"தியாகு"

விவிலியக் களஞ்சியம்

VI

துணை ஏடு

விவிலியக் களஞ்சியத் தலைப்புகளின்
ஆங்கில - தமிழ்
அகர முதலி

விவிலிய அறிமுகம்
தியான ஆசிரமம்
சென்னை - 28.

விவிலியக் களஞ்சியம்

VI

துணை ஏடு

விவிலியக் களஞ்சியத் தலைப்புகளின்
ஆங்கில - தமிழ்
அகர முதலி

பதிப்பாசிரியர்

"தியாகு"

ஓர் எடுத்துக்காட்டு: **ABRAHAM** — *ஆபிரகாம்;* **I:465**
இந்தத் தலைப்புப் பற்றிய கட்டுரையை முதலாம் பாகம், பக்கம் 465-இல் காணலாம்

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்

சென்னை-28.

A

AARON - ஆரோன்; I:503.
AARONITES - ஆரோனியர்; I:502.
AARON'S ROD - ஆரானின் கோல்; I:502.
AB-அபு; I:150.
ABADDON - அபதோன்; I:136; அபத்தோன்.
ABAGTHA - அபகத்தா; I:125; அபக்தா.
ABANA - அபானா; I:131.
ABARIM - அபாரீம்; I:136.
ABBA - அப்பா; I:159.
ABDA - அபுதா; I:150 அபீதா.
ABDEEL - அபிதேல்; I:142; அப்தயேல்.
ABDI - அபிதி; I:42.
ABDIAS, APOSTOLIC HISTORY OF - அப்தியாவின் அப்போஸ்தலர் வரலாறு; I:152.
ABDIEL - அபிதியேல்; I:142; அப்தியேல்.
ABDON (PERSON) - அபிதோன்; I:142; அப்தோன்.
ABDON (PLACE) - அபிதோன்; I:143 அப்தோன்.
ABEDNEGO - ஆபதுநெகோ; I:464; ஆபேத்நெகோ.
ABEL (PERSON) - ஆபேல்; I:474.
ABEL(PLACE) - ஆபேல்; I:476; ஆபல்.
ABEL-BETH-MAACAH - ஆபேல்-பேத்து-மாக்கா; I:476; ஆபல்-பெத்-மாக்கா.
ABEL-KERAMIM - ஆபேல்-கெராமிம்; I:476; ஆபல் - கெராமிம்.
ABEL-MAIM - ஆபேல் மாயிம்; I:476; ஆபல்-மயீம்.
ABEL-MEHOLAH - ஆபேல்-மெகோலா; I:476; ஆபல்-மெகோலா.
ABEL-MIZRAM - ஆபேல் மிசுராயிம்; I:476; ஆபல்-மிட்சராயிம்.
ABEL-SHITTIM - ஆபேல் சித்திம்; I:476; ஆபல்-சித்தீம்.
ABGAR - அப்காா்; I:152.
ABGAR, EPISTLES OF CHRIST AND - அப்கார் - கிறிஸ்துவின் திருமுகங்கள்; I:152.
ABI - அபி; I:137.
ABI-ALBON - அபி-அலபோன்; I;137; அபிஅல்போன்.
ABIASAPH - அபியசாபு I:144.
ABIATHAR - அபியத்தார்; I:144.
ABIB - அபீபு;I:150; ஆபீபு.
ABIDA - அபிதா; I:142.
ABIDAN - அபிதான்; I:142.
ABIDE - குடி கொள்ளுதல், தங்குதல்; II:848.
ABIEL - அபியேல்; I:147.
ABIEZER - அபியேசர்; I:147.
ABIGAIL - அபிகாயில்;I:137.
ABIHAIL - அபிகயில்; I:137;- அபிகாள்.
ABIHUD - அபிகு; I:138; அபிகூ.
ABIJAH - அபியா; I:145.
ABIJAM - அபியாம்; I:147.
ABILENE - அபிலேன்; I:148.
ABIMAEL - அபிமேல்; I:144; அபிமாவேல்.
ABIMELECH - அபிமெலக்கு; I:143.
ABINADAB - அபினதாபு; I;148.
ABINOAM - அபினோவாம்; I:150.
ABIRAM - அபிராம்; I:147.
ABISHAG - அபிசாகு; I:140.
ABISHAI - அபிசாய்; I:141.
ABISHUA - அபிசுவா; I;142.
ABISHUR - அபிசூர்; I;141.
ABITAL - அபிதாள்; I:142; அபித்தால்
ABITUB - அபுதாபு; I:142; அபித்தூபு.
ABIUD - அபியூது; I:147.
ABLUTIONS - கழுவுதல் சடங்கு; II:677.
ABNER - அபினேர்; I:149; அப்னேர்.
ABOMINATION - அருவருப்பு; I:267.
ABOMINATION THAT MAKES DESOLATE - பாழாக்கும் அருவருப்பு; IV:566.
ABRAHAM - ஆபிரகாம்; I:465.
ABRAHAM, BOSOM OF - ஆபிரகாமின் அருகில்; I:464.
ABRAHAM, REVELATION OF - அபிரகாமின் வெளிப்பாடு; I:465.
ABRAHAM, TESTAMENT OF - ஆபிரகாமின் ஏற்பாடு; I:464.
ABRAM - அபிராம்; I:148.
ABRON - அபிரோன்; I:148.
ABRONAH - அபிரோனா; I:148.
ABSALOM, ABISHALOM - அபிசலோம்; I:138; அப்சலோம்.
ABUBUS - அபூபு; I:150.
ABYSS - பாதாளம், படுகுழி; IV:494.
ACACIA - சித்தீம் மரம்; III:273.
ACCESS - அணுகும் பேறு; I:89.
ACCO - ஆக்கோ; I:378; அக்கோ.
ACCURSED, ANATHEMA - சபிக்கப்படுதல்; III:131.
ACCUSER - குற்றம் சாட்டுபவர்; II:903.
ACHAEMENIANS - அக்கேமேனியர்; I:26.
ACHAIA - அக்காயா; I:23.
ACHAICUS - அக்காயிக்கு; I;23; அக்காய்க்கு.
ACHAN - ஆக்கான்; I:377.
ACHAR - ஆக்கார்; I:377.
ACHBOR - ஆகிபோர்; I:376; அக்போர்.
ACHIM - அக்கிம்; I:23; ஆக்கிம்.
ACHIOR - அக்கியோர்; I:23.
ACHISH - ஆக்கிசு; I:377.
ACHOR - ஆக்கோர்; I:378.
ACHSAH - அகிசா; I:9; அக்சா.
ACHSHAPH - அகிசாபு; I:9; அக்சாபு.
ACHZIB - அகிசிபு; I;9; அக்சிபு.
ACRABA - அகிரபா; I:13.

ACROSTIC - அகர வரிசை அமைப்பு; I:4.
ACTS, APOCRYPHAL - அப்போஸ்தலர் பணிபோலி நூல்; I:187.
ACTS OF THE APOSTLES - அப்போஸ்தலர் பணிநூல்; I:174.
ADADAH - அதாதா; I:91.
ADAH - ஆதா; I:458.
ADAIAH - அதாயா; I:92.
ADALIA - அதலிய; I:91.
ADAM (PERSON) - ஆதாம்; I:460.
ADAM (PLACE) - ஆதாம்; I:463.
ADAM, BOOKS OF - ஆதாமின் நூல்கள்; I:459.
ADAMAH - அதாமா; I:92.
ADAMANT, DIAMOND - வைரம், வைரக்கல்; V:959.
ADAMI-NEKEB - அதாமி-நெகபு; I:92.
ADAR - அதார்; I:92.
ADASA - அதசா; I:90.
ADBEEL - அதிபேல்; I:99.
ADDAN, ADDON - அதான், அதோன்; I:93; அத்தோன்.
ADDAR - அத்தார்; I:107.
ADDER, ASP - நச்சும்பாம்பு; IV:135.
ADDI - அதி; I:93.
ADDON - அதோன்; I:105 அத்தோன்.
ADIDA - அதிதா; I:98.
ADIEL - அதியேல்; I:99.
ADIN - அதீன்; 1:101.
ADINA - அதினா; I:101.
ADITHAIM - அதித்தாயிம்; I:98.
ADLAI - அதிலாய்; I:100.
ADMAH - அதிமா; I:199.
ADMATHA - அதிமாத்தா; I:99.
ADMIN - அதிமின்; I;99; அத்மின்.
ADNA - அதினா; I:101.
ADNAH - அதுனா; I:102.
ADONAI - அதோனாய்; I:102.
ADONI-BEZEK - அதோனி பெசக்கு; I:103.
ADONIJAH - அதோனியா; I:104.
ADONIKAM - அதோனிக்காம்; I:103.
ADONIRAM - அதோனிராம்; I:104.
ADONIS - அதோனிசு; I:103.
ADONI-ZEDEK - அதோனி - செதெக்கு; I:103.
ADOPTION - சுவிகாரம்; III:352.
ADORAIM - அதோராயிம்; I:102.
ADORATION - ஆராதனை; I:497.
ADRAMMELECH - அதிராம்மெலக்கு; I:99.
ADRAMYITIUM - அதிராமித்தியம்; I:100.
ADRIA - அதிரியா; I:100.
ADRIEL - அதிரியேல்; I:100.
ADUEL - அதுவேல்;I:102.
ADULLAM - அதுல்லாம்; I:101.
ADULTERY - விபசாரம்; V:826.
ADUMMIM - அதுமிம்; I:101, அதும்மிம்.
ADVENTRESS - பரத்தை; IV:407.
ADVENT - திருவருகை; III:714.
ADVOCATE - பரிந்துபேசுபவர்; IV:417.
AENEAS - ஐனேயா; II:488.
AENON - ஐனோன்; II:488.
AESORA - ஐசோரோ; II:454.
AFRICA - ஆப்பிரிக்கா; I:478.
AGABUS - அகபு; I:4.
AGAG - அகாகு; I:6.
AGAGITE - அகாகியர்; I:6.
AGAPE - அகாபே; I:6; அன்பு விருந்து; I:362.
AGATE - வைடூரியம், சிவப்புக்கல்; V:959.
AGEE - ஆகே; I:377.
AGRAPHA - அக்ரபா; I:27.
AGRICULTURE - வேளாண்மை, விவசாயம்; V:954.
AGRIPPA - அகிரிப்பா; I:14.
AGUR - ஆகூர்; I:376.
AHAB - ஆகாபு; I:368.
AHARAH - அகராகு; I:5; அகரகு.
AHARHEL - அகரேல்; I:5; அகரகேல்.
AHASBAI - அகுசுபாய்; I:2; அகசீபாய்.
AHASUERUS - அகசுவேரு; I:2.
AHAVA - அகவா; I:5.
AHAZ - ஆகாசு; I:367.
AHAZ, DIAL OF - ஆகாசின் கடிகாரம்; I:360.
AHAZIAH - அகசியா; I:1.
AHBAN - அகிபான்; I:11; அக்பான்.
AHER - அகேர்; I:20.
AHI - அகி; I:7.
AHIAH - அகியா; I:12.
AHIAM - அகியாம்; I:12.
AHIAN - அகியான்; I:12.
AHIEZER - அகியேசர்; I:12.
AHIHUD - அகியூது; I:12; அகிகூது.
AHIJAH - அகீயா; I:16.
AHIKAM - அகிக்காம்; I:7.
AHIKAR - அகிக்கார்; I:7.
AHIKAR, BOOK OF - அகிக்காரின் நூல்; I:7.
AHILUD - அகிலுது; I:16.
AHIMAAZ - அகிமாசு; I:11.
AHIMAN - அகிமான்; 1:11.
AHIMELECH - அகிமெலக்கு; I:12.
AHIMOTH - அகிமோத்து; I:12.
AHINADAB - அகினதாபு; I:16.
AHINOAM - அகினோவாம்; I:16.
AHIO - அகியோ; I:13.
AHIRA - அகிரா; I:13.
AHIRAM - அகிராம்; I:13.
AHISAMACH - அகிசமாக்கு; I:8.
AHISHAHAR - அகிசகார்; I:8; அகிசாகர்.
AHISHAR - அகிசார்; I:9.
AHITHOPHEL - அகித்தோபல்; I:9.
AHITUB - அகிதூபு; I:10.
AHLAB - அகிலாபு; I:16.

AHLAI - அகிலாய்; I:16.
AHOAH - ஆகோவா; I:20.
AHOHI - அகோகி; I:20.
AHOHITE - அகோகியர்; I:20.
AHUMAI - அகுமாய்; I:17.
AHUZZAM - அகுசாம்; I:17.
AHUZZATH - அகுசாத்து; I:17.
AHZAI - அகிசாய்; I:9.
AI - ஆயி; I:493; ஆய்.
AIATH - அய்யா; I:212.
AIAH, AIJA - அய்யாத்து, அயா; I:213.
AIJALON - அய்யலோன்; I:212.
AIJELETH SHAHAR - அய்யலத்து சாகார்; I:212.
AIN (ALPHABET) - அயின்; I:211.
AIN (PLACE) - அயின்; I:211.
AIN FESHKA - அயின்பெசுக்கா;I:212.
AIN KAREM - அயின்-கெரேம்; I:211.
AKAN - அக்கான்; I:23.
AKELDAMA - அக்கலிதமா; I:21.
AKHENATON - அக்கெனாத்தோன்; I:26.
AKHETATON - அக்கெதாத்தோன்; I:26.
AKIBA - அக்கிபா; I:25.
AKKAD, ACCAD - அக்காது; I:22.
AKKADIAN - துக்காதியன்; I:22.
AKKUB - அக்கூபு: I:25.
AKRABATTENE - அக்கிரபத்தேன்; I:23.
AKRABBIM - அகிரபிம்; I:13; அக்ரபிம்.
ALABASTER - படிகச்சிமிழ்; IV: 371.
ALAMOTH - அலமோத்து; I:298.
ALCIMUS - ஆல்கிமு; I:515.
ALEMA - அலமா; I:298.
ALEMETH (PERSON) - அலமேத்து; I:298.
ALEMETH (PLACE) - அலமேத்து; I:298.
ALEPH - ஆலபு; I:512.
ALEXANDER - அலக்சாந்தர்; I:294.
ALEXANDRA - அலெக்சாந்திரா; I:296.
ALEXANDRIA - அலக்சாந்திரியா; I:296.
ALGUM, ALMUG - வாசனை மரம்; V:720.
ALIAH - அலியா; I:300; அலயா.
ALIAN - அலியான்; I:300; அலயான்.
ALIEN, FOREIGNER, STRANGER, SOJOURNER - அன்னியன்; I:365.
ALLAMMELECH - அலமெலக்கு; I:298; அல்லாமெலக்கு
ALLEGORY - உருவகம் / உருவகக் கதை; II:80.
ALLELUJAH - அல்லேலூயா; I:301.
ALLOGENES SUPREME - அல்லோக்னஸ் சுப்ரீம்; I:303.
ALLON - அல்லோன்; I:303.
ALLON-BACUTH - அல்லோன்-பாக்கூத்து; I:303.
ALMSGIVING - பிச்சையிடுதல், ஈகை; IV:573.
ALMIGHTY - எல்லாம் வல்லவர்; II:343.
ALMODAD - அல்மோதாது; I:301.
ALMON - அலமோன்; I:298; அல்மோன்.
ALMON-DIBLATHAIM - அலமோன்-திபிலாதயிம்; I:298; அல்மோன் - திப்லாத்தயிம்.
ALMOND - வாதுமை; V:723.
ALPHA AND OMEGA - ஆல்பாவும், ஓமேகாவும்; I:515.
ALPHABET - நெடுங்கணக்கு; IV:333.
ALPHAEUS - ஆல்பேயு; I:516; அல்பேயு.
ALTAR - பீடம்; IV:612.
ALTAR TO AN UNKNOWN GOD - நாம் அறியாத தெய்வத்திற்குப் பீடம்; IV:235.
ALTASCHITH - ஆல்தாசித்து; I:515.
ALUSH - அலூசு; I:300; ஆலுசு.
ALVAH - அலிவா; I;300 ஆல்வா.
ALVAN - அலிவான்; I:300; அல்வான்.
AMAD - அமாது; I:193.
AMAL - ஆமால்; I:481.
AMALEK (PERSON) - அமலேக்கு; I:192.
AMALEK (PLACE) - அமலேக்கு; I:92.
AMALEKITES - அமலேக்கியர்; I:191.
AMAM - அமாம்; I:192.
AMANA - அமானா; I:195.
AMARIAH - அமரியா; I:189.
AMARNA LETTERS - அமர்னா கடிதங்கள்; I:189.
AMASA - அமாசா; I:192.
AMASAI - அமசாய்; I:187.
AMASHSAI - அமாசாய்; I:187; அமசாய்.
AMASIAH - அமாசியா; I:193.
AMAW - அம்மோ; I:206.
AMAZIAH - அமசியா; I:188; அமட்சியா.
AMEN - ஆமென்; I:481.
AMETHYST - செவ்வந்திக்கல், சுகந்தி; III:437.
AMH'AREZ - "அம்கா அரேசு"; I:201.
AMITTAI - அமித்தாய்; I:195.
AMI - ஆமீ; I:481.
AMMAH - அம்மா; I:205; அமா.
AMMI - அம்மீ; I:206.
AMMIEL - அம்மியேல்; I:205.
AMMIHUD - அம்மியூது; I:205; அமமிகூது.
AMMINADAB - அம்மினதாபு; I:205; அமினதாபு.
AMMISHADDAI - அம்மிசதாய்; I:205; அம்மிசத்தாய்.
AMMIZABAD - அம்மிசபாது; I:205.
AMMON, AMMONITES - அம்மோன், அம்மோனியர்; I:206.
AMNON - அம்னோன்; I:209.
AMOK - அமோக்கு; I:201.
AMON (PERSON) - ஆமோன்; I:487.
AMON (DEITY) - ஆமோன்; I:487.
AMON (PLACE) - ஆமோன்; I:487.
AMORITES - எமோரியர்; II:274.
AMOS - ஆமோஸ்; I:486; ஆமோசு.
AMOS, BOOK OF - ஆமோசின் இறைவாக்கு நூல்; I:482.

AMOZ - ஆமோசு; I:486; ஆமோட்சு.
AMPHIPOLIS - அம்பிப்பொலி; I:203.
AMPLIATUS - அம்பிலியாத்து; I:204.
AMRAM - அம்ராம்; I:209.
AMRAMITES - அம்ராமியர்; I:209.
AMRAPHEL - அம்ராபேல்; I:208; அம்ராபல்.
AMULETS - தாயத்து; III:555.
AMZI - அம்சி; I:203.
ANAB - அனாபு; I:343.
ANAEL - அனயேல்; I:340.
ANAH - ஆனா; I:536; அனா.
ANAHARATH - அனகராத்து; I:339; அனாகராத்து.
ANAIAH - அனாயா; I:343.
ANAK - அனாக்கு; I:342; ஆனாக்கு.
ANAKIM - அனாக்கியர்; I:341; ஆனாக்கியர்.
ANAMIM - அனாமீம்; I:343.
ANAMMELECH - அனம்மெலேக்கு; I:340.
ANAN - அனான்; I:343; ஆனான்.
ANANI - அனானி; I:343.
ANANIAH (PERSON) - அனனியா; I:340.
ANANIAH (PLACE) - அனனியா; I:340.
ANANIAS - அனனியா; I:340.
ANANIEL - அனனியேல்; I:341.
ANATH (DEITY) - அனாத்து; I:343.
ANATH (PERSON) - அனாத்து; I:343.
ANATHOTH - அனத்தோத்து; I:339.
ANCHOR - நங்கூரம்; IV:133.
ANCIENT OF DAYS - நீண்ட ஆயுளுள்ளவர்; தொன்மை வாய்ந்தவர்; IV:277.
ANDREW - அந்திரேயா; I:121.
ANDREW, ACTS OF - அந்திரேயாவின் பணி நூல்; I:122.
ANDREW & MATTHIAS, ACTS OF - அந்திரேயா, மத்தியா, மத்தேயு, ஆகியோரின் பணிகள்; I:123.
ANDREW AND PAUL, ACTS OF - அந்திரேயா, பவுல் ஆகியோரின் பணிகள்; I:122.
ANDREW, FRAGMENRTARY STORY OF - அந்திரேயா பற்றிய கதைத் துணுக்கு; I:123.
ANDRONICUS - அந்திரோனிக்கு; I:123.
ANEM - ஆனேம்; I:536.
ANER (PERSON) - ஆனேர்; I:537.
ANER (PLACE) - ஆனேர்; I:537.
ANGELS - வானதூதர்கள்; V:744.
ANGER - சினம், கோபம்; III:97; 301
ANGUISH - அங்கலாய்ப்பு; I:29.
ANIAM - அனியாம்; I;343.
ANIM - ஆனிம்; I:536.
ANIMALS - விலங்குகள்; V:837.
ANKLETS - காற்சிலம்புகள்; II:747.
ANNA - அன்னா; I;364.
ANNAS - அன்னாசு; I:364.
ANOINT - அபிடேகம் செய்தல்; I:131.
ANSWER - பதில்; IV:390.
ANT - எறும்பு; II:353.
ANTELOPE - கொம்புமான்; III:51.
ANTHOTHIJAH - அந்தோதியா; I:125.
ANTHROPOMORPHISM - மனிதப் பண்பேற்றிக் கூறுதல்; V:180.
ANTI-CHRIST - எதிர்க் கிறிஸ்து; II:231.
ANTIGONUS - அந்தி கோனுஸ்; I:111.
ANTI-LEBANON - எதிர்லெபனோன்; I:233.
ANTINOMIANISM - ஒழுக்கச் சட்டமறுப்புக் கோட்பாடு; II:521.
ANTIOCH-PISIDIA - அந்தியோக்கியா-பிசிதியா; I:115.
ANTIOCH-SYRIA - அந்தயோக்கியா-சீரியா; I:113.
ANTIOCHIANS - அந்தியோக்கியர்; I:113.
ANTIOCHIS - அந்தியோக்கி; I:113.
ANTIOCHUS - அந்தியோக்கு; I:117.
ANTIPAS - அந்திப்பா; I:113.
ANTIPATER - அந்திபாத்தர்; I:113.
ANTIPATRIS - அந்திப்பத்திரி; 1:112.
ANTONIA, TOWER OF - அந்தோணியாக் கோட்டை; I:124.
ANTONY - அந்தோணி; I:125.
ANUB - அனுபு; I:343; ஆனுபு.
ANXIETY - கவலை, கலக்கம்; II:669.
APELLES - அப்பெல்; I:160.
APELLES, GOSPEL OF - அப்பெல் எழுதிய நற்செய்தி; I:160.
APHAIREMA - அபேய்ரமா; I:151.
APHEK - அபேக்கு; I:150.
APHEKAH - அபேக்கா; I:150; அப்பேக்கா.
APHIAH - அப்பியாகு; I:160.
APHIK - அபீக்கு; I;150; அப்பிக்கு.
APIRU - அபிரூ; I:148.
APIS - ஆப்பிஸ்; I:477.
APOCALYPTIC LITERATURE - வெளிப்பாட்டு இலக்கியம்; V:909.
APOCRYPHA - போலிநூல்கள்; IV:850.
APOCRYPHAL ACTS - போலிப் பணிநூல்கள்; IV:854.
APOCRYPHAL APOCALYPSES - போலி வெளிப்பாட்டு நூல்கள்; IV:854.
APOCRYPHAL EPISTLES - போலித் திருமுகங்கள்; IV:849.
APOCRYPHAL GOSPELS - போலி நற்செய்திகள்; IV:849.
APOLLONIA - அப்பொல்லோனியா; I:162.
APOLLONIUS - அப்பொல்லோனியு; I:162.
APOLLOPHANES - அப்பொல்லோபான்; I:161.
APOLLOS - அப்பொல்லோ; I:160.
APOLLYON - அப்பொல்லியோன்; I:160.
APOSTASY - சமய நிலை பிறழ்தல்; III:134.
APOSTLE - அப்போஸ்தலர்; I:166.
APOSTLES, LETTER OF THE - அப்போஸ்தலர்களின் திருமுகம்; I:173.
APOSTOLIC CONSTITUTIONS AND CANONS -அப்போஸ்தலச் சட்ட அமைப்பும், ஒழுங்குகளும்; I:164.

APOSTOLIC COUNCIL - அப்போஸ்தலச் சங்கம்; I:162.
APOSTOLIC FATHERS - அப்போஸ்தலத் தந்தையர்களின் நூல்; I:165.
APOSTOLIC TIMES - அப்போஸ்தலர் காலம்; I:163.
APPAIM - அப்பாயிம்; I:159; அப்பயிம்.
APPHIA - அப்பியா; I:159.
APPHUS - அப்பூசு; I:160.
APPIAN WAY - ஆப்பியன் வழி; சாலை; I:477.
APPIUS, FORUM OF - அப்பியு சந்தை; I:160.
APPLE - ஆப்பிள், கிச்சிலிப்பழம்; 1:478.
AQUILLA - அக்கிலா; I:24.
AQUILLA - அக்கிலா; I:24.
AR - ஆர்; I:506.
ARA - ஆரா; I:497; அரா.
ARAB - அரபு; I:241.
ARABAH - அரபா; I:239; அராபா.
ARABAH, BROOK OF THE - அரபாவின் ஓடை; I:240.
ARABAH, SEA OF THE - அரபாக்கடல்; I:241.
ARABIA - அரேபியா; I:279.
ARABIANS - அரேபியர்; I:276.
ARABIC GOSPEL OF THE INFANCY - அராபிய மொழியில் இயேசுவின் பாலபருவம் பற்றிய நற்செய்தி; I:248.
ARAD (PERSON) - அராது; I:248.
ARAD (PLACE) - அராது; I:248.
ARADUS - அராதுசு; I:248.
ARAG EL-EMIR - அரக்-எல்-எமிர்; I:213.
ARAH - ஆரகு; I:496.
ARAM (PERSON) - ஆராம்; I:501.
ARAM (PLACE) - ஆராம்; I:501.
ARAMAIC - அரமேயம்; I:241.
ARAMEANS - அரமேயர்கள்; I:243.
ARAMITESS - அரமேயள்; I:245.
ARAM-MAACAH - அராம்-மாக்கா; I:249; ஆராம்-மாக்கா.
ARAM-NAARAIM - அராம்-நகராயிம்; I:249 ஆராம்-நகராயிம்.
ARAM-ZOBAH - அராம்-சோபா; I:248; ஆராம்-சோப.
ARAN - ஆரான்; I:502.
ARARAT - அரராத்து; I:246.
ARATUS - அராத்து; I:248.
ARAUNAH - அரவுனா; I:247.
ARBA - அர்பா; I:290.
ARBATHITE - அர்பாத்தியர்;I:290 அர்பாவியர்.
ARBATTA - அர்பத்தா; I:290.
ARBELA - அர்பேலா; I:290.
ARBITE - அர்பியர்; I:290.
ARCHAEOLOGY - தொல்பொருளியல்;IV:83.
ARCHANGEL - அதிதூதர்; I:98.
ARCHELAUS - அர்க்கெலா; I:283.
ARCHER - வில்லாளர், வில்வீரர், அம்பு எய்பவர்; V:840.
ARCHEVITES - அர்க்கேவியர்; I:285.
ARCHIPPUS - அர்க்கிப்பு; I:282.
ARCHITE - அர்க்கியர்; I:283.
ARCHIVES, HOUSE OF - ஆயபப்திவேடுகள் நிலையம்; I:489.
ARD - அரது; I:237, அருது.
ARDON - அருதோன்; I:267.
ARELI - அரேலி;I:281.
AREOPAGITE - அரயோப்பாகியர்; I:245.
AREOPAGUS - அரயோப்பாகு; I:245.
ARETAS - அரேத்தா; I:275.
ARGOB (PERSON) - அருகோபு; I:255; அர்கோபு.
ARGOB (PLACE) - அருகோபு; I:256; அர்கோபு.
ARIARATHES - அரியாரதேசு; I:254.
ARIDAI - அரிதாய்; I:250.
ARIDATHA - அரிதத்தா; I:250; அரிதாத்தா.
ARIEH - அரியை; I:255.
ARIEL (PERSON) - அரியேல்; I:255.
ARIEL (PLACE) - அரியேல்; I:255.
ARIMATHEA - அரிமத்தியா; I:253.
ARIOCH - அரியோக்கு; I:255.
ARISAI - அரிசாய்; I:249.
ARISTARCHUS - அரித்தார்க்கு; I:250.
ARISTEAS, LETTER OF - அரித்தேயாவின் கடிதம்; I:250.
ARISTION - அரித்தியோன் I:250.
ARISTOBULUS - அரித்தோபுல்; I:252; அரிஸ்தோபுல்.
ARIUS - அரியோசு; I:255.
ARK OF NOAH - நோவாவின் பேழை; IV:355.
ARKITE - அர்க்கியர்; I:283.
ARM AND HAND - கரம் மற்றும் புயம்; II:628.
ARMAGEDDON - ஆர்மகதோன்; I:507; அருமகதோன்.
ARMENIAN GOSPEL OF THE INFANCY - அர்மேனிய மொழியில் இயேசுவின் பால பருவம் பற்றிய நற்செய்தி; I:292.
ARMLET - கைக்காப்பு; III:38.
ARMONI - ஆர்மோனி; I:507; அர்மோனி.
ARMOR OF GOD - இறைவன் தரும் படைக்கலன்கள்; I:875.
ARMOR BEARER - படைக்கலம் தாங்குபவன், பரிசையன்; IV:375.
ARMORY - படைக்கருவிச்சாலை; IV:375.
ARMY - படை; IV:373.
ARNAN - ஆர்னான்; I:511.
ARNI - ஆர்னி; I:511.
ARNON - ஆர்னோன்; I:511; அர்னோன்.
AROD - அரோது; I:281.
ARODI, ARODITES - அரோதியர்; I:281.
AROER - அரோயர்; I:281.
AROERITE - அரோயரியர்; I:282; அரோயோரியர்.
AROMATIC CANE - நறுமண வசம்பு, நறுமணப்புல்; IV:163.
ARPACHSHAD - அருபகசாது; I:267; அர்ப்பகசாது.

ARPAD - ஆர்பாது; I:507; அர்ப்பாது.
ARPHAXAD - ஆர்பகசாது; I:507; அர்ப்பகசாது.
ARROGANCE - அகந்தை, ஆணவம், செருக்கு; II:2.
ARSACES - அரிசாகு; I:249.
ART - கலை; II:650.
ARTAXERES - அர்த்தாசெருசு; I:289; அர்த்தக்சஸ்தா.
ARTEMAS - ஆர்தமா; I:506; அர்த்தமா.
ARTEMIS - ஆர்தமி; I:506; அர்த்தமி.
ARUBBOTH - அருபோத்து; I:267.
ARUMAH - அருமா; I:267.
ARVAD - ஆர்வாது; I:511; அர்வாது.
ARVADITES - ஆர்வாதியர்; I:511; அர்வாதியர்.
ARZA - ஆர்சா; I:506; அர்சா.
ASA - ஆசா; I:379.
ASAHEL - அசாயேல்; I:36; அசாவேல்.
ASAIAH - அசாயா; I:35.
ASAPH - ஆசாபு; I:381.
ASARAMEL - அசரமேல்;I:32.
ASAREL - அசரேல்; I:34.
ASCENSION - விண்ணேற்றம்; V:815.
ASCENTS, DESCENTS - ஏற்றம், இறக்கம்; II:446.
ASCENTS, SONGS OF - ஏற்றப்பாடல்கள்;II:446.
ASENATH - அசனாத்து; I:35; அசினாத்து.
ASHAN - ஆசான்; I:381.
ASHARELAH - அசரேலா; I:34.
ASHBEL, ASHBELITES - அசுபேல், அசுபேலியர்; I:51.
ASHDOD - அசுதோது; I:49; அஸ்தோது.
ASHENAZ - அசுக்கனாசு; I:49.
ASHER - ஆசேர்; I:384.
ASHERAH - அசேரா; I:53.
ASHERITES - ஆசேரியர்; I:384.
ASHES - சாம்பல்; III:229.
ASHHUR - அசுகூர்; I:47.
ASHIMA - அசிமா; I:40.
ASHKELON - அசுக்கலோன்; I:47; அஸ்கலோன்.
ASHKENAZ - அசுக்கனாசு; I:49; அஸ்கனாசு.
ASHNAH - அசீனா; I:47; அசுனா; அஸ்னா.
ASHPENAZ - அசிபெனாசு; I:39; அஸ்பனாசு.
ASHTAROTH (DEITY) - அசித்தரோத்து; I:38; அஸ்தரோத்து.
ASHTAROTH (PLACE) - அசித்தரோத்து; I:38; அஸ்தரோத்து.
ASHTERATHITE - அசித்தராவியர்; I:37; அஸ்தராயர்.
ASHTEROTH-KARNAIM - அசித்தரோத்து- கர்னயிம்; I:37; அஸ்தரோத்து-கர்னயிம்.
ASHTORETH - அசித்தோரேத்து; I:38; அஸ்தரேத்து.
ASHURBANIPAL - அசூர்பானிப்பால்; I:52.
ASHURITES - அசூரியர்; I:51.
ASHVATH - அசிவாத்து; I:41; அஸ்வாத்து.
ASIA - ஆசியா; I:382.
ASIA MINOR - சிறிய ஆசியா; III:298.
ASIARCH - ஆசியார்க்கு; I:383.
ASIEL - அசியேல்; I:40.
ASMODEUS - அசுமதேயு; I:51.
ASNAH - அசினா; I:41; அஸ்னா.
ASPATHA - அசிபத்தா; I:39; அசுப்பாத்தா.
ASPHAR - அசிபார்; I:39.
ASRIEL - அசிரியேல்; I:41.
ASS - கழுதை; II:674.
ASSASSIN - கொள்ளைக்கூட்டத்தார் (கொலை செய்பவர்); III:88.
ASSAYER - மதிப்பீடு செய்பவர்; V:63.
ASSHUR (DEITY) - அசூர்; I:52.
ASSHUR (PERSON) - அசூர்; I:52.
ASSHUR (PLACE) - அசூர்; I:52.
ASSHURIM - அசூரிம்; I:51.
ASSIR - அசீர்; I:47.
ASSOS - ஆசோ; I:386.
ASSURNASIRPAL - அசூர்னசிர்ப்பால்; I:53.
ASSYRIA - அசீரியா; I:41.
ASTARTE - அசித்தார்த்தி; I:38.
ASTONISHMENT, AMAZEMENT - திகைப்பு, திகில், வியப்பு, மலைப்பு; III:612.
ASTROLOGER - குறிசொல்பவர், சோதிடர்; III:452.
ASYNCHRITUS - அசிங்கிரித்து; I:37.
ATAD - ஆதாது; I:458.
ATARAH - அத்தாரா; I:105; அற்றாரா.
ATARGATIS - அத்தர்காத்தி; I:106.
ATAROTH - அத்தரோத்து; I:105; அற்றரோத்து.
ATAROTH-ADDAR - அத்தரோத்து-அத்தார்; I:105; அற்றரோத்-அதார்.
ATER - ஆத்தேர்; I:463; அற்றேர்.
ATHACH - அத்தாக்கு; I:107.
ATHAIAH - அத்தாயா; I:107.
ATHALIA - அத்தாலியா; I:107; அத்தலியா.
ATHARIM - அத்தாரிம்; I:107.
ATHBASH - அத்திபாசு; I:108.
ATHENOBIUS - அத்தனோபி; I:105.
ATHENS - ஏதென்ஸ்; II:409; ஏதன்சு.
ATHLAI - அதிலாய்; I:100; அத்லாய்.
ATONEMENT, DAY OF - பாவப்பரிகாரநாள், பாவநீக்க நாள்; IV:552.
ATROTH-BETH-JOAB - அத்தரோத்து-பேத்து-யோவாபு; I:106; அற்றரோத்-பெத்-யோவாபு.
ATROTH-SHOPHAN- - அத்தரோத்து-சோபான்; I:106; அற்றரோத்து-சோபான்.
ATTAI - அத்தாய்; I:107.
ATTALIA - அத்தாலியா; I:106.
ATTALUS - அத்தாலுசு; I:108.
AUGUSTAN COHORT - அகுஸ்துவின் பட்டாளம்; I:19.
AUGUSTUS - அகுஸ்து; I:18.
AURANUS - அவுரான்; I:308.
AUTHORITY - அதிகாரம்; I:93.
AVARAN - அவரான்; I:304.
AVE MARIA - ஆவே மரியா; I:525.
AVEN - ஆவென்; I:525.

AVITH - ஆவிது; I:308; அவீது.
AVVA - அவ்வா; I:309.
AVVIM (PERSON) - அவ்விம்; I:309.
AVVIM (PLACE) - அவ்விம்; I:309.
AVVITES - அவ்வியர்; I:309; அவ்வாவியர்.
AWL - குத்தூசி; II:862.
AXE - கோடரி; III:94.
AYYAH - அய்யா; I;212; ஆய்யா.
AZAL - ஆசால்; I:381; ஆட்சால்.
AZALIAH - அசலியா; I:34.
AZANIAH - அசனியா; I:35.
AZAREL - ஆசரேல்; I:379; அசரியேல்.
AZARIAH - அசரியா; I:32.
AZARIAS - அசரியா; I:34.
AZAZ - அசாசு; I:35; ஆசாசு.
AZAZEL - அசாசேல்; I:35.
AZAZIAH - அசசியா; I:31.
AZBUK - அசிபுக்கு; I:39; அசபூக்கு.
AZEKAH - அசக்கா; I:31; அசேக்கா.
AZEL - ஆசேல்; I;385; ஆட்சேல்.
AZGAD - அசிகாது; I:36.
AZIEL - அசியேல்; I:40.
AZIZA - அசிசா; I:37.
AZMAVETH (PERSON) - அசிமவேத்து; I:39; அசமா வேத்து.
AZMAVETH (PLACE) - அசிமவேத்து; I:40.
AZMON - அசிமோன்; I;40; அட்சமோன்.
AZNOTH-TABOR - அசினோத்து-தாபோர்; I:41; அசனோத்து-தாபோர்.
AZOR - ஆசோர்; I:386; அசோர்.
AZOTUS - அசோத்து; I:54.
AZRIEL - ஆசிரியேல்; I:384.
AZRIKAM - அசிரிக்காம்; I:40.
AZUBAH - அசுபா; I:51.
AZZAN - அசான்; I:36.
AZZUR - அசூர்; I:52.

B

BAAL - பாகால்; IV:477.
BAAL (DEITY) - பாகால்; IV:478.
BAALAH - பாகலா; IV:477.
BAALATH - பாகலாத்து; IV:477.
BAALATH-BEER - பாகலாத் பெயேர்; IV:477.
BAALBEK - பாகால்பேக்கு; IV:482.
BAAL-BERITH - பாகால்-பெரித்து; IV:481.
BAAL-GAD - பாகால்காது; IV:480.
BAAL-HAMON - பாகால்-ஆமோன்; IV:480.
BAAL-HANAN - பாகால்-அனான்; IV:479.
BAAL-HAZOR - பாகால்-ஆட்சோர்; IV:479.
BAAL-HERMON - பாகால்-எர்மோன்; IV:480.
BAAL-MEON - பாகால்-மெகோன்; IV:482.
BAAL-PEOR - பாகால்-பெயோர்; IV:481.
BAAL-PERAZIM - பாகால்-பெராட்சிம்; IV:481.
BAAL-SHALISHAH - பாகால்-சாலிசா; IV:480.
BAAL-TAMAR - பாகால்-தாமார்; IV:481.
BAAL-ZEBUB - பாகால்-செபூபு; IV:480.
BAAL-ZEPHON - பாகால்-செபோன்; IV:481.
BAALE-JUDAH - பாகால்-யூதா; IV:483.
BAALI - பாகாலி; IV:477.
BAALIS - பாகாலிசு; IV:477; பாகிலிசு.
BAANA - பாகனா; IV:477.
BAANAH - பாகநா, பாநா; IV:476.
BAARA - பாரா; IV:519.
BAASEIAH - பாசேயா; IV:486.
BAASHA - பாகசா, பாசா; IV:476.
BABEL - பாபேல்; IV:507.
BABYLON - பாபிலோன்; IV:502.
BABYLONIA - பாபிலோனியா; IV:497.
BACA, VALLEY OF - பாக்கா பள்ளத்தாக்கு; IV:483.
BACCHIDES - பாக்கிது; IV:484.
BACENOR - பாக்கனோர்; IV:483.
BADGER, ROCKBADGER - குழிமுயல், குறுமுயல்; II:885.
BAEAN - பேயான்; IV:780.
BAG - பை, கைப்பை; IV:812.
BAGOAS - பகோவா; IV:364.
BAHARUM, BAHARUMITE - பகரும், பகருமியர்; IV:360.
BAHURIM - பகூரிம்; IV:360.
BAJITH - வீடு; IV:404.
BAKBAKKAR - பகபக்கர்; IV:360.
BAKBUK - பகபூக்கு; IV:360.
BAKBUKIAH - பகபுக்கியா; IV:360.
BAKERS' STREET - அப்பம் சுடுவோர் வீதி; I:158.
BALAAM - பிலயாம்; IV:590.
BALADAN - பலாதான்; IV:433.
BALAH - பாலா; IV:540.
BALAK - பாலாக்கு; IV:540.
BALAMON - பாலமோன்; IV:540.
BALANCE - துலாக்கோல்; III:793.
BALBAIM - பால்பாயிம்; IV:551.
BALD LOCUST - மொட்டை, வெட்டுக்கிளி, V:372.
BALDMESS - மொட்டை, வழுக்கை; V:372.
BALL - பந்து; IV:399.
BALM - பொன் மெழுகு, தைல வகை; IV:829.
BALSAM TREE - பிசின் மரம்; IV:573.
BALTHASAR - பால்தசார்; IV:551.
BAMOTH - பாமோத்து; IV:509.
BAMOTH-BAAL - பாமோத்-பாகால்; IV:510.
BAN, EXCOMMUNICATION - விலக்கி வைத்தல், ஒதுக்கி வைத்தல்; V:833.

BANI - பானி; IV:569.
BANISHMENT - நாடு கடத்தப்படும் தண்டனை; IV:217.
BANK - வங்கி, வட்டிக்கடை; V:647.
BANNER, STANDARD - கொடி; III:45.
BANQUET - விருந்து; V:831.
BAPTISM - திருமுழுக்கு; III:706; ஞானஸ்நானம்; III:501.
BAR - பார்; IV:529.
BAR-JESUS - பாரேசு, பார்-இயேசு; IV:529.
BAR-JONA - பார்-யோனா; IV:533.
BAR-KOKHBA - பார்-கோக்பா; IV:529.
BARABBAS - பரபா; IV:407.
BARACHEL - பாரக்கேல்; IV:513.
BARACHIAH - பரக்கியா; IV:406.
BARAK - பாராக்கு; IV:519.
BARBARIAN - நாகரிகமற்றவன், மிலேச்சன்; IV:202.
BARBER - அம்பட்டன்; I:203.
BAREFOOT - வெறுங்கால்; V:936.
BARIAH - பாரியா; IV:520; பாரியகு.
BARKOS - பரக்கோசு; IV:407.
BARLEY - வாற்கோதுமை; V:739.
BARLEY HARVEST - வாற்கோதுமை அறுவடை; V:739.
BARNABAS - பர்னபா; IV:422.
BARNABAS, ACTS OF - பர்னபாவின் பணிநூல்; IV:425.
BARNABAS, EPISTLE OF - பர்னபா எழுதிய திருமுகம்; IV:423.
BARREN FIG TREE - காய்க்காத அத்திமரம்; II:721.
BARSABBAS - பர்சபா; IV:419.
BARTHOLOMEW - பர்த்தலமேயு; IV:420.
BARTHOLOMEW THE APOSTLEL, BOOK OF THE RESURRECTION OF CHRIST BY - பர்த்தலமேயு எழுதிய கிறிஸ்துவின் உயிர்ப்பு பற்றிய நூல்; IV:420.
BARTHOLOMEW, GOSPEL OF - பர்த்தலமேயு எழுதிய நற்செய்தி; IV:421.
BARTIMAEUS - பர்த்திமேயு; IV:421.
BARUCH - பாருக்கு; IV:529.
BARUCH, APOCALYPSE - பாருக்கின் வெளிப்பாடு; IV:528.
BARUCH, BOOK OF - பாருக்கின் நூல்;IV:520.
BARZILLAI - பர்சில்லாய்; IV:420.
BASEMATH - பாசமத்து; IV:484.
BASHAN - பாசான்; IV:485.
BASILIDES, GOSPEL OF - பாசிலிதசின் நற்செய்தி; IV:486.
BASKAMA - பாசிககமா; IV:486.
BASKET - கூடை; II:908.
BASTARD - வேசிப்பிள்ளை; V:946.
BAT - வௌவால்; V:960.
BATANEA - பத்தனேயா; IV:392.
BATH, BATHING - குளித்தல், கழுவுதல், துவைத்தல்; II:881.
BATH-RABBIM - பத்ரபீம்; IV:398.
BATH-SHUA - பத்சூவா; IV:392.
BATHSHEBA - பத்சேபா; IV:392.
BATTERING RAM - போர் இயந்திரம், அரண் தகர் பொறி; IV:844.
BATTLE ARRAY - அணி வகுத்து நிற்கும் படை; I:89.
BATTLEMENTS, CASTLE, CITADEL - கோட்டை, கொத்தளங்கள்; III:95.
BAVVAI - பவ்வாய்; IV:455.
BAZAAR - கடைவீதி; II:592.
BAZLITH, BAZLUTH - பட்சிலித்து, பட்சலூத்து; IV:384.
BEALIAH - பெகலியா; IV:691.
BEALOTH - பெகலோத்து; IV:691.
BEAM - நெசவாளரின் தறிக்கட்டை, படைமரம்; IV:333.
BEANS - அவரை; I:304.
BEAR - கரடி; II:627.
BEARD - தாடி; III:547.
BEASTS & BEAST - விலங்குகளும், விலங்கும்; V:835.
BEATEN GOLD - பொன்தகடு, அடிக்கப்பட்ட வேலை; IV:829.
BEATEN OIL - இடித்துப் பிழிந்த தூய்மையான எண்ணெய்; I:651.
BEATITUDE - பேறுகள்; IV:808.
BEAUTIFUL GATE - அழகுவாயில்; I:311.
BEAUTY - அழகு; I:310.
BEBAI - பேபாய்; IV:780.
BECHER - பெக்கர்; IV:692.
BECHERITE - பெக்கரியர்; IV:692.
BECORATH - பெக்கோரத்து; IV:693.
BECTILETH - பைக்திலத்து; IV:812.
BED - படுக்கை; IV:372.
BED (GARDEN) - பாத்தி, நாற்றங்கால்; IV:496.
BEDAD - பெதாது; IV:701.
BEDAN - பெதான்; IV:701.
BEDEIAH - பேதயா; IV:757.
BEDSTEAD - கட்டில்; II:596.
BEE - தேனீ; IV:42.
BEELIADA - பெகலியாதா; IV:691.
BEELZEBUL, BEELZEBUB - பெயல்செபூல், பெயல்செபூபு; IV:723.
BEER - பெயேர் IV:725.
BEERA - பெயேரா; IV:723.
BEERAH - பேயேரா; IV:723.
BEER-ELIM - பெயேரேலிம், பெயேர்-ஏலிம்; IV:723.
BEERI - பெயேரியர்; IV:723.
BEER-LAHAI-ROI - பெயேர்-லகய்-ரோயி; IV:726.
BEEROTH - பெயரோத்து; IV:724.

BEEROTH-BENE-JAAKAN - பெயரோத்-பென்-யாக்கான்; IV:724.
BEEROTHITES - பெயரோத்தியர்; IV:724.
BEER-SHEBA - பெயேர்-செபா; IV:725.
BE-ESTHTERAH - பெயசுதரா; IV:718.
BEHEMOTH - பெகமோத்து; IV:691; பெகெமோத்து.
BEKA - பெகா; IV:691.
BEL - பேல்; IV:806.
BEL AND THE DRAGON - பேல் சிலையும் நாகமும்; IV:807.
BELA (PERSON) - பேலா; IV:805.
BELA (PLACE) - பேலா; IV:805.
BELAITES - பேலாயியர்; IV:806.
BELIAL - பேலியால்; IV:806.
BELL - மணி; V:57.
BELLOWS - துருத்திகள்; III:791.
BELMAIN - பேல்மாயின்; IV:807.
BELOVED - அன்பிற்குரியவர்; I:343.
BELOVED DISCIPLE - அன்புச் சீடர்; I:360.
BELSHAZZAR - பெல்சாட்சர்; IV:746.
BELT - கச்சை; II:586.
BELTESHAZZAR - பெல்தசாட்சர்; IV:747.
BELTETHMUS - பெல்தேத்திமு; IV:747.
BEN - பென்; IV:752.
BEN-ABINADAB - பென்-அபினதாபு; IV:752.
BEN-AMMI - பென்-அம்மீ; IV:752.
BEN-DEKER - பென்-தெக்கர்; IV:753.
BEN-GEBER - பென்-கெபர்; IV:753.
BEN-HADAD - பெனதாது, பென்-அதாது; IV:748.
BEN-HAIL - பென்கயில்; IV:752.
BEN-HANAN - பென்-கனான்; IV:752.
BEN-HESED - பென்கெசது; IV:753.
BEN-HUR - பென்கூர்; IV:752.
BEN-ONI - பெனோனி, பென்-ஒனி; IV:752.
BEN-ZOHETH - பென்சோகேத்து; IV:753.
BENAIAH - பெனாயா; IV:749.
BENE-BERAK - பென-பராக்கு; IV:749.
BENE-JAAKAN - பென-யாக்கான்; IV:749.
BENEDICTION - ஆசீர் அளித்தல்; I:397.
BENEDICTUS - செக்கரியாவின் பாடல்; III:376.
BENEFACTORS - நன்மை புரிவோர்; IV:195.
BENINU - பெனினூ; IV:751.
BENJAMIN - பென்யமின்; IV:753.
BENJAMIN GATE - பென்யமின்வாயில்; IV:755.
BENO - பெனோ; IV:752.
BEON - பெகோன்;IV:692.
BEOR - பெகோர்; IV:691; பெயோர்.
BERA - பெரா; IV:728.
BERACAH - பெராக்கா; IV:728.
BERACAH VALLEY OF - பெராக்காப் பள்ளத்தாக்கு; IV:728.
BERAIAH - பெராயா; IV:728.
BEREA - பெரயா; IV:727.
BERECHIAH - பெரக்கியா; IV:727.
BERED - பெரேது; IV:740.
BERI - பெரி; IV:728; பேரி.
BERIAH - பெரீயா; IV.732.
BERITIES - பெரீயர்; IV:733.
BERNICE - பெர்னிக்கி; IV:742.
BEROEA - பெரோயா; IV:740.
BEROTHAH - பேரோத்தா; IV:805.
BEROTHAI - பேரோத்தாய்; IV:805.
BERYL - படிகப்பச்சை; IV:371.
BESAI - பெசாய்; IV:693.
BESODEIAH - பெசோதியா; IV:694.
BESOR, THE BROCK - பெசோர் ஓடை; IV;694.
BESTIALITY - விலங்கோடு புணர்தல்; V:840.
BETAH - பெற்றகு; IV:748.
BETEN - பெற்றன்; IV:748.
BETH - பேத்து; IV:780.
BETH-ANATH - பெத்-அனாத்து; IV:707.
BETH-ANOTH - பெத்தனோத்து, பெத்-அனோத்து; IV:707.
BETH-ARABAH - பெத்தராபா, பெத்-அராபா; IV:707.
BETH-ARBEL - பெத்தர்பேல், பெத்-அர்பேல்; IV:707.
BETH-ASHBEA - பெத்தசுபேயா; IV:706; பெத்-அஸ்பேயா.
BETH-AVEN - பெத்தாவன், பெத்-ஆவென்; IV:708.
BETH-AZMATETH - பெத்தசுமாவேத்து, பெத்-அசுமா வேத்து; IV:706.
BETH-BAAL-MEON - பெத்-பாகால்-மெகோன்; IV:714.
BETH-BARAH - பெத்பரா; IV:714.
BETH-BIRI - பெத்பிரீ; IV:715.
BETH-CAR - பெத்கார்; IV:702.
BETH-DAGON - பெத்தாகோன்; IV:707.
BETH-DIBLATHAIM - பெத்திப்லாத்தயிம்; IV:709.
BETH-EDEN - பெத்தேதன், பெத்-ஏதன்; IV:710.
BETH-EKED - பெத்தேக்கது, பெத்-ஏக்கது; IV:710.
BETH-EMEK - பெத்தேமக்கு, பெத்-ஏமக்கு; IV:711.
BETH-EZEL - பெத்தேட்செல், பெத்-ஏட்செல்; IV:710.
BETH-GADER - பெத்காதேர்; IV:701.
BETH-GAMUL - பெத்காமுல்; IV:702.
BETH-GILGAL - பெத்கில்காலு; IV:702.
BETH-HACCHERIM - பெத்தக்கரேம், பெத்-அக்கரேம்; IV:706.
BETH-HAGGAN - பெத்தகான், பெத்-ஆகான்; IV:706.
BETH-HARAM - பெத்தாராம், பெத்-ஆராம்; IV:707.
BETH-HARAN - பெத்தாரான்; IV:708.
BETH-HOGLAH - பெத்தொகிலா, பெத்-ஒகிலா; IV:713.
BETH-HORON - பெத்கோரோன்; IV:702.
BETH-JESHIMOTH - பெத்தசிமோத்து, பெத் எசி மோத்து; IV:706.
BETH-LE-APHRAH - பெத்லயபரா, பெத்-லெ-அபரா; IV:717.

BETH-LEBAOTH - பெத்லபவோத்து; IV:717.
BETH-MAACAH - பெத்-மாக்கா; IV:715.
BETH-MARCABOTH - பெத்மர்க்காபோத்து; IV:715.
BETH-MEON - பெத்மெகோன்; IV:715.
BETH-MILLO - பெத்மில்லோ; IV:715.
BETH-NATH - பெத்தனாத்து, பெத்-அனாத்து; IV:707.
BETH-NIMRAH - பெத்னிம்ரா; IV:717.
BETH-PAZZEZ - பெத்பசேசு; IV:714.
BETH-PELET - பெத்பெலேத்து; IV:715.
BETH-PEOR - பெத்பெயோர்; IV:715.
BETH-PHAGE - பெத்பகு; IV:714.
BETH-RAPHA - பெத்ராபா; IV:716.
BETH-REHOB - பெத்ரகோபு; IV:716.
BETH-SAIDA - பெத்சாய்தா; IV:703.
BETH-SHAN - பெத்சான்; IV:703.
BETH-SHEMESH - பெத்செமேசு; IV:705.
BETH-SHEMITE - பெத்செமேசியர்; IV:705.
BETH-SHITTA - பெத்சிற்றா; IV:704.
BETH-TAPPUAH - பெத்தப்புவாகு; IV:706.
BETH-TOGARMAH - பெத்தொகர்மா; IV:713.
BETH-ZAITH - பெத்சாயிது; IV:703.
BETH-ZATHA - பெத்சதா; IV:702.
BETH-ZECHARIAH - பெத்-செக்கரியா; IV:705.
BETH-ZUR - பெத்சூர்; IV:704.
BETHABARA - பேத்தபாரா; IV:780.
BETHANY - பெத்தானியா; IV:708.
BETHBASI - பெத்பாசி; IV:714.
BETHEL - பெத்தேல்; IV:711.
BETHER - பெத்தேர்; IV:711.
BETHLEHEM - பெத்லகேம்; IV:716.
BETHLEHEMITE - பெத்லகேமியர்; IV:717.
BETHUEL - பெத்துவேல்; IV:709.
BETHULIAH - பெத்தூலியா; IV:710.
BETOMASTHAIM - பெத்தோமசுத்தாயிம்; IV:713.
BETONIM - பெற்றோனிம்; IV:748.
BETROTHAL - மண ஒப்பந்தம்; V:53.
BEULAH - பெயுலா; IV:723.
BEVELED WORK - கைவினைத் தோரணங்கள்; III:43.
BEWITCH - மயக்குதல்; V:95.
BEYOND THE RIVER - நதிக்கு அப்பால்; IV:141.
BEZAI - பேட்சாய்; IV:757.
BEZALEL - பெட்சலேல்; IV:695.
BEZEK - பெசேக்கு; IV:693 .
BEZER - பெட்சேர்; IV:695 .
BIBLE, FAUNA IN THE - விவிலியத்தில் உயிரினங்கள்; V:858 .
BIBLE, THE - விவிலியம் V:871.
BIBLICAL CANON - O.T. - விவிலியத்திருமுறைப்பட்டியல் - பழைய ஏற்பாடு; V:842.
BIBLICAL CANON - N.T. - விவிலியத் திருமுறைப்பட்டியல் - புதியஏற்பாடு; V:851.
BIBLICAL CRITICISM - விவிலியத் திறனாய்வு; V:858.
BIBLICAL HERMENEUTICS - விவிலியப்பொருள் கோள்; V:864.
BICHRI - பிக்ரி; IV:571.
BICHRITES - பிக்ரியர்; IV:571.
BIDKAR - பிதகர்; IV:578.
BIER - பாடை; IV:492.
BIGTHA - பிகதா; IV:571.
BIGTHAN, BIGTHANA - பிகதான், பிகதானா; IV:571.
BIGVAI - பிகவாய்; IV:571.
BILDAD - பில்தாது; IV:606.
BILEAM - பிலயாம்; IV:591.
BILGAH - பில்கா; IV:605.
BILGAI - பில்காய்; IV:605.
BILHAH (PERSON) - பில்கா; IV:605 .
BILHAH (PLACE) - பில்கா; IV:605 .
BILHAN - பில்கான்; IV:605.
BILSHAN - பில்சான்; IV:605.
BIMHAL - பிம்கால் IV:580.
BINDING AND LOOSING - கட்டுதலும், அவிழ்த்தலும்; II:596.
BINEA - பினயா; IV:608.
BINNUI - பின்னூய்;IV:611.
BIRD - பறவை; IV:467.
BIRD OF PREY - பட்சிக்கும் பறவை, இரைமேல் பாயும் பறவை; IV:384.
BIRSHA - பிர்சா; IV:585.
BIRTH - பிறப்பு; IV:606.
BIRTHRIGHT - பிறப்புரிமை; IV:607.
BIRZAITH - பிர்சாவித்து; IV:585.
BISHLAM - பிஸ்லாம்; IV:577.
BISHOP, PASTOR - ஆயர், மேற்பார்வையாளர்; I:489.
BITHIAH - பித்தியா; IV:578.
BITHRON - பித்ரோன்; IV:579.
BITHYNIA - பித்தினியா; IV:578.
BITTER, BITTERNESS - கசப்பு; II:575.
BITTER HERBS - கசப்புக்கீரைகள்; II:576.
BITTER LAKES - கசப்பு ஏரிகள்; II.576.
BITTERNESS, WATER OF - கசப்பு நீர்; II:576.
BITUMEN - நிலக்கீல்; IV:258.
BIZIOTHIAH - பிசியோத்தியா; IV:572.
BIZTHA - பிசித்தா; IV:572.
BLACK - கருமை, காரிருள்; II:631.
BLASPHENEY - இறைநிந்தை; I:815.
BLASTUS - பிலாஸ்து; IV:591.
BLEMISH - அங்கவீனம்; I:28; குறைபாடு, ஊனம், பழுது, மாசுமறு; II:887.
BLESSING - ஆசீர்; I:390.
BLESSINGS AND CURSINGS - ஆசீரும் சாபமும்; I:386.
BLIGHT - வெப்பக்காற்று; V:909.
BLINDNESS - குருட்டுத்தன்மை; II:867.
BLOOD - இரத்தம்; I:718.
BLOOD GUILT - இரத்தப்பழி; I:716.

BLOOD, AVENGER OF - இரத்தப்பழி வாங்குவோன்; I:716.
BLOOD, BRIDEGROOM OF - இரத்த மணமகன்; I:717.
BLOOD, FIELD OF - இரத்த நிலம்; I:716.
BLOOD, FLOW OF - இரத்தப் போக்கு, பெரும்பாடு; I:717.
BLOOD, SHEDDING OF - இரத்தம் சிந்துதல்; I:719.
BLOODY SWEAT - இரத்த வியர்வை; I:720.
BLUE, VIOLET, PURPLE - நீலம், ஊதா, கருஞ்சிவப்பு; IV:319 .
BOANERGES - பொவனேர்கேசு; IV:819 இடியின் மக்கள்; I:651.
BOAR - காட்டுப்பன்றி; II:709.
BOAT - படகு; IV:371.
BOAZ - போவாசு; IV:855.
BOCHERU - பொக்கரு; IV:814.
BOCHIM - போக்கிம்; IV:831.
BODY - உடல்; 11:4.
BODYGUARD - மெய்க்காப்பாளர்; V:349.
BOHAN - பொகான்; IV:814.
BOIL - கொப்புளம், கட்டி; III:49.
BOLDNESS - மனத்துணிவு; V:168.
BONES - எலும்புகள்; II:339.
BOOK - நூல், புத்தகம்; IV:324.
BOOTH - குடில், குடிசை, பந்தல், கூடாரம்; II:853.
BOOTY - கொள்ளைப்பங்கு; III:89.
BORASHAN - போராசன்; IV:839.
BORROW, LEND - கடன்வாங்குதல், கொடுத்தல்; II:591.
BOSOR - போசோர்; IV:831.
BOSSED, BOSSES - குமிழ்கள்; II:862.
BOUGAEAN - [illegible]கயான்; IV:620.
BOW AND ARROW - வில்லும் அம்பும்; V:841.
BOZEZ - போட்சேசு; IV:831.
BOZKATH - பொட்சகத்து; IV:814.
BOZRAH - பொட்சரா; IV:814.
BRACELET - கையணி, கைவளையல், கைக்காப்பு; III:42.
BRAIDING - சடை பின்னுதல்; II:116.
BRANCH - கிளை/தளிர்; II:790 .
BREAD - அப்பம், ரொட்டி; I:153.
BREAD OF PRESENCE, SHOWBREAD - திருமுன்னிலை அப்பம்; III:714 .
BREATH - மூச்சு; V:326.
BRIBE - கையூட்டு, கைக்கூலி; III:42.
BRICKS - செங்கல்; III:380.
BRIDE - மணமகள்; V:54.
BRIER - நெருஞ்சிமுள், முட்செடி; IV:342.
BRIMSTONE - கந்தகம், கந்தகக்கல்; II:610.
BROAD PLACE - அகன்ற இடம், பரந்த இடம்; I:6.
BROAD WALL, THE - அகலமான மதில், பெரிய மதில்; I:5.
BROKEN AND CONTRITE - நொறுங்கிய, குற்ற முணர்ந்த; IV:348.
BRONZE - வெண்கலம்; V:908.
BRONZE LAVER - வெண்கல நீர்த்தொட்டி; V:907.
BRONZE SEA - வெண்கலக்கடல்; V:907.
BRONZE SERPENT - வெண்கலப்பாம்பு; V:907.
BROOK - ஓடை; II:563.
BROOM-TREE - சூரைச்செடி; III:358.
BROTH - குழம்பு; II:884.
BROTHER - சகோதரன்; III:108.
BROTHERLY LOVE - சகோதரத்துவ அன்பு; III:112.
BROTHERS OF THE LORD - ஆண்டவரின் சகோதரர்கள்; I:436.
BUCKLE - சரடு; III:147.
BUILD - கட்டி எழுப்புதல்; II:592.
BUILDING A HOUSE ON ROCK - கற்பாறையில் வீடு கட்டுதல்; II:684.
BUKKI - புக்கி; IV:620.
BUKKIAH - புக்கியா; IV:621.
BUL - பூல்; IV:688.
BULL - காளை; II:746.
BULRUSH - கோரைப்புல், நாணல்செடி; III:104.
BULWARK - மதில் அரண்; V:63.
BUNAH - பூனா; IV:689.
BUNNI - பூனி; IV:689.
BURDEN - சுமை, பளு; III:350.
BURIAL - அடக்கம்; I:57.
BURNING - எரித்தல், எரிதல்; II:280.
BURNING BUSH - எரியும் முட்புதர்; II:283.
BUSHEL - மரக்கால்; V:96.
BUTLER - மது பரிமாறுவோன்; V:64.
BUZ - பூசு; IV:679.
BUZI - பூசி; IV:679.
BUZITE - பூசியர்; IV:679.
BYBLOS - பிபுலோசு; IV:579.

C

CABBON - கபோன்; II:613.
CABUL - காபூல்; II:717.
CAESAR - சீசர்; III:305.
CAESAR, APPEAL TO - சீசருடைய மன்றத்திற்கு முறையீடு; III:304.
CAESAR'S HOUSEHOLD - சீசருடைய வீட்டைச் சேர்ந்தவர்கள்; III:305 .
CAESAREA - செசரியா; III:383.
CAESAREA PHILIPPI - செசரியா பிலிப்பி; III:383.
CAGE - கூண்டு; II:909.
CAIAPHAS, JOSEPH - கயாபா, யோசேப்பு; II:625.
CAIN - காயின்; II:720.
CAINAN - காயினான்; II:720.

CALAH - காலாகு; II:740.
CALAMITY - பேரிடர்; IV:790.
CALAMUS - நறுமண வசம்பு, நறுமணப்புல்; IV:163; வசம்பு, கன்னல்; V:647.
CALCOL - கல்கோல்; II:659.
CALEB - காலேபு;II:741.
CALEB-EPHRATAH - காலேபு-எப்பிராத்தா; II:742.
CALEBITE - காலேபியர்; II:741.
CALENDAR - ஆண்டுக்குறிப்பேடு; I:456.
CALLING, VOCATION - அழைப்பு; I:317.
CALLISTHENES - கல்லிசுத்தேன்; II:662.
CALNEH - கலினே; II:649.
CALNO - கலினோ; II:650.
CALVARY - கல்வாரி II:664.
CAMEL - ஒட்டகம்; II:490.
CAMEL'S HAIR - ஒட்டக மயிராடை; II:490.
CAMEL'S THORN - ஒட்டக முள்; II:490.
CAMP - பாளையம், பாசறை; IV:566
CANA - கானா; II:748.
CANAAN (PERSON) - கானான்; II:753.
CANAAN (PLACE) - கானான்; II:753.
CANAANITES - கானானியர்கள்; II:749.
CANANAEN - கானானியர்; II:749.
CANDACE - கந்தாக்கு; II:610; கந்தகி.
CANNEH - கன்னே; II:701.
CAP, TURBAN - பாகை, தலைப்பாகை; IV:483.
CAPERNAUM - கப்பர்நகூம்; II:615; கப்பர்நகும்.
CAPHARSALAMA - கபர்ச்சலாமா; II:611.
CAPHTORIM - கப்பதோரியர்; II:614.
CAPHTOR - கப்பதோர்; II:614.
CAPPADOCIA - கப்பதோக்கியா; II:613.
CAPTIVES - போர்க்கைதிகள்; IV;847.
CAPTIVITY - அடிமைத்தனம்; I:74.
CARAVAN - வணிகர் குழு, பயணியர் குழு; V:653.
CARCHEMIS - கர்கமிசு; II:634; கர்க்கமிசு.
CARE & CAREFULNESS - அக்கறை, கவனம்; I:21.
CARIA - காரியா; II:724.
CARKAS - கர்காசு; II:634; கார்கசு.
CARMEL - கர்மேல்; II:635.
CARMEL MOUNT - கர்மேல் மலை; II:635.
CARMELITE - கர்மேலியர்; II:635.
CARMELITESS - கர்மேலியள்; II:635.
CARMI - கர்மி; II:635.
CARMITES - கர்மியர்; II:635.
CARNAL - ஊனியல்பு II:142.
CARNAM - கர்னயிம்; II:636.
CARNELIAN, SARDIUS - பதுமராகம்; IV:391.
CARPENTER - தச்சர்; III:509.
CARPUS - கார்ப்பு; II:725.
CARRION VULTURE - குருகு; II:866.
CARSHENA - கரிசனா; II:629; கர்சனா.
CART - வண்டி; V:654.
CARVING, ENGRAVING - செதுக்குதல் III:385.
CASIPHIA - காசிப்பியா;II:704.
CASLUHIM - கசுலுகிம்; II:584; கஸ்லுகிம்.
CASPIN - கசிப்பின்; II:583.
CASTOR PLANT - ஆமணக்குச் செடி; I:481.
CASTOR, POLLUX - கசுத்தோர், பொல்லுக்சு; II:583.
CAT - பூனை; IV:690.
CATARACT - நீர்வீழ்ச்சி, அருவி; IV:319.
CATERPILLAR - கம்பளிப்பூச்சி; II:622.
CATHOLIC LETTERS - பொதுத் திருமுகங்கள்; IV:815.
CATTLE - கால்நடை, ஆடுமாடு; II:743.
CAUDA - கவுதா; II:671.
CAVALRY - குதிரைப்படை; II:861.
CAVE, DEN - குகை; II:847.
CEDAR - கேதுரு மரம்; III:32.
CELESTIAL BODIES - விண்ணைச் சார்ந்த உடல்கள்; V:819.
CELIBACY - மணங்கொள்ளா நோன்பு; V:53.
CELLAR - நிலவறை; IV:259.
CENCHREAE - கெங்கிரேயா; III:1.
CENDEBEUS - கெந்தபேயு; III:10.
CENSER - தூபக்கலசம்; III:813.
CENSUS - மக்கள் தொகைக் கணக்கெடுப்பு; V:47.
CENTRE OF THE LAND - நாட்டின் நடுவு; IV:225.
CENTURION - நூற்றுவர் தலைவன்; IV:327; செந்தூரியன்; III:388.
CEPHAS - கேபா; III:33.
CEROMONIAL LAWS - சடங்குச்சட்டம்; III:115.
CHABRIS - கபிரி; II:611.
CHAEREAS - கைரேயா; III:43.
CHAFF - பதர், சருகு, IV:388; தூசி, பதர்; III:805.
CHAINS - சங்கிலிகள்; III:115.
CHALDEA, CHALDEANS - கல்தேயா, கல்தேயர்கள்; II:659.
CHALICE OF ANTIOCH - அந்தியோக்கியாவின் கிண்ணம்; I:116.
CHALKSTONES - சுண்ணாம்புக் கற்கள்; III:348.
CHALPHI - காலிபி; II:741.
CHAMBER OF THE SOUTH - தென்திசை விண்மீன் குழுக்கள்; IV:27.
CHAMBERLAIN - அரண்மனை மேற்பார்வையாளர்; I:239.
CHAMBERLAIN, OVERSEER - மேற்பார்வையாளர்; V:369; பச்சோந்தி; IV:369.
CHAMLEON - ஓணான்; II:563.
CHANNELS OF THE SEA - கடலின் அடிப்பரப்பு; II:587.
CHAPHENATHA - கப்பனாத்தா; II:619.
CHARAX - காராகு; II:723.
CHARCOAL - கரி; II:629.
CHARGERS, STEEDS, STALLION - போர்க்குதிரை IV:847.
CHARIOT - தேர், இரதம்; IV:32.

CHARIOTEER - தேர்ப்பாகன், தேரோட்டி; IV:40.
CHARISMS - அருட்கொடைகள்; I:263.
CHARMIS - கார்மி; II:725.
CHASM - பெரும்பிளவு; IV:739.
CHASPHO - கசிபோ; II:583.
CHEBAR - கெபார்; III:11.
CHECKER WORK - பின்னல் வேலைப்பாடு; IV:610.
CHEDORLAOMER - கெதர்லகோமர்; III:7.
CHEESE - பாற்கட்டி, பாலாடைக்கட்டி; IV:568.
CHELAL - கெலால்; III:23
CHELLEANS - கெல்லயாயியர்; III:26.
CHELOUS - கெலூச; III:24.
CHELUB - கெலூபு; III:24.
CHELUBAI - கெலுபாய்; III:24.
CHELUHI - கெலுகி; III:24.
CHEMOSH - கெமோசு; III:16.
CHENAANAH - கெனானா; III:28 .
CHENANI - கெனானி; III:28.
CHENANIAH - கெனனியா; III:27.
CHEPHAR-AMMONI - கெபரம்மோனி; III:10.
CHEPHIRAH - கெபிரா; III:12.
CHERAN - கெரான்; III:18.
CHERETHITES-PELETHITES - கெரேத்தியர்-பெலேத்தியர்; III:21.
CHERITH, BROOK - கெரீத்து, ஓடை; III:19.
CHERUB (PLACE) - கெருபு; III:20.
CHERUB, CHERUBIM (ANGEL) - கெருபு, கெருபிம்; III:20.
CHESALON - கெசலோன்; III:2.
CHESED - கெசேது; III:4.
CHESIL - கெசீல்; III:3.
CHEST - பெட்டி; IV:695.
CHESULLOTH - கெசுல்லோத்து; III:4.
CHEZIB - கெசீபு; III:3 .
CHETH - கேத்து; III:33.
CHIDON - கீதோன்; II:838.
CHIEF - தலைவர்; III:539.
CHILD - குழந்தை; II:882.
CHILDBEARING - குழந்தையைப்பெறுதல்; II:884.
CHILDREN OF GOD - இறைவனின் பிள்ளைகள்; I:949.
CHILEAB - கிலயாபு; II:782.
CHILIASAM - கிலியாசம்; II:783.
CHILION - கிலியோன்; II:783.
CHILMAD - கிலிமாது; II:783; கில்மாது.
CHIMHAM - கிங்காம்; II:754.
CHINNERETH - கின்னரேத்து; II:836; கினரேத்து.
CHINNEROTH - கின்னரோத்து; II:836; கினரோத்து.
CHIOS - கீயு; II:839.
CHISLEU - கிசிலேவு; II:754.
CHISLON - கிசிலோன்; II:754.
CHISLOTH - TABOR - கிசிலோத்து தாபோர்; II:754 -
CHITLISH - கிதிலீசு; II:758; கித்திலிசு.
CHLOE - குலோயி; II:879 .
CHOBA - கோபா; III:97.
CHORAZIN - கொராசின்; III:51.
CHRIST - கிறிஸ்து; II:795.
CHRIST AND ABGARUS - கிறிஸ்துவும் அப்காரும்; II:835.
CHRIST, APPARITIONS OF - உயிர்த்த இயேசு அளித்த காட்சிகள்; II:51.
CHRIST, BODY OF - கிறிஸ்துவின் உடல்; II:820.
CHRIST, BRIDE OF - கிறிஸ்துவின் மணமகள்; II:827.
CHRIST DAY OF - கிறிஸ்துவின் நாள்; II:825.
CHRIST, DEATH OF - கிறிஸ்துவின் மரணம்; II:827.
CHRIST, DIVINITY OF - கிறிஸ்துவின் இறைத் தன்மை; II:818.
CHRIST, GENEOLOGY - கிறிஸ்துவின் தலைமுறை அல்லது மரபுமுறை; II:822.
CHRIST, HUMANITY OF - கிறிஸ்துவின் மனிதத் தன்மை; II:835.
CHRIST, PASSION OF - கிறிஸ்துவின் பாடுகள்; II:826.
CHRISTIAN MNISTRY - கிறிஸ்தவப் பணி அமைப்பு; II:791.
CHRISTIANS - கிறிஸ்தவர்கள்; II:794.
CHRISTMAS - கிறிஸ்து பிறப்புவிழா, கிறிஸ்மஸ்; II:818.
CHRISTOLOGY - கிறிஸ்து இயல்; II:815.
CHRONICLES - நாளேடு; IV:252.
CHRONICLES I-II, BOOK OF - நாளாகமம் I-II, ஆட்சிக்குறிப்பேடு நூல்கள், I-II; IV:239.
CHRONOLOGY - காலவரிசைமுறை; II:735 .
CHRYSOLITE - சுவர்ணரத்தினம்; III:352.
CHURCH - திருச்சபை; III:641.
CHURCH GOVERNMENT - திருச்சபையின் ஆட்சி முறை; III:653.
CHUSI - கூசி II:905.
CHUZA - கூசா; II:904.
CILICIA - சிலிசியா; III:285.
CIMMERIANS - சிமிரியர்; III:279.
CINNAMON, CASSIA - இலவங்கம்; I:754.
CIRCUMCISION - விருத்தசேதனம்; V:828.
CISTERN - பள்ளம், கிணறு, தொட்டி; IV:466.
CITIES OF REFUGE - அடைக்கல நகரங்கள்; I:76.
CITIES OF THE VALLEY - சமவெளி நகர்கள்; III:138.
CITIZENSHIP - குடியுரிமை; II:852.
CITY - நகரம்; IV:128.
CITY AUTHORITIES - நகர அதிகாரிகள்;IV:127.
CITY OF PALM TREES - பேரீச்சை நகர்; IV:804.
CITY OF WATERS - நீரூற்று நகர்; IV:309.
CLAMP - கீல் முனை; II:841.
CLAROMONTANUS CODEX - கிளாரோமோன்தானுவின் கையெழுத்துச் சுவடி; II:789.

CLASP, HOOK - கொக்கி, தூண்டில் முள்;III:44.
CLAUDIA - கிளாதியா; II:787.
CLAUDIUS - கிளாதியு; II:787.
CLAY - களிமண்; II:679.
CLAY TABLETS - மண் தகடு; V:62; களிமண் தகடு; II:679.
CLEAN AND UNCLEAN - தூய்மையான, தூய்மை யற்ற, (சுத்த-அசுத்த); III:819.
CLEMENT - கிளமந்து; II:787.
CLEMENT, EPISTLE OF - கிளமந்தின் திருமுகங்கள்; II:786.
CLEOPAS - கிளயோப்பா; II:787.
CLEOPATRA - கிளியோப்பத்திரா II:789.
CLOPAS - கிளோப்பா; II:791.
CLOTHING - ஆடை அணிதல்; I:404.
CLOTHING, DRESS - ஆடை, உடை; I:401.
CLOUD - மேகம்; V:360 .
CLUD - தடி, குண்டாந்தடி, கைத்தண்டு; III:510.
CNIDUS - கினிது; II:835.
COAL - நிலக்கரி, கரி; IV.258 .
COAT OF MAIL - மார்புக்கவசம்; V:229 .
COCK - சேவல்; III:443.
CODEX ALEXANDRINUS - அலக்சாந்திரியச் சுவடி; I:297.
CODEX BEZAE - பேசே சுவடி; IV:756.
COELE - SYRIA - கூலே - சீரியா; II:913.
COL-HOZEH - கொல்-கொசே; III:87; கொல்கோசே.
COLONY - குடியிருப்பு; II:852 .
COLOSSAE - கொலோசை; III:77.
COLOSSIANS, LETTER TO THE - கொலோசையருக் குத் திருமுகம்; III:78.
COLOUR - நிறம், வண்ணம்; IV:265.
COLT - குட்டி; II:855 .
COMFORT, CONSOLATION - ஆறுதல், தேற்றுதல்; I:529.
COMMANDMENT - கட்டளை; II:592.
COMMEND - நற்சான்று கூறுதல், புகழ்தல்; IV:172.
COMMISSION, THE GREAT - பெரும் கட்டளை; IV:738.
COMMON - பொதுவான, சாதாரணமான; IV:815.
COMMON CHARACTERS - சாதாரண எழுத்துகள்; III:178.
COMMON LIFE - பொதுவாழ்வு; IV:815.
COMMONWEALTH - சம உரிமைச் சமூகம்; III:134.
COMMUNION - ஒன்றிப்பு; II:538.
COMMUNITY OF GOODS - பொதுவுடைமைச் சமூகம்; IV:816.
CONANIAH - கொனனியா; III:90.
CONCUBINE - வைப்பாட்டி; V:960.
CONDUIT - கால்வாய்; II:745.
CONFESSION - அறிவித்தல்; I:330.
CONFIDENCE - திட நம்பிக்கை; III:616.
CONFIRMATION - உறுதி பூசுதல்; II:123.
CONFISTICATION - பறிமுதல் செய்தல்; IV:469
CONGREATION, ASSEMLY - கூட்டம், கூட்டமைப்பு; II:909.
CONIAH - கோனியா; III:107.
CONSCIENCE - மனச்சான்று, மனச்சாட்சி; V:165.
CONSECRATE - திருநிலைப்படுத்துதல்; III:655.
COOKING AND COOKING UTENSILS - உணவு சமைப்பதும், உணவு சமைக்கும் பாத்திரங்களும்; II:21.
COPPER - செம்பு; III:419.
COPPERSMITH - கன்னான்; II:696.
COPTIC VERSION - கோப்திக்கு மொழிபெயர்ப்பு (விவிலியத்தின்); III:99.
CORAL - பவழம்; IV:440.
CORBAN - கோர்பான்; III:105.
CORD, ROPE - கயிறு; II:626.
CORIANDER SEED - கொத்த மல்லி விதை; III:49.
CORINTH - கொரிந்து; III:52.
CORINTHIANS-I, LETTER TO THE - கொரிந்தியருக் குத் திருமுகம்-1; III:54.
CORINTHIANS-II, LETTER TO THE - கொரிந்தியருக் குத் திருமுகம்-2; III:61.
CORINTHIANS-III, LETTER TO THE - கொரிந்தியருக் குத் திருமுகம்-3; III:75.
CORMORANT - நீர்க்கோழி, சகோரம்; IV:318.
CORNELIUS - கொர்னேலியு; III:75.
CORNER GATE - மூலை வாயில்; V:332.
CORNERSTONE - மூலைக்கல்; V:332.
CORNER, UPPER CHAMBER OF - மூலையிலிருந்த மேல்மாடி; V:332.
CORRUPTION - அழிந்து போதல்; I:311.
COS - கோசு; III:93.
COSAM - கோசாம்; III:93.
COSMETICS - ஒப்பனைப் பூச்சுக்கள்; II:512.
COTTON - பஞ்சு; IV:371.
COUNCIL - அவை; I:308.
COUNSEL - ஆலோசனை; I:513.
COUNSELLOR - ஆலோசனையாளர்; I:514.
COURIER - விரைவு அஞ்சலர்; V:832.
COURT OF LAW - நீதி மன்றம்; IV:287.
COUSIN - உறவினர்; II:122.
COVENANT - உடன்படிக்கை; II:6.
COVENANT, ARK OF THE - உடன்படிக்கையின் பேழை; II:15.
COVENANT, BOOK OF - உடன்படிக்கையின் புத்தகம்; II:15.
COVERING, COVERLET, RUG - போர்வை; IV:847.
COVETOUSNESS, CUPIDITY, GREED - பேராசை IV:787.
COW - பசு; IV:369.
COZBI - கோசுபி; III:94.
COZEBA - கோஸ்பா; III:94.
CRAFTS - கைத்தொழில்கள், வேலைகள்; III:40.

CRANE - நாரை; IV:237.
CRATES - கிராத்தே; II:765.
CRAWLING THINGS - ஊர்வன; II:137.
CREATION - படைப்பு; IV:377.
CREATURES, LIVING - உயிரினங்கள், உயிருள்ள படைப்புக்கள்; II:42.
CRESCENS - கிரேசெக்கு; II:779; கிரேஸ்கு.
CRESCENT - குளிசங்கள், இளம்பிறை அணிகள்; II:991.
CRETE - கிரேத்து; II:779.
CRIB - தொட்டில், தொழுவம்; IV:82.
CRICKET - சுவர்க்கோழி; III:352.
CRIMES AND PUNISHMENT - குற்றங்களும் தண்டனைகளும்; II:887.
CRIMSON, SCARLET - நல்ல சிவப்பு; IV:156.
CRISPUS - கிரிசிப்பு; II:766; கிறிஸ்பு.
CROCODILE - முதலை; V:302.
CROSS - சிலுவை; III:287.
CROSS, INSCRIPTION ON THE - சிலுவையின்மேல் குற்ற அறிக்கை; III:293.
CROWN - மணிமுடி; V:58.
CROWN OF THORNS - முள்முடி; V:313.
CRUCIBLE - உலைக்களம்; II:115.
CRUCIFIXION - சிலுவையில் அறைதல்; III:290.
CRUSE - கலயம்; II:636.
CUB - கூபு; II:909.
CUCUMBER - வெள்ளரிக்காய்; V:932.
CUMININ - சீரகக்செடி; III:318.
CUNEIFORM - ஆப்பு எழுத்துக்கள்; I:479.
CUN - கூன்; II:915.
CUP - கிண்ணம், கோப்பை; II:755.
CUPBEARER - பானம் பரிமாறுபவர்; IV:569.
CURDS - தயிர், வெண்ணெய்; III:528.
CURSE - சாபம்; III:187.
CURTAIN, SCREEN - திரை; III:740.
CUSH (PERSON) - கூசு; II:905.
CUSH (PLACE) - கூசு; II:905.
CUSHAN - கூசான்; II:905.
CUSHAN - RISHATHAIM - கூசான்-ரிசத்தாயிம்; II:904.
CUSHI - கூசி; II:905.
CUSHITE - கூசியர்; II:905.
CUSTODIAN, GUIDE - வழித்துணை; V:672.
CUTHA, CUTH - கூத்தா; II:909.
CYPRESS, TEREBINTH - தேவதாரு மரம்; IV:41.
CYPRUS - சைப்பிரசு; III:445.
CYRENE - சிரேன்; III:284.
CYRENIANS - சிரேனியர்; III:284.
CYRUS - சைரசு; III:446.

D

DABBESHETH - தபசேத்து; III:523
DABERATH - தபராத்து; III:524
DAGON - தாகோன்; III:546.
DALETH - தாலத்து; III:562.
DALMANUTHA - தல்மனுதா. III:539.
DALMATIA - தல்மாத்தியா; III:539.
DALPHON - தல்போன்; III:539.
DAMARIS - தாமரி; III:552.
DAMASCUS - தமஸ்கு; III:526.
DAMASCUS GATE - தமஸ்கு வாயில்; III:528.
DAMASCUS, COVENANT OF - தமஸ்கு நகர உடன்படிக்கை அல்லது ஏடு; III:528.
DAN (PERSON) - தாண்; III:547.
DAN (PLACE) - தாண்; III:549.
DANCING - நடனமாடுதல்; IV:136.
DANIEL - தானியேல்; III:587.
DANIEL, BOOK OF - தானியேல் நூல்; III:588.
DANNAH - தன்னா; III:544.
DAPHNE - தாபினே; III:550.
DAPPLED - புள்ளிகளையுடைய; IV:659.
DARDA - தர்தா; III:530.
DARIC OF GOLD, DRACHMA - திராக்குமா, பொன், பொற்காசு; III:628.
DARIUS - தாரியு; III:559.
DARIUS, THE MEDE - தாரியு மேதியன்; III:560.
DARKNESS - இருள்; I:738.
DARKON - தர்க்கோன்; III:529.
DATES - பேரீச்சைப்பழம்; IV:904.
DATHAN - தாத்தான்; III:550.
DATHEMA - தாத்தமா; III:550.
DAUGHTER - மகள், புதல்வி; V:2.
DAUGHTER-IN-LAW - மருமகள், V:130.
DAVID - தாவீது; III:576.
DAVID, CITY OF - தாவீதின் நகர்; III:574.
DAVID, STAIRS OF THE CITY OF - தாவீது நகரின் படிகள்; III:576.
DAWN - இளஞாயிறு; I:766.
DAY - நாள்; IV:253.
DAY STAR - விடிவெள்ளி; V:763.
DAY'S JOURNEY - ஒருநாள் பயணம், ஒரு நாள் வழி; II:518.
DEACON - திருத்தொண்டர்; III:654.
DEACONESS - திருப்பணிப்பெண்; III:656.
DEAD, ABODE OF THE - இறந்தோரின் உறைவிடம்; I:772.
DEAD SEA - சாக்கடல்; III:163.
DEAD SEA SCROLLS - சாக்கடல் ஏடுகள், சுருள்கள்; III:164.

DEATH - இறப்பு; I:775.
DEBIR (PERSON) - தெபீர்; IV:18.
DEBIR (PLACE) - தெபீர்; IV:18.
DEBORAH - தெபோரா; IV:19.
DEBT, DEBTOR - கடன், கடன்பட்டவன்; II:590.
DECAPOLIS - தெக்கப்பொலி; IV:1.
DECEPTION/DISAPPOINTMENT - ஏய்ப்பு/ஏமாற்றம்; II:421.
DECISION, VALLEY OF - தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கு; III:768.
DECK - கப்பலின் மேல்தளம்; II:616.
DECREE - சட்ட அறிவிப்பு; III:116.
DEDAN - தெதான்; IV:17.
DEDICATION FEAST OF - அர்ப்பண விழா; I:290.
DEFILE - தீட்டுப்படுத்துதல்; III:749.
DEHAVITES - தெகாவியர்; IV:1.
DELAIAH - தெலாயா; IV:25.
DELILAH - தெலீலா; IV:26.
DELOS - தேலோ; IV:41.
DEMAS - தேமா; IV:31.
DEMETRIUS - தெமேத்திரியு; IV:20.
DEMON, DEMONOLOGY - பேய், பேயியல்; IV:780.
DEMONIAC - பேய் பிடித்தவன்; IV:785.
DEMOPHON - தெமோபோன்; IV:22.
DENARIUS - தெனாரியுஸ்; IV:27.
DENY - மறுத்தல், மறுதலித்தல்; V:157.
DEPOSIT - ஒப்படைக்கப்பட்ட பொருள்; II:512.
DEPUTY - பிரதிநிதி; IV:580.
DERBE - தெருபை; IV:24.
DESCENT IN HADES - பாதாளத்தில் இறங்குதல்; IV:493.
DESERT - பாலைவனம்; IV:546.
DESIRE - ஆசை; I:397.
DESOLATING SACRILEGE - நடுங்கவைக்கும் தீட்டு, பாழாக்கும் அருவருப்பு, கொடும்பாவச் செயல்; IV:137.
DESSAU - தெசாவு; IV:17.
DESTINY - ஊழ்; II:141.
DESTROYER - அழிப்பவன்; I:312.
DEUEL - தெகுவேல்; IV:1.
DEUTERONOMIC HISTORY - துணைச்சட்டப் பாரம்பரிய வரலாறு; III:776; உபாகமப் பாரம்பரிய வரலாறு.
DEUTERONOMY - உப ஆகமம்; II:38.
DEUTERONOMY, BOOK OF - துணைச்சட்டநூல், உபாகமம்; III:777.
DEVIL - அலகை, பேய்; I:293.
DEVOTED - அர்ப்பணிக்கப்பட்ட; I:291.
DEVOUT - பக்தியுள்ள, இறைப்பற்றுடையோர்; IV:366.
DEW, MIST, SNOW - பனி, மூடுபனி, உறைபனி, வெண்பனி; IV:470.
DIADEM - மகுடம்; V:15.
DIAL - நிழற்கடிகை அல்லது கதிரவக் கடிகை; IV:265.
DIATESSARON OF TATIAN - தேசியனின் நற்செய்தி ஒருங்கமைவு; IV:28.
DIABLAIM - திப்லயிம்; III:622.
DIBON - தீபோன்; III:751.
DIBON-GAD - தீபோன்-காது; III:752.
DIBRI - திப்ரி; III:621.
DIDACHE - திதாகே; III:618.
DIDRACHMA - திதிராக்குமா; III:620.
DIDYMUS - திதிமு; III:620.
DIKLAH - திக்லா; III:614.
DILEAN - திலயான்; III:741.
DILL - சோம்பு; III:458.
DIMNAH - திம்னா; III:625.
DIMONAH - தீமோனா; III:756.
DIMON - தீமோன்; III:756.
DINAH - தீனா; III:774.
DINAITES - தீனாவியர்; III:774.
DINHABAH - தின்காபா; III:742.
DICGNETUS, LETTER TO - தியோக்னேத்துவுக்கு எழுதப்பட்ட கடிதம்; III:626.
DIONYSIA - தியோனிசியா; III:626.
DIONYSIUS - தியோனிசியு; III:626.
DIONYSUS - தியோனிசு; III:627.
DIOSCORINTHIUS - தியோஸ்கொரிந்தியு; III:626.
DIOOTREPHES - தியோத்திரபு; III:626.
DIPHATH - தீபத்து; III:751.
DISCHARGE - இரத்த ஊறல்; I:716.
DISCIPLE - சீடன்; III:306.
DISCIPLINE - பயிற்றுவித்தல், கற்றுக்கொடுத்தல்; IV:405.
DISCRETION AND PRUDENCE - அறிவுக் கூர்மையும், விவேகமும்; I:334.
DISCUS - சில்லு; III:297.
DISEASE - நோய், பிணி; IV:349.
DISH, PLATE, PLATTER - தட்டு, தகடு; III:511.
DISHAN - தீசான்; III:748.
DISHON - தீசோன்; III:748.
DISHONEST STEWARD-PARABLE - அநீதக் கண்காணிப்பாளர்-உவமை; I:111.
DISMAS, DYSMAS - திஸ்மஸ்; III:615.
DISPERSION, DIASPORA - சிதறிப்போதல்; II:270.
DISSENSION - கருத்து வேறுபாடு, பிளவு, கலகம்; II:631.
DISTAFF - நூற்புக்கழி, இராட்டினம்; [illegible]
DIVES - தீவேஸ்; III:773.
DIVIDING WALL - தடைச்சுவர்; III:510.
DIVINATION - குறிகூறல்; II:885.
DIVENER'S OAK - குறி சொல்வோரின் கருவாலி மரம்; II:887.
DIVORCE - மணவிலக்கு, விவாகரத்து; V:54.
DIZAHAB - திசகாபு; III:614.
DOCETISM - தோசேத்திம்; IV:97.
DODAI - தோதாய்; IV:99.

DODANIM - தோதானீம், தோதானியர்; IV:99.
DODAVAHU - தோதவா; IV:98.
DODO - தோது; IV:99.
DOEG - தோயேகு; IV:120.
DOG - நாய்; IV:236.
DOK - தோக்கு; IV:97.
DOMINION - ஆட்சி புரியும் அதிகாரம்; I:412.
DOMITIAN - தொமிசியன்; IV:82.
DOOR - கதவு, வாயில்; II:602.
DOOR KEEPER - வாயில்காப்போன்; V:725.
DOOR POST - வாயில் நிலை; V:725.
DOPHKAH - தொப்கா; IV:82.
DOR - தோர்; IV:120.
DORCAS, TABITHA - தொர்க்கா, தபித்தா; IV:83.
DORYMENES - தோரிமேன்; IV:120.
DOSITHEUS - தோசித்தேயு; IV:97.
DOT - புள்ளி, கொம்பு; IV:658.
DOTHAN - தோத்தான்; IV:99.
DOUBLE-MINDED - இருமனத்தோர்; I:737.
DOUBLE-TONGUED - இரட்டை நாவுள்ளவர்கள்; I;714.
DOUGH - பிசைந்த மாவு; IV:573.
DOVE - புறா; IV:669.
DOVE'S DUNG - புறாவின் எச்சம்; IV:669.
DOWRY - சீர்வரிசை, திருமணப்பரிசு; III:340.
DOXOLOGY - போற்றுரை, புகழ்ப்பாடல்; IV:855 இறை புகழ்ச்சியுரை; I:817.
DRAGNET - வாரிவரும் வலை; V:731.
DRAGNET - (PARABLE) - வாரிவரும் வலை-உவமை; V:731.
DRAGON - பறவை நாகம்; IV:468.
DREAMS - கனவுகள்; II:689.
DRESSER OF SYCAMORE TREE - காட்டு அத்திமரத் தோட்டக்காரன்; II:708.
DRINK - பானம்; IV:569.
DROMEDARY - ஒற்றைத்திமில் ஒட்டகம்; II:543.
DROPSY - நீர்க்கோவை; IV:318; மாசு, களிம்பு; V:212.
DROSS - களிம்பு; II:680.
DRUNKENNESS - குடிமயக்கம்; II:850.
DRUSILLA - துருசில்லா; III:791.
DUALISM - இருபொருள் வாதம்; I:735.
DUMAH (PERSON) - தூமா; III:814.
DUMAH (PLACE) - தூமா; III:814.
DUNG - சாணம், மலம்; III:178.
DUNG GATE - குப்பை மேட்டுவாயில்; II:862.
DUNGEON - நிலவறைச்சிறை; IV:260.
DURA - தூரா; III:825.
DWARF - குள்ளன்; II:881.
DYEING - சாயமிடுதல்; III:231.
DYSENTRY - சீதபேதி; III:310.

E

EAGLE - கழுகு; II:674.
EAR - காது; II:712.
EAR OF GRAIN - கதிர்; II:605.
EAR-RING - காதணி; II:710.
EARLY RAIN - முன்மாரி; V:319.
EARNEST - அச்சாரம்; I:57.
EARTH - நிலவுலகம், மண்ணுலகம், பூமி; IV:260; பூமி, நிலம்; IV:680.
EARTHQUAKE - நிலநடுக்கம்; IV:259.
EAST COUNTRY - கீழ்த்திசை நாடு; II:843.
EAST GATE - கிழக்கு வாயில்; II:785.
EAST SEA, EASTERN SEA - கிழக்குக்கடல், கீழைக்கடல்; II:785.
EAST WIND - கீழைக்காற்று, அனல்காற்று; II:843.
EAST, THE PEOPLE OF THE - கீழ்த்திசை மக்கள்; II:843.
EBAL (PERSON) - ஏபால்; II:418.
EBAL (PLACE) - ஏபால்; II:418.
EBED - ஏபேது; II:418; எபெது.
EBED - MELECH - ஏபேது - மொலெக்கு; II:418; எபெது-மெலெக்கு.
EBENEZAR - எபனேசர்; II:242.
EBER - ஏபேர்; II:418.
EBEZ - எபசு; II:241.
EBIASAPH - எபியசாபு; II:242.
EBIONITES - எபியோனியர்; II:242.
EBIONITES, GOSPEL OF THE - எபியோனியர்களின் நற்செய்தி; II:243.
EBONY - கருங்காலிமரம்; II:249.
EBRON - எபிரோன்; II:260.
ECBATANA - எகுபத்தானா; II:166; எக்பத்தானா.
ECSTASY - கழிபேருவகை; II:672.
ED - ஏது; II:409.
EDEN (PERSON) - ஏதேன்; II:412.
EDEN, GARDEN OF - ஏதேன் தோட்டம்; II:412.
EDER - ஏதேர்; II:411.
EDER, TOWER OF - ஏதேர்க்கோபுரம்; II:411;.
EDICT - அரசகட்டளை; I:213.
EDIFICATION - கட்டுதல்; II:597.
EDNA - எதினா; II:234.
EDOM - ஏதோம்; II:413.
EDREI - எதிரை; II:233; எதிரேயி.
EDUCATION - கல்வி; II:664.
EGG - முட்டை; V:301.
EGLAH - எகிலா; II:164; எக்லா.
EGLAIM - எகிலாயிம்; II:165; எக்லயிம்.
EGLATH-SHELISHIYAH - எகிலாத்து-செலிசியா; II:165; எக்லத்-செலிசியா.

EGLON (PERSON) - எகிலோன்; II:165; எக்லோன்.
EGLON (PLACE) - எகிலோன்; II:165; எக்லோன்.
EGNATIAN WAY - எகினேசியன் சாலை; II:166.
EGYPT - எகிப்து; II:150.
EGYPT, BROOK OF - எகிப்து ஓடை; II:613.
EGYPT, RIVER OF - எகிப்து நதி; II:164.
EGYPTIAN - எகிப்தியன்; II:149.
EHI - ஏகீ; II:355.
EHUD - ஏகூது; II:357.
EKER - ஏக்கேர்; II:358.
EKRON - எக்கரோன்; II:168; எக்ரோன்.
EL - ஏல்; II:433.
ELA - எலா; II:321.
ELAH - ஏலா; II:427.
ELAH, VALLEY OF - ஏலாப் பள்ளத்தாக்கு; II:428.
EL-BERITH - ஏல்பெரீத்து; II:436.
EL-BETHEL - ஏல்-பெத்தேல்; II:436.
EL-ELOHE-ISRAEL - ஏல்-எலோகே-இஸ்ராயேல்; II:434.
EL-ELYON - ஏல் எலியோன்; II:433.
EL-PARAN - ஏல்-பாரான்; II:435.
EL-SHADDAI - ஏல் சதாய்; II:434
ELAM (COUNTRY) - எலாம்; II:429
ELAM (PERSON) - ஏலாம்; II:429.
ELASA - எலாசா; II:318.
ELASAH - எலாசா; II:321.
ELATH - ஏலாத்து; II:428.
ELDAAH - எலிதாகா; II:326; எலிதாயா.
ELDAD - எல்தாது; II:319.
ELDER - மூப்பர், பெரியோர்; V:330.
ELDERS, TRADITION OF THE - மூதாதையர் மரபு; V:330.
ELEAD - எலயாது; II:321.
ELEADAH - எலயாதா; II:321.
ELEALEH - எலயாலே; II:321.
ELEASAH - எல[illegible]சா; II:320.
ELEAZAR - எலயாசர்; II:319.
ELECT LADY - தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமாட்டி; IV:40 .
ELECTION - தேர்ந்தெடுத்தல்; IV:33 .
ELEMENT - அரிச்சுவடி; I:249.
ELEMENT (ELEMENTAL SPIRIT) - உலகப்பூதங்கள், மூலப்பொருட்கள்; II:107 .
ELEPHANT - யானை; V:427.
ELEPHANTINE PAPYRI - எலிபான்டைன் தீவு புல்தாள் ஏடுகள்; II:327.
ELEUTHERUS - எலூத்தரு; II:339.
ELEVEN, THE - பதினொருவர்; IV:391 .
ELHANAN - எல்கனான்; II:341; எல்கானான்.
ELI - ஏலி; II:431.
ELI, ELI, LAMA SABACHTHANI - ஏலி, ஏலி, லாம சபக்தானி; II:432.
ELIAB - எலியாபு; II:335.
ELIADA - எலியாதா; II:334; எலயாதா.
ELIABHA - எலியாவா; :336; எலியகுபா.
ELIAKIM - எலியாக்கிம்; II:333.
ELIAM - எலியாம்; II:336.
ELIASAPH - எலியாசாபு; II:334 .
ELIASHIB - எலியாசீபு; II:334.
ELIATHAH - எலியாத்தா; II:335.
ELIDAD - எலிதாது; II:326.
ELIEHOENAI - எல்யகோவெனாய்; II:338; எலியோயேனாய்.
ELIEL - எலியேல்; II:337.
ELIENAI - எலியேனாய்; II:338.
ELIEZER - எலியேசர்; II:336.
ELIHOREPH - எலியோரேபு; **II:338**; எலிகோரெபு .
ELIHU - எலிகூ; II:321.
ELIJAH - எலியா; II:330.
ELIJAH (PROPHET) - எலியா; II:330.
ELIJAH, APOCALYPSE OF - எலியாவின் வெளிப்பாடு;II:336 .
ELIKA - எலிக்கா; II:322 .
ELIM - ஏலிம்; II:432 .
ELIMELECH - எலிமெலக்கு; II:330.
ELIOENAI - எலியோனாய்; II:338; எலியோவெனாய்.
ELIPHAL - எலிப்பால்; II:327.
ELIPHAZ - எலிப்பாசு; II:326 எலீப்பாசு.
ELIPHELEHU - எலிப்பெலகு; II:328 எலிப்பலேகு.
ELIPHELET - எலிப்பெலத்து; II:328; எலிப்பலேற்று.
ELISHA - எலிசா; II:323.
ELISHAH - எலீசா; II:338 .
ELISHAH (PLACE) - எலீசா; II:338 .
ELISHAMA - எலிசாமா; II:325.
ELISHAPHAT - எலிசபாத்து; II:322; எலிசபாற்று.
ELISHEBA - எலிசெபா; II:326; எலிசபா.
ELISHUA - எலிசூவா; II:326; எலிசுவா.
ELIUD - எலியூது; II:336.
ELIZABETH - எலிசபெத்து; II:322.
ELIZAPHAN - எலிசாபான்; II:325; எலிட்சாபான்.
ELIZUR - எலிசூர்; II:326; எலிட்சூர்.
ELKANAH - எல்கானா; II:341.
ELKIAH - எல்கியா; II:342.
ELKOSH - எல்கோசு; II:342 .
ELLASAR - எல்லாசர்; II:343.
ELMADAM - எல்மாதம்; II:343; எல்மதாம்.
ELNAAM - எல்னாம்; II:344.
ELNATHAN - எல்நாத்தான்; II:342
ELOAH - எலோவா; II:340
ELOHIM - எலோகிம்; II:340.
ELOHIST - எலோகியர்; II:340.
ELOI, ELOI LAMA SABACHTHANI - எலோயி, எலோயி லாம் சபக்தானி; II:340.
ELON - ஏலோன்; II:433.
ELON-BETH-HANAN - ஏலோன்-பேத்-கானான்;II:433.
ELONITE - ஏலோனியர்; II:433.

ELOTH - ஏலோத்து; II:433.
ELPAAL - ஏல்பால்; II:436; எல்பாகால்.
ELPELET - ஏல்பாலேத்து; II:436; ஏல்பலற்று.
ELTEKEH - ஏல்தெக்கே; II:435; எல்தக்கே.
ELTEKON - ஏல்தெக்கோன்; II:435; எல்தக்கோன்.
ELTOLAD - ஏல்தோலாது; II:435.
ELUL - எலூல்; II:339.
ELUZAI - எலுசாய்; II:329.
ELYMAIS - எலிமாயி; II:329.
ELYMAS - எலிமா; II:329.
ELYON - எலியோன்; II:338.
ELZABAD - ஏல்சபாது; II:435; எல்சபாது.
ELZAPHAN - ஏல் சபான்; II:435; எல்சபான்.
EMBALMING - இறந்த உடல்களைப் பாடம் பண்ணுதல்; I:772; சடலப்பாதுகாப்பு; III:115.
EMEK-KEZIZ - எமெக்-கெசீசு; II:274.
EMERALD - மரகதம்; V:96.
EMIM - ஏமியர்; II:421 .
EMMAUS - எம்மாவு; II:275.
EMPEROR - பேரரசர்; IV:785.
EMPEROR WORSHIP - பேரரசர் வழிபாடு; IV:785.
EMPTIED, KENOSIS - வெறுமையாக்குதல்; V:940.
EN - ஏன்; II:452.
EN-EGLAIM - ஏனெகிலயிம்/ஏன்-எகிலயிம்; II:450; ஏனெக்லயிம்.
EN-GANNIM - ஏங்கன்னிம்/ஏன்-கன்னிம்; II:358.
EN-GEDI - ஏங்கேதி/ஏன்-கேதி; II:358.
EN-HADDAH - ஏங்கதா/ஏன்-கதா; II:358.
EN-HAKKORE - ஏங்கக்கோரே/ஏன்-கக்கோரே; II:358.
EN-HAZOR - ஏங்காசோர்/ஏன்-காசோர்; II:358.
EN-MISHPAT - ஏன்-மிசுபாத்து; II:52 ஏன்-மிசாபற்று.
EN-RIMMON - ஏன்-ரிம்மோன்; II:452.
EN-ROGEL - ஏன் ரொகேல்; II:453.
EN-SHEMESH - ஏன் சேமசு; II:452.
EN-TAPPUAH - ஏன் தப்புவாகு; II.452.
ENAIM - எனாயிம்; II:353.
ENAM - ஏனாம்; II:450.
ENAN - ஏனான்; II:450.
END - முடிவு; V:300.
ENDOR - எந்தோர்/ஏன்-தோர்; II:417
ENDURANCE, STEADFASTNESS - மனவுறுதி; V:177.
ENEMY பகைவன், எதிரி; IV:361.
ENEMY, ADVERSARY - எதிரி, பகைவன்; II:230.
ENGINE - இயந்திரம்; I:680.
ENLIL - என்லில்; II:353.
ENOCH (PERSON) - ஏனோக்கு; II:450.
ENOCH (PLACE) - ஏனோககு; II:451
ENOCH, BOOK OF - ஏனோக்கின் நூல்; II:451.
ENOSH - ஏனோசு; II:452.
ENROLLMENT - பதிவு செய்தல், கணக்கெடுத்தல்; V 390.
ENVY, JEALOUSY - பொறாமை; IV:819.
EPAENETUS - எபனெத்து. I:273
EPAPHRAS - எப்பப்பிரா; II:268.
EPAPHRODITUS - எப்பப்பிராதித்து; II:268.
EPHAH (PERSON) - ஏப்பா; II:420; ஏப்பாகு.
EPHAH (MEASURE) - ஏப்பா; II:420; ஏப்பாகு.
EPHAI - ஏப்பாய்; II:420.
EPHER - ஏப்பேர்; II:421.
EPHES-DAMMIM - எப்பசு-தம்மிம்; II:267; எபெசு-தம்மீம்.
EPHESUS - எபேசு; II:265.
EPHESIANS, LETTER TO THE - எபேசியருக்குத் திருமுகம்; II:260.
EPHLAL - எபிலால்; II:260; எப்லால்.
EPHOD (PERSON) - ஏபோது; II:419.
EPHOD (THING) - ஏபோது; II:419.
EPHPHATHA - எப்பத்தா; II:268.
EPHRAERMI-SYRI CODEX - எப்பிரேமி சீரி கையெழுத்துச் சுவடி; II:273.
EPHRAIM (PERSON) - எப்பிராயிம்; II:271; எப்ராயிம்.
EPHRAIM (PLACE) - எப்பிராயிம்; II:272; எப்ராயிம்.
EPHRAIM GATE - எப்பிராயிம் வாயில்; II:272; எப்ராயிம் வாயில்.
EPHRAIM, FOREST OF - எப்பிராயிம் காடு; II:272; எப்ராயிம் காடு.
EPHRAIM, HILL COUNTRY OF - எப்பிராயிம் மலைநாடு; II:272; எப்ராயிம் மலைநாடு.
EPHRAIMITE - எப்பிராயிமிர்; II:271; எப்ராயிமர்.
EPHRATH - எப்பிராத்து; II:270; எப்ராத்து.
EPHRATHAH (PERSON) - எப்பிராத்தா; II:270; எப்ராத்தா.
EPHRATHAH (PLACE) - எப்பிராத்தா; II:270; எப்ராத்தா.
EPHRATHITE - எப்பிராத்தியர்; II:270; எப்ராத்தியர்.
EPHRON (PERSON) - எபரோன்; II:241; எப்ரோன்.
EPHRON (PLACE) - எபரேன்; II:241; எப்ரோன்.
EPICUREANS - எப்பிக்கூரர்; II:269.
EPILEPSY - வலிப்பு; V:663.
EPISTLE, LETTER - திருமுகம்; III:704.
ER - ஏர்; II:427.
ERAN - ஏரான்; II:424.
ERANITES - ஏரானியர்; II:424.
ERASTUS - ஏரத்து; II:277.
ERECH - எரேக்கு; II:307.
ERI - ஏரி; II:424.
ERITES - ஏரியர்; II:424.
ERROR - தவறு, பிழை; III:540.
ERRUPTION, ITCH, SCURVY - சொறி, சொறி சிரங்கு; III:450.
ESARHADDON - ஏசர்கதோன்; II:403; ஏசர்கத்தோன.
ESAU - ஏசா; II:404.
ESCAPE, ROCK OF - பிரிக்கும் பாறை; IV.582.
ESCHATOLOGY - இறுதிக்கால இயல்; I:780.
ESDRAELON - எசுதிரலோன்; I:133.
ESDRAS, BOOK OF - எசுதிராவின் நூல்கள்; II.183
ESDRIS - எசுதிரி; II:183.

ESEK - ஏசக்கு; II:359; எசேக்கு.
ESHAN - ஏசான்; II;406; எசான்.
ESHBAAL - எசுபாகால்; II:185.
ESHBAN - எசுபான்; II:185.
ESHCOL (PERSON) - எசுக்கோல்; II:182.
ESHCOL (PLACE) - எசுக்கோல்; II:182..
ESHEK - ஏசேக்கு; II:408.
ESHTAOL - எசுத்தாவோல்; II:185.
ESHTAOLITE - எசுத்தாவோலியர்; II:185.
ESTEMOA (PERSON) - எசுத்தமோவா; II:184.
ESTEMOA (PLACE) - எசுத்தமோவா; II:184.
ESHTEMOH - எசுத்தமோ; II:184.
ESHTON - எசுத்தோன்; II:185; எஸ்தோன்.
ESLI - எசுலி; II:185; எஸ்லி.
ESSENES - எஸ்ஸேனியர்; II:186.
ESTHER - எஸ்தர்; II:188.
ESTHER, ADDITION TO - எஸ்தர்நூலின் பிற்சேர்க்கை; II:197.
ESTHER, BOOK OF - எஸ்தர் நூல்; II:188.
ETAM ஏதாம்; II:408; ஏற்றாம்.
ETAM, ROCK OF - ஏதாம் பாறை; II:409; ஏற்றாம் பாறை.
ETHAM - ஏத்தாம்; II:416.
ETHAN - ஏத்தான்; II:417.
ETHANIM - ஏத்தானிம்; II:417.
ETHBAAL - எத்துபாகால்; II:240; எத்பாகால்.
ETHER - எத்தேர்; II:239.
ETHICAL LISTS - ஒழுக்கநெறிப் பட்டியல்கள்; II:530.
ETHICS - ஒழுக்கநெறி இயல்; I:522.
ETHIOPIA - எத்தியோப்பியா; II:237.
ETHIOPIAN EUNUCH - எத்தியோப்பிய அண்ணகன்; II:236.
ETHIOPIAN VERSION - எத்தியோப்பிய மொழி பெயர்ப்பு; II:237.
ETH-KAZIN - எத்-காசின்; II:235.
ETHNAN - எதினான்; II:235; எத்னான்.
ETHNARCH - எதினார்க்கேயர்; II:234.
ETHNI - எதினி; II:235; எத்னி.
EUBULUS - யூபுல்; V:466.
EUCHARIST - நற்கருணை - திருவிருந்து; IV:164.
EUERGETES - யூர்கெத்து; V:469.
EUMENES - யூமன்; V:468.
EUNICE - யூனிக்கி; V:470.
EUNUCH - அண்ணகன்; I:89.
EUODIA - எவோதியாள்; II:277; எயோதியா.
EUPATOR - யூப்பத்தோர்; V:466.
EUPHRATES - யூப்பிரத்தீசு; V:466.
EUPOLEMUS - யூப்பொலம்; V:468.
EUSEBIUS - யூசேபியு; V:429.
EUTYCHUS - யூத்திக்கு; V:463.
EVANGELIST - நற்செய்தி அறிவிப்பவர்; IV:178.
EVE - ஏவா; II:436.
EVI - ஏவி; II:437.
EVIL - தீமை, தீயவை; III:752.
EVIL-MERODACH - எவில்-மெரோதாக்கு; II:344; அவீல்-மெரோதக்கு.
EVIL ONE, THE - தீயோன்; III:759.
EVIL SPIRITS - தீய ஆவிகள்; III:756;
EVODIUS, HOMILY OF - எவோதியசின் மறையுரை; II:344.
EXACTOR OF TRIBUTE - வரி வசூலிப்பவர்; V:658.
EXAMPLE - எடுத்துக்காட்டு/முன் மாதிரிகை; II:210.
EXECUTIONER - கொலைஞர், தண்டனை வழங்குவோர், தூக்கிலிடுபவர்; III:77.
EXHORT - அறிவுரை கூறுதல்; I:377.
EXILE - நாடு கடத்தப்படுதல்; IV:214.
EXODUS - யாத்திரை அல்லது புறப்பாடு; V:416
EXODUS, BOOK OF - யாத்திரை ஆகமம்; V:419; விடுதலைப் பயணநூல், யாத்திரை நூல்; V:785.
EXORCISM - பேய் ஓட்டுதல்; IV:783.
EXIATION, PROPITIATION, ATONEMENT - பரிகாரம்; IV:411.
EXTORTION - பொருளைப் பறித்தல்; IV:819.
EYE - கண்; II:598.
EYE PAINT - கண் மை; II:601.
EYE, APPLE OF THE - கண்மணி; II:601.
EYELIDS OF THE MORNING - வைகறை இமைகள்; V:959.
EYES, GOURGING THE - கண்களைப்பிடுங்குதல்; II:599.
EZBAI - எசிபாய்; II:180.
EZBON - எசபோன்; II:180; எட்சபோன்.
EZEKIEL - எசக்கியேல்; II:172, எசேக்கியேல்.
EZEKIEL, BOOK OF - எசேக்கியேல் திருநூல்; II:172.
EZEL - ஏசேல்; II:408.
EZEM - ஏசேம்; II:408; எட்சேம்.
EZER - ஏசேர்; II:408; ஏட்சேர்.
EZION-GEBER - எசியோன்-கெபேர்; II:181; எட்சியோன்-கெபேர்.
EZRA - எஸ்ரா; II:197.
EZRA AND NEHEMIAH, BOOK OF - எஸ்ரா, நெகமியா நூல்கள்; II:199.
EZRAH - எஸ்ரா; II:199; எசுரா.
EZRAHITE - எசிராவியர்; II:182; எசுராகியர்.
EZRI - எசிரி; II:182; எஸ்ரீ.

F

FABLE - கட்டுக்கதை, கற்பனைக்கதை; II:596.
FACE - முகம்; V:295.
FACETS - பட்டை, முகக்கூறு; IV:384.
FAIR HAVENS - செந்துறை; III:388.
FAITH - விசுவாசம்; V:753.
FAITHFUL AND WISE SERVANT - நம்பிக்கைக்குரிய, அறிவாளியான பணியாளர்; IV:150.
FALL, THE - வீழ்ச்சி; V:897.
FALLOW GROUND - பயிரிடப்படாத நிலம், தரிசு நிலம்; IV:404.
FALSE APOSTTES - போலி அப்போஸ்தலர்கள்; IV:847.
FALSE CHRISTS - போலிக் கிறிஸ்து; IV:849.
FAMILIAR SPRIKIT - குறிசொல்லும் ஆவி; II:886.
FAMILY - குடும்பம்; II:853.
FAMINE - பஞ்சம்; IV:370.
FAREWEL SPEECHES - பிரியாவிடை உரைகள்; IV:853.
FARMER - குடியானவன்; II:852.
FAST, FASTING - உண்ணாநோன்பு; II:28; நோன்பு; IV:357.
FATE - விதி; V:822.
FATHER - தந்தை; III:513.
FATHER'S HOUSE - தந்தையின் குடும்பத்தார், வீட்டார்; III:523.
FATHERLAND - தாயகம், தாய்நாடு; III:553.
FATHERLESS, ORPHANS - அனாதைகள், திக்கற்றவர் கள்; I:342.
FATHERS AND FATHER - தந்தையர்களும் தந்தையும்; III:514.
FATHERS OF THE CHURCH - திருச்சபைத் தந்தையர் கள்; III:652.
FATHOM - ஆழம் பார்த்தல்; I:527.
FATLING - கொழுத்த கன்று; III:87.
FAWN - இளமான்; I:766.
FEAR - அச்சம்; I:54.
FEAST OF BOOTHS, FEAST OF INGATHERING - கூடாரவிழா, சேகரிப்பு விழா; II:906.
FEASTS - விழாக்கள்; V:874.
FELIX ANTONIUS - பெலிக்சு அந்தோனியு; IV:743.
FEMALE SLAVE - ஊழியக்காரி, வேலைக்காரி; II:138.
FENCE, HEDGE - வேலி; V:948.
FERTILITY CULT - வளமைச் செறிவு வழிபாடு; V:702.
FESTUS, PORCIUS - பெஸ்து, பொர்க்கியு; IV:694.
FEVER - காய்ச்சல்; II:722.
FIELD - வயல், நிலம்; V:655.
FIERY SERPENTS - கொள்ளிவாய்ப் பாம்புகள் III:88.
FIG TREE & FRUIT - அத்தி மரம், கனி; I:109.
FIG TREE-PARABLE - அத்திமர உவமை; I:109.
FIGURE - மாதிரி; V:216.
FIGURED STONE - படிமங்கள், செதுக்கிய சிலைகள்; IV:372.
FINGER OF GOD - இறைவனின் விரல், கைவண்ணம்; I:858.
FIRE - தீ, நெருப்பு; III:743.
FIREBRAND - கொள்ளிக்கட்டை; III:88.
FIREPAN - நெருப்புத்தட்டு; IV:342.
FIRMAMENT, HEAVENS - வானம்; V:748.
FIRST AND LAST - முதலும் இறுதியும்; V:302.
FIRST-BORN - தலைப்பேறு; III:533.
FIRST FRUITS - முதற்பலன்கள்; V:302.
FIRST-RIPE - முதலில் பழுத்த; V:301 .
FISH - மீன்; V:291.
FISH GATE - மீன் வாயில்; V:294.
FISH HOOK - தூண்டில்; III:806.
FISHING - மீன்பிடித்தல்; V:292.
FLAGSTAFF - கொடிமரம், பாய்மரம்; III:45.
FLAX - சணல் பயிறு; III:125.
FLEA - உண்ணி; II:32.
FLESH - ஊன் அல்லது தசை; II:142.
FLESH POT - இறைச்சிப் பாத்திரம்; I:809 .
FLINT - கற்பாறை; II:683.
FLOOD - வெள்ளம்; V:931.
FLOOD IN GENESIS - பெருவெள்ளம்; IV:740.
FLORA - மரம், செடி, கொடிகள்; V:105.
FLOUR - மாவு; V:230.
FLOWER PLANTS - பூச்செடிகள்; IV:679.
FLY - ஈ; I:907.
FODDER - கால்நடைத் தீவனம்; II:744.
FOLLOW; IMITATE - பின்பற்று; IV:608.
FOLLY - மடமை, மூடத்தனம்; V:52.
FOOD - உணவுப்பொருட்கள்; II:22.
FOODS, CLEAN AND UNCLEAN - சுத்த, அசுத்த உணவு; III:349.
FOOLISH RICHMAN - அறிவற்ற செல்வன்; I:330.
FOOT - கால், காலடி; II:742.
FOOT - STOOL - கால்மணை; II:744.
FOOT - WASHING - கால்கழுவுதல்; II:743.
FOREHEAD - நெற்றி; IV:343.
FOREIGNER - அன்னியன்; I:365.
FOREKNOW AND FOREKNOWLEDGE - முன்னறித லும் முன்னறிவும்; V:319.
FORERUNNER - முன்னோடி; V:326.
FORESKIN - நுனித்தோல்; IV:322.
FOREST - காடு; II:706.
FORGETFULNESS, LAND OF - மறதி நிலவும் உலகு; V:157.
FORGIVENESS, PARDON - மன்னிப்பு; V:203.
FORK - முள் கரண்டி; V:313.
FORNICATION - மணமாகா ஆண் பெண் கலவி; V:54.

FORTIFICATION, FORTRESS - அரண்; I:238.
FORTUNATUS - பொர்த்துனாத்து; IV:819.
FOUNDATION - அடித்தளம்; I:61.
FOUNTAIN GATE - ஊருணி வாயில், ஊற்றுவாயில்; II:136.
FOUNTAIN, SPRING - ஊற்று, சுனை; II:141.
FOWLER - வேடன்; V:946.
FOX, JACKAL - நரி, குள்ளநரி; IV:155.
FRANKINCENSE - சாம்பிராணி, தூபம்; III:230.
FRIEND - நண்பன்; IV:139.
FRIEND AT MIDNIGHT - நள்ளிரவில் வந்த நண்பன்; IV:159.
FRINGES - விளிம்பு, தொங்கல்கள், குஞ்சங்கள்; V:883.
FROG - தவளை; III:539
FRONTLETS - கண்களுக்கிடையில் சீட்டுப்பட்டம்; II:599.
FRUITFULNESS - பலனுடைமை; IV:429.
FRUIT - கனி, பலன்; II:692.
FRUITS, FRUIT PRODUCTS - பழங்கள், பழப்பொருட்கள்; IV:456.
FUEL - எரிபொருள்; II:281.
FULFILL - நிறைவேற்றுதல்; IV:269.
FULLER - வண்ணார், சலவைத் தொழிலாளி; V:654; III:148.
FULLER'S FIELD - வண்ணான் வயல், வண்ணான் துறை; V:654.
FULLNESS, PLEROMA - முழுமை, நிறைவு; V:312.
FULLNESS OF TIME - காலநிறைவு; II:725.
FURNACE - சூளை, உலைக்களம்; III:360.
FURNITURE - துணைக்கலங்கள்; III:776.

G

GAAL - ..கல்; II:702.
GAASH - காகசு; II:702.
GABAEL - கபேல்; I':613.
GABATHA - கபத்தா; II:610.
GABBAI - காபாய்; II:717.
GABBATHA - கபத்தா; II:611.
GABRIAS - கபிரியா; II:612.
GABRIEL - கபிரியேல்; II:612.
GAD (DEITY) - காது; II:714.
GAD (PERSON) - காது; II:713; காத்து.
GAD, VALLEY TOWARD - காது நோக்கிய பள்ளத்தாக்கு; II:714.
GADARA - காதாரா; II:711.
GADDI - கதீ; II:605; கத்தி.
GADDIEL - கதியேல்; II:603; காதியேல்.
GADI - காதி; II:711.
GADITES - காதியர்; II:711.
GAHAM - ககாம்; II:575.
GAHAR - ககார்; II:575.
GAI - காயி; II:720.
GAIUS - காயுசு; II:721; காயு.
GALAL - கலால்; II:646; காலால்.
GALATIA - கலாத்தியா; II:644.
GALATIANS, LETTER TO THE - கலாத்தியருக்குத் திருமுகம்; II:637.
GALBANUM - கெல்பான்பிசின்; III:25.
GALEED - கலயேது; II:636.
GALILEAN ACCENT - கலிலேயாப் பேச்சு; II:649.
GALILEANS - கலிலேயர்; II:646.
GALILEE - கலிலேயா; II:647.
GALILEE, SEA OF - கலிலேயாக் கடல்; II:648.
GALL - கசப்பு, நஞ்சு; II:576.
GALL OF LIVER - பித்தநீர், பிச்சு; IV:578.
GALLERY - மேடையிருக்கை; V:363.
GALLIM - கல்லீம்; II:663.
GALLIO - கல்லியோ; II:663.
GAMAD - கமாது; II:619.
GAMALIEL - கமாலியேல்; II:621.
GAME - வேட்டைப்பொருள்; V:947.
GAMES - விளையாட்டுகள்; V:884.
GAMUL - காமுல்; II:719.
GANGRENE - புற்றுநோய்; IV:669.
GAPH - காபு; II:717.
GARDEN - தோட்டம்; IV:98.
GAREB - காரேபு; II:724.
GARLIC - வெள்ளைப்பூண்டு; V:935.
GARMITE - கரிமியர்; II:629.
GASH - உடலைப் புண்படுத்துதல்; II:4.
GATAM - காத்தாம்; II:715.
GATE BETWEEN THE TWO WALLS - இரண்டு சுவர்களுக்கிடையேயுள்ள வாயில்; I:716.
GATE OF FOUNDATION - அடித்தள வாயில்; I:61.
GATE, DOOR - வாயில்; V:723.
GATH - காத்து; II:716.
GATH - HEPHER - காத்து - கேப்பர்; II:717; கத்கேப்பேர்.
GATH - RIMMON - காத்து - ரிம்மோன்; II:717; கத்ரிம்மோன்.
GAULANITIS - காலானியர்; II:740.
GAULS - காலியர்; II:741.
GAZA - காசா; II:703.
GAZAITES - காசாவியர்; II:704.
GAZEZ - காசேசு; II:704; கசேசு; II:584.
GAZZAM - கசாம்; II:582.
GEAR - தடுப்புப் பலகை; III:510.
GEBA - கெபா; III:10.
GEBAL - கெபால்; III:11.
GEBER - கெபேர்; III:15.

GEBIM - கேபீம்; III:33; கேபிம்.
GECKO - உடும்பு; II:18.
GEDALIAH - கெதல்யா; III:7.
GEDER - கெதர்; III:7.
GEDERAH - கெதேரா; III:8.
GEDEROTH - கெதெரோத்து; III:7 .
GEDEROTHAIM - கெதரோத்தாயிம்; III:16 .
GEDOR - கெதோர்; III:8.
GE-HARASHIM - கேராசிம்; III:34.
GEHAZI - கேகசி; III:29 .
GEHENNA - கேகன்னா; III:29.
GELILOTH - கெலிலோத்து; III:24 .
GEMALLI - கெமல்லி; III:15.
GEMARIAH - கெமரியா; III:15; கெமாரியா.
GENEALOGY - மூதாதையர் பட்டியல்; V:328.
GENERAL, CAPTAIN, MARSHAL, TRIBUNE - படைத்தலைவர்; IV:376.
GENERATION - தலைமுறை, மூதாதையர் பட்டியல்; III:537.
GENESIS, BOOKS OF - தொடக்கநூல் அல்லது ஆதியாகமம்; IV:44; I:463.
GENIZAH - கெனீசா; III:28.
GENNAEUS - கென்னாயு; III:28.
GENNESARET - கெனசரேத்து; III:27.
GENTILES, PEGANS, NATIONS - புறவினத்தார்; IV:659.
GENTILES, COURT OF THE - புறவினத்தார் முற்றம்; IV:668.
GENUBATH - கெனுபத்து; III:28.
GEORGIAN VERSION - கியோர்கியன் மொழிபெயர்ப்பு; III:764.
GERA - கேரா; III:33.
GERAH - கேரா; III:34.
GERAR - கெரார்; III:17.
GERASA - கெராசா; III:17.
GERASENES, GERASA - கெரசேனர் பகுதி, கெராசா; III:17.
GERIZIM - கெரிசிம்; III:18.
GERON - கெரோன்; III:22.
GERSHOM - கேர்சோம்; III:34.
GERSHON - கேர்சோன்; III:35.
GERUTH CHIMHAM - கேருத் - கிம்காம்; III:34.
GESHAN - கேசான்; III:30.
GESHEM - கெசேம்; III:4.
GESHUR - கெசூர்; III:6.
GESHURITES - கெசூரியர்; III:5.
GESTAS - கெஸ்தாஸ்; III:6.
GETHER - கெத்தெர்; III:10.
GETHSEMENE - கெத்சமனி; III:8.
GEUEL - கூவேல்; II:914; கெயுவேல்; III:16.
GEZER - கெசேர்; III:4.
GIAH - கியாகு; II:764; கீகு.
GIANT - அரக்கர்; I:213.
GIBBAR - கிபார்; II:763.
GIBBETHON - கிபத்தோன்; II:760 .
GIBEA - கிபயா; II:760.
GIBEAH - கிபயா; II:760.
GIBEATH - ELOHIM - கிபயாத்து - எலோகிம்; II:761; கிபயத் எலோகிம்.
GIBEATH-HA-ARALOTH - கிபயாத்து-கா-அரலோத்து; II:762; கிபயத்து காரலோத்து.
GIBEON - கிபயோன்; II:762.
GIDDALTI - கிதலிதி; II:758; கிதல்த்தி.
GIDDEL - கிதேல்; II:758.
GIDEON - கிதயோன்; II:756; கிதியோன்.
GIDEONI - கிதயோனி; II:756.
GIDOM - கிதோம்; II:758.
GIFT - கொடை, அன்பளிப்பு; III:46.
GIHON (RIVER) - கீகோன்; **II:837.**
GIHON (FOUNTAIN) - கிகோன்; II:837.
GILALAI - கிலலாய்; II:782; கிலலேய்.
GILBOA - கில்போவா; II:785.
GILEAD (PERSON) - கிலயாத்து; **II:781.**
GILEAD (PLACE) - கிலயாத்து; II:781 .
GILEAD, BALM OF - கிலயாத்தின் பொன்மெழுகு; II:780.
GILGAL - கில்கால்; II:783.
GILOH - கீலோ; II:841.
GIMEL - கிமல்; II:764.
GIMZO - கிஞ்சோ; II:755; கிம்சோ.
GINATH - கீனாத்து, II:846.
GINNETHOI - கின்னத்தோய்; **II:836.**
GINNETHON - கின்னத்தோன்; II:836.
GIRGASHITE - கிருகாசியர்; II:769; கிர்காசியர்.
GIRZITE - கிருசியர்; II:769; கிர்சியர்.
GISHPA - கிசிப்ப; II:754; கிஸ்பா.
GITTAIM - கித்தாயிம்; II:758.
GITTITE - கித்தியர்; II:759.
GITTITH - கித்தித்து; II:759.
GIZONITE - கிசோனியர்; II:754.
GLASS - கண்ணாடி; II:600.
GLASS, SEA OF, GLASSY SEA - கண்ணாடிக்கடல்; II:601.
GLAZING - மெருகூட்டிப் பளபளப்பாக்கு; V:351
GLEANING - பொறுக்கிச் சேர்த்தல்; IV:822
GLORY - மகிமை, மாட்சி; V:4.
GLUTTON - பெருந்தீனிக்காரன்; IV:734.
GNAT - கொசு, பூச்சி; III:44.
GNOSTICISM - அறிவு நெறிக்கோட்பாடு; I:335.
GOAD - தாற்றுக்கோல்; III:585.
GOAH - கோவா; III:107.
GOAT - வெள்ளாடு; V:932.
GOB - கோபு; III:98.
GOD - இறைவன்; I:858.
GOD-FEARERS - இறைவனுக்கு அஞ்சுவோர்; I:858
GODLESS - இறைப்பற்றில்லாதவர்; I:816.

GODLESSMAN - நாத்திகர், இறைப்பற்றற்றவர்; IV:231.
GODLY - இறைப்பற்றுள்ளவர்; I:817.
GOG - கோகு; III:92.
GOG AND MAGOG - கோகும் மாகோகும்; III:92.
GOIM - கோயிம்; III:101.
GOLAN - கோலான்; III:106.
GOLD - பொன், தங்கம் IV:828.
GOLDEN CALF - பொற்கன்று; IV:827.
GOLDEN RULE, THE - பொன்விதி; IV:830.
GOLDEN URN - பொற்சாடி; IV:828.
GOLDSMITH - பொற்கொல்லர்; IV:828.
GOLGOTHA - கொல்கொதா; III:85.
GOLIATH - கோலியத்து; III:106.
GOMER - கோமேர்; III:101.
GOMORRAH - கொமோரா; III:50.
GONG - சேகண்டி (மணி); III:438.
GOOD - நல்லது, நல்லவர்; IV:157.
GOOD FRIDAY - பெரிய வெள்ளி; IV:732.
GOOD SMARITAN - நல்ல சமாரியன்; IV:156.
GOPHER WOOD - கோபெர் மரம்; III:100.
GORGIAS - கோரிக்கியா, III:103.
GORTYNA - கோர்த்தினா; IIII:104.
GOSHEN - கோசேன்; III:94.
GOSPEL - நற்செய்தி; IV:172.
GOTHIC VERSION - கோதிக்கு மொழிபெயர்ப்பு (விவிலியத்தின்); III:96.
GOTHONIEL - கொதொனியேல்; III:49.
GOVERNMENT - ஆட்சி அமைப்பு; I:408.
GOVERNMENTS - ஆளும் வரம்; I:528.
GOVERNOR - ஆளுநர்; I:527.
GOZAN - கோசான்; III:93.
GRACE - அருள்; I:268.
GRAFT - ஒட்டவைத்தல்; II:492.
GRAINS - தானியம்; III:586.
GRANARY, BARN - களஞ்சியம்; II:678.
GRANE - பிணக்குழி, கல்லறை; IV:577.
GRASS - புல்; IV:657
GRASSHOPPER - தத்துக்கிளி, வெட்டுக்கிளி; III:512.
GRATITUDE - நன்றி செலுத்துதல்; IV:195.
GRAVEL - மணல், சிறுகற்கள்; V:54.
GRAVEN IMAGE - செதுக்கிய உருவம் அல்லது சிலை; III:385.
GRAY - நரைமயிர்; IV:156.
GREAT - பெரிய மனிதன்; IV.731.
GREAT SEA - பெருங்கடல்; IV:733.
GREEK LANGUAGE - கிரேக்க மொழி; II.772.
GREEK PHILOSOPHY AND RELIGION - கிரேக்க மெய்யியலும், மதமும்; II:769.
GREEK VERSIONS - கிரேக்க மொழி பெயர்ப்புகள்; II:773
GREEKS - கிரேக்கர்கள்; II:778.
GREEN - பசுமை [illegible]; IV:[illegible]69.
GRIDDLE - தட்டை [illegible]; III:511.
GRINDERS - அரைத்தல், மாவரைத்தல்; I:281.
GROWTH - வளர்ச்சி; V:703.
GUARD, GATE OF THE - காவலர் வாயில்; II:745.
GUARDIAN - பாதுகாப்பாளர்; IV:495.
GUARDS, COURT OF THE - காவலர் கூடம்; II.745.
GUDGODAH - குதுகோதா; II:862; குத்கோதா.
GUEST - விருந்தாளி; V:831.
GUEST ROOM - விருந்து உண்பதற்கான அறை; V:831 .
GUILE - கபடு, வஞ்சகம்; II:610.
GUNI - கூனி; II:915.
GUR - கூர்; II:911.
GURBAAL - கூர்பாகால்; II:912.
GYMNASIUM - பயிற்சிக்கூடம்; IV:404.

H

HAAHASHTARI - அகசுத்தாரி; I:2; அகஸ்தாரி.
HABAIAH - கபயா; II:611; அபய்யா.
HABAKKUK - அபக்கூக்கு; I:130.
HABAKKUK, BOOK OF - அபக்கூக்கின் இறைவாக்கு நூல்; I:126
HABAZZINIAH - கபசீனியா; II:610; அபச்சினியா.
HABIRU - கபீரு; II:612.
HABOR - காபோர்; II:718; ஆபோர்.
HACALIAH - கெக்கல்யா, அக்கல்யா; III:1.
HACHMONI - ககிமோனி; II:575; அக்மோனி
HACHMONITE - ககிமோனியர்; II:575; அக்மோனியர்.
HADAD - கதாது; II:603; அதாது.
HADADEZZER - அதாதெசர்; I:91; அததேசர்.
HADAD-RIMMON - அதாதுரிம்மோன்; I:91; அத்தரிம் மோன்.
HADAR - ஆதார்; I:463; அதார்.
HADASHAH - அதசா; I:90.
HADASSAH - அதாசா; I:91.
HADID - காதீது; II:711; ஆதிது.
HADLAI - கதுலாய்; II:605; அத்லாய்.
HADORAM - அதோராம்; I:102.
HADRACH - கதிராக்கு; II:605; அதிராக்கு.
HA-ELEPH - ஆயலபு, ஆ-ஏலேப்; I:490; எலேபு.
HAGAB - காகாபு; II:702.
HAGABAH - ககாபா; II:575.
HAGAR - ஆகார்; I:375.
HAGGADAH - அக்கதா; I:20.
HAGGAI - ஆகாய்; I:374.
HAGGAI, BOOK OF - ஆகாயின் இறைவாக்கு நூல்; I:371.
HAGGEDOLIM - அகதோலிம்; I:2; அக்தோலிம்.
HAGGI - காகீ; II:702; ஆகி.

HAGGIAH - காகியா; II:702; அகியா.
HAGGITES - காகீயர்; II:702.
HAGGITH - காகித்து; II:702; அகித்து.
HAGRI - அகிரி; I:14; அக்ரி.
HAGRITES - அகிரியர்; I:15; ஆகாரியர்.
HAHIROTH - அகிரோத்து; I:16; பிககிரோத்து.
HAIL, HAILSTONES - கல்மழை, ஆலங்கட்டி மழை; II:661.
HAIR CLOTH - முடியாலான ஆடை; V:300.
HAKKATAN - அக்காத்தான்; I:22; அக்காற்றான்.
HAKKOS - அக்கோசு; I:27.
HAKUPHA - கக்குபா; II:575; அகுப்பா.
HALAH - கெலகு, அலகு; III:23.
HALAK - காலாக்கு; II:740; அலாக்கு.
HALAKHAH - அலக்கா; I:299.
HALF-TRIBE - பாதி அல்லது அரைக்கோத்திரம்; IV:494.
HALHUL - கல்கூல்; II:659; கல்குல்.
HALI - கலீ; II:650; அலீ.
HALICARNASSUS - அலிக்கார்னசு; I:300.
HALLEL - அல்லேல்; I:302.
HALLOHESH - அல்லோகசு; I:303; அல்லோகேசு.
HAM (PERSON) - காம், II:719.
HAM (PLACE) - காம்; II:719.
HAMAN - ஆமான்; I:481.
HAMATH - கமாத்து; II:620; ஆமத்து
HAMATH, ENTRANCE OF - கமாத்தின் நுழைவாயில்; II:620; ஆமாத்தின் நுழைவாயில்.
HAMATH-ZOBAH - கமாத்து-சோபா; II:621; அமத்து - சோபா.
HAMITES - காமியர்; II:718.
HAMMATH - கம்மாத்து; II:623; அம்மாத்து.
HAMMEDATHA - அம்மதாத்தா; I:204.
HAMMER, MALLET - சுத்தியல், சம்மட்டி, கொட்டாப் புளி; III:349.
HAMMOLECHETH - அம்மோலகேத்து; I:206.
HAMMON - கம்மோன்; II:625.
HAMMOTH-DOR - கம்மோத்து-தோர்; II:625; அம்மோத் தோர்.
HAMMUEL - கம்முவேல்; II:625.
HAMMURABI - கம்முராபி; II:623.
HAMONAH - அமோனா; I:201.
HAMON-GOG - கமோங்கோகு; II:622; அமோன்கோகு.
HAMOR - கமோர்; II:622; ஆமோர்.
HAMRAN - கம்ரான்; II:625; அம்ரான்.
HAMUL - காமூல்; II:719; ஆமூல்.
HAMULITES - காமூலியர்; II:719; அமூலியர் .
HAMUTAL - கமுத்தாள்; II:622; அமுற்றாள்.
HANAMEL - கனமேல்; II;689; அனமேல்.
HANAN - கனான்; II:692; அனான்.
HANANEL, TOWER OF - கனனேலின் கோபுரம்; II:691; அனனியேல் கோபுரம்.
HANANI - கனானி; II:692; அனனி.
HANANIAH - கனனியா; II:690; அனனியா.
HAND - கை; III:38.
HAND BREADTH - விரற்கடை; V:828.
HANDKERCHIEF, NAPKIN - கைக்குட்டை; III:38.
HANDPIKE - கைத்தடி; III:40.
HANES - கானேசு; II:753; ஆனேசு.
HANGING - தூக்கு மரணம்; III:805.
HANGINGS - தொங்கு திரைகள்; IV:44 .
HANAH - அன்னா; I:364 .
HANNATHON - கன்னாத்தோன்; II:696; அன்னாத் தோன்.
HANNIEL - கன்னியேல்; II:701; அன்னியேல்.
HANOCH - கனோக்கு; II:696; கானோக்கு அனோக்கு II:753.
HANUKKAH - கனுக்கா; II:695.
HANUN - கனூன்; II:695; ஆனூன்.
HAPHARAIM - கப்பாரயிம்; II:619; அப்பாரயிம்.
HAPPIZZEZ - அப்பிசேசு; I:159.
HARA - ஆரா; I:497.
HARADAH - கராதா; II:629; அராதா.
HARAN (PERSON) - ஆரான்; I:502.
HARAN (PLACE) - காரான்;II:723.
HARARITE - அராரியர்; I:249; ஆராரியர் .
HARBONA - ஆர்போனா; I:507; அர்போனா.
HARBOUR, HAVEN - துறைமுகம்; III:793.
HARDNESS OF HEART - இதயத்தின் கடினத்தன்மை; I:659.
HARE - முயல்; V:308.
HAREPH - காரேபு; II:724; ஆரேபு.
HARHAIAH - கார்கயா; II:724; அர்கயா.
HARHAS - கார்காசு; II:724; அர்க்சு.
HAR-HERES - கார்கரேசு; II:724; அர்கரேசு.
HARHUR - கார்கூர்; II:724; அர்கூர்.
HARIM - காரிம்; II:723; ஆரிம்.
HARIPH - காரிபு; II:723; ஆரிபு.
HARMON - ஆர்மோன்; I:508; அர்மோன்.
HARMONY OF THE GOSPHELS - நற்செய்திகளின் ஒருங்கமைவு; IV:178.
HARNEPHER - கார்னப்பேர்; II:725; அர்னபெர்.
HAROD - கரோது; II:634; அரேது.
HAROEH - ஆரோயே; I:282.
HAROSHETH - HAGOIIM - கரோசத்து-கோயிம்; II:633; அரோசத் கோயீம்.
HARP, LUTE, TYRE - யாழ், வீணை; V:427.
HARROW - பரம்படித்தல்; IV:407.
HARSHA - கார்சா; II:725; அர்சா.
HART - கலைமான்; II:656.
HARUM - ஆரும்; I:502.
HARUMAPH - கருமாபு; அருமபு.
HARUPHITE - கரூபியர்; II:633; அருபியர்.
HARUZ - காருசு; II:724; ஆருசு.
HARVEST - அறுவடை; I:339.
HASADIAH - கெசதியா, அசதியா; III:1.

HASHABIAH - கெசபியா, அசபியா; III:1.
HASHABNAH - கெசப்னா, அசபினா; III:2.
HASHABNEIAH - கெசபினியா, அசபினியா; III:2.
HASHEM - ஆசேம்; I:384.
HASHBADDANAH - கசபத்தானா; II:575; அசுபதானா.
HASHMONAH - கசுமோனா; II:584; அசுமோனா.
HASHUBAH - கெசுபா, அசுபா; III:3.
HASHUM - காசும்; II:704; ஆசும்.
HASIDEANS - கசிதேயர்; II:583.
HASIDIM - கசிதீம்; II:582.
HASMONEANS - கசமோனியர்கள், அசமோனியர்கள்; II:577.
HASRAH - கசுரா; II:584; அசரா.
HASSENAAH - அசெனா; I:34; அசெனாவா.
HASSENUAH - அசனுவா; I:35; அசனுவா.
HASSHUB - கசுபு; II:584 அசுபு.
HASSOPHERETH - அசோப்பாரத்து; I:54; அசோப்பேரத்து
HASUPHA - கசூபா; II:584, அசுபா.
HATCHET - சிற்றுளி; III:301.
HATE, HATRED - வெறுத்தல், வெறுப்பு; V:936.
HATHACH - அததாக்கு; I:107.
HATHATH - கத்தாத்து; II:609; அத்தாத்து.
HATIPHA - கத்திபா; II:609; அற்றிப்பா.
HATITA - கதித்தா; II:605; அத்தித்தா.
HATTIL - கத்தீல்; II:609; அற்றில்.
HATTUSH - கத்தூசு; II:609; அற்றூசு.
HAURAN - கவுரான்; II:671; அவுரான்.
HAVILAH (PERSON) - கெவிலா, அவிலா; III:26.
HAVILAH (PLACE) - கெவிலா, அவிலா; III:26.
HAVVOTH-JAIR - கவ்வோத்து-யாயிர்; II:672; அவ்வோத்-யாயிர்.
HAWK, HERON - வல்லூறு; V:668.
HAZAEL - கசயேல்; II:580; அசவேல்.
HAZAIAH - கசாயா; II:582; அசாயா.
HAZAR-ADDAR - கசர்-அத்தார்; II:580; அட்சராதார்.
HAZAR-ENAN - கசர்-ஏனான்; II:581; அட்சரேனான்.
HAZAR-GADDAH - கசர்-கதா; II:581; அட்சர்-கதா.
HAZAR-MAVETH - கசர்-மவேத்து; II:582; அட்சர்-மாவேத்து.
HAZAR-SHAUAL - கசர்-சூவால்; II:582; அட்சர்-சூவால்.
HAZAR-SUSAH - கசர்-சூசா; II:581; அட்சர்-சூசா.
HAZAR-SUSIM - கசர்-சூசிம், II:582, அட்சர்-சூசிம்.
HAZAZON-TAMAR - கசசோன்-தாமார்; II:575; அட்சசோன்-தாமார்.
HAZER-HATTICON - கசேர்-அத்திக்கோன்; II:584; அட்சேர்-அத்திக்கோன்.
HAZERIM - கெசேரிம்; அட்சேரிம்; III:4.
HAZEROTH - கெசேரோத்து; III:2; அட்சரோத்து
HAZIEL - கெசியேல், அசியேல்; III:3.
HAZO - கெசோ, அசோ; III:6
HAZOR - காசோர்; II:705; ஆட்சோர்.
HAZOR-HADATTHAH - காசோர்-கதாத்தா; II:706.
HAZZELELPONI - அசலெல்போனி; I:34; அட்செலல்போனி.
HEAD - தலை; III:531.
HEADBANDS - சுட்டிகள்; III:348.
HEALING, GIFT OF - குணமளிக்கும் வரம்; II:856.
HEALING, HEALTH - குணமளித்தல்; II:856.
HEAP OF STONES - கற்குவியல்; II:682.
HEART - இதயம்; I:662.
HEARTH, OVEN - அடுப்பு, அடுப்படி, சூளை; I:76.
HEAVEN, FIRMAMENT - வானகம், விண்ணகம்; V:739.
HEBER - கெபேர், ஏபேர்; III:15.
HEBREW - எபிரேயர்; II:259.
HEBREW LANGUAGE - எபிரேய மொழி; II:251.
HEBREW PEOPLE - எபிரேய மக்கள்; II:249.
HEBREW RELIGION, HISTORY OF - எபிரேயச் சமய வரலாறு ;II:243.
HEBREWS, GOSPEL ACCORDING TO - எபிரேயாகளின்படி நற்செய்தி; II:259.
HEBREWS, LETTER OF THE - எபிரேயருக்குத் திருமுகம்; II:253.
HEBRON (PERSON) - கெபிரோன், எபிரோன்; III:12.
HEBRON (PLACE) - கெபிரோன், எபிரோன்; III:13.
HEDGEHOG, PORCUPINE - முள்ளம் பன்றி; V:314.
HEEL, LIFTED - குதிங்காலைத் தூக்குதல்; II:860.
HEGAI - ஏகாய்; II:355.
HEGEMONIDES - கெகமோனியர்; III:1.
HEGLAM - எகிலாம்; II:165; எக்லாம்.
HEIFER - கன்று போடாத இளம்பசு; II:696.
HEIR - வாரிசு, உரிமையாளர்; V:731.
HELAH - கேலா, எலயா; III:35.
HELAM - கேலாம், ஏலாம்; III:36.
HELBAH - கெல்பா, எல்பா; III:25.
HELBON - கெல்போன், எல்போன்; III:26.
HELDAI - கெல்தாய், எல்தாய்; III:25.
HELEB - கேலேபு, ஏலேபு; III:36.
HELECH - கேலேக்கு, ஏலேக்கு; III:36.
HELED - கேலேது, ஏலேது; III:36.
HELEK - கேலக்கு, ஏலக்கு; III:35.
HELEM - ஏலம்; II:427; ஏலேம்.
HELEPH - கேலப்பு, ஏலப்பு; III:35.
HELEZ - கேலேசு, ஏலேசு; III:36.
HELI - ஏலி; II:432.
HELIODORUS - கெலியதோர், எலியதோர்; III:23.
HELIOPOLIS - கெலியாப்போலி, எலியாப்போலி. III:23
HELKATH - கெல்காத்து, எல்காத்து, III:25
HELKATH-HAZZURIM - கெல்காத்து அட்சூரிம், எல்காத்து அட்சூரிம்; III:25
HELL - நரகம்; IV:[illegible]
HELLENISM - கெல்லெனிசம், III:26
HELLENIST - கிரேக்க மொழி பேசும் யூதர்கள்; I:778

HELMET - தலைச்சீரா, தலைக்கவசம்; III:533.
HELON - கேலோன், ஏலோன்; III:36.
HEMAM - ஏமாம்; II:421.
HEMAN - ஏமான்; II:421.
HEMDAN - கெம்தா, எம்தான்; III:16.
HEN (PERSON) - கேன்; III:37.
HEN - பெட்டைக்கோழி; IV:696.
HENA - ஏனா; II:450.
HENADAD - கேனதாது, ஏனதாது; III:36.
HENNA - மருதோன்றி; V:123.
HEPHER (PERSON) - கேபர், ஏபர்; III:33.
HEPHER (PLACE) - கேபர், ஏபர்; III:33.
HEPHZIBAH - கெப்சியா, எப்சியா; III:15.
HERALD - அறிவிப்பவர், கட்டியங்காரன்; I:334; பறை அறிவிப்பவர், கட்டியங்காரர்; IV:469.
HERB - கீரை; II:840.
HERCULES - கெரிக்குலிசு; III:18.
HERDSMAN - மந்தை மேய்ப்பவர்; V:94.
HERES, ASCENT OF - கெரேசின் (எரேசு) ஏற்றம்; III:21.
HERES, CITY OF - கெரேசு (எரேசு) நகர்; III:21.
HERES, MOUNT - கெரேசு (எரேசு) மலை; III:21.
HERESH - கெரேசு, ஏரேசு; III:34.
HERESY - தப்பறை; III:524.
HERETH - கெரேத்து, எரேத்து; III:22.
HERMAS - எரிமா; II:281.
HERMAS, SHEPHERED OF - எரிமாவின் ஆயர்; II:282.
HERMES (DEITY) - எரிமசு; II:281.
HERMES (PERSON) - எரிமசு; II:281.
HERMOGENES - எரிமொகேன்; II:283.
HERMON, MOUNT - கெர்மோன் (எர்மோன்) மலை; III:23.
HEROD - ஏரோது; II:424.
HERODOTUS - எரோதோத்தசு; II:318.
HESHBON - கெசுபோன், எசுபோன்; III:3.
HESHMON - கெசுமோன், எசுமோன்; III:4.
HETH - கேத்து, ஏத்து; III:33.
HETHLON - கெத்லோன், எத்லோன்; III:10.
HEWERS OF WOOD - மரம் வெட்டுபவர்கள்; V:107.
HEZEKIAH - எசக்கியா; II:169; எசேக்கியா.
HEZION - கெசயோன், எசியோன்; III:3.
HEZIR - கேசீர், ஏசீர்; III:30.
HEZRO - கெசிரோ, எட்சரோ; III:3.
HEZRON (PERSON) - கெசிரோன், எட்சரோன்; III:3.
HEZRON (PLACE) - கெசிரேன்; III:3; எட்சரோன்; எஸ்ரோன்.
HE - கே/ஏ; III:29.
HIDDAI - இத்தாய்; I:668.
HIDDEN TREASURE - மறைந்திருந்த புதையல்; V:160.
HIDDEKEL - கிதக்கேல்; II:755.
HIEL - கீயேல்; II:838; ஈயேல்.
HIERAPOLIS - எராப்பொலி; II:278.
HIEROGLYPHS - சித்திர எழுத்துமுறை; III:273.
HIERONYMUS - எரோனிமு; II:318
HIGGAION - இகாயோன்; I:541
HIGH PLACE - தொழுகை மேடை; IV:94
HIGH PRIEST - பெரிய குரு, தலைமைக்குரு; IV:729
HIGH PRIEST, BREAST PIECE OF THE - தலைமைக் குருவின் மார்புப்பட்டை; III:537
HIGHEST HEAVENS, HEAVEN OF HEAVENS - வான மண்டலம்; V:747
HIGHWAY - நெடுஞ்சாலை; IV:335
HILEN - கீலேன்; II:841
HILKIA - கிலிக்கியா; II:783; இலிகியா
HILL COUNTRY - மலை நாடு; V:146
HILLEL - இல்லேல்; I:765
HIND - பெண்மான்; IV:700; மரை, பெண்மான்; V:130
HINGE - கீல்பட்டை, கீல், கதவின் மூட்டுவாய், முளையாணி; II:841
HINNOM - இன்னோம்; I:906
HIRAH - கீரா; II:839; ஈரா
HIRAM - கீராம்; II:839; ஈராம்
HISTORY - வரலாறு; V:656
HITTITES - இத்தியர்; I:669
HIVITES - கீவியர்; II:841; இவ்வியர்
HIZKI - கிசிக்கி; II:754; இசுக்கி
HOBAB - கோபாபு, ஒபாபு; III:98
HOBAH - கோபா, ஒபா; III:98
HOD - ஓது; II:564
HODAVIAH - ஒதவியா; II:564
HODESH - கோதேசு, ஒதேசு; III:97
HODEVAH - ஒதவா; II:563
HODIAH - ஒதியா; II:564
HOE, MATTOCK - மண்வெட்டி; III:62
HOGLAH - கோகுலா, ஒகுலா; III:92
HOHAM - ஒகாம்; II:545
HOLINES CODE - புனிதத்தின் அல்லது தூய்மையின் சட்டம்; IV:670
HOLM TREE - மருத மரம்; V:123
HOLOFERNES - ஒலபெரினே; II:571
HOLON - கோலான்; III:106; ஒலோன்
HOLY ARRAY - தூய கோலம்; III:815
HOLY OF HOLIES - திருத்தூயகம்; III:654
HOLY ONE, THE - தூயவர்; III:815
HOLY PLACE - தூயகம்; III:814
HOLY SEPULCHRE - புனித கல்லறை; IV:669
HOLY SPIRIT - தூய ஆவி; III:814
HOLY, HOLINESS - புனிதம்; IV:671
HOMAM - கோமாம், ஒமாம்; III:101
HOMILY - சமய அறவுரை; III:134
HOMOSEXUALITY - இயற்கைக்கு மாறான பாலினப் பாவம்; I:680
HONEY - தேன்; IV:43
HONOUR - மேன்மை, நன்மதிப்பு; V:369
HOPE - நம்பிக்கை; IV:144
HOPHNI - கொப்னி, ஒப்னி; III:50

HOPHRA - கொப்ரா (ஒப்ரா); III:50
HOR - ஓர்; II:571
HORAM - ஓராம்; II:570
HOREB MOUNT - கோரேபு, ஓரேபு மலை; III:103
HOREM - கோரேம், ஓரேம்; III:103
HORESH - ஓரசு; II:570
HOR-HAGGIDGAD - கோரகித்காது, ஓரகித்காது; III:102
HORI - கோரி, ஓரி; III:103
HORITES - கோரியர்; III:104
HORMAH - கோர்மா, ஓர்மா; III:105
HORN - கொம்பு, ஊதுகுழல்; III:51
HORNETS, WASPS - குளவிகள்; II:880
HORNS OF THE ALTAR - பீடத்தின் கொம்புகள்; IV:612
HORONAIM - கொரோனயிம், ஒரோனயிம்; III:75
HORONITE - கொரோனயிமர், ஒரோனயிமர்; III:75
HORSE - குதிரை; II:860
HORSE GATE - குதிரைவாயில்; II:862
HOSAH - கோசா; III:93; ஓசா
HOSANNA - ஓசன்னா; II:546
HOSEA - ஓசேயா; II:548
HOSEA, BOOK OF - ; II:548
HOSHAIAH - ஓசாயா; II:546; ஓசயா
HOSHAMA - ஓசாமா; II:546
HOSHEA - ஓசியா; II:546
HOSPITALITY - விருந்தோம்பல்; V:831
HOSTAGES - பிணைக்கைதிகள்; IV:577
HOTHAM - கோதாம், ஓதாம்; III:96
HOTHIR - ஒத்திர்; II:564; ஓதிர்
HOUR - மணி, நேரம்; V:58
HOUSE - வீடு; V:886
HOUSEHOLD OF GOD - இறைவனின் வீடு; I:858
HOUSEHOLDER - வீட்டுத்தலைவன்; V:897
HOWLING CREATURES - ஊளையிடும் உயிரினங்கள்; II:138
HOZAI - கோசாய்; III:93
HUKKOK - குக்கோக்கு; II:848; உக்கோக்கு
HUKOK - கொக்கோக்கு, உக்கோக்கு; III:44
HUL - கூல்; II:914; ஊல்
HULDAH - குலிதா; II:879; உல்தா
HULEH - கூலே; II:913
HUMAN SPEECH - மனிதப்பேச்சு; V:181
HUMILITY - தாழ்ச்சி; III:583
HUMITHA - குமிதா; II:862; குமற்றா
HUNCHBACK - கூனன்; II:914
HUNGER & THIRST - பசியும் தாகமும்; IV:367
HUNTING - வேட்டையாடுதல்; V:947
HUPHAM - கூப்பாம்; II:910; உபாம்
HUPPAH - குப்பா; II:862; உப்பா
HUPPIM - குப்பிம்; II:862; உப்பிம்
HUR - கூர்; II:912
HURAI - கூராய்; II:910; ஊராய்
HURAM - கூராம்; II:910; ஊராம்
HURAM-ABI - கூராம்பி; II:910; ஊராம்-அபி
HURI - கூரி; II:910; ஊரி
HARRIANS - கூரியர்கள்; II:910
HUSHAH, - கூசா II:904; ஊசா
HUSHAI - கூசாய் II:904; ஊசாய்
HUSHAM - குசாம்; II:848; ஊசாம்
HUSHATHITE - கூசாபியர்; II:904
HUSHIM - கூசிம், கூசியர்; II:905; ஊசிம்
HUT - குடிசை; II:850
HUZZAB - கூசாபு; II:904
HYDASPES - கிதசிபே; II:756
HYENA - கழுதைப்புலி; II:675
HYKSOS - கைக்கோஸ்; III:39
HYMENAEUS - இமனேயு; I:677
HYPOCRITE - வெளிவேடக்காரன்; V:929
HYRCANUS - இரிக்கானு; I:730
HYSSOP - ஈசோப்பு அல்லது ஏசோப்பு; I:912

I

I AM WHO I AM - இருக்கிறவராக இருக்கிறவர் நானே; I:734.
IBEX - காட்டு வெள்ளாடு; II:710.
IBHAR - இபுகார்; I:675; இப்கார்.
IBIS - கோட்டான்; III:95.
IBLEAM - இபுலயாம்; I:676; இபிலயாம்.
IBNEIAH - இபுனயா; I:676; இபினயா.
IBNIJAH - இபினியா; I:675;.
IBRI - இபிரி; I:675.
IBSAM - இபுசாம்; I:675; இபிசாம்.
IBZAN - இபுசான்; I:675; இப்சான்.
ICHABOD - இக்காபோது; I:541; இக்கபோது.
ICHTHUS - இக்துசு; I:542.
ICONIUM - இக்கோனியா; I:541.
IDALAH - இதலா; I:666; இதாலா.
IDBASH - இதிபாசு; I:666; இத்பாசு.
IDDO - இத்தோ; I:672.
IDLENESS - சோம்பல்; III:457.
IDOLS - சிலைகள்; III:293.
IDUMEA - இதுமேயா; I:667.
IEZER - இயசேர்; I:680.
IGAL - இகால்; I:541.
IGDALIA - இகிதலியா; I:541; இக்தலியா.
IGNATIUS, EPISTLES OF - இன்னாசியார் எழுதிய திருமுகங்கள்; I:905.
IGNORANCE - அறியாமை; I:329.
IIM - இய்யிம்; I:707; ஈயிம்.
IJON - இயோன்; I:707; ஈயோன்.
IKKESH - இக்கேசு; I:541.

ILAI - ஈலாய்; I:915.
ILLYRICUM - இல்லிரிக்கும்; I:765.
IMAGE - உருவம்; II:85.
IMAGE AND LIKENESS OF GOD - இறைவனின் உருவும் சாயலும்; I:826.
IMALKUE - இமால்க்குவே; I:677.
IMLAH - இமிலா; I:677; இம்லா.
IMMANUEL, EMMANUEL - இம்மானுவேல்; I:677
IMMER (PERSON) - இம்மேர்; I:679.
IMMER (PLACE) - இம்மேர்; I:630.
IMMORTALITY - அழியாமை, இறத்தல் இல்லாமை;I:312.
IMNA - இமினா; I:677; இம்னா.
IMNAH - இமினா; I:677; இம்னா.
IMPALEMENT - கழுவேற்றுதல்; II:678.
IMPOSITION OF HANDS - தலைமேல் கரம் வைத்தல்; III:535.
IMRAH - இமிரா; I:677; இம்ரா.
IMRI - இமிரி; I:677; இம்ரி.
INCANTATIONS - மந்திர உச்சரிப்புகள்; V:94.
INCARNATION - மனிதனாதல்; V:183.
INCENSE ALTAR - தூபப்பீடம்; III:813.
INCESE DISH - தூபப்பாத்திரம்; III:813.
INCEST - முறை தவறிய புணர்ச்சி; V:314
INDIA - இந்தியா; I:673.
INDIAN - இந்தியர்; I:674.
INDIAN DRIVER - இந்திய யானைப் பாகன்; I:673.
INDICTMENT - குற்றஞ்சாட்டுதல், வழக்காடுதல்; II:903.
INHERITANCE - உரிமைச் சொத்து; II:69.
INK - மை; V:371.
INLAY - பதிப்பு வேலை; IV:389.
INN - சாவடி, சத்திரம், விடுதி; III:260.
INNER, INWARD MAN - உள்ளார்ந்த மனிதன்; II:116
INNOCENCE - மாசின்மை; V:211.
INNOCENTS, SLAUGHTER OF THE - மாசில்லாக் குழந்தைகள் கொலை செய்யப்படுதல்; V:210
INQUIRE OF GOD - இறைவனிடம் ஆலோசனை கேட்டல்; I:825.
INSCRIPTION - எழுத்துப்பட்டயம்; II:349.
INSIGHT - நுண்ணோக்கு, உள்நோக்கு; V:321
INSPIRATION - இறை ஏவுதல்; I:803.
INTERDICT - தடை உத்தரவு; III:510.
INTEREST - வட்டி; V:652.
IOB, JOB - யோபு; V:504.
IPHDEIAH - இபுதேயா; I:676; இப்தயா.
IPHTHA - இபுதா; I:676. இப்தா.
IPHTAHEL - இபுதாவேல்; I:676.
IR - ஈர்; I:915.
IRA - ஈரா; I:914.
IRAD - ஈராது; I:915
IRAM - ஈராம்; I:915.
IRI - ஈரி; I:915.
IRIJAH - இரியா; I:733; இரிய்யா.
IR-NAHASH - ஈர் நாகாசு; I:915.
IRON - இரும்பு; I:737.
IRON SMITH - இரும்புக் கொல்லன்; I:738.
IRONY AND SATIRE - வஞ்சப் புகழ்ச்சியும் வசையுரையும்; V:648.
IRPEEL - ஈர்ப்பேல்; I:915; இர்ப்பயேல்.
IRRIGATION - நீர்ப்பாசனம்; நீர் பாய்ச்சுதல்; IV:319.
IRSHEMESH - ஈர்சேமேசு; I:915.
IRU - ஈரு; I:915.
ISAAC - ஈசாக்கு; I:908.
ISAAC, TESTAMENT OF - ஈசாக்கின் ஏற்பாடு; I:912.
ISAIAH - எசயா; II:354.
ISAIAH, ASCENSION OF - எசயாவின் விண்ணேற்பு; II:402.
ISAIAH, BOOK OF - எசயாவின் திருநூல் (முதல்) - தூயவரின் தூதர்; II:359.
ISAIAH-II, BOOK OF - எசயாவின் திருநூல் (இரண்டாம்) - ஆறுதலின் நூல்; II:380.
ISAIAH-III, BOOK OF - எசயாவின் திருநூல் (மூன்றாம்) - புதியவானம் புதிய பூமி; II:395.
ISCAH - இசிக்கா; I:544; இசுக்கா.
ISHBAAL - இசிபாகால்; I:544; இசுபாகால்
ISHBAH - இசிபா; I:544; இசுபகு.
ISHBAK - இசிபாக்கு; I:545; இசுபாக்கு.
ISHBI BENOB - இசிபி-பெனோபு; I:545.
ISHBOSHETH - இசிபோசத்து; I:546; இஸ்பொசேத்து.
ISH-HAI - இசிகாய்; I:544.
ISHHOD - இசிகோது; I:544, இசுகோது.
ISHI (NAME OF GOD) - ஈசி, I.912; இசி.
ISHI (PERSON) - ஈசி; I:912; இசி.
ISHMA - இசிமா; I:546; இஸ்மா.
ISHMAEL - இசுமயேல்; I:549; இஸ்மயேல்.
ISHMAELITES - இசுமயேலர்; I:546. இஸ்மயேலர்.
ISHMAIAH - இசுமாயா; I:551; இஸ்மாயா.
ISHMERAI இசுமெராய்; I:552
ISHPAH - இசுபா; I.548.
ISHPAN - இசுபான்; I:548; இசுப்பான்.
ISHTAR - இஷ்தார்; I.544.
ISHVAH - இசுவா, I:552
ISHVI - இசுவி. I:552; இஸ்வி.
ISIS - ஐசிஸ், II:454.
ISLAND, ISLE - தீவு; III:773.
ISMACHIA - இசுமாக்கியா; I:551
ISRAEL - இஸ்ராயேல்; I:558
ISRAEL, HISTORY OF - இஸ்ராயேலின் வரலாறு; I:570.
ISRAEL, NAMES AND ASSOCIATIONS OF - இஸ்ராயேலின் பெயர்களும் தொடர்புகளும்; I.556.
ISRAEL, SOCIAL AND ECONOMIC PROGRESS - இஸ்ராயேல் சமூக பொருளாதார முன்னேற்றம்; I.561
ISSACHAR - இசக்கார்; I:542.

ISSIAH - இசியா; I:546.
ISSHIJAH - இசீயா; I:548.
ITALA - இத்தாலா; I:668.
ITALIAN COHORT - இத்தாலியப் பட்டாளம்; I:669.
ITALY - இத்தாலியா; I:668.
ITHAI - ஈத்தாய்; I:913; இத்தாய்.
ITHAMAR - இத்தாமார்; I:667.
ITHIEL - ஈத்தியேல்; I:913; இத்தியேல்.
ITHLAH - இதுலா; I:667; இத்லா.
ITHMAH - இதுமா; I:667; இத்மா.
ITHNAN - இதினான்; I:667; இத்னான்.
ITHRA - இதிரா; I:666; இத்ரா.
ITHRAN - இதிரான்; I:666; இத்ரான்.
ITHREAM - இதிரயாம்; I:666; இத்ரயாம்.
ITHRITES - இதிரியர்; I:666; இத்ரியர்.
ITTAI - இத்தாய் I:668; ஈத்தாயா.
ITUREA - இத்துரேயா; I:672.
IVORY - தந்தம்; III:513.
IVVAH - இவ்வா; I:766.
IYE-ABARIM - இயே-அபாரிம்; I:681; இயாபரிம்.
IYIM - ஈயிம்; I:914; இய்யிம்.
IYYAR - இயார்; I:681.
IZHAR - இசார்; I:544; இட்சகார்.
IZLIAH - இசுலியா; I:522; இஸ்லியா.
IZRAHIAH - இசுரகியா; I:552.
IZRAHITE - இசுரகியர்; I:552.
IZRI - இசுரி; I:552; இட்சரி.
IZZIAH - இசியா; I:546; இசிய்யா.

J

JAAKAN - யாக்கான்; V:394.
JAAKOBAH - யாக்கோபா; V:396.
JAALA - யாலா; V:425.
JAALAH - யாலாகு; V:425.
JAAR - யாகர்; V:394.
JAARE - OREGIM - யகரே-ஒர்கீம்; V:391.
JAARESHIAH - யகரேசியா; V:391.
JAASIEL - யகசியேல்; V:391.
JAASU - யகசு; V:391.
JAAZANIAH - யாசனியா; V:412.
JAAZIAH - யகசியா; V:391.
JAAZIEL - யகசியேல்; V:391.
JABAL - யாபால்; V:419.
JABBOK - யாபோக்கு; V:420.
JABES - யாபேசு; V:419.
JABESH - யாபேசு; V:419.
JABESH-GILEAD - யாபேசு-கிலயாது V:419.
JABEZ (PERSON) - யகபேசு; V:39[illegible].
JABEZ (PLACE) - யகபேசு; V:391.
JABIN - யாபீன்; V:419.
JABNEEL - யாப்னவேல்; V:421.
JABNEH - யாப்னே; V:22.
JACAN - யாக்கான்; V:394.
JACHIN - யாக்கின்; V:395.
JACHIN AND BOAZ - யாக்கின் மற்றும் போவாசு; V:395.
JACINTH - கெம்பு; III:16.
JACKAL'S WELL - நரி நீரூற்று; IV:156.
JACOB O.T. - யாக்கோபு - பழைய ஏற்பாடு; V:396.
JACOB N.T. - யாக்கோபு - புதிய ஏற்பாடு; V:396.
JACOB, BLESSING OF - யாக்கோபுவின் ஆசீர்; V:410.
JACOB-ISRAEL - யாக்கோபு-இஸ்ராயேல்; V:398.
JACOB'S LADDER - யாக்கோபுவின் ஏணி; V:410.
JACOB'S WELL - யாக்கோபுவின் கிணறு; V:410.
JADA - யாதா; V:416.
JADDAI - யாதாய்; V:416.
JADDUA - யாதுவா; V:416.
JADON - யாதோன்; V:416.
JAEL - யாவேல்; V:427.
JAGUR - யாகூர்; V:394.
JAHATH - யாகத்து; V:393.
JAHAZ - யாகசு; V:393.
JAHAZIEL - யாகசியேல்; V:393.
JAHDAI - யகுதாய், எகுதாய்; V:391; 394.
JAHDIEL - யாகுதியேல், எகுதியேல்; V:394; யகுதியேல், எகுதியேல்; V:391.
JAHDO - யாகுதோ; V:394.
JAHLEEL - யாகுலவேல்; V:394.
JAHMAI - யாகுமாய்; V:394.
JAHZAH - யாகுசா; V:394.
JAHZEEL - யாகுட்சேல்; V:394.
JAHZEIAH - யாகிசியா; V:394.
JAHZERAH - யாகிசேரா; V:394.
JAHZIEL - யாகுட்சியேல்; V:394.
JAIRITE - யாயீரியர்; V:424.
JAIRUS - யாயிர்; V:423.
JAKEH - யாக்கே; V:395.
JAKIM - யாக்கிம்; V:395.
JALAM - யாலாம்; V:426.
JALON - யாலோன்; V:426.
JAMB - புடைநிலை; IV:621.
JAMBRES - யம்பிரே, இயம்பிரே; V:391.
JAMBRI - யாம்பிரி, இயாம்பிரி; V;422.
JAMES - யாக்கோபு; V:396.
JAMES, APOCALYPSE OF - யாக்கோபுவின் திருவெளிப்பாடு; V:411.
JAMES, ASCENTS - யாக்கோபுவின் ஏற்றம்; V:410.
JAMES, LETTER OF - யாக்கோபு எழுதிய திருமுகம்; V:405.
JAMES, PROTOEVANGLIUM OF - யாக்கோபுவின் முதல் நற்செய்தி; V:411.

JAMES, THE GREAT, ACTS OF - பெரிய யாக்கோபு வின் பணிநூல்; IV:732.
JAMIN - யாமின்; V:422.
JAMLECH - யாமலேக்கு; V:422.
JAMNIA - யாம்னியா; V:422.
JANAI - யானாய்; V:427.
JANIM - யானிம்; V:427.
JANNAI - யன்னாய், இயன்னாய்; V:392.
JANNES - யன்னே, இயன்னே; V:392.
JANNEUS - யன்னேயு; V:392.
JANOAH - யனோவாகு; V:428.
JAPHETH - யாப்பேத்து, எப்பேத்து; V:421.
JAPHIA (PERSON) - யாப்பியா; V:421.
JAPHIA (PLACE) - யாப்பியா; V:421.
JAPHLET - யாப்லேற்று; V:421.
JAPHLETITES - யாப்லேற்றியர்; V:421.
JARAH - யாரா; V:424.
JAREB - யாரேபு; V:425.
JARED - யாரேது, எரேது; V:425; யாரேத்து.
JARHA - யார்கா; V:425.
JARIB - யாரிபு; V:424.
JARMUTH - யார்முத்து; V:425.
JAROAH - யாரோவாகு; V:425.
JASHAR, BOOK OF - யாசாரின் நூல்; V:412.
JASHEN - யாசேன்; V:414.
JASHOBEAM - யாசொபயாம்; V:414.
JASHUB - யாசுபு; V:413.
JASHUBI-LEHEM - யாசுபிலகேம்; V:413.
JASON - யாசோன்; V:415.
JASPER - மணிக்கல், கடல் வண்ணக்கல்; V:58.
JATHAN - யாத்தான்; V:416.
JATHNIEL - யாத்தனியேல்; V:416.
JATTIR - யாத்திர்; V:419.
JAVAN - யாவான்; V:426.
JAW, JAWBONE - தாடை, தாடை எலும்பு; III:547.
JAZER - யாசேர்; V:413.
JAZIZ - யாசிசு; V:413.
JEALOUSY, ORDEAL OF - சினத்தின் உணவுப் படையல்; III:301.
JEARIM - எயாரிம்; II:276.
JEATHERAI - எயத்திராய்; II:276; எயத்தராய்.
JEBERECHIAH - எபெரெக்கியா; II:260; எபரேக்கியா.
JEBUS - எபூசு; II:266.
JECOLIAH - எக்கோலியா; II:169; எக்கொலியா.
JECONIAH - எக்கொனியா; II:169; எக்கோனியா.
JEDAIAH - எதாயா; II:229.
JEDIAEL - எதியேல்; II:233; எதியவேல்.
JEDIDAH - எதீதா; II:235.
JEDIDIAH - எதிதியா; II:235.
JEDUTHUN - எதுத்தூன்; II:235.
JEGAR-SAHADUTHA - எகர்-சகதுத்தா; II:149.
JEHALLELEL - எகல்லலேல்; II:149; எகலலேல்.
JEHDEIAH - எகிதியா; II:149.
JEHEZKEL - எகசக்கேல்; II:149; எகசக்கேல்.
JEHIAH - எகியா; II:164.
JEHIEL - எகியேல்; II:164.
JEHIELI - எகியேலி; II:164.
JEHIZKIAH - எகிசிக்கியா; II:149; எகிசகியா.
JEHOADDAH - யோயதா, யோகதா; V:528; எகோயாதா.
JEHOADDAN - யோயதான், V:528.
JEHOADDIN - யோவாதீன்; V:540.
JEHOAHAZ - யோவகாசு; V:538.
JEHOHANAN - யோகனான்; V:471.
JEHOIACHIN - யோயாக்கின்; V:531.
JEHOIADA - யோயாதா; V:532.
JEHOIAKIM - யோயாத்திம்; V:528.
JEHOIARIB - யோயாரிபு; V533.
JEHONADAB, JONADAB - யோனதாபு; V:586.
JEHONATHAN - யோனத்தான்; V:586.
JEHORAM, JORAM - யோராம்; V:534.
JEHOSHABEATH - யோசபெயாத்து; V:477.
JEHOSHAPHAT - யோசபாத்து; V:475.
JEHOSHAPHAT, VALLEY OF - யோசபாத்து பள்ளத் தாக்கு; V:476.
JEHOSHEBA - யோசேபா; V:500.
JEHOVAH - எகோவா; II:167.
JEHOVAH-JIREH - எகோவா-ஈரே; II:167.
JEHOVAH-NISSI - எகோவா-நீசி ; II:168.
HEHOVAH-SHALOM - எகோவா-சாலோம்; II:168.
JEHOZABAD - யோசபாது; V:474.
JEHOZADAK - யோசதாக்கு; V:474.
JEHU - ஏகூ; II:355.
JEHUBBAH - எகுப்பா; II:167; எகுபா.
JEHUCAL - எகூக்கல்; II:167; எகுக்கல்.
JEHUD - எகுது; II:166; எகூது.
JEHUDI - எகுதி; II:166.
JEHUDIJAH - எகுதியா; II:166.
JEHUEL - எகுவேல்; II:167.
JEIEL - எயியேல்; II:276.
JEKABZEEL - எக்கபுசேல்; II:168; எக்கபசவேல்.
JEKAMEAM - எக்கமயாம்; II:168.
JAKAMIAH - எக்கமியா; II:168.
JEKUTHIEL - எகுத்தியேல்; II:166.
JEMIMAH - எமிமா; II:274.
JEMUEL - எமுயேல்; II:274; எமுவேல்.
JEPHTHA - இபிதாகு; I:674; இப்தாகு.
JEPHUNNEH - எப்புன்னே; II:273.
JERAH - எராகு; II:278.
JERAHMEEL - எரகுமேல்; II:277; எரகுமவேல்.
JERED - எரேது; II:308.
JEREMAI - எரேமாய்; II:308.
JEREMIAH - எரேமியா; II:308.
JEREMIAH, BOOK OF - எரேமியாவின் நூல்; II:308.
JERAMIAH, LETTER OF - எரேமியாவின் மடல்;II:315.
JEREMOTH - எரெமோத்து; II:307.

JERIAH - எரீயா; II:283; எரிய்யா.
JERIBAI - எரிபாய்; II:281.
JERICHO - எரிகோ; II:278.
JERIEL - எரியேல்; II:284.
JERIJAH - எரியா; II:283.
JERIMOTH - எரிமோத்து; II:283.
JERIOTH - எரியோத்து; II:284.
JEROBOAM - எரோபயாம்; II:316; எரோபவாம்.
JEROHAM - எரோகாம்; II:316; எரொராகாம்.
JERUBAAL - எருபாகால்; II:306.
JERUBBESHETH - எருபாசத்து; II:306; எருபசேத்து.
JERUEL - எருவேல்; II:306.
JERUSALEM - எருசலேம்; II:284.
JERUSALEM, COUNCIL OF - எருசேலம் சங்கம்; II:304.
JERUSALEM, TEMPLE OF - எருசலேம் ஆலயம்; II:295.
JERUSHA - எருசா; II:306.
JESHAIAH - எசாயா; II:180; ஏசாயா.
JESHANAH - எசானா; II:180.
JESHARELAH - எசரேலா; II:179.
JESHEBEAB - எசெபெயாபு; II:179; எசேபயாபு.
JESHER - ஏசேர்; II:408.
JESHIMON - எசிமோன்; II:181.
JESHISHAI - எசிசாய்; II:180.
JESHOHAIAH - எசொகாயா; II:186; எசோகயா.
JESHUA (PERSON) - ஏசூவா; II:406.
JESHVA (PLACE) - ஏசூவா; II:408.
JESHURUN - எசுரூன்; II:185.
JESIMIEL - எசிமியேல்; II:180.
JESSE - ஈசாய்; I:912.
JESUS - இயேசு; I:681.
JESUS CHRIST - இயேசு கிறிஸ்து; I:681.
JESUS TEMPTED - இயேசு சோதிக்கப்பட்டது; I:692.
JESUS, NAME OF - இயேசுவின் பெயர்; I:695.
JESUS, TEACHING OF - இயேசுவின் போதனைகள்; I:697.
JESUS, TRIAL OF - இயேசுவின் விசாரணை; I:706.
JESUS, WISDOM OF - இயேசுவின் ஞானம்; I:694.
JETHER - எத்தேர்; II:240.
JETHETH - எத்தேத்து; II:239.
JETHRO - இத்திரோ; I:671.
JETUR - எத்தூர்; II:240; எற்றூர்.
JEUEL - எயுவேல்; II:277.
JEUSH - எயூசு; II:276; எயுசு.
JEUZ - எயுசு; II:276; ஏயூசு.
JEW - யூதன்; V:430.
JEWELS AND PRECIOUS STONES - நகைகளும் விலையுயர்ந்த கற்களும்; IV:131.
JEWESS - யூதப்பெண்; V:429.
JEZANIAH - எசனியா; II:179.
JEZEBEL - ஈசபேல்; I:907; இசபேல்.
JEZER - எசேர்; II:186; எட்சேர்.
JEZIEL - எசியேல்; II:181.
JEZRAHIAH - இசராகிய; I:552; இஸ்ரகியா.
JEZREEL (PERSON) - இசிரியேல்; I:546; இஸ்ரியேல்.
JEZREEL (PLACE) - இசிரியேல்; I:547.
JEZREELITE - இசிரியேலர்; I:546.
JEZEREELITESS - இசிரியேலப்பெண்; I:546.
JIDLAPH - இதிலாபு; I:666.
JOAB - யோவாபு; V:541.
JOAH - யோவாகு V:540.
JOAHAZ - யோவகாசு; V:540.
JOAKIM - யோயாக்கிம்; I:530.
JOANAN - யோவனான்; V:540.
JOANNA - யோவன்னா; V:540.
JOARIB - யோவாரிபு; V:543.
JOASH, JEHOASH - யோவாசு; V:540.
JOB - யோபு; V:504.
JOB, BOOK OF - யோபு நூல்; V:504.
JOBAB - யோபாபு; V:504.
JOCHEBED - யோக்கபேது; V:472.
JOD - யோது; V:503.
JODA - யோதா; V:503.
JOED - யோவேது; V:580.
JOEL - யோவேல்; V:581.
JOEL, BOOK OF - யோவேல் திருநூல்; V:582.
JOELAH - யோவேலா; V:581.
JOEZER - யோவேசர்; V:580.
JOGBEHAH - யோக்பகா; V:473.
JOGLI - யோகிலி; V:472.
JOHA - யோகா; V:472.
JOHANAN - யோகனான்; V:471.
JOHN - யோவான்; V:544; அருளப்பர்; I:268.
JOHN THE DIVINE, DISCOURSE OF SAINT - மதகுரு யோவானின் உரை; V:62.
JOHN, ACTS OF - யோவானின் பணிநூல்; V:543.
JOHN, ACTS OF, BY PROCHORUS - பிரக்கோர் எழுதிய யோவானின் பணி; IV:580.
JOHN, APOCRYPHON OR SECRET BOOK OF - யோவானின் போலி அல்லது இரகசிய நூல்; V:544.
JOHN, GOSPEL OF - யோவான் எழுதிய நற்செய்தி; V:553.
JOHN-I, LETTER OF - யோவான் எழுதிய திருமுகம் I; V:545.
JOHN-II-III, LETTER OF - யோவான் எழுதிய திருமுகம் II-III; V:550.
JOHN, THE BAPTIST - திருமுழுக்கு யோவான்; III:712.
JOHN, THE EVANGELIST, BOOK OF - நற்செய்தியாளர் யோவானின் நூல்; IV:179.
JOIADA - யோயாதா; V:533.
JOIAKIM - யோயாக்கிம்; V:531.
JOIARIB - யோயாரிபு; V:533.
JOKDEAM - யோக்தயாம்; V:473.
JOKIM - யோக்கிம்; V:473.
JOKMEAM - யோக்மயாம்; V:473.

JOKNEAM - யோக்னயாம்; V:474.
JOKSHAN - யோக்சான்; V:473.
JOKTAN - யோக்தான்; V:473.
JOKTHEEL - யோக்தவேல்; V:473.
JONADAB - யோனதாபு; V:586.
JONAH - யோனா; V:589.
JONAH, BOOK OF - யோனா திருநூல்; V:589.
JONAM - யோனாம்; V:602.
JONATH ELEM RECHOKIM - யோனதெலம்-ரிக்கோகிம்; V:586.
JONATHAN - யோனத்தான்; V:587.
JONATHAN, SON OF SAUL - யோனத்தான், சவுலின் மகன்; V:588.
JOPPA - யோப்பா; V:528.
JORAH - யோரா; V:534.
JORAI - யோராய்; V:535.
JORAM - யோராம்; V:534.
JORDAN - யோர்தான்; V:535.
JORDAN, BEYOND THE - யோர்தானுக்கு அப்பால்; V:535.
JORDAN, JUNGLE OF, PRIDE OF JORDAN - யோர்தான் காடு, யோர்தான் மேன்மை; V:536.
JORIM - யோரிம்; V:535.
JORKEAM - யோர்க்கயாம்; V:535.
JOSECH - யோசேக்கு; V:500.
JOSEDECH - யோசதேக்கு; V:474.
JOSEPH - யோசேப்பு; V:500.
JOSEPH OF ARIMATHEA, NARRATIVE BY - யோசேப்பு (அரிமத்தியா) எழுதிய நிகழ்ச்சியுரை; V:502.
JOSEPH, HUSBAND OF MARY - யோசேப்பு, மரியாளின் கணவர்; V:502.
JOSEPH, PRAYER OF - யோசேப்புவின், செபம்; V:503.
JOSEPH, THE CARPENTER, HISTORY OF - தச்சர் யோசேப்பின் வரலாறு; III:510.
JOSES - யோசே; V:500.
JOSHAH - யோசா; V:477.
JOSHAPHAT - யோசபாற்று; V:477.
JOSHAVIAH - யோசவியா; V:477.
JOSHBEKASHAH - யோசபக்காசா; V:474.
JOSHEB-BASSHEBETH - யோசேபு-பசபேத்து; V:500.
JOSHIBIAH - யோசிபியா; V:477.
JOSHUA - யோசுவா; V:748.
JOSHUA, BOOK OF - யோசுவா நூல்; V:748.
JOSHUA, SON OF NUN - யோசுவா நூனின் மகன்; V:498.
JOSIAH - யோசியா; V:477.
JOSIPHIAH - யோசிப்பியா; V:477.
JOTBATH - யோற்றுபா; V:586.
JOTBATHAM - யோற்றுபாத்தா; V:586.
JOTHAM - யோத்தாம்; V:503.
JOY - மகிழ்ச்சி; V:10.
JOZABAD - யோசபாது; V:474.
JOZACAR - யோசக்கார்; V:474.
JOZADAK - யோசதாக்கு; V:474.
JUBAL - யூபால்; V:463.
JUBILEE, BOOK OF - யூபிலி நூல்; V:464.
JUBIOLEE, YEAR OF - யூபிலி ஆண்டு; V:463.
JUCAL - யூக்கால்; V:429.
JUDAH (PERSON) - யூதா; V:433.
JUDAH, HILL COUNTRY OF - யூதாவின் மலைப்பகுதி; V:446.
JUDAH, TRIBE - யூதா-இனமும் நாடும்; V:433.
JUDAH, WILDERNESS OF - யூதாவின் பாலைவனம்; V:466.
JUDAISM - யூதத்துவம்; V:429.
JUDAIZING - யூதராக்குதல்; V:430.
JUDAS - யூதாசு; V:443.
JUDAS, GOSPEL OF - யூதாசின் நற்செய்தி; V:443.
JUDAS ISCARIOT - யூதாசு இஸ்காரியோத்து; V:444.
JUDAS MACCABEUS - யூதா மக்கபேயு; V:445.
JUDE, LETTER OF - யூதா எழுதிய திருமுகம்; V:440.
JUDEA - யூதேயா; V:462.
JUDGE, JUSTICE - நீதிபதி, நடுவர்; IV:286.
JUDGEMENT - தீர்ப்பு; III:762.
JUDGEMENT, DAY OF - தீர்ப்பின் நாள்; III:761.
JUDGEMENT, HALL OF - நீதி மண்டபம்; IV:287.
JUDGEMENT SEAT - நீதி இருக்கை; IV:285.
JUDGES, BOOK OF - விடுதலைத்தலைவர்கள் நூல், நீதிபதிகள் நூல்; V:769; IV:287 .
JUDITH - யூதித்து; V:446.
JUDITH, BOOK OF - யூதித்து நூல்; V:447.
JULIA - யூலியா; V:469.
JULIUS - யூலிபு; V:469.
JUNIAS - யூனியா; V:470.
JUPITER - யூபித்தர்; V:463.
JUSHAB-HESED - யூசபு-கெசேது; V:429.
JUSTICE - நீதி; IV:277.
JUSTIFICATION - ஏற்புடைமை; II:447.
JUSTUS - யுஸ்து; V:429.
JUTTAH - யூற்றா; V:469.

K

KABZEEL - கபிசேல்; II:611; கப்சவேல்.
KADESH, KADESH-BARNEA - காதேசு, காதேசு - பார்னேயா; II:714.
KADMIEL - கதிமியேல்; II:603; கத்மியேல்.
KADMONITES - கதிமோனியர்; II:603; கத்மோனியர்.
KAIN (PERSON) - கயீன்; II:627.
KAIN (PLACE) - கயீன்; II:627.
KAIWAN - காய்வான்; II:722; கிய்யோன்.

KALLAI - கல்லாய்; II:662.
KAMON - காமோன்; II:719.
KANAH - கானா; II:748.
KAREAH - காரயாகு; II:723.
KARKA - கர்க்கா; II:634.
KARKOR - கர்க்கோர்; II:634.
KARNAIM - கார்னாயிம்; II:725.
KARTAH - கர்த்தா; II:634.
KARTAN - கர்த்தான்; II:634.
KATTATH - கத்தாத்து; II:609; கற்றாத்து.
KEDAR - கேதார்; III:31.
KEDAMAH - கேதமா; III:31 .
KEDEMOTH - கெதமோத்து; III:6.
KEDESH - கெதேசு; III:8.
KEDESH IN NAPHTALI - நப்தலியைச் சேர்ந்த கெதேசு; IV:144.
KEDRON - கெதரோன்; III:6 .
KEEPER - காவலாளி; II:745.
KEEPER OF THE WARDROBE - ஆடையக மேற்பார்வையாளர்; I:408.
KEHELATHAH - கெகேலாத்தா; III:1.
KEILAH (PERSON) - கெயிலா; III:16.
KEILAH (PLACE) - கெயிலா; III:16.
KELAIAH - கேலாயா; III:36.
KELITA - கெலிற்றா; III:24.
KELKAI - கெல்காய், எல்காய்; III:25.
KEMUVEL - கெமுவேல்; III:15.
KENAN - கேனான்; III:37.
KENATH - கெனாத்து; III:27.
KENAZ - கெனாசு; III:27.
KENITES - கேனியர்; III:37 .
KENIZZITE - கெனிசியர்; III:28.
KERAN-HAPPUCH - கெரேன் - அப்பூக்கு; III:22.
KERIOTH - கெரியோத்து; III:19.
KERIOTH-HEZRON - கெரியோத்து-எட்சரோன்; III:19.
KEROS - கேரோசு; III:34.
KETURAH - கெற்றூரா; III:26.
KEY - திறவுகோல்; III:741.
KEYS, POWER OF - திறவுகோல்களின் அதிகாரம்; III:741.
KEZIAH - கெட்சியா; III:6.
KEZIZ - கெசிசு; III:2.
KHIRBET KERAK - கிர்பெத்து - கேராக்கு; II:780.
KHIRBET QUMRAN - கிர்பெத்து கும்ரான்; II:780.
KIBROTH-HATTAAVAH - கிபிரோத்து-அத்தாவா; II:763; கிப்ரோத்து-அத்தாவா.
KIBZAIM - கிபிசயிம்; II:763; கிபட்சயிம்.
KID - ஆட்டுக்குட்டி; I:413.
KIDNEYS - சிறுநீரகங்கள்; III:299.
KIDRON - கிதரோன்; II:757; கெதரோன்.
KILL - கொலை செய்தல்; III:76.
KILN - சூளை, காளவாய்; III:360.
KINAH - கீனா; II:846.
KING - அரசன்; I:224.
KING'S GARDEN - அரச தோட்டம்; I:214.
KING'S GATE - அரச வாயில்; I:215.
KING'S HIGHWAY - அரச நெடுஞ்சாலை; I:214.
KING'S POOL - அரச குளம்; **I:214.**
KING'S SON, MARRIAGE FEAST OF THE - PARABLE - அரசனுடைய மகனின் திருமண விருந்து - உவமை; I:215.
KING'S VALLEY, VALLEY OF SHAVEH - அரசர்களின் பள்ளத்தாக்கு; I:215.
KINGDOM OF GOD - இறை அரசு; **I:787** .
KINGS, I-II BOOK OF - அரசர்கள் நூல் I-II; I:224.
KIR - கீர்; II:840.
KIR HARESETH - கீர் - கரசேத்து; II:841; கீர்-அரசேத்து.
KIR HERES - கீர் கரேசு; II:841; கீர்-எரேசு.
KIRIATH - கிரியத்து; II:767.
KIRIATHAIM - கிரியத்தாயிம்; II:766.
KIRIATH - ARIBA - கிரியத்தரிபா/கிரியத்து - அர்பா II:766.
KIRIATH - ARIM - கிரியத்தாரிம்/ கிரியத்து - ஆரிம்; II:767.
KIRIATH - BALL - கிரியத்து - பாகால்; II:769.
KIRIATH - HUZOTH - கிரியத்து குசோத்து; II:768.
KIRIATH - JEARIM - கிரியத்து எயோரிம்;II:767.
KIRIATH - SANNAH - கிரியத்து - சன்னா; II:768.
KIRIATH - SEPHER - கிரியத்து - சேபர்; II:768.
KISH - கீசு; II:837.
KISHI - கீசி; II:837.
KISHION - கிசியோன்; II:754.
KISHON - கீசோன்; II:838.
KISS - முத்தம்; V:305.
KITCHEN - சமையற்கட்டு; III:144.
KITE - பருந்து; IV:419.
KITRON - கித்திரோன்; II:759; கிற்றரோன்.
KITTIM - கித்தீம். கித்தியர்; II:759; கித்திம்.
KNEE - முழங்கால்; V:310.
KNIFE - கத்தி; II:609.
KOA - கோகா; III:91.
KOHATH - கோகாத்து; III:91.
KOHELETH, QOHELETH - கோகெலேத்து; III:92.
KOLA - கோலா; III:106.
KOLAIAH - கோலயா; III:105.
KONA - கோனா; III:107.
KOPH - கோப்பு; III:100.
KORAH - கோராகு; III:102.
KORE - கோரே; III:103.
KOZ - கோசு; III:94.
KUE - கேவே; III:36.
KUSHAIAH - கூசயா; II:904.
KYRIA ELEISON - கீரிய எலேயிசோன்; II:840.

L

LADAH - இலாதா; I:758.
LABAN (PERSON) - லாபான்; V:621; இலாபான்;**I:759.**
LABAN (PLACE) - லாபான்; V:622.
LABOUR - உழைப்பு; II:118.
LACE - நாடா, பின்னல்; IV:211.
LACEDAEMONIANS - லக்கதேமோனியர், இலக்கதே மோனியர்; V:621.
LACHIS - இலாக்கீசு; I:756; இலாக்கிசு.
LADAN - இலாதான்; I:758.
LAEL - இலாயேல்; I:760; இலாவேல்.
LAHAD - இலகாது; I:740.
LAHMAM - இலகுமாம்; I:741.
LAHMI - இலகுமி; I:741.
LAISH (PERSON) - இலாயிசு; I:759.
LAISH (PLACE) - இலாயிசு; I:759.
LAISHAH - இலாயிசா; I:759.
LAKKUM - இலக்கூம்; I:750.
LAMB - செம்மறி; III:420.
LAMB OF GOD - இறைவனின் செம்மறி; I:838.
LAME, CRIPPLED - முடம், கால் ஊனம்; V:299.
LAMECH - இலாமேக்கு; I:759.
LAMED - லாமேது; V:622.
LAMENTATIONS, BOOK OF - புலம்பல் நூல்; IV:644.
LAMP - விளக்கு; V:879.
LAMP, PARABLE OF - விளக்கு உவமை; V:881.
LAMPSTAND - விளக்குத்தண்டு; V:881.
LAND - நாடு, நிலம்; IV:211.
LAND LAWS - நாட்டைப் பங்கீடு செய்யும் சட்டம்; IV:225.
LAND MARK - எல்லைக்குறி; II:343.
LANGUAGES OF THE ANCIENT NEAR EAST - பழங்கால மேற்காசிய மொழிகள்; IV:456.
LAODICEA - இலவோதிக்கயா; I:755; இலவோதிக் கேயா.
LAODICEANS, LETTER TO THE - இலவோத்தியருக் குத் திருமுகம்; I:756.
LAPPIDOTH - இலப்பிதோத்து; I:754.
LASEA - இலசயா; I:750; லாசேயா; V:621.
LASH - கசையின் கயிறு; II:586.
LASHA - இலாசா; I:758; இலேசா.
LASHARON - இலசாரோன்; I:750; இலாசரோன்.
LAST PLACE (PARABLE) - கடைசி இடம் - உவமை; II:592.
LAST SUPPER - இறுதி இரவுணவு; I:778.
LASTHENES - இலாசுதன்; I:758.
LATCH - கதவுத்துளை; II:603.
LATIN - இலத்தீன்; I:750.
LATIN VULGATE - இலத்தீன் வுல்கத்தா மொழி பெயர்ப்பு; I:750.
LATRINE - கழிவறை; II:674.
LATTER RAIN, SPRING RAIN - பின்மாரி; IV:610.
LATTICE - பின்னல்தட்டி; IV:610.
LAUGHTER - சிரிப்பு; III:283.
LAVER - கழுவ உதவும் தொட்டி; II:676.
LAW - சட்டம்; III:116.
LAWYER - திருச்சட்ட அறிஞர்; III:640.
LAZARUS - இலாசர்; I:758.
LAZARUS AND DIVES - இலாசரும் திவேசும்; I:757.
LEAD - ஈயம்; I:914.
LEAH - இலேயா; I:764; லேயா; V:643.
LEATHER, LEATHERN - பதனிட்ட தோல்; IV:389.
LEAVEN, PARABLE OF - புளிப்புச்சத்து உவமை; IV:658.
LEBANA - இலபானா; I:754; இலெபனா.
LEBANON - இலபனோன்; I:754; லெபனோன்; V:642.
LEBANON, CEDAR OF - லெபனோனின் கேதுரு; V:641.
LEBANON, HOUSE OF THE FOREST OF - லெபனோனின் வன மாளிகை; V:642.
LEBAOTH - லபவோத்து, இலபவோத்து; V:621.
LEBONAH - இலபோனா; I:754; இலெபோனா.
LECAH - இலேக்கா; I:764.
LEECH - அட்டை; I:88.
LEES - மண்டி; V:61.
LEGEND - கதை; II:605; மரபுவழிக்கதை **V:103.**
LEGION, COHORT, CENTURIES - படைப்பிரிவுகள்; IV;377.
LEHABIM - இலகாபிம், இலகாபியர்; I:740; இலெகா பிம்.
LEHEM - இலகேம்; I:741.
LEHI - இலகி; I:740; இலேகி .
LEMUEL - இலமுவேல்; I:754; லெமுவேல்; V:643.
LENDING - கடன் கொடுத்தல்; II:591.
LENTILS - சிறு பயறு; III:299.
LENTULUS, LETTER OF - இலெந்துலுவின் கடிதம்; I:764.
LEOPARD - சிறுத்தைப்புலி, வேங்கை; III:298.
LEPROSY - தொழுநோய்; IV:95.
LESHEM - இலசம்; I:750; இலசேம்.
LETUSHIM - இலத்தூசிம், இலத்தூசியர்; I:754; இலற்றுசிம்.
LEUCIUS - லெயுக்கியு; V:643.
LEUMMIM - இலயூமியர்; I:754; இலயும்மிம்.
LEVI - லேவி; V:643.
LEVI, LEVITE - இலேவி, இலேவியர்; I:764; லேவியர்.

LEVIATHAN - இலவியத்தான்; I:755; லிவியத்தான்; V:622.
LEVIRATE MARRIAGE - லேவிரேட்டுத் திருமணம்; V:645.
LEVITE - லேவியர்; V:644.
LEVITICAL CITIES - லேவியர் நகரங்கள்; V:645.
LEVITICUS, BOOK OF - வழிபாட்டுத் திருநூல், லேவியர் திருநூல்; V:678.
LIBATION, DRINK OFFERING - பானப்படையல், பானப்பலி; IV:568.
LIBERATION/LIBERTY - விடுதலை/சுதந்தரம்; V:763.
LIBNAH - லிப்னா; V:622; இலிபுனா; I:762.
LIBNI - லிப்னி; V;622; இலிபுனி; I:762.
LIBYA - லிபியா; V;622; இலிபியா; I:762.
LICENTIOUSNESS - காமவெறி; II:718.
LIDEBIR - இலிதெபீர்; I:762.
LIE - பொய்; IV:816.
LIFE - உயிர், வாழ்வு; II::42.
LIFE, AUTHOR OF - வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவர்; V:736.
LIFE, BOOK OF - வாழ்வு நூல்; V:736.
LIGHT AND DARKNESS - ஒளியும், இருளும்; II:533.
LIKHI - இலிக்கி; I:760; லிக்கி; V:622.
LILITH - லிலித்து; V:622; இலிலித்து; I:762.
LILY - லீலி, அல்லி; V:623.
LILY WORK - லீலிமலர் வேலைப்பாடு; V:623.
LIME - சுண்ணாம்பு; III:348.
LINEN - நார்ப்பட்டு; IV:237.
LINEN GARMENT - நார்ப்பட்டாடை; IV:238.
LINTEL - நிலைகளின் மேற்சட்டம்; IV:263.
LINUS - லீனு; V:624; இலினு; I:763.
LION - சிங்கம்; III:268.
LIONS, DEN OF - சிங்க்குகை III:267.
LIPS - உதடுகள்; II:38.
LISTEN - உற்றுக்கேள்; II:124.
LITERATURE - இலக்கியம்; I:741.
LITHOSTROTOS - கல்தளம்; II:659.
LITTER, PALANGUIN - பல்லக்கு; IV:440.
LITTLE HORN - சிறிய கொம்பு; III:298.
LIVER - கல்லீரல்; II:663.
LIVING, BUNDLE OF THE - வாழ்வோரின் கட்டுகள்; V:736.
LIZARD - பல்லி; IV:440.
LO-AMMI - லோ-அம்மி; V:646.
LO-DEBAR - லோதபார்; V:646.
LO-RUHAMAH - அன்பு பெறாதவள்; I:362; லோருகாமா; V:646.
LOCUST - வெட்டுக்கிளி; V:907.
LOD - போது; V:646; உலோது;**II:114.**
LODGE - தங்குமிடம்; III:508.
LOG - மரக்கட்டை; V:96.
LOGIA - வாக்குகள் தொகுப்பு; V:712.
LOIS - போயி; V:646; உலோய்; II:115.
LOOM - நெசவுத்தறி; IV:333.
LOOPS - வளையங்கள், கொக்கிகள்; V:705.
LORD - ஆண்டவர்; I:443.
LORD, BOOK OF THE WARS OF THE - ஆண்டவருடைய போர்களின் நூல்; I:443.
LORD, DAY OF THE - ஆண்டவரின் நாள்; I:439.
LORD, DETAINED BEFORE OF THE - ஆண்டவர் முன் தடைப்பட்டிருத்தல்; I:454.
LORD OF HOSTS; HOST OF HEAVEN - படைத்திரளின் ஆண்டவர்; IV:376.
LORD'S DAYS - ஆண்டவருடைய நாள்; I:442.
LORD'S PRAYER - ஆண்டவர் கற்பித்த செபம்; I:446.
LORD'S SUPPER - ஆண்டவரின் இரவுணவு, ஆண்டவரின் விருந்து - நற்கருணை; I:416.
LOST COIN - காணாமற்போன பணம்; II:710.
LOST SHEEP - காணாமற் போன ஆடு; II:710.
LOST SON - காணாமற்போன மகன்; II:710.
LOT - லோத்து; V:646.
LOTAN - லோத்தான்; V:646; உலோத்தான்; II:115.
LOTS - சீட்டுப்போடுதல்; III:308.
LOTUS - தாமரை; III:552.
LOVE - அன்பு; I:344.
LUCIUS - லூக்கியு; V:641; உலூக்கியு; II:113.
LUD, LUDIM - லூது, லூதியர்; V:641; உலூது, உலூதியும், உலூதியர்; II:114.
LUHITH - உலூகித்து; II:113; லூகித்து; V:624.
LUKE - லூக்கா; V:624.
LUKE, GOSPEL OF - லூக்கா எழுதிய நற்செய்தி; V:626.
LUNATICK - மதி மயங்கியோர்; V:63.
LUST - இச்சை; I:556.
LUZ - லூசு; V:641: உலூசு; II:114.
LYCAONIA - லிக்கவோனியா; V:622; இலிக்கவோனியா; I:760.
LYCIA - லீக்கியா; V:622: இலிக்கியா; I:760.
LYDDA - லித்தா; V;622; இலிதா; I:761.
LYDIA (PERSON) - லீதியா; V:623.
LYDIA (PLACE) - லீதியா; ;623; இலீதியா; I:763.
LYE - காரக்கரைசல், சாம்பல் உப்பு; II:722.
LYSANIAS - இலிசானியா; I:761; லிசானியா; V:622.
LYSIAS - லீசியா; V;622; இலிசியா; I:763.
LYSIAS CLAUDIUS - இலீசியா கிளாதியு; I:763; லீசியா கிளாதியு; V:623.
LYSIMACHUS - இலிசிமாக்கு; I:761; லிசிமாக்கு; V:622.
LYSTRA - லிஸ்திரா; V:622; இலிசித்திரா; I:761.

M

MAACAH (PERSON) - மாக்கா; V:207.
MAACAH (PLACE) - மாக்கா; V:208.
MAADAI - மாகதாய்; V:207.
MAADIAH - மதயா; V:216.
MAAI - மாவாய்; V:230.
MAARATH - மாராத்து; V:226.
MAASAI - மாசாய்; V:210.
MAASEIAH - மாசேயா; V:212.
MAATH - மாத்து; V:222.
MAAZ - மாகாசு; V:207.
MAAZIAH - மாசியா; V:210.
MACCABEES AND THEIR REVOLT - மக்கபேயர்களும் அவர்களின் கிளர்ச்சியும்; V:16.
MACCABEES I-II, BOOKS OF - மக்கபேயர் நூல்கள்-I,II; V:19.
MACEDONIA - மாசிதோனியா; V:210.
MACHAERUS - மக்கேரு; V:49.
MACHABANNAI - மக்பன்னாய்; V:50.
MACHBENAH - மக்பேனா; V:50.
MACHI - மாக்கி; V:209.
MACHIR - மாக்கிர்; V:209.
MACHNADEBAI - மக்னதபாய்; V:51.
MACHPHELAH - மக்பேலா; V:50.
MACRON - மக்ரோன்; V:50.
MADAI - மாதாய்; V:216.
MADMANNAH - மத்மன்னா; V:93.
MADMEN - மத்மேன்; V:94.
MADMENAH - மத்மேனா; V:93.
MADNESS - பைத்தியம், பித்துப்பிடித்தல்; IV:812.
MADON - மாதோன்; V:222.
MAGADAN - மகதான்; V:1; மகதா.
MAGBISH - மக்பீசு; V:50.
MAGDALA - மகதலா மரியா; V:1.
MAGDALENE, MARY - மகதலா மரியா; V:1.
MAGDIEL - மக்தியேல்; V:50.
MAGI, WISEMEN FROM THE EAST IN MATTHEW - மத்தேயுவில் கீழ்த்திசை ஞானிகள்; V:91.
MAGIC - மாய வித்தை; V:223.
MAGIC BANDS - மந்திரக்காப்புக் கயிறுகள்; V:94.
MAGISTRATE, UMPIRE - நடுவர்; IV:137.
MAGNIFICAT - மரியாளின் பாடல்; V:110.
MAGOG - மாகோகு; V:207.
MAGOR-MISSABIB - மாகோர்-மிசாபிபு; V:207.
MAGPIASH - மக்பியாசு; V:50.
MAHALAB - மகலாபு; V:2; மகலேபு.
MAHALALEL - மகலலேல்; V:1.
MAHALATH - மகலாத்து; V:1.
MAHANAIM - மகனயிம்; V:2.
MAHANEH-DAN - மனனேதாண்; V:3.
MAHARAI - மகராய்; V:1.
MAHATH - மாகாத்து; V:207.
MAHAVITE - மகவியர்; V:2.
MAHAZIOTH - மகசியோத்து; V:1.
MAHER-SHALAL-HASH-BAZ - மகேர்-சலால்-கசுபாசு; V:16.
MAHLAH - மக்லா; V:51.
MAHLI - மக்லி; V:51.
MAHLON - மக்லோன்; V:51.
MAHOL - மாகோல்; V:207.
MAHSEIAH - மக்சேயா; V:49.
MAKAZ - மாக்காசு; V:208.
MAKED - மாக்கேது; V:209.
MAKHELOTH - மக்கலோத்து; V:37.
MAKKEDAH - மக்கேதா; V:49.
MALACHI - மலாக்கி; V:133.
MALACHI, BOOK OF - மலாக்கி திருநூல்; V:133.
MALCAM - மல்க்காம்; V:155.
MALCHIAH, MALCHIJAH - மல்கியா; V:155.
MALCHIEL - மல்கியேல்; V:155.
MALCHIRAM - மல்கிராம்; V:155.
MALCHISHVA - மல்சிசுவா; V:155.
MALCHUS - மால்கு; V:229.
MALLOTHI - மல்லோத்தி; V:156.
MALLUCH - மல்லூக்கு; V:156.
MALLUCHI. - மல்லூக்கி; V:156.
MALLUS - மல்லூசு; V:156.
MALTA - மால்தா; V:229.
MAMMON - மம்மோன்; V:94.
MAMRE (PERSON) - மம்ரே; V:95.
MAMRE (PLACE) - மம்ரே; V:95.
MAN - மனிதன்; V:185.
MAN OF GOD - இறை மனிதன்; I:824.
MAN OF LAWLESSNESS - அக்கிரமி; I:24.
MANAEN - மனாயேன்; V:180; மனயேன்.
MANAHATH (PERSON) - மானகத்து; V:246.
MANAHATH (PLACE) - மானகத்து; V:246.
MANAHATHITES - மானகத்தியர்; V:246.
MANASSEH - மனாசே; V:177.
MANASSEH, PRAYER OF - மனாசேயின் செபம்; V:179.
MANDRAKE - தூதாயிச்செடி; III:806.
MANGER - மாட்டுக்கொட்டில்; V:215.
MANI - மானி; V:247.
MANICHEISM - மானிகேயிசம்; V:247.
MANIUS TITUS - மானியு தீத்து; V:248.
MANNA - மன்னா; V:199.
MANOAH - மனோவாகு; V:199.
MANTELET - காப்புக்கருவி; II:718.
MANUSCRIPT - கைப்பிரதி; III:40.
MANY WATERS - நீர்த்திரள், வெள்ளப்பெருக்கு; IV:318.

MAOCH - மாவோக்கு; V:230.
MAON (PERSON) - மாவோன்; V:230.
MAON (PLACE) - மாவோன்; V:230.
MARA - மாரா; V:225.
MARAH - மாரா; V:225.
MARANATHA - மாரனாதா; V:225.
MARBLE - சலவைக்கல்; III:148.
MARCHESHVAN - மர்கேசவன்; V:131.
MARCION, GOSPEL OF - மார்சியோனுடைய நற்செய்தி; V:227.
MARDUK - மார்துக்கு; V:227.
MAREAL - மரியலா; V:107.
MARESHAH (PERSON) - மாரேசா; V:226.
MARESHAH (PLACE) - மாரேசா; V:226.
MARI - மாரி; V:226.
MARISA - மரிசா; V:107.
MARK, GOAL, SIGN - அடையாளம், இலக்கு, அருங்குறி; I:79.
MARK, GOSPEL ACCORDING TO - மாற்கு எழுதிய நற்செய்தி; V:231.
MARK, JOHN - மாற்கு என்னும் யோவான்; V:246.
MARKET PLACE - சந்தைவெளி, பொதுவிடம்; III:130.
MAROTH - மாரோத்து; V:227.
MARRIAGE - திருமணம்; III:696.
MARSENA - மர்செனா; V:131.
MARTHA - மார்த்தா; V:228.
MARTYR - மறை சாட்சியர்; V:158.
MARY - மரியா; V:108.
MARY, ASSUMPTION OF - மரியாளின் விண்ணேற்பு; V:111.
MARY, BIRTH OF - மரியாளின் பிறப்பு; V:111.
MARY, GOSPEL OF - மரியாவின் நற்செய்தி; V:109.
MARY, GOSPEL OF THE BIRTH OF - மரியாளின் பிறப்பு நற்செய்தி; V:111.
MARY, MOTHER OF JESUS - மரியாள், இயேசுவின் தாய்; V:112.
MARY, REVELATION OF - மரியாவின் வெளிப்பாடு; V:110.
MARY, RELEVATIONS OF - மரியாளின் வெளிப்பாடுகள்; V:111.
MASADA - மசாதா; V:51.
MASH - மசு; V:52.
MASHAL - மசால்; V:210.
MASKIL - மஸ்கில்; V:52.
MASONS - கொத்தர்கள்; III:49.
MASORA - மாசோரா; V:213.
MASORETIC TEXT - மாசோரேட்டிக்கு வாசகம்; V:213.
MASREKAH - மசுரேக்கா; V:52.
MASSA - மாசா; V:209.
MASSAH AND MERIBAH - மாசா மற்றும் மெரிபா; V:209.
MAST - பாய்மரம்; IV:513.
MASTER - குருவே; II:878.
MASTIC - விளாமரம்; V:883.
MATRED - மதிரேது; V:63.
MATRITE - மதிரி; V:63.
MATTAN - மத்தான்; V:66.
MATTANAH - மத்தானா; V:66.
MATTANIAH - மத்தனியா; V:65.
MATTATHA - மத்தாத்தா; V:66.
MATTATHIAS - மத்தத்தியா; V:64.
MATTENAI - மத்தனாய்; V:65.
MATTHAN - மத்தான்; V:66.
MATTHAT - மத்தாத்து; V:66.
MATTHEW - மத்தேயு; V:67.
MATTHEW, GOSPEL OF - மத்தேயு எழுதிய நற்செய்தி; V:67.
MATTHEW, MARTYRDOM OF - மத்தேயுவின் மறைசாட்சி மரணம்; V:92.
MATTHIAS - மத்தியா; V:66.
MATTHIAS TRADITIONS OF - மத்தியாவின் பாரம்பரியங்கள்; V:67.
MATTITHIAH - மத்தத்தியா; V:66.
MAUNDY THURSDAY - பெரிய வியாழன்; IV:732.
MEAH, TOWER OF, TOWER OF THE HUNDRED - "மேயா காவல்மாடம்"; V:365.
MEAL - உமியுடன் அரைக்கப்பட்ட மாவு; II:41.
MEALS - உணவருந்தல்; II:18.
MEARAH - மெயாரா; V:348.
MEBUNNAI - மெபுன்னாய்; V:347.
MECHERATHITE - மெக்கராத்தியர்; V:335; மெக்கராவியர்.
MECONAH - மெக்கோனா; V:335.
MEDAD - மேதாது; V:364.
MEDAN - மெதான்; V:346.
MEDEBA - மேதபா; V:363.
MEDIA, MEDES - மேதியா, மேதியர்; V:364.
MEDIATOR - இணைப்பாளர்; I:652.
MEDICINE - மருத்துவக்கலை; V:123.
MEDIUM, WIZARD - இறந்தோர் தொடர்பு சாதனம்; I:775.
MEEKNESS - சாந்தம்; III:185.
MEGIDDO - மெகிதோ; V:334.
MEGIDDO, PLAIN OF - மெகிதோ சமவெளி; V:335.
MEGIDDO, WATERS OF - மெகிதாவின் நீர்நிலை; V:335.
MEGILLOTH - மெகில்லோத்து; V:335.
MEHETABEL - மெகேற்றபேல்; V:335.
MEHIDA - மெகிதா; V:334.
MEHIR - மெகீர்; V:335.
MEHOLATHITE - மெகோலாயர்; V:335; மெகொலாயர்.
MEHUJAEL - மெகுயாவேல்; V:335.
MEHUMAN - மெகுமான்; V:335.
ME-JARKON - மேயர்க்கோன்; V:365.
MELATIAH - மெலற்றியா; V:353.
MELCHI - மெல்கி; V:353.

MELCHIEL - மெல்கியேல்; V:356.
MELCHIOR - மெல்கியோர்; V:356.
MELCHIZEDEK - மெல்கிசெதேக்கு; V:353; மெல்கிசதேக்கு.
MELEA - மெலேயா; V:353.
MELECH - மெலேக்கு; V:353.
MELKON - மெல்கோன்; V:356.
MEM - மேம்; V:365.
MEMBERS - உறுப்பினர்கள்; II:123.
MEMMIUS, QUINTUS - மெம்மியு குவிந்து; V:348.
MEMORY, MEMORIAL - நினைவு; IV:273.
MEMPHIS - மெம்பிசு; V:347.
MEMUCAN - மெமுக்கான்; V:347.
MENACHEM - மெனகேம்; V:356.
MENE, MENE, TEKEL, PARSIN - மெனே, மெனே, தெக்கேல், பார்சின்; V:358.
MENELAUS - மெனலாவு; V:357.
MENESTHEUS - மெனத்தேயு; V:357.
MENI - மெனி; V:358.
MENNA - ; V:359.
MENORAH - மெனோரா; V:359.
MENUHOTH - மெனுகோத்து; V:358.
MEONOTHAI - மெயோனத்தாய்; V:348.
MEPHAATH - மேபாத்து; V:365.
MEPHIBOSHETH - மெபிபோசேத்து; V:346.
MERAB - மேராபு; V:366.
MERAIAH - மெராயா; V:350.
MERAIOTH - மெரயோத்து; V:349.
MERARI - மெராரி; V:350.
MERARITES - மெராரியர்கள்; V:350.
MERATHAIM - மெராத்தயிம்; V:350.
MERCHANT, TRADER - வணிகர்; V:652.
MERCURIUS - மெர்க்குரி; V:352.
MERCY, MERCIFUL - இரக்கம், இரக்கமுள்ள; I:709.
MERCY SEAT - இரக்கத்தின் இருக்கை; I:709.
MERED - மெரேது; V:351.
MEREMOTH - மெரமோத்து; V:349.
MER-NE-PTAH - மெர்னெப்தா; V:352.
MERES - மெரேசு; V:351.
MERIBAH - மெரிபா; V:351.
MERIBATH-KADESH - மெரிபத்து-காதேசு; V:351.
MERIBBAAL - மெரிபாகால்; V:351.
MERODACH - மெரோதாக்கு; V:351.
MERODACH-BALADAN - மெரொதாக்கு-பலாதான்; V:351.
MEROM, WATERS OF - மேரோம் நீரோடை; V:366.
MERONOTHITE - மெரொனோவியர்; V:352.
MEROZ - மெரோசு; V:352.
MERRAN - மோரான்; V:366.
MESALOTH - மெசலோத்து; V:336.
MESHA (PERSON) - மேசா; V:362 .
MESHA (PLACE) - மேசா; V:363.
MESHACH - மேசாக்கு; V:363.
MESHECH - மேசேக்கு; V:363.
MESHELEMIAH - மெசலேமியா; V:336.
MESHEZABEL - மெசசபேல்; V:336.
MESHILLEMOTH - மெசிலமோத்து; V:334; மெசில்லமோத்து.
MESHOBAB - மெசோபாபு; V:346.
MESHULLAM - மெசுல்லாம்; V:345.
MESHULLEMETH - மெசுல்லமேத்து; V:345.
MESOPOTAMIA - மெசபொத்தாமியா; V:336.
MESSENGER, AMBASSADOR, ENVOY, HERALD - தூதுவர்; III:812.
MESSIAH, CHRIST - மெசியா, கிறிஸ்து; V:336.
MESSIANIC, SECRET - மெசியா பற்றிய இரகசியம்; V:342.
MESSOS, APOCALYPSE OF - மெசோசின் வெளிப்பாட்டு நூல்; V:346.
METHEG-AMMAH - மெதக்கம்மா; V:346.
METHUSELAH - மெத்துசேலா; V:346; மெத்துசெலாக்கு.
METHUSHAEL - மெத்துசவேல்; V:346.
MEUNIM, MEUNITES - மெயோனியர்; V:348.
MEZHAB - மேசகாபு; V:362.
MEZOBAITE - மெட்சோபயா; V:346.
MEZUZAH - மெசுசா; V:344.
MIBHAR - மிப்கார்; V:269.
MIBSAM - மிப்சாம்; V:269.
MIBZAR - மிப்சார்; V:269; மிபுசார்.
MICA - மீக்கா; V:274.
MICAH - மீக்கா; V:274.
MICAH, BOOK OF - மீக்கா திருநூல்; V:275.
MICAIAH - மீக்காயா; V:283.
MICHAEL - மிக்கேல்; V:249.
MICHAL - மீக்கால்; V:284.
MICHMAS - மிக்மாசு; V:251.
MICHMETHATHA - மிக்மத்தாத்து; V:250.
MICHRI - மிக்ரி; V:251.
MIDDIN - மிதின்; V:268.
MIDDLE COURT - நடுமுற்றம், நடுப்பகுதி; IV:137; V:315.
MIDDLE GATE - நடுவாயில்; IV:139.
MIDIAN - மிதியான்; V:267.
MIDRASHIC LITERATURE - மிட்ராஷ் இலக்கியம்; V:255.
MIDWIFE - மருத்துவப்பெண், தாதியர்; V:129.
MIGDAL-EL - மிக்தலேல்; V:250.
MIGDAL-GAD - மிக்தல்கது; V:250.
MIGDOL - மிக்தோல்; V:250.
MIGHT MEN - வலிமை மிக்கோர்; V:667.
MIGRON - மிக்ரோன்; V:251.
MIJAMIN - மிய்யாமின்; V:269.
MIKLOTH - மிக்லோத்து; V:251.
MIKNEIAH - மிக்னேயா; V:251.
MIKTAM - மிக்தாம்; V:250.

MILALAI - மிலலாய்; V:271.
MILCAH - மில்கா; V:271.
MILCOM - மில்கோம்; V:271.
MILDEW - பூஞ்சக்காளான், நச்சுப்பனி; IV:680.
MILETUS - மிலேத்து; V:271.
MILK - பால்; IV:550.
MILL, MILLSTONE - எந்திரம், எந்திரக் கல்; II:240.
MILLENISM - ஆயிரம் ஆண்டுக்காலம்; I:495.
MILLET - தினை; III:742.
MILLO - மில்லோ; V:272.
MINA, PARABLE OF - மினா நாணய உவமை; V:272.
MIND - மனம், உள்ளம்; V:169.
MINIAMIN - மினியமின்; V:272.
MINING - சுரங்க வேலை/சுரங்கத்துறை; III:350.
MINISTRY - பணி; IV:385.
MINNI - மின்னி; V:273.
MINNITH - மின்னித்து; V:273.
MINT - புதினா; IV:629.
MIRACLE - புதுமை, அருஞ்செயல்; IV:629.
MIRIAM - மிரியாம்; V:270.
MIRMAH - மிர்மா; V:271.
MIRROR - முகம் பார்க்கும் கண்ணாடி; V:297.
MISGAB - மிசுகாபு; V:252.
MISHAEL - மிசாவேல்; V:252.
MISHAL - மிசால்; V:252.
MISHAM - மிசாம்; V:252.
MISHMA - மிசுமா; V:252.
MISHMANNAH - மிசுமன்னா; V:252.
MISHNA - மிஸ்னா V:255.
MISHRAITES - மிசிராயர்; V:252.
MISPAR - மிஸ்பார்; V:254.
MISPERETH - மிஸ்பரத்து; V:253.
MISREPHOTO-MAIM - மிஸ்ரபோத்து-மயிம்; V:254.
MISSION - தூதுப்பணி; III:807.
MITANNI - மித்தன்னி; V:268.
MITHKAH - மித்கா; V:268.
MITHNITE - மித்னியர்; V:269.
MITHREDATH - மித்ரதாத்து; V:269.
MITYLENE - மித்திலேன்; V:268.
MIXED MULTITUDE - பல இனப்பெருந்திரள்; IV:425.
MIZAR - மிட்சார்; V:255.
MIZPAH, MIZPEH - மிஸ்பா, மிஸ்பே; V:253.
MIZRAIM - மிஸ்ராயிம்; V:254.
MIZZAH - மிசா; V:252.
MNASON - மினாசோன்; V:272.
MOAB - மோவாபு; V:386.
MOAB, CITY OF - மோவாபு நகர்; V:388.
MOABITE STONE - மோவாபுக்கல்; V:388.
MOADIAH - மோவாதியா; V:386.
MOAT - அகழி; I:5.
MOCHMUR - மொகுமூர்; V:372.
MODEIN - மோதயின்; V:384.
MOLADAH - மோலதா; V:385.
MOLE - அகழெலி; I:6.
MOLECH, MOLOCH - மோலேக்கு, மோலோக்கு; V:386.
MOLID - மோலிது; V:386.
MOLOCH - மோலோக்கு; V:386.
MOLTEN IMAGE - வார்ப்புச்சிலை; V:732.
MOLTEN SEA - வார்ப்புக்கடல்; V:731.
MONEY - நாணயம், பணம்; IV:225.
MONEY BOX - பணப்பெட்டி; IV:385.
MONEY CHANGERS - நாணயம் மாற்றுவோர்; IV:227.
MOON - நிலா; IV:261.
MORDECAI - மொர்தக்காய்; V:372.
MOREH - மோரே; V:385.
MORESHETH - மோரசேத்து; V:385.
MORESHETH-GATH - மோரசேத்துக் காது; V:385.
MORIAH - மோரியா; V:385.
MORTAL SIN - இறுதிச் சாவை வருவிக்கும் பாவம்; I:786.
MORTAR - உரல்-உலக்கை; II:65.
MORTGAGE - அடைமானம், ஒற்றி வைத்தல்; I:78.
MOSAIC BASEMENT - பலவண்ணத்தளம்; IV:429.
MOSERAH - மோசேரா; V:384.
MOSEROTH - மோசரோத்து; V:372.
MOSES - மோசே; V:374.
MOSES, ASSUMPTION OF - மோசேயின் விண்ணேற்பு; V:381.
MOSES, SEAT OF - மோசேயின் இருக்கை; V:381.
MOST HIGH - உன்னதர்; II:125.
MOTE, SPECK - துரும்பு; III:792.
MOTH - அந்துப்பூச்சி; I:124.
MOTHER - தாய், அன்னை; III:556.
MOUNT OF CORRUPTION - குற்றத்தின் குன்று; II:903.
MOUNTAIN - மலை; V:142.
MOUNTAIN OF ASSEMBLY - பேரவை மலை; IV:786.
MOUNTAIN OF GOD, OF YAHWEH - இறைவனின் மலை, யாவேயின் மலை; I:857.
MOUNTAIN SHEEP - மலை ஆடு; V:146.
MOURNING - இழவுத்துயர்; I:770.
MOUSE - எலி; II:321; சுண்டெலி; III:348.
MOUTH - வாய்; V:726.
MOWING - புல்லறுப்பு; IV:657.
MOZA - மோட்சா; V:384.
MOZAH - மொசா; V:372.
MULE - கோவேறு கழுதை; III:107.
MUPPIM - முப்பிம்; V:308.
MURATORIAN FRAGMENTS - முராத்தோரியின் சிதைந்த ஏடு; V:309.
MURMUR - முணுமுணுத்தல்; V:301.
MUSHI - மூசி; V:326.
MUSIC - இசை; I:552.
MUSICAL INSTRUMENTS - இசைக்கருவிகள்; I:553.
MUSTARD - கடுகுச்செடி; II:591.

MUSTARDSEED (PARABLE) - கடுகுவிதை-உவமை; II:591.
MUTH-LABBEN - முத்லபேன்; V:307.
MUTILATION - முடமாக்குதல், உறுப்புகளைக் குறைத்தல்; V:299.
MUZZLE - வாயைக்கட்டுதல்; V:725.
MYNDOS - மிந்தோசு; V:269.
MYRA - மீரா; V:291.
MYRIAD - எண்ணற்ற; II:216.
MYRRH - வெள்ளைப்போளம்; V:935.
MYRTLE - மிருதுச்செடி; V:270.
MYSIA - மீசியா; V:284.
MYSTERY - மறையுண்மை; V:160.
MYTHS - புராணக்கதைகள்; IV:642.

N

NAAM - நாவாம், நாகாம்; IV:239.
NAAMAH (PERSON) - நாமா; IV:234.
NAAMAH (PLACE) - நாமா; IV:234.
NAAMAN - நாமான்; IV:235.
NAAMATHITE - நாமாயர், நாமாவியர்; IV:234.
NAAMITES - நாமானியர்; IV:235.
NAARAH (PERSON) - நாரா; IV:237.
NAARAH (PLACE) - நாரா; IV:237.
NAARAI - நாராய்; IV:237.
NAARAN - நாரான்; IV:237.
NABAL - நாபால்; IV:233.
NABATEANS - நபத்தேயர்; IV:142.
NABONIDUS - நபோனிது; IV:143.
NABOTH - நபோத்து; IV:234.
NACON - நாக்கோன்; IV:208.
NADAB - நாதாபு; IV:229.
NADABATH - நாதபாத்து; IV:228.
NAGGAI - நாகாய்; IV:202.
NAHALAL - நகலால்; IV:131.
NAHALIEL - நகலால்; IV:131.
NAHALIEL - நகலியேல்; IV:131.
NAHAM - நகாம்; IV:131.
NAHAMANI - நகமானி; IV:127.
NAHARAI - நகராய், நகுராய்; IV:130.
NAHASH - நாகசு; IV:201.
NAHATH - நாகத்து; IV:201.
NAHBI - நகுபி; IV:131.
NAHOR (PERSON) - நாகோர்; IV:208.
NAHOR (PLACE) - நாகோர்; IV:208.
NAHSHON - நகுசோன், நகசோன்; IV:131.
NAHUM - நகூம்; IV:202.
NAHUM, BOOK OF - நாகூம் இறைவாக்கு நூல்; IV:202.
NAIL - நகம்; IV:127.
NAIL - ஆணி; I:414.
NAIN - நயீன்; IV:150.
NAIOTH - நவியோத்து; IV:109
NAKEDENESS - அம்மணம்; I:2-
NAME - பெயர்; IV:718.
NAMES OF GOD - இறைவனின் பெயர்கள்; I:854.
NANEA - நானேயா; IV:254.
NAOMI - நகோமி; IV:132.
NAPHATH - நாபேத்து; IV:234.
NAPHATH-DOR - நாப்பத்தோர்; IV:234.
NAPHISH - நாபிசு; IV:233.
NAPHOTH-DOR - நாப்போத்தோர்; IV:234.
NAPHTALI - நப்தலி; IV:143.
NAPHTHUHIM - நப்துகிம்; IV:144.
NARCISSUS - நர்க்கிசு; IV:156.
NARD - நரந்தம், இலாமிச்சை நறுமணத் தைலம்; IV:154.
NASH PAPYRUS - நாசு புல்தாள் ஏடு; IV:210.
NATHAN - நாத்தான்; IV:229.
NATHANAEL - நத்தனியேல்; IV:141.
NATHAN - MELECH - நாத்தான் - மெலக்கு; IV:230.
NATIONS - நாடுகள், இனங்கள்; IV:219.
NAVE - நடுக்கூடம்; IV:137.
NAVEL STRING - கொப்புழ்க்கொடி; III:49.
NAZARENE - நசரேயர்; IV:133.
NAZARENES, GOSPEL OF THE - நசரேயர்களின் நற்செய்தி; IV:134.
NAZARETH - நாசரேத்து; IV:209.
NAZARITE - நசீர்; IV:134.
NEAH - நேயா; IV:345.
NEAPOLIS - நெயாப்பொலி; IV:341.
NEARIAH - நெயரியா; IV:341.
NEBAI - நேபாய்; IV:345.
NEBAIOTH - நெபயோத்து; IV:337.
NEBALLAT - நெபல்லாற்று; IV:337.
NEBAT - நெபாற்று; IV:337.
NEBO (DEITY) - நெபோ; IV:339.
NEBO (PLACE) - நெபோ மலை; IV:339.
NEBO MOUNT - நெபோ மலை; IV:340.
NEBUCHADNEZZAR, NEBUCHADREZZAR - நெபுகத்னேசர், நெபுகத்ரேசர்; IV:337.
NEBUSHAZBAN - நெபுசசுபான்; IV:338.
NEBUZARDAN - நெபுசரதான்; IV:339.
NECO - நெக்கோ; IV:332.

NEDABIA - நெதபியா; IV:336.
NEEDLE - ஊசி; II:127.
NEGEB, THE - நெகேபு; IV:330.
NEHELAM - நெகலாம்; IV:329.
NEHEMIAH - நெகேமியா; IV:331.
NEHEMIAH, BOOK OF - நெகேமியா நூல்; IV:332.
NEHUM - நெகூம்; IV:329.
NEHUSHTAN - நெகுஸ்தான்; IV:329.
NEHUSHTA - நெகுஸ்தா; IV:329.
NEIEL - நெகியேல்; IV:329.
NEIGHBOUR - அயலார்; I:209.
NEKODA - நெக்கோதா; IV:333.
NEMUEL - நெமுவேல்; IV:341.
NEPHEG - நெபேகு; IV:339.
NEPHILIM - நெப்பிலிம், அரக்கர்கள்; IV:341.
NEPHISM - நெபிசிம்; IV:337.
NEPHTHAR - நெப்தார்; IV:340.
NEPHTOAH - நெப்தோவாகு; IV:340.
NER - நேர்; IV:345.
NEREUS - நேரேயு; IV:345.
NERGAL - நேர்கால்; IV:346.
NERGAL - SHAREZER - நேர்கால் சரேசர்; IV:346.
NERI - நேரி; IV:345.
NERIAH - நேரியா; IV:345.
NERO - நீரோ; IV:309.
NEST - கூடு; II:908.
NET - வலை; V:667.
NETAIM - நெற்றாயிம்; IV:343.
NETHANEL - நெத்தனியேல்; IV:336.
NETHANIAH - நெத்தனியா; IV:336.
NETHINIM - நெத்தினிம்; IV:337.
NETOPHAH - நெற்றோபா; IV:344.
NETWORK, GRATING - வலைப்பின்னல்; V:668.
NEW - புதிய; IV:621.
NEW BIRTH - புதிய பிறப்பு; IV:625.
NEW EARTH, NEW HEAVEN - புதிய பூமி, புதிய வானம்; IV:628.
NEW GATE - புதிய வாயில்; IV:628.
NEW JERUSALEM - புதிய எருசலேம்; IV:625.
NEW MOON - அமாவாசை; I:193.
NEW TESTAMENT - புதிய ஏற்பாடு; IV:625.
NEW YEAR - புத்தாண்டு; IV:639.
NEZIAH - நெட்சியாகு; IV:336.
NEZIB - நெட்சிபு; IV:336.
NIBHAZ - நிபுகசு; IV:257.
NIBSHAN - நிப்சான்; IV:257.
NICANOR - நிக்கானோர்; IV:255.
NICANOR GATE - நிக்கானோர் வாயில்; IV:255.
NICODEMUS - நிக்கோதேமு; IV:256.
NICODEMUS, GOSPEL OF - நிக்கோதேமுவின் நற்செய்தி நூல்; IV:257.
NICOLAITANS - நிக்கொலாயர்; IV:256.
NICOLAUS - நிக்கொலா; IV:256.
NICOPOLIS - நிக்கப்பொலி; IV:254.
NIGER - நீகர்; IV:277.
NIGHT - இரவு; I:724.
NIGHT HAG - பெண்பேய், கூளி; IV:700.
NILE - நைல்; IV:347.
NIMRAH - நிம்ரா; IV:257.
NIMRIM, THE WATERS OF - நிம்ரிம் நீர்நிலைகள்; IV:257.
NIMROD - நிம்ரோது; IV:258.
NIMSHI - நிம்சி; IV:257.
NINEVEH - நினிவே; IV:272.
NISAN - நீசான்; IV:277.
NISROCH - நிசுரோக்கு; IV:257.
NOADIAH - நோவதியா; IV:354.
NOAH - நோவா; IV:354.
NOAH, APOCALYPSE OF - நோவாவின் வெளிப்பாடு; IV:356.
NO-AMON - நோவாமோன்; IV:354.
NOB - நோபு; IV:349.
NOBAH (PERSON) - நோபாகு; IV:348.
NOBAH (PLACE) - நோபாகு; IV:348.
NOD - நோது; IV:348.
NODAB - நோதாபு; IV:348.
NOGAH - நோகாகு; IV:348.
NOHAH (PERSON) - நோகாகு; IV:348.
NOHAH (PLACE) - நோகாகு; IV:348.
NOMADISM - நாடோடி வாழ்க்கை; IV:220.
NOPHAH - நோப்பாகு; IV:349.
NORTH COUNTRY, THE - வடநாடுகள்; V:651.
NORTHEASTER, THE - வாடைக்கொண்டல்; V:722; யூராக்கிலோன்.
NORTHERNER - வடக்கிலிருந்து வரும் படை; V:651.
NOSE RING - மூக்குத்தி; V:326.
NOURISHMENT - ஊட்டம்; II:130.
NUMBERS - எண்கள்; II:213.
NUMBERS, BOOK OF - எண்ணிக்கை நூல்; II:217.
NUMENIUS - நூமேனியு; IV:324.
NUN (ALPHABET) - நூன்; IV:328.
NUN (PERSON) - நூன்; IV:328.
NUNC DIMITIS - சிமியோனின் பாடல்; III:278.
NURSE - தாதி, செவிலித்தாய்; III:549.
NUTS - கொட்டைகள்; III:48.
NUZI - நூசி; IV:323.
NYMPHA - நிம்பா; IV:257.

O

OAK - கருவாலி மரம்; II:631 .
OAK OF THE PILLAR - சிலைத்தூண் கருவாலிமரம்; III:296.
OAR, GALLEY - துடுப்பு, துடுப்புப்படகு; III:776.
OATH - ஆணை, ஆணையிடல்; I:414.
OBADIAH - ஒபதியா; II:505.
OBADIAH, BOOK OF - ஒபதியா திருநூல்; II:506.
OBAL - ஒபால்; II:565.
OBED - ஓபேது; II:565.
OBED-EDOM - ஓபேது-ஏதோம்; II:565.
OBEDIENCE - கீழ்ப்படிதல்; II:843.
OBEISANCE - வணக்கம் தெரிவித்தல்; V:652.
OBIL - ஓபில்; II:565.
OBOTH - ஓபோத்து; II:566; ஒபோத்து.
OCCUPATION - தொழில், வேலை; IV:93.
OCHRAN - ஒக்கிரான்; II:489.
OCINA - ஒக்கினா; II:489.
ODED - ஓதேது; II:564.
ODOMERA - ஒதமேரா; II:492.
ODOUR - நறுமணம்; IV:162.
OFFENCE - குற்றம்; II:903.
OFFICER - அதிகாரி; I:97.
OG - ஓகு; II:545.
OHAD - ஓகாது; II:545; ஒகாது.
OHEL - ஓகேல்; II:546; ஒகேல்.
OHOLAH - ஒகலா; II:545; ஓகோலா.
OHOLIAB - ஒகலியாபு; II:489; ஓகோலியாபு.
OHOLIBAH - ஒகலிபா; II:489; ஒகோலிபா.
OHOLIBAMAH - ஒகலிபாமா; II:489; ஓகோலிபாமா.
OIL - எண்ணெய்; II:228.
OINTMENT - நறுமணத்தைலம்;; IV:160.
OLD AGE - முதுமை; V:304.
OLD GARMENT AND UNSHRUNK CLOTH - பழைய ஆடையும், புதிய துணியும்; IV:464.
OLD GATE - பழைய வாயில்; IV:465.
OLD LATIN VERSIONS - பழைய இலத்தீன் மொழி பெயர்ப்புகள்; IV:464.
OLD TESTAMENT - பழைய ஏற்பாடு; IV:465.
OLD TESTAMENT LANGUAGES - பழைய ஏற்பாட்டு மொழிகள்; IV:465.
OLIVE TREE - ஒலிவ மரம்; II:519.
OLIVES, MOUNT OF - ஒலிவமலை; II:519.
OLYMPIA ZEUS, TEMPLE OF - ஒலிம்பிய செயுசின் ஆலயம்; II:521.
OLYMPUS - ஒலிம்பா; II:521.
OMAR - ஓமார்; II:516; ஒமார்.
OMEGA - ஓமேகா; II:518.
OMER - ஓமர்; II:566; ஒமேர்.
OMRI - ஓம்ரி; II:517; ஒம்ரி.
ON (PERSON) - ஓன்; II:574.
ON (PLACE) - ஓன்; II:574.
ONAM - ஓனாம்; II:572.
ONESIMUS - ஒனேசிமு; II:543.
ONESIPHORUS - ஒனேசிப்போர்; II:543.
ONIAS - ஓனியா; II:572.
ONION - வெங்காயம்; V:904.
ONO - ஓனோ; II:574.
ONYCHA - குங்கிலியம்; II:848.
ONYX, SARDONYX - கோமேதகம்; III:101.
OPHEL - ஓப்பேல்; II:516.
OPHIR (PERSON) - ஓப்பீர்; II:513.
OPHIR (PLACE) - ஓப்பீர்; II:513.
OPHNI - ஒபினி; II:511.
OPHRAH (PLACE) - ஒபிரா; II:511.
OPHRAM (PERSON) - ஒபிரா; II:511.
ORAL TRADITION - வாய்மொழி மரபு, வாய்மொழிப் பாரம்பரியம்; V:726.
ORCHARD - பழத்தோட்டம்; IV:460.
OREB - ஓரேபு; II:570.
OREN - ஓரேன்; II:571.
ORE - கனிஉலோகக் கலவை; II:695.
ORIENTATION - திசை நிர்ணயித்தல்; III:615.
ORIGIN OF THE GOSPEL - நற்செய்தியின் தோற்றம்; IV:179.
ORION - ஓரியன்; II:570.
ORNAN - ஒர்னான்; II:519.
ORPAH - ஒர்பா; II:518.
ORTHOSIA - ஒரிதோசியா; II:518.
OSIRIS - ஒசீரிசு; II:489.
OSNAPPAR - ஒசினப்பார்; II:489.
OSPREY - கடலூராஞ்சி; II:587.
OSSUARIES - எலும்புக்கலம்; II:339.
OSTRACA - மண்பாண்ட ஏட்டுத்துணுக்குகள்; V:62.
OSTRICH - தீக்கோழி, நெருப்புக்கோழி; III:748.
OTHNI - ஒதினி; II:492.
OTHNIEL - ஒதினியேல்; II:492.
OUTCAST - நாடு கடத்தப்பட்டவர்கள், சிதறிப்போன வர்கள்; IV:218.
OVEN, TOWER OF THE - சூளைக்காவல் மாடம் அல்லது கோபுரம்; III:361.
OVERLAY - வேய்தல்; V:947.
OWL - ஆந்தை, கோட்டான்; I:464.
OX (ANIMAL) - எருது, காளை; II:305.
OX (PERSON) - ஒசு; II:548.
OXYRHYNCHUS FRAGMENTS - ஒசிரிங்கஸ் துணுக்கு கள்; II:547.
OZEM - ஓசேம்; II:548.
OZIEL - ஒசியேல்; II:547.
OZNI - ஒசினி; II:489.

P

PAARAI - பாராய்; IV:520 .
PADDAN - பதான்; IV:389.
PADDAN-ARAM - பதான் - ஆராம்; IV:389; பதான்-அரம்.
PADON - பாதோன்; IV:496.
PAGIEL - பகியேல்; IV:360.
PAHATH - MOAB - பகத் - மோவாபு; IV:360.
PAI - பாய்; IV:513; பாயி.
PALACE - அரண்மனை; I:238.
PALAL - பாலால்; IV:540.
PALASTINE - பாலஸ்தீனம்; IV:534.
PALLU - பல்லூ; IV:440.
PALM TREE - பேரீச்சை; IV:804.
PALTI - பல்தி; IV:439.
PALTIEL - பல்தியேல்; IV:440.
PALTITE - பல்தியர்; IV:439.
PAMPHYLIA - பம்பிலியா; IV:400.
PAPHOS - பாப்போ; IV:509.
PAPIAS - பாப்பியா; IV:509.
PAPYRUS - பப்பிரஸ்; IV:399.
PARABLE - உவமை; II:115.
PARABLE OF BARREN FIG TREE - பழமில்லாத அத்திமர உவமை; IV:460.
PARABLE OF BUILDING A TOWER & MAKING WAR -கோபுரங்கட்டுதல், அரசன் போர்தொடுத்தல்; III:99.
PARACLETE - துணையாளர், பரிந்துரைப்பவர்; III:788.
PARADISE - சொர்க்கம், இன்பவனம்; III:448.
PARADOX - முரணுரை; V:308.
PARAH - பாரா; IV:519.
PARALYSIS - முடக்குவாதம்; V:299.
PARAN - பாரான்; IV:520.
PARAPET - கைப்பிடிச்சுவர்; III:40.
PARBAR - தூண்வரிசை வாயில்; III:806.
PARCHED GRAIN - வறுக்கப்பட்ட தானியம்; V:706.
PARCHMENT - தோல் சுருள்; IV:125.
PARMASHTA - பர்மஸ்தா; IV:422.
PARMENAS - பர்மனா; IV:422.
PARNACH - பர்னக்கு; IV:422.
PAROSH - பரோசு; IV:419.
PARSHANDATHA - பர்சந்தாத்தா; IV:419.
PARTHIANS - பார்த்தியர்; IV:533.
PARTRIDGE - கவுதாரி; II:671.
PARTY - கட்சி; II:592.
PARUAH - பாருவாகு; IV:520.
PARVAIM - பர்வயிம்; IV:422.
PASACH - பாசாக்கு; IV:485.
PASCHAL LAMB - பாஸ்காச் செம்மறி; IV:492.
PASEAH - பாசயாகு; IV:485.
PASHHUR - பஸ்கூர்; IV:369.
PASS - கணவாய்; II:598.
PASSOVER, PASCHA - பாஸ்கா; IV:487.
PASSOVER AND UNLEAVENED BREAD - கடந்துபோகும் விழாவும், புளியாத அப்பவிழாவும்; II:586.
PASTRORAL LETTERS - மேய்ப்புப்பணித் திருமுகங்கள்; V:366.
PASTURE LAND - மேய்ச்சல் நிலம்; V:366.
PATARA - பத்தாரா; IV:392.
PATHROS - பத்ரோசு; IV:398.
PATHRUSIM - பத்ருசிம்; IV:398.
PATIENCE, LONG SUFFERING - பொறுமை; IV:824.
PATMOS - பத்மு; IV:398.
PATRIARCHS - குலத்தந்தையர்கள், குல மூதாதையர்கள்; II:878; V:326.
PATROBAS - பத்திரொபா; IV:393.
PATROCLUS - பத்திரொக்குல்; IV:393.
PATROL - உலகெங்கும் சுற்றிவரும் தூதர்; II:113.
PAU - பாவு; IV:566.
PAUL, ACTS OF - பவுலின் பணிகள்நூல்; IV:440.
PAUL, APOCALYPSE OF - பவுலின் வெளிப்பாட்டு நூல்; IV:442.
PAUL, PRAYER OF THE APOSTLE - பவுலின் மன்றாட்டு; IV:442.
PAUL AND SENECA, EPISTLES OF - பவுல் மற்றும் செனக்காவின் திருமுகங்கள்; IV:455.
PAUL, THE APOSTLE - பவுல், அப்போஸ்தலர்; IV:443.
PAVEMENT, FLOOR - தளம், தரை; III:541; கல்தளம்.
PE - பே; IV:756.
PEACE - அமைதி, சமாதானம்; I:195; சமாதானம்; III:139.
PEACE MAKERS - சமாதானம் செய்வோர், அமைதி ஏற்படுத்துவோர்; III:139.
PEACE OFFERING - சமாதானப்பலி; III:138.
PEACOCK - மயில்; V:95.
PEARL - முத்து; V:307.
PEDAHEL - பெத்கேல்; IV:701.
PEDAHZUR - பெதாசூர்; IV:701.
PEDAIAH - பெதாயா; IV:701.
PEDDLER - விலை கூறித்திரிபவர்; V:840.
PEG, TENT PEG - முளை; V:313.
PEKAH - பெக்கா; IV:692.
PEKAHIAH - பெக்ககியா; IV:692.
PEKOD - பெக்கோது; IV:693.
PELAIAH - பெலாயா; IV:743.
PELALIAH - பெலலியா; IV:742.
PELATIAH - பெலற்றியா; IV:472.
PELEG - பெலேகு; IV:745.
PELET - பெலேற்று; IV:746.
PELETH - பெலேத்து; IV:746.
PELETHITE - பெலேத்தியர்; IV:746.

PELICAN - கூழக்கடா, மீன்கொத்தி, பெலிக்கான்; II:914.
PELLA - பெல்லா; IV:747.
PALONITE - பெலோனியர்; IV:746.
PELUSIUM - பெலுசிம்; IV:745; பெலூசிம்.
PENDANT - ஆரம்-தொங்கணி; I:496.
PENIEL - பெனியேல்; IV:751.
PENINNAH - பெனின்னா; IV:751.
PENTATEUCH OR THORAH - ஐந்நூல் அல்லது தோரா; II:454.
PENTECOST - ஐம்பதாம் நாள் விழா; II:486; பெந்தக்கோஸ்தே; IV:718.
PEN - எழுதுகோல்; II:347.
PENUEL (PERSON) - பெனுவேல்; IV:751.
PENUEL (PLACE) - பெனுவேல்; IV:751.
PEOPLE - மக்கள்; V:37.
PEOPLE OF GOD - இறைவனின் மக்கள்; I:856.
PEOPLE OF THE LAND - மண்ணின் மைந்தர்கள்; V:62.
PEOR - பெயோர்; IV:726.
PERAZIM MOUNT - பெரசிம் மலை; IV:727; பெராசிம் மலை.
PEREA - பெரயா; IV:727.
PERESH - பெரேசு; IV:740.
PEREZ - பெரேட்சு; IV:740; பெரேசு.
PEREZ-UZZAH - பெரேட்சு-உஸ்ஸா; IV:740.
PERFECTION - நிறைவுடைமை; IV:266.
PERFUME - பரிமளம், நறுமணப்பொருள்; IV:417.
PERGA - பெருகை; IV:733.
PERGAMUM - பெர்கமு; IV:740.
PERIDA - பெரீதா; IV:732.
PERIOD OF BABYLONIAN CAPTIUITY - பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட காலம்; IV:503.
PERIZZITE - பெரிசியர்; IV:729.
PERSECUTION - துன்புறுத்தல், துன்புறுத்தப்படுதல்; III:800.
PERSEPOLIS - பெர்சப்பொலி; IV:742.
PERSEUS - பெரிசயு; IV:729.
PERSIA - பாரசீகம்; IV:513.
PERSIS - பெர்சி; IV:742.
PERUDA - பெருதா; IV:734.
PERUVERSE - சீரழிந்த, சீர்கெட்ட; III:318.
PESHITTA - பெசித்தா; IV:693.
PESTILENCE - பெருவாரி நோய், கொள்ளை நோய்; IV:739.
PETER - பேதுரு; IV:757; இராயப்பர்; I:730.
PETER, ACTS OF - பேதுருவின் பணிகள்; IV:777.
PETER, APOCALYPSE OF - பேதுருவின் வெளிப்பாடு; IV:779.
PETER AND ANDREW, ACTS OF - பேதுரு மற்றும் அந்திரேயாவின் பணிகள்; IV:775.
PETER AND PAUL, ACTS OF - பேதுரு மற்றும் பவுலின் பணிகள்; IV:775.
PETER AND PAUL, PASSION OF - பேதுரு மற்றும் பவுலின் பாடுகள்; IV:776.
PETER AND TWELVE DISCIPLES, ACTS OF - பேதுரு மற்றும் பன்னிரண்டு சீடர்களின் பணிகள்; IV:776.
PETER, GOSPEL OF - பேதுருவின் நற்செய்தி IV:776.
PETTER-I, LETTER OF - பேதுரு எழுதிய திருமுகம் I; IV:761.
PETER-II; LETTER OF - பேதுரு எழுதிய திருமுகம் II; IV:768.
PETER, PASSION OF - பேதுருவின் பாடுகள்; IV:778.
PETTR, PREACHING OF - பேதுருவின் போதனைகள்; IV:778.
PETER, SLAVONIC ACTS OF - பேதுருவின் ஸ்லாவோனியப் பணிகள்; IV:776.
PETHAHIAH - பெத்தகியா; IV:706.
PETHOR - பெத்தோர்; IV:713.
PETHUEL - பெத்துவேல்; IV:710.
PETRA - பெத்ரா; IV:716.
PEULLATHAI - பெயுல்லத்தாய்; IV:723.
PHANUVEL - பானுவேல்; IV:570.
PHARAOH - பார்வோன்; IV:533.
PHARATHON - பாரத்தோன்; IV:519.
PHARISEE - பரிசேயர்; IV:413.
PHARISEE AND TAX COLLECTOR - PARABLE - பரிசேயனும் ஆயக்காரனும் - உவமை; IV:417.
PHARPAR - பர்பார்; IV:422.
PHASAEL - பாசவேல்; IV:485.
PHASELIS - பாசேலி; IV:486.
PHASIRON - பாசிரோன்; IV:486.
PHICOL - பிக்கோல்; IV:571.
PHILADELPHIA - பிலதெல்பியா; IV:586.
PHILEMON - பிலமோன்; IV:589.
PHILEMON, LETTER TO -பிலமோனுக்குத் திருமுகம்; IV:586.
PHILETUS - பிலேத்து; IV:605.
PHILIP - பிலிப்பு; IV:602.
PHILIP, ACTS OF - பிலிப்புவின் பணிகள்; IV:604.
PHILIP, GOSPEL OF - பிலிப்புவின் நற்செய்தி; IV:604.
PHILIPPI - பிலிப்பி; IV:594.
PHILIPPIANS, LETTER TO THE - பிலிப்பியருக்குத் திருமுகம்; IV:595.
PHILISTINES - பெலிஸ்தியர்; IV:744.
PHILO, BIBLICAL ANTIQUITIES OF - பீலோவின் விவிலியத் தொன்மை நிகழ்ச்சிகள் பற்றிய நூல்; IV:615.
PHILO JUDAEUS - பீலோ யூதேயு; IV:614.
PHILOLOGUS - பிலலோகு; IV:591.
PHILOMETOR - பிலமேத்தோர்; IV:586.
PHINEAAS - பினகாசு; IV:607.
PHLEGON - பிலகோன்; IV:585.
PHOEBE - பெயிபா; IV:723.
PHOENICIA - பெனிசியா; IV:750.

PHOENIX - பெனிக்க; IV:750
PHRYGIA - பிரிகியா; IV:581
PHYGELUS - பிகல்; IV:571
PHYLACTERIES - மறைநூல் வாசகப்பட்டை; V:159
PHYSICIAN - மருத்துவர்; V:130
PI-BESETH - பிபசேத்து; IV:579
PICK - கடப்பாறை; II:586
PIETY - பக்தி; IV:364
PIGEON - மாடப்புறா; V:214
PI-HAHIROTH - பிககிரோத்து; IV:571
PILATE, ACTS OF - பிலாத்துவின் பணிநூல்; IV:593
PILATE, PONTIUS - பிலாத்து, பொந்தியு; IV:591
PILDASH - பில்தாசு; IV:606.
PILGRIMAGE - திருப்பயணம்; III:656.
PILHA - பிலிகா; IV:594.
PILLAR OF FIRE AND CLOUD - நெருப்பும் மேகமுமான தூண்; IV:343.
PILLARS - தூண்கள்; III:805 .
PILLOW - தலையணை; III:538.
PILOT - மாலுமி; V:229.
PILTAI - பில்தாய்; IV:606.
PIM - பீம்; IV:614 .
PINNACLE - முகடு; V:295.
PINON - பினோன்; IV:608.
FIPE - குழல்; II:884 .
PIRAM - பிராம்; IV:581.
PIRATHON - பிராத்தோன்; IV:580.
PISGAH MOUNT - பிஸ்கா மலை; IV:576.
PISHON - பிசோன்; IV:573.
PISIDIA - பிசிதியா; IV:572.
PISPA - பிஸ்பா; IV:577.
PISTACHIO NUTS - தேவதாருக் கொட்டைகள்; IV:41.
PISTIS SOPHA - பிஸ்திஸ் - சோபியா ; IV:576.
PITCH - கீல்; II:841.
PITFALL - இடறு குழி; I:651.
PITHOM - பித்தோம்; IV:579.
PITHON - பித்தோன்; IV:579.
PLAGUE - கொள்ளை நோய்; III:89.
PLAIN, TABLELAND - சமவெளி; III:138.
PLAN OF GOD - இறைத்திட்டம்; I:809.
PLANE TREE - அர்மோன் மரம்; I:293.
PLASTER - சாந்து, சுண்ணாம்புக்காரை; III:186.
PLEIADES - கார்த்திகை விண்மீன்குழு; II:725.
PLOUGH - கலப்பை; II:636.
PLUMB LINE - தூக்கு நூல்; III:805.
POCHERETH-HAZZEBAIM - போக்கரேத்து-சபாயிம்; IV:831.
POD - நெற்று; IV:343.
POET - புலவர்; IV:656.
POISON - நஞ்சு; IV:135.
POLICE - நகர்க்காவலர்; IV:130.
POLYCARP, EPISTLE OF -போலிகார்பின் திருமுகம்; IV:848.
POLYCARP, MARTYRDORN OF - போலிகார்பின் மறைசாட்சி மரணம்; IV:848.
POMEGRANATE - மாதுளை; V:222.
POND, POOL - குளம்; II:880.
PONTIUS PLATE - பொந்தியு பிலாத்து; IV:816.
PONTUS - போந்து; IV:837.
POOR - ஏழைகள்; II:441.
POPLAR - புன்னை மரம்; IV:678.
PORATHA - போராத்தா; IV:839.
PORTION, SHARE - பங்கு, பாகம்; IV:366.
POSIDONIUS - பொஸிதோனியு; IV:814.
POTIPHAR - போத்திபார்; IV:837.
POTIPHERA - போற்றிபெரா; IV:855.
POTSHERD - மண்கல உடைசல்; V:59.
POTSHERD GATE - மண்கல உடைசல் வாயில்; V:60.
POTTAGE - கூழ்; II:914.
POTTER'S FIELD - குயவன் நிலம்; II:863.
POTTER'S WHEEL - குயவன் சக்கரம்; II:863.
POTTERY - மண்கலத் தொழில்; V:60.
POWER - ஆற்றல்; I:529.
PRAETORIUM - பிரேத்தோரியம்; IV:584.
PRAISE - புகழ்ச்சி, போற்றுரை; IV:617.
PRAYER - செபம், வேண்டல்; III:392.
PRAYER OF AZARIAH, - அசரியாவின் மன்றாட்டு; I:34.
PRAYER, PLACE OF - செபிக்கும் இடம்; III:404.
PREACH - போதித்தல்; IV:832.
PREACHER, ECCLESIASTES, BOOK OF - திருவுரையாளர்; III:715.
PREDESTINE - முன்குறித்தல்; V:315.
PREPARATION, DAY OF - ஆயத்த நாள்; I:488.
PRESENCE OF GOD - இறைவனின் பிரசன்னம் / திருமுன்; I:845.
PRIDE - பெருமை; IV:735.
PRIEST - குரு; II:863.
PRIESTHOOD - குருத்துவம்; II:867.
PRIESTLY DOCUMENT - குருக்கள் பாரம்பரிய ஏடு; II:866.
PRINCIPALITIES - தலைமை ஏற்போர்; III:536.
PRISCA, PRISCILLA - பிரிஸ்கா, பிரிஸ்கில்லா; IV:582.
PRISON - சிறைக்கூடம்; III:300.
PRISON LETTERS - சிறைக்கூட மடல்கள்; III:300.
PRISON, SPIRITS IN - சிறையிலிருந்த ஆன்மாக்கள்; III:301.
PRIZE - பரிசு; IV:413.
PROCHORUS - பிரக்கோர்; IV:580.
PRODIGAL SON - ஊதாரியின் உவமை; II:133.
PROFANE - தூய்மையானதை இழிவுபடுத்துதல்; III:825.
PROMISES - வாக்குறுதிகள்; V:715.
PROPHETS - இறைவாக்கினர்; I:876.
PROPHYRY - வெண்ணிலக்கல்; V:908.

PROSELYTIZE - சமயம் தழுவச்செய்தல்; III:137.
PROVENDER - தீனி; III:774.
PROVERBS, BOOK OF - நீதிமொழிகள்நூல், பழமொழி யாகமம்; IV:288.
PROVIDENCE - பராமரிப்பு, பாதுகாப்பு; IV:408.
PROVINCE - மாநிலம்; V:222.
PSALMS, BOOK OF - சங்கீதங்கள்-திரு நூல்; III:115; திருப்பாடல்கள், சங்கீதநூல்; III:658.
PSEUDEPIGRAPHA - புனைபெயர் நூல்கள்; IV:678.
PSEUDO-MATTHEW, GOSPEL OF - புனை பெயர் மத்தேயுவின் நற்செய்தி; IV:678.
PSEUDO-MELITO, NARRATIVE OF - புனைபெயர் மேலித்தோவின் நிகழ்ச்சியுரை; IV:678.
PTOLEMAIS - தாலமாய்; IV:121; தோலமாய்.
PTOLEMY - தோலமி; IV:121.
PUAH - பூகா; IV:679.
PUBLIUS - புப்பிலியு; IV:641.
PUDENS - பூதன்சு; IV:680.
PUL - பூல்; IV:689.
PUNITES - பூனியர்; IV:689.
PUNON - பூனோன்; IV:690.
PUR - பூர்; IV:688.
PURAH - புரா; IV:642.
PURE - தூய்மை, மாசின்மை; III:815.
PURIM - பூரிம்; IV:688.
PURPLE - கருஞ்சிவப்பு; II:629.
PURSE - பணப்பை; IV:385.
PURSLANE - துப்பும் எச்சில்; III:790.
PUT - பூற்று; IV:689.
PUTEOLI - புத்தயோலி; IV:638.
PUTHITES - பூத்தியர்; IV:680.
PUTIEL - பூற்றியேல்; IV:689.
PUVAH - பூவா; IV:689.
PYRRHUS - பீரு; IV:614.

Q

QUAIL - காடை; II:707.
QUARRY - கற்சுரங்கங்கள்; II:683.
QUARTER-MASTER - பயணவிடுதிப் பொறுப்பாளர்; IV:403.
QUARTUS - குவார்த்து; II:880; குவர்த்து.
QUEEN - அரசி; I:236.
QUEEN OF HEAVEN - விண்ணக அரசி; V:814.
QUIRINIUS - கிரேனியு; II:780; சிரேனியு.
QUIVER - அம்பறாத்தூணி; I:203.
QUMRAN - கும்ரான்; II:862.
QUOTATION - மேற்கோள்; V:367.

R

RAAMA, RAAMAH - இராகமா; I:724.
RAAMIAH - இராமிய; I:725.
RAAMSES, RAMESES - ராமசேசு; V:604.
RAAMSES, RAMESES (PLACE) - இராமசேசு; I:728.
RABBAH - இரபா; I:720.
RABBI, RABBONI - ராபி, ரபூனி; V:604.
RABBITH - இரபித்து; I:721.
RABMAG - இரபிமாகு; I:721.
RAB-SARIS - இரபிசாரி; I:721.
RAB-SHAKEH - இரபிசாகே; I:721.
RACA - ராக்கா; V:604.
RACAL - இராக்கால்; I:726.
RACHEL - ராகேல்; V:603; இராக்கேல்; I:726.
RACHEL'S TOMB - ராகேலின் கல்லறை; V:603.
RADDAI - இராதாய்; I:726.
RAFT - கட்டுமரம்; II:598.
RAGES - இராகியு; I:725.
RAGUEL - இரகுவேல்; I:708.
RAHAB - இராகாபு; I:725; ராகாபு.
RAHAM - இராகாம்; I:725.
RAIN - மழை; V:157.
RAINBOW - வானவில்; V:749.
RAISINS - உலர்ந்த திராட்சை; II:113.
RAKEM - இராக்கேம்; I:726.
RAKKATH - இரக்காத்து; I:712.
RAKKON - இரக்கோன்; I:713.
RAM - இராம்; I:730; ஆராம்.
RAMAH - ராமா; V:604; இராமா; I:728.
RAMATHITE - இராமாவியர்; I:729; ராமாவினர்; V:604.
RAMATH-LEHI - இராமத்து லெகி; I:728; ராமத்லெகி.
RAMATH-MIZPEH - இராமத்து மிசுபே; I:728; இராமத்துமிட்சபே.
RAMATHAIM-ZOPHIM - ராமாத்தயிம்-சோப்பிம்; V:604; இராமத்தாயிம் சோப்பிம்.
RAMIAH - இரமியா; I:723 இரம்யா.
RAMOTH - இராமோத்து; I:729.
RAMOTH-GILEAD - இராமோத்து கிலயாது; I:730; ராமோத்து-கிலயாது; V:604.
RAMPART - சுற்றுமதில் புற அரண்; III:354.
RAMSES, RAAMESES, RAMESSES (PERSON) - இராமசேசு; I:727.
RANSOM - ஈட்டுத்தொகை, மீட்புப்பணம்; I:914.
RAPHA - ராபா; V:604; இராப்பா; I:727.
RAPHAEL - இராபேல்; I:726.
RHPAH - இராப்பா; I:727.
RAPHAIM - இரப்பாயிம்; I:722.
RAPHIA - இரப்பியா; I:723.

RAPHON - இரப்போன்; I:723.
RAPHU - இரப்பு; I:723; இராபூ.
RAS-SHAMRA - இராஸ் ஸம்ரா; I:726.
RASSIS - இராசி; I:726.
RATHAMIN - இரதாமின்; I:716.
RAVEN - காக்கை; II:702.
RAZIS - ராசி; V:604.
RAZOR - சவரக்கத்தி, கத்தி; III:154.
RE, RA - இரே, இரா; I:740.
REAIAH - இரயாயா; I:723.
REBA - இரபா; I:721; இரெபா.
REBECAH - இரெபேக்கா; I:740; ரபேக்கா; V:603; ரெபேக்கா.
RECAH - இரக்கா; I:712; இரேக்க.
RECHAB - இரக்காபு; I:712; இரேக்கபு.
RECHABITES - இரக்காபியர்; I:713.
RECONCILIATION - ஒப்புரவு; II:513.
RECORDER - பதிவாளர்; IV:390.
RED - செந்நிறம், சிவப்பு; III:388.
RED HEIFER - செங்கிடாரி; III:381.
RED SEA - செங்கடல்; III:380.
REDEMPTION, REDEEMER - மீட்பு, மீட்பர்; V:285.
REED, RUSH - நாணல்; IV:228.
REELAIAH - இரகலாயா; I:708; இரகேலயா.
REFINING - வடிகட்டுதல், தூய்மைப்படுத்துதல்; V:652.
REFUGE - அடைக்கலம், தஞ்சம்; I:78.
REGEM - இரகேம்; I:739.
REGEM-MELECH - இரகேம்-மெலக்கு; I:739.
REGENERATION - புத்துயிர் பெறுதல்; IV:640.
REGISTER - பதிவேடு; IV:391.
REHABIAH - இரகபியா; I:707.
REHOB (PERSON) - இரகோபு; I:708.
REHOB (PLACE) - இரகோபு; I:708.
REHOBOAM - இரகபெயாம்; I:707; ரெகபெயாம், ரெகபயாம்; V:619.
REHOBOTH - இரகொபோத்து; I:708.
REHOBOTH-IR - இரகொபோத்தீர்; I:708.
REHUM - இரகூம்; I:740.
REI - இரேயி; I:740.
REKEM (PERSON) - இரக்கேம்; I:713.
REKEM (PLACE) - இரக்கேம்; I:713.
RELEASE, YEAR OF - விடுதலை ஆண்டு; V:769.
REMALIAH - இரமலியா; I:723.
REMETH - இரமேத்து; I:723.
REMNANT - எஞ்சியோர்; II:206.
REPENTENCE / CONVERSION - மனவருத்தம் / மன மாற்றம்; V:169.
REPHAEL - இரபாவேல்; I:721.
REPHAH - இரப்பா; I:722; இரபா.
REPHAIAH - இரப்பாயா; I:722; இரபாயா.
REPHAIM (PERSON) - இரப்பாயிம்; I:722; இரபாயிம்.
REPHAIM (PLACE) - இரப்பாயிம்; I:722; இரபாயிம்.
REPHAN - இரப்பான்; I:723.
REPHIDIM - இரபிதிம்; I:721.
RESEN - இரசேன்; I:714.
RESERVOIR - நீர்த்தேக்கம்; IV:318.
RESH - ரேசு; V:620.
RESHEPH - இரசேப்பு; I:714; இரசேபு.
RESPECT OF PERSONS - மதித்து நடத்துதல், மரியாதை அளித்தல்; V:62.
RESPONSIBILITY - பொறுப்புணர்வு; IV:822.
REST - இளைப்பாறுதல், ஓய்வு; I:766; ஓய்வு; II:566.
RESTORATION - மீண்டும் அமைத்தல், புதுப்பித்தல்; V:290.
RESURRECTION - உயிர்ப்பு; II:58.
RETURN - திரும்புதல்; III:714.
REU - இரகூ; I:708; இரகி.
REUBEN - ரூபன்; V:618.
REUEL - இரகுவேல்; I:708; ரெயுவேல்; V:619.
REUMAH - இரயுமா; I:724.
REVELATION - இறை வெளிப்பாடு; I:895.
REVELATION, BOOK OF - திருவெளிப்பாடு நூல்; III:728.
REVERENCE - பயபக்தி; IV:403.
REWARD - வெகுமானம், கைம்மாறு, பரிசு; V:900.
REZEPH - இரசேப்பு; I:714; ரெசேபு; V:619.
REZIN - இரசீன்; I:713; ரெத்சின், ரெசின்; V:619.
REZON - இரசோன்; I:714.
RHEGIUM - இரேகியம்; I:740; இரேகியு.
RHEIMS VERSION - ரெய்ம்ஸ் மொழிபெயர்ப்பு ஏடு; V:619.
RHESA - இரேசா; I:740.
RHODA - உரோதா; II:88; ரோதா; V:620; ரோதி.
RHODES - உரோது; II:88; ரோதே; V:620; ரோது.
RHODOCUS - உரோதொக்கு; II:89; ரோதொக்கு; V:620.
RIBAI - இரிபாய்; I:732.
RIBLAH - இரிபிலா; I:732; இரிப்லா.
RIDDLE - புதிர் அல்லது விடுகதை; IV:628.
RIGHT HAND - வலக்கரம்; V:662.
RIGHTS / LAWS - உரிமைகள் / சட்டங்கள்; II:66.
RIMMON (PERSON) - இரிம்மோன்; I:733; ரிம்மோன்; V:605.
RIMMON (PLACE) - இரிம்மோன்; I:733; ரிம்மோன்; V:605.
RIMMON-PEREZ - இரிம்மோன் பேரேசு; I:733; ரிம்மோன் பாரேசு; V:605.
RIMMONO - இரிம்மோனோ; I:733; ரிம்மோனோ; V:605.
RING - வளையம்; V:705.
RINNAH - இரின்னா; I:733; ரின்னா; V:605.
RIPHATH - இரிபாத்து; I:732.
RISSAH - இரிசா; I:731.
RITHAMAH - இரித்தமா; I:732.
RITHMAH - இரித்தமா; I:732; இரித்மா.

RIVER - ஆறு, நதி; I:528.
RIZIA - இரிசியா; I:732; இரித்சியா.
RIZPAH - இரிசிப்பா; I:732; இரிசபா.
ROAD - பாதை, வழி, சாலை; IV:495.
ROCK - பாறை; IV:567.
RODANIM - உரோதானிம்; II:88; ரோதானியர்; V:620.
ROGELIM - உரோகலிம்; II:88; ரோகலிம்; V:620.
ROHGAH - உரோகா; II:88; ரோககா; V:620.
ROHGAH - உரோகா; II:88; ரோக்கா; V:620.
ROLL, SCROLL - சுருள், ஏட்டுச்சுருள்; ; III:352.
ROMAMTI-EZER - உரோமந்தி-ஏசேர்; II:89; ரோமமத் எசேர்; V:620.
ROMAN EMPIRE - உரோமைப் பேரரசு; II:95.
ROMANS, LETTER OF THE - உரோமையருக்குத் திருமுகம்; II:100.
ROME - உரோமை; II:89.
ROME, CHURCH AT - உரோமையில் புதிய ஏற்பாட்டுக் காலத் திருச்சபை II:105.
ROOF - மாடி, மேல்தளம், கூரை; V:215.
ROOT - வேர்; V:948.
ROSH - உரோசு; II:88; ரோசு; V:620.
RUDDER - சுக்கான்; III:347.
RUDDY - சிவந்த மேனி; III:297.
RUFUS - ரூபு; V:619; உரூபு; II:87.
RUHAMAH - உருகாமா; II:76; ரூகாமா; V:605.
RUMAH - உரூமா; II:88; ரூமா; V:619.
RUN - ஓடுதல்; II:561.
RUNNEL, TROUGH - நீர்த்தொட்டி; IV:319.
RUST - துரு; III:790.
RUTH - ரூத்து; V:605.
RUTH, BOOK OF - ரூத்து திருநூல்; V:605.

S

SABACHTHANI - சபக்தானி; III:131.
SABAOTH - சாபாஒத்து; III:191.
SABATH - சாபாத்து; III:191.
SABBATH-DAY OF REST - ஓய்வு நாள்; II:568.
SABBATH DAY'S JOURNEY - ஓய்வு நாள் பயணத் தூரம்; II:569.
SABBATICAL YEAR - ஓய்வு ஆண்டு; II:567.
SABEANS - செபாயர்; III:401.
SABTA(H) - சப்தா; III:132.
SABTECA - சப்தக்கா; III:133.
SACHAR - சாக்கார்; III:176.
SACHIA - சாக்யா; III:177.
SACK - கோணி, சாக்கு; III:97.
SACKLOTH - சாக்கு உடை, கோணி; III:176.
SACRED STONE - சிலைக்கல்; III:296.
SACRIFICE - பலி; IV:433.
SADDLE - சேணம்; III:438.
SADDUCEES - சதுசேயர்கள்; III:126.
SADNESS - வருத்தம்; V:659.
SAFFRON - மஞ்சள்; V:52.
SAIL - கப்பலின் பாய்; II:616.
SAILOR - கப்பலோட்டி, மாலுமி; II:616.
SAINT - புனிதர்; IV:676.
SAKKUTH AND KAIWAN - சக்கூத்து-கிய்யோன்; III:113.
SALA - சாலா; III:258.
SALAMIEL - சலாமியேல்; III:149.
SALAMIS - சாலமி; III:236.
SALECAH - சலிக்கா; III:149.
SALEM - சாலேம்; III:259.
SALIM - சலீம்; III:149.
SALLAI - சல்லாய்; III:152.
SALLU - சல்லூ; III:152.
SALMA - சல்மா; III:150.
SALMON - சல்மோன்; III:151.
SALMONE - சல்மோனி; III:151.
SALOME - சலோமி; III:149.
SALT - உப்பு; II:39.
SALT, CITY OF - உப்புநகர்; II:40.
SALT, SEA OF - உப்புக்கடல்; II:40.
SALT, VALLEY OF - உப்புப் பள்ளத்தாக்கு; II:40.
SALU - சாலூ; III:259.
SALVATION - வீடுபேறு, மீட்பு, உய்வு; V:891.
SALVE - மருந்து, கண் மருந்து; V:130.
SAMARIA - சமாரியா; III:143.
SAMARIA, TERRITORY OF - சமாரிய. நிலப்பரப்பு; III:139.
SAMARITAN PENTATEUCH - சமாரியர்களின் ஐந்நூல் III:140.
SAMARITANS - சமாரியர்கள்; III:141.
SAMECH - சாமேக்கு; III:229.
SAMGAR-NEBO - சம்கார் நெபோ; III:145; சம்கார்நெபு.
SAMLAH - சம்லா; III:147.
SAMOS - சாமு; III:193.
SAMOTHRACE - சமொத்திராக்கு; III:144.
SAMPSAMES - சம்பிசாம்; III:146.
SAMSON - சிம்சோன்; III:280.
SAMUEL - சாமுவேல்; III:194.
SAMUEL-I-II, BOOKS OF - சாமுவேல் திருநூல்கள்; I-II; III:196.
SANBALLAT - சன்பல்லாற்று; III:162.
SANCTIFICATION - அர்ச்சிக்கப்படுதல்; I:285; புனிதப் படுத்தல்; IV:670.
SANDALS OR SHOES - மிதியடிகள், காலணிகள்; III:266.
SANHEDRIN - சனேத்ரின்; III:160.
SANSANNA - சன்சன்னா; III:162.
SAPH - சபு; III:133.

SAPPHIRA - சப்பீரா; III:134.
SAPPHIRE, LAPIS LAZULI, TURQUOISE - நீல மணிக்கல்; IV:319.
SARAH - சாரா; III:233.
SARAPH - சாராபு; III:234.
SARDIS - சர்தை; III:147.
SARGON - சார்கோன்; III:236.
SARID - சாரிது; III:235.
SARSECHIM - சர்செக்கிம் III:147.
SATAN - சாத்தான்; III:180.
SATRAP - சாத்திராபு; III:184.
SAUL - சவுல்; III:154.
SAVIOR, DIALOGUE OF THE - மீட்பரின் உரையாடல்; V:284.
SCABBARD, SEATH - வாளுறை; V:737.
SCALES - செதில் (மீன்); III:385.
SCAPE GOAT - போக்கு ஆடு, பழி ஆடு; IV:831.
SCARECROW - புள்ளோட்டி உருவம், தோட்டத்துப் பொம்மை; IV:659.
SCARF - கழுத்துத்துண்டு; II:675.
SCENTED WOOD - வாசனைக் கட்டை; V:720.
SCEPTER - செங்கோல்; III:382.
SCEVA - ஸ்கேவா; III:461.
SCHISM - சமயப்பிளவு; III:134.
SCOFFER - ஏளனஞ்செய்பவன், இகழ்பவன்; II:445.
SCORPION - தேள்; IV:42.
SCOURGING, FLOGGING - கசையடி; II:584; அடிபடுதல்; I:61.
SCRIBE - எழுத்தர், மறைநூல் அறிஞர், சட்டவல்லுநர்; II:347.
SCRIBES, EMENDATIONS OF THE - எழுத்தர்களின் பிழை திருத்தம்; II:349.
SCROLL - ஏட்டுச்சுருள்; II:408.
SCYTHE - வீச்சுவாள்; V:886.
SCCYTHIANS - சித்தியர்; III:273.
SCYTHOPOLIS - ஸ்கூத்தோபோலி; III:461.
SEA - கடல்; II:587.
SEA COAST - கடற்கரை; II:589.
SEA GULL - செம்புகம், கடல் நாரை; III:419.
SEA MONSTER - கடலின் பெருநாகம், திமிங்கலம்; II:587.
SEA OF GLASS - பளிங்கெனத் தெரிந்த கடல்; IV:465.
SEAL - முத்திரை; V:306.
SEASON - பருவகாலம்; IV:419.
SEAT - இருக்கை, இடம்; I:734.
SEBA - செபா; III:401.
SEBAM - செபாம்; III:401.
SECACAH - செகாக்கா; III:363.
SECOND ADAM - இரண்டாவது ஆதாம்; I:715.
SECOND COMING - இரண்டாம் வருகை; I:715.
SECOND DEATH - இரண்டாவது மரணம்; I:715.
SECOND QUARTER - இரண்டாம் தொகுதி அல்லது பகுதி; I:715.
SECRETARY - செயலர்; III:420.
SECUNDUS - செக்குந்து; III:377.
SECU - சேக்கு; III:438.
SEE - பார்த்தல்; IV:529.
SEED THAT SPROUT AND GROWS BY ITSLEF-(PARABLE) - தானாக முளைத்து வளரும் விதை-உவமை; III:586.
SEEK - தேடுதல்; IV:28.
SEER - காட்சியாளர்; II:708.
SEGUB - செகுபு; III:363.
SEINE - பறி; IV:469.
SEIR (PERSON) - சேயிர்; III:442.
SEIR (PLACE) - சேயீர்; III:442.
SEIRAH - செயிரா; III:421.
SELAH - சேலா; III:443.
SELA - செலா; III:428.
SELED - செலேது; III:430.
SELEUCIA - செலூக்கியா; III:429.
SELEUCUS - செலூக்கு; III:429.
SELF CONTROL - தன்னடக்கம்; III:543.
SELF-DENIAL - தன்னை மறுத்தல்; III:544.
SEMACHIAH - செமக்கியா; III:415.
SEMEIN - செமேய்; III:419.
SEMITES - செமியர்; III:418.
SENAAH - செனா; III:437.
SENEH - செனே; III:437.
SENIR - செனீர்; III:437.
SENNACHERIB - சனகெரிபு; III:159.
SENTRY - மெய்க்காப்பாளர் தலைவன்; V:349.
SEORIM - செயோரிம்; III:421.
SEPHAR - செபார்; III:403.
SEPHARAD - செபாரது; III:399.
SEPHARVAIM - செபர்வயிம்; III:399.
SEPTUAGINT - எழுபது நூல்; II:349.
SERAH - செராகு; III:422.
SERAIAH - செராயா; III:423.
SERAPHIM - செராபிம், செராபியர்; III:423.
SERED - செரேது; III:427.
SERGUIUS PAULUS - செர்கியு பவுல்; III:428.
SERMON ON THE MOUNT - மலைப்பொழிவு; V:147.
SERON - செரோன்; III:427.
SERPENT - பாம்பு; IV:510.
SERPENT'S STONE - பாம்பின் பாறை; IV:510.
SERUG - செரூக்கு; III:426; செரூகு.
SERVANT - வேலைக்காரர்; V:953.
SERVANT OF GOD - ஆண்டவரின் ஊழியன்; I:427.
SERVICE - ஊழியம், பணி; II:138.
SETH - சேத்து; III:439.
SETHUR - செதூர்; III:386.
SEVEN CHURCHES - ஏழு சனபகள்; II:440.

SEVEN CHURCHES, ANGELS OF THE - ஏழு சபைகளின் தூதர்கள்; II:440.
SEVEN WORDS FROM THE CRORS - ஏழு வார்த்தைகள்; II:440.
SEVEN, SEVENTH, SEVENTY - ஏழு, ஏழாவது, எழுபது; II:437.
SEXUALITY - பாலினப்பண்பு; IV:540.
SHAALABIM/SHALLABIN - சாலபிம்/சாலபின்; III:236.
SHAALBON - சால்போன்; III:260.
SHAALIM - சாலீம்; III:259.
SHAAPH - சாபு; III:192.
SHAARAIM - சாரயிம்; III:233.
SHAASHGAZ - சாட்சகசு; III:177.
SHABBETHAI - சபத்தாய்; III:131.
SHADDAI - சத்தாய்; III:128.
SHADOW, SHADE - நிழல்; IV:263.
SHADRACH, MESHACH, ABED-NEGO - சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேது நெகோ; III:185.
SHAGEE - சாகே; III:163.
SHAHARAIM - சகரயிம்; III:108.
SHAHAZUMAH - சகட்சிம; III:108.
SHALEM - சாலேம்; III:259.
SHALISHAH - சாலிசா; III:258.
SHALLECHETH - சல்லகேத்து; III:152.
SHALLUM - சல்லூம்; III:152.
SHALMAI - சல்மாய்; III:151.
SHALMAN - சல்மான்; III:151; சல்மன்.
SHALMANESER - சல்மானேசர்; III:150.
SHAMA - சாமா; III:193.
SHAME - வெட்கம்; V:905.
SHAMGAR - சம்கார்; III:145.
SHAMHUTH - சங்கூத்து; III:115.
SHAMIR (PERSON) - சாமீர்; III:193.
SHAMIR (PLACE) - சாமீர்; III:193.
SHAMLAI - சம்லாய்; III:147.
SHAMMA - சம்மா; III:146.
SHAMMAH - சம்மாகு; III:146.
SHAMMAI - சம்மாய்; III:146.
SHAMMOTH - சம்மோத்து; III:147.
SHAMMUVA - சம்முவா; III:146.
SHAMSHERAI - சம்சராய்; III:145.
SHAPHAM - சாபாம்; III:191.
SHAPHAN - சாபான்; III:192.
SHAPHAT - சாபாற்று; III:191.
SHAPHIR - சாபீர்; III:192.
SHARAI - சாராய்; III:235.
SHARAR - சாரார்; III:233.
SHAREZER - சரெத்சர்; III:147; சரேத்சர்.
SHARON - சாரோன்; III:235.
SHARONITE - சாரோனியர்; III:235.
SHARUHEN - சாருகென்; III:235.
SHASHAI - சசாய்; III:115.
SHASHAK - சாசாக்கு; III:177.
SHAUL - சாவூல்; III:261.
SHAVEH-KIRIATHAIM - சாவே-கிரியாத்தயிம்; III:261.
SHAVEH VALLEY OF - சாவே பள்ளத்தாக்கு; III:261.
SHAVING - மழித்தல்; V:156.
SHAVSHA - சவுசா; III:154.
SHEAL - செயால்; III:421.
SHEALTIEL - செயல்தியேல்; III:421.
SHEARIAH - செயரியா; III:420.
SHEAR-JASHUB - செயார்-யாசுபு; III:421.
SHEBA (PERSON) - சேபா; III:439.
SHEBA (PLACE) - சேபா; III:440.
SHEBA, QUEEN OF - சேபா நாட்டு அரசி; III:441.
SHEBANIAH - செபன்யா; III:400.
SHEBARIM - செபாரிம்; III:403.
SHEBAT - செபாற்று; III:403.
SHEBER - செபேர்; III:406.
SHEBNA - செபுனா; III:406.
SHEBUEL - செபுவேல்; III:405.
SHECANIAH - செக்கனியா; III:377.
SHECHEM (PERSON) - செக்கேம்; III:378.
SHECHEM (PLACE) - செக்கேம்; III:378.
SHECHEM, TOWER OF - செக்கேமின் கோட்டை; III:377.
SHEDEUR - செதேயூர்; III:387.
SHEEP - ஆடு; I:399.
SHEEP GATE - ஆட்டு வாயில், மந்தை வாயில்; I:414; V:94.
SHEEPFOLD - ஆட்டுப்பட்டி; I:414.
SHEEPSKIN - ஆட்டுத்தோல்; I:413.
SHEERAH - செயேரா; III:421.
SHEHARIAH - செகரியா; III:363.
SHEKEL - செக்கேல்; III:379.
SHEKINAH - செக்கீனா; III:377.
SHELAH - சேலா; III:443.
SHELAH, POOL OF - சேலாக் குளம்; III:443.
SHELEMIAH - செலேமியா; III:430.
SHELEPH - செலேபு; III:430.
SHELESH - செலேசு; III:430.
SHELOMITH - செலோமித்து; III:431.
SHELOMOTH - செலமோத்து; III:428.
SHELUMIEL - செலுமியேல்; III:430.
SHEM - சேம்; III:442.
SHEMA (PERSON) - செமா; III:415.
SHEMA (PLACE) - செமா; III:415.
SHEMA, THE - சேமா; III:441.
SHEMAAH - செமாகா; III:415.
SHEMAIAH - செமாயா; III:415.
SHEMARIAH - செமரியா; III:415.
SHEMEBER - செமேபர்; III:419.
SHEMED - சாமேது; III:229.
SHEMER - செமேர்; III:419.
SHEMIDA - செமிதா; III:418.
SHEMIRAMOTH - செமிரமோத்து; III:418.

SHEMUEL - செமுவேல்; III:419.
SHEN - சேன்; III:444.
SHENAZZAR - செனாட்சர்; III:437.
SHEOL - செயோல்; III:422.
SHEPHAM - செபாம்; III:401.
SHEPHATTAH - செபற்றியா; III:400.
SHEPHELAH - செபேலா; III:407.
SHEPHER MOUNT - செபேர் மலை; III:406.
SHEPHERD AND SHEEP - ஆயனும் மந்தையும்; I:490.
SHEPHI, SHEPHO - செபி, செபோ; III:404.
SHEPHUPHAM - செபுபாம்; III:404.
SHEPHUPHAN - செபுபான்; III:405.
SHEREBIAH - செரேபியா; III:427.
SHERESH - செரேசு; III:426.
SHESHACH - சேசாக்கு; III:438.
SHESHAI - சேசாய்; III:438.
SHESHAN - சேசான்; III:438.
SHESHBAZZAR - சேசுபட்சர்; III:438.
SHETH - சேத்து; III:439.
SHETHAR - சேத்தார்; III:439.
SHETHAR-BOZENAI - செத்தர்-போசனாய்; III:387.
SHEVA - செவா; III:436.
SHIBAH - சிபா; III:274.
SHIBBOLETH - சிபோலத்து; III:275.
SHIELD-BEARER - கேடயம் தாங்குவோன், பரிசையன்; III:31.
SHIELD, BUCKLER - கேடயம்; III:31.
SHIGGAION, SHIGIONOTH - சிகயோன், சிகியோனத்து; III:266.
SHIHOR - சீகோர்; III:304.
SHIHOR-LIBNATH - சீகோர்-லிப்னாத்து; III:304.
SHIKKERON - சிக்கரோன்; III:266.
SHILHI - சில்கி; III:296.
SHILHIM - சில்கிம்; III:296.
SHILLEM - சில்லேம்; III:297.
SHILOAH, WATERS OF - சீலோவாகு; III:341.
SHILOH - சீலோ; III:340.
SHILONITE - சீலோவியர்; III:341.
SHILSHAH - சிலிசா; III:285.
SHIMEA - சிமியா; III:276.
SHIMEAH - சிமெயா; III:280.
SHIMEAM - சிமயாம்; III:276.
SHIMEATH - சிமயாத்து; III:276.
SHIMEATHITES - சிமயாத்தியர்; III:276.
SHIMEI - சிமயி; III:276.
SHIMEON - சிமியோன்; III:278.
SHIMON - சீமோன்; III:312.
SHIMRATH - சிம்ராத்து; III:282.
SHIMRI - சிம்ரி; III:282.
SHIMRITH - சிம்ரித்து; III:283.
SHIMRON - சிம்ரோன்; III:283.
SHIMRON-MERON - சிம்ரான்-மெரான்; III:283.
SHIMSHAI - சிம்சாய்; III:280.
SHINAB - சினாபு; III:302.
SHINAR - சினார்; III:303.
SHION - சீயோன்; III:316.
SHIPHI - சிபி; III:275.
SHIP MASTER - கப்பல் தலைவன்; II:619.
SHIPHMITE - சிபிமியர்; III:275.
SHIPHRAH - சிப்ரா; III:276.
SHIPHTAN - சிப்தான்; III:275.
SHIPS AND SAILING - கப்பல்களும் கப்பலோட்டுதலும்; II:617.
SHISHA - சிசா; III:270.
SHISHAK - சிசாக்கு; III:270.
SHITRAI - சிற்றாய்; III:301.
SHITTIM - சித்திம்; III:272.
SHIZA - சீசா; III:305.
SHOA - சோவா; III:459.
SHOBAB - சோபாபு; III:455.
SHOBACH, SHOPHACH - சோபாக்கு; III:455.
SHOBAI - சோபாய்; III:455.
SHOBAL - சோபால்; III:456.
SHOBEK - சோபேக்கு; III:456.
SHOBI - சோபி; III:456.
SHOHAM - சோகாம்; III:451.
SHOMER - சோமேர்; III:456.
SHOVEL - குறடு, அள்ளு கருவி; II:885.
SHROUD - மெல்லிய துணி; V:356.
SHUA - சூவா; III:360.
SHUAH - சூவாகு; III:360.
SHUAL (PERSON) - சூவால்; II:360.
SHUAL (PLACE) - சூவால்; III:360.
SHUBAEL - சுபவேல்; III:349.
SHUHAH - சூகா; III:355.
SHUHAM - சூகாம்; III:355.
SHUHITE - சூகாயர்; III:355.
SHULAMMITE - சூலாமியர்; III:359.
SHUMATHITE - சூமாவியர்; III:358.
SHUNEM, SHUNAMMITE - சூனேம், சூனாமியர்; III:362.
SHUNI - சூனி; III:362.
SHUPPIM - சப்பீம்; III:349.
SHUR - சூர்; III:358.
SHUTHELAH - சுத்தேலகு; III:349.
SHUTTLE - தறி ஓடு கட்டை; III:541.
SIA, SIAHA - சீயா, சீயாகா; III:315.
SIBBECAI - சிபகாய்; III:274.
SIBMAH - சிபிமா; III:275.
SIBRAIM - சிபிராயிம்; III:275.
SICKLE - அரிவாள்; I:255.
SICKNESS AND HEALING - நோய்நிலையும், குணப்படுதலும்; IV:350.
SICYON - சிகியோன்; III:266.
SIDDIM - சிதீம்; III:272.

SIDE - சீதே; III:310.
SIDON - சீதோன்; III:310.
SIEVE - சல்லடை; III:152.
SIGN - அறிகுறி; I:321.
SIGNATURE - கையொப்பம்; III:42.
SIGNS AND WONDERS - அருங்குறிகளும் அற்புதங்க ளும்; I:256.
SIHON - சீகோன்; III:304.
SILAS - சீலா; III:340.
SILENCE - மௌனம்; V:389.
SILK - பட்டு; IV:384.
SILLA - சில்லா; III:296.
SILOAM - சீலோவாம்; III:341.
SILVANUS - சில்வான்; III:297.
SILAVANUS, TEACHINGS OF - சில்வானின் போதனை கள்; III:297.
SILVER - வெள்ளி; V:933.
SILVER SMITH - வெள்ளித்தட்டான்; V:935.
SIMALCUE - சிமால்கு; III:278.
SIMEON - சிமியோன்; III:278.
SIMON - சீமோன்; III:312.
SIMON MACCABEUS - சீமோன் மக்கபேயர்; III:314.
SIMON MAGUS - சீமோன் மாகு; III:315.
SIMPLICITY - எளிமை; II:352.
SIN - சீன்; III:346.
SIN OFFERING - பாவப்பரிகாரக் காணிக்கைகள்; IV:551.
SIN, SINNER - பாவம், பாவி; IV:553.
SIN, WILDERNESS OF - சீன் பாலைவனம்; III:346.
SINAI - சீனாய்; III:342.
SINAITICUS CODEX - சீனாய்ச் சுவடி; III:343.
SINEW - தசை நார்; III:509.
SINITES - சீனியர்; III:345.
SIPHMOTH - சிபமோத்து; III:274.
SIPPAI - சிபாய்; III:275.
SIRACH - சீராக்கு; III:318.
SIRACH, BOOK OF - சீராக்கு நூல்; III:319.
SIRAH - சீரா; III:318.
SIRION - சிரியோன்; III:284.
SISERA - சிசரா; III:269; சீசரா.
SISMAI - சிசமாய்; III:269.
SISTER - சகோதரி; III:112.
SITHRI - சித்ரி; III:274.
SITNAH - சித்னா; III:274.
SIVAN - சீவான்; III:342.
SIX HUNDERED AND SIXTY SIX - அறுநூற்று அறுபத்தாறு; I:338.
SKIFF - நாணற்படகு; IV:228.
SKIN - தோல்; IV:125.
SKULL - மண்டை ஓடு; V:62.
SLANDER - அவதூறு, பழி; I:303.
SLAVE - அடிமை; I:62.
SLAVONIC VERSIONS - ஸ்லாவோனின் வாசகங்கள்; III:466.
SLEEP - உறக்கம்; II:120.
SLEEVES - சட்டைக்கை; III:125.
SLING - கவண், கல்லெறி கருவி; II:669.
SLOTHFULNESS, SLUGGARD - சோம்பலான, சோம் பேறி; III:457.
SMOKE - புகை மண்டலம்; IV:620.
SMYRNA - சிமிர்னா; III:279.
SNAIL, SLUG - நத்தை; IV:142.
SNAKE CHARMING - பாம்பாட்டி வித்தை; IV:510.
SNARES AND TRAPS - கண்ணி, வலை, பொறி; II:601.
SNUFFDISHES - சாம்பல் தட்டு(கள்), சாம்பல் கலசங்கள்; III:230.
SNUFFERS - கத்திரி, அணைப்பான்; II:609.
SO - சோ; III:451.
SOAP - சவர்க்காரம்; III:154.
SOCO/SOCOH - சோக்கோ; III:451.
SODI - சோதி; III:452.
SODOM - சோதோம்; III:452.
SODOMITES - சோதோமியர்; III:452.
SODOM, VINE OF - சோதோமின் கொடி முந்திரி; III:452.
SOLITUDE - தனிமை; III:542.
SOLOMON - சாலமோன்; III:254.
SOLOMON, BOOK OF THE ACTS OF - சாலமோன் வரலாற்று நூல்; III:258.
SOLOMON, ODES OF - சாலமோனிக் பாடல்கள்; III:253.
SOLOMON, PSALMS OF - சாலமோனின் சங்கீதங்கள்; III:237.
SOLOMON'S PORTICO - சாலமோனின் மண்டபம்; III:254.
SOLOMON, SERVANTS OF - சாலமோனின் பணியா ளர்கள், அதிகாரிகள்; III:253.
SOLOMON, TESTAMENT OF - சாலமோனின் ஏற்பாடு; III:237.
SOLOMON, WISDOM OF - சாலமோனின் ஞானம்; III:238.
SON - மகன், புதல்வன்; V:3.
SON OF GOD - இறைமகன்; I:817.
SON OF MAN - மனுமகன், மானிட மகன்; V:193.
SONG OF SONGS - பேரின்பப் பாடல், உன்னத சங்கீதம்; IV:791; II:125.
SONS OF THE PROPHETS - இறைவாக்கினர் புதல்வர்கள்; I:887.
SOPATER - சோப்பத்தர்; III:456.
SOPHERETH - சொபரேத்து; III:448.
SOREK - சோரேக்கு; III:458.
SORES - புண்; IV:621.
SORROW - துக்கம், துயரம்; III:775.
SOSIPATER - சோசிபத்தர்; III:451.

SOSTHENES - சொஸ்தேன்; III:447.
SOSTRATUS - சோஸ்திராத்து; III:452.
SOTAI - சோற்றாய்; III:460.
SOUJOURNER - அன்னியன்; I:365.
SOUL - ஆன்மா; I:537.
SOUTH - தெற்குத்திசை; IV:27.
SOW - பெண்பன்றி; IV:700.
SOWER, PARABLE OF - விதைப்பவன் உவமை; V:826.
SOWING - விதைத்தல்; V:823.
SPAIN - ஸ்பெயின்; III:466.
SPARROW - அடைக்கலான் குருவி; I:78; குருவி; II:878.
SPARTA, SPARTANS - ஸ்பார்த்தா, ஸ்பார்த்தேயர்; III:465.
SPEAR - ஈட்டி; I:914.
SPECKLED BIRD OF PREY - பல வண்ணப்பறவை; IV:429.
SPELT - சாமை, மாக்கோதுமை; III:229.
SPICES - நறுமணப்பொருள்; IV:162.
SPIDER - சிலந்தி; III:285.
SPIES - ஒற்றர்கள்; II:538.
SPINNING - நூல் நூற்றல்; IV:327.
SPIRIT - ஆவி; I:517.
SPIRIT OF GOD - இறை ஆவி; I:793.
SPIRIT, DISCERNMEN OF THE - ஆவிகளை ஆய்ந்துணர்தல்; I:519.
SPIRITUAL BODY - ஆவிக்குரிய உயிர்கொண்ட உடல்; I:519.
SPIRITUAL GIFTS - ஆவியின் கொடைகள்; I:520.
SPIT - உமிழ்தல், துப்புதல்; II:41.
SPIOL - கொள்ளைப்பொருள்; III:90.
SPONGE - கடற்காளான்; II:589.
SPOUSE - வாழ்க்கைத்துணை; V:732.
SQUAD - நான்கு படைவீரர்களைக் கொண்ட குழு; IV:254.
SQUARE - வளாகம்; V:705.
STACHYS - ஸ்தாக்கி; III:461.
STACTE - வெள்ளைப்போளம், யூத அத்தார்; V:936.
STADIA, FURLONG - கல்தொலைவு; II:661.
STAFF - கோல், கைத்தடி; III:106.
STAIRS - படிக்கட்டு; IV:371.
STALL, STABLE - தொழுவம்; IV:96.
STARS - விண்மீன்கள்; V:819.
STEPHANAS - ஸ்தேவானா; III:461.
STEPHEN - ஸ்தேவான்; III:461.
STEPHEN, REVELATION OF - ஸ்தேவானின் வெளிப்பாடு; III:461.
STERILITY - மலட்டுத்தன்மை; V:131.
STEWARD, STEWARDSHIP - கண்காணிப்பாளர், கண்காணிப்புப்பணி; II:599.
STOCKS - தொழு, தொழுமரம்; IV:94.
STOICS - ஸ்தோயிக்கர்; III:463.
STONE - கல்; II:656.
STONE CUTTERS - கல்வெட்டுவோர்; II:669.
STONES - கற்கள்; II:680.
STONING - கல்லால் எறிந்து கொல்லல்; II:662.
STORE CITIES - களஞ்சிய நகரங்கள்; II:678.
STORK - கொக்கு, நாரை; III:44.
STORM - புயல்; IV:641.
STRAIGHT STREET - நேர் தெரு; IV:346.
STRANGE - அன்னியன்; I:365.
STRANGLING - கழுத்தை நெரித்துக் கொல்லுதல் II:676.
STRAW - வைக்கோல், தாள்; V:960.
STRENGTH - வலிமை; V:664.
STRONG DRINK - மதுபானம்; V:64.
STUBBLE - அரிதாள் கட்டை, தாளடி; I:250.
STUMBLING BLOCK - இடறும் கல்; I:651.
SUAH - சூவாகு; III:360.
SUCATHITE - சுக்காத்தியர், சுக்காவியர்; III:347.
SUCCOTH - சுக்கோத்து; III:347.
SUCCOTH-BENOTH - சுக்கோத்து-பெனோத்து; III:347.
SUD - சூது; III:357.
SUFFERING - துன்பம்; III:794.
SUICIDE - தற்கொலை; III:542.
SUKKIM - சுக்கிம், சுக்கியர்; III:347.
SUKKOTH - சுக்கோத்து; III:347.
SUMER, SUMERIA - சுமேர், சுமேரியா; III:349.
SUN - கதிரவன்; II:603.
SUN, CITY OF - கதிரவன் நகரம்; II:604.
SUPH - சூபு; III:357.
SUPHAH - சூபா; III:357.
SUR - சூர்; III:359.
SURETY - பிணையாளர்; IV:577.
SURGATE - சூர்வாயில்; III:359.
SURNAME - சிறப்புப்பெயர்; III:356.
SUSA - சூசா; III:356.
SUSANNA - சூசன்னா; III:355.
SUSANNA, BOOK OF - சூசன்னாவின் நூல்; III:356.
SUSI - சூசி; III:357.
SWADDLE - துணியால் சுற்றிப் பொதிதல்; III:776.
SWALLOW - சிட்டுக்குருவி; III:270.
SWAMP, MARSH - சதுப்பு நிலம்; III:128.
SWAN - அன்னம்; I:364.
SWARTHY - கருநிறங்கொண்ட; II:631.
SWEAT - வியர்வை; V:827.
SWEET CANE - நறுமண நாணல்; IV:162.
SWINE - பன்றி; IV:471.
SWORD - வாள்; V:737.
SYCAMINE, MULBERRY - முசுக்கட்டை மரம்; V:298.
SYCAMORE - காட்டு அத்திமரம்; II:708.
SYCHAR - சிக்கார்; III:266.
SYENE - சீனிம்; III:345.
SYMBOLISH - அடையாளவியல்; I:79.
SYMEON - சிமெயோன்; III:280.

SYMMACHUS - சிம்மாக்கு; III:281.
SYNAGOGUE - செபக்கூடம்; III:389.
SYNOGOGUE OF THE FREEDMEN - உரிமை அடைந்தோரின் செபக் கூடம்; II:66.
SYNOPTIC GOSPELS - ஒத்தமை நற்செய்திகள்; II:493.
SYNTYCHE - சிந்திக்க; III:274; சிந்திக்கி.
SYRACUSE - சிரக்கூசா; III:283.
SYRIA, SYRIANS - சீரியா, சீரியர்; III:339.
SYRIAC VERSION - சீரியக்கு மொழிபெயர்ப்பு; III:335.
SYRIAC - சீரியக்கு; III:334.
SYRO-PHOENICIA - சீரியா-பெனிசிய இனம்; III:339.
SYRTIS - சீர்த்தி; III:339.

T

TAANACH - தானாக்கு; III:586.
TAANATH-SHILOH - தானத்து சீலோ; III:585
TABBAOTH - தபாயோத்து; III:524.
TABBATH - தபத்து; III:523.
TABEEL - தாபேல்; III:551.
TABERAH - தாபேரா; III:550.
TABERNACLE - திருஉறைவிடம்; III:638.
TABLE OF NATIONS - நாடுகளின் அட்டவணை; IV:218.
TABLET, BLANK - பலகை; IV:425.
TABOR - தாபோர்; III:551.
TABOR, MOUNT - தாபோர் மலை; ; III:551.
TABOR, OAK OF - தாபோரிலுள்ள கருவாலிமரம்; III:551.
TABRIMMON - தபரிம்மோன்; III.523.
TACKLE - கப்பற்பாய் இழுப்பு வடக்கயிறு; II:619
TADMOR - ததிமோர்; III:512.
TAHAN - தாகான்; III:546.
TAHASH - தகசு; III:508.
TAHATH (PERSON) - தாகத்து; III:546.
TAHATH (PLACE) - தாகத்து; III:546.
TAHCHEMONITE - தக்கமோனியர்; III:508.
TAHPANHES (PERSON) - தகபனகேசு; III:508.
TAHPANHES - தகபனகேசு; III.509.
TAHPENES - தகபனேசு; III:508.
TAHREA - தகரேயா; III:508.
TALENT - தாலந்து; III:562.
TALENT, PRAABLE OF - தாலந்து உவமை; III:563.
TALITHA CUMI - "தலித்தா கூம்" ; III:531.
TALMAI - தல்மாய்; III:539.
TALMON - தல்மோன்; III:539.
TALMUD - தால்மூது; III:563.
TAMAR (PERSON) - தாமார்; III:552.
TAMAR (PLACE) - தாமார்; III:553
TAMARISK - ஏசல்மரம் ; II:404.
TAMMUZ - தம்மூசு; III:528.
TANHUMETH - தங்குமெத்து; III:509.
TANNER, TANNING - தோல் பதனிடுபவர், தோல் பதனிடுதல்; IV:126.
TAPHATH - தாபத்து; III:550
TAPPUAH (PERSON) - தப்புவாகு; III:526.
TAPUAH (PLACE) - தப்புவாகு; III 526.
TARALAH - தராலா; III:529.
TAREA - தாரேயே; III:560.
TARGUM - தார்கும்; III:560.
TARSHISH (PERSON) - தர்சிசு; III:529.
TARSHISH (PLACE) - தர்சிசு; III:529
TARSUS - தர்சு; III:530.
TARTAK - தர்த்தாக்கு; III:531
TARTAN - தர்த்தான்; III:531
TASK MASTER - வேலைவாங்கும் அதிகாரிகள், V:954.
TASSEL - குஞ்சம்; II:848
TASTE - சுவை, அனுபவம்; III:353.
TATENAI - தத்னாய்; III:512.
TATTOO - பச்சை குத்தல்; IV.639.
TAU - தௌ; IV:126.
TAX, TAXES - வரி, வரிகள்; V:656.
TAX COLLECTOR - ஆயக்காரன்; I:487
TAX OFFICE - சுங்கத்துறை; III:348
TEACH - கற்பித்தல்; II:684.
TEACHER - போதகர்; IV:831.
TEBAH - தெபகு; IV.18.
TEBALIAH - தெபலியா; IV:18.
TEBETH - தெபேத்து; IV:19.
TEHINNAH - தெகின்னா; IV:1.
TEKOA - தெக்கோவா; IV:2.
TEL ABIB - தெல்-அபீபு; IV:26.
TELAH - தெலகு; IV:25.
TELAIM - தெலாயிம்; IV:26
TEL-ASSAR - தெலாசார்; IV:25.
TELEM (PERSON) - தேலேம்; IV:41.
TELEM (PERSON) - தேலேம்; IV.41
TEL-HARSHA - தெல்லர்சா; IV:27.
TEL-EL-AMARNA - தெல்-எல்-அமர்னா; IV:26.
TEL-MELAH - தெல் மெலாகு; IV:27.
TEMA - தேமா; IV:31.
TEMAH - தெமகு; IV:20.
TEMAN - தேமான்; IV:31.
TEMANITE - தேமானியர்; IV:31.
TEMENI - தேமனி; IV:31.
TEMPLE, CAPTAIN OF THE - ஆலயக் காவலர் தலைவன்; I:513.
TEMPLE SERVANTS - ஆலய ஊழியர்கள்; I.512.
TEMPLE, VEIL OF THE - ஆலயத் திரை; I:513

TEN COMMANDMENTS - பத்துக்கட்டளைகள்; IV:394.
TEN VIRGINS - PARABLE - பத்துக்கன்னியர் - உவமை; IV:398.
TENDERNESS - வாஞ்சை, பரிவு; V:721.
TENONS - கொளுந்துகள்; III:88.
TENT - கூடாரம்; II:905.
TENTMAKER - கூடாரம் செய்பவர்; II:906.
TENT OF METTING - சந்திப்புக்கூடாரம்; III:130.
TEPHON - தெபோன்; IV:20.
TERAH (PERSON) - தெராகு; IV:23; தேராகு.
TERAH (PLACE) - தெராகு; IV:24.
TERAPHIM - தெராபிம்; IV:24.
TERESH - தெரேசு; IV:25.
TERRESTRIAL BODIES - மண்ணைச்சார்ந்த உடல்கள்; V:62.
TERTIUS - தெர்த்தியு; IV:25.
TERTULLUS - தெர்த்துல்லு; IV:25; தெர்த்துல்.
TESTAMENT - இறுதி விருப்பப்பத்திரம், ஏற்பாடு; I:786.
TESTAMENTS OF THE TWELVE PATRIARCHS, THE - பன்னிரு குல மூதாதையரின் ஏற்பாடுகள்; IV:472.
TESTIMONY - சாட்சியம், சான்று; III:177.
TETH - தெத்து; IV:18.
THADDAEUS - ததேயு; III:512.
THADDAEUS, 'ACTS OF - ததேயுவின் பணிகள்; III:512.
THANK OFFERING - நன்றிப்பலி; IV:198.
THANKS GIVING - நன்றி செலுத்துதல்; IV:195.
THASSI - தாசி; III:547.
THE ANOINTED - அபிடேகம் பெற்றவர்; I:136.
THE DEEP - ஆழம்; I:526.
THE GEORGIAN VERSION - கியோர்கியன் மொழி பெயர்ப்பு; II:764.
THE RICHMAN AND POOR - PARABLE - பணக்கா ரனும், ஏழையும் - உவமை; IV:384.
THE SEVEN - எழுவர்; II:351.
THEATRE - நாடகத்திடல்; IV:210.
THEBES - தெபேசு; IV:19.
THEBEZ - தேபேசு; IV:30.
THECLA, ACTS OF PAUL AND - தேக்கிலா மற்றும் பவுலின் பணிகள்; IV:28.
THEFT - களவு, திருட்டு; II:678.
THEOCRACY - இறையாட்சி முறை; I:824.
THEODOSIUS, DISCOURSE OF - தெயோதோசியு வின் உரை; IV:23.
THEODOTION - தெயோதோசியன்; IV:23.
THEODOTUS - தெயோதோத்து; IV:23.
THEOPHANY - இறை மகிமைக்காட்சி; I:821.
THEOPHILUS - தெயோபில்; IV:23.
THESSALONIANS - I, LETTER TO THE - தெசலோ னிக்கேயருக்குத் திருமுகம்; I; V:3 .
THESSALONIANS - II, LETTER TO THE - தெசலோ னிக்கேயருக்குத் திருமுகம் II; V:11
THESSALONICA - தெசலோனிக்கே; IV:2.
THEUDAS - தெயுதா; Iv:22.
THIGH - தொடை; IV:81.
THIRD DAY - மூன்றாம் நாள்; V:333.
THISBE - திசிபே; III:615.
THOMAS - தோமா; IV:116.
THOMAS, ACTS OF - தோமாவின் பணிநூல்; IV:118.
THOMAS, APOCALYPSE OF - தோமாவின் வெளிப் பாட்டு நூல்; IV:119.
THOMAS, GOSPEL OF - தோமா எழுதிய நற்செய்தி; Iv:117.
THOMAS, INFANCY GOSPEL OF - தோமா எழுதிய இயேசுவின் பாலபருவ நற்செய்தி; IV:117.
THONG - தோல்வார்; IV:126.
THORNS AND THISTLES, BRAMBLES, NETTLES - முட்செடியும் முட்புதரும், காஞ்சொறி; V:300.
THOUSAND - ஆயிரம்; I:494.
THRACE - திராக்கு; III:628.
THRASEAS - தெரசேயா; IV:23.
THREE TAVERNS - மூன்று விடுதி; V:333.
THREE YOUNGMEN, SONG OF THE - மூன்று இளைஞர்களின் பாடல்; V:333.
THRESHING FLOOR - போரடிக்கிற களம்; IV:839.
THRESHOLD - நுழைவாயில்; IV:322.
THRONE - அரியணை; I:254.
THUNDER AND LIGHTNING - இடியும் மின்னலும்; I:652.
THUT-MOSE - துட்மோசு; III:776.
THYATIRA - தியத்திரா; III:625.
TIBERIAS - திபேரியா; III:620.
TIBERIAS, SEA OF - திபேரியாக் கடல்; III:620.
TIBERIUS - திபேரியு; III:620.
TIBHATH - திப்காத்து; III:621; திபகத்து.
TIBNI - திப்னி; III:622.
TIDAL - திதால்; III:620.
TIGLATH - PILESER - திகிலத் - பிலேசர்; III:612.
TIGRIS - திக்ரீசு; III:614.
TIKUAH - திக்வா; III:614.
TIL GATH - PILNESER - தில்கத்து பில்னேசர்; III:612.
TILE - ஓடு; II:561.
TILON - தீலோன்; III:768.
TIMAEUS - திமேயு; III:622.
TIME - காலம், நேரம்; II:726.
TIMNA - திம்னா; III:625.
TIMNAH - திமினா; III:622.
TIMNATH-HERES, TIMNATH-SERAH - திம்னத்-கெரேசு, திம்னத்-செரா; III:624.
TIMON - தீமோன்; III:756.
TIMOTHY - திமொத்தேயு; III:622.
TIMOTHY-I-II, LETTER TO - திமொத்தேயுவுக்குத் திருமுகங்கள் I-II; III:623.

TIN - வெள்ளீயம், தகரம்; V:935.
TIPSAH - திப்சாகு; III:621.
TIRAS - திராசு; III:629.
TIRATHITES - திராயர்; III:637.
TIRKAKAH - திராக்கா; III:628.
TIRHANAH - திர்கனா; III:741.
TIRIA - தீரியா; III:760.
TIRZAH (PERSON) - திரட்சா; III:627.
TIRZAH (PLACE) - திரட்சா ; III:627.
TISHEBE - திசபே; III:614.
TISHRI - திஸ்ரீ ; III:615.
TITHE - பத்திலொரு பங்கு; IV:393.
TITITUS - தித்தியு; III:620.
TITUS - தீத்து; III:749.
TITUS, EPISTLE OF - தீத்துவின் மடல்; III:750.
TITUS, LETTER TO - தீத்துவுக்குத் திருமுகம்; III:750
TIZITE - தீட்சியர்; III:748.
TOAH - தோவாகு; IV:126.
TOB - தோபு; IV:115.
TOBADONIJAH - தோபஅதோனியா; IV:99.
TOBIAH - தோபியா; IV:114.
TOBIAS - தோபியா; IV:114.
TOBIJAH - தோபியா; IV:114.
TOBIT - தோபித்து; IV:100.
TOBIT, THE BOOK OF - தோபித்து நூல்; IV:100.
TOCHEN - தொக்கேன்; IV:44.
TOGARMAH - தோகர்மா ; IV:97.
TOHU - தோகூ; IV:97
TOI - தோயி; IV:119.
TOKHATH - தோக்காத்து; IV:97.
TOLA - தோலா; IV:124.
TOLAD - தோலாது; IV:124.
TOMBS OF THE KINGS - அரசர்களின் கல்லறை; I:215.
TONGUE - நா; IV:200.
TONGUES, GIFTS OF - பலமொழிகளில் பேசுதல், பரவசப்பேச்சு ; IV:426.
TOOTH - பல் ; IV:439.
TOPAZ - புட்பராகம்; IV:621.
TOPHEL - தோபேல்; IV:115.
TOPHETH - தோபேத்து; IV:115.
TORAH - தோரா; IV:120.
TORCH - தீப்பந்தம்; III:752.
TORTURE - வதைத்தல், வேனைக்குள்ளாக்குதல்; V:654 .
TOTEMISM - மரபுச்சின்ன முறைமை; V:102.
TOU - தோகு; IV:97.
TOUCH - தொடுதல்; IV:81.
TOWEL - துண்டு; III:790.
TOWER - கோபுரம்; III:99.
TOWER OF THE HUNDERED - நூற்றுவர் கோபுரம், மேயா காவல்மாடம்; IV:327.
TOWN CLERK - அவைத்தலைவர்; I:309.
TRACHONITIS - திரக்கோனித்தி; III:627.
TRADITION - மரபு, பாரம்பரியம்; V:96.
TRAIN - தொங்கலாடை; IV:44.
TRANCE - பரவசக்காட்சி; IV:408.
TRANSFIGURATION - உருமாற்றம்; II:76.
TRANSJORDAN - யோர்தான் கிழக்குப்பகுதி ; V:536.
TRAPS AND SNARES - பொறிகளும் கண்ணிகளும்; IV:821.
TRAVEL AND COMMUNICATIONS - பயணமும், தகவல் தொடர்பும்; IV:400.
TRAVELLERS, VALLY OF - வழிப்போக்கர்களின் பள்ளத்தாக்கு; V:702.
TREASURE - சொத்து, செல்வம் ; III:447.
TREASURY, TREASURER - கருவூலம், கருவூலக்காப்பாளர்; II:632.
TREE - மரம்; V:104.
TREE OF KNOWLEDGE, TREE OF LIFE - நன்மை தீமை அறியும் மரமும், வாழ்வின் மரமும் ; IV:191.
TRELLIS - மரப்பின்னல் வேலைப்பாடு; V:104.
TRIAL - விசாரணை; V:749.
TRIBULATION - வேதனை, கடுந்துன்பம் ; V:946.
TRIBUNE - திரிப்யூன்; III:638.
TRIBUTE - கப்பம், திறை ; II:614.
TRIGON - முக்கவட்டியாழ்; V:298.
TRINITY - திரித்துவம் ; III:637.
TRIPOLIS - திரிப்பொலி; III:638.
TRIUMPHAL ENTRY - வெற்றி நுழைவு ; V:945.
TROAS - துரோவா; III:792.
TROGYLLIUM - துரோகில்லியும் ; III:792.
TROPHIMUS - துரோபிம்; III:792.
TRUTH - உண்மை; II:32.
TRYPHAENA AND TRYPOSE - திரிபேனா, திரிபோசா; III:637.
TRYPHO - திரிபோ; III:637.
TUBAL - தூபால்; III:814.
TUBAL - CAIN - தூபால்-காயீன்; III:814.
TUMOURS - மூலக்கட்டிகள்; V:332.
TURBAN - தலைப்பாகை; III:535.
TURTLE DOVE - காட்டுப்புறா; II:710.
TWELVE - பன்னிரண்டு; IV:472.
TWELVE THE - பன்னிருவர்; IV:475.
TWIN BROTHERS - மிதுனம்; V:268.
TWINED LINEN - முறுக்கேற்றி நெய்த நார்ப்பட்டு; V:314.
TWO DEBTORS (PARABLE) - இரு கடன்காரர்கள்-உவமை ; I:737.
TWO SONS - இருமக்கள் உவமை; I:737.
TYCHICUS - திக்கிக்கு; III:613.
TYRANUS - திரன்னு; III:628.
TYRE - தீர் III:760.
TYRE, LADDER OF - தீரின் ஏணி; III:706.
TYROPOEON - திரோப்பியன்; III:740.
TZADDI - திசோத்தி/இட்சாதே ; III:615.

U

UCAL - ஊக்கால்; II:126; உக்கால்.
UEL - ஊவேல்; II:138.
UGARIT - உகாரித்து; II:1.
ULAI - ஊலாய்; II:138.
ULAM - ஊலாம்; II:138.
ULLA - உல்லா; II:115.
UMMAH - உம்மா; II:41.
UNBELIEF - அவிசுவாசம்; I:304.
UNCIALS - பன்னிருபாக எழுத்துகள்; IV:474
UNFORGIVABLE SIN - மன்னிக்க முடியாத பாவம்; V:201.
UNFORGIVING SERVANT - மன்னிக்காத ஊழியன்; V:202.
UNITY - ஒற்றுமை; II.540.
UNJUST JUDGE - அநீத நடுவன்-உவமை; I 111.
UNKNOWN GOD - அறியப்படாத தெய்வம்; I.329.
UNLEAVEND BREAD - புளிப்பற்ற அப்பம்; IV:657.
UNLEAVEND BREAD, FEAST OF - புளிப்பற்ற அப்பவிழா; IV:658.
UNNI - உன்னி; II:125.
UNTIMELY BIRTH - காலந்தப்பிய பிறப்பு; II:725.
UNWORTHY SERVANTS-PARABLE - பயனற்ற ஊழியர்-உவமை; IV:403.
UPHAZ - ஊப்பாசு; II:133; ஊபாசு.
UPPER GATE - உயர்வாயில்; II.41.
UR (PERSON) - ஊர்; II:136.
UR (PLACE) - ஊர்; II:136.
UR-MARKUS - ஊர்-மாற்கஸ்; II:137.
URBANUS - ஊர்பான்; II.137.
URI - ஊரி; II:134.
URIAH - உரியா; II:75
URIEL - உரியேல்; II:76.
URIM AND THUMMIM - ஊரீம் தும்மீம்; II.134.
UTENSILS - பண்டபாத்திரங்கள், துணைக்கலங்கள்; IV:388.
UTHAI - ஊத்தாய்; II:133.
UZ (PERSON) - ஊசு; II:130.
UZ (PLACE) - ஊசு; II:130.
UZAI - ஊசாய்; II:126
UZAL (PERSON) - ஊசால்; II:126
UZAL (PLACE) - ஊசால்; II:126.
UZZA (PERSON) - உசா; II:4.
UZZA (PLACE) - உசா; II:4
UZZAH - ஊசா; II 126.
UZZEN-SHEERAH - உசேன் செயேரா; III.4
UZZI - ஊசி; II 126. உசி.
UZZIA - உசியா; II:4.
UZZIAH - ஊசியா; II 128
UZZIEL - ; II.129. உசியேல்.

V

VAIZATHA - வயிசாத்தா; V:656.
VALLEY - பள்ளத்தாக்கு; IV:465.
VALLEY GATE - பள்ளத்தாக்கு வாயில்; IV:466.
VANIAH - வனியா; V:706.
VANITY - பயனின்மை, நிலையாமை; IV:403; வீண்; V:897.
VASHTI - வஸ்தி; V:647.
VASSALS - சிற்றரசர்கள்; III:301
VATICANUS, CODEX - வத்திக்கான் சுவடித் தொகுப்பு; V:654
VAU - வவ்; V:668.
VEGETABLES - காய்கறி, மரக்கறி; II.721
VEIL - முக்காடு; V:298.
VENGEANCE - பழிவாங்குதல்; IV:461.
VERMILION - செவ்வண்ணம்; III:436
VERSE - வசனம்; V:647.
VERSIONS ANCIENT - பழங்கால விவிலிய வாசகங்கள்; IV:460.
VESPASIAN - வெஸ்பாசியன். V:905.
VESSELS - பாத்திரங்கள்; IV:496.
VESTMENTS - உடைகள்; II:18.
VIA DOLOROSA - துன்பப்பாதை; III:794.
VIAL - எண்ணெய்ச் சிமிழ்; II:229.
VICTORY, TRIUMPH - வெற்றி, வாகைசூடல்; V:941.
VILLAGE - கிராமம்; II:765.
VINDICATE - எண்பித்தல், மெய்ப்பித்தல்; II:229.
VINE, VINEYARD - திராட்சைக்கொடி, முந்திரிக் கொடி, திராட்சைத் தோட்டம்; III:629.
VINEGAR - காடி; II:706.
VINEYARD, LABOURER OF THE - திராட்சைத் தோட்டத் தொழிலாளர்கள்; III.633.
VINTAGE - முந்திரி விளைச்சல், திராட்சை விளைச்சல்; V 307.
VIOLENCE - வன்முறை; V.706.
VIPER - விரியன் பாம்பு; V:828.
VIRGIN, APOCALYPSES OF THE - கன்னியின் வெளிப்பாடுகள்; II:700.
VIRGIN. ASSUMPTION OF THE - கன்னியின் விண்ணேற்பு; II:700.
VIRGINITY - கன்னிமை; II:696.
VIRTUES & VICES - நற்பண்புகளும் தீய பண்புகளும்; IV:184.
VISION - காட்சி; II.707
VISITATION - சந்திப்பு; III 128.
VOPSHI - வோப்சி, ஒப்சி; V:960
VOW - வாக்குக்கொடுத்தல், வார்த்தைப்பாடு, நேர்ச்சை, பொருத்தனை; V:712
VULTURE - பிணந்தின்னிக் கழுகு; IV 577

W

WAGES - கூலி, சம்பளம்; II:912.
WAHEB - வாகேபு; V:712.
WAIST CLOTH - இடைக் கச்சை; I:652.
WAIT - எதிர் பார்த்திரு, காத்திரு; II:232; 715.
WAITING SERVANT-PARABLE - கடமையுணர்வுள்ள ஊழியன்; II:587.
WALLS - சுவர், மதில்; III:352.
WANDER - அலைந்து திரிதல்; I:301.
WAR - போர்; IV:839.
WASH - கழுவுதல், துவைத்தல்; II:677.
WASHBASIN - கழுவும் பாத்திரம்; II:678; IV:493.
WASHINGTONENSIS, CODEX - வாசிங்டன் சுவடித் தொகுப்பு; V:720.
WATCH - விழிப்பாயிரு; V:877.
WATCH-TOWER - காவல் கோபுரம்; II:746.
WATCHING DOORKEEPER OR SERVANT-PARABLE - விழிப்பாயிருக்கும் வாயில் காவலர்-உவமை; V:879.
WATCHMAN - காவலர், சாமக்காவலர்; II:745
WATER - நீர்; IV:311.
WATER COURSE - நீரோடை; IV:311.
WATER GATE - தண்ணீர் வாயில்; III:511.
WATER OF IMPURITY - தீட்டுக்கழிக்கும் தண்ணீர்; III:748.
WATER SHAFT - குடை கால்வாய்; II:855.
WATER SKIN - நீர்க்குடம்; IV:317
WATER, DRAWERS OF - தண்ணீர் எடுப்பவர்கள்; III:511.
WAVE OFFERING - ஆராத்திப் படையல், பலி, காணிக்கை; I:500.
WAX - மெழுகு; V:356.
WAY - வழி; V:668.
WAYFARER - வழிப்போக்கர்; V:701.
WAYMARK, GUIDEPOST - வழியடையாளம்; V:702.
WEALTH - செல்வம்; III:432.
WEAPONS OF WAR - போர்க்கருவிகள்; IV:845.
WEAVING - நெய்தல்; IV:342
WEED - களை; II:680.
WEEDS, PARABLE-OF - களைகளின்-உவமை; II:680.
WEEK - வாரம்; V:730
WEEKS, FEAST OF - வாரங்களின் விழா; V:727.
WESTERN SEA - மேற்குக் கடல்; V:367.
WHALE - திமிங்கலம்; III:622
WHEAT - கோதுமை; III:97.
WHEEL - சக்கரம், உருளை; III:113
WHELP - சிங்கக்குட்டி; III:268.
WHET - கூர்மையாக்குதல், தீட்டுதல்; II:912.
WHIP - சாட்டை; III:177.
WHIRLWIND - சூறாவளி; III:361.
WHITE - வெண்மை; V:909.
WICKED TENANTS - கொடிய குத்தகைக்காரர்; III:45.
WIDOW - கைம்பெண், விதவை; III:41; V:821.
WILD ASS - காட்டுக்கழுதை; II:709.
WILD GOAT - காட்டாடு, வரையாடு; II:708.
WILD GOAT'S ROCKS - காட்டாடுகளின் பாறை, வரையாடுகளின் பாறை; II:708.
WILD GOURDS - பேய்க் கொம்மட்டி; IV:784.
WILD GRAPES - காட்டுத் திராட்சை; II:709.
WILD OX - காட்டெருது; II:710.
WILL - உரிமைச்சாசனம், உயில்; II:66.
WILL OF GOD - இறைவன் சித்தம்; I:870.
WILLOW - அலரி; I:299.
WILLOWS, BROOK OF THE - அலரிகள் ஓடை; I:299.
WIND - காற்று; II:747.
WINDOW - சன்னல், பலகணி; III:162.
WINE - திராட்சைப் பழரசம்; III:634.
WIND AND SKINS (PARABLE) - திராட்சை மதுவும் தோல் துருத்திகளும்-உவமை; III:637.
WING - இறக்கை; I:771.
WINNOWING - தூற்றிப் பிரித்தல்; III:826.
WISDOM - ஞானம்; III:501.
WISDOM LITERATURE MOVEMENT - ஞான இலக்கிய இயக்கம்; III:467.
WISDOM OF SOLOMON, BOOK OF - சாலமோனின் ஞானம்; III:238.
WITHERED HAND - சூம்பியகை; III:358.
WITNESS - சான்று பகர்; III:262.
WITNESS, ALTER OF - சாட்சிப்பலிபீடம்; III:177.
WOLF - ஓநாய்; II:564.
WOMAN - பெண்; IV:696.
WOOL - கம்பளி; II:622.
WOOLEN THINGS - கம்பளிப் பொருட்கள்; II:622.
WORD OF GOD - இறை வார்த்தை; I:887.
WORK - வேலை; V:948.
WORKS OF GOD - இறைவனின் செயல்கள்; I:840.
WORLD - உலகம்; II:107
WORMWOOD - எட்டிக்காய்; II:213.
WORSHIP - வழிபாடு; V:673.
WRATH OF GOD - இறைவனின் கடுஞ்சினம்; I:831
WRESTLING - மல்யுத்தம்; V:155.
WRITINGS - எழுதப்பட்ட நூல்கள்; II:344.

X

XANTICUS - சாந்திக்கு; III:186.
XERXES - செருசு; III:424.

Y

YAHWEH - யாவே; V:426.
YEAR - ஆண்டு; I:454.
YIRON - ஈரோன்; I:915; இரோன்.
YOKE - நுகம்; IV:321.

Z

ZAANAN - சானான்; III:261.
ZAANANNIM - சானானிம், சானானியர்; III:261.
ZAAVAN - சகவான்; III:108.
ZABAD - சாபாது; III:191.
ZABADEANS - சாபதேயர்; III:187.
ZABBAI - சபாய் ; III:131.
ZABDI - சப்தி; III:133; சபதி.
ZABDIEL - சப்தியேல்; III:133.
ZABUD - சாபூது; III:193.
ZACCAI - சக்காய் ; III:113.
ZACCHAEUS - சக்கேயு ; III:114.
ZACCUR - சக்கூர்; III:114.
ZADOK - சாதோக்கு; III:179.
ZADOKITE FRAGMENTS - சாதோக்கியத் துணுக்குகள்; III:178.
ZAHAM - சாகாம் ; III:163.
ZAIN - சாயீன்; III:232.
ZAIR - சாயிர்; III:232.
ZALAPH - சாலபு; III:236.
ZALMON (PERSON) - சல்மோன்; III:151.
ZALMON (PLACE) - சல்மோன்; III:151.
ZALMONAH - சல்மோனா; III:151.
ZALMUNNA - சல்முன்னா; III:151.
ZAMZUMMIM - சம்சும்மிம், சம்சும்மியர்; III:145.
ZANOAH (PERSON) - சானோவாகு; III:261.
ZANOAH (PLACE) - சானோவாகு; III:262.
ZAPHENATH - PANEAH - சபனத்து பனேகா; III:131.
ZAPHON - சாபோன்; III:193.
ZAREPHATH - சாரபாத்து; III:232; சாரிபாத்து.
ZARETHAN - சாரத்தான்; III:232.
ZATTU - சத்து; III:128.
ZAZA - சாசா; III:177.
ZEAL - ஆர்வம்; III:508.
ZEALOT - தீவிரவாதி; III:768.
ZEBADIAH - செபதியா; III:392.
ZEBAH - செபாகு; III:401.
ZEBEDEE - செபதேயு; III:392.
ZEBIDOAH - செபிதா; III:404.
ZEBINA - செபினா ; III:404.
ZEBOIIM - செபோயிம்; III:407.
ZEBOIM - செபோயிம்; III:408.
XEBUL - செபூல்; III:406.
ZEBULUN - செபுலோன்; III:405.
ZECHARIAH - செக்கரியா; III:363.
ZECHARIAH-I, BOOK OF - செக்கரியாவின் திருநூல் - முதல்பாகம்; III:366.
ZECHARIAH-II, BOOK OF - செக்கரியாவின் திருநூல் - 2-ஆம் பாகம்; III:372.
ZECHER - செக்கேர்; III:379.
ZEDAD - செதாது; III:385.
ZEDEKIAH - செதேக்கியா; III:386.
ZEEB - செயேபு; III:421.
ZELA - செலா; III:428.
ZELEK - செலேக்கு; III:430.
ZELOPHEHAD - செலோபுகாது; III:431.
ZELZAH - செல்சகு ; III:432.
ZEMARAIM - செமாரயிம்; III:418.
ZEMARITES - செமாரியர்; III:418.
ZEMER - செமேர்; III:415;செமர்.
ZEMIRAH - செமிரா; III:418.
ZENAN - செனான்; III:437.
ZENAS - சேனா; III:444.
ZEPHANIAH - செப்பனியா; III:408.
ZEPHANIAH, APOCALYPSE OF - செப்பனியாவின் வெளிப்பாடு; III:414.
ZEPHANIAH, BOOK OF - செப்பனியாவின் திருநூல்; III:408.
ZEPHATH - செபத்து; III:392.
ZEPHATHAH - செப்பாத்தா; III:414.
ZEPHO, ZEPHI - செபோ; III:407; சேபி.
ZEPHON - செபோன்; III:408.
ZER - சேர்; III:443.
ZERAH - செராகு; III:422.
ZERAHIAH - செரகியா; III:422.
ZERAHITE - செரகியர்; III:422.
ZERED - செரேது; III:427.
ZEREDAH - செரேதா; III:426.
ZERERAH - செரேரா; III:427.
ZERESH - செரேசு; III:426.
ZERETH - ; III:427.
ZERETH-SHAHAR - செரேத்து-சாகார்; III:427.
ZERI - செரீ; III:424.
ZEROR - செரோர்; III:427.
ZERUAH - செரூவா; III:426.
ZERUBBABEL - செருபாபேல்; III:425.
ZERUIAH - செரூயா; III:426.
ZETHAM - சேத்தாம்; III:439.
ZETHAN - சேத்தான்; III:439.
ZETHAR - சேத்தார்; III:439.

ZEUS - சேயுசு; III:443.
ZIA - சியா; III:283.
ZIBA - சீபா; III:312.
ZIBEON - சிபியோன்; III:274.
ZIBIA - சிபியா; III:275.
ZIBIAH - சிபியா; III:275; சிபயா.
ZICHRI - சிக்ரி; III:266.
ZIDDIM - சிதீம்; III:272.
ZIHA - சிகா; III:266.
ZIKLAG - சிக்லாகு; III:267.
ZILLAH - சில்லா; III:296.
ZILLETHAI - சில்தாய்; III:296.
ZILPHA - சில்பா; III:296.
ZIMMAH - சிம்மா ; III:281.
ZIMRAN - சிம்ரான்; III:282.
ZIMRI (PERSON) - சிம்ரி; III:282.
ZIMRI (PLACE) - சிம்ரி; III:283.
ZIN, WILDERNESS OF - சின் பாலைவனம்; III:303.
ZINA - சினா; III:302.
ZION - சீயோன்; III:316.
ZION, DAUGHTER OF - சீயோன் மகள்; ; III:317.
ZIOR - சீயோர்; III:315.
ZIPH (PERSON) - சீபு; III:312.
ZIPH (PLACE) - சீபு; III:312.
ZIPHAH - சிப்பா; III:275.
ZIPHION - சிபியோன்; III:275.
ZIPHRON - சிபிரோன்; III:275.
ZIPPOR - சிப்போர்; III:276.
ZIPPORAH - சிப்போரா; III:275.
ZIV - சிவு; III:297.
ZIZ, ASCENT OF - சீசு ஏற்றம்; III:306.
ZIZA - சீசா; III:305.
ZIZAH - சீசா; III:306.
ZOAN - சோவான்; III:460.
ZOAR - சோவார்; III:459.
ZOBAH - சோபா; III:454.
ZOBEBAH - சோபேபா; III:456.
ZOHAR - சோகார்; III:451.
ZOHETH - சோகேத்து; III:451.
ZOPHAH - சோபகு; III:454.
ZOPHAI - சோபாய்; III:455.
ZOPHAR - சோப்பார்; III:456.
ZOPHIM - சோபிம்; III:456.
ZORAH - சோரா; III:458.
ZORATHITES - சோராவியர்; III:458.
ZORITES - சோரியர்; III:458.
ZUAR - சுவார்; III:360.
ZUPH (PERSON) - சூப்பு; III:357.
ZUPH (PLACE) - சூப்பு; III:358.
ZUR - சூர்; III:359.
ZURIEL - சூரியேல்; III:358.
ZURISHADDAI - சூரிசதாய்; III:352.
ZUZIM - சூசிம்; III:357.

ஆசிரியரது பிற நூல்கள்

விவிலிய அறிமுக நூல்கள்

1.	"தோரா" அல்லது "ஐந்நூல்"	(ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்)
2.	வரலாற்று நாயகன்	(யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2, அரசர்கள், 1,2 நாள், எஸ்ரா, நெகேமியா, 1,2, மக்கபேயர்கள்)
3.	இஸ்ராயேலின் காவலர்கள் – I	(பொது முன்னுரை, ஆமோஸ் ஓசேயா, மீக்கா)
4.	இஸ்ராயேலின் காவலர்கள் – II	(எசாயா, செப்பனியா, நாகூப், அபக்கூக்கு, எரேமியா, எசேக்கியேல், ஆகாய், செக்கரியா, ஒதியா, மாலக்கி, யோவேல்)
5.	ஞான நூல்கள்	(யோபு, பழமொழி, சங்கீதங்கள், திருவுரை, உன்னத சங்கீதம், ஞானநூல், சீராக்கு)
6.	சில கதைகளும் காட்சிகளும்	(யோனா, ரூத்து, தோபியா, எஸ்தர், புலம்பல், பாரூக்கு, தானியேல், யூதித்து)
7.	நான்கு வடிவ நற்செய்திகள்	(மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகள்)
8.	புனித பவுலின் திருமுகங்கள் – I	(பவுலின் வாழ்க்கை வரலாறு, மற்றும் 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 & 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன் ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்கள்)
9.	புனித பவுலின் திருமுகங்கள் – II	(2–ஆம் தெசலோனிக்கர், கொலோசையர், எபேசியர், தீத்து, 1–ஆம், 2–ஆம் திமொத்தேயு ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்களும், பவுலின் இறையியலும்)

விளக்கவுரை நூல்

10.	லூக்காவின் நற்செய்தி	(அருள்வாக்கு மன்றப்பதிப்பு)
11.	விவிலியச் சித்திரக் கதைகள்	**பழைய ஏற்பாடு:** (காயின் ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சிம்சோன் ரூத்து, சாமுவேல், சவுல், தாவீது, அரசன் தாவீது)
12.	விவிலியக் களஞ்சியம் – I	**புதிய ஏற்பாடு:**
13.	விவிலியக் களஞ்சியம் – II	
14.	விவிலியக் களஞ்சியம் – III	
15.	விவிலியக் களஞ்சியம் – IV	
16.	விவிலியக் களஞ்சியம் – V	

தயாரிப்பில் உள்ளவை :

1. விவிலியச் சித்திரக் கதைகள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)

கிடைக்குமிடம்

தியான ஆசிரமம்

13, மாதா கோவில் தெரு, சென்னை – 600 028.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

"தியாகு"

விவிலியக் களஞ்சியம்

I

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்

சென்னை - 28

விவிலியக் களஞ்சியம்

I

அ, ஆ, இ, ஈ

பதிப்பாசிரியர்
"தியாகு"

விவிலிய அறிமுகம்
தியான ஆசிரமம்
சென்னை-28.

முதல் பதிப்பு - மார்ச், 1991.
இரண்டாம் பதிப்பு - மார்ச், 1992.
மூன்றாம் பதிப்பு - மார்ச், 1994.
நான்காம் பதிப்பு - அக்டோபர், 1996.
ஐந்தாம் பதிப்பு - மே, 2000.
ஆறாம் பதிப்பு - மார்ச், 2004.
ஏழாம் பதிப்பு - அக்டோபர், 2009.

Nihil Obstat,
P.C. Thomas

Imprimaters,
+M. Arockiasamy,
Archbishop of Madurai.

விலை : ரூ 250/-

நூல் கிடைக்கும் இடங்கள்

தியான ஆசிரமம்

சென்னை-28.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புபணி நிலையங்கள்

Type Setting : Sri Maruthy Laser Printers, Chennai.
Savithri Laser Printers, Chennai.
Printed at Hi-tech Offset (P) Ltd., Chennai - 107. Ph.: 2479 3339, 2479 7245.

அர்ப்பணம்

இறைவனின் வார்த்தையை இதயத்தில் ஏற்று
வார்த்தையாம் இறைவனை உதரத்தில் வளர்த்து
மனு உருவான வார்த்தையை உலகிற்கு அளித்த
இறைவனின் அன்னையாம் மரியாளுக்கு
அன்பு கலந்த அர்ப்பணம்.

முன்னுரை

விவிலியக் களஞ்சியம்-முதல் பாகத்தைத் தமிழ்கூர் நல்லுலகிற்கு அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். இக்களஞ்சியம் பலர் சேர்ந்த கூட்டு முயற்ச்சியின் விளைவாகும். தமிழ்க் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் முதல் முயற்சியாகும். இந்நூலும் இதற்குப்பின் வரும் நூல்களும் விவிலிய அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையில் இந்நூலை வெளியிடுகிறேன்.

இங்குச் சில குறிப்புகளைத் தருவது நல்லது. ஆள், இடம் ஆகியவற்றின் பெயர்களின் மூல எபிரேய, கிரேக்க உச்சரிப்புக்கள் தமிழ் இலக்கண மரபுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. உதவியாக ஆங்கிலச் சொற்களும் அடைப்புக் குளிகளுக்குள் தரப்பட்டுள்ளன. சங்கீதங்களின் எண்கள் எபிரேய முறையில் தரப்பட்டுள்ளன. இறையியல் கட்டுரைகளில் பெரும்பகுதி Xavier Leon-Dufour-இன் Dictionary of Biblical Theology நூலைத் தழுவி எழுதப்பட்டுள்ளன.

இனி, நன்றி நவில்தல் என்ற இனிய கடமைக்கு வருகிறேன். இந்நூல் தயாரிப்பில் பலர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பல கட்டுரைகளின் பொருட்களையும் செய்திகளையும் தொகுத்துத் தருவதில் பெரிதும் உதவியுள்ளனர். ஒவ்வொரு கட்டுரைக்குப் பின்னும் அதைத் தொகுத்தவரின் பெயர் கொடுக்கப்படவில்லை. இவர்கள் அனைவரின் பெயர்ப்பட்டியல் பின் தரப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இந்நூலைத் திட்டம் செய்த காலத்தில், அறிவுரை கூறியும் உற்சாகப்படுத்தியும் பொருள் உதவி நல்கியும் ஊக்கமளித்த மேதகு கர்தினால் சைமன் D. லூர்துசாமி ஆண்டகை அவர்களுக்கு எனது உளம் கனிந்த நன்றி உரியதாகும். தயாரிப்புக் காலத்தில் பொருள் உதவி செய்த Adam Schall Var Bell E.V., Koln, பதிப்பித்தலுக்குப் பொருள் உதவி செய்த Missio, Munchen. ஆகிய இரு நிறுவனங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி. இவர்களின் உதவியின்றி இந்நூலை இவ்வளவு மலிவாகக் கொணர்ந்திருக்க முடியாது.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள மதுரைப் பேராயர் மேதகு M. ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்களுக்கும், இறையியல் கட்டுரைகளில் பலவற்றைத் தணிக்கை செய்து உதவிய அருட் தந்தை P.C. தாமஸ் அடிகளார்க்கும், இந்நூல் தயாரிப்பில் நெடுகலும் பிரதிகளைத் திருத்தியும் பலவாறு உதவியும் செய்து வந்துள்ள திரு. தனராஜ், திரு. சக்கரியா, அருட் தந்தையார்கள் P.T. அமல்ராஜ், சேவியர் இளங்கோ, N. யோனாஸ், U. சுந்தரம், S.I. அருள்சாமி ஆகியோர்களுக்குச் சிறப்பான முறையில் நன்றி கூறுகிறேன். இம்முயற்சியில் ஊக்கமளித்த இயேசு சபை மதுரை மாநில முன்னாள் தலைவர் அருட்தந்தை மைக்கிள் ஜெராஜ் அடிகளார்க்கும் தயாரிப்புக் காலத்தில் எங்கள் குழு தங்குவதற்கு இடமளித்து விருந்தோம்பி நல்லுதவிகள் செய்த திருச்சிராப்பள்ளி, புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியினருக்கும், குறிப்பாக அதன் முன்னாள் அதிபர்கள் அருட்தந்தையர் லாம்பர்ட் மிராண்டா, ராசசேகரன் ஆகியோருக்கும் அன்போடு பராமரித்து உதவி செய்த எனது இல்லங்களாகிய லோயோலாக் கல்லூரி, தியான ஆசிரமம் ஆகியவற்றின் இயேசு சபைச் சகோதரர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. வரைபடங்கள் கொடுத்துதவிய திண்டிவனம், தமிழ்நாடு முப்பணி நிலையத்தினருக்கும் எனது மனமுவந்த நன்றி. அச்சு அமைத்த Sri Maruthy Laser Printers, Savithri Laser Printing, Hi-Tech Offset Printers, சென்னை ஆகியோருக்கும் எனது உளம் கனிந்த நன்றி.

இறைவார்த்தையை நன்குணர்ந்து, அன்பு செய்து, அதன்படி வாழ்வதற்கு இந்த விவிலியக் களஞ்சியம் பெரிதும் துணை செய்யும் என்று நம்புகிறேன். இக்களஞ்சியத்தைத் தயாரிப்பதில் நெடுகலும் ஏவுதலும் ஊக்கமும் உரணும் அளித்து வழி நடத்திய இறைவன் திருவருள் துணைக்குச் சிரம் தாழ்த்தி நன்றியுடன் வணக்கம் செலுத்துகிறேன்.

"தியாகு".

விவிலியக் களஞ்சியம்
அணிந்துரை

விவிலியக் களஞ்சியம் தமிழ்க் கத்தோலிக்க உலகில் பூத்த புதிய மலர், முதல் மலர். ஐந்து ஆண்டுகளாக அருட்தந்தையர் சிலரும் குரு மாணவர் சிலரும் இணைந்து செய்த இனிய முயற்சியில் மலர்ந்த பூ. இம்மலருக்கு மூன்று அல்லது நான்கு இதழ்கள் உண்டு; இதழ் ஒவ்வொன்றும் ஏறத்தாழ 1000 பக்கங்களுக்கு விரிந்து நிற்கும்.

இதில், விவிலியத்தில் வரும் மக்களின் சிறப்புப் பெயர்கள், இடங்களின் சிறப்புப் பெயர்கள், பொதுப் பெயர்கள், இறையியல் தலைப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கட்டுரை உண்டு. இதில் உள்ள படங்களும் வரைபடங்களும் பொன் மலருக்குப் புதுமணம் ஊட்டுகின்றன.

இப்போது வெளிவரும் முதற்பகுதி உயிரெழுத்துகளில் தொடங்கும் சொற்களுக்குரிய கட்டுரைகள் கொண்டுள்ளது.

இது ஒரு புதிய பூ என்றால், காகிதப் பூ அன்று; நறுமணம் கமழும் மல்லிகை, முல்லை ஆகும். இதை நாம் நடைமுறையில் பயன்படுத்த வேண்டும்.

இது ஒரு செடி என்றால், பார்ப்பதற்கு மட்டும் உரிய அழகுச் செடி (குரோட்டன்ஸ்) அன்று; அதாவது மற்ற நூல்களின் நடுவில் வைத்து அழகு பார்க்க வேண்டிய நூலன்று.

இதை ஒரு தோப்பு என்று சொல்லலாம். மா, பலா, வாழை போன்ற தீங்கனிகள் தரும் மரங்கள் உள்ள ஒரு கனித்தோப்பு, இதை நாளும் சுவைக்க வேண்டும். இதன் வழியாக, இறை வார்த்தை கொண்ட விவிலியத்தை ஆழமாக அறிந்து கொள்ளலாம்.

இதற்கு வித்திட்டு, நீருற்றி, வளர்த்தவர் அருள் தந்தை எம். சந்தியாகு சே.ச. ஆவார். இவர் கணித ஆசிரியராகக் கல்லூரிகளில் பணி புரிந்தவர்; இறைவாக்கால் ஈர்க்கப்பெற்று அதன் பணிக்கே தம்மை மனமுவந்து அர்ப்பணித்தவர், பொது மக்கள் விவிலியத்தை அறிந்துகொள்ள அதன் பல்வேறு நூல்களைப் பற்றி அறிமுக நூல்கள் படைத்தவர். சிறுவர்களும் விவிலிய உலகிற்குள் வர, விவிலியச் சித்திர நூலைத் தமிழ் உலகில் பரப்பி வருபவர். எனவே, தமிழ் விவிலிய உலகில் சுவாமி சந்தியாகுக்கு ஒரு தனி இடம் உண்டு.

''ஆற்றின் இரு பக்கங்களிலும் வாழ்வின் மரமிருந்தது. மாதத்திற்கு ஒருமுறையாக அது ஆண்டுதோறும் பன்னிரு முறை கனிகள் தரும் (திருவெளிப். 22:1-2)

இந்தப் பயன்தரு மரம் போல சுவாமி 'தியாகு' வின் பணி சிறக்க மனமார வாழ்த்துகிறேன்.

+ M. ஆரோக்கியசாமி,
மதுரைப் பேராயர்

17.12.90.

இந்நூலைத் தயாரிப்பதில் உடன் உழைத்தவர்கள்

அந்தோணிசாமி A.
அமலதாஸ் M.
அமல் ராஜ் P.T.
அருள்சாமி S.I.
அருள்ராஜ்
ஆரோக்கிய சாமி C.
ஆரோக்கியதாஸ்
ஆரோக்கிய நாதன் P.
ஆன்ரு டிரோஸ்
இஞ்ஞாசி G.
இருதயராஜ் A.
உபால்டு M.
ஏர்னஸ்ட் A.
கருணைதாஸ்
சந்தியாகு M.
சவரிமுத்து X.
சர்லஸ் குமார் N.A.
சுந்தரம் U.
சூசை ஆரோக்கியசாமி
சேவியர் இளங்கோ
ஜான்சன் ராஜ் S.
ஜெயபாலன்
ஜெரால்டு S.
ஜேம் ரொசாரியே B.
ஜோசப் லயனஸ் S.
ஜோ லாரன்ஸ்
ஜோனாஸ் N.
ஞானப் பிரகாசம் F.
தாஸ் F.X.
தீம்மஸ் P.
நசரேன் S.
பாக்கியராஜ் S.
பால்ராஜ் B.
பீட்டர் சகாயராஜ்
பிரான்சிஸ்
போனவென்சர்
மரியதாஸ் I.
மரிய பீட்டர்
மரிய வளன்
யூக்கரிஸ்ட்
லூர்து Y.A.
லூர்து சாமி A.
லூர்துராஜ் G.G.
ரொசாரியோ கோமஸ்
விக்டர் M.
வின்செண்ட் G.

விவிலியத் திருறைப் பட்டியலும் சுருக்கக் குறிப்பும்

I. பழைய ஏற்பாடு

1. ஆதி ஆகமம் (தொடக்கநூல்)	ஆதி.
2. யாத்திராகமம் (விடுதலைப் பயணநூல்)	யாத்
3. லேவியராகமம் (திருப்பணியாளர் நூல்)	லேவி
4. எண்ணாகமம் (எண்ணிக்கை நூல்)	எண்
5. உப ஆகமம் (துணைச்சட்டநூல்)	உப
6. யோசுவா ஆகமம்	யோசு
7. நீதிபதிகள் ஆகமம் (விடுதலைத் தலைவர்கள் நூல்)	நீதி
8. ரூத்து ஆகமம்	ரூத்
9. 1 சாமுவேல் ஆகமம்	1 சாமு
10. 2 சாமுவேல் ஆகமம்	2 சாமு
11. 1 அரசர்கள் ஆகமம்	1 அர
12. 2 அரசர்கள் ஆகமம்	2 அர
13. 1 நாள் ஆகமம் (ஆட்சிக் குறிப்பேடு)	1 நாள்
14. 2 நாள் ஆகமம் (2 ஆட்சிக் குறிப்பேடு)	2 நாள்
15. எஸ்ரா ஆகமம்	எஸ்
16. நெகேமியா ஆகமம்	நெகே
17. தோபியா ஆகமம்	தோபி
18. யூதித்து ஆகமம்	யூதி
19. எஸ்தர் ஆகமம்	எஸ்த
20. யோபு ஆகமம்	யோபு
21. சங்கீதங்கள் (திருப்பாடல்கள்)	சங்
22. பழமொழி ஆகமம் (நீதி மொழிகள்)	பழ
23. திருவுரையாளர் ஆகமம்	திருவுரை
24. உன்னத சங்கீதம் (பேரின்பப் பாடல்)	உ.ச.
25. ஞான ஆகமம்	ஞான
26. சீராக்கு ஆகமம்	சீரா
27. எசாயா ஆகமம்	எசா
28. எரேமியா ஆகமம்	எரே
29. புலம்பல் ஆகமம்	புல
30. பாரூக்கு ஆகமம்	பாரூ
31. எசேக்கியேல் ஆகமம்	எசே
32. தானியேல் ஆகமம்	தானி
33. ஓசேயா ஆகமம்	ஓசே
34. யோவேல் ஆகமம்	யோவே
35. ஆமோஸ் ஆகமம்	ஆமோ
36. ஒபதியா ஆகமம்	ஒப
37. யோனா ஆகமம்	யோனா
38. மீக்கா ஆகமம்	மீக்
39. நாகூம் ஆகமம்	நாகூ
40. அபக்கூக் ஆகமம்	அப
41. செப்பானியா ஆகமம்	செப்
42. ஆகாய் ஆகமம்	ஆகா
43. செக்கரியா ஆகமம்	செக்
44. மலாக்கி ஆகமம்	மலா
45. 1 மக்கபேயர் ஆகமம்	1 மக்
46. 2 மக்கபேயர் ஆகமம்	2 மக்

II. புதிய ஏற்பாடு

47. மத்தேயு நற்செய்தி	மத்
48. மாற்கு நற்செய்தி	மாற்
49. லூக்கா நற்செய்தி	லூக்
50. யோவான் நற்செய்தி	யோவா
51. அப்போஸ்தலர் பணிநூல் (திருத்தூதுவர் நூல்)	அ.ப.
52. உரோமையர்	உரோ
53. 1 கொரிந்தியர்	1 கொரி
54. 2 கொரிந்தியர்	2 கொரி
55. கலாத்தியர்	கலா
56. எபேசியர்	எபே
57. பிலிப்பியர்	பிலி
58. கொலேசியர்	கொலோ
59. 1 தெசலோனிக்கேயர்	1 தெச
60. 2 தெசலோனிக்கேயர்	2 தெச
61. 1 திமொத்தேயு	1 திமொ
62. 2 திமொத்தேயு	2 திமொ
63. தீத்து	தீத்
64. பிலமோன்	பில
65. எபிரேயர்	எபி
66. யாக்கோபு	யாக்
67. 1 பேதுரு	1 பேதுரு
68. 2 பேதுரு	2 பேதுரு
69. 1 யோவான்	1 யோவா
70. 2 யோவான்	2 யோவா
71. 3 யோவான்	3 யோவர்
72. யூதா	யூதா
73. திருவெளிப்பாடு	திருவெளி

துணை நின்ற நூல்கள்

Anderson G.N : A Critical Introduction to the O.T.
A History and Religion of Israel.
The Living Word of the O.T.

A New Catholic Commentary on Holy Scripture.

Bright J : A History of Israel.

Claus Schedl : History of the O.T.

Danielou J : The Lord of History

Daniel-Rops : Sacred History

Edman Jacob : God, the Lord of History

Ellis P.F : The Men and Message of the O.T.

Grelot P : Introduction to the Bible

Harry Thomas Frank : Discovering the Biblical World

Helmer Ringgren : Israelite Religion

James Hastings : Dictionary of the Bible

Leon-Dufour X : Dictionary of Biblical Theology

Louis Hartman : Encyclopedic Dictionary of the Bible

Mc Kenzie J.L : Dictionary of the Bible

Moriarty F.L : Introducing the O.T.

Osmund Lewry O.P : Introducing the O.T.

Robert A & Feuillet A : Introduction to the Bible

Robert A & Tricot A : Guide to the Bible

The Eerdmans Bible Dictionary

The Harper's Dictionary of the Bible

The Interpreter's Dictionary of the Bible 5 Vols

The Jerome Biblical commentary

The Jerusalem Bible

Weather head : A Guide to the Bible

William P. Baber : Everyone in the Bible

''தியாகு'' : *விவிலிய அறிமுகம் (10 பாகங்கள்)*

அ

அ தமிழின் நெடுங்கணக்கில் முதல் எழுத்து எல்லா மொழிகளிலும் முதல் ஒலியைக் குறிக்கும் அடையாள எழுத்து "அகர முதல எழுத்தெல்லாம்" (திருக்குறள் 1.1.) எபிரேய மொழியில் அலேபு (அலெஃப்) என்றும் கிரேக்க மொழியில் ஆல்பா என்றும் உச்சரிக்கப்படும் காண்க: ஆல்பாவும் ஒமேகாவும்

அகசியா (AHAZIA – யாவே பற்றிக் கொண்டார்)

1. ஆகாப்–ஈசெபேல் ஆகியோருக்குப் பிறந்தவர். யூதாவின் அரசன் யோசபாத்து அரியணை ஏறிய 17–ஆம் ஆண்டு, இவர் சமாரியாவின் அரசனாகி இஸ்ராயேலில் ஈராண்டுகள் ஆட்சி செலுத்தினார் (கி.மு. 854–853; 1 அர 22: 52). இவர் ஆண்டவர் திருமுன் தீயன புரிந்து, தன் தாய் தந்தையர் வழியிலும், இஸ்ராயேலைப் பாவத்திற்கு உள்ளாக்கின நெபாத்தின் மகன் எரொபெயாமின் வழியிலும் நடந்தார். அத்தோடு பாகாலுக்கு ஊழியம் செய்து, அதை வழிபட்டார். இதனால் ஆண்டவருக்குக் கோபம் வருவித்தார் (22:53–54).

இவரது ஆட்சிக் காலத்தில் அண்டை நாடுகளோடு இஸ்ராயேல் உறவு நன்கு அமையவில்லை. ஆகாபு இறந்தபின் மோவாப்பியர் கிளர்ச்சி செய்தனர். கப்பம் கட்ட மறுத்தனர் (2 அர 1:1; 3:4–5). யோராம் ஆட்சி வரை இந்தக் கிளர்ச்சியை அடக்க ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை (3:6). எசியோன்–கெபேரை மையமாகக் கொண்டு ஒரு கப்பற்படை அமைக்க யோசபாத்து மறுத்துவிட்டார். ஏனெனில் இஸ்ராயேலின் ஆதிக்கம் தனது நாட்டில் ஏற்பட்டுவிடும் என்று அஞ்சினார் (1 அர 22:47–49; 2 நாள் 20:35–37).

அரசர்கள் நூல்படி அகசியா மாடியிலிருந்து விழுந்து நோயுற்றார். ஆனால் ஆண்டவரின் உதவியால் நலம்பெற நாடாமல், பெலிஸ்திய தேவதை பாகால்–செபூபின் உதவியை நாடினார். இதன் விளைவாக, ஆண்டவர் எலியா வழியாக, "அவன் ஆண்டவரின் உதவியை நாடாமையால் படுக்கையினின்று எழுந்திராமலே சாவான்" என்று அறிவித்தார். இச்செய்தியை அறிவித்தவர் எலியா என்றறிந்த அரசன் அவரைக் கைது செய்ய இரு முறை வீரர்களை அனுப்பினார். இரு முறையும் வானின்று தீ இறங்கிவந்து அவர்களைச் சுட்டெரித்தது. மூன்றாம் முயற்சி எலியாவை அரசனிடம் கொண்டு வந்தது. ஆனால் இறைவாக்கினர் இறைவனது முன்னறிவிப்பை மாற்றவில்லை. ஆண்டவர் எலியாவின் வாயிலாகக் கூறிய வாக்கின்படியே அகசியா இறந்தார். அவருக்குச் சந்ததியில்லாததால் அவரது சகோதரன் யோராம் அரியணை ஏறினார் (2 அர 1:2–17).

2. இவர் யூதாவின் அரசன். ஆகாபு–ஈசெபேல் ஆகியோருடைய மகளான அத்தாலியாவுக்கும், யூதாவின் யோராம் என்ற அரசனுக்கும் பிறந்த கடைசி மகன் (2 அர 8:24–26; 2 நாள் 22:1). அவருடைய மூத்த சகோதரர்களை அராபிய கூட்டத்தினர் கொன்றுவிட்டதால் (2 நாள் 22:1) அவர் தந்தைக்குப்பின் அரியணை ஏறினார். இவர் 2 நாள் 21:17–இல் யேவாக்காசு என்றும், 22:6–இல் அசரியா என்றும் அழைக்கப்படுகிறார். இவர் தனது 22–ஆம் வயதில் அரசனானார். இவரது ஆட்சி ஓர் ஆண்டே நீடித்தது (842). இவரையும், முன் கூறிய இவர் மாமன் அகசியாவோடு குழப்பிவிடக்கூடாது (காண்க: அகசியா–1).

இவரும் வட அரசின் அரசனும் இவருடைய மாமனுமான யோராமும் சேர்ந்து சீரியா அரசன் கசாயேலுக்கு எதிராக இராமோத்–கிலயாத்தில் போரிட்டனர் (2 அர 8:28; 2 நாள் 22:5). யோராம் போரில் காயம்பட்டு சிகிச்சை பெற இஸ்ராயேலுக்குத்திரும்பினார். யோராமைப் பார்த்து வரும் பொருட்டு அகசியா அங்குச் சென்றார் (8:29). அப்போது இறைவனால்

பழிவாங்க நியமிக்கப்பட்ட ஏகூவால், அம்பு எய்யப்பட்டு யோராம் அவரது தேரிலேயே மடிந்ததை அகசியா கண்டார் (9:21–26). அகசியா பேத்தாகான் திசையில் தப்பியோடினார். ஏகூ அவரைத் துரத்திச் சென்று இபுலயாம் அருகிலுள்ள கூருக்குப் போகும் வழியில் அம்பு எய்து காயப்படுத் தினார். ஆனால் அகசியா மெகிதோ வுக்குத் தப்பியோடி அங்கு இறந்தார். அவருடைய ஊழியர்கள் அவரை எருசலே முக்குக் கொண்டுச்சென்று அவரது முன் னோரோடு அடக்கம் செய்தனர். (9:27–28).

நாளாகம ஆசிரியர் உரைப்படி அகசி யாவின் மரணம் வேறுவிதமாக விவரிக்கப் படுகிறது. 2 நாள் 22:7–9–இன்படி ஏகூ விடம் தப்பியோடியபோது பெற்ற காயத் தால் மரிக்கவில்லை. மாறாக மெகிதோ வில் கொல்லப்பட்டார்.

அரசர்கள் நூலும் நாளாகம நூலும், ஆகாபுவின் சமயப் பழக்கவழக்கங்களை அகசியா பின்பற்றினார் என்று கூறுகின் றன (2 அர 8:27; 2 நாள் 22:3). நாளாகம ஆசிரியரின் கருத்துப்படி அவருடைய தாய் அத்தாலியாதான் இந்தப் பதிதத்தை உற்சாகப்படுத்தினாள். இவர் யோராமின் பால் காட்டிய அக்கறையின் விளைவாக இவரது மரணம் இறைவனால் முன் திட்டம் செய்யப்பட்டதாகும் என்று ஆசிரி யர் சுட்டுகிறார் (2 நாள் 22:67; 2 அர 9:21).

அகசுத்தாரி (HAAHASHTARI – ஓடுபவர்)

அசுகூர், நாகரா என்பவர்களுக்குப் பிறந்த ஒருவராவார். இது எதுவும் அதிகம் அறியப்படாத ஒரு குடும்பம். புவியியல், இனக் கூறுகளுக்கிடையில் யூதா இனத்தைச் சேர்ந்த குடும்பமாகக் கருதப்படுகிறது (1 நாள் 4:6).

அகசுபாய் (AHASBAI – நம்புகிறு)

இவர் தாவீதின் "முப்பது வல்லவர் களில்" ஒருவரான எலிப்பெலத்தின் தந்தை (2 சாமு 23:34). இவர் ஆபேல்–பேத்து மாக்காவிலோ (20:14) சீரியாவி லுள்ள மாக்காவிலோ (10:6.8) வாழ்ந்தவ ராக இருக்கலாம். 2 சாமு 23:34–க்கு இணையான 1 நாள் 11:35–இல் "....ஊரின் மகன் எலீப்பால்" என்றுள்ளது.

அகசுவேரு (AHASUERUS–இளவரசன்)

1. இவர் முதலாம் செர்சீஸ் என்ற பார சீக மன்னர் (கி.மு.485–465) "இந்தியா முதல் எத்தியோப்பியாவரை இருந்த நூற்று இருபத்தேழு மாநிலங்களையும் மன்னன் அகசுவேரு ஆட்சி செய்தான். அவன் அரியணை ஏறியபொழுது சூசா தலைநகரமாயிருந்தது" (எஸ்த 1:1–2). "கட லிலுள்ள எல்லா தீவுகளிலும் வாழ்ந்து வந்த மக்களையும் தனக்குக் கப்பம் கட்டச் செய்தான்" (எஸ்த 10:1). எஸ்தர் இவரு டைய மனைவி. பெரிய தாரியுவின் மகனான அகசுவேரு, சைரசு (எஸ் 4:5). அர்த்த சேர்சீஸ் (எஸ் 4:7) ஆகிய மன்னர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்தார் என்று எஸ் 4:6 கால வரையின்படி கொடுத்துள்ளது. எழுபது நூல் இவரை அர்த்தா சேர்சீஸ் என்ற ழைக்கிறது.

தோபித் 14:15–இன்படி நெபுக்கதுனே சார், அகசுவேரு ஆகியவர்கள் நினிவே நகரை அழித்தனர். இது காலமயக்க மான கூற்றாகும். உண்மையில் மேதிய இனத்தவனாகிய சியாசாரெகம் நபோ பொலாசரும் சேர்ந்து நினிவேயை கி.மு. 612–இல் கைப்பற்றினர்.

2. மேதிய இனத்தவராகிய தாரியுவின் தந்தை (தானி 9:1). யோசிபஸ் இவரை முதலாம் அசித்தியாகுவின் மகன் என்று குறிப்பிடுகிறார். இது பொருத்தமுடைய தாகத் தெரியவில்லை.

அகதோலீம் (HAGGEDOLIM – பெரிய வர்கள், பெரிய குருக்கள்)

இவர் நாடு கடத்தலுக்குப்பின் எருச லேமில் வாழ்ந்த மேற்பார்வையாளரான சபிதியேலின் தந்தை ஆவார் (நெக 11:14). ஒருவேளை இது, "பெரியவர்களின் தந்தை யான சபிதீயேல்" என்று மொழிபெயர்க் கப்பட வேண்டும். வாசகம் பழுதுபட்டிருக் கிறது.

அகந்தை, ஆணவம், செருக்கு (ARROGANCE)

1. அகந்தையும் அதன் விளைவுகளும் :-

அகந்தை கடவுளாலும், மனிதராலும் அருவருக்கப்படத்தக்கதாய் இருக்கிறது (சீரா 10:7). அகந்தை பல வகைகளில்

வெளிப்படுகிறது. சாதாரண மனிதன் உயர்ந்த மதிப்பை எதிர்பார்க்கிறான் (லூக் 14: 7; மத் 23:6 தொ). தன்னைத்தானே உயர்ந்தவன் என எண்ணுகிறான் (உரோ 16:3). அடுத்தவரைப் பார்த்துப் பொறாமைப்படுகிறான் (கலா 5:26) இறுமாப் புள்ள பார்வை கொண்டுள்ளான் (பழ 6:17). செருக்குடைய பணக்காரன் தன் செல்வச் செருக்கை வெளிக்காட்டுகிறான் (ஆமோ 6:8); மக்கள் பார்க்கவேண்டும் என்பதற்காகத் தன் செயல்களைச் செய்யும் வெளிவேடக்காரன் (மத் 23:5. 25–28). மேலும், இறுமாப்புக்கொண்ட மனிதன் இறைவனைச் சார்ந்து வாழ மறந்து, இறைவனுக்கு இணையாக தன்னை நினைத்துக் கொள்கிறான் (ஆதி 3:5; பிலி 2:6; யோவா 5:18). அவன் இதயம் கண்டனங்களுக்கு அமையாதது (பழ 15:12). தாழ்ச்சி அவனுக்குப்பிடிக்காது (சீரா 13:20). தயக்கமின்றி பாவம் செய்கிறான் (எண் 15:30 தொ). ஆண்டவரது ஊழியரைப் பார்த்தும், அவரது வாக்குறுதிகளைக் குறித்தும் ஏளனம் செய்கிறான் (சங் 119:5; 2 பேதுரு 3:3 தொ). ஆண்டவர் செருக்குற்றோரைச் சபித்து அவர்களைப் பயத்திலே வாழச் செய்கிறார் (சங் 119:21; லூக் 16:15). அகந்தையால் ஆக்கிரமிக்கப்பட்டோர் (மாற் 7:22) அருளையும் (1 பேதுரு 5:5) விசுவாசத்தையும் பெறார் (யோவா 5:44). தனது தவறினால் கட்டுண்டவன் (மத் 23:24; யோவா 9:39தொ) ஞானத்தைக் கண்டுபிடியான் (பழ 14:6). அவனோடு சேர்பவர் அவனைப் போல் ஆவர் (சீரா 13:1); எனவே அவனை விட்டு விலகுவது நலம் (சங் 1:17)

2. இஸ்ராயேலரைத் துன்புறுத்தும் புறவினத்தாரின் ஆணவம் :- உண்மைக் கடவுளை அறியாத ஆணவக்காரன் அரசாளும்போது வலுவிழந்தோர் ஊழியம் செய்யவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இஸ்ராயேல் விடுதலை பெறுவதை பாரவோன் தனது ஆணவத்தால் தடுக்கிறார் (யாத் 5:2). இத்தகைய ஆணவக்காரர்கள் இஸ்ராயேலரை அடிமைப் படுத்தப்போவதாக அச்சுறுத்துவார்கள். கோலியாத்து முதல் அந்தியோக்கு வரை (1 சாமு 17:4; 2 மக் 9: 4–10) பலரும் அகந்தை கொண்டு அலைந்தது கண்கூடு. அகங்காரத்தின் உச்சியிலே நின்றது பாபிலோனிய அரசு. நாடுகளிலே சிறந்த நாடு; எல்லாக் காலமும் நிலைபெறும் நாடு (எச 13:19); தானே தனிப்பெரும் நாடு எனப் பெருமிதம் கொண்ட நாடு இது (எச 47:5–10). இந்த மக்களின் கூட்டு ஆணவச் சின்னமாக பாபேல் கோபுரம் முற்றுப் பெறாமல் நின்று, விண்ணை அடையவேண்டும் என்ற அவர்தம் அகந்தையை எடுத்துக் காட்டுகிறது (ஆதி 11:4).

3. இறைவனை ஏற்காது ஏழைகளைத் துன்புறுத்துபவர்களின் ஆணவம்:- இஸ்ராயேலரிடையே அகந்தை ஆண்டவனை மறக்கச் செய்தது; அடுத்தவனை ஒடுக்கச் செய்தது. வலுவிழந்தோர்க்கு அன்பு காட்ட வேண்டும் என்று சட்டம் கூறியது (யாத் 22:21–27). அரசன் ஆணவத்தால் அளவுக்கு அதிகமான பொன், வெள்ளியைச் சேர்க்கவோ, அடுத்தவனை விட உயரவோ முயலக்கூடாது (உப 17:17.20). தான் செல்வந்தனாக ஆணவக்காரன் ஏழைகளை வாட்டி வதைக்கிறான் (ஆமோ 8:4–8; எரே 22:13 தொ). ஆனால் ஏழைகளை அவமதிப்பது இறைவனையும் அவரது நீதியையும் அவமதிப்பதாகும். ஆணவக்காரர்கள் இறை பற்றற்றவர்கள்; புறவினத்தவர் போன்றவர்கள். அவர்களால் துன்புறுத்தப்பட்டோர் (சங் 10:2 தொ; 123:4) ஆண்டவனை நோக்கிக் கூக்குரலிடுகின்றனர் (சங் 73:6–9). அகந்தையும் பண ஆசையும் கொண்டவர் ஆண்டவருக்கு ஊழியம் செய்யஇயலாது (லூக் 16:13 தொ).

4. ஆணவக்காரனுக்குரிய தண்டனை:- ஆண்டவரை விட்டு விலக நினைக்கும் ஆணவக்காரனை அவர் ஏளனம் செய்கிறார் (பழ 3:34; சங் 2: 2 தொ). மக்களினங்களை இரக்கமின்றித் துன்புறுத்தி ஆணவத்தோடு வாழ்ந்தவன் இறந்தபின் அருவருப்பான அழுகல்போல் கல்லறைக்குப் புறம்பே விடப்படுவான் (எச 14:3–20; எச. 28:17 தொ. 31). கொடுங்கோலர்களைப் போல் அவர்தம் அரசுகளும் அழிக்கப் படும். சில சமயங்களில், இவ்வரசர்கள் இஸ்ராயேலரை தூய்மைப்படுத்தும் இறைவனின் கருவிகளாகவும் செயல்படுகிறார்கள். ஆனால் அவர்கள் அகந்தையுடன் தங்கள் வேலையைச் செய்தபோது

இறைவன் அவர்களைத் தண்டித்தார் (ஏச 10:12; 47:9.11). ஆண்டவரின் நாளிலே ஆணவமிக்க இஸ்ராயேலரும் தண்டிக்கப் படுவர் (எரே 9:3; எச 7:10). "அந்த நாளிலே மனிதனின் அகந்தையெல்லாம் அடங்கும்; மனிதர்களின் இறுமாப்பு தாழ்த்தப்படும்; ஆண்டவர் ஒருவரே அந்நாளில் உயர்த்தப் படுவார்" (ஏச 2:6–22). "செருக்குற்று நடப்பவர்களுக்கு அவர் நிறைவான தண்டனை அளிக்கிறார்" (சங் 31:24). நீதி மான்களைப் பழித்தவர் புகைபோல் மறைவர் (ஞான 5:8–14). தன்னைத் தானே உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் (மத் 23:12).

5. ஆணவத்தை அடக்குபவர், தாழ்ச்சி யுடையோரின் மீட்பர்:- எப்படி ஆண்டவர் "நெஞ்சிலே செருக் குற்றவர்களைச் சிதற டிக்கிறார்" (லூக் 1:51). மனிதனை அகந் தைகொள்ள ஏமாற்றிய பழம்பாம்பும் (ஆதி 3:5) தன்னைக் கடவுளாகத் தொழும் படி உலக முழுவதையும் வசியம் செய்ய விரும்பும் பேயுமான (திருவெளி 12:9; 13:5; 2 கொரி 4:4) சாத்தானை எவ்வாறு ஆண்டவர் வெற்றி கொள்கிறார்?

ஒரு தாழ்ச்சியுள்ள கன்னியும், அவளது குழந்தையும் வழியாக இதை ஆற்றலோடு செயலாற்றுகிறார். மாட் டடைக் குடிலிலே மரியாளின் மடியிலேப் பிறந்த இயேசு பாலன் (லூக் 2:1 தொ) நெஞ்சிலே செருக் குற்றோரைச் சிதற டித்தார். அவரை ஏரோதின் அகந்தை கொல்லத் திட்டம் தீட்டியது (மத் 2:13). ஆணவமிக்க சாத்தானை வென்றார். அவர் தமது பணியிலே சாத்தான் அளித்த இவ்வுலகப் பெருமையை நிராக ரிக்கிறார் (மத் 4:3–10). இறைவனுக்குச் சமமானவர் என்றாலும் (யோவா 5:18), அதனால் ஆதாயம் தேடவில்லை (8:50). தமக்கு பெருமை சேர்க்க அவர் விரும்ப வில்லை. கேவலமான சிலுவை மரணத் தையும் ஏற்றார் (12:31 தொ; பிலி 2:6 தொ). தந்தை தம்மை மகிமைப்படுத்தும்படிக் கேட்பதுவும், தந்தை அவரில் மகிமைப் படுத்தப்படுவதற்காகவே (யோவா 12:28; 17:1). அவர் காட்டிய வழியிலே அவரது சீடர்கள், குறிப்பாக அவரது திருச்சபை யின் ஆயர்கள் நடக்க வேண்டும் (லூக் 22:26 தொ; 1 பேதுரு 5:3; தீத் 1:7). அவர் பெய ராலே சீடர்கள் சாத்தானின் ஆதிக்கத்தை வெல்வார்கள் (லூக் 10:18 தொ). ஆணவத் தின் வல்லமை ஆண்டவரின் மாட்சி வெளிப்படும் நாளன்றுதான் அழிக்கப் படும் (2 தெச 1:7 தொ). அப்போது ஆண்ட வரோடு தங்களைச் சமமாகக் கருதிய இறைபற்றற்றவர்கள் ஆண்டவரின் ஆவி யாலே அழிக்கப்படுவர் (2 தெச 2:4.8). அப் போது கடவுளாக்கப்பட்ட அரசின் அடை யாளமான பாபிலோன் ஒரே அடியில் அழிக்கப்படும் (திருவெளி 18:10.21). தாழ்ச்சியுடையோர் மட்டும் ஆண்டவரின் பிள்ளைகளாக இருப்பர் (மத் 18:3 தொ; 1 யோவா 3:2).

அகபு (AGABUS – வெட்டுக்கிளி)

தூய ஆவியால் பேசும் வரம் பெற்ற, யூதேயாவிலிருந்து வந்த ஒரு கிறிஸ்தவ இறைவாக்கினார். இவர் மற்ற இறை வாக்கினருடன் எருசெலேமிலிருந்து அந்தியோக்கியாவிற்குச் சென்று, உலகம் முழுவதும் (அநேகமாக உரோமைப் பேரரசு முழுவதும் அல்லது) யூதேயாவில், பஞ்சம் நிலவும் என்று முன்னுரைத்தார். (அ.ப. 11:27–30). பேரரசர் கிளதியு ஆட்சிக் காலத்தில் (46–47 கி.பி.) யூதேயா முழுவ தும் பஞ்சம் நிலவியது. இவரது வார்த் தையை நம்பி அந்தியோக்கியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் காணிக்கை எடுத்து எருச லேமிலுள்ள ஏழைக் கிறிஸ்துவர்களுக்குப் பொருளுதவி அனுப்பினர் (11:30). அ.ப. 21:10–11–இல் பவுலின், மூன்றாம் பயண முடிவில் அவர் எருசலேமிலுள்ள யூதர் களால் பிடிக்கப்பட்டு புறவினத்தாருக்குக் கையளிக்கப்படுவார் என்பதை அகபு ஓர் அடையாளச் செய்கையின் மூலம் முன்னு ரைக்கின்றார்; ஆனால் இந்த இறைவாக்கு அப்படியே நிறைவு பெறவில்லை. இவரை ஒரு வேத சாட்சி எனக் கருதி, கிரேக்கத் திருச்சபை இவருடைய திருவிழாவை மார்ச் மாதம் 8–ஆம் நாள் கொண்டாடு கின்றது.

அகர வரிசை அமைப்பு (ACROSTIC)

இது ஒரு யாப்பு யுக்தியாகும். இதன் படி ஒரு பாடலின் ஒவ்வொரு வரியின் அல்லது அடியின் முதல் எழுத்து அகர வரிசைப்படி அமைக்கப்பட்டிருக்கும்

அல்லது ஒரு குறிப்பிட்ட சொல் அல்லது பதத்தில் வரும் எழுத்துக்களின் வரிசையில் அமைக்கப்பட்டிருக்கும்.

விவிலியத்தில் ஞான நூல்களிலும் ஞானம் பற்றிய சங்கீதங்களிலும் இவ்வரிசை அமைப்பு மூலமொழியில் காணப்படுகிறது. சங் 111:112–இல் ஒவ்வொரு அரை வரிசையும் எபிரேய எழுத்துக்களின் வரிசைப்படி அமைந்துள்ளது. சங்.25;34; 145; பழமொழி 31:10–31–இல் ஒவ்வொரு வரியிலும் இவ்வமைப்பு காணப்படுகிறது. புலம்பல் நூலின் ஐந்து பாடல்களில் நான்கில் இவ்வமைப்பு காணப்படுகிறது. புல 1–2–இல் மூன்று வரி கொண்ட ஒவ்வொரு அடியும் எபிரேய எழுத்துக்களின் வரிசைப்படி அமைந்துள்ளன. புல 3–இல் மூன்று வரிகொண்ட ஒவ்வொரு அடியும் இவ்வமைப்பைக் கொண்டிருப்பதோடு, ஒவ்வொரு அடியும் அதற்குரிய எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டுள்ளது. சங். 119–இல் எட்டு வரிகொண்ட 22 அடிகள் அகர வரிசையைக் கொண்டிருப்பதோடு ஒவ்வொரு அடியும் அதற்குரிய எழுத்தை ஒவ்வொரு வரியின் முதல் எழுத்தாகக் கொண்டுள்ளது. சங் 9–10–இல் காணப்படும் அகர வரிசை அமைப்பு, இரண்டையும் ஒரே சங்கீதமாகக் கருத விளக்கவுரையாளர்களைத் தூண்டியுள்ளது. இப்படித்தான் எழுபதுநூல் கணித்துள்ளது. சங் 4–இல் வரும் முதல் எழுத்துக்கள் எபிரேய எழுத்து வரிசையில் தலைகீழாக அமைந்துள்ளன.

ஆப்பு எழுத்து இலக்கியங்களிலும் இத்தகைய யாப்பு யுக்திகள் பயன்பட்டுள்ளன. இவ்வகை அமைப்பைப் பயன்படுத்துதலின் நோக்கம் என்ன? எழுத்துக்களின் மந்திர சக்தியின் மேலுள்ள நம்பிக்கையாகவோ, ஆசிரியரது இலக்கிய ஆற்றலைக் காட்டுவதாகவோ அல்லது வெறுமனே இலக்கியப் பாணியாகவோ இருக்கலாம். விவிலியத்தைப் பொறுத்தமட்டும் இது மனனம் செய்வதற்கும் மனதில் பதிய வைப்பதற்கும் பயன்பட்ட ஒரு பயிற்சி யுக்தியாகவும் ஞானப்பள்ளிகளில் பயன்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மேலும் ஒரு பொருள்பற்றி தான் கூற விரும்பியவற்றைக் கூறிவிட்டதாகக் காட்ட ஆசிரியர் பயன்படுத்தும் ஒரு யுக்தியாகும் இம்முறை. அலபுவிலிருந்து தௌவரை ஒரு கவி எல்லாவற்றையும் கூறிவிட்டால் ஒரு தலைப்பைப் பற்றிச் சொல்லக் கூடியதை எல்லாம் சொல்லிவிட்டார் என்று பொருளாகும்.

அகராகு (AHARAH – ராவின் சகோதரன், சகோதரனைப் பின்பற்றுபவன்)

1 நாள் 8:1–இன்படி பென்யாமினின் மூன்றாவது மகன்; அநேகமாக இவர் அகிராமாக இருக்கலாம் என்று சிலரும் அகேராக இருக்கலாம் என்று சிலரும் கூறுவர்.

அகரேல் (AHARHEL – ராக்கேலின் சகோதரன்; கோட்டைக்குப் பின்)

யூத குலத்தைச் சேர்ந்த ஆரும் என்பவரின் மகன் (1 நாள் 4:8).

அகவா (AHAVA)

அகவா என்ற பெயருடைய ஓர் ஆற்றின் கரையில் அமைந்திருந்த ஒரு பாபிலோனிய நகரம் (எஸ் 8:15. 21.31). இங்குதான் தன்னோடு எருசலேமுக்கு திரும்பிவர இருந்த யூதர்களை எஸ்ரா ஒன்று கூட்டினார். இங்கு இவர்கள் மூன்று நாள் தங்கி (8:15) ஆண்டவர் திருமுன் தங்களையே தாழ்த்தி, நல்ல முறையில் எருசலேம் போய் சேரவேண்டி, நோன்பு இருந்தனர் (8:21). இந்த மன்றாட்டு கேட்கப்பட்டது. யாவரும் எந்தக் கேடுமின்றி எருசலேம் போய்ச் சேர்ந்தனர் (8:31–32).

அகவா ஆறு பாபிலோனியாவின் முக்கிய ஓடைகளில் ஒன்றாக இருக்கலாம். இது வடிகாலாகவும், நீர்ப்பாசனத்திற்கும் பயன்பட்டிருக்கலாம். இது நாடு கடத்தப்பட்ட யூதர்கள் பலர் வாழ்ந்த தலைநகருக்கு அருகில் இருந்திருக்கலாம்.

அகலமான மதில், பெரிய மதில்

நெகமியாவால் பழுது பார்க்கப்பட்ட எருசலேம் மதிற் சுவரின் ஒரு பகுதி. சூழ்நிலையிலிருந்து இது நகரின் வடமேற்கு சுவராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது (நெக 3:8; 12:38).

அகழி (MOAT)

கோட்டை மதிலையோ நகரையோ சுற்றித் தோண்டப்பட்ட பள்ளமாகும். இது

ஒரு அரணாகவும் பாதுகாப்பாகவும் அமைந்தது. 'அகழி சூழ் அரண்' (தானி 9:25) எருசலேம் நகர் மீண்டும் கட்டப்படுவதுபற்றிய விவரிப்பின் ஒரு விபரமாகும்.

அகழெலி (MOLE)

இது பூச்சிகளை உண்ணும் பாலூட்டி வகை உயிர்களில் ஒன்று. ஒன்பதிலிருந்து இருபத்திரண்டு சென்டிமீட்டர் நீளமுள்ளது. பாலஸ்தீனத்தில் சாதாரணமாய்க் காணக் கூடியது. இந்த எலி பூமிக்கு அடியில் வாழ்ந்து வேர்களையும் கிழங்குகளையும் பெறுவதற்காக விடாமுயற்சியோடு பூமியைக் குடைந்து செல்லக்கூடியது. இந்த எலியும் வௌவாலும் இருள் உலகிலே வாழ்ந்தாலும் இவை இரண்டும் ஒரே இடத்தில் வாழ்பவையல்ல என்பது குறிப்பிடப்பட வேண்டும். ஏச 2.20–இன் படி இரண்டும் சேர்த்துக் கூறப்படுகின்றன.

இறைவனது தீர்ப்பை எதிர்கொள்ளும் சிலைவழிபாடு செய்வோர் தங்கள் சிலைகளை அகழெலிகளுக்கும், வௌவால்களுக்கும் எறிந்துவிடுவர் என்று கூறப்படுகிறது. லேவி 11:30–இன்படி இந்த அகழெலி ஒரு அசுத்த விலங்காகும்.

அகன்ற இடம், பரந்த இடம் (BROAD PLACE)

இப்பொருளுள்ள சொல் யோபு 30:16; 2 சாமு 22:20; சங் 18:19–இல் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பரந்த இடத்திற்குக் கொணர்ந்தார் என்பது வேதனை, கலக்கம், அச்சம், பஞ்சம் இவற்றிலிருந்து காப்பாற்றினார் என்று பொருள்படும்.

அகாகியர் (AGAGITE – அகாகுவின் வழித் தோன்றல்கள்)

ஆமானைக் குறிக்க உபயோகப்படுத்தப்படும் ஒரு சொல் (எஸ்த 3:1. 10; 8:3.5; 9:24). இது அநேகமாக இஸ்ராயேலின் பழைய எதிரியான, அமலேக்கியர்களின் அரசனான அகாகுவைக்குறிக்கும் (உப 25:17–19); ஏனெனில் ஆமானின் எதிரியான மோர்தெக்காய், ஆகாகின் எதிரியான சவுலின் வம்சத்தைச் சேர்ந்தவர் என்று கொடுக்கப்பட்டுள்ளது (எஸ்த 2:5; 1 சாமு 15:7 தொ). எழுபது நூல் தொகுப்பு இதற்கு "எதிரி" என்று பொருள் கொடுக்கின்றது (எஸ்த 9:24)

அகாகு (AGAG – அனற் பிழம்பு, சீற்றம் உடையவன், மூர்க்கன்)

1. பெனிசியா மொழியில் இவ்வார்த்தை காணப்படுகின்றது. அநேகமாக இந்த வார்த்தை பாரவோன் என்பது போன்ற ஓர் அரச பட்டமாகும். தனி ஆளின் பெயரன்று. எண் 24:7–இல் வரும் அகாகு இப்படிப்பட்ட பட்டமாக இருக்கலாம். இதனுடைய சூழ்நிலை அமைப்பு இது ஒரு புராணக்கதை என்று காட்டுகிறது. இறையரசுக்கும், உலகிற்குமிடையேயுள்ள பகைமைக்கு அடையாளமாகிறது.

2. சவுலினால் தோற்கடிக்கப்பட்டு, சாமுவேலால் கொல்லப்பட்ட ஓர் அமலேக்கிய அரசன் (1 சாமு 15:8–9. 20.32–33). சவுல் மன்னருக்கும், அகாகு மன்னன் தலைமையில் வந்த அமலேக்கியருக்கும் இடையில் நடைபெற்ற போரானது, சாமுவேலும் சவுலும் நிரந்தரமாகப் பிரிவதற்கு ஒரு தருணமாய் அமைந்தது. "அமலேக்கியர்களையும், அவர்களுடைய சொத்துக்கள் அனைத்தையும் அழித்துவிட வேண்டும்" என்ற சாமுவேலின் கட்டளைக்கு சவுல் கீழ்ப்படியவில்லை. சாமுவேல் இந்த கீழ்ப்படியாமையைப் பற்றிச் சவுலிடம் வினவியபொழுது, "கடவுளுக்கு ஒப்புக்கொடுப்பதற்காக இவைகளை அழிக்கவில்லை" என்று முதலில் சாக்கு சொன்னாலும், பின்பு பழியை முழுவதும் மக்கள் மேல்போட்டார். சாமுவேல்தானே அகாகுவைக் கொலை செய்தார் (1 சாமு 15:33).

சவுல் கீழ்படியாததும், அதன் விளைவாக அரச பதவி பறிபோனதும், ஆதி பெற்றோர் கீழ்ப்படியாததற்கும் அதன் விளைவாக இன்பவனத்திலிருந்து விரட்டப்பட்டதற்கும் ஒத்துள்ளன என்று இறையியல் விவரிப்பு எடுத்துக்காட்டுகிறது.

அகாபே (AGAPE – அன்பு) –சொல் தோற்றம்

இது ஓர் கிரேக்க வார்த்தை. இதை மொழி பெயர்க்காமல் அப்படியே சில மொழிகளில் எழுதப்படுகிறது. அன்பைக் குறிக்கப்பயன்படுத்தப்படும் பல கிரேக்க வார்த்தைகளில் இதுவும் ஒன்று. இதன் அடிப்படைப் பொருளில் பிறர் நன்மைக்காகத் தன்னையே எந்த அளவுக்கும் தியா

கம் செய்யும் இறை தன்மையுடைய, தன்னலமற்ற அன்பைக் குறித்தது (காண்க: அன்பு). ஆதித் திருச்சபையிலே இது தனிப்பட்ட ஓர் முறையிலே பயன்படுத்தப் பட்டது. இதற்கு அன்பு விருந்து என்பது பொருள். காண்க: அன்பு விருந்து.

அகி (AHI – என் சகோதரன்)

யாவே என் சகோதரன் என்று பொருள்படும் அபியா என்ற பெயரின் சுருக்கமாக இருக்கலாம். நாளாகம நூல்களில் தந்துள்ள மரபுமுறை அட்டவணையில் இந்தச் சொல்லானது இரண்டுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. வாசகங்கள் ஐயத்திற்குரியவை.

1. பாசானில் வாழ்ந்த காது குலத்தினரான அபிதியேல் என்பவரின் மகனாவார் (1 நாள் 5:15).

2. செமேரின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:34). இப்பகுதியில் எபிரேயச் சொல், ஒரு ஆளின் பெயராக எடுத்துக் கொள்ளப்படுவதைவிட "என் சகோதரன்" என்று இடுபெயராக எடுத்துக் கொள்வது மேல்.

அகிக்காம் (AHIKAM – என் சகோதரன் எழுந்துவிட்டான்)

அகிக்காம் சாப்பானின் மகன் (2 அர 22:12). கெதலியாவின் தந்தை (25:22; எரே 39:14). அகிக்காம் யோசியாவின் அமைச்சரவையில் ஒருவர். இவர் சட்ட நூலில் மன்னனைப் பற்றியும், மக்களைப்பற்றியும் என்ன எழுதியிருக்கிறது என்று குல்தா இறைவாக்கினியிடம் கேட்டறியச் சென்ற குழுவில் ஒருவர் (2 அரச 22:12.14). இறைவாக்கினர் எரேமியா, மன்னன் யோயாகிமினால் கொலை செய்யப்படாமலிருக்க அவருக்கு உற்ற துணையாக இருந்து அவரைப் பாதுகாத்தவர் (எரே 26.24).

அகிக்கார் (AHIKAR – மதிப்புமிக்க சகோதரன்)

1. அனாயேலின் மகன். அசீரிய மன்னன் சனகெரிபுவின் காலத்திலும், அவர் கொலை செய்யப்பட (2 அர 19:36–37) அவருக்குப்பின் மன்னராக வந்த எசர்கதோன் காலத்திலும் (தோபி 1:21–22) முதல் மந்திரியாக இருந்தவர். தனது செல்வாக்கைப்பயன்படுத்தி தனது சிற்றப்பன் தோபித்து நினிவேக்குத் திரும்பிவர உதவினார் (1:22). தோபித்து குருடரான போது அவரைக் கவனித்துப் பேணிக் காத்து வந்தார் (2:10). பிற்காலத்தில் மகன் தோபியாவின் திருமணக் கொண்டாட்டங்களில் பங்குகொண்டார் (11:18).

2. இவர் பழம் மேற்காசியாவின் ஞானிகளில் ஒருவர். காண்க: அகிக்காரின் நூல்.

அகிக்காரின் நூல் (BOOK OF AHEKAR)

ஒரு பழமையான ஞான நூல். பழமொழிகளையும், நீதிக் கதைகளையும் கொண்டது. முகவுரை அகீக்கார் என்ற ஞானியின் வாழ்க்கைக் குறிப்பைக் காட்டுகிறது. நூலில் காணப்படுபவை அவர் தனது மகனுக்கு அறிவுரையாகக் கூறப்பட்டதாக அமைந்துள்ளன. அந்நூல் சீரியா, அராபிய, அரமேயா மற்றும் சில மொழிகளில் காணப்படுகிறது. ஆயினும் பழைய அரமேயிக் வடிவம் எலெபென்டைன் ஏடுகளில் திரும்பக் கண்டுபிடிக்கப்பட்டது பெரிய வியப்பை ஊட்டியது. அது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது கண்டுபிடிக்கப்படும்வரை இந்நூலுக்கும் தோபித்து நூலுக்கும் இடையேயுள்ள தொடர்பை ஒருவரும் எண்ணிப பார்க்கவில்லை.

அகிக்கார் அசீரிய அரசன் செனகெரிப்பின் கீழ் ஒரு மேலதிகாரியாக இருந்தார். அவருக்கு மகன் இல்லாததால், தனது சகோதரியின் மகன் நாடனைத் தத்து எடுத்துக்கொண்டார். அவனை நூலில் பிறகு வரும் அறிவுரைகளால் கல்வி கற்றவனாக்கி அரசன் எசர்கதோனிடம் கொண்டுவந்தார். நாடன் அகிக்காரின் வாரிசாக நியமிக்கப் பட்டார். அகிக்கார் ஓய்வுபெற்று தனது வீடு திரும்பினார். ஆனால் நாடன் தனது வளர்ப்புத் தந்தையான அகிக்கார் கற்றுக் கொடுத்தவையால் பயன்பெறவில்லை. அகிக்கார் அரசுக்கு எதிராகச் சதிச்செய்வதாகக் குற்றம் சாட்டி அவரது பெயரைக் கெடுத்தான். அரசனும் அதை நம்பி, சினந்து, நபு–சும்–இங்குன்னையும் மற்றும் இரண்டு பேரையும் அகிக்காரைக்கொல்ல அனுப்பினார். அவர்கள் அகிக்காரை அவரது திராட்சைத் தோட்டத்தில் இரு

மலைகளுக்கிடையில் கண்டனர். அகிக்கார் நபு-சும்-இங்குன்னிடம், செனகொரிபு அவரைக் கொலை செய்ய உத்தரவிட்டபோதுதான் அவரைக் காப்பாற்றியதை எடுத்துரைத்தார். மேலும் அவன் குற்றமற்றவன் என நிரூபிக்கப்பட்டபோது அரசன் மகிழ்ந்ததையும் நினைவுப்படுத்தினார். அகிக்கார் அதேபோன்ற பதிலுதவி எதிர்பார்த்தார். மூவரும் இரகசியத்தைக் காப்பாற்றுவதாக உறுதி எடுத்துக்கொண்டனர். இதன் பின் ஒரு அடிமையைக்கொன்று அகிக்காரை மறைத்து வைத்துப் பாதுகாத்தனர். எகிப்தியரோடு போர் தொடங்கியபோது, அகிக்கார் மட்டுமே கொடுக்கக்கூடிய ஆலோசனை அரசனுக்குத் தேவைப்பட்டது. ஆகவே அரசன் தனது தண்டனைத் தீர்ப்பைப் பற்றி வருந்தினார். அச்சமயத்தில் கொலையை நிறைவேற்றுபவர் அகிக்காரை அரசர் முன்கொண்டு வந்தார். அரசனும் மகிழ்ந்து அவரைப் பயன்படுத்தினார். அகிக்கார் தனது மதியால் எகிப்திய மன்னனை வென்ற பின் மகிமையோடு நாடு திரும்பினார். நாடன் மக்களால் பழித்துக்கூறப்பட்டு, கைதியாக்கப்பட்டார். சிறையில் ஊதி, வெடித்து மிகக் கேவலமாக மடிந்தார். இவ்வாறு அகிக்காரின் கதை நேர்மைக்காக எண்பிக்கப்பட்டவரது வரலாறு ஆகும்.

அரேமேயிக் நூல் அசீரிய நூலிலிருந்து வந்ததென்பதை நம்பக் காரணங்கள் உள்ளன. இதில் வரும் சில மனிதர்கள் உண்மையிலேயே வாழ்ந்தவர்களாக இருக்கலாம். செனகொரிபுவின் கீழ் நபு-கம்-இங்குன் என்ற உயர் அதிகாரி இருந்ததாகத் தெரிகிறது. அகிக்கார் இருந்தாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அது ஒரு அசீரியப் பெயர். நாடன் அல்லது நாடின் என்பது அதாத்-நாடின்-சும் போன்ற பெயர்களின் சுருக்கமாக இருக்கலாம். அகிக்கார் புரட்சி செய்ததாகக் கூறப்படுகிறது உண்மையாக இருக்கலாம். அசீரிய நூற்களின்படி ஆட்சிக்கு வரவேண்டியவர்களைத் தோற்கடித்து ஏசர்கதோன் ஆட்சியைக் கைப்பற்றினார்.

அரமேயிக் படிவம் வழியாகத்தான் இந்நூல் பரவலாக அறியப்பட்டது. ஆனால் இன்றைய வடிவில் இது கி.மு. 500-க்கு முந்தியதாக இருக்க முடியாது. கிரேக்க ஆசிரியர்கள் அகிக்காரின் கதையை பலவாறு பயன்படுத்தியுள்ளனர்.

இவற்றில் ஞானியான அகிக்காரைப் போற்றும் கதையைப்பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். தோபித்து நூல் ஆசிரியர் தன் கதையில் அகிக்காரைத் தோபித்தின் உறவினர் ஆக அறிமுகப்படுத்துவது, ஏற்கெனவே நன்கு அறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கதையோடு தமது கதையை இணைத்துத் தமது கதைத் தலைவரின் புகழை அழுத்திக் கூறுகிறார் எனலாம். ஒருவேளை ஆசிரியர் தோபித்தை ஒரு யூத அகிக்காராக எண்ணியிருக்க வேண்டும். ஒரு பழங்கால கதையின் ஒழுக்கப்பாடத்தைத் தமது மக்களின் மொழியிலும் சிந்தனை வடிவிலும் எடுத்துக்கூற விரும்பியிருக்கலாம். அகிக்காரின் கதையில் அவர் கூறியதாகப் பல ஞானமிக்க கூற்றுக்கள் வருகின்றன. அவற்றிற்கு இணையானக் கூற்றுக்கள் தோபி 4-இல் காணப்படுகின்றன.

அகிசகார் (AHISHAHAR-விடியலின் சகோதரன், சகோதரன் விடியல் ஆனன்)

ஐயப்பாடுகளுக்கு இடம் தருகின்ற பென்யாமின் மரபுப் பட்டியலில் எதியேல் குடும்பத்தைச் சேர்ந்த பிலிகானின் புதல்வர்களில் ஒருவர். ஆற்றல்மிக்க வீரன் (1 நாள் 7:10-11). ஆனால் அதிகாரப்பூர்வமான பட்டியலில் (1 நாள் 8:1-40) பிலிகான், அகிசகார் போன்ற பெயர்கள் காணப்படவில்லை. எனவே செபுலோன் வழி மரபுப் பட்டியலின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்பது பலரின் கருத்து.

அகிசமாக்கு (AHISAMACH-என் சகோதரன் ஆதரிக்கிறான், உதவியாளன் ஆனான்)

இவர் தாண் குலத்தைச் சேர்ந்தவர். ஒகலியாபுவின் தந்தையாவார். உடன் படிக்கைக் கூடாரமும், அதனுடன் தொடர்புடைய மற்ற பொருட்களையும் அமைப்பதற்காக நியமனம் செய்யப்பட்டவர்களில் இருவரும் ஒருவராவார் (யாத் 31:6; 35:34; 38:23).

அகிசா (ACHSAH – *சிலம்பு, கணுக்கால் அணி)*

காலேபுவின் மகள். காலேபு தன் தம்பி கெனாசின் மகன் ஒதினியேல் என்பவனுக்கு, கீரியத்து சேபரைப் (தெபீர்) பிடித்ததற்குச் சன்மானமாக, தான்கொடுத்த வாக்கின்படி அவனுக்கு இவளை மணமுடித்துக்கொடுத்தார் (யோசு 15:16–19; நீதி 1:12–13; 1 நாள் 2:49). மேலும் அகிசாவின் விருப்பத்திற்கிணங்கி, நெகேபில் நீர் ஊற்றுக்களைச் சீதனமாக காலேப்பு அவளுக்கு அளித்தார் (யோசு 15:19; நீதி 1:15).

அகிசாபு (ACHSHAPH – *மாயவித்தை, கவர்ச்சி, ஈர்ப்பு)*

இது ஆசேர் புதல்வர்களின் கோத்திரத்திற்குக் கிடைத்த எல்லைப்புற பகுதிகளில் ஒன்று (யோசு 19:25). இஸ்ராயேல் மக்கள் யோசுவாவின் தலைமையின் கீழ் பாலஸ்தீன நாட்டில் நுழைந்தபோது காணப்பட்ட ஓர் பழைய நகரம். இந்த கானானிய நகரம் மற்ற பல நகரங்களோடு சேர்ந்து யோசுவாவை எதிர்த்த கூட்டணி தோல்வியுற்றபோது, அதன் அரசன் கொல்லப்பட்டான். நகரமும் அழிந்து போனது (யோசு 11:1; 12:20).

எகிப்திய ஏடுகளிலும் (கி.மு.19–18–ஆம் நூற்றாண்டு), மூன்றாம் துத்–மோஸ் (கி.மு.1440–1435) வென்ற நகரங்களின் கர்னாக் பட்டியலிலும் (15–ஆம் நூற்றாண்டு) அமர்னா ஏடுகளிலும் (14–ஆம் நூற்றாண்டு) அனஸ்தாசின் புல்தாள ஏடுகளிலும் (13–ஆம் நூற்றாண்டு) இந்நகரம் குறிக்கப்படுகிறது. இந்த இடத்தை உறுதியாக அடையாளம் காட்டமுடியாது. ஆனாலும் ஆக்கோ சமவெளியில் ஆக்கோவுக்கு தென் கிழக்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள தேல்–கிசானை அடையாளம் காட்டுவர். அடையாளங் காட்டக்கூடிய மற்ற இடங்கள் தேல்–பெர்வேயும், தேல்–கர்பாக்கும் ஆகும்.

அகிசாய் (AHZAI – *ஆண்டவர் பற்றிக் கொண்டார்.*

எஸ்ரா காலத்திலிருந்த குரு (நெக 11:13). ஆசரேலின் தந்தையும் இம்மேரின் பேரனுமாவார்.

அகிசார் (AHISHAR – *பாடகனின் சகோதரன்)*

சாலமோன் அமைச்சரவையில் அகிசார் அரண்மனை மேற்பார்வையாளராயிருந்தார் (1 அர 4:6).

அகிசீபு (ACHZIB – *ஏமாற்றல், வஞ்சகம்)*

1. மேற்கு யூதர் நாட்டில் கெயீலாவுக்கும், மரேசாவுக்கும் இடையிலுள்ள ஒரு நகரமாகும் (யோசு 15:44). ஒருவேளை ஆதி 38:5–இல் குறிக்கப்படும் கெசிப்பும் இதுவும் ஒரே நகரைக் குறிக்கலாம். இப்பெயரை வைத்து மீக் 1:14 சிலேடை அணியல் ஒரு கூற்றைக் கொண்டுள்ளது.

பழங்கால அகிசீபுக்கு யுசேபியஸ் அதுல்லாம் அருகிலுள்ள ஒரு அழிவுக் குன்றை அடையாளம் காட்டுகிறார். இவ்விடம் அதுல்லாமுக்குக் கிழக்கே 5 கி.மீ தொலைவிலுள்ள இக்கால தெல்–ஏல்–பெய்தா என்று இப்போது ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கலிலியோவின் மத்திய தரைக் கடற் கரையில் உள்ள நகரமாகும். இது பெனிசிய எல்லைக்கு அருகில் உள்ளது. ஆசேர் நாட்டைச் சேர்ந்ததாயினும் ஆசேரியர்களால் இந்நகர் கைப்பற்றப்படவில்லை (யோசு 19:29; நீதி 1:31).

ஆக்கோ நகருக்கு வடக்கே 14 கி.மீ. தொலைவிலுள்ள, இக்கால எஸ்–ஸிப் என்ற இடத்தில் நடந்த தொல்பொருள் அகழ்வாய்வுகளிலிருந்து கி.மு. 19–ஆம் நூற்றாண்டில் இந்நகரை நிறுவியவர்கள் பள்ளம் தோண்டி இதை ஒரு தீவாக்கினர் என்று தெரிகிறது. 11–6–ஆம் நூற்றாண்டுகளில் இந்நகர் செழிப்புற்று விளங்கியது. இதில் 10–8–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாறையில் வெட்டப்பட்ட பல குடும்பக் கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. செனகெரிப்புவின் தலைமையின் கீழ், கி.மு. 701–இல் இந்நகரை வெல்ல அசீரியர்கள் படையெடுக்குமுன், இந்நகரின் தலைவர்கள் நகரைவிட்டு ஓடிப்போயினர்.

அகித்தோபல் (AHITOPHEL – *மடமையின் சகோதரன்)*

தாவீதின் அறிவுக் கூர்மைமிக்க ஆலோசகராய் பணிபுரிந்த அகித்தோபல் யூதா மேட்டு நிலங்களிலுள்ள கீலோ

(யோசு 15:31) என்ற ஊரினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் நாடறிந்த மதிநுட்பம் நிறைந்தவர். இவருடைய அறிவுரைகளெல்லாம் இறைவனின் கூற்றுகளுக்கு இணையானவை என்று இவருடன் வாழ்ந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன (2 சாமு 16:23).

அபிசலோம் தனது தந்தை தாவீதுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து கெபிரோனில் முடிசூட்டிக் கொண்டபொழுது அகித்தோபல் அவரது ஆதரவாளராகச் சேர்ந்துகொண்டார். எருசலேமை எந்த விதச் சண்டையுமின்றிக் கைப்பற்றியபின் அகித்தோபலின் அறிவுரையின்படி, இஸ்ராயேல் முழுமையும் அறியும்வண்ணம், தன் தந்தையின் வைப்பாட்டிகளுடன் அபிசலோம் படுத்தான். இந்த நிகழ்ச்சி அவனைப் பின் தொடர்பவர்களுக்கு மனத் துணிவைக் கொடுத்தது (2 சாமு 16:20–22). மேலும் தாவீதின் படையானது விவிமை பெறுமுன்னே அவரை அழித்தொழிக்க வேண்டும் என்றும் அபிசலோம் பன்னிராயிரம் வீரர்களோடு உடனே தாவீதைத் துரத்திச் சென்று, தாவீது அரசனை அழித்து விட வேண்டும் என்று அகித்தோபல் அறிவுரை வழங்கினார் (17:1–3). இத்தகைய அறிவுரைகளனைத்தையும் நல்லவையாகத் தோன்றினாலும், தாவீதைத் துரத்திச் செல்வதைத் தள்ளிப்போடவேண்டும் என்று தாவீதின் ஒற்றன் கூசாய் அபிசலோமுக்குக் கொடுத்த மடமைமிக்க திட்டங்களின் காரணத்தால் கைவிடப்பட்டன (17:5–14). அகித்தோபலின் அறிவுரைகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராக மாறியதால், அபிசலோமின் விதி முடிந்துவிட்டது என்றும், தன்னுடையவும் மற்ற சதிகாரர்களின் முடிவும் தெளிவாயிற்றென்பதாலும், அவர் வீட்டிற்குச் சென்று தற்கொலை செய்துகொண்டார் (17:23;1 நாள் 27:33–34).

அகித்தோபல் எலியாமின் தந்தையாவார் (2 சாமு 23:24). ஊரியாவின் மனைவியாகிய பதுசேபா எலியாமின் மகளாவாள் (2 சாமு 11:3). இவளை மணந்துகொள்ள தாவீது இவளது கணவன் ஊரியாவைக் கொலைச் செய்தார் (11:17–27). பதுசேபாவோடு தாவீது கொண்ட இழிவான செயல்தான் அபிசலோம் தாவீதுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது ஆலோசகர் பதவியிலிருந்து அகித்தோபல் விலகிக் கிளர்ச்சியாளர் குழுவில் சேர்ந்ததற்குக் காரணமாக இருக்கலாம் (16:15).

இறையியல் மட்டத்தில், விவிலிய விவரிப்பு தாவீதைக் காட்டிக் கொடுத்தவில் அகித்தோபல் காட்டிய தாழ்ச்சியின்மையை, இவரது பேத்தியான பதுசேபாவோடு தாவீது இழிவாக நடந்துகொண்டதற்கு தாவீது காட்டிய மனத்துக்கத்தோடு ஒப்பிட்டு வேறுபடுத்துகிறது (2 சாமு 12:13). இறைவன் தாவீதின் மன்றாட்டைக் கேட்டருளினார் (15:3). அகித்தோபலின் ஆலோசனையை முழுவதும் மடமைமிக்கதாக்கினார். இதை, அகித்தோபலுக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்பதைவிட, அபிசலோமுக்கு அளிக்கப்பட்ட தண்டனையாக எடுத்துக்கொள்ள வேண்டும் (17:14).

அகிதூபு (AHITUB – என் சகோதரன் நல்லவன்)

1. பினகாசின் இரு புதல்வர்களில் ஒருவர். ஏலியின் பேரன். அகிதூபு குருவாகிய அகிமெலக்கின் தந்தையாவார் (1 சாமு 22:9, 11–12,20). இவர், முதல் சாமுவேல் ஆகமத்தில் (14:3) சவுலின் தனிப்பட்ட மத குருவாகிய அகீயாவின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார். இரண்டாம் சாமுவேல் ஆகமத்தில் (8:17) இவர் குருவாகிய சாதோக்கின் தந்தை என்று தவறாகக் குறிப்பிடப்படுகிறார் (இந்த தவறுகளுக்கு மூலங்கள் 1 நாள்6:8; 6:52–53; 18:16; எஸ் 7:2)

2. அமரியாவின் மகன். இவர் சாதோக்கு என்று பெயரிடப்பட்ட மற்றொரு குருவின் தந்தையாகவோ (2 சாமு 8:17; 1 நாள் 6:7–8) பாட்டனாகவோ (1 நாள் 9:11; நெக 11:11) இருக்கலாம்.

3. யூதித்தின் மூதாதையராவார் (யூதித் 8:1) மற்றொரு அமெரியாவின் மகனும், சாதோக்கு என்ற பெயருள்ள மற்றொரு குருவின் பாட்டனுமாவார் (1 நாள் 6:11–12).

அகிபான் (AHBAN – விவேகம் உள்ளவனின் சகோதரன், ஞானியின் சகோதரன்)

இவர் அபிசூர், அபிகயில் ஆகியோரின் புதல்வர்களில் ஒருவர். மோலீத்தின் சகோதரன். யூதர் குலத்தைச் சேர்ந்தவர். எரகுமேலின் மூல மரபுப்பட்டியலில் இவர் பெயர் வருகிறது (1 நாள் 2:29).

அகிமாசு (AHIMAAZ – சினத்தின் சகோதரன்)

1. சவுலின் மனைவியாகிய அகினோவாமின் தந்தை அகிமாசு என்றழைக்கப்படுகின்றார் (1 சாமு 14:50).

2. அகிமாசு தலைமைக் குருவான சாதேக்கின் மகனாவார் (2 சாமு 15:27; 1 நாள் 6:8.53). இவர் அசரியாவின் தந்தையுமாவார் (1 நாள் 6:9). அபிசலோமின் கிளர்ச்சியின் பொழுது சாதோக்கும், அபியத்தாரும் எருசலேமிலிருந்தனர். அகிமாசும், யோனத்தானும் தாவீதோடு தொடர்பு கொள்வதற்காக ஏன்–ரோகேல் நீரூற்றருகில் மறைந்திருந்தார்கள். அங்கிருந்து தாவீதுக்குச் செய்தி அனுப்பிவந்தனர். அபிசலோமின் திட்டங்களனைத்தும் குருக்களாலும், கூசாயினாலும் இவர்களுக்கு அறிவிக்கப்பட்டன. ஆனால் அபிசலோமின் ஆட்கள் ஒரு சிறுவனின் உதவியால் எதிரிகள் இருக்குமிடத்தை இனம் கண்டுக் கொண்டனர். எனவே அவர்கள் பகுரிமில் ஒரு வீட்டு முற்றத்திலுள்ள கிணற்றில் இறங்கி மறைந்து கொண்டார்கள் (2 சாமு 17:17 தொ). பின் அவர்கள் அபிசலோமின் திட்டங்களைத் தாவீதிடம் சொல்ல விரைந்துசென்றனர். மேலும் எப்பிராயிமில் நடந்தபோரில் அபிசலோமின் படைகள் முறியடிக்கப்பட்டன. அவரும் கொலை செய்யப்பட்டார். இந்த மா பெரும் வெற்றியைத் தாவீதிடம் அறிவிக்க அகிமாசு யோவாபிடம் அனுமதி கேட்டார். ஆனால் அவர் இந்த வெற்றியை அறிவிக்க அனுமதி அளிக்கவில்லை. ஏனென்றால் அபிசலோமின் இறப்பானது வெற்றியை மறைத்து தாவீதிற்கு ஆழ்ந்த வருத்தத்தை தரக்கூடும். எனவே நற்குணசீலர் அகிமாசை இந்த துக்கச் செய்தியைக் கூற அனுமதியளிக்கவில்லை. மாறாக ஒரு கூசியரை அனுப்பினர். இருப்பினும் அகிமாசு வலியுறுத்திக் கேட்டதால் அனுமதி வழங்கப்பட்டது. கூசியருக்கு முன்பே வந்து, அவர் மன்னரை அணுகித் தாங்கள் அடைந்த வெற்றியை அறிவித்தாரே ஒழிய அபிசலோமின் இறப்பினை எடுத்துச் சொல்ல அவரால் இயலவில்லை. பின்பு வந்த கூசியர் கிளர்ச்சி செய்தவரின் அவல முடிவை அறிவித்தார் (2 சாமு 18:19–33). அகிமாசின் பிற்கால வாழ்வு பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவரது தந்தை சாதோக்குக்குப்பின் பெரிய குருவானார் என்பதற்கு ஒரு சான்றுமில்லை.

3. தாவீதால் நியமிக்கப்பட்ட 12 மாவட்ட அதிகாரிகளில் ஒருவர் நப்தலி நாட்டிற்குத் தலைவனாவார் (1 அர 4:15). அரசருக்கும் அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுப்பது இவர்களுடைய வேலையாகும் (4:7). அகிமாசு சாலமோனின் மகள் பாசமத்தை மணந்தார். சில ஆய்வாளர்கள் இப்பெயர் ஒரு அதிகாரியின் தந்தையின் பெயராகும் என்றும் அந்த அதிகாரியின் பெயர் விடப்பட்டுள்ளது என்றும் கருதுகின்றனர். இவர் அகிமாசு 2–இல் குறிக்கப்படுவரே என்பது அவர்கள் கருத்தாகும்.

அகிமான் (AHIMAN – என் சகோதரன் கொடை ஆவான்)

1. கெபிரோனில் வாழ்ந்த ஆனாக்கின் மூன்று புதல்வர்களில் ஒருவர் அகிமான் என்று அழைக்கப்படுகிறார் (எண் 13:32; யோசு 15:14; நீதி 1:10). இஸ்ராயேல் மக்கள் பாலஸ்தீனத்தில் குடியேறும் முன்னால் கெபிரோனிலும், எருசலேமிற்குத் தெற்கிலும் வாழ்ந்து கொண்டிருந்தவர்களும் அனாக்கின் வழிவந்தவர்களாகக் கருதப்பட்டனர். கெபிரோனில் இவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இந்த வெற்றி நீதி 18:10 –இல் யூதாவைச் சேர்ந்தவர்களுக்கும், யோசு 15:14–இல் கலேபுக்கும் சாற்றிக் கூறப்பட்டுள்ளது.

அனாக்கின் வழிவந்தவர்களாகிய அகிமான், சேசாய், தல்மாய் ஆகியவர்களின் பெயர்கள் இவர்கள் அரமேயர்கள் என்று சுட்டுகிறது.

2. ஒரு லேவியர். இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் எருசலேம்

நகரில் வாழ்ந்தவர். ஆலயத்தின் நான்கு தலைமை வாயில் காப்பாளர்களில் அகிமானும் ஒருவராவார் (1 நாள் 9:17–18).

அகிமெலக்கு (AHIMELECH – என் சகோதரன் அரசன் ஆவான்)

1. அகிதூபின் மகனாகிய அகிமெலக்கு நோபு என்ற ஊரிலுள்ள குருவாவார். நோப் ஊரிலிருந்த குருக்கள், தப்பியோடிய தாவீதுக்கு, உதவி புரிந்தனர் (1 சாமு 21:1–9). இது அங்குள்ள குருக்களைக்கொன்று குவிக்க சவுலைத் தூண்டியது. அரச வீரர்கள் இக்கட்டளையை நிறைவேற்ற மறுத்தாலும், ஏதேமியனான் தோயேகு அகிமெலக்கின் புதல்வர்களில் ஒருவரான அபியத்தாரைத்தவிர மற்றவர்கள் அனைவரையும் கொன்று தீர்த்தார் (22:17–20). இவரோ, இவரது சகோதரனோதான் 1 சாமு 14:3.18–இல் வரும் அகீயாவாக இருக்கலாம். சங் 52–இல் வரும் தலைப்பு தாவீது அகிமெலக்கு செய்த உதவியை தோயாகு சவுலுக்கு அறிவித்த சூழ்நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் அகிமெலக்கைச் சவுல் அழைத்துக் கலந்துரையாடியிருப்பதாகத் தெரிகிறது (1 சாமு 22:15). இவர் சவுலின் தனி சமய குருவாகிய அகீயாவோடு ஒப்புமைப்படுத்தப்படுகிறார் (1 சாமு 4:3.18). அகீயா அகிமெலக்கிலிருந்து சிறிது வேறுபட்டவராகவும் கருதப்படுகின்றார்.

2. குருவான அபியத்தாரின் மகனாவார். அகிமெலக்கு 1–இன் பேரன் ஆவார். தாவீது ஆட்சிக்காலத்தில் சாதோக்கோடு முக்கிய குருத்துவ அலுவலில் பங்குகொண்டார் (2 சாமு 8:17; 1 நாள் 18:16). ஆனால் இரண்டாம் சாமுவேல் ஆகமத்தில் (8:17) அகிமெலக்கின் மகன் அபியத்தார் என்பது அபியத்தாருடைய மகன் அகிமெலக்கு என்பதன் தவறான கூற்றாகக் கருதப்படுகிறது.

3. இவர் தாவீதுக்குப் பணிபுரிந்த ஒரு இத்தியர் (1 சாமு 26:6).

அகிமோத்து (AHIMOTH – மோத் என் சகோதரன் ஆவார்)

இவர் கோராகு குடும்பத்தைச் சேர்ந்த லேவியராவார் (1 நாள் 6:25). மேலும் சாமுவேலின் தந்தையான எல்கானாவின் ஒரு மூதாதையர். இப்பெயர் ஒருவேளை அகிமகாத்து என்று வாசிக்கப்படவேண்டும். (1 நாள் 6:35).

அகியா (AHIAH – யாவேயின் சகோதரன்)

நெகமியா தலைமையில் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டபோது கையொப்பம் இட்டவர்களில் ஒருவர் (நெக 10:26).

அகீயா என்ற பெயரின் மற்றொரு வடிவமாகும். இவ்வடிவில் ஒருதரம் வருகிறது. காண்க: அகீயா – 8.

அகியாம் (AHIAM – தாயின் சகோதரன்)

இவர் அராரியக் குலத்தவரான சாரார் (2 சாமு 23:33) அல்லது சாக்காரின் (1 நாள் 11:35) மகனாவார். இவர் தாவீதின் முப்பது புகழ்மிக்க வல்லவர்களில் ஒருவர்.

அகியான் (AHIAN – சகோதரத் தன்மையுடைய)

இவர் மனாசேயின்வழி மரபுப் பட்டியலில் வரும் செமிதாவின் முதல் மகனாவார் (1 நாள் 7:9).

அகியூது (AHIHUD – மாட்சிமை, கீர்த்தி, மாட்சிமையின் சகோதரன்)

1. சலோமீயினுடைய மகனாகிய அகியூது ஆசேர் குலத்தின் தலைவராவார் (எண் 34:27). மேலும் கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க எலயாசர், யோசுவா, ஆகியவர்களின் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட பத்துக் குலத்தலைவர்களில் இவரும் ஒருவராவார்.

2. குல மரபு அட்டவணையில் இவர் பென்யாமின் குலத்தினைச் சேர்ந்தவராகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார். எகுதின் மகன் (1 நாள் 8:7). வாசக வேறுபாடுகளால், அகியூதை எகிலாம் அல்லது கேராவின் புதல்வராக எண்ணுவதற்கு இடமிருக்கிறது.

அகியேசர் (AHIEZER – என் சகோதரன் உதவியாளன் ஆனான்)

1. இவர் அம்மிசத்தாயின் மகனாவார். இவர் மக்கள் தொகை கணக்கெடுப்பின் பொழுதும் (எண். 1:12;2:25); பீடம் திருநிலைப்படுத்தப்பட்டபோதும் பலிக்கென காணிக்கை செலுத்தும் பொழுதும் (எண்

7:66.71). தாண் குலத்தைச்சேர்ந்த படையின் தலைவராகயிருந்து அவர்களை வழி நடத்தும் பொழுதும் (எண் 10:25) தாண் குலத்தின் பிரதிநிதியாக மோசேக்கு உதவி புரிந்தார்.

2. இவர் பென்யாமீன் குலத்தினரான சவுலின் குடும்பத்தைச் சேர்ந்த திறமையும் ஆற்றலும் மிக்க வில்வீரர்களின் தலைவர். இவர்கள் தாவீது சிக்கிலாகு, என்னுமிடத்தில் தலைமறைவாயிருந்தபோது அவருக்கு உதவ வந்து சேர்ந்து கொண்டார்.

அகியோ (AHIO – தம்பி)

1. இவர் அபினதாபுடைய மகனாவார். தாவீதின் நகரமாகிய எருசலேமிற்கு இறைவனது பேழையைத்தேரில் ஏற்றித் தன் தந்தையின் வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு வரும்பொழுது அகியோ அப் பேழைக்கு முன் நடந்தார் (2 சாமு 6:3–4; 1 நாள் 13:7). அவரும் அவர் சகோதரர் ஊசாவும் பேழையோடு நாக்கோனின் போரடிக்கும் களம்வரை வந்தனர் (6:6). 'அகியோ என்பதை என்சகோதரன் என்று எடுத்துக்கொள்ளாமல் சில மொழி பெயர்ப்புக்கள் செய்வதுபோல் ஒருஆளின் பெயராக எடுத்துக்கொள்வது மேல்.

2. மசரோட்டிக் வாசகத்தின்படி, பென்யாமின் குலத்தினரான பெரியாவின் புதல்வர்களில் ஒருவராகக் கருதப்படுகின்றார் இவர். "எழுபது நூல்கள்" அடிப்படையில் அகியோவை "அவர்களின் சகோதரன்" என்று கூறுவது வரவேற்கப்படுவது என்பது பல அறிஞர்களின் கருத்து.

3. பென்யாமின் குலத்தினரான எயியேலின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8:29–31). இவருடைய தாய் மாக்கா ஆவாள். சவுலின் தந்தையான கீசின் சகோதரர்களில் ஒருவர் (9:35–37).

அகிரபா (ACRABA)

மொகுமூர் ஓடை மேலுள்ள கூசிக்கு அருகிலுள்ள ஓர் இடம் (யூதி 7:18). இவ்விடம் எருசலேமுக்கு வடக்கே 42 கி.மீ. தொலைவிலும், சிக்காருக்குச் சில கி.மீ. தொலைவிலும் யோர்த்தானிலிருந்து எழும் மலைப்பகுதியில் அமைந்துள்ள இக்கால அக்ராபே–ஆக இருக்கலாம்.

அகிரபிம் (AKRABBIM – தேள், அல்லது தேள்வழி)

கானான் நாட்டின் தென் எல்லையிலுள்ள ஒரு கணவாய் (எண் 34:4; யோசு 15:3; நீதி 1:36). பெயர் – செபாவிலிருந்து அராபாவிற்குச் செல்லும்பாதை திடீரென வாடி–மூரா என்ற ஓடைக்கு இறங்கும் இடத்தில் உள்ள நெக்–எஸ்–சபாவாக இது இருக்கலாம் என சாதாரணமாக அடையாளம் காட்டப்படும். இலிசானுககு எதிர்த் திசையில் சாக்கடலுக்கு மேற்கேயுள்ள உம்–எல்–அக்கராப் தான் இது என்ற மற்றொரு கருத்தும் நிலவுகின்றது. கிரேக்க மொழி அறிந்த யூதர்கள் காலத்தில் இவ்விடம் அக்கிரபத்தானே என்று அழைக்கப்பட்டது. இவ்விடத்தில்தான் யூதா மக்கபேயு இதுமேயர்களைத் தோற்கடித்தார் (1 மக் 5:3).

அகிரா (AHIRA – சகோதரன் நண்பன் ஆவான்)

அகிரா ஏனானின் மகனாவார். நப்தலி குலத்தின் தலைவன் (எண் 1:15; 2:29; 7:78–83; 10:27). இஸ்ராயேல் மக்கள் தொகை கணக்கெடுப்பிலும், பாலைவனத்தில் ஆற்றப்பட்ட மற்றப் பணிகளிலும் மோசேக்கு உதவியாளர்களாக இருந்த பன்னிரண்டு குலத்தின் தலைவர்களில் இவரும் ஒருவராவார்.

அகிராம் (AHIRAM – என் சகோதரன் உயர்த்தப்பட்டான்)

அகிராம் பென்யாமினுடைய மூன்றாவது மகனாவார். இவர் அகிராமியர்களின் குடும்பத் தலைவனாவார் (எண் 26:38). நாளாகம ஆசிரியர் தந்துள்ள பென்யாமின் வழி மரபு பட்டியலில், அகராகு தான் இவரது மூன்றாவது புதல்வர் என்று எழுதப்பட்டிருக்கிறது (1 நாள் 8:1). ஆனால் அகிராம் என்றுதான் இடம் பெறவேண்டும் என்பது பலஅறிஞர்களின் கருத்து. இதே மாற்றம் முதல் நாளாகமத்தில் (7:12) அகேர் என்ற பெயருக்குப் பதிலாக இடம் பெறவேண்டும். மேலும் மற்றொரு வழி மரபுப் பட்டியலில் ஏகீ, உரோசு, முப்பிம், குப்பிம் போன்றவர்கள் தான் தான் பென்யாமினின் மக்களாகத் தரப்படுகின்றனர் (ஆதி 46:21). ஆனால் பெரும்பாலும் இது தவறாகத்தான்

இருக்கவேண்டும். ஏனென்றால் இதனை எண்ணாகமம் இருபத்தி ஆறாம் அதிகாரத்தோடு ஒத்துப்போகும்படி "அகிராம், சுப்பாம், கூப்பாம்" என்று அமைந்திருக்கவேண்டும்.

அகிரி (HAGRI – அலைந்து திரிபவர், என் அழகு)

தாவீதின் படையில் உள்ள திறமை வாய்ந்த வீரர்களில் ஒருவரான மிபிகாரின் தந்தையாவார் (1 நாள் 11:38). "அகிரியின் மகன் மிபிகார்" என்பதற்குப் பதிலாக 2 சாமு 23:36–இல் "காதியனான பானி" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. விளக்கவுரையாளர்கள் இதையே பயன்படுத்துகிறார்கள்.

அகிரிப்பா (AGRIPPA)

யூதேயாவின் இரண்டு அரசர்களின் பெயர்.

1. முதலாம் அகிரிப்பா அல்லது ஏரோது அகிரிப்பா (கி.மு. 10–கி.பி.44) என்பவர் யூதேயாவின் அரசர் (கி.பி. 41–44). அரிஸ்தோபுலின் மகன். பெரிய ஏரோது, அசமோனிய மரபைச் சேர்ந்த மரியம்னே ஆகியோரின் பேரன். ஏரோது அந்திப்பாவின் ஒன்றுவிட்ட அண்ணன் மகன்.

இவர் தன்னுடைய குழந்தைப் பருவத்தையும், இளமைப் பருவத்தையும் உரோமையில் கழித்தவர். அங்கு அவர் ஊதாரித்தனமாக வாழ்ந்தார். தன் தாயின் நண்பர்களின்மூலம் இந்த அரச போக வாழ்க்கையை அடைய முடிந்தது. குறிப்பாகத் தன்னுடைய தாயின் மரணத்திற்குப் பிறகு கடன்கொடுத்தவர்களின் தொல்லையைத் தாங்கமுடியாமல் உரோமையைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. ஒரு நிலையில் இவர் தற்கொலை செய்துகொள்ளவும் நினைத்தார். ஆனால் தன்னுடைய மனைவியினுடையவும், அவருடைய சகோதரன் ஏரோது அந்திப்பாவினுடையவும் உதவியால் திபேரியாவிலுள்ள கடைகளை மேற்பார்வையிடும் வேலை கிடைத்தது. இந்த வேலை நிரந்தரமாக உதவி செய்யவில்லை. ஏனெனில் அவருடைய மனைவியின் இரு சகோதரர்கள் தங்களுக்குள் சண்டைபோட்டுக் கொண்டார்கள். ஆகவே வேலையை ராஜிநாமா செய்துவிட்டார். பின்பு அந்தியோக்கியாவிலுள்ள உரோமை ஆளுநருடன் நட்புக் கொண்டார். அவர் உதவி செய்தார். பல ஆண்டுகளுக்கிடையில் உரோமைக்குச் சென்று மறுபடியும் அரச வீட்டினரோடு உறவு கொண்டார். அவருடைய ஊதாரித்தனமான வாழ்க்கை அவரைக் கடனாளியாகவே வைத்திருந்தது. அவருடைய கட்டுப்பாடற்ற பேச்சினால் அவர் சிறையில் தள்ளப்பட்டார். ஆறு மாதங்களுக்குப் பின் திபேரியு இறந்த பின்பு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

தன்னுடைய நெருங்கிய நண்பன் கலிகுலா திபேரியுவுக்கு அடுத்து அரசனான பின் அகிரிப்பாவிற்கு நல்ல காலம் பிறந்தது. அவர் உடனே சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதுமன்றி, பிலிப்பு, இலிசானியா ஆகியோரின் பகுதிகளின்மேல் சிற்றரசராக நியமிக்கப்பட்டார். கி.பி. 39– இல் ஏரோது அந்திப்பா ஆட்சி செய்த பகுதியும் இவருக்குக் கொடுக்கப்பட்டது. கி.பி. 41–இல் கலிகுலா கொலை செய்யப்பட்ட பிறகு கிளாதியு என்ற புதிய மாமன்னரிடமிருந்து யூதேயா, சமாரியா ஆகிய பகுதிகளையும் பெற்றார். இவ்வாறாகத் தன்னுடைய தாத்தா முன்பு ஆண்டு சென்ற பகுதிகளுக்கு அகிரிப்பா இப்பொழுது அரசனானார். மேலும் அரசவை அங்கத்தினரும் ஆனார்.

கடைசியாக பாலஸ்தீனத்திற்கு அரசனானபொழுது அவருடைய நன்னடத்தை (உண்மையாகவோ, நடிப்போ தெரியாது) தன்னுடைய குடிமக்களான யூதர்களின் நல்ல எண்ணத்தைப் பெற்றுத்தந்தது. பரிசேயரின் நல்லெணத்தை இவர் பெற்றார். யூத மாநிலங்களில் அம்மக்களின் சட்டங்களையும், பாரம்பரியங்களையும் அனுசரிப்பதில் கவனம் செலுத்தினார். கோவிலுக்கு நன்கொடைகளைத் தாராளமாகக் கொடுத்தார். தன்னுடைய பக்திச் செயல்களை எல்லோரும் காணும்படி செய்வதில் கவனம் செலுத்தினார்.

தன்னுடைய தாத்தா செய்தது போலவே, யூதர்கள் அல்லாதவர்கள் வாழும் பகுதிகளில் அவர்களுடைய அனுதாபத்தைப் பெறுவதற்காக கட்டிட வேலைகளை மேற்கொண்டார். அ.ப. 2–

இன் படி யூதர்களைப் பிரியப்படுத்தும் படி இவர் சில ஆதிக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார். செபதேயுவின் மகனான யாக்கோபுவைச் சிரைச் சேதம் செய்தார். பேதுருவைச் சிறையில் இட்டார். உரோமை அரசு இவருடைய நிர்வாகத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தது. சீரியா நாட்டுத் தூதுவரின் தூண்டுதலால் இவருடைய இரண்டு பேராசைமிக்க வேலை ஏற்பாடுகள் உரோமை அரசால் நிறுத்தப்பட்டன.

இவரது மக்கள் இவரை ஒரு கடவுள் என்று அறிக்கையிட்ட சில காலத்திற்குள் கி.பி. 44-இல், இவர் திடீரென செசரியாவில் காலமானார். இவருடைய மரணத்தைப்பற்றி இரண்டு வரலாறுகள் உள்ளன. அவற்றில் ஒன்று அ.ப. 12:19-23 ஆகும்.

2. இரண்டாம் அகிரிப்பா அதாவது மார்கஸ் யுலியு அகிரிப்பா (கி.பி. 27-100) முதல் அகிரிப்பாவின் மகன்.

தந்தையைப் போலவே இவர் உரோமையில் தன்னுடைய கல்வியை முடித்தார். தன் தந்தை இறந்தபொழுது இவர் 17 வயதினர். தன்னுடைய தந்தையைத் தொடர்ந்து அரசபீடம் ஏற கிளாதியு அனுமதி வழங்கினாலும், அவருடைய ஆலோசகர்கள் இதற்கு மாறாக ஆலோசனை கூறினார்கள். ஆகவே யூதேயா, ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கி.பி. 50-இல் கிளாதியு, கால்க்கிசின் நாட்டை (இக்கால லெபனோன்) அகிரிப்பாவுக்குக் கொடுத்தார். சிறிது காலத்திற்குப் பின்பு சிறிய பாகத்திற்குப் பதிலாக பெரிய பகுதியாக ஏரோது பிலிப்புவின் பகுதிகளாகப் பத்தனேயா, திரக்கோனீது, காலனீத்து, அபிலேன் ஆகிய பகுதிகள் 53-இல் அகிரிப்பாவுக்கு அளிக்கப்பட்டன. பின்பு நீரோ காலத்தில் (54-இல்) கலிலேயா, பெரயாவின் சில பகுதிகளும் ஏரோதுக்குக் கொடுக்கப்பட்டன. இவர் எருசலேமிலுள்ள அசமோனிய அரண்மனையைப் பெரிதாக்கினார். செசரியாவில் பல கட்டடங்களை எழுப்பினார்.

இவருடைய சகோதரி பெர்னீக்காவோடு இவர் கொண்டிருந்த தவறான நெருங்கிய உறவு துர்மாதிரிகையாக இருந்தது. மதத்தில் ஆர்வம் அற்றவராகவே வாழ்ந்தார். இதை யூதர்கள் வெறுத்தனர். சில சமயம் சிதறிக்கிடந்த யூதர்களுக்குச் சார்பாக இவன் பேசினாலும், பெரும்பாலும் உரோமையர்களுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தார். குருத்துவத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டார். ஒருவேளை இந்தச் சமய அதிகாரத்தினால்தான் பெஸ்து பவுலின் தற்காப்புரையைக் கேட்க இவரைக் கேட்டிருக்கலாம் (அ.ப. 25:13-26:32). ஆலயக் காரியங்களில் இவர் அதிகாரம் செலுத்தியதால், எருசலேம் குருக்கள் இவரை வெறுத்தனர். கி.பி. 66-70-இல் உரோமைருக்கும் யூதர்களுக்குமிடையே நடந்த போரில் இவர் உரோமையர் பக்கமே பிரமாணிக்கமாய் இருந்தார். போரின் முடிவில் இவர் தீத்துவோடு உரோமை சென்றார். அங்கு உரோமைப் படைத் தலைவனாக நியமிக்கப்பட்டார். இவருக்குப்பின் சந்ததியிருந்ததாகத் தெரியவில்லை. இவரே ஆட்சி செய்த ஏரோதர்களில் கடைசியானவர். கி.பி.100-ஐ ஒட்டி இறந்தார். இதற்குப்பின் இவருடைய அரசு சீரியா மாநிலத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டது.

அகிரியர் (HAGRITES)

யோர்தானுக்கு அப்பால் கிலயாத்துக்குக் கிழக்கில் வாழ்ந்த ஒரு ஆயர் இனம் (1 நாள் 5:10.19-20; சங் 83:6). இவர்கள் ஆகாரின் சந்ததிகளாகக் கருதப்பட்டனர் (சங் 83:6). இவர்கள் மோவாபியா, ஏதோமியா, இசுமயேலியர் ஆகியவர்களோடு சேர்த்து இஸ்ராயேலருக்கு எதிரானவர்கள் என்று பெயர் பெற்று யோர்தானுக்கு அப்பால் சமவெளியில் வாழ்ந்து வந்தார்கள்.

சவுலின் காலத்தில் ரூபன் குலம் ஒருவேளை யோர்தான் பகுதியில் வாழ்ந்த மற்ற மக்களின் உதவியோடு அகிரியர்களை வென்று தன்னுடைய நிலப்பரப்பை விரிவுபடுத்தியது (1 நாள் 5:10:19-22). தாவீது அரசாண்டபொழுது அகிரியரான யாசிசு என்பவருக்கு ஆடுகளைக் கண்காணிக்கும் பொறுப்புக் கொடுக்கப்பட்டது (1 நாள் 27:30). இந்த அகிரியர்கள் இசுமயேலின் தாயான ஆகாரோடு கொண்டுள்ள உறவு தெளிவாகத் தெரியவில்லை.

தேமான் நாட்டினரோடு ஆகாரின் மக்களை தொடர்புப்படுத்திச் சொல்லப் பட்டிருக்கிறது (பாரூக் 3:23). இங்கு ஒன்று படுத்தப்பட்டிருப்பது முக்கியத்துவம் அல்ல. கீழ்த்திசை ஞானத்தைப்பற்றி சொல்லுவதில் உள்ள மரபின்படி உள்ளது. இது 1 அர 4:30; எரே 49:7; ஒப 8 ஆகிய பகுதிகளிலும் சொல்லப்பட்டி ருக்கிறது.

அகிரோத்து (HAHIROTH)

கிழக்கு நைல்நதிக் கழிமுகத் துறையில் உள்ள இடம். எகிப்திலிருந்து யாத்திரை செய்தபோது, இஸ்ராயேல் கடந்துசென்ற ஓர் இடம் (எண் 33:8). காண்க: பியகி ரோத்து.

அகிலாபு (AHLAB – கொழுத்த, செழிப்பான, பலனுள்ள)

அகிலாபு ஆசேர் ஆட்சிப் பகுதியில் உள்ள ஒரு நகரம். நீதி 1:31–இன் படி அகி லாபு நகரத்தில் குடியேறியிருந்த கானா னியர்களை ஆசேரால் வெளியேற்ற இயல வில்லை. அதே வரியில் குறிக்கப்படும் கெலிபா, இப்பெயரின் இரட்டிப்பாகும். தொடர்புடைய விவரிப்பில் (யோசு 14:29) குறிக்கப்படும் மகலாபு இதே நகரத்தைக் குறிக்கலாம். அப்படியானால், தீர் நாட்டுக்கு வடகிழக்கே 6 கி.மீ. தொலை விலுள்ள கிர்பேத்து–ஏல்–மகாலிபு என்ற இடத்தில் அகிலாபு இருந்ததாகக் கூற லாம். அசீரியர்கள் ஏடுகளின்படி மகா லிபு கி.மு. 743–இல் திகிலாத்து பிலேசரா லும், பிற்காலத்தில் செனகொரிபுவாலும் கைப்பற்றப்பட்டது.

அகிலாய் (AHLAI – ஓ அப்படியிருந்தால்)

1. தாவீது குலத்தைச்சேர்ந்த எரகுமே லின் மரபுப் பட்டியலில் இவள் சேசா னின் மகள் (1 நாள் 2:31–இல் வரும் புதல் வர்கள் வழித்தோன்றல்களை உணர்த்து கிறது). இவளது தந்தைக்கு ஆண் வாரிசு இல்லாததால், இவர் இவளை யரிகா என்ற எகிப்திய அடிமைக்கு மணம் செய் வித்தார். இவர்களின் மகனின் பெயர் அத்ததாய் ஆகும்.

2. தாவீதினுடைய வல்ல வீரர்களின் பெயர் பட்டியலில் சாபதுவின் தந்தை யாக அகிலாய் குறிப்பிடப்பட்டிருக்கிறார் (1 நாள் 11:41). சாபது என்ற பெயர் சேசா னின் புதல்வியின் வழி வந்தவர்களில் காணப்படுவதால் (1 நாள் 2:36) அகிலாய் சாபதுவினுடைய தாயாக இருக்க வேண்டும் அப்படியானால் அகிலாய் – 1 ஆவாள்.

அகிலூது (AHILUID – என் சகோதரன் பிறந்துள்ளான்)

அகிலூது என்பவர் தாவீது, சால மோன் மன்னர்களிடம் பதிவு செய்பவரா யிருந்த யோசபாத்தின் தந்தை ஆவார். (2 சாமு 8:16; 1 அர 4:3; 1 நாள் 18:15). சால மோன் ஆட்சியில் 12 மாவட்ட அதிகாரி களுள் ஒருவரான பானாவின் (1 அர 4:12) தந்தையாக (1 அர 4:12) இருக்கலாம்.

அகினதாபு (AHINADAB – என் சகோதரன் உயர்ந்த பண்பு உடையவர், உயர்தரமானவர்).

இத்தோவின் மகன். அகினதாபு சால மோனால் நியமனம் பண்ணப்பட்ட பன்னி ரெண்டு பணியாளர்களில் ஒருவராவார். இவர் மகனாயிம் பகுதிக்குத் தலைவரா வார் (அர 4:14).

அகினோவாம் (AHINOAM – என் சகோதரன், மகிழ்ச்சி, பெருந்தன்மை, அன்பானவன் ஆவான்)

1. அகிமாசின் மகளும், சவுலின் மனைவியுமாவாள் (1 சாமு 14:50).

2. இசிரியேல் என்ற ஊரைச் சேர்ந்த அகினோவாம் தாவீதின் மனைவிகளில் ஒருவள் (1 சாமு 25:43–44). தாவீது பெலிஸ் தியர்களுக்குத் தப்பிச் சென்றபோது, அபிகாயிலும், அகினோவாமும் அவ ரோடு காத்துக்குச் சென்றனர் (27:3). பின்பு சிக்கிலாகில் தாவீது தங்கியிருந்த போது இவர்கள் அமலேக்கியரால் சிறைப்பிடிக் கப்பட்டனர் (30:5). பின்பு தாவீதால் விடுதலை செய்யப்பட்டு கெபிரோனுக்குத் தாவீதுடன் சென்றனர். அங்கு அகினோ வாம் தாவீதின் தலைமகனான அம் னோனை பெற்றெடுத்தாள் (2 சாமு 2:2; 3:2; 1 நாள் 32:1).

அகியா (AHIJAH – யாவேயின் சகோதரன்)

1. சவுல் காலத்தில் சீலோவில் குரு வாக இருந்தவர். அகிதாபுவின் மகனா

வார். குருவாகிய ஏலியின் மகனாகிய பினகாசின் பேரனுமாவார் (1 சாமு 14:3). கிபயாவில் தங்கியிருந்த சவுலின் படை வீரர்களோடு சேர்ந்து அவருக்குப் பணி புரிந்தார். ஏபோதை அணிந்திருந்தார். உடன்படிக்கைப் பெட்டகத்தைக் கண் காணிக்கும் பொறுப்புப் பெற்றிருந்தார். இந்த ஏபோதும், உடன்படிக்கைப் பெட்டகமும் இறைவனது விருப்பத்தை அறிவதற்குரிய அடையாளங்களாகப் பயன்படுத்தப்பட்டன (1 சாமு 14:18–19. 41–42). தலைமைக்குருக்கள் பெயர் பட்டியலில் இப்பெயர் இடம் பெறவில்லை (1 நாள் 6:50–53; எஸ் 7:2–5). இவர் அகிமெலக்கின் மூத்த சகோதரராகவும் முதியவராகவும் இருந்திருக்கலாம். பிள்ளையில்லாது இறந்திருக்கலாம் அல்லது நோபு என்ற ஊரிலுள்ள குருவாகிய அகிதூபுவின் மகனாகிய அகிமெலக்கு என்பதுதான் இவருடைய உண்மையான பெயர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர் (1 சாமு 21–22).

2. சீலோவின் இறைவாக்கினரான அகீயா, முதலில் இஸ்ராயேலரின் முதல் அரசராகிய எரொபயாமின் சார்பாளராகவும், பின்பு எதிர்ப்பார்ப்பாளராகவும் இருந்தார் (1 அர 11:14; 12:15; 15:29; 2 நாள் 10:15). எரொபயாம் பத்துக்குலத்தவர்களுக்குத் தலைவராகப் போகின்றார் என்று அகீயா வாக்களித்து, அவரைச் சாலமோனுக்கு எதிராக கிளர்ச்சி செய்யும் படித் தூண்டிவிடுகிறார் (1 அர 11:29 தொ).

இதனை உணர்த்துவதற்காகத் தான் அணிந்திருந்த புதிய சால்வையை எடுத்து, பன்னிரண்டு துண்டுகளாக்கிப் பத்துத் துண்டுகளை அவருக்கு அளிக்கின்றார். இதைக் கேள்வியுற்ற சாலமோன் எரொபயாமைக் கொல்ல வழி தேடுகின்றார். ஆனால் அவர் ஓடி ஒளிந்து கொள்கின்றார். சாலமோனின் இறப்பிற்குப்பின் எரொபயாம் மன்னனாகிறார். ஆனால் சாலமோனைவிட எரொபயாம் ஒழுக்கத்தில் சிறந்தவராக இல்லை. மேலும் அவரது மகன் நோயுற்றிருக்கும் பொழுது ஆண்டவரின் விருப்பம் என்ன என்று இறைவாக்கினர் அகீயாவிடம் கேட்டறிய தனது மனைவியை மாற்றுடையில் அனுப்புகின்றார். அகீயா அவளை இனம் கண்டுகொண்டு, எரொபயாமின் மகனது திடீர் இறப்பினையும், அவரது பாவங்களின் விளைவாக அவரது சந்ததியின் அழிவினையும் எடுத்துக் கூறுகின்றார் (1 அர 14:1–20; 15:29–30). 2 நாள் 9:29–இல் சாலமோனின் செயல்கள் பற்றி எழுதியவர்களுள் அகீயா ஒருவராகக் குறிக்கப்படுகிறார்.

3. இவர் இஸ்ராயேலின் அரசராவார். பாசாவின் தந்தையாவார். இசக்கார் குலத்தின் உறுப்பினராவார் (1 அர 15:27.33;21:22; 2 அர 9:9).

4. யூதா குலத்தைச் சேர்ந்த எரகுமேலின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 2:25).

5. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த பெலாவின் மகன் (1 நாள் 8:7). 8:4–இல் இவர் அகோவா என்றழைக்கப்படுகிறார்.

6. தாவீதின் வலிமைமிக்க வீரர்களில் ஒருவர். பெலோனியர் என்றும் அழைக்கப்படுகிறார் (1 நாள் 11:36).

7. தாவீது அரசர் காலத்தில் இருந்த ஒரு லேவியர். ஆலயத்தில் சில கருவூலங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார் (1 நாள் 26:29).

8. சீசாவின் மகனாகிய அகீயா சாலமோனது செயலராகவோ, எழுத்தாளராகவோ இருந்தார் (1 அர: 4:3).

அகுசாத்து (AHUZZATH – உடைமை)

இவர் பெயர்–செபாவில் ஈசாக்குடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக கெராரிலிருந்து பெலிஸ்தியனான அபிமெலக்குடன் வந்தவர் (ஆதி 26:26–31). ஆனால் ஆதி 21:22–32 இதிலிருந்து வேறுபட்டக் கருத்தினைக் கொடுக்கிறது. இவர் மன்னனுக்கு அறிவுரை கூறுகின்றப்பணிப் பொறுப்பினைக் கொண்டிருந்துபோல் தோன்றுகிறது.

அகுசாம் (AHUZZAM – உடைமையாளர்)

யூதாவின் தலைமுறை அட்டவணையில் அசுகூர்–நாகரா என்பவர்களின் மகனாக அகுசாம் இடம் பெறுகிறார் (1 நாள் 4:6).

அகுமாய் (AHUMAI – கோழையான)

யூதாவின் மரபு அட்டவணையில் யாகாத்தின் புதல்வர்களில் ஒருவராக அகுமாய்

இடம் பெறுகிறார் (1 நாள் 4:2). "எழுபது நூல்களைப்" பின்பற்றி அறிஞர்கள் அகுமாயை "அகிமாய்" அல்லது "அகிமான்" என்று அழைக்கிறார்கள்.

அகுஸ்து (AUGUSTUS – போற்றத் தகுதி உடையவர், மதிப்பிற்குரிய, உயர்த்தப்பட்ட)

அகுஸ்து என்பது இயேசு பிறந்த பொழுது (லூக் 2:1) மத்திய தரைக்கடல் நாடுகளை ஆண்டுவந்தவரும் உரோமைப் பேரரசை நிறுவியவருமான கையு யூலியஸ் *சீசர்* அக்டாவியான் என்பவருக்கு உரோமானிய ஆட்சிப் பேரவையினால் வழங்கப் பட்ட சிறப்புப் பெயராகும். இவ்வார்த்தை யானது "மதிப்பிற்குரிய" என்று பொருள் படும். இவருக்குப் பின்னால் உரோமை நகரை ஆட்சிபுரிந்த அனைத்து மன்னர் களும் இப்பெயரால் அழைக்கப்பட்டனர்.

அகுஸ்து *சீசர்* கி.மு. 63–இல் செப்டம்பர் திங்கள் 23–ஆம் நாள் பிறந்தார். இவரை இவரது மாமனார் யூலியு *சீசர்* தனது மகனாகவும் தனது உடைமை களுக்கு உரிமையாளராகவும் தத்தெடுத் துக்கொண்டார். இவருக்கு இராணுத்தி லும், அரசியலிலும் பயிற்சி கொடுத்தார். *சீசர்* இறந்தபின், கையு அக்டாவியன் என்ற தன் பெயருடன் தனது மாமனார் பெயரையும் சேர்த்து வைத்துக்கொண் டார். முதன் முதலில் தனது மாமனாரின் தலைமை மெய்க்காப்பாளராய் விளங்கிய மாற்கு அந்தோனியோடு தனது உறவை முறித்துக் கொண்டு, *சீசரின்* படைகள் தனக்கு ஆதரவளிக்க வழிதேடினார். பின் உரோமானிய அரசப்பேரவை அவருக்கு முழு ஆதரவு கொடுத்தது. ஆனால் விரை வில் அதனோடு கொண்டிருந்த தொடர்பை முறித்துக்கொண்டு, கி.மு. 43–இல் உரோமை நகரைக் கைப்பற்றி னார். உடனே மாற்கு அந்தோனியையும், லெப்பிதஸ்ஸையும், தன்னோடு சேர்த்துக் கொண்டு 300 பேரவை உறுப்பினர்களை யும், இரண்டாயிரம் வீரர்களையும் சாவுக்கு உட்படுத்தினார். இம்மூவரும் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு உரோமைப் பேரரசின் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். மேலும் *சீசரைக்* கொலை செய்தவராகிய புருட்டஸ் என்பவரின் படைகளுக்கு எதிராக போரிட்டு அவர்களைத் தோல்வியுறச் செய்தார். அக்டாவியனின் சகோதரி அக்டாவியாளை மாற்கு அந்தோனி மணந்து கொண்டார். அதன்பின் லெப்பிதஸ்லை ஆப்பிரிக்காவுக்கு அனுப்பிவிட்டு, மற்ற இருவரும் சிசிலியை ஆண்ட மக்கள் கட்சித் தளபதியின் படைகளைத் தோற் கடித்தனர்.

கி.மு. 41–க்குப்பின் அந்தோனி தனது கவனம் முழுவதையும் கிழக்குப் பகுதியில் செலுத்தி, பார்த்தியர்களுக்கு எதிராகப் போர்புரிந்து தோல்வியுற்றார். எனவே அவர் அலக்சாந்திரியாவுக்குச் சென்று ஓய்வு எடுத்தார். அங்கிருந்தபொழுது எகிப்து நாட்டு அரசி கிளியோபத்திரா வுடன் காதல் உறவு கொண்டார். கி.மு. 35–இல் தனது மனைவி அக்டாவியாளை நீக்கிவிட்டு, கிளியோபத்திராவை திரு மணம் செய்துகொண்டார். எனவே கி.மு. 31–இல் அகுஸ்து *சீசர்* கிளியோபத்திரா விற்கு எதிராகப் போர் புரிந்து எகிப்து நாட்டைக் கைப்பற்றி உரோமை ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக் கொண்டார்.

கி.பி. 14–வரை உரோம் பேரரசை ஆண்டுவந்தார். கி.மு. 27–இல் "அகுஸ்து" என்ற சிறப்புப் பெயர் இவருக்கு வழங் கப்பட்டது. படைகளையும் அயல்நாட்டுக் காரியங்களையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டு, உள்நாட்டுக் காரியங் களை ஆட்சிப் பேரவையின் பொறுப்பில் கொடுத்தார். அதனுடைய எண்ணிக்கை யையும் குறைத்தார். கி.பி. 27–இல் தன் பதவிகளையெல்லாம் ராசினாமா செய்ய முன் வந்தார். ஆனால் ஆட்சிப் பேரவை அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக அவருக்கு அகுஸ்து" என்ற பட்டத்தை வழங்கியது. ஆட்சிப் பேரவை, உரோமை, இத்தாலியா, படைப்பாதுகாப்புத் தேவைப் படாத பகுதிகளையும் கவனித்துக் கொண் டது. மற்ற பகுதிகளையும், அயல் நாட்டுக் காரியங்களையும் அக்டாவியன் தனக்கே பொறுப்பான ஆளுநர்கள் வழியாக ஆட்சி செய்தார். உண்மையில் எல்லா அதிகாரத் தையும் தன்னிடமே கொண்டிருந்தாலும், தோற்றத்திற்கு இவர் தான் தனியாக இருந்து தன் மனம் போனபடி ஆட்சி புரியாமல் அரசப் பேரவையின் வழியாக

ஆட்சிப் பொறுப்பை நடத்தினார். இவர் மக்களார்வத் தலைவர் அல்லது நடுவர். மாநிலங்களில் ஆளுநர்களின் வழியாக நேரடியாக ஆட்சி செய்தார். இவர்கள் அகுஸ்துவுக்கு மட்டுமே பொறுப்பானவர்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொழுதும், திட்டங்களை வகுக்கும்பொழுதும், இவர் தனித்திருந்து செயல்படாமல், அரசப் பேரவையில் கலந்துரையாடி முடிவு எடுத்தார். இவர் அரசபட்டத்தை விரும்பவில்லை: நிராகரித்துவிட்டார். இவற்றால் முதல் "குடிமகன்" என்ற பேற்றையும் உரிமையையும் பெற்றார். உரோமையின் அரசியல் பெயரளவிற்குக் குடியரசாக இருந்த போதிலும் அகுஸ்து சர்வாதிகாரியாகவே விளங்கினார். அவர் காலத்திற்குமுன் பேரரசில் புகுந்த பல ஊழல்களைக் களைந்தார். இதனால் மக்களின் அன்பைப் பெற்றார். இவர் காலத்தில் உரோமைப் பேரரசு மிகுந்த உயர்நிலை அடைந்ததால், அது பொற்காலம் எனப்புகழ்பெற்றது. கி.பி. 14–இல் அகுஸ்து காலமானதிலிருந்து அவர் மரபினர் பலர் உரோமைப் பேரரசர்களாக ஆண்டனர். இவர்கள் சீசரின் குடும்பத்தைச் சார்ந்தவர்களாகையால் சீசர் என்னும் பெயர் பேரரசர்களின் பட்டப்பெயராக மாறிற்று. இவருக்குப் பின், இவரது மருமகன் திபேரியு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்.

புதிய ஏற்பாட்டில் பெயர் குறிப்பிடப்படும் பேரரசர்களுள் இவரும் ஒருவர். இவரது ஆட்சிக் காலத்தில்தான், வரி சேகரிப்பதற்காக, உலக முழுமையும் மக்கள் தொகைக் கணக்கிடும்படி இவர் விட்ட கட்டளைக்கேற்ப இயேசு பெத்லகேமில் பிறந்தார் (லூக் 2:1). தொடக்கத்தில் பெரிய ஏரோது அந்தோனிக்கு ஆதரவு அளித்தார். ஆனால் பின்பு பெரிய ஏரோதுக்கு அகுஸ்து புரவலனாக இருந்து, அவரை யூதர்களின் அரசனாக உறுதிப்படுத்தினார்.

அகுஸ்துவின் பட்டாளம்
(AUGUSTAN COHORT)

இது சர்ச்சைக்குரிய ஒரு சொற்றொடர். உரோமைப்படையின் ஒரு பிரிவாகும். ஏறக்குறைய 600 பேரைக் கொண்டது. அகுஸ்து என்ற பெயரைக் கொண்டது. அகுஸ்துவின் முதலாவது படைப்பிரிவாக இருக்கலாம். கி.பி. 6–க்குப்பின் சீரியாவிலும், 2–ஆம் அகிரிப்பாவின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 50–100) பத்தனேயிலும் காணப்படும் கல் பொறிப்புகள் இப்படைப் பிரிவுக்குச் சான்று கூறுகின்றன. அ.ப.27:1 இப்படைப் பிரிவைக் குறிப்பிடுகிறது.

செசரியாவில் தங்கியிருந்த ஐந்து துணைப் பட்டாளங்களை லூக்கா அறிந்திருக்கவேண்டும். அவற்றில் ஒன்று அகுஸ்து என்ற பெயரை மதிப்புமிக்க புனைப்பெயராகக் கொண்டிருந்தது.

லூக்கா, பட்டாளம் என இப்படிக் குறிப்பிடுவது யூலியுவின் பெருமையைக் குறைத்து, பவுலின் பெருமையை உயர்த்தவே. எனவே பவுல் அகுஸ்துவின் காவலில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

உரோமையர் பட்டாளங்கள் அவர்கள் தங்கியிருந்த இடத்தைச் சார்ந்தவர்களைப் பொதுவாக கொண்டிருந்ததால், செசரியாவில் இருந்தவர்கள் பெரும்பாலும் செசரியாவையும் சமாரியாவையும் சேர்ந்தவர்களே. எனினும் லூக்கா சமாரியாவில் உள்ள பட்டாளம் என்பதற்குப் பதில், அகுஸ்து பட்டாளம் என தவறுதலாக எழுதி இருக்கலாம். இப்பட்டாளம் செபஸ்தேயிலிருந்து வந்திருந்தாலும், லூக்காவிற்கு அவர்கள் எங்கிருந்து

அகுஸ்துவின் தலையையுடைய நாணயம்

அகுஸ்துவின் நெஞ்சளவு உருவம்

வந்தனர் என்பது முக்கியமல்ல. அவரது ஒரே எண்ணம் பவுலின் பெருமையை உயர்த்துவதே.

லூக்காவின் கருத்தின் அடிப்படையில் பார்த்தால் அகுஸ்து பட்டாளம் அரசருக்கும், இராணுவத்திற்கும் இடையே செய்திகளைக் கொடுக்கின்ற ஒரு படைப்பிரிவை சார்ந்தது என்றும், கைதிகளை உரோமிற்கு அனுப்பும் பணியை செய்து வந்தவர்கள் என்றும் தெரிகிறது. முக்கிய கைதியான பவுல் சீரியாவிலுள்ள நூற்றுவர் தலைவரிடம்தான் ஒப்படைக்கப்பட வேண்டுமா என்பது கேள்வி. லூக்காவிற்கு யூலியு, அகுஸ்து என்ற இரு உரோமைப்பெயர்களும் பெருமை வாய்ந்ததாகத் தெரிகிறது. இப்பட்டாளம் எந்த கும்பலைச் சார்ந்தது என்பது முக்கியமல்ல. பவுல் அகுஸ்து பட்டாளத்தில் உள்ள நூற்றுவர் தலைவன் யூலியுவின் பொறுப்பில் விடப்பட்டார் என்பதுதான் முக்கியம்.

அகேர் (AHER – மற்றொருவன்)

நாளாகமத்திலுள்ள குலமரபுப் பட்டியலின்படி இவர் உண்மையில் பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். கூசிமின் தந்தையாவார் (1 நாள் 7:12). ஆனால் எழுபது நூலின் அடிப்படையில் திருத்தப்பட வேண்டியதிருக்கிறது. இவர் ஏகீ ஆகவோ (ஆதி 46:21) அகிராமாகவோ (எண் 26:38) அல்லது அகராகு ஆகவோ (1 நாள் 8:1) இருக்கலாம்.

அகோகி (AHOHI)

மசோரெட்டிக் வாசகம் உரைப்பது சரியென்றால், இவர் தோதோவின் தந்தை. தாவீதின் வலிமைமிக்க மூன்று வீரர்களில் ஒருவராகிய எலயாசர், இவரது பேரன் ஆவார் (2 சாமு 23:9). அவருடைய வழி வந்தவர்களின் வீரச் செயல்களுக்காக அளிக்கப்பட்ட அகோகியர் என்ற தந்தை வழிப் பெயரைத்தவிர, அகோகி என்பது விவிலியத்தில் வேறு எங்கும் சுட்டிக் காட்டப்படவில்லை.

1 நாள் 11:12–இல் வரும் இணைப்பகுதியின் அடிப்படையில் "அகோகின் மகன்" என்பது (மசோரெட்டிக் வாசகம்) அகோகியர் என்று கூறப்படவேண்டும் என்பது பல அறிஞர்களின் கருத்து. மேலே கூறப்பட்ட கூற்றுச் சரி என்றால், இந்த தந்தை வழிப்பெயரை நாளாகம ஆசிரியர் பயன்படுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அகோகியர் (AHOHITE)

தோதோ (1 நாள் 11:12; 2 சாமு 23:9) சல்மோன் (2 சாமு 23:28) ஈலாய் (1 நாள் 11:29) ஆகிய தாவீதின் மூன்று வல்ல வீரர்களுக்கு அளிக்கப்பட்ட, தந்தை வழிப்பெயராகவோ இனப்பெயராகவோ இருக்கலாம்.

ஆகோவா (AHOAH – சகோதரத் தன்மையுடைய)

இவர் பென்யாமினின் மரபுப் பட்டியலில் இடம் பெறுகின்ற பெலாவின் ஆறாவது மகன் (1 நாள் 8:4). பென்யாமினின் பேரன். அகோவா என்பது ஒரே ஒரு முறைதான் விவிலியத்தில் காணப்படுவதால் அகீயா என்பதைத் தவறாக அகோவா என்று குறிப்பிட்டிருக்கலாம் என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

அக்கதா (HAGGADAH – எடுத்துரைத்தல், போதகம்)

விவிலிய காலத்திற்குப்பின் வந்த யூதத்துவத்தில் விவிலியத்தில் சட்டமல்லாத நிகழ்ச்சியுரைப் பகுதிகளுக்கு அளிக்கப்படும் விளக்கவுரைகளாகும். இவ்வாறு அக்கதா பழைய ஏற்பாட்டின் முக்கியமாக வரலாற்றுப் பகுதிகளுக்குக் கோட்பாடு ஒழுக்க நியதி அடிப்படையில் விளக்கம் அளிக்கிறது. பெரும்பாலும் அக்கதா, நாடோடிப் பாடல்கள், வீர காவியங்கள், கதைகள், பழமொழிகள் உவமைகள் முதலியவற்றைப் பயன்படுத்தி நிகழ்ச்சியுரைகளை ஆழப்படுத்தி மெருகூட்டுகிறது. இது உண்மையான பக்தியையும், சமயஉணர்வையும் தூண்டும் நோக்கத்துடன் எழுதப்பட்டது. மற்றொரு யூத விளக்க முறையாகிய 'அலாக்காவை' நிறைவு செய்கிறது. அலாக்கா விவிலியத்தின் சட்டப்பகுதிகளுக்கு விளக்கம் அளிக்கிறது. இஸ்ராயேலின் கடமை என்ன என்பதை எடுத்துக் கூறுகிறது. இதை ஆர்வத்தோடு நிறைவேற்ற அக்கதா அவரைத் தூண்டுகிறது. பின்பு புதிய ஏற்பாட்டிலும் போதனை அளிக்கும்போது

இதே வகையான முறையும் பொருட்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் புதிய ஏற்பாடு வேத விளக்க நூல் அல்ல என்ற அளவில் அது அலாக்காவுடன் தொடர்புடையதன்று. அது அக்கதா பகுதிகளைக் கொண்டிருப்பதாகக் கூறவும் முடியாது.

அக்கலிதமா (AKELDAMA – இரத்த நிலம், துக்க நிலம்)

யூதாசு நாண்டு கொண்டு இறந்த இடம். அ.ப. 1:17–18–ன்படி இயேசுவைக் காட்டிக் கொடுத்தவரும், அவருடைய சீடருமான யூதாசு, அவரைக் காட்டிக் கொடுக்க வாங்கிய "கூலியைக்கொண்டு ஒரு நிலம் வாங்கி அதில் தலைகீழாக விழ, அவர் வயிறு வெடித்து குடலெல்லாம் சிதறிப்போயின . ஆகவே இவ்விடம் இரத்த நிலம் எனப்பட்டது. இப்பெயர் விளக்கம் மத்தேயுவின் விவரிப்போடு (மத் 27:7–8) ஒத்துப்போகிறது எனலாம். அதன்படி இயேசுவைக் காட்டிக் கொடுக்கப்பெற்ற கூலிப்பணத்தை யூதாசு ஆலயத்தில் எறிந்துவிட்டுச்சென்றார். தலைமைக் குருக்கள், "இரத்தத்தின் விலையைக்" கொண்டு அன்னியரை அடக்கம் செய்ய "குயவன் நிலத்தை வாங்கினார் (எரே 18:2). அதனால் இந்நிலம் "இரத்த நிலம்" என்று அழைக்கப்பட்டது.

கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த யுசெபியசின் சான்றுபடி இன்னோம் பள்ளத்தாக்கில் தெற்குச் சரிவிலுள்ள வாடி–ஏர்–ரபாபே என்ற ஓடை அருகிலுள்ள நிலமாகும் இது.

அக்கறை, கவனம் (Care & Carefulness)

1. அக்கறைபடுவதற்காக அறிவுரைகள்:- அக்கறை என்பது முதலாவதாக ஒரு செயலையோ, பணியினையோ செய்து முடிப்பதற்காக ஒரு மனிதன் கொண்டுள்ள கவனமாகும். தனது எல்லா கடமைகளுக்குமான மனிதனுடைய இத்தகைய புத்திசாலித்தனமான மற்றும் சுறுசுறுப்பான, கவனத்தை விவிலியம் வியந்து பரிந்துரை செய்கிறது. எடுத்துக்காட்டாக முதலில் வீடு (பழ 31:10–31), ஒருவரது பணி (சீரா 38:24–34), அல்லது சமூகக் கடமைகள் (50:1–4) முதலிய தாழ்வான பொறுப்புகளைப்பற்றி அக்கறைகொள்ளவேண்டும். விவிலியமானது, ஞானத்தைத் தேடுதல் (ஞான 6:17; சீரா 39:1–11) அல்லது ஒழுக்க முன்னேற்றம் (1 திமோ 4:15; தீத் 3:8; 1 கொரி 12:25) அப்போஸ்தலரின் ஆர்வம் (2 கொரி 11:28; 4:8 தொ) போன்ற ஆன்மீக கடமைகளை இன்னும் சற்று உயரிய இடத்தில் வைக்கின்றது. தம்முடைய பணியினை நிறைவேற்றுவதற்காக, எந்தவித வரையறையுமின்றி தம்மையே அளித்த இயேசுவே இங்கு உயர்ந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார் (லூக் 12:50; 22:32). ஆண்டவருடைய செயல்களுக்கான அக்கறையானது எவ்வளவு உயர்ந்தது என்றால் தேவையான ஒரே பொருளின் மீது நேரடியாகக் கவனம் முழுமையாகவும் அக்கறை செலுத்துவதற்காக, கிறிஸ்துவின் அழைப்பிற்கேற்ப, அது உலக அக்கறைகளைத் துறந்துவிட நம்மை நடத்திச் செல்லக்கூடும் (1 கொரி 7:32–33; லூக் 10:41 தொ).

2. அக்கறையும் விசுவாசமும்:–விவிலியமானது எல்லா பகுதிகளிலும் கவனக் குறைவையும், சோம்பலையும் கண்டிக்கிறது. ஆனால், மனிதன் ஆன்மீகக் கவனம் சிதைவுறுமாறு உலக அக்கறைகளால் மூழ்கடிக்கப்படக்கூடிய ஆபத்தான பாதையில் மனிதன் தன்னையே ஈடுபடுத்துவதையும் விவிலியம் அறிந்திருக்கிறது (லூக் 8:14; 16:13; 21:34). இயேசு இந்த அபாயத்தை வெளிப்படையாகவே கண்டிக்கிறார். இறையரசின் மீது மட்டுமே அக்கறை கொள்ளுமாறு அவர் தமது சீடர்களை அழைக்கிறார்.உலகப்பொறுப்புகள் ஒரு கடமையாக இருப்பதால், அவர்களுக்கு தேவையான ஆவியின் விடுதலை கவனமின்மையால் வராது; மாறாக, இறைவனின் தந்தைக்குரிய அன்பின்மீது கொண்ட நம்பிக்கையினின்றே வரும் (மத் 6:25–34 இ: 16:5–12).

எதைப் பற்றியது ஆனாலும், அக்கறையானது தன்மையிலேயே நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் உரிய அழைப்பாக விளங்குகின்றது. சில குறிப்பிட்ட சமயங்களில் நன்கு நிறைவேற்றப்பட்ட ஒரு செயலானது வரவிருக்கும் நாளைநோக்கிச் "சிரிப்பதற்கு" ஒருவனை அனுமதிக்குமானால் (பழ 31:25) அதில் ஈடுபட்டுள்ள அக்

கறையானது, உறுதியற்ற நிலை, பயம், அங்கலாய்ப்பு ஆகியவற்றில் தன்னுடைய குறைபாடுகளை அவன் உணர்ந்து கொள்வதற்கான வாய்ப்பாகவே பெரும்பாலும் விளக்குகின்றது. இவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்ற துன்பமானது எல்லா மனிதருக்குமே பொதுவான ஒன்றாகும் (ஞான 7:4). "உன்னதர் அனைத்தின் மீது அக்கறை கொண்டுள்ளார்" என்னும் விசுவாசத்துடன் (ஞான 5:15) தங்களது கவலைகளின் சுமையானது, அது தங்களுடைய பாவங்களின் விளைவாகவே இருந்தாலும் (சங் 37:19; லூக் 15:16–20) அச்சுமையினை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடுமாறு அது அழைக்கின்றது (சங் 55:23; 1 பேதுரு 5:7). உண்மையில் "இவ்வுலகை அவர்கள் உபயோகிக்காதது போன்று" எல்லாத்தேவையான அக்கறையுடன் அவர்கள் இனி உலகை உபயோகிக்க முடியும் (1 கொரி 7:31). உண்மையில் எல்லா அக்கறைகளுக்கும் அப்பால், "அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவுக்குள் அவர்கள் உள்ளத்துக்கும் மனதுக்கும் அரணாயிருக்கும்" (பிலி 4.7).

அக்காதியன் (AKKADIAN)

பொதுவாக கி.மு. 2000 முதல் 500 வரை மெசபொத்தாமியாவில் பேசப்பட்ட மொழி இவ்வாறு அழைக்கப்படுகிறது. கீழ்த்திசை செமித்திக் வகுப்பைச் சேர்ந்தது. இது முன்பு அசீரிய மொழி என்று அழைக்கப்பட்டது, ஏனெனில் இதனுடைய இலக்கிய ஞாபகச் சின்னங்கள் முதலில் அசீரிய மொழியில்தான் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மொழி மெசபொத்தோமியாவில் கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. செமித்திய மக்களின் ஆதிக்கம் அதிகரித்தபோது, இம்மொழி சுமேரிய மொழியை அகற்றி, அரமேயிக் மொழி அதன் இடத்தை எடுத்துக் கொள்ளும் வரை, மக்களின் பொது மொழியாகத் திகழ்ந்தது. இது பாபிலோனியா, அசீரியா ஆகிய இரண்டு முக்கிய பிரிவு மொழிகளில் காணப்படுகிறது. இது சுமேரியா ஆப்பு வடிவ எழுத்துக்களால் எழுதப்பட்டது. செமித்திக்கு மொழியில் உள்ள மெய்யெழுத்துக்களுக்கு சுமேரியா ஆப்பு வடிவ எழுத்துக்களில் அடையாளங்கள் இல்லாமையால் பல சுமேரிய வார்த்தைகளை இது ஏற்றுக்கொண்டது. கி.பி. 1835–இல் இருந்து பல அக்காதிய ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, விளக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டு உலகைப் பற்றிப் புரிந்துகொள்ள தனிச்சிறப்பான ஒரேமூலம் மட்டுமன்றி, இம்மொழி எபிரேய மொழியைப் புரிந்துகொள்ள முக்கிய உதவியாகவும் அமைந்துள்ளது.

அக்காது (AKKAD, ACCAD)

வடபாபிலோனியாவில் சின்னார் நாட்டின் ஒரு நகரம். நிம்ரோத்தின் ஆட்சிக்குட்பட்டது. பாபேல், எரேக்கு ஆகிய நகரங்களோடு சேர்த்துக் குறிக்கப்படுகிறது (ஆதி 10:0). முதலாம் சார்கோனின் (கி.மு. 2242–2186) தலைநகராக நிறுவப்பட்டது. இவரது அரசு மரபு மெசபொத்தாமியாவையும் சீரியாவின் ஒரு பகுதியையும் சிறிய ஆசியாவின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியது. நராம்–சின் என்பவரின் 56 ஆண்டு ஆட்சிக் காலத்தில் நகரும் பேரரசும் அரசியலிலும், கலாச்சாரத்திலும் சிறந்து விளங்கியது. சார்–காலி–சாரியின் காலத்தில் (கி.மு. 2100–ஐ ஒட்டி) அக்காது அழிக்கப்பட்டது. மீண்டும் கட்டப்படவே இல்லை.

அக்காது பொதுவாக வடபாபிலோனியாவைக் குறிக்கும். "அக்காது–சுமோநாடு" என்ற சொற்றொடர் பாபிலோனியாவைப் பொதுவாகக் குறிக்கும். அக்காதியன் என்ற சொல், செமித்திய மொழியைக்குறிக்கும் அக்காதிய மூலமொழியாகும். அசீரியர், பாபிலோனிய மொழிகள் அதன் பிரிவு மொழிகளாகும்.

அக்காதை இப்போது அடையாளங்காட்ட முடியாது. அது சிப்பார் அல்லது பாபிலோனுக்கு அருகில் இருக்கவேண்டும். ஒரு வேளை இக்காலத் தேல்–தெர் ஆக இருக்கலாம்.

அக்காத்தான் (HAKKATAN – *சிறுவன்*)

அசிகாது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர். யோகானானின் தந்தை. பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று எஸ்ராவோடு எருசலேமிற்குத் திரும்பி வந்தவர்களில் இவரும் ஒருவர் (எஸ் 8:12).

அக்காயா (ACHAIA – தொந்தரை, மனக்குழப்பம்)

அக்காயா நாடு கோமேரின் பாடலி லேயே காணப்படுகிறது. எரோடொத்தல் குறிப்பிடுகிறார். அது பெலொப்போனே யசில் இருப்பதாகக் கூறுகிறார்.

இப்பெயர் பெலொப்போனேயிசின் ஒரு பகுதியைக் குறிக்க மூலத்தில் பயன் பட்டது. பிற்காலத்தில் கிரிசின் தென் பகுதி முழுவதையும் குறித்தது. கிரிசின் சுதந்திர ஆட்சிக் காலத்தில் அக்காயா நாட்டுக் குழு முக்கியம் வாய்ந்த அரசியல் சக்தியாகத் திகழ்ந்தது. இக்குழுவில் ஏதன்சும் கொரிந்தும் சேர்ந்திருந்தன. கொரிந்து தலைமை தாங்கியது. கி.மு. 146–இல் கொரிந்து நகரம் உரோமையர் களால் அழிக்கப்படும்வரை, இக்குழு செல்வாக்குக் கொண்டிருந்தது. உரோ மையர் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது, இப் பகுதி, மக்கதோனியாவுக்குத் தெற்கிலுள்ள ஓர் உரோமை மாகாணமாகியது. ஓர் ஆளுநர் ஆண்டார்.

பவுல், தனது இரண்டாவது மூன்றா வது வேதபோதகப் பயணத்தில் அக்கா யாவைப் பார்க்கச் சென்றார் (அ.ப. 19:21–ஐக் காண்க) அப்போது கல்லியோ அக்காயாப் பகுதிக்கு ஆளுநராக இருந் தார் (18:12). 18:27–வின்படி அப்பொல்லோ இப்பகுதிக்குப் போக விரும்பினார். இந்தப் பகுதியில் முதலில் மனம் திரும்பி யவர்களில் ஸ்தேவானாவும் ஒருவர் (1 கொரி 16:15). அக்காயாவும் மக்கதோனி யாவும் எருசலேமில் வறுமையில் தவித்த திருச் சபைக்குப் பொருள் உதவி செய்தன (உரோ 15:26;2 கொரி 9:2). மக்கதோனியா வில் தெசலோனிக்கா திருச்சபை, அக் காயப் பகுதியிலுள்ள திருச்சபைக்கு ஒரு எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகிறது. (1 தெச 1:7–8). கொரிந்தியருக்கு எழுதப் பட்ட 2–ஆம் திருமுகம் அக்காயா முழுவதி லுள்ள இறை மக்களையும் நோக்கி எழுதப்பட்டதாகும் (2 கொரி 1:1; 11:10).

அக்காயிக்கு (ACHAICUS – அக்காயாவைச். சேர்ந்தவன்)

கொரிந்தின் முதல் கிறிஸ்தவர்களில் ஒருவர் (1 கொரி 16:17). பவுல் கொரிந்தி யருக்கு எழுதும்போது எபேசு நகரில் இருந்தார். ஸ்தேவானா, போர்த்துனாத்து ஆகியோர், அவரோடு இருந்தவர்கள். 1 கொரி 7:1–இல் குறிப்பிடப்படும் கடிதத தைக் கொண்டு வந்தவர்கள் இம் மூவ ராகத்தான் இருக்கவேண்டும். கொரிந்திய ருக்கு எழுதப்பட்ட முதலாம் திருமுகத் தைக் கொண்டு சென்றவர்களும் இவர் களாகத்தான் இருக்கவேண்டும். இவர்கள் அப்போஸ்தலருடன் நல்ல உறவு கொண் டிருந்தனர் என்பது தெளிவாகிறது.

அக்கான் (AKAN – கோணலான, வளைந்து)

ஏசாவின் குடும்பத்தைச் சேர்ந்த கோரியனான ஏசேரின் புதல்வர்களில் ஒருவர் (ஆதி 36:27). 1 நாள் 1:42–இல் இவர் யாக்கான் என்றழைக்கப்படுகிறார். காண்க: யாக்கான்.

அக்கிம் (ACHIM – யாவே நிறுவுகிறார், யாவே நிலை நாட்டுகிறார்)

யோசேப்பின் தூரத்து மூதாதையர். இவர் இயேசுவின் மூதாதையர் பட்டியலில் மத்தேயுவால் மட்டுமே குறிக்கப் பெறு கிறார் (மத்1:14)

அக்கியோர் (ACHIOR–ஒளியின் சகோதரன்)

அசீரியப் படைத்தளபதியான ஒலபெரினே யின் கீழ் அம்மோனியர் படைத்தலைவன் ஆவார். இவர் இஸ்ராயேல் மக்களைக் கடவுள் கட்டாயம் காப்பார் என்று ஒலபெரினேயுக்கு எச்சரிக்கை செய்தும் அவர்கள் மீது படையெடுப்பதைத் தடுக்க முயன்றார் (யாத் 5:50.86). வரலாறு பற்றிய அக்கியோரின் சமய விளக்கத்தை, ஒலபெரினேயின் மூத்த தலைவர்கள் புறக் கணித்து, அவரைக் கொல்ல எண்ணினர் (5:22–23). இஸ்ராயேலரோடு கொல்லப் படுவதற்காக அக்கியோரை இஸ்ராயேலரி டம் அனுப்பிவிட்டனர்.

யூதித் ஒலபெரினேயின் தலையைக் கொணர்ந்து காட்டியபோது, அக்கியோர் அச்சத்தால் மயங்கித் தரையில் முகம் குப்புற விழுந்தார். பிறகு இறைவன் செய்துள்ள அரும்பெரும் செயல்களைக் கண்டு வியப்புற்று அக்கியோர் மென் மேலும் கடவுள் மீது ஆர்வத்தோடு உறுதி யான விசுவாசம் கொண்டவரானார். விருத்தசேதனம் செய்து கொண்டார்.

இஸ்ராயேல் மக்களோடு சேர்ந்து கொண்டார் (14:10). விருத்தசேதனம் பெற்ற வெகு சில அம்மோனியருள் இவரும் ஒருவர் (உபா 23:3–இல் வரும் கட்டளையைக் காண்க).

அக்கிரபத்தேன் (AKRABATTENE)

இது யூதேயா, இதுமேயா எல்லையில் உள்ள ஒரு கோட்டை. அக்கிரபிம் ஏற்றத்துக்கு அருகில் உள்ளது. இங்கு யூதா மக்கபேயு இதுமேயர்கள்மேல் வெற்றி கொண்டார் (1 மக் 5:3) செக்கேமுக்குத் தென் கிழக்குத் திசையில் அக்கிரபத்தேன் மாவட்டம் உள்ளது என்று யோசிபஸ் கூறுகின்றனர். வட யூதேயாவிலுள்ள ஒரு கோட்டையை 1 மக் 5:3–இல் கூறப்பட்டுள்ள அக்கிரபத்தேன் என்று சிலர் அடையாளம் காட்டுகின்றனர்.

அக்கிரமி (MAN OF LAWLESSNESS)

இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவரை எதிர்த்து நிற்கும் தீமையே உருவான மனிதனே இவன் (2 தெச 2:8). புராணச் சாத்தான் தன்மையுடையவன். இது ஒரு உருவகமாகக் கூறப்படும் தீய சக்தியாகும். காண்க: எதிர் கிறிஸ்து.

அக்கிலா (AQUILLA – கழுகு)

1. அக்கிலாவும் பிரிசிக்கில்லாவும் கொரிந்திலும், எபேசுவிலும் பவுலுடைய தோழர்களாக இருந்த கணவன் மனைவியர். பவுல் தனது மடல்களில் பிரிசிக்கில்லாவைப் பிரிசிக்கா என்று குறிப்பிடுகிறார்.

அ) முந்திய வாழ்க்கை:- அக்கில்லா என்பவர் போந்து என்ற ஆசியா மாகாணத்தைச் சேர்ந்த ஒரு யூதர் (அ.ப. 18:2). இவர் இத்தாலிக்குக் குடிபெயர்ந்தார். ஆனால் யூதர்கள் உரோமைப் பேரரசிலிருந்து வெளியேற்றப்பட்டபோது (கி.பி. 49) கிளாதியுவின் சட்டப்படி இவரும் தன்னுடைய மனைவியோடு உரோமையிலிருந்து வெளியேற்றப்பட்டார். பிரிசிக்கில்லாவின் குடும்பப் பெயர் கொடுக்கப்படவில்லையாதலால், இவள் ஒரு யூதப்பெண் அல்ல, உரோமைப் பெண் என்று தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இரண்டு பெயர்களும் இலத்தீன் மொழியைச் சேர்ந்தவை. உரோமைத் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. இவர்கள் இத்தாலியிலிருந்து வெளியேற்றப்பட்டபொழுது கிறிஸ்தவர்களாக இருந்தார்களா அல்லது கொரிந்தில் கிறிஸ்தவர்களாக ஆனார்களா என்று சரியாகத் தெரியவில்லை. ஆளுநர் கல்லியோவைப் பற்றியுள்ள வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டும், புதைபொருள் கண்டுபிடிப்புகளைக் கொண்டும் இவர்கள் ஏறக்குறைய கி.பி 49–50 இல் இத்தாலியாவிலிருந்து வெளியேற்றப்பட்டு கொரிந்திற்குச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது (அ.ப. 18:12). அக்கிலாவும், பிரிசிக்கில்லாவும் கூடாரம் கட்டுபவர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. இது கூடாரத்திற்கு துணி நெய்பவர்களாகவோ அல்லது தோலினால் கூடாரம் கட்டுபவர்களாகவோ இவர்களைக் குறிக்கலாம்.

ஆ) பவுலுடன் தோழமை:- பவுல் தனது இரண்டாம் போதகப் பயணத்தில் முதன் முறையாக கொரிந்திற்கு வந்தபொழுது இவர்கள் அந்நகர்வாசிகளாக இருந்தார்கள் (18:2). பவுலும் அவர்களும் ஒரே தொழிலையே செய்து வந்ததால், அவர்களுடன் உடனே தொடர்பு கொண்டார். அக்கிலா ஒப்பந்தக்காரனாகவும் பவுல் அவர் அடியில் வேலை செய்தும் இருக்கலாம். தன்னிடம் வேலை செய்பவர் தங்கும் அளவிற்கு வீட்டு வசதி இருந்தது (18:3). இவர்களுடைய தோழமை தொழிலில் மட்டுமல்ல, நற்செய்தி பரப்புவதிலும் பவுலுடன் அநேகமாக போதகர்களாகவும், பங்காளிகளாகவும் ஆனார்கள் (1 கொரி 12:28).

பவுல் கல்லியோவின் முன்பு விசாரிக்கப்பட்ட பின்பு, கொரிந்தை விட்டுச் சென்றபொழுது (அ.ப.18:18–19) அக்கிலாவையும், பிரிசிக்கில்லாவையும் தன்னுடன் எபேசுவிற்கு அழைத்துச் சென்றார். இந்த மாற்றத்திற்குத் தொழில் சம்பந்தமான சில காரணங்களும் அவர்களுக்கு இருந்திருக்கலாம். பவுல் எருசலேமிற்குச் சென்றபொழுது, அவர்கள் நற்செய்திப் பணியைத் தொடர்ந்து நடத்தும்படி நகரிலேயே விடப்பட்டார்கள். புத்திசாலியும்,

ஞானஸ்நானத்தைப் பற்றி அதிகம் அறியாதவருமான அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த அப்பொல்லோவை இவர்கள் எபேசுவில் சந்தித்தார்கள். இவருக்கு மனத்தெளிவு அளித்ததில் சிறப்பாக "கிறிஸ்துவில்" "ஆவியின் கொடைகள்" ஆகிய கருத்துக்களைப் புரிந்துகொள்ள வைத்ததில் இவர்கள் கருவியாக இருந்தனர் (அ.ப. 18:25–26; 19:67). 1 கொரி 16:19–இன்படி இவர்கள் இருவரும் தங்கள் வீட்டில் ஒரு கோவிலைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. எவ்வளவு காலம் இவ்விருவரும் எபேசுவில் தங்கினார்கள் என்று தெரியவில்லை. பவுலுக்கு எதிராகச் செய்யப்பட்ட கலகத்தில் இவர்களுடைய பெயர்கள் சொல்லப்படவில்லை (அ.ப. 19:23–41). இருப்பினும் "பிரிசிக்கில்லாவும், அக்கிலாவும் என் உயிரைக் காக்க தங்கள் தலைகளைக் கொடுக்கவும் முன் வந்தார்கள்" என்று பவுல் கூறுகின்றார் (உரோ 16:3–4). பவுல் எபேசுவிலிருந்து கொரிந்திற்கு எழுதிய முதல் மடலில், அக்கிலா, பிரிசிக்கில்லாவின் வாழ்த்துக்களையும் சேர்த்து அனுப்புகின்றார் (1 கொரி 16:19). கிளாதியுவின் இறப்புக்குப்பின் அவன் சட்டம் நடைமுறையில் இல்லாததால், இவர்கள் இருவரும் உரோமைக்குச் சென்று, இவர்கள் தங்கள் வீட்டை மையமாக வைத்து ஒரு சபையைத் தொடங்கினர். உரோ 16:3–இல் பவுல் கூறும் வாழ்த்துதலில் இவர்கள் பெயர்தான் முதலில் வருகிறது. பவுலுக்காக இவர்கள் எவ்வித ஆபத்துக்களை அனுபவித்தார்களோ (16:4). பவுலும் "புறவினத்தார் நடுவிலுள்ள சபைகள் அனைத்தும்" இவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளன என்று பவுல் கூறுகிறார். 2 திமோ 4:19 இவர்களுடைய இருப்பிடத்தைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. தான் கொல்லப்படுவதற்குமுன் சிறையிலிருந்து இந்த வாழ்த்தைப் பவுல் அனுப்பியிருக்க வேண்டும்.

இ) பிற்காலப் பாரம்பரியம்:- அப்பொல்லோவிற்கு அறிவுரைக் கூறியதில் பிரிசிக்கில்லாவின் பெயர் முதலில் சொல்லப்பட்டிருப்பதால் (அ.ப. 18:26) இவள் தன்னுடைய கணவரைவிட திறமையும் ஆர்வமும் உள்ளவளாக இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. அநேகமாக இவள் உரோமைக் கிரேக்கப் பண்பாடுகளைக் கொண்டவளாக இருந்திருக்கலாம். பல வல்லுநர்கள், இவள் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியை எனக் கருதுகின்றார்கள்.

2. போந்துவிலுள்ள சினோப்பே என்ற ஊரைச் சேர்ந்தவர். அதிரியானால் எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்டார். ஒரு கிறிஸ்துவர் ஆனார். ஆனால் பிறகு திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டார். பிறகு யூதமதத்தைத் தழுவி, ராபி அக்கிபாவின் சீடன் ஆனார். இவர் பழைய ஏற்பாட்டை உயர்ந்த கிரேக்க நடையில் மொழி பெயர்த்தார். இம்மொழிபெயர்ப்பு கி.பி 533–வரை செபக் கூடங்களில் அதிகாரப் பூர்வமான அனுமதி பெற்றிருந்தது.

அக்கிபா (AKIBA)

யூத ராபிகளில் ஒரு தலைவர் (கி.பி. 50–136). ஆசிரியர்கள் எனப் பொருள்படும் தனாயீமியர்களின் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவராகக் குறிக்கப்படுகிறார். சட்டத்தை விளக்குபவர். யோசேப்பின் மகனான அக்கிபா, தனாயீமியர்களின் கூற்றுக்களை ஒன்று சேர்த்து வரிசைப்படுத்தும் வேலையைத் தொடங்கினார். அதை அவரது சீடர் ராபி மேயீர் தொடர்ந்து நடத்தினார். இதனால் அக்கிபா, மிஸ்னாவில் செல்வாக்குக் கொண்டிருந்தார். இல்லேலுக்குப் பிறகு, அக்கிபா மிகப்பெரிய ஒழுக்க ஆசிரியராகக் கருதப்படுகிறார். அவரது போதகம் மிஸ்னாவில் அடிக்கடி எடுத்துக் கூறப்படுகிறது. சீமோன்–பார்–கோக்பாதான் மெசியா என்று உரிமை கொண்டாடியதை ஏற்று, அவர் உரோமைக்கு எதிராகச் செய்த கிளர்ச்சியை (132–135), அக்கிபா உற்சாகத்துடன் ஆதரித்தார். தோராவைப் படிப்பதைத் தடை செய்யும் அதிரியானின் சட்டத்திற்குக் கீழ்படியாததற்கான தண்டனையாக, இவர் கைதியாக்கப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்டார்.

அக்கூபு (AKKUB – வஞ்சகமான. துரத்துகிறவன்)

1.தாவீது அரசரின் தூர. வழித்தோன்றலான எலியோனாயின் மகன் (1 நாள் 3:24).

2. பாபிலோனியாவிலிருந்து நாடு திரும்பிய பின்பு, கோவிலின் வாயில் காக்கும் லேவியர் குடும்பங்களில் ஒன்றுக்குத் தலைவர் (எஸ் 2:42; நெக 7:45; 11:19; 12:25; 1 நாள் 9:17).

3. கோவில் ஊழியர்களின் குடும்பங்களில் ஒன்றுக்குத் தலைவர் (எஸ் 2:45). காண்க: நெத்தினிம்

4. எஸ்ரா மக்கள் கூட்டத்திற்குமுன் வாசித்த சட்டத்திற்கு விளக்கம் அளித்த ஒரு லேவியர் (நெக 8:7).

அக்கெனாத்தோன் (AKHENATON – ஆத்தானோடு எல்லாம் நன்றாக உள்ளது).

பதினெட்டாவது அரசகுலத்தைச் சார்ந்த பாரவோன். சமய, பண்பாட்டுப் புரட்சியை எகிப்தில் ஏற்படுத்தியவர் (கி.மு.1363–1347). இவர் முதன்முதலில் நான்காம் அமென்–கோதெப் என்று அழைக்கப்பட்டார். இப்பெயருக்கு "அம்மோன் (கடவுள்) மன நிறைவடைந்தார்" என்பது பொருள். இவர் பழம்பெரும் தெய்வத்தின் "ஆமோன்" என்ற பெயரைத் தவிர்த்து, "சூரியனின் வாழ்வு கொடுக்கும் சக்தி" என்ற பொருள்படும் 'ஆதோன்' என்ற புதிய தெய்வத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் தன்னுடைய பெயரை மாற்றிக் கொண்டார்.

கி.மு. 1370–இல் ஆசியாவில் எகிப்திய பேரரசானது ஒரு நூற்றாண்டை எட்டிப் பிடித்தது. எகிப்து நாடானது செல்வாக்கிலும், செல்வப் பெருக்கிலும் மற்ற நாடுகளைவிட முன்னணியிலிருந்தது. ஆனால் அயல்நாட்டுப் பண்பாட்டின் பாதிப்பால் எகிப்திய பண்பாடு பெரும் மாற்றம் கண்டது. (எ.கா.) மற்ற நாட்டு மக்கள் பற்றிய அக்கறை எகிப்திய தெய்வங்கள் எகிப்து நாட்டின் வளர்ச்சியில் மட்டும்தான் ஈடுபாடு கொண்டவர்கள் என்று நம்பிக்கையை மாற்றியமைக்கச் செய்தது.

மூன்றாம் அமென்–கோதெப் என்ற பாரவோன் (கி.மு. 1398–1361) அரசு, சமயம், கலை, இலக்கியம் போன்ற துறைகளில் புதிய மாற்றங்களை, அணுகுமுறைகளைக் கையாள்வதை ஏற்றுக் கொண்டார். இவரது மகனும் கூட்டு அரசனுமான நான்காம் அமென்–கோதெப புதிய ஆட்சி முறையை ஏற்படுத்தும் நோக்குடன் புரட்சியில் புகுந்தார். உடனே நான்காம் அக்கெனாத்தோன் பழைய தலைநகராகிய திபிசுவை விட்டு வெளியேறி தேல்–ஏல்– அமர்னாவுக்கு அருகிலுள்ள ஆக்கெதாத்தோன் என்ற புதிய இடத்திற்குச் சென்றார். அங்கு மன்னனும், அவரது மனைவி நெப்பர்தித்தியாளும், இறைவழிபாடு, கலை போன்றவற்றில் மாற்றங்களைக் கொண்டுவர அயராது உழைத்தனர். இவர் 'ஆத்தோன்' என்ற கடவுளின் மேல் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடு உலகிலேயே காலத்தால் முந்திய இறையொருமைக் கொள்கை என்றழைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரே இறைவன் மேல் எகிப்தியர் செலுத்திய ஆழ்ந்த ஈடுபாடு மோசேயையோ அல்லது எந்த ஒரு எபிரேயனையோ நேரடியாக பாதித்ததற்கு ஆதாரங்கள் இல்லை. உள் நாட்டில் மறுமலர்ச்சியைக் கொண்டுவரவேண்டும் என்ற இவரது ஆர்வம் சீரியா, பாரசீகம் போன்ற நாடுகள் எகிப்திய பேரரசிலிருந்து பிரிந்து தனி மாநிலங்களாக ஆவதற்கு வழி வகுத்தது என்று தலைநகரில் கண்டுபிடிக்கப்பட்ட கடிதங்களில் அறியப்படுகிறது. இவருக்குப் பின் வந்த இவரது மருமகன் துத்–அங்–ஆமோன் காலத்தில், முந்தைய புரட்சி அழிந்தது. எகிப்து பழைய நிலையை அடைந்தது. திபிசு மறுபடியும் தலைநகராக்கப்பட்டது.

முந்தைய இயக்கங்கள் பதிதமாகக் கருதப்பட்டாலும் அவை எகிப்திய சமயம், அறிவு சார்ந்த துறைகள், கலைத்துறை ஆகியவற்றில் நிலையான நல்ல மாற்றங்களை விட்டுச் சென்றன.

அக்கெதாத்தோன் (AKHETATON – சூரிய கடவுள், ஆத்தோனின் மகிமையின் இடம்)

நான்காம் ஆக்கெனாத்தோன் என்ற எகிப்திய பாரவோன், ஏற்படுத்திய புதிய எகிப்தியத் தலைநகர். இது இக்கால தேல்–ஏல்–அமர்னா என்ற இடத்துக் கருகில் இருந்திருக்க வேண்டும். காண்க: ஆக்கெனாத்தோன்.

அக்கேமேனியர் (ACHAEMENIANS)

இரண்டாம் சைரசிலிருந்து (கி.மு. 559–530) வந்த பாரசீக அரச மரபுக்கு மற்

றொரு பெயராகும். இந்த சைரசுதான், நாடு கடத்தப்பட்ட யூதர்கள், "ஆண்டவரின் ஆலயப் பாத்திரங்களை" (எஸ் 1:7) மீண்டும் எருசலேமுக்கு எடுத்துச் செல்ல அனுமதித்தவர். பேரரசின் பரந்த, பல்வேறுபட்ட வளங்கள் அக்கேமேனியரின் கலை தோன்றுவதற்கும் பெரிதும் உதவின.

அக்கோசு (HAKKOS – முட்புதர்)

தாவீது காலத்தில் வாழ்ந்த குருக்களின் ஏழாவது பிரிவின் தலைவர் (1 நாள் 24:10). பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்தவர்களில் இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். இவர்கள் தங்கள் உரிமையை எவ்வளவோ கேட்டும் அவர்கள் இந்தத் திருப்பணியிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். ஏனெனில் இவர்கள் தங்கள் குருகுல மரபை நிரூபிக்க முடியவில்லை (எஸ் 2:61–62; நெக 7:63–64). ஒருவேளை எருசலேம் சுவர்களைப் பழுது பார்க்க உதவி செய்த உரியாவால் இந்தக் குடும்பம் குறிக்கப்படலாம் (நெக 3:4.21). இந்த வீட்டின் சார்பாக யோகானானின் புதல்வன் யூப்பொலமை யூதா தேர்ந்தெடுத்து உரோமையரோடு சமாதானமும் நட்பும் செய்து கொள்வதற்காக அனுப்பி வைத்தார் (1 மக் 8:17).

அக்ரபா (AGRAPHA – எழுதப்படாதவை)

ஜே.ஜி. கோர்னர் என்பவரால் 18-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட சொல். இது கிறிஸ்துவினால் சொல்லப்பட்ட, ஆனால் திருமுறை நற்செய்திகளில் எழுதப்படாத வாக்குகளின் தொகுப்பைக் குறிக்கும். இந்தச் சொல்லின் பொருள் "எழுதப்படாதவை" என்பதாகும். கிறிஸ்துவின் போதனைகளில் சில எழுதப்படவில்லை. ஆயினும் எழுதப்பட்ட கருத்துக்களுக்கு இணையாக இவை வாய் மொழியாகச் சேகரிப்பட்டன. ஆனால் தன்மையால் நமது எழுதப்பட்ட நற்செய்திகளுக்கு இணையானவை.

சிறிய போதனைகள் முதல் பெரிய படிப்பினைகள் வரை உள்ள இவ்விதப் பல தொகுப்புகள் உள்ளன. இவை கிறிஸ்துவின் வாழ்நாள் முதல் இன்று வரை இவை சேகரிப்பட்டுள்ளன. தொடக்கத்தில் அறிஞர்கள் உண்மையிலேயே இவை கிறிஸ்துவால் கூறப்பட்டவை என்று நம்பினர். அவற்றின் மூலம், எழுதப்படாத தொடக்கக்கால வாய்மொழி நற்செய்தியாகும் என்றும், எழுதப்பட்ட திருமுறை நற்செய்திகளும் அவற்றையும் மூலமாகக் கொண்டிருந்தன என்றும் நம்பினர். ஆனால் இன்று இக்கருத்தை மிக எளிதாக ஏற்றுக் கொள்வதில்லை. அதனால் நமது தீர்மானங்கள் எல்லாம் அகவியலானவையே. இத் தொகுப்புகளில் வரும் மத உண்மைகளை வெளிப்படுத்தும் நீண்ட உரையாடல்களும், திருமுறை சேராத அப்போஸ்தலர் பணி போன்ற வீரகாதைகளும் நீக்கப்படலாம். ஆனால் சொற்செறிவுடைய, நன்மை பயக்கும் வாக்கியங்கள் முற்றிலுமாக மறுக்க முடியாதவை. பல வல்லுநர்கள் இவை திருமுறை நற்செய்திகளில் காணப்படும் கிறிஸ்துவின் தன்மையை ஒத்து இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். இவை திருமுறை நற்செய்திகளில் இல்லை என்று முடிவாகத் தீர்மானிக்க முடியாது. ஆனால் இவற்றில் சிலவே காலத்தாலும் தரத்தாலும் இயேசுவுக்குச் சாற்றிக் கூறப்படக் கூடியன என்பது, திருமுறை நற்செய்தி ஆசிரியர்கள் தாங்கள் சேகரித்த பாரம்பரியத்தில் ஒரு சிலவற்றை மட்டுமே எழுதாமல் விட்டனர் என்று காட்டுகிறது.

அக்ராபாவில் பல கூற்றுக்களில் போதனைகள் வெறுமனே விரிவாக்கப்பட்டுள்ளன. மிகைப்படுத்தப்பட்டுள்ளன அல்லது மாற்றப்பட்டுள்ளன அல்லது திருமுறை நற்செய்திகளில் வரும் சொற்களின் தொகுப்பாக அமைந்துள்ளன. இப் பண்புகளைப் பிற்காலத்தில் திருத்தியமைக்கப்பட்ட திருமுறைசாராத நற்செய்திகளில் காணலாம். உ.ம்:பணக்கார ஆட்சியாளன் கதை; தாலந்து உவமை; மத் 18:22 வேறு வடிவமைப்புகளில் காணப்படுகின்றது. "உன்னுடைய சகோதரன் வார்த்தையால் பாவம்செய்து, மனம் வருந்தினால் அவனை ஒருநாளில் ஏழுமுறை ஏற்றுக் கொள். ஆம். நான் உங்களுக்குச் சொல்கிறேன். எழுபது முறை ஏழு. ஏனெனில் இறைவாக்கினர்களும் பரிசுத்த ஆவியினால் அபிசேகம் செய்யப்பட்ட பின் பாவம் நிறை சொற்களைக் கூறினர்".

இதுபோன்ற பல "அக்ரபாக் கூற்றுக்கள்" நற்செய்திக் கைப்பிரதிகளில் காணப்படுகின்றன. குறிப்பாக லூக் 14:8–11–க்கு இணையாண பகுதியில் காணப்படுகிறது. வேறுசில: கோடெக்ஸ் பெஸே–யில் மத் 20:28. அல்லது ஓய்வு நாளில் வேலை செய்த மனிதனிடம் கிறிஸ்து கூறியது. "நீ செய்வது இன்னதென்று அறிந்திருந்தால் நீ பேறு பெற்றவன். நீ அறியாமலிருந்தால் சபிக்கப்பட்டவன். சட்டத்தை மீறுபவனாகின்றாய்". இது அதே கைபிரதியில் லூக் 6:4–இல் காணப்படுகின்றது. இவற்றில் நாம் சந்திக்கும் பிரச்சினை வாசகப் பேத திறனாய்வினைச் சார்ந்தாகும். ஏனெனில் கிறிஸ்துவின் பல வார்த்தைகள் இன்று பல பிரதிகளில் அச்சிடப்பட்டிருப் பினும் (உ.ம்: மத் 6:13; மாற்கு 16:15–18; லூக் 23:34) இவற்றின் தன்மை, வாசக அளவில், இவை பிற்சேர்க்கை என்பதையும், அதனால் அக்ரபாவைச் சேர்ந்தவை என்பதையும் சுட்டுகின்றன.

மேலும் தனிப்பட்ட நற்செய்திக் கைப்பிரதிகளில் காணப்படும் சில வாக்குகளைத் தவிர, சில கூற்றுகள் புதிய ஏற்பாட்டு நற்செய்திகளில் கிறிஸ்து கூறியதாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆனால் நற்செய்திகளுக்குப் புறமே சில கூற்றுகள் இயேசு கூறியதாகத் தரப்படுகின்றன. "பெறுவதினும் தருவதே இன்பம்" (அ.ப. 20:35). இறுதி உணவின் போது கிறிஸ்து கூறியதாக பவுல் குறிப்பிடும் வார்த்தைகள் (1 கொரி 11:24–25). அக்ரபா எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு: இதையடுத்து பவுல் குறிப்பிடும் வாக்கியம் அப்போஸ்தலர் சட்டத்தில் அப்படியே இடம் பெறுகிறது. "எனவே நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகும் போதெல்லாம் ஆண்டவர் வரும் வரையில் அவரது மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்".

பெரும்பான்மையான அக்ரபா கூற்றுகள் திருமுறைக்குப் புறம்பான இலக்கியங்களில் இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட சில நூல்கள்: இயேசுவின் "ஒக்சிரிங்கசு" கூற்றுகள், திருச்சபையின் தந்தையர்கள், தோமையாரின் நற்செய்தி என்ற நூல், 1940–இல் செனோபோஸ்கயோனில் கண்டுபிடிக்கப்பட்ட மறையியல் ஞானக் கோட்பாட்டைச் சார்ந்த நூல், பாபிலோனிய யூதர்களின் சட்டம், தால்மூது, இஸ்லாமிய நூற்கள்; இவை போன்றவற்றிலிருந்து வளர்ச்சியடைந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலும் இந்நூல்கள் தோன்றிய காலத்தையோ இடத்தையோ குறிப்பிடவில்லை.

இப்படிப்பட்ட கூற்றுகள்அடங்கிய பல நூல்கள் இருந்தாலும் சிலவே உண்மைத் தன்மையுடையன. பெரும்பாலானவை, திருமுறை நற்செய்திகளில் வரும் கூற்றுகளை விரிவாக்குகின்றன அல்லது மாற்றி அமைக்கின்றன. பெரும்பாலானவை, குறிப்பாக, திருமுறை சேராத நற்செய்திகளில் காணப்படுபவை திருமுறை நற்செய்தி வாக்குகளோடு, ஒப்பிடப்படும் போது, வடிவிலும் பொருளடக்கத்திலும் தாழ்ந்தவையாக உள்ளன. ஒரு வேளை இவை பக்திமிக்க கள்ள வேலையாக இருக்கலாம்.

அங்கவீனம்

சமயச் சூழ்நிலையில், குருவிடமோ அல்லது பலியிடப்பெறும் விலங்கிடமோ காணப்படும் அங்கக் குறைகளாகும்.

கூடாரத்திலும், பிற்காலத்தில் ஆலயத்திலும் வழிபாட்டு சடங்குகள் முடிந்த அளவு நிறைவாகச் செய்யப்பட வேண்டும் என்பதால், அங்கவீனமுடைய குரு பிரசன்ன அப்பத்தை ஒப்புக்கொடுக்கத் தடை செய்யப்பட்டிருந்தது (லேவி 21:17). ஆனால் அவர் அந்த அப்பத்தை உண்ணலாம் (21:22). பிற்கால இறைவாக்குகளில், வரவிருக்கும் மீட்பர் இத்தகைய குறைபாடுகளிலிருந்து, குறிப்பாகக் குருடர்களையும், செவிடர்களையும், விடுவிப்பார் (எச 29:18; 35:5–6;42:7).

புதிய ஏற்பாட்டில், திருச்சபை எக்குறையுமின்றி ஆண்டவர் திருமுன் துலங்க வேண்டும் (எபே 5:27). மாசுமறுவற்ற செம்மறியென கிறிஸ்து அழைக்கப்பெறுகிறார் (1 பேதுரு 1:19). அவருடைய மாசற்ற முழுமையின் வழியாகத் தூய்மைப்படுத்துதல் நிறைவேறுகிறது (எபி 9:13–14).

அங்கலாய்ப்பு (ANGUISH)

இவ்வுலக உயிர்களால் உண்டாக்கப் படும் பயத்தைப் போன்றோ அல்லது குறிப்பிட்ட குறிக்கோள் மற்றும் உண்மை யான பணி ஆகியவற்றின் மீதான தனிப் பட்ட அல்லது அதிகப்படியான கவனிப் பால் ஏற்படும் கவலை போன்றோ இல் லாமல், அங்கலாய்ப்பானது ஒருவரது அடி மனதிலிருந்து உருவாகின்ற மன அமைதியற்ற உணர்வினையே குறிக்கின் றது. இத்தகைய நிலை சாவை எதிர் கொள்ளும்போது அல்லது பொதுவாக எதிர் காலத்தைப்பற்றி எழும் ஒரு உறுதி யற்ற உணர்வேயாகும். விவிலியத்தில் குறிப்பாக கிரேக்க மொழி பெயர்ப்பில், இந்நிலையை விவரிக்கப் பல சொற்கள் பயன்பட்டுள்ளன. பல சூழ்நிலைகளில் விவரிக்கப்படுகின்றன (2 மக் 3:14–15; 15:19; லூக் 22:44; ஓசே 13:8; 2 மக் 8:20; ஞான 11:5; லூக் 21:25; 1 சாமு 23:8; 2 சாமு 20:3; லூக் 8:37; மத் 4:24; லூக் 4:38; உப 28:53; 2 கொரி 4:8; 6:4.12).

1. தமது மக்களுடன் யாவே செய்து கொண்ட உடன்படிக்கையானது, உறுதி மொழிகளின் ஆண்டவருடைய பிரசன்னத் தை உறுதிப்படுத்துகின்றது; ஆனால், அது மனிதன் சட்டத்தைக் கடைப் பிடிப்ப தில் காட்டும் பிரமாணிக்கத்தைப் பொருத் தது. ஆகவே இந்த உறுதிப்பாடு நடப்பில் மறைந்துவிடும் அபாயம் எப்போதும் உள்ளது.

யாபோக்குக் கரையை அடையும் யாக் கோபு ஒன்றும் இயலாத ஒரு சூழ்நிலை யில் தான் இருப்பதைக் காண்கிறார் (ஆதி 32:8). ஆனால், தனது தந்தையுடனும் (22:16 தொ) தன்னுடனும் (28:14) இறைவன் மீண்டும் மீண்டும் செய்த உடன்படிக்கை களைத் தனக்குப் பின்னணியாகக் கொண்டுள்ளார். ஆயினும், தனது சகோத ரன் ஏசாவைச் சந்திப்பதற்கு முன்னர், அவருக்கு அங்கலாய்ப்பினை உருவாக்கும் ஒரு சூழ்நிலையை எதிர்கொள்கிறார். ஆண்டவரின் தூதருடன் போராடித் தரையில் விழுந்த பின்னர், இறைவன் அவருடன் உள்ளார் என்னும் உறுதி மொழியை தூதரிடமிருந்து பெறுகிறார் (32:23–33).

சூரைச் செடியின் கீழ் அமர்ந்துள்ள எலியா, இறப்பதற்கும் தயாரான மனக் கசப்பில் இருக்கிறார் (1 அர 19:3 தொ). மக்களின் பொது பதிதம் பற்றி (தவறாக) உறுதியாக அறிந்த நிலையில் அவர் தனது வாழ்வினைத் தோல்வியெனக் கருதுவது சரியல்லவா? ஆனால், பிற் காலத்தில் இயேசுவிற்கு கெதுசமனியில் நடந்தது போன்று, ஆண்டவரது தூதரால் வலிமைபடுத்தப்பட்டு, அவரைச் சரியான பாதையில் செலுத்தும் இறைவனுடைய சந்திப்புவரை, அவரது பாதையில் தொடர்ந்து நடத்தப்படுகின்றார் (19:5–18).

எல்லா மக்களும் இருளில் மூழ்கி யிருக்கும்போது அவர்கள் அங்கலாய்ப் பில் இல்லையா? (ஏச 8:22 தொ; 5:30; 24:19). உடன்படிக்கையின் காப்பாளராக இருக் கின்ற நிலையில், மக்கள் பஞ்சத்தினால் துன்புறும்போது தனது இதயமே தன்னைக் கைவிட்டது போன்ற நிலையில், எரேமியா இக்கவலையில் மூழ்கிவிடுகி றார் (எரே 8:18.21). அவர் மட்டுமே துன் புறுமபோது அவரது உணர்ச்சிகள் வேறு விதமாக உள்ளன. தான் வேதனைக்குட் படுத்தப்பட்ட போது தான் பிறந்த நாளி னையே சபிக்கும் அளவிற்குச் சென்றாலும் (15:10; 20:14). தனக்காகப் பழி வாங்கித் தன்னைப் பாதுகாப்பவரில் ஒரு தீர்வினை அவர் கண்டடைகிறார் (11:20; 20:12).

யோபுவின் நிலையினை எடுத்துக் கொண்டால், தனிநபர் மீட்பு என்னும் ஊன்றிவிட்ட கருத்து வெளிப்படையாகத் தெரிகிறது. அச்சத்தால் மேற்கொள்ளப் பட்ட அவர் அழுகிறார் (யோபு 3:24); "நான் அஞ்சியது எனக்கு வந்துற்றது, நான் கண்டு நடுங்கியது எனக்கு நேரிட்டது" (3:25); அவரது ஆன்மா கசப்புற்றதால் அவர் இவ்வாறு பேசுகின்றார் (10:1; 7:11). இறைவன் அனுப்பும் வேதனைக்காக அஞ்சி நடுங்குகிறார் (31:23). இறுதியாக, இச்சொற்களை உபயோகிக்காமலே, அவருடைய இயலாத சூழ்நிலையினின்று அவரை காப்பாற்றக்கூடிய இறைவனை நோக்கி நீதிமான் தனது அங்கலாய்ப்பில் கூக்குரலிடுகிறார் (சங் 22; 31; 35; 38; 57; 69; 88; 102).

இந்த எல்லா நிலைகளிலும், மரணம் காத்திருப்பதால், தனிநபர் மைய இடத்தைக் கொண்டுள்ளார். இறைவனுடைய காரியம் அவருடையதில் இணைந்திருப்பதால், அவரது அங்கலாய்ப்பில் இருமுகத் தெளிவின்மை காணப்படுகிறது. மோசேயும், முதலில் தனது பிரச்சினைக்கு ஒரே தீர்வாக மரணத்தையே காண்கிறார் (எண் 11:11–15); ஆனால், தொடரும் நிகழ்ச்சிகளில் அவரது அங்கலாய்ப்பிற்குக் காரணம் மக்களின் பதிதமே என்பது தெளிவாகிறது. வாழ்வின் நூலிலிருந்து மக்களின் பெயர் அடிக்கப்படும்போது, தனது பெயரையும் அழிக்குமாறு இறைவனை மன்றாடும்போது, தனது பாவமிக்க சகோதரர்களுடன் தனக்குள்ள ஒன்றிப்பை வெளிப்படுத்தினாலும் இறைவனுடைய வெற்றி கொள்ளும் அன்பின் மீது உறுதியாக உள்ளார் (யாத் 32:31 தொ).

2. ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும் இத்தகைய அங்கலாய்ப்பு உணரப்பட்டாலும், இயேசுவின் வருகையோடு அதன் கருத்து மாறுபடுகிறது. தமது மரணத்தை எதிர்கொள்ளும் அங்கலாய்ப்பினை மட்டுமன்றி, ஐயப்பாடு, உறுதியற்ற நிலை ஆகிய பயங்கர உணர்வையும் அவர் தன் மீது ஏற்றுக்கொள்கிறார். ஒலிவ தோட்டத்தில் அவர் அச்சம், திகில், துயரம், மனக் கலக்கம் ஆகியவற்றால் ஆட்கொள்ளப்படுகிறார் (மாற் 14:33 தொ). அவருடைய அங்கலாய்ப்பு எல்லாக் காலத்தையும் சேர்ந்த நீதிமான்கள் அனைவருடைய அங்கலாய்ப்பினையும் ஒன்று சேர்த்துக்கொள்கிறது (சங் 41:6.12; 42:5). அவர் கூக்குரலிட்டுக் கண்ணீர் விடுகிறார். தன்மைச் சாவிலிருந்து மீட்க வல்லவரிடம் அவர் செபிக்கிறார் (எபி 5:7); இறுதியாக, தந்தையின் விருப்பத்திற்கே தனது விருப்பத்தையும் கொண்டு வருகிறார் (மாற் 14:36). இரத்த வியர்வை சிந்தும் வரை போராடுபவரைப் பலப்படுத்த மீண்டும் ஒருமுறை ஆண்டவரின் தூதர் வருகிறார். இதற்குப்பின், வெற்றி கொண்டவராய் தமது முடிவை எதிர்கொள்ள ஆயத்தமாகிறார் (லூக் 22:41–45).

இயேசு மனித அங்கலாய்ப்பின் ஆழத்தை அனுபவித்ததன் மூலம் "தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணராகிறார்" (எபி 5:9); அவர் ஒரு புதிய திருப்ப இயலாத சகாப்தத்தை துவக்குகிறார். விசுவாசிகள் தாம் வாழும் இக்காலத்தின் பண்பினைத் தனக்கு உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நம்பியிருக்கும் செயலானது, கடந்த காலத்தில் நடைபெற்றுவிட்டது (7:27); ஆனால், அது காலத்திற்கு வெளியே நின்று வரலாற்றின் ஏற்றத் தாழ்வுகளின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது (திருவெளி 1:5). இயேசு என்னும் ஆளில் அங்கலாய்ப்பானது அடக்கப்படவில்லை; அதற்குரிய இடத்தைப் பெறுகிறது; ஏனெனில், இப்போது முதல் நம்பிக்கையானது உறுதியானதாகவும் மரணமானது பலனளிப்பதாகவும் உள்ளது.

3. விசுவாசியின் மனதில் ஆழம் மற்றும் பரப்பு என்னும் இரு நிலைகளில் அங்கலாய்ப்பினை அனுபவிக்கலாம். "உயிர் வாழ பெருமூச்சுவிட்ட நிலையில், தன் மேல் நம்பிக்கை வைக்காமல், இறந்தோரை உயிர்ப்பிக்கும் கடவுள் மீது மட்டுமே நம்பிக்கை வைக்க வேண்டுமென (பவுல்) இதன்மூலம் அறிந்து கொண்டார்" (2 கொரி 1:9; 5:4). "கலாபனையோ? வேதனையோ? எதுவுமே (தன்னை) கிறிஸ்துவின் அன்பினின்று பிரிக்கமுடியாது" என உண்மையாகவே பவுல் அறிந்திருந்தார் (உரோ 8:35.39). கிறிஸ்துவில் மரணம் வெற்றிக் கொள்ளப்பட்டது என்னும் உறுதியான நிலையில் இந்த அங்கலாய்ப்பு ஏற்றுக் கொள்ளப்படுகிறது (1 கொரி 15:54 தொ). இயேசுவின் வேதனையுடன் இணைக்கப்படும் போது மரணமானது ஒரு பொருளையும், மீட்பு மதிப்பீட்டையும் பெறுகிறது: "எங்களுள் சாவும், உங்களுள் வாழ்வும் செயலாற்றுகிறது" (2 கொரி. 4:1).

ஆனால், அங்கலாய்ப்பானது இன்னும் ஆழமான நிலையில் மீண்டும் தோன்றலாம். இந்நிலையில் மனிதனுடைய மரணத்தையும் தன் சொந்த மீட்பையும் பற்றி பவுல் அக்கறை கொள்ளவில்லை. ஏனெனில் இவை விசுவாசத்தினால் பெறப்பட்டுவிட்டன என்று அறிந்திருந்தார் (உரோ 5:1–5; 8:24). ஆனால்

மற்றவர்களின் மீட்பையும் மற்ற மக்களின் விடுதலையும் பற்றி அங்கலாய்ப்பு தோன்றுகிறது. மோசேயைப் போன்று, தனது சகோதரர்களுக்காக சாபத்துக்கு உட்பட விரும்புவதாக பவுல் இப்பொருளிலேயே கூறுகின்றார் (9:3); தான் துன்புற, கிறிஸ்துவோடு சேர்ந்து துன்புற அவர் விரும்புகிறார் (8:17). உண்மையில், இறுதி வரை உலகம் ஏங்கிக்கொண்டே இருக்கின்றது (8:18–23) ; அதன் மற்றொரு கூறின் அடிப்படையில் நம்பிக்கை எழுகிறது; ஆவியின் மூலமாக, இது உறுதியானதாக மட்டுமில்லாமல் எதிர்பார்ப்பையும் மாறாத்தன்மையையும் கொண்டதாக உள்ளது (8:24–25). இயேசு தனது பலியின் முன்னனுபவத்தால் முழுமையாக ஆட்கொள்ளப்பட்டதைப் போன்று (லூக் 12:50), அப்போஸ்தலரும் கிறிஸ்துவின் அன்பினால் முழுமையாக மேற்கொள்ளப்படுகிறார் (2 கொரி 5:14). வேதனை மற்றும் கலக்கத்தின் விளிம்பில் அவரை நாம் கண்டாலும் (2 கொரி 6:4), நம்பிக்கை இழந்தவராகவோ, நசுக்கப்பட்டவராகவோ அவர் இல்லை (4:8). கிறிஸ்துவின் வேதனையானது உலகமுடிவுவரை நிலைத்திருக்கும்.

இவ்வாறு கிறிஸ்தவன் தனது விசுவாசத்தின் மூலம் மரணம் மற்றும் மீட்பு பற்றிய எண்ணத்தின் மீது ஏற்படும் அங்கலாய்ப்பினை மேற்கொள்ள முடியுமெனில், கிறிஸ்துவினுடைய உடலின் எல்லா உறுப்பினர்களுடனும் கொண்டுள்ள ஒன்றிப்பின் விவரிக்க முடியாத அங்கலாய்ப்பிலும் வாழலாம். உறுதியானது மற்றும் உறுதியற்றது ஆகிய இரண்டும் ஒரே மட்டத்திலும் இல்லை; ஒரே பொருளைப் பற்றியும் குறிப்பிடவுமில்லை.

அசக்கா (AZEKAH – கொத்தப்பட்ட நிலம்)

அய்யாலோன் பள்ளத்தாக்கிற்குத் தென்புறத்தில் உள்ள அரண்சூழ்ந்த நகரமாகும். பேயித்–கிப்ரின் என்ற இடத்திற்கு வடக்கே 6.5 கி.மீ. தொலைவிலும், கெபிரோனுக்கு வடமேற்கே 24 கி.மீ. தொலைவிலும் உள்ள தேல்–எஸ்–சக்கரியே என்ற இடத்தை அசக்காவிற்கு அடையாளம் காட்டுவர். தேல் மேலே உள்ள மேட்டு நிலத்தில் அழிந்துபோன சுவர்களும், கோபுரங்களும் காணப்படுகின்றன. பல நிலத்தடிப் பாதைகளும், அறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை போர்க்காலத்தில் அடைக்கலமாகவும், உணவுப் பொருள்களைச் சேர்த்து வைப்பதற்கும் பயன்பட்டிருக்க வேண்டும். இஸ்ராயேல் காலத்தைச் சேர்ந்த, அரசசெய்திகளைக் கொண்ட பாண்டங்கள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தேலுக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள கிர்பெத்–ஏல்–அலாமி என்ற இடம்தான் அசக்கா இருந்த இடமாக பைசான்டைன் காலத்தில் கருதப்பட்டது.

எருசலேமின் அரசராகிய அதோனி–சதேக்கின் தலைமையில் வந்த கானானியர்களின் படைகளை யோசுவாவின் படைகள் அசக்காவரை துரத்திச் சென்றனர் (யோசு 10:10–11). இது யூதா நாட்டின் செப்பேலா மாவட்டத்திலுள்ள ஒரு நகரமாகும் (15:35). பெலிஸ்தியர்கள் போருக்குப் படையைத் திரட்டிக்கொண்டு வந்து அசக்கா என்ற இடத்தில் பாசறை அமைத்தனர். தாவீது பெலிஸ்தியர்களின் தலைவனாகிய கோலியாத்தைக் கொன்றவுடன் 'அசக்கா' நகரானது இஸ்ராயேலர்களால் கைப்பற்றப்பட்டது (1 சாமு 17:1).

வடக்கு ஆட்சிப் பகுதி கிளர்ச்சி செய்து பிரிந்து போனபின் சாலொமோன் மகன் இரகபெயாமினால் அரண்சூழக் கட்டப்பட்ட நகர்களில் அசக்காவும் ஒன்றாகும் (2 நாள் 11:10). உணவுப் பொருட்களைச் சேர்த்து வைப்பதற்கும் பயன்பட்டது (11:11). எருசலேமைத் தாக்குவதற்கு முன்னால் நெபுக்கதுனேசாரின் படைகளால் கடைசியாகப் பிடிக்கப்பட்டது யூதாவின் அரண்சூழ்ந்த நகராகிய அசக்கா ஆகும் (எரே 34:7 கி.மு. 588). நாடு கடத்தப்பட்டதற்குப் பின் அடிமைத்தளையில் இருந்து திரும்பி வந்த யூதர்களால் அசக்கா நகரானது மறுபடியும் கைப்பற்றப்பட்டது, குடியேறப்பட்டது (நெக 11:30).

அசசியா (AZAZIAH – யாவே வலிமைமிக்கவர், யாவேயால் பலப்படுத்தப்பட்டவர் அல்லது யாவேயால் வலு அடைந்தவர்)

1. ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையை எருசலேம் தேவாலயத்திற்கு

எடுத்து வருவதற்காகத் தாவீது முன்னேற்பாடு செய்த பாடகர் குழுவில் ஒரு லேவியர் (1 நாள் 15:21)

2. தாவீதின்கீழ் எப்பிராயிம் குலத்தாருக்குப் படைத்தலைவராக இருந்த ஓசயாவின் தந்தை ஆவார் (1 நாள் 27:20)

3. எசக்கியா காலத்தில் ஆலயப் பொறுப்பினைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டவர்களில் மூன்றாம் தர அலுவலர் (2 நாள் 31:13).

அசரமேல் (ASARAMEL)

வுல்கத்தா வாசகப்படி இது ஓர் இடத்தின் பெயராகும். ஆனால் இது எபிரேயச் சொற்றொடரைத் தவறாகப் புரிந்து கொண்டதின் விளைவாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. சிலர் இது எருசலேமைக் குறிக்கிறது என்றும் இன்னும் சிலர் இது இறை மக்களின் முற்றம் அல்லது இறைமக்களின் இளவரசன் என்று பொருள்படும் என்பர்.

முன்னதென்றால் இது ஆலயத்தில் பெரிய முற்றத்தைக் குறிக்கும். பின்னதென்றால் இது இடத்தைக் குறிக்கவில்லை. மதிப்புமிக்க ஒரு பட்டமாகும். இதனால் பெரிய குருவாகிய சீமோன் "இறை மக்களின் தலைவர்" என்று குறிக்கப்பெறுகிறார் (1 மக் 14:47; 15:1).

அசரியா (AZARIAH – யாவே உதவி செய்தார்)

1. சாலமோனின் கீழ் உள்ள உயர் அதிகாரி. பெரிய குரு சாதோக்கின் புதல்வராவார். அகிமாசுவின் சகோதரராகவும் இருக்கலாம் (1 அர 4:2. காண்க: 2 சாமு 15:27).

2. இவர் நாத்தானின் மகனாவார். சாலமோனின் ஆட்சிக்குட்பட்ட பன்னிரெண்டு மாகாணங்களின் அரச அலுவலர்களுக்குத் தலைவராக இருந்தா (1 அர 4:5). சாபதுவின் சகோதரராவார். இவர் இறைவாக்கினர் நாத்தானின் மகனா (2 சாமு 12) அல்லது சாலமோனின் அண்ணன் மகனா (2 சாமு 5:14) என்பது பற்றி அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

3. அசரியா யூதாவின் அரசர் அமசியாவின் மகனும் வாரிசுமாவார் (2 அர 14:21; 15:1.6–8. 17, 23. 27; 1 நாள் 3:12). இவருடைய மற்றொரு பெயர் உசியா என்பதாகும்.

4. யூதாவைச் சேர்ந்த ஒரு மனிதர். ஏத்தானின் மகன் செராகுவின் புதல்வர்களின் தலைமுறை அட்டவணையில் இடம் பெறுகிறார் (1 நாள் 2:8).

5. யூதாவிலுள்ள ஒரு மனிதர். ஏகூவின் புதல்வரும், ஓபேதுவின் பேரனுமாவார். எரகுமேலின் புதல்வர்களின் தலைமுறை அட்டவணையில் சேசானின் எகிப்திய அடிமை வழியாக இடம் பெறுகிறார் (1 நாள் 2:38–39). இவரை கீழ் வரும் 14–இல் இருந்து வேறுபடுத்த வேண்டும்.

6. அகிமாசுவின் புதல்வரும், சாதோக்கின் பேரனும் ஆவார் (1 நாள் 6:9).

7. பெரிய குரு யோகானானின் புதல்வரும், 6–இல் குறிக்கப்படுபவரின் பேரனுமாவார் (1 நாள் 6:10–16; எஸ் 7:3). இவர் அரசன் உசியா குருத்துவப் பதவியைப் தனககே அபகரித்துக் கொண்டதை எதிர்த்தவராக இருக்கலாம் (2 நாள் 26:17–18).

8. பெரிய குரு கிலிக்கியாவின் புதல்வரும், செராயாவின் தந்தையும் ஆவார் (1 நாள் 6:13–14). இவர் நாடு கடததப்படுதலுக்குச் சிறிது முன்பு வாழ்ந்த எஸ்ராவின் மூதாதையர் ஆவார் (எஸ் 7:1).

9. கொகாத்தியர்களின் குலத்தைச் சேர்ந்தவர். சாமுவேலுக்கும் லேவியரான இசை வல்லுநர் ஏமானுக்கும் மூதாதையராவார் (1 நாள் 6:36). யோவேல் இவரது மகனாவார். இவர் 1 நாள் 6:24–இல் உசியா என்றழைக்கப்படுகின்றார்.

10. கிலிக்கியாவின் ஒரு வழித்தோன்றல். நாடு கடத்தலுக்குப் பின் எருசலேமில் ஆலயத்தின் முக்கிய அதிகாரி (1 நாள் 9:11). ஒருவேளை நெக 11:11–இல் குறிக்கப்படும் செராயாவும் இவரும் ஒருவரையே குறிக்கலாம்.

11. இவர் சமயச் சீர்திருத்தங்களைச் செய்ய யூதாவின் அரசராகிய ஆசாவிற்கு உற்சாகமளித்த இறைவாக்கினர் (2 நாள் 15:1–8). இறைவாக்கினர் ஓதேதுவின் மகனாவார்.

12. 13. யூதாவின் அரசராகிய யோசபாத்தின் புதல்வர்களில் இருவர் (2 நாள்

21:2–4). இவர்களின் தந்தைக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இவர்களது மூத்த சகோதரர் யோராம் இவர்களைத் தன் வாளுக்கு இரையாக்கினார். 'அசரியா' என்ற பெயர் யோசபாத்தின் புதல்வர்கள் பட்டியலில் இரண்டு முறை வருகிறது.

14. அத்தலியாளைப் பதவியிலிருந்து நீக்கும் சதித்திட்டத்தில் தீவிரமாக பங்கு பெற்ற ஒரு அதிகாரி. இவர் யோராமின் மகனாவார் *(2 நாள் 23:1).*

15. யூதாவைச் சேர்ந்த படைத்தலைவர். ஒபேதுவின் புதல்வர். அத்தலியாளைப் பதவி நீக்கிவிட்டு யோவாசுவை அரசராக்க வேண்டும் என்ற சதித் திட்டத்தில் தீவிரமாகச் செயல்பட்டார் *(2 நாள் 23:1).* இவரை மேலே 5–ஆம் எண்ணில் குறிப்பிட்டிருப்பவரோடு தொடர்புப்படுத்தக் கூடாது.

16. எப்பிராயிம் மக்கள் தலைவர்களில் ஒருவர். யோகானானின் புதல்வர். சிறைப்பிடித்தவர்களை விடுவிக்க வேண்டி பெக்காவின் படையினை வலியுறுத்தியவர்களில் ஒருவர் *(2 நாள் 28:12).*

17. எசக்கியாவின் காலத்தில் யோவேல் என்றழைக்கப்பட்ட கெகாத்தியர் குலத்தைச் சேர்ந்த ஒரு லேவியரின் தந்தையாவார் *(2 நாள் 29:12).* இவர் ஆலயத்தைச் சுத்தி செய்த அலுவலில் பங்கு பெற்றார். ஆனால் 9–வது எண்ணில் குறிப்பிட்டவரோடு தொடர்புடையவர் இல்லை.

18. எகல்லலேலின் மகன். எசக்கியா காலத்திலிருந்த மெராரிய குலத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். ஆலயம் சுத்தி செய்தபோது உதவியவர் *(2 நாள் 29:12).*

19. எசக்கியாவின்கீழ் இருந்த தலைமைக்குரு *(2 நாள் 31:10.13).* ஆலயத்தில் மக்கள் அளித்த பொருட்களைச் சேமித்து வைப்பதற்கென அறைகளைக் கட்டினார். இவர் சாதோக்கின் குடும்பத்தைச் சேர்ந்தவரும், ஆண்டவரது ஆலயத்தின் முக்கிய அதிகாரிகளின் தலைவரும் ஆவார் *(1 நாள் 9:11; நெக 11:11; எரே 20:1).* இவர் 27–இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

20. அசரியா என்பவர் தன்னுடைய வீட்டிற்குப் பின்னாலிருந்த எருசலேம் மதில் சுவரைப் பழுது பார்த்தவரும் மாசேயாவின் மகனுமாவார் *(நெக 3:23–24).*

21. நாடு கடத்தப் பெற்றதற்குப்பின் உள்ள காலக் கட்டத்தில் இருந்த ஒரு தலைவர். அடிமைத் தனத்திலிருந்து விடுதலைப்பெற்று செருபாபேலோடு திரும்பி வந்தவர்களில் இவரும் ஒருவர் *(நெக 7:7).* இதற்கு இணையான பகுதியில் 'செராயா' என்று குறிப்பிடப்படுகிறார் *(எஸ் 2:2; காண்க நெக 12:1).*

22. எஸ்ராவின் காலத்தின் சட்டத்தை மக்களுக்கு எஸ்ரா வாசிக்க, அதைப் புரிகின்ற விதத்திலே விளக்கிக் கூறிய ஒரு லேவியர் *(நெக 8:7–8).* இவர் எபிரேயத்தியிலிருந்து அரமேயிக்குக்கு மொழிபெயர்த்திருக்கலாம்.

23. நெகமியாவின் காலத்தில் புதுப்பிக்கப்பட்ட இஸ்ராயேலின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட குருக்களில் ஒருவர் *(நெக 10:2).*

24. இவர் யூதா நாட்டுக் குருவாக அல்லது தலைவராக இருந்தவர் *(நெக 12:33).*

25. ஒசாயாவின் மகன். இறைவாக்கினர் எரேமியாவின் எதிரிகளில் ஒருவர் *(எரே 42:2).* எரே 42:1– இல் சில வாசகங்கள் இவரை எசனியா என்று குறியிடுகின்றன.

26. தானியேலின் தோழர்களில் ஒருவரான ஆபதுநெகோவின் மூல எபிரேயப் பெயர் *(தானி 1:6.7.11.19; 2:17; 3:25.88 (1:2.66); 1 மக் 2:59).*

27. ஊசியாவின்கீழ் உள்ள தலைமைக் குரு *(2 நாள் 26:17.20)* அரசன் குருவின் பணியை ஆற்றுவதை எதிர்த்த குருக்களின் தலைவராக இருந்தவர். இவர் 19–இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

28. அடிமைத் தனத்திலிருந்து வந்தபின் எருசலேமில் வாழ்ந்தவர்களாகக் கூறப்படுகின்றவர்களின் பட்டியலில் இவர் ஒரு குருவாகக் கருதப்படுகின்றார். சிலிக்கியாவின் மகனாவார். ஆண்டவரது ஆலயத்தின் தலைமைக் குருவாகவும் எண்ணப்படுகின்றார் *(1 நாள் 9:11).* இவர் 8–இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம். நெக 11:11–ல் இவர் செராயா என்றழைக்கப்படுகிறார். ஒருவேளை இதுவே சரியான வாசகமாக இருக்கலாம்.

29. யூதா மக்கபேயுவின் படையில் ஒரு அதிகாரி (1 மக் 5:18.56.60). யூதா இல்லாத காலங்களில் படைத்தலைவராகப் பொறுப் பேற்றிருப்பவர். கோர்க்கியா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.

அசரியா (AZARIAS)

மாறுவேடம் கொண்டிருந்த தூதர் இரபேலால் பயன்படுத்தப்பட்டப் பெய ராகும் (தோபி 5:12; 6:6.13; 7:8; 9:2).

அசரியாவின் மன்றாட்டு (PRAYER OF AZARIAH)

இது தானி 3:24–50 என்ற பகுதியைக் குறிக்கும். இது எபிரேய விவிலியத்தில் காணப்படவில்லை. ஆகவே பிரிவினைச் சகோதரர்கள் தங்கள் விவிலியங்களில் இதைச் சேர்த்துக் கொள்வதில்லை. இதைத் திருமுறையைச் சேராத பிற் சேர்க்கை என்று அழைப்பர். ஆனால் இப்பகுதி கிரேக்க எழுபது நூலில் காணப்படுகிறது. கத்தோலிக்கத் திருச் சபை இதையும் இறையூக்கம் பெற்ற பகுதியாக ஏற்றுக் கொள்ளும். இப்பகுதி துணைத் திருமுறைப் பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படும். இதுவும் மூன்று இளைஞர்களின் பாடலும் (3:46–90) சேர்ந்த ஒரே தொகுப்பாகக் கருதப்படும்.

தானியேலின் மூன்று தோழர்களான சதிராக்கு, மேசாக்கு, ஆபதுநெகோ ஆகியோரின் கதையாகும். நெபுகத்து னேசார், தூரோ என்னும் சமவெளியில் பொற் சிலை ஒன்றை நாட்டி வைத்தார். அதை எல்லோரும் தாழ விழுந்து வணங்க வேண்டும் என்று கட்டளையிட்டார். இதற்குப் பணிய மறுத்த இம்மூன்று இளைஞர்களும், தண்டனையாகத் தீச் சூளையில் எறியப்பட்டனர். ஆபதுநெகோ என்ற அசரியா (1:6–7) இறைவனைப் பார்த்து மன்றாடின செபம் தான் இப்பகுதி. அதில் தன் பாவங்களை அறிக்கையிட்டு இஸ்ராயேலின் உடன் படிக்கையின் நிமித்தம் பாவ மன்னிப்பும், விடுதலையும் கோருகிறார் (3:24–45). இதற்குப் பிறகு வரும் உரைநடைப்பகுதி, அரசரது ஊழியர்கள் எப்படிச் சூளை யின் நிலக்கீல், குங்கிலியம், சணற்கூளம், விறகுச் சுள்ளிகள், ஆகியவற்றை ஓயாமல் இட்டுத் தீச் சுவாலையை 49 முழும் உயரம் வரை வளர்த்தனர் என்று கூறுகிறது. தீச் சூளை, அருகில் நின்ற கல்தேயர்களைப் பொசுக்கிவிட்டது. ஆனால் ஆண்டவரின் தூதர் அசரியாவோடும் அவரது சகோத ரர்களோடும் சூளைக்குள் இறங்கி, தீக் கொழுந்தைச் சூளையினின்று வெளியே செல்லச் செய்து அதன் நடுவில் குளிர்ந்த காற்று வீசும்படி செய்தார் (3:50). அதனால் தீ அவர்களைத் தொடவில்லை. அவர்கள் கொஞ்சமும் வருத்தமோ துன்பமோ அடையவில்லை.

இஸ்ராயேலுக்காக இறைவன் முன்பு செய்த அருஞ்செயல்களை எடுத்துக் கூறி இக்கதை அந்தியோக்கு எப்பிபானின் காலத்திலும் எக்காலத்திலும் மறைக் காகத் துன்புறுபவர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது.

அசரேலா (ASHARELAH)

ஆசாபுவின் புதல்வர்களுள் இவரும் ஒருவர். இவர் அரச கட்டளைப்படி சுர மண்டலம் தம்புரு, கைத்தாளம் ஆகிய வற்றை ஒலித்து இறைவாக்குரைத்து வந்தவர் (1 நாள் 25:2). இவர் 25:14–இல் எசரேலா என்றழைக்கப்படுகிறார்.

அசரேல் (ASAREL – இறைவன் சிறைக் கூடம்)

யூதா இனத்தைச் சேர்ந்த எகல்லலே லின் நான்கு புதல்வர்களில் ஒருவர் ஆவார் (1 நாள் 4:16).

அசலியா (AZALIAH–யாவே ஒதுக்கி வைத்தார், யாவே சிறந்து விளங்கினார்)

அசலியா என்பவர், ஆண்டவருடைய சட்ட நூல் கண்டுபிடிக்கப்பட்ட சூழ்நிலை யில் குறிக்கப்படுபவரும், யோசியாவின் கணக்கருமாகிய சாப்பானின் தந்தையா வார். மெசுல்லாமின் மகன் (2 அர 22:3).

அசலெல்போனி (HAZZELELPONI – வரும் நிழல்)

ஏதாம் ஊரைச் சேர்ந்த யூதா இனத்துப் பெண். ஏதமின் புதல்வர்களின் சகோதரி என்று குறிக்கப்படுகிறார் (1 நாள் 4:3).

அசனா (HASSENAAH)

எருசலேம் சுவர்களைப் பழுதுபார்ப்ப தில் உதவிய ஒரு குடும்பத்தின் தலைவர்

(நெக 3:13). செனா என்ற பெயரின் மற்றொரு வடிவம்.

அசனாத்து (ASENATH – நெயித் என்ற கடவுளுக்குரியது)

ஓனின் குருவாகிய போத்திபராவின் மகள். பாரவோன் மன்னன், யாக்கோபின் மகன் யோசேப்புக்கு இவளை மனைவியாகக் கொடுத்தார். இவள் மூலம் யோசேப்புக்குப் பிறந்தவர்கள் மனாசே, எப்பிராயிம் என்பவர்கள் ஆவர். (ஆதி 41:45. 50–52; 46:20)

கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் கிரேக்கப் போலிநூலில் இவளது புற இனத் தன்மையை மாற்றி விளக்கம் அளித்தனர். இவளைச் செக்கேம்–தீனா ஆகியோரின் மகள் என்று கூறி அவளை ஒரு எபிரேயப் பெண்ணாக்கினர். அவளை போத்திபராதத்து எடுத்துக் கொண்டார். மற்றொரு பாரம்பரியம், இவளை எகிப்தியள் ஆக்கியது. ஆனால் அவள் யோசேப்பால் யாவே வழிபாட்டுக்கு மதமாற்றப்பட்டாள்.

அசனியா (AZANIAH–யாவே கேட்டு அருளினார், யாவே ஒதுக்கி வைத்தார்)

எசுவா என்ற லேவியரின் தந்தை. நெகமியாவின் தலைமையில் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்ட போது கையொப்பமிட்டவர்களில் ஒருவர் (நெக 10:9).

அசனுவா (HASSENUAH – வெறுக்கப்பட்ட பெண், கோபமுள்ள)

1. ஓதவியாவின் தந்தை. பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர். இவரது சந்ததியினர் நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் வாழ்ந்தனர் (1 நாள் 9:7).
2. நெகமியா காலத்தில் யோவேலுக்கு அடுத்த நிலையில் தலைவராக இருந்த யூதாவின் தந்தை (நெக 11:9).

அசாசேல் (AZAZEL–பாவப் பரிகாரக் கிடா)

'அசாசேல்' என்ற வார்த்தை, பாவப் பரிகாரப் பலி செலுத்தப்படும் நாளில் பாலை நிலத்திற்கு ஒட்டி விடப்படுகின்ற பாவங்களைச் சுமக்கும் வெள்ளாட்டுக் கிடாயைக் குறிக்கிறது (லேவி 16:18.10–26). இவ்வார்த்தைக்கு மூன்று விளக்கங்கள் தரப்படுகின்றன.

அ) பாவங்களைச் சுமக்கும் வெள்ளாட்டுக்கிடாயைக் குறிக்கிறது என்பது "எழுபது நூல்கள்", வுல்கத்தா போன்றவைகளின் கருத்தாகும். இதிலிருந்து வேறுபட்ட குறிப்புக்களில், இவ்வார்த்தையானது 'துரத்துதல்' 'நீக்குதல்' என்ற பொருள்படுகின்ற அசாலா என்று அராபிய வார்த்தையோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

ஆ) பாவங்களைச் சுமக்கும் வெள்ளாட்டுக் கிடாயானது ஒட்டிவிடப்படுகின்ற பாலைநிலத்தை இவ்வார்த்தை குறிக்கிறது. இக்கருத்து யூத ராபிகளின் விளக்க நூல்களில் காணப்படுகிறது. ஒரு சிலர் 'அசாசேல்' என்ற இப்பெயரை 'கரடுமுரடான' என்று பொருள் கொள்ளப்படுகின்ற 'அஸ்ஸா' என்ற அராபியச் சொல்லோடு தொடர்புபடுத்திச்' செங்குத்தான இடம் என்று பொருள்படுகின்ற பேத்து–கித்துதோ என்ற இடத்தை அடையாளம் காட்டுகின்றனர்.

இ) பாலைநிலத்தில் குடியிருக்கின்ற சாத்தானைக் குறிக்கின்ற பெயராகும் என்பது இன்றைய விளக்கவுரையாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டக் கருத்தாகும். ஆனால் எந்த ஒரு பண்பாட்டிலும் வெள்ளாட்டுக் கிடாய்கள் சாத்தானுக்குப் பலியிடப்படுவதில்லை. மேலும் லேவி 16–இல் ஆடு சாத்தானுக்குப் பலியிடப்படுவதாகக் கூறப்படவில்லை; மாறாக, இஸ்ராயேலின் பாவங்களைச் சுமந்து சென்று சாத்தானுக்கு அவமானமாக அனுப்பப்படுகிறது. மனித பாவங்கள் சாத்தானுக்குச் சொந்தமாகின்றன. ஆடு பாவங்களைச் சுமந்து செல்லும் வாகனமேயொழிய பரிகாரப்பலிப் பொருள் அல்ல.

அசாசு (AZAZ– ஆற்றலுள்ள)

ரூபனின் தலைமுறை அட்டவணையில் பெலாவின் தந்தையும், சேமாவின் மகனும் ஆவார் (1 நாள் 5:8)

அசாயா (ASAIAH – ஆண்டவர் படைத்தது)

1. யோசியா அரசன் கீழ் இருந்த ஓர் "அரச ஊழியன்" (2 அரசர் 22:12.14; 2 நாள் 34:20). ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட சட்ட நூலைப்பற்றி ஆண்டவர் விருப்

பத்தை அறிய இறைவாக்கினி குலிதா விடம் அனுப்பப்பட்ட குழுவில் ஒருவர்.

2. சிமியோன் குலத்தின் ஒரு தலைவ ராக இருந்தவர். மெயூனியரை அழித்த தில் பங்கு பெற்றவர் (1 நாள் 4:36 – 41).

3. கக்கியாவின் மகன் அசாயா. மெராரியின் மக்கள் என்றழைக்கப்பட்ட லேவியர் குலத் தலைவரும் இவரே. திருப் பேழை ஆண்டவரின் ஆலயத்தில் நிறுவப் பட்டபோது தாவீதுக்கு உதவியர்களுள் ஒருவர் (1 நாள் 6:30; 15:6.11).

4. சீலோனியர்களில் மூத்தவர் இவரே. பாபிலோனியரின் அடிமைத் தனத்தில் இருந்து திரும்பிய பெயர் பட்டியலில் இடம் பெறுகிறார் (1 நாள் 9:5). இப்பட்டியலுக்கு இணையான பகுதியில் இவர் பாரூக்கின் மகனான மாசேயா என்றழைக்கப்படுகிறார் (நெக 11.15).

அசாயேல் (ASAHEL– இறைவன் செய்தார்)

1. தாவீதின் சகோதரியான செருயா வின் கடைசி மகன். யோவாபு, அபிசாய் ஆகியோருக்குச் சகோதரன் (2 சாமு 2:18). காட்டு மான் போல் மிகவும் வேகமாய் ஓடக் கூடியவர் (2:18). தாவீதின் முப்பது வலிய வீரர்களில் ஒருவர் (23:24; 1 நாள் 11:26). ஒவ்வொரு மாதமும் ஒரு படைப் பிரிவு பணியாற்றும் முறைப்படி நான் காம் மாதம் பணியாற்றும் படைப்பிரிவுக்கு இவர் தலைமை வகித்ததாகக் கூறப்படு கிறது (1 நாள் 27:7). இப்பட்டம் அவர் இறந்த பின், அவரைப் பெருமைப்படுத்த கொடுக்கப்பட்டதாக இருக்கலாம். ஏனெ னில் அவரது இறப்புக்குப்பின், அவரது மகன் செபதியாதான் படையின் நான்காம் பிரிவுக்கு உண்மையான தலைவராக இருந்தார்.

இசிபோசத்தின் படை அபினேர் தலைமையில் தாவீதின் படையோடு, கிபயோன் என்ற இடத்தில் போரிட்டது. அதில் தோல்விடைந்து தப்பி ஓடிய அபினேரை அசாயேல் விடாது துரத்தி னார் (2 சாமு 2:17). யோவாவுக்காக இந்த இளைஞனைக் கொல்ல மனமில்லாத அபினேர் அவரை இருமுறை எச்சரித்து, திரும்பப் போகக் கேட்டுக் கொண்டார். இதற்கு செவிமடுக்காது துரத்தி வந்த அசாயேலை வயதான அபினேர் தற் காப்புக்காகக் கொல்ல நேரிட்டது. இந்த இளைஞனின் முடிவு அவ்வழியே செல்பவர்களில் ஆழ்ந்த பாதிப்பை உண்டு பண்ணியது (2 சாமு 2:18–23). போர் முடிந்தபின் அசாயேல் பெத்ல கேமிலுள்ள தன் தந்தையின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார் (2:32). அசாயே லின் சாவு அவருடைய சகோதர்களில் பழிக்கு பழிவாங்கும் உணர்வை வளர்த்தது. பிற்காலத்தில் யோவாபு, அபினேரை அழைத்து நம்பிக்கைத் துரோகமாக அவரைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டார் (3:26–30).

2. லேவியருள் ஒருவர். இவர் யூதா வின் இளவரசர்களோடும் குருக்களோடும் சேர்ந்து யோசபாத்தின் ஆட்சிக் காலத்தில், சட்ட நூலை மக்களுக்குப் போதிக்க அரசனால் நியமிக்கப்பட்டவர் களில் ஒருவர் (2 நாள் 17:8).

3. எசக்கியா காலத்தில் "ஆண்டவ ருடைய ஆலயத்தின் அறைகளைக்" கட்டு வதற்கு முதற்பலன்களையும், தசம பாகத்தையும் நேர்ச்சிப் பொருட்களையும் சேர்ப்பதில் உதவி செய்ய நியமிக்கப்பட்ட அலுவலர்களில் ஒருவர் (2 நாள் 31:13)

4. பாபிலோனின் அடிமைத்தனத்தி லிருந்து திரும்பி வந்தபின் யூதர்களின் அந்நிய மனைவியர் அனுப்பப்பட வேண்டுமென்ற எஸ்ராவின் கோட் பாட்டை எதிர்த்த யோனத்தானின் தந்தை யாவார் (எஸ் 10:15). சில மொழி பெயர்ப்பு கள் இந்தக் கோட்பாட்டை நிறைவேற்று வதில் பயன்பட்டவர் யோனத்தான் என்று கூறுகின்றன.

அசான் (AZZAN–வலிமை)

இவர் இசக்கார் குலத்தின் தலைவரா கிய பலித்தியேலின் தந்தையாவார். யோர் தானுக்கு மேற்கிலுள்ள கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க நியமிக்கப்பட்டவர்களில் பலித் தியேலும் ஒருவர் (எண் 34:26).

அசிகாது (AZGAD – இறைவன் வலிமை யுள்ளவர்)

அடிமைத் தனத்திற்குப்பின் பாலஸ்தீ னாவிற்குத் திரும்பி வந்த குடும்பங்கள் ஒன்றின் தலைவராக அசிகாது விளங்கி னார் (எஸ் 2:12; நெக 7:17). அசிகாதுவின்

மக்களில் அக்காத்தானின் மகன் யோகானானும் மற்றும் நூற்றுப்பத்து ஆடவர்களும் எஸ்ராவுடன் திரும்பி வந்தனர் (எஸ் 8:12). எஸ்ராவின் கீழ் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களில் ஒருவராக அசிகாது விளங்குகிறார் (நெக 10:15).

அசிங்கிரித்து (ASYNCHRITUS— ஒப்புமையில்லாத)

உரோமை 16:14—இல் பவுலால் வாழ்த்தப்பட்டுள்ள ஒரு கிறிஸ்தவர்.

அசிசா (AZIZA—வலிமை)

சட்தூ குடும்பத்தைச் சேர்த்த ஒரு இஸ்ராயேலர். எஸ்ராவின் காலத்தில் புறவினப் பெண்களை மனைவியாகக் கொண்டிருந்தவர்களைக் கட்டாயப்படுத்தி அப்பெண்களை விலக்கிவிடக் கோரப்பட்டவர்களில் ஒருவராவார் (எஸ் 10:27).

அசித்தராவியர் (ASHTERATHITE)

அசித்தரோத்தின் குடிமகன் அல்லது அந்த ஊரைச் சேர்ந்தவர். தாவீதின் வலிய வீரர்களில் ஒருவரான உசியாவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 நாள் 11:44).

அசித்தரோத்து—கர்னயிம் (ASHTEROTH-KAR NAIM —அஸ்தாரோத்தின் இரு கொம்புகள்)

கிலயாதிலிருந்த மிக முக்கியமான கோட்டை நகரம். பிற்காலத்தில் கர்னாயிம் என்று சுருக்கி அழைக்கப்பட்டது (ஆமோ 6:13). கலிலேயக் கடலுக்குக் கிழக்கே 32 கி.மீ. தொலைவிலும் தேல்—அஸ்தராவிற்கு வடக்கே 5 கி.மீ. தொலைவிலும் உள்ள செயிக்காத் இருக்கும் இடத்தில் இவ்விடம் அடையாளம் காட்டப்படுகிறது. இந்த இரண்டு இடங்களும் ஒன்றாக சேர்ந்து வளர்ச்சியடையவில்லை. மாறாக மாறி மாறி வளர்ந்ததாகப் புதைபொருள் ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. இந்த இரண்டு இடங்களும் இரண்டு கொம்புகளையுடைய அசித்தார்தியைப் பொதுவாக வழிபடவில்லை. உண்மையைச் சொல்லப்போனால் கர்னயிமின் பாதுகாவலான தேவதை அசித்தார்த்தி அல்ல, மாறாக அத்தர்காத்தி ஆகும் (2 மக் 12:26)

கெதர்லகோமேரும் அவருடைய கூட்டு அரசர்களும், யோர்தானுக்கு அப்பால் தெற்கு நோக்கிச் சென்ற பொழுது இந் நகரம் அவர்களுடைய தாக்குதலுக்கு இலக்கானது, முழுவதும் அழிக்கப்பட்டது. அப்போது இந்நகரில் இரப்பாயிமியர் வாழ்ந்து வந்தனர் (ஆதி 14:5). இது எவ்வளவு தூரம் அழிபட்டதென்றால், இது கி.மு.16 முதல்13—ஆம் நூற்றாண்டு வரையிலும் (வெண்கலக்காலம்) எந்த மக்களாலும் குடியேறப்படவில்லை. இஸ்ராயேல் வந்த பிறகுதான் இது மறுபடியும் கட்டப்பட்டது. இது சீரியா (ஆராம்) அல்லது இஸ்ராயேல் மக்களால் கட்டப்பட்டிருக்கலாம். இருவருக்கும் போராட்டம் எழுதற்கு ஒரு ஊராக இருந்தது. இஸ்ராயேலின் அரசன் இரண்டாம் எரொபெயாம் (கி.மு. 781—741) "லோ—தெபாரை"க் கைப்பற்றிய பொழுது இதையும் சேர்த்துக் கைப்பற்றினார். அசீரிய நாட்டு அரசர் மூன்றாம் திகிலாத்து பிலேசர் இந்நகரை கார்னெனென்று குறிப்பிடுகின்றார். இவர் இந்தப் பகுதி முழுவதையும் கி.மு. 732—இல் கைப்பற்றி கார்னெனைத் தலை நகரமாக்கினார்.

அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய பிறகு கர்னயிம் அல்லது கர்னியோன் என்று அழைக்கப்பட்ட இந்நகரம் யூதர்களாலும், கிரேக்கர்களாலும் குடியேறப்பட்டது. அக்காலத்தில் இது மிகவும் வல்லமை வாய்ந்த ஒரு கோட்டையாகக் கருதப்பட்டது. ஆனால் யூதர்கள் தங்களைக் காப்பாற்றும்படி யூதா மக்கபேயுவிடம் முறையிட அவர் அதைக் கைப்பற்றி அழித்துவிட்டார் (1 மக் 5:26. 43—44; 2 மக் 12:21.26).

தொல்பொருள் அகழ்வு ஆய்வுகள் இது மூன்றடுக்குச் சுவர்களைக் கொண்ட பெரிய நகரமாயிருந்தது என்றும், முற்றுகையிடக் கடினமானதாகவும் இருந்தது என்றும் காட்டுகின்றன (1 மக் 12:21). இதை இதற்குத் தெற்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள அசித்தரோத்து நகரோடு குழப்பிவிடக்கூடாது.

அசித்தார்த்தி (ASTARTE)

அசித்தரோத்தின் கிரேக்க வடிவம்.

அசித்தரோத்து (ASHTAROTH – தேவதை)

கானானியரின் பாலினப் பெருக்கத் தேவதையான அசித்தோரேத்து என்ற பெயரின் பன்மை வடிவம்.

எபிரேயக் குடியிருப்பில் இஸ்ராயேல் பாகாலிம், அசித்தரோத்து கடவுள்களுக்கு வழிபாடு செய்ததாக கூறப்பட்டாலும் (நீதி 2:13; 10:16), இது அவர்கள் பாகாலுக்கும், அசித்தரோத்துக்கும் நேரடியாக வழிபாடு செய்யாமல், அவர்கள் நடத்திய பாலினப் பெருக்க வழிபாட்டின் பருவச் சடங்குகளைக்குறிக்கலாம். பாகலீமையும், அசித்தரோத்தையும் எறிந்துவிடும்படி சாமுவேல் இஸ்ராயேல் மக்களுக்கு மிசுப்பா கூட்டத்தில் கட்டளையிட்டார் (1 சாமு 7:3–4). பெலிஸ்தியர்களால் இஸ்ராயேல் மக்கள் தோற்கடிக்கப்பட்ட பின்பு, தாங்கள் பாகாலிமுக்கும் அசித். ரோத்திற்கும் வழிபாடு செய்ததை வெளிப்படையாக ஒத்துக்கொண்டார்கள் (1 சாமு 12:10)

இந்த தேவதைக்கு அநேகமாக பேத்துசான் என்ற இடத்தில் ஒரு கோவில் இருந்தது (1 சாமு 31:10). தாவீது இதை அழித்தார். எபிரேயர் அதில் குடியேறவில்லை.

அசித்தரோத்து (ASHTAROTH) – இடம்

1. அசித்தரோத்து தேவதையின் பெயருடைய பாசானில் உள்ள ஒரு ஊராகும். இது யோர்தானுக்கு அப்பால் வடகிழக்கிலுள்ள ஒரு நகரின் பெயர் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. யோசு 12:4; 13:12–இன் படி இங்கு இரப்பாயிமியர் வாழ்ந்தனர் இது எதிரையோடு (இக்கால தேர) தொடர்புப்படுத்தப்பட்டுள்ளது. இது பாசான் நாட்டு அரசனான ஓகுவின் இருப்பிடமாகும் (உப 1:4; 3:10; யோசு 12:4). பின்பு இது மனாசே குலத்தவர்களுக்குப் பங்கீடு செய்யப்பட்டது மாக்கிரால் (யோசு 13:12,31) குடியேறப்பட்டு, இது இஸ்ராயேலின் தஞ்சமடையும் நகர்களுள் ஒன்றாகவும் கெரிசோனிய லேவிய நகரமும் ஆயிற்று (1 நாள் 6:71; யோசு 21:27). கெதர்லாகோமேரால் கொள்ளையிடப்பட்ட இரப்பாயிம் என்பது இவ்விடம்தான் என்று கருதப்படுகின்றது (ஆதி 14:5). இங்கு இவ்விடம் அசித்தரோத்து–கர்னயிம் என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றை அருகருகில் உள்ள வெவ்வேறு நகரங்களாகக் கருதுவதுமேல். அறிஞர்களிடைய கருத்து வேறுபாடு உண்டு. இரண்டையும் இந்த ஊரையும் பெயெசுத்தராவையும் சிலர் ஒன்றாகக்கருதுவர். (காண்க. யோசு 21:27). கலிலேயாக் கடலுக்குக் கிழக்கில் 32 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால தேல்–அஸ்தாரா பழங்கால அசித்தரோத்து இருந்த இடத்தில் அமைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

2. 'இளமை' அல்லது "பெருகும்மந்தை" ஆகிய பொருள்களைக்கொண்ட ஒரு பொதுப்பெயர் (உப 7:13; 28:4; 18:51).

அசித்தோரேத்து (ASHTORETH – விண்மீன்)

இது அசித்தரோத்து என்ற கானானிய பாலினப் பெருக்கத் தேவதையின் பெயரின் திரிபு. இத்தேவதை அசித்தரோத்து, அசித்தார்த்தி, இசிதார் என்று பலவாறு அழைக்கப்படும். 1 அர 11:5,33; 2 அர 23:13 ஆகிய இரண்டு இடங்களில்தான் பழைய ஏற்பாட்டில் இப்பெயர் ஒருமையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கானானிய புற இன மதத்தைக் குறிப்படும்பொழுது எல்லாம் பொதுவாக இப்பெயரின் பன்மை வடிவமான அசித்தரோத்து என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கடவுளின் இடத்திற்குரிய வெளிப்பாடுகளைக்குறிக்கும் 1 சாமு 31:10–இல் ஒரு கோவில் குறிக்கப்பட்டுள்ளது. இது அநேகமாக பேத்துசானில் உள்ளதாக இருக்கலாம். இங்கு கில்போவாப் போருக்குப்பின் பெலிஸ்தியர் சவுலின் படைக்கலங்களை வைத்தனர். இத்தேவதையை அசேரா என்ற தேவதையோடு குழப்பிவிடக்கூடாது.

பாபிலோனியக் கடவுள்கள் கூட்டத்தில் இத்தேவதை இசிதார் என்றழைக்கப்படுகிறது. இவள் சந்திரக்கடவுளான சின்னுக்கும் அவரது துணைவியும் விண்ணகத் தேவதையுமான அனுவுக்கம் பிறந்தவள். இவள் காதலுக்கும், சிற்றின்பத்திற்கும், பாலின விருத்திக்கும் உரிய கடவுளாக சாதாரணமாகக் கருதப்பட்டாள். ஆனால் அசீரியர்கள் இவளைப் போரின் கடவு

ளாகக் கருதினர். இந்த இரட்டை அலுவல்கள் அடையாளம் மாலைவெள்ளி, காலை வெள்ளியோடு தொடர்புடைய தாகச் சிலர் கருதுகின்றனர். மாலை வெள்ளி சிற்றின்பச் செயல்களோடும், காலைவெள்ளி போர்களோடும் தொடர்பு டையதாகக் கருதுகின்றனர்.

கிரேக்கர்காலத்தில் இசிதார் காதலின் தேவதையான வீனஸ் அல்லது அப்ரோ தைட் ஆனாள். இவளது சில உருவங்கள் தாடியுடன் காணப்படுகின்றன. இது இவள் ஒரு அர்த்த நாரீசுவரத் தன்மை யுடையவள் என்பதைச் சுட்டுகிறது.

பெனிசியர்களிடையே சீதோனியர் களின் மிக முக்கியத் தேவதையாவாள் (1 அரச 11:5.33). உகரிட்டிக்கு வாசகங் களில் இவள் பாகலின் கூட்டாளி ஆவாள். ஆனால் உயிரும் மரணமும் கொடுக்கும் இவளது அலுவல், பாகாலின் சகோதர துணைவியான அனாத்தால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பெலிஸ்தியர் இவளைப்போரின் கடவுளாக வழிபட்டனர் (1 சாமு 31:10; காண்க 1 நாள் 10:10). சீரிய பாலஸ்தீனம் முழுவதும் கண்டெடுக்கப் பட்டுள்ள பல அம்மணமான பெண் உரு வங்களில் இவளது உருவங்களும் காணப் படுகின்றன.

இஸ்ராயேலர் பாலஸ்தீனத்தில் குடி யேறிவிட்டபின் அவ்வப்பொழுது இந்தத் தேவதையின் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த னர் (காண்க: நீதி 2:13). சாலமோன் பிற மதப் பெண்களை மணந்தபின் இவ்வழி பாட்டுக்கு ஊக்கம் அளித்ததாகத் தெரி கிறது. 1 அர 11:5–இன்படி சாலமோன் சீதோனிய அசித்தோரேத்து, அம்மோ னிய மில்க்கோம் ஆகியோரின் வழி பாட்டை நாட்டில் புகுத்தினார். அதற்குத் தண்டனையாக இறைவன் அவரது மகன் இரகபெயாமிடம் இருந்த அரசை எடுத்து அதன் பெரும்பகுதியை எரொபயா முக்குக்கொடுத்தார் (11:33). 2 அர 23:13– இல் யோசியா சீர்திருத்தக் காலத்தில் இந்த வழிபாட்டை அழிப்பது குறிக்கப்படு கிறது. இதுவரை இந்த வழிபாடு இஸ்ரா யேலரிடையே நிலைபெற்று இருந்தது.

பாலஸ்தீனத்திலும், தென்சீரியா நாட் டிலும் அசித்தோரேத்தின் வழிபாடு மிகவும் சிறப்பாக இருந்தது என்று பழைய ஏற்பாடும், 10–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெனிசிய குறிப்புகளும் காட்டு கின்றன. எப்பூ என்ற இடத்தில் தோலமி காலத்தில் இவள் சிங்கத் தலையுடன் காட் டப்பட்டுள்ளாள். சிங்கத்தின் தலையுடன் இத்தேவதை சேர்க்கப்பட்டுள்ளது. இது 19–ஆவது அரச மரபுச் சிற்பக் கலைகளு டையதென்பதைக் காட்டுகின்றது. இத் தேவதையினுடைய வழிபாடு பேத்து– சானில் கி.மு. 15 முதல் 13–ஆம் நூற் றாண்டு வரை சிறப்பாக இருந்தது.

பெனிசியா நாட்டு எஸ்மூன் என்ற குணமாக்கும் கடவுளுடன் இது தொடர்பு படுத்தப்பட்டிருப்பதால், இது வாழ்வு கொடுக்கும் தேவதையும்கூட எனத் தோன்றுகிறது.

அசிபத்தா (ASPATHA)

பதிலுக்குப் பதில் யூதர்களால் கொல் லப்பட்ட அகாகிய ஆமானின் 10 புதல் வர்களில் ஒருவர் (எஸ்த 9:7).

அசிபார் (ASPHAR)

பாலைவனத்திலுள்ள ஒரு குட்டை யோனத்தான் மக்கபேயும் சீமோன் மக்கபேயும் கூடாரம் அடித்துத் தங்கிய இடங்களில் ஒன்று (1 மக் 9:33).

அசிபுக்கு (AZBUK – பாழாக்கு)

இவர், பேத்துசூர் மாவட்டத்தின் ஒரு பாதிக்கு ஆளுநராய் இருந்தார். அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த பின் எருசலேம் மதிலைக் கட்டி எழுப்பு வதில் ஈடுபட்டிருந்த நெகமியா என்ற பெயர் கொண்ட ஒருவரின் தந்தையாகக் கருதப்படுகின்றார் (நெக 3:16).

அசிபெனாக (ASHPENAZ – குதிரை மூக்கு)

நெபுக்கதுனேசாரின் அரண்மனையி லிருந்த அண்ணகர்களின் தலைவர். அழகுள்ள ஞானத்தில் சிறந்த உயர்குடி சேர்ந்த யூத இளைஞர்களை அரசனின் பணிக்காக, அரண்மனைக்குக் கொண்டு வரும்படி இவர் கட்டளையிடப்பட்டார் (தானி 1:3–4).

அசிமவேத்து (AZMAVETH – சாவு வலிமை வாய்ந்தது) – ஆள்

1: இருகையாலும் கவணையும், அம்பை யும் கையாள்வதில் திறமை படைத்த

எசியேல், பெலத்து ஆகிய இருவரும் அசிமவேத்தின் புதல்வராவர். இவர்கள் பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரும் சிக்கிலாகு என்னுமிடத்தில் தலைமறைவாயிருந்த தாவீதுடன் சேர்ந்து கொண்டார்கள் (1 நாள் 12:3). இவரும் அடுத்து குறிககப்படுபவரும் ஒருவராக இருக்கலாம்.

2. தாவீதின் திறமையும், ஆற்றலுமிக்க முப்பது படை வீரர்கள் அடங்கிய குழுவில் அசிமவேத்து ஒருவராவார். இவர் பகுரிம் என்ற இடத்திலிருந்து வந்தவர் (2 சாமு 23:31; 1 நாள் 11:33).

3. இவர் அதியேலின் மகனாவார். இவர் எருசலேமில் தாவீது மன்னனின் கீழிருந்து அரண்மனைக் கருவூலங்களைக் கண்காணித்து வந்தார் (1 நாள் 27:25).

4. இவர் யோயதாவின் புதல்வராவார். சவுல் குடும்பத்தின் வழித்தோன்றல்களில் ஒருவர் (1 நாள் 8:36). 1 நாள் 9:42–இல் இவரது தந்தை யாரா என்றழைக்கப்படுகிறார்.

அசிமவேத்து (AZMAVETH) – இடம்

எருசலேமிற்கு வடக்கிலும், வடமேற்கிலுமிருந்து 8 கி.மீ. தொலைவிலும் அனாத்து (அனாதோத்து)க்கு 3 கி.மீ. தொலைவிலும் உள்ள அண்மைக் காலத்திய கிஸ்மே நகரோடு இந்நகர் அடையாளம் காட்டப்படுகிறது. இதன் சிதைவுகள் இது பாறையின் மேல் கட்டப்பட்டிருந்தது என்றும், அதிலே களஞ்சியங்களும் நீர்த்தொட்டிகளும் வெட்டப்பட்டிருந்தனவென்றும் காட்டுகின்றன. அசிமவேத்து நகரைச் சேர்ந்த 42 ஆட்கள் பாபிலோனியாவிலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்தார்கள் (எஸ் 2:24). எருசலேம் மதிலின் அர்ப்பணிப்பு விழாவில் அசிமவேத்திலிருந்து வந்த பாடகர்களும் பங்கு கொண்டார்கள் (நெக 12:29). நெக 7:28–இல் இது பேத்து–அசிமவேத்து என்றழைக்கப்படுகிறது.

அசிமா (ASHIMA – குற்றம்)

கி.மு. 722–இல் வட அரசின் வீழ்ச்சிக்குப்பின் கம்மாத்து நகரிலிருந்த சமாரியாவில் அசீரியர்களால் குடியேற்றப்பட்ட மக்களின் கடவுள் (2 அர 17:30). இது கானானிய தாய்த் தேவதையான அசேராவின் திரிபுப் பெயராகும். ஆமோஸ் இறைவாக்கினர் காலத்தில் வாழ்ந்த மக்கள் சத்தியம் செய்த கடவுளின் பெயராக இருக்கலாம் (ஆமோ 8:14). எகிப்தைச் சேர்ந்த எலிபைன்டைன் ஏடுகளில் காணப்படும் அசேம்–பேத்தேலுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

அசிமோன் (AZMON – வலிமை)

யூதாவின் தென் எல்லையோரப் பகுதியில் இந்த இடம் உள்ளது. எகிப்து நாட்டின் நதிக்கு முன்னால் மேற்குப் புறத்தில் உள்ள கடைசி ஊராகும் (எண் 34:4–5; யோசு 15:4). ஒருவேளை அசிமோன் என்ற ஊரானது "ஏசேம்" என்ற நகராக இருக்கலாம். வரலாற்றிற்கு முன்னால் புனிதப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாகிய பழம்பெரும் காதேசு–பார்னேயாவுக்கு வடமேற்கில் 16 கி.மீ தொலைவிலுள்ள அயீன்–ஏல்–கோசேமே என்ற இடத்தில் அஸ்மோன் என்ற ஊர் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த இடத்தில் எகிப்தியப் புறக்காவல் நிலையச் சிதைவுகள் இன்னும் காணப்படுகின்றன.

அசியேல் (ASIEL – இறைவன் படைத்தது)

1. சிமியோன் குலத் தலைவர்களுடைய பட்டியலில் உள்ள ஏகூ என்பவருடைய கொள்ளுப்பாட்டனும் செராயாவின் தந்தையுமாவார் (1 நாள் 4:35). கெதோரில் மேய்ச்சல் நிலம் தேடிச் சென்ற தலைவர்களில் ஒருவர் (4:39).

2. தோபித்தின் மூதாதையர் (தோபி 1:1). இவர் நப்தலி குலத்தைச் சேர்ந்தவர்.

அசியேல் (AZIEL – இறைவன் என்பலம் ஆவார்)

அசியேல் என்பவர், ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையை எருசலேமிற்கு எடுத்துக்கொண்டு வரும்பொழுது யாழ்களை மீட்டுக்கொண்டு வந்தவர்களில் ஒருவராவார். இவர் ஒரு லேவியர். இவருடைய முழுப் பெயர் 'யாகசீயேல்' எனப்படும் (1 நாள் 15:20).

அசிரிக்காம் (AZRIKAM – என் உதவி எழுந்துவிட்டது)

1. இவர் நெயரியாவின் புதல்வராவார். செருபாபேல், தாவீது ஆகியோரின் வழித் தோன்றல் ஆவார் (1 நாள் 3:23).

2. இவர் பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஆசேலின் மகனாவார். யோனத்தான், சவுல் ஆகிய இருவரின் வழிவந்தவர் (1 நாள் 8:38; 9:44)

3. ஒரு மெராரி குலத்தைச்சேர்ந்த ஒரு லேவியர். செமாயாவின் பாட்டனும் கெசபியாவின் மகனும், கசூப்பின் தந்தையுமாவார் (1 நாள் 9:4; நெக 11:15).

4. ஆகாசு மன்னனின் அரண்மனைத் தலைவராவார். எப்பிராயிமின் வலிமை மிக்க வீரன். சிகிரி என்பவரால் போரில், இவர் மாசேயா, எல்கானா ஆகியோருடன் கொல்லப்பட்டார் (2 நாள் 28:7). இவரும் 2–இல் குறிக்கப்பட்டவரும் ஒருவராக இருக்கலாம்.

அசிரியேல் (ASRIEL – இறைவன் உதவியாயுள்ளார், இறைவன் மகிழ்ச்சியால் நிரப்பினார்)

மனாசேயின் குலத்தவருள் ஒருவர். மோசேயால் வனாந்திரத்தில் எடுக்கப்பட்ட இரண்டாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பட்டியலில் வருகின்ற கிலயாத்தைச் சேர்ந்த ஒருவர் (எண் 26:31; யோசு 17:2; 1 நாள் 7:14). யோசுவாவால் நிலம் ஒதுக்கப்பட்ட மனாசே குலத்தைச் சேர்ந்த குடும்பங்களில் ஒன்றான அசிரியேலருடைய மூதாதையர். குலப் பெயர் முதல்வர்.

அசிவாத்து (ASHVATH)

ஆசேரின் மரபுப்பட்டியலில் வரும் யபிலேத்தின் புதல்வருள் ஒருவர் (1 நாள் 7:33).

அசினா (ASNAH – முட்புதர், "நா"வைச் சேர்ந்தவர்)

பாபிலோனியாவில் இருந்து செருபாபேல் தலைமையில் பாலஸ்தினத்திற்கு நாடு திருப்பிய ஆலயப்பணியாளர்களுள் ஒரு குடும்பத்தின் தலைவர் (எஸ் 2:50).

அசினோத்து–தாபோர் (AZNOTH-TABOR- தாபோரின் சரிவுகள்)

நப்தலியின் தென் எல்லையோரத்திலுள்ள ஒரு பகுதியாகும். ஒருவேளை இது நப்தாலி, இசக்கார், செபுலோன் ஆகிய பகுதிகள் தாபோர் மலையின் ஒன்றுகூடிய இடமாக இருக்கலாம் (யோசு 19:34). தாபோர் மலைக்கு அருகிலுள்ள ஊன்–எபேயில் என்ற இடத்தில்தான் அசினோத்து–தாபோர் என்ற இடம் இருந்திருக்கலாம்.

அசீரியா (ASSYRIA)

மெசபொத்தாமியாவில் திகிரிசு நதியின் மேற்குப் பகுதியில் நிலவியிருந்த ஒரு பேரரசும் நாகரிகமும் ஆகும். கி.மு. முத லாம் ஆயிரம் ஆண்டுகளில் யூதாவும் இஸ்ராயேலும் எதிர்கொண்ட முக்கிய எதிரியுமாகும். இது அக்காதிய ஏடுகளிலும் பழைய ஏற்பாட்டிலும் அசூர் என்றழைக்கப்பட்டது (எண் 24:22,24). இது பாபிலோனுக்கு வடக்கிலும் சீரிய பாலைவனத்திற்குக் கிழக்கிலும் அந்தோலியாவுக்குத் தெற்கிலும் குர்தீஸ் மலைகளுக்கு மேற்கிலும் அடங்கிய பகுதியைக் கொண்டது.

1. வரலாறு:- நமக்குக் கிடைத்திருக்கும் சான்றுகளிலிருந்து வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். உணவுப் பொருட்கள் உண்டாக்கும் வாழ்க்கை முறையோடு கிராம வாழ்க்கை இங்குத் தொடங்கியது. இதற்கு இக்கால கிர்குக்குக் கிழக்கிலுள்ள காரீம் சாகீர்க்கு (கி.மு. 7000), யார்மோ (கி.மு. 6000) ஆகிய ஊர்கள் இருந்த இடங்கள் சான்றுகளாக உள்ளன. கி.மு. 5500 – 3000–க்கு இடைப்பட்ட காலத்தில், தொழில்கள் முன்னேறியதாகத் தெரிகின்றது. இதற்குக் கசூனா, சமர்ரா, தேல் கலாப், உபய்த், ஊருக் போன்ற இடங்களில் காணப்படும் கலாச்சாரத் தடையங்கள் சான்றுகளாக அமைகின்றன. கி.மு. 2900–ஐ ஒட்டி அரசாட்சி தொடங்குகிறது. அதோடு எழுத்துக் கலாச்சாரமும் தொடங்குகிறது.

அசீரிய அரசர்களின் பட்டியல்படி, தொடக்ககால அரசர்கள் பெரும்பாலும் கூடாரங்களில் வாழும் நாடோடித் தலைவர்களாவர். கி.மு. மூன்றாம் ஆயிரமாண்டு காலத்தின் முடிவில் சுமேரியன் செல்வாக்கு இங்கு காணப்படுகிறது. அக்காதிய சார்கோனின் (2300–2230) செமித்திய அரச மரபினர் நினிவே, அசூர், காலாக் ஆகிய நகர்களை மீண்டும் கட்டினர். ஏலாமியர் 2000–ஐ ஒட்டி அமர்சுயென்னையும் ஊரின் மூன்றாம் அரசமர்பையும் தோற்கடிக்கும் வரை இந்நிலை நீடித்தது. விவிலியம் நாடுகளின் பட்டிய

வில் தொடக்க நிலை அசீரியாவில் பாபிலோனியர் கொண்டிருந்த பாகத்தைக் குறைத்துக் கூறுவதாகத் தெரிகிறது (ஆதி 10:11–12.22).

சுதந்திர நகர–நாடான அசூர் வணிக மையமாகத் திகழ்ந்தது. சிறிய ஆசியாவின் குடியிருப்புகளுடன் வணிக உறவு கொண்டிருந்தது. கப்பதோக்கியாவில் கனேசில் (இக்கால குல்தெபே) கண்டெடுக்கப்பட்ட ஏறக்குறைய 3000 ஆப்பு எழுத்து ஏடுகள் இந்த வணிகச் செயல்களுக்குச் சான்று பகர்கின்றன. அக்காதிய அரசர்கள் இலுசுமா, முதலாம் சார்கோன் ஆகியோரின் கீழ் அசீரியா பாபிலோனின் மேல் படைஎடுத்துச் சென்றது. 19–ஆம் நூற்றாண்டு மத்தியில் அந்தோலியாமவைச் சேர்ந்த இத்தியர்களின் படையெடுப்பு அசீரிய வணிகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. சிறிது காலத்திற்கு தியாலா ஆற்றுப் பகுதியிலுள்ள எஸ்நுன்னானைச் சேர்ந்த நராம்–சின் என்பவர் ஆசூரில் ஆதிக்கம் செலுத்தினார். சிறிது காலத்திற்குப் பிறகு எமோரியத் தலைவர் முதலாம் சம்சீ–அதாத் அசூரில் அரியணை ஏறினார். அவரது மகன் யஸ்மா–அதாத் என்பவர் மாரியைக் கைப்பற்றினார். சம்சீ–அதாதின் இறப்புக்குப் பின் பதவி நீக்கப்பட்ட சிம்ரி–லிம், மாரியில் அதிகாரம் செலுத்தினார். இவரைப் பாபிலோனைச் சேர்ந்த கமுராபி தோற்கடித்தார். ஒரு குறுகிய போராட்டத்திற்குப்பின் அசூர் மித்தன்னீ பேரரசின் சிற்றரசாகியது. இதோடு பழைய அசீரிய காலம் முடிவுக்கு வந்தது (1650). இதற்குப் பின் வந்த இருண்ட காலத்தில் அரசியல் செய்திகள் கிடைக்கவில்லை என்றாலும், இப்பகுதி விவசாயத்தில் ஓரளவு செழிப்புற்றிருந்தது என்பது நூசி ஏடுகளிலிருந்து தெரிகிறது.

14–ஆம் நூற்றாண்டின் மத்தியில் மித்தன்னீ அரசின் வீழ்ச்சியோடு, அசீரியா மீளவும் அகில உலக முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. அசீரியப் பகுதியில் அரசப்பட்ட உரிமை கோரியவரான முதலாம் அருபல்லி (1365–1330) எகிப்திய அரசவைக்குத் தூது அனுப்பினார். இரண்டாம் கராயின்தாசக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்து பாபிலோனோடு உடன்படிக்கை செய்து கொண்டார். அவனது வழித் தோன்றலான இரண்டாம் குரிகல்சூ பாபிலோன் அரியணை ஏறக் கருவியாக அமைந்தார். அசூருபல்லியின் மரணத்துக்குப் பின் குரிகல்சூ அசீரிய அரியணையையும் சேர்த்துக் கொள்ள முயற்சித்தார். இதன் விளைவாக ஏற்பட்ட போராட்டங்கள் பாபிலோனியாவை மிகவும் பலவீனப்படுத்தியது. அரசுக்கு வரும் மரபுமுறை செய்யப்பட்டது. மத்திய அசீரியர் காலத்தில் அரசர்கள் வடக்கிலும் மேற்கிலும் வியாபாரப் போக்குவரத்தைத் திறந்துவிட்டனர்.

முதலாம் சால்மனேசர் (1274–1245) மேற்கு மாநிலமான கனிகல்காத்தில் நடந்த கிளர்ச்சியை அடக்கி அப்பகுதியைத் தன் அரசுக்குள் சேர்த்துக் கொண்டார். பிற்காலத்தில் அசீரியர்கள் வழக்கமாக இருந்த முறைப்படி தோற்கடிக்கப்பட்ட மக்களை நாடு கடத்திச்சென்று தன் அரசின் பலபகுதிகளில் குடியேற்றினர். வடக்கு எல்லையை உரத்துக்கு எதிராகப் பாதுகாத்தார். காலாக்கில் (நிம்ரூத்) புதிய தலைநகரை அமைத்தார். அவர் மகன் முதலாம் துகுல்தி–நிதூர்தா (1244–1208) பாபிலோனின் மேல் குறி வைத்து, அதை வென்று அசீரிய ஆட்சிக்குள் முதல் முறையாகக் கொண்டு வந்தார். ஏழு ஆண்டுகளுக்குப்பின் அரசன் அவன் மகனால் கொல்லப்பட்டார். அசீரியா உள்நாட்டுப் போரில் ஈடுபட்டது. இது பாபிலோனின் மேலாண்மையைக் கொண்டு வந்தது. அசூர்–ரெஸ்–இஸ்ஸி மீளவும் அசீரியாவைச் சுதந்திர நாடாக்கினார் (1125). அவரது மகன் முதலாம் திகிலாத்து பிலெசேர் (1115–1077) சுபாரிய, அக்லாமு ஆகிய இனத்தவர்மேல் ஆதிக்கம் செலுத்தினார். இவர் மத்தியதரைக்கடல்வரை அரசை விரிவாக்கினார். பிப்லோஸ், சீதோன், ஆர்வாது போன்ற நகரங்களைக் கப்பம் கட்டச்செய்தார். ஆனால் அரமேயரின் தாக்குதல் நீடித்திருந்தது. அசீரிய பலம் நாட்டின் நிலைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. ஆகையால் அசீரியா தளர்ச்சியுறத் தொடங்கியது. 1100–900–க்கு இடைப்பட்ட காலத்தில் இந்நிலை

தான் அசீரியாவிலும் பாபிலோனிலும் எலாமிலும் நீடித்தது. இந்நிலை தாவீது, சாலமோன் ஆகியோரின்கீழ் இஸ்ராயேலின் முடியாட்சி எழுச்சிக்குச் சாதகமாக இருந்தது.

10–ஆம் நூற்றாண்டின் இறுதியில் அசீரியா படைப்பலத்திலும், பொருளாதாரத்திலும் மீண்டும் வளர்ச்சியுறத் தொடங்கியது. புதிய அசீரிய அரசர்களான இரண்டாம் அசூர்தான் (934–912) 2–ஆம் அதாத்னிராரி (911–891) ஆண்டுதோறும் படையெடுக்கும் முறையைத் தொடங்கி வைத்தனர். இது இக்காலத்தின் பண்பாகியது (காண்க: 2 சாமு 11:1). புதிய அசீரியப் பேரரசு பழைய மேற்காசியாவில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக மாறினாலும் இது உறுதியான நிலையை ஒரு போதும் அடையவில்லை. அரண்மனைச் சதிகளும் வாரிசு உரிமைப் போராட்டங்களும் சர்ச்சைகளும் சாதாரண நிகழ்ச்சிகளாயின. ஒவ்வொரு அரசரும் மாநிலங்களில் கிளர்ச்சிகளை அடக்கவும், அண்டை நாட்டாரின் படையெடுப்பை எதிர்க்கவும் வேண்டியிருந்தது. ஒவ்வொரு அரசரும் மிகுந்த படைப்பலத்தைப் பெருக்குவார், பெரும்பகுதிகளை வென்று அரசை விரிவாக்குவார். ஆனால் அவர் இறப்போடு பேரரசு நசித்துப் போய்விடும்.

இரண்டாம் அசூர்னசிர்ப்பால் (883–859) யூப்பிரத்தீசு பள்ளத்தாக்கில் அரமேயப் படையெடுப்பை நிறுத்தினார். மத்திய தரைக்கடலுக்கு வழி தொடங்கி வைத்தார். கொடுங்கோலன் என்ற படத்தில் பெருமை பாராட்டிக்கொண்டார். வென்ற பகுதிகளிலிருந்து பெரும் கப்பம் கட்டச் செய்து தலைநகர் காலாக்கை மீண்டும் கட்டினார். அவர் மகன் 3–ஆம் சால்மனேசார் (858–824) கர்கேமிசைக் கைப்பற்றினர். பித்–அதினி என்ற அரமேயப் பகுதியைப் பேரரசுக்குள் சேர்த்துக்கொண்டார். ஆனால் அவர் முன்னேற்றத்தைத் தமஸ்குவின் 2–ஆம் பென்–அதாத்தின்கீழ் செயல்பட்ட இஸ்ராயேலின் ஆகாபு அடங்கிய கூட்டணி தடுத்து நிறுத்தியது.(காண்க 1 அர 20). 841–இல் இப்போது அரசுரிமையை அபகரித்துக்கொண்ட கெசாயேலின்கீழ் செயல்பட்ட சீரியக் கூட்டணியைப் பழிக்குப்பழி தீர்த்தார். நாட்டுப் புறங்களைக் கொள்ளையடித்தார். இஸ்ராயேலின் ஏகூ உள்ளடங்கிய சீரிய–பாலஸ்தீன கூட்டணியை அடிபணியச்செய்தார். அரசி சம்மூர்மாத்தின் (செமிராமிஸ்) பகர ஆட்சிக்குப்பின் 3–ஆம் அதாத்நிராரி (810–783) தமஸ்குவின் பென்–அதாத்தின் கூட்டணியைக் கலைத்தார். இது யோவாசின்கீழ் இஸ்ராயேலுக்குச் சிறிது ஓய்வளித்தது (2 அர 13:25; காண்க 2 நாள் 24:23–24). 2– ஆம் சால்மனேசர் (782–772) உரத்தியர்களிடமிருந்து நெருக்கடி நிலையிருந்தாலும் தமஸ்குவைக் கட்டுப்பாட்டுள் வைத்திருந்தார். இது 2–ஆம் எரொபயாம் இஸ்ராயேலின் எல்லையை கம்மாத்து வரை நீடிக்க உதவியது (2 அர 14:25–28).

3–ஆம் திகிலாத்து பிலெசேர் (745–727) அரியணையை அபகரித்துக் கொண்டார். அவருக்குப் பின் வந்தவர் அசீரியப்படைப் பலத்தையும், பொருளாதார ஆதிக்கத்தையும் மீண்டும் நிறுவினார். இஸ்ராயேலின் அரசன் மெனகேம் இவருக்குக் கப்பம் கட்டி இவரது ஆதரவைக் கோரினார் (காண்க 2 அர 15:19). தமஸ்குவின் இரசீன், பெக்கா ஆகியோரின் தாக்குதலுக்கு எதிராக ஆகாசின் ஆதரவு கோரும் வேண்டுதலுக்கு இணங்கி (கி.மு. 734; 16:5–9), திலாத்து பிலெசோர் சீரிய பாலஸ்தினத்தின்மேல் படையெடுத்து பரவலாக அழிவை ஏற்படுத்தினார் (15:29). இரு ஆண்டுகளுக்குப் பின் ஓசியாவை இஸ்ராயேலின் அரியணையில் ஏற்றினார் (காண்க: 15:30). பின் எருசலேமின்மேல் படையெடுத்தார் (16:5–6; 2 நாள் 28:17.19–21). சிறிது காலத்திற்குப் பின் கல்தேயாவைக் கைப்பற்றி பூலூ என்ற பட்டத்துடன், தன்னையே பாபிலோனின் அரசனாக்கிக் கொண்டார் (2 அர 15:19; 1 நாள் 5:26). ஓசியா கப்பம் கட்டாததால் சினமுற்று 5–ஆம் சால்மனேசர் (727–722) சமாரியாவை முற்றுகையிட்டு, நகரைக் கைப்பற்றி அதன் மக்களை நாடு கடத்தினார் (கி.மு.722; 2 அர 17:3–6; 18:9–10). அசீரியாவின் கடைசி அரச மரபைத் தொடங்கி வைத்த 2–ஆம் சார்கோனின் (721–705) ஆட்சிக்காலம் முழுவதும் 3–ஆம் திக

லாத்து–பிலெசேரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதில் செலவிடப்பட்டது. 10 ஆண்டுகளுக்குப்பின் கல்தேய மர்துக்–அப்லா–இத்தினா (மெரோதாக்–பலதான்)விடம் பாபிலோனை இழந்தார். ஆனால் எகிப்திய ஆதரவு பெற்ற கூட்டணியை கர்காரிலும், அசுதோத்திலும் முறியடித்தார் (காண்க. ஏச 10:5–6.9; 20: 1–6). சனகெரிபுவின் (705–681) காலத்தில் ஓரளவு அமைதியும் நிலையான அமைப்பும் நிலவியது. ஆண்டுதோறும் நடக்கும் போர்கள் நிகழவில்லை. ஆனால் 701–இல் பாபிலோனில் மர்துக்–அப்லா–இத்தினாவும் எருசலேமில் எசக்கியாவும் கிளர்ச்சி செய்தபோது இந்த அமைதி குலைந்தது. இது அசீரியர்கள் எருசலேமை நீண்டகாலத்திற்கு முற்று கையிடுவதற்கு இட்டுச்சென்றது (கி.மு. 701; 2 அர 18:13–19:37; 2 நாள் 31:1–22; ஏச 36–37). பாபிலோனும் அழிக்கப்பட்டது (689). சனகெரிபுவின் மனைவியருள் ஒருத்தி நக்கீயா அல்லது சக்கூத் ஆவாள். இவள் இஸ்ராயேலின் அரசன் ஓசியாவின் மகளாக இருக்கலாம். இவள் வழியாகப்பிறந்த மகன் ஏசர்கத்தோனை சனகெரிபு தன் வாரிசாக நியமித்தார். இது அவரது புதல்வர்களே அவரைக் கொலை செய்வதற்கு இட்டுச் சென்றது (காண்க: 2 அர 19:37; ஏச 37:38) ஏசர்கத்தோன் (681–669) பாபிலோனின் வாரிசு இளவரசனாக இருந்தார். அப்போது அந்நகரை மீளவும் கட்டி எழுப்பினார். வடக்கிலிருந்து சித்தியர் சிம்மேரியர் ஆகியவர்கள் வழியாக வந்த இடுக்கண் நிலையைச் சமாளித்து இவர் வெற்றிகரமாக எகிப்தின் மேல் படையெடுத்து, பாரவோன் தகார்காவை மெம்பிசில் 671–இல் தோற்கடித்தார் (2 அர 19:9; ஏச 37:9). இவருக்குப்பின் வந்த அசூர்பானிப்பால் (668–626) எகிப்தைத் தொடர்ந்து வெற்றி கண்டு திபிசை அழித்தார். 663–இல் பாரவோன் நெக்கோவைக் கொன்றார் (காண்க: நெக 3:8) அசூர் பானிப்பால் வடக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வந்த தாக்குதல்களில் கவனம் செலுத்தியபோது, இவரால் பாபிலோனின் பொறுப்பு அளிக்கப்பட்ட இவர் சகோதரன் சமாஸ்–சும்–உகின் கிளர்ச்சி செய்தார் (652). இருவருக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் கிளர்ச்சி செய்தவனின் தற்கொலையில் முடிந்தது. இவை அசீரியப் பேரரசை பெரிதும் பலவீனப் படுத்தியது. 612–ல் கல்தேய நபு–அப்லா–உசூருக்கு (நபோபோலாசார்) நினிவே சரண் அடைந்தது. 609–ல் மெகித்தோவில் யோசியாவின் தலையீடும் (2 அர 23:24–30), 605–இல் கர்கேமிசில் பாபிலோனியர்களோடு நடந்த போர்களும், 2–ஆம் நெக்கோவின் தலைமையில் எகிப்திய உதவி 2–ஆம் அசூர்பல்லித்துக்கு காரானில் வந்தடைவதைத் தடுத்தது. இதோடு அசீரியப்பேரரசு முடிவுக்கு வந்தது. அசீரியா பாபிலோனின் ஒரு மாநிலமாயிற்று.

2. சமயம்:- அசீரிய வரலாற்றின் மாறுபட்டுக்கொண்டிருந்த அரசியல் அமைப்பின் விளைவாக, இப்பகுதியின் சமயமும், கலாச்சாரமும் பாபிலோனிய சமயத்தோடு நெருங்கிய விதத்தில் ஒத்திருக்கிறது. இரண்டும் சுமேரியர்களிடமிருந்து தோன்றியதாகத் தெரிகிறது. அசூர் நாட்டு கடவுளாவார். இவர் பாபிலோனிய மர்துக்குக்கு இணையாவார். இருவரும் சுமேரிய ஏன்லில்லின் வாரிசுகளாகும். அசூர்தான் அரசர்களுக்கு ஆற்றல் அளிப்பவர். அவருக்கே தங்கள் போர்ச் செயல்களை அர்ப்பணித்தனர். மிகப்பெரிய கடவுள்கள் குழுவில், மற்ற முக்கிய கடவுள்கள் சந்திரக் கடவுள் ஆன சின், போருக்கும் காதலுக்கும் கடவுளான இசிதார், போருக்கும் வேட்டையாடுதலுக்கும் காவலான நினுர்தா, ஞானத்திற்கும் இலக்கியத்திற்கும் கடவுளான நபு ஆகியவர்களும் உள்ளடங்குவர். மழை நீரையே நம்பியிருந்ததால் நீருக்கும் வாழ்வுக்கும் அசீரிய சமயம் வானிலை காட்சிகளில் அக்கறை காட்டியது. ஆகவே புயல் கடவுளான அதாத் போன்ற தேவர்கள் முதன்மை பெற்றனர்.

இப்பகுதியில் ஏராளமான கடவுள்களின் சிலைகளும் உருவங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அக்கடவுள் தன் வாழ்வதாகக் கருதப்பட்டது. ஆகவே அவர்களைக் கவனிப்பது, சேவை செய்வது பற்றி விரிவான நடைமுறைகள் கொடுக்கப்படுகின்றன. அரசனை சுத்தி செய்யவும் அவனுக்கு வழிகாட்டவும், பல

கடவுள்களின் பெயரால், விரிவான சடங்குகள் அனுசரிக்கப்பட்டன. பாது காக்கிற ஆவிகள், பேய்கள் ஆகியவற்றின் மேல் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. சோதிடத்தையும், விலங்குகளின் ஈரலின் வடிவம், வண்ணம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளைக் கவனித்து, விலங்குகளின் நடத்தை, இயற்கைக்கு மாறான பிறப்பு கனவுகள் போன்ற குறிகளையும் பயன் படுத்தி வருவது உணர்ந்து கூறுவதற்குத் தங்களையே அர்ப்பணித்த சிறப்புக் குழுக் கள் இருந்தன.

3. இலக்கியம்:- இப்பகுதிபற்றி கி.பி. 1842–இல் இருந்து அகழ்வாய்வுகள் செய் யப்பட்டுள்ளன. நினிவே (கியுன்யிக்) தூர்–சரூக்கின் (25 கி.மீ. தொலைவில் வட கிழக்கிலுள்ள கொர்சாபாத்) ஆகிய இடங் களில் செய்யப்பட்ட ஆய்வுகளில் அசீரிய இலக்கிய கலாச்சாரம் பற்றிய செய்திகள் அதிகம் கிடைத்துள்ளன. குறிப்பாக, நினி வேயில் கண்டெடுக்கப்பட்டுள்ளன (1345–851). இவர்கள் கி.மு. 3000–க்கு முன்னரே எழுதக் கற்றுக்கொண்டிருந்தனர். இம் முறையை பாபி லோனியர்களிட மிருந்து பெற்றதாகத்தெரிகிறது. இவர்கள் சிறப் பான இலக்கியத்தைத் தோற்றுவித்தனர். இவர்கள் களிமண் பலகை செய்து அதில் நூல்களை எழுதினர். பழங்காலத்தில் ஆப்பு வடி எழுத்தில் எழுதினர். இதோடு சேர்த்து கி.மு. 700–இல் இவர்கள் அரிசுச் சுவடி முறையில் அராபிக் மொழி யில் எழுதலாயினர். அசூர்பானிப்பாலின் நூல் நிலையம் பற்றிய ஆய்வுகள் 26,000 ஆப்பு எழுத்து ஏடுகளையும் கொண் டுள்ளன. இவற்றில் பல்வேறு இலக்கியங் கள் காணப்படுகின்றன. அசீரிய அரசர் கள் எழுத்தர்கள் குழுவைக் கொண்டிருந் தனர். இவர்கள் வியாபார, ஆட்சிப் பதி வேடுகளைக் கவனித்துக் கொண்டதோடு, சுமேரிய, பாபிலோனிய அசீரிய வாசகங் களைப் பாதுகாத்தனர். இவற்றில் மதம், கதைகள், இதிகாசங்கள், அரச நாட் குறிப்புகள், மரபு முறைப்பட்டியல்கள், சடங்குகள், அடையாளங்கள், அவற்றின் பொருள், ஞான இலக்கியங்கள், சட்டத் தொகுப்புகள் சுமேரிய பலவகைப்பட்ட அக்காதிய பிரிவுமொழிகளின் மொழி பெயர்ப்புக்காக அகராதிகள், சொல் தொகுதி, நிகண்டு, பாடத்திட்ட முறைகள் ஆகியவை காணப்படுகின்றன. கணிதம், வானஇயல், மருத்துவம், கண்ணாடி செய்தல் போன்றவற்றில் அசீரிய விஞ் ஞான, தொழில்கள் பற்றிய நூல்களும் காணப்படுகின்றன. இவர்களது சட்டத் தொகுப்பு நூல் கி.மு. 1400–இல் எழுதப் பெற்றதாகும். இவற்றை அகர வரிசைப் படுத்தி அலமாரிகளில் அடுக்கி வைத்த னர். இப்போது ஆங்கில நாட்டுப் பொருட் காட்சி நிலையத்தில் உள்ளன. கலைத் துறையில் இவர்கள் பாபிலோனிய, மேற்கு மெசபொத்தாமியா, சீரிய கலைகளால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களையும் மிஞ்சினர். கி.மு. 2000–1000–ல் தனி அசீரிய கலை ஒன்று எழுந்தது. இவர்கள் வெண்கல்லிலும், சுண்ணாம்புக் கல்லிலும் புடைப்புச் சித்திரம் செதுக்கினர். ஆனால் இவர்களுக்கு இயலுறுத்தோற்றம் தெரி யாது. அசீரியர்கள் கட்டடக் கலையிலும் மற்ற கலைகளிலும், சிறந்து விளங்கினர். பல அரசர்கள் அரண்மனைகள், ஆலயங் கள் கட்டுவதிலும் அவற்றை அழகுபடுத்து வதிலும், குறிப்பாகத் தலைநகர்களான அசூர், காலாக், நினிவே ஆகிய நகர் களில் தங்களது ஆற்றலைப் பெரிதும் செலவிட்டுள்ளனர். அரச, பொதுக் கட்ட டங்களில் பெரும் சிலைகளும், அழகு செய்யப்பட்ட சித்திரங்களும் அழகு செய் தன. தலைநகர்களில் பரந்த தாவர, விலங்குப் பூங்காக்கள் அமைக்கப்பட்டன. நிமிரு, சமாரியா, ஆகிய இடங்களில் காணப்படும் தந்தத்தில் செதுக்கப்பட்ட உருவங்களும், கல்உருளை முத்திரை களும், அசீரியாவின் கலைஞர்களின் ஆற்றலைச் சுட்டுகின்றன. இவ்ர்களுடைய கலைப் பொருள்களில் சிறந்தவை அசூர் பானிப்பாலின் காலத்தைச் சேர்ந்தவை யாகும். இவர்கள் பெரிய நகரங்களை அமைத்தனர். அவற்றில் மாடியுடைய கட்டடங்கள் இல்லை. சில அரண்மனை கள் முற்றங்கள் முதலியவற்றுடன் மிகுந்த பரப்பளவு உடையன. அரண்மனையைச் சுற்றி அகழிகள் வெட்டப்பட்டன.

4. கொடியவர்கள்:- இவ்வளவு அறிவி யல், கலாச்சார முன்னேற்றம் அடைந்தி ருந்தாலும், அசீரியர்கள் கொடியக் காட்டு மிராண்டிகளாகக் கருதப்பட்டனர். அதற்

கேற்றவாறு நடந்துகொண்டனர் (காண்க: ஏச 10:12–15). அசீரிய அரசர்கள் தங்களது படைப்பலத்தையும் தோற்கடிக்கப்பட்டவர்களைக்கொடுமையாக நடத்தியது பற்றியும் பெருமை பாராட்டிக்கொண்டனர். கூரிய கம்பங்களில் எதிரிகளைக் கழுவேற்றினர். நகரங்களை எரித்தனர். கொள்ளையிட்டு பெரும் கொள்ளைப் பொருட்களைக் கவர்ந்துசென்றனர். மத்திய, புதிய அசீரிய காலங்கள், தோற்கடிக்கப்பட்ட மக்களை பேரரசின் மற்றொரு பகுதிக்கும், அங் குள்ளவர்களை இங்கும் குடியேற்றி, பரந்த பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைத்திருந்தனர். அதனால் பழைய ஏற்பாட்டில் குறிப்பாக ஆமோஸ், ஓசேயா, ஏசயா, மீக்கா, செப்பனியா, நாகூம் போன்ற இறைவாக்கினார்கள் அசீரியர்களைக் காட்டுமிராண்டிகள் என்றழைத்தார்கள். இவர்களை யாவே தமது மக்களுக்கு ஒழுக்கம் கற்பிக்க ஒரு கருவியாக அடிக்கடி பயன்படுத்தினார். (காண்க: ஏச 10:5; எரே 1:13).

5. தொழில்:- அசீரிய மக்கள் தச்சு வேலை, மண்வேலை, சித்திரத் தையல், நெசவு, உலோக வேலை ஆகியவற்றில் திறமையுள்ளவர்களாயிருந்தனர். இவற்றில் பாபிலோனியரைப் பின்பற்றினர். குழந்தைகள் பொதுவாகப் பெற்றோர் தொழிலையே செய்தனர்.

6. மக்கள்:- இம்மக்களிடையே, அரசினர் தொழிலாளர், பொதுமக்கள், அடிமைகள் என நான்கு பிரிவினர் காணப்பட்டனர். ஆளுநர்கள், புரோகிதர்கள், தளபதிகள் ஆகியோர் அரசினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவர். அடிமைகள் என்போர் அயல் நாட்டிலிருந்து சிறைப்பிடித்துக்கொணரப்பட்டவர்கள்.

பெண்கள் தாழ்வாகக் கருதப்பட்டனர். அரசினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை மனைவியர் வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம். மற்றவர்கள் ஒரு மனைவியை மட்டுமே மணக்க வேண்டும்.

7. பொருளும் முக்கியத்துவமும்:- விவிலிய வரலாற்றில், ஆசீரியா 200 ஆண்டுகளுக்கு இஸ்ராயேல் வரலாற்றைக் கட்டுப்படுத்தியது எனலாம். இதைத் தவிர, அதன் மறைமுகமான கலாச்சாரப் பாதிப்பு பலவகையிலும் உறுதியாகவும் பாதித்தது. கலாச்சாரத்தில் அசீரியா பாபிலோனைத் தழுவியது என்று முன்பு கூறினோம். அசீரியாதான் பேரரசு முழுவதும் பாபிலோனியக் கலாச்சாரத்தைப் பரப்பியது. அசீரிய அரசர்களின் ஆட்சி பற்றிய ஆண்டுக்குறிப்பு ஏடுகள்தான் இஸ்ராயேல் உட்பட்ட பழங்கால மேற்காசியாவில் கி.மு. 9–7–ஆம் நூற்றாண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளுக்குக்காலம் குறிக்க நம்பகமாக, நிலையான ஆதாரமாகும். இந்த ஆட்சி ஏடுகள், பழங்கால அரச ஏடுகளைவிட நயப்படுத்தப்பட்டு, ஒரு புதிய இலக்கியவகையாக உருவெடுத்தது. இக்காலம் பற்றிய, பழைய ஏற்பாட்டு நூல்களைத் தவிர்த்த, ஒரே முக்கியப் புகழ்பெற்ற நூல் தொகுப்பாகும்.

அரசியலைப் பொறுத்தமட்டும், அசீரியர்கள்தான் உலகலாவிய அரசை முதன்முதலில் எய்தியவர்கள். இக் கருத்து அக்காதிய சார்கோனின் காலத்தி லேயே தோன்றுகிறது. அவர்களது போர் படைத்துறைக்கு ஒத்த அரசியல் ஆட்சி முறையையும் கொண்டிருந்தனர் என்றால் அப்பேரரசு வெகுகாலத்திற்கு நிலைத்திருக்கும். ஆனால் படைவலிமையால் பேரரசைக் கட்டிக்காக்க வேண்டியிருந்தது. அவர்கள் கைப்பற்றிய நாட்டினரை எப்படி நடத்தினர் என்று ஏற்கனவே கூறியுள்ளோம். ஆனால் இவர்கள் கொடியவர்களானாலும் பொருட்களும் மனிதர்களும் சுதந்திரமாக பரிமாற்றம் செய்துகொள்ள அனுமதித்தனர். அசீரியப் பேரரசு அப்படியே பாபிலோனியப் பேரரசுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. பிற்காலத்தில் பாரசீகப் பேரரசுக்குள்ளும், அலக்சாந்தரின் பேரரசுக்குள்ளும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அலக்சாந்தருக்குப்பின்தான் இப்பேரரசு சிதறிப் பிரிவுபட்டுப் போய்விட்டது. அரசியல் அடிப்படையில் சிதறிப்போனாலும், கலாச்சார ஒருமைப்பாடு நிலைத்தது.

உலகலாவிய அரசு, ஒரே அரசின் கீழ் மக்கள் மிகுந்த அமைதியும், பாதுகாப்பும் அடையலாம் என்ற குறிக்கோள் அலக்சாந்தரிடம் கையளிக்கப்பட்டது. அவரிடமிருந்து உரோமையரிடம் வேருன்றியது.

அசீரியர் செயல்படுத்திய இக்குறிக்கோள் பிற்காலத்தல் பரிசுத்த உரோமையப் பேரரசு, "கிறிஸ்தவ உலகம்" ஆகியவற்றி லும், பிற்காலத்தில் கண்டம் முழுவதை ஒருமை ஆட்சிக்குள் கொண்டு வரும் முயற்சிகளிலும் தோன்றியது. இறையரசு பற்றிய எபிரேய இறைவாக்குக் கருத்து, இந்த இறையரசையே அழித்து விட்டி ருக்கக்கூடிய அசீரியப் பேரரசைக்காணும் வரையும் ஒரு நிலையான வடிவம் எடுக்க வில்லை. நற்செய்தியில் எடுத்தியம்பப் படும் இந்த இறையரசு பற்றிய கருத்து கிறிஸ்துவ விசுவாசத்திற்கு அடிப்படை யானதாகும்.

அசீர் (ASSIR – சிறைப்பட்டவர்)

1. லேவியர் குலத்தைச்சேர்ந்த கோரா குவின் புதல்வருள் ஒருவர். (யாத் 6:24; 1 நாள் 6:22). இருப்பினும் நாளாகம ஆசிரிய ரின் திருப்பணியாளர் மரபுப்பட்டியலின் படி அசீர், எலியாசாபுவின் மகன் என்றும் தாகாத்தின் தந்தை என்றும் அழைக்கப்படுகின்றார் (1 நாள் 6:23.37). கோராகுவின் குலத்தில் இரண்டுபேர் அசீர் என்ற பெயருடன் இருந்தார்கள் என்றோ இந்த இரண்டு மரபு முறைப் பட்டியின் செயற்கை முறையின் விளை வான தவறாகவோ நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. எலியாவின் மகனும் கோராகுவின் பேரனும் ஆவார் (1 நாள் 6:23.37).

அசினா (ASHNAH–மாற்றம்)

1. யூதாவின் அடிவாரத்திலுள்ள செப் பேலாவிலுள்ள ஓர் நகர். எசுத்தாவோல், சோரா ஆகியவற்றோடு கொண்டுள்ள தொடர்பில் கூறப்படுகிறது (யோசு 15:33). இதன் இடத்தை அடையாளம் காட்டுவது கடினம். அநேகமாக, யூதாவின் கடற் கரையின் சமவெளியின் ஓரத்திலுள்ள அஸ்லின் என்ற கிராமமாக இருக்கலாம் எனக்கருதப்படுகின்றது.

2. அதே பகுதியில் ஆனால் இன்னும் தெற்கிலுள்ள ஓர் ஊர் (யோசு 15:43). இது மரேசாவுக்கு அருகிலும் கெபிரோனுக்கும் இலாக்கீசுக்கும் இடையிலுள்ள இத்னா வாக இருக்கலாம்.

அசகூர் – (ASHHUR)

கெசிரோனின் மனைவியாயிருந்த எப்பிராத்தா வழியாக, அவர் இறந்தபின், காலேப்புக்குப் பிறந்த மகன். அசகூர் தெக்கோவாவின் தந்தை அல்லது அதை நிறுவியவர் ஆனார் (1 நாள் 2:24). 1 நாள் 4:5–6–இல் அவரது பிள்ளைகளின் பட்டி யல் தரப்படுகிறது.

அசுக்கலோன் (ASHKELON – இடம்மாறுபவர்)

பெலிஸ்தியருடைய ஐந்து முக்கிய நகரங்களுள் கடற்கரையில் இருந்த ஒரே நகரம் (எரே 47:7). இது காசாவிற்கு வடக் கே ஏறக்குறைய 19 கி.மீ. தொலைவிலும் அசுதோதுக்குத் தெற்கே 16 கி.மீ. தொலை விலும் இருந்தது.

வரலாறு:- இது நீண்ட, சிறந்த வரலாற் றைக் கொண்டிருந்திருக்கிறது. எகிப்திய பேரரசில் கிளர்ச்சி செய்த நாடுகளில் முதலாவதாக கி.மு. 1850–ஐச் சேர்ந்த பழித்துரை ஏடுகளில் கொடுக்கப்பட்டுள் ளது. அமர்னா காலத்தில் இந் நகரம் கிளர்ச்சியால் பாதிக்கப்பட்டாலும், எகிப் திற்குப் பிரமாணிக்கமாய் இருந்ததாகச் சொல்லப்படுகிறது (கி.மு. 1375–1350). 2–ஆம் பாரவோன் இராம்சேசின் ஆட்சி யில் இந்நகரம் கிளர்ச்சி செய்தது. அவர் திடீரென்று இந்நகரைத்தாக்கி வென்று இந்நகரில் கார்னாக் என்ற இடத்திலுள்ள கோவில் சுவரில் அப்போரின் படத்தை வரைந்து வைத்தார்.

இந்நிலையில் பெலிஸ்தியர்கள் வந் தார்கள். வரலாற்றில் இங்கிருந்து நடந் ததை விவிலியத்தில் பதிவு செய்யப்பட் டுள்ளன. அசுக்கலோனும் அதனைச்சுற்றி யுள்ள நகரங்களும் யோசுவாவால் வெல் லப்படவில்லை (யோசு 13:3). இருப்பினும், காசாவையும் அசுக்கலோனையும் எக் கரோனையும் யூதா இனத்தவர் பிடித்துக் கொண்டதாக இஸ்ராயேல் பாரம்பரியம் சொல்லுகிறது (நீதி 1:18). அவைகள் வெல் லப்படவில்லை என்று எழுபது நூல்கள் கூறுகின்றன. நீதிபதிகள், சவுல், தாவீது காலங்களில் அசுக்கலோன் உறுதியாக பெலிஸ்திய நகரமாகத் திகழ்ந்தது (நீதி 14:19; 1 சாமு 6:17; 2 சாமு 1:20). சவுல் இறந்த போது தாவீது புலம்பல் பாடலில்

"காத்திலும் இதை அறிவிக்காதீர்கள். அசுக்கலோனின் தெருக்களிலும் தெரியப் படுத்தாதீர்கள். தெரிந்தால் பெலிஸ்தி யரின் புதல்வியர்கள் அகமகிழ்வர்" (2 சாமு 1:20) என்று கூறப்படுகிறது. இது பெலிஸ்தியாவின் கிழக்கு, மேற்குப் பகுதி களையோ அல்லது முழு நாட்டையோ குறிக்கிறது.

அசீரியருடைய காலம் வரை இதைப் பற்றி வேறெதுவும் சொல்லப்படவில்லை. ஆமோஸ் 1:8 அரசன் மீதும், நாட்டின் மீதும் அதன் அடிமை வியாபாரத்திற் காகத் தண்டனையை முன்னறிவிக் கின்றது (750).

பல வருடங்களுக்கு அசீரியாவுக்கு அடியில் இருந்தது இந்நகரம். நெபுக்கது னேசாருக்குக் கப்பம் கட்டுவதா இல் லையா என்று இந்நகர மக்கள் தீர் மானிக்க வேண்டிய இடுக்கண் நிலை ஏற்பட்டது. கப்பம்கட்ட மறுத்தபோது, கல்தேய மன்னன் விரைவில் இந்நகரை அழித்தான் (கி.மு. 605; காண்க: எரே 25:20; 47:5–7). செப்பனியாவும் இந்நகரின் அழிவை முன்னறிவித்தபோது இஸ்ரா யேல் இந்நகரைக் கைப்பற்றும் என்று இறைவாக்குரைக்கிறார் (செப் 2:4–7).

கிரேக்கப் புவியியல் வல்லுநர் கிலாக் சின்படி இந்நகரம் பாரசீகர் காலத்தில் தீரின் கட்டுப்பாட்டில் இருந்தது. யூதர்கள் இதைப் பகை உணர்வுடன் நோக்கினர் (செக் 9:5). மாமன்னன் அலெக்சாந்தரின் வருகைக்குப்பின் இது கிரேக்கப் பண் பாட்டை ஆர்வத்துடன் அரவணைத்து அறிவியல் களஞ்சியமாகியது. நான்காம் தோலமி எப்பிபானின் ஆட்சியின்கீழ் தோபியாவின் மகனான யோசேப்பு என்ற யூத வரிவசூலிப்பவர் அசுக்கலோனிற்குச் சென்று கப்பத்தைக் கேட்டார். ஆனால் மறுக்கப்பட்டது. இதனால் 20 முக்கிய மானவர்கள் கொல்லப்பட்டார்கள். பொருட்களும் அழிக்கப்பட்டன. ஒரு அழிவும் செய்யாத மக்கபேயருடன் இது சமாதானத்துடன் இருந்தது (1 மக் 10:86; 11:60; 12:33). இக்காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு யூதர்கள் அதில் வாழ்ந்திருந் தாலும், இது யூத நகரில்லை என்று யூதி 2:28 கூறுகின்றது. பிறகு உரோமை யிடம் செய்த முறையீட்டால் இது சுதந்திர நகரமாக்கப்பட்டது. பெரிய ஏரோது, அசுக்கலோனியக்கோவில் ஊழியர்களின் வழிவந்தவன் அல்லது அந்நகரைச் சேர்ந்தவன் என்ற பாரம்பரியம் யூதர் களின் பழித்தூற்று என்று சிலர் கருது கிறார்கள். ஏரோது அதை கட்டுப்படுத்தா விட்டாலும் அங்கு பூங்காக்களையும் குளிப்பு அறைகளையும் விலைமதிப்பற்ற அமைப்புகளையும் ஓர் அரண்மனையை யும் கட்டியதாகவும் அதை அவன் சகோதரி சலோமேக்குக் கொடுத்ததாக வும் கூறப்படுகின்றது. உரோமைக்கு எதிராகப்போர் எழுந்த பொழுது யூதர்கள் இந்நகரைத் தாக்கி ஒருபகுதியை அழித் தார்கள். புதிய ஏற்பாட்டின் காலத்தில், கிரேக்க மொழிப் பெயர்ச்சிக்கு இது புகழ் பெற்றிருந்தது. அதன் மொழி "அசுக்க லோன் கிரேக்கம்" என்றும் அழைக்கப் பட்டது.

கி.பி. முதல் நூற்றாண்டுகளில் இது ஒரு முக்கிய நகரமாகத் திகழ்ந்தது. கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் இது கிறிஸ்தவ நாடானது. இங்கு ஓர் ஆயர் இருந்தார். வெற்றி பெற்றுக் கொண்டு வந்த இஸ்லா மியரால் இது "சீரியாவின் மணப்பெண்" என்று அழைக்கப்பட்டது (கி.பி.7–ஆம் நூற்றாண்டு). 1153 வரைச் சிலுவைப் போர் களை எதிர்த்தது. 1187–இல் சாலதீன் இதைவென்று இதன் சுவர்களை இடித் துத் தள்ளினார். முதலாம் ரிச்சர்ட் இதை பழைய நிலைமைக்குக் கொண்டுவர முயற்சித்துச் சிறிது வெற்றிகண்டார். மீதியிருந்தது 1270–இல் சுல்தான் பாய்பா ரால் அழிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை மக்களற்ற இடிபாடுகளுடன் உள்ளது. 1953–இல் நிறுவப்பட்ட இக்கால அசுக்கலோன் பழைய நகரின் அழிவிலி ருந்து 1 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

தொல்பொருள் ஆய்வு:- ஸ்தான்கோப் என்பவர் 1815–இல் முதல் அகழ்வாய்வை நடத்தினார். 1920–22க்கு இடையில் பாலஸ் தீன தொல்பொருள் ஆய்வு நிறுவனம் அகழ்வாய்வு நடத்த உதவியது. அதிலி ருந்து, இந்நகரின் வரலாற்றை கி.மு. 1800 வரை தடம் காண அறிஞர்களால் முடிந்தது. பெலிஸ்தியர் குடியேறியதற்குச்

சான்றுகளையும் எரோது கட்டிய சில கட்டடங்களையும், சில சிலைகளையும் கண் டெடுக்க முடிந்தது.

அகக்கனாக (ASHENAZ – பரவும் தீ)
யாப்பேத்தின் மகனான கோமேரின் மகன் (ஆதி 10:3; 1 நாள் 1:6): அராராத்து, மின்னீ என்ற அரசுகளுடன் சேர்ந்த ஒரு அரசின் பெயராகும் (எரே 51:27). அசீரியா நாட்டு சித்தியர்களும் இவர்களும் ஒன்றே என்பது சரியாக இருப்பதுபோல் தோன்றுகிறது. சித்தியர்கள் கோமேரின் வழித்தோன்றல்களாக இருந்ததால்தான், இவர்கள் சிமிரியர் படையெடுத்தபொழுது அவர்களை உந்தும் ஆற்றலாக விளங்கினர். மன்னாயேர்களோடு சேர்ந்து அசீரியர்களுடன் போரிட்டனர். ஆனால் பிற்பாடு மேதியர், பாரசீகர் ஆகியவர்கள் இவர்களை வென்றனர். பூர்வீக அரசுகளாகிய உரார்து, அசீரியா (கி.மு. 538) வின் வீழ்ச்சிக்கு இவர்கள் கருவியாக இருந்தார்கள்.

அகதோது (ASHODOD – கோட்டை)
பெலிஸ்தியர்களுடைய ஐந்து முக்கிய நகரங்களுள் ஒன்று (யோசு 13:3). கடற்கரைக்கருகிலோ கடற்கரையிலோ உள்ள மூன்று நகரங்களில் வடகோடியில் உள்ளது. காசா, யோப்பாவிற்கு இடையில் கடற்கரையிலிருந்து ஏறக்குறைய 5 கி.மீ. தொலைவில் அசுக்கலோனிற்கு வடக்கே ஏறக்குறை 16 கி.மீ தொலைவிலும் உள்நாட்டில் அமைந்துள்ளது. கிரேக்கத்தில் அசோத்தோஸ் என்றழைக்கப்படுகிறது.

வரலாறு: பூர்வீக அனாக்கியர் என்ற மக்களால் ஒரு காலத்தில் குடியேறப்பட்ட ஒரு பழமையான நகரம் என்று போற்றப்படுகின்றது (யோசு 11:22). இது, இதனைச் சுற்றியிருந்த இடங்களுடன் சேர்ந்து யூதா குலத்திற்கு பங்கீடு செய்யப்பட்டது (யோசு 15:46–47). ஆனால் இது பெலிஸ்தியருடைய கையில் இருந்தது (யோசு 13:1–3). பெலிஸ்தியர்கள், இஸ்ராயேலுடன் போரிட்டபொழுது உடன்படிக்கை பெட்டகத்தைக் கைப்பற்றி, அசுதோத்திலிருந்த தாகோன் கடவுளின் ஆலயத்திற்குக் கொண்டுச் சென்றார்கள். ஆனால் தீயகுறிகளும், கொள்ளைநோயும் தோன்றின. ஆகவே, அதை உடனடியாக காத்திற்குக் கொண்டுச் சென்றனர் (1 சாமு 5:1–8; 6:17). தாவீது பல தடவை பெலிஸ்தியரை வென்றாலும் இந்நகரைக் கைப்பற்ற முடியவில்லை.

ஊசியாவின் காலத்தில்தான் யூதா தன்னுடைய வலிமையின் உச்சநிலையில் இருந்தபொழுது, அசுதோத்தையும் அதைச் சுற்றியிருந்த நகரங்களையும் யூதாவின் அரசன் வென்றார் (2 நாள் 26:6). ஆனால் சிறிது காலத்திற்கே இது நிலவியது.

அசீரியர்கள் படையெடுப்பில், இந்நகரத்தைத் தங்கள் மாகாணம் ஒன்றின் தலைநகராக்கி அதைக்கப்பம் கட்டச் செய்தனர். 712–க்குச் சிறிது காலத்திற்கு முன்பு இரண்டாம் சார்கோனின் ஆட்சியில் இந்நகர மக்கள் குழப்பம் செய்து, விடுதலையடையப் பார்த்தனர். சார்கோன், அந்நாட்டு அரசன் அசூரியை அரச பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவருடைய இளைய சகோதரன் அகிமித்தியை அரசானாக்கினார். சார்கோனால் இத்தியர் என்றழைக்கப்பட்ட இவர்கள் இயாமானியின் தலைமையில் கிளர்ச்சியை இன்னும் தொடர்ந்தனர். சினம் மேலீட்டால் சார்கோன் படையெடுத்து அசுதோது, காத்து, அசுதும்மு ஆகியவற்றை வென்றான். இயாமானி எதியோப்பியாவிற்கு ஓடினார். அங்கிருந்து அசீரியாவிற்கு வெளியேற்றப்பட்டார். கிளர்ச்சி செய்தபகுதி அசீரியர்களின் ஒரு மாகாணமாக மாற்றப்பட்டது (ஆமோ 1:8; 3:9). இந்தக் கிளர்ச்சியில் யூதா ஈடுபடக்கூடாது என்று ஏசயா எச்சரித்தார். எகிப்தியர் சதிகளைத் தூண்டிவிடுவர், ஆனால் உண்மையாக உதவி அளிக்க மாட்டார்கள் என்றும் எச்சரித்தார் (ஏச 20:1–6); காண்க. செக் 9:6).

701–இல் இன்னும் அசுதோது அசீரியாவிற்கு பிரமாணிக்கமாயிருந்தது. அது சனேகெரிப்புவுக்கு கப்பம் கட்டி கைம்மாறாக யூதாவின் பல பகுதிகளைப் பெற்றது. அப்பொழுது மித்திந்தி என்பவர் அரசனாக இருந்தார். ஏசர்கதோன்னும் (680–669) அசூர்பானிபாலும் (668–633) எகிப்தை எதிர்த்துப் போரிட்டபொழுது (671–667) அசுதோத்தின் அரசனான அசி

மல்கியிடமிருந்து (அநேகமாக மித்தின்தி லின் வாரிசு) கப்பத்தை வாங்கிக் கொண்டுச்சென்றனர். இதன்பிறகு எகிப் தில் புதிய வலிமை வாய்ந்த முதலாம் சாம்டிக் (663–610) என்ற அரசன் தோன்றி னார். இவர் அசுதோத்தை 29 ஆண்டு கள் முற்றுகையிட்டு கைப்பற்றினார். இது வரலாற்றிலேயே மிக நீண்ட முற்றுகை என்று எரோதோத்தோஸ் கூறுகின்றார். அநேகமாக இச்சமயத்தில்தான் சித்தியர் கள் அவர்களுடைய பங்கை எடுத்துக் கொண்டார்கள் (செப் 2:4; எரே 25:20). பிறகு அநேகமாக இன்னும் இருந்து கொண்டிருந்த எகிப்திய ஆதிக்கத்தால் கல்தேயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தது. மற்ற அரசர்களோடு சேர்ந்து அசுதோதின் அரசனும் கல்தேய நாட்டு அரசவையில் கைதியாக இருந்தார் என்று நெபுக்கதுனேசாரின் பிற்காலக் குறிப்பு களில் ஒன்று கூறுகிறது.

இவ்வளவு துன்பங்களுக்கிடையிலும் பாரசீகர் காலத்தில் பெலிஸ்திய நாடு களிலே அசுதோது வலிமை வாய்ந்ததாக வும் பெரும்பகுதிகளை தன் கட்டுப் பாட் டுக்குள் கொண்டதாகவும் பண்பாட்டுத் தொடர்புகளால் யூதர்களுக்கு ஓர் அச் சுறுத்தும் நாடாகவும் இருந்தது (நெக 9:7; 13:23–24; செக் 9:6; யூதி 2:28) மக்கபேயர்கள் ஆட்சிக்காலத்தில் இது ஒன்றன்பின் ஒன்றான தாக்குதல்களால் யூதா (1 மக் 9:15; 5:68) யோனத்தான் (10:77–85; 11:4) யோ வான் இரிக்கானு ஆகியோரால் அழிக்கப் பட்டது. யோனத்தான் யூதாவின் கொள் கையைப்பின்பற்றி நகரிலிருந்து புற இன வழிபாட்டை அகற்றினார் (1 மக் 10:84). 16:10–இன்படி யோவான் இரிகானு நகரை எரித்து அழித்தார் (நெக 13:23–24). 1 மக் 14:34–இல் காசாரா (கெசேர்) அசு தோத்தின் எல்லைப்புறத்தில் குறிப்பிடப் படுகிறது. ஆனால் இந்த இடங்கள் 24 கி.மீ. அப்பால் உள்ளன. அநேகமாக இது பாரசீகர் காலத்திலிருந்த பரந்த அசு தோத்தைக் குறிக்கலாம் (நெக 13:23–24). அலக்சாந்தர் யன்னேயு காலத்தில் இது யூதர்களுடைய ஆளுகையின் கீழ் இருந்தது. பாம்பே இதை விடுவித்து (கி.மு. 63), சீரியாவின் ஒரு பகுதியாக்கினார். ஆளுநர் கபீனசின்கீழ் (கி.மு. 57–55) இந்நகரம் மீண்டும் கட்டப்பட்டு, குடியேற்றப்பட்டு உரோமை நகராக்கப்பட்டது. அப்போது அது அசோத்து என்றழைக்கப்பட்டது. ஏரோது இதைக்கட்டுப்படுத்தி, தன்னு டைய சகோதரி சலோமேக்கு அளிப்பித் தார். நற்செய்தியைப்பரப்பிய பிலிப்பு காசாவிற்கு அருகில் எத்தியோப்பிய அண்ணகருக்கு ஞானஸ்நானம் கொடுத்த பின்பு, போதித்துக்கொண்டு செசரியா விற்குச் செல்லும் வழியில் இந்நகரைக் கடந்துசென்றார். இவ்வாறாக பல பெலி ஸ்திய நகரங்கள் முதன்முறையாக நற் செய்தியைக்கேட்டன (அ.ப. 8:40). கி.பி. 66–70–இல் உரோமையருக்கு எதிராக எழுந்த கிளர்ச்சிக் காலத்தில், இந்நகரில் யூத ஆதிக்கம் இருந்ததால் வெஸ்பாசியன் அதற்கு எதிராகப் படையெடுத்து, அங்கு ஒரு படைப்பிரிவை நிறுத்தி வைத்தார். 4–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இது ஒரு முக்கியமான நகரமாக இருந்ததென்று யுசேபியஸ் கூறுகின்றார். 4 முதல் 6–ஆம் நூற்றாண்டுவரை இது கிறிஸ்தவ ஆயர்களைக் கொண்டிருந்தது. இடைக்காலங்களில் இது அழிந்து இப் பொழுது ஒரு சிறிய கிராமமாக மட்டும் உள்ளது.

தொல்பொருள் ஆராய்வு:- 1962–1969–க்கு இடையில் பரந்த தொல்பொருள் அகழ்வாய்வுகள் நடந்துள்ளன. இங்கு எடுக்கப்பட்ட தொல்பொருள்களிலும் பழைய ஏடுகளிலும், கல்வெட்டுக்களிலு மிருந்து கிடைக்கும் செய்திகளும் சேர்ந்து, இந் நகரின் வரலாற்றை ஓரளவு முழுமை யாகத் தரவல்லன.

அசுதோத்தின் வரலாறு கி.மு. 17–ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. அப் போது அது 7 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஒரு? கோட்டைப் பாதுகாப்புடன் கூடிய நகரமாக நிறுவப்பட்டது. பிறகு இதைக் கானானியர்கள் வியாபார மையமாக விருத்தி செய்தனர். ஆனால் 13–ஆம் நூற் றாண்டின் பிற்பகுதியில் அழிக்கப்பட்டது. இதில் கடலைச் சார்ந்த மக்கள் சிறிது காலத்திற்குக் குடியேறியிருந்ததாகத் தெரி கிறது. 12–ஆம் நூற்றாண்டில் இங்கு பெலிஸ்தியர் குடியேறினர். அகழ்வுகளி லிருந்து எடுக்கப்பட்ட பெலிஸ்தியர்களின் பாண்டங்களின் தொகுப்பு, இஸ்ராயேலும்

யூதாவும் தாழ்வுற்ற காலத்தில், இந்நகரம் பெரிதும் விரிவடைந்திருக்கவேண்டும் என்று காட்டுகிறது. பெண் தேவதை வடிவிலுள்ள ஒரு அரியணை பெலிஸ்தியரின் அகியன் தோற்றத்தைச் சுட்டலாம். நான்கு அடுக்குச் சாம்பல் மட்டங்கள் யூதாவின் ஊசியா, அசீரியாவின் இரண்டாம் சார்கோன், எகிப்தின் முதலாம் சம்டிக், பாபிலோனின் நெபுக்கதுனேசார் ஆகியோரால் நகரம் அழிக்கப்பட்டதைக் காட்டலாம்.

பெரிய கட்டடங்களின் அமைப்பும், பல்வேறுபட்ட கைவினைப் பொருட்களும் கிரேக்க உரோமையர் காலத்தில் இந்நகரம் மிகவும் செழிப்புற்றிருக்க வேண்டும் என்று காட்டுகின்றன. இந்நகரின் அருகில் கண்டெடுக்கப்பட்ட ஒரு நாணயம் யோவான் இரிக்கானவின் படையெடுப்பு கி.மு. 114–க்குப்பின் நடந்திருக்க வேண்டும் என்று காட்டுகின்றது.

1948–வரைக் கைவிடப்பட்டு அருகிலுள்ள குன்றின் மேலுள்ள ஒரு ஊர் இப்போது இஸ்தூது என்றழைக்கப்படுகிறது. 5 கி.மீ. தொலைவிலுள்ள பழைய நகரம் இருந்த இடம் இப்போது மினெத்–ஏல்–காலா என்றழைக்கப்படுகிறது.

அசுபா (AZUBA – கைவிடப்பட்டவர்)

1. அசுபா என்பவள் அரசன் யோசபாத்தின் தாயும் சில்கியின் மகளும் ஆவாள் (1 அர 22:42; 2 நாள் 20:31).

2. அசுபா கெசிரோனின் மகனான காலேபின் மனைவியாவாள். இவளுக்கு ஏசேர், சோபாபு, அருதோன் ஆகிய மூன்று புதல்வர்கள் பிறந்தனர் (1 நாள் 2:18–19).

அசுபேல், அசுபேலியர்
(ASHBEL, ASHBELITES – குற்றம் கூறுதல்)

பென்யாமினின் புதல்வர்களுள் ஒருவர். இரண்டாம் (1 நாள் 8:1) அல்லது மூன்றாம் மகனாக (ஆதி 46:2) பட்டியலில் குறிக்கப்படுகிறார். இவர் அசுபேலியர்களின் மூதாதையர் எனப்படுகிறார் (எண் 26:35). 1 நாள் 7:6, இவர், "இறைவனுக்குத் தெரிந்தவர்" என்ற பொருள்படும் எதியேல் என்ற பெயரால் குறிக்கப்படுகிறார். இது அசுபேல் என்ற பெயரின் புற இனப் பொருளைத்தவிர்ப்பதற்காக இருக்கலாம்.

அசுமதேயு (ASHMODEUS – அழிப்பவன்)

தோபித்து நூலில் இது முக்கியமான இடத்ததை வகிக்கிற தீய ஆவியாகும். இது சாராவின் மேல் கொண்ட காதலால் அவளுடைய ஏழு கணவர்களை முதலிரவில் கொலை செய்கிறது (மாற் 12:20–22 இதைக் குறிப்பதாக இருக்கலாம்). இரபேல் வானதூதரின் உதவியால், தோபியா இதை விரட்டிவிட்டு, மணப்பெண்ணை அடைகின்றார் (தோபி 6:15–18; 8:3).

பிற்கால யூதப்பாரம்பரியங்களில் "அலகைகளின் அரசன்" என்றும் இதுசில சமயங்களில் பேல்செபூல் (மாற் 3:22) என்றும் அபிதோன் (யோபு 31:12) என்றும் அப்பொல்லியோன் (திருவெளி 9:11) என்றும் கருதப்பட்ட ஒரு அசுத்தப்பிறவி. தால்முதில் சாலமோனைச் சார்ந்த நிகழ்ச்சிகளில் இது அடிக்கடி தோன்றுகிறது. இலக்கியங்களில் திருமண பிணக்குகளைக் குறிக்கின்ற அடையாளமாகிறது.

அசூரிம் (ASSHURIM – செல்வந்தர், படிகள்)

ஆபிரகாம்–கெத்தூரா ஆகியோரிலிருந்து தெதான் அல்லது யொக்கிசான் வழியாகத் தோன்றிய இனமாகும். இதைவிட அதிகமாக இவர்களைப் பற்றிக் கூற முடியாது.

சில விளக்கவுரையாளர்கள் ஆதி 25:18–இன் அடிப்படையில் அசீரியர்களோடு தொடர்புடையவர்கள் என்று கருதினாலும், இவர்கள் ஓர் அராபிய இனத்தவர்களாக இருக்கலாம். இவர்களை அசீரியர்களோடு குழப்பாதிருத்தல் நல்லது.

அசூரியர் (ASHURITES)

இசிபோசத்து ஆட்சியின் ஒருபகுதியாகச் சொல்லப்பட்டுள்ள வடக்கு இஸ்ராயேலில் கிலயாத்து, இசிரியேல் ஆகிய வற்றுக்கிடையில் வாழ்ந்த மக்கள் (2 சாமு 2:9). யோசு 12:5–இல் இவர்கள் கெசூரியர் என்று அழைக்கப்படுகின்றனர் ஆனால் 'கெசூர்' ஓர் சுதந்திரமடைந்த அரசு (2 சாமு 3:3; 13:37). ஒருவேளை இவர்கள் 'அசேரியர்களாக' இருக்கலாம். ஏனெனில் ஆசேர் என்பது ஆசேர், செபுலோன், நப்தாலி ஆகிய இனத்தவர்களைக் குறிக்கும், குழுப் பெயராகும்.

அசூர் (ASSHUR) – ஆள்

சேமின் புதல்வருள் ஒருவர். அசீரிய ருடைய குலப்பெயர் முதல்வர் ஆவார் (ஆதி 10:22; 1 நாள் 1:17).

அசூர் (ASSHUR) – தேவதை

அசீரியா நாட்டு அனைத்துக் கடவுள் குழுவின் ஆலயத்திலுள்ள முதன்மையான கடவுள். இப்பெயரில் இருந்தே அசூர் நகரமும், அசீரியா, அசீரியர்கள் என்ற பெயர்கள் தோன்றுகின்றன. விவிலியத் தில் இப்பெயர் ஆட்களின் பெயர்களில் பகுதியாகத் தோன்றுகின்றது. உதாரண மாக ஏசர்கத்தோன் "ஆசூர் (சகோதரனை (களைக்) கொடுத்திருக்கிறார்"), அசூர் பானிப்பால்.

அசூர் (ASSHUR) – இடம்

1. அசீரியாவின் ஒருநகரம். ஒரு காலத்தில் தலைநகரமாகத் திகழ்ந்தது. அசீரியாவின் (எச 27:23) நிலம் முழுவதும் வடக்கு ஈராக்கில் திகிரிசுக் கரையில் அமைந்திருந்தது. அசூர், காலாகு, நினிவே, தூர்–சருக்கின் ஆகியவை வெவ் வேறு காலங்களில் அசீரியாவின் தலை நகரங்களாக இருந்தன. இந்நகரம் (இன் றைய காலாத்சர்காத்) செர்மானியர்க ளால் தோண்டிஎடுக்கப்பட்டது. பல முக் கியமான ஏடுகள், அசூர், இசிதார் ஆகி யோருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங் கள், கோட்டைகள், அரண்மனைகள் நினைவுச் சின்னங்கள் ஆகியவை கிடைத்திருக்கின்றன.

எச 27:23–இல் இந்த நகரமோ நாடோ குறிப்பிடப்படலாம். திரிபு வாசகங்களில் காணப்படும் ஆராம் (சீரியா) சூழ்நிலைக் குப் பொருத்தமாக இருக்கலாம். பிலயா மின் இறைவாக்கிலுள்ள (எண் 24:22.24) அசூர் அநேகமாக அசீரியா நாடாகும்; ஏனெனில் இச்சொல் சாதாரணமாக அசீரியா என்று மொழி பெயர்க்கப்படு கிறது.

2. அசீரியாவுக்கு அதன் மக்களுக்கும் உரிய மற்றொரு பெயராகும் (எண் 24:22. 24; ஓசே 14:13).

அசூர் (AZZHUR–உதவி பெற்றவர்)

1. இவர் மக்களின் ஒரு தலைவரா வார். நெகமியா ஆளுநராக இருந்தபோது உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர் களில் இவரும் ஒருவர் (நெக 10:17).

2. கிபயோனிலிருந்து வந்த போலி இறைவாக்கினர் கெனனியாவின் தந்தை அசூர் ஆவார் (எரே 28:1).

3. இவர் எசக்கியேலுக்கு சமகாலத்தவ ரான யாசானியாவின் தந்தை (எச 11:1).

அசூர்பானிப்பால் (ASHURBANIPAL– அசூர் வாரிசு படைத்தவர்)

அசீரியாவின் அரசன் (668–629) ஏசர்க தோனின் மகன். இவர் அசீரியாவின் மாமன்னர்களில் கடைசியானவர். பாபி லோனிய அரசனும் தன் சகோதரனுமான சமஸ்சுமுக்கின் தலைமையில் கூட்டுச் சேர்ந்து தன்னை எதிர்த்த அரசர்களுடன் செய்த நீண்ட போர்தான் இவர் ஆட்சியில் நடந்த மிகமுக்கிய நிகழ்ச்சியாகும். தன்னு டைய ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் அவர் தந்தை எகிப்தியருக்கு எதிராகக் கொண்டிருந்த கொள்கைகளையே இவரும் பின்பற்றினார். கி.மு. 663–இல் மெம்பிசைக் கடந்தும் திபிசை அழித்தும் வெற்றிகண்டார். கி.மு.652–ல் தன்னுடைய சகோதரனுக்கு எதிராக எழ சரியான நேரம் வந்துவிட்டது என்று சமஸ்சுமுக் கின் நினைத்தார். பாபிலோனியாவின் தலைநகர் வலிமைவாய்ந்த ஆசிரியா படைகளால் சூழப்பட்டிருந்தும், தன் கூட் டாளிகளான எலாமியர் உதவியும், கல் தேயருடைய படைகளும் அராபியர்களு டைய படைகளும் பயனற்றவை எனறு அறிந்திருந்தும், ஏன் படையெடுத்தார் என்று தெரியவில்லை. ஊர், ஊருக் ஆகிய முக்கிய நகரங்களை சமஸ்சுமுக் கின் கைப்பற்றத் தவறினார். எலாமியரு டையபடை அசீரியர்களால் தோற்கடிக்கப் பட்டது. அதனால் பாபிலோனியர்கள் பாதுகாப்புப் பேரில் இறங்கினார்கள். ஆனால் அது அவரது அழிவிற்கு இட்டுச் சென்றது. 650–இல் அசீரியர்கள் எலா மியர்களையும், கல்தேயர்களையம் கைப் பற்றினர். அராபிய படை தோற்கடிக்கப் பட்டு பாபிலோனுக்கு ஓடியது. அசீரிய படை பாபிலோனை முற்றுகையிட்டது. இந்த முற்றுகை இரண்டு ஆண்டுகள் தொடர்ந்தது. பஞ்சம்வேறு வந்ததால் பாபிலோனியப்படை தோற்றது (648).

அசூர்பானிப்பால் அராபியர்களையும் ஏலாமியரையும் தண்டித்து சூசாவை அழித்தார். இவர் 629 வரை ஆண்டாலும் இவரது பிற்கால ஆட்சி குழப்பமிக்கதாய் அமைந்திருந்தது. அதுபற்றி செய்திகள் கிடைக்கவில்லை. இந்த இருட்டடிப்பை விளக்குவது கடினம். திடீரென்று அவருடைய மகன் சின்சாரிஸ்குன் என்பவரின் (627–612) ஆட்சியில் அசீரியா அரசு சிதைந்துவிட்டது. பாபிலோனிய நபோபோலாசாரிடம் சரண் அடைந்தது. பேரரசின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் சுதந்திரம் அடைந்தன. 612–ல், மேதியர்களால் இதன் தலைநகரான நினிவே அழிக்கப்பட்டது.

மேலும் இவர் எப்போதும் போர்ச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும், ஒரு செழிப்பான பண்பாட்டு மரபுரிமையை விட்டுச் சென்றுள்ளார். நினிவேயிலுள்ள அவரது அரண்மனையிலும், ஆலயத்திலும், மற்ற நகரங்களிலுள்ள பொதுக் கட்டடங்களிலும் காணப்படும் சித்திரங்களும் சிலைகளும் அசீரியக் கலைக்குச் சாட்சியாகின்றன. நினிவேயிலிருந்த இந்த அரசரின் நூலகம் அசீரிய அரசர்களிலேயே அசூர்பானிப்பால் ஒருவர் மட்டும் மிகுந்த படிப்பாற்றல் கொண்டிருந்தார் எனக் காட்டுகின்றது. இவர் ஒரு பெரிய எழுத்தாளர் குழுவுக்கு ஆதரவு அளித்தார். இவர்கள் சுமேரிய, அக்காதிய இலக்கியச் சொத்துக்களைப் பாதுகாத்தனர். இவரது நூல் நிலையத்தைச் சேர்ந்த ஏறக்குறைய 30,000 வாசகங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. இதன் ஒரு பகுதி இப்பொழுது தோண்டி எடுக்கப்பட்டு பிரித்தானிய பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. இது இவருடைய அழியாத ஞாபகச் சின்னமாகத் திகழ்கிறது.

அசூர்னசிர்ப்பால் (ASSURNASIRPAL)

இரண்டாம் அசூர்னசிர்ப்பால் (கி.மு. 883–859) அசீரியாவின் அரசனாவார். இவர் இரண்டாம் திலுக்தி–நினுர்தாத்தின் மகன். கார்கேமிசையும் பித்–அதினி என்ற பலம் வாய்ந்த அரமேய நாட்டையும் வென்றபின் (868) இவர் மத்தியதரைக் கடலுக்கு ஒரு வழியை உண்டாக்கினார். தோற்கடிக்கப்பட்டவர்களை இவர் கொடுமையாக நடத்தியதால் இவர் கொடுங்கோலன் என்ற பெயர் பெற்றார். ஆனால் ஒரு பலம் வாய்ந்த ஆட்சியை நிறுவுவதில் வெற்றி பெற்றார். இவர் மாநில ஆட்சிகளுக்கு மதிப்புக் கொடுத்துச் செயல்பட்டார். முற்றுகை ஆயுதங்களை விருத்தி செய்தார். காலாகுவின்மேல் புதிய தலைநகரைக் (நிம்ரூத்) கட்டினார் (ஆதி 10:11).

அசேரா (ASHERAH)

ஓர் எமோரிய அல்லது கானானிய பெண் தெய்வத்தினுடையவும் அவளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வழிபாட்டுக்கும் உரிய பெயரே இது. தொடக்கக்காலப் பாபிலோனியரின் முக்கிய கடவுள்களில் ஒன்றான அமுருவின் துணைவியான அஸ்ராத்துமோடு இது ஒன்றாய் இருக்கலாம். உகரித்து புராணங்களில் தெய்வங்களின் தந்தைக் கடவுளான 'ஏல்' என்பவரின் துணைவியாகக் காட்டப்படுகிறாள் இப்பெண் தெய்வம். "பாகால்" தெய்வத்தின் புராணத்தில் ஆசேரா பல பூதகணங்களைப் பெற்றுத் தருவதாகவும் அவை பாகால் தெய்வத்தை விழுங்கி பாகால் தெய்வத்துக்காக எழுப்பப்படும் அரண்மனையைக் கட்டவிடாமல் தடுப்பதாகவும் கூறப்படுகிறது. இவளுக்கு "கடலின் தலைவி அசேரா" என்ற பெயரும் உண்டு. இவள் தாய் தெய்வமாவாள். கானானியர் பாலின விருத்தித்தேவதை அசித்தார்தியாவிலிருந்து வேறுபட்டவள். இவளை வழிபட்ட மேற்காசிய நாடுகளில் பெனிசியா சிறப்புப் பெற்றதாகும்.

பழைய ஏற்பாட்டில் இப்பெண் தெய்வம் பாகாலின் துணைவியாகவே தோன்றுகிறாள். பொதுவாக இது ஒரு வழிபாட்டுப் பொருளாகவே பார்க்கப்படுகிறது. அது மரத்தாலான ஒன்றாகவோ, கம்பமாகவோ, தோட்டமாகவோ இருக்கலாம். ஏனெனில் இதனை நட்டு வைக்கவோ, வெட்டி எறியவோ கூடியதெனக் கூறுகின்றனர்.

வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியவுடன் அசேராவை இஸ்ராயேலர் வணங்க ஆரம்பித்தனர். இந்தப் பிரமாணிக்க மின்மைக்காக இறைவன் அவர்களைத் தண்டிக்க வேண்டியிருந்தது (நீதி 3:7–8) கோரேபு மலையிலும் (யாத் 34:13–14).

பிற்பாடும் (உப 7:5) கூறப்பட்ட இறைவனது எச்சரிக்கைளுக்கு அவர்கள் செவிசாய்க்க வில்லை.

பாகாலின் பலிப்பீடத்துடன் இது காட்சியளிப்பதாக, கிதயோனின் வீட்டுப் பொருள்களுடன் இருந்ததாகக் கூறப்படு கிறது (நீதி 6:25 தொ). இரகபெயாமின் ஆட்சிக் காலத்திலும் (1 அர 14:23) ஆசா (1 அர 15:13), ஆகாபு (1 அர 16:33), யோவாசு (2 அர 13:6), மனாசே (2 அர 21:7) ஆகி யோர் ஆட்சிக்காலத்தில் எல்லாம் இப் பெண் தெய்வ வழிபாடு இருந்திருக்கு மெனத்தெரிகிறது. அரசன் ஆகாபுமெனி சிய இளவரசி ஈசபேலை மணந்தபின் அசேராவின் வழிபாடு, பாகாலின் வழி பாட்டோடு சேர்ந்து, அதிகம் வளர்ந்தது. இறைவாக்கினர் எலியா, இதை எதிர்த் துப்போராட வேண்டியிருந்தது. சாமாரி யா இவ்வழிபாட்டின் மையமாகத் திகழ்ந் தது (2 அர 13:6). இஸ்ராயேலரின் இந்த வழிபாடு அசீரியாவுக்கு நாடு கடத்தலுக்கு ஒரு காரணமாயிற்று (17:10.16). இவ்வழி பாடு யூதா நாட்டிலும் பரவியிருந்தது. சாலமோனின் மகன் இரகபெயாம் தமது அரசில் இந்த வழிபாட்டை ஊக்குவித் திருந்தார் (1 அர 14:23). தாய் அரசியான மாக்கா யூதாவில் அசேராவின் சிலையை வைத்திருந்தாள். அதை அவளது பேரன் ஆசா கிதரோன் ஓடையில் அழித்தார் (15:13; 2 நாள் 15:16). யோசபாத்து (2 நாள் 18:4) எசக்கியா (2 அர 18:5) போன்ற அரசர்கள் சீர்திருத்த முயன்றாலும், யூதா வைச் சேர்ந்தவர்கள் தங்கள் வழிபாட்டு முறையை மாற்றிக்கொள்ளவில்லை. மனாசே எருசலேம் ஆலயத்தில் அசேரா வின் சிலையையும் தொங்கல்களையும் நிறுவியிருந்தார் (2 அர 21:7; காண்க: 2 நாள் 33:3.19). அரசன் யோசியா தனது சீர்திருத்த முயற்சியில் ஆலயத்தில் அவன் தந்தை வைத்த அசேராவின் பொருட் களையெல்லாம் அழித்தார் (2 அர 23:4.7; 2 நாள் 34:3.7). யோசியாவுக்குப்பின் வந்த அரசர்கள் ஆண்டவருக்குப் பிரமாணிக்க மாக இருக்கவில்லை. இந்த அசேரா வழி பாடு தான் பாபிலோனுக்கு நாடு கடத் தப்படுதலுக்கு வித்திட்டது (ஏச 27:9; எரே 17:1 தொ; மீக் 5:14). ஏசயா இக்காலத்தை மக்கள் மனிதன் செய்த வழிபாட்டுப் பொருட்களை விட்டுவிட்டு, படைத்தவ ரைப்போற்றும் காலத்தோடு ஒப்பிட்டு வேறுபடுத்துகிறார் (ஏச 17:8).

அவர்கள் வழிபட்ட பொருள் ஒரு மரத் துண்டில் அந்தத் தெய்வத்தில் உருவம் பொறிக்கப்பட்டோ அல்லது அதன் வடிவம் செதுக்கப்பட்டோ இருந்திருக்க வேண்டும். இஸ்ராயேலில் இத்தெய்வம் அனாத்து, அசித்தார்த்தி, இசிதார் போன்ற பலரின் உருவங்களில் இருந்து வந்தது. இவற்றின் பயன் என்னவெனில் மக்கள் செல்வம் பெருகவேண்டும் என்னும் எண்ணத்திற்கான வழிபாட்டில் பெரிதும் ஈடுபடுத்தப்பட்டனர். இது போன்ற பல மூடநம்பிக்கைகள் இஸ்ரா யேலில் இருந்தது என்பது இதன்மூலம் தெரிகிறது.

அசோத்து (AZOTUS)

அசுதோது என்ற பெயரின் கிரேக்க வடிவம்.

அசோப்பரத்து (HASSOPHERETH – எழுத்தர்)

செருபாபேலோடு நாடு கடத்தலிலி ருந்து திரும்பிய "சாலமோனின் ஊழியர் கள்" என்றழைக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் அல்லது குழுவின் தலைவர் (எஸ் 2:55). காண்க: சோப்பரத்து.

அச்சம் (FEAR)

மறை நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள இந்த சொல்லுக்குப் பலபொருள் உண்டு. தவிர்க்க முடியாத ஆபத்தால் எழும் பயம், தெரிந்தோ தெரியாமலோ வரும் ஆபத் தால் வரும் பயம், சந்தேகத்தால் ஏற்படும் பயம் என பலபொருள் உண்டு. இச் சொல் உலக வழக்கிலும் ஆன்மீக வழக்கி லும் பயன்படுத்தப்படுகிறது. தூயவரும் உன்ன தருமான கடவுளை நோக்கி இருக் கும்போது எழும் உணர்ச்சியைக் கடவுள் பயம் என்று குறிப்பிடுகின்றனர். இந்த உணர்ச்சி மதிப்பு, மரியாதை, பயம், ஆரா தனை, விசுவாசம், நம்பிக்கை ஆகிய உணர்வுகளைத் தூண்டுகிறது. இது விவிலியத்தில் மட்டுமல்ல, அண்டை மேற் காசிய நாடுகளின் பல இலக்கியங்களிலும் இந்தக் கருத்து காணப்படுகிறது.

1. புதிய ஏற்பாட்டைவிட பழைய ஏற் பாட்டில் இச்சொல் அதிகமாக பயன்

படுத்தப்பட்டுள்ளது. 'அஞ்சினர்' என்ற சொல்லை எபிரேயத்தில் நாம் அடிக்கடி காண்கிறோம் (யோனா 1:10; பழ 1:7; சங் 19:9; 130:4; யோபு 13:11). இது ஓர் உள்ளார்ந்த ஆழ்ந்த உணர்ச்சியைக் குறிக்கும் (ஆதி 15:2; எரே 8:15; 6:25; ஆதி 35:5). கிரேக்கத்திலே இதற்கு மரியாதை பக்தி என்ற பொருள்படும் வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளனர் (எச 11:2; பழ 1:7; ஆதி 15:12). கோழைத்தனம், பயம் என்ற வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன (சங் 54:4). 'பயத்தால் பாதிக்கப்பட்ட', 'நடுக்கம்' 'அச்சம் மேலிட' போன்ற தொடர்களை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம் (மத் 10:31; மாற் 4:14; உரோ 13:7; எபி 12:28; 2 திமோ 1:7; யோவா 14:27). விவிலியத்தில் கவலைப்படுவதிலிருந்து அச்சம் வேறுபடுத்தப்படுகிறது.

2. பழைய ஏற்பாட்டில் சமயச் சார்பற்றச் சூழ்நிலையில் மிருகங்களும் மனிதர்களுக்கு அஞ்சி நடுங்குவனவாக என்றும் (ஆதி 9:2), வேறு சில அஞ்சுவதில்லை என்றும் (யோபு 39:16; 41:33) கூறப்பட்டுள்ளது. இயற்கைகூட அஞ்சுவதாகக் கூறப்படுகிறது (சங் 76:8). அழிவைக் கண்டு மனிதர் பொதுவாக அஞ்சினர்.

அ) உலகு சார்ந்த அச்சம்:- தன்பாதுகாப்பிற்கு, குறிப்பாக உயிருக்கு எதிராக ஆபத்து வரும் போது மனிதன் பயந்தான் (ஆதி 4:14; 32:7; 46:3; எண் 14:9; ஆமோ 3:8). நாடோடியான காயின், காண்பவர் எவரும் தன்னைக் கொல்லக்கூடும் என்று அஞ்சினர் (ஆதி 4:14). யாக்கோபு, தனது சகோதரன் எசா பழிவாங்குதலைக் கண்டு அஞ்சினார் (32:7) பிற்காலத்தில் தெரியாத நாட்டிற்குக் குடியேற அஞ்சினார் (46:3). கானானியரின் படைப்பலத்தைக் கண்டு எபிரேயர் அஞ்சினர் (எண் 32:7). இடையன் சிங்கம் கர்ச்சிப்பதைக்கேட்டு அஞ்சுகிறான் (ஆமோ 3:8). ஏன்–தோரின் சூனியக்காரி சாமுவேலின் ஆவியைக்கண்டு பயந்து கூக்குரல் இடுகிறாள் (1 சாமு 28:12). தேமானைச் சேர்ந்த எலிப்பாசு இரவு ஆவிகளின் காட்சி கண்டு அஞ்சினார் (யோபு 4:14). தனக்கு வரவிருக்கும் அகால மரணத்தை எண்ணி யோபு அஞ்சினார் (3:25; 21:6; 22:10;...)

இவ்வாறு சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆ). அச்சமும் பாவமும்:- மனிதன் கடவுளுக்குப் பயந்தான். இவன் பாவத்தின் காரணமாகவும் இறைவன் தண்டிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பாலும் கடவுளுக்கு அஞ்சினான் (ஆதி 3:10; 18:15; 20:8; உப 9:19; சங் 76:8; 78:33; 90:7–11). துன்புறும் மக்கள் தாங்கள் தவறு செய்ததால்தான் கடவுள் இத் துன்பத்தைத் தங்களுக்கு அளித்தார் என எண்ணி அஞ்சினர். தாம் அறியாத தவற்றிற்காகவும் கடவுள் தண்டிக்கிறார் என எண்ணினர் (யோபு 23:15; சங் 22:1; 8:1). மனிதனின் இந்த பாவ நிலையை கருத்தில் கொண்டு கடவுளின் இறுதி தீர்ப்பைப்பற்றிய ஓர் அச்சத்தை எபிரேயர் வளர்த்தனர் (உப 32:25; சங் 47:5; எச 2:6–22; எச 27:35; யோவேல் 2:1; ஆமோ 5:18; அப 3:2; செக் 9:5; மலா 3:2–3).

இ) அச்சமும் வெளிப்பாடும்:- இறைவன் தன்னை வெளிப்படுத்தும்போது மக்கள் அஞ்சினர் என நாம் வாசிக்கிறோம். அப்போதெல்லாம் 'அஞ்சாதே' என்ற வார்த்தையைக் கடவுள் கூறுவதாக நாம் அடிக்கடி காண்கிறோம் (ஆதி 15:1; யாத் 14:13; நீதி 6:23; எச 41:10). இறைவன் தம்மை வெளிப்படுத்தும் போதெல்லாம், அதில் பயங்கர மறைபொருள் அடங்கியிருக்கிறது. இதில் அச்சத்தை ஏற்படுத்தும் இறைவனது புனிதத்தின் மறைபொருள் அடங்கியிருக்கிறது (ஆதி 31:42). இதில் இறைவனது மகிமை உணரப்படுகிறது. மனிதன்பால் இறைவன் காட்டும் ஆழ்ந்த அக்கறையையும், அன்பையும் கண்டுணர்வதினால் வரும் மனவெழுச்சியும் மகிழ்ச்சியும் உண்டாகிறது (சங் 18: அப 3). இத்தகைய அச்சம், இறைவனது பரிசுத்தத்தை உணர்வதால் மட்டுமன்று, அவரது மீட்கும் அருளை அனுபவித்ததால் வருவதாகும் (ஆதி 28:13–14; 17). மோசே எரியும் புதரைக் கண்டு அஞ்சினார். ஆனால் கடவுள் தம் திருப்பெயரை அவருக்கு வெளிப்படுத்தி, அவரைத் தம் கருவியாக்கினார் (யாத் 3:6; சங் 98:3).

கடவுளை நேருக்கு நேர் பார்த்த சில மனிதர்களைப் பார்க்கவும் மக்கள் அஞ்சி

னர். மோசே மலையில் கடவுளோடு உரையாடியபின் திரும்பியபோது அவரைப் பார்க்க ஆரோனும் மற்றவர்களும் அஞ்சினர் (யாத் 34:30; யோசு 4:14; 1 சாமு 12:18; 18:12; 5–6; 2 சாமு 6).

ஈ) அச்சமும் வழிபாடும்:- இந்தப் பயம் அவர்களின் வழிபாட்டிற்குள்ளும் இடம் பெற்றது. இந்த கடவுள் பயம், விசுவாசம், அன்பு, நம்பிக்கை உறவு ஆகியவற்றோடு இணைத்தே காணப்படுகிறது. "ஆண்டவருக்கு அச்சத்தோடு ஊழியம் செய்யுங்கள் நடுக்கத் தோடு அகமகிழுங்கள்" (சங் 2:11) என்பது போன்ற கூற்றைப் புரிந்துகொள்வது நமது காலத்தவர்க்குக் கடினமாக இருக்கலாம். இந்த பயம் என்பது கடவுளின் சினத்தாலோ அல்லது அவரின் தண்டனை தீர்ப்புக்கு அஞ்சியோ எழுவதல்ல. மாறாக இந்த கடவுள் பயம் கடவுளின் அன்பை உணர்ந்ததால் எழவேண்டும் (ஓசே 11:9–11). விசுவாசத்தோ(ஒத்து வராத பயம் பொருளற்றது. கடவு. மேல் கொண்ட விசுவாசம் நம்மை உலக ஆபத்துக்களில் இருந்து காக்கும் (சங் 23:4; 130:4). ஏனெனில் விசுவாசத்தோடு கூடிய கடவுள் பயம் இறைவனின் புனிதத்தன்மையை உணரச் செய்யும் (ஏச 8:12; உப 1:17).

3. ஆண்டவர்பால் அச்சம்:- கடவுள் பயம் என்பது 'இராத் யாவே' என்று எபிரேயத்தில் கூறப்பட்டது. நாடு கடத்தலுக்குப்பின் ,இது யூத மதத்தில் சிறப்பிடம் பெற்றது. கடவுள் பயம் வெறும் மரியாதையால் மட்டும் எழுவதல்ல மாறாக கடவுள் மேல் கொண்ட முழுமையான தனிப்பட்ட அன்பினால் எழுவது. இதுதான் செமா என்னும் எபிரேய வழக்கில் வலியுறுத்தப் பட்டுள்ளது (உப 6:4–5). இதில் பயம் என்பது இறைவனை அன்பு செய்யும் கட்டளையிலிருந்து பிரிக்கப்படவில்லை (உப 6:2.13;10:20;28:58..). ஏனெனில் முழுமையான . அன்பு முழுச்சரணடைதலைக் கோருகிறது. இது கடவுள் பயத்தையும், அன்பையும் உள்ளடக்கிய ஒன்றாகத்தான் மனித நடத்தையின் கோட்பாடாகுகிறது. ஞானத்தின் தொடக்கமாகிறது (யோபு 28:28; சங் 111:10; பழ 1:7). கடவுள் மீது மனிதன் கொண்டுள்ள அன்பு கலந்த பயமே அவனைப் பாவம் செய்யாமல் விலக்குகிறது (சங் 51:6–15). மெசியாவின் பண்புகளில் ஒன்று இறைஅச்சமாகும் (ஏச 11:2).

4. திருமுறைப் புறநூல்களிலும் போலி நூற்களிலும் அச்சம்:- திருமுறையில் ஏற்கப்படாத நூல்களில் இந்த அச்சத்தைப்பற்றி அதிகமான கருத்துகள் குறிப்பிடப்படவில்லை. சில இடங்களில் மட்டுமேபயம் என்ற இந்த வார்த்தை காணப் படுகின்றது. பாவத்திற்கு அஞ்சுதலே ஞானத்திற்கு அடிப்படை என சிலநூல்களில் கூறப்பட்டுள்ளது. சில இடங்களில் கடவுள் பயம், கடவுள் அன்பு என்ற வார்த்தைகளும் ஒரே பொருளோடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

5. புதிய ஏற்பாட்டில் அச்சம்:- அ) உலகம் சார்ந்த அச்சம்:- புதிய ஏற்பாட்டிலும் இந்த அச்சம் என்ற சொல் முக்கிய இடத்தை வகிக்கவில்லை. உலக சார்புள்ள அச்சம் சிலஇடத்தில் விளக்கப் பட்டுள்ளது. அர்க்கெலா யூதேயாவை ஆண்டு வந்தான் என அஞ்சி யோசேப்பு அங்குச் செல்லவில்லை (மத் 2:22). அதிகாரிகள் மக்களுக்கு அஞ்சினர் என்று பல தடவை கூறப்படுகிறது (மத் 14:5; 21:26–46; மாற் 11:18; அ.ப. 5:26). கிறிஸ்து உலக அச்சத்தினின்று விடுவிப்பார் எனக்கூறும் போது பேய், எதிரி ஆகியோரைப் பற்றிய அச்சத்தையே குறிப்பிடுகிறார். "அச்சத்திற்குள்ளாக்கும் அடிமையுள்ளம் அன்று, பிள்ளைகளாக்கும் தேவ ஆவியை பெற்றுக் கொண்டீர்கள்" (உரோ 8:15). கடவுள் மேல் நாம் கொண்டுள்ள அன்பு நம்மை உலக அச்சத்தினின்று காப்பாற்றுகிறது. ஏனெனில் "அன்பில் அச்சத்துக்கு இடமில்லை, நிறை அன்பு அச்சத்தை அகற்றும்". இறைவன் தம் ஆவியால் கோழை உள்ளத்தை நமக்கு அருளவில்லை, வலிமையும் அன்பும் விவேகமும் கொண்ட உள்ளத்தையே அருளினார் (2 திமோ 1:7).

ஆ) அச்சமும் கிறிஸ்துவும்:- கிறிஸ்துவே பழைய ஏற்பாட்டில் வாக்களிப் பட்ட மெசியா. எனவே கிறிஸ்து பிறப்பு திருமுழுக்கு அருளப்பரின் பிறப்பு ஆகிய நிகழ்ச்சிகளை அறிவிக்கும்போது தூதர் 'அஞ்சாதே' என்கிறார் (லூக் 1:13. 30;2:10). கிறிஸ்துவே 'அஞ்சாதே' என்று அடிக்கடி

கூறுகிறார் (லூக் 5:10; 8:50; 12:7.32). கிறிஸ்து இயல் வெளிப்பாட்டிலும் அதே சொற்கள் பயன்பட்டுள்ளன (யோவா 12:15). ஆண்டவரின் உருமாற்றத்தின்போதும் அஞ்சாதே என்கிறார் (மத் 17:6–7; லூக் 3:34). சிலுவைச் சம்பவங்கள் உயிர்த்தெழுதல் ஆகிய நிகழ்ச்சிகள் (மத் 27:54:28:4) யாத்திரைக் காலத்தில் இறைவன்தம்மை வெளிப்படுத்தியதை எதிரொலிக்கின்றன. இன்னும் அச்சம் ஒரு தன்னல உணர்ச்சியாக கருதப்பட்டது. இதை விலக்கி இறைவனின் அழைப்பை ஏற்கவேண்டும் (மாற் 10:32).

இ) அச்சமும் மகிழ்ச்சியும்:- இயேசுவின் வல்லமையையும், தூய்மையையும் சீடர்கள் உணரும்போது அவர்களை வேறு விதமான அச்சம் ஆட்கொள்கிறது. புயலால் வரும் ஆபத்தைக்கண்டு சீடர்கள் கொள்ளும் உலகு சார்ந்த அச்சம் ஆண்டவரின் ஆற்றலைக்கண்டு புனித அச்சமாக மாறுகிறது (மாற் 4:37.41; மத் 9:8; 14:26–27; மாற் 5:15.33). இயேசு இறந்தவர்களை உயிர்ப்பித்தபோது கடவுளே நம் நடுவே வந்துள்ளார் என மக்கள் அஞ்சினர் (லூக் 5:26; 7:16). இங்கு நாம் காண்பது ஓர் மகிழ்ச்சி கலந்த அச்சம் (மத் 28:8; மாற் 16:8, அ.ப. 2:43). இதில் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் முரண்பாடு காணவில்லை.

ஈ) ஆண்டவருக்கு அஞ்சுவோர்:- "யாவேயின் அச்சம்" என்ற பழைய ஏற்பாட்டு பதம் புதிய ஏற்பாட்டில் "இறைவனுக்கு அஞ்சுவோர்" என வடிவம் எடுக்கிறது. கடவுள் பயம் என்பது கடவுள்மேல் முழு நம்பிக்கை வைப்பதைக் குறிக்கிறது (லூக் 1:50; 18:24). இப்படி விவரிக்கப்படுவோர் ஆழ்ந்த நம்பிக்கையால் உந்தப்பட்டு, இறைவனது சித்தத்துக்கு, அது எதுவாயிருந்தாலும், எங்கு இட்டுச்சென்றாலும், தங்களை அர்ப்பணித்தனர்.

உ) அச்சமும் அர்ச்சிப்பும்:- கிறிஸ்துவில் புதுமனிதன் என்பவன் இந்த சகல விதமான உலக அச்சத்தினின்றும் விடுபட்டவன். ஆனால் தீமை எவ்வடிவத்தில் தோன்றினாலும் அதைக்கண்டு அஞ்ச வேண்டும் என்று நினைவுபடுத்தப்படுகிறது (மத் 10:28; உரோ 11:20). ஒரு கிறிஸ்தவனையோ அல்லது சபையையோ அர்ச்சிக்கும் பணி இந்த கடவுள் பயத்தின் விளைவே (2 கொரி 5:10–11; கொலோ 3:22; எபி 10:31). ஆகையால் கிறிஸ்துவும் இறை அச்சத்தின் இடத்தை அகற்றி இறை அன்பிற்கு இடம் அளிக்கிறது என்பது தவறாகும். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இரண்டுமே கடவுள் பயத்தையும் கடவுள் அன்பையும் சார்புபடுத்தியே கூறுகின்றன (பிலி 2:12). திருச்சபை தூய ஆவியால் தூண்டப்பட்டு கடவுள் பயத்திலேயே முன்னேறுகிறது (அ.ப. 9:31). மீட்பரை வழிபடுவதும், ஆராதிப்பதும், விண்ணையும் மண்ணையும் படைத்த ஆண்டவரின்பெயரை மகிமைப்படுத்துவதும் அஞ்சுவதும் ஆகும். ஏனெனில் அவர் ஒருவரே புனிதர் (திருவெளி 14:6–7; 15:3–4).

அச்சாரம் (EARNEST)

இச்சொல்லின் மூல கிரேக்கச் சொல்லான 'அரபோன்' செமித்திய மொழியில் தோன்றியது. ஆனால் பெனிசியர்களால் கிரேக்க மொழிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம். கிரேக்க எழுபது நூல் இச்சொல்லை 'அடைமானமாகக் கொடுக்கும் பொருள்' என்று மொழி பெயர்க்கிறது (ஆதி 38:17–18; உப 24:6; யோபு 24:3). கி.மு.. நான்காம் நூற்றாண்டிலிருந்து "அச்சாரப்பணத்தைக்" குறித்தது. புதிய ஏற்பாட்டில் இச்சொல் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தூய ஆவியே விசுவாசியின் உரிமைப் பேறான முடிவற்ற வாழ்வின் அச்சாரமாக இருக்கிறார் (எபே 1:14; 2 கொரி 5:5). உரோ 8:23–இல் வரும் முதற் கனியான தேவ ஆவி என்ற உருவகத்தை யும் கவனிக்க. அடைமானம் என்ற பொருள் 2 கொரி 1:22;.எபே 1:14–இல் அச்சாரமும், முத்திரையும் சமமாக்கப்படுவதில் பிரதிபலிக்கிறது. உரிமைப்பேறு சுவீகாரம் தொடர்பான ஆவணங்களில் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளே புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அடக்கம் (BURIAL)

வரலாறு வரைவதற்கு முந்திய காலந்தொட்டே, குறிப்பாக பழங்கால மேற்காசியாவில் இறந்தோரை அடக்கம் செய்வதில் கவனம் செலுத்தி வந்துள்ளனர். இதற்கு விவிலியத்தில் நாம் காணும் பல குறிப்புகளும், மற்ற முற்கால ஏடுகளும்,

விவிலிய நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள ஆயிரக்கணக்கான கல்லறை களும் சான்றுகளாக உள்ளன. இந்தக் கவனம் பல்வேறு தோற்றங்களில் வெளிப் படுத்தப்பட்டது. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாய் விளங்கியது, மனிதன் சாவிற்குப் பின்னும் ஏதோ ஒருவகையில் வாழ்கிறான் என்று மக்கள் கொண்டி ருந்த நம்பிக்கையேயாகும். ஆனால் தெளி வான சான்றுகள் இல்லை.

1. பழங்காலத்தில் :

1. இறந்தவர்களை அடக்கம் செய்யும் பழக்கம் மக்களிடையே இருந்தது என்பதை பின்வரும் பகுதிகளில் இருந்து நாம் அறியலாம்: திருவுரை 6:3; ஏச 14:20; எரே 22:19; இவைகளில் புதைக்கும் இடம் பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் பின் வரும் பகுதிகளில் அத்தகைய குறிப்பு களும் உள்ளன: ஆதி 47:30; உப 34:6; 2 அர 9:28; 21:26; 23:30; எச 32:23–24. இறந்த வர்களை அடக்கம் செய்வோர் புதைப் போர்எனப்பட்டனர் (எச 39:15). இறந்த வர்களைப் புதைக்குமுன் என்னென்ன நடைபெறும் என்பதும் விளக்கப்பட்டுள் ளன (மத் 26:12; மாற் 14:8; யோவா 12:7; 19:40). மத் 8:21–22; அ.ப. 2:29; 1 கொரி 15:14 ஆகிய பகுதிகளில் அடக்கம் செய்யும் செயலே விளக்கப்பட்டிருக்கிறது. இவ் வார்த்தையானது ஞானஸ்நானத்தால் நாம் கிறிஸ்துவுக்குள் புதைக்கப்பட்டுள் ளோம் (உரோ 6:4; கொலோ 2:12) என்ப தை உவமையாகக் கூறவும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

பாலஸ்தினத்தில் முற்காலத்திலேயே அடக்கம் செய்யும் பழக்கம் இருந்தது என்பதை நாம் மக்கபேலாக் குகை பாரம்பரியத்திலிருந்து அறியலாம். இங்கு த்தான் சாரா (ஆதி 23:19) ஆபிரகாம் (25:9) ஈசாக்கு, ரெபேக்கா, லேயா (49:31) யாக் கோபு (50:13) ஆகியோர் அடக்கம் செய்யப் பட்டனர். கர்மேல் மலைப்பகுதியில் வாடி –ஏல்–முகாராவில் உள்ள குகைகளில் காணப்படும் எலும்புக்கூடுகள், மற்றும் சாக்கடலுக்கு வடக்கே உள்ள தொலயி லாத் காசுல், பழங்கால முற்கால எரிகோ ஆகிய இடங்களில் உள்ள கல்லறைகளை நாம் பார்க்கும்போது அடக்கம் செய்யப் படுவது என்பது கற்காலம், வெண்கலக் காலம் ஆகியவற்றின்போதே மிக முக்கிய மானதொரு செயலாகக் கடைப்பிடிக்கப் பட்டு வந்திருக்கிறது.

குகைகளைத் தவிர்த்து, ஏராளமான அடக்கம் செய்யும் இடங்களின் பெயர் களும் விவிலியத்தில் வருகின்றன. பெரும் பாலும் ஒரு நகரத்தின் அல்லது பகுதியின் பெயர் கொடுக்கப்படுகின்றன. ஆரோன் மொசேராவில் அடக்கம் செய்யப்பட்டார் (உப 10:6; காண்க: எண் 33:8; இங்குள்ள கோர் என்ற மலையே இவர் புதைக்கப் பட்ட இடம் எனத்தெரிகிறது). பேத்து– பெயோர் என்பதற்கு எதிரே உள்ள மோவாபு பள்ளத்தாக்கில் மோசே அடக் கம் செய்யப்பட்டார் (உப 34:6). யோசுவா திம்னாத்து செராக்கிலும் (யோசு 24:30; நீதி 2:9) இபிதாகு அவரது ஊரான கில யாத்திலும் (நீதி 12:4) சிம்சோன் சோரா விற்கும் எசுத்தாவோலுக்கும் இடைப்பட்ட அவரது தந்தையின் கல்லறையிலும் (நீதி 16:31) அடக்கம் செய்யப்பட்டனர். சவுல் யோரைத்தான் இருவரையும் பெலிஸ்தி யர் யபேசில் எரித்தபின் (1 சாமு 31:13) அவர்கள் எலும்புகள் சேலா என்ற பென்யாமின் ஊரிலுள்ள கீசின் கல்லறை யில் அடக்கம் செய்யப்பட்டன (2 சாமு 21:14). தாவீதும், சாலமோனும், தாவீதின் நகரில் அடக்கம் செய்யப்பட்டனர் (1 அர 2:10; 11:43). இஸ்ராயேல், யூதா நாடுகளின் அரசர்கள் மற்றும் பலரும் தாவீதின் ஊரில் (1 அர 15:8.24; 2 அர 8:24; 12:21) திரிசா (1 அர 16:6), சமாரியா (1 அர 16:28; 22:34) மற்றும் எருசலேம் (2 அர 14:20) ஆகிய இடங்களில் அடக்கம் செய்யப் பட்டனர்.

இப்பகுதிகளில் அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் துல்லியமாகக் குறிக்கப்பட வில்லை. ஆனாலும், குறிப்பிடப்பட்ட ஊர் களில் மக்கள் வாழ்ந்த பகுதியில் கல்லறை கள் இருந்திருக்கவேண்டும். மேலே சொன்ன இடங்களில் கல்லறைகள் இருப்பது கண்டுபிடிக்கபட்டுள்ளது. பழங் கால எரிகோவில் உள்ள வீடுகளினடியி லும் முந்திய வெண்கலக் காலத்தில் வீடு களின் முற்றங்களிலும், தரைக்குள்ளேயே கல்லறைகள் காணப்படுகின்றன. பிற்

காலங்களில் இயற்கையாக அல்லது செயற்கையாக எடுக்கப்பட்ட குகைகளில் அடக்கம் செய்தனர். இக்குகைள் நகருக்கு வெளியே அமைந்திருந்தன. அந்நகர்களாவன: எரிகோ, இலாக்கீசு, மெகிதோ, கெசெர், தெல்லென்–நாஸ்பே, மிசுபா, தெல்லெபாரா, திரிசா, தீபோன், எருசலேம் முதலியன. குகைகளில் உள்ள கல்லறைகளில் எலும்புகள் அப்புறப்படுத்தி விட்டு திரும்பவும் வேறு உடல்களை அதில் அடக்கம் செய்தனர். ஒரு கல்லறையில் ஓர் உடல்தான் என்று அடக்கம் செய்யும் பழக்கம் பரவலாக இல்லாவிடிலும், கும்ரான் குகைப்பகுதியில் இத்தகைய ஆயிரத் 'ற்கும் மேற்பட்ட கல்லறைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதைக்கப்பட்ட இடங்கள் என்று குறிப்பிட்டு சிலபகுதிகள் விவிலியத்தில் வருகின்றன. அவை: பெத்தேல் எனும் இடத்தில் கருவாலிமரத்தடி (ஆதி 35:8), தோட்டம் (2 அர 21:18.26) முதலியன. இயேசுவின் அடக்கம் பற்றிப் பேசும்போது தோட்டத்தில் ஒரு புதுக்கல்லறை இருந்தது. அதில் யாரையும் இதுவரை வைத்ததில்லை என்று யோவா 19:41–இல் திட்டவட்டமாக இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் வீடுகளில் அடக்கம் செய்ததாகவும் வாசிக்கிறோம் (1 சாமு 25:1; 1 அர 2:34; 2 நாள் 33:20). வீடுகளில் என்று குறிப்பிடுவது சாமுவேல், யோவாபு, மனாசே இவர்களைப் பற்றியே. ஆனால் இப்பழக்கம் அப்போது இருந்த ஒன்றல்ல. ஏற்கெனவே முற்காலத்தில் இருந்த பழக்கத்தைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கலாம். எச 43:1–ன்படி கல்லறைகள் எருசலேம் அரண்மனையிலேயே இருந்திருக்கின்றன. 2 அர 21:8–இன்படி மனாசே அவரது வீட்டின் பக்கமுள்ள தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றுள்ளது.

2. அடக்கப்பெட்டிகள் பொதுவாக எபிரேயர்களிடையே காணப்படவில்லை. யோசேப்புவின் உடல் மட்டும் எகிப்துநாட்டில் சவப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது என்று அறிகிறோம் (ஆதி 50:20). எகிப்தில் அடக்கப் பெட்டிகள் செய்யும் பழக்கம் இருந்தது. எகிப்தில் மரப்பெட்டிகள் மனிதனது வடிவில் செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டு உபயோகப்படுத்தப் பட்டன. தீபோன், பேத்து–சான் பகுதிகளில் உள்ள கல்லறைகளில் பெட்டிகளில் மனித உருவம் பொறிக்கப்பட்ட சுட்ட மண்பாண்டப் பெட்டிகள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எலும்புகள் வைத்திருக்கும் எலும்புக்கலங்கள் ஏறத்தாழ கி.மு. 3–ஆம் நூற்றாண்டிலேயே பயன் படுத்தப்பட்டன.

3. அடக்கம் செய்யும்போது உள்ள வழிமுறைகள் ஒவ்வொரு பாரம்பரியத்திற்கும் வித்தியாசமாக உள்ளன. நறுமணத் தைலம் பூசுவது என்பது எபிரேயர்களிடையே இருந்த ஒன்றல்ல. யாக்கோபு, யோசேப்பு, இதற்கு விதிவிலக்காவார். ஆனால் எகிப்தியர்களிடையே காணப் பட்டது. யூதர்களிடையே, கிறிஸ்தவர்களிடையே உடல்களை எரிக்கும் பழக்கம் இல்லை. ஆனால் உரோமை, கிரேக்க நாடுகளில் சில சமயங்களில் பிணங்களை எரித்தனர். பிணங்களை எரிப்பது என்பது பழி தீர்த்துக்கொள்வதற்கு அடையாளம் (1 சாமு 31:12). அல்லது அநீதியைக் குறிப்பதன் அடையாளம் (ஆமோ 6:10) அல்லது குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுப்பதன் அடையாளம் (லேவி 20:14; 21:9; யோசு 7:25). மிஸ்னா எரிப்பது என்பது ஒரு சிலை வழிபாடாகும் என்று த்டுக்கிறது.

அன்றைய மேற்காசிய நாடுகளில் இன்றுபோலவே இறந்த அன்றே அடக்கம் செய்யும் பழக்கம் நிலவியது (லேவி 10:4; உப 21:23). ஒருவேளை உடல் நலனையும், தீட்டுப்படுதலையும் கருதி இது நடந்ததாக இருக்கலாம் (எண் 19:11–14). உறவினர்கள் அடக்கத்திற்காக உடலைத்தயார் செய்தனர். இறந்தோருக்காக அழுது புலம்புவதும் உண்டு. இதை உறவினர்களோ (12:92–14) புலம்புவதைத் தொழிலாகக் கொண்டவர்களோ செய்தனர் (திருவுரை 12:5). அடக்கம் செய்யமுடியாது போனால் அது பெரிய துன்பம் எனக்கருதினர். வெட்கத்திற்குரியதாக அல்லது இறை தண்டனையாகக் கருதப்பட்டது (1 அர 14:11; 21:23; சங் 79:3; காண்க: 2 சாமு 21:10 தொ; எரே 7:33; தோபி 17–18). பிறரை நல்லடக்கம் செய்வது புண்ணிய செயலாகக் கருதப்பட்டது (தோபி 1:17–18).

பல்லக்கு அல்லது தூக்குக்கட்டிலில் வைத்துப் பிணங்கள் கல்லறைகளுக்கு எடுத்துச் செல்லப்படும். அவைகளின் பின் தற்காலத்தில் நாம் செல்வதுபோல் மக்கள் ஊர்வலமாக பின் செல்வர் (புலம்பிச் செல்வர்). இறந்தவர்களின் உடமைகளும் அவர்களோடு சேர்த்து புதைக்கப்படும். கானானியர், மோவாபியர் கல்லறைகளில் ஆயுதங்கள், மோதிரங்கள், காதணிகள், கையணிகள், விளக்குகள், உணவுப் பொருட்கள், மரத்தால் செய்யப்பட்டத் தட்டுகள் பலஇருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இறந்தோருக்கு உணவு கொடுப்பது இறந்தோர் வழிபாடாகலாம் என்பதால் எபிரேயச் சட்டம் தடுத்தது (உப 26:14).

II. இஸ்ராயேல் மக்களும், அவர்களது அண்டை மக்களும் இறந்த ஒருவரை அடக்கம் செய்யமுடியாதபொழுது, அதை அவருக்கு ஏற்பட்ட பெரும் அவப்பேறாகக் கருதினர் (சங் 79:3). தீங்கிழைப்போருக்கு இவ்வாறு ஏற்பட இருக்கிறது, இத்தகைய தண்டனை வரவிருக்கிறது, என்று இறைவாக்கினர் எச்சரித்தனர் (1 அர 14:11; எரே 22:18–19).

ஆதலால் ஒருவரை அடக்கம் செய்வதில் இஸ்ராயேல் மக்கள், ஆபிரகாமைப் போன்று, அதிகக் கவனம் செலுத்தினர் (ஆதி 23, மூதாதையரின் கல்லறையைக் கட்டுவித்தல்). இறந்த ஒருவனைச் சவ அடக்கம்செய்வது, அவன் மகனின் தலையாய கடமையாகும் (ஆதி 25:8; 35:29; 50:12; தோபி 4:3; 6:15; 14:10). இச்செய்கையானது, யுத்தகாலத்தில் போர் வீரர்களுடைய வும், மற்றும் பிரமாணிக்கமுள்ள ஒவ்வொரு இஸ்ராயேல் மகனுடையவும் மிகப் புண்ணியம் நிறைந்த கடமையாகக் கருதப் பட்டது (தோபி 1:17–20; 2:4–8; 12:12).

இறந்தவர்களுக்காக அழுது துயர் கொண்டாடுவதற்கான சடங்குகள் பலவாகும். அவைகள் சிக்கலானவைகளும் கூட. இச்சடங்குகள் இஸ்ராயேலரின் அண்டை மக்களிடமும் காணக்கிடக்கின்றன. உபவாசம் (1 சாமு 31:13; 2 சாமு 1:12; 3:35), கிழிந்த ஆடை (ஆதி 37:34; 2 சாமு 1:11; 3:31; 13:31), சாக்குத் துணி தரித்தல் (ஆதி 37:34; 2 சாமு 3:31; 14:12; எச 7:18), முடி வெட்டிக் கொள்தல், தன்னையே காயப்படுத்திக் கொள்தல் (ஆமோ 8:10; மீக் 1:16; ஏச 22:12) எனப் பல சடங்குகள் இருந்தன. (இக் கடைசிச் சடங்கு உப 14:1–இலும் லேவி 19:2–இலும் விலக்கப்பட்டுள்ளது. ஏனெனில் ஒருவேளை, இச்சடங்கு பாகால் என்னும் தெய்வத்திற்குக் காட்டப்பட்ட சடங்கின் ஒரு பகுதியாய் இருந்திருக்கலாம்). இவ்வாறே ஒப்பாரி வைத்தலும் (2 சாமு 1:12.17–27; 3:33; 13:36; 1 அர 13:30; ஆமோ 5:16; எரே 22:18; 34:5) பரவலாகக் காணப்படும் சடங்காகும்.

இச்செய்கைகள் துக்கத்தை வெளிப் படுத்தும் அடையாளங்களாக மட்டுமல்ல. நிறைவேற்றப்பட வேண்டிய சடங்குகளாகவும் இருந்தன. அச்செய்கைகளில் முதல் நோக்கத்தைப் பெரும்பாலும் நாம் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம் (இறந்தோரை வழிபடுதல், தீய ஆவிகளிடமிருந்து பாதுகாப்பு முதலானவைகளாக இருக்கலாம்). ஆண்டவரைக் கடவுளாகக் கொண்ட இஸ்ராயேல் மக்களிடையே, இறந்தோரைத் தொழுதல் விலக்கப்பட்டிருப்பதால், இச்சடங்குகள் இறந்தோர், தம் முன்னோரை அடையும் வரை அமைதியான நிலைபெற வேண்டு மென்று நிறைவேற்றப்பட்டன (ஆதி 25:8; 35:29; 1 அர 2:10; 11:43) எனலாம்.

III. நற்செய்திகளிலும், இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் இறந்தோரை அடக்கம் செய்வதற்கான பழைய ஏற்பாட்டு வழக்கு முறைகளைப் பின்பற்றுவதைக் காண்கிறோம் (மாற் 5:38; யோவா 11:38–44) இயேசுவும் இவ்வழிமுறைகளைக்கூடாது என்று வெறுத்து ஒதுக்கவில்லை. ஆனால் இதேசமயத்தில், ஒருவருக்கு, தன் இறந்த தந்தையைப் புதைத்திடும் திருச்சடங்கைக்காட்டிலும், இறைவனின் அழைப்பு மேலானது எனக் காட்டத் தயங்கவில்லை (மத் 8:21). யூதகுலத்திலுதித்தவர் இயேசு, தம் வாழ்வின் இறுதியில் தாம் அடக்கம் செய்யப்படுவதற்கான எவ்வித ஆடம்பரமும், மரியாதையுமின்றி, குற்றவாளியைப்போல் தாம் மரிக்க இருப்பதை நினைத்து நாணித் துயருறுகிறார் (மாற் 14:8).

உண்மையில் இம்மரியாதைகளெல்லாம் ஆண்டவருக்கு அரிமத்தியா யோசேப்பினால் அளிக்கப்படும். ஆனால் பண்டிகைநாள் அடுத்து வந்ததால் இவைகள் அவசரம் அவசரமாய் செய்யப்பட்டன (மாற் 15:46) என்றும், உயிர்ப்பு ஞாயிறன்று பெண்கள் வாசனைத் தைலத்தால் அன்று அவசரமாய்ச் செய்ததை சரியாய் நிறைவேற்றி அடக்கம் செய்ய வரும் பொழுதே (மாற் 16:1; யோவா 19:39 இயேசுவின் உடம்புக்கு, அவர் மரிப்பதற்கு முந்தியநாளே தைலம் பூசப்பட்டது), வான தூதர் அவர்களிடத்தில் "அவர் உயிர்த்துவிட்டார் இங்கில்லை", என்று கூறினர்.

இயேசுவின் இவ்வரலாற்றினைப் பின்பற்றி, இறந்தோரைக் கல்லறையிலும் சுரங்கக் கல்லறைகளிலும் புதைக்கும் சடங்குமுறையானது கிறிஸ்தவர்களிடையே வழக்கில் வந்தது. பரிசுத்த ஆவியால் அர்ச்சிக்கப்பட்ட உடலுக்கு அளிக்கப்பட்டுள்ள மரியாதையிலிருந்தும் உயிர்த்த ஞாயிறு நமக்கு அளித்துள்ள நம்பிக்கையினின்றும், இச்சடங்கிற்கான ஆதரவும் ஆதாரமும் கிடைக்கின்றன.

அடித்தளம் (FOUNDATION)

விவிலியத்தில் பல சொற்களை மொழிபெயர்க்க இது பயன்படுகிறது. ஒரு கட்டடத்தின் (1 அர 7:9–10; 2 நாள் 8:16; எஸ் 5:16) அல்லது சுவரின் (எஸ் 4:12) அல்லது முழு நகரின் (சங் 137:7; மீக் 1:6) அடி அமைப்பாகும் இது. சாலமோனின் ஆலயத்திற்கு பத்து முழமும் எட்டு முழமுமான விலையேறப்பெற்ற பெரிய கற்களால் அடித்தளமிடப்பட்டது (1 அர 7:10). எசக்கியேல் ஆலயத்தின் சுற்றுக்கட்டுகளின் அடிப்படைகள் இருமுழம் கொண்ட கோலால் அளக்கப்பட்டன (எச 41:8).

பழங்கால மேற்காசியாவில் ஒரு நகரத்திற்கோ அல்லது ஒரு ஆலயத்திற்கோ அடித்தளமிடுவது விரிவான சடங்காகும். குறிப்பிட்ட சமயப் பொருளுடையதுமாகும். அசீரிய ஆலயங்களிலும் அரண்மனைகளிலும் அந்தந்த தேவதைக்கு மட்டும் அளிக்கப்பட்ட செய்தி பொறிக்கப்பட்ட அடித்தளங்கள் காணப்படுகின்றன. பாலஸ்தீனத்தில் மற்ற பகுதிகளிலும் அடித்தளம் இடும்போது மனிதப் பலிகளும் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர் (யோசு 6:26; 1 அர 16:34). புதைபொருள் ஆராய்ச்சியில் கோட்டைகளின் மேல் அமைப்புகள் அழிக்கப்பட்டிருந்தாலும் அடித்தளத்தைக் காணமுடிந்தது. உருவகப்பொருளில் இச்சொல் நாடுகளையோ அரசுகளையோ (எச 30:4; எரே 50:15), சட்டங்களையோ (சங் 11:3) பூவுலகின் அடித்தளத்தையோ (2 சாமு 22:16; சங் 18:15) மலைகளின் அடித்தளத்தையோ (2 சாமு 22:8; சங் 18:7) குறிக்கலாம். இம்மைக்குரிய பொருளில் 'பூவுலகுக்கு அடித்தளம் இடுதல்" படைப்புச் செயலைக் குறிக்கிறது (சங் 102:25; ஏச 51:13; திருவெளி 13:8).

அடித்தள வாயில் (GATE OF FOUNDATION)

எருசலேமில் ஒரு வாயிலாகும். ஒரு வேளை அரச மாளிகையிலிருந்து ஆலயத்திற்கு இட்டுச்செல்லும் வாயிலாக இருக்கலாம் (2 நாள் 23:5; காண்க: எரே 39:3). அரசை அபகரித்துக் கொண்ட அத்தாலியாவைக் கைப்பற்றியபோது குரு யோயதா வாயிற்காவல்களின் ஒரு பகுதியை இங்கு நிறுத்தி வைத்திருந்தார். இந்நிகழ்ச்சியின் இணை விவரிப்பு இதைச் சூர்வாயில என்றழைக்கிறது (2 அர 11:6).

அடிபடுதல் (SCOURGING)

ஒழுங்குக்காகவும், தண்டனையாகவும், கோலால் அல்லது தடியால் அடிப்பது வழக்கமாயிருந்தது. இது அடிமைகளுக்கும், சிறுவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. ஞான இலக்கியத்தில் முட்டாள்களுக்கு கொடுக்கப்பட்டது (யாத் 21:20; பழ 13:24; 26:3; ஏச 9:4). வார்ச்சாட்டை அதிகத் துன்பத்தை அளிக்கவல்லது (1 அர 12:11.14). பெரும்பாலும் விலங்குகள் மேல் பயன்பட்டது (பழ 26:3; நெக 3:2). மனிதர்கள் மேல் கோலோ தடியோ பயன்படுத்தப்பட்டது.

உப 25:13–இல் யூதசட்டப்படி, தண்டனை அதிகபட்சம் நாற்பது அடிகளாகும். இது குற்றவாளி அதிகம் இழிவுபடுவதைத் தடுக்கவே வரையறை செய்யப்பட்டது. எண்ணிக்கை குற்றத்திற்கு தகுந்தாற்போல் மாறும். ஆனால் சட்டங்கள், எது எதற்கு சாட்டை அடிகள் என்று குறித்துக் காட்டத் தவறிவிட்டன. குற்றவாளி, அடிவாங்கும்

போது, சாய்ந்து இருக்கும்படி செய்யப் படுவார். இது நீதிபதியின் பார்வையில் தான் நடக்கும்.

பிற்கால யூதச் சட்டம், விவிலியத் தடைக்கு மாறாகத் தண்டித்திருக்கிறது. மிஸ்னாவில் காணப்படும் முறை சாட்டை யடியைத் தாங்கிக் கொள்ளக் கூடியவனா என்று சோதிக்கப்பட்டபின், குற்றவாளி யின் கைகள் தூணில் கட்டப்படும். நெஞ்சு, முதுகிலிருந்து உடைகள் நீக்கப் படும். செபக்கூடத்தை நடத்துபவர் (மத் 10:17) சாட்டையடியை அடிப்பார். கழுதை, பசுங்கன்றுகளின் தோலினால் செய்யப் பட்ட சாட்டை பயன்பட்டது. மூன்றில் ஒரு பகுதி அடிகள் குற்றவாளியின் நெஞ்சிலே கொடுக்கப்படும். மூன்றில் இரண்டு பகுதி பின்னால் கொடுக்கப்படும். மொத்தம் நாற்பதுக்கு ஒன்று குறைவாக முப்பத் தொன்பது அடிகள் கொடுக்கப்படும் (2 கொரி 11:24). எண்ணிக்கையில் தவறு நடப்பதைத் தடுக்க உப ஆகமம் அனும தித்ததற்கு ஒன்று குறைவாகக் கொடுக் கப்பட்டது.

உரோமையர்களிடம், குற்றவாளிகளின் நிலை பார்த்து சாட்டையடி கொடுக்கும் வழக்கம் இருந்தது. சுதந்திரமாகத்திரியும் மனிதர்கள் தடியால் தண்டிக்கப்படுவர் (1 கொரி 4:21; அ.ப. 16:22; 2 கொரி 11:25). அடிமைகள், உரோமையர் அல்லாதவர் கள் சாட்டையடி கொடுக்கப்பட்டு சோதிக் கப்படுவர் (அ.ப. 22:23–25). உரோமையர் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பிடப்பட்ட பின்பு தான் கசையடியால் தண்டிக்கப்பட்டனர். குற்றவாளிகளின் ஆடைகள் கிழிக்கப்பட்டு சாட்டையால் அடிக்கப்படுவர் (16:22). அவரது கைகள் முள்ளோடு சேர்த்து தூணில் கட்டப்படும் (22:25). அடிமைகள், அந்நியர், மரண தண்டனைபெற்ற குற்ற வாளிகள் போன்றோர் முடிச்சுள்ளவார் களின் நுனியில் எலும்பு, உலோக கண்ணாடித் துண்டுகள் முடிக்கப்பட்டி ருக்கும் சாட்டையால் அடிக்கப்படுவர். அதிகம் துன்புறுத்தப்படுவர். இந்த பயங் கரமான சாட்டை வெறும் முதுகில் கொடுக்கப்பட்டது. இதனால் குற்றவாளி கள் இறப்பதும் உண்டு.

1 அர 12:11,14–இல் வரும் முற்சாட்டை உருவகமாகப் பயன்பட்டிருக்கலாம். 2 கொரி 11:24–ஐ பவுல் எழுதியபோது, அவர் ஏற்கெனவே ஐந்துமுறை, யூத முறைப்படி, கசையடிபட்டிருந்தார். இதே வாக்கில், தடியால் அடிபடுவது வேறு படுத்தப்படுகிறது. இயேசு தண்டனை யாகக் கசையடிப்பட்டார் (மத் 27:26).

அடிமை (SLAVE)

'அடிமை முறை' இஸ்ராயேல் நாட்டில் இருந்தது. பெரும்பாலன அடிமைகள் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப் பட்டவர்கள். வழிவந்த முறைப்படி, போரில் கைது செய்யப்பட்டவர்கள் அடி மைகள் ஆக்கப்பட்டனர் (உப 21:10). மேலும் வியாபாரிகள் மூலமும் அடிமைகள் விலைக்கு வாங்கப்பட்டனர் (ஆதி 17:12). சில எபிரேயர்கள் கூட அடிமைகளாக விற்கப்பட்டனர்; அல்லது தங்களையே அடிமைகளாக விற்றுக்கொண்டனர் (யாத் 21:1–10; 2 அர 4:1).

விவிலியக் காலத்தில் அடிமை முறை பெருமளவிலும் முறைப்படியும் பிறநாடு களில் நிலவியது. இஸ்ராயேலில் மட்டும் அந்நிலையை அது அடைந்ததில்லை. இஸ்ராயேலின் வரலாற்றில் இருவகை யான அனுபவங்கள் கோடிட்டுக் குறிக்கப் படுவதைக் காண்கிறோம். அவை அந்நிய நாடுகளில் அவர்கள் அடிமைகளாக அனுபவித்த துன்ப துயரங்களும், இறை வன் அற்புதமாக அவர்களை விடுவித்தது மாகும் (உப 26:28; யாத் 22:20). இவ்வனு பவத்தால், இச்சமூக பிரச்சினையை இஸ்ராயேல் அணுகிய விதமும், இறை நோக்கோடு உணர்ந்த உண்மைகளும் தனித்தன்மை படைத்தவையாகும்.

I. பழைய ஏற்பாட்டில் அடிமைத் தனம்: மனிதனே மனிதனை உரிமை யாக்கிக் கொள்வது, ஏறக்குறைய ஆயிரம் ஆண்டு காலம் அளவிற்கு, பொருளாதார அடிப்படையிலும், குறிப்பிடத்தக்க அள விற்குச் சமுதாய வாழ்விலும் பழங்கால மேற்காசியாவின் முக்கியமான பகுதியாக இருந்து வந்தது. அடிமைமுறை ஒரு பொ ருளாதார நிறுவனம். விவிலிய அடிமை முறையை அதற்குரிய கண்ணோட்டத்தில்

மதிப்பிடுவதற்கு, மேற்காசியா பகுதிகளில் அடிமை முறை நிறுவனமாக இருந்ததை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். அடிமை முறை சம்பந்தப்பட்ட விவிலிய கருத்துப் பரிமாற்றத்தில், அடிக்கடி அருகாமையில் இருக்கின்ற மக்களுடைய அடிமை முறைக்கு குறிப்பீடுகள் காட்டப்படுவதால், இதற்கு மற்றொரு காரணம் உள்ளது, அதாவது அவை மூலப்பொருளாக அமைகின்றன.

1. இலக்கிய ஆதாரங்கள்:- சட்ட நூல்களும், பாபிலோனிய, சீரியா ஆகிய நாடுகளிலிருந்து வந்த அடிமை முறையுடன் தொடர்புள்ள ஏராளமான தனி, பொருளாதார சம்பந்தமான பத்திரங்களும், பழைய ஏற்பாட்டில் உள்ள சட்டப்பூர்வமான சட்டத்திற்கு வெளியே உள்ள, இது சம்பந்தமான செய்திகளை வளப்படுத்துகின்றன. உறுதிப்படுத்துகின்றன. விவிலியத்திற்கு வெளியே உள்ள மதிப்பிட முடியாத கருவூலங்களான இந்த சான்றுகளை நல்ல முறையில் பயன்படுத்தியதனால் ஒற்றுமைகளும், அதேபோல் வேற்றுமைகளும், குறிப்பாக விவிலியம் அடிமை முறையைப் பார்க்கின்ற விதத்திற்கும், அருகாமையில் இருந்த மக்கள் பார்த்ததற்குமிடையேயுள்ள வேறுபாடு பொருள் உள்ளதாகவும், தெளிவானதாகவும் தென்படுகின்றது. பழங்கால மேற்காசியா நாடுகளில் இருந்த அடிமை முறையைப் படிப்பதற்கு முக்கியமான மூலங்களாக இருப்பவை அ) ஊர்-நமு சட்ட நூல் (கி.மு. 2050), எஸ்நுன்னாவின் சட்டங்கள் (2000), லிப்பித்-இசிதர் சட்ட நூல் (1950), கமுராபியின் சட்ட நூல் (1700), மத்திய அசீரியர்களின் சட்டங்கள் (1400-1200), ஆ) பாபிலோனிய அசீரியாவிலிருந்து வந்த தனியாருடையவும் அரசரவை பத்திரங்களும் குறிப்பாக கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் முடிவுப் பகுதியிலிருந்து, கிறிஸ்துவ சகாப்தத் தொடக்கம் வரையுள்ள காலங்களிலிருந்து வந்தவைகள் இ) இத்தியருடைய சட்டங்கள் (1550), ஈ) கி.மு. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து பதிமூன்றாம் நூற்றாண்டுவரை அலாலாக் உகரிட்டிலிருந்து வந்த அக்காதியப் பத்திரங்கள் ஆகியவையாகும். விவிலிய அடிமைச் சட்டங்கள் யாத் 21; லேவி 25-லும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் பழைய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களிலும் பலகுறிப்புகள் உள்ளது. யூத அடிமைக்காலம் பற்றிய ஒரே ஒரு விவிலியத்திற்குப் புறம்பான குறிப்பு கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில், யூதர்களின் குடியிருப்பான எலே பென்டைன் என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட அரமேயிக் புல்தாள் ஏடாகும்.

2. அடிமை முறையின் மூலங்கள்:- அ) போர்க்கைதிகள்:- "சுமேரிய அடிமை" என்ற சொல், போரிலிருந்துதான் அடிமைகள்' கொண்டு வரப்பட்டனர் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. போர்க்கைதிகளும் தோற்கடிக்கப்பட்ட நாட்டு மக்களின் பெரும்பகுதியினரும் அடிமை முறைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பது பழங்கால மேற்காசிய நாடுகளின் பழைய போர் சம்பந்தமான குறிப்பு ஏடுகளில் காணக்கிடைக்கின்றது. இதே மாதிரியாக போர்க்கைதிகளை அடிமைகளாக்கும் முறை கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டின் மத்திய காலத்தில் சீரியாவிலுள்ள நகரங்களிலும் பாலஸ்தீனத்திலும் பின்பற்றப்பட்டு வந்தது. சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு இஸ்ராயேலர்களால் பின்பற்றப்பட்டது (எண் 31:77 தொ; உப 20:10 தொ; 1 அர 20:39; 2 நாள் 28:8 தொ). கமுராபியின் சட்டத்தொகுப்பும் விவிலிய சட்டமும் இந்தப் பொதுவான வழக்கமான போர்க் கைதிகளை அடிமையாக்கும் முறையை ஏற்றுக்கொண்டன. மேலும் அவர்களுடையவும், அவர்களது உடனடியான குடும்பங்களுடையவும் துன்ப நிலையைச் சீர்செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தன.

கமுராபியின் சட்டத் தொகுப்புகளின்படி கைதி வீரர்களும், மாநில அதிகாரிகளும், தங்களுக்கென்று ஒரு வழியும் இல்லாது இருப்பவர்களும், நகரக் கோயிலினாலோ அல்லது நாட்டாலோ மீட்கப்படலாம். ஒரு பெண்ணுடைய கணவன் கைதியாக இருந்தால் அவள் தன்னுடைய குழந்தைகளையும் தன்னையும் காப்பாற்றிக் கொள்வதற்கான வழியில்லாமல் இருந்தால் அவள் மீண்டும் திருமணம்

செய்துகொள்ளலாம். அதேபோல் மத்திய அசீரியச் சட்டங்கள் கைது செய்யப்பட்ட படைவீரனின் மனைவி தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலையில் இல்லாமல் இருந்தால் அவளை அரண்மனைப் பாதுகாப்பில் வைக்கவேண்டும் என்று கூறுகிறது. உப 21:10–14–இன்படி படைவீரன் கைதிகளின் நடுவில் ஒரு அழகான பெண்ணைக் கண்டு அவளைத் தன் மனைவியாக்கிய பிறகு அவளைச் சுதந்திரப் பெண்ணாக நடத்தவேண்டும். பிற்பாடு அவளை விரும்பவில்லையென்றால் போர்க்கைதிகளில் ஒருத்தியாக விற்க முடியாது.

ஆ) அன்னிய அடிமைகள்:- பண்டைய கிழக்கத்திய நாடுகளின் வாணிபர்களுடைய நடவடிக்கைகளின் அன்னிய அடிமை வாணிபமும் பின்னிப் பிணைந்த ஒன்றாக இருந்தது. மெசபொத்தாமியாவின் பல்வேறு பகுதியிலிருந்து அடிமைகளை இறக்குமதி செய்ததற்கும், ஏற்றுமதி செய்ததற்கும் தேவையான சான்றுகள் உள்ளன. ஆனால் இது பற்றிய விவிலிய பாலஸ்தீனச் சான்றுகள் மிகக்குறைவாகவே உள்ளன. வெளிநாட்டு அடிமைகள் குறைந்த எண்ணிக்கையில் பாலஸ்தீனத்தில் இறக்குமதி செய்யப் பட்டிருந்தாலும் (1 நாள் 2:34–35) குறைந்த எண்ணிக்கையில் அடிமைகள் பாலஸ்தீனத்திலிருந்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது பற்றி இரு சட்டங்கள் தான் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன. யாத் 21:16; உப 24:7 ஆகியவை சுதந்திரமான தனி மனிதனைக் கடத்திக்கொண்டு போய் விற்றால் அதற்கு மரண தண்டனை விதிக்கின்றன. சட்டங்கள் குறிப்பாக கடத்தப்பட்ட மனிதன் வெளிநாட்டில் விற்கப் படமாட்டான் என்பதைச் சொல்லாவிட்டாலும், நாம் அதை அப்படி எடுத்துக் கொள்ளலாம் (ஆதி 37:28). மேலும் உப ஆகமத்தின் சட்டம் (23:15–16) வெளி நாட்டிலிருந்து தப்பிவந்து உள்நாட்டில் அடைக்கலம் தேடும் அடிமையைப் பிடித்து அவனுடைய தலைவனிடம் ஒப்படைக்காதே என்று இந்தச் சட்டம் பகர்கின்றது. இப்படியாக பாலஸ்தீனத்திலிருந்து அடிமைகளை இறக்குமதி செய்தலும், ஏற்றுமதி செய்தலும் விவிலிய காலத்தில் நடந்துள்ளன என்பதற்கான சில சான்றுகள் உள்ளன.

இ) வயது வராதவர்களின் விற்பனை:- தாங்களாகவே முன்வந்து தங்களுடைய குழந்தைகளைப் பொருளாதார நெருக்கடி காலத்தில் அல்லது போர் சமயங்களில் விற்ற செயல் பண்டைய மேற்காசிய நாடுகளில் இல்லாமல் இல்லை. இந்தச் செயல் பாலஸ்தீனத்திலும் இதே மாதிரியான சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அதற்கான சான்றுகள் இல்லை. யாத். 21:7–11–இல் உள்ள சட்டமும் நெக 5:1–5–இல் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளும், பெற்றோர் வயது வராத தங்களுடைய குழந்தைகளை வெளிப்படையாக விற்பனை செய்வதற்கான தெளிவான சான்று பகர்வதில்லை. யாத் 21:7–11 பெண் பிள்ளையை அவளது தந்தை விற்பதைப் பற்றியும், அவளை வயது வந்தவுடனேயே மனைவியாகவோ அல்லது வைப்பாட்டியாகவோ தலைவனோ அல்லது அவனுடைய பிள்ளைகளில் ஒருவனோ மணந்து கொள்ளவேண்டும் என்று சொல்கின்றது. பெண் பிள்ளைகள் விற்பனை பற்றிய அதே மாதிரியான நிபந்தனை நூசி என்ற கூரியர் குடியிருப்பில் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஒருசில விற்பனை ஒப்பந்தங்களில் அந்தப்பெண்ணின் வருங்காலத் திருமணம் ஒரு சுதந்திர மனிதனுக்கோ அல்லது அடிமைக்கோ செய்யப் படவேண்டும் என்று சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. "அன்னிய மக்களுக்கு அவளை விற்றுவிட தலைவனுக்கு அதிகாரமில்லை" (யாத் 21:8). இங்கு அந்தத் தலைவன் அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள வில்லையெனில் அவளை விடுவிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. மேலும் யாத் 21:9–11–விருந்து தலைவன் அவளை வைப்பாட்டியாகவோ அல்லது தன்னுடைய மகன்களில் ஒருவனுக்குத் திருமணம் செய்துவைக்காமல் இருந்தால் "அவள் பணமொன்றும் கொடாமலேயே விடுதலையாய்ப் போவாள்". நெக 5:1–5–இல் சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சியில் "தாங்களாகவே" முன்வந்து பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை

விற்றார்கள் என்று சொல்ல முடியாது. பொருளாதார நெருக்கடி ஒரு சில விவசாயிகளைத் தங்களுடைய நிலங்களையும், குழந்தைகளையும் தாங்கள் பெற்றுக் கொண்ட தவணைத் தொகைக்கு அடைமானமாக அளித்தனர். அந்தக் கடன் தொகை அளிக்கப்படாதபோது அதற்குரியவர்கள் அந்த நிலத்தை மீட்கும் உரிமையைத்தடை செய்துவிட்டு, ஈடு செய்யப்பட்ட குழந்தைகளைப் பெற்றோர்களின் விருப்பத்திற்கு எதிராகக் குழந்தைகளை விற்றுவிட்டனர்.

ஈ) தங்களை விற்பனை செய்து கொள்ளுதல்:- வறுமை அல்லது கடன் தங்களுடைய பிள்ளைகளை முதலிலும் பிறகு தங்களையும் அடிமை நிலைக்கு விற்குமாறு செய்கின்றது. தாங்களாகவே முன்வந்து தங்களையே அடிமை ஆக்கிக் கொண்ட நிலை அன்னியர்களிடம் பொதுவாகக் காணப்பட்டது. இது குறிப்பாக நூசி என்ற இடத்தைச் சேர்ந்த கெபீரு என்றவர்களுக்கு ஏற்பட்ட நிலையாகும். அவர்கள் தங்களுக்கென்று ஒரு பணியை அமைத்துக் கொள்ளமுடியாத நிலையில் "தங்களுடைய சொந்த விருப்பத்தின்படி" தனிமையாக அல்லது அவர்களுடைய குடும்பங்களுடன் அடிமை நிலையை ஏற்றுக்கொண்டனர். பண்டைய சட்டத் தொகுப்புக்களிலும், பழைய ஏற்பாட்டுச் சட்ட அமைப்புக்கள் மட்டுமே தங்களையே விற்பனை செய்து கொள்வதை அல்லது மனமுவந்த அடிமை முறையையும் குறிக்கின்றது (யாத் 21:5–6; லேவி 25:39 தொ: உப 15:16–17). எபிரேய கடன்கார அடிமைக்கு, அவனுடைய தலைவன் ஒரு மனைவியைக் கொடுத்தபிறகு, தன்னுடைய ஆறு வருட பணி முடிந்தபிறகும் வெளியே சுதந்திரமாகச் செல்ல மறுத்துவிட்டால் அவன் வாழ்நாள் முழுவதும் தலைவனுக்கு ஊழியம் செய்வானாக என்று யாத் 21:5–6 கூறுகின்றது. அந்த அடிமை அப்படி நடந்து கொண்டதற்கான காரணங்கள் பொருளாதார பாதுகாப்பு, தன்னுடைய மனைவியுடனும் அவள் பெற்றெடுத்த பிள்ளைகளுடனும் இணைந்து இருக்க வேண்டும் என்ற விருப்பம் ஆகியவை ஆகும். யாத்திர, உப ஆகமங்களின் சட்டங்களுக்கு எபிரேயே கடன்கார அடிமைகள் உட்பட்டவர்களாக இருக்கும்போது, லேவி 25:39–55 ஆனது ஒரு எபிரேயன் தன்னுடைய வறுமையினால் தானாக முன் வந்து சகோதர எபிரேயனிடமோ அல்லது அங்கேயே நிரந்தரமாக வாழ்கின்ற ஒரு அன்னியரிடமோ அடிமையாக இருப்பவனைப் பற்றிக் குறிக்கின்றது. உன்னுடைய சகோதரன் ஏழ்மையினால், தன்னை உன்னிடம் விற்றால்....அல்லது அன்னியனுக்கோ விற்றால்" இப்படியாக எபிரேயர்கள் தாங்களாகவே முன்வந்து அடிமையாக்கிக்கொள்வது பற்றிய மூன்று அடிமைச் சட்டங்கள் இருப்பதனால், இவ்வகையான அடிமை முறை எதாவது ஒரு வகையில் பழங்கால இஸ்ராயேலில் பொதுவாக இருந்திருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

உ. கடனைச்செலுத்தமுடியாத வகையற்ற நிலை:- போர்க்கைதிகள், வெளிநாட்டு அடிமைகள், அடிமைப் பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகள் அனைத்தும், பண்டைய மேற்காசிய நாடுகளின் சுதந்திரமற்ற மக்கட்தொகையின் அடிப்படைப் பகுதிகளாக இருந்தாலும், சுதந்திர குடிமக்களாக வந்த அந்நாட்டு மக்களே; கடன் தொல்லை தாங்கமுடியாமல் அடிமைகளாக மாறினர். மெசபொத்தாமியாச் சட்டம் கடன் அளித்த தலைவனின் உரிமையான, தன்னுடைய கடன்காரன் கடனைக் கட்டாதபோது அவனைக் கட்டாயப்படுத்திப் பணி செய்யுமாறு பல வந்தப் படுத்தலாம் என்கின்றது.

கடன்கட்ட இயலானை நிலைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் தலையான காரணமாக தட்டிக் கேட்க முடியாத அளவுக்கு கடன் கொடுக்கப்பட்ட தொகையின் மீது விதிக்கப்பட்ட வட்டித் தொகையாகும். பாபிலோனியா, அசீரியா, சீரியா போன்ற நாடுகளில் வெள்ளி மீது சராசரி வட்டி 20–25 சதவிகிதமாக இருந்தது. தானியங்கள் மீது $33^1/_3$ சதவிகிதமாக இருந்தது. பாலஸ்தீனத்தில் கடன் தொகையின் மீது எவ்வளவு வட்டி விதித்தார்கள் என்பதற்கான சான்றுகள் பழைய ஏற்பாட்டில் இல்லை. இரண்டாவது சக எபிரேயரிடமிருந்து வட்டி வாங்குவதற்கு

எதிராக மூன்றுசட்டங்களிலும் கட்டளை உண்டு (யாத் 22:28; லேவி 25:35–37; உப 23: 19–20). மேலும் வட்டிகள் வசூலிக்கப்பட்டன என்ற விவிலிய குறிப்புகள் உள்ளன (சங் 15:5; பழ 28:8; எச 18:8–17; 22:12). இவற்றிலிருந்து பாலஸ்தீனத்தில் வட்டி வாங்கும் வழக்கம் இருந்திருப்பது தெரிகிறது.

பாலஸ்தீனத்தில் கடன் கொடுத்தவன் தன்னுடைய கடன்காரன் தன்னை ஏமாற்றும் பொழுது அவனைத் தன்னுடைய அடிமை ஆக்குவது பற்றி ஏட்டில் சொல்லப்பட்டுள்ளது. தாவீதுடன் அதுல்லாம் குகையில் சேர்ந்து கொண்டவர்களும் தங்களுக்குக் கடன் அளித்தவனை ஏமாற்றி விட்டுத் தப்பித்து ஓடிவந்தார்கள் (1 சாமு 22:2). 2 அர 4:1–இல் "கடன் கொடுத்தவன் இறந்துபோன கடனாளியின் குழந்தைகளை தங்களுடைய உடைமையாக்கிக் கொண்டார்கள். எனவே விதவை உதவிக்காக இறைவாக்கினர் எலிசாவிடம் வந்தாள்". "கடன்காரன் என் இரண்டு மக்களையும் தனக்கு அடிமைகளாக எடுத்துக் கொள்ள வந்திருக்கிறான்" என்று குறிப்பு உள்ளது. நெக 5:1–5 ஈடு செய்யப்பட்ட குழந்தைகள் அவர்களுடைய பெற்றோர்கள் கடன் செலுத்தமுடியாத நிலை ஏற்படும்போது அடிமைகளாக்கப்பட்டார்கள் என்று குறிப்பிடுகின்றது. இந்த வகையான செயல்முறை இறைவாக்கு இலக்கியத்தில் பிரதிபலிக்கின்றது. "அவர்கள் நீதிமானை பணத்திற்கும், எளியவனை ஒருசோடி செருப்புக்கும் விற்கின்றார்கள்" (ஆமோ 2:6). "உங்களை விற்றுவிடும் படி நமக்கு கடன் கொடுத்தவன் எவன்" (ஏச 5:11).

கடன்காரன் ஏமாற்றும்போது கடன் கொடுத்தவன் அவனைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும் உரிமை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று யாத் 22:2 காட்டுகின்றது. இந்தச் சட்டம் திருடனை அடிமை முறையில் விற்கும்படி சொல்கின்றது. ஆனால் இது அவனுக்குத் தண்டனையாக இல்லாமல், அவன் தன்னுடைய உரிமையாளருக்கு ஏற்பட்ட சேதத்தை நிவர்த்தி செய்யமுடியாத நிலையில் இருக்கின்றான் என்பதற்காகத் தான் இந்நிலைக்கு உட்படுத்தப்படுகின்றான். யாத் 21:2–4; உப.15:12–இல் உள்ள சட்டங்களுக்கு உட்பட்டவர்கள் எபிரேயர்கள், ஏனெனில் இவர்கள் சட்டங்கள் இவர்களுடைய வலுக்கட்டாயமாக்கப்பட்ட பணி ஆறு வருடத்திற்கு என்று நிர்ணயித்து அவர்களைப் பாதுகாக்கின்றது.

3. சட்ட நிலை (அ) சூட்டுக்குறி:- சட்டப்பூர்வமாக அடிமைகள் ஒரு தட்டுமுட்டுப் போன்றவர்களே. அடிமையைக் கடைச் சரக்காகக் கருதினர். அதை விற்கமுடியும், வாங்கமுடியும், குத்தகைக்குக் கொடுக்கலாம், மாற்றிக்கொள்ளலாம் அல்லது வாரிசு உடமையாக ஆக்கிக் கொள்ளலாம். இவனுக்கும் சுதந்திரமாக உள்ள மனிதனுக்குமிடையே இருக்கின்ற மிகவும் கூர்மையான வித்தியாசம் என்னவெனில் இவனுடைய தந்தையின் பெயரை எப்பொழுது குறிப்பிடுவதில்லை. அவனுக்குப்பெயர் இல்லாததால் அவனுக்குத் தலைமுறை கிடையாது. சொத்தின் ஒரு பகுதியாக விலங்குகளைப்போல் அடிமையை ஒரு குறியிட்டு அவனை அந்த தலைவனுக்குரிய சொத்தில் சேர்க்கின்றனர். பழைய கால எகிப்தியர்கள் கைதிகளுக்குச் சூடு குறிபோட்டனர், அரசனுடைய பெயரைக் கொண்ட முத்திரையும் குத்தினர்; தனியாக உரிமையாக வைக்கப்பட்டிருந்த அடிமைகளின் தலைகள் வழிக்கப்பட்டிருந்தன. சில சமயம், வால் போன்ற முடி உச்சியில் விடப்பட்டிருந்தது. பண்டைய பாபிலோனிய அடிமைகளில் குறிப்பாக தப்பித்து ஓடும் போக்குடையவர்கள் எல்லாரும் அறியக் குறியிடப்பட்டிருந்தனர். இது நெற்றிமீது இடப்பட்ட சூட்டுக்குறியாக இருக்கலாம், இது சிறப்பான முறையில் முடிவழித்தலாகவோ இருக்கலாம்; வேறுசிலர் இது மண்ணால் அல்லது உலோகத்தால் செய்யப்பட்டு அடிமையின் கழுத்திலோ, கையிலோ அல்லது காலிலோ கட்டப்பட்ட தகடாகவோ இருக்கலாம். புதிய பாபிலோனிய காலத்தில், அடிமையின் கையில் அவனுடைய தலைவனின் பெயரை பச்சைக்குத்தும் வழக்கம் இருந்தது. ஆலய அடிமைகள் எந்த ஆலயத்திக்கு உரிமையுடையவர்களாக இருந்தார்களோ அந்த ஆலயத் தெய்வத்தின், தேவதையின் அடையாளத்தால் குறியிடப்பட்டிருந்தனர்.

விவிலியச் சட்டத்தின்படி ஆறு ஆண்டு காலப்பணி முடிவடைந்த அடிமை மீண்டும் வாழ்நாள் முழுவதும் பணிசெய்ய விரும்பினால் அவனுடைய காதில் தோல் தைக்கும் ஊசியால் துளைபோடப்படும் (யாத் 21:6; உப 15:17). அந்தத் துளை ஒட்டை அவசியமாக சிறியதாகவும், கண்ணுக்குப் புலப்படாததாகவும் இருந்தால் அது எந்த தேவைக்காக செய்யப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்வது மிகக்கடினமாக இருந்தது. அந்தத் துளையானது வளையமோ அல்லது நூல் கயிறோ நுழைக்கப் பட்டு அதன் மீது மண்ணால் அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட முகவரித் தொங்கல் சீட்டுக் கட்டப்பட்டது. இந்த முறையுடன் பச்சைக்குத்தும் பழக்கமும் இருந்தது. காயினுடைய குறி (ஆதி 4:15), கையின் மீது எழுதப்பட்ட யாவேவின் பெயர் (ஏச 44:5; 49:16) நெற்றியின் மீது இருந்த "தௌ" என்ற எபிரேய எழுத்துப் போன்ற அடையாளம் போன்றவைகள் பச்சைக்குத்தும் வழக்கம் இருந்ததைத் தெளிவாக விளக்குகின்றன. பச்சைக் குத்துதல் ஒருவனுக்குச் சொந்தமான பொருட்களை அடையாளம் காட்டியது. இது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் எலெபென்டைன் குடியிருப்பில் உள்ள அடிமைகளின் கையில் இப்படிப்பட்ட அடையாளங்கள் பொறிக்கப்பட்டதாகத்தெரிகிறது.

ஆ) பெண் அடிமை:- பெண் அடிமையும், ஆண் அடிமையைப் போல தட்டு முட்டுப் பொருளாக நடத்தப்பட்டாள். அவள் வேலைக்கு குத்தகைக்கு விடப் பட்டாள். ஈடாக கொடுக்கப்பட்டாள் அல்லது வர தட்சிணையின் ஒரு பகுதியாகக் கொடுக்கப்பட்டாள். அவளுடைய அன்றாட வேலைகளுடன், அவள் தன்னுடைய பெண்பால் நிலைக்கு ஏதுவான துன்பத்திற்கும் ஆளாகி இருந்தாள். பெண் அடிமையை கொண்டிருப்பது தலைவனுக்கு அவளிடமிருந்து சாதாரண பணிகளை மட்டும் எதிர்ப்பார்ப்பது என்பது மட்டுமல்ல, அதோடுகூட பெரும் பாலான நேரங்களில் முதன்மையாக, தலைவனுடைய குடும்பத்தைத் சார்ந்த ஆண்கள் அவளுடைய அழகைப் பயன் படுத்திக்கொண்டார்கள், மேலும் அவளுடைய உடலை அடிமைக் குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்காகப் பயன்படுத்தினார்கள். பெண் அடிமை அடையக்கூடிய உயர்ந்த பதவி தன்னுடைய தலைவனுக்குக் குழந்தை பெற்றெடுக்கும் வைப்பாட்டியாக இருப்பதும், மிகவும் தாழ்ந்த விபச்சாரத் தொழிலில் பயன்படுத்துவதும் ஆகும்.

கமுராபி சட்டத்தொகுப்பின்படி தன்னுடைய தலைவியின் கணவனுக்குக் குழந்தையைப் பெற்றுக்கொடுத்த அடிமைப் பெண்ணை விற்கமுடியாது. ஆபிரகாமும் சாராளும் தெள்ளத் தெளிவாக ஆகாரின் காரியத்தில் இந்தப் பழைய சட்டத்தின்படி நடந்துகொண்டார்கள். ஆகார் சாராயிக்கு சொந்தமானவள். அவளுக்கு இசுமாயேல் பிறந்த பிறகு அவள் தலைவியை "அலட்சியம்" செய்தாள். ஆனால் தலைவி அவளுடைய வாழ்க்கையை கசப்புள்ளதாக ஆக்கலாம், ஆனால் அவளை விற்க முடியாது (ஆதி 16). சிலிப்பா, பிலியா என்ற இரண்டு பெண் அடிமைகள் யாகோபுக்குப் பிள்ளைகளைக் பெற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் ராக்காலுக்கும், லியாவுக்கும் சொந்தமானவர்கள். ஆனால் அவர்களுடைய நடத்தையைப்பற்றி எந்த செய்தியும் கிடைக்கவில்லை. ஆனால் அவர்கள் ஆகார் நடந்து கொண்டது போல நடந்திருந்தால் மேற்கூறிய அதே சட்டத்தை இவர்களுக்கும் பயன்படுத்தலாம்.

ஆண் அடிமைகளும், பெண் அடிமைகளும் அடிமைக் குழந்தைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தில் கூடினார்கள். யாத் 21:4 "அவன் தலைவன் அவனுக்கு ஒரு பெண்ணை மணமுடித்துக்கொடுத்து அவள் அவனுக்கு ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் பெற்றிருப்பாளாயின், அந்தப் பெண்ணும் அவள் பிள்ளைகளும் தலைவனுக்கேச் சொந்தம், அவன் தனியே செல்வானாக" என்கின்றது. பெண் அடிமை வரையறையற்ற முறையில் தலைவனின் குடும்பத்தில் உடலுறவு நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட்டாள் என்ற செய்தியை யோபு 31:10-இலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இ) அடிமைகளுக்கும் உரிமை குடிமக்களுக்குமிடையேயான திருமணம்:- பண்டைய பாபிலோனியாவில் உரிமை

குடிமக்களுக்கும், அடிமைக்கும் திருமணம் நடப்பது பொதுவான செயலாக இருந்தது. தலைவனுடைய அனுமதியின் பேரில் அடிமை ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்துச் சட்டப்படி இவளைத் திருமணம் செய்துகொள்ளலாம். கெமுராபி சட்டத் தொகுப்பின்படி இவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை உரிமைக் குடிமக்களாக கருதப்பட்டனர். அவர்களுடைய தந்தையின் தலைவன் அவர்களின் சேவையைக் கோரமுடியாது. ஆனால் இப்படிப் பட்ட திருமணங்கள் பாலஸ்தீனத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. லேவி 19:20 –இல் உள்ள குறிப்பீடு பெண் அடிமையைப்பற்றியதாகும். அவள் மற்றொருவருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தாள். ஆனால் இது தெளிவாக இல்லை. இந்தக் காரியத்தில் உள்ள பெண்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அதேபோல் அந்த ஆள் யார் என்றும் தெரியவில்லை. சேசானுக்கு புதல்வியரேயன்றி புதல்வரில்லை. ஆகையினால் அவனுடைய ஒரு பெண்ணை தன்னுடைய யரிகா என்ற அடிமைக்கு மணமுடித்து கொடுத்தார் (1 நாள் 2:34–35). இது கலப்புத் திருமணத்திற்கான சான்று அல்ல (1 நாள் 2:34–35). யரிகா விடுதலை அளிக்கப்பட்டு சேசானால் தத்து எடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் யரிகா, யூதாவின் மரபு முறைப்பட்டியலில் இடம் பெறுகிறார்.

ஈ) வீட்டில் பிறந்த அடிமை:- சட்டபூர்வமாக வீட்டிலே பிறந்த அடிமைக்கும் வெளியிலிருந்து வாங்கிய அடிமைக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. ஆனால் சமுதாய அடிப்படையில் முந்தியவனுடைய நிலை பிந்தியவனைவிட மேன்மையானதாக இருந்தது. எலியேசர் ஆபிரகாமின் பிரமாணிக்கமுள்ள ஊழியனின் காரியத்தில் இந்தக் கருத்து தெள்ளத் தெளிவாக்கப்பட்டுள்ளது. எலியேசர்தான் தன்னுடைய் வாரிசாக இருப்பான் என்ற ஆபிரகாமின் முறையீடு (ஆதி 15:2–4) பிள்ளைகளற்ற தலைவனின் அடிமைகள் சொத்துரிமை பெற்றனர் என்பதற்கு சான்று அன்று. பாலஸ்தீனத்திலோ பழமேற்காசியில் எங்குமோ இதற்குச் சான்று இல்லை. ஆபிரகாமின் முறையீட்டின் பொருள், அவர் பிள்ளையின்றி இருந்தால், எலியேசரைத் தத்து எடுத்துத் தன் வாரிசாக நியமிக்க வேண்டியிருக்கும் என்பதே.

உ) தப்பியோடிய அடிமை:- தப்பியோடிய அடிமையைப் பாதுகாத்து வைப்பதென்பது திருடிய பொருட்களை பெற்றுக் கொள்வது, சொந்தமாக்கிக் கொள்வது போன்றதாகும். இது சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடியது. எஸ்நூன்னா சட்டம் தப்பியோடிய அடிமைகளைப் பிடித்து வைத்தவர்களுக்கு அபராதம் விதிக்கின்றது. தொடக்ககால பாபிலோனிய சட்டங்கள் இந்தக் காரியத்தில் அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை. ஆனால் கமுராபி சட்டம் மிகவும் கடுமையானதாகத் தெரிகிறது. தப்பியோடிய அடிமையைப் பிடித்து வைத்திருப்பதென்பது தலையாய குற்றமாகும். அடிமைக்கு நகர எல்லையிலிருந்து தப்பியோடுவதற்கு உதவி செய்தால் அல்லது அவனை அதிகாரிகளிடம் ஒப்படைக்க மறுப்பது, மரண தண்டனைக்குரிய குற்றமாகும். பிடித்துக் கொடுப்பவனுக்குச் சன்மானமும் உண்டு. பழைய ஏற்பாட்டுச் சட்டம் (யாத் 21: லேவி 25: உப 115) தப்பியோடுகின்ற அடிமைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஆயினும் தலைவர்களுடைய கொடுமை தாங்க முடியாமல் அங்கிருந்து தப்பியோடுவதும், சுதந்திரத்திற்காகத் தப்பியோடுவதும் பாலஸ்தீனத்தில் பரவலாக இருந்தது. ஆகார் தன்னுடைய தலைவி சாராவிடமிருந்து தப்பி ஒடிவிட்டாள் (ஆதி 16). "தாவீது யார்? ஈசாயின் மகன் யார்? இன்றைக்கு ஏராளமான அடிமைகள் தங்களுடைய தலைவர்களிடமிருந்து தப்பி ஒடுகின்றார்கள்" (1 சாமு 25:10) என்று நாபால் கேட்கிறார். சிமயி தன்னுடைய இரண்டு அடிமைகள் ஒடிவிட்டார்கள் என்று கேள்விப்பட்டவுடனேயே, காத்து என்ற நகரத்திற்குப் போய் அவர்களைக் கூட்டி வந்தார் (1 அர 2:39–40).

ஊ) நடத்துமுறை:- அடிமைகளை அவர்கள் வீட்டுப்பொருட்களாகக் கருதினாலும், சட்டமும், சமுதாயமும் அவர்கள் மனிதர்கள் என்பதை மறந்துவிடவில்லை.

ஒருபுறம் அவர்கள் பொருட்களாகக் கருதப்படுகின்றனர். அதே வேளையில் மறுபுறம் அவர்கள் மனிதர்களாக கருதப் படுகின்றனர். அவன் கொல்லப்பட் டாலோ அல்லது ஊனப்படுத்தப்பட் டாலோ அல்லது பெண் அடிமையின் காரியத்தில் அவள் ஒரு அந்நியரால் தவ றாக நடத்தப்பட்டாலோ அதற்கான இழப் பைச்செய்தவன் அவர்களுடைய தலை வனுக்கு ஈடுசெய்தான், ஆனால் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக கருதப்பட வில்லை. விவிலியம் இப்படிப்பட்ட இரண்டு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிடு கின்றது. முதலில் எருதுவினால் கொல் லப்பட்ட ஒரு பெண்ணையும் மற்றொன்று ஒரு அன்னியன் அடிமைப் பெண்ணுடன் உடலுறவு கொண்ட நிகழ்ச்சியும் ஆகும். முதல் நிகழ்ச்சியில் எருதுவின் சொந்தக் காரர் தலைவனுக்கு 30 செக்கேல் கொடுத்து ஈடு செய்யவேண்டும் (யாத் 21:32). இரண்டாவது நிகழ்ச்சியில் "பாவம் பரிகாரப்பலியுடன்" குற்றவாளி தப்பித்துக் கொள்கிறான் (லேவி 19:20). விவிலியச் சட்டம் மற்ற சட்டத்தைப்போல் அல்லா மல் அடிமைமீது அவனுடைய தலைவ னுக்கு இருக்க வேண்டிய அதிகாரத்தை வரையறை செய்து, அடிமையின் மனிதத் தன்மையை ஏற்றுக்கொள்கிறது. தலை வன் தன்னுடைய அடிமையைக் கொடு மைப்படுத்தலாம் "ஏனெனில் அடிமை அவனுடைய பணம்" (யாத் 21:20–21). ஆனால் இவனுடைய கொடுமையினால் அவன் நிரந்தர ஊனமாக்கப்பட்டு விட் டால் அதற்கு ஈடாக அவனுக்குச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் (யாத் 21: 26–27). அடித்ததினால் அவன் இறந்து விட்டால் தலைவன் தண்டனைக்குள்ளா வான் (யாத் 21:20–21).

விவிலிய பாலஸ்தீனத்தில் அடிமைகள் வீட்டு வேலைக்காரர்களாக இருந்தார் கள், தங்கள் தலைவனோடு தோள் கொடுத்து வீட்டிலும் வயலிலும் பணி செய்தார்கள். எபிரேயர் அல்லாத அடி மைகள் தங்கள் தலைவனுடைய ஓய்வு நாள் உட்பட்ட சமயக்காரியங்களில் பங்கெடுக்க வேண்டும் (ஆதி 17:13.28; யாத் 12:44; 20:10; 23:12; லேவி 22:11; உப 5:14; 12: 12.18; 16:11.14). இறைவாக்கு இலக்கியம் அடிமைகளின் மனித்தன்மையை நினைவுபடுத்துகின்றது. "அடிமையாக இருக்கும் பெண் கள் மீதும் ஆண்கள் மீதும் அந்நாட்களில் நாம் ஆவியைப் பொழிந்திடுவோம்" (யோவேல் 2:24). யோபு அடிமை ஒழுக் கத்தை எதிர்த்து அதனுடைய முழு அமைப்பு முறையையும் கண்டித்தார் (யோபு 31:15).

எ) அடிமையின் சேமிப்பு: பாபிலோ னிய அசீரிய எகிப்திய அடிமைகளுக்கு சேமிப்பு வைத்துக்கொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. அடிமை இறந்த பிறகு சேர்த்து வைத்துள்ள செல்வத்தை அவனுடைய சுதந்திர மனைவிக்கும் அவனுடைய தலைவனுக்கும் இது சரிபங் காகப் பிரித்துக் கொடுக்கப்பட வேண் டும். இது அடிமையின் உடமைக்குத் தலைவனுக்குரிய உரிமையைச் சுட்டிக் காட்டுகிறது. பிற்கால அசீரியாவிலும் புதிய பாபிலோனியாவிலும் பொருளாதார வாழ்வில் அடிமைகளுக்கு ஏராளமான பங்கு இருந்தது. சிலர் கைவினைஞர் களாகவும், மேற்பார்வையாளர்களாகவும், குத்தகை விவசாயிகளாகவும் இருந்தனர். அவர்களுக்கென்று, வீடுகள், நிலம் இன் னும் அவர்களுக்கென்றே அடிமைகள் இருந்தார்கள். இதை அனுபவிப்பதற்காக அவர்கள் தங்களுடைய வருமானத்தின் ஒரு பகுதியைத் தங்களுடைய தலைவனு க்குச் செலுத்தினர். அடிமை இறந்த போது அவனுடைய உடமைகள் எல்லாம் தலைவனுக்குச் சொந்தமாயின.

இதே மாதிரியான உரிமை பாலஸ் தீனத்தில் வாழ்ந்த அடிமைகளுக்கும் வழங்கப்பட்டது (லேவி 25:49). எபிரேயன் தன்னை ஒரு எபிரேயன் அல்லாதவனுக்கு விற்கும்போது அவனை அவனுடைய உற வினர்கள் மீட்கவேண்டும் அல்லது அவன் பணக்காரன் ஆகும்போது அவனே தன் னை மீட்டுக்கொள்ளவேண்டும். கீசு என்ப வனின் அடிமை கால் வெள்ளிச்சேக் கேல் பணம் கொண்டிருந்தான். அதே போல் சவுலின் அடிமையான சீபா 20 அடிமைகளும், 15 மகன்களும் வைத்திருந் ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (2 சாமு 9:10). ஆனால் இவர்கள்மேல் சட்ட உரிமை யுள்ளவன் சீபாவின் தலைவனே (9:12).

ஏ) அடிமையை விடுதலை செய்யும் முறை:- கமுராபி சட்டத் தொகுப்பு நான்கு வகையான முறையில் விடுதலை செய்வதைக் குறிப்பிடுகின்றது. அ) கடன் பெயரால் அடிமையாகக்கருதப்பட்டவனும், அவனுடைய குடும்பமும் மூன்றாண்டு ஊழியத்திற்குப்பிறகு விடுதலையளிக்கப் படவேண்டும். ஆ) அடிமை வைப்பாட்டியும், அவளுடைய குழந்தைகளும் தலைவனுடைய இறப்பிற்குப் பிறகு விடுதலையளிக்கப்பட வேண்டும் இ) உரிமை குடிமகளுக்கும், அடிமைக்கும் பிறந்த குழந்தைக்குச்சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் ஈ) வியாபாரியால் வெளிநாட்டில் வாங்கப் பட்ட பாபிலோனிய அடிமை தன் தாய் நாட்டுக்குக்கொண்டு வரப்பட்ட உடனேயே விடுதலையளிக்கப் படவேண்டும்.

மிகவும் பொதுவாக பின்பற்றப்பட்ட அடிமையை விடுதலை செய்யும் முறை விலை கொடுத்து விடுதலை வாங்குதலும், தத்து எடுத்து விடுதலை அளித்தலுமாகும். அவனுடைய நிலை பாதுகாப்பாக இருப்பதற்காக சில காலத்திற்கு அவர்களைத் தெய்வங்களுக்கு அர்ப்பணித்து விட்டார்கள்.

விவிலியச் சட்டத்தின்படி அடிமைகளை ஐந்துமுறையில் உரிமை குடிமக்களாக்கலாம் அ) ஒரு எபிரேய அடிமை அவனுடைய மனைவி அல்லது எபிரேய பெண் அடிமை ஆகியவர்கள் ஆறு வருட பணிக்குப் பின் விடுதலை செய்யப்பட வேண்டும் (யாத் 21:2–4; உப 15:12). ஆ) சொந்த விருப்பத்தினால் தானாக முன் வந்து தன்னையே ஒரு எபிரேயனுக்கோ அல்லது அன்னியனுக்கோ விற்றுக் கொண்ட எபிரேய அடிமை ஜுப்லி ஆண்டின்போது விடுவிக்கப்படவேண்டும் (லேவி 25:34–43.47–55). இ) தன்னுடைய தந்தையினால் தலைவனிடம் ஒப்படைக்கப் பட்ட பெண், நிபந்தனையின்படி அவள் வயதை அடைந்தவுடன் தலைவனுக்கோ அல்லது அவனுடைய மகன்களில் ஒருவனுக்கோ திருமணம் செய்து வைக்கப்படவில்லையெனில் அவளை அவனுடைய தந்தைக்கே திருப்பிக் கொடுக்கவேண்டும் (யாத் 21:7–11). ஈ) தலைவனால் நிரந்தரமாக ஊனமாக்கப் பட்ட அடிமை எந்தவித ஈடும் இல்லாமல் விடுவிக்கப்படவேண்டும் (யாத் 21:26–28). உ) தப்பி ஓடிய அடிமையை அவனுடைய தலைவரிடம் ஒப்படைக்கக்கூடாது. மாறாக அவனுக்கு அடைக்கல உரிமை அளிப்பது மற்றவர்களுடைய பொறுப் பாகும் (உப 23:15–16).

யாத் 21:2–4; உப 15:12 போன்ற சட்டங்களுக்கு எபிரேய கடன்கார அடிமைகள் உட்பட்டிருந்தனர். யாத்திர ஆகமத்திலும், உப ஆகமத்திலும் அடிமைகளைப் பற்றியான சட்டம் ஒரே மாதிரியாக இருந்தது. பாலஸ்தீனத்தில் இருந்த சட்டம் மற்ற சட்டங்களைவிட அடிமைகளை விடுவிப்பதில் விடுதலை அளிப்பதைச் செயல்படுத்துவதில் அதிக முன்னேற்றம் அடைந்திருந்ததா என்று சொல்லமுடியாது. ஏனெனில் எரே.34:8–16 தன்னுடைய காலத்தில் எபிரேய அடிமைகள் ஏழாம் ஆண்டில் விடுதலை செய்யப்படவில்லை என்று வெளிப்படையாக கூறுகின்றார். அதே போல் நெகமியா காலத்தில் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

லேவி.25:39–43. 47–55–இல் உள்ள சட்டத்திற்குட்பட்ட அடிமைகள் தாங்களாக முன் வந்து தங்களையே விற்றுக் கொண்ட ஏழை எபிரேயர்கள் ஆவார்கள். இந்தச் சட்டமானது எல்லா எபிரேயர்களுக்கும் ஜுபிலி ஆண்டில் விடுதலை அளிக்குமாறு கூறுகிறது. மேலும் தாங்களாக முன்வந்து நிரந்தர அடிமையானவர்களையும் இந்தச் சட்டம் உள்ளடக்கியுள்ளது. எழுத்து அடிப்படையில் ஜுபிலிச் சட்டம், மற்ற கிழக்கத்திய நாடுகளில் இல்லாத சட்டத்தைப்போன்று, நிரந்தர அடிமை முறையை அந்த சமுதாயத்தின் எல்லா குடிமக்களிடமிருந்தும் அழிக்கின்றது. இந்தச் சட்டம் எந்த, எவருக்கும் ஒரு எபிரேயனையும் நிரந்தரமாக உரிமையாக்கிக்கொள்ளும் தகுதி கிடையாது என்று கூறுகின்றது. "ஏனென்றால், இஸ்ராயேல் மக்கள் நமக்கே ஊழியக்காரராம். நாமல்லவோ எகிப்து நாட்டிலிருந்து அவர்களை மீட்டுவந்தோம்" (லேவி 25:55).

யாத் 21:26–27 எவ்வகை அடிமைகளைப்பற்றியது என்பது விளக்கவுரை

யாளர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. சிலர் இது எபிரேயரல்லாதவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பர். மற்றவர்களைவிட எபிரேயர்களுக்கே அதிகம் பொருந்தும் என்பர் வேறு சிலர். இதைவிட உடன்படிக்கையின் புத்தகம் எந்தவித வேறுபாடுமின்றி எல்லா அடிமைகளுக்கும் குறிப்பாக அவர்களுடைய உறுப்புக்கள் ஊனப்படுத்தப்படுவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது என்பதே மேல்.

பாலஸ்தீன அடிமை தன்னுடைய சுதந்திரத்தை வாங்க முடியும். ஆனால் அவனுடைய தலைவனே அதற்கு இணங்க வேண்டும். எபிரேயனை ஒரு அன்னியன் அடிமையாக வைத்திருந்தால், அவனுக்குச் சுதந்திரத்தை வாங்கக்கூடிய வழிகள் இருந்தால் அவனுடைய தலைவன் அதற்கு அனுமதி வழங்கவேண்டும் (லேவி 25:47–54). ஆனால் அதே வேளையில் எபிரேய தலைவன் அப்படிச் செய்ய வேண்டுமென்பதில்லை (25:39–41).

உப ஆகமச் சட்டங்கள் (23:15–16) தப்பி ஓடிவந்த அடிமையை அவனுடைய தலைவனிடம் ஒப்படைக்கக்கூடாது என்று தடை செய்கின்றது என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது என்று சிலர் கூறுவர். இந்தச் சட்டமானது பின்வருமாறு உள்ளது "உன் அடைக்கலத்தைத் தேடி வந்த அடிமையை அவனுடைய தலைவன் கையில் ஒப்புவியாதே. அவன் உனக்குள்ள இடங்களில் தனக்கு வசதியான ஒன்றைத் தேர்ந்து கொண்டு உன் நகரங்களுள் ஒன்றிலே உன்னோடு இருப்பான். நீ அவனைத் துன்புறுத்தாதே" (உப 23:15–16).

25:16 மிகவும் தெளிவாக இந்தச் சட்டம் வெளிநாட்டிலிருந்து தப்பி வந்து அடைக்கலம் புகுந்த அடிமையை நடத்தும் முறையைப்பற்றி குறிப்பிட்டுள்ளது. மேலும் சொந்த நாட்டைச் சார்ந்தவர்களை அன்னிய நாட்டில் விற்பதையும் தவிர்க்கின்றது.

பொதுவாக சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கல்லேடுகளிலிருந்து, வேறு நாட்டிலிருந்து தப்பி ஓடி வந்துள்ள அடிமைகளைப் பிடித்து அந்நாட்டில் ஒப்படைக்க வேண்டுமென்று கூறுகின்றது. கானானிய நாட்டுச் சட்டப்படி வெளி நாட்டில் சொந்த நாட்டைச் சார்ந்த அமைகளை விற்பதைத் தவிர்க்கவில்லை. அவர்கள் தப்பித்துத் தங்களுடைய சொந்த நாட்டிற்கு வந்துவிட்டால், அவர்களை அவர்களுடைய தலைவனிடத்தில் ஒப்படைக்கவேண்டும். உப ஆகமம் இதற்கு மாறுபட்ட கோணத்தில் மற்றொரு நாட்டிலிருந்து தப்பி ஓடிவந்த பாலஸ்தீன அடிமையை அவனுடைய தலைவனிடம் ஒப்படைப்பதை தடை செய்கின்றது. ஆனால் இங்கு 'அடிமை' என்ற வார்த்தை யாரைக் குறிக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது. பாபிலோனிய, அசீரிய எழுத்துக்களில் 'அடிமை' என்ற சொல் தங்களுடைய நாட்டைச் சார்ந்தவர்களை மட்டும் குறித்தது. உப 23:16–இன்படி தப்பி ஓடிவந்த எபிரேய அடிமை எந்த கூட்டத்தில் அடைக்கலம் தேடுகின்றானோ அங்கு அவனுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறுகிறது.

4. அரச அடிமைகள்:- காலம் காலமாகப் போரில் கைதிகளாகப் பிடிபட்டவர்களில் தலைவிதியாக இது உள்ளது. இந்த கைது செய்யப்பட்ட அடிமைகள் சாலைகள் அமைக்கவும், கோட்டைக் கட்டவும், கோயில்கள் கட்டவும், நிலத்தைப் பயிர் செய்யவும், அரண்மனையுடன் இணைந்த தொழிற்சாலையில் பணி செய்யவும் பயன்படுத்தப்பட்டனர். பாலஸ்தீனத்தில் எகிப்தியர்களின் ஆட்சி வீழ்ச்சி அடைந்தபிறகு அதற்குப் பிறகு வந்த நீதிபதிகளின் காலத்தின் மத்திய மையமாக்கப்பட்ட ஆட்சி அமைப்பு நிலவவில்லை. எனவே அரச அடிமை முறை இஸ்ராயேலில் இருக்கவில்லை. தாவீது, சாலமோன் இவர்களுடைய காலத்தில் மீண்டும் அரச அடிமை முறை நிறுவப்பட்டது. போரில் கைதியாக்கப்பட்ட அரச அடிமைகளில் சிலர், வெற்றிபெற்ற நாட்டின் தேவதையின் கொள்ளைப் பங்காக ஆலயத்திற்கு அளிக்கப்பட்டனர். ஏனெனில் தேவதை அவர்களது வெற்றிக்கு உதவி செய்ததாக நம்பினார்கள் (எண் 31:32–47; யோசு 9:23–27; எஸ் 8:20; எச 44:7–9). மேலும் மற்றவர்கள் பழங்கால மேற்காசிய வழக்

கப்படி படைத் தளபதிகளுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் பணி செய்யும் படி நன்கொடைகளாக கொடுக்கப்பட்டனர் (உப 20:10–14; 21:10; நீதி 5:30). அரச அடிமைகளின் பெரும்பகுதியினர் அரசனுடைய பங்காகும். தாவீதின் வெற்றிகளுக்குப்பின் இஸ்ராயேலில் அரச அடிமை முறை புகுத்தப்பட்டது. அராபாவைக் கைப்பற்றிய பிறகு அரச அடிமை முறை ஒரு பொருளாதார பிரச்சினையாக மாறி விட்டது. புறம்போக்கு நிலங்களிலும், பெரிய பெரிய பண்ணைகளிலும், சுரங்கத் தொழில்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர். தாவீது, சாலமோன், அதற்குப் பின்னர் வந்த அனைத்து அரசர்களும் அரச அடிமைகளைச் சுரங்கத் தொழிலில் ஈடுபடுத்தி அதிக நன்மை அடைந்தனர். அரச அடிமை முறை நிறுவனம் பாலஸ்தீனத்தில் தாவீதின் நாட்களிலிருந்து எஸ்ரா, நெகமியா காலம் வரை இருந்தது. இவர்கள் யூதா அரசாட்சிவரை நீடித்திருந்தார்கள். புதிய முறையில் எஸ்ரா, நெகமியா இவர்களால் தொடங்கப்பட்ட குருக்களாட்சி முறையில் அரச அடிமைகள் ஆலய அடிமைகளோடு சேர்க்கப்பட்டனர் (எஸ் 2:55–58; நெக 7:57–60; 11:3). இஸ்ராயேல் சுதந்திர நாட்டு அமைப்பை இழந்தபோது அரச அடிமை முறையும் முடிவுக்கு வந்தது.

5. ஆலய அடிமை முறை:- மெசபொத்தாமியாவில் ஆலய அடிமைகள் இரண்டு வகையில் சேர்க்கப்பட்டனர். போரில் பிடிபட்ட கைதிகளை அரசன் அளிக்கலாம். தனிநபர்கள் காணிக்கையாக ஆலயத்திற்கு அளிக்கலாம். மற்ற நாட்டின் ஆலயங்களைப் போன்றே பாலஸ்தீனத்தில் இருந்த ஆலயங்களின் புனித இடத்திற்கும் போரில் கிடைத்த கொள்ளைப் பொருட்களின் பங்காக அடிமைகள் கொடுக்கப்பட்டனர். மோசே மிதியா நாட்டினரைத் தோற்கடித்தபோது, போர்க்கைதிகளை நன்கொடையாக கோயிலுக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படுகின்றது (எண் 31:25–47). யோசுவா கிபயோனியர்களைப் புனித இடத்திற்கு "விறகு வெட்டுபவர்களாகவும், தண்ணீர்கொண்டு வருபவர்களாகவும்" ஆக்கினார் (யோசு 9:21–27). அதே வேளையில் தனி நபர்கள் பாலஸ்தீன ஆலயத்திற்கு அடிமைகளை காணிக்கையாக கொடுத்ததற்கான சான்றுகள் ஏதும் இல்லை. நேர்ச்சையின்பேரில் கடவுளுக்கு கொடுத்த பொருட்கள் வரிசையில் அடிமைகள் இடம் பெறவில்லை (லேவி 27:2–9). பாலஸ்தீன ஆலய அடிமைகள் முதல் முறையாக நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப் பிறகு குறிப்பிடப்பட்டுள்ளனர். அதாவது அவர்கள் எஸ்ரா, செருபாபேல் ஆகியோருடன் பாபிலோனிலிருந்து திரும்பி வந்ததாகக் கூறப்படுகிறது (எஸ் 2:43–54; நெக 7:46–56). லேவியர்களுக்கு உதவி செய்யுமாறு தாவீதும் அவர்களுடைய அலுவலர்களும் நியமித்திருந்தவர்களிலிருந்து" இவர்கள் தோன்றியிருக்கலாம் என்று நெக 3:20 குறிப்பிடுகிறது. எசக்கியாவில் விருத்த சேதனம் செய்யாதவர்களும் ஆலயத்தில் பணி செய்தார்கள் என்று குறை கூறினார் (44:7–9). பாபிலோனிய ஆலயங்களில் பணி செய்த அடிமைகளைப்போலவே, பாலஸ்தீனத்தில் இருந்த ஆலய அடிமைகளை தனிக் கட்டிடத்தில் வைக்கப்பட்டு, மேற்பார்வையாளரின்கீழ் பணி செய்துவந்தனர் (நெக 3:31; 11:21). அவர்கள் அந்த வகுப்புக்கு வெளியே திருமணம் செய்துகொள்ளலாம், ஆனால் அவர்களுடைய குழந்தைகள் ஆலயத்திற்குச் சொந்தமாவர்.

6. அடிமை முறையின் பொருளாதாரப் பங்கு:- பாபிலோனியா, அசீரியா, சீரியா, இஸ்ராயேலர்களுக்கு முன்பிருந்த பாலஸ்தீன நாடு ஆகிய பகுதிகளிலிருந்து கிடைத்த சான்றுகளின்படி அடிமைகளின் பங்கு விவசாயத்திலும், தொழில் துறையிலும் மிகவும் குறைந்த அளவாகவே இருந்தது. எகிப்தில் நிலம் அனைத்தும் அரசனுக்கே சொந்தமாக இருந்தது. ஆனால் பழங்கால மேற்காசிய நாடுகளில் தனி நபர்களுக்கு நிலங்கள் சொந்தமாக இருந்தன. அரசனுக்கும், ஆலயத்திற்கும் உடைமையாக இருந்த நிலங்கள் போக மற்றவை அனைத்தும் சிறிய நிலச் சொந்தக்காரர்களிடமிருந்தது. அவர்கள் அதைத் தங்களுடைய குடும்ப உறுப்பினர்களைக் கொண்டே கொத்திப் பயிரிட்டார்கள். அவர்கள் வாடகைக்கு ஆள் அமர்த்த

வேண்டிய சூழ்நிலையும் ஏற்படவில்லை. மேலும் அடிமைகளின் விலை அதிகமாக இருந்தது. எனவே சாதாரண விவசாயி ஒரு அடிமையைக் கூட வாங்க முடியாது. பெரிய நிலச் சொந்தக்காரர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களைக் கொண்டு தங்களுடைய நிலத்தைப் பயிரிட்டார்கள் பழங்கால மேற்காசிய நாடுகளிலும், பாலஸ்தீனத்திலும் விவசாயத்தில் அடிமைகளின் உழைப்பு ஒருமுக்கியமான பங்கு கொள்ளவில்லை.

ஒருசில அடிமைகளே நன்கு வளர்ச்சியடைந்த தொழிலில் ஈடுபட்டதாக மெசபொத்தோமியாவிலிருந்து வந்த சான்றுகள் கூறுகின்றன. இந்த வகையான வளர்ச்சியடைந்த தொழிலுக்கு உரிமைக் குடிமக்களே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஒருசில இப்படிப்பட்ட சிற்பிகள் தங்களுடைய சொந்த தொழிற்சங்கங்களை அமைத்துக் கொண்டனர் என்று விவிலிய ஆதாரங்கள் கூறுகின்றன.

பொதுவாக, பாலஸ்தீனத்தின் பொருளாதாரம் உரிமைக் குடிமக்களின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். அடிமையின் பணி முக்கியமாக பணக்காரர்களின் வீடுகளை மையம் கொண்டிருந்தது. அவர்களுடையப் பணி விவசாயத்திலும், தொழிற்சாலையிலும் மிகக் குறைவாகவே இருந்தது.

II சிந்தனை

1. சமூகப்பிரச்சினை:- 'அடிமை' என்ற ஒரே சொல், வேதாகமத்தில், வேலையாளையும், அடிமையையும் குறிக்கின்றது. அடிமைத்தனம் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறைமையாகவே சட்டம் காண்கிறது (யாத் 21:21). இருப்பினும், இதன் கொடுமையை குறைப்பதற்கேச் சட்டம் எப்போதும் முயல்கின்றது. நடைமுறையில் அவ்விதம் இல்லாதிருந்தால் கூட, மனிதனை மதிக்கும் ஒரு மனப்பான்மையை காண்கின்றோம். தலைவனின் சொந்த உடைமையே அடிமை. அதனால், ஒரு தலைவன் தனது விருப்பம் போல், தனது அடிமையைக் கொடுமைப் படுத்தும் உரிமையைப் பெற்றுவிடுவதில்லை (யாத் 21:20.26). எபிரேய அடிமைகளைப் பற்றிப் பேசும்போது, மேலும் பல சலுகைகளைச் சட்டம் காட்டுகிறது. அவனே விரும்பினாலன்றி, ஒருவன் வாழ்நாள் முழுவதும் அடிமையாய் இருப்பதைச் சட்டம் தடைசெய்கிறது. ஏழாண்டுக்குப்பின் ஒரு அடிமை விடுதலை செய்யப்படவேண்டுமென்பது உடன்படிக்கையின் சட்டமாகும் (யாத் 21:2). உப ஆகமத்தின் பிற்பகுதியில், ஒரு அடிமை விடுதலை பெறும்போது சகோதரனைப் போல் நடத்தப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது (உப 15:13). ஜூபிலி ஆண்டில் எல்லா குற்றவாளிகளுக்கும் விடுதலை அளிக்கப்பட வேண்டுமென்ற விதிமுறை லேவியராகமத்தில் உள்ளது (லேவி 25:29–30; எரே 34:8). இறுதியாக, 'கூலி பெறும்' நிலைக்கு எபிரேய அடிமைகளை உயர்த்துகிறது. காரணம், எகிப்திலிருந்து கடவுளால் மீட்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள், மனிதனுக்கு ஒருபோதும் அடிமையாய் இருத்தலாகாது.

கிரேக்க–உரோமைப் பேரரசின்போது, அடிமைப் பிரச்சினை திரும்பவும் கிறிஸ்தவ சமுதாயத்தில் எழுந்தது. புனித பவுல் கொரிந்தில் இப்பிரச்சினையைச் சந்திக்கிறார். இப்பிரச்சினைக்குச் சரியான பதிலையும் தருகின்றார். கிறிஸ்துவைப் பின்பற்றுபவனுக்குச் சமுதாய ஏற்றத் தாழ்வுகள்முக்கியமல்ல; இறைவனின் அழைப்பே முக்கியம். அவன் எந்நிலைக்கும் அழைக்கப்படலாம் (1 கொரி 7:17). ஒரு அடிமை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதுபோல தன் தலைவனுக்குக் கீழ்படிந்து தன் கடமைகளை ஆற்றவேண்டும் (எபே 5:5–8). கிறிஸ்துவத் தலைவன், தனது அடிமையை கிறிஸ்துவில் தன் சகோதரனாகக் காண்பானாக; சகோதரனைப்போல் நடத்துவானாக (எபே 6:7; பில 14–21). கடவுள் முன்னிலையில் தலைவனும் அடிமையும் சரி நிகர். கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுள், அடிமை என்றும், குடிமகனென்றும் இல்லை (கலா 3:24). கிறிஸ்துவுக்குள் புதிய படைப்பாவதே முக்கியமாகும் (கலா 6:15).

2. ஆன்மீகப் பொருள்:- அடிமை நிலையிலிருந்து இறைவனால் மீட்கப்பட்ட பின்னும், தனது பிரமாணிக்கமற்ற செயலால், இஸ்ராயேல் திரும்பவும் அடிமைத் தனத்திற்குள்ளானது. இதிலிருந்து,

தங்கள் அடிமை நிலைக்கு தங்கள் பாவங்களே காரணமென உணர்ந்தனர். எனவே, பாவங்களிலிருந்து விடுதலை பெறவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர் (சங் 130;141:36). புதிய ஏற்பாடு இப் பிரச்சினையின் அடித்தளத்திற்கே நம்மை இட்டுச் செல்கிறது. ஆதாமினால் பாவம் உலகில் நுழைந்தது; எல்லா மனிதரும் பாவத்திற்கு அடிமையாயினர் பாவத்தால் சாவுக்கும் அடிமையாயினர் (உரோ 5:2; 7:13–24; எபி 2:14). சட்டம் இந்த அடிமைத் தனத்தை மேலும் வலுப்பெறச் செய்கிறது.

கிறிஸ்துவே பாவத்திலிருந்து நம்மை விடுவிக்க வல்லவர். ஏனெனில், அவர் மேல் மட்டுமே இவ்வுலகின் தலைவனுககு அதிகாரமில்லை (யோவா 14:30). பாவிகளுக்கு விடுதலையளிக்கவே கிறிஸ்து வந்தார் (8:36). இதற்காக அடிமையின் தன்மை பூண்டார் (பிலி 2:7). பாவப் பிடியிலுள்ள நம் இயல்பில் பங்குபெற்றார் (உரோ 8:3). சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார் (பிலி. 2:8). கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதருக்கும் பணிவிடை புரியவும், மனிதருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார் (மத் 20:28; யோவா 13:1–17).

எபிரேய மக்கள் எகிப்திலிருந்து மீட்கப் பட்டனர். திருமுழுக்குப் பெற்றவர்கள் பாவத்திலிருந்து கிறிஸ்துவால் மீட்கப் பட்டவர்கள். கிறிஸ்துவுக்கும், இறைவனுக்கு ஏற்புடைய நிலைக்கும் உரியவர்கள் (1 கொரி 7:22; உரோ 6:16–22; லேவி 25:55). பாவம், சாவு, சட்டம் இவற்றிலிருந்து விடுதலை பெற்றவர்கள், கிறிஸ்துவின் முன் மாதிரி கையைப் பின்பற்றி எல்லோருக்கும் எல்லாமுமாய், பிறருக்குத் தங்களை அடிமைகளாக்கிக் கொள்கின்றனர் (1 கொரி 9:17; மத் 20:26–27; யோவா 13:14).

அடிமைத்தனம் (CAPTIVITY)

1. அடிமைத்தனத்தின் சோதனை:– முதுகுலத் தந்தையர்களை வரவேற்ற நாடு இஸ்ராயேலுக்கு "அடிமைத்தனவீடாகிற்று" (யாத் 13:14; உப 7:8). இஸ்ராயேலின் வரலாற்றுத் தொடக்கத்திலிருந்து எகிப்தில் அனுபவித்த இதுதான் "முதல் அடிமைத்தன"மாகும். கைதிகள், அல்லது பிடிபட்டவர்கள் என்பதைவிடக் குறிப்பாக எபிரேயர்கள் பாரவோனின் அடிமைகளாயிருந்தனர். பிற்பாடு ஒரு தடவைக்குமேல் இறைமக்கள் நாடு கடத்தப்பெற்றனர். பழைய மேற்காசியாவில் இது பரவலாக இருந்தபோதிலும், இந்தப் பழக்கத்தை ஒருகுற்றம் என்று ஆமோஸ் கண்டனம் செய்கிறார் (ஆமோ 1:6.9). சமாரியா அழிவுற்றபின் வடபகுதியினருக்கும் (2 அர 17:6.23). ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யூதாவிற்கும் (24–25) இதே கேடு தான் ஏற்பட்டது. இறைமக்களின் விசுவாசமின்மைக்குத் தகுந்த தண்டனையாகவே இரண்டும் அமைந்தன. பரம்பரையின் படி பாபிலோனிய அடிமை நாடு கடத்தல் ஆனாலும், அது சிறப்பான பொருளில் எடுத்துக்காட்டான அடிமைத் தனம் என்றாகிறது. தள்ளிவைக்கப்பட்டதைவிட நாடு கடத்தப்பட்டதையே அது குறிக்கும்.

இந்தக் குழுச் சோதனைகளை ஒட்டி, தனிப்பட்டவர்களை அடிமைகளாகவோ கைதிகளாகவோ விவிலியம் குறிக்கிறது. சிலருக்குச் சிறைபடுதல் உண்மையான தண்டனை (காண்க: மத் 5:25). மற்றவருக்கு அது தேவ பராமரிப்பைச் சார்ந்த சோதனையாகும் (காண்க: திருவெளி 2:10). யோசேப்பைப் பொறுத்தவரை 'இப்படியே தான் (ஆதி 39:20 தொ); கடவுளின் ஞானம் "அவன் விலங்கிடப்பட்டிருந்தபோது, அவனைவிட்டு அகலாமல் இருந்தது" (ஞான 10:14); பல இறைவாக்கினருக்கும் இதேகதிதான் (காண்க: 1 அர 22: 26 தொ); எரேமியாவுக்கு (எரே 20:2; 32:2 தொ; 37:11–21; 38:6), திருமுழுக்கு யோவானுக்கு (மத் 14:3); இறுதியாக இயேசுவும் கட்டப் பெற்று (யோவா 18:12; மத் 27:2) சிறைக்குள் தள்ளப்பெற்றார். அப்போஸ்தலருக்கும் திருச்சபையில் இதே கதிதான் காத்திருக்கிறது (அ.ப 5:18; 12:3 தொ; 16:23 தொ); தானே முன் வந்து அடிமையாகிய (அ.ப. 20; 22) பவுலும் பிற்காலத்தில் தன்னை 'இயேசுவின் கைதி' என்கிறார் (எபே 3:1; 4:1; காண்க: 2 கொரி 11:23). இருந்தாலும் "கடவுளுடைய வார்த்தைக்கு விலங்கெதுவுமில்லை" (2 திமோ 2:9; காண்க: பிலி 1:12 தொ); நற்செய்தியை அடிமைப்படுத்தமுடியாது என்பதைப் புதுமையான விடுதலை (அ.ப 5:19; 12:7–11; 16:26) தெளிவாக்கும்.

ஏனெனில் கைதிகள்மேல் கடவுளுக்கு அக்கறையுண்டு. விசுவாசிகளுக்கு "அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்துவிடச்" (ஏச 58:6) சொல்கிறவர், சிறைச்சாலைக்குச் செல்லுதல் இரக்கத்தின் செயலாகும் என்கிறவர் (மத் 25:36–40; காண்க: எபி 10:34; 13:3). அவருடைய கைதிகளின் மேல் பரிவுள்ளவர், தமது கட்டளைகளை வெறுத்து உதறியவர்களையும் (சங் 107: 10–16) அன்புடன் நோக்குகின்றவர் கடவுளன்றோ! அவருடைய மக்களுக்கு விடுதலை அறிவிக்கிறார் (ஏச 52:2). இதுவே நற்செய்தியின் முன் சுவையாகும் (61:1).

2. பாவியின் ஆன்மீக அடிமைத்தனம்: - தற்காலிகமான அடிமைத்தனத்தின் அனுபவ வாயிலாய் வேறொரு அடிமைத்தனத்தை இறைமக்கள் கண்டுணர்கிறார்கள். முன்னால் நடந்தது வெளிப்படையான அடையாளமே. அவர்கள் காண்பது பாவிகளின் அடிமைத்தனமாகும். இதிலும்கூடப் பிடிபட்ட நிலையும் அடிமை நிலையும் கலந்துள்ளது. விசுவாசமில்லாதோரை அவர்களின் எதிரிகளுக்குக் கடவுள் கையளித்தார் (நீதி 2:14) என்கிற பழைய ஏற்பாட்டு பின்னணியில் "பாவஞ் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமை" (யோவா 8:34) என்று இயேசுவும் திட்டவட்டமாக உறுதிப்படுத்துகிறார். அவர்களின் குற்றங்களின் ஆற்றலுக்கே அவர் கையளித்தார் (ஏச 64:6); ஞானிகளின் சொற்படி பாவம் ஒருவகையில் ஒருவனைத் தனிப்படுத்துவதாகும், பிரிப்பதாகும்: "அக்கிரமிகள் தங்கள் சொந்த அநீதங்களாகிய கண்ணிக்குள்ளே சிக்கிப்போய், பாவக்கயிறுகளாலேயே கட்டவும் படுகிறார்கள்" (பழ 5:22; காண்க: 11:6).

இயேசு விடுதலை நல்குவதாய்ச் சொல்லவிருக்கும் (காண்க: லூக் 4:18; காண்க: ஏச 61:1) மனிதனின் ஆழமான துன்பத்தை அப்போஸ்தலரின் எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. "நானோ பாவத்திற்கு அடிமையாக விற்கப்பட்டவன்; சீரழிந்த இயல்புள்ளவன்"; "என் உறுப்புகளில் இருக்கும் பாவச்சட்டத்திற்கு" நான் அடிமைபோன்றவன் (உரோ 7:14.23). பவுலின் கூற்றுப்படி இதுதான் ஒவ்வொரு மனிதனும் ஏற்புடைமை ஆகு முன் அனுபவிக்கிறதாகும். பாவம் என்பது ஏதோ எட்டாத இடத்தில் இல்லை: "பேயின் வலையில் சிக்குண்டு அதன் விருப்பத்திற்கு அடிமைகளா"யிருக்கிறவர்களே பாவிகள் (2 திமோ 2:26).

இறுதியாக ஆன்மீக அடிமைத்தனம் "கீழுலகின் தளைகள்" . என்பதிலும் "சாவின் கண்ணிகள்" (சங் 18:5) என்பதிலும் வேறொரு திட்டவட்டமான வெளிப்பாடாக உள்ளது. இவைகள் மனிதனுக்கு அச்சம் தருபவை (காண்க: எபி 2:14 தொ). இயேசுவின் விடுதலைச் செயலும் அந்த அளவுக்கு நீளுகிறது. சாவை அனுபவித்துச் "சிறையிலிருந்த ஆன்மாக்களிடம் சென்று, அவர்களுக்குத் தம் நற்செய்தியை அறிவித்தார்" (1 பேதுரு 3:19).

இறுதியாக, பவுல் சில சமயங்களில் திருச் சட்டமும் ஒரு வகைச் "சிறை" என்று சொல்லத் தயங்குவதில்லை; "விசுவாசம் அளிக்கப்படும் முன்.... சட்டத்தின்கீழ் அடைப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தோம்" (கலா 3:23: காண்க. உரோ 7:6). ஒருவகையில் இவைகள் மிகைப்பட்டுத் தோன்றினாலும், இயேசுக் கிறிஸ்து கொணரும் உண்மையான விடுதலைபற்றி அறியப் பெரிதும் உதவுகின்றன.

கிறிஸ்துவால் விடுதலை பெற்ற பாவிகள் என்ன ஆகிறார்கள்? அவர்கள் ஆண்டவரின் அடிமையாகின்றார்கள். கேட்கவே புதிரான சொற்கள்! பாவத்தினின்று விடுதலைபெற்று இறைவனின் ஏற்புடைய நிலைக்கு அடிமை ஆவதைப் பவுல் முரசொலிக்கிறார் (உரோ 6:12–23; 1 கொரி 7:22); ஆவியானவரால் கட்டுண்டவன் என்று தன்னைப்பற்றி அவர் நினைக்கிறார் (அ.ப 20:22); "மனித எண்ணங்கள் அனைத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியுமாறு" (2 கொரி 10:5; காண்க: உரோ 1:5) அடிமைப்படுத்தவும் விரும்புகிறார். பழங்காலப் படைத்தலைவர்கள் போல் இயேசுவும் உண்மையில் அவரது வெற்றிப் பவனியில் " "பகைவரைக் கைதியாக்கிக் கொண்டு சென்றார்" (எபே 4:8; சங் 67:19). அப்படிச் செய்தது அவர்களுக்குக் கொடைகள் அளிக்கவும் அவரது வெற்றியில் பங்குகொள்ளவுமே. காண்க: நாடு கடத்தப்படுதல்.

அடுப்பு, அடுப்படி, சூளை (HEARTH, OVEN)
இதன் அடிப்படைப் பொருளில், தரையில் ஒரு பள்ளம் செய்து, அதில் சமைப்பதற்காகவோ அல்லது சூடு உண்டாக்குவதற்கோ தீமூட்டி எரியவிடுவதாகும். வழிபாட்டு விழாக் காணிக்கைகள் எரிக்கப்பட்ட பலிபீடத்தின் மேற்பகுதி அடுப்பாக இருந்தது (லேவி 6:9; எச 43:15–16). இது சிலசமயம் பீட அடுப்பு என்றழைக்கப்பட்டது. எச 46:23–24–இல் எசக்கியேலின் எடுத்துக்காட்டான ஆலயத்தில் அடுப்பு பலிகளை வேகவைக்கப் பயன்பட்டது.

இக்காலப் பாலஸ்தீன மக்கள் பயன்படுத்துகின்ற அடுப்பானது எகிப்தியர்கள், அசீரியர்கள் ஆகியோர் பற்றிய தொல்பொருள் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அடுப்புகளிலிருந்து அவ்வளவாக வேறுபட்டு இருக்கவில்லை. அவை உருளை வடிவத்தில் 2 அல்லது 3 அடி விட்டத்தில் அமைந்து, அதன் அடியில், நெருப்பு மூட்டப்பட்டது. அடுப்பு போதிய மட்டும் சூடுபடுத்தப்பட்டபின், சாம்பல் அகற்றப்பட்டு, அடுப்பின் வளைந்த பகுதியில் தட்டையான அப்ப மாவு போடப்பட்டது. இன்றையதினம் கட்டப்படும் அடுப்புகள் வீட்டின் பின்பகுதியின் பாதுகாப்பான இடத்திலோ அல்லது ஊருக்குப் பொதுவான இடத்திலோ ஓர் மூலையில் கட்டுகிறார்கள்.

நெகமியா காலத்தில் எருசலேமின் வட மேற்குப் பகுதியிலுள்ள கோபுரம் சூளைக் கோபுரம் என வழங்கப்பட்டது (நெக 3:11). ஏனெனில் வியாபாரத்திற்கு அப்பம் சுடுவோர் இப்பகுதியில் அடுப்புகள் வைத்திருந்தனர். பொதுவாக சூளையை எரிப்பதற்கு காய்ந்த புல்லையும், காட்டுப் புதர்களையும் சாணவிறாட்டிகளையும் பயன் படுத்தினார்கள் (மத் 6:30; லூக் 12:28). எச 4:12–இல் குறிப்பிடப்பட்டுள்ள மனித மலத்தை விறகாகப் பயன்படுத்தியது அப்பொழுது இருந்த மக்களின் இழிநிலையை விளக்கிக் காட்டுவதற்காகவேயாகும்.

அடைக்கல நகரங்கள் (CITIES OF REFUGE)
திட்டமிடாது தற்செயலாகக் கொலை செய்தவனை ஏற்று அடைக்கலம் அளிக்க நியமிக்கப்பட்ட நகர்களாகும். இவை லேவியர் நகரங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை.

பெனிசியர்கள், சீரியர்கள், கிரேக்கர்கள், உரோமையர்கள் போன்ற பழங்கால மக்களிடையே சில புனித இடங்கள் தப்பியோடுபவர்களுக்கு நிபந்தனையற்ற பாதுகாப்பு அளிக்க நியமிக்கப்பட்டிருந்தன. குற்றமற்றவர்களும், குற்றவாளிகளும், தப்பியோடும் அடிமைகள், கடன் பட்டவர்கள், அரசியல் அகதிகள், இப்படிப்பட்ட இடங்களை அடைந்து, அந்த இடத்துக் கடவுளின் பாதுகாப்பைக் கோரினால், அவர்கள் பழிவாங்கப்படுவதிலிருந்தும், நீதித் தீர்ப்பிலிருந்தும் தப்பினர். இஸ்ராயேலில் யாவேயின் பீடம் தப்பியோடுபவர்களுக்கு அடைக்கலம் அளித்தது (1 அர 1:50–53; 2:28–34). ஆனால் விவிலியச் சட்டம் தற்செயலாக நடந்த கொலைக்கு மட்டும்தான் அடைக்கல உரிமை அளித்தது (யாத் 21:12–14; எண் 35:9–34; உப 19:1–13; யோசு 20). கொலை செய்தவனுக்கும் இரத்தப்பழி வாங்குபவனுக்குமிடையில் இடையிட்டுப் பொது நீதி கிடைக்கச்செய்து இரத்தப் பழி வாங்குதலைக் கட்டுப்படுத்துவது இதன் நோக்கமாகும். "கொலை செய்து அவைகளில் அடைக்கலம் புகுந்தவன் சபையிலே நியாயம் விசாரிக்கப்படுமுன் கொலை செய்யப்பட்டவனுடைய உறவினர் கையாலே அவன் சாகாமல் தப்பித்துக்கொள்வான்" (எண் 35:12). இப்படி தற்செயலாகக் கொலை செய்தவனுக்குப் பாதுகாப்பு அளிப்பது முழுச்சமூகத்திற்கும் முக்கியமானதாகும். "அதனால் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு உரிமையாகக் கொடுக்கும் மண்ணில் குற்றமில்லாத இரத்தம் சிந்தப்படாதிருக்கும். எனவே இரத்தப்பழி உன்னைச் சாராது" (உப 19:10).

அடைக்கலத்தின் தன்மை பற்றி யாத்திரை நூல், தற்செயலாகக் கொலை செய்தவன் ஓடி அடைக்கலம் தேடக்கூடிய இடத்தைப் பற்றி தெளிவில்லாமல் கூறுகிறது. ஆனால் உண்மையான கொலைகாரன் பீடத்திலிருந்தும் கூட எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும் (காண்க:

1 அர 2:31–34). உப 4:41–43–இல் மோசே, யோர்தானுக்கு அப்பால் மூன்று அடைக்கல நகரங்களை நியமித்தார். மேலும் கானானில் மேலும் மூன்று அடைக்கல நகரங்களை நியமிக்கும்படியும் கட்டளையிட்டிருந்தார். இவை லேவியர் நகரங்கள் என்று உபாகம நூல் கூறவில்லை. யோசு 20:7–8, கானானில் காதேசு, செக்கேம், கெபிரோன், யோர் தா னு க் க ப் பா ல் பெசேர், இராமோத் – கிலயாத்து, கோலான் ஆகிய நகரங்களை அடைக்கல நகராகக் குறிக்கிறது. இவையாவும் லேவியர் நகரங்களாகும் (காண்க: யோசு 21:13. 21.27.32; 1 நாள் 6:63).

கொலைகாரனை நடத்துவதுபற்றிய கருத்தும், முறையும் இருபாரம்பரியங்களிலும் வேறுபடுகிறது. எண்ணாகம நூலில் அடைக்கல இடத்திற்கு வெளியில் உள்ள 'சபை' கொலைகாரனை விசாரிக்கிறது. அவன் குற்றமற்றவன் என்று கண்டுபிடிக்கப்பட்டால் அவனை இரத்தப் பழிகாரனிடமிருந்து விடுவித்து, அடைக்கல நகருக்கு அனுப்புகிறது. அங்கு அவன் அந்த இடத்துத் தலைமைக் குரு இறக்கும் வரை தங்கியிருக்கவேண்டும். அதற்குமுன் அவன் அவ்விடத்திலிருந்து வெளிவந்தால் பழிவாங்குபவரால் எந்தத் தடையுமின்றி அவன் கொல்லப்படலாம். அவன் உயிருக்குப் பதிலாக மீட்புப் பணம் வாங்கப்படக் கூடாது (எண் 35:32). இவ்வாறு அவன் அங்குத் தங்கியிருப்பது ஒரு தண்டனைச் சிறையாகிறது. அது தலைமைக் குருவின் மரணத்தோடு முடிவது, உயிருக்கு உயிர் பகரப் பரிகாரமாகும் என்று பிற்காலத்தில் விளக்கப்பட்டது. இரத்தக் குற்றம் பற்றிய பழங்காலக் கருத்து, இச்சட்டங்களில் ஆதிக்கம் செலுத்துகிறது.

உபாகம நூல், கொலைகாரனுக்கு அடைக்கலம் கிடைக்கச்செய்வதும் உண்மையான குற்றவாளி நீதியிலிருந்து தப்பாதிருக்கப் பார்த்துக்கொள்வதும் சமூகத்தின் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துகிறது. உண்மையான கொலைகாரன் அடைக்கல நகருக்கு ஒடிவிட்டால், அவன் ஊர் முதியவர்கள் அவனை அழைத்து பழிகாரனிடம் ஒப்படைக்கவேண்டும். கட்டாயமாக அங்குத் தங்கியிருப்பது பற்றியோ தலைமைக் குருவின் மரணத்துக்குப்பின் விடுதலைபற்றியோ ஒன்றும் கூறப்படவில்லை.

யோசு 20, இரண்டு பாரம்பரியங்களையும் பிரதிபலிக்கின்றது. அடைக்கல நகரின் முதியவர்கள், தப்பியோடுகிறவன் வந்தவுடன் அவன் உரிமைப்பற்றித் தீர்ப்பிட வேண்டும்; பின்பு சபையில் அவனை விசாரிப்பர். அவன் குற்றமற்றவன் ஆனால், தலைமைக் குருவின் மரணம் வரை அவன் அங்கு தங்கியிருக்க வேண்டும்.

உபாகமச் சீர்திருத்தம் இதுவரை அடைக்கலமாக விளங்கிய தலத்துப் பீடங்களை அழித்துவிட்டதால் அவற்றிற்குப் பதிலாக, அடைக்கல நகரங்கள் நிறுவப்படுவது, உபாகமத்தின் நோக்கமாகும் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். இருப்பினும் தலப் புனித இடங்கள் இருந்த காலத்திலும், பீடங்கள் தற்காலிகப் பாதுகாப்பை அளித்ததால் அவன் நீண்ட காலத்திற்குப் பாதுகாப்போடு இருக்க இடம் அவசியமாயிற்று.

மேலும் இரத்தக் குற்றம் புறநிலைமையைச் சார்ந்ததும் நாட்டைச் தீட்டுப்படுத்தும் தன்மையுடையதால், தற்செயலாகக் கொலை செய்தவன்கூட அதற்குப் பரிகாரம் செய்யவேண்டும் என்பது பழங்காலக் கருத்தாகும். கிரீசு போன்ற நாடுகளில் கொலை செய்யப்பட்டவனின் உறவினர் மன்னிக்கும் வரைத் தற்செயலாகக் கொலை செய்தவன் நாடு கடத்தப்பட்டான். நாடு கடத்தப்படுதல் விஷிலியத் தண்டனையில்லை என்பதால், கொலை செய்தவன், அவன் ஊரிலிருந்து மற்றொரு இடத்தில் கட்டாயமாகத் தங்குதல், இஸ்ராயேலில் நாடு கடத்தப்படுதலைப் போன்றதாகும். மேலும் உறவினன் கொலைகாரனோடு ஒத்துப்போகச் சட்டம் அனுமதிக்கவில்லையாதலால், பரிகாரம் செய்ய வேறொரு வழி கண்டுபிடிக்கப்படவேண்டும். எண்ணாகமக் கருத்துப்படி அடைக்கல நகரம் இந்தக் கூறுகளையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. அது கொலைகாரனின் உயிரை நீடிய காலத்திற்குப் பாதுகாக்

கிறது. அதே சமயம் முதலில் கொலை காரன் தன் ஊரிலிருந்து புறம்பாக்கப்படு தலுக்குச் சமமான கட்டாயமாக வேறொரு இடத்தில் தங்கியிருப்பதாலும் இரண்டா வது தலைமைக் குருவின் இறப்பாலும், குற்றத்திற்குப் பரிகார வழியையும் அமைக் கிறது. இம்முறையில் நோக்கினால், அடைக்கல நகரங்கள் தலத்துப் பீடங் களுக்குப் பதிலாக அமைவதைவிட அவசி யமான காரியமாகிறது.

அடைக்கல நகரங்கள் லேவியர் நகரங் களாகும். இந்த ஆறு நகரங்களும், ஒன்றித்த அரசாட்சியின் உச்ச காலத்தில் தான் அதாவது தாவீதின் மரணத்துக்கு முன்னும் பின்னும்தான், இஸ்ராயேல் நாட்டின் பகுதிகளாகத் திகழ்ந்தன. இந்த ஒன்றித்த அரசாட்சிதான் இரத்தப் பழி தீர்ப்புப்பற்றிய நாடு தழுவிய கட்டுப்பாட் டைச் சிந்திக்க மிகவும் பொருந்திய கால மாக இருந்திருக்கலாம். உபாகமம், குருக் களின் தொடர்பை அழித்துவிட்டு அடைக் கலம் என்ற பழங்காலக் கருத்தை மாற்றி அமைத்தது. இந்த நகரங்களின் லேவியர் தன்மையை அதாவது இவை கோவில் நகரங்களாயிருந்ததையும், தலைமைக் குருவின் மரணத்தையும், உபாகமம் புறக் கணிக்கிறது. ஏனெனில் அதன் மையப் படுத்தப்பட்ட வழிபாட்டுக் கோட்பாடு இந் நகரங்களைச் சமயச்சார்பற்ற தாக்கு கிறது. எண்ணாகமம் மட்டும் பழங்காலத் தைச் சேர்ந்த வழிபாட்டு, பரிகார பண்பு களைப் பாதுகாக்கிறது. இவ்வாறு சட்டத் திற்குப் புறம்பே அடைக்கல நகரங்கள் பற்றி ஒன்றும் கூறப்படாவிட்டாலும், சட்டங்கள் முந்திய காலத்து உயிருள்ள வழக்கிலிருந்து தோன்றியிருக்கவேண்டும்

அடைக்கலம், தஞ்சம் (REFUGE)

ஆபத்திலோ அல்லது துன்பத்திலோ பாதுகாப்பளிப்பதாகும். மழை (யோபு 24:8), காற்று (ஏச 32:2), எதிரிகளின் படை (14:32; நாகூ 3:11) முதலியவற்றிலிருந்து தப்பிக்கப்பயன்படும் மறைவிடம் அல்லது தஞ்சமாகும். உருவகமாக வலிமையுள்ள அரசன் அல்லது கூட்டாளி அடைக்கல மாகக் கருதப்படுவான் (நீதி 9:15; ஏச 30:2).

பெரும்பாலும் 'அடைக்கலம்' என்பது பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படும் போர் மொழியாகும். "உயரமான இடத்தை அடைதல்" "உறுதியான பாறை" என்பவை அன்றைய கானான் நாட்டில் தப்பி ஓடிய வர் ஒளிந்துகொள்ள வசதியாக இயற்கை யாகவோ அல்லது செயற்கையாகவோ அமைந்துள்ள பாதுகாப்பைக் குறிக்கிறது.

'அடைக்கலம்' என்பது யாவேயின் மற்றொரு அடைமொழியாகும். இது அவர் மனிதர்களைக் காப்பவர் என்பதன் இணை மொழியாகும் 'அடைக்கலப் பாறை, அரண்' (சங் 18:1-2) போன்றவை யாவே பற்றி சங்கீதம் காட்டும் ஒரு முக்கிய கருத்தாகும் (உப 32:3; எரே 16:19 17:12-18; நாகூ 1:2-8).

பக்தியுள்ளவர்கள் அவரது சிறகின் நிழலில் அடைக்கலம் புகுவர் (ரூத் 2:12; சங் 17:8; 36:7). இது ஒருசில சமயங்களில் எருசலேம் ஆலயத்தினைக் குறிக்கப் பயன் படுத்தப்படலாம் (சங் 57:1; 61:4; 63:7). அவர் கள் அவரிடம் அடைக்கலம் புகுகின்றனர் என்றும் கூறப்படுகிறது (சங் 2:12; 5:11; 16:1; பழ 30:5; நாகூ 1:7; ஏச 57:13). இறைவனை தவிர, செல்வம் போன்ற மற்றவற்றில் அடைக்கலம் புகுவது மடமையாகும் (சங் 52:7).

அடைக்கலான் குருவி (SPARROW)

ஊர்க்குருவி, சிட்டுக்குருவி .... கிளை அல்லது கொம்பினைப் பற்றிக் கொண்டு அமர்வதற்கேற்ற கால்களை யுடைய ஒரு வகை பறவையினம். சங் 83:3; 101: 7; பழ 26:2..... இவ்வகைக் குருவியைப் பற்றிய குறிப்புகள் தருகின்றன.

புதிய ஏற்பாட்டில் மத் 10:29-31; லூக் 12:6-7: இக்குருவிகளின் அற்பமான விலை மதிப்பைக் குறிப்பிடுகின்றன. "அற்பமான இக்குருவிகளுள் ஒன்றும் கடவுள் முன்னி லையில் மறக்கப்படுவ தில்லை எனில் பல குருவிகளைவிட மேலான சீடர்களும், மனிதர்களும் அஞ்ச வேண்டியதில்லை" என்று இயேசு கூறுகின்றார்.

அடைமானம், ஒற்றி வைத்தல் (MORTGAGE)

அடைமானத்தின் பேரில் எடுத்தல், அடைமானத்தில் கொடுத்தல், மாற்றுதல் (நெக 5:3; ஆதி 43:9; 44:32; எஸ் 9:2; சங் 105: 35; பழ 6:1; 11:15; 14:10; 17:18; 20:16; 24:21; 27:13; ஏச 36:8; 2 அர 18:23; 38:14; எரே 30:21).

விவிலியத்தில், 'அடைமானம்' என்ற வார்த்தை ஒரு முறை மட்டுமே வினைச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நெகமிய, எஸ்ரா ஆகியோர் வாழ்ந்த காலத்தில் யூதாவின் உள்நாட்டுப் பொருளாதார நிலைமை எப்படி இருந்தது என்பதை விளக்கும் பகுதியில் (நெக 5:1–13) இச்சொல் வினைச் சொல்லாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது.

அன்றைய ஏழை யூதர்கள், பணக்கார யூதர்களுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டு களை எழுப்பினார்கள். அவற்றில் ஒன்று அடைமானம் பற்றியது. பஞ்சகாலங்களில் உணவு வாங்குவதற்காகத் தங்களின் நிலங்களையும், வீடுகளையும் அடைமானம் வைக்க வேண்டியது மிக அவசியம் என்று கூறினார்கள் (நெக 5:3). வரி செலுத்துவதற்காக, நிலங்களையும் தோட்டங்களையும் அடைமானம் வைத்துப் பணம் கடன் வாங்கவேண்டியிருந்தது என்று முறையிட்டனர் (நெக 5:4).

அடையாளம், இலக்கு, அருங்குறி : (MARK, GOAL, SIGN)

1. பழைய ஏற்பாட்டில்:– காயீனின் 'அடையாளம்' முகத்தில் பச்சைக் குத்தப் பட்டதாகும் (ஆதி 4:15). இவ்வாறே எச 9:4.6–இல் கூறப்படும் 'அடையாளம்' மற்றவர்களை வேறுபடுத்திக் காட்ட பயன் பட்டது. லேவி 19:28–இல் கூறப்படும் அடையாளங்கள் கானானியரின் வழி பாட்டு சின்னங்களாக இருக்கலாம். வானவெளியில் உள்ள ஒளிதரும் பொருட்கள் நேரத்தைப் பிரித்துக்காட்டும் அடையாளங்களாக இருக்கலாம் (ஆதி 1:14). மோசேயின் புதுமைகள் அவருடைய அழைப்பின் உண்மைத் தன்மையைக் காட்டப் பயன்பட்டது (யாத் 4:8–9)

2. புதிய ஏற்பாட்டில்:– அருங்குறி என்பதற்குச் சாதாரணமாகப் பயன்படுத்தப் படும் சொல் "செமேயியோன்". எவ்வாறு யோனா நினிவே மக்களுக்கு அருங்குறியாய் இருந்தாரோ அவ்வாறே மனுமகனும் அவர் காலத்திய தலைமுறைக்கு அருங்குறியாய் இருந்தார் (லூக் 11:30). அப்போஸ்தலர்களின் காலத்தில் இறைவாக்குரைத்தல் விசுவாசிகளுக்கும் பரவசப்பேச்சு அவிசுவாசிகளுக்கும் அடையாளங்களாய் கருதப்பட்டன (1 கொரி 14:22). குறிப்பாக அருங்குறி என்ற சொல் இறைமகன் இயேசுவால் செய்யப்பட்ட அரும் பெரும் செயல்களைக் குறிக்கப்பயன்படுத் தப்பட்டது. பிலி 3:14–இல் குறிப்பிடும் 'அடையாளம்' பவுல் தம் அப்போஸ்தலப் பணியில் அடையவேண்டிய இலக்காகும். இயேசு வின் காயங்கள் பவுலின் தழும்பு களோடு ஒப்பிடப்படுகின்றன (கலா 6:17). விலங்கின் அடையாளம் எதிர்கிறிஸ்து வைப் பின்பற்றுகிறவர்கள்மேல் இடப்பட்ட எதிர்க்கிறிஸ்துவின் பெயராகும் (திரு வெளி 13:16–17). அ.ப. 28:11 குறிப்பிடும் அடையாளம் கப்பலின் முகப்பு ஆகும்.

அடையாளவியல் (SYMBOLISM)

பார்க்கப்படாத மற்றும் பார்க்க இயலாத ஒன்றின் பார்வைக்குரிய அல்லது கருத்தளவிலான உருவமைப்பே இது. சமய அடையாளம் அதன் தன்மைக்கு அப்பாற்பட்டு உண்மையைச் சுட்டிக்காட்டி, அதனுடைய ஆற்றலில் பங்கு பெற்று, அதன் பொருளை அறிவுக்குப் புலப்படக் கூடியதாக்குகிறது. இவ்வாறு, அது குறி அல்லது உருவத்திற்கு அப்பாற்பட்டும் செல்கிறது. ஒரு அடையாளத்தின் மதிப்பானது, தெளிவுபடுத்துதல் ஆகும். அதன் திறன், உடனே அறியப்பட்டு மனதில் தங்குதல் எளிய, அர்த்தமுள்ள முழுமையாகச் சுருக்கித்தருதலும், நடத்தையையும் நம்பிக்கையையும் வடிவமைக்க ஒரு மையத்தை அளித்தலும் ஆகும்.

அடையாளங்கள் விசுவாசமொழியின் ஒரு பகுதியாகும்; விசுவசமானது தூய்மை, முடிவற்றது மற்றும் எல்லை கடந்தவை ஆகியவற்றை அறிவிக்கும் போதும், இறைசந்திப்பு உரிமைகள் மற்றும் கோரிக்கைகளை அறிவிக்கும்போதும், விசுவாசம் இத்தகைய அடையாள மொழியைப் பயன் படுத்துகிறது. இதன்படி அடையாளவியலானது ஆதியிலிருந்தே விவிலிய சமயத்தின் ஒரு பகுதியாக உள்ளது.

அடையாளவியலானது இறைவெளிப் பாட்டின் ஒரு சாதனமாகும். சந்திப்பின் போது உருவாகி, உள்தூண்டுதலின் போது அளிக்கப்படும் அடையாளங்கள் அனுபவத்தைச் சுருக்கி விளக்குகின்றன. இவை மாறுகின்ற சூழ்நிலைகளுக்கு

இடையில் படைக்கப்பட்டு, அளிக்கப்பட்டு பிறந்து, வளர்ந்து மடிகின்றன. சில சமயங்களில் அவை புதியன போன்று தோன்றுகின்றன. சில நேரங்களில், தங்களுடைய பொருளையே இழந்துவிட்ட அல்லது மற்றவற்றினின்று தழுவப்பட்ட அமைப்புகளுக்கு, புதிய பொருளைக் கொடுக்கின்றன. மனித அனுபவத்தின் எல்லையினின்று எடுக்கப்பட்ட இவைகள், இறுதியான அக்கறையோடு மனிதனை உறவு கொள்ளச் செய்கிறது.

1. பழைய ஏற்பாடு:- எபிரேயருக்கிடையே புனிதமானவற்றிற்கும், உலகைச் சார்ந்தவற்றிற்குமிடையே எந்தவிதமான தெளிவான வேறுபாடும் கிடையாது. ஆன்மீகமானது உடல் சார்ந்தவற்றில் தன்னை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு, இயற்கையும் வரலாறும் வெளிப்பாட்டின் தலங்களாகின்றன. அடையாளச் சிறப்பிற்குரிய ஆற்றலை ஒவ்வொன்றும் தனக்குள்ளேயே கொண்டிருக்கின்றன. சொற்கள், நபர்கள், நிகழ்ச்சிகள் அல்லது செயல்கள் ஆகியவை இஸ்ராயேலின் வரலாறு மற்றும் விசுவாசத்தினுடைய நம்பிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகள், பொருள் மற்றும் சிறப்பு, நடந்தவை மற்றும் நடக்கவிருப்பவை ஆகியவற்றை ஒன்று சேர்த்த வரையில், அவற்றை அடையாளங்கள் என்று குறிப்பிடலாம்.

அ. அடையாளச் சொற்கள்:- இஸ்ராயேலின் சமயமானது பேசுதல்- கேட்டல் உறவாகிய உரையாடலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதனுடைய இறைவன் ஒரு பேசும் இறைவனாவார். அவர் வார்த்தைகள் மூலம் அதனுடன் தொடர்பு கொண்டார். ஒரு வார்த்தையானது தொடர்பு முறையை விட உயர்ந்ததாக இருந்தது. இது பேசுகிறவருடைய ஆற்றல், அதிகாரம், மற்றும் நோக்கம் இவற்றை ஒன்றாக இணைத்து செயல்படுகின்ற இயக்கமுள்ள உயிருள்ள உண்மையின் அடையாளமாக இருந்தது (ஏச 55:11; உப 18:22; எரே 28:9). ஒரு வார்த்தையானது ஒரு பொருளாக, நிகழ்ச்சியாக, சந்திப்பாக உரிமையாக, கோரிக்கையாக இருந்தது. இதுவே இறைவாக்கினர், குரு, நீதி வழங்குவோர் ஆகியோருடைய பணியைச் சிறப்புடையதாகச் செய்தது. உச்சக் கட்டங்களில் இஸ்ராயேலானது, அருளையும் தீர்ப்பையும் வாக்களிக்கின்ற, கவனித்து கீழ்படிகின்ற, பதிலை எதிர்பார்க்கின்ற இறைவார்த்தையை எதிர்கொள்வதை உணருகின்றது. பேசப்படுகின்ற வார்த்தைகள் சேகரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, படிக்கப்பட்டு, போற்றப்படுகின்றன; இவை நடக்க வேண்டிய பாதைக்கு விளக்காகவும் செல்லும் வழிக்கு வெளிச்சமாகவும் உள்ளன (சங் 119:105). இறுதியாக இறைவன், அனைத்து முற்பட்ட வார்த்தைகளையும் நிறைவேற்றிய ஊனுடல் எடுத்த வார்த்தையாகிய தம்முடைய இறுதி வார்த்தையை அளித்தார். அவர் அனைத்தையும் தம்முள் கொண்ட, மனிதனுக்கான இறைவனின் ஒரே வார்த்தையாக ஆனார்.

வார்த்தையின் செயல் திறனானது, நல்லதையோ (ஆதி 27:33-37; எண் 22:6; சங் 129:8) அல்லது தீயதையோ (ஆதி 9:25; எண் 23:7-8; ஏச 24:6) புரியக்கூடிய திறமையை தம்முள் கொண்டுள்ள ஆசீர்களிலும் சாபங்களிலும் காணப்படுகிறது. வார்த்தையானது ஒருமுறை பேசப்பட்டவுடனே, விளைவு உறுதிப்படுத்தப்படுகிறது.

வார்த்தை அடையாளவியலானது பெயரிலும் அடங்கியுள்ளது. ஒரு பெயரானது அம்மனிதனுடைய ஆளுமையின் பிரதிநிதியாகவும் விரிவாகவும் இருந்து, அப்பெயருக்குரியவருடைய ஆன்மா, உள்ளுரம், ஆற்றல் மற்றும் அதிகாரம் ஆகியவற்றை தன்னுள் கொண்டுள்ளது. (யாத் 3:13-15; ஆதி 17:15; 1 சாமு 17:45). இறை பெயரால் பேசுவதென்பது இறை ஆவியை உரிமையாக்கிக் கொள்ளுதலும் (2 நாள் 15:1; ஏச 61:1; மீக் 3:8), 'ஆண்டவர் கூறுவதாவது' என்று இறை அதிகாரத்தால் பேசுவதுமாகும். இறைவனுடைய பெயரைக் கூவி அழைப்பது இறையாற்றலை அழைப்பதாகும் (1 அர 8:29.33; 18: 24; 2 அர 5:11)

சில சமயங்களில் ஏற்கனவே நிகழ்ந்ததையோ அல்லது நிகழவிருப்பதையோ குறிப்பிடும் வண்ணம், பிள்ளைகளுக்கு அடையாளப் பெயர்கள் அளிக்கப்பட்டன: செயார்-யசூப= "எஞ்சிய ஒருவன் திரும்பு

வான்" (ஏச 7:3); இம்மானுவேல்= "இறைவன் நம்மோடு" (7:14); லோ–அம்மி= "எம் மக்கள் அல்லர்" (ஓசே 1:9).

வார்த்தை அடையாளவியலானது, மனித, நரவிலங்கு அல்லது மனித சமுதாயப் பண்புகளை இறைவனுக்குச் சாற்றிப் பேசும்போது மேலும் தோன்றுகிறது. இறைவன், பார்வைக்குரிய முறையில் வருணிக்கப்பட முடியாதவராகையால், அவருடைய இயல்பையும் செயலையும் புரிந்துக்கொள்ளக்கூடிய விதத்தில், அவர் அடையாளங்களால் விவரிக்கப்படுகிறார். அவர் மனிதனுடைய, மிருகங்களுடைய, இயற்கையினுடைய தோற்றங்களாலேயே குறித்துக் காட்டப்படுகிறார். அவருடைய கண் அவரது யாவற்றையும் அறியும் தன்மையையும் (எரே 5:3; ஆமோ 9:8) மற்றும் சலுகையையும் (உப 11:12; சங் 33:18; 34:15) குறிப்பிடுகிறது; அவரது கை அவருடைய ஆற்றலையும் (யாத் 15:16) அவரது வலக்கரம் வெற்றி மற்றும் எண்பிக்கப்படுதலையும் (யாத் 15:6; சங் 17:7; 43:3) குறிக்கின்றன. தீர்ப்பின் போது அவர் கர்ச்சிக்கும் சிங்கத்தைப் போலவும் (ஆமோ 3:8), கிழக்கு திசைக்காற்று போலவும் (எரே 18:7), சூறாவளிக்காற்று போலவும் (எரே 30:23) வருகிறார். இத்தகைய எல்லா வர்ணனைகளின் மூலம், இறைவன் அறிவுக்குப் புலப்படக்கூடியவராகவும் அவரது நோக்கமும் விருப்பமும் தெளிவானவையாகவும், அவரது செயலானது வாழ்வின் மாற்றத்தில் உயிருள்ள சக்தியாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன.

ஆ. அடையாள ஆட்கள்:- இஸ்ராயேலுடைய வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே குழுவின் நம்பிக்கை, வல்லமை மற்றும் பண்புகளைக் குறித்துக் காட்டுகின்றவர்களாக, கோத்திரம் அல்லது நாட்டின் பிரதிநிதிகளாக இருந்த மக்கள் இருந்தனர். ஆபிரகாம் போன்ற குலமுதியவர்கள் (ஆதி 12:2–3; 17:4–8; ஏச 51:1–2; லூக் 3:8; உரோ 4:15.9–12) ஏசா போன்ற இனப்பெயர் முன்னோர் (ஆதி 25:25; 27:39–40; ஒப 10; மலா 1:2–5) மற்றும் யாக்கோபின் புதல்வர்கள் (ஆதி 49; உப 33), இன்னும் சற்று கீழ்ப்பட்ட நிலையில் பாராக்கு, கிதயோன், சாமுவேல் மற்றும் சவுல் போன்ற அருங்கொடையைப் பெற்ற தலைவர்கள் இத்தகையோரே.

மீண்டும் ஆண்டவரால் அபிடேகம் செய்யப்பட்ட அரசன், விண்ணக அரியணையில் பகர ஆட்சியாளராய் அமர்ந்து (சங் 2:6–7; 45:6), நாட்டின் நம்பிக்கைகளை தன்னுள் கொண்டு, அதனுடைய முடிவிற்கு ப் பொறுப்பாளராக இருந்தான்.

பிற்காலத்தில், தனது விதியில் நம்பிக்கையிழந்து, நம்பிக்கைக்குரிய ஆட்சியாளர்களை இழந்த நிலையில் இஸ்ராயேல், தன் பழைய வரலாற்றில் சிறப்புற்று விளங்கியவர்களை உயர்வுபடுத்தி, தன்னை மீண்டும் இறைவனுடைய தயவுக்குட்படுத்தி எல்லா நாடுகளிலும் உயர்ந்ததாக தன்னை கொணரக்கூடிய எதிர்பார்க்கப்பட்டுள்ள மீட்பராகிய மெசியாவில் அவர்கள் மீண்டும் தோன்றவேண்டுமென ஏங்கியது. சட்டத்தை வழங்கியவரும் இறைவாக்கினர்களிலெல்லாம் மிகச் சிறந்து விளங்கியவருமான மோசே (உப 18:15; ஓசே 12:13; யோவா 1:21; 6:14; 7:40); முன்னோடியாகிய எலியா (மலா 4:5; சீரா 48:4– 11; மத் 16:14); அரசராகிய தாவீது (ஏச 34:23; 37:24; ஏச 9:1–6; 11:1–5) குருவாகிய ஆரோன் (அல்லது சாதோக்கு) (செக் 6:12–13; 1 மக் 14:41) ஆகியோர் இத்தகையோரே. நாடு கடத்தலின் இறைவாக்கினர், நாட்டையே வரவிருக்கும் மீட்பரின் அடையாளச் சின்னமாகப் பார்த்தார் (துன்புறும் ஊழியனாகிய இஸ்ராயேல்; ஏச 49:1–6; 52:13–53:12; மாற் 10:45; அ.ப. 8: 32–35). இத்தகைய அனைத்து தனிநபர்களும் இஸ்ராயேலின் ஊழோடு தொடர்பு படுத்தப்பட்டிருந்தனர். ஒவ்வொருவரும் தனக்கேயுரிய வழியில் இறைவனையும் மனிதனையும் குறித்துக்காட்டினர். ஒவ்வொருவரும் பழமையின் பாரம்பரியத்தையும், நிகழ்கால அனுபவத்தையும், எதிர்கால நம்பிக்கையையும் தம்முள் கொண்ட வரவிருக்கும் ஒருவரையே அவர்கள் ஒவ்வொருவரும் சுட்டிக்காட்டினர். இந்த நம்பிக்கைகள் அனைத்தும் மொத்தமாக இயேசுவில் நிறைவேறுவதை புதிய ஏற்பாடு காண்கிறது.

இ. அடையாளப் பொருட்கள்:- தொடர்பு அல்லது அறிகுறித்தன்மையால்

பொருட்களுக்கு அடையாளத் தன்மை அளிக்கப்பட்டது. இவ்வாறு உடன்படிக் கையைச் சாட்சித்தூணும் (ஆதி. 31:44–53; யோசு 24:26–27). இறை வழிகாட்டுதலையும் (யாத் 13:21) மற்றும் மகிமையையும் (யாத் 16:10) மேகத்தூணும், இறை பிரசன்னமும், மகிமை (யாத் 3:2–6; 24:17; லேவி16:2), வழி காட்டுதல் (யாத் 13:21), மற்றும் சினத்தை (எண் 11:1; உப 4:24; எபி 12:29) நெருப்பும் போன்ற இயற்கைப் பொருட்கள் சுட்டிக் காட்டின. உடன்படிக்கையின் அடை யாளம் (யாத் 25:10–22) மற்றும் இறைபிர சன்னத்தைப் பேழையும் (எண் 3:31; 1 சாமு 4:3–6), சட்டத்தைச் சாட்சிப்பலகையும் (யாத் 25:16.21; 31:18; 40:20), செபத்தை நறு மணப்புகைப்பீடமும் (சங் 142:2), வெளிப் பாட்டைப் பலி பீடமும் (ஆதி 12:7–8; 26:25; 35:1; 2 அர 16:15) போன்ற வழிபாட்டு பொருட்கள் சுட்டிக்காட்டின. இறைவனுக் குரிய சேவையை சீட்டுப்பட்டங்களும் (யாத் 13:16; உப 6:8; 11:18), மற்றும் கட்டளைகளைக் குஞ்சலங்களும் (எண் 15: 37–41; உப 22:12) போன்ற சொந்தப் பொருட்கள் வெளிப் படுத்தின.

உடலின் பகுதிகளும் குறிப்பிட்ட ஆன்மீகப் பொருளைக் கொண்டிருந்தன. எபிரேய உளவியலில் ஆன்மீகத்திற்கும் உடலுக்கும் இடையில் இருந்த நெருங்கிய இணைப்பானது, ஒவ்வொரு உடலுறுப்பும் தனக்கேயுரிய உளவியல் மற்றும் நன் னெறிப் பண்புகளைக் கொண்டிருப்பதை வெளிப்படுத்தியது. இவ்வாறு கண் மனதின் புலனுணர்வையும், காது கீழ்ப் படிதலையும், கரம் வலிமையையும், நாசி கோபத்தையும் (யாத் 15:8; 2 சாமு 22:9; சங் 18:8) இதயம் அறிவாற்றலையும் (பழ 14:33) மற்றும் சித்தத்தையும் (16:9), சிறு நீரகங்கள் மனக்கிளர்ச்சியையும் (23:16), குடல் அன்பு அல்லது இரக்கத்தையும் (உ.ச. 5:4), ஈரல் வாழ்வின் மையத்தையும் (பழ 7:23; புல 2:11), இரத்தம் வாழ்வின் ஊற்றையும் (லேவி 17:11; உப 22:12) வெளிப்படுத்துகின்றன.

ஈ) அடையாள இடங்கள்:- ஆழம் (ஆதி 1:2; பழ 8:28; ஏச 51:10; ஆமோ 7:4), பாதாளம் (செயோல்) (யோபு 26:6; சங் 16:10; 139:8; ஆமோ 8:2) மற்றும் பள்ளம் (சங் 30:3; 88:6; ஏச 14:15) போன்ற புராணக்கதை களில் எஞ்சியிருந்த கவடுகள் அடை யாளப் பொருளைக் கொண்டிருந்தாலும் புவியில் சார்ந்த இடங்களும் சில நேரங் களில் அடையாளங்களாக உருவாயின; இவ்வாறு கெட்ட ஒழுக்கம் மற்றும் கொடுமைத்தனத்தின் இருப்பிடமாக சோ தோமும் (ஏச 1:10; எச 16:46; ஏச 3:10–இன் மறைசாட்சியம்; திருவெளி 11:18) அடிமைத் தனம் மற்றும் தீமையின் இடமாக எகிப் தும் (ஓசே 11:5; திருவெளி 11:8) கடவுளின் உறைவிடம், புனித நகர் மற்றும் சீயோனும் (ஏச 2:3; 60:14; எரே 31:6; 50:5; யோவே 3:17) எருசலேமும் (எச.24:23;62; யோவே 2:32;செக் 2:4.12; 8:3; திருவெளி 21:2. 10) அடையாளமாக உணர்த்தின. புதிய ஏற்பாட்டின் காலத்தில், கொடுமையின் அரியணையாக விளங்கிய உரோமைக்கு பாபிலோன் அடையாளமாயிற்று (1 பேதுரு 5:13; திருவெளி 17:5; 18:10).

உ) இறைவாக்கு அடையாளவியல்:- பழைய ஏற்பாட்டின் அடையாளவியலுக்கு மற்றெவரையும்விட இறைவாக்கினர்களே அதிக பொறுப்பானவர்களாவர். செமித் தியச் சிந்தனையின் ஆழ்ந்த மற்றும் எளிதான இயல்வாய்மையுடன் ஒன்றுபட்ட இறைவாக்கினரின் கடமை மற்றும் அனு பவத்தின் இயல்பானது இறைவாக்கு பணி யில் அடையாளவியலை மிக முக்கியமான ஒன்றாக உருவாக்கிற்று, காட்சிகள், கனவுகள், செயல்கள் மற்றும் சொற்கள், இறைநோக்கத்தையும், விருப்பத்தையும் மெய்யாக்குவதற்கேற்ற, தங்களுக்கே உரிய புறநிலை கொண்டிருந்தன. இறைவாக்கி னர்களின் காட்சிகள், வரவிருக்கும் இறை செயலின் அச்சாரமாக இருந்தன. விழிப் பாயிருக்கும் மரக்கிளையானது இறைசெய லின் தவறாத தன்மையினையும் (எரே 1:11–12) பொங்கிக் கொதிவரும் பானை யானது வடக்கிலிருந்து வரும் தீங்கையும் (1:13–15), இரண்டு கூடை அத்திக்காய்கள், நல்லது கெட்டதையும், நாடு கடத்தப் பட்டோர் மற்றும் எஞ்சியோரையும் (எரே 24) கனிந்து பழங்களுடைய கூடையானது இஸ்ராயேலின் அழிவையும் (ஆமோ 8:1–2), சதையால் மீண்டும் உடுத்தப்பட்ட உலர்ந்த எலும்புகள், இறைவனுடைய

ஆவியால் புதுப்பிக்கப்பட்ட இஸ்ராயேலை யும் (எச 37:1–14) குறிப்பிடுகின்றன.

வருங்காலத்தை முன்னறிவிக்கின்ற கனவுகள், காட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன (1 சாமு 28:15; ஆதி. 37: 5–8; 40:7–13; 41:1–32; தானி 4:13–27). முடிவில்லாத அரசை உருவாக்குவதைப் பற்றிக் குறிப்பிடும், கல்லினால் அழிக்கப் படுகின்ற, தங்கம், வெள்ளி, வெண்கலம், இரும்பு மற்றும் மண்ணால் செய்யப்பட்ட மிக உயர்ந்த உருவம் பற்றிய நபுக்கதுனே சாரின் கனவானது, சமயச் சிறப்புடையது (தானி 2:31–45).

இறைசெய்தியை நாடகமாக்குகின்ற இறைவாக்குச் செயல்களும் இத்தகைய இயல்புடையவையே. சாமுவேல் தனது மேல் போர்வையை கிழிப்பது, இறைவன் சவுலிடமிருந்து அரசை எடுத்துக்கொள்வ தின் அடையாளம் (1 சாமு 15:27–28); அகீயா தன்னுடைய சால்வையைப் பன்னி ரெண்டு துண்டுகளாகப் பிரிப்பது, சாலமோனு டைய அரசை பிரிப்பதன் அடையாளம் (1 அர 11:30–32); எலிசா கட்டளைப்படி யோவாக அம்பு எய்வது, சீரியாவின் மீதான இஸ்ராயேலுடைய வெற்றியின் அடையாளம் (2 அர 13:15–19); எரேமியா நுகத்தடியை அணிவது, பாபிலோனுக் கான யூதாவினுடைய அடிமைத்தனத்தின் அடையாளம் (எரே 27:2–7, 10–12); கைதி யின் உடையில் ஏசயா மூன்று வருடம் நடந்தது, அசீரியாவினால் எகிப்துவும், எத்தியோப்பியாவும் அடிமைப்படுவதன் அடையாளம் (ஏச 20:2); எசக்கியேல் மரத்தில் கோத்திரங்களின் பெயர்களைப் பதிப்பது, யூதா மற்றும் இஸ்ராயேலுடைய ஒன்றிப்பின் அடையாளம் (எச 37:15–23) என்று நாம் வாசிக்கிறோம். இத்தகைய நடிப்புச் செயல்கள் வருங்காலத்தைக் குறிப்பிட்டு, அதனுடைய வருகையைத் தோற்றுவித்தன.

இறைவாக்கினர்கள் அடையாள உரு வங்களையும் மிக அதிக அளவில் பயன் படுத்தினர். எண்ணற்ற உருவங்களோடு இஸ்ராயேலின் வாழ்வின் பொருளை வெளிப்படுத்தும் பல்வேறு உருவங்களும் இருந்தன. இப்படிப்பட்ட ஒருவகை உரு வகமே திராட்சைக்கொடி (திராட்சைத் தோட்டம்). இஸ்ராயேலின் பொருளா தாரத்தில் திராட்சை ஒரு முக்கிய பொரு ளாகும். அதற்கு தினசரி கவனிப்பும், கவாத்து செய்தலும் தேவைப்பட்டது. அது வளமையையும் (1 அர 4:25; மீக் 4:4; செக் 3:10), செழிப்பையும் (ஆதி 49:22; சங் 128:3) குறிப்பிட்டது. இவ்வுருவத்தின் மூலமாக இஸ்ராயேல் இறைவனுடன் கொண்டி ருந்த உறவின் பல்வேறு வடிவங்கள், அவருடைய அருள், அதனுடைய பதிதம் போன்றவற்றை இறைவாக்கினர்கள் விவரித்தனர். எகிப்திலிருந்து கொண்டு வரப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட திராட்சைக் கொடியான இஸ்ராயேல் (சங் 72:8), ஆண்டவரால் நடப்பட்டு (எரே 2:21), அவருக்குப் பலன்கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டது (ஏச 5:1–5). ஆனால், இஸ்ராயேல் கெட்டு தன்மையிழந்து (எரே 2:21), காட்டுத் திராட்சைகளை அளித்தது (ஏச 5:4.7). அதனால், அது மேய்ப்பாளர்களால் அழிக்கப்பட்டு (எரே 12:10) பாழ்வெளியாகியது. தனக்கும், தனது சீடருக்கும் இடையில் உள்ள உறவை வெளிப்படுத்த, இயேசு இந்த உருவகத்தைப் பயன்படுத்துகிறார்.

இஸ்ராயேலின் ஆன்மீக வரலாற்றை வெளிப்படுத்தப் பயன்படும் மிக வளமை யும் பலகோணமுமுள்ள மற்றொரு உருவ கம் செம்மறியாடு ஆகும். செம்மறியானது பிறரைச் சார்ந்ததாகவும், உதவியற்றதாக வும் உள்ளது. அதற்கு தொடர்ந்த கவனிப்பு, வழிகாட்டுதல், பாதுகாப்பு போன்றவை தேவைப்படுகின்றன. குரல் மூலம் அது வழிநடத்தப்படுகிறது. அது இல்லாவிட்டால், அலைந்து திரிந்து, வழி தவறி, காட்டு விலங்குகளுக்கு உணவாகி விடுகிறது. இஸ்ராயேல், இறைவனுடைய மந்தையாகவும், அவரது மேய்ச்சலின் செம்மறியாகவும் உள்ளது (சங் 70:13; 100:3; எச 34:6). இறைவனே அவர்களுடைய உண்மையான மேய்ப்பர் (சங் 23; எச 34:12. 16). ஆனால், அவர் அவர்களை மனித மேய்ப்பர்களின் (சமயத்தலைவர்கள்) கவனிப்பின் கீழ் ஒப்படைத்தார்; ஆனால், அவர்களோ நேர்மையற்றவர்களாகவும், பேராசை கொண்டவர்களாகவும் தங்களை வெளிப்படுத்தினர் (எச 34: 1–10). அதன் விளைவாக, ஆடுகள், வழி தவறி அலைந்து திரிந்தன (சங் 119:176; ஏச 53:6;

எரே 23:1; எச 34:5–6), தாங்கள் விரும்பியதைச் செய்தன (எச 34:6), காணாமல் போயின (எரே 50:6; எச 34:11), கொலை செய்யப்படுவதற்கு எண்ணப்பட்டன (சங் 44:22). இறுதியாக, ஆண்டவர் அவர்களைத் தேடி (எச 34:11–16), செம்மறியாட்டுக் குட்டிகளைக் கைகளில் ஏந்தியவராய், அவர்களைக் கொண்டு வரத் தீர்மானிக்கிறார் (ஏச 40:11)

சமய உண்மையினை வெளிப்படுத்த சரியாக பொருந்தியுள்ள மூன்றாவது உருவமானது, அனுதின வாழ்விலிருந்து எடுக்கப்பட்ட 'வழியாகும்'. ஒரு சாலை அல்லது பாதையானது செயலையும் (நடத்தல்) திசையையும் (நெறி) அதன் மூலமாக நோக்கத்தையும் குறிப்பிடுகின்றது (சங் 103:7; ஏச 26:8). வாழ்க்கையில் முக்கியமானது சரியான சாலையை எடுப்பதாகும். ஏனெனில், ஒரு வழியானது வாழ்வுக்கும் (பழ 6:23; 10:17; எச 21:8) அல்லது சாவுக்கும் (பழ 7:27; 14:12; எரே 21:8) நடத்திச் செல்லலாம். இஸ்ராயேலின் சமயத்தலைவர்கள் அதனுடைய வழியினைக் குறிப்பிட்டு காட்டுமாறு முக்கியமாக பணிக்கப்பட்டிருந்தனர். சீயோனுக்கு நடத்திச் செல்கின்ற தூய்மையான வழியும் (ஏச 35:8), ஆண்டவருடைய வழியுமான சரியான வழியை தேர்ந்தெடுப்பதே, ஓர் ஆசீராகும் (சங் 1:6; பழ 12:28; ஏச 26:7). இஸ்ராயேலின் முழு வாழ்வானது, எகிப்திலிருந்து கானான் நாட்டிற்கு, அடிமைத்தனத்தினின்று விடுதலைக்கு சாவிலிருந்து வாழ்விற்கு செல்லும் நடைப்பயணமாகவே இருந்தது. அது தன்னுடைய பாதை தவறி கைதியாக்கப்பட்டபின், இறைவனுடைய நகருக்கு திரும்ப வருவதற்கு (ஏச 35:8–9) மீண்டும் ஒரு வழி தயாரிக்கப்பட வேண்டும் (ஏச 40:3; மலா 3:1). நடத்தையானது வாழ்விற்கு முக்கியமான பாதிப்புகளைக் கொண்டுள்ளது என்பதை இவ்வுருவம் சிறப்பாக வற்புறுத்திக் கூறுகின்றது. யூத கட்சியினரிடையிலும், கிறிஸ்தவரிடையிலும் புதுப்பிக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டது.

சிங்கம் அதனுடைய வலிமை, அச்சமூட்டும் கர்ச்சித்தல் பதுங்கியிருந்து திடீரென இரையின் மீது பாயும் தன்மை, ஆகியவை இறைசினத்தையும் தீர்ப்பையும் குறித்துக்காட்டுவதற்கு இறைவாக்கினர்களால் பயன்படுத்தப்பட்டன. (ஏச 31:4; ஓசே 5:4; 11:10). யாவே சீயோனிலிருந்து கர்ச்சிக்கிறார் (எரே 25:30; யோவே 3:18; ஆமோ 1:2; 3:8). இதன் மூலம், அவரது எதிரிகளின் இதயங்களில் பயத்தை உண்டு பண்ணுகிறார். அழிவானது உறுதியானதாகவும் பாழாக்குவதாகவும் இருக்கும். சில பகுதிகள் மட்டுமே விடுபட்டிருக்கும் (ஆமோ 3:12.)

ஊ. வழிபாட்டு அடையாளங்கள்:- அன்றாட வாழ்விலிருந்து பிரிக்கப்பட்டு தனக்குரிய தாக்கப்படுகின்ற உயரிய வழிபாட்டு அடையாளமானது, உடன்படிக்கைக்கு உரியதாகும். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அடிப்படைப் பண்பாக அமைந்திருப்பது உடன்படிக்கையாகும். உடன்படிக்கைகளை உருவாக்குவதில் வாழ்க்கை அமைந்திருந்தது. இஸ்ராயேலின் வாழ்வே, சீனாய் மலையில் நடைபெற்ற உயர்ந்த உடன்படிக்கை கொண்டாட்டத்தினால் விளைந்தது. அங்கு, அது இறைவனுடைய குரலைக் கேட்டது. அங்கு அது சட்டத்தைப் பெற்றது. இறைவனுடைய மக்களாகவும் கீழ்ப்படிதல் உறுதி மொழி எடுத்ததாகவும், சேவைக்கு ஒப்படைத்துக் கொண்டதாகவும், நெறி முறைக்கு கீழ்பட்டதாகவும், இரக்கத்தைக் சார்ந்துள்ளதாகவும், தான் இருப்பதை அங்கு அது அறிந்தது. உடன்படிக்கையைப் பின்பற்றுவதில் அதனுடைய வாழ்க்கை நிலை சார்ந்திருந்தது. அதனுடைய வழிபாட்டு மற்றும் சமய வாழ்விற்கு அடிப்படையாகவும், ஒற்றுமையின் இணைப்பாகவும், நேர்மையின் இடமாகவும், காலந்தோறும் புதுப்பிக்கப்பட்டு, உடைபட்டாலும் புதிதாக வாக்களிக்கப்பட்ட உடன்படிக்கையானது, இஸ்ராயேலின் முழு வரலாற்றையும் நோக்கச் சாதகமான நிலையாகும்.

வழிபாட்டு அடையாளவியலானது சைகை நாடக முறையில் அமைந்திருந்தது. இவ்வாறு முதற்கனிகளின் காணிக்கை விளைச்சலைப் புனிதப்படுத்தியது (யாத் 23:16; 34:22; உப 26:1–11); முதல்

பிறப்பு, மந்தைகளையும் கூட்டத்தைப் புனிதப்படுத்தியது (யாத் 22:29–30; 34:19–20), ஆசீரையும் புனிதத்தையும் கொண்டு வந்தது (உப 15:19–23); தகனப் பலிகள் (லேவி 1–13), பாவப்பரிகார பலிகள் (4:6), புனிதத்துவத்தை புதுப்பித்தது; பரிகார நாள் சடங்குகள் (லேவி 16) பாவ மன்னிப்பைக் கொண்டு வந்தன.

பெரிய விழாக்களில், மீண்டும் நடிக்கப்பட்ட வழிபாட்டு நாடகங்கள், நாட்டு வாழ்வின் அடித்தளத்தை வலிமைப்படுத்தின. தொன்மையான விவசாய துவக்கமுடைய இவ்விழாக்கள் யாவே வழி பாட்டிற்கு மாற்றி அமைக்கப் பட்டு, வரலாற்று மற்றும் அடையாளப் பொருள்கள் அளிக்கப்பட்டன. இவ்வாறு, எகிப்திலிருந்ததான வெளியேற்றத்தை கொண்டாடிய பாஸ்காவானது புதிய யாத்திரையின் இறைவாக்காகவும், புதிய நாளின் துவக்கமாகவும் உருவாயிற்று; புத்தாண்டு விழாவானது, ஆண்டவர் அரியணை ஏறுதல் மற்றும் உலகின் படைப்பைக் கொண்டாடியது; ஆண்டவருடைய இறுதிக்கால நாளின் இறைவாக்காக அமைந்தது; வாரங்களின் விழா, சட்டத்தை அளிப்பதையும்; கூடாரவிழா, பாலைவன வாழ்வையும் குறிப்பிடுகின்றன.

சடங்குகளோடு மிக நெருங்கி தொடர்புடையதாக, உடன்படிக்கை மற்றும் கடவுளுடைய குடும்பத்தின் உறுப்பினர் என்பதன் அடையாளமான விருத்தசேதன சடங்கும், படைப்பினை (யாத் 20:11) அத்துடன் வருகின்ற ஒய்வுடன் (உப 55:15) கொண்டாடும் ஒய்வு நாளும் உள்ளன. ஒய்வு நாளை அனுசரிப்பதென்பது பிற்காலத்தில் இறைவனுக்குக் காட்டும் உண்மை பக்தியின் அறிகுறிகளில் ஒன்றாயிற்று.

2. பிற்கால யூத மதம்:- நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட மற்றும் பிற்கால யூத மதம், தொடர் உருவகமான விரிவுரையால் மேம்படுத்தப்பட்டு, பழைய ஏற்பட்டிற்குள் அதிக அளவில் அடையாளப் பொருளைக் கண்டது. விவிலிய சொற்களின்பின் மறைவான உண்மைகள் இருப்பதாகவும் இவை அறிவொளி பெற்ற விரிவுரையாளர்களால் மட்டுமே வெளிப்படுத்தப்பட முடியும் என்றும் கருதப்பட்டது. தேவாலயம் அதனுடைய துணைப் பொருட்கள், பலிகள், கட்டடங்கள், உணவு விதிமுறைகள் ஆகிய அனைத்துக்கும் அடையாளப் பொருள் அளிக்கப்பட்டது. எண்களின் பொருளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. (மூன்று என்பது புனிதம் அல்லது இறைவனையும்; நான்கு, பூமியையும்; ஏழு, வானம் மற்றும் பூமி, கடவுளுடனான உறவு ஆகியவற்றையும்; பத்து, முழுமையையும் குறிப்பிடுகின்றன). உலோகங்களுக்கும் (உ.ம். தங்கம், கடவுளின் மகிமை; வெள்ளி, மாசற்ற ஒழுக்கம்; பித்தளை, வலிமை) நிறங்களுக்கும் (நீலம்–புனிதம்; கருஞ்சிவப்பு–அரசுரிமை; வெண்மை–தூய்மை; கருப்பு–தீமை மற்றும் அழிவு) உருவகமான பொருள் அளிக்கப்பட்டது. ஏழு கிளைகளுடைய விளக்குத் தண்டு ஆன்மாவையும், ஆட்டுக்கடாவின் கொம்பானது மெசியாவையும், கதிர் மணியானது உயிர்ப்பையும் குறிப்பிடுவதாகக் கருதப்பட்டது.

வெளிப்பாட்டு இலக்கிய தோற்றத்துடன், பழமையினையும் வருங்கால வரலாற்றையும் விவரிக்க, விசித்திரமான இயல்புக்கு மீறிய உருவங்கள் பயன்படுத்தப்பட்டன. விசித்திர மிருகங்கள் (தானி 7:1–8) மற்றும் விலங்குகளின் கொம்புகள் (7:24; 8:8.22) ஆகியவற்றால் வரலாற்று அரசர்களும் அரசுகளும் குறிப்பிடப்பட்டன. வெள்ளாட்டுக் கடாவின் கொம்பு, பெரிய அலக்சாண்டரையும் (8:5–8); பெரிய ஆட்டுக்கடாவின் கொம்பு, யூதா மக்கபேயுவையும் (ஏனோக் 90:9); சிங்கம் கழுகை அழிப்பது, தாவீது மரபு மெசியாவின் மூலம் உரோமை வெல்லப்படுவதையும் குறிப்பிடுகின்றன. இதன் சற்று மேம்பட்ட வளர்ச்சியானது, மேலும் விரிவான வானதூதர் மற்றும் பேய்கள் பற்றிய கோட்பாடு, உலக அழிவுடன் கூடிய வளர்ந்த இறுதிக்கால இயல், இறுதித் தீர்ப்பு மற்றும் பேரின்ப புது உலகம் என்பனவாகும்.

யூதப்பிரிவுகளின் இடையிலும், இறைவாக்கு நூல்களுக்கு தற்காலப் பொருளை

அளிக்க அடையாளச் சிறப்பை குறிப்பிடு வதன் மூலம், அந்நாளின் ஆன்மீக நிலைகளுக்கு ஏற்ற விளக்க முறைகளையும் காண்கிறோம்.

3. புதிய ஏற்பாடு:- பெரும்பாலும், புதிய ஏற்பாட்டு அடையாளவியலானது, இயேசு கிறிஸ்துவின் ஆள்தன்மை, அவருடைய அடையாளம், அவரது வாழ்வு மற்றும் பணி ஆகியவற்றின் பொருள் ஆகியவற்றைப் பற்றியதாகும். பெரும்பாலான உருவங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்தும், யூத வெளிப்பாட்டிலிருந்தும் எடுத்தாளப் பட்டுள்ளன.

அ. அடையாள தலைப்புகள்:- புதிய ஏற்பாட்டில் அனைத்தையும் உள்ளடக்கும் அடையாளமானது, அபிடேகம் செய்யப் பட்டவரும் மெசியாவும் ஆகிய இயேசுக் கிறஸ்துவே ஆவார். அவர் தம்மிலேயே இஸ்ராயேல் நாட்டையும் எதிர்ப்பார்ப்புகளையும், புதிய உடன்படிக்கை மற்றும் புதிய சமுதாயத்தையும் கொண்டுள்ளார். அவரில் அரசன் (மத் 21:15; யோவா 18:37), குரு (எபி 4:14–5:10), இறைவாக்கினர் (யோவா 6:14; 7:40), வழிபாடு (எபி 9:1–10:25), மற்றும் வார்த்தை (யோவா 1:1; எபி 1:1) ஆகியவற்றின் பணிகள் நிறைவேறுகின்றன. விளக்கமான தலைப்புகள் மற்றும் உருவகமான பெயர்களின் மூலம், அப்போஸ்தலர்கள், யூதர் மற்றும் கிரேக்கர்கள் முதலான எல்லா மக்களுக்கும் இயசுவின் பொருளை வெளிப்படுத்த முயன்றனர்.

இவற்றில் அதிகப் பொருளுடையதாக இருப்பது, இறைவனுடன் கொண்டிருந்த நெருங்கிய உறவினைக் குறித்துக் காட்டுகின்ற 'மகன்' என்ற தலைப்பாகும். இறைவனுடைய திராட்சை தோட்டத்தில் பழங்களை சேகரிக்க அனுப்பப்பட்ட ஒரே, தனித்துவ மிக்க மகன் இவரே. மனிதனை மீட்கவும் கடவுளின் பிள்ளைகளாக அவர்களை உருவாக்கவும், அவர் தன்னுடைய உயிரையே அளித்தார்.

இயேசுவினுடைய தாழ்ச்சியையும், அவருடைய மரணத்தின் பலிப்பண்பையும் வலியுறுத்துகின்ற மற்றொரு அடையாளம் செம்மறியாகும். "உலகத்தின் பாவத்தைப் போக்குகின்ற இறைவனின் செம்மறியாகிய" (யோவா 1:29) உண்மையான பாஸ்காச் செம்மறி இவரே (1 கொரி 5:7)

இவ்வுருவத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது குரு என்ற உருவகமாகும். எபிரேயருக்கான திருமுகத்தின் ஆசிரியர் இதனைப்பற்றி அதிக அளவில் குறிப்பிடுகின்றார். இறைவனிடம் செல்வதற்கான நிலையான வழியை தருகின்ற, எல்லாம் நிறைவான ஒரே பலியினை அளிக்கின்ற, ஒரே உன்னத தலைமைக் குரு கிறிஸ்துவே. இவ்வாறு, அவரில், இஸ்ராயேலின் முழுவழிபாட்டு சமயமானது தனது நிறைவைக் காண்கிறது.

மீண்டும், இயேசு வார்த்தை (யோவா 1:1), படைப்பு, வெளிப்பாடு மற்றும் மீட்பு ஆகியவற்றில் செயல் தலைவரான வார்த்தை என்று குறிப்பிடப்படுகின்றார். அவரில் இறைவார்த்தையின் ஆற்றல், உறுதிமொழி மற்றும் உரிமைக் கோரிக்கையானது மீண்டும் வெளிப்பாட்டை காண்கிறது. மனிதர்கள் பதிலுரைக்குமாறு அழைக்கப்படுகின்ற இறுதி வார்த்தை இவரே.

பல சமய மற்றும் சமூக உறவுகளைக் கொண்ட வார்த்தையாகிய ஆண்டவர் என்ற சொல்லால், இயேசு மேலும் குறிப்பிடப்படுகிறார். இவரே மனித வடிவிலான இறைவன் வழிபாட்டின் ஆண்டவர், மனிதருடைய பற்றுறுதி, பக்தி மற்றும் சேவையைக் கோருகின்ற அவர்களின் ஒரே உண்மையான தலைவர்.

ஆ. இயேசுவின் அடையாளவியல்:- இயேசு அடிக்கடி உருவங்களையும் அடையாளங்களையும் பயன்படுத்தினார் என்று எல்லா நற்செய்தி ஆசிரியர்களும் சான்றுரைக்கின்றனர். சமய உண்மைகளை விளக்குவதற்கு, வாழ்க்கையின் மிகச் சாதாரண ஆரம்ப நிலைகளினின்று உருவங்களை அவர் பயன்படுத்தினார். அவருடைய முதன்மையான அடையாளமானது இறையரசு: மனிதருடைய இதயங்களில் இறைவனுடைய ஆட்சி என்பதாகும். இதுவே, அவரது போதனையின் மையக் கருத்தாகவும் (மத் 4:17), அவரது உவமைகளில் முதல் பொருளாகவும் (மத் 13), அவரது அக்கறையின் இலக்காகவும்

இருந்தது. மனிதர்கள் அதனை அறிந்து, அதற்கான வழியைக் கண்டுபிடித்து, அதில் நுழைய வேண்டும் என்பதில் அவர் ஆர்வமிக்கவராய் இருந்தார். உடன்படிக்கையையும் இறையாட்சியையும் நினைவிற்கு கொண்டுவந்து, இயேசுவில் நிறைவேறிய இவ்வுருவமானது, மீட்பின் முழு வரலாற்றுக்கு பணிச்சட்டமாக உருவாகி, "அரசருக்கெல்லாம் அரசர் மற்றும் ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவர்" என்று இயேசு புகழப்பட விருக்கும் சிறப்பான உச்ச நிலையை எதிர்நோக்குகிறது. இந்த இயேசு ஓர் அரசை உருவாக்கி, அதைத் தந்தையிடம் அளிக்கவந்தார்.

இயேசுவினுடைய மற்றொரு அடையாளம், ஆயனும் ஆட்டு மந்தையும் என்பதாகும். பழைய ஏற்பாட்டில் இவ்வுருவம் கொண்டிருந்த பொருளுக்கு, வழி தவறிய மக்களுக்கு தனது உயிரையே அளிக்கின்ற தன்னுடைய பணியின் உட் பொருளையும் சேர்க்கின்றார் (யோவா 10: 11.15). திருடர்களாகவும் கொள்ளைக்காரர்களாகவும் (10:8), கூலியாட்களாகவும் (10:12–13), போலி இறைவாக்கினர்களாகவும் உள்ள சமய தலைவர்களின்று முற்றிலும் வேறுபட்டு, உண்மையான ஆயனாக அவர் உள்ளார். அவருடைய குரலையே அவை பின் தொடர்கின்றன; அவைகளுக்காக தன்னுடைய உயிரையே அளிக்கின்றார்; மற்ற கிடையிலுள்ளவற்றையும் இறைவனின் ஒரே மந்தைக்கு சேகரிப்பதற்காக அவர் செல்கிறார் (10:16).

இயேசு தன்னுடனான ஒன்றிப்பின் அவசியத்தை, திராட்சைக்கொடி அடையாளத்தினால் வலியுறுத்துகின்றார். அவரது கவனமானது பலனுள்ள வாழ்வின் மீது அமைந்துள்ளது. கிளைகள் திராட்சைக்கொடியினின்று வாழ்வு பெறுவது போல, சீடனும் கிறிஸ்துவிடமிருந்து பெறுகிறான் (யோவா 15:4). சீடனுடைய உள்ளுரமானது இவ்வுறவையே சார்ந்துள்ளது; கிறிஸ்து இன்றி, அவன் ஒன்றும் செய்ய இயலாது (15:5). மேலும், கனி கொடாவிடில், கிளையானது வெட்டப்பட்டு அழிக்கப்படும் (15:6).

மீண்டும், அவர் 'வழி' என்னும் உருவத்தை பயன்படுத்துகிறார் (யோவா 14:6). இவ்வடையாளத்தின் மூலம் தாமே வழிபற்றிய இறைவாக்கினர்களின் கூற்றுக்களை நிறைவேற்றி (எச 35:8; 40:3; மலா 3:1) இறைவனிடம் செல்வதற்கான வழியை அளித்து, இறைவனுடன் தோழமை கொள்வதற்கு அவசியமான வாழ்க்கை முறையினை வெளிப்படுத்தியதாக (மத் 22: 16) இயேசு குறிப்பிடுகிறார். இவ்வாறு, கிறிஸ்தவமானது வழியாகவும் (அ.ப. 9:2; 19:9.23; 22:4), கிறிஸ்தவர்கள் அவ்வழியைச் சார்ந்தவர்களாகவும் அறியப்பட்டனர்.

இ. மீட்பின் அடையாளவியல்:- மீட்பினுடைய முதன்மையான அடையாளமானது, சிலுவையாகும். அதில் பெரும்பான்மையான புதிய ஏற்பாடு இறையியல் ஒருங்கு சேருகின்றன. சிலுவையானது மீட்பின் வழியாகவும் (கலா 6:14; கொலோ 2:14), மனித இனத்தின் பிளவுபட்ட நிலைகளை ஒன்றிணைக்கும் சாதனமாகவும் (எபே 2:16; கொலோ 1:20), கிறிஸ்தவர்களுக்கான வாழ்வின் வழியாகவும் இருப்பதால் (மத் 10:38; 16:24; மாற் 8:34; 10:39; லூக் 9:23; 14:27), சிலுவையின் செய்தி என்பது இறைவனின் ஆற்றலாக உள்ளது (1 கொரி 1:18). புதிய ஏற்பாடு காலந்தொட்டு, உலகின் பாவங்களுக்கான அவரது மரணத்தையும் மனிதருக்கு அவர் அளிக்கின்ற புது வாழ்வையும் வலியுறுத்துகின்ற சிலுவையானது, கிறிஸ்துவில் வருகின்ற மீட்பின் ஒரே உலகளாவிய அடையாளமாக விளங்குகிறது.

மீட்பின் உண்மையை விவரிக்கும் போது, புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பல்வேறு அடையாள சொற்களைப் பயன்படுத்துகின்றனர்; விடுதலை தீர்ப்பினை குறிப்பிடும் "ஏற்புடையவராதல்" (உரோ 4:25; 5:16.18; 3:24; 9:30; 1 கொரி 6:11); மகன் என்கிற நிலையில் குடும்ப உறவில் நுழைதலை குறிப்பிடும் "சுவிகாரம்" (உரோ 8:15; கலா 4:5); அடிமையை விடுதலை செய்தல் அல்லது சிறையிருப்போரை மீட்பதைக் குறிப்பிடும் "விலை" (மத் 20:28; மாற் 10:45; எபே 1:7; கொலோ 1:14; 1 திமோ 2:6; எபி. 9:15); பலியின் மூலம் தோழமையை மீட்டளித்தல் அல்லது குற்றத்தை நீக்குதலைக் குறிப்பிடும் "பரிகாரம்" (உரோ 3:25; 1 கொரி 5:7), ஆகியவை இப்படிப்பட்ட அடையாளச் சொற்களாகும்.

மீட்கப்பட்ட சமுதாயம் என்பது, 'கிறிஸ்து எங்குள்ளாரோ அங்கு திருச்சபையும் உள்ளது' என்பதை வலியுறுத்தும் கிறிஸ்துவின் உடலாக அழைக்கப்படுகிறது. இவ்வுருவத்தின் மூலமாக, திருச்சபையினுடைய கூட்டான இயல்பும், பணியும் வலியுறுத்தப்படுகின்றன.

மீண்டும், கிறிஸ்துவினுடனான நெருங்கிய உறவையும், அதனுடைய துணை நிற்கும் நிலையைக் குறிப்பிடும் முறையில் திருச்சபை கிறிஸ்துவினுடைய மணமகள் என்று கூறப்படுகின்றது.

ஈ. வழிபாட்டின் அடையாளவியல்:- வழிபாட்டின் அடையாளவியலானது திருவருட்சாதனங்களில் முன்னிலைக்கு வருகிறது. ஒவ்வொரு அருட்சாதனமும் சைகை நாடகத்தொனியை உள்ளடக்கிய, நற்செய்தியினுடைய, நாடக வடிவ வெளிப்பாடாக உள்ளது. ஞானஸ்நானத்தில், நீரானது, தீய சக்திகளின் மீதான வெற்றி வாழ்வை அச்சுறுத்தும் நீரினிடையே செல்வது, செங்கடலைனைக் கடப்பதை நினைவூட்டுகிறது (1 கொரி 10:1–2; சங் 74:13; ஏச 51:9–10); சாவிலிருந்து வாழ்விற்குச் செல்லுதல் (உரோ 6:14); கறையினை அகற்றுதல் (அப.2:38; தீத் 3:5); வாழ்வை அளிப்பது (உரோ 6:4; கலா 3:27; யோவா 3:5) என்பனவற்றை குறிப்பிடுகின்றது. புனித சமுதாயத்திற்குள் நுழைவதற்கான துவக்கச் செயலாக, விருத்த சேதனத்தின் இடத்தினை ஞானஸ்நானம் ஏற்கிறது (1 கொரி 12:13). இது இயேசுவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்கு பெறுவதாகும் (உரோ 6:3–5; கொலோ 2:12). ஒருவன் கிறிஸ்துவோடு புதைக்கப்பட்டு (உரோ 6:3), புதிய வாழ்விற்கு உயிர்தெழுந்து (உரோ 6:4; கொலோ 2:12), அதன் மூலம் கிறிஸ்துவின் உடலுக்குள் நுழைகிறான் (1 கொரி 12:13). இவ்வாறு, இது மீட்பு நாடகத்தின் மறு அரங்கேற்றமாக உருவாகிறது.

இதே முறையில் நற்கருணையானது (ஆண்டவருடைய இரவுணவு) நற்செய்தியை நாடகமாக்குகிறது. இது புதிய உடன்படிக்கையின் அடையாளமாகும் (மத் 26:26–29; மாற் 14: 22–25); தனது சீடர்களுடனான இயேசுவின் தோழமை விருந்தை நினைவு கூர்கிறது; சிலுவை உயிர்ப்பு நிகழ்ச்சியைப் பறைசாற்றுகிறது (1 கொரி 10:16–17; 11:23–30); மெசியாவின் பெருவிருந்தை எதிர் நோக்கியுள்ளது (லூக் 22:15–19; திதாக்கே 9–10). மீட்பினுடைய முழுப்பொருளானது, இயேசுவின் மரணம் மற்றும் அதனின்று வெளிப்படும் தோழமையின் புதுவாழ்வை வலியுறுத்தும் விதமாக நாடகமாக்கப் பட்டுள்ளது.

உ இறுதிக் கால இயலின் அடையாளவியல்:- புதிய ஏற்பாட்டு இறுதிக்கால இயலில், புதிய எருசலேமின் உருவகத்தின் கீழ், விசித்திர விலங்கு அடையாளவியல் மற்றும் எண்ணியலோடு சேர்ந்து, விண்ணக வழிபாடு, கொள்ளை நோய்கள், விண்ணக போர்முறை, தீமையின் புத்தெழுச்சி மற்றும் அழிவு, உயிர்ப்பு, தீர்ப்புக் காட்சி மற்றும் பேரின்பத்தை மீட்டளித்தல் போன்ற மையக்கருத்துக்களுடன் சேர்ந்து, மீண்டும்வெளிப்பாட்டு இலக்கியம் பயன்படுகிறது. அடையாள உருவகங்களைப் பயன்படுத்தி, வரலாற்றினை மீண்டும் அண்டவியல் சொற்களால் எழுதுவதன் மூலம், உரோமையரின் அடக்குமுறையின்போது திருச்சபைக்கு ஆறுதலளிக்க, வலிமையளிக்க ஆசிரியர் விரும்புகிறார்.

அப்போஸ்தலருக்கு பிற்பட்ட காலத்தில், கிறிஸ்து, ஞானஸ்நானம், உயிர்ப்பு, நற்கருணை, அரசு, மேலும் நற்செய்தியின் ஆற்றல் (யோவா 21:1–13) ஆகியவற்றை குறிப்பிடுகின்ற அடையாளமாக மீனையும், வாழ்வின் கடலில் விசுவாசிகளை சுமந்து செல்லும் திருச்சபையினை குறிப்பிடுகின்ற அடையாளமாக கப்பலையும், கிறிஸ்தவ கலை மற்றும் சிற்பக்கலையில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள பொருட்களின் சித்திரம், போன்றவற்றை நாம் சந்திக்கிறோம்.

'அடையாளம்' என்னும் சொல்லானது, விசுவாசத்தின் சுருக்கமான அறிவிப்பைக் குறிப்பிடவும் உபயோகிக்கப்படுகிறது. உ–ம்: அப்போஸ்தலர்களுடைய விசுவாசப் பிரமாணத்தின் முன்னோடியான "உரோமை அடையாளம்" (விசுவாச அறிக்கை).

அட்டை (Leech)

புழு வகையைச் சார்ந்த இந்த உயிரினமானது இரத்தத்தை உறிஞ்சும் தன்மை

கொண்டது (பழ 30:15). பாலஸ்தீனத்தில் தேங்கி நிற்கும் குட்டைகள் அல்லது மெது வாக ஓடும் ஓடைகளில் வாழ்ந்த பலவகை யான அட்டைகள் குறிப்பிடப்படுகின்றன. அட்டையை விழுங்கிவிடும் அச்சத்தால், ஆற்றிலிருந்தோ குட்டைகளிலிருந்தோ நேரடியாக வாய் வைத்தோ கையாலோ நீர் அருந்துவதற்கு எதிராக தல்மூது எச்சரிக்கிறது.

அணிவகுத்து நிற்கும் படை (BATTLE ARRAY)

பகைவர்கள் தாக்கினால் எதிர்த்து நிற்கவோ, அல்லது வாய்ப்பு ஏற்படும் போது முன்சென்று தாக்கவோ தயாராக இருக்கும் போர்நிலை அல்லது அமைப்பு. இது யோசுவா, மற்றும் அரசர்கள் செய்த போர்களில் விளக்கமாகக் கூறப்படுகிறது (யோசு 1:14; 1 சாமு 17:10; 2 சாமு 10:8–17). இறைவாக்குகளிலும் இந்தப் "போருக்கு ஆயத்தமாயிருக்கும்" நிலைபற்றிக் கூறப் படுகிறது (எரே 6:23). "கடவுள் தரும் நடுக்கங்கள் எனக்கெதிராய் அணிவகுத்து நிற்கின்றன" என யோபு குறிப்பிடுகிறார் (யோபு 6:4). திருவெளி 9:7–இல் வெட்டுக் கிளிகள் போருக்கு அணிவகுத்துச் செல் லும் குதிரைகள் போல் நிற்பதாக உருவக மாகக் கூறப்படுகிறது.

அணுகும் பேறு (ACCESS)

கீழை நாடுகளின் அரசவையிலே பார்வையாளர்களையும், குறைகளைக் கூற வருவோரையும் அரசரைப் பார்க்க அழைத்து வரத் தனி அதிகாரி இருந் தார். இந்த அதிகாரியின் தயவு இருந் தால்தான் அரசரைக் காண இயலும். மேலும் இவர் இவ்வாறு வருபவர்கள் உண்மையான காரணத்துடன் வருகிறார் கள் என உத்தரவாதம் அளிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார் (காண்க: பர்னபா பவுலை எருசலேம் சபைக்கு அறிமுகப் படுத்தி உத்தரவாதம் அளிக்கிறார், அ.ப. 9:27,28). பொதுவாக, இப்படி ஒருவரை மற்றவருக்கு அறிமுகப்படுத்தும் பணியை செய்பவரை இடையீட்டாளர் அல்லது இணைப்பாளர் எனவும் கூறலாம். அகிலத்தை ஆண்டவர் ஆள்வதால் அவர் அனைத்திற்கும் அரசர் (சங் 29:10; 10:47; 96:10; 99:1). அவ்வரசரை அணுகும் வாய்ப்பை மானிடருக்குப் பெற்றுத் தந்தவர் இறைமகன் இயேசு (எபி 10:19–22). இங்கே மனிதனை இறைவனோடு இணைக்கும் இயேசுவின் பணி வெள்ளிடை மலை. இது பாவி இறைவ னோடு உறவு கொள்ளவும் தொடர்ந்து அவரை அணுகவும் வழி செய்கிறது உரோ 5:2; எபே 2:12–18 ஆகிய பகுதிகள் பாவத்தினால் மனிதன் கடவுளிடமிருந் தும், உடன்படிக்கை உரிமையிலிருந்தும் பிரிக்கப்படுகிறான் (உரோ 3:23) எனவும், இறைவனிடம் மீண்டும் தங்களை அறி முகப்படுத்த இடையீட்டாளர் தேவை எனவும் இயேசு தனது பாடுகளால் பிரிவினைச் சக்திகளைத் தகர்த்தெரிந்து உறவை ஏற்படுத்தினார் எனவும் கூறுகின்றன (எபே 2:15–18; 1 பேதுரு 3:18). இயேசு ஏற்படுத்திய உரிமை இறைவ னோடு நேரடி உறவு கொள்ளும் உரிமை ஆகும் (எபி 4:16; 10:22). இது ஆவியினால் ஏற்பட்ட உரிமை (எபே 2:18). இயேசுவின் இறப்பு இறைவன் – மனித உறவைப் புதுப்பித்தது. மேலும் மனித உறவுகளை யும் மேம்படுத்தியது. இந்த உரிமை நாளும் தொடர்கிறது. இதற்குக் காரணம் இயேசுவின் மீட்புப் பணி தொடர்ந்து செயல்படுவதேயாகும் (உரோ 5:1; காண்க: உரோ 3:25; எபி 11:6).

அண்ணகன் (EUNUCH)

அண்ணகர்கள் அரண்மனையில் பெண்கள் தங்கியிருக்கும் பகுதியின் மேற் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர் கள். வழக்கமாக இவர் விதை அடித்து ஆண்மை நீக்கப்பட்டவர். திருமணம் செய்துகொண்ட அண்ணகர்களும் உண்டு (ஆதி 39:1). ஆனால் போத்திபார் அநேக மாக அண்ணகராக இருக்கமுடியாது. ஏனெனில் 'அண்ணகன்' என்ற சொல் அவனது வேலையையே குறிக்கும். பழ மேற்காசிய அரசவைகளில் இருந்தது போல், மெசபொத்தாமியா வழியாக உரோமை, பைசன்டைன் பேரரசுகளி லும் அரசியல் முக்கிய வேலைகளுக்கு அண்ணகர்களைப் பயன்படுத்தும் முறை புகுத்தப்பட்டது.

அண்ணகர்கள் உயர் அதிகாரிகளாக வும் இருந்தனர் (ஆதி 39:1; அ.ப. 8:27). ஆனால் இஸ்ராயேலில் பழுதுபட்ட ஊன

முற்ற மற்ற பொருட்களைப் போன்று அண்ணகர்களும் ஆண்டவருடைய உடன் படிக்கைச் சபையில் புகுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டனர் (லேவி 22:24; உப 23:1). எனவே இஸ்ராயேல் மக்கள் நாடு கடத் தப்படும்போது பாபிலோன் அரண்மனை யில் அண்ணகராய் இருப்பார்கள் (ஏச 39:7) என்று ஏசயா இறைவாக்குரைத்த போது அனைவரும் அஞ்சினர். இந்த இறைவாக்கு நிறைவேறியதா என்பதும், தானியேல் ஓர் அண்ணகரா (2 அர 20: 17–18) என்பதும் தெளிவாகத் தெரிய வில்லை. ஆனால் அடிமைகள் பொது வாக அண்ணகராக்கப்பட்டனர் என்று எரோதோட்டஸ் என்பவர் கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் அண்டை நாட்டவர் அரசவைகளில் அண்ணகர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர் (எஸ்த 1:10–15; தானி 1:3.8–9). தீரிலிருந்து வந்த ஈசபேல் அண்ணகர்களைப் பயன் படுத்தினாள் (1 அர 22:9; 2 அர 8:6; 9:32). தாவீதும் அவர்களை அலுவலர்களாகப் பயன்படுத்தினார் (1 சாமு 8:15; 1 நாள் 28:1). யூதாவை இறுதியாக ஆண்ட மன்னர் களும் அண்ணகர்களைப்பற்றி அறிந் திருந்தனர் (2 அர 24:15; 25:19; எரே 41:16). திருமுறைப் புற நூல்களில் சட்டத்தைக் கடைப்பிடிக்கும் அண்ணகர் பாராட்டப் படுகிறார். பெரிய ஏரோது தனக்குப் பானம் அளிக்கும் அதிகாரியாக ஒரு அண்ணகரைப் பயன்படுத்தினார் என்று யோசிபஸ் கூறுகிறார். மெசியா அரசில் விசுவாசமற்ற இஸ்ராயேலர்களுக்கு முன்னால் விதையடிக்கப்பட்ட அண்ணகர் களும் அன்னியர்களும் நுழைவார்கள் என்று ஏசயா முன்னறிவிக்கிறார் (ஏச 56:3–5; காண்க: ஞான 3:14).

புதிய ஏற்பாட்டில் எத்தியோப்பிய அரசியான காத்தாக்கேயின் மேலலுவலன் ஒரு அண்ணகன் ஆவான் (அ.ப. 8:27–29). இதன் வழியாக நிலையானச் சடங்கு தீட்டுடையவனும், இறையரசை ஏற்றுக் கொள்ளுதல், கிறிஸ்துவின் உடலில் முழுப்பங்கு பெறுதல் ஆகியவற்றிலிருந்து விலக்கப்படுவதில்லை என்று சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர். திருமண முறிவு பற்றிப் பேசுகையில் 'தாய் வயிற்றினின்று அண்ணகராகப் பிறந்தவரும் உளர். மனிதரால் அண்ணகரானவரும் உளர். விண்ணரசை முன்னிட்டு அண்ணக ராக்கிக் கொண்டவரும் உளர் என்று (மத் 19:12) இயேசு அண்ணகர்களை வேறு படுத்துகிறார்.

இறைவனின் அரசில் நன்முறையில் சேவை செய்யத் தங்களது இனவிருத்தி ஆற்றலைத் தியாகம் செய்பவர்களே இயேசுவுக்காகத் தங்களையே அண்ணகர் களாக்கிக் கொண்டவர்கள் என்று உருவக மாகக் கூறப்படுகின்றனர். இது உடற் கூறு களுக்கு அப்பாற்பட்ட பொருளில் கூறப் படுகிறது. அறுவை சிகிச்சை அல்ல. இயேசு இங்கு தன்னை அல்லது திரு முழுக்கு யோவானைக் குறிப்பிடுகிறார் என்று சிலர் கருதுகிறார்கள். அண்ணகர் கள் ஆற்றலற்ற மனிதர்கள் என்று சீராக் ஆகமம் கூறுகிறது (சீரா 20:3; 30:21). மத் 19:2– என்ற வாசகம், கன்னிமைக் குருத் துவத்திற்கு அடிப்படையாக விளக்கப்படு கிறது.

அதசா (ADASA)

யூதா மக்கபேயர் நிக்கானோரின் சீரியாப்படையை கி.மு. 161–இல் தோற் கடித்த இடமாகிய அதசா, எருசலேமிற் கும் பேத்து – கோரனுக்கும் இடையேயுள்ள வழியோரம் அமைந்துள்ள நகரம் (1 மக் 7:40.45). இது. எருசலேமிலிருந்து வடக் கில் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இன்றைய கிர்பேத்–அத்தசே ஆக இருக்க லாம்.

அதசா (HADASHAH – புதிய நகர்)

இது யூதாவில் இலாக்கீசுக்கு அருகில் செப்பேலா மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர் (யோசு 15:37). இது மோரசேத்துகாத்துப் பகுதியில் அமைந்திருந்தது. ஆனால் சரி யான இடத்தை அறிய முடியவில்லை. ஒரு காலத்தில், இது திகிரிசுக்கும் அகக் கலோனுக்கும் இடையில் உள்ள இக்கால கத்தாவாகக் கருதப்பட்டது. ஆனால் இது அரகு எல்–மென்சியோவுக்கும் கிர்பெத்து அய்லானுக்கும் இடையில் இருக்கும் கிர் பெத்து ஏல்–நுதேயிதாவாக இருக்கலாம் என்பது சரியான ஊகமாக இருக்கலாம்.

அதலியா (ADALIA - மதிப்பிற்குரியவர், நெருப்புக் கடவுள்)

அகாகியனான ஆமானின் ஐந்தாவது புதல்வன் (எஸ் 9:8)

அதாசா (HADASSAH – மண மலர்ச் செடி)

எஸ்தரின் மூல எபிரேயப் பெயராகவோ (எஸ்த 2:7) அல்லது அவளுக்கு அளிக்கப்பட்ட பெயராகவோ இருக்கலாம். பின்னது சரியென்றால் அக்காதிய மொழியில் அதாசாவுக்கு "மணப்பெண்" என்று பொருள் உண்டு. இது இசிதார் தேவதைக்கு அளிக்கப்பட்ட பட்டமாகும். பென்யாமீன் குலத்து மோர்தெக்காய் என்பவர் இவளை எடுத்து வளர்த்தார். ஏனென்றால் அவளுக்குத் தாயும், தந்தையும் இல்லை.

அதாதா (ADADAH)

ஏதோமின் எல்லைக்கருகே யூதேயாவின் தென் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள நகரம் (யோசு 15:22). இப்பெயர் வடிவம் அசாதாரணமானது. இது யூதாவைச் சேர்ந்த அரோயர் என்ற இடத்தின் (1 சாமு 30:28) மறு பெயரான அராராவாக என்று இருக்கவேண்டும் என்பது அறிஞர்கள் கருத்தாகும். தாவீது அமலேக்கியரிடம் கொள்ளை அடித்த பொருட்களில் ஒரு பகுதியை அன்பளிப்பாகக் கொடுத்த நகரங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்விடம் பேயேர் - செபாவிக்குத் தென்கிழக்கில் 19 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பேத் – அராராவாக இருக்கலாம்.

அதாதுரிம்மோன் (HADAD - RIMMON- ரிம்மோன் ஓர் இடி)

மேற்குச் செமித்திய புயல் கடவுளின் கலப்புப் பெயராகும். ஒருவேளை மெகிதோ பகுதியில் வழிபடப்பட்ட கானானியப் பாகாலின் தல வடிவமாக இருக்கலாம். இந்த வழிபாட்டில் தாவரக் கடவுளின் மரிப்பும் உயிர் பெறுதலும் புலம்பப்பட்டது. இந்த வழிபாட்டோடு தொடர்புப் படுத்தப்பட்டது. செக் 12:11–இல், தாங்களே கொன்றுபோட்ட தாவீது குடும்பத்தைச் சேர்ந்த அரசனைப்பற்றி யூதா கொள்ளும் அவ நம்பிக்கை இப்புலம்பலோடு ஒப்பிடப்படுகிறது. சில அறிஞர்கள் 609–இல் மெகிதோவில் எகிப்திய பாரவோன் நெக்கோவுடன் நடந்த போரில் யோசியா அரசன் கொல்லப் பட்டது (காண்க: 2 நாள் 35: 24–25) பற்றிய புலம்பலோடு இக்கூற்றைத் தொடர்பு படுத்துகின்றனர்.

அதாதுரிம்மோன் ஒரு இடப்பெயராகவும் இருக்கலாம். இது தன்பெயரை இந்தப் புலம்பல் வழிபாட்டிலிருந்து பெற்றிருக்கக்கூடும். செக் 12:11–இல் கூறப் படும் சடங்கு நடந்த இடமாக இருக்கக் கூடும். சிலர், இந்த இடம் விவிலிய இடமான தானாக்குக்கு அருகிலுள்ள ரும்மானே என்ற கிராமமாக இருக்கலாம் என்பர். இதைவிட, மெகிதோச் சமவெளியில் சிறிது கிழக்கிலுள்ள உரோமையர் படை நகரமாக (இக்கால லெக்குன்) இருந்திருக்கலாம். இந்த இடத்தை கி.பி. 4–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போர்டோ என்ற மாக்சிமியன் திருயாத்ரீகர் பொலி என்று அழைக்கிறார். இது செசரியாவுக்குக் கிழக்கில் 27 கி.மீ. தொலைவிலும், இசிரியேலுக்கு மேற்கில் 16 கி.மீ. தொலைவிலும் உள்ளது. எரோனிமுசின் கருத்துப்படி மாக்சிமியன்பொலி முற்காலத்தில் அதாதுரெம்மோன் என்றழைக்கப்பட்டது.

அதாதெசர் (HADADEZZER – அதார் ஓர் உதவி ஆவார்)

அரமேய நாட்டைச் சேர்ந்த சோபாவின் அரசன் அதாதெசர் ஆவார். இவர் தாவீது அரசரால் தோற்கடிக்கப் பட்டார். தமஸ்கு நகர மக்கள் அதாதெசருக்கு, உதவி செய்ய வந்தனர். அரமேய அரசர்களில் ஆற்றல்மிக்கவர். முன்னால் அசீரியரிடமிருந்த பகுதியில் யூப்பிரத்திசு வரையிலும் ஆட்சி செய்தார். கோழையான இரண்டாம் அசுராபி (கி.மு. 1012–972) இதைத் தடுக்க முடியவில்லை. சவுலின் காலத்தில் சோபாவினருக்கும் இஸ்ராயேலருக்கும் போர் மூண்டது.

பழைய ஏற்பாட்டில் அதாதெசர், தாவீது கொண்ட தொடர்பை 3 இடத்தில் சொல்லுகிறது.

(அ) 2 சாமு 10:6–14–இல் அம்மோனியர்கள், சீரியர்கள் ஆகியவர்களுடன் இவரும் இரபாவில் யோவாபுவால் தோற்கடிக்கப்பட்டார்.

(ஆ) 2 சாமு 10:15–18 தாவீதுக்கும் அதாதெசருடைய படைத்தலைவன் சோபாக்கு தலைமையில் அணி வகுத்த புதிய போர்ப் படைக்கும் கேலாம் என்ற இடத்தில் நடந்தபோரைப் பற்றி விளக்குகிறது. திரும்பவும் தாவீது அரமேயர்களைத் தோற்கடித்தார். இதனால் அரமேயர்களிடமிருந்து தாவீது பெரும் கப்பம் பெற்றார். அவரது ஆதிக்கம் யோர்தானுக்கு அப்பாலும் பரவியது (8:7–8; 10:19). அதாதெசருக்கு அடியில் இருந்த எல்லா அரசர்களும் இஸ்ராயேலரோடு சமாதானம் செய்து கொண்டனர்.

(இ) 2 சாமு 8:3–8 தாவீது யூப்பிரத்திசு நதிக்கரையிலுள்ள நாட்டைக் கைப்பற்றிச் செல்லுகையில், இரகோபுவின் மகன் அதாதெசர் என்ற சோபாவின் அரசரைத் தோற்கடித்தார். தமஸ்கு நகரத்தாராகிய சீரியர் சோபாவின் அரசன் அதாதெசருக்கு உதவி செய்ய வந்தார்கள். ஆனால் தாவீது அங்குத் தம் படைகளை வைத்து சீரியர்களை அடிமையாக்கி விட்டார். இவை யோர்தானுக்கு அப்பால் வியாபாரக் கட்டுப்பாட்டையும், பிகாவிலுள்ள செம்புக் கனிவளங்களின் மேல் கட்டுப்பாட்டையும் கொடுத்தன. அதாதெசருடைய ஊழியர் வைத்திருந்த பொற்கலன்களையும், பேத்தா, பேரோத்தாய் ஆகிய நகர்களிலுள்ள வெண்கலத்தையும் தாவீது எருசலேமிற்கு எடுத்துக் கொண்டு வந்தார். சில ஆய்வாளர்கள் இம்மூன்றும் தனித்தனி போர்களை விவரிக்கின்றன என்பர். மற்றவர்கள் ஒரே தொடர்ச்சியான நிகழ்ச்சிகளை விவரிக்கின்றன என்பர்.

அதாமா (ADAMAH – செம்மண், செந்நிலம்)

நப்தலி நாட்டிலுள்ள மதிற்சுவர்களால் பாதுகாக்கப்பட்ட ஓர் நகரம் (யோசு 19:36). இது இருந்த இடம் தெளிவாகத் தெரியாத போதிலும், மதிற்சுவர்களால் சூழப்பட்டுள்ள நகர்களின் பட்டியலின்படி' கலிலேயா கடலின் வடமேற்கே அமைந்திருந்ததாகத் தெரிகிறது. இது கெனசரேத்து (கலிலேயாக்) கடலில் யோர்தான் ஆறு வந்து சேரும் இடத்திற்கு வடகிழக்கே 4 கி.மீ தொலைவிலுள்ள காசர்–எத்தம் ஆக இருக்கலாம்.

அதாமி–நெகபு (ADAMI - NEKEB - கணவாயின் அதாமி)

நப்தலி நாட்டின் எல்லைப் பகுதியிலுள்ள நகர் (யோசு 18:33). கலிலியோவின் தென் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள கிர்பேத்தாமியேயாக இருக்கலாம்.

தாபோர் மலைக்கு வட கிழக்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. கவுரானையும் ஆக்கோ சமவெளியையும் இணைக்கும் வியாபார வழியில் ஒரு கணவாய் இருந்தது. இதையும் ஆதாம் என்ற இடத்தையும் குழப்பி விடக்கூடாது. சில அறிஞர்கள் இவ்விடம் கிர்பேத்–எத்– தேல் லாக இருக்கலாம் என்பர்.

அதாயா (ADAIAH – யாவே தம்மையே அணி செய்து கொண்டார்)

1. போசுக்காத்தைச் சேர்ந்த யோசியாவின் தாய்வழிப் பாட்டனார் (2 அர 22:1).

2. இவர் கெரிசோம் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். தாவீதால் நியமிக்கப்பட்ட ஆலயப் பாடகர்களின் பட்டியலில் இடம் பெறும் ஆசாபுவின் தூரத்து மூதாதையர் ஆவார் (1 நாள் 6:41).

3. பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து, எருசலேமிற்கு திரும்பி வந்த குருக்களின் ஒருவர் (1 நாள் 9:12; நெக 11:12). மலக்கியாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர், எரொகாமின் மகன் ஆவார்.

4. பென்யாமின் குலப் பெயர் பட்டியலில் காணப்படும் சிமயியின் மக்களில் ஒருவர் (1 நாள் 8:21).

5. இது புறவினப் பெண்களை மணந்தவர்களின் பட்டியிலில் இடம் பெறும் இருவரின் பெயராகும். ஒருவர் பானியின் வழித்தோன்றல் (எஸ் 10:29). மற்றவர் பினுயியின் வழித்தோன்றல் (10:39).

6. எருசலேமில் குடி கொண்டிருந்த யூதா குலத்தைச் சேர்ந்தவர். யோயாரீபுவின் மகன் (நெக 11:5).

7. அரசி அத்தாலியாவை பதவியிலிருந்து நீக்குவதில் ஈடுபட்டிருந்த சேனைத் தலைவர்களில் ஒருவரான மாசேயாவின் தந்தையாவார் (2 நாள் 23:1).

அதார் (நிறைவு, மகிமை)

யூத ஆண்டுக் கணிப்பில் 12–வது மாதமாகும் (எஸ் 6:15). பெப்ரவரி – மார்ச், மாசி மாதங்களுக்கு இணையானது. இம்

மாதத்தில் பூரிம் விழா கொண்டாடப் பட்டது (எஸ் 9:17.19.21). ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு இடையில் பதின்மூன்றாவது மாதம் சேர்க்கப்பட்டது. இது இரண்டாவது அதார் என்றழைக்கப்பட்டது.

அதான், அதோன் (ADDAN, ADDON – அரண் செய்யப்பட்ட இடம்)

பாபிலோனைச் சார்ந்த அடையாளம் தெரியாத பகுதி. இங்கு வாழ்ந்து தாயகம் திரும்பிய நாடு கடத்தப்பட்டவர்கள் தங்கள் முன்னோர் பாரம்பரியத்தை நிரூபிக்க முடியவில்லை (எஸ் 2:59: நெக 7:61). நெக 7:61–இல் இது அதோன் என்றழைக்கப்படுகிறது.

அதி (ADDI – அணி செய்யப்பட்டது)

1. நாடு கடத்தப்படுதலுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்தவர். இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (லூக் 3:28).

2. அதினா என்ற பெயரின் மற்றொரு வடிவமாகத் தெரிகிறது. அதினா – 1ஐக் காண்க.

அதிகாரம் (AUTHORITY)

யூத, கிறிஸ்தவ எண்ணங்கள் அதிகாரத்தின் மூலம் இறைவனே எனக் கூறுகின்றன (தானி 2:37தொ; யோவா 19:11; உரோ 13:1). எனவே ஆண்டவரிடமின்றி அதிகாரமில்லை என்பது சாலப் பொருந்தும்.

I பழைய ஏற்பாடு :

(அ) "அதிகாரம் அளிப்பவர் ஆண்டவரே" என்று பவுல் வகுத்த (உரோ 13:1) இக்கோட்பாட்டை, பழைய ஏற்பாடு என்றுமே ஏற்று வந்திருக்கிறது. ஆனால் பழைய ஏற்பாட்டில் இறைவன் இட்ட கட்டளைக்குக் கட்டுப்பட்டே இவ்வதிகாரம் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. ஆண்டவரின் அதிகாரம் எங்கும் எதிலும் எப்பொழுதும் எல்லையற்று நிறைந்துள்ளது.

1. இவ்வுலக அதிகாரத்தின் பண்புகள்:-

இறைவனது படைப்பில், எல்லா அதிகாரங்களும் இறைவனிடமிருந்தே வருகின்றன: மனிதனுக்கு இயற்கையின் மீதும் (ஆதி 1:28), கணவனுக்கு தன் மனைவி மீதும் (ஆதி 3:16), பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகள் மீதும் (லேவி 19:3) அதிகாரம் அளிக்கின்றார். பலவகையான நிறுவனங்களைக்கொண்ட சமுதாயத்தில், குடிகளுக்காகவும் பொதுநலத்திற்காகவும், ஆளுநர்கள் இறைவனிடமிருந்தே தங்கள் பொறுப்பைப் பெறுகின்றனர். எனவே தான் தலைவிக்கு அடங்கி நடக்கும்படி ஆகாரைக் கட்டளையிடுகிறார் யாவே (ஆதி 16:9); தமஸ்கு நகரின் ஆட்சியை கசயேலுக்கும் (1 அர 19:15; 2 அர 8:9–13), கீழ்த்திசை நாடுகள் அனைத்தின் மேல் அதிகாரத்தையும் நெபுக்கதுனேசாருக்கும் (எரே 27:6) ஒப்புவிக்கின்றார். இவ்வாறு புறவினத்தாரே தங்கள் அதிகாரத்தை இறைவனிடமிருந்து பெறுவாரெனில் (காண்: சீரா 10:4), இறைவனுடைய மக்கள் அதிகாரத்தை அவரிடமிருந்து பெறுகிறார் என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் இவ்வதிகாரம் உலகில் நாம் காணும் அதிகாரத்திலிருந்து மாறுபட்ட பண்பு கொண்டது. இவ்வுலக அதிகாரம் எண்ணற்ற பிரச்சினைகளை எழுப்புகின்றது. அதனைப் பற்றிய அறிவு தனிப்பட்ட ஆய்வுக்கும் சிந்தனைக்கும் உரியதாகும்.

2. அதிகாரத்தை பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டிய விதிகள்

இறைவன் நமக்கு அளித்த அதிகாரத்தை அவரவரர் விருப்பப்படி பயன்படுத்தாது நீதிக்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு பயன்படுத்த வேண்டும். இறைவன் நமக்கு அளித்திருக்கும் அதிகாரம் வரம்பில்லாத ஒன்று அன்று. மாறாக ஒழுக்க நியதிகளால் அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடிமைகளின் உரிமைகளை நுண்ணியமாக எடுத்துக் கூறும்போது சட்டம் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகின்றது (யாத் 21:1–6.26 தொ; உப 15:12–18; சீரா 33:30. ...). பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மேல் கொண்ட அதிகாரமும் அவர்கள் சீரான கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே பயன்படுத்தலாம் (பழ 23:13 தொ; சீரா 7.2 தொ; 30.1....). அரசியல் துறையில் மட்டுமே மனிதன் எளிதில் வரம்பு கடந்து தன் அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய

சூழ்நிலையில் இருக்கிறான். வெற்றி மயக்கம் ஏறிய அசீரியர்களைப் போன்று, (ஏச 10:7–11. 13 தொ). அதிகாரப் போதையில் "எல்லாம் என் கைவன்மையே" என்று இறுமாப்புக் கொள்கிறான் அவன்; 'தானே கடவுள்' என்ற மமதையில் (எச 28: 2–5), ஒப்பற்ற இறைவனுக்கு ஒப்பாக தன்னையே உயர்த்தி (ஏச 14:13 தொ) பழிச் சொற்களைக் கூட கக்குகின்றான் (தானி 11:36). இந்நிலையில் அவனுக்கும், தானியேல் கண்ட கடல் மிருகங்களுக்கும் மிக்க வேறுபாடுகள் இல்லை; இறைவன் அம மிருகங்களைத் தங்கள் போக்குப்படி ஒரு சிறிது காலம் செல்ல விட்டுவிட்டது போன்று (தானி 7:3–8. 19–25), அவனுக்கும் சிறிது காலம் அதிகாரத்தை அளித்துள்ளார். ஆனால் இவ்வாறு தவறான வழியில் பயன்படுத்தப்பட்ட அதிகாரம் இறைவனின் தீர்ப்புக்குள்ளாகி, ஒரு நாள் அழிவுறும் (தானி 7:11 தொ. 26); தீய சக்திகளோடு கைகோர்த்து இயங்கிய இவ்வதிகாரம் முடிவில் அவைகளோடே அழியும்.

ஆ. இறைமக்களிடையே அதிகாரம்

மனிதன் இவ்வுலக அதிகாரத்திற்குரிய விதிகளையும் ஒழுங்குகளையும் மதியாது போனான். எனவே அவற்றை மீண்டும் அமைக்க இறை மக்கள் வரலாற்றில் ஒரு மீட்புத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றார் இறைவன்.

இத்திட்டத்தின் மூலம், மீட்பை இலக்காகக் கொண்டு இவ்வுல அதிகாரம் புதுப்பிக்கப்படும்.

1. இரு அதிகாரங்கள்:-

தம் மக்களை நடத்திச் செல்ல, இறைவன், சிலருக்கு அதிகாரம் கொடுத்து அவர்களைத் தமது பிரதிநிதிகளாக நியமிக்கின்றார். இவர்கள் முதன்மையாக அரசியல் தலைவர்கள் அல்லர். மாறாக இஸ்ராயேலை "குருக்களின் அரசாகவும், புனித மக்களினமாகவும்" (யாத் 1:16) உருவக்கும் பணிக்காக அனுப்பப்பட்ட இறை நடுவர்கள் இவர்கள். மோசேயும், இறைவாக்கினரும், குருக்களும் பெற்ற அதிகாரம் அடைப்படையில் ஆன்மீகத் துறையைச் சார்ந்ததாகும்; இறைவன் கொடுத்த இவ் வதிகாரத்தை யாவரும் பார்க்க வெளிப் படையாக இவர்கள் பயன்படுத்தினர். இருப்பினும் இஸ்ராயேல் ஒரு தேசிய சமூகமாகவும், தனக்கென அரசியல் அமைப்புக்கள் கொண்ட ஒரு தனி நாடாகவும் திகழ்ந்தது. ஆனால் இறைவன் பெயராலேயே இங்கே எல்லா அதிகாரங்களும் செலுத்தப்படுவதால், இது ஒரு தெய்வீக அரசாகும்; இவ்வாறே மோசேயுக்கு உதவியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் (யாத் 18:21 தொ; எண் 11:24 தொ) செல்வாக்கு மிக்க யோசுவா, நீதிபதிகள் போன்றோரும், அரசர்களில் சிலரும் இறைவன் பெயரில் இஸ்ராயேலை ஆண்டு நடத்திச் சென்றனர்.

இறைவன் இஸ்ராயேலரோடு ஏற்படுத்திய உடன்படிக்கை, ஆன்மீக அதிகாரத்திற்கும் அரசியல் அதிகாரத்திற்குமிடையேயுள்ள நெருங்கிய பிணைப் பையும், இஸ்ராயேலின் தெய்வீக அழைப் பின் அடிப்படையில் அரசியல் அதிகாரம் ஆன்ம அதிகாரத்துக்கு கீழ் படுத்தப்பட்டதையும் உணர்த்துகிறது. எனினும் நடைமுறையில் இவ்விரு அதிகாரங்களுக்கு மிடையே தவிர்க்க முடியாத பூசல்களுக்கு வழிகோலுகின்றது. இவ்வாறு சவுல் சாமுவேலோடும் (1 சாமு 13:7–15:15), ஆகாபு எலியாவோடும் (1 அர 21:17–24) அரசர் கள் பலர் தங்கள் காலத்து இறைவாக்கினர்களோடும் மோதிக் கொள்கின்றனர். மேலும் இறை மக்களிடையே, மற்றெங்கும் போல, இறைமக்களும் தவறான வழியில் அதிகாரத்தைக் கையாளுவதைத் தவிர்க்கவில்லை. இவ்வதிகாரம் தெய்வத் தீர்ப்புக்குள்ளாவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்; இஸ்ராயேல் அரசர் குலத்தின் அரசியல் அதிகாரம் நாடு கடத்தப்பட்ட நிலையில் முற்றுப்பெறும்.

2. புறவினத்தாரின் ஆட்சியின் கீழ்:-

பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து தாயகம் திரும்பியபின் யூதர்கள் செய்த சீர்திருத்தத்தில், தங்கள் சமுதாயத்தை முந்திய காலத்தைப்போல இறைவனை மையமாகக் கொண்ட ஆட்சிமுறையிலேயே அமைத்தனர். ஆனால் இப்பொழுதோ அன்னியர் தங்களை ஆள, இவர்கள் சாதாரண குடிமக்களாக வாழ்ந்தனர். இந்நிலை ஆன்மீக அதிகாரத்திற்கும்

அரசியல் அதிகாரத்திற்குமிடையே உள்ள வேறுபாட்டைக் கண்கூடாக வெளிக்காட்டியது. இப்புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு இறைமக்கள் இருவகையான நடத்தையை ஏற்றுக்கொண்டனர். அன்னியர் அதிகாரத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வது முதல்வகையாகும். இதன்படி இறைவனிடமிருந்தே சைரசும் அவர் பின் வருவோரும் தங்கள் பேரரசைப் பெறுகின்றனர் என்று ஏற்றுக் கொண்டனர் (எச 45:1 தொ): தெய்வ வழிபாட்டைப் பழைய நிலைக்குக்கொண்டு வருவதற்கு இவர்கள் ஆதரவு தருவதால், யூதர்கள் இவர்களுக்கு விசுவாசமுள்ள குடிமக்களாக பணியாற்ற வேண்டும்: அவர்களின் நலனுக்காக ஆண்டவரிடம் மன்றாட வேண்டும் (எரே 29:7; பாரு 1:10 தொ). தங்கள் எதிரிகளை இறைவன் சீக்கிரம் பழிவாங்க வேண்டும் என்று மன்றாடுவதும் இறுதியில், அன்னியர் தங்களை அதிகமாகக் கொடுமைப் படுத்தத் தொடங்கினால் கிளர்ந்தெழ வேண்டும் (யூதித்; 1 மக் 2; 15–28) என்பதும் அவர்கள் ஏற்றுக்கொண்ட இரண்டாம் போக்கு ஆகும். மக்கபேயர் காலத்தில் மீண்டும் முடியாட்சி தளிர்விட்டபோது, இருவித அதிகாரங்களுக்குமிடையே சந்தேகமான உறவு நிலவி, இறுதியில் மிகவும் தரங்கெட்டுப் போயிற்று. கி.மு. 63–ம் ஆண்டில் உரோமைப் பேரரசு தலையிட்டபோது, இறைமக்கள் தாங்கள் வெறுத்து வந்த புறவினத்தாரின் ஆட்சியிலேயே மீண்டும் தங்களையே அடிமைகளாகக் கண்டனர்.

II. புதிய ஏற்பாடு

அ. இயேசு

1. அதிகாரம் உடையவர் இயேசு:-

இயேசு தாம் போதித்து வந்த காலத்தில் ஒருதனிப்பட்ட அதிகாரத்தைப் பெற்றவராய்க் காணப்படுகிறார்: அதிகாரமுள்ளவராய்ப் போதிக்கின்றார்: (மாற் 1:22தொ) அதிகாரத்தோடு பாவங்களை மன்னிக்கின்றார் (மத் 9:6): அவரே ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய்த் திகழ்கின்றார் (மாற் 2:28). "எந்த அதிகாரத்தைக் கொண்டு இப்படிச் செய்கிறீர்" (மத் 21:23) என்று யூதர்கள் அடிப்படைக் கேள்வியையே எழுப்பும் வண்ணம் இறைவனால் அனுப்பப்பட்டவர்க்குரிய முழு ஆன்மீக அதிகாரம் உடையவராய் இருக்கின்றார். இயேசுவும் இக்கேள்விக்கு நேரடியான பதிலிறுப்பதில்லை (மத் 21:27 இ). ஆனால் அவர் புரியும் செயல்களே அக் கேள்விக்கான பதிலைக் காட்டுகின்றன. பிணிகள் மீதும் (மத் 8:8), காற்று, கடல் ஆகியவை மீதும் (மாற் 4:41 இ), பேய்கள் மீதும் (மத் 12: 28 இ) அவருக்கு வல்லமை உண்டு. எனவே அவருடைய அதிகாரம் அரசியில் மீதும் நீடிக்கின்றது. அலகையிடமிருந்து அவர் பெற மறுத்த இவ்வதிகாரத்தை (லூக் 4:5 தொ), உண்மையில் அவர் இறைவனிடமிருந்து முன்பே பெற்றுவிட்டார். எனினும் அவர் மனிதரிடையே இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. பிறரை அடக்கி, உலகத் தலைவர்கள், தங்கள் அதிகாரத்தை வெளிக்காட்ட விரும்பும் போது, இயேசுவோ சீடர்களிடையே பணிவிடைபுரிபவராக விளங்குகின்றார் (லூக் 22:25 தொ). அவர்தான் போதகர்: அவரேதான் ஆண்டவர் (யோவா 13, 13): ஆனால் அவர் பணி விடை புரியவும், தம் உயிரை அளிக்கவும் வந்துள்ளார் (மாற் 10: 42 தொ.இ). அவர் அடிமையின் தன்மை பூண்டதினால்தான், அனைவரும் அவர் முன் மண்டியிடுவர் (பிலி 2:5–11). எனவேதான், தம் உயர்ப் புக்குப்பின், 'விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (மத் 28:18) என்று தன் சீடர்களுக்குக் கூறுவார்.

2. இவ்வுலகத் தலைவர்கள் முன் இயேசு:-

இவ்வுலகத் தலைவர்கள் . முன்னிலையில் இயேசு நடந்துகொள்ளும் முறை மிகப் பொருளுள்ளதாய் விளங்குகின்றது. யூதத் தலைவர்கள் முன் இயேசு மனுமகன் பட்டத்திற்கும் (மத் 26:63 தொ. இ) அப் பட்டத்தோடு மறைநூல் உறுதிப்படுத்தும் அதிகாரத்திற்கும் (தானி 7:14) உரிமை கேருகிறர். அரசியல் தலைவர்கள்முன் அவர் நிலை வேறுபடுகிறது. சீசரின் தகுதியை அங்கீகரிக்கின்றார் (மத் 22:21 இ); ஆனால் அதிகாரத்தின் பெயரைச் சொல்லி நடக்கும் அட்டூழியங்களைச் சுட்டிக் காட்டத்தவறவில்லை (மத் 20:25: லூக் 3:32). பிலாத்துவின் அதிகாரம் மேலி

ருந்து அருளப்பட்டதை இயேசு அறிந்திருந்ததால், அவர்முன் நிற்கும் போது அவருடைய அதிகாரத்தைக்குறித்து அவர் விவாதிக்கவில்லை; ஆனால் நடக்கப் போகும் அநியாயத்திற்கு அவர் கருவியாக பயன்படுத்தப்படுகிறார் என்பதையே வலியுறுத்துகிறார் (யோவா 19:11). ஆனால் அதே சமயத்தில் இவ்வுலகைச் சாராத அரசின் மேல் தனக்குள்ள உரிமையை வலியுறுத்த அவர் தவறவில்லை (18:36). இவ்வாறு, ஆன்மீக அதிகாரமும் இவ்வுலக அதிகாரமும், தனித்தனி வகையில் அவரிடமிருந்தே வந்தாலும், அவர் அவைகளின் வேறுபாட்டைப் புனிதப்படுத்துகிறார், ஆசீர்வதிக்கிறார்; இவ்வுலக அதிகாரம் தற்காலிகமானதே என்றாலும் அதற்கு உரிய மதிப்பையும், இன்றியமையாமையையும் தெளிவுபடுத்துகிறார்; மகிமையில் அவர் திரும்பி வரும்வரை இந்நிலையே நீடிக்கும். இறைவனை மையமாகக்கொண்ட இஸ்ராயேல் அரசில் இவ்விரு அதிகாரங்களும் கலந்திருந்தன: திருச் சபையிலோ இவ்விதக் கலப்புக்கு இடமே இராது.

ஆ. அப்போஸ்தலர்கள்

1. இயேசுவின் அதிகாரத்தைப் பெற்றவர்கள்:–

இயேசு தமது சீடர்களை அனுப்பும்போது தமது அதிகாரத்யையும் ("உங்களுக்குச் செவிசாய்ப்பவன், எனக்குச் செவிசாய்க்கிறான்"), வல்லமையையும் (காண்: மாற் 3:14 தொ.இ; லூக் 10:19) அவர்களிடம் ஒப்படைக்கின்றார். எனினும் இவ்வதிகாரத்தைப் பணிக்காகவே பயன்படுத்த வேண்டும் என்றும் போதிக்கின்றார் (லூக் 22:26இ; யோவா 13:14 தொ). பிற்காலத்தில் அப்போஸ்தலர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டச் சலுகைகளைப் பயன்தரும் வகையில் பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, கெட்டநடத்தையில் ஈடுபட்டுபட்டவர்களைக் கிறிஸ்துவ சமுதாயத்திலிருந்து விலக்குகின்றனர் (1 கொரி 5:4 தொ). அவர்கள் தங்கள் அதிகாரத்தைக் கொண்டு, கிறிஸ்துவுக்கும், மனிதர்களுக்கும் பணி புரிவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனரே அல்லாமல் மக்களை அடக்கியாள முயலவில்லை (1 தெச 2:6–10). இவ்வாறு வெளிப்படையாக அதிகாரம் பயன்பட்டாலும், இது ஆன்மீகத் துறையைச் சார்ந்ததாகும்; ஏனெனில் தாகும்: ஏனெனில் இது திருச்சபையை மட்டுமே ஆளுவதற்குப்பயன்படுத்தப்படும் அதிகாரமாகும். இவ்வாறு ஆன்மீக அதிகாரமும் இவ்வுலக அதிகாரமும் தனித்து வேறுபட்ட நிலையில் செயலாற்றுவது பழங்கால நகர ஆட்சிகளில் காண இயலா ஒரு புதுமையாகும்.

2. இவ்வுலக அதிகாரத்தைக் கையாளும் வகை:–

இவ்வுலக அதிகாரத்தின் மேன்மையையும், அதைக் கையாளுதற்குரிய முறைகளையும் பற்றிய பழைய ஏற்பாட்டுக் கொள்கைகளைப் புதிய ஏற்பாடு ஏற்றுக் கொள்கிறது. ஆனால் புதிய ஏற்பாடு இவ்வதிகாரத்தைப் புதியதொரு அடித்தளத்தில் எழுப்புகின்றது. திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பதுபோல் மனைவியர் தங்கள் கணவருக்குப் பணிந்திருத்தல் வேண்டும்; கணவர்களோ, கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்தது போல் தங்கள் மனைவியருக்கு அன்பு செய்யவேண்டும் (எபே 5:22–33). பிள்ளைகள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (கொலோ 3:20 தொ; எபே 6:1 தொ). ஏனெனில் தந்தையர் அனைவரும் அவ்வுரிமையை இறைவனிடமிருந்தே பெறுகின்றனர் (எபே 3.15); பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அறிவு புகட்டி வளர்க்கும்போது எரிச்சல் மூட்டக்கூடாது (எபே 6:4; கொலோ 3:21). அடிமைகளோ, கல்மனத்தவரும் கொடூரமானவருமானத் தலைவர்களுக்குக்கூட (1 பேதுரு 2:18), கிறிஸ்துவுக்கே கீழ்ப்படிவது போல் (கொலோ 3:22; எபே 6:5...) கீழ்ப்படிந்து இருக்க வேண்டும். தலைவர்கள், தாங்களுக்கு ஒரு தலைவர் வானகத்தில் இருக்கிறார் என்பதை மனதிற்கொண்டு (எபே 6:9) அடிமைகளைத் தங்கள் அன்புமிக்க சகோதரர்களாக பாவிக்கவேண்டும் (பில 16). இத்தகைய சமூக ஒழுக்கமுறை, சமுதாயத்தில் அதிகாரத்தைச் சரியான முறையில் புரிந்து கொள்வதற்குப் பாதுகாப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் இது பிறர் வாழத் தேவையான

பிறரன்புச் சேவைகளுக்கு ஓர் அடிப்படை யையும், அத்தகைய உயரிய வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளையும் நமக்குத் தருகின்றது.

3. திருச்சபையும் உலகத் தலைவர்களும்:-

இயேசுவின் அதிகாரத்தைப் பெற்ற அப்போஸ்தலர்கள் இவ்வுலக அதிகாரத்தோடு தொடர்பு கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றனர். யூதத் தலைவர்கள் மற்ற தலைவர்களைப்போல் அல்லர்; அவர்களுடைய அதிகாரமும் ஆன்மீகத் துறையைச் சார்ந்தது. அவர்களின் தலைமை பீடமோ இறைவனால் ஏற்படுத்தப் பட்டது. எனவே, கிறிஸ்துவுக்கு வெளிப் படையாக அவர்கள் தடையாக அமையாத வரை, அவர்களை அப்போஸ்தலர்கள் மிகவும் கண்ணியமாக நடத்துகின்றனர் (அ.ப. 4:9; 23:1–5). ஆனால் கிறிஸ்துவை மறுதலித்து அவர் சாவுக்குக் கையளிக் கப்பட அவர்கள் காரணமாயிருந்ததால் அவர்களின் பொறுப்பு அதிகமாகின்றது (3:12 தொ; 13:27 தொ). அதோடு நற்செய்தி போதிக்கப்படுவதைத் தடுக்கும் போது, மேலும் தங்கள் நிலையை மோசமாக்கிக் கொள்கின்றனர்: எனவே அப்போஸ்தலர் களும், மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதை விட கடவுளுக்கு கீழ்ப்படிவதே மேல் என்று எண்ணி (5:29) அவர்கள் கட்டளை களை நிராகரிக்கின்றனர். இவ்வாறு கிறிஸ்துவின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள மறுத்ததினால், யூதத் தலைவர் கள் தங்கள் ஆன்மீக அதிகாரத்தை இழக் கலாயினர்.

அரசியல் தலைவர்களோடு உறவு கொள்வது அப்போஸ்தலர்களுக்கு ஏற் பட்ட மற்றொரு பிரச்சனையாகும். உரோ மைப் பேரரசுக்கு பவுல் தனது முழு விசு வாசத்தை வெளிப்படுத்துகின் றார்; உரோமைக் குடிமகன் என்ற பட்டத் துக்கு உரிமை கொண்டாடி (16:37; 22:25...) நீதி பெற சீசரின் மன்றத்தில் வழக்காட விரும்புகிறார் (25: 12). மேலும் கடவுளிட மிருந்தே எல்லா அதிகாரமும் வரு கின்றது என்றும், பொது நலத்திற்கா கவே அரசினருக்கு அத்தகைய அதிகா ரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் நாட்டுத்தலைவர்கள் கடவுளுக்கே பணிபுரி கிறார்கள் என்பதால் நமது மனச்சாட்சி யின்படி அவர்களுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிடுகின் றார் (உரோ 13:1–17). அரசர்களுக்காக வும், அதிகாரிகளுக்காகவும் நாம் மன்றாடவேண்டும் (1 திமோ 2:2) என்றும் உரைக்கின்றார் பவுல். பேதுருவின் முதல் மடலிலும் இதேக்கருத்துக்களைக் காண்கி றோம் (1 பேதுரு 2:13–17). நாட்டுத் தலை வர்களும் இறைவுளத்திறகுக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் திருச்சபையின் ஆன்மீகத் தலைவர்கள் அரசியலுக்கு நேரடியாக உரிமை கொண்டாடுவதை நாம் எங்கும் காண்பதில்லை.

மாறாக, அன்று சீரியப் பேரரசு யூதர் களைக் கொடுமைப்படுத்தியதைப் போன்று, இறைவனுக்கும் அவர் கிறிஸ் துவுக்கும் எதிராக நாட்டுத் தலைவர்கள் எழும் போது, கிறிஸ்துவ இறைவாக்கினர் இறைவனின் தீர்ப்பையும் அழிவையும் எடுத்துரைக்கின்றனர். இதைத்தான் நீரோ, தொமிசியன் ஆகியோரின் உரோ மைப்பேரரசுக்கு எதிராக மொழிந்தது திரு வெளிப்பாட்டுப் நூல் (திருவெளி 17:1–19:10). இறை அதிகாரத்தின் மனு உருவாகப்பாவனை செய்யும் சர்வாதி பத் தியப்பேரரசில் அரசியல்சக்தி சத்தானின் கேலிக்கூத்தாகின்றது. அதன் முன் எந்த விசுவாசியும் தலைவணங்கக் கூடாது.

அதிகாரி

அரசனுக்குக் கீழ், இராணுத்தில், ஆலயத்தில் பணி செய்வோர் அதிகாரிகள் என்றழைக்கப்பட்டனர். ஆனால் அதி காரியை குறிக்கக்கூடிய எபிரேய கிரேக்க வார்த்தைகள் வரையறுக்கப்படவில்லை. ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு குறிப் பிட்ட வேலையை வரையறுப்பது மிகவும் கடினமான ஒன்றாகும். அரசனுடைய செயலன், செபக் கூட்டத் தலைவன் ஆகி யோர் அதிகாரிகளே. இராணுவமானது அதனுடைய அதிகாரிகளால் கட்டுப்படுத் தப்படுகிறது. அரண்மனையிலே அரச னுக்குக் கீழ் வேலை செய்யும் அனை வரும் அதிகாரிகளாவர்.

1. பழைய ஏற்பாட்டைப் பொறுத்தவரை அதிகாரிகள் என்று சொல்லப்பட்டோர்

ஊர் தலையாரி, கண்காணிப்பாளர் ஆவர் (யாத் 5:6.14). இவர்களுடன் வழிநடத்தும் நீதித்துறையைச் சேர்ந்த முதியோரும் (எண் 11:16; உப. 16:18; 1 நாள் 23:4; 2 நாள் 19:18). சேர்க்கப்பட்டனர். இஸ்ராயேலின் குலத் தலைவர்கள் அதிகாரிகளாக (உப. 29:10; 31:28; 1 நாள் 26:29) விளங்கினர். அவர்கள் எவ்வாறு அப்பதவிக்கு தெரிந்து கொள்ளப்பட்டனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பொதுவாக அதிகாரிகள் இளவரசர்களாகவும் அரண்மனையோடு தொடர்புடையவர்களாகவும் (எஸ் 7:28) இராணுவத் தலைவர்களாகவும் (2 நாள் 32:3; நெக 2:9) விளங்கினர். இஸ்ராயேல் நாட்டில் அதிகாரிகள் அரசர்களால் நியமிக்கப்பட்டனர் (1 அர 4:5; 5:16; 9:23). சாலமோனுடைய அரசில் பணிபுரிந்த படைத்தலைவர்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது (2 நாள் 8:10). அரசாங்க வேலைகளைப் பொறுத்தவரை அவர்கள் நாட்டின் ஒரு பகுதியில் தங்கிக் காண்டு அரசனுடைய மேற்பார்வையாளராகப் பணி புரிந்தனர் (நீதி 9:28; ஏச 60:17). சில நேரங்களில் அவர்கள் அரசரால் ஒரு குறிப்பிட்ட பணிக்காக அமர்த்தப்பட்டனர் (எஸ் 2:3).

குருக்களிடமிருந்தும், லேவியர்களிடமிருந்தும் ஆலயத்தைக் கண்காணிக்கும் அலுவலர்கள் (2 நாள் 24:1; 31:13; 35:8; எரே 20:1; 29: 26) நியமிக்கப்பட்டனர். எனவே அவர்கள் ஆலயத்தின் காவலர்கள் (2 அர 11:18) என்று அழைக்கப்பட்டனர்.

2. புதிய ஏற்பாட்டில்:-

லூக் 12:58–ல் பயன்படுத்தும் 'அதிகாரி' என்ற வார்த்தைக்குப் பதிலாக இணைப் பகுதியாகிய மத் 5:25 கிரேக்கமொழி பொதுச் சொல்லாகிய சிறைக்காவலன் என்ற பதத்தைப் பயன்படுத்துகின்றது. யோவான் தலைமைக்குருக்கள், நூற்றுவத் தலைவன் அடியில் பணிபுரியும் காவல் காரர்களைக் (யோவா 7:32.45–46) குறிக்கப் பயன்படுத்துகின்றார். அதே காவலர்கள் தான் இயேசுவைத் தோட்டத்தில் பார்த்தனர் (18:13. 18.22). இயேசுவும் தமக்கும் அத்தகைய காவலர்கள் இருந்தாலும், அவர்கள் போர்புரிய மாட்டார்கள், ஏனெனில் அவருடைய அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று (18:13) என்றார்.

காவலர்கள்தான் பிலாத்துவின் முன்னால் இயேசுவைக் குற்றம் சாட்டினார்கள் (19:6). அப்போஸ்தலர்களும் கூட காவலர்களால்தான் பிடிக்கப்பட்டனர் (அ.ப. 5:22.26) பவுல் தன்னைக் கிறிஸ்துவின் பணியாளர், கண்காணிப்பாளர் (1 கொரி 4:1) என்றே எண்ணினார்.

அதிதா (ADIDA)

எருசலேமிலிருந்து கடற்கரைக்கு வடமேற்காகச் செல்லும் பாதையில் அமைந்திருந்த நகரமாக இருக்கலாம். யூதேயாவின் சமவெளிப் பகுதிக்குப் புறத்தே இலிதாவுக்குக் கிழக்கில் ஏழு கி.மீ அப்பால் ஓர் குன்றின் மேல் அமைந்தது. சீமோன் மக்கபேயுவாலும் பிற்காலத்தில் வெஸ்பேசியனாலும் வலுப்படுத்தப் பட்டது (1 மக் 12:38; 13:13)

அதிதூதர் (ARCHANGEL)

வானத் தூதர்களின் தலைவர் (1 தெச 4:16). மிக்கேலுக்கு அளிக்கப்படும் இடு பெயராகும் (யூதா 9). பாரசீகர், கிரேக்கர் காலத்தில் வானதூதர் இயல் பற்றிய ஆர்வம் உச்ச நிலையடைந்தது எனலாம். அப்போது அதிதூதர்களைத் தலைமையாகக் கொண்ட படிமரபுடைய வான தூதர் இயல் தோன்றியது எனலாம் (தோபி 12:15). யூதப் பாரம்பரியப்படி உரியேல், இரபேல், இரகுவேல், மிக்கேல், சாரியேல், கபிரியேல், இரெமியேல் என்ற ஏழு வானத்தூதர்கள் அதிதூதர்கள் எனக் குறிக்கப்படுகின்றனர். இவர்கள்தான் திருவெளி 8:1–இல் சுட்டிக்காட்டப்பட்ட வான தூதர்களாக இருக்கவேண்டும். மற்ற விவரங்களுக்கு காண்க: வானதூதர்.

அதித்தாயிம் (ADITHAIM-இரட்டிப்பு அணிகலன்)

இது செப்பேலாவிலுள்ள யூதா குலத்தைச் சேர்ந்த சோரா–அசக்கா மாவட்டத்திலுள்ள ஒரு நகரமாகும் (யோசு 15:36). இந்த நகர் இருந்த இடம் சரியாகத் தெரியவில்லை. ஆயினும் இது அய்யலோனுக்கு வடக்கிலுள்ள ஏல்–கதித்தே என்று அடையாளம் காட்டுவர்.

அதிபேல் (ADBEEL – இறைவனின் மூச்சு)

இசுமாயேலின் மூன்றாம் மகன். ஆகவே அராபிய இனப் பெயர் (ஆதி 25:13; 1 நாள் 1:20) அசீரியாவின் மூன்றாம் திகிலாத்து – பிலேசரால் தோற்கடிக்கப் பட்ட பின், எகிப்திய எல்லைப்புற காவ லாளியாக நியமிக்கப்பட்ட இதிபா–இலே யர்கள் தான் இந்த இசுமாயேல் வழிவந்த அரேபிய இனமாக இருக்கலாம். அவர் கள் வடமேற்கு அரேபியாவில் கேதார், நெபயோத்து அருகில் வாழ்ந்தவர்கள்.

அதிமா (ADMA – கோட்டை, அரண்)

பாவத்தின் விளைவாகச் சோதோம், கோமோரா செபோயிம் ஆகிய நகரங் களுடன் சேர்ந்து அழிக்கப்பட்ட சிதீம் பள்ளத்தாக்கிலுள்ள நகரங்களுள் ஒன்று (ஆதி 19:24–29; உப 29:23). கானானியரின் எல்லை விவரிப்பில் குறிக்கப்படுகிறது (ஆதி 10:19). நான்கு கீழ்த்திசை மன்னர் களால் தாக்கப்பட்ட ஐந்து நகரங்களுள் ஒன்றாகும் (ஆதி 14:1–7). இந்நகரின் அரசன் சினாபு, முதலில் கெதர்லா– கோமேரின் சிற்றரசனாக இருந்தார் (14:2). இவர் ஆதி 19:24–29–இல் சோதோம், கோமோரா, செபோயீம் ஆகிய நகரங் களின் சிற்றரசர்களோடு சேர்ந்து தங்கள் அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். இந்நாட்டின் அழிவிற்கு அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. உப 29:23–ல் இந் நாடு வீழ்த்தப்பட்டது குறிப்பாக நினைவு கூறப்படுகின்றது. அதிமா, செபோயீம் ஆகிய நாடுகளின் அழிவை, ஓசேயா இறைவாக்கினர் (11:8) இஸ்ராயேலுக்கு ஒரு எச்சரிக்கையாகப் பயன்படுத்து கின்றார்.

அதிமா, சிதீம் பள்ளத்தாக்கில் நிறுவப் பட்டிருந்தது. சாக்கடலின் தெற்கு வளை குடாவில், இப்பொழுது கடலுக்கு அடியில் உள்ள செயில் எஸால், செயீல் ஏன் – நுமெய்ரா ஆகிய நீரோடைகளுக்கு இடையில் மேற்கு நோக்கி நீண்டு ஓடும் நீரோடையின் மேல், இப்பொழுது இது குறிக்கப்படலாம்.

அதிமாத்தா (ADMATHA – வெல்லப்படாத, அடக்கி வைக்கப்படாத)

அகசுவேரு மன்னனின் ஆட்சியில் ஏழு சிற்றரசர்களில் இவர் ஒருவர் (எஸ்த 1:14). இந்தச் சட்ட ஆலோசகர்கள் (1:13) அன் நாட ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்றனர். இவர்களின் ஆலோசனைப்படி அகசு வேரு வஸ்தியின் அரசிப்பட்டத்தை நீக்கி னார் (எஸ்த 1:19). இவர்கள் எஸ் 7:14–இல் குறிக்கப் பெறுகின்றனர்.

அதிமின் (ADMIN)

தாவீது மன்னர் காலத்துக்கு முந்தி வாழ்ந்த இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (லூக் 3:33).

அதியேல் (ADIEL – இறைவன் என் அணிகலன் ஆவார்)

1.சிமியோனின் புதல்வர்களில் ஒருவர். எசக்கியாவின் ஆட்சிக் காலத்தில் இவர் கள் தங்கள் ஆடுகளுக்கு மேய்ச்சலைத் தேடிக் கெதோரின் எல்லையான பள்ளத் தாக்கின் கீழ்ப்புறம்வரை சென்று மிகச் செழிப்பான மேய்ச்சல் நிலங்களைக் கண்டுபிடித்தனர் (1 நாள் 4:36–43).

2. 1 நாள் 9:12 –இல் குறிப்பிடப்படும் ஓர் குரு. இவரே யக்சேராவின் மகனுமாவார். இவர் நெக 11:13–இல் ஆசரேல் என்று அழைக்கப்படுகிறார். இவரது மகன் மாசாய் (நெக 1:13–இல் அமசாய்) பாபிலோன் நாடுகடத்தலிலிருந்து திரும் பியவர்.

3. தாவீதால் அரண்மனைக் கருவூலங் களைக் கண்காணித்து வந்த அசிமா வேத்து என்பவரின் தந்தை (1 நாள் 27:25).

அதிராம்மெலக்கு (ADRAMMELEK ஆதார் அரசன் ஆவார்)

1. தேவதை:- செப்பர்வாயிம் (அநேக மாக சீரியாவிலுள்ள கமாத்துக்கு அருகி லுள்ள சபராயீம்) என்ற இடத்திலுள்ள மக்களால் அனம்மெலக்கோடு வழிபடப் பட்ட கடவுள். செப்பாவாயிம் அசீரியர் களால் கி.மு. 722–21–இல் சமாரியாவில் குடியேறப்பட்டது. மெலேக்கு என்பது செப்பர்வாயிம் என்ற இடத்தின் பெயரி டப்படாத ஒரு கடவுளின் பட்டமாக இருக் கலாம் அல்லது அத்தார் (வீனஸ் நட்சத்தி ரம்) என்ற கடவுளின் பட்டமாக இருக்க லாம் என்று கருதப்படுகின்றது. இத்தேவ தையின் வழிபாடு குழந்தைகளைப் பலி யாக எரிக்கும் வழக்கத்தையும் கொண்டி ருந்ததால் (2 அர 17:31) அதிராம்மெலக்கு அசீரிய அல்லது பாபிலோனியத் தேவதை

என்பதைவிட சீரியாத் தேவதை என்பது மேல். ஏனெனில் அசீரியர்களும், பாபிலோனியர்களும் இவ்வழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. அதிராம்மெலக்கும் பெனிசிய அதாரும் ஒன்றே என்று கருதப்படுகிறது.

2. ஆளின் பெயர்:- *2 அர 19–37 (ஏச 37:38)* இன்படி தன் சகோதரன் சரேசருடன் சேர்ந்து நிஸ்ரோக் என்ற கோவிலில் தன்னுடைய தந்தையைக் கொலை செய்தான். பின் அரராத்து நாட்டிற்குத் தப்பி ஓடி விட்டான். இந்த கொலை அசீரியா வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. இப்பெயர் அந்ரோமாக்கேஸ் என்று யோசிபசின் நூலிலும், கிரேக்க மூலங்களில் அதிரமெலோஸ், அரிதுமுசான் என்றும் காணப்படுகிறது.

அதிராமித்தியம் (ADRAMYITIUM – தந்தையின் பெயர், ஆளின் பெயர்)

சிறிய ஆசியாவிலுள்ள உரோமை மாகாணத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள மீசியாவின் துறைமுகமாகும்.

பவுல் தமது நான்காம் பயணத்தில், ரோமைக்குச் செல்லும் கப்பலுக்கு மாறுமுன் செசாரியாவிலிருந்து இலீசியாவிலுள்ள மீராவுக்கு அதிராமித்தியக் கப்பலில் பயணம் செய்தர் *(அ.ப. 27:1–6)*.

எரோதோத்தஸ் இவ்விடத்தின் பெயரை தன்னுடைய நூலில் குறிப்பிடுகின்றார். இது இலிதியா மக்களால் கட்டப்பட்டதென்றும், பின்பு மீசியினருக்குச் சொந்தமானதென்றும் ஸ்ட்ராபோ குறிப்பிடுகின்றார். இது ஒரு புகழ்வாய்ந்த நகரமென்றும், செனோகிலிஸ் என்ற பேச்சாளர் பிறந்த இடம் என்றும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

தெற்கு அராபியாவிலுள்ள அத்ரமொத் என்ற இடத்திலிருந்து வந்த வணிகர்கள் முதன் முதலில் தங்களுடைய வணிகத் தலங்களை இங்கு நிறுவினர். கி.பி.1100–இல் துருக்கியரால் கொள்ளையடிக்கப்பட்டபின் இத்துறைமுகம் கைவிடப்பட்டது. இந்த இடத்தின் இன்றைய பெயர் எத்ரெமித் என்பதாகும். இது இன்னும் சிறிது உள் நாட்டில் உள்ளது.

அதிரியா (ADRIA)

இத்தாலிக்கும், கிரீசுக்கும் தென்பகுதியில் கிரேத்தேக்கும், மால்தாவுக்கும் இடையில் உள்ள கடல் அத்ரியாக் கடலாகும். இது இப்போது இயோனியன் கடல் என்றழைக்கப்படுகிறது. பவுலையம் மற்ற கைதிகளையும்கொண்ட கப்பல் மால்தாவை அடையுமுன் இங்குதான் இங்குமங்கும் அலைக்கழிக்கப்பட்டது. *(அ.ப. 27:27)*

பவுல் காலத்தில் வாழ்ந்த யோசிப்பஸ் இதே போன்ற தன்னுடைய அனுபவத்தை கூறுகின்றார்; மேலும் அதே காலத்தில் வாழ்ந்த கோரேஸ் என்ற இலக்கிய ஆசிரியரும் இக்கடலின் கொந்தளிப்பையும், அமைதியின்மையையும், அழிவுச் செயலையும் பற்றி எழுதுகின்றார்.

அதிரியேல் (ADRIEL – என் உதவி இறைவன் ஆவர்)

மெகாலாத்தியரான பார்சில்லாயின் மகன். சவுல் மன்னனின் மகள் மேராபுவின் கணவன் *(1 சாமு 18:19)*; "மேகாலாத்தியரான அதிரியேல்" என்று அழைக்கப்பட்டார். பிற்காலத்தில், சவுலின் கொலைக் குற்றத்திற்கு விலையாக கொலை செய்யப்படுவதற்காக அதிரியேலின் புதல்வர்களைத் தாவீது கிபயோனியரின் கையில் ஒப்படைத்தார். இங்கு சில வாசகங்களில் மேராப்புக்குப் பதிலாக மீக்காள் பயன்பட்டிருக்கிறது.

அதிலாய் (ADLAI – யாவே நீதி உள்ளவர்)

தாவீது அரசர் குலத்தின் பள்ளத்தாக்குகளில் இருந்த அரசருடைய ஆட்டு மந்தைகளைக் கண்காணித்து வந்த சாப்பாத்து என்பவருடைய தந்தை இவர் *(1 நாள் 27:29)*

அதிலாய் (ATHLAI – யாவே உயர்த்தப்பட்டவர், யாவேயால் துன்பறுத்தப்பட்டவர்)

எஸ்ராவின் காலதில் புறவினப்பெண்களைத் தங்கள் மனைவியராகக் கொண்டிருந்தவர்களில் அதிலாயும் ஒருவராவார். எனவே இந்தப் புறவினப் பெண்களைத் தள்ளிவிடக் கோரி எஸ்ராவினால் கட்டாயப்படுத்தப்பட்டவர்களில் இவரும் ஒருவராவர் *(எஸ் 10:28)*

அதினா (ADINA – *அணிகலன்)*

சீசாவின் மகன். தாவீதின் பலம் வாய்ந்த ஆட்களின் பட்டியலில் இடம் பெறும் தலைவன். ரூபன் குலத்தைச் சேர்ந்த தலைவன் (1 நாளா 11:42).

அதினா (ADNA – இன்பம்)

1. பாகாத்து – மேவாப்பின் மகன். அயல் நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்துகொண்ட பின்பு அப்பெண்களை அனுப்பி விட கட்டளை பெற்ற ஓர் இஸ்ரா யேலர் (எஸ் 10:30).

2. செருபாபேலுடன் நாடு திரும்பிய ஒரு குரு (நெக 12:15). காரிம் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அதீன் (ADIN – சுவைமிக்க, இன்பத்தில் திளைக்கிற)

பாபிலோனில் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேல் அல்லது எஸ்ராவுடன் எருசலேமிற்குத் திரும்பிய ஒரு சில யூதர்களின் தந்தையும் மூதாதையுமாவார் (எஸ் 2:15; 8:6; நெக 7:20; 10:16).

அதுமீம் (ADUMMIM – *சிவப்புப் பாறை)*

யோர்தான் பள்ளத்தாக்கிலிருந்து மலைதேசத்திற்குச் செல்லும் ஒரு கணவாய். தொன்று தொட்டு எரிகோவிலிருந்து எருசலேமிற்குச்செல்லும் வணிகர்கள் இந்தக் கணவாயைப் பயன்படுத்தினர். எல்லாக் காலங்களிலும், இன்றும் கூட, இந்த கணவாய் இந்த இரண்டு நகரங்களுக்கு இடையில் செல்லும் வழியைச் சேர்ந்ததாகத் தோன்றுகிறது. இது யூதாவின் வடக்கு எல்லையாக இருந்தது (யோசு 15:7); பென்யாமின் பகுதியின் தெற்கு எல்லையில் உள்ள சூரிய நீரூற்று எனப்படும் ஏன்–செமசுவைக்குறிக்க இது உதவுகிறது (18:17). இன்று எருசலேமிலிருந்து எரிகோவிற்குச் செல்லும் வழியில் இங்கு தான் "நல்ல சமாரியன் விடுதி" குறிக்கப் படுகிறது (லூக் 10:34–35). இங்கு நிலமெல் லாம் மிகவும் சிவப்பாக உள்ளது. ஆகவே "இரத்தின் ஏற்றம்" என்று பொருள்படும் தலாத்–எத்–தம் என்று இப்போது அழைக் கப்படுகிறது.

அதுல்லாம் (ADULLAM – பின்வாங்குதல், அடைக்கலம்)

யூதா நாட்டைச் சேர்ந்த ஒரு நகரம் (யோசு 15:35); செப்பேலாவிலுள்ள ஒரு கானானிய நகரம் (12:15). யாக்கோபின் மகனான யூதா, அதுல்லாம் நகரப் பெண்ணை மணந்து கொண்டதும், அதைத் தொடர்ந்து அங்கு அவனுடைய நடவடிக்கைகளும் ஆதி 38:1. 12–20–இல் கொடுக்கப்பட்டுள்ளன. இங்குதான் இந்தப் பெயர் விவிலியத்தில் முதல் முதலாக வருகின்றது.

இஸ்ராயேல் கானான் நாட்டில் குடியேறிய பொழுது யோசுவால் தோற்கடிக்கப்பட்ட முப்பத்தொரு கானானிய அரசர்களுள் அதுல்லாம் நாட்டின் அரசனும் ஒருவர் (யோசு 12:15). இது யூதா கோத்திரத்திற்காகக் குறிக்கப்பட்டு செப்பேலாவிலுள்ள சோரா–அசக்கா மாவட்டத்தைச் சேர்ந்த நகரங்களில் ஒன்று (15:35).

தாவீது, சவுல் மதன்னருக்குப் பயந்து ஓடிச்சென்று இந்த இடத்திற்கு அருகிலிருந்த ஒரு குகையில் தங்கினார். இங்கு இவருடைய குடும்பமும், இவரைப் பின்பற்றியவர்களும் வந்து சேர்ந்து கொண்டனர் (1 சாமு 22:1–2). சிறிது காலத்திற்கு இந்தக் குகை தாவீதின் தலைமைச் செயலகமாக இருந்தது (2 சாமு 23:13 தொ; 1 நாளா 11:15 தொ).

பெலிஸ்தியருடன் சண்டை போட்ட பொழுதும் தாவீது இங்குதான் தங்கினார். இவ்வாறு தங்கியிருந்த பொழுது தாவீதின் வீரர்கள் பெத்லெகேமிலிருந்து குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்தனர் (2 சாமு 23:11; 1 நாளா 11:15). சீசாக்கு யூதாவின் மேல் படையெடுக்கும் முன் இரகபெயாமால் இதன் கோட்டை மதில்கள் கட்டப்பட்டன (2 நாளா 11:7; கி.மு. 918).

மேற்கு, தெற்கிலிருந்து ஏற்படும் படையெடுப்பைத் தடுக்க ஒரே வரிசையாய் கட்டப்பட்டுள்ள கோட்டை நகரங்களுள் இதுவும் ஒன்று.

கி.மு. 710 சனகெரிபு படையெடுத்து கைப்பற்றிய 46 கோட்டை நகரங்களுள் இதுவும் ஒன்றாக இருந்திருக்கலாம் (2 அர 18:13 தொ; 2 நாளா 32:1 தொ). செப்லோவிலுள்ள நகரங்களின் மேல் நடக்கவிருந்த இந்த படையெடுப்பை எதிர் பார்த்து மீக்கா இறைவாக்கினர் புலம்பினார். கி.மு. 711–இல் இரண்டாம் சார்

கோன் எடுத்த படையெடுப்பைக் குறித்தும் இருக்கலாம். எப்படியிருப்பினும் யூதா வின் நகரங்கள் இந்த படையெடுப்பிலி ருந்து தப்பின (மீக் 1:8–16; குறிப்பாக 1:15).

பாபிலோனியாவிலிருந்து நாடு திரும் பிய மக்கள் மீண்டும் குடியேறிய நகரங் களுள் இதுவும் ஒன்று (நெக 11:30). யூதா மக்கபேயு 164–இல் இதுமேய படையெடுப் பின் பொழுது நான்காம் அந்தியோக்கு எப்பிபானின் படைத்தளபதிகளுள் ஒருவ ரான கோர்க்கியாவைத் தோற்கடித்த பின்பு அதுல்லாமில் சென்று ஓய்வெடுத் தார் (2 மக் 12:38 தொ; 1 மக் 5:55 தொ).

இந்த இடம் இப்பொழுது செப்பேலா விலுள்ள பேய்த்–சிப்ரின்னுக்கு கிழக்கு வடக்கிழக்கில் 14 கி.மீ. தொலைவில் உள்ள எஸ் தேல்–செயீக்–மத்கூர் என்ற இடத்தில் குறிக்கப்படுகிறது.

அதுவேல் (ADUEL)

நப்தலி குலத்தைச் சேர்ந்த அசியேலின் வழிவந்தவர்களின் பட்டியலில் வரும் தோபியா என்பவரின் மூதாதையாவார் (தோபி 1:1).

அதுனா (ADNAH – இன்பம்).

1. யோசபாத்து ஆட்சிக் காலத்தில் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு படைத்தலைவன் (2 நாள் 17:14).

2. சவுல்அரசரைக் கைவிட்டு, சிக்கிலா துவில் தாவீதின் படையில் சேர்ந்த மனாசே குலத்தவர் (1 நாள் 12:29).

அதோராம் (HADORAM – அதாத் உயர்த்தப்பட்டார்)

1. கமாத்தின் அரசன் தோகு என்பவ ரின் மகன் (1 நாள் 18:10). தாவீது அதா தெசர் மேல் கொண்ட வெற்றிக்குப் பாராட்ட அவரது தந்தையால் அனுப்பப் பட்டவர். 2 சாமு 8:10–ல் இவர் தோயின் மகன் யோராம் என்று குறிப்பிடப்படு கிறார். இது அதோராம் என்று திருத்தப் பட வேண்டும்.

2. யொக்கிதானின் தலைமகன் என்ற ழைக்கப்பட்ட அதோராம் ஒரு அராபிய இனத்தின் குல முதியவர் ஆவார் (ஆதி 10:27; 1 நாள் 1:21).

3. அரசன் இரகபெயாமின் ஓர் அதி காரி. கட்டாய உழைப்பை மேற்பார்ப்பவ ராக இருந்தார். அரசன் அதோராமை இஸ்ராயேலர்களிடம் கப்பம் வசூலிப்பதற் காக அனுப்பி வைத்தார். அவரை மக்கள் கல்லால் எறிந்து கொன்று போட்டனர். இவர் 1 அர 4:6–ல் அதோனிராம் என்றும் 12:18–இல் அதோராம் என்றும் அழைக்கப் படுகிறார். அதோராம், அதோனிராம் என்பதின் சுருக்கமாகும்.

அதோராயிம் (ADORAIM – இரு குன்றுகள், இரு போர் அடிக்கும் இடங்கள்)

இது யூதா குலத்தைச் சேர்ந்த ஒரு நகரம்; இரகபெயாமாவினால் கோட்டை மதில்கள் பலப்படுத்தப்பட்ட நகரங்களில் இதுவும் ஒன்று (922–915 கி.மு.; 2 நாள் 11:9). இந்நகரம் கெபிரோனுக்கு 8 கி.மீ. தொலைவிலுள்ள மேற்கு, தென்மேற்குத் திசையில் உள்ள இன்றைய தூரா என்று கருதப்படுகிறது. இந்நகரம் பிற்காலத்தில் அதோரா என்றழைக்கப்பட்டது (1 மக் 13:20). அதோராவும், மரிசாவும் இது மேயா நாட்டின் இரண்டு பெரிய நகரங் களாகும். கி.மு. 142–இல் சீமோன் மக்க பேயு திரிபோ முன்னேறுவதை அதோரா வில் தடுத்தார் (1 மக் 13:20–21). கி.மு. 129–ல் ஏழாம் அந்தியோக்கு மரணத் திற்குப்பின் யோவான் இரிக்கானு என்ப வர் அதோராவைக் கைப்பற்றினார். ஏறக்குறைய கி.மு. 79–இல் அலக்சாந்தர் யன்னாயு காலத்திலும் இந்கரம் யூதர் களின் கையில் இருந்தது.

கி.மு. 59–ஆம் ஆண்டில் சீரியாவின் ஆளுநரான கபினியு அதோராயிமைத் திரும்பவும் கட்டியெழுப்ப ஆணையிட் டார். அதைத்தன்னுடைய ஐந்து மாவட்டங் களில் ஒன்றில் ஆட்சி மையமாக்கினார்.

அதோனாய் (ADONAI – என் ஆண்டவர்)

இது மதிப்பையும், மாட்சிமையையும் உணர்த்தக்கூடிய இறைவனது பெயர் களில் ஒன்று. பொதுவாக, இப்பெயர் "ஆண்டவர்", "என் ஆண்டவர்" என்று மொழிபெயர்க்கப்படும். இஸ்ராயேல் மக்கள் பாபிலோனிய அடிமைத்தனத்தி னின்று திரும்பியபின், இறைவனது உச்ச ரிக்கப்படக்கூடாத பெயராகிய யாவேக்குப் பதிலாக இப்பெயரைப் பயன்படுத்தினர். மாசோரேடிக் வாசகத்தைத் தயாரித்த வர்கள் இப்பெயரின் உயிரெழுத்துக்களை

யும், யாவே என்ற பெயரின் மெய் எழுத்துக்களையும் சேர்த்து எழுதி, அதோனோய் என்று உச்சரிக்கப்பட வேண்டும் என்ற மரபை உண்டாக்கினார். சில கிறிஸ்துவப் பிரிவினை சபைகளைச் சேர்த்த மொழி பெயர்ப்பாளர்கள் இந்தக் கலப்புச் சொல்லை எகோவா என்று உச்சரித்தனர்.

அதோனிக்காம் (ADONIKAM – என் ஆண்டவர் எழுந்துவிட்டார்)

பாபிலோனியாவிற்கு நாடு கடத்தப்பட்ட குடும்பங்களிலிருந்து நாடு (எருசலேம்) திரும்பிய குருக்களில், ஒரு குடும்பத் தலைவர் (எஸ் *2:13*; *8:13*; நெக *7:18*). இவரும் நெக *10:16*–இல் வரும் அதோனியாவும் ஒரே ஆளைக் குறிக்கலாம்,

அதோனி–சதேக்கு (ADONI-ZEDEK – என் ஆண்டவர் நேர்மையானவர், சதேக் என் ஆண்டவர்)

யோசுவாவால் கிபயோனில் நடைபெற்ற போரில் தோற்கடிக்கப்பட்ட எருசலேமின் அரசன் (யோசு *10:1.3*). அனேகமாக இவரும் அதோனி– பெசக்கும் ஒரே ஆளாக இருக்கலாம். எருசலேமிற்கு தெற்கேயும், மேற்கேயும் இருந்து கூட்டுச் சேர்ந்த ஐந்து எமோரிய நாடுகளின் அரசர்களுக்குத் தலைவர். இஸ்ராயேல் மக்களின் தாக்கு தலைச் சமாளிக்க முடியாத கிபயோன் நகர் யோசுவாவோடு உடன்படிக்கைச் செய்துகொண்டது. இது அதோனி சதேக்கையும் அவருடைய ஆட்சியையும், பாதித்தது; ஆகவே அவர்கள் அந்நகரைத் தண்டிக்கச் சென்றனர் (*10:1–5*). ஆனால் யோசுவா இரவோடு இரவாக கிபயோனின் உதவிக்குச் சென்றார்; பனிக்கட்டி மழையினால் தாக்கப்பட்டு, கூட்டுச் சேர்ந்த நாடுகள் தோல்வியுற்று, மேற்கு கடற்கரையை நோக்கிச் செல்லும் தாழ் வான வழியில் தப்பி ஓடினர் (*10:12*). ஐந்து எமோரிய அரசர்களும் அவர்கள் தங்கியிருந்த மக்கேதா குகையில் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். அவர்களுடைய உடல்கள் சூரியன் மறையும் வரை மரங்களில் தொங்கவிடப்பட்டு பின்பு அதேகுகையில் போடப்பட்டு பெரிய கற்களால் மூடப்பட்டு முத்திரை செய்யப்பட்டன (*10:6–27*).

அதோனிச (ADONIS – ஆண்டவர்)

சீரிய நாட்டுத் தாவரத் கடவுள். பாபிலோனின் தாமுஸ் என்று வணங்கப் பட்டது. இது வேனிற்கால வெப்பத்தில் மரித்து, கீழுலகிற்குள் இறங்கி, வசந்த காலத்தில் மீண்டும் உயிர்பெற்று இயற்கைக்கு மீண்டும் உயிர் அளித்ததாக நம்பப்படுகிறது. குறிப்பாக பெய்ரூட்டுக்கு அருகிலுள்ள அதோனிஸ் ஆற்றங்கரையில் (இக்கால நகர் இப்ராயீம்) பெனிசிய நாட்டுப்பெண்கள் இக்கடவுளின் மரணத்தை நினைத்து அழுதார்கள். பிளேடோ, "அதோனிஸ் தோட்டங்கள்" என்று குறிப்பிடுவதால், இந்த வழிபாடு கிரேக்கருக்கும் தெரிந்திருந்தது. இத்தேவதையின் மரணத்தையும் உயிர்ப்பையும் அடையாளமாகக் காட்டும் தோட்டங்கள் வீட்டின் கூரைகளில் நடப்பட்டன. இத்தோடங்களைச் சரியாகக் கவனித்து வருவது, இறப்பு அழிவுக்குப்பின் இயற்கைக்கு உதவியதாகவும், தாவர வளர்ச்சியை ஊக்குவித்ததாகவும் கருதப்பட்டது. இத் தோட்டங்களிலிருந்து பெற்ற மூலிகைகளை, அழல் வெள்ளி மேலெழும் 7 நாட்களில் செய்யும் மந்திர வழிபாட்டில் பயன படுத்தினர். தானி *11:37*–இல் இத் தேவதை சுட்டப்படலாம். எச *8:14* இத் தேவதையைக் குறித்தல் தேவதையின் வழிபாடு யூதாவிற்குள்ளும் புகுந்து, குறிப்பாக பெண்களிடையே பிரபல்யமாய் இருந்தது என்று தோன்றுகிறது. ஏச *17:10*–இல் இந்த வழிபாடு, "கண்ணுக்கினிய நாற்றுகளை" என்ற பதத்தின்மூலம் குறிப்பிடப் பட்டுள்ளது எனலாம்; இங்கு 'அதோனிஸ்' 'இனிய' என்ற பொருளுடன் பயன்படுத்தப் பட்டுள்ளது.

அதோனிபெசக்கு (ADONI BEZEK– போசேக்கின் தலைவன், போசக்கின் அரசன்)

இவர் தென் பாலஸ்தீனத்திலுள்ள பெசக்கின் கானானிய அரசர். யூதாவின் படையால் தோற்கடிக்கப்பட்டார். இவர் தன்னுடைய போர் கைதிகளான மற்ற 70 அரசர்களுக்குச் செய்தது போலவே, இவருடைய கைகால், பெருவிரல்கள் வெட்டப்பட்டன (நீதி *1:5–7*). பின்பு, இவருடைய ஆட்களாலேயே எருசலேமிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது. அங்கே இவர் காலமானார்.

அதொனிபெசக்கும், இஸ்ராயேலர் கானான் நாட்டைக் கைப்பற்றிய பொழுது எருசலேமின் அரசனாக இருந்த அதோனிசதேக்கும் ஒரே ஆள் என கருதப் படுகின்றனர் (யோசு 10:1–3). அதோனி சதேக்கு என்ற பெயரில் பிற்பகுதியாக இருக்கும் சதேக்கு ஒரு இறை பெயராகும். பெசக்கு அப்படிப்பட்டதன்று.

அதோனியா (ADONIJAH – யாவே என் ஆண்டவர்)

1. கெபிரோனில் தாவீதுக்குப் பிறந்த நான்காம் மகன். இவரது தாய் காகித்து ஆவாள் (2 சாமு 3:4; 1 நாள் 3:2). அரசர்கள் நூலின் தொடக்க அதிகாரங்களிள், தாவீது அரசரின் கடைசி உடல் நலக் குறைவின் போது, இவர் தாவீதுக்கு அடுத்து சிம்மாசனம் ஏறுவதற்குச் செய்த முயற்சியை விவரிக்கின்றன. அதுவே இவருக்கு அழிவாக முடிந்தது. இவருக்கு மூத்தவர்களான அம்மோன், அபிச லோம், கிலயாபு ஆகியோர் இறந்து விட்ட தனால் (1 அர 2:22), அடுத்தவராகிய இவர் அரசு பதவிக்கு வர எதிர்பார்த்த தில் தவறு இல்லை. ஆனால் தாவீது இதை உற்சாகப்படுத்தவில்லை (1:6). இது வரை இஸ்ராயேலில் அரசன் ஆவதற் கான நிலையான சட்டம் ஒன்று செயல் பாட்டில் இல்லை. அரசனால் நியமிக்கப் பட்டு இஸ்ராயேலின் எல்லாக் குலத்தவர் களாலும், கோத்திரங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்தான் அரசராகலாம். அதோனியாவுக்கு ஒத்துழைத்தவர்களில் யோவாபு, அபியத்தார் என்ற இருவர் இருந்தனர் (1:7). சாலமோனுக்குப் பிர மாணிக்கமானவர்களைத் தவிர, அதோ னியா தான் அரசராவதைக் கொண்டாடத் தன்னுடன் ஒத்துழைத்த அனைவரையும் ஒரு விருந்திற்கு அழைத்தார். அப்போது தான் உண்மையிலேயே அடுத்துச் சிம்மா சனம் ஏறப்போவதாக நம்பினார். இதைக் கேள்வியுற்ற நாத்தான் அதோனியா சிம்மாசனம் ஏறினால் தங்களுடைய உயிர் களுக்கு ஆபத்து என்று சாலமோனின் தாயான பதுசேபாவை எச்சரித்தார். பின்பு பதுசேபா தாவீதிடம் முறையிட தாவீது சாலமோனைக் கீகோனில் அரச னாக முடிசூட்டச் செய்தார் (1 அர 1:11–40). அதோனியாவின் காலந்தவறிய கொண்டாட்டங்கள் அரைகுறையாய் முடித்தன, பாதுகாப்பிற்காகப் பீடத்திற்கு ஓடினார் (1 அர 1:50). ஆனால் சாலோ மோன் அவரை அவருடைய வீட்டிலேயே அடைத்து வைத்து அவருக்கு உயிர்பிச்சை கொடுத்தார் (1:50–53). தாவீது அரசரின் மரணத்திறகுப் பின்பு, தாவீது கடைசி உடல் நலக் குறைவின் பொழுது அவரைக் கவனித்துக் கொண்டு வந்த அபிசாகு என்ற அழகிய பெண்ணைத் தனக்குக் கொடுக்கும்படி சாலமானிடம் மன்றாடும் படி பது சேபாவிடம் கேட்டார். இது அரசுரிமையைப்பங்கப்படுத்துவதாக சால மோன் கருதி அதோனியாவை கொலை செய்ய பெனாயாவைக் கட்டளையிட்டார் (1 அர 2:13–25).

2. யோசபாத்து ஆட்சியின் மூன்றாம் ஆண்டில், யூதா கோத்திர நகரங்களில் நாட்டுத் தலைவர்களுடனும், குருக்களுட னும் சேர்ந்து மக்களுக்குச் சட்டத்தைப் போதித்த லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் (2 நாள் 17:8).

3. எஸ்ரா காலத்தில், உடன்படிக்கைச் சீர்திருத்தத்தில் கையொப்பமிட்ட மக்க ளின் தலைவர்களுள் ஒருவர் (நெக 10:16). இவரும் எஸ் 2:13–இல் குறிக்கப்படும் அதோனிக்காமும் ஒரே ஆளாக இருக்க லாம்.

அதோனிராம் (ADONIRAM – என் ஆண்டவர் உயர்த்தப்படுகிறார்).

இவர் அபுதாவின் மகன், தாவீது, சாலமோன், இரகபெயாம் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் உயர்ந்த பதவி வகித்து, "கட்டாய உழைப்பு" பகுதிக்குப் பொறுப் பாய் இருந்து நீண்ட காலமாக சேவை செயதவர் (2 சாமு 20:24; 1 அர 4:6; 12:18). இஸ்ராயேல் மக்களிலிருந்து சாலமோன் ஒன்று சேர்த்த 30,000 உழைப்பாளர் களுக்கு மேற்பார்வையாளராக இருந்த வர்; இவர்கள் சாலமோனின் கட்டிட வேலைகளுக்குத் தேவையான பொருட் களைச் சேகரிக்கும்படி லெபானோனுக்கு ஒவ்வொரு மாதமும் பத்தாயிரம் பத்தா யிரம் பேராக அனுப்பப்பட்டனர் (1 அர 5:13–14). இரகபெயாம் தன்னுடைய கொடிய திட்டங்களின் மூலம் வடக்குப்

பகுதி கோத்திரங்களை எதிரிகளாக்கிக் கொண்டபொழுது, அவர்களின் மேல் கட்டாய உழைப்பை உடனடியாக புகுத்தும்படி அதோனிராமை அனுப்பி வைத்தார். ஆனால், அவர்களால் கல்லால் எறிந்து கொல்லப்பட்டார் (1 அரச 12:18; 2 நாள் 10:18).

அதோன் (ADDON) – காண்க: அதான்

அத்தனோபி (ATHENOBIUS)

அத்தனோபி ஏழாவது அந்தியோக்கு சிதேதெஸ் மன்னனின் அவையிலுள்ளவர்களில் ஒருவராவார். அந்தியோக்கு மன்னன் இவரைத் தனது பிரதிநிதியாக யூத மக்களின் தலைமைக்குருவான சீமோனிடம் அனுப்பி வைத்தார் (1 மக் 15:32–36).

அத்தரா (ATARAH – பொன்முடி, தோரணம்)

எரகுமேலின் இரண்டாம் மனைவி. இவள் ஓனாம் என்பவரின் தாய் (1 நாள் 2:26).

அத்தரோத்து (ATAROTH–பொன்முடி, தோரணம்)

1. யோர்தானுகவு அப்பாலுள்ள காத்திலுள்ளது அத்தரோத்து (எண் 32:3 3.34). ரூபன், காது ஆகிய குலத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் உடமையாகக் கேட்ட நகரங்களில் இதுவும் ஒன்று (எண் 2:3) ஆனால் காதிற்குக் கொடுக்கப் பட்டது. அவர் இதைப் பாதுகாப்பான அரணாக்கினார் (32:34). தீபோனுக்கு வடக்கே ஏறக்குறைய 13 கி.மீ. தொலைவிலும், சாக்கடலுக்குக் கிழக்கே 16 கி.மீ. தொலைவிலும் உள்ள கிர்பெத் அத்தாரசு என்ற இடமும் இதுவும் ஒன்று என்று கருதப் படுகிறது. மேசா குறிப்புக்களில் இப் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. "இஸ்ராயேல் அரசன் தங்களுக்குக் கட்டிக் கொடுத்த அத்தரோத்தில் காது குலத்தவர் எப்பொழுதும் தங்கினர்".

2. எப்பிராயிமிற்கும் பென்யாமினுக்கும் இடையிலுள்ள எப்பிராயிமின் கிழக்கு எல்லையில் இருந்த எல்லை நகரங்களில் ஒன்று (யோசு 16:7). மலைப்பகுதியான பாலஸ்தீனத்திறகு வாடி–எல்–பாரா வழியாகவும் யோர்தானுக்கு அப்பால் வாடி செராக் (யப்போக் ஆறு) செல்கின்ற முக்கிய சாலையிலும் இருக்கும் முக்கிய மண் குற்றான தேல்–ஏல்–மாசார் இது இருந்த இடம் என்று கருதப்படுகிறது. வேறு சிலர் தேல் செயிக் எத்–தியாப் ஆக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

3. யோசு 16:2–இல் குறிக்கப்படும் ஒரு நகரம். இதுவும் அத்தரோத்து–அத்தார் என்பதும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

அத்தரோத்து–அத்தார் (ATAROTH-ADDAR–மகிமை மிக்க முடி)

எப்பிராயீம், பென்யாமின் ஆகியவற்றுக்கும் இடைப்பட்ட எல்லையிலுள்ள ஒரு நகரம். எப்பிராயிமின் தெற்கு எல்லைக் குறிப்புகளும் (யோசு 16:1–3). பென்யாமின் எல்லைக்குறிப்புகளும் (யோசு. 18:12–13) ஒன்றாக உள்ளன. ஆகவே இரண்டு எல்லைக் குறிப்புகளும் ஒரு மூலத்தைச் சேர்ந்தவை. தேல்–ஏன்–நாஸ்பே குன்றின் அடிவாரத்தில் கிர்பெத்–அத்தாரா என்ற ஊர் உள்ளது. ஆனால் உரோமையர் காலத்திறகு முந்திய பொருட்கள் ஒன்றும் இங்கு காணப்படவில்லை. இந்த இடத்தில் அத்தரோத்து–அத்தாரும், குன்றின் மேல் ஒரு நகரமும் இவ்வளவு நெருங்கி இருக்க வாய்ப்பு இல்லை. ஆசா கோட்டைகள் கட்டிய காலத்தில் மிஸ்பா என்று மாற்றப்பட்ட பழைய பெயர்தான் அத்தரோத்து. அத்தார் என்று சிலர் கூறுகின்றார்கள் (1 அர 15:16–22). இது உண்மையாக இருக்க வாய்ப்பு உண்டு. இது தேல்–ஏன்–நாஸ் பேவுக்கு தெற்கில் பெத்தேலிலிருந்து எருசலேமுக்குச் செல்லும் சாலையிலுள்ளது. வேறுசிலர் தேல்–ஏன்–நாஸ்பே தான் இவ்வூர் என்பர்.

அத்தரோத்து–சோபான்– (ATAROTH-SHOPHAN – சோபானின் முடிவு)

சீகோன் நாட்டிலிருந்து வெல்லப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட பகுதிகளில் காது குலத்தவரால் கட்டப்பட்ட அரணுள்ள நகரம் சோப்பான் நகரமாகும் (எண் 32:35). இப்பெயரானது அத்தரோத்து என்றழைக்கப்படுகின்ற மிகப் பெரிய நகரத்தின் பெயரிலிருந்து எடுக்கப்பட்டது போல் தோன்றுகிறது. அத்தரோத்துக்கு வடகிழக்கே 3 கி.மீ. தொலை

விலுள்ள மிக உயரமான குன்றில் அமைந்துள்ள ருகும் அதாரஸ் பகுதியானது அநேகமாக சோபான் நகராக இருக்கலாம் என்றும் அத்தரோத்துக்குப் பாதுகாவலாகவும் அமைக்கப்பட்டிருந்தது என்றும் கருதப்படுகிறது.

அத்தரோத்–பேத்து–யோவாபு (ATAROTH-BETH-JOAB – யோவாப் வீட்டின் முடிகள், யோவாப்பின் வீட்டின் ஆட்டுக்கிடை)

அத்தரோத் – பேத்து – யோவாபு பெத்திலகேமுக்கு அருகிலுள்ள கிராமம் (1 நாள் 25:4). யூதாவின் தலைமுறை அட்டவணையில் யூதா குலத்தில் வழி வந்தவர்களில் ஒரு குழுவினராக அத்தரோத்து–பேத்து–யோவாபு நகர மக்கள் கருதப்படுகின்றனர். இந்நகர் இருந்த இடம் தெரியவில்லை.

அத்தர்காத்தி (ATARGATIS – திறப்பு)

அரமேயருடைய பெரிய பெண் தேவதை. இவள் அதாதுவின் மனைவி. கிரேக்கர்களாலும், உரோமையராலும் இவள் அடிக்கடி "சீரியவின் தேவதை" என்று அழைக்கப்படுகின்றாள். இவளுடைய பெயர் இரண்டு பெயர்களின் சேர்ப்பாகும். 'அதார்', 'அதே' அல்லது 'அத்தா என்ற முதல்பகுதி இசிதார், அசித்தார்த்தீ, அசித்தரேத் ஆகியோரைக் குறித்தது. இரண்டாவது பகுதி யாருக்கும் தெரியாத ஒரு ஆண் தேவதையின் பெயர். சில சமயங்களில் இந்த ஆண் தேவதையானது "அத்திஸ்" என்பவராக இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. முதன் முதலில் சிறிய ஆசியாவில் இவள் ஒரு தாய்தேவதையாவாள். சிபேலேவிற்கு இருந்தது போல் இவளுக்கும் விதை எடுக்கப்பட்ட குருக்கள் இருந்தனர். இவளுடைய அரியணை சிங்கத்தின் மேல் கட்டப்பட்டிருந்தது. ஆனால் சீரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, இவள் பாபிலோனியாவைச் சேர்ந்த 'இசிதர்' தேவதையின் பல பண்புகளைப் பெற்றாள். பெனிசிய அசித்தார்த்தீ அல்லது அசித்தரேத்தின் பண்புகளுக்கு இணையானவை இவளுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. பெரும்பாலும் கையில் கதிர்களைக் கொண்டிருப்பதாக வரையப்படுகிறாள். சீரியாவிலுள்ள அலெப்போவுக்கு வடகிழக்கிலுள்ள கியெராப்போல் இவளுடைய வழிபாட்டின் மையமாக இருந்தது. ஆனால் மேற்காசியாவில், அவளுக்குப் பலஇடங்களில் கோவில்கள் இருந்தன. கிரேக்கநாட்டிற்கும், ஏன் பிரிட்டன் வரைக்கும், இவள் வழிபாடு சென்றது. கிலயாத்தில் கர்னாயீம் என்ற இடத்தில் இருந்த இவள் கோவில் 2 மக் 12:25–இல் (காண்க: 1 மக் 5:43–44) குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு பாதுகாப்பிற்காக ஓடிவந்த அவ்விட குடிமக்களில் 25,000 பேரை யூதா மக்கபேயு கொன்றார்.

அத்தலியா (ATTALIA)

அத்தலியா என்பது உரோமையரின் பம்பிலியா என்ற மாநிலத்தில் சிறிய ஆசியாவின் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள ஒரு துறைமுகநகரமாகும். பெர்காவிற்கு தெற்கில் 13 கி.மீ. தொலைவில் உள்ளது. அத்தலிய நகரானது பெர்கமோன் நாட்டை ஆட்சி செய்த இரண்டாம் அத்தலூசால் (159–138 கி.மு.) தோற்றுவிக்கப்பட்டு, அவரது பெயராலேயே "அத்தலியா" என்று வழங்கப்பட்டன. கத்தார்கத்தேசின் வாயிலில் அமைந்துள்ள இது, இப்பகுதியில் ஒரு முக்கியமான வியாபார மையமாகும். இது பம்பிலியாவிற்கு மேற்கே சிறிய ஆசியா கடற்கரையிலிருந்து வெளிச்செல்லக்கூடிய முக்கிய வழியாகும். அத்தலியா என்று பெயரிடப்பட்ட நகரமும், துறைமுகமும் அப்போஸ்தலர் பணியில் குறிப்பிடப்பட்டுள்ளது (அ.ப.14:25). பவுல் தனது முதல் வேத போதகப் பயணத்தின் முடிவில், பெர்கமோனிலிருந்து வந்து இங்குச் சிறிது காலம் தங்கியபின் சீரியாவைச் சேர்ந்த அந்தியோக்கியாவுக்குக் கப்பல் ஏறினார் (14:25).

இன்றும் அந்தலியா என்றழைக்கப்படும் அத்தலியா சிறப்புமிக்க வகையில் வளர்ந்து அல்லது முன்னேறி வருகிறது. இத்துறை முகமானது இதன் வியக்கத்தக்க பழம் பெரும் அமைப்பினைப் பாதுகாத்து வருகிறது. கிரேக்கர் காலத்தைச் சேர்ந்த பாதுகாப்பு அரண்களின் எஞ்சிய பகுதிகள் இன்றும் காணப்படுகின்றன. அதிரியானால் கட்டப்பட்ட மூவ்வாயில்

தான் அனைவரையும் ஈர்க்கின்ற சிறப்பு மிக்க பழமையான குறிப்பிடத்தக்க கட்டட மாகும்.

அத்தாக்கு (ATHACH – இடைநிறுத்த இடம்)

அமலேக்கியரைத் தோற்கடித்த பின்பு அங்கிருந்து பெற்ற கொள்ளைப் பொருட் களிலிருந்து ஒருபகதியை தாவீது செப் போலாவிற்குத் தெற்கேயிருந்த இந்த நகரில் இருந்த முதியவர்களுக்குக் கொடையாக அனுப்பினார் (1 சாமு 30:30). அநேகமாக இது யோசு 15:42; 19:7–இல் வரும் எத்தேர் என்பதின் எழுத்துப் பிழை வடிவமாக இருக்கலாம்.

அத்தாக்கு (HATHACH)

அரசி எஸ்தருக்குப் பணிசெய்ய நிய மிக்கப்பட்ட பாரசீக அண்ணகர். இவர் வழியாகத்தான் மோர்தெக்காயிட மிருந்து யூதர்களுக்கு எதிரான ஆமோனின் சூழ்ச் சியை அவள் அறிந்தாள் (எஸ்த 4:5–6.9–10)

அத்தாயா (ATHAIAH – யாவே உதவி செய்கிறார்)

யூதா குலத்தைச் சேர்ந்தவர். ஊசியா வின் மகன். அடிமைத் தளையிலிருந்து நாடு திரும்பியபின் எருசலேமில் குடியே றிய வர்களின் பட்டியலில் இப்பெயர் உள்ளது (நெக 11:4). மேலேயுள்ள விவிலி யக்குறிப்பிற்கு இணையாயுள்ள 1 நாள் 9:4–இல் வரும் ஊத்தாய் என்பவரும் அத்தாயாவும் ஒன்று என்று சிலர் கருது கின்றார்கள். இருவரும் பேரேசுவின் வழி வந்தவர்கள். ஆனால் இடைப்பட்ட தலை முறைகள் முழுவதுமாக வேறுபடுகின்றன.

அத்தாய் (ATTAI – முன்னேற்பாடான, தக்க சமயத்தில்)

1. சேசானிடமிருந்த எகிப்திய அடிமையான யரிகாவுக்கு சேசானின் மகள் வழியாகப் பிறந்த மகன். நாத்தா னின் தந்தையாவாரென்றும் எரகுமேலின் வழிமரபுப் பட்டியலில் குறிப்பிட்டிருக் கிறது (1 நாள் 2:35–36).

2. காத்து என்ற இடத்திலிருந்து வந்து சிக்கிலாகு என்னுமிடத்தில் தலை மறை வாயிருந்த தாவீதிடம் வந்தவர் களாகக் கூறப்படும் ஆற்றலும் திறமையும் வாய்ந்த போர்வீரர்களின் பட்டியலில் ஆறாவது நபராக அத்தாய் இடம் பெறு கிறார் (1 நாள் 12:11)

3. இரகபெயாமின் மிக்க அன்புக் குரிய மனைவியாகிய மாக்கா பெற்றெ டுத்த புதல்வர்களில் அத்தாய் ஒருவரா வார் (2 நாள் 11:20).

அத்தாரிம் (ATHARIM – வேவு பார்ப்பவர்கள்)

அடையாளம் காட்ட முடியாத ஓர் இடம். இவ்விடத்தில் இஸ்ராயேலர்கள் மோசேயின் தலைமையின் கீழ் வந்து கொண்டிருந்த சமயத்தில் அரசனாகிய அராது என்பவரால் தாக்கப்பட்டனர் (எண் 21:1).

அத்தார் (ADDAR – ஏராளம், மிகுதியான)

1. (ஆள்) பெஞ்யாமின் இனத்தைச் சேர்ந்த பேலாவின் மகன் (1 நாள் 8:3). அரது என்ற சொல்லின் மற்றொரு வடிவ மாகும் (ஆதி 46:21).

2. (இடம்). சீன் பாலைவனத்தின் மேற் கில் யூதர் நாட்டின் தெற்கு எல்லையில் அமைந்திருந்த நகரமாகும் (யோசு 15:3). இது கதேசு–பார்னேயாவுக்கு வடமேற்கில் 8 கி.மீ. தொலைவிலும் பேயேர்–செபாவுக் குத் தென்மேற்கில் 66 கி.மீ. தொலைவி லும் அமைந்திருக்கலாம். இப்பகுதிக்கு இணையான எண் 34:4–இல் இப்பெயர் கெசிரோனோடு சேர்க்கப்பட்டுக் கசர்–அத்தர் என்றழைக்கப்படுகிறது.

அத்தாலியா (ATHALIA – யாவே பெரியவர், யாவே உயர்த்தப்பட்டவர்)

1. ஆகபின் மகள் (2அர 9:18) ஒமிரியின் பேத்தி (8:26). ஆகாபின் மனைவி ஈசபேல் இவளது தாயாக இருக்கலாம். யூதாவின் அரசனான யோராமின் மனைவி; அகசியாவின் தாய். திருமணமான எட்டு ஆண்டுகளுக்குப்பின் அவள் கணவன் இறந்தான். அவனது மகன் அரியணை ஏறி ஒராண்டு ஆண்டான் (8:26; காண்க: 2. நாள் 22.2). பின்பு இஸ்ராயேலின் ஏகூவால் கொல்லப்பட்டார் (2 அர 9:27: காண்க: 2 நாள் 22:7–9) அவருடைய புதல் வர்கள் யாவரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்று கேள்விப்பட்டவுடன் தனது பேரப் பிள்ளைகள் யாவரையும் இவளே கொன்று விட்டு, தன்னையே உரிமையுள்ள அரசி

யாக அறிக்கையிட்டாள். இவளதுகொலை பாதகத்திலிருந்து இவளுடைய கடைசிப் பேரன், யோவாசு மட்டும் தப்பினார். இவரை அகசியாவின் சகோதரியும் பெரிய குரு யோயதாவின் மனைவி யுமான யோசபா ஒளித்து வைத்துக் காப் பாற்றினாள் (2 அர 11:1–2; காண்க.2 நாள் 22:10–11). அத்தாலியா யூதாவை 6 ஆண்டு கள் ஆண்டாள் (ஏறக்குறைய கி.மு. 842–837) (2 அர 11; 2 நாள் 22–23). யூதாவில் தாவீதின் மற்றபடி இடைவிடாத குல மரபில் வடக்கிலிருந்து வந்து புகுந்தவள். தென்னரசில் பாகாலின் வழிபாடு இவள் காலத்தில் உச்சநிலை அடைந்தது.

சாமாரியாவில் வளர்க்கப்பட்டுப் பாகால்–மேல்கார்த்தின் வழிபாட்டைப் பரப்புவதில் மிகுந்த ஆர்வம் காட்டினாள். அவளது வெட்கம்கெட்ட தாயைப்போல் மிகுந்த செல்வாக்குச் செலுத்தினாள். யோராமின் மனைவியாகவும் (1 அர 8:18; 2 நாள் 21:6; காண்க: 2 நாள் 21: 1 தொ), அக சியாவிற்குமேல் தாய் அரசியாவும் (2 அர 8:26–27; 2 நாள் 22:2–3) இருந்து வெளிப் படையாக இவ்வழிபாட்டைப் பரப்ப தன்னு டைய அதிகாரத்தைப் பயன்படுத்தினாள்.

அவள் இரத்த வெறியோடு 6 ஆண்டு கள் ஆண்டாள். அவளுடன் ஒத்துழைத்த வர்கள் ("அத்தாலியாவின் புதல்வர்கள்") பாகாவின் பெயரால் ஆலயத்தை வியா பாரக் கூடமாக்கினர். இதைத்தவிர அவள் ஆட்சியைப்பற்றி எந்த செய்தியும் பாது காக்கப்படவில்லை (2 அர 11:18; 2 நாள் 24:7).

இப்படி இவள் பாகால்–மெல்கார்தின் வழிபாட்டைப் பரப்பிக் கொண்டிருந்த போது யாவேயின் பிரமாணிக்கமுள்ள குருவான யோயதா தக்க நேரத்திற்காகத் தான் காத்திருந்தார். சிறுவன் யோவா சுவை ஆலயத்தில் ஆறு ஆண்டுகளுக்கு மறைத்து வைத்தபின் (2 அர.11:3) ஏழாவது ஆண்டில் அரசித் தாய்க்கு எதிராகச் சதி செய்தார் கூலிப்படையினரான காரியர் களின் தலைவர்களோடு ஆலயக் காவலர் களோடு உடன்படிக்கை செய்து (11:4 தொ; காண்க.2 நாள் 23:1 தொ) சிறுவன் யோவா சின் பாதுகாப்பை உறுதிசெய்தார். பின்பு ஆலயத்திலிருந்தவர்கள் முன் யோவா சுவை யூதாவின் அடுத்த அரசனாக யோயதா முடி சூட்டினார் (11:12).

இச்சதியை அறிந்த அத்தாலியா அதை அடக்க முயன்றாள். போர்வீரர்கள் முன்தான் ஒன்றும் செய்ய இயலாமையை அறிந்து தப்பியோட முயன்றபோது, அவளது இரத்தத்தால் ஆலயப்பகுதி களைக் கறைபடுத்த விரும்பாத பெரிய குரு, அவளை, அரச அரண்மனைக்கருகில் கொன்று போடச்செய்தார் (2 அர 11:13–16; 2 நாள் 23:12–15). இந்த விவரிப்பு பெரிய குரு எருசலேமில் பாகாலின் வழிபாட்டை முடிவுக்குக்கொண்டு வந்து, யோவா சுவை அரசனாக்கியதோடு முடிகிறது (2 அர 11:17–20; 2 நாள் 23:16–21).

2 நாள் 22:3. இவள் அகசியாவுக்குத் தீய ஆலோசனை கொடுத்தாள் என்பது பாகால் வழிபாட்டுக்கு இவள் காட்டிய ஆர்வத்தையும் அளித்த ஆதரவையும் குறிக் கிறது.

2. பென்யாமின் தலைமுறைப்பட்டிய லிலுள்ள எருசலேமில் வாழ்ந்த குடும்ப தில் எரோகாமுக்குப் பிறந்த புதல்வருள் ஒருவர் (1 நாள் 8:26).

3. எஸ்ராவுடன் நாடு திரும்பிய ஏலா மின் புதல்வர்களின் தலைவரும், எசாயா தந்தையுமாவார் (எண் 8:7).

அத்தாலுசு (ATTALUS)

அத்தாலுசு என்ற பெயரானது பெரு காமோனை ஆண்ட மூன்று மன்னர் களால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்ட பெயராகும். உரோமையர்கள் யூதர்களுக்கு நண்பர்களாக இருப்பார்கள் என்ற செய்தியை உரோமையருடைய தூதர் உலூக்கியு பல மன்னர்களுக்கு கடிதங்கள் வழியாக எழுதி அனுப்பினார். அம் மன்னர்களில் இரண்டாம் அத்தாலுசும் ஒருவராவார் (1 மக் 15:22). இரண்டாம் அத்தாலுசினால்தான் (200–138 கி.மு.) பிலதெல்பியா என்ற நகரமானது தோற்று விக்கப்பட்டது.

அத்திபாசு (ATHBASH)

எபிரேய மொழியில் உள்ள குழு உக்குறி எழுத்து முறையாகும். இதன்படி முதல் எழுத்து 'ஆலெப்'புக்குப் பதிலாக கடைசி எழுத்தான 'தௌ' எழுதப்படும்.

இரண்டாவது எழுத்து 'பேத்' துக்குப் பதிலாக கடைசியிலிருந்து இரண்டாவது எழுத்து 'சீம்'. எழுதப்படும். இப்படியே மாற்றி எழுதப்படும்.

இவ்வகை எழுது முறைக்கு மூன்று எடுத்துக் காட்டுகள் எரேமியா நூலில் உள்ளன. (எரே 25:26; 51:1.41). அவை எப்படி, எப்பொழுது அதில் வந்தன என்பது புதிராகவே உள்ளது. 51:1-இல் உள்ள வார்த்தை கல்தேயர்கள் என்ற பொருளைத் தருகிறது. 25:26; 51:41-இல் இத்தகையசொல் பாபிலோன் அரசரைக் குறிப்பதாகத் தெரிகிறது. ஆனால் அதி 51-ல் பாபிலோனைப் பற்றிய பல குறிப்புகள் உள்ளதால், இப்படி மறைத்துக் கூறுவதில் பயனில்லை எனத் தோன்றுகிறது. ஆனால் இதன் பொருளை மற்றபடி விளக்க பலமுயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒன்றும் வெற்றியடையவில்லை. இதேமுறை 25:26-லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய முறை தால்முத் மித்ராசிலும் கபலா போன்ற நூற்களிலும் காணப்படுகிறது. சாக்கடல் ஏடுகளை விளக்க இந்த முறையைப் பயன்படுத்த முயற்சிகள் நடந்திருக்கின்றன.

அத்தி மர உவமை:

(மத் 24:32-34; மாற் 13:28-32; லூக் 21:29-33)

மழைக்காலம் முடியும் வேளையிலே அத்திமரம் தளிர்விட்டு கோடைக்காலம் அண்மையிலுள்ளது என குறிப்பிடுகிறது. கோடைக்காலமும், அறுவடையும் மெசியா வருகையின் அடையாளங்கள். தண்டனைக்காவும் பரிசுக்காகவும் மக்களைப் பிரிக்கும் தீர்வை நேரமாகும், இங்கே நீதித் தீர்வை மட்டுமின்றி, அத்தி மரத் தளிர்கள் நம்பிக்கையையும் நல்ல அறுவடையையும் குறிக்கின்றன. விவிலிய வல்லுநர் எரேமியா இந்த உவமை இயேசுவின் பணியிலே மெசியா வருகையின் போது இருக்கவேண்டிய அடையாளங்கள் இருக்கின்றன என்று சீடர்களுக்கு உணர்த்த கூறப்பட்டதாக எழுதுகிறார். மனுமகன் வாயிலிலே இருக்கிறார் என்பது அழைப்பையும், அச்சுறுத்தலையும் சேர்த்தே குறிக்கும்.

அத்தி மரம், கனி

மேற்காசியா முழுவதிலும், மத்திய தரைக்கடல் ஓரங்களிலும் வளரும் ஒரு மரமாகும். இது சிறப்பாக பாலஸ்தீன சீரிய மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் குறிப்பாகத் திபேரியா அருகிலுள்ள பள்ளத்தாக்கில் கலிலேயே கடல் ஓரத்தில் அதிகம் வளர்க்கப்படுவதாகும். இதன் கனிக்காகப் பயிரிடப்படுகிறது. இந்த மரமும் கனியும் விவிலியத்தில் 60 முறைக்கு மேல் குறிக்கப்படுகிறது. ஆதி 3:7; மத் 21:19-மரத்தையும், எண் 13:23; மத் 7:16 கனியையும் குறிக்கின்றன. அதன் வளர்ச்சி பற்றிய பல குறிப்புகள் உள்ளன (ஏச 23:4; உ.ச.2:13; திருவெளி 6:13; 1 சாமு 30:12; 1 அர 25:18).

பாலையில் அத்தி ஒர புதராகவே வளரும். ஆனால் பயிர் செய்தால் 5 முதல் 15 மீட்டர் உயரத்திற்கு வளரக்கூடியது. அதன் கிளைகள் வளைந்து வளைந்து வளரும். அதன் பரந்த இலைகள் நெருக்கமாக அமைந்திருக்கும் (காண்க ஆதி 3:7). ஆகவே விரிவான நிழல் தரக்கூடியது (காண்க. மீக் 4:4; செக் 3:10). இவைகளில் கனத்தால் கிளை தரையை நோக்கி வளர்ந்திருந்தால் இலைகளின் வழியாகப் பார்ப்பது முடியாத காரியமாகும் (யோவா 1:48.50) குளிர்கால மழை காலத்திற்கு முன் இலைகள் உதிர்ந்துவிடும். மார்ச் அல்லது ஏப்ரலில் புதுத்தளிர்கள் தோன்றும். இது கோடைக்காலம், அண்மையில் வருவதை உணர்த்தும் (மத் 24:32). நீண்ட இதழுடைய பூக்களையும், நீண்டுருண்ட அல்லது முத்து வடிவமுடைய கனிகளைத் தரும். மரம் பொருட்கள் செய்வதற்கு உகந்ததன்று, வீட்டிலும் ஆலயத்திலும் எரிப்பதற்குப் பயன்பட்டது.

பாலஸ்தீனத்தில், கானானியர் காலத்தில் இருந்து அத்தி பயிர் செய்யப்பட்டு வந்திருக்கிறது (எண் 13:23). வருடத்தில் பத்து மாதங்களுக்கு கனிகளைத் தரக்கூடியது. மார்ச் ஏப்ரல் மாதங்களில் புதிய இலைகள் தோன்றும். ஆரம்ப அத்திக் காய்கள் முந்திய ஆண்டின் பலனாகும் (திருவெளி 6:13). அவற்றில் சாறு இல்லை என்றாலும் அக்காலத்தில் வேறு பழங்கள்

இல்லாதபோது அது உண்ணப்படும். மீத மிருப்பவை ஜுன் மாதம் பறிக்கப்படும். அதன் சாறுக்காக விரும்பி உண்ணப் படும். வசந்த காலத்தில் பூத்துக் காயாகி பழுத்தவை ஆகஸ்ட் மாதத்தில் பறிக்கப் படும். இதில் அதிகச்சாறு இருக்கும். சுவையும் மிக இனிமையாக இருக்கும் (நீதி 9:11). பழம் தரையில் விழுந்து, பழுது பட்டு விடாமல் கவனமாய் பறிக்கப்படும் (காண்க. நாகூ 3:12). பழம் புதிதாக உண்ணப்படலாம் அல்லது காய வைத்து அடையாகச் செய்யப்படலாம் (1 சாமு 30:12; 1 நாள் 12:40). கொப்புளங்களுக்கு மருந்தாகவும் பழம் பயன்பட்டதாகத் தெரிகிறது (2 அர 20:7; ஏச 38:21).

முக்கியமான உணவுப் பொருளாக இஸ்ராயேலரிடையே கருதப்பட்டு மதிக்கப் பட்டது. அத்தி பற்றிய ஏறக்குறைய எல் லாக் குறிப்புகளும் அதன் முக்கியத் துவத் தைக் காட்டுகின்றன. இன்றும் பாலஸ் தீனத்தில் இதுமுக்கியமானதாகும். இதன் இலைகள் ஆதாம் ஏவாளுக்கு ஆடையாக வும் (ஆதி 3:7), நிழலாகவும் (யோவா 1:48.50) பயன்பட்டது. ஒலிவ மரம், மாதுளம் செடி முதலியவற்றோடு அத்தி மரமும் வாக்களிக்கப்பட்ட நாட்டின் செழு மைக்கு அடையாளமாகியது. இஸ்ராயே லைக் கவர்ந்தது (உப 8:8; எண் 13:23; 20:5).

அத்தி பற்றிய பெரும்பாலான குறிப்பு கள் உருவகத்தன்மையுடையன. ஒருவனுக் குச் சொந்தமான திராட்சைச் செடிக்கும் அத்தி மரத்துக்கும் கீழ் வாழ்வது மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டது (1 அர 4:25; 2 அர 18:31; ஏச 36:16; மீக் 4:4; செக் 3:10). அபிமெலக்கைக் கண்டனம் செய்யும் யோத்தாமின் உவமையில் அரசனாக இருக்க மறுத்தவற்றில் அத்திமரமும் வரு கிறது (நீதி 9:10–11). இஸ்ராயேலின் பாவங் களுக்குத் தண்டனையை அறிவிக்கும் இறைவாக்குகளில் உலர்ந்துபோன அத்தி மரம் நாட்டிற்கு வரும் அழிவை அடை யாளமாக உணர்த்திற்று (எரே 5:17; ஓசே 2:12; யோவே 1:7.12; ஆமோ 4:9). எரேமியா வின் காட்சியில் வரும் இருகூடை அத்திப் பழங்கள், நல்ல பழங்களால் குறிப்பிடப் பட்ட நாடு கடத்தப்பட்டவர் களையும் கெட்ட பழக்கங்களால் குறிக்கப்பட்ட எகிப்திலும் பாலஸ்தீனத்திலும் தங்கியி ருந்தவர்களையும் வேறுபடுத்துகின்றன. (எரே 24:1–10). கனி கொடாத மரமாகிய தம் மக்களை பொறுமையாக கவனித்து வரும் தோட்டக்காரனாக இறைவனை இயேசு சித்தரிக்கிறார் (லூக் 13:6–9). இதற்கு மற்றொரு விளக்கம், இறைவனது தீர்ப்புக்கு மாறாக மக்களுக்காகப் பரிந்து பேசும் தோட்டக்காரன் இயேசுவே தான்.

விளக்குவதற்கு மிகவும் கடினமான விவரிப்பு, கனி கொடாத அத்தி மரத்தை இயேசு சபிக்கும் நிகழ்ச்சியுரையாகும் (மாற் 11:13–14.20–21; மத் 21:18–21). இது இயேசுவின் தன்மைக்கு மாறானதாகும். பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன; ஒன்றும் நிறைவு தரவில்லை. லூக் 13:6–9– இல் வரும் உவமையை நாடகப் பாணி யில் செயல்படுத்தி, தங்கள் வாழ்வில் எந்தப் பலனையும் கொடாதவர்களின் அவல முடிவை சுட்டிக்காட்டுகிறது என லாம். வசந்த காலத் தொடக்கத்தில் புது தளிர்கள் தோன்றுமுன் கடந்த ஆண்டின் காய்கள் மரத்தில் இருந்திருக்க வேண்டும் (உ.ச.2:13). அப்படியில்லாதது இந் நிகழ்ச்சியுரையை விளக்கலாம். ஆனால் இயேசுவின் உணர்ச்சி வசப்பட்ட செயலை விளக்கவில்லை. ஒருவேளை மூலத்தில் இந்நிகழ்ச்சி வெளிப்பாட்டு அடையாள மாக இருந்திருக்கலாம். நிகழ்ச்சியுரை யில் மூலச் சூழ்நிலையும் பொருளும்


அத்தி இலை, பூ, பழம்

மறைந்து போனது அல்லது தவறிப்போய் விட்டது என்பது தெளிவாகுகிறது. லூக்கா இதை விட்டுவிடுகிறார் என்பது இந் நிகழ்சிசியுரையின் கடினத்தைச் சுட்டு கிறது.

அநீதக் கண்காணிப்பாளன் – உவமை

பரிசேயருக்கும் மறைநூல் வல்லுநர் களுக்கும் ஊதாரியின் உவமையைக் கூறிய பின், இயேசு தம் சீடர்களுக்கு இந்த அநீதக் கண்காணிப்பாளன் உவமையைக் (லூக் 16:1–9) கூறுகிறார். செல்வந்தன் தன் உடமைகளை விரயம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கண்காணிப்பாளனிடம் கணக்குக் கேட்கிறான். கண்காணிப்பா ளன் தன் தலைவனிடம் கடன்பட்டிருப்ப வர்களின் கடனைத் தந்திரமாய் மாற்றி அமைத்து, தன் வருங்காலத்திற்கு ஆதா யம் தேடிக்கொண்டான். இந்தத் தந்தி ரத்தை அறிந்த தலைவன், கண்காணிப் பாளனது விவேகத்தை மெச்சினான். இவ் வுவமையில் இந்த உலகில் நடைபெறும் நீதியற்ற செயல்களை இயேசு வஞ்சப் புகழ்ச்சியோடு சாடுகிறார். உவமையின் முடிவில், "ஒளியின் மக்களைவிட இவ் வுலகின் மக்கள் தம்போன்றவர்களிடத் தில் (அதாவது அவர்களுக்குள்ளேயும் அவர்களது குறுகிய நோக்குடைய போக்கி லும்) மிக்க விவேகமுள்ளவர்களாக இருக் கின்றனர்" என்று இயேசு கூறுகிறார். ஆனால் இவ்வுலகின் மக்கள், விண்ணரசு நிறுப்படுதலுக்கு எதிரான சக்திகளால் வாழ்கின்றனர்; ஒளியின் மக்களாகிய விசு வாசிகள் உயர் சட்டத்தால் வாழ்கின்ற னர்: ஆகவே வஞ்சப்புகழ்ச்சியோடு "அநீதி செல்வத்தைக் கொண்டு நண்பர்களைச் சம்பாதித்துக்கொள்ளுங்கள். அது உங்க ளைக் கைவிடும்போது இவர்கள் உங்களை முடிவில்லாக் கூடாரங்களில் ஏற்றுக் கொள்வர்" (16:9). அதாவது "நீங்கள் உரிமை பேறாக அடையவிருக்கும் ஆன் மீகச் சொத்துக்களைப்பெறத் தகுதிபெறும் பொருட்டு, எந்த உலகச் செல்வத்தையும் இரக்கத்தோடும் தாராளமாகவும் பயன் படுத்துங்கள்" என்று இயேசு தொடர்ந்து கூறுகிறார். "மிகச் சிறிய காரியத்தில் நம்பத்தகுந்தவன் பெரியதிலும் நம்பத்தக்க வனே: (16:10) மிகச் சிறியதில் நீதியற்றவன் பெரியதிலும் நீதியற்றவனே என்று சிறு காரியங்களிலும் நேர்மையாக இருக்கப் படிப்பிக்கிறார். முடிவில் உண்மையான விசுவாசம் தோல்வியுறுவதில்லை. நீதி யற்றவர்களின் நண்பர்கள் காணும் "முடி வில்லாக் கூடாரங்கள்" நரகமேயாகும்.

இயேசு தமது காலத்துச் சமயத் தலை வர்களைப் பார்த்துக் கூறியதாக அளிக்கப் படும் விளக்கம் நமது காலச்சமயத் தலை வர்களுக்கும் பொருந்தும். ஆண்டவரின் சொத்துக்களைப் பொறுப்பற்ற முறையில் பயன்படுத்துபவர்கள் உலகோடும் உலகப் போக்கோடும் இணங்கிப் போகின்றனர். பின்பு, அவற்றை ஏற்றுக்கொள்கின்றனர். இக்கருத்தை, "எந்த வேலைக்காரனும் இருதலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. கடவுளுக்கும் செல்வத்துக்கும் நீங்கள் ஊழியம் செய்ய முடியாது" (16:13) என்ற கூற்றில் வலியுறுத்துகிறார்.

அநீத நடுவன் – உவமை

எப்பொழுதும் மனந்தளராமல் செபிக்கவேண்டும் என்பதை உணர்த்த இந்த நீதிக்கதை கூறப்படுகிறது (லூக் 18:1–18). யாருக்கும் பணியாத நடுவன் விதவையின் தொந்தரவு காரணமாக அவளுக்கு நன்மை செய்கிறான். இது நள்ளிரவிலே வந்த நண்பன் நீதிக்கதை போன்றது. மனிதன் செய்யும் செபம் கேட்கப்படும் என மொழிகின்றது. இங்கே ஆண்டவர் அந்த மனிதரோடு வேறு படுத்திக்காட்டப்படுகிறார். மேலும் இந்த நீதிக்கதை மனுமகனின் இரண்டாம் வருகைக்கு முக்கியத்துவம் தருகின்றது. அக்காலத்தில் விசுவாசிகள் பல துன்பங் களை ஏற்க வேண்டியிருக்கும். ஆனால் ஆண்டவர் எதிரிகள் மீது வஞ்சம் தீர்க்கப் போவது உறுதி. எளிதில் இன்னல் நேரக் கூடிய நிலையில் விதவைகள் உள்ளனர். இந்த நீதிக்கதையில் வரும் விதவை விசு வாசிகளைக் குறிக்கிறாள்.

அந்திகோனுஸ்(ANTIGONUS)

அசமோனிய அரசர்களில் கடைசி யானவர். இரண்டாம் அரித்தோபுலின் மகன். இருவரும் கி.மு. 63–57–இல் உரோ மையில் சிறையில் வைக்கப்பட்டனர். 44–இல் யூலியு சீசெர் இறந்தபின் அந்தி

கோனு கலிலேயாவின் மீது படையெடுத்தார். ஆனால் பெரிய ஏரோதால் தோற்கடிக்கப்பட்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு யூலியு சீசருக்குப் பின் உரோமையில் ஆட்சிக்கு வந்த மாற்கு அந்தோனி அலக்சாந்திரியாவில் அரசி கிளியோபத்திராவைப் பார்க்கச்சென்றபோது, இதைச் சாதகமாகப் பயன்படுத்திப் பார்த்தியர்கள் துணையுடன் யூத அரசனாகவும், பெரிய குருவாகவும் ஆனார். ஆனால் 37–இல் பெரிய எரோதால் நீக்கப்பட்டார். ஏரோது உரோமையர் உதவியுடன் எருசலேமைக் கைப்பற்றி அந்திகோனுவைக் கொலை செய்தார்.

அந்திபத்திரி (AN–TI PATRIS)

யோப்பாவிற்கு ஏறக்குறைய 16 கி.மீ வடகிழக்காகவும் இலிதாவிற்கு 16 கி.மீ வடக்காகவும் உள்ள ஒரு நகரம். யூலியு சீசர், காலத்தில் யூதேயாவிற்கு ஆளுநராக இருந்த அந்திபாத்தாரின் நினைவாக இவர் மகன் பெரிய ஏரோது அப்பேக்–குவின்மேல் இந்நகரை மறுபடியும் கட்டி இப்பெயரிட்டார்.

இப்பெயர் விவிலியத்தில் ஒரே ஒரு முறைதான் கூறப்படுகிறது (அ.ப. 23:31). 470 உரோமைப் படைவீரர்கள், பவுலைக் கைதியாக எருசலேமிலிருந்து, செசரியாவிற்கு அழைத்துச் சென்றபொழுது இரவில் இங்கு தங்கினார்கள். எருசலேமுக்கும், அந்திப்பத்திரிக்கும் இடையில் இருந்த தூரம் ஏறக்குறைய 65 கி.மீ.

இந்நகரம் உரோமையரின் படைகள் ஓய்வெடுக்கும் இடமாகவும், யூதேயாவிற்கும், சமாரியாவிற்கும் இடையிலுள்ள எல்லைப்பகுதியாகவும் இருந்தது.

கி.மு. 2000–ல் இருந்த பழைய ஏற்பாட்டு அபேக்கு, இங்கு இருந்ததாக இங்கு நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் நிறுவுகின்றன. உலோத்துக்கு வடக்கில் 16 கி.மீ. தொலைவிலும், எருசலேமுக்கு வடமேற்கில் 65 கி.மீ. தொலைவிலும், செசரியாவுக்குத் தென்மேற்கில் 40கி.மீ தொலைவிலுமுள்ள இக்கால ராஸ்–ஏல் ஆயின் தான் அந்திப்பத்திரி முன்பு இருந்த இடம் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

கி.பி. 457–இல் நடந்த கால்சீடனில் நடந்த கூட்டத்தில் ஆயர் போலிக்ரோனியுஸ் என்பவர் அந்திப்பத்திரியின் பிரதிநிதியாக வந்தார். ஓம்மியாத்தியர்களோடு கூட்டுச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இங்கு 744–இல் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

அந்திப்பா (ANTIPAS – தந்தையைப் போன்றவன்)

1. பெரிய எரோது வைத்திருந்த ஒன்பது மனைவிகளில் சமாரிய மனைவியான மால்தாக்கே என்பவளுக்கு பிறந்த மகன். அந்திப்பாவும் அவருடைய சகோதரன் அர்க்கெலாவும் உரோமையில் வாழ்ந்த ஒரு மனிதரால் வளர்க்கப்பட்டதாக யோசிபசின் நூல் கூறுகிறது- இந்த அந்திப்பாதான் லூக் 3:1. 19–இல் நாம் காணும் கலிலேயாவின் சிற்றரசன் என்பவர். இவர் திருமுழுக்கு யோவானையும் இயேசுவையும், நடத்திய விதத்திலிருந்து இவனுடைய காமமும், குரோதமும் தெரிய வருகின்றன. இவர்தான் திருமுழுக்கு யோவானைச் சிறைவைத்துப் பின் கொன்றவர் (மத் 14:1–11; மாற் 6:14–28). இயேசுவை அவரது பாடுகளின்போது கேலி செய்தவர் (லூக் 23:7–11) காண்க: எரோது–2.

2. பெருகமோனைச்சேர்ந்த ஒரு கிறிஸ்தவர் தனது விசுவாசத்திற்காக மறைசாட்சியாக மரித்தவர் (திருவெளி 2:12).

3. அலக்சாண்டர் அரசராலும், அவர் மனைவியாலும் இதுமேயா முழுவதற்கும் ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒரு இதுமேயன் என்று யோசிபஸ் கூறுகிறார். 4–இல் கொடுக்கப்பட்டுள்ளவரின் தந்தை.

4. ஒரு பணக்கார இதுமேயன். சுறுசுறுப்பானவரும், சூழ்ச்சி செய்வதில் ஆர்வமும் உள்ளவர். இரிக்கானுவிடம் தன்எதிரியான அரித்தோபுலின் பெயரைக் கெடுக்க பலமுயற்சிகளைச் செய்தார். இரிக்கானு உயிருக்குப் பயந்து அரேபிய நாட்டு அரசரான அரேத்தாவிடம், ஓடி, பெத்திராவில் தஞ்சம்புகுந்தார். அரேத்தாவின் உதவியுடன் அரித்தோபுலின் மேல் அந்திப்பாவும், இரிக்கானும் படையெடுத்தனர். தற்காலிக வெற்றியும் அடைந்தனர். பாம்ப்பேயிலிருந்து புதிராக வந்த

ஸ்கொளருஸ் என்பவர் அரித்தோபுலுக்கு உதவி செய்து எதிரிகளை பாப்பிரோன் என்னும் இடத்தில் தோற்கடித்தார்.

அந்திபாத்தர் (ANTITPATER - *அவன் தந்தைக்குப் பதிலாக)*

1. இவர் யாசோனின் மகன். இவர் அந்தியோக்குவின் புதல்வன் நூமேனியுடன், உரோமைகளோடும் இலக்கதேமானியர்களோடும் முன்பு கொண்டிருந்த நட்பையும், கூட்டணியையும் புதுப்பிக்க யூதர்களின் தூதுவராக அனுப்பப்பட்டான் (மக் 12:16; 14:22).

2. பெரிய ஏரோதுவின் தந்தை. முதலில் பாலஸ்தீனத்தின் அதிகாரப்பூர்வ மற்ற ஆட்சியாளராக இருந்தார் (63–55 கி.மு.). சீசருக்கும் தோலமிக்கும் இடையில் நடந்த போரில் இவர் காட்டிய ஆதரவுக்காக கி.மு.47–ல் யூதேயாவின் ஆளுநராக ஆக்கப்பட்டார். பிறகு தன் புதல்வர்கள் பாசாவேல், ஏரோது ஆகியோருக்கு எருசலேம், கலிலேயாமேல் ஆளுநர் பதவியை வாங்கி அளித்தார். இந்த அந்திபாத்தர் அவரது பான அமைச்சனால் 43–இல் நஞ்சுவைத்துக் கொல்லப்பட்டார்.

அந்தியோக்கி (ANTIOCHIS)

நான்காம் அந்தியோக்கு எப்பிபானின் வைப்பாட்டி. அந்தியோக்கு சிலிசியாவிலுள்ள தார்சுவையும், மல்லோத்தாவையும் அவளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்ததின் காரணமாக இந்நகரங்களின் மக்கள் இவர்மேல் கோபப்பட்டனர்.

அந்தியோத்தியர் (ANTIOCHIANS)

யாசோன் என்ற தலைமைக் குருவால், எருசலேமில் வாழ்ந்த சில குடி மக்களுக்காகக் கேட்ட மதிப்பும் சலுகையும் நிறைந்த பட்டம்தான் "அந்தியோக்கியர்கள்" என்பது. தீர் நாட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் அவரது பிரதிநிதிகள் இவ்வாறு அழைக்கப் பட்டனர் (2 மக் 4:9.19).

எருசலேமில் வாழும் சிலரை "அந்தியோக்கியர்" என்ற பட்டம் அளித்துச் சலுகை செய்யும்படி யாசோன் கேட்டுக் கொண்டது எருசலேமை கிரேக்கமயமாக்க அவரது திட்டத்தின் ஒரு பகுதியாகும் (2 மக் 4:7–17; 1 மக் 1:11–15). ஒருவேளை கிரேக்க மொழிபேசிய யூதர்களுள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைதான் "அந்தியோக்கியா குடிமக்கள்" என்று பதிவு செய்யப்பட்டனர். இவர்கள் அரசின் அங்கீகாரம் பெற்று எருசலேமில் கிரேக்க மொழிபேசும் பகுதியை அமைத்தார்கள். யாசோனுடைய திட்டம் ஒருவேளை எருசலேம் என்ற பெயரை அந்தியோக்கியாவாக மாற்றவேண்டும் என்று இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனால் ஐயத்திற்குரியது.

செலூக்கியப் பேரரசில் இருந்த மற்ற நகரங்களில் வாழ்ந்தவர்களும் அந்தியோக்கியர்கள் என அழைக்கப்பட்டதாக நாணயங்களின் மேல் இருக்கும் குறிப்புகள் காட்டுகின்றன. நாணயப் பணத்தை உபயோகிக்கும் முக்கியமான அரசாங்க உரிமையை (சலுகையை) இந்தப் பட்டம் தந்தது.

அந்தியோக்கியா (ANTIOCH) – *(சீரியா)*

சீரியாவின் பழமையான நகரங்களில் ஒன்றான அந்தியோக்கியா ஒரு கிரேக்கப் பண்பாட்டுப் நகரம். இன்று துருக்கியில் அன்தாகியா என்னும் பெயருடன் உள்ளது. அன்று உரோமை, அலக்சாந்திரியா இவைகளுடன் இணையாக வைத்துக்கருதப்பட்டு கிரேக்க உரோமை உலகின் மூன்று மிகப்பெரிய நகரங்களில் ஒன்று. கிறிஸ்தவம் தொடக்கத்தில் வளர்ச்சிபெற்ற மையங்களில் இதுவும் ஒன்று. செலூக்கசின் தந்தை அந்தியோக்கின் நினைவாக இப்பெயர் இடப்பட்டது. கி.மு. 300–இல் நிறுவப்பட்ட இந்நகரம் மத்திய தரைக் கடற்கரையிலிருந்து 19 கி.மீ தொலைவு உள்ளது. ஒரோன்டெஸ் ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள செலூக்கியா பியெரியா இதன் துறைமுக நகரம்.

அந்தியோக்கியச் சமவெளி பலஆயிரம் ஆண்டுகள் விவசாயத்திற்குப் பயன்பட்டிருக்கிறது. கி.மு. 300–ஐ ஒட்டி முதலாம் செலூக்குசு அந்தியோக்கியா நகரை நிறுவினார். செலூக்கிய அரசர்களின் நகரமான இதில் கிரேக்கபடை ஒன்று இருந்தது. பின்னர் பல உள்நாட்டவர் புகுந்து அன்றைய கிரேக்க–உரோம

உலகின் மிகப்பெரிய நகரமாகியது. கி.மு. 2–ஆம் நூற்றாண்டில் இந்நகரில் ஐந்து லட்சத்திற்கு மேல் மக்கள் வசித்திருக்கின்றனர். இங்கு ஒரு யூதக் குடியிருப்பு செழிப்பாக வாழ்ந்து வந்திருக்கிறது. ஆனால் கி.பி. 37–41–இல் கலிகுலாவின் ஆட்சியின் கீழ் குடியேற்றம் பல இழப்புகளைச் சந்தித்தது. மிகப் பெரிய கட்டிடங்களுக்கும், வியாபாரத்திற்கும் பெயர் பெற்ற இந்நகரம் தீய பழக்கங்களுக்கும், தீய இச்சைகளுக்கும் பெயர் பெற்றதென்ற இழிவும் பெற்றிருந்தது.

செலூக்கிய அரசர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு கி.மு. 83. இல் திக்ரானேசு என்பவராலும் கி.மு. 64–க்குப் பிறகு உரோமையராலும் ஆளப்பட்டது. பிறகு அவர்கள் சீரியா மாகாணத்தின் தலைநகராக இதனை மாற்றினர். இக்காலத்தில்தான் அந்தியோக்கியா அறிவின் இருப்பிடமாகியது. கி.பி. 4–6 ஆம் நூற்றாண்டுகளில் இறையியல் சிந்தனைகட்கு இது தலைசிறந்த இடமாக இருந்தது. 1932–1939–இல் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தாலும், பிரான்சின் தேசிய அருங்காட்சியகத்தாலும் இந்நகர் அகழ்ந்தெடுக்கப்பட்டது. எஞ்சியப் பொருட்களெல்லாம் விவிலிய காலத்திற்குப் பிந்தியவைகளாகக் கணிக்கப்பட்டுள்ளன.

1. பழைய ஏற்பாட்டில் அந்தியோகியா:-

நகரின் அமைப்பு வியப்புக்குரியதாகும். அதன் கிழக்கு மேற்கு நெடுஞ்சாலை சலவைக் கற்தூண்களால் ஆன நான்கு வரிசைகொண்டது. இவை மூன்று பாதைகளை உண்டாக்கியது. நடுப்பாதையில் கனமான ஊர்திகளுக்கும், புற இரு பாதைகளும் கால் நடையாகப் போவோருக்கும் குதிரைகளுக்கும் சொகுசு வண்டிகளுக்கும் உரியதாகும். தெற்கு வடக்கிலும், இத்தகைய நெடுஞ்சாலை அமைந்திருந்தது. இவ்வாறு நகரம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வளைந்து ஓடும் ஓரோன்டெஸ் நதிக்கு வடக்கில் செலுசித் அரண்மனை இருந்தது. நகரத்தின் வடகிழக்கில் திபேரியுவின் சுவர் உள்ளது. தாபினேயின் கவர்ச்சிமிக்க இயற்கையான இன்பவனம் தெற்கில் இருந்தது. இங்குள்ள அப்பொல்லே கோவிலுக்கு மக்கள் பெருங்கூட்டமாய் கூடினர். அதன் ஊற்றுகள் நகரத்திற்கு போதிய நீரை வழங்கின. மேலும் சலவைக் கல் பாவப்பட்ட நாட்டுப்புற மளிகைகளும், பெயர் தெரியாத தேவர்களுக்கு ஒரு பீடமும் தேவர்களின் சிலைகளும் ஆழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு கிண்ணம் இயேசு தன் இறுதி இரவுணவில் பயன்படுத்தியது என்று கருதப்பட்டது. ஆனால் இப்போது அது கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்படும்.

யூதர்களுக்கு எதிராக செலூக்கியர்கள் இயங்குவதற்கென மையமாகக் கொண்டிருந்த இடமென மக்கபேயர் ஆகமம் அதனைக் குறிப்பிடுகிறது (1 மக் 3:37; 4:35). அந்தியோகியாவை ஆட்சி செய்த பிலிப்பு என்பவரைத் தோற்கடித்து இலீசியா அதனைக் கைப்பற்றியது பற்றியும், நான்காம் தோலமி பிலோமேத்தோர் என்பவன் அந்தியோகியாவில் புகுந்து எகிப்து ஆசியா ஆகியநாடுகளில் முடியை அணிந்து கொண்டதாகவும், இந்நகர் பற்றிய குறிப்புகள் வருகின்றன (1 மக் 6:63; 11:13). பின்பு இரண்டாம் தெமேத்திரியு என்பவரிடமிருந்து துருபோன் நகரைக் கைப்பற்றினார் (11:56). தாபினே எனும் இடம் அப்பொல்லோவின் வழிபாட்டு இடமாகவும், ஒனியாசு என்ற தலைமைக் குரு தஞ்சம் புகுந்த இடமாகவும் இருந்தது (2 மக் 4:33).

2. புதிய ஏற்பாட்டில்:-

அப்போஸ்தலர் பணி 11:19–இல் முதன் முதலில் இந்நகரம் பற்றிப் பேசப்படுகிறது. ஸ்தேவானின் இறப்புக்குப் பிறகு தப்பிய கிறிஸ்தவர்கள் எருசலேமிலிருந்து இங்கு வந்து அடைக்கலம் புகுந்தனர். இங்கு நற்செய்தி எவ்வளவு விரைவில் பரவியதென்றால் எருசலேமில் உள்ள தலைவர்கள் இங்கு பர்னபாவை அனுப்புகின்ற அளவுக்கு தேவை ஏற்பட்டது (அ.ப. 11:22). பார்னபா தார்சு நகரத்திலிருந்து இங்குப் பவுலைக் கொணர்கிறார் (11:26). இதுதான் பவுல் பற்றிய முதல் வரலாற்றுக்குறிப்பு. இங்குதான் முதன் முதலில் "கிறிஸ்தவர்கள்" என்ற பெயரை இயேசுவைப் பின்பற்றியவர்கள் பெற்றனர்.

ஆனால் இப்பெயர் எம்முறையில் வந்தது எனத்தெரியவில்லை. புற இனத்த வரால் இழிவான பட்டப் பெயராகப் பயன்படுத் தப்பட்டிருக்கலாம். அல்லது கிறிஸ்தவர் கள் தங்களுக்கு அளித்துக் கொண்டதாக இருக்கலாம். அல்லது, யூதர்களிடமிருந்து வேறுபட்ட இந்தப் பிரிவினைக் குழுவைக் குறிக்க உரோமைக் காவலர்கள் கொடுத்த பெயராக இருக்கலாம்.

கிறிஸ்தவத்தின் தொடக்ககாலத்தில் மிகப் பெரிய எண்ணிக்கையுடன் தழைத்து வளர்ந்த இச்சமூகம் மிகமுக்கியமானதா கவும், முதன் முதல் ஏற்பட்ட புறவினக் கிறிஸ்தவ சமூகமாகவும் இருந்தது. கிறிஸ்தவம் தொடர்ந்து பரவவும் காரண மாக இச்சமூகம் எருசலேம் சமூகத்துக்கு உதவ பணம் வசூலித்து பவுல், பர்னபா வழியாக அனுப்பியுள்ளது (அ.ப.11:27–30). இவ்விரண்டு சமூகத்திற்குமிடையே அன்று இதய பூர்வமான உறவு நிலவி வந்தது. லூக்காவின் சொந்த ஊராக இருந்திருக் கலாம். அந்தியோகியாவில் உள்ள இறை வாக்கினார்கள் பற்றி இருமுறை கூறப் படுவது (11:27; 13:1) எதார்த்தமாக நிகழ்ந்த ஒன்றேயாகும்.

அந்தியோகியத் திருச்சபைக்குரிய அதி காரமும், சுதந்திரமும் அவர்கள் பவுலை யையும், பர்னபாவையும் நற்செய்திப் பணிக்கு அவர்களாகவே முடிவு செய்து அனுப்புவதிலே புலனாகிறது. (13:1 தொ). வேறு எந்தச் திருச்சபை அதிகாரிகளை யும் அவர்கள் கலந்து ஆலோசிக்க வில்லை. அதேபோல நற்செய்திப் பயணத் தின் விளைவுகளையும், பவுலும், பர்னா பாவும் அந்தியோகியத் திருச்சபையில் வந்தே தெரிவிக்கின்றனர் (13:1; 14:26 தொ). சிறிய ஆசியாவில் உள்ள இத்தகைய பரந்த மனப்பான்மையுள்ள புற இன அந் தியோக்கியக் கிறிஸ்தவர்களுக்குத்தான் பவுலும், பர்னபாவும் நற்செய்தி அறிவித் தனர். அதேநேரத்தில் புற இனக் கிறிஸ்த வர் யூத பழக்க வழக்கங்களை மேற்கொள் வது பற்றிய பிரச்சன்ன எழுகிறது. இச் சூழலில்தான் பேதுரு, அந்தியோகியா வில் புறவினக் கிறிஸ்தவர்களோடு நெருங் கிப்பழகியவர், எருசலேமிலிருந்து யூதக் கிறிஸ்தவர்கள் வந்தபோது அவர்களை விட்டு ஒதுங்கியதை மிகக் கடுமையாகப் பவுல் கண்டிக்கிறார் (கலா 2:11).

எருசலேம் சங்கத்தின்போது பவுலும், பர்னபாவும் அந்தியோகியத் திருச்சபை யின் பிரதிநிதிளாக அவர்களது கருத் தைப் பிரதிபலித்து, பிரச்னைகளுக்கு முடிவை எருசலேம் சங்கத்தின் சீலா, யூதா வழியாக அவர்கட்குத் தெரிவிக் கின்றனர். பவுல் தனது இரண்டாம் நற் செய்தி அறிவிப்புப் பயணம் முடிந்த பின்னர் இங்கு வருகிறார் (அ.ப. 18:22). இதுவரை அந்தியோக்கியா பவுலின் திருச்சபையாகவே இருந்து வந்திருக் கிறது. இதற்குப்பிறகு பவுல் இந்நகர் வந்ததாகக் கூறப்படவில்லை. ஆனால் அவர் நிறுவிய பிற சபைகளுக்குச் சென்றது பற்றிக் கூறப்படுகிறது.

அந்தியோக்கியா (ANTIOCH) (பிசிதியா)

பிசிதியா எல்லைக்கு அருகிலுள்ள, பிரிகியாவைச் சேர்ந்த நகரமாகும். ஆயினும் அ.ப. 13:13, இந்நகரம் பிசிதியா வைச் சேர்ந்ததென்று கூறுகிறது. இந் நகரம் முதலாம் செலூக்கு அல்லது முத லாம் அந்தியோக்கு என்பவரால் கி.மு. 350–ல் கிரேக்க நகரமாகத் தோற்றுவிக் கப்பட்டது. இது செலூக்கியர்களுக்கு எல்லைக் கோட்டையாகவும் பிசிதியா நாட்டு மலை ஏறும் வீரர்களிடம் இருந்து ஒரு பாதுகாப்பாகவும் அமைந்தது. மூன றாம் அந்தியோக்கு உரோமையரால் தோற்கடிக்கப்பட்ட பிறகு கி.மு. 189–இல் இது ஒரு விடுதலை பெற்ற நகரம் என்று உரோமை அரசரால் அறிவிக்கப்பட்டது. கலாத்திய அரசர் அமின்தாசு ஆண்ட கலாத்திய நாட்டுடன் இதை அந்தோணி கி.மு.36–இல் இணைத்தார்; அரசன் இறந்த பின்பு, இதனை உரோமையைச் சேர்ந்த கலாத்திய மாகாணத்தோடு சேர்த்துவிட்டார். இப்போது எபேசிலி ருந்து சீரியாவுக்குச்செல்லும் நெடுஞ் சாலையிலுள்ள முக்கிய உரோமைக் குடி யிருப்பாகியது. யூதர்களும் சேர்ந்த பல வணிகர்கள் இங்குக் குடியேறினர். யோசி பசின்படி கி.மு. 200–ஐ ஒட்டி 2000 யூத குடும்பங்கள் இங்கு குடியேறினர் என்று அறிகிறோம்.

இந்நகரத்தின் இடிபாடுகள் இன்றைய துருக்கியிலுள்ள யால்வாக்குக்கு அருகில் உள்ளன. கி.மு.1லும், கி.பி.1லும் கட்டப் பட்ட இந்நகர் அமைப்புகளை மிச்சிகன் பல்கலைக்கழகம் நடத்திய புதைபொருள் ஆராய்ச்சி கண்டுபிடித்துள்ளது. அவற் றில் நகர்ச் சுவரின் ஒருபகுதி, மேனே கடவுளின் கோயில், ஒரு நாடக அரங்கம், உரோமையின் நீர்வாய்களின் உடைந்த பகுதி, முந்நகரின் வாயில் முதலியவை அடங்கும்.

பூர்வீக மாநிலங்களான பிசிதியா, பிரி கியா இவைகளுக்கு இடையில் எல்லைப் புறத்தில் இந்நகரம் குறிப்பிடப்பட்டுள் ளது. சில சமயங்களில் இது பிசிதியா நாட்டு அந்தியோக்கியா என்று அழைக் கப்படுகிறது (அ.ப.13:14): ஆனால் ஸ்ட்ரா போ இதை பிசிதியாவிற்கு அருகில் இருந் தது என்று குறிப்பிடுகிறார்.

இதனுடைய பெயர் செசரியா குடி யிருப்பு என்று மாற்றப்பட்டது. இருப்பி னும் இதனுடைய பழைய பெயர் அகற்றப் படவில்லை. அகுஸ்துவின் வீரச்செயல் களின் அடையாளங்கள் இந்நகரில் வெளிப்படையாகக் காணப்படுகின்றன. அகுஸ்து காலத்தில் இவருக்கு வழிபாடு இந்நகரில் நிறுப்பட்டது. போர், மற்ற தேவைகளுக்காக இரண்டு புதிய சாலை கள் போடப்பட்டன. இவை அந்தியோக்கி யாவையும், பிசிதியாவையும் இணைத்தன.

அந்தியோக்கியாவின் செபக் கூட்டத் தில், பவுல் யூதர்களுக்கும், கிரேக்கமொழி பேசிய புறவினத்தார்களுக்கும் போதித் தார் (அ.ப. 13:14–43). பவுலும், பார்னபா வும் தங்களுடைய முதல் அப்போஸ்தலப் பயணத்தின்போது இந்நகரில் வேதம் போதித்தனர். இவர்கள் முதலில் யூதர் களுக்கும் போதித்தனர்; ஆனால் அவர் கள் இவர்களைப் புறக்கணிக்கவே, புறவினத்தாருக்குப் போதித்து வெற்றி கொண்டனர். பொறாமை கொண்ட யூதர் கள் இவர்களை நகரைவிட்டு வெளியேற்றி யது மட்டுமன்றி, இலிசித்திரா வரைக்கும் அவர்களைப் பின்சென்று, அவர்களைக் கல்லால் எறியும்படி மக்களைத் தூண்டி விட்டனர் (அ.ப. 13:14.52; 14:19).

பவுல் தனது இரண்டாவது, மூன்றா வது வேதபோதகப் பயணத்தில் இந் நகருக்கு மீண்டும் வந்திருக்கலாம 14:21; 16:6; 18:23). ஆனால் யூதர்களின் பகைமை யும் தொந்தரவும் இருந்துகொண்டே இருந்தது. இதை திமோ 3:11–இல் சுட்டிக் காட்டுகிறார். இருப்பினும் இங்குதான் முதன்முறையாக கிரேக்கர்களான யூதர் களிடையேயும், புறவினத்தாரிடையேயும் தனது போதகத்தின் தர்க்கத்தை ஏற்படுத் தினார். ஐயப்பாடுடையவர்களாக இருந்த வர்களை ஆதரவாளராக மாற்றினார் (அ.ப. 13:48).

பைசான்டைன் காலத்திலும் இந்நகரம் முக்கியம் வாய்ந்ததாக இருந்தது. கி.பி. 4–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பேரா லயம், அதன் பல வண்ண ஓவியங்களுக் கும் பைசான்டைன் கல்லறைகளுக்கும் சிறப்புப் பெற்றது. சிலுவைப்போர் காலத் திலும் இந்நகரம் ஒரு கோட்டையாக இருந்தது.

அந்தியோக்கியாவின் கிண்ணம்
(CHALIA OF ANTIOCH)

கிறிஸ்தவக் கலைக்குச் சான்றாக விளங்கும் இக்கிண்ணம் கி.பி. 1910–இல் அந்தியோக்கியாவில், அல்லது சீரியா வில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படு கிறது. வெள்ளியினால் செய்யப்பட்ட இக் கிண்ணம், உட்பக்கம் சாதாரண கிண்ணம்போல குழிவாகவும், வெளிப் பகுதி பல வேலைப்பாடுகளுடனும், கீழ்ப் பகுதி சமமானஒரு தட்டைப்பகுதியாகவும் உள்ளது. வெளிப்பகுதியில் விலங்குகள், பறவைகள், அமர்ந்திருக்கும் வடிவில் இரு குழுவாகவுள்ள பன்னிருவர் எனப்பல உருவங்கள் இதில் உள்ளன. இக் கிண்ணத்தின் நடுப்பகுதி வளைந்திருப்ப தால் அதன்மேல் பகுதி சிறிது வெடித் திருக்கிறது, இப்போது இது நியூயார்க் கில் உள்ள ஒரு துறவறமடத்தில் உள்ளது.

இது செய்யப்பட்ட காலம்பற்றி அதிக சர்ச்சையுண்டு. சிலர், இது முதல் ஆறு நூற்றாண்டுகட்கு உட்பட்டது என்று கருது கின்றனர். எயிசென் என்பவர் இது இறுதி இராவுணவில் இயேசுவால் பயன் படுத்தப்பட்டிருக்கவேண்டும் எனவே

முதல் நூற்றாண்டைச்சேர்ந்தது என்கிறார். இவற்றில் உள்ள உருவங்கள் இளைஞரான இயேசு, நான்கு நற்செய்தியாளர்களுடனும், யாக்கோபு அவர் சகோதரர் யோவானுடனும், உயிர்த்த இயேசுபேதுரு, பவுல், யாக்கோபு, யூதா, அந்திரேயர் ஆகியோரை இவற்றில் இருப்பதாகக் குறிப்பிடுகிறார். பழங்கலையின் மாணவர்கள் யாவருமே இதனை மறுக்கின்றனர். ஏனெனில் அனைத்து புதிய ஏற்பாட்டு நூல்களும் கி.பி 64-க்குள் முடிக்கப்பட்டதாகக் கொள்ளும் கருத்தின் அடிப்படையில் அவற்றை எழுதி முடித்த ஆசிரியர்கள் இக்கிண்ணத்தில் பொறிக்கப்பட்டுள்ளனர் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. இது 4 அல்லது 5-ம் நூற்றாண்டைச்சேர்ந்த கிறிஸ்தவக் கலையின் சிறந்த படைப்புக்குச்சான்றாகும்.

அந்தியோக்கு (ANTIOCHUS – எதிர்ப்பவன்)

சீரியாவைச் சேர்ந்த செலூக்கிய அரசமரபின் அரசர்களுக்கு விருப்பமான பெயராகும். கி.மு. 280–65–க்கு இடையில் சீரியாவை ஆண்ட பன்னிரண்டு செலூக்கிய அரசர்கள் இப்பெயரைக் கொண்டுள்ளனர்.

1. முதலாம் அந்தியோக்கஸ் (கி.மு. 280–261):- செலூக்கிய அரசர்கள் இரண்டாவது பெயரைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கப்படி, இவர் "விடுவிப்பவர்" என்ற பொருளுடைய சோத்தேர் பெயரைச்சேர்த்துக்கொண்டார். இவர் பெரிய அலக்சாந்தரின் தளபதிகளில் ஒருவரான முதலாம் செலூக்கு நிகாட்டோர் என்பவரின் மகனாக கி.பி. 324-ல் பிறந்தவர். இவர் தந்தைக்குப் பின் 280-இல் அரசனானார். சிறிய ஆசியாவிலுள்ள கால்வியர்களுக்கு எதிரான போரில் 261-ல் கொல்லப்பட்டார். இவர்களையும் கெல்தியர்களையும் அடக்குவதில் இவரது பெருங்காலம் செலவிடப்பட்டது. இதில்கொண்ட வெற்றிக்காக, மக்கதோனிய அரியணைக்கு உரிமை கொண்டாடிய போட்டியில் அடைந்த வெற்றிக்காகவும் இவருக்கு சோத்தர் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார். பாலஸ்தீனமாகிய சூலே-சீரியாவைப் பொருத்தமட்டும், இவர் எகிப்தின் தோலமி பிலதெல்பூசுடன் போரிட்டார். ஆனால் இந்தப் பகுதிகளை வெற்றி கொள்ளவில்லை (முதல் சீரியப்போர்) மற்றபடி இவரைப்பற்றி ஒன்றும் அறிவதற்கில்லை.

2. இரண்டாம் அந்தியோக்கு தெயோஸ் (கி.மு. 261–246) :-

இவரது இரண்டாவது பெயர் "கடவுள்" என்று பொருள்படும். முன்வரின் மகன். இவர் தனது ஒன்றுவிட்ட தங்கையை மணந்தார். இவரைப்பற்றி அவதூறாகப் பலகாரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவர் ஒழுக்கம் கெட்டவர்; குடிகாரன்; கையாள்கள் வைத்து ஆண்டார். திமார்க்கு என்ற கொடியவரிமிருந்து மிலேசிய மக்களை விடுவித்ததால் அம்மக்களால் கடவுள் என்று பொருள்படும் தெயோஸ் என்ற பெயர் கொடுக்கப்பட்டார். அதன்விளைவாக சிறிய ஆசியாவிலுள்ள பல நகரங்களில் இருந்த யூதர்கள் குடியுரிமைச் சலுகை பெற்றனர். இவர் அரியணை ஏறிய சிறிது காலத்திற்குப்பின் தோலமி பிலதெல்பூசால் தாக்கப்பட்டு (இரண்டாம் சீரியப்போர்) சிறிய ஆசியாவின் சிலபகுதிகளை இழந்தார். இப்போரைப்பற்றி அதிகமாகத் தெரியவில்லை. ஆனால் 250-இல் இப்போரின் ஒரு நிபந்தனையாக, இவர் தனது முதல் மனைவி இலாவோதிக்கவை நீக்கிவிட்டு தோலமியின் மகள் பெர்னீக்காவை மனைவியாக்கக் கட்டாயப்படுத்தப்பட்டார். இதை மிகவும் வெறுத்த இலாவோதிக்காவை அவளது கணவன் சமாதானப்படுத்த முயன்றபோது, அவருக்கு நஞ்சு வைத்துக் கொன்றதோடு, அவருக்கும் பெர்னீக்காவுக்கும் பிறந்த குழந்தையையும் கொன்றுவிட்டாள். தனது மகன் இரண்டாம் செலூக்குக்கு அரியணையை உரியதாக்கினாள். இதனால் சினம்கொண்ட, பெர்னீக்காவின் சகோதரன் தோலமி யூர்கேத்து பதிலடியாக சீரியாவின் மேல் படையெடுத்தார். பெர்னீக்காவுக்குச் சார்பாக எகிப்தியர் படை எடுத்தது பொய்க்கதையாக இருக்கலாம். ஆனால் உண்மையில் இரண்டாம் அந்தியோக்குவுக்குப் பின் இலாவோதிகாவின் இரண்டாம் செலூக்கு ஆட்சிக்கு வந்தான் (காண்க 2-ஆம் செலூக்கு).

தானி 11:16–18ஐ இந்த அரசனுக்குச் சாற்றிக் கூறுவது மரபாகும். இதன்படி தென் அரசரின் புதல்வி வட அரசனின் மனைவியாவாள். அவளோ, அவள் குழந்தையோ, அவளது கணவனோ உயிரோடு இரார். தானியேல் நூலில், கடந்த கால நிகழ்ச்சிகள் இன்னும் வருங்காலத்தில் நடப்பதாகப் பாவித்துக் கூறப்படுகின்றன.

3. பெரிய மூன்றாம் அந்தியோக்கு (223–187):- இரண்டாம் செலூக்குவின் இளைய மகனும் 2 –ம் அந்தியோக்குவின் பேரனுமாவார். அவரது அண்ணன் மூன்றாம் செலூக்குவுக்குப்பின் அரசனானார். பார்த்தியர்களுக்கு எதிராகக் கொண்ட வெற்றிக்காக "பெரிய" என்ற பட்டம் பெற்றார். 218–இல் எகிப்திய நான்காம் தோலமி பிலோபத்தோரால் தோற்கடிக்கப்பட்டார் (தானி 11:11). ஆனால் அடுத்த எகிப்திய குழந்தை மன்னன் காலத்தில் 198–இல் பாலஸ்தினத்தை வென்று தன் ஆளுகைக்குள் கொண்டு வந்தார் (11:13–16) இது யூதர்களுக்கு ஒரு முக்கிய, ஆனால் வருத்தத்திற்குரிய நிகழ்ச்சியாகும். ஏனெனில், இதுவரை சலுகையோடு யூதர்களை நடத்திய எகிப்திய தோலமியர்களோடு இருந்த தொடர்பு அறுப்பட்டுவிட்டது. இதுவரை யூதர்கள் அனுபவித்திராத கொடுமைமிக்க காலத்திற்குத் தொடக்கமாகும். 5–ஆம் தோலமியோடு செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, சமாதான அடையாளமான இந்த அந்தியோக்கு தன் மகள் கிளியோபத்திராவை 5–ம் தோலமிக்கு மனைவியாகக் கொடுத்தார் (11:17).

இவரது இறுதிக்காலம் சிறிய ஆசியாவிலும், உரோமையரோடும் போரிடுவதிலே செலவிடப்பட்டது. இருமுறை உரோமையால் அவர் தோற்கடிக்கப்பட்டார் (11:18–19; 1 மக் 3:6–8). 189–இல் தௌரஸ் ஆற்றுக்கு மேற்கான பகுதிகளின் உரிமையை விட்டுக்கொடுக்கும் உடன்படிக்கையில் கையொப்பமிட கட்டாயப்படுத்தப்பட்டார். இரு ஆண்டுகளுக்குப் பின் அர்மேனியர்களின் கிளர்ச்சியை அடக்க முயலும் போது கொல்லப்பட்டார்.

4. நான்காம் அந்தியோக்கு எப்பிபான் (175–164):- முன்னவரது இளைய மகன். இவர் அண்ணன் செலூக்கு பிலோபத்தோருக்குப் பின் முறையான வாரிசு இருந்தாலும் ஆட்சிக்கு வந்தான். புகழ்பெற்ற அல்லது வெளிப்பாடான கடவுள் என்று பொருள்படும் எப்பிபான் என்ற இரண்டாவது பெயரை எடுத்துக் கொண்டார். ஆனால் அவனது எதிரிகள் அவனை கிறுக்கன் என்று பொருள்படும் எப்பிமான் என்றழைத்தனர். ஒருவேளை இப்பெயரே இவருக்கு மிகவும் பொருத்தமானதாகும். வரலாற்றிலேயே மிகக் கொடுங்கோலர்களில் ஒருவர். இவர் தந்தையைப் போல் துணிவுள்ளவர். ஆனால் கிறுக்குப் பிடிக்கும் அளவுக்குத் தான்தோன்றித்தனமாய் நடப்பவர். இவரடியில் எருசலேம் யூதர்களும் மிகவும் துன்பப்பட்டனர். தனது நாட்டின் பகுதிகளை எல்லாம் ஒற்றுமைப்படுத்த கிரேக்க கலாச்சாரத்தைக் கட்டாயமாகப் புகுத்தினார். இது யூதர்களின் தீவிர எதிர்ப்பைக் கிளப்பியது.

எருசலேமயில் உரிமையுள்ள பெரிய குரு ஒனியாவுக்கும், அவரது சகோதரன் யாசோனுக்கும் இடையில் தலையிட அழைக்கப்பட்டார். அந்தியோக்கு, கிரேக்க மயமாக்குவதை ஆதரிக்கும் யாசோனுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தார். ஒனியா ஓடவேண்டியிருந்தது. ஒரு பெருந் தொகைப் பணமும் கொடுத்த யூதர்களிடையே கிரேக்க மயமாக்குவதை விரைவுபடுத்துவதாக வாக்குறுதி கொடுத்து யாசோன் பெரிய குருவானார் (2 மக் 4:7–20) இவர் அரசனுக்கு மட்டுமிஞ்சி செலவிட்டு வரவேற்பளித்தார். விரைவில் இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, இன்னும் அதிகப் பணம் அளிக்க வாக்களித்த மெனெலாவு பெரிய குரு வாக்கப்பட்டார். அரசன் இறந்துவிட்டான் என்ற வதந்தியை நம்பி, யாசோன் எருசலேமை முற்றுகையிட்டார். அப்போதுதான் எகிப்தில் ஒரு வெற்றிப் படையெடுப்பை முடித்திருந்த அரசன் சினம் கொண்டு, எருசலேமுக்குத் திரும்பி அதைக் கொடுமையாகத் தாக்கி ஆலயத்தைப் பங்கப்படுத்தி, அதன் கருவூலத்தில் உள்ளதையெல்லாம் கொள்ளையடித்தார் (1 மக் 1:28–29; 2 மக் 5:11–26). தன்னைப் போன்றே கொடுமையுள்ளம் படைத்த பிலிப்புவை ஆளுநகராக விட்டுச் சென்

றார். யூதர்களுக்கும் இவனுக்குமுள்ள உறவு நிலை 168–இல் புதிய இழிநிலைக் குத் தாழ்ந்தது. எகிப்தை மூன்றாம் முறை யாகத் தாக்கப்போய்க் கொண்டிருக்கும் போது, அலக்சாந்திரியா நகருக்கு வெளியே, இப்படையெடுப்பைக் கைவிட்டு விட்டு, எகிப்திய பகுதிகளை அனைத்தை யும் உரோமையரிடம் விட்டுவிட வேண்டு மென உரோமைத்தளபதி காயுஸ் போப் லியுலோனாஸ் கட்டளையிட்டார் (காண்க: தானி 11:30) இதைக் கேட்டுக் கோப வெறி யோடு பின்தங்கிய அந்தியோக்கு எருச லேமை அழித்து அதில் கிரேக்கர்களைக் குடியேற்ற தீர்மானித்தார். இந்த அலுவலை இருபதாயிரம் பேர் கொண்ட படையோடு அப்பொல்லோனியுவிடம் விட் டார். அப்பொல்லோனியு ஒரு ஒய்வு நாளில் எருசலேமுக்குள் நுழைந்து, ஆண் யூதர்களில் பெரும்பாலோரைக் கொன் றார். மீதிப் பேர் நகரத்திற்குப் புறம்பே யூதா மக்கபேயரோடு சேர்ந்துகொண்ட னர். பெண்களும் குழந்தைகளும் அடிமை களாக்கப்பட்டனர். எருசலேம் பெரிதும் பாழ்படுத்தப்பட்டது. அங்கு ஒரு காவல் படை நிலையம் கட்டுப்பட்டு, சீரியத் துருப்புக்கள் தங்கின. மெனலாவு பெரிய குருவாக இருந்தாலும், சமயப் பழக்க வழக்கங்கள் இல்லை.

தனது கிரேக்க மயமாக்கும் வேலை வெற்றி பெறுவதாக நம்பிக்கைக்கொண்ட அந்தியோக்கு ஒரு கொடிய சட்டதைக் கொண்டு வந்தான் (2 மக் 4:1). அதன்படி நாடு முழுவதும் ஒரே சமயமும், சட்டமும் பழக்க வழக்கங்களும் இருக்க வேண்டும். யூதர்கள் மட்டுமே இதை எதிர்த்தனர். ஆகவே ஒய்வு நாள் அனுசரிப்பு, விருத்த சேதனம், உணவு ஒழுங்குகள் ஆகியவற் றைக் கடைப்பிடித்தல் சாவைத் தண்டனை யாகக்கொண்டுவரும். ஆலயத்தில் தகனப் பலி பீடத்தில் சேயுசுக்குப் பீடம் கட்டி னார். இதுதான் தானியேல் குறிக்கும் "பாழாக்கும் அருவருப்பு" ஆகும் (தானி 11:31; 1 மக் 1:5). யூதர்கள் சட்டப்புத்தகத்தை வைத்திருந்தால் கொல்லப்பட்டனர். புற இனவிழாக்களில் பங்கெடுக்கக்கட்டாயப் படுத்தப்பட்டனர். பல பிரமாணிக்கமுள்ள யூதர்கள் மறைசாட்சிகளாக மரித்தனர். இறுதியாக 167–இல் அரசனை எதிர்த்து யூதர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். சீரிய படைகளுக்கும் யூதக்கிளர்ச்சியாளர் களுக்கும் கொரில்லாப் போர்கள் நடந்தன. 166–இல் மத்தத்தியா இறந்தார். அவர் மகன் யூதா மக்கபேயு கிளர்ச்சிக் கும் தொடர்ந்து தலைமை தாங்கினார். யூதா வெற்றிக்குமேல் வெற்றிகொண்டார். அந்தியோக்குவின் கவனம் பார்த்தியர், அர்மேனியர், கிளர்ச்சிகளில் திரும்பி யிருந்ததால், யூத கிளர்ச்சியை அடக்க தன் தளபதிகளை அனுப்பினார். அப் பொல்லோனியு, சேரோன், தோலமி, நிக்கனோர் கோர்க்கியா இறுதியாக அரச பிரதிநிதி இலிசியா ஆகிய அனைவரை யும் யூதா தோற்கடித்தார். ஆலயத்தை அதன் முந்திய மகிமையில் புதுப்பித்தார் (165–இல் தினப்பலி வழிபாடு மீண்டும் தொடங்கியது).

யூதாவின் வெற்றிகள், அந்தியோக் குவை மேலும் பைத்தியம் பிடித்தவனாக்கி யது. யூதாவை அவர் கட்டுப்படுத்தவே முடியவில்லை. ஏலிமாயிசில் உள்ள நானேயா கோவிலைக் கொள்ளையடிக் கும் முயற்சியில் வெற்றிபெறாது கீழ்த் திசை திரும்பினார். அவர் இறக்கும் முன் சிறிது காலத்திற்கு பாரசீகத்தில் உண்மை யிலேயே பைத்தியக்காரன் ஆனார் என்று கூறுப்படுகிறது (1 மக் 6:1–16).

பக்தியுள்ள யூதர்கள் இவரிடம் காட்டிய பேரச்சத்தை தானியேல் நூலும் மக்கபே யர் நூல்களும் பிரதிபலிக்கின்றன. அவர் பயங்கரமுடையவர். விண்ணகப் படை களுக்குச் சவால்விடும் சிறிய கொம்பா வார். தந்திரமுள்ளவர், ஏமாற்றுபவர், சதி காரர். மிகுந்த பேய்த்தன்மையுடையவர்.

5) ஐந்தாம் அந்தியோக்கு யூபாத்தேர் (164–162):- மேன்மைமிக்க தந்தையையுடைய வர் என்பது இரண்டாவது பெயரின் பொருள். சிறுவராக இருக்கும்போதே பதவிக்கு வந்தார். இவரது காப்பாளராக இலிசியா நியமிக்கப்பட்டார். 162–இல் இலிசியாவின் உதவியுடன், எருசலேமில் முற்றுகையிடப்பட்டிருந்த சீரியப்படைக்கு உதவ, ஒருபெரும்படையை எருசலேமுக்கு அனுப்பினார் (1 மக் 6:18–54). அதிகாரப்

பூர்வமான அதிகாரியும் பாதுகாப்பாளரு மான பிலிப்பு பாரசீகத்திலிருந்து திரும்பி விட்டான் என்று இலிசியா அறிந்தபோது விரைவாக யூதர்களோடு சமாதானம் செய்துகொண்டார் (6:55–60). பின் பிலிப்பு வை அந்தியோக்கியாவில் எதிர்த்துத் தோற்கடித்தார். வெற்றியின் மகிழ்ச்சி வெகுகாலத்திற்கு நீடிக்கவில்லை. இளைய அரசன் யூதர்களுக்குச் செய்து கொடுத்திருந்த சத்தியத்தைக் கடைப் பிடிக்கவில்லை. விரைவில் இலிசியா விடம் இளைய அரசரும் உண்மையான வாரிசும் 4–ஆம் அந்தியோக்குமுன் அரச னாக வேண்டியவனுமான தெமேத்திரியு சோத்தோரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டு 5–ஆம் அந்தியோக்குவும் இலிசியாவும் 162–இல் கொல்லப்பட்டனர்.

6. 6–ஆம் அந்தியோக்கு எப்பிபான் தியோனிசியு (145–142):- இவர் அலக் சாந்தர் பாலாசின் மகன். சிறுவனாக இருக்கையிலேயே தெமேத்ரியு நகத்தோ ரின் ஆட்சிக் காலத்தில் தன் தந்தையின் தலைமை அமைச்சர்களில் ஒருவனான திரிபோவால் அரியணை ஏற்றப்பட்டார். தளபதிகள் ஆதரவு அளித்தனர். எருச லேமில் யோனாத்தானும் ஆதரவு அளித் தார். இவர் தன் அதிகாரத்தை உறுதிப் படுத்தத் தேவையான காலத்திற்கு மட்டும் தான் ஆட்சி செய்தார். பின்பு திரிபோ இவரைக்கொன்றுவிட்டு, பதவியைத் தான் எடுத்துக்கொண்டார் (1 மக் 11:39–40. 54;12:39;13:31). இவருடைய ஆட்சி, யூதத் தலைவரும் பெரிய குருவுமான யோனத் தானின் இறுதி ஆண்டுகளோடு ஒன்றித் திருந்தது.

7. 7–ஆம் அந்தியோக்கு சிதெதேஸ் (138–129):- பம்பிலியாவிலுள்ள சீதாவில் பிறந்து வளர்ந்தவர். இவர் புரவலர் உப காரி என்று பொருள்படும் யூர்கெத்து என்ற பெயரையும் கொண்டிருந்தார். முத லாம் தெமேத்திரியுவின் இரண்டாம் மகனும் இரண்டாம் தெமேத்ரியுவின் சகோதரனும் ஆவார். இரண்டாம் தெமேத்ரியுஸ் பார்த்தியர்களால் பிடிபட்ட பின் திரிபோ பதவிக்கு வந்தார். இவனுக்குப் பதிலடி கொடுக்கும் விதத் தில் 7–ஆம் அந்தியோக்கு, யோன தானுக்குப்பின் வந்த சீமோன் என்ற யூத பெரிய குருவுக்குப் பல சலுகைகளை அளித்தார் (1 மக் 15:1–14). தோர் என்ற இடத்தில் திரிபோவை அடைத்து வைத்த பின் இச்சலுகைகளை எல்லாம் நீக்கி விட்டார் (15:25–27). பெரிய குரு அரசனுக்கு எதையும் விட்டுக் கொடுக்கவில்லை. ஆனால் 135–இல் அவர் செலூக்கியர் களுக்குப் பிரமாணிக்கமான அவருடைய மருமகன்களில் ஒருவரால் கொல்லப் பட்டார் (16:11–18).

135–இல் அந்தியோக்கு எருசலேமின் மீது படையெடுத்துப்பிடித்து, அதன் சுவர் களில் ஒரு பகுதியைத் தரமட்டமாக்கி னார். யோவான், இரிக்கானுவை பெரிய குருவாக்கினார். யூதர்களுக்கும் மதச் சுதந்திரச் சலுகைகள் கொடுத்தாலும், பெரிய குருவைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். யூதாவைத் தன் ஆட்சிக் குள் நிலைப்படுத்திய பின்பு, தனது கவனத்தைப் பார்த்தியர்பால் திருப்பி னார். 130–இல் அவர்கள்மேல் வெற்றியும் கொண்டார். ஆனால் இது வெகு காலத் திற்கு நீடிக்கவில்லை. 129–இல் அவர்கள் 2–ஆம் தெமேத்திரியுவை விடுவித்தனர். அந்தியோக்கு பார்த்தியர்களுக்கு எதி ராகப் போரிட்டபோது மரித்தார்.

8. 8–ஆம் அந்தியோக்கு (125–96):- "கொக்கி மூக்குடையவன்" என்று பொருள் படும் கிரிப்பு என்ற பட்டப்பெயர் பெற்ற வர். இவர் 2–ஆம் தெமேத்திரியுவின் இரண்டாம் மகன். முதலில் அவபெயரு டைய கிளியோபத்திரா தேயா என்ற தன் தாயோடு சேர்ந்து ஆட்சிசெய்தார். சிறிது காலத்திற்குப்பின் இவரது பதவிக்கு இவரது ஒன்றுவிட்ட சகோதரன் 9–ஆம் அந்தியோக்கு சவால்விட்டார்.

9. 9–ஆம் அந்தியோக்கு (116–95):- இவரது இரண்டாவது பெயர் சிசிசேனு ஆகும். ஆனால் நாணயங்கள் பிலோதேத் தோர் என்ற பெயரைக் கொண்டுள்ளன. இவர் 8–ஆம் அந்தியோக்குவின் ஒன்று விட்ட சகோதரன். இருவருக்கும் நடந்த போட்டிகளில் முதலில் 8–ஆம் அந்தி யோக்கு வெற்றி பெற்றார். ஆனால் பின்பு நிலை மாறியது. ஆகவே இரு சகோத ரர்களும் சீரியாவைப் பங்கிட்டுக் கொண்ட

னர். இது உரோமையர் அங்கு காலூன்ற ஒரு வாய்ப்பை அளித்தது. இதுவே யோவான் இரிக்கானு தலைமையில், யூதர்கள் முழுச் சுதந்திரத்தை நோக்கி முன்னேற உதவியது.

10. 10–ஆம் அந்தியோக்கு (94–83):- 9 – ஆம் அந்தியோக்குவின் மகன். 8–ஆம் அந்தியோக்குவின் மகனான 4–ஆம் செலூக்குவை நாடு கடத்தினார். இவர் எகிப்திய இளவரசி சேலேனேயின் மூன்றாவது கணவன் ஆவார். இவள் முதலில் 8–ம் அந்தியோக்குவையும், பின்பு 9–ஆம் அந்தியோக்குவையும் மணந்தவள். 10–ஆம் அந்தியோக்கு, 8–ஆம் அந்தியோக்குவின் மற்ற புதல்வர்களிடமிருந்து எதிர்ப்பை எதிர் கொண்டார். இவர்களில் 11–ஆம் அந்தியோக்கும் உள்ளடங்குவார். இறுதியில் 10–ஆம் அந்தியோக்கு நாடு கடத்தப்பட்டு, போரில் கொல்லப்பட்டார். 8–ஆம் அந்தியோக்குவின் கடைசிமகன் 12–ஆம் அந்தியோக்கு ஆனார். செலூக்கியின் அரசமரபின் இறுதிக்காலம் உட்பூசல்கள் நிறைந்ததாக இருந்தது. 83–இல் அர்மேனிய அரசனான திகிரான் சீரியா முழுவதையும் தன் ஆட்சிக்குள் கொண்டு வர முடிந்தது. தனது பிரதிநிதி வழியாக 14 ஆண்டுகளுக்கு இப்பகுதியை ஆண்டார். இவரும் உரோமையரால் தோற்கடிக்கப் பட்டார். செலூக்கிய அரச மரபு கூட ஒரு சிறிது காலத்திற்கு உயிர் பெற்றிருந்தது.

11. 13–ஆம் அந்தியோக்கு (66–65):- இவர் பொதுவாக ஆசியத்திகு என்றழைக்கப்பட்டார். 10–ஆம் அந்தியோக்கு – சேலேனே ஆகியவர்களுக்குப் பிறந்தவர். இவர் அரசாள உரோமையர் அனுமதித்தனர். ஆனால் 65–இல் அதே குடும்பத்தைச் சேர்ந்த பிலிப்பு என்பவர் அரச பதவிக்கு உரிமை கொண்டாடினார். அதனால் வெற்றியடையவில்லை. 63–இல் உரோமைத் தளபதி பாம்பே சீரியாவை ஒரு உரோமை மாகாணமாக்கி செலூக்கிய அரச மரபை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

12. நூமேனியுவின் தந்தை. இவர் 1 மக் 12:16; 14:22–இல் குறிக்கப்பெறுகிறார். இவ்ரைப் பற்றி மற்றெந்த முக்கியமும் இல்லை.

அந்திரேயா (ANDREW – ஆண்மையுடையவர்)

இவர் யோனாவின் மகன். சீமோன் பேதுருவின் சகோதரன். இது ஒரு கிரேக்கப்பெயர். யூதர்களால் பயன்படுத்தப் பட்டது. இவரது குடும்பம் பெத்துசாயிதாவில் வாழ்ந்து வந்தது (யோவா 1:44).

இவர் ஒரு மீனவர். திருமுழுக்கு யோவான் சீடர்களில் ஒருவர். பின் இயேசுவின் முதல் சீடர்களில் ஒருவரானார் (1:35–40). அப்போஸ்தலர் பட்டியலில் முதல் நால்வரில் ஒருவராக வருகிறார் (மத் 10:2–4; மாற் 3:16–19; லூக் 6:14–16; அ.ப. 1:13). பேருதுவையும், பிறகு பிலிப்புவையும் நத்தனியேலையும், இயேசுவுக்கு அறிமுகப்படுத்தியவரும் இவரே (யோவா 1:41–42). ஒத்தமை நற்செய்திகளின்படி, சீமோன், செபதேயு, அவரது மக்களாகிய யாகோபு, யோவான், ஆகியவர்களுடன் சேர்ந்து அந்திரேயா மீன் பிடிப்பவர் இவர். அவர்களுடன் சேர்ந்து கப்பர் நாகூமுக்கு அருகில் கலிலேயாக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அவருக்கு அழைப்பு வந்தது (மாற் 1:16–20; லூக் 5:10).

ஐயாயிரம் பேருக்கு உணவு அளிக்கப் படுமுன் அப்பமும் மீன்களும் வைத்திருந்த பையனைப்பற்றிக்கூறியவர் இவரே (யோவா 6:3). மற்றொரு சமயம் மெசியாவைப்பற்றி அறிய விரும்பிய கிரேக்கர்களின் விருப்பத்தை இவர்தான் இயேசுவுக்குச் சொன்னார் (12:22). இந்த இரு நிகழ்ச்சியுரைகளிலும் கிரேக்கப் பெயருடைய மற்றொரு சீடரான பிலிப்புவோடு தொடர்புபடுத்தப்படுகிறார். ஒலிவ மலை உரையில் எருசலேமின் அழிவு, இறுதிக் காலம் ஆகியவற்றின் பொருளை இயேசுவிடம் கேட்ட சீடர்களில் இவரும் ஒருவர் (மாற் 13:3). இதற்குப் பின் இவரைப்பற்றி ஒரு செய்தியும் கூறப்படவில்லை.

திருச்சபை பாரம்பரியப்படி சித்தியா இவர் பணிபுரிந்த முக்கிய இடங்களில் ஒன்று ஆகும். இதனால் இவர் உருஸ்யாவின் பாதுகாவலர் என அழைக்கப்படுகிறார். இவர் ஸ்காட்லாந்துக்கும், பாது

காவலர். அக்காயாவில் விசுவாசத்தைச் போதித்தபோது அங்குச் சிலுவையில் அறையப்பட்டு வேத சாட்சியாக இறந்தார் என்று அந்திரேயாவின் பணி என்ற அங்கீகாரம் பெறாத நூல் கூறுகிறது. பிற்காலப் பாரம்பரியப்படி, அவரது உடல் கான்ஸ்டாண்டிநோபுலுக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் பின்பு சிலுவைப்போர் வீரர்களால் இத்தாலியாவில் உள்ள அமால்பிக்கிற்கு மாற்றப் பட்டது என்றும் அறிகிறோம்.

அந்திரேயாவின் பணி நூல்
(ACTS OF ANDREW)

அப்போஸ்தலர்கள் பணிபற்றி எழுதப் பட்ட ஐந்து, திருமுறை சேராத நூல்களில் ஒன்று. இது லெயூசியஸ் கரினுஸ் என்பவரால் எழுதப்பட்டதாகப் பாரம்பரியமாக ஏற்றுக்கொள்ளப்படும். இது கி.பி. 3–ஆம் நூற்றாண்டிலோ அல்லது சிலர் கருதுவதுபோல 190–ஐ ஒட்டியோ கிரிசிலோ அல்லது சிறிய ஆசியாவிலோ கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும். மேற்கூறப் பட்ட ஐந்து நூல்களில் மிக நீண்டது. கிரேக்க மொழியில் சில துணுக்குகளிலும் தூர் ஊரின் கிரெகோரியாரின் (540–594) இலத்தீன் சுருக்கத்திலுமே இப்போது உள்ளது. இது துறவுப் பிரிவினைக்காரர்களாலும் குறிப்பாக மனிகேயர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மனிக்கேயர், திருமுறைப் பட்டியலில் வரும் அப்போஸ்தலர் பணி நூலுக்குப் பதிலாக இதை ஏற்றுக்கொண்டனர்.

நூல், பேதுருவின் சகோதரர் கிரீஸ் மேற்கு ஆசியா வழியாகச் செய்த பயணங்களையும் அவர் செய்த புதுமைகளையும் வியத்தகு செயல்களையும் விவரிக்கிறது. அக்காயாவில் குருடனுக்குப் பார்வை அளிக்கிறார், இறந்தவனை உயிர்ப்பிக்கிறார், அநியாயத் தீர்ப்பைத் தடுக்கும் பொருட்டு நில நடுக்கத்திற்காக வேண்டுகிறார். பேய்களை ஓட்டுகிறார். நீர்க்கோர்வை நோயுடைய ஒரு பெண்ணைக் குணமாக்கி அவளை மனந்திருப்பிவிடுகிறார். நிசேயாவில் நகரத்தையும் நகர மக்களையும் வழியில் போவோர்களை கல் எறிந்து கொல்லும் பேய்களிடமிருந்து விடுவிக்கிறார். நிக்கோமேதியாவில் இறந்து போன மனிதனை உயிர்ப்பிக்கிறார். இந்த விவரிப்பு லூக் 11–17க்கு ஒத்ததாக உள்ளது. திராக்கேயில் அவரும் அவருடன் சென்ற தோழர்களும், தாக்க வந்த படையின் வாள்களிலிருந்து, வான தூதுவர்களால் காப்பாற்றப்படுகின்றனர். துறவு நோக்கு குறிக்கோள், அவர் பிலிப்பையில் ஒரு திருமணத்தை நிறுத்தியதிலிருந்தும், ஆளுநராக இருந்த அகேயுத்தாசின் மனைவியான மக்ஸ்மில்லாவை அவரிடமிருந்து பிரிந்து கற்பு வாழ்வு வாழத் தூண்டியதிலிருந்தும் தெளிவாகிறது. பின் இந்த நிகழ்ச்சியின் தலையீட்டுக்காக அந்திரேயா சிறையிலடிக்கப்படுகிறார். பிறகு சிலுவையில் அறைந்து கொல்லப் படுகிறார். எக்ஸ் (X) வடிவமுள்ள சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது, பல போதக உரைகளை வழங்குகிறார். இவை ஞானவாத இயல்புடையன. இவற்றின்படி மனுக்குலத்தின் உண்மையானதன்மை தூய ஆண் மீகமானதாகும். அதன்பலவீனம் தீமையிலிருந்தும் அமைதியை எதிர்த்து ஏமாற்றும் பகைவனிடமிருந்தும் வருகிறது. பாவத்திலிருந்து விடுதலை ஞான ஒளியூட்டுதலால் வருகிறது.

கிரெகோரியாரின் இலத்தீன் வாசகத்தின் முன்பகுதி அந்திரேய, மத்தியா ஆகியோரின் பணி பற்றிய ஓர் எகிப்திய கதையைக் கொண்டுள்ளது. இம்முன்பகுதி அந்திரேய செய்த பல அரும் நிகழ்ச்சியுரைகளையும், மனிதர்களைச் சாப்பிடுபவர்களிடமிருந்து மத்தியாவைச் (சில வாசகங்களில் மத்தேயுவைக்) காப்பாற்றிய கதையையும் கொண்டுள்ளது.

அந்திரேயா, பவுல் ஆகியோரின் பணிகள்

இவ்விரு சீடர்களின் வீரச் செயல்களைக்கூறும் கதைகளுக்குப் பொதுவாகக் கொடுக்கப்படும் தலைப்பு. இப்போது இதன் வாசகம் காப்டிக் மொழியில் மட்டும் உள்ளது. இவற்றில் ஒன்றில் அந்திரேயாவும், பவுலும் இணைந்து காணப்படுகின்றனர். பவுல் கடலினுள் குதித்து கீழ் உலகைப் பார்க்கிறார். திரும்பி வந்து தாம் கண்டவற்றை அந்திரேயாவுக்குக் கூறுகிறார். யூதாசைச் சந்தித்ததாகவும், அவரது பரிதாபக் கதையையும்

கூறுகிறார். அவர் கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்ததையும், மனம் வருந்தியதையும், சாத்தான் அவரை தவறான நெறியில் செல்லத் தூண்டியதையும், கிறிஸ்து அவரைச் சந்தித்ததையும், அவரது இறுதி முடிவையும் விளக்குகிறார். அதன்பின் இருவரும் ஒரு நகரத்தக்குச் செல்லுகின்றனர். அவர்களுக்கெதிராக அவற்றின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. பவுல் கீமூலகிலிருந்து கொண்டு வந்திருந்த கைத்தடியால் அடிக்கின்றார். கதவுகள் தரை புகுந்து மறைந்துவிடுகின்றன. அதன்பின் அவர்கள் பொய்த்தன்மைக் கொண்ட யூதர்களோடு போட்டியிடுகின்றனர். பின்பு 27 ஆயிரம் யூதர்களை மனம் திருப்புகின்றனர்.

அந்திரேயா பற்றிய கதைத் துணுக்கு
FRAGMENRTARY STORY OF ANDREW)

இப்பகுதி காப்டிக் மொழியில் மட்டும் தான் உள்ளது. அப்போஸ்தலர்களைப் பற்றியது. பாலைவனத்தில் ஒரு பெண் முறைகேடான பிள்ளையைக் கொன்று துண்டு துண்டாக வெட்டி ஒரு நாயைத் தின்னச் செய்கிறாள். அந்திரேயா தன் தோழன் பிலமோனோடு அவ்விடத்திற்கு வந்த போது, அந்த நாய் அப்பெண் செய்ததை எடுத்துக் கூறுகிறது. அவர் மன்றாடுகிறார். அதில் இயேசு கெபால் மலையில் செய்த புதுமையைச் சுட்டிக் காட்டுகிறார். அவர் மன்றாட்டின் பயனாக கொல்லப்பட்டக் குழந்தையின் துண்டுகள் கக்கப்பட்டு, ஒன்று சேர்க்கப் பட்டு உயிர் பெறுகிறது. உயிர்த்த பிள்ளை ஒரே சமயத்தில் அழுகிறது, சிரிக்கிறது.

அந்திரேயா, மத்தியா, மத்தேயு, ஆகியோரின் பணிகள

திருமுறை புற நூல்களில் பெயர் பெற்றது. அந்திரேயா மத்தியாவைக் காப் பாற்றியதை விவரிக்கின்றது. மத்தியா மனிதர்களை உண்பவர்களால் சிறையில டைக்கப்பட்டிருந்தார். அம்மனிதர்கள் தங்கள் கைதிகளை 30–ஆம் நாள் குரு டாக்கி தொங்கப்போட்டு உண்பார்கள். 27–ஆம் நாள் கிறிஸ்து அந்திரேயாவுக்குத் தனது நண்பனை மீட்கச் செல்லும்படி கூறுகின்றார். இயேசுவே படகு ஓட்ட அந்திரேயா அப்படகில் பயணம் செய் கிறார். பயணத்தின்போது ஒட்டுநர் கிறிஸ் துவே என்றறியாத அந்திரேயா கிறிஸ்து இதற்குமுன் செய்த வீரச் செயல்களையும் எடுத்து உரைக்கின்றார். தான் புறவினத் தார் கோயிலையும் பேசும் ஸ்பிக்னிக்கைப் பார்த்ததையும், ஆபிரகாம், ஈசாக், யாக் கோபைச் சந்தித்து உரையாடியதையும் கூறுகிறார் அவர்கள் நிலத்தை அடைந்ததும் அந்திரேயா மத்தியாவை மீட்கின் றார். தீயவர்கள் நிறைந்த அவ்விடத்தில் புதுமைகள் பல புரிந்து துன்பத்திற்கு ஆளாகின்றார். கிறிஸ்து அவரைக் காப் பாற்றுகிறார். சிறையிலிருந்த ஒரு கற் சிலையில் இருந்துவந்த நீர் அந்ந கரை அழிக்க இருந்த நிலையில் மக்கள் மனந்திருப்பினர். எனவே அவர் அந் நகரை மீட்கின்றார். அவர்களுக்கு ஞான ஸ்தானம் கொடுத்து ஒரு கோயில் கட்டு வதற்கான திட்டத்தையும் வரைந்து கொடுக்கிறார். தூரசு நகர கிரெகோரி யார் "அந்திரேயாவின் பணிகள்" என்ற தனது இலத்தீன் மொழி பெயர்ப்பின் தொடக்கத்தில் இக்கதையை வைத்துள் ளார். ஆனால் இது அதைச் சேர்ந்த தன்று. இந்தக் கதை எகிப்திலிருந்து வந்திருக்கலாம். கிரேக்க சீரிய மொழி களிலும், ஒருபகுதி இலத்தீனிலும் காணப் படுகின்றது. இந்நூல் ஞானவாதிகளால் திருத்தப்பட்டது அல்லது சில பகுதிகள் நீக்கப்பட்டது என்பதற்கு ஆதாரமில்லை. எகிப்திய மடங்களில் கற்பனையாக உரு வாக்கப்பட்ட பலவகையான விந்தை யூட்டும் கதைகளில் ஒன்று. பலவடிவங் களில் மத்தியா பெயரும், மத்தேயு பெய ரும் மாறி மாறி வருகின்றன. அதிகம் தெரியாத மத்தியாவுக்குப் பதிலாக நன்கு தெரிந்த மத்தேயுவைப் புகுந்த முயற்சித்த தின் விளைவாக இருக்கலாம்.

அந்திரோனிக்கு (ANDRONICUS – மனிதர்களை வெல்பவன்)

1. அந்தியோக்கு எப்பிபான் அரசியல் தூதராக சிலிசியாவுக்குச் சென்றபோது அவனால் அந்தியோக்கியாவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட அதிகாரி (2 மக் 4:31–38). உரிமை பறித்துக்கொண்ட பெரிய குரு மெனலாவுவால் கையூட்டுப் பெற்று இவர் உரிமையுள்ள, ஆனால்

பதவிநீக்கம் செய்யப்பட்ட தலைமைக் குரு, ஓனியாவைக் கொலை செய்தவர். இந்தத் துரோகத்திற்குக் கைமாறாக அந்தியோக்கு திரும்பியபின் அவனால் கொலையுண்டார். எகிப்தின்மேல் அந்தியோக்கு எப்பிபான் இரண்டாம்முறை படையெடுத்தபோது அங்கு கொல்லப்பட்டார் என்ற பொய்யான செய்திக்குப்பின், யூதேயாவில் நடந்த கலகங்களை அடக்கியபின், அவரால் கெரிசிம் மக்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகத் துன்பம் கொடுக்கும் வண்ணம் நியமிக்கப்பட்டவரே இந்த அந்ரோனிக்கஸ் (2 மக் 5:23). காண்க மெனலாவு.

2. புனித பவுல் உரோமைக்கு எழுதிய திருப்பத்தில்" என் உறவினரும் உடன் கைதிகளுமான அந்திரோனிக்கஸ், யூனியா ஆகியோருக்கும் எனது வாழ்த்துக்கள். அப்போஸ்தலர்களுள் இவர்கள் பேர் பெற்றவர்கள். இவர்கள் எனக்கு முன் கிறிஸ்தவர்கள் ஆனார்கள்" என்று கூறுகிறார் (உரோ 16:7). இவர்கள் இருவரும் யூதக் கிறிஸ்தவர்கள். ஒருவேளை தார்சுவில் உள்ள யூதச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். யூனியா பெண்பால் பெயராக உள்ளது. அதனால் யூனியா அந்த்ரோனிக்கசின் மனைவியாகவோ, சகோதரியாகவோ, இருந்திருக்கலாம். ஆனால் சூழ்நிலை இருவரும் ஆண்களே என்று காட்டுகிறது.

அந்துப் பூச்சி (MOTH)

இது ஒருவகைப் பூச்சி. இது கம்பளி அல்லது மென் மயிரில் முட்டையிடுகின்றது. இதன் புழு அவற்றைத் தின்று வளர்க்கிறது. பெரும்பாலும் அவற்றிற்கு கடும் சேதம் விளைகின்றது. இந்த அழிவு விவிலியத்தில் சங் 39:11; எச 50:9; 51:8; ஓசே 5:12; மத் 6:19–20; லூக் 12:33; யோபு 4:19; 27:18 ஆகிய பகுதிகளில் குறிக்கப்படுகிறது.

மறை நூலில் அந்துப் பூச்சி உருவகமாகப் பயன்படுகிறது. அந்துப் பூச்சி பலவீனமானது. ஆனால் அதைவிட மனிதன் பலவீனம் ஆனவன் என்று மிகைப்படுத்திக்கூறப்படுகிறது (யோபு 4:19). அதுபோல், அந்துப் பூச்சி அரித்த ஆடை மனித வாழ்வின் பலவீனத்தையும், உறுதியற்ற தன்மையையும் எடுத்துக்காட்டுகிறது (யோபு 13:28; எச 50:9; 51:8). இறைவனே அழிக்கும் அந்திப்பூச்சிக்கு ஒப்பிடப்படுகிறார் (சங் 39:11; ஓசே 5:12). அந்துப் பூச்சியால் அரிக்கப்படும் ஆடை மனித உடமைகளின் நிலையாமையைச் சுட்டிக்காட்டுகிறது (மத் 6:19–20; லூக் 12:33; யாக் 5:2).

அந்தோனியா கோட்டை

எருசலேம் கோவில் முற்றத்தின் வடமேற்கு மூலையில், அரசன் தங்குமிடமாகவும், வீரர்களின் வீடுகளாகவும், இருப்பதற்காகப் பெரிய எரோதினால் மீண்டும் கட்டப்பட்ட அரச பாதுகாப்புக் கோபுரம். அந்தோனியா" என்பது விவிலியத்தில் காணப்படவில்லை. ஆனால் அ.ப.யில் மட்டும் "பாசறை" என்று குறிப்பிடப் பட்டுள்ளது (அ.ப. 21:34–37; 22:24; 23:10. 16.32).

1. வரலாறு:- இந்த குறிப்பிட்ட இடத்திலுள்ள இந்தக் கோபுரமானது சாலமோன் காலத்தில் கட்டப்பட்டதாக இருக்கலாம். இவர் காலத்தில் எருசலேமைச் சுற்றியிருந்த மதில்களில் வடக்கு மதில் கோவில் கட்டப்பட்ட மேட்டில் திரும்பியது. இந்தத் திருப்பு முனையானது சுற்றுப் புறங்களை விட உயரமான பாறை மேடு, ஆகவே இது கோபுரத்தைக் கட்டுவதற்குத் தகுந்த இடம். எதிரிகள் சாதாரணமாக வடக்கிலிருந்து நகரத்தைத் தாக்கியதால் இந்தச் சுவர் மற்ற சுவர்களைப்போல அடிக்கடி பழுதுபார்க்கப்பட்டது. நாடு திரும்பிய பிறகு, இந்த இடத்தில் கோட்டை மதில் மறுபடியும் கட்டப்பட்டதென்று நெக 2:8 கூறுகிறது. இரிக்கானு என்பவரால் மறுபடியும் கட்டப்பட்டு பெரிய ஏரோது ஆட்சிக்கு வரும்வரை மக்கபேயர்களால் ஆளப்பட்டு வந்தது. கடைசியாக இதை ஏரோது கட்டியபோது, தன்னுடைய நண்பனும், புரவலனுமான மாற்கு அந்தோணியின் நினைவாக இதற்கு"அந்தோனியா" என்று பெயரிட்டார். உரோமை ஆளுநர்கள் எருசலேமை ஆண்டபொழுது இது ஆளுநர் இல்லமாக மாறியது. கி.பி. 66–இல் யூதர்களால் செய்யப்பட்ட குழப்பத்தில் தித்துசினால் அழிக்கப்பட்டது.

2. அமைப்பு:- இந்தக் கோபுரமானது 75 அடி உயரமுள்ள செங்குத்தான பாறை

யின் மேல் போர் தந்திர முறையில் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பாறையின் மேற்புறம் சறுக்கும் கற்களால் பாவப்பட்டுள்ளது. இந்தப் பாறைக்கு மேற்கே தீரோபேயேன் பள்ளத்தாக்கும், வடக்கே பெசெத்தா மலையிலிருந்து இதனைப் பிரிக்கும் ஆழமான பள்ளமும் உள்ளன. இரண்டையும் ஒரு சுவரும், அகழியும் பிரித்தன. பாறையின் மேல் 60 அடி உயரத்திற்கு கற்சுவர்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மூலையிலும் இன்னும் உயரமான 4 கோபுரங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் 75 அடி உயரமுடையது. ஆனால் கோவில் முற்றத்தை நோக்கி நிற்கும் தென்கிழக்கு கோபுரமானது 100 அடி உயரமுள்ளது.

யோசிபஸ் இதனுடைய பரந்த உள்பகுதியை அழகாக விவரிக்கின்றார். இது அரண்மனையாகவும், கோட்டையாகவும் பயன்பட்டது. இங்கிருந்து புறவினத்தாரின் கோவில் முற்றத்திற்கு படிகள் நேராகச் சென்றன. அதே போல் அவசர காலத்தில் இஸ்ராயேல் முற்றத்திற்கு சுரங்கப்பாதை இருந்தது. இது சதுரமாகக் கட்டப்பட்டது. அநேகமாக மையத்தில் முற்றம் ஒன்று இருந்தது. இந்த முற்றத்தில் ஆளுநர் அரச முடிவுகளை வெளிப்படுத்தியிருக்கலாம். இவ்விடம் இயேசு பிலாத்துவின்முன் தோன்றிய கபத்தா என்ற இடமாக (யோவா 19:13) இருக்கலாம். இப்போதுள்ள சீயோனின் மாதா கன்னியர் மடத்தின் கீழும், கசையடி கன்னியர் மடத்தின் கீழுள்ள பாவப்பட்ட தளம் இக்கோட்டையின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

3. உபயோகம்:- தாவீது முதல் மக்கபேயர்களின் கடைசி அரசரான அந்திகோனு வரை இந்த கோபுரம் வடக்குத் திசையில் வாழ்ந்த எதிரிகளை நோக்கி வெளி நோக்கியிருந்தது. ஆனால் பெரிய ஏரோது வந்ததிலிருந்து யூதர்களுக்குப் பாதுகாப்பாக உட்பக்கம் நோக்கி இருந்தது. இதன் மிக உயரமான கோபுரம் கோவிலின் முற்றங்களை நோக்கி இருந்தது. அங்கு 500 அல்லது 600 வீரர்கள் தங்கியிருந்தனர். கோவிலின் ஆடைகள் அந்தோனியாவில் வைக்கப்பட வேண்டும் என்று செய்து ஏரோது தலைமைக் குருவின் மேல் ஆதிக்கம் செலுத்தினார் அதே பழக்கம் மற்ற ஆளுநர்களால் பின்பற்றப்பட்டது. பிலாத்துவின் முன் இயேசு நின்றது, அநேகமாக உரோமை ஆட்சிக்குட்பட்ட இந்த இடத்திலிருந்திருக்கலாம்.

பவுல் யூதமதத் தலைவர்களுடன் தர்க்கித்த இடம்கூட இதுவேயாகும் (அ.ப. 21:37–40). அந்தோனியாவிற்கு செல்லும் படிகளில் நின்று, யூதர்களுடன்பேச பவுலுக்கு விசாரணைக்குழு உரிமை அளித்தது. இங்குதான் பவுல், பின்பு நூற்றுவர் தலைவனால் விசாரணைச் செய்யப்பட்டார் (22:23–29). பிறகு அந்தோனியாவிலேயே வைக்கப்பட்டு, மேல்விசாரணைக்கு செசரியாவிற்கு அனுப்பப்பட்டார் (23:10, 16–24).

அந்தோதியா (ANTHOTHIJAH)

பென்யாமின் குலத்தைச் சேர்ந்த சாசாக்கின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8:24).

அந்தோணி (ANTONY)

உரோமை அரசியல்வாதி, அக்டாவியன், லெப்பிதஸ் ஆகியோரோடு மூவர் குழுவில் ஒருவர். இவர் பெரிய எரோதைப் பாலஸ்தீனத்தின் மேல் சிற்றரசனாக நியமித்தார். அதற்குப் பதிலாக எரோது எருசலேமிலுள்ள கோட்டையை அரண் செய்து அதற்கு அந்தோனியாக் கோட்டை என்று பெயரிட்டார். இவர் கி.மு. 31–இல் அக்தியம் என்ற இடத்தில் அக்டாவியனால் தோற்கடிக்கப்பட்டார். ஒரு வருடத்திற்குப்பின் அவருடைய மனைவி கிளியோப்பத்திரா இறந்துவிட்டாள் என்ற பொய்ச் செய்தியைக் கேட்டுத் தற்கொலை செய்துகொண்டார். காண்க: அகுஸ்து சீசர்.

அபகத்தா (ABAGTHA – இறைவன் அருளியது, நற்பேற்றின் கொடை)

இவர் பாரசீக மன்னன் அகசுவேருவால் அல்லது முதலாம் செருசுசால் (கி.மு. 485–465) பேரழகி வஸ்தியை அழைத்து வர அனுப்பப்பட்ட ஏழு அண்ணகர்களில் ஒருவர் (எஸ்த 1:10). இவர்கள் அந்தப் புறத்தின் காப்பாளர்களாகவும், அரசன் முன்னிலையில் ஏவலர்களாகவும் பணிபுரிபவர்கள். இவர்கள் வழக்கமாக வேற்று நாட்டிலிருந்து கொணரப்பட்டவர்கள்.

அபக்கூக்கின் இறைவாக்கு நூல்

இந்நூல் சிறிய இறைவாக்கினர் தொகுப்பில் எட்டாவது நூலாகும். 1. இறைவாக்கினர் அபக்கூக்கு: காண்க: அபக்கூக்கு – 1.

2. வரலாற்று, சமயப் பின்னணி:- இறைவாக்கினர் அபக்கூக்கு ஒரு பேரரசின் வீழ்ச்சியையும் அழிவையும், மற்றொரு பேரரசின் எழுச்சியையும் வளர்ச்சியையும் கண்டவர். கி.மு. 612–இல் பாபிலோனியர், மேதியர், சித்தியர் ஆகியோர் கூட்டணியாக அசீரியாவின் தலை நகரான நினிவேயைத் தாக்கி, அழித்து மண்மேடாக்கினர். சில அசீரியர்கள் தப்பி காரானுக்கு ஒடி, அரசை மீண்டும் நிறுவ முயன்றனர். கி.மு. 611–இல் காரானையும் பாபிலோனியர் கைப்பற்றினர். அசீரிய அரசன் சீரியாவுக்குத் தப்பி ஒடினார். இந்நிலையில், இதுவரை அசீரியர்களைப் பகைவர்களாகக் கருதி எகிப்தியர் அசீரியாவுக்கு உதவி செய்ய முன் வந்தனர். வலிமைமிக்க பாபிலோனியப் பேரரசைவிட, சிறு அரசாகிவிட்ட அசீரியா எகிப்துக்கு சாதகமானது என்று பாரவோன் நெக்கோ எண்ணினார். மேலும், சீரிய–பாலஸ்தீனத்தின் மேல் தனது மேலாண்மையை நிறுவத் திட்டமிட்டார். இதற்கு யூதாவின் அரசனான யோசியா எதிர்ப்புத் தெரிவித்தார். இவர் இஸ்ராயேல்–யூதா ஒன்றித்த அரசை நிறுவ எண்ணினார். அசீரிய அடிமைத் தனத்திலிருந்து எகிப்திய அடிமைத்தனத்துக்கு யூதாவும் இஸ்ராயேலும் மாறுவதை இவர் விரும்பவில்லை. ஆகவே, அசீரியாவுக்கு உதவி செய்யப் பாரவோன் வடக்கு நோக்கிப் படையெடுத்தபோது மெகிதோ என்ற இடத்தில் எகிப்தியரை யோசியா எதிர்த்தார். நடந்தபோரில் யோசியா தோற்றார்: கொல்லப்பட்டார். எகிப்தியர் வடக்கு நோக்கிப் படையெடுத்தனர் (2 அர 23:29–30). யோசியாவின் மகனான யோவகாசு யூதாவின் அரசனாகி மூன்று மாதங்களுக்கு ஆண்டான். இவனை எகிப்தியர் பதவி நீக்கம்செய்து, இவரது தம்பி யோயாக்கிமை அரியணையில் அமர்த்தினர்.

அசீரிய மேலாண்மையிலிருந்து எகிப்திய மேலாண்மைக்கு யூதா மாறியது. ஆனால், இந்நிலை வெகுகாலத்திற்கு நீடிக்கவில்லை. அசீரியப் பேரரசைச் சேர்ந்த பகுதிகளையெல்லாம் தங்கள் ஆட்சிக்குள் கொண்டுவரப் பாபிலோனியர் முயன்றனர். கி.மு. 605–இல் கார்க்கேமிசு என்ற இடத்தில் நடந்த போரில், எகிப்தியர் உறுதியாகத் தோற்கடிக்கப் பட்டனர். "எகிப்திய அரசன் இதன்பின் தன் நாட்டிலிருந்து வெளியேறவேயில்லை. ஏனெனில் "எகிப்திய நதிமுதல்" யூப்பிரதிசு நதிவரை எகிப்திய அரசன் கைவசம் இருந்த நாட்டையெல்லாம் பாபிலோனிய அரசன் பிடித்தார் (2 அர 24:7). சீரிய – பாலஸ்தீனம், பாபிலோனியப் பேரரசின் மேலாண்மைக்கு உள்ளாயிற்று. எவ்வித எதிர்ப்பும் இன்றி யூதா பாபிலோனுக்கு அடிமையாயிற்று. யோயாக்கிம் பாபிலோனிய மன்னனான நெபுக்கதுனேசாரின் சிற்றரசன் ஆனார்.

சிறிது காலத்திற்கு யோயாக்கிம் பாபிலோனுக்குப் பணிந்து நடந்தார். இவர், தனது தந்தைக்கு நேர்மாறானவர்; சமயப்பற்று அற்றவர். இவரது தந்தை செய்த சமயத் சீர்திருத்தங்களைத் தலைகீழாக்கினார். இவரது முன்னோர்களான மனாசே, ஆமோன் ஆகியோரைப் போல் நாட்டை ஆண்டார். இறைவாக்கினர் எரேமியாவை அவமதித்தார். அவர் அளித்த செய்தியை நிராகரித்தார். இவர் ஒரு சுயநலவாதி; உலகியல்வாதி; சுகபோகத்தை விரும்பினார். தனது மக்களின் நலத்தைத் தேடுவதைவிட, தனது அரண்மனையைப் பெரிதாக்கி அழகு படுத்துவதில் கருத்தாக இருந்தார். இக்கொடியவன் மக்களைக் கொடுமைப் படுத்தினார். குற்றமற்றவர்களின் குறிப்பாக, இறைவாக்கினரின் இரத்தத்தைச் சிந்தினார் (எரே 22:13–19; 2 அர 24:4). தான் அரசுக்கு வந்த மூன்று ஆண்டுகளுக்குப் பின் பாபிலோனியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். பாபிலோனிய வீரர்களும், ஏதோமியரும் மோவாபியரும், அம்மோனியர்களும் யூதாவைத் துன்புறுத்தினர் (2 அர 24:1–2). பின் பாபிலோனியர்படை கி.மு.598–இல் எருசலேமை

முற்றுகையிட்டது. இம்முற்றுகையின் போது யோயாக்கிம் இறந்தார். ஒரு வேளை கொல்லப்பட்டிருக்கலாம். இவருக்கடுத்து, இவனது மகனான யோயாக்கின் மூன்று மாதத்திற்குப்பின், பாபிலோனியரிடம் சரண் அடைந்தார். அவரும், அவரது அரசவையும் ஆற்றல் வாய்ந்த பதினாயிரம் வீரர்களும் பிற கலைவல்லுநர்களும் பாபிலோனுக்கு கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர் (24:14). எருசலேம் ஆலயம் கொள்ளையிடப் பட்டது. யோசியாவின் மற்றொரு மகனான செதேக்கியா பாபிலோனுக்குச் சார்பாகச் சிற்றரசன் ஆனார். கி.மு. 598–இல் நடந்த நாடு கடத்தல், பாபிலோனிய நாடு கடத்தலின் தொடக்கமாகும். இந்தக் குழப்பமிக்க சூழ்நிலையில் அபக்கூக்கு தனது இறைவாக்குப் பணியினைச் செய்தார். அவரது கூற்றுக்கள் கி.மு. 605–இல் கார்க்கெமிசின் போருக்குப் பின் யோவாக்கிமின் ஆட்சிக்காலத்தில் அளிக்கப்பட்டிருக்கலாம். அவற்றில் சில கி.மு. 598–இல் எருசலேம் முற்றுகையிடப்பட்ட போது கூறப்பட்டிருக்கலாம். நாகூம், எரேமியா ஆகியோருக்கு அபக்கூக்கு சமகாலத்தவர் ஆவார்.

3. நூல் தோன்றிய காலம்:- அபக்கூக்கு எப்போது இறைவாக்கு பணி செய்தார் என்று தெளிவாக அறிவதற்கில்லை. யூதாவுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் 1:2–4; 1:12–17; 2:12–17–இல் விவரிக்கப்படுகின்றன. இக்கொடுமைகளை யார் செய்தனர் என்று கூறக்கூடுமானால், இந்நூல் தோன்றிய காலத்தையும் நாம் ஒரளவு நிர்ணயிக்கலாம்.

1:2–4–இல் விவரிக்கப்படும் கொடுமைகளைச் செய்தவர் அசீரியர்கள்தான் என்று வாதித்து, இந்நூல் கி.மு. 615–க்கு முன் தோன்றியிருக்கவேண்டும் என்பர் சில ஆய்வாளர்கள். ஆனால், இக்காலத்தில் அசீரியர்கள் தங்களுக்குள்ளே உள்நாட்டுப் போர்களை நடத்திக் கொண்டிருந்தனர். பேரரசின் பிறபகுதிகள் மேல் கவனம் செலுத்தும் நிலையில் இவர்கள் இல்லை. கி.மு. 608–இல் மெகிதோவில் யோசியாவைத் தோற்கடித்தபின், எகிப்தியர் யூதாவின் மேல் மேலாண்மை செலுத்தினர். இவர்கள் காலத்திலும் இந்நூல் தோன்றியிருக்க முடியாது. ஏனெனில் 1:2–4இல் வரும் கொடுமைகள் ஒரு பேரரசின் கொள்கையாகத் தோன்றவில்லை. அவை சமயத்தையும் சமூகத்தையும் சேர்ந்தவையாகத் தெரிகின்றன. இவற்றை அன்னியர்தான் செய்திருப்பர் என்ற கருத வேண்டியதில்லை. அருவருக்கத்தக்க பழக்கங்களை யூதாவில் புகுத்திய (எரே 28:13–17) யோயாக்கிமின் ஆட்சிக் காலத்திற்கு (கி.மு. 605–598) ஒத்ததாகத் தெரிகிறது. யூதாவின் தீயவர்களையும், உடன் படிக்கைக்கு எதிரான குற்றங்களையும் கண்டனம் செய்கிறார் இறைவாக்கினர். இக்கொடியவர்களுக்கு எதிராக கல்தேயர்களை எழுப்பப்போவதாக இறைவன் கூறுவதாக 1:6 குறிக்கிறது. தீயவர்களைத் தண்டிக்க இறைவனால் பயன்படுத்தப்பட்ட கருவியே இன்னும் அதிகமாகத் தீயவைகளைச் செய்வது கண்டு, இறைவாக்கினர் திகைத்து, இறைவனிடம் முறையிடுகிறார். இத்தீமைகளின் விவரிப்பு 1:2–17லும் அவர்களுக்கு எதிராகக் கேடுகள் 2:6–20 என்ற பகுதியில் கொடுக்கப்படுகின்றன. இவை ஒரு பேரரசின் கொள்கையாகத் தோன்றுகிறது. மேலும், கி.மு. 597–இல் எருசலேம் கைப்பற்றப்பட்டது பற்றிய குறிப்பு இல்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால், கார்கெமிசில் நெபுகத்நேசார் அசீரியர்களையும் எகிப்தியரையும் இறுதியாக வெற்றிகொண்ட கி.மு.605–க்கும் எருசலேம் முற்றுகையிடப்பட்டு பாபிலோனியரால் முதல் முறையாகத் தோற்கடிக்கப்பட்ட கி.மு. 598–க்கும் இடையிட்ட காலத்தில் இந்நூல் தோன்றயிருக்கலாம். குறிப்பாக பாபிலோனியர் எருசலேமின் மீது படையெடுத்த கி.மு.599–98 ஆண்டுகள் – இந்நாலுக்கு வரலாற்றுப் பின்னனியாக அமைகிறது. இது அறிவுக்கொத்ததாக இருக்கிறது. இதன்படி 1:2–4–இல் வரும் கொடுமைகளுக்கு யூத ஆளுநர்களும் 1:12–17–இல் வரும் கொடுமைகளுக்குப் பாபிலோனியரும் காரணமாவர். இவ்வாறு நாகூமுக்குப் பின் அபக்கூக்கு இறைவாக்குரைத்தார், எரேமியா இவரது சமகாலத்தவர் ஆவார்.

4. திட்டமும் பொருளடக்கமும்:- அபக்கூக்கு இறைவனோடு உரையாடுதல் (1:1–24):- I. நாட்டில் அநீதியும் கொடுமையும் மிகுந்துவிட்டது என்று முறையிட்டு ஆண்டவர் தலையிடவேண்டும் என்று இறைவாக்கினர் மன்றாடுகிறார் (1:2–4). அதற்கு, தீயவர்களைத் தண்டிக்கக் "கொடுமையும் விரைவும் கொண்ட இனத்தாரான கல்லேயர்களை" அனுப்பப்போவதாக ஆண்டவர் கூறுகிறார் (1:4–11). தீயவர்களைத்தண்டிக்க அவர்களைவிடத் தீயவர்களைப் பயன்படுத்துவதில் என்ன நீதி இருக்கிறது என்று இரண்டாம் முறையாக இறைவாக்கினர் முறையிடுகிறார் (1:12–17). காவற்கோட்டையின்மேல், பதிலுக்கு ஆவலோடு காத்திருக்கும் இறைவாக்கினர், தீயவர்கள் தண்டிக்கப் பெறுவர், நேர்மை வெற்றி பெறும், ஆனால் நீதிமான் தன் விசுவாசத்தினால் வெற்றி பெறுவான் என்று பதில் பெறுகிறார் (2:1–4).

II. கொடியவர்கள் மீதுவரும் அழிவு (2:5–20):-

கல்தேயர்கள் மேல்வரவிருக்கும் அழிவு பற்றி ஐந்து இறைவாக்குகள் கூறப்படுகின்றன. யூதாவையும் அதைச் சுற்றி உள்ள நாடுகளையும் கொடுமைப்படுத்தியதற்காகவும், நேர்மையற்ற முறையில் பொருள் சேர்த்தற்காகவும், வன்முறைக் கொள்கை களைக் கடைப்பிடித்ததற்காகவும் முறை கேடான கொடுமைகளுக்காகவும், சிலை வழிபாட்டுக்காகவும் கல்தேயர்களை இறைவாக்கினர் கண்டனம் செய்கிறார்.

III. அபக்கூக்கின் மன்றாட்டு (3:1–19):-

இச்சங்கீதம் யாவேயின் இறையாறறல் தோற்றத்தை விவரிக்கிறது. வரலாற்றில் யாவே செய்த ஆற்றல் மிகு செயல்களை உயிர்ச்சித்தரமாக விவரித்து, துன்பங்களின்மேல் இறைவன் கொள்ளும் வெற்றியில் தனக்குள்ள தளரா விசுவாசத்தை இறைவாக்கினர் பறைசாற்றுகிறார்.

5. இலக்கிய பண்புகள்:- நூலில் பல வகைப்பொருட்கள் காணப்படுவதிலிருந்து இந்நூலில் ஒன்றியந்த அமைப்பு இல்லை என்பர் சிலர். நூல் முழுவதையும் ஒரே ஆரியர்தான் இயற்றினாரா என்றும் கேள்வி எழுப்பப்படும். குறிப்பாக, மூன்றாம் அதிகாரம் தனிப்பட்ட இலக்கிய வடிவில் அமைந்துள்ளது. மேலும் நூலில் வரும் வழிபாட்டுக் குறிப்புகள், இப்பகுதி பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்று காட்டுகின்றன என்பர் சிலர். இக்குறிப்புகள் பொதுவாக இரண்டாம் தரமுடையவை. ஆசிரியரே இதை இயற்றவில்லை என்றாலும், இப்பகுதி அவர் செய்த அல்லது பயன்படுத்திய தொகுப்பைச் சேர்ந்ததாயிருக்கலாம். கும்ரான் ஏடுகளில் இந்த அதிகாரம் பற்றிய விளக்கவுரையில்லை; ஆகவே, இப்பகுதி அபக்கூக்கின் நூலைச் சேர்ந்ததில்லை என்று சிலர் கருதுவர். இவ்வாறு வாதிட வேண்டியதில்லை. கும்ரான் விளக்கவுரை மிட்ராசிக் இலக்கியத் தன்மையுடையது. தங்களுடைய கால நிகழ்ச்சிகளுக்கேற்றவாறு இந்நூலுக்கு விளக்கம் அளிக்கும் கும்ரான் துறவிகள், இப்பகுதிக்கு விளக்கவுரை அளிக்காமல் வெறுமனே விட்டிருக்கலாம். மேலும் இவ்விளக்கவுரைகளில் சிந்தனைத்தொடர்ச்சியில்லை. இப்பகுதி 2:4–ல் கூறப்பட்டிருக்கும் செய்திக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. மேலும், எழுபது நூலிலும் மாசரோட்டிக் வாசகத்திலும் காணப்படுகிறது.

ஆனால் இச்சிறுநூல் மிகவும கவனமாய் திட்டம் செய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்ற உணர்வை எழுப்பக்கூடியது. இறைவாக்கினருக்கும் இறைவனுக்கும் இடையே நிகழும் உரையாடலுடன் நூல் தொடங்குகிறது. இறைவாக்கினருடைய இருமுறையீடுகளுக்கு இறைவன் இருமுறையும் பதில் அளிக்கிறார். அடுத்து, இறைமக்களைக் கொடுமைப்படுத்துபவர்கள் மேல், ஐந்து கேடுகள் அறிவிக்கப்படுகின்றன. இறைவன் இறுதியில் வெற்றி பெறுவது கொண்டாடப்படுகின்றது. இறுதி அதிகாரத்தை அபக்கூக்குதான் எழுதினாரா என்பது பற்றி கருத்து வேறுபாடு உண்டு. வழிபாட்டுத் தொகுப்பிலிருந்து இப்பகுதி தரப்படுகின்றது எனச் சிலர் கூறுவர்: இப்பகுதி இந்நூலோடு இணைந்ததாகும். இல்லையென்றால், நூல்தனது ஒருங்கிணைந்த பண்பினை இழந்ததாகவே தோன்றும். மேலும், அது நூலின் மையக்கருத்தோடு ஒன்றியுள்ளது.

மொழியிலும் நடையிலும் சிந்தனையின் போக்கிலும் ஒற்றுமை இருக்கிறது. இவற்றைக் கருத்தில்கொண்டு, நூல் முழுவதையும் ஒரே ஆசிரியரே எழுதியுள்ளார் என்று நாம் கருதலாம்.

6. இறையியல் கருத்து: ஒருபிரச்சினையும் பதிலும்:-

வரலாற்றில் இறைவன் செயல்படும் முறைபற்றி அடிப்படைப் பிரச்சினைகளை எழுப்பி அவரோடு வாதிடும் சிலருள் அபக்கூக்கும் ஒருவராவார்.

நீதியும் நேர்மையுமுள்ள எல்லாவல்ல, நல்ல இறைவன், ஏன் தீயவர்களைத் தண்டிப்பதில்லை? ஏன் தீமை செழித்தோங்க விடவேண்டும்? நீதிமான்களை தீயவர்கள் கொடுமைப்படுத்த ஏன் அனுமதிக்க வேண்டும்?

இப்பிரச்சினை, தனி வாழ்விலும், சர்வதேச அளவிலும், எல்லாக் காலங்களிலும் எழும் பிரச்சினையாகும். பலரை குழப்பத்திற்கு உண்டாக்கக்கூடியது, திகைக்க வைக்க கூடியது. இதற்கு அறிவு சார்ந்த முறையில் அளிக்கப்படும் எப்பதிலும் முழுமையானதன்று. இவ்வாழ்வில் நமது அறிவுக்கு அப்பாற்பட்டதாகவே எக்காலத்திற்கும் இருக்கும். யோபு நூல் ஆசிரியர் இப்பிரச்சினையோடு போராடி அழுது புலம்புகிறார். அபக்கூக்கு நயமாக இப்பிரச்சினையை எழுப்பி, பொறுமையோடு பதிலை "எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்".

பதில், எதிர் நிலையான, நேர் நிலையான கூறுகளைக் கொண்டுள்ளது. தீயவர்கள் தண்டனை பெறுவர் என்பது எதிர் நிலைச் செய்தியாகும் "நேர்மையற்றவன் அழிக்கும் போவான்" (2:4); "தீமைப்பளுவிலிருந்து தப்ப தான் வாழுமிடத்தை மிக உயரத்தில் அமைக்கிறவனுக்கு..... ஐயோ கேடு" (2:9). தீமை, கொடுமை தன்னையே அழிக்கும் தன்மையுடையது. "நேர்மை யுடையவனோ தன் பற்றுறுதியால் வாழ்வு பெறுவான்" (2:4) என்பது பதிலின் நேர் நிலைச் செய்தியாகும். உயிருள்ள இறைவன் பாறைபோன்றவர், உறுதியானவர், முழுவதும் நம்பத்தகுந்தவர், பற்றுறுதியானவர். அவரை நம்புகிறவர்களிடமும் இப்பண்புகள் காணப்படவேண்டும். இப்படிப்பட்டவர்கள் நிகழ்ச்சிகளின் பொருளை, எப்போதும் முழுவதும் அறியமுடியாமல் போகலாம். தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அறிவார்ந்த முறையில் புரிந்துகொள்ளாமல் போகலாம். இறைவாக்கினரைப்போல் "ஏன்" என்று கேள்வி எழுப்பலாம்; "எவ்வளவு காலத்திற்கு"-என்று புலம்பலாம். குறிப்பிட்ட சூழ்நிலையில் இறைவன் செயல் ஆற்றும் முறையை மனிதருக்கு எண்பிக்க முடியாது போகலாம். ஆனால் அன்புறுதியால், பற்றுறுதியால், பிரமாணிக்கத்தால், வாழ்வர், தற்காலிகமாக, இறைபராமரிப்பு செயல் ஆற்றும் முறையை அவர்கள் கண்டுணர முடியாவிட்டாலும், அவர்கள் இறைவனையே பற்றிக் கொண்டு தொடர்ந்து செயலாற்றுகின்றனர். அவர்கள் பிடிவாதமிக்க விடாமுயற்சியுடன் இறைவனது வார்த்தையையும் வாக்குறுதிகளையும் நம்புகின்றனர். இத்தகையப் பற்றுறுதி அறிவு சார்ந்த ஒப்புதலைக் கொண்டதாயினும், அதைக்கடந்ததும் ஆழமிக்கதும் ஆகும். அந்நிலை ஆழ்ந்த நிலையான வாழ்க்கைப் போக்காகும்; இறைவன்பால் கொண்ட ஆழப்பதிந்த இதய நிலையாகும். அது பற்றுறுதியானவரை முழுவதும் பாதிக்கிறது. அவருக்குத் தனித்தன்மை அளிக்கிறது. எதிர்ப்பும் இன்னலும் எதிர்ப்பட்டுத் திகைப்புறும் போது அது பொறுமையாக மாறுகிறது. எதிர்ப்பார்ப்போடு காத்திருக்கிறது. சோதனைகளில் இறைவனைப் பற்றிக் கொண்டு நிலைத்து நிற்கிறது. "நீங்கள் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றி, அவர் வாக்களித்ததைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு மனஉறுதி தேவை...நீதி நெறியில் நடக்கும் என் அடியான் விசுவாசத்தால் வாழ்வு பெறுவான்" (எபி 10:36-38). பவுல் விசுவாசத்தால் ஏற்புடமை என்ற தனது போதகத்திற்கு ஆதரவாக அப 2:4-ஐ எடுத்துக்காட்டுகிறார் (உரோ 1:17; கலா 3:11). அப்படிச் செய்யும்போது "விசுவாசம்" என்ற சொல்லுக்கு மறு விளக்கம் அளிக்கிறார். எபிரேய இறைவாக்கினருக்கும் விசுவாசம் பற்றுதியை, பிரமாணிக்கத்தை உணர்த்துகிறது; ஆனால், பவுலுக்கு அது கிறிஸ்துவில் இறைவனுக்கு

அளிக்கும் நம்பிக்கையையும் அர்ப்பணத்தையும் உணர்த்துகிறது. முன்னது பின்னதைச் சார்ந்துள்ளது. பற்றுறுதிமிக்க இறைவனில் விசுவாசம் கொண்டவன் பற்றுறுதியுள்ளவனாகிறான். நம்பிக்கைக்குரிய கிறிஸ்துவை நம்புபவன், நம்பிக்கைக் குரியவனாகிறான். இவ்வாறு "நேர்மையுள்ளவன் தன் பற்றுறுதியால், விசுவாசத்தால் வாழ்வு பெறுகிறான்".

7. அபக்கூக்கும் விவிலியப் பிற நூல்களும்:–

பிரச்சினையும், இறைவனோடு கொள்ளும் உரையாடல் வடிவமும் அபக்கூக்குக்கும் அவரது சமகாலத்தவராகிய எரேமியாவுக்கும் பொதுவாக உள்ளன. இருவரும் எழுப்பும் பிரச்சினையை யோபு நூல் நீண்டதாகவும் இலக்கிய நயத்தோடும் விவாதிக்கிறது.

காலத்தால் மட்டுமன்று, பொருளடக்கத்திலும், அபக்கூக்கு நாகூமை நெருங்கியவராக உள்ளார். இருவரும் இறைவனது மீட்பை அறிவிக்கும் இறைவாக்கினர் பரம் பரையைச்சேர்ந்தவர்கள். இவருடைய சிந்தனைப் போக்கும் உபாகமப் பாரம்பரிய வரலாற்றுப் போக்கைக் கொண்டுள்ளது: இருவருக்கும் வரலாற்றை சமயநோக்கிலிருந்து புரிந்துகொள்வதில் இறைவனது நீதியை மையப் பிரச்சினையாக அமைக்கிறது. அபக்கூக்கின் செய்தி காட்சி வடிவம் எடுக்கிறது. தனது பிரச்சினைக்கு இறைவனது சர்வவல்லமையில் விடைதேட முயலுகிறார். பழைய ஏற்பாட்டுப் பாரம்பரிய, சீனாய் மலையில் அருளப்பெற்ற இறையாற்றல் வெளிப்பாட்டோடு தொடர்பு காட்டுகிறார். ஆனால், இறைநீதியைத் தனது மக்களுக்கு ஒரு சவாலாகக் காட்டத்தவறுகிறார். இது அவரது இறையியலை வரையறை செய்கிறது. அதனால், பிரச்சினையின் ஆழ்ந்த கூறுகளோடு போராடி, அவற்றிற்குரிய வழி காண்பதைத் தடை செய்கிறது. புகழ்பெற்ற 2:4 என்ற கூற்றும் புதிய ஏற்பாட்டில் எடுத்து மறுவிளக்கம் அளிக்கப்படும் வரை (உரோ 1:17; கலா 3:1) நிறைபொருளையும், நிறைவேறுதலையும்பெறவில்லை எனலாம். அதுவரை, பொறுமையோடும் விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் இறைவாக்கினர் காத்திருக்கிறார். பிரச்சினை ஞான நூலிலும் புதிய ஏற்பாட்டிலும் அதற்குரிய பதிலைப் பெறுகிறது.

அபக்கூக்கு (HABAKKUK – தழுவுதல், தோட்டத்துச் செடி)

1. நாடு கடத்தலுக்கு முன் யோசியாவின் (640–609) இறுதிக்காலத்திலும் யோயாக்கிமின் (609–598) ஆட்சிக்காலத்திலும் வாழ்ந்த யூதாவைச் சேர்ந்த வழிபாட்டு இறைவாக்கினர். இவரது பெயரைத்தாங்கும் நூல் சிறிய இறைவாக்கினர் நூல்களில் எட்டாவதாக வருகிறது.

இப்பெயரின் தோற்றம் பொருள்பற்றி உறுதியாக ஒன்றும் கூறமுடியாது "தழுவுதல்" என்ற பொருளுடைய சொல்லிலிருந்து இப்பெயர் வரலாம் (2 அர 4:16; திருவுரை 3:5). வுல்கத்தா வடிவம் 'மற்போர்' என்ற பொருளைச்சுட்டுகிறது. நாத் என்பவர், "தோட்டத்துச்செடி" என்ற பொருளுடைய அக்காதியச் சொல்லிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம் என்பார்.

இவர் யார், எங்கு வாழ்ந்தார் என்று ஒரு சிறிதே உறுதிசெய்யக்கூடும். இவரது நூலில் காணப்படும் வரலாற்றுச் சுட்டிக் காட்டல்களும் இலக்கியப் பண்புகளும் இவர் யூதாவில் 600–ஐ ஒட்டி பணி செய்திருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன. ஆகவே இவர் சூனாமியப் பெண்ணின் மகன் என்று கூறும் (காண்க: 2 அர 4:16 தொ) ராபிகளின் பாரம்பரியம் கால மயக்கமானதாகும். எழுபத நூல் வாசகத்தில் "பேல் தெய்வமும் நாகமும்" என்ற பகுதியின் (தானி 14) தலைப்பு லேவியின் இனத்தைச் சேர்ந்த எசுவாவின் மகன் அபக்கூக்கு இந்நூலை எழுதியதாகக் கூறுகிறது. இது அப 3–இல் வரும் சங்கீதத்தை வழிபாட்டில் பயன்படுத்தியதால் வந்த பாரம்பரியமாக இருக்கலாம். ஆனால் காலக்கணிப்புக் கூறுகள் இவரைத் தானியேலின் சமகாலத்தவராக ஆக்கத் தடை செய்கிறது.

2. தானி 14:33–39–இன்படி அபக்கூக்கு என்ற பெயருடைய ஓர் இறைவாக்கினர், சிங்கக் குகையில் இரண்டாம்முறை

அடைப்பட்டிருந்த தானியேலுக்கு உண வளிக்கும்படி, வான தூதனால் யூதேயா விலிருந்து பாபிலோனுக்குத் தூக்கிச் செல்லப்பட்டார். தியோதோசியனின் மொழிபெயர்ப்பு இவரை இறைவாக்கினர் அபக்கூக்கோடு தெளிவாக ஒன்றுபடுத்தி னாலும், எழுபது நூல் இவரை ஓர் இறை வாக்கினர் என்று கூட அடையாளம் காண வில்லை. பெரும்பாலான அறிஞர்கள், இது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாக ஒருவேளை அபகூக்கைப் பற்றி மற்றொரு நூலிலிருந்து சேர்க்கப்பட்டதாகக் கருது கின்றனர்.

அபானா (ABANA – கற்கள் நிரம்பிய)

1. இது சீரியாநாட்டு ஆறுகளில் ஒன்று. இப்போது பாரதா என்றழைக்கப்படு கிறது. இது எதிர் லெபனோன் அல்லது கிழக்கு லெபனோன் மலைத்தொடரில் தொடங்கி தெற்கு–தென் கிழக்காகத் தமஸ்குவை நோக்கி ஒடுகிறது. பின் ஏழு முக்கிய கிளைகளாகப்பிரிந்து அந்த நிலப் பரப்பைச் செழிப்பாக்குகிறது. இந்தப் பாலைவனச் சோலைப் பகுதியில் தமஸ்கு உள்ளது. 2 அர 5–இல் இறைவாக்கினர் எலிசா, சீரியா நாட்டு அரசனின் படைத் தலைவனும் தொழுநோயால் வருந்திய வனமான நாகமானுக்கு "நீ போய் யோர் தான் நதியில் ஏழு முறை குளித்தால் உன் உடல்நலம் பெறும், நீயும் தூய்மையா வாய்" என்று செய்தியனுப்பினார் (5:10). அற்கு நாகமான் "நான் குளித்து உடலைத் தூய்மைப்படுத்தும் பொருட்டு இஸ்ராயே லில் உள்ள ஆறுகள் எல்லாவற்றையும் விட நல்ல தண்ணீரை உடைய தமஸ்கு நகர நதிகளான அபானா, பர்பார் என்ற நதிகள் எங்களுக்கு இல்லையா?" (5:12) என்று சொல்லி சினத்தோடு திரும்பிச் செல்ல முயன்றதாய் வாசிக்கிறோம். இப்படிக்கூறியபோது, சீரியா ஆறுகளின் தண்ணீர் தெளிவை மட்டுமின்றி, அவை அவனது நாட்டு மக்களுக்குப் புனிதமாக இருந்ததையும் மனதில் கொண்டிருக்க லாம். ஆனால் திரும்பி வந்து, இறைவாக் கினர் கூறியபடி செய்து குணமடைந் தான். காண்க: நாமான்

அபிடேகம் செய்தல்

1. இது ஒருவரின் தலைமேலோ உடலிலோ அல்லது ஒரு பொருளின் மேலோ எண்ணெயையோ, தைலத்தையோ பூசுதல் அல்லது ஊற்றுதலாகும். இப்பழக் கத்திற்குச் சமயச் சார்பற்ற முறையிலோ சமயச்சார்புடைய முறையிலோ பொருள் அளிக்கலாம். இப்பழக்கம் விவிலியக் காலம் முழுவதும் இஸ்ராயேலரிடையே யும், அவர்களுக்குப் புறம்பேயும் காணப் படுகிறது. இது இருவகைப்படும்.

1. சமயச்சர்பற்ற வழக்கு:- எண்ணெ யைப் புத்துணர்ச்சி அளிக்கும் தைலமாகப் பயன்படுத்துவது பழங்கால உலகில் மிகவும் சாதாரணமாக இருந்தது. செல் வந்தர்கள் அன்றாட உடல் ஒப்பனையை வாசனை மிக்க ஒலிவ எண்ணெயையோ மற்ற வாசனைப் பொருள்களையோ தேய்த் துக்கொண்டனர். எபிரேயர் மகிழ்ச்சி விழாக்களின் காலங்களிலும் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களிலும், அன்றாட உடல் ஒப்பனையிலும் எண்ணெய் பூசிக்கொண் டனர் (உப 28:40; ரூத் 3:3; யூதி 16:8). எண் ணெய் பூசுதல் மகிழ்ச்சியை உணர்த்திற்று (சங் 45:7). விருந்தாளிகளின் தலையில் தைலம் பூசப்பட்டது (லூக் 7:46). ஆகை யால் நோன்பு காலத்திலும் (2 சாமு 12:20; மத் 6:17) துக்க காலத்திலும் (2 சாமு 14:2; தானி 10:3; யூதி 10:3) இவை பயன்படுத்தப் படவில்லை. தைலம், எண்ணெய் ஆகிய வற்றின் குளிர்ச்சி அளிக்கும் வலி போக் கும் விளைவுகள் அவற்றை மருந்துப் பொருளாகப் பயன்படுத்தச் செய்தன (ஏச 1:6; எச 16:9; மாற் 6:13; திருவெளி 3:10).

2. சமய, வழிபாட்டுப் பூசுதல்:- இஸ்ரா யேலில் எண்ணெய் பூசுதல் எப்படிப் பரி சுத்தப்படுத்தும் சடங்காகத் தோன்றியது, அதன் அடையாளப் பொருள் ஆகியவற் றின் வரலாற்றை உறுதியாகக்கூற முடி யாது. பழங்கால மேற்காசியாவிலும், இஸ் ராயேலிலும், எண்ணெய் பூசும் சடங்கு ஆட் களையும் பொருள்களையும் வழிபாட்டுப் பணிக்குத் திருநிலைப்படுத்த பயன்பட்டது. கற்களும், தூண்களும் (ஆதி.28:18; 31:13 35:14). பீடம் (யாத்.29:36; எண்.7:10) ஆலயப்

பாத்திரங்கள் (யாத் 40:10; எண் 7:1) இறைவன் உறைவிடம் அதன் பொருட்கள் (லேவி 8:10; எண் 7:1), பெட்டகம் (யாத் 30:26) முதலியவை தைலம் பூசப்பட்டு, சமய வழிபாட்டிற்காகத் திருநிலைப்படுத்தப்பட்டன: சமயச்சார்பு அற்ற காரியங்களிலிருந்து புறம்பாக்கப்பட்டன (யாத் 30:26–29).

குருக்கள் (யாத் 28:41; 29:7; லேவி6:13; 8:12; 21:10; எண் 3:3), இறைவாக்கினர்கள் (1 அர 19:16), அரசர்கள் (நீதி 9:15; 1 சாமு 9:16; 16:3; 10:1; 1 அர 1:39; 2 அர 9:6; 11:12; 19:10; 23:30) ஆகியோர் தைலம் பூசுதலால் அபிடேகம் பெற்றனர். விவிலியத்தில் இச்சடங்கின் பொருள் என்ன?

II எபிரேயர்களின் கருத்துப்படி, எண்ணெய் உடலில் ஊறி ஊடுருவுகின்றது (சங் 108:18); அது உடலுக்கு வலிமையும் நலமும் மகிழ்ச்சியும் வனப்பும் தருகின்றது. எனவே, சமயத்துறையில் எண்ணெய் பூசுதல் மகிழ்ச்சியையோ, மதிப்பையோ காட்டும் அடயாளமாய் இருந்தது. புரிந்துகொள்ளத்தக்கது; மேலும், எண்ணெய் பூசுதல் குணப்படுத்தும் சடங்குமுறைகளிலும் திருநிலைப்படுத்தும் சடங்குமுறைகளிலும் பயன்படுத்தப்பட்டது.

அ. மகிழ்ச்சியை அல்லது மதிப்பை உணர்த்தும் அடையாளமாய் எண்ணெய் பூசுதல்:–

1. எண்ணெய், குறிப்பாக, நறுமணப் பொருள் கலந்த எண்ணெய், மகிழ்ச்சிக்கு ஓர் அடையாளம் (பழ 27:9; திருவுரை 9:8); ஆகவே, எண்ணெய் சிறப்பாக விழாக்களில் பயன்படுத்தப்பட்டது (ஆமோ 6:6). எண்ணெயே பூசிக்கொள்ளமாட்டாத நிலை ஒரு சாபம் (உப 28:40; மீக் 6:15); அந்நிலை உண்ணா நோன்போடு இணைந்து, துயருறுதலுக்கு அடயாளமாயிற்று (தானி 10:3; 2 சாமு 12:20). ஆயினும், இயேசு கட்டளையிட்டபடி, நோன்பு இருப்பவர் ஒரு விருந்துக்குச் செல்பவரைப்போன்று, தலைக்கு எண்ணெய் தடவிக்கொள்ள வேண்டும் (மத் 6:17); இவ்வாறு அவருடைய தவம் மக்கள் முன் வெளிப்படலாகாது.

எண்ணெய் பூசுதல், எருசலேமில் பெரும் விழாக்களுக்காக ஒன்று கூடிய இஸ்ராயேல் மக்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் அறிகுறியாகப் பயன்பட்டது (சங் 132:2); அல்லது நாடுகடத்தலுக்குப்பின் சீயோனில் அழுதுகொண்டிருந்தவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஆறுதலை உணர்த்தும் அறிகுறியாகப் பயன்பட்டது (ஏச 61:3); அவ்வாறே, எண்ணெய் பூசுதல் மெசியாவின் விருந்துபற்றிய வருணனையிலும் இடம் பெற்றது; இந்த மலை மேலே அவர்கள் மகிழ்ச்சியைப் பருகுவார்கள், அவர்கள் இரசம் அருந்துவார்கள்; இந்த மலைமேலே அவர்கள் நறுமணத் தைலத்தால் பூசப்பெறுவார்கள்" (ஏச 25:6 தொ). குறிப்பாக, மெசியா காலத்துச் சூழவையில் 'மகிழ்ச்சியின் தைலம்' என்ற சொற்றொடர் திரும்பத்திரும்ப இடம் பெறுகிறது (ஏச 61:3; சங் 44:7; எபி 1:9).

2. விருந்தினர் ஒருவர் மீது எண்ணெய் பொழிதல், அவரைச் சிறப்பிக்கும் அடையாளக் குறியாய் இருந்தது. எண்ணெய் பொழிதல் என்ற சொற்றொடர் சங்கீதங்களில் இடம் பெற்று, இறைவன் அளித்த நலன்களின் நிறைவளத்தினை உருவகப்படுத்துவதாய்த் தெரிகிறது; "என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர்; என் தலைக்கு எண்ணெய் பூசுகிறீர்" (சங் 22:5; 91:10). நற்செய்தி ஏடுகள் இருமுறை குறிப்பிடுவதுபோல, பெண் ஒருத்தி இயேசுவுக்குத் தைலம் பூசித் தனிச் சிறப்பு அளித்தாள். இவ்வாறு குறிப்பிடப்படுகிற முதல் பெண், சீமோன் என்ற பரிசேயன் வீட்டில் தோன்றிய பாவியாவாள். இங்கே இயேசு சீமோனின் விருந்தினர்; எனினும் சீமோன் இயேசுவின் தலையில் எண்ணெய் சொரியவில்லை; அவ்வாறிருக்க இந்தப் பெண் இயேசுவின் பாதங்களைப் பரிமளத் தைலத்தால் பூசினாள் (லூக் 7:38.46). இரண்டாம் பெண் லாசரின் சகோதரி மரியாள்; இயேசு எருசலேமில் நுழைவதற்கு முந்தின நாள் இவளும் அவருக்கு விலையுயர்ந்த நல்ல பரிமளத் தைலம் பூசி, அவரைக் கண்ணியப்படுத்தினாள்; இத்தகைய பரிமளத்தைலம் பூசியது சீடர்களுக்கு, குறிப்பாக யூதாசுக்கு இடறலாய் இருந்தது (மத் 26:6–13 தொ; யோவா 12: 1–8). ஆனால் இயேசு மரியாள் செய்ததைப் பாராட்டியதோடு அதே வேளையில் அச்செயலுக்குப் புதியதொரு உட்பொருளை இறைவாக்காக முன்னறிவித்தார்;

இவ்வாறு அவர் முன்னறிவித்தது, இறந்தவர்களின் உடலைப் பரிமளப் பொருட்களால் பூசும் வழக்கத்தோடு தொடர்புடையது (மாற் 16:1); மரியாளின் செயல், இயேசுவின் சடலத்தை அடக்கம் செய்யும் சடங்கு முறைக்கு ஓர் அடையாளமாகவும் முன்னறி குறியாகவும் அமைந்தது; இயேசு சிலுவையில் இறந்த பின்னர் இந்தச் சடங்குமுறை நடைபெறும் (யோவா 19:40).

ஆ.நோயாளிகளையும் பேய்ப் பிடித்தவர்களையும் எண்ணெயால் பூசுதல்:-

1. தவிர, நோயாளிகளைக் குணப்படுத்துவதற்காகவும் எண்ணெய் பயன்பட்டது; சான்றாக, புண்களை ஆற்றுவதற்கு எண்ணெய் பயன்பட்டது (ஏச 1:6); இதை நல்ல சமாரியன் உவமையில் காணலாம் (லூக் 10:34); லேவி 14:10-32-இல் கண்டுள்ளதற்கு ஏற்ப, குணமடைந்த தொழுநோயாளிகளின்மீது எண்ணெய் தடவிச் சுத்திகரிப்புச்சடங்குகள் நடந்தன. கிறிஸ்து தம் சீடர்களை அனுப்பி, கடவுளின் அரசை அறிவிக்கச் செய்தபொழுது, தீய ஆவிகளை ஒட்டவும் நோய் பிணியெல்லாம் குணப்படுத்தவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார் (மத் 10:1; லூக் 9:1 தொ). சீடர்கள் திருப்பணியை மேற்கொண்டவர்களாய்ப் புறப்பட்டுச் சென்று, பிணியாளர் பலரை எண்ணெய் பூசி, புதுமையாய்க் குணப்படுத்தினார்கள் (மாற் 6:13). ஒருவேளை இயேசு கற்பித்தபடி, அப்போஸ்தலர்கள் இவ்வாறு பூசியிருக்கலாம்; எவ்வாறாயினும், அப்போஸ்தலர்கள் இப்படிச் செய்தது, திருச்சபையில் உள்ள நோயாளிகளை எண்ணெயால் பூசுதல் என்னும் சடங்கு முறைக்குத் தொடக்கமாகும். யாக்கோபுவின் திருமுகம் தரும் விதிமுறைப்படி, மூப்பர்கள் ஆண்டவர் பெயரால் நோயாளியின் மீது எண்ணெய் பூசுவார்களாக: "விசுவாசமுள்ள செபம் நோயாளியைக் குணமாக்கும். ஆண்டவர் அவரை எழுப்பிவிடுவார். அவன், பாவம் செய்தவனாயிருந்தால், மன்னிப்புப் பெறுவான்" (யாக் 5:15). நோய் பாவத்தின் விளைவு எனில், "ஆண்டவர் பெயரால்" எண்ணெய் பூசப்பெறுதல், நோயாளி "மீட்பினை"க் கைகூடச் செய்கிறது; இப்பூசுதல், கிறிஸ்து பாவத்தின்மீதும் சாவின்மீதும் பெற்ற வெற்றியில் நோயாளி "பங்கேற்கச் செய்கிறது; இவ்வாறு பங்கேற்பதால், நோயாளி குணமடையலாம் அல்லது சாவை எதிர்ப்படுவதற்காக ஆற்றலைப் பெருக்கிக்கொள்ளலாம்.

2. தீயஆவிகளை ஒட்டுதல், மாற் 6:13-ல் பிணியாளர்களைக் குணப்படுத்துவதோடு நெருங்கிப் பிணைந்துள்ளது; தீயஆவிகளை ஒட்டுதல், பிணியாளர்களைக் குணப்படுத்துதல் ஆகிய இரண்டுமே வியப்புக்குரிய அதிகாரங்களாகும்; இவை கடவுளின் அரசு வந்துவிட்டது என்பதற்கு ஓர் அறிகுறியாகும். இன்னும், காலப்போக்கிலே ஆங்காங்குள்ள பல்வேறு திருச்சபைகள், எண்ணெய் பூசும் சடங்கு முறைகளைத் திருமுழுக்குக்கு முன்னர் அதற்கு ஆயத்தம் செய்கிறவர்கள் மீது பேயோட்டும் சடங்குகளாகப் பயன்படுத்தின.

III. பூசுதல் – திருநிலைப்படுத்துதல்

பழைய ஏற்பாடு குறிப்பிடுகின்ற பூசுதல்கள் பெரும்பாலும் திருநிலைப்படுத்தும் சடங்குமுறைகளாகும்.

1. வழிபாட்டுக்குரிய ஒரு சில பொருட்கள், குறிப்பாக பலிபீடம், எண்ணெய் பூசித்திருநிலைப்படுத்தப்பட்டன (யாத் 29:36 தொ; 30:26-29; லேவி 8:1 தொ); இவ்வாறு எண்ணெய் பூசப்பெற்ற பலிபீடம் "பரிசுத்தத்திலும் பரிசுத்தம்" எய்தியது. இதை ஒத்ததும், மிகப்பழமையானதும், ஒருவேளை கனானியர்வழி வந்ததுமான சடங்குமுறை ஒன்றினை யாக்கோபு பயன்படுத்தியிருந்தார்: அவர் இரவில் கனவு கண்டபின்னர், ஒரு கற்றூணை நினைவுச் சின்னமாக நாட்டி, அதன்மேல் எண்ணெய் வார்த்து, இறைவன் பிரசன்னமாயிருக்கும் இடத்தைக் குறித்து வைத்தார்; இதிலிருந்தே "இறைவனின் இல்லம்" எனப் பொருள்படும் பெத்தேல் என்ற பெயர் தோன்றியது (ஆதி 28:18; 31:13; 35:14).

2. அரசருக்கு எண்ணெய் பூசுதல், திருநிலைப்படுத்தும் சடங்கு முறைகளிலே தனிச்சிறப்பு வாய்ந்தது. கடவுளின் மனிதர் எனப்படும் இறைவாக்கினர் அல்லது குரு ஒருவர் எண்ணெய் பூசினார். சாமுவேல், சவுலின் மீதும் (1 சாமு 10:1) தாவீதின்மீதும் (1 சாமு 16:13) எண்ணெய் ஊற்றி அவர்களை அபிடேகம் செய்தார்; இறைவாக்கினர் எலிசா இன்

னொரு இறைவாக்கினரை அனுப்பி, ஏசூவின் மேல் எண்ணெய் ஊற்றி அபிடேகம் செய்வித்தார் (2 அர 9:6). யூதா நாட்டு அரசர்கள் ஆலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார்கள். குரு ஒருவரால் எண்ணெய் வார்த்து அபிடேகம் செய்யப்பட்டார்கள்: சாலமோன் குரு சாதோக்கு என்பவரிடமிருந்து அபிடேகம் பெற்றார் (1 அர 1:39): யோவாசு, பெரிய குரு யோயதாவினால் அபிடேகம் பெற்றார் (2 அர 11:12). இவ்வாறு நடந்த அபிடேகச் சடங்கின் உட்கருத்து யாதெனில்: இறைவன் இம் மனிதர்களைத் தேர்ந்தெடுத்து, தம் மக்களை ஆள்வதற்கான கருவிகளாக்கிக் கொண்டார் என்பதனை வெளி அடையாளத்தால் சுட்டிக்காட்டுவதாகும். அரசர் கடவுளால் அபிடேகம் பெற்றவர். அபிடேகத்தினால் (எண்ணெய் பூசுதலால்) அரசர் இறைவனின் ஆவியில் பங்காளியானார்; இதற்குத் தாவிது எடுத்துக் காட்டாவார்: "சாமுவேல் கொம்பினால் செய்யப்பட்ட எண்ணெய்க் கிண்ணத்தை எடுத்து அவனுடைய சகோதரர் நடுவில் அவனை அபிடேகம் செய்தார். அன்று முதல் ஆண்டவருடைய ஆவி தாவீதின் மேல் இறங்கி எப்பொழுதும் இருந்தது" (1 சாமு 16:13). அபிடேகம் (எண்ணெய் பூசுதல்) அரசரை அவருடைய பணிக்குத் தகுதிப்படுத்தி, இறைவன் அவரைத் தம் ஊழியனாயிருக்கும்படித் தேர்ந்துகொண்டார் என்பதை வெளிப்படையாக அறிவித்தது. இதனால் புரிந்துகொள்ளக்கூடியது என்னவெனில்: முதன்முதலாக இஸ்ராயேலின் அரசரைப்பற்றி வழங்கப்பட்ட "கடவுளால் அபிடேகம் பெற்றவர்" என்ற பட்டப்பெயர் புறச்சமய அரசரான சைரசுக்கும் உருவகமாக பயன்படக் கூடுமாயிருந்ததாகும் (ஏச 45:1); ஏனெனில் சைரசு தான், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பாபிலோனில் நடத்திய அடிமை வாழ்வுக்கு முடிவுகட்டி, அவர்கள் இஸ்ராயேல் நாட்டுக்குத் திரும்பிப்போக ஒப்புதல் அளிக்கிறார்.

அரசருக்கு எண்ணெய் பூசுதல் (அபிடேகம் செய்தல்) என்ற கருத்து , தன் தனிச்சிறப்பு அனைத்தும் பெற்றது எப் பொழுதெனில்: அபிடேகம் பெற்றவர் என்பதை மெசியாவுக்கும் பயன்படுத்திய போதுதான். ஆண்டவரையும் அவர் அபிடேகம் செய்தவரையும் பற்றிக்கூறும் சங் 2 மெசியாவைக் குறித்துப் பேசுவதாய் யூத மரபிலும் கிறிஸ்தவ மரபிலும் விளக்கம் பெற்றது (அ.ப. 4:25 தொ), முதல் கிறிஸ்து வர்களைப் பொறுத்தளவில், மெசியா அல்லது அபிடேகம் பெற்றவர் என்ற பட்டப்பெயர் இன்னம் அரசுரிமை சார்ந்த பொருள் கொண்டிருந்தது. அந்தப் பட்டப் பெயர் மெய்யான பொருள் பெற்றது குறிப்பாக எப்பொழுதெனில்: கடவுளின் வலப்புறத்தில் இயேசு அரியணையில் அமர்த்தப்பெற்று, கடவுளிடமிருந்து அக்களிப்புத் தைலத்தால் அபிடேகம் பெற்ற பொழுதுதான் (எபி1:8 தொ: சங் 44:6 தொ). அரசுரிமை சார்ந்த இந்த அபிடேகத்தால் இயேசு அந்தப்பட்டப் பெயருக்குரிய உரிமையோடும், அதன் முழுப் பொருளிலும் ஆண்டவரும் "கிறிஸ்துவும்" (மெசியாவும்) ஆனார் (அ.ப. 2:36; பிலி 2:11). "அபிடேகம் பெற்றவர்" என்ற இந்தப் பட்டப்பெயரைப் பொறுத்தளவில், பிந்திய கிறிஸ்தவ மரபு, கிறிஸ்து, அரசர் –குரு– இறைவாக்கினர் எனறளவில், மூவகை அபிடேகம் பெற்றார் என்று விளக்கம் கூறும்.

3. குருக்களும், மிகச்சிறப்பாகத் தலைமைக்குருவும்கூட, அபிடேகம் பெறுகின்றனர். ஆண்டவர் கட்டளையிட்டிருந்தபடி (யாத் 29:7), மோசே ஆரோனுக்கு அபிடேகம் அளிக்கிறார் (லேவி 8:12); தலைமைக் குருவுக்கென வகுத்தமைக்கப்பெற்ற விதிமுறைகளில், தலைமைக்குரு பல்வேறு சமயங்களில் "எண்ணெய்பூசித் திருநிலைப் படுத்தப்பெற்ற குரு" என அழைக்கப் படுகிறார் (லேவி 4:5; 16:32). இன்னும், மற்ற குருக்களான "ஆரோனின் புதல்வர்களுக்கும்" அபிடேகம் அளிக்கப்படுகிறது (யாத் 28:41; 40:13. 15; எண் 3:3). எனினும், பல்வேறான இந்த உரைப்பகுதிகள், நாடு கடத்தலுக்குப் பின்னர் உருவான குருக்களுக்குரிய சட்டத்தொகுப்பைச் சார்ந்தவை. எனவே, முடியாட்சியின் கீழ் அரசர் மட்டுமே அபிடேகம் பெற்றிருந்தார் என்று நம்பலாம்; (எருசலேமின்) இரண்டாம் ஆலயகாலத்தில் தலைமைக்

குரு மக்களின் தலைவர் ஆகிவிட்டதால், அவர் தம் பணிக்கென அபிடேகம் பெற்றார்: அவ்வாறே, விரைவில் குருக்கள் அனைவருமே அபிடேகம் பெற்றனர். முதல் நூற்றாண்டு நெடுகிலும் 'கும்ரான்' என்ற துறவு சமுதாயத்தினர் ஒரு மெசியாவை (ஓர் அரசரை) மட்டுமல்ல, "அபிடேகம் பெற்றவர்" ஒருவரையும் எதிர்பார்த்திருந்தனர்: இவ்வாறு அவர்கள் எதிர்பார்த்த அபிடேகம் பெற்றவர் லேவியர் குலத்தில் தோன்றிய மெசியா – குரு ஆவார்.

4. இறைவாக்கினர்கள் எண்ணெய் பூசி அபிடேகம் பெறவில்லை: இறைவாக்கினர்களை அபிடேகம் செய்தல் என்பது, சடங்கோடு அவர்களைப் பதவியில் அமர்த்துதலை உருவகமாகக் குறித்துக் காட்டுகிறது: எலியா எலிசாவை அபிடேகம் செய்ய உத்தரவு பெறுகிறார் (1 அர 19:16); ஆனால் எலிசா அழைக்கப்படுகின்ற நேரத்தில் திசுபியரான எலியா எலிசாவின்மேல் தமது போர்வையைப் போட்டு, அவருக்கு தமது ஆவியில் பங்களிப்பதற்குமேல் வேறு எதுவும் செய்யவில்லை (1 அர 19:19; 2 அர 2:9–15). இத்தகைய இறைவாக்கினரின் திருப்பணியை விளக்குவதற்காகத்தான், ஏச 61–ஐ ஆக்கியவர் எழுதுகிறார்: 'இறைவனாகிய ஆண்டவரின் ஆவி என் மேலே; ஏனெனில் ஆண்டவர் என்னை அபிடேகம் செய்துள்ளார், அவர் என்னை எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க அனுப்பினார்' (ஏச 61:1 காண்).

5. கிறிஸ்துவின் அபிடேகம்:– புதிய ஏற்பாடு, இயேசுவின் மண்ணக வாழ்வில் அவர் பெற்ற ஒரே ஒரு அபிஷேகத்தை மட்டும் குறிப்பிடுகிறது (அவர் விண்ணகத்தில் அரியணையில் அமர்த்தப்பெற்றபோது அவருக்கு நடந்த அரசுரிமை சார்ந்த அபிஷேகம் பற்றி, எபி 1:9); அந்த அபிடேகம் இயேசு திருமுழுக்குப் பெற்றபோது நடந்தது: "கடவுள் அவருக்குப் பரிசுத்த ஆவியையும் வல்லமையையும் அளித்து அபிடேகம் செய்தார்" (அ.ப. 10:38). இயேசுவே தமது திருப்பணியின் தொடக்கத்தில் (லூக் 4.18–21), ஏச 61 :1 என்ற உரைப் பகுதியைத் தம்மோடு தொடர்புபடுத்தி, தமது அபிடேகம் நற்செய்தி அறிவிப்பதற்காக இறைவாக்கினர் பெறும் அபிடேகம் போன்றது எனவிளக்குகின்றார். ஆனால், அப்போஸ்தலர்கள் காலத்துக் கிறிஸ்துவ சமுதாயம் இயேசுவின் வாக்குகளால் தூண்டப்பெற்று (மாற் 10:38; லூக் 12:50), கிறிஸ்து இறந்ததின் கண்ணோட்டத்தில் திருமுழுக்கினுக்குப் பொருள் விளக்கம் தர முற்பட்டது (அ.ப. 4:27; உரோ 6:3 தொ); இயேசு தாம் வெளிப்படையாக நடத்திய வாழ்வின் தொடக்கத்தில் பெற்றுக் கொண்ட திருப்பணி இன்னும் போதிக்கும் திருப்பணி மட்டுந்தான், ஊழியன்–இறைவாக்கினரின் திருப்பணி மட்டுந்தான் (ஏச 42:1–7); ஆனால், இத்திருப்பணி கல்வாரியிலே (1 யோவா 5:6 காண்) நடந்த துன்புறும் ஊழியனின் பலியில் நிறை வெய்த வேண்டுமாய் இருந்தது.

6. கிறிஸ்தவனும்கூட ஓர் அபிஷேகம் பெறுகின்றான் (2 கொரி 1:21; 1 யோவா 2:20.27); இவ்வுரைப்பகுதிகள் (திருமுழுக்கு அல்லது உறுதி பூசுதல் எனும்) ஒரு சடங்குமுறைப் பற்றிப் பேசுவதில்லை; மாறாக, இயேசு பெற்ற இறைவாக்கினர் பணி சேர்ந்த அபிஷேகத்தில் பங்கு பெறுவதைப்பற்றிக் பேசுகின்றன; அவ்வாறு பங்குபெறும் அபிஷேகம், விசுவாசத்தினால் பெறும் ஆன்மீக அபிடேகமாகும். திருமுழுக்குப் பெற ஆயத்தம் செய்கிறவர், திருமுழுக்கின்போது ஆவியின் முத்திரையைப்பெறுவதற்கு முன்னரே இறைவனால் "அபிடேகம்" பெற்றுவிட்டார் (2 கொரி 1:21; எபே 4:30); நற்செய்தியின் போதனை திருமுழுக்குப் பெற ஆயத்தம் செய்கிறவரை ஊடுருவச் செய்தவர் கடவுள்; ஆயத்தம் செய்கிறவர் தமது உள்ளத்தில் உண்மையின் வார்த்தையில் விசுவாசம் கொள்ளத் தூண்டியவரும் கடவுள் (எபே 1:13). ஆகவேதான், யோவான் இந்த உண்மையின் வார்த்தை கிறிஸ்துவிடமிருந்து வருவதை "அபிடேக எண்ணெய்" என்று அழைக்கிறார்; இந்த உண்மையின் வார்த்தை ஆவியின் செயலாதரவில் விசுவாசத்தினால் உள்ளார்ந்த கருவாகின்றது (யோவா 14:26; 16:13); 'அந்த அபிடேகம் நம்மில் நிலைத்திருக்கிறது (1 யோவா 2:27); அந்த அபிடேகம் நமக்கு உண்மையை

உணர்த்துகிறது' (2:20); அந்த அபிடேகம் நமக்கு எல்லாவற்றையும் பற்றிக் கற்பிக்கிறது (2:27). ஆகவே தான் யோவான், கிறிஸ்தவருக்கு ஒருவரும் கற்பிக்கத் தேவையில்லை என்று சொல்லக்கூடும்; இறைவாக்கினர்கள் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எதிர்ப்பார்த்திருந்தது கைகூடுகின்றது (எரே 31:34; ஏச 11:9). உள்ளார்ந்த அபிடேகம் பற்றிய இந்தக் கொள்கை விளக்கம் கிறிஸ்தவ மரபிலும் கிறிஸ்தவ ஆன்மீக வாழ்விலும் முக்கியத்துவம் வாய்ந்தது. அலக்சாந்திரியா கிளமெந்து, கிறிஸ்துவைப் பின்வருமாறு புறச்சமயத்தினருக்கு அழைப்பு விடுத்து வாக்களிக்கச் செய்கிறார்: "நான் விசுவாசத்தைலத் தால் உங்களை அபிடேகம் செய்வேன்;" புனித பெர்நர்தும் பின் வருவதைக்கடவுள் மக்களின் தனிச்சிறப்பாகவும் தனிப் பண்பாகவும் கருதுகிறார்: "அபிடேகம் அவர்களுக்கு எல்லாவற்றையும் கற்பித்து வருகிறது."

அபிடேகம் பெற்றவர் (THE ANOINTED)

பழைய ஏற்பாட்டின்படி இச்சொல் இஸ்ராயேலின் அரசனையும், பின் தலைமைக் குருவையும் குறித்தது. இவர்கள் எண்ணெய் பூசி அபிடேகம் செய்யப்பட்டனர். பழைய ஏற்பாட்டு காலத்திற்குப் பின் எல்லாவற்றிற்கும் மேலான நிரந்தர அரசனைக் குறித்தது. இதன் அரமேயிக் சொல்லான மெசியாவும் கிரேக்கச் சொல்லான கிறிஸ்து என்பதும் நன்கு அறியப்பட்டவையாகும்.

அபதோன் (ABADDON – கீழ் உலகம், பாதாளம்)

அழிவு, நரக தண்டனை என்று இச்சொல்லுக்குப் பலவாறு பொருள் கூறலாம். இந்த இடம் இறந்தோரின் ஆவிகள் தங்கியிருந்த இடமாகிய செயோல் என்ற பாதாளத்தோடும் (யோபு 26:6) சாவோடும் (28:22) கல்லறையோடும் (சங் 88:11) தொடர்பு உடையது. இவ்விடம் பிறர் மனை நயப்பவர்களையும் (யோபு 31:12) காம இச்சையுடையவர்களையும் (பழ 27:20) தண்டிக்கும், சுட்டெரிக்கும் இடம் ஆகும் (யோபு 31:12). இங்கு இறைவனது இறுதியான இரக்கம் எடுத்து உரைக்கப்படுவதில்லை, அவரது பிரமாணிக்கம் போற்றப்படுவதில்லை (சங் 88:11). இறைவன் ஒருவரே அறியும் ஞானத்தின் வழியை இவ்விடம் அறியாது (யோபு 28:22–23). ஆயினும் இந்த இடம் இறைவனது ஆட்சிக்கு உட்பட்டது. மனிதர்கள் இதயங்களில் இறைவன் முன் உள்ளது போல் (பழ 15:11), இந்த இடமும் அவர் கண்முன் பரவிக்கிடக்கிறது: அவரது ஆய்வுக்கு உட்பட்டது (யோபு 26:6).

ராபிகளின் இலக்கியத்தில் இவ்விடம் கேகன்னாவின் ஒரு பகுதியாகும். புதிய ஏற்பாட்டில் இந்த இடம் ஆட்தன்மைப் படுத்தப்பட்டு கிரேக்க மொழியில் அப்பொல்லியோன் என்று ஆட்பெயர் பெறுகிறது. திருவெளி. 9–இல் ஐந்தாம் வானதூதர் எக்காளத்தை ஊதியபின் பாதாளக் குழியின் தூதனான அப்பொல்லியோன் தோன்றுகின்றான் (திருவெளி 9:11). இவன் திய ஆவிகளின் அரன் ஆவான் இந் நூலில் இந்த இடம் கோரமாக விவரிக்கப்படுகிறது. இவ்விடத்திலே ஆவிகள் உலக இறுதிக்காலத்தில் வெட்டுக்கிளிகளின் உருவம் எடுத்து இறைவனின் முத்திரை இல்லாதவர்களை மட்டும் சித்திரவதை செய்யும். காண்க: அப்பொல்லியோன்.

அபாரீம் (ABARIM – அப்பால் உள்ள பகுதி)

இது கிழக்கில் மோவாபு மேட்டுச் சமவெளியும் மேற்கில் சாக்கடலுமாக அமையும்படி பிரிக்கும் மலைப்பகுதியாகும் (எண் 27:12; 33:47–48; உப 32:49). யோர்தானுக்கு மேற்கிலுள்ள மக்களால் அபாரீம் என்றழைக்கப்பட்ட இந்த மலைத் தொடர் மோவாபு மேட்டுச் சமவெளியின் செங்குத்தான ஓரமாகும். இது மேட்டுச் சமவெளியிலிருந்து 300–லிருந்து 600–அடி உயரமும் சாக்கடலின் மட்டத்திலிருந்து 400 அடி உயரமும் உடையது. இதன் பெயர் பெற்ற முக்கிய சிகரங்கள் நெபோ (உப 32:39) பிசுகா (34:1) பேகோர் (எண் 23:28) ஆகியவையாகும்.

பாலைவனத்தில் அலைந்து திரிந்த போது, இஸ்ராயேல் எமோரியர்களைத் தோற்கடிக்கு முன் இந்த மலைப் பகுதியில் பல இடங்களில் கூடாரம் அடித்துத் தங்கினர் (எண் 21:10–20; 33:34). அலமோன்–திபிலாதயிமிலிருந்து புறப்பட்டு, மோ

வாபு சமவெளியை அடையுமுன் அபாரீம் மலைப்பகுதியில் தங்கினர் (எண் 34:47–48). அதன் முக்கியசிகரங்களில் ஒன்றான நெபோவிலிருந்து மோசே, தான் இறக்கு முன் வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டைப் பார்த்தார் (எண் 27:12; உப 32:49). கி.மு. 597–க்குச் சிறிது முன் அமைக்கப்பட்ட பாடல் பகுதியில் (22:20–23)–ல் லெபனோன், பாசான், அபாரீம் ஆகிய மலைகளிலிருந்து எருசலேம் தன் அழிவை அறிவிக்கவும், அழுது புலம்பும் படியும் அதை உருவகமாக அழைக்கிறார் எரேமியா.

அபி (ABI – என் தந்தை)

இது அபியா என்ற பெயரின் சுருக்கமாகும். அபி கி.மு. 8–ஆம் நூற்றாண்டின் சிறப்பு வாய்ந்த அரசியாவாள். இவள் செக்கரியாவின் புதல்வி. ஆகாசின் மனைவி. ஆண்டவர் திருமுன் நேர்மையுடன் நடந்த எசக்கியாவின் தாய் (2 அர 18:2).

அபி–அலபோன் (ABI-ALBON – வலிமை மிக்க தந்தை)

தாவீதின் பொறுக்கியெடுத்த புகழ் பெற்ற வீரர்களைக் கொண்ட மூன்றாம் துணைப்படையில் முப்பது வீரர்கள் இருந்தனர். இவர்களில் அபி–அலமோன் ஒருவராவார். இவர் வட யூதாவிலுள்ள அராபா அல்லது பேத் – அராபா என்ற சிற்றூரிலிருந்து வந்தவர். அர்பாத்தியன் என்றழைக்கப்பட்டார் (2 சாமு 23:31). இதற்கு இணையான 1 நாள் 11:32–இல் இவன் "அர்பாத்தியனான அபியேல்" என்றழைக்கப்படுகிறார். அபி–அலபோன் என்பது சாலபோன் என்றபெயரின் பிழை வடிவமாக இருக்கலாம் (2 சாமு 23:32). காண்க: அபியேல், சாலபோன்.

அபிகயில் (ABIHAIL – தந்தை வல்லமைமிக்கவர்)

1. மெராரீ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். சூரியேலின் தந்தை (எண் 3:35).

2. யூதாவைச் சேர்ந்த, எரகுமேலைச் சேர்ந்த அபிசூரின் மனைவி (1 நாள் 2:29).

3. காது குலத்தைச் சேர்ந்தவர். இவர் ஏழு புதல்வர்களுக்குத் தந்தை (1 நாள் 5:13–14).

4. தாவீதின் சகோதரன் எலியாபுவின் புதல்வி. தாவீதின் மகன் எரிமோத்தின் மனைவியாவாள். இவர்களின் மகள் மகலாத்து யூதாவின் அரசன் இரகபெயாமின் மனைவியானாள் (2 நாள் 11:18). இவ்வாசகம் தெளிவாக இல்லை.

5. அரசி எஸ்தரின் தந்தை மோர்தெக்காயின் சிறிய தகப்பன் (சகோதரன்). (எஸ் 2:15; 9:29).

அபிகாயில் (ABIGAIL – என் தந்தை மகிழ்ந்தார்)

1. மாகோனைச் சேர்ந்த செல்வமிக்க இடையனான நாபாலின் மனைவி பிற்காலத்தில் தாவீதின் மனைவியானார். தாவீது இவருக்கும் இவர் மந்தைக்கும் பாதுகாப்பு அளித்து வந்திருந்தும், கர்மேலைச் சேர்ந்த நாபால் வாழ்த்துக் கூற வந்த தாவீதின் தூதர்களை அவமதித்தது மன்றி, மந்தைக்கு மயிர் கத்தரிக்கும் விழாவுக்கும் தாவீதை அழைக்க மறுத்துவிட்டார். ஆகவே, தாவீது அவரைப், பழிவாங்கத் திட்டமிட்டார். அதை அறிந்த நாபாலின் அழகும் விவேகமும் உள்ள மனைவி அபிகாயில், தன் கணவனுக்குத் தெரியாமல் பெரும் காணிக்கை களோடு சென்று தாவீதுக்கு வணக்கம் செலுத்தித் தன் கணவன் முட்டாள்தனமாய் நடந்து கொண்டதற்கு மன்னிப்புக்கேட்டுத் தன் கணவனைத் தாவீது கொல்லக்கூடாது என்றும், அதற்கு மாறாக, தன் காணிக்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் நயமாக கேட்டுக்கொண்டாள். அபிகாயிலின் அழகாலும், விவேகமிக்க பேச்சாலும் அமைதி அடைந்த தாவீது நாபாலின் மீது பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிட்டார். அவளுடைய காணிக்கையை ஏற்றுக்கொண்டார் (1 சாமு 25:2–35). அடுத்தநாள் காலையில் அபிகாயில் இவற்றை எல்லாம் தன் கணவரிடம் கூற அவர் கல்லாய்ச் சமைந்துபோனார். பத்துநாட்களுக்குப்பின் இறந்து போனார் (25:36–39). பின்பு தாவீது அபிகாயிலைத் தன் மனைவியாக்கிக் கொண்டார் (25:40–43). அவள் அவரோடு காத்தில் வாழ்ந்து வந்தாள். சவுலுக்கு எதிராக போர் செய்யத் தாவீதும் அவரோடு இருந்தவர்களும் பெலிஸ்தியரோடு சேர்ந்தபோது அம

லெக்கியர் அபிகாயில், அகினோவாம் என்ற தாவீதின் இரு மனைவியரையும் சிறைப்பிடித்துச் சென்றனர் (30:5). பின்பு அவர்களைத் தாவீது விடுவித்தார் (30:18). கெபிரோனில் தாவீது அரசனான பின்பு, அவருக்கு அபிகாயில் கிலயபு என்ற மகனைப் பெற்றெடுத்தாள் (2 சாமு 3:3). இவர் 1 நாள் 3:1–இல் தானியேல் என்று அழைக்கப்படுகிறார்.

2. 1 நாள் 2:16 –இன்படி தாவீதின் இரு சகோதரிகளில் ஒருத்தி ஆவாள். 2 சாமு 17:25–ன்படி இரு ஒன்றுவிட்ட சகோதரி களில் ஒருத்தி ஆவாள். இக் கூற்றின் படி அபிகாயிலின் தந்தை நாகாசு ஆவார். ஈசாய் அல்ல. செரூயா, அபிகாயிலின் சகோதரி என்பதைவிட யோவாபுவின் தாய் ஆவாள். ஒருவேளை ஈசாயை மணக் கும் முன் தாவீதின் தாய் நாகாசுக்கும் பெற்று எடுத்தவர்களாக செரூயாவும், அபிகாயிலும் இருக்கலாம். அப்படியா யின் செரூயா தாவீதுக்கு மிகவும் மூத்தவள் ஆவாள். தாவீதை அவள் தாய் பெற்றெடுத்த சமயத்தில் செரூயாவும் யோவாபுவைப் பெற்றெடுத்திருக்கலாம்.

அபிகாயில், இசுமயேலனான எத்தேர் அல்லது இசுரியை மணந்து அமாசா வுக்குத் தாயானாள் (1 நாள் 2:1617). இவரை அபிசலோம் தாவீதின் படையில் யோவாபுக்குப் பதிலாகப் படைத் தலை வன் ஆக்கினார் (2 சாமு 17:25). 2 சாமு 19:13 தாவீதே இவரைப் படைத்தலைவன் ஆக்கியதாகக் கூறுகிறது. இரண்டாம் சாமுவேல் நூலின் ஆசிரியர் இசுரிக்குப் பாதகம் ஆனவிதத்தில் விவரிக்கிறார். அதன்படி, இசுரி அபிகாயிலைக் கெடுத் தான். அதனால் அமாசா முறையற்ற விதத்தில் பிறந்தவர் ஆவார்.

அபிகு (ABIHU – அவர் என் தந்தை)

ஆரோனுக்கும் எலிசெபாவுக்கும், பிறந்த இரண்டாம் மகன் (யாத் 6:23). எப்போதும் முதல் மகன் நாதாபுவோடு சேர்த்து அபிகு குறிக்கப்பெறுகிறார். இவர்களுடைய சகோதரர்கள் எலயாசார், இத்தாமார் ஆவர். இஸ்ராயேலின் தலை வர்களைச் சேர்ந்தவர்கள். மோசே, ஆரோன், நாதாபு, அபிகு மற்றும் 70 முதியவர்களும் இறைவனது இறையாற் றல் தோற்றத்தைக்காண சீனாயிமலை ஏறிச்சென்றனர் (24:1,9–11). நாதாப்பும், அபிகுவும் ஆண்டவரின் குருக்களாக்கப் பட்டனர் (28:1). ஆரோன் பெரிய குருவாக் கப்பட்டபின் அவரது முதல்நாள் பணியில் அவருக்கு உதவி செய்தனர் (லேவி 9:9). நாதாபும், அபிகுவும் "தூபக் கலசங்களை எடுத்து அவற்றுள் நெருப்பையும் தூபத் தையும்போட்டு, தங்களுக்குக் கட்டளை யிட்டிருந்ததை மீறி ஆண்டவர் திருமுன் அன்னிய நெருப்பைச் சமர்ப்பித்தனர். உடனே ஆண்டவரிடமிருந்து நெருப்பு புறப்பட்டு அவர்களை எரித்தது. அவர் கள் ஆண்டவர் முன்னிலையிலேயே இறந் தனர்" (10:1–2). இவர்களுடைய சகோதரர் களைத் தவிர்த்து, ஆரோனின் சிற்றப்பன் ஊசியேலின் புதல்வர்களை, நாதாபு, அபிகுவை அடக்கம் செய்யக் கட்டளை யிட்டார் மோசே (10:4–5).

பிற்கால வரலாற்றில் இந்த நிகழ்ச்சி யோடு நாதாபு அபிகு தொடர்புபடுத்தப் படுகின்றனர். கட்டுமீறிய அவர்களது நடத்தை லேவியர் திருநிலைப்படுத்தும் விவரிப்பிலும் (எண் 3:2–4), லேவியர் கணக்கெடுப்பினும் (26:60–61) குறிக்கப்படு கிறது. இக் குற்றத்திற்காக மகப் பேறின்றி இவர்கள் இறந்ததாகக் கூறப்படுகிறது 1 நாள். 24:1–2, இவர்கள் மக்கட்பேறின்றி இறந்துபோயினர் என்று வெறுமனே கூறு கிறது. இவர்கள் இடத்தை, இவர்களு டைய சகோதரர்கள் எலயாசர், இத்தா மார் நிறைவுசெய்து, குருக்களாகப் பணி புரிந்தனர்.

அபிகூது (ABIHUD – என் தந்தை மாட்சிமை ஆவார், என் தந்தை புகழ் ஆவார்)

இவர் பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பென்யமினின் தலைமகன் பெலாவின் மூன்றாவது மகன் ஆவார் (1 நாள் 8:3).

அபிசலோம் (ABSALOM, ABISHALOM – தந்தை அமைதியாவார்)

1. வட சீரியாவில் கெசூரின் அரசன் தால்மாயின் மகளான மாக்காவின் வழி தாவீதுக்குப் பிறந்த மூன்றாம் மகன் (2 சாமு 3:3; 1 நாள் 3:2). இவர் கெபிரோ னில் பிறந்தவர். அழகுமிக்க இளைஞ னாக வளர்ந்தார் (2 சாமு 14:25–26); 1 அர

15:2.10-இல் இவன் அபிசாலோம் என்றழைக்கப்படுகிறார்.

தாவீதின் முதல் மகன் அம்னோன் இவரது அழகிய தங்கை தாமாரை வஞ்சகமாகக் கற்பழித்த கதையுடன் அபிசாலோமைப்பற்றிய குறிப்புகள் தொடங்குகின்றன. அம்னோன் கற்பழிக்குமுன் தாமாரை எவ்வளவு விரும்பினாரோ அவ்வளவு அதற்குப்பின் அவளை வெறுத்தார். அவளை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார். அவளும் தன் சகோதரன் வீட்டில் அடைக்கலம் புகுந்தாள் (2 சாமு 3:1–13). தாவீது மன்னன், அப்போது உரியாவின் மனைவி பதுசேபாவோடு வெகுவாக ஈடுபாடுகொண்டிருந்தார். ஆகையால் அம்னோனை நீதி முறைப்படி தண்டிக்கவில்லை. இதன்விளைவாக, நாத்தான் இறைவாக்குப்படி தாவீது குடும்பத்தினருக்கு வரவிருக்கும் அழிவுகளுக்கு அடிப்படை நிறுவப்பட்டது.

அம்னோனிடம் கொண்ட பகையை அபிசலோம் இருவருடங்களுக்கு மறைத்து வைத்திருந்தார் (2 சாமு 13:22–23). பின் ஆட்டு மயிர்வெட்டு விழாவின்போது அம்னோனைக் கொன்றுபோடச் செய்தார். பின் தன் தாய்வழி பாட்டனின் ஊரான கெசூருக்கு ஓடவிட்டார் (13:23–38). தாவீது அபிசலோமை மிகவும் அன்பு செய்திருக்கவேண்டும். அவரை நினைத்து அவர் நாளும் புலம்பிக் கொண்டிருந்தார் (13:37; 14:1). இதை அறிந்த தாவீதின் சகோதரி செரூயாவின் மகனும் படைத் தலைவனுமான யோவாபு, தந்திரமாய் தெக்கோவா ஊரைச் சேர்ந்த அறிவாளியான பெண்ணைக்கொண்டு அபிசலோமுக்காகப் பரிந்து பேசச்செய்து, அவனை கெசூரிலிருந்து எருசலேமுக்கு அழைத்து வந்தார். ஆனால் அரசர் அவனது முகத்தைக் கூடப் பார்க்க விரும்பவில்லை. இருவருடங்களுக்குப் பின்புதான் யோவாபு தந்தைக்கும் மகனுக்கும் ஒப்புரவு ஏற்படுத்த முடிந்தது (14:2–33).

சிறிது காலத்திற்குப்பின், அபிசலோம் அரச வாரிசு உரிமை கொண்டாடத் தொடங்கினார். தனது தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தந்திரமாகத் தயாரிக்கத் தொடங்கினார். எருசலேமிலுள்ள மத்திய அதிகாரிகள் குலங்களின் சலுகைகளை மதிக்காததால் ஏற்பட்ட மக்களின் அதிருப்தியைப் பயன்படுத்தி மக்களின் அன்பைப் பெற முடிந்தது (15:6). பின் பதுசேபாவின் பாட்டனும், தாவீதின் புகழ்பெற்ற ஆலோசகருமான அகித்தோபலின் ஆதரவோடு அபிசலோம் கெபிரோனில் தன்னையே அரசனாக அறிக்கையிட்டார் (15:7–12).

மிகவேகமாக, தாவீது எருசலேமை விட்டு ஓடினார் (15:13–14). ஒலிவ மலையில் ஏறிப்போகும்போது அழுதுகொண்டே சென்றார் (15:30). அகித்தோபல் அபிசலோமோடு சேர்ந்து கொண்டதை அறிந்த அரசன் விவேகத்தோடு நடந்துகொள்ளத் தொடங்கினார். தனது பிரமாணிக்கமான கூசாயை எருசலேமுக்கு அனுப்பி, அபிசலோமின் பணியில் சேர்ந்துகொள்ளச் செய்தார். இப்படிச் செய்வதால், அகித்தோபலின் ஆலோசனை வெற்றியடையாது போகச் செய்ய எதிர்பார்த்தார்.

இதற்கிடையில், அபிசலோம் அகித்தோபலோடு எருசலேமுக்குள் நுழைந்தார் (15:37; 16:15). அகித்தோபலின் முதல் ஆலோசனைப்படி, அரண்மனையைக் கவனித்துக்கொள்ள தாவீதால் விட்டுச் செல்லப்பட்ட அவரது வைப்பாட்டிகளை மக்கள் யாவரும் பார்க்கப் பங்கபடுத்தினார் (16:21–22). இவ்வாறு நாத்தான் தாவீதுக்கு அறிவித்த இறைவாக்கு நிறைவேறிற்று (12:11–12). இச் செயலால் அவர் தந்தையோடு எத்தகைய சமாதானத்திற்கும் இடமில்லாது போயிற்று. அன்று இரவே தாவீதைத் துரத்திச் சென்று அவரைத் தோற்கடிக்க வேண்டுமென்ற அகித்தோபலின் இரண்டாவது ஆலோசனையை அபிசலோம் உடனே ஏற்றுக்கொள்ளாதபடி கூசாய் பார்த்துக்கொண்டார் (17:1–14). தாண் முதல் பேயேர் – செபா வரை உள்ள மக்களை ஒன்று சேர்த்து தாவீதுக்கு எதிராக அவனே போருக்குத் தலைமை தாங்கிச் செல்ல வேண்டும் என்று கூசாய் கூறினார். இதை அவர் ஏற்றுக்கொண்டார். "இவ்வாறு, ஆண்டவர் அபிசலோமுக்குத் தீங்கு நேரிடும்படி, அகித்தோபலின் பயனுள்ள ஆலோசனை எடுபடாது போகச் செய்

தார்" (17:14). இவ்வாறு தொடக்கத்திலேயே அபிசலோமின் வீழ்ச்சி உறுதி செய்யப்பட்டது.

பெரும்படையுடன் தாவீதைத் துரத்திவர அபிசலோம் திட்டமிட்டுள்ளதை கூசாய் வழியாக அறிந்த தாவீது யோர்தானைக்கடந்து, மகனாயிமில் தங்கியிருந்தார் (17:21–24). தனது ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று கண்ட அகித்தோபல் தற்கொலை செய்துகொண்டார். (17:23). சிறிது காலத்திற்குப்பின் தந்தைக்கும் மகனுக்கும் நடந்த போரில் அபிசலோம் எப்பிராயீம் காடுகளில் தோற்கடிக்கப்பட்டார் (18:6–8). அங்கு அவரது தலைமுடி ஒரு கருவாலி மரத்தில் சிக்கிக்கொண்டது. அவர் ஏறிவந்த கோவேறு கழுதை, அவரை விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் தொங்கிக்கொண்டிருக்க விட்டுவிட்டு ஓடிப்போயிற்று. இதை அறிந்த யோவாபு, "என் மகனை என்பொருட்டு உயிரோடு காப்பாற்றவேண்டும்" (18:5) என்ற அரச கட்டளையையும் புறக்கணித்துவிட்டு தன் கையாலே மூன்று ஈட்டிகளை அபிசலோமின் இதயத்தில் பாய்ச்சினார். அதன் பின்னும் அபிசலோம் உயிரோடிருப்பதைக் கண்ட யோவாபின் பரிசையர்கள் அவனை வெட்டிக் கொன்று போட்டார்கள் (18:14–15). பின்பு, அவர்கள் அபிசலோமின் உடலைத் தூக்கிச் சென்று மிகவும் ஆழமான ஒரு பள்ளத்தில் எறிந்து அவர் மேல் கற்களைப் பெருமளவில் குவித்தனர் (18:17).

செய்தி அறிந்த தாவீது வெகுவாகப் புலம்பி அழுதார் (18:33). இதனால் அன்று வெற்றி துக்கமானதாக மாறிப்போயிற்று. அரசனது நடத்தை பிரமாணிக்கமுள்ள வீரர்களை ஊக்கமிழக்கச்செய்யும் என்றுணர்ந்த யோவாபு, அரசனைக் கண்டித்து, அவருக்குப் பிரமாணிக்கமாயிருந்தவர்களிடம், அன்பாய்ப் பேசச் செய்தார் (19:1–8).

தனது வாழ்நாளில் அபிசலோம், தன் பெயரையும், நினைவையும் நிலைப்படுத்த புதல்வர்கள் இல்லாததால் எருசலேமுக்கு அருகிலுள்ள அரசரின் பள்ளத்தாக்கில் ஒரு தூணை நிறுத்தி அதற்குத் தன் பெயரை இட்டிருந்தார். அது "அபிசலேமின் கை" என்றழைக்கப்பட்டது (ஒரு வேளை 14:27–இல் குறிக்கப்பட்ட அபிசலேமின் மூன்று புதல்வர்களும் அவருக்கு முன்பே இறந்திருக்கவேண்டும்). அவரது மகள் தாமார் பிற்காலத்தில் அபியா அரசனது மாமியாவாள்). அவர் இத்தூணை கித்ரோன் பள்ளத்தாக்கின் கிழக்குச்சரிவில் நிறுவியிருக்கவேண்டும். அங்கு ஓர் எகிப்திய – கிரேக்கப் பாணி நினைவுச் சின்னம் அசமோனியர் அல்லது எரோதியர் காலத்திலிருந்து அபிசலோமின் தூண்" என்றழைக்கப்படுகிறது.

2. யோனத்தான் மக்கபேயுவின் படையில் ஒரு தலைவரான மத்தத்தியாவின் தந்தை ஆவார். சீரியர்களுக்கு எதிரான போரில் படை எல்லாம் ஓடிவிட்ட பின்னும் மத்தத்தியா தன் பேரனுக்குப் பிரமாணிக்கமாயிருந்தார் (1 மக் 11:70). இவர் 1 மக் 13:11–இல் குறிக்கப்படும் தூதுக்கு சீமோன் மக்கபேயுவால் அனுப்பப்பட்ட யோனத்தனின் தந்தையான அபிசலோமாக இருக்கலாம்.

3. கி.மு. 165–இல் பேத்து–சூரில் நிகழ்ந்த தோல்விக்குப்பின் சமாதான உடன்பாடு செய்ய யூதர்களால் இலிசியாவிடம் அனுப்பப்பட்ட இரு தூதுவர்களில் ஒருவராவார் (2 மக் 11:17). இவர் மேலே 2–இல் குறிக்கப்பட்டவராகவும் இருக்கலாம். இதற்கு இணையாக 1 மக்கபேயரில் ஒன்று மில்லை. இந்த நிகழ்ச்சியைப்பற்றி 2 மக்கபேயர் ஆசிரியர் பிழை செய்திருக்கலாம்.

அபிசாகு (ABISHAG – என் தந்தை அலைந்து திரிகிறார், என் தந்தை தவறுகிறார)

சூனாமிய ஊராள். அழகிய இளங்கன்னி. தாவீது அரசனின் முதிர்ந்த வயதில், "அவரது முன்னிலையில் நிற்கவும்", அவருக்குச் சூடு உண்டாக்கும்படி அவரது மார்பின் மீதுபடுத்து உறங்கவும், அழைத்து வரப்பட்ட தாதிப் பெண். ஆனால் அரசன் அவளோடு சிற்றின்ப உறவு கொண்டதில்லை (1 அர 1:1–4).

ஆனால் தாவீதின் மரணத்துக்குபின், சாலமோன் அவளைத் தாவீதின் மனைவி

யாகவே கருதினார். அதோனியா அவளை மணக்க, விரும்பி சாலமோனின் தாய் பதுசேபா வழியாக வேண்டிக் கொண்டபோது, இளைய மன்னன் சாலமோன், இது அதோனியா அரசன் ஆவதற்குச் செய்யும் ஒரு முயற்சி என்று கருதி, அவனைக்கொன்று போட்டார் (2:13–25).

அபிசாய் (ABISHAI – என் தந்தை வாழ்கிறார்)

தாவீதின் சகோதரி செரூயாவின் மூத்த மகன். யோவாபு, அசாயேல் ஆகியோரின் சகோதரன் (2 சாமு 2:18; 1 நாள் 2:16; 18:2). இவரது தந்தையின் பெயர் கொடுக்கப் படவில்லை.

தாவீது, சவுலால் துரத்தப்பட்டு அலைந்து திரிந்த காலத்தில், தாவீதின் வீரமிக்க தோழனாக, அபிசாய் முதன் முதலாகக் குறிக்கப்பெறுகிறார். சிப்பு பாலைவனத்தில் சவுலின் பாளையத் திற்குத் தாவீதோடு இரவில் சென்றார். சவுலும் மற்றவர்களும் கூடாரத்தில் ஆழ்ந்து உறங்கிக் கிடக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி, சவுலை ஈட்டியால் குத்திக் கொல்ல அபிசாய் விருப்பம் தெரிவித்த போது, தாவீது அவரைக் கட்டுப்படுத்தினார். ஆனால் சவுலின் ஈட்டியையும் தண்ணீர்ப் பாத்திரத்தையும் மட்டும் எடுத்துக்கொள்ளக் கட்டளையிட்டார் (1 சாமு 26:5–12).

சவுல் இறந்தபின், தாவீது வீட்டாருக்கும் இசிபோசத்தின் வீட்டாருக்கும் நடந்த சிறு போர்களின் முடிவில், அடுத்து அபிசாய் குறிக்கப்படுகிறார். அப்படிப்பட்ட ஒரு போரில், அபிசாயின் சகோதரன் அசாயேல் அபினேர் படைத்தலைவர் எச்சரித்தும், அவரைத் துரத்திச் சென்றார். அபினேர் தற்காப்புக்காக அசாயேலை ஈட்டியால் குத்திக்கொன்றார். ஆகவே பழி தீர்க்கும் எண்ணத்துடன் அபிசாயும் யோவாபுவும், அபினேரைத் தொடர்ந்து தாக்கி வந்தனர். தற்காலிகப் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. ஆனால் பழி தீர்க்கும் எண்ணத்தை இரு சகோதரர்களும் கைவிட்டு விடவில்லை (2 சாமு 17–30). வாய்ப்புக் கிடைத்தபோது அபிசாயும், யோவாபுவும் அபினேரை வஞ்சகமாகக் கொன்று தங்கள் வழிவாங்கும் எண்ணத்தைத் தீர்த்துக்கொண்டனர்.

அம்மோனியர் சீரியர்களுக்கு எதிரான போரில் அம்மோனிய அரசன் கனூன், தாவீதின் தூதுவர்களை அவமதித்தான். அபிசாய் அம்மோனியர்களையும் யோவாபு சீரியர்களையும் தாக்கி வெற்றி கொண்டனர் (2 சாமு 10:9–19; 1 நாள் 19:11–19). 1 நாள் 18:12–13–இன் படி அபிசாய் ஏதோமியரைத் தாவீதின் அடிமைகளாக்கினார். மற்றொரு சமயம், பெலிஸ்தியனான இசிபி–பெனோபு என்ற அராபிய குலத்தினன் தாவீதை ஈட்டியால் கொல்ல முயன்றபோது, அவனைக் கொன்று அபிசாய் தாவீதைக்காப்பாற்றினார் (2 சாமு 21:10–17). மற்றொரு சமயம் முன்னூறு பெலிஸ்தியரை அபிசாய் கொன்றதாகத் தெரிகிறது (2 சாமு 23:18: 1 நாள்.11:20). தாவீதின் மிக வலிமைபெற்ற மூன்று வீரர்களில் ஒருவன் இல்லையென்றாலும், வீரத்திற்குப் புகழ் பெற்ற அவரது முப்பது வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்தார் அபிசாய் (2 சாமு 23:19; 1 நாள் 11:21).

அபிசாய் தாவீதுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தாலும், இருமுறை அவருக்கு எதிராகத் தாவீது எரிச்சல்பட்டு "செரூயாவின் புதல்வர்களே உங்களுக்கும் எனக்கும் என்ன?" என்று கூற வேண்டியிருந்தது (2 சாமு 16:10; 19:21). முதல் தடவை, அபிசலோம் கிளர்ச்சியின்போது, தாவீது தப்பி எருசலேமிலிருந்து ஓடிக் கொண்டிருக்கையில், பென்யாமீன் குலத்தவனாகிய சிமயி வசைமொழி கூறி, கல்லால் எறியத் தொடங்கியபோது, அவனைக்கொன்றுவர அபிசாய் அனுமதி கேட்டபோது தாவீது இவ்வாறு கூறினார் (2 சாமு 16:5–12). இரண்டாம்முறை சிமயி தனது முந்திய நடத்தைக்கு வருந்தி தாவீதிடம் மன்னிப்புக்கேட்டபோது, பழி வாங்குதலில் வல்ல அபிசாய் சிமயியைக் கொல்ல விரும்ப தாவீது இவ்வாறு கூறினார் (19:16–23).

அபிசூர் (ABISHUR – என் தந்தை அரண் ஆவார்)

கெசிரோன் குடும்பத்தைச் சேர்ந்த யூதா குலத்தைச் சேர்ந்தவர். சம்மாயின்

மகன். நாதாபுவின் சகோதரன். இவர் அபிகயிலை மணந்து இரு புதல்வர்களுக்குத் தந்தையானார் (1 நாள் 2:28–29).

அபிசூவா (ABISHUA – *தந்தைமீட்பாவார், தந்தை விடுதலை ஆவார்)*

1. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த பெலாவின் புதல்வர்களில் ஒருவர். பென்யாமினின் பேரன் (1 நாள் 3:4).

2. ஆரோனின் கொல்லுப் பேரனும் பெரிய குரு பினகாசின் மகனுமாவார் (1 நாள் 6:4–5). இறைவல்லுநர் எஸ்ராவின் மூதாதையருமாவார் (எஸ் 7:5). லேவியர் மரபு முறைப்பட்டியலில், பீடத்தின் அருகே பணியாற்றி வந்த வழிவந்தவர்களின் பட்டியலில் இவரும் இடம் பெறுகிறார்.

அபிதாள் (ABITAL – *என் தந்தை பனித் திவலை ஆவார்).*

தாவீது அரசரின் மனைவியருள் ஒருத்தியாவாள். அவரது ஐந்தாம் மகன் செப்பத்தியாவின் தாயார் (2 சாமு 3:4. 1 நாள் 3:3).

அபிதா (ABIDA – *என் தந்தை அறிவார்)*

ஆபிரகாம்–கெத்தூரா ஆகியோரின் பேரன். மிதியானின் நான்காவது மகன் (ஆதி 25:4; 1 நாள் 1:33).

அபிதான் (ABIDAN – *என் தந்தை தீர்ப்பிட்டார்)*

கிதயோனின் மகன். பென்யாமின் குலத்தவர். அக்குலத்தின் தலைவன் ஆனார். பாலைவனத்தில், இஸ்ராயேலின் மக்கள் தொகைக்கணக்கெடுப்பிலும் மற்ற அலுவல்களிலும் மோசேக்கு உதவி செய்த பன்னிருகுலத் தலைவர்களுள் ஒருவர் (எண்.1:11; 2:22; 10:24). பலிபீடம் அபிடேக விழாவின் ஒன்பதாம் நாள் இவர் தன் காணிக்கையைச் செலுத்தினார் (7:60.65).

அபிதி (ABDI – *யாவேயின் ஊழியன் என்பதன் குறுகிய வடிவம்)*

1. இவர் மெராரியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். இவர் கீசியின் தந்தையும், தாவீது காலத்தில் ஆலயப் பாடகர்களுள் ஒரவரான எத்தானின் பாட்டனும் ஆவார் (1 நாள்.6:44)

2. இவர் எசக்கிய அரசனோடு சம காலத்தவரும் ஒரு லேவியரும் ஆகிய கீசின் தந்தையாவார் (2 நாள் 29:12). ஒரு வேளை ஒன்றில் குறிக்கப்பட்டவராகவே இருக்கலாம்.

3. இவர் எஸ்ராவின் பணிக்காலத்தில், சட்டம் தடுத்ததற்கு மாறாக அன்னியப் பெண்களை மணந்துகொண்ட இஸ்ராயேலர்களில் ஒருவராவார் (எஸ் 10:26). இவர்கள் தங்களது புற இன மனைவியரை அவர்கள் பிள்ளைகளுடன் தள்ளிவிடவும், தங்கள் பாவத்துக்காக ஒரு செம்மறி ஆட்டுக்கிடாவைப் பலியிடவும் ஒப்புக் கொண்டனர் (10:18.44).

அபிதியேல் (ABDIEL – *இறைவனது ஊழியன்)*

இவர் கிலயாத்து அல்லது பாசானில் வாழ்ந்த காது குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் கூனியின் மகனும் அக்குடும்பத்தின் தலைவரான அகியின் தந்தையும் ஆவார் (1 நாள் 5:15).

அபுதூபு (ABITUB – *என் தந்தை நன்மையானவர்)*

சாரயிமுக்கும் அவரது முதல் மனைவி கூசிமுக்கும் பிறந்த இரு புதல் வர்களில் ஒருவர் (1 நாள் 8:11). பென்யாமின் குல மரபுப் பட்டியலில் குறிக்கப்பெறுகிறார்.

அபிதேல் (ABDEEL – *இறை ஊழியன்)*

இவர் செலமியாவின் தந்தையாவார். எரேமியாவையும் பாருக்கையும் பிடித்து வர யோயாக்கிமினால் கட்டளையிடப்பட்ட மூன்று ஏவலர்களுள் ஒருவர் (எரே 36:26).

அபிதோன் (ABDON – *பணி அடிமைத்தனமுள்ள) – ஆள்.*

1. எப்பிராயிமிலுள்ள பிராத்தோனைச் சேர்ந்த இல்லேலின் மகனாவார். இவருக்கு நாற்பது புதல்வர்களும் முப்பது பேரன்களும் இருந்தனர். இவர் செல்வமும் மதிப்பும் உடையவர். எழுபது கழுதைக் குட்டிகளைக் கொண்டிருந்தார் (நீதி 12:13–15). எட்டு ஆண்டுகள் இஸ்ராயேலுக்கு நீதி வழங்கினார். இஸ்ராயேலின் இறுதி நடுவர்களில் ஒருவர். இவர் இறந்தபின் அவர்களது பாவங்களுக்காக ஆண்டவர் இஸ்ராயேலரை நாற்பது ஆண்டுகள் பெலிஸ்தியர் கையில் ஒப்படைத்தார் (13:1). முடிவில் இறுதி நடுவரான சிம்சோன் தோன்றினார்.

2. பென்யாமின் குலத்தைச்சேர்ந்தவர். எருசலேமில் வாழ்ந்தார். சாசாக்கின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8:23.28).

3. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த எயியேலுக்கு அவரின் மனைவி மாக்க வுக்கும் மூத்த புதல்வராவார். சவுலின் முன்னோர் பட்டியலில் இருமுறை குறிக் கப்பெறுகிறார் (1 நாள் 8:30; 9:35–36). இவர் கிபயோனில் வாழ்ந்தார். அபிதோனின் சகோதரனான நேர் சவுல் அரசனுக்குப் பாட்டனாவார் (9:35–39).

4. யோசியா அரசனது அவையில் ஓர் உறுப்பினர். மீக்காவின் மகன் (2 நாள் 34:20). ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட சட்ட நூல்பற்றி ஆலோசனைகேட்ட இறை வாக்கினி குலிதாவிடம் அனுப்பப்பட்ட குழுவில் ஒருவர் (34:22). ஆனால் 2 அர 22:12–இல் இவர் ஆகிபோர் என்றழைக்கப் படுகிறார்.

அபிதோன் (ABDON – இடம்

அ) அப்தோன்– ஆசேர் குலத்துக்குரிய பகுதியில், கெரிசோமின் குடும்பத்திற்குக் குறிக்கப்பட்ட ஒரு லேவியர் நகரமாகும் (யோசு 21:30; 1 நாள் 6:74). ஒருவேளை அகிசீபுவுக்குக் கிழக்கில் 6 கி.மீ. தொலை விலும் ஆக்கோவுக்கு வடக்கு வடகிழக்கில் 17 கி.மீ தொலைவிலும் உள்ள கிர்பேத் அப்தேவாக இருக்கலாம். யோசு 19:28– ல் வரும் எபிரோன் அபிதோன் என்று திருத் தப்படவேண்டும் என்று சிலர் கருதுவர்.

அபிமெலக்கு (ABIMELECH – என் தந்தை அரசன் ஆவார்)

1. கெராரில் பெலஸ்தியர்களின் அரசன். ஆபிரகாமோடு சம காலத்தவர். சில அறிஞர்கள் இது ஓர் ஆளின் பெயர் என்பதைவிட, ஒரு பதவியின் பெயர் என்பது மேல் என்பர். (பதவியின் பெயர் என்ற அடிப்படையில், சங் 34–இல் காத் தின் அரசன் அபிமெலக்கு என்றழைக் கப்படுகிறார். காண்க: அபிமெலேக்கு–4)

சோதோம்–கொமோரா அழிவுக்குப் பின், ஆபிரகாம், கெரார் நாட்டில் சுற்றித் திரிந்தார் (ஆதி 20:1). அவரின் மனைவி சாராளை அவருடைய சகோதரி என்று சொல்லிக் கொண்டதை அரசன் நம்பி அவளைத் தன் வீட்டிற்கு எடுத்துக் கொண்டார். உண்மையில் சாராள் ஆபிரகாமின் மனைவி என்று இறைவ னால் எச்சரிக்கப்பட்டார். தான் ஆபிரகா மால் ஏமாற்றப்பட்டுவிட்டதை எடுத்துக் கூறினார். இறைவன் கட்டளைக் கிணங்க, அபிமெலக்கு, தன்னை எமாற்றியதற்காக ஆபிரகாமை அழைத்துக் கடிந்து கொண்டார். சாராளை ஆபிரகாமுக்குத் திருப்பிக்கொடுத்ததோடு பல நன்கொடை களையும் கொடுத்தார். தன் நாட்டில் தங்க உரிமையும் கொடுத்ததார் (20:2–16). அதன்பின் ஆபிரகாம் இறைவனிடம் மன்றாட, அவரும் இதுவரை மலடிகளாக இருந்த அபிமெலக்கின் மனைவிக்கும் வேலைக்காரிகளுக்கும் பிள்ளைப்பேற்றி னை அளித்தார் இறைவன் (20:1.7–18).

சில காலத்திற்குப் பிறகு, அபிமெலக் கின் ஊழியர் வலுக்கட்டாயமாகக் கைப் பற்றியிருந்த ஒரு கிணற்றுக்கு உரிமை அளித்து ஆபிரகாமோடு அபிமெலக்கு உடன்படிக்கை செய்துகொண்டார். ஆபிர காமும் அவருக்குத் தாராளமாக விலை கொடுத்தார். சத்தியம் செய்து உடன் படிக்கை செய்யப்பட்ட இந்த சர்ச்சைக் குரிய கிணற்றின் பெர் (சத்தியத்தின் கிணறு) பேயேர்–செபா நகரின் பெயரா யிற்று (21:22–32).

2. இவர் கெராரில் ஆட்சிசெய்த பெலி ஸ்திய அரசன். ஒருவேளை முன்னவரின் மகனாக இருக்கலாம். ஏனெனில் ஆதி 20–21–இல் வரும் நிகழ்ச்சி நடந்து நாற் பது ஆண்டுகள் கடந்துவிட்டன. பிற்காலத் தில் இப்பகுதியில் பிலிஸ்தியர்கள் ஆட்சி செய்ததால், காலமயக்கமாகப் பெலிஸ் திய அரசன் என்று அழைக்கப்படுகிறார். இவர் 26–இல் குறிக்கப்படுகிறார். ஈசாக்கு, பஞ்சத்தின் விளைவாக கெரா ருக்கு வந்து (26:1–6) தனது மனைவி ரெபோக்காவைத் தன் சகோதரி என்று சொல்லித் திரிகிறார். அபிமெலக்கு, ரெபெக்காவை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் ஏமாற்றித் திரிவதற்காக ஈசாக் கைக் கடிந்துகொண்டார் (26:8–10). சச் சரவு உண்டாக்கிய ஒரு கிணறு பற்றி இரு வரும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

அபிமெலக்கு ஆபிரகாமைப் பற்றிய கதை (20–21) எலோயீம் பாரம்பரியத்தையும், அபிமெலெக்கு ஈசாக்கைப் பற்றிய கதை (20) யாவே பாரம்பரியத்தையும் சார்ந்ததாகும். இரண்டு கதைகளும் இரட்டிப்பு வாசகங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

3. கிதயோனுக்கும் (எருபாகால்) அவரது செக்கேமைச் சேர்ந்த கானானிய வைப்பாட்டிக்கும் பிறந்தவர் (நீதி 8:31). இவர் தன் தந்தை இறந்தபின் செக்கேமிலிருந்த தன் தாய்வழி உறவினர்களின் உதவி பெற்றார்.சூழ்ச்சி செய்து தனது 70 சகோதரர்களைக் கொல்ல பாகால் பேரீத் கோவிலிருந்து 70 வெள்ளிக் காசுகளைப் பெற்று இவர் ஏழைகளையும் நாடோடிகளையும் வேலைக்கு அமர்த்தி தன் சகோதரர் அனைவரையும் பாறையின் மேல் கொன்றார். கடைசிச் சகோதரனான யோத்தாம் மட்டும் தப்பினார். அதன்பின் செக்கேம் குடிமக்களால் அபிமெலக்கு அரசனாக்கப்பட்டார் (9:1–6). நீதிபதிகளின் நூல் ஆசிரியர் கருத்துப்படி இறைவன் அபிமெலக்கின் இக்குற்றத்தைத் தண்டிக்காமல் விடவில்லை. மூன்று வருட ஆட்சிக்குப் பின் "ஆண்டவர் அபிமெலக்குக்கும் செக்கேம் ஊராருக்குமிடையே கொடும் பகையை மூட்டினார்" (9.23). அவர்கள் அவரைப்பகைத்து காகால் என்பவனைத் தலைவனாக்கினர் (9:26–29). நகரத் தலைவன் செபூல் வழியாக செய்தி அறிந்த அபிமெலக்கு காகாவைத் தோற்கடித்து, செக்கேமைத் தரைமட்டமாக்கினார் (9:30–49). ஆனால் அருகிலிருந்த தேபேசுவைப் பிடிக்க முயன்றபோது, ஒருபெண் எந்திரக்கல்லின் துண்டை அவர் மேல போட்டு மண்டையை உடைத்தாள். ஒரு பெண்ணால் கொல்லப்படுதல் என்ற அவமானத்தைப் போக்க, தன்னைக் கொன்று போடும்படி தன்பரிசையானைக் கேட்டுக்கொண்டார். அவரும் அப்படியே செய்தார் (90:50–55). "அபிமெலக்கு தன் எழுபது சகோதரரைக் கொன்று தன் தந்தைக்குச் செய்த பழிக்குக் கடவுள் அவனைப் பழி வாங்கினார்" (9:56) என்று ஆசிரியர் அபிமெலக் கைப்பற்றிய விவரிப்பை முடிக்கிறார். இத்தியனான உரியாவின் அவல மரணத்தையொட்டி 2 சாமு 11:21–ல் யோவாபு அபிமெலக்கைக் குறிப்பிடுகிறார்.

4.காத்தின் அரசனான ஆக்கீசின் மற்றொரு பெயராகும். இவர்முன் தாவீது பைத்தியக்காரனாக வேடம் போட்டார் (1 சாமு 21:10–5). அபிமெலக்கு என்ற பெயர், பெலிஸ்திய அரசர்களின் பட்டமானால், சங் 34–ன் ஆசிரியர், 1சாமு.21:10–15 –ஐத் தவிர்த்த வேறொரு மூலத்திலிருந்து, ஒரு வேளை தாவீது அரசன் ஆட்சி ஏட்டிலிருந்து, எடுத்து எழுதியிருக்க வேண்டும்.

அபிமேல் (ABIMAEL – என் தந்தை இறைவன் ஆவார்)

இவர் யோக்கிதானின் மகன் (ஆதி 10:28; 1 நாள் 1:23). இவர் ஒரு தென் அராபிய குலத்தின் குல முதல்வராவார்.

அபியசாபு (ABIASAPH – என் தந்தை ஒன்று சேர்த்தார்)

இவர் கோராகு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். ஆரோனின் பேரனான பினகாசோடு சம காலத்தவர். எகிப்திலிருந்து மோசேயோடு புறப்பட்ட லேவியர் குடும்பங்களுள் ஒன்றுக்குத் தலைவர் (யாத் 6:24–25). இவர் 1 நாள் 6:23.37; 9:19– இல் எபியாசாபு என்றழைக்கப்படுகிறார். 1 நாள் 26:1–இல் வரும் ஆசாபு இப் பெயரின் குறுகிய வடிவமாக இருக்கலாம்.

அபியத்தார் (ABIATHAR – செழிப்பின் தந்தை, ஈடெடுப்பற்ற தந்தை முதன்மையுள்ள தந்தை)

தாவீது ஆட்சியில் ஆரோனுக்குப் பின் பதினோராவது பெரிய குருவாக இருந்தவர். இவரின் தந்தை அகிமெலக்கு ஆவார். இவர் பினகாசு, அகிதூபு, அகிமெலக்கு ஆகியோரின் வழியாக ஏலியின் வழித்தோன்றல் ஆவார். தாவீதுக்கு உதவி செய்ததற்காக, சவுலின் கட்டளைக் கிணங்க நோபுவில் இருந்த 85 குருக்களை ஏதோமியனான தோயேகு கொன்று தீர்த்தபோது, இவர் மட்டும் தப்பினார் (1 சாமு 22:17–20). சவுலிடமிருந்து தப்பி, தாவீது மலைக்காடுகளில் வாழ்ந்து வந்த போது, அபியத்தார் தப்பியோடிச்சேர்ந்து கொண்டார். அபியத்தரின் குடும்பக்கேட்டிற்குத்தாமே ஒரு வகையில் காரணம்

என்று உணர்ந்த தாவீது இவரைத் தன்னுடைய மக்களோடு ஏற்றுக்கொண்டார் (22:20–23). அதிலிருந்து அபியத்தர் தாவீது வாழ்நாள் முழுவதும் அவரது நெருங்கிய நண்பனாகவும் பெரிய குருவாகவும் விளங்கினார். கெயீலா–வில் மட்டுமன்று (23:9) அமலேக்கியர் சிக்கிலாகுவைத் தாக்கிய போதும் தாவீதின் குருவாகப்பணிபுரிந்தார் (30:26). நோபுவிலிருந்து எடுத்து வந்திருந்த ஏபோதின் (23:6) உதவி கொண்டு இறைவாக்குக் கூறி, அதை விளக்கிக் கூறி தாவீதுக்கு ஆலோசனை கூறிவந்தார். சவுலின் சாவுக்குப் பின்னும், தாவீது கெபிரோன்னிலும், எருசலேமிலும் ஆட்சிசெய்தபோது அபியத்தார் அவருக்குப் பணிபுரிந்தார். இதில் அவரது மகன் அகிமெலக்கு அவருக்கு உதவி செய்திருக்கலாம் (2. சாமு 8:17).

எருசலேம் பிடிப்பட்டபின் சாதோக்கோடு சேர்ந்து தாவீதுக்குப் பெரிய குருவாகத் திகழ்ந்தார். சாதோக்கு பெட்டகத்திற்கும், அபியாத்தார் எபோதுக்கும் பொறுப்பாளர்களாக இருந்தனர் என்று கூறுவர் சிலர். ஆனால் அபிசலோம் கிளர்ச்சியின் விவரிப்பு, இருவருமே பெட்டகத்திற்குப் பாதுகாப்பாளர்களாவார் என்று காட்டுகிறது (2 சாமு 15:24–36). இக்கிளர்ச்சிக் காலம் முழுவதும் இருவரும் தாவீதுக்குப் பிரமாணிக்கமாக உள்ளனர். தாவீது எருசலேமை விட்டுத் தப்பியோடியபோது இவர்கள் பெட்டகத்தையும் கொண்டு செல்ல முயல்கின்றனர் (15:24). ஆனால் தாவீதால் கட்டளையிடப்பட்டு பெட்டகத்தை எருசலேமுக்கு எடுத்துச்செல்கின்றனர் (15:25.29). அதோடு அவர்கள் ஒடி ஒழிந்து திர்ந்த அரசனுக்குச்செய்திகள் அனுப்பவேண்டும் (15:35–36). இதை இவர்கள் பிரமாணிக்கமாய்ச் செய்தனர் (17:15–21).

தாவீதின் இறுதி நாட்களில் வாரிசுப் போராட்டத்தில், அபியத்தார் அதோனியாவையும், சாதோக்கு சாலமோனையும் ஆதரித்தனர் (1 அர 1). அபியத்தார் ஆரோனின் கடைசிப்பிள்ளையான இத்தாமாரின் இன வழித் தோன்றலாவார். சாதோக்கு ஆரோனின் முதல் மகன் எலயாசாரின் இன வழித்தோன்றலாவர். இதனால் அபியத்தார் சாதோக்கின் மேல் பொறாமைப்பட்டிருக்கலாம். சாதாரணமாக அபியத்தாருக்குமுன் சாதோக்கு குறிக்கப் பெறுகிறார் (2 சாமு 15:24–29). சாலமோனுக்கு ஆதரவு அளித்த கட்சி ஆட்சிக்கு வந்தபின் அதோனியா கொல்லப்பட்டார். ஆனால் அவர் பெட்டகத்தைச்சுமந்து சென்றதாலும் தாவீதின் துன்பங்களில் பங்கு கொண்டதாலும் (1 அர 2:26–27) அபியத்தார் கொல்லப்படவில்லை. அனத்தோத்துக்குத் துரத்தப்பட்டார். இவ்வாறு நாடுகடத்தப்படுதலில் "இறைவன் சீலோவாவில் ஏலியின் சந்ததியாருக்குச் சொல்லியிருந்த வார்த்தை (1 சாமு 2:27–36) நிறைவேறிற்று" (1 அர 2:27) என்று அரசர் நூல் ஆசிரியர் கருதுகிறார். ஏலி அபியத்தாரின் மூதாதையருள் ஒருவராவார். அபியத்தார் பெரிய குரு பதவியிலிருந்து விலக்கப்பட்டு, சாலமோனுக்கு ஆதரவு அளித்த சாதோக்கு பெரிய குருவானார் (2:35). அபியத்தார் பெரிய குரு பதவியை இழந்தாலும், பெரிய குருவின் மதிப்பை இழந்துவிடவில்லை என்று 1 அர 4:4 சுட்டுவதாகத் தெரிகிறது. அனத்தோத்து என்னும் ஊரில் இருந்த அர்ச்சகர்களுள் ஒருவரான கிலிக்கியாவின் மகனான எரேமியா" (எரே 1:1) அபியத்தாரின் வழித்தோன்றலாக இருக்கலாம்.

ஒய்வு நாள் பற்றிப் பரிசேயரோடு இயேசு தர்க்கித்தபோது, தாவீது பிரசன்ன அப்பத்தை உண்டது அபியத்தர் காலத்தில் நடந்ததாக மாற்கு கூறுகிறார் (2:26). இது தவறாகும். இந்நிகழ்ச்சி அபியத்தர் தந்தை அகிமெலக்கு காலத்தைச் சார்ந்ததாகும் (1 சாமு 21:1–6).

அபியா (ABIJAH – என் தந்தை யாவே)

இப்பெயர் பலரைக் குறிக்கிறது.

1. ஆரோனின் வழித்தோன்றல்களில் ஒருவர். தாவீது ஆரோனின் புதல்வர்களான குருக்களை இருபத்தி நான்கு பிரிவுகளாகப்பிரித்து, முறைப்படி ஒவ்வொரு பிரிவும் ஆலயப் பணிசெய்ய ஒழுங்கு செய்தார். இது சீட்டுப் போட்டு நிர்ணயிக்கப்பட்டது. அபியா குருக்களின் எட்டாவது பிரிவுக்குத் தலைவர் (1 நாள் 24:10). லூக் 1:5–இன்படி திருமுழுக்கு யோவானின் தந்தையான செக்கரியா,

அபியா தலைமை தாங்கிய குருக்களின் பிரிவைச் சேர்ந்தவராவார்.

2. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த பெக்கரின் ஏழாவது மகன் (1 நாள் 7:8).

3. இறைவாக்கினர் சாமுவேலின் இரண்டாவது மகன் (1 நாள் 6:28). சாமுவேல் முதியவரானபோது யோவேல், அபியா ஆகிய தம் இரு புதல்வர்களையும் பேயேர்–செபாவில் நடுவர்களாக நியமித்தார். ஆனால் அவர்கள் அவர் சென்ற வழியில் செல்லவில்லை. பண ஆசை கொண்டு, கையூட்டுகளைப் பெற்றுக் கொண்டு நியாயத்தைத் திரித்துக்கூறினார்கள். ஆகவே இஸ்ராயேலின் குலத் தலைவர்கள் தங்களுக்கு நீதிவழங்க, மற்ற நாடுகளில் இருப்பதுபோல் ஓர் அரசனை ஏற்படுத்தும்படி சாமுவேலிடம் கேட்டுக் கொண்டனர் (1 சாமு 8:1–5).

4. இஸ்ராயேலின் அரசனான முதலாம் எரொபயாமின் மகனாவார் (1 அர 14:1). இவன் நோயுற்று வருந்தியபோது, தனது வருங்காலத்தை அறிந்துவரும்படி தனது மனைவியை இறைவாக்கினர் அகியாவிடம் எரொபயாம் அனுப்பினார் (14:2–3). அவள் மாறுவேடம் பூண்டிருந்தாலும், முதியவரும் கண்கள் மங்கிப் பார்க்க முடியாதவராய் இருந்த இறைவாக்கினர் அவளை அடையாளம் கண்டுகொண்டார். ஏனெனில் அவளது வருகையைப் பற்றி ஆண்டவர் ஏற்கெனவே இறைவாக்கினருக்கு அறிவித்திருந்தார் (14:4–5). முதியவரான இறைவாக்கினர் எரொபயாமின் வீட்டிற்கு வரவிருக்கும் அழிவை அறிவித்தார். ஆனால் அபியாவின்மேல் ஆண்டவர் கருணைக்கண் கொண்டதினால் அவருக்காக இஸ்ராயேலர் எல்லோரும் துக்கம் கொண்டாடி அவனை அடக்கம் செய்வர் என்று முன்னறிவித்தார் (14:13). எரொபயாமின் மனைவி திரும்பி வந்து தன் வீட்டு வாயிற்படியில் கால் வைத்தவுடனே இறைவாக்கினர் முன்னுரைத்தபடி அபியா இறந்தவிட்டான். அவருக்காக இஸ்ராயேலர் எல்லோரும் துக்கம் கொண்டாடினர். (14:17–18).

5. யூதாவின் அரசனான இரகபெயாமின் மகனும் அவனுக்குப்பின் ஆட்சி செய்தவனுமாவார் (2 நாள் 12:16; 13:1). 1 அர 14:31; 15:1.7–8–இல் இவர் அபியாம் என்றழைக்கப்படுகிறார். இவர் தாய் மாக்கா ஆவாள். இவள் அபிசலேமின் மகள் தாமாருக்கும் அவளது கணவன் உரியேலுக்கும் பிறந்தவள் (2 சாமு 14:27).

அவரது குறுகிய ஆட்சியில் (இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் கி.மு.915–913; 1 அர 15:2; 2 நாள் 13:2) அபியா முதலாம் எரொபயாமோடு தன் தந்தை நடத்திய போரைத் தொடர்ந்து நடத்தினார் (1 அர 15:6–7). நாளாகம ஆசிரியர் இந்தப் போர்களை விவரிக்கிறார் (2 நாள் 13:2–20). தனது குடும்பத்தைப் பெருக்கினார். பல பிள்ளைகளைக் கொண்டிருந்தார் (13:21). இரு ஆசிரியர்களும் இவரது மரணத்தையும் அடக்கத்தையும் குறிக்கின்றனர் (2 நாள் 14:1; 1 அர 15:8).

அரசர் நூல் ஆசிரியர் நோக்கில், அபியா தன் தந்தை அவருக்கு முன் செய்திருந்த எல்லாப் பாவங்களையும் செய்தார். ஆண்டவருக்கு முழுவதும் பிரமாணிக்கமாய் இருக்கவில்லை (1 அர 15:3). ஆயினும் தாவீதின் பிரமாணிக்கத்தின் பொருட்டு ஆண்டவர் அபியாவின் உயிரை காத்தார். அவனுக்கு ஒரு மகனைக் கொடுத்தார் (15:4–5). ஆனால் நாளாகம ஆசிரியர் அபியாவை இறைவனின் நம்பிக்கைக்கொண்ட சமயப் பற்றுடையவனாக விவரிக்கிறார் (2 நாள் 13:14.18)

கிறிஸ்துவின் மூதாதையார் பட்டியலில் இரகபெயாமுக்கும் ஆசாவுக்குமிடையில் அபியா சேர்க்கப்பட்டுள்ளார் (மத் 1:7).

6. எசக்கியாவின் தாயும் செக்கரியாவின் மகளுமாவாள் (2 நாள் 29:1). 2 அர 18:2–இல் இவள் அபி என்றழைக்கப்படுகிறாள். காண்க: அபி.

7. பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு செருபாபேலோடு திரும்பிய குருக் கள் குடும்பங்கள் ஒன்றின் தலைவர் (நெக 12:4.7.17). அநேகமாக நெகமியாவின் தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் ஒருவராக 10:7 குறிக்கப் பெறுவபவர் இவரேயாகும். இவர் 1–இல் குறிக்கப்படும் எட்டாவது ஆரோன் குருக்கள் பிரிவின் வழித்தோன்றலாக இருக்கலாம்.

ஆனால் எஸ் 2:36–39–இல் திரும்பி வந்தவர்களாகக் குறிக்கப்படும் குருக்கள் பட்டியலில் இப்பெயர் காணப்படவில்லை.

8. கெசிரோனின் மனைவியும் தெக்கோவாவின் பாட்டியுமானவரின் பெயர். சிலமொழி பெயர்ப்புக்கள் (1 நாள் 2:24) அபியா என்ற பெயரை இடு பெயராக ஏற்று "என் தந்தை" என்று மொழி பெயர்க்கின்றன.

அபியாம் (ABIJAM – கடவின் தந்தை)

யூதாவின் அரசனான அபியாவின் பெயர்த்திரிபு ஆகம். இத்திரிபு பலவாறு விளக்கப்பட்டுள்ளது. எதுவும் நிறைவளிக்கவில்லை. காண்க அபியா–5

அபியேசர் (ABIEZER – என் தந்தை உதவியாக உள்ளார்)

1.மனாசேயின் ஒரு குடும்பம் (1 நாள் 7:18). எண் 26:30–இல் இப்பெயரின் குறுகிய வடிவமான இயசேர் காணப்படுகிறது. அபியேசரியர்களுக்கு, யோத்தானுக்கு மேற்கிலுள்ள கானானில் மனாசேயின் பகுதியில் ஒரு பகுதி கொடுக்கப்பட்டது (யோசு 17:24: 1 நாள் 7:18). அதில் ஒபிரா நகரமும் உள்ளடங்கும். அபியேசர் மனாசே மரபுப் பட்டியலில் ஒரு தனி ஆளாகத் தோன்றுகிறார். ஒரு வேளை கிலயாத்தின் மகனாக இருக்கக்கூடும். ஆனால் வாசகம் தெளிவாக இல்லை. கிதயோன் ஓர் அபியேசர் குடும்பத்தைச் சேர்ந்தவராவார். காண்க: ஒபிரா–2, கிதயோன்.

2. பென்யாமின் குலத்தைச்சேர்ந்தவர். அனத்தோத்தில் குடியிருந்தவர். தாவீதின் வீரமிக்க முப்பது மெய்க்காப் பாளர்களுள் ஒருவர் (2 சாமு 23:27; 1 நாள் 11:28; 27:12). நாளாகம ஆசிரியரின் திட்டப்படி, தாவீது தனது படையை 24,000 வீரர்கள் கொண்ட பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரித்திருந்தார். அபியேசர் ஒன்பதாவது பிரிவுக்குப் படைத்தலைவராக விளங்கினார். ஒன்பதாவது மாதத்தில் இவருக்குச் சிறப்பு பொறுப்புகள் உண்டு.

அபியேல் (ABIEL – என் தந்தை இறைவன் ஆவார்)

1. பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர். கீசின் தந்தையும் சவுலின் பாட்டனுமாவார் (சாமு 9:1–2). மேலும் நேரின் தந்தையும் அபினேரின் பாட்டனும் ஆவார் (14:51). 1 நாள் 8:29–இல் நேரின் தந்தையாகத் தோன்றும் எயியேல் அபியேலாகத்தான் இருக்க வேண்டும்.

2. தாவீதின் பொறுக்கி எடுத்த 30 வீரர்களில் ஒருவராவார். அர்பாத்தியர் என்றழைக்கப்படுகிறார் (1 நாள் 11:32). 2 சாமு 23:31–இல் இவர் அர்பாத்தியனான அபி அலபோன் என்றழைக்கப்படுகிறார். காண்க: அபி அலபோன்.

அபியூது (ABIUD – என் தந்தை மாட்சிமை ஆவார், என் தந்தை புகழ் ஆவார்)

அபிகூது என்ற பெயரின் மற்றொரு வடிவம் ஆகும். செருபாபேலின் மகன். இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (மத் 1:13; லூக் 3:23 தொ).

அபிராம் (ABIRAM – தந்தை உயர்ந்தவர்)

1. ரூபன் குலத்தவர், எலியாப்பின் புதல்வர். மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் கலகம் விளைவித்த கோராகு கலகத் தலைவர்களில் இவரும் ஒருவர் (எண் 16:1). இக்கலகக்காரர்களை நிலம் பிளந்து விழுங்கிவிட்டது. மோசேயின் அதிகாரம் எண்பிக்கப்பட்டது (16:1–34). இச்சம்பவம் இறைவனது மகிமையை வெளிப்படுத்தும் மறக்கவியலா மாபெரும் சம்பவமாகும். மும்முறை இந்நிகழ்ச்சி நிகழ்ச்சி பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எண் 26:9–இல் ஓர் எச்சரிக்கையாகவும் உப 11:6–இல் இறைவனது ஆற்றலை வலியுறுத்தும் கடந்த காலப்பாடமாகவும், சங் 106:7–இல் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது இஸ்ராயேலில் செய்த பாவங்களின் ஒரு மாதிரிகையாகவும் குறிக்கப்படுகின்றது.

2. பெத்தேல் ஊரானாகிய கீயேலின் தலைமகன் அபிராம் ஆவார். ஆகாபு ஆட்சிக்காலத்தில் அவரது தந்தை எரிகோவைக் கட்டி எழுப்ப முனைகையில் அடிக்கல் நாட்டும்போது தலைமகனான அபிராமும், வாயில்களை அமைத்தபோது இளைய மகனான சேக்குவும் இறந்து போயினர் (1 அர 16:34). இந்த மரணங்கள் தொடக்கத்தில் எரிகோவை அழித்த யோசுவாவின் சாபத்தின் விளைவு என

கருதப்படுகிறது (யோசு 6:26). இந்நிகழ்ச்சி இறைப்பற்றின்மை இஸ்ராயேலரிடையே வளர்ச்சியுற்றதை எடுத்துக்காட்டுகிறது. இச்சாவுகளில் அடிக்கல் நாட்டும்போது காவு கொடுக்கும் வழக்கத்தைப் பல ஆய்வாளர்கள் காண்கின்றனர்.

அபிராம் (ABRAM)
ஆதி 11:26–17: 4–இல் இடம் பெற்றிருக்கும் ஆபிரகாமின் மூலப்பெயராகும். காண்க: ஆபிரகாம் – பெயர்.

அபிரு (APIRU)
கபீருவின் மற்றொரு வடிவம். காண்க. கபிரு

அபிரோனா (ABIRONAH – வாயில், பாதைகள் சந்திக்கும் இடம்)
இஸ்ராயேலர் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது, எசியோன்–கெபேரில் பாளையம் இறங்கும்முன் அபிரோனாவில்தான் தங்கியிருந்தனர் (எண் 33:34–35). இவ்விடம் எசியோங்கேபேருக்கு வடக்கே 12 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு பாலைவனச் சோலையாகும்.

அபிரோன் (ABIRON)
யூப்பிரத்திசு நதியின் ஒரு கிளையாறு. காபுர் என்ற ஆற்றின் மற்றொரு பெயராகும். சிலர், இந்த ஆறு சபோராஸ் ஆறு தான் என்பர் (யூதி 2:24).

அபிலேன் (ABILENE – பசும்புல் நிலம்)
எதிர் லெபானோன் அல்லது கிழக்கு லெபானோன் மலைத்தொடரின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு சிறு நாடாகும். அதன் தலைநகரம் அபிலா ஆகும். இது விவிலிய அபானாவான பரதா–என்ற ஆற்றின் தென்கரையில் தமஸ்குவிலிருந்து 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

புதிய எற்பாட்டில், திருமுழுக்கு யோவானின் பணியின் தொடக்கத்தை விவரிக்கும்போது, அபிலேன் நாட்டிற்கு இலிசானியா சிற்றரசனாக இருந்தார் என்று லூக்கா கூறுகிறார் (3:1). இலிசானியா இறந்தபின் இந்நாடு முதலாம் அகிரிப்பாவுக்கும் (கி.மு.37), பின்பு இரண்டாம் அகிரிப்பரவுக்கும் அளிக்கப் பட்டது.

அபினதாபு (ABINADAB–தந்தை பெருந்தன்மையுள்ளவர், தந்தை உயர்தரமானவர்).

1. எலயாசர், அகியோ, ஊசா ஆகியோரின் தந்தை. லேவியராக இருக்கலாம். கிரியத்து–எயாரீம் மலையில் இவர்கள் வசித்து வந்தனர் (யோசு 15:9–10.60; 18:14; 1 நாள் 13:6)

பேத்து–செமேசில் நடந்த பேரழிவுக்குப்பின் ஆண்டவருடைய பேழையை இவர் வீட்டில்தான் நிறுவினர் (1 சாமு 6:19–7:2).

பல ஆண்டுகளுக்குப்பின், ஆண்டவரது பேழைக்கு எருசலேமில் நிலையான இடமளிக்க எண்ணிய தாவீது மன்னன் ஒரு பவனி நடத்தினார். அதில் அபினதாபின் புதல்வர்கள் ஊசா, அகியோ ஆகியோர் மாடுகள் பூட்டிய புதுத்தேரில் பேழையை ஏற்றிக்கொண்டு வந்தனர். பவனி நாக்கோனின் களத்திற்கு வந்தபோது மாடுகள் மிரண்டு பேழையைக் கீழே சாய்த்துப் போட இருந்தன. இதைக் கண்ட ஊசா, அதைத்தன் கையால் தாங்கினார். அப்போது ஆண்டவருக்கு ஊசாவின்மேல் கோபம் மூண்டது. அவருடைய துணிவை முன்னிட்டு ஆண்டவர் அவரை வீழ்த்த, அங்கேயே விழுந்து இறந்தார் (2 சாமு 6:6–7: 1 நாள் 13:6–10).

2. அரசன் சவுலின் மகன் (1 நாள் 8:33; 9:39). அவரின் தந்தை மற்றும் சகோதரர்களோடு கில்போவா மலையில் பெலிஸ்தியர்களால் கொல்லப்பட்டார் (1 சாமு 31:2; 1 நாள் 10:2).

3. ஈசாயின் இரண்டாம் மகன், தாவீதின் அண்ணன் (1 சாமு 16:8; 1 நாள் 2:13). கோலியாத்து, எப்பசு–தம்மிமில் பெலிஸ்தியர்களுக்காகச் சவால் விட்டுக் கொண்டிருந்தபோது, தன் சகோதரர் எலியாபு மற்றும் சம்மாவோடு அபினதாபும் சவுலின் படையில் இருந்தார் (1 சாமு 17:13).

4. சாலமோனின் மருமகன்களில் ஒருவனின் தந்தை. இவர் நாபத்–தோர் பகுதி முழுவதற்கும் அதிகாரியாக இருந்தார் (1 அர 4:11) காண்க: பென் – அபினதாபு.

அபினேர் (ABNER – என் தந்தை விளக்காவர்)

இவர் சவுலின் சிற்றப்பன் நேரின் மகன். சவுலின் படைத்தலைவர் (1 சாமு 14:50–51). சவுலின் கீழ் அபினேரின் நீண்ட போர்க்காலப் பணிகளைப் பற்றி அதிகம் கூறப்படவில்லை (14:47). பெலிஸ்தியருக்கு எதிரான போரில் இஸ்ராயேலர் படைக்கு இவர் தலைமை தாங்கினார். தாவீதைச் சவுலின்முன் கொண்டு வந்தவரும் இவரே (17:55–58). அமாவாசை விருந்தில் "அபினேர் சவுலின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான்" என்ற கூற்று, அவரது முக்கியத்துவத்தைக் காட்டுகிறது (20:25). சவுல் வெறிகொண்டு தாவீதைக் கொடுமைப்படுத்திபிடிக்க முயன்றபோது, அபினேரும் பங்குகொண்டார். சிப்பு பாலையில் சவுலைப்பாதுகாப்பதில் கவனக் குறைவுக்காக, தாவீது அபினேரைக் கடிந்து கொண்டார் (26:5 தொ).

சவுல் இறந்த பின்னும் அவருடைய வீட்டு அரச காரியங்களில் அபினேர் அக்கறைகொண்டார். சவுலின் மகன் இசிபோசத்தை யோர்தானுக்கு அப்பாலுள்ள மகனாயிமுக்கு எடுத்துச்சென்று இஸ்ராயேலின் வடகுலத்தவர்களுக்கு அரசனாக்கினார் (2 சாமு 2:8–10). சவுலின் வீரர்களோடு கிபேயோன் என்ற இடத்தில் தாவீதின் படைத்தலைவர் யோவாபுவுடன் மோதினார். தோற்கடிக்கப்பட்டார் (2:12–17). முடிவில் எச்சரிக்கைகளுக்குப்பின் யோவாபு, அபிசாயின் சகோதரனான அசாயேல் அபினேரைத் துரத்திச்சென்றார். தற்காப்பிற்காக அபினேர் அசாயேலைக் கொல்லவேண்டியிருந்தது (2:18–23). யோவாபும், அபிசாயும் பழி வாங்கச் சமயம் தேடிக்கொண்டிருந்தபோது, அவர்களோடு அபினேர் இடைக்காலப் பகை நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டார். ஆனால் இது சிறிது காலத்திற்கே நீடித்தது.

இசிபோசத்தின் ஆட்சியில் இரண்டாம் ஆண்டு அரசவையில் இடுக்கண் நிலை ஏற்பட்டது அதன் விளைவாக சவுலின் மரபே அழிந்துபோயிற்று. இசிபோசத்துக்கு அபினேர் தனது ஆதரவைக் குறைக்காவிடினும் சவுலின் வைப்பாட்டிகளுள் ஒருவளான இரிசிப்பா என்பவளோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள ஆரம்பித்தார். இந்தத் துரோகச் செயலுக்காக அபினேரை அரசன் கடிந்து கொண்டார். இதனால் அபினேர் தனது ஆதரவைத் தாவீதுக்கு மாற்றினார் (3:6–12). வட இனத்தவரைத் தாவீதின் ஆட்சியின் கீழ்கொண்டு வருவதாக வாக்களித்து தூதுவர்களைத் தாவீதிடம் அனுப்பினார் (2:12). இதைத் தாவீது ஏற்றுக்கொண்டாலும் தனது முதல் மனைவி மீக்காள் தனக்குத் திரும்பத் தரவேண்டும் என்று தாவீது வற்புறுத்தினார். அபினேரின் இடையீட்டால் மீக்காள், தாவீதுக்குத் திருப்பித் தரப்பட்டாள் (3:13–16). இது புதிய உடன்படிக்கைக்கு இட்டுச்சென்றது. வாக்களித்தபடி அபினேர் வட குலத்தவர்களைத் தாவீதுவின் ஆட்சிக்குக் கொண்டு வருவதில் வெற்றிகொண்டபின், தாவீது அபினேரைக் கெபிரோனின் ஒரு விருந்துக்கு அழைத்தார் (3:17–20). எல்லாம் சரி செய்யப்பட்டபின், விருந்து முடிந்தபின் அபினேர் தாவீதுவிடம் விடைபெற்றுச் சென்றார். யோவாபுவின் வேண்டுகோளுக்கிணங்கி அபினேர் வந்தபோது, தனித்து பேச விரும்புவதாக நடித்து அபினேரை வாயிலில் சந்தித்து கபடமாய் யோவாபு கொன்றார். இவ்வாறு தனது சகோதரன் அசாயேலின் மரணத்திற்குப் பழிவாங்கினார் (3:23–27). இவ்வாறு, ஆற்றல் மிக்க இந்தப் படைதலைவனின் வாழ்வு எதிர்பாராதவிதமாய் அவலமாய் முடிந்தது.

இச்செய்தி கேட்ட தாவீது, அவருக்காகப்புலம்பினார். அவரது பண்புகளைப் போற்றிப்பேசினார். அவருக்காக உண்ணா நோன்பு இருந்தார். அவருக்கு ஒரு இரங்கற்பாடலும் இயற்றினார். இக்கொலையில் அரசனுக்கு எப்பங்குமில்லை என்று மக்கள் அறிந்துகொண்டனர் (3:31–39). குற்றவாளிக்குத்தகுந்த தண்டனை அளிக்குமாறு தாவீது இறைவனிடம்வேண்டினார் (3:39). கெபிரோனில் அபினேர் அடக்கம் செய்யப்பட்டார். அவரால் வெறுக்கப்பட்ட இசிபோசத்தின் வெட்டப்பட்ட தலையும் பிற்காலத்தில் இக்கல்லறையிலேயே வைக்கப்பட்டது (4:1–2.12).

1 நாள் 26:27–28–இன்படி ஆண்டவருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கவும் அதற்குத்தேவையான பாத்திரங்கள் செய்வதற்கும், போர் கொள்ளைப் பொருட்களின் ஒரு பகுதியைக் காணிக்கையாக அளித்தவர்களுள் அபினேரும் ஒருவராவார். அவரது மகன் யாசியேல் தாவீது ஆட்சிக்காலத்தில் பென்யாமின் குலத்தவர்க்குத் தலைவனாக விளங்கினார் (27:21).

அபினோவாம் (ABINOAM – தந்தை அற ஆர்வமுள்ளவர்)

நப்தலி குலத்தைச் சேர்ந்தவர். காதேசில் வாழ்ந்தவர். தெபோராவின் தூண்டுதலால், வட எபிரேயர்களை ஒன்று சேர்த்து, சிசராவின் தலைமையில் வந்த கானானியப் படையைத் தோற்கடித்த பாராக்கின் தந்தையாவார் (நீதி 4:6.12; 5:1.12).

அபீக்கு (APHIK)

அபேக்கின் மாற்று வடிவம் (நீதி 1.31). காண்க: அபேக்கு–3.

அபீபு (ABIB)

இது ஒரு கானானியப் பெயராகும். எபிரேய ஆண்டுக்குறிப்பில் முதல் மாதமாகும். மார்ச், ஏப்ரல் மாதத்தோடும், பங்குனி மாத்தோடும் இணையானது. கடந்தேகும் பாஸ்கு விழாவோடோ, புளியாத அப்ப விழாவோடோ குறிப்பிடப்படுகிறது. தானியக் கதிர் மாதம் என்றும், பார்லியின் இளங்கதிரின் மாதம் என்றும் குறிக்கப்படுகிறது. இது அறுவடைக் காலத்தைச் சுட்டலாம் (யாத் 13:4). பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு திரும்பிய பின் இம்மாதம் நீசான் என்றழைக்கப்பட்டது (நெக 2:1; எஸ்த 3:7).

யோசிபாசின் கருத்துப்படி அபீபு இஸ்ராயேலின் சமய ஆண்டின் முதல் மாதமாகும். சமூக ஆண்டு இலையுதிர் காலத்தில் திசுரி மாதத்தோடு தொடங்கியது. காண்க: ஆண்டுக் கணிப்பு, நீசான்.

அபு (AB)

இப்பெயரை பாபிலோனிய "அபு" என்ற சொல்லிலிருந்து யூதர்கள் கடன் வாங்கியிருக்க வேண்டும். இது எபிரேய ஆண்டுக் குறிப்பேட்டின் ஐந்தாவது மாதமாகும். இது நமது ஜூலை–ஆகஸ்டு, ஆடி மாதங்களுக்கு இணையானது. இம்மாத்தில் கொடி முந்திரி மற்றும் அத்திப் பழங்கள் அறுவடைசெய்யப்பட்டன. இம்மாதத்தின் ஏழாம் நாளில் நெபுக்கதுனேசாரால் எருசலேம் அழிக்கப்பட்டதை (கி.மு.587/586) நினைவு கூறும் விதத்தில் ஒரு பெரும் நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது.

அபுதா (ABDA – யாவேயின் ஊழியன் என்பதன் சுருக்கம்)

1. இவர் சாலமோன்கீழ் அடிமைகளின் மேற்பார்வையாளராக இருந்த அதோனிராமின் தந்தையாவார் (1 அச 4:6)

2. இவர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் எருசலேமில் வாழ்ந்த ஒர லேவியர் ஆவார். எதுத்தூனின் மகனான காலாவின் புதல்வரான சம்மூவாவின் மகனாவார். இவர் 1 நாள் 9:16–இல் ஒபதியா என்றழைக்கப்படுகிறார்.

அபூபு (ABUBUS)

அசமோனியப் பரம்பரையைச் சேர்ந்த சீமோனையும் அவரது புதல்வர்களையும் கபடமாய் கொன்றுவிட்ட தோலமியின் தந்தையாவார். சீமோனின் மருமகன் (1 மக் 16:15). எரிகோவின் ஆளுநர்.

அபேக்கா (APHEKAH – கோட்டை அல்லது தூசி)

யூதா குலத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒரு நகரம்: மலைப்பகுதியிலும் பேத்து–தப்புவாகுக்கு அருகிலும் இருந்தது (யோசு 15:33). இதன் இருப்பிடம் இன்னும் தெரியவில்லை. செயில்–ஏத்–தில்பேயின் கிழக்கிலுள்ள ஏல்–அதாத்–ஆக இருக்கலாம் என்று சிலர் கூறுவர்.

அபேக்கு (APHEK)

1. யோசுவாவும், இஸ்ராயேல் படைகளும் கானான் நாட்டில் குடியேறிய பொழுது, சாரோனின் சமவெளியில் இருந்த இந்த நகர அரசின் அரசரைக் கொன்றனர் (யோசு 12:18). சாரோன் சமவெளியில் செல்லும் முக்கிய சாலையின்பகுதி போர் தந்திரமாக நிறுவப்பட்டிருந்தது. இது இந் சமவெளியையும், எப்பிராயிம் மலை நாட்டையும் இணைந்

தது. ஆகவே இவ்விடம் இயற்கையாக பெலிஸ்திய இஸ்ராயேல் படைகள் மோதும் ஒரு இடமாக இருந்தது. ஏலி நடுவராக இருந்தபோது, பெலிஸ்தியர் இங்கு கூடாரம் அடித்து இருமுறை இஸ்ராயேலரைத் தோற்கடித்தனர் (1 சாமு 4:2. 10–17). இங்கு நடந்த இரண்டாவது போரில் உடன்படிக்கையின் பெட்டகம் பெலிஸ்தியர்களால் பிடிபட்டது (கி.மு. 1050). சவுலின் ஆட்சி முடிவில் இங்குதான் இஸ்ராயேலரும் பெலிஸ்தியரும் போரிட்டனர் (1 சாமு 29:1). அதில் சவுல் உயிர் இழந்தார் (31:1–7).

இவ்விடமானது இன்றைய யார்கோன் ஆறு தொடங்கும் இடமாகிய ராஸ்–ஏல்–ஆயின் என்ற இடத்தில் குறிப்பிடப்படுகிறது. இங்குதான் அந்திப்பத்திரி என்ற ஏரோதிய உரோமை நகரம் இருந்தது. கி.மு.19–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட எகிப்திய பழிப்புரை வாசகங்களில் காணப்படுகின்ற அபேக்கு இதுவாக இருக்கலாம் எனத்தோன்கிறது. அதோன் என்ற பாலஸ்தீன அரசன் அரமேய மொழியில் தன்னுடைய எகிப்து மேலதிகாரிக்கு பாபிலோனிய படையின் முன்னேற்றத்தைத் தெரிவித்து எழுதிய கடிதத்தில் இப்பெயர் தோன்றுகிறது (கி.மு.600). தொல்பொருள் ஆய்வுகள் கி.மு.2200 லிருந்து 1200 வரை இவ்விடத்தில் மக்கள் தொடாந்து வாழ்ந்ததற்குச்சான்று காட்டுகின்றன. 1200–இல் பெலிஸ்தியர் இந் நகரை அழித்ததாகத் தெரிகிறது. விவிலிய நகரைச் சுற்றியே பெருமளவுக்கு அகழ்வுகள் செய்யப்பட்டாலும் அதில் ஒரு கானானியகோட்டை அல்லது அரண்மனை, சத்திரம், உரோமையர் கல்லறைக் கூடம் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. கல்லறைகளும் குப்பைத்தொட்டிகளும் பலவகையான பாண்டங்களையும் ஆப்பு எழுத்து வாசகங்களையும் காட்டியுள்ளன.

2. கானான் நாட்டு வடக்கு எல்லையில் எமோரியர்கள் தங்கியிருந்தஇடம். இது இஸ்ராயேலருடைய உடைமையாக ஒரு போதும் இருந்ததில்லை. ஆயினும், அது அவர்களுடைய பாரம்பரிய சொத்தாகக் கருதப்பட்டது (யோசு 13:14). லெபனோனிலுள்ள எபேயிலுக்குக் கிழக்கில் 24 கி.மீ தொலைவிலும் பெத்தேலுக்கு வடகிழக்கில் 37 கி.மீ. தொலைவிலும் உள்ள இன்றைய அப்காவாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அசித்தார்த்தி அதோனிசின் வழிபாட்டு மையமாகவும், திருத்தலமாகவும் இருந்தது. இங்கு இருக்கின்ற புனித நீரூற்று இன்றைய நாரா இப்ராகிமின் (அன்றைய அதோனிஸ்) என்ற ஆற்றின் மூலமாக இருக்கின்றது.

3. ஆசேர் குலத்துப் பூர்விகச் சொத்தான ஒரு கனானிய நகரம் (யோசு 19:30). இவ்விடத்தின் குடிமக்களை வெளியேற்றவோ, அல்லது அவர்களை கப்பம் கட்டச் செய்யவோ இந்தக் குலத்தவரால் முடியவில்லை. ஆக்கோவிலிருந்து 9 கி.மீ. தென்கிழக்கில் கய்பா வளைகுடாவிலிருந்து 5 கி.மீ. உள் நாட்டிலுள்ள தேல்கெர்தானா–அருவாக இவ்விடம் இருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

4. விவிலிய பாசானிலுள்ள யோர்தானுக்கு அப்பாலுள்ள மாவட்டத்தின் வடக்குத் திசையில் இந்நகரம் உள்ளது. தமஸ்குவை பேத்து–சானுடனும் இஸ்ராயேல் பள்ளத்தாக்குடனும் இணைக்கும் முக்கியசாலையில் இது உள்ளது. இவ்விடத்திற்கு அருகிலுள்ள சமடவெளியில்தான் சீரியாநாட்டு பென்–அதாது ஆகாபின் படைகளால் தோற்கடிக்கப்பட்டு, மீதியிருந்த படைகளுடன் பாதுகாப்பிற்காக அபேக்கு நகருக்குள் ஓடினார். அங்கு நகர எல்லைச் சுவர் இடிந்து விழ, மீதி இருந்த படைகளும் அழிந்துவிட்டன (1 அர 20:26–30). எலிசாவின் இறைவாக்கின்படி இஸ்ராயேலின் அரசன் யோவாசு இவ்விடத்தில்தான் சீரியா படைகளை பலமுறை தோற்கடிப்பதாக இருந்தது (2 அர 13:14–19.25).

கலிலேயாக் கடலுக்குக் கிழக்கேயுள்ள பிக் (அபிக் என்றும் அழைக்கப்படுகிறது) என்ற ஊரின் பெயரில் இப்பூர்வீகப் பெயர்ச் சின்னம் உள்ளது.

அபேய்ரமா (APHAIREMA)

யோனத்தானின் உதவியைப்பெறும் பொருட்டு முதலாம் தெமேத்திரியு யூதர்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்த சமா

ரியாவைச் சேர்ந்த மூன்று மாநிலங்களுள் ஒன்று (1 மக் 10:38). இரண்டாம் தெமேத் திரிய இதனைச் உறுதிப்படுத்தினதோடு யோனத்தானுக்கு இன்னும் பல அதிகா ரங்களைக் கொடுத்தார். அரச வரியிலி ருந்து யூதர்களுக்கு விடுப்பு அளித்தார். இந்த இடம் பெத்தேலுக்கு அருகில் இருந் ததாக யோசீபஸ் கூறுகின்றார். இயேசு கடைசியாக எருசலேமில் நுழைவதற்கு முன்பு தங்கி ஒய்வெடுத்த இடம்தான் இதுவாக இருக்கவேண்டும் (யோவா 11:54). எழுபது நூலில் காணப்படும் இவ் விடத்தின் பெயரானது யோசிபஸ் குறிப் பிடும் பெயரின் திரிபாக இருக்கலாம். இந்த இரண்டு பெயர்களும் எப்பிராயீம் என்ற அரமேய இடப்பெயரைக் குறிப்பிடு கின்றன. இந்த எப்பிராயீம் முன்பு பெத் தேலுக்கு வடகிழக்கிலுள்ள ஒரு மலையில் மேல் இருந்த ஒபிரா எனப்பட்ட இடம். இவ்விடம் இன்று எல்-தையிபே என்று அழைக்கப்படுகிறது.

அப்கார் (ABGAR)

இவர் உச்சாமோவின் அரசனும் கி.பி.9-46-ஐ ஓட்டி எதேசாவில் ஆட்சி செய்த உச்சாமோவின் மகனும் ஆவார். இவர் கிறிஸ்துவோடு கடிதப்போக்கு வைத்திருந்ததாகக் கதை உண்டு. இதன் படி இவருடைய ஒரு பயங்கர வியாதி யைக் குணப்படுத்தும்படி கிறிஸ்துவை அழைக்கிறார். கிறிஸ்து, தமது சீடர்களில் ஒருவரை அனுப்புவதாக உறுதியளிக் கிறார். அவரது விண்ணேற்றத்திற்குப் பின், அவருடைய எழுபது சீடர்களில் ஒருவரான ததேயு எதேசாவுக்கு வந்து, அரசனைக் குணப்படுத்தி, நாட்டில் கிறிஸ்தவ மறையைப் பரப்புகிறார். காண்க: அப்கார்-கிறிஸ்து ஆகியோருக கிடையே திருமுகங்கள்.

அப்கார்-கிறிஸ்துவின் திரு முகங்கள் (EPISTLES OF CHRIST AND ABGAR)

இரு சிறு மடல்கள் அடங்கிய நூலா கும். ஒன்று எதேசாவின் அரசன் அப்கார் உச்சாமோவினால் இயேசுவுக்கு எழுதப் பட்டது. மற்றது அதற்குப் பதில் மடல், விண்ணேற்றத்திற்குப்பின் தோமையாரால் எதேசாவிற்கு அனுப்பப்பட்ட எழுபது பேரில் ஒருவரான ததேயுவின் தீரச் செயல்கள் அடங்கிய பணிகளோடு இரண்டு மடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இநநூலை சிரியாக் மொழியிலிருந்து கிரேக்கத்திற்கு மொழி பெயர்த்த யூசேபி யஸ், ததேயுவின் தூதுபற்றிய கதையையும் அம்மடல்களையும் எதேசாவின் ஆயப்ப வேட்டு நிலையத்தில் கண்டெடுத்தாகக் குறிப்பிடுகிறார்.

கொடிய நோயினால் துன்புற்ற அப் கார், இயேசுவின் புதுமைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு, இயேசு தன் நாட்டிற்கு வந்து, தன்னைக் குணமாக்கி, தனது அரசின் ஒரு பகுதியைப் பெற்று வாழும் படியும், அதனால் எருசலேம் யூதர்களின் வன்மப்பகையிலிருந்து தப்பிக் கும்படியும் அவரை அழைத்து மடல் அனுப்புகிறார். இந்த வேண்டுகோளை மறுத்த இயேசு, தனது விண்ணேற்பிற்குப்பின் தனது சீடர் களில் ஒருவரை அனுப்புவதாக வாக் களிக்கின்றார். விண்ணேற்றத்திற்குப்பின் ததேயு வந்து அப்காரைக் குணமாக்கி, அந்த சமுதாயத்தை மனந்திருப்புகிறார்.

இதற்கு இணையான ஆனால் சிறிது மாறுபட்ட விளக்கம் அத்தேயின் போதகம் என்ற நூலில் உள்ளது (கி.பி.400). இந்தப் பிற்கால வாசகத்தில் கிறிஸ்துவின் பதில் வாய்மொழியாக அமைகின்றது. கிறிஸ்து எதுவுமே எழுதவில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட நேரம்-மடலுக்குப் பதிலாக அனனியா (அப்காரின் தூதுவன்) கிறிஸ் துவின் உருவமைப்பைத்தானே வரைந்து எடுத்துச்செல்கிறார். அது அப்கார் அரண் மனையில் காட்சிப்பொருளாகின் றது. ததேயுவின் பணி என்ற கிரேக்க நூல், இதே கதையைச் சில வேறுபாடுகளு டன் தருகிறது. அதில் குறிப்பிடத்தக்கது, கிறிஸ்து ஒரு கைத்துணியை அனனியா வுக்குக் கொடுத்ததாகவும், அதில் அவர் முகத்தோற்றம் அருஞ்செயலாக பதிந்த தாகவும் கூறுகின்றது. காண்க: ததேயுவின் பணி.

அப்தியாவின் அப்போஸ்தலர் வரலாறு (APOSTOLIC HISTORY OF ABDIAS)

இது ஒரு தொகுப்பு நூலாம் யூலியு ஆப்ரிகானு எழுதியதாகக் கருதப்படும் முன்னுரையில் அப்போஸ்தலர்களைப் பற்றி எபிரேயத்தில் அப்தியா எழுதிய

வற்றை அவரது சீடன் யூட்ரோபியு கிரேகத்தில் மொழி பெயர்த்ததாகவும், அதை யூலியு ஆப்ரிக்கானும் இலத்தீனில் மொழி பெயர்த்ததாகவும் கூறப்படுகிறது. கிரேக்கத்தில், அப்போஸ்தலர்கள் பற்றித் தனித் தனியாக இருந்த கதைகள், இலத்தீனில் வசதியாக தொகுப்படுகின்றன. இதில் பத்து நூல்கள் உண்டு. பேதுரு (1), பவுல் (2), அந்திரேயா (3), பெரிய யாக்கோபு (4), யோவான் (5), சின்ன யாக்கோபு (6:1–6) சீமோன்–யூதா (6:7.தொ), மத்தேயு (7), பார்த்தொலமே (8), தோமா (9), பிலிப்பு (10) ஆகியோரைப் பற்றியவையாகும்.

இவை நற்செய்திகள், அப்போஸ்தலப் பணி, கிளமென்தின் நூல்கள் போன்ற பலவற்றிலிருந்து தொகுக்கப்பட்டவை. கிரேக்க வாசகம் இலத்தீன் வாசகத்திலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. இந்நூல் தொகுப்பு, கி.மு. 6–ஆம், 7–ஆம் நூற்றாண்டின் பிரான்சில் தொகுக்கப்பட்டு அப்தியா என்ற பெயரோடு தொடர்புபடுத்தப்படுகிறது. இதற்கு எந்த வரலாற்று அடிப்படையும் இல்லை.

அப்பம், ரொட்டி (BREAD)

1. தொடக்கக் காலம்முதல் இஸ்ராயேலிலும், பழம் மேற்காசியாவிலும், மனித உணவில் அப்பம் ஒரு முக்கிய பகுதியாகும். நிலையாகக் குடியேறிய விவசாய வாழ்வில் அப்பம் உண்ணுதல் சிறப்பான பண்பாகும். நாடோடி வாழ்க்கைக் காலத்தில் அப்பம் சிறிது அரிதாகவே பயன்பட்டது. ஏனெனில் அந்த வாழ்வில் தானியங்கள் சிறிதளவிலேதான்கொண்டு செல்லக்கூடும். ஆயினும் அப்பம் உணவின் முக்கியபாகமாக அமைந்திருந்தது என்பதை சீராக் நூல் சுட்டிக்காட்டுகிறது. "மனித வாழ்க்கைக்கு வேண்டிய தலையான காரியங்களாவன: தண்ணீர், அப்பம், உடை, மானத்தைக் காப்பாற்ற வீடு" (சீரா 29:28).

1. அப்பம் செய்தல்

செல்வந்தர் வீட்டில் அடிமைகள் அப்பம் செய்தனர். இவ்வாறு, இஸ்ராயேலர் தங்களுக்கென ஓர் அரசரைக் கோரிய போது, அவன் "உன் புதல்வியர்களையோ தனக்கு ரொட்டி செய்கிறவர்களாக வைத்துக்கொள்வான்" என்று சாமுவேல் அவர்களை எச்சரிக்கிறார் (1 சாமு 8–13). இஸ்ராயேலின் பிற்கால வரலாற்றில் அப்பம் செய்தல் ஒரு சிறப்பான தொழிலாக மாறியது. எரேமியா சிறையிலிருந்த போது, அவருக்கு அப்பம் செய்வோர் வீதியிலிருந்து ஒரு அப்பம் கொடுக்கப்பட்டது (எரே 37:21). ஒரு சராசரிக் குடும்பத்தில், விட்டிலேயே அப்பம் செய்யப்பட்டது. தாயோ (ஆதி 18:6), மகளோ (2 சாமு 13:8), அல்லது ஒரு உறவுப் பெண்ணோ (எரே 7:18; 44:19 1 சாமு 28:24), பொதுவாகப் பெண்களே அப்பம் செய்தனர். வழக்கமாக, ஒருதடவையில் மூன்று படி மாவில் (ஆதி 18:6; நீதி 6:19; மத் 13:33; லூக் 13:21), ஒரு நாளைக்கு வேண்டிய அளவு மட்டும் அப்பம் செய்யப்பட்டது.

அ) கலவையில் சேர்க்கப்பட்டபொருள்கள்:– பெரும்பாலும் அப்பம் வாற் கோதுமையிலிருந்து செய்யப்பட்டது. இது முந்தியே முதிர்ச்சி பெறும் (2 அர 4:42; யோவா 6:9;13) விலை அதிகமில்லாதது (2 அர 7:18). ஆகையால் பொதுமக்களுக்குச் சிக்கனமானது. கோதுமை விலை அதிக மானது. ஆகவே வியாபாரத்திற்கும் (1 அர 5:11; எச 27:17), காணிக்கை ஒப்புக் கொடுப்பதற்கும் (லேவி 2) பயன்பட்டது. உயர் குடிவாழ்வின் சொகுசுப் பொருளாக இருந்தது (ஆதி 18:6; எச 16:13.19; சங் 81:16; 147:14). பஞ்சகாலங்களில் திணை, சாமை போன்ற கூல வகைகளும் பயறு வகைகளும் கூட அப்பம் செய்தில் பயன்பட்டன. இவ்வாறு வரவிருக்கும் நாடு கடத்தப்படுதலை அடையாளமாக உணர்த்த "கோதுமை, வாற்கோதுமை, பெரும்பயறு, சிறுபயறு, திணை, சாமை" ஆகியவற்றைக் கொண்டு அப்பம் செய்யுமாறு எசக்கியேல் கட்டளை பெறுகிறார்.

ஆ) மாவு பிசைதல்:– தானியம் மாவரைக்கும் கல்லில் அரைக்கப்டும் அல்லது உரலில் குத்தப்படும் (எண் 11:8). பின் மாவு தண்ணீரோடு சேர்த்து ஒரு பாத்திரத்தில் பிசையப்படும் (யாத் 8:3; உப 28:5.17). பின்பு சிறிது புளிக்காரம் சேர்க்கப்பட்டு, புளிக்க வைக்கப்படும் (மத் 13: 33; லூக் 13:21). இஸ்ராயேல் வரலாற்றின் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த காலத்தில், புளிக்காரம் சேர்க்கப்

படவில்லை (ஆதி 18:6). இக்கால பெடூயினர்கள் இன்றும் புளியாத அப்பங்களையே பொதுவாக உண்கின்றனர். கானானில் நிலையாகக் குடியேறிய பின் முந்திய நாளின் புளித்த மாவில் ஒரு பகுதியைத் தண்ணீரில் கரைத்து மாவோடு சேர்த்து அதைப் புளிக்கச் செய்வது மரபு. பிசைந்த மாவில் உப்புச் சேர்க்கப்பட்டது.

எகிப்தில் சிலசமயங்களில் சுவைக்காக எண்ணையும் சேர்க்கப்பட்டது. இஸ்ராயேலர் அவசரமாய் புறப்பட்டதை நினைவுகூரும் பாஸ்குச் சடங்கில் புளியாத அப்பத்தைப் பயன்படுத்தவேண்டும் (யாத் 12:8; லேவி 23:11;உப 16:9). புளிக்காரம் பொங்கச் செய்தது. தூய்மையின்மையை உணர்த்திற்று. ஆலயத்தில் உணவுக் காணிக்கை புளியாத அப்பமாக இருக்கவேண்டும் (லேவி 2:4; 10:12; 7:13; ஆமோ 4:5).

இ) அப்பம் சுடுதல்:- விவிலிய காலத்தில் மூன்று முக்கிய முறைகள் பயன்பட்டன. மிக எளிய முறை, ஒரு பெரிய சமதளமான கல்லின் மேல் நெருப்பு எரிய வைத்து, சாம்பலை நீக்கிவிட்டு, பிசைந்த மாவின் தட்டையான துண்டுகளை சூடுபடுத்தப்பட்டக் கல்லின் மேல் வைத்து முழுவதையும் சாம்பலால் மூடுவதாகும். ரொட்டி, பக்கம் மாற்றப்படும்போது, சாம்பல் நீக்கப்பட்டு, மீண்டும் மூடப்படும். ஏச 44:19–இல் வரும் குறிப்பு இம்முறையைக் குறிக்கலாம். எலியாவுக்குத் தணலில் சுட்ட ஓர் உரொட்டி உணவாகக் கொடுக்கப்படுகிறது (1 அர 19:6).

சிறிது வளர்ச்சியடைந்த முறை, தட்டையான சட்டியில் பொரிக்கப்படுவதாகும் (லேவி 2:5; 6:21; 1 நாள் 23:29; எச 4:3). இச்சட்டி மண்ணாலோ, இரும்பாலோ செய்யப்பட்டிருக்கலாம். ஒரு பள்ளத்தில் நெருப்பு மூட்டப்பட்டு அதன்மேல் சட்டியை வைத்து அதன் மேல் நேரடியாக அப்பம் சுடப்பட்டது. இதைத் "தட்டையான உரொட்டி" என்றழைத்தனர்.

சாதாரண பொதுமுறை அடுப்பில் சுடுவதாகும். அடுப்பு குப்புறப் போடப்பட்ட மட்பாண்டத்தைப் போன்றது. இந்த அடுப்பில் நெருப்பு மூட்டப்பட்டு எரியும், காலையில் சாம்பல் நீக்கப்பட்டு சூடாக்கப்பட்ட அடிக்கல்லின் மேல் அப்பம் சுடப்பட்டது.

ஈ) அப்ப வடிவம்:- பெரும்பாலும் தட்டையான வடிவில் இருந்தது. அதன் விட்டம் 7 அங்குலத்திலிருந்து 18 அங்குலம் வரையிருக்கலாம். சில துளையிடப்பட்டிருக்கும். கிதயோனின் வீரர்களில் ஒருவர், வாற்கோதுமை அப்பம், மதியானியா பாளையத்திற்குள் உருண்டோடியதாகக கனவு கண்டார் (நீதி 7:13). சில சமயம் அப்பம் இருதய வடிவில் செய்யப்படுவதும் உண்டு. பிரசன்ன அப்பம் இக்கால உரொட்டியைப்போல் இருந்ததாகத் தெரிகிறது. எகிப்திய புள்தாள் ஏடு முப்பதுக்கு மேற்பட்ட வடிவங்களில் அப்பம் செய்யப் பட்டதாகக் குறிக்கிறது.

2. அப்பத்தை உண்ணுதல்:- அப்பம் உணவின் முக்கியமானது பாகமாததால், சாதாரண உணவில் மட்டுமன்று, வழிபாட்டுச் சடங்குக் காணிக்கைகளிலும் உண்ணப் பட்டது.

அ) அன்றாட வாழ்வில்:- அப்பம் எவ்வளவு முக்கியம் என்றால் "அப்பம் உண்டு தண்ணீர் குடித்தல்" என்ற பதம் உணவு உட்கொள்ளுவதை குறித்தது (1 அர 13:8–9, 16–19:; சீரா 29:28). இதனால், அப்பம் "ஊன்றுகோல்" என்று அழைக்கப்படுகிறது. இறைவன் தீர்ப்பிட வரும்போது, இந்த ஊன்றுகோலை முறித்து விடுவார் (லேவி 26:26; சங் 105:16; எச 4:16; 5:16; 14:13; ஏச 3:1; எசே 12:19). அப்பம் இல்லாமை கொடிய வறுமை அல்லது துன்பத்தின் அடையாளமாகும் (2 அர 25:3; யோவா 15:23). சில இடங்களில் அப்பம் உணவு என்றுமொழி பெயர்க்கப்படுகிறது. சங்கீத ஆசிரியர் உள்ளத்திற்கு உரம் தரும் உணவைத் தரும் (சங் 105:15) இறைவனைப் போற்றுகின்றார்.

அன்னியர்களுக்கும் (ஆதி 14:18), விருந்தினர்களுக்கம் (நீதி 19:19) அப்பம் கொடையாக அளிக்கப்படுகிறது. போர்க்கோலத்தில் வீரர்களுக்கு அப்பம் சாதரண உணவாகும். பயணத்தின்போது எடுத்துச் செல்லப்பட்டது (ஆதி 21:14; 45:23). ஒரு சாதாரண ஆளுக்கு மூன்று அப்பத்துண்டுகள் ஒரு உணவுக்குப் போதும் (லூக்

11:5–6). சிறைக் கைதிகளுக்கு ஒரு நாளுக்கு ஒரு துண்டுதான் கொடுக்கப்பட்டது (எரே 37:21). கொடைகொடுக்க ஒரு அப்பத் துண்டு போதும் (1 சாமு 2:36). உண்ணும் போது அப்பம் ஒரு கரண்டியாகவும் தொட்டுச் சாப்பிட பயன்பட்டது. அது உணவாகவும் கரண்டியாகவும் பயன் பட்டது (மத் 26:23; யோவா 13:26; 25:34; 27:17).

ஆ) காணிக்கைகள்:- பழங்கால மேற்கு ஆசியாவில் வழிபாட்டுக் காணிக்கைகளில் அப்பம் மிகச் சாதாரணப் பொருளாகும். உணவுக்காணிக்கை மாவு மட்டுமாக இருக்கலாம் அல்லது பலவகை அப்பங் களாக இருக்கலாம். அவை "எண்ணெய் தெளிக்கப்பட்ட புளியாத அப்பங்களாக வும் எண்ணெய் பூசப்பட்ட புளியாத பணி யாரங்களாகவும்" இருக்கலாம் (லேவி 2:4). அப்பம் சட்டியிலோ அல்லது தட்டிலோ சுடப்படலாம் (2:5.7). அவை புளியாத அப்ப மாயும், உப்புச் சேர்க்கபட்டதாயும் இருக்க வேண்டும் என்ற ஒரே நிபந்தனைதான் உண்டு. காணிக்கையில் ஒரு பகுதி பீடத்தில் எரிக்கப்படும். மீதமிருப்பவை ஆரோனுக்கும் அவரது புதல்வர்களுக்கும் உரியதாகும்.

3) உருவகமுறை:- இயற்கையாகவே முக்கிய உணவாகிய அப்பம், பழைய ஏற் பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உருவ முறையில் குறிக்கப்படுகிறது.

அ) பழைய ஏற்பாட்டில் மனித வாழ்வுக்கு அப்பம் எவ்வளவு அவசியமா னது என்றால், அது ஒருவன் தன்னையே தாங்கிக் கொள்ளும் ஊன்றுகோலாக விவ ரிக்கப்படுகிறது (லேவி 26:26; சங் 105:16; எச 4:16; 5:16; 14:13; காண்க ஏச 3:1). ஒருவன் வாழ்வின் ஒரு பண்போ, நிலையோ எவ்வளவு உண்மையாகவோ, அவசிமான தாகவோ இருக்கிறதோ அந்த அளவு உணவோடு தொடர்புப்படுத்தி அது விவரிக்கப்படுகிறது. இவ்வாறு "கண்ணீ ரின் உணவு" (சங் 80:5; காண்க: 42:3), "அக்கி ரமமாகிய அப்பம்" (பழ 4:17) "சோம்பலின் அப்பம்" (31:27), "துன்பம் என்கிற அப்பம்" (எச 30:20; யோபு 3:24). எதிரிகளுக்கு உருவ கமாக அப்பம் பயன்படுகிறது. யோசுவா வும் காலேபும் இஸ்ராயேலர்கள் கானா னிய மக்களுக்கு அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில் "அப்பத் தைப்போல் நாம் அவர்களை விழுங்கி விடலாம்". அதாவது அவர்களை எளிதில் வென்றுவிடலாம் (எண் 14.9) பல செயல் கள் உணவோடு தொடர்புபடுத்தப்படுகின் றன. நல்ல மனைவி "சோம்பலாய்த் தன் அப்பத்தை உண்ணாள்" (பழ 31:27). ஆனால் தீயோர் "அக்கிரமமாகிய அப் பத்தை உண்கின்றனர்" (4:17). "வஞ்சகத் தின் அப்பம் மனிதனுக்குச் சுவையுள்ள தாக இருக்கிறது. ஆனால் பின்பு, அவன் வாய் பொடிக் கற்களால் நிறையும்" (20:17). யாவே தம் மக்களிடம் சினம் கொள்ளும் போது அவர்களுக்குத் 'துன்பம் என்கிற அப்பத்தையும் வேதனை என்னும் நிலை யையும்" (ஏச 30:20; காண்க யோபு 3:24). அல்லது 'கண்ணீரின் உணவை'யும் (சங் 80:5; 42:3) கொடுக்கிறார்.

நேர்நிலையாக அப்பமும் பழச்சாறும் ஞானத்தின் பண்புகளையும் (பழ 9:5) இறை வனது உண்மையான வார்த்தையையும் (ஏச 55:2) குறிக்கின்றன. அப்பம் இறைவ னது கொடையாகும் (யாத் 16:4; நெக 9:15; சங் 105:40; யோவா 6:51). குல முதியவர்கள் காலமுதலே அப்பம் விருந்தோம்பலின் அடையாளமாகக் கருதப்பட்டது. அது அன்னியரோடும் நண்பர்களோடும் பகிர்ந்து கொள்ளப்படவேண்டும் (ஆதி 14:18; நெக 13:1–2; மத் 14:15–21). சேர்ந்து உண்ணுதல் "அப்பம் பிடுதல்" என்று பொதுவாக அழைக்கப்பட்டது. சிறப்பான உறவை உண்டு பண்ணியது. உடன் படிக்கை அமைப்பை அடையாளமாக்கும் செயலாகியது (1 அர 13:8 தொ).

ஆ) புதிய ஏற்பாட்டில்:- சேர்ந்து உண் ணுதல் என்ற கருத்து "அன்பு உணவு" என்ற கருத்தாக உருவெடுக்கிறது. இவ் வுணவில் சபை முழுவதும் ஒரு பொது உணவிலோ, வழிபாட்டு உணவிலோ பங்கு கொள்கின்றனர் (அ.ப. 2:42.46; 20:7). இது இறுதி உணவு கடைப்பிடித்தலோடு தொடர்புபடுத்தப்படுவதாகத் தெரிகிறது (1 கொரி 10:16; 11:21; யூதா 12). நற்கருணை வழிபாட்டின் தொடக்க வடிவம் 'அப்பம் பிடுதலை' உள்ளடக்கியதால், அதே பதத் தால் வழிபாடும், பொதுவில், அழைக்கப் பட்டது(அ.ப.2:42;46:20:7).புதியஏற்பாட்டில் மற்ற இடங்களில் அப்பம் உருவகமாக

இறையரசின் வருகையையோ, அல்லது இயேசுவின் வருகையையோ குறிக்கிறது. இயேசுவோடு உணவருந்திய ஒருவர் "கடவுளின் அரசில் விருந்து (அப்பம்) உண்பவன் 'பேறுபெற்றவன்' என்று கூறும் போது (லூக் 14:15) மெசியாவின் விருந்தைச்சுட்டிக்காட்டுகிறார். நற்கருணையின் அப்பத்திலும், கிண்ணத்திலும் பங்கு பெறும் போதெல்லாம் கிறிஸ்துவன், கிறிஸ்து வரும்வரை ஆண்டவரது மரணத்தை அறிக்கையிடுகிறான் (1 கொரி 11:26). இயேசுவே தம்மை "உண்மையான அப்பம்" என்று அழைத்துக் கொள்வது மிகவும் பொருள் பொதிந்ததாகும். இறைவனால் கொடுக்கப்பட்ட "வானத்திலிருந்து வந்த உணவாக" மன்னாவைச் (யாத் 16:4; நெக 9:15 தொ) சீடர்கள் குறிப்பிட்டனர். உலகில் உயிர் அளிக்க தம் தந்தை அனுப்பிய வானின்று இறங்கி வந்த உண்மையான அப்பம் தாம்தான் என்று இயேசு கூறுகிறார். இந்த உணவை எப்பொழுதும் தங்களுக்குக் கொடுக்கும்படி சீடர்கள் கேட்கின்றனர் (யோவா 6:31–34). அப்போது தான் உரிமை கொண்டாடியதை இயேசு வலுப்படுத்துகிறார். அவரே "உயிர் தரும் உணவு" ஆவார். அவரைப் பின்பற்றுகிறவருக்குப் பசியே இராது என்றும் தாகம் இராது (6:35). இதைக் கேட்டு யூதர்கள் முணுமுணுத்தனர். பின் அவர் தரும் இந்த அப்பத்தை உண்பவன் என்றுமே வாழ்வான். இந்த அப்பம் அவருடைய தசையே என்று உரிமை கொண்டாடுகிறார் (6:48–51; காண்க: 4:13–15). இந்த நிகழ்ச்சியுரையில் வரவிருக்கும் இறுதி உணவு பற்றிய தவறாத சுட்டிக் காட்டல்கள் உள்ளன. இந்த அடையாளம் இறுதி உணவின் முக்கியமாகிறது (மத் 26:26; மாற்கு 19:22; லூக் 22:19). 6:52–57 இதைத் தெளிவாக்குகிறது. ஆனால் இயேசு தமது பலி மரணத்தையும் சுட்டிக்காட்டுகிறார். சாதாரண உணவாக மன்னா குறிக்கப்படுதல் சட்டத்திற்கும் மேலானவர் இயேசு என்பதைக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டது.

II. - அப்பம் கடவுளின் ஒரு கொடை. அது மனிதனுக்கு வலிமையின் ஊற்று (சங் 103:14 தொ). எவ்வளவு முக்கியம் மனித வாழ்க்கைக்கு என்றால், அப்பமே தேவை என்றால் எல்லாமே தேவையாகும் (ஆமோ 4:6; காண்க ஆதி 28:20). எனவே கிறிஸ்து தமது சீடருக்குக் கற்பித்த செபத்தில், அவசியமான கொடைகளின் மையமே அப்பம் என்பது புலனாகிறது (லூக் 11:3); கொடைகளில் எல்லாம் பெரியது அதுவென்பதும் தெளிவாகும் (மாற் 14:22).

1. அன்றாட அப்பம்

அ) எவ்வித வாழக்கைச் சூழ்நிலை. அன்றாட வாழ்க்கையில் உணவுக்குச் சுவையூட்டுகிறது என்பதும் தெளிவாகும். கடவுள் கைநெகிழ்ந்துள்ளதாகத் தோன்றும் துன்புறு மனிதனுக்கு அங்கலாய்ப்புக் 'கண்ணீரோ' 'சாம்பலோ' ஓர் உணவாகிறது (சங் 41:4; 79:6; 102:10; ஏச 30:20); மகிழ்கின்றவன் மகிழ்ச்சியோடு உண்கிறான் (சங் 9:7). பாவியின் உணவு அக்கிரமத்தின் அல்லது பொய்ம்மையின் அப்பமாகும் (பழ 4:17); சோம்பேறியின் உணவு சோம்பலாய் அப்பம் உட்கொள்வதாகும் (பழ 31:27). அப்பம் வாழ்க்கையின் அத்தியாவசியமானாலும், அதிலே பகிர்ந்துண்ணும் பாங்குவேண்டும். ஒவ்வோர் உணவும் பிறரோடு சேர்ந்து வருவதையும் அதேபோல் ஒன்றிப்பையும் உணர்த்துகிறது. ஒருவனோடு வழக்கமாய்ச் சேர்ந்துண்பது நண்பனாய் அதுவும் நெருங்கிய நண்பனாய் இருப்பதாகும் (சங் 40:10; யோவா 13:18). விருந்தோம்பும் கடமையுணர்வு புனிதமானது, கடவுளே அனுப்பும் வழிப்போக்கர்கள் என்று அவர்களோடு சேர்ந்துண்பது மேலானது (ஆதி 18:5; லூக் 11:5:11). குறிப்பான விதத்தில் நாடு கடத்தப்பெற்ற பின்பு பசித்தோருடன் பகிர்ந்துண்பது முக்கியத்துவம் பெறுகிறது. இதிலேதான் யூதரின் பக்தி பிறர் அன்புச் செயலாக முகிழ்க்கிறது (பழ 22:9; எச 18:7:6; யோபு 31:17; ஏச 58:7; தோபி 4:16). "புனிதர்களின்" சார்பில் தண்டல் செய்யக் கோரும்போது, அப்பம் முதல் எல்லாமே கடவுளின் கொடை என்று பவுல் கொரிந்தியருக்கு நினைவூட்டுகிறார் (2 கொரி 9:10). எல்லார் பெயராலும் கிறிஸ்தவ சபையில் 'அப்பம் பிட்கப்படுதல்" நற்கருணையைச் சுட்டுகிறது. ஆண்டவரின் உடல்திருச்சபையை ஒன்றிக்கும் ஊற்றாக அமைகிறது (அ.ப.2:42; 1 கொரி 10:17).

அ) அப்பம், கடவுளின் கொடை. மனிதனைப் படைத்த பின்பும் (ஆதி 1:29) பெரு வெள்ளத்திற்குப் பின்பும் (9:3) அவன் என்ன உண்ணலாம் என்று கடவுள் தெரியப்படுத்துகிறார். பாவியான மனிதனுக்குத் தேவையானதெல்லாம் கடின உழைப்பின் மூலமே கிடைக்கும். "நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உண்பாய்" (3:19). இப்போதிருந்து மிகுதியோ பற்றாமையோ ஒரு பொருளைக் குறிக்கும். மிகுதி கடவுளின் ஆசீரையும் (சங் 36:25; 131:15; பழ 12:11) பற்றாமை பாவத்தின் தண்டனையையும் (எரே 5:17; எச 4:16 தொ; புல 1:11; 2:12) குறிப்பதாகும். எனவே மனிதன் உணவு பெறக் கடவுளைப் பணிவோடு கேட்கவேண்டும்; நம்பிக்கையுடன் காத் திருக்க வேண்டும். இந்த வகையில் அப்பங்களின் பெருக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எலிசா நடத்திய (2 அர 4:42 தொ) புதுமை கடவுளின் அபரிமித மான தெய்வக்கொடையைக் காட்டுகிறது. "இவர்கள் உண்டபின்னும் மீதி இருக்கும்". நற்செய்தி நிகழ்ச்சிகளிலும் பணிவான நம்பிக்கையே முதல் பாடமாகும்; "வேண்டிய அளவுக்கு உணவை அவர்களுக்கு அளித்தார்" (மத் 14:20; 15:37; யோவா 6:12; சங் 77:25) என்னும் உரையில், "வலியோரின் உணவால்" பாலைவனத்தில் கடவுள் தனது மக்களை நிறைவு செய்ததை நினைவு கூர்கின்றனர். இதே எண்ண வடிவில்தான், விண்ணகத் தந்தையிட மிருந்து நம்பிக்கையுடன் எல்லாவற்றையும் எதிர்பார்க்கும் மக்கள் போல், "அன்றாட உணவையும்" (மத் 6:11) கேட்க, தமது சீடரை இயேசு வரவேற்கிறார்.

முடிவாக, இறுதிக்காலத்தின் மாபெரும் கொடை அப்பமாகும். இது குறிப்பிட்ட தனி நபருக்கு (ஏச 30:23), அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு மெசியாவின் விருந்தில் பங்கேற்கும் பேறாகும் (எரே 31:12). இறுதிக்கால விருந்துக்கு (மத் 11:19 இ) முன்னேற்பாடாகவே தம்மவரோடு இயேசு கொண்ட உணவுகளாகும். குறிப்பாக நன்றித்திருவிருந்தில் தமது சீடருக்கு இயேசு கொடுப்பது அவரின் உடலாகும், கடவுளின் உண்மைக் கொடையாகும் (லூக் 22:19)

2. வழிபாட்டில் அப்பம்:-

அ) காணிக்கை அப்பங்கள்பற்றி குருத்துவச்சட்டம் முக்கியத்துவம் கொடுக்கிறது. அந்த அப்பங்கள் மேசைமீது கழுவுதற்கென்ற கலங்களுடன் இருந்தன (1 அர 7:48; 2 நாள் 13:11; யாத் 25:23–30). அவற்றின் தோற்றம் மிகப் பழமையான தென்றே தோன்றுகிறது (1 சாமு 21:5 தொ). தெய்வீகத்திற்கு ஊட்டம் அளித்த பழைய சமய உணர்வின் சிந்தனையென்றுகூட ஒருவகையில் சொல்லலாம். எந்த வித மான ஊட்டத்தையும் வெறுக்கின்றவர் இஸ்ராயேலின் கடவுள் (நீதி 13:16); இந்த அப்பங்கள் கடவுளுக்கும் அவரின் விசுவாசிகளுக்கும் உள்ள ஒன்றிப்பின் அடையாளமாகும்; அவற்றை குருக்கள் உட்கொள்வர் (லேவி 24:5–9).

ஆ) திருநாட்களின் கொண்டாட்ட காலத்தில் புதுத்தானிய மணியின் அப்பமும் ஒரு காணிக்கையாகும் (லேவி 23:17). காணிக்கைப் பொருளாக என்பதிலிருந்து ஒவ்வொரு முதற்கனி வழிபாட்டில் உள்ளதுபோல் இங்கேயும் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவே ஆகிறது (காண்க யாத் 23:16.19). கடவுளின் பிரதிநிதியான குருவிற்கே முழுமையாகச் சேர்கிறது (லேவி 23:20; காண் எச 44:30; எண் 18:13). இதே போல நன்றியுணர்வுதான் அரசனும் குருவுமான மெல்க்கிசதேக்குவை, அப்பமும் இரசமும் உலகைப் படைத்துக் காக்கின்ற கடவுளுக்குச் செலுத்தத்தூண்டுகிறிது (ஆதி 14:18 தொ).

இ) பழைய சட்டத் தொகுப்புகளின்படி பலிகளை ஒட்டியே புளியாத அப்பங்களும் வருகின்றன (யாத் 23:18; 34:25); இவையே வசந்த காலத்தின் ஊட்டமாக இஸ்ராயேலுக்கு அமைகின்றன (23:15; 34:18). புளிப்பு என்பது படைத்தலில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை (லேவி 2:11); ஒரு வேளை புளிப்பு அழிநிலையைக் குறித்தது போலும். எது எப்படி இருந்தாலும், புளியாத அப்பம் கொண்ட வேளாண்மைத் திருவிழா பாஸ்கு விழாவோடு சேர்க்கப் பட்டபோது, புளியாத அப்பத்தின் பழக்கம் எகிப்தின் புறப்பாட்டோடு இணைக்கப்பட்டது, மாவு புளித்தெழுவதற்குள் விரைவாய்ப் புறப்பட்டதை நினை

லூட்டுவதாகும் (யாத் 12:8.11.39). இந்த வழி பாட்டு முறையின் தொடக்கம் ஒருவேளை நாடோடி வாழ்க்கையின் வழக்கமாக லாம். இந்த வாழ்க்கை கானான் நாட்டில் சுகபோகமாகிறது. பழையது மறையவேண்டும் என்பதால் இது முடி வாக மறுமலர்ச்சியுடன் இணைகிறது (12:15). புது மனிதர்களாக வாழவேண்டும் என்பதற்காகத் திருமுழுக்குப்பெற்றவர் களுக்கு இந்த உருவகத்தைப் பவுல் பயன்படுத்துகிறார் (1 கொரி 5:7 தொ). நன்றிப் பலியில் அப்பம் உபயோகிப்பது இதன் நிறைவேற்றம் ஆகிறது. வழிபாட்டு முறையில் அப்பத்தைப் பலுக வைத்த (மத் 14:19) இயேசு இதே செயலை இரவுணவில் புதுப்பிக்கும் கட்டளையாக்குகிறார்; இந்தச் செயல்மூலம் அப்பத்தைத் தமது பலியான உடலாகவும், விசுவாசிகளின் ஒன்றிப் பின் அருட்சாதனமாகவும் ஆக்குகிறார் (1 கொரி 10:16–22; 11:23–26).

3. வார்த்தையின் அப்பம்:-

கடவுளின் வார்த்தையின் பால் உள்ள பசி பற்றி முழங்கும் இறைவாக்கினர் ஆமோஸ் (8:11) அப்பத்தை வார்த்தையோடு ஒப்பிடுகிறார் (காண்க உப 8:3 மன்னா பற்றியது). மெசியாவின் விருந்து பற்றிப் பேசும் இறைவாக்கினரும் ஞானியரும் வாழ்விக்கும் கடவுள் வார்த்தை அப்ப மென்றும் (எச 55:1 தொ) ஆளுருவில் தெய்வஞானம் என்றும் (பழ 9:5 தொ; சீரா 24:19–22; காண்க 15:1 தொ) பேசுகின்றனர். மனிதன் அன்றாடம் கொள்ள வேண்டி யது தெய்வ வார்த்தை என்றே இயேசுவுக் கும் அப்பம் எழுச்சியூட்டுகிறது (மத் 4:4). இறுதிக்கால விண்ணரசில் அப்பம் உட் கொள்ளும் ஆசைபற்றி (லூக் 14:15), விருந்துக்கு அழைக்கப்பட்டோர் உவமை யில் இயேசு பதில் தருகிறார். அவரையும் அவரின் நற்செய்தியையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றே இந்த உவமை தொடக்கத்திலிருந்தே புலப்படுத்துகிறது. முதல் அப்பம் பலுகும் நிகழ்ச்சியில் போத னைப் பகுதியை வலியுறுத்திக் காட்டி அப்பங்கள் இயேசுவின் வார்த்தை என்று காட்ட மாற்கு விரும்புவதாய்த் தோன் றுகிறது; அதே சமயத்தில் நமக்காகக் கையளிக்கப்பட்ட அவரின் உடல் என்றும் காட்ட விரும்புகிறார் (மாற் 6:30.34). அவரே (இயேசுவே) உண்மையான அப்பம் (யோவா 6:32 தொ) என்பதை இந்தப் புதுமையின் பொருள் உறுதிப்படுத்துவ தாக யோவான் காட்டுகிறார். ஒருவன் நம்பவேண்டிய வார்த்தையானவர் தாமே என்று முதலில் இயேசு காட்டுகிறார் (6:35–47). மனுவுருவான வார்த்தையானவர் பலியில் ஒப்புக்கொடுக்கப்படும்போது, நன்றித் திருவிருந்தில் விசுவாசப்பற்றுறுதி தன்னோடு ஒன்றிப்பையும் கொணர் கிறது (6:49–58). அவசியமான, கடவுளின் கொடையான அப்பத்தை விசுவாசமுள்ள மனிதன் அன்றாடம் கேட்கும்போது, விசு வாச வளர்ச்சியுடன் அது தெய்வீக வார்த் தையையும், வானகமிருந்து வந்த அப்பம், வாழ்கின்ற உயிரூட்டுகின்ற வாழ்க்கை அப்பமாகிய (6:32.35.51) தகனப் பலியான அதே மீட்பரான ஆளையும் குறிப்பதாகும்.

அப்பம் சுடுவோர் வீதி

சிறு தொழில்கள் செய்வோர் தங்கள் கடைகளை ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைத்துக்கொள்வது இயல்பு. அது போல் எருசலேமிலும் மற்ற நகரங்களிலும் குறிப்பிட்ட தொழில்களைச் செய்தவர்கள் சில வீதிகளில் தங்கள் கடைகளை ஒருங்கு சேர வைத்திருந்தனர். அப்படிப்பட்டவை களில் அப்பம் சுடுவோர் வீதி ஒன்றாகும். இதை அப்பம் சுடுவோர் வீதி என்பதை விட, அப்பம் சுடுவோரின் பகுதி என்று கூறுவதுமேல். எரேமியா சிறையில் இருந்தபோது இப்பகுதியில் அப்பம் இருக்கும்வரை, அவருக்கு அப்பம் கொடுக்கப் படவேண்டும் என்று அரசன் கட்டளையிட்டிருந்தார் (எரே 37:21).

அப்பம் சுடுதல் தனிச் சிறப்பான தொழிலாகக் கருதப்பட்டது (ஆதி 40:1–41:13; 1 சாமு 8:13; ஓசே 7:4). இவர்களுக் கெனத்தனி வீதிகள் தமஸ்குவிலும் சமாரி யாவிலும் ஒதுக்கப்பட்டிருக்கலாம் (1 அர 20:34). இன்று, தமஸ்கு வாயிலுக்கும் பரி சுத்த கல்லறைக் கோவிலுக்கும் இடையில் பல அப்பம் சுடும் கடைகள் உள்ளன. அப்பம் சுடும் இடமே அத்தொழில் செய் வோரின் உறைவிடமாக இருந்திருக்க லாம். ஆகவே அப்பம் சுடுவோர் தன்

வீட்டிலேயே அப்பம் சுட்டுத் தொழில் செய்து வாழ்ந்தனர்.

அப்பா (ABBA – எந்தாய், "ஆப்" என்ற எபிரேயச் சொல்லின் அழுத்தம் பெற்ற வடிவம் ஆகும்).

இச்சொல்லுக்கு அப்பா அல்லது தந்தை என்பது சாதாரண மொழியிலுள்ள பொருள் ஆகும். இது பிற்கால யூதமத ராபிகளின் இலக்கியங்களில் காணப்படும் செபங்களில் பயன்படுத்தப்படுகிறது. இது பொதுவாக செபத்தில் "என்னுடைய தந்தை", "நம்முடைய தந்தை" என்ற பொருளுக்குச் சமானமாகப் பயன்படுத்தப்படுகிறது. இது எபிரேயர்களின் குடும்பங்களில் வழக்கமாய்ப் பயன்படுத்தப் பட்டச்சொல். புதிய ஏற்பாட்டில் மூன்று முறை இது பயன்படுத்தப்படுகிறது. எப்பொழுதும் செபச் சூழ்நிலையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது (மாற் 14:36; உரோ 3:15; கலா 4:6). இவற்றை ஒத்த கிரேக்க மரபில் அரமேக்கு வடிவம் பின்னணியாக இருக்கலாம் (மத் 6:9; லூக் 11:11; 23:46; யோவா 12:27; சங் 88:26; ஏச 63:16; 64:8; எரே 3:19; தோபி 13:14; ஞானம் 14:3; சீரா 23:1.4).

யூத மதத்தில் இறைவனை அப்பா என்று உருவகப்படுத்திக் கூறுவதில் தனிப் பொருள் உண்டு. இறைவனுக்கும் இஸ்ராயேலருக்கும் (மக்களுக்கும்) அல்லது இறைவனுக்கும் நீதிமான்களுக்குமிடையே உள்ள ஒரு நெருங்கிய தொடர்பை இது குறிக்கிறது. ஆனால் இவ்வழக்குப் பழங்கால நூல்களில் காணப்படவில்லை. மேலே சுட்டிக்காட்டப்பட்ட இடங்களைத்தவிர இச் சொல் 1 நாள் 17.13; சங் 68:5; எரே 31:9; மலா 1:6; 2:10–ஆகிய இடங்களிலும் காணப் படுகிறது.

புதிய ஏற்பாட்டில் இறைவனைக் குறிக்கப் பழக்கப்பட்ட ஒரு பெயராக இயேசு இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். தந்தை மகன் என்ற உறவிலிருந்து எடுக்கப்பட்ட அடையாளத்தில் இறைவனது நன்மை செய்யும் தன்மையை வலியுறுத்த இச்சொல்லை பயன்படுத்துகிறார். கெதுசமனித் தோட்டத்தில் இயேசு தந்தையிடம் மன்றாடுகையில் மத்தேயுவும், லூக்காவும் தந்தை என்ற சொல்லைமட்டும் பயன் படுத்தும்போது, மாற்கு அப்பா என்ற சொல்லையும் சேர்த்துக்கூறுகிறார். புனித பவுலும் இறை விசுவாசத்தை உணர்த்தும் பொருள் பொதிந்த சொல்லாய் இதைப் பயன்படுத்துகிறார் (உரோமை 8:15).இதில் அன்பும், நம்பிக்கையும் நிறைவாக வெளிப்படுத்தப்படுகிறது. இச்சொல் வழிபாட்டிலும் பயன்படுத்தப்படுகிறது. இறைவனின் சுவிகாரப்பிள்ளைகளானவர்களும், மகனுக்கு உரிய ஆவியைப்பெற்றவர்களும் இறைவனை அப்பா, தந்தை என அழைக்க உரிமை பெற்றவர்கள் (நாம் திருமுழுக்கின் வழியாக இறைவனின் சுவிகாரப்பிள்ளைகள் ஆகிறோம்). காண்க: தந்தை, புதிய ஏற்பாட்டில் இறைவன்.

அப்பாயிம் (APPAIM – மூக்குத்தொளை)

யூதாவைச் சேர்ந்த ஏரகுமேலின் வழித் தோன்றல்களில் ஒருவர். இவர் நாதாப் பின்மகன். ஈசியின் தந்தை (1 நாள் 2:30–31)

அப்பிசேக (HAPPIZZEZ)

ஆரோனின் வழித்தோன்றல் (1 நாள் 24:1–6.19). தாவீது அரசரின் காலத்தில் இருந்த ஆலய குருக்கள் குலத்தின் 18–ஆம் பிரிவின் குலத்தலைவர் (1 நாள் 24:15).

அப்பியா (APPHIA – செழிப்பான, உற்பத்தி செய்யக்கூடிய)

பிலமோனுக்கு எழுதிய திருமுகத்தின் ஆரம்பத்தில் பவுல் வாழ்த்துக்கூறும் மூவர்களில் இரண்டாம் நபராகும் (பில 2). இவள் பவுலால் (திருமுகத்தை எழுதியர்) "சகோதரி" என்று அழைக்கப்படுகிறாள். இவளுடையபெயர் பிலிமோனுக்கு அடுத்த படியாக வருவதால் சில சமயங்களில் இவள் இவருடைய மனைவி என்று கருதப் பட்டாள். இவளுடைய பெயருக்கு அடுத்து வருகின்ற அர்க்கிப்புவின் மனைவியாக இருக்கலாம் என்று சிலர் கூறுகின்றார்கள். இரண்டிற்கும் ஒரு ஆதாரமும் இல்லை. இவள் ஒரு கிறிஸ்துவள். திருமுகத்தை எழுதியவருடைய நண்பர். கொலோசை அல்லது இலவோதிக்கயா திருச்சபையின் அங்கத்தினர் என்று மட்டும் நாம் திட்டவட்டமாகக் கூறமுடி

யும். இப்பெண்ணைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் வேறெந்த குறிப்புமில்லை.

அப்பியாகு (APHIAH – ஆண்டவர் புத்துயிர் கொடுத்தார்)

சவுலின் மூதாதையருள் ஒருவரும் பென்யாமின் குலத்தைச் சேர்ந்த பெக்கொராத்தின் தந்தையுமாவார் (1 சாமு 9:1).

அப்பியு சந்தை (FORUM OF APPIUS)

இது உரோமையிலிருந்து தென்மேற்கில் அப்பியு சாலையில் 69 கி.மீ. தொலைவிலுள்ள ஒருதங்குமிடம். இக்கால பையித்தாகவாக இருக்கலாம். அப்பியுகிளாதியு சேக்கு கி.மு.312–இல் அப்பியு சாலையைக் கட்டினார். அவர் காலத்தில் இந்த நிலையம் நிறுவப்பட்டிருக்கலாம். கி.மு. முதலாம் நூற்றாண்டில் இது ஒரு முக்கிய நகரமாய் விளங்கியது. இங்கிருந்து, சாலைக்கு இணையாக ஒரு கால்வாய், போந்தைன் சதுப்பு நிலங்களிலிருந்து, 30 கி.மீ. ஓடி, பெரோனியாவை அடைந்தது.

பவுல் புத்தேயோலி துறைமுகத்தை அடைந்தபின் உரோமைக் கிறிஸ்துவர்களில் பலர், அப்பியு சந்தை, மூன்று விடுதி என்னும் இடங்கள் வரையில், பவுலையும் அவருடன் இருந்தவர்களையம் எதிர் கொண்டு வந்தனர் (அ.ப.28.15).

அப்பூசு (APPHUS)

இது ஒரு பண்பை விளக்கும் சொல். இதன்பொருள் "தந்திரமான" என்பதாகும். மத்தத்தியாவின் ஐந்து புதல்வர்களில் ஒருவரான யோனதானுக்கு இப்பெயர் வழங்கப்பட்டது (1 மக் 2:5).

அப்பெல் (APELLES)

உரோ 16:10–இல் "உண்மையான கிறிஸ்தவர்" என்று சொல்லப்பட்டுள்ளவர் தான் இவர். இவருக்குச் புவல் வாழ்த்துக் கூறுகிறார். சினாயிடிக்கு ஏட்டுத் தொகுப்பு அ.ப.18:12; 19:1–இல் வரும் அப்பொல்லோதான் இவர் என்று சொல்கின்றது. ஆனால் இதற்கு அடிப்படை இல்லை.

இந்தப் பெயர் அடிக்கடி பதித்து எழுதப்பட்ட ஏடுகளில் காணப்படுகின்றது. இப்பெயர் யூதர்களாலும், புறவினத்தராலும் பயன்படுத்தப்பட்டது.

அப்பெல் எழுதிய நற்செய்தி (GOSPEL OF APELLES)

கி.பி. 2–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானவாத பிரிவனைக் குழுவை நிறுவியவரான அப்பெல் எழுதிய திருமுறை சேராத நூலாகும். இது அப்பெல்லின் ஆசிரியரான மார்சியன் எழுதிய நூல்களின் திருத்தம் செய்யப்பட்ட நூலாகும். இந்நூல் திருச்சபைத் தந்தையர்களில் சிலர் சுட்டிக் காட்டுவதில் மட்டும்தான் அறியப்படுகிறது.

அப்போல்லியோன்: (APPOLLYON – அழிப்பவன்)

பாதாளக்குழியின் தூதனுடைய கிரேக்கப் பெயர்; திருவெளி 9:11–ன்படி இவருடைய எபிரேயப்பெயர் "அபதோன்" என்பது. ஐந்தாவது தூதன் எக்காளம் ஊதியபோது, பாதாளக் குழியின்மூடி திறக்கப்பட்டு, அதிலிருந்து புகையும், அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகளும் வந்தன (திருவெளி 9; யோவேல் 1:4). யார் யார் நெற்றியில் கடவுளின் முத்திரையில்லையோ அவர்களைத் தாக்க வல்லவை இந்த வெட்டுக்கிளிகள். இவை தேள்களைப்போல் வால்களும், கொடுக்குகளும் கொண்டிருந்தன (திருவெளி 10:9). இந்த வெட்டுக்கிளிகளின் அரசன் இந்த தூதன்தான். இவருடைய பெயர் வேறெங்கும் சொல்லப்படவில்லை. காண்க: அபதோன்.

அப்பொல்லோ (APOLLOS – அப்பொல்லோவிடமிருந்து)

அலக்சாந்தியாவைச் சேர்ந்த ஒரு யூதர். அவர் சொல்வன்மைமிக்கவர், மறைநூல் அறிஞர் (அ.ப.18:24). அவர் திருமுழுக்கு யோவானுடனோ அவரது சீடர்களில் ஒருவருடனோ தொடர்பு கொண்டிருந்ததாகத்தெரிகிறது. ஏனெனில் ஐம்பதாம் நாள் விழாவின்போது பேதுரு போதித்த ஞானஸ்நானத்தை விட (18:25), ஞானஸ்நானம் பற்றிய யோவானுடைய கருத்துக்களை நன்கு அறிந்திருந்ததாகத் தெரிகிறது. இவர் எப்போது கிறிஸ்துவ விசுவாசத்திற்கு மனந்திரும்பினார் என்பதை உறுதியாகக் கூறமுடியாது (18:25).

பவுல் தனது இரண்டாம் வேத போதகப் பயணத்தின் முடிவில், எபேசை விட்டுச் சென்றதற்குப்பின், இந்தச் சொல் வன்மைமிக்க அப்பொல்லோ எபேசுக்கு வந்து யூதச் செப்பக்கூடங்களில் தன் பணியை ஆரம்பித்தார் (18:26). இவர் பேசியதைக் கேட்ட பவுலின் நெருங்கிய கூட்டாளிகளான பிரிஸ்கில்லாவும் அக்கி லாவும் அப்பொல்லோவை தங்களுடன் அழைத்துப்போய், கடவுளின் அருள் நெறியை அவருக்குத் திட்டவட்டமாய் விளக்கினார்.

நற்செய்தியின் தன்மைப்பற்றி நிறை வான அறிவு பெற்றபின், அப்பொல்லோ அக்காயாவிற்குப் போகவிரும்பவே, சகோ தரர் ஊக்குவித்து, வரவேற்கும்படி அங்குள்ள சீடர்களுக்கு எழுதினார். அங்கு சென்று விசுவாசத்தின் அருளைப் பெற்ற வர்களுக்குப் பெரிதும் உதவியாய் இருந் தார். இயேசுவே மெசியா என்று மறை நூலின் வாயிலாக எண்பித்து யூதர்க ளோடு எல்லோருக்குமுன் வாதாடி அவர் களது தவற்றை எடுத்துக்காட்டினார் (18:27–28).

இந்தச் சமயத்தில் கொரிந்திய விசு வாசிகளிடையே ஒரு பிளவு ஏற்பட்டது. ஒரு பகுதியினர் அப்பொல்லோவையும், மற்றவர்கள், பவுலையும், வேறுசிலர் பேது ருவையும், வேறு சிலர் கிறிஸ்துவையும் சேர்ந்து கொண்டவர்கள் என்று கூறிக் கொண்டனர் (1 கொரி 1:12). இது, அப் பொல்லோவும், பவுலும் கேபாவும் இவர் களிடையே கொண்டிருந்த செல்வாக்கைக் காட்டலாம். பவுல் எபேசில் தங்கியதற் கும், அப்பொல்லோவின் பணிக்கும் இரு வருடங்களுக்குப் பின் பவுல் கொரிந்திய ருக்கு எழுதிய முதலாம் திருமுகத்தில் (கி.பி.57), அவர் இந்தச் சண்டைகளுக் காக அவர்களைக் குறை கூறுகிறார். விசு வாசத்தைக்கொண்டு வந்தவர்கள் வெறும் பணியாளர்களே என்றும், "நான் நட்டேன் அப்பொல்லோ நீர் பாய்ச்சினார். ஆனால் விளையச் செய்கிறவர் கடவுள் தாமே....கடவுளுக்கே எல்லாப் பெருமை யும் உரியது...நான் அடித்தளம் இட்டேன் இவ்வடித்தளம் கிறிஸ்துவே" (1 கொரி 3:5–11) என்றும் நினைவுபடுத்துகிறார். அவரது வார்த்தைகளின் தொனி அப் பொல்லோவைக் குறை கூறுவதாகக்காட்ட வில்லை. கொரிந்தில்தான் செய்த வேலையை அப்பொல்லோ தொடர்ந்து செய்வதற்கு அவருக்குப் பாராட்டுக் கூறு கிறார் (3:6). பிறகு இத்திருச்சபையைத் திரும்பவும் பார்க்கச் செல்ல அவரைத் தூண்டுகிறார் (16:12). பவுல் கொரிந்தியர் களையே கண்டனம் செய்கிறார் (3:6–9; 4:6–7).

தீத்து 3:13–இல் "அப்பொல்லோவை யும் வழக்கறிஞரான செனாவையும் வழி கூட்டி அனுப்பிவையும். அவர்களுக்கு எவ்விதக்குறையும் ஏற்படாதபடி அக்கறை யோடு பார்த்துக்கொள்ளும்" என்று பவுல் தீத்துவிடம் பரிந்துரைக்கிறார். இச்சமயத் தில் எபேசுக்குத் தென்மேற்கும், அலெக் சாந்திரியாவுக்கு வடமேற்கிலுமுள்ள, கிரேத்தேயில் இருந்தார்.

அப்பொல்லோவின் வேதாகம அறிவும் போதிப்பதில் சொல்வன்மையும், அவருடைய அலக்சாந்திரிய பின்னனி யிலிருந்து கற்றுக்கொண்டதாக இருக்க லாம். இந்த அலக்சாந்திரியாதான் எழுபது நூல் தோன்றிய இடம். பீலோ இங்கிருந்துதான் தோன்றினார். இவரது உருவக விளக்குமுறை அலக்சாந்திரிய யூதர்களை அதிகம் பாதித்தது. இந்தப் பண்புகளால் லூத்தரும் மற்ற சில அறிஞர்களும், எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தை எழுதிய பெயர் தெரியாத ஆசிரியர் அப்பொல்லோவாகத்தான் இருக்கலாம் என்று கருதினர். இது ஒரு வேளை உண்மையாக இருக்கலாம்.

எரோனிமுவின் கூற்றுப்படி அப் பொல்லோ, கிரேத்தேயிலிருந்து கொரிந் துக்குத்திரும்பி அங்கு ஆயராக இருந்தார். இது எந்த அளவுக்கு உண்மையானது என்பது ஐயத்திற்குரியது.

அப்பொல்லேபான் (APOLLOPHANES)

யூதா மக்கபேயுவின் படையைச்சேர்த்த "இருபது இளைஞர்களால்" காசாராவில் கொல்லப்பட்ட மூன்று சீரியர்களில் ஒருவர் (மற்ற இருவரும் மேலே கொலை யுண்டவரின் சகோரர்கள், திமோ த்தேயு வும், கைரேயாவும் ஆவர் (2 மக் 0:37).

அப்போல்லோனியா (APOLLONIA – அப்பொல்லோ கடவுளுக்குரியது)

மக்கதோனியாவிலுள்ள ஒரு கிரேக்க நகரம். இதே பேர்கொண்டு அழைக்கப் பட்ட மற்ற நகரங்களிலிருந்து இது மக்க தோனிலுள்ள அப்பொல்லோனியா என்று வேறுப்படுத்தப்பட்டது. போல்பே ஏரிக்குத் தெற்கே உரோமை எக்னேசியன் சாலை யில் தெசலோனிகாவுக்குக் கிழக்கில் 56 கி.மீ. தொலைவிலும் அம்பிப்பொலிக்குத் தென்மேற்கில் 44 கி.மீ. தொலைவிலும் உள்ள இடத்தில் அமைந்திருந்தது. பவுலும் சீலாவும், அவர்களது இரண்டா வது வேத போதகப் பயணத்தில், தெச லோனிக்காவிற்குச் செல்லும் வழியில் இதனைக் கடந்துசென்றார்கள் (அ.ப.17:1). இந் நகரம் இக்கால பொல்லினோவாக அடையாளம் காட்டப்படுகிறது.

அப்பொல்லோனியு (APOLLONIUS - அப்பொல்லோவுக்குரியது)

1. தார்சு நகரத்தைச் சேர்ந்தவர் இவர் நான்காம் செலூக்கு பிலோபாத்தோரின் (கி.மு. 187–175) ஆட்சியில் கூலே–சீரியா, பெனிசியா, ஆகிய இடங்களின் ஆளுநர். எருசலேம் ஆலய கருவூலத்தைக் கொள்ளையிடத்திட்டமிட்டார். இக்கொள் கையை நடத்த கெலியோதோர் என்பவர் அனுப்பப்பட்டார். "பயங்கரத்திற்குரிய விண்ணகப் போர்வீரன்" வலிமைமிக்க குதிரையின்மேல் தோன்றி அவரை விழத் தாட்டினார் என்று 2 மக் 3:7–40–ல் உள்ள கதை சொல்லுகிறது. இந்த நிகழ்ச்சி ஓவியர்களுக்கு ஒரு விருப்பமான கருத் தாக இருந்திருக்கிறது–

2. முதலாம் தெமெத்திரியு, அலக்சாந் தர் பாலஸ் ஆகியோரின் ஆட்சியின் கூலே – சீரியாவின் ஆளுநர். இவர் தாவுஸ் என்ற மற்றொரு பெயரும் கொண்டிருந் தாக யோசிபஸ் கூறுகின்றார். இவர் மேலே கூறப்பட்டுள்ள அப்பொல்லோனியு வின் மகன் என்று யோசி பஸ் கருது கின்றார்.

கிளர்ச்சியாளரான 2–ம் தெமெத்திரியு வின் படைக்குத் தலைவனாக நியமிக்கப் பட்டபின் அலக்சாண்டருடைய உத்தரவில் லாமல், அப்பொல்லோனியு யோனத் தானுடைய படைகளுக்கு சவால்விட்டார். அப்பொல்லோனியுவால் நன்கு பாது காக்கப்பட்டிருந்து யோப்பாவை யோனத் தான் வென்றார். அப்பொல்லோனியு யோனத்தானின் படைவீரர்களை சம வெளிக்கு இழுத்து பதுங்கியிருந்து தாக்கி னார். ஆனாலும் யோனத்தானின் ஆட்கள் வென்று (1 மக் 10:69–85), அப்பொல்லோ னியுவின் படைகளை அசுதோது வரைக் குத்துரத்திச்சென்று, அதை தீக்கிரையாக் கினார்.

3. மொனஸ்தெயுவின் மகன். 4–ஆம் அந்தியோக்கு எப்பிபானின் ஆட்சியில் கூலேசீரியா, பெனிசியா ஆகியவற்றுக்கு ஆளுநர் (2 மக் 4:4). தோலமி பிலோமேத் தோரின் முடிசூட்டுவிழாவிற்கு (170 கி.மு.) அந்தியோக்கு எப்பிபானுக்குப் பதிலாக அனுப்பப்பட்டார் (2 மக் 4:21).

4. இஸ்ராயேலை எதிர்த்துப் போரிட (1 மக் 3:10) புறவினத்தாருடைய படைகளை ஒன்று திரட்டிய சமாரியா நாட்டுப் படை களின் தளபதி (1 மக் 3:10) நான்காம் அந்தியோக்கு முன்பு எருசலேமைக் கொள்ளையடிக்க அனுப்பிய அப்பொல் லோனியுவாக இருக்கலாம் எனக் கருதப் படுகின்றது (1 மக் 5:24–26; 1 மக் 1:29–35). இவர் சமாதானமாய் வந்தவர்போல் காட்டிக்கொண்டார். ஆனால் யூதர்கள் ஓய்வு நாளில் வேலை செய்யாமலிருப்ப தைக்கண்டு, அவர்கள் இளைப்பாறு இருக்கையில் "தன் படைகளை ஆயுதங்கள் எடுக்கக்கட்டளையிட்டார். வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் எல்லோரையும் கொன்றார்" (2 மக் 5:25:26; 1 மக் 1:29–35). யூதாவோடு செய்த போரில் (கி.மு. 166) அப்பொல்லோனியு தன்னுடைய வாளை இழந்துவிட்டார். அந்த வாளைக் கொண்டே யூதா தன் வாழ்நாளெல்லாம் சண்டை செய்தார் (1 மக் 3:10–12). இப் போரில் அப்பொல்லோனியு யூதாவால் கொல்லப்பட்டார்.

5. கென்னாயுவின் மகன். 5–ஆம் அந்தியோக்கு யூபத்தோரின் கீழ் பாலஸ் தீன மாநிலங்களில் ஒன்றின் ஆளுநர். இவரும் மற்ற ஆளுநர்களும் "அவர்களை (யூதர்களை) அமைதியிலும், சமாதானத் திலும் இருக்கவிடவில்லை" (2 மக் 12:2).

6. தியானாவின் அப்பொல்லோனியு (கி.பி. 100). புதிய பித்தகோரிய தத்துவ இயல்வாதி. ஒரு சமயச் சீர்திருத்தவாதி. தொடக்ககால கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஆசிரியர்கள், இவரைக் கிறிஸ்துவுக்கு இணையான போட்டியாளராகக் காட்ட இவரைப்பற்றிய வாழ்க்கை வரலாறுகளை எழுதினர். இவற்றில் இவர் பிறப்பும், ஒரு வான தூதரால் அறிவிக்கப்பட்டதாகவும், அவரது சீடர்களோடு பயணங்கள் செய்து, போதித்துப் புதுமைகள் செய்ததாகவும், இவரது சீடரில் ஒருவரால் உரோமையருக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டதாகவும், தோமிசியன் முன் விசாரணை செய்யப்பட்டபோது திடீரென்று மறைந்துபோய், பின்பு கீழுலகத்திற்கு இறங்கினதாகவும், பின்பு தன் சீடர்களுக்குத் தோன்றியதாகவும், பல கதைகள் உண்டு.

அப்போஸ்தலர் காலம்

இயேசு கிறிஸ்துவின் உடனடியான சீடர்கள், குறிப்பாக பன்னிரு அப்போஸ்தலர்கள், வாழ்ந்து போதித்தகாலம் இப்பெயரால் அழைக்கப்படும். அது இயேசுவின் பணியோடு தொடங்கியது எனலாம். அவரது உடனடிச் சீடர்களில் கடைசியாவரது இறப்போடு, ஏறக்குறையை முதல் நூற்றாண்டின் இறுதியோடு முடிந்தது எனலாம். அப்போஸ்தலர் காலத்திற்கு உடனடியாகப் பின் வந்த காலம், அதாவது அப்போஸ்தலர்களில் ஒருவரை ஆள் முறையில் அறிந்தவர்களின் காலம் துணை – அப்போஸ்தலர் காலம் என்றழைக்கப்படும்.

அப்போஸ்தலச் சங்கம்
(APOSTOLIC COUNIL)

எருசலேம் திருச்சபையின் பிரதிநிதிகளுக்கும் அந்தியோக்கிய திருச்சபையின் (பவுல், பார்னபா உட்பட்ட) பிரதிநிதிகளுக்கிடையே எருசலேமில் நடந்த கூட்டமாகும். மனந்திரும்பிய புறஇனக் கிறிஸ்தவர்களுக்கு விருத்த சேதனம் அவசியம் தான் என்ற பிரச்சினையைத் தீர்க்க இச் சங்கம் கூடியது (அ.ப.15:1–21). லூக்காவின் நிகழ்ச்சியுரைப்படி, . பவுலின் முதல், இரண்டாம் வேதபோதகப் பயணங்களுக்கிடையில் இந்நிகழ்ச்சி நடந்தது.

அந்தியோக்கியாவிலுள்ள சில யூதர்கள், மனந்திரும்பிய புற இனக்கிறிஸ்தவர்கள், மோசேயின் சட்டம் கூறியபடி விருத்த சேதனம் பெறவேண்டும், அதாவது, அவர்கள் கிறிஸ்தவர்களாகக் கருதப்படுமுன் யூதர்களாக மாறவேண்டும் என்று போதித்ததின் விளைவாக இப் பிரச்சினை எழுந்தது (15:1). நீண்ட தர்க்கத்திற்குப் பிறகு இறைவன்முன் யூதர்கள், புற இனக்கிறிஸ்தவர்கள் என்ற வேறுபாடு இல்லை என்றும், கடந்த காலத்தில் யூதர்கள்கூட சுமக்கமுடியாத ஒரு சட்டத்திற்கு மனந்திரும்பிய புறவினத்தாரைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்றும், மீட்பு புறச்சட்டங்களால் நிறைவேறும் மனிதச் செயல் அன்று என்றும், மீட்பு "ஆண்டவராகிய இயேசுவின் அருளால்தான்" என்றும் பேதுரு அறிவித்தார் (15:7–11). பேதுருவின் உரையைக்கேட்டு அனைவரும் அமைதியாயினர். அடுத்துப் பேசிய பவுலும், பார்னபாவும் புற இனத்தாருக்குச் சார்பாகப் பேசினர் (15:12). இறுதியில் கூட்டத்தின் நடுவரான யாக்கோபு, பேதுரு கூறியதற்கு ஆதரவாய்ப் பேசினார். இறைவன் புற இனத்தாருக்கும் இறைவனே. புறவினத்தார் சிலைகளால் தீட்டுப்பட்டதைத் தொடாமல், கெட்ட நடத்தையை விலக்கி மூச்சடைத்து செத்ததின் இறைச்சி, இரத்தம் இவற்றை உண்ணாமலிருத்தல் போன்ற ஒழுக்கங்களைத் தவிர, அவர்களுக்கு வேறு தொல்லை கொடுத்தலாகாது என்று கூறினார் (15:13–22). அவருடைய பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. சங்கத்தில் இருவரைத் தேர்ந்தெடுத்து, பவுல் பணிபுரிந்த பகுதியிலுள்ள பலதிருச்சபைகளுக்கு சங்கத்தின் முடிவை அறிவிக்கும்படி பவுல், பார்னபாவோடு அனுப்புதலோடு சங்கம் முடிந்தது.

சங்கத்தின் பொருள் அளவிட முடியாததாகும். இச்சங்கம் திருச்சபைக்குள் வேறுபட்ட குழுக்கள் கருத்தொருமை அடையக்கூடும் என்று காட்டியதோடு, கிறிஸ்துவத்துக்குள் யூதமயமாக்கும் கூறுகளை, கொள்கையளவிலாவது, முடிவுக்குக்கொண்டு வந்தது. ஆனால் இம்முடிவு பொது உற்சாகத்துடன் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று பவுலின் சிலதிருமுகங்கள் காட்டுகின்றன.

கலா 2:1–10, இச்சங்கம் பற்றிய பவுலின் விவரிப்பாக இருக்கலாம். ஆனால் பல திறனாய்வுக் கடினங்கள் எழுகின்றன. 1) அ.ப.யில், லூக்கா, பவுல் மனந்திரும்பிய பின் எருசலேமுக்கு மூன்றுமுறை சென்ற தாகக்கூறுகிறார். முதல் தடவை, அவர் மனந்திரும்பியதற்குப் பின் விரைவில் (அ.ப. 9:26–28), இரண்டாம் தடவை பஞ்சத் தின்போது (11:30; 12:25), மூன்றாம்முறை அவர் அப்போஸ்தலர் சங்கத்தில் பங்கெடுத்தபோது (15:2–4. 12–19). இதற்கு மாறாக இருமுறைதான் எருசலேமுக்குச் சென்றதாகப் பவுல் கூறுகிறார். முதல் முறை: மனந்திருப்பிய மூன்றாண்டு களுக்குப் பின் (கலா 1:8). இரண்டாம் முறை: 14 ஆண்டுகளுக்குப் பிறகு (2:1). இரு ஆசிரியர்களும் குறிப்பிடும் முதல்தடவை குறிக்கும் நிகழ்ச்சிகளும் ஒன்றே என்ப தில் விளக்கவுரையாளர்கள் கருந்தொற் றுமை கொண்டுள்ளனர். ஆனால் பின் வந்த நிகழ்ச்சிகள் பற்றி கருத்து வேறு பாடுகள் கொண்டுள்ளனர் (2) விருத்த சேதனம், கலாத்தியர் விவரிப்புக்கு அவ்வளவு முக்கியத்துவம் உடைய தில்லை. அதில் பவுலின் போதகத்தின் பொருளடக்கம், அவருடைய செயலாற்று முறையின் பொருத்தமுடைமை ஆகியவற் றைப்பற்றிக் கவனம் செலுத்தப்படுகிறது. 3) பவுல், பார்னபாவின் பிற்காலச் செயல் களை, அப்போஸ்தல சங்கத்தின் தீர் மானத்தோடு ஒத்துப்போகச் செய்வது கடினம் (கலா 2:11–21). மேலும் புறவினத் தாருக்கும் மோசேயின் கட்டுப்பாடு களுக்கும் உள்ள உறவு சங்கத்தின் முக்கிய தீர்மானங்களைக் கலாத்தியருக்கு பவுல் எடுத்துக்கூறவில்லை.

அப்போஸ்தலச்சட்ட அமைப்பும், ஒழுங்குகளும்

(APOSTOLIC CONSTITUTIONS AND CANONS)

திருச்சபையின் சட்டங்களும், திரு வழிப்பாட்டு ஒழுங்குகளும் எட்டு புத்தகங் களில் தொகுக்கப்பட்டன. இறுதி அதிகா ரத்தில் 85 அப்போஸ்தல ஒழுங்குகள் பின் சேர்க்கப்பட்டுள்ளன. இவை திருத்தொண் டர்களைத் தேர்ந்தெடுக்கும்முறை, திரு நிலைப்படுத்துதல், பணிகள் பற்றிக் கூறு கின்றன. இது பலதொகுப்புகளில் ஒன்று. பெரும் பாலானவை திதாக்கே இப்போ லித்துவின் அப்போஸ்தலிக்க பாரம்பரி யம், திதா ஸ்காலியா போன்ற நூல்களைப் பெரிதும் சாந்திருக்கிறது. இது நான்காம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டிரு க்கலாம். சீரியாவில் தோன்றிருக்கலாம். இது அப்போஸ்தலர்களால் தொகுக்கப் பட்டு உடன் ஊழியர் கிளமெந்துவிடம் கொடுக்கப்பட்டதாக உரிமை கொண்டாடு கிறது. எட்டாம் புத்தகத்தில் பேதுரு தொடங்கி மத்தியா, பவுல், எருசலேம் யாக்கோபு என்று பலரும் ஒருவர்பின் ஒரு வராக அப்போஸ்தலர் சங்கத்தில் பேசு கின்றனர். மாறாக முதல் ஏழு புத்தகங் களில் எல்லோரும் சேர்ந்து முடிவெடுப்ப தாக அமைந்துள்ளது. முதல் ஆறு நூற் களும் திதாஸ்காலியா என்ற நூலையே தழுவியுள்ளதாகத் தெரிகிறது.

ஏழாம் புத்தகம் திதாக்கேயின் தழுவல் அல்லது விரிவு ஆகும். அதில் செபங்கள், ஞானஸ்நானம் பெற இருப்பவர்களுக்குப் போதகம், ஞானஸ்நானம் கொடுக்கும் முறை ஆகியவை உள்ளன. எட்டாம் புத்த கம் இப்போலித்துவின் அப்போஸ்தலிக்க பாரம்பரியத்தைத்தழுவி உள்ளது. ஆயர் கள் குருக்களின் பட்டமளிப்பு பற்றிக் கூறு கின்றது. மேலும் தியாக்கோன்கள், பாவ பொறுத்தல் அளிப்போர், கன்னிகைகள், விதவைகள், பேய் ஓட்டுபவர்கள் பற்றிப் பேசுகின்றது. பின் பலவகையான சட்டங் கள் உள்ளன. கடைசி அதிகாரம் 85 அப் போஸ்தலிக்க ஒழுங்குகளைக் குறிப்பிடு கின்றது. இவற்றில் கடைசிச் சட்டம் ... முறை விவிலிப்பட்டியல் பற்றிப் பேசு கிறது. பட்டியல் முடிவில் கிளமெண்டில் இரு மடல்களும் காணப்படுகின்றன.

இந்த முழு நூலின் நடை, சொற்றொ குதி ஆகியவற்றை வைத்துப்பார்க்கும் போது ஒரு தனிப்பட்ட மனிதன் தொகுத் திருக்கலாம் என்று எண்ணத் தோன்று கிறது. அவர் ஓர் ஆரியனாக இருக்கலாம் என்று கூறப்படும். எனினும் இதை நிரு பித்தல் கடினம். இவற்றில் இஞ்ஞாசியா ரின் போலித் திருமுகங்களோடு ஒரு நேரடி தொடர்பு இருப்பதை உணரலாம்.

இது போன்றத் தொடர்புடையனவாக சிலவற்றைக்குறிப்பிடலாம். 1) அவற்றில்

ஒன்று அப்போஸ்தல் ஒழுங்குமுறை ஆகும். இது கிரேக்கத்தில் நான்காம் நூற்றாண்டில் எகிப்தியரால் எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கிறிஸ்துவின் கட்டளையை ஏற்று 12 அப்போஸ்தலர்களும் "புதல்வர்கள் புதல்வியர்களுக்கு" எழுதியது. பிற்பகுதி ஒழுக்க நெறிகள் பற்றியும், ஆயர், குருக்கள், திருத்தொண்டர்கள், விதவைகள் பற்றியும் பேசுகின்றது. இப்போலித்துவின் அப்போஸ்தலப் பாரம்பரியங்கள் பல நூல்களுக்கு வழிவகுத்தது. அவற்றில் ஒன்று நமது ஆண்டவரின் ஏற்பாடு, இதில் கிறிஸ்து விண்ணேற்றத்துக்கு முன் அப்போஸ்தலர்களுக்கு அளித்த அறிவுரையை முகவுரையாகக்கொண்டுள்ளது. 2) இப்போலித்து எழுதிய திருமுறைகள் கிரேக்கத்தில் எழுதப்பட்டாலும் இன்று எத்தியோப்பிய அரபிக் மொழிகளில் உள்ளன.

3) இப்போலித்துவின் வழியாக வரும் சட்டமுறை, இது, அப்போஸ்தலச் சட்டமுறை நூலிலிருந்து சிலபகுதிகளை எடுத்துக்கூறுகிறது. இது, கோப்டிக் மொழியில்தான் முதலில் அறிஞர்களுக்குக் கிடைத்ததால், எகிப்திய திருச்சபை அமைப்பு என்று அழைக்கப்பட்டது. இப்போது, நெடுங்காலமாய் மறைந்து போயிருந்த அப்போஸ்தலப்பாரம்பரியம் பற்றிய நூல் என்று ஏற்றுக்கொள்ளப்படும்.

அப்போஸ்தலத் தந்தையர்களின் நூல் (APOSTOLIC FATHERS)

புதிய ஏற்பாட்டு கடைசி நூல்களின் காலகட்டத்தில், அப்போஸ்தலர்களோடு நேரடியாக அல்லது அவர்களின் சீடர்களோடு தொடர்புள்ளவர்களால் பல விளக்கங்கள் தரும் நூல்கள் எழுதப்பட்டன. இவ்வாறு நூற்கள் எழுதியவர்களை 17–ஆம் நூற்றாண்டிலிருந்து அப்போஸ்தல தந்தையர் என்று அழைத்தார்கள். இவைகளில் பல நூற்கள், 4,5 –ஆம் நூற்றாண்டுகள் வரை, சில திருச்சபைகளில் திருமுறை அதிகாரம் பெற்றவை போல் விளங்கின. மேலும் இவற்றில் சில பழைய புதிய ஏற்பாட்டு திருமுறைப்பட்டியலோடு இணைக்கப்பட்டிருந்தன. (எ.கா. பர்னபா எழுதிய திருமுகம், கிளமெந்து எழுதிய திருமுகங்கள் 1,2).

இந்த நூல்களை அதிகாரப் பூர்வமாக விவிலிய நூல்களாக திருச்சபை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவைகளின் தோற்ற இடம், காலம், ஆசிரியர்போன்ற தகவல்கள் சரியாகத் தெரியவில்லை என்றாலும், இவைகள் வரலாறு, இறையியல், கிறிஸ்தவ திருச்சபையின் வளர்ச்சி ஆகிய வற்றைப்பற்றி ஏராளமான தகவல்களைத் தருகின்றன. புதிய ஏற்பாட்டு நூற்களின் சொற்றொகுப்புக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் அந்நூற்களைப் புதிய ஏற்பாட்டோடு சேர்த்துக்கொள்ளவும், இந்த அப்போஸ்தலத் தந்தையரின் நூல்கள் பெரிதும் உதவியாயிருக்கின்றன. ஆனால் புதிய ஏற்பாடு வாசகத்தைப் பொறுத்த மட்டும் இவைகள் சிறிதளவே உதவுகின்றன. காரணம், அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களிலிருந்து இந்நூல்களில் காணப்படும் எடுத்துக் காட்டு வாசகங்களும் சுட்டிக்காட்டல்களும் மூல நூல்களிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. எனவே இவர்கள் வாய்மொழிப்பாரம்பரியத்தைச் சார்ந்து எழுதினரா அல்லது பிற நூல்களில் இருந்து எடுத்துக்கையாண்டர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவற்றில் திருமுறை சாராத நூல்களின் அடையாளங்களும் உள்ளன.

இந்த நூல்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இல்லாததால் அவைகளைத் தனித்தனியாக படிப்பதே நல்லது. இவை பார்ணபா எழுதிய போலித் திருமுகம், உரோமை கிளமெந்துவின் இரு திருமுகங்கள், அந்தியோக்கிய இஞ்ஞாசியாரின் திருமுகம், போலிகார்ப்பின் திருமுகமும், மறைசாட்சி வரலாறும் போன்ற பல திருமுகங்களை உள்ளடக்கிய ஏர்மாஸ் ஆயரது நூல் போன்ற பல திருமுகங்கள் உள்ளடக்கிய அப்போஸ்தல தந்தையரின் நூல்களைக்கொண்ட தொகுப்பாகும். 1672–ல் ஜே.பி. கோட்லியர் என்பவர் தணிக்கை செய்துவெளியிட்டார். இக்காலப் பதிப்புக்கள், திகாக்கே போன்ற பல நூல்களையும் இத்தொகுப்பில் சேர்க்கின்றன.

அப்போஸ்தோலிக்க தந்தையர் என்ற தொகுப்பில் சில திருமுறை அதிகாரம் பெற்றதாகக் கருதப்பட்டதோடு, புதிய

ஏற்பாட்டு நூல்களுக்குச் சமமாகவும் கருதப்பட்டன. ஆனால் அத்தனேசியுவும் (397) இறுதியாக கார்த்தேசின் சங்கமும் (397) இந்த முதல் நூற்றாண்டு ஆசிரியர்களின் நூல்களைப் புதிய ஏற்பாட்டு திருமுறை நூல்களிலிருந்து தெளிவாக வேறுபடுத்தின.

பல நூற்றாண்டுகளாக, இந்நூல்கள் தொகுப்பு, புறக்கணிக்கப்பட்டன. பிரிவினைத் திருச்சபை சீர்திருத்தவாதிகளின் கருத்துப்படி, பவுல், யோவான் ஆகியோரில் காணப்படும் இறையியல் மேன்மையும் நயமும் இவற்றில் காணப்படவில்லை. புதிய ஏற்பாட்டு நூல்களிலிருந்து இவை வேறுபட்டவை. ஆனால் இந்த வேறுபாட்டை மிகைப்படுத்தக்கூடாது. புதிய ஏற்பாட்டு நூல்களைவிட இந்நூல்கள் அன்றாடச்செயல் முறையான காரியங்களில் அக்கறை செலுத்தின. இந்நூல்களை எழுதிய ஆசிரியர்கள், பவுலைப்போல் நற்செய்தியை அறிவிக்க கிரேக்க, உரோமையர் நாடுகள் முழுவதும் பயணம் செய்த அப்போஸ்தலர்களாக இல்லாது போகலாம். இவர்களது அலுவல் கிளர்ச்சியூட்டுபவை அல்ல. அப்போஸ்தலர்கள் தோற்றுவித்த திருச்சபைகளுக்கு பணிபுரியும் சுமையான அலுவலாகும்.

இவற்றில் பொதுவாகக் காணப்படும் கருத்துக்கள்: படைக்கும், ஆட்சி செய்யும், மீட்கும், நீதிவழங்கும் இறைவன், இயேசு கிறிஸ்து, திருச்சபையும் அதன் ஒருமைப்பாடும், பணியும், கிறிஸ்துவ வாழ்வு, இறுதிக்கால இயல் ஆகியவையாகும். ஒவ்வொரு நூலும், இவை பற்றிய அழுத்தத்திலும் பொருளாக்கத்திலும் வேறுபடுகின்றன.

அப்போஸ்தலர்
(APOSTLE – அனுப்பப்பட்டவர்)

இப்பெயர் தூதுபெற்ற அதிகாரப் பூர்வமான பிரதிநிதியைக் குறிக்கிறது. தூதின் பொருளடக்கத்தைவிட தூது அனுப்பினவரின் அதிகாரத்தைக் குறிக்கிறது. பல்வேறுபட்ட பொருளில், குறிப்பான பொருளிலும், பொதுவான பொருளிலும், இது புதிய ஏற்பாட்டில் 72 தடவை வருகிறது. கிறிஸ்தவ வழக்கில், இப்பெயர் இரு தெளிவான பொருளில் பயன்படுகிறது அ) திருச்சபை வரலாற்றின் முதல் முறையைச் சேர்ந்த சில குறிப்பிட்ட மனிதர்கள் அப்போஸ்தலர் என்றழைக்கப்படுகின்றனர் ஆ) நற்செய்தி போதகர்கள்.

1. கிரேக்க வழக்கில் கப்பற்படையெடுப்பையோ, அல்லது குடியேற்றக் குழுவையோ விவரிக்க அப்போஸ்தலர் என்ற சொல் பயன்படுகிறது. எரோதோத்தில் தூதுவரான ஆளைக்குறிக்கிறது. அடைமொழியில் தூதுவரைக் குறிக்கப் பயன்படுகிறது இது அபூர்வமானதாகும். இம்முறையில் இருமுறைதான் புதிய ஏற்பாட்டில் பயன்பட்டுள்து (யோவா 13:16; பிலி 2:25).

2. யூத வழக்கில், அப்போஸ்தலர் என்ற கிரேக்கச் சொல்லுக்கு இணையான எபிரேயச் சொல் "சலியா" ஆகும். தூதர், தனிநபர்களுடைய அல்லது அரசவை, செபக்கூடம் போன்ற குழுக்களின் பிரதிநிதியாக இருக்கலாம். இவர்களின் கடமை தூதின் பொருளடக்கத்தைப் பொறுத்தது. இவை சட்ட ஏடுகளை அளித்தல், பணத்தைப் பெற்று வருதல், செய்திகளை, குறிப்பாக காலக்கணிப்பு, விழாக்கள் பற்றிய செய்திகளை அளித்தலாகும். செபக்கூடத்தில், சலியா குழுச் செபத்தில் தலைமை தாங்குபவராக இருக்கலாம். "ஒருவரின் தூதன் அவனைப் போன்றவனே" என்பது ராபிகளின் மேற்கோளாகும். இது அனுப்பினவரின் கட்டளையை நிறைவேற்றும் பொறுப்புடையவராவார், தூதுவர் என்பதையும், அலுவலையும் விளக்குகிறது. அவரது இடத்தை விளக்கவில்லை. கி.பி. 4–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிறிஸ்துத் திருச்சபைத்தந்தையர், யூத ஏடுகள், தியோதோசியின் சட்டநூல் ஆகியவற்றின் சான்றுகள், எருசலேமின் தலைமையகதின் அதிகாரம் பெற்ற யூதத் தூதவர்களை அப்போஸ்தலர் என்ற சொல்லால் குறிக்கின்றன. இவர்கள் சிதறிக் கிடந்த யூதர்களிடையே வரி சேர்க்க அனுப்பப்பட்டனர். இவர்கள் இருவர் இருவராக அனுப்பப்பட்டனர். இவர்கள் சில சமயம் செபக் கூடங்களில் போதித்தனர். இவர்

கள் எருசலேமுக்குத் திரும்பியதோடு இவர்கள் தூது முடிந்தது. இத்தூதை மற்றவர்க்கு மாற்ற முடியாது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சலியா என்ற சொல் மோசே, எலியா, எலிசா, எசக்கியேல் ஆகிய நான்கு முக்கியமான வர்களைக் குறிக்கிறது. இவர்கள் இறைவன் பெயரால் அருஞ்செயல்புரிய ஆற்றல் அளிக்கப்பட்ட 'இறைவனது தூதர்கள்', பகர ஆள் ஆவர். கிறிஸ்து இறைவனின் அப்போஸ்தலராவார் (மாற்கு 9:37). அதோடு "நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்பவன் என்னை ஏற்றுக் கொள்கிறான்" என்றும் உரிமை கொண்டாடுகிறார் (யோவா 13:20; மத் 10:40). எழுபது நூலில் அப்போஸ்தலர் என்ற சொல் பெயர்ச்சொல்லில் ஒரே ஒரு தரம் 1 அரச 14:6-இல் வருகிறது. அதில் இறைவாக்கினர் அகீயா தம்மை, இறைவனது செய்தியைக் கொண்டு வரும் அவருடைய தூதர் என எரொபயாமின் மனைவிக்கு அறிவிக்கிறார். பாரசீகர் காலத்திய இலக்கியத்தில், ஆட்சி, சமயத்தூதிற்கு அனுப்பப்பட்ட அரச தூதுவர்களைக் அப்போஸ்தலர் என்ற சொல் குறிக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர் (எஸ் 7:12 தொ; நெக 2:5; 2 நாள் 17:9; எஸ்த 9:20; 2 மக் 1:1-2). ஆனால் இவற்றில், பிற்கால கிறிஸ்துவ அப்போஸ்தலர் என்ற சொல்லைப்போல், சலியா என்ற சொல் நிறுவ அமைப்பையோ போதக பொறுப்பையோ, உணர்த்தவில்லை. அவரது அதிகாரம் தெளிவாக வரையறை செய்யப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்குரியது. அவரது தூதின் தன்மை சமயத் தன்மையைவிடச் சட்டத்தன்மையையே அதிகம் உணர்த்தியது.

3. இயேசுவும் அப்போஸ்தலரும்:- அப்போஸ்தலர் என்பது ஒரு பட்டமாக உருவெடுக்குமுன், அப்போஸ்தலத்துவம் ஒரு அலுவலாகும். உண்மையில், படிப்படியான வளர்ச்சியின் முடிவில், அப்போஸ்தலர் என்ற பட்டம் தனிச்சிறப்பான பொருளிலும் பன்னிருவர் குழுவுக்கு உரியதாகப் பயன்பட்டது (மத் 10:2). பிறகு இப்பெயர் இயேசுவுக்கே சாற்றிக் கூறப்பட்டது. இப்பெயர் பன்னிருவருக்கு மட்டுமே உரியதானாலும், அப்போஸ்தல அலுவலில் பிறரும் பங்கெடுத்தனர் என்பது தெளிவு.

4. பன்னிரு அப்போஸ்தலர்கள்:- தமது பகிரங்கப் பணியின் தொடக்கத்திலிருந்து, இயேசு, மற்ற மனிதர்கள் வழியாகத் தமது பிரசன்னத்தைப் பெருக்கவும், தமது செய்தியைப் பரப்பவும் விரும்பினார். முதல் நான்கு சீடர்களை "மனிதர்களைப் பிடிப்பவர்களாக" இருக்க அழைக்கிறார் (மத் 4:18-22). அவர், "தம்மோடு இருக்கவும்" அவரைப்போல நற்செய்திகளைப் போதிக்கவும், பேய்களை ஒட்டவும் பன்னிருவரைத் தேர்ந்தெடுக்கிறார் (மாற் 3:14 தொ). அவரது அதிகாரத்தைப் பெற்று அவரது பெயரில் பேச அவர்களை அனுப்புகிறார் (6:6:13). "உங்களை ஏற்றுக் கொள்பவன் என்னை கொள்கிறான்; என்னை ஏற்றுக் கொள்பவனோ என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்கிறான்" (மத் 10:40). அவர்கள் பாலையில, அவர் பெருக்கிய அப்பத்தை பகிர்ந்தளிக்கின்றனர் (14:19). கிறிஸ்தவச் சமூகத்தை நடத்துவதற்காக தனிச்சிறப்பான அதிகாரம் பெறுகின்றனர் (16:18; 18:18). சுருக்கமாக அவர்கள் புதிய இஸ்ராயேலின் அடிப்படையாக அமைகின்றனர். இறுதிக்காலத்தின் அப்புதிய இஸ்ராயேலின் நடுவர்களாக இருப்பர் (19:27 தொ). இதுதான் அப்போஸ்தலர் குழுவில் 12 என்ற எண்ணிக்கையின் பொருளாகும். இந்த மூலப்பன்னிருவர் இயேசுவாலே தேர்ந்தெடுக்கப்பட்டவராவர். அதற்கு அவர்கள் மனு உரு எடுத்த வார்த்தையை ஆள் முறையில் அறிந்திருக்கவேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகும். அவர்கள் சீடர்களின் பொதுக்குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்கள் இயேசுவின் அலுவலைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அவர்களிடம்தான் உயிர்த்த இயேசு பாவமன்னிப்பைப் போதிக்கும் (லூக் 24:44-49), எல்லா இனத்தாரையும் சீடராக்கும் ஞானஸ்நானம் கொடுக்கும் (மத் 28:16-20) கடமையை அளிக்கிறார். இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் அவர் உலக முடிவுவரை எந்நாளும் அவர்களோடு இருப்பார். இயேசு

பன்னிருவருக்கும் பரிசுத்த ஆவியையும், அதிகாரத்தையும் அருள்கிறார் (யோவா 20:21). இப்போதிலிருந்து யூதாசுக்குப் பதிலாகப் பன்னிரண்டாம்வரைத் தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியமாகிறது. அப்போதுதான், அண்மையில் தோன்றியுள்ள புதிய திருச்சபையின் புதிய இஸ்ராயேலின் உருவம் காணப்படும் (அ.ப. 1:15—26). அவர்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருக்கவேண்டும். அதாவது உயிர்த்த கிறிஸ்து அவர்கள் பழகி வாழ்ந்த அதே இயேசுதான் என்று சான்று கூறவேண்டும் (1:18—21). இந்தத் தனித்தன்மையுடைய சாட்சியளித்தல் அவர்களது அப்போஸ்தலத்துக்கு சிறப்பான பண்பை அளிக்கிறது. இந்தப் பன்னிருவரும் எக்காலத்திற்கும் திருச்சபையின் அடித்தளமாகின்றனர். "நகரின் மதில் பன்னிரு அடிக்கற்கள் மேல்கட்டப்பட்டிருந்தது. அவற்றின்மேல் செம்மறியின் பன்னிரு அப்போஸ்தலர்களின் பெயர்களும் இருந்தன" (திருவெளி 21:14). பன்னிருவரின் தூது அலுவல், இயேசு விண்ணேற்றமானபின் பரிசுத்த ஆவியின் கொடையால் செயல்முறை பெறுகிறது (லூக் 24:49; அ.ப. 1:8; 2).

பன்னிருவர் இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் (அ.ப. 1.2 தொ). அவர்கள் தொடக்க கிறிஸ்தவச்சமூகத்திற்குப் போதிக்கின்றனர், தலைமை தாங்குகின்றனர் (2:42 தொ). உயிர்ப்புக்குச் சாட்சி பகருகின்றனர் (4:33). கிறிஸ்தவச் சமூகத்திற்குப் பொருட்கள் பங்கீடுவதில் தலைமை தாங்குகின்றனர் (4:34—37; 5:2). இயேசுவின் பெயரால் பேசுகின்றனர் (5:40). அவர் பெயரால் அடையாளங்களும் புதுமைகளையும் செய்கின்றனர் (5:12). வார்த்தையின் பணி அவர்களுடையதாகும் (6:2). பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கவனிக்க அதிகாரம் அளிக்க எழுவர் (தியாக்கோண்கள்) மீது கைவிரிக்கின்றனர் (6:6). வேதகலாபனையால் எருசலேமிலுள்ள கிறிஸ்தவச் சமூகம் சிதறிப் போன பின்னும், எருசலேம் அவர்களின் உறைவிடமாகிறது. அத்திருச்சபையோடு ஒன்றாகின்றனர் (8:1.14.18; 9:27; 11:1). எருசலேம் சமூக மூப்பர்களோடு அவர்கள் திருசசபையின் மேலாண்மையுள்ள சட்டமன்றமாக விளங்குகின்றனர் (15:2.4.22 தொ; 16:4).

ஆதித் திருச்சபையில் பன்னிருவரின் இடம் தெளிவாக உள்ளது. ஆனல் பன்னிருவர் என்பது அப்போஸ்தலப் பதவியின் ஒரு பொருள் பிற சொல்லா என்பது அவ்வளவு தெளிவாக இல்லை. அப்போஸ்தலர் என்ற சொல் ஒருமையில் பவுலின் கடிதங்களில் முதலில் காணப்படுகிறது. அது பேதுரு (1 பேதுரு 1:1;2 பேதுரு 1:1), யாக்கோபு (கலா 1:19) பார்னபா (அ.ப.14:14), மற்றபடி அறியப்படாத அந்திரோனிக்கு, யூனியா (உரோ 16:7) ஆகியோருக்குக் கொடுக்கப்படுகிறது. அப்போஸ்தலர்கள் என்ற சொல் பல இடங்களில் வருகிறது. ஆனால் அனைத்திலும் சூழ்நிலை பன்னிருவரைத்தான் சுட்டுகிறது என்பது தெளிவாக இல்லை (1 கொரி 4:9—13; 9:5; 15:7; 2 பேதுரு 3:2; யூதா 17). பவுல் அப்போஸ்தலத்துவத்தை திருச்சபையின் அருங்கொடைப் பதவிகளில் ஒன்றாகக் குறிக்கிறார் (1 கொரி 12:28 தொ). இறைவாக்கினரும், அப்போஸ்தலர்களும் திருச்சபையின் அடிக்கல்லாவர் (எபே.2:20). பவுல் ஏளனச் செய்யும் "பேர்போன அப்போஸ்தலர்"களின் அடையாளம் தெளிவாயில்லை (2 கொரி 12:11). இவர்கள் 2 கொரி 11:13—இல் வரும் போலி அப்போஸ்தலர்களாக இருக்கலாம். ஆனால் அப்போஸ்தலர்கள் என்ற பட்டம் பன்னிருவருக்கு மட்டுமே உரியதானால், அப்பட்டத்தைப் பெறத்தகுதியுடையவர் வேறுயாரும் இருக்கமுடியாது. தொடக்கத் திருச்சபையின் சில பகுதிகளிலாவது, பன்னிருவரைத் தவிர பிறருக்கு இப்பட்டம் அளிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களில் எல்லாம் லூக்கா இப்பட்டத்தைப் பன்னிருவருக்கும், பவுலுக்கு மட்டுமே வழங்குகிறார். அப்பொல்லோ, திமோத்தே ஆகியோருக்கு இப்பெயர் கொடுக்கப்படுவதேயில்லை. இதற்குக்காரணம், அப்போஸ்தலரின் முன்நிபந்தனையான, இயேசுவோடு வாழ்ந்த சொந்த அனுபவம் இவர்களுக்கு இல்லை என்பதாக இருக்கலாம்.

5. புதிய திருச்சபையில் அப்போஸ்தலத்துவம்:-

பன்னிருவர் மற்ற அப்போஸ்தலர்களுக்கு மேலானவர்கள் என்றாலும், திருச்சபையின் அப்போஸ்தலத்தவம் பரந்த பொருளில் புரிந்து கொள்ளப்படுகிறது. பன்னிருவரின் செயல்களுக்கு மட்டும் வரையறை செய்யப்படவில்லை. "இறைவனால் அனுப்பப்பட்டவர்கள்" ஆக. இயேசு (எபி. 3:1) தனது பிரசன்னத்தையும் வார்த்தையையும் பெருக்க சலுகைபெற்ற ஒரு குழுவை நிறுவ விரும்பியதுபோல், இவர்கள், தங்களது அப்போஸ்தலத்துவத்தைத் தொடர்ந்து நடத்துதலை பிறருக்கு அளித்தனர். எக்காலத்துக்கும் உயிர்த்த இயேசுவுக்கு சாட்சிகளாக அவர்களை எக்காலத்துக்கும் ஆக்கும் சலுகையை அளிப்பதற்கல்ல. ஏனெனில் அதை அவர்கள் மாற்றித்தர முடியாது. ஏற்கெனவே பழைய ஏற்பாட்டில் மேசே, யோசுவாவுக்கு தன் ஆற்றலின் நிறைவை அளித்திருந்தார் (எண். 27:18).அதேபோல் இயேசு பன்னிருவரிடம் ஒப்படைக்கப்பட்ட மேய்ப்புப் பணி காலம் காலமாய்த் தொடர்ந்து நடக்கவிரும்பினார். அவர்களோடு தனிப்பட்ட ஒற்றுமையை முழுவதும் காப்பதுடன், உயிர்த்த இயேசு இக்குழுவுக்கு அப்பாலும் செல்வார்.

இந்த அப்போஸ்தலப் பணி நீட்டிப் பிற்கு, தமது வாழ்நாளிலேயே இயேசு வழிவகுத்தார். பன்னிருவருக்கு அளிக்கப்பட்ட தூது பற்றிய பாரம்பரியத்தைத் தவிர, லூக்கா மற்றொரு பாரம்பரியத்தையும்கொடுக்கிறார். இதன்படி, "ஆண்டவர் வேறு எழுத்திரண்டுபேரை நியமித்து, தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும், இடங்களுக்கும் அவர்களை இருவர் இருவராகத்தமக்கு முன்னால் அனுப்பினார்" (லூக் 10:1). இவர்களுக்கு அளிக்கப்பட்ட தூதுப்பணியும், பன்னிருவருக்கு அளிக்கப்பட்டதின் பண்புகளையே கொண்டிருக்கிறது (10:1-16). ஆகவே இயேசுவின் கருத்தில், அப்போஸ்தலத்தூது பன்னிருவருக்கு மட்டும் உரியதன்று எனத்தெரிகிறது.

பன்னிருவரும் இதே மன நிலையில் தான் செயல்படுகின்றனர். மத்தியா தேர்விலிருந்து, அப்போஸ்தலர்களாக இருக்கும் தகுதி பலசீடர்களுக்கு உண்டு என்பதை அறிந்திருந்தனர் எனத்தெரிகிறது (அ.ப. 1:21 தொ). மத்தியா சரியான முறையில் அப்போஸ்தலர் அல்லர். ஆனால் இறைவன் தேர்ந்தெடுக்கும் பன்னிரண்டாவது சாட்சியாவார். இதைத் தவிர, பவுலைப்போல் பேர்பெற்ற அப்போஸ்தலரான பார்னபா உள்ளார் (14:4.14). பன்னிருவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுவர் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்படாவிட்டாலும் அவர்கள் புதுத் திருச்சபையை நிறுவுகின்றனர். இவ்வாறு, பிலிப்பு, அவரது அதிகாரத்தைப் பன்னிருவர் வரையறை செய்தாலும், சமாரியாவில் திருச்சபையை நிறுவுகிறார் (8:14-25). திருச்சபையில் உயிர்த்த இயேசுவுக்கு சாட்சியம் கூறும் அதிகாரப்பூர்வமான பிரதிநிதி அப்போஸ்தலத்துவம் எக்காலத்திற்கும் பன்னிருவரின் "அப்போஸ்தலிக்கக் குழுவை" அடிப்படையாகக்கொண்டுள்ளது. ஆனால், அவர்கள் யாருக்கு அதிகாரம் அளிக்கிறார்களோ, அவர்களால் செயல்படுத்தப்படுகிறது.

6. பவுல் கருத்தில் அப்போஸ்தலர்:-

பவுலின் அப்போஸ்தலத்தன்மை, தனக்கு உரியமுறையில், இவ்வுலகில் இயேசு வாழ்ந்தபோது, பன்னிருவரைத் தவிர எழுபத்திரண்டு பேரை அனுப்பிய போது சுட்டிக்காட்டியதை உறுதிப்படுத்துகிறது. உயிர்த்த இயேசு விண்ணிலிருந்து, பன்னிருவரைத்தவிர, பவுலையும் அனுப்புகிறார். இந்த அப்போஸ்தலத்தூதின் வழியாக, அப்போஸ்தலத்துவத்தின் தன்மை இன்னும் துல்லியமாக்கப்படும்.

பவுல், அப்போஸ்தவராக இருக்க உயிர்த்த இயேசுவின் காட்சியில் (கலா 1:16; 1 கொரி 4:1; 15:8; அ.ப.9:5.27) தாம் அழைக்கப்பட்டதாக மீண்டும் மீண்டும் கூறுகிறார் (உரோ 1:1; கலா 1:15). அப்போஸ்தலன் இருக்கவேண்டிய தகுதியையும் வெளிப்படையாக எடுத்துக்கூறுகிறார். அப்போஸ்தலர் மனிதரால், அவர்கள் அப்போஸ்தலர்களாயிருந்தாலும் கூட, அனுப்பப்பட்டவரல்லர். அவர் இயேசுவாலே அனுப்பப்பட்டிருக்கவேண்டும். பவுலுக்கு அவரது முதல் தூது அந்தி

யோக்கிய திருச்சபையில் கொடுக்கப் பட்டாலும் (அ.ப. 13:2), இதனால் அவர் உரிமை கொண்டாடவில்லை. ஏனெனில் திருச்சபையின் ஆணை ஒருவரை அப், போஸ்தலனாக்குவதில்லை. தான் பன்னி ருவருக்கும் சமமான அப்போஸ்தலர்தான் என்று அவர் வெளிப்படையாக உரிமை கொண்டாடாவிட்டாலும், அவரது தொனி அதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் இந்த உரிமை கொண்டாடுதல் மட்டும் போதாது. கலா 1–2–இல் வரும் விவரிப்பு, பன்னிருவரும் அதை ஏற்றுக்கொண்டனர் என்று காட்டுகிறது. அவரது உரிமை கொண்டாடுதல் பன்னிருவருடைய தகுதி களை அடிப்படையாகக்கொண்டது. அவை: இயேசுவாலேயே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கவேண்டும்; உயிருள்ள இயேசு வோடு சொந்த அனுபவம் கொண்டிருக்க வேண்டும். பவுலைப் பொருத்தமட்டும் இந்த அனுபவம் உயிர்த்த இயேசுவோடு கொண்டதாகும். அவரது அப்போஸ்தலத் துவம்பற்றி அவரது உறுதி தமஸ்குவிற்குப் போகும்போது பெற்ற அனுபவத்திலி ருந்து எழுகிறது (கலா 1:16). இது மூன்று வடிவங்களில் தரப்படுகின்றது. ஒவ் வொன்றும் அவர் தேர்ந்தெடுக்கப்படு தலை வலியுறுத்துகின்றது. பவுல் புற வினத்தார், அரசர்கள், இஸ்ராயேலர் முன்பு இயேசுவின் பெயரைக் கொண்டு செல்லத் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவியா வார் (அ.ப. 9:15). எல்லா மனிதருக்குமுன் இயேசுவுக்கு அவர் சாட்சியாக இருக் கிறார் (22:15). "நீ சாட்சியம் பகர வேண்டும். புறவினத்தாரிடையே உன்னை அனுப்புகிறேன். நீ அவர்களுடைய கண் களைத்திறப்பாய். அவர்கள் இருளை விட்டு ஒளிக்கு வந்து பேயின் அதிகாரத் திலிருந்து கடவுள் பக்கம் திரும்பச் செய் வாய். இவ்வாறு அவர்கள் என்னில் கொள்ளும் விசுவாசத்தால் பாவமன்னிப் புப்பெற்று, அர்ச்சிக்கப்பட்டவர்களோடு பங்கு அடைவார்கள் (26:16–18). பன்னிரு வருக்கும் இயேசு தோன்றியது போலவே பவுலுக்கும் தோன்றினார். (1 கொரி 15:8). அவருக்கு முன்பே அவர்கள் அப் போஸ்தலர்களாயிருக்கிறார்கள். ஆனால் அவரும் ஒரு அப்போஸ்தலர்தான் (கலா 1:17). எரேமியாவைப்போல் அவர் தாயின் வயிற்றில் இருக்கும்போதே தேர்ந்தெடுக் கப்பட்டு இறை அருளால் அழைக்கப் பட்டார் (கலா 1:15). இறைசித்தத்தால் அப் போஸ்தலராக அழைக்கப்பட்டு (1 கொரி 1:1; 2 கொரி 1:1; எபே 1:1; கொலோ 1:1; 2 திமோ 1:1). நற்செய்தியை அறிவிக்கக் குறிக் கப்பட்டவர் (உரோ 1:1–7). மனிதன் வழி யாக ஏற்படுத்தப்படாமல் இயேசு கிறிஸ்துவினாலும் அவரது தந்தையாகிய கடவுளாலும் அப்போஸ்தலனாய் ஏற்படுத் தப்பட்டவர் (கலா 1). கடவுளிமிருந்தும், இயேசவிடமிருந்து பெற்றக் கட்டளையால் அப்போஸ்தலராவார் (1 திமோ 1:1). தூதரைப்பவராகவும், அப்போஸ்தலராக வும் விசுவாசத்தையும் உண்மையையும் புற வினத்தாருக்குக் கற்பிக்கும் போதகனாக வும் ஏற்படுத்தப்பட்டவர். (1 திமோ 2:7). யூதர்களின் அப்போஸ்தலத்துவம் பேதுரு வுக்கு அளிக்கப்பட்டதுபோல், புறவினத் தாருடைய அப்போஸ்தலத்துவம் பவுலுக்கு அளிக்கப்பட்டது (அ.ப. 9:15; 22:15; உரோ 11:13; கலா 2:8). இந்தப் பணியை இயேசு விடமிருந்தே பெற்றார் (உரோ 1:5). தான் அழைக்கப்பட்டதை இயேசுவோடு மட்டு மல்ல, தந்தையோடும் பவுல் தொடர்பு படுத்துகிறார்.

அப்போஸ்தலராக இருப்பது அருங் கொடை பதவியாகும். மனிதனுடைய வேலையன்று, இறையருளின் வேலையா கும் என்று பவுல் நன்குணர்ந்திருந்தார் (1 கொரி.15:10). கிறிஸ்துவைப் பற்றிய அறி வையும் மகிமையையும் வெளிப்படுத்தும் இறை ஒளியின் விளைவாக இயேசு ஆண்டவர் என்று போதிக்கிறார் (2 கொரி.4:5–6). உண்மை அப்போஸ்தலரின் அடையாளமான அருங்குறிகள் ஆற்றலை க்கொண்டுள்ளார் (அ.ப.15:12; 2 கொரி. 12:12). ஆனால் அவர் நிறுவிய திருச் சபையே அவரது அப்போஸ்தலத்தின் முத்திரையாகும் (1 கொரி.9:2). அப்போஸ் தலர்கள் கிறிஸ்துவின் பணியாளரும் கடவுளுடைய மறைபொருள்களின் கண் காணிப்பாளரும் ஆவார் (1 கொரி.4:1). அவர் ஒப்புரவின் வார்த்தையாகிய (2 கொரி 5:19) சிலுவையைப் பற்றிய போத னையை போதிக்கிறார் (1 கொரி 1:18). அப் போஸ்தலர்கள் கிறிஸ்துவின் தூதுவர் களும் (2 கொரி. 5:20) இறைவனின் உடனு

ழைப்பாளிகளும் (1 கொரி. 3:9; 2 கொரி.6:1) ஆவர். அப்போஸ்தலர்கள் இயேசுவிடம் இருந்து பெற்றுக்கொண்டதையே மக்களுக்குக் கையளிக்கின்றனர் (1 கொரி 11:23; 15:1 தொ). பவுல் அளிக்கும் செய்தி மனிதர்களுடையதன்று இறைவனுடையதே (1 தெச.2:13). கடவுளின் தூதுவரை ஏற்றுக் கொள்வதுபோல் அவரை ஏற்றுக்கொண்ட வர்கள்பேறு பெற்றவர்களாவர் (கலா 4:14). அப்போஸ்தலர்கள் வழியாக முடிவு கால மகிமையின் பணி நிறைவேறுகிறது (2 கொரி 3:7–11). தூதுவர் இந்த இறை யாற்றலையும், மகிமையையும் தனது ஆதாயத்திற்குப் பயன்படுத்தாமல் இருப்ப தற்கு, அப்போஸ்தலர்கள் உலகத்தவரால் வெறுக்கப்படுவர்; துன்புறுத்தப்படுவர்; மனிதர்களுக்கு வாழ்வு அளிக்கப்படும் பொருட்டு, மரணத்திற்குக் கையளிக்கப் படுவர் (2 கொரி 4:7–6:10; 1 கொரி 4:9–13).

செயல்முறையில், போதனை, பணி மேற்பார்வை ஆகியவற்றில் அப்போஸ் தலிக்க அதிகாரம் செயல்படுகிறது. அடிக்கடி பவுல் தனது போதனை அதி காரத்தை எடுத்துக்கூறுகிறார். ஏனெனில் தான் அறிவித்த நற்செய்திக்கு மாறாக வேறொரு நற்செய்தியை அளிப்பவர் களைச் சபிக்க உரிமை கொண்டாடு கிறார் (கலா 1:8 தொ). தனது சொந்த அதிகாரங்களை மற்றவர்களுக்கு வழங் கக்கூடும் என்று நம்பினார் என்பது அவர் திமோத்தேயுமேல் கைகளை விரித்து திரு நிலைப்படுத்தியதிலிருந்து தெரிகிறது (1 திமோ 4:14; 2 திமோ 1:6). இதே செயலை திமோத்தேயு அவருக்குப் பின்வந்தவர் களுக்குச் செய்யலாம் (1 திமோ 5:22). இறுதியாக அவரது அதிகாரம் அவர் நிறு விய திருச்சபைகள்மேல் அவர் செலுத்திய மேற்பார்வையில் செயல்படுகிறது. தீர்ப் பிடுகிறார். தண்டனை அளிக்கிறார் (1 கொரி 5:3 தொ; 1 திமோ 1:20). அத் திருச்சபைகளைப் பார்க்கச் சென்றபோது எல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்துகிறார் (1 கொரி 11:34; 2 கொரி 10:13–16; 2 தெச 3:4). சபை ஒற்றுமைக்காக (1 கொரி 5:4) சமூகத் திடமிருந்து கீழ்ப்படிதலைக் கோருவது எப்படி என்றும் அறிவார் (உரோ 15:18; 1 கொரி 14:37; 2 கொரி 13:3). இந்த அதிகாரம் கொடுமைமிக்கதன்று (2 கொரி 1:24) தேவைப்படும்போது தனது உரிமையையும் விட்டுக் கொடுப்பதும் (1 கொரி 9:12) ஆயனுடைய (அ.ப. 20:28; 1 பேதுரு 5:2–5) பணியாகும் (1 கொரி 9:19). விசுவாசிகளுக்குச் சுமையாக இருப்பதை விட தந்தையைப்போல் தாயைப்போல் அவர்களைப் பேணுகிறார் (1 தெச 2:7–12). அவர்களுக்கு விசுவாசத்தின் மாதிரியை அளிக்கிறார் (1 தெச 1:6; 2 தெச 3:9; 1 கொரி 4:16).

திருச்சபையின் அப்போஸ்தலத்தில் பவுலுக்குத் தனி இடம் கொடுக்கப்பட்டது. அது புறவினத்தாருக்கு அப்போஸ்தல ராக இருப்பதாகும். கிறிஸ்து என்னும் மறை உண்மையைத் தனிச் சிறப்பான முறையில் புரிந்துகொள்கிறார். கிறிஸ் துவ மீட்புத் திட்டத்தில் இந்தத்தனிச் சிறப் பான இடம் அவருக்கே சொந்தமானதா கும். அதைப்பிறருக்கு அளிக்கமுடியாது.

நற்செய்தியைப் புறவினத்தார்க்கு அளிப்பதில் முதலானவர் பவுல் அல்லர். அவருக்கும் முன் ஏற்கனவே பிலிப்பு சாமாரியர்களுக்கு நற்செய்தி அறிவித் திருந்தார் (அ.ப.8). செசரியாவில் உள்ள புறவினத்தார்மேல் பரிசுத்த ஆவி இறங்கி வந்துள்ளார் (அ.ப.10) திருச்சபையின் தொடக்கத்தில் புறவினத்தாருக்கென ஒரு அப்போஸ்தலரை நியமிக்க இறைவன் விரும்பினார். இதைப் பேதுருவுக்குத் தெரிவிக்க பவுல் பெரிதும் முயன்றார். பேதுருவின் தூதராக இருக்கவேண்டும் என்பதற்கல்ல. ஏனெனில் அவர் நேரடி யாகக் கிறிஸ்துவின் தூதராவார். ஆனால் அவரது உழைப்பு வீணாகாதிருக்கும் படிக்கும் திருச்சபையில் பிளவு உண்டா காதிருக்கவும் பன்னிருவரின் தலைவரு க்குத் தனது பணியை எடுத்துக்கூறுகிறார் (கலா 1–2). புறவினத்தார்பால் கிறிஸ்து வின் மறைபொருளை (எபே.3:4) இறைவன் அருளால் நன்கு அறிந்திருந்தார். அதை அவர்களுக்குக் கையளிக்கக் கட்டளை பெற்றிருந்தார். இந்த மறைபொருளை நிறைவேற்றுவதில் துன்பப்படுத்தப்படு கிறார். வேதனை உறுகிறார். கைதியாகு கிறார் (கொலோ 1:24–29; எபே 3:1–21). இத்தகைய தனிச்சிறப்பான, பிறருக்கு

அளிக்கப்படமுடியாத, அருளை பவுல் பெற்றிருந்தார். ஆனால் கிறிஸ்துவின் தூதரின் பாகமும், அப்போஸ்தலத்துவம் பற்றி அவர் கொண்டிருந்த ஆன்மீக அறிவும் ஒருவகையில் எல்லா அப்போஸ் தலர்களுக்கு ஆவியின் ஆண்டவரால் கொடுக்கப்படலாம் (1 கொரி 2:6–16).

7. விசுவாசிகளின் அப்போஸ்தலத்துவம்:-
இது புதிய ஏற்பாட்டில் வெளிப்படை யாகப் படிப்பிக்கப்படவில்லை. ஆனால் நிகழ்ச்சிகள் இதற்கு அடிப்படையாக அமைகின்றன. அப்போஸ்தலத்துவம் பன்னிருவர், பவுல் ஆகியோரின் ஒப்பற்ற முதன்மையான அலுவல் ஆனாலும் தொடக்கத்திலிருந்து, முழுத்திருச்சபை யும் அதைச் செயல்படுத்தியது. சான்றாக, அந்தியோக்கியா, உரோமை ஆகிய இடங் களில் உள்ள திருச்சபைகள் திருச்சபைத் தலைவர்கள் வரும்போது, ஏற்கெனவே அங்கு இருந்தன. பரந்த பொருளில், அப் போஸ்த்தலத்துவம் கிறிஸ்துவின் ஒவ் வொரு சீடரின் அலுவலாக அவர்கள் உலகிற்கு ஒளியாகவும் உப்பாகவும் இருக்கவேண்டும் (மத் 5:13 தொ.). ஒவ் வொருவரும் தமக்குரிய மட்டத்தில், திருச்சபையின் அப்போஸ்தலத்தில் பங் கேற்கவேண்டும். அவர்களுடைய அப் போஸ்தல ஆர்வத்தில் பவுலையும், பன்னி ருவரையும் பின்பற்ற வேண்டும்.

சுருக்கமாக, இவ்வாறு, அப்போஸ்த லர் உயிர்த்த இயேசுவை அறிவிக்கிறார். அவர் ஒரு பாரம்பரியத்தைத் தாங்கிச் செல்பவராவார். முழுத்திருச்சபையும் சேர்ந்த பதவியைக் கொண்டிருக்கிறார். அவர் மற்ற பணியாளர்களை நியமிக்கி றார். ஆனால் மற்ற அப்போஸ்தலர்களை அல்ல. அவர் திருச்சபையின் அடிப்படை நிர்ணயக் கூறு ஆவார். மேற்கூறப்பட்டவை இச் சுருக்கத்தின் கருத்துக்களை எடுத்துக் காட்டவல்லன. அப்போஸ்தலரின் அதி காரம் எருசலேமில் பன்னிருவரின் செயல்களிலும், பவுல் தான் நிறுவிய திருச்சபைகளை ஆண்ட விதத்திலும் மிகத் தெளிவாக்குகிறது பவுல் நிறுவிய திருச் சபைகள் அவரது பொறுப்பாகவே இருந் தன. அவரது தீர்மானிக்கும் அதிகாரம் கொரிந்தில் மட்டும்தான் வாதத்திற்குரிய தாயிற்று. அது அங்கேயே எண்பிக்கப் பட்டது.

மேற்கூறப்பட்ட அப்போஸ்தலப் பதவி யின் பண்புகள் திருச்சபையின் முதல் தலைமுறைக்குப்பின் தொடர முடியாது என்பதற்குச் சான்றுகளாகும். திருச்சபை யின் நிர்ணயிக்கும் கூறு என்ற அளவில், அப்போஸ்தலப் பணி, திருச்சபை முடி யாமல், முடிவுக்கு வரமுடியாது. ஆகை யால் திருச்சபை மற்ற அதிகாரிகளில், அப்போஸ்தல அதிகாரத்தையும் பாராம் பரியத்தில் அப்போஸ்தலிக்கப் போதகத் தையும் பாதுகாத்து வந்தது.

8. பிற்கால கிறிஸ்துவ இலக்கியத்தில் அப்போஸ்தலர்:-
அப்போஸ்தலர் என்ற பட்டமும், பதவி யும் அதை மூலத்தில் கொண்டிருந்தவர் களோடு முடிந்தது எனலாம். அதைப் பிறருக்கு வழங்கமுடியாது. பிற்கால கிறிஸ்துவ இலக்கியங்களில் இப்பெயர் பயன்படும்போது அது உருவகமாகவே பயன்படுகிறது. முதல் நூற்றாண்டுக்குப் பின் புதிய ஏற்பாட்டுப் பொருளில், திருச் சபை அப்போஸ்தலர்களைக் கொண்டி ருக்கவில்லை.

பவுல், யாக்கோபு, பார்னபாவைப் போன்றவர்களைப் புறம்பாக்க வேண்டும் என்ற நோக்கமின்றி, அப்போஸ்தலர் களுக்குப்பின் வந்த காலத்தில் அப்போஸ் தலர் என்ற பெயரைப் பன்னிருவருக்கு மட்டும் சாற்றிக்கூறும் போக்குத் தெரி கிறது. "பன்னிரு அப்போஸ்தலர்" களைப் பற்றிப் பேசும் போக்கு மத் 10:2; திருவெளி 21:14–இல் ஏற்கெனவே காணப்படுகிறது. திதாக்கேயின் தலைப்பான "பன்னிரு அப்போஸ்தலர்கள் எழுதிய புறவினத்தா ருக்கு இயேசுவின் போதனை" என்பது இதைச் சுட்டிக்காட்டுகிறது. இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர்களில் சிலர் இப்பெயரால் தங்களை அழைத்துக் கொண்டார்கள் என்பது திருவெளி 2:2–இல் தெளிவாகுகிறது. இதைத் திருச் சபையின் தலைவர்கள் ஏமாற்றுதல் என்று கண்டனம் செய்தனர். பதித எழுச்சி மூல அப்போஸ்தலர்களின் போதனைக்கும் மாதிரிகளுக்கும் தனது போதகத்தை செயல்முறை ஆகியவற்றின் இறுதி அதி

காரத்தை வரையறை செய்வதற்குத் திருச் சபையைத் தூண்டியது (காண்க எபே.2:20; 3:5). ஆகவே இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையும் அப்போஸ்தலர்கள் அல்லது உடனடி சீடர்களால் எழுதப்பட்டதாகக் கருதப்பட்ட நூல்களின் புதிய ஏற்பாட்டு திருமுறைப்பட்டியலும், அப்போஸ்தலர் களிடமிருந்து வரும் வாரிசு உரிமை உடையபடி மரபுடைய பணியும் வளர்ச்சி யடைந்தன.

இந்த வளர்ச்சி புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் பணி நூலில் மிகத் தெளி வாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஒரே ஒரு இடத்தில் தவிர, இந்நூலில் அப்போஸ் தலர்கள் என்ற சொல் பன்னிருவரையும் அல்லது எருசலேமில் மூப்பர்களோடு சேர்ந்து திருச்சபையை ஆண்டு, அதன் தூது அமைப்பு ஆகியவற்றின் வளர்ச்சி பற்றி அதிகாரப் பூர்வமான தீர்மானம் எடுத்து வந்த ஒரு தனிப்பட்ட குழுவினரை மட்டுமே குறித்தது. அ.ப.14:4.14–இல் பவுலும் பார்பனபாவும், அவர்களுடைய முதல் வேதபோதகப் பயண விவரிப்பில், அப்போஸ்தலர்கள் என்றழைக்கப்படு கிறார்கள்.

அ.பணியின் ஆசிரியர் அப்போஸ்தலர் என்ற பெயரை பவுலுக்கு மறுத்திருக்க மாட்டார். நூலின் பாதியை பவுலின் போதக வாழ்வுக்கு அர்ப்பணிக்கும் அவரது மன நிலை தெளிவாக உள்ளது. நூலின் பெயர் 'அப்போஸ்தலர் பணி' என்பது திருச்சபையின் தொடக்க கால முதல் வருவதாகத் தெரிகிறது. இது அப் போஸ்தலர் பன்னிருவர்தான் என்ற தொடக்கத்திலிருந்து நிறுவப்பட்ட பாரம் பரியத்திற்குச் சான்று பகருகிறது. ஆனால் இப்பன்னிரண்டு எண்ணிக்கை பவுலையும் மற்றும் சிலரைலயும் புறம்பாக்கவில்லை என்பதும் தெளிவு.

அப்போஸ்தலர்களின் திருமுகம்

இது இரண்டாம் நூற்றாண்டின் நம் பிக்கையையும், எதிர்பார்ப்புகளையும் பதி னொரு அப்போஸ்தலர்களும் எழுதிய ஒருமடல் வடிவில் காட்டுகிறது. அதோடு கிறிஸ்து தனது உயிர்ப்பின் பிறகு அவர் களுக்கு வெளிப்படுத்தியவற்றைச் சுருக்கிக் கூறுகிறது.

திருமுறை சேராத இலக்கியங்களில் முக்கியமான இந்நூல், கயிரோவில் கோப் டிக் மொழிக் கைபிரதிகள் கண்டுபிடிக் கப்படும்வரை யாரும் அறியப்படா மல் இருந்தது. (இவ்வாசகம் கி.பி.4–5– நூற் றாண்டைச் சேர்ந்தது). மேலும் எத்தி யோப்பிய மொழியல் ஏறத்தாழ முழுமை யான வாசகமும் இலத்தீன் மொழியல் ஒரு துணுக்கும் கிடைத்துள்ளன. கிரேக்க மூல நூல் கிடைக்கவே இல்லை. இந்த மூன்றையும் சேர்த்து 1919–இல் ஸ்கிமிட் ஒரு நூலை பதிப்பித்தார். இந்தத் திரு முகம் இரண்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம். இதில் மறையியல் ஞானக் கொள்கைகள் இங்கு மங்குமாகக் காணப்பட்டாலும், அதற்கு மாறானவற்றையே பெரும்பகுதியாகக் கொண்டுள்ளது. சான்றாக சீமோனும் செரின்சும் கடுமையாகக் கண்டனம் செய் யப்படுகின்றனர். உடல் உயிர்ப்பு வலி யுறுத்தப்படுகிறது. பெரும்பாலான திரு முறை சேரா இலக்கியங்கள் கிறிஸ்து உயிர்த்தப்பின் வெளிப்படுத்தியதை அடிப் படையாகக் கொண்டவை. இந்நூல் திரு முறை நற்செய்திகள் அப்போஸ்தலர் பணி, பேதுரு வெளிப்பாட்டு நூல், பார்னபா, எர்மா ஆகியோரின் நூல்கள் இளைஞன் இயேசு கல்வி கற்க அனுப்பப் பட்டது பற்றிய பிரபல்யமான கதை போன்றவற்றைக் கொண்டு எழுதப் பட்டது.

இது ஒரு கடிதம்போலத் தொடங்கு கிறது. பதினொரு அப்போஸ்தலர்களால் கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற் கிலும் உள்ள திருச்சபைகளுக்கு எழுதுவ தென்று தொடங்கி, உடனடியாக இயற் கையைக் கடந்த கிறிஸ்துவின் பிறப்பு, புதுமைகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவற் றைப்பற்றிப் பேசுகின்றது. அதன் பிறகு மடல் வடிவம் மறைந்து கிறிஸ்து அவர் களுக்கு அளிக்கும் வெளிப்பாடாக வடிவம் எடுக்கிறது. அவர்கள் கேள்வி கேட்க அதற்கு இயேசு பதில் கூறும் வடிவில் அமைகின்றது. இரண்டாம் வரு கையின்போது நேரம், தன்மை, கிறிஸ்து

வர்களின் உடலின் உயிர்ப்பு, இறுதித் தீர்ப்பு, வேத போதகப் பணி பற்றிய அறிவுரை, பவுலின் வருகை, விவேகமும், விவேகமும் இல்லாத கன்னியர்களை அடையாளம் காணுதல், போன்ற பல செய்திகள் இடம் பெறுகின்றன. இதன் இறுதி கிறிஸ்து வானகம் செல்வதை விவரிக்கிறது. இதில் குறிப்பிடத்தக்க ஒன்று, கிறிஸ்த தாமே மரியாளுக்கு வான தூதர் கபிரியேல் வடிவில் தோன்றிய தாகவும், மரியாளின் உடலில் தோன்றிய தாகவும் குறிப்பிடுகிறது. இது குறிப்பிட விரும்புவது, கிறிஸ்து யாரும் தனக்கு உதவிச் செய்ய விரும்பவில்லை, பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிறக்கவில்லை. மாறாக அவர் செய்ய விரும்பியதைச் செய்தார். ஏனெனில் அவர் அவராகவே இருந்தார் என்பதாம்.

அப்போஸ்தலர் பணி நூல்

(திருமுறை சேர்ந்தது)

1. பெயர்:

அலக்சாந்தர், கன்னிபால் போன்ற புகழ் பெற்ற தலைவர்களின் தீரச் செயல் களை எடுத்துக்கூறும் நூல்களுக்கு செயல் கள், அல்லது பணி நூல், நடபடி என்று பெயர் கொடுப்பது கிரேக்க இலக்கிய மரபாகும். இதைப்பின்பற்றி இந்நூல் ஆசிரியர், பேத்துரு, பவுல் என்ற தனது இருதலைவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியை இந்நூலில் எடுத்துக் கூறுகிறார். அப்போஸ்தலர் பணி என்ற தலைப்பு நூலின் மூலப்பெயராக இல்லாமல் இருக் கலாம். ஆதித் திருச்சபையால், கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் இறுதியை ஒட்டி, கொடுக்கப்பட்டதாக இருக்கலாம். இப் பெயரும் பொருத்தமுடையதென்று கூற முடியாது. ஏனெனில் இந்நூல் எல்லா அப்போஸ்தலர்களின் பணிகளையும் கூற வில்லை அல்லது முக்கிய தலைவர் களான பேதுரு, பவுல் ஆகியோரின் எல்லாச் செயல்களையும் கூறவில்லை. நூல் யோவானைப்பற்றிக் குறிக்கிறது (3:1–11; 4:13–19; 8:14). மற்ற அப்போஸ்தலர் களின் பட்டியலை மட்டும் கொடுக்கிறது (1:13) அல்லது அவர்களை ஒரு குழுவாகக் குறிக்கிறது (1:2–26; 2:14–37). நூல் ஸ்தே வான் (6–7), பிலிப்பு (8), பார்னபா (4:36–37; 11:22–36; 13–15) ஆகியோரைப்பற்றி ஓரளவு விரிவாகக்கூறுகிறது. ஆனால் இவர்கள் மூலப்பன்னிரு அப்போஸ்தலர் களைச் சேர்ந்தவர்கள் அல்லர். மேலும் இப்பெயர் நூலின் உண்மையான பொரு ளடக்கத்தையும் நோக்கத்தையும் வெளிப் படுத்தவில்லை எனலாம்.

இந்நூல் ஒரு வரலாற்று நூலின் இரண்டாம் பகுதியாகும். முதற்பகுதி மூன்றாம் நற்செய்தியாகும் (1:1).

2. ஆசிரியர்:-

ஆசிரியரின் பெயர் நூலில் கொடுக்கப் படவில்லை. ஆனால் மூன்றாம் நற்செய்தி யின் ஆசிரியரே இந்நூலின் ஆசிரியர் ஆவார் என்றும், அந்நற்செய்தியின் தொடர்ச்சியே இந்நூல் என்றும் பரவ லாக ஏற்றுக்கொள்ளப்படும். இரண்டு நூல்களும் தியோபிலுவுக்கு அர்ப்பணிக் கப்பட்டுள்ளது என்பது இரண்டும் தொடர்ச்சியானவை என்று சுட்டுவதாக அமைந்துள்ளது (1:1; லூக்.1:1–4). இலக்கிய நடை அடிப்படையில் இருநூல்களையும் பிரிக்கமுடியாது. இருநூல்களுக்கும் பொதுவான ஆசிரியர் அந்தியோக்கியா வைச் சேர்ந்த லூக்காதான் என்பது விவியத்துக்குப் புறம்பான திருச்சபையின் பாரம்பரியமாகும். இதற்குக் காலத்தால் முந்திய சான்று (கி.பி.160–180) மார்சிய னுக்கு எதிராக லூக்கா நற்செய்திக்கு எழுதப்பட்ட முன்னுரையாகும். இரேனேயு காலத்திலிருந்து வரும் இப்பாரம்பரியத் தை நவீன கால ஆய்வும் ஏற்றுக்கொள் கிறது. அதோடு "நாங்கள்" பகுதியை எடுத் துக்கூறுபவர் லூக்காவே என்றும் அடை யாளம் காண்கிறது. மூன்றாம் நற்செய்தி யும் இந்நூலும் ஒரே ஆசிரியரின் படைப்பே என்பது பலரின் உறுதி. இக் கருத்தின் அடிப்டையில் லூக்காவின் வாழ்க்கைக் குறிப்புகளைக் காண்க: லூக்கா நற்செய்தியாளர்.

3. காலமும், இடமும்:- தமது நற்செய்தி நூலுக்குப் பின் அ.ப.நூலை எழுதுவதாக ஆசிரியர் கூறுகிறார் (1:1) இதைவிடத் துல்லியமான காலக்குறிப்பு நூலில் கொடுக்கப்படவில்லை. லூக்காவின் நற் செய்தி கி.பி.80–85க்கு இடைப்பட்ட காலத் தில் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்

படும் கருத்தை ஏற்றுக்கொண்டால், அ.ப. நூல் இக்காலத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்று கூறலாம்.

அ.ப.நூல் பவுல் உரோமையில் சிறைக் கைதியாக இருந்த நிகழ்ச்சியோடு முடிகிறது ஆகவே இந்நூல் கி.பி.61–63–ஐ ஒட்டித் தோன்றியருக்க வேண்டும் என்பர் சிலர். ஆனால் இது, நூலின் முடிவுரையைத் தவறாகப் புரிந்து கொண்டதின் விளைவாகும். நூல் தோன்றுவதற்கு முன்பே பவுலின் விசாரனை ஏற்கெனவே நடந்திருந்தால், அதன் முடிவை லூக்கா விட்டுவிட்டிருக்க மாட்டார் என்று வாதிடுவர். மேலும் பவுலின் இறப்பைப் பற்றியும், உரோமைத் திருச்சபையைப் பற்றியும் நூல் ஒன்றும் கூறாமையையும் சுட்டிக் காட்டுவர். ஆனால் நூலின் முழு அமைப்பையும் கருத்தில்கொண்டு, அதன் முடிவுரையின் பொருளைச் சரியாகப் புரிந்து கொண்டால், ஆசிரியர் நூலைத் திடீரென்று முடிப்பதற்கு மற்ற காரணங்கள் இருக்கக்கூடும் என்பது புரியும். நூலைப் பற்றிய ஆய்வு, ஆசிரியர் தனது பொருள்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுக்கிறார் என்று காட்டுகிறது. அ.ப.யில் காணப்படும் எருசலேமிலிருந்து உரோமை வரை என்ற திட்டம், நற்செய்தில் காணப்படும் கலிலேயவிலிருந்து எருசலேம்வரை என்ற திட்டத்தோடு ஒத்துப்போகிறது, இணையாக உள்ளது. அக்கால உலகின் மையமான உரோமையை அ.ப. அடைந்தவுடன் திருச்சபை விரிவடைதல் பற்றிய விவரிப்பில் ஒரு கட்டம் நிறைவெய்துகிறது. அடைய முடியாதது அடையப்பட்டு விட்டது. நற்செய்தி உலகளாவிய நற்செய்தியாகமாறிவிட்டது.

இந்நூலின் மூலங்களில் உயர்தன்மையும், வாய்மொழிப் பாரம்பரியத்துக்குக் காட்டும் பிரமாணிக்கமும், பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக்காட்டாகப் பயன்படும் வாசகங்களின் செமித்தியத் தன்மையும், இந்நூல் மிகவும் பிற்காலத்தில் தோன்றியிருக்கமுடியாது என்று காட்டுகின்றன. கி.பி.95–ஐ ஒட்டி உரோமை கிளமெண்து கொரிந்தியத் திருச்சபைக்கு எழுதிய முதல் திருமுகத்திற்கும் இந்நூலுக்குமிடையே சொற்றொடர்களில் ஒற்றுமை உள்ளது. கி.பி 95–க்கும் பின்வரும் தொடக்ககாலத் திருச்சபை மற்ற ஏடுகளிலும் இந்நூல் சுட்டிக்காட்டப்படுகிறது. இவை இந்நூல் முதல் நூற்றாண்டின் முடிவிற்கு முன்பே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன. மேலும் நூலில், படிமரபுடைய ஆயர் பதவித் தன்மை பற்றிய சுவடுகள் இன்மை (20:28), இந்நூல் மேய்ப்புப் பணித் திருமுகங்களுக்கு முன் தோற்றியிருக்கவேண்டும் என்று காட்டுகிறது (காண்க: 1 திமோ 3:2; தீத்து 1:7). ஆனால் இதே திருமுகங்களில் ஆசிரியர் அ.ப. நூலை அறிந்திருக்க வேண்டும் என்று 2 திமோ 3:12 வலுவாகச் சுட்டுகிறது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்நூல் கி.பி.70–90–க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் கருதுவர்.

இந்நூல் எழுதப்பட்ட இடம் பற்றி உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. கி.பி.60–62–க்கு இடையில் எழுதப்பட்டிருந்தால் உரோமையில் எழுதப்பட்டிருக்கலாம். பிற்காலத்தில் தோன்றியது என்றால் கிரேக்க நாட்டில் அல்லது அக்காயா அல்லது போயேத்தியாவில் தோன்றியிருக்கலாம் என்ற பாரம்பரியம் ஒன்று உண்டு.

4. மூலங்கள்:– இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளவற்றையெல்லாம் ஆசிரியர் நேரடியாகப் பார்த்தவர் அல்லர் என்பதையும், அவர் சில பகுதிகளைச் சுதந்திரமாகப்படைத்துள்ளார் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். மேலும் நூலை வாசிப்போரின் நன்மைக்காக ஆசிரியர் தனது வரலாற்றுக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துள்ளார். சில வற்றைச் சுருக்கி வரைந்துள்ளார். சில வற்றை அருகருகே வைத்துள்ளார் சில வற்றைத் தொகுத்துத் தந்துள்ளார். இத்தகைய இலக்கியச் செயல்களுக்கும், "நாங்கள்" என்ற பகுதிகளுக்கும், ஆசிரியர் இந்நூலை எழுதியபோது எத்தகைய மூலங்களைப் பயன்படுத்தினார் என்ற கேள்வி எழும், இந்த மூலங்களைப் பிரித்துக் காட்ட பலமுயற்சிகள் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் சில: 1) பாலஸ்தீன அல்லது எருசலேம் மூலம்: 1:6; 2:40; 3:1–4:31; 4:36; 5:11; 5:17–42; 8:5–40; 9:32–11: 18; 12:1–23. இப்பகுதிகளுக்கு ஆசிரியர் பிற சாட்சிகளைச் சார்ந்திருப்பது தெளிவாக உள்ளது. 2) அந்தியோக்கியா மூலம்: 6:1–6; 6:8–8:4; 11:19–30; 13:3–14:28; 15: 35–28:31. பவுலின் இரண்டாம் பயணத்திற்குமுன் வரும் பொருள்களுக்கு ஆசிரியர் வாய்மொழிப் பாரம்பரியத்தையும், சிறுசிறு நிகழ்ச்சிகளையும் சார்ந்திருக்கவேண்டும். இவை ஒன்றுக்கு மேற்பட்டவைகளாக இருக்க வேண்டும்.

நூலின் இரண்டாம் பகுதியில் "நாங்கள்" என்ற பகுதிகள் முக்கியத்துவம் பெறுகின்றன (16:10–17; 20:5–16; 21:1–18; 27:1–28:6). இவை இப்பகுதிகளை எழுபவர். அந் நிகழ்ச்சிகள் நடந்தபோது அங்கு இருந்தார் என்று சுட்டுகின்றன. இவற்றிலிருந்து எழுதுபவர் துரோவாவில் பவுலோடு இவரது இரண்டாம் பயணத்தில் சேர்ந்து, அவரோடு பிலிப்பைவரை பயணம் செய்தார் என்றும் பவுல் தன் மூன்றாம் பயணத்தில் அங்குத் திரும்பிய போது அவரோடு ஆசிரியர் சேர்ந்து கொண்டார் என்றும், அதிலிருந்து நூலின் முடிவுவரை பவுலோடு இருந்தார் என்றும் அறிகிறோம். இப்பகுதிகளைப் பவுலின் ஒரு தோழன் எழுதியப் பயணக்கையேட்டிலிருந்து எடுக்கப்பட்டது என்பர் சிலர். இந்தத் தோழர் முழு நூலின் ஆசிரியரிலிருந்து வேறுபட்டவர் என்றும் காட்டச் சிலர் முயன்றுள்ளனர். ஆனால் இக் கருத்து பல அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

நடையில் மட்டுமன்று, தனது பொருள்களையும், மூலங்களையும் பயன்படுத்தும் முறையிலும் ஆசிரியரின் கரம் நூல் முழுவதும் காணப்படுகின்றது. நூல் முழுவதும் சில குறிப்பிட்ட அக்கறையும், செயல்படும் முறைகளும் காணப்படுகின்றன. இவை ஆசிரியரிடமிருந்தே தோன்றியிருக்கவேண்டும். இவை ஆசிரியர் தன் மூலங்களை எப்படிப் பயன்படுத்தியிருக்கக்கூடும் என்றும், மறைமுகமாக மூலங்களைப் பற்றியும் சுட்டிக்காட்டுகின்றன. சான்றாக: பவுல் மனந்திரும்பியது பற்றிய மூன்று உரைகளை (9:22:26) ஒப்பிடும் போது, ஒவ்வொரு தனிப்பட்ட உரையிலும் ஆசிரியர் தனது செய்தியை எடுத்துரைக்க மூலங்களைத் தழுவி அமைப்பதில் போதிய சுதந்திரம் எடுத்துக்கொண்டார் என்று தெரிகிறது. கிறிஸ்துவின் பால பருவம் பற்றிய நற்செய்தியில் பயன்படுத்திய முறையையே ஐம்பதாம் நாள் விழா நிகழ்ச்சியின் பொருளை வெளிக்கொணர்தலிலும் பயன்படுத்துகிறார். மற்றொரு சான்று: அரேயோப்பாகுவில் பவுலின் பேச்சுக்கு முன்னுரை (17:16–21) சாட்சி மூலத்திலிருந்து எடுக்கப்பட்டதைவிட இலக்கிய ஏட்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறலாம். அது வரலாற்றைக் கூறுவதுபோல் தோன்றினாலும், ஒரு சூழ்நிலையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும். உரோமையில் நிகழும் கடைசிக்காட்சி (28:17–31) வரலாற்றுச்செய்தியை விட இறையியல் செய்தியையே கொண்டுள்ளது எனலாம். இது வரைக்கூறப்பட்ட செய்திகளின் இறுதி உச்சநிலையாக இருக்கவேண்டும் என்று ஆசிரியர் வேண்டுமென்றே இப் பகுதியை அமைப்பதாகத் தெரிகிறது. நூலில் விவரிக்கப்படும் சூழ்நிலைகள் முதல் நூற்றாண்டின் மத்தியில், ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே பொருந்தியது என்பது நூலின் மூலங்களின் நம்பத் தகுந்த தன்மையை உறுதியாக நிறுவுகிறது. இது நேரடிச் சாட்சி விவரிப்பிலிருந்து மட்டுமே கிடைக்கக் கூடியது.

எருசலேமில் தொடக்கக் காலச் சபை பற்றிய நிகழ்ச்சியுரைகளை மதிப்பீடு செய்வது அவ்வளவு எளிதல்ல. இவை பொதுவான விவரிப்புகளே ஆகும். அனானியா, சப்பீரா ஆகியோரைப் பற்றிய நிகழ்ச்சியுரை (5:1–11), பேதுரு தப்பியது (12:6–17) போன்றவற்றை ஆசிரியர் தனிப்பட்டோரிடமிருந்து பெற்றிருக்கவேண்டும். நூலில் இந்தத் தொடக்கப்பகுதிகளில் தான் செமித்தியப் பண்புகள் அதிகம் காணப்படுகின்றன. நடந்திருக்கக் கூடிய உண்மையை, அது கூறப்பட்டிருக்கும் விவிலிய மொழி, உருவங்களிலிருந்து பிரித்தெடுப்பது மிகக்கடினமானதாகும். இந்த செமித்தியப் பண்புகளே, நூலின்

இறுதியான மூலங்கள், சமூகத்தில் நிலவிய பாரம்பரியங்களே என்று சுட்டுகின்றன.

பல்வேறு மூலங்களைப் பயன்படுத்தி லூக்கா அப்போஸ்தலர் பணி நூலை எழுதுகிறார் என்பது தெளிவு, அவற்றையெல்லாம் ஒன்றித்து நூலுக்குப் பெரிய ஒற்றுமை அளிக்கிறார்.

5. நடையும் இலக்கியக் கூறுகளும்:-

அப்போஸ்தலர் பணி நூலின் நடை மற்ற புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களைவிட இதன் ஆசிரியர் ஓர் இலக்கிய மனிதனாவார் என்று காட்டுகிறது. அவரது சொற்றொகுதி பரந்தது, செழிப்பானது. பொதுவாக நல்ல கிரேக்க நடையில் எழுதுகிறார். நடை ஆற்றொழுக்கோடு அமைந்துள்ளது. ஆசிரியர் மொழியைப் பயன்படுத்தும்முறை எளிதில் வளைந்து கொடுக்கக்கூடியது. அக்கால இலக்கிய மரபுக்கேற்ப எத்தவறுமின்றி பேச்சுக்களை அமைக்கிறார். சூழ்நிலைக்கேற்ப நடையைப் பயன்படுத்தும் அவரது ஆற்றல் பெருமளவு நூலைக் கவர்ச்சி மிக்கதாக்குகிறது எனலாம். சான்றுகள்: பேதுரு தப்பித்தலில் காணப்படும் நகைச்சுவை (12:6–17), 23:12–35–இல் காணப்படும் எதிர்பார்ப்பு நிலை, பவுலின் பிரியாவிடையில் காணப்படும் உருக்கம் (20:18–38). இந்த வளைந்து கொடுக்கும் தன்மை இருந்தாலும், சொற்றொகுதியிலும் நடையிலும் ஒரு நிலையான தன்மை இருக்கிறது. அது இந்நூலை ஒரே ஆசிரியரின் படைப்பாக்குகிறது எனலாம்.

நிகழ்ச்சியுரை உயிருள்ளதாகவும் உருக்கமானதாகவும் நாடகப்பாணியுடையதாகவும் உள்ளது. நூலில் காணப்படும் பொதுப்பாணித் தொனி, அவ்வப்போது காணப்படும் கொய்னே மரபையும், செமித்தியப் பண்புகளையும் பிரித்துக் காட்டுகிறது. இது ஆட்களுக்கும், நிகழ்ச்சிகளின் சூழ்நிலைகளுக்கும் எற்ப மொழி யைச் சரிசெய்ய ஆசிரியர் செய்யும் முயற்சியின் விளைவாகும். இவை எருசலேம் சமூகம் பற்றி அவருக்குக் கிடைத்த வாய்மொழிப் பாரம்பரியங்களில் காணப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் இப்பகுதியில்தான் பெரும்பாலான நடை வேறுபாடுகள் காணப்படுகின்றன. "நாங்கள்" என்ற பகுதிகள் உயிருள்ளதாகவும் கவர்ச்சியுடன் விவரிக்கப்பட்டதாயும் பல துல்லியமான விவரங்களைக் கொண்டதாயும் உள்ளன. அடிக்கடி ஆட்களின் பெயர்களும் காலவரைக் குறிப்புகளும் கூறப்படுகின்றன (18:11; 19:8–10; 20:31; 24:27; 28:30). கோட்பாடுகளை விளக்கும் இறையியல் வல்லுநரைப் போல் அல்லது ஒரு நாடக ஆசிரியரைப்போல், நூலின் ஆசிரியர் போதிக்கின்றார். சிறுசிறு காட்சிகளை விவரிக்கிறார். பெரும்பாலும் இவற்றிடையே தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை; ஆனால் இவற்றின் வழியாக வாசகரின் மனதில் தனது செய்தியைப் பதிக்கிறார். இதில் வறட்சியான ஆய்வுகளில் தனது செய்தியை எடுத்துக்கூறவில்லை; படங்கள் மூலம் இறையியலைப் போதிக்கிறார். இதில் வரலாற்று, இறையியல் குறிப்புகள் பின்னிப்பிணைந்துள்ளன. பழக்கப்படாதவர்களுக்கு நேரடி வரலாறாகத் தோன்றுபவற்றை, லூக்கா செயல்படும் முறையில் நோக்கினால் இறையியல் ஓட்டத்தைக் காணலாம்.

நூலின் இலக்கிய அமைப்பின் இரு கூறுகளைப் பற்றி ஒரு சிறிது கூறலாம். 1) சுருக்க விவரிப்புகள்: தொடக்ககாலத் திருச்சபையின் வளர்ச்சி, தன்மை ஆகியவற்றை விவரிக்க அல்லது குறிப்பிட்ட விவரிப்புகளுக்குப்பின் பொதுவாகக் கூற மூன்று வகையான சுருக்க விவரிப்புகளை ஆசிரியர் அமைத்துள்ளார். இவை ஆசிரியர் விவரங்களைப்பற்றி அக்கறை கொண்டிருந்தாலும், இறைவார்த்தை பரவுவது அடைந்து கொண்டிருந்த முன்னேற்றத்தை வாசகர்களுக்கு நினைவுபடுத்தவே பயன்படுகின்றன. அவை: அ) பெரியவை. 2:42–47; 4:32–35; 5:11–16...இவை திருச்சபை அதன் வசந்த காலத்தில் வளர்ச்சியுற்றது பற்றி கருத்தியலான நோக்கைக் கொடுக்கின்றன. இவை ஒரு வேளை வேண்டுமென்றே அமைக்கப்பட்டவையாக அல்லது தொகுக்கப்பட்டவையாக இருக்கலாம். ஆ) சிறியவை: 1:14; 6:7; 9:31; 12:24; 16:5; 19:20; 28:30–31; இவை பொதுவாக ஒரு வாக்கியமாகும். இவை நூலை ஆறு வரலாற்றுப் பகுதிகளாகப் பிரிக்கப்பயன்

படுகின்றது என்று சிலர் கருதுவர். இ) எண்ணிக்கை அடிப்படை கொண்டவை: 2:41; 4:4; 5:14; 6:1–7; 11:21.24; 12:24; 14:1; 19:20. இவற்றில் சில மேலே கூறப்பட்ட இரண்டு வகையில் ஏதாவது ஒன்றைச் சேர்ந்தவையாக இருக்கலாம். இவை திருச்சபையின் வளர்ச்சியைக் காட்டுகின்றன. 2. உரைகள்: ஏறக்குறைய நூலில் மூன்றில் ஒரு பகுதி உரைகளாக அமைந்துள்ளது. இவற்றை இலக்கிய யுக்தியாக ஆசிரியர் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. வெறுமனே நிகழ்ச்சியுரைகளைக் கொடுப்பதற்குப் பதிலாக, லூக்கா உரைகளை அடிக்கடிப் பயன்படுத்தியிருக்கிறார். இவை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய உளவியல் ஆய்வு, அல்லது சிந்தனையின் மையை ஈடுசெய்கின்றன. முக்கிய பாத்திரங்களின் வாயிலிருந்து வரும் உரைகள், அவர்கள் தொடர்புகொண்ட நிகழ்ச்சிகளின் பொருளை வெளிக்கொணர்கின்றன.

இறுதி ஆய்வில், நூலில் வரும் உரைகள் லூக்காவின் படைப்பே ஆகும். அவரது நடை தெளிவாக உள்ளது; நூல் முழுவதும் காணப்படுகிறது. சில உரைகள், வரலாற்று விவரங்களில் கருத்து செலுத்தாமல், சுதந்திரமாக அமைக்கப்பட்டுள்ளன. மற்றவை, முதல் அப்போஸ்தலத் தலைமுறையில் மறைபரப்புப் போதகத்தைப் பிரதிபலிக்கின்றன. செய்தி அளிக்கும் உரைகள் என்றழைக்கப்படும் உரைகள் (பேதுருவுடையவை: 2:14–39; 3:11–26; 4:8–12; 5:29–32; 10:34–43; அல்லது பவுலினுடையவை: 13:15–41;17:22 தொ; 20:18 தொ; 22:3 தொ; 24:10 தொ; 26:2 தொ). அப்போஸ்தலத் தலைமுறையின் மறைபரப்புப் போதகத்தைச் சேர்ந்தவையாகும். இவை யாவும் பேதுருவோ பவுலோ கூறியதை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே தரவில்லை. ஏனெனில் அதற்கு இவை மிகக் குறுகியவையாகும். இவை தொடக்கக்கால அப்போஸ்தலச் செய்தியுரையை எதிரொலித்தாலும், இவற்றின் எல்லா விவரங்களையும் பிரதிபலிக்கவேண்டிய அவசியமில்லை. இவற்றின் அமைப்பு ஒரேமாதிரியானவை. இவை லூக்காவின் இறையியலாலும் சொல்லியலாலும் முலாம் பூசப்பட்டுள்ளன எனலாம். இவற்றில் பேதுருவினுடையவை எவை லூக்காவினுடையவை எவை என்று பிரித்துக்காட்டுவது எளிதன்று. பொதுவாக, இவை லூக்காவின் படைப்பாகக் கருதப்படுவதே மேல். அவரது வாசகர்களின் நன்மைக்காகவும், அவரது வரலாற்றை முன்னேறச் செய்வதற்காகவும் இவை அமைக்கப்பட்டவையாகும். இக்கருத்து பவுலினுடைய மற்ற உரைகளுக்கும் (17:22–31; 20:18–35; 22:3–21; 24:10–21; 26:1–23; 28:17–20.25–29), ஸ்தேவானின் உரைக்கும் (7:2–53) உண்மையாகப் பொருந்தும். அப்போஸ்தலப் பணி நூலில்வரும் உரைகள் மரபுமுறை கிரேக்க வரலாற்று நூல்களில் முக்கிய பாத்திரங்களின் வாயிலிருந்து வரும் பேச்சுகளோடும், கிரேக்கத் துன்பியல் நாடகங்களில் வரும் கூட்டுப் பாடல்களோடும ஒப்பிடப்பட்டுள்ளன. இவை, மத்தேயு நற்செய்தியில் வரும் இயேசுவின் பெரிய மறை உரைகளுக்கு ஒத்தவையாகும். வார்த்தை பரவுவதின் முக்கிய கட்டங்களைக் குறிக்கின்றன.

6. வாசகங்கள்:- புதிய ஏற்பாட்டு நூல்களில் அப்போஸ்தலர் பணிநூல் இரண்டு கிரேக்க வாசகங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்ற சிறப்புடையதாகும். ஒன்று அலக்சாந்திரியா அல்லது எகிப்திய வாசகம், மற்றது மேலைநாட்டு வாசகம். பின்னதை இரேனேயு, சிப்ரியன், அகுஸ்தீன, எப்பிரேம் போன்ற திருச்சபைத்தந்தையர் பயன்படுத்தியுள்ளனர். இது முன்னதைப்போல் பழமையானது ஆனாலும், அதைவிட பத்தில் ஒரு மடங்கு நீண்டது. இதில் ஒருவகைப் போக்கைக் கண்டுணர முடிகிறது. நயமற்றவை நயமாக்கப்படுகின்றன. மறைந்திருப்பவை வெளிக் கொணரப்படுகின்றன. சித்திரத் தன்மை கொண்டுள்ளது. பேதுருவுக்கு அளிக்கப்படும் முதன்மையையும், மேன்மையையும் அதிகமாக்கும் போக்கு காணப்படுகிறது. யூத எதிர்ப்புப் போக்கு காணப்படுகிறது. இதில் பல பதங்களும் வாக்குகளும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இரண்டு வாசங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளை ஆராய்ந்து லூக்

காவே இரண்டு பதிப்புகளுக்கும் காரண மாவார் என்ற கருத்துக்களைச் சில அறிஞர்கள் ஒரு காலத்தில் கூறிவந்தனர். மேலைய நாட்டு வாசகம் எகிப்திய வாசகத்தை வேண்டுமென்றே திருத்தி அமைத்த பதிப்பாகும் என்று பல ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். பொருள் அளவில் இரண்டும் வேறுபடும் பகுதிகள் :13;27;15:29; 18:27; 19:1; 28:31. சில இடங்களில் எகிப்திய வாசகத்தைவிட மேல்நாட்டு வாசகம் மேலானதாகக் கருதப்படுகிறது (12:10; 19:9; 20:15; 28:16).

இந்த நூலின் மூலமொழி என்ன? அ.ப.1–15 என்ற பகுதி சிலதவறுகளோடும், செமித்திய பண்புகளின் சுவடுகளோடும் ஆசிரியரால் மொழி பெயர்க்கப் பட்டது என்பர் சிலர். ஆனால் இந்தச் செமித்திய பண்புகள் இந்நூலில் காணப் படும் விதத்தில், ஏற்கெனவே கிரேக்கத் தில் மொழிபெயர்க்கப்பட்டு, ஆசிரியருக்குக்கிடைததிருக்க வேண்டும் என்பர் வேறு சிலர். யூத மரபுமுறை வாசகத்தையோ எழுபது நூல் வாசகத்தையோ சேராத பழைய ஏற்பாட்டு எடுத்துக் காட்டுகளில் பல, அக்காலத்தில் கிறிஸ்துவப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக இருந் திருக்கவேண்டும். குறிப்பாகக் கிறிஸ்துவத்தன்மை கொண்ட கலைசொற்களும் பதங்களும் பயன்படுத்தப்படுவதும், எழுபது நூலை அடிப்படையாகக் கொண்டு சொற்றொடர்களை வேண்டுமென்றே அமைப்பதும், இந்நூல் புறமத்தினருக்காக எழுதப்பட்டதன்று என்று காட்டுகிறது.

7. நூலின் நோக்கம்:- லூக்கா எழுதிய நற்செய்தியின் இரண்டாம் பகுதி, இயேசு எருசலேமை நோக்கிச் செய்த பயணத்தை விவரிக்கிறது. அங்கு கிறிஸ்து மீட்பின் மையச் செயலை நிறைவேற்றவேண்டும். அப்போஸ்தலர் பணி நூலின் இயக்கம் எருசலேமிலிருந்து பிரிந்துவிரிந்து செல்லுகிறது; வென்ற மீட்பு எங்கும் பரவ வேண்டும்; 1:8–இல் பரிசுத்த ஆவியின் ஆற்றலால் தமது சாட்சிகளாக இருக்கும் படி அப்போஸ்தலர்களை கிறிஸ்துவே அனுப்புகிறார். அவர் கட்டளையிட்ட படியே அவர்களும் செயலாற்றுகின்றனர். முதலில் எருசலேமிலும் (அதி:1–5) பின்பு யூதேயா சமாரியாவிலும் (6–8), பின்பு உலகின் எல்லை வரை அதாவது உரோமைவரை (9–28) அவர்கள் சாட்சி பகர்கின்றனர். குறிப்பாக இறுதிப் பகுதியில் தான் பரிசுத்த ஆவி வழிகாட்டுதல் தெளிவாக உள்ளது. இதுபற்றி இறையியல் போதகத்தில் பார்ப்போம். புறவினத் தார்பால் தூது, இறைவனது தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட திருவுளமாகும், என்று வாசகர்களின் மனதில் பதிய வைக்க ஆசிரியர் அக்கறை கொள்கிறார்.

இந்த உலகெலாம் அடங்கிய புவியியல் அடிப்படையில் திருச்சபை பரவியதன் முதல் துணை முடிவு, யூதத்துவத்தின் உரிமைச் சொத்து புறவினத்தாருக்கும் அளிக்கப்படுகிறது என்பதாகும். யூதர்கள் நிராகரித்த பின்தான், மறைபரப்புப் பணியாளர்கள் புறவினத்தாரிடம் செல்லுகின்றனர். ஒருமுறை ஸ்தேவானாலும் (7:51–53) மும்முறை பவுலாலும் (13:45–47; 18:6–7; 28:24–28) யூதர்களின் இந்த முரண்டுப்பிடியான எதிர்ப்பு வெளிப்படையாக அறிவிக்கப்படுகிறது. மும்முறை பவுல் புறவினத்தாருக்கு மீட்பைத் தொடர்ந்து அறிவிக்கிறார். ஸ்தேவான் மறைக்காகத் துன்பப் பட்டதிலிருந்து முதல் கிறிஸ்துவச் சமூகம் தோன்கிறது (11:9). கிறிஸ்துவம் யூதத்திலிருந்து தவறிப் போனதன்று; அதன் பின் வந்த வாரிசு ஆகும் என்று ஆசிரியர் எப்போதும் வலியுறுத்துகிறார். கிறிஸ்துவம் உயிர்ப்பின் நம்பிக்கையில் மையம்கொண்டுள்ளது. யூதத்துவம் உயிர்ப்பின் நம்பிக்கையில் மறைமுகமாகவேனும் பங்கு கொண்டிருந்தது (23:6–8; 26:5. 30–31; 28:20). ஆனால் யூதர்கள் இந்த நம்பிக்கை நிறைவேறுதலை மட்டும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

உலகமனைத்திற்கும் கிறிஸ்து அளிக்கும் தூதின் மற்றொரு துணை முடிவு, கிறிஸ்துவத்திற்கு எதிர்ப்பு இருக்கமுடியாது என்பதாகும். அப்படி ஏதாவது இருந்தால் அது அறியாமையின் விளைவாகும் என்றும் விளக்கப்படுகிறது (23:29; 25:18–19; 26–24). மனந்திருப்பியவர்களின் மேன்மை கவனமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது (17:4). உரோமைப் பேரரசின் அதி

காரிகளோடு திருச்சபை கொண்ட தொடர்பு சிறப்பான முக்கியத்துவம் உடையதாகும். உரோமையும் அதன் அதிகாரிகளும் திருச்சபையை ஏற்றுக்கொள்வதாகவும் அதற்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும் லூக்கா காட்டுகிறார் (10; 13:7–12; 16:19–24; 35–40; 18:12–1 7; 19:23–41; 28:7–10). பவுலின் உரோமைப் பயணம், அன்றைய உலகின் மையமான உரோமையில் நற்செய்தியைப் போதிக்க பவுலுக்கு வாய்ப்பளிக்கும் இறைத் திட்டத்தின் ஒரு சாதனமாகவே காட்டப்படுகிறது.

பவுலும் அவர் போதித்தகிறிஸ்தவமும், உரோமை அதிகாரிகளிடம் கொண்டிருந்த சலுகையை எடுத்துக் கூறுவதில் லூக்காகாட்டும் அக்கறையையும் எடுத்துக் காட்டி, கிறிஸ்துவத்திற்கு ஒரு காப்புரை நூலைப் படைப்பதே லூக்காவின் நோக்கம் என்று கூறியுள்ளனர் பல ஆய்வாளர்கள். ஆனால் இந்நூல் உரோமையர்களுக்காக அல்ல, மாறாகக் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டதாகும். எதுவும் கிறிஸ்தவத்தை எதிர்த்து நிற்கமுடியாது, எதிர்காவும் விரும்பாது என்ற இறையியல் நோக்கு மிகுந்த ஆழமானதாகும். இந்த இறையியல் நோக்கே நூலின் இறுதிப்பகுதியை நிர்ணயிக்கிறது. பவுல் குற்றம் சாட்டப் பெற்று உரோமையில் உள்ளார். எந்த முடிவும் இன்றி நூல் முடிகிறது என்பதைக்கண்டு பலர் திகைப்புறுகின்றனர். ஆனால் பவுலின் வழக்கு விசாரணையையோ அவரது விடுதலையையோ எடுத்துக்கூறுவது ஆசிரியர் கூற விரும்பியவற்றில் குழப்ப மட்டுமே பயன்பட்டிருக்கும். நூல் அமைந்திருக்கும் விதத்தில் இறுதிக்காட்சி நூலின் உச்ச நிலையாகும். ஏனெனில் அப்போஸ்தலர் பணிநூல் பரிசுத்த ஆவியின் ஆற்றலில் கிறிஸ்துவம் எல்லா நாடுகளிலும் எல்லா மக்களிடையேயும் பரவும் வரலாற்றையும் அது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதின் முன்னறிவிக்கும் வரலாற்றையும் எடுத்துக் கூறுகிறது.

8. நூலின் திட்டமும் பொருளடக்கமும்:-

1:8–ல் அப்போஸ்தலர்களுக்கு ஆண்டவர் அளித்த கட்டளைக்கு ஏற்ப லூக்கா தன் நூலைத் திட்டம் செய்து பொருளடக்கத்தைத் தருவதாகத் தெரிகிறது. இது திருச்சபையின் தொடர்ச்சியான வளர்ச்சியையும் அதன் நலனைப் பாதிக்கும் உள்ளார்ந்த ஆபத்துக்களையும், அதன் தனிச்சிறப்பான பணியமைப்புகளையும் விவரிக்கிறது.

I. பாலஸ்தீனத்தில் மறைபரப்புத்தூது (1:1–9:43)
   - அ. மறைபரப்பு யுகத்தின் அடிப்படை (1:1–2:13)
   - ஆ. எருசலேமில் மறைபரப்பும் தூதும் யூத கிறிஸ்தவச் சமூகமும் (2:14–8:3)
   - இ. யூதேயாவிலும் சமாரியாவிலும் மறைபரப்புத்தூது (8:4–9:43)

II. உலக எல்லைவரை மறைபரப்புத்தூது (10:1–28:31)
   - அ) புறவினத்ததாருக்குத் தூது தொடங்குதலும் நிறுவப்படுதலும் (10:1–15:35)
     1) பேதுருவின் பணி (10:1–12:25)
     2) பவுலின் முதல் மறைபரப்புப் பயணம் (13:1–14:28)
     3) அப்போஸ்தல சங்கம் (15:1–35)
   - ஆ) பவுலின் உலகலாவிய மறைபரப்புத்தூது (15:36–28:31)
     1) பவுலின் இரண்டாம் பயணம் (15:36–18:22)
     2) பவுலின் மூன்றாம் பயணம் (18:23–21:14)
     3) எருசலேமில், செசரியாவில் பவுல் (21:15–26:32)
     4) உரோமை நோக்கி (27:1–28:16)
     5) உரோமையில் பவுல் (28:17–31)

ஆட்களின் அடிப்படையிலும் நூலைப் பிரித்துத்திட்டம் செய்யலாம். அதி 1–12–இல் பேதுருவின் பணியும், அதி 13–28–இல் பவுலின் மறைபரப்புப் பணியும் விவரிக்கப்படுகின்றன. இவ்விருவருடைய பணிவிவரிப்புகளுக்கிடையே குறிப்பிடத்தக்கத் தொடர்புகள் இருக்கின்றன. முதல் பகுதி பேதுருவின் பல உரைகளைத் தருகின்றது (அதி 2–4; 10–11). இரண்டாம் பகுதி பவுலின் உரைகளைத் தருகிறது (அதி 13;17; 20;22; 26;28). இருவரும் முடமான

வர்களைக் குணப்படுத்துகின்றனர் (3:6–7; 14:8–10). இருவரும் சிறையிலிருந்து அருஞ் செயலாக விடுவிக்கப்படுகின்றனர். பேதுருவின் நிழல் கூட குணமளிக்கும் ஆற்றலை கொண்டிருக்கிறது (5:15). பவுலின் உடலைத் தொட்ட கைக்குட்டை கூட நோயாளிகளைக் குணமாக்க வல்லது (19:12). இருவரும் இறந்தவரை உயிர்தெழச் செய்கின்றனர் (9:36–40; 20:9–12). இருவரும் தங்கள் பணியை எதிர்த்த மந்திரவாதி களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது (8:18–24; 13:6–11). இருவரும் கைகளை விரித்து பரிசுத்த ஆவி இறங்கிவரக் கருவி யாக இருக்கின்றனர் (8:17; 19:6). இந்த இணையமைப்புத் தன்மையை வேண்டு மென்றே லூக்கா தன் நூலில் புகுத்தி யுள்ளார் என்று சில அறிஞர்கள் கருது வர். இதற்கு மாறாக, இரண்டு பேருடைய பணிகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை யும் காணத்தவறக்கூடாது. பேதுரு இரு முறை சிறையிலிருந்து விடுவிக்கப்படு கிறார் (5:19–20; 12:7–11). பவுல் ஒருமுறை தான் சிறையிலிருந்து விடுவிக்கப்படு கிறார் (16:25–35). ஐனேயாவைப் பேதுரு குணமாக்கியதற்கு இணையாக (9:34) பவுல் குணமாக்கியதாக எச்சான்றும் இல்லை. பேதுருவைப் போலல்லாமல், பவுல் கல்லால் எரியப்படுகிறார் (14:19). அவரது பெயர் பேய் ஓட்டுதலில் பயன்படுகிறது (19:13–20). இவ்வாறு இருவருடைய பணி களுக்கிடையே முழுவதும் இணைவுத் தன்மையில்லையாயிலும், அவற்றிடையே யுள்ள தொடர்பை, இரண்டு சாட்சிகளின் சான்று நம்பகமானது என்ற விவிலிய ஒழுங்கின் நோக்கில் (உப 19:15; மத் 18:16) காணவேண்டும்.

9. இறையியல் நோக்கு:-

லூக்காவின் நற்செய்தி, கிறிஸ்து தமது சாட்சிகளையும் பணியாளர்களையும் எப்படி தயாரித்தார் என்று காட்டுகின் றது. லூக்காவின் இரண்டாவது நூலாகிய அப்போஸ்தலப் பணிநூல், அப்பணி யாளர்களின் சொற்களையும் செயல்களை யும் விவரிக்கின்றது. அவர்கள் இயேசு வின் தூதுவர்களாக, கருவிகளாகச் செயல்படுகின்றனர். அவர்களிலும் அவர் கள் வழியாகவும் கிறிஸ்து மீட்புப் பணி யைத் தொடர்ந்து செயல்படுத்துகிறார். இந்தப் பணியை பலகோணங்களில் நோக்கலாம்.

அ) கிறிஸ்து இறையியல் நோக்கு:- உயிர்த்த மீட்பர் விண்ணேற்பின் போது தமது அப்போஸ்தலர்களை தமக்குச் சாட்சிகளாக இருக்கக் கட்டளையிடுகிறார் (1:8).யூதாசுக்குப் பதிலாக மத்தியாவைப் பன்னிரண்டாவது அப்போஸ்தலராகத் தேர்ந்தெடுத்தலில் இயேசு கருவியாக இருக்கிறார் (1:24–26). ஐம்பதாம் நாள் விழாவில் அவர் வானிலிருந்து பரிசுத்த ஆவியைப் பொழிகின்றார் (2:23). பிறவி முடவனைக் குணமாக்குகிறார் (3:6; 12:16). சீடர்கள் செபித்துக் கொண்டிருந்த இடம் அதிரச்செய்கிறார் (4:31). அனனியாவும் சப்பீராவும் ஏமாற்றியதற்காக அவர்கள் மேல் உடனடியாகத் தீர்ப்பைச் செயல் படுத்துகிறார் (5:5.10). அப்போஸ்தலர் களைச் சிறையிலிருந்து விடுவிக்க வான தூதரைப் பயன்படுத்துகிறார் (5:19–21). பேதுரு, யோவான் ஆகியோருடைய வேண்டுதலைக் கேட்டுச் சமாரியார் களுக்குப் பரிசுத்த ஆவியை அளிக்கிறார் (8:15–17). எத்தியோப்பிய அண்ணகரிடம் பிலிப்புவைப் போகச்செய்ய ஒரு வான தூதரை அனுப்புகிறார் (8:26). பவுலை அப் போஸ்தலராக அழைக்கும் பொருட்டு நேரடி யாக அவருக்குத் தோன்றுகிறார் (9:3–4). ஐனேயாவைக் குணப்படுத்துகிறார் (9:34). பேதுருவுக்கு தூதர்களை அனுப்பு மாறு அறிவிக்க கொர்னேலியுவிடம் வான தூதரை அனுப்புகிறார் (10:3–6). அதே சமயம் அவர்களோடு போகும்படி காட்சி யில் பேதுருவுக்கு அறிவிக்கிறார் (10:9–20). பின்பு கொர்னேலியுவின் வீட்டார் மேல் பரிசுத்த ஆவியைப்பொழிகிறார் (10:44–45; 11:15–17). பேதுருவைச் சிறையிலிருந்து விடுவிக்கிறார் (12:7–9). பார்னபாவையும் பவுலையும் மறைபரப்பும் தூதுவர்களாக ஒதுக்கும்படி பரிசுத்த ஆவியின் வழி யாகக் கட்டளையிட்டு, அந்தியோக்கியத் திருச்சபையை வழிநடத்துகிறார் (13:2). சைப்ரசில் மறைபரப்புப் பணிக்கு எதிர்ப் புக்காட்டிய எலிமாவைத் தண்டிக்கிறார். (13:11). இலிசித்திராவில் ஒரு முடவனைக் குணமாக்குகிறார் (14:10). ஆசியா, பித்தி

னியா அகிய உரோமை மாநிலங்களில் நற்செய்தியைப் போதிக்காதபடி, பவுல், சீலா திமோத்தேயு ஆகியோரை ஆவி வழியாக ஆண்டவர் தடுக்கிறார் (16:6–7). அதற்கு மாறாக அவர்களை துரோபாவுக்குப் போகச்செய்து, அங்கு ஒரு காட்சியில் மக்கதோனியாவுக்கு அழைக்கிறார் (10:8–10). ஒரு நில நடுக்கம் ஏற்படச் செய்து பவுலையும் சீலாவையும் சிறையிலிருந்து விடுவிக்கிறார். அது சிறைக் காவலரும் அவனது குடும்பம் முழுவதும் மனந்திரும்ப ஒரு வாய்ப்பாக அமைகிறது (16:15–32). கொரிந்தில் ஒரு காட்சியில் பவுலை உற்சாக மூட்டுகிறார் (18:9–10). துரோவாவில் யூத்திக்குவை உயிர்த்தெழச் செய்யப் பவுலுக்கு ஆற்றல் அளிக்கிறார் (20:9–10)). எபேசில் வரவிருக்கும் சிறைவாசத்தை ஆவி வழியாக அவருக்கு அறிவிக்கிறார் (20:23;21:10–11). எருசலேமில் பவுல் கைதியாக இருந்தபோது, ஆண்டவர் அவருக்கு இரவில் தோன்றி, மற்றொருமுறை ஊக்கமூட்டி, பவுல் உரோமையில் சாட்சி கூறவிருப்பதை அறிவிக்கிறார் (23:11). இறுதியாகப் பவுல் பயணம் செய்த கப்பல் புயலால் அலைக் கழிக்கப்பட்டபோது ஒரு வான தூதரைப் பவுலிடம் அனுப்பிகிறார் (27:3).

அ.ப.1:1–இல் தன் நூலின் முதற்பகுதியில் (நற்செய்தியில்) "இயேசு விண்ணேற்படைந்த நாள்வரை, அவர் செய்தவை, போதித்தவை யாவற்றையும்" எழுதியதாக லூக்கா கூறுகிறார். அவரது அப்போஸ்தலர்களின் பணியை எடுத்துக் கூறுவதற்காக, இயேசுவின் பணியினின்று லூக்கா இப்போது விலகுகிறார் என்று இது சுட்டவில்லை. மாறாக இனிமேல் அவர், உலகிலிருந்த தமது அப்போஸ்தலர்கள், பணியாளர்கள் வழியாக, வானிலிருந்து அவர் தொடர்ந்து செய்யும் செயல்களை எடுத்துக்கூற விழைகிறார் லூக்கா.

லூக்கா நூலின் முதல்பகுதியில் இயேசுவின் மெசியாத் தன்மை மையக் கருத்தாக அமைந்திருக்கிறது. வெளிப்படையாக எடுத்துக் கூறப்படுகிறது. பேதுருவின் உரைகள் இதைத்தான் எண்பிக்கின்றன. கிறிஸ்து பாடுபட்டு மகிமையில் புக வேண்டும் என்று மறைநூல் முன்னறிவித்ததாகக் காட்டி, சிலுவை மரணத்தால் வரும் இடறலை அகற்றுவதே அவரது முக்கிய அக்கறையாகும். இதற்காகத் துன்புறும் ஊழியரைப் பற்றிய எசயாவின் இறைவாக்குகளைச் சிறப்பாகப் பயன்படுத்துகிறார் (3:13–26; 4:27–30). ஏசயாவின் பகுதிகளைச் சுட்டிக்காட்டுவது நீதிமான் என்ற பட்டத்திலும் அடங்கியுள்ளது (3:14; 7:52). இயேசுதான் மெசியா என்று காட்ட மட்டுமே கிறிஸ்து என்ற சொல்லை அப்போஸ்தலர் பணிநூல் பயன்படுத்துகிறது. அதுவும் சொந்தப் பெயராக அன்று, ஒரு பட்டமாகவே பயன்படுத்துகிறது. நூலின் தொடக்கப்பகுதிகள் இயேசுவை அவரது பாடுகளும் உயிர்ப்பும் மெசியாவாகக் காட்டும் அறிவிப்பின் மகிழ்ச்சியால் நிறைந்துள்ளன. அது துன்புறுதல் மட்டுமன்று வெற்றியுமாகும் (4:24–30). ஆவியின் புதிய காலத்தைத் தொடங்கி வைக்கிறது. இவ்வாறு இயேசு தந்தையார்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார் இஸ்ராயேலின் நம்பிக்கை நிறைவு செய்கிறார் (3:21–26; 24:15; 28:20)

இந்த மெசியா இறையியலைத் தவிர, இயேசு இறையாற்றலையும் உயர் உரிமைகளையும் கொண்டிருந்த அனுபவம் உள்ளார்ந்ததாக இருந்தாலும் தெளிவாக உள்ளது. இருமுறை தான் இயேசு "இறைமகன்" என்றும், அதுவும் பவுலால், அழைக்கப்படுகிறார் (9:20; 13:33). பவுலுக்கு இக்கருத்து முக்கியத்துவம் மிக்கதாகும். பழைய ஏற்பாட்டில் இறைவனுக்கு மட்டுமே உரிய "ஆண்டவர்" என்ற பட்டம் இயேசுவுக்கு அளிக்கப்படுகிறது. அப்போஸ்தலர் பணி நூலில், இப்பட்டம் இறைத்தன்மையைவிட இயேசுவையே குறிக்கிறது. அதன் விளைவாக, ஆலயத்தில் பவுல் காணும் காட்சியில் (22:17–19) இயேசுதான் தோன்றுகிறார். இதனால், இயேசு தமக்கே இறைவனது ஆலயத்தை உரிமையாக்கித்கொள்கிறார். பழைய ஏற்பாட்டில் இறைவன் இறைவாக்கினர்களைத் தமது கருவியாக அழைத்தது போல் இயேசு பவுலைத் தமது கருவியாக அழைக்கிறார் (9:3–9). இறைவனது பெயரை அழைப்பதால் மனிதன் மீட்புப் பெறுவர் (2:21). "இயேசுவின் பெயரை

அழைப்பவர்கள்" என்பது கிறிஸ்துவர் களின் பட்டமாகிறது. யாவேயின் பெயரை அழைப்பதால் வரும் பழைய ஏற்பாட்டு ஆசீரை நினைவுபடுத்தி இந்தப்பதம் இயேசுவின் இறைத்தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது.

பவுலின் கிறிஸ்து இயலிலிருந்து வேறு படுத்தி, இந்நூல் இயேசு வானகத்தில் இருப்பதாகவும் உயர்த்தப்பட்டவராகக் காட்டுகிறது. திருச்சபையில் பரிசுத்த ஆவி இயேசுவின் பதிலாளி ஆவார். ஆனால் பவுலுக்கு, கிறிஸ்து திருச்சபை யில் பிரசன்னமாக இருக்கிறார். ஆவியே அவரது பிரசன்னத்தின் வடிவமாகும்.

ஆ) பரிசுத்த ஆவியும் திருச்சபையும்:- லூக்காவிற்கு "இறுதிகாலத்தின்" தொடக் கம் உலகின் உடனடியான முடிவைக் குறிக்கவில்லை: அது திருச்சபை காலத் தின் தொடக்கமாகும். அதில் திருச்சபை கிறிஸ்துவுக்குச் சாட்சி அளிக்கிறது. அவரது செயலை உலகின் எல்லை வரை செயல்படுத்துகிறது (1:7–8). கிறிஸ்துவின் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளுக்கும் திருச் சபையின் வாழ்வின் நிகழ்ச்சிகளுக்கும் குறிப்பான, தெளிவான இணையமைப்பு உள்ளது. கிறிஸ்து அளித்த மறைபோதக முறையையே (லூக்.24:18–27) பிலிப்பும் பயன்படுத்துகிறார் (அ.ப. 8:26–39). பேதுரு வின் அருஞ்செயல்கள் கிறிஸ்துவினுடைய தோடு இணையாக உள்ளன. ஸ்தோவா னின் மறைசாட்சி மரணம் பலவிவரங்க ளில் கிறிஸ்துவினுடயதோடு இணையாக உள்ளது.

இயேசு வாக்களித்த ஆவியால் (1:8) திருச்சபை ஆட்சி செய்யப்படுகிறது, வழி நடத்தப்படுகிறது. ஆவியின் வருகை கூடி யிருந்த முழு உலகின் மனிதர்களுக்குத் திருச்சபையின் தூதின் தொடக்கமாகும் (அதி.2). திருச்சபை பரவுதலின் ஒவ் வொரு கட்டத்தையும் ஆவி வழிநடத்து கிறார். இவ்வாறு ஆவியின் பல இடை யீடுகள் யூத உணவு ஒழுங்குகளைக் கை விடப் பேதுருவைக் கட்டாயப்படுத்துகின் றன. முதல் புறவினத்தாரைத் திருச்சபைக் குள் ஏற்றுக் கொள்ளும்படித் தூண்டு கிறார் (அ.ப.10). புறவினத்தாருக்குத் தூது செல்ல பவுலைத் தூண்டுகிறார் (அ.ப.9). அவர் முதல் மறை பரப்புப் பயணத்தை மேற்கொள்ளச் செய்கிறார் (13:2–4). இப் பயணம் புறவினக் கிறிஸ்துவத்தைப் பற்றிய பிரச்சினையை எழுப்பி எருசலேம் சங்கத்தில் தீர்த்து வைக்கிறார் (15:1–39). ஆவிதான் பவுலை கிரிசுக்குப் போகச் செய்கிறார் (16:6–9). இறுதியாக பவுலின் இறுதிப்பயணத்திலும் அவருக்கு வழி காட்டுகிறார் (20:23). கிறிஸ்துவத்தின் இந்த வெற்றிகரமான பரவுதலின் ஒவ் வொரு கட்டத்திலும், ஆவி திருச்சபையை வழி நடத்துகிறார். பழைய ஏற்பாட்டு இறை வாக்கினர்களை நிரப்பியது போல் (1:16; 28:25), ஆவி திருச்சபையின் பணியா ளர்களை நிரப்புகிறார் (4:8; 6:5; 7:55; 9:17; 11:24). திருச்சபையைச் சேர்ந்த அனைவ ரையும் நிரப்புகிறார். ஆவியின் தோற்றமே விசு வாசிகள் குழுவின் மனிதர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள் என்பதற்கு அடை யாளமாகும் (10:44–47; 11:17).

அ.ப. நூல் ஆவியின் தூண்டுதலால் வளர்ச்சியுறும் திருச்சபையின் வரலாற் றைக்கொடுக்கிறது. லூக்காவின் நற் செய்தி நூல் மகனின் நற்செய்தியாக இருப்பதுபோல் அ.ப.நூல் ஆவியின் நற் செய்தியாக உள்ளது எனலாம். ஆவியின் நிறைவு திருச்சபையின் தூது புறஇன உலகின் திருச்சபை பரவுவதில் காணப் படுகிறது.

இ) திருச்சபையும் தலைவர்களும்:- 1) அப்போஸ்தலர்கள்: 1:8–இல் கிறிஸ்து அளித்த கட்டளையில் அப்போஸ்தலர் களின் பங்கு தெளிவாகக் கூறப்படுகிறது. அவர்கள் சாட்சிகளாகத் திகழ்வர். இக் கருத்து மீண்டும் மீண்டும் வருகிறது. (1:22; 2:32; 3:15; 4:33; 5:32; 10:39.41; 13:31). இக்கருத்து பவுலுக்கும் பொருந்தும் (9:15; 22:15; 23:11; 26:16). அவர்களது சாட்சி, சொல், செயல் போதகம், அருஞ்செயல் செய்தல் ஆகிய வற்றில் அடங்கியிருந்தாலும், அவர்களது மறை உரைகள் அவர்களின் பணியின் பெரும் பகுதியாக அமைகின்றன. சான்று: 1:15–22; 2:14–41; 3:12–26; 4:8–12; 7:2–53; 10:33–43;... இவ்வுரைகள் அப்போஸ்தலர் கள் இயேசுவுக்கு அளித்த சாட்சியின் தன்மையையும் எருசலேம், யூதேயா,

சமாரியா, சீரியா, சிறிய ஆசியா, கிரிசு, இறுதியாகப் பேரரசின் மையமாகிய உரோமை ஆகிய இடங்கள் அவர்கள் எடுத்துக்கூறிய அறிவிப்பின் தன்மையையும் வெளிப்படுத்துகின்றன. உரோமையில் அங்கு வாழும் யூதர்களுக்கு இயேசுவைப் பற்றி சாட்சி கூறி, பவுல் உலகமனைத்திற்கும் மீட்பு பற்றியும் அறிவிக்கிறார். நூல், பவுல் "மிகத் துணிவோடு, தடை யேதுவுமின்றி இறைவனது அரசைப் பற்றிய செய்தியை அறிவித்து, ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய உண்மைகளைப் போதித்தலை" (28:31) எடுத்துக்கூறுவதோடு முடிகிறது.

அ.ப. நூல் அப்போஸ்தலர்களின் சாட்சியத்தின் விளைவாகிய, புறவினத்தார் பலர் கிறிஸ்துவ விசுவாசத்திற்கு மனந்திரும்புதலையும், சபைகள் நிறுவப்படுதலையும் எடுத்துக்கூறினாலும், இவற்றிற்கு அதிகம் அழுத்தம் தரவில்லை சில பகுதிகளில், சில சபைகளின் அமைப்பு வளர்ச்சி ஆகியவைபற்றி அதிகச்செய்திகள் கொடுத்திருக்கக்கூடும் என்றாலும், இவற்றில் ஆசிரியரது விவரிப்பு குறிப்பிடத்தக்க விதத்தில் சுருக்கமாகவே உள்ளது. சில இடங்களும் சூழ்நிலைகளும் விடப்பட்டுள்ளன. ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு அப்போஸ்தலர்கள் அளித்த சாட்சியத்தை எடுத்துக் கூறுவதே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சாட்சியம் அறிவிப்பாக எடுத்துக் கூறப்படுகிறது. துன்பங்களால் முத்திரையிடப்படுகிறது. அவர்கள் வழியாக ஆண்டவர் செய்த அடையாளங்களாலும் வியப்புக்குரிய செயல்களாலும் அவராலே உறுதி செய்யப்படுகிறது (4:29—32).

ஆவி, வழக்கமாக, அப்போஸ்தலர்கள் (8:15) அல்லது மற்ற பணியாளர்கள் (8:39; 19:6) வழியாக அளிக்கப்படுகிறார். ஏனெனில் திருச்சபையில் பார்க்கக்கூடிய அதிகாரம் இருக்கிறது. அதன் மையத்தில் அப்போஸ்தலர்கள் இருக்கின்றனர். ஒரு குழுவாக, அவர்கள் வரலாற்றின் கிறிஸ்துவுக்கும் புதிய இஸ்ராயேலின் பிதாப்பிதாக்களுக்கும் இடையில் இணைப்பாக உள்ளனர். ஆகவே ஆவியின் வருகைக்கு முன்பே அவர்களின் பன்னிரண்டு என்ற எண்ணிக்கை நிறைவு செய்யப்பட வேண்டும். இதில் அவர்கள் ஒரு குழுவாகச் செயல்படுவதைப் பார்க்கின்றோம். தங்கள் பிரதிநிதிகளை அனுப்புகின்றனர் (8:15); ஸ்தேவானுக்கு அதிகாரம் அளிக்கின்றனர் (6:6); பவுலை ஏற்றுக் கொள்கின்றனர் (9:27). பொதுவாக, சாட்சி பகர்கின்றனர், போதிக்கின்றனர், குணமாக்குகின்றனர், பேதுருவைப்பற்றி மட்டும் தான் தனி நிகழ்ச்சிகள் தரப்படுகின்றன. மூன்று சமயங்களில் யோவான் பேதுருவோடு, அதுவும் துணையாளராக இருக்கிறார். ஐம்பதாம் நாள் விழாவில் பேதுருதான் பேசுகிறார்: அவர் தான் முதல் அருஞ்செயல்கள் செய்கிறார் (அதி.3). கிறிஸ்துவின் பெயருக்காக அவர் தான் முதலாவதாகத் துன்புறுகிறார். அவர்தான் முதல் அருஞ்செயல்கள் செய்கிறார் (அதி.3).கிறிஸ்துவின் பெயருக்காக அவர்தான் முதலாவதாகத் துன்புறுகிறார். அனானியா, சப்பீரா ஆகியோரைத் தீர்ப்பிடுகிறார் (அதி.5). முதல் புறவினத்தாரைத் திருச்சபைக்குள் ஏற்றுக்கொள்வதிலும், அதை எண்பிப்பதிலும், பேதுரு தான் பொறுப்பேற்கிறார். இது லூக்காவின் நோக்கில், மிகமுக்கியதானதாகும் (அதி. 10—11), எருசலேம் சங்கத்தில் புறவினக்கிறிஸ்துவர்களின் சுதந்திரத்தை ஆதரித்துப்பேசுகிறார் (அதி.15). இங்கு நாம் அதிகார முதன்மைபற்றி, ஒரு வேளை, பேசமுடியாது. ஆனால் பேதுருவின் அதிகாரம் மறுக்க முடியாத உத்தரவாதம் என்று லூக்கா கருதினார் என்பது உறுதி. ஆனால் சபையும் அதிகாரம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஸ்தேவானையும் அவரது தோழர்களையும் சபைதான் தேர்ந்தெடுத்து அப்போஸ்தலர்கள்முன் நிறுத்துகின்றனர் (6:3—5). எருசலேம் சங்கத்தில் அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் எடுத்த முடிவுகளைச் சபையோர் உறுதிப்படுத்துகின்றனர்.

2. மூப்பர்கள்:- காலப்போக்கில், திருச்சபையின் மூப்பர்கள் என்ற துணை அதிகாரத்தைக் காண்கிறோம். இவர்கள் முதலில் எருசலேமில் தோன்றுகின்றனர் (11:38). அப்போஸ்தலர்கள் மறைந்த பிற்பாடு, யாகோப்பின் தலைமையில்

அங்குள்ள சபையின் பொறுப்பை ஏற்கின்றனர் (21:18). பவுல் தமது மறைப்பரப்பு பயணங்களில் நிறுவிய சபைகளில் எல்லாம் மூப்பர்களை நியமிக்கின்றார் (14:23). எபேசிலுள்ள மூப்பர்களுக்கு தன் மேய்ப்புப்பணியை அளிக்கிறார். இவர்கள்தான் பவுல் இல்லாதபோது வழிகாட்டவும் பாதுகாக்கவும் பரிசுத்த ஆவியால் நியமிக்கப்பட்ட "மந்தையின் காப்பாளர்கள்" (20:28–30). மூப்பர் என்ற பதவி மேய்ப்புப்பணி திருமுகங்களுக்குமுன் கூறப்படவில்லை. இவற்றை பவுல் எழுதினார் என்பது சர்ச்சைக்குரியது. அதனால் லூக்கா தன் காலத்தில் நிலவிய நிலையில் எடுத்துக் கூறுகிறார் என்று கூறுவர் சிலர். ஆனால் சிதறிப்போன யூத சபைகள் கொண்டிருந்த அமைப்புகளையே கிறிஸ்தவச் சபைகளிலும் பவுல் நிறுவினார். இவ்வாறு ஒவ்வொரு யூதச் செபக் கூடமும் ஒரு மூப்பர் குழுவைக் கொண்டிருந்தது. இந்த மூப்பாகள் எப்படி ஒன்றிச் செயல் ஆற்றினர் என்பதைப் பற்றி நாம் ஒன்றும் அறிவதற்கில்லை. எருசலேமில் யாக்கோபு ஒரு தனிச் சிறப்பான அதிகாரம் கொண்டிருந்தார் (12:17; 21:18; கலா 2:12). இதைத் தவிர, பிற்காலத்தில் அரசுமுறை ஆயர் பதவியாக வளரவிருந்த எந்த அமைப்பின் அடையாளமும் இல்லை.

ஈ) திருச்சபையின் கூறுகள்:- இவை அ.ப. நூலின் முன்பகுதியில் வரும் சுருக்கப்பதிப்புக் குறிப்புகளில் கொடுக்கப்படுகின்றன. இவற்றில் புதிய இஸ்ராயேலாகிய மெசியாச் சமூகத்தின் சிறப்புப் பண்புகளாக விளங்கிய அமைதி, எளிமை, மகிழ்ச்சி ஆகியவற்றை லூக்கா சித்தரிக்றார் (2:1–4; 4:32–35; 5: 12–16). இந்த ஓவியப் பட்டிகளோடு, அடிக்கடிவரும் பதிப்புக் குறிப்புகளில் லூக்கா, சகோதரர் ஒருமைப்பாட்டையும், ஒருவருக்கொருவர் காட்டும் தாராள குணத்தையும், சபையின் வளர்ச்சியையும் எடுத்துக்கூறுகிறார். இக் கூறுகள் லூக்காவுக்கு முக்கியம் வாய்ந்தவை என்பது உறுதி. இவையனைத்தும் சேர்ந்து தொடக்கக்காலத் திருச்சபை பற்றிய கருத்தியலான சித்திரத்தை நமக்குத் தருகின்றன.

உ) திருச்சபையும் அருட்சாதனங்களும்:- திருச்சபையின் இடையீடு இல்லாமல் ஆவி கொடுக்கப்படலாம் என்றாலும் (10:44–47), சபைக்குள் ஏற்றுக்கொள்வதற்குரிய வழக்கமான சாதனம் ஞானஸ்தானம் அல்லது திருமுழுக்காகும். அ.ப. நூலில் திருச்சபையின் திருமுழுக்கு முறையை அதன் தொடக்க வடிவில் காண்கிறோம். திருமுழுக்குக்குமுன் போதனை அளிக்கப்பட்டது. இப்போதும், இயேசுவை மறைநூலின் மெசியாவாகக் காட்டி, அவரிலே மட்டுமே மீட்பு உண்டு என்று எடுத்துக் கூறி, மனவருத்தத்தையும் விசுவாசத்தையும் எழுப்பும் மறை உரையாக அமைந்திருந்தது. திருவருட்சாதன வழிபாட்டிலே திருமுழுக்கிற்கு எத்தடையும் இருக்கிறதா (8:36–38) என்ற பிரச்சினையில் விசுவாச அறிக்கையும், நீரினால் திருமுழுக்கு ஆகியவை அடங்கியிருந்ததாகத் தெரிகிறது. திருமுழுக்கு பெற விரும்புவர் இயேசுவின் பெயரைக் கூவி அழைத்தார் அல்லது அவர்மேல் இயேசுவின் பெயர் கூறப்பட்டது. இரண்டிலும் அவர் இயேசுவக்குரியவராக்கப்பட்டார். இருபகுதிகளில் கைகளை விரிக்கும் தனிச் சடங்கு கூறப்படுகிறது. இது உறுதிப்படுத்தும் அருட்சாதனத்தின் விவரிப்பாகக் கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால் இச் சடங்கின் பொருள் முழுவதும் வேறுபட்டதாகும் (8:14–17; 19:1–7). நற்கருணை பற்றி, அ.ப. நூலில் மிகச் சிறிதே கூறப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் ஆலய வழிபாட்டில் ஒழுங்காகப் பங்கெடுத்தாலும், நற்கருணை வழிபாடு வாழ்வின் ஒரு பகுதியாகத் தெரிகிறது (2:42.46). ஒருவேளை, இது பவுல் கப்பல் உடையமுன் சுட்டிக் காட்டப்பட்டிருக்கலாம் (27:35). ஆனால் வாரத்தின் முதல் நாளில், கிறிஸ்தவ நற்கருணைக் கூட்டம் பற்றிய ஒரே காட்சியில் (20:7–11) நற்கருணைக்கு முன் வரும் மறையுரையிலும், அப்போது நடந்த அருஞ்செயலிலும் கவனம் முழுவதும் செலுத்தப்படுகிறது.

10. வரலாற்றுத் தன்மை:- 19–ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்நூலின் வரலாற்றுத்தன்மையை மறுத்து, இது ஓர் இறை

யில் ஏடாகும் என்று ஒரு சாரார் கூறி வந்தனர். இக்காலத்தில், ஆய்வாளர்கள், இத்தகைய ஒரு தலையாய ஐயப்பாட்டைத் தவிர்ப்பர். ஆயினும் சிலர் இந்நூலை ஒரு காப்புரையாக மட்டும் கருதுவர். இவர்கள் கருத்துப்படி இந்நூல் கிறிஸ்துவம் யூதத் துவத்தின் நேர்மையான வளர்ச்சி என்று யூதர்களுக்கு எண்பிக்கவும், கிறிஸ்துவம் பொது அமைப்புக்கு ஆபத்தில்லாத ஒரு வழிபாட்டு முறை என்றும் சட்டப்பூர்வ மாக அனுமதிக்கத்தக்க சமயம் என்றும் உரோமை அரசாங்கத்திற்கு எண்பிக்கவும் எழுதப்பட்ட ஒரு காப்புரை நூலாகும். இத்தகைய காப்புரைத் தன்மை நூலில் காணப்படுவதாகத் தோன்றுகிறது. ஆனால் அது நூலின் வரலாற்றுத் தன்மை யை பலவீனப்படுத்தவில்லை. வெறுமனே உண்மையை எடுத்துக்கூறி காப்புரை வழங்கமுடியாது என்று ஏற்றுக்கொண் டால் மட்டுந்தான், நூலின் வரலாற்றுத் தன்மை பலவீனப்படுகிறது என்று கூற லாம். மேலே கூறப்பட்ட காப்புரைத் தன்மையைவிட, கிறிஸ்துவம் பரவுதல், இயேசுவின் தூது, மற்றும் ஆவியின் அலுவல் ஆகியவற்றின் நேர்மையான வளர்ச்சியாகும் என்று எண்பிப்பதே ஆசிரியரது விருப்பமாகும்.

நூல் முழுவதும் பொதுவாக எடுத்துக் கொள்ளும்போது, இந்த வரலாற்றுப்பிரச் சினை எழுவதில்லை. தனிப்பட்ட பகுதி களையும் கேள்விகளையும் பற்றியே இப் பிரச்சினை எழுகிறது. நூலின் வரலாற் றுத்தன்மை நூல் முழுவதும் ஒரே சீராக அமைந்திருக்கவில்லை என்று ஏற்றுக் கொண்டால் இப்பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு காணலாம். முதல் பகுதிக் கும் இரண்டாம் பகுதிக்கும் இடையே நடை யிலும் பொருளடக்கத்திலும் வேறுபாடுகள் உள்ளன. வியப்புமிக்க செயல்கள் மற்றும் அருங்கொடைச் செயல்களின் சூழ்நிலை இரண்டாம் பகுதியை விட முதல் பகுதியில் தான் முதன்மை பெறுகின்றது. இவைகள் "நாங்கள்" என்ற பகுதியில் காணப்படவே யில்லை. இது, ஆசிரியர் பெற்றுக் கொண்ட விவரிப்புக்களில் தொடக்க சமூகம் பற்றிய வாய்மொழிப்பாரம் பரியம், இக்கூறுகளை ஓரளவு மிகைப் படுத்தியுள்ளது என்று காட்டுகிறது. ஒவ் வொரு தனி நிகழ்ச்சி, மற்றும் அதன் மூலம் பற்றிய விரிவான ஆய்வுக்கு இட மிருக்கிறது.

அ.ப. நூல் ஒரு காலவரையறைத் திட்டத்தை அமைக்கவில்லை. இது முக்கி யமாக முதல் பகுதிக்குப் பொருந்தும். விவிலியத்திற்குப் புறம்பான மூலங்க ளோடு அ.ப. நிகழ்ச்சியுரைகள் தொடர்பு கொள்ளும்போது இந்தக் காலவரைப் பிரச்சினை எழுவதில்லை. இரண்டையும் சேர்த்து ஆராய்ந்து, அந்நிகழ்ச்சிகள் நடந்திருக்கக் கூடிய காலத்தை ஓரளவு உறுதிப்படுத்தலாம். இதன்படி முதல் ஐம்பதாம்நாள் விழா நிகழ்ச்சியிலிருந்து ஸ்தேவான் வரை மூன்ற ஆண்டுகள் எடுத்திருக்கலாம் (கி.பி.30–33). எருசலேம் சமூகம் சிதறியதிலிருந்து பவுல் மனந் திரும்பயது வரையுள்ள காலத்தை நிர்ண யிக்கமுடியாது. அந்தியோக்கியா சபை அநேகமாக கி.பி. 38–40–இல் நிறுவப் பட்டிருக்கவேண்டும். புறவினச்சான்று களிலிருந்து ஏரோது அகிரிப்பா 44–இல் இறந்திருக்கவேண்டும். கிளாதியுவின் ஆட்சிக்காலத்திய பஞ்சம் 49–55–இல் நடந் திருக்கலாம். கல்லியோ கொரிந்தில் 51–52–இல் இருந்தது அங்குப் பவுல் இருந்த காலத்தைக் குறிக்கப்பயன்படு கிறது. பெலிக்சுக்கு அடுத்த ஆளுநராகப் பெஸ்து 59–60–இல் பதவி ஏற்றிருக்க லாம். நூலின் முடிவு 63–இல் நிகழ்ந்தி ருக்கவேண்டும்.

நூலில்வரும் உரைகளின் தன்மையைப் பற்றி ஏற்கனெவே கூறியுள்ளோம் அவற் றின் வரலாற்றுத் தன்மை, அவை சூழ் நிலையோடு முழுவதும் ஒத்துள்ளன என் பதைவிட, தொடக்கப் போதனையின் கருத்துக்களைப் பிரமாணிக்கமாகக் காத் துத்தந்துள்ளன என்பதில் அடங்கியிருக் கிறது.

அ.ப. நூலில் காணப்படும் பவுலுக்கும், திருமுகங்களில் காணப்படும் பவுலுக்கு மிடையே போதகத்திலும் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் காணப்படும் வேறுபாடு களை அவ்வளவு சுலபமாய் தீர்த்துவிட முடியாது. அவற்றின் சூழ்நிலையிலும், இறையியல் நோக்கிலும் ஓரளவு தீர்வு காணலாம்.

அ.ப. நூலின் ஆசிரியர் தொடக்கத் திருச்சபையின் வரலாற்றையோ தொடக் கக்கால கிறிஸ்துவக் காப்புரையையோ மட்டும் எழுதவில்லை. புறவினத்தார் அல்லது புறவினக் கிறிஸ்தவ வாசகர் களுக்காகத் தொடக்க கால திருசபையின் தன்மை, வளர்ச்சி, பிரச்சினைகள் ஆகிய வைபற்றி எடுத்துக்காட்டாக விவரிக்கும் ஓர் இறையியல் கட்டுரையை வரைகிறார். இந்நூல் வரலாறும் காப்புரையும் சேர்ந்த படைப்பாகும்.

11. மதிப்பீடு: காப்புரையாளர் என்ற அளவில், லூக்கா, திருச்சபை, உரோமை பேரரசின் சட்ட, ஒழுக்க அடிப்படைகளை அழிக்க அச்சுறுத்தும் மற்றொரு கலகம் செய்யும் குழுவன்று என்று தியோபிலுவின் மனதில் பதிய வைக்க முயசிக்கிறார். இந் நோக்கத்திற்காக, யூதத்தலைமைச் சங்கத் தின் முன், பேதுரு, யோவான் ஆகியோ ரின் குற்றமின்மையையும் (அ.ப.4:23; 5:40) உரோமை அதிகாரிகள்முன் பவுலின் தூய் மையான வரலாற்றையும் விவரிக்கின் றார். பிலிப்பையில் பவுலை அநியாக மாகச் சிறைவைத்த நீதிபதி அவரிடம் மன்னிப்புக் கேட்கிறார் (16:39). கொரிந்தில் உரோமைச் சட்டத்தின் முன் யூதர்களின் குற்றச்சாட்டு பொருத்தமற்றது என்று கல்லியோ கருதினார் (18:14–16). எருசலே மில் பவுல் சீசரிடம் தஞ்சம் கோரியிரா விட்டால் பெலிக்சும் பெஸ்துவும் அவரை விடுவித்திருப்பார்கள் (26:32).

நற்செய்திகளையும் பவுலின் பெரும் பாலான திருமுகங்களையும் இணைக்கும் பாலமாக அ.ப.நூல் அமைந்துள்ளது என்பதில் அதன் மதிப்பீடும் முக்கியத்து வமும் அடங்கியிருக்கிறது. நற்செய்திகள் உலகில் கிறிஸ்துவின் ஒப்புறவுப் பணியை எடுத்துக்கூறுகின்றன. திருமுகங்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பு, ஆவி பொழியப் படுதல் ஆகியவற்றுக்குப் பின் நிறுவப்பட்ட திருச்சபையில், பவுல் உழைத்து அல்லது உழைக்க விரும்பிய திருச்சபைகளின் பல் வேறு சூழ்நிலைகளை விவரிக்கின்றன. அந்த் தனிப்பட்ட சபைகளின் தொடக்க காலத்தைச் சேர்ந்த சில முக்கியமான விவரங்களை அ.ப.நூல் விவரிக்கிறது.

அப்போஸ்தலர் பணி நூல்
(திருமுறை சேராதது)

இந்நூல் திருமுறை அப்போஸ்தலர் பணியில் விடுபட்ட பல செய்திகளைக் கொடுக்கிறது. பல சிறு செய்திகள் அடங் கிய நூல். முதல்பகுதி மறை உண்மை களை விளக்குவதற்காக எழுதப்பட்டது. பெரும்பாலும் பதிதக் கொள்களைகளைக் கொண்டது. பிற்பகுதி, அயல்நாடுகளில் அப்போஸ்தலர்கள் செய்த வீரச் செயல் களையும், தலைவர்களின் விந்தைமிகு செயல்களையும், வேத சாட்சி மரணத்தின் விரிவான செய்திகளையும் எடுத்துரைக் கின்றது. எழுதப்பட்ட கால வரிசைப்படி, யோவான் பணி, பவுல் பணி, பேதுரு பணி, அந்திரேயா பணி, தோமா பணி என்ற ஐந்து பகுதிகளைக் கொண்டிருக் கிறது.

அமசாய் (AMASAI – சுமையான)

நாளாகம நூலில் குறிக்கப்படும் லேவியர் பட்டியலில் பலமுறை இப்பெயர் பயன்பட்டுள்ளது.

1. லேவியர் வழி மரபுப் பட்டியலில் கொத்தியரான எல்கானாவின் மகன் (1 நாள்.6:25); பாடகரான ஏமானின் வழி மரபுப் பட்டியலிலும் இவர் தோன்றுகிறார் (1 நாள் 6:35).

2. நாளாகம ஆசிரியரின்படி தாவீதின் "முப்பது வல்லவர்களின்" தலைவர் (1 நாள் 12:18); சிக்கிலாக்கில் தாவீது இருந்த போது பென்யாமின் யூதா குலங்களைச் சேர்ந்த சிலரோடு தாவீதோடு சேர்ந்து கொண்டார் (1 நாள் 12:16–18). ஆனால் 2 சாமு 23; 1 நாள் 11–இல் உள்ள இராணு வப்பட்டியலில் இவருடைய பெயர் காணப் படவில்லை. இவரை அமசாவுடனோ அல்லது அபிசாயுடனோ ஒன்றாகக் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த இருவரும் அமசாயைப் போன்று அவ்வளவு உயர்ந்த பதவியை வகித்ததாகத் தெரியவில்லை.

3. தாவீதின் காலத்தில் வாழ்ந்த ஒரு குரு. இறைவனின் பேழை எருசலேமுக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அதற்கு முன் எக்காளம் ஊத நியமிக்கப்பட்டவர் (1 நாள் 15:24).

4. எசக்கியா அரசன் காலத்தில் கொத்தியகுடும்பத்தைச் சேர்ந்த மகாத்தின் தந்தை (2 நாள் 29:12). மேலே 1–இல் கூறப்பட்டவரும் இவரும் ஒரே ஆளே என்று காட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த அமசாய் அவருக்குப்பின் நூறு ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்தவர்.

அமசியா (AMAZIAH யாவே வலிமையுள்ளவர்)

1. யூதாவின் அரசர் (கி.மு.796–767) யோவாசின் மகனும், அரச வாரிசுமாவார்.

இவர் பதவிக்கு வந்தபொழுது இவருக்கு வயது 25. இவர் 29 ஆண்டுகள் ஆண்டதாகச் சொல்லப்படுகிறது (2 அர 14:2; 2 நாள் 25:1). இவருடைய தாய் எருசலேமைச் சேர்ந்த யோயாதின் என்பவள் ஆவாள். (2 அர 14:1; 2 நாள் 25:1–இல் யோயாதான்).

இவர் 29 ஆண்டுகள் ஆண்டார் என்பது தவறு. இதனை விளக்க பல யோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்றும் திருப்திகரமானதாக இல்லை. 2 அர 14:17–இன்படி இவர் 18 அல்லது 10 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அப்படியே 29 ஆண்டுகள் ஆண்டிருந்தாலும், சில காலத்திற்குத் தன் மகனோடு கூட்டாச்சி செய்திருக்க வேண்டும்.

இவர் ஆட்சிக்கு வந்த உடன் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஏனெனில் இவரது தந்தையைக் கொன்றவர்கள் இன்னும் அரச சேவையில் இருந்தார்கள். இவர் ஆட்சிக்கு வந்ததும் தன் தந்தையைக் கொன்றவர்களைக் கொன்றார்: ஆனால் உப 24:16–இன் கட்டளைப்படி அவர்களுடைய பிள்ளைகளைக் கொல்லவில்லை (2 அர 14:5–6; 2 நாள் 25:3–4).

15 ஆண்டுகளுக்கு முன்பு யோராம் ஆட்சியில் யூதாவிலிருந்து சுதந்திரம் பெற்ற ஏதோமை மறுபடியும் வென்றது இவருடைய ஆட்சியில் குறிப்பிடத்தக்கதாகும் (2 அர 8:20–22). 10,000 இதுமேயர்கள் கொல்லப்பட்ட "உப்புப் பள்ளத்தாக்கும்" அமசியாவால் திடீரென வெல்லப்பட்டு யோக்திேல் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட செலா (2 அர 14:7) என்ற இடம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. கொல்லப்பட்டதாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இதுமேயர்களின் எண்ணிக்கை ஒரு முழு எண். பாறைமீது இருந்து தள்ளப்பட்டு கொல்லப்பட்தாக நாளாகமத்தில் கொடுக்கப்ட்டிருக்கும் மற்றுமொரு 10,000 இதுமேயர்கள் தெளிவான சரித்திர அடிப்படைக் கொண்டதன்று (2 நாள் 25:12).

இதுமேயர்களின் மேல்கொண்ட வெற்றியினால் சந்தேகமில்லாமல் இறுமாப்பு கொண்ட அமசியா, இஸ்ராயேல் அரசன் யோவாசுக்கு எதிராக சவால் விட்டார், அதற்குக் காரணம் கொடுக்கப்படவில்லை. ஆனால் பொறாமைதான் இவ்வாறு செய்யத் தூண்டியிருக்கலாம். இதன்விளைவு அவருக்கு அழிவைக் கொண்டு வந்தது (2 அர 14:8–14; 2 நாள் 25:17–24). யூதாவானது இஸ்ராயேலின் சிற்றசராக மாறியது.

தன் தந்தையைப்போல இவரும் அரசவை சதிக்குப் பலியானார். இவர் இலாகிசுக்குத் தப்பி ஓடினார். ஆனால் அங்கு இவர் கொல்லப்பட்டார். இவர் உடல் எருசலேமிற்கு சவப்பவனியில் கொண்டு வரப்பட்டு தாவீதின் நகரில் அடக்கம் செய்ப்பட்டது.

நாளாகம் ஆசிரியர் அமசியாவின் தோல்விக்கு இறையியல் நோக்கம் அளிக்கிறார். அவருடைய ஆட்சித் தொடக்கத்தில் அவர் ஆண்டவர் திருமுன் நேர்மையாய் நடந்தாலும் முழுமனதோடு அவ்வாறு நடக்கவில்லை (2 நாள் 25:2). அவர் ஏதோமியரை முறியடித்துத் திரும்புகையில் அவர்களின் சிலைகளை எருசலேமுக்குக் கொண்டுவந்து தன் தெய்வங்களாக வைத்து அவற்றிற்கு வழிபாடு செய்து தூபம் காட்டினார். இதனால் ஆண்டவர் அவர் மேல் சீற்றம் கொண்டு அவரை அழிக்க முடிவு செய்தார் (25:14–16). யோவாசோடு நடந்தபோரும், அதில் அமசியாவின் தோல்வியும் அவரது சமயப்பதிதத்தின் விளைவுகளாகக் காட்டப்படுகின்றன (25:20).

அமசியா, சாமோனின் வழித்தோன்றல்களில் ஒருவராகக் குறிக்கப்பட்டாலும் (1 நாள் 3:12), இயேசு வழி மரபுப்பட்டியலில் அவர் பெயர் காட்டப்படவில்லை (மத் 1:8).

2. சிமியோன் குலத்தைச் சேர்நதவர். யோசாவின் தந்தை (1 நாள் 4:34)

3. சந்திப்பின் கூடாரப் பேழைமுன் பாடல்கள் பாடும் பொறுப்பிற்கு தாவீது அரசரால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர். அதில் ஒருவரான மெராரியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர் (1 நாள் 6:31–32.45).

4. இரண்டாம் எரொபயாம் காலத்தில், பெத்தேலிலிருந்த அரச புனித இடத்தில் பணிபுரிந்த ஒரு குரு. ஆமோஸ் அங்கு இறைவாக்கு உரைப்பதைத் தடுக்க இவர் முயற்சி செய்தார். அரசனுக்கு எதிராக ஆமோஸ் சூழ்ச்சி செய்வதாக அரசனுக்குத் தெரிவித்தவர் (ஆமோ 7:10–11). அவர் ஆமோசைப் பெத்தேலிலிருந்து விரட்ட முயற்சித்தபோது, ஆமோஸ் வட அரசுக்கு வரவிருந்த அழிவை அறிவித்தார். அமசியாவுக்கு இழிவான வருங்காலத்தை முன்னறிவித்தார் (7:13–17).

அமரியா (AMARIAH – யாவே பேசிவிட்டார், யாவே கூறிவிட்டார்)

பழைய ஏற்பாட்டில் சிறப்பாக பாபிலோனியாவிலிருந்து நாடு திரும்பியவர்கள் பட்டியலில் அடிக்கடி காணப்படும் பெயர்.

1. ஆரோனின் வழித்தோன்றலான மெராயோத்தின் மகன். எலயாசாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 6:7–52).

2. ஒரு குரு. அசரியாவின் மகன் (1 நாள் 6:11) எஸ்ராவின் மூதாதையர்களில் ஒருவர் (எஸ் 7:3).

3. தாவீது ஆட்சிக்காலத்தில், கெகாத் பிரிவினைச் சேர்ந்த லேவியர். கெபிரோனின் இரண்டாவது மகன் (1 நாள் 23:19;24:23).

4. யோசபாத்து ஆட்சிக்காலத்தில் தலைமைக் குருவானார். "ஆண்டவருக்குக் கொடுத்த எல்லாக் காரியங்களும்" அவர் பொறுப்பில் இருந்தன (2 நாள் 19.11). இவரது தந்தையாரின் பெயர் கொடுக்கப்படவில்லை. 2–இல் குறிக்கப்பட்டவரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

5. எசக்கியாவின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த ஒரு லேவியர் (2 நாள் 31:15). காணிக்கைப் பொருள்களை லேவியர் நகரங்களுக்குப் பகிர்ந்தளிக்க நியமிக்கப்பட்ட ஆறு உதவியாளர்களில் ஒருவர்.

6. பினூயி அல்லது பானியின் புதல்வர்களில் ஒருவர். இவர்கள், எஸ்ராவின் சீர்திருத்த காலத்தில், தாங்கள் மணந்திருந்த புற இன மனைவியரை அனுப்பிவிடக் கட்டளையிடப்பட்டனர் (எஸ் 10:42).

7. பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், நெகமியாவின் தலைமையில் உடன்படிக்கையைப் புதுப்பித்தபோது கையொப்பமிட்ட ஒரு குரு (நெக 10:3). ஒருவேளை கீழே வரும் 9–இல் குறிக்கப்படுபவரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

8. பாபிலோனுக்கு யூதர்கள் நாடு கடத்தப்பட்டபோது எருசலேமிலேயே தங்க முன்வந்தவர்களில் ஒருவர், யூதா குலத்தையும், பேரேசு குடும்பத்தையும் சேர்ந்தவர் (நெக 11:4).

9. செருபாபேலோடு பாபிலோனிலிருந்து திரும்பி வந்த ஒரு குரு (நெக. 12:2). யோவாக்கிம் பெரிய குருவாக இருந்தபோது குருக்கள் குடும்பதைச் சேர்ந்தவர் (12:13).

10. எசக்கியாவின் மகனும் இறைவாக்கினர் செப்பனியாவின்கொள்ளுப் பாட்டனுமாவார் (செப் 1:1).

அமர்னா கடிதங்கள் (AMARNA LETTERS)

நைல் நதியின் கிழக்குக் கரையில் கெய்ரோவுக்குத் தெற்கில் 320 கி.மீ. தொலைவிலுள்ளது தேல்–எல்–அமர்னா என்ற இடம். இது அக்கெனத்தோன் பார்வோனின் தலைநகர் இருந்த இடமாகும். இங்கு கி.பி.1887–இல் 379 ஆப்பு எழுத்து வடிவ களிமண் ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் 200 ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அழிக்கப்பட்டுவிட்டன. இப்போது இவை பல பொருட்காட்சியகங்களில் பாதுகாக்கப்பட்டு வரு

கின்றன. இருநூறுக்கும் மேற்பட்டவை பெர்லின் பொருட்காட்சியகத்திலும் 80–க்கும் மேற்பட்டவை பிரிட்டிஷ் பொருட்காட்சியகத்திலும் மற்றவை கெய்ரோவிலும் அக்ஸ்போர்ட் பொருட்காட்சியகத்திலும் உள்ளன.

ஏடுகள் அக்காதிய மொழியின் ஒரு பிரிவு மொழியான ஆப்பு எழுத்து பாபிலோனிய மொழியில் அக்கால அரசியல் தூது நடையில் எழுதப்பட்டுள்ளன. இம்மொழிதான் அக்கால மேற்காசியாவில் தூது மொழியாகும். ஏறக்குறைய 350 ஏடுகள் கி.மு.1402–1347–க்கு இடையில் ஆட்சி செய்த மூன்றாம் அமென்கோ–தேப், நான்காம் அமென்கோதேப் என்ற பாரவோன்களுக்கும், அவர்களுக்குக் கீழ் சிற்றரசுகளாக இருந்த பாபிலோன், அசீரியா, மித்தானி, காத்தி குறிப்பாக சீரியா, பாலஸ்தீனம் ஆகியவற்றிலிருந்த நகர நாடுகள் ஆகிய பகுதிகளை ஆண்டவர்களுக்குமிடையே நடந்த கடிதப் போக்குவரத்துக்களைக் கொண்டுள்ளன. இவை, அரசியல், போர், பொருளாதாரக் காரியங்களைப் பற்றியவை. ஆகையால் கி.மு.2–ஆம் ஆயிரமாண்டின் பிற்பகுதியில் விவிலிய நாடுகள் பற்றிய இடம், வரலாறு சம்பந்தப்பட்ட தொல்பொருள் கண்டுபிடிப்புகளில் இவ்வேடுகள் முதல் இடம் பெறுகின்றன. எகிப்து சிறிய ஆசியாவில் இத்திய அரசு, மேல் குபூர் பகுதியில் மித்தானின்மேல் கூரியர்கள் கொண்டிருந்த கட்டுப்பாடு, அசீரியா அரசன் எழுச்சி, பாபிலோனியாவில் காசியரது ஆதிக்கம் ஆகிய அரசியல் நிலைகளைப் புரிந்துகொள்ள இவ்வேடுகள் மிக முக்கியமானவையாகும்.

இக்கடிதங்களின்படி அக்கெனத்தோன் உள்நாட்டுக் காரியங்களில் ஈடுபட்டிருந்ததால் பேரரசின் காரியங்களில் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. அதனால் பாலஸ்தீனத்தில் குழப்ப நிலை நிலவியது. நகர அரசுகளின் சிற்றரசர்களிடையே போராட்டமும், உள்நாட்டுக் குழப்பங்களும் கிளர்ச்சிகளும் எழுந்தன. சிமிர்னாவுக்கு வடக்கிலுள்ள கெபால் (பிப்லோஸ்) பகுதியை ஆண்ட ரிப்–அத்தி மட்டும் ஏறக்குறைய 70 கடிதங்கள் எழுதியுள்ளார். அவற்றில் எகிப்தின்பால் தனக்குள்ள பிரமாணிக்கத்தை எடுத்துக் கூறுகிறார். அண்டை நாடான அமுரூ பகுதியின்" அரசனான அப்து–அசிர்தாவும் அவரது மகனுமான அசீரும் தூண்டிவிட்ட வளர்ச்சியடைந்து வந்த கிளர்ச்சியை அடக்க போர்உதவி கேட்கிறார். எகிப்து அப்து–அசிர்தாவுக்கு எதிராக ஓரளவு உதவி அளித்தது. அசீரு காலத்தில் கிளர்ச்சி மீண்டும் தலை தூக்கியது. அவர் கெபாலையும் எகிப்திய மாவட்டத் தலைநகரான சுமேரையும் கைப்பற்றினார். பிறகு எகிப்துக்குத் தனக்குள்ள பிரமாணிக்கத்தை எடுத்துக்கூறினார். ஆனால் பின்பு இத்தியர்களோடு கூட்டுச் சேர்ந்தார். அதே சமயம் செக்கேம் அரசன் லபாயு எகிப்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, கபீருகளின் உதவியுடன் கெசேர், மெகிதோ ஆகிய முக்கிய நகரங்களையும் தோத்தான், இஸ்ராயேல் பள்ளத்தாக்கிலும் சாரோன் சமவெளியிலுமுள்ள நகரங்களையும் கைப்பற்றினார். ஒரு கடிதத்தில் ரிப்–ஆத்தீ பிப்லோஸ் மற்ற இரு நகரங்களும் தவிர மற்ற நகரங்கள் எல்லாம் (சா) காஸ் மக்களிடம் வீழ்ந்துவிட்டன என்று எழுதுகிறார். பிறகு அவற்றையும் இழந்து, திருமணத்தால் உறவினரான பெய்ரூட்டின் அரசனான அம்முறிரோவிடம் ஓடி அடைக்கலம் தேட வேண்டியிருந்தது. இப்படி அக்கால மேற்காசியா பற்றிய பல விவரங்கள் இந்த ஏடுகளில் காணப்படுகின்றன. அக்கெனத்தோனுக்குப் பிறகு பாலஸ்தீனத்தில் எகிப்திய அதிகாரம் எவ்வளவு எஞ்சியது என்பது பற்றி அதிகம் அறிவதற்கில்லை. இப்பகுதியில் நடந்த உள்நாட்டுப் போர்கள் தடுக்கப்படாததால், அரசியல் குழப்பம் மிகுந்திருக்க வேண்டும். முதலாம் சேத்தி (1318–1249) 2–ஆம் இரமாசேசு (1299–1232) ஆகியவர்கள் ஆட்சிக்கு வரும் வரை இந்நிலையே நிலவியது.

பழைய ஏற்பாட்டு ஆய்வுகளைப் பொருத்த மட்டும் கபீருகளின் பாகம் என்பதுதான் நமக்கு முக்கியம் வாய்ந்தது. இவர்கள் யார்? பெயரளவுக்கு எபிரேயர்களோடு தொடர்புபடுத்தபடுகின்றனர். ஆனால் இப்பெயர் ஒரு இனத்

தைச் குறிப்பதைவிட, ஒரு அரசியல் இயக்கத்தைக் குறிக்கிறது எனலாம். இவர்கள் பெரும்பாலும் நிலமற்ற நாடோடிகள். விவசாய ஊழியர்களாக வும் போர் வீரர்களாகவும் பிழைப்புத் தேடியவர்கள். தனிப்பட்ட போர் குழுக் கள், ஒரு நகரத்தின் மக்கள் முழுவதும் ஏற்கெனவே இருந்த சார்புடைமைக்கு எதிராக எழுந்து, சலுகைகளையும் கடமை களையும் கைவிட்டுவிட்டு 'முறையற்ற' போர், பொருளாதாரச் சக்திகளை அடிப் படையாகக்கொண்ட புதிய அமைப்புகளை அமைந்தனர். இத்தகைய கபீரு செயல் களைத்தான் பாலஸ்தீனத்தைக் கைப்பற் றிய இஸ்ராயேலர் வரலாற்றோடு அறிஞர் கள் தொடர்புபடுத்துகின்றனர் (காண்க இபிதாகு நீதி 10:17–11:11; நாடு விட்டு விரட்டப்பட்ட தாவீதின் செயல்கள் 1 சாமு 21–24: பார்க்க. கபீரு, அபிரு).

அமலேக்கியர் (AMALEKITES – அமலேக்கின் வழித்தோன்றல்கள்)

ஏசாவின் சந்ததியினர், குறிப்பாக ஏசாவின் மகன் எலிப்பாசுக்கும் அவர் வைப்பாட்டி திம்னாவுக்கும் பிறந்த வழித் தோன்றல்கள் (ஆதி 36:12; 1 நாள் 1:36) எசாவின் பிறப்புக்கு முன்பே, அமலேக் கியர் இருந்தனர் என்பதற்கு ஆதி 14:7 சான்று கூறுவதால், ஏசாவின் சந்ததியி னரில் சிலர் பிற்காலத்தில் அமலேக்கிய ருடன் சேர்ந்திருக்கலாம். இப்பகுதி, பிற் காலத்தில் அமலேக்கியர்கள் குடியேறிய நாட்டைப் பாழாக்கினர் என்று உணர்த் தலாம்.

பாலையில் நாடோடியாக வாழ்ந்த அமலேக்கியர், காதேசைச் சுற்றியும் (ஆதி 14:7) பிற்காலத்தில் யூதாவின் எல்லைக்குத் தெற்கிலும் (நெகேபு எண்: 13:29) வாழந்து வந்தனர். சவுலின் ஆட்சிக்காலத்தில் கெவிலாவுக்கும் எகிப்துக்குக் கிழக்கி லுள்ள சூருக்கும் இடையிலுள்ள பகுதியில் வாழந்தனர் (1 சாமு 15:7; 27:8). ஒரு தடவையாக காதேஸ்பார்னேயாவுக்கு வடக்கிலுள்ள நகரங்களைக் கொள்ளை யிட்டனர் (சிக்கிலாகு 1 சாமு 30:1). எப்பிரா யீம் நாட்டின் ஒரு பகுதியையும் இவர்கள் தங்களுடையதாகக் கொண்டிருந்திருக்க லாம் (நீதி 12:15).

இஸ்ராயேலர் பாலையில் பயணம் செய்தபோது இரபிதிம் என்ற இடத்தில் இஸ்ராயேலர்களுக்கும், அமலேக்கியர் களுக்கும் முதல் சந்திப்பு நிகழ்ந்தது. அப் போது நடந்த போரில், இஸ்ராயேலின் பாளையத்தின் படைவீரர்கள் களைத்து நின்று கொண்டிருந்ததைக் கண்டு, அம லேக்கியர் அவர்களைக்கொன்று வீழ்த்தி னர் (உப 25:18). இருப்பினும் இஸ்ராயேலர் அமலேக்கியரைத் தோற்கடித்தனர். ஏனெனில் ஆரோன், கூர் ஆகியோரால் தாங்கிக்கொள்ளப்பட்டு மோசே ஆண்டவ ரது கோலை உய்த்திப் பிடித்திருந்தார் (யாத் 17:9–13). இந்த வெற்றிகுப் பின் இறைவன் தன் ஊழியன் மோசேயை இந்த நிகழ்ச்சயையும், காலப்போக்கில் அமலேக்கியர் முழுவதும் அழிக்கப்படு வது பற்றிய முன்னறிவிப்பையும் எழுதி வைக்கும்படி பணித்தார் (யாத் 17:14–15; எண் 20:20).

இதற்குப்பின் இரு இனத்தவர்களுக் கும் சுமுகமான உறவு ஒரு போதும் இருந்ததில்லை. அமலேக்கியர் தந்திர மாகத் திடீரென்று தாக்கியதை இஸ்ரா யேல் எப்போதும் நினைவில் கொண்டி ருந்தது (உப.25:17; 1 சாமு 15:2). மேலும் அமலேக்கியர்கள் இஸ்ராயேல் மேல் சில போர்களில் வெற்றியும் கொண்டனர். ஏகூது, கிதயோன் நடுவர்களாக இருந்த காலத்தில், இஸ்ராயேலர் இறைவனுக்குப் பிரமாணிக்கம் தவறியபோது, அவர்கள் அமலேக்கியரால் துன்புறுத்தப்பட்டனர். முதலில் மோவாபு மன்னன் எகிலோனின் கூட்டாளியாகவும் (நீதி 3:13) பின்பு மிதி யானியருக்குக் கூட்டாளியாகவும் (6:3.33. 10:12) அமலேக்கியர் இஸ்ராயேலரைத் துன்புறுத்தினர். ஒரு சமயம் எப்பிராயி மின் ஒரு பகுதியையும் தங்களுடைய தாக்கிக் கொண்டிருக்கலாம் (12:15).

அமலேக்கியரை முழுவதும் அழித்து விடும்படி சவுல் இறைவனால் கட்டளை யிடப்பட்டார். ஆனால் அதை ஓரளவே நிறைவேற்றினார். ஒரு போரில் வெற்றிக் குப்பின் அமலேக்கியர் அரசன் அகாக் கையும், ஆட்டு மாட்டு மந்தைகளில் நல்ல வற்றையும் தவிர, மற்றவற்றையெல்லாம் அழித்தார் (1 சாமு 15:9). இக்குற்றத்திற்

காக, அரச பதவியிலிருந்து இறைவனால் நீக்கப்பட்டார். இறைவாக்கினர் சாமு வேல் அகாக்கைத் துண்டுதுண்டாய் வெட் டிப்போட்டார் (15:11.33). பெலிஸ்தியரால் காயப்பட்டபோது, சவுல் தன்னைக் கொன்றுவிடும்படி ஓர் அமலேக்கியரைக் கட்டளையிட்டார். அவன் மறுத்துவிட் டான். இது கவனிக்கத் தக்கது (2 சாமு. 1:8–10; ஆனால் காண்க 1 சாமு 31:4–5).

காதுவின் அரசன் ஆக்கீசோடு இருந்தபோது தாவீது அமலேக்கியரைக் கொள்ளையடித்தார் (1 சாமு 27.8–4). ஆனால் அவர்களை முழுவதும் அழிக்க முடியவில்லை. பெலிஸ்தியச் சேனையில் பங்கெடுப்பதிலிருந்து நிராகரிக்கப்பட்டு தாவீது சிக்கிலாகுவிற்குத் திரும்பிய போது, அமலேக்கியர் அந்நகரை எரித்து, அவரது இரு மனைவியரையும் கைது செய்து சென்றனர் என்று அறிந்தார் (30:1–2). ஆண்டவருடைய ஆசிரோடு அவர் கொள்ளைக் கூட்டத்தாரைத் துரத்திச் சென்று, பாலையில் விட்டுச்செல்லப்பட்ட ஒரு அமலேக்கிய அடிமையின் உதவி யுடன், அவர்கள் இருந்த அந்த இடத் தைக் கண்டுபிடித்த அவர்கள் அனைவ ரையும் கொன்று போட்டார். ஆனால் 400 இளைஞர்கள், ஒட்டகத்தில் மேல் தப்பி விட்டனர் (30:7–17). இந்த வெற்றி தாவீது தான் இழந்த உடைமைகளையம், அகினே வாம், அபிகாயில் என்ற இரு மனைவிய ரையும் திரும்பப் பெற உதவியது.

அரசாட்சி நிறுவப்பட்டபின், இஸ்ரா யேல் அமலேக்கியரைக் கட்டுப்படுத்த முடிந்தது (காண்க 2 சாமு 8:11–12). அமலேக்கியர் பற்றிய விவிவியத்தின் கடைசிக் குறிப்பு 1 நாள் 4:42–43 –இல் வருகிறது. இதன்படி சிமோன் குலத்தைச் சேர்ந்த 500 பேர் சேயீர் மலையில் (ஏதோம்) அமலேக்கியரில் மீதியாய் எஞ்சி யிருந்தவர்களைக்கொன்றுவிட்டு, அங்கே குடியேறினர். இவ்வாறு அமலேக்கியர் வரலாறு எங்கு தொடங்கியதோ அங்கே அதாவது ஏதோம் நாட்டிலேயே முடிந் தது. பழைய ஏற்பாட்டுக்குப்புறம்பே இவர் களைப் பற்றிய நம்பத்தகுந்த விவரிப்புகள் கிடைக்கவில்லை. தொல்பொருள் புதை பொருள் ஆய்வுகள் இவர்களைப் பற்றி ஏதும் தரவில்லை.

அமலேக்கு (AMALEK – *பள்ளத்தாக்கில் வாழ்பவர்*) –ஆள்

1. எலிப்பாசுக்கும் அவர் வைப்பாட்டி திம்னாவுக்கும் பிறந்தவர். ஏசாவின் பேரன் (ஆதி 36:12; 1 நாள் 1:36) அமலேக் கியரின் குல மூதாதையர். எலிப்பாசின் ஓர் இனத்திற்குத் தலைவர் என்று குறிக் கப்படுகிறார் (ஆதி 36:16).

2. அமலேக்கியருக்கு மற்றொரு பெயர்.

அமலேக்கு (AMALEK) – இடம்

எப்பிராயிம் நாட்டின் ஒரு பகுதியாக இருக்கலாம் (யோசு 5:14). சிலர் சில திருத்தங்களின் அடிப்படையில், இதை வெறுமனே பள்ளத்தாக்கு என்று மொழி பெயர்ப்பர்.

அமாம் (AMAM – *ஒன்று கூடும் இடம்*)

யூதாவிற்குத் தென்மேற்குத் திசையி லுள்ள செப்பேலாவிலுள்ள ஒரு நகரம் (யோசு 15:26). இது இருந்த இடம் தெரிய வில்லை. ஒரு வேளை இது பேயேர்– செபாவுக்கு அருகில் இருந்திருக்கலாம்.

அமாசா (AMASA – *சுமை*)

1. தாவீதின் மருமகன். இவரது தாய் தாவீதின் ஒன்றுவிட்ட தங்கையும், செருயாவின் சகோதரியுமான அபிகாயில் ஆவாள். இவருடைய தந்தை இதிரா (2 சாமு 17:25) அல்லது எத்தேர் (1 நாள் 2:17) என்று அழைக்கப்பட்ட இசுமலேயர் ஆவார். இந்த அமாசா அமசாய்–2–இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

தாவீதின் அரசுக்கு எதிராக அபிச லோம் கிளர்ச்சி செய்த தொடக்கத்தில் அபிசலோம் தன் அத்தை மகன் அமா சாவை தனது படைக்குத் தலைவனாக நியமித்தார் (2 சாமு 17:25). தாவீதின் மற்றொரு மருமகனும் அபிசலோமின் மற்றொரு அத்தை மகனுமான யோவாபு பதவி நீக்கப்பட்ட தாவீது அரசனுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தார். பின்பு நடந்த போரில் தாவீதின் அதிக ஆற்றல் வாய்ந்த படை அபிசலோமின் படையை வென்றது. ஆனால், யோவாபு, அரசனு டைய தெளிவான கட்டளைக்கு மாறாக அபிசலோமைக் கொன்றார். இதனால்

சினமுற்ற அரசர் தனது படைக்குத் தலைவராக அமாசாவை நியமித்தார். இவ்வாறு செய்து, யூதா குலத்திலிருந்த பல பிரிவுகளையும் மீண்டும் ஒன்றிக்கச் செய்ய ஒரு நல்லெண்ணச் செயலாகப் பயன்படுத்தினார் (19:11–15). யோவாபு பின் கிளர்ச்சியை அடக்கிய முறையும், குறிப்பாக அரசனது மகன் அபிசலோமைக் கொன்ற விதமும், அரசருக்கு வெறுப்பளித்தன என்பதை இச்செயல் தெளிவாகக் காட்டியது.

அபிசலோமின் வெற்றிபெறாத கிளர்ச்சிக்குப் பின் எருசலேமுக்குத் திரும்பிய அரசர் மற்றொரு கிளர்ச்சியைச் சந்திக்க வேண்டியிருந்தது. இச்சமயம் பென்யாமின் குலத்தைச் சேர்ந்த செபா என்பவன் இஸ்ராயேலில் பெரும்பாலோர் அரசரைக் கைவிடத் தூண்டினார். அவர்களும் தாவீதைக் கைவிட்டு செபாவைப் பின்பற்றினர் (20:1–2). தாவீது அமாசாவை அழைத்து, யூதாவின் வீரர்களை ஒன்றுசேர்த்து மூன்று நாட்களில் தன்னிடம் வருமாறு கட்டளையிட்டார். அபிசாய் யோவாபுடன், அமாசாவை கிபயோனில் உள்ள பெரும் பாறை அருகில் சந்தித்தபோது, யோவாபு அவரை நம்பிக்கைத் துரோகமாய் கொன்று போட்டார் (20:5–10). படையின் தளபதியாக அமாசா நியமிக்கப்பட்டதைக் கண்டு யோவாபு பொறாமைப்பட்டிருக்கவேண்டும். மேலும் அரசருக்குத் தான் காட்டிய பிரமாணிக்க மிக்க சேவையை அரசர் புறக்கணித்ததை யோவாபு வெறுத்திருக்க வேண்டும். பலர் முன்னிலையில் கொடிய வேதனையோடு அமாசா இறந்தாலும் அவருக்கு உதவி செய்ய ஒருவரும்முன் வரவில்லை; கடைசியில் வீரர்களைத் தாமதிக்கச் செய்யும் விதத்தில் வழியில் கிடந்த அமாசாவின் உடலை ஒருவன் இழுத்து வயலில் கிடத்தி, ஒரு துணியால் அதை மூடினான். அதன்பின், யூதா மக்கள் செபாவைத் துரத்திச் சென்றனர் (20:11–13).

தாவீது அரசன் தனது முதிர்ந்த வயதிலும் இந்நிகழ்ச்சியை மறக்கவில்லை இறக்குமுன் அரசர் தாவீது, சாலமோனுக்கு அமாசா, அபினேர், ஆகியோர் கொலை செய்யப்பட்டதை நினைவுபடுத்தினார் (1 அர 2:5). அதோனியா இரண்டாவது கிளர்ச்சி செய்தபோது, புதிய அரசரான சாலமோன், "அவன் தன்னைவிட நல்லவர்களும் நீதிமான்களுமான அபினேர், அமாசா ஆகிய இருவரையும் என் தந்தை தாவீதுக்குத் தெரியாமல் வாளால் கொன்ற இரத்தப்பழியை ஆண்டவர் அவன் தலைமேல் திரும்பச் செய்வாராக" என்று கூறி (2:32) யோவாபுவைக் கொன்று போடக் கட்டளையிட்டார்.

2. எப்பிராயிமைச் சேர்ந்த கத்லாயின் மகன். பெக்கா, ஆகாஸ் ஆகியோரோடு செய்தபோரில் பிடிப்பட்ட யூதாவைச் சேர்ந்த கைதிகள் சமாரியாவுக்குள் கொண்டு வரப்படுவதை, அறநெறிஅடிப்படையில் எதிர்த்த எப்பிராயிம் தலைவர்களுள் ஒருவர். இவர்கள் யூதாக் கைதிகளுக்கு இரக்கம் காட்டி, அவர்கள் நாட்டிற்குச் செல்ல உதவினர் (2 நாள் 28:12–15).

அமாசாய் (AMASHSAI – சுமத்தல், தாங்குதல்)

பாபிலோனியவில் இருந்து நாடு திரும்பிய பின்பு நெகமியா காலத்தில் எருசலேமில் வாழ்ந்த ஒரு குரு; ஆசரேலின் மகன் (நெக 11:13). இவரும் மாசாயும் ஒருவரே என்று கருதப்படுகின்றனர் (1 நாள் 9:12).

அமாசியா (AMASIAH – யாவே தாங்கிக்கொண்டார்)

யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஆண்டவருக்குத் தன்னையே அர்ப்பணித்திருந்த சிக்ரியின் மகன். யோசபாத்தின் படையில் இருநூறு ஆயிரம் வீரர்களுக்குத் தளபதி. யாவேயின் பிரமாணிக்கமுள்ள ஊழியன் (2 நாள் 17:16). நம்பிக்கைக்குரிய ஊழியன்.

அமாது (AMAD – நிலைத்திருப்பது)

ஆசேரின் பகுதியில் உள்ள ஒரு எல்லை நகரம். கர்மேல் மலைக்கு அருகிலுள்ளது (யோசு 19:26). இது இருந்த இடம் தெரியவில்லை.

அமாவாசை

புதியதான ஒன்று; மாதம்; மாதத்தின் முதல் நாள் (எண் 10:10; 28:11) அமாவாசை (யூதி 8:6) அதாவது மாதத்தின் முதல் நாள் அன்றுதான் திருவிழாக்கள் ஆரம்பமாகும்

இஸ்ராயேலின் சமுதாய, சமய திருவிழாக்கள் பொதுக்காரியங்கள் எல்லாம் நிலாவின் குறிப்பேட்டைப் பொறுத்துதான் அமைகின்றன. பிற இனத்தவர் சூரியனை வைத்து ஆண்டை கணித்தபோது, இஸ்ராயேலர் சந்திரனை வைத்துக் கணித்தனர். யாத்.12:2–இல் அமாவாசையே இஸ்ராயேல் மக்களுக்கு மாதத்தின் தொடக்கமாகும். கடந்து போகுதல் என்ற பாஸ்கா திருவிழா, கூடாரத் திருவிழா அனைத்துமே அவை வரும் மாதங்களின் அமாவாசை தோன்றுவதைப் பொறுத்தே அமைகின்றன. ஐம்பதாம் நாள் திருவிழா பாஸ்கா திருவிழாவைப் பொறுத்துமாறும். இன்றும் கிறிஸ்து உயிர்ப்புத் திருவிழாவும், ஐம்பதாம் நாள் திருவிழாவும் இதே முறையில் தான் பின்பற்றப்படுகின்றன. இதற்கு ஒரே விதிவிலக்கு ஓய்வு நாள் அனுசரிப்பாகும். ஓய்வு நாள் என்பது வாரத்தின் ஒவ்வொரு ஏழாம் நாளிலும் கொண்டாடப்பட்டது.

எவ்வாறு ஓய்வு நாள் கடைப்பிடிக்கப் பட்டதோ அவ்வாறே அமாவாசையும் கடைப்பிடிக்கப்பட்டது. அன்று வேலையிலிருந்து ஓய்வு எடுக்கப்பட்டது. "நாம் தானியங்களை விற்பதற்கு அமாவாசை எப்பொழுது முடியும்" (ஆமோ 8:5); அமாவாசை என்பது ஒரு மகிழ்ச்சி கரமான நாளாகும் (ஓசே 2:11). அமாவாசை அன்று நோன்பும் தவமும் நீக்கப்பட்டிருக்கும் (யூதி 8:6). அன்று ஆலய வழிபாட்டில் சிறப்பான பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும். அன்று இவை ஓய்வு நாளை விட அதிகமாக இருக்கவேண்டும். சடங்குகள் எக்காளம் ஊதி அறிவிக்கப்படும் (எண் 10:10; சங் 81:3). விழா உணவு உண்ணுவது இந்த அனுசரிப்பின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது. சில மாதங்களில் வரும் அமாவாசை தனிச் சிறப்பான விதத்தில் புனிதமான நாளாகக் கருதப்பட்டது (காண்க 1 சாமு 20:6). அதிலும் ஏழாவது மாதத்தில் கொண்டாடப்படும் அமாவாசை மிகவும் முக்கியமானது (லேவி 23:24; நெக 8:2). ஏனென்றால் இதுதான் ஒரு காலத்தில் ஆண்டின் தொடக்கமாக இருந்திருக்கலாம். அமாவாசை இறைவாக்கினர்களிடமிருந்து குறிகள் கேட்பதற்கு ஏற்ற நல்ல நாளாகக் கருதப்பட்டது (2 அர 4:23). ஆண்டவரின் காட்சிகள் முதல் மாதத்தின் முதல் நாளில் தமக்கு அருளப்பட்டதாக எசக்கியேல் இறைவாக்கினர் எழுதி வைத் திருக்கின்றார் (26:1; 29:17; 31:1; 32:1; காண்க ஏச 47:13; ஆகாய்1:1)

யூதரின் அடிமை வாழ்வுக்குப் பிறகு அமாவாசைத் திருவிழாவின் முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. திருச்சட்ட நூலை குரு எஸ்ரா ஏழாம் மாதம் முதல் நாள் அதாவது அமாவாசையன்று கொண்டு வந்து படித்தார் (நெக 8:2).

ஓய்வு நாள்தோறும் மனிதர் அனைவரும் வந்து இறைவன் திருமுன் வழிபாடு செய்வது பற்றிய இறுதிக்காலம் பற்றிய கூற்றுக்களில் அமாவாசை ஓய்வு நாளோடிணைக்கப்படுகிறது. (ஏச 16:22–23).

அமாவாசை அறிவிப்புக்கு வேண்டிய எல்லா வரலாற்று யூதச் சடங்குகளும் முந்திய ஓய்வு நாளன்று செய்யப்பட்டன என்பதும், அதோடு இறுதிக்கால பொருளுடைய செபமும் சேர்க்கப்பட்டது என்பதும், பொருள் பொதிந்தாகும். இந்த அனுசரிப்பிற்குக் காரணம், இறைவன் இஸ்ராயேலோடு செய்துகொண்ட முறிக்க முடியாத உடன்படிக்கையின் அடையாளம் ஆகவும் காலத்தைக் கணிக்கவும் இறைவன் சந்திரனைப் படைத்தார் என்பதே (சங் 109:19; சீரா 43:6–8). உடன்படிக்கைச் சூழ்நிலையில் இந்த இறுதிக் காலப் பொருள் இறைவனே காலங்களைப் படைப்பவர் என்பதோடு இணைக்கப்பட்டுள்ளது என்பது அமாவாசை ஆசீர்களின் வாய்ப்பாட்டில் எடுத்துக் கூறப்படுகிறது "மாதங்களைப் புதுப்பிப்பவரான ஆண்டவர் போற்றப்படுவாராக". அமாவாசை அனுசரிப்பு கிறிஸ்துவத் திருச்சபையில் தொடர்பில்லையானாலும் அதற்கு யூதத்துவத்தில் அதன் பலவற்றை உள்ளடக்கிய பொருளை உணராததல்ல (கொலோ 2:16–17; காண்க 1:16–17).

ஒரு நிலையான கால அட்டவணையால் அமாவாசையின் நாள் குறிக்கப்படுமுன், அமாவாசையால் உண்மையிலேயே

காண்பதைக்கொண்டு நிர்ணயிக்கப் பட்டது. இவ்வாறு ஆலய அழிவுக்குப் பின் இந்நாளைக் குறிப்பது, ராபிகளின் உயர் சங்கத்தின் அலுவலாகும். அந்நாளுக் குரிய சிறப்பான தோரா வாசகமாகிய எண் 28:1–15; சங் 109 வாசிக்கப்பட்டது. அந்நாளின் மகிழ்ச்சிமிக்க தன்மை அல் லேல் சங்கீதத் தொகுப்பைப் பாடுவதால் சுட்டிக்காட்டப்பட்டது. 16–ஆம் நூற்றாண்டி லிருந்து, அமாவாசைக்கு முந்தியநாள் ஒரு நோன்பு நாளாக அனுசரிக்கப்படு கிறது. இது ஒருசிறிய "யோம்இப்பூர்" என்றழைக்கப்படுகிறது.

அமானா (AMANA – *பற்றுறுதியான, நிலையான)*

லெபானோன்னுக்கு எதிரேயுள்ள மலைத் தொடரிலுள்ள ஒரு கிராமம் (உ.ச.4:8). அநேகமாக அமானா அல்லது அபானா ஆறு பாயும் பள்ளத்தாக்கிற்குத் தெற்கேயுள்ளது. இது லெபானோன்னுக்கு மற்றொரு பெயராக இருக்கலாம் (உ.ச.4:8).

அமித்தாய (AMITTAI – *நம்பிக்கைக்குரிய, உண்மையான)*

செபுலோன் இனத்தின் காத்து–கேப்பர் என்ற ஊரைச் சேர்ந்தவர். இறை வாக்கினர் யோனாவின் தந்தை (2 அர 14:25; யோனா 1::1).

அமைதி, சமாதானம் (PEACE)

மனிதன் அமைதியைத்தேடி நாளெல் லாம் அலைகிறான். ஆனால் அதன் தன் மையையும் அதனை அடைய அவன் பின் பற்றும் வழிகள் முறை ஆண்டவருடைய வழிகள் அல்ல என்பதை அறியாதது போகிறான். எனவே, மனிதன் உண்மைச் சாதானம் என்ன என்பதையும், இயேசுவில் அந்தக் கொடை எப்படிக் கிடைத்தது என்பதையும் புனித வரலாற்றி லிருந்து அறிந்து செயல்படவேண்டும். அமைதி முழுமை நலமும் பாதுகாப்பும் அடங்கிய நிலையாகும். இதற்குப் பல பருமன் உண்டு. இது உடல்நலத்தையோ, செல்வச் செழிப்பையோ, பாதுகாப் பையோ ஆன்மீக நிறைவுடைமையையோ சார்ந்ததாக இருக்கலாம். இது ஒரு தனி நபரையோ அல்லது குழுவினரையோ பற்றிக் கூறப்படலாம்.

I. பழைய ஏற்பாடு :-

1. இலௌகீக அமைதி:- இலௌகீக அமைதி, சமய அமைதி என்று வேறுபடுத் துவது நமது ஆய்வுக்காக மட்டுமே. பழைய ஏற்பாட்டில் எவ்வகை அமைதியும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்டு அளிக் கப்படும் முழுமை நலமாகும். இங்கே இலௌகீக அமைதி என்பது, மனிதர் ளிடையே அவர்களுடைய சமூக உறவிலும் தனிப்பட்டோர் வாழ்விலும் காணப்படும் முழுமை நலத்தைக் குறிக்கிறது.

அ.தனிப்பட்டோர் வாழ்வில் அமைதி:– இது முதன்மையாக உடல் நலத்திலும் நல் வாழ்விலும் அடங்கியுள்ளது. இது இறைவ னது ஆதரவான வாக்குறுதியாலோ நம் நலம்தேடும் ஒருவராலோ அளிக்கப்படும் பாதுகாப்பாகும் (நீதி 16:6; 13:20). உடல் நலத்தைத்திரும்பப் பெறுவது அமைதி யைத் திரும்ப பெறுவதாகும் (ஏச 38:17). போரிலிருந்து நலமே திரும்பியவன் அவனது நலத்தைப் பாதுகாத்துள்ளான், அவன் அமைதியுள்ளவனாக உள்ளான் (யோசு 10:21; 1 அர 22:17; 2 நாள் 19:1; சங் 55:18). ஆபத்தை எதிர்கொள்ளச் செல்பவ னுக்கு அமைதி கூறப்படுகிறது (யாத் 4:18; 2 சாமு 15:27). தனி நபரின் அமைதி அவனது நல்வாழ்வுக்குச் சமமானதாகும். அதில் நலமான துயில் (சங் 4:8), நீண்ட வாழ்வு (பழ 3:2), செல்வச் செழிப்பு (சங் 37:37), நிறைந்த வாழ்வுக்குப் பின் அமைதி யான மரணம் (ஆதி 15:15; நீதி 6:28; 2 அர 22:20; 2 நாள் 34:28; யோபு 21:13; எரே 34:5) ஆகியவை அடங்கும்.

ஆ. சமூக வாழ்வில் அமைதி:- தனி நபரின் வாழ்வில் அமைதி நலத்தையும் பாதுகாப்பையும் குறிப்பதுபோல் நாட்டின் அல்லது குடும்பத்தின் அமைதி அதன் செல்வச் செழிப்பையும் பாதுகாப்பையும் குறிக்கும். அடிக்கடி அமைதி பொருளா தாரச் செழிப்பைக்குறிக்கிறது (1 நாள் 4:40; 22:9; சங் 37:11; 147:14; ஏச 54: 13; 16:12; செக் 8:12). சிலபகுதிகள் சமூகத்திற்கும் இயற்கைக்குமிடையே நிலவும் ஒருங்கி யைந்த உடன்படிக்கை நிலையை அமைதி என்று விவரிக்கின்றன (லேவி 26:6; யோபு 5:23–24; எச 34:25; சங் 72:3). அரசியல் பாது காப்பும் அமைதியே (2 அர 20:19; ஏச 32:

18; ஆகா 2:9). ஆனால் இது சமூகத்தில் நுழையும் "நோய்களாலும்" "காயங்களாலும் கெடுகிறது (எரே 6:4; 8:11; 14:19; எச 13:10.16). இவற்றை யாவே மட்டுமே குணமாக்க முடியும் (எச 57:19; எரே 33:6). அமைதி உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது (ஆதி 34:21; யோசு 9:15; ஒபா 7) போராட்டத்தின் எதிர்மறையை அமைதி குறிக்கிறது (எரே 12:5; செக் 8:10). அமைதி போரின்மையாகும் (நீதி 21:13; 1 சாமு 16:4–5; 29:7; 1 அர 2:5; 4:24; சங் 120:7; திருவுரை 3:8; எரே 14:13; 28:9). மாறாகப் போரை நிறுத்துவதற்கு அமைதி ஒரு நிபந்தனையாகும். அதற்காக வல்லந்தம் செய்யாதிருக்க உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும் (உப 2:26; 20:10–12; யோசு 10:1.4; 11:19; நீதி 4:17; 1 சாமு 7:14; 1 அர 5:12; 22:24; 2 அர 9:17–31; 18:31; எச 36:16; தானி 11:16). சில சமயம் அமைதி போரில் வெற்றியைக் குறிக்கும் (நீதி 8:9; 2 சாமு 19:24; 30:1; 1 அர 22:27–28; 1 நாள் 22:18; எச 9:7; எரே 43:12; மீக் 5:5; செக் 9:10). "அமைதியின் இளவரசன்" பற்றிய ஏசையாவின் கூற்று (எச 9:6) வெற்றிமிக்க இளவரசனைக் குறிப்பதாகத் தெரிகிறது. அமைதி சில சமயம் சரண் அடைவதையும் குறிக்கிறது (2 சாமு 10:19; 1 அர 28:18; 1 நாள் 19:19; எச 27:5; தானி 11:17).

2. சமய அமைதி:

இது இறைவனிடமிருந்து வருவது (எச 45:7) இறைவனது பிரசன்னமே அமைதிக்கு நிபந்தனை (எண் 6:26; 1 நாள் 23:25). ஆகவே உடன்படிக்கையின்கீழ் மனிதனது ஏற்புடைமை நீதியே மனிதனை அமைதியுள்ளவனாக்குகிறது.

அ) அமைதியும் நீதியும்:– "நீதியின் பலன் அமைதி" (எச 48:18; 57:2; 60:17) இரு கருத்துக்களும் அடிக்கடி ஒன்று சேர்ந்து வருகின்றன (சங் 72:7; 85:10; எச 48:18; 57:2; 60:17). அமைதியாக இருப்பது, நேர்மையோடு நடந்துகொள்ளுதலாகும் (மலா 2:6), பிரமாணிக்கமாக இருத்தலாகும் (2 சாமு 20:19) உண்மையில் நிலைத்து நிற்ற லாகும் (எஸ் 9:30; செக் 8:16). இவ்வாறு அமைதி தீமைக்கு எதிர்நிலையானதாகும் (சங் 34:14; பழ 10:10; எச 48:22) மனித வாழ்வின் முழுமை இறைவனுக்குக் கீழ்ப்படிதலை உள்ளடக்குகிறது.

ஆ) அமைதியும் உடன்படிக்கையும்:– உடன்படிக்கையானது இறைவனோடு உள்ள உறவின் முழுமையை மீண்டும் அமைக்கும் உறவாகும். ஆகவே அமைதி எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கும் உடன்படிக்கை அமைதியைக் குறிக்கலாம் (எச.37:26). இது மனிதனுக்கு இறைவனது அன்பைக் கொண்டுவருகிறது (எச 54:10). யாவே தமது அமைதியை நீக்குவது உடன்படிக்கையை அகற்றிவிடுவதாகும் (எரே 16:5). உடன்படிக்கை அமைதி பரஸ்பர உறவை உள்ளடக்குகிறது (எண் 25:12; மலா 2:5).

இ) அமைதியும் ஆசீரும்:– ஆசீர் உறவின் முழுமையின் யாவே அருளும் கொடையாகும். அது வலிமையைக் குறிக்கலாம் (சங் 29:11), பாவ மன்னிப்பையோ (2 அர 5:19), மகிழ்ச்சியையோ (எச 55:12), மன்றாட்டுக்குப் பதில் கிடைக்கும் என்ற உறுதியையோ (ஆதி 41:16; 1 சாமு 1:17) குறிக்கலாம். எருசலேமின் முழுநலனுக்கும், ஆகவே, இஸ்ராயேலின் சமயத்திற்கும், அமைதி எனும் ஆசீர் அவசியமாகும் (சங் 122:6–8; 125:5). அதோடு தொடர்ந்து வரும் ஆசீர் உறுதி அளிக்கப்படுகிறது (1 அர 2:33; சங் 128:6)

ஈ) அமைதியும் மீட்பும்:- இறைவன் மனிதனின் நற்பேறுகளை ஆட்சி செய்வதால், அவரது அமைதி மீட்பாகும் (எச 52:7; நாகூ 2:1). அவரை நம்புபவர்கள் (எச 26:3), அவரது மீட்பில் நம்பிக்கை வைப்பவர்கள் (சங் 119:65) அமைதியைக் கொண்டிருப்பர். இறைவனது இறுதிக் காலத்திய வாக்குறுதி அமைதிபற்றிய வாக்குறுதியாகும் (சங் 85:8; எச 26:12). இறுதிக்கால அமைதிக்குமுன் தீர்ப்பும் துன்பங்களும் வரலாம் என்றாலும், இஸ்ராயேல் தனது துன்பங்கள் "நலமாக்கும் தண்டனை" என்றும், "குணமளிக்கும் காயங்கள்" என்றும் அறிந்திருக்கிறது (எச 53:5).

II. புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டில் அமைதி என்ற சொல், அதைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லும், எபிரேயச் சொல்லும் குறிக்கும் பொருளை உள்ளடக்கியதாகும். "சமாதானமாயப்போ" (மாற் 5:34), "உங்களுக்குச் சமாதானம்" (யோவா 20:19.21)

என்ற கூற்றுகள் வெறும் வாழ்த்துக்கள் மட்டுமல்ல, அவை அமைதியைப் பொழி கின்றன. இப்பொருளில்தான் சீடர்கள் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றனர். இவ்வாறு கூறி அளிக்கப்பட்ட அமைதி புறக்கணிக்கப்பட்டால், அமைதி அளித்த வரிடமே திரும்பிவிடும் (மத் 10:13; லூக் 10:5–6). பவுலின் திருமுகங்களும் மற்ற திரு முகங்களும் இப்பொருளில்தான் வாழ்த் துக்கூறுகின்றன.

இவ்வாழ்த்துக்களில் அளிக்கப்படும் அமைதி இறைவனிடமிருந்து வருகின்றது (கலா 1:3; எபே.1:2; திருவெளி 1:4). மற்ற இடங்களில் அது "இறைவனது அமைதி" என்று விவரிக்கப்படுகிறது (பிலி 4:7; கொலோ 3:15). மனிதனுக்கு இறைவனிட மிருந்து அமைதி வருவதால், இறைவனே அமைதியின் இறைவனாகிறார் (உரோ 15:33; 2 கொரி 13:11; பிலி 4:9; எபி 13:20). யோவா 14:27–இல் அது கிறிஸ்துவின் கொடையாகுகிறது.

பலவற்றை உள்ளடக்கும் பொருளில் புதிய ஏற்பாட்டில் அமைதி என்ற சொல் தெளிவாக வேறுபட்ட மூன்று முறையில் பயன்படுகிறது.

அ) இது இதன் கிரேக்கச் சொல்லின் பொருளை அடிப்படையாகக் கொண்டது. இது, போர் அல்லது பகைமைக்கு எதிர் நிலையாகும். இந்தச் சமயச் சார்பற்ற பொருளில், இச்சொல் லூக் 14:32; அ.ப. 12:20–இல் காணப்படுகிறது இப்பொரு ளின் விரிவாக, எபே 2:14–17–இல் சாதா ரணமாய் பகைமையுள்ள இரு குழுவினர் களான யூதர்களுக்கும் புறஇனத்தாருக்கும் இடையே கிறிஸ்து கொண்டுவந்த ஒப்புறவை அமைதி குறிக்கும்.

1 கொரி 7:15–இல் கணவன்– மனைவி யருக்கிடையே நிலவும் "குடும்ப அமைதி யையும்", மத் 10:34; லூக் 12:51–இல் குடும்பத் திற்குள் நிலவும் ஒருங்கியைந்த உறவை யும் அமைதி குறிக்கும். பிறரோடு, குறிப் பாகச் சக கிறிஸ்தவர்களோட மகிழ்ச்சி மிக்க உறவு என்ற பொருளில், அமைதி கிறிஸ்துவனின் முயற்சியின் குறிக்கோ ளாக எடுத்துக் கூறப்படுகிறது (உரோ 14:19; எபே 4:3; எபி 12:14; 1 பேதுரு 3:11). இதே பொருளில் கிறிஸ்தவர்கள் ஒருவ ரோடு ஒருவர் அமைதியாக இருக்கும்படி அறிவுரை கூறப்படுகின்றனர் (மாற் 9:50; உரோ 12:18; 2 கொரி 13:11; 1 தெச 5:13). மத் 5:9–இல் இயேசுவும் "சமாதானம் செய வோர்" மேல் ஆசீர் கூறுகிறார். 1 கொரி 14:33–இல் திருச்சபையின் கூட்டங்கள் சரி யான முறையில் நடத்தப்படவேண்டும் என்ற பொருளில், குழப்பத்தின் எதிர் நிலையாக, அமைதி பயன்பட்டுள்ளது.

ஆ) இறைவனுக்கும் மனிதனுக்கு மிடையே சரியான உறவை மீண்டும் அமைப்பதில் புதிய ஏற்பாடு மிகுந்த அக் கறைகொள்வதால், திரும்ப அமைக்கப் பெற்ற அந்த உறவைக் குறிக்க அமைதி பயன்படுகிறது. மனந்திரும்புதலுக்கு முன் மனிதன் இறைவனிடமிருந்து அந்நிய னாக்கப்பட்டான் (எபே 4:18; கொலோ 1:21). இறைவனின் பகைவனாவான் (உரோ 5:10; கொலோ 1:21). இத்தவறான உறவுமுறை, கிறிஸ்துவில் சரி செய்யப்படுகிறது. மனிதன் இறைவனோடு ஒப்புறவாக்கப் படுகிறான் (2 கொரி 5:19; கொலோ 1:22) "விசுவாசத்தினால் ஏற்புடையவனாக" (உரோ 5:1) ஆக்கப்படுகின்றான். இவ் வாறு, "நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ் துவின் வழியாய்" இறைவனுடைய அமைதி யைக்கொண்டுள்ளான் (உரோ 5:1). சிலு வையின் இரத்தத்தால் இறைவன் அமைதி உண்டாக்கினார் (கொலோ 1:20). கிறிஸ்து வின் இந்த அலுவல் எவ்வளவு வலி யுறுத்தப்படுகின்ற தென்றால் (எபே 2:15) அவரே "நமது அமைதி" என்றழைக்கப் படுகிறார் (2:14).

இ) மனஅமைதி என்ற பொருளிலும் அமைதி என்ற சொல் புதிய ஏற்பாட்டில் பயன்பட்டுள்ளது. இது தெளிவாகக் கிறிஸ்துவத் தன்மையுடையதாகும். ஏனெனில் அமைதியைக்குறிக்கும் கிரேக்க அல்லது எபிரேயச் சொல் இப்பொருளில் பயன்படவில்லை. உரோ.8:6–இல் "ஆவி யால் தூண்டப்படும் இயல்பின் நாட்டத் தால் வருவது வாழ்வும் அமைதியுமாகும்" என்றும், 15:13–இல் "விசுவாசத்தால் உண் டாகும் எல்லாவகையான மகிழ்ச்சியும் அமைதியும்" என்றும் வாசிக்கிறோம். இவ்வாறே கலாத்.5:22–இல் தேவ ஆவி

விளைவிக்கும் பலன்களில் ஒன்றாக அமைதி விவரிக்கப்படுகிறது. பிலி.4:7–ல் "இறைஅமைதி கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் உள்ளத்துக்கும் மனதுக்கும் அரணாயிருக்கும்" என்றும், கொலோ. 3:15–இல் "கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இதயங்களில் ஆட்சி புரிவதாக" என்றும் வாசிக்கிறோம்.

வெவ்வேறு சூழ்நிலைகளில், அமைதி என்ற சொல், மேற்கூறப்பட்ட மூன்று பொருள்களில் ஒன்றைக் குறிக்கலாம். ஆனால் இவற்றில் அநேக இடங்களில் மூன்று பொருளையும் உள்ளடக்கிப் பயன் பட்டுள்ளது. இது, ஒரு கிறிஸ்தவன் மற்றொரு கிறிஸ்தவனுக்கு "இறைவனிடமிருந்து அமைதி"யை வேண்டும்போது நிகழ்கிறது.

III. அமைதி இறைவனின் கொடை:-

சமாதானம் நீதியின் கனியும், அடையாளமுமாக இருக்கிறதென்றால், தீயவர்கள் எப்படி அதனைப் பெற முடியும் (சங் 73:3)? மீட்பின் முழு வரலாறு இந்தத் துயர்மிக்க கேள்விக்கு விடை அளிக்கிறது. ஆரம்பத்தில் இவ்வுலக இன்பமாக கருதப்பட்ட சமாதானம், வானகத்திலிருந்து அது வருகின்றபடியால் அது ஆன்மீக நலனாகும் என்ற கருத்து வளர்ச்சியடைகிறது.

1. அமைதியின் இறைவன்:-

விவிலிய வரலாற்றின் தொடக்கத்திலே கிதயோன் அமைதியின் ஆண்டவருக்கு பலிபீடம் கட்டினார் (நீதி.6:24). வானத்தை ஆளும் ஆண்டவர் (யோபு 25:2) சமாதானத்தை உருவாக்க இயலும் (ஏச 45:7). அவரிடமிருந்தே இந்த நலன் எதிர்பார்க்கப்படுகிறது. அவரே தம் ஊழியருக்கு சமாதானத்தை அளிப்பார் (சங் 35:27). அவர் இஸ்ராயேலையும் (எண் 6:26), அவர்களது மக்களையும் (சங் 29:11). தாவீதின் வீட்டாரையும் (1 அர 2:33) குருத்துவ திருக்கூட்டத்தையும் (மலா 2:5) ஆசீர்வதிக்கிறார். எனவே அவரை நம்புபவர் சமாதானத்தோடு உறங்கலாம் (சங் 4:9; காண்க ஏச 26:3).

2. ஆண்டவர் அமைதி தருகிறார்:-

"சமாதானத்தைத் "தாரும் ஆண்டவரே" என மனிதன் தொடர்ந்து நம்பிக்கையோடு வேண்டி நீதியான செயல்களைச் செய்தால் அமைதி பெறுவான். ஏனெனில் இறைவன் திட்டப்படி சமாதானத்தை உலகில் நிலவ மனிதன் ஒத்துழைக்கவேண்டும். ஆனால் எப்போதும் பிரசன்னமாயிருக்கும் பாவத்தால் இந்த ஒத்துழைப்பு இருப்பதில்லை. விடுதலை வீரர்களை உருவாக்கி இஸ்ராயேல் தன் பாவங்களால் இழந்த அமைதியை இஸ்ராயேலர் திரும்ப பெறச் செய்கின்றார் இறைவன். எதிரிகளிடமிருந்து நாட்டை மீட்டபோது தாவீது தனது பணியைச் செய்துவிட்டதாக எண்ணினார் (2 சாமு 7:1). சாலமோன் அமைதியின் அரசரென போற்றப்பட்டார் (1 நாள் 22:9). அவரது ஆட்சியில் வட, தென் இஸ்ராயேலைச் சேர்ந்த இருமக்களும் சகோதரப் பண்போடு ஒன்றித்து வாழ்கின்றனர்.

3. அமைதிக்காகப் போராட்டம்:-

அ. இறைவாக்கினரின் போராட்டம்:- இஸ்ராயேலின் அரசர்கள் இறை நீதியின் கனியாக அமைதியை நாடாமல் அந்நிய அரசரோடு அரசியல் கூட்டணியின் விளைவாக அமைதியைத் தேடினர். போலி இறைவாக்கினர்களும் அதனை அமைதி என்றுரைத்தனர் (மீக் 3:5). பாவத்திலே மூழ்கி நிலையான சமாதானத்தை அறிவித்தனர் (எரே 14:13). கி.மு. 850–இல் இமிலாவின் மகனான மீக்காயா இவர்களை எதிர்த்து வாதாடுகின்றார் (1 அர 22:13–28). எருசலேம் முற்றுகையிடப்பட்ட வேளையில் இப்போராட்டம் கடுமையாகிறது. உண்மை மனமாற்றம் தேவையென எரேமியா மொழிகின்றார் (எரே 23:9–40; 6:14) அடிமைத்தனத்திலே வாடிய மக்களுக்கு இறைவன் தாம் அமைதித் திட்டத்தை அவர்களுக்காக வைத்திருப்பதாகக் கூறுகிறார் (எரே 29:17; காண்க 33:9). அமைதியின் உடன்படிக்கை ஏற்படுத்தப்படும் பாதுகாப்பும் ஆசீரும் அருளப்படும் (எரே 34:25–30). ஏனெனில் "நாம் அவர்களோடு இருப்போம்" என்று இறைவன் கூறுகிறார்.

ஆ) இறுதிக்கால அமைதி :-

அமைதிபற்றிய போராட்டமே இறைவாக்குச் செய்தியின் அடிப்படையாகும். இறுதிக்காலம் பற்றிய போதனையில்,

அமைதி, அதன் இவ்வுலகு சார்ந்த வரையறைகளிலிருந்தும் பாவப்போலித்தன்மையிலிருந்தும் விடுவிக்கப்படுகிறது. அச்சுறுத்தும் வாக்குகளை எடுத்துக்கூறும் இறைவாக்கினர்கள் இறுதிக்காலத்திலே சமாதானம் நிறைவாக நிறுவப்படும் என்கின்றனர் (ஓசே 2:20; ஆமோ 9:13). ஏசயா "அமைதியின் இளவரசர்" வந்து முடிவில்லா அமைதியை வழங்குவார் என எண்ணுகிறார் (ஏச 9:5; 9:6). ஏனெனில் அவரே அமைதி ஆவார் (மீக் 5:4). இயற்கை மனிதனுக்கு அடிபணியும், பிரிந்த இரு நாடுகளும் ஒன்று சேரும், நாடுகள் அமைதியில் வாழும் (ஏச 2:2; 11:1; 32:15–20). இந்த அமைதியின் நற்செய்தி (நாகூ 2:1) துன்புறும் இறையடியான் வழியாய் நிறைவேறும் (ஏச 53:5). தனது துன்பத்தின் வழியாய் இந்த அமைதியின் விலையை அவர் காட்டுகிறார். அந்நாளில் தொலைவிலிருப்பவனுக்கும் அருகிலிருப்பவனுக்கும் அமைதி அருளப்படும், காயங்கள் குணமாக்கப்படும் (57:9). நீதி எருசலேமுக்குத் தலைமை தாங்கும் (60:17). "இதோ, ஆற்றுப்பெருக்குப் போல் எருசலேம்மேல் அமைதியை நாம் பொழிந்திடுவோம்" (66:12; காண்க 48:18)

இ) இறுதியாய் ஞான நூல்கள் உண்மை அமைதியைப்பற்றத் தெளிவாய்ப் பேசுகின்றன. ஆண்டவரை அன்பு செய்பவர்கள் மிகுதியான சமாதானத்தைப் பெறுவர் (சங் 119:165). ஆனால் நல்லவன் பல நேரங்களில் துன்பப்படுகிறான். இது செயல்வினைப்பயன் என்ற பிரச்சினையை எழுப்புகிறது. பார்வைக்கு அவர்கள் பரிதாபத்திற்குரியவனாக இருப்பினும் ஆண்டவரது கைகளில் அவர்களது ஆன்மா உள்ளது. இறந்த பின்னும் தனித்தன்மையோடு நிறைவாக வாழ்கின்றனர். அமைதியிலே திளைத்திருக்கின்றனர் (ஞான 3:1 தொ). அவர்களுக்குப் பெரும் பேற்றை அளிப்பவரோடு ஒன்றித்து நிறைநலத்தோடு வாழ்கின்றனர்.

IV. இயேசுவின் சமாதானம்:-

இறைவாக்கினர்களும் ஞானிகளும் அளித்த நம்பிக்கை கிறிஸ்துவில் அளிக்கப்படும் உண்மையாகிறது. ஏனெனில் அவரிலும் அவராலும் பாவம் வெற்றி கொள்ளப்படுகிறது. பாவம் ஒவ்வொரு மனிதனிலும் அழிக்கப்படவில்லையெனில் ஆண்டவர் இறுதி நாளில் வரவில்லையெனில் அமைதி எதிர்காலக் கொடையாகவே நிற்கிறது. எனவே இறைவாக்கினர் கருத்தான, 'சமாதானம் செய்வோர் சமாதானத்தில் விதைக்கும் விதையிலிருந்து இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வென்னும் கனி விளைகிறது' (யாக் 3:18; காண்க ஏச 32:17) என்பது தொடர்கிறது. இதுவே புதியஏற்பாட்டின் அமைதி பற்றிய நற்செய்தி.

1. லூக்கா:-

லூக்கா தனது நற்செய்தியிலே அமைதியின் அரசரைச் சிறப்பாகச் சித்தரிக்கிறார். கிறிஸ்துவின் பிறப்பின்போது வானதூதர்கள் உலகிலே ஆண்டவர்தம் தயவு பெற்றவர்களுக்கு அமைதி உண்டாகுக என அறிவித்தனர் (லூக் 2:14). இதே அறிவிப்பு இயேசு யெருசலேமில் நுழைந்த போது அவருடைய சீடர்களால் மகிழ்வுடன் எழுப்பப்பட்டது (19:38). ஆனால் எருசலேம் அவரை ஏற்க மறுத்தது (19:42). அவர் 'சமாதானம்' என மொழிகின்றபோது அதே மீட்பாக மாறி விடுகின்றது. 'சமாதானமாய்ப் போ' என இயேசுகூறி, பெரும்பாட்டினால் வருந்திய பெண்ணைக் குணமாக்கினார் (8:48). மனம்வருந்திய பெண்ணின் பாவங்களை மன்னித்தார் (7:50). இவற்றின் மூலமாக அவருக்குப் பாவம், நோய்கள் மேலுள்ள அதிகாரத்தைக் காண்பித்தார். இயேசுவைப் போல அவரது சீடரும் சமாதான வாழ்த்தால் மக்களுக்கு மீட்பை அளித்தனர் (10:5–9). ஆனால் இந்த மீட்பு உலக சமாதானத்திற்கு எதிரானது. "சமாதானத்தையல்ல பிரிவையே ஏற்படுத்த வந்தேன்" என்று இயேசு கூறுகிறார். (12:51). இறைவாக்கினர் போல, போலியான பாதுகாப்பை நம்பி ஏமாற வேண்டாமென எச்சரிப்பதோடு அவர் நிறைவடையவில்லை (17:26–36; காண்க 1 தெச 5:3). போர்களை அழிக்க அவர் வரவில்லை, மாறாக இயேசு உண்மைச் சமாதானத்தை ஏற்படுத்தினார் (லூக் 24:36). இந்தச் சமாதானத்தை உலக மனைத்திற்கும் சீடர்கள் எடுத்துச் செல்கின்றனர் (அ.ப.7:26; 9:31; 15:33). ஏனெனில்

இறைவன் "எல்லாவற்றிற்கும் ஆண்டவராகத்" தம்மையே காட்டி கிறிஸ்து வழியாக அமைதியை அறிவிக்கிறார்.

2. பவுல்:-

பவுல் தமது மடல்களில் கூறும் வாழ்த்துக்களில் சமாதானத்தோடு அருளையும் சேர்த்து அதன் மூலத்தையும் நிலைத் தன்மையையும் உறுதிப்படுத்துகின்றார். மேலாக இது மீட்போடு கொண்டிருக்கும் தொடர்பையும் காட்டுகின்றார். கிறிஸ்துவே நம் சமாதானம். அவரே யூத இனத்தையும் புறவினத்தையும் ஒன்றாய் இணைத்தார் (எபே 2:14–22). சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால் சமாதானம் உண்டாக்கி விண்ணிலும் மண்ணிலும் உள்ள யாவற்றையும் அவர் வழியாக ஒப்புரவாக்கினார் (கொலலோ 1:20). எனவே நாம் 'ஒரே உடலின் உறுப்பினராய் அழைக்கப்பட்டிருப்பதால்' நம் இதயங்களில் கிறிஸ்துவின் சமாதானம் ஆட்சி செய்கிறது (கொலே 3:15). தூய ஆவியே நமக்குள் இந்தப் பிணைப்பை ஏற்படுத்துகிறார் (எபே 4:3). ஏற்புடையவன் இறைவனோடும், இயேசுவோடும், சமாதானத்தோடு வாழ்கிறான் "அன்புக்கும் சமாதானத்துக்கும் ஊற்றாகிய இறைவன்" (2 கொரி 13:11) அவனை முழுமையாக அர்ச்சிக்கிறார் (1 தெச 5:23). பிறரன்பு, மகிழ்ச்சி போன்றவைபோல சமாதானம் ஆவியன் கனியாகும் (கலா 5:22). அமைதி நாம் முன்கூட்டியே வாழ்கின்ற முடிவில்லா வாழ்வு (உரோ 8:6). இது அறிவெல்லாம் கடந்தது (பிலி 4:7); துன்பங்களில் பொறுமையாக உள்ளது (உரோ 15:1–5); அடுத்தவர் உறவிலே மிளிர்வது (1 கொரி 7:15; உரோ 12:18; 2 திமோ 2:22). "கிறிஸ்துவை இறந்தோரிடமிருந்து எழுப்பியவரும் சமாதானத்தின் ஊற்றுமாகிய இறைவன்" (எபி 13:20), சாத்தானை அழித்து (உரோ 16:20) எல்லாவற்றையும் மூலநிலையில் திரும்ப அமைக்கும் நாளில் அமைதி மிளிரும்.

3. யோவான்:-

இயேசுவின் தியாகத்தால் விளைந்த கனியே சமாதானம் (யோவா 16:33). ஒத்தமை நற்செய்திகள் கூறுவதுபோல் இயேசு அளிக்கும் சமாதானம் உலக சமாதானம் போன்றதன்று. இறைவன் தங்களோடு இருந்ததால் இஸ்ராயேலர் சமாதானத்தைப்பெற்றனர் (லேவி 26:12; எச 37:26) என்பதைக் கருத்தில் கொண்டு யோவான், யேசுவின் பிரசன்னத்தில் அமைதியின் மூலத்தையும் உண்மையையும் காட்டுகின்றார். இதில் அவரது முன்னோக்கின் சிறப்புப் பண்புகளில் ஒன்று அமைந்துள்ளது. எனவேதான் இயேசு தங்களைவிட்டுப் பிரிகின்றார் என சீடர்கள் வருந்தியபோது "என் சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்" என இயேசு உறுதிகூறுகின்றார் (யோவா 14:27). இந்தச் சமாதானம் இயேசுவின் பிரசன்னத்தோடல்லாமல் இவ்வுலகின் மேல் கொண்ட வெற்றியோடு இணைக்கப்படுகிறது. சாவை வென்று அவர் சமாதானத்தையும் தூய ஆவியையும் பாவத்தின் மேல் அதிகாரத்தையும் அளிக்கிறார் (20:19–23).

4. அமைதியின் தூயகாட்சி:-

வானக எருசலேமை தியானிக்கச் செய்யும் நம்பிக்கையில் கிறிஸ்துவன் அசையாது நிலைத்து நின்று (திருவெளி 21:2) சமாதானம்செய்பவர் பேறு பெற்றவர் என்ற பேற்றின் மகிழ்ச்சியை அனுபவிக்க அவன் ஆவலோடு எதிர்பார்க்கிறான் (மத். 5:9). ஏனெனில் இது கடவுளைப் போலவும், ஒரே மகனான இயேசுவில் கடவுளின் பிள்ளைகளுமாக வாழ்வதும் ஆகும். எனவே இயேசுவின் சீடன் இவ்வுலகிலே ஒற்றுமையும் அமைதியும் நிலவ முழுவலிமையேடு முயல்கின்றான். இம் முயற்சியில் அவனுக்கு வழிகாட்டுகின்ற மூன்று கொள்கைகள் இங்கே முக்கியமானவை. அவை அ) இயேசுவின் இறுதி வருகையில் எல்லா மக்களும், உலக முழுமையும் இயேசுவை ஆண்டவரென ஏற்றுக் கொள்வதுதான் உறுதியான உலகலாவிய அமைதியை நிறுவும். ஆ) இனம், குலம், பால் ஆகிய பாகுபாடுகளுககு அப்பாற்பட்ட திருச்சபையே உலகில் மக்களிடையே அமைதியின் இடமும், அடையளமும் ஊற்றுமாகும் (கலா 3:28; கொலே 3:11). ஏனெனில் திருச்சபையே கிறிஸ்துவும் ஆவியை அளிப்பவருமானவரின் உடலாகும். இ) கடவுளுக்கும் மனித

னுக்கும் முன்னால் நீதியுடைமையே சமாதானத்தின் அடித்தளம். ஏனெனில் நீதியே பிரிவினைகளுக்குக் காரணமான பாவத்தை அளிக்கிறது. இறைவன் ஒருவர் மட்டுமே அமைதி அளிக்கிறார். கிறிஸ்துவன் அவருக்குச் செவிமடுத்து, சமாதானம் செய்யும் தன் முயற்சியைத் தொடர்ந்து நடத்துகின்றான். ஏனெனில் "இறைவன் பேசுவதோ சமாதானமே. உண்மை பூமியினின்று முளைத்தெழும். நீதி நேர்மை வானத்திலிருந்து எட்டிப் பார்க்கும். நன்மையானதை யாவே அருள்வார். நம் நிலமும் தன் பலனைத் தரும். நீதி அவருக்கு முன் செல்லும், அமைதி அவரைப் பின்தொடரும்" (சங் 85:8–13).

அமோக்கு (AMOK – ஆழமான)

பாபிலோன் அடிமைதளத்தினின்று செருபாபேலோடு உடன் வந்த குழுவில் இருந்த குருக்களில் ஒருவரும், குடும்பங்களில் ஒன்றின் தலைவருமாவார் (நெக 12:7). யோயாக்கிம் பெரிய குருவாக இருந்த காலத்தில் குருவாக இருந்த ஏபேரின் ஒரு மூதாதையார் (12:20).

அமோனா (HAMONAH – கூட்டம். திரள்)

கோகு கூட்டத்தார், இஸ்ராயேலின் மீது படையெடுத்துத் தோற்கடிக்கப்பட்ட பின் இந்நகரில் அழிக்கப்படுவார்கள் என்று எசக்கியேல் இறைவாக்கினர் முன்னறவித்தார்(எச 39:16).

அபாரிமுக்கும், யோர்தானின் வாய்க்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்குப் பகுதியில், பாகால்–ஆமோனுக்கு அருகில் இவ்விடம் இருந்திருக்கலாம். இதற்கு மெகிதோ பள்ளத்தாக்கிலுள்ள ஏல்–லெக்கும் (லெகியோ ஒருவேளை அதாதுரிம்மோன்) –ஐ மற்றொரு இடமாக அடையாளம் காட்டுவர். இது ஒரு நகரமே இல்லை என்பதும் சாத்தியம்.

"அம்கா அரேசு" (AMH' AREZ – மண்ணின் மைந்தர்கள்).

ஒரு இடத்தின் மக்கள் தொகையைப் பற்றி குறப்பிடும்போது இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. விவிலிய காலத்திற்கு பின்பு, சமயத்தைப்பற்றி அறிவில்லாத பொதுமக்கள், பிற தாழ்ந்த குல மக்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களை தாழ்த்திப் பேச இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. ஆனால் தீவிர ஆராய்ச்சிக்குப் பின்பு இந்த வார்த்தையானது ஒரு சமூக இனத்தை மட்டுமே குறிக்கப்பயன்படுத்தப்பட்ட கலைச் சொல்லாகத் தெரிகிறது. மேலும் இந்த ஆராய்ச்சியின் முடிவுகள், இந்த வார்த்தையானது, இஸ்ராயேலின் அரசியலில் பிரதிநிதித்துவம் பெற்ற, எல்லாவித உரிமைகளையம் கொண்ட ஒரு மக்களவையைத்தான் குறிப்பிடுகின்றது என்றும் தெரிவிக்கின்றன. இந்த மக்கள் அமைப்பு நாடு கடத்தப்பட்ட பின்பும் செயல்பாட்டில் இருந்திருக்கின்றது. மக்களாட்சி மலர்வதற்கு முன்னால், கிரேக்க நகரங்களில் காணப்பட்டதைப் போன்ற (2 அர 25:19–20) குறுநிலத்தில் குறுகிய படையோடு வாழ்ந்த மக்கள் கூட்டம் என்று சமூகவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

குறுகிய கண்ணோட்டத்தில் இந்தச் சொல்லானது, ஒருகுறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்த பொறுப்புள்ள ஆண் குடிமகன்களையும், தங்களது சொந்தநிலத்தில் முழு உரிமையோடு வாழ்ந்த திருமணமான ஆண்களையும், விழாக்களின்போதும், அரசியல் பணிகளின்போது நாட்டை பாதுகாக்கும் ஆண்களையும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்த மக்களைப்பற்றி பழைய ஏற்பாடு குறிப்பிடுகிறது. அவர்கள், எகிப்தியர்கள் (ஆதி 42:6) கானானியர்கள் (எண் 13:28) இத்தியர்கள் (ஆதி 23:7. 12.13) போன்றோர்கள் ஆவர். பொதுவாக நிலம் அல்லது பகுதி அல்லது நாடு என்று சொல்வதைவிட அந்த பகுதியின் பெயரை இணைத்துச் சொல்லும்போது, அப்பகுதியில் வாழ்ந்த மக்களைக் குறித்தது. சான்றாக யூதாவின் மக்கள் யூதாவின் பகுதியில் வாழ்ந்த மக்களைக் குறித்தது.

மண்ணின் மைந்தர்கள் என்று சொல்லப்படுபவர்கள், சமுக அரசியல் முக்கியத்துவம் பெறுகிறார்கள். காரணம் அவர்களைப்பற்றி எங்கெல்லாம் சொல்லப்படுகின்றதோ, அங்கெல்லாம் வரலாற்று உண்மைகளும் காணப்படுகின்றன. யோவாசின் முடிசூடல் நிகழ்ச்சியில் (2 அர 11:12.18.20) இது தெளிவாக விளங்கு

கிறது. 21:24–இல் இவர்கள்தான் ஆமோனை பழிவாங்கிவிட்டு அவனது மகன் யோசியாவை அரசனாக்குகிறார்கள். அதுபோல 23:3(இல் யோசியாவின் மரணத்திற்கு பின்பு யோவகாசை அரசனாக்குகிறார்கள். 23:35–இல் மண்ணின் மைந்தர்கள் எகிப்துக்கு கப்பம் கட்டத் தொடங்கினார்கள். எரேமியா இறைவாக்கினரும் எசக்கியல் இறைவாக்கினரும் அரசர், இளவரசர்கள், குருக்கள் ஆகியவர்களுக்குப் பின்பு இந்த மக்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள் (எரே 1:18; 34:19; 37:2; 44:21; எச 7:27; 22:25–29). அவர்கள் மன்னன், குருக்கள், இளவரசர்கள் ஆகியோர் கலந்து கொண்ட "ஏழாவது ஆண்டில் கைதிகளை விடுதலை செய்யும்" ஒப்பந்தத்தின்போது இவர்களும் கலந்து கொண்டதாக எரே 34–இல் கூறப்பட்டுள்ளது. எசக்கியேல் (22:29) இவர்கள் ஏழைகளையும் வறியவர்களையும் கொடுமைப்படுத்தியதற்காக அவர்களைப் பழித்துரைக்கிறார். இவை அனைத்திலிருந்து, யூதாவின், அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கையில் இவர்களுக்கு பெரும் பங்கு இருந்திருக்கின்றது என்றும், குருக்களுக்கு அடுத்தப்படியான சமூக நிலையை இவர்கள் வகித்தார்கள் என்றும் தெளிவாகத் தெரிகிறது. நெபுக்கதுனேசார் எருசலேமில் விட்டுச்சென்ற மக்களைப் பற்றிக் கூறும் பொழுது மட்டுமே (2 அர 24:14) மண்ணின் ஏழை மக்கள் என்று குறிப்பிடப்படுவதன் மூலம், இந்த வார்த்தையானது தாழ்த்தப்பட்டவர்களையும் குறிப்பிடப் பயன்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

நெபுக்கதுனேசார் தலைமைக்குரு, உதவிக்குரு ஆகியவரோடு அறுபது மண்ணின் மைந்தர்களையும் கைது செய்ததாக கூறுப்படுகிறது. நிச்சயமாக இந்த அறுபதுபேரும், சமூக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகவே இருந்திருக்க வேண்டும் இவர்கள் பின்பு இரிபிலாவில் கொல்லப்பட்டார்கள் (2 அர 25:18–21).

நாடுகடத்தப்பட்டு திரும்பி வந்தபின்பு, பொறுப்புடைய குடிமகன் என்ற பொருளை இவ்வார்த்தையானது இழந்தது. நாடுகடத்தலிலிருந்து திரும்பமுடியாத இரண்டாம், மூன்றாம், நான்காம் தலைமுறைகள் தாங்கள் வாழ்ந்த நாட்டில் உள்ள பிற மக்களை மண்ணின் மைந்தர்கள் என்றழைத்தனர். அதுபோல் நாடு கடத்தலிலிருந்து திரும்பியவர்கள் யூதா நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தவர்களை மண்ணின் மைந்தர் என்றழைத்தனர். நாடுகடத்தலிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கும் இவர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் ஆரம்பமாயின. எஸ் 4:4–இல் இவ்வாறு திரும்பி வந்தவர்கள் 'யூதாவின் மக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு தொல்லைக் கொடுத்து, சொந்த நாட்டில் இருந்தவர்கள் மண்ணின் மக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் பிற இனத்தவர்களோடு திருமணம் செய்து கலப்பினமானவர்கள்.

ராபி இலக்கியங்களில், போதகர்கள் யாரையெல்லாம், மதத்திற்கும், அறநெறிக்கும் சட்டத்திற்கும் எதிரானவர்களாக கருதினர்களோ அவர்கள் எல்லாம் மண்ணின் மைந்தர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறு, பொது மக்கள், வாழ்க்கைத் தேவைகளை அமைத்துக்கொள்வதில் முழுவதும் ஈடுபட்டிருந்தால், சடங்குச் சுத்திபற்றி இவர்களால் அக்கறை கொள்ள முடியவில்லை என்ற கருத்து நிலவியது. பரிசேயர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு தெளிவாகத் தெரிந்ததே. இயேசு, பரிசேயர்களின் செயல்பாட்டிற்கு எதிரான போராட்டத்தில், பொதுமக்களைச் சார்ந்து நின்றார் (மாற் 7:1–5; லூக் 6:1–5; 11:37–41). யோவா 7:49–இல் பரிசேயர்கள் சட்டம் அறியாத கூட்டம் எனக்கண்டித்துப்பேசுவது இந்த மக்களைத்தான். ஆனால் விவிலிய காலத்திற்குப்பின் சமூக நிலையைக் குறிக்க இந்த சொல் பயன்பட்டதா? என்பதை அறிய சரியான சான்றுகள் இல்லை. தொடக்கக்கால தானாக் இலக்கியங்களில் இந்த வார்த்தையானது, மேல் குலத்தவர்களால், உழவர்கள், நிலத்தை தோண்டுபவர்கள், பொதுமக்கள் போன்றோரைக் குறிக்கப் பயன்பட்டது. இவர்கள் தூய்மையற்றவர்களாகக் கருதப்பட்டனர். இப்பேற்பட்ட மக்களில் பலர் கிறிஸ்துவர்களாக மாறிய போது, யூத கிறிஸ்தவர்களை இழிவு

படுத்த இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டது. ஆனால் உண்மையில் இந்த வார்த்தையானது சமூகத்தில் ஒருவரின் இடத்தை குறிப்பிடவும், மதச் சம்மந்த மான அறிவற்ற தன்மையை குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது.

அம்சி (AMZI – என் வலிமை. ஆண்டவர் வலுப்படுத்துகிறார் என்ற பொருள்படும் அமசியா என்ற பெயரின் சுருக்கமாக இருக்கலாம்)

1. மெராரி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியன், பானியின் மகன். ஆண்டவரின் ஆலயத்தில் திருப்பேழை நிறுவப்பட்ட போது, ஆலயப் பாடர்களுககுப் பொறுப் பாகயிருந்த ஏத்தானின் மூதாதையர் (1 நாள் 6:46).

2. அடிமைத்தளத்திற்கு பிறகு எருசலே மில் வாழ்ந்த அதாயாவின் மூதாதையர். செக்கரியாவின் மகன் (நெக 11:12). 1 நாள் 9:12–இல் கொடுக்கப்பட்டுள்ள வழிமரபுப் பட்டியலில் அம்சியின் பெயர் இடம் பெற வில்லை.

அம்பட்டன்

இவர்கள் தலைமுடியை வெட்டுபவர், தாடியை அழகு செய்பவர் ஆவர். விவி லியக் காலங்களில் இவர்கள் எப்போதும் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர் (எண் 6:5; எச 5:1). பொதுவாகத் திறந்த வெளியில் வேலை செய்தனர். சவரக் கத்திதான் அவர்களது கருவி. இன்றைய மேற்காசிய நாடுகளில் தலைமுடி வழிப் பது சமய முக்கியத்துவம் வாயந்ததாகக் காணப்படுவதுபோல் விவிலிய காலத்தில் காணப்பட்டதாக சான்று இல்லை.

அம்பறாத்தூணி :- (QUIVER)

அம்புகளை வைத்துக் கொள்ள பயன் படும் ஒரு குடுவை போன்ற அமைப்பு உடையது. இது தோலினால் செய்யப்பட் டிருக்கும். அழகு செய்யப்பட்ட உலோகங் களால் சுற்றப்பட்டு, வண்ணங்கள்தீட்டப் பட்டிருக்கும். இதை வழக்கமாக தோளில் சுமந்திருப்பர்.

விவிலியத்தில் அம்பறாத்தூணி உருவ கமாக சங் 127:5–இல் குடும்பச் சூழ்நிலை யிலும், ஏச 49:2–இல் தம் ஊழியனைத் தீட்டிய அம்பாகச் செய்து இறைவன் தமது அம்பறாத்தூணியில் ஒளித்து வைத் திருப்பார் என்றும், புல 3:13–இல் இறைவன் 'தமது அம்பறத்தா தூணியில் உள்ள அம்புகளை என் மார்பில் எய்தார்" என்றும் கூறப்பட்டுள்ளது. மற்ற இடங் களில் இது வீரரின் ஒரு கருவி என்றே கொள்ளலாம்.

அம்பிப்பொலி (AMPHIPOLIS – நகரைச் சுற்றி, சூழப்பட்ட நகரம்)

மக்கதோனியாவில் முதல் மாகாணத் தின் தலைநகர். ஸ்டிரிமோன் ஆற்றுப் படுக்கையில் கடலிலிருந்து 4 கி.மீ. தொலைவில் அம்பிப்பொலி அமைந்துள் ளது. திராக்கேயிலிருந்து, மக்கதோனியா வின் தெற்குக் கடற்கரையில், எக்னேசியன் பாதையில் அமைந்திருந்த ஒரு முக்கிய இடமாகும். செருசு கி.மு. 480– இல் படை யெடுத்தபோது இவ்விடத்து பாலத்தின் வழியாகத்தான் இந்த ஆற்றைக் கடந்து சென்றார். ஏதோனியின் நகரமாக இருந் தது. அப்போது இவ்விடம் ஒன்பது வழிகள் என்றழைக்கப்பட்டது. திராக்கே யைச் சேர்ந்த கிரேக்கர்கள் அவர்களின் குடியிருப்பை அங்கு ஏற்படுத்த முயன்ற னர். கி.மு. 497–இல் மிலேத்தின் அரிஸ் தோகொரஸ் தாரியு அரசரிடம் இருந்து தப்பிவந்தபோது, இங்கிருந்து விரட்டப் பட்டு கொலை செய்யப்பட்டார். 33 ஆண்டு களுக்குப் பிறகு கி.மு. 437–இல் ஏதன்சியர் இதைக் கைப்பற்றி ஒரு குடியிருப்பை ஏற்படுத்தினர். 424–இல் ஸ்பார்தர்களிடம் சரண் அடைந்தது. 357–இல் மக்கதோனி யாவைச் சேர்ந்த பிலிப்பு இதைக் கைப் பற்றினார். 168–இல் உரோமையர் இதைக் கைப்பற்றி மக்கதோனியாவின் முதல் மாவட்டத்திற்கு தலைநகர் ஆக்கினார். இந் நகரத்தின் வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய 3 பகுதிகளும் ஸ்டிரிமோன் ஆற்றால் சூழப்படவே, காக்னோான் என்ற ஏதன்சியர் இந்நகருக்கு அம்பிபொலி என்று பெயரிட்டு, கிழக்குப் பகுதியில் மதிற்சுவர்களை எழுப்பினர். மக்கதோனி யா உரோமையர்களால் நான்கு மாவட்டங் களாக பிரிக்கப்பட்டபோது, கி.மு.167– இல் அம்பிபொலி முக்கியத்துவம் பெற்று விளங்கியது.

பவுல் இரண்டாம் வேத போதகப் பயணத்தில் தெசலோனிக்காவிற்குச் செல்

லுவதற்கு அம்பிப்பொலி வழியாகத்தான் சென்றார் (அ.ப.17:1)

அம்பிலியாத்து (AMPLIATUS–பரந்த, பெரிய)
பொதுவாக அடிமைகளுக்கு அளிக்கப் படும் பெயர். இப்பெயர் ஓர் குறிப்பிட்ட நபரைக் குறிப்பதாகக் காணப்படுகிறது (உரோ 16:8). பவுல் தனது திருமுகத்தில் "ஆண்டவருக்குள் என் அன்பார்ந்த" என்று இவரை வாழ்த்துகிறார். இவர் எபேசு நகரில் வாழ்ந்திருக்கலாம் என சூழ்நிலைப் பொருத்தம் காட்டுகிறது. பவுலுக்கும், இவருக்கும் சுமூகமான உறவு இருந்திருப்பதை அவரது வாழ்த்திலிருந்து அறிகிறோம்.

அம்மதாத்தா (HAMMEDATHA – இரட்டிப்பு, நிலவால் கொடுக்கப்பட்டது)
எஸ்தர் நூலில் யூதர்களின் முக்கிய எதிரியாகத் திகழும் ஆமானின் தந்தை (எஸ்த 3:1.10; 8::5; 9;:10.24).

அம்மணம் (NAKEDENESS)
விவிலியத்தில, சரியான ஆடை அணியாத நிலையிலிருந்து முழுவதும் ஆடையின்றி இருக்கும் பல நிலைகளைக் குறிக்கும் சொல்லாகும்.

எபிரேய சமூகத்தில் அம்மணமாய் இருத்தல் தடை செய்யப்பட்டிருந்தது. இதற்கு விந்து (லேவி 15:2–18), மாதவிடாயில் வடியும் இரத்தம் (15:19–24), மற்றபடி வடியும் இரத்தம் (15:25–30), சில சமயங்களில் துப்பிய எச்சில் (15:8) போன்ற உடலிலிருந்து வடியும் நீர்த்தன்மையுடையவை அசுத்தமானவையாகக் கருதப்பட்டது ஓரளவுக்குக் காரணமாகலாம். ஆடை இவைகளை உறிஞ்சி பொதுவாக பகுதிகளை கறைப்படுத்துவதைத் தடுத்தது.

எபிரேய வழக்கில், அம்மணம், பாலின உறவுகளைக் குறிக்கும். மறைத்துக்கூறும் வழக்காகும் (லேவி 18:6–18). பொது இடங்களில் அம்மணமாய் இருத்தல் வெட்கத்திற்குரியதாகும். இது வேசியின் பண்பாகும் (1 சாமு 20:30; திருவெளி 17:16). இறைவாக்கினர்கள் இஸ்ராயேலரின் பதிதத்தைக் காட்டும் அடையாளமாக காமம்மிக்க அம்மணமான வேசி என்ற உருவத்தைப் அடிக்கடி பயன் படுத்துகின்றனர் (எச 16:15–43; 23; ஓசே 2:1 –13). ஆனால் அம்மணம் கொடிய வறுமையின் விளைவாகவும் இருக்கலாம் (உப 28:48; திருவெளி 3:17–18). இந்நிலை நற்செயல் செய்வதற்கு ஒரு வாய்ப்பாகும் (எச 18:7.16; மத் 25:36–44; காண்க யாக் 2:15 –26). அப்போஸ்தலர்கள் அடிக்கடி இத் தகைய கொடிய நிலையில் இருந்தனர் என்று பவுல் கூறுகிறார் (1 கொரி 4:11;2 கொரி 11:27; காண்க யோவா 21:7)

அம்மணமாய் இருத்தல் கனானியரின் வழிபாட்டோடு தொடர்புடையதால் இஸ்ராயேலின் சமயச் சடங்குகளில் இது தடை செய்யப்பட்டிருந்தது (காண்க லேவி 20: 23). ஆகவே குருக்கள் நிர்வாணம் கீழேயுள்ள மக்களுக்குத் தெரியாதபடிக்கு பீடங்கள் படிகள் இல்லாது கட்டப்படவேண்டும் (20:26). இருப்பினும், மோசே மலைமேல் கட்டளைகளைப் பெற்றுக் கொண்டிருந்த போது, ஆரோன் மக்களின் கட்டாயத்தினால் பொற்கன்று செய்ய, அதன் முன் மக்கள் அம்மணமாய் நடனமாடினர் (32:25). சவுல் பகலிலும், இரவிலும் அம்மணமாய் விழுந்து கிடந்து ஆவேசமாய் இறைவாக்குரைத்தார் (1 சாமு 19:24). எகிப்தின் அழிவை எடுத்துக்காட்டும் கண்கூடான இறைவாக்காக மூன்று ஆண்டுகளுக்கு ஏசயா ஆடையின்றி நடனமாடினார் (ஏச 20:2–4). உடன்படிக்கைப் பேழையைக் கொண்டு வரும்போது தாவீது ஆடைகளை உரித்து போட்டு உற்சாகமாக நடனமாடினார் (2 சாமு 6:20).

பொதுவாக ஆடையின்றியிருக்கும் பல நிலைகளையும் எபிரேய அல்லது கிரேக்கச் சொற்கள் வேறுபடுத்தப்படவில்லை. ஆயினும் மூன்று நற்செய்தி நூல்கள், இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்த போது, அவரது ஆடைகளை வீரர்கள் பங்கு போட்டனர் என்று கூறுகின்றன (மத் 27:35; மாற் 15:24; யோவா.19:23). வரலாற்றுச் சான்றுகளிலிருந்து நமது படங்களிலும் சுருபங்களில் காட்டுவதுபோல் ஓரளவு ஆடை அணிந்திராமல், இயேசு முழுவதும் அம்மணமாய் சிலுவையில் அறையப்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது. இதைத்தான் சிலுவையின் அவமானம் அல்லது நிந்தை என (எபி 12:2) சிலர் விளக்குவர்.

சில இடங்களில் அம்மணம் குற்றமின்மையையும் பிறந்த நிலையையும் குறிக்கிறது (யோபு 1:21; திருவுரை 5:15; காண்க: எச 16:7.22). வீழ்ச்சிக்கு முன் ஆதாமும் ஏவாளும் அம்மணமாய் இருந்தாலும் வெட்கப்படவில்லை (ஆதி 2:25). மரத்திலிருந்து பழத்தைத் தின்றபின் தாங்கள் அம்மணமாய் இருப்பதை உணர்ந்து, அத்தி இலைகளைத் தைத்து இடுப்பில் உடுத்திக் கொண்டனர் (3:7).

அம்மா (AMMAH – தலைவனின் தாய்)

யோர்தான் பள்ளத்தாக்கினுள் பாலைவனத்து சரிவு இறங்கும் ஆரம்பத்திலுள்ள பென்யாமின் பகுதியைச் சேர்ந்த கிபயோன் பாலைவன வழியில் உள்ள கியாகுவுக்கு அருகிலுள்ள ஒரு குன்று (2 சாமு 2:24). இங்குதான் கிபயோன் போருக்குப் பின் தொடர்ந்து முன்னேறித்துரத்திவந்த யோவாபோடு அபினேர் தற்காலிகப் போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி எதிர்த்து நின்ற படைகள் தத்தம் தலைமையகங்களுகுத் திரும்பிச் சென்றுவிட்டன (2 சாமு 2:24–32).

அம்மிசதாய் (AMMISHADDAI – சதாய் எல்லாம் வல்லவர், என் உறவினர்)

பாலைவனப் பயணத்தில் தாண் குலத்தின் தலைவராய் இருந்த அகியேசரின் தந்தை (எண் 1:12; 2:25; 7:66; 10:25).

அம்மிசபாது (AMMIZABAD–என் உறவினர் கொடுத்தார்)

தாவீதின் புகழ் பெற்ற வல்ல வீரர்களுக்குத் தலைவரான பெனாயாவின் மகன் (2 சாமு 23:20–23; 1 நாள் 11:22–25) தாவீதுடைய படைப்பிரிவை அம்மிசபாது கண்காணித்து வந்தார். 1 நாள் 27–6–இன்படி இவர் அப்பிரிவுக்கு மூன்றாம் மாதத்தில் தலைமை தாங்கினார். பெனாயா முப்பது பேருக்குத் தலைவராக உயர்த்தப் பட்டபின், அவரது பிரிவுக்கு அம்மிசபாது தலைமை தாங்கியிருக்க வேண்டும்.

அம்மியூது (AMMIHUD–என் உறவினன் உயர்த்தப்படுகிறான், மேன்மை பெறுகிறான்)

1. பாலைவனத்தில் பயணம் செய்த போது, எப்பிராயிம் பாதிக் குலத்தில் தலைவராக இருந்த எலிசாமாவின் தந்தை (எண் 1:10; 2:18; 7:48.53; 10:22). இவர் யோசுவாவிற்குக் கொள்ளுப்பாட்டன் ஆவார் (1 நாள் 7:26).

2. கானான் நாட்டை, பங்கீடு செய்த போது சிமியோன் குலப்பிரதிநிதியாக விளங்கிய செமுவேலின் தந்தை (எண் 34:20).

3. கானான் நாட்டைப் பங்கீடு செய்த போது, உதவிய நப்தலி குலத்தைச் சேர்ந்த பெதகேலின் தந்தை (எண்.34:28).

4. கெசூரின் அரசர் தல்மாயின் தந்தை (2 சாமு 13:37). அபிசலோமின் பாட்டன் (3:3). 2 சாமு 13:37–இன்படி அம்மியூதின் மகனான தல்மாயிடம் அபிசலோம் ஓடிச் சென்று தஞ்சம் புகுந்தார்.

5. யூதாவின் மகன் பெரேசுவின் சந்ததியைச் சேர்ந்தவர். நாடுகடத்தப்பட்டுத் திரும்பியவர்களில் ஒருவர். ஓமிரியின் மகன். ஊத்தாயின் தந்தை (1 நாள் 9:4).

அம்மியேல் (AMMIEL – என் உறவினன் இறைவன் ஆவார்)

1. கெமல்லியின் மகன். கானான் நாட்டைத் துப்பறிய மோயீசனால் அனுப்பப்பட்ட ஆட்களுள், தாண் குலத்தினத்தின் பிரதிநிதி (எண் 13:12).

2. மாக்கிருடைய தந்தை. மனாசே பகுதியிலுள்ள லோ–தபார் என்ற ஊரைச் சேர்ந்தவர். இவர் வீட்டில்தான் யோனத்தானின் மகன், தாவீதிடமிருந்து பதுக்கி வைக்கப்பட்டார் (2 சாமு 9:4–5). அவர் பிறகு தாவீதிற்கு நண்பனானார் (2 சாமு 17:27).

3. உரியாவின் மனைவியான பதுசேபாவின் தந்தை. இவள் பிற்காலத்தில் தாவீதின் மனைவியானாள் (1 நாள் 3:5). 2 சாமு 11:3–இல் மெய்யெழுத்துக்களின் இடம் மாற்றத்தின் விளைவாக எலியாம் என்று அழைக்கப்படுகிறார்.

4. ஒபேது–எதோமின் ஆறாவது மகன். கோவில் வாயில் காக்கும் சேவை செய்தவர்களில் ஒருவர் (1 நாள் 26:5).

அம்மினதாபு (AMMINADAB – என் உறவினர் பெருந்தன்மை உள்ளவர், தாராளமானவர்)

1. யூதா குலத்தின் தலைவரான (எண் 1:7; 2:3; 7:12.17; 10:14) நகசோனுடையவும் ஆரோனின் மனைவியான எலிசெபாவினு

டையவும் தந்தை (யாத் 6:23) ஆவார். இவருடைய மகனின் வழியாகத் தாவீதின் மூதாதையர் பட்டியலில் இவர் பெயர் வருகிறது (ரூத் 4:19–20). ஆகவே இயேசுவின் மூதாதையர் பட்டியலிலும், புதிய ஏற்பாட்டிலும் வருகிறது (மத் 1:4; லூக் 3:33).

2. ஒரு லேவியர். லேவியர்கள் பற்றிய நாளாகம வழிமரபுப் பட்டியலில் கெகாத்தின் மகனும் கோராக்குவின் தந்தையுமாவார் (1 நாள் 6:22). இப்பட்டியலுக்கு இணையான பட்டியல்களில் (யாத் 6:21; எண் 16:1; 1 நாள் 6:38) இவர் இசார் என்றழைக்கப்படுகிறார்.

3. ஊசியேலின் லேவிய குடும்பத் தலைவர். அவருடைய உறவினர்கள் 112 பேர்களோடு எருசலேமுக்குப் பெட்டகத்தைச் சுமந்து செல்ல தாவீதால் பணிக்கப்பட்டவர் (1 நாள் 15:10).

4. அம்மோனிய அரசர்கள் பலரின் பெயர். காண்க; அம்மோன், அம்மோனியர்.

5. எழுபது நூலின்படி இவர் எஸ்தரின் தந்தையாவர் (எஸ்த 2:15; 9:29). ஆனால் மோசரேட்டிக் வாசகம் எஸ்தரின் தந்தையை அபிகயில் என்றழைக்கிறது. பின்னதுதான் சரியான பெயராக இருக்கலாம்.

அம்மீ (AMMI – என் மக்கள்)

கடவுள் இஸ்ராயேலை முடிவாகத் தள்ளி வைத்ததைக் குறிக்கும் "என் மக்கள் அல்லர்" (ஓசே 1:9) என்பதற்கு மாறாக, மீட்பின் நாளில் இஸ்ராயேலை இறைவன் ஏற்றுக்கொண்டதை அடையாளமாகக் குறிக்க வழங்கப்பட்ட ஒரு புதிய பெயர். இதற்கு என் மக்கள் என்று பொருள் (ஓசே 2:1).

அம்மோ (AMAW)

பிலயாமை அழைத்து வரும்படி, மேவாபு நாட்டு பாலாக்கு தன்னுடைய ஆட்களை அனுப்பிய நாட்டிற்குப் பெயர் (எண்.22:5). இந்த நாடு "ஆற்றிற்கு அருகிலிருந்த" (யூப்பிரத்திசு) பிலயாமின் நகரமாகிய பெத்தோரை தன்னுள் கொண்டிருந்தது. அசீரியா நாட்டுக் குறிப்புகளின் படி, பித்ரூ (பெத்தோர்), சகூர் ஆற்றங்கரையில் இருந்தது. இது கார்கேமீசுக்குத் தெற்கில் 80 கி.மீ. தொலைவிலும் பிலயாமின் ஊரான பெத்தோருக்குத் தென்மேற்கில் உள்ளது.

இத்ரிமி குறிப்புகளின்படி, அலாலக்கு நாட்டு அரசர், முகிஸ்கே, நீ, மற்றும் அம்மோ ஆகியநாடுகளை, பிலயாம் நிகழ்ச்சிக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆண்டார்.

அம்மோலகேத்து (HAMMOLECHETH – அரசி, ஆட்சி செய்பவள்)

அநேகமாக இது முதலில் இறைவனுக்குச் சூட்டப்பெற்ற பெயராக இருக்கலாம். இவள் கிலயாத்தின் சகோதரியும் மனாசே இனத்தின் பல குடும்பங்களைத் தோற்றுவித்தவளுமாவாள் (1 நாள் 7:18).

அம்மோன், அம்மோனியர் (AMMON, AMMONITES – எனது இனத்தின் மகன்)

இவர்கள் ஒரு செமித்திய இனத்தவர். லோத்துக்கு அவருடைய இளைய மகள் வழியாகப் பிறந்த (ஆதி 19:38) "எனது மக்களின் மகன்" என்று பொருள்படும் பென்–அம்மீயின் வழித்தோன்றல்களாகப் பாரம்பரியமாகக் கருதப்படுவர். இவர்கள் மோவாபியருக்கும் (19:37) இஸ்ராயேலருக்கும் (உபா 2:19) உறவினர்களாகக் கருதப்படுவர். அம்மோனின் பகுதி சாக்கடலுக்கு வடகிழக்கில் ஆர்னோன் யாப்கோக்கு ஆகிய ஆறுகளுக்கிடையில் அமைந்திருந்தது (சங் 83:7). இதன் தலைநகர் இக்கால அம்மானாகிய ரபாத் –அம்மோன் ஆகும் (காண்க இரபா–2)

1. வரலாறு: வரலாற்றின் தொடக்கத்தில் (கி.மு. 1600 அதற்கு முன்னும் இருக்கலாம்) அம்மோனியர் சாம்சும்மீமின் பகுதியில் வாழ்ந்தனர் (உப 2:20–21). இக் காலத்தில் இவர்கள் ஓரளவு நாடோடிகளாக இருந்தனர். அதனால் எமோரியர் பகுதியிலும் இவர்கள் தங்கியிருக்கக் கூடும். எமோரிய அரசன் சீகோன் காலப் போக்கில் இவர்களின் ஒரு பகுதியைக் கைப்பற்றினார் (எண் 21:26–28; யோசு 12:2; 13:10). கி.மு.13–ஆம் நூற்றாண்டின் மத்தியில் இஸ்ராயேல் அவனது நாட்டின் வழியாகக் கடந்துபோக அனுமதி மறுத்தவர் இவர்தான். பின் இஸ்ராயேலர் இவரைத் தோற்கடித்து, இவரது நாட்டைக் கைப்பற்றினார். ஆனால் அம்மோனியர் நாட்டில் புகவில்லை (எண் 21:21–25; மேலும்

காண்க உப 2:19–37; 3:16; யோசு 13:10. 24–28; எண்.21:24). எண் 22–24 இவர்கள் ஈடு பாட்டைக் குறிக்கவில்லை. என்றாலும் மோவாபியர்களோடு சேர்த்து அம்மோனியர்களும் ஆண்டவரது சபையினுள் வர அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் இவர்கள் இஸ்ராயேலைச் சபிக்கும் படி குறிகாரன் பிலயாமுக்குக் கையூட்டுக் கொடுத்து ஏற்பாடு செய்தனர் (உப 23:3–6; நெக 13:1–2)

நடுவர்கள் காலத்தில் அம்மோனியரின் பலம் அதிகரித்திருந்தது. அவர்கள் இருமுறை இஸ்ராயேலுக்கு எதிராக போரில் ஈடுபட்டனர். அவர்கள் மோவாபியருடனும் அமலேக்கியருடனும் சேர்ந்து, இஸ்ராயேலர் யோர்தானுக்குக் கிழக்கில் கொண்டிருந்த நாட்டின் ஒருபகுதியை மோவாபைச் சேர்ந்த எகிலோனுக்குப் பிடித்துக் கொடுத்தனர். இதனால் இஸ்ராயேலில் ஒரு பகுதியினர் மோவா பின் ஆட்சிக்குட்பட்டிருந்தனர் (நீதி 3:12–14). இக்காலத்தில் பாலஸ்தீனத்தில் இவர்களுடைய சமயச் செல்வாக்குப் பரவியிருந்தது (10:6). அம்மோனியர் கிலயாத்தின் பகுதியைக் கைப்பற்றினர். பென்யாமினுடையவும் எப்பிராயிமினுடையவும் பகுதியிலும் போரிட்டனர். பின் நடுவர் இபிதாகு இவர்களை விரட்டியடித்தார் (10:7–11:33).

11–ஆம் நூற்றாண்டின் பிற்காலத்தில் அம்மோனிய அரசன் நாகாசு இஸ்ராயேலுக்குரிய யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள பகுதிகளைக் கைப்பற்ற முயற்சி செய்து வடக்கில் யாபேசு–கிலயாது வரை முன் னேறினார் (1 சாமு 11:1–2). இவரை தோற் கடித்துச் சவுல் தனது சேனையை அதிகாரத்தில் உறுதியாக நிறுவினார் (11:5–11; 12:12; மேலும் காண்க 14:47–48). நாகாசோடு தாவீதின் உறவு சுமூகமாக இருநதது (2 சாமு 10:12). ஆனால் அவனது மகன் கானூன் பேத்து– ராகோபு, சோபா, மாக்கா மற்றும் தோபு ஆகிய சீரிய நாடுகளோடு சேர்ந்து பகைமையைப் புதுப்பித்தார் (10:6; 1 நாள் 19:6). ஆனால் தாவீதின் படைகள், அபிசாய், யோவாவு ஆகியோரின் தலைமையில் ஆராம் மற்றும் அம்மோன் நாடுகளை வென்று அடக்கி இஸ்ராயேல் பேரரசின் சிற்றரசுகளாக ஆக்கின. இரபா கைப்பற்றப்பட்டு அதன் மக்கள் அடிமை ஊழியத்திற்குட்படுத்தப் பட்டனர் (2 சாமு 10:9–14; 11:1; 12:26–31)

ஒன்றித்த இஸ்ராயேல் அரசு காலம் முழுவதும், இப்பகுதி அம்மோனிய ஆளுநர் ஆட்சியின் கீழிருந்தது. தாவீது அபிசலோமிடமிருந்து தப்பி ஓடியபோது நாகாசின் மகன் சோபியிடமிருந்து உதவி பெற்றார் (17:27–29). அவருடைய முப்பது வல்லவர்களில் செலேக்கு ஒருவராவர் (23:27). சாலமோன் தனது அந்தப்புறத்தில் அம்மோனியப் பெண்களையும் சேர்த்துக் கொண்டார். அவர்களின் ஒருத்திதான், அவருக்குப்பின் அரசுக்கு வந்த இரகபெயாமின் தாயாகிய நாகமா ஆவாள். (1 அர 11:1; 14:21.31; 2 நாள் 12:13). இஸ்ராயேலரிடையே மில்க்கோம் (மோலக்கு) என்ற அம்மோனிய கடவுளின் வழிபாடு பரவ இப்பெண்கள் கருவியாக அமைந்தனர் (2 நாள் 12:5.7.33).

யோசபாத்தின் ஆட்சிக்காலத்தில் அம்மோனியரும் அரமேயரும் சேர்ந்து கர்கார் போரில் அசீரியர்களின் படையெடுப்பைத் தடுக்க முயன்றனர் (கி.மு. 835). பின்பு மோவாபியர், மெயூனியர் ஆகியோரோடு சேர்ந்து, யூதாவின் போர் முயற்சிகளையும் வணிகத்தையும் தடுக்க முயன்றனர். ஆனால் வெற்றி பெறவில்லை (2 நாள் 20:1–30). பிறகு யூதாவின் ஊசா, யோத்தாம் ஆகியோருக்குக் கப்பம் கட்டக் கட்டாயப்படுத்தப்பட்டனர் (26:8; 27:5).

எட்டாம் நூற்றாண்டில் அசீரிய மீண்டும் எழுச்சிகொண்டு வடக்கிழக்கிலிருந்து வரும் பெரும் ஆபத்தாக உருக் கொண்டது. மூன்றாம் திகிலாத்து–பிலேசர் அம்மோனியர்களை (733) வென்று அடக்கினார். ஆனால் அவர்களுடைய அரசு மரபு தொடர்வதை அனுமதித்தார். அடுத்த நூற்றாண்டு முழுவதும் அசீரியர்களுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசாக இருந்தாலும் அசூர்பானிப்பாலுக்கும் அர் சகோதரன் சமாஸ்–சும்–ஊகினுக்கும் (652–643) இடையே ஏற்பட்ட போராட்டத்தைப் பயன்படுத்தி தங்கள் சுதந்தரத்தை நிறுவ அம்மோனியர் முயன்றனர். 7–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அம்மோனியர்

யூதாவுக்கு எதிராக பழித்துரைத்தனர் (செப் 2:8). காத்து நாட்டை கைப்பற்ற முயன்றனர் (49:1; சங் 83:7; ஆமோ 1:13). அசீரியப் பேரரசு உடைந்து அழிந்தபோது அராபியர்கள் குழுக்களின் தாக்குதல் அதிகமானது. அம்மோனியர் பாபிலோனியரின் பாதுகாப்பைப் பெறுவதற்காக அதன் சிற்றரசாக மாறினர் (2 அர 24:2). ஆனால் விரைவில் அண்டை நாடுகளுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து பாபிலோனுக்கு எதிராகக் கிளப்பினர் (எரே 27.3). 587–586–இல் எருசலேம் வீழ்ச்சியுற்றபின், அம்மோனியர் மேலும் தொந்தரவு கொடுத்தனர். அதன் அரசன் பாகாலீஸ் பாபிலோனிய ஆளுநன் கெதலியாவைக் கொல்ல இசுமாயேலை அனுப்பினார் (40:14; 41:11–15). நெபுக்கதுனேசார் விரைவாக பதிலடி கொடுத்தார் (எசே 21:19–22). அவர்களை நாடு கடத்தினர். இவ்வாறு அம்மோனியரின் சுதந்திர நாடு இருப்பதை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் அம்மோனியர் பற்றிய குறிப்புகள் முழுவதும் வேறுபட்ட பகுதியைக் குறிக்கிறது. நெகமியா (440) தோபியாவிடமிருந்து அதிக எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இவர் ஒரு வேளை அம்மோன் என்ற பாரசீக மாகாணத்தின் ஆளுநராக இருக்கலாம். இவர் எருசலேமின் சுவர்கள் மீண்டும் கட்டப்படும்போது பெரிய இடைஞ்சல் அளித்தார் (நெக 2:10.19;4:3.7;6:1). நாடு கடத்தலுக்குப் பின் யூதர்களில் பலர் அம்மோனியரோடு கலப்புத் திருமணம் செய்து கொண்டனர் (13:23–31; எஸ் 9:1–12).

கிரேக்கர் காலத்தில் அம்மோனியர் தோலமியர் ஆட்சியின்கீழ் இருந்தனர். யூதா மக்கபேயர் திமோத்தேயுசின் படையை விரட்டி அடித்து அம்மோனிய நகராக யாசேரையும் அதன் சுற்றுப்புறங்களையும் கைப்பற்றியபோது (165) அம்மோனியரிடையே வாழ்ந்த யுதர்களில் பெரும்பாலோர் கொன்று அழிக்கப்பட்டனர் (1 மக் 5:6–8. 13). கி.மு. முதல்நூற்றாண்டில் அம்மோன் நபத்தேய அரசோடு சேர்க்கப்பட்டது. சிறிது காலத்திற்குப்பின் அது உரோமைப் பேரரசின் ஒரு பகுதியாக மாறியது.

2. தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள்:–
அம்மானிலும் மற்ற இடங்களிலும் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள் கி.மு. 1800–க்கு முன்னேயிருந்து நிலையான வாழ்க்கை முறையுள்ள மக்கள் இருந்த தற்குச் சான்று தருகின்றன. கி.மு. 1600–1200 இடையிட்ட காலம்பற்றிய பழம் பொருள் ஆய்வுகள் ஒரு கோவிலைக் கண்டுள்ளன. இது புதிய அதிகக்கலப்பினமான மக்களைச் சுட்டுகிறது (உப 2:20;21). அதற்குப்பின் வந்த அம்மோனியர் வலுவான ஆட்சிகொண்டிருந்தனர் என்பதற்கு 19 மிகவும் பெரிய எல்லைக் கோட்டைகள் வலுவான சான்று பகர்கின்றன. 7–6 ஆம் நூற்றாண்டை சேர்ந்த கண்டுபிடிப்புகள் அம்மோனியரின் பொற்காலத்தையும் உயர்ந்த பண்பாட்டையும் சுட்டுகின்றன.

எழுத்துச் சான்றுகள் அம்மோனிய மொழி எபிரேயத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்று சுட்டுகின்றன. 8–ஆம் நூற்றாண்டுக்குப்பின் இம்மொழி தனக்கே உரிய எழுத்து வடிவத்தைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. அம்மான் தலைநகரில் எடுக்கப்பட்ட 9வது நூற்றாண்டைச் சேர்ந்த ஏடு அம்மோனின் முக்கிய கடவுளாகிய மில்க்கோமுக்குக் கோவில் கட்டியதை நினைவு கூறுகிறது. மில்க்கோம் பெயர் இருமுத்திரைகளில் காணப்படுகிறது. தேல்–சீரான என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலப் புட்டியில் காணப்படும் 5–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வாசகம் அமினதாபு அரசனைக் குறிக்கிறது. 7–6–ஆம் நூற்றாண்டு முத்திரைகள் கெனனோல் அரசனது பெயரைக் கொண்டுள்ளன (காண்க கானூன் 2 சாமு 10:2– 4). மற்ற முத்திரைகளில் வரும் பெயர்கள் 6–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அங்கு நிலவிய அராபிய செல்வாக்கைக் காட்டுகின்றன. அம்மோனில் கண்டெடுக்கப்பட்ட கிரேக்க இலத்தீன் வாசகங்கள் 2–ஆம் நூற்றாண்டைப்போல் அரபியர்களின் (நபத்தேய) ஆதிக்கத்தைச் சுட்டுகின்றன.

அம்ராபேல் (AMRAPHEL கடவுள்களின் காவலாளி)

தெற்கு பால்தீனில் ஐந்து அரசர்களை சிதீம் பள்ளத்தாக்கில் வென்ற கெதர்லா–

கோமேரின் கூட்டணியைச் சேர்ந்த ஒரு அரசன் (ஆதி 14:1.9). ஆபிரகாமும் அவரது ஆதரவாளர்களும் சேர்ந்து கெதர்லா–கோமோரின்படையைத் தோற்கடித்தனர் (14:13–16 காண்க ஆபிரகாம்). இவர் "சீனாரின் அரசன்". சீனார் வட மெசபொத்தோமியாவிலுள்ள சிங்கார் மாவட்டமாக இருக்கலாம். அம்ராபேல் பாபிலோனிய நாட்டு அரசர் கமுரபியாகத்தான் இருக்க வேண்டும் என்றக் கருத்து ஒரு காலத்திற்கு நிலவியது. ஆனால் மொழியியல் கணிப்பும், காலவரைக் கணிப்பும் இக் கருத்துக்கு அதிக ஆதரவு தருவதில்லை.

அம்ராமியர் (AMRAMITES)

அம்ராம்–1–இன் வழித்தோன்றல்கள்; லேவியர் குடும்பத்தினர். பெட்டகத்திற்கும் (எண் 3:27) ஆலயக் கருவூலத்திற்கும் (1 நாள் 26:23) பொறுப்பானவர்கள்.

அம்ராம் (AMRAM – உயர்த்தப்பட்ட மக்கள்)

1. கெகாத்தின் புதல்வன். இவர்தனது அத்தை யோக்கபேத்தை மணந்தார். அவருக்கு ஆரோன், மோசே என்ற புதல்வர்களும் மிரியாம் என்ற மகளும் இருந்தனர் (யாத் 6:18.20; காண்க எண் 26:59; 1 நாள் 6:3). இவர் லேவியின் பேரன். இவரது பெயர் லேவியரின் பரம்பரைப் பட்டியலில் பலமுறை சொல்லப்படுவதைக் காண்கிறோம் (எண் 3:19; 1 நாள் 6:2–3; 6:18; 23:12– 13; 24:20). இவர் வழிவந்த அம்ராமியர்கள் பாலைவனத்தில் புனித இடங்களைக் காத்துக்கொண்டும், பிறகு கோவில் கருவூலங்களைக் காத்தும் வந்தனர். இவர் 137 ஆண்டுகள் வாழ்ந்தார். புதிய ஏற்பாட்டில் குழந்தை மோசேயைப் பாதுகாத்ததற்காக அம்ராமும் யோக்கபேத்தும் போற்றப்படுகின்றனர் (எபி 11:23; காண்க: யாத் 2:1–2).

2. எஸ்ராவின் காலத்தில் புறவினப் பெண்ணை மணந்து பின்பு அவர்களை அனுப்பி விடும்படி பணிக்கப்பட்டவர்களில் ஒருவர். பானியின் புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:34).

அம்னோன் (AMNON – நம்பிக்கைக்குரிய)

1. கெபிரோனில், இஸ்ராயேலைச் சேர்ந்தவளும் தாவீதின் மனைவியுமான அகினோவாமுக்குப் பிறந்த அம்னோன், தாவீதுக்குத் தலைமகன் (2 சாமு 3:2; 1 நாள் 3:1). இவரைப்பற்றி ஒரே ஒரு நிகழ்ச்சிதான் தெரியவருகிறது. தனது ஒன்றுவிட்ட சகோதரியான தாமாரைக் கற்பழித்தார். அவளது தமையன் அபிசலோம் இதற்காக இவரைக் கொலை செய்து பழி தீர்த்தார் (2 சாமு 13). இது தாவீது பதுசேபாவோடு விபசாரம் செய்து, உரியாவைக் கொன்றபின் தாவீதின் குடும்பத்தில் நிகழ்ந்த முதல் கலகமாகும். இதுதான் தாவீதின் குடும்பம் பிளவு படுதலின் முதற்படியாகும்.

2. யூதாவின் தூரவழிவந்த வழித்தோன்றலும் சீமோனின் புதல்வர்களில் ஒருவரும் ஆவார் (1 நாள் 4:20).

அயலார் (NEIGHBOUR)

ஒருவன் மற்றொருவனோடு தொடர்பு படுத்திக் கொள்ளும் போது அவன் மற்றவனுக்கு அயலானாகிறான். இச்சொல் நண்பன், தோழன், உடன்குடியிருப்பவன், உறவினன், ஒரே நாட்டைச்சேர்ந்தவன், அருகில் இருப்பவன் ஆகியோரைக் குறிக்கலாம்.

I. பழைய ஏற்பாடு:-

1. சொல்: அயலான் என்ற சொல் கிரேக்கத்தில் 'பிளேசியோன்' என்பதன் பொருளை சரியாக உணர்த்தினாலும் கூட, மூலமொழியாகிய எபிரேயத்தில் 'ரேயா' என்பதன் முழுப் பொருளையும் எடுத்துக்காட்டுவதில்லை. பல இடங்களில் இவ்வார்த்தையானது சகோதரன் என்றும் பொருள் கொண்டு வந்தாலும் கூட அயலான் என்னும் சொல்லை சகோதரன் என்பதோடு குழப்பிவிடக் கூடாது. இதனையே சொல்விணக் கணத்தின் அடிப்படையில் நோக்கின் ஒருவன் மற்றொருவனோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதை காட்டுகிறது. சகோதரன் என்பது உடன்பிறப்பைக் குறிக்கிறது. ஆனால் அயலானோ இவ்வகை உறவினால் இணைக்கப்பட்டவன் அல்லன். மேலும் என் உடன்பிறப்பும் நானும் ஒன்றெனக் கொள்ளுமிடத்து என் அயலானைப் பிரிதொருவன் எனக் கொள்வது பொருத்தமே. அவன் எனக்கு அடுத்தவனாக உள்ளான் எனினும் என்னோடு உறவு கொண்டு என் சகோதரனாக ஆக முடியும். இங்ஙனமாக தற்காலிகமான

(லேவி 19:13.16.18) அல்லது நிலையான உறவு ஏற்பட முடியும். இவ்வுறவு நட்பு (உப 13 7), அன்பு (எரே 3:1.20; உ.ச. 1:9.15) அல்லது தோழமை (யோபு 30:29) என்னும் அடிப்படையில் உருவாகலாம்.

பழைய சட்டத் தொகுப்பின் படி அயலான் என்பது சகோதரர்களைக் குறிக்காது; தம்மைச் சுற்றியுள்ளவர்களைக் (யாத் 20: 16 தொ) குறித்தது. இதன்படி பரந்த மனப்பான்மை விளங்கினும், சட்ட வரம்பு இஸ்ராயேலரைத்தவிர வேறு யாரையும் குறிக்கவில்லை. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற உணர்வில் ஊறியவர்கள் என்பதால், உப ஆகமமும் பரிசுத்தத்தின் சட்டமும் அயலானையும் சகோதரனையும் (லேவி.19:16 தொ) குழப்பிவிடுகிறது. இஸ்ராயேலரை மட்டுமே நோக்குகிறது. இதனால் அயலானுக்கு அன்பு காட்டு எனும் பொழுது சகோதரனுக்கு மாத்திரமே அன்பு காட்டுதல் என பொருள் கொள்ளக்கூடாது. மாறாக, மேற்கூறிய வாக்கியங்களின் உள்நோக்கமானது தம்முடன் வாழும் அன்னியர்களையும் (லேவி 17:8.10.13;19:34) இஸ்ராயேல் கூட்டத்தில் சேர்ந்து அன்புகாட்ட வேண்டுமென்பதே.

2. அயலான் உறவுபற்றிய பழைய ஏற்பாட்டு ஒழுங்குகள் :-

அயலார்களுக்குள்ளே உறவு சட்டத்திற்குட்பட்டதாகும் (யாத் 20:16–17). இந்த உறவு சரியான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும் (22:5–15.25–27; காண்க லேவி.6:2 தொ; 19:9–18; 25:13–17.25–28.35 தொ). அயலானுக்குத் தீங்கிழைப்பவன் தீமை செய்கிறான். அவன் செய்தபடியே அவனுக்குச் செய்யப்படும்' (லேவி 24:19–20; 22; உப 19:11–13; காண்க உப 27:24; 1 அர 8: 31–32; 2 நாள்.6:22). அது அவனது சகோதரனுக்கே தீங்கிழைத்ததற்கு ஒப்பாகும் (உபா.4:41–43; 19:1–4; யோசு 20). ஒருவனுக்கும் அவன் அயலானுக்குமிடையே உள்ள உறவை இறைவனே ஏற்படுத்துவதால், அது சட்டத்திற்குட்பட்டதாகும். அயலானுக்கு உரிமை வழங்க மக்கள் மறுக்கும்போது ஒருவர்க்கொருவர் பரிமாற்றமான கடமைகளைப் புறக்கணிக்கும் போது, ஒழுக்க சீர்கேடுகளும், நாட்டுப் பேரழிவும் விளைகின்றன. மனிதர் பொய் சொல்லி அயலானை அவதூறாய்ப் பேசும்போது இறை சினத்திற்குள்ளாகின்றனர் (சங் 12:2; 101:5; காண்க பழ 11:9.12; 14: 21; 21: 10; 25:18; 26:18–19). ஆண்டரவது தீர்ப்பு நாளுக்கு முந்திய தீய காலத்தில் இச்சூழ் நிலை பரவலாக இருக்கும் (ஏச 3:5; எரே 9:4–9; மீக் 7:5–6; காண்க எரே 19:9). புதிய உடன்படிக்கையின் காலத்தில், மனிதரின் உள்ளத்தில் சட்டம் எழுதப்பட்டு, அனைவரும் அமைதியாய் வாழ்வர் என்று எரேமியா முன் நோக்குகிறார் (31:34). "ஒவ்வொருவனும் தன் அயலானைத் தன் திராட்சைக் கொடியின் கீழும் அத்திமரத்தின் கீழும் வந்து தங்கி இளைப்பாற அழைப்பார்" என்று எல்லோரும் ஒப்புரவாக வாழும் மகிழ்ச்சிமிக்க காட்சியைச் செக்கரியா சித்தரிக்கிறார் (3:10).

3. பாபிலோனிய அடிமைத்தனையிலிருந்து தாயகம் திரும்பிய பிறகு இருவித போக்குகள் தோன்றுகின்றன. ஒருவகையில் 'தம்மைச் சுற்றியுள்ளவர்கள்' என்னும் வாக்கியம் இஸ்ராயேல் மக்களையே குறிப்பதாக் கொண்டனர். எனவே இஸ்ராயேலரை அல்லது மதம் மாறி யூத மதத்தில் சேர்ந்தவர்களை மட்டுமே அன்பு செய்ய அவர்களுக்குக் கடமை உண்டு. இதற்கு மாறாக எபிரேயச்சொல் 'ரேயாவை மொழி பெயர்த்து கிரேக்கத்தில் பிளேசியோன் என்னும் வார்த்தையை எழுபது நூல் கையாளும்போது சகோதரன் என்னும் அர்த்தத்தில் இருந்து, "பிறர்" என்பதை நீக்கி பொருள் தருகிறது. ஆதலின் சகோதரனோ இல்லையோ நம் அன்புக்குரியவர் அனைவரும் அயலாரே. இருவர் சந்திக்கும் நேரத்திலிருந்து அவர்கள் ஒருவர்க்கொருவர் அயலார் என்று உறவு கொள்ளுகின்றனர். அவர்களிடையே ஏற்பட்ட இந்த உறவானது அவர்களின் தனித்தனி குடும்ப உறவினின்று வேறுபட்டது. மேலும் ஒருவரொருவரைப் பற்றி அவர்கள் கொண்ட கருத்திற்கு அபபாற்பட்டதாக இவ்வுறவு அமைகிறது.

II. புதிய ஏற்பாடு :-

சட்ட வல்லுநர் ஒருவர் இயேசுவிடம் "என் அயலான் யார்" (லூக் 19,29) என்று கேட்டபொழுது. ஒருவேளை அவர்

அயலான் என்றால் இஸ்ராயேலருள் ஒருவனாகிய தன் சகோதரன் என்றே எண்ணினார் போலும். ஆனால் இயேசுவோ அயலான் என்னும் சொல்லின் பொருளைச் சிறப்புற மாற்றிப் புதுக் கருத்தைப் புகுத்த விழைகின்றார்.

முதன் முதலில் "என் அயலானை உன்னைப்போல் அன்பு செய்வாயாக" என்ற கட்டளையைப் புனிதப்படுத்துகிறார். இவ்வாறு அவர் எல்லாக்கட்டளைகளையும் இந்த அன்புக் கட்டளையில் அடக்கிக் கூறுவதோடு அல்லாமல், எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளை அன்பு செய் என்ற கட்டளையோடு பிரிக்க முடியாதபடி இணைத்துக் கூறுகிறார். (மத் 22:34–40). இயேசுவைப் போல பவுலும் இந்த ஒரே கட்டளையில் திருச்சட்டம் முழுவதும் நிறைவேறுகிறது (கலா 5:14) என்றும் இன்னம் சுருங்கக்கூறின், பிற கட்டளைகளின் 'முழுமையும்' (உரோ 13:8 தொ) இதுவே என்றும் கூறுகிறார். இதையே யாக்கோபும் 'இறையரசின் திருச்சட்டம்' என்று கூறுகிறார் (யாக் 2.8).

அடுத்தபடியாக, இயேசு நமது நண்பர்களையே அன்றி பகைவர்களையும் நேசிக்க வேண்டும் என்று கட்டளையை உலகனைத்திற்கும் பொதுவானதாக ஆக்கி விடுகிறார் (மத் 5:43–48). இதனால் பகைவரிடமிருந்து நம்மைப் பிரித்து வைக்கும் தடைகளை எல்லாம் இதயத்திலிருந்து நாம் எவ்வளவு தூரம் களைந்து விடுகிறோம் என்றால் இந்த அன்புக் குணம் பகைவரையும் நம்மால் தொட முடிகிறது.

இறுதியாக, இயேசு யாவரும் வாழ்க்கையில் கடைபிடிக்கும் வண்ணம் இக் கட்டளையை நல்ல சமாரியன் உவமையின் மூலம் விளக்குகின்றார் (லூக் 10:29–37). என் அயலான் யார் என தீர்மானிப்பது என்கையில் இல்லை. துன்புறுபவன் எவனும் என் உதவி தேவைப்படும் எவனும், அவன் என் பகைவனாக இருப்பினும், அவன் என் அயலான் ஆகிறான். துன்புறுபவனுக்கு உதவி செய்பவன் துன்புற்றவனுக்கு அயலாகிறான். இவ்வுவமையில் கிறிஸ்து தாமே இரக்கமிக்க அயலான் என்று அறிவிக்கிறார். இவ்வாறு கிறிஸ்துவைக் காண்பவன் இறை அன்பைப் பெறுபவனாகிறான். அப்போது இறைவனையும் அயலானையும் அன்பு செய்யக் கூடியவனாகிறான். அப்போது கிறிஸ்துவின் சீடன் மற்றெல்லார்க்கும் இரக்கமிக்க அயலானாகிறான். இவ்வாறு என் வாழ்க்கைப் பாதையில் இறையருளால் குறுக்கிடும் ஒவ்வொரு மனிதனிலும் இப்பரந்த அன்பு வெளிப்படையாகச் செயல்படுகிறது.

அயின் (AIN – கண் ஊற்று – இடம்)

1. "அகண்ட பாலஸ்தீனத்தில், இரிபிலாவுக்கு மேற்கே அமைந்திருந்த நகரமாக இருக்கலாம் (எண் 34:11; காண்க எச 47:15 தொ). இதை அடையாளம் காட்ட முடியாது. இது யாரிமுக்கும் யோர்தானும் சந்திக்கும் இடத்திற்கு அருகிலோ, கிர்பெத்–தாப்னே ஆகாவோ இருக்கக் கூடும் என்பர்.

2. யோசு 15:32; 1 நாள் 4:32–இல் இரிம்மோனுக்கு முன் வரும் நகரமாகும். இரண்டையும் சேர்த்து ஒரே சொல்லாக ஏன்–ரிம்மோன் என்று வாசிப்பது மேலானதாகத் தெரிகிறது (யோசு 19:7; நெக 11:29).

3. ஆரோனின் வழித்தோன்றல்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு லேவியர் நகரமாகும் (யோசு 21:16). ஒருவேளை இது 2–இல் குறிக்கப்பட்ட நகரமாக இருக்கலாம். இப்பெயர், இணைப்பகுதியான 1 நாள் 6: 59–இல் வருவதுபோல், "ஆசான்" என்று வாசிக்கப்படவேண்டும் என்பர் சில அறிஞர்கள்.

அயின் (AIN) – எழுத்து

எபிரேய நெடுங்கணக்கில் 16–வது எழுத்து. இது சங்கீதம் 118–இன் 16–வது பகுதியில் ஒவ்வொருவரியின் தொடக்க எழுத்தாக வருகிறது.

அயின்–கெரேம் (AIN KAREM – திராட்சைத் தோட்ட நீரூற்று)

செக்கரியா–எலிசபெத்து ஆகியோரின் ஊராகவும், திருமுழுக்கு யோவானின் பிறப்பிடமாகவும், பாரம்பரியமாகக் கருதப்படுகிறது. எருசலேமுக்கு மேற்கே 8 கி.மீ. தூரத்தில் மலைப்பகுதியிலுள்ள சிற்றூர். இங்குதான் மரியாள் தன் உறவினளான எலிசபெத்தைச் சந்தித்தாள் (லூக்

1:39–40). அந்தச் சந்திப்பில் இயேசுவின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது (1:41–56).

அயின்பெசுக்கா (AIN FESHKA)
சாக்கடலுக்கு மேற்கில் 2 கி.மீ. தொலைவிலும் எரிகோவுக்குத் தெற்கில் 12 கி.மீ. தொலைவிலும் உள்ள ஓர் உப்பு நீரூற்றாகும். சாக்கடல் ஏடுகள் கண்டு எடுக்கப்பட்ட குகைகளுக்கு அருகில் உள்ளது.

அய்யலத்து சாகார் (AIJELETH SHAHAR)
சிலமொழி பெயர்ப்புகளில் சங் 22–க்கு அளிக்கப்படும் மேல் குறிப்பாகும். இது ஒரு இராகத்தையோ அல்லது அது போன்ற இசைக் குறிப்பையோ குறிக்க லாம். இதன் பொருள் "விடியலின் பெண் மான்" என்பதாகும். வறியவர்களுக்கு இறைவனுடைய உதவி எப்போதும் உள்ளது என்ற, சங்கீதங்களில் பொது வாக வரும் கருத்தை இப்பதம் சுட்டிக் காட்டுகிறது.

அய்யலோன் (AIJALON – மான் வயல்)
1. இந்த இடம் யோசுவா ஐந்து அரசர் கள் சேர்ந்த எமோரியர் கூட்டணியைத் தோற்கடித்ததால் புகழ்பெற்றது (யோசு 10:12). யோசுவா ஆண்டவரிடம் மன்றாடிக் கட்டளையிட்டதற்கு ஏற்ப "சூரியனும் சந்தி ரனும் நிலை குலையாமல் இஸ்ராயேலர் தங்கள் எதிரிகள் மேல் பழிவாங்கித் தீரு மட்டும் அசையாது நின்றன" என்று கூறப் பட்டுள்ளது (10:12–13). பேத்துகோரோ னுக்குக் கீழே பெலிஸ்தியாவின் எல்லைப் புறத்தில் அமைந்து, யூதா நாட்டு மலைத் தொடர்களுக்குச் செல்லப் பயன்பட்ட முக்கிய கணவாயும், அமர்னா ஏடுகளில் அய்யலூன் என்று அழைக்கப்படுகிறது.

எருசலேமுக்கு 23 கி.மீ வடமேற்கிலும் எம்மாவுக்கு அருகிலும் உள்ள யாலோ என்ற இடத்தில் இந்த நகரம் குறிக்கப் படுகிறது. இங்கு அரண் சூழ்ந்த நகரத் தில் அழிவுகளைக் கொண்ட ஒரு பெரும் குன்று உள்ளது.

அய்யலோன் தாண் குலத்திற்குக் குறிக கப்பட்ட எல்லைப் பகுதியாகும் (யோசு 19:42). அய்யலோன் தாண் குலத்தவர் களுக்கு உரிமையாக்கப்பட்ட பகுதியாக இருந்தாலும் எமோரியர்களும் அங்கு தங்கினார்கள். ஆனால் கட்டாய ஊழியம் செயதனர். எப்பிராயிம் அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தியது (நீதி 1:35). மிக்கி மாசுபோரில் யோனத்தான் பெலிஸ்தி யரைத் தோற்கடித்து அய்யலோன் வரை விரட்டியடித்தார் (1 சாமு 14:31).

தாவீதின் ஆட்சி அமைப்பில் அய்ய லோன் கெகாத்தியர்களுக்குக் குறிக்கப் பட்ட லேவிய நகரமாகும் (யோசு 21:24). இது அடைக்கல நகரங்களில் ஒன்றாகும் (1 நாள் 6:69). முடியாட்சியில் பிளவு ஏற்பட்டபின், பென்யாமினின் பகுதிக்குள் அடங்கிய இந்நகரம் (1 நாள் 8:13) இரக பெயாமால் (922–915) மேற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் வரும் தாக்குதல்களைத் தடுக்க அரண் சூழ்ந்த நகரமாக்கப் பட்டது (2 நாள் 11:10). முதலாம் யோவ காசு (ஆகாசு 735–715) ஆட்சிக் காலத்தில் இந்நகரம் பெலிஸ்தியர்களால் கைப் பற்றப்பட்டது (2 நாள் 28:18). இந்த இடத் தில்தான் யூதா மக்கபேயு கோர்கியாவை கி.மு. 166–இல் தோற்கடித்தார் (1 மக் 3:40; 9:1–5).

2. நீதிபதி ஏலோன் புதைக்கப்பட்ட செபுலோனில் உள்ள ஓர் இடம் (நீதி 12:12). இது எங்கிருந்தது என்ற விவரம் தெரிய வில்லை.

அய்யா (AIAH – வேட்டைப் பருந்து)
1. கிபயோனின் மகன். ஆனாவின் சகோதரன். கோரியர்களின் தலைவன் (ஆதி 36:4; 1 நாள் 1:40).
2. சவுலின் வைப்பாட்டியான இரிசிப் பாவின் தந்தையாவார் (2 சாமு 3:7). இவரது இரு புதல்வர்கள் சவுல் கிப யோனியர்களுக்குச் செய்த தீய செயல் களுக்காக அவர்களிடம் கையளிக்கப் பட்டனர் (21:8–11).

அய்யா (AYYAH)
எப்பிராயிமுக்கு உடைமையான நகர் களில் அய்யா ஒன்றாகும் (1 நாள் 7:28). பெலிஸ்தியாவிலுள்ள காசாவிலிருந்து இது வேறுபடுத்தப்படவேண்டும். சூழ் நிலையும் பெயர்களுக்கிடையேயுள்ள ஒருமைப் பாடும் இப்பெயர் ஆயி என்ப தோடு தொடர்புடையது போல் தோன்று கிறது. முற்காலத்திலிருந்த ஆயி அல்லது கிர்பெத் கயியான் தான் அய்யா இருந்த

இடமாகச் சில அறிஞர்கள் கருது கின்றனர். வேறுசிலர் நெகமியா 11:31–இல் குறிப்பிடப்பட்டுள்ள 'அய்யா' என்பதுதான் இந்த 'அய்யா'வாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

அய்யாத்து, அய்யா (AIATH, AIJA)

ஆயி என்ற பெயரின் வேறு வடிவங்கள் (நெக 11:31; ஏச 10:28) பார்க்க. ஆயி–1.

அரக்–எல்–எமீர் (ARAG EL-EMIR)

பாரசீகர் காலத்தில் செல்வாக்குள்ள செல்வமிகுந்த அம்மோனியக் குடும்பமாகிய தோபியாத் மரபின் இருப்பிடமாகும் (நெக 2:19; 6:1.12.14.17; 13:4–8; செக் 6:9–14). கி.மு. 3–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு செங்குத்தான பாறைக்குள் குடைந்த குகைகளில் காணப்படும் வாசகங்களில் "தோபியா" என்ற பெயர் காணப்படுகிறது. கஸ்ர்–ஏல்–அப்த என்ற ஒரு பெரிய கட்டிடத்தின் சிதைவு தோபியாதியரின் கல்லறைக் கூடமாகக் கருதப்படுகிறது. ஆனால் இது ஓர் அரண்மனையாகவோ கோட்டையாகவோ இருக்கலாம். இந்த ஊரின் இடம் வாடி–சீர் என்ற ஓடையருகில் எகிகோவுக்குக் கிழக்கில் 29 கி.மீ. தொலைவிலும் அம்மானுக்கு மேற்கில் 16 கி.மீ. தொலைவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரக்கர் (இராட்சதர், பேராற்றல் வாய்ந்தவர்)

மற்ற மக்களைப்போல் எபிரேயரும் அரக்கர் இனம் உண்டு என்று நம்பினர். தொல்பொருள் ஆய்வோ, தொல்கால இயலோ, இப்படிப்பட்ட இனம் இருந்ததற்குச் சான்று தரவில்லை. உயிர் நூல் வல்லுநர்கள் கருத்துப்படி, குள்ளர்களைப் போல் அரக்கர்களும், சாதாரண மனிதனின் இயல்புக்கு மாறான பிறப்பாவர். வழக்கமாக அரக்கர்கள் மலடுத் தன்மையுடையவர்கள். இரண்டு சூழ்நிலைகள் அரக்கர்கள் மேல் நம்பிக்கைக் கொள்ளத் தூண்டின. 1) அசாதாரண பருமனுடையவர்கள் வாழ்ந்ததை எபிரேயர்கள் அறிந்திருந்தார்கள். பலபேர் விவிலியத்தினால் குறிக்கப்பட்டிருக்கின்றார்கள். பாசான் நாட்டு அரசன் ஒகு ஒரு அரக்கனாகக் கருதப்பட்டார். ஏனெனில் அவர் 4 மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் உள்ள இருப்புக் கட்டிலைக் கொண்டிருந்தான் (உப 3:11). அரக்கர்களில் எல்லோருக்கும் தெரிந்தவர் தாவீதால் கொல்லப்பட்ட பெலிஸ்தியன், கோலியாத்து ஆவார் (1 சாமு 17:23–54). மற்ற பல பெலிஸ்திய வீரர்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர் (2 சாமு 21:16–22; 1 நாள் 20:4. 6. 8). 2) எபிரேயர், பாலஸ்தினத்தில் பல பெருங்கற்கால அமைப்புகளைக் கண்டனர். அவற்றை அமைத்தவர்கள் அரக்கர் பலத்தைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று எண்ணினர்.

அரக்கர்களில் இருபெரும் பிரிவுகள் இருந்தன: 1) தெய்வீகத் தந்தைக்கும் மண்ணகத் தாய்க்கும் பிறந்தவர்களாகக் கருதப்பட்ட அரக்கர்கள். இத்தகைய கதை ஆதி. 6:1–4–இல் காணப்படுகிறது. 2) சில நாட்டோடும், குலத்தோடும் தொடர் புற்ற மனிதவர்க்க அரக்கர்கள். எல்லா அரக்கர்களும், தெய்வ–மனித–தொடக்கம் உள்ளவர்கள் என்று எபிரேயர்கள் நம்பியதற்குச் சரியான சான்றுகள் இல்லை. உடல் பருமனும் நீடிய ஆயுளும் ஆன்மீகப் பொருளுடையதாகக் கருதபபட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். கானானில் உளவு பார்த்து வர யோசுவாவால் அனுப்பப்பட்டவர்கள், திரும்பி வந்து கானான் நாட்டில் வாழ்ந்தவர்கள் அரக்கினரைப் போல்வர் என்று கூறி மக்களை அச்சமூட்டினர் (எண் 13:32–33; உப 2:11.20; 3:11.13; யோசு 12:4; 13:12; 17:15).

அரச கட்டளை (EDICT)

இது எழுதப்பட்டு, அரச முத்திரையிடப்பட்ட பொதுவில் வாசிக்கப்படும் அறிக்கையாகும் (எஸ். 6:11; எஸ்த. 2:8; 9:1.13). இது எழுத்து வடிவம் பெறுவதாலும், பொதுவில் அறிவிக்கப்படுவதாலுமே அரச ஆணையினின்று வேறுபடுகிறது (எஸ்த 8:8–9; 3:12).

மேதிய–பாரசீக சட்டத்தின் மாற்ற முடியாத தன்மையை விவிலியம் வலியுறுத்துகிறது (எஸ். 6:11; எஸ்த 8:8–9; தானி 6:8) ஆனால் விவிலியத்திற்கு புறம்பே இதற்குச் சான்றுகள் இல்லை. மூன்றாம் தாரியு கரிதமோஸ் என்பவனைக் கொல்ல கட்டளையிட்டதாகவும், பின் தன் தவற்றை அறிந்து ஏற்றுக்கொண்டாலும் அதைத்

தடுக்க அவரால் ஒன்றும் செய்ய முடிய வில்லை என்றும் கூறப்படுகிறது. இக் கதை பாரசீகர்களின் சட்டம் மாற்ற முடி யாது என்பதற்குச் சான்றாகும் என்று கூறப்படுவது வாதத்திற்குரியது. ஏனெ னில் கொல்லப்படுவது ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டது. இக்கதை நிகழ்ந்துவிட்ட நிகழ்ச்சியை அரசனால் மாற்ற முடிய வில்லை என்பதையே உணர்த்தலாம். எஸ்தர் ஆகமத்தில் முதலில் யூதர்கள் அனைவரும் கொல்லப்பட வேண்டும் என்ற அரசகட்டளை யூதர்கள் தங்கள் பகைவர்களைப் பழிவாங்க அனுமதிக்கும் மற்றொரு அரச கட்டளையால் சரி செய் யப்பட்டு ஈடு செய்யப்படுகிறது (எஸ்த 8:8–13). பாரசீக அரச கட்டளையை மீறு பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது (எஸ் 6:11). புதிய ஏற்பாட் டில், ஆண் குழந்தைகள் யாவரும் கொல லப்படவேண்டும் என்ற அரச கட்டளை யை மீறிய மோசேயின் பெற்றோர்கள் விசு வாசத்திற்கு முன் மாதிரிகையாக கூறப் பட்டுள்ளார்கள் (எபி 11:23).

அரச குளம் (KING'S POOL)

எருசலேமிற்கு அருகில் உள்ள அரச தோட்டத்தில் இக்குளம் உள்ளது (நெக. 2:14). இது ஒருவேளை செலாது குளமாக இருக்கலாம் என கருதப்படுகிறது (3:15). சிலர் இது சாலமோனின் குளமாக இருக் கலாம் என்று கருதுகின்றனர். இதை யோசிபஸ் சீலோவாம் நீரூற்றுக்கும் ஒப்பேலுக்கும் இடையில் குறிக்கிறார்.

நெக 3:16–இல் குறிக்கப்படும் செயற் கைக்குளம் இதுதானா என்பது தெளி வாக இல்லை.

அரச தோட்டம் (KING'S GARDEN)

இது நெகமிய 3:15–இல் குறிக்கப்படு கிறது. இது எருசலேம் சுவற்றுக்கு வெளி யில் சிலோவாம் குளத்துக்கருகில் அமைந் திருந்த அரச தோட்டமாகும். தீரோபோ யோனும் கிதரோனும் சந்திக்கும் இடத்தி லிருந்தது. அரசர்கள் ஆட்சிக் காலத்தில் கிதரோன் ஓடையிலிருந்து நீர் பாய்ச்சப் பட்டது. நகரத்திலிருந்து குளத்திற்கு ஒரு சுரங்கம் இருந்தது. அது பள்ளத்தாக்கிற்கு இட்டுச்சென்றது (நெக.3:15). பாபிலோ னிய முற்றுகையின் போது தப்பிக்க அரசன் செதேக்கியா இந்தச் சுரங்கத் தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். நிகழ்ச்சியுரை எருசலேமுக்கு வெளியி லுள்ள தோட்டத்திற்குப் போகும் வழியை விவரிக்கிறது (எரே 39:4; காண்க 52:7; 2 அரச 25:4).

அரச நெடுஞ்சாலை (KING'S HIGHWAY)

இந்தப் பாதையானது மறை நூலில் மூன்றுமுறை குறிக்கப்பட்டுள்ளது. மோசே இஸ்ராயேல் மக்களை வழிநடத்திச் செல்லும்போது, இந்த அரச நெடுஞ் சாலை வழியாய்ச் செல்வதாக ஏதோமிய ரிடமும் எமோரியரின் அரசனாகிய சீகோனிடமும் உறுதி அளித்தார் (எண் 20:17–18; 21:22–23; மேலும். உப 2:27– 30). இச்சாலையானது தமஸ்குவிலிருந்து அக்காபா வளைகுடாவரை கிழக்குப் பால ஸ்தீனம் வழியாகச்செல்லும் முக்கியமான நெடுஞ்சாலையாகும். இந்நெடுஞ்சாலை பாசான், கிலயாத்து, அம்மோன், மோவாபு, ஏதோம் ஆகியவை வழியாகச் சென்று, பெனிசியாவையும் எகிப்தையும் இணைக்கும் கடற்கரையோர வழிகளை நோக்கி நெகேபு வழியாகச்செல்லும் சாலைகளோடு இணைந்தது. இந்த நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் அரண்கள் எழுப்பப்பட்டிருந்ததாக புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்ற னர். இந்த அரண்களில் சிலவற்றை எலா மியரின் அரசன் கெதெர்லா – கோமேர் மற்றும் இவரது கூட்டாளிகளால் அழிக் கப்பட்டன. இச்சாலையைப் பின்பற்றி இவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக பல நகர் களை கைப்பற்றினர் (ஆதி 14). இப்பகுதி 600 ஆண்டுகளுக்குக் குடியேறப்பட வில்லை. இதன்பின் இப்பகுதியில் ஊடுரு விய மக்கள் இவ்விடத்தைப் பிடித்தனர். புது அரண்கள் கட்டப்பட்டன. இச்சாலை நபத்தேய வணிகர்களால் பயன்படுத்தப் பட்டது. இவர்களிடமிருந்து திரேசான் மன்னன் இச்சாலையைக் கைப்பற்றி (கி.பி. 106) அதைக்கட்டி எழுப்பினார். அதன் பின்னர் இது திரேசன் சாலை யென அழைக்கப்படுகிறது. இப்போது இச்சாலை தரீக்–எஸ்–சுல்தானி என்ற ழைக்கப்படுகிறது. தற்போதைய யோர் தான் சாலை இந்நெடுஞ்சாலையைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும்.

அரசர்களின் கல்லறை (TOMBS OF THE KINGS)

தாவீது சந்ததியிலே வந்த யூதா அரசர்களின் கல்லறைகள். தாவீதின் நகரிலே, தாவீது வம்சத்தைச் சார்ந்தவர்கள் தமக்கென கல்லறைகளைக் கொண்டிருந்தனர் (2 நாள் 16:14; 2 அர 9:28). திடீரென்று செயற்கை மரணம் எய்தியவர்கள் இந்தக் கல்லறையில் புதைக்கப்படவில்லை. யோராம் தாவீதின் நகரில் புதைக்கப்பட்டார். ஆயினும் அரசர்களின் கல்லறையில் அவரை அடக்கம் செய்யவில்லை (2 நாள் 21:20). ஊசிய தொழுநோயாளியாய் இருந்ததால் அவர் அரச கல்லறைக்குப் புறம்பே புதைக்கப்பட்டார் (2 நாள் 26:23). மனாசேயும் (2 அர 21:18) ஆமோனும் (21:26) ஊசியாவின் தோட்டத்திலுள்ள கல்லறையில் புதைக்கப்பட்டனர்.

2 நாள் ஆகமம், நெகமியா ஆகமம் ஆகியவை துணைகொண்டு (2 நாள் 32:33; நெக 3:15–16) இந்த அரசர்களின் அமைந்திருந்த இடத்தை நாம் அறியலாம். இதன்படி இந்தக் கல்லறை திரோபேயோன், கிதரோன் சமவெளிக்கு இடையிலுள்ள மலைப்பகுதியில் அமைந்திருக்கவேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். இதை அகழ்வாய்வுகள் ஓரளவுஉறுதி செய்கின்றன. ஆனால் மற்ற கல்லறைகள் எங்கே இருந்தன எனசொல்வதற்கில்லை. ஊசியாவின் தோட்டம் எங்கிருந்தது என்று கூறமுடியாது.

பிற்கால மரபுகள் தாவீது மன்னனின் கல்லறை பெத்திலகேமில் இருந்ததாகக் குறிப்பிடுகிறது.

அரசரின் பள்ளத்தாக்கு
(KING'S VALLEY, VALLEY OF SHAVEH)

எருசலேமுக்கு அருகில் உள்ள ஒரு பள்ளத்தாக்கு. இதுவும் சாவே பள்ளத்தாக்கும் ஒன்றாகத் தோன்றுகிறது. ஆபிரகாம், கெதர்லா – கோமேரையும் அவரது கூட்டணியையும் வெற்றி கொண்டபின், அவரைச் சலேமின் அரசர் மெல்க்கிசதேக்கும் சோதோமின் அரசனும் சந்தித்து வாழ்த்தினர் (ஆதி. 14:17–18; 2 சாமு. 18:18). அரசரின் பள்ளத்தாக்கை அரசரின் தோட்டத்தோடு ஒப்பிடும்போது இந்த இடம் எருசலேமுக்கு வெகு அருகில் உள்ளதைக் குறிக்கிறது. பாரம்பரியப்படி இது கிதரோன் பள்ளத்தாக்கு தாவீதின் நகரத்தின் தெற்கில் இன்னோம் பள்ளத்தாக்கைச் சந்திக்கும் இடத்தைக் குறிக்கிறது. ஆகவே சாவே பள்ளத்தாக்கும் அரசரின் பள்ளத்தாக்கும் ஒரே இடத்தையே குறிக்கின்றன எனக் கருதலாம். யோசிபஸ் இது எருசலேமிலிருந்து 370 மீட்டர் தொலைவில் உள்ளதாகக் குறிக்கிறார். இப்பகுதியில் ஒரு பகுதி அரசரின் சொத்தாகும். இங்குதான் அபிசலோம் தனது பெயருக்காக ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பினார் (2 சாமு 18:18).

அரச வாயில் (KING'S GATE)

இவ்வாயில் சாலமோன் கட்டிய ஆலயத்தின் கிழக்குப் பக்கத்தில் அமைந்து, ஆலயத்தையும் அரச மாளிகையையும் இணைத்தது. இதை லேவியர் காவல் செய்தனர் (1 நாள் 9:18). இது ஓய்வு நாளிலும் அம்மாவாசை நாளிலும் அரசனுக்கு மட்டும் திறக்கப்பட்டது (எச 46:1–3). அரசன் ஆகாசு இந்த வாயிலை இடித்து, அதிலிருந்து கிடைத்த உலோ கப்பொருட்களை, மூன்றாம் திகிலாத்து – பிலேசருக்குக் கப்பம் கட்டப்பயன்படுத்தியதாகத் தெரிகிறது (2 அர 16:18).

அரசனுடைய மகனின் திருமண விருந்து – உவமை

இயேசு எருசலேமை நோக்கி கடைசி முறையாகச் செல்லும் வேளையில் கூறிய உவமைகளுள் இதுவும் ஒன்று (மத். 22:1–14). இது ஆண்டவரின் நீதித் தீர்வை அருகில் உள்ளது என எச்சரிக்கிறது. எனவே விழித்திருந்து விசுவாசத்தோடு அந்நாளுக்காக தயார் செய்ய அழைக்கிறது. லூக்காவின் திருமண விருந்து (லூக். 14:15.24) உவமையும் இந்த உவமையும் ஏறக்குறைய ஒரேவிதமாக உள்ளன. இவையிரண்டில் மத்தேயவின் உவமை சிறிது கடினமாக உள்ளது. அழைக்கப்பட்டவர்கள் வர மறுத்ததால் அழிக்கப்படுகின்றனர். இதன் மூலமாக மத்தேயுவின் தங்களை எதிர்த்த யூதர்களை விட்டு விட்டு புறவினத்தாருக்கு நற்செய்தி அறிவிக்கத் தயாராகிறார். மேலும் தனி மனித மீட்பை வலியுறுத்த திருமண உடை இல்லாதவன் தண்டிக்கப்படுவதை எழுதுகிறார். ஏனெனில் கடவுளின் அருட்

கொடையை ஏற்க அனைவரும் காத்திருக்க வேண்டியது கடமை. அழைக்கப் பட்டவரோ பலர் தேர்ந்து கொள்ளப்பட்டவரோ சிலர் (மத் 20:16).

அரசர்கள் நூல் 1,2

1. முன்னுரை

இரண்டு நூல்களும் தாவீதின் இறப்பிலிருந்து, நாடு கடத்தப்பட்டது வரை யூதா, இஸ்ராயேல் ஆகிய அரசுகளில் அரசர்களைப் பற்றி கூறுவதால் அரசராகமம் அல்லது அரசர்கள் நூல் என்று பெயர் பெற்றன. இந்த நூல்கள் சுமார் 400 ஆண்டுகளில் வாழ்ந்த அரசர்களைப் பற்றிப் பேசுகின்றன. மூல எபிரேய வாசகத்தில் இரு நூல்களும் ஒரே தொடர்ச்சியான நூலாகவே இருந்தன. எழுபது நூல் இதற்கு முந்திய சாமுவேல் நூலையும் இதையும் இரண்டாகப் பிரித்து 1–ஆம், 2–ஆம், 3–ஆம், 4–ஆம் அரசராகமங்கள் என்றுப் பெயரிடப்பட்டது. பின் எல்லா விவிலியப் பதிப்புகளும் இதையே பின்பற்றின. எபிரேயப் பதிப்பு இவற்றை 1–ஆம், 2–ஆம் சாமுவேல் ஆகமங்களாகவும், 1ஆம், 2ஆம் அரசராகமங்களாகவும் பெயரிட்டது. குழப்பத்தைத் தவிர்க்க இப்பிரிவே இன்று பயன்படுத்தப்படுகிறது.

2. நூல் தோன்றிய சூழ்நிலை

சாமுவேல் ஆகமத்தின் ஆசிரியர் கூறும் இஸ்ராயேலில் அரச அமைப்பு, தாவீது பரம்பரை என்றும் நிலைத்திருக்கும் என யாவே அளித்த வாக்குறுதி இவையெல்லாம் 400 ஆண்டுகள் கடந்த போது பொய்யானது, அடிப்படையற்றது எனத் தோன்ற ஆரம்பித்தன. வரலாற்று நிகழ்ச்சிகளும் இதை உறுதிப்படுத்துவது போலவே அமைந்தன. கி.மு. 722–இல் சமாரியா வீழ்ந்தபோது, இங்கு வாழ்ந்தவர்கள் அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். கி.மு.587–ல் நெபுக்கதுனேசார் எருசேலமை முற்றுகையிட்டு, அதன் கோட்டைச்சுவர்களைத் தகர்த்து, நகரத்தை அழித்து ஆலயத்தையும் தீக்கிரையாக்கினார். யூதேயாவின் தலைச்சிறந்தவர்களைப் பாபிலோனுக்கு நாடுகடத்தினார். இறைவன் சீனாய்மலையில் அளித்த வாக்குறுதிகள் நிறைவேறவே இல்லை. "எனது பெயர் அங்கேயிருக்கும்" என்று அவர் கூறிய ஆலயம் அழிந்துவிட்டது. தாவீதின் அரசு நிலைத்திருக்கும் என இறைவன் அளித்த வாக்குறுதி பொய்த்து விட்டது போல் தோன்றியது. இப்போது இஸ்ராயேல் மக்களின் விசுவாசம் சோதனைக்குள்ளானது. கடவுள் தன்னுடைய வாக்குறுதிகளுக்கு பிரமாணிக்கமாய் இருப்பதாக எப்படிச் சொல்லமுடியும்? தாவீதின் அரசு நிலைக்கும் என்னும் வாக்கை இன்னும் எப்படி நம்பமுடியும்? கி.மு. 587–இல் நாடு கடத்தப்பட்டபின் இஸ்ராயேல் மக்கள் இத்தகைய வினாக்களை எழுப்பினார். இவைகளுக்கு விடை கூறும் முகமாகத்தான் இந்நூல் எழுதப் பட்டது.

3. நூலின் காலமும் இடமும்

இரண்டாம் அரசராகமத்தில் கூறப் படும் பகுதி (2 அர 25:27–30). கி.மு. 562–ல் நடந்திருக்கக் கூடுமெனக் கருதப்படுகிறது. இதற்கு சிறிதுகாலத்திற்கு பிறகு தான் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும். மேலும் இந்த இரு நூல்களும் நாடு கடத்தப்பட்டவர்கள் திரும்பி வந்ததைப்பற்றி எதுவும் கூறாததால் கி.மு. 562–539–க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். வேறுசில அறிஞர்கள் நாடு கடத்தப்படுமுன், கி.மு. 621–597–க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று வாதிடுகின்றனர். இன்னும் சிலர் இந்நூலின் முதல்பதிப்பு நாடு கடத்தப்பட்டிருந்தபோது சுமார் கி.மு. 562–க்கு பின் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

இந்நூல் எங்கு எழுதப்பட்டது. நாடு கடத்தப்பட்டபின் பாலஸ்தீனத்தில் எஞ்சியிருந்த மக்களிடையேயா? அல்லது கி.மு.597–லும். கி.மு.587–லும் நாடு கடத்தப்பட்ட மக்களிடையேயா? என்பது முடிவு செய்யமுடியாத ஒன்றாக உள்ளது. எங்கு எழுதப்பட்டது என்பதைவிட, யாருக்கு, எந்த நோக்கத் திற்காக எழுதப்பட்டது என ஆராய்வது நலம் பயக்கும்.

4. யாருக்கு? ஏன்? எழுதப்பட்டது

கி.மு. 587–இல் நடந்த கொடுமையான சம்பங்களைக் கண்ட யூதர்களுக்கும், விசுவாசகத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த அவர்களின் பிள்ளைகளுக்கும் எழுதப்

பட்டது இந்நூல். அவர்களுக்கு அறிவுரை கூறவும், உற்சாகமூட்டவும், அவர்களின் பழைய பாவங்களுக்கு மனத்துயரையும், எதிர்காலத்திற்கு நம்பிக்கையை எழுப்பவும் இந்நூல் எழுதப்பட்டது. சுருங்கச் சொல்லவேண்டுமெனில், கி.மு.587–இல் நடந்த கொடுமையான நிகழ்ச்சிகள் எழுப்பிய வினாக்களுக்கு விடைகூறும் விதத்தில் இந்நூல் எழுதப்பட்டது. எனவே இதில் நூலின் ஆசிரியர் இஸ்ராயேல் தங்களின் அரசர்கள் மூலம் உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாய் இல்லையென்றும், ஆனால் இறைவன் எப்போதும் நம்பிக்கைக்குரியவராய இருந்தாரென்றும், அவர்ளின் பாவவாழ்க்கையைக் கண்டும் பொறுமையாக இருந்தார் என்றும் ஆசிரியர் போதிக்கிறார். இவ்வாறு அவர்கள்தான் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்க மற்றவர்களாய் இருந்தார்கள்; இறைவன் அல்ல என்பதை தெளிவாக அழுத்தந்திருத்தமாக கூறுகிறார். ஆசிரியரின் முக்கிய நோக்கம், அறிவுரை கூற மட்டுமன்ற, அவர்களுக்கு உற்சாகமூட்டவும் விரும்பியதால் தாவீதின் அரசு நிலைபெறும் என்ற வாக்குறுதியையம், அரசுக்கும், ஆலயத்திறகும், எருசலேமுக்கும் உள்ள நிரந்தர பிணைப்பையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். மேலும் இந்த வாக்குறுதிகள் இன்னும் நிர் மூலமாக்கப்படவில்லை, மாறாக இவற்றில்தான் எதிர்கால நம்பிக்கையே இருக்கிறது.

5. நூலின் தன்மை

முதன் முதலில், ஆசிரியர் வரலாற்று ஆசிரியர் அல்ல என்பதும், அவர் ஒரு இறையியல் வல்லுநர் என்பதையும் நாம் தெளிவாக உணரவேண்டும். பல இறையியல் கருத்துக்களை வாசகர்களின் மனதில் புகுத்த வரலாற்றை பயன்படுத்துகிறார். சுமார் 40 ஆண்டுகள் ஆண்ட இரண்டாம் எரொபயாம் மற்றும், ஒமிரி இவர்களுக்கு ஆசிரியர் 15 வசனங்கள்தான் ஒதுக்கியுள்ளதிலிருந்து இவர் வரலாற்று நிகழ்ச்சிகளை வரலாற்றுக்காக எழுதவில்லை என்பது தெள்ளத்தெளிவாகிறது. மேலும் ஆலயம், உடன்படிக்கையை கடைப்பிடித்தல், சமயம் சீர்திருத்தம், அரசர்களுக்கும் இறைவாக்கினர்களுக்குமுள்ள உறவு இவைகளைப்பற்றி இந்நூலின் ஆசிரியர் அடிக்கடி பேசுவதிலிருந்து அவர் சமயத்தை போதிப்பதையே தன் முதன்மையான நோக்கமாகக் கொண்டார் என்பதும் தெளிவாகிறது. மேலும் ஆசிரியர் பயன்படுத்திய மூலங்களையும் அவற்றை அவர் பயன்படுத்திய முறையையும், அவற்றை அவர் தொடர்புப்படுத்தும் விதமும், அவரின் முதன்மை நோக்கம் வரலாற்றைக் கூற அல்ல, மாறாக இறையியல் கருத்துக்களை வலியுறுத்தவே என்பதையும் எண்பிக்கின்றன.

6. ஆசிரியரது முறை

இந்நூலின் ஆசிரியர், இதை எழுதுவதில் பயன்படுத்தும் முறை நவீன இறையியல் வல்லுநர்களுக்கு முதிர்ச்சி அடையாத ஒன்றாக தோன்றலாம். அவரது முறையை இக்கால அறிவியல் முறையோடு ஒப்பிடும்போதுதான் இவ்வாறு தோன்றுகிறது. ஆனால் ஆசிரியரின் காலத்தில் அவர் இம்முறையை முதன் முதலாக பயன்படுத்தும் புது முயற்சியாளர் அல்லர். மாறாக, இவருக்கும், யாவே, எலோகீம், உபாகம பாரம்பரிய இறையியல் வல்லுனர்களோடு இவருக்கு நெருங்கிய ஒற்றுமை இருப்பதோடல்லாமல், அவர்களின் அடிச்சுவட்டையும் பின்பற்றுவதைக் காணலாம். முதலில் அவர் பயன்படுத்தும் முறையைச் சுட்டிக்காட்டி, அதை எவ்வாறு தன் இறையியல் கருத்துகளைத் தொகுக்க பயன்படுத்துகிறார் என்று காண்பது நலம் பயக்கும்.

முன்பே குறிப்பிட்டபடி, இந்நூலின் ஆசிரியர், வரலாற்றை வரலாற்றுக்காகவே எழுதாமல் தனது இறையியல் நோக்கத்தை நிறைவேற்றவே பயன்படுத்தினார். எனவே இஸ்ராயேலின் வரலாற்றைக் கூறும் மூலங்களிலிருந்து, தன் இறையியல் போதகத்திற்கு ஆதரவு காட்டும் நிகழ்ச்சிகளை மட்டும் பிரித்தெடுத்துப் பயன்படுத்துகிறார். இப்படிப்பட்ட பிரித்தெடுக்கும் முறைதான் அவருடைய படைக்கும் பணிக்கே கருவாகும். சமயத்தைச் சேராத வாசகர்களுக்கு, இஸ்ராயேலின் வரலாற்று நிகழ்ச்சிகளில் இறைவனின் திருக்கரம் செயலாற்றுவது தெளிவாக இல்லாததால், யாவருக்கும் புரியும் வண்ணம்

தேர்தல், வரிசைப்படுத்துதல், தெளிவு படுத்துதல் ஆகிய முறைகளை பயன் படுத்தி ஆசிரியர் விளக்க நினைக்கிறார். இதை அவருடைய விளக்கக் குறிப்பு களிலும் (1 அர 11; 2 அர 17) வெளிப்படை யான இறையியல் தீர்ப்புகளிலும் (யூதா, இஸ்ராயேல் அரசர்களின்மேல் சொல் லப்படும் தீர்ப்பு) விளக்கவுரையுடன் கூடிய அறிவுரைகளிலும் (1 அர 8:23–53; 9:3–9; 11:11–13, 31–39; 14:7–16; 2 அர 20:16–19; 21:11–15; 22:15–19; 23:26–27) அறியலாம்.

ஆசிரியரது முறைகளை தெரிந்து கொண்டபின் அரசராகமங்களைபின் வரு மாறு ஆய்வு செய்யலாம். முதலில் ஆசிரி யர் பயன்படுத்தும் மூலத்தைமுடிந்த வரை தனியாகப் பிரித்தெடுத்து அவ்வொவ் வொன்றுக்கும் உரிய தனிப் பண்புகளைத் தொகுக்கவேண்டும். அடுத்து ஆசிரி யருக்கே உரிய விளக்கவுரைகள், இறை யியல் தீர்ப்புகள், விளக்கக் குறிப்புகள் இவற்றை முடிந்த மட்டும் பிரித்தெடுக்க வேண்டும். இலக்கிய நடையைக் கொண்டு நாம் இதை முடிவு செய்யமுடியும். ஆசிரி யருக்கே சொந்தமான பகுதிகள் இணைக் கும் பகுதிகளாக இருக்கலாம். அறவுரைப் பகுதிகள் ஆசிரியர் பயன்படுத்தும் இலக் கிய யுக்திகளாக இருக்கலாம் அல்லது தனது தேவைக்கேற்ப இந்நிகழ்ச்சிகளை பெரிதாக்கிப் பயன்படுத்தி இருக்கலாம். பின்னதை, இறைவனோ அல்லது இறை வாக்கினரோ அல்லது அரசர்களோ கூறும் அறவுரைப் பகுதிகளில் காணலாம் (1 அர 8).

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் செயல் முறை இந்நூலின்பெரும்பாலான பகுதி களுக்கு, விளக்கமளிக்க பயன்படுகிறது. எளிதாக விளக்கமுடியாத பகுதிகள் இருந் தால், ஆசிரியர் இந்நிகழ்ச்சிகளை எடுத் தாண்டபோது சரியாக பதிப்பிக்காததே காரணம்.

7. மூலங்கள்

அரசராகமங்களின் ஆசிரியர் சுமார் பத்துக்கு மேற்பட்ட மூலங்களை பயன் படுத்தியுள்ளார். அவைகளில் மூன்று மட்டுமே பெயருடன் குறிப்பிடப்படு கின்றன. (1) சாலமோனின் பணி நூல் (1 அர 11:41); (2) இஸ்ராயேல் அரசர்களின் பணி நூல் (1 அர 14:19); (3) யூதாவின் அரசர்களின் பணி நூல் (1 அர 15:17). பெயரிட்டு அழைக்கப்படாத மூலங்கள்: (1) தாவீது அரசப்பரம்பரையின் வரலாற்று முடிவு (1 அர 1–2); (2) ஆலயம் பற்றிய குரு குலமூலம் (1 அர 6–7); (3) எலியாவின் வட்டம் (1 அர 17–19); (4) எலிசாவின் வட்டம் (2 அர 2:1–8:15); (5) அத்தாலியா வின் வட்டம் (2 அர 11); (6) ஏசயாவைப் பற்றி அவருடைய சீடரிடமிருந்து தோன் றிய வட்டம் (2 அர 18:17–20:19); (7) இஸ்ரா யேல் அரசர்களோடு பல்வேறு இறை வாக்கினர்கள் கொண்ட உறவு, முன்னறி விப்பு நிறைவேறுதல் போன்ற கதைகள் அடங்கிய பல்வேறு தொகுப்பு; இதில் செமாயாவும், இரகபெயாமும் (1 அர 12:21–24); முதலாம் எரொபயாம், யோசியா இவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த பெயர் குறிப்பிடப்படாத இரண்டு இறை வாக்கினர்கள் (1 அர 13; 2 அர 23:16–20); அகியாவும் முதலாம் எரொபயாமும் (1 அர 14), ஆகாபும் இரண்டு பெயரிடப் படாத இறைவாக்கினர்களும் (1 அர 20); ஏகூவும் பாசாவும் (1 அர 16:1–12); மிக்கா யாவும், ஆகாபும் (1 அர 22); யோசியாவும், குலிதா என்ற பெண்இறைவாக்கினரும் (2 அர 22:1–20).

பெயரிட்டு ஆசிரியர் குறிப்பிடும் மூன்று மூலங்களும், பொதுமக்கள் எளி தாக பார்க்கமுடியாத அதிகாரப்பூர்வ மான ஆயப் பதிவேடுகளாய் இருக்கலாம் அல்லது பொது மக்களுக்குக் கிடைக்கும் விதத்தில் முன்பிருந்த ஆசிரியர்களால் இந்த ஆயப்பதிவேடுகளிலிருந்தும், இறை வாக்கினர்களின் மூலங்களிலிருந்தும் கொடுக்கப்பட்ட தனிதொகுப்புகளாக இருக்கலாம். எலியாவின், எலிசாவின் வட்டங்கள் கலக்கப்பட்டுவிட்ட நிலையும், இறைவாக்கினரின் முன்மொழிதல் நிறை வேறியதைப்பற்றிய பல அறிக்கைகளும் இந்நூலின் ஆசிரியருக்கு முன்பே தொகுக் கப்பட்டுவிட்டன என்பதை எண்பிக் கின்றன.

8. வாசகம்

எபிரேய மசொரோட்டிக் வாசகம், இறைவாக்கினர் நூல்களைவிட இந் நூலின் உண்மை மூலத்தை பாதுகாத்து

வைத்திருக்கிறது. கிரேக்க எழுபதுநூல் வாசகம், மசோரோட்டிக் வாசகத்திலுள்ள கடினமான பகுதிகளை விளக்க பயன் படுத்துவதைவிட, அதில் கலந்துள்ள பல தவறான செய்திகளை நீக்க உதவுகிறது. வாசகத்தில் சிலபகுதிகளை மாற்றியமைத் திருப்பதும், பல பெரிய பகுதிகளை இணைத்திருப்பதும்தான் கிரேக்க எழுபது நூல் வாசகத்தின் தனித்தன்மையாகும். இரண்டு வாசகங்களுக்கிடையே சில வேறுபாடுகளும் உள்ளன. 1 அர 4:20 –28; 7: 16.28 ஆகிய பகுதிகளில் யோசபாத்தின் ஆட்சி, ஆகாபுக்கு முன்கிரேக்க வாசகத் தில் குறிப்பிடப்படுகிறது. ஆனால் மசோ ரோட்டிக் வாசகத்தில் இது மாறியிருக் கிறது. 1 அரச 4:20–28–இல் கிரேக்க வாச கம் வசனங்களை நல்ல வரிசைப்படுத்தி யுள்ளது. 1 அர 7–இல் ஆலயத்தில் இருக்க வேண்டிய பொருட்களை விவரிக்கின்றது. 1 அர 16:28–இல் கிரேக்க வாசகத்தின்படி யோசாபாத் ஓமிரியின் 11–ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தார். கிரேக்க வாசகத்தில் 1 அர 2:35; 1 அர 2:46; 1 அர 12:24 ஆகிய பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

9. நூலின் ஒற்றுமையும் அமைப்பும்

அரசர்களைப் பற்றிக் கூறும்போது ஆசிரியர் இறையியல் கருத்துக்களையும் எடுத்துரைக்கிறார். ஒவ்வொரு அரச னின் வரலாற்றையும் ஒரே பணிச்சட்டத் தில் கூறுவதால் நூல் முழுவதும் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. இதில் ஒரு தொடக்கவுரை வாய்ப்பாட்டையும், முடி வுரை வாய்ப்பாட்டையும் காணமுடிகிறது. யூதாவின் அரசர்களைப் பற்றிய தொடக்க வுரை வாய்பாடு ஐந்து கூறுகளை கொண்டது: (1) பேசப்படும் அரசு: மற்ற அரசுகளோடு கொண்டுள்ள காலத் தன்மை; (2) அரசனின் வயது; (3) ஆட்சிக் காலம்; (4) அரசின் மேல் தீர்ப்பு; (5) அரசனின் தாய்ப் பெயர். உதாரணமாக: "சாலமோனின் மகன் இரகபெயாம் யூதா வில் ஆட்சிசெய்தான். இரகபெயாம் அரசனானபோது அவனுக்கு வயது நாற் பத்தொன்று:.... எருசலேமில் பதினேழு ஆண்டு ஆண்டான்., அம்மோனியாளாகிய அவன் தாயின் பெயர் நாகமா... ஆண்டவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தான்" (1 அர 14:21–22). இஸ்ராயேலில் ஆண்ட அரசர்களைப் பற்றிய தொடக்க வுரையில்: (1) அவன் ஆட்சிக்கு வந்தபோது யூதாவில் ஆண்ட அரசனின் பெயர்; (2) மகன் ஆட்சிக்கு வந்ததால் தந்தையின் பெயர்: (3) ஆண்ட தலைநகரம்;(4) தீர்ப்பு. தாவீது அரசர் வம்சத்தைச் சார்ந்த அரசர்களுக்கு மட்டுமே தாயின் பெயர் தரப்படுகிறது. மேலும் யூதாவின் அரசர் களுக்கு அளிக்கப்படும் தீர்ப்பு மூன்று வகைப்படும்: முழுவதும் கண்டனம் செய் யும் தீர்ப்பு, வரையோடு கூடிய பாராட்டு வழங்கும் தீர்ப்பு, வரையறையற்ற பாராட்டை வழங்கும் தீர்ப்பு.

யூதா அரசர்களின் முடிவுரை வாய்ப் பாடு நான்கு கூறுகளை கொண்டிருக்கும் (1) ஆசிரியரின் மூலம் பற்றிக் குறிப்பு, (2) அரசனின் மரணம், (3) அடக்கம், (4) அதற்குபின் வந்த அரசனின் பெயர்: உதாரணமாக "இரகபெயாமின் மற்ற செயல்களும் அவன் செய்தவையாவும் யூதா அரசர்களின் பணி நூலில் எழுதப் பட்டுள்ளன. இரகபெயாம் தன் முன்னோ ரோடு துயில் கொண்டு தாவீதின் நகரில் தன் முன்னோரோடு அடக்கம் செய் யப்பட்டான்....... அவனுடைய மகன் அபி யாம் அவனுக்குப்பின் அரசுக்கட்டில் ஏறி னான்" (1 அர 14:29–31). இஸ்ராயேல் அரசர்களின் முடிவுரை வாய்ப்பாடு: (1) ஆசிரியரின் மூலம் பற்றிய குறிப்பு, (2) இறப்பு, அவனுக்கு பின் ஆட்சிக்கு வந்தவன் பெயர்.

10. இறையியல்

ஆசிரியரின் இறையியலை புரிந்து கொள்ள வேண்டுமெனில் முதலில் உபா கம பாரம்பரிய வரலாற்றில் ஒவ்வொரு அரசனும் கொண்டிருந்த இடத்தையும், தன்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்க எப்படி அதை பயன்படத்திக் கொண்டார் என்பதையும் முதலில் புரிந்துக் கொள்ள வேண்டும்.

அ) அரசர்களின் பிரமாணிக்க மின்மை:– இஸ்ராயேலின் வீழ்ச்சிக்குக் காரணம் இறைவன் உடன்படிக்கையைக் கடை பிடிக்கத்தவறியது அன்று, மாறாக உடன்படிக்கைக்கு எதிராக அரசர்கள் காட்டிய பற்றுறுதியின்மைதான். யூதா,

இஸ்ராயேல் அரசர்களின் மேல் கூறும் தீர்ப்பினால் ஆசிரியர் இதை மக்கள் மனதில்பதியும்படி போதிக்கிறார். எல்லா அரசர்களும், தாவீது மரபைச்சார்ந்த சில அரசர்களைத்தவிர, உடன்படிக்கைக்கும், ஆலயத்திற்கும் பிரமாணிக்கம் இல்லாமல் நடந்ததாகத் தீர்ப்பிடப்படுகின்றனர்.

ஆ) முன்னறிவித்தல் நிறைவேறுதல்:- இறைவார்த்தைதான் மோசே வழியாக இஸ்ராயேலை ஒர தனி இனமாக்கி அவர்களின் வரலாற்றைத் தோற்றுவித்தது. அதே இறைவார்த்தைதான் அவர்கள் வாழ்வில் பங்குகொண்டு தவறாது நிறைவேற்றி கடந்தகாலத்தில் தொடந்து வரலாற்றை அமைத்தது. முதல் அரசராகமத்தில் 25-ம், இரண்டாம் அரசராகமத்தில் 20-ம் ஆக 45 முன்னறிவித்தல்- நிறைவேறுதல் நிகழ்ச்சியுரைகள் குறிப்பிடப்படுகின்றன. இவைகளெல்லாம், இறைவார்த்தை ஒரு முறை கூறப்பட்டுவிட்டால் அது தவறாது நிறைவேறியேத்தீரும் என்பதை வலியுறுத்துகின்றன.

அ) நாத்தானில் இறைவாக்கு:- 2 சாமு 7- இல் கூறப்பட்ட, தாவீதின் அரசு என்றும் நிலைபெறும் என்னும் நாத்தானின் இறைவாக்கு அதன் தன்மையால் எத்தனை இடர்பாடுகள் வந்தாலும் நிறைவேறியேத்தீரும். ஆசிரியர் இந்நூலை எழுதியபோது, நாடு அழிந்து, மக்கள் நாடு கடத்தப்பட்டு மன்னன் பதவியிழந்து இருந்ததால், மற்ற இறைவாக்குகளைப் போல இதுவும் நிறைவேறியுள்ளது என சுட்டிக்காட்ட இயலவில்லை. அவருக்கும் மற்ற இஸ்ராயேல் மக்களுக்கும் இவ்விறைவாக்கு நிறைவேறும் என்பது ஒரு விசுவாச உண்மையாகவே இருக்கவேண்டியதாயிற்று. ஆனால் இந்த விசுவாசத்திற்கு உறுதியான அடிப்படை உண்டு என்பதை ஆசிரியர் பலவகைகளில் வலியுறுத்துகிறார். இதில் 45 முறை குறிப்பிடப்படும் முன்னறிவித்தல்-நிறைவேறுதல் பகுதிகள், அவ்விதமே நாத்தானின் இறைவாக்கும் நிறைவேறும் என வலியுறுத்துகின்றன. நாத்தானின் இறைவாக்கைவிட அவ்வளவு முக்கியமில்லாத இறைவாக்குகள் நிறைவேறுமாயின், நிச்சயம், தாவீதின் அரசு நிலைபெறும் என்னும் நாத்தானின் வாக்கு நிறைவேறாமல் போகாது. இவ்விறைவாக்கை மக்கள் மறந்துவிடக் கூடாது. என்பதற்காக 40 இடங்களில் தாவீதைச் சுட்டிக்காண்பிப்பதோடு, 7 முறை நேரடியாகவும், 7 முறை மறைமுகமாவும், நாத்தானின் இறைவாக்கையும் சுட்டிக்காட்டுகிறார் (1 அர 2:4.45; 3:6-7.14; 5:5; 6:12; 11:32.34.36.39; 15:4.5; 2 அர 8:19). தாவீதின் மரபைச் சார்ந்த 21 பேரில் 19 பேருக்கு அவர்களின் தாயின் பெயரைக் கொடுத்தும், 12 பேரை "தாவீதின் நகரத்தில்" அடக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறியும், "தாவீதுக்காக தாவீது அரச மரபுக்கு காட்டப்பட்ட சிறப்பான பாதுகாப்பை ஆசிரியர் உயர்த்திக்காட்டுகிறார் (1 அர 11:12.32. 34.36.39; 15:4; 2 அர 8:19; 11:1 தொ: 19:34). ஆனால் வட அரசர்களைப் பற்றி கூறும்போது அவர்களின் தாயின் பெரையோ, அடக்கம் செய்யப்பட்ட இடத்தையோ குறிப்பிடவில்லை.

"நெபாத்தின் மகனான எரொபயாமின்" அடிச்சுவட்டை பின்பற்றியதற்காக கண்டனம் செய்யப்படும் வட அரசர்கள் மேல், அவனுடைய பாவம் "ஜென்மப் பாவம்"போல அழுத்துகிறது (1 அர 14:7-16). மாறாக தென்னாட்டு அரசர்கள் தாவீதோடு ஒப்பிடப்படும்போது அது அவர்களுக்கு சாதகமாக இல்லாவிட்டாலும், அவர்களிலும், ஆசா, யோசபாத்து, எசக்கியா, யோசியா போன்றவர் விதிவிலக்குபெறுகின்றனர். முதலாம் எரொபயாமின் பாவத்தால் வட அரசனின் மன்னர்கள் அழிந்தனர். ஆனால் "தாவீதின் மூல நேர்மையின்" பொருட்டு தாவீதின் மரபினர் குழுவாக இறைவனின் பாதுகாப்பையும் ஆதரவையும் பெற்றனர். கி.மு.562-இல் நெபுக்கது னேசாருக்குப் பின் பதவியேற்ற எவில் மெரோதாக், தாவீது மரபிலே நாடு கடத்தபட்டிருந்த யோயாக்கினை சிறையிலிருந்து விடுவித்து அவருடன் கனிவுடன் உரையாடி, அவருக்கு பாபிலோனிலிருந்த மற்ற அரசர்களுக்குமேல் அதிகாரம் வழங்கினார் என்று ஆசிரியர் நூலை முடித்து அவர்களுக்கு உற்சாக மூட்டுகிறார்.

ஈ) எருசலேமும் ஆலயமும்:– எருசலேமையும் ஆலயத்தையும், பரிகாரம் செய்தலையும்பற்றி ஆசிரியர் கூறுகின்ற கருத்துக்களும் குறிப்பிடத்தக்கவை. இங்கு இந்நூலின் ஆசிரியர், நாத்தானின் இறைவாக்கோடு எருசலேமையும், ஆலயத்தையும் தொடர்ப்படுத்தியும், எருசலேம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரம் என்றும் அங்குள்ள ஆலயம் இறைவன் "என்றென்றும்" வாழத் தேர்ந்து கொண்ட இடமென்றும் அடிக்கடி குறிப்பிட்டும், எருசலேமும் ஆலயமும், தாவீதின் அரசும் நிலை பெறும் என்ற நாத்தானின் இறைவாக்கிலே பங்குபெறுகின்றன என்று மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டுகிறார் (1 அர 6:11–13; 8:12–13; 9:3–9; 11:13.32.36; 14:21; 15:5; 2 அர 19:34; 20:6; 21:7–8). மேலும் ஆலயக் கட்டிடத்தைப் பற்றித் தெளிவாக விளக்கியும் (1 அர 6–7), ஆலயத்தில் கவனம் செலுத்திய அரசர்களைப்பாராட்டியும் (1 அர 3–10; 15:9–15; 2 அர 12:1–2; 18:1–3; 22:1–2; 23:25), ஆலயச் சீர்திருத்தப் பணிகளைச் செய்த ஆசா (1 அர 15), யோவ காசு (1 அர 12), எசக்கியா (2 அர 18), யோசியா (2 அர 22) போன்ற அரசர்களைப் பற்றி விளக்கிக் கூறியும் தன்கருத்தை ஆதரவோடு எண்பிக்கிறார். "பரிகாரம்" செய்தலைப்பற்றி குறிப்பிடும்போது ஆசிரியர், இறைவன் தீய அரசர்களைத் தண்டித்தார் என்பதை கவனமாக எடுத்துரைக்கிறார். ஆனால், அவர்கள் எப்போதோ செய்த நன்மைக்காகவோ அல்லது அவர்களின் மனத்துயரத்தின் பொருட்டோ (1 அர 11:12; 21:29; 2 அர 20:17–19; 22:18–20) தண்டனையைத் தள்ளியும் வைத்திருக்கிறார் என்பதையும் மறக்கவில்லை.

11. நூலின் திட்ட அமைப்பு

1. சாலமோனின் வரலாறு (1 அர 1:1–11:4=2 நாள் 1–9)

அ) தாவீதின் அரியணையில் சாலமோன் அமர்தல் (1:1–2: 46)

1. தாவீதின் அரியணைக்கு அதோனியாவும் சாலமோனும் போட்டியிடுகின்றனர் (1:1–53).
2. தாவீது இறத்தலும், எதிர்ப்புகள் நீக்கப்படுதலும் (2:1–46)

ஆ) சாலமோனின் மேன்மைமிக்க ஆட்சி (3:1–11:41)

1. ஞானியாகிய சாலமோன் (3:1–4:34)
2. கட்டடப்பிரியர் சாலமோன் (5:1–9:14)
3. அனைத்துலக வணிகர் சாலமோன் (9:15–10:29).
4. பாவியான சாலமோன் (11:1–41).

2. பிளவுபட்ட அரசு (1 அர 12:1–2 அர 16:34).

அ. சாலமோன் அரசு பிளவு (12:1–13:34)

1. அரசுபிளவுபடுதல் (12:1–20 = 2 நாள் 10)
2. இறைவாக்கு நிறைவேறுதல் (1 அர 12:21–24)
3. எரொபயாமின் பாவம் பற்றிய உபாகம விளக்கம் (12:25–32)
4. இறைவாக்கு நிறைவேறுதல் (12:33–13:34)

ஆ. எலியா காலம் வரையுள்ள அரசர்களின் ஒத்தமைவு வரலாறு (14:1–16:34)

1. முதலாம் எரொபயாம் (922–901) (14:1–20)
2. இரகபெயாம்(922–915) (14:21–31)
3. அபியாம் (915–913) (15:1–8)
4. ஆசா (913–873) (15:9–24)
5. நாதாபு (901–900) (15:25–31)
6. பாசா (900–877) (15:33–16:7)
7. ஏலா (877–876) (16:8–14)
8. சிம்ரி (876) (16:15–20)
9. ஓம்ரி (876–869) (16:21–28)
10. ஆகாபு (869–850) (16:29–34; 22:39–40)

இ. எலியா வட்டம் (1 அர 17:1–2 அர 1:18)

1. எலியாவும், ஆகாபும், மூன்றாண்டு பஞ்சமும் (17:1–18:46)
2. எலியா ஒரேபுக்கு ஓடிப்போதல் (19:1–21)
3. ஆகாபும், பென்–அதாத்தும், இறைவாக்கினர்களும் (20:1–43)

4. நாபோத்தை ஈசேபேல் கொல்லுதல் (21:1–29)
5. ஆகாபும் மிக்கேயாவும் (22:1–40)
6. யோசபாத்து (873–849) (22:41–50)
7. அகசியா (859–849) (1 அர 22:51–2 அர 1:18)

ஈ. எலிசாவின் வட்டம் (2 அர 2:1–8:29)

1. எலிசா எலியாவுக்குப்பின் இறைவாக்கினராதல் (2:1–25)
2. யோராம் (849–842), மோவாவியருடன் போர் (3:1–27)
3. எலிசாவின் அருஞ்செயல்கள் (4:1–8:15)
4. எகோராம், யோராம் (849–842) (8:16–24)
5. அகசியா (842) (8:25–29)

உ. ஏகூவிலிருந்து சமாரியாவின் வீழ்ச்சிவரை (9:1–17:41)

1. ஏகூ (842–815) (9:1–10:36)
2. யூதாவின் அத்தாலியா (842–837) (11:1–20)
3. யூதாவின் யோவாசு (837–800) (12:1–21)
4. இஸ்ராயேலின் யோவகாசு (815–801) (13:1–9)
5. இஸ்ராயேலின் யோவசு (801–786) எலிசேயுவின் மரணம் (13:10–25)
6. யூதாவின் அமசியா (800–785) (14:1–22)
7. இரண்டாம் எரொபயாம் (738–746) (14:23–29)
8. அசரியா (783–742) (15:1–7)
9. செக்கரியவும் சல்லூமும் (746–745) 15:8–15)
10. மெனகேம் (745–738) (15:16–22)
11. பெக்காகியாவும் பெக்காவும் (738–732) (15:23–31)
12. யூதாவின் யோத்தாம் (750–735) (15:32–38)
13. யூதாவின் ஆகாசு (735–715) (16:1–20)
14. ஒசேயா (732–724) (சமாரியாவின் வீழ்ச்சி (722) (17:1–41)

3. யூதாவின் இறுதி அரசர்கள் (2 அர 18:1–25:30)

அ. எசக்கியா (715–687) (18:1–20:21)
ஆ. மனாசே (687–642), ஆமோன் (642–640) (21:1–26)
இ. யோசியா (640–609), (22:1–23:30)
ஈ. யோவகாசு (609), யோயாக்கிம் (609–598) (23:31–24:7)
உ. யோயாக்கின் (598–597), செதேக்கியா (597–587) நெபுக்கதுனேசரின் படையெடுப்பு, எருசலேமின் அழிவு (24:8–25:30)

12. வரலாற்று மதிப்பீடு

முன்பே கூறியதுபோல் இந்நூல் ஆசிரியர், வரலாற்றை வரலாற்றுக்காக எழுதவில்லை. அவர் எழுதுவது சமய அடிப்படை கொண்ட வரலாறு ஆகும். அது ஒரு விளக்கம் பெற்ற வரலாறு ஆகும். இந்நூல் பல வரலாற்று உண்மைகளைக் கொண்டிருக்கிறது. இவற்றை புற இன வரலாற்றோடு ஒப்பிடும்போது சிறப்பாக அசீரிய, பாபிலோனிய வரலாற்றோடு ஒப்பிடும்போதும், இந்நூல் வரலாற்று மதிப்பீடு மேம்படுகிறது. புதைபொருள் ஆராய்ச்சிகளும் இந்நூலின் வரலாற்றுத் தன்மைக்கு ஆதரவு அளிக்கின்றன.

ஆசிரியர் பயன்படுத்தும் மூலங்களில் பெரும்பாலானவை அவைகூறும் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தை ஒத்தவை, அல்லது நெருங்கியவை என்று ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். இந்நூலின் முதல் இரண்டு அதிகாரங்களைப் பற்றி, இதை எழுதியவர் தான் எழுதுவதை நன்கு அறிந்தவராகவும் நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கருதப்படும் காலத்திற்கு மிகவும் நெருங்கியவராகவும் இருக்கவேண்டும் என விவிலிய அறிஞர் கருதுவர். சாலமோனைப் பற்றிக்கொடுக்கப்படும் வரலாற்றுக் குறிப்புகள், அவரது ஆட்சிக் காலத்தை துல்லியமாகக் கணிக்க உதவுகின்றன (11:14–25; 9:15–19; 9:26–28; 10:11–28; 9:16–24; 11:7). இப்படியே வரலாற்றைச் கட்டிக்கொண்டே போகலாம்.

இஸ்ராயேலைச் சுற்றியிருந்த, அவர்களோடு தொடர்புகொண்ட புறஇனத்தவருடைய வரலாற்று சான்றுகளுடன் இந்

நூலை ஒப்பிடும்போது அதன் வரலாற்று மதிப்பீடு நன்கு தெரிகிறது. மெஸ்ஸாவின் கல்வெட்டுகள் இந்நூலில் காணப்படும் விவரங்களுக்கு ஆதரவு அளிக்கின்றன. இரகபெயாமின் 5–ஆம் ஆண்டில் (1 அர 14:25–28) பாரவோன் முதலாம் செசாக் பாலஸ்தீனத்திற்கு எதிராகப்படையெடுத்ததற்கு கர்னாக் என்னுமிடத்திலுள்ள அம்மோன் சுவர்களில் காணப்படும் வாசகங்கள் சான்று காட்டுகின்றன. தாமஸ்கு அரசரோடு இஸ்ராயேல் கொண்ட தொடர்பு பற்றிய அராமிய வாசகங்கள் அதிகமில்லை. பாபிலோனிய சான்றுகள் பல உள்ளன. அசீரிய, பாபிலோனிய வாசகச் சான்றுகள் இந்நூலில் காணப்படுவதற்கு ஆதரவு கொடுப்பதோடு அவற்றை நிறைவுபடுத்தவும், சிறப்பாக இஸ்ராயேல் யூதா அரசர்கள் காலவரையைச் சரியாக் கணிக்கவும் உதவுகின்றன.

அரசர்களின் காலவரைப் பணிச்சட்டம் துல்லியமாக இருப்பதாகத் தோன்றுகிறது. இஸ்ராயேல் யூதா அரசர்களின் தனிக்காலவரையைக் கொடுப்பதுடன் மற்ற அரசனின் ஒத்துமை காலவரையையும் கொடுக்கிறது. ஆனால் தனிக்காலவரை ஒத்தமை காலவரையோடு ஒத்துப்போகவில்லை. இந்த வேறுபாடுகளுக்குப் பலவிளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் ஒன்றும் நிறைவு அளிப்பதாயில்லை. வட, தென் அரசுகள் வெவ்வேறு காலக்கணிப்பை பயன்படுத்தியிருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது.

இக்காலவரைப் பிரச்சினையைத் தீர்க்க வரலாற்று ஆசிரியர்கள், அசீரிய, பாபிலோனிய வாசகங்களைப் பயன்படுத்தி சிலமுக்கிய நிகழ்ச்சிகளின் காலத்தைக் கணித்துள்ளனர். இக்கணிப்பில் ஒரு வருடம் முன்னே பின்னே இருக்கலாம்.

கி.மு.853–ல் ஒரோன்டேசின் கர்காரில் மூன்றாம் சல்மனாசர் பல சீரியா, பாலஸ்தீன் அரசர்களை வென்றார். இஸ்ராயேலின் மன்னன் ஆகாபு இவர்களில் ஒருவர்.

841–மூன்றாம் சல்மனேசர் ஏகூவிடமிருந்து கப்பம் பெறுகிறார். இது ஏகூவின் தொடக்கத்தில் நடந்திருக்கவேண்டும். 738–மூன்றாம் திகிலாத்து–பிலேசருக்கு மனகேம் கப்பம் கட்டியிருக்கலாம் (2 அர 15:20)

721–ஐந்தாம் சல்மனாசர் சமாரியா மேல் படையெடுக்கிறார். நகர் பிடிபடுமுன் அசீரியாவில் ஆட்சி மாறுகிறது. இரண்டாம் சர்கோன் அரசுக் கட்டில் ஏறுகிறார். சமாரியா வீழ்கிறது. 27,290 யூதர்கள் நாடு கடத்தப்படுகின்றனர். அவர்களுக்குப் பதிலாக அசீரியரால் வெல்லப்பட்ட மற்ற நாடுகளிலிருந்து மக்கள் இங்கு குடியேற்றப்படுகின்றனர் (2 அர 17:5–6; 18:9.11).

701–பெனிசியா பெலிஸ்தியா, யூதாவின் மேல் சனகெரிப்பு படையெடுக்கிறார் (18:13 தொ).

601–அசீரிய அரசன் பாபிலோனியரிடம் சரண்அடைகிறார். அவருக்கு உதவி செய்ய இரண்டாம் நெக்கோ என்ற பாரவோன் வடக்கு நோக்கிப் படையெடுக்கிறார். அவனைத் தடுத்து நிறுத்திய யோசியாவை மெகிதோவில் தோற்கடித்தார் (23:29).

605–நெபுக்கதுனேசார் இரண்டாம் நெக்கோவைத் தோற்கடித்தார். பாபிலோனுக்கு அரசனாகிறார். இது யோயாக்கிம் ஆட்சியின் நான்காம் ஆண்டாகும் (எரே 25:1).

மார்ச் 597–நெபுக்கதுனேசாரிடம் எருசலேம் முதல்முறையாக சரண் அடைந்தது. பலர் பாபிலோனுக்கு கைதிகளாக் கொண்டு செல்லப்பட்டனர்.

மற்ற மூலங்களையும் கொண்டு 587–6 இல் எருசலேம் அழிக்கப்பட்டது எனக் கூறுலாம், யூத மக்கள் இரண்டாம் முறை நாடுகடத்தப்பட்டனர்.

இவ்வாறு அசீரிய–பாபிலோன் வாசகங்கள் புதிய விவரங்களை அளிப்பதோடு, விவிலிய நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளிக்கக்கூடிய அப்பகுதியின் பொது வரலாற்றையும் அளிக்கின்றன. இப்படியாக, இஸ்ராயேல் யூதர் அரசர்களின் காலக்கணிப்பை ஓர் அளவுக்கு நிறைவு செய்கின்றது. சான்றாக ஓமிரி (885–874)

சமாரியாவைத் தலைநகராக்குகிறார் என்பதைத்தவிர மற்றது எதையும் அவரைப் பற்றிய அரசராகமங்கள் கூறவில்லை அசீரிய வாசகங்கள் குறிக்கும் விதம் ஓமிரியின் மகன்தான் இஸ்ராயேலின் அரசன் என்றும், அவர்தான் அவ்வரசை நிறுவினார் என்பது போன்ற முக்கியத்துவம் கொடுக்கிறது. இதே விதம் ஆகாபுவுக்கும் (874–853) இரண்டாம் எரொபயாமுக்கும் (783–743) கூறலாம். சமயக் குற்றமும், இவ்வுலகு சார்ந்த சிறப்பான போக்கும் வெற்றியும் இணைந்து போவதாகத் தெரிகிறது.

புதைபொருள் ஆய்வும் தொல்பொருள் ஆய்வும் இந்நூலின் வரலாற்றுத்தன்மையைச் சிறப்பித்துக் கூறுகிறது. சமாரியாவில் காணப்படும் வாசகங்கள் (கி.மு.8–ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை) வட அரசின் மைய அமைப்புக்குச் சான்று பகர்கின்றன. எசக்கியாவின் வாசகம் சுரங்கப் பாதை வழியாக கீகோன் ஊற்றை சிலோவா குளத்தோடு இணைத்ததை எடுத்துக் கூறுகிறது. இலாக்கீசில் காணப்படும் வாசகங்கள் யூதா அரசர்களின் கடைசி மன்னர்களின் வரலாற்றை பிரதிபலிக்கின்றன. சமாரியாவைச் சேர்ந்த மெகிதோ, இலாக்கீசு, டேல்பெயிட் மிர்சீம், டெல் என்நாஸ்பே முதலிய இடங்களில் செய்யப்பட்ட புதைபொருள் ஆய்வு இஸ்ராயேல் அரண்களுக்கும் தனியார் வீடுகளுக்கும் சான்று கொடுக்கிறது. டேல்–எல்–பராவில் காணப்படும் பாதி முடிந்த கட்டடங்கள் ஓமிரி சமாரியாவில் புதிய தலைநகரை ஏற்படுத்த, இந்நகரைக் கைவிட்டதற்கு சான்று காட்டுகின்றன. பல இடங்களில் காணப்படும் அழகு சாதனங்களும் பண்டங்களும் அக்கால மக்களின் வாழ்க்கைத் தரத்தை தொடக்கத்தில் எடுத்துக் காட்டுகின்றன. கி.மு. 6–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யூதாவின் நகரங்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவு பாபிலோனியரின் படையெடுப்பு எந்த அளவு இஸ்ராயேலைப் பாதித்தது என்பதைக் காட்டுகிறது. இப்பேரழிவு ஆன்ம சோதனைக்குரிய வாய்ப்பாகும். இதைத்தான் இந்நூலின் ஆசிரியர் செய்ய முயலுகிறார்.

அரசன்

ஒரு நாட்டைச் சுதந்திரமாக ஆளும் ஆடவனே அரசனாவான். பொதுவாக அவன் சுதந்திர நாட்டின் அரசனாகவும் சில சமயம் ஒரு பேரரசில் குறுநில மன்னராகவும் செயல்பட்டான். பண்டைக் கால மேற்காசிய நாடுகளிலும் பிறவிடங்களிலும் அரச பதவியானது புராணக் கதைகளோடு இணைக்கப்பட்டு தெய்வீகத் தன்மை உடையது என்ற கருத்து பரவலாக இருந்து வந்தது. இவ்வாறு புனிதம் மிகுந்த நிறுவனமாக அரச பதவி பெரும்பாலும் தெய்வத்துக்கரிய காரியங்களில் ஒன்றாய் இருந்திருக்கிறது. எகிப்து நாட்டையாண்ட பாரவோன் அரசன் கோரசின் அவதாரமென ஏற்றுக்கொள்ளப்பட்டார். எனவே அவருடைய செயல்கள் எல்லாம் இயல்பிலேயே புனிதமானவையாகக் கருதப்பட்டன. வழிபாட்டு நிகழ்ச்சிகளெல்லாம் சட்டப்படி அவருக்கு உரிமையானவை. பாபிலோனிய அரசன் மார்துக்கு என்ற தெய்வத்தால் அரசனாகத் தெரிந்து கொள்ளப்பட்டு எண்திசைக்கும் அரசனாக அமர்த்தப்பட்டவர். அவரே குடிமக்களுக்கும் படைக்கும் தலைவனாக இருப்பதோடு நகரத்தின் தலைமைக் குருவாகவும் இருந்தார். இவ்விருவகையிலும் அரச பதவியானது அரசரைக் கடவுளுக்கும், மக்களுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்தும் பாலமாகியது. நேர்மையும், வெற்றியும், அமைதியும் கொண்ட நல்லரசை மக்களுக்குத் தருவது இவரது கடமையாகும். அத்துடன் நிலவிளைச்சல், மனித, விலங்குகளின் பெருக்கம் போன்ற இறைவனின் ஆசீர்கள் அனைத்தும் இவர் மூலமாகவே மக்களுக்குக் கிடைத்தன. ஆகவே அரச பதவி எனும் நிறுவனம், புராணக்கதைகளின் தொகுப்பில் அடங்கிய பலவேறு தெய்வங்களின் நம்பிக்கை, வழிபாடுகளின் ஒரு கூறாகும். பிற்காலத்தில் கிரேக்க, உரோமைப் பேரரசுகள் தங்களுடைய மன்னர்களைத் தெய்வப் பிறவிகளாக மாற்றும் முயற்சியில் இதே கருத்துக்களை கையாண்டன.

விவிலிய வெளிப்பாடு இத்தகைய பின்னனிக்கு முற்றிலும் மாறுபட்டது. இறையரசு பழைய, புதிய ஏற்பாடுகளில்

தலையாய இடத்தை வகிக்கிறது. அரசனைப்பற்றிய சிந்தனை இஸ்ராயேல் மக்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் வளர்ந்து, இறுதியாக இயேசு கிறிஸ்துவின் அரசாட்சியினை வரையறுக்க உதவுகின்றது. அரசுரிமை பற்றிய பொதுவாக நிலவி வந்த கருத்து முற்றிலும் மாறி, அது ஒரே இறைவனின் வெளிப்பாட்டினைச் சார்ந்ததாகின்றது. முதலில், அரச நிறுவனம் தற்காலிக அமைப்பு என்பதால் தொடக்கத்திலிருந்தே அது மனித நிறுவனமாகத்தான் கருதப்பட்டு, அதன் தெய்வத்தன்மை மறுக்கப்பட்டது. அதன் பின்னர், சமயக்கொள்கையின் வளர்ச்சி முற்றுப்பெற்ற நிலையில், கிறிஸ்தவின் அரசு இவ்வுலக அரசியல் அமைப்புகளைச் சாராது என்று விளக்கம் பெற்றது.

I. பழைய ஏற்பாட்டில் காணும் அரசன்

1. பழங்காலத்தில் அரசாட்சி மூன்று விதமாக இருந்தது 1) வெளியிலிருந்து வந்து இராணுவ ஆதிக்கத்தால் நகர அரசுகளை ஆண்ட சிற்றரசுகள். பாலஸ்தீனம் இவர்களால் ஆட்சி செய்யப்பட்டது 2) அரசர்கள் தங்குள் அரச பதவியை மக்களின் நலனுக்காக இறைவனாலேயே அளிக்கப்பட்டது என்று கருதினர். இப்படிப்பட்டவர்கள் எகிப்திய மெசபொத்தாமிய மன்னர்களாவர். 3) இராணுவ வலிமையினால் நாட்டை ஆண்டவர்கள். இவர்கள் நாட்டினைச் சேர்ந்தவர்கள். இவர்கள் யோர்தானுக்கு அப்பாலுள்ள பகுதியில் ஆண்டனர். எபிரேயர்களோடு இன உறவு உடையவர்கள்.

எபிரேயரிடையே உடன்படிக்கையின் அடிப்படையில் ஏறபட்ட இறை மக்களின் சமூக நிர்வாகத்திற்கு அரச பதவி அடிப்படையான ஒன்றன்று. இருப்பினும், இம்முறையானது குல முதியவர்களின் காலத்திலிருந்தே கானான் நாட்டிலும் (ஆதி.20) அடுத்து அண்டை மக்களிடையே யாத்திராகம், நீதிபதிகள் காலத்திலும் வாழ்ந்த மக்களிடத்தும் நிலவியது (ஆதி 35:31–39; எண் 20:14; 21:22.33; 22:4; யோசு 10–11; நீதி 4:2; 8:5). ஆனால் இஸ்ராயேல் மக்கள் தங்களுடைய இறைவனுக்கு அரச மரியாதை செலுத்தும் முறைதனைக் கையாண்ட போதிலும், அம்முறை அவர்களின் அரசியலமைப்பின் இயல்புகளை மாற்றியதில்லை. யாவே உடன்படிக்கையின் அடிப்படையில் இஸ்ராயேல் மக்களை ஆண்டார் (நீதி 8:23; 1 சாமு 8:7; யாத் 19:6). ஆனால் மனித அரசன் எவனும் அவருடைய பிரசன்னத்தின் அவதாரமாக மக்கள் மத்தியில் தோன்றவில்லை.

2. அரச பதவி பற்றிய அனுபவம்:- இஸ்ராயேலின் அரசாட்சியின் தொடக்கமும் நிறுவனமும்

தொடக்க காலத்திலே இஸ்ராயேலர்கள் இனத்தலைவரையோ, குழுத்தலைவரையோ பெற்றிருந்தார்கள். சில நேரங்களில் எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள அருங்கொடைகள் பெற்ற ஒரே தூதுவனின் அடியில் பல இனத்தவர் சேர்ந்து போரிட்டார்கள். இவர்கள் நீதிபதிகள், நடுவர்கள் என்றழைக்கப்பட்டனர் (காண்க: நீதிபதிகள் நூல்). அரசாட்சி ஏற்படும் முன்பு அவர்களுடைய நாடு தழுவிய அரசியல், இராணுவ அமைப்புகள் இல்லை. அவர்கள் விசுவாசம் ஒன்றிலேயே இணைக்கப்பட்டார்கள். யாவேயைத் தங்களுடைய அரசராக ஏற்றுக்கொண்டு அவருடன் உடன்படிக்கை செய்து கொண்டார்கள் (உப 33:5). இதன்படி முதலில் யாவேயைத் தங்களுடைய தலைவராக சமயம் சார்ந்த முறையில் ஏற்றுக்கொண்டனர். இது சில நேரங்களில் அரசியல் குழப்பத்தை உண்டாக்குவதுண்டு (நீதி 21:25). இஸ்ராயேலர் மிதியானியர்கள்மேல் வெற்றி கொண்ட போது கிதயோன் தங்களுக்கு அரசராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். (நீதி 8:22). ஆனால் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவே இஸ்ரயேலில் அரசாட்சியைப்புகுத்தச் செய்த முதல் முயற்சியாகும்.

அபிமெலக்கு செக்கேம் என்னுமிடத்தில் கானானியரின் அரச பதவியைப் போன்றதொரு நிறுவனத்தைத் தோற்றுவிக்க முயன்றார் (நீதி 9:1–7). ஆனால் அந்த முயற்சி பெரிதும் எதிர்ப்புக்குள்ளாகி (9:8–20) அழிவுற்றது (9:22–57).

இது இஸ்ராயேல் அரசாட்சியை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு தயாரிப்பாக

அமைந்தது எனலாம். காலப்போக்கில் இஸ்ரேயலரிடையே அரசியல் ஒற்றுமை மிகவும் தேவையாயிற்று. சாமுவேல் காலத்திலேயே இஸ்ராயேல் மக்கள், பெலிஸ்தியர்களால் ஆட்சி செய்யப்பட்ட பகுதிகளில், பெரும் துன்பப்பட்டனர் (1 சாமு 13:19–21). பெலிஸ்தியரின் கையிலிருந்து தப்பிய இஸ்ராயேலருடைய இடங்களில் அவர்கள் அடிக்கடி கொள்ளையிட்டுப் பாழ்படுத்தினர். அம்மோனியர்களாலும் பெரிதும் துன்பப்பட்டனர் (11:1–2). இந்நிலையில் அரசன் என்பது ஒருமிக முக்கியமான தேவையாக இஸ்ராயேல் மக்களுக்குப்பட்டது. இஸ்ராயேல் மக்களின் முதியவர்கள், "தங்களுக்கு நீதி வழங்கவும் தங்களுக்காக நின்று போரிடவும்" ஓர் அரசனைப் பெற விரும்பினர் (8:19). அத்தகைய அரச பதவி என்னும் நிறுவனம் தெளிவில்லாமல் இருந்ததோடு அது இஸ்ராயேலை "மற்ற நாடுகள்" போன்று ஆக்கிவிடும் அபாய நிலைக்கு உள்ளாக்கியது (8:5–20): இதுவே சாமுவேலை அவர்களுக்கெதிரான கருத்து கொள்ளச் செய்த காரணங்களில் ஒன்றாகும் (8:6; 10:17 தொ: 12:12). இது ஆண்டவருக்கு எதிரானது என்று சில பகுதிகள் கூறுகின்றன (7:13–14; 8:7). இறுதியில் அரசரால் ஆளப்பட்டாலும், இறையாட்சியின் தொடர்ச்சியாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறு சவுல் ஆண்டவரால் தேர்ந்து கொள்ளப்பட்டு, இஸ்ராயேல் அரசராக அபிடேகம் செய்யப்பட்டார். அவர் மக்களின் அரசனாகவும், போர்த்தலைவராகவும் இருந்தார் (1 சாமு 10). இவ்வாறாக இஸ்ராயேல் அரசர் செயலளவில் ஒரு அருங்கொடைபெற்ற நீதிபதியே ஆவார் (11:6). இஸ்ராயேல் இனத் தலைமையிலிருந்து, நாட்டின் அரசத் தலைமைக்கு மாறியதில் சவுல் ஒரு நடுக்கட்டமாவார். சவுலை இஸ்ராயேலின் தலைவராக அபிடேகம் செய்து (9:16 தொ: 10:1). அவரைத் தலைவராக அரியணையில் அமர்த்தியதில் (10:20–24; 11:12–15) முழுவதும் சமயச் சார்பு கொண்ட புதியதொரு அரச பதவி எனும் நிறுவனத்தை சாமுவேல் உருவாக்கினார். ஆனால் முடியாட்சி முழுவதும் யோவேயின் உடன்படிக்கைக்கு உட்பட்டதாகவே எப்போதும் கருதப்பட்டது. சவுல் நீதிபதியைப் போன்றும், இறைவனின் அருட்கொடை பெற்ற தலைவனாகவும் இருந்தார் (10:6 தொ). அவர் தூய ஆவியால் நடத்தப்பட்டு ஒரு புனிதப் போரை நடத்தினார் (1 சாமு 11). இவ்வாறே இறைவனது அருட்கொடையை நிறைவாகப் பெற்றதொரு தலைவராகத் தாவீது முதலில் யூதா நாட்டிற்கும் (2 சாமு 2:1–4). பின்னர் இஸ்ராயேல் நாட்டிற்கும் அரசனானார். (2 சாமு 5:1 தொ). தாவீதின் ஆட்சிக்காலத்தில் முடியாட்சி ஒரு படி உயர்ந்தது. முடியரசு அண்டை நாடுகளின் அரசியல் முறைப்படி நெறிப்படுத்தப்பட்டது. அனைத்திற்கும் மேலாக நாத்தானுடைய இறைவாக்கு தாவீதின் அரியணை என்றென்றும். இறைமக்களின் நிறுவனமாகவும், இறைவனின் வாக்குறுதிகளை உள்ளடக்கிய சின்னமாகவும் நிலைத்திருக்கச் செய்தது (7:5–16). அப்போதிலிருந்து இறைமக்கள் தாவீதின் அரச மரபில் மிகுந்த நம்பிக்கைக்கொண்டனர். தென்னாடாகிய யூதாவிலாவது (காண்க எண் 24:17; ஆதி 48:8–12) எப்போதுமே மன்னர் குலத்துக்குப் பெருமதிப்பு வழங்கப்பட்டது.

தெற்கில் அரச நிறுவனம் ஆற்றல் மிக்க வடிவில் எப்போதும் போற்றப்பட்டது. இதற்கு மாறாக நாட்டின் வட பகுதியிலி, சமயச் சூழ்நிலை அரச பதவியைப் அருங்கொடையின் அடிப்படையில் வைத்துப் போற்றியது. இறைவாக்கினர் ஆட்சித்தகுதி வாய்ந்த அரசர்களை உருவாக்குவதில் முனைந்திருந்தனர் (1 அர 11:20–40; 2 அர 9).

3. இஸ்ராயேல் அரசர்களின் வழிமரபு உரிமை

தொடக்கத்தில் அரச அதிகாரம் ஒருவரிடமிருந்து அடுத்தவருக்கு மாறுவது பற்றி எந்தவிதமான அமைப்புகளும் விதிமுறைகளும் ஏற்படுத்தப்படவில்லை. தொடக்கத்திலே இஸ்ராயேல் அரசாட்சி இறை ஏவுதலால் நியமிக்கப்பட்டு நீதி வழங்குவதில் சிறப்பாயிருந்தது. சவுலின் காலத்திலே வழித்தோன்றல் குறித்து கருத்து வேறுபாடு காணப்பட்டது. அருங்கொடை முறைக்கும், தலைமுறைக்கும் மோதல் ஏற்பட்டது (1 சாமு 20:31; 20:12–16),

சவுலின் இறப்பிற்குப்பின் இரு முறைகளும் வெளிப்படையாகவே மோதின. யூதா தாவீதை ஏற்றுக்கொண்டது, மற்ற இனங்கள் சவுலின் மகனை அரசனாக ஏற்றுக் கொண்டது.

வழித் தோன்றல்களுக்கு அரசாட்சி கொடுப்பதை ஏற்றுக் கொண்ட போதிலும் அதை ஒரு ஒழுங்காக ஏற்படுத்தவில்லை. அரசனின் தலைமகன்தான் அரசாள வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. இதனால் ஆண்பிள்ளைகளிடையே போட்டி எழுந்தது (நீதி 9:2; 1 அர 1–2). யூதாவிலே அரசருடைய தாயின் பெயரும் பாதுகாக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து, யூத நாட்டிலே அரசனுடையதாயும் அரச வழி மரபு முறையில் ஒரு குறிப்பிட்ட இடம் வகித்தாள் என்று காட்டுகிறது.

4. அரசனின் பண்புகள்

அரசரின் கடமைகள் மூன்று விதமான தன்மையுடையதாய் இருந்தன: 1) அரசர் இராணுவத் தலைவனாகவும் 2) நீதியை நிலைநாட்டுபவராகவும் 3) தொடக்க காலத்திலேயாவது குருவாகவும் இருந்தார்.

அ) இராணுவம்:- அரசன் இராணுவத் தலைவராக இருந்ததால் தன்னுடைய எதிரிகளுக்கு எதிராகப் போர் புரிந்து நாட்டைக்காப்பது அவருடைய கடமையாகும் (1 சாமு 8:20). இவ்வாறே சவுல் அமலேக்கியருக்கு எதிராகவும் (15:4–5) ஆகாபு சீரியர்களுக்கு எதிராகவும் (1 அர 22:29–30) யோராம் மோவாபுக்கு எதிராகவும் (2 அர 3:6.12) போர் புரிந்தனர்.

ஆ) நீதியை நிலைநாட்டுதல்:- பழங் காலத்தில் அரசனுடைய முதல் கடமை நாட்டிலே நீதியை நிலைநாட்டி ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் பாதுகாப்பாக இருந்தலேயாகும். இஸ்ராயேலின் இரண்டு அரசாட்சியிலும் மக்கள் தங்களுக்குள் தீர்ப்புக் காணமுடியாத பிரச்சினைகள் அரசர்களால் தீர்த்து வைக்கப்பட்டது (2 சாமு 12:1–6; 14:4–7; 15:2; 1 அர. 3:16–28). இதைக்கொண்டு அரசன் ஒரு உச்ச நீதிபதி என்று கருதக் கூடாது. நீதி வழங்குதல் பொதுவாக மூப்பர்களால் கவனிக்கப்பட்டு வந்தது.

இ) கற்றுப்புற மக்களின் பண்பாடுகளில் காணப்பட்டது போல் இஸ்ராயேல் மக்களின் மன்னன் தெய்வீக உலகைச் சார்ந்தவன் இல்லை. மற்ற எல்லா மனிதர்களையும்போல் அவனும் இறைவனுடைய உடன்படிக்கைக்கும் சட்டத்திற்கும் உட்பட்டவன். இந்த உண்மையை இறைவாக்கினர் அவனுக்கு அடிக்கடி நினைவுபடுத்தத் தவறியதில்லை (காண் 1 சாமு 13:8–15; 15:10–30; 2 சாமு 12:1–12; 1 அர 11:31–39; 21:17–24). இருப்பினும் அரசன் ஆண்டவரால் அபிடேகம் செய்யப்பட்ட காரணத்தால் மிகவும் மரியாதைக்குறியவர் புனிதமிக்கவர் (1 சாமு 24:11; 26:9). தாவீதின் காலத்திலிருந்தே இறைவனுடன் அரசன் கொண்டுள்ள உறவு தெளிவடைகிறது. இறைவன் அரசனைத் தமது சுவிகாரப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு (2 சாமு 7:14; சங் 2:7; 89:27 தொ). அவனைத் தமது ஆற்றலின் காப்பிடமாகவும், நிலவுலகின் அரசர்க்கெல்லாம் தலைவனாகவும் நியமிக்கிறார் (சங். 89:28; காண். 2::8–12; 18:44 தொ). அரசன் தமக்கு உண்மையுள்ளவனாக நடந்து கொண்டால், அவனைத் தாம் காப்பதாக இறைவன் வாக்களிக்கின்றார். அயல் நாட்டுப் பகைவர்கள்மீது அவன் கொள்ளும் வெற்றிகளின் மூலம் தன்னுடைய மக்களுக்கு வளத்தையும் (காண்க சங் 20:21). உள் நாட்டு எதிரிகளின்மேல் கொள்ளும் வெற்றிகளின் மூலம் நீதியையும் நிலைநாட்டுவான் (சங் 45:4–8; 72:1–7.12 தொ; பழ 16:12; 25: 4 தொ; 29:4. 14). இவ்வாறு உலகு சார்ந்த அவனது அலுவல்கள், உடன்படிக்கை சட்டம் சார்ந்த அவனது அலுவல்கள், உடன்படிக்கை சட்டம் இவற்றின் குறிக்கோளை நோக்கமாகக் கொண்டுள்ளன. மேலும் இறை மக்களின் தலைவர் என்ற முறையில் அவன் சில சமயங்களில் வழிபாட்டுச் சடங்குகளையும் செய்கின்றான் (2 சாமு 6:17 தொ; 1 அர 8:14. 62 தொ). இதனால் அரச குருத்தவம் சுட்டிக்காட்டப்பட வாய்ப்பு ஏற்படுகிறது (சங் 110:4). இவ்வாறு அமைதி காத்து நீதி வழங்கும் ஓர் அரசனின் பண்புகள் அந்த நாட்டுப் இலக்கியத்திற்கே மணி முடியாய் விளங்குகின்றன (சங் 101). அமைதி நீதி என்பவையே அவனது நாட்டின் குறிக்

கோளாகும். இக்குறிக்கோள்களைச் செய லாக்குவதே அரச அதிகாரத்தின் நோக்க மாகும்.

5. அரச அதிகாரங்களைச் செயல்படுத்துல்

அரச அதிகார வரம்புகள் ஒழுங்கு களால் நிர்ணயிக்கப்பட்டு அதிகாரிகளின் உதவியோடு செயல்பட்டது. வரிகளை வசூலிக்கவும் அரச அதிகாரத்தைப் பாது காக்கவும் அதிகாரிகள் உதவினர்.

அ) அரசர்கள் பற்றிய சட்டம்:- இஸ்ரா யேல், அரசாட்சிக்குமுன், 'அரசரைப்பற்றி கொண்டிருந்த கணிப்பானது சாமுவேல் காலத்தில் அரசாட்சியைப் புகுத்துவதற்கு எதிர்ப்பாக இருந்தது. அதற்கான பல காரணங்களில் அரசனது கொடுங்கோல் தன்மை ஒன்றாகும். ஆனால் அரசன் முழுவதும் கட்டுப்பாடற்றவன் அல்லன்.

கானானிய அதிகாரிகளிடமிருந்து பெற்ற கசப்பான அனுபவத்தினால் இஸ் ராயேல் பாதிக்கப்பட்டிருந்தது. இதைத் தான் யோத்தாமின் கதை வெளிப்படுத் தியது. பயன் அற்றவர்கள்தான் நிலை யற்ற அரச பதவியை ஏற்க விரும்புவர் (நீதி 9:7–15).

மூப்பர்கள் புதிய அரசனுடன் உடன் படிக்கை செய்துகொண்டனர் (2 சாமு 5:3; 2 அர 11:17). அரசனுடைய உரிமைகளும், கடமைகளும் தொகுக்கப்பட்டு ஆண்டவ ருக்கு முன் வைக்கப்பட்டன (1 சாமு 10:25). அரசன் விதிமுறைகளிலிருந்து விடு பட்டவன் அல்லன். ஆகாபு நாபோத்தின் உடைமையை விரும்பியபோது நாபோத்து மறுக்க மரபு உரிமையால் விட்டுவிட்டார் (1 அர 21:47). குடிமக்களின் உடமைகளை அரசன் பணம் கொடுத்து வாங்கினான் (2 சாமு 24:24; 1 அரச 16:24). சதி செய்வோர் (2 சாமு 16:4) அரசனையும், இறைவ னையும் சபிப்பவர்கள் (1 அர 2:10) ஆகி யோரின் உடமைகள் எடுத்துக்கொள்ள அரசனுக்கு உரிமை உண்டு.

அரசன் நாட்டின் முதல் குடிமகனாக இருந்தபோதிலும் மக்களின்மேல் எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கவில்லை. இதைத்தான் உரியாவின் கொலை நினைவுபடுத்துகிறது (2 சாமு 11). நாபோத்தின் இறப்பு அநீதியாய் இருந்த போதிலும் அது விதிமுறைகளை பின் பற்றித்தான் நடந்தது (1 அர 21:8–14). அரசர்கள் கடமை தவறிய போது இறை வாக்கினர்கள் அவர்களை எச்சரித்தனர். நாத்தான் தாவீதையும் (2 சாமு 12:1–15), எலியா ஆகாபையும் (1 அர 21:17–24) கண்டித்தனர். அரசர்கள் பற்றிய உபா கமச் சட்டம் (17:14–20) அரசனைச் சட்டத் திற்குக் கட்டுப்படுத்தியது. ஆனால் முழுவ தும் புதியதொன்றன்று. ஏற்கெனவே இருந்த முறைகளின் விரிவேயாகும்.

ஆ) அரச அதிகாரிகள்:- இவர்கள் அரசனின் முன் பணிபுரிவோர்களாவார். (எஸ் 1:14). அன்னிய கூலியாட்கள் அடங் கிய மெய்க்காவல்படை அரசனுக்குப் போரில் பாதுகாப்பளித்தது (2 சாமு 15:18). சாலமோன் (1 அர 1:38) யோவாசு (2 அர 11:4) ஆகியோரின் முடிசூட்டுதலில் முக்கிய அங்கம் வகிக்கிறது. மெய்க்காப்பாளர் களின் தலைவரும், இராணுவத்தின் தலைவனும் அரச அவையில் பணி புரிந் தனர் (1 சாமு. 14:50; 2 சாமு 8:16,18). மேலும் ஆவணங்கள் தயாரிப்பாளர்கள் இருந்த னர். இவர்கள் அரச அலுவல்களுக்குத் தலைவர்களாகவும் இருந்தனர் (2 சாமு 8:16; 1 அர 4:3). மேலும் செயலர்களும் (2 சாமு 8:17; 2 அர 8:18) 12 மாநிலங்களுக்குத் தலைமை அதிகாரிகளும இருந்தனர் (1 அர 4:5). மேலும் அரண்மனை பாதுகாவ லன் (1 அர 18:3; 2 அர 18:18) இருந்தான். இவன் கண்காணிப்பாளன் என்றழைக்கப் பட்டான். கட்டாய வேலையை மேற்பார்ப்ப வன் (2 சாமு 20:24; 1 அர 4:6), அரசனது "நண்பன்" (2 சாமு 15:37; 1 அர 4.5; 1 நாள் 27:33), ஆலோசகர்கள் (2 சாமு 15:12), உடை களைக் கவனிப்பவன் (2 அர 22:14–17), அரச பண்ணைகளைக் கவனிப்பவன் (1 நாள் 27:25–31) போன்ற அதிகாரிகள் இருந்தனர். மேலும் குருக்களும் (2 சாமு 8:17; 20:25; 1 அர 4:4) இறைவாக்கினர்களும் (2 சாமு 7:2; 12:25) அரசவையில் இடம் பெற்றிருந்தனர்.

இ) அரச வருமானம்:- சவுல் மக்களை வரி செலுத்தச் செய்யவில்லை. மாறாகத் தன்னுடைய முன்னோர்களின் சொத்தி லிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு

அவர் எளிமையோடு வாழ்ந்தார் (1 சாமு 22:6). அவருடைய நண்பர்கள் அன்பளிப்பு கொடுத்தார்கள் (1 சாமு 10:27; 16:20). தாவீது போரில் கைப்பற்றிய கொள்ளைப் பொருட்கள் இருந்தன (2 சாமு 8:1–14). இதனால் மக்களிடம் வரிசேர்க்கத் தேவை இல்லாமல் இருந்தது. தாவீதினால் செய்யப்பட்ட பொதுவான கணக்கெடுப்பு வரித்திட்டம் கொணர ஒரு முன்னேற்பாடாக அமைந்தது (2 அர 24:1–9). பொது வரித்திட்டம் சாலமோனால் புகுத்தப் பட்டது. சாலமோன் நாட்டை 12 மாவட்டங் களாகக் பிரித்து அதிகாரிகளை நியமித்தல் பின்னர் தொடக்கப்பட்டது (1 அர 4:7–19. 27–28). விவசாயப் பொருட்கள் விலங்குகள் ஆகியவற்றில் 10–இல் ஒரு பங்கானது வரியாக, பணமாகவோ, தானியமாகவோ, அரண்மனையின் தேவைகளுக்குச் செலுத்தப்பட்டது (1 சாமு 8:15.17). எப்பொழுதாவது சிறப்பு வரி வசூலிக்கப் பட்டது (2 அர 23:35). காலப்போக்கில் அரசர்களும் தங்களுக்கென்று அரசாங்க நிலங்கள் பெற்றிருந்தனர் (1 நாள் 27:25–30; 2 நாள் 26:10; 32:27–29). அரச சொத்துக்கள் மக்களைப் பாதிக்கும் அளவுக்குப் பெருகியது (எச 45:8) கொத்தடிமைப் பணியும் அரசனுக்கு ஒரு வருமானமாக அமைந்தது (2 சாமு 20:24; 1 அர 4:6).

சில முக்கியமான வியாபாரத் தடங்கள் இஸ்ராயேல் நாட்டின் வழியாகச் சென்றன. எனவே சாலமோன் அரசர் வியாபாரிகளிடமிருந்து வரியாகக் குறிப்பிட்ட பணத்தைப் பெற்றார் (1 அர 10:15). சாலமோன் அரசர் குதிரை, தேர் வியாபாரம் செய்தார் (1 அர 10:28–29). அரசர் அராபியா நாட்டுடனும் ஆப்பிரிக்கா நாட்டுடனும் வியாபாரத் தொடர்பு வைத்திருந்தார் (1 அர 9:26–28). அரசனுடைய வியாபாரத் தொடர்பு பற்றிய விவரங்கள் அரசனுடைய பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

ஈ) அரசச் சின்னங்கள்:- அரசனுடைய அதிகாரத்தின் அடையாளமாக மகுடம் (2 சாமு 1:10; 2 அர 11:12) செங்கோல் (எண் 24: 17), அரியணை (2 சாமு 14:9) ஆகிய சின்னங்கள் விளங்கின. இவைகள் அரசருடைய அப்பிடேகத் தன்மையையும் வெளிப்படுத்தின. சவுலைப் பொறுத்தவரை ஈட்டி (1 சாமு 22:6; 2 சாமு 1:6) கைக்காப்பும் (2 சாமு 1:10) அரச அடையாளங்களாக இருந்தன. ஆனால் முக்கியம் பெறவில்லை. அரசனுடைய வைப்பாட்டிகளை கைப்பற்றுதல். அரச பதவியைக் கைப் பற்றுதலுக்கு அடையாளமாகும் (16:20–22). அரண்மனை (5:11–12), அரச புனித இடம் (7:1–2), தேர் (1 சாமு 8:11) ஆகியவை அரச அதிகாரத்தை எடுத்துக்காட்டியவையாகக் கருதப்படவில்லை. ஆனால் அரசனுக்கு பெருமைச் சேர்த்தன.

6. இஸ்ராயேல் அரசின் சமயப் பண்பு

பழங்கால வழக்கத்திலே அரச நிறுவனம் வெறுமனே சமயச் சார்பற்றதன்று. இஸ்ராயேல் நாட்டின் அரச நிறுவனத்தில் சமயக் கூறுகளும் உண்டு.

அ. ஆண்டவனே இஸ்ராயேலின் முதன்மையான அரசன். துரதிருஷ்டவசமாக இதுபற்றிய வாசகங்கள் (யாத் 15:18; 19:6; எண் 23:21; எரே 33:5; 1 சாமு 8:7; 12:12; நீதி 8: 23) பெரும்பாலும் ஐயத்திற்குள்ளாக் கப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும் இஸ்ராயேல் ஆண்டவருடன் செய்துகொண்ட உடன்படிக்கை அரச உடன்படிக்கையாகும் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன (யோசு 24). எனவே இன்னொரு பூவுலக அரசரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது இறைவனுக்கு எதிரான பதிதமாகக் கருதப்பட்டது (1 சாமு 8:7; ஓசே 8:4). யாவேயை இஸ்ராயேலின் அரசராக ஏற்றுக்கொள்வது அவர்களின் விசுவாசமாகும். எனவே இவ்வுலக அரசருடைய அரசத் தன்மையானது இறைவனிடமிருந்தே பெறப்பட்டது. இதை 'ஆண்டவரால் அபிடேகம் செய்யப்பட்டவர்' என்ற கூற்று (1 சாமு 16:6; 2 சாமு 1:14;1 சாமு 9:16; 10:1; 13:14) தெளிவாக்குகிறது. அரசன் யாவேயின் பிரதிநிதியாவார்.

ஆ) பதவி ஏற்பு:- ஆண்டவனே இஸ்ராயேலின் உண்மையான அரசன். மற்ற அரசர்கள் அவருடைய பிரதிநிதி என்ற கருத்து இருந்தபோதிலும் அரசர்கள் குழுத் தலைவர்களாலும், மூப்பர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர் (1 சாமு 11:15; 2 சாமு 5:3). இது இறைவாக்கினால் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கையின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டது. பதவி

ஏற்பு பற்றிய விவரங்கள் நமக்குத் தெளிவாகக் கிடைக்கவில்லையெனினும் நாம் சாலமோன் அரசரின் பதவி ஏற்புவிலிருந்து விபரங்கள் புரிந்து கொள்ளலாம் (1அர 1:32–40).

பதவி ஏற்பிலே மிகவும் முக்கியமானது அபிடேகம் செய்தலாகும். சாலமோன் கோவேறு கழுதைமேல் ஏறி கீனோனுக்குச் சென்றார். அங்கே குரு சாதோக்கும், இறைவாக்கினர் நாத்தானும் அவரை இஸ்ராயேலின் அரசனாக அபிடேகம் செய்தார்கள். பின்பு எக்காளம் ஊதி அரசன் சாலமோன் வாழி என்று ஆர்ப்பரித்தார்கள் (1 அர 1:38–39). யோயதா, யோவாசின் தலைமேல் முடியை வைத்து, கையில் திரு சட்ட நூலை அளித்து அபிடேகம் செய்தார். பிறகு எல்லோரும் அரசர் வாழி என்று சொல்லி கைத் தட்டினர் (2 அர 11:12). பின்பு அரசன் ஆண்டவருடனும், மக்களுடனும் உடன்படிக்கை செய்துகொண்டான். பின்பு தன்னுடைய மெய்க்காப்பாளிகள் பின் தொடர அரண்மனைக்குச் சென்று பதவியேற்பான் (2 அர 11:13–14.17). பதவி ஏற்பின்போது புறஇனப்பேரரசர்கள் யூதாவின் அரசர்களுக்குப் புதிய பெயரையும், புதிய செங்கோலையும் அளித்தனர். இவ்வாறு எலியாக்கிம் யோயாக்கீம் என்றும் (2 அர 23:34) மத்தானியா, செதேக்கியா என்றும் (2 அர 24:17) புதிய பெயர் பெற்றனர்.

இ) பழங்கால மேற்காசியாவில் அரசனின் இறைத்தன்மை:-

பழங்கால மேற்காசியாவில் அரசர்கள் இறைத்தன்மை உடையவர்களாகக் கருதப்பட்டனர். அமர்னா கடிதங்களில் எகிப்திய அரசர்களை "என் தெய்வமே என் சூரியனே, நிலத்தின் சூரியனே என் உயிரே" என்று கானானியச் சிற்றரசர்கள் அழைக்கின்றனர். தெய்வங்களாகிய கோரஸ், சேத், ஒசைசிரிஸ் ஆகிய தெய்வங்களின் வெளிப்பாடாக எகிப்திய அரசன் பாரவோன் விளங்கினான். எகிப்தியர்கள் அரசன் இறைவனால் பெற்றெடுக்கப்பட்டவன் என்று நம்பினார்கள். எனவே அரசனே விதிமுறைகளைக் கொடுத்து, ஆளுகிறவன். எனவே நீதியை நிலை நாட்டுவதோடு அரசனே நீதியின் பிறப்பிடமாவான். எனவே எகிப்திய அரசர்கள் மக்களால் வணங்கப்பட்டனர். மெசபொத்தாமியா மக்களும் இந்தக் கருத்தையே கொண்டிருந்தார்கள். ஆனால் சுமேரியர்கள் அரசனை ஒரு மனிதனாகத்தான் கருதினார்கள். பாபிலோனியர்கள் அரசனை இறைத்தன்மையுடையவன் என்று எண்ணினர். அவர்கள் அரசன் தேவதைகளால் தத்து எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் என்று நம்பினர். அவனுடைய இறைத்தன்மையானது அவனுடைய செயல்களில் மட்டுமே. எனவே அவர்கள் அரசனை வழிபடவில்லை. பாபிலோனிய அரசன் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையாளன் ஆவான். எனவே அவனுடைய கடமையானது சமய நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதாகும். குறிப்பாகக் புதிய ஆண்டு விழாவில் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும். அரசன் உலகத்திலே ஒழுங்கினை ஏற்படுத்த கடவுளின் பிரதிநிதியாக செயல்படுகின்றான். இத்தியர்கள், உயிரோடு இருக்கும்வரை, அரசனை தெய்வத் தன்மையுடைவராக கருதினார்கள். இவ்வாறாக வேறுபட்ட கருத்துக்கள் பழங்கால மக்களிடையே நிலவி வந்தது.

ஈ) அரசனது இறைத்தன்மை பற்றிய பிரச்சினை:-

இந்தப் பிரச்சினையை இஸ்ராயேலர்கள் ஒரே கடவுள் மேல் கொண்டிருந்த நம்பிக்கை மேற்காசியாவில் பிற மக்கள் அரசனைப் பற்றிக் கொண்டிருந்த வேறுபட்ட கருத்துக்கள் ஆகியவற்றின் பின்னனியில் நோக்க வேண்டும்.

இஸ்ராயேல் அரசர்கள் அபிடேகத்தால் புனிதராகக் கருதப்பட்டனர் (2 சாமு 1:14.16). சவுல் தாவீதிடம் சிக்கி யிருந்த போதும், அபிசாய் சவுலைக் கொலை செய்வதை தாவீது தடுத்தார் (1 சாமு 26:9). அரசனை சபிப்பவர்கள் சாவுக்குத் தகுதியானவர்கள் (2 சாமு 19: 21–28). அரசனுக்கும், கடவுளுக்கும் கீழ்ப்படியவும் பயப்படவும் வேண்டும். ஏனெனில் அரசனுடைய அறிவானது இறை தூதர்களின் அறிவோடு ஒப்பிடப்படுகிறது (2 சாமு 14:17.20:19:27).

தாவீதோடும் அவருடைய சந்ததியோடும் இறைவன் எப்பொழுதுமே நிலைத்திருக்கும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார் என்பது யூத நாட்டிலே ஓர் விசுவாசமாகும் (2 சாமு 23:5; 7:8–15; சங் 89:19–37), எனவே யூதாவின் அரசர்கள் வாக்குறுதியின் வழித்தோன்றல்கள் (2 சாமு 7:5–16). வாக்குறுதிகளுக்கு உரிமையாளர்கள் ஆவர் (சாமு 7:12). சங் 2:7–இல் "நீரே என் மகன் இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்" என்று கூறப்படுகிறது. எனவேதான் தாவீது இறைவனின் தலைமகன் என்றும் (சங் 89:27), கடவுளின் வலப் பக்கம் அமர்ந்திருப்பவர் என்றும் (110:1) சங்கீதத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. புகழ்ச்சியின் உச்சியிலே அவரே கடவுளாகவும், ஆட்சி பீடமே புனிதமாகும் என்று சங்கீத ஆசிரியர் கூறுகின்றார் (45:6).

இறைவனோடு இத்தகைய நெருங்கிய உறவு கொண்டிருந்ததால் மக்களுககுத் தேவையான அமைதி, வளம், செழுமை இவற்றை அரசனால் மக்களுக்குத் தர முடிந்தது. எனவே அரசன் மக்களுககு அரணாகவும் (89:10), உயிரைக் காக்கும் மூச்சாகவும் (புல 4:20) விளங்கினான். ஏனெனில் வளமையானது நிறைய விளைச்சலையும், மக்கள் பெருக்கத்தையும் பொறுத்திருந்தது. இதனால்தான் அரசன் இஸ்ராயேலின் விளக்கு என்று பெயர் பெற்றான் (2 சாமு 21:17). இறைவனால் தத்து எடுத்துக் கொள்ளப்பட்டதால் அரசன் இறைவனுடைய வழித்தோன்றலாகவும், உலகத்தின் ஆட்சியாளராகவும் விளங்குகின்றான் (சங் 2:8). ஆனால் அவன் இறைவனுக்குச் சமமானவன் அல்ல. அவன் வழிபடப்படவில்லை. அவன் இஸ்ராயேலிலும் உலகிலும் ஆண்டவரது பகர ஆட்சியாளனே.

உ) வழிபாட்டுக் கடமைகள்:- அரசனுடைய முக்கியத்துவம் அவனுடைய வழிபாட்டுக் கடமைகளால் பெருமைப்படுத்தப் பட்டது. மெல்க்கிசதேக்கு அரசனும், குருவுமாய் விளங்கியதுபோல, தொடக்கக் காலத்திலாவது அரசர்கள் குருத்துவப் பணியையும் நிறைவேற்றினார்கள். சவுல் (1 சாமு 13:10; 14:35) தாவீது (2 சாமு 6:13.17; 24;25), சாலமோன் (1 அர 3:4.15; 8:62; 9:25) பலி செலுத்தினர். சவுலும் தாவீதும் ஆண்டவருக்குப் பலிபீடம் கட்டினார்கள். (1 சாமு 14:33–34; 2 சாமு 24:21).

முக்கிய நாட்களில் அரசர்கள் நாட்டிற்காக வேண்டினர். சாலமோன் (1 அர 8: 22–53), எசக்கியா (2 அர 19:14–19) இதற்கு எடுத்துக்காட்டாவர். தாவீது குருவின் உடையாகிய சணல் நூலால் செய்யப்பட்ட எபோதை அணிந்துகொண்டு ஆண்டவர் திருமுன் நடனமாடினர் (2 சாமு 6:14). பிறகு ஆண்டவர் பெயரால் மக்களை அசீர்வதித்தார் (2 சாமு 6:18). ஆலய அபிடேகத்தின்போது சாலமோன் ஆசீர்வதித்தார் (1 அர 8:14). அரசர்கள் குருக்கள் மீதும் வழிபாட்டின் மீதும் அதிகாரம் கொண்டிருந்தனர். குருக்கள் அரச அதிகாரிகளாகவும் விளங்கினர். வழிபாட்டின் மேற்பார்வையாளர்களாக மட்டுமல்லாமல் அதைத் திருத்துவதற்கும் உரிமையிருந்தது. ஆசா (1 அர 15:12–15) எசக்கியா (1அர 18:1–7) இதற்குச் சான்றாவர். எனவே அரசனுடைய வழிபாட்டுப் பணியானது அவனுடைய கடமைகளுள் மேலானதாக இருந்தது.

7. அரச பதவி பற்றிய அனுபவத்தின் தெளிவின்மை:-

வரலாற்று ஏடுகளும், இறைவாக்கினர்களின் நூல்களும் அரச பதவி பற்றிய அனுபவத்தில் ஒரு தெளிவின்மையைக் காட்டுகின்றன. அரசர்கள் தங்களுக்குக் குறிக்கப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றும் அளவிற்கு அவர்கள் இறைவாக்கினரின் ஆதரவையும் வரலாற்று ஆசிரியர்களின் புகழுரையையும் பெற்றார்கள்.

இதனை நாம், தாவீது (சங் 78:70; 89:20–24), ஆசா (1 அர 15:11–15), யோசபாத்து (2 அர 18:3–7), எசக்கியா (2 அர 18:3–7) யோசியா (2 அர 23:25) போன்ற அரசர்களின் வாழ்க்கையில் காண்கிறோம். ஆனால் சலமோனுடைய மகிமை, புகழ் ஏற்கெனவே ஐயப்பாடு உடையதாக இருந்தது (1 அர 11:1–13). இறுதியாக பொல்லாத அரசர்கள் வட நாட்டிலும், (1 அர 16:25 தொ; 30–33), யூதா நாட்டிலும் (2 அர 16:2 தொ; 21:1–9) பெருகுகின்றனர். குறிப்பாக வடபகுதியைச் சேர்ந்த அரச குடும்பங்கள் தங்களைச் சுற்றியிருந்த புறவினத்தாரின்

முடியாட்சிகளைப் பின்பற்றத் தொடங்கின. இதனால் அக்குடும்பத்தினர் அப்புறவினத்தாரின் கொடுங் கோன்மையைப் பின்பற்றியதோடன்றி (1 சாமு 8:10–18) அரச பதவி தெய்வீகத் தன்மையுடையதென்று புராணக்கொள்கைப்படி புறவினத்தாரால் போற்றப்பட்டு வந்த சிலைவழிபாட்டினையும் ஏற்றுக் கொண்டனர். இதன் காரணமாக இறைவாக்கினர், அரசர்கள் தங்கள் பதவியை துர்பிரயோகம் செய்வதைத் தொடர்ந்து கடுமையாகக் கண்டித்தும், அவர்களது செயலால் நாட்டிற்கு விளையும் கேட்டினை வெளிப்படுத்தியும் வந்தார்கள் (காண்: ஏச 7:10 தொ; எரே 21– 22; 36–38; 2 அர 23:26 தொ). ஓசேயா இறைவாக்கினர் அரச (பதவி) நிறுவனத்தையே கண்டனம் செய்தார் (ஓசே 8:4). உப ஆகமம் இதனை ஒழுங்குபடுத்த முயன்று, புறவினத்தரசர்களை இஸ்ராயேல் மன்னர்கள் பின்பற்றக் கூடாதென எச்சரிக்கை செய்தது (உப 17:14–20).

8. புறவினத்தரசர்கள்:-

புறவினத்தரசர்களைப்பற்றி விவிலியம் சற்று மாறுபட்ட போக்குக்கொண்டுள்ளது. இவர்களும் தங்களது அதிகாரங்களைக் கடவுளிடமிருந்தே பெறுகின்றனர். எலிசா இறைவாக்கினர் இறைவன் பெயரால் தலையிட்டு, தமஸ்கில் கசாயேல் நடத்திய கிளர்ச்சிதனைத் தூண்டிவிட்டார் (காண். 1 அர 19:15; 2 அர 8:7–15). அவர்கள் இறை மக்கள்பால் இறைவனது அருட் கட்டளைகளை ஏற்றுப் பணியாற்றக் கூடியவர்கள். இறைவன், இஸ்ராயேல் நாடு உட்பட மேற்காசிய நாடுகளனைத்தையும் ஆளுகின்ற அதிகரத்தை நெபுக்கதுனேசாருக்குக் கொடுத்தார் (எரே 27); அதன்பின் பாபிலோனியரைக் கீழ்ப்படுத்தி யூதர்களை மீட்கும் வண்ணம், அவர் சைரஸ் மன்னனுக்கு வலிமை நல்கினார் (ஏச 41:1–4; 45:1–6). ஆனால் அவர்கள் எல்லோருமே இறைவனுடைய ஆளுகைக்குப் பணிந்திருக்கவேண்டும்; அவர்களது மூர்க்கத்தனமான அடாத செயல்களையும் (ஏச. 14:3–21; எச 28:1–19), இறைநிந்தனைகளையும் (ஏச 37:21–29) தண்டித்து இறைவன் நீதி வழங்கினார். நேரம் வரும்போது அவர்கள் எல்லோரும் இறைவனுடைய ஒப்பற்ற அரசுரிமையின் முன்னும், அவரால் அபிடேகம் பண்ணப்பட்டவரது ஆற்றலுக்கு முன்னும் பணிந்திருப்பார்கள் (சங் 2 ; 72:9 தொ).

II. எதிர்கால அரசுரிமை

1. இறைவாக்கினரின் வாக்குறுதிகள்:

சமயக்கோட்பாடுகளின் அடிப்படையில் அரச முறையின் அனுபவத்தைக் காணும் போது அது ஒரு மாபெரும் தோல்வியே என்று பல இறைவாக்கினர் மதிப்பீடு வழங்கியுள்ளனர். ஒசேயா அரச பதவியின் முடிவை முன்னறிவித்தார் (ஒசே 3:4 தொ). தாவீது அரசரின் பரம்பரை தாழ்நிலைக்குள்ளாகும் என்பதை எரேமியா திட்டவட்டமாக முன்னுரைத்தார் (எரே 21–22). ஆனால் அவருக்கு முந்திய ஏசயா தாவீது பரம்பரையின் மீது மிகுந்த பற்று வைத்திருந்தார். தாவீது மன்னனின் இறையழைப்பிலும், அடையாளமாக விளங்கிய ஒரு சில அரிதான வெற்றிகளாலும் கடவுளின் திட்டம் எவ்வாறு முற்றிலும் நிறைவேறும் என்பதை இறுதிக் காலக்கண்ணோட்டத்தில் இறைவாக்கினர் எடுத்துரைத்தனர் கி.மு.8–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏசயா ஒரு எதிர்கால அரசரின் பிறப்பையும் (ஏச 9:1–6), அவர் இறை மக்களுக்கு மகிழ்வும், வெற்றியும், சமாதானமும், நீதியும் வழங்குவார் என்பதையும் முன்னறிவித்ததார்.

ஈசாயின் வழித்தோன்றலாகிய இவர் யாவேயின் தூய ஆவியால் நடத்தப்பட்டு, நாடு பூவுலக இன்பவனமாக ஆகும் அளவிற்கு (11:1–10) நீதியினை நிலைநாட்டுவார் (32:1–5). மீக்காவும் இதே நம்பிக்கையில் உறுதியாய் இருந்தார் (மீக் 5:1–5). தாவீதின் பரம்பரை வீழ்ச்சியுற்றபோது, தாவீதின் மரபில் நீதிமிக்க ஒருவரது எதிர்கால ஆட்சி பற்றி எரேமியா முன்னுரைத்தார் (எரே 23:5 தொ). இதே நம்பிக்கை கொண்டிருந்த எசக்கியேல் ஒரு திருப்பத்தை எடுத்தோதினார். இஸ்ராயேலின் ஆயனாகிய புதிய தாவீதை, இஸ்ராயேலின் ஆயனாகக் காண்கிறார். இப்பட்டம் "இளவரசன்" என்ற பட்டத்

திற்கு மட்டும் சிறிது குறைந்தது (எச 34:23 தொ; 45:7 தொ). அரசர்களின் ஆட்சிக் காலத்திற்கு அப்பால் சென்று, மோசேயின் காலத்தில் நிலவிய இறையாட்சியே இஸ்ராயேலுக்கு ஏற்ற எழிலாட்சி என்று இறைவாக்கினர் எண்ணினார் (காண் ஏச 52.7). ஏசயாவின் ஆறுதல் மொழி நூலும் தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேறும் என்பதைக் குறைத்துக் கூற வில்லை (ஏச 55:3; சங் 89:35–38).

2. வாக்குறுதிகள் நிறைவேறக் காத்திருத்தல்:-

இஸ்ராயேல் அரச முறையுடன் நடத்திய சோதனைகள் கி.மு.587–இல் முடிந்தன. இஸ்ராயேலின் வரலாற்றில் அரசர்களின் ஆட்சிக்காலம் ஓர் அடைப்புக் குறி போல், ஓர் இடைக்கால அமைப்பாக இருந்தது. ஆனால் அவ்வமைப்பு அம் மக்களின் மனத்தில் என்றும் மறக்க முடியாத சில கருத்துக்களை விட்டுச் சென்றது. அடிமைகளாய், நாடிழந்த அகதிகளாய் அவமானம் அடைந்தபோது (புல 4:20; சங் 89:39–52), அவர்கள் தங்கள் அரச குலத்தின் மறுமலர்ச்சிக்காக வேண்டிக் கொண்டனர் (சங் 80:18). தாவீதின் வழி வருவோர் மீண்டும் முடியாட்சியை நிலை நாட்டுவர் என்ற நம்பிக்கைக்கு (செக் 3:8 தொ; 6:9–14), செருபாபேலின் எழுச்சி சிறிது வாழ்வு கொடுத்தது. ஆனால் அந்த நம்பிக்கை நீண்ட காலம் நிலைக்க வில்லை. அடிமைத்தனத்திலிருந்து நாடு திரும்பிய பின் யூதேயா இறையாட்சி முறையில் திரும்ப அமைக்கப்பட்டது. அன்னிய மன்னர்களின் ஆணைக்குட்பட்டதாக இருந்தாலும், அம்மன்னர்கள் பெருந்தன்மையுடன் இஸ்ராயேலுக்குத் தன்னாட்சி தந்தனர் (எஸ் 7:1–26). இஸ்ராயேலும் அம் மன்னர்களுக்காக இறைவனிடம் வேண்டுவதை ஒரு கடமையாகக் கொண்டது (6:10; 1 மக் 7:33). நாட்டின் துயரக்காலம் நீண்டு கொண்டே சென்றதால், இறைவாக்கினர் உரைத்த இறுதிக் காலத்தின் மீது மக்களின் கவனம் திரும்பியது. இறையரசு நிறுவப்படும் என்ற தளராத நம்பிக்கை இறுதிக்கால நம்பிக்கையின் மையமாக ஆகியது. இந்தச் சூழ்நிலையில் எதிர்கால அரசனின் வருகைபற்றிய நம்பிக்கை முக்கியமானதாயிற்று. பழைய சங்கீதக் கருத்துக்கள் அவர் மீது ஏற்றிக் கூறப்பட்டன (சங் 2:45; 72:110). அவற்றிற்கேற்ப அவருடைய ஆட்சியின் இயல்பு கணிக்கப்பட்டது. இவ்வாறு அவர்கள் சிந்தனையில் எழுந்த அரசன் நீதி, வெற்றி, சமாதானம் இவையெல்லாம் நிறைந்தவனாகக் கருதப்பட்டான் (செக் 9:9 தொ) புற இன அரசர்களைப் பொறுத்த அளவில், சில சமயங்களில் அவர்கள் எதிர்கால அரசனின் ஆளுகையில் பங்கேற்பவர்களாயும் போற்றப்பட்டார்கள் (ஏச 60:16); வேறு சில சமயங்களில், அவர்கள் யாவேயின் ஆட்சிக்கு எதிராக் கிளம்பினால் (தானி 7:17–27). நீதித் தீர்ப்புக்குள்ளானவர்களாக இகழப்பட்டார்கள் (ஏச 24:21).

3. புதிய ஏற்பாட்டின் நுழைவாயிலில்

யூத மக்கள் இறைவனின் அருஞ்செயலான தலையீட்டினை வெளிப்பாட்டுப் பாரம்பரியம் எதிர்நோக்கி இருந்த வேளை, பழைய பரம்பரை நம்பிக்கைகளுக்கு மாறுபட்ட வகையில் அசமோனிய சந்ததியினரால் மீண்டும் முடியாட்சி நிறுவப்பட்டது (தானி 2:44 தொ; 12:1). ஆனால் அது பாரம்பரிய நம்பிக்கைப் போக்கில் அமையவில்லை. யூதாவின் புரட்சி பழைய 'புனிதப் போர்'களின் கோட்பாட்டு அடிப்படையில் நிகழ்ந்த ஒன்றாயினும் (1 மக் 3), சீமோனிடம் எல்லா அதிகாரங்களும் குவிந்துகிடந்தது (1 மக் 14), ஒரு புதிய போக்காகும். மேலும் விரைவில் அசமோனிய மன்னர்கள் புறமத மன்னர்கள் பழக்கங்களையும் ஆட்சி முறையினையும் பின்பற்றத் தொடங்கினர். எனவே மெசியா பிறக்க இருக்கும் தாவீதின் சந்ததியினர் மீதுள்ள பற்றின் காரணமாகப் பரிசேயர்கள் அசமோனிய சந்ததிக்கு ஆதரவு தரமறுத்து விட்டனர். அதே வேளையில் அன்றிருந்த குருத்துவ நிலை முறைகேடானது என்று, அதனை எஸ்ஸேனிய இயக்கத்தார் கடுமையாக எதிர்த்தனர். இவ்வியக்கம் ஆரோன், இஸ்ராயேல் (பெரிய குருவும் அவருக்குட்பட்ட தாவீது மரபு அரசன்) வழியாக வரும் இரு மெசியாக்களை எதிர் பார்த்தது.

அசமோனியருக்குப் பின் உரோமையருக்குக் கீழிருந்த ஏரோதின் சந்ததிக்கு

அரசுரிமை உரித்தானது. இச்சமயத்தில், காலத்திற்கேற்பத் தங்கள் கருத்துக்களை மாற்றிக்கொண்ட சதுசேயரைத் தவிர, மற்ற யூத மக்கள், அனைவரிடத்திலும் இறுதிக்கால வேந்தனை எதிர்பார்க்கும் நம்பிக்கை மிகவும் உறுதியாக இருந்தது. ஆனால் இந்த எதிர்பார்த்தல் இறைவனே அரசாள்வார் என்ற சமய நம்பிக்கையை உறுதியாய் கைக்கொண்டிருந்தாலும் அவர்களது நம்பிக்கையில் அரசியல் வாசனையும் வீசத்தான் செய்தது. ஏனென்றால் வரவிருக்கும் அரச மெசியா இஸ்ராயேலரை அன்னியரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பார் என்ற நம்பிக்கை அவர்களிடம் வேரூன்றியது.

III. புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டின் நற்செய்தியும் இறையரசு பற்றிய சமயக் கொள்கையினை மையமாகக் கொண்டுள்ளது. இஸ்ராயேலின் வாழ்க்கை அனுபவத்தில் பிறந்ததும், இறைவாக்கினரின் முன்னறிவிப்புகளால் வளர்ந்ததுமான அரச மெசியா பற்றிய நம்பிக்கை புதிய அரசின் சிற்பியாக இயே சுவைச் சித்தரிக்க உதவுகிறது. ஆனால் மீட்பின் வரலாற்றில் இந்நம்பிக்கை நிறைவேறியபோது, அதன் அரசியல் தொனி முற்றிலும் நீக்கப்பட்டது.

1. மண்ணக வாழ்வின்போது இயேசுவின் அரசுரிமை

அ. இயேசு ஓர் அரசரா?:- இயேசு தம் பொதுவாழ்வின்போது உலக நம்பிக்கை நிறைந்த அரச மெசியா பற்றி மக்கள் கொண்டிருந்த பேரார்வத்திற்கு இணக்கமோ, ஆதரவோ அளிக்கவில்லை. தம்மைத் தனக்குப் போட்டியாகக் கிளம்பிய யூத அரசன் என்ற ஐயுற்ற (லூக் 13:31.தொ; 9:7 தொ) ஏரோது அரசனின் அதிகாரத்தை அவர் என்றுமே எதிர்க்கவில்லை. அது போலவே, உரோமையப் பேரரசனின் ஆட்சியையும் எதிர்க்காது, உரோமையர்களுககு வரி செலுத்துவது கடமை என்பதை ஏற்றுக்கொண்டார் (மாற் 12:13–17). ஏனென்றால் அவரது அருட்பணி வேறு துறையைச் சார்ந்தது. "நீரே இஸ்ராயேலின் அரசன்" (யோவா 1:49) என்று நத்தனியேல் கூறியதை அவர் மறுக்கவில்லை; எனினும், அவர் மனு மகனின் மகிமைமிக்க வரவை எதிர்நோக்கித் தம் கவனத்தைத் திருப்புகிறார். அப்பங்கள் பலுகிய நிகழ்ச்சிக்குப்பின் அவரைப் பிடித்து அரசனாக்க மக்கள் விரும்பியபோது அவர் அவர்களின் நடுவிலிருந்து நழுவிவிட்டார் (6:15). ஒருமுறை எருசலேம் நகருக்குள் எளிய மக்களின் வரவேற்பையும், வாழ்த்துரைகளையும் ஏற்றபோது, செக்கரியா கூறியதற்கொப்ப (மத் 21:5; செக் 9:9), தம்மை மன்னர் என்று அம்மக்கள் அக்களிப்புடன் அறிக்கையிட அனுமதித்தார் (லூக் 19:38; யோவா 12:13). ஆனால் இவ்வெற்றி விழாத்தான் அவரது பாடுகளை விரைவுபடுத்தியது. இறுதியாக அவரது துயரப்பாடுகள் தொடங்கும் வேளையில் இறுதிக் காலவியலின் கண்ணோட்டத்தில், தம் அரசுபற்றித் தம் சீடர்களுக்கு விளக்கினார் (லூக் 22:29 தொ).

ஆ) இயேசுவின் பாடுகளும் அரசுரிமையும்:-

இயேசுவின் சமய விசாரணையின்போது எழுப்பப்பட்ட கேள்விகள் அவரது மெசியா, இறைமகன் பண்புகளை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. ஆனால் அவர் பிலாத்துவின் முன் அரசியல் விசாரணைக்காக நின்றபோது, அவரது அரசுரிமை கேள்விப் பொருளாகிறது. நற்செயதியாளர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பாடுகளில் பொதிந்துள்ள முரணான உண்மைகளை வெளியிடுகின்றனர் 'நீர்தான் யூதர்களின் அரசரோ?' (மாற். 15:2; யோவா 18:33.37), என்று பிலாத்து கேட்ட போது இயேசு இச்சிறப்புப் பட்டத்தை மறுக்கவில்லை (யோவா 18:37). மாறாக தம் அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று என்பதைத் தெளிவாக்குகிறார் (18:36). இதன் மூலம் தாம் சீசருக்குப் போட்டியாகக் கிளம்பியவரன்று என்பதை விளக்குகிறார் (லூக் 23:2). ஆனால் யூதர்கள் ஆணவ இருளில் அமுந்திய காரணத்தால், இயேசுவை ஒழித்துக் கட்டும் பொருட்டு, சீசரைத் தவிரத் தங்களுக்கு வேறு வேந்தரில்லை என்று ஆர்ப்பரித்தனர் (யோவா 19:12.15). ஆனால் அவரை ஏளனம் செய்யக் கையாண்ட செயல்களே அவரது அரசுரிமையை எடுத்தியம்பின. படைவீரர் அவரைச் சாட்டையால் அடித்த

பிறகு, அவரை யூதர்களின் அரசனென்று கூறி வணக்கம் தெரிவித்தனர் (மாற் 15:18); சிலுவையில் பொருத்தப்பட்ட குற்ற அறிக்கை "நசரேத்தூர் இயேசு, யூதர்களின் அரசர்" என்று முழங்கியது (யோவா 19:19 தொ); அவரை வேடிக்கை பார்த்து நின்றவர்கள் அவரது அரசுரிமையை நிந்தனை செய்வதில் கருத்தாய் இருந்தனர் (மத் 27:42; லூக் 23:37). ஆனால், அவருடன் தொங்கிய நல்ல கள்வன், அவரது உண்மைப் பண்புகளை உணர்ந்தபோது "உம் அரசில் நுழையும்போது என்னையும் நினைந்தருளும்" என்று வேண்டிக்கொண்டான் (லூக் 23:42). உண்மையில் இயேசு மாவேந்தருக்குரிய மகிமையாவையும் பூணுவார், ஆனால், அது அவரது உயிர்ப்பிற்கும் இறுதி நாளின் மாட்சிமிகு வருகைக்கும் பின்னரே நிகழும். அவர் கூறிய, உவமையில் அரசுரிமை பெற வந்த அரசிளங்குமரனைப்போல் அவரது நாட்டினர் அவமதித்து விரட்டியடித்தாலும், அவர் ஒருநாள் அரசனாக முடிசூடி அவர்களின் வாழ்வை மதிப்பீடு செய்து, எதிரிகளைப் பழிவாங்குவார் (லூக் 19:12–15,27). விசவாசக் கண் கொண்டு நோக்கும்போது இயேசுவின் அரச மகிமை சிலுவையில் ஒளி வீசித்திகழ்வதைக் காணலாம்.

"அரசனின் மாட்சி அவனது கொடியில்
சிலுவையின் மாட்சி செறிந்திடும் மறைவில்"
(பாடுகளின் காலத்துப்பாடல்)

2) உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் அரசுரிமை

அ)ஆண்டவரின் இன்றைய ஆட்சி:-

உயிர்த்த கிறிஸ்து தமது அரசில் நுழைந்துவிட்டார். ஆனல் யூதர்களின் எதிர்பார்ப்புக்கு மாறான மெசியாவின் ஆட்சி முறையை முதலில் தம் சீடர்களுக்கு விளக்குவது அவருக்கு அவசியமாயிற்று. இஸ்ராயேலின் சொந்த இலாபத்திற்காக முடியாட்சியை அவர் நிலைநாட்டுவார் என்ற எண்ணத்திற்கே இடமில்லை (அ.ப. 1:6). அவரது அரசு அப்போஸ்தலர்களின் போதனையால்தான் நிறுவப்படும் (அப் 1:8). இருப்பினும், அவரே அரசர்; இவ்வுண்மையினை ஆதித்திருச்சபை, இறைவாக்கினரின் கூற்றுக்களை அவருக்குப் பொருத்திகாட்டி அறிக்கையிட்டது. அவர் நீதியின் அரசர் (சங் 45:7; எபி 1:8); அவர் ஓர் அரசகுரு (சங் 110:4; எபி 7:1); நற்செய்தியாளர் வலியுறுத்த விழைவதுபோல், அவரது பிறப்பிலிருந்தே மறைபொருள் மிக்க முறையில் அவர் அரசர் தாம் (லூக். 1:33; மத் 2:2). ஆனால் அவரின் அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று (யோவா.18:36); இயேசு தம் அரசுரிமையை உலகின் எந்த அரச குலத்திடமும் ஒப்படைக்கவில்லை. இருப்பினும் உலகின் எந்த அரசாட்சிக்கும் அது போட்டியாக எழுவதில்லை. "கடவுள் அவர்களை இருளின் அதிகாரத்தினின்று விடுவித்துத் தம் அன்பார்ந்த மகனுடைய அரசில் கொண்டு வந்துசேர்க்கும்போது" (கொலோ 1:13) கிறிஸ்துவர்கள் அவ்வரசின் குடிமக்களாவர். இதன் காரணமாகப் புறமத அரசர்களின் ஆட்சிக்கு அடங்கி நடப்பதும், அவர்களுக்கு மதிப்புத் தருவதும் தடை செய்யப்படவில்லை (பேதுரு 2:13,17). ஏனெனில், அவர்கள் இறைவனின் ஆணையை தாங்கியவர்கள்; இயேசுவின் ஆன்மீக அதிகாரத்தை அவர்கள் எதிர்க்காத வரையில் அவர்களுக்குப் பணிவது கடமையாகிறது. ஆனால் அவர்கள் அவருக்கு எதிராகக் கிளம்பும் போதுதான் சங் 2:2–இல் முன்னறிவித்ததுபோல மோதல் ஏற்படுகிறது. பாடுகளின்போது நிகழ்ந்தது இதுதான் (அ.ப.4:25 தொ). உலக மன்னர்கள் பாபிலோனியஅரசுடன் அநாச்சாரங்கள் புரிந்தபோதும் (திருவெளி 17:2). தங்களை ஆளுமாறு பாபிலோனை அனுமதித்தபோதும் (17:18). சாத்தானின் அரசாகிய விலங்கு வழிபாட்டில் கலந்து கொண்டபோதும்(17:12) மேற்கூறிய எதிர்ப்பும் மோதலும் எழுந்தன. பின்னர் அவ்வரசுகள் அதிகார வெறிகொண்டு, பாபிலானிய அரசு அதிகார வெறிகொண்டு கிறிஸ்துவின் சாட்சிகளுடைய செந்நீரைக் குடித்துச் சீரழிந்ததுபோல் திருச்சபையினையும், அவளது பிள்ளைகளையும் அடக்குமுறையால் கொடுமைப்படுத்தினர் (17:6).

ஆ)இரண்டாவது வருகையின்போது இயேசுவின் ஆட்சி:-

இறுதிக்காலத்தில் இறைவனின் செம்மறிக்கு எதிராக மண்ணக மன்னர்கள் யாவரும் ஒன்றாக எழுந்து இடர் விளை

விப்பார்கள் என்பதை உருவக வடிவில் திருவெளிப்பாடு சித்தரிக்கிறது. அவர்கள் அனைவரும், வல்லமை எல்லாம் விலங்கினிடம் ஒப்படைத்துவிட்டு (திருவெளி 17:13), இறுதி நாளுக்கு முன் ஒன்றாகத் திரண்டெழுவார்கள் (16:14). ஆனால் செம்மறி அவர்களை வென்று அடிமைப்படுத்துவார் (19:18 தொ). ஏனெனில், அவரே அரசர்க்கெல்லாம் அரசர் ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர் (17:14; 19:1 தொ; 1:5). அவரது மாட்சிமை மிகுந்த இரண்டாம் வருகை அவரது அரச மகிமையையும், இறையரசின் பெருமையினையும் வியக்குமாறு வெளிப்படுத்தும் (11:15; 2 திமோ 4:1). ஏசயா 11:4–இன் இறைவாக்கைப் பின்பற்றி அவர் தமது மகிமையை விளங்கச் செய்து எதிர்க்கிறிஸ்துவை கொன்றழிப்பார் (2 தெச 2:9). அதன்பின் சங் 110:1–இல் கூறியதற்கொப்ப அவர் தம் அரசை இறைவனிடம் ஒப்படைப்பார். இறைவன் அவரது பகைவர்களையெல்லாம் அவரது காலடியில் வீழ்த்தும் வரையில் அவர் அரசாள்வார் (1 கொரி 15:24 தொ). சங் 2:9 கூறிவதுபோல், ஒரு இரும்புக்கோலுடன் (திருவெளி 19:15) தம் பகைவர்களை ஆளுவதே, அவர் இறைவார்த்தையாக இருந்து நிகழ்த்தும் பெரும் இறுதிக் காலப் போரின் விளைவாக இருக்கும். பின்னர் அவர் தம் ஆட்சியை விலங்கினை வணங்க மறுத்ததற்காக உயிரிழந்த தம் தொண்டர்களோடு பகிர்ந்துகொள்ள, அவர்களும் அவருடனும், இறைவனுடனும் இணைந்து ஆட்சி செலுத்துவர் (1 கொரி 15:24; திருவெளி 20:4 தொ; 5:10). இவ்வாறாக மனுமகனுடன் அவர்களும் முடிவில்லாக்காலத்திற்கு ஆளுவார்கள் என்று தானியேல் இறைவாக்கினர் உரைத்தது நிறைவேறும் (தானி 7:22–27). இதே வாக்குறுதியைத்தான் இயேசு இறுதி இரவு உணவின்போது தம் பன்னிரு சீடருக்கும் அளித்தார். "என் தந்தை எனக்கு அரசுரிமை வழங்கியது போல நானும் உங்களுககு அதை வழங்கப் போகிறேன் எனவே அரசில் என்னுடன் பந்தியில் உண்பீர்கள் குடிப்பீர்கள். இஸ்ராயேலின் பன்னிருகோத்திரங்களுக்கும் நடுவராக அரியணைகளில் வீற்றிருப்பீர்கள்" (லூக் 22:29 தொ; திருவெளி 7:4–8.15)

அரசி

இஸ்ராயேல் யூதா உட்பட்ட பழங்கால மேற்காசியவில், அரசர்கள் பல மனைவியர்களையும், வைப்பாட்டிகளையும் கொண்டிருந்தனர். அம்மனைவியருள் ஒருத்திக்குச் சிறப்பிடம் கொடுத்து அவளை அரசியென்று அழைப்பது வழக்கம். பொதுவாக அரசி நேரடியாக ஆட்சி செய்பவளாக இருக்கலாம், அரசனின் தாயாகவோ விதவையாகவோ இருக்கலாம்.

1. ஆட்சிசெய்யும் அரசி:- அரசனாக ஆட்சி செய்யும் அரசி, பழங்கால மேற்காசியாவில், அவ்வப்போது இருந்திருக்கின்றனர். விவிலியம் இஸ்ராயேலரைச் சேராத இரு அரசிகளைப் பற்றிக் கூறுகிறது. அவர்கள் சேபா நாட்டு அரசி (1 அர 10; 2 நாள் 9), எத்தியோப்பியர்களின் அரசியான கந்தாக்கு (அ.ப.8:27). எபிரேயர்களிடையே அத்தாலியாவைத் தவிர, உரிமையோடு ஆட்சிசெய்த வேறோரு அரசி காணப்படவில்லை. இவள் தன் மகன் அகசியாவின் மரணத்துக்குப்பின் யூதாவின் ஆட்சியை அபகரித்து ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்தாள் (2 அர 11:3).

2. அரசனின் மனைவியான அரசி:- இஸ்ராயேலிலும் யூதாவிலும் அரசர்களின் மனைவியர் அதிகாரப் பூர்வமான சிறப்பிடம் வகித்ததாகத் தெரியவில்லை. பாரசீகத்தில் வாஸ்தி (எஸ்த 1:9), எஸ்தர் (1:13–22) போன்ற அரசிகள் முடிசூட்டப் பெற்றிருந்தாலும் அரசனுக்கு முழுவதும் கீழ்ப்படிந்திருக்க வேண்டியிருந்தது. பதுசேபா "நெடுங்கிடையாய் விழுந்து தாவீதுக்கு வணக்கம் செலுத்தினாள் (1 அர 1:16.31). அரசியின் இடம் அரசனின் வலதுபுறத்தில் மதிப்புக்குரிய இடமாகும் (சங் 45:9). சில சமயங்களில் அரசிகள் ஆதிக்கம் செலுத்தியதாகத் தெரிகிறது. வட இஸ்ராயேலில் அரசி ஈசெபேல் இறைவாக்கினர் எலியாவை அச்சுறுத்தும் அளவுக்கும் (1 அர 19:1–3) நாபோத்துக்கு எதிராகச் சதி செய்யும் அளவுக்கும் (21: 15–16) ஆதிக்கம் கொண்டிருந்தாள். கெசூரின் அரசன் தல்மாயின் மகள் மாக்காவைத் தாவீதும் (2 சாமு.3:3) பார்வோனின் மகளை சாலமோனும் (1 அர 3:1) தீரின்

அரசன் எத்துபாகாலின் மகளான ஈசெபேலை ஆகாபும் (16:31) இஸ்ராயேலைச் சேர்ந்த அத்தாலியாவை யூதாவைச் சேர்ந்த யோராமும் (2 அர 8:25 –27) மணந்து கொண்டது அமைதியான உடன்படிக்கைக்காகவும், கூட்டணிகளுக்காவும் செய்யப்பட்டவையாகும். பல கூட்டாளிகளையுடைய ஆற்றல்மிக்க அரசன் பல மனைவியரைக் கொண்டிருந்தான். இவ்வாறு சாலமோன் 700 மனைவியரையும், 300 வைப்பாட்டிகளையும் கொண்டிருந்தார் (1 அர 11:3). இவர்களின் எண்ணிக்கை அரசரின் செல்வத்திற்கும் ஆதிக்கத்திற்கும் ஓர் அடையாளமாக விளங்கியது. ஓர் அரசியின் செல்வாக்கு, ஒருவேளை, அவளது உறவினரின் ஆதிக்கத்தைப் பொருத்ததாக அமைந்திருக்கலாம். அரசியைத் தவிர, அரசனுக்கு மற்ற மனைவியர்களும் இருந்தனர். இவர்கள் சில இடங்களில், தெளிவில்லாமல் "அரசியர்" என்றழைக்கப்படுகின்றனர் (உ.ச.6:8–9). இவர்கள் அரசனுடைய வைப்பாட்டிகளைவிட சிறிது உயர்ந்த இடத்தை வகித்தனர் (1 அர.11:3).

3. அரசரின் தாய்:– அரசரின் மனைவி என்ற அளவில் அரசி அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை என்றால், அரசனின் தாய் என்ற அளவில் அரசியின் இடம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எகிப்திய, மெசபொத்தாமியா, இத்தியப் பேரரசுகளில் ஆட்சி செய்யும் அரசனின் தாய் செல்வாக்குக் கொண்டிருந்தாள். யூதாவின் அரசன் ஆசாவின் தாய் மாக்கா செய்த வழிபாட்டின் குற்றத்திற்காக அவளைத் தாய்அரசி என்ற பதவியிலிருந்து நீக்கினார் (1 அர 15:13). இதிலிருந்து, தாய் அரசிக்கு யூதாவில் ஒரு சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்தாகத் தெரிகிறது. தாய் அரசிக்கு அரசனும் மரியாதை செலுத்தினார். சாலமோன், தன் தாய் பதுசேபாவுக்கு எழுந்து, அவளை எதிர்கொண்டு வணங்கி அரியணையில் அமர்த்தினார் (1 அர 2:19). தாய் அரசிக்கென ஒரு முடி இருந்திருக்கலாம் (எரே 13:18). அவள் அரசனோடு மீண்டும், மீண்டும் குறிப்பிடப்பெறுகிறாள் (13:18; 22:26; 29:2). யூதாவைச் சேர்ந்த அரச தாய்களின் பெயர்கள் விவிலிய விவரிப்புகளில் காணப்படுவதிலிருந்து யூதாவில் தாய் அரசியின் முக்கியத்துவம் தெரிகிறது (1 அரச 14: 21; 15:2.10...). அத்தாலியா, தன் தந்தை வழி வந்த ஓமிரி அரச மரபு இஸ்ராயேலில் கொலை செய்யப்பட்ட பின்பும் (2 அர 11: 1– 3), யூதாவின் அரியணையை அபகரித்து ஏழு ஆண்டுகளுக்கு ஆட்சி செய்தாள். இது தாய் அரசி கொண்டிருந்த செல்வாக்குக்கும், ஆதிக்கத்திற்கும் சான்றாக உள்ளது.

யூதாவைப்போல் வட அரசாகிய இஸ்ராயேலில் தாய் அரசிக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஏகூவின் கிளர்ச்சியின் போது அகசியாவின் உறவினர்கள் 'அரசரின் புதல்வர்களையும் அரசியின் புதல்வர்களையும்' சென்று பார்த்தனர் (2 அர 10:13). செரூயா (1 அர.11:26) ஈசெபேல் ஆகிய இரு அரச தாய்களின் பெயர்கள் மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளன. இது, அரச தாய்களுக்குச் செல்வாக்கு இல்லையென்று காட்டவில்லை (2 அர 9:22). அரசர்கள் நூலின் உபாகமப் பாரம்பரிய ஆசிரியர் வட அரசின்பால் கொண்டிருந்த பாதகமான போக்கு இதற்குக் காரணமாக இருக்கலாம்.

அரசிகள் பற்றிய புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள் (மத் 12:42; லூக் 11:31;...) அரசிகளின் நிலைபற்றிய ஒன்றும் கூறவில்லை.

அரது (ARD – தப்பி ஓடியவர், கூனன்)

எகிப்தில் வந்து குடியேறிய யாக்கோபின் குடும்பத்தைச் சேர்ந்த எழுபது பேர்களில் ஒருவராவார். பென்யாமினின் வழிவந்தவர் (ஆதி 46:27). அரதியர் வம்சத்தின் மூதாதையராக அல்லது தலைவராக இவர் கருதப்படுகிறார் (எண் 26:40).

பெயரும் குடும்ப உறவும் வெவ்வேறு வடிவம் எடுக்கின்றன. மாசாரோட்டிக் வாசகத்தில் ஆதி 46:21; எண் 26:40 கொடுக்கின்ற அரது என்ற பெயரானது, முதல் நாளாகமத்தில் வருகின்ற (8:3) அத்தார் என்ற பெயரைக் குறிக்க முன்னால் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும். அராதுக்கும் பென்யாமினுக்கும் உள்ள உறவு முறையானது மகனாகவும் (ஆதி 46:21) பேரனாக

வும் (எண் 26:40) கொள்ளுப்பேரனாகவும் (ஆதி 46:21) காணப்படுகிறது.

அரண் (FORTIFICATION, FORTRESS)

நகரை அல்லது பாளையத்தைச் சுற்றி செயற்கை முறையில் அமைக்கப்பட்ட பாதுகாப்பாகும். தொடக்கத்தில் ஓர் இடத்தின் இயற்கையான பலத்தை மேம்படச் செய்வதாக அமைந்தது. காலப் போக்கில் முற்றுகை முறைகள் முன்னேறியதற்கு ஒப்ப அரண்களும் சிக்கல்மிக்கதாயின. அடிப்படை அரண், கோபுரப் பாதுகாப்போடு கூடிய சுற்றுச் சுவர்களைக் கொண்டதாகும். சுவரைச் சுற்றி அகழி அமைக்கப்பட்டது. இந்த அரண்களில் வாயில்கள் போன்ற பலவீனமான இடங்கள் பிரச்சினைகளை உண்டாக்கின. புறத்திலிருந்து நகருக்கு நீரைக் கொண்டு வருவதற்கு, 'இத்தகைய வாயில்களை அமைக்க வேண்டியிருந்தது. அரணுக்குள் உயர்ந்த இடத்தில் அரசாங்கக் கட்டடங்கள் அமைந்திருந்தன. இவை மேலும் உள் அரண்களால் பாதுகாக்கப்பட்டிருநதன. அரண் சூழ்ந்த இடம் கோட்டை என்றழைக்கப்பட்டது. அரண் இறைவனது பாதுகாப்பையும் அடைக்கலத்தையும் அடையாளமாக உணர்த்திற்று. (சங் 59:9. 16–17; 62:2; 94:22; ஏச 33:16).

தானி.11:38–இல் வரும் "அரண்களின் தெய்வம்" இருபொருள் மயக்கமுடையது. இது உரோமையர் தெய்வம் யூபித்தர் காப்பிட்டோலீனசைக் குறித்தது என்பது பொதுவான விளக்கமாகும். இத்தெய்வத்திற்கு ஒரு பெரும் கோவிலைக் கட்டுவதாக நான்காம் அந்தியோக்கு உறுதி கூறியிருந்தார். ஆனால் வாசச் சூழ்நிலையில், இது அந்தியோக்குவையே வஞ்சப்புகழ்ச்சியாகக் குறிக்கிறது எனலாம். ஏனெனில், இவர் "இறைவெளிப்பாடு" என்று பொருள்படும் எப்பிபான் என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டார். மேலும் இவர் வேகமாக அடைந்த போர் வெற்றிகளால் முற்றுகையிடப்பட்ட அரண்களுக்கு ஒரு பயங்கர எதிரியாகத் திகழ்ந்தார் (தானி 11:24.31.39; 1 மக் 1:19.33).

அரண்மனை (PALACE)

1. அரசர்கள் அல்லது மற்ற பெரிய தலைவர்கள் தங்கி வாழ்ந்து வந்த வீடு அரண்மனை என்றழைக்கப்பட்டது. இப்பொருளை உணர்த்த பல சொற்கள் பயன்பட்டுள்ளன (ஆதி 12:15:1 அர 4:6;16:18; 2 அர 10:5; 15:25; 2 நாள் 2:1; 9:11; 36:19: எஸ் 6:2; நெக 1:1; 7:2; எஸ்த 1:2.5; 2:3–5; ஏச 23:13; 34:13; 39:7; மத் 26:31.58.69...)

2. அன்னிய அரண்மனைகள்:- விவிலியத்திலே அன்னிய அரசர்களாகிய பாரவோன் (ஆதி.12:15), நெபுக்கதுனேசார் (தானி 1:4), பேல்சாசார் (தானி 5:5), தாரியு (6:18) ஆகியோரது வீட்டைப் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. இஸ்ராயேலும் யூதாவும், மெசபொத்தோமியா எகிப்து ஆகிய நாடுகளோடு கொண்டிருந்த வர்த்தக அரசியல் உறவுகளோடு அந்நாட்டு அரண்மனைகளைப்பற்றியும் அறிய வந்தன. பாலஸ்தீனத்தில் நடந்த புதைப்பொருள் ஆராய்ச்சிகள் பல பெரிய கட்டடங்களை வெளிக்கொணர்ந்துள்ளன. இவை அரண்மனைகளாக இருந்திருக்கலாம்.

3. எபிரேய அரசர்களின் அரண்மனைகள்:-

தாவீதின் அரண்மனையானது தீரின் அரசனாகிய கீராமினால் அனுப்பி வைக்கப்பட்ட தச்சர்களாலும், கொத்தனார்களாலும் கேதுரு மரங்களால் கட்டப்பட்டது. அதில் தாவீதுவுடைய மனைவிகளும் வைப்பாட்டிகளும், வேலையாட்களும் மக்களும் வாழ்ந்தனர் (2 சாமு 5:11). சாலமோனுடைய அரண்மனையும் இவர்களால் தான் கட்டப்பட்டது. "லீபானின் வனம்" என்ற மாளிகையானது முழ நீளமும் ஐம்பது முழ அகலமும் முப்பது முழ உயரமும் இருந்தது (1 அர 7:1–12) எருசலேமின் அழிவின்போது (587 கி.மு) சாலமோன், தாவீது அரசனுடைய அரண்மனையின் சில பகுதிகள் இருந்ததாக சான்றுகள் கிடைக்கின்றன. அதனுடைய முழுமையான அழிவானது கி.பி.135–க்கு பிறகு நடந்தது. சாலமோன் தன்னுடைய ஆட்சியின்போது தன்னுடைய ஆளுநர்களுக்கும் பெரிய வீடுகள் கட்டிக் கொடுத்தார்.

வட அரசாகிய இஸ்ராயேல் நாட்டில் எரொபயாமும் அவனுடைய வழித்தோன்றல்களும் அரண்மனையில் இருந்

தனர். சிமிரி தன்அரசாட்சியின் 7–ஆம் நாளில் கலகத்தின் விளைவால் அரண் மனைக்குள் புகுந்து அதைத் தீக்கிரையாக் கியதோடு தானும் தீக்குளித்தார் (1 அர 16:18). எனவே அவருக்குப்பிறகு ஆண்ட ஓமிரி சமாரியரின் மலைமேலே அரண் மனைகள் கட்டித் தன் தலைநகராக ஆக்கிக் கொண்டார். பின்பு இது அவரு டைய மகன் ஆகாபால் விரிவாக்கப் பட்டது. புதைபொருள் ஆராய்ச்சி ஆகாபு தந்தத் தால் வீடு கட்டியதற்குச் சான்று காட்டு கிறது (1 அர 22:39). இது ஆமோஸ் இறைவாக்கினராலும் உறுதிப்படுத்தப்படு கிறது (ஆமோ 3:15; 6:4). தேல்–ஏல்–பூல், கிபயா ஆகிய இடங்களில் நடந்த தொல் பொருள். ஆய்வுகள் வலிமையான அரண் களைக் காட்டுகின்றன.

4. கிரேக்கர், உரோமையர் காலத்திய அரண்மனைகள்.

அடிமைத் தனத்திற்குப்பின்பு எருச லேமை ஆண்டவர்கள் தனிப்பட்ட வீடு களில் வாழ்ந்தனர் (நெக 2:8). யாசோன் என்ற பெரிய குரு, அந்தியோக்கு எப்பி பானின் தூண்டுதலால் நகரத்தாரின் ஒழுங்கு முறைகளை நீக்கி, கோட்டைக் கருகிலேயே உடற்பயிற்சிக்கூடத்தை நிறுவி னார் (2 மக் 4:12). ஒனியாவின் மகனான சீமோன் தலைமைக் குருவாக இருந்த போது கடவுளின் ஆலயத்தை உறுதிப் படுத்தினார். ஆலயத்துக்கு அருகில் தனக் கென ஓர் அரண்மனையைக் கட்டிக் கொண்டார் (சீரா 50:1).

ஏரோது யூதர்களுடைய அரசனான போது மிகப்பெரிய கட்டிடங்களை எழுப் பும் திட்டங்களை உருவாக்கினார். எருச லேமின் வடக்கிழக்குப் பகுதியில் மூன்று மிகப்பெரிய கோபுரங்களைக் கொண்ட அரண்மனையைக்கட்டினார். எரிகோவில் கட்டப்பட்ட மற்றுமொரு அரண்மனை அவருடைய சாவின்போது தீக்கிரையாக் கப்பட்டது. 1950–51–இல் ஆராய்ச்சியின் படி இது அரசனுடைய குளிர்கால உறை விடமாக இருந்தது. கி.மு.40–இல் ஏரோது சாக்கடலுக்கு அருகிலிருந்த அரண்மனையிலே தஞ்சம் புகுந்திருந்தார். அப்போது பார்த்தியர்கள் எருசலேமை முற்றுகையிட்டார்கள்.

புதிய ஏற்பாட்டிலே உள்ள குறிப்புகள் (மத் 26:3.58.69; மாற் 14:54.66; யோவா 18:15) இயேசுவின் காலத்திலே தலைமைக் குருக் கள், உரோமைய ஆளுநர்கள் இருந்த போதும், தங்களுக்கென தனியாக அரண் மனைப் பெற்றிருந்தார்கள் என்று காட்டு கின்றன.

அரண்மனை மேற்பார்வையாளர் (CHAMBERLAIN)

இவர் அரசனுடைய தனிப்பட்ட காரி யங்களைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட அதிகாரிகளில் ஒருவர். அரசன் நம்பு கின்ற அளவிற்கு அவரோடு மிக நெருங் கிய தொடர்பு கொண்டவர். யோசியா அரசன் காலத்தில் நாத்தான்மெலக்கு என்பவர் அரண்மனை மேற்பார்வை யாள ராக இருந்தார் (2 அர 23:11). இந்த அதி காரிகள் அரண்மனைப் பெண்களின் படுக்கையறையில் நுழையக்கூடிய உரிமை பெற்றிருந்த கரணத்தால் பெரும்பாலும் அவர்கள் அண்ணர்களாகவே இருந்தனர் (எஸ் 1:10).

அரபா (ARABAH – பாலைவனம், எரிந்துபோன)

அரபா பாலஸ்தீனத்தின் பகுதிகளான கடற்கரைச் சமவெளி, நெகேபு, செப் பேலா மற்றும் மலைப்பகுதிகள் ஆகிய வற்றிலிருந்து வேறுபடுத்தப்பட்ட பகுதியா கும். சில இடங்களில் இது சமவெளி என்று குறிக்கப்பட்டாலும், உண்மையில் இது பாலஸ்தீனத்தின் கிழக்குப் பகுதியி லுள்ள ஒரு பள்ளமாகும்.

அ) இடஅமைப்பு:- பழைய ஏற்பாடு இப்பகுதியைப் போதிய மட்டும் துல்லிய மாக விவரிக்கிறது. இது கின்னெரேத் துக்குத் தெற்கில் உள்ளது. யோர்தானை எல்லையாகக்கொண்டது. அரபா கடலா கிய உப்புக் கடல், கிழக்கில் பிசுகாவின் சரிவுகளையும் இப்பகுதி கொண்டிருந்தது (உப 3:17; யோசு 12:3.8; 2 அர 14:25). இதோடு தொடர்புடைய வாசகப் பகுதிகள் கின்னெ ரோத் (யோசு 11:2) யோர்தானின் கிழக்குப்படுகை (உபா 4:49) சாக்கடல் அல்லது உப்புக் கடல் (4:9; யோசு 3:16) ஆகியவற்றைக் குறிக்கின்றன. ஒரு தடவை யாவது, சாக்கடலிலிருந்து, எசியோன் கெபேர்வரையுள்ள அரபாவின் தென் பகுதி குறிக்கப்படுகிறது (உப 2:8).

இவ்வாறு அரபா 1) யோர்தான் பள்ளத் தாக்கு, 2) சாக்கடல் பகுதி 3) சாக்கடலிலிருந்து அக்காபா வளைகுடாவரை உள்ள பகுதி என்று மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது.

ஆ) வரலாறு:- பாலைவனத்தில் இஸ்ராயேல் செய்த பயணத்தின் முடிவில், அரபா முதல் தடவை குறிக்கப்படுகிறது. இஸ்ராயேலர் எகிப்திலிருந்து கானானுக்கு வந்தபோது கடந்து வந்தவழிகளில் ஒன்று. உப 2:8–இன்படி ஏதோம், மோவாபைத் தவிர்ப்பதற்காக காதேசுபார்னேயாவிலிருந்து ஏசியோன்–கெபேர் வழியாக மோவாபை நோக்கிப் பயணம் செய்தனர். இத்தருணத்தில் அரபாவில் மோவாபியர்களின் பகுதி ஒர் எமோரிய அரசனான சீகோனால் கைப்பற்றப்பட்டு, பின்னர் இஸ்ராயேலர்களால் அவரிடமிருந்து வெற்றிகொண்டு பிடிக்கப்பட்டது. இவ்விடத்தில்தான் மோசே இறைவனது ஆற்றல் மிக்க செயல்களை தம் மக்களுக்கு மீண்டும் எடுத்துக் கூறினார் (எண் 32:36; உப 1:1)

யோசுவா (இங்கிருந்து புறப்பட்டு) சாக்கடலுக்கு வடக்கில் யோர்தானைக் கடந்து எரிகோவின் அரபாவை அடைந்து (யோசு 3:16) அங்கு கில்காலில் வழிபாட்டிடத்தையும் தனது போர்த்தலைமையகத்தையும் (4:19) நிறுவினார். எரிகோவை வெற்றிகொண்டு (ஆதி 6) அதன்மூலம் யோர்தானின் மேற்குப் பகுதியை வெற்றிகொள்ள வழிவகுத்தார்.

வட அரபா பற்றி பின்னைய வரலாற்று நிகழ்ச்சிகளில் கூறப்படுகிறது. பின்பு அரசன் சவுலால் துரத்தப்பட்ட காலத்தில் தாவீது மாவோன் பாலைவனத்தில் ஒளிந்து வாழ்ந்தார் (1 சாமு 23:24). அபினேர் கிபயோனில் தோற்கடிக்கப்பட்டபின் தாவீதின் தளபதி யோவாபின் வீரர்களிடமிருந்து தப்பிக்க இதன் வழியாக ஒடியதாகக் கூறப்படுகிறது (2 சாமு 2:29). இசிபோத்தை இரிம்மோனின் புதல்வர்கள் கொன்று அவரது தலையைத் கெபிரோனில் இருந்த தாவீதிடம் கொண்டு செல்ல இரவு முழுவதும் இதன் வழியாகச் சென்றனர் (4:7). பிரிவுபட்ட அரசாட்சி காலத்தில் 2–ஆம் எரொபயாம் தனது அரசின் கிழக்கு எல்லையின் ஒரு பாகமாக அரபாவைக் கருதினார் (2 அர 14:25). பாபிலோனியர்கள் நாட்டைக் கைப்பற்றியபோது செதேக்கியா தப்பி ஒடியபோது இங்குதான் எரிகோவின் சமவெளி அருகில் கல்தேயர்களால் பிடிபட்டார் (2 அர 25:4; எரே 39:4; 52:7). தென் அரபா பற்றி அதிகம் பேசப்படாவிட்டாலும், இது யூதா, இஸ்ராயேல் ஆகியோரின் உரிமையாக இருந்தது. பின் ஏதோமியர்களால் மீண்டும் ஆட்கொள்ளப்பட்டது. கி.மு. 3 லிருந்து இப்பகுதி நபத்தேயர்கைவசம் ஆனது.

பின்னைய இறைவாக்கு நூல்களில் இதுபற்றிப் பேசப்படுகிறது. ஆதி.13–19–ல் உள்ளபடி ஐந்து தீய நகரங்களின் முன்னர், அரபாவின் சாக்கடல்பகுதி செழிப்பு மிக்கதாகவும் ஆண்டவரது இன்பவனம் போல் விளங்கியது (13:10). பிற்கால இறைவாக்கு நூல்கள் இப்பகுதி தனது பழைய வளமையைப் பெறுவது இஸ்ராயேல் தன்வளமையைப் பெறுவதன் வாக்குறுதியைக் குறிப்பதாகும் என முன்னறிவிக்கிறது. எசக்கியேல் ஆலயத்தின் கீழ்ப்புறத்தில் இருந்து நீர் ஊற்று புறப்பட்டு அரபா, சாக்கடல்வரை சென்று அவற்றை வளமானதாகவும், பயனுள்ளதாகவும் மாற்றும் எனக் குறிப்பிடுகிறார் (எச 47:1–12). இதே வாக்குறுதிகள் மீண்டும் பலஇறைவாக்குகளில் எதிரொலிக்கின்றன. யோவேல் 3:18; செக் 14:8; ஏச 35:1; 51:3 போன்ற பகுதிகளில் பாலைவனம் என்று குறிப்பிடுவது உண்மையில் அரபாவைக் குறிப்பதாக இருக்கலாம். இப்பகுதி பற்றிய கடைசிக்குறிப்பு அடையாளத் தன்மையுடையது. செக் 14:10–இன்படி கெபாவிலிருந்து இரிம்மோனுக்கு இடைப்பட்ட பகுதி "சமவெளியாக்கப்படும்"., இவ்வாறு அரபா எருசலேமின் மேன்மையோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது.

அரபாவின் ஓடை (BROOK OF THE ARABAH)

சாக்கடலுக்குத் தென்புறத்தில், இஸ்ராயேலின் தென் எல்லையைக் குறிக்கும் விதத்தில் அமைந்த வறண்ட நீரோடை (ஆமோ 6:14). இது ஒருவேளை செரேது என்ற சிற்றோடையாக இருக்கலாம் அல்லது எகிப்திய சிற்றோடையாக

இருக்கலாம். இதுதான் இஸ்ராயேலின் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தென் எல்லை. அரபா ஓடையே அலரிகளின் ஓடையாக இருக்கலாம். காண்க. அலரிகளின் ஓடை.

அரபாக்கடல்
(SEA OF THE ARABAH – பாலைவனக்கடல்)

பழைய ஏற்பாட்டில் உப்புக் கடலோடு இணைத்துப் பேசப்படும் ஒரு ஏரியாகும் (உப 3:17; யோசு 3:16; 12:13; மேலும் காண்க. உப 4:19; 2 அர 14:25). இது இப்போது பொதுவாகச் சாக்கடல் என்றழைக்கப்படுகிறது. அரபா பள்ளத்தில் மிக ஆழ்ந்த பகுதியில் இருப்பதால் இப்பெயர் பெறுகிறது.

அரபு (ARAB – பாலைவனம், பதுங்கி இருத்தல்)

யூதா நாட்டின் மலைப்பகுதியிலுள்ள ஒரு நகர், கெபிரோனின் தென் மேற்கிலுள்ளது (யோசு 15:52). ஒருவேளை 2 சாமு 23:35–இல் குறிக்கப்படும் பாகராயின் பிறப்பிடமாக இருக்கலாம். தூமாவிற்குக் கிழக்கேயும் ஊம்–ஏல்–அமாத்திற்கு அருகேயும் உள்ள இக்கால ஏர்–ராபியே தான் இவ்விடம் என்று கருதப்படுகிறது.

அரமேயம் (ARAMAIC)

செமித்திய மொழியின் திரிபு மொழிகளின் தொகுப்பு இப்பெயரால் அழைக்கப்படுகிறது. இது எபிரேயத்துக்கு நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது.

1. வரலாறு:- அரமேயர்கள் பேசிய மொழியாததால் அரமேயம் என்று பெயர் பெற்றது. இந்த அரமேயர்கள் கி.மு.2–ஆம் ஆயிரமாண்டின் தொடக்கத்தில் வட மேற்கு மெசபொத்தாமியாவில் வாழ்ந்து வந்தனர். இவர்களது தொடக்க வரலாறு தெளிவாக இல்லை. ஆனால் இவர்கள் எழுதத் தொடங்கியபோது கானானிய திரிபு மொழிகளைப் பயன்படுத்தினர். கி.மு. 12–ஆம் நூற்றாண்டில் அரமேயக் குழுக்கள் திகிரிசு, யூப்பிரத்திசு ஆகிய ஆறுகளை ஒட்டியும் பாலஸ்தீனத்திலும், வட அரேபியாவிலும் குடியேறியதற்குச் சான்றுகள் உள்ளன. அடுத்த நூற்றாண்டில் இவர்கள் சீரியாவில் பல நகர அரசுகளை அமைத்திருந்தனர். காலப் போக்கில் இவர்களது அரசியல் சுதந்திரம் அழிந்து போனது அதன் பின்புதான் அவர்களது மொழியின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. இவர்களது மொழி, வணிகத்திலும் அரசியலிலும், தூதுக் குழுக்களாலும் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. அசீரியப் பேரரசில், அக்காதிய மொழியை அகற்றிவிட்டு, இது மக்களின் பொது மொழியாகிறது (கி.மு. 1100–600). பாபிலோனியப் பேரரசிலும் அவ்விதமே பயன்பட்டு (600–540) அது பாரசீகப் பேரசின் அதிகாரப்பூர்வமான மொழியானபோது (500–300) இது தன் உச்சநிலையை அடைந்தது. ஆனால் கிரேக்க மொழியின் வருகையால் இதன் ஆதிக்கம் குறைந்தது. கி.மு. 300–க்குப் பின் கிரேக்க மொழி மக்களின் பொது மொழியாக மாறியது. அரேமேயிக்கின் சில பிரிவு மொழிகள் இங்குமங்குமாக தனிப்பட்ட குழுவினரிடையே பயன்படுத்தப்பட்டது. இன்றும் அரமேயத்தின் ஒரு வகை, மேற்காசியாவின் சில பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது.

2 அர 18:26; ஏச 36:11–இல் குறிக்கப்படும் நிகழ்ச்சி, அரேமேய மொழி பாலஸ்தீனத்தில் பரவியிருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. கி.மு.701–இல் சனகெரிபு எருசலேமை முற்றுகையிட்டபோது யூத அதிகாரிகள் நடக்கும் விவகாரங்களை எபிரேயா மொழி பேசும் பொதுமக்கள் புரிந்து கொள்ளாதிருக்கும்படி அசீரிய இரபிசாகே தூது மொழியைப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றனர். நாடு கடத்தப்பட்டு திரும்பியபின் அரமேயம் எவ்வளவு ஆதிக்கம் செலுத்தியதென்றால் எபிரேய வேதவாசகத்திற்குப்பின் அரமேய மொழிபெயர்ப்புக்குக் கொடுக்கப்படுவது அவசியமாயிற்று. இது பிற்காலத்தில் தார்கூமின் நிலையான அமைப்பாயிற்று (காண்க: நெக 8:8).

2. விவிலிய அரமேய்க்கு:-

அ. பழைய ஏற்பாடு:- பழைய ஏற்பாட்டின் சில பகுதிகள் எழுதப்பட்டிருக்கும் மொழி விவிலிய அரமேயம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இது கல்தேய மொழி என்ற பெயர் பெற்றிருந்தாலும் இது பாரசீகப் பேரரசு முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட அதிகாரப்

பூர்வமான அரமேய மொழிதான். காலத்தால் முந்திய விவிலிய அரமேயிக்குச் சான்று: லாபான் யாக்கோப்போடு செய்த உடன்படிக்கையில் வரும் எகர்—சகதூத்தா என்ற பெயராகும் (ஆதி 31:47). இதை சில மொழி பெயர்ப்புகள் சாட்சியக் குவியல் என்று மொழி பெயர்க்கின்றன. எரே 10.11—இல் சிலைகள் மேல் யாவே கொண்டிருக்கும் மேலாண்மையை எடுத்துக்கூறும் பாடலில் அரமேய இடை புகுதல் காணப்படுகிறது. எஸ்ரா நூலில் இரு பகுதிகள் அரமேயத்தில் உள்ளன. இவற்றில் ஒன்று அதிகாரிகளுக்கும் பாரசீக அரசர்கள் அர்த்த செருசு, தாரியு ஆகிய வர்களுக்கும் இடையே இருந்த, எருசலேமும் ஆலயமும் மீண்டும் கட்டப்படுவதைப் பற்றிய கடிதப் போக்குவரத்து ஆகும் (4:8—6:18). மற்றது எஸ்ராவின் அலுவலுக்கு அவருக்கு அதிகாரம் அளிக்கும் அர்த்தாசெருசின் கடிதமாகும் (7:12—26).

தானியேலின் ஒரு முக்கிய பெரும் பகுதி அரமேயத்தில் எழுதப்பட்டிருக்கிறது (2:4—7:28). இதில் நெபுக்கதுனேசாரின் கனவு, அவரது பைத்தியம், சதிராக்கு, மேசாக்கு, ஆபதுநெகோ ஆகியோர் பற்றிய கதை, பேல்சாசாரின் விருந்து, சிங்கக் குகையில் தானியேல், அவரது முதல்காட்சி ஆகியவைகள் அடங்கும். தானியேலின் எபிரேயப் பகுதிகள் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும். சில அறிஞர்களின் கருத்துப்படி இப்பகுதியும் அரமேயத்திலிருந்து எபிரேயத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டதாக இருக்கலாம்.

ஆ. புதிய ஏற்பாட்டில் பல அரமேயச் சொற்களும், அரேமேயப் பாதிப்பும், காணப்படுகின்றன. "தலித்தாகூம்" (சிறுமியே எழுந்திரு, மாற் 5:41), "எப்பத்தா" (திறக்கப்படு 7:34), "ஏலி, ஏலி லாமா சபக்தானி" (என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக்கைவிட்டீர், மத் 27:46; மாற் 15:34), "ரபூனி" (போதகரே, மாற்கு 10:51; யோவா 20:16), மாரனாதா (ஆண்டவரே வருக, 1 கொரி 16:22), "கேபா" (யோவா 1:42; 1 கொரி 1:12), தபித்தா (அ.ப.4:36.40) ஆகிய ஆட்பெயர்களிலும், அக்கலிதமா (அ.ப.1:19), கெதுசமனி (மத் 26:36; மாற் 14:32), கொல்கொத்தா (மாற் 15:27) ஆகிய இடப்பெயர்களிலும் அரமேய மொழியின் பாதிப்பு உள்ளது.

கி.பி முதல்நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் அரமேய மொழிதான் பேசப்பட்டது என்பது இப்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். இம்மொழியின் கலிலேய திரிபுமொழியை இயேசுவும் அவரது சீடர்களும் பவுலும் பேசினர். இது எருசலேமில் பயன்படுத்தப்பட்ட திரிபு மொழியிலிருந்து வேறுபட்டதாகும் (மத் 26:73)

3. பிரிவுகள்:- இடம், காலம், இலக்கிய வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் அரமேயத்தின் பல பிரிவுகளையும் வேறுபடுத்தலாம்.

அ. பழைய அரமேயம்:- இதற்குச் சான்றுகள், சீரியா, பாலஸ்தீனத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள கி.மு. 8—ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த கல்வெட்டுக்களும், வட கலிலேயாவில் காணப்படும் பாண்டங்களின் மேலுள்ள வாசகங்களும் ஆகும்.

ஆ. அதிகாரப்பூர்வமான அரமேய பொது மொழி வடிவம் அரச வட்டாரங்களில் உருவாக்கப்பட்டது. இது 9—ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் வளர்ச்சியடைந்து மேற்காசியாவில், அசீரியா, பாபிலோனிய பாரசீகப் பேரரசுகளில் ஆதிக்கம் செலுத்தியது. இதன் கல்வெட்டுக்களும், எலெபென்டைன் ஏடுகளில் காணப்படும் கடிதப்போக்குவரத்துக்களும், வணிக ஏடுகளும், முத்திரைகளும் இவ்வகைக்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. பாரசீகப் பேரரசின் அழிவோடு இவ்வகை இலக்கிய மொழியாகவும் (சான்றுகள் தானியேல், தோபித், ஏனோக் ஆகிய நூல்கள், பல கும்ரான் ஏடுகள், சில தார்கூம் வாசகங்கள்) சட்ட மொழியாகவும், (நபத்தேய பல்மைரா கல்வெட்டுக்கள், கடிதங்கள்) பயன் பட்டுள்ளது.

இ.கி.மு.300—200—க்கு இடைப்பட்ட காலம். கிரேக்க மொழி அதிகாரப்பூர்வமான மொழியானபின், அரமேய மொழியில் மேற்கு, கிழக்கு அரமேயம் என இரு முக்கிய பிரிவுகள் சிறப்புப் பெற்றன.

1) மேற்கு அரமேயம் எலெவான்டைன் அரமேயம் என்றழைக்கப்பட்டது. இதற்குச்

சான்றுகள்: எருசலேம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களும் புதிய ஏற்பாட்டில் காணப்படும் பெயர்களும், பதங்களும், பார்கோப்பாவின் கடிதங்களும் ஆகும். இதன் கீழ் மூன்று துணைப்பிரிவுகள் காலப்போக்கில் (கி.பி. 200–900) தோன்றியதாகத் தெரிகிறது. பாலஸ்தீன யூத அரமேயம், பாலஸ்தீன தால்மூத், மிட்ராசிம், தார்கூம் ஆகியவற்றில் பயன்பட்டுள்ள அரமேயம், பாலஸ்தீனத்திலும் எகிப்திலும் யூதக் கிறிஸ்துவர்களும், செக்கேம் பகுதியில் சமாரியர்களும் பயன்படுத்திய கிறிஸ்துவப் பாலஸ்தீன அரமேயம் ஆகும்.

2) கிழக்கு அரமேயத்திற்கு கி.பி.2–ஆம் நூற்றாண்டிலிருந்து சான்றுகள் உள்ளன. இது பிற்காலத்தில் மூன்று முக்கிய துணைப்பிரிவு மொழிகளாக வடிவெடுத்தது. அ) சீரியக்மொழி இதில் பலவாரியான இலக்கியங்கள் உள்ளன. பாரசீகத்திலிருந்து சீனாவரைக்கும் உள்ள பகுதிகள் சிறிய ஆசியா, அராபியா, எகிப்து ஆகிய பகுதிகளில் அரமேயம் பேசும் கிறிஸ்துவர்களால் பயனபடுத்தப்பட்டது. ஆ) யூத பாபிலோனிய அரமேயம். இது பாபிலோனிய தால்மூதில் பயன்பட்டுள்ளது. இ) மண்டேயன் ஆமேயிக் இதற்குச் சான்றுகள் கிறிஸ்துவத்தைச் சேராத அறிவியல் வாதிகளான மண்டேயர்களின் சமய இலக்கியங்களிலும், காப்புகளிலும் மந்திரப் பாத்திரங்களிலும் காணப்படுகிறது.

இக்காலத்தில் மேற்கு அரமேயத்தின் ஒருவகை கிழக்கு லெபனோனில் உள்ள சில கிறிஸ்தவப் குடியிருப்புகளில் பயன்படுத்தபட்டு வருகிறது. கிழக்கு அரமேயம் இக்கால சீரியக் என்றழைக்கப்படுகிறது. இது வட சீரிய, துருக்கியின் வான்ஏரிப் பகுதி, சோவியத் யூனியனில் அசெர்பாயிபான், ஈராக், ஈரான் ஆகிய நாடுகளின் வடபகுதிகள் ஆகியவற்றில் சில கிறிஸ்துவக் குடியிருப்புகளால் பயன்படுத்தப்படுகிறது.

4. இலக்கியப்பண்புகள்:- உச்சரிப்பில் விவிலிய எபிரேயத்துக்கு ஒத்த, அரமேயம் மொழிக்கு 23 மெய் எழுத்துக்கள் உண்டு. சொற்கள் மூன்று மெய் எழுத்துக்கள்கொண்ட வேர்ச்சொல்பகுதியை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படுகின்றன. இவை முன், இடை, பின் சேர்க்கைகளால் வெவ்வேறு விதமாய் உச்சரிக்கப்படுகின்றன. வினைச்சொல்வேர் அடிப்படையைக் கொண்டு, ஆள், எண் காலம், ஆகியவற்றிற்கேற்ப வேறுபட உச்சரிக்கப்படுகின்றன. பெயர்ச் சொல், ஆண், பெண் பால்வகை, எண் வகையில் பிரிக்கப்படுகின்றன.

இதன் நெடுங்கணக்கு எழுத்துக்கள், கானானியர் எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்டாலும், அதை எழுதுவதற்கு எளிதாக்கியது. அதனால் அக்காதிய மொழியை அகற்றி, அதன் இடத்தை நிறைவு செய்தது.

பெனிசிய எழுத்துக்களினின்று தோன்றி, 9–ஆம் நூற்றாண்டைப்போல் ஒரு தனிப்பட்ட அரமேய எழுதும் முறை வளர்ச்சியடைந்தது. அம்மோனியர், ஏதோமியர் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டு பல பிரிவு மொழிகள் தோன்றின. அதன் தொடராகச் செல்லும் வடிவிலிருந்து கி.மு.2–ஆம் நூற்றாண்டைப்போல் எபிரேய மொழி ஏற்றுக்கொண்ட சதுர எழுத்துவடிவம் தோன்றியது. பாரசீகப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் இம்மொழி பல வடிவம் எடுத்தது. அவற்றில் சில நாபத்தேய (அதன்வழியே வந்த அராபிக்கும்) சீரியாக், மண்டேயன், பக்லாவி, பார்த்தியன், சொக்தியன், மங்கோல் ஆகிய மொழிகளும் வெவ்வேறான கிழக்கத்திய எழுதும் முறைகளும் தோன்றின.

அரமேயர்கள் (ARAMEANS)

ஒரு செமித்திய இனம், சீரியாவுக்கு வட கிழக்கில் அமைந்திருந்த அராமே நாட்டின் பெயரிலிருந்து இவர்கள் இப்பெயர் பெற்றிருக்கலாம். அராம் என்ற பெயர் மக்களையும் (1 நாள் 2:23) அவர்கள் தோன்றிய நாட்டையும் (2 சாமு 15:8; ஒசே 12:12; செக் 9:1) குறிக்கப்பயன் பட்டுள்ளது. விவிலிய வாசகங்களிலும் மொழி பெயர்ப்புகளிலும் இவர்கள் அரமேயர்கள் என்றும், சீரியர்கள் என்றும், ஒரு பொருள் இரு சொற்களாகக் குறிக்கப் பெறுகின்றனர்.

1. இடம்:- அரமேயர்கள் மெசபொத்தோமியா, சீரியா, யோர்தானுக்கு கிழக்கி

லுள்ள பகுதி ஆகியவற்றில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமஸ்குவின் அராமிலும் (2 சாமு 8:6; 1 நாள் 18:6) சோபாவிலும், கூலே-சீரியாவிலும் (லெபானோன்னுக்கும் கீழ்லெபானோன்னுக்கும் இடைப்பட்ட பகுதி) தாணுக்கு அருகில் பேத்துர கோபிலும் அரண்களைக் கொண்டிருந்தனர். இப்பகுதியாவும் இப்போது சீரியா என்றழைக்கப்படுகிறது. மெசபொத்தாமியாவில் இவர்கள் ஆராம் நகராயிமிலும் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் பாசானுக்கு அருகில் உள்ள மாக்கா (அராம்-மாக்கா)வைச் சுற்றிலும் வாழ்ந்தனர்.

2.வரலாறு:- அரமேயர்கள் வரலாறு கி.மு. 3100-ஐ ஒட்டித் தொடங்கியதாகத் தெரிகிறது. இச்சமயத்தில் இவர்கள் நாடோடி அரமேயர்களாக எகிப்தில் காணப்படுகின்றனர். அமர்னா காலத்தில் (கி.மு.1400-ஒட்டியது) அவர்கள் பெயர் அக்காதியன் ஏடுகளில் காணப்படுகிறது.

அரமேயர்களுக்கு இஸ்ராயேலர்களுக்கு முள்ள உறவு மிகப்பழமையானது. நெருங் கியதுமாகும். விவிலியத்தில் நாடுகளின் பட்டியலில் சேமின் வழித்தோன்றல்களில் ஒருவரான அராம் அராமேயர்களின் மூலகுல மூதாதையராகக் கூறுப்படுகிறது (ஆதி 10:22-23). ஆமோ 9:7-இன்படி இவர்கள் மெசபொத்தாமியாவில் கீரின் சுற்று வட்டாரத்தில் தோன்றியவர்கள் ஆவார். கி.மு.2400-ஐ ஒட்டி இவர்கள் திகிரிசைக் கடந்து சீரியாவுக்குள் புகுந்தனர். நகர அரசுகளை அமைத்து, வளமாக வாழ்ந்தனர். ஆபிரகாமின் சகோதரன் நாகோர் அராமுக்குத் தந்தையாவார் (ஆதி 10:22-23). ரெபெக்கா, லாபான் ஆகியோரின் தந்தையான (10:22-23) பெத்தூவேல் அரமேய இனத்தைச் சேர்ந்தவர். ஆபிரகாம் தனது கண்காணிப்பாளரான எலியேசரை காரானுக்கு (விவிலிய பாதான்-ஆராம்) அனுப்பித் தன் மகன் ஈசாக்குக்கு ஒரு மனைவியைக் கொண்டு வரச் செய்தார்.. அதன் விளைவாக ரெபெக்கா ஈசாக்கின் மனைவியானாள். பிறகு யாக்கோபுவும், அங்கேயே தனது மனைவியரைக் கொண்டார் (28:5). யாக்கோபு தன் தாய்மாமன் லாபானுக்கு 21 ஆண்டுகள் பணிபுரிகிறார் (31:20.24). உப 26:5-இல் யாக்கோபு "அலைந்து திரியும் அராமேயன்" என்றழைக்கப்படுகிறார். இதற்கு லாபானின் புதல்வியர் லேயா, ராக்கேல் ஆகியோரை மணந்த சூழ்நிலை அடிப்படையாக இருக்கலாம். ஆனால் இதைவிட, அராமேய நாடோடித் தன்மையைப்பற்றிய குறிப்பாகவோ அல்லது கபிரூவின் செயல்களோடு யாக்கோபு கொண்ட தொடர்பு காரணமாகவோ இருக்கலாம்.

அரசாட்சிக் காலத்தில் சவுல், சோபாவில் அராமேயர்களோடு போரிட்டு வென்றார் (1 சாமு 14:47). பிற்காலத்தில் சோபாவின் அரசனான அதாதெசரையும் (2 சாமு 8:3-4) தமஸ்குவின் அரமேயர்களையும் (8:5) தாவீது தோற்கடித்தார். பல அரமேய இனத்தவர்கள் இஸ்ராயேலரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டனர். ஆண்டுதோறும் கப்பம் கட்டினர். இவர்கள் அம்மோனியர்களுக்கு உதவி செய்ய முயன்றனர். இந்த அம்மோனியரும் அரமேயர்களே. பாரம்பரியமாக லோத்தோடு உறவுடையவர்கள் (ஆதி 11:26-27; 19:30-38). நாகாசு இறப்புக்குப் பிறகு அம்மோனியர் தாவீதோடு போரிட்டபோது, அரமேயர்கள் அம்மோனியர்களுக்கு உதவினர். ஆனால் தோற்கடிக்கப்பட்டனர் (2 சாமு 10:1-19). அதற்குப் பிறகு அம்மோனியருக்கு உதவத் துணியவில்லை (10:19).

சாலமோன் காலத்திலும், ஓரளவுக்கு வட அரசின் முதல் அரசர்களுக்கும் அரமேயர் அடிமைப்பட்டிருந்தனர் (ஆனால் காண்க 1 அர 15:18-20). ஆகாபின் ஆட்சிக் காலத்தில் தமஸ்குவின் பென்-அதாது சமாரியாவை முற்றுகையிட்டார் (20:1). அரமேயர்களின் தாக்குதல்பற்றி முன்னறிவிக்கப்பட்டு, ஆகாபு அரமேயர்களைத் தனது தலைநகரிலிருந்து விரட்டிய தோடல்லாமல், அநேகரை கொன்று தீர்த்தார் (20:21). இன்னும் சில வெற்றிகளால் ஊக்குவிக்கப்பட்டு, இராமோத்-கிலயாத்தைத் திரும்பக் கைப்பற்ற போரிட்டார். அதில் கடுங்காயம்பட்டு இறந்தார் (22:34-37).

சமாரியாவைக் கைப்பற்ற முடியவில்லையானாலும் (7:10) இஸ்ராயேலர்

அரசர்கள் யோராம், ஏகூ ஆகியோரின் காலத்தில் அராமேயர்கள் வலுவான அரசியல் சக்தியாகத் திகழ்ந்தனர் (2 அர 8:28–29; 9:32–33) இஸ்ராயேலின் பெயர் குறிக்கப்படாத ஓர் அரசன், சீரியனான நாகமான் இஸ்ரா யேல் நாட்டிற்குள் வர அனுமதித்தார் (5:20; 4:2). ஆனால் யூதாவின் அரசன் யோவாசு அரமேயர் களால் இழிவுபடுத்தப்பட்டார். ஏனெனில் அவரும் அவருடைய மக்களும், "அவர் முன்னோரின் இறை வனாகிய ஆண்டவரைக் கைவிட்டனர் (2 நாள் 29:24).

அசீரிய அரசு வலுப்பெற்று படையெடுக்க, அரமேயர்கள் நகரங்களையும் நாட்டின் பகுதிகளையும் படிப்படியாக இழந்தனர். அரமேயர்களின் கொடுமைக் குத் தண்டனையாக (ஆமோ 1:3) ஆமோஸ் முன்னறிவித்தபடி (1:5) 732–இல் சோபா, தமஸ்கு ஆகியவை முதலில் சரண் அடைந்தன. பிறகு 720–இல் கமாத்தும் வீழ்ந்தது. 732–ல் சமாரியாவை வென்றபின், அசீரியர்கள், மெசபொத்தாமியாவில் முன்பு அரமேயர் வாழ்ந்த பகுதிகளுக்கு இஸ்ராயேலரை நாடு கடத்தினர் (2 அர 17:6). அதேசமயம் கமாத்தின் அரமேயர்கள் சமாரியாவில் குடியேற்றப்பட்டனர் (17:24:30). அரமேயர்களின் அரசியல், படைப்பலம் அழிந்து போனாலும், இங்கு மங்குமாகத் தங்கியிருந்த அரமேயர் குழுவினர் இடையிடையே யூதாவோடு இஸ்ராயேலரோடும் போரிட்டனர் (2 அர 24:2; எரே 35:11; ஏச 9:12–இல் குறிக்கப்படும் அரமேயர்கள் அசீரியாவுக்குட்பட்டவர்களாக இருக்கலாம்). தமஸ்கு பிடிபடுமுன் அரமேய அரசன் இரசீன் யூதாவின் ஆகாசுக்குத் தொல்லை கொடுத்தார் (2 அர 6:5). 612–ல் நினிவேயின் அசீரியர்களை பாபிலோனியர் வெற்றி கொண்டபோது கீழ்த்திசை அராமேயர்கள் (கல்தேயர்கள்) பாபிலோனியரோடு சேர்ந்துகொண்டனர். படிப்படியாக இவர்கள் பாபிலோனியர்களோடு ஒன்றித்துப்போயினர். தனித்தன்மை இழந்தனர்.

3. கலாச்சாரம்:– அரமேயர்களின் படைப்பலத்தைவிட, அவர்களது கலாச்சாரம் பழங்கால மேற்காசியாவில் நல்ல விளைவுகளை விட்டுச்சென்றது. அவர்கள் பெனிசிய நெடுங்கணக்கை மாற்றிய மைத்து, எபிரேயர் உட்பட்ட பிற மக்களுக்கு அளித்துச்சென்றனர். அவர்கள் மொழி அரமேயம், அக்காதிய மொழியை அகற்றிவிட்டு, அலக்சார்ந்தர் பாரசீகத்தைவென்று கிரேக்கமொழியை அதிகார மொழியாக ஆக்கும்வரை மக்களின் பொதுமொழியாகப் பயன்பட்டது. அதன் திரிபு மொழிகளான யூத அரமேயம் சீரியக், நபத்தேயம், பல்மைரா ஆகியவை கிறிஸ்துவக் காலம் வரை பயன்பட்டு வந்துள்ளன. அராபிக் மொழி வழக்கில் வரும்வரை இவை பயன்பட்டுள்ளன.

இவர்களது இலக்கியங்கள் அதிகம் கிடைக்காததால், இவர்களது சமயம் பற்றி எதையும் தெளிவாகக் கூறமுடியாது. இவர்கள் மெசபொத்தாமியா, கானானியத் தெய்வங்களை கலந்து வழிபட்டதாகத்தெரிகிறது. பாகால், கெதாது, சமாஸ், தாமுஸ், ரெகூப்–ஏல்–சகர், நிக்கால் ஆகிய தெய்வங்களை வணங்கி வந்ததாகத் தெரிகிறது.

அரமேயள் (ARAMITESS)

மனாசேயின் வைப்பாட்டியினைக் குறிக்கின்ற பெயர். மாக்கிரின் தாயாவாள். மாக்கிர் கிலயாத்தின் தந்தையாவர் (1 நாள் 7:14). இவ்வாறு கிலயாத்தின் குடிமக்கள் ஒருவிதத்தில் அரமேயர்களின் வரித்தோன்றல்கள்ஆவார்.

அரயோப்பாகியர் (AREOPAGITE)

அரயோப்பாகு சங்கத்தின் ஒரு உறுப்பினர் அரயோப்பாகியர் என்றழைக்கப் படுகிறார். ஏதன்சு நகரிலுள்ள அரயோப்பாகு என்ற மலையிலோ அதன் அருகிலோ இந்தச் சங்கம் கூடியதால் அரயோப்பாகு சங்கம் அல்லது மன்றம் என்று அழைக்கப்பட்டது (அ.ப.17:19.22). பவுல் மனந்திருப்பியவர்களுள் ஒருவரான தியொனீசியு ஓர் அரயோப்பாகியர் ஆவார்.

அரயோப்பாகு (AREOPAGUS – அரெசின் குன்று, அராயின் (சாபங்களின் குன்று))

அரயோப்பாகு என்பது ஏதன்சு நகரிலுள்ள ஒரு சிறிய மொட்டையான சுண்ணாம்புக்கல் குன்று. கி.மு.5–ஆம் நூற்றாண்டிற்கு முன்னால் ஏதன்சு

நகரத்து முக்கியமான சங்கம், நீதி வழங்க இங்குதான் கூடியது. அரயோப்பாகு குன்றானது 370 அடி உயரத்தில் அக்ரோபோலி, பினிக்ஸ் ஆகிய இரண்டிற்கு மிடையே வடக்குப்பகுதியில் உள்ளது. அரயோப்பாகு என்ற பெயரானது அரெசின் குன்று என்று பொருள்படும். சிலர் இதனை அரெசின் கோவில் என்ற அழைக்கின்றனர்.

முற்காலத்தில் இவ்விடத்தல் நடைபெற்ற சங்கமானது அரயோப்பாகு மன்றம் அல்லது சங்கமென அழைக்கப்பட்டது. அரயோப்பாகில் இரண்டு(கற்கள்) காணப்பட்டன. ஒன்று "மானக்கேட்டின் கல்" என்றும் பிரிதொன்று "கொடுமையின் கல்" என்றும் அழைக்கப்பட்டன. இக்கற்களின் மேல் குற்றம் சுமத்தப்பட்டவர்களும், குற்றம் சாட்டுபவர்களும் நிற்பார்கள் என்று பவுசானியாஸ் கூறுகிறார். காலீரோத்தியு என்பவரை கொலை செய்த குற்றத்திற்காக அரேஸ்தான் முதன்முதலில் அரயோப்பாகிலுள்ள கல்லின்மேல் நிறுத்தப்பட்டாரென்றும், அதன் பின் கிளிதெம்னெஸ்த்ரா என்ற தன்தாயைக்கொன்ற ஒரேஸ்து நிறுத்தப்பட்டாரென்றும் பாரம்பரியம் கூறுகிறது.

இச்சங்கத்தின் பணியானது காலத்திற்குக் காலம் மாறியிருக்கிறது. சில நேரங்களில் கொலை குற்றங்கள் சம்பந்தமான வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. மற்றும் சில நேரங்களில் அரசியல், சட்டம், சமயம், கல்வி சார்ந்த வழக்குகளையும் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. அரேயோப்பாகு குன்றினை தவிர்த்து மற்ற இடங்களிலும் சங்கங்கள் நடைபெற்றன.

பவுலை அரயோப்பாகு மன்றத்திற்கு அழைத்துச் சென்றபோது சங்கம் நடந்து கொண்டிருந்ததா என்பது தெளிவாக இல்லை. பவுல் அரயோப்பாகு மன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் பாணியானது வழக்கமாக அவர் பின்பற்றுகிற பாணியிலிருந்து வேறுபட்டதாக இருந்தது. அவர் கிரேக்கத்தத்துவ இயலார்களின் பாணியிலே கிறிஸ்துவின் நற்செய்தியை வழங்க முயன்றார். ஆனால் அவரது முயற்சி முழுப்பலனை அளிக்கவில்லையென்றாலும் அச்சங்கத்தின் உறுப்பினராகிய தியொனீசியு கிறிஸ்துவில் விசுவாசங் கொள்ள வாய்ப்பளித்தது (அ.ப.17:19.22).

அரராத்து (ARARAT – மேட்டு நிலம்)

அர்மோனியாவில் ஏரிப்பகுதியிலுள்ள நாடே இது. இதன் அசீரியப் பெயர் "ஊரார்து" ஆகும். அதன் எபிரேய வடிவம் அரராத்து ஆகும். இந்த நாடு பல குறிப்புகளைத் தந்திருந்தாலும் இந்நாடு பற்றி அதிகமாக அசீரிய வரலாற்றுக்குறிப்புகளிலே காணப்படுகின்றது. இன்று ஊரார்து எங்கிருக்கிறதென்பதைக் காண துருக்கி, ருஷ்யா, ஈரான் ஆகிய மூன்று நாடுகளில் முயன்று பார்த்திருக்கின்றனர்.

1. வரலாறு:- ஊரார்து ஒரு அரசியல் பிரிவாக கி.மு. 9–ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்தது என 2–ஆம் அசூர்நாசிர்ப்பால் தனது வரலாற்குக் குறிப்புகளில் தருகிறார். மூன்றாம் சால்மனேசர் எனும் அரசர் ஊரார்து அரசின் பல பகுதிகளில் புகுந்து வெற்றி கண்டார்.

அசீரியர்களின் பலம் குறைந்து பின்னர் ஊரார்து அரசின் பலம் அதிகமாகி சற்று விரிவடைந்தது. இஸ்புயினி, மெனுவா, அர்கிஸ்தி, சாதூரி என்ற அரசர்களின்கீழ் கோட்டைகள், அரண்மனைகள் மற்றும் மிகச் சிறந்த நீர்ப்பாசன வசதி ஆகியவற்றுடன் அரசு சிறந்து விளங்கியது. ஊரார்து அரசின் செல்வாக்கு மேற்கிலும், வடக்கே சீரியா வரையிலும் பரவியது. அசீரியாவுக் ஓர் ஆபத்தாக அமைந்து அதன்பல மாகாணங்களைக் கைப்பற்றியது.

மூன்றாம் திகிலாத்து பிலேசர்(745–727) இரண்டாம் அல்லது மூன்றாம் சார்தூரி என்ற ஊரார்து அரசரைத் தோற்கடித்து ஊரார்தை மீண்டும் தமது அரசின்கீழ் கொண்டு வந்தார். சர்தூரி அசீரியர்களிடமிருந்து தப்பி ஓடினார். ஊரார்து நாட்டின் கிராமப்புறங்கள் அசீரியர் படையால் சீரழிக்கப்பட்டது. சிம்மேரியாவின் உட்புகுதலால் சிறிய ஆசியாவே பாதிக்கப்பட்டதுபோல் ஊரார்தும் பாதிக்கப்பட்டது. கி.மு ஆறாம் நூற்றாண்டில் மேதி

யர்கள் ஊரார்தின் மேல் படையெடுத்து அதனை வெற்றிகொண்டபின் அது ஒரு தனி அரசியல் உரிமை பெற்ற நாடாக நிலைக்க வாய்ப்பில்லாது போயிற்று.

இவர்கள் கட்டியெழுப்பிய கோட்டைகள், மற்றும் அரண்மனைகள்மூலம் இவர்களது கலைகள் மற்றும் கட்டிடத்திறன் சிறப்பாக வெளிப்படுகிறது. இத்தாலிய கிரேக்க கட்டிடக்கலைப் போலவே இதுவும் சிறந்திருந்ததால் மேற்கில் இதனுடைய பாதிப்பும் அதிகமாக இருந்தது.

2. விவிலியத்தில்:- ஆதி 8:4–இல் அரராத்தின் புகழ் பற்றிப் பேசப்படுகிறது. வடக்கில் உள்ள மலைகள் பெருவெள்ளத்தின்போது மேல்நீர் வற்றி முதலில் வெளிப்பட்டதாகவும் அவற்றிற்கு அரராத்து எனவும் பெயரிட்டனர் இன்றைய அரரார்த்து மலை பழைய ஊரார்து அமைந்திருந்த இடத்தில்தான் உள்ளது. இதன்மேல் நோவாபின் பெட்டகம் தங்கியதாகக் கருதப்பட்டது. பிற்காலக் கிறிஸ்துவப் பாரம்பரியம் துருக்கியிலுள்ள அக்ரீ–தாக் என்ற மலை உச்சிதான், இவ்விடம் என்று கருதியது. 2 அர 19:37; ஏச 37:38–இல் கூறப்டுவது வரலாற்று அடிப்படைக் கொண்டது. சனகெரிபு அரசன் கிமு.681–இல் அவரது புதல்வர்களால் கொல்லப் பட்டார். ஆனால் அவரது இறப்பிற்கான சூழ்நிலைகளைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை, மேலும் அரராத்து கொலையாளிகளின் அடைக்கல இடமாகக் கூறப்படவில்லை. ஆனால் மேற்கூறப்பட்ட விவிலியக் குறிப்புகள் கூறுகின்றன.

அராராத்துடன், மின்னீ, அசுக்கனாசு, மேதியர் ஆகியவர்கள் இணைந்து நின்றது. அன்றைய கி.மு.6–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியின் படைகளின் சூழ்நிலைபற்றித் தெரிவிக்கிறது (எரே 51:27–28). பாபிலோனின் வீழ்ச்சிக்குமுன் இந்த அரசுகள் எல்லாம் மிகத்துடிப்பாகச் செயல்பட்டன. உண்மையில், ஒரு சுதந்திர இனமாகவும் அரசியல் அமைப்பாகவும் உள்ள அளவில் அரராத்து மேதி யர்களால் 6–ஆம் நூற்றாண்டில் அழிக்கப்பட்டது.

அரவுனா (ARAUNAH – பெட்டகம், உயர்ந்த மனிதர்)

தாவீது மன்னன் இஸ்ராயேல் மக்கள் தொகையைக் கணக்கெடுத்ததை இறைவன் விரும்பவில்லை. எனவே அவர்கள் மீது இறைவன் கொள்ளை நோயை அனுப்பியதால் 70 ஆயிரம் மக்கள் உயிரிழுந்தனர் (1 நாள் 21:12.15; இங்கு உயிர்களைப் பறித்துக் கொண்டிருந்த தூதர் அல்லது "ஆண்டவரதுவாள்" என்பது நாட்டில் பரவியுள்ள கொள்ளை நோயோடு ஒன்றுபடுத்தப்படுகிறது). இந்தக் கொள்ளை நோயானது எருசலேமைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவியதேயொழிய, தலைநகரில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படுத்தவில்லை. தாவீது தான் செய்த தவறினால் மக்கள் தண்டிக்கப்படுவதைக் கண்டு மனம் வருந்திக் கொள்ளை நோய் நீங்குவதற்கான வழிகளை மேற்கொண்டார். எனவே பலிகள் ஒப்புக்கொடுக்கச் சிறந்த இடம் எபூசியரான அரவுனாவின் களம் என்ற இறைவாக்கினர் காதின் அறிவுரைப்படி 50 செக்கேல் நிறையுள்ள வெள்ளியை அரவுனாவிடம் கொடுத்து அந்தக் களத்தை தாவீது வாங்கினார். அங்குப் பலிபீடம் எழுப்பி, இறைவனுக்கு பலி ஒப்புக் கொடுத்தார். இறைவன் அவரது பலியை ஏற்றுக் கொள்ளை நோயை நீக்கினார் (2 சாமு 24:15–25; 1 நாள் 21:14 தொ).

அரவுனா நான்கு புதல்வர்களின் தந்தை. இவர்கள் கொள்ளை நோய் பரவிய காலத்தில் களத்தில் தூதரைக் கண்டவுடன் ஒளிந்துகொண்டனர். (1 நாள் 21:20). அரவுனாவின் களம் மோரியா மலையில் இருந்ததாகப் பாரம்பரியமாகக் கருதப்பட்டது. ஆகையால் அங்குதான் சாலமோனும் இறைவனுக்கு ஆலயம் கட்டினார் (2 நாள் 3:1). 1,2 நாளாகம நூல்களில் அரவுனா என்ற பெயருக்குப் பதிலாக ஒரினான் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் சாமுவேல் ஆகமத்தில் (24:16) பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தை "அரவுனாவைக்" குறிக்கவில்லை. மாறாக 'தலைமை ஆட்சியாளர் ' என்று பொருள்படும் "இவிர்னே" என்ற கூரியர் சொல்லாக இருக்கலாம்.

அராது (ARAD – காட்டுக்கழுதை) – ஆள்

பென்யாமீன் குலத்தைச் சேர்ந்த பெரியா என்பவரின் புதல்வருள் ஒருவர் (1 நாள் 8:15).

அராது (ARAD) – இடம்

மோசேயின் காலத்திலும், கானான் நாட்டை வென்ற பொழுதும் நெகேபிலிருந்த ஒரு கானானிய நகரம். இஸ்ராயேல் மக்கள் பாலைவனப் பயணத்தின் இறுதியில் காதேசு பார்னேயாவிலிருந்து அத்தாரீம் வழியாக கோர் மலைக்குச் சென்று கொண்டிருந்தபொழுது அராத்தின் அரசன் திடீரென்று இஸ்ராயேலரைத் தாக்கித் தோற்கடித்தார் (எண்.21:1). கானானியரைப் பழிவாங்க இஸ்ராயேலர் நேர்ந்துகொண்டு அவர்களுடைய நாடுகளை அழித்தார்கள் (21:2–3). இவ்விடத்தில் நாடோடிகளான கேனியர்கள் இஸ்ராயேலரிடையே குடியேறினர் (யோசு 1:16). இவர்கள் மோசேயின் மாமனின் வழித் தோன்றல்களாவர். யோசுவாவால் வெல்லப்பட்ட நகர்களில் அராதும் சேர்க்கப்பட்டுள்ளது (யோசு 12:14). ஏனெனில் அநேகமாக இந்த வெற்றி யோர்தானுக்கு மேற்கே நடந்த வெற்றிகளின் முடிவு ஆகும்.

கெபிரோனுக்கு ஏறக்குறைய 26 கி.மீ தெற்கேயுள்ள தேல்–அராத் உள்ள இடம் தான் இந்த நகரம் இருந்த இடம் என்று கருதப்பட்டது. ஆனால் அண்மையில் இவ்விடத்தில் நடந்ததொல்பொருள் அகழ்வுகள் இக்கருத்திற்கு ஆதரவுதரவில்லை. அராது என்பது ஒரு நகரைவிட நிலப் பரப்புப் பகுதியையே குறிக்கலாம் அல்லது தேல்–ஏல்–மில்க் (அல்லது மல்கத்தா) ஆக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அராதுசு (ARADUS)

யூதர்களின் நிலைமை பற்றிய கடிதங்கள் அனுப்பப்பட்ட பலஇடங்களின் பெயர் பட்டியலில் இது ஒன்றாக இருக்கின்றது (1 மக் 15:23). காண்க: ஆர்வாது.

அராத்து (ARATUS)

சிலிசியா நாட்டிலுள்ள சோலி என்ற ஊரினைச் சேர்ந்த ஸ்தோயிக்கு கவிஞராவார். கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில்தான் இவரது புகழ் ஓங்கியது. இவருடைய வானாராய்ச்சி சார்ந்த பாடலில் இருந்து "நாமும் அவரினமே" என்ற வார்த்தையானது பவுல் அரயோபாகு மன்றத்தில் நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவில் மேற்கோளிட்டுக் காட்டப்பட்டது (அ.ப.17:28).

அராபிய மொழியில் இயேசுவின் பால பருவம் பற்றிய நற்செய்தி:–

இது பிற்காலத்தில் குழந்தை இயேசுவைப்பற்றி எழுதப்பட்ட புதுமைக் கதைகளின் தொகுப்பு ஆகும். இயேசுவின் குழந்தைப்பருவம் பற்றி பேசும் பல இரண்டாம் தர நற்செய்தி நூல்களைப் போல இதுவும் யாக்கோபின் மூல நற்செய்தி, தோமாவின் நற்செய்தி ஆகிய இரண்டு நூல்களையும் அதிகமாக தழுவி எழுதப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நூல்களின் பகுதிகளும் 1–9; 36–55 ஆகிய அதிகாரங்களில் அதிகமாகக்கையாளப்பட்டுள்ளன. இவற்றில் திருமுறை நற்செய்திகளில் காணப்படும் குறிப்புகள் கற்பனைமிக்க முறையில் விரிவாக்கப்பட்டுள்ளன. இதற்கு இடைப்பட்ட பகுதிகள், இயேசுவின் ஆடை, குளிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தண்ணீர் ஆகியவற்றோடு தொடர்புடையன. எகிப்திலும் (20–25) நசரேத்திலும் (26–35) நடந்த புதுமைகள்பற்றி கூறப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் இயேசுவின் தாய் மரியாளே தூண்டு கோலாக இருக்கிறாள். 1967–ல் கென்றிசைக் என்பவர் இதை அச்சாக்கி வெளியிட்டதைத் தழுவி இந்த நூல் அடிக்கடி புதிப்பிக்கப்படுகிறது. முதலில் இது சீரியாக் மொழியில் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இது எங்கு எப்போது என்று கூறுவது முடியாத காரியம். ஆனால் நூலின் தன்மை இது மேற்காசியாவில் முதலில் தோன்றியிருக்கலாம் என்று காட்ட வல்லது.

அராம்–சோபா (ARAM-ZOBAH)

லெபானோனுக்கும் கீழ் லெபானோனுக்கும் இடைப்பட்ட பிக்கா பள்ளத்தாக்கிலுள்ள ஒரு அரமேய நகரம் (சங்.60–இன் மேல் குறிப்பு). சோபாவுக்கு மற்றொரு பெயராகும். காண்க: சோபா.

அராம்–நகராயிம்
(ARAM-NAARAIM – ஆறுகளின் அராம்)

அராம் நகராயிம் என்பது வடமேற்கு மெசபொத்தாமியாவில் யூப்பிரத்திசு, திகிரிசுக்கு இடைப்பட்ட பகுதியாகும். இவ்விடம் எபிரேய குடும்பத் தலைவர்கள் தோன்றிய இடமாகும். ஆபிரகாமின் கண்காணிப் பாளர் எலியேசர் ஈசாக்குக்கு ஒரு மனைவி பார்த்துவர இங்குதான் அனுப்பப்பட்டார் (ஆதி 24:10). குறி சொல்பவர் பிலயாமின் ஊராகும் (உப 23:4). ஒதினியேல் நடுவராகுமுன், இப்பகுதியிலிருந்துதான் கூசான்–ரிசத்தாயிம் இஸ்ராயேலைத் தாக்கினார் (நீதி 3:8). சங் 60–இன் தலைப்பு தாவீது மன்னன் அராம்–நகராயிமுக்கு எதிராகக் கொடுத்த தண்டனையை மறைமுகமாக உணர்த்துகிறது. இதற்கு ஆதாரமாக, முதல் நாளாகமத்தில் (19:6) அம்மோனியர்கள் தாவீதுக்கு எதிராக மெசபொத்தாமியாவின் தேர்களையும், குதிரைவீரர்களையும் கூலிக்கு அமர்த்துகின்ற நிகழ்ச்சி காட்டப்படுகிறது.

அராம் மாக்கா (ARAM-MAACAH)

ஓர் இடப்பெயர். மாக்காவின் மற்றொரு பெயர் (1 நாள் 19:6). காண்க: மாக்கா (இடம்).

அராரியர் (HARARITE – மலைவாசி)

தாவீதிடம் முப்பது பேர் கொண்ட வல்லமை நிறைந்த படை ஒன்று இருந்தது. இவர்களில் மூவர் அராரியர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களின் தந்தையர்களின் பெயர்கள் பின்வருவனவாகும். சம்மாவின் தந்தை ஆகே (2 சாமு 23:11); யோனத்தானின் தந்தை சம்மா (2 சாமு 23:33; 1 நாள் 11:34–ல் சகே என்றுள்ளது); அகியாமின் தந்தை சாரார் (2 சாமு 23:33; 1 நாள் 11:35–இல் சாக்கார் என்றுள்ளது).

அராரியர் ஓர் இனப்பெயராகவும், யூதா அல்லது எப்ராயிமின் மலைப்பகுதிகளில் உள்ள ஒரு இடத்தின் அல்லது பகுதியில் வாழ்ந்த மக்களைக் குறிக்கும் பெயராக இருக்கலாம். அமர்னா ஏடுகளில் காணப்படும் அராரு என்பதில் இருந்து வந்ததாக இருக்கலாம். அப்படியாயின் இது கெபிரோனுக்கு அருகில் அமைந்திருக்க வேண்டும்.

அரிசாகு (ARSACES)

கி.மு. 250–இல் செலூக்கிய அரசன் மூன்றாம் அந்தியோக்கு சோத்தேருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து 'அர்சாசிதே' குல மரபை தோற்றுவித்தவரின் ஞாபகமாக இப்பெயர் பார்த்திய அரசர்கள் தங்களுக்கே வழங்கிக்கொண்ட பெயராகும். வரலாற்று ஆசிரியர் "யோசிபஸ்" தன் நூலில் இவரைப்பற்றியும் குறிப்பிடுகிறார்.

இப்பாரம்பரியத்தைச் சேர்ந்த முப்பது பேர் இப்பட்டத்தைப் பயன்படுத்தியுள்ளனர். இவர்களில் சிலர் திதொதெஸ், முதலாம், இரண்டாம் மித்ரதாதெஸ், நான்காம் பாராதெஸ் ஆகியோராவர். 4–ஆம் அரிசாகு ((முதலாம் மித்ரதாதெஸ், 171–138) மேதியா, பாரசீகம் அர்மேனியா, பாபிலோனியா ஆகியவை அடங்கிய பெரும்பகுதியை வென்று, பார்த்தியப் பேரரசின் எழுச்சியை வளர்த்தார். சீரியாவைச்சேர்ந்த 2–ஆம் தெமேத்திரியு நிக்கத்தோர் பார்த்தியா நாட்டின் மீது படையெடுத்தபோது, அரிசாகுவின் படைகள் அவரைப்பிடித்து, இர்கானியாவில் அரிசாகுவின் முன் கொண்டு வந்தனர் (1 மக் 14:1–3). பத்து ஆண்டுகளுக்குச் சிறைப்பட்டிருந்தாலும் அரிசாகு இவரை நேர்மையாக நடத்தி, தனது மகளை இவர் மணக்கவும் அனுமதித்தார். 1 மக் 15:22–இல் யூதர்களை எதிர்த்து போர் செய்யாதபடி இருக்கும்படி, உரோமை ஆளுநர் உலூக்கியுவால் கடிதம் எழுதப்பட்ட அரசர்களில் இவரும் ஒருவராவார்.

அரிசாய் (ARISAI – சிங்கம் போன்ற)

யூதர்களால் கொலை செய்யப்பட்ட ஆமானின் பத்துப்புதல்வர்களில் அரிசாயும் ஒரவராவார் (எஸ்த 9:9).

அரிச்சுவடி (Element)

முதலில் நெடுங்கணக்கின் எழுத்துக்களைக் குறிப்பது. அடுத்து, கலை, அறிவியல் அல்லது எந்தப் பாடத்தின் அடிப்படை கோட்பாடுகளைக்குறிக்கும். இப்பொருளில்தான் எபிரேயருக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் 5:12–இல் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். அவரது வாச

கர்கள் இறைவாக்குளில் புலமைபெற்று, பிறருக்கு அவற்றைக் கற்பிக்கவேண்டும். ஆனால் அவர்களே, அறிவு மழுங்கியவர்களாக, அவற்றை அடிப்படையிலேயிருந்து கற்றுக்கொள்பவர்களாக இருக்கிறார்கள்.

அரிதத்தா (ARIDATHA – *அரியால் கொடுக்கப்பட்டது)*

அரிதாத்தா ஆமானின் பத்துப் புதல்வர்களில் ஒருவர். யூதர்கள் தங்கள் பகைவர்களைத்துன்புறுத்திக் கொலை செய்யும் பொழுது இவரும் கொலை செய்யப்பட்டார் (எஸ்த 9:8).

அரிதாய் (ARIDAI – *வலுவான, அரியின் களிப்பு)*

அரிதாய் ஆமானின் பத்துப் புதல்வர்களில் ஒருவர். யூதர்கள் தங்கள் பகைவர்களைக் கொலை செய்த பொழுது இவரும் கொலை செய்யப்பட்டார் (எஸ்த 9:9)

அரித்தார்க்கு (ARISTARCHUS – *மிகச் சிறந்த ஆட்சியாளர்)*

அரித்தார்க்கு தெசலோனியாவிலிருந்து வந்த மக்கதொனியராவார். (அ.ப. 19:29; 20:4). இவர் பவுலுக்கு துணைவராயிருந்த புறவினத்தார். பவுல் கிறிஸ்துவை போதிப்பதைக் கண்ட தியானாவின் பக்தர்கள் வெகுண்டெழுந்து அவரை எபேசு நகரில் சிறைப்பிடிக்கும்பொழுது அவருடனிருந்த அரித்தார்க்கையும் சிறைப்பிடித்தனர். பவுலின் பணி மக்கதொனியாவில் ஆரம்பத்திலிருந்து அவரது நான்காம் வேத போதகப் பயணத்திலும் இறுதிவரை அவருடனிருந்த வழித் துணைவராவார் இவர் (27:2). நீரோ மன்னனின்கீழ் உரோம் நகரில் வேத சாட்சியாக இவர் கொலை செய்யப்பட்டார் என்று பாரம்பரியம் கூறுகிறது.

அப்போஸ்தலர் பணியில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அதே அரித்தார்க்குதான் உரோம் நகரில் சிறையில் பவுலுடன் சிறைக்கைதியாய் இருந்தவராவர் (2 கொலோ 4:10). இதே பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற மாற்கு, யுஸ்து எனப்படும். இயேசு ஆகியவர்களைப் போன்று அரித்தார்க்கும் யூதனாக இருக்கவேண்டுமே என்பது அவசியமில்லை. இவர் ஒரு யூதனாக எண்ணப்பட்டாரென்றால், இவரை அப்போஸ்தலர் பணியில் வருகின்ற அரித்தார்க்கோடு ஒருவராக்கமுடியாது. பிலமோனுக்கு எழுதிய மடலில் குறிக்கப்படும் அரித்தார்க்கு கொலோசேயருக்கு எழுதிய மடலில் காணப்படுகின்ற அரித்தார்க்கோடு ஒருவராக்கப்படுகிறார். அப்போஸ்தலர் பணியிலும், பவுலின் மடல்களிலும் அரித்தார்க்கு பவுலின் நெருங்கிய, சிறந்த வழித்துணைவராகக் காட்டப்படுகின்றார்.

அரித்தாள் கட்டை, தாளடி (STUBBLE)

தானியங்கள் அறுவடை செய்யப்பட்டபின் ஒதுக்கப்பட்ட அரித்தாள். யாத்.5:12–இல் இது வைக்கோலிலிருந்து வேறுபடுத்தி காட்டப்படுகிறது. இதைச் சேகரிப்பதற்காக இஸ்ராயேல் மக்கள் எகிப்தின் நான்கு திசைகளிலும் தேடி அலைந்தனர். ஆனால் இதேசொல் சூட்டடிப்பின்போது கிடைத்த வைக்கோலையும் பதரையும் குறிக்கலாம். மற்ற இடங்களில் எல்லாம் இச்சொல் உருவகமாக பயன்படுத்தப்பட்டது. இத்தகைய பொருட்கள் எளிதாக எரிக்கப்பட்டுவிடும் (யாத் 15:7; ஏச 5:24; 47:14; யோவே 2:5; நாகூ 1:10; மலா 4:1) அல்லது காற்றால் அடித்துச் செல்லப்பட்டுவிடும் (ஏச 40:24;41:2; யோபு 13:25; எரே 13:24).

அரித்தியோன் (ARISTION)

பப்பியசின் கருத்துப்படி இவர் "ஆண்டவரது சீடராவார்". மூப்பர் யோவானானுடன் சேர்ந்து, இவர் நற்செய்திப் பாரம்பரியங்களுக்கு முதன்மையான செல்வாக்குடையவராவார். கி.பி.986–ஐ ஒட்டிய ஒரு ஆர்மேனியக் கையெழுத்துப்பிரதி, மாற்கு நற்செய்தியின் முடிவுரைப் பகுதிக்கு (169–20) மூப்பர் அரித்தியோனே பொறுப்பு என்று கூறுகிறது. இவரும் பப்பியசின் அரித்தியோனும் ஒருவராக இருக்கலாம்.

அரித்தேயாவின் கடிதம் (ARISTEAS)

இது ஒரு சிறிய புனைப்பெயர் காப்புரை நூலாகும். இந்நூலின் ஆசிரியராக உரிமை கொண்டாடும் அரித்தேயா என்ற யூதர், தனது சகோதரர் பிலோக்ராதேசுக்கு நூலை அர்ப்பணிக்கிறார். ஆகையால் இரு கடிதம் என்று தவறாகக் கருதப்பட்டது.

ஆசிரியர்தான், 2–ஆம் தோலமி பில தெல்பூசின் (285–246 கி.மு) அரசவையைச் சேர்ந்தவராக உரிமை கொண்டாடி தோரா அல்லது ஐந்நூலின் கிரேக்க மொழிபெயர்ப்பு சேர்ந்த பல நிகழ்ச்சி களை, நேரடிச்சாட்சியாகவும் உதவியாள ராகவும் பாவித்துக்கூறுகிறார். ஆகை யால், இந்நூல் எழுபது நூல் மொழி பெயர்ப்புத் தோற்றம் பற்றியதாயிருப்ப தால் முன் காலத்திலிருந்து இந்நாள் வரை இந்நூல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

1. பொருளடக்கம்:– முன்னுரை நூலைப் பிலோக்ராதேசுக்கு அர்ப்பணம் செய் கிறது (வச 1–8). அலக்சாந்திரியாவின் நூல் நிலையத்தின் தலைவர் பலேருமின் தெமேத்திரியஸ் என்பவர் "யூத சட்டத்தை" மொழிபெயர்த்து நூல் நிலையத்தில் சேர்த்துக்கொள்ள ஒரு திட்டம் அமைத்து தோலமிக்குக் கூறுகிறார் (வச 9–11). இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, எகிப்திய பேரர சில் உள்ள யூத அடிமைகளுக்கு விடுதலை பெற்றுத் தருகிறார் அரித்தேயா (வச 12–22). தெமேத்திரியுவின் விரிவான திட்டம் (வச 28–33) அரசனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அரசன் ஆற்றலுள்ள 70 (72) மொழிப் பெயர்ப்பாளர்களை அனுப்புமாறு எருசலேம் பெரிய குரு எலயாசாருக்குக் கடிதம் எழுதுகிறார் (34–40). பெரிய குரு இதற்கு இணங்கி, மொழி பெயர்ப்பாளர்களின் பெயரையும் தமது பதிலில் எழுதுகிறார் (41–50).

அரித்தேயாவே எருசலேமுக்குத் தூத ராகச் சென்று, பெரிய குருவுக்கு அரசன் அனுப்பிய கொடைகளை விவரிக்கிறார் (51–82). பின், எருசலேமையும் அதன் சுற்று வட்டாரத்தையும் (83–120) மொழி பெயர்ப் பாளர்கள் பற்றி பெரிய குரு கொண்டி ருந்த மதிப்பையும் (120–127) விவரிக்கிறார். பின்பு யூதச்சட்டம் பற்றிய ஒரு காப்புரை யும் வழங்குகிறார் (128–171).

தோலில் தங்கத்தால் எழுதப்பட்ட தோராவை எகிப்துக்கு மொழி பெயர்ப் பாளர்கள் கொண்டு வருகின்றனர். அரசன் அவர்களை மிகுந்த மதிப்போடும் மகிழ்ச்சியோடும் வரவேற்கிறார் (172–81). அரசன் ஏழு நாட்களுக்கு இரவில் இவர் களுக்கு விருந்தளிக்கிறான். இதில் ஒவ் வொரு மொழி பெயர்ப்பாளரிடமும் அரச னால் கேட்கப்பட்ட 70 (72) கேள்விகளுக்கு அவர்கள் அளித்த பதில்கள் எல்லோரை யும் வியக்கச்செய்கிறது. அரசன் அவர் களுக்கு வெகுமானம் அளிக்கிறார் (182–300). இந்நிலையில் ஆசிரியர் தனது அறிக்கையின் உண்மைத் தன்மையை வலியுறுத்திக் கூறுகிறார் (295–300).

பாரோஸ் தீவில் மொழிபெயர்ப்பு 70 (72) நாட்களில் நடைபெறுகிறது (301–307). அலக்சாந்திரிய யூதர்களும் (308–311) அரசனும் (312–317) மொழிபெயர்ப்பை ஏற்று, வாழ்த்துக் கூறுகின்றனர். பின்பு அரசர் மொழிபெயர்ப்பாளர்களுக்கு நன்றி கூறி மேலும் சன்மானம் அளித்து வழி அனுப்புகிறார் (318–321).

ஆகவே முடிவுரை (322) நூல், மொழி பெயர்ப்புச் செயல்களை மட்டும் கூற வில்லை. அவற்றோடு ஆசிரியரது தலை யீட்டால் யூத அடிமைகள் விடுதலை பெறு தல், பெரிய குருவுக்கு அளிக்கப்பட்ட கொடைகள், பாலஸ்தீனம், எருசலேம், ஆலய வழிபாடு ஆகியவைபற்றிய விவ ரிப்புகள், யூதச் சட்டம் பற்றிய பெரிய குருவின் உரை போன்ற பலவற்றையும் கூறுகிறது.

2. ஆசிரியரும், காலமும்:– பலநூற்றாண் டுகளாக இது ஒரு கற்பனை நூலாகக் கருதப்பட்டது. ஆசிரியர், எல்லாத் துறை யிலும் யூதர்களின் மேன்மையை எடுத்துக் கூறுவதில் அக்கறை காட்டுகிறார். அவர் நேரடிச் சாட்சியாவார் என்பது ஐயத்திற் குரியதானாலும் அவர் தரும் பல குறிப்பு களின் அடிப்படையில் அவர் கி.மு.2–ஆம் நூற்றாண்டின் முடிவிலோ முதலாம் நூற் றாண்டின் தொடக்கத்திலோ அலக் சாந்திரியாவில் வாழ்ந்த யூதராகத் தெரி கிறது. இந்நூல் தோன்றியிருக்கக்கூடிய காலமாக கி.மு.200–250 இடைப்பட்டக் காலத்தைக் குறிப்பிட்டாலும், இது கி.மு. 2–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி யிருக்கவேண்டும் என்பது பலரது கருத்து.

3. ஆசிரியரது நோக்கம்:– யூதசமய, சட்டச் சிந்தனைகளின் மேன்மையை எடுத் துக்கூறுவதும், அலக்சாந்திரிய யூதர்களி டையே தன்னம்பிக்கையை வளாப்பதும் ஆகும்.

4. இலக்கியத் தன்மை:- இந்நூலின் உள்ளடக்கத்தில் கூறப்பட்டிருக்கும் மொழி பெயர்ப்புப்பற்றிக் காணும் பொழுது, இதன் சிலபகுதிகள் நூலுக்கு எவ்வகையிலும் தேவையற்றதுபோல் தோன்றுவதால் அவை பின்னால் சேர்க்கப்பட்ட பகுதிகள் எனத்தெரிகிறது. நூல் முழுவதும் ஒரே நடையும், அதன் முறையும் ஒரே முறையில் அமைவதால் நூலின் ஒருமைப்பாடு புலனாகிறது.

யூத அடிமைகளை விடுவிப்பது பற்றி கி.மு.260–ஆம் ஆண்டு நாணல்தாள் ஏடு குறிப்பிடுவதை அப்படியே இந்நூலும் குறிப்பிடுகிறது. இதிலிருந்து எத்தகைய வரலாற்றுக் குறிப்பையும் தன் குறிக்கோளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க ஆசிரியர் தயங்கவில்லை. இக் குறிக்கோள் யூதர்களின் பெருமையை நிலைநாட்டுவதுதான். இந்த ஒரே நோக்கம்தான் தனித்தனியே பிரிந்துகிடக்கும் பல உண்மை களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஒரு தொடர்பைத் தருகிறது.

எல்.பிவெஸ், ஜே.ஸ்காலிகர் போன்ற அறிஞர்கள், இது அன்றைய காலத்திய நூல்களில் ஒன்று என்பதைப் பொறுத்த வரையில் தனக்கேயுரிய மதிப்பைக் கொண்டிருந்தாலும், ஒருவரலாற்று நூல் என்பதைப் பொறுத்த வரையில் இது சிறந்ததாகாது என்றும் கதைத் தன்மை யுடையது என்றும் கருதுகின்றனர். இந் நூலில் எவ்வளவு தூரம் உண்மை நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளன, கற்பனை கள் கலந்துள்ளன என்பது ஆய்வுக்கு உரியதொன்றாகும். எழுபது நூல்களின் தொடக்க வரலாறு பற்றியதாக இந்நூலை காண முயல்வது, ஆசிரியது பொது நோக்கையும், சில முக்கியப்பகுதிகளையும் தவறாகப் புரிந்துகொண்டதின் விளைவாகும்.

பிற்கால யூத, கிறிஸ்துவ பாரம்பரியங்கள், அரித்தேயாவின் நூல் எழுபது நூல் முழுவதையும் பற்றியதாக விளக்கி, அதனால் அந்த வாசகத்தின் உண்மைத் தன்மையையம்அதிகாரத்தையும் எடுத்துக்கூற முயன்றன. இந்நூலில் வரும் கதையின் பிற்கால வடிவங்கள் 70 (72) மொழி பெயர்ப்பாளர்கள் தனித்தனியே தங்கள் அலுவலைச் செய்தாலும், அவர்களிடையே காணப்பட்ட வியத்தகு ஒருமைப் பாட்டை அழுத்திக் காட்டியுள்ளன. ஆனால் இதற்கு இந்நூலில் ஆதாரமேயில்லை. மாறாக, மொழிபெயர்ப்பாளர்களிடையே நிலவிய நெருங்கிய ஒத்துழைப் பால்தான் ஒருமைப்பாடு உண்டானது என்று இந்நூல் கூறுகிறது.

அரித்தோபுல்

(ARISTOBULUS – மிகச்சிறந்த ஆலோசகர்)

1. இவர் 7–ஆம் தோலமி பிலோமேத்தரின் (கி.மு.146–116) யூத ஆசிரியர். இவருக்கு யூதா மக்கபேயர் ஆலயச் சுத்திகரிப்புக் கொண்டாட்டம் பற்றிக் கடிதம் அனுப்பினார் (2 மக்.1:10). கி.மு. 170–150– இல் வாழ்ந்த கிரேக்க யூத சிந்தனையாளரோ எனவும் நம்பப்படுகிறது. இக்கருத்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. யூசேபியு நூலில் காணப்படும் சிந்தனையாளரின் இரு துணுக்குகளை அடிப் படையாகக் கொண்டது.

2. முதலாம் அரித்தோபுல் யூதா:-

யோவான் இரிக்கானின் மூத்த மகன். அசமோனிய குலத்தில் அரசுபட்ட உரிமைக் கொண்டாடியவருள் முதல்வர். கி.மு. 104–103 வரை ஆண்டு, கடும் துன்ப மிக்க நோயினால் இறந்தவர். வரலாற்று ஆசிரியர் யோசிபசின் கருத்துப்படி இரிக் கானின் மறைவிற்குப்பின் தன் சகோதரர் அந்தியோக்கைத் தவிர தன் ஒன்றுவிட்ட தாயையும், ஒன்றுவிட்ட சகோதரரையும் சிறை செய்தவர். தாய் சிறையில் பசியால் சாக, சகோதரர் அந்தியோக்கையும் நியாயமற்ற சந்தேகத்தாலும், பொறாமை யாலும் கொன்றார். இதில் அரித்தோபு லின் சகோதரனும் வாரிசுமான அலக் சாந்தர் யன்னாயுவின் செயல்களை இவர் செய்ததாகக் கூறி குழம்புகிறார் யோசிபஸ் என்பதற்கு நல்ல காரணங்கள் உள.

3. இரண்டாம் அரித்தோபுல்:- இவர் அலெக்சாந்தர் யன்னாயுவுக்கும், சலோமி அலக்சாந்திரவுக்கும் பிறந்த இளைய மகன். பெற்றோரின் மறைவுக்குப் பின் மூத்தவனும் முறைப்படி வாரிசுமான இரண்டாம் இரிக்கானைத் தோற்கடித்து அரசு பதவியைப் பிடித்தவர். இரிக்கானு தனி வாழ்விற்குத் திரும்பினார். ஆனால்

அரித்தோபுலின் எதிரியான அந்திப்பாத்தரின் தூண்டுதலால் இவனுடையவும் மூன்றாம் அரஸ்தாஸ் ஒபோதசுடையவும் உதவியுடன், எருசலேமின் மீது படையெடுத்து அரித்தோபுலைத் தோற்கடித்தனர். அரித்தோபுல் ஆலயத்தற்குள் தஞ்சம் புகுந்தார். அங்கு இவரை இரிக்கானும் அரஸ்தாசும் முற்றுகை இட்டனர். ஆனால் இருவரும் உரோமையரது ஆதரவுக்காக உரோமை தளபதி ஸ்கௌரசுக்கு பெரும் கொடைகளைக் கொடுக்கமுன் வந்தாலும், தளபதி அரித்தோபுலுக்கு ஆதரவு அளித்தார். அவருடைய உதவியுடன் அரித்தோபுல் இரிக்கானையும் அரேத்தாசையும் தோற்கடித்து அரியணை ஏறினார்.

பாம்பே, சீரியாவுக்கு வந்தபோது இரு சகோதரனின் சார்பாகவும் இருவருக்கும் எதிரான யூதர்கள் சார்பாகவும் தூதுக் குழுக்கள் பாம்பேயைச் சந்தித்தன. சிறிது காலம் கடத்தியபின் பாம்ப்பே கி.மு.63–இல் எருசலேமைக் கைப்பற்றி அரித்தோபுலை உரோமைக்குத் கைதியாக அனுப்பினார். இதோடு யூதர்களின் சுதந்திரம் முடிவுக்கு வந்தது. கி.பி. 56–இல் அரித்தோபுல் உரோமையிலிருந்து தப்பித் தனது பதவியை மீண்டும் அடைய முயற்சி செய்தார். தோற்கடிக்கப்பட்டு மீண்டும் கைதியாக்கப்பட்டு உரோமைக்கு அனுப்பப்பட்டார். கி.மு.49–இல் நடந்த உள்நாட்டுப் போரில் யூலியு சீசர், இவரை விடுவித்து யூதேயாவை வென்றுபிடிக்க படையுடன் அனுப்பினார். ஆனால் பாம்பேயின் ஆதர வாளர்கள் அரித்தோபுலை நஞ்சு வைத்துக்கொன்றனர்.

4. இவர் அசமோனிய பரம்பரையில் புகழ் பெற்றவர்களுள் கடைசி நபராக கருதப்படுகிறார். இரண்டாம் அரிதோபுவின் பேரனும் பெரிய எரோதின் மனைவியுமான மரியம்னேயின் சகோதரரும் ஆவார். பெரிய எரோதுவால் 17 அல்லது 18 வயதிலேயே பெரிய குருவாக்கப்பட்டார். மக்களிடையே இவர் கொண்டிருந்த புகழ் எரோதை கோபாவேசம் கொள்ளச் செய்தது. அதன் விளைவாக இவர் கி.மு.35–ல் நீரில் மூழ்கடிக்கப்பட்டார்.

5. இவர் பெரிய எரோதுவுக்கும் அசமோனிய குலத்தைச் சேர்ந்த மரியம்னேயுவுக்கும் பிறந்த இளைய மகன். எரோது அகிரிப்பாவின் தந்தை. மூத்த சகோதரன் அலக்சாந்தருடன் உரோமுக்குக் கல்விப்பயில அனுப்பப்பட்டவர். இருவரும் தன்தகப்பன் எரோதின் பொறாமைக்கும் அரசக் குடும்ப சூழ்ச்சிகளுக்கும் பலியாயினர். இருவரும் கி.மு-7–இல் கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்டனர்.

6. இவர் உரோ 16:10–இன்படி உரோமையிலுள்ள ஒரு கிறிஸ்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரைப்பற்றி அதிகம் தெரியவில்லை. இவர் 5–இல் குறிப்பிடப் பட்டவரின் மகன் என்றும் எரோது அகிரிப்பாவின் சகோதரர் என்றும் பேரரசன் கிளாதியுவோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்றும் சிலர் கருதி உள்ளனர். வேறு சிலர் பின் வரும் 7–இல் குறிக்கப்படுபவர் இவர்தான் என்று கருதுவர். ஆனால் இக்கால அறிஞர்கள் இக்கருத்தை ஒரு முகமாய் நிராகரிப்பர்.

7. இவர் 5–இல் குறிக்கப்பட்டவரின் மகன். இவர் தன் சகோதரன் ஏரோது அகிரிப்பாவுக்கு எதிராக சதி செய்தார் என்றும், எருசலேம் ஆலயத்தில் கலிகுலாவின் சிலையை அமைப்பதற்கு எதிராக கி.பி.40–இல் சீரிய ஆளுநரான பெத்ரோனியசிடம் மன்றாடினார் என்றம் யோசிபஸ் கூறுகிறார்.

அரிமத்தியா (ARIMATHEA – உச்சி)

அரிமத்தியா என்ற பெயரானது ஒவ்வொரு நற்செய்திலும் ஒரே ஒருமுறை ஒரே மாதிரியான சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் இறந்த இயேசுவின் உடலை யாரும் அடக்கம் பணணப்படாத அவரது கல்லறையில் அடக்கம் செய்தார் என்று நற்செய்திகளில் கூறப்படுகிறது (மத் 27:57; மாற் 15:53; லூக் 23:50; யோவா 19:38). அரிமத்தியா யூதர்களுடைய ஊரென்றும், யூதராகிய யோசேப்பு தலைமைச் சங்கத்தின உறுப்பினரென்றம் நற்செய்தியாளர் லூக்கா விரித்துரைக்கிறார்.

எருசலேமுக்கு வடக்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள பென்யாமீனின் ஊரா கிய இராமாவோடு அரிமத்தியாவைத் தொடர்புபடுத்துதல் கூடாது. ஆனால் அரிமத்தியாவும், இறைவாக்கினர் சாமு வேல் வாழ்ந்த இராமாத்தாயிம்– சோபீம் என்ற ஊரும் ஒன்றாக இருக்கலாம் (1 சாமு 1:1; 19:19).

அரிமத்தியா ஒரு நகரமாகும். இந் நகரம் இருந்த இடம் சந்தேகத்திற்குரிய தாகயிருப்பினும் இலிதாவுக்கு வட கிழக்கே 16 கி.மீ. தொலைவிலும், அந்திப் பாத்திரிசுக்குத் தென்கிழக்கே 16 கி.மீ தொலைவிலும் அரிமத்தியா இருந்ததாகக் கூறப்படுகிறது. இது இலிதாவுக்கு வட கிழக்கில் 14.5 கி.மீ.தொலைவில் உள்ள இக்கால ரென்திஸ் ஆக இருக்கலாம். கர் மாத்தாயீம், ராமதெம், ராமத்தா, ராமா ஏர்–ராம் என்பவை அரிமத்தியாவின் மற்ற வடிவங்களாகும். நான்காம் நூற் றாண்டில் புனித பவுலா அரிமத்தியா ஊரைக் கண்டுச் சென்றதாக எரோனிமு கூறுகின்றார். இதே நூற்றாண்டில் யூசே பியு இந்த ஊரினை ரெம்ப்தீஸ் என்ற ழைத்தார். இடைக்காலங்களில் அரிமத்தி யாவானது சாமுவேலின் உறைவிடமாகக் கொண்டாடப்பட்டது.

அரியணை (THRONE)

அரியணை, அரசர்கள் பயன்படுத்திய அலங்காரமான நாற்காலியாகும். அரிய ணை, அரசரின் மாண்பையும் மகத்துவத் தையும் குறிப்பிடும்படி அமைந்திருந்த தால், மிகவும் சிறப்பாகப் பேணப்பட்டு வந்தது. அரியணை கடவுளின் மகத்துவத் தோடும் இணைத்துப் பேசப்படுகின்றது. பொதுவாக இது ஒரு மரியாதையான இருப்பிடம். குறிப்பாக ஆளுநர்கள் (நெக 3:7), குருக்கள் (1 சாமு 4:13,18), அரசரின் விருந்தினர்கள் (2 அர 4:10) ஆகியோருக் குச்சிறப்பான இருக்கைகள் வழங்கப் பட்டுள்ளன. ஆனால் அரியணை மன்ன னுக்கும், இறைவனுக்கும் மட்டுமே வழங் கப்பட்டது. விவிலியத்தில் குறிப்பாக பழைய ஏற்பாட்டில் பல மன்னர்களின் அரியணைகள் குறிப்பிடப்பட்டிருக்கின் றன (யாத் 11:5; எரே 43:10; யோனா 3:6). இஸ்ராயேல் மன்னர்களான தாவீது மற் றும் சாலோமோனின் அரியணைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன (1 அர 10:18–20).

அரியணையின் அமைப்பு:– உயரமான பின்பாகம்கொண்டது. அகன்ற கையிருக் கையாக அமைந்தது. இறக்கைகள் கொண்ட சிங்கத்தின் அமைப்பில் இருந் தது. அரியணையின் பின்புறம் காளையின் முகம் செதுக்கப்பட்டிருந்தது. அரியணை யோடு, கால்மனை எப்போதும் இணைத் துக்கூறப்படுகின்றது. அரியணைகள் தங்கத் தகடுகளாலும், தந்தத்தாலும் அழகுப்படுத்தப்பட்டிருந்தன.

கடவுளுடைய அரியணை, எப்போதும் அவருடைய உடன்படிக்கைப் பெட்டகத் தோடு இணைத்துக் கூறப்படுகின்றது. இறைவனின் அரியணை இறைவாக்கு களிலும், திருவெளிப்பாடுகளிலும் காணப் படுகிறது (ஏச 6:1–3; எச 1:4–28; தானி 7:9–10; திருவெளி 4). கடவுளின் அரியணை வானகத்தில் உள்ளது. சில சமயங்களில் கடவுளின் அரியணையே வானகம் என்னும் கருத்தும் உள்ளது (சங் 10:4; ஏச 66:1; மத் 5:34). எருசலேம் (எரே 3:17), தேவா லயம் (ஏச 6:1; எச 43:7), நாடு (எரே 14: 21) ஆகியவைகளும் இறைவனின் அரியணை களாகக் கூறப்படுகின்றன.

அரசனின் அனைத்து மகத்துவமும் உவமையாக அரியணைக்கு அளிக்கப்படு கின்றது. அரியணை, நீதியின் இருக்கை யாக வருணிக்கப்படுகிறது (சங் 8:4; ஏச 16:5). புதிய ஏற்பாட்டிலும் இக்கருத்து வலி யுறுத்தப்படுகின்றது (மத் 25:31; லூக் 22:30). தாவீதின் எக்காலமும் நிலைத்திருக்கும் தெய்வ சிம்மாசனம் (2 சாமு 7:16; சங் 45:6), மெசியாவின் அரியணை என்ற கருத்துக்கு வழிகோலுகிறது. இக்கருத்து பழைய ஏற்பாட்டில் அரிதாகக் காணப் படுகிறது (ஏச 9:6–7; எரே 17:25). ஆனால் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி வருகிறது. புதிய ஏற்பாட்டில் மெசியாவாகிய கிறிஸ்து தாவீதின் வழித்தோன்றலா கிறார் (லூக் 1:32; அ.ப.2:30).

அரியாரதேசு (ARIARATHES)

இப்பெயரைக் கொண்ட ஐந்தாவது கப்பதோக்கிய மன்னன். யூதர்களுக்கு உரோமையர்கள் நண்பர்களாக இருப்பார்

கள் என்று உறுதியளித்து, உரோமைத் தூதர் உலூக்கியு கடிதம் எழுதிய பலமன்னர்களில் இவரும் ஒருவர் (1 மக் 15:15–24).

அரியேல் (ARIEL – இறைவனின் சிங்கம்–ஆள்)

அரியேல் எஸ்ராவால் தலைவர்களில் ஒருவராகக் குறிப்பிடப்படுகிறார் (எஸ். 8:16). ஆலயப்பணியாளரைக் கொண்டு வரும்படி காசிப்பியாவுக்கு எஸ்ரா அனுப்பியத் தூதுக் குழுவில் ஒருவர்.

2. தாவீதுவின் வலிய வீரர்களில் ஒருவரான பெனாயாவால் கொல்லப்பட்ட இரு மோவாயியர்கள் (2 சாமு 23:20; 1 நாள் 11:22)

அரியேல் (ARIEL) – இடம்

எருசலேமின் முற்றுகை மற்றும் பாதுகாப்புப் பற்றிய இறைவாக்கில் (ஏச 29:1–2.7) எருசலேமைக் குறிக்கப்பயன்படுத்தப்படும் மறைபொருளான பெயர். இப்பகுதியில் வரும் எபிரேயச் சொல் "பீடத்தின் அடுக்களை" என்பதை உணர்த்த வல்லது. இங்கே குறிக்கப்படும் பொருள் நான்கு "கொம்புகள்" கொண்ட சதுர நெருப்புச் சட்டியாகும். இது பீடத்தின் அடித்தளத்தோடு பொருத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து எடுத்துவிடலாம்.

அரியை (ARIEH)

இவர் சமாரியாவிலுள்ள அரச மாளிகையில் நடந்த படுகொலையில் பலியாகவோ, சதியாளராகவோ, அருகோபுடன் குறிக்கப்படுகிறார் (2 அர 15:25). சில மொழி பெயர்ப்புகள் இப்பெயர்களை விட்டுவிடுகின்றன. இவை 3–ஆம் திகிலாத்து – பிலேசரால் பிடிபட்ட இடங்களோடு சேர்க்கப்படவேண்டும் என்று சிலர் கருதுவர் (15:29).

அரியோக்கு
(ARIOCH – நன் மதிப்புக்குரிய)

1. ஆதி ஆகமம் 14–1–இல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மன்னர்களில் அரியோக்கு ஒருவராவார். இவர் அம்ராபேல், கெதொர்லா–கோமேர், திதால் ஆகியோரோடு சேர்ந்து (ஆதி 14:1) சிதீம் பள்ளத்தாக்கின் அரசர்களைத் தண்டிக்கப்படையெடுத்தார். ஆனால் இவர்கள் ஆபிரகாமின் படையால் தோற்கடிக்கப்பட்டனர் (14:2–17). அரியோக்கு ஆட்சி செய்த பகுதியானது சந்தேகத்திற்குரிய நிலையில் இருக்கின்றது. பாபிலோனியாவிலுள்ள லார்சா நகரோடு முன்பு அடையாளம் காட்டப்பட்ட எல்லாசர் பகுதியின் மன்னராவார் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது. மாரி வாசகங்களில் இப்பெயர் காணப்படுகிறது. அதன்படி சமீப கருத்து, இப்பகுதி, பாபிலோனில் கார்கேமிஸ், காரான் ஆகியவற்றுக்கு இடையிலுள்ள இலன்சூரா என்ற இடத்தை அடையாளம் காட்டுகிறது.

2. நெபுக்கதுனேசாரின் மெய்க்காவலர்களின் தலைவராக அரியோக்கு கருதப்படுகின்றார் (தானி 2:14–15 தொ). பாபிலோனிய ஞானிகளைக் கொலை செய்ய நியமிக்கப்பட்டவர். தன் கடமையைச் செய்தபோது இவர் தனியேலைச் சந்தித்து. அவரை அறிமுகப்படுத்தியவர்.

அரியோசு (ARIUS)

இவர் ஸ்பார்த்திய மன்னன் ஆவார் (1 மக் 12:20). இவர் பெரிய குரு ஓனியாவுக்கு "நீங்கள் எங்கள் சகோதரர்கள்" என்று வாழ்த்துக்கள் அனுப்பியதை (1 மக் 12:7) நினைவுபடுத்தி யோனத்தான் ஸ்பார்த்தர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினார்.

அரிவாள் (SICKLE)

வளர்ந்து முதிர்ந்த தானியக் கதிர்ளை அறுவடை செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட கருவி. தொடக்கக் காலங்களில் சக்கிமுக்கி கற்களால் பற்கள் போன்ற கருவியை செய்து அதை மரக்கட்டை பிடி போட்டு பயன்படுத்தி வந்தனர். பிற்காலத்தில் உலோகங்களால் செய்யப்பட்டு மரக்கட்டை கைப்பிடி போடப்பட்டது (உப 16:9; 23:25; எரே 50:16; மாற் 4:29).

அரிவாள் தீர்ப்பை அடையாளமாக உணர்த்துகிறது (யோவே 3:13; திருவெளி. 14: 14–20).

அருகோபு (ARGOB –குன்று, குவியல்) –ஆள்

இரண்டாம் அரசராகமத்தில் (15:25) அருகோபு அரியையுடன் சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் பெக்காகியாவுடன் பெக்காகின சதிச்செயலுக்குப் பலி

யாயிருக்கலாம் அல்லது பெக்காகினுடன் சேர்ந்து சதி செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இப்பெயர் சில மொழி பெயர்ப்புகளில் விடப்பட்டுள்ளது.

அருகோபு (ARGOB) –இடம்

கெசூர், மாக்கா ஆகிய இடங்களின் எல்லையிலுள்ள பாசானின் ஒருமாவட்டம். வடக்கு கிலயாத்திலுள்ள ஓகினுடைய அரசின் ஒரு பகுதியாகும். அம்மோனிய அரசன் சீகோனை வென்றபின் மனாசேயின் மகனாகிய யாயீர் என்பவரால் இப்பகுதி கைப்பற்றப்பட்டது (உப 3:4.13–14; 2 அரச 4:13). பிறகு மோசேயால் மானாசேயின் குலத்திற்கு ஒதுக்கப் பட்டது. அருகோபு 60 நகரங்களை உள்ளடக்கி இருப்பதாகக் கூறப்படுகிறது.

அருகோபு மாவட்டம் இருந்த இடமானது தெளிவாகத் தெரியவில்லை. பாசானிலுள்ள ஒரு பகுதியாக இருக்கலாம் அல்லது பாசானுக்கு வழங்கப்படுகின்ற மற்றொரு பெயராக இருக்கலாம். உப 3:4 –இல் இருந்து இப்பகுதி யாயீரின் கூடார கிராமங்கள் என்று பொருள்படும் கவ்வோத்து–யாயீர் என்ற மற்றொரு பெயரைக் கொண்டிருந்தாகத் தெரிகிறது. ஆனால் 1 அர 4:13 கிலயாத்திலிருந்த ஊர்களை "உயர்ந்த மதில்களாலும், வாயில்களாலும், தாள்ப்பாள்களாலும் அரண் செய்யப்பட்டு" பாசானிலுள்ள அருகோபுபின் 60 ஊர்களிலிருந்து வேறுபடுத்தப்படுகிறது. சாலமோனின் ஆறு மாவட்டங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

அருகோபு, தமஸ்குவிற்குத் தெற்கில் திராக்கோனித்திசில் இருந்ததாக தார்கூம் என்ற நூலும், கலாணித்திலும் (கோலான்) இருந்ததாக யோசிப்பசின் நூலும் இடம் காட்டுகின்றன.

அருங்குறிகளும் அற்புதங்களும் (SIGNS AND WONDERS)

இது ஒரு கூட்டு வார்த்தை, பல முறை விவிலியத்தில் தோன்றுகின்றது. இதை பரம்பரை வாய்பாடு என்று கூறலாம்.

பழைய ஏற்பாட்டில் ஏறக்குறைய முப்பத்தி ஐந்து தடவை அற்புதம் அல்லது வியப்புக்குரியது என்ற வார்த்தை காணப்படுகிறது. அதாவது "அற்புதம்" அவற்றில் பதினெட்டுத் தடவை அருங்குறி அல்லது அடையாளம் என்ற சொல்லோடு இணையாகவும், ஒன்பது தடவை அருங்குறி, அற்புதம் என்ற சொற்கள் ஒரு பொருட் பன்மொழியாகவும் வருகின்றன (உப 28:45–46; எச 12:6.11). பழையகால இஸ்ராயேலர்ளுடைய விசுவாச அறிக்கையில் "அடையாளங்களுடனும், அற்புதங்களுடனும்" மக்களை எகிப்திலிருந்து யாவே கூட்டிவந்தார் என்ற விசுவாசம் உள்ளடங்கியுள்ளது (உப 6:20–24; 26:5–10; யோசு 24:17). இந்த விசுவாச வாய்ப்பாடு இஸ்ராயேலர்கள் யாவே வரலாற்றின் ஆண்டவர் என்று அவாகள் ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்குச் சான்றாக உள்ளது. மேலும் இது மறுபடியும் மறுபடியும், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் (உப 4:34; 7:19; 11:3; 29:3; நெக 9:10; எரே 32:20–21; அ.ப 7:36), யாவே தன் மக்களுடன் வியப்புமிக்க வகையிலே தொடர்புகொண்ட விதத்தைப்பாடும் சங்கீதங்களிலும் காண்கிறோம் (சங் 78:43; 105:27; 135:9).

புதிய ஏற்பாட்டில் "அருங்குறி" என்ற சொல் ஒருமையில் தனித்துத் தென்படுவதில்லை, மாறாக "அற்புதங்களுடன்" இணைந்து பன்மையில்தான் காணப்படுகின்றது. "அருங்குறிகளும் அற்புதங்களும்" என்ற கூட்டுச் சொற்றொடர் (மாற் 13:22; யோவா 4:48; அ.ப 2:43; உரோ 15:19;...) கிரேக்க இலக்கியப் பாரம் பரியத்திலும் காணப்படுகிறது. இருப்பினும் புதிய ஏற்பாட்டில் இம்மரபு எழுபது நூலோடு கொண்ட தொடர்பின் விளைவாகும்.

1. திருவெளிபாட்டின் வியத்தகு சிறப்பியல்புகள்:–

இறையியல் பாணியில் பேசும்போது வெளிப்பாடும், அற்புதமும் பிரிக்க முடியாத அளவுக்கு இணைந்தவையாகும். எங்கெங்கு எப்பொழுது இறைவன் தம்மையே இவ்வுலகில் வெளிப்படுத்தினாரோ, அப்பொழுதெல்லாம் விசுவாசமுள்ள மனிதன் அவருடைய அற்புதத்தைக் கண்டுணர்ந்தான். வெளிப்பாடு என்பது இயற்கைச் சூழ்நிலையிலிருந்து தோன்றக்கூடிய அல்லது விளக்கிக்காட்டக்கூடிய நிகழ்ச்சி அன்று. இறைவனுடைய பரிசுத்தம் இவ்

வுலகைச் சார்ந்ததன்று. அதாவது சாதாரண உலகில் அறியப்படக்கூடியது அல்ல, சிந்தனைக்குட்பட்ட எதற்கும் அப்பாற்பட்டது ஆகவே மதிப்பச்சத்துடனும், நடுக்கத்துடனும், வியப்புடனும் பதில் எழுப்பும் நிகழ்ச்சிகளில் இறை மறையுண்மை வெளிப்படுத்தப்படுகிறது (யாத் 3:1–6).

அற்புதங்கள் பற்றியச் சொல் தொகுதியில் கடவுளுடைய பிரசன்னம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (யாத் 15:11; சங் 77:14; 78:12; 88:10.12; 13:89:5; ஏச 25:1). அவருடைய தீர்ப்பு மற்றும் மீட்புச்செயல்கள், வியப்புக் குரியவையும் அசாதாரணமும் ஆனவை யாகும். (யாத் 3:20; 34:10; யோசு 3:5; நீதி 6:13; யோபு 9:10; சங் 78:4.11.32; 105:5; எரே 21:2). யாவேயின் அற்புதங்கள் அச்சத்தை எழுப்பும் அளவில் பயங்கரமும் திகிலும் எழுப்புவதாக விவரிக்கப்படுகின்றன (யாத் 34:10; 2 சாமு 7:23; சங் 66:3.5). அற்புதத்தைக் குறிக்கப்பயன்படுத்தப்பட்ட மற்ற சொற்கள் "செயல்" (உப 3:24; சங் 9:11; 66:5; 77: 12; 86:8; ஏச 12:4), அரிய செயல், "அரிய பெரியன", மகத்தானவை, வலிமைமிக்கவை (2 சாமு.7:23; 2 அர.8:4; யோபு 9:10; சங் 71:19; 136:4), புதுமையைப் "படைப்பு" என்றும் அழைக்கலாம் (யாத் 34:10; எண் 16:30; ஏச 48:7; எரே 31:22). யாவேயின் செயல்கள் பரிசுத்ததனத்தையும், பெருந்தன்மையையும், (இஸ்ராயேல்களுடைய கடவுளின்) மீட்கும் சக்தியையும் வெளிப்படுத்துகின்றன (சங் 77:11–15). இந்த பகுதி புதுமையைக் குறிக்கப் பல வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றது.

விவிலிய கண்ணோட்டத்தில், அற்புதமானது சாதாரண நிலைக்கு மேம்பட்டது, வியப்புக்குரியது. அது கடவுளுடைய பிரசன்னத்திற்கு சான்றாக உள்ளது. ஆகவே, அற்புதமானது இயற்கை அமைவதைத் தகர்த்தெறியும் செயல் என்று புரிந்துகொள்ளக்கூடாது. நவீன காலப்புரிந்துகொள்ளும் தன்மையின்படி இயற்கைஅமைவு காரணகாரியம் என்ற விதியின்படி நடக்கிறது, அது நம்பத்தகுந்தது என்பதற்கு விவிலியம் சான்றுபகருகிறது (ஆதி.8:22). இந்நிலை கடவுளுடைய உடன்படிக்கைப் பிரமாணிக்கத்தையும் உறுதியையும் எடுத்துக்காட்டுகிறது (சங் 148:6; ஏச 45:18; எரே 5:24; 31:36). இறைவன் சட்ட அமைப்புக்கு வெளியிலுள்ளவரும் அல்லர் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவரும் அல்லர். ஆனால்,அவர் எந்த நேரத்திலும் எல்லா இடத்திலும் இருக்கின்றார் (எரே 23:24). இயற்கை உலகின் பொருள்களைப் பயன்படுத்தித் தன்னுடைய இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு அவர் விரும்பியவாறு செயலாற்ற அவருக்கு எல்லாவிதமான சுதந்திரமும் உண்டு. "கடவுளால் எல்லாம் முடியும்" என்பது திரும்பத் திரும்பத் தென்படுகின்ற சொற்றொடராகும் (ஆதி 18:14; 1 சாமு 14:6; எரே 32:17; மாற் 10:27). ஆனால் இதைக் கொண்டு அவர் தான்தோன்றித்தனமாகச் செயலாற்றுகிறார் என்று பொருள்கொள்ளக்கூடாது.

விவிலிய விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று ஆண்டவருடைய பராமரிப்புக் கொள்கையாகும். இதன்படி படைப்பவரும் ஆண்டவருமாகிய இறைவன் வரலாற்று நகிழ்ச்சிகளுக்கு உருவம் அளிக்கிறார். தமது மேலாண்மை நோக்கத்திற்கு ஏற்றவாறு இயற்கையின் வலிமையைக் கட்டுப்படுத்துகின்றார். இறைவனது செயல்களின் சூழலில் வாழும் மனிதன், மக்களிடையே இறைவனது பிரசன்னத்தைச் சுட்டிக்காட்டும் அடையாளங்களை அன்றாட உலகில் காண விழிப்பாயுள்ளான். உண்மையிலேயே விசுவாசமுள்ள இஸ்ராயேலனும் அல்லது கிறிஸ்தவனும் வியப்புக்குரியவை என்று கருதுபவை, மற்றொரு கோணத்தில் மிகச் சாதாரணமாகவும், முக்கியத்துவம் இல்லாததாகவும் இருக்கலாம். இவ்வாறு செங்கடலைக் கடந்த நிகழ்ச்சி ஒரு பயங்கரமான காற்று நாணல் கடலில் இருந்த தண்ணீரை வாரி ஒதுக்கிவிட்டதாக விளக்கப்படலாம்; மேலும் மன்னாவும் காடை பறவையும் பாலஸ்தீனத்தின் தென்பகுதியில் உள்ள பாலை நிலத்திற்குப் பழக்கப்பட்ட ஒரு இயற்கையான செயலாக இருக்கலாம்; அல்லது யோர்தான் ஆற்றைக் கடந்த நிகழ்ச்சியானது அண்ட நிகழ்ச்சியால் நீர் தற்காலிகமாகத் தேக்கப்பட்டதாக இருக்கலாம். அதேபோல் இயேசு

வின் ஒரு சில அற்புதங்களும் (முடவனைக்குணமாக்குதல் போன்றவை, மாற் 2:1–12) நவீன மனோதத்துவ அறிவைக் கொண்டு விளக்கப்படலாம். ஒருவர், அவர் பழங்காலத்தவரோ, நவீன காலத்தவரோ, இப்படியாக அந்தச் செயலின் வியப்புக் கூறைக் காணத் தவறிவிடலாம். ஆனால், விவிலிய விசுவாச கண்ணோட்டத்தில் அற்புதம் குறிப்பிட்ட விளக்கத்தின் படி நடந்ததா என்பதன்று, மாறாக கடவுள் அங்கிருந்து அதை வியப்புமிக்கதாக மாற்றினாரா என்பதுதான் கேள்வி. கடவுள் வியப்புமிக்க வகையிலே பிரசன்னமாயிருந்தார் என்பது, அதைப் பெரிதுப்படுத்தப்போதுமான காரணமாகும். இதில் மற்ற கூறுகளும் பங்கு கொண்டிருக்கலாம். இவ்வாறு நிலவுக்கும் சூரியனுக்கும் யோசுவாவின் செய்யுள் வடிவமான கட்டளையைச் சொற்பொருளில் தவறாகப் புரிந்துகொள்ளலாம் (யோசுவா 10:12–13). எலிசாவின் சீடர்கள் அவருடைய ஆசிரியரை மகிமைப்படுத்துவதற்காகப் பல அரிய செயல்களைக்கூறுவது; நற்செய்திகளின் பாரம்பரியத்தில், கிரேக்க வியப்புக் கதைகளின் செல்வாக்கு ஆகியவை பிற கூறுகளுக்குச் சான்றாகலாம்.

பொதுவான பொருளில் இறைவனுடைய கரத்தால் தொடப்பட்டதெல்லாம் விசுவாசமுள்ள மனிதனுக்குப் புதுமையானவையே. இயற்கை முழுவதும் கடவுளை மகிமைப்படுத்துகின்றது. அவருடைய செயல்கள் யாவும் வியப்புமிக்கவை (யோபு 38; சங் 139:14). ஆனால் ஒரு சில சூழ்நிலைகளில் கடவுளுடைய செயல், தனிமனிதனுடைய வாழ்க்கையில் அல்லது மக்களுடைய' வாழக்கையில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலையோடு ஒன்றாகிறது. இது குறிப்பிட்ட புதுமைகளைப்பற்றிப் பேச வாய்ப்பளிக்கிறது.

பழைய ஏற்பாட்டில், வியப்புக்குரியவற்றைக் கூறும்போது "அருஞ்செயல்" என்ற சொல் முக்கியமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தையானது "வியப்புக்குரியது" அல்லது "அசாதாரணமான" என்ற கருத்தை நமக்குக் கொடுக்கின்றன (யாத் 4:21; 7:9; 11:9–10; 1 நாள் 16:12; சங் 105:5; யோவேல் 2:30; 2 நாள் 32:24). இருந்த போதிலும் இந்த வார்த்தைகள், காட்சிக்குரிய இயற்கைக்கு மாறான அற்புதம் என்ற கருத்துடன் தொடர்புடையதாகத் தென்படுவதில்லை. இஸ்ராயேல் நாடு கடத்தப்படுவதை எசக்கியேல் செய்து காட்டியதும், அவரது மனைவி இறந்தபோது வருத்தம் கொண்டாடததும் மக்களுக்கு ஓர் அடையாளமாகும் (எச. 12:6; 11:24; 24.27). அற்புதம் என்ற சொல்லானது "அடையாளம்" என்ற சொல்லுடன் பொருளில் மிக நெருக்கமானதாக அமைந்துள்ளது; மேலும் ஒருசில நேரங்களில் அதற்குப் பதிலாக இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது (2 அர 20:8; ஏச 38:7). ஒரு சிலநேரங்களில் அதற்கு இணையான பொருளைக்கொடுக்கின்றது (1 அர. 3:3; சங் 71:7; செக் 3:8). பெரும்பாலான சூழ்நிலைகளில் இரண்டு வார்த்தைகளும் இணைந்த ஒன்றாக வருகின்றன (யாத் 7:3; நெக 9:10; சங் 78:43; 105:27; 135:9; எரே 32.20–21; உப 9 முறைகள்). ஏசயா அசுதோத்து முற்றுகையிடப்பட்டபோது, நிர்வாணமாகவும், வெறுங்காலுடனும் சென்றது ஓர் அடையாளமாகும் (ஏச 20:2–4). அவர் தன்னுடைய மக்களுடன் "அடையாளங்களாகவும் முன்னறிகுறிகளாகவும்" உள்ளார். சாதாரண அல்லது அருகதையற்ற பொருட்கள், தெய்வீக வெளிப்பாடு அவற்றின் மீது ஒளிவீசி மாற்றும்போது அசாதாரணமானவையும் பொருள் பொதிந்தவையாகவும் மாறுகின்றன. கடவுளுடைய பிரசன்னத்தைத் தற்செயலான குறிப்புகளிலும் அசாதாணரமான நேரங்களில் நிகழும் நிகழ்ச்சிகளின் மாற்றத்திலும், அகால இறப்பிலும், போருக்குப் பின் நாடு வழக்கமான நிலைக்குத் திரும்புவதிலும் அறிந்து கொள்ள முடியும் (ஆதி 24:10–21; 1 சாமு 2:27–36; 14:10; ஏச 37:30–32)...ஒரு நிகழ்ச்சியின் இயற்கை மீறிய தன்மையைப் பொறுத்ததன்று அற்புதம். அசாதாரணமான அது நடக்கும் நேரத்தைப் பொறுத்ததாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இறைவனது திட்டத்தில் புரிந்து கொள்ளக் கூடிய குறிப்பிட்ட பொருளுடன் நிகழ்வதைப் பொறுத்தது. எகிப்தியர்களுக்கு செங்கடலைக் கடந்த நிகழ்ச்சியானது, இயற்கைக்கு மாறான நிகழ்ச்சியாகும்

ஆனால், வரலாற்று நெருக்கடி நிலையில் இருந்த இஸ்ராயேலருக்கு இறைவாக்கு விளக்க ஒளியில், இந்த நிகழ்ச்சி கடவுளுடைய ஆற்றலுள்ள பிரசன்னத்தை வெளிப்படுத்தியது. அதேபோல் சிலுவையில் அறையப்பட்டதும், உயிர்த்ததுவும் யூதர்களுக்கு இடறலாகவும் கிரேக்கர்களுக்கு முட்டாள்தனமான செயலாகவும் இருந்தன. ஆனால் திருச்சபைக்கு இது கடவுளின் ஞானத்தின், வல்லமையின் அடையாளமாக விளங்கியது (1 கொரி 1:18–25).

பரந்த கண்ணோட்டத்தில் பார்க்கின்றபோது விவிலியத்தில் எடுத்துக்கூறப்பட்டிருக்கும் இறைவனது செயல்களின் வரலாறு, தொடக்கத்திலிருந்து முடிவுவரை அற்புதமானதாகும். இருந்த போதிலும் கடவுள் மனிதர்களுடன் தொடர்பு கொண்டபோது முடிவுகள் செய்ய வேண்டிய சிலநேரங்கள் இருந்திருக்கின்றன. விவிலியப் பாரம்பரியத்தில் அந்த நேரங்கள் அற்புதங்களின் மிகுதியால் சிறப்பு பெற்றுள்ளன. இப்படியாக இஸ்ராயேலர்களின் தொடக்ககால வரலாறு பல அற்புதங்களைக் கொண்டிருந்ததாக விவரிக்கப்படுகிறது. அதேபோல் இஸ்ராயேலர்கள் இவ்வுலக அரசியல் வாழ்க்கையில் மூழ்கி இருந்தபோது இறைவாக்கினர் வழியாகக் கடவுள் பேசினார். இது இறைவாக்கினர்களுடைய சீடர்களின் கண்ணோட்டத்தில் புதிய அற்புதங்களால் சிறப்புப் பெற்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, புதிய யுகத்தின் ஆரம்பமானது, அருங்குறிகளாலும், அற்புதங்களாலும், அதாவது கிறிஸ்து நிறைவேற்றிய அற்புதங்களால் மட்டுமல்லாது (அ.ப. 2:2), திருச்சபையும் அப்போஸ்தலர்களும் செய்த அற்புதங்களாலும் (யோவா 14:12; அ.ப.4:16.30; 5:12–6:8; 14:3; 1 கொரி 12:10. 28; 2 கொரி 12:12; கலா 3:5; எபி 1:4) சிறப்புப் பெற்றது என்று புதிய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது.

2. அடையாள நிகழ்ச்சிகளான புதுமைகள்:–

அடிக்கடி அற்புதத்தையும் அருங்குறியைக் குறிக்கும் விவிலியச் சொற்கள் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றன. இது விவிலிய அற்புதங்களின் மற்றொரு தன்மையை எடுத்துக் கூறுகின்றது. அவைகள் கடவுளுடைய செயல்களின் வியப்புக்குரிய தன்மைக்கு மட்டும் சான்று பகர்வ தோடல்லாமல் அச்சுறுத்தலாகவோ வாக்குறுதியாகவோ அல்லது ஆதரவாகவோ பாதகமாகவோ பேசப்பட்ட ஆண்டவருடைய வார்த்தையை உறுதிப்படுத்தும் விளைவையும் கொண்டிருக்கிறது. அருங்குறியானது, இறைவாக்கு வார்த்தைக்கு நெருங்கிய உறவுடையது. ஆனால் இரண்டாந்தரமானது. அனுபவச் சான்று அளித்தது. இதனால் மனிதர்கள் கடவுளுடைய வார்த்தையை கேட்பது மட்டுமல்லாமல் அதை செயலிலும் பார்க்கலாம்.

ஓர் அருங்குறியானது புலன்களை, குறிப்பாகப் பார்வையை, பாதிக்கின்றது. பழைய ஏற்பாட்டில் அடையாளம் என்ற சொல் பல பொருட்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. புதுமையோடு தொடர்புபடுத்தப்படும் போது அருங்குறி கண்ணுக்குத் தென்படக்கூடிய குறி. அது கண்ணால் காணமுடியாத ஆற்றலையும், இந்த உலகில் கடவுளுடைய செயலையும் சுட்டிக் காட்டும் புற அடையாளத்தை உணர்த்துகிறது. அடிக்கடி அருங்குறிகள் தெய்வீகக் கட்டளையுடன் தொடர்புள்ள வகையில் "நான் உங்களோடு இருப்பேன்" என்ற கடவுளுடைய உறுதிமொழியின் சான்றாகக் கொடுக்கப்பட்டது. இப்படியாக யாத் 3:12–இன்படி யாவே மோசேயை நோக்கி "நாமே உன்னோடு இருப்போம். அதுவுமன்றி நீ நம் மக்களை எகிப்தினின்று வெளியேறச் செய்த பின்னர், இம்மலையின் மீதே கடவுளுக்குப் பலி இடுவாய். நாம் உன்னை அனுப்பினோம் என்பதற்கு இதுவே அடையாளமாகும் என்று அருளினார்". அதாவது இஸ்ராயேலர் யாவேக்கு ஊழியம் செய்வதற்காக விடுவிக்கப்பட்ட ஓர் இனமாய் இருப்பது தாதின் வரலாற்றுப் பூர்வமான உறுதிப்பாடாகும். தனி நபர்களுடைய வரலாற்றுப்பூர்வமான நிகழ்ச்சிகளைத் தவிர்த்து, மோசேக்கு நேர்முகமாகவோ (யாத் 4:8–9,17) அல்லது இஸ்ராயேலர்களின் முன்னிலையிலே (4: 28,30) அல்லது பாரவோனின் முன்னிலையிலே (7:3; 8:23; 10:1–2) அளிக்கப்பட்ட அடையாளங்களின் நோக்கம் மோசே யாவேயின் பேராள் என்பதைப் புற அடையாளத்தால் உறுதிப்படுத்துவ

தாகும். இதே மாதிரியான நோக்கம் (மிதியான் நாட்டு மக்களைத் துன்புறுத்திய போது) கிதயோனை நியமித்த கதையிலும் காணப்படுகிறது (நீதி 6:11–24). கிதயோன், வல்லமையுள்ள செயல்கள் எல்லாம் எங்கே? குறிப்பாக கடத்தல் காலத்திலிருந்து செய்யப்பட்டவைகள் எங்கே? என்று கேட்கிறார். யாவே அவரை அழைத்து இஸ்ராயேலை விடுவிப்பதாகக் கூறி, "நான் உன்னோடு இருப்பேன்" என்று அவருக்கு உறுதி அளிக்கின்றார். தன்னுடன் பேசுபவர் யாவே என்பதற்கு சான்றாக கிதயோன் அடையாளம் கேட்கின்றார். அவருடைய காணிக்கை சுட்டெரிக்கப்படுவதிலிருந்து ஓர் அடையாளம் பெறுகிறர். அதேபோல் அரசாட்சியின் தொடக்கக்காலத்திலும் (1 சாமு 9–10), சவுலைக் கடவுள் இஸ்ராயேலர்களைப் பகைவர்களின் கையின்று விடுவிப்பதற்காகத்தேர்ந்தெடுத்துள்ளார் என்ற செய்தியைச் சாமுவேல் சவுலுக்கு அளித்து (1 சாமு 9–10) இச்செய்தி அருங்குறிகளால் உறுதிப்படுத்தப்படும் என்று கூறுகிறார் (10:1–13). "இந்த அடையாளங்கள் எல்லாம் உனக்கு நேரிடும்போது உன்னால் செய்ய முடிந்தவற்றை எல்லாம் செய்" (10:7) என்று கூறுகிறார்.

இந்தப் பகுதிகள் அடையாளத்திற்கும் வார்த்தைக்கும் இடையில் உள்ள தொடர்பை மட்டும் காட்டுவதில்லை மாறாக அருங்குறியானது வருவதுரைக்கும் தன்மையுள்ளது என்பதையும் காட்டுகிறது. அவை யாவே நிகழ்காலத்தில் தீர்ப்பாகவோ இரக்கமாகவோ பேசிய சொல்லை உறுதிப்படுத்தச் செய்யப்போவதைச் சுட்டிக்காட்டுகின்றன. இறைவாக்கினர்களுடைய தலையாய பணி "கடவுளுடைய வார்த்தையை" அறிவிப்பதாகும். அது மன வருத்தத்தையும், விசுவாசத்தையும் தூண்டக்கூடியதாகும். அவை அடையாளங்களையும் செயல்படுத்தப்பட்ட அடையாளங்களையும் சுட்டிக்காட்டின அவை வரலாற்றில் இறைவார்த்தையின் ஆற்றல் மிக்க தன்மையை எடுத்துக் காட்டின. ஒரு முக்கியமான எடுத்துக்காட்டு ஏச 7:10–16–ல் உள்ள இம்மானுவேல் அருங்குறியாகும். ஏசயா கடவுளுடைய வார்த்தையை அரசர் ஆகாசுக்கு அறிவித்தார். அதாவது சீரியர்களுடன் இஸ்ராயலர்கள் செய்துள்ள நட்பானது நிலைக்காது என்றும், யூதாவில் பொம்மை அரசனை நியமிக்கும் திட்டம் தோல்வியுறுமென்றும், யாவே தன்னுடைய வார்த்தையை அரசன் தேர்ந்தெடுக்கின்ற எந்த அடையாளத்தைச்செய்தும் உறுதிப்படுத்துவர் என்றும் கூறினார். இதற்கு இறைவனால் எல்லாம் செய்ய முடியும். அரசன் தன்னுடைய பக்தி என்ற போர்வையின் அடியில் அடையாளம் கேட்க மறுத்தாலும், அடையாளம் முன்னறிவிக்கப்படுகிறது. இந்த இறைவாக்குக்குப் பொருள் அளிப்பதில் பலப்பிரச்சினை உண்டு. இவற்றை இம்மானுவேல் என்ற தலைப்பில் காண்க. இந்த அடையாளங்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக யாவே வரலாற்றுச் சூழ்நிலையில் பிரசன்னமாக உள்ளார் என்பதைச் சுட்டுகின்றன. இறைவாக்கினரும் அவரது குடும்பமும் (ஏச 8:16–18), விசுவாசச் செழிப்பு மீண்டும் கிடைத்தல் (37:30–32; 2 அர 19:29–31), நிகழ்த்தப்பட்ட மாதிரிச் செயல்கள் (ஏச 20:3; எச 4:1–3) போன்றவை விளக்கிக்காட்டும் அடையாளமாகலாம். அதேபோல் புதுயுகத்தைப் பற்றிய இறுதிக்கால உறுதிமொழிகள், நிகழவிருக்கும் அடையாளங்களின் முன்னறிவிப்போடு தொடர்புடையன (ஏச. 45:1–8; 55:10–13). அப்போது பூமி வியத்தகு முறையில் மாற்றியமைக்கப்படும். உண்மையிலேயே வானத்திலும் பூமியிலும் வியப்புமிக்க நிகழ்ச்சிகளின் முன்னறிவிப்புத் தன்மை வெளிப்பாட்டு இலக்கியங்களில் முக்கிய இடம் பெறுகின்றது. (தானி 4:2–3; 6:27; யோவே 2:30). புதிய ஏற்பாடும் இந்த உலகின் முடிவு அடையாளங்களாலும், அற்புதங்களாலும் அறிவிக்கப்படும் என்பதை அறிவிக்கிறது (லூக் 21:11.25; திருவெளி 12:1.3; 15:1; அ.ப 2:19).

ஒத்தமை நற்செய்திகளில் வரும் புதுமைகள் மெசியா காலத்தில் உதயமாகிய இறையரசின் வருகையை அறிவிக்கும் சூழ்நிலையில் நிகழ்கின்றன. இயேசு அரசின் நற்செய்தியை மட்டும் அறிவிக்கவில்லை; தன்னுடைய செயல்களில், குறிப்பாகப் பேய்களை ஓட்டுவதில், இறைவனு

டைய வாக்குறுதிகள் நிறைவேறுகின்றன என்பதற்குச் சான்றுகளையும் காட்டினார். நற்செய்தி ஆசிரியர்கள் புதுமைகளை மெசியாச் செயல்களாகவும் வல்லமை மிக்க செயல்களாகவும் நோக்கினர். அவற்றை விசுவாசக் கண்ணோடு நோக்கினதால், அவை மனிதனுடைய மீட்புக்காக இறைவன் ஆற்றியவற்றையும், அவரால் நியமிக்கப்பட்ட இயேசுவையும் அடையாளம் காட்டின. இவ்வாறு அவருடைய போதகத்தோடு அடையாளங்களும் நிகழ்ந்தன. அவை இறைனுடைய வார்த்தையைக் கேட்கமட்டுமல்ல, உலகில் அதன் ஆற்றல் மிக்க தன்மையை மனிதர் காணவும் வாய்ப்பளித்தன (மத் 11:4–5; லூக் 7:22; 10:23–24). அவர் பேய்களை ஓட்டுதல், சாத்தனது ஆட்சி அழிக்கப்பட்டு, இறையரசு ஆற்றலோடு வந்துகொண்டிருப்பதற்கு அடையாளமாகும். (மத் 12:28; மாற் 3:22–30; லூக்.11:20). அவர் குணமாக்குதல், பாவமன்னிப்பில் வெளிக்காட்டப்படும் இறைவனது பிரசன்னமும் ஆற்றலும் அருகில் இருப்பதற்கு அடையாளமாக உள்ளது (மாற் 2:1–12). கடலில் புயலை அடக்குதல் போன்ற இயற்கை சார்ந்த புதுமைகள் (4:35–41). இயேசுவின் வார்த்தைகளிலும் செயல்களிலும் வெளிப்படுத்தப்பட்ட இறைமேலாண்மையின் மகத்துவத்தையும் ஆற்றலையும் உணர்ந்தவர்களிடம் ஏற்பட்ட மதிப்பச்சத்தை எடுத்துக் காட்டுகின்றன. நான்காம் நற்செய்தியில், இயேசுவின் புதுமைகள் தன்மையாலே சிறப்பான அடையாளங்களாகும்; அதாவது, விசுவாசம் உள்ளவர்களுக்கு, இயேசு இறைமகன் என்று அவரது மாட்சிமையையும் வெளிப்படுத்தும் அடையாளப் படங்களாகும் (யோவா 2:11; 9:3; 11:4.40)

3. அறிகுறிகள்–அற்புதங்களில்–ஐயத்தன்மை:-

விவிலியப் புதுமைகளின் மற்றொரு பண்பு அவற்றின் ஐயத்தன்மையாகும். அச்சுறுத்தலாகவோ வாக்குறுதியாகவோ பேசப்பட்ட வார்த்தையை உறுதிப்படுத்த அடையாளம் கொடுக்கப்பட்டாலும், ஐயமின்றி உறுதிப்படுத்தும் ஆற்றல் இந்த அடையாளங்களுக்கு இல்லை. அடையாளம் விசுவாசத்துக்கு ஆதரவு அளிக்கிறது. அதை உறுதிப்படுத்துகிறது. ஆனால் விசுவாசச் சூழ்நிலைக்குப் புறம்பாக உள்ள மனிதனுக்கு இது உறுதியான அடையாளமாக அமையாது. அதாவது விசுவாசம் தேவையில்லாத அளவுக்கு இதை உறுதியான சான்று அளிக்கவில்லை. மோசே எகிப்தில் செய்ததாகக் கருதப்படும் பல அறிகுறிகளும் பாரவோன், இஸ்ராயேலருடைய மனதில் பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. ஆனால் அவற்றின் சான்றுபகரும் ஆற்றல், எகிப்திய மந்திரவாதிகளும் சில அறிகுறிகளைச் செய்தனர் என்பதாலும் பாரவோனின் கடின இதயம், வரலாற்றில் யாவேயின் மேலாண்மையின் சான்றுகளைக் காணத்தவறிய இஸ்ராயேலரின் குருட்டுத்தனம் ஆகியவற்றாலும், பலவீனப்படுத்தப்பட்டதற்குப் பாரம்பரியம் சாட்சி கூறுகிறது. நடந்தவற்றையெல்லாம் கண்டபின்னும், இஸ்ராயேலர் "ஆண்டவர் நம்மோடு இருக்கிறாரா இல்லையா?" என்று முணுமுணுத்தனர் (யாத் 17:7). அதுபோலவே புதிய ஏற்பாட்டில் இயேசுவின் அறிகுறிகளும் அற்புதங்களும் மறுக்க முடியாதபடி விசுவாசத்திற்கு இட்டுச் செல்லவில்லை (யோவா.12: 37). மாறாகப் பெரும்பாலும் அவை மக்களின் வேடிக்கை பார்க்கும் தன்மையைத் தூண்டின. இயேசுவை ஒரு வியப்புகள் செய்பவர் என்ற அளவிலேயே மக்கள் இயேசுவைச் சூழ்ந்தனர். அவருடைய எதிரிகள் கூட அவர் புதுமைகள் செய்ததாக ஏற்றுக்கொண்டனர் (மாற் 3:22). நான்காம் நற்செய்தியின்படி, இயேசுவின் அறிகுறிகள் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டன. பகைமையை வளர்த்தன. சாவுக்கு இட்டுச் சென்றன (யோவா 11:47).

அற்புதங்களின் ஐயத்தன்மைபற்றி உபாகமச் சட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது (உப.13:1–5). ஒரு இறைவாக்கினரோ அல்லது கனவு காண்பவரோ ஒரு அருங்குறி அல்லது வியப்புக்குரிய செயலைச் செய்து, அதன் மூலம் இஸ்ராயேலர்கள் மற்ற கடவுளுக்கு ஊழியம் செய்து நெறி தவறி நடக்கச் செய்தால், அந்த அருங்குறி அல்லது வியப்புச்செயல் உண்மையானதாக இருந்தாலும்கூட, அவனுக்குச் செவிமடுக்கக்கூடாது; இப்படியாக

கடவுள் தம்மக்களின் பிரமாணிக்கத்தை சோதிக்கின்றார் என்று கூறுப்பட்டுள்ளது. அடையாளமானது, வரலாற்றுப் பூர்வமாக யாத்திரை நிகழ்ச்சியில் வெளிப்படுத்துப் பட்டுள்ள கடவுளுடைய வார்த்தைக்குப் பொருத்தமானதாக இருக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. இப்படியாக அறிகுறியானது தானாகவே கடவுளுடைய பிரசன்னத்திற்குச் சான்றாக அமைவதில்லை (2 அர 3:27); இறைவாக்கினர்களால் விளக்கப்பட்டு யாவேயின் மீட்பு வரலாற்றின் சூழ்நிலையில் நோக்கும் போதுதான் அவை பொருள் பொதிந்தவையாகும். உண்மையிலே விசுவாசம் இயற்கையிலும், வரலாற்றிலும் இறைவனின் பராமரிப்பிலும் காணக்கூடிய அடையாளங்களை உணர்ந்துகொள்ளமுடியும். ஆனல் வியப்புகுரியவற்றில் கவர்ச்சி விசுவாசத்திற்கு இட்டு செல்லமுடியாது. அற்புதங்களின்பால் உள்ள ஆர்வம் விசுவாசத்திற்கு மாற்றாக அமையாது. பிற்கால விவிலிய யூத மறை இறைவாக்கு மறைந்து விட்டது என்று நம்பியபோது (சங் 74:9; 1 மக் 4:46; 9:27; 14:41), கண்ணால் பார்க்கக்கூடிய பகட்டான வியப்புகளின் மேல் கவனம் செலுத்தும் மனநிலை இருந்தது (2 நாள் 20:20–30; 32:20–31; தானி 14:31–42; 2 மக் 1:19–23; 3:22–40; 10:29–31).

புதிய ஏற்பாடானது அற்புதத்தின் கண்ணால் பார்க்கக் கூடிய குணத்தை வலியுறுத்தத் தயங்கியது. ஏற்கனவே பார்த்தது போல அற்புதமும், அருங்குறியும் பெரும்பாலும் இணைந்தே காணப்படுகின்றன. இயேசுவும் தன்னைப்பற்றிய வியப்புகள் செய்பவர் என்ற பாராட்டுப் புகழுரையைப் பெறக்கூடிய சோதனையைத் தொடர்ந்து சந்திக்க வேண்டியதாக இருந்தது. "வானத்திலிருந்து அறிகுறியைத் தேடுவது" கடவுளை தேடுவதற்கு மாற்றாக அமையலாம், ஆகவே சந்தேகக் குணம் படைத்த பரிசேயர்களைக் கடிந்து கொள்கின்றார். "எந்த அறிகுறியும் இந்தத்தலைமுறைக்குக் கொடுக்கப்படாது" (மாற் 8:12; மத் 12:39; லூக் 11:24; மத் 16:1–4; யோவா 4:48; 6:30) என்று மறுத்துவிடுகிறார். இவருடைய வல்லமைமிக்க செயல்கள் மனமாற்றத்தையும் விசுவாசத்தையும் உண்டாக்குவதற்குப் பதிலாக அவர்களின் கடுமையான உள்ளங்களையே எதிர் கொண்டன; ஒருவேளை தீர் சீதோனைச் சேர்ந்த புறவினத்தார் இந்த அற்புதங்களைக் கண்டிருந்தால் அவாகள் மனம் மாறி இருப்பார்கள் என்று கிறிஸ்து கூறினார் (மத் 11:21; லூக் 10:13). மேலும் எல்லாவற்றிற்கும் மேலாகப் புதிய ஏற்பாடு மற்றவர்கள் அற்புதம் என்று கருதுகின்ற செயல்களை, அற்புதமான செயல்கள் என்றே கருதவில்லை. ஏனெனில் அவை கடவுளுடைய திட்டத்தை வெளிப்படுத்தவில்லை; மாறாக மனிதர்களை ஏமாற்றுகின்றன. கடைசியில் மாற்குவின் சிறிய வெளிப்பாட்டு உரையின்படி, காலத்தின் இறுதியில் "போலி மெசியாக்களும், போலி இறைவாக்கினர்களும், தீர்க்கதரிசிகளும் தோன்றி, கூடுமானால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களையும் ஏமாற்றக் கூடிய அருங்குறிகளும், அற்புதங்களும் செய்து காட்டுவார்கள்" (மாற் 13:22; 2 தெச 2:9). சாத்தானும், அதனுடைய உதவியாளர்களும் கூட அற்புதங்கள் நிகழ்த்த முடியும் என்று சொல்லப் பட்டுள்ளது (திருவெளி 13:13–14; 16:14; 19:20). இயேசு இந்தச் சீர்கெட்ட தலைமுறைக்கு ஐயமற்ற அருங்குறி தர மறுத்த போதிலும், கடவுளுடைய அரசின் அற்புதங்களையும் அருங்குறிகளையும் நிகழ்த்துவதில் அவருடைய பணி அடங்கி இருந்தது. பார்வையாளர்களுக்கு இந்த நடவடிக்கைகள் மற்றவர் செய்யக்கூடிய அற்புதங்களிலிருந்து வேறுபட்ட ஒன்றாகத் தென்படவில்லை; ஆனால், விசுவாசத்துடன் இதைப்பார்த்தவர்களுக்கு இந்த அருங்குறிகள் வரப்போகின்ற கடவுளுடைய அரசைச் சுட்டிக்காட்டின. எல்லாவற்றிற்கும் மேலாகத் திருச்சபையின் விசுவாசக் கண்ணோட்டத்தில் பார்க்கின்றபோது, இயேசுவே அந்தப் புதிய அரசின் அருங்குறியாக அமைகின்றார். ஆகையினாலே சிமியோன் (லூக் 2:34) குழந்தை இயேசு அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றார் என்று அறிவிக்கின்றார். மேலும் மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் எழுபது நூலின் மொழி பெயர்ப்பைச் சார்ந்த ஏச 7:4–இல் கூறப்பட்ட இம்மானுவேல் அடையாளம் பற்றிய இறைவாக்கு நிறைவேறுவதாக அறிவிக்கிறார் (மத் 1: 22–23). திருச்

சபையின் விசுவாசத்தில் கடவுளின் மிக வல்லமையுள்ள செயல் இயேசுவின் உயிர்ப்பாகும். இதனுடைய பின்னனியில் இயேசுவின் வாழக்கையில் நிறைவேற்றிய எல்லா அருங்குறிகளும், வல்லமையுள்ள செயல்களும் புரிந்துகொள்ளப்பட்டன. .

அருட்கொடைகள் (CHARISMS)

"அருட்கொடைகள்" என்பது "காரிஸ்மா" என்ற கிரேக்கச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். இதற்கு, இறைவன் கருணையோடு வழங்கும் "இலவசக் கொடைகள்" என்பது பொருள். இதனை "அருள்" என்ற சொல்லாலும் குறிக்கலாம். இறைவன் தாம் வழங்கும் அருட்கொடைகளைத் திருப்பி எடுத்துக்கொள்வதில்லை (உரோ 11:29). அருள் என்னும் கொடை கிறிஸ்துவின் வழியே நம்மை வந்தடைகின்றது (உரோ 5:15 தொ). இக்கொடை நம் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவில் முடிவில்லா வாழ்வுக்கு இட்டுச்செல்கிறது (உரோ 6:23). இறைவன் நம்மைக் கிறிஸ்துவின் அருளால் நிறைத்துள்ளார் (எபே 1:6); இன்னும் தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அளிப்பார் (உரோ 8:32). இறைவனளிக்கும் கொடைகளுள் தலைசிறந்தது தூய ஆவியே. நமக்கு அருளப்பட்ட தூய ஆவி வழியாய் இறையன்பு நம் உள்ளங்களில் பொழியப் பெறுகின்றது (உரோ 8:15). தூய ஆவியார் நம் உள்ளத்தில் உறைகின்றார்; தாம் விரும்பியளிக்கும் அருட்கொடைகளின் வழியே தம்மையே வெளிப்படுத்துகின்றார் (1 கொரி 12:1–4). தொடக்ககாலத் திருச்சபையில் இக்கொடைகள் நிறைந்து காணப்பட்டன. அவற்றைப் பயன்படுத்துதல் சில பிரச்சினைகளை எழுப்பியது. ஆகவே தம்முடைய திருமுகங்களிலே புனித பவுல் இக்கொடைகளின் பண்பும் பயனும் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார்.

I. அருட்கொடை அனுபவம் :-

பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே இறைவன் ஆவி அடியவரை ஆட்கொண்டு அவர்களைத் தம்கொடைகளால் நிரப்புகிறார். சிலர் இறைவாக்குகளைச்சீர் தூக்கிப்பார்க்கும் திறம் பெற்றிருந்தனர் (1 அர 22:28). சிலர் ஆவியாரால் பரவச நிலைக்கு அழைத்துச் செல்லப் பெற்றனர் (எச 3:12). சிலர் வியக்கத்தக்க வகையில் இடம்விட்டு இடம்மாறும் இடப்பெயர்ச்சித் திறம் பெற்றனர் (1 அர 18:12). வரவிருக்கும் மீட்பருக்கு வாக்களிக்கப்பட்ட கொடைகளைப் பொதுவாக ஆவியாருக்கு உரித்தாக்குகிறார் இறைவாக்கினரான ஏசயா (ஏச 11:2). கல்லான இதயத்தைக் கனிய வைப்பவர் ஆவியார் என உணர்த்துகிறார் எசக்கியேல் (எச 36:26 தொ). ஆவியாரின் கொடைகள் எல்லா இனத்தவர் மேலும் பொழியப்படும் என அருட்கொடைகளின் பொதுமைப்பண்பை விளக்குகிறார் யோவேல் (யோவே 3:1 தொ). தொடக்ககாலத் திருச்சபையில் தூய ஆவியின் கொடைகள் பற்றிய அனுபவத்தைப் புரிந்துகொள்ள, மேற்கூறப்பட்ட இறுதிக்காலம் பற்றிய வாக்குறுதிகளை மனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், இக்கொடைகள் எல்லாம் திருச்சபையின் தொடக்கக் காலத்தில் நிறைவேறின. இளந்திருச்சபை ஆவியாரின் கொடைகளை முழுவதும் பெற்று அனுபவித்தது. ஏனெனில் திருச்சபையே இவ்வாக்குறுதிகளின் நிறைவாகும்.

1. அப்போஸ்தலர் பணிநூலில்:– ஐம்பதாம் நாள் விழாவை அருட்கெடை வழங்கு விழாவின் தொடக்க நாளாகக் கொள்ளலாம். அன்று ஆவியார் தம் கொடைகளின் வழியே தம்மை வெளிப்படுத்துகிறார் (அ.ப. 2:15–21). அன்று அப்போஸ்தலர்கள் இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்டதற்கேற்ப இறைவனின் இணையற்ற செயல்களைப் பல்வேறு மொழிகளிலே எடுத்தியம்புகின்றனர் (2:4. 8–11). ஆவியாரின் வருகை கிறிஸ்துவின் வெற்றியை அறிவிக்கின்றது. கிறிஸ்து கடவுளின் வல்லமையால் உயர்த்தப்பெற்று, வாக்களிக்கப்பட்ட ஆவியாரைத் தந்தையிடமிருந்து முதல் கொடையாகப் பெற்றுப் பொழிகின்றார் (2:33). அதன் பிறகு ஆவியார் பல்வேறு வழிகளில் தம்மையே வெளிப்படுத்துகிறார். ஐம்பதாம் நாள் விழா நிகழ்ச்சிகள் பல்வேறு விதங்களில், சிறப்பாகத் திருமுழுக்குப் பெற்ற பின், கைகளை விரித்து வேண்டி நிற்கும்போது (8:17 தொ; 19:6) தொடர்ந்து நடைபெறுகின்றன (4:31; 10:44 தொ). இறை

வாக்கினரின் செயல்களிலே (11:27 தொ; 15:32; 21:10), போதகர்களின் பணியிலே (13:1 தொ), நற்செய்தியை அறிவிப்போரின் பணியிலே (6:8 தொ), தம்மை வெளிப் படுத்துகிறார். தொண்டர்கள் ஆற்றிய அருங்குறிகளிலேயும் (6:8; 8:5 தொ), அவர் கள் கண்ட அருங்காட்சிகளிலேயும் (7:55) தம்மை வெளிப்படுத்துகிறார். இந்த அருங்கொடைகள் எல்லாம் முதலில் அப் போஸ்தலர்களுக்கு வழங்கப்படுகின்றன. அவர்களுடன் தொடர்புடைய மற்றவர் களிடத்திலும் இக்கொடைகளைக் காண்கி றோம். சில குறிப்பிட்ட பணிகளுக்காக நியமிக்கப்பட்டவர்களுக்கு அருட்கொடை கள் வழங்கப்படுகின்றன (ஸ்தேவான், பிலிப்பு, · பார்னபா). எல்லா அருட் கொடைகளும் தூய ஆவியின் ஏவுதலால் விசுவாசிக்கும் திருச்சமூகத்தின் பொது நலனுக்காகவே தூய ஆவியானவரால் வழங்கப் பெறுகின்றன.

2. பவுல் நிறுவிய திருச்சபையியல்:– பவுல் உருவாக்கிய பழந்திருச்சபையில் அருட்கொடை அனுபவம் அன்றாட நிகழ்ச்சியாக விளங்குகிறது. அவர் அறி வித்த நற்செய்தியை ஆவியாரின் ஆற்ற லும் அருங்குறிகளும் உறுதிப்படுத்துகின் றன (1 தெச 1:5; 1 கொரி 2:4). அவர் பரவ சப்பேச்சு வரம் பெற்றிருக்கிறார் (1 கொரி 14:18), ஆண்டவரின் அருளினால் அரிய காட்சிகளையும் வெளிப்பாடுகளையும் காண்கிறார் (2 கொரி 12:1–4). தங்களுள் நடை பெறும் வியத்தகு செயல்களைக்கண் கூடாகக் கண்ட மக்கள், தாங்கள் ஆவிய ரைப் பெற்றுக்கொள்வதை அறிகின்றனர் (கலா 3:2–5). அத்துடன் அவர்கள் பெற்ற பல திறப்பட்ட கொடைகளும் இவ்வுண் மைக்குச் சான்றாய் விளங்குகின்றன (1 கொரி 1:7). பவுல் தன்னுடைய அப் போஸ்தலப் பணியைத் தொடங்கிய காலத் திலிருந்தே அருட்கொடைகளை அரிய செல்வமாகப் போற்றுகிறார். அவற்றின் தூய்மையைப்பாதுகாக்க அரும்பாடுபடு கின்றார். அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து நல்லவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறார். "தேவ ஆவியை அணைத்துவிட வேண்டாம். இறைவாக்குகளை புறக்கணிக்க வேண் டாம். அவை அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து நல்லதையே ஏற்றுக்கொள்ளுங் கள். தீமையான எல்லாவற்றையும் விட்டு வி குங்கள்" (1 தெச 5:19–22). இந்த அருட் கொடைகளினால் நடைமுறையில் சில சிக்கல்கள் எழுகின்றன. பவுல் அவற்றிற் குத் தம்முடைய திருமுகங்களில் தீர்வு காணுகின்றார்.

II திருச்சபையில் அருட்கொடைகள்:–

கொரிந்து நகரிலே வளர்ந்த திருச் சபையில் பரவசப்பேச்சு நிறைந்து காணப் படுகின்றது. இதனால் வேண்டாத விளை வுகள் சில தோன்றுகின்றன (1 கொரி 12–14). மக்களிடையே மிகுந்து காணப்பட்ட மறை ஆர்வம், பரவசப் பேச்சாய் பல மொழிகளில் வெளிப்படுகிறது (காண். அ.ப 2:4). ஆனால் அப்பேச்சு பொருள் புரியா புதிராய் ஒலிக்கிறது. அதனால் சபையிலே சில குழப்பங்கள் முளைக் கின்றன. அவர்கள் ஆவியாரின் நிறை வால் பேசுகின்றனர்; ஆனால் அடுத்து நின்று கேட்பவர்கள் அது மது தந்த மயக்கம் என்றும் (அ.ப. 2:13), ஏன், அவர் களுக்குப்புத்தி பேதலித்துவிட்டது என்றும் கூட முடிவுகட்டுகின்றனர் (1 கொரி 14:23). இந்தப் பரவசப்பேச்சு, புறமறையினரி டையே வெறியாட்ட வழிபாட்டை ஒருவிதத் தில் ஒத்திருப்பதால் தவறான எண்ணங் களுக்கு வழிவகுக்கின்றது. தூய ஆவியா ரின் தூண்டுதலுக்கும் தீய ஆவிகளின் ஆட்டங்களுக்கும் வித்தியாசம் காண இய லாத சிலர் பொறுப்பற்ற விதத்தில் நடக்க வும் ஏதுவாகிறது (1 கொரி 12:1 தொ). இத் தகைய நடைமுறைச் சிக்கல்களுக்கெல் லாம் தீர்வுகாண விழையும் பவுல் தர்க் கத்தை உயர்நிலைக்கு உயர்த்தி மிகவும் பொதுத் தன்மையுடைய கோட்பாட்டை எடுத்துக்கூறுகிறார். அவைபின் வருபவை யாகும்.

1) அருங்கொடைகளின் ஒற்றுமையும் வேறு பாடும்:- திருச்சபையின் திருப்பணி கள் பல; உறுப்பினர்களின் செயல்திறன் கள் பல; அதுபோல ஆவியாரின் அருட் கொடைகள் பல. இந்தப் பன்மையிலும் ஒப்பற்ற ஓர் ஒற்றுமையைக்காண்கிறோம். திருப்பணிகள் ஒரே ஆண்டவரிடமிருந்து வருகின்றன. ஆற்றல் மிகு செயல்கள் ஒரே இறைவனிடமிருந்து வருகின்றன;

. அதுபோல் அருட்கொடைகள் அனைத்தும் ஒரே ஆவியாரிடமிருந்து வருகின்றன (1 கொரி 12:4 தொ). வெவ்வேறு அருட்கொடைகளைப் பெற்ற மக்கள் யாவரும் இறைவனது அருளின் சீரிய கண்காணிப்பாளர்கள். இந்த ஒரே அருள் பல பண்புகளைத் தோற்றுவிக்கின்றது (1 பேதுரு 4:10). பல்வேறு உறுப்புகள் ஒரே உடலின் நலனுக்காகச் செயல்படுகின்றன. அதே போலப் பல்வேறு அருட்கொடைகள் ஒரே நோக்கில் இயங்குகின்றன: திருச்சமூகத்தின் பொது நலனே அவற்றின் இலக்கு (1 கொரி 12:7). உடலின் உறுப்புகள் உடலின் நன்மைக்காக ஒத்துழைப்பது போல் அருங்கொடைகள் யாவும் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் பயனுக்காக ஒன்று சேர்ந்து செயல்படுகின்றன (1 கொரி 12:12–27). இக்கொடைகளைத் தூய ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக்கின்றார் (12:11). அதே நேரத்தில் இது கிறிஸ்துவின் பணியுமாகும். ஒவ்வொருவரின் தகுதியறிந்து அவர் அருள் வழங்குகிறார் (எபே 4:7–10). இக்கொடைகள் நம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டாலும், அவை பொது நன்மைக்கே என்பதை நாம் உணரவேண்டும்.

2) அருட்கொடைகளின் வகைகள்:- பவுல் தமது திருமுகங்களில் பல்வேறு அருட் கொடைகளைக்குறிப்பிடுகின்றார் (1 கொரி 12:8 தொ. 28 தொ; உரோ 12:6 தொ; எபே 4:11; காண். 1 பேதுரு 4:11). அவற்றை அவர் தரம் வாரியாகப் பிரித்து வரிசைப்படுத்திக் கூறாவிடினும், அவற்றின் பயன் நோக்கிப் பல வகையாகப் பிரிக்கலாம். சில அருட்கொடைகள் திருப்பணிகளுடன் உறவுகொண்டவை (காண். எபே 4:12); இப்பணிகளில் அப்போஸ்தவப்பணி, இறைவாக்குரைக்கும் பணி, போதிக்கும் பணி, நற்செய்தி விளக்கப்பணி, மேய்ப்புப் பணி ஆகியவை திருப்பணிகளுள் அடங்கும் (1 கொரி 12:28; எபே 4:11). மற்றும் சில அருட்கொடைகள் திருச்சபையின் நலனுக்குத்துணை நிற்கின்றன. ஊழியம் புரிதல், போதித்தல், ஊக்கமூட்டுதல், இரக்கச் செயல்கள் (உரோ 12:7 தொ), ஞானம் நிறைந்த பேச்சு, அறிவு செறிந்த பேச்சு, முனைப்பான விசுவாசம், நோய்களைக் குணமாக்கும் வரம், புதுமை செய்யும் ஆற்றல், பல்வகைப் பரவசப் பேச்சு, ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறன் (1 கொரி 12:8 தொ) ஆகியவை இவ்வகையைச்சாரும்

இத்தகைய அருட்பணிகள் ஆவியாரின் தூண்டுதலால் நடைபெறுகின்றன; ஆட்கொள்ளும் ஆவியாரின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. ஆனால் ஒவ்வொரு கொடையும் ஒரு குறிப்பிட்ட திருச்சபை பணிக்கு மட்டும் உரியதன்று. அதுமற்றொரு அலுவல் செய்பவரிடமும் காணப்படலாம். இவ்வாறு பவுல் ஓர் அப்போஸ்தலர். அதேநேரத்தில் அவர் பரவசப் பேச்சு வரம் பெற்றிருக்கிறார்; அருங்குறிகளும் ஆற்றுகிறார். இறைவாக்கு வரம் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியது எனக் கூறப்படுகிறது (1 கொரி. 14:29 தொ. 39 தொ). அதே நேரத்தில் அது திருச்சபையின் முறைப்பணியாகவும் கருதப்படுகிறது (1 கொரி 12:28; எபே 4:11). கிறிஸ்தவர்களின் குறிப்பிட்ட அழைப்பும் அருட்கொடையையே அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. இவ்வாறு ஒருவர் துறவு நிலைக்கு அழைக்கப்படுகின்றார்; மற்றவர் வேறொரு கொடையைப் பெறுகிறார் (1 கொரி 7:7). இறுதியாக, கொடைகளுள் சிறந்த கொடையாகிய அன்பு என்னும் கிறிஸ்தவப் பண்பும் ஆவியாரின் அருட்கொடையையே (1 கொரி 12:31–14:1). கிறிஸ்தவ வாழ்விலே அருங்கொடைகள் தனிச் சிறப்புடையவை அன்று. கிடைத்தற்குரிய இயல்பு கடந்த பொருளன்று. புதுமைகள் புரிதல்போன்ற சிலகொடைகள் நம்முடைய அன்றாட வாழ்விற்கு அப்பாற்பட்ட தனிச்சிறப்புடையவையாக இருக்கலாம்; இருப்பினும் தனிக்கிறிஸ்தவனின் வாழ்வும், திருச்சபையின் பொதுப்பணிகள் அனைத்தும் இந்த அருட்கொடைகளையே சார்ந்துள்ளன. புதிய இறை மக்கள் மீது இறைவன் தம் ஆவியாரை அளவின்றிப் பொழிகின்றார். ஆவியார் தம் அருட்கொடைகளின் வழியே அவர்களை ஆண்டு நடத்துகிறார். சிலருக்குத் தம் பணிகளைத் திறம்பட ஆற்ற அருளும் ஆற்றலும் நல்குகிறார்; மற்றும் சிலருக்குத் தங்களுடைய அழைத்தலுக்குச் செவிமடுக்கவும், திருச்சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடு

படவும் அதனால் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையைக் கட்டி எழுப்பவும், தேவையான வரங்களைப் பொழிகின்றார் (எபே 4:12).

3) அருட்கொடைகளைப் பயன்படுத்தும் முறை:– ஒருவரும் ஆவியை அணைத்து விடக்கூடாது; ஆனால் அருங்கொடைகளையும் (1 தெச 5:19 தொ) ஆவிகளையும் (1 யோவா 4:1) சீர்தூக்கிப் பார்த்து மெய்யானவற்றையே ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறு சீர்தூக்கி ஆய்ந்தறியும் திறனும் ஓர் அருட்கொடையாகும் (1 கொரி 12:10). அது அவசியமானதுமாகும். ஒரு கொடை உண்மையானதா அன்றிப் போலியானதா எனக் கண்டறியச் பவுலும் யோவானும் ஒழுங்குகளை வகுத்துத் தருகின்றனர். உண்மையான கொடைபெற்றவன் 'இயேசு ஆண்டவர்" என அறிக்கையிடுகிறார் (1 கொரி 12:3). ஊன் உருவில் வந்த கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளச் செய்யும் ஏவுதல் எல்லாமே கடவுளிடமிருந்து வருகின்றது (1 யோவா 4.2). இதைக் கொண்டு எதிர்க் கிறிஸ்துவால் தூண்டப்பெறும் போலித் தீர்க்கதரிசிகளை நாம் அடையாளம் கண்டுகொள்ளலாம் (4:3; காண். 1 கொரி 12:3). மேலும் அருட்கொடைகள் திருச்சமூகத்தின் நலனுக்காகவே, பொது நன்மைக்காகவே அருளப்படுகின்றன (1 கொரி 12:7). இன்னும், இவை திருச்சபை அதிகாரிகளையும் மதிக்கவேண்டும். திருச்சபையின் பணிகளிலே பல தரங்கள் இருக்கின்றன. அவற்றுள் முதன்மையாக அப்போஸ்தலர்கள் விளங்குகின்றனர் (1 கொரி 12:28; எபே 4:11). இப்பணிகளை யாரும் வெளிப்பகட்டுக்காக நாடக் கூடாது. அவற்றால் விளையும் பொது நலன் கருதியே அவற்றை ஏற்கவேண்டும். அன்பை முதலில் தேடவேண்டும்; அதன் பின் ஆவிக்குரிய வரங்களை ஆவலோடு தேடலாம்; இவற்றில் முதலிடம் பெறுவது இறைவாக்குரைத்தலாகும் (1 கொரி. 14:1). இறைவாக்கு வரம் பரவசப் பேச்சுக் கொடையை விட உயர்ந்தது. பொங்கும் உணர்வுகள் பரவசப் பேச்சாக வெளிப்படும்போது, அவற்றின் பொருள் யாருக்கும் புரிவதில்லை; அவை துர்மாதிரியாகவும் அமைந்துவிடுகின்றன. இதனால் திருச்சமூகத்தின் முன்னேற்றமும் பாதிக்கப்படுகின்றது. திருச்சபையின் முன்னேற்றம் முக்கியமானதாகும் (1 கொரி 14:2–25; காண்க. 1 பேதுரு 4:1 தொ). உண்மையான அருங்கொடைகள் நடைமுறைக்கேற்ற சில நடைமுறை ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும். அப்போதுதான் வழிபாட்டுக்கூட்டங்களில் கட்டுப்பாடு நிலவும் (1 கொரி 14:33). புவல் கொரிந்தியத் திருச்சபைக்கு கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டிய சில நடைமுறை ஒழுங்குகளையும் வழங்குகிறார் (1 கொரி 14:26–38).

4) அருங்கொடைகளும் திருச்சபை அதிகாரமும்:– இவ்வாறு அப்போஸ்தலர்களின் அதிகாரம் ஆவியாரின் ஆட்சிக்குரிய அருட்கொடைகளின் எல்லைக்குள்ளும் செல்லக் காண்கிறோம். அருட்கொடைகள் திருச்சபையின் அதிகாரத்திற்கு என்றும் கட்டுப்பட்டிருந்திருக்கின்றன (காண் 1 யோவா 4:6). அப்போஸ்தலக் கொடை அருட்கொடைகளுள் உயர்ந்தது. எனவே அப்போஸ்தலர்கள் உயிருடன் இருந்த காலம்வரை அப்போஸ்தலத்துவம் முதன்மையான அருட்கொடை என்பதிலிருந்து அவர்களே அருங்கொடைகள் பற்றிய எல்லா அதிகாரமும் பெற்றிருக்கின்றனர். அவர்கள் மறைவிற்குப்பின் அவர்களுடைய வழிவருவோர் அந்த அதிகாரத்தின் பங்குபெறுகின்றனர். பவுலின் திருமுகங்கள் இவற்றைத் தெளிவுபடுத்துகின்றன (1 திமோ 1:18–4 : 16). அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்கள் தலைமேல் கரம் விரித்துவேண்டும் சடங்கின் வழியே ஆவியின் குறிப்பிட்ட கொடையாக இந்த அதிகாரத்தைப் பெறுகின்றனர் (1 திமோ 4:14; 2 திமோ 1:6). அப்போஸ்தலராக இருக்கும் அருங்கொடையை அவர்கள் பெறாவிட்டாலும் ஆட்சிப்பொறுப்பு அருங்கொடையைப் பெற்றிருக்கின்றனர்; இதுவே அவர்களுக்குப் போதிக்கவும், ஆணையிடவும் அதிகாரம் வழங்குகின்றது (1 திமோ 4:11). இந்த அதிகாரத்தை யாரும் அவமதிக்கக்கூடாது (1 திமோ 4:12). திருச்சபையின் ஆட்சிமுறைக்கு மற்றவை எல்லாம் அடங்கியிருக்க வேண்டும். இந்த ஆட்சிமுறையும் அருட்கொடைகளின் அமைப்பைச் சேர்ந்ததுவே.

அருதோன் (ARDON – தப்பி ஓடியவர்)

யூதாவின் தலைமுறை அட்டவணையில் அருதோன் காலேபு, அசுபா ஆகியாரின் மூன்றாவது புதல்வராவார் (1 நாள் 2:18).

அருபகசாது (ARPACHSHAD)

சேமின் மூன்றாம் மகனும், ஏபேரின் பாட்டனும், எபிரேயரின் மூதாதையரும் ஆவார் (ஆதி 10:22; 11:10–13; 1 நாள் 1:17–18) இப்பெயரின் சொல்லிலக்கணம் பற்றிக் பொதுக்கருத்து ஒருமைப்பாடு இல்லையென்றாலும், பல அறிஞர்கள் இப் பெயரை அக்காதிய அர்ராபு, வட கிழக்கு இராக்கிலுள்ள இக்கால கிர்குக்கோடு அடையாளம் காட்டுகிறதற்கு ஆதரவு அளிக்கிறார்கள்.

அருபோத்து (ARUBBOTH – பாலைவனம்)

மாதம் ஒரு மாவட்டமாக சாலமோனின் அரண்மனைக்கு உணவுப் பொருள்கள் அளிக்க வேண்டிய 12 மாவட்டங்களின் ஒன்றின் நகரம் (1 அர. 4:10).

தற்போதைய ஆய்வின்படி மனாசேயின் பகுதியில் மெகிதோவுக்கும், சமாரியாவுக்கும் இடையில் உள்ளது அருபோத்து எனக் கருதப்படுகிறது. இந்த மாவட்டம் மனாசேயின் பகுதியோடு ஒன்றானதாக இல்லாவிடினும் சாலமோன் வரி வசூலிப்பிற்காக மாகாணங்களைப் பிரித்து வகைப்படுத்தியபோது பழைய குலப் பெயர் அழிக்காமல் காத்து வந்திருக்கிறார் என்பதைக் காட்டலாம்.

சமாரியாவிற்கு 14 கி.மீ. தொலைவிலும் வடக்காக இன்று காணப்படும் 'அர்ராபே' தான் அன்றைய அருபோத்தாக இருக்கலாம் என சில அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்விடம் செப்பேலாவுக்குத் தெற்கில் அமைந்திருக்கலாம். 1 மக் 5:23–இல் இந்நகரம் அர்பத்தா என்றழைக்கப்படுகிறது.

அருமா (ARUMAH – வெட்கம், இழிவு)

செக்கேமிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பிறகு, எருபாகாலின் (கிதயோன்) மகனான அபிமெலக்கு தங்கிய இடமாகும் இது (நீதி. 9:41). இதன் சரியான இருப்பிடம் இன்னும் தெளிவாக நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் செக்கேமுக்குத் தென்கிழக்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள இப்போதைய எபெல்–ஓர்மே என்ற இடமாக இருக்கலாம்.

இவ்விடத்திலிருந்து எடுக்கப்பட்ட உடைந்த பாண்டங்கள், நீதிபதிகள் காலத்தில் இங்கு ஒரு குடியிருப்பு இருந்ததாகக் காட்டுகின்றன. தனித்து நின்ற இந்த செங்குத்தான குன்றிலிருந்து அபிமெலக்கு, தனக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த செக்கேமை நன்கு பார்க்கக்கூடும்.

அருவருப்பு (ABOMINATION)

சடங்கு முறைகளிலும், ஒழுக்கத்திலும் வெறுப்பூட்டுகின்ற, இறைவனும் மனிதனும் விரும்பாத செயல். கீழ்காணும் நான்கு சொற்கள் இந்தத் தலைப்பை தெளிவாக விளக்குகின்றன.

அ) வெறுக்கப்படுதல்:- இந்த வார்த்தை உப ஆகமம், பழமொழி, எசக்கியேல் ஆகிய நூல்களில் அடிக்கடி வருகின்றது. இது ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்களை மீறுதலையும் (ஆதி 43:32; 46:34), அசுத்தமென தடை செய்யப்பட்ட உணவையும், குறைபாடான பலிகளையும் (உப 17:1; 23:18; பழ 15:8;21:27; ஏச 1:13; 44:19), மந்திரம், குறி கூறுதலையும் (உப 18:12), காமவெறியாட்டங்களையும் (லேவி 18:22; உப 24:4; எச 16:22), ஒழுக்கக்குறைபாடுகளையும் (உப 25:14–16; பழ 3:32; ஏச 41:24), இயற்கைக்குப் புறம்பாக நடப்பதையும் (உப 22:5; பழ 16:12), சிலை வழிபாட்டையும் (லேவி 18:27; உப 12:31) அருவருக்கப்படவே வேண்டியது எனக்கூறுகிறது. இத்தகைய செயல்களுக்கு பலன் கடவுளின் கோபமும், நீதித் தீர்ப்பும், தண்டனையுமாகும் (எச 7:3–4; 20:4).

ஆ) அருவருத்தல்:- இந்த வார்த்தை விலங்குகளின் இறைச்சியைச் தொடுவதால் அது தீட்டு உண்டாக்குதலைக் குறிக்கும் (லேவி 7:21; ஏச 6:17; எச 8:10).

இ) வெறுக்கப்பட வேண்டிய பொருள்கள்; இந்தச்சொல் சிலை வழிபாடு, புறவினத்தார் தெய்வ வழிபாட்டுடன் இணைந்த பொருட்களைக் குறிக்கிறது (உப 29:17; 1 அர 11:57; 2 அர 23:13; ஏச 66:3) காண்க. பாழாக்கும் அருவருப்பு, சிலை.

ஈ) நாற்றமடைந்த பொருட்கள்:- இச்சொல் முதல் நாள் ஒப்புக் கொடுக்கப்

பட்ட. பலியின் இறைச்சியை மூன்றாம் நாள் உண்ணக்கூடாது. ஏனெனில் அது நாற்ற மடைந்த பொருள் எனக்கூறுகிறது (லேவி 7:18; எச 4:14). இரத்தமுள்ள இறைச் சியிலிருந்து தயாரிக்கப்பட்ட சாறும். அறு வறுக்கப்பட வேண்டியது (ஏச 65:4).

இந்த அருவருப்பு பெரும்பாலும் அறிவு சார்ந்த உணர்வாய் இருந்த தில்லை. இவ்வாறு எகிப்தியர் ஆடு மேய்ப் பவர்களை மிகவும் வெறுத்தனர் (ஆதி 46:34). இவர்கள் எபிரேயரோடு சாப்பிட மாட்டார்கள், அப்படிச் சாப்பிடுவது தீட் டென்று எண்ணினர் (43:32). இஸ்ராயே லரும் சில குழுவினரை வெறுத்தனர். ஆனால் அவர்களது உறவு இனத்தவரான ஏதோமியரை, எகிப்தியரிடையே வாழ்ந்தி ருந்தாலும், அவர்களையும் வெறுக்க வில்லை (உப 23:7). நோயுற்றவரும், (சங் 88:8) துன்புற்றவரும் (யோபு 19:19) அருவருக் கப்படுவார். அவருக்கு முன்பு அளிக்கப் பட்ட மரியாதை அளிக்கப்படாது. எகிப்தி யர் வழிபடுவனவற்றை அவர்கள் முன் இஸ்ராயேலர் பலி செலுத்தமுடியாது. ஏனெனில் எகிப்தியர் அதை வெறுத்தனர் (யாத் 8:26). எபிரேயரின் தடைசெய்யப்பட்ட உணவுப் பட்டியல் அருவருப்பையும், அசுத்தமானவைகளையும் நெருங்கியவிதத் தில் இணைக்கிறது (உப 14:3–20; லேவி 11:2–23). இந்த அருவருப்பு இயற்கையான வெறுப்பை அடிப்படையாகக் கொண்டி ருக்கவில்லை. மதிப்புச்சத்தை அடிப்படை யாகக் கொண்டது. ஏனெனில் அசுத்த விலங்குகள் புற இனத்தவரின் இறைத் தன்மையுள்ளவையாகும். நாடு கடத்தப் பட்ட காலத்தில், உணவு ஒழுங்குகளை அனுசரிப்பது யூதர்களை வேறுபடுத்திக் காட்டும் அடையாளாகியபோது, அரு வருப்பின் மூலப்பொருள் மறைந்து போயிற்று. குருக்கள் பாரம்பரியச் சட்டம், ஏன் சில விலங்குகள் தடைசெய்யப்பட்டன என்று அறிந்திருக்கவில்லை.

இந்த வளர்ச்சியற்ற அறிவு சாராத வெறுப்பு, சிலை வழிபாட்டோடு நெருங் கிய தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரி கிறது (உப. 32:16 தொ). மக்களை புற இனக் கடவுள்களை வணங்க ஈர்ப்பவர் களை உபாகமம் கண்டனம் செய்கிறது (13:13 தொ). இவர்கள் வாழும் நகரங்கள் முழுவதும் அழிக்கப்படவேண்டும். சபிக் கப்பட்டதாகக் கருதப்படவேண்டும். சிலை வழிபாடு, வாழ்வின் சரியான முறையை மாற்றி அமைக்கிறது. ஆண்டவருக்குரிய வழிபாட்டைப் பாழாக்குகிறது. பிறகடவுள் களையும் சூரியன், சந்திரன், விண்மீன் களையும் வணங்கும் அருவருப்பைச் செய் தவரைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் (உப 17:4–5). ஏனெனில் அது உடன்படிக்கையை மீறுகிறது. அருவருப்பு என்ற சொல் சிலை வழிபாடுகளைக் குறிக்கும் மரபுச்சொல்லாகியது (2 அர 23:13; 21:2 தொ; எச 8:6 தொ; தானி 9:27; 11:31; 12:11). பலபகுதிகள் சிலை வழி பாட்டை ஒழுக்கப் பொறுப்பற்ற தன்மை யோடு இணைக்கிறது (எச 7:1–15; எரே 6:13–15) பாலினக் குற்றங்களும் ஒழுக்கக் குற்றங்களும் அருவருப்பாகக் கருதப்படு கின்றன. இவ்வாறு பாலினக் குற்றப்பட்டி யல் (லேவி 18:6–23) அவை வெறுக்கத்தக்க தீச்செயல்கள் என்று கூறுகிறது. பழ. 6:16–19 இறைவனுக்கு வெறுப்புத்தரும் ஏழு காரியங்களைக் குறிப்பிடுகிறது. இது குறிப்பாக அகந்தையைக்குறிக்கிறது "குற்ற மற்றவனைக் குற்றவாளி என்றும், குற்ற வாளியைக் குற்றமற்றவன் என்றும் தீர்ப் பிடுகிறவர்கள் இறைவனின் வெறுப்புக் குள்ளாகிறார்கள்" (பழ 17:15). ஏனெனில் இது நீதியின் தன்மை நெறி கோணச் செய்கிறது.

அருளப்பர் (JOHN). காண்க யோவான்.

அருள் – (GRACE)

மனிதனிடம் எத்தகுதியுமில்லாமல், இறைவன் அவனுக்கு அளிக்கும் கொடை, உதவி, சலுகையே அருளாகும். இது அவர் தம் மக்களுடன் செய்த உடன்படிக் கையால் செயல்படுவது. இறைமகன் இயேசுவிலே நிறைவேறுகிறது– தெய்வீகப் புத்துயிர் அளிப்பது; உந்துதல் அளிக்கும், பலமளிக்கும்ஆற்றலாகும்.

I 'அருள்' என்ற சொல்லின் பொருள்:- இச்சொல், முழுவதும் கிறித்துவ மதத் தால் உருவாக்கப்பட்டதல்ல. பழைய ஏற்பாட்டிலேயே இச்சொல் காணப்படு கிறது. ஆனால் புதிய ஏற்பாடு இதன் பொருளையும், அதன் விரிவாக்க விளக்க

தையும் நிர்ணயம் செய்தது. சட்டங்களால் கட்டுண்ட பழைய வாழ்க்கைக்கு மாறாக ஆண்டவர் அருளினால் இயேசு அமைத்த புதிய அமைப்பை இது குறிக்கிறது (உரோ 6:14 தொ; யோவா 1:17). அருளானது ஆண்டவர் அளித்த அனைத்துக் கொடைகளையும் குறிப்பாக அவர் தம் மகனையும் குறிக்கும் (உரோ 8:32). ஆனால் இது ஒரு கொடை மட்டுமன்று. இதில் கொடுப்பவரின் பெருந்தன்மை மிளிர்கிறது. பெறுபவரும் அதே பெருந்தன்மையால் நிறைவு பெறுகிறார். ஒரே சமயத்தில் கொடையின் மூலத்தையும் பெறுபவரில் ஏற்படும் விளைவுகளையும் குறிக்கிறது.

II. பழைய ஏற்பாட்டில் அருள்:- இறைமகன் இயேசுவிலே பெறவேண்டிய அருள் பழைய ஏற்பாட்டிலே வாக்குறுதி யாகவும், நம்பிக்கையாகவும் எடுத்துக் காட்டப்படுகிறது. பற்பல வடிவங்களிலும், பற்பல பெயர்களிலும் மனிதனையும் இறைவனையும் இணைக்கும் கருவியாக அருள் புதிய ஏற்பாட்டில் தோன்றுகிறது. பழைய ஏற்பாட்டைக் கிறிஸ்துவக் கண்ணோட்டத்தோடு படிக்கும்போது நாம் கடவுளது அருளின் செயல்களையும் பண்புகளையும் காணலாம்.

அருள் என்ற கருத்தை எடுத்துக் கூற மூன்று எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. முதற்சொல், ஆதரவு என்று பொருள்படும் "கேன்" என்பதாகும். தாழ்ந்தோர் மேல் உயர்ந்தோர் (ஆதி 33:8 தொ), குறிப்பாக அரசர்கள், காட்டும் ஆதரவை இச்சொல் குறிக்கும் (1 சாமு 27:5; எஸ்த 5:8; ரூத் 2:2). இச்சொல் இறைவனோடு மனிதன் கொள்ளும் உறவை விவரிக்கப்பயன்பட்டுள்ளது. சாதாரணமாக, நீதிமான் அல்லது நீதிமானாக இருக்க முயல்கிறவன், இறைவனின் தயவைப்பெறுகிறான். அவர்தான் அவனுக்குத்தம் தயவை அளிக்கிறார். இச்சொல் இறையருளின் சுதந்திரத்தை (ஆதி 6:8; யாத் 33:12 தொ; எரே 31:2) அல்லது ஆசீர்பெறுபவரின் பண்புகளாகிய பிரமாணிக்கம் (பழ 3:4), தாழ்ச்சி (3:34; காண்க யாக் 4:6), நல்லறிவு (பழ 13:15) ஆகியவற்றை அழுத்திக் கூறும்.

ஆனால் 'கேன்' என்ற சொல், அருளைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லான 'காரிஸ்' என்பதின் புதியஏற்பாட்டுப் பொருளை நிறைவாக உணர்த்தவில்லை.

"கேன்" என்ற சொல்லோடு தொடர்புடைய மற்றொரு எபிரேயச் சொல் ("தயவாக இரும்" என்று பொருள்படும்) 'கேனன்' என்பதாகும். இது தேவையின் சூழ்நிலையில் தகுதியில்லாமலே மற்றொருவரிடமிருந்து ஆதரவு பெறும் செயலைக் குறிக்கும் இது அன்பை முன் கொள்கிறது (உப 7:7–8). ஆனால் அதை உரிமையாகக் கோரமுடியாது (யாத் 33:19). சங்கீத ஆசிரியர் தனிமையில் (சங் 25:16), பசியால் (111:4–5), பாவத்தால் (51:1) வருந்தும்போது தன்மீது தயை கூறும்படி கூவி அழைக்கிறார். இறைவன் தீர்ப்பில் இந்தத் தயவை மறுக்கிறார் (உப 7:2; ஏச 27:11). ஆயினும் மனம் வருந்துவோருக்குத் தயவு காட்டுகிறார் (ஆமோ 5:15). தமக்காகக் காத்திருப்போருக்குத் தயவுகாட்டுவதில் ஆண்டவர் பெருமை கொள்கிறார் என ஏசயா அறிவிக்கிறார் (ஏச 30:18). இறைவனின் தயவே நம்பிக்கையின் (ஆதி 43:29; எண் 6:25), போற்றுரையின் (சங் 67) குறிக்கோளாகும்.

கிரேக்க "காரிஸ்" என்ற சொல்லுக்கு நெருங்கிய எபிரேயச் சொல், இரக்கம், நிலையான அன்பு என்று பொருள்படும் "கெசேத்" என்பதாகும். இறைவன் அவ்வப்பொழுதுதான் ஆதரவு காட்டுவதில்லை. அவர் தமது மக்களோடு தொடர்ந்து உறவு கொள்கிறார். மக்களிடையே, இச்சொல், உறுதிசெய்யப்பட்ட பிரமாணக்கத்தை உணர்த்தும் (ஆதி 47:29). இது அன்புச் செயல்களால் (யோசு. 2:12; ரூத் 3:10) அல்லது உடன்படிக்கையால் (1 சாமு 20:8) தோன்றுவது. ஒன்று மற்றதை உள்அடக்கும் (ஆதி 21:23; 1 அர 20:3 தொ). இறைவனது இரக்கம், கடமையிலிருந்து வருவதன்று. அவரது அன்பிலிருந்து வருகிறது. அவர் நிலைத்திருக்கும் அன்பில் உலகைப்படைத்தார் (சங் 136:4–9). அவரது அருளால் பூமி நிறைந்துள்ளது (33:5; 119:64). ஒன்றுமில்லாமல் இருந்த மக்களோடு அன்பு கூர்ந்து உடன்படிக்கை செய்கிறார் (உப 7:6–9); அவர்

களுக்கு விடுதலை அளிக்கிறார், தமது சட்டத்தை அளிக்கிறார் (யாத் 20:2–6). இந்த அருள், மக்களை உடன்படிக்கைப் பிரமாணிக்கத்திற்கும் (எண் 14: 18–19), ஒருவர்க்கொருவர் இரக்கம் காட்டவும் (மீக் 6:8; சங் 109:16) அழைக்கிறது. இஸ்ராயேல் தவறிப்போனபோது (ஒசே 6: 4.6), அவர் எப்போதும் இரக்கமுள்ளவராக இருக்கிறார். மனம் வருந்தித் திரும்புவோரை வரவேற்கிறார் (ஒசே 10:12; சங் 51). இறைவனது "கெசேத்"தை அறிக்கையிடும் சங்கீதங்களில் அருள் நிறைந்திருக்கிறது (சங் 136). அடிக்கடி பிரமாணிக்கத்தோடு இணைந்து அருள் கூறப்படுகிறது. இது வரலாற்றில் அனுபவித்த மீட்பு அருளாகும். இஸ்ராயேல் பாவம் செய்தாலும் இது தொடர்கின்றது (106:1.7). நம்பிக்கை அளிக்கிறது (107:39–43). தேவைகளின் போதும் (31:7), சாவின் முன்கூட (86:13) நம்பிக்கை அளிக்கிறது. விசுவாசிகளின் வாழ்வை அருள் தொடர்கிறது (23:6). அதற்கு முடியாக அமைகிறது (103:4).

யாத் 34–இல் இம் மூன்று சொற்களும் சேர்ந்து வருகின்றன. இறைவன் இஸ்ராயேலை மீட்டவராக (34:14), உடன்படிக்கை செயபவராக (34:10) தம்மையே அறிவிக்கிறார். தமது மக்களின் துன்பத்தில் தயவு (கேன்) நிறைந்தவர். பேரன்பும் (கெசேத்) பிரமாணிக்கமும் மிக்கவும் (34:6). அவர் தமது உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கம் உள்ளவர். ஆயிரம் தலைமுறைக்கும் தம் மக்களின் கொடுமையையும் குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர். இறைவனைப் போற்றுவதற்கும் (சங் 86:15; 103:8) மனந்திரும்புதலை எடுத்துக்கூறவும் (யோவேல் 2:13; மீக் 7:18; காண்க. யோனா 4:2) உடன்படிக்கையைப் புதுப்பிக்கவும் (2 நாள் 30:9; நெக 9:17) இதே சொற்களை இஸ்ராயேல் பயன்படுத்துகிறது. இந்த அருளைத்தான் இயேசு நிறைவு செய்கிறார் (யோவா 1:16).

2. கடவுளின் அருள்:- கடவுள் தம்மை அன்பின் கடவுளாக, அருளின் கடவுளாக வர்ணிக்கிறார் (யாத் 34:6). அவரது அருள் துயருறுவோர்க்கு ஆறுதலாகும், அவருடையவர்களுக்கு அளவற்ற நம்பிக்கையாகும். அவருடைய ஒப்பந்தங்களில் அசைக்க முடியாத உறுதியாகும். அவர் அன்பு செய்பவர்களுக்குக் காட்டும் இதயபாசமும் பற்றுதலுமாகும். படைப்புகளின் உரிமைகளின் நிறைவை உறுதி அளித்து அவர்களில் ஆவல்களை நிறைவு அளிக்கும் வற்றாத நீதியாகும். அவரது அருளின் விளைவாக ஆண்டவர் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் விளங்குகிறார். அவரது அருள் உயர்மதிப்புள்ளது (சங் 36:7 தொ). அவரது அருள் உயிரைக்காட்டிலும் மேலானது (சங் 63:4). எனவே ஆண்டவரின் அருள் நமது அனுபவங்கள் அனைத்தையும் காட்டிலும் மேலானது, நிறைவானது.

3. இறையருளின் வெளிப்பாடு:- ஆண்டவரின் தாராளம் எல்லாப் படைப்புகளிலும் பரவி இருக்கிறது. அவரது அருள் பாதுகாக்கப்பட்ட புதையலாக இருப்பதில்லை. இஸ்ராயேல் தேர்ந்தெடுக்கப்படுவதிலே, அழைப்பிலே, ஆண்டவரது அருளின் தாராளத்தின் அடையாளம் வெளிப்படுகிறது. அவர் அவர்களைத் தாமே விரும்பித் தேர்ந்தெடுத்தார். அவர்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவோ (உப.7:7) நல்ல நடத்தையுள்ளவர்களாகவோ (9:4) புயவலிமையுடையவர்களாகவோ (8:17) இல்லை. இறைவன் அவர்களைத் தேர்ந்தெடுக்கக் காரணம் அவர் அவர்கள் மேல்கொண்ட அன்பும், அவர்களுடைய மூதாதையர்க்குத்கொடுத்த வாக்குறுதியுமே ஆகும் (7:8; 4:37). இஸ்ராயேலின் தோற்றத்திற்கு, தமது உடன்படிக்கைக்கும் அன்புக்கும் அவர் காட்டும் பற்றுறுதி ஒன்றே விளக்கமாகும் (7:9); அருளின் அடையாளம் இந்த ஆண்டவர் அவர்களுக்குத் தந்த பாலும், தேனும் பொழியும் நாடாகும் (8:7; 11:11; 6:10 தொ). இந்தக் கொடை எவ்வித நோக்கமுமில்லாமல் தரப்படுவதல்ல. தேர்ந்தெடுத்தல் உடன்படிக்கைக்கு இட்டுச்செல்கிறது. அருளைப் பெறுபவர் அன்பையும் நன்றிக் கட்டுப்பாட்டையும் கொண்டு ஒழுக வேண்டியது அவசியம். இதுதான் உப ஆகமத்தின் போதனையாகும் (உப 6:5; 10:12 தொ). இறைவனின் அருள், பங்காளிகளையும் ஒரு பரிமாற்றத்தையும் ஒன்றிப்பையும் தேடுகிறது.

4. தேர்ந்தெடுக்கப்பட்டவர் மேல் கடவுளருள்:- ஆண்டவரது தாரளத்தால் மனிதனிடம் விளைவதை அவரது ஆசீர் வாதம் என்ற சொல் மிகச்சிறப்பாக விளக்கவல்லது. புறப்பாதுகாப்புத்தருவது மட்டுமல்ல. அருளைப் பெற்றவனிடத்தில் வாழ்வு, மகிழ்ச்சி, பலத்தின் முழுமை நிலவ அது வகை செய்கிறது. இது கடவு ளுக்கும் மனிதனுக்கும் நெருங்கிய ஆட் தன்மையுடைய தொடர்பை ஏற்படுத்து கிறது. ஆண்டவரின் திருமுகத்தை அவன் காண வழி செய்யும் (எண் 6:25). இந்த உறவு உயிருள்ளது. ஏனெனில் இது படைப்பாற்றலைத் தொடுகிறது. ஆசீர் வதிப்பது தந்தைக்குரியதாகும். இஸ்ரா யேல் வரலாறு எல்லா மக்கள் மேலும் ஆசீர்பெற்றுத்தருவதை நோக்கமாகக் கொண்டது என்றால் (ஆதி 12:3) அது இறைவன் தந்தையாயிருந்து தன் பிள்ளை களின் ஊழியை உருவாக்குவதால்தான் (ஏச 45:10 தொ) இறைவனது அருள் தந் தையின் அன்பாகும். அது பிள்ளைகளை உண்டாக்குகிறது. இந்த அசீர் புனிதமிக்க இறைவனுடையதாகையால் அது அவரது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோடு ஏற்படுத் தும் உறவு அர்ப்பணமாகும். தேர்ந்தெடுத் தலானது புனிதத்துக்கும் அர்ப்பணிக்கப் பட்ட வாழ்கை வாக்குறுதிக்கும் விடப்படும் அழைப்பாகும் (யாத் 19:6; ஏச 6:7; லேவி 19:2). இந்தப்பிள்ளைக்குரிய பதிலை அளிப் பதிலிருந்தும், வாழ்வின் அர்ப்பணத்தி லிருந்தும், இஸ்ராயேல் திசைமாறுகிறது. இஸ்ராயேல் (ஒசே 4:1; தொ; ஏச 1:4) தீமை யிலே வாழ்நாட்களைக் கழிக்கிறது (எரே 6:7). இந்நிலையில் இறைவன் மனிதனால் அடிப்படையில் செய்யமுடியாத ஒன்றைச் செய்கிறார். அதற்கும் மனிதனையே பயன் படுத்துகிறார். கடவுள் கெட்டுப்போன எருசலேமை நீதியுடைய நகரமாக்குவார் (எச 1:21–26). கல்லான இதயத்தை நீக்கி (எரே 5:1 தொ) அவரை அறியக்கூடிய புதிய இதயத்தை அமைப்பார் (ஒசே 2:21; எரே 31:31). இது ஆண்டவரது ஆவி யின் செயலாகும் (எச 36:27). அது அவரது நீதியே உலகிற்குள் வருவ தாகும் (ஏச 45:8.24; 51:6).

III. புதிய ஏற்பாடு

1. வாசகங்களில்:- புதிய ஏற்பாட்டில் அருளைக் குறிக்கும் கிரேக்கச் சொல் 'காரிஸ்' என்பதாகும். இது மகிழ்தல் என்ற பொருளுடைய 'கயிரோ' என்ற வினைச் சொல்லோடு தொடர்புடையது. சமயச் சார்பற்றவழக்கில், இது மகிழ்ச்சி யையும் இன்பத்தையும்கொண்டு வருபவற் றையோ, ஆதரவைப் பெற்றுத் தருவதை யோ குறிக்கும். இந்தப் பரந்த பொருள் லூக்கா நற்செய்தி, அப்போஸ்தலர் பணி ஆகிய நூல்களில் பிரதிபலிக்கிறது (லூக் 1:30; 2:40; அ.ப.7:10).

அ) நற்செய்திகள்:- அருள் என்ற சொல்லை நற்செய்திகள் அரிதாகத்தான் பயன்படுத்துகின்றன. ஆனால் இந்தக் கருத்தும் பொருளும் இயேசுவின் வாழ்வி லும் போதனையிலும் பரவிக்கிடக்கிறது. இறைநோக்கோடு (லூக் 4:4) அன்பில் அனுப்பப்பட்டு (யோவா 3:17) ஊழியனாகி (மாற் 10:45) இயேசு இறைவன் தம்மையே அளிப்பதை நற்செயதிகள் பிரதிபலிக் கின்றன. இஸ்ராயேலில் தவறிப் போன வர்கள் (மத் 9:36; 10:6; லூக் 15:4; தொ; யோவா 10), எளியோர் (மத் 19:21), சமூகத் தால் ஒதுக்கப்பட்டவர்கள் (லூக் 5:30–32), பெண்கள் (8:2), குழந்தைகள் (மாற் 10: 14–15) ஆகியோரைத் தேடுவதில் அவரது வாழ்க்கை அருளை வெளிப்படுத்துகிறது. இறைவனைத் தேடுதல் (லூக் 15), மீட்பு கிட்டக்கூடியதாக்குதல் (மாற் 10:17–31), புதிய உடன்படிக்கை (லூக் 22:19–22), பகை வர்களுக்கு அன்பு (மத் 5:43–44; லூக் 10:27 தொ) ஆகியவற்றில் அவர் அருளைப் போதிக்கிறார். மனிதப் பாவங்களுக்காக இறைவன் இயேசுவை சிலுவைக்குக் கைய ளிப்பதிலும், பின் உயிர்த்தெழச் செய்வதி லும் அருளை எடுத்துக் காட்டுகிறார். இப் போது ஆண்டவராக ஆட்சிசெய்யும் இயேசு கிறிஸ்து அருளின் புதிய யுகத் தைத் தொடங்கி வைக்கிறார்.

ஆ) பவுலின் திருமுகங்கள்:- இவற்றில் இந்தப் புதிய அருள் முக்கிய இடத்தை வகிக்கின்றது. "காரிஸ்" என்ற சொல் பயன்படுத்தப்படுவதில் மூன்றில் இரண்டு

பங்கு இந்தத் திருமுகங்களில் காணப்படு கின்றன.

பவுலின் கருத்துப்படி, இயேசுகிறிஸ்து வில் வெளிப்படுத்தப்படும் இறைவனது அன்பிலிருந்து அவரது அருளைப் பிரிக்க முடியாது (உரோ 1:7; 1 கொரி 1:3). கிறிஸ்து மீட்பின் நடுவர், இடையாளர் ஆவார். செல்வமிக்கவராய் இருந்தும் ஏழையானவர் (2 கொரி 8:9); மகிமை மிக்கவராயினும் அடிமையின் தன்மை பூண்டவர் (பிலி 2:7); 'பாவிகளாய் இருந்தபோதே' (உரோ 5:8) மனுக்குலத்தை இறைவன் கிறிஸ்துவில் தம்மோடு ஒப்புரவாக்கினார் (2 கொரி 5:18–21).

இயேசு கிறிஸ்துவின் அருள் சிலுவை வழியாக வருகிறது (கலா 2:20; எபே 1:20; உரோ 5:9). விசுவாசம் மற்றும் அருள் வழியாக, விசுவாசிக்கும் எல்லாரையும் இறைவன் இலவசமாகத் தமக்கு ஏற்புடைய வராக்குகிறார் (உரோ 3:24–25; காண்க. 5:1). சட்டம் (கலா 5:4), மனித ஞானம் (2 கொரி 1:12), பாவம் (உரோ 6:1) ஆகியவற்றிற்கு அருள் முரணானது. இரக்கத்திலும் அன்பிலும் செல்வந்தராகிய இறைவன் சினத்திற்கு ஆளாகியிருந்த மக்களை உயிர் பெறச் செய்கிறார் (எபே 2:4–5).

இந்த அருள் விசுவாசத்தால் பெறப் படுகிறது (எபே2:8). விசுவாசத்தில் அருளின் வளத்தை ஒருவர் அனுபவிக் கிறார் (உரோ 5:17; எபே 1:7; 2:7). சட்ட மனப்பான்மையாலோ (கலா 2:21; 5:4) அல்லது கடமை தவறுதலாலோ (1 கொரி. 15:2; 2 கொரி.6:1) விசுவாசமின்மையோ இந்த அருளை வீணாக்கக்கூடும். அருளை யாரும் உரிமைகொண்டாட முடியாவிட் டாலும், அதன் வளம் ஒவ்வொரு பாவிக் கும் போதியது என்று நம்பலாம் (1 திமோ 1:15–16).

கிறிஸ்துவில் இறையருள் அவரது மக்கள் வழியாக உலக முழுவதும் பெருகு கிறது (2 கொரி 4:15). புறவினத்தாருக்குப் பவுல் தனது தூதைப் போதிக்க இறைவன் அவருக்குத் தனிப்பட்ட அருள் வழங்கு கிறார் (உரோ 15:15; எபே 3:8; அ.ப 20:24). திருச்சபையும் தனது அலுவல்களையும் பணிகளையும் நிறைவேற்ற அதே அருளைப் பெறுகிறது (உரோ 12:3–8; எபே 4:7.11–12). விசுவாசிகள் தங்கள் அன்புத் தொண்டிலும் (2 கொரி 8:7) இறை பய மிக்க வாழ்விலும் (தீத் 2:1 தொ), அருட் பயன் விளைவிக்கும் பேச்சிலும் (எபே 4:29 தொ; கொலோ.4:6), இறைவனது அருளை எடுத்துக் காட்டுகின்றனர்.

பவுலின் திருமுகங்களில் காணப்படும் வாழ்த்துகளிலும், ஆசீர்களிலும் அருள் என்றசொல், கிரேக்க வாழ்த்துக் கருத்தை எதிரொலிக்கிறது. அமைதி என்ற சொல் லோடு சேர்ந்து, இருசொற்களும் அமைதியின் இறைவன்மேல் கவனத்தை ஈர்க்கின்றன (உரோ 15: 33). இறைவன் கிறிஸ்துவில் மக்களைத் தம்மோடும், ஒருவர்கொருவரோடும், உறவு கொள்ளச் செய்கிறார் (எபே 2:14 தொ). "அருள் உங் களோடு இருப்பதாக" என்ற முடிவுரை (உரோ 16:20; கலா 6:18), கிறிஸ்துவின் மீட்பில் அவர்கள் தொடர்ந்து இருக்கவும், அவர் அளிக்கும் இறைப் பிரசன்னத்திற் காகவும் வேண்டுகிறது. இந்த வளமிக்க மொழி, தொடக்க காலத் திருச்சபையால் அதன் திருமுகங்களிலும் (எ.கா திரு வெளிப்பாடு, கிளமெண்ட்) வழிபாடுமுறை களிலும் (2 கொரி 13:14) பயன்படுத்தப் பட்டது.

இ) பிற வழக்குகள்:- அப்போஸ்தலர் பணி நூலில் அருள் என்ற சொல் பெரும் பாலும் விசுவாசிகளிடையே செயல்படும் மீட்பைக் குறிக்கிறது (அ.ப.11:23; 13:43). சில இடங்களில் பவுலைப்போல் லூக்கா வும் அருளையும் நற்செய்திகளையும் ஒன்றாக்குகிறார் (15:40; 20:24).

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத் தில், இச்சொல் எழுபது நூல் வழக்கைப் பின்பற்றி ஆதரவு, தயவு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தங்கள் தேவை களில் இறைவனை அணுகுவோருக்கு அவர், கிறிஸ்து வழியாக, தமது அரச தயவைக் கொடுக்கிறார் (எபி 4:16). இந்தத் தயவு விசுவாசத்தைக் கோருகிறது (11:6). விசுவாசிகள் அருளை அவமதிக்கக் கூடாது (10:29). அசட்டையால் அதைப் புறக்கணிக்கக் கூடாது (12:15). மாறாக, அவர்கள் உள்ளங்களை அருளால் உறுதிப்படுத்தவேண்டும் (13:9).

பேதுருவின் முதல் திருமுகம், பரிசுத்தத்திலும் (1 பேதுரு 1:13தொ), தாழ்ச்சியிலும் (5:5), ஆன்மீக வரங்களைப் பயன்படுத்துவதிலும் (4:10), அருள் செயலாற்றுவதை அடிக்கடிச் சுட்டிக் காட்டுகிறது. துன்புறுவது கூட அருளாகும் (5:10).

படைப்பிலிருந்து முடிவுரை, விவிலியம் இறைவனின் அருள்பற்றிப் பேசுகிறது. பழைய ஏற்பாட்டின் மகிமையை (யாத் 34:6) கிறிஸ்து அகற்றிவிடவில்லை. மாறாக அருளிலும் உண்மையிலும் அதை நிறைவுபடுத்துகிறார் (யோவா 1:16–17; எபி 1:1–27). மனுக்குலம் போற்றுரையோடு தம்மிடம் திரும்ப (எபே 1:6) அவற்றை அதன்மேல் இலவசமாகப் பொழிகிறார்.

2. கடவுளருள் இயேசுவில் வெளிப்படுத்தப்படுகிறது:-

ஆண்டவரின் தாராளம் அவரது மகனையே அளிக்கும் அளவுக்கு கரை கடந்து செல்கிறது (உரோ 8:32). இந்தக் கேட்டறியாச் செயல் இறைவனது அன்பு, கனிவு, பிரமாணிக்கம் ஆகியவற்றின் கலவையாகும். இச்செயலைத்தான் புதிய ஏற்பாடு அருள் என அழகாகக் கூறுகிறது. இந்த அருளைப் பெற வேண்டுமென்ற ஆசையை அப்போஸ்தலர் மடல்கள் அறிமுகப்படுத்துகின்றன. இந்த அருள் கிறிஸ்தவர்களுக்கு, இறைவனின் மேலான கொடையாகும். இறைவனின் செயலினுடையவும் சுருக்கமும், நமது சகோதரர்களுக்கு நாம் விரும்பும் அனைத் தையும் அடக்கிய சுருக்கமாகும். கிறிஸ்து விலே அருளும் உண்மையும் நமக்கு வந்துள்ளன (யோவா 1:17) "அவரது மாட்சி மையை நாங்கள் கண்டோம்" (1:14) "அன்பே கடவுளென உணர்ந்தோம்" (1 யோவா 4:8). ஆகவே இயேசுவின் செயல்கள் அருளென நாம் அறிகிறோம் (தீத் 2:11; 3:4) ஒத்தமை நற்செய்தியாளர்கள் அருளென்ற சொல்லை அறியாவிட்டாலும் அருளை முழுவதும் உணர்ந்திருந்தனர். அவர்களுக்கு இயேசு நமக்காகத் தந்தையால் கையளிக்கப்பட்ட உயர்ந்த கொடையாகும் (மத் 21:37; 26:28). துன்பங்களைக் கண்டு இயேசு இரக்கமும், பரிதாபமும் காட்டுதல் பழைய ஏற்பாட்டில் இறைவனின் தன்மையை எடுத்துக்காட்டும் அன்பையும் இரக்கத்தையும் சுட்டிக் காட்டுகிறது. புனித பவுல் செல்வந்தராயிருந்து ஏழையாக மாறிய இயேசுவின் அருள் தன்மையை எடுத்துக்கூறி கொரிந்தியரும் இவரைப்போல பெருந்தன்மை கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார் (2 கொரி 8:9).

3. கைம்மாறு கருதாது விரும்பித்தரப்பட்ட அருள்:- கடவுளருள் மனித மீட்பின் இரகசியமென்றால் அதே அருளைத்தான் ஒவ்வொரு கிறிஸ்துவனும் (உரோ 12:6; எபே 6:7) ஒவ்வொரு திருச்சபையும் அதைப் பெற்று வாழும் செயல் முறையின் இரகசியமும் ஆகும். மக்கதோனியா திருச்சபை தாராளத் தன்மையின் அருள்வரத்தையும் (2 கொரி 8:1 தொ), பிலிப்பியர் அப்போஸ்தல அருளையும் பெற்றனர் (பிலி 1:7). இந்த அப்போஸ்தலம் பவுலின் முழுச் செயலையும் விளக்குகிறது (உரோ 5:1; 1 கொரி 3:10; கலா 1:15; எபே 3:2). எல்லா மனிதவிருப்பத்திற்கு முன்னே இறைவனிடமிருந்து வரும் (1 உரோ 1:5; கலா 1:15) தேர்ந்தெடுத்தலில் பலவகைக் கொடைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்தத் தேர்ந்தெடுத்தல் மீட்புக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது (கலா 1:6; 2 திமோ 1:9). ஒரு குறிப்பிட்ட பணிக்கு அர்ப்பணிக்கிறது (1 கொரி 3:10). நாம் கிறிஸ்தவர்களாக இருக்கக்காரணம் கடவுள் தாமே முன் வந்து நம்மை அழைத்ததால்தான் என பவுல் கூறுகிறார் (உரோ 11:5). மீட்பு ஆண்டவரின் கொடையே அன்றி நமது செயலின் பரிசு அன்று. அப்படியில்லையென்றால் அருள் அருளாக இருக்க முடியாது (11:6.4:4). மீட்பு திருச்சட்டத்தைப் பின்பற்றுவார்க்கு மட்டுமெனில் விசுவாசம் பொருளற்றதாயும், வாக்குறுதி வெறுமையாயும் ஆகும். வாக்குறுதிகளில் விசுவாசம் மட்டுமே இறைவனது செயலை விளக்குகிறது. அச்செயல் முதன்மையாக அருளாகும். அருள் வழங்கப்படும் செயல் முறையான சூழ்நிலை, இன்னும் கைம்மாறு கருதாததாகச் செய்கிறது. எதிரியை, தீர்ப்பிடப்பட்ட மனிதனைத் தேர்ந்தெடுத்து மீட்பளிக்கிறார். "நாம் பாவத்தால் வலுவற்றிருந்தபோது நாம் பாவிகளாக இருந்தபோதே" பாவத்தின் சக்தியி

லிருந்து நம்மையே விடுவித்துக் கொள்ள முடியாதபோது "அவருடைய மகனது மரணத்தின் வழியாக இறைவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம்" (5:6–10; 3:24; எபே 2:5) அவரருள் நம்மையே சாவினின்று விடுவிப்பதில் நிறைவடைவதில்லை. மாறாக அவரது அருள் எல்லா எல்லைகளையும் கடந்து செல்கிறது. பாவம் பெருகியிருந்த இடத்தில், அருள் எவ்வளவோ மிகுதியாகப் பெருகியுள்ளது (உரோ 5:15–21). அது இறைதாராளத்தின் அளவற்ற செல்வத்தை வெளிக்கொணர்ந்து (எபே 1:7;2–7) மக்களிடையே பெருகச்செய்கிறது (2 கொரி 4:15; 9:14; 1 கொரி 1:7). தனதருமை மகனையே இவ்வுலகிற்கு அனுப்பியவர் வேறெதை மனிதனுக்கு மறுக்க இயலும்? (உரோ 8:32).

4. அருளின் கனிகள்:- கடவுளருள் வீணாகப்போவதில்லை (1 கொரி 15:10). அது விசுவாசம் தனது செயல்களை ஆற்றவும் நிறைவு செய்யவும் உதவுகிறது. அன்பால் செயலாற்றவும் (கலா 5:6) நற்பயன்களையும் (கொலோ 1:10) "நாம் செய்ய வேண்டுமென்று கடவுள் முன்னேற்பாடு செய்த நற்செயல்களையும்" (எபே 2:10) செய்ய உதவுகிறது (கலா 5:6). அப்போஸ்தலர்கள் தங்கள் பணிகளைச் செய்ய ஊக்கமூட்டியது அந்த அருள்தான் (அ.ப.14:26; 15:40). "நான் இப்பொழுது இருக்கும் நிலையிலிருப்பது கடவுளின் அருளால்தான் என்னோடு இருக்கும் இறை அருள்தான் உழைத்தது" என்று பவுல் கூறுகிறார் (1 கொரி.5:10). அவர் கிறிஸ்தவனாய், அப்போஸ்தலனாய் இருக்கச் செய்வதும் இந்த அருள்தான்.

மாற்றி அமைப்பதற்கும் செயலுக்கும் அருள்தான் ஊற்றாயிருப்பதால் அதோடு ஒத்துழைக்கக்கோருகிறது. அதற்குக் கீழ்ப்படியவும் (2 கொரி 4:1) அதற்குப் பதில் அளிக்கவும் எப்போதும் கறுசுறுப்பாய் இருக்கவேண்டும். நமது வலுவின்மையில் இறைவனது வல்லமை சிறந்தோங்குவதால் அவரருள் நமக்குப்போதும் (2 கொரி 12:9). அது ஒரு போதும் குறைவுப்படுவதில்லை.

எனவே அருளானது புதிய வாழ்வுக்குப் பிறப்பாகும் (யோவா 3:3தொ). பிள்ளைகளாக்கும் இறை ஆவிக்குள் வாழ்வாகும் (உரோ 8:14–17). பவுல் இவ்வருள் வாழ்க்கையை விளக்கச் சட்டச்சொற்களை அடிக்கடி பயன்படுத்துகிறார். அருள் நிறுவிய ஆட்சியை நிரூபிப்பதுதான் இந்த அருள் வாழ்க்கையின் நோக்கமாகும் (கலா 1:6). அருள் நிலை அடையும் பேறு பெற்றவர்கள் (உரோ 5:2), அருளாட்சியிலே வாழ்பவர்கள் (உரோ 5: 21; 6:14). ஆனால் இந்த வாழ்க்கை சட்ட உரிமை நிலையைப்பெற்ற வாழ்க்கைமட்டுமல்ல. வாழ்வு என்ற சொல்லின் நிறைபொருளைக்கொண்ட வாழ்வாகும். மேலாக இவ்வாழ்க்கை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்து உயிர்த்த இயேசுவோடு புதிய வாழ்வு வாழ்வதேயாகும் (6:4.8.11.13). இங்கே பவுல் தனது கருத்தை வேறொரு கோணத்தில் கூறினாலும், அது கிறிஸ்துவின் அருள்வாழ்வெனும் கொடையாகும் என்ற யோவானின் கருத்தை ஒத்திருக்கிறது (யோவா 5:26; 6:33; 17:2).

இவ்வாழ்க்கை அனுபவமானது தூய ஆவியைச்சேர்ந்தது. அருளின் அரசு ஆவியின் அரசாகும் (உரோ 6:14; 7:6). மனிதன் பாவத்திலிருந்து விடுதலை பெற்றுப் புனிதத்தின் கொடைகளைத் தாங்கி நிற்கிறான் (6:22; 7:4). ஆவியானவர் ஆண்டவரின் மேலான கொடையாவார் (அ.ப.8:20; 11:17). அந்தக் கொடையைப் பெற்ற நாம், அருளைப் பெற்ற நாம், அப்பா, தந்தை என ஆண்டவரை அழைக்கிறோம். அப்போது நம் உள்ளத்தோடு உறையும் இறை ஆவியானவரே நாம் இறைவனின் பிள்ளைகள் என்று சான்று பகர்கிறார் (8:15–16). இதுவே அருள் நமக்காகச் செய்து முடித்த ஏற்புடைமையாம் (3:23 தொ). அதாவது தந்தைமுன் அன்பு மக்களாய் நிற்கும் நிலையாகும் (8:14–17). தனது எல்லாச் செயல்களுக்கும் இறை அருளே ஊற்று என்று உணர்ந்து, கிறிஸ்துவில் உண்மையாகவே பெருமை கொள்ளலாம். ஆனால் இது தானாக எதையோ செய்துவிட்டோம் என்ற இறுமாப்பன்று. பவுல் அருளையும் பெருமை பாராட்டுவதையும் சேர்த்துக் கூறப்பெரிதும் விரும்புகிறார் (உரோ 4:2 தொ; 5:2 தொ; 2 கொரி 12:9; எபே 1:6)! இறைவனின் அருளில் மனிதன் தானாக ஆவதில் வெற்றி கொள்கின்றான்.

முடிவாக இறைவனது உறவு படைப் பின் தொடக்க முதல் முடிவுவரை தொடர்ந்து கொண்டேயிருக்கும். மனிதன் மாறலாம். ஆனால் இறைவன் மாறாத வர். அவரது அன்புறவும் அருளும் மாறா தவை.

அரேத்தா (ARETAS – நன்னெறியாளர், மகிழ்ச்சி உண்டாக்குகிற)

பெத்திரா, தமஸ்கு போன்ற நகர்களில் ஆட்சி புரிந்த அரேபிய மன்னர்கள் உரிமையாக்கிக் கொண்ட பெயராகும்.

இசுமயேலின் மூத்த புதல்வர் நெப யோத்து ஆவார் (ஆதி 25:13). நெபயோத் தின் சகோதரியாகிய மகலாத்து என்பவள் ஏசாவின் மனைவியரில் ஒருவளாவாள் (ஆதி 28:9). இவள் சில இடங்களில் "பாச மத்து" என்றழைக்கப்படுகின்றாள் (ஆதி 36:3). யோசிபஸ் நபத்தேயர்களை நெப யோத்தின் வழி வந்தவர்களாகக் கருது கிறார். மேலும் இசுமயேலின் பன்னி ரண்டு புதல்வர்களும் யூப்பிரத்திசுக்கும், செங்கடலுக்கும் இடையிலுள்ள பகுதியைத் தங்களது குடியிருப்பிடமாகக் கொண்டு அவ்விடத்தை நபத்தேனே என்றழைத் தனர் என்றும் கூறுகிறார். இவர்கள் அரே பியர்கள்; தங்கள் இனத்தின்பெயரை இவர் களிடமிருந்து பெறுகின்றனர். இதற்கு இவர்களது நன்னெறியோ அல்லது அவர்களது மூதாதையராகிய ஆபிரகா மின் பெருமையோ காரணமாக இருக்க லாம்.

இவர்களின் தலைநகரும், படை வலி மைமிக்க அரணும் செலா ஆகும் (நீதி 1:36; 2 அர 14:7; ஏச 16:1;42:11). இவ்விடம் கிரேக் கத்தில் பெத்திரா என்றழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் குடியிருந்தவர்கள் அராபிய இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தா லும், இவர்கள் அரமேய மொழியைத்தான் எழுதுவதற்கும், கல்வெட்டுக்களில் பொறிப்பதற்கும் பயன்படுத்தினார்கள்.

மக்கபேயர்களுடன் நபத்தேயர்கள் நட்பு டன் இருந்ததாகச் சில குறிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன (1 மக் 5:24–2 5;9:35).

1. முதலாம் அரேத்தா:– இரண்டாம் மக்கபேயர் ஆகமத்தில் (5:8) குறிப்பிட்டுள்ள கொடுங்கோலன்தான் இவர்கள் அறிந்த முதல்லரசராவார். மக்கபேயரின் ஆட்சிக் காலத்தில், அரேத்தா அரேபியர்களின் அரசராக இருந்தார். தலைமைக் குரு யாசோன் என்பவர் நான்காம் அந்தி யோக்கு மன்னன் இறந்துவிட்டார் என்ற தொரு தவறான செய்தியைக்கேட்டவுடன், ஆட்சிப்பொறுப்பை ஏற்கவேண்டும் என்ற ஆர்வத்தில் வன்முறைகைளைக் கையாண் டார். முயற்சிகள் அனைத்தும் தோல்வி யடைந்தன. எனவே அவரது சதித்திட்டங் களனைத்தும் தோல்வியடைந்தவுடன், அரேபியர்கள் ஆண்டுவந்த அரேத்தாவி னால் இவர் சிறைப்படுத்தப்பட்டார்.

2. மூன்றாம் அரேத்தா:–

இவரது இரண்டாவது பெயர் ஒபோ தாஸ் ஆகும். இவர் செலூக்கிய அரசன் 12–ஆம் அந்தியோக்கு தியோனிசுசைத் தோற்கடித்து கூலேசீரியா, தமஸ்கு ஆகிய பகுதியில் தன் ஆட்சியை நிறுவினார்.

அரித்தோபுல் என்பவர் இரிக்கானுக்கு நல்லெண்ணம் காட்டியதால் பெரிய ஏரோதின் தந்தையாகிய அந்திப்பா, அரித்தோபுலுடன் பகைமை கொண்டார். அந்திப்பா செய்த சதித்திட்டத்தினை யறிந்த இரிக்கானு பயமடைந்து, அடைக் கலம் தேடி அரேபிய மன்னராகிய அரேத் தாவிடம் ஓடினார். அரேத்தாவும், பெத் திரா என்ற இடத்தில் அவருக்கு அடைக் கலம் தந்தார். அரேத்தாவின் ஆதரவி னால் அந்திப்பா, இரிக்கானு இருவரும் உறவு கொண்டதோடு அல்லாமல், அரித்தோபுலுக்கு எதிராகச் செயல்பட்ட தன் விளைவாக தற்காலிகமான வெற்றி யை அடைந்தனர். ஆனால் பாம்பேயிடமி ருந்து வந்த ஸ்கவுரஸ் அரித்தோபுலுக்கு ஆதரவு அளித்தார். அதன் விளைவாக இரிக்கானு ஆகியவர்களின் படை பாப்பி ரோன் என்ற இடத்தில் தோற்கடிக்கப் பட்டது (கி.மு. 65).

3. நான்காம் அரேத்தா ஜனேயா (கி.மு.9–கி.பி.40):–

தமஸ்கு நகரில் நபத்தேயர்களின் செல் வாக்கு, அதிகாரம் ஓங்கியிருந்ததாக புதிய ஏற்பாட்டில் காண்கிறோம். இதற்குச் சான்றாக பவுல் தமஸ்கு நகரில் இருந்த பொழுது நான்காம் அரேத்தா அரசன் கீழ் இருந்த ஆளுநன் அவரைச் சிறை

பிடிக்க விரும்பி தமஸ்கு நகர வாயில்களில் காவல் வைத்தான். ஆனால் அவர் கூடையினுள் வைத்து மதில் சுவரின் வழியாக கீழிறக்கப்பட்டு காப்பாற்றப்பட்டார் என்று நிகழ்ச்சி விளங்குகிறது (2 கொரி 11:32–33). இந்த நான்காம் அரேத்தாதான் தனது மகளை விவாகரத்து செய்த ஏரோது அந்திப்பாவைத் தாக்கித் தோற்கடித்தார்.

அரேபியர் (ARABIANS)

அரேபியாவில் வசிக்கும் மக்கள், முக்கியமாக வடஅரேபியாவில் வசிப்பவர்கள் அரேபியர்கள் எனப்படுவர். இவர்கள் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தவர்களுடன் மிகப் பழமையான காலத்திலிருந்தே தொடர்பு கொண்டிருக்க வேண்டும். முற்காலத்தில் இப்பகுதி முழுவதற்குமான தனிப் பெயர் எதுவுமில்லை. அத்துடன் இப்பகுதியில் வாழ்ந்திட்ட மக்களுக்குத் தனி இனப்பெயர் எதுவும் இருக்கவில்லை எனவும் தெரிகிறது. அந்தந்தப் பகுதியை வைத்துப் பெயரும் கொடுக்கப்பட்டது. எனவே பழைய ஏற்பாட்டில் இவர்கள் இசுமயேலர், மிதியானியர், கெத்தானியர், சபேயர், எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டனரே ஒழிய அரேபியர் என அழைக்கப்படவில்லை.

1. பெயர்:- இதற்கு நாடோடிகள் என்பது பொருள் 2 மக் 12:10–12–இல் யூதாவைத்தாக்கிய அரேபியர்கள் நாடோடிகள் என்றே அழைக்கப்படுகின்றனர். நாடோடிகள் பாலைவனத்தில் அலைந்து திரிந்தனர் என்பதில் சந்தேகமில்லை. ஆப்பு எழுத்து வாசகங்களில் "அருபு" அல்லது "அரிபி" என்பது மேதிய நாடோடிகளையும், அரேபிய நாடோடி களையும் குறித்தது. ஏச 13:20; எரே 3:2 என்பன இவர்கள் நாடோடிகள் என்றும், 1 அர 10:15; ஏச 21:13; எரே 25:24; எச 30:5 என்பன அரேபியர் என மொழி பெயர்க்கப்பட்டாலும், நாடோடி என்பதையே குறிக்கும்.

எச. 27:21–இல் அரேபியா என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியையும், அங்கு வாழும் மக்களையும் குறிக்கும் பொருளில் உள்ளது. இதே பொருளில்தான் 2 நாள். 21:16; நெக. 4:7–லும் வருகிறது அரேபியா என்ற பெயர். நெமாரா கல்வெட்டுக்களில் ஆள்பவன் எல்லா அரேபியர்களின் அரசன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

2. வரலாறு:- வட, தென் அரேபியப் பகுதிகள் இரண்டிலுமே பழைய கற்கால இடங்கள் காணப்படுகின்றன. எனவே வரலாற்றில் முதன் முதல் இவர்கள் எப்பொழுது தோன்றினார்கள் என்பது தெளிவாக இல்லை. தலைமுறை அட்டவணையில் அரேபியரின் கூசுவின் மக்களாகவும் (ஆதி 10:7), ஆராமின் (10:23) எபேரின் (10:25–30) சந்ததிகளாகவும், கெத்தூர வழியாகவும் (25:1–4) ஆகார் வழியாகவும் (25:13–16) ஆபிரகாமின் வழித்தோன்றல்களாகவும் கருதப்படுகின்றனர். இந்தத் தலைமுறை அட்டவணை ஒரு சீரான தொடர்போடு மக்களைக் குறிப்பதாக இல்லாவிடினும் இதில் வரும் பெயர்கள் அரேபியரின் பல இடப்பெயர்களாகவும் மக்களின் பெயர்களாகவும் உள்ளதைக் காணலாம்.

இஸ்ராயேலின் குல மூதாதையார் காலத்தில், ஆபிரகாம் பென்–கேத்திடமிருந்து ஒரு குடும்பக் கல்லறை நிலம் வாங்கியதாகவும் (ஆதி 23) ஏசா இவர்களிடமிருந்து தன் மனைவியரைக் கொண்டதாகவும் (26:34; 27:46; 36:2) வாசிக்கிறோம். இக்கால இத்தியர் பிற்கால இத்தியரிலிருந்து வேறுபட்டவர்களாக இருக்கலாம். யோசேப்பின் கதையில் இவர்கள் ஒட்டங்களை வாகனமாகக் கொண்டவர்களாகவும், எகிப்தோடு வணிகத் தொடர்புடையவர்களாகவும் தோன்றுகின்றனர். ஆதி 16:12–இல் வரும் "அவன் கொடும் குணமுள்ள மனிதனாய் வளர்வான். அவருடைய கை, எல்லோருக்கும் விரோதமாயும் எல்லோருடையகையும் அவனுக்கு விரோதமாயும் ஓங்கியிருக்கும்" என்ற இசுமயேலைப் பற்றிய விவரிப்பு, வட அரேபிய பெடூயீனர்களுக்குப் பொருந்தும். இவர்கள் நிலையாகக் குடியேறியவர்களைக் கொள்ளையடித்து தங்களைப் பற்றிய அச்சம் மேற்காசியப் பகுதியில் பரவச் செய்தனர். ஆதி 21:20, இவர்கள் பாலைவனத்தில் வாழ்ந்ததாகக் குறிக்கிறது. இவர்கள் மிதியான் நாட்டுக்கும் மெசபொத்தோமியாவின் எல்லைக்கும்

இடைப்பட்ட பகுதியிலுள்ள பாலையில் வாழ்ந்தனர். இது ஆப்பு எழுத்து வாசக விவரிப்புகளில் குறிக்கப்பட்டு அரேபியர்களோடு ஒத்துப்போகிறது.

கி.மு. 854–ஐச் சேர்ந்த கல்வெட்டுக்களில் (மூன்றாம் சால்மனேசர்) அரேபியர்கள் ஒரு ஒட்டகப் படையைத் திரட்டி அசீரியர்களை எதிர்த்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இவை குறிப்பிடும் பல பெயர்கள் விவிலிய இடங்களோடு தொடர்புடையனவாக உள்ளன. கி.மு. 1200–ஐ ஒட்டி தென் அரேபியாவில் கலாச்சாரம் வளர்ந்திருக்க வேண்டும். இவர்கள் அரசியல் அமைப்பைக்கட்டி எழுப்புவதிலும், வேளாண்மை செய்வதிலும், வணிகம் செய்வதிலும், சிறந்து விளங்கினர் எனத் தெரியவருகிறது. வணிகத் தொடர்பிற்காக வட அரேபியாவில் பல இடங்களில் இவர்கள் குடியேறி இருக்கின்றனர். இவர்களிடமிருந்து மொழியையும், எழுத்தையும் வட அரேபியர்கள் கற்றிருக்கவேண்டும். கிரேக்கர்கள் தென்அரேபியாவின் நான்கு அரசுகளான மினேயர், சபேயர், கட்டபானியர், கத்ராமாவுத்தியர் ஆகியவற்றைத் தெரிந்து வைத்துள்ளனர். ஆதி 10:26–30 குறிப்பிடும் பல பெயர்கள் தென் அரேபியாவோடு தொடர்புடையனவே.

செபா, சேபா இவை இரண்டுக்கும் உள்ள வேறுபாடு ஆதி 10:7; சங் 7:10லும் அப்படியே வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் செபா என்பது தென் அரேபியாவில் உள்ள சபேயர்களையும் சேபா, என்பது வட அரேபியாவில் உள்ளவர்களையும் குறிப்பதாகும். எனவே மன்னன் சாலமோனைச் சந்திக்க வந்த சேபா நாட்டு அரசி வட அரேபியாவைச் சேர்ந்தவளாகவே இருக்கவேண்டும். ஏனெனில் தென்னாட்டில் தனியாக அரசிகள் யாரும் இருக்கவில்லை.

பழைய ஏற்பாடு வடக்கு அரேபியர்கள் குலமுதுவர்கள் காலத்திலிருந்தே பாலஸ்தீனத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகிறது. கிதயோன் பற்றிய கதையில் (நீதி 6–7 ஆதி), மேதியர்கள், அமலேக்கியர்கள் பொருட்களைக் கொள்ளையடித்துப் பாலைவனத்துக்கு ஓடி விடுவதாகக் கூறப்படுகிறது. சிக்கிலாகுவை அமலேக்கியர் பிடித்தது பற்றியும் (1 சாமு 30), யோராமின் குடும்பத்தையும் பொருட்களையும் தூக்கிச்சென்றது பற்றியும் கூறப்படுவது வட அரேபியர்கள் பற்றியே (2 நாள் 21:16–17;22:1). எசக்கியா அரசன் காலத்தில் (1 நாள் 4:43) சிமியோனியர்களின் கூட்டத்தினர் அமலேக்கியர்கள் பெருங்குழுவையே அழித்தொழித்தனர் (யாத் 17:8–16; உப 25:17–19). ஏனெனில் இந்த அமலேக்கியர் இஸ்ராயேலர் பாலைவனத்தைக் கடந்து சென்றபோது அவர்களைத் தாக்கிக் கொள்ளையடித்தனர். சவுல், தாவீது ஆகியோர் காலத்திலும் தொல்லை கொடுத்தவர்கள் இவர்கள் (1 சாமு 15:30). இந்நிகழ்ச்சிகளின் வரலாற்றுத் தன்மை எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கும் என்ற சந்தேகம் இருந்தாலும் இஸ்ராயேலரின் வரலாற்றில் இந்த அரேபியர்கள் என்ன பங்கு வகித்தனர் என்பதை துல்லியமாக எழுதி வைத்துள்ளனர் விவலிய ஆசிரியர்கள். அதேநேரத்தில் இஸ்ராயேலின் அமைதியான வாழ்வுக்கு அரேபியர்கள் துணைநின்றதாகவும் சில இடங்களில் குறிப்பிடுகின்றனர். மேதியர்கள் சிலர் எகிப்துக்கு வியாபாரநிமித்தமாகச் சென்றதாக ஆதி 37:28, 36–இல் குறிப்பிடப்படுகிறது. மோசேயின் வாழ்க்கையில் (உப 2–3) இந்த அரேபியர்கள் ஆடுமேய்ப்பவர்கள் என்றும் மோசே அவர்களிடையே தனது மனைவியைத் தெரிந்தெடுத்தார் என்றும், அந்த நாட்டுக்கே பின்னர் எகிப்தினின்று இஸ்ராயேலை இட்டுச்சென்றார் என்றும் (யாத் 17) கூறப்படுகிறது. மேலும் அவர்கள்தான் மோவாபு வழியாக வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைய இஸ்ராயேலுக்கு வழிகாட்டியைத் தந்து உதவியதாகவும் குறிப்பு உள்ளது (எண் 10:29–32). தாவீதின் ஒட்டகங்களைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்ட தலைவன் ஒரு இசுமயேலியன் ஆவான் (எண் 10:29–32). அரேபியர்களின் செல்வம்பற்றி எச 38:10–13–ல் குறிப்புள்ளது. அவர்கள் இஸ்ராயலேுக்கு பொன், விலையுயர்ந்த கற்கள், நறுமணப் பொருட்கள் முதலியவற்றை அளித்ததாக 2 நாள் 9:14; ஏச 60:6; எரே 6:20; எச 27:22–இல் காண்கிறோம்.

நாடு கடத்தல் முடிந்து எருசலேமுக்கு வந்து நெகமியாவின் தலைமையில் எருசலேமைத் திரும்ப கட்டியெழுப்பத் தடை செய்தவர்களுள் அரேபியர்களும் ஒருவராவர் (நெக 2:19; 4:7; 6:1–6). நபத்தேயர்கள் மட்டுமே, வட அரேபியர்களுள் தென் அராபியர்கள்போல, ஒரு கலாச்சாரத்தை வளர்த்து வாழ்ந்தவர்கள்.

அவர்களது முதல் அரசன் கி.மு. 169–ஐ ஒட்டி வாழ்ந்த முதலாம் கரேதாத்து (அரேத்தா) என்பவர் ஆவார். இவர் அந்தியோக்கு, எப்பிப்பான், யூத பெரிய குரு யாசோன் ஆகியவரோடு சம காலத்தவர் (2 மக் 5:8). அதனை அடுத்து மூன்றாம் அரேத்தா, நான்காம் அரேத்தா ஆகியோர் அரேபியாவை ஆண்டுள்ளனர். கி.மு. 9–கி.பி. 40–வரை ஆண்ட நான்காம் அரேத்தா பவுல் காலத்தைச் சேர்ந்தவர் (1 கொரி 11:32). அவர்களோடு மக்கபேயர்கள் சுமூகமான உறவுகொண்டிருந்தனர் (1 மக் 5:25; 9:35). ஆனால் அசமோனியர் அவர்களோடு சண்டை போட்டனர். மூன்றாவது அரேத்தா காலத்தில் அவர்களது அரசு மிகுந்த பரப்பைக் கொண்டிருந்தது. அவர்களது கலாச்சாரம், கிரேக்க மயமாக்கப்பட்டது. இவர் யூத காரியங்களில் தலையிட்டார். இக்காலத்தில் உரோமையரால் தாக்கப்பட்டார். கி.பி. 106–இல் கொர்னேலியஸ் பால்மா அவர்களது அரசை முடிவுக்குக் கொண்டு வந்தார். திரேசன் இப்பகுதியை அரேபிய உரோமை மாகாணத்துடன் இணைத்து விட்டார்.

ஐம்பதாம் நாள் விழாவில் எருசலேமில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் அரேபியர்கள் (அ.ப. 2:11) நபத்தேயப் பகுதியில் குடியேறி வாழ்ந்த யூதர்களாக இருக்கவேண்டும்.

3: வாழ்க்கைமுறை:- அரேபியர்கள் பொதுவாக நாடோடிகளாகத் திரிந்தாலும் அவர்களுள் சில இடங்களில் நிலையாகத் தங்கியும் வாழ்ந்த குழுவினர் இருந்திருக்கின்றனர். இவர்கள் பாலைவனத்தில் இனம் இனமாகச் சேர்ந்து வாழ்ந்தனர். இன முதல்வர் பெயரைத் தமக்கு இட்டுக் கொண்டனர். மேலும் குலத்தின் தலைவர் சொன்னபடி நடந்தனர். சொள்ளையடித்து வாழ்வது இவர்களது தொழில். பழிவாங்குவதில் கை தேர்ந்தவர்களாக இருந்தனர். இத்தகைய பண்புகளிலே வளர்ந்ததால் அரேபியர் ஆண்மையும், வீரமும் கொண்டவர்களாகவும் விருந்தோம்பலில் தலைசிறந்தவர்களாகவும் இருந்தனர். இவர்களுடைய முக்கிய வாகனம் தொடக்கத்தில் கழுதைகளும், பிற்காலத்தில் ஒட்டகங்களுமாகும். இவர்கள் வாழ்க்கையில் அடிமைகளும் இவர்களோடு இருந்திருக்கின்றனர். இனத் தலைவர்களுக்குப் பெருமதிப்புக் கொடுத்தனர். இவர்கள் கூடாரம் அமைத்து வாழ்ந்தனர் என்பதற்கு நீதி 5:6; 8:11; 83:6; 120:5; எரே 49:29.31; எச 38:11; சான்று கூறுகின்றன. கலை, சிற்பம், மண்பாண்டங்கள் செய்வதில் தலைசிறந்து விளங்கினர். இலக்கியம் பற்றி ஒன்றும் தெரியவில்லை. சாலமோனின் ஞானம் அரேபியனான பென–கெதம்மின் ஞானத்தைவிட சிறந்து விளங்கியதாகவும், (1 அர 4:30; 5:10), யோபின் அறிவில் சிறந்த நண்பர்கள் வட அரேபியாவில் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

4.சமயம்:- தென்அரேபியாவின் சமயம் பற்றிய செய்திகள் நமக்குத் கிடைத்துள்ள அளவுக்கு வட அரேபியர்களின் சமயம் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. பிற்கால இஸ்லாமியரின் வெறியால் யாவும் அழிக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. வட அரேபியாவில் பல வழிபாட்டு மையங்கள் இருப்பதைக் காண்கிறோம். விழாக்காலங்களில் இத்தகைய மையங்களுக்கு நாடோடிகள் கூட்டம் கூட்டமாகத் திருயாத்திரை சென்றனர். இத்தகைய வழிபாட்டிடங்களில் ஒரு தூய்மையான கல்நடப்பட்டு, அருகே ஒருகிணறும், மரமும் அமைந்திருந்தன. இக்கல் ஆண், அல்லது பெண் தெய்வத்தைக் குறிக்கும் அடையாளமாக இருந்தது. நாடோடிகளாகத் திரிந்தபோது புனிதப் பொருட்களைத் தங்களுடன் எடுத்துச் சென்றனர். வழிபாட்டு மையங்களில் தெய்வதைச்சுற்றி வருதல், விலங்கு, மனிதர்களைப் பலியிடுதல், காணிக்கை செலுத்துதல், குறி சொல்லுதல், விழாச் சடங்குகள் செய்தல் அனைத்தும் இருந்தன. குருக்கள் இருந்

தாலும் அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை யெனத்தெரிகிறது. சூரிய, சந்திர, விண்மீன் கடவுள்களையும் வழிபட்டதாகத் தெரிகிறது. மெக்காவில் "அன்னை கடவுள்" வழிபாடு சிறப்புற இருந்ததாகத் குறிப்பு உள்ளது. பழைய அரேபிய நாட்காட்டி சமயத் தொடர்புடையதாக இருந்ததெனத் தெரிகிறது. தென், வட அரேபியாவில் சிறிதளவாவது "இறையொருமைக் கோட்பாடு" இருந்திருக்கும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

அரேபியா (ARABIA – பாலைவனம், மேட்டு நிலம்)

தென்மேற்கு ஆசியாவில் பாரசீக வளைகுடாவுக்கும், செங்கடலுக்கும் இடைப்பட்ட ஒரு பெரிய தீபகற்பமாகும்.

I. 1) இடம், அமைப்பு:- இது உலகிலேயே மிகப் பெரிய தீபகற்பம், ஏறக்குறைய ஒரு லட்சம் சதுர மைல் பரப்புடையது. தீப கற்பம் ஒரு நீண்ட சதுரம் போன்றது. 2900 கி.மீ. மைல் நீள கடற்கரைக் கொண்டது. செங்கடலுக்கும் பாரசீக வளைகுடா வுக்குமிடையேயுள்ள தூரம் ஏறக்குறைய 1000 கி.மீ நீளமாகும். மேற்கில் செங்கடலையும், தெற்கில் ஆதன் வளைகுடா மற்றும் இந்துமாக்கடலையும், கிழக்கில் ஊமான் வளைகுடாவையும், பாரசீக வளைகுடாவையும் எல்லையாகக் கொண்டது. வடக்கு எல்லை தெளிவாக இல்லை. வடக்கு எல்லையாக சீரிய பாலைவனத்தை இக்கால யோர்தான், சீரியா, இராக் ஆகிய பகுதிகளைக் கூறலாம். அரேபியா மூன்று பக்கங்களில் கடலையும் வடக்கில் யூப்பிரத்திசு நதியையும் எல்லையாகக் கொண்டிருப்பதால் "அரேபியர் தீவு" என்று அழைக்கப்படுவதுண்டு.

2) பிரிவுகள்:- பாரம்பரிய புவியியல் வல்லுநர்கள் அரேபியாவை மூன்று பகுதிகளாகப் பிரிப்பர். முதல்பகுதி பாறை அரேபியாவாகும். இதில் சீனாயி, மோவாபு, ஏதோம், யோர்தானுக்குக் கிழக்கில் உள்ள பகுதி, அராபா ஆகியவை அடங்கும். அதன் முக்கிய நகரம் பெத்திராவாகும். இரண்டாம் பகுதி பாலைவன அரேபியாவாகும். இதில் சீரியாப் பாலைவனமும் மத்திய அரேபியாவும் அடங்கும். மூன்றாம் பகுதி நற்பேறுடைய அரேபியாவாகும். இதில் தென் பகுதி, குறிப்பாகக் கடற்கரைப் பகுதிகள் அடங்கும். விவிலியம் அரேபியா என்று கூறும்போது, அரேபியாவின் பாறைப் பகுதியையும், பாலைப் பகுதியையும் உணர்த்துகிறது (எச 21:13; எரே 25:24). 2 நாள் 9:4; எச 27:21; வட தென் பகுதிகளிரண்டையும் குறிக்கலாம். பவுல் அரேபியாவில் சீனாய் மலை இருப்பதாகக் கூறுகிறார் (கலா 4:25).

அரேபியாவில் வாழ்ந்தவர்கள் "பாலைவன மக்கள்" அல்லது பெடுயீனர் என்றழைக்கப்பட்டனர். பின்னது ஆளின் பெயராகி அரேபியர் என்றாயிற்று. பாலைவனத்தில் வாழ்ந்த (எரே 25:24; 3:2) இந்த நாடோடி மக்கள் கிழக்கில் பாபிலோனியா வரையும் (எச 13:20) மேற்கில் எத்தியோப்பியா வரையும் (2 நாள் 21:16) வாழ்ந்தனர். ஆதி 37:28–இல் வரும் மிதியானியர் வட அரேபியாவில் வாழ்ந்தவர்கள். நீதி 6:3–இல் குறிக்கப்படும் கீழ்த்திசை மக்கள்" பாறை அரேபியாவில் வாழ்ந்த வர்கள் ஆவார்கள்.

II. விவிலியக் குறிப்புக்கள்:- 1) பழைய ஏற்பாட்டு நாடுகளின் பட்டியலில் பல அரேபிய இனத்தவர் அல்லது நகரங்கள் குறிக்கப்பெறுகின்றன. இவை கசர்–மாவேத்து, சேபா, ஒப்பீர், கெவீலா மற்றும் யோபாபு ஆகியவையாகும். இவை யாவும் சேம்மின் வழித்தோன்றல்களும் யொக்கிதானின் புதல்வர்களின் பெயர்களுமாகும் (ஆதி 10:26–29). இசுமாயேல் பல அரேபிய இனத்தவர்களுக்கு குல மூதாதையாவார் (25:12–18).

இஸ்ராயேலின் அரசாட்சி காலத்தில், இஸ்ராயேலர்களும், அரேபியர்க்ளும் முக்கியமாக வணிகத் தொடர்பே கொண்டிருந்தனர். அரேபியர்கள் ஒரு விதத்தில் ஆன்மீக முறையிலும் இஸ்ராயேலரைப் பாதித்திருக்கலாம் (பழ 30:1; 31:1 இங்கு மாசா என்பது வட அரேபியாவிலுள்ள ஒரு நகரைக் குறிக்கிறது). தங்கம் (1 அர 9:27–28), வாசனை மரங்கள், விலை உயர்ந்த கற்கள் (10:11; 2 நாள் 9:10) முதலியவை ஒப்பீரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. வாசனைப் பொருட்கள் சேபாவி

விருந்து வாங்கப்பட்டன (ஏச 60: 6; எரே 6:20). வட அரேபியாவைச் சேர்ந்த சேபா வின் அரசி, சாலமோனின் ஞானத்தை சோதித்தறிய அவரைப் பார்க்க வந்தாள் (1 அர 10:1–13; 2 நாள் 9:1–12). "அரேபியா வின் அரசர்கள்" தங்கமும் வெள்ளியும் அரசன் சாலமோனுக்குக் கொண்டு வந்த னர். இவை ஒருவேளை ஆண்டுக் கப்ப மாக இருக்கலாம் (2 நாள் 9:14; 1 அர 10:15). யூதாவின் யோசபாத்து ஆட்சிக் காலத்தில் அரேபியர் பெரும் கப்பத்தை கால்நடைகளாகக் கட்டினர் என்பது உறுதி (2 நாள் 17:11). யூதாவின் இட அமைப்பையும், பெலிஸ்தியரைப் பற்றிய குறிப்பையும் மனதில் கொண்டால், இவர் கள் பாறை அரேபியாவில் வாழ்ந்தவர் களாவார்கள்.

விரைவில் நிலை மாறியது. யோசபாத் தின் தீய புதல்வன் இறைவனது சினத் தைத் தூண்டினான். அதற்குத் தண்டனை யாக பெலிஸ்தியரையும், அரேபியர்களை யும் யூதாவுக்குப் பகைவர்களாக ஆண்டவர் எழுப்பினார் (21:16–17). எத்தியோப்பியா வுக்கு அருகிலுள்ள இடத்திலிருந்து வந்த இந்த நாடோடிகள் பெருங்கூட்டமாக யூதாவில் நுழைந்தனர். தலைநகருக் குள்ளும் புகுந்து, அரச உடைமைகளையும் புதல்வர்களையம் எடுத்துச் சென்றனர். இவர்களுடைய ஆதிக்கம் யூதாவில் சிறிது காலத்திற்காவது நிலவியது என்பது கூர்பாகால் (ஒருவேளை ஏதோமில் இருக்கலாம்) போரிலிருந்து தெரிகிறது. இப்போரை யூதாவின் பக்தியுள்ள ஊசியா யூதர்களுக்குச் சாதகமாக மாற்ற முடிந் தது (26:7). நாடுகளுக்கு எதிரான தீர்ப்பில் எரேமியா, ஒருவேளை கி.மு. 604–இல் நடந்த நெபுக்கதுனேசாரின் வெற்றிகளை மனதிற்கொண்டு, அரேபிய அரசர்களை யும் உள்ளடக்குகிறார் (எரே 25:24). தீருக்கு எதிரான தனது இறைவாக்கில், அரேபி யர்களுக்கும் பெனிசிய நகருக்குமிடையே யுள்ள வணிகத் தொடர்பு முடிவுக்கு வரும் என்று எசக்கியேல் முன்னறிவிக்கிறார் (எச 27:20–22). 572–ல் தீரின் வீழ்ச்சியோடு, அரேபியர்களுக்கும் பெனிசியர்களுக்கும் இடையே இருந்த பரந்த வாணிகத்தை நெபுக்கதுனேசார் கடுமையாகக் கட்டுப் படுத்தினார்.

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்னும் யூதர்கள் அரேபியர் களின் எதிர்ப்பையும், பகைமையையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. யூதர்கள் கிளர்ச்சி செய்யப்போவதாக எண்ணி கெசம் என்ற ஒ[illegible] அரேபியன் யூதர்கள் எருசலேமின் சுவர்களைக் கட்டும் முயற்சி யைப் பார்த்து எள்ளி நகையாடினான் (நெக. 2:19). சுவர் எழுப்பும் வேலை முன் னேறிக் கொண்டிருக்கும்போது, மற்ற அண்டை மக்களோடு சேர்ந்து அரேபி யரும் எருசலேமின் அழிவிற்குச் சதித் திட்டம் செய்தனர் (4:7). யூதி 2:25–இல் அரேபியா, தமஸ்குவிற்கருகில் இருப்ப தாகச் சூழ்நிலை காட்டுகிறது.

யூதா மக்கபேயர் தன்னைச் சுற்றியி ருந்த "எல்லா இனத்தாரோடும்" போர் புரிந்த போது, அவர் அரேபியக் கூலிப் படையையும் சந்திக்க வேண்டியிருந்தது (1 மக் 5:39–39). அவருக்குப் பின் வந்த யோனத்தான் சில நபத்தேயர்களோடு நட்புறவு கொண்டிருந்தார் (9:35). 1 மக்க பேயர் நூல் ஆசிரியருக்கு அரேபியரும் நபத்தேயர்களும் ஒருவரே.

2) புதிய ஏற்பாட்டில்:- ஐம்பதாம் நாள் விழாவிற்கு எருசலேமில் வழிபட வந்த பக்தியுள்ள யூதர்களில் அரேபியாவிலி ருந்து வந்தவர்களும் இருந்தனர் (அ.ப. 2:11). நபத்தேய அரசின் மக்கள் அரசன் அரெத்தாவால் ஆளப்பட்டனர். முதலில் கலிலேயா சிற்றரசனான எரோது அந்தி பாவுக்கும் அரசன் அரேத்தாவுக்கும் சுமூகமான உறவு நிலவியது. நபத்தேய அரசனது மகளை எரோது அந்திபா விவாகரத்து செய்தபின், அரேத்தா பகைமை கொண்டார். பவுல் தமஸ்கு வுக்குப்போகும் வழியில் மனந்திரும்பிய பின், இந்த அரேபியாவில் தான் தங்கி னார் (கலா 1:17).

III. 1. முக்கியத்துவம்:- அரேபிய நாட்டின் முக்கியத்துவம் இருவகைப்படும் அ) ஆதி 25:12–18–இல் இஸ்ராயேல் பழங் காலப்பல அரேபியா இனங்களுக்கு மூதா தையராகக் குறிக்கப்படுகிறார். ஆனால் தென் பகுதி அரேபியர்களின்படி ஒக்தா (ஒருவேளை விவிலிய யோக்திதான் (10:25–26) ஆக இருக்கலாம்). அவர்களின்

மூல மூதாதையர் என்று கருதப்படுகிறார். ஆ) மோசே 40 ஆண்டுகள் மிதியானில் வாழ்ந்தது அரேபியா இனத்தவர் வாழ்ந்த வடமேற்கு கோடிப்பகுதியாகும். இதே பகுதியில் இஸ்ராயேலர், தங்களுடைய பாலைவனப் பயணத்தில் பல ஆண்டுகள் செலவழித்தனர்.

2. தொல்பொருள் ஆய்வு:- இதன்படி பூசு, தெதான், தூமா, ஏப்பா, கெவீலா, கெசர் – மாவேத், காசோர் (எரே 49:28). மாசா, மிதியான், ஓப்பிர், பரிவாயிம், இராமா, சபிதா, செபா, தேமா, ஊசு ஆகிய விவிலிய இடங்களை அரேபியாவில் அடையாளம் காட்டலாம். பழைய ஏற்பாட்டில் காணப்படும் அரேபியாவின் விரிவான புவியியல் விவரங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

3. பிற்காலத்தில்:- கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் அதிகாரப்பூர்வமான சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின், அரேபியர்கள் உலக வரலாற்றில் முக்கிய இடம் பெற்றனர். அவர்களது தென் செமித்தியா மொழி, அதன் பல திரிபு மொழிகளுடன் சேர்ந்து, 50 மில்லியன் மக்களால், இப்போது பேசப்படுகிறது. அதில் இயலிலும், சந்தமுடைய உரைநடையிலும் செழிப்புள்ள இலக்கியங்கள் பல உள்ளன.

அரேலி (ARELI – வீரமிக்க)

அரேலி காதின் மகனும் யாக்கோபின் பேரனும் ஆவார். அரேலி குடும்பத்தின் குலத் தலைவருமாவார் (ஆதி 46:16; எண் 26:17).

அரைத்தல், மாவரைத்தல்: (GRINDERS)

தானியங்களை மாவாக்கும் செயலைக் குறித்தது. இரண்டு கற்களுக்கிடையில் தானியங்களை வைத்து கையாலோ, விலங்குகளின் உதவியோடோ, தேய்த்துப் பொடியாக்குவதாகும். பழங்கால மேற்காசியாவில், இவ்வேலையைப் பொதுவாகப் பெண்களும், ஊழியர்களும், அடிமைகளும் செய்தனர் (யாத் 11:15). சில சமயம் கைதிகளும் (நீதி 16:21) வெல்லப் பட்டவர்களை இழிவு படுத்தும்பொருட்டு அவர்களும் (புல 5:13; ஏச 42:7) இவ்வேலையை செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

கிறிஸ்து, தாம் மகிமையில் வரும் போது விழிப்பாய் இருக்கவேண்டும் என்று போதிக்கும்போது, இந்தவீட்டு வேலையை உவமையாகப் பயன்படுத்துகிறார் (மத் 24:41). மாவரைக்கும் இயந்திரங்களின் ஓசை நிறுத்தப்படுவது இறைவனது தீர்ப்பைச் சுட்டிக்காட்டியது (எரே 25:10).

திருவுரை 12:1–7–இல் வரும் மூப்படைவது பற்றிய உருவகத்தில் "அரைப்போர்" கடவாய்ப் பற்களைக் குறிக்கிறது. இவை தேய்ந்துபோய், எண்ணிக்கையில் குறைந்தும்போய் இருப்பதால், மெதுவான உணவுகளை அரைப்பதற்கே பயன்படும்.

அரோதியர் (ARODI, ARODITES)

அரோதின் வழித்தோன்றல்கள் (ஆதி 46:16).

அரோது (AROD – கூனன்)

காதின் ஆறாவது மகன். அரோதியர் குடும்ப மூதாதையரும் தலைவனும் ஆவார் (எண் 26:17).

அரோயர் (AROER)

1. ஆர்னோனின் கெவிமலைப் பள்ளத்தின் வட ஓரத்திலுள்ள நன்கு அறியப்பட்ட நகரம் (உப 2:36; 3:12; 4:48). சீகோனின் எமோரிய அரசின் தென்கோடி எல்லையாக அமைந்திருந்தது (உப 4:4–5; 4:48; யோசு 12:12). பிற்பாடு இஸ்ராயேலர் யோர்தானுக்குக் கிழக்கில் கைப்பற்றிய பகுதியின் எல்லையாக அமைந்தது (உப 2:36; யோசு 13:9). இது தொடக்கத்தில் ரூபன் இனத்தவருக்குப் பங்கீடு செய்யப்பட்டிருந்தாலும் காது இனத்தவர்தான் இதைப் பலப்படுத்தினர் (எண் 32:34). அவர்களுக்குத் தெற்கு காவல் நிலமாகியது (யோசு 18:16). பிற்காலத்தில் இது தாவீதின் கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட முதலிடமாகும் (2 சாமு 24:5). கி.மு. 9–ஆம் நூற்றாண்டின் சீரியா அரசன் கைப்பற்றிய இஸ்ராயேலின் பகுதியின் எல்லையைக் குறித்தது (2 அர 10:33). மோவாபியக் கல்லின் மோவாவு அரசன் மேசா இஸ்ராயேலின் தாக்குதலுக்கு எதிராக இந்நகரைப் பலப்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் இந்நகரம் பற்றிய குறிப்பு, எரேமியா காலத்தில் இந்நகரம் மோவாபியரின்

ஆட்சிக்குட்பட்டிருந்தது (எரே 48:19) எனத் தெரிவிக்கிறது.

இதன் இடம் இன்றைய தீபானுக்குக் கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத்து அராயீர் என்று அடையாளம் காட்டப்படுகிறது. அர்னோன் ஆறு மகீப் கெவிமலைப் பள்ளத்தில் புகும் இடத் தில் அமைந்துள்ள கூராவைச் சுற்றியுள்ள செழிப்பான சமவெளியின் தென் எல்லை யில் அமைந்து நன்கு பாதுகாக்கப்பட்ட இப்பழம் பெரும் நகரம் வடக்கு தெற்கு வழியிலும் ஆர்னோனின் ஆற்றுத்துறையி லும் முக்கிய இடம் வகித்தது. தொல் பொருள் அகழ்வுகள், வெண்கல, இரும்புக் காலங்களைச் சேர்ந்த பரும னான சுவர்களைக்கொண்ட கட்டடங்களை வெளிக் கொண்டு வந்தன. இவை மேசா வால் கட்டப்பட்டதாக இருக்கலாம். கி.மு. 6–ஆம் நூற்றாண்டிலிருந்து கைவிடப் பட்டது. கி.மு. 2–ஆம் நூற்றாண்டில் நபத் தேயர்கள் ஆக்கிரமித்துக் குடியேறினர்.

2. காத்தின் எல்லையில் உள்ள கிலெ யாத்தில் உள்ள நகரமாகும். இரபா (இன் றைய அம்மான்) என்ற அம்மோனிய தலைநகருக்கு அருகில் இருந்தது. இஸ் ராயேலுக்கும் அம்மோனியருக்கும் இடைப் பட்ட எல்லையைக் குறித்தது (யோசு 13:25). இரபாவுக்குத் தெற்கில் எஸ்–ஸ்வேய் வினா என்ற ஊர் அருகிலுள்ள இடமாக இந்த நகர் அடையாளம் காட்டப்படும்.

3. யூதாவின் தென் செப்பேலாவிலுள்ள ஒருநகரம் (1 சாமு 30:28). இவ்வூரைச் சேர்ந்தவர்களோடு, தாவீது சிக்கி லாகுக்குத் திரும்பியபின் அமலேக்கியரிட மிருந்து எடுத்த கொள்ளைப் பொருட் களைப் பங்கிட்டுக்கொண்டார். பெயேர் செபாவுக்குத் தென் கிழக்கில் 19 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து அறாரா என்பது இந்நகரம் என்று அடையாளம் காட்டப்படுகிறது. யோசு 15:22–இல் வரும் அதாதா என்பது இப்பெயரின் திரிபாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது தாவீதின் விவிலிய வீரர்களில் இருவரின் தந்தையான அரோயேராகிய கோத்தாம் (1 நாள் 11:44). இந்நகரத்தைச் சேர்ந்தவ ராக இருக்கலாம்.

அரோயரியர் (AROERITE)

அரோயர் 1 அல்லது 3 – இல் குறிக்கப் பட்ட இடத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 11:44) தாவீதின் வலிமைமிக்க வீரர்கள் இரு வரின் தந்தையான கோத்தாம் ஓர் அரோ யரியராவார்.

ஆரோயே (HAROEH – காட்சியாளர்)

யூதாவின் வழித்தோன்றல். சோபாடு வின் மகன் (1 நாள் 2:52). 1 நாள் 4:2–இல் காணப்படும் இரயாயாவும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

அர்க்கிப்பு (ARCHIPPUS – குதிரை இலாயம் காவலாளி)

புதிய ஏற்பாட்டில் பவுல் பிலமோ னுக்கு எழுதிய கடிதத்தின் தொடக்கத்தில் பலரைக் குறிப்பிட்டு அவர்களுக்காக இம் மடலை எழுதுவதாகக் குறிப்பிடுகின்ற ஆட்களில் இவரும் ஒருவராவார். இவர் இம்மடலில் பவுலின் உடன் உழைப்பாளி யாக குறிப்பிடப்படுகின்றார். மேலும் பவுல் கொலேசையருக்கு எழுதிய மடலில் "ஆண்டவருக்குள் நீர் பெற்றுக்கொண்ட திருப்பணியை நிறைவேற்றக் கருத்தா யிரும்" (4:17) என்பதை அர்க்கிப்புவிடம் கூற கொலோசைய மக்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. இங்கே திருப்பணி என்பது எதைக்குறிக்கிறது என்பது முக்கியமான கேள்விக்குறியாகும்.

பிலமோன், அப்பியா ஆகிய இருவ ரின் புதல்வராக அர்க்கிப்பு பொதுவாகக் கருதப்படுகின்றார். ஆனால் இவ்வாறு கருதுவதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. ஒருவேளை அவர்கள் வீட்டில் இருந்த திருச்சபையின் ஒரு அங்கத்தின ராக இருந்திருக்கலாம். மேலும் ஒனேசிமு என்ற அடிமைக்குச் சுதந்திரமளித்து வீட்டில் ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல் லாமல், அவரைக் கிறிஸ்தவ சபையின் ஒரு நற்செய்திப் பணியாளராய் ஆக்க வேண்டும் என்பதுதான் அர்க்கிப்புவுக்கு கொடுக்கப்பட்ட பணியாகும் என்பது சிலரது கருத்து.

இலிக்கு பள்ளத்தாக்கிலுள்ள மிக முக்கிய நகரமாகிய இலவோதிக்கயாவில் பிலமோன் வசித்திருந்தால், அவர் அந்தப் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவ

சபைகளைத் தலைமையேற்று பொறுப்புடன் நடத்தும் மூப்பராக இருந்திருப்பார் என்கின்ற செய்தியானது இம்மடல் ஏன் பிலமோனுக்கும், அர்க்கிப்புவுக்கும் எழுதப்பட்டது என்பதற்கு விளக்கமளிக்கிறது. இம்மடலானது முதன் முதலில் பிலமோனைச் சென்றடைந்திருக்க வேண்டும். அதன்பின் கிறிஸ்துவ சபையின் உறுப்பினராகிய ஒனேசிமுவும் (கொலோ 4:9) அர்க்கிப்புவும் தங்கியிருந்த நகராகிய கொலோசையை அடைந்திருக்கும் என்று எண்ணப்படுகிறது. பவுலின் இம்மடல் இல்வோதிக்கயாவை சென்றடைய வேண்டும் என்பது அவரது திட்டம் என்பதை கொலோசையருக்கு எழுதிய மடல் (4:16) விளக்குவதாகத்தெரிகிறது. "இக்கடிதத்தை நீங்கள் வாசிக்கக் கேட்ட பின் இலவோதிக்கயா திருச்சபையிலும் வாசிக்கச் செய்யுங்கள். அவ்வாறே இலவோதிக்கயாவிலிருந்து வரும் கடிதத்தை நீங்களும் வாசியுங்கள்" என்று எழுதுகிறார்.

பவுல் கொலோசையருக்கும், பிலமோனுக்கும் எழுதியுள்ள இந்த இரு மடல்களுக்குமிடையே உள்ள உறவுகளைப் பார்க்கும்பொழுது பிலமோனுக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிற மடலை அர்க்கிப்புதான் பெற்றிருக்க வேண்டுமென்றும், அவர்தான் ஒனேசிமு அடிமையின் தலைவராக இருந்திருக்க வேண்டுமென்றும் தோன்றுகிறது. எனவே அர்க்கிப்புதான் நற்செய்திப் பணிக்காக அடிமையை உரிமைக் குடிமகனாக்க வேண்டும். மேலும் கோலோசைச் சபையில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தத் தேவையானவைகளை நிறைவு செய்யவேண்டும். பவுலின் இம்மடலை முதன் முதலில் பெறுபவராக பிலமோன் குறிக்கப்படுவதால் (பில 1:1) இம்மடலுக்கு பிலமோனுக்கு எழுதிய மடல் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவச் சபைகளைக் கண்காணிக்கும் உறுப்பினராக பிலமோன் இருந்திருப்பதால், இம்மடலில் முதன் முதலில் அவரைக் குறிப்பிடுவதில் எந்த வித வியப்புமில்லை.

அர்க்கியர் (ARCHITE)

பெத்தேலுக்கு தென்மேற்கில் உள்ள பகுதியில் நிறுவப்பட்ட பென்யாமின் குலத்தின் ஒரு பிரிவினர். முதலில் தாவீதிற்கும், பின் அபிசலோமுக்கும், ஆலோசகராயும், நண்பனுமாகவும் பணிபுரிந்த கூசாய் அர்க்கியர் குலத்தின் முக்கிய உறுப்பினராவர் (2 சாமு 15:32; 16:16; 17:5. 14; 2 நாள் 27:33). எப்பிராயிம், பென்யாமினுக்கும் இடைப்பட்டிருந்த எல்லைப் பகுதியின் விவரிப்பில் (யோசு 16:2,5) அர்க்கியர்களின் நிலப்பகுதி அத்தரோத்தில் (ஒருவேளை அத்தரோத்து – அத்தாரில்) இருந்திருக்கலாம்.

அர்க்கியர் (ARKITE)

அர்க்காத்து நகரில் வாழ்பவர் அல்லது அந்நகரிலிருந்து வருபவர். ஆதி 10:17; 1 நாள் 1:15–இல் அர்க்கியர் கானானின் வழித்தோன்றல்களாகக் குறிக்கப்பெறுகின்றனர். அர்க்காத்து சீரிய நாட்டிலுள்ள திரிப்போலியின் வட மேற்கில் அமைந்துள்ள நகரம். அமர்னா கடிதங்களில் இந்நகரம் இர்க்காத்தா என்று அழைக்கப்படுகிறது. மூன்றாம் துத்மோசால் குறிக்கப்படும் அர்க்காத்து இதே இடமாக இருக்கலாம். இக்காலத்தில் இது திரிப்போலிக்கு வடக்கில் 18 கி.மீ தொலைவிலுள்ள தேல்–அர்க்காவாக இருக்கலாம். உரோமையர் காலத்தில் இந்நகரம் செசரியா விமானி என்றழைக்கப்பட்டது. அப்போது இவ்விடம் அசித்தார்த்தித் தேவதையின் வழிபாட்டுக்குப்புகழ் பெற்றிருந்தது.

அர்க்கெலா (ARCHELAUS – மக்களின் இளவரசன்)

இவர் பெரிய எரோது, மால்தாக்கே ஆகிய இருவர்களின் மகனாவார் (மத் 2:22). கி.மு. 4–ல் பெரிய ஏரோது இறந்த பின், அவரது ஆட்சிப் பகுதியானது அவர் எழுதி வைத்த உயிலின்படி பிரித்து வழங்கப்பட்டது. ஏரோது அந்திப்பா, பிலிப்பு ஆகிய இருவரும் மண்டல ஆளுநர்களாகவும், அர்க்கெலா வாரிசு அரசராகவும் நியமிக்கப்பட்டனர்.

ஆனால் அர்க்கெலா உடனே அரியணையேற முயலவில்லை. ஏனென்றால், யூதர்கள் தன் குடும்பத்தோடு பகைமை கொண்டுள்ளனர் என்பதை நன்கறிந்திருந்ததினால் அவர்களது ஆதரவையும், முழுமையான விருப்பத்தையும் பெற பல

வழிகளைக் கையாண்டார். அரச பொறுப்பை ஏற்கும் உரிமை தனக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று உரோம் நகரால் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் விரும்பினார்.

யூதர்களின் ஆதரவைப் பெற வேண்டுமென்று அவர் கையாண்ட வழிமுறைகள் பயனளிக்கவில்லை. அவர்கள் என்றும் ஓர் எதிர்ப்புச் சக்தியாகத்தான் விளங்கினர். எனவே யூதர்கள் விடாமல் பிடித்துக் கொண்டிருந்த பகை உணர்வு, எதிர்ப்பு மனப்பாங்கு போன்றவைகளால் ஏற்பட்ட சீர்கேடுகளைத் தவிர்க்க படைவலிமையைப் பெருக்கவேண்டுமென்று உணர்ந்தார். ஆனால் யூதர்களிடமிருந்து வந்த எதிர்ப்புகள் அவரது தந்தையின் காலத்தில் இருந்தபோல் இவரது காலத்தில் அவ்வளவு தீவிரமாக இல்லை. முதலில் அர்க்கெலா கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டாலும் பாஸ்கு விழாவின்போது ஆலயத்தில் இரத்தக் களரி எதிர்ப்பை அடக்க, இவர் படையைப் பயன்படுத்துவதை அவசியமாக்கியது.

ஏரோதின் இறப்பிற்குப்பின் அர்க்கெலா மன்னராக முடிசூட்டப்படப் போவதையறிந்த அவரது சகோதரர் ஏரோது அந்திப்பா தான்தான் அரசராக்கப்பட வேண்டுமென்ற பிரச்சினையை உருவாக்கினார். எனவே இருவரும் தங்களது உரிமைக் கோரிக்கைகளை அகுஸ்துமுன் வைக்க உரோமைக்குப் பயணமானார்கள். அர்க்கெலாவின் தாயும் அவருக்குச் சார்பாகச் சான்று பகர உரோம் நகருக்கு வந்தாள். ஆனால் இடையிலே அந்திப்பா பிரிவினரால் ஈர்க்கப்பட்டுவிட்டாள்.

வழக்கு முடிவதற்கு முன்னால் மால்தாக்கே இறந்துவிட்டாள். அதேநேரத்தில் யூதேயாவில் கிளர்ச்சி எழுந்தது. அவற்றை உரோமை வீரர்கள் அடக்கினர். அப்பாது யூதர்களின் தூதுக்குழு உரோமைக்கு வந்து, ஏரோதின் குடும்பத்தினர் யாரையும் அரசனாக்காது, யூதர்களை அவர்கள் சட்டப்படி வாழ அனுமதிக்கும்படி அகுஸ்துவிடம் வேண்டியது.

அகுஸ்து வழக்கை ஆராய்ந்து பார்த்து, ஏரோதின் ஆட்சிப்பகுதியில் பாதியை (யூதேயா) அர்க்கெலாவுக்கும் மற்றொரு பகுதியை சரிசமமாகப் பங்கிட்டு பிலிப்பு, அந்திப்பா ஆகிய இருவருக்கும் கொடுக்குமாறு தீர்மானித்தார். மேலும் அர்க்கெலாவுக்குச் சிற்றரசன் என்பதுதான் பதவிப் பெயராக வழங்கப்பட்டது. அவர் திறம்பட ஆட்சி செலுத்தினாரென்றால் 'மன்னன்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

அர்க்கெலா யூதேயாவிற்கு திரும்பி வந்தவுடன் தலைமைக் குருவாக இருந்த யோயெசேரை நீக்கிவிட்டு, அவருக்குப் பதிலாக அவரது சகோதரர் எலயாசரை தலைமைக் குருவாக்கினார். அர்க்கெலா தனது ஒன்றுவிட்ட சகோதரரின் மனைவி கிளப்ரியாவை மணம் செய்ய விரும்பியதால் மரியம்மனே என்ற தனது முதல் மனைவியை விவாகரத்து செய்தார். இவர் அவளுக்கு மூன்றாவது கணவனாவார். இவ்வாறு அர்க்கெலா கைம்பெண்ணாகிய தனது சகோதரரின் மனைவியை மணந்ததால் "தந்தையர்களின் சட்டத்திற்கெதிரான தீச்செயல் புரிந்திருக்கிறார்" என்று யோசிபஸ் கூறுகிறார் (லேவி 18:16; 20:21). இது யூதர்களின் சமய உணர்வை வெகுவாக அவமதித்ததாயிற்று.

மேலும் இவர் தலைமைக் குருவாகிய எலயாசரை நீக்கிவிட்டு சீயேவின் மகனாகிய இயேசு என்பவரை தலைமைக் குருவாக்கினார். அர்க்கெலா சமாரியர்கள், யூதர்களுக்கு இழைத்த கொடுமைகள் பற்றிய விவரங்களை யோசிபஸ் சரிவரத் தரவில்லை. ஆனால் யூதர்களை மிருகத்தனமாக நடத்தியதைச் சுருக்கமாகத் தருகின்றார். இக்கொடுமைகள் அர்க்கெலாவைப் பதவி நீக்கம் செய்யுமாறு கோரி சீசரிடம் தூதுக்குழு அனுப்ப யூதர்களைத் தூண்டியது. கி.பி. 6–இல் அர்க்கெலா இப்பொழுது வியன்னா என்றழைக்கப்படுகின்ற கலாத்தை நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டார். யூதேயாவை ஆட்சி செய்ய ஆளுநர் கோப்போனியஸ் அனுப்பப்பட்டார்.

அர்க்கெலா புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு தரம்தான் குறிக்கப்பெறுகிறார் (மத் 2:22).

அர்க்கேவியர் (ARCHEVITES)

அர்க்கேவியர்கள் பாபிலோனியாவிலுள்ள எரேக்கு என்ற நகரத்தில் வாழ்ந்தவர்கள். பாரசீகர்கள், பாபிலோனியர்கள், ஏலாமியர்கள், போன்றவர்களோடு எரேக்கு நகர மக்களும், அசூர்பானிப்பால் என்பவரால் சமாரியாவின் நகரங்களிலும், நதியின் அக்கரையிலுள்ள மற்ற மாகாணங்களிலும் குடியேற்றப்பட்டனர். அசூர்பானிப்பால் எஸ்.4:10–இல் ஒசினப்பர் என்றழைக்கப்படுகிறார்.

அர்ச்சிக்கப்படுதல் (SANCTIFICATION)

இது இறைவனுக்கு அல்லது அவருடைய திருவுளத்துக்கு ஒத்த நிலையைக் கொண்டிருத்தல் அல்லது படிப்படியாக முன்னேறி இதை அடைதலாகும். இது இறை அருளால் வழங்கப்பட்ட நிலையாகவும் அடையவேண்டிய ஓர் இலட்சியமாகவும் இருக்கலாம். விவிலியக் கோட்பாடு என்ற அளவில் இது பழைய ஏற்பாட்டை விட புதிய ஏற்பாட்டை அதிகம் சார்ந்ததாகும். ஆயினும் புனிதம் பற்றிய பழைய ஏற்பாட்டு அடிப்படைக் கருத்துக்களை முன் கொள்கிறது.

1. பழைய ஏற்பாட்டுபின்னணி:- பழைய ஏற்பாட்டில் புனிதம் என்பது, பிறமதப் புத்தகங்களில் உள்ளது போலவே, மனிதனுடைய சாதாரண அனுபவத்திற்கும், கட்டுப்பாட்டுக்கும் அப்பால் உள்ளவற்றிற்கும் அவன் அளிக்கும் பதிலாகும். ஆனால் இப்பதிலை அறிவு சார்ந்த, ஒழுக்கத்தைச் சார்ந்த, கலைச்சுவை சார்ந்த வகையிலிருந்து வேறுபடுத்தும் ஒரு தனி வகையாகக் காட்டவேண்டும். மனிதன் வளர வளர இந்தப் பண்பும் வளர வேண்டும் என்றால் அது ஒழுக்கத்தைச் சார்ந்ததாக, அறிவைச் சார்ந்ததாக ஆக்கப்படவேண்டும். எபிரேய மதத்தின் முக்கியமான பங்கு இதுதான்.

எபிரேய மொழியில் புனிதத்தைக் குறிக்கும் "கதோஸ்" என்ற சொல்லின் அடிப்படைப் பொருள், சாதாரண வழக்கிலிருந்து பிரிந்திருப்பது. வேறுபட்டிருப்பதாகும். கடவுளைப் பொறுத்த வரையில் மற்றதிலிருந்து பிரிப்பது என்ற பொருளில் "மற்ற–தன்மை" என்ற சொற்றொடர் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைவன் உள்ளியல்பால் மனிதனிடமிருந்து வேறுபட்டிருக்கிறார் என்பதைவிட அவர் இறைவனாக இருக்கிறார் என்பதை நாம் மனத்தில் முதன்மையாகக் கொள்ள வேண்டும். இறைவனாய் இருப்பது நேர் இயல்புடைய கருத்தாகும். எதிர் இயல்புடையதன்று.

நவீன காலக் கருத்து, விவிலியத்திற்கு மாறானது அது மனிதனை மையமாக கொண்டதாக இருக்கின்றது. கடவுளைப் பற்றிப் பேசும்போது அவரைப்பற்றி எதிர்மறையாக விவரிக்கிறோம்; மனிதனைச் சேராத சொற்களைப் பயன்படுத்தி விவரிக்கின்றோம். ஆனால் விவிலியம் ஆதி மனிதன் புனிதத்தைப் பற்றி கொண்டிருந்த கருத்தைத்தான் கொண்டிருக்கிறது. அவனுக்கு கடவுள்தன்மை என்பது ஒரு தற்காலிகக் கோட்பாடு அன்று. மாறாக அது எவ்வளவு தான் விளக்க முடியாதது என்றாலும், முதன்மை உண்மையாகும். புனிதத்தைக் குறிக்கும் "காதோஸ்" என்ற சொல் உண்மை பற்றிய இப்பொருளைக் கொண்டுள்ளது. அது எதிர்மறையான விவரிப்பன்று. அது ஒதுக்கி வைக்கப்பட்டதன்று, தீண்டத்தகாததன்று. ஆனால் மனிதனுக்கு அப்பாற்பட்ட ஆற்றலாகும். மிகச் சரியாக, அது இரண்டும் சேர்ந்ததாகும்.

இது முதிர்ச்சியடையாத கருத்தாகும். இறைவனைத் தவிர்த்த உயிரினங்களுக்கும், பொருட்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பொருளில் பழைய ஏற்பாட்டில் நல்ல சான்று உடன்டிக்கைப் பேழை பற்றிய விவரிப்புகளாகும் (1 சாமு 6:19–7:1; 2 சாமு 6:6–11; லேவி 17:26; எச 42:1–44:44). புனிதம் ஆட் தன்மையற்ற சூழ்நிலைக்கு வெளியே எடுத்துக் கொள்ளப் படும்போது அது பற்றிய சமயக் கருத்தில் வளர்ச்சி எழுகிறது. பழைய ஏற்பாட்டில் வேறுபட்ட இரண்டு வளர்ச்சிகள் உள்ளன. (அ) புனிதத்தன்மையது முதன்மையாகவும் மிக மேலாகவும் யாவேயிற்கு உரியது என்று கருதப்பட்டது (யோபு 6:10; ஏச 6:1–5; ஓசே 11:9). மற்ற எல்லா மனிதர்களும், பொருட்களும் குறிப்பாகக் குருக்களும் ஆலயமும் இறைவனோடு

கொண்டிருக்கும் தொடர்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு புனிதமுள்ளவர்களாவர் (யாத் 19:6; 29:42–44; லேவி 19:2; 1 அர 9:3; எரே 1:5). ஏசயா எசக்கியேலின் நூல்கள் இங்குப் பொருள் மிக்கவையாகும் (ஏச 5:16; 40:25). இறைவாக்கினரும் குருவுமான எசக்கியேல் இறைவன் தமது புனிதம் பற்றிய அக்கறையால் செயலாற்றுவதாகக் காண்கிறார் (எச 20:41; 28:22.25; 36:23; 38:16; 39:27). (ஆ) அடிமைத்தனத்திற்கு முன்னால் இருந்த இறைவாக்கினர்கள் இறை புனிதத்தை அறநெறி சார்ந்ததாக் கினர்; அதாவது இறைவனது திருவுளம் அறநெறி விளைவுகள் உடையதாகக் கருதினர். இதைச் சார்ந்த முக்கியமான பகுதிகள் ஏச 5; எரே 5–7; ஆமோ 4–5; ஓசே 11: எச 18) ஆகும்.

2. புதிய ஏற்பாட்டு வளர்ச்சி :-

(அ) தொடக்க காலத் திருச்சபை:- அப்போஸ்தலர் பணியிலிருந்து, புனிதப் படுத்துதல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதைப் பொருத்தது என்று அறிந்து கொள்கின்றோம். இது உலகத்தை விட்டு விலகுவதையும் (அ.ப. 2:40), பாவமன்னிப் பையும் உள்ளடக்கியது (2:38;26:18). நேர் நிலையாகப் பரிசுத்த ஆவியைப் பெறுதல், புதுமைகள் செய்வதற்கான வரத்தையும் (2:43; 3:6; 4:12–16) ஒழுக்க ஆற்றலையும் (4:31–37), பொதுவாக கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதற்கான துணிவையும் கொடுக்கிறது (2:32–36; 4:31; 5:32).

கிறிஸ்தவர் வெறுமனே "புனிதர்கள்" என்று அழைக்கப்பட்டனர் (9:13.32; 26:10). புனித பவுல் தன்னுடைய கடிதங்களில் தொடர்ந்து இதைப் பயன்படுத்துகின்றார் (உரோ 1:7; 12:13; 1 கொரி 6:1; 16:1). அதே போல் திருவெளிப்பாட்டிலும் பதிநான்கு முறை இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. 1 கொரி 7:34; எபே 1:4;5:27; கொலோ 3:12–17 ஆகிய பகுதிகள் இன்னும் அதிகமாக இதை வலியுறுத்துகின்றன (1 கொரி 1:2; எபி 2:11; 10:14). இப்பகுதிகளின் பொருள் இங்கு ஒழுக்க முழுமையன்று. மாறாகக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப் பதைக் குறிக்கின்றது. இந்த வார்த்தையானது, தூய்மையைக் காட்டுகின்ற அல்லது சுத்திகரிப்பைக் காட்டுகின்ற வார்த்தைகளைத் தழுவியதாக உள்ளது. பின்னதின் அடிப்படைபொருள் சடங்குத் தூய்மையாகும். இதுவும், புனிதத்தைப் போல் ஒழுக்கப் பொருளுடையதாக மாறுகிறது. காண்க. அ.ப. 10:14–15.28. இது யூதர்கள் புறவினத்தாரை விடத் தூய்மையானவர்கள் அல்ல என்றும், ஆனால் எல்லோரும் கடவுளால் ஏற்றுக்கொள்ளப் படும் தகுதியுடையவர்கள் (10:34–35.45; 11: 17–18; 15:9; 28:28) என்றும் காட்டுகிறது. பரிசுத்தமும், சுத்திகரிப்பும் பற்றிய பகுதிகளுக்கு எபே. 1:4;5:26; கொலோ 1:22; 1 தெச 4:7; 2 தீமோ 22:21; எபி. 9:13–4 ஆகிய வற்றைக் காண்க. இந்த வழக்கு இரு பொருள்கள் உடையது. (அ) திருச்சபை பரிசுத்தமானது என்ற கருத்துக்கு இது அடிப்படையானதாகும். புனிதமடைய மிகவும் குறுகிய மனப்பான்மையுடைய தனி நபர் பண்புடைய முயற்சிகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றால், இந்தக் கூட்டு இலட்சியத்தையும் தேவையையும் கருத்தில் கொள்ள வேண்டும். பிரிந்திருத்தல் என்ற மூலக்கருத்து முழுவதும் ஆட் தன்மை பெறுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் புனிதத்தின் ஊற்றும் ஒழுக்க ஆற்றலுமான ஆண்டவரை வழிபடுவதில் சக கிறிஸ்தவர்களுடன் ஒன்றித்திருக்கும் போது புனிதத்தின் எல்லைக்குள் நுழைகிறான். (ஆ) புதிய ஏற்பாட்டில் அர்ச்சிக்கப்படுதல் என்றசொல் திருச்சபை கடவுளால் கட்டுப்படுத்தப்பட்ட சமூகமாகும் என்பதைக் குறிக்கிறது. இறைவனுடைய பண்பான புனிதம் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கும் சாற்றிக் கூறப்படுகிறது (மாற் 1:24; யோவா 6:69; அ.ப. 3:14; 4:27; திருவெளி 3:7; 1 பேதுரு 1:16;2:9).

திருச்சபையின் அனுபவம் "அர்ச்சிக்கப்பட்டவர்களோடு பங்கு அடைவார்கள்" என்று விவரிக்கப்படுகிறது (அ.ப. 20:32; 26:18). பரிசுத்தப்படுத்துதல் ஏற்கெனவே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் அது குறிப்பாக ஒருவன் ஒரு திருச்சபையில் நுழையும்போது நிறைவடைவதாகயில்லை. புனிதமாதல் இறைவனது பாவ மன்னிப்புக் கொடையோடு ஒரே சமயத்தில் நிகழ்கிறது. அ.ப. 26:18–இல் இது தெளிவாக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் பெறும் வாரிசுச் சொத்து வருங்காலத்தை

யும், இறப்பையும் தாண்டிச் செல்லக் கூடியதாக பலருக்குத் தோன்றலாம். கிறிஸ்துவின் அர்ச்சிப்பை ஏற்கெனவே அனுபவிக்கின்ற கிறிஸ்தவர்களுக்கு, ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறுபாடுகள், குறிப்பாக, இம்மை மறுமை, பூலோகம், விண்ணுலுகம் போன்றவை அவ்வளவு முக்கியமானவையல்ல. ஏன், இறப்பு என்பது அதனுடைய முக்கியத்துவத்தை இழந்துவிடுகிறது.

ஆ) ஒத்தமை நற்செய்திகளில் :- புனித மாற்கு நற்செய்தியின்படி "இயேசு கடவுளின் பரிசுத்தர்" (1:24). அவர் அசுத்தமானது அனைத்தையும் விரட்டி அடிக்கிறார் (1: 23–26; 34). புனித ஆலயமும் கூட, தூய்மைப்படுத்தப்பட வேண்டியிருந்தது (மத் 12:6; மாற் 11:15–17; 14:58); பாவிகளுடன் தொடர்பு கொள்வதால் தாம் தீட்டுப்பட்டு விடுவோமோ என்று அவர் அஞ்சவில்லை, அவருடைய பரிசுத்த தன்மை உண்மையானது, மேலாண்மையுடையது, பரிசேயர்களுடையதைப் போன்ற தன்று (மாற் 2:15–17; லூக் 19:5–10); இயேசு அவர்கள் பரிசுத்தம், அசுத்தம் ஆகியவை பற்றி அளித்த விளக்கத்தை நிராகரித்தார். மனிதனின் உண்மையான தேவைகளை எடுத்துக் கூறினார் (மாற் 7:1–23). மனிதனுடைய தலையாய தேவை என்னெவெனில் பாவச் செயல்களைப் பற்றிய எச்சரிக்கைகள் அல்ல, மாறாக அவனு டைய உள்ளம் பாவத்திலிருந்து விடுபட்ட தூய்மையான உள்ளமாக இருக்க வேண்டும். ஏனெனில் அங்கிருந்துதான் பாவம் தோன்றுகிறது (மத் 5:21–32; 6:22–23; 7:17–18; 12:34–35). மனிதர்களுடைய உள்ளத்தைத் தூய்மைபடுத்துவதே தன்னுடைய பணி என்பதைக் கிறிஸ்து உணர்ந்து திருந்தார். ஏனெனில் உள்ளத் தூய்மையின்மைதான் அவர்களுடைய வாழ்க்கையைத்திசை திருப்பி விடுகின்றது. தவறான செயல்களில் வெளிப்படுத்துகிறது. கடவுளுடன் உறவு கொள்வதற்கு அவர்களைத் தகுதியற்றவர்கள் ஆக்கி விடுகின்றது. இந்த நோக்கத்திற்காகத் தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்தார். இது அவரை மரணப் பலிக்கு இட்டுச் சென்றது. மனிதனுக்குத் தேவையான விடுதலையையும் அர்ச்சிப்பையும் அளிக்கும் சக்திவாய்ந்த பலியாக இறைவன் தம் மரணப்பலியை மாற்றுவார் என்ற நம்பிக்கையில் தம்மையே அர்ப்பணித்தார் (மத் 26:38; மாற் 10:45; 14:21–24).

இ) எபிரேயேருக்கு எழுதிய திருமுகத்தில்:-

குருவான கிறிஸ்து தன்னையே எப்படி பலியாக்கியுள்ளார் என்பதுதான் இத்திரு முகத்தின் மையக்கருத்தாகும். இது மக்களைப் பாவங்களிலிருந்து தூய்மைப் படுத்தலின் (1:3) அவசியத்தை பலி உருவகத்திலும் (2:17; 5:1) மையவாதத்திலும் (அதி. 5–10) எடுத்துக் கூறுகிறது. கிறிஸ்துவை அர்ச்சிப்பவராக விவரிக்கும் போது, உருவகம் அர்ச்சித்தலைப் பற்றியதாக மாறுகிறது (2:11; 7:26–27; 13:12). இந்த உருவகங்கள் ஒன்றுக்கு ஒன்றாக மாற்றிப் பயன்படுத்தப்படுகின்றன. இதை 9:11–14; 9:22–23–ல் காணலாம். யூத இடையீட்டுச் சடங்கு புறப்புனிதத்தை உண்டாக்கியது, கிறிஸ்து உள்ளார்ந்த புனிதத்தை உண்டாக்குகிறார். கிறிஸ்து அளிக்கும் பரிசுத்தமானது, மனிதனை இறைவனுடைய பணிக்கு தகுதியுள்ளவனாக்குகிறது. இதைவிட மேலாக அவனைக் கடவுளுடைய பரிசுத்ததனத்தில் பங்காளி ஆக்குகின்றது (12:10). இதுதான் மனிதனுடைய மிகமுக்கியமான தேவையாகும். கடவுளுடைய தரிசனமானது தூய்மையற்றவனுக்குக் கிடைக்காது. "அர்ச்சிப்பு" என்பது ஒருபொருள் பன்மொழியாக "நிறைவு" என்ற வார்த்தையோடு பயன்படுகிறது. நிறைவு என்றசொல் இத்திருமுகத்தில் ஒரு முக்கியமான சொல்லாகும் (2:10; 10:14; 11:39; 12:2). இந்த அர்ச்சிப்பு அல்லது நிறைவு அடைதல் ஏற்படக் காரணம் கிறிஸ்துவே, அவர் மனிதருடன் ஒப்பானார்; மனிதனைக் கடவுளுடைய பிரசன்னத்திற்குத் தகுதியுடையவனாக்கினார்; அவரே நமக்கு முன்னோடியாகி அதற்கு வழியும் வகுத்தார் (6:20; 10:19 தொ).

ஈ) யோவான் :- இவரது நற்செய்தியில் புனிதப்படுத்துதல் ஒரு முக்கிய இடத்தைக் கொண்டிருக்கிவில்லை; இருந்த போதிலும் அதை யோவானுடைய கருத்துடன் தொடர்புப்படுத்திக் காட்டலாம். உலகின் பாவத்தை நீக்குகின்றவர் கிறிஸ்துவே (யோவா 1:24). பாவத்தைப் பற்றியும்

அதிகமாக இந்த நற்செய்தியில் குறிப்பி டப்படவில்லை. அதேபோல் அர்ச்சிப்புப் பற்றிய சொற்கள் பயன்படுத்தப்பட வில்லை. ஆனால் அது பற்றிய கருத்துக் களை எடுத்துக் கூறலாம். கிறிஸ்து மனு மகன் என்றளவில், வானிலிருந்து அதா வது புனிதத்தின் ஊற்றிலிருந்து வருபவர் (3:12; 6:33–51; 8:13). அவரே "இறைவனின் பரிசுத்தர்" (6:69). கிறிஸ்து மற்ற எல்லாச் சாதனங்களையும் விட ஆற்றலோடு புனிதத்தை வழங்குகிறார். அவரில் விசு வாசம் கொள்கிறவர்கள் இறைவனோடு உறவு கொள்கின்றார்கள் என்ற பொரு ளில் புனிதப்படுத்தப்படுவார்கள் (17:20–26; 14:9–10; 16:15, 25–28). அவர்கள் வெறுமனே வாழ்வதில்லை, மாறாக அவர்கள், உயர்ந்த மட்டத்தில் எல்லாக் காலத்திற் கும், கடவுளுடைய மீட்பு ஆற்றல் தொடாத உலகத்தைச் சேராதவர்களாக வாழ்கின்ற னர். அவர்கள் உண்மையை கொண்டிருக் கின்றார்கள், அது அவர்களைத் தூய்மை ப்படுத்தும் (17:17). கிறிஸ்துவின் சொந்தப் புனிதத்தன்மை அவர்களுக்குக் கொடுக் கப்படுகிறது (17:19). யோவானின் முதல் கடிதத்தின்படி அவர்கள் கடவுளுடைய பிள்ளைகளாவர்; கிறிஸ்துவைப்போல் ஆக்கப்பட வேண்டியவர்கள். இந்த நம் பிக்கையே அவர்களைத் தூய்மைப்படுத் தும் என்று கூறப்படுகிறது (1 யோவா 3:3)

2) பேதுரு:- 1 பேதுரு 1:2–இல் ஆவியி னால்தான் அர்ச்சிப்பு நிகழ்கிறது. மேலும் இது கடவுளுடைய காலங்கடந்த நோக்கத்துடனும், கிறிஸ்துவால் செய்யப் பட்ட பரிகாரத்தோடும் இணைந்ததாகும் (1:19; 3:18). இது கடவுளுடைய தூய்மையின் மறு படைப்பாகும் (1:15–16). இது கிறிஸ்த வர்களையும் மற்றவர்களையும் வேறு படுத்திக் காட்டுகின்றது. அவர்களை ஒரே குருத்துவமாக அமைக்கின்றது (2:5). அதா வது, இறைவனை அணுகக் கூடியவர் களாகும், பிறரும் அவரை அணுக உதவக் கூடியவர்களாகவும் ஆக்குகிறது (3:15). அது, கிறிஸ்துவின் பரிசுத்தத்தை ஏற்று, அது நமது நடத்தையை நிர்ணயிக்கும் விதத்தில் கிறிஸ்துவின் பரிசுத்தத்தை நம்முடையதாக்கிக் கொள்வதில் அடங்கி யுள்ளது.

ஊ) பவுல்:- கிறிஸ்துவ அனுபவத்திலே பாவியைக் கடவுள் ஏற்றுக்கொள்கின்றார். பாவத்தினாலும், சாவினாலும், மனிதன் மீது சுமத்தப்பட்ட தடை உடைத்தெறியப் படுகிறது. பாவமானது ஆற்றல் வாய்ந்த எதிரிதான் என்றாலும் மேலாண்மை உள்ளதன்று. ஏனெனில் இறைவன் அதை விட மிகுந்த ஆற்றல் வாயந்தவர் (உரோ 5:20). இதுதான் பவுலின் கடிதங்களில் மீட்பு, ஏற்புடைமை என்பவற்றின் பொருள். பழைய வாழ்க்கையிலிருந்து விடுபட்ட கிறிஸ்துவின் "புதிய வாழ்விலே நடக்கின்றான்" (உரோ 6:4). எதிர்மறை யாக இது பழைய பாவ வாழ்க்கையை விட்டுவிடுவதையும் உள்ளடக்குகிறது, குறிக்கின்றது (உரோ 6:12–19). இதன் நேர் பயன்களைப் பற்றிப் பேசும்போது பவுல் "அர்ச்சிப்பு" என்ற சொல்லைப் பயன் படுத்துகின்றார் (உரோ 6:19, 22). இது இந்தச் சூழ்நிலையில் பாவத்தோடு ஒப்பிட்டு வேறுபடுத்தி "நேர்மை"யையும், இச்சைக்கு அடிமை ஆவதைவிட கடவு ளுக்கு பணிவதையும் உணர்த்துகிறது. 1 தெச 4:3.7–இல் இது கெட்ட நடத்தை, அசுத்த வாழ்க்கை ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.

புதிய ஒழுக்க அழுத்தம் ஆவியின் பெய ரால் விவரிக்கப்படுகிறது. அதற்குக் கொடுக்கப்பட்ட இறைத்தன்மையை வலி யுறுத்துகிறது (உரோ 7:6; 8:2–4, 11–13; கலா 5:16–25). கிறிஸ்தவர்களின் வளர்ச்சியைப் பற்றிக்கூறும்போது, பவுல் அர்ச்சிப்பைப் பற்றிய சொற்களைவிட ஆவியைப் பற்றிய சொற்களையே அதிகம் பயன்படுத்து கிறார். இரு கருத்துக்களும் சேர்ந்து 1 கொரி 3:16–17–இல் வருகின்றன.

அர்ச்சிப்பை, "அறநெறி வளர்ச்சிக்கு" ஒரு பொருட்பன்மொழியாகக் கொள்வது போதுமானதாக இருக்க முடியாது. சில வேளைகளில் "அர்ச்சிப்பு" என்பது விசு வாசி பாவ வாழ்க்கையை விட்டுவிட்ட கிறிஸ்துவனாகப் புதிய சூழ்நிலையில் மூலநிலையில் நிறுவப்படுவதைக் குறிக் கிறது. அதாவது ஓட்டப் பந்தயத்தில் தொடக்கத்தில் இருப்பதையேயன்றி, ஓட்டத்தில் முன்னேற்றத்தைக் குறிக்க வில்லை. இவ்வாறு ஏற்புடைமைக்கு

அர்ச்சிப்பை ஒரு பொருள் மறு சொல்லாகப் பயன்படுத்தலாம். "புனிதராயிருக்கும்படி அழைக்கப்பட்டு.... கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தராக்கப்பட்டவர்கள்" என்று கிறிஸ்தவர்கள் விவரிக்கப்படுகின்றனர் (1 கொரி 1:2) "இறைவனுக்கு நாம் ஏற்புடையவர்களும் பரிசுத்தவர்களும் ஆவதற்கு வழியானார்" (1:30) என்ற கூற்றின் நிறைவான விளக்கம் நமது அர்ச்சிப்பை மட்டும் குறிக்கவில்லை. திருச்சபையின் எல்லா வளர்ச்சியையும் குறிக்கிறது.

கிறிஸ்தவ அனுபவத் தொடக்கத்தை அர்ச்சிப்பாகச் சுட்டும் கூற்றுகளுக்கு மாறாகக் கிறிஸ்துவனின் முழுவாழ்வின் ஒருகூறாக அர்ச்சிப்பைக் காட்டும் அல்லது, திருச்சபை தனது பணிவாழ்வில் கொணரும் ஒன்றாக அர்ச்சிப்பைக் காட்டும் வாக்குகளும் உள்ளன. (உரோ 12:1; 15:16; 2 கொரி 7:1; எபே 2:19–22). மேலும் 1 கொரி 6:11 என்ற பகுதி கூட அறநெறி சூழ்நிலையைக் கொண்டது. 1 தெச 3:13–4:7–இல் அர்ச்சிப்பு என்பது பெரும் பாவத்தைத் தவிர்ப்பதைக் குறிக்கின்றது. 1 தெச 5:23–24ல் இது இறுதியில் இரண்டாம் வருகையில் நிறைவுபெறும் வளர்ச்சியைக் குறிக்கிறது. அர்ச்சிப்பு பரிசுத்த ஆவியோடு கொண்டுள்ள தொடர்பு 2 தெச 2:13–14–இல் காணப்படுகிறது. இது திருச்சபைக்கு இறைவன் கொண்டுள்ள மூல குறிக்கோளின் ஒரு பகுதியாகும். திருச்சபை பரிசுத்தமும் மாசற்றதுமாய்த் துலங்குவது, அதன் அமைப்பால் வருவதன்று; கிறிஸ்துவ வாழ்க்கை தொடக்கத்திலேயே இது நிறைவுடையதன்று: படிப்படியாக வளர்வதாகும்; கிறிஸ்து அன்பு கூர்வதால் வருவது (எபே 4:12–13. 22–5:2; பிலி 1:9–11;2:12–16).

சுருக்கமாக புனித பவுலுக்கு அர்ச்சிப்பு பற்றி இருக்கின்ற அனுபவத்தை கிறிஸ்தவ வாழ்வில் ஒரு கட்டத்தைச் சுட்டிக் காட்டி இதுதான் அந்தக் கட்டம் என்று சொல்லமுடியாது. அது மிகுந்த பொருள் வளம் பொதிந்ததாகும். ஏற்புடமை என்பது ஒரு மனிதனுடைய வாழ்வில் கடவுள் அவனுடைய மீட்பு வாழ்வை தொடங்கி வைப்பது என்றால், அர்ச்சிப்பு என்பது இன்னும் பரந்த பரப்பைக் கொண்டிருக்கின்றது. இந்த வளர்ச்சி பரிசுத்த ஆவியினால் ஆரம்பிக்கப்படுகிறது. அவரே அதை முன்னின்று நடத்தி அதை முழு வளர்ச்சி அடையச் செய்து, கிறிஸ்துவினுடைய நிறைவிலே அது நிறைவு அடையும்படி செய்கின்றார் (எபே 4:16). கிறிஸ்துவின் கடைசி வருகையின் போது அர்ச்சிப்பு முழுமை அடையும் (1 தெச 5:23).

அர்த்தாசெருச (ARTAXERES) – வீரம் உள்ளவர்)

1. முதலாம் அர்த்தாசெருசு லோன்கிமான்:- இவர் (465–424) முதலாம் செருசின் மகனும் வாரிசுமாவார். கி.மு. 460–இல் எகிப்தில் ஏதன்சியர் ஆதரவோடு தொடங்கி 454 வரை நீடித்த கலவரத்தை வென்று அமைதி கண்டவர். பாரசீகப் பேரரசில் நடந்த மற்ற கிளர்ச்சிகளையும் அடக்கினர். கி.மு. 458–இல் எஸ்ரா இறைவாக்கினர் அதிகாரப் பூர்வமான தூதுக்குழுவின் தலைவராகப் போக இஸ்ராயேலருக்கு அனுமதி அளித்தவர் (அல்லது) கட்டளைக் கடிதம் கொடுத்தவர் (எஸ் 7–26;8:1) ஆனால் இவர் எருசலேம் புதுப்பிக்கப்படுவதை, மீண்டும் கட்டப்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார் (4:7–23). 445–இல் எருசலேம் மீண்டும் கட்டப்படுவதில் உதவி செய்ய நெகமியாவை அனுப்பினார் (நெக 2:1–7). 432–இல் மீண்டும் எருசலேமுக்குத் திரும்ப அவருக்கு அனுமதி அளித்தார் (13:6).

2. இரண்டாம் அர்த்தாசெருச (404–359):- இரண்டாம் தாரியுசின் மகனும், முதலாம் அர்த்தாசெருசின் பேரனும் ஆவார். மனேமோன் என்றழைக்கப்பட்டார். இவர் இவரது சகோதரன் சைரஸ் மூலமாக ஏற்பட்ட கலவரத்தை அடக்கினார். ஏறக்குறைய 402–இல் அல்லது 401–இல் இவர் எகிப்தை இழந்திருக்கலாம் எனக்கருதப்படுகிறது. இவரது பல கல்வெட்டுக்கள் இவரது கட்டிடத்திறனை வெளிப்படுத்துகின்றன. சூசாவில் இவர் கட்டிய அரண்மனைதான் எஸ்த 1:5–6–இல் குறிக்கப்படுவதாகும் என்று சிலர் கருதுகின்றனர்.

3. மூன்றாம் அர்த்தாசெருசு (359–338):- இரண்டாம் அர்த்தாசெருசின் மகன். ஒக்கஸ் எனவும் அழைக்கப்படுகிறார். தனது சாதுர்யத்தாலும், படை பலத்தினாலும் மேலெழுந்தவரான பலம் படைத்த பேரரசைக் கட்டிக்காத்தார். பாகோவால் என்பவரது சூழ்ச்சியின் விளைவாகக் கொல்லப்பட்டார்.

அர்பத்தா (ARATTA)

அர்பத்தா என்பது யோர்தான் பள்ளத் தாக்கின் தாழ்வான பகுதிகளைக்குறிக்கும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் கலிலேயாவின் ஓரப்பகுதியை எல்லையாகக் கொண்ட சமாரியாவின் மேற்கு மாவட்டம்தான் அர்ப்பாத்தா என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. யோசிபசினால் இப்பகுதி நார்பத்தேனே என்றழைக்கப்படுகிறது. முதல் மக்கபேயர் நூலின் சிரியாக் மொழி பெயர்ப்பில் இதே எழுத்துக்கள்தான் பயன்படுத்தப் பட்டுள்ளன. கி.பி. 66–70–இல் ஏற்பட்ட யூதப் போரில் செசரியாவிலிருந்து ஓடி வந்த யூதர்களுக்கு அடைக்கலம் தருகின்ற இடமாக விளங்கியது. சீமோன் மக்கபேயு கலிலேயா, அர்பத்தா போன்ற நாடுகளுக்கு எதிராகப் போரிட்டு புற இனப் படைகளைத் தோல்வியடையச் செய்து யூத மக்களை விடுவித்தார். விடுவிக்கப்பட்டவர்களில் பலர் அவரைப் பின்பற்றி யூதேயாவிற்குச் சென்றனர் (1 மக் 5:23).

அர்பா (ARBA – நான்கு)

பாலஸ்தீனத்தை வெற்றி கொண்ட காலத்தில் கெபிரோன் அல்லது கிரியத்து அர்பாவில் தங்கி வாழ்ந்த முக்கிய நபராகக் காட்டப்படுகிறார் (யோசு 15:13; 21:11). இவர் அனாக்கின மூதாதையராகக்கருதப் படுகிறார். இவல் அனாக்கியர் அல்லது "அரக்கர்கள் இனத்தில்" மிகப்பெரியவராவார் (14:15). கிரியத்து அர்பா அனாக்கியரின் பணி இருப்பிடமாகும் என்ற 70 நூல்களின் வாசகத்தின்படி கெபிரோனின் பழைய பெயராகிய கிரியத்து அர்பா என்பதிலிருந்து, 'அர்பா' என்ற பெயர் எடுக்கப்பட்டது என்று கணிக்கப்படுகிறது. எபிரேய வாசகமும் கிரியத்து அர்பாவை அனாக்கியரின் தாய்நகரெனக் குறிப்பிடுகிறது. காண்க. கிரியத்து – அர்பா:

அர்பாத்தியர் (ARBATHITE – பாலையிலிருந்து வந்தவர்)

யூதா, பென்யாமின் பகுதிகளுக்கிடைப் பட்ட எல்லையிலுள்ள நகரமாகிய பேத்து – அராபாவின் குடிமகன். தாவீதின் திறமையும் ஆற்றலும்மிக்க வீரர்களில் ஒருவராகிய அபி–அலபோனின் உறைவிடமாக பேத்து–அராபா கருதப்படுகிறது (2 சாமு 23:3; 1 நாள் 11:32).

அர்பியர் (ARBITE)

தாவீதின் சிறந்த வீரர்களில் ஒருவராகிய பாகராயின் இடுபெயராகும். இது அவரது தந்தையையோ அவர் வாழ்ந்த இடத்தையோ குறிக்கலாம் (2 சாமு 23:35). முதலாம் நாளாகமத்தில் (11:37) எசிபாயின் மகன் நாகராய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அர்பேலா (ARBELA)

சீரியாவைச் சேர்ந்த பாக்கிதால் தாக்கப்பட்ட பகுதிகளில் அர்பேலாவும் ஒன்றாகும். இந்நகரம் கிலயாத்தில் உள்ள பேத்து–அர்பேலாவோடு ஒப்புமைப்படுத் தப்படுகிறது. ஆனால் கலிலேயாக் கடலுக்கு மேற்கே உள்ள வாதி–ஏல்–கமாம் என்ற ஓடைக்கு மேலே உள்ள கலிலேய கிர்பெத்து–இர்பித் என்ற இடம்தான் அர்பேலாவாக இருக்கலாம். மேலும் பாறைகளிலே செதுக்கப்பட்டபடிகளால் இணைக்கப்பட்ட குகைகளைக் கொண்ட புகழ்பெற்ற இந்நகரம் கலகக் காரர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் புகலிடம் தருகின்ற இடமாக விளங்கியது என்று யோசிபஸ் விவிரிக்கிறார்.

கி.மு. 161–இல் யூத மக்கபேயருக்கு எதிராகப் பாக்கிதின் படைஎடுப்பில், அவரது படைகள் இங்கிருந்த பல யூதர்களைக் கொன்றனர் (1 மக் 9:2). இந்தக் குகைப் பகுதிகளிலிருந்துதான் யூதக் கிளர்ச்சியாளர்கள் பெரிய ஏரோதை கி.மு. 39–இல் எதிர்த்தனர்.

அர்ப்பண விழா (FEAST OF DEDICATION)

பொதுவாக இறைவனுக்கு அர்ப்பணமாகக் கொடுக்கப்படும் ஒரு விழாவைக் குறிக்கும் சொல். இது இறைவனுக்கு

பாலைவனக் கூடாரத்தில் பீடங்களை அர்ப்பணித்ததையோ (எண் 7:10. 84.88) அல்லது சாலமோன் மன்னன்போல் ஆலயப் பலிப்பீடம் அர்ப்பணித்ததையோ (2 நாள் 7:9) அல்லது எருசலேம் மதில் சுவரை அர்ப்பணிப்பதையோ (நெக 12:27) அல்லது ஆலயம் அர்ப்பணிப்பதையோ (சங் 30:1) குறிக்கும். சிறப்பாக இது யூதா மக்கபேயரால் எருசலேம் ஆலயம் தூய் மைப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டதை யும் புதிய பீடத்தை அர்ப்பணித்ததையும் நினைவு கூறும் விழாவைக் குறிக்கும் (1 மக் 4:56; 2 மக் 10:5). இவ்விழாவின்போது தான் இயேசு தம்மையே மெசியா என்றும் இறைமகன் என்றும் அறிவித்தார் (யோவா 10:22–38). சாலமோன் மன்னன் காலத்திலேயே ஆலய அர்ப்பண விழாத் தொடங்கியது (1 அர 8). ஆனால், கிரேக் கர்களால் பங்கப்படுத்தப்பட்ட எருசலேம் ஆலயம் யூதா மக்கபேயுவால் கி.மு.165–இல் புதிதாகக்கட்டப்பட்டு அர்ப்பணிக்கப் பட்டதை யொட்டி (1 மக் 4:53) இவ்விழா வருடந்தோறும் அர்ப்பண விழா என்ற பெயரில் கொண்டாடப்பட்டது. தற்போது இது "கனுக்கா" என்று பொதுவாக அழைக்கப்படுகிறது (1 மக் 4:59).

இந்த விழா எட்டு நாட்கள் கொண்டா டப்பட்டது. ஒருவேளை இது எசக்கியா அரசனின் ஆலயத் தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சியோடு தொடர்புடையதாக இருக் கலாம் (2 நாள் 29:17). இவ்விழா குளிர் காலத்தில் தொடங்குகிறது. கிசிலேவு மாதத்தின் 25–ஆம் நாள் தொடங்கும் (யோவா 10:22–23). குளிர்காலத்தில் கொண்டாடப்படுவதால் இது அன்னிய தெய்வங்களின் வழிபாட்டிலிருந்து எழுந்ததா என்ற ஐயம் உள்ளது. ஆனால் யூத மரபானது இவ்விழாக் கொண்டாடப் படும் நாள் மக்கபேயர் காலத்தில் இருந்த படி அதே நாள் என்று மிகத்தெளிவாக அழுத்திக் கூறுகிறது (1 மக் 4:54; 2 மக் 10:3).

ஆலயம் இருந்த காலத்தில் மகிழ்ச்சி மிக்க இந்தக் கொண்டாட்ட நாட்களில் மக்கள் நன்றி பாடல்களை, குறிப்பாக அல்லேலூ சங்கீதங்களை (சங் 113–118) அடிக்கடி பாடிக்கொண்டு மரக்கிளை களை ஏந்திக்கொண்டு வலம் வருவர் (1 மக் 10:7). கூடார விழாவைப் போல் கொண்டாடப்பட்டது. ஆகையால் இவ் விழா "கிசிலேவு மாதத்தில் கொண்டாடப் படும் கூடார விழா" என்று அழைக்கப் பட்டது.

கி.பி.70–இல் ஆலயம் அழிக்கப்பட்ட பின் இந்த வழிபாடானது ஒளி விழா என்றும் அழைக்கப்பட்டது. ஏனெனில் இக் கொண்டாட்டங்களின் போது தனிப் பட்ட வீடுகளில் வைக்கப்படும் எட்டு விளக்குகளை ஏற்றுவதையும், ஒவ்வொரு திரு நாளுக்கும் கூடுதலாக ஒரு விளக்கு ஏற்றுவதும் முக்கியத்துவம் பெற்றதால் இப்பெயர் வந்தது எனலாம். பாபிலோ னிய தால்மூதுப்படி ஆலயத்தில் சிறிதள வே இருந்த எண்ணெயானது ஓர் அற்புதச் சக்தியால் புதிய எண்ணெய் திருநிலைப்படுத்தும் வரைக்கும் எரிந்து கொண்டிருந்தது என்று ஒரு கதையும் உண்டு. நாளா வட்டத்தில் இக்கதை இப் பழக்கத்திற்கு உத்தரவாதமாயிற்று. இவ் விழாவைக் கொண்டாட வேண்டும் என்று சட்டம் கூறவில்லையானாலும் தற்போது ஆண்டுதோறும் தொடர்ந்து கொண்டாடப் பட்டு வந்துள்ளது. மேலும் அண்மைக் காலத்தில் இது அதிகச் சமய முக்கியத்து வம் பெற்றுள்ளது.

அர்ப்பணிக்கப்பட்ட (DEVOTED)

இக்கருத்து 'புனிதத் தன்மை', ஒதுக்கப் படுதல், பிரிக்கப்படுதல், தடுக்கப்படுதல் ஆகிய கருத்தோடு தொடர்புடையது. எல்லா மொழிகளிலும் இந்தக் கருத்து சாதாரண வாழ்க்கைக்கு பயன்படுத்தக் கூடாதப் பொருட்களைக் குறிக்கின்றன. இது "கேரேம்" என்றழைக்கப்பட்டது. லேவி 27:28–ல் கடவுளுக்காக அர்ப்பணிக் கப்பட்ட மனிதனோ மிருகமோ அல்லது வேறெதுவோ அவைகள் பரிசுத்தமான வை என்று கூறப்படுகின்றது. போரில் வெற்றி வாகை பெறுவதற்காக, வெற்றி பெற்ற பின், அந்நாட்டில் உள்ள பொருட் களையும் உயிர் வாழ்பவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணிப்பதாக இஸ்ராயே லர்கள் நேர்ந்து கொண்டார்கள் (எண் 21: 2–4). அர்ப்பணிக்கப்பட்ட பொருட்களில் எதுவும் தனிப்பட்ட காரியங்களுக்கு பயன் படுத்தக்கூடாது (உப 13:17). எனவே கடவு

ளுக்காக ஒதுக்கப்பட்ட எதுவும் குருக் களுக்கு உரியதாயின (லேவி 27:21; எண் 18:14; எச 44:29). அர்ப்பணிக்கப்பட்ட பொருட்கள் மட்டில் ஆக்கான் கட்டிக் கொண்ட பாவமானது, இஸ்ராயேலரின் மீது, அர்ச்சிக்கப்பட்ட பொருட்களின் சாபத்தை விழ வைத்தது. இந்தச் சாபம் நீங்க குற்றம் புரிந்தவரையும் அவரது வீட் டாரையும் விலக்கி அழிக்க வேண்டி யிருந்தது (யோசு 7:11–15.25), கடவுளுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்ட எதுவும் காப்பாற் றப்பட முடியாது அல்லது மீட்கப்படக் கூடாது (லேவி 27:29). எரிகோவின் அழிவு ஓர் அர்ப்பணிக்கப்பட்ட நகரின் நிலைக்கு எடுத்துக்காட்டே (யோசு 6:18 தொ). அர்ப் பணப்போர் என்ற கருத்து கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டால் உயிருள்ளவை யெல்லாம் கொல்லப்பட வேண்டும் (உப 20:16). அழிக்கப்படக்கூடியதெல்லாம் அழிக்கப்படவேண்டும் எரிக்கப்படக்கூடி யவை எரிக்கப்படவேண்டும் (7:25–26). எரிக்கப்பட முடியதவை ஆண்டவரின் கரு வூலத்தில் சேர்க்கப்படவேண்டும் (யோசு 6:24). போரின்போது எதிரி அரசனை நேர்ச்சைக் கடனாக அளிப்பதே சாலச் சிறந்தது. அப்படி நேர்ச்சை நிறைவேற வில்லை என்றால் அவன்மீது தேவ சாபம் விழும் (1 சாமு 15:24–33; 1 அர 20:42).

இந்த "கேரேம்" கொடுமையிலிருந்து பெண்களும், குழந்தைகளும் (எண் 31:7–12; 17:12; உப 21:10–14) குறிப்பாக இளம் கன்னிப் பெண்களும் (யோசு 21:11–12) விதி விலக்குப் பெற்றிருந்தனர். விலங்குகள் காப்பாற்றப்படலாம் (உப 2:35). ஆனால் தீவிரவாதிகள் இவற்றையும் ஆண்ட வருக்குப் பலிசெலுத்தக்கூட அனுமதிக்க வில்லை (1 சாமு 15:9–21).

இஸ்ராயேலர்கள் சிலை வழிபாட்டில் விழுந்துவிடாமல் இருக்க கானானியர் அழிவுக்காக அர்ப்பணிக்கப்பட்டனர் (உப 7:1–3; 20:16–18; யோசு 2:10; 6:17). யோசுவா அவர்களை முழுவதும் அழித்ததாகக் கருதப்படுகிறது (யோசு 10:1.28–40; 11:1–21). இது எதிரிகளை அழிக்கவேண்டும் என்ற பிற்காலத்திய இஸ்ராயேலரின் விருப்ப த்தை இங்கு வெளிப்படுத்துகிறதே தவிர, இஸ்ராயேலர்களால் அவர்களை அழிக்க முடியவில்லை (1 அர 9:21). சிலை வழி பாட்டில் ஈடுபட்டுள்ள இஸ்ராயேல் நகரம் எதுவும் கானானிய நகரங்களைப் போலவே அழிக்கப்படும் (உப 13:12–18). ஆண்டவர் ஒருவருக்கன்றி வேறு தேவ ருக்குப் பலி கொடுப்பவன் கொல்லப்படு வான் (யாத் 22:20). ஆனால் இவ்வாறு எப்போதும் நடந்ததா என்பது ஐயத்திற் குரியது.

நாடு கடத்தலுக்கு பின்பு இக்கருத்து போரைச் சார்ந்ததாகச் செயல்பட வில்லை. சமூகத்தில் உள்ள வேண்டாத வற்றை பிடுங்கி எறிவதை குறிக்க இந்தக் கருத்து பயன்பட்டது. நாடு கடத்தப்பட்ட வர்களில் எவனாவது மூன்று நாட்களில் எருசலேமுக்குள் வந்து சேராவிட்டால் அவனது உடைமைகள் பிடுங்கப்பட்டு அவன் கூட்டத்தில் இருந்து விலக்கப்படு வான் (எஸ் 10:8). எனவே இக்கருத்து 'விலக்கி வைத்தல்' என்ற பொருளையும் பெற்றது. சபை ஒழுங்கு முறையாயிற்று.

இக்கருத்து வெளிப்பாட்டு இலக்கியங் களிலும் இடம் பெற்றது. இஸ்ராயேலரின் எதிரிகளான புற இன நாடுகளைக் குழு வாகக் குறித்த ஏதோம் கொல்லப்படுவ தற்குத் தீர்ப்பளிக்கப் பெற்றவர்கள் (ஏச 34:2.5) சீயோன் அழிக்கப்பட்டு அதன் சொத்துக்கள் ஆண்டவருக்கு அளிக்கப் படும் (மீக் 4:13; ஆகாய் 2:6–7). மலாக் 4:6– இல் கடவுளின் சாபம் பற்றிய அச்சமும் வெறுப்பும் காணப்படுகிறது. புதிய எருச லேமிலும் (செக் 14:1), வானக எருசலேமி லும் (திருவெளி 22:3) இந்த அழிவுக்கு ஒதுக்கப்படுதலும் சாபமும் இராது.

அர்மேனிய மொழியில் இயேசுவின் பால பருவம் பற்றிய நற்செய்தி

(ARMENIAN GOSPEL OF THE INFANCY)

இந்நூல் இயேசுவின் பாலபருவம் பற்றிய பல இரண்டாம் தர நிகழ்ச்சி களைக் கூறும் பல நூற்களைப் போல, யாக்கோபின் மூல நற்செய்தி என்ற நூலையும், தோமாவின் நற்செய்தியையும் அதிகமாகத் தழுவி அமைந்துள்ளது. இதில் மிகைப்படுத்தப்பட்ட கதைகளும், அதிகமான முடிவற்ற உரையாடலும் காணப்படுகின்றன. இதற்கு முந்திய மற்ற பாரம்பரியங்களில் காணப்படாத ஒன்றும்

இந்நூலில் இல்லை. இந்நூல் சீரியக் மொழியிலிருந்து அர்மேனியமொழிக்கு வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

அர்மோன் மரம் (PLANE TREE)

அகன்ற இலைகளையும், விரிந்து பரவும் கிளைகளையும் முள் தோலுடைய வட்ட வடிப்பழங்களையும் கொண்ட ஒரு வகை மரம். ஆண்டுக்கு ஒருமுறை இலைகள் யாவும் உதிர்ந்துவிடும். காரானில் தன் மாமன் லாபானுககு எதிராகச் செய்த ஏமாற்றும் திட்டத்தில் யாக்கோபு அர்மோன் கிளைகளையும் பயன்படுத்தினார் (ஆதி 30: 37). எச 31:8–இல் பாரவோனுக்கு ஒப்பிடப்படும் கேதுரு மரத்தோடு ஒப்பிட்டு வேறுப்படுத்தப்படும். இறைவனது சோலையிலுள்ள மற்ற மரங்களில் இதுவும் ஒன்றாகும். ஞானம் "அர்மோ மரத்தைப் போல் உயர்த்தப்பட்டது" (சீரா 24:14). மேற்காசியாவில், நீர்நிலைகளுக் கருகில் இம் மரங்கள் வளர்கின்றன.

அலகை, பேய் (DEVIL)

பழைய ஏற்பாட்டிலும், யூத சமயத்தில் பிற்காலத்தில் எழுந்த நூல்களிலும், புதிய ஏற்பாட்டிலும் அடிக்கடி தோன்றும் வார்த்தை, கிரேக்க விவிலியத்தில் அலகை (தியாபோலோஸ்) என்றுள்ளது. புதிய ஏற்பாட்டில் சாத்தான், அலகை என்று வேறுபாடு ஏதுமின்றி உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. பவுல் எழுதிய திருமுகங்களில் சாத்தான் என்றும் யோவான் நற்செய்தியிலும், திருமுகங் களிலும் அலகை என்றும் உள்ளது.

இந்தப் பழைய ஏற்பாட்டுச் சொல் எபிரேயர்களின் சட்ட வழக்கில் 'எதிரி' அல்லது 'பழித்துக் கூறுபவன்' என்ற பொருளில் உள்ளது (செக் 3:1). இஸ்ராயேலின் பகைவர்களைக் கடவுள் இஸ்ராயேலருககு எதிராக எழுப்பச் செய்தார் (1 அர 1:14). யோபு 1:6–12–இல் சாத்தான் யோபுவுக்கு எதிராக கடவுளின் முன்னின்று பேசுவதாக உள்ளது. ஆனால் இங்கு சாத்தான் யோபுவுக்கு துன்பங்கள் செய்பவனாக காட்டப்படுகின்றான். 1 நாள் 21:1–இல் தீமைகளைத் தூண்டுபவனாகத் தோன்றுகின்றான்.

யூத சமயத்துப் பிற்கால நூல்களில் இவ்வார்த்தை பல பொருளில் கையாளப் பட்டிருக்கிறது. தீய ஆசை, வீழ்ச்சியடைந்த வான தூதர்கள், கசாவின் தூதன் ஆகிய பொருளில் உள்ளது. ஆனால் இந்தப் பொருள்கள் முக்கியமானவை அல்ல. முக்கியமான பொருள் எதுவென்றால் கடவுளுக்கும், மனிதருக்கும் இடையே உள்ள உறவை அழிப்பவன்; இஸ்ராயேல் மக்களைப் பாவத்தில் விழத் தாட்டச் செய்பவன்; அவர்களைக் கடவுளின் முன்னிலையில் பழித்துக் கூறுபவன்; அவர்கள் கடவுளை பழித்துப் பேசச் செய்பவன்; இறைவனது திட்டத்தைக் குறுக்கிட்டுக் கெடுப்பவன், இவ்வுலக அரசனோடு இவ்வார்த்தை ஒன்றாக்கப் படவில்லை.

புதிய ஏற்பாட்டில் கீழ்வரும் பகுதிகளில் அலகை கடவுளுக்கு எதிரான இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு எதிரி என்றும், மனிதர்களைச் சோதனைக்கு உட்படுத்துபவன் என்றும் கூறப்படுகிறது (மத் 4:1 தொ; 13:39; லூக் 4:1 தொ; 8:12; யோவா 13:2; அ.ப 10:38; எபே 4:27; 6:11; 1 திமோ 3:6–7; 2 திமோ 2:26; யாக் 4:7; 1 பேதுரு 5:8). அலகையின் அதிகாரத்திற்கு (சோதனைக்கு) உட்பட்டவனும் அலகை என்றோ அல்லது அலகையின் மக்கள் என்றோ அழைக்கப்பட்டனர் (யோவா 6:70; 8:44; 1 யோவா 3:8.10). சாவு அவன் கையில் உள்ளது (எபி.2:14). அலகை இவ்வுலகை ஆட்சி செய்வது போல் இருப்பினும் கிறிஸ்து அவனைத் தோற்கடித்து வெற்றி காண்கிறார் (மத் 25:31; யூதா 9; திருவெளி 2:10; 12:9.12; 20:2.10; யோவா 12:3; 14:30; 16:11; 2 கொரி 4:4). இவற்றைத் தவிர்த்து பழைய ஏற்பாட்டுப் பொருளான குற்றம் கூறுபவன் என்ற பொருளில் திருவெளி 12:10–இல் வருகிறது. உரோமை 8:33–34–ல் இது முன்கருத்தாகக் கையாளப்பட்டிருக்கிறது. அலகை ஒரு பெயர் தழுவுச் சொல்லாக 2 திமோ 3:3.11; தீத்து 2:3 ஆகிய பகுதிகளிலும், வினைச் சொல்லாக லூக் 6:1–லும் இது வருகிறது.

புதிய ஏற்பாட்டில் சில வான தூதர்கள் தங்களது விண்ணக மேன்மையிலிருந்து வீழ்ந்து, அலகையின் ஆட்சியை ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. பேய்களின் தலைவன் (மத் 9:34) என்ற

அளவில் அலகை "பொய்யனும், பொய்க் குத் தந்தையும்" 'தொடக்கத்திலிருந்தே கொலைக்காரனும்" (யோவா8:44) ஆவான். பேய்களை மனிதருள் அனுப்பி, அவர் களைப் பேய் பிடித்தவர்களாக்கி கிறிஸ்து வின் மீட்பு அலுவலை எதிர்ப்பவன்.

பாலைவனத்தில் இயேசுவைச் சோதித்து அவரது பணியை ஒன்று மில்லாமல் ஆக்க முயற்சித்தான். இந்த முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டா லும் (மத் 4:1–11; லூக் 4:2–13) குறித்தகாலம் வரை காத்திருந்தான் (லூக் 4:13). அந்த நேரம், அவரது பாடுகளின்போது பன்னி ருவரில் ஒருவரான யூதா இசுகாரியோத்து அவரைக் காட்டிக் கொடுத்தபோது வந்தது (லூக் 22:3; யோவா 6:70; 13:2). அலகையின் மேல் இயேசு வெற்றி கொண் டதை லூக்கா சுட்டிக் காட்டினாலும், இயேசு அலகையின் ஆற்றலை (லூக் 8:12; மத் 13:39), குறிப்பாக மக்களைப் பேய் பிடிக்கச் செய்து இறையரசு விரிவாவ தைத் தடுப்பதில் அலகையின் ஆற்றலை அறிந்திருந்தார் என்றும் சுட்டிக்காட்டு கிறார். அ.ப.13:10–11–இல், அலகையோடு கொண்டிருந்த தொடர்புக்காக எலிமா சைக் பவுல் குருடன் ஆக்குகிறார்.

தமது உயிர்ப்பின் வழியாக, கிறிஸ்து சாவின் ஆதிக்கத்தையும், கொள்கையள வில் அலகையின் ஆதிக்கத்தையும் தகர்த் தெறிகிறார் (எபி 2:14; காண்க. அ.ப. 10:38; 1 யோவா 3:8). இறைவனின் எதிரியான அலகை "கர்ச்சிக்கும் சிங்கம்போல் யாரை விழுங்கலாம்" எனத் தேடித் திரிகிறான் (1 பேதுரு 5:8). இறுதித் துன்ப காலத்தில் நடக்கும் பெரும் போரில் (திருவெளி 20:10) அல்லது தீர்ப்பின் நாளில் (மத் 25:41) அலகையின் ஆட்சி முடிவுறும்.

இதற்கிடையில், விசுவாசிகள் அலகைக்கு இடம் கொடாதிருக்கவும் (எபே 4:27) அதன் வஞ்சகத்தை எதிர்க்க வும் (6:11; காண்க 1 பேதுரு 5:9) எச்சரிக்கப் படுகின்றனர் திருச்சபை அதிகாரிகள், அவிசுவாசிகளைச் சாந்தத்தோடு கடிந்து கொள்ளவேண்டும் என அறிவுரை கூறப் படுகிறது. ஏனெனில் அதன் விளைவாக "கடவுள் அவர்களுக்கு மனம் திரும்பும் அருளைத்தந்து அவர்கள் உண்மையைக் காணச் செய்யக்கூடும். பேயின் வலையில் சிக்குண்டு அதன் விருப்பத்திற்கு அடிமை களாக இருந்த அவர்கள் இவ்வாறு தெளி வடைந்து அவ்வலையினின்று விடுதலை பெறக்கூடும்" (2 திமோ 2:25–26).

அலக்சாந்தர் (ALEXANDER – மனிதனின் காப்பாளன், மனிதனின் ஆதரவாளர்)

பழைய ஏற்பாட்டில் இருவருக்கும், புதிய ஏற்பாட்டில் ஐவருக்கும் கொடுக்கப் பட்டுள்ள ஒரு கிரேக்கப் பெயர்.

1. மக்கதோனியாவின் அரசனான மூன்றாம் அலக்சாந்தர் இவர். பூர்வீக உலகத்தின் மாவீரர் மாமன்னர் அலக் சாந்தர் என அழைக்கப்படுகிறார். மக்க தோனியாவின் அரசனான இரண்டாம் பிலிப்புவின் மகன் கி.மு.356–இல் பிறந்து, அரிஸ்டாடிலிடம் கல்வி பயின்று, கி.மு. 336–இல் அரியணை ஏறினார். பாரசீக நாடு கிரேக்க நாட்டிற்குக் கொடுத்து வந்த தொல்லைகளுக்கு ஒரு முடிவு காண தீர்மானித்து, 334–ல் கீழ்த்திசை நாடுகளின் மீது போரை ஆரம்பித்தார். அதிலிருந்து அவர் மக்கதோனியாவுக்குத் திரும்பவேயில்லை. பாரசீகம் (கி.மு.334, 333) சிறிய ஆசியா, சீரியா, பாலஸ்தீனம், எகிப்து (331) ஆகியவைகளை வென்றார். கௌகமேலாவில் தாரியுவைத் தோற் கடித்துவிட்டு, மெசபொத் தாமியாவை யும், பாரசீகப் பேரரசையும் வென்று சிந்து வரை வந்துவிட்டார் (326). எட்டு ஆண்டு களாகத் தங்கள் வீடுகளை விட்டு வந்த போர் வீரர்கள் வீடு திரும்பவேண்டும் என்று அலக்சாந்தரைக் கட்டாயப்படுத்தி னர். ஆகவே இந்தியாவை வெல்ல வேண்டும் என்ற நம்பிக்கை இவருக்குத் தடைப்பட்டது. கி.மு.323–இல் சுரம் கண்டு 33 வயதில் பாபிலோனில் காலமானார். 1 மக் 1:1–இல் உள்ளது போல் இவர் உண்மையிலேயே தாரியுசைவென்று ஆட்சி யைக் கைப்பற்றினார்.

பழைய ஏற்பாட்டில் 1 மக் 1:1–8; 6:2–இல் மாவீரர் அலக்சாந்தரின் அரசியல், போர்ச் செயல்களின் சுருக்கம் கொடுக் கப்படுகிறது. "மாமன்னர் இறந்த பின் அவர் அரசு பிளவுபட்டது" என்று தானி 7;11:3–4–இல் உள்ளது. சிலையும் தானி 8:5–உம் அலக்சாந்தரை மறைமுகமாகக்

குறிக்கின்றன. செக் 9:1–8–இல் அலக்சாந்தர் பாலஸ்தீனத்தை வென்றதற்குக்குறிப்பு உண்டு என்று வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

அலெக்சாந்தர் பாலஸ்தீனத்தைத் தன்னுடைய அரசுடன் இணைத்துக் கொண்டார். இவர் யூதர்களுக்குப் பல சலுகைளைக் கொடுத்தார். இதைச் சமாரியர் கடுமையாக எதிர்த்தனர்.

331–இல் அலக்சாந்திரியா நகரை எகிப்தில் கட்டினார். யூதர்களுக்கு பல சலுகைகள் கொடுத்து அங்குக் குடியேற்றினார்.

இவருடைய வெற்றிகள் கிரேக்க நாகரீகத்தை மேற்கு ஆசிய நாடுகளுக்குக் கொண்டுச் சென்றன. யூதர்களுடைய வாழ்க்கையிலும், சிந்தனையிலும் பல மாறுதல்களைக் கொண்டு வந்தன. தனது பேரரசு முழுவதிலும் கிரேக்க மொழியை ஆட்சி மொழியாக்கினார். இது அலக்சாந்திரியாவில் பழைய ஏற்பாட்டை எபிரேய மொழியிலிருந்து கிரேக்கமொழிக்கு மொழிபெயர்க்கவும், புதிய ஏற்பாடு அம்மொழியில் எழுதப்படவும் வழிகோலியது. இதனால் பல மக்கள் யூத, கிறிஸ் தவச் சமயங்களை அறிய வாய்ப்பு ஏற்பட்டது. அதேசமயம் கிரேக்க அறிவியல் வாதிகளின் பாதிப்பு இவ்விரு சமயங்களையும் பாதிக்கச் செய்தது. அவற்றிற்குச் சவாலாக அமைந்தது.

2. அலெக்சாந்தர் பாலாசு என்பவர், அந்தியோக்கு எப்பிபானின் மகன் போல பாவனை செய்தார். இவர் உண்மையில் கிரேக்க நாட்டுக் கீழ்ச்சாதியினர். இவருடைய உண்மையான பெயர் "தெரியாதவன்" என்று பொருள்படும் பாலாஸ் என்பதாகும். எகிப்து, பெர்காமும், கப்பதோக்கியா ஆகியவற்றின் மன்னர்கள், சீரியாவில் குழப்பம் விளைவிக்க விரும்பிய உரோமையர் ஆகியோருடைய உதவியுடன் கி.மு. 153–இல் தெமேத்திரியுவின் ஆட்சியைக் கைப்பற்றத் தயாரானார். 152–ல் யோனத்தான் மக்கபேயுவை எருசலேமில் தலைமைக் குருவாக நியமித்து அவருடைய உதவியையும் பெற்றார். கடைசியில் தெமேத்திரியவைத் தோற்கடித்து 150–இல் சீரியாவின் அரியணை ஏறினார். தோலமி பிலோமெத்தரின் மகள் கிளியோபத்திராவை மணந்தார். 150–145 வரை ஆண்டார். ஆனால் நல்ல முறையில் ஆட்சி செய்யவில்லை.

இரண்டாம் தெமேத்திரியுவுக்காக அவருடைய மாமன் அவரை கைவிட்டார். தன்னுடைய மகள் கிளியோபத்திராவை அலக்சாந்தரிடமிருந்து எடுத்துத் தெமேத்திரியாவுககுக் கொடுத்தான். யோனாத்தான் அலக்சாந்தருக்குப் பிரமாணிக்கமாய் இருந்து அப்பொல்லொனியுவின் தலைமையில் வந்த தெமேத்திரியுவின் படைகளைத் தோற்கடித்தார். சீரிய நாட்டின் மீதப்பகுதிகள் தெமேத்திரியு ஆட்சியை ஏற்றுக் கொண்டன. கடைசியில் அலக்சாந்தர் தோற்று அரேபியாவிற்குத் தப்பி ஓடினார் அங்கு அரேபியாவின் தலைவன் தீயேல் என்பவரால் 145–இல் கொல்லப்பட்டார் (1 மக் 10:1–11:19).

3. அலக்சாந்தர், யன்னாயு யோவான் இரிக்கானின் மகன். மக்கபேயர் குடும்பத்தைச் சேர்ந்த அரசன் முதலாம் அரித்தோபுலின் ஒன்றுவிட்ட சகோதரனும் அவனுக்குப்பின் அரசனும் ஆவார். யூதேயாவின் போர் விருப்பமுள்ள அரசனும் பெரிய குருவுமான இவர் (கி.மு.103–76). யூதேயாவின் பரப்பை விரிவாக்கினாலும் பல போர்களில் தோல்வியுற்றார். அவர் சதுசேயர்களுக்கும், கிரேக்கப் பிரியர்களுக்கும் காட்டிய ஆதரவால், மக்களில் அதிருப்தியை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அவரது ஆட்சியின் கடைசி மூன்று ஆண்டுகளில் நோயால் வருந்தி இறந்தார். அவரது மனைவியும், முதலாம் அரித்தோபுலின் விதவையுமான சலோமே அலக்சாந்திரா அரியணை ஏறினாள். தன் கணவன் கொள்கைகளை மாற்றி இவள் பரிசேயர்களுக்கு ஆதரவு காட்டினாள்.

4. இயேசுவின் சிலுவையைச் சுமந்து சென்ற (மாற் 15:21) வட ஆப்பிரிக்கனான சீரேனே ஊரரான சீமோனின் மகன். உருபு என்பவரின் சகோதரர் (உரோ 16:13). மாற்கு தன்னுடைய நற்செய்தியில், திருச்சபையால் நன்கு அறியப்பட்டவர்களைப் பற்றி எழுதுவது போல் தற்செய

லாக இந்த சகோதரர்களைப் பற்றி எழுது கிறார் (மாற் 15:21). மத்தேயு இதை விட்டு விடுகின்றார். இவர்கள் மனம் திருப்பப் பட்ட யூதர்களாக இருக்கலாம்.

5. தலைமைக் குரு அன்னாசின் உறவி னர் (அ.ப. 4:6). இவர் தன் உறவினர்கள் கயாபா, யோவான் ஆகியோருடன் யூத சபையின் தலைமைச் சங்கத்தின் முன் பேதுருவும், யோவானும், ஆலயவாயலில் முடமான ஒருவனைக் குணப்படுத்தியது பற்றி விசாரிக்கப்பட்டபோது, இவரும் அங்கு இருந்தார் (அ.ப.4:6). இவரைப் பற்றி சிறிதுதான் தெரியவிருக்கின்றது. இவர் அலக்சாந்திரியாவிலிருந்த யூதர் களின் ஆளுநர் என்றும் பிலோவின் சகோதரர் என்றும் சில வல்லுநர்கள் கருதுகிறார்கள். அன்னாசின் மூன்றாம் மகனான எலயாசர் என்றும் சிலர் கருது கிறார்கள்.

6. வெள்ளி வேலையாள் தெமேத்திரியு வினால் பவுலுக்கு எதிராக எபேசில் உண்டாக்கிய கலகத்தில் யூதர்களுக்குச் சார்பாக பேசினவர் (அ.ப.19:33–34). இவரும் ஒருவேளை ஒரு வெள்ளி வேலை யாளாக இருந்திருக்கக்கூடும். இவர் யூதன் எனக் கண்ட மக்கள் கூட்டம் அவரைப் பேச விடவில்லை.

7. திருச்சபையில் போலிப் போதகர், விசுவாசத்தைக் கைவிட்டதால் பவுலால் மதவிலக்குச் செய்யப்பட்ட இரு கிறிஸ்த வர்களில் ஒருவர் (1 திமோ 1:19–20). இவரும் இமனேயுவும் புறக்கணித்தவர்கள் அறிவு நெறிக்கோட்பாட்டைப் போதித்த வர்கள். இவர் "வெறும் சொற்களைப் பற்றி சண்டையிடுபவர்", "கடவுள் பயம் அற்றவர்" வீண் பேச்சுடையவர் என்று பவுல் கூறுகின்றார் (2 திமோ 2:14,16).

8. இவர் பித்தளைக் கொல்லன். இவர் பவுலுக்குக் கொடிய தீமை செய்ததாகவும் (2 திமோ 4:14) அவரின் நற்செய்தியைக் கடுமையாக எதிர்த்தவராகவும் 2 திமோ 4:15–இல் பவுல் கூறுகிறார். பவுல் உரோ மையில் விசாரிக்கப்பட்டபொழுது அவ ருக்கு எதிராகச் சாட்சியம் கூறியவர். இவர் 6 அல்லது 7–இல் குறிக்கப்பட்ட வர்களாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர். ஆனால் போதிய சான்றுகள் இதுவரை இல்லை.

அலக்சாந்திரா (ALEXANDRA)

ஒரு யூத அரசி. அசமோனியா பரம் பரையைச் சேர்ந்த முதல் யூத அரசனான முதல் அரித்தோபுவின் மனைவிதான் சலோமே அலக்சாந்திரா என்ற இவள். அரசன் இறந்த பின்பு, இவள் அரசனின் ஒன்றுவிட்ட சகோதரன் யன்னாயுவை மணந்தாள். இரண்டாம் சங்கீதம் (2) இந்தத் திருமணத்தின்போதுதான் பாடப் பட்டது என்று சிலர் கருதுகிறார்கள். இது இன்னும் நிரூபிக்கப்படாவிட்டாலும் சங்கீதம் புறவினத்தாரை அடக்கி அவர் களைத் "தவிடுபொடியாக்க வேண்டும். தாவீதின் அரசை நிறுவ வேண்டும்" (சங் 2:9) என்ற அலக்சாந்திராவின் கணவர் களின் ஆவல் இதில் வெளிப்படுகின்றது. அவளுடைய இரண்டாம் கணவன் இறந்த பின்பு அவளே அரியணை ஏறினாள் (கி.மு.76–77). அயல்நாட்டுக் கொள்கையை நயத்தோடும் விவேகத்தோடும் நடத்தி னாள். யூதர்களின் பல பிரிவினர்களி டையே அமைதி நிலவச்செய்தாள். அவளு டைய அமைதியான ஆட்சியில் பரிசேயர் கள் பல அதிகாரங்களைப் பெற்றார்கள். முதல்முறையாக அவர்கள் யூத தலை மைச் சங்கத்திற்கு அனுமதிக்கப்பட்டார் கள். இவள் புகழ்பெற்ற சீமோன்–பென்–செட்டாக் என்ற பரிசேயருடைய சகோதரி.

அலக்சாந்திரியா (ALEXANDRIA)

எகிப்திலுள்ள ஒரு நகரம். அ.ப.யில் அடிக்கடி குறிக்கப்படுகிறது. பவுலின் நண்பரான அப்போல்லோ பிறந்த ஊர் (அ.ப.18:24). மால்தா தீவில் உடைந்த கப்ப லும் (அ.ப.27:6), மால்தாவிலிருந்து உரோ மைக்குச் சென்ற கப்பலும் (அ.ப.28:11) இத் துறைமுகத்தைச் சேர்ந்தவை. ஸ்தேவனு டன் தர்க்கம் செய்த யூதர்களில் சிலர் இந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் (அ.ப.6:9). பிற்காலப் பாரம்பரியப்படி யோவான் மாற்கு அலக்சாந்திரியாவுக்கும் எகிப்துக் கும் முதன்முதல் நற்செய்தியைக்கொண்டு வந்தவராவர்.

இந்நகரம் அலக்சாந்தரால் நிறுவப் பட்டது (கி.மு.332–331). பாரசீகப் பேரர சின் மேற்குப் பகுதியை வென்றபின், பார வோனின் பேரரசையும் கிரேக்கப் பேரர சையும், அரசியல் கலாச்சார அடிப்படை யில் ஒன்றிணைக்கும் அவருடைய பெய

ரால் அழைக்கப்பட்டது. மத்திய தரைக் கடலுக்கும், மெரெயோடிஸ் ஏரிக்கும் இடையில், நைல் நதியின் முகத்துவாரத் தில் உள்ள குறுகிய நிலப்பரப்பில் இது கட்டப்பட்டுள்ளது. இது ஒரு செயற்கைத் துறைமுகம். இந்நகரையும், பாரோஸ் தீவையும் இணைக்கும் அணைக்கரை தான் இதன் சிறப்பு. இந்த அணைக் கரையில்தான் பூர்வீக உலகின் ஏழு அதிச யங்களில் ஒன்றான கலங்கரை விளக்கம் அமைந்துள்ளது. இது தோலமியர்களு டைய ஆட்சிக் காலத்திலும் உரோமையர் காலத்திலும் நிர்வாகத் திறனுடைய தலை நகரமாகும். பூர்வீக எழுத்தாளர்கள் இதன் அழகையும், பூங்காக்களையும் புகழ்ந் தார்கள். இது உரோமை, அந்தியோக்கி யா ஆகிய நகரங்களுடன் இது உரோமை அரசின் மிகவும் முக்கியமான நகரமா கும். இது 5,00,000 மக்களைக் கொண்டி ருந்தது. மற்ற இரண்டு நகரங்களுக்கும் சென்ற பவுல், புகழ்வாய்ந்த மக்கள் நிறைந்த இந்த நகருக்குப் போவதாக நினைத்ததாகக் கூடத் தெரியவில்லை. யூதர்கள் இதன் ஐந்து மாவட்டங்களில் ஒன்றில் குடியேறியிருந்தனர். பூர்வீக உலகில் யூதர்கள் அதிகமாக வாழ்ந்த, செல்வம் நிறைந்த, செல்வாக்கு மிகுந்த சிதறிக்கிடந்த யூதர்கள் இங்குதான் அதிகம் குடியேறியிருந்தனர். இங்கு யூதர் களுக்கு எதிராகக் கலகங்கள் பல நடை பெறுவதுண்டு. கி.மு.88–இல் நடந்தது மிகவும் மோசமானது. நூலகங்கள், வல்லுநர்கள் நிறைந்த கிரேக்க அறிஞர் களின் மையமாகத் திகழ்ந்தன. இங்கு யூதர்கள் கிரேக்க நாகரீகத்தையும், சிந்த னையையும், வாழ்க்கை முறைகளையும், தங்களுடையதாக்கிக் கொண்டார்கள். இங்கு தான் பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுபது நூலாக மொழி பெயர்க்கப்பட்டது. யூத அறிஞர்கள் தங்க ளுடைய ஞானத்தையும், சட்டத்தையும், கிரேக்க தத்துவ இயலோடு ஒன்று படுத்த முயற்சி செய்தனர்; இதில் புகழ்மிக்க அறிஞர்களில் ஒருவர் பிலோ என்பவரா வார். இங்கு தோன்றிய சிந்தனைக் கதிர் கள் புதிய ஏற்பாட்டில் சிறப்பாக பவுலின் மடல்களிலும், எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலிலும் காணப்படுகின்றன.

அலக்சாந்திரியா சுவடி
(CODEX ALEXANDRINUS)

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் எழுதப்பட்டது இச்சுவடி. இதில் கிரேக்க விவிலியமும் புதிய ஏற்பாடும் முழுவதுமாக படிகம் செய்யப் பட்டிருக்கிறது. இதில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இவைகளின் புத்தகங் களுடன் கிளமெண்ட் என்பவர் எழுதிய இரண்டு திருமுகங்களும் சாலமோனின் சங்கீதங்கள் என்ற புத்தகங்களும் சேர்த்து எழுதப்பட்டுள்ளன.

இப்பழம் ஏட்டில் எழுதப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் பெரிதும் சேதத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் கீழ்க்காணும் பகுதிகள் சிதை விற்குள்ளாகி, அவைகளை இப்பழம் சுவடியில் நாம் காண முடியவில்லை. மத் 1:1 முதல் 25:6 வரை; யோவா 6:50 முதல் 8:52 வரை; 1 கொரி 4:13 முதல் 12:6 வரை. இச் சுவடியில் இணைக்கப்பட்டிருந்த சால மோனின் சங்கீதங்கள் என்ற புத்தகத்தை சுத்தமாகவே இச்சுவடியில் இப்போது காண முடியவில்லை.

இச்சுவடியில் மொத்தம் 773 தோல் தாள்கள் அடங்கியுள்ளன. இவைகளில் 630 தாள்கள் பழைய ஏற்பாட்டையும், மீத முள்ள 143 தாள்கள் புதிய ஏற்பாட்டையும் தாங்கியுள்ளன. இவ்வேட்டுச் சுவடி தொகுப்பில், பழைய ஏற்பாட்டு புத்தகங் களை இரண்டு எழுத்தாளர்களும், புதிய ஏற்பாட்டு புத்தகங்களை மூன்று எழுத் தாளர்களும் எழுதியிருக்கவேண்டும் என்று இவ்வேடுகளில் காணும் எழுத்து அமைப்புகள் நமக்கு வெளிப்படுத்து கின்றன. இவ்வேட்டில் உள்ள தாள்கள் 12.75 அங்கு நீளம் 10.25 அங்குல அகலம் என்ற அளவில் அமைந்துள்ளன. ஒவ் வொரு பக்கத்திற்கு இரண்டு பத்திகள் வைத்து எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்தியும் 46 முதல் 52 வரிகள் எழுதப் பட்டுள்ளன.

இப்பழம் சுவடி முதலில் கான்ஸ் டான்டின் நோபிளில் காப்பாற்றப்பட்டு வந்தது. 1624 ஆண்டு கான்ஸ்டான்டி நோபிள் சமய மூதுவர் சிரில் லூகார் இச்

சுவடியை ஆங்கிலேய மன்னர் முதலாம் ஜேம்ஸ் என்பவருக்கு அன்பளிப்பாக அளிக்க விரும்பினார். இதற்காக துருக்கியின் ஆங்கில தூதுவரிடம் இதனை ஒப்படைத்தார். இச்சுவடி இங்கிலாந்துசென்று சேர்வதற்கு முன்பே முதலாம் ஜேம்ஸ் இறந்துவிட்டார். எனவே புதிய மன்னனாகிய முதலாம் சார்லஸிடம் இச்சுவடி 1624 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. பிறகு இச்சுவடி ஆங்கிலேய அரசு நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது. 1757–லிருந்து பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அலமா (ALEMA)

கிரேக்க மொழி பேசிய யூதர் வாழ்ந்த கிலயாத்தில் இருந்து ஆறு நகரங்களில் ஒன்று. புறவினத்தார் யூதர்களைச் சிறைப்படுத்தினர் என்ற நபத்தேய பழங்குடியினர் யூதா மக்கபேயுவிடம் அறிவித்தனர் (1 மக் 5:26). மற்ற யூதர்கள் தப்பிவிட்டனர். ஆனால் தாத்தமா கோட்டையில் முற்றுகையிடப்பட்டனர் (5:9). அலமா இருந்த இடம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் கவுரான் சம வெளியிலுள்ள புஸ்ர்–ஏல்–கரிரிக்குத் (போசோர்) தென் மேற்கில் 14 கி.மீ. தூரத்திலுள்ள இன்றைய அல்மா தான் இவ்விடம் என்று கருதப்படுகிறது. அநேகாக 2 சாமு 10:16இல் வரும் கேலாம் தான் இவ்விடம் என்ற இன்னொரு கருத்தும் நிலவுகிறது.

அலமெலக்கு (ALLAMMELECH)

ஆசேரிலுள்ள ஒரு நகரம் (யோசு 19:26). இதனுடைய இடம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் அநேகமாக ஆக்கோ சமவெளியின் தென்திசையில் இது குறிக்கப்படலாம். வாடி–எல்–மெலேக் என்ற ஓடை, கர்மேல் மலையில் அருகில் கீசோன் ஆறோடு சேருமிடத்திற்கு இப்பெயர் வழங்குகிறது.

அலமேத்து (ALEMETH – மறைத்து வைத்தல்) – ஆள்

1. பெக்கரின் மகன். பெஞ்யாமினின் பேரன் (1 நாள் 7:8)

2. ஆறாவது சந்ததியில் யோனத்தான் மெரிபாகால் வழியாக சவுலின் வாரிசு. 1 நாள் 8:36–இல் இவர் தந்தை யோயாதா என்றும், 9:42–இல் யாரா என்றும் கொடுக்கப்பட்டுள்ளது.

அலமேத்து (ALEMETH) – இடம்

பென்யாமின் குலத்து குருக்கள் வாழ்ந்த நகரம் (1 நாள் 6:60). அடைக்கல நகரங்களில் ஒன்று. அலமோனும் இதுவும் ஒன்று தான்.

அலமோத்து (ALAMOTH)

பொருள் தெளிவில்லாத சொல். 1 நாள் 15:20–இலும் சங்.46–இன் தலைப்பிலும் காணப்படுகிறது. இச்சொல் 'மங்கை' என்ற இசை மெட்டைக் குறிக்கலாம், அல்லது இளம் பெண்களால் பாடல் பாடப்படவேண்டும் என்ற குறிப்பும் கூடிய இசைக்கருவிகளைக் குறிக்கலாம்.

அலமோன் (ALMON)

அனத்தேத்திற்கு அருகில் உள்ள பென்யாமின் குலத்தைச் சேர்ந்த திருப்பணியாளர்களின் ஒரு நகரம். இது அடைக்கல நகரமும் ஆகும் (யோசு 21:18); 1 நாள் 6:60–இல் உள்ள அலமேத்தும் இதுவும் ஒன்று தான். இந்த இரண்டு பெயர்களில் ஒன்று கூட யோசு 18:21–28–இல் உள்ள பென்யாமினின் குலம், நகர்ப்பட்டியலில் காணப்படவில்லை. அயின்–பாராவிற்குச் செல்லும் வழியிலுள்ள அனாதாவிற்கு வடகிழக்கில் இரண்டு கி.மீ.தொலைவில் உள்ள பாழடைந்த ஊரான கிர்போத்து அல்மித் இருக்கும் இடத்தில் இந்த நகரம் இருந்தது.

அலமோன்–திபிலாதயீம் (ALMON-IBLATHAIM – இரு அத்திப்பழ அப்பம்)

இஸ்ராயேலர் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது தீபோன்–காதைக் கடந்து அபாரிம் மலைகளுக்கு முன்பாகப் பாளையம் இறங்கிய இடம் (எண் 33:46–47). இலிப்புவிற்கு வடகிழக்குத் திசையில் 4 கி.மீ. தொலைவில் மூன்று சாலைகள் கூடுமிடமாகிய தெலெய்லாத்–ஏல்–கார்பியே என்ற இடத்தில் இது இருந்திருக்கலாம் என கருதப்டுகின்றது. ஆனால் பொதுவாக இது யாராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது எரே

48:22–ல் வரும் பேத்து–திபிலாதயிமாக இருக்கலாம். மோவாபிய கல்வெட்டுக் களில் மேதெபு, பாகால்–மெயோன் என்ற பெயர் களோடு இதுவும் காணப்படு கிறது.

அலக்கா (HALAKHAH – வாழ்க்கை முறை)

அலக்கா அடிப்படையில் வாழ்க் கைக்குச் செயல் முறையாகப் பயன்படும் போதகம் அல்லது கட்டளையாகும். நாடு கடத்தலுக்குப்பின் வந்த யூதத்துவத்தில் அலக்கா என்பது மோசேயின் சட்டத் திற்கு ராபிகளும் சட்ட வல்லுநர்களும் அளித்த விளக்கங்களையும், வாழ்க்கை க்குச் சாற்றிக் கூறுதல்களையும் கொண்ட தொகுப்பாகும். இது எஸ்ராவிலிருந்து தொடங்கி இடைவிடாது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து நடந்தது.

பழைய ஏற்பாட்டின் நிகழ்ச்சியுரை களுக்கு விளக்கம் அளிக்கும் அக்கதா முறையோடு அலாக்காவை ஒப்பிடும் போது, இது, விவிலியத்திலுள்ள சட்டப் பகுதிகளுக்கு அளிக்கப்படும் விளக்க மாகும். மோசேயின் சட்டம் பரந்தது. பொதுத்தன்மையுடையது. அதை அரசி யல், சமூக, பொருளாதார மாற்றங் களுக்கு ஏற்பவும், மாறிய சூழ்நிலைகளுக் கேற்பவும், ஒரு குறிப்பிட்ட நிகழச்சிக் கேற்பவும் விளக்கிக் காட்டப்பட்டு, வாழ்க் கைக்குப் பொருத்திக் கூறப்பட்டது. இது சிறு ராபிகளின் குழுவில் நடந்த தர்க்கங் களில் விவாதிக்கப்பட்டது. அதிகப்படி யான வாக்குரிமை இந்தக் குழுவின் முடி வை மாற்ற முடியாத அதிகாரப்பூர்வ மான சட்டமாக்கியது.

இவை மனித வாழ்க்கையின் ஒவ் வொரு பகுதியையும் அலுவலையும் பாதித் தது. இவையாவற்றையும் இறைவனது திருவுளத்தின் மேலாண்மையோடு இணைப்பதும், அதையே எல்லாவற்றிற் கும் அளவுகோலாகச் செய்வதும் இம் முறையின் நோக்கமாகும். இம்முறை முடிவுகள் முதலில் வாய்மொழிப் பாரம் பரியமாகவே பாதுகாக்கப்பட்டது. அவை பெருகியபோது, அவற்றை வாய் மொழி யாகச் சேர்த்துப் பாதுகாப்பது முடியாத காரியமாகியது. ஆகவே, கி.பி.2–ஆம் நூற்றாண்டின் முடிவில் இவையெல்லாம் ஒன்று சேர்த்து எழுதி வைக்கப்பட்டன. இவ்வாறு மிஸ்னா தொகுப்புத் தோன்றி யது. இத்தொகுப்புக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களின் தொகுப்பு. கெமாரா தொகுப்பாக உருவெடுத்தது. இவ்வாறு, அலக்கா தால்மூதின் பெரும்பகுதியாக இடம் பெற்றது.

புதிய ஏற்பாட்டின் காலத்திய சதுசே யர்கள், மோசேயின் சட்டத்தை மட்டுமே அதிகாரப்பூர்வமானது என்று ஏற்றுக் கொண்டனர். ஆனால் பரியேர்கள், மேசே யின் சட்டத்தைப்போல், அலக்காவின் சட்டங்களும் அதிகாரப்பூர்வமானவை, கட்டுப்படுத்தக்கூடியவை என்று ஏற்றுக் கொண்டனர். கி.பி. 70 வரை எருசலேமில் இத்தகைய விளக்க முறைகள் நடந்தன. பிறகு யாம்னியா, திபேரியா, பாபிலோன் ஆகிய இடங்களில் நடந்தன.

அலரி (WILLOW)

நீரோடையின் ஓரங்களில் வளரும் ஒரு வகைச் சடிை அல்லது மரம். இதுவும் புன்னை மரமும் ஒரே தன்மையில் உள்ள நிலத்தில் வளர்வதாலும், ஓரளவு ஒரே அமைப்பைக் கொண்டிருப்பதாலும் ஒன்று மற்றதாக விவிலியத்தில் சில இடங் களில் காணப்படுகிறது (லேவி 23:40; யோபு 40:22; சங் 137:2; எச 17:5).

எசக்கியேலில் இரு கழுகுகள் பற்றிய உவமையில், விரைவில் எளிதாக வேரூன் றும் அலரியின் நுனிக்கிளையை உருவக மாகப் பயன்படுத்துகிறார் (17:5). அதன் கிளைகளும் கூடார விழாவில் பயன் பட்டன (லேவி 23:40). பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட யூதர்கள் தங்கள் யாழ்களை அலரிச் செடிகள் மீது தொங்க வைத்தனர் (சங் 137:2). மேலும் காண்க. அலரி ஓடை.

அலரிகள் ஓடை (BROOK OF THE WILLOWS)

மோவாப்பின் எல்லையிலிருந்த ஓர் ஓடை. மோவாபு அகதிகள் தங்களுடைய சொத்துக்களை எடுத்துக்கொண்டு இதன் குறுக்கே சென்றார்கள் (ஏச.15:7). இவர் கள் தெற்கு நோக்கிச் சென்றிருந்தால் (அவ்வாறுதான் தோன்றுகிறது) இந்த ஓடை, அநேகமாக விவிலியத்தில் செரேது

ஓடை என்று குறிக்கப்படும் வாடி ஏல்–கெசாவின் பின்பகுதியான செயில்–ஏல்–கூராகி என்பதாக இருக்கலாம். இங்கு அலரிச்செடிகள் வளர ஏதுவாக ஒரு சிறிய சதுப்புச் சமவெளியுள்ளது.

செரேது ஓடையை இஸ்ராயேல் கடந்த நிகழ்ச்சி, அவர்களது பாலைவனப் பயணத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது (எண் 21:22; உப 2:13–14) அலரி ஓடையும், இஸ்ராயேலின் தென் எல்லையான அரபா ஓடையும் ஒன்றையே குறிக்கலாம் (ஆமோ 6:14).

அலிக்கார்னசு (HALI CARNASSUS)

சிறிய ஆசியாவின், காரியாவில் உள்ள தோரியன் குடியிருப்பாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கிரேக்க நகரம். செரமிக் வளைகுடாவின் கரையின் வடமேற்கில் எபேசுக்குத் தெற்கில் 90 கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. இது ஒரு சிறந்த துறைமுகம். அந்த இடத்தில் உயரமான கோட்டைகள் உள்ளன. இது காரியாவிலேயே மிக உயர்ந்த, வலிமை வாய்ந்த நகரமாக இருந்தது. இது பாரசீகர்களுக்கு அளித்த ஆதரவுக்குப் பதிலடியாக இதை மகா அலக்சாந்தர் அழித்து விட்டார். கி.மு.334–இல் இது அழிக்கப்பட்டதற்குப் பின்பு, பழைய நிலையை, உயர்ந்த நிலையை இது ஒருக்காலும் பெற்றதில்லை. ஆனால் வணிகத்திலும், கலையிலும் தொடர்ந்து முக்கியத்துவம் பெற்றதாக விளங்கியது. பழங்கால உலகில் ஏழு அதிசயங்களில் ஒன்றான மௌசோலுசு (கி.மு. 377–353) அரசரின் கல்லறை இங்கிருப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய சகோதரியும் மனைவியுமான அர்தேமிசியாவால் இந்த நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. அது பழங்காலத்தின் உலக வியப்புக்குரிய எழில்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. இப்பொழுது போதுரம் என்ற ஊரானது அந்த நகர் இருந்த ஒருபகுதியில் அமைந்திருக்கிறது. இவ்விடம் எரோதோத்தஸ், தியேனிசியு போன்ற வரலாற்று ஆசிரியர்களின் பிறப்பிடமாகும்.

கிரேக்கப் பண்பாடும், வாழ்க்கை முறையும் இவ்விடத்தில் சிறப்புற்று இருந்தது. ஆனால் இங்கு அதிக அளவில் வாணிகம் நடந்ததாலும் பல மக்களும் அங்கு வந்து போவதாலும் அங்குள்ள மக்களினம் கலப்பினமாகிவிட்டது. கி.மு. இரண்டு நூற்றாண்டுகளிலிருந்து யூதர்கள் அங்கு அதிகமாக வாழ்ந்தனர் என்பதற்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. (1 மக் 15:23). அங்கு வாழ்ந்த யூதர்கள் வாழ்க்கை முறைக்கும் வழிபாட்டிற்கும் பாதுகாப்பு அளிக்க உரோமையர் மூப்பர் சபை கி.மு.139–ஐயொட்டி எழுதிய கடிதத்தில் வலியுறுத்துகிறது.

ஒரு நூற்றாண்டுக்குப்பின் இந்நகர் யூதர்களுக்கு மதச் சுதந்திரம் அளித்தது என்று யோசீபஸ் கூறுகிறார்.

அலியா (ALIAH)

அலிவாவின் மற்றொரு பெயர். காண்க அலிவா

அலியான் (ALIAN)

அலிவானின் மற்றொரு பெயர். காண்க அலிவான்.

அலிவா (ALIVAH – கொடியவன்)

இப்பெயரின் மற்றொரு வடிவம் அலியா ஆகும் (1 நாள் 1:51). ஏதோமில் தங்கியிருந்த ஏசா இனத்தவர் வழிவந்தவர்களுடைய பதினொன்று குலத்தலைவர்களில் இரண்டாமவர் (ஆதி 36:40). அநேகமாக ஆதி 36:23–இல் உள்ள அலிவானும், 1 நாள் 1:40–இல் உள்ள அலியானும் இங்கு வரும் அலிவாவும் ஒரே ஆளாக இருக்கலாம்.

அலிவான் (ALIVAN)

இப்பெயரின் மற்றொரு வடிவம் அலியான் (1 நாள் 1:40) ஆகும். ஏதோமிலிருந்து கோரியர் என்ற துணை குலத்தின் மூதாதையரும், இனத் தலைவருமான சோபாலின் முதல் மகன் (ஆதி 36:23).

அலூசு (ALUSH – கூட்டம்)

இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் பயணம் செய்தபோது தொபிகாவிற்கும் இரபிதிமிற்கும் இடையில் பாளையம் இறங்கிய இடம்தான் இது. இது இருந்த இடம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒருவேளை இக்கால வாடி–ஏல்–எசால் என்ற ஓடையாக இருக்கலாம்.

அலைந்து திரிதல் (WANDER)

பழைய ஏற்பாட்டில், ஒருவரோ ஒரு குழுவினரோ இடம் விட்டு இடம் பெயர்ந்து பயணம் செய்வதை இச்சொல் குறிக்கிறது. இவ்வாறு, காயின் "நாடோடியாக அலைந்து திரிவார்" (ஆதி 4:12.14). இஸ்ராயேல் மக்கள் பாலைநிலத்தில் நாற்பது ஆண்டுகள் அலைந்து திரிந்தனர் (எண். 23:13; எபி 11:38). சில இடங்களில் வழி தவறிப் போதலையும், எந்நோக்கமும் இன்றி திரிவதையும் இச்சொல் குறித்தது (ஆதி 37:15; யோபு 12::24–25; சங் 107:4.40).

இச்சொல், சிறப்பான முறையில், இறைவனிடமிருந்து விலகுவதையும், அவரது கற்பனைகளை விட்டுத் தவறிச் செல்வதையும் குறிக்கிறது (சங் 119:10.21; பழ 5:6; 21:16; எரே 14:10). புதிய ஏற்பாட்டில் இப்பொருள் முக்கியத்துவம் பெறுகிறது. அப்படி உண்மையிலிருந்து தவறிப் போகும்போது பேராபத்து நிலவியது (1 திமோ 1:6; 6:10; 2 திமோ 4:4; யாக் 5:19; யூதா 13).

அல்மோதாது (ALMODAD – அன்புக்குரியவர், அளப்பரியது)

யொக்கிதானின் பதிமூன்று புதல்வர்களில் முதல்வர். ஏபேரின் பேரன். தெற்கு அரேபிய நாட்டு மக்களின் மூதாதை என்று கருதப்படுகின்றார் (ஆதி.10:26; 1 நாள் 1:20). எழுபது நூலில் இருப்பது போல இந்தப் பெயரானது அநேகமாக "எல்மோதாத்" என்று வாசிக்கப்பட வேண்டியிருக்கலாம். இதன் பொருள் "கடவுள் ஒரு நண்பர்" என்பது.

அல்லேலூயா (ALLELUJAH – ஆண்டவர் போற்றி)

புகழ்தலின் ஒரு கட்டளை அறை கூவலாகும். யூதப் பாரம்பரியப்படி, அறியப்படாத சொல்லிலக்கணத்தோடு கூடிய, மிகப் பழைய வழிபாட்டு அறைகூவலாகும். எபிரேய வாசகத்தில், இச்சொல் இறைபெயரான "யாவே" என்பதன் சுருக்கமான 'யா' வைக்கொண்ட கட்டளையைச் சுட்டுகிறது. "யாவேயைப் போற்று" என்று பொருள் கொடுக்கப்படும்.

சங்கீதங்களில் 5–ம் புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற இறை புகழுரை அமைப்பு இது. அதோடு நாள் ஆகம நூலிலும் பயன்படுகிறது.

1. மொழி ஆராய்ச்சி வினாக்கள்:-

"புகழ்தல், புகழப்படுதல்" என்று பொருள்படும் வேர்ச் சொல்லில் இருந்து இச்சொல் சாதாரணமாகவும், மத உணர்விலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பாரவோனின் பிரபுக்கள் சாராள் அழகாய் இருந்தது கண்டு அவளைப் புகழ்ந்து பேசினார்கள் [ஆதி 12:15; 2 சாமு 14:25 (அபிசலோம்)] கன்னியர்கள் அவர்களுடைய மணநாளின்போது புகழப்படுகிறார்கள் (சங் 78:63). அல்லது நகரின் அரண் சக்திக்கு (எண் 26:17). ஆயுதங்கள் அணிந்து கொள்வதற்கு அரசன் தன்னையே புகழ்ந்துகொள்ளலாம் (1 அர 20:11; பழ 27:2; எரே 9:22–23). மக்கள் அரசரைப் புகழ்கிறார்கள் (2 நாள் 23:12). அதைப் போலப் பெலிஸ்தியர்கள் தங்கள் கடவுளான தாகோனைப் புகழ்ந்தார்கள் (நீதி 16:24). இஸ்ராயேலர்கள் தங்கள் கடவுளையும் (யாவே) அவருடைய வார்த்தையையும், பெயரையும் புகழ்ந்தார்கள் (1 நாள் 23:5; எரே 20:13; சங் 56:4).

2. சமயத்தில் வழக்கு : (அ) சங்கீதங்களில்:-

"அல்லெலூயாவைக்" கொண்டிருக்கும் சங்கீதங்கள், உலகைப் படைப்பதில் (சங். 104) அல்லது இஸ்ராயேல் வரலாற்றில் குறிப்பாக எகிப்தில் இருந்து அடைந்த விடுதலையில் (சங் 105; 106; 135). ஆண்டவருடைய ஆற்றலையும் ஞானத்தையும் போற்றுகின்றன. சிலைகளை விட ஆண்டவருடைய வலிமைமிக்க கரங்களின் ஆசீர் மேன்மையானது (115). அதனால் புறவினத்தாரும் அதைப் புகழ்ந்து பாடுவர் (117). ஒரு தனி மனிதனுடைய வாழ்வில் ஆண்டவரின் வாழ்வு கொடுக்கும் சக்தி காணக்கூடியது, ஆராதிக்கக் கூடியது (116). அல்லேலூயா சங்கீதங்கள் (146–150) என்று சொல்லப்படுகின்ற இந்த சங்கீதங்கள், ஆண்டவர் இதுவரை செய்த எல்லா நன்மைகளுக்கும் செய்துகொண்டிருப்பதற்கும், செய்யப்போகிற செயல்களுக்கும் பொதுவாக நன்றி கூறிப் புகழ்ச்சிக் கீதம் பாடுகின்றன. நாளாகமம், இவை பாடப்படுவதை, குறிப்பாக எருசலேம் வழிபாட்டில் பாடப்படும் முறையை எடுத்துக் கூறு

கிறது. வெவ்வேறுபட்ட பாடற் குழுவின ரால் அல்லது சபையினரால் அல்லே லூயா மாறிமாறிப் பாடப்பட்டு வந்தது (சங் 135:19 தொ; காண்க 1 நாள் 16:36). இந்தப் பாடுதல்தான் தாவீதால் நிறுவப் பட்ட நியமனப்படி லேவியர்களின் முக்கியக் கடமையாகும் (காண்க. 1 நாள் 23:5; நெக 12:24). சில காலத்தில் அல்லே லின் ஒவ்வொரு வரிக்குப்பின், அல்லே லூயா என்று சொல்லப்பட்டு வந்தது.

சங்கீத நூலில் இச்சொல் 24 தடவை காணப்படுகிறது (சங் 104–106; 111–114; 115–117; 135; 146–150). பொதுவாக இது சங்கீதத்தின் தொடக்கத்திலோ (106:1; 111:1; 112:1) அல்லது சங்கீதத்தின் முடிவிலோ (104:35; 105:45; 115–17) அல்லது இரண்டு இடத்திலுமோ (113:135; 146–150) வருகிறது. 135:3; 147:1–இல் இது பொருளுக்கு அவசிய மாகிறது. இவற்றைத் தவிர, இச்சொல் வழிபாட்டு வாய்ப்பாடாகத் தெரிகிறது. இத்தகைய "அல்லேலூயா" சங்கீதங்கள் ஆலயப்பணியில் பயன்பட்ட பாடல்களில் இருந்து தொகுக்கப்பட்டிருக்கலாம் (காண்க: 106:48). அங்கு இவை மாறி மாறிப் பாடப்பட்டிருக்க வேண்டும் (காண்க 1 நாள் 16:4.36).

(ஆ) எருசலேமிற்கு வெளியே உள்ள சடங்கு முறை:-

எகிப்திய யூதர்கள், அரசனின் யானை களிடமிருந்து தப்புவிக்கப்பட்டதால், அலக்சாந்திரியாவிற்கு வீட்டிற்குச் செல்லும் வழியில் புகழ்ந்து அல்லேலூயா என்று பாடிச் சென்றார்கள். இறுதி நாட் களில் மீட்கப்பட்ட எருசலேம் வீதிகளே பாடும் (தோபி 13:18). திருவெளி 19:1.3–4. 6–இல் விண்ணகப் பாடற்குழு அல்லே லூயா பாடுகிறது. இதில் வான தூதரின் பாடற்குழுவும், 24 முதியவர்களும், நான்கு உயிர்களும் இறைவனது மீட்பையும், மகி மையையும், ஆற்றலையும், செம்மறியின் திருமணத்தையும் இந்த அறை கூவலால் கொண்டாடுகின்றனர்.

(இ) கிறிஸ்தவ சபைகளில்:-

கிறிஸ்தவ சபைகளின் வழிபாட்டில் பயன்படுத்துகின்ற முறை பலவகைப் பட்டது. கிழக்கிந்திய திருச்சபைகளில் இசை மேன்மையோடு கூடிய நீண்ட உயி ரோட்டமான மரபு இருக்கிறது. பெத்தில கேமில் ஏரோனிமு வாசகங்களுக்குப் பின் சபையினர் இதைப்பாடுவதைக் கண்டார். அவர் பாப்பு தமசுசிடம் சொல்லி உரோ மையில் உயிர்ப்பு விழாச்சடங்கில் அறி முகப்படுத்தச் செய்தார். இந்தப் பழக்க மானது மேலும் மேலும் பெருகி முதலாம் கிரேகோரியார் எல்லாச் சடங்கிலும் இதைச் சேர்த்தார். இறுதி அசை 'யா' வைப்பாடுவதில் ஏற்படும் தவறுகளைத் தவிர்ப்பதற்காக அவர் அதைக் குறுகிய வரிகளோடு இணைத்து வைத்தார் (எ.கா. சங் 5:2; 7:12; 85:8; 95:1; 98:1; 147:12).

லூத்தர் (1523–ல்) அல்லேலூயா சொல்லைத் 'திருச்சபையின் நித்திய குர லாக" வாசகங்களின் முடிவில் ஏற்றுக் கொண்டார். ஆனால் 1526–இல் அதை அகற்றினர். வெற்றி பெறவில்லை. உரோ மன் பூசைப் புத்தகத்திலும் பிரிவினைச் சகோதரர்களின் திருச்சடங்குகளிலும், உயிர்ப்பு விழாவிற்கும், ஐம்பதாம் விழா விற்கும் இடைப்பட்ட நாட்களில் இரு முறை அல்லேலூயா வருகிறது. தபசு கால நாட்களில் அல்லேலூயா பாடப்படு வதில்லை.

அல்லேல் (HALLEL – போற்று நீ ஆண்டவரை)

ஆண்டவருக்குப் புகழ்ச்சிப் பாடல். இறைவனைப் போற்றுதல் லேவியரின் கடமையில் ஒன்றும் (2 நாள் 7:6; எஸ் 3:11) அன்றாட காலை செபத்தைச் சேர்ந்தது மாகும் (சங் 145–50). இப்பெயர் யூதப் பாரம்பரியப்படி விழாக்காலங்களிலும், அன்றாட காலைச் செபத்திலும் பயன் பட்ட சில குறிப்பிட்ட சங்கீதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

கி.மு. முதல் நூற்றாண்டு மரபின்படி "எகிப்திய" அல்லேல் (சங் 113–118; காண்க 114–1). மோசேயால் எழுதப்பட்டவையா கும். இவை இஸ்ராயேல் வரலாற்றில் இறைவனது செயல்களை யாத்திரையி லிருந்து எடுத்துக்கூறுவதால் இப்பெயர் பெற்றன. இவை முக்கிய வருடாந்திர விழாக்களிலும், அமாவாசைக் கொண் டாடத்திலும் பாடப்பட்டன. பாஸ்கா விருந்தின்போது வீடுகளில் சொல்லப் பட்டு வந்தது (மத் 26:30). பாஸ்காவின்

இரண்டாவது கிண்ணத்திற்கும் உணவுக்கும் முன் சங் 113–114–உம் உணவுக்குப் பின்னும், ஆனால் நான்காவது கிண்ணத்திற்கு முன்னும் சங் 115–118–உம் பாடப்பட்டன. மிஸ்னாவின்படி பாஸ்கு செம்மறி கொல்லப்பட்டபோது லேவியர் இச் சங்கீதங்களைப் பாடினர். ஒருவேளை, இந்த அல்லேலின் ஒரு பகுதியைத்தான், இயேசுவும் அவரது சீடர்களும் இறுதி உணவின் முடிவில் பாடியிருக்க வேண்டும் (மத் 26:30; மாற் 14:26).

தால்மூது, மிஸ்னா ஆகிய பாரம்பரியங்கள் சங் 136–ஐயும், மற்ற பாரம்பரியங்கள் சங் 135–136 அல்லது 120–136யும் 'பெரிய அல்லேல்' என்றழைக்கின்றன. இது மழை அளித்ததற்கும் (135:1). எல்லா உயிர்களுக்கு உணவு அளிப்பதற்கும் (136:25) இறைவனைப் போற்றுகிறது. இது அன்றாடக் காலைச் செபத்தில் பாடப்பட்டது.

இறைவனது ஆற்றல்மிக்க செயல்களுக்காக அவரைப் போற்றுகிறது. சங் 136 மாறிமாறி பாடும் அமைப்பைக் கொண்டுள்ளது.

சங் 146–150 என்ற தொகுப்பும் அல்லேல் தொகுப்பு என்றழைக்கப்படுகிறது. இதுவும் காலைச்செபத்தில் பயன்பட்டது.

அல்லோகச (HALLOHESH - தணிந்த குரலில் பேசுபவர், மந்திரக்காரர்)

நெகமியாவின் தலைமையில், எருசலேமின் சுவர்களைப் பழுதுபார்ப்பதற்குத் தன்னுடைய புதல்வியரோடு உதவி செய்த சல்லூமின் தந்தையாவார். எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் இவரும் ஒருவர் (நெக 10:24).

அல்லோகனஸ் சுப்ரீம்
(ALLO GENES SUPREME)

பண்டை எகிப்திய மொழியின் திரிபு மொழியில் அமைந்த ஓர் அறிவு நெறிக் கோட்பாட்டு நூல். கெனோபோஸ்கியோனால் 1946–இல் கண்டுபிடிக்கப்பட்டது. போர்பிரியின் சான்றுப்படி பிலோத்தினஸ் எதிர்த்து போராடிய ஐந்து வெளிப்பாட்டு நூல்களில் ஒன்றாகும். மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்ட செத்தியன் நூல் தொகுப்பாகத் தெரிகிறது.

அல்லோன் (ALLON – ஓக் மரம், எருது)

சிமியோன் கோத்திரத்தின் ஒரு இளவரசன். எதாயாவின் மகன், செமாயாமவின் வழித்தோன்றல் (1 நாள் 4:37).

அல்லோன் – பாக்கூத்து
ALLON - BACUTH – அழுகையின் ஓக்)

ரெபெக்காளின் தாதியான தெபோரா அடக்கம் செய்யப்பட்ட இடம். பெத்தேலுக்கு அருகில் உள்ளது (ஆதி 35:8). இவ்விடம் இறைவாக்கினி தெபோரா நீதி வழங்கிய பேரீச்ச மரம் இருந்த இடமாக இருந்தால், இது இருந்த இடம் பெத்தேலுக்கும் இராமாவிற்கும் இடையில் குறிக்கப்படலாம் (நீதி 4:5). இரண்டிலும், புனித மரத்தடியில் வழிபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. 1 சாமு 10:3–இல் உள்ள அழுகைக் கருவாலியும் தாபோர் மலையிலுள்ள கருவாலியும் ஒன்றுதான் என்று சில அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

அவதூறு, பழி (SLANDER)

பழைய ஏற்பாட்டில் மற்றவருடைய பெயரைக் கெடுப்பதற்காக அல்லது அவரை அழிப்பதற்காகப் பேசப்படும் தீய பேச்சுக்களைக் குறிக்கப் பல எபிரேய சொற்கள் பயன்பட்டிருக்கின்றன (2 சாமு 16:1–4; 19:24–30; 1 அர 21:8–14). இந்த வார்த்தைக்கும், ஒன்பதாவது கட்டளைக்கும் தொடர்பு லேவி 19:16–இல் காணப்படுகிறது. பிறருடைய பெயரைக் கெடுப்பவன் இறைவனுடைய சட்டத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டான், தீர்ப்புக்குள்ளாயிருக்கிறான் என்று காட்டுகிறது (சங் 50:20; 101:5; எரே 6:28; 9:4; எச 22:9). பெரும்கேடு விளைவிக்கக் கூடிய கருவியாக நாவு கருதப்பட்டது (சங் 57:4; பழ 17:4–11; எரே 9:8; காண்க: யாக் 3:1–12).

புதிய ஏற்பாட்டிலே சகோதரனுக்கு எதிராக பேசுவது (1 பேதுரு 2:1) வாய்மையில்லாதது மட்டுமல்ல, அது முதலாவதாக அன்பின்மையை உள்ளடக்குகிறது. புற இனத்தாரின் தனித்தன்மை வாய்ந்த குணமாக இது கருதப்பட்டது (1 பேதுரு 2:12; 3:16), விசுவாசிகளின் குடும்பங்களிலே

இந்தப் பழக்கத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாது (யாக் 4:11–12). புறணி பேசுதல் (1 தீமோ 3:11; 2 தீமோ 3:3. தீத் 2:3). பழிச் சொல் (மத் 15:19; மாற் 7:21–22; எபே 4:31; கொலோ 3:8–9) ஆகியவை தவிர்த்து ஒதுக்கப்பட வேண்டும்.

அவரான் (AVARAN – வெளிறிய)
மத்தத்தியாவின் நான்காவது புதல்வராகிய எலயாசரின் பட்டப்பெயர் 'அவரன்' எனப்படும். இவ் வீரனுக்கு உகந்த முறையில் பேத்து செக்கரியா என்ற இடத்தில் இறந்தார் (1 மக் 6:43–46).

அவரை (BEANS)
ஒரு காராமணி வகையைச் சேர்ந்த ஒரு பருப்பு வகைச் செடி. சில சமயம் பெரும்பயறு என்றழைக்கப்படுகிறது. இச் செடி சத்துள்ள உணவைக் கொடுப்பதால் இது பூர்வீக காலத்திலிருந்தே பயிரிடப்பட்டது. தாவீது மகனாயிமில் இருந்தபொழுது அவருக்கு கொண்டு வரப்பட்ட உணவுப்பொருட்களில் இதுவும் ஒன்றாக இருந்தது (2 சாமு 17:28). இது மற்ற தானியங்களோடு சேர்க்கப்பட்டு, எருசலேமின் முற்றுகையைக் குறிக்கும் பொருட்டு, மட்டமான ரொட்டி செய்யப் பட்டது (எச 4:9).

அறுவடைக்குப் பிறகு கோதுமை சுத்தம் செய்யப்பட்டதுபோல இவையும் சுத்தம் செய்யப்பட்டன. மேலும் பச்சைக் காயானது காய்கறிகள் போல் சமைக்கப் பட்டது.

அவிசுவாசம் (UNBELIEF)
அவிசுவாசமானது இறைமக்களைப் பற்றியது என்பதால், புறவினத்தாருடைய சிலை வழிபாட்டினின்று மாறுபட்டு, இறைவிசுவாசத்திற்கு மனம் மாறு தலைக் கோருகிறது. இறைமக்களிடையே அவிசுவாசிகள் இருப்பது விசுவாசிகளுக்கு எப்போதுமே ஓர் இடறலாக உள்ளது. இயேசு கிறிஸ்துவோடு முரண்பட்ட ஓர் இஸ்ராயேலனின் அவிசுவாச மானது ஒவ்வொரு கிறிஸ்தவனின் இதயத்திலும் "இடைவிடாது வேதனையை" (உரோ 9:2) ஏற்படுத்த வேண்டும்.

அவிசுவாசம் என்பது இறைவன் இருப்பதை மறுப்பதோ, அல்லது கிறிஸ்துவின் இறைத் தன்மையை நிராகரிப்பதோ மட்டுமல்ல. இறைவார்த்தையின் அடையாளங்களையும் சாட்சியங்களையும் அறிந்து கொள்ள தவறுவதும், அதற்கு கீழ்படிய மறுக்கின்ற நிலையினையும் இது குறிக்கின்றது. விசுவசித்தல் என்பதனுடைய எபிரேயச் சொல்லின் சொல்விணக்கப்படி விசுவாசியாமை என்பது இறைவனுக்கு 'ஆமென்' என்று சொல்லாமலிருப்பதாகும். இது, இறைவன் மனிதனுடன் ஏற்படுத்தி நிலைப்படுத்த விரும்புகிற உறவினை மறுப்பதாகும். இம்மறுப்பானது பல்வேறு வழிகளில் தன்னை வெளிப்படுத்துகிறது. இறைபற்றற்ற மனிதன் இறைவன் இருப்பதைப்பற்றி கேள்வி எழுப்புகிறான் (சங் 4:1); ஏளனம் புரிபவன் வரலாற்றில் இறைவனுடைய செயல்படும் பிரசன்னத்தைப் பற்றியும் கேள்வி எழுப்புகிறான் (எச 5:19); வலுவற்ற இதயத்தை உடையவன் அவருடைய அன்பு மற்றும் ஆற்றலைப் பற்றி கேள்வி கேட்கிறான்; கலகக்காரன் அவருடைய மேலாண்மை, விருப்பம் போன்றவற்றைப் பற்றி கேள்வி கேட்கிறான். இப்படி கூறிக் கொண்டே போகலாம். அவிசுவாசம் சிலை வழிபாட்டினின்று முற்றிலும் மாறுபட்டதாகும்; அடிப்படைத் தன்மை கொண்டது. இதிலே பலதரத்தைக் காணலாம். ஓரளவு விசுவாசத்துடன் இணைந்தும் காணப்படும். விசுவாசத்தை எளிதில் நம்ப முடியாமலிருப்பது ஆகியவற்றிற் கிடையேயுள்ள வரையறை எல்லையானது வெவ்வேறு மனிதர்களிடையே காணப்படுகிறது என்பதைவிட, ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும் உய்த்துணரப்படுகிறது (மாற் 9:24).

I. இஸ்ராயேலில் அவிசுவாசம்

விசுவாசத்தின் தெளிவற்ற எதிர்நிலை அவிசுவாசமாகும். விசுவாசத்தின் முழு வரலாற்றையும் இங்கு எடுத்துக்கூறப் போவதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் இரு முக்கிய சூழ்நிலைகளை எடுத்துக்காட்டினால் போதுமானது. இவை, அவிசுவாசம் நிகழக்கூடிய இரு வகை வழியின் பண்புகளை எடுத்துக் காட்ட வல்லன. ஒன்று அவர்களிடையே விசுவாசக் குறைவைக்காட்டிய பாலைவன

வாழ்க்கை. மற்றது வாக்களிக்கப்பட்ட நாட்டில் வாழ்க்கை. அங்கு விசுவாசத்தின் முன்னுருவங்களை அவர்கள் ஏற்கனவே கொண்டிருந்தனர்.

1. எபிரேயரின் முணுமுணுப்பு:- பாலைவனத்தில் மக்களுடைய நம்பிக்கையற்ற நிலையினைக் குறிப்பிட வரலாற்று ஆசிரியர்கள் பல்வேறு சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றனர். தடை செய்பவர்களாகவும் கீழ்படிய மறுப்பவர்களாகவும் உள்ள (எண் 14:9; உப 32:15) குழப்பக்காரர்கள் (எண் 20:10; உப 9:24); வணங்கா கழுத்துடைய மக்கள் (யாத் 32:9; 33:3; உப 9:23; எரே 7:26; ஏச 48:4); மற்றும் குறிப்பாக முணுமுணுப்பவர்கள். இயேசுவை விசுவாசிக்க மறுக்கின்ற சீடர்களையும் யூதர்களையும் குறிப்பிடுவதற்கு யோவான் கடைசி சொற்றொடரைப் பயன்படுத்துகிறார் (யோவா 6:41. 43. 61). இதை யாத் 15–17 மற்றும் எண் 14–17 ஆகிய இரு பகுதிகள் விளக்குகின்றன. எகிப்தில் தாங்கள் உண்ட நல்ல இறைச்சியை இப்போது இழந்து நிற்கும் மக்கள், பாலைவனத்தில் தாங்கள் பசியினாலும் (யாத் 16:2; எண் 11:4–5), தாகத்தினாலும் (யாத் 15:24; 17:3; எண் 20:2–3) இறந்து விடுவோமோ என்று அஞ்சுகின்றனர். அல்லது மன்னாவினால் வெறுப்புற்று பொறுமையற்றவர்களாகின்றனர் (எண் 21:4–5). அல்லது வாக்களிக்கப்பட்ட நாட்டில் தாங்கள் நுழைவதை தடுக்கின்ற எதிரிகளுக்கு அவர்கள் அஞ்சுகின்றனர் (எண் 14:1; யாத் 14:11). அவர்கள் கண்ட அரும் பெருஞ் செயல்களை மறந்துவிடுகின்றனர் (சங் 77:105). மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முணுமுணுப்பதன் மூலம், உண்மையில் இறைவனுக்கு விரோதமாக முணுமுணுத்து (யாத் 16:7–8; எண் 14:27; 16:11) அவரது நன்மைத்தனம் மற்றும் வல்லமை மீது கேள்வி எழுப்புகின்றனர் (உப 8:2). அச்சத்தின் ஒருவகையாகிய நம்பிக்கையற்ற நிலையானது, தமது வாக்குறுதிகளை உடனே நிறைவேற்றுமாறு இறைவனை கோருவதில் அடங்கியுள்ளது. இது. உடன்படிக்கையை உருவாக்கிய இறைவனுக்கு விரோதமாக மிரட்டுதலின் ஒரு வடிவாகும். இது அவரில் விசுவாசம் கொள்ளாமையாகும் (எண் 14:11); அவரது குரலுக்கு கீழ்ப்படியமையாகும் (14:22); அவரை சோதித்து அவருடன் சச்சரவு செய்வதாகும் (யாத் 17:7); இறைவனை ஏளனம் செய்வதும் ஆகும்.

இறைவனுக்கு எதிராக முணுமுணுப்பதன் மற்றொரு வழி "பொன் கன்றுக்குட்டியின்" உருவத்தைச் செய்து அவருக்கு உருவம் அளிப்பதாகும் (யாத் 32; உப 9:12–21). அவர்களுடைய நிலைக்கு இறங்கி, அவர்களது இரக்கத்திற்கு உட்பட்டவராக இருக்க விரும்பாத இறைவன் மேல் எபிரேயர்கள் ஆதிக்கம் செலுத்த விரும்பினர். 'எரோபயாமின் பாவம்' எனப்படும் அவிசுவாசத்தில் அதே போன்ற பாவம் வட அரசின் தனித்தன்மையாக உள்ளது (1 அர 12:28 தொ; 16:21.31). இறைவன் மேல் ஆதிக்கம் கொள்ளவிரும்பியதால், அவர்கள் நாடு கடத்தப்படும் வரை குறிகூறுதல், மந்திரம் மற்றம் சூனியம் ஆகியவற்றை கடைபிடித்தனர் (1 சாமு 18:3–25; 2 அர 9:22; 17:17; யாத் 22:17; ஏச 2:6; மீக் 3:87; எரே 27:9; எச 12:24; உப 18:10 தொ). இதனாலேயே அவர்கள் போலி இறைவாக்கினர்களின் துணையையும் நாடினர் (எரே 4:10).

2. பிளவுப்பட்ட இதயத்தையுடைய இஸ்ராயேல்:- உண்மையில் மக்கள் பாலஸ்தீனத்தில் அவிசுவாசம் மற்றொரு வடிவம் எடுத்தது. ஆனால் குற்றத்தன்மையில் அது குறையவில்லை. அவர்கள் குடியேறிய நாடு அல்லது சூழ்ந்துள்ள நாட்டு கடவுள்களுடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டனர். யாவே எந்த பிளவையும் ஏற்பவராக இல்லை. எலியா போதிப்பது போல "எத்தனை நாள் இருமனத்தோராய்த் தத்தளித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஆண்டவர்தாம் இறைவன் என்றால் அவரைப் பின்பற்றுங்கள்: பாகால் கடவுளானால் அவனைப் பின்பற்றுங்கள்" (1 அர 18:21). அவ்வாறே, யாவே மட்டுமே அளிக்கக்கூடிய உதவிக்காகப் புறவினத்தாரை நோக்குகின்ற (ஒசே 7:11–12) பிளவுபட்ட இதயத்திற்கும் (ஒசே 10:2) எதிராக இறைவாக்கினர்கள் போராடுகின்றனர். விளைச்சலையும் மந்தையையும் தங்களது தலைவர் மற்றும்

துணையாளரின் கொடைகளாக பார்ப்பதற்குப் பதிலாக, இனப்பெருக்க வளமைச் சடங்குகளில் இஸ்ராயேல், தங்களது அன்பர்களாகிய கானானிய கடவுளர்களிடமிருந்து உடன்படிக்கையின் பொருட்களை தேடிச் செல்கிறது (2:7–15). அவிசுவாசமானது, தவறாமல் இறைவனைப் பின்பற்றி (உப 1:36; எண்.14:24; 32:11), முழுவதும் இறைவனுக்கே உரிய (1 அர 8:23; 11:4) நிறைவான பிரமாணிக்கமிக்க இதயத்தை கொண்டிருக்க வேண்டிய (உப 18:13; சங் 17:23) அபிடேகம் செய்யப்பட்ட மணமகளின் விபச்சாரம் ஆகும் (ஓசே 2:1–6; எரே 2–4; யாத் 16)

மனித சக்திகளால் நிறைவேற்றப்பட முடியாவிடினும், இக்குறிக்கோளானது என்றும் நிலைத்துள்ளது. "உங்களிடம் விசுவாசம் இல்லாவிட்டால், நீங்கள் நிலை பெற்றிருக்க மாட்டீர்கள்" என்று ஏசயா மக்களுக்கு தெளிவாக காட்டுகிறார் (ஏச 7:9). இறைமக்களுக்கு இயலக் கூடிய ஒரே வாழ்வாக விசுவாசம் மட்டுமே உள்ளது; மற்ற எல்லா முறைகளையும் அது ஒதுக்கி விடுகிறது (28:14–15; 30:15–16). எரேமியாமின் கூற்றுப்படி அவிசுவாசமானது படைக்கப் பட்டவைகளைச் சார்ந்திருப்பதிலும், அவற்றின் மீது ஒருவரது நம்பிக்கையை கொண்டிருப்பதிலும் அடங்கியுள்ளது (எரே 5:17; 7:4; 8:14; 17:5; 46:25; 49:4). "நீங்கள் இறக்கும்போது நாமே உங்கள் ஆண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று எசக்கியேல் நம்ப மறுப்பதன் விளைவை சுட்டிக்காட்டுகின்றார் (எச 6:7; 7:4; 11:10). அவிசுவாசமானது, ஏசயா இறைவாக்கு உரைத்தபோது இதயத்தைக் கடினப்படுத்துதலாக மாற்றுகிறது (ஏச 6:9–10). நாடு கடத்தப்பட்டதால் மக்கள் செவிடராகவும் குருடராகவும் ஆயினர் (ஏச 42:19; 43:8) நாடோறும் காலையில் இறைவன் எழுப்பக் கூடிய செவிப்புலனை உடைய ஓர் ஊழியனை யாவே எழுப்பவேண்டும் (50:4–5). அவர் மூலமாக, இறைவாக்கினர்களின் உயர்ந்த நம்பிக்கை நிறைவு செய்யப்படும். இறைவனால் அனைவரும் கற்பிக்கப்படும் நாளில் அவிசுவாசம் நின்றுவிடும் (எரே 31:33–34; ஏச 34:13; யோவா 6:45). அப்போது யாவேதான் ஒரே இறைவன் என்று எல்லோரும் காண்பர் (ஏச 43:10).

II. இயேசு கிறிஸ்துவால் எதிர்க்கப்படும் நிலையில் அவிசுவாசம்

"நாங்கள் அறிவித்ததை நம்பியது யார்?" (ஏச 53:1; யோவா 12:38; உரோ 10:16) என்று ஊழியனைப் பற்றிய இறைவாக்குகளை இயேசு ஏற்கனவே நிறைவேற்றியிருக்க வேண்டும். இறைமகன் மனிதன் ஆனதையும் மற்றும் அவரது மீட்புப் பணியையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற இதயங்களில் அவிசுவாசமானது வெற்றி பெறுகிறதாகத் தோன்றலாம்.

1. நாசரேத்தூர் இயேசுவால் எதிர் கொள்ளப்படுதல்:- முற்காலத்தில் யாவேயின் பெயரால் பேசிய இறைவாக்கினர்களை விசுவசிக்க வேண்டியிருந்தது. இயேசு இறைவார்த்தையின் அதே நிலையில் தன்னுடைய வார்த்தையையும் கூறுகிறார். அவரது வார்த்தையை செயல் படுத்தாமலிருப்பதென்பது, எவ்வித ஆதாரமும் இல்லாமல் மணலின்மீது வீட்டை கட்டுவதற்கு ஒப்பாகும் (மத் 7:24–27). இத்தகைய உரிமையானது மிகைபடுத்தப் பட்டதாகத் தோன்றுகிறது. "என்னைப் பற்றி இடறல்படாதவன் பேறுபெற்றவன்" (மத் 11:6). உண்மையில் அவரது படிப்பினைக்கும் புதுமைகளுக்கும் ஒரு பதிலாக இருப்பது பரிசேயரின் வெளிவேடமும் (15:7, 23:13...) ஏரிக்கரை நகரங்கள் (11:20–24), எருசலேம் (23:37–39), மற்றும் அனைத்து யூதர்களின் (8:10) அவிசுவாசமுமேயாகும். அவர்களது விசுவாசமற்ற நிலையைக் கண்டு இயேசுவே வியப்புறும் அளவிற்கு (மாற் :6), இயேசுவின் ஆற்றல் இத்தகைய அவிசுவாசத்தினால் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது (மத் 13:58). ஆயினும் இந்த விசுவாசமின்மை, விசுவாசத்தின் ஊற்றான தந்தையால் வெல்லப்படக் கூடும். இயேசுவைபற்றிய மறைபொருளை அவர் ஞானிகளின் கண்களுக்கு மறைத்து (மத் 11:25–26), அவரது விருப்பத்தை நிறைவேற்றி, இஸ்ராயேலில் எஞ்சியோராகிய இயேசுவின் குடும்பத்தைச் சேர்ந்த சிறியவர்களுக்கு அளிக்கின்றார் (12:46–50).

ஆயினும், விசுவாசிகளிடத்தில், அவிசுவாசமானது பல்வேறு படிகளை கொண்

டுள்ளது. சிலர் சிறிதளவு விசுவாசமே கொண்டவர்களாக உள்ளனர். சீடர்கள் புயலைக்கண்டு (8:26) அல்லது எழும் அலைகளைக்கண்டு (14:31) அஞ்சும் போதும், புதுமை செய்யும் ஆற்றல் பெற்றிருந்தும் அவ்வாறு செய்ய இயலாதபோதும் (17:17.20; 10:8) தங்களிடம் அப்பம் இல்லாதபோது அவர்கள் கவலைப்படுவதிலும் (16:8; 6:24) இந்நிலை காணப்படுகின்றது. இத்தோல்விகளைச் செபம் தீர்த்து வைக்கும் (மாற் 9:24). இதன் வழியாக, இயேசு பேதுருவின் விசுவாசத்திற்கும் உத்திரவாதம் அளிக்கின்றார் (லூக் 22:32).

2. பாஸ்கா மறைபொருளின் பிரசன்னத்தில்:– மகிமைக்கான பாதையாக சிலுவையை தேர்ந்தெடுக்கின்ற இறை ஞானத்தை மனமானது கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளவேண்டிய தருணத்தில், அவிசுவாசமானது தனது சிகரத்தை அடைகிறது (1 கொரி 1:21–24). இயேசுவினுடைய முடிவு அறிவிக்கப்படும்போது, இயேசுவிற்கு இடறலாக இருக்கும் அளவிற்கு பேதுரு தன் தலைவரை பின்தொடர்வதை தவறிவிடுகிறார் (மத் 16:23). குறித்த காலம் வந்தவுடன் பேதுரு இடறல்படுகிறார். இயேசு முன்னர் கூறியவாறே, இயேசுவை மறுதலிக்கிறார் (26:31–35.69–75). ஆயினும், நீதிமன்றத்திற்கு முன்னர் இயேசுவின் சாட்சியாக இருக்க விரும்பினால் (10:32–33), சீடன் அதே சிலுவையை சுமக்க வேண்டும் (16:24). அவருடைய சான்றுரையானது மிக அரிதாக நம்பப்படுகின்ற உயிர்ப்பினையே உண்மையில் குறிப்பிடுகின்றது (அ.ப.26:8). மனிதனுடைய இதயத்தில் அவிசுவாசமானது எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளதென்றால், உயிர்த்த காட்சிகளின் நேரத்திலும் சீடர்களே அதை நம்புவதில் மிக மந்தமாக இருந்தனர் (லூக் 24:25.37.41; மத் 28:17; மாற் 16:11.13.14).

III. இஸ்ராயேலின் அவிசுவாசம்

கட்டுவோர் மூலைக்கல்லை விலக்குவர் என்று இயேசு அறிவித்திருந்தார் (மத் 21:42). இக்கூற்றை ஆதித்திருச்சபை ஆற்றலுடன் நினைவு கூறுகிறது (அ.ப.4:43; 1 பேதுரு 2:4.7). இஸ்ராயேலின் மறுப்பிற்கு ஒரு சமயம் அவர்களின் அறியாமையையும் (அ.ப. 3:17; 13:27–28), மற்றசமயங்களில் அவர்களின் குற்றத்தையும் (2:23; 3:13; 10:34), காரணம் காட்டுகிறது. தனது போதனை இஸ்ராயேலை மனந்திருப்பவில்லை என்பதை மட்டுமன்று பெரும்பாலான யூதர்களால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று விரைவிலேயே அறிகிறது. இந்த புதியநிலை மறைபொருள் மிக்கதாகவுள்ளது. இறையியலார்களான பவுலும் யோவானும் அதை எண்பிக்க முயல்வார்கள்.

1. புனித பவுலும் விசுவசியாத மக்களும்:– தீவிரமிக்க ஸ்தேவானின் (அ.ப.7:51–52) வாரிசாக தோன்றிய பவுல், தனது பணியின் ஆரம்பத்தில், விசுவசியாது, கொடுமைப்படுத்தும் யூதர்களை, இறைசினத்திற்குக் கையளிக்கின்றார் (1 தெச 2:16). அவர் அவர்களை பிரமாணிக்கமுள்ள எஞ்சியுள்ள விசுவாசிகளாக இனி கருதவில்லை. பின்னர், போராட்டங்கள் தளர்ந்து புறவினத்தார் அனைவரும் ஒட்டுமொத்தமாக விசுவாசத்தை தழுவிய நிலையில் பவுல் தனது மக்களுடைய அவிசுவாசத்தின் மறை உண்மையை ஆராய்கிறார். அது அவரை ஆழமாக துன்புறச்செய்கிறது (உரோ 9:2; 11:13–14). முக்கியமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் ஒட்டு மொத்தமான மறுப்பானது, இறைவனையும் அவரது வாக்குறுதிகளையும் கேள்விக்குரியதாக்கி (3:3), விசுவாசத்திற்கு ஆபத்து உண்டு பண்ணுவதாக உள்ளது. மனித நிலையில் அல்லாமல் இறைஞானத்தின் மறை பொருளில் உரோ 9:11–இல் அவர் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறார். இறைவன் தனது மக்களை ஒதுக்கிவிடவில்லை; தனது வாக்குறுதிகளுக்குப் பிரமாணிக்கமாய் உள்ளார் (9:6–29). அப்போஸ்தலிக்க போதனையின் வாயிலாக கீழ்படியாமல் எதிர்த்து நிற்கிற மக்கள்பால் கைகளை நீட்டி அழைப்பதை (10:21) இறைவன் விட்டுவிடவில்லை. எதிர்த்தெழுந்து, சட்டத்தின் மூலம் நீதியை பெற முயன்ற யூதர்களே இவர்கள் (9:30–10:21). இஸ்ராயேலினுடைய இதயத்தின் கடினத்தன்மை ஒரு நாள் நீங்கும் என்பதால், இறைவனே இறுதியில் வெற்றி பெறுவார். இவ்வழியாக இறைவனின் அளவிளாத இரக்கத்தை அவர்களின் கீழ்ப்படியாமை எல்லாருக்கும் வெளிப்படுத்தும்.

2. புனித யோவானும் விசுவசியாத யூதனும்:- ஏற்கனவே பவுலும் முழு திருச் சபையும் 'விசுவாசிகள்' அல்லது 'விசுவாச மற்றவர்கள்' என்னும் பெயரை புறவினத் தாருக்கு மட்டுமன்றி, கிறிஸ்துவின் விசு வாசத்தில் பங்குபெறாத யூதருக்கும் அளித் திருந்தனர் (1 கொரி 6:6; 7:12–13; 10:27; 14:22–23). இவ்வுலகின் கடவுளால் குரு டாக்கப்பட்ட இவர்களுடன் (2 கொரி 4:4) எந்தவித உறவையும் கொள்வது இயலாது (6:14–15). ஆயினும், தனது விசுவாசத்தை மறுப்பதன் மூலம் ஒரு கிறிஸ்தவன் 'அவி சுவாசியைவிட கேடுகெட்ட நிலைக்கு' (1 திமோ 5:8) ஆளாவான் என்பதற்கு உயி ருள்ள சாட்சிகளாக அவர்கள் விளங்கு வார்கள். பவுல் விசுவாசியாத இஸ்ரா யேலை இறைவனின் கண்டிப்பிற்கும் (உரோ 11:21–22) முதல் தேர்விற்கும் (11:16) சாட்சியாக காட்டும்போது, யோவான் இயேசுவை நிராகரிக்கும் யூதனை அவி சுவாசியின் மாதிரிகையாகவும், தீய உலகின் முன்னோடியாகவும் காண்பார். அவிசுவாசப் பாவம் என்பது இயேசுவே கிறிஸ்து என்பதை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதாகும் (1 யோவா 2:22–23; 4:2–3; 5:1–5). இது இறைவனை ஒரு பொய்யர் ஆக்குவதாகும் (5:10). நான்காவது நற் செய்தி, மனு உருவெடுத்த வார்த்தையை யும் (யோவா 1:11; 6:36) மக்களின் மீட்பரை யும் (6:53) நாசரேத்தூர் இயேசுவில் ஏற்றுக் கொள்ள மறுப்பதில், அவிசுவாசத்தை மையப்படுத்துகின்றது. விசுவாசியாமல் இருப்பதானது தீர்ப்பிடப்படுவதற்கும் (3:18) பொய்மைக்கும் கொலைக்கும் ஒருவன் தன்னைக் கையளிப்பதாகும் (8:44), மரணத் திற்கு தீர்ப்பிடபடுவதாகும் (8:24). இவ் வாறு தனது செயல்கள் தீயவையாக இருப் பதால் விசுவாசமற்றவன் ஒளியினின்று ஓடிச்சென்று (3:20), சாத்தானிடம் தன்னை அளித்து இருளில் மூழ்குகிறான். இது இதயத்தைக் கடினமாக்கும் நிலைக்கு இட்டுச்செல்கிறது. இயேசுவின் வார்த்தை களை அவன் ஒருபோதும் கேட்க இயலா மல் போகின்றது. அவன் தீயவனின் இனத்தைச் சேர்ந்தவனாகிறான் (8:43–44). மற்றொரு'புறம், இவ்விசுவாசமற்ற நிலை யின் வெளிப்படையான அழிவினை சமப் படுத்தும் விதமாக, இயேசு தந்தையினு டைய ஈர்ப்பின் மறைபொருளை வெளிப் படுத்துகின்றார் (6:44). "உலகினின்று உயர்த்தப் பெற்றபின் அனைவரையும் தன்பால் ஈர்த்துக்கொள்ளக்கூடியவராய்" (12:32) அவரே இதை வெற்றிகரமாக செயல்படுத்துவார். பவுலின்கூற்றுப்படி, அவிசுவாசமும் ஒருநாள் வெற்றிக்கொள் ளப்படும். "நாம் அவருக்கு உண்மையா யில்லாவிடினும், அவர் உண்மையாயி ருப்பார்" (2 திமோ 2:13). கிறிஸ்தவ வாழ் வானது எப்போதுமே உயிர்த்த இயேசு வின் மறைபொருளின் புதிய கண்டுபிடிப் பேயாகும். "விசுவாசமற்றவனாயிராதே விசுவாசங்கொள்" (யோவா 20:27)

அவிது (AVITH – அழிவு, சிதைவு)

அவிது என்ற நகரம், ஏதோம் நாட் டின் அரசராகிய பெதாதின் மகனாகிய அதாதின் தலைநகராகும் (ஆதி 36:35; 1 நாள் 1:46). மோவாபிலிருந்த மிதியானியர் களை இவரது தந்தை தோல்வியுறச் செய்ததின் விளைவாக அதாது அரசரா னார் (காண்க: கிதயோனின் மகன் அபி மெலக்கு நீதி 9). மான் என்ற இடத்திற்கும் கிர்பெத்து – ஏல் – பஸ்தவிற்கும் இடையி லுள்ள கிர்பெத்து–ஏல்–கித்தே என்ற நகரம் தான் அவிது நகரம் இருந்த இட மாகக் கருதப்படுகிறது.

அவுரான் (AURANUS)

மக்கபேயர்களின் காலத்தில் எருசலே மில் ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சி எழும் பியபொழுது அக்கிளர்ச்சியை முன்னின்று நடத்தியவரும், அதன் தலைவராக விளங் கியவரும் அவுரான் ஆவார் (2 மக் 4:40).

அவை (COUNCIL)

நகராட்சி, சட்ட சமயகாரியங்களில் இது ஆராய்ந்து தீர்மானிக்கும் குழுவா கும். ஆலோசனை சபையாகும். இச் சொல் பல எபிரேய அரமேயக் கிரேக்கச் சொற்களை மொழி பெயர்க்கப் பயன்படு கிறது. இச்சொல் இறைவனது ஆலோ சனை சபைக்குப் பொருந்தும் (காண்க எரே15:17; 23:18,22; யோபு 15:8; சங் 89:7).

புதிய ஏற்பாட்டில் இச்சொல் மனித சபையைத்தான் குறிக்கிறது. இதைக் குறிக்கும் கிரேக்கச்சொல் "சினெதரி யோன்" ஆகும். இது சாதாரணமாக யூத

தலைமை சங்கமான சனேதிரினைக் குறிக்கும் (அ.ப.22:5; மத் 5:22; 26:59 இ). மத் 10:17; மாற் 13:9–இல் இது அவ்விடத்திலுள்ள யூத அவையைக் குறிக்கிறது. கொள்கையளவில் 120க்கு மேற்பட்ட யூதர்களைக் கொண்ட எந்த ஊரிலும் 23 நபர்களைக் கொண்ட அவை செயல்பட்டது. இது ஆன்மீகக் காரியங்களில் நீதிமன்றமாகத் திகழ்ந்தது. அந்த இடத்திலிருந்து செபக்கூட்டத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, இந்த அவை செபக் கூடத்திலிருந்து ஒருவரைப் புறம்பாக்கவும், உடல் தண்டனை அளிக்கவும் அதிகாரம் கொண்டிருந்தது. இத்தண்டனை செபக் கூடத்திற்குள்ளே செயல்படுத்தப்பட வேண்டும் (காண்க: அ.ப.22:19; 26:11). உரோமையர்கள், யூதர்கள் அவர்கள் காரியங்களை அவர்கள் சட்டப்படியே கவனித்துக் கொள்ளவும் சாவுக்குத் தீர்ப்புச் செய்யவும் ஓரளவு சுதந்திரம் அளித்திருந்தனர். இயேசு சட்டத்திற்கு விளக்கம் அளித்த போது இத்தகைய அவை ஒன்றை மனதில் கொண்டிருக்கவேண்டும் (மத் 5:22). இப்படிப்பட்ட உரோமை அவை அ.ப.25:12–இல் குறிக்கப்படுகிறது.

அவைத் தலைவர் (TOWN CLERK)

எபேசு நகரத்தின் உயர்ந்த அதிகாரியை அவைத்தலைவர் என்று புனித லூக்கா குறிப்பிடுகிறார் (அ.ப.19:35). இவர் அதிகாரம் நிறைந்தவராக இருப்பதை விவிலியத்தில் நாம் காண்கிறோம். இவரின் பணிகள் என்னவெனில்: அ) நகரத்தின் கணக்கு வழக்குகளை பொறுப்பாய் கவனிப்பது. அவையின் திட்டங்களையும், நடைமுறைகளையும் குறித்து வைப்பது. ஆணைகள், வாக்குறுதிகள் ஆகியவற்றின் பிரதிகளை பத்திரப்படுத்துவது. ஆ) நகர அவையிலிருந்து நாட்டின் பேரவைக்கு அறிக்கைகள் அளிப்பது. மக்களுக்கு அன்பளிப்புகள் வழங்குவது. ஆகவே காலப்போக்கில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவராக ஆனார். இ) நகர ஆட்சிக்கும் உரோமை மாநில ஆட்சிக்கும் இடையில் இடையாளராக இருப்பது. நகரத்தில் நடக்கும் எந்த ஒரு வன்முறைச் செயலுக்கும் பொறுப்பேற்பது.

அ.ப. 19:35–41–ல் இத்தகைய அவைத் தலைவரைக் காண்கிறோம். எபேசில் பவுலின் போதகத்தால் தங்கள் தொழில் பாதிக்கப்பட்டதைக் கண்டு தெமேத்திரியுவும் அவர் கூட்டாளிகளும் பவுலுக்கு எதிராகக் கலகம் செய்தபோது இந்த அவைத் தலைவர், பவுலும் அவரோடு இருந்தவர்களும் ஒரு குற்றமும் செய்யவில்லை என்றும் வழக்குகளை நீதி மன்றத்தில் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் கிளர்ச்சியின் விளைவுகளையும் எடுத்துக் கூறி கலகத்தை அடக்கினார்.

அவ்வா (AVVA – அழிவு, சிதைவு)

அவ்வா என்பது ஓர் அசீரிய அல்லது சீரிய நகரமாகும். ஐந்தாம் சால்மனேசர் (கி.பி.722) என்ற அசீரிய மன்னன் இந்நகரிலிருந்து மக்களை நாடுகடத்தப்பட்ட இஸ்ராயேல் மக்களுக்குப் பதிலாக சமாரியாவின் நகர்களில் குடியேறச்செய்தார். இதேபோன்று பாபிலோன், கூத்தா, கமாத்து, செப்பர்வயிம் போன்ற நகரங்களிலிருந்து மக்களை அழைத்து வந்து சமாரியாவின் நகர்களில் குடியேறச் செய்தார் (2 அர 17:24). இது ஒருவேளை இவ்வா என்பதாக இருக்கலாம்.

அவ்விம் (AVVIM – அழிவு, சிதைவு) – ஆள்

தொடக்ககாலத்தில் அல்லது தொன்று தொட்டு கானானியர்களாக இருந்த அவ்வியர்கள் காசாவிற்கு அருகிலுள்ள ஊர்களில் குடியிருந்தார்கள். இவர்களை கப்தோரியர் (பெலிஸ்தியர்) அழித்து, இப்பகுதியில் குடியேறினர். இப்பகுதி பிற்காலத்தில் பெலிஸ்தியர் சமவெளி என்று அழைக்கப்பட்டது (உ.ப.2:23; யோசு 13:3).

அவ்விம் (AVVIM) – இடம்

பெத்தேலுக்கு அருகிலுள்ள பென்யாமின் இனத்தவருக்குரிய பகுதியிலுள்ள ஒரு நகரம் (யோசு 18:23). இதுவும் ஆயி என்ற இடமும் ஒன்றையே குறிக்கலாம்.

அவ்வியர் (AVVITES)

அவ்வாவின் குடிமக்கள். இவர்களை ஐந்தாம் அசீரிய மன்னன் சால்மனேசர் குடிபெயர்த்து சமாரிய நகரங்களில் குடியேற்றினார் (2 அர 17:24–31). இவர்கள் நிப்காஸ், தர்தாக் ஆகிய தெய்வங்களை வழிபட்டனர்.

அழகு (BEAUTY)

அழகு என்பதைக் குறிக்க பலசொற்கள் விவிலியத்தில் பயன்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டிலோ, புதிய ஏற்பாட்டிலோ அழகைக் குறிக்க எந்தவிதக் கோட்பாடும் இல்லை. ஆனால் இரண்டிலும் அழகான பொருட்களைப்பற்றி விவரிப்புகள் காணப்படுகின்றன. பழ 11:22; எரே 4:30; எச 16:9–14 போன்ற பகுதிகளில் பெண்களின் அழகு வர்ணிக்கப்படுகின்றது. ஏச 3:18–24; எச 23:40 ஆகிய பகுதிகளில் அழகிற்கு பயன்படுத்திய வழி முறைகள் பற்றி கூறப்படுகின்றன. சாராய் (ஆதி 12:11.14), ரெபேக்கா (ஆதி 24:16; 26:7), ராக்கேல், அபிகாயில் (1 சாமு 25:3) அபிசாகு (1 அர 1:34), பதுசேபா, அபிசலோமின் சகோதரி தாமார் (2 சாமு 13:1), அபிசலோமின் மகள் தாமார் (14:27), தெவீலாவின் இளைய சகோதரி (நீதி 15:2), எஸ்தர் (எஸ் 1:11; 2:7), உன்னத சங்கீதத்தின் மணவாட்டி (4:1–6) ஆகியோர் அழகுடன் விளங்கினார்கள்.

பெண்கள் மட்டும் அழகானவர்கள் அல்லர். அபிசலோம் (2 சாமு 14:25), அதோனியா (1 அர 1:6), பெனாயாவின் எகிப்திய வீரன் (2 சாமு 23:21), தானியேல் (தானி 1:4,15), தாவீது (1 சாமு 16:12), யோசேப்பு (ஆதி 39:6), சவுல் (1 சாமு 9:2), யோனத்தான் (2 சாமு 1:23) இவர்கள் எல்லோரும் வெவ்வேறு அளவில் அழகுடன் விளங்கினர். குழந்தை மோசேயின் அழகும் (யாத் 2:2), சங் 45, உன்னத சங்கீதம் ஆகியவற்றிலும் வரும் மணச்சோடிகளின் அழகும் சற்று வித்தியாசமாகக் கூறப்படுகிறது. ஆதி 6:2–இல் வரும் பெண்களும், ஆமோஸ் 8:13–இல் வரும் கன்னியர்கள், யோபின் புதல்விகள் (42:15) அழகுள்ளவர்களே.

உடலுறுப்புக்களின் அழகையும், சிறப்பையும் பற்றிக்கூற, அவைகள் தனிப்படுத்தப்படுகின்றன. பொதுவாக உன்னத சங்கீதத்தில்தான் இவ்வாறு உள்ளன. குரல் (எச 33:32) எப்பிராயிமினின் கழுத்து (ஓசே 10:11) இறையரசுபற்றித் தூதுரைப்பவர்களின் காலடிகள் (ஏச 52:7; உரோ 10:15) போன்றவை, தனிப்படுத்தலுக்கான சில எடுத்துக்காட்டுகள். உன் இதழ்கள் செம்பட்டு நூலிழைப் போன்ற அழகுடையது (உ.ச. 4:3) என்று வருணிப்பது மனதை கவர வல்லது.

பெண்ணின் கூந்தல் உ.ச. 4:1; ஏச 3:24, லூக் 7:38; யோவா 11:2; 12:3 ஆகிய பகுதிகளிலும் ஆண்களின் தாடி 2 சாமு 10:5; 14:25–27; பழ 20:29–லும் வர்ணிக்கப்படுகின்றன. ஆனால் புதிய ஏற்பாட்டில் உடல் உறுப்புக்கள் வித்தியாசமான கருத்தைச் சொல்ல பயன்படுத்தப்படுகின்றன (உரோ 9:21).

ஆரோனின் ஆடைகள் அழகுக்கும், மாட்சிமைக்கும் உரியன (யாத் 28:2.40; திருவெளி 1:4). சீனாரிலிருந்து கொண்டு வரப்பட்ட சால்வை (யோசு 7:21; ஆதி 41:42; எஸ் 8:15). விழாக்கால ஆடைகள் (ஆதி 45:22; நீதி 14:12–13; 2 அர 5:5), பூவேலைப் பாட்டோடுகூடிய போர்வைகள் (யாத் 26:36; நீதி 5:30; எச 16:18; 26:16), வெள்ளை ஆடைகள் (திருவுரை 9:8; தானி 7:9; மத் 17:2; திருவெளி 3:4–5) ஆகியவை அழகுள்ள பொருட்களாகக் குறிக்கப்படுகின்றன "அழகிய மாலை" "அழகின் சிகரம்" "அழகிய கிரீடம்" (பழ 4:9; ஏச 62:3; எரே 13:18; எச 23:47) போன்று அழகோடு தொடர்புப்படுத்தப்பட்ட பலபதங்கள் விவிலியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பாலஸ்தீனத்தில் 'இயற்கைக் காட்சி' அழகியது என விவரிக்கப்படுகிறது. அந்த நிலமே அழகு வாய்ந்திருப்பது அதன் மரபுரிமையாகும் (எரே3:19; சங் 16:6). எருசலேம், சியோன் மலை, ஆலயம், அங்குள்ள வீடுகள் ஆகியவற்றின் அழகும் விளக்கப்படுகிறது (காண்க எஸ் 7:27; சங் 48:1 தொ; 50:2; 93:5; ஏச 5:9; 64:11; எரே 6:2; புல 2:15; அ.ப.3:2.10). சங் 50:2; புல 2:15 ஆகிய பகுதிகளில் சியோன் மலை எழில் மிக்கது என்று அழைக்கப்படுகிறது. இஸ்ராயேல் கடவுளின் 'அழகிய மந்தை' (எரே 13:20; ஓசே 14:6) என்று அழைக்கப்படுகிறது. சமாரிய நகரின் (ஏச 28:7–14) அழகும், எகிப்திய பாரவோனின் அழகும் (எச 31:1–32:21), தீர் நகரும் அதன் இளவரசர்களின் அழகும் (எச 27–28) விவரிக்கப்படுகின்றன. எகிப்தின் அழகு லெபானோனின் தேவதாரு மரத்திற்கும், தீர் நகரத்தின் அழகு விலைமதிப்பற்ற கற்களுக்கும்

ஒப்பிடப்படுகின்றது. எரேமியா இறை வாக்கினர் எகிப்தை அழகிய இளம் பசு என்கிறார் (எரே 46:20). பாலஸ்தீனத்தில் வானம் வெளிச்சமாகவும், அழகானதாக வும் இருந்தது (யாத் 24:10; யோபு 26:13; சங் 19:1; உ..ச.6:10).

பழைய ஏற்பாடு பொதுவாக, கடவு ளின் அழகையும், மாட்சியையும் இயற்கை யில் காண்கிறது. எல்லாம், அதற்குரிய காலத்தில் நன்றாய் இருக்கின்றன (திரு வுரை 3:11). இயேசுவும் சாலமோன் தன் மாட்சிமையில் என்ற பதத்தால் இயற்கை யின் அழகை சிறப்பித்துக் கூறுகிறார் (மத் 6:29). "அழகான" என்ற சொல் வீண் புகழ்ச்சிக்கும் (சங் 45:2) தவறான பேச்சுக் கும் (எரே 12:6; உரோ 16:18) பயன்படுத்தப் படுகிறது. ஆனால் ஞானத்தின் வார்த்தை கள் அழகானவை (பழ 1:9; 4:9).

இஸ்ராயேலின் இசை, சமய கலைப் பொருட்கள், அவற்றின் அலங்காரம், நடனத்தோடு ஊர்வலம் போகும் வழி பாட்டுக் கொண்டாட்டங்கள் ஆகியவற்றில் வெளிப்பட்டாலும், அவர்களின் மொழி அது உரைநடை விவரிப்போ, போதனை யோ, வழிபாட்டுப் பாடல்களோ எல்லா வற்றிலும் அழகுணர்வை வெளிப்படுத்தும் விதத்தில் இஸ்ராயேலின் அழகுபால் கொண்டிருந்த மனப்பான்மை மேலும் வெளிப்படுகிறது. இயேசுவின் உவமை யில் பேசும் திறன் ஒரு தனி அழகை வெளிப்படுத்துகின்றது. அழகு பற்றிய கோட்பாட்டை பிலி 4:8–இல் காணலாம்.

பொதுவாகவே முடிவு கால இயல் பகுதிகள் அழகைப் பற்றிய குறிப்புகளை அதிகம் கொண்டுள்ளன. வருங்கால எருசலேமின் அழகும் (ஏச 52:1; 62:3; செக் 9:17) மெசியாவின் மகிமையும் (ஏச 33:17; காண்க: 4:2) கூறப்படுகின்றன. ஆனால் ஆண்டவரின் ஊழியன் அழகுள்ளவராக விவரிக்கப்படவில்லை. இறுதியில் கடவுளே அவருடைய மக்களுக்கு ஒரு அழகிய மணி மகுடமாக மாறுவார் (ஏச 28:5). திருவெளிப்பாட்டில் 'அழகு' என்ற சொல் மனிதர்களுக்கும், இடங்களுக்கும், ஆபரணங்களுக்கும் பயன்படுத்தப்படு கின்றது.

கிறிஸ்துவின் அடக்கத்திற்குத் தயாரிப் பாக அவரது பாதங்களைத் தைலத்தால் பூசியபெண்மணியின் அழகுச் செயல் போற்றத்தக்கதாகும் (மத் 26:6–13).

அழகுவாயில் (BEAUTIFUL GATE)

பேதுருவும், யோவானும் கோயிலுக்கு வந்து கொண்டிருந்தபோது பிறவி யிலேயே முடவனாயிருந்த ஒருவன் கோயிலின் "அழகு வாயில்" என்னும் வாசலருகே அமர்ந்திருந்தான் (அ.ப.3:2). அவன் அவர்களைப் பார்த்துப் பிச்சைக கேட்டான். பேதுருவோ "என்னிடம் உள்ளதை உனக்குக் கொடுக்கிறேன்" எனக் கூறி அவனைக் குணப்படுத்தினார்.

இத்தகைய வாயில் இருந்ததாக யூத மூலங்கள் குறிக்கவில்லை. ஆனால் யோசி பஸ், பெண்கள் முற்றத்தில் வாயிலாக இருந்த கிழக்கு வாயிலின் அழகை விவ ரிக்கிறார். இது கொரிந்திய வெண்கலத் தால் செய்யப்பட்டிருந்தது. இந்த வாயில், கிறிஸ்தவப் பாரம்பரியம் கருதியதுபோல் சூசா அல்லது பொன்வாயிலாக இல்லா மல், நிக்கனோர் வாயிலாக இருந்திருக்க லாம்.

அழிந்து போதல் (CORRUPTION)

இச்சொல்லால் விவிலியம் இந்த உலகம் அதில் உள்ள அனைத்தும் கடந்து செல்லும் தன்மையைக் குறிக்கின்றது. விசு வாசிகளின் அழியாத உரிமைப் பேற் றோடு ஒப்பிட்டு வேறுபடுத்தி (1 பேதுரு 1:4), படைப்பு முழுவதும் பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது. படைப்பு அனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டி ருக்கிறது (உரோ 8:20–21) என்று விவிலியம் படிப்பிக்கிறது.

இந்த இயற்கை 'உடலானது' அழிவிற் குரியது, அதாவது சாவிற்கும் சிதைந்து போவதற்கும் ஆளாகக் கூடியது என்று 1 கொரி 15:42 கூறுகின்றது. "அழியக்கூடி யது" இறக்கக்கூடியது ஆகியவை ஒரே பொருளுடையவை; அதேபோல 'அழி வற்றது' சாகாத் தன்மையடையது ஆகிய வை ஒரு பொருள் பலசொற்களாகும். உயிர்த்த யேசுவின் உடல் இனி அழிவுக் குள்ளாகாது (அ.ப.13:37). அ.ப.2:27 தொ; 13:35 தொ–இல் உள்ள அழிவு வார்த்தை சிதைந்து போகும் பொருளுடையது.

அழிப்பவன் (DESTROYER)

சாவுப் பழிவாங்கும் தூதன். இஸ்ராயேலர் எகிப்திலிருந்து விடுதலை அடைந்து புறப்பட்ட இரவில் இந்த அழிவின் மனித இயல்பு கடந்த தூதன் நாடு முழுவதும் கடந்து சென்று, கதவு நிலையின் மேற் சட்டத்திலும் நிலை கால்கள் இரண்டிலும் செம்மறியின் இரத்தம் பூசப்படாத வீடுகளில் புகுந்து அதிலுள்ள தலைபேற்றாண்களைக் கொன்றார் (யாத் 12:23). பழைய ஏற்பாட்டில் இந்த உருவம் இறைவன் தம் திருவுளத்தை நிறைவேற்ற பயன்படுத்திய இறை தூதுவராகத் திகழ்கிறார் (காண்க. 11:4–8). 2 சாமு 24:16–17; 1 நாள் 21:15–இல் இத்தகைய தூதன் ஒருவர், தாவீதின் கணக்கெடுப்புக்காக இஸ்ராயேலைத் தண்டிக்கிறார். 2 அர 19:35–இல் 'ஆண்டவரின் தூதர்' எருசலேமுக்கு எதிராக முற்றுகையிட்டிருந்த சனகெரிபின் படைகளைக் கொன்றழிக்கிறார். ராபீகளின் சிந்தையில் அழிப்போன் என்ற பெயர் ஓர் ஆள் பெயராகி, ஒரு தனிப்பட்ட தூதரை உணர்த்திற்று. இப்பொருளில் தான், பாலைவனத்தில் செய்த கிளர்ச்சிக்காக இஸ்ராயேலைத் தண்டித்த அழிவின் தூதரை பவுல் குறிப்பிடுகிறார் (1 கொரி 10:10; காண்க எண் 14:2.36–37; 16:30–31. 41–45). அவர் சாத்தானையோ அவனது தூதரையோ மனதில் கொண்டிருந்திருக்கலாம் (காண்க 2 கொரி 12:7; 1 தெச 2:18; ஞான 18:20–25). ஏனெனில், நாடு கடத்தப்பட்டப்பின் காலத்தில் சாத்தான், இறைவனின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள அழிவின் தூதனாகச் சித்தரிக்கப்படுகிறான். 1 கொரி 5:5–சாத்தானை அழிவோடு இணைக்கிறது (காண்க.1 தெச 5:3; 2 யோவா1:9; 1 திமோ 6:9).

இந்தத் தனிப்பட்ட பொருளைத் தவிர, பொதுவான பொருளிலும் அழிப்போன் என்ற சொல் பயன்பட்டிருக்கிறது (யோபு 15:21; ஏச 49:17; எரே 4:7; 22:7).

அழியாமை, இறத்தல் இல்லாமை (IMMORTALITY)

I. பழைய ஏற்பாடு

யாவேக்கும் மரணத்திற்கும் இடையிலுள்ள உறவு உறுதிப்படுத்தப்பட்டபின் மரணத்தின் மீதான வெற்றி பற்றிய நம்பிக்கைக்கு இடமுள்ளது. ஏனெனில் யாவே எங்கு ஆட்சி செய்கிறாரோ, அங்கு வாழ்வு ஆதிக்கம் பெறவேண்டும். நோயினால் இறக்கின்ற மனிதர்களை குணமாக்க யாவேயால் முடியும்போது, மரணத்தின் பணி முடிவடைந்த பிறகு, மரணத்தின் மீதும் அவர் தனது வல்லமையினை வெளிப்படுத்த முடியும். யாவே உயிருள்ள கடவுள் என்று உறுதியாகக் கூறுவது பழைய ஏற்பாட்டின் மையக்கருத்தாகும் (சங் 18:46; 42:3; 84:2; எரே 23:36; ஓசே 1:10). அவரது நித்தியம் பற்றிய உறுதிப்பாடு, அவர் இருத்தலின் விளைவேயாகும். இறந்துவிட்ட சிலையாகிய பிற கடவுள்களுக்கும் (2 அர 19:4.16; சங் 106:28; எரே 10:11), இறக்கும் தன்மையுடைய மனிதருக்கும் முற்றிலும் மாறான நிலையில் உயிருள்ள கடவுள் இருக்கின்றார்.

யாவே கொண்டுள்ள வாழ்வு, வாழ்வின் உற்றாகிறது. அந்த வாழ்வை, தமது மக்களுக்கு, அவர்களோடு கொண்டுள்ள உடன்படிக்கைக்கு அவர்காட்டும் பிரமாணிக்கத்தின் சேவைக்கு அளிக்கிறார். இவ்வாறு யாவே நோயினாலும் பாவத்தாலும் பலவீனப்படும் வாழ்வை மீண்டும் அளிக்கிறார். இது புத்துயிர் அளிக்கும் செயலாகும் (யோபு 33:19–26; சங் 30:2–3; 56:1–3; 71:20; 143:11). மரணம் தனது பணியினை முடித்தபின்னர், புத்துயிர் அளிக்கும் செயலைச் செய்ய யாவேயை தடுக்க எதுவுமே இல்லை. சரெப்தா நகர விதவையின் மகன் (1 அர 17:17–21), சுனாமிய பெண்ணின் மகன் (2 அர 4:18–37) ஆகியோர் எலியா மற்றும் எலிசாவால் மீண்டும் உயிர்ப்பெறுகின்றனர். பெயர் தெரியாத ஒருவனின் பிணம் எலிசாவின் எலும்புகளின் மேல்பட்டவுடனே, அம் மனிதன் உயிர்த்து எழுந்தான் (2 அர 13:20–21). இத்தகைய நிகழ்ச்சிகளில் உயிர்த்தெழுதல் என்பது கடைசி உயிர்த்தெழுதலைவிட, அச்சமயத்தில் நோய்களினின்று விடுபடுதலையே குறிப்பிடுகிறது. இத்தகைய செயல்கள் இறந்தவுடனே, மண்ணோடு மண்ணாவதற்கு முன்னர் நிகழ்கின்றன. இவை வாழ்வினை நீட்டிப்பதற்கே செயல்படுத்தப்படுகின்றன. இறப்பின் மேல் இன்னும் உறுதியான வெற்றி,

சில சலுகை பெற்றவர்கள் இறைவனிடம் எடுத்துக்கொள்வதில் நிகழ்கிறது. இவ்வாறு, ஏனோக்கு (ஆதி 5:24) மற்றும் எலியா (2 அர 2:10–11) ஆகியோர் இறவாமலே கடவுளால் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். பழைய ஏற்பாட்டுப் புனைப்பெயர் நூல்கள் உப.34:5க்கு எடுத்துக்கொள்ளல் என்று பொருள் கொடுத்து மோசேயும் இறவாமல் இறைவனால் எடுத்துக்கொள்ளப்பட்டார் என்று கூறுகின்றன. இன்னும் பொதுவான உண்மை நிலையின் முன்னறிவிப்பாக இத்தகைய நிகழ்ச்சிகள் கருதப்படுகின்றன.

அழியாமை அல்லது இறத்தல் இல்லாமையில் விசுவாசம் என்பது இரு திசைகளில் வளர்ந்தது.

அ) வாழ்வுக்கு மீண்டும் திரும்பக் கூடும் என்ற கருத்து மேலும் பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்படலாயிற்று. இயற்கையின் வாழ்வின் அடையாளமான தேவதையின் இறப்பு, உயிர்ப்பில் கானானியர் கொண்டிருந்த நம்பிக்கையினால் இஸ்ராயேலர் பாதிக்கப்படாதவர்களாய் இருக்கமுடியவில்லை. விசுவாசிகள் தமது சமய சடங்குகளுக்குள், மரணம் மற்றும் உயிர்தெழுத்தல் பற்றிய கருத்துக்களுடன் தங்களை இணைத்துக்கொண்டனர். இஸ்ராயேலரால் தமது சமயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில குறிப்பிட்ட சொற்றொடர்கள் கானானியரின் விசுவாசக் கோட்பாடுகளிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கலாம். இவ்வாறு கடவுளின் இறப்பையும் உயிர்ப்பையும் கொண்டாடும் ஒரு சமயச்சடங்கினை ஓசே 6:1 பின்பற்றியிருக்கலாம். அரசன் யோயா கிமிற்கான புலம்பல் கானானிய சடங்கிலிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கலாம் (எரே 22:18). மிகவும் எச்சரிக்கையாக நோக்கப்பட வேண்டிய கருத்தாக இருப்பினும், அரசனுக்கும் இறப்பு என்பது இல்லை என்ற நம்பிக்கையினை இஸ்ராயேலும் மற்ற அயலாருடன் சேர்ந்து கொண்டிருந்தது என்பதை மறுக்க முடியாது (எச 34:24; 37:24). ஆயினும், இயற்கையினைப் பற்றிய கானானேய சமயத்தின் அடிப்படையான இந்த மீபௌதீகக் கருத்து முடிவில்லா வாழ்வுபற்றி சிந்திப்பதில் இஸ்ராயேலர் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதை உணர்த்திற்று.

இறத்தலிலிருந்து உயிர்த்தெழுதல் என்ற கருத்து இஸ்ராயேல் மக்களின் எதிர்காலநிலையை ஓர் உயிர்ப்பாக எடுத்துக்காட்டும் உருவகங்களின் அடிப்படையாக இருந்திருக்கலாம். மேலே குறிப்பிடப்பட்ட ஓசேயின் கருத்துடன், எசக்கியேல் இறைவாக்கினரின் காட்சியினையும் (எச 37) குறிப்பிடலாம். இறந்தவரின் எலும்புகள் ஒன்று சேர்தல், கல்லறைகளிலிருந்து வெளிவருதல் போன்றவற்றைத் துல்லியமாக விவரிப்பதால், இந்த உருவங்களுக்குப் பின்னணியில் சாவுப்பற்றிய சில துல்லியமான கருத்துக்கள் இருந்திருக்க வேண்டும். யாவேயின் ஊழியனைப் பற்றிய நான்காவது பாடலில், நீண்ட, முடிவற்ற வாழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கருதலாம். பிறரின் பாவங்களின் பரிகாரமாக அவர் ஏற்றுக்கொண்ட துன்பம் மற்றும் சாவு ஆகியவற்றுக்கு ஈடாக இவ்வாழ்வு அவருக்கு அளிக்கப்படுகிறது (ஏச 53:8,10). தானி 12:2–இன்படி உயிர்த்தெழுதல் மேலும் பலருக்கு விரிவாக்கப்படுகிறது. இந்த உயிர்தெழுதல் பலருக்கு அளிக்கப்படுகிறது. எல்லாருக்கு மன்று. உயிர்த்தெழுதலானது சிலருக்கு வெகுமதியாகவும், மற்றவர்களுக்கு தண்டனையாகவும் தன்மையால் இருவடிவம் எடுக்கிறது. மக்கபேயரின் போர்களிலிருந்து மறைசாட்சிகளாக மரித்த பல நீதிமான்களின் முடிவு பற்றிய பிரச்சினையிலிருந்தும் உயிர்த்தெழுதல் உருவெடுக்கின்றது. இவர்கள் இவ்வாழ்வின் ஆசீர்களைச் சன்மானமாக பெறுவது பொருத்தமே. உயிர்த்தெழுதல் செயல்வினைப் பயனின் ஒருவடிவாகக் கருதப்பட்டது என்பது உறுதி. ஏச 26:19–இல் 'இறந்துபோன உம்மக்கள்' என்று கூறும்போது மறைசாட்சிகளைக் குறிப்பிடலாம்.

செய்வினைப்பயனின் எடுத்துக்கூறலாக இருப்பதுடன், உயிர்ப்பானது அனைத்து உலகின் மீதும் பரவியுள்ள இறைவனுடைய ஆட்சியின் அறிவுப்பூர்வமானதும் அவசியமானதுமான விளைவாகத் தோன்றுகிறது. யாவே அரசனாகும் பொழுது என்றென்றைக்கும் சாவு

அழிக்கப்படும் (ஏச 25:8). இறந்தோரை பாதாளத்தில் அடைத்து வைத்திருக்கும் இலவியத்தானும், மற்ற சகாக்களோடு சேர்த்து வான்படையும் தண்டிக்கப்படும் (24:21; 27:1 தொ). அதே சமயம் யாவே, உலகின் மேல் "ஒளிவீசும் பனியைப் பெய்வார்" (26:19). இவ்வாறு உயிர்த்தெழுத லானது முதல் படைப்பைவிட முழுமை யான புதுப்படைப்போடு ஒன்றாக்கப்படு கிறது. சங் 22:29–39–இன்படி உயிர்த்தெழு தலானது அவ்வாறே யாவே அரசினுடைய வெற்றியில் ஒரு பாகமாகிறது. செயல் வினைப் பயன் மற்றும் மெசியாவைப் பற்றிய நம்பிக்கையோடு உயிர்ப்பை தொடர்புபடுத்துவதில் உயிர்த்தெழுதலின் சில கூறுகளில் ஈரானிய சமயத்தால் இஸ்ராயேலின் விசுவாசம் பாதிக்கப் பட்டது எனலாம். மறுபுறத்தில் ஆன்மா வின் இறப்பு இல்லாமையை அடிப்படை யாகக் கொண்ட முடிவில்லா வாழ்வைப் பற்றிய நம்பிக்கையானது, பழைய ஏற்பாட்டிற்கு முற்றிலும் அன்னியமான தாகும். ஈரானின் அடிப்படையாக விளங் கும் உலகின் அழிவு மற்றும் புதுப்பித்தல் பற்றிய அண்டவியல் கதைகள், கடவுளின் வல்லமை மற்றும் நீதி மீது இஸ்ராயேல் கொண்டிருந்த விசுவாசத்தை விட பெரு மளவு முக்கியத்துவம் குறைந்தவையாகவே இருந்தன.

ஆ) உயிர்ப்புப் பற்றிய இரண்டாவது சிந்தனைப்போக்கு உயிர்த்தெழுதலைப் பற்றிய வாய்ப்புகள் மற்றும் முறைமை களைப் பற்றியதன்று. அது தீர்வுகளை காண்பதில் கடவுளை நம்பி, இறைவ னோடு ஒன்றுபடுதலைத்தவிர வேறு உறுதியை வேண்டாத விசுவாசமாகும். ஆன்மீகம் அல்லது இறை அனுபவம் எனப்படும் இந்த மனநிலை பல சங்கீதங் களில் காணப்படுகிறது. சங் 6–ன் ஆசிரி யர் மரணத்திற்குபின் நடக்கவிருப்பதைப் பற்றி கவலைப்படாமல், யாவேயுடன் உள்ள ஐக்கியமானது மரணத்தினால் அழிக்கப்பட முடியாதவாறு உறுதியானது என்று கூறுகிறார். யாவே மட்டுமே உயிருள்ள கடவுளாய் இருப்பதால், சங்கீத ஆசிரியரை பொறுத்தவரை இந்த ஐக்கிய மானது மரணத்திற்கு பின்னும் வாழ்வா கும். உயிர்த்தெழுதலின் சுட்டிக்காட்டல் வெளிப்படையாக இல்லாவிடினும் சங் 17:5–ல் இதேபோன்ற நம்பிக்கை வெளிப் படுகிறது. சில குறிப்பிட்ட சலுகை பெற்ற மனிதர்கள் கடவுளிடம் எடுத்து செல்லப் படுகின்றனர் என்று கூறுவதன்மூலம், சங் 49 மற்றும் 73 மரணம் என்ற பிரச்சி னைக்கு ஒரு தீர்வு காண்பதாக தெரிகிறது (சங் 49:15 மற்றும் 73:24–இல் எடுத்தல் என்னும் சொல்). நேர்மையுடனும் விசுவா சம் குறையாமலும் வாழ்ந்ததினால், இறைப்பற்றற்றவர்களுக்கு அழிவினை மாற்றமுடியாத முறையில் கொண்டு வருவதுபோல, மரணம் தனக்கு இருக் காது என்பதில் சங் 49–இன் ஆசிரியர் உறுதியாக உள்ளார். சங் 73–ன் ஆசிரியர், நேர்மையற்ற காலத்திற்கு முந்திய மரணம் தன்னை எதிர்நோக்கியிருந்தாலும், அம் மரணமானது எந்த வல்லமையினாலும் அழிக்கமுடியாத, இறைவனோடு கொண் டுள்ள ஐக்கியத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது என உறுதியாக நம்பு கிறார். உரோ 8–ன் இறுதியில் பவுல் கூறுவதுபோல இறைவனால் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளோம் என்று அறியும் மனி தனை இறைவனின் அன்பினின்று பிரிக்க முடியாது என்று எடுத்துரைப்பது வெற்றி கரமாக விசுவாசத்தின் வெளிப்படையா கும். இதே மனப்பாங்கு யோபு 19:26–லும் கூறப்படுகிறது. அதில் உலகில் செயல் வினைப்பயனோ அல்லது உயிர்ப்போ முதன்மையாக வலியுறுத்தப்படவில்லை. பொதுவாகச் சடங்குகளின்மூலம் இறை வனுடன் ஐக்கியமாகும் நிலையினை குறிப்பிடும், கடவுளை நேரிடையாக "காணும்" உறுதியே வலியுறுத்தப்படுகிறது. காட்சியும் அறிவுக் காரணமும் முற்றிலும் மாறாக விளங்கும் நிலையில் என்ன நிகழ்ந்தாலும் கடவுளுடன் கொண்டுள்ள ஐக்கிய நிலை எப்போதுமே இருக்கும் என்று அறிந்து கொள்வதில் யோபுவின் விசுவாசம் அடங்கியுள்ளது.

இத்தகைய சமய நிலைமையே உயிர்த் தெழுதல் பற்றிய கருத்தை உயிருள்ள விசுவாசமாக மாற்றியதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. தனிநபர் செயல் வினைப் பயன் கோட்பாட்டின் வெற்றியின் விளை

வாக, யூதத்துவத்தில் அழியாமை அல்லது இறத்தல் இல்லாமை மற்றும் உயிர்த் தெழுதல் பற்றிய கருத்துக்கள் வளர்ச்சியுடைய முக்கிய இடத்தை பெற்றன. ஆனால் இக்கருத்துக்கள் இன்னும் ஒரு மித்தவிதத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இத்தகைய கருத்துக்கள் திருவுரை, யூதித், தோபியா, பாரூக்கு மற்றும் 1 மக்கபேயர் (1 மக் 2:49,70) ஆகிய நூல்களால் தெளிவாக நிராகரிக்கப்பட்டன. சதுசேய கட்சியினரும் இந்நிலைக்கு ஆதரவுதரவில்லை. 2 மக் 7:9 தொ. ஏனோக்கின் உவமை, பாரூக்கின் நூல் மற்றும் பன்னிரண்டு குலத்தந்தையரின் ஏற்பாடுகள் (குறிப்பாக யூதா) ஆகியவை இந்நிலைக்கு உறுதியாக ஆதரவு அளித்தன. உயிர்த்தெழும் இடம், முறை, உயிர்த்தெழுந்தோரின் நிலைமைப் பற்றி பல்வேறு வேறுபாடுகளை கொண்டிருந்தாலும், ஏச 26:19 மற்றும் தானி 12:2–இன் கருத்துக்கள் மீண்டும் கையாளப்பட்டு வெளிப்படையாக எடுத்துக்கூறப்படுகின்றன.

கும்ரான் நூல்கள், நேர்மையாளர்களின் உயிர்த்தெழுதலைப் பற்றியும், கடவுள் மற்றும் அவரது வான தூதர்களினுடைய ஒளிமயமான உலகில் உள்ள முடிவற்ற வாழ்வில் நிலவும் நீடித்த மகிழ்ச்சியை பற்றியும் விவரிக்கின்றன. அலக்சாந்திரியா யூதத்துவத்தின் ஏடுகளில் கடவுளின் அருகில் உள்ள ஆன்மாக்களின் இறவாநிலைமை என்ற கருத்து உயிர்த்தெழுதல் என்ற கருத்தின் இடத்தை எடுத்துள்ளது (ஞான 3:1 தொ; 9:15; 4 மக்.). பொதுப் பாணி யூதத்துவம் பழைய ஏற் பாட்டு நம்பிக்கைகளையும், கிரேக்க அல்லது கிரேக்க–ஈரானிய கருத்துக்களையும் இணைத்து சமரச நிலைக் கொண்டுள்ளது. உயிர்த்தெழும் நாளில் உடலோடு எழுந்திருக்கும் வரையில் இறந்தவர்களுடைய ஆன்மாக்களுடைய ஆவிகள், ஒருவித தீர்ப்பாகப் பாதாளத்தில் (செயோல்) நான்கு பகுதிகளில் பிரித்து வைக்கப்பட்டு உயிர்ப்பு நாளில் உடல் வடிவம் மீண்டும் பெற காத்திருக்கும்போது சுதந்திரமான வாழ்வு அளிக்கப்பட்டுள்ளன என்று ஏனோக் 22–ல் கூறப்பட்டுள்ளது. ஆன்மாவின் இறத்தல் இல்லாத நிலை பற்றிய கோட்பாடு, உயிர்த்தெழுதல் பற்றிய கோட்பாட்டுடன் மீண்டும் அதே போல் இணைக்கப்பட்டு 2 எஸ்திராஸ் (4–எஸ்ரா)–இல் குறிப்பாக 7–ஆம் அதிகாரத்தில் மீண்டும் தோன்றுகிறது. இதையொத்த மனப்போக்கு புதிய ஏற்பாட்டிலும் காணப்படலாம். அதில் உடலோடு கூடிய உயிர்த்தெழுதலைப் பற்றிய உறுதியான எண்ணத்துடன், இறத்தல் இல்லாத நிலையிலும், மரணத்திற்குப்பின் உடனே கடவுளின் அருகிலிருக்கும் வாழ்க்கை (லூக் 16:24) பற்றிய நம்பிக்கையும் காணப்படுகிறது. ஆனால் இயேசு, மரணத்திற்கு பிந்திய வாழ்வு பற்றி பேசும்போது அவர் காலத்து யூத விசுவாசத்தைக் கடந்து சென்று உயிருள்ள கடவுளின் எல்லாம் வல்ல நிலையினையும், உண்மையான நிலையினையும் வலியுறுத்துவதன் மூலம், பழமையான பழைய ஏற்பாட்டு உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறார் (மத் 22:23; மாற் 2:26).

II. புதிய ஏற்பாடு

அழியாமை பற்றிய புதிய ஏற்பாட்டுக் கோட்பாடு, இறைவனைப்பற்றியும் மனிதனைப் பற்றியும் பழைய ஏற்பாட்டில் காணப்படும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. அவை: இறைவன், தம்மிலேயே உயிர் கொண்டிருப்பவர், உயிர் அளிப்பவர். மனுக்குலம், ஒரு தொகுப்பென்ற அளவில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை இறுதியாகக் கொண்டுள்ளது. இந்த இரு கருத்துக்களும் கிறிஸ்துவிலும் அவரது உயிர்ப்பிலும் ஒன்றிணைகின்றன. முனைப்புப்பெறுகின்றன, நிறைவு பெறுகின்றன. இவ்வாறு புதிய ஏற்பாடு எப்போதும் கிறிஸ்துவில் மையம்கொண்டது. சாகாமை என்ற எதிர்முறைக் கருத்தைவிட, உயிர்ப்பு அல்லது மறுபடைப்பு வழியாக முடிவில்லா வாழ்வு என்னும் நேர்முறை செழிப்புமிக்கக் கருத்தில் அக்கறை கொள்கிறது.

முடிவிலா வாழ்வு கிறிஸ்துவில் வெளிப்படுகிறது (1 யோவா 1:2). அவருக்குத் தம்மிலே உயிர் கொண்டிருக்கத் தந்தை அளித்துள்ளார் (யோவா 5:26). இறைவாழ்வைத் தம்மையாலே கொண்டி

ருப்பவர் என்ற முறையில், இயேசு தம் உடலிலும் ஆன்மாவிலும் "இறுதிப் பகைவனாகிய" சாவை (1 கொரி 15:26) எதிர்கொண்டு, அனுபவித்தார். ஆயினும் உயிர்ப்பில் வெற்றி வீரராக வெளிவந்தார். ஆகவே அவர் சாவை வென்றார். "இறுதி ஆதாம்" என்ற அளவில் முதல் ஆதாம் விட்டுச் சென்ற பாவம் என்றும் மரபுரிமைச் சொத்தை மாற்றி அமைத்தவர் (உரோ 6:23; 1 கொரி 15:22.45–49). அதன் விளைவாக "துஞ்சினோரின் முதற்கனியாகவும்" (15:20) "உயிர்தரும் ஆவியாகவும்" (15:45) ஆனார். இவ்வாறு மனுக்குலத்திற்கு முடிவில்லாத வாழ்வு கிறிஸ்துவிடமிருந்து வருகிறது (1 யோவா 5:11.20). அவர் சாவை அழித்து "சாவே அறியா வாழ்வை நற்செய்தியின் வழியாய் ஒளிரச் செய்தார்" (2 திமோ 1:10). கிறிஸ்துவில் உள்ள வாழ்வில் பங்குபெற மக்களை இறைவன் அழைக்கிறார். இறைவனால் குறிக்கப்பட்டவர்களுக்கு முடிவில்லாத வாழ்வு கிறிஸ்து வழியாக அளிக்கப்படும் கொடையாகும் (யோவா 17:2; அ.ப.13:48; 1 கொரி 15:23). நற்செய்தியாளர் யோவான் இதை உயிருள்ள நீரும் உணவும் என்று உணவு, பானம் என்ற உருவங்களில் எடுத்துக்கூறுகிறார். மேலும் இயேசுவின் வார்த்தைகளையும் (6:68; 10:28) கிறிஸ்துவைச் சுட்டும் பழைய ஏற்பாட்டையும் எடுத்துக்காட்டி இதைப் போதிக்கிறார்.

"ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்தல் புதியதொரு படைப்பாகும்" (2 கொரி 5:17). இவ்வாறு, அழியாமை பழைய படைப்பின் உள்ளார்ந்த பண்பன்று. ஆனால் கிறிஸ்து உயிர்ப்பின் முதற்கனியாக இருப்பதால், கிறிஸ்தவனும் இறுதி ஆதாமாகிய ஆன்மீக வித்தாகிய அழிவில்லாத வித்திலிருந்து புதியதாய்ப் பிறக்கிறான் (1 பேதுரு 1:23). புதிய படைப்பின் வாழ்வு கிறிஸ்துவிலிருந்து வரும் வாழ்வாகும். அது இறைஇயல்பில் பங்குகொள்வதாகும் (2 பேதுரு 1:4; 1 கொரி 15): அழியாத உரிமைப்பேற்றில் உடன் பங்காளிகளாக கிறிஸ்துவோடு பங்குபெறுவதாகும் (1 பேதுரு 1:4; 1 கொரி 9:25; எபி 9:15); மண்ணைச்சார்ந்தவனின் சாயலுக்குப் பதிலாக விண்ணைச் சார்ந்தவரின் சாயலாக மாற்றிக்கொள்வதாகும் (1 கொரி. 15:49). அது "அளவிடமுடியாத நித்திய மாட்சிமையை ஒப்புயர்வற்ற முறையில் விளைவிக்கிறது" (2 கொரி 4:17). ஆனால் கிறிஸ்து தமது சிலுவை மரணத்தின் வழியாகத்தான் புதுவாழ்வை அடைந்தார். அதனால் அந்த வாழ்வை பழைய வாழ்வுக்குச் சாவதின் வழியாகத்தான் பிறர் அடையமுடியும். விசுவாசிகள் "புத்துயிர் பெற்றவர்களாய் வாழும்படி ஞானஸ்நானத்தின் வழியாக கிறிஸ்துவோடு புதைக்கப்படவேண்டும்" (உரோ 6:4; கொலோ 2:12), புதிய வாழ்வை இயக்குபவரான பரிசுத்த ஆவி ஆன்மீக வாழ்வை முதலில் உள் மனதினில் நாடுகிறார். புதுப்படைப்பு உள்ளிலிருந்து வளர்கிறது: நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுகிறது (2 கொரி 4:16; எபே 3:16). இதனால், சாவு, உடலின் மேல் இன்னும் ஆட்சி செய்தாலும், கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்ட இறை அன்பிலிருந்து மனுக்குலத்தைப் பிரிக்க முடியாது (உரோ 8:39).

முடிவில்லாத வாழ்வு என்பது, இப்போது வாழ்வின் வெறும் பண்பு மட்டுமன்று. இந்த வாழ்வோடு தொடர்பில்லாத வருங்காலக் குறிக்கோள் மட்டுமன்று. "இப்போதுள்ளது" ஆனால் "இன்னும் இல்லை" என்று இறுதிக்கால இடுக்கண் நிலை, இத்தலைப்புப் பற்றிய புதிய ஏற்பாட்டு அறிவிப்புகளில் காணப்படும். ஆனால் அழுத்தத்தில் வேறுபாடு இருக்கலாம். பவுலின் போதனைப்படி மீட்கப்பட்டோர் இப்போது ஆவியானவரில் உயிருள்ளவர்களாக உள்ளனர். புதிய வாழ்வைக் கொண்டிருக்கின்றனர். வரவிருக்கும் வாழ்வில் உடல் அளவிலும் உயிருள்ளவர்களாக இருப்பர். இதுவே உயிர்ப்பாகும் (உரோ 8:9–11). முடிவில்லா வாழ்வின் கூறு, கிறிஸ்துவோடு புதைக்கப்படுவதில் (6:4), ஊன் சார்ந்தவற்றைத் துறத்தலில் (மத் 19:29; யோவா 12:25), இப்போது தொடங்குகிறது. ஆனால் ஊனுக்குச் செத்தவர்களாக இருப்பது இறைவனது திருவுளத்துக்கு உயிருள்ளவர்களாக இருத்தலாகும். ஆகவே கட்டளைகளைக் கடைப்பிடிப்பது வாழ்வதாகும் என்ற பழைய ஏற்பாட்டுக் கருத்தை (லேவி 18:5; உப 5:33) புதிய ஏற்பாடு எதிரொலிக்கிறது (மத் 19:16 இ; 25:46; யோவா 12:50; 1

திமோ 6:12). இத்தகைய வேலை கிறிஸ்து வில் நிகழ்கிறது அல்லது பவுல் கூறுவது போல், இது முடிவில்லா வாழ்வெனும் கனியை அறுவடை செய்யும் பொருட்டு "ஆவியில் விதைப்பதாகும்" (கலா 6:8; யோவா 4:36). இவ்வாறு யோவான் கிறிஸ் துவில் விசுவாசத்தை முடிவில்லாத வாழ் வோடு அடிக்கடி இணைத்துக் கூறுகிறார் (யோவா 3:15–16; 5:24; 17:3; 1 யோவா 5:13; 1 திமோ 1:16). முடிவில்லா வாழ்வு புனிதப் படுத்தப்படுதலின் முடிவாகும். இது ஏற் கெனவே பரிசுத்த ஆவியால் தொடங் கப்பட்டுவிட்டது (உரோ 6:22).

முடிவில்லா வாழ்வின் இருகூறுகளா கிய நிகழ்காலத்தையும் வருங்காலத்தை யும் கிறிஸ்துவோடு பிரிக்கமுடியாதபடி இணைத்துக்கூறும் கூற்று யோவான் நற் செய்தியில் வருகிறது. "என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் (இப்போது) முடிவிலா வாழ்வைக் கொண்டுள்ளான். நானும் அவனைக் (வரவிருக்கும்) கடைசி நாளில் உயிர்ப்பிப் பேன்" (யோவா 6:54). முடிவில்லா வாழ்வு, விசுவாசியும் கிறிஸ்துவும் ஒருவர் மற்ற வரில் வாழ்வதால், இப்போது வருகிறது (6:56–57). பவுல் அப்பம், இரசத்தைப்பற்றி பேசும்போது, இதையே கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பங்குகொள்ளு தல் அல்லது ஒன்றிப்பு கொள்ளுதல் என்று நற்கருணை நோக்கில் சொல்லு கிறார் (1 கொரி 6:16). இவ்வாறு ஆண்ட வரது உணவுப்பந்தி, முடிவில்லாத வாழ் வின் "இப்போது" என்ற கூறை ஆன்மீக, உடல் அளவில் ஒருமுகப்படுத்தும் இட மாகுகிறது.

இத்தகைய ஆன்மீக வாழ்வு கிறிஸ்துவ அழியாமையின் மையம் என்றால் உயிர்ப்பு இல்லாமல் அது நிறைவற்றதா கும், முடியாததும்கூட (மாற் 12:27). இயேசு வின் குணமாக்கும் பணி, மீட்பின் இறுதி நிறைவின், உடலையும் ஆன்மாவையும் புதுப்பித்தலின், முன் சுவையாகக் கருதப் படலாம். ஆண்டவரின் இறுதி உணவு பற்றிய பருப்பொருள் தன்மை அதே நிறை வைச் சுட்டுகிறது. அதனால் தான் பவுல் உயிர்ப்போடு தொடர்புப்படுத்தி மட்டும் தான், அழியாமையைப் பற்றிப்பேசுகிறார். விசுவாசியில், இப்போது ஆவி பிரசன்ன மாக இருப்பது, உடல் உயிர்ப்பு என்னும் இறுதி மேலுடை அணிய அச்சாரமாகும் (2 கொரி 5:5). பவுல் உயிர்ப்பு உடலைக் கிறிஸ்துவின் "மாட்சிமைக்குரிய உடலின்" சாயலாக்குகிறார் (பிலி 3:21; 2 கொரி 3:18). இந்த "ஆன்மீக உடல் (1 கொரி 15:44) பாவத்திற்கும் சாவுக்கும் அடிமைப்பட்டி ருப்பதற்குப் பதிலாக பரிசுத்த ஆவியின் ஆற்றலால் உயிர்கொள்கிறது. அழிவுக் குரியதாய் விதைக்கப்படுவது, அழிவற்ற தாய், மாட்சிகைக்குரியதாய், வலிமையுள்ள தாய், இறை ஆவிக்குரியதாய், சாகாமை யுடையதாய், உயிர்த்தெழுப்பப்படும் (15:42–44.53). சாவு, விடப்படும் என்று சொல் வதைவிட வாழ்வில் ஆழ்ந்து கலந்து விடும் (2 கொரி 5:4).

இவ்வாறு உண்மையான அழியாமை, ஆன்மாவைத்தடை செய்யும் உடல் சார்ந்த கீழ்த்தரப் பண்புகளிலிருந்து விடுவித்த லாகும். இதைவிட, வீழ்ச்சியுற்ற படைப்பு என்ற அளவில் மனுக்குலத்தின், ஆன்மீக, ஊன்சார்ந்த தன்மை இப்போது போது மான மட்டும் அம்மணமாகவும் வெட்கத் திற்குரியதுமாக உள்ளது. இது மனிதர்கள் இன்னும் போதியமட்டும் உடல் பெறாதது போன்றதாகும். மனுக்குலம் நிறைவாகப் புனிதப்படுத்தப்படுமுன், மேலும் ஆடை அணிவிக்கப்பட வேண்டும் (2 கொரி 5:4). அழியாமை பற்றிய வாக்குறுதி, கிறிஸ்து வின் மகிமையில் பங்கெடுத்தல் வழியாக ஆன்மாவும் உடலும் புதுப்பிக்கப்பட நிறை வுடைமை பற்றிய வாக்குறுதியாகும்.

அழைப்பு (CALLING, VOCATION)

விவிலியத்தில் ஒருவரை மிகக் கவர்ந் திழுக்கும் பக்கங்களில் அமைந்துள்ளவை, அழைப்பினைக் கொண்ட காட்சிகள். எரி கின்ற புதர் (யாத் 3) மூலம் மோசேக்கு வரும் அழைப்பு; ஆலயத்தில் ஏசயாவிற்கு வரும் அழைப்பு (ஏசை 6); யாவே, இளம் எரேமியா இவர்களிடையே நடைபெறும் உரையாடல் (எரே 1) இவை அனைத்தும் இறைவனை அவரது மாட்சிமையிலும் மறையுண்மையிலும், மனிதனை அவனது உண்மை நிலையிலும் அவனது அச்சத்தி லும் ஈகைத் தன்மையிலும், எதிர்த்து மறுக் கும் அல்லது இணங்கிப் பதிலிறுக்கும்

சக்தியிலும் காட்டுகின்றன. மறை நூலில் இறையழைப்பின் விவரங்கள் எத்துணையளவு முக்கியத்துவம் பெற்றவை என்றால் இறைவெளிப்பாட்டிலும் மனித மீட்பிலும் இறைவன் விடுக்கும் அழைப்பு தனித்துவமும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு தருணமாக அமைந்துள்ளது.

1. பழைய ஏற்பாட்டில் அழைப்பும் திருப்பணியும்

தனிப்பட்ட நபர்கள் குறிப்பிட்ட அலுவல்களுக்கு அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு மோசே இஸ்ராயேல் மக்களை எகிப்திலிருந்து நடத்திச்செல்லவும் (யாத். 3:4–10) சாமுவேல் அவருடைய ஊழியனாக இருக்கவும் (1 சாமு 3:1–14) இறைவாக்கினர்கள் அவருடைய செய்தியை மக்களுக்கு எடுத்துக்கூறவும் (காண்க: ஆமோ 7:15; எரே 1:4–19) இறைவனால் அழைக்கப்படுகின்றனர். அதேபோல் ஓய்வு நாளை அனுசரிக்கவும் (லேவி 23:2–3) பாஸ்கு விழாவின் இறுதியிலும் (எண் 28:25) வாரங்களின் விழாவிலும் (28:26) பரிசுத்த கூட்டமாகக் கூடும்படி இஸ்ராயேல் இறைவனால் அழைக்கப்படுகிறது. ஏசயா நூல் இறைவனது அழைப்பின் விளைவாக இஸ்ராயேல் இறைவனது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகச் சிறப்பிடம் பெறுவதை விவரிக்கிறது. இஸ்ராயேலை உலகில் கடைசிப் பகுதிகளிலிருந்து (ஏச 41:9). அறத்தை நிலைநாட்ட (42:9) பெயரிட்டு (43:1) இறைவன் அழைக்க மட்டும் செய்யவில்லை, இறைவனால் அழைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஆபிரகாமைத் தங்கள் குல முதியவராக நோக்கச் சமய காரியங்களில் உறுதியற்றவர்களை உற்சாகப்படுத்துகிறார் (51:2; காண்க ஆதி 12:1–2). உண்மையில் இறைவனால் பெயரிட்டு, அழைக்கப்பட்டு (43:1) படைக்கப்படும் வரை இஸ்ராயேல் நிறுவப்படவில்லை.

இவ்வாறு பழைய ஏற்பாட்டில் உள்ள ஒவ்வொரு அழைப்பும் ஒரு தூது கலந்த திருப்பணியை உள்ளடக்கியது. எவ்வெப்போது யாரேனும் ஒரு மனிதனை இறைவன் ஆணையிட்டு அழைக்கின்றாரோ அப்போதெல்லாம் அம்மனிதனை அவர் அனுப்புகிறார். ஆபிரகாமிடமும் (ஆதி 12:1), மோசேயிடமும் (யாத் 3:10.16), ஆமோசிடமும் (ஆமோ 7:15), ஏசயாவிடமும் (ஏச 6:9) எரேமியாவிடமும் (எரே 1:7), எசக்கியேலிடமும் (எச 3:1.4) ஒரே வகையான ஆணையையே தருகின்றார். தமது மீட்பின் திட்டத்திலும் தம் மக்களின் நிர்ணயிக்கப்பட்ட முடிவைப் பொறுத்த அளவிலும் ஒரு மனிதனை இறைவன் தெரிந்தெடுத்து குறிப்பிட்ட ஒரு பணிக்காக நிர்ணயித்திருப்பதைத் தெளிவுபடுத்தி அவனை இறைவன் ஆணையிட்டு நேரிடையாகக் கூப்பிடுவதே அழைப்பு ஆகும். எனவே இறைவன் தெரிந்தெடுப்பது ஓர் அழைப்பின் அடிப்படையாக அமைகிறது. அழைப்பின் நோக்கம் இறைவனின் திருவுளத்தை முழுமையுறச் செய்துமுடிப்பது. எனினும், அழைப்பு எனும் கருத்து ஒருவரின் அறவழிப்பட்ட பொறுப்புணர்ச்சியின் மிக ஆழ்ந்த நிலையை நோக்கித் தனிப்பட்ட முறையில் சவால் விடுக்கும் ஒரு தொனியைத் தந்து, தெரிந்தெடுத்தல், திருப்பணி என்னும் கருத்துக்களைத் தெளிவுபடுத்தி அவற்றின் பொருளை நிறைவு செய்கிறது. இந்த அழைப்பு வெளிப்புற அமைப்பில் மட்டு மன்றி உள்ளுயிரின் மிக ஆழ்ந்த பகுதியையும் தொட்டு மனிதனின் வாழ்க்கை நிலையை மாறுபடச்செய்து அவனை வேறொரு மனிதனாக மாற்றுகிறது.

இறை அழைப்பில் உள்ள தனிப்பட்ட இந்த நோக்கு விவிலியத்தின் மூலச்சொற்றொடர்களாலே நிரூபணமாகின்றது. இறைவன் தாம் அழைக்கும் மனிதனின் பெயரை உச்சரிக்கின்றார் (ஆதி 15:1; 22:1; யாத் 3:4; எரே 1:11; ஆமோ 7:8; 8:2). ஒரு மனிதனை ஆட்கொண்டு அவனது வாழ்க்கையை மாறுபடச் செய்கின்ற உண்மையை நல்லவிதமாக எடுத்துக்காட்டும் வகையில், இறைவன் தெரிந்தெடுக்கப்படும் நபருக்கு புதியதொரு பெயர் தருகின்றார் (ஆதி 17:1; 32:29; காண்க ஏச 62:2). அத்துடன், தாம் விடுத்த விண்ணப்பத்திற்கு விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் இயைந்த, மனமுவந்த ஒப்புதலை எதிர் நோக்குகின்றார். சிலவேளைகளில் நொடிப்பொழுதிலே ஒப்புதல் கிடைக்கிறது (ஆதி 12:4; ஏச 6:8). ஆனால் இந்த அழைப்பு அழைக்கப்பட்ட நபரை மற்ற மனிதரிடமிருந்து வேறுபடுத்தித் தனது நண்பர்கள்

மத்தியில் அவரை விசித்திரமானதோர் கோலத்திற்கு மாற்றிவிடுவதால் (ஆதி 12:1; ஏச 8:11; எரே 12:6; 15:10; 16:1–9; 1 அர 19:4) அந்த மனிதன் அச்சத்தாலே பீடிக்கப் பட்டு அழைப்பைக் கண்டு ஒதுங்க முயலும் நிலையே அடிக்கடி நடப்பதாகும் (யாத் 4:10 தொ; எரே 1:6; 20:7).

இறைவனது கருவியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் அவரது அழைப்பை பெறுவதில்லை. எடுத்துக் காட்டாக, அரசர்கள் ஆண்டவரின் அபிடேகம் பெற்றவர்கள்தாம். ஆனால், அவர்கள் இறைவனிடமிருந்து எந்தவித அழைப்பையும் பெறவில்லை. சவுலிற்கும் (1 சாமு 10:1), தாவீதுக்கும் (16:12) செய்தி யறிவிப்பதே சாமுவேல்தான். மற்றக் குருக்களும் பிறப்பின் காரணமாக அன்றி தமது குருத்துவ நிலையை இறை அழைப்பால் பெறுவதில்லை. எபி 5:4–ல் சொல்லப்பட்டபடி ஆரோன் "கடவுளால் அழைக்கப்பட்டிருந்தாலும்", ஆரோனுக்கு அழைப்பு மோசே வழியாக வருகின்றது. அதே வேளை, ஆரோன் அழைப்பை உள்ளார்ந்து ஏற்றுக் கொண்டதாக நூலில் ஒன்றும் சொல்லப்படவில்லை. எபிரேய ருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலும் விளக்கம் தரும் சொற்றொடர் ஒன்றும் இல்லை என்றாலும் "நீரே என் மகன்... மெல்க்கிசதேக்கின் முறைமைப்படி... குரு வாயிருக்கிறீர்" (எபி 5:5 தொ) என்ற இறை வனின் சொற்களால் குறிப்பிடப் பெறும் குருத்துவத்தைவிட லேவியர் குருத்துவம் தாழ்ந்தது என்பதை ஆரோனின் மறை முகமான நிலைகொண்ட அழைப்பே ஒரு குறிப்பென நின்று காட்டுவது திருமுகத் தின் தொனிக்கு முரண்பட்டது அன்று.

2. இஸ்ராயேலின் அழைப்பும் கிறிஸ்து இயேசுவின் அழைப்பும்

இஸ்ராயேலுக்கு அழைப்பு ஒன்று கிடைத்ததா என்ற வினாவிற்கு இப் பொழுது நாம் கொள்ளும் பொருளில் பதில் தெளிவாகக் கிடைக்கிறது. விவிவி யத்தின் மிகச்சரியான மொழியில் சொல்ல விழைந்தால் மக்கள் தனிப்பட்ட ஒரு நபரைப்போல நடத்தப்படவில்லை யென்றாலும் அல்லது அவர்கள் தனி மனிதன் கொள்ளும் எதிர்ப்புணர்ச்சியை அனுபவிக்காவிட்டாலும் இறைவன் தாம் அழைக்கின்றவர்களிடம் எப்படி நடந்து கொள்கிறாரோ அப்படியே இஸ்ராயேலி டமும் நடந்து கொள்கிறார். உறுதியாக வே இறைவன் தமது சொந்தப் பிரதிநிதி கள் மூலம் இஸ்ராயேலிடம் பேசுகின்றார்; அவர்களுள் மோசே சிறப்பான முறையில் ஓர் இணைப்பாளர். சம்பந்தப்பட்டவை களில் இயல்பால் வலிந்து புகுத்தப்பட்ட மேற்கண்டவொரு வேறுபாட்டைத் தவிர, அழைப்பு ஒன்றுக்குத் தேவையான குணங்களத்தனையும் இஸ்ராயேல் கொண் டுள்ளது. உடன்படிக்கை முதன்மையாக இறைவனிடமிருந்து வரும் ஓர் அழைப்பா கும். அது இதயத்திற்கு நேர்முகமாகத் தரப்பட்ட ஒரு வார்த்தை "இஸ்ராயேலை, கேள்" (உப 4:1; 5:1; 6:4; 9:1; சங் 50:7; ஏச 1:10; 7:13; எரே 2:4; காண்க ஓசே 2:16; 4:1). என்னும் அழைப்பின் பொருளை முற்றி லும் கொள்பவர்கள் சட்டமும் இறைவாக் கினர்களும். இந்தச் சொற்கள் இறைவ னையே உறுதிச் சான்றாகக் கொண்ட ஒரு தனிவகையான வாழ்க்கையில் மக்களை உறுதிப்படுத்துகின்றன (யாத் 19:4 தொ; உப 7:6). எனவே தான் தம்மைத் தவிர வேறு எதன் மேலும் மக்கள் சார்ந்தி ருப்பதை இறைவன் தடை செய்கிறார் (ஏச 7:4–9; காண்க: எரே 2:11 தொ). இஸ் ராயேலுக்கு இறைவனிடமிருந்து வரும் அழைப்பு தன்னுள்ளத்தையும் (யாத் 19:8; யோசு 24:24) தனது முழு வாழ்க்கையை யும் அர்ப்பணிக்கவல்ல ஒரு பதிலை எதிர் நோக்கி நிற்கிறது. இப்பண்புகள் அனைத் தும் அழைப்புக்குரியவையாகும்.

ஒரு கோணத்தில், கிறிஸ்து இயேசு வின் ஆளுமையில் அழைப்பின் குணங்கள் முழுமையுறக்காணக்கிடக்கின்றன என்பது உண்மை. தந்தையின் குரலுக்கு என்றும் செவி கொடுத்துக் கீழ்ப்படியும் மிகச் சிறந்த இறைவனின் ஊழியன் அவர். ஆனால் புதிய ஏற்பாடு கிறிஸ்துவைப் பற்றிப் பேசும்போது அழைப்பு ஒன்றுக் குரிய கலைச்சொற்களைப் பயன்படுத்துவ தில்லை. இயேசு தந்தையிடமிருந்து தாம் பெற்ற திருப்பணியைப்பற்றி இடையறாது பேசினாலும் இறைவன் அவருக்கு அழைப்பு விடுத்ததாக ஓரிடத்திலும்

காணப்படவில்லை. இது கவனிக்கத்தக்க ஒருநீக்கம் ஆகும். இறைவனின் அழைப்பு ஒரு மனிதனைச் சாதாரணப் பணி செய்யும் நேரத்தில் தழுவுகிறது: அவனது நண்பர்கள் மத்தியிலே அவனை வழி மறிக்கிறது: நாம் உனக்குக் காட்டவிருக்கிற நாட்டிற்கு"ச் (ஆதி 12:1) சென்று இறைவனுக்கு மட்டுமே தெரிந்த ஒரு அலுவலில் ஈடுபடும்படி செய்கிறது. எனவே அழைப்பு உள்ளுயிரில் மாற்றத்தை முன்னரே எதிர்பார்க்கிறது. கிறிஸ்து இயேசுவின் வாழ்வில் அவருடைய திருமுழுக்குக்கு ஒரு பொருளுண்டு; ஒன்று, "நீரே என் அன்பார்ந்த மகன்" (மாற் 1:11) என்ற அரசுப்பட்டம் சூட்டும் நிகழ்ச்சி, மற்றது. தாம் முழுமையாகத் திருப்தி கொள்ளும் ஊழியனை இறைவன் அறிமுகப்படுத்துவது. ஆனால் இந்த இடத்திலோ நற்செய்தியில் வேறு எந்த இடத்திலோ அழைப்பிற்கேயுரிய காட்சிகளைக் காட்டும் குறிப்பு ஒன்றுகூட இல்லை. நற்செய்தி முழுவதிலும் இயேசு தமது தொடக்கத்தையும் முடிவு நிலையையும் பற்றிச் சிறப்பான முறையில் உணர்ந்து நிற்கிறார் (யோவா 8:14). யாருமே பின்பற்றி வரமுடியாத ஒரு நிலைக்கு அவர் செல்கிறார்; மேலும் அவரது முடிவுநிலை சிறப்பாகத், தனிப்பட்டதும் ஒப்பற்றதும் ஆகும். அது அழைப்பினால் ஏற்படுவது அன்று. மாறாக அவரது உள்ளுயிரினின்று தொடங்குவதே.

3. சீடர்களின் அழைப்பும் கிறிஸ்துவர்களின் அழைப்பும்

இயேசுவுக்கு அழைப்பு விடுக்கும் இறைவனின் குரல் எங்கேயும் காணப்படவில்லை. ஆனால் இயேசுவோ தன்னைப் பின்செல்லும்படி பற்பல அழைப்புக்களை விடுக்கின்றார். அழைப்பு ஒன்றின் மூலமே இயேசு பன்னிரண்டு பேரைத் தன்னருகே கொள்கின்றார் (மாற் 3:13). இதே வகையான ஓர் அழைப்பு மற்றவர்களுக்குக் கிடைக்கிறது (மாற் 10:21; லூக் 9:59 தொ.62). அவரது போதனை அனைத்தும் அழைப்பின் கருத்தைச் சுற்றியே எழுகின்றது. "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து..." (மத் 16:24; யோவா 7:17) என்று அவர் மட்டுமே அறிந்த புதிய பாதை ஒன்றின் வழியாக அவரைப் பின்தொடர அந்த அழைப்பு வருகிறது. "அழைக்கப்பட்டவர் பலராயிருக்கையில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலரே". ஏனெனில் அரசுக்கு வரவேற்கும் அழைப்பு தனிப்பட்ட அழைப்பாகும்; அதற்குச் சிலர் செவி கொடாது இருந்து விடுகின்றனர்.

கிறிஸ்துவன் என்பவன் அழைப்புப் பெற்ற ஒருவன் என்பதை இளம் திருச்சபை தொடக்கத்திலே கண்டுணர்ந்தது. பேதுரு எருசலேமில் இஸ்ராயேலுக்குச் செய்த முதற்சொற்பொழிவு இறைவாக்கினர்களால் விடுக்கப்பெற்ற அழைப்பைப் போன்றது. பேதுரு தனிபட்டவொரு விருப்பத்தைத் தூண்டிவிட முயல்கின்றார்; "நெறிகெட்ட இந்தத் தலைமுறையிலிருந்து நீங்கி, உங்களை மீட்டுக் கொள்ளுங்கள்" (அ.ப. 2:40). பவுலைப் பொறுத்தவரையில் "அழைப்புப் பெற்ற புனிதர்"களாய் உரோமை, கொரிந்தியக் கிறிஸ்துவர்களுக்கும் "அழைப்புப் பெற்ற அப்போஸ்தலர்" ஆகிய தனக்கும் இடையே உண்மையான ஒப்புமையைக் காண்கின்றார் (உரோ 1:1–7; 1 கொரி 1:1 தொ...). கொரிந்தியர்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி அவர்களை மாற்ற, பவுல் "சகோதரர்களே, நீங்கள் அழைக்கப்பட்ட போது என்ன நிகழ்ந்தது என்பதை எண்ணிப்பாருங்கள். மனிதர் மதிப்பின்படி உங்களுள் ஞானிகள் எத்தனைபேர்?" (1 கொரி 1:26) என்று சொல்லி அவர்களுடைய அழைப்பை நினைவூட்டுகிறார். அந்த அழைப்பே கொரிந்திய சமூகத்திற்கு அது கொண்ட மதிப்பினை வழங்குகிறது. இறைவன் விசுவாசிகளைக் கிறிஸ்துவோடு நட்புறவு கொள்ளவும் (1 கொரி 1:9) அமைதியாக வாழவும் (7:15), கிறிஸ்துவில் ஒரே நம்பிக்கையில் பங்கு கொள்ளவும் (எபே 4:4) முடிவில்லா வாழ்வுக்கும் (1 திமோ 6:12) அழைக்கிறார். விசுவாசிகள் ஒவ்வொரு நாளும் தங்கள் கடமைக்கு அழைக்கப்படுகின்றனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் அதற்குப் பதில் அளிக்க வேண்டும் (பிலி 3:13–14). இக்காரணத்திற்காக அவர்கள் "பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ற வாழ்க்கை நடத்த" உந்தப்படுகின்றனர் (எபே 4:1). கடந்து செல்லும் இயல்பைக் கொண்ட இவ்வுலகில் ஒழுக்

கத்தின் விதியாக, "ஒருவன் எந்த நிலையில் அழைக்கப்பட்டானோ அந்த நிலையிலேயே அவன் கடவுள் திருமுன் நிலைத்திருக்கட்டும்" (1 கொரி 7:24) என்று கூறிப் பவுல் ஒவ்வொருவரையும் தூண்டுகிறார். கிறிஸ்துவின் வாழ்க்கை ஓர் அழைப்பு. ஏனெனில் அது ஆவியின் வழிப்பட்ட வாழ்க்கை. அதேவேளை ஆவியோ முழுவதும் புதியதோர் உலகத்தின் ஊற்று. தந்தையின் வார்த்தைக்கு நாம் பதில் அளிக்கவும், மகன்களுக்குரிய முறையில் நடக்க நம்மை எழுச்சியூட்டவும் "நம் ஆவியோடு அதே ஆவி இணைந்திருக்கிறது" (உரோ 8:16).

கிறிஸ்தவனின் அழைத்தல் ஆவியால் பிறந்திருப்பதாலும் கிறிஸ்துவின் முழு உடலுக்கும் ஆவியே வாழ்வின் ஒரே ஊற்றாக இருப்பதாலும் ஒன்றென இருக்கும் கிறிஸ்துவ அழைத்தலின் மையத்தில் "பலவகைக் கொடைகள்.... திருப்பணிகள் ....ஆற்றல்மிக்க செயல்கள்" உள்ளன. இருந்தபோதிலும், பல திறப்பட்ட இந்த அருட்கொடைகளில் இறுதியில் ஒருடலே, ஒராவியே இருக்கின்றது (1 கொரி 12:4–13). அழைப்புப் பெற்றவர்களைக் கொண்ட சமூகமான திருச்சபை தானும் "அழைத்தல் பெற்றதும்" "தேர்ந்தெடுக்கப்பட்டதும்" ஆகும் (2 யோவா 1). எனவே, திருச்சபையில் இறைவனின் அழைப்பைப் கேட்டுத் தன் அழைப்பிற்கேற்ப பதில் கூறிடும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் மணவாளனின் குரல்கேட்டு "ஆண்டவராகிய இயேசுவே வாரும்" (திருவெளி. 22:20) என்று பதில் உரைக்கும் முழுத் திருச்சபையின் அழைப்பிற்கே உண்மையில் பதில் கூறுகின்றார்கள். புனிதர்களுக்குத் தகுதியான பரிசுத்த வாழ்க்கை முறையால் இறை அழைப்புக்குப் பதில் அளிக்கின்றனர் (உரோ 1:7; 1 கொரி 1:2; காண்க 2 திமோ 1:9).

அறிகுறி (SIGN)

இன்னொருவருடைய எண்ணத்தையோ, விருப்பத்தையோ அறிந்து கொள்ள உதவுவது குறியாகும். அவ்வாறு ஒரு பொருளின் இருப்பை, அதன் உண்மையைத் தெரிந்து கொள்ள உதவுவதும் குறியாகும். இத்தகைய குறிக்கும் குறியால் தெரிந்து கொள்வதற்கும் உள்ள தொடர்பு இயல்பானதாக இருக்கலாம் அல்லது மக்கள் தங்களுக்குள் ஏற்பாடு செய்து கொண்டதாய் இருக்கலாம். மக்கள் தங்களுக்குள் உறவாடுவதில் பயன்படுத்திய பல்வேறு குறிகளையும் வேதாகமத்தில் காணலாம். போர்வீரர்கள் பயன்படுத்திய குறிகள் (யோசு 2:18; நீதி 20:38; எச 13:2; 18:3), எக்காளத்தைக் கொண்டு எழுப்பிய வழிபாட்டுக்குறிகள் (1 மக் 4:40), ஒருவரை அடையாளம் கண்டுகொள்ள முன்பே ஒப்புக்கொள்ளப்பட்டகுறி (தோபி. 5:2), அறிவிப்புக்குறி (எச 39:15), தனிப்பட்ட ஒருவரின் கையெழுத்து (2 தெச 3:17) அல்லது நற்பண்பின் அடையாளம் (ஞான 5:11.13) முதலியன.

மக்களின் மீட்புக்காக இறைவனும் அவர்களின் இயல்புக்கு ஏற்ற குறிகளைப் பயன்படுத்துகிறார். அக்குறிகளை அடையாள அதிசயமென்றும் அருங்குறிகளென்றும் அழைக்கிறோம். ஏனெனில் முதன் முதலாக இறைவன் தம் மீட்புச் செயலில் அனைத்தும் கடந்தவராகக் காணப்படுகிறார். இவ்வாறு தம் ஆற்றலையும் அன்பையும் குறிப்பாய் உணர்த்துகிறார். எனவே புதுமைகள் விரும்பிய பயன் அளித்துத் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன. அவை மீட்பு வரலாற்றில் இறைவன் காட்டிய அருங்குறிகளில் தனிச்சிறப்பிடம் பெறுகின்றன. இவைகளைப் பற்றித்தான் நாம் இங்குப் பார்க்கப்போகிறோம். ஆயினும் புதுமைகள் மட்டும் இறைவன் காட்டும் குறிகள் அல்ல. ஏனெனில் இறுதியாக இயேசுவே மாபெரும் குறியாக இருந்து தந்தையின் அன்புக்குத் தலைசிறந்த சான்றாய் விளங்குவார்.

I பழைய ஏற்பாடு

கடந்த காலக் குறிகளின் நினைவாலும் நிகழ்காலக் குறிகளின் கொடையாலும் இறைவன் தம் மக்களின் விசுவாசத்திற்கு உயிரூட்டுகின்றார். வரவிருக்கும் குறிகளின் அறிவிப்பால் அவர்களிடம் நம்பிக்கையை உருவாக்குகின்றார்.

1. உடல் அடையாளம், சில சமயங்களில் முன் குறிப்பவை :-

ஆதி 1:14–இல் வானத்தின் கோள்கள் அடையாளங்களாக பயன்பட வேண்டு

மென்று சொல்லப்பட்டுள்ளது. எ.கா. திசைகளையும், நாட்களையும், தட்பவெப்ப நிலையையும் கட்டிக்காட்டுபவைகளாக உள்ளன. எரே 10:2-இல் "வானத்தின் அடையாளங்கள்" அசாதாரணமான வான கம் சம்பந்தமான காட்சியை முன் வைக் கின்றன. சங் 65:8 'உம் அருங்குறிகள்' என்பது கடவுளுடைய படைப்பாற்றல் செயல்களையும், இயற்கையில் அவருடைய வெளிப்பாடுகளையும் காட்டுவதாக தெரி விக்கின்றது. யோசு 4:6; 39:15 குறியானது காலநேரம் அல்லது அடுக்கப்பட்ட கற் களைக் குறிக்கும். சங் 74:4- இங்குப் போர் குறிகளைக் கொண்டிருக்கலாம். யோ வேல் 2:30 "இன்னும் விண்ணிலும், மண்ணிலும், அற்புதங்களை காட்டு வோம்" என்பது ஆண்டவரது நாளின் வருகையைக் குறிக்கிறது.

2. ஓர் அடையாளம் காட்டும் அறிகுறி :-

எபிரேயர்களின் வீட்டின் மீதுள்ள இரத்தம் அது அவர்களுடைய இல்லம் என்பதை அடையாளம் காட்டியது (யாத் 12:13)

3. ஓர் அறிவிப்பு :-

வானவில், நோவாவுடன் கடவுள் செய்து கொண்ட உடன்படிக்கையை அறிவிக்கின்றது. அதேபோல் எல்லா உலகத்தின் மீதும் (ஆதி 9:12-13.17); விருத்த சேதனம் அபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைச் சுட்டிக் காட்டு கின்றது (ஆதி 17:11).

4. ஓர் எச்சரிக்கை:-

பலிப்பீடத்தின் மீதுள்ள தட்டையான தகடானது பாவிகளின் மரணத்தால் செய்யப்பட்டது என்ற இடைவிடாத எச்ச ரிக்கையாக இஸ்ராயேலுக்கு இருக்கட்டும் (எண். 16:38), அப்போது கோராக்கின் இறப்பும், அவருடைய துணைவர்களின் இறப்பும், அதே நோக்கத்திற்காகப் பயன் படுத்தப்பட வேண்டும் (எண். 26:10). ஆண்டவருடைய பேழைக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள ஆரோனின் கோல், கலகம் உண்டாக்கக் கூடியவர்களைப் பய முறுத்தக்கூடியவையாக இருக்கும்படியாக வைக்கப்பட்டுள்ளது. எச 4:3-ல் செங் கல்லின் மேல் வரையப்பட்ட முற்றுகை யிடப்பட்ட எருசலேமின் படம், என்ன விரைவாக நடக்கவேண்டும் என்பதை எச்சரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. எச 12:1-16; 24:15-27-இல் உள்ள அடை யாள செயல்கள், மேற்குறிப்பிட்ட பொரு ளில் குறிகளாகும்.

5. ஓர் உறுதிமொழி அல்லது நிரூபணம் :-

யோசு 2:12-ல் இராகாபு, அவளும் அவளுடைய குடும்பமும் பாதுகாக்கப் படும் என்பதற்கு "ஒரு நம்பத் தகுந்த அடையாளம்" கொடுக்குமாறு கேட்கின் றாள். கடவுளுடைய வார்த்தையும், இறைவாக்கினர்களுடைய வார்த்தையும் உண்மை என்பதைக் காட்டும் பொருளி லும் குறி பயன்பட்டுள்ளது (யாத் 3:12; 1 சாமு 10:7.9; 14:10; 1 அர 13:3.5; 2 அர 19:29; ஏச 37:30; 20:8-9; 2 நாள் 32:24.31; ஏச 38:7; 7:11.14; 38:22; எரே 44:29). சங் 86:17இல் அடையாளம் என்பது இறைவன் தம் தயவைக் காட்டுவதைக் குறிக்கிறது.

6. ஒரு ஞாபகமூட்டும் அறிகுறி :-

யாத். 13:9, பாஸ்கா என்பது மக்களு டைய முன்னிலையில் எப்போது அவர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று வந்ததை குறிக்கின்றது. அதேபோல் வச 16-இஸ்ராயேலில் தலைச்சன் பிள்ளை களின் பலி அல்லது மீட்பு நினைவுகூரும் நோக்கைக் கொண்டுள்ளது. யாத் 31:17- இல் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வு நாள் சட்டங்கள், கடவுளுடைய படைப்பு வேலை யையும், அவருடைய ஓய்வையும் நினை வூட்டுவதாகும் (எச 20:12.20).

உப. 6:8-இல் கடவுளுடைய வார்த்தை களை ஒருபோதும் மறவாதிருக்க, அவற்றை கையில் அடையாளம் போல் கட்டவேண்டும். இப்பகுதியும் 11:18-20-உம் சேர்ந்து சீட்டுப் பட்டயங்கள் அணிவதற்கு அடிப்படையாகின.

7. முன் அறிகுறி அல்லது படிப்பினை:-

சங். 71:7-சங்கீத ஆசிரியர் தன்னுடைய காலத்து மக்களுக்குத் தான் ஒரு முன் அறிகுறியாக உள்ளதாகக் கூறுகிறார். ஏசயாவும் இவ்வாறே தானும் தன்னு டைய மக்களுக்கும் இருப்பதாக உரிமை கோருகிறார் (ஏச 8:18; 20:3). இந்த உருவம்

சிலைவழிபாடு செய்கிறவரைப் பற்றியும் பயன்படுத்தப்பட்டுள்ளது (எச 14:8).

8. ஒரு சகுணம்:-

குறி சொல்பவர்களின் சகுணங்களைப் பற்றி ஏச 44:25–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சிலர் சங் 74:9–ல் வரும் அறிகுறிகள் குருத்துவ சகுணங்களைக் குறிப்பதாகக் கருதுவர். 'அடையாள மனிதர்கள்' என்ற சொற்றொடர் (செக் 3:8) "நல்ல சகுண முடையவர்கள்" என்று கருதப்படுகின்றது.

9. ஒரு சாட்சி அல்லது சான்று:-

ஏச 19:19–இல் எகிப்தில் உள்ள ஒரு பீடம் ஆண்டவருக்கு ஒரு அயலான் நாட்டிலே சான்றாக உள்ளது. ஏச 55:13 –இல் உள்ள 'முடிவில்லா அடையா ளம்' எதிர்காலத்தின் புனிதம் ஆண்டவ ருடைய வார்த்தைக்கும், நோக்கத்திற்கும் சாட்சி யாக இருக்கும் என்பதை உணர்த்துகிறது (காண் 66:19). சான்று என்ற பொருளில் யோபு 21:29–ல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

10. கடந்த கால அறிகுறிகள்:-

மோசே நிகழ்த்திய அதிசயங்களும் (யாத் 3:20; 15:11;34:10; நீதி 6:13; சங் 77:12. 15;78: 11 தொ.32: எரே 21:2; நெக 9:17) வாக்களிக் கப்பட்ட நாடு உரிமையாகும் வரை (எ.கா. சங் 78:4; 105:2.5), யோசுவாவின் வரலாற் றில் (யோசு 3:5) நிகழ்ந்த புதுமைகளும் இறைவனின் அரும்பெருங்குறிகளென பழைய ஏற்பாடு கருதுகின்றது (யாத் 4:9. 17.28.40; 10:1 தொ; எண் 14:11. 22; யோசு 24:17); எகிப்தில் நிகழ்ந்த புதுமைகளாலும் (யாத் 11:9) அதைத் தொடர்ந்த நிகழ்ச்சி களாலும் (சங் 105:5) இறைவன் தம்முடைய தூதர்களின் பணியை இஸ்ராயேலரி டையே உறுதிப்படுத்தினதுமன்றி (யாத் 4:1–9.29.31;14:31), தம்மக்களை விடுவிப்ப தில் தம் வலிமையையும் அன்பையும் சிறந்த முறையில் வெளிப்படுத்துகின்றார் (சங் 86:10; 106:7;107:8).

உபாகமும் (4:34; 6:22; 7:19....) அதைத் தொடர்ந்து மற்ற ஆகமங்களும் (யாத் 7:3; சங் 78:43; 105:27;135:9; எரே 32:20 தொ; நெக 9:10; எஸ் 10:3; பாரூ 2:11; ஞான 10:16) "அருங் குறிகளும் அதிசயங்களும்" என்ற இரட் டைக்கிளவியை அடிக்கடி பயன்படுத்து கின்றன. இவற்றின் வாசகர்கள் இந் நிகழ்ச்சிகளைக் கண்டவர் அல்லர். ஆனால் தொடக்க காலத்தில் நிகழ்ந்த குறி–நிகழ்ச்சிகள் இஸ்ராயேலின் நினை வில் நீங்காதிருக்கவேண்டும். ஏனெனில் இறைவனோடு செய்த உடன்படிக்கை யைப் பிரமாணிக்கமாய்க் காப்பாற்ற அவற்றை அடிக்கடி நினைவுகூர்தல் வேண்டும் (உப 4:9; 8:14 தொ; சங் 105:5).

11 நிகழ்காலக் குறிகள்:-

அ. இஸ்ராயேலின் திருவிழாக்கள் யாவேயின் அதிசயங்களை நினைவு கூர்கின்றன (சங் 114:4). இவ்விழாக்களின் வழிபாட்டு முறைகள், குறிப்பாக சில சடங்குகளும் (யாத் 13:9.16; காண் உப் 6:8; 11:18) சில பொருட்களும் (எண் 17:3.25; காண்க யோசு 4:6), இஸ்ராயேலின் ஞாபகத்தைப் பசுமையாகக் காத்து அதன் விசுவாசத்தை வளர்க்கின்றன.

ஆ. விசுவாசத்தின் நினைவு மோசே, அவர் முன் ஆபிரகாமின் தேர்வு, அதற் கும் முன் உலகப் படைப்பு வரை எட்டு கின்றது. ஓய்வுநாள் (யாத் 31:16 தொ; எச. 20:12), வானவில் (ஆதி 9:8–17), விருத்த சேதனம் (17:9–13) ஆகியவை இறைவன் முறையே ஆதாம், நோவா, ஆபிரகாம் இவர்களோடு செய்த உடன்படிக்கை களை ஞாபகமூட்டுகின்றன. இவற்றையே இறைவனின் நிரந்தரமான குறிகளாக குருக்கள் மரபு கருதுகின்றது.

ஏனெனில் புறப்பாட்டை ஒட்டிய அதி சயங்களை நிகழ்த்திய அதே இறைவன் தான் உலக அதிசயங்களையும் தோற்று வித்தார் (சங் 89:6;136:4; யோபு 37:14). விண் வெளிக் குறிகளாகிய விண்மீன்கள் காலத் தைக் கணக்கிட உதவுதல் மட்டுமன்றி படைத்தவரையம் இடையறாது ஞாபகப் படுத்துகின்றன. மோசேயின் வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவாக்கும் திருவிழாக் களும் காலத்தைக் கணிக்கின்றன (ஆதி 1:14; சங் 65:9; எரே 10:2; சீரா 42:18 தொ; காண் 43:1–10)

இ. ஆனால் வாக்களிக்கப்பட்ட நாட் டில் நுழைந்ததோடு புனித வரலாறு முடிவு பெறவில்லை. அங்கும் தொடர்ந்து யாவே மீட்பதில் தன் வலிமையை அவ்வப் பொழுது அருங்குறிகளால் காட்டுகின்

றார் (1 அர 13:3.5; 2 அர 19:29; 28: 8 தொ; எலியா, எலிசா, ஏசயா இவர்களின் வரலாறுகள்). இவற்றுள் இறைவன் தாமாகவே முன்வந்து செய்வன சில (ஏச 7:11); பிறர் வேண்டுதலுக்கிணங்க நிகழ்த்துவன சில (நீதி 6:17.37; 2 அர 20:8 தொ; 2 நாள் 32:24). போலியான இறைவாக்கினர்கூட மாயவித்தையால் உண்மையாகவே அதிசயிக்கத்தக்க அருங்குறிகளை முன்னறிவிப்போடு நிகழ்த்தலாம்; உண்மையான அல்லது பொய்யான கனவுகளின் பொருள் உணர்ந்துரைக்கலாம் (எரே 23:26 தொ). அதனால்தான் யாவேயை விசுவசித்து அதற்கேற்பப் போதிக்கின்றவர்கள் நிகழ்த்துவன மட்டுமே இறைவனின் அருங்குறிகள் என்று நாம் ஏற்றுக் கொள்கின்றோம் (யாத் 13:2–6).

ஈ) சில வேளைகளில் எதிர்பாராத சூழ்நிலைகள் கூட இறையுளத்தின் வெளிப்பாடாக கொள்ளப்படுகின்றன (1 சாமு 14:10; ஆதி 24:12 தொ). முன்னறிய முடியாத இயற்கையான நிகழ்ச்சிகளைக்கூட இறைவனுடைய செயல்கள் என்று பல முறை இறைவாக்கினர் அறிவித்து விடுகின்றனர். இவை உண்மையாகும் பொழுது முன்பே அறிவித்திருந்த ஒரு பணிக்கு ஆதாரமென்றோ (1 சாமு 10:1.7) அல்லது வருங்காலத்தில் இன்னும் தெளிவாக வரலாற்றில் இறைவன் தலையிடுவார் என்று காட்டும் ஒரு அருங்குறியென்றோ (2:34; எரே 44:29 தொ; 20:6;28:15 தொ) இவற்றை ஏற்றுக்கொள்கின்றோம். அப்பொழுது நம்பிக்கையோ (யாத் 14:13; ஏச 7:1–9), மனமாற்றமோ (2 சாமு 12:13 தொ; எரே 36:3 தொ) தோன்றுகின்றது. மேலும் இது போன்று குறுகிய காலத்தில் நிறைவேறக் கூடிய முன்னறிவிப்பு இறைவாக்கினர் உண்மையானவரா போலியா என்று பிரித்துணர ஒரு குறிப்பாகவும் பயன்படுகின்றது (உப 18:22).

உ. இறைவாக்கினரின் செயற்குறிகள்:–

வருவனவற்றை செயல்கள் மூலமாக முன்னறிவிக்கின்றன (ஏச 20:3; எச 4:3; 12:6.11; 24:27; ஓசே 1–3). அவர்கள் கூறும் இறைவார்த்தை விரைவில் செயலாகக் கூடியது என்று காட்டுகின்றன. ஓசேயா, ஏசயா இவர்களின் குழந்தைகள் கூட இவை போன்ற குறிகள்தாம்; அவர்களுடைய பிறப்பும், குறிப்பான பெயரும், இறைவனுடைய செயல்கள் சிலவற்றின் முன்னறிவிப்பாகவே உள்ளன. அரசுரிமையின் வாரிசான இம்மானுவேல் (இறைவன் நம்மோடு) முன்னறிவித்தபடி பிறக்கும்பொழுது, அப்பிறப்பே மீட்பின் குறியாகின்றது (ஏச 7:14).

ஊ) யாவேயின் ஆதரவைக் காட்டும் வெளி அடையாளங்கள் சிலவும் இக்குறிகளைப் போன்றனவே (ஆதி 4:15; யாத் 12:13; எச 9:4.6). அவை யாவேயின் வாக்குப்படி அவருடைய உரிமையையும் சித்தத்தையும் அறிவிக்கின்றன, உண்மையாக்குகின்றன.

இறைவனுடைய அன்பையும் இயல்பு கடந்த தன்மையையும் ஏதாவது ஒரு வழியில் வெளிப்படுத்துவதே நிகழ்காலக் குறிகளின் பண்பாகும். இறைவார்த்தையைத் திறந்த உள்ளத்தோடு ஏற்றுக்கொள்பவர்கள் (காண் யாத் 7:13; ஏச 7:10 தொ) விசுவாசிகளாய் வாழ இக்குறிகள் உதவுகின்றன.

12. வருங்கலக் குறிகள்:–

இறைவன் நம்மைவிட்டு அகன்றுவிட்டார் என்று கோவில் பாழடைந்தபோது தோன்றிய இழப்புணர்வு, புதுமைகள், இறைவாக்கினரின் முன்னறிவிப்புகள் (சங் 74:9) போன்ற குறிகளும் மறைந்த பொழுது அதிகமாகின்றது. ஆனால் அகதிகளாய் வாழும்பொழுது விரைவில் தாய்நாடு திரும்பும் நிகழ்ச்சி ஒரு புதிய புறப்பாடாக (ஏச 43:16–20) உருவகிக்கப்பட்டு 'நிலையான தகர்த்தமுடியாத ஒரு குறியாக' அறிவிக்கப்படுகின்றது (55:13). ஆனால் அவ்வாறு நடக்காதபொழுதுகூட யாவே ஐயம் இன்றி மீட்பார் என்ற நம்பிக்கை தளரவில்லை: "குறிகளை மீண்டும் செய்யும், அதிசயங்களை நிகழ்த்துங்கள்" (சீரா 36:5 தொ). இறைவாக்கினருள் சிலர் இம்மீட்புச்செயல் இஸ்ராயேலை மட்டுமன்றி எல்லோரையும் பாதிக்கும் என்று எதிர்பார்க்கின்றனர். யாவே பிறரைப் பழிவாங்கினாலும், அவர்களையும் மனந்திருப்பக்கூடிய குறியொன்று தருவார் (ஏச 66:19). இம்முன்னறிவிப்பாலும் நம்பிக்கையினாலும்தான் எஞ்சினோர் மீட்பரின் வருகைக்கும் தயாராய் இருக்கின்றனர்.

II புதிய ஏற்பாடு

மெசியா வரும்பொழுது யாத்திரை காலத்தில் நிகழ்ந்ததையொத்த அதிசயங்கள் நிகழும் என யூதர்கள் எதிர் நோக்கியிருந்தார்கள். புறவினத்தார்மேல் அடையப்போகின்ற வெற்றியைப் பற்றியும் கனவு கண்டார்கள் (காண்க 1 கொரி 1:22). இவ்வுலகைச்சார்ந்த நிலையில் இந்நம்பிக்கை பொய்யானாலும் மறுவுலகைச் சார்ந்த நிலையில் அது நிறைவேறுகின்றது. இயேசு மீட்புச்செயலைத் தமது புதுமையால் ஆரம்பிக்கின்றார். சிலுவையிலும் மகிமையிலும் உயர்த்தப்படுதலாகிய பெருங்குறியான (யோவா 12:33) தமது 'புறப்பாட்டினால்' (லூக் 9:31) முழுமையாக்குகின்றார். சிலரால் எதிர்க்கப்பட்டாலும்கூட, நம்முடைய பிணிகளைத் தன்மீது சுமக்கும் ஊழியனாகப் பணிபுரியம் இயேசு (மத் 8:17= ஏச 53:4) மக்கள் கூட்டத்திற்கு விடுதலை அளிக்கும் ஆற்றலுடைய குறியாகவும் (லூக் 2:34), சிதறிக் கிடந்தோரை ஒன்று கூட்டும் சின்னமாகவும் விளங்குகின்றார்.

1. மெசியாவின் வரவிற்கான அடையாளக் குறிகள்:-

விவிலியக் காலங்களில் ஓர் இறைவாக்கினர் தன்னுடைய செய்தியை நிச்சயப்படுத்துவதற்காக குறிகளை காட்டுவார் என்பது இயற்கையாக எதிர்பார்க்கப்பட்டதாகும். ஆனால் திருமுழுக்கு யோவான் எந்தவித குறியையும் காட்டவில்லை என்பது ஒரு குறையாகும் (யோவா 10:41). மெசியா 'இறைவாக்கினர்' தம்மை அறிமுகப்படுத்துவதற்கான அடையாளங்களைக் கொடுப்பார் என்பது எதிர்பார்க்கப்பட்டது (யோவா 1:21; 6:14; உப 18:15), மெசியாவின் தோற்றம் குறிப்பிட்ட அளவுக்கு ஒரு தெளிவற்றதாக இருப்பதனால், அதுபோல அதுசம்பந்தமான அறிகுறிகளும் உண்மையானவையா என்ற சந்தேகம் எழுகின்றது. பரிசேயர்கள் இயேசுவிடம் அவர் உண்மையாகவே இறைவாக்கினரா அல்லது மெசியாவா என்பதை நிரூபிப்பதற்கு அடையாளத்தைக் கேட்பது என்பது காலத்திற்கு ஏற்ற ஒன்றாக இருந்தது (மத் 12:38; மாற் 8:11; லூக் 11:16; யோவா 2:18). இப்படியாக பவுலைக் கொரிந்தியர்கள் அவர் அப்போஸ்தலர் என்பதற்கான அடையாளம் காட்டு என்று கேட்டதில் அவர்களுடைய உரிமையாக தென்படுகின்றது (2 கொரி 12:12). பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை இது ஒரு தன்னிலே வெளிப்படுத்தக் கூடிய அடையாளமாக கடைபிடிக்கப் பட்டு வந்தது. மேலும் மறு உலகைச் சார்ந்த அறிகுறி கொண்டுதான் வெளிப்படவேண்டும். ஆனால் அது அற்புதமானதாக இருக்க வேண்டியதில்லை. இயேசு பிறந்தபோது வானதூதர்கள் மாட்டுக் குடிலில் கிடத்தியிருந்த குழந்தையைப் பற்றிய அடையாளத்தை கொடுத்தனர் (லூக் 2:12). சீமோன் குழந்தை இயேசுவைப் பற்றி "எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான்" (லூக் 2:34) என்று கூறி இருக்கின்றார். இயேசுவைப் பற்றிப் புரிந்தவர்களுக்கு, இது கடவுள் தாமே முன்வந்து மனிதனுடைய மீட்பை வெளிப்படுத்தும் உண்மையை வெளிப்படுத்துகின்றது. மேலும் அவருடைய உயிர்ப்பு அவருடைய வார்த்தையையும், பணியையும் உண்மையானவையாக ஆக்குகின்றது (அ.ப. 2:22). அப்போஸ்தலிக்க திருச்சபை இயேசுவின் கருத்தரிப்பிலிருந்து விண்ணுலகிற்கு எழுந்து சென்றது வரை கடவுளால் நல்ல உள்ளம் படைத்தவர்களுக்குக் கொடுக்கப் பட்ட அடையாளம் என்று விசுவசித்தனர், இது நான்காம் நற்செய்தியின் பின்னணியில் உள்ளது.

2. இயேசுவின் வாழ்விலே அறிகுறிகள்:-

அ) கடந்த கால அதிசயங்களெல்லாம் மீண்டும் புதுப்பிக்கப்பெறும் என்ற இறைவாக்கிற்கிணங்க (மத் 11: 4 தொ= ஏச 35: 5 தொ; 26:19), இயேசு புதுமைகளைச் செய்கின்றார். இப்புதுமைகள் இயேசுவின் போதனை உண்மையானது என்று காட்டுகின்றன. மீட்பை முன்னறிவித்துச் செயல்படுத்துகின்றன (மாற் 8:23 தொ). அவருடைய அதிகாரம் அவருடைய செயல்கள் இவற்றோடு இப்புதுமைகளும் 'காலத்தின் அறிகுறிகளாக' (மத் 16:3), அதாவது மெசியா வந்துவிட்டார் என்று காட்டும் அடையாளங்களாக விளங்குகின்றன. ஆனால் இஸ்ராயேல் பாலைவனத்தில் செய்ததற்கு மாறாக (யாத் 17:2.7; எண்

14:22), தமக்குச் சாதகமான அறிகுறிகளை இறைவனிடமிருந்து கேட்டு அவரைச் சோதிக்க இயேசு மறுக்கிறார் (மத் 4:7=உப 6:16). கண்கவரும் அதிசயங்களுக்கு ஆசைப்பட்டு, அருங்குறி ஒன்றைக் கேட்டு அவரைச் சோதிப்போரையும் திருப்தி படுத்த மறுக்கின்றார் (மத் 16:1 தொ). ஒத்தமை நற்செய்திகள்கூட இயேசுவின் இத்தயக்கத்தை எதிரொலிப்பதுபோல, புதுமைகளை, அவரது எதிரிகளின் சொல் வழக்கில், "அறிகுறிகள்" என்று அழைக்கவில்லை (மத் 12:38; லூக் 23:8). மரியாள் (லூக் 1:36 தொ), இடையர் (2:12) போன்ற எளியோருக்கு மீட்பின் வருகையைப் பற்றிய அறிகுறிகளை இறைவன் தருகிறார் என்பதில் ஐயமில்லை. ஆனால் யூதர்கள் எதிர்நோக்கியிருக்கும் குறிகளை அவர்களுக்குத் தருவது அவருடைய திருப்பணிக்கே மாறாகும். இக்குருடர்கள் முதன் முதலில் 'யோனாவின் அறிகுறியை' (லூக் 11:29–32) கவனிக்கவேண்டும். அதாவது தபசுக்கழைக்கும் இயேசுவின் போதனையைக் கேட்கவேண்டும். அப்பொழுதுதான் தங்களுடைய வசதிக்கேற்பக் குறிகளைத்தேடிக்கொண்டிருக்காமல் 'காலத்தின் குறிகளை' அவர்களால் கணிக்க இயலும். அவற்றில் முக்கியமானதான 'யோனாவின் அறிகுறியை' (மத் 12:40) அதாவது கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொள்வார்கள்.

ஆ) யோவானின் நற்செய்தியிலும் (யோவா 4:48 தவிர), அப்போஸ்தலர் பணி மற்றும் மடல்களிலும் "அறிகுறி" என்ற சொல்லைப் பயன்படுத்துவதுபற்றி ஒரு விதமான தயக்கமும் இல்லை. இயேசுவின் காலத்தில் வாழ்ந்தோர் அவருடைய அறிகுறிகளால் அவரை விசுவசித்திருக்க வேண்டும் என்று யோவான் கருதுகின்றார். (யோவா 9:35–38...). யாவே தம் மக்களைப் பாலையில் சோதனைக்குட் படுத்தி (உப. 8:2) தம்மை வெளியிட்டதைப் போல (எண் 14:22), சோதனைக்குட்பட்டவருக்கு (யோவா 6:6) இயேசுவின் குறிகள் அவரது மகிமையை வெளிப்படுத்துகின்றன (2:11). மோசே எகிப்தைவிட்டுப் புறப்பட்ட மக்களுடைய மீட்புக்காக உயர்த்திய நலந்தரும் சர்ப்பத்தின் சின்னத்தைப் போல (எண் 21:8; யோவா 3:14) வாழ்வின் ஊற்றாக (யோவா 12:10) சிலுவையிலே ஊடுருவப்பட்டுத் தொங்கும் அறிகுறியை விசுவாசக் கண்களால் காண (யோவா 19:37= செக் 12:10) இக்குறிகள் மக்களைத் தயார் செய்கின்றன.

கிறிஸ்துவைக் காண வேண்டும் என்று கேட்ட கிரேக்கர்களைப் போன்று (யோவா 12:21.32 தொ) இவ்விசுவாச நோக்கினால் கிறிஸ்துவர்கள் மனந்திரும்புகின்றார்கள் (20:29). இவர்கள் ஊடுருவப்பட்டவரிடமிருந்து வழிந்தோடும் இரத்தத்தையும் நீரையும் (19:34) திருமுழுக்கு, ஒப்புரவு, நற்கருணை என்ற அருட்குறிகளால் நாம் பங்குபெறும் திருப்பலி, ஆவியின் வாழ்வு இவற்றின் அடையாளங்களாகக் காண்கின்றனர். தம் உயிர்ப்பினால் இயேசு உயிருள்ள நீரூற்றாகும் ஆலயமாகிறார் (2:19;7:37 தொ; 19:34; சங் 14:8; எச 47:1 தொ); அவரின் மீட்புச் செயல்களாகிய இவ்வருட்குறிகளை நோக்கும்பொழுது, இயேசுவின் அறிகுறிகளெல்லாம் (யோவா 5:14; 6:9; 13:1–10) முன்னறிவிக்கும் அடையாளங்களாகவே உணரப்படும்.

3. இயேசுவே ஓர் அடையாளம்:-

வானகத்தில் ஓர் அடையாளம் கேட்கும் எண்ணத்தையுடையவர்களின் மனநிலையை இயேசு கண்டித்தார் (மத் 12:39; மாற் 8:12; லூக் 11:29; 1 கொரி 1:2). மேலும் அடையாளம் காட்டுவதற்கு மறுத்துவிட்டார். அவருடைய கருத்தும் பொதுவாக விவிலியத்தைச் சார்ந்ததாகத்தான் இருந்தது. அடையாளம் கேட்பது விசுவாசக்குறைவைக் காட்டுகின்றது (யோவா 20:24–30), இப்படியாக பழைய இஸ்ராயேல் மக்கள் ஓர் அடையாளம் காட்டும்படியாக கடவுளை பாலைவனத்தில் சோதித்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது (எண் 11). மேலும் பவுல், அவர்களுடைய தலைவிதியானது நம்முடைய வாழ்க்கைக்கு எச்சரிக்கையாக உள்ளது என்று கூறுகிறார். "அவர்களுள் சிலர் ஆண்டவரைச் சோதித்துப் பாம்புகளால் கடியுண்டு அழிந்து போயினர்" (1 கொரி 10:9–11). சோதிக்கும் கதையில் இன்னும் இது தெளிவாக உள்ளது (மத் 4:1–11; லூக் 4:1–13), புதிய இஸ்ராயேல் சாத்தானின்

கருத்தை மறுத்து, கடவுளிடம் அடையாளம் வேண்டமாட்டேன் என்று கூறுகின்றார். "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதியாதே" (மத் 4:7; லூக் 4:12). மாசாவின் காலத்தில் இருந்ததுபோல், பழைய இஸ்ராயேல் நாற்பது ஆண்டு அளவாக உள்ளத்தை கடினப்படுத்திக் கொண்டது. மேலும் கடவுளை சோதித்தது (சங் 95:8–10); ஆனால் புதிய இஸ்ராயேலான கிறிஸ்து, நாற்பது நாட்கள் பாலைவனத்தில் உண்ணா நோன்பிருந்த பிறகு, கடவுளிடம் ஒரு அடையாளம் கேட்கும்படி சோதிக்கப்பட்டபோது மறுத்துவிட்டார். இப்படியாக கிறிஸ்து அடையாளம் கேட்பதற்கும், கொடுப்பதற்கும் மறுத்துவிட்டார். ஏனெனில் விசுவாசமற்ற மனிதர்களுடைய வாயிலிருந்து இந்த வேண்டுகோள் வந்தது. அவர் கடவுளில் நம்புகிறார், அவருடைய சீடர்கள் அவரில் நம்பிக்கைக் கொள்ளவேண்டும். அது முழுவதும் மறு உலக அடையாளங்களைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

இருந்தபோதிலும் கடவுள் இஸ்ராயேலருக்கு அவர் அவர்களை எகிப்திலிருந்து நடத்தி வந்தபோதும், செங்கடலைக் கடக்கச்செய்தபோதும், பாலைவனத்தில் இருந்தபோதும், அடையாளங்கள் கொடுத்துள்ளார். அதேபோல், இப்பொழுதும் கடவுள் முன்குறித்த மீட்பைவிட வலிமையுள்ள மீட்பு அண்மையில் உள்ளது என்று காட்ட அடையாளங்கள் கொடுத்துள்ளார். இந்த அடையாளங்கள் அனைத்தும் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவைகள். அவை மனிதனுடையவை அல்ல. இயேசு தம்மையும், அதேபோல திருமுழுக்கு யோவானையும் இயேசுவின் போதனைகளையும், அற்புத பணிகளையும், காலங்களுக்கேற்ற குறிகள் என்று கருதினார். பரிசேயர்களும் இதை உணர்ந்திருக்க வேண்டும் (மத் 16:3). பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்கள் கொடுத்ததுபோல செக் 9:9, (மத் 21:5)–இல் முன்னறிவிக்கப்பட்ட விதத்தில் மிகப் பெரிய அடையாளமான கோவேறு கழுதையின்மீது அமர்ந்து எருசலேம் தேவாலயத்திற்குச் செல்வது போன்ற அடையாளங்களைக் கிறிஸ்து செய்கிறார். நினிவேயின் புறவினத்தார் யோனாவின் அருங்குறி கேட்டு மனந்திரும்பினர். தென்னாட்டு அரசி சாலமோனின் அடையாளத்தைக் கண்டு கொண்டாள் (மத் 12:39.42; லூக் 11:29–32). ஆனால், இயேசு காட்டிய அடையாளங்கள், இந்தக் காலத்து கடவுளுடைய மீட்புச் செயலின் அடையாளங்கள், கீழ்ப்படியாத இஸ்ராயேலர்கள் எதிர்பார்த்த அடையாளங்கள் அல்ல. கோராசின், பெத்து–சயிதாவில் நிகழ்த்தப்பட்ட அறிகுறிகள் புறவின தீர், சீதோனில் நிகழ்த்தப்பட்டிருந்தால் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு மனந்திரும்பி இருப்பார்கள் (மத் 11:20–24; லூக் 10:13). இயேசு தம்மைவிட தன்னுடைய செயல்களைக் கடவுளுடைய மீட்பு செயல்களின் அடையாளங்களாகக் கருதவில்லை. கடவுள் மகனே கடவுளால் உறுதியளிக்கப்பட்ட அண்மையிலுள்ள மீட்பின் அடையாளமாவார். இந்தக் காரணத்தால்தான் கிறிஸ்து தாம் கடவுளின் மகன் என்ற தலைப்பு தம்மை விவரிப்பதாக ஏற்றுக்கொள்கின்றார். மற்ற இறைவாக்கினர்களைப்போல (எச 8:18) எசக்கியேல் தனதுகால மக்களுக்குத் தன்னையே அடையாளமாகக் கருதினார் (எச 12:6; 24:24). அவர்கள் அவரது வார்த்தையைக் கேட்கிறார்களோ இல்லையோ, ஆனால் அவர் கடவுளுடைய வார்த்தையை எடுத்துக்கூறுவதற்காகக் கடவுளால் அனுப்பப்பட்டவர். அவர் ஓர் அடையாளம் (3:4.11). எனவே மனுமகனான இயேசு கடவுளுடைய வார்த்தையை போதிப்பதற்கும், கீழ்ப்படியாத மக்களுக்கு அடையாளமாக இருக்கும் படியும் அனுப்பப்பட்டார் (எச 3:27; கேட்க செவி உள்ளவன் கேட்கட்டும். மாற் 4:9).

4. திருச்சபைக் காலத்து அறிகுறிகள்:-

அ. இறுதிக் காலத்தைத் தொடங்கும் அறிகுறிகள்:- கிறிஸ்துவின் உயிர்ப்போடு இவ்வுலகிலே இறுதிக்காலம் தொடங்குகின்றது (அ.ப. 2:17). இவ்விறுதிக் காலத்தில் விருத்த சேதனம் (கொலோ 2:11 தொ) என்ற அறிகுறிக்குப் பதில் திருமுழுக்கு உயிர்ப்பின் மீட்பாற்றலை மக்களுக்கு அளிக்கின்றது. ஒய்வு நாள் (காண். எபி 4:1–11; கொலோ 2:16) என்ற அறிகுறிக்குப் பதில் ஞாயிறு, ஆண்டவரின் நாள்,

உயிர்ப்பின் நினைவு நாள் ஆகின்றது. ஐம்பதாம் நாளன்று ஆவியின் கொடையே இறுதிக் காலத்தைத் தொடங்குகின்றது: பாஸ்குக் காலம் முடிய, அப்போஸ்தலர்கள் போதிக்க ஆரம்பிக்கின்றனர். இவ்வைம்பதாம் நாள் விழா நிகழ்ச்சிகளோடு இவ்வுலகில் மீட்பின் வரலாற்றின் திட்டவட்டமான இறுதிப்பகுதி (அப் 2:19) தொடங்குகின்றது என்று காட்ட, புனித லூக்கா, யோவேல் இறைவாக்கினர் இறுதிக்காலத்தைப்பற்றி முன்னறிவித்த வானிலை அதிசயங்களோடு (யோவே 3:1–5) அவற்றையொத்த மண்ணக அறிகுறிகளையும் நினைவுபடுத்துகின்றார்.

ஆ) உண்மையான அப்போஸ்தலரைக் காட்டும் அறிகுறிகள்:- ஐம்பதாம் நாள் விழாவை அடுத்து "அறிகுறிகளும் அதிசயங்களும்" மீண்டும் தொடர்கின்றன (அ.ப. 2:43; 4:30; 5:12; 6:8; 14:3; 15:12; எபி 2:4). இவை, இயேசுவின் புதுமைகளைப் போல (அ.ப. 2:22), அப்போஸ்தலர்களின் 'வார்த்தையை உறுதிப்படுத்துகின்றன" (மாற் 16:20). எடுத்துக்காட்டாக, 'அருங்குறிகள் அற்புதங்களின் வல்லமையாலும், தேவ ஆவியின் வல்லமையாலும்" (உரோ 15:19) பவுலின் வார்த்தை தேவ வார்த்தையாக ஏற்றுக்கொள்ளப்படுவது மட்டுமன்றி (1 தெச 2:13) மக்கள் இதயங்களில் இறைவனுடைய வலிமையால் விசுவாசம் வேரூன்றவும் செய்கின்றது (1 கொரி 2:4 தொ).

இவ்வப்போஸ்தலிக்கக் குறிகள் பன்மொழி பேசுதல் போன்ற அருட்கொடையிலிருந்து முற்றிலும் மாறுபட்டன. இது சில கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே தரப்பட்டது: விசுவசியாதவர்களுக்கென முன்பு ஏற்பட்ட புரியாத மொழி போன்றது (1 கொரி 14:21 தொ; காண் ஏச 28:11 தொ).

உண்மையான அப்போஸ்தலரை போலியானவரிடமிருந்து பிரித்துணரப் புதுமைகள் மட்டும் போதா: 'தளரா மனவுறுதி' (2 கொரி 12:12), பற்றற்ற பண்பு (1 தெச 2:2 –12; காண். 2 பேதுரு 2:3.14; தீத் 1:11; 2 திமோ 3:2) போன்ற ஆவியின் கொடைகளும் வேண்டும். இவற்றோடு அவரது போதனை நெறிபிறழாதிருத்தல் தான் விசுவாசிகளுக்குத் திட்டவட்டமான அறிகுறியாகும் (காண்க கலா 1:8; 2 கொரி 11:13 தொ; 1 யோவா 4:1–6; அ.ப. 13:6 தொ).

இ. சூரியனை ஆடையாக அணிந்த பெண்ணாகிய அறிகுறி:- இறைமக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கும், போலி மெசியாக்களும், இறைவாக்கினரும் தவறான அறிகுறிகளால் அவர்களை வழி தவறச் செய்யும் முயற்சிகளுக்கு (திருவெளி 13:13 தொ; 16:14; 19:20) மூல காரணமாக இருப்பவன் சாத்தான். சோதனைக்குட்பட்டவர்களை ஊக்குவிக்க தான் கண்ட விண்ணகத்தில் மற்ற விண்மீன்களுக்கிடையே ஒரு 'பெரும் அறிகுறியை" (திருவெளி 12:1) திருவெளிப்பாட்டின் ஆசிரியர் உருவாக்கின்றார். திருச்சபையைக் குறிக்கும் ஒரு பெண்: அவளுக்கு எதிராக ஊறு விளைவிக்க ஆற்றல் இல்லாத 'வேறொரு அறிகுறி' (12:3) பறவை நாகமாகிய சாத்தான். மெசியாவை ஈன்றெடுத்த சீயோனின் மகளின் (12:5) அடிச்சுவட்டில் வரும் திருச்சபையும், இஸ்ராயேலைப் போன்று, பாலையில் சோதிக்கப்பட்டு (12:6.14; காண் யாத் 19:4; உப 3:12; ஏச 40:30), விசுவாசத்தால் மட்டுமே பெறக்கூடிய மன்னாவை (திருவெளி 12:6; காண் 2:17; யோவா 6:34 தொ. 47–51) உண்டு வளர்கின்றது. உண்மையான கடவுளைப் பணிந்து வாழ்வு பெற மனிதரை அது அழைத்துச் செல்கின்றது (திருவெளி 22:1 தொ).

5. காலமுடிவின் அறிகுறிகள்:- கால இறுதியைப்பற்றி அறியும் பெருவிருப்போடு யூதர்களிடையே எழுப்பப்பட்ட கணக்கற்ற வெளிப்பாட்டு நூற்களோடு ஒப்பிடும் பொழுது புதிய ஏற்பாட்டில் ஒரு நிதானம் தென்படுகின்றது. மொழியளவில் வேறுபாடு இல்லாவிட்டாலும் கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பினால் வெளிப்பட்ட இறுதி உண்மைகளே அதில் முதலிடம் பெறுகின்றன. உண்மையான அப்போஸ்தலர்களைப் போன்று பாவனை செய்யும் (மத் 24:24) மாயவித்தைக்காரரும் போலி இறைவாக்கினரும் "போலி அருங்குறிகளையும், அற்புதங்களையும்" (2 தெச 2:9) செய்வார்கள் எனக்கூறப்படுவது உண்மை தான்; மத்தேயு "இயேசுவின்

இரண்டாம் வருகையையும் உலக முடிவை யும்" (மத் 24:3) அடுத்த அறிகுறிகளைப் பற்றிக் கூறும்பொழுது அண்டத்தில் நிகழப் போகின்றவற்றைப் பற்றியும் பேசுவது உண்மைதான் (24:29 தொ; லூக் 21:25); ஆனால் இக்குறிகள் எல்லாம் மனு மகனின் அறிகுறியின்முன் (மத் 24:30), அதாவது அவருடைய வெற்றியின்முன், தங்களது முக்கியத்தை இழக்கின்றன.

அறியப்படாத தெய்வம் (UNKNOWN GOD)

பவுல் ஏதன்சு நகர் சென்றபோது அங்கிருந்த அரயோபாகு மன்றத்திற்கு வந்து ஆற்றிய உரையில் "அறியப்படாத தெய்வத்து" அல்லது 'நாம் அறியாத தெய்வத்திற்கு" என்று எழுதியிருந்த பீடம் ஒன்றைக் கண்டதாகக் குறிப்பிடுகின்றார். இதனைப் பற்றி வேறு எந்த இடத்திலும் குறிப்புகள் இல்லை.

கி.பி. 4–ஆம் நூற்றாண்டு முடிவில் எரோனிமு, இவ்வாசகம், "ஆசிய, ஐரோப்பிய, ஆப்பிரிக்க கடவுள்களுக்கும் அறியாத அன்னிய கடவுள்களுக்கும்" என்று அமைந்திருந்தது என்று கூறு கிறார். பவுலின் உரை அவருடையது தானா என்று கேள்வி எழுப்பும் பலர் இதுபோன்ற பீடங்கள் இருந்தன என்று கூறுவதோடு வழக்கமாக இப்பீடங்கள் 'நாம் அறியாத தெய்வங்களுக்கு' என்று பன்மையில் இருந்தது என்றும், ஆசிரியர் தனது ஒரே கடவுள் கொள்கைக்கு ஏற்ப இதனை 'நாம் அறியாத தெய்வத்திற்கு' என்று ஒருமையில் மாற்றி அமைத்திருக்க வேண்டும் என்பர். கி.பி. 2–ஆம் நூற் றாண்டு குறிப்புகளில் பாலேரும் துறை முகத்திலிருந்து ஏதன்சுக்குப் போகும் வழியில் பலபீடங்கள் இதுபோல் இருந்த தாகத் தெரிகிறது. இதன்மூலம் நாம் புரிந்துகொள்ள வேண்டியது மனிதன், தான் அடைந்த நன்மைகளுக்கு தனது இயல்பிலேயே இறைவனுக்கு நன்றி கூற விரும்புகிறான். அவரது பெயரை அவ னால் தீர்மானிக்க முடிவதில்லை. ஆனால் இதற்கு கடவுளே அறிய முடியா தவர் அல்லர் என்று பொருள் இல்லை. அப்போஸ்தலப் பணி ஆசிரியர், இப்பீடக் குறிப்புக்கு விளக்கம் அளிக்க முயல வில்லை; கிறிஸ்துவில் இறைவனது வெளிப்பாட்டை விளக்க இக்குறிப்பைப் பயன்படுத்துகிறார்.

அறியாமை (IGNORANCE)

பழைய ஏற்பாட்டில்:- அறியாமை எனும் இச்சொல் தெரியாமல் ஒருவன் செய்த தவற்றைக் குறிக்கிறது. அறிந்து செய்யப்படும் தவற்றைவிட அறியாமை யால் செய்யப்படும் தவறு அற்பமானதே என்றாலும் பரிகாரம் செய்யப்பட வேண்டியதாகும்; (திருவுரை 5:6; 10:5; லேவி 4:2; 5:5–18; எண் 15:24–29; 35:11). அறியாமை யால் ஏற்படும் தவறு குருடன் வழிதப்பு வதாகவும் (உப 27:18; எச 34:6) குடியில் தள்ளாடுவதாகவும் (ஏச 28:7), உணர்ச்சி களின் தடுமாற்றமாகவும் (பழ 5:19–20) அறிவு மற்றும் ஒழுக்கத்தவறாகவும் (ஆதி 43:12; யோபு 12:16; பழ 19:27) இருக்கலாம். விவிலியக் கண்ணோட்டப்படி ஒருவன் அறியாமையாலும் தவறு இழைக்கக் கூடாது. அறியாமை ஒருவனை பாவத் தின் விளைவிலிருந்து தப்பிவிக்காது (லேவி 4:13–14; 22:14; எண் 15:24). பாவத்தின் விளைவு எப்போதும் பாவச்செயலுடன் சேர்ந்துவருகிறது. எனவே அறியாமையி னால் செய்யப்பட்ட தவறுக்கும் பரிகாரம் செய்யப்பட வேண்டும் (லேவி 4:3; 5:14–16; 22:14). அறிந்து செய்த பாவத்திற்கு சடங்குப் பரிகாரமே இல்லை (எண் 15:30; சங் 19:13).

புதிய ஏற்பாட்டில்:- அறியாமை என்ற கருத்து கிரேக்க மனப்பான்மையால் பாதிக்கப்பட்டிருந்தது. அது உண்மை யான அறிவு அற்ற நிலை அல்லது குறைந்த அறிவு உடைய நிலை என்பதா கும் (2 கொரி 6:9; கலா 1:22). அறியாமை என்பது மயக்கமான நிலையினையும், குறிக்கோளற்ற நிலையையும் (அ.ப.17:23; உரோ 2:4; 2 கொரி 2:11) புரிந்துகொள்ளா நிலையையும் (மாற் 9:32; லூக் 9:45; உரோ 6:3; 7:1; 1 பேதுரு 2:15; 2 பேதுரு 2:12) குறிக் கும். அறியாமை இருள் அகல ஒருவன் புரிந்துகொள்ளும் தன்மை பெறவேண்டும் (உரோ 1:13; 11:25; 1 கொரி 10:1; 12:1; 2 கொரி 1:8; 1 தெச 4:13). அறியாமை பாவத்திற்கு இட்டுச்செல்லலாம். கடவுளைப் பற்றியும், நற்செய்தியைப் பற்றியும் ஒருவன் அறி யாமல் இருப்பது பிரிந்திருப்பதற்கும்

பதிதத்திற்கும் சமமாகக் கருதப்பட்டது. இவ்வாறு, இயேசுவைச் சிலுவையில் அறைந்ததில் யூதர்கள் அறியாமையும் (அ.ப.3:17) கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தியதில் பவுலின் அறியாமையும் (1 திமோ 1:13) குற்றத்தன்மையிலும் மன்னிக்கப்படுதலிலும் பழைய ஏற்பாட்டின் பாவம் என்ற கருத்துக்கொத்தாகும். யூதர்கள் கிறிஸ்துவை அறிந்து ஏற்றுக்கொள்ளத் தவறியதும் (அ.ப.13:27) இறைவனது அருட்செயல்முறையை அறியத் தவறியதும் (உரோ 10:13) புற இனத்தார் உண்மையான இறைவனை அறியத் தவறியதும் (அ.ப. 17:30; 1 கொரி 15:34; எபே 4:18; 1 பேதுரு 1:14) குறிப்பாக இவர்கள் இயற்கை அறிவின் ஒளியைப் புறக்கணித்ததும் (உரோ 1:21; 2 பேதுரு 3:5) பாவத் தன்மையுடையதாகும்.

அறிவற்ற செல்வன்–(உவமை லூக் 12:16–21)

எவ்வகைப் பொருளாசையும் கொள்ளாமல் கவனமாயிருங்கள் (லூக் 12:15) என இயேசு கூறி, பொருளாசை கொண்டால் என்ன விளைவு ஏற்படும் என்பதை விளக்க இந்த உவமையைக் கூறுகிறார். அதிகமாசப் பொருள் சேர்க்க நினைத்தால் அது அழிவிற்கு வழிகோலும் என்கிறார். இந்த உவமையிலே வரும் பணக்காரன் தன்னை நிறைவு செய்து கொள்ள விரும்புகிற தன்னலக்காரன். தன் செல்வத்தை பத்திரப்படுத்தவேண்டும், உடல் தேவையை நிறைவேற்றவேண்டும் என எண்ணுகிறான். ஆனால் அவன் தன் ஆன்மத் தேவையை நினைக்கவில்லை. எனவேதான் இயேசு உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்குமென்கிறார் (12:34). ஆண்டவர், எதிர்பாராத நேரத்திலே அவனை அழைக்க, அவன் அதற்குத் தயாராய் இல்லை.

அறிவித்தல் (CONFESSION)

அறிக்கையிடுதல் என்ற சொல் பொதுவாகப் பாவத்தை அறிக்கையிடுதல் அதாவது பாவமன்னிப்பு என்ற திருவருட்சாதனத்தைக் குறிக்கிறது. ஆனால் இவ்வார்த்தை வேதாகமத்தில் இரண்டாந்தரமாகத்தான் இப்பொருளில் கூறப்பட்டுள்ளது. பழைய புதிய ஏற்பாடுகளிலும் கிறிஸ்தவப் பாரம்பரியத்திலும் இறைவனின் மாட்சிமையையும், அவரது மீட்புச் செயல்களையும் வெளிப்படையாக அறிக்கையிடுபவர்களைத்தான் புனிதர்கள் என அழைக்கிறார்கள். பாவத்தை ஏற்றுக் கொள்வது உண்மையாய் இருக்க வேண்டுமானால் இறைவனின் புனிதத் தன்மையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இறைவனை அறிக்கையிடுதல் தெய்வ நம்பிக்கையுள்ளவனுக்கு இன்றியமையாதது. இதற்கு இறைவனின் செயல்கள் அனைத்தையும் அறிந்திருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால் இறைவனின் செயல்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனப்பக்குவம் வேண்டும். இத்தகைய மனப்பக்குவத்தைக் குரு ஏலி தன் மக்களின் பாவ அறிக்கையிட்டும் இறைவனின் மேன்மையை எடுத்துரைத்தும் வெளிப்படுத்துகிறார் (1 சாமு 3:18). இறைவனைப்பற்றிய அறிவானது அவரது புகழ்பாட ஏதுவாகிறது. இறைவன்பால் காட்டும் திறந்த உள்ளமானது அவருக்கு நன்றியறிதல் கூறுவதற்கும் அவரது புகழ்பாடுவதற்கும் காரணமாகிறது (சங் 22:23), நன்றியறிதல், வாழ்த்துரைத்தல் போன்று விசுவாச அறிக்கையிடுதலும் இறைவனுக்கு நேரடியாகச் செலுத்தப்படுகிறது. இறைவனுக்குச் சாட்சி பகர்தல் என்பது இறைவனின் செயலை எடுத்துரைப்பதாக இருந்தாலும் அது பொதுவாகப் பிற மனிதர்களின் பொருட்டு அறிக்கையிடப்படுகிறது.

இது இறைவழிபாட்டோடு தொடர்புடையதாகும். இது ஒருவன் தன் பாவத்தையும் ஒன்றும் இயலாமையையும் ஏற்றுக் கொள்ளுதலையும், மனிதனது துன்பங்களிலிருந்து விடுவிக்கும் இறைவனது செயல்களை அறிக்கையிடுதலையும், இறைவன் தம் மக்களுக்குக் காட்டும் இரக்கத்திற்காக வல்லவரான இறைவனைப் போற்றி நன்றி கூறுதலையும் உள்ளடக்குகிறது. இது விசுவாச அறிக்கையாகும். இது புதியஏற்பாட்டில் இயேசு இறைவனது அபிடேகம் பெற்றவர் என்றும் இயேசு ஆண்டவர் என்றும் வழிபாட்டு முறையிலும் இறையியல் முறையிலும் அறிவித்தலாகும். கிறிஸ்தவ மறை கிரேக்க உலகில் பரவியபோது நற்செய்தி

பலவாறு தவறாக விளக்கப்பட்டது. இதை எதிர்த்த போராட்டத்தில், வழிபாட்டு அறிக்கை மிகவும் சிக்கலானதாயிற்று. இறுதியில் 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமுழுக்கு விசுவாச அறிக்கைகளில் இறையியல் வாய்பாடாக உருவெடுத்தது.

பறைசாற்றுதல், பாவங்களை ஏற்றுக் கொள்ளுதல், இறைவனைப் போற்றி நன்றி கூறுதல் ஆகியவை அடங்கிய அறிக்கையிடுதல் விவிலியத்தில் பல சொற்களால் உணர்த்தப்படுகிறது.

I. பழைய ஏற்பாடு:- 1. அறிக்கையிடுதல் வழிபாட்டில் வேரூன்றியுள்ளது. முதலில் இது இறைவன் அளித்த விடுதலையைப் பறைசாற்றுதலாகும். இந்த விடுதலை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேல் அடைந்த மீட்பாக இருக்கலாம் அல்லது தனி நபர் தன் எதிரியின் கொடுமையிலிருந்தோ, பேரழிவுகளால் நசுக்கப்படுவதிலிருந்தோ அல்லது குற்றச் சுமையிலிருந்தோ அடைந்த விடுதலையாக இருக்கலாம் (சங் 40:1-2).

2. இரண்டாவது அறிவித்தல், பாவத்தையும் ஒன்றும் இயலாமையையும் ஏற்றுக் கொள்ளுதலாகும் இறைவன் தண்டித்துத் திருத்துதலில் இஸ்ராயேல் தனது பாவத்தை அடையாளம் கண்டது. வழிபடுபவர் தனது அவல நிலையையும் தப்பிக்க இயலாமையையும் சிந்தித்துப் பார்க்கிறார். பாவ அறிக்கை இறைவன் மனிதனைத் தீர்ப்பிடும்போது நீதியுள்ளவராக இருக்கிறார் என்று அவரை மகிமைப்படுத்துகிறது. (சங் 51:4).

மோசேயின் சட்டம் இஸ்ராயேல் தங்கள் பாவங்களை அறிக்கையிடக் கட்டளையிடுகிறது (லேவி 26:40). சில சமயம் பாவத்திற்குப் பரிகாரமாக ஆண்டவருக்குக் காணிக்கை செலுத்தக்கோருகிறது (5:5 தொ). மற்ற சமயங்களில் யாருக்குத் தீங்கிழைத்தார்களோ அவர்களுக்கு ஈடு செய்யவும் கட்டளையிடுகிறது (எண் 5:7). மக்களின் பிரதிநிதி என்ற அளவில் பெரிய குருவான ஆரோன், பரிகார நாளில் இஸ்ராயேலின் பாவங்களை அறிக்கையிட வேண்டும் (லேவி 16:21). இஸ்ராயேலின் பெயரால் தனி நபர்களின் பாவ அறிக்கைக்குச் சான்றுகள்: சாலமோன் (1 அர 8:31 தொ), எஸ்ரா (10:1), நெகமியா (1:6), தானியேல் (9:4-20) ஆகியோருடைய பாவ அறிக்கைகளாகும். நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் தனிப்பட்டோரின் பாவ அறிக்கை, சமய வாழ்வில் அதிகமான முதன்மை பெறுகிறது.

எல்லாப் பாவங்களும் யாவேக்கு எதிரானவை (லேவி 26:40) என்ற அடிப்படையில்தான் பாவ அறிக்கையிடுதல் எழுந்துள்ளது. இறைவன் மனிதனோடு உறவு கொள்வதற்குத் தடையாக உள்ளது பாவம். தனிப்பட்ட முறையிலோ (பழ 28:13) அல்லது ஓரினமாகவோ (நெக 9:2; சங் 106) இறைவனுக்கு எதிராகச் செய்த காரியத்தை ஏற்றுக்கொள்வது மனிதன்பால் இறைவனுக்குள்ள முழு உரிமையை மீண்டும் வலியுறுத்துவதாகும். இறைவனின் தூண்டுதலால் ஏற்பட்ட உடன்படிக்கையால் எழும் இறைவனின் உரிமைகளை வலியுறுத்தும்போது பாவ மன்னிப்பு கிடைக்கிறது (2 சாமு 12:13; சங் 32:5).

இஸ்ராயேலர் பாவங்களை அறிக்கையிட்டபோது இறைவன் மன்னிப்பார் என்று எதிர் பார்த்தனர் (சங் 32:5). பாவ அறிக்கைக்கும் இறைவனைப் போற்றும் விசுவாச அறிக்கைக்கும் உள்ள தொடர்பு கவனிக்கத்தக்கதாகும். இதை சங் 32-இல் காணலாம். இது தவச் சங்கீதமாகவும் நன்றிப்பாடலாகவும் அமைந்துள்ளது.

3. மூன்றாவது மக்களை விடுவிக்கும் இறைவனைப் போற்றுதலும் அறிவித்தலுமாகும். இவ்வாறு இக்கருத்து போற்றுதல் சங்கீத நூலில், குறிப்பாகச் சங் 22; 30; 34; 40; 51; 116 -இல் பரவிக்கிடக்கிறது. இத்தகைய பாடல்கள் 1 சாமு 2:-1-10; ஏச 38:10-12; யோனா 2:2-9 இலும் காணக்கிடக்கின்றன.

4. இறைவனின் நாமத்தை அறிக்கையிடுதல்:- அறிக்கையிடுதல், புகழ் பாடுதல், நன்றியறிதல், வாழ்த்துரைத்தல் போன்ற இவையனைத்தும் ஒன்றோடொன்று தொடர்பு உடையன. இறைவனின் செயல்கள் இவ்வனைத்திற்கும் அடிப்படையாகும். அவரது செயற்கரிய செயல்கள் (சங் 26:7) விசுவாச அறிக்கையின் மையமாக விளங்குகின்றன. உதாரணமாக 'ஆண்டவர்' வாழ்த்தப்படுவா

ராக' (யாத் 18:10; 1 யோவா 1:48; சங் 28:6; 31:22...) என்ற எளிய விசுவாச அறிக்கை வேதாகமத்தில் பலவிடங்களில் காணப் படுகின்றன. "நான் உமக்கு நன்றி கூறு கிறேன்", "நான் உம்மை வாழ்த்துகிறேன்", "நான் உமது புகழ்பாடுகிறேன்" என்ற வாக்கியங்களும் இவ்வுண்மையை எடுத்து ரைக்கின்றன.

கிறிஸ்துவத்திற்கு முந்திய யூத மரபின் படி வழிப்பட்ட கிறிஸ்தவர்கள் திருச் சட்டப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட மூன்று வசனங்களால் தொடுக்கப்பட்ட செபத்தை விசுவாச அறிக்கையாகத் தினந்தோறும் சொல்லி வந்தனர். முதல் வசனமானது இஸ்ராயேல் மக்களோடு உடன்படிக்கை செய்து கொண்ட ஒரே கடவுளின் மேல் கொண்ட விசுவாசத்தை (உப 6:4) அறிக்கையிடுகிறது.

II புதிய ஏற்பாடு:

பழைய ஏற்பாடு அறிக்கை முறை புதிய ஏற்பாட்டு முறைக்கு வழிகாட்டியது. பாவ அறிக்கை, இறைவனால் வரும் விடுதலை யைப் பறைசாற்றுதல், நன்றியோடு போற்றுதல் ஆகிய மூன்று கூறுகளும் புதிய ஏற்பாட்டு முறையில் காணக்கிடக் கின்றன. ஆனால் இவை இயேசுவை மையமாகக் கொண்டிருப்பதும், தொடக்க காலத் திருச்சபையின் வளர்ச்சியும், இவற்றைப் பொருள் பொதிந்த முறையில் மாற்றி அமைத்தன. விசுவாச அறிக்கை உண்மையான மாற்றம் பெறுகிறது.

அ) பாவ அறிக்கை:- திருமுழுக்கு யோ வான் தன்னிடம் ஞானஸ்நானம் பெற வந்தவர் பாவ அறிக்கை செய்வதை வலி யுறுத்தினார். ஏனெனில் அது அவர்களது மனத்துக்கத்தை எடுத்துக்காட்டியது. அதோடு, மெசியாவின் வருகைக்கு இஸ் ராயேல் சுத்திசெய்யப்பட பயன்பட்ட ஞான ஸ்நானத்தின் ஒரு பகுதியாகியது (மத் 3:6; மாற் 1:5). மேலும் இயேசுவும் ஊதாரியின் மகன் உவமையிலும் (லூக் 15:18), பரிசே யன் ஆயக்காரன் உவமையிலும் (18:10), அவர் கற்பித்த செபத்திலும் (மத்6:12; லூக் 11:4) பாவ அறிக்கையை மையப்படுத்தி அதனை வலியுறுத்தினார்.

புதிய ஏற்பாட்டு மக்கள் பொதுவாக இறைவனிடம் பாவஅறிக்கை செய்தாலும் (1 யோவா 1:9) இரு நிகழ்ச்சிகளில் ஒருவர் மற்றவரிடம் செய்துகொள்கின்றனர். லூக் 17:4—இல் குற்றம் செய்தவன் மனம் வருந் தினால் அவனை மன்னிக்கும்படி தம் சீடர்களைத் தூண்டுகிறார் யாக்கோபு 5:16—இல் "ஒருவருக்கொருவர் பாவ அறிக்கை செய்துகொள்ளுங்கள்" என்று போதிக்கப்படுகிறது.

பாவமன்னிப்பு என்ற திருவருட்சாத னம் நடைமுறையில் இருந்ததாக புதிய ஏற்பாட்டில் குறிப்பு ஒன்றுமில்லை. ஒருவன் தன் வெளியரங்கமான குற்றங் களை ஏற்றுக்கொள்ளும்படி செய்வது சகோதரனைத் திருத்துதலின் நோக்கமா கும் (மத் 18:15). யாக்கோபு எழுதிய திரு முகத்தில் (5:16) குறிப்பிட்டுள்ள ஒருவர்க் கொருவர் பாவ அறிக்கை செய்து கொள்ளுவது யூதர்களின் மரபினை அடிப் படையாகக் கொண்டது.

ஆயினும் ஒருவன் தன் பாவத்தை அறிக்கையிடுவது அவன் மனந்திருந்தி மன்னிப்புப் பெறுவதற்குத் தகுதி பெற்று விட்டான் என்பதற்கு அடையாளமாகும். யூதர்கள் திருமுழுக்கு யோவானிடம் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டார்கள் (மத் 3:6). பேதுரு தான் இயேசுவை நெருங் குவதற்குத் தகுதியற்ற பாவி என்று ஏற்றுக் கொண்டார் (லூக் 5:8). இயேசுவும் ஊதா ரிப்பிள்ளை தன் பாவத்தை ஏற்றுக்கொண் டான் (லூக் 15:21) என எடுத்துரைக்கிறார். சக்கேயுவின் வார்த்தைகளும் (லூக் 19:8) பாவி ஒருத்தியின் செயலும் (லூக் 7:31—50) விபசாரத்தில் பிடிப்பட்ட பெண்ணின் மௌன நிலையும் (யோவா 8:9—11) மன்னிப்பு பெறுவதற்கு ஒருவன் தன் பாவத்தை ஏற்றுக்கொள்ளுவது அவசியம் என உணர்த்துகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் பாவமன்னிப்பு என்ற திரு வருட்சாதனம் தோன்றுவதற்கு ஆதாரமா யிருந்தன. ஒவ்வொரு மனிதனும் பாவி யாயிருக்கிறான்; அவனது பாவங்கள் கழுவப்படவேண்டுமென்றால் பாவ அறிக் கையிடவேண்டும் (1 யோவா 1:9). இவ் வறிக்கை உண்மையானதாய் இருக்க வேண்டுமென்றால் அது உதட்டளவி லன்றி உள்ளத்திலிருந்து பிறக்கவேண் டும். ஆகையால் யூதாசின் பாவ அறிக்கை பயன் அற்றது (மத் 27:4).

ஆ. இயேசுவை அறிவித்தல்:- பழைய ஏற்பாடு இஸ்ராயேலுக்கு இறைவன் செய்த மீட்புச் செயல்களை அறிக்கையிடும்போது, புதிய ஏற்பாட்டில் இறைவனின் மீட்புச் செயல் இயேசுவே என்று அறிவிக்கிறது. அறிவித்தலுக்கு இயேசுவே மிகச்சிறந்த எடுத்துக்காட்டு: "அனைத்திற்கும் உயிரளிக்கும் கடவுள் முன்னிலையிலும் போன்சியு பிலாத்தின்முன் நின்று சிறந்த விசுவாச அறிக்கை செய்த இயேசு" (1 திமோ 6:13). இத்தகைய மொழி திரு வெளி 1:5; 3:14–இல் பயன்பட்டுள்ளது. போலிச்சாட்சிகள் அவருக்கெதிராக சாட்சி கூறினர் (மாற் 14:56). அவரது சீடர்கள் அவரை மறுதலித்தனர் (14:68). ஆனால் அவரே, பெரிய குரு முன்னும் (14::62) பிலாத்தின் முன்னும் (15:2) தனது மெசியா அழைப்புக்குச் சாட்சி கூறுகிறார்.

சீடர்களும் விசுவாச அறிக்கை செய்ய வேண்டும். அது "பல சாட்சிகள் முன்னிலையில் செய்யப்படும்" பகிரங்கச் செயலாகும் (1 திமோ 6:12). இது ஒருவேளை ஞானஸ்நானத்தோடு தொடர்புடையதாக இருக்கலாம். திருமுழுக்கு யோவான், அவர்தான் வாக்குறுதி அளிக்கப்பட்ட மெசியாவா என்று கேட்கப்பட்டபோது விசுவாச அறிக்கை செய்கிறார் (யோவா 1:20.29–34; 3:25–30). செசரியா பிலிப்பியில் இயேசு மெசியா என்று சீமோன் பேதுரு அறிக்கை செய்கிறார் (மத் 16:13–20; மாற் 8:27–30; லூக் 9:18–21). குருடனாகப் பிறந்தவரும் (மத் 9:15 தொ), இலாசர் இறப்புக் குப்பின் மரியாளும் (யோவா 11:27), பவுல் பெலிக்ஸ் முன்னும் (அ.ப.24:14 தொ) விசுவாச அறிக்கை செய்கின்றனர். பவுலின் கருத்துப்படி இயேசு ஆண்டவர் என்று விசுவாச அறிக்கையிடுவது மீட்புக்கு அவசியமாகும் (உரோ 10:9–10; 2 கொரி 4:3). யோவானின் போதகப்படி கிறிஸ்து மனித உருவெடுத்ததுப்பற்றிய உண்மையான அறிக்கை உண்மையான விசுவாசத்தின் அடையாளமாகும் (1 யோவா 4:2–3). பிலி. 2:5–10–இல் பவுல் தனது சொந்த விசுவாச அறிக்கையைக் கொடுக்கிறார். அதோடு கிறிஸ்து உயர்த்தப்பட்டிருப்பது அவர் ஆண்டவர் என்ற அறிக்கையை ஒவ்வொருவரிடமிருந்தும் கோருகிறது என்று கூறுகிறார் (2:11).

இத்தகைய விசுவாச அறிக்கையை புதிய ஏற்பாட்டுச் சமூகம் உற்சாகப் படுத்துவதற்குப் பல காரணங்கள் உண்டு. 1) விசுவாச அறிக்கை ஞானஸ்நானத்திற்குத் தயாரித்தபோது போதகத்திற்குப் பயன்பட்டது 2) திருச்சபையின் வழிபாடு விசுவாச அறிக்கையைப் பாதித்தது. 1 திமோ 3:6 காலத்தால் முந்திய கிறிஸ்து இயல் பாடலாகக் கருதப்படுகிறது. மற்ற வழிபாட்டு அறிக்கைகள் பிலி 2:6–11; 1 கொரி 15:3–7–இல் காணப்படுகின்றன. யூத வழிபாட்டு விசுவாச அறிக்கையான செமா 1 கொரி 8:6; எபே 4:4–6 போன்ற அறிக்கைகளைப் பாதித்திருக்கவேண்டும். 3) சமயத்திற்காகக் கொடுமைப்படுத்தப் பட்டதும் விசுவாச அறிக்கைக்கு ஒரு காரணமாயிற்று. உரோமை அரசர்களை வழிபடுதல் பேரரசனுக்கும் தூபம் காட்டவும், சீசர் ஆண்டவர் என்று அறிக்கையிடவும் கோரியது.

தொடக்கக் காலக் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட ஒரே ஆண்டவர் மெசியாவாகிய இயேசுதான் என்று உறுதியாக விசுவசித்தனர். ஆகவே பேரரசன் வழிபாடு ஒரு சிலை வழிபாடாகும் என்று கருதினர். இயேசுவே பிலாத்தின்முன் சிறந்த விசுவாச அறிக்கை செய்தார். கிறிஸ்தவர்களும் உரோமை அதிகாரிகள்முன் இயேசுவின் பெயரை அறிக்கையிட்டனர். இந்த அனுபவத்திலிருந்து இயேசுவே அறிக்கையிடுவதற்கும், மறைசாட்சிக் கருத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு வளர்ந்தது. 4) பதிதத்தின் வளர்ச்சியும் விசுவாச அறிக்கையை அவசியமாக்கிற்று. சில போலிப் போதனைகளுக்குத் திருச்சபை காட்டிய கடினமான பதிலை சில புதிய ஏற்பாட்டு விசுவாச அறிக்கைகள் காட்டுகின்றன (1 யோவா 2:22; 4:2–3; 4:15; 2 யோவா 7). விசுவாச அறிக்கைகள் இயேசுக்கிறிஸ்துவில் இறைவன் ஆற்றிய மீட்புச் செயலின் வரலாற்றுத் தன்மையைப் பறைசாற்றின. இயேசுவின் ஆண்டவர்பால் கொண்ட பற்றுறுதியை எடுத்துக் கூறின. கிறிஸ்து நிகழ்ச்சி பற்றிய அறிவு, ஒழுக்க இயல், கட்டுக் கதைகள் ஆகியவை சார்ந்த தவறான விளக்கங்களை நிராகரித்தது.

இ) போற்றுரையும் நன்றியுரையும். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவை அறிக்கை யிடுதல் அதன் வாத எதிர்வாதச் சூழ் நிலையில், முதன்மை பெற்றாலும், போற் றுதல் நன்றி கூறுதல் என்ற பொருளில் அறிவித்தல் புதிய ஏற்பாட்டில் இல்லாம லில்லை. இறைவாக்கினி அன்னா குழந்தை இயேசுவைப் பார்த்தபின் இறை வனைப் போற்றுகிறாள் (லூக் 2:38). இயேசு, தந்தையின் அருள்கூர்ந்த வெளிப் பாட்டுக்காக அவரைப் போற்றுகிறார் (மத் 11:25; லூக் 10:21). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியர் கிறிஸ்துவ வாழ்வை ஒரு போற்றுரை அறிக்கையாகக் காண்கிறார் (எபி. 13:15). புறவினத்தார் இறைவனை மகிமைப்படுத்தும்படி இயேசு விருத்தசேதனமுள்ளோருக்குப் பணியாளர் ஆனார் என்று உரோ 15:9 உறுதியாகக் கூறுகிறது. பிலி 2:9–11, கிறிஸ்து ஆண்டவர் என்ற அறிக்கை தந்தையாகிய இறைவனுக்கு மகிமையாகும் என்கிறது.

இவ்வாறு பழைய, புதிய உடன்படிக் கைகள் இரண்டிலும் மீட்பளிக்கும் இறை வனை அறிக்கையிடுபவர்களும், தங்கள் பாவங்களை அறிக்கையிடுபவர்களும் (கலா 3:22) "உன் விசுவாசம் உன்னை மீட்டது" (லூக் 7:50) என்ற இயேசுவின் வார்த்தையின் நிறைவேறுதலாக விசுவா சத்தினால் விடுதலை அடைகிறார்கள் (கலா 3:22).

அறிவிப்பவர், கட்டியங்காரன் (HERALD)

நாட்டு அல்லது அரச செய்திகளைப் பொதுவில் எடுத்துரைப்பவன். அரசர் களுக்கிடையே சடங்கு முறைச் செய்தி களை எடுத்துச் செல்பவன்.

தானி 3:4–இல் இவர் கட்டியங்காரன் என்று குறிப்பிடப்படுகிறார். புதிய ஏற்பாட் டில் உருவகமாக போதிப்பவரை குறிக் கிறது. போதகர் என்றும் மொழி பெயர்க் கப்படுகிறது (1 திமோ 2:7; 2 திமோ 1:11; 2 பேதுரு 2:5). நோவாவின் எச்சரிக்கையை ஓர் அறிவிப்பாகப் பேதுரு கருதுகிறார் (2 பேதுரு 2:5). நற்செய்தி அறிவிப்பவர் என்ற பதம் எச 40:9; 41:27–இல் வருகிறது. இந்தப்பதத்தில் பழைய ஏற்பாட்டு நற் செய்தி அடங்கியுள்ளது. "சீயோனுக்கு நற் செய்தி அறிவிப்பவனே, உயர்ந்தமலை மேல் நீ ஏறிப்போய் நில்: எருசலேமுக்கு நற்செய்தி அறிவிப்பவனே, உன் குரலை எழுப்பி முழங்கு". இதில் உள்ள உருவகம் போதிப்பவர் வானகத் தந்தையால் அவருக்கு அளிக்கப்படும் செய்தியைப் பெற்று அறிவிக்கிறார் என்பதாகும்.

அறிவுக் கூர்மையும், விவேகமும்
(DISCRETION AND PRUDENCE)

குறிப்பிட்ட நேரத்தில் செய்யத்தக்கது என்ன அல்லது தேவையான முடிவை எது அடையும் என தீர்மானிக்கும் ஆற்ற லாகும். இவ்வார்த்தைகள் இணைந்து மூன்று முறையும் (பழ 1:4; 8:12; தானி 2:14) தனித்தனியாக ஞான இலக்கியத்தில் பல முறையும் தோன்றுகின்றன. இவை கடவுளைப்பற்றிய அறிவிற்கு மிக நெருங் கியவையாகவும், போதனைக் கனிகளான செயல் நயம், விவேகம், நற்சுவை, சாது ரியம் ஆகியனவற்றை குறிப்பிடுவனவாக வும், நல்வாழ்வு வாழவும் தீயவற்றை விலக்கவும் அவசியமானவையாகவும் உள்ளன.

அறிவுக்கூர்மை என்பது நேரடியாக ருசிப்பதன்மூலம் சோதிப்பது; உருவக மாகதக்கது மற்றும் நற்சுவையுடன் உள்ளது எது என தேர்ந்து தெளிதல் (1 சாமு 25:33; பழ 11:22; தானி 2:14), சம யோசிதமாய் நடத்தல் (1 நாள் 22:12; 2 நாள் 2:12; எஸ் 8:18; பழ 19:11), மற்றும் ஒருவரது செயலை நல்லவிதத்தில் தீர்மானிக்கும் ஆற்றல் (பழ 1:4; 2:11; 3:21; 5:2; பன்மையில் 8:12; 14:17) ஆகியவற்றை உணர்த்தவல்லது.

அறிவுக் கூர்மை பெரும்பாலும் 'ஞானம்' (பழ 3:21; 5:2), "புரிந்துகொள்ளு தல்" (1 நாள் 22:12; 2 நாள் 2:12; பழ 2:11) மற்றும் "கற்றறிந்த சிந்தனை" (பழ 1:4; 5:2; 8:12) ஆகியவற்றுடன் இணைந்துகாணப் படுகிறது. இது சாமர்த்தியத்தையும் குறிப் பிடலாம் (அபிகாயில், தாவீதின் கோபத் தைச் சமாதானம் செய்வதுபோல 1 சாமு 25:33). இது யாவேயின் சட்டத்தை கடை பிடிக்கவும் (1 நாள் 22:12) தீயவழியை விலக் கவும் (பழ 2:11), பாதுகாப்பாக நடத்தவும் (பழ 3:21) ஒருவரை தூண்டுகிறது. பன்மை யில் உபயோகிக்கும்போது (யோபு 21:27; சங் 9:2; பழ 12:2; 24:8) இவை நகைச்சுவை

யான கண்டுபிடிப்புகளையும் (பழ 8:12) அல்லது தீய உபாயங்களையும் (பழ 14:17) குறிப்பிடுகின்றன (காண்க யோபு 21:27; சங் 10:2.4; பழ 12:2; 24:8).

விவேகம் என்னும் சொல்லானது தந்திரமாய் இருப்பதிலிருந்து வருகிறது. ஆனால் இது ஞான இலக்கியத்தில், நல்ல பொருளில், தவறானபடி சொல்லாமல் ஒருவரை நிலை நிறுத்தும் திறனான 'கூரிய அறிவைக்குறிப்பிட்டு பயன்படுத்தப் படுகிறது. இச்சொல்லானது ஆதி.3:1–இல் பாம்பிற்குச் சாற்றிக் கூறப்படுகிறது. யாத் 21:14; யோசு.9:4 ஆகியவற்றில் தீயபொருளில் பயன்படுத்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் விவேகம் (புரிந்துகொள்ளுதல்), குறிப்பாக இறைவனது சித்தத்தை அறிதலையும் அதை அன்பு செய்தலையும் (எபே 1:8) மற்றும் ஞானத்தோடு செயல்படு தலையும் (லூக் 16:8) மொழி பெயர்க்க உதவுகிறது. இச்சொல் அதன் சொல்லியல் பொருளான முன்னறிவு, முன்நோக்கு என்ற பொருளில் புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை: ஆயினும் இது பற்றிய பிரதிபலிப்பு லூக் 16:8–இல் காணப்படுகிறது.

திறந்த மனதுடைய ஆனால் வழி நடத்த யாருமின்றி எளிதில் தவறான வழியில் செல்லக்கூடியவர்களான எளியோர், கற்றறிவில்லாதவர் ஆகியோருக்கு விவேகம் கற்பிக்கப்படுகிறது. கூரிய அறிவு என்ற பொருளில் விவேகம் "பாம்பின் விவேகத்தையும் புறாவின் கபடமற்ற தன்மையையும்" (மத் 10:16) இணைப்பதாகத் தெரிகிறது.

அறிவு நெறிக்கோட்பாடு (GNOSTICISM)

1. கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் இம்மறை பலமதக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டதாகும். அறிவு நெறிக்கோட்பாடு சம்பந்தப்பட்ட இம்முறையின் கருத்துக்களும், கோட்பாடுகளும் யூத மறையின் கருத்துக்கள் பலவற்றோடு ஒத்திருக்கின்றன. பவுல் மற்றும் பேதுரு தங்கள் மடல்களில் குறிப்பிடும் கருத்துக்கள் சிலவற்றையும் இக்கோட்பாடு தன்னுடையதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன் மையக்கோட்பாடு, மேலாண்மையும் எடுத்தியம்ப முடியாதவருமான அன்பின் இறைவனுக்கும், தீமையான பருப்பொருள் உலகுக்குமிடையேயுள்ள இருபொருள் வாதமாகும். இறைவனுக்கும் பருப்பொருளுக்கும் இடையில் ஆன்மீக ஆற்றல்களின் கூட்டம் உள்ளது. இது இறைவனின் "முழுமை" என்று அழைக்கப் படுகிறது. இவற்றில் மிகத் தாழ்ந்ததிலிருந்து படைப்பவர் தோன்றுகிறார். இவர் பழைய ஏற்பாட்டில் யாவேயோடு அடையாளம் காட்டப்பெறுகிறார். வீழ்ச்சியடைந்த ஆன்மீக ஆற்றல்கள், இப்போது உலகை ஆள்கின்றன.

சில மனிதர்கள் (அறிவு நெறிக்கோட்பாளர்கள்) இறைத்தன்மையுடைய ஒளிச் சிதறலைக் கொண்டிருக்கின்றனர். இது உடல் ஆன்மாவிலிருந்து வேறுபட்ட உள்ளார்ந்த உள்ளுயிராகும். உடலில் சிறைப் படுத்தப்பட்டிருந்தாலும், அதன் உண்மையான இல்லம் "முழுமையாகும்". வெளிப்பாட்டின் வழி இந்த அவல நிலையை உணரவேண்டும். இந்த அறிவு ஒருமுறை மீட்பரால் கொணரப்படுகிறது. இந்த அறிவின் துணையால் அவர்கள் அவர்களுடைய இல்லத்திற்கு எழும்பவேண்டும். இந்த அறிவு புத்தியால் வருவதன்று. மறை மெய்மை சார்ந்ததாகும். உண்மையான பார்ப்பதும் கேட்பதுமாகும்.

கோட்பாட்டில் மீட்பு இறைவனில் மையம் கொள்ளவில்லை. மாறாக இறுதியில் ஒரு நபரின் சுய அறிவும், அதனால் விளையும் சுதந்திரமும் ஆகும்.

இக்கோட்பாட்டு இயக்கம் பற்றிய செய்திகள் பெரும்பாலும் திருச்சபைத் தந்தையரின் நூல்களிலிருந்து கிடைத்தவையே. 20–ஆம் நூற்றாண்டுக்குமுன் இக் கோட்பாடு அடங்கிய வாசகங்கள் சிலவே அறியப்பட்டிருந்தன. 1946–இல் எகிப்தில் நாக் கம்மாத் என்ற இடத்துக்கு அருகில் 13 கோப்டிக் வாசகத் தொகுப்புகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில் மிகவும் சிக்கலான, ஆனால் கிறிஸ்தவ பாதிப்பு குறைந்த, இயக்கத்தைக் காண்கிறோம். இவ்வியக்கம் பிளேட்டோவின் தத்துவ இயலிலும், கீழைய சமயங்களிலும், யூதத்துவத்திலும், கிறிஸ்துவத்திலும் தன் வேர்களைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

2. புதிய ஏற்பாடும், இந்த இயக்கமும்:-

கி.பி. முதல் நூற்றாண்டின் பின் பகுதியில் இந்த இயக்கத்தின் பல வடிவங்களும் ஒன்று சேர்ந்தபோது, புதிய ஏற்பாட்டுத் திருச்சபை இவ்வியக்கப் பாதிப்புடைய பல பொய் போதகங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

பவுல், இவ்வியக்கத்தின் கூறுகளால் பாதிக்கப்பட்ட கலாச்சாரத்தோடு மோத வேண்டியிருந்தது. கொரிந்திலுள்ள தனது எதிரிகளை 'அறிவு இறுமாப்பு" கொண்டவர்கள் என்று கூறுகிறார் (1 கொரி 8:1). இவர்கள் மறைமைத் தன்மையுடைய அறிவை வலியுறுத்தி தங்களை முதிர்ந்தவராகக் கற்பனை செய்துகொண்டு, ஒரு உயர்குழுவினராகக் கருதுகின்றனர் (2:6). கட்டியெழுப்புவது அறிவல்ல, அன்பே (8:1; 13:8); இரகசிய ஞானமன்று, சிலுவையின் மடமையேயாகும் (1:8; 2:7–8); ஆன்மீக உயர்வுக்குழுத்தன்மையன்று, கிறிஸ்துவின் மனமே (2:16; பிலி 2:5 தொ) என்று பவுல் வாதாடுகிறார்.

கொலோசையருக்கு எழுதும்போது பவுல், கிரேக்கச் சிந்தனையும் கலப்பு யூதமும் இணைந்து அறிவியல் கோட்பாட்டுத் தொடக்கமான போதகத்திற்குச் சவால் விடுகிறார். கிறிஸ்து இறை முழுமையில் ஒரு பகுதியேயாகும் என்று இந்தக் கோட்பாடு கூறியது. இதற்கு மாறாக கிறிஸ்து இறைவனின் சாயலாகும் என்றும், எல்லா ஆன்மீகச் சக்திகளை யும் ஆள்பவராவார் என்று பவுல் வலியுறுத்துகிறார் (கொலோ 1:15). பூதங்களின் ஆட்சியிலிருந்து தப்ப, துறத்தலை இப்பதிதம் போதித்தபோது (2:21–இதைத் தொடாதே, அதைச்சுவைக்காதே, இதில் கைவைக்காதே" என்று தடுக்கிறார்கள்), பவுல் கிறிஸ்துவின் விடுதலை அளிக்கும் ஆற்றலைப் பறைசாற்றுகிறார் (2:11–15; 3:10).

மேய்ப்புப் பணி திருமுகங்கள் அறிவு நெறிக்கோட்பாட்டின் வளர்ச்சி பற்றிய தெளிவானபடம் அளிக்கின்றன. 1 திமோத்தேயுவில் ஆசிரியர் யூதப்புராணங்களிலும் தலைமுறைப் பட்டியலிலும் கவனம் செலுத்தும் (1:4; 4:7; காண்க: தீத் 1:14) ஞானத்தைப் (1 திமோ 6:20) போதிக்கும், தங்களையே சட்டத்தின் போதகர்கள் என்று கூறிக்கொண்டவர்களை கண்டனம் செய்கிறார் (6:4). அவர்கள் ஏற்கனவே நிகழ்ந்துவிட்ட ஒரு ஆன்மீக உயிர்த்தெழுதலை அறிவிக்கின்றனர் (2 திமோ 2:18). மேலும் உணவு (1 திமோ 4:3) திருமணம் (2:15;5:14; தீத் 2:4) ஆகியவற்றில் துறத்தலைப் போதிக்கின்றனர். இதை பிற்கால அறிவு நெறிக்கோட்பாடு மாற்றி கொண்டது.

1 யோவானில் ஆசிரியர் தனது ஒழுக்க இருபொருள் வாதத்தை (ஒளி/இருள் 1 யோவா 1:5–65: இறைவன்/ தீயவன் 5:19) உயிர் தத்துவமாக எடுத்துக்கொண்டு போதித்த போலிப் போதகர்களை எதிர்க்கிறார். இப்படித் தவறாக எடுத்துக் கொண்டதின் விளைவாக மனிதவதாரத்துக்குப் பதிலாக முழுவதும் ஆன்மீகக் கிறிஸ்துவையும் விசுவாசத்திற்குப் பதிலாக அறிவையும் போதித்தனர்.

பரிகாரத்திலிருந்து தொடர்பற்ற (2:2; 5:6–10) பாவமற்ற மிக உயர்ந்த ஆன்மீக நிலையைக் கொண்டிருப்பதாக (1:7–8) போலி உரிமை கொண்டாடினர். கொரிந்தியர்களைப்போல, இவர்களும் ஒழுக்க வியலுக்குப் புறம்பான ஒரு ஆன்மீகத்தைப் போதித்தனர் (2:3.10–11). இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட அன்பின் இறைவனை மறுக்கும் (4:8) இவர்கள் உண்மையில் 'எதிர்க் கிறிஸ்துவை ஏவும் ஆவியைக்' கொண்டிருக்கின்றனர் (4:3). இவர்கள் வஞ்சகர்களும் ஏமாற்றுகிறவர்களுமாவர் (2 யோவா 7).

"ஆழ்ந்த ஞானம்" என்பது அறிவு நெறிக் கோட்பாட்டின் ஒரு பதமாகும். இப்படிப்பட்ட ஞானத்தைக் கொண்டிருப்பதாக பெருமைபட்டுக்கொள்ளும் நிக்கொலாயர் (திருவெளி 2:6.15.24) தொடக்க கால அறிவு நெறிக் கோட்பாட்டாளர்களாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த ஆன்மீக விபச்சாரத்திற்கும் ஒழுக்கக் கேட்டிற்கும் (2:20) எதிராக விசுவாசிகள் மனவுறுதியோடு நிலை நிற்க வேண்டும் (2:3.25).

3. அப்போஸ்தலர்களின் காலத்துக்குப் பின் அறிவு நெறிக்கோட்பாடு :-

இந்த இயக்கம் முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலையான வடிவம் எடுக்கத் தொடங்கியது. இவ்வியக்கத்தில்

சீமோன் மாகஸ் (அ.ப. 8:9–24) செரிந்தஸ், மாச்சியோன், வலென்தீனூஸ், பாசிலிதெஸ் ஆகியோர் முக்கியமானவர்கள்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இந்த இயக்கம் விரைவாக வீழ்ச்சியுற்றது. இதை கிறிஸ்துவம் காப்புரைத் தாக்குதல்களாலும் திட்டமிட்ட விவிலிய இறையியல் நூல்களாலும் எதிர்த்தது. 4–ஆம் நூற்றாண்டில் அறிவு நெறிக்கோட்பாடு மணிக்கேயித்துவத்தில் புத்துயிர் பெற்றதாக தெரிகிறது. அடிப்படையான இருள் பொருள் வாதத்தைக்கொண்ட மணிக்கேயித்துவம் பலருடைய கவனத்தைக் கவர்ந்தது. அகுஸ்தினார் இளைஞனாக இருந்த போது இதனால் பாதிக்கப்பட்டார். அறிவு நெறிக்கோட்பாடு, ஓர் இயக்கம் என்ற அளவில் அழிந்து போயிற்று.

4. மதிப்பீடு:- இவ்வியக்கம் கிறிஸ்துவத்தை அமிழ்த்தி அழித்துவிட அச்சுறுத்தியது. அதன் கற்பனைமிக்க புராணங்களும் அடிப்படை அகவியலும் பலரைக் கவர்ந்தது. இந்த இடுக்கண் நிலையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள, தொடக்க காலத்திருச்சபை அதிகார அமைப்புகளை (ஆயர்குழு, சட்டங்கள்) வளர்த்துக்கொண்டது. விவிலிய விளக்கவுரைகளையும் திட்டமிட்ட இறையியலையும் வளர்த்தது. அறிவு நெறிக்கோட்பாட்டை நிராகரித்ததில் பழைய, புதிய ஏற்பாடுகளுக்கிடையில் உள்ள ஒற்றுமை, படைப்பவர், மீட்பர், அன்பின் முதன்மை ஆகியவற்றை திருச்சபை வலியுறுத்தியது. திருச்சபையின் தந்தையர் இந்த இயக்கத்தின் சில கூறுகளைப் பயன்படுத்தினாலும் திருச்சபையில் யூஸ்தீன இரனேயு, தெல்துல்லியன், கிப்போலித்தஸ், எப்பிபானியஸ்' போன்றவர்களின் காப்புரை நூல்கள் இவ்வியக்கத்தை மறுத்துப் போராடின. இவ்வியக்கம் எழுப்பிய "நாம் யாராய் இருந்தோம், என்னவாக இருக்கிறோம், எதனால் மீட்கப்பட்டோம் எதை நோக்கிப் போகிறோம்" போன்ற கேள்விகளுக்கு கிறிஸ்தவப் பதில் போதியது என்று காட்டுகின்றன.

அறிவுரை கூறுதல் (EXHORT)

தூண்டுதல் உரை (கிரேக்க மொழியில் பாராகிளேசிஸ்) என்பது அருட்கொடைகளின் பட்டியலில் (உரோ 12:8) ஒரு முறை தான் இடம்பெறுகிறது. இருப்பினும் அது அப்போஸ்தலர், இறைவாக்கினர், மூப்பர் ஆகியோரின் முக்கிய அலுவல்களில் ஒன்றாகும். இத்திருப்பணி பழைய ஏற்பாட்டுச் சமய வாழ்விலும் யூதமதத்திலும் வேரூன்றியது. அப்பணி இன்றும் திருச்சபையில் தொடர்கிறது.

1. பழைய ஏற்பாடு :-

இறைவனுக்குச் சான்று பகர்ந்தவர்கள் அவரது மீட்புத்திட்டத்தை உள்ளார்வமின்றி வெறுமனே எடுத்துரைத்து மன நிறைவு கொள்ளவில்லை. குருக்கள் (உப 4–11), இறைவாக்கினர் (ஏச 1:16...) ஞானிகள் (பழ 1–9) ஆகியோர் ஆற்றிய பேருரைகள் கேட்போரின் அறிவை மட்டுமன்றி உள்ளத்தையும் தொட்டன. இவர்கள் தங்கள் பேருரைகளால் மக்களைத் தம்பால் ஈர்த்து உற்சாகப்படுத்துகிறார்கள்: தொடர்ந்து இறைவனின் பெயரால் பேசி, மக்கள் அவருக்குச் செவிமடுக்கவும், மனந்திரும்பவும் அவரைத் தேடவும் தூண்டுகிறார்கள். மிகப் பழக்காலந் தொடங்கி மக்கபேயர் காலமட்டும் இத்தகைய தூண்டுதலையும் வேண்டுகோளையும் காண்கிறோம்: ஆண்டவருக்கும் அவரது திருச்சட்டத்திற்கும் துணிவோடு பிரமாணிக்கமாய் இருப்பதற்குத் தூண்டுதல் தராத போதனையே இல்லை (உப 5:32; 6:4 தொ; 32:45 தொ). இவ்வாறு, குறிப்பாகச் சமயத்திற்காகத் துன்புறுத்தப்பட்ட காலத்திலும் (2 மக் 7:5), புனிதமான போர் மூண்ட காலத்திலும் (2 மக் 8:16; 13:12.14), இருந்தது.

2. புதிய ஏற்பாடு :-

புதிய ஏற்பாட்டின் தொடக்கத்தில் திருமுழுக்கு யோவான் இப்பாரம்பரியத்தைத் தொடர்கிறார்: "பல அறிவுரைகள் கூறி மக்களுக்கு நற்செய்தி அறிவித்தார்" (லூக் 3,18). இயேசுவும் தம்மில் தோன்றிய இறையரசின் நற்செய்தியை அறிவித்து, அவ்வரசின் மறையுண்மைகளை வெளிப்படுத்தியதோடு மனநிறைவு கொண்டாரல்லர். அவ்வரசில் மக்கள் நுழைய வேண்டுமென்று வருந்தி அழைக்கிறார்; எவ்வாறெனில் மக்கள் மனந்திரும்பவும், நற்செய்தியை விசுவசிக்கவும், தம்மைப் பின்பற்ற

வும், தம் போதனையைக் கடைப் பிடிக்கவும் அவர்களை ஆர்வத்துடன் அழைக்கிறார். அவ்வாறே அப்போஸ் தலர்களும், தம் போதனையைக் கேட்டுத் திருமுழுக்குப் பெற (அ.ப. 2:40) மக்களை வருந்தி அறிவுறுத்தி வேண்டுகிறார்கள். கிறிஸ்துவ சமுதாயங்களில் பவுல் தம் உரைகளால் மக்களுக்கு ஞான வளர்ச்சி தருகிறார்; ஊக்கம் ஊட்டுகிறார்; ஆறுதல் அளிக்கிறார் (1 கொரி 14,3); இவ்வாறு தான் திமோத்தேயுவும் தீத்துவும் செய்திருக்க வேண்டும் (2 திமோ 4:2; தீத் 1:9). இவை யாவும் அப்போஸ்தலிக்கத் திருப்பணியின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றை நிலைத்திருக்கச் செய்கின்றன (அ.ப. 11:23; 14:22; 15:32;16:40; 1 தெச 3:2). இப்பொறுப்புப் பற்றி பவுலும் விளக்கிக் கூறுகிறார்: "நாங்கள் பேசுவது கடவுளே அறிவுறுத்துவது போலாகும்" (2 கொரி 5:20; 1 தெச 2:13). இவ்வாறு புதிய ஏற்பாட்டு நூல்களும் பல்வேறு தூண்டுதல் உரைகளைக் கொண்டுள்ளன. எபிரேய ருக்கு எழுதிய திருமுகம் (எபி 13:22), பேதுருவின் முதல் திருமுகம் (1 பேதுரு 5:12) ஆகியவற்றின் முக்கிய குறிக்கோள் தூண்டுதல் உரை தருவதே. மேலும் சாதாரணக் கிறிஸ்தவர்களும் திருச்சபையின் வளர்ச்சியைக் கண்முன் கொண்டு தூண்டுதல் உரை தந்து ஒருவர் ஒருவரை ஊக்கமூட்ட வேண்டும் (2 கொரி 13:11; எபி 3:13; 10:25).

அறுநூற்று அறுபத்தாறு

திருவெளிப்பாட்டு நூலில் வரும் விலங்கின் பெயரைக் குறிக்கும் எண்ணாகும் (13:18). இந்த எண் 13:1–இல் வரும் விலங்கைக் குறிக்கிறது. இந்த விலங்கின் பெயரையோ அல்லது பெயரின் எண்ணையோ கொண்டிராதவர்கள் வியாபாரத்தில் ஈடுபடமுடியாது. ஆசிரியர், வாசகர்களின் புத்திக்கூர்மைக்கு இந்த எண்ணைக் கணிக்க ஒரு சவாலாக விட்டுவிடுகிறார்.

அராபிய எண்கள் வழக்கில் வருமுன், எழுத்துக்கள் ஒலியையும், எண்ணையும் குறித்தன. "அது ஒரு மனிதனைக் குறிக்கும் எண்" என்பதற்கேற்ப, விலங்கின் எண் ஒரு குழூஉக்குறியல் அடையாளமாகக் கருதப்பட்டது. இதன்படி ஒருவரின் பெயர் அப்பெயரில் காணப்படும் எழுத்துக்களின் எண்களின் கூட்டுமதிப்பாகக் கருதப்பட்டது.

இரேனேயு காலத்திலிருந்து, எபிரேய, கிரேக்க எழுத்துக்களின் எண் மதிப்பை வைத்து இந்த எண் குறிப்பது யார் என்று கண்டுபிடிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் விளைவாக, நீரோ சீசர், தோமிசியன் சீசர் போன்றவர்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

சில விளக்கவுரையாளர்கள் கருத்துப்படி விலங்கின் எண், திருவெளிப்பாட்டு நூலுக்குப் பிந்திய காலத்தை சேர்ந்த ஒருவரைச் சுட்டிக்காட்டுகிறது. ஆகையால் நூலின் முதல் வாசகர்கள், இங்கே சுட்டிக்காட்டப்படும் ஆளையோ (நிறுவனத்தையோ) அறிந்திருக்கமாட்டார்கள். இந்த அள், சாதாரணமாய் காலமுடிவில் வரும் "எதிர்க் கிறிஸ்து" என்று புரிந்துக் கொள்ளப்பட்டார். ஆனால் இந்தப்பதம் இந்நூலில் காணப்படவில்லை. இந்த அடிப்படையில் இக்காலம்வரை வரலாற்றில் இருந்திருக்கிற அரசியல், சமய, படைத்தலைவர்கள், நிறுவனங்களில் இந்த விலங்கை அடையாளம் காட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒருவேளை திருவெளி – 13, உரோமைப் பேரரசின் படைப்பலத்தையும் சமயச்சடங்கு முறைகளையும் இந்நூல் எழுதியபோது இப்பேரரசு கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தியதையும் விவரிக்கலாம்.

இந்த எண் "ஒரு மனித எண்" அல்லது "மனுக்குலத்தின் எண்" என்றும் "ஒரு ஆளின் எண்" அல்ல, ஆகையால் இது பெயரோடே தொடர்புடையதல்ல என்றும் எடுத்துக்கொள்ளலாம். இதன்படி, திருவெளிப்பாட்டு நூலில் வரும் மற்ற எண்களுக்கு விளக்கம் அளிக்கு முறையிலேயே இதற்கு விளக்கம் அளிக்கலாம். இந்நூலில் எண் ஏழு முழுமையை நிறைவைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. ஆறு ஏழிலிருந்து ஒன்று குறைந்தது. அதனால் 666 குறைபாடுகளின் கூட்டமைப்பைக் குறிக்கிறது. இதை விலங்கின் அடையாளத்தை நெற்றியிலோ கையிலோ கொண்டிராத இறைமக்களைத்தவிர மற்றவர்கள் எல்லாம் அடையாளமாகப் பெற்றிருந்தனர்.

அறுவடை (HARVEST)

இது விவசாய விளைச்சலை அறுத்து ஒன்று சேர்த்தலைக் குறிப்பிடுகிறது. கெசேர் ஆண்டுக்குறிப்பு பழங்கால இஸ்ராயேல் அறுவடை நாட்களுக்கு ஒரு குறிப்பு தருகிறது. செப்டம்பர் மத்தியிலிருந்து நவம்பர் மத்திவரை உட்பட்ட வருடத் தொடக்கத்தில் ஆலிவப் பழங்கள், தொரட்டிகளால் அறுவடை செய்யப்பட்டன. மார்ச் ஏப்ரலில் சணல் அறுவடை செய்யப்பட்டிருக்கிறது (யோசு 2:6). பார்லியின் அறுவடை ஏப்ரல்–மே மாதங்களில், கோதுமை அறுவடை மே–ஜூன் மாதங்களில் நடந்திருக்கிறது. ஆகஸ்ட்–செப்டம்பர் மாதங்களில் கோடை கால பழங்களான அத்தி, திராட்சை, மாதுளை போன்றவை அறுவடை செய்யப்பட்டன.

அறுவடையில் குடும்பம் முழுவதும், கூலியாட்களும் ஈடுபட்டனர். எல்லா இஸ்ராயேலரும் பங்கெடுக்க வேண்டுமென்று எதிர்ப்பார்க்கப்பட்டது (பழ 16:5: 20:4). தானியங்களும் மற்ற பொருட்களும் கையால் சேர்க்கப்பட்டன. பெரும்பாலும் அரிவாள் பயன்பட்டது (யோவே 3:13; மாற் 4:29). மற்ற விளைச்சல்களை அறுவடை செய்ய தொரட்டி போன்ற கருவிகள் பயன்பட்டன (ஏச 17:6).

பழங்கால இஸ்ராயேல் முதன்மையாக விவசாய சமூகமாகும். அதன் முக்கிய அறுவடைக்காலங்கள் மூன்று முதன்மையான பெரும் விழாக்காலங்களைக் கொண்டிருந்தன. பார்லி அறுவடைத் தொடக்கத்தில் (ஏப்ரல் மாதம்) பாஸ்கு விழாவும் (யாத் 34:18–20) கோதுமை அறுவடைச் சமயத்தில் (மே–ஜூன்) ஐம்பதாம்) நாள் விழாவும் (லேவி 23:15–21; யாத் 23:16 : இது அறுவடை விழா என்றழைக்கப்பட்டது) திராட்சை அறுவடை முடிவில் (செப்டம்பர், அக்டோபர்) கூடார விழாவும் (உப 16:13–16; யாத் 23:16) கொண்டாடப்பட்டன.

எல்லா விளைச்சலும் இறைவனுடைய கொடையாகக் கருதப்பட்டதால், முதற்பலன்களின் ஒரு பகுதி காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது (லேவி 19:23– 25; 23:10; யாத் 22:29). அன்னியர், அனாதைகள், விதவைகள் ஆகியோர்பால் கொண்ட அக்கறையினால் அவர்கள் பொறுக்கிக் கொள்ளும்படி விளைச்சலில் ஒரு பகுதி அறுவடை செய்யாமல் விடப்பட்டது (லேவி 19:9; 23:22; உப 24:19–20; ரூத் 2).

உருவக முறையில் இறையரசுக்காகத் தங்களை அர்ப்பணிப்பதை அறுவடைக்கு இயேசு ஒப்பிடுகிறார் (மத் 9:37; 13:30; யோவா 4:35). மற்ற இடங்களில் அறுவடை காலமுடிவை அடையாளமாகக் குறிக்கிறது (மத் 13:39; திருவெளி 14:15). அழிந்துபோன அறுவடையின் பயங்கர விளைவுகள் இறை தண்டனையையும் (ஏச 16:9; 17:11; எரே 5:17), ஆண்டவரின் பயங்கர நாளையும் (எரே 51:33; யோவே 3:13) சித்தரிக்கிறது.

அனகராத்து (ANAHARATH – அழிக்காதே, விரைவாக விழுங்காதே)

இசிரியேல் பள்ளத்தாக்கிலுள்ள ஒரு நகர், இசக்காரின் பாகமாகக் கொடுக்கப்பட்டது (யோசு 19:19). மூன்றாம் துத்மேசேயால் பிடிக்கப்பட்ட நகரங்களின் பட்டியலில் காணப்படுகிறது. இது ஏந்தோருக்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவிலுள்ள நா–ஊரா என்று அடையாளம் காட்டப்படுகிறது.

அனத்தோத்து (ANATOTH – பதிலான)

பென்யாமினைச் சேர்ந்த ஒரு லேவிய நகரம் (யோசு 21:18; 1 நாள் 6:60). எருசலேமுக்கு வடக்கில் இருந்தது. அனத்தோத்து என்பது பேத் – அனத்தோத்து என்பதின் சுருக்கமாக இருக்கலாம். இதிலிருந்து கானானியர்கள் வணங்கி வந்த அனாத்து என்ற தேவதையின் புனித இடம் இது எனத் தெரிகிறது. தேவதையின் இரு வீரர்களான அபியேசர், ஏகூ ஆகிய இருவரின் பிறப்பிடம் இதுவே (2 சாமு 23:27; 1 நாள் 11:28; 12:3). ஏலியின் வழிவந்த இறுதி தலைமைக் குருவான அபியத்தார், அனத்தோத்தில் உடைமைகள் கொண்டிருந்தார். அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டபோது இவ்வூருக்கே செல்லும்படி சாலமோன் கட்டளையிட்டார் (1 அர 2:26).

இந்நகரம் இறைவாக்கினர் எரேமியாவின் பிறப்பிடம் ஆகும் (எரே 1:1). இவர் முதன் முதலில் இறைவாக்குரைப்பு

எதிர்ப்பைக் கண்டதும் இந்நகரிலேதான். இவ்வூர் மக்கள்மேல் வர இருக்கும் தண்டனையை முன்னறிவித்தார் (எரே 11:21–23). ஆயினும் இந்நகரில் அவருடைய பெரியப்பாவின் மகனது நிலத்துச் "சொத்துரிமையையும் மீட்கும் உரிமையையும்" விரும்பி வாங்கிக்கொண்டார் (32:7–9). பாபிலோனியர் எருசலேம் மீது படையெடுத்தபோது இந்நகரம் பாழாக்கப்பட்டது (ஏச 10:30). ஆனால் நாடு கடத்தப்பட்டு திரும்பியபின் நெகமியா காலத்தில் பென்யாமின் குலத்தவர்கள் மீண்டும் இங்கு குடியேறினர் (நெக 11:32). அனாத்தோத்தின் மக்கள் என்பது ஒரு குடும்ப குழுவா அல்லது புவியியல் பட்டமா என்பது பற்றி நாடு கடத்தப்பட்டு திரும்பியவர்களின் பட்டியலில் தெளிவாக இல்லை (எஸ் 2:23; நெக 727; 10:19). அனாத்தா என்ற இக்கால நகரம் எருசலேமுக்கு வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. பழங்கால லேவியர் நகரத்தை நினைவுபடுத்துகிறது. ஆனால் விவிலிய நகரின் இடம் அனாத்தாவுக்கு தென்மேற்கில் ஒரு கி.மீ. தொலைவிலுள்ள ராஸ்–ஏல்–கரூபேயாக இருக்கலாம்.

அனம்மெலேக்கு (ANAMMELECH – *அனு அரசன் ஆவார்)*

கி.மு. 722–க்குப் பிறகு சமாரியாவில் குடியேற்றப்பட்ட செப்பர்வாயிம் மக்களால் வணங்கப்பட்டு வந்த தெய்வங்களுள் ஒன்று இந்தத் தேவதையாக இருக்கலாம் (2 அர 17:31). செப்பர்வாயிம் சீரியாவில் உள்ள சப்ராயிம் ஆக இருக்கலாம். இம்மக்கள் தங்கள் பிள்ளைகளையே அத்தெய்வங்களுக்கு எரிபலியாக ஒப்புக் கொடுத்ததாகத் தெரிகிறது. எனினும் மெசபொத்தாமியாவில் இந்த வழிபாட்டில் இத்தகைய பழக்கம் இருந்தது என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

அனயேல் (ANAEL)

தோபியின் சகோதரர். இவரது மகன் அகிக்கார் சனகெரிபின் விருந்தில் பானம் பரிமாறுபவனாகவும், கணக்குப் பிள்ளையாகவும், தலைமை ஆளுநராகவும் இருந்தவர் (தோபி 1:21–22).

அனனியா (ANANIAH – *யாவே தம்மை வெளிப்படுத்தியுள்ளார்) – ஆள்*

மாசேயாவின் தந்தை. மாசேயாவின் மகன் அசரியா, நெகமியாவின் தலைமையில் எருசலேம் மதிற்சுவர் கட்டி எழுப்புவதற்கு உதவினார் (நெக 3:23).

அனனியா (ANANIAH)–இடம்

பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து திரும்பியபின் பென்யாமின் குலத்தவர் குடியேறி வாழ்ந்த இடம் (நெக 11:32). இவ்விடம் எருசலேமிற்குக் கிழக்கில் 3 கி.மீ அப்பாலுள்ள இக்கால ஏல்–அசரியாவாக (புதிய ஏற்பாட்டில் பெத்தானியாவாக) இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது. இவ்விடத்தில் அனனியாவின் குடும்பத்தினர் குடியேறி வாழ்ந்ததால், இவ்விடம் இப்பெயர் பெற்றிருக்கலாம். இது அனனியா வீடு என்று பொருள்படும் பெத்தானியா என்ற புதிய ஏற்பாட்டுப் பெயரை விளக்கலாம்.

அனனியா (ANANIAS - *யாவே பெருந்தன்மை உடையவர்)*

1. எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவனும், சப்பீராவின் கணவனுமாவார் (அ.ப. 5:1. 3.5). இவர் தனது உடைமைகளை விற்று தனது சகோதரரோடு பகிர்ந்துகொள்ள முன்வந்தவர். ஆனால் தனது மனைவியின் தூண்டுதலால் தனக்கென ஒரு பகுதியை ஒதுக்கியபிறகே அப்போஸ்தலர்களுக்கு முழுமையாக அளிப்பது போல் அளிக்கவே, பேதுரு அவர்களுடைய கபடத்தை எடுத்துச் சொல்லவே அதே இடத்தில் இருவரும் இறந்தனர் (அ.ப. 5:1–11). அனனியாவின் கொடை பரிசுத்த ஆவியால் தூண்டப்படவில்லை. பிறர்முன் நற்பெயர் பெற பாவலாச் செய்த பாவமாகும். இந்த நிகழ்ச்சியுரை எரிகோவின் கொள்ளைப் பொருட்களில் ஒருபகுதியைத் திருடி வைத்துக் கொண்ட ஆக்கானின் நிகழ்ச்சி யுரைக்கு ஒத்ததாகக் காட்டப்படுகிறது (யோசு–7). அனனியா–சப்பீராவின் மரணம் அதிர்ச்சியால் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அவர்களுடைய ஏமாற்றும் எண்ணத்திற்கு அளிக்கப்பட்ட இறை தண்டனையாகக் காட்டப்படுகிறது.

2. தமஸ்குவில் வாழ்ந்த ஓர் கிறிஸ்தவச் சீடர் (அ.ப. 9:10.12–13.17; 22:12). சவுல் மனந்திரும்பிய அனுபவத்தைக் காட்சியில் கண்டவர். குருடான சவுல் மீண்டும் கண் பார்வை பெற உதவி, பவுலை தமஸ்குவிலுள்ள கிறிஸ்துவ சமூகத்திற்கு அறிமுகம் செய்தவர் (9:10–18). இந்தப் பக்திமானைப் பற்றி பவுலே போற்றிப் பேசுகிறார் (22:12–16). இவரைப்பற்றி புதிய ஏற்பாட்டில் வேறொரு செய்தியும் தரப்படவில்லை. இவர் பவுல் மனந்திரும்பியது பற்றிய மூன்றாம் விவரிப்பில் குறிக்கப்படுகிறார் (அ.ப. 26). பிற்காலப் பாரம்பரியம் இவர் தமஸ்குவில் ஆயரானதாகவும் மறைசாட்சியாக மரித்ததாகவும் கூறுகிறது.

3. நெபெதேயுவின் மகனாகிய இவர் கி.பி. 48–ம் வருடத்திலிருந்து தலைமைக் குருவாக இரண்டாம் ஏரோது அகிரிப்பாவால் நியமிக்கப்பட்டவர். அ.ப. 23:2–இன்படி இவர் பவுலுக்கு எதிராக யூதர்கள் கொண்டு வந்த குற்றச்சாட்டை உறுதி செய்யும் பொருட்டு அவரைத் தன் முன் கொண்டுவர கிளவுதியு இலிசியா என்ற உரோமை நூற்றுவர் தலைவனைக் கட்டளையிட்டார் (22:30). பவுல் தனது காப்புரையை வழங்கியபோது அவரது வயலில் அடிக்கும்படி அனனியா கட்டளையிட்டார். இதைப் பவுல் வன்மையாகக் கண்டித்தார். ஆனால் அவர் பெரிய குருவிடம் பேசுகிறார் என்பது நினைவு படுத்தப்பட்டபோது, தனது பேச்சிற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார் (23:2–5). ஐந்து நாட்களுக்குப் பின் பவுல் ஏற்கெனவே கொண்டு செல்லப்பட்டிருந்த செசரியாவுக்கு அனனியா ஆளுநன் பெலிக்சிடம் பவுலுக்கு எதிராகத் தானே குற்றம் சாட்டிச்சென்றார் (24:1). உரோமையரசின் கீழ் பணியாற்றிய இவர், அதிகார ஆணவமும், பேராசைமிக்கவராயும், உரோமையருக்கு ஆதரவாளராகவும் இருந்ததால் யூதர்களின் சண்டையின் போது (67–70) கொல்லப்பட்டார்.

4. அசரியாவின் தந்தை. இரபேல் தூதர், இப்பெயரை தனதாக்கி, தோபியாவின் தந்தைமுன் உண்மைக்கு மாறாக அடையாளம் காட்டினார் (தோபி 5:12).

5. யூதித்தின் மூதாதையரில் ஒருவர் (யூதி 8:1).

அனனியேல் (ANANIEL)

தோபித்தின் பாட்டனாவார். நப்தலி குலத்தில் தோன்றி அசியேலின் வழிவந்தவர் (தோபி 1:1).

அனாக்கியர் (ANAKIM–கழுத்து, கழுத்தணி)

அர்பாவின் புதல்வர்கள் அனாக்கின் வழித்தோன்றல்கள். இந்த அர்பா இவர்களில் மிகப்பெரியவராகக் கருதப்பட்டார் (யோசு. 14:15; 15:13). பாலஸ்தீன நாட்டில் இஸ்ராயேல் மக்கள் குடியேறுவதற்கு முன் யோர்தானுக்கு மேற்கேயுள்ள மலைப்பகுதியில் (11:21) குறிப்பாக கெபிரோன் பகுதியில் (14:12–15), வாழ்ந்து கொண்டிருந்த ஓர் இனம். எபிரேய பாரம்பரியப்படி இவர்கள் "வலுத்த இனம்" "நெடிய ஆட்கள்" ஆவர் (உப 2:2; 9:2). எண் 13:33–இன்படி இவர்கள் "தெய்வப் புதல்வர்கள் மனிதரின் புதல்வியர்களுக்குப் பிறந்த" (ஆதி 6:4) நெப்பிலிமின் வழிவந்தவர்கள் என்றும் கருதப்படுகின்றனர். பாலஸ்தீனநாட்டின் வட பகுதியில் பெரும்பகுதி இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. யோசுவாவால் அனுப்பப்பட்ட 12 வேவுக்காரர்கள் இவர்களைப்பற்றி பயங்கர செய்திகள் கொண்டு வந்தனர் (எண் 13:28; 31–33; உப 1:28). ஆனால் இஸ்ராயேலர் யோர்தானைக் கடந்தபின் அவர்கள் இந்தப் பயங்கர மக்களை வெல்வர் என்று யோசுவா இறைவாக்குரைத்தார் (உப 9:2). காலப் போக்கில் யோசுவா வந்து அனாக்கின் புதல்வர்களைக் கொன்று குவித்தார். அவர்களின் நகரங்களை எல்லாம் அழித்தபோதிலும் பெலிஸ்திய நகரங்களான காசா, காத்து, அசுதோத்து, என்ற நகர்களைச் சார்ந்த மக்களை உயிரோடு விட்டுவிட்டார் (யோசு 11:21–23). காலேபுதான் அனாக்கின் புதல்வர்களான அகிமான், சூசாய், தால்மாய் ஆகியோரை கெபிரோனிலிருந்து விரட்டி அடித்தார் (14:12–15; 15:13–14; நீதி 1:10) காத்தைச்சேர்ந்த கோலியாத்தும் (1 சாமு 17:4) 2 சாமு 21:16–22; 1 நாள் 20:4–8–இல் குறிக்கப்படும் இராட்சதர்களும்தான் அனாக்கியரில் கடைசியானவர்கள். 2:10.20–21–இல் வரும் ஏமியர், சம்சூம்மியர் ஆகியவர்கள் அனாக்கியர்களோடு ஒப்பிடப்படுகின்றனர். இந்த அனாக்கு வம்ச

அரசர்கள் செமித்தியப் பெயர்களை கொண்டிருந்தது எகிப்திய பழித்துரை வாசகங்களிலிருந்து தெரிகிறது. இது கி.மு. 2000–ஐ ஒட்டி அனாக்கியரின் ஒரு பிரிவினர் பாலஸ்தீனத்தில் இருந்ததைச் சுட்டுகிறது.

அனாக்கு (ANAK – கழுத்து, கழுத்தணி)

அர்பாவின் மகன். அகீமான், சூசாய், தால்மாய் ஆகியோரின் மூதாதையர் (எண் 13:22; யோசு 15:13–14; 21:11; நீதி 1:12). இப் பெயர் அனாக்கின் வழித்தோன்றல் களான அனாக்கியர்களின் இனப்பெய ராகவும், அனாக்கியர் என்ற பெயருக்குச் சமமானதாகவும் பயன்பட்டுள்ளது.

அனாதைகள், திக்கற்றவர்கள் (FATHERLESS, ORPHANS)

இச்சொல் தாய் தந்தையர் இருவரை யும் இழந்தவரைக் குறிக்கிறது. ஆனால் மறை நூலில் இருபெற்றோரையும் இழந்த வரா அல்லது தந்தையை மட்டும் இழந்த வரா என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வில்லை. ஆயினும் மறைநூலில் இவர்கள் பொதுவாக அனாதைகள் என்றே குறிக் கப்படுகின்றனர். கைம்பெண்களும், அனாதைகளும் சேர்த்துக் கூறப்படுகின் றனர். இஸ்ராயேலில் சொத்துரிமை ஆண் களின் வழியாக வந்தது. இவர்கள் போரில் மடிந்துபோகும் வாய்ப்பு அதிகம் இருந்தது. அப்படிப்பட்ட நிலையில் குடும்பத்திற்கு ஊதியம் தேட ஒருவருமின் றியும், குடும்பத்தார் தங்கள் உரிமையைப் பிற குலத்தவர் முன் பாதுகாக்க முடியாத வர்களுமாய் இருந்தனர்; குடும்பத் தலை வனை இழந்த குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அனாதைகளாகின்றனர். ஆகவே விதவைகளும் அனாதைகளும் சேர்த்தே குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

அனாதைகளைக் காப்பாற்றும்படி யான வேண்டுகோள் மறைநூலில் பல இடங்களில் காணப்படுகின்றது. (யாத் 22:22; உப 10:18; 24:17; ஏச 1:17; 10:12; எரே 22:3; செக் 7:10; சீரா 4:10; யாக் 1:27). எபிரேய சட்டப்படி ஒவ்வொரு மூன்றாண்டு முடி விலும் அளிக்கப்பட்ட பத்தில் ஒரு பங்கு வரியில் அனாதைகளுக்குத் தனிக் கவனம் செலுத்தப்பட்டது. அறுவடையின் போது தவறிவிடப்பட்ட அரிக்கட்டையையும் பழங் களையும் அனாதைகளுக்கு விட்டுவிட வேண்டும். ஏனெனில் இவர்களுக்கு உரி மையான நிலமில்லை (உப 14:29; 24:19–21 26:12; 27:19; ரூத் 2). கடன் கொடுத் தவன் அனாதைகளிடமிருந்து அவர்களது மேலாடையை அடமானமாக எடுக்கக் கூடாது (உப 24:17). இவர்கள் பெரும் பாலும் சமூகத்தில் ஏழைகளும் பலவீன மானவர்களுமாய் இருந்தனர். ஆகையால் நீதி கோரமுடியாத நிலையில் இருந்த னர். அனாதைகளையும், விதவைகளையும் காப்பாற்றியது தனது நேர்மைக்குச் சான் றாகும் என்று யோபு கூறுகிறார் (யோபு 6:27; 22:9; 24:3; உப 27:19; சங் 94:6). இறை வாக்கினர்கள் அடிக்கடி அனாதைகளுக் கும் விதவைகளுக்காகவும் பரிந்து பேசு கின்றனர் (ஏச 1:17.23; 10:2; எரே 5:28; 22:3; எச 22:7; செக் 7:10; மலா 3:5; சீரா 4:10). தாமே இவர்களுக்குப் பாதுகாப்பாளராக இருப்பதாய் இறைவன் வாக்குறுதி அளிக் கிறார் (யாத் 22:23–24; உப 10:18; சங் 10:14.15; பழ 23:10–11; ஏச 9:17). நிக்கா னோரை வெற்றி கொண்டபின் யூதர்கள் கொள்ளைப் பொருளில் ஒரு பகுதியை அனாதைகளுக்கும் விதவைகளுக்கும் கொடுத்தனர் (2 மக் 8:28). யாக்கோபின் போதனைப்படி 'தந்தையாகிய இறைவன் முன்னிலையில் புனிதமும் மாசற்றதுமான தொண்டு' அனாதைகளையும், விதவை களையும் ஆதரிப்பதாகும் (யாக் 1:17).

இஸ்ராயேலரிடையே புதல்வர்கள் இல்லாதபோதுதான் புதல்விகள் சொத்து ரிமை பெற்றனர் (எண் 27:8). ஆகவே தந்தையை இழந்த புதல்விகளுக்கு சமூகத் தில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. சிலரின் கருத்துப்படி அனாதைப் பெண் கள் என்பவர்கள், புனித இடங்களைச் சேர்ந்த தாசிகளின் புதல்வியர்களாவர். ஏனெனில் அவர்களின் தந்தை யாரென்று எவரும் அறியார். அவர்களுடைய வாழ்க் கை புனித இடங்களோடு அடங்கியிருந் தது. இந்த நிலை யோசியாவின் சீர் திருத்தத்தின்போது நீக்கப்பட்டது (கி.மு. 621). சில மலடிப் பெண்கள் இந்தத் தாசி களின் குழந்தைகளை சுவீகாரம் எடுத்துக் கொண்டனர் (ஓசே 1).

அனாத்து (ANATH – சினம்) – ஆள்

இஸ்ராயேலுக்கு நீதி வழங்கி வந்த நடுவர்களில் ஒருவரான இவர் சங்காரின் தந்தை (நீதி 3:31; 5:6).

அனாத்து (ANATH) – தேவதை

அனாத்து என்பது பண்டைய மேற்காசிய நாடுகளில் புகழ்பெற்று விளங்கிய செமித்திய தேவதையின் பெயர். உகரிட்டிக் இலக்கியத்தில் அனாத்து போரின், காதலின் தேவதையாகும். அனாத்து பாகாலுக்குச் சகோதரியும் வாழ்க்கைத் துணைவியும் ஆவாள். இஸ்ராயேலில் பேத்து–அனாத்து, அனத்தோத்து ஆகிய இடங்களில் வழிபடப்பட்டிருக்கலாம்.

அனாபு (ANAB – முந்திரிப்பழம்)

தெபீரின் அருகேயுள்ள யூதேயாவின் மலைப்பகுதியில் உள்ள ஒரு நகரம். இங்கிருந்துதான் அனாக்கியர்கள் யோசுவாவினால் விரட்டியடிக்கப்பட்டார்கள் (யோசு 11:21; 15:50). பத்தொன்பதாவது அரச மரபைச் சேர்ந்த எகிப்திய ஏடுகளிலிருந்து இதன் ஆரம்பக்காலப் பெயர் கார்த் – நாபு எனத்தெரிகிறது. கெபிரோனிலிருந்து தென்மேற்குப் பகுதியில் 24 கி.மீ. தொலைவிலுள்ள இன்றைய கிர்பேத்து–அனாபு என்ற கிராமமே அன்றைய அனாப்பின் இருப்பிடமாக இருந்திருக்கலாம்.

அனாமீம் (ANAMIM)

எகிப்து வழிவந்தவர்களின் இனப் பட்டியலில் வரும் ஓர் இனம் அல்லது நாடு (ஆதி 10:13; 1 நாள் 1:11). இது எவருக்கும் அதிகமாகத் தெரியப்படாத பெயர். ஆல்ப்ரைட் கூறுவதுபோல சிரேனேயில் வாழ்ந்தவர்களாக இருக்கலாம். அசீரிய நாட்டைச் சேர்ந்த இரண்டாம் சார்கோன் காலத்தவர்களாக இருக்கலாம். மேற்கு எகிப்திலுள்ள கின்மித் என்ற பாலைவனச் சோலையைச் சேர்ந்த கேனெமியராக இருக்கலாம்.

அனாயா (ANAIAH – ஆண்டவர் பதில் அளித்து விட்டார்)

1. மோசே திருச்சட்ட நூலை, மரத்தால் செய்யப்பட்ட ஒரு மேடையின் மீது நின்று எஸ்ரா வாசித்துக்கொண்டிருக்கும் போது அவரது வலப்புறத்தில் நின்றுகொண்டிருந்த ஆறுபேர்களில் ஒருவர். ஒருவேளை ஒரு குருவாக இருக்கலாம் (நெக 8:4).

2. நெகமியாவின் கீழ் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டபோது தனது மக்கள் பெயரில் கையொப்பமிட்ட தலைவர்களில் ஒருவர் (நெக 10:22). இவர் 1–இல் கூறப்பட்டவராகவே இருக்கக்கூடும்.

அனான் (ANAN – மேகம்)

நெகமியா தலைமையில் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டபோது, கையொப்பம் இட்ட தலைவர்களில் ஒருவர். ஆண்டவர் ஆலயத்தின் பாடகர்களின் பெயர் பட்டியலில் இவரும் இடம் பெறுகிறார் (நெக 10:26).

அனானி (ANANI – யாவே தம்மை வெளிப்படுத்தியுள்ளார்)

தாவீது வழி வந்தோரின் வம்சத்தில் ஒருவரான செருபாபேலின் வழிவந்த எலியோனாயின் ஏழாவது புதல்வர் (1 நாள் 3:24).

அனியாம் (ANIAM – மக்களின் புலம்பல்)

மனாசே பரம்பரையில் வந்த செமிதாவின் நான்காவது புதல்வர் (1 நாள் 7:19).

அனுபு (ANUB – பழுத்த, முதிர்ந்த)

யூதா குலத்தைச் சேர்ந்த கோசு என்பவருடைய மகன் (1 நாள் 4:8).

அன்பிற்குரியவர் (BELOVED)

'அன்பிற்குரியவர்' என்ற இவ்வார்த்தை விவிலியத்தில் பலமுறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. பழைய ஏற்பாட்டில் பென்யாமின் அன்பிற்குரியவராகக் கருதப்படுகின்றார் (உப 33: 21). தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் 'அன்பிற்குரியவர்கள்' என அழைக்கப்படுகின்றனர் (சங் 60:5; 108: 6; 127:2; எரே 11:15). உன்னத சங்கீதத்தில் பால் உணர்வு சார்ந்த அன்பினைக் குறிக்க இவ்வார்த்தைப் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஏச 5:1–இல் இவ்வார்த்தை இறை அன்பைக்குறிக்கின்றது. பல இடங்களில் இவ்வார்த்தையானது வினைச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்

றது (உப 21:15–16; 2 சாமு 1:23; நெக 13:26; ஓசே 3:1). இவ்வார்த்தையானது ஓசே 9:16–இல் குழந்தைகள் மேல் உள்ள அன்பைக் குறிக்கின்றது. தானியேல் மிகுதியான அன்புக்குரியவர் (தானி 9:23; 10:11.19)

2. புதிய ஏற்பாட்டில் தந்தையின் மகனும், பணியாளருமாகிய இயேசு அன்பார்ந்த மகனாவார் (மாற் 1:11; 9:7; 2 பேதுரு 1:17; காண் மாற் 12:6). எபே 1:6–இல் அன்பிற்குரியவர் என்ற வார்த்தைத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பணியாளரையும் தந்தையின் ஒரே மகனையும் சேர்த்து (மத் 12:18; ஏச 42:1) குறிக்கின்ற மெசியாவிற்குரிய பெயராக விளங்குவதுபோல் தோன்றுகிறது (காண்க ஆதி 22:2; கலா 3:16; 4:4.28–29).

இஸ்ராயேல் மக்களின் பின் வருபவர்களும், கிறிஸ்துவின் உடலுமாகிய திருச்சபையும் அன்பு செய்யப்படுகின்றது [உரோ 1:7; 9:25 (காண் ஓசே 2:1.16 தொ) கொலோ 3:12; 1 தெச 1:4 (காண் உப 33:12); 2 தெச 2:13]. திருச்சபையின் உறுப்பினர்கள் கிறிஸ்துவினால் மீட்கப்பட்டவர்களாதலாலும் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும் என்று கட்டளையிடப்பட்டதாலும், அவர்களும் அன்பிற்குரியவர்கள் (யோவா 13:34; பிலி 4:1; எபி 6:9; 1 பேதுரு 2:11; 2 பேதுரு 3:1; யோவா 3:2; 3 யோவா 1 யூதா 1.3.7.20). கிறிஸ்தவர்கள் அனைவரும் அன்பினால் இணைக்கப்பட்ட சகோதரத்துவத்தை உருவாக்குகின்றனர் (1 கொரி 15:58; எபே 6:21; கொலோ 4:7–9; யாக் 1:16–19; 2:5; 1 திமோ 6:2; பிலோ 16). ஆண் பெண்களுக்கிடையே குறிக்கப்படும் அன்பித்தொனி குறிப்பிடத்தக்க தொன்றாகும். இது வெறும் ஆசாரம் அன்று (உரோ 16:5–16; 2 திமோ 1:2; 3 யோவா 1.2.5.11; காண்க பிலி 2:22 தொ).

அன்பு (LOVE)

1. முன்னுரை:-

"இறைவன் அன்பானவர், "ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்" புதிய ஏற்பாடு வெளிப்பாட்டின் இந்த உச்சி நிலையை அடைவதற்கு முன்னர் இறைவன்பால் மறைபொருளை உணர்ந்து கொள்வதற்கென அன்பைப்பற்றி தனக்கென உருவாக்கிய முழுமையும் மனித இயல்பு சார்ந்த கருத்துக்களை மனிதன் தூய்மைப்படுத்த வேண்டும். இச்செயலானது சிலுவையின் மூலமாக நடைபெறுகிறது. அன்பு என்ற சொல்லானது உண்மையில் ஊனியல்பான அல்லது ஆன்மீக பற்றார்வமிக்க அல்லது சிந்தனையுடனான, உன்னிப்பான அல்லது இலேசான, விரிவுபடுத்தக்கூடிய அல்லது அழிக்கப்படக்கூடிய பல்வேறுபட்ட கருத்துக்களின் கலப்பினை குறிப்பிடுகிறது. இனிய ஒன்றை ஒருவர் அன்பு செய்கிறார். உதாரணமாக விலங்கு, உழைப்பில் தோழன், நண்பன், உறவினர்கள், பிள்ளைகள், இறுதியாக ஒரு பெண். விவிலிய மனிதன் இவை அனைத்தையும் அறிந்துள்ளான். ஆதியாகமம் (ஆதி 2:23–24; 3:16; 12:10–19; 22:24:34), தாவீதின் வரலாறு (1 சாமு 8:1 தொ; 2 சாமு 3:16; 12:15–25; 19:1–5), உன்னத சங்கீதம் முதலியன எல்லாவிதமான உணர்வுகளுக்கும் சான்றுகளாக உள்ளன. ஆனால் பாவமானது பெரும்பாலும் இவற்றில் கலந்திருக்கிறது. ஆனால் அடக்கமான நேர்மை, ஆழ்ந்த நிலை மற்றும் வாய்மை ஆகியவை எளிய அடக்கமான வார்த்தைகளில் எடுத்துக் கூறப்படுவதைக் காணலாம்.

இஸ்ராயேல் அறிவார்ந்த கருத்தியலான போக்கிற்குச் சிறிதளவே முக்கியத்துவம் அளிக்கிறது. இஸ்ராயேலுக்கு இவ்வார்த்தைகள் பெரும்பாலும் உணர்ச்சிகளை எடுத்துக்காட்டுகின்றன. அவர்கள் வாழ்வில் அறிதலென்பது ஏற்கெனவே அன்பு செய்வதாகும். சமூக மற்றும் குடும்ப உறவுகளுக்கு இஸ்ராயேல் காட்டும் அன்புறுதியானது, முற்றிலுமாக ஆவியுடனும் சுதந்திரத் தன்னியல்புடனும் வளப்படுத்தப்பட்டுள்ளது (ஆதி 24:49; யோசு 2:12–14; ரூத் 3:10; செக் 7:9).

சுருக்கமாக, விவிலிய மனிதன் அன்பின் அபாயங்களை அறிந்திருந்தாலும் (பழ 5; சீரா 6:5–17) அதனுடைய மதிப்பையும் அறிந்துள்ளான் (பழ 15:17). அன்பெனும் கருத்து அவனது சமய மன நிலையை ஊடுருவிச்செல்லும்போது, அது வளமான செயல்பாடான மனித

அனுபவத்தினால் முழுவதும் தாக்கம் பெறுகிறது. அதே நேரத்தில் அன்பானது எண்ணற்ற வினாக்களையும் எழுப்புகிறது. உயரிய தூய இறைவன், சிறிய, பாவம் நிறைந்த மனிதனை அன்பு செய்வதற்காக தம்மைத் தாழ்த்துவாரா? இறைவன் அன்பு செய்வதற்காக இறங்கி வந்தாலும், அந்த அன்பிற்கு பதிலன்பாக மனிதன் எவ்வாறு பதிலளிக்க முடியும்? இறையன்பிற்கும் மனித அன்பிற்கும் இடையில் எத்தகைய உறவு நிலவுகிறது? இந்த இரு எதிர்முனைகளில் ஒன்றை சார்வதன் மூலம் வழக்கமாக எல்லா சமயங்களும் தங்களுக்கேயுரிய முறையில் இந்த வினாக்களுக்கு பதிலளிக்க முயல்கின்றன. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொலைவை நீடிக்கச்செய்ய இறையன்பை அவை அடையமுடியாத நிலைக்கு ஒதுக்குகின்றன அல்லது இறைவனை மனிதரிடையில் தோற்றுவிப்பதற்கென இறையன்பினை முற்றிலும் மனித அன்பாக தாழ்த்துகின்றன. மனித அளவிலான இந்த சமய குழப்பத்திற்கு விவிலியமானது ஒரு தெளிவான பதிலை அளிக்கின்றது. மனிதருடனான அன்பின் உரையாடல் மூலம் இறைவன் முதல் முயற்சியை எடுத்துள்ளார். இந்த அன்பின் பெயரால் அவர் அவர்களை பிணைக்கிறார். ஒருவரையொருவர் அன்பு செய்ய அவர்களுக்கு கற்பிக்கிறார்.

II. பழைய ஏற்பாட்டில் அன்பு:-

1. மனித அன்பு:- பழைய ஏற்பாட்டிலே மனித உறவுகள் அன்பினால் உருவாகின்றன. இதிலே வெவ்வேறு வடிவங்கள் உண்டு.

அ) பாலின அன்பு:- ஒரு புதிரானது. படைப்பின் ஓர் அங்கமாகும் (பழ 30:18–19). சாவைப் போல் வலிமையுள்ளது (2 சாமு 8:6). ஆகையால் எச்சரிக்கையாகக் கையாள வேண்டும் (2:7). ஒருவருக்கொருவர் வழங்குவது. இன்பம் அளிப்பது. எல்லாப் புலன்களையும் ஈடுபடுத்துவது (2:3.14.16; 3:1–5). அதன் மேலான நிலை திருமணத்தில் எய்தப்படுகிறது (திருவுரை 9:9). ஆனால் அது தவறாகப் பயன்படும் போது, காமத்திற்கும் விபசாரத்திற்கும் இட்டுச்சென்று இழிநிலை அடைகிறது. இது பதிதத்திற்கு உருவகமாகிறது (எரே 2:25; ஓசே 3; 2 சாமு 13:15). காதலையும் காமத்தையும் பழைய ஏற்பாடு மறைப்பதில்லை. இந்தக் காதல் காமத்தைச் சார்ந்ததாயிருப்பினும் காலமெல்லாம் நிலைத்திருப்பதாகவும் உள்ளது (உப 21:15–16; 1 சாமு 1:5; திருவுரை 9:9). உண்மை அன்பாகவும் மாறுகிறது.

ஆ. குடும்ப அன்பு:- இஸ்ராயேலரிடையே குடும்ப குல உறவுகள் வலுப்பெற்றிருந்தன. தந்தையும் மகனும் (ஆதி 22:2; 37:3; பழ 13:24) பெற்றோரும் பிள்ளைகளும் (பழ. 15:17; ஓசே 9:6), மாமியாரும் மருமகளும் (ரூத் 4:15) அன்பு செய்து வாழ்கின்றனர். இவ்வன்பு ஒரு சிலருக்கே காட்டப்படும் போது பிரச்சினைகள் எழுகின்றன. பொறாமையும் பகைமையும் தோன்றுகின்றன (ஆதி 25:28; 37:3–4).

இ. சமுதாயத்திலே அன்பு:- சமுதாய வாழ்க்கை மனிதனுக்கு முக்கிய உறவாகும். மனிதன் மனிதனை அன்பு செய்ய வேண்டும். மனிதனை மதித்தல் (1 அர 5:1; பழ 16:13), நண்பனைத் தொடர்ந்து அன்பு செய்தல் (2 சாமு 1:26; பழ 10:12; 17:9; 18:24), அடிமை தலைவன்மேல் பக்தி கொள்ளல் (யாத் 21:5), ஏழைகளுக்கு இரக்கம் காட்டுதல் (பழ 14:21.31) போன்றவை வெவ்வேறு அன்பு நிலைகளாகும்.

கலைச் சொல்லாக அன்பு, உடன்படிக்கை உறவையும் (உப 5:10; 7:7–9; ஓசே 11:1) தலைவருக்குக் காட்டும் பிரமாணிக்கத்தையும் கீழ்ப்படிதலையும் (1 சாமு 18:16; 20:13–17; தானி 9:4) தலைவன் காட்டும் ஆதரவையும் (1 சாமு 16:21; 2 சாமு 9:1) குறிக்கப்பயன்படுகிறது.

நேர்மை (சங் 45:7), ஞானம் (பழ 4:6; 8:36), வேளாண்மை (2 நாள் 26:10), மடமை (பழ 1:22), செல்வம் (திருவுரை 5:10), போன்றவற்றில் ஆர்வம் காட்டுவதும் அன்பு எனக் குறிக்கப்படுகிறது.

2. இறையன்பு:- இறைவனின் அன்பு மனிதனை மீட்பதற்காக அவன் மீது செலுத்தப்பட்ட அன்பு. இந்த அன்பு ஆழமான இறை–மனித உறவை ஏற்படுத்துகிறது. இஸ்ராயேலர்தம் வரலாற்றிலே ஆண்டவரின் அன்பு வெள்ளிடைமலை.

அ) தேர்ந்தெடுத்தலில் அன்பு:- இஸ்ராயேல் தான் இறைவனால் தேர்ந்தெடுக்கப் பட்டதை நன்றாக உணர்ந்திருந்தது. ஒரு ஆண் தன் மனைவியை தேர்ந்தெடுப்பது போல் இறைவன் இஸ்ராயேலைத் தேர்ந் தெடுத்தார் (ஒசே 3:1). இந்த அன்புறவு தந்தை–மகன் உறவு என ஒசேயா இறை வாக்கினர் கூறுகின்றார் (ஒசே 11:1). எகிப்திலிருந்து இஸ்ராயேல் விடுதலை அடைந்தது இறையன்பின் அடையாள மென அடிக்கடி குறிப்பிடப்படுகிறது (யாத் 15:13; உப 4:37). அவர் தம் அன்பி னால் தகுதியில்லாத இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்தார் (உப 7:8).

இந்தத் தேர்ந்தெடுக்கப்படும் அன்பை விளக்குவது கடினம். இஸ்ராயேலை யாவே தேர்ந்தெடுத்து அன்பு செய்வ தற்குக் காரணம் "யாவே உன்னை அன்பு செய்தார்" (உப 7:8) என்பதுதான். அவர் தம் விருப்பம்போல் தேர்ந்தெடுத்து அன்பு செய்கிறார். அதற்கு இஸ்ராயேல் பதில் அன்பால் பதிலளிக்க வேண்டும்.

ஆ) உடன்படிக்கை அன்பு:- அழைப் பின் அன்பும், உடன்படிக்கையின் அன்பும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்துள்ளன. இவையிரண்டும் ஒரே அன்புறவின் இரு பக்கங்களாகும். ஆரா ய்ச்சிக்காக இவ்விரண்டையும் பிரித்தால் அன்பினால் ஆண்டவர் அழைக்கிறார். அந்த அன்பு தொடர்ந்து உடன்படிக்கை யாகிறது எனக்கொள்ளலாம். இந்த உடன்படிக்கை ஆண்டவரின் அன்பு தொடர்வதை உறுதிப்படுத்துகிறது (ஏச 54:10; 55:3). ஆண்டவரின் உடன்படிக்கை யன்பு மாறாத மங்காத உடன்படிக்கை உறவு. இத்தகைய அன்பு உடன்படிக்கை உறவு அவர் செய்த அன்புச் செயல் களிலே தெளிவாகிறது (ஆதி 24:27; 32:10). உடன்படிக்கைக்கு உண்மையாய் இருப்ப வர்களை அண்டவர் தொடர்ந்து அன்பு செய்வார். இந்த அன்புக்காக, இஸ்ரா யேல் யாவேக்கு நன்றி செலுத்துகிறது (சங் 138:2). அவரைப் போற்றுகிறது (115:1).

இ) அன்பும் இறுதிக்காலயியலும்:- ஆண்டவரின் உடன்படிக்கை அன்பு மாறாத காரணத்தால் அது தொடர வேண்டுமென இஸ்ராயேல் எதிர்பார்த் தது. எனவேதான் அவரது அன்பு என் றென்றும் நிலைத்திருக்கிறது எனப் பாடப் பட்டது (சங் 136). எனவே ஆண்டவரை இஸ்ராயேல் நம்பலாம் (சங் 147:11). ஆண்ட வரும் தம்மை நம்புவோரைக் கண் நோக் குகிறார் (சங் 33:18.22). இந்த அன்பிலே பாவமன்னிப்பும் அடங்கியுள்ளது (ஒசே 14:4). எனவே உலகச் செல்வங்களை நாடாது இறையன்பை நம்புவது நலம் பயக்கும் (சங் 52:8). நம்புபவரை இறுதி நாளில் இறைவன் மீட்பார். அவரது இறுதிக்கால மீட்பு, அன்பில் இஸ்ரா யேலைப் புதுப்பிப்பதாகும் (செப் 3:17). "ஏற்புடைய காலத்தில்" உடன்படிக்கை நிறைவுறும் போது மீட்பும் நிறைவேறும் (சங் 69:13).

3. மனிதனின் இறையன்பு:- இறை மனித உறவிலே பிறந்ததுதான் இறைவ னின் உடன்படிக்கையன்பு. இறைவன் மனிதனோடு உடன்படிக்கை செய்து கொண்ட காரணத்தால் மனிதன் இறை வனை அன்பு செய்யவேண்டும். மனிதர் களை அன்பு செய்து அவர்களது தேவை யை இறைவன் நிறைவு செய்வதால் மனிதர்கள் இறைவனை அன்பு செய்ய வேண்டும் (சங் 32:23; 116:1). "உன் முழு இதயத்தோடும் உன் முழு ஆன்மாவோ டும் உன் முழு ஆற்றலோடும், உன் இறை வனாகிய யாவேக்கு அன்பு செய்வாயாக" (உப 6:5). என்ற கட்டளை இஸ்ராயேல் காட்டவேண்டிய பதிலன்பின் ஆழத்தை யும் மேன்மையையும் எடுத்தியம்புகிறது.

அ) அன்பும் உடன்படிக்கையும்:- ஆண்டவனை அன்பு செய்ய உப ஆகமம் கட்டளையிடுகிறது (உப 11:13–22; 19:9). அன்பினால் இஸ்ராயேலரோடு உடன் படிக்கை செய்துகொண்ட இறைவன் அவர்களிடம் அன்பையே திரும்ப எதிர் பார்க்கிறார். ஆண்டவனை அன்பு செய் தல் உடன்படிக்கையால் வந்த கடமையா கும். அவரை அன்பு செய்வதே வாழ்வா கும் (உப 30:20). தம்மை அன்பு செய்ப வர்கள் மேல் ஆண்டவர் தம் அன்பைப் பொழிகின்றார். அவர்களை விடுவிக் கிறார். அவர்களுக்கு இரக்கம் காட்டு கிறார்; உடன்படிக்கையைக் காக்கின்றார்

(யாத் 20:6; உப 5:10; 17:9). எனவே இஸ்ராயேலரின் அன்பு ஆண்டவர் உடன்படிக்கையின் வழியாகத் தமது அன்பை எண்பித்ததன் விளைவேயாகும். ஆனால் இஸ்ராயேலரின் இந்த அன்பு நெடுங்காலம் நிலைக்கவில்லை (எரே 2:5–37).

ஆ) அன்பும் வழிபாடும்:- இஸ்ராயேலர்தம் வழிபாடு ஆண்டவர்மீது அவர்கள் கொண்ட அன்பின்பால் மேற்கொள்ளப்பட்டது. ஆண்டவனை அன்பு செய்பவர் மீண்டும் அமைக்கப்பட்ட சீயோனில் குடியிருப்பர் (சங். 69:36). சீயோனில் குடியிருப்பது அவரைத் தொடர்ந்து வழிபடுவதைக் குறிக்கும். பக்திமான் ஆண்டவரை அன்பு செய்கிறான். ஏனெனில் அவன் மன்றாட்டு கேட்கப்படுகின்றது (116:1). அவரை அன்பு செய்பவர் அவர் உறையும் ஆலயத்தையும் அன்பு செய்வர் (26:8). வேற்றாரும் இந்த வழிபாட்டிலே கலந்துகொள்ளலாம் (எச 56:6–7). ஆனால் இஸ்ராயேல் தவறான வழிபாட்டை மேற்கொண்டு வேற்றுத்தெய்வங்களை வழிபட்டது (எரே 2:5). ஒசேயா இறைவாக்கினர் இஸ்ராயேல் பாகாலை வழிபட்டதாகக் குறிப்பிடுகிறார் (2:13). இறைவாக்கினர் பலர் இந்த இழிநிலையைக் கண்டிக்கின்றனர்.

இ) அன்பும் ஒழுக்க வாழ்வும்:- ஆண்டவர் மீதுள்ள அன்பு நமது பொறுப்புள்ள வாழ்க்கையிலே வெளிப்படவேண்டும். ஆண்டவர் பலியை விரும்பவில்லை. மாறாக நல்லொழுக்கத்தை விரும்புகிறார் (ஒசே 6:6; மீக் 6:8). நேர்மையின் விதையை விதைத்து உடன்படிக்கை அன்பு எனும் அறுவடை செய்யவேண்டும் (ஒசே 10:12). உண்மை இறை அன்போடு நீதியோடு வாழ்தல் மனந்திரும்புதலின் அடையாளமாகும் (ஒசே 12:6). ஒழுக்க வாழ்வு உடன்படிக்கைக்குள் நிகழ்கின்றது. யாவேயை அன்பு செய்வது, அவரது வழிகளில் நடப்பதாகும் (உப 10:12; 11:22; 19:9; 30:16). அவரது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாகும் (யாத் 20:6; உப 5:10; 7:9; 11:1; நெக 1:5; தானி 9:4).

ஆகவே அன்புக்கும், சட்டத்திற்கும் முரண்பாடு இல்லை. இறைவனின் அன்பு முதன்மையானது. இந்த அன்புக்கு மனிதன் காட்டும் பதில், இறைவனுக்கு மனிதன் காட்டும் அன்பாகும். சட்டம் இறைவனது அன்பின் கொடையாகும். ஆகவே சங்கீத ஆசிரியர் யாவேயின் சட்டத்தை, கட்டளைகளை, அன்பு செய்கிறார் (சங். 119). யாவேயை அன்பு செய்வது அவரது முதன்மையான அன்பை அறிவதும், மனிதரோடும் இறைவனோடும் பொறுப்புள்ள பற்றுறுதியோடு வாழ்வதும் ஆகும். அது யாவேயின் திருவுள்ளத்துக்கு அமைந்து அவரைப் பற்றிக் கொள்வதாகும் (உப 30:20).

இறுதியாக இஸ்ராயேலர் வாழ்க்கையின் உயிர் நாடியாக இருந்த இறைவன் அம்மக்கள் மீட்புப் பெறத் தம் அன்பின் மிகுதியால் தம் மகனையே அளிக்கின்றார். அன்பே உருவாக அவர் உலகிலே உதித்தார்.

4) இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் அன்பு உரையாடல்:- அன்பு என்ற சொல் இங்கு தோன்றாவிடினும் படைப்புப்பற்றிய நிகழ்ச்சியுரை (ஆதி 1:2–3) ஆதாம் மற்றும் ஏவாள் பெற்றுக்கொள்ளும் நன்மைத் தனத்தின் வழியாக இறையன்பைச் சுட்டிக்காட்டுகிறது. வாழ்வை அதனுடைய முழுமையில் அவர்களுக்கு அளிக்க இறைவன் விரும்புகிறார். ஆனால் இக்கொடையைப் பெற அவருடைய சித்தத்திற்குத் தங்களையே சுதந்திரமாகக் கையளிக்கவேண்டும். கட்டளை அளிப்பதன் வழியாக இறைவன் அன்பின் உரையாடலில் ஈடுபடுகிறார். தனக்கு கொடையாக அளிக்கப்பட்டவற்றின்மேல் தலைவராக தம்மை அமைத்துக்கொள்ள ஆதாம் விரும்புகிறார்; ஆதனால் பாவம் புரிகிறார். பின்னர் நன்மைத்தனத்தின் மறைபொருளானது மீட்பின் வாக்குறுதியினால் பாவிக்குக் காட்டும் இரக்கத்தினால் ஆழப்படுத்தப்படுகிறது. காலப்போக்கில் இறைவனையும் மனிதனையும் பிணைக்கும் அன்புறவு மீண்டும் படிப்படியாக அமைக்கப்படும். இன்பவனம் பற்றிய கதையானது ஏற்கனவே புனித வரலாறு முழுவதையும் குறிப்பாகச் சுட்டுகிறது.

அ) இறைவனுடைய நண்பர்களும் நம்பிக்கைக்குரியவர்களும்:- புறவினத்தாரி

விருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட (யோசு 24:2–3) ஆபிரகாமைத் தமது நண்பனாக இருக்குமாறு அழைப்பதில் (ஏச 41:8) இறைவன் தமது அன்பினை நட்பின் வடிவில் வெளிப்படுத்துகிறார். ஆபிரகாம் இறைவனுடைய இரகசியங்களுக்கு நம்பிக்கைக்குரியவராகிறார் (ஆதி 18:17). இந்நிலை இவ்வாறுள்ளதெனில், இறை அன்பினுடைய கோரிக்கைகளுக்கு ஆபிரகாம் பதிலளித்ததே இதற்கு காரணமாகும். இறைவனுடைய வேண்டுகோளின் படி அவர் தனது நாட்டைவிட்டு விலகிச் சென்றார் (12:1). ஆனால் விரைவிலேயே அன்பாகிய இறைபயத்தின் மறை பொருளில் அவர் ஈடுபடவேண்டும். ஏனெனில் அவர் தனது மகனையும் அவனுடன் அவரது மனித அன்பையும் பலியிடுமாறு அழைக்கப்படுகிறார். "நீ அதிகம் அன்பு செய்யும் உன் ஒரே புதல்வனை கூட்டிக் கொண்டு போ" (ஆதி 22:2).

மோசே தனது மகனை பலியிடத் தேவையில்லை, ஆனால் அவரது அனைத்து மக்களும் இறைபுனிதத்தன்மை மற்றும் பாவத்திற்கு இடையிலான போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். தன்னை பிரதிநிதியாக கொண்டுள்ள இறைவனுக்கும் தன்னைப் பகரஆளாகக் கொண்டி ருக்கும் மக்களுக்கும் இடையில் அவர் அலைக்கழிக்கப்படுகிறனர் (யாத் 32:9–13). அவர் விசுவாசமுள்ளவராக உள்ளாரெனில் மரணத்திற்கென அழைக்கப்பட்டது முதல் (3:4) இறைவனுடன் ஒரு நண்பனுடன் பழகுவதுபோல அவர் இறைவனோடு கொண்ட நெருக்கத்தில் பின் வாங்காததே இதற்கு காரணம் (33:11). இறைவனது அளவற்ற இரக்கத்தின் வெளிப்பாட்டை அவர் பெற்றிருந்தார். தன்னுடைய புனிதத் தன்மையில் எதனையும் இழக்காமலே இரக்கம் காட்டும் இந்த அன்பு (34:6–7).

ஆ) இறைவாக்கு வெளிப்பாடு:- இறைவனுடைய நம்பிக்கைக்குரியவர்களும் (ஆமோ 3:7) இறைவனால் அன்பு செய்யப் பட்டனர். இறைவன் தமது தேர்வினால் அவர்களை ஆட்கொண்டார் (7:15). சில நேரங்களில் அவர்களைத் துண்டு துண்டாக கிழித்தார் (எரே 20:7–9). அவர்களை மகிழ்ச்சியால் நிரப்பினார் (20:11–13). இறைவாக்கினர்கள், ஆண்டவருடைய அன்பு மற்றும் கோபத்தின் நாடகத்திற்கு சான்றுகளாக உள்ளனர் (ஆமோ 3:2). எப்போதும் பிரமாணிக்கமற்ற இஸ்ராயேலின் மணமகளாக இருக்கிறார் இறைவன் என்று முதலில் ஓசேயாவும் பின்னர் எரேமியாவும் எசக்கியேலும் வெளிப்படுத்துகின்றனர். இந்த உணர்ச்சிமிக்க பொறாமைகொள்ளும் அன்புக்குக் கிடைத்த வெகுமதி நன்றியின்மையும் கைவிடப்பட்டதுமேயாகும். ஆனால் அன்பானது பாவத்தைவிட வலிமையானது. அது துன்புறவேண்டும் (ஓசே 11:8). அது மன்னித்து அன்பு செய்யக்கூடிய ஒரு புதிய இதயத்தை இஸ்ராயேலில் மீண்டும் படைக்கிறது (ஓசே 2:21–22; எரே 31:3. 20.22; எச 15:60–63; 36:26–27). ஆயன் (எச 34) அல்லது திராட்சைக்கொடி (எச 5; 17:6–10) முதலிய மற்ற உருவகங்களும் அதே இறை ஆர்வத்தையும் அதே நாடகத்தையும் வெளிப்படுத்துகின்றன.

மக்கள் இறை அன்பைவிட சிலை வழிபாட்டையே உறுதியாக விரும்புவதாக தோன்றுகின்ற தருணத்தில் சந்தேகத்திற்கிடமின்றி பிரகடனப்படுத்தப்பட்ட (2 அர 22) இஸ்ராயேலுக்கான இறையன்பானது கைமாறு கருதாதது என்றும் (உப 7:7–8), மற்றும் இஸ்ராயேல் இறைவனை தனது முழு இதயத்துடன் அன்பு செய்ய வேண்டும் என்றும் (6:5) அயராது நினைவு படுத்துகிறது உபாகமம். இந்த அன்பு ஆராதனையிலும் கீழ்ப்படிதலிலும் (11:13; 19:9) எடுத்துக்காட்டப்பட வேண்டும். இவை அடிப்படைத் தேர்வினையும் கடினமான வேருடன் பிடுங்கப்படுவதையும் கோருகின்றன. கீழ்ப்படிதலின் செயல்களில் வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் இறைவனே நேரடியாக இஸ்ராயேலின் இதயத்தை தூய்மைப்படுத்தி அன்பு செய்ய தகுதியுடையதாக அதனை மாற்றும் போது மட்டுமே இது இயலக் கூடியதாகும் (30:6).

இ) தனிப்பட்ட உரையாடலைநோக்கி:- நாடு கடத்தப்பட்ட பின்னர் சோதனை

யால் தூய்மைப்படுத்தப்பட்ட இஸ்ராயேலானது இறைவனுடனான வாழ்வு அன்பின் உரையாடல் என்பதை மேலும் மேலும் கண்டுபிடிக்கிறது. இந்த மன நிலையோடு அவர்கள் உன்னத சங்கீதத்தை மீண்டும் வாசிக்கின்றனர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. உரிமையாக்குதல் மற்றும் நாடுதல் என்னும் மாறுபட்ட கருத்துக்களுடன், மணமகனும் மணமகளும் மரணமளவு வலுவுடைய அன்பினால் ஒருவரையொருவர் அன்பு செய்வதாக காட்டப்படுகின்றனர் (உ.ச 8:6).

நாடு கடத்தப்பட்டதற்குப் பின் ஒவ்வொரு மனிதனுடைய இதயத்துடனும் இறைவனே பேசுகிறார் என்ற உயரிய உணர்வும் அங்கு உள்ளது. அவர் குழுவையோ (உ.ப 4:7) அல்லது அதனுடைய தலைவர்களையோ மட்டுமின்றி (2 சாமு 12:24) ஒவ்வொரு தனிப்பட்ட யூதனையும், எல்லோருக்கும் மேலாக நீதிமானையும் (சங் 37:25–29; 146:8), ஏழைகளையும், எளியோரையும் அன்பு செய்கிறார் (சங் 113:5–9). யாவேயின் அன்பானது யூதரை மட்டுமின்றி புறவினத்தாரையும் (யோனா 4:10–11), உண்மையில் ஒவ்வொரு படைப்பையும் தழுவுகிறது (ஞான 11:23–26) என்னும் எண்ண எழுச்சியை நாம் படிப்படியாக காண்கிறோம்.

இவ்வாறு கிறிஸ்துவின் வருகைக்கான காலம் நெருங்குகிற நிலையில் பக்திமிக்க யூதர் (சங் 4:4; 134:9.16) விவிலியத்தை தியானித்து தான் இறைவனால் அன்பு செய்யப்படுவதை உணர்கிறார். அவர் உடன்படிக்கைக்குக் காட்டும் இரக்கமிக்கப் பிரமாணிக்கத்தையும் (சங் 136; யோவே 2:13), அவரது நன்மைத்தனத்தையும் (சங் 34:9; 100:5), அருளையும் (ஆதி 6:8; எச 30:18), பரிவையும் (சங் 86:15; ஞான 15:1) பாடுகிறார். அதற்கு பதிலாக இறைவனுக்கும் (சங் 31:24; 73:25; 116:1) அவரது பெயர், சட்டம் ஞானம் முதலிய அவருக்குரிய அனைத்திற்கும் (சங் 34:13; 119:127; எச 56:6; சீரா 1:10; 4:14) அவர் தனது அன்பை இடைவிடாது எடுத்துக் கூறுகிறார். இந்த அன்பானது இறை பற்றற்றவர்களின் மாதிரிகை மற்றும் தாக்கம் ஆகியவற்றின் முன் தன்னையே அடிக்கடி நிரூபிக்க வேண்டும் (சங் 10; 40:14–17; 73; சீரா 2:11–17). மக்கபேயரின் காலத்தில் நிகழ்ந்தது போல, வேதசாட்சி மரணம்வரை இது செல்லலாம் (2 மக் 6–7). கி.பி. 135–இல் தனது விசுவாசத்திற்காக மரித்த ராபி அக்கிபா செயலிலும் இதே நிலை உள்ளது. "எனது முழு இதயத்தோடும் நற்பேறுடனும் நான் அவரை அன்பு செய்தேன்; ஆனால் எனது முழு ஆன்மாவுடனும் அவரை அன்பு செய்யும் வாய்ப்பை நான் இதுவரை பெற்றதில்லை. ஆனால் இப்போது அந்தத் தருணம் வந்துள்ளது", என்று அவர் கூறுவார். இந்த சிறப்பு வாய்ந்த கூற்று அறிவிக்கப்பட்டபோது மனிதருக்கு முழு வெளிப்பாடு இயேசு கிறிஸ்துவால் ஏற்கனவே அளிக்கப்பட்டு விட்டது என்று கூறலாம்.

III. புதிய ஏற்பாட்டில் அன்பு

1. சொல்லின் பொருள்:- அன்பு மொழியானது நாம் எதிர்பார்ப்பதை விட குறைந்த அளவிலேயே புதிய ஏற்பாட்டில் பயன்பட்டுள்ளது (அப்போஸ்தலர் பணி ஒரு எடுத்துகாட்டை கொண்டுள்ளது, தீத்துவில் ஒன்றுமில்லை). பெயர் சொல்லை விட வினைச்சொல்லே அதிகமாக உள்ளது. அன்பு என்னும் பெயர்ச்சொல் மாற்கு, அப்போஸ்தலர் பணி, தீத்து, யாக்கோபு அல்லது 1 மற்றும் 2 பேதுரு ஆகியவற்றில் சுத்தமாக இல்லை. அன்பு என்னும் பெயர்ச்சொல்லை இயேசு பத்து சதவிகிதமும், பவுல் இருபத்தெட்டு சதவிகிதமும் யோவான் (நற்செய்தியும் மூன்று திருமுகங்களும்) முப்பத்து மூன்று சதவிகிதமும், எபேசியர் மற்றும் மேய்ப்புப் பணி மடல்கள் பதிமூன்று சதவிகிதமும், மற்றவர்கள் பதினாறு சதவிகிதமும் பயன்படுத்துகின்றனர். புதிய ஏற்பாட்டில் பத்தில் ஒரு பகுதிக்கு உரியவராகிய யோவான் அன்பிற்கான குறிப்புகளில் மூன்றில் ஒரு பங்கு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

கிரேக்க மொழியில் அன்பைக் குறிக்க எரோஸ் (Eros), பிலியா (Philia), அகபே (Agape) ஆகிய மூன்று சொற்களும்

அவற்றைச் சார்ந்த சொற்களும் பயன்படுகின்றன. இவற்றை மோகம், நேசம், அன்பு என்றும் மொழி பெயர்க்கலாம். "அகபே" என்ற சொல் மூலப்பொருளில் மனநிறைவு, ஒத்துணர்வு, ஈகைப்பண்பு ஆகியவற்றை உணர்த்தவல்லது. பொதுவாக நேசம் என்ற சொல்லானது நண்பனுடைய அல்லது உறவினருடைய பாசத்தை குறிப்பிடுகிறது. இவை இரண்டும் காமவெறியற்ற அன்பினை குறிப்பிடுகின்றன. இவ்விரண்டிற்கும் முரண்பாடானது சிற்றின்ப ஆசை, காம நாட்டம், உடலின்ப இச்சை முதலியவற்றை குறிப்பிடும் மோகமானது (Eros) மெய்யியல் விவாதங்களில் "முடிவில்லாத இறை தன்மைக்கான மேலோங்கிய நாட்டம்" என்பதைக் குறிக்கப்பயன்பட்டாலும் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இந்தச் சொல்லை தவிர்க்கின்றனர்.

இவ்வாறு மோகமானது சிற்றின்ப ஆசையின் இச்சையை குறிப்பிடுகிறது. அது புதிய ஏற்பாட்டில் தோன்றுவதில்லை. நேசம் என்ற சொல்லானது முதன்மையாக நட்புணர்வின் அன்பை குறிப்பிடுகிறது. சமய சார்பற்ற கிரேக்க மொழியில் அன்பு என்ற சொல்லானது அடிக்கடிக் காணப்படுவதில்லை. இக்காரணத்திற்காகவே புதிய ஏற்பாட்டில் அன்பினுடைய தனித்துவமிக்க மூலக் கிறிஸ்தவ கருத்தினை எடுத்துக் கூற இச்சொல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

2. ஒத்தமை நற்செய்திகள்:– இவற்றில் அன்பும் மற்றும் ஒருவரது அயலாருடைய அன்பும் உப 6:5; லேவி 19:18–ஐ எடுத்துக் காட்டுகின்றன. இயேசுவால் சட்டத்தின் மிகப்பெரிய கட்டளையென அழைக்கப்படுகின்றன (மத் 22:34–40; மாற் 12:28–34; லூக் 10:25–28). இரு கட்டளைகளும் சமமாகக் கருதப்படுகின்றன. அன்பு பற்றிய கிறிஸ்துவப் புரட்சி துல்லியமாக இதில் தான் அடங்கியுள்ளது. ஆயினும் "யார் அயலான்"? என்ற அடுத்த வினாவினை லூக்கா மட்டுமே எடுத்து விளக்குகிறார். நல்ல சமாரியன் உவமையில் இயேசு அதற்கு பதிலளிக்கிறார் (லூக் 10:29–37). யூதருக்கும் சமாரியருக்கும் இடையிலான பகைமையானது ஆழமானது. தங்களுக்கு மிகவும் அந்நியர்கள் என யூதர்கள் எண்ணிய குழுவுடன் இயேசு அயலாரை அடையாளப்படுத்துகிறார். ஒருவரது பகைவரை அன்பு செய்தல் பற்றிய வண்ணமிக்க விளக்கமாக இந்த உவமை உள்ளது (மத் 5:43–48; லூக் 6:27–28, 32–36). மனிதருடன் இறைவன் கொண்டுள்ள மனப்பான்மையை தன்னை வெறுப்பவருடன் கிறிஸ்தவன் கொள்ள வேண்டிய மனப்பான்மைக்கு மாதிரியாக இயேசு இங்கு அளிக்கிறார். ஒருவரது அயலானை அன்பு செய்வதென்பது கிறிஸ்தவன் வெளிப்படுத்துகின்ற பொதுவான அன்றாட மனப்பான்மையாகும். பாவிகள் பாலும் நீதிமான்கள் பாலும் இயற்கையில் இறைவன் கடைப் பிடிக்கின்ற போக்கை விட அதிகமாக ஒருவரது அயலாரின் நடத்தையை இந்த அன்பு இனிமேல் சார்ந்திருப்பதில்லை. இதில் கிறிஸ்தவ அன்பானது புறவின ஒழுக்கத்தினின்று மாறுபட்டதாக அமைய வேண்டும். ஒருவரது நண்பரை அன்பு செய்வதைப் பற்றி எவரும் வினா எழுப்புவதில்லை. ஆனால் இயேசு, அதைவிட அதிகமாக கோருகிறார்.

லூக் 7:37–50–இல் இறையன்பின் வளர்ச்சியைப் பாவ மன்னிப்பிற்கான நன்றியுணர்வின் விளைவாக இயேசு எடுத்துக் காட்டுகிறார். உண்மையான இறையன்பு ஒருவர் தனது பாவநிலையை உணர்வதினின்றே எழுகிறது; மற்றும் பரிசேயருடையதைப் போன்ற சுய நேர்மை அன்புடன் ஒத்துப் போக முடியாது என்பதை இது தெளிவுப்படுத்துகிறது. 7:47–இல் உள்ள வாக்கியமானது அதற்கு முந்திய மற்றும் பிந்திய சூழ்நிலையில் "அவள் அதிக அன்பு காட்டியதனால் அவளுக்கு அதிக பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று பொருள்படுகிறது, அதாவது அவளுடைய அசாதாரணமான அன்புச் செயல் பெரும் மன்னிப்பு பற்றிய அவளின் உணர்வினை வெளிப்படுத்துகிறது. இத்தகைய உணர்வு இல்லாதவர்கள் அன்பினை காட்ட முடியாது.

இறைவனுடைய அன்பானது சொந்தம் பாரட்டக்கூடியது. ஒருவன் இரு தலைவர்

களை கொண்டிருக்க முடியாது (மத் 6:24; லூக் 16:13). இவ்வார்த்தையில் அன்பு சார்ந்த விருப்பு வெறுப்பு தெளிவாக தோன்றுகிறது.

இயேசுவை "அன்பார்ந்த மகன்" என்று குறிப்பிடுவதில் மட்டுமே ஒத்தமை நற்செய்திகளில் இயேசு மற்றும் தந்தையினுடைய அன்பானது தோன்றுகிறது (மத் 3:17; 12:18; 17:5; மாற் 1:11; 9:7; 12:6; லூக் 3:22; 9:35; 20:13). இச்சொற்றொடரின் செமித்திய மூலமானது "ஒரே மகன்" என்று பொருள்படுகிறது. ஆனால், கிரேக்க சொல்லமைப்பானது துல்லியமாக உள்ளது; ஒரே மகனே அன்பு மகனுமாவார். இந்த உறவானது யோவானிலும் பவுலிலும் முழுமையாக வளர்க்கப்படுகிறது.

பெற்றோருக்கு அல்லது பிள்ளைகளுக்கு ஒருவன் அளிப்பதைவிட உயரிய அன்பினை கோருவதன் மூலம் தம்பால் தமது சீடர்கள் கொள்ளவேண்டிய மனப்பான்மையை நேசம் என்ற சொல்லால், இயேசு குறிக்கிறார் (மத் 10:37). எவ்வாறு நிறைவு பெறுவது என்று கேட்ட வாலிபன் மீது இயேசு காட்டிய உணர்வினையும் (மாற் 10:21) யூத நூற்றுவர் தலைவன் காட்டிய பரிவையும் (லூக் 7:5) அன்பு என்ற சொல் விவரிக்கிறது.

3. பவுலின் திருமுகங்கள்:- இவற்றில் அன்பு என்ற சொல்லானது மனிதன்பால் இறைவன் மற்றும் கிறிஸ்துவின்பால் மனிதன் காட்டும் அன்பையும் மற்றும் மனிதர் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பையும் குறிப்பிடுகிறது. இறையன்பின் அடையாளமாகவும் விளைவாகவும் உள்ள தூய ஆவியின் மூலமாக இறைவனுடைய அன்பானது மனிதனுடைய இதயத்தில் பொழியப்படுகிறது (உரோ 5:5). அன்பின்மூலம் தந்தை, கிறிஸ்தவனை முன் குறித்து வைத்து (எபே 1:4) அவனுக்கு வாழ்வளிக்கிறார் (2:4). மனிதன்பால் இறைவன் கொண்டுள்ள அன்புக்குச் சான்று பாவத்தினின்று மனிதனை விடுவிப்பதற்கான கிறிஸ்துவின் மரணமாகும் (உரோ 5:8). கிறிஸ்தவனுக்கு வெற்றியை உறுதிப்படுத்துகின்ற இத்தகைய நிலையான அன்பினின்று எந்த வல்லமையும் கிறிஸ்தவனை பிரிக்க முடியாது (உரோ 8:35-39). கிறிஸ்தவனை அன்பு செய்கிற இறைவன் அவனுக்கு ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அளிக்கிறார் (2 தெச 2:16). மனிதருக்கான கிறிஸ்துவின் அன்பானது பாவியின் சார்பாக அவர் தன்னையே பணயமாக்குவதில் காட்டப்படுகிறது (கலா 2:20; எபே 5:2.25). கிறிஸ்து தனது திருச்சபைக்கு காட்டுகின்ற அன்பானது கணவர்கள் தமது மனைவியருக்கு காட்டவேண்டிய அன்பிற்கு மாதிரியாக உள்ளது (எபே 5:25). ஓசேயிலும் எரேமியாவிலும் காணப்படும் அன்பு பற்றிய பழைய ஏற்பாட்டு கருத்தானது இங்கே தோன்றுகிறது.

அன்பின் பலனாக மனிதன் பெறுகின்ற ஆசிகளைப் பற்றி அறிவிக்கவே சாதாரணமாக இறைவன்பால் மனிதன் கொள்ளும் அன்பைப் பற்றி பவுல் பேசுகிறார். இறைவன்பால் அன்பு என்பது கிறிஸ்தவனுடைய இதயத்தை இறைவனே அதனை நோக்கி நடத்திச் செல்வதாகும் (2 தெச 3:5). இறைவனை அன்பு செய்பவருக்கென அனைத்தும் நன்மைக்காக ஒன்றுபட்டு பணிபுரியும் (உரோ 8:28). தம்மை அன்பு செய்பவர்களுக்கென இறைவன் என்ன தயாரித்திருக்கிறார் என்ற எண்ணத்தினால் கிறிஸ்தவன் மகிழ்ச்சிப்படுத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்படவேண்டும் (1 கொரி 2:9). இறைவனை அன்பு செய்பவர்கள் அவரால் அங்கீகரிக்கப்படுகின்றனர் (1 கொரி 8). கிறிஸ்துவின்பால் பவுல் கொண்டுள்ள அன்பானது அப்போஸ்தலத்துவத்தின் உழைப்பிற்கு அவரை தூண்டுகிறது (2 கொரி 5:14).

ஒருவருக்கொருவர் காட்ட வேண்டிய அன்பு பற்றிய அறிவுரைகள் எண்ணற்றவையாகவும் கிறிஸ்தவ வாழ்வுக்கும் புண்ணியத்திற்கும் பவுலின் ஊக்குரைகளில் ஒரு நிலையான பகுதியாகவும் உள்ளன. பவுல் தனக்கேயுரிய சொற்களில் ஒத்தமை நற்செய்திகளின் படிப்பினைகளை மீண்டும் எடுத்துரைக்கிறார்: தமது அயலானை அன்பு செய்பவன் முழுச் சட்டத்தையும் நிறைவேற்றுகிறான்

ஏனெனில் இக்கட்டளையானது மற்ற கட்டளைகள் அனைத்தையும் தன்னுள் கொண்டுள்ளது (உரோ 13:8–10; கலா 5:13–14). கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் அமையவேண்டிய அன்பானது ஒப்புயர்வற்ற விதத்தில் தோன்ற வேண்டும். கிறிஸ்துவும் திருச்சபையும் ஒருவரை யொருவர் அன்பு செய்வதுபோல அவர்களும் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டும் (எபே 5:25–33). ஒரு சகோதரனை இடறலால் புண்படுத்தாமல் இருப்பதற்கென அசௌகரியத்தை ஏற்றுக் கொள்வதிலும் (உரோ 14:15), தேவையில் இருப்போருக்கு உதவி அளிப்பதிலும் (2 கொரி 8:7.9) அன்பு காட்டப்படவேண்டும். அன்பானது திருந்திய பாவியையும் வரவேற்கிறது (2 கொரி 2:8). உண்மையில் சகோதர அன்பு என்னும் பவுலின் கருத்தானது கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு இடம் கொண்டிராதது போலத் தோன்றுகிறது ஒரு விதத்தில் உண்மையே. ஏனெனில் சமுதாயத்தை உருவாக்கக் கூடிய இதயங்களின் ஒன்றிப்பும் அன்பினுடைய கடமைகளின் பரிமாற்றமும் சமுதாயத்தின் உறுப்பினராக இல்லாதவர்களுக்கு அறிவிக்கப்பட முடியாது. ஆயினும் பவுல் கிறிஸ்தவரல்லாதோரை கிறிஸ்தவருடைய இரக்கத்தினின்று விலக்கிவிடவில்லை. ஆனாலும் "அகபே" என்பது பவுலின் திருச்சபைக்கு ஒரு பொருள் பிற சொல்லாகிறது. ஆகவே அன்பின் முழுமையில் பங்குபெறுவதற்கு ஒருவன் இத்திருச்சபையில் உறுப்பினராக இருக்கவேண்டும். பவுல் திருச்சபையின் உறுப்பினர்களை "அன்புக்குரியவர்களே" என அடிக்கடி அழைக்கிறார். பவுல் அவர்கள் மீது கொண்டுள்ள பாசத்தையும் அவர்கள் ஒருவரோடொருவர் கொண்டுள்ள பாசத்தையும் இது முதன்மையாக குறிப்பிடுகிறது. ஒருவருக்கொருவரிடையில் உள்ள உறவில் "அகபே" கிறிஸ்தவருக்கிடையில் மட்டுமே நிலவ முடியும்.

பவுலின் நூல்களில் அடிக்கடி உபயோகிக்கப்படும் அன்பு என்ற சொல் வெளிப்படையாக கூறப்படும் எந்த செயப்படுபொருளும் இல்லாமல் அடிக்கடி பயன்படுகிறது. இது குறிப்பிடத்தகுந்ததொன்றாகும். இதன் காரணமாக இச்சொல்லானது முறைப்படி இறைவனது அன்பையா அல்லது கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பையா குறிப்பிடுகின்றது என்று உறுதிப்படுத்துவது சில நேரங்களில் இயலாததாகிறது. மேய்ப்புப்பணி திருமுகங்களிலும் இலக்கிய தோற்றத்தைவிட தூண்டுதலிலும் ஊக்கத்திலும் பவுலினுடையவை என்று கருதப்படும் மற்ற திருமுகங்களிலும் இந்த சொல் அடிக்கடி பயன்படுகிறது. இவ்வாறு அன்பானது இறைவனும் கிறிஸ்தவரும் ஒன்றுபட்டு வாழ்கின்ற ஒருவித சூழ்நிலையாக உருவாகின்றது. இறைவனிடமிருந்து அளிக்கப்பட்ட நிலையில் அன்பானது, கிறிஸ்தவ சமுதாயத்திலும் தனிப்பட்ட கிறிஸ்தவனிலும் ஊடுருவிப் பரவியுள்ளது. அன்பு கிறிஸ்தவனைக் கட்டியெழுப்புகிறது (1 கொரி 8:1). கிறிஸ்தவன் அன்பில் ஊன்றப்பட்டு நடப்பட்டுள்ளான் (எபே 3:17). அன்பு அவனது நடத்தையின் வழிகாட்டியாக உள்ளது (எபே 5:2). இது அனைத்துக் குணங்களையும் ஒன்று சேர்க்கின்ற பிணைப்பாகவும் (கொலோ 3:14), விசுவாசத்தின் செயலாகவும் உள்ளது (கலா 5:6). உழைக்குமாறு அது கிறிஸ்தவனை தூண்டுகிறது (1 தெச 1:3). உண்மைக்குக் காட்டும் பிரமாணிக்கத்தால் அவன் அன்பில் வளர்கிறான் (எபே 4:15–16). இந்த முழுமையான பொருளில் அன்பானது 1 கொரி 13:1–13–இன் பாடலில் புகழப்படுகிறது. இதுவே, பல மொழிகள் பேசுதல், அறிவு, புதுமைகள் செய்தல், வேதசாட்சி மரணம் ஆகியவற்றைவிட உயர்வான, ஒப்புயர்வற்ற அருட்கொடையாகும் (13:1–4). இது இல்லாமல் மற்றவற்றிற்கு எந்த மதிப்பும் இல்லை. அனைத்துப் புண்ணியங்களையும் இது வெளிப்படுத்துகிறது (13:4–7). மற்ற அருட்கொடைகளையும் குணங்களையும் போலன்றி இது நீடித்துள்ளது. விசுவாசமும் நம்பிக்கையும் கூட இறுதி மெய்ம்மைக்கு இடமளிக்கலாம்; ஆனால் கிறிஸ்தவன் என்றென்றைக்கும் அன்பில் தங்கியிருப்பான் (13:8–13).

4. யோவானின் நூல்கள்:- இவற்றில் அன்பானது தந்தை, மகன் மற்றும்

சீடர்கள் ஆகியவர்களுக்கிடையே நிகழும் பரிமாற்றத்தை உணர்த்திய மூன்று சொற்களால் விளக்குகிறது. சீடர்கள்பால் தந்தையின் அன்பானது அவர்களை தனது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளுமாறு தூண்டுகிறது (1 யோவா 3:1). இயேசு தனது சீடரை இறுதிவரை அன்பு செய்து (யோவா 13:1) தனது வாழ்வையே அவர்களுக்காக அளிக்கிறார் (1 யோவா 3:16). அன்பினுடைய பெரிய நிரூபணம் இதுவே (யோவா 15:13). இறைவனே அன்பு (1 யோவா 4:8.16). அன்பில்லாமல் ஒருவன் இறைவனை அறிய முடியாது.

மனிதன்பால் இறைவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பு ஒரு பதிலை கோருகிறது. இறைவனை அன்பு செய்யாததற்காக யூதர்கள் குறைகூறப்படுகின்றனர் (யோவா 5:42). இந்த அன்பானது அன்பினை அறிக்கையிடுவதில் மட்டும் அடங்கியிருப்பதன்று. உண்மையான செயல்களிலும் எடுத்துக் காட்டப்பட வேண்டும் (1 யோவா 3:18). அன்பின் தலையாய பணியானது இறைவனுடைய வார்த்தையையும் இயேசுவின் கட்டளைகளையும் கடைபிடிப்பதாகும் (யோவா 14:15.21.23; 15:10; 1 யோவா 2:5; 5:3). உலகை அன்பு செய்பவன் இறைவனை அன்பு செய்வதில்லை (1 யோவ 2:15–16). தேவைப்படுகின்றவனுக்கு தனது கொடைகளை கொடுக்க மறுப்பவனும் இறைவனை அன்பு செய்வதில்லை (3:17). இயேசுவை அன்பு செய்பவர்கள் அவர் தந்தையிடம் திரும்பி வருவதில் பெரு மகிழ்ச்சி கொள்கின்றனர். ஏனெனில் இச்செயலானது அவரது பணி முற்றுப்பெற்று, அவரது மகிமை நிறைவு பெறுவதாகும் (யோவா 14:28).

கட்டளைகளில் தலையானதாகியதும், இயேசுவின் புதியதுமான கட்டளையானது, சீடர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டும் என்பதாகும் (யோவா 13:34–35; 15:17). இயேசு அவர்களை அன்பு செய்த அதே தன்னலமற்ற முழுமையான அன்பினால் அவர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்யவேண்டும் (15:12–13). கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பு பற்றிய யோவானுடைய கருத்தின் தனிப்பட்ட தாக்கம் தந்தையால் மகனின் மூலமாக, சீடர்களுக்கு அளிக்கப்படும் அன்பின் மெய்ம்மையாக இருப்பதாகும். அதை சீடர்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர். தந்தை தம்மை நோக்கி வெளிப்படுத்திய அதே அன்பினால் இயேசு சீடர்களை அன்பு செய்கிறார் (15:9). தந்தை மகனை அன்பு செய்து, அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார் (3:35). மகன் தனது வாழ்வையே கையளிப்பதன் காரணமாக அவர் மகனை அன்பு செய்கிறார் (10:17). இயேசுவை அன்பு செய்பவர் தந்தையாலும் அன்பு செய்யப்படுகிறார்; மகன் அவருக்கு தம்மையே வெளிப்படுத்துவார். இயேசுவை அன்பு செய்து, அவரது வார்த்தையை கடைபிடிப்பவனில் தந்தையும் மகனும் குடிகொள்வர் (14:21.23). மகன் தந்தையின் மீதான தனது அன்பை தனது கீழ்ப்படிதலால் காட்டுகிறார் (14:31). சீடர்களுடைய ஒன்றிப்பானது தந்தை அவர்கள் மீது பொழிகின்ற அன்பினால் முத்திரையிடப்படுகின்றது. அதே அன்பினால் அவர் மகனையும் அன்பு செய்கிறார். இந்த அன்பின் மூலமாகத் தந்தையும் மகனும் சீடரில் தங்கியுள்ளனர் (17:23.26). இறைவனிடமிருந்து தோன்றி திருச்சபையின் மூலமாகப் பரவுகின்ற அன்பினுடைய ஒன்றுபடுத்தும் ஆற்றலே 1 யோவா 4:7– 21– இல் உள்ள உயரிய பேருரையின் மையக்கருத்தாகும். இறைவனே அன்பு வாழ்வினை அறிவிப்பதற்கென அன்பினால் தனது மகனை அனுப்புகிறார். இறைவனுடைய அன்பானது அவரை அன்பு செய்வதிலன்றி, அவரால் அன்பு செய்யப்படுவதில் அடங்கியுள்ளது. இறைவன் துவக்குகிறார், மனிதன் பதிலளிக்கிறான். உறுப்பினர்களிடையே நிலவும் அன்பின் வாயிலாக இறைவன் சமுதாயத்தில் தங்குகிறார். அதே போன்று கிறிஸ்தவனுடைய அன்பின் மூலமாகத் தனிப்பட்ட கிறிஸ்தவனிலும் அவர் தங்குகிறார். அன்பு முழுமையாக இருக்கும் போது அச்சத்திற்கே இடமில்லை. அச்சம் வெளிப்படுத்துகின்ற உள்ளார்ந்த விரோத மனப்பான்மையானது முழுமையாக ஒன்றுப்படுத்துகின்ற நிறைவான அன்பில் அழிக்கப்படுகின்றது. இறைவன்

பால் கிறிஸ்தவன்கொள்ளும் அன்பின் முழு நிறைவானது, தனது சகோதரர்பால் கொண்டுள்ள அவனது அன்பினால் சோதித்து அறியப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் பிற நூல்களைப் போல, அன்பிற்கும் நேசத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை யோவான் வேறுபடுத்திக் கொண்டிருப்பதில்லை. நேசம் என்பது சாதாரணமாக நட்புறவின் அன்பைக் குறிக்கிறது. இயேசு லாசரையும், மார்த்தாளையும் மரியாளையும் நேசித்தார் (யோவா 11:3.36). ஆனால் அன்புச் சீடனுக்கான இயேசுவினுடைய அன்பானது "அகப்பான்" என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது (13:23; 19:26; 21:7.20). பிற இடங்களில் அன்பு என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்ற தந்தை மகனுக்குமிடையே உள்ள அன்பிற்கும் (5:20) சீடரின் பால் தந்தையின் அன்பிற்கும், இயேசுவின் சீடரின் அன்பிற்கும் நேசம் என்ற சொல் பயன்படுகிறது (16:27). யோவா 21:15–17–இல் காணப்படும் மூன்று கேள்விகளுக்குப் பேதுரு அளிக்கும் பதிலில் இவ்விரு சொற்களினுடைய வேறுபாட்டில் எவ்வித தனிப்பட்ட சிறப்பியலும் இல்லையென இப்பகுதிகள் காட்டுகின்றன. இந்த மூன்று கேள்விகளில் முதல் இரண்டில் அன்பு என்ற சொல்லும் மூன்றாவதில் நேசம் என்ற சொல்லும் பயன்படுகின்றன. பேதுருவின் மூன்று பதில்களிலும் நேசம் என்ற சொல் பயன்பட்டுள்ளது.

5. புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்கள்:– புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்கள் அன்பு பற்றிய தங்களுடைய கருத்தில் எவ்வித வேறுபட்ட சிறப்பியல்பையும் வெளிப்படுத்துவதில்லை. இச்சொல் பெரும்பாலும் அன்பு முழுமையானது என்னும் பவுலின் கருத்தையும் அனைத்தையும் தழுவிய ஒன்றுபடுத்தும் பரிமாற்ற சக்தி என்னும் யோவானின் கருத்தையும் வெளிப்படுத்துகின்றன. யூதா 12–இல் மட்டுமே நற்கருணைச் சடங்கினை "அகபே" குறிக்கிறது. இந்த உபயோகமானது அப்போஸ்தலிக்க காலத்திற்கு பிற்பட்ட கிறிஸ்தவ இலக்கியத்தில் மிகவும் பொதுவானதாக உள்ளது.

6. அன்பின் உரையாடல்:– பழைய ஏற்பாட்டில் இறைவனுக்கும் மனிதருக்குமிடையேயான அன்பானது, இறை முன் முயற்சிகள், மனிதனின் மறுப்புகள், புறக்கணிக்கப்பட்ட அன்பின் துன்பம், மற்றும் அன்பின் அளவில் இருந்து அன்பின் அருளை ஏற்றுக்கொண்டிருந்தவனுக்கான பரிதாபமான மிகையாடுகள் முதலிய நிகழ்ச்சிகளின் தொடரால் வெளிப்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில் இறை அன்பானது சூழ்நிலையில் உண்மைகளையே மாற்றியமைக்கின்ற இயல்பினையுடைய தனித்துவமிக்க நிகழ்ச்சியில் வெளிப்படுத்தப்படுகிறது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான அன்பின் நாடக உரையாடலாக இறைவனாகவும் மனிதனாகவும் வாழ இயேசு வந்தார்.

அ) தந்தையின் கொடை:– இயேசுவின் வருகையானது முதலாவதாக தந்தையின் செயலாகும். இறைவாக்கினர்கள் மற்றும் பழைய ஏற்பாட்டு வாக்குறுதிகளின்படி "தமது இரக்கத்தை நினைவு கூர்ந்தவராய்" (லூக் 1:54–55; எபி 1:1) இறைவன் தம்மை அறியச் செய்தார் (யோவா 1:18). எதிர்பார்க்கப்பட்ட மெசியா மீட்பராக மட்டுமின்றி (லூக் 2:11) தாம் அன்பு செய்கிற (யோவா 3:35; 10:17; 15:9; கொலோ 1:13) தம்முடைய சொந்த மகனாகவும் உள்ளவரில் (மாற் 1:11; 9:7; 12:6) அவர் தனது அன்பை வெளிப்படுத்துகிறார் (உரோ 8:39; யோவா 3:1; 4:9).

எதுவுமே விஞ்ச முடியாத முறையில் தந்தையின் அன்பு தன்னையே வெளிப்படுத்துகிறது. புதிய உடன்படிக்கையின் நிறைவேறுதல் செயல்படுகிறது. மனித இனத்துடனான மணமகனின் முடிவில்லா திருமணமும் இங்கே நடக்கிறது. இஸ்ராயேலின் தொடக்கத்திலிருந்து தெற்றெனத் துவங்கும் இறை தாராள மனப்பான்மையானது (உப 7:7–8) அதன் உச்ச நிலையை அடைகிறது. மகனை வரவேற்கின்ற நிலையில் தன்னுடைய தகுதிகளை அடிப்படையாக்கி கொண்ட அனைத்து இறுமாப்பு, ஆணவம் ஆகியவற்றைத் துறப்பதை மனிதன் தவிர்க்க

முடியாது. இறைவனால் அமைக்கப்பட்ட அன்பின் கொடையானது முற்றிலும் சுதந்திரமானது (உரோ 5:6–7; தீத் 3:5; 1 யோவா 4:10–19). இக்கொடையானது இயேசுவின் உலக வாழ்விற்கும் அப்பாற் பட்டு செல்கின்ற உறுதியானதாகும் (மத் 28:20; யோவா 14:18–19). உலகம் வாழ்வை அடைவதற்காகவும் (உரோ 5:8; 8:32) நாம் இறைவனுடைய பிள்ளைகளாக இருப்பதற் காவும் (1 யோவா 3:1; கலா 4:4–7) மகனுடைய மரணத்திற்கு இணக்கம் அளிக்கும் இந்த கொடை உச்சநிலை அடைகிறது. "தனது ஒரே மகனை அளிக்கும் அளவிற்கு இறைவன் உலகை அன்பு செய்தாரெனில்" (யோவா 3:4) அது மனிதர் முடிவில்லா வாழ்வை அடைய வேண்டும் என்பதற்காகவே. அனுப்பப் பட்டவரை விசுவாசிக்க மறுக்கின்றவர் களும், ஒளியைவிட இருளை அதிகமாய் அன்பு செய்கின்றவர்களும் (3:19) தங் களைத் தாங்களே தண்டனை தீர்ப்பிட்டுக் கொள்கிறார்கள். மகனில் விசுவாசத்தின் மூலம் அன்பு செய்தல் அல்லது விசுவா சத்தை மறுப்பதன்மூலம் இறை சீற்றத் தைப் பெறுதல் ஆகிய தேர்வை தவிர்க்க முடியாது.

ஆ) இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட நிறைவான அன்பு:– இயேசுவுடனான தொடர்பின் சமயத்தில் மட்டுமின்றி அவரின் மூலமாகவும் இனிமேல் அன் பின் நாடகம் செயல்படுத்தப்படுகிறது. தமது வாழ்வின் மூலமே இயேசு அன்பினு டைய செயல்முறையான வெளிப்பாடாக உள்ளார். இறைவனுடனான மகனுக்குரிய உரையாடலை முழுமைப்படுத்தி, மனித ருக்கு அதற்கென சான்று பகர்கின்ற மனிதர் இயேசுவே மனித இனத்தின் முழுமையில் தமது அன்பை வாழ்ந்து காட்ட வந்தவரும், அன்பினுடைய ஆர்வ மிக்க வேண்டுகோளை நாம் புரிந்து கொள்ளச்செய்ய வந்தவருமான இறை வன் இயேசுவே அவரது ஆள் தன்மையில் மனிதன் இறைவனை அன்பு செய்து அவரால் அன்பு செய்யப்படுகிறான் .

1) இயேசுவில் வாழ்வு:– இயேசுவினு டைய முழு வாழ்வும் இருவடிவ உரையாட லுக்கு சான்று பகர்கிறது. தொடக்கத்தி லிருந்தே தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டு (லூக் 2:49; எபி 10:5–7) செபத்திலும் நன்றி செலுத்துதலிலும் (மாற் 1:35; மத் 11:25) எல்லாவற்றிற்கும் மேலாக இறை சித்தத் திற்கு முழுவதும் ஒத்த விதத்தில் வாழ்ந்து கொண்டு (யோவா 4:34; 6:38) இறைவனுக்கு செவிமடுப்பதில் அவர் சோர்வடைவ தில்லை. இது தந்தையால் கேட்கப்படு வதற்கு அவருக்கு உறுதியளிக்கிறது (11:41–42; 5:30; 8:36.40).

மனிதரைப் பொறுத்தவரை அவரு டைய வாழ்வானது சில குறிப்பிட்ட நண்பர்களுக்கு மட்டுமின்றி (மாற் 10:21; லூக் 8:1–3; யோவா 11:3.5.36) அனைவருக் கும் முழுமையாக அளிக்கப்படுகிறது (மாற் 10:45). மிகவும் இழிவுபடுத்தப்பட்ட வர்கள் மற்றும் தகுதியற்றவர்கள் முதற் கொண்டு (லூக் 7:36–50; 19:1–10; மத் 21:31–32). அனைவருக்கும் கவனம் செலுத்தி முழுமையான பற்றற்ற தன்மை யோடு (லூக் 9:58) தம்முடைய நண்பர் களாக இருப்பதற்கென (யோவா 15:15–16) தாம் விரும்பியவர்களை அவர் சுதந்திர மாக தேர்ந்தெடுத்தார் (மாற் 3:13).

இந்த அன்பானது கொடுத்து வாங்கும் பரிமாற்றத்தைக் கேட்கிறது. உப ஆகமத்தின் கட்டளை இன்னும் வழக்கில் இருந்தாலும் (மத் 22:37; உரோ 8:28; 1 கொரி 8:3; 1 யோவா 5:2) இயேசுவின் வழியாகவே ஒருவன் அதற்குக் கீழ்ப்படிகிறான். அவரை அன்பு செய்வதில் மனிதன் தந்தையை அன்பு செய்கிறான் (மத் 10:40; யோவா 8:42; 14:21–24). இறுதியாக இயேசுவை அன்பு செய்வதென்பது அவரது வார்த்தையை முழுமையாக கடை பிடிப்பதிலும் (யோவா 14:15.21.23) அனைத் தையும் துறந்து அவரை பின் செல்வதி லும் அடங்கியுள்ளது (மாற் 10:17–21; லூக் 14:25–27). இது முதல் இந்த அன்பை ஏற்ப வர்களுக்கும் மறுப்பவர்களுக்கும் இடை யில் நற்செய்தி முழுதும் ஒரு பிளவு செயல்படுகிறது (லூக் 2:34). இந்த அன்பிற்குமுன் எப்பக்கமும் சாராத நடு நிலைமை வகிக்க முடியாது (யோவா 6:60–71; 3:18–19; 8:13.59; 12:48).

2) சிலுவை:– சிலுவையில் அன்பானது தனது உச்ச அளவையும் நடைமுறையையும் உறுதியான முறையில் வெளிப்படுத்துகிறது. தமது தந்தைக்குரிய தமது கீழ்ப்படிதலையும் (பிலி 2:8) தமக்குரியவர்களுக்குத் தமது அன்பையும் (யோவா 13:1) முழுமையாக வெளிப்படுத்த இயேசு துன்புற வேண்டியிருந்தது (லூக் 9:22; 17:25; 24:7.26; எபி 2:8). கடுமையான மனித தனிமையில் (மாற் 14:50; 15:29–32) சோதனை முழுவதிலும் இறைவன் மௌனம் சாதிப்பதாகத் தோன்றியபோதும் (மாற் 14:32–41; 15:34; எபி 4:15) முற்றிலும் சுதந்திரமாக இருந்தாலும் (மத் 26:53; யோவா 10:18) அவர் மன்னித்து அனைவரையும் ஏற்பவராக உள்ளார் (லூக் 23:28; 24:43; யோவா 19:26). இதில் மிக உயரிய அன்பின் ஈடற்ற கட்டத்தை இயேசு வந்தடைகிறார் (யோவா 15:13). எதையும் ஒதுக்காமல் அவர் இங்கு அனைத்தையும் இறைவனுக்கும் (லூக் 23:46), விதி விலக்கின்றி அனைத்து மனிதருக்கும் அளிக்கின்றார் (மாற் 10:45; 14:24; 2 கொரி 5:14–15; 1 திமோ 2:5–6). சிலுவையினால் இறைவன் முழுமையாக மகிமைப் படுத்தப்படுகிறார் (யோவா 17:4). மனிதனாகிய இயேசுவும் (1 திமோ 2:5) அவருடன் அனைத்து மனுக்குலமும் எவ்வித ஒதுக்கீடுமின்றி இறைவனால் அன்பு செய்யப்படும் தகுதியை அடைகின்றனர் (யோவா 10:17; பிலி 2:9–11). இயேசுவினுடைய இறுதி செபத்திற்கேற்ப இறைவனும் மனிதனும் ஓர் ஒன்றிப்பில் ஒருங்கிணைக்கப்படுகின்றனர் (யோவா 17). கிறிஸ்துவின் மாதிரியைத் தொடர்கின்ற சுய தியாகத்திற்கு அவனை நடத்திச் செல்லவிருக்கின்ற இத்தகைய முழுமையான மற்றும் உரிமைகோரும் அன்பை மனிதன் எவ்வித தடையுமின்றி சுதந்திரமாக ஏற்க வேண்டியது இன்னும் அவசியமாகிறது (17:19). அன்பின் இடறலன்றி வேறில்லாத சிலுவையின் இடறலை அவன் தனது பாதையில் எதிர்கொள்கிறான். அங்குதான் மணமகளுக்கான மணமகனின் கொடையானது முழுமையாக வெளிப்படுத்தப்படுகின்றது (எபே 5:25–27; கலா 2:20). ஆனால் அங்குதான் பிரமாணிக்கமுள்ளமைக்கு இட்டுச் செல்லும் சோதனையும் எல்லா மனிதரையும் எதிர் கொள்கிறது.

இ) ஆவியில் உலகளாவிய அன்பு:– கல்லாரியானது நிறைவான அன்பிற்குரிய இடம் என்றால் அதன் வெளிப்பாட்டு முறை ஒரு முடிவான சோதனையாகும். சிலுவையில் அறையப்பட்டவரின் நண்பர்கள் அவரை கை விட்டு விடுகின்றனர் (மாற் 14:50; லூக் 23:13–24). இறையன்பிற்குப் பிரமாணிக்கமாயிருப்பது உடலியல் சந்திப்பையோ, மனித அறிவையோ, சுருக்கமாகக் கூறினால், "ஊனியல்பின் படியான அறிவையோ" சார்ந்ததன்று (2 கொரி 5:16). புதிய இதயத்தை உருவாக்குகின்ற ஆவியில் கொடை இங்கு தேவைப் படுகிறது (எரே 31:33–34; எச 36:25–27). கிறிஸ்து வாக்களித்தபடி (யோவா 14:16–18; லூக் 24: 49) ஐம்பதாம் நாளில் அனுப்பப்பட்ட ஆவியானவர் அன்று முதல் திருச்சபையின் மூலமாக (எபே 2:21–22) உலகில் பிரசன்னமாகியுள்ளார் (யோவா 14:16). இயேசு அவர்களுக்கு கூறியதை ஆவியானவர் மனிதருக்கு கற்பித்து (14:26) உண்மையான சமய அறிவின்மூலம், உள்ளார்ந்த முறையில் புரிந்து கொள்ளச் செய்கிறார். இயேசுவின் உலக வாழ்வுக்கு அவர்கள் சாட்சிகளாக இருக்கிறார்களோ இல்லையோ இங்கு மனிதர்கள், காலம் அல்லது இனம் முதலிய வேறுபாடுகளின்றி சமமாக உள்ளனர் 'தந்தாய்' (உரோ 8:15) என்று கூறுவதற்கும், கிறிஸ்துவ மகிமைப்படுத்துவதற்கும் யோவா 16:14) ஒவ்வொரு மனிதனுக்கும் ஆவியானவர் தேவையாக உள்ளார். நம்மைக் கட்டுப்படுத்துகின்ற (2 கொரி 5:1) அன்பு நம்பிடையே பரவி நிலவுகிறது (உரோ 5:5). அதிலிருந்து நம்மை எதுவும் பிரிக்க முடியாது (8:35–39). அது "நாம் அறியப்படுகிறவாறே அறிந்து கொள்கிற" அன்பின் உறுதியான சந்திப்பிற்கு நம்மைத் தயாரிக்கின்றது (1 கொரி 13:12).

ஈ) இறைவனே அன்பு: அன்பின் உரையாடலில் தமது ஆண்டவருடன் வாழ்வதற்கென ஆவியால் நடத்தப்படும் நிலையில் கிறிஸ்தவன், இறைவனுடைய மறைபொருளுக்கே நெருங்கி வருகிறான். ஏனெனில் தாம் இருக்கும் வித்தில் தம்து முதல் சந்திப்பிலேயே இறைவன் வெளிப்படுத்துவதில்லை. அவர் பேசுகிறார்,

அழைக்கிறார், செயல்படுகிறார்; இவ்வாறாக, மனிதன் ஆழமாகப் புரிந்து கொள்கிறான்; இறைவன் தம்முடைய மகனையே அளிக்கும்போது அன்பில் தம்மையே அளிப்பவராக வெளிப்படுத்துகிறார் (உரோ 8:32). முழுமையான அன்பின் உரையாடலில் தம் தந்தையோடு வாழ்ந்து அதன்விளைவாக தொடக்கத்திலிருந்தே தாமும் தந்தையும் ஒன்று என்றும் (யோவா 10:30; 17:11.21–22) அவரே இறைவன் என்றும் (யோவா 1:1; 10:33.38; மாற் 11:27) வெளிப்படுத்தி, "தந்தையின் இதயத்திற்கு மிக அருகிலுள்ள ஒரே மகன்" "யாருமே என்றுமே கண்டிராத இறைவனைப் பற்றி அறிய நமக்கு உதவுகிறார் (யோவா 1:18). இந்த இறைவன் ஆவியின் ஒன்றிப்பில் அவருடைய தந்தையும் அவருமே ஆவார். அன்பு மற்றும் விசுவாசத்தின் உண்மையான பொருள் என்ன என்பதை அனுபவித்தள்ள "அன்புச் சீடர்" இக்கருத்தைப் பற்றி இறுதி முடிவான கூற்றாக "இறைவனே அன்பு" (1 யோவா 4:8.16) என்று கூற முடியும். வளமையும் வரையறைகளும் கொண்ட மனிதச் சொற்கள் அனைத்திலும் "அன்பு" என்னும் இச்சொல் மட்டுமே தந்தை, தம் மகன் மற்றும் ஆவியினுடைய முடிவில்லாத பரிமாற்றக் கொடையாகிய மூவொரு இறைவனின் மறைபொருளை சிறந்த முறையில் விவரிக்கிறது.

IV. சகோதரத்துவ அன்பு, பிறர் அன்பு

I. பழைய ஏற்பாடு:–

பழைய ஏற்பாட்டில் இறைவனுடைய அன்பின் கட்டளையானது "உனக்கு அன்பு செய்வது போல் உன் அயலானுக்கும் அன்பு செய்" (லேவி 19:18) என்ற இரண்டாவது கட்டளையால் நிறைவு செய்யப்படுகிறது. உண்மையில் இந்த கட்டளையானது மற்றதைவிட சற்று குறைந்த ஆடம்பர முறையிலேயே அளிக்கப்படுகிறது (ஒப்பிடுக லேவி 19:1–37 மற்றும் உப 6:4–13). அயலான் என்ற சொல்லானது அங்கு உண்மையில் ஒரு குறுகிய பொருளைக் கொண்டுள்ளது. ஆனால் கவனத்தை மற்றவைகளை நோக்கி திருப்பச்சொல்லி இஸ்ராயேலன் ஏற்கனவே கோரப்பட்டுள்ளான். ஒருவரது அயலாருக்கு விரோதமாகவோ அல்லது அவருக்குக் கவனம் செலுத்தாமலோ இருப்பது பண்டைய நூல்பகுதிகளின்படி இறைவனுக்கெதிரான குற்றமாகும் (ஆதி 3:12; 4:9–10). சட்டமானது இறைவனுடன் கொள்ளும் உறவுகள் பற்றிய கோரிக்கைகளுடன் மனிதரிடையிலான உறவுகளைப்பற்றிய கோரிக்கைகளையும் சேர்க்கின்றது. இவ்வாறு "பத்து கட்டளைகளும்" (யாத் 20:12–17) "உடன்படிக்கை நூலும்" அமைந்துள்ளன. பின்னதில் ஏழைகளுக்கும் எளியோருக்குமான கவனம் பற்றிய குறிப்புகள் அதிகம் உள்ளன (யாத் 22:20–26; 23:4–12). இறைவாக்கு மரபு முழுவதும் (ஆமோ 1–2; ஏச 1:14–17; எரே 9:2–5; எச 19:5–9; மலா 3:5) ஞான மரபும் முழுவதும் (பழ 14:21; 1:8–19; சீரா 25:1; ஞான 2:10–12) ஒரே கருத்தை வலியுறுத்துகின்றன. அக்கருத்து மற்ற மனிதருக்கு, குறிப்பாக மிகவும் கைவிடப்பட்டோருக்கும், குறைந்த கவனத்தை ஈர்க்கக் கூடியவர்களுக்கும், மரியாதை அளிக்காமல் இறைவனை பிரியப்படுத்த முடியாது என்பதாகும். மனிதரில் விருப்பமில்லாமல் இறைவனை அன்பு செய்ய முடியுமென எவரும் நம்ப முடியாது. "அவர் நீதியும் நேர்மையாயும் நடந்தார்... ஏழையின் வழக்கையும் எளியவனின் வழக்கையும் அவர் தீர்த்தார். இதெல்லாம் செய்வதே நம்மை அறிதல் அன்றோ?" (எரே 22:15–16). இந்த இறைக்கூற்று யோசியாவை பற்றியதாயினும் எல்லா இஸ்ராயேலுக்கும் பொருந்தும் (எரே 9:4)

இக்கடமையானது அன்பு என அழைக்கப்பட வேண்டுமென்பது அடிக்கடி குறிப்பிடப்படவில்லை (லேவி 19:18; 19:34; உப 10:19). ஆயினும் அன்னியருக்குக் காட்ட வேண்டிய அன்பினைப்பற்றி பேசும்போது யாத்திரையின்போது யாவே செய்ததுபோன்று செயல்பட வேண்டிய கடமையின் கட்டளையானது ஏற்கெனவே நிறுவப்படுகிறது. "ஆண்டவர் அகதியை நேசித்து அவனுக்கு உணவும் உடையும் தந்தருளுபவருமாய் இருக்கிறார். நீங்களும் எகிப்து நாட்டில் அந்நியராய் இருந்தீர்கள் அல்லவா? ஆகையால் அகதிகளுக்கு அன்பு செய்யுங்கள்" (உப 10:18–19).

இதற்குரிய உந்து காரணம் சாதாரண இயல்பான கூட்டுணர்வல்ல மாறாக மீட்பின் வரலாறு ஆகும்.

இயேசுவின் வருகைக்கு முன்னா சகோதர அன்பின் இயல்பை யூதத்துவம் ஆழப் படுத்தியது அயலாரின் அன்பில் யூதஎதிரிகளும் புறவின பகைவனும் கூட சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இஸ்ராயேலானது தனது மையப்பங்கை கொண்டிருந்தாலும் அன்பானது உலகளாவியதாயிற்று. "சமாதானத்தை அன்பு செய்", "சமாதானத்திற்காக ஆர்வம் கொள். உயிரினங்களை அன்புசெய்து, அவற்றை சட்டத்திற்கு நடத்திச்செல்" என்று இல்லேல் கூறினார். அன்பானது இறை செயலை நீட்டிப்பது என்ற கண்டுபிடிப்பும் அங்கே உள்ளது. "போற்றப்பட வேண்டிய பரிசுத்தர் நிர்வாணியை உடுத்துவதுபோல, துன்புற்றவர்களைத் தேற்றுவதுபோல, இறந்தவரை அடக்கம் செய்வதுபோல, நீயும் நிர்வாணியை உடுத்து, நோயாளியை சந்தி". அக்கால முதல் இறைவனுக்கும் அயலாருக்குமான அன்பின் இரு கட்டளைகளுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்துவது எளிது. ஒருநாள் இயேசுவை அணுகும் போது சட்ட வல்லுநர் இதையே செய்வார் (லூக் 10:26–27).

2. புதிய ஏற்பாடு:–

சகோதர அன்பானது மற்ற கட்டளைகளுடன் சமத்தவ நிலையில் அமைக்கப் பட்டுள்ளது என விசுவாசிக்குமாறு யூத கருத்தானது ஒருவரை நடத்திச் செல்லக் கூடுமாயின் கிறிஸ்தவ காட்சியானது அதற்கு மையமான அதற்கு மேலாகத் தனித்துவமிக்க நிலையை அளிக்கிறது..

அ) இருஅன்புகள்:

புதிய ஏற்பாட்டின் தொடக்க முதல் இறுதிவரை அயலாருக்கான அன்பு இறை அன்பினின்று பிரிக்கப்பட முடியாததாகத் தோன்றுகிறது. இவ்விரு கட்டளைகளும் சட்டத்தின் உச்ச நிலையாகவும் திறவுகோலாகவும் உள்ளன (மாற் 12:28–33). சகோதர அன்பே அனைத்து ஒழுக்கக் கோரிக்கைகளின் நிறைவேறுதலாகும் (கலா 5:22; 6:2; உரோ 13:8–9; கொலோ 3:14). உண்மையில் இது மட்டுமே ஒரே கட்டளை (யோவா 15:12; 2 யோவா 5), அனைத்து உயிருள்ள விசுவாசத்தின் தனித்தன்மையுடையதும் பல பருமனுடையதும் ஆகும் (கலா 5:6.23). "கண்ணால் கண்ட சகோதரனுக்கு அன்பு செய்யாதவன் தான் கண்டிராத கடவுளுக்கு அன்பு செய்ய இயலாது.... நாம் கடவுளுக்கு அன்பு செய்யும் போது கடவுளுடைய மக்களுக்கும் அன்பு செய்கிறோம்" (1 யோவா 4:20–21; 5:2). அடிப்படையில் ஒரேயொரு அன்பு மட்டுமே உள்ளது என்ற கூற்றை உயர்த்துவதென்பது இயலாதது.

எனவே அயலாரின் அன்பு என்பது சமயத்தைச் சார்ந்தது. இது வெறும் மனித நேயம் மட்டுமல்ல. மேலும் இறைவனுடைய அன்பே இதற்கு மாதிரியாக இருப்பதாலும் இது சமயம் சார்ந்ததாகும் (மத் 5:44–45; எபே 5:1–2.25; 1 யோவா 4:11–12). எல்லாவற்றிற்கும் மேலாக இறுதியாக இதனுடைய மூல ஆதாரமும் இதற்கு காரணமாகும். ஏனெனில் இது நம்மில் இறைவன் ஆற்றும் வேலையாகும். ஆண்டவர் நமக்கு கற்பிக்காவிடின் (1 தெச 4:9), ஆவியானவர் அதனை நமது இதயங்களில் பரவச் செய்யாவிடின் (உரோ 5:5; 15:30), விண்ணகத் தந்தையை போன்று நாமும் எவ்வாறு இரக்கமிக்கவர்களாக இருப்போம்? (லூக் 6:36). இந்த அன்பு இறைவனிடமிருந்து வருகிறது. இறைவன் நம்மை தமது மக்களாக ஏற்றுக் கொண்டார் என்ற உண்மையிலிருந்தே இந்த அன்பு நம்மில் வாழ்வது தெரிகிறது (1 யோவா 4:7). இறைவனிடமிருந்து வந்ததனால் இந்த அன்பானது இறைவனிடமே திரும்பிச்செல்கிறது. ஏனெனில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு கிறிஸ்துவின் உடலை உருவாக்குகிறோம் (உரோ 12:5–10; 1 கொரி 12:12–27). நமது சகோதரர்களை அன்பு செய்வதில் நாம் இறைவனையே அன்பு செய்கிறோம் (மத். 25:40). இவ்வாறாக இறைவன் முதலில் நமக்கு காட்டிய அன்பிற்கு நாம் பதிலளிக்கலாம் (1 யோவா 3:16; 4:19–20).

ஆண்டவருடைய வருகையை எதிர் நோக்கியுள்ள வேளையில் அன்பானது இயேசுவின் சீடர்களுடைய முக்கிய செயலாக உள்ளது. அதன்படியே அவர்களும்

தீர்ப்பிடப்படுவர் (மத் 25:31–46). இயேசுவால் விடப்பட்ட தந்தை வழிச் செல்வம் இத்தகையதே: "நாம் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்" என்பதுவே இயேசு நமக்கு விட்டுச்சென்ற உரிமைச் சொத்தாகும். கிறிஸ்துவினுடைய அன்புச் செயலானது அவரது சீடர்களுடைய செயல்களின் மூலமாகத் தொடர்ந்து செயலாற்றுகிறது. இக்கட்டளையானது பழமையானதாக இருந்தாலும், வெளிப்பாட்டின் ஊற்றுகளோடு கொண்டுள்ள தொடர்பின் காரணமாக பழைமையானதாக இருந்தாலும் (1 யோவா 2:7–8), புதியதாக உள்ளது. உண்மையில் தனது பலியின் மூலமாக இறைவாக்கினர் அறிவித்திருந்த புதிய சமுதாயத்தை தோற்றுவித்ததன் மூலம் ஒரு புதிய காலகட்டத்தை இயேசு துவக்கியுள்ளார். புதிய இதயங்களைப் படைக்கக் கூடிய ஆவியை அவர் மனிதனுக்கு அளித்துள்ளார். இவ்விரு கட்டளைகளும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. ஏனெனில் கிறிஸ்துவைப் பின்செல்வோர் தம்மில் வெளிப்படுத்துகின்ற அன்பின் மூலமாக கிறிஸ்துவின் அன்பு தொடர்ந்து வெளிப்படுத்தப் படுவதே இதற்கு காரணம்.

ஆ) அன்பு ஒரு கொடை:–

முன் கூறியதுபோல் கிறிஸ்தவ அன்பானது, சிறப்பாக ஒத்தமை நற்செய்தியாளர்களாலும் பவுலாலும் எத்தகுதியும் இல்லாத நிலையிலும் எல்லா பாவ மனிதருடைய மீட்பிற்காகவும் தமது மகனையே இலவசமாக அளிக்கின்ற இறைவனின் சாயலில் பார்க்கப்படுகிறது (மாற் 10:45; உரோ 5:6–8). எனவே இது எவ்விதச் சமூக அல்லது இனத்தடையினையும் அனுமதிக்காமல் (கலா 3:28), எவரையும் வெறுத்து ஒதுக்காமல் (லூக் 14:13; 7:39) யாவரையும் உள்ளடக்குகிறது. மேலும் பகைவரையும் அன்பு செய்தலை இது கோருகிறது (மத் 5:43–47; லூக் 10:29–37). அன்பினைத் தளர்வடையச் செய்ய முடியாது. எல்லையற்ற மன்னிப்பிலும் (மத் 18:21–22; 6:12.14–15) எதிரியை குறித்த செயலிலும் (மத் 5:23–26), பொறுமையிலும், தீமைக்கு நன்மை செய்வதிலும் (உரோ 12:14–21; எபே 4:25–5:2) அது தன்னை வெளிப்படுத்துகிறது. திருமணத்தில் கிறிஸ்துவின் பலியை பின்பற்றி, முழுமையான கொடையாக அளிக்கப் படுவதில் அது வெளிப்படுகிறது (எபே 5:25–32). அனைவருக்கும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவுடன் மனிதன் தம்மையே துறக்கின்ற (பிலி 2:1–11) ஒருவருக்கொருவர் அளிக்கின்ற அடிமைத்தனமாக அது அமைகிறது (கலா 5:13). தன்னுடைய "அன்பின் பாடலில்" (1 கொரி 13) அன்பினுடைய இயல்பையும் மாண்பையும் பவுல் வெளிப் படுத்துகின்றார். அதனுடைய அனுதின தேவைகளைச் சிறிதும் புறக்கணியாமல் (13:4–6), அன்பில்லாமல் எதற்கும் மதிப் பில்லை (13:1–3) என்றும், மற்றும் அது மட்டுமே எதனையும் கடந்து இருக்கக் கூடியது என்றும் உறுதிப்பட அவர் எடுத்துக்கூறுகிறார். கிறிஸ்து அன்பு செய்ததுபோல அன்பு செய்வதன் மூலம் இறைவனுடைய முடிவில்லா உண்மையை நாம் ஏற்கெனவே வாழ்கிறோம் (13:8–13). அன்பினால் திருச்சபையானது கட்டியெழுப்பப்படுகிறது (1 கொரி 8:1; எபே 4:16). இதன்மூலமாக மனிதன் ஆண்டவருடைய நாளுக்கு நிறைவுள்ளவனாகிறான் (பிலி 1:9–11).

இ. அன்பானது ஒன்றிப்பாகும்:– அன்பினுடைய உலகளாவிய நிலை மற்றும் இலவசத்தன்மை பற்றியும் யோவான் குறிப்பிடுகிறார் (யோவா 3:16; 15:16; 1 யோவா 4:10). ஆனால், ஆவியில் தந்தை மற்றும் மகனுடைய ஒன்றிப்பைப் பெரிதும் உணர்ந்தவராய், ஒருவருக்கொருவர் கிறிஸ்தவர்கள் கொள்ளும் அன்பின் விளைவுகளை அவர் வலியுறுத்துகிறார். இந்த சகோதரத்துவமானது முழுமையான ஒன்றிப்பாக இருக்க வேண்டும். இதனில் அன்பு மற்றும் விசுவாசத்திற்கான தனது திறமைக்கேற்ப ஒவ்வொருவனும் பங்கேற்கிறான். இவ்வுலகில் அவன் தீயோனுடைய அரசினை அன்பு செய்ய முடியாது (1 யோவா 2:14–15; யோவா 17:19). ஆனால் கிறிஸ்தவன் தனது சகோதரர்களை வலிந்து பெறும், செயல்முறையான அன்போடு அன்பு செய்வான் (1 யோவா

3:11–18). அதிலே துறவு மற்றும் மரணத்தின் சட்டம் தடையின்றி இயங்குகின்றன. அது இல்லாமல் உண்மையான பலனே இல்லை (யோவா 12:24–25). இந்த அன்பினால் விசுவாசி இறைவனோடு ஒன்றித்து வாழ்கிறான் (1 யோவா 4:7–5:4). "நீர் என் மீது கொண்டிருந்த அன்பு அவர் ளுள் இருக்கவும் நானும் அவர்களுள் இருக்கவும்" என்பதுவே இயேசுவின் இறுதிச் செபம் ஆகும் (யோவா 17:26). தாங்கள் சேராத உலகின் நடுவில் சீடர்களால் வாழ்கின்ற நிலையில் (17:11. 15–16). இயேசு தந்தையால் அனுப்பப்பட்டவர் என்பதை உலகம் அறிந்து கொள்வதற்குச் சான்றாக இந்த சகோதர அன்பு உள்ளது (17:21); "நீங்கள் ஒருவர் மீதொருவர் அன்பு கொண்டிருந்தால் தான் நீங்கள் என் சீடர் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" (13:35).

அன்புச் சீடர் (BELOVED DISCIPLE)

அருளப்பர் நற்செய்தியின் இறுதியில் பெயர் ஒன்றும் கூறப்படாமல் அன்புச் சீடர் என்று மட்டுமே கூறப்பட்டுள்ள இயேசுவின் சீடரே இவர். மாற்கு 10:21–இல் குறிப்பிடப்படும் பணக்கார மனிதன் இவராக இருக்க முடியாது. இயேசு அன்பு செய்ததாகக் கூறப்படும் அந்த மனிதனும் இயேசுவின் சீடனாகவில்லை.

இறுதி இராவுணவின்போது இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டிருந்த இச்சீடர் பேதுரு கேட்டுக்கொண்டதின் பேரில் இயேசுவைக் காட்டிக் கொடுக்கப் போவது யார் எனக்கேட்கிறார் என யோவான் 13:23–ல் குறிப்பிடுகிறார். சிலுவையினடியில் 'தாம் அன்பு செய்த சீடரிடம்" தன் தாயை ஒப்படைக்கிறார் இயேசு. அவரும் அந்நேரம் முதல் அவளைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டார் (யோவா 19:26–27). மரிய மத்தலேனே காலியான கல்லறையைப் பார்த்ததும் விரைந்து வந்து பேதுருவிடமும் இயேசு அன்பு செய்த சீடரிடமும் வந்து கூறினாள். உடனே அவர்களிருவரும் ஓடிச்சென்றபொழுது அன்புச் சீடர் பேதுருவுக்கு முன்னர் ஓடினாலும் பேதுருவே முதலில் கல்லறைக்குள் நுழைந்தார். பின்புதான் மற்ற சீடர் உள்ளே நுழைந்து பார்த்து விசுவசித்தார் (20:1–8). யோவான் நற்செய்தியின் பிற்சேர்க்கையான 21–ஆம் அதிகாரத்தில் இயேசுவின் அன்புச் சீடர் திபேரியாக் கடற்கரையில் ஆண்டவரை முதன்முதலில் அடையாளம் கண்டு கொண்டார் (21:7). இதே அதிகாரத்தில் இயேசுவின் வார்த்தை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது. "நான் வரும்வரை இவன் இப்படியே இருக்க வேண்டுமென்பது எனது விருப்பமானால் அதைப்பற்றி உனக்கு என்ன" என்று பேதுருவிடம் இயேசு கூறியதை நான் வரும்வரை அவன் இறக்கமாட்டான் எனக் கூறியதாகப் புரிந்துகொண்டனர். அச்சீடர் இறந்து விட்டதாகத் தோன்றுகிறது. ஆகவே "நான் வருமளவும் இவன் இப்படியே இருக்க வேண்டும் என்பது எனக்கு விருப்பமாயிருந்தல் உனக்கென்ன" என்று இயேசு கூறினாரே அன்றி இறக்கமாட்டான் என்று கூறவில்லை என்று விளக்கப்படுகிறது. யோவா 21:24–இல் சில கிறிஸ்தவர்கள் இந்தச்சீடர் கூறும் சாட்சியம் உண்மையானதே எனச்சான்று பகர்கின்றனர்.

யோவான் 1:41; 18:15; 19:35 ஆகிய மூன்றும் இச்சீடரைப் பற்றியே குறிப்பிடுவதாகச் சிலர் கருதுகின்றனர். மற்ற சீடர், பெயரிடப்படாதவர் இவரே என்றும், அவரது விலாவினின்று இரத்தமும் நீரும் வரக் கண்டவர் அன்புச் சீடர்தான் எனக் கூறினாலும் இவை நிச்சயமானதாக இல்லை. இவர் யார்? இவரை அடையாளம் காண இருமுறைகளில் ஒன்று பின்பற்றப்படுகிறது. ஒரு சாரார் இவ்வளவு முக்கியத்துவம் பெற்றவர் இயேசுவின் சீடர்களுள் ஒருவராகவே இருந்திருக்க வேண்டும். அவர் பேதுருவாகவோ யாக்கோபுவாகவோ இருந்திருக்க முடியாது, ஏனெனில் அவர்களிருவரும் இவருடன் வருகின்றனர், எனவே யாக்கோபுவின் சகோதரரான யோவானாகத் தான் இருக்கவேண்டும் இந்த அன்புச் சீடர் என்று கருதுகின்றனர். யோவான் நற்செய்தியைப் போலவே லூக் 22:8; அ.ப.3:1; 8:14–இல் பேதுருவும் யோவானும் இணைந்தே வருகின்றனர். இதுவும் யோவான்தான் அன்புச்சீடர் என்பதைக்

குறித்துக்காட்டுகிறது. யோவா 21:2 திபேரியாக் கடற்கரையில் செபதேயுவின் மக்கள் இருந்தனர் என்றும், 21:7 அன்புச் சீடரும் அங்கு இருந்தார் எனவும் குறிப்பிடுவதால் இவ்வன்புச் சீடர் நிச்சயமாக யோவானாகத்தான் இருக்க வேண்டுமென்பதற்குப் புறச்சான்றாக இது அமைகிறது. பழைய திருச்சபை மரபு அன்புச் சீடர் யோவான்தான் என வலியுறுத்திக் கூறுகிறது. ஆகவே புறச்சான்றுகள், யோவான்தான் இயேசுவால் அன்பு செய்யப்பட்ட சீடர் என்ற கருத்துக்கு பெரிதும் ஆதரவு தரும் வாதமாக அமைகின்றன.

மற்றொரு அணுகுமுறை யோவானின் நற்செய்தியை ஆராய்ந்து அது அன்பு செய்யப்பட்ட சீடரை அடையாளம் காட்டுகிறதா என்று காண முயலுதலாகும். யோவானின் பெயர் அவரது நற்செய்தியில் வரவில்லை என்பதற்காக அன்புச் சீடர் யோவானாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. இந்நற்செய்தியின் அகச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட மூன்று கருத்துக்கள் கவனிக்கத்தக்கவையாகும்.

அ) இயேசுவைப் பின்பற்றும் உண்மையான சீடர் எப்படி இருக்கவேண்டுமென்பதே அன்புச் சீடர் என்ற பெயரில் காட்டப்பட்டுள்ளது. அது ஒரு இலட்சியச் சீடன் பாத்திரம். அதை வைத்து அன்புச் சீடர் என்று தனி மனிதரைக் குறிப்பது, தேடுவது தவறு என்கின்றனர்.

ஆ) அன்புச் சீடர் எருசலேமைச் சேர்ந்த ஒரு குருவின் குடும்பத்தாராகவோ அல்லது தொடர்புடையவராகவோ இருக்க வேண்டும். இக்கருத்து யோவா. 18:15 அன்பு செய்யப்பட்டச் சீடரைக் குறிக்கிறது என்று ஏற்றுக்கொள்ளும். இவர் உயிர்ப்பிற்குப்பின் வரும் பிற்சேர்க்கை பகுதியைத் தவிர மற்றபடி எருசலேமில் மட்டும்தான் தோன்றுகிறார். நற்செய்தியைக் கூட எருசலேமை மையமாகக் கொண்டுள்ள இந்நற்செய்தியின் ஆசிரியர் அல்லது அடிப்படை சாட்சி ஒரு கலிலேயே மீன் பிடிப்பவராக இருந்தால் எருசலேமை மையமாக வைப்பதை விளக்குவது கடினம். இவர் பெரிய குருவை அணுக முடிகிறது.

போலிகிரேத்தஸ் என்ற ஏதெசாவின் ஆயர் யோவான் குருக்கள் அணியும் மார்புத் தகட்டை அணிந்து இருந்ததைக் குறிப்பிடுகிறார். இது 18:15—ஐ அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம். அன்பு செய்யப்பட்ட சீடர் குருகுலத்தைச் சேர்ந்தவர் என்ற கருத்தைப் பிரதிபலிக்கலாம்.

இ) அன்புச் சீடர் இலாசர்தான் என்ற கருத்தும் உண்டு; ஏனெனில் இயேசு இவரை அன்பு செய்வதை வலியுறுத்துவதாக யோவா 11:3.5. 11.36—ம் இயேசுவுடன் இலாசர் உணவைப் பகிர்ந்து கொள்வதாக 12:2—உம் கூறுகின்றன. பின்பு, 13:23—இல் அன்புச் சீடர் இயேசுவோடு உணவைப் பகிர்ந்து கொள்வதாகக் கூறுகிறது. இலாசர் எருசலேமுக்கு அருகே பெத்தானியாவில் வசிப்பதாக கூறப்படுகிறது. மேலும் இது கல்வாரிக்கு அருகில் இருப்பதால் இயேசுவின் தாயை விரைவில் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்ல முடியும். மேலும் இயேசுவால் உயிர்ப்பிக்கப்பட்ட இலாசரால் உயிர்த்த இயேசுவை அடையாளம் கண்டுகொள்வதும், அவரில் அவரால் மட்டுமே வாழ்வு உண்டு என்று சான்று பகர்வதும் எளிது, பொருத்தமுடையது. ஆனால் நற்செய்தியை இலாசர் எழுதினார் என்று ஒப்புக்கொண்டால் அது அவர் முக்கிய சீடர்கள் கூட்டத்திற்கு வெளியே உள்ளவர் என்று கருதப்படும் போது உண்டாகும் ஒற்றுமையின்மையை நீக்கி, நற்செய்திக்கு அந்த ஒற்றுமையை அளிக்கிறது. அதே நேரத்தில் இலாசர், இறந்து உயிர்த்தது உண்மை என்பதால் அவர் மீண்டும் இறக்கமாட்டார் என்ற வதந்தி எளிதாக எழுந்திருக்கக்கூடுவதாக உள்ளது.

அகச் சான்றுகள் இலாசர்தான் அன்புச் சீடர் எனவும், புறச் சான்றுகள் செபதேயுவின் மகனான யோவான்தான் அன்புச் சீடர் எனவும் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் இலாசர் ஒரு உருவக, உவமைப் படைப்பே, ஒரு தனி ஆள் அல்ல என்ற கருத்தும் உண்டு (லூக் 16:31). இது இலாசர் ஒரு உண்மையான ஆள்

என்று நற்செய்திச் சுட்டிக்காட்டு வதை எண்பிக்கவில்லை. அன்புச் சீடர் என்று நற்செய்தியின் மூலப்பிரதியில் பெயர் குறிப்பிடப்படாத அவர், பின்னர் யோவான் என்ற பெயருடைய ஒரு தலைவ ரோடு தொடர்புபடுத்தப்பட்டு பின்னர் அது சீடர்களில் ஒருவரான அப்போஸ் தலர் யோவானைக் குறித்திருக்கலாம்; யோவா 21:24 இந்த வளர்ச்சியின் ஒரு கூட்டத்தைப் பிரதிபலிக்கலாம். ஆனால் உறுதியாக அறுதியிட்டு 'அன்புச் சீடர்' யார் என்று கூறமுடியாது.

அன்பு பெறாதவள்

இது ஓசேயின் இரண்டாவது குழந்தை யாகிய மகளுக்கு அளிக்கப்பட்ட அடை யாளப் பெயராகும்; ஆண்டவர் இஸ்ராயேல் வீட்டை இனி ஒருபோதும் மன்னிக்க மாட் டார் என்பதை குறிப்பிடுகின்றது (ஓசே 1:6). உடன்படிக்கையானது பின்னர் மீண்டும் அமைக்கப்படும்போது, இறைவன் மீண் டும் இஸ்ராயேல் மீது "அன்பு கூறுவார்" (2:22).

அன்பு விருந்து (AGAPE)

அகபே என்ற கிரேக்கச் சொல், அதன் அடிப்படைப் பொருளில் அன்பு செய்யப்பட்டவரின் நலனுக்காக எதையும் செய்யும் இறைத் தன்மையுடைய தன்னல மற்ற அன்பைக் குறித்தது. புதிய ஏற்பாட் டில் இது கலைச்சொல்லாக அன்பு விருந்தைக் குறிக்கிறது. இந்த விருந்துகள் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ளே சமயத் தோழமையை வளர்க்கவும் குறிப்பாகக் கிறிஸ்தவச் சமூகத்திலிருந்து ஏழைகள், அநாதைகள், விதவைகளுக்கு அன்பு செய்யவும் பயன்பட்டன. இது கிறிஸ்தவம் தோன்றிய காலத்திலிருந்து அதாவது இயேசு தம் சீடர்களோடு உண்ட காலத்தி விருந்து வழக்கத்தில் இருந்து அல்லது அவர் பெருங்கூட்டத்தினருக்கு உணவ ளித்த பணி நிகழ்ச்சிகளிலிருந்து (மாற் 6:34-44; 8:1-9) வரலாம். இதற்கு அ.ப. 2:42. 46; 6:1-2-ல் சான்றுகளைக் காண்கி றோம். இவற்றில் குறிக்கப்படுவது அன்பு விருந்தா, அல்லது ஆண்டவரின் இரா வுணவா என்ற சந்தேகம் நிலவுகிறது (1 கொரி 11:20; அ.ப. 20:11)

இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு அன்பு விருந்தை பற்றிய சில அறிவுரைகள் திதாக்கே என்ற ஆதி கிறிஸ்தவர்களின் சட்ட நூலில் 9-10 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன. அந்தி யோக்கிய நகர இன்னாசியாரும் இதைப் பற்றிக் கூறுகிறார். பித்துனியாவில் கி.பி. 11-ல் ஆளுநராய் இருந்த சிறிய பிளினி என்பவர் கிறிஸ்தவர்கள் உண்ட அன்பு விருந்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி யில் இந்த அன்புவிருந்து ஆண்டவர் இரவு உணவு அல்லது நற்கருணை என்ற திருவருட்சாதனச் சடங்கின் தொடர்பி விருந்து தெளிவாக வேறுபடுத்தப்பட்டது. இது பிற்பகலில் அல்லது மாலை வேளை யில் நடைபெற்றது. இந்த வேறுபட்ட பொருளில் யூதா 12-இல் ஒன்றில்தான் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அலெக்சாந்திரியா நகர கிளமென்தும் இதற்குச் சான்று பகர்கிறார்.

இவ்வாறு அன்பு விருந்து உண்ணும் பழக்கம் யூத குடும்பங்களில் திருவிழா நாட்களில் கூடி உண்ணும் பழக்கத்தி விருந்து தோன்றியது. யூத சட்ட ஒழுங்கு முறை நூல்களான மிஸ்னா, தால்மூது ஆகியவற்றில் குடும்பங்களில் விருந்தை எப்படி உண்ணவேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. ஒரு குடும்பமோ அல்லது நண்பர்களின் கூட்டமோ சூரியன் மறைவ தற்கு முன் அந்த வீட்டில் கூடும். அவர்கள் எல்லோரும் ரசம் பருகியபின் உணவு ஆரம்பமாகும். முதலில் அந்த குழுவின் தலைவர் உணவை அசீர்வதித்து கடவுளுக்கு நன்றி கூறி ரொட்டியைப்பிட்டு எல்லோருக்கும் அளிப்பார். உணவின் போது சமய போதனைகள் பற்றியே பேசப்படும். உணவு முடிந்தபின் கைகள் கழுவியபின் தலைவர் இறைவனுக்கு நன்றி கூறுவார். அது ஓய்வு நாளாகவோ அல்லது விழாவாகவோ இருந்தால் திராட்சை ரசம் உள்ள கிண்ணம் ஆசீர்வ திக்கப்படும். இதையே ஆசீர்களின் கிண்ணம் என்றனர் (1 கொரி 10:16). இறை வனின் அரசு வருவதையும், அவர் சித்தம் நிறைவேறுவதையும் இது சிறப்பாக

நினைவு கூறும். பிற்காலத்தில் செபக்கூட வழிபாட்டின் முடிவில் இவ்வுணவுச் சடங்கு அமைந்ததால் உணவிற்கு முன்னமே கிண்ணம் ஆசீர்வதிக்கப்பட்டது. இப் பழக்கம் யூதர்களின் சமுதாய வாழ்விற்கு அடிப்படையாக விளங்கிற்று. இது எஸ்ஸேனியர்கள் சமூகத்திலும் வழக்கத்தில் இருந்த ஓர் சடங்காகும். இது கும்ரான் சுவடிகளிலிருந்து தெரியவருகிறது. இந்த எஸ்ஸேனியர்கள் சட்டத்தைப் படிக்க, ஆலோசனை கேட்க, வழிபாட்டுக்குக் கூடும் வேளைகளில் அதன் தலைவர் மேசைக்கு வந்து அதன்மேல் உள்ள ரொட்டியையும், ரசத்தையும் ஆசீர் வதிப்பார்.

பிலோ என்பவரும், அலெக்சாந் திரியா நகரில் உள்ள ஓர் யூத பிரிவினர் மாலைவேளையிலே இவ்வாறு கூடினர் என்று கூறுகிறார். அப்பிரிவின் தலைவரோடு சேர்ந்து புகழ்பாடல்கள் பாடிய பின் உப்புக்கலந்த புளித்த அப்பங்கள் மேசைக்கு கொண்டுவரப்படும். இரவுணவை உண்டபின் விடியும்வரை பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் இருப்பர். இறுதியாக செபித்தபின் கலைந்து செல்வர். ஆதிக் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடினர் என்று அப்போஸ்தலர் பணியிலும், பவுலின் திருமுகங்களிலும் கூறப் பட்டிருப்பது மேற்கூறப்பட்ட பழக்கங் களோடு ஒத்துள்ளதாகவே காணப்படுகிறது. இவ்வாறு உண்ணக்கூடும்போது, போதித்தல், இறைவாக்குரைத்தல், பல மொழிகளில் பேசுதல் ஆகிய பணிகளும் நடந்தன (1 கொரி 12:14). இறை பாடல் களும் பாடப்பட்டன (கொலோ 3:16–17; எபே 5:19–20; 1 கொரி 14:16). இவ்வாறு உண்ணும் பழக்கத்தோடு ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் உதவ நன்கொடை வழங்கும் பழக்கமும் கிறிஸ்தவர்களிடையே காணப்பட்டது (அ.ப. 6:1; 1 கொரி. 11:21). கிறிஸ்தவர்களுக்கான அன்பு உணவு ஒழுங்கு முறைபற்றி பழங்கால கிறிஸ்தவ சட்ட நூலான திதாக்கேயில் கூறப்பட்டுள்ளது. இதன்படி நன்றி கூறி ஆசீர்வதிக்கப்பட்ட கிண்ணமும், அப்பமுமே நற்கருணை எனப்பட்டது. இதைத் திருமுழுக்கு பெற்றவர் மட்டுமே உட்கொள்ள வேண்டும். இந்த உணவிற்குப் பின் நன்றி கூறியபின் கடவுளின் அரசின் வருகைக்காக மன்றாடப்பட்டது. இதிலே ஆண்டவரின் பாடுகள், மரணம் பற்றி சிந்திக்கும் பகுதி இல்லை. இதில் கூறப்பட்டுள்ள ஒழுங்குகள் பொதுமக்களுக்கானவை. அதிகாரம் 14:15–ல் ஆயர் திருத்தொண்டருக்கான ஞாயிறு நற்கருணை வழிபாட்டைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது. இந்த திதாக்கேயில் காணப் படும் குறிப்புகள் அன்பு விருந்து, நற் கருணை விருந்து இரண்டும் கலந்த சடங்கிற்கான ஒழுங்குகளாகத் தெரிகிறது.

இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தான் (தெர்துல்லியனின் நூலில்) அன்பு விருந்து நற்கருணை வழிபாட்டிவிருந்து வேறுபடுத்தப்பட்டபின் அதுபற்றிய தனித் தனி குறிப்புகள் தெர்துல்லியனின் காப் புரை நூலில் காணப்படுகின்றன. இப்போ லித்தஸ் என்பவரின் நூலும் இதுபற்றிக் கூறுகிறது. இதிலே இந்தப் பழக்கம் மேலே கூறப்பட்ட யூதப் பழக்கத்திலிருந்து எவ்வாறு தோன்றியது எனக்கூறப் பட்டுள்ளது. இப்போலித்தஸ் என்பவரின் குறிப்பில், விருந்துண்ண வந்த விருந்தினர் சில ரொட்டித் துண்டுகளைத் தங்களோடு வீட்டிற்கு எடுத்துச்செல்லலாம் என்றும், விதவைகளுக்கென தனிப்பகுதி உணவு ஒதுக்கப்பட்டது எனவும் கூறப் பட்டுள்ளது.

இரண்டாம் நூற்றாண்டில் மற்றொரு சிறப்பு அன்பு விருந்து வடிவம் தோன்றியது. ஆண்டுதோறும் இறந்தோரை நினைவு கூறும் முறையில் அன்பு விருந்து நடைபெற்றது. இது புறமதப்பழக்கங்களி விருந்து தோன்றியிருக்கலாம். உரோமை நகரிலே மிகவும் பழமையான கல்லறை ஒன்றில் (பிரிஸ்கிலா, தொமித்திலா ஆகிய புனிதைகளின் கல்லறை) அதன் அருகே உண்ணுவதற்கு வசதியாக இருக்கைகள் பொருத்தப்பட்ட கூடங்கள் காணப்படுகின்றன. பழங்காலக் கிறிஸ்தவ சித்திரங்களிலும் இவ்வாறான விருந்து நடப்பது தெளிவாகத் தீட்டப் பட்டுள்ளது (காண்க. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவ வழிபாடு, கலை)

அன்னம் (SWAN)

அன்னப் பறவையைத் தீட்டான பறவைகளோடு சேர்ப்பதற்கு எந்த வகையான வெளிப்படையான காரணமும் இல்லை (லேவி 11:18; உப 14:16). அன்னப் பறவை திரிஸ்த்ராம் என்பவரால் மிகவும் அரிதான பறவை என்று கூறப்படுகின்றது. இவையும் இன்னும் பல ஆதாரங்களும் 'அன்னம்' என்பது புரியாத எபிரேயச் சொல்லின் மொழி பெயர்ப்பு என்று காட்டுகின்றன.

அன்னா (ANNA - அருள், கிருபை)

1. தோபித்தின் மனைவி. தோபியாவின் தாய் (தோபி 1:9.20). தோபித் குருடனாய் இருந்தபோது தனக்காகவும் தன் கணவனுக்காகவும் உழைத்துப் பொருள் தேடியவள் (2:11).

2. ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகளாகிய இவள் வயதில் முதிர்ந்த ஓர் இறைவாக்கினி (லூக் 2:36). நீண்ட நாட்களாக விதவையாக இருந்தவள். ஆலயத்தில், நோன்பாலும் செபத்தாலும் அல்லும் பகலும் பணிபுரிந்தவள். இயேசு ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்டபோது இவள் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து, எருசலேமின் விடுதலையை எதிர்பார்த்திருந்த அனைவருக்கும் குழந்தையைப் பற்றி எடுத்துரைத்தாள் (2:37–38).

3. இயேசுவுக்குப் பாட்டியும் மரியாளுக்குத் தாயுமான இவள் யாக்கோபின் மூல நற்செய்தி என்ற நூலில் குறிக்கப்படுகிறாள். இவளின் கணவன் யோவாக்கின் என அழைக்கப்படுகிறார். நீண்ட நாட்களாக குழந்தைப்பேறு இல்லாமல், இறைவனை மன்றாடித் தனது முதிர்ந்த வயதில் குழந்தையைப் பெற்றதால் அதைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தாள். பலவிதத்தில், இவள் பழைய ஏற்பாட்டில் சாமுவேலின் தாயான அன்னாவை ஒத்திருக்கிறாள்.

அன்னா (HANNA – அருள்)

இவர் எப்பிராயிம் ஊரைச் சேர்ந்த எல்கானாவின் மனைவியும், சாமுவேலின் தாயுமாவாள் (1 சாமு 1:2–20). பல வருடங்களாக இவள் ஒரு மலடியாக இருந்தாள். ஒருமுறை சீலோவில் உள்ள புனித இடத்திற்குச் சென்றபோது, அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தால் அவனை வாழ்நாள் முழுவதும் ஆண்டவனுக்கு ஒப்புக்கொடுப்பதாகப் பொருத்தனை செய்துகொண்டாள் (1 சாமு 1:11). இதன் பிறகு அவளுக்கு சாமுவேல் பிறந்தார். உடனே "இவன் வாழ் நாளெல்லாம் ஆண்டவருக்குச் சொந்தமாயிருப்பான்" என்று சொல்லி சீலோவில் உள்ள புனித இடத்தில் ஆண்டவருக்குப் பணிவிடை புரிய தன் மகனை அர்ப்பணித்தாள் (1 சாமு 1:24–27). இதன் பிறகு அன்னாவுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர் (1 சாமு 2:21). 1 சாமு 2:1–10 இல் அன்னா வேண்டிக்கொண்ட செபமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது வேறொரு சூழ் நிலையிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அன்னாசு (ANNAS – ஆண்டவர் அருள் உடையவர்)

ஒரு யூத பெரிய குரு. சேத்து என்பவரின் மகன். இவர், சீரியாவின் ஆளுநன் கிரேணியாவால் கி.பி. 6 அல்லது 7 –இல் நியமிக்கப்பட்டு, வலேரியஸ் கிராதுசால் கி.பி. 15–இல் பதவி நீக்கம் செய்யப்பட்டவர். ஆயினும் அவருடைய பெரும் செல்வத்தின் விளைவாக, பதவி இழந்த பின்னும் தலைமைக்குரு கயாபாவின் மாமனாகவும் இருந்ததாலும் (யோவா 18:13) செல்வாக்குக் கொண்டிருந்தார் இவருடைய தொடர்ந்த செல்வாக்குக்குப் புதிய ஏற்பாட்டில் போதிய சான்றுகள் உள்ளன. திருமுழுக்கு யோவானின் பணியின் தொடக்கத்தில் "அன்னாசு, கயாபா தலைமைக் குருக்களாக இருக்க" (லூக் 3:2 என்று குறிக்கப்படுகிறது. இயேசுவின் பாடுகளின் வரலாற்றில், இயேசு பெரிய குரு கயாபாவிடம் கொண்டுபோகப்படு முன், அன்னாசிடம் கொண்டு வரப்படுகிறார் (யோவா 18:13.24). பேதுரு, யோவான் விசாரணையிலும் இவர் பங்கெடுக்கிறார் (அ.ப. 4:6). யோவா 18:19.22–இல் குறிக்கப்படும் தலைமைக் குரு அன்னாசாக இருக்கலாம். ஏனெனில் யூத சட்டப்

படி இவர்தான் இந்தப் பதவியின் அதிகாரப் பூர்வமானவராக இன்னும் கருதப்பட்டிருக்கலாம்.

இவருடைய மருமகன் கயாபாவைப் போல் இவருடைய ஐந்து புதல்வர்களும் தலைமைக் குருவாக இருந்துள்ளனர்.

அன்னியன்-(ALIEN, FOREIGNER, STRANGER, SOJOURNER)

விவிலியத்தில் அன்னியன் என்னும் சொல் ஒரு கூட்டத்தை சாராதவனைக் குறிக்கும். குல முதியவர் வழிவந்த முற்கால யூத சமுதாயத்தில் எந்த ஒரு குலத்தையும் சாராதவன் அன்னியன் என்று அழைக்கப்பட்டான். யூதர்கள் கானான் நாட்டில் குடியேறி அரசாட்சி நிலவிய போது, அன்னியன் என்ற சொல் இஸ்ரா யேல் அல்லாத ஒருவரைக் குறித்தது. எல்லா சமூகங்களிலும், அன்னியன் ஓரளவு சந்தேகத்துடன் நோக்கப்பட்டான். முற்கால யூதரிடையே இந்த அன்னியன் ஒரு எதிரியாகவே கருதப்பட்டான். ஆனால் அவன் இஸ்ராயேல் மக்களிடம் விருந்தினராக வரும்போது அவன் உபசரிக்கப்படவேண்டும். பழைய ஏற்பாட்டில் கொள்கை அளவில் அன்னியரிடம் பகைமையும், செயல்முறையில் தோழமையும் அவனை ஏற்றுக்கொள்ளுதலும் சேர்ந்த முரண்பாடு காணப்படுகிறது.

'அன்னியன்' எனக் கருதப்படுபவர்களுக்கும் இஸ்ராயேல் மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. ஆனால் அவர்களிடையே கொள்கையளவில் நிலவி வந்த பகைமை உப 7:1–7; 9:1–5; 12:1–3 ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்படுகின்றது. இவற்றில் இஸ்ராயேல் மக்கள் கானானியர்களை அழிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் அப்படி நடந்ததாக வரலாற்றில் எந்த ஆதாரமும் இல்லை. இது வெறும் கொள்கையளவில் இஸ்ராயேலர்களுக்கும் அண்டை இனத்தவருக்குமிடையே நிலவிய மத வேறுபாட்டைக் குறித்தது. யூதர்கள், புறவினத்தாரின் மத கோட்பாட்டையும், பழக்க வழக்கங்களையும், பின்பற்றுவதையே உபஆகமப் போதகம் மிகப் பெரிய ஆபத்தாக கருதியது. புறவினத்தாருக்கும் யூதருக்குமிடையே தேவைக்கு அதிகமான தொடர்பு மறுக்கப்பட்டது.

யூதரிடையே, 'அன்னியன்' என்னும் சொல் புறவினத்தாரையும் பொய்த் தேவர்களை வழிபடுபவர்களையும் குறித்தது (2 மக் 10:2,5). விவிலியத்தின் சில பகுதிகள் அன்னியர்களைச் சபித்து, அவர்கள் அழிவை முன்னுரைக்கின்றன (ஏச 13–23; எரே 46–51; எச 29–32). இவற்றை நம்மால் புரிந்துகொள்வது கடினம். இந்தப் பகுதிகள், புறவினத்தார் யாவேயை எல்லாம் வல்லவராக ஏற்றுக்கொண்டு அவருக்கு அடிபணிய வேண்டும் என்னும் கருத்தை அடிப்படையாக கொண்டுள்ளன. அப்படிச்செய்ய மறுத்தால், அவர்கள் முழுவதும் அழிக்கப்படவேண்டும். உப ஆகம மரபு புறவினத்தாருடன் திருமணம் செய்வதை தடை செய்தது. இது பிற்காலத்தில் தோன்றியதாகத் தெரிகிறது. பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேலருக்கும் அன்னியர்களுக்கும் நடந்த திருமணங்கள் பல கூறப்படுகின்றன.

அன்னியன் இஸ்ராயேல் மக்கள் நடுவே தற்காலிக விருந்தினராகவோ அல்லது நிரந்தரமாகவோ வாழலாம். இஸ்ராயேலரின் சட்டம் அன்னியருக்கு உரிமையையும், கடமையையும் கொடுத்து, அவரை அன்பு செய்யும்படியும், துன்புறுத்தாமல் இருக்கும்படியும் கூறுகின்றது. (உப 10:18; 14:29; யாத் 22:20; 23:9). இவையும் சங் 94:6–உம் அன்னியர் அடிக்கடி துன்புறுத்தப்பட்டனர் என்று காட்டுகிறது. இஸ்ராயேல் மக்களைப்போன்றே அன்னியருக்கும் சம உரிமை வழங்கப்பட்டது (உப 1:16). கொலைக் குற்றத்திற்கு அடைக்கலம் புக உரிமையுண்டு (எண். 35:15; யோசு 20:9). சவுலிடமிருந்து தப்பித்து ஓடும்படி தாவீது தன் வீட்டாரை அனுப்பிய போது அவர்கள் மோவாபு அரசரிடம் தஞ்சம் புகுந்தனர் (1 சாமு 22:3). அன்னியர் இராணுவத்தில் பணி புரிய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் கூலிக்குப் போர் வீரனாக இருக்கலாம் (1 சாமு 27:1 தொ; 29:1 தொ; 2 சாமு 15:19). ஆனால் மற்ற விவிலியப்

பகுதிகளில் அவர்கள் நிலச்சொந்தக் காரர்களாக இருக்கலாம் என்று கூறப் படுகிறது. தன் குடும்பத்தாரைப் புதைக்க ஆபிரகாம் ஒரு நிலத்தை வாங்கியபோது நிலத்தை வாங் கும் உரிமை, சபையால் வழங்கப்பட்டது (ஆதி 23:4 தொ). தெவோ என்பவர் முற்காலத்தில் யூத சமுதாயத் தில் அன்னியர்கள் நிலச் சொந்தக் காரர்களாக இல்லை என்றும், தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானதை மற்றவர் களுக்கு வேலை செய்து சம்பாதித்தனர் என்றும் கூறுகிறார் (உப 24:14). ஆனால் பிற்காலத்தில் வந்த எசக்கியேல் நாட்டை உரிமைச் சொத்தாகப் பிரித்துக்கொள்ள அன்னியருக்கும் உரிமை உண்டு என்று கூறுகிறார் (எச 44:22–23). ஆனால் அன்னியன் குல மற்றும் நகர சபை தீர்மானங்களில் பங்கெடுக்க முடியாது. அவர்கள் இஸ்ராயேலரின் மதத்தைப் பின்பற்றுபவர்கள் அல்ல. ஆனால் பிற் கால யூத சமுதாயத்தில் அவர்கள் விருத்த சேதனம் பெற்று யூத மதத்தில் சேர்ந்தார் கள் (யாத் 12:43–45.48). அவர்கள் இறைச்சியை இரத்தத்தோடு உண்ணக் கூடாது (லேவி 17:10 தொ). இஸ்ராயேலின் பாலின ஒழுங்கு சட்டங்களை கடைபிடிக்க வேண்டும் (லேவி 18:26). ஓய்வு நாளையும், விழாக்களையும் அவர்கள் அனுசரிக்க வேண்டும் (யாத் 20:10; உப 5:14). லேவி 17:8 அவர்கள் பலி ஒப்புக் கொடுக்கலாம் என்று கட்டுகிறது (காண்க லேவி 22:18; எண். 15:15). இது பிற்காலத்தைச் சேர்ந் தது. இஸ்ராயேலர்களுக்கும் அன்னியர் களுக்கும் ஒரே சட்ட அமைப்பு இருந்ததை எடுத்துக்காட்டுகிறது. இஸ்ராயேல் மக்கள் நாடு கடத்தப்படும் முன் அன்னி யர் என்ற சொல் திருமணத்தாலோ தத்து எடுப்பதாலோ இஸ்ராயேலுக்குள் ஏற்றுக் கொள்ளப்படாத கானானியர்களை குறித்தது (2 சாமு 4:3). இவர்கள் போன்ற பிறரும் இருந்திருக்கலாம். இவர்களில் சமாரியர்களும் அடங்குவர் (லூக் 17:18). அன்னியர் என்ற ஒரு சொல் தனிப்பட்ட குழுவினைரையன்றி, தனிப்பட்ட நபரை யோ குடும்பத்தையோ குறிக்கிறது.

ஒரு செல்வமிக்க அன்னியருக்கு ஓர் இஸ்ராயேலர் வேலைக்காரனாவது அவ பேறாகக் கருதப்பட்டது (காண்க. உப 28:43). இவற்றிற்குரிய தனிப்பட்ட சட்டங் கள் உண்டு (லேவி 25:47–55). மற்றபடி இஸ்ராயேரும் அன்னியரும் சமமாகக் கருதப்படவேண்டும். ஆனால் செயலள வில் இக்கருத்து கடைப்பிடிக்கவில்லை என்று சில நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டு கின்றன (1 நாள் 22:2; 2 நாள் 2:17–18).

இஸ்ராயேல் ஓர் 'அன்னிய நாடு' என்ற கருத்து பழைய ஏற்பாட்டில் இறையியில் முக்கியத்துவம் உடையதாகும். இஸ்ராயே லின் குல முதியவர்கள் குடியேறிய கானான் நாடு, இறைவனுடைய வாக்குறு திக்கேற்ப, இஸ்ராயேலின் உடமையானா லும் (ஆதி 17:8; யாத் 6:4), இறுதியில் அது இறைவனுக்கே உரிமையானதாகும். இஸ் ராயேல் அதில் ஓர் அன்னியராகவே குடி யிருந்தார் (லேவி 25:23; 1 நாள் 29:15; காண்க. எபி 11:8–16). அதுபோலவே ஆலயத்தில் வழிபடுவோர், இறைவனுக்கு உரிமையான இடத்தில் அன்னியரே (சங் 15:1; காண்க. 61:4). வழிபடுவோரும், தங்கள் வாழ்வு தற்காலிகமானது, விரை வில் கடந்துபோக வேண்டியது என்ற பொருளில் தாங்கள் அன்னியரே என்றும் அறிவர் (39:12). இஸ்ராயேலின் இறுதிக் கால இயல் பற்றிய போதகம் அன்னியரை ஏற்றுக் கொள்வதில் அக்கறை காட்டு கிறது (எச 47:22–23; ஏச 56:3. 6–7). இந்த நம்பிக்கை நிறைவேறுதல் எபே 2:11–13.19–இல் குறிக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் ஆதித்திருச்சபை அன்னியர்பால் கொண்ட உறவு புரட்சி கரமானது. கிறிஸ்தவ சமூகத்தில் அன்னியர் பெரும் எண்ணிக்கையில் சேர்ந்தனர். காலப்போக்கில் அவர்கள் எண்ணிக்கையில் யூத கிறிஸ்தவர்களையும் மிஞ்சினர். அன்னியர் பற்றிய பழைய ஏற்பாட்டு கருத்து புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவன் அன்னியன் அல்லன். அவன் இறையர சின் குடிமகனாவான் (எபே 2:19; கொ லோ 1:21). விண்ணரசின் குடிமகனான கிறிஸ்தவன், இவ்வுலகத்தைப் பொருத்த மட்டும் ஓர் அன்னியனே (1 பேதுரு 1:1.17; 2:11; காண்க. எபி 13:14).

ஆ

ஆகாசு (AHAZ - யாவே பற்றிக் கொண்டார்; யோவகாசு என்ற பெயரின் கருக்கமாக இருக்கலாம்)

1. யோத்தாமின் மகனும், அவருக்குப்பின் தன் 21-ஆம் வயதில் அரியணை ஏறிய யூதாவின் 12-வது அரசர் (2 அர 16:2; 2 நாள் 28:1) ஆவார். தன் தகப்பனோடு சேர்ந்து கூட்டு அரசனாக கி.மு. 735-இல் தன் ஆட்சியைத் துவக்கினார். அவரது தந்தை இறந்தபின் 732-இல் யூதாவின் ஒரே அரசனானார். 716 வரை ஆட்சி செய்தார் (2 அர 16:2; 2 நாள் 28:1). இவர் தன் மூதாதையர் தாவீதைப் போல் ஆண்டவர் திருமுன் நல்லவராக நடந்துகொள்ளவில்லை. வட இஸ்ராயேலின் அரசர்களைப் பின்பற்றினார். புறவினத்தாரின் இழிவான பழக்கவழக்கங்களில், தன் மகனையும் தீமையில் நடக்கச் செய்து பொய்த்தேவர்களுக்கு அவனைக் காணிக்கையாகச் செலுத்தினார். மேலும் மேடுகளிலும், குன்றுகளிலும், தோப்புகளிலும், பலியிட்டுத் தூபவழிபாடு நடத்தி வந்தார் (2 அர 16:2-4; 2 நாள் 28:1-4). இதன் விளைவாக இறைவன் யூதாவைச் சிறுமைப்படுத்தினார் (28:19).

அவரது தந்தையோடு கூட்டாட்சி செய்த போதோ ஆகாசு அரசியல் குழப்பங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சீரிய அரசனான இரசீனும் இஸ்ராயேலின் அரசன் இரமலியாவின் மகன் பெக்காவும் சேர்ந்து, அசீரியாவுக்கு எதிரான தங்களின் கூட்டணியில் யூதாவைச் சேர்க்க, யூதாவைத் தாக்கத் தலைப்பட்டனர். யூதாவில் பெரும் சேதம் விளைவித்தபின் (2 நாள் 28:5-5), எருசலேமை முற்றுகையிட்டனர் (2 அர 16:5; ஏச 7:1). இவர்களது எண்ணம், ஒரு வேளை யூதாவின் மற்றொரு இளவரசனான தாபெயேலின் மகனை எருசலேமின் அரசனாக்குவதாகும் (ஏச 7:6). இதற்கிடையில் ஏதோமின் அரசன் ஏலாத்தை (எசியோன் கெபேர்) மீண்டும் கைப்பற்றி இந்த முக்கிய துறைமுகத்தை ஒரு எதோமிய நகரமாக்கினார் (அர 16:5; 2 நாள் 28:18). மேலும் பெலிஸ்தியர் செப்பேலாவிலுள்ள நகரங்களைக் கொள்ளை அடித்தனர். அங்கு குடியேறினர்.

இந்த இக்கட்டான நிலையில் ஆகாசு அச்சத்தால் மேற்கொள்ளப்பட்டு, யூதாவை ஊக்கமூட்டவந்த இறைவாக்கினர் ஏசயாவின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்க மறுத்துவிட்டார் (ஏச. 7:2-9). இறைவாக்கினர் வார்த்தைக்கு உறுதிச் சான்றாக ஏதாவது ஒரு அடையாளத்தைக் கேட்க இறைவாக்கினர் அழைத்தபோது அதற்கும் ஆகாசு மீண்டும் மறுத்துவிட்டார். இருப்பினும் இறைவன் இம்மானுவேலின் பிறப்பை அடையாளமாக அளித்தார். யூதா சீரிய- இஸ்ராயேலின் படையெடுப்பிலிருந்து விடுவிக்கப்படும் (ஏச 7:10-17).

வெற்றியை முன்னறிவித்த இறைவன் தூதரைப் புறக்கணித்துவிட்டு, ஆகாசு அசீரிய மன்னன் திகிலாத்து-பிலேசரிடம் தூதுவர்களை அனுப்பித் தான் அசீரியர்களுக்குச் சிற்றரசராக இருப்பதாகக் கூறி, அசீரியர்களின் உதவியை நாடினார் (2 அர 16:7; 2 நாள் 28:16). ஆலயத்திலிருந்தும் அரண்மனையிலிருந்தும் தங்கமும் வெள்ளியும் கப்பமாக அனுப்பினார் (2 அர 16:8). கி.மு. 734-ஐச் சேர்ந்த அசீரிய ஏடுகளில் யூதாவின் யாகசீ அசீரியாவுக்குக் கப்பம் கட்டுபவர்களில் ஒருவனாகத் தோன்றுகிறார். ஆகாசின் வேண்டுதலுக்கு இணங்கி திகிலாத்து-பிலேசர் தமஸ்கு என்ற சீரியா நகரைக் கைப்பற்றி அதன் மக்களை கீருக்கு நாடுகடத்தினார் (ஆமோ 1:5; 9:7). அதன் அரசன் இரசீனைக் கொன்றார் (2 அர 16:9). அடுத்து இஸ்ராயேல்மேல் படையெடுத்துப் பல நகரங்களைக் கைப்பற்றினார். அங்கிருந்த மக்களை. அசீரியாவுக்கு அடிமைகளாகக் கொண்டுச் சென்றார் (2 அர 15:29).

2 அர 16:10-இன் படி ஆகாசு தமஸ்குவிலிருந்து திகிலாத்து-பிலேசரைச் சந்திக்கச் சென்றார். இது அசீரியர்கள் இஸ்ராயேலின் நகரங்

களைப் பிடித்தபின் அநேகமாக கி.பி. 732-இல் நடந்திருக்கலாம். அங்கே அவர் ஒரு பீடத்தைக் கண்டார். இது ஒருவேளை இரிம்மோன் தேவதைக்குரியதாக இருக்கலாம். அதன் மாதிரி ஒன்றை அனுப்பி எருசலேமில் அதைப்போன்று ஒரு பீடத்தைக் கட்ட குரு ஊரியாவுக்குக் கட்டளையிட்டார். ஊரியாவும், ஆகாசு தமஸ்குவிலிருந்து திரும்பி வருவதற்குள் அப்படியே செய்திருந்தார். யாவேக்கு பலியிடப்பட்ட வெண்கலப் பீடத்திற்குப் பதிலாக, இப்பீடத்தை ஆகாசு பயன்படுத்தி, தகனப்பலிகளையும் மற்ற பலிகளையும் செலுத்தினார் (16:10-6). அசீரியாவுக்குக் கப்பம் கட்டும் பொருட்டு ஆலயத்திலிருந்து பல விலையுயர்ந்த உலோகப் பொருட்களை அனுப்பினார். இதனால் ஆலயம் எவ்வளவு வெறுமையாக்கப்பட்டதென்றால், அதன் கதவுகளைப் பூட்டி விட்டார் (16:17-18; 2 நாள் 28:24). மூலைக்கு மூலை சிறிய தெய்வங்களுக்குப் பீடங்கள் கட்டினார்.

அரசர்கள் நூல் ஆசிரியரைவிட, நாளாகம ஆசிரியர் ஆகாசைக் கடுமையாக விமர்சிக்கிறார். அசீரியர்களின் உதவியை நாடியது யூதாவுக்குப் பெரும் சுமையாயிற்று (2 நாள் 28:20-21). அவருடைய சமயச் செயல்களும் அவரது பதிதத்தை அதிகமாக்கியது (23:22).

ஆகாசின் கடைசிக் காலத்தைப் பற்றி அதிகம் தெரியவில்லை (2 அர 16:19; 2 நாள் 28:26; ஏச 14:28). அவர் எருசலேம் நகரில் புதைக்கப்பட்டாலும் (2 அர 16:20) அரசர்கள் கல்லறையில் புதைக்கப்படவில்லை (2 நாள் 28:27) எனத் தெரிகிறது. ஆகாசு, அரசமரபுப் பட்டியலிலும் (1 நாள் 3:13) இயேசுவின் மூதாதையர் பட்டியலிலும் (மத் 1:9) குறிக்கப்படுகிறார்.

2. இவர் சவுலின் மகன் யோனத்தானின் கொள்ளுப் பேரனாவார். இவர் மீக்காவின் மகனும் யோயதா, யாரா ஆகியோரின் தந்தையுமாவார் (1 நாள் 8:35-36; 9:42).

ஆகாசின் கடிகாரம் அல்லது நிழற்கடிகை

சில மொழிபெயர்ப்புகளின்படி, நேரத்தைக்காட்டும் ஒரு கருவி; இது சூரிய கடிகாரமாக இருக்கலாம். அல்லது பாபிலோனியர்கள், எகிப்தியர் பயன்படுத்திய மணியறியும் கருவியாக இருக்கலாம் (ஏச 38:8). ஆனால் எபிரேயச் சொல் வெறுமனே ''படிகள்'' என்று பொருள்படும். இது ஒரு படிகட்டைக் குறிக்கலாம்; அதன்மேல் விழும் நிழலைக் கொண்டு, சூரியனின் இயக்கத்தை அறியலாம். அப்படியாயின், ஆகாசு அரண்மனையைப் புதுப்பித்தபோது அமைத்த கட்டட அமைப்பாக இருக்கலாம் (2 அர 6:18). ஆகாசின் கடிகாரம்பற்றிய நிகழ்ச்சியுரை எபிரேயத்தில் தெளிவாக இல்லை (2 அர 20:4-11; ஏச 38:4-8). இதில் நோயற்ற எசக்கியா தான் நலம் பெறுவதற்கு ஓர் அடையாளம் காட்ட வேண்டுமென்று ஏசயாவைக் கேட்கிறார். அந்த அடையாளம், சூரிய நிழல் பத்துப்படிகள் அல்லது கோடுகள் அல்லது பாகை பின் செல்ல வேண்டும் என்பதாகும். ஏசயா ஆண்டவரிடம் மன்றாட அவ்வாறே நிகழ்ந்தது.

ஆகாபு (AHAB - தந்தயின் சகோதரன்)

1. ஓமிரீயின் மகனும் அவருக்குப் பின் வந்த இஸ்ராயேலின் ஏழாவது அரசனும் ஆவார் (கி.மு. 875-854; 1 அர 16:29).

அ. அரசியல் பின்னணி:- இவர் இஸ்ராயேலைச் சமாரியாவில் 22 ஆண்டுகள் ஆண்டதாகக் கூறப்பட்டாலும், அதே காலத்தில் நடந்த சம்பவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவர் 20 ஆண்டுகள்தான் ஆண்டார் எனத் தெரிகிறது (1 அர 16:29; 15:10; 22:51). யூதாவின் அரசன் ஆசாவின் 38-வது ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஆகாபு அரியணை ஏறினார். ஆசா 41 ஆண்டுகள் ஆண்டார். ஆகாப்பின் மகன் அகசியா யூதாவின் அரசன் யோசபாத்தின் 17-வது ஆண்டு ஆட்சியின்போது அரியணை ஏறினார்.

ஆகாபு தீர் நாட்டு அரசன் எத்துபாகாவின் மகள் ஈசபேலை மணந்தார் (16:31). இதன் உறவின் விளைவாக, சீரியர்களுக்கு எதிரான அவர் நிலை வலுவுற்றது. நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சியுற்றது. இரு நாடுகளுக்

குமிடையே வணிகம் பெருகி, செல்வம் மிகுதியாயிற்று (22:39). ஆனால் பணக்கார வணிகர்களுக்கும் நிலத்தை நம்பிய சாதாரண மக்களுக்குமிடையே பெரும் பிளவு ஏற்பட்டது. இந்த ஆதாயத்தோடு பாகால் தேவதையின் வழிபாடும் புகுத்தப்பட்டது. ஆகாபு தன் மகள் அத்தலியாவை, யூதா அரசனின் மகனுக்குத் திருமணம் செய்து, தனது அரசியல் பலத்தைப் பெருக்கிக்கொண்டார் (2 அர 8:18; 2 நாள் 18:1). மோவாலியரிடமிருந்து தனது அரசின் கிழக்கிலிருந்து அடிக்கடி வந்த தாக்குதலைத் தடுத்து நிறுத்த பல காலம் அழிந்து கிடந்த எரிகோவை மீண்டும் கட்டியெழுப்பினார்.

ஆ. பதிதமும் போராட்டமும்:- ஆகாபு ''நொபாத்தின் மகன் எரொபயமின் பாவ'' வழியில் நடந்தார். தனது மனைவி ஈசபேலின் தூண்டுதலால் பெனிசியா பாகாலை (மெல் கார்ட்) வழிபட்டார் (1 அர 16:31). இந்தத் தேவதைக்குச் சமாரியாவில் ஒரு ஆலயமும், பீடமும் கட்டினார் (16:32). ஈசபேலின் சமயத் தீவிரம் பாகாலின் வழிபாட்டை நாடு முழுவதும் பரப்ப ஏதுவானது. இறைவனது இறைவாக்கினர் கொல்லப்பட்டனர். இதை அரசன் கண்டுகொள்ளவில்லை. யாவே என்ற பெயரோடு தொடர்புடைய அகசியா, யோரம், அத்தலியா என்ற பெயர்களைத் தன் பிள்ளைகளுக்கு இட்டாலும், இஸ்ரயேலின் இறைவன் வழிபாட்டில் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை. எரிகோ நகரம் கட்டும்போது சிசுக்களைப் பலியிட்டார் (16:34).

ஆகாபின் இந்தப் பதிதம் இறைவனது சீற்றத்தைப் பெருக்கியது. இப்பதிதத்தை எதிர்த்துப் போராட அவர் உண்மையான இறைவாக்கினர்களை அனுப்பினார். அவர்களின் சிறப்பானவர் திசுபியரான எலியாவாகும். இவர் இறைவனுக்கப் பிரமாணிக்கமானவர். ஆற்றல் மிக்கவர். அரசனுக்கும் இறைவாக்கினருக்கும் பல சமயங்களில் போராட்டங்கள் ஏற்பட்டன. எலியா வரவிருக்கும் பஞ்சத்தை முன்னறிவித்தார் (17:1). வறட்சி எவ்வளவு கொடுமையாக இருந்ததென்றால், வீட்டு விலங்குகளைக் காப்பாற்ற அரசனே புல்தேட வேண்டியிருந்தது (18:5). எலியாவுக்காக எங்கும் தேடினார். இறுதியில் எலியாவே அரசனை எதிர்கொண்டபோது, அவர் அவரைக் கலகக்காரன் என்று அழைத்தார். அதற்கு இஸ்ராயேலில் உண்மையான கலகக்காரன் அரசன்தான் என்று கூறி, கர்மேல் மலையில் தனக்கும், ஈசபேலின் போலித்தீர்க்கத் தரிசிகளுக்கும் இடையே ஒரு போட்டி வைக்க அரசனைத் தூண்டுகிறார். அரசன் இதற்கிசைந்து, போட்டி அமைக்க, போலித் தீர்க்கத்தரிசிகளின் காணிக்கை எரிக்கப்படவில்லை; எலியாவின் பலி ஏற்கப்பட்டு எரிக்கப்பட்டது (17:17-45). அதன் முடிவில் எலியா, ஈசபேலின் 850 போலித் தீர்க்க தரிசிகளைக் கொன்று போட்டார். அதன்பின் மழை பெய்து, பஞ்சம் தீர்ந்தது. இது ஆகாபைப் பெரிதும் பாதித்தது. ஆனால் ஈசபேல் பலி வாங்க எலியாவைத் தேடினாள். அதிலிருந்து எலியா தப்பி ஓட வேண்டியிருந்தது.

எலியா யாவே வழிபாட்டுக்காக மட்டும் போராடவில்லை. ஏழை எளியவர்களின் உரிமைக்காகவும் போராடினார். இதை நாபோத்தின் நிலம் பற்றிய கதையை அதி.21-இல் வாசித்தறியலாம். முடிவில் ஆகாபுக்கும் அவன் மனைவி ஈசபேலுக்கும் இறைவனது தீர்ப்பை அறிவிக்கிறார்.

இ. ஆராமோடு (சீரியாவோடு) போர்கள்:-

சீரியாவுக்கும் இஸ்ராயேலர்களுக்குமிடையே போர்கள் அடிக்கடி நடந்தன. சீரியாவின் அரசன் முதலாம் பென்-அதாதின் காலத்தில் சீரியர்களின் கை ஓங்கியிருந்தது. கர்மேல் மலைப் போட்டிக்குப் பின் சீரிய அரசன் இஸ்ராயேல்மேல் போர்தொடுத்து (கி.மு. 853) சமாரியாவை முற்றுகையிட்டார் (1 அர 20:1). மக்களிடமிருந்து அதிகமான கப்பம் கேட்டார் (20:21). இதை ஆகாபு மறுக்க பென்-அதாது போருக்கு ஆயத்தமானார். பெயர் தெரியாத ஒரு இறைவாக்கினரின் உதவியுடன் ஆகாபு சீரியர்களை வென்றார் (20:13-21). அடுத்த ஆண்டும் படை

எடுத்து வந்த சீரியர்களை அபேக்கு என்ற இடத்தில் வென்றார் *(20:26-30)*. ஆனால் சீரிய மன்னனுக்கு உயிர்ப்பிச்சை அளித்து அவனோடு உடன்படிக்கை செய்து கொண்டார் *(20:30-34)*. இதைக் கண்டித்து அவனது உயிரும் அவனது மக்களின் உயிரும் பழி வாங்கப்படும் என்று இறைவாக்கினர் அறிவிக்க *(20:35-43)* அரசன் இதைக் கேட்க விரும்பாது கோபவெறியுடன் சமாரியா திரும்பினார் *(20:43)*.

மூன்று ஆண்டு சமாதானத்திற்குப்பின் *(857-854)* இஸ்ரேயலுக்குச் சொந்தமான இராமோத்து-கிலயாதைத் திரும்பக் கைப்பற்ற சீரியர்களோடு போராடத் தொடங்கினார். அப்போது யூதாவின் அரசன் யோசபாத்தும் சேர்ந்து கொண்டார். ஆனால் இவர் யாவேயின் உண்மையான இறைவாக்கினருடைய ஆலோசனையைத் தேடினார். அப்படிப் பட்ட இறைவாக்கினர் மீக்காயா கூறிய ஆலோசனையைப் புறக்கணித்து ஆகாபு படை எடுத்தார் *(22:1-29)*. ஆகாபு சாதாரண வீரனைப் போல் உடை உடுத்துப் போரிட்டார். யோசபாத்து அரசஉடையில் போரிடச் செய்து அவரைச் சீரியர்களின் இலக்காக்கினார் *(22:31-33)*. ஆனால் ஒரு சீரியா வீரன் எய்த அம்பு, தற்செயலாக ஆகாபை, அவர் வயிற்றுக்கும் நுரையீரலுக்கும் இடையில் பாய்ந்தது. போர்க்களத்தை விட்டுப் போக விரும்பினாலும், முடியாமல் நாள் முழுதும் போரிட்டு மாண்டார். அவர் உடல் சமாரியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது *(2 2:34-37)*.

ஈ. சமய மதிப்பீடு:- ஆகாபின் பெரிய பாவம் பாகாலின் வழிபாட்டை இஸ்ராயேலில் புகுத்தி அதை அதிகாரப் பூர்வமான சமயமாக்கி, மக்கள் யாவே வழிபாட்டைக் கைவிடச் செய்ததாகும். இதில் பாலினப்புணர்ச்சிச் சடங்குகளும், சிசுக்களைப் பலியிடும் சடங்குகளும் உண்டு. நாபோத்தைக் கொன்று அவனுடைய நிலத்தை அரசனுடையதாக ஈசபேல் செய்தபோது அவர் ஒன்றும் செய்யாமை அவரது பலவீனத்தையும் கொடுந்தன்மையையும் காட்கிறது *(21:2-26)*. எலியாவின் வாயிலாகக் கூறப்பட்ட இறைவனது பயங்கரத் தீர்ப்பு *(21:19)* செயல்படுத்தப்பட்டது. அவரது தேரையும் கடிவாளத்தையும் சாமாரியாவின் குளத்தில் கழுவிய போது நாய்கள் அவரது இரத்தத்தை நக்கின *(22:38)*. ஆயினும் ஒரு தடவை அவன் உண்மையாகவே மனத்துக்கம் படுவதாகக் காட்டப்படுகிறார் *(21:27)*. அது அவர் வீட்டிற்கு வரவிருந்த அழிவை இறைவன் தள்ளிப் போடச் செய்கிறது *(21:28-29)*.

அரசர்கள் நூல் ஆசிரியர் ஆகாபை மிகக் கடுமையாக விமர்சிக்கிறார். ''ஆண்டவர் திருமுன் தீயன புரியத் துணிந்த ஆகாபைப் போல் கெட்டவன் ஒருவருமில்லை''. ஏனெனில் அவருடைய மனைவி ஈசபேல் அவரை ஏவி விட்டாள். அவர் எவ்வளவு வெறுப்புக்குரியவர் என்றால், இஸ்ராயேல் மக்கள் முன்னிலையில் ஆண்டவர் அழித்தொழித்த எமோரியரின் விக்கிரகங்களை அவர் தொழுது வந்தார் *(21:25:26)*. அவர் ஆற்றல் வாய்ந்த அரசனாக இருந்திருக்கலாம். அவர் அடைந்த சில வெற்றிகளும் ஆண்டவருடைய உதவியால் கிடைத்தவையாகும் *(20:13-38)*. தனது மக்களுக்கு நகரங்களைக் கட்டினாலும் தனக்கென ''தந்தத்தால் வீடு'' கட்டிக் கொண்டார் *(22:39)*. உண்மையில் தாவீது, சாலமோன் போன்ற இறையாட்சி அரசர்களின் கேலிச் சித்திரமாவார். உணர்ச்சி வசப்படக் கூடியவர் நீதி, இறையன்பு ஆகியவற்றால் தூண்டப்படுவதற்குப் பதிலாக அவரது கட்டாயப்படுத்தும் மனைவியால் தூண்டப்பட்டுச் செயல்பட்டார். நாளாகம ஆசிரியர் இவரை இவ்வளவு கடுமையாக விமர்சிக்கவில்லை *(2 நாள் 18)*.

உ. தொல்பொருள் ஆய்வுகள்:- ஆகாபு சாமாரியாவிலும் மற்ற இடங்களிலும் கட்டிய கட்டடங்களுக்குப் பல சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சமாரியாவுக்கு மூன்று சுவர்களைக் கொண்ட கோட்டை கட்டினார். இது மிகவும் வலுவானதாகும். பல முற்றுகைகளைத் தாங்கி நின்றது. இறுதியின் மூன்று வருட முற்றுகைக்குப் பின்தான் வீழ்ந்தது *(2 அர 17:5)*. அதன் வேலைப்பாடு

பாலஸ்தீனத்தில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டவைகளில் மிகச் சிறந்ததாகும். மூன் றாம் சால்மனேசரின் ஒற்றைக்கல்லாலான ஏடு ''இஸ்ராயேலனான ஆகாபைக்'' குறிப் பிடுகிறது. இவர் இரண்டாயிரம் தேர்களோ டும், பதினாயிரம் காலாட்படைகளோடும் வந்து சால்மனேசருக்கு எதிராக கர்கார் என்ற இடத்தில் (854) போரிட்டதாகக் குறிக்கிறது. மோவாபிய கல் ஏடு, ஆகாபு நெடுங்காலத் திற்கு மோவாபியரைக் கொடுமைப்படுத்தி யதாகக் கூறுகிறது.

2. கோலாயாவின் மகன் .பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களில் இருந்த இரு போலி இறைவாக்கினர்களில் ஒருவர். இரு வரையும் எரேமியா கண்டனம் செய்தார். ஏனெனில் அவர்கள் இஸ்ராயேலுக்கு மதி கேடானதைச் செய்தனர். அயலாருடைய மனைவியரோடு விபச்சாரம் செய்தனர். போலி இறைவாக்குரைத்தனர். அவர்கள் பெற்ற தண்டனை பிற இஸ்ராயேலருக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும் (எரே 29:21-22).

ஆகாயின் இறைவாக்கு நூல்

இது, சிறிய இறைவாக்கினர் தொகுப்பில் பத்தாவது நூலாகும்.

1. இறைவாக்கினரின் பெயரும் வாழ்க்கை யும்: காண்க: ஆகாய்.

2. வரலாற்று, சமய, சமூகப் பின்னணிகள்:- பாரசீக மன்னன் சைரஸ் கி.மு. 539-இல் பாபிலோனியப் பேரரசை வென்று அழித் தார். இதுவரை பாபிலோனியர் தாங்கள் வென்ற மக்கள் அனைவரையும் நாடு கடத்தி னர். இக்கொள்கையை சைரஸ் மாற்றிய மைத்தார். சைரஸ் தான் வென்ற மக்களை நாடு கடத்தவில்லை. முன்பே நாடுகடத்தப் பட்டவர்கள், தங்கள் தாயகம் திரும்பி தாங் கள் பாரம்பரிய வழிபாட்டு முறைகளைப் புதுப்பித்துப் பின்பற்ற அனுமதி அளித்தார்; ஊக்குவித்தார். இதற்கு ஏற்றவாறு சட்டம் இயற்றினார். இச்சட்டம் எபிரேய, அரமே யிக்கு மொழிகளில் பாதுகாக்கப்பட்டுள்ளது (2 நாள் 36:22; எஸ் 1:1-4; 6:3-5). இச்சட் டத்தை சாதகமாகப் பயன்படுத்தி, சில யூத அகதிகள் பாபிலோனிலிருந்து எருசலேமுக் குத் திரும்பினர். இவர்களுக்கு நாடு கடத்தப் பட்ட யூத அரசனான எயோயாக்கினின் மகன் சேசிபசார் தலைமை தாங்கினார்; இவர் நெபுக்கதுனேசார் எருசலேம் ஆலயத் திலிருந்து அபகரித்துச் சென்ற பரிசுத்த பாத் திரங்களையும் தன்னோடு திரும்ப எருசலே முக்கு எடுத்து வந்தார். சேசிபசாரை யூதா வுக்கு ஆளுநராக சைரஸ் நியமித்தார். எருச லேமுக்குத் திரும்பிய அகதிகள் தகனப்பலி பீடத்தை மீண்டும் கட்டியெழுப்பினர். இரண்டாம் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டி னர் (எஸ் 8:1-4;5).

இந்தத் தொக்கத்திற்குப் பிறகு, ஆலயம் கட்டும் வேலை தடைப்பட்டது; பதி னெட்டு ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடப் பட்டது. இதற்குப் பல காரணங்களைச் சுட் டிக் காட்டலாம். 1. பாபிலோனியப் படை யெடுப்பால் யூதா மிகவும் பாழ்பட்டுப் போய் இருந்தது. எருசலேமும் மற்ற நகரங்க ளும் இன்னும் அழிவுற்ற நிலையிலேயே இருந்தன. நாட்டில் பரப்பளவு இருபது மைல் நீளமும் இருபது மைல் அகலமுள்ள தாகக் குறுகியது. வலிமைமிக்கப் பாரசீகப் பேரரசின் ஐந்தாம் மாகாணத்தின் ஒரு சிறிய பகுதியாக விளங்கியது. 2. உயர்குடி மக்க ளும், வீரர்களும் கலை விற்பன்னர்களும் நாடு கடத்தப்பட்டு விட்டனர். எருசலே மைச் சுற்றி 20,000 யூதர்களே வாழ்ந்தனர். பகைமை கொண்டு, அண்டை நாடுகளும் மக்களும் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தனர். 3. வட அரசில் வாழ்ந்த இஸ்ராயே லர், அசீரியர்களால் பிறநாடுகளிலிருந்து குடியேற்றப்பட்ட அந்நியர்களோடு திரும ணம் செய்தனர். அதன் விளைவாகக் கலப் பின மக்கள் தோன்றினர். இவர்கள் சமாரியர் கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் யூதா அரசியல் அதிகாரம் பெறுவதையும், பொரு ளாதார வளர்ச்சியடைவதையும், சமயச் செல்வாக்குப் பெறுவதையும் ஐயத்தோடு நோக்கினர். முடிந்தபோதெல்லாம் யூதர்க ளுக்குத் தொல்லை கொடுத்து வந்தனர். தெற்கில், ஏதோமியரை யூதர்கள் உண்மை யாகவே வெறுத்து ஒதுக்கினர் (மலா 1:3).

ஆகையால் அவர்களும் யூதர்களுக்குப் பல வாறு இடைஞ்சல் செய்தனர். 4. பொருளா தாரத்தில் யூதா தாழ்ந்த நிலையில் இருந்தது. நிலம் களைமண்டி இருந்தது. செய்த விவசா யம் நோயால் பாதிக்கப்பட்டது (1:9:11; 2:15-17). நீண்டகால வறட்சியும், தொடர்ந்து அறுவடை இன்மையும், உணவு உடைப்பற் றாக்குறையை ஏற்படுத்தின. பண வீக்கம் எழுந்தது. பணத்தின் மதிப்பு குறைந்தது. வாங்கும் சக்தியும் குறைந்தது (1:6). வறுமை எவ்வளவு கொடுமையாய் இருந்ததென்றால் யூதர்கள் கடனுக்காகச் சகயூதர்களையே விற் றனர் (நெக 5; மலா 3-5). உயிர் வாழ்வ தற்கே போராட வேண்டியிருந்தது. இந்நி லையில் ஆலயத்தைக் கட்டும் மாபெரும் வேலையைத் தொடர்ந்து நடத்த உற்சா கமோ சக்தியோ மக்களிடம் இல்லை. 5. மேலும் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப் பும் வேலை மிக அவசரமானதாக இவர் களுக்குத் தோன்றவில்லை. ஏனெனில் பாபி லோனியர் சாலமோன் கட்டிய ஆலயத்தை அழித்து விட்டதால் வழிபாடு நின்று விட வில்லை. நாடு கடத்தப்பட்ட காலத்தில் யூதாவில் தங்கியோர் பலி ஒப்புக் கொடுக்க வும் செபிக்கவும் நெருப்பால் எரியூட்டப் பட்ட ஆலயத்தைச் சுற்றிக் கூடினர் (எரே 41:4-5). இக்காரணங்களுக்காக சைரஸ் அவனது மகன் கம்பீசு ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் ஆலயம் மீண்டும் கட்டப்படும் வேலையில் ஒரு முன்னேற்றமும் ஏற்பட வில்லை.

கம்பீசு எகிப்தை வென்று அடிமைப்படுத் தியபின் வாரிசு இல்லாது இறந்தார். அவருக் குப்பின் ஆட்சிக்கு வந்த தாரியு தன் பதவிக் காக உள்நாட்டுப் போரில் ஈடுபட வேண்டி யிருந்தது. இதனால் பாரசீகப் பேரரசு பெரும் ஆட்டம் கண்டது. அழிந்து போகும் நிலை யில் இருந்தது. இந்த வரலாற்று நிகழ்ச்சிக ளின் முழக்கத்தை இந்நூல் விவரிக்கிறது (2:6-7; 21-22). இந்த குழப்பமிக்க வரலாற்றுச் சூழ்நிலை-இறைவாக்கினர்கள் முன்னறி வித்த வரலாற்றில் வரும் இறுதியான தீர்மா னமான ஓர் இக்கட்டான நிலை ஏற்படும் என்பதை எதிர்பார்க்க இஸ்ராயேலரைத் தூண்டியது. இந்தப் பின்னணியில் ஆகாயும் செக்கரியாவும் தங்கள் இறைவாக்குப் பணி யைச் செய்தனர். இந்தப் பின்னணியில் அவர் களுடைய செய்தியைப் புரிந்து கொள்ள வேண்டும். சேசிபசாரும் அடுத்து அவரது மருமகன் செருபாபேலும் யூதாவுக்கு ஆளு நர் ஆனார்கள். இவர் பாபிலோனில் பிறந்து வளர்ந்த யூதர். தாரியூவின் ஆட்சிக்காலத்தில் பாலஸ்தீனத்திற்கு திரும்பிய யூதர்களில் ஒரு வர். அரசன் யோயாக்கினின் பேரன் ஆன தால் இவர் தாவீதின் வழித்தோன்றல் ஆவார். பாரசீகப் பேரரசில் ஏற்பட்ட உள் நாட்டுக் கலகங்களால் உந்தப்பட்டு, மேற் சொன்ன இறைவாக்கினர்களும் செருபா பேல் வழியாகத் தாவீது அரசு மரபு மீண்டும் நிறுவப்படும் என்று நம்பினர். யாவே தாவீது அரசை மீண்டு அமைத்து எருசலே முக்குத் திரும்ப இருப்பதால் அவரது உறை விடமான ஆலயத்தை மீண்டும் கட்டுதல் முக்கியத்துவம் பெற்றது. ஆகாயின் உணர்ச் சிமிக்க நேரடிப் போதகங்களால் தூண்டப் பெற்று மக்கள் ஆலயம் கட்டும் வேலை யைத் தொடர்ந்தனர். சமாரியர்கள் உதவ முன் வந்தனர். ஆனால் அவர்கள் சிலை வழிபாட்டில் ஈடுபட்டிருந்ததால், அவர்கள் உதவியைச் செருபாபேல் நிராகரித்தார் (2:10.14). ஆகவே அவர்களது நேசக்கரம் பகை பூண்டது. அவர்கள் யூதர்களுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினர். அவர் களால் தூண்டப்பெற்று பாரசீக அதிகாரிகள் எந்த அதிகாரத்தைக் கொண்டு யூதர்கள் ஆல யத்தை மீண்டு கட்டுகின்றனர் என்று கேட்ட னர். (எஸ் 5:3). இந்தப் பிரச்சினையைத் தாரியு மன்னனிடம் கொணர்ந்தனர். அவர் ஆலயம் கட்ட அனுமதித்த மூலச்சட்டத்தை உறுதிப்படுத்தி ஆலயம் கட்டும் வேலை யைத் தொடர்ந்து நடத்த யூதர்களுக்கு அனு மதி அளித்தார் (எஸ் 6:1-15). நான்கு ஆண்டு களில் வேலை முடிந்தது (கி.மு.520-16). இந்த வேலைக்கு ஆளுநன் செருபாபேலும் தலைமைக்குரு யோசதாக்கின் மகனான யோசுவாவும் தலைமை தாங்கினர். ஆகா யும், செக்கரியாவும் மக்களைத் தூண்டி உற் சாகப்படுத்தினர். மக்கள் உழைப்பைத் தானம் செய்தனர். அவர்களுடைய ஒத்து

ழைப்பால் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இந்த இரண்டாம் ஆலயம், பெரிய ஏரோது கி.மு.20-இல் புதியதொரு ஆலயத்தைக் கட்டும்வரை, ஐந்து நூற்றாண்டுகளுக்கு யூதமக்களின் வழிபாட்டு, பக்தி முயற்சிகளின் மையமாக திகழ்ந்தது.

3. நூலின் தோற்றம்:- ஆகாய் குறுகிய காலத்திற்கே இறைவாக்குப் பணி செய்ததாகத் தெரிகிறது. இவரது நான்கு இறைவாக்குகள் கி.மு.520-இல் ஆகஸ்ட்-செப்டம்பர் (நமது ஆவணி மாதம்) மாதங்களில் தொடங்கி அதே வருடம் நவம்பர்-டிசம்பர் (கார்த்திகை) மாதங்களில் முடிந்ததாகத் தெரிகிறது. நூலில் காணப்படும் காலக் கணிப்பு பாபிலோனிய முறைப்படி தரப்படுகிறது.

ஆகாயின் இறைவாக்குகளை அவருடைய சீடருள் ஒருவர் தொகுத்துப் பதிப்பித்தார். இவர், நூலுக்குப் பெருமிதமான, புறநிலை மெய்மைத் தொனி அளிக்கும் நோக்கத்தோடு இறைவாக்கினரைப் படர்க்கையில் குறிப்பிடுகிறார். இவர்தான் நூலுக்குக் கால கணிப்பையும் திட்ட அமைப்பையும் அளிக்கிறார். இவர் இறைவாக்கினரது செய்திகளோடும், அவை மக்களிடையே ஏற்படுத்தும் விளைவையும் குறிக்கின்றார். நூல் இறைவாக்கினரது பணிபற்றிய சுதந்திரமான அறிக்கையாகத் தோன்றுகிறது. இறைவாக்கினர் படர்க்கையில் குறிக்கப்பட்டாலும் நூலுக்கு அவரே பொறுப்பாவார். நூல் அவரது உண்மையான வாக்குகளைக் கொண்டிருக்கிறது என்பது உறுதி.

4. இலக்கிய சிறப்பு:- இறைவாக்கினர் நூல்கள் பொதுவாகப் பாடல் வடிவில் இருக்கும். ஆனால் இந்நூல் இதைத் தவிர்த்து எளிய உரைநடையை விரும்பிப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. இந்நூலில் பரவசத்தையோ, காட்சிகளையோ, காரணகாரிய வாதத்தையோ, நுட்பமான அறிவாராய்ச்சியையோ, காவியக் கழி வகையையோ காண முடியாது. ஆசிரியர் செயலார்வம் உடையவர். மக்களை இடித்துரைக்கும்போதும், அவர்களைத் தூண்டி உற்சாகப்படுத்தும்போதும் அவர் தனது குறிக்கோளிலிருந்து சிறிதும் விலகவில்லை. ஆலயம் மீண்டும் கட்டப்பட வேண்டும்; மக்கள் மீட்படைய வேண்டும். இச்செய்தியை அறிவிக்க அனுப்பப்பட்ட தூதனாகத் திகழ்கிறார். தனது தூதில் பெரிதும் வெற்றி பெறுகிறார்.

நூலின் எபிரேய வாசகம் மிகவும் சிதைந்துள்ளது. இதை திருத்த எழுபது நூலின் கிரேக்க வாசகம் உதவுகிறது. ஆனால் கிரேக்க வாசகம் விளக்கமாக உரைக்கும் போக்குடையது.

5. திட்டமும் பொருளடக்கமும்:-

அ. முதல் இறைவாக்கும் விளைவும் (11-15).

யூதாவின் ஆளுநர் செருபாபேலுக்கும் பெரிய குரு யோசுவாவுக்கும் இந்த வாக்கு அருளப்படுகிறது. மக்கள் தங்களது சொந்தக் காரியங்களிலேயே அக்கறை கொண்டு, ஆலயம் கட்டுவதைத் தள்ளிப் போட்டனர். புறக்கணித்தனர். இதை இறைவாக்கினர் கண்டனம் செய்கிறார். இப்புறக்கணிப்புதான் விவசாயத்திலும், பொருளாதாரத்திலும் வீழ்ச்சியடைந்ததற்குக் காரணமாயிற்று. ஆகவே மக்கள் ஆலயம் கட்டுவதை இறைவாக்கினர் ஊக்குவிக்கிறார். மக்களும் அவரது போதகத்துக்குப் பணிந்து, ஆலயத்தை மீண்டும் கட்டத் தொடங்குகின்றனர்.

ஆ. இரண்டாம் இறைவாக்கு (2:1-9)

புதிய ஆலயத்தின் வருங்கால மகிமையை விவரித்து, ஆலயம் தொடர்ந்து கட்டப்படுவதை இறைவாக்கினர் உற்சாகப்படுத்துகிறார்.

இ. மூன்றாம் இறைவாக்கு: (2:10-19)

வழிபாட்டுச் சடங்குகள் பற்றி, குருக்களோடு ஆலோசித்தபின், இறைவாக்கினர் தீர்ப்புக் கூறுகிறார். தீட்டுடையோரின், ஒரு வேளை சமாரியர்களின், காணிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன. ஆலயம் கட்ட அடிக்கல் இட்டபின் ஆண்டவர் மக்களுக்கு அறுவடை மிகுதியையும் செல்வச் செழிப்பினையும் தந்து ஆசீர்வதிப்பார் என்று உறுதி கூறப்படுகிறது.

ஈ. நான்காம் இறைவாக்கு: (2:20-23)

இவ்வாக்கு ஆளுநர் செருபாபேலுக்கு அருளப்படுகிறது. வரலாற்றில் தலையிட்டு, இறைவன் பிறநாடுகளின் சக்தியை அழிக்கப் போகிறார். அதன்பின் தாவீது அரசமரபை மீண்டும் அமைப்பார் என்று இறைவாக்கினர் மிகத் தூரக்காலத்தை நோக்குகிறார்.

6. சிறப்புச் கருத்துக்கள்:- ஆகாய், தனக்கு முன் வந்த இறைவாக்கினர்கள் போல், ஆன்மீக ஒழுக்கப் போதகத்தை அளிக்கவில்லை. வெறும் ஆலயம் கட்டுவதையே ஊக்குவித்தார். ஆகவே அவரது போதகம் எபிரேய விசுவாசம் வளர்வதற்கு அவ்வளவு உதவவில்லை என்பர் சிலர். ஆனால் வரலாற்றுச் சூழ்நிலையில் பார்க்கும்போது, ஆலயத்தை மீண்டும் கட்டுவது, யூத இனமும் சமயமும் அழிவிலிருந்து தப்பி உயிர் வாழ்வதற்கு, அவசியமான அடிப்படையாயிற்று. இதனால், ஆகாயும் அவரது சமகாலத்தவராகிய செக்கரியாவும் யூத இனம் அழிவிலிருந்து தப்பி, நீடித்திருப்பதற்கு பொறுப்பாளர்களாக விளங்கினர். மேலும் இறைவனது காரியங்களுக்கு எப்போதும் முதன்மை அளிக்க வேண்டும் என்பது ஆகாயின் அடிப்படைப் போதகமாகும். குறிப்பிட்ட சூழ்நிலையில் ஆலயம் கட்டுவது, இந்த முதன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மேலும், வரவிருக்கும் மெசியாக் காலம் பற்றிய காட்சி, பின்வரும் கருத்துக்களில் எடுத்துக் கூறப்படுகிறது. ஆலயத்தை மீண்டும் கட்டுதல்; செருபாபேல் உருவில் தோன்றும் தாவீது மரபு சார்ந்த மெசியா (2:23); பிறநாடுகளுக்கும் மீட்பளிக்கும் சேவை (2:7-9); யூதச் சமூகத்தைக் குறிக்க ''எஞ்சியோர்'' என்ற சொல் பயன்படுத்தப்படுதல் (1:12); மெசியாக் காலத்திற்கு முன்னோடியாக வரும் அண்ட அதிர்ச்சிகள், வானமும் பூமியும் அழிந்து போவது போன்றவை- அக்கால முறைப்படி ''காட்சி இலக்கிய முறையில் விவரிக்கப்படுகின்றன (2:6-7.21-22; ஏச 51:6; 66:22).

7. வரலாற்று முக்கியத்துவம்:- இந்நூல் வரலாற்று முக்கியத்துவம் உடையது. நாடு கடத்தப்பட்ட யூதர்களின் முதற்குழு கி.மு.537-இல் தாயகம் திரும்பியது. இருபது ஆண்டுகளுக்குப்பின், தாயகம் திரும்பிய யூத சமூகத்தின் சமய, சமூக நிலையை இந்நூலும், செக் 1:8 என்ற பகுதியும் விவரிக்கின்றன. இச்சான்றுகள் எஸ்ரா திருநூலின் தொடக்க அதிகாரங்களைப் புரிந்துக் கொள்ள உதவுகின்றன.

ஆகாய் (HAGGA - விழாக் கோலம், விழா நாளில் பிறந்த)

இவர் பாபிலோன் அடிமைத்தனத்திற்குப் பின் வந்த ஓர் இறைவாக்கினர். இவரது கூற்றுக்கள் ஆகாய் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரைப் பற்றி அதிகம் தெரியவில்லை. முன் மரபு வரலாறு இன்றி வெறுமனே இறைவாக்கினர் என்று அழைக்கப்படுகிறார் (ஆகா 1:1; எஸ் 5:1; 6:14) இதிலிருந்து இவர் பலராலும் அறியப்பட்டவராகத் தெரிகிறார். யூதப் பாரம்பரியப்படி பாபிலோனில் நாடுகடத்தப்பட்ட நிலையிலேயே இவர் இறைவாக்கினராகத் திகழ்ந்தார்.

ஆகா 1:1-இலிருந்து இவர் 520-இல் எருசலேமில் செயலாற்றியதாகத் தெரிகிறது. இது இவர் இதற்கு முன்னே எருசலேமிற்குத் திரும்பியிருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. குரு குலத்தைச் சேர்ந்தவராகத் தெரியவில்லை. ஏனெனில் லேவியர் பழக்கவழக்கங்கள் பற்றி குருக்களின் ஆலோசனையைக் கேட்கிறார் (2:11-13). 2:3-இல் இருந்து எருசலேம் ஆலயம் 586-இல் அழிக்கப்படுமுன், அதைப் பார்த்திருக்கிறார் என்று தெரிகிறது. 520-இல் ஆலயம் மீண்டும் கட்டப்படுவதைத் தூண்டியவர்களில் முக்கியப் பங்கெடுத்த இவர், அப்போது மிக முதியவராக இருந்திருக்க வேண்டும். ஆனால் மற்றொரு பாரம்பரியம், இவர் இளைஞனாக சேசிபசாரோடு நாடு கடத்தலிலிருந்து 538-இல் திரும்பினார் என்று கூறுகிறது.

இவரது சமகாலத்தவரான செக்கரியாவோடு சேர்ந்து இவரும் (எஸ் 4:24-5:1; 6:14; செக் 1:16) எருசலேம் மக்களையும் அவர்களது தலைவர்களான செருபாபேல்

யோசுவா ஆகியோர்களையும் ஆலயத்தை மீண்டும் கட்டத் தூண்டியெழுப்பினார். இவ ருடைய ஆற்றலாலும், உற்சாகத்தாலும், முதல் வேண்டுதலுக்குப்பின் உடனடியாக ஆலயம் மீண்டும் அமைக்கப்படுதல் தொடங்கப்பட்டு நான்கு ஆண்டுகளில் முடிக்கப்பெற்றது (எஸ் 6:15). செக்கரியா வும் இவரும், ஆலயம் மீண்டும் கட்டப்பட் டதற்குப் பொறுப்பானவர்கள். ஆனாலும், இவரும் சேர்ந்து பணி செய்ததற்கான சான்று கள் எதுவும் இல்லை (காண்க எஸ் 5:1-2; 6:14). பிற்கால தால்மூத் பாரம்பரியம் ஆகாய், செக்கரிய, மலாக்கி ஆகியமூவர்க ளும் சேர்ந்து ''பெரிய செபக்கூடத்தை'' தோற்றுவித்தார்கள் என்று கூறுகிறது. இறை வாக்கினர்களில் இறுதியான இவர்களின் இறப்போடு இறைவாக்கு பரிசுத்த ஆவி இஸ்ராயேலை விட்டகன்றார் என்று கருதப் பட்டது. சில விவிலிய வாசகங்கள் (எழுபது நூல், வுல்கத்தா, பெசித்தா) சில சங்கீதங் களை செக்கரியாவும், ஆகாயும் எழுதியதா கக் குறிக்கின்றன (சங் 138; 146-149) இது, இவர் குருகுலத்தவர் என்ற கிறிஸ்தவப் பாரம்பரியத்திற்கு அடிப்படையாக இருக்க லாம். ஆனால் இது யூத பாரம்பரியத்திற்கு மாறானது (காண்க. ஆகா 2:11-13).

ஆகார் (HAGAR - தப்பி ஓடிய, அலைந்து திரிகின்ற)

ஆபிரகாமின் மனைவி சாரா தனக்குப் பிள்ளை இல்லாததால் தன்னிடம் வேலை செய்து வந்த எகிப்து நாட்டு வேலைக்காரி ஆகாரைத் தன் கணவனுக்கு வைப்பாட்டி யாக இருக்கச் செய்தாள். அவர் கருவுற்று இசுமயேல் என்ற மகனுக்குத் தாயானாள்.

இந்த ஆகாரின் கதைகள் எல்லாம் யாவே, எலோகிம், பாரம்பரியங்களில் பாதுகாக்கப் பட்டுள்ளன (யாவே. ஆதி 16:1-2. 4-14; எலோகிம் 21:8-21). சில வசனங்கள் மட்டும் குருக்கள் பாரம்பரியத்திலிருந்து எடுக்கப் பட்டிருக்கின்றன (16:3.15-16). அநேக அறி ஞர்கள் யாவே, எலோகிம், பாரம்பரியங்கள் இணை விவரிப்பாக இருந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். இரண்டும் ஆபிரகா மின் குடும்பத்திலிருந்து ஆகாரையும், இசும யேலையும் துரத்துவதை விவரிக்கின்றன. ஆதி 16:9 இந்த இரண்டு பாரம்பரியங்களை யும் இணைத்து வைக்கிறது.

முதல் கதையில் (ஆதி 16:1-16) ஆகார் என்பவள், மலடியாய் இருந்த சாராளிடம் வேலை பார்த்த எகிப்திய நாட்டு வேலைக் காரி; சாரா ஆபிரகாமின் மனைவி; யாவே கொடுத்த வாக்குறுதி சாராளின் மலட்டுத் தன்மையால் அழிந்து போய்விடுமோ என் றெண்ணி சாரா ஆகாரைத் தன் கணவன் ஆபிரகாமுக்கு மனைவியாக ஆக்கினாள். இது அக்காலத்திய பழக்கம் (30:3.9) என் பதை நூசி வாசகத்தால் உறுதிப்படுத்துகிறது. ஆகார் கருவுற்றிருக்கும் பொழுது தன் தலைவி சாராளை அலட்சியப்படுத்தினாள். அதனால் சாராய் தன் கணவன் ஆபிரகாமின் உத்தரவோடு ஆகாரைக் கண்டிப்புடன் நடத் தினாள்.

கண்டிப்புடன் நடத்தியது கண்டு ஆகார் பெயேர்-செபாவிற்கும் எகிப்திற்கும் இடைப்பட்ட பகுதியாகிய சூர் பாலைவ னத்திற்கு ஓடிப்போனாள். அவர் செல்லு கின்ற பொழுது ஒரு நீருற்றுக்கருகில் ஆண்ட வருடைய தூதர் அவளுக்குத் தோன்றி ''நீ ஒரு மகனைப் பெற்றெடுப்பாய்; அவனுக்கு இசுமயேல் என்று பெயரிடுவாய். அவனிலி ருந்து உன் சந்ததியை எண்ண முடியாத அளவில் விருத்தி அடையச் செய்வோம்'' என்றார். ஏனென்றால் ஆண்டவர் ''அவ ளைக் கண்டுகொண்டார்''. இசுமயேல் கொடும் குணமுள்ள மனிதராய் வளர்வார். அவருடைய கை எல்லாருக்கும் விரோதமா கவும், எல்லோருடைய கையும் அவருக்கு விரோதமாகவும் ஓங்கியிருக்கும். ஆண்டவர் அவளுக்கு மனமிரங்கிச் சொன்னதால் அந்த ஊற்றை 'காண்கிற இறைவன் நீர்'' என்று அழைத்தாள் ஆகார்.

இரண்டாவது கதை (ஆதி 21:8-21) இசும யேல் பிறந்து பல வருடம் கழிந்தபின் நடந்து இருக்கிறது. ஆபிரகாம் தன்னுடைய குழந்தை ஈசாக்கு வளர்ந்த நிலையில் மகிழ்ச் சியோடு விருந்தொன்றை நடத்தினார். அன்று சாரா தன் முதிர்ந்த வயதில் பெற்ற

தன் குழந்தை ஈசாக்கும், வேலைக்காரி ஆகாரின் மகன் இசுமயேலும் விளையாடிக் கொண்டிருந்ததைச் சாரா பார்த்தாள். ஆகாரின் மகனும், தன்னுடைய மகனுக்குப் பங்காளியாக வந்துவிடுவானோ என்ற பயம் சாராவுக்கு வந்தது. இதை ஆபிரகாமிடம் முறையிட்டு இருவரையும் துரத்திவிடக் கோரினாள். இதைக் கண்ணுற்ற ஆபிரகாம் மன வருத்தம் கொண்டார். ஆயினும் இறைவன் கட்டளைக்கேற்ப இருவரையும் அனுப்பிவிட்டார். பெயேர்-செபா பாலைவனத்தில் அலைந்து திரிந்து தண்ணீர் தாகத்தால் துன்பப்பட்ட பொழுது குழந்தையைத் தனியே விட்டுத் தானும் அழுதுகொண்டு நின்றாள். அப்பொழுது வான தூதர் தோன்றி, ''குழந்தையின் குரல் ஆண்டவரை எட்டியது. இசுமயேல் இறக்க மாட்டான்'' என்று கூறினார். அவள் கண்களைத் திறந்து பார்த்ததும் முன்னால் கிணறு ஒன்று இருப்பதைக் கண்ணுற்றாள். இசுமயேல் அந்தப் பாலைவனத்தில் வாழ்ந்து வில் வித்தையில் வீரனானார். ஆகார் எகிப்திலிருந்து ஒரு பெண்ணைக் கூட்டி வந்து இசுமயேலுக்குத் திருமணம் முடித்து வைத்தாள்.

பாலஸ்தீனத்தில் தெற்கில் வாழ்ந்த போர் வீரர்கள் பெடுயீனர்கள் எபிரேயர்களோடு உறவு கொண்டவர்கள் என்று ஆகார் பாரம்பரியம் கூறுகிறது. ஏனென்றால் இசுமயேல் தான் அவர்களுக்குக் குலத்தலைவர். எபிரேயர்களைப் போலவே அவர்களுக்கும் ஆபிரகாம்தான் குலத்தந்தை. ஆனால் அவர்களுடைய தாய்தான் எகிப்தின் வேலைக்காரி ஆகார். சவுலின் ஆட்சிக் காலத்தில் இஸ்ராயேலர்கள் அகிரியர்களோடு போரிட்டு அவர்களைக் கொன்றுபோட்டார்கள் (1 நாள் 5:10). சாராளின் ஊழியக் காரியம், எகிப்து நாட்டினருமான ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற இசுமயேலின் தலைமுறை பெருகியது. அவரின் புதல்வர்கள் பன்னிருவரும் தந்தம் குலத்தவர்களுக்குத் தலைவர்களாய் இருந்தனர்.

கலா 4:21-31: புதிய ஏற்பாட்டில் பவுல் ஆகாரின் கதையை ஒரு உருவகமாகப் பயன்படுத்துகிறார். ஆபிரகாமின் புதல்வர் இருவரில் இசுமயேல் அடிமைப்பெண்ணிடம் பிறந்தவர். ஈசாக்கு அடிமையல்லாத சுதந்திரப் பெண்ணிடம் வாக்குறுதியின்படி பிறந்தவர். இந்தப் பெண்கள் இருவரும் இரு உடன்படிக்கையைக் குறிக்கின்றனர்.

சீனாய் மலையில் செய்யப்பட்ட உடன்படிக்கையின் விளைவாக அடிமைத்தனத்தில் பிள்ளைகள் பிறக்கின்றனர். ஆகாரால் குறிக்கப்படுவது இதுவே. ஈசாக்கின் புதல்வர்கள் வாக்குறுதியின் புதல்வர்கள். இயல்பு முறைப்படி உரிமை மக்கள். அடிமை அல்லாத மனைவி சாராளின் மக்கள் ஆவார். இவர்கள் புதிய உடன்படிக்கையின் மக்களைக் குறிக்கின்றனர்.

ஆகிபோர் (ACHBOR - சுண்டெலி)

1. ஏதோம் நாட்டின் அரசன் பாகால்-கனானின் தந்தை (ஆதி 36:38-39; 1 நாள் 1:49).

2. மீக்காயாவின் மகன். யோசியாவின் அரசவை அலுவலர்களில் ஒருவர். புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட சட்ட நூலைக் குறித்து ஆண்டவரது திருவுளத்தை அறிந்து வரக்கட்டளை பெற்றவர்களில் ஒருவர் (2 அர 22:12.19). 2 நாள் 34:20-இல் இவர் மீக்காவின் மகன் அபிதோன் என்றழைக்கப்படுகிறார் (காண்க. அபிதோன்-4). எரே 26:22; 36:12-இன்படி யோயாக்கிமின் அலுவலரான எல்நாத்தானின் தந்தையாகவும் இருக்கலாம் இவர்.

ஆகூர் (AGUR - ஞானத்தை ஒன்று கூட்டுபவன்)

மாசாவைச் சேர்ந்த யாக்கே என்பவரின் மகன். பழ 30:1-33-இல் உள்ள நீதி மொழிகளை இந்த அறிஞர் எழுதியவராகவோ, தொகுத்தவராகவோ கருதப்படுகிறார். இவரைப் பற்றிப் பல ஊகங்கள் உண்டு. அ. மாசாவின் அரசியின் மகன். மாசாவின் அரசனான இலமுவேலின் சகோதரன் அல்லது நாட்டைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆ. அரேபிய பாலைவனம், ஏதோம், யோர்தானுக்கு அப்பாலுள்ள பகுதி அல்லது சேயி

ருக்கு அப்பாலுள்ள பகுதி ஆகிய பகுதிக ளில் பலவாறு குறிக்கப்படும் மாசாவில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார்.

ஆகே *(AGEE - தப்பி ஓடுகிற)*

தாவீதின் மூன்று வல்லவர்களுள் ஒருவ ரான சம்மாவின் தந்தையாவார். அராரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் (2 சாமு 23:11). ''அராரிய ஊரானாகிய ஆகே'' என்று அழைக்கப்பட்டார்.

ஆக்கார் *(ACHAR - தொந்தரவு கொடுப்பவன்)*

ஆக்கானின் மற்றொரு பெயர் (1 நாள் 2:7)

ஆக்கான் *(ACHAN - தொந்தரவு)*

யூதர் குலத்தைச் சேர்ந்த கர்மியின் மகன். இவர் எரிகோவிலிருந்து ஆண்டவர் கட்ட ளையை மீறி விலக்கப்பட்ட சில கொள் ளைப் பொருட்களைக் கவர்ந்து ஒளித்து வைத்துக் கொண்டார் (யோசு 6:17-19). அத னால் ஆண்டவர் சினம் கொண்டார். அதன் விளைவாக ஆயி என்ற சிறு கிராமத்தைத் தாக்கியபோது இஸ்ராயேலர் தோற்கடிக்கப் பட்டனர் (7:2-5).

ஆயிக்கு எதிராக நடந்த போரில் தோல்வி யுற்ற காரணம் அறிய கடவுளை விசாரித்த போது, இஸ்ராயேல் சமூகத்தில் பாவம் நிலவியிருந்தது தெரியவந்தது. ஆண்டவ ருக்கே உரிமையான பொருட்கள், இஸ்ரா யேலனால் களவாடப்பட்டு பாளையத்தில் மறைத்து வைத்திருப்பதாகத் தெரியவே சீட் டுக் குழுக்களின் மூலம் குற்றவாளி ஆக்கான் எனத் தெரியவர, அவரும் அவர் குடும்பமும் ஆக்கோர் பள்ளத்தாக்கில் கல்லால் எறியப் பட்டனர் (7:6-24; 22:20).

இந்த நிகழ்ச்சியுரை தொடக்க காலத்தில் இஸ்ராயேலரிடையே நிலவிய கூட்டு ஒரு மைப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. ஒருவ னுடைய குற்றம் எல்லோருடைய பாதுகாப் பையும் பாதிக்கும். ஆகவே ஆக்கானும் அவனது குடும்பமும் தண்டிக்கப்பட வேண் டும். ஆயினும் இது ஆக்கான் தனது குற் றத்தை ஏற்று அறிக்கையிட வாய்ப்பளிக்கி றது.

அவரது மறுபெயர் தொந்தரவு செய்பவன் என்ற பொருளுடைய ஆக்கார் ஆகும். ஆக் கான் என்பது ஆக்கோர் என்பதன் மங்கல வழக்காகும். 1 நாள் 2:7-லும் அவர் கல்லால் எறியப்பட்ட ஆக்கோர் பள்ளத்தாக்கும் இக் கருத்துக்கு ஆதரவு அளிக்கின்றன.

ஆக்கிசு *(ACHIS - அரசன் கொடுக்கிறார், மகுடி ஊதுவார்)*

1. மாவோக்கின் மகன். காத்து என்ற பெலிஸ்திய நகரின் அரசனிடம் (1 சாமு 21:10) இருமுறை தாவீது தஞ்சம் புகுந்தார், பாதுகாப்புத் தேடினார். நேபுபிலிருந்து தப் பியோடியபோது, தாவீது காத்து நாட்டில் வாழ்ந்து வந்தார். அங்கு அவர் பைத்திய மாய் நடித்தது, பாதுகாப்புப் பெறுவதை விட, அவருடைய நாட்டிலிருந்து விரைவில் விடுதலை பெறுவதையே நோக்கமாகக் கொண்டதாகும் (21:13-15). சவுல் தாவீதைத் தேடித் துரத்தியபோது, தாவீது ஆக்கிசிடம் தஞ்சம் புகுந்தார். அவர் தாவீது தங்க எல்லை நகரமாக சிக்கிலாகுவை அளித்தார் (27:6). மேலும் அவரைத் தன் மெய்க்காப்பா ளர்களின் தலைவராக ஆக்கினார் (28:2). தாவீதின் பிரமாணிக்கத்தில் ஆக்கிசு முழு நம்பிக்கைக் கொண்டிருந்தார். அவர் சவு லுக்கு எதிராக கில்போவா என்ற இடத்தில் படை எடுத்தபோது, தாவீதையும் அவரது வீரர்களையும் சேர்த்துக்கொண்டார். ஆனால் மற்ற பெலிஸ்தியர் தாவீதிடம் அவ்வளவு நம்பிக்கை கொள்ளவில்லை. அவர்கள் தாவீ தைச் சிக்கிலாகுக்கு அனுப்பிவிட ஆக்கி சைக் கட்டாயப்படுத்தினர் (29:2-6).

1 அர 2:39-40 குறிப்பிடும் ஆக்கிசுதான் தாவீது சந்தித்தவர் என்றால் அவர் அப் போது மிகவும் இளைஞனாக இருந்திருக்க வேண்டும். இக் குறிப்பில் அவர் மாக்கா வின் மகன் என்று அழைக்கப்படுகிறார். காண்க: மாக்க-3.

சங் 34-ன் தலைப்பு, 1 சாமு 21:10-15-இல் வரும் நிகழ்ச்சியைச் சுட்டுகிறது. அதில் ஆக்கிசு அபிமெலக்கு என்றழைக்கப்படுகி றார். காண்க அபிமெலக்கு-4.

2. இவர் காத்தின் அரசன், சாலமோன் காலத்தில் வாழ்ந்தவர். மாக்காவின் மகன். சிமெயியின் இரு ஊழியர்கள் காத்துக்கு ஓடிப் போகவே, அவர் தன் காவலை மீறி ஆக்கிசிடம் சென்று தன் ஊழியர்களைக் கூட்டி வந்தார் (1 அர 2:39-40).

ஆக்கோ (ACCO - *வெப்பான மணல் சூடான மணல்)*

கர்மேல் மலைக்கு வடக்கில் மத்தியதரைக் கடற்கரையில் அமைந்திருந்த ஒரு துறைமுகமாகும். கிழக்கிலும் தெற்கிலும் கர்மேல் மலையையும், வடக்கில் பேலஸ் ஆற்றில் ஒரு கிளையையும் பாதுகாப்பாகக் கொண்ட போர் முக்கியத்துவம் வாய்ந்த இயற்கையான துறைமுகம். இந்த இடம் இன்றைய கைப்பாவின் வடக்கில் இருந்திருக்க வேண்டும். இவ்விடத்தைச் சுற்றிய கடற்கரைச் சமவெளியும் ஆக்கோ சமவெளி யென்றே அழைக்கப்பட்டது.

தொல்பொருள் ஆய்வுகளின்படி இரண்டாம் மத்திய வெண்கல காலத்தில் இந்நகரம் நிறுவப்பட்டதாகத் தெரிகிறது. கானானியர்கள் காலத்தில் இது ஒரு சிறந்த வணிக மையமாகத் திகழ்ந்தது. இந்நகர் எகிப்திய ஏடுகளிலும், அமர்னா ஏடுகளிலும் குறிக்கப்படுகிறது. எகிப்திய பாரவோன் முதலாம் சேத்தி கி.மு. 1320-ஐ ஒட்டி இந்நகரைக் கைப்பற்றினார். பிறகு கடல்வாழ் மக்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. ஆனால் விரைவில் போதிய பலம் பெற்றுத் திகழ்ந்தது. அதனால் இஸ்ராயேல் இனத்தைச் சேர்ந்த ஆசேர் குலத்தவர், ஆக்கோ நகரைத்தாரைக் கொல்லாது அங்கு வாழ்ந்த கானானியர் மத்தியில் வாழ்ந்தனர். ''ஏனெனில் ஆசேரால் ஆக்கோவிலும் அதைச் சுற்றியிருந்த நகரங்களிலும் வாழ்ந்த மக்களை விரட்டியடிக்க முடியவில்லை (நீதி 1:31-32).

பிற்காலத்தில் கி.மு. 733-இல் மூன்றாம் திகிலாத்து-பிலேசர் இந்நகரை அசீரிய ஆட்சிக்குட்படுத்தினார். ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்குப்பின், அசூர்பானிப்பால் இந்நகர் மக்களில் பெரும்பாலோரை நாடு கடத்தினார். மற்றவர்களைக் கொன்று அழித்தார். சில காலத்திற்கு அழிந்து கிடந்தபின் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இந்நகரில் அத்தீனிய கிரேக்கர்கள் குடியேறினர். இரண்டாம் தோலமி என்பவர் துறைமுகத்தை விரிவாக்கி, அதற்கு தோலமாயிசு என்று பெயரிட்டார். தோலமியர், செலூக்கியர் காலத்தில் இந்நகர் முக்கியம் பெற்று, மக்கபேயர்களின் எதிரிகளின் மையமாக விளங்கியது (1 மக் 5:15). இங்குதான் மக்கபேயர் தலைமையில் யூதர்கள் போரிட்டனர். இங்கு வந்து சந்திக்குமாறு யோனத்தான் முதலில் அலெக்சாந்தர் பாலாசாலும் பின்பு இரண்டாம் தெமேத்திரியுவாலும் கட்டளையிடப்பட்டார் (1 மக் 10:51-66; 11:21-74). மூன்றாம் முறையாக, வரும்படி யோனாத்தானைத் திரிபோ கட்டளையிட்டார். தந்திரமாய், அவரின் படையின் பெரும்பகுதியை அனுப்பிவிடச் செய்தார். அவர் வந்தபோது அவரை இந்நகரில் சிறைப்பிடித்து வைத்தார் (1 மக் 12:39-49).

கி.மு. 65-இல் ஆக்கோ அல்லது தோலமாயிசு என்ற இந்நகரம் உரோமை ஆட்சிக்குள் வந்தது. கிளாதியு காலத்தில் இது ஒரு உரோமையர் குடியிருப்பாக மாறியது. இங்குதான் பவுல் தனது மூன்றாவது வேதபோதகப் பயணத்தில், இங்குள்ள திருச்சபையைப் பார்ப்பதற்காக, கப்பல் இறங்கினார் (அ.ப. 21:17).

மத்திய காலத்தில் இந்நகரம் சிலுவைப் போர் வீரர்களின் ஆட்சியில் இருநூறு ஆண்டுகளுக்கு இருந்தது. இதற்கு புனித யோன் தார்க்கு என்று பெயர் கொடுத்தனர். அதனால் இன்றும் இது ஆக்ரே என்ற பெயரைக் கொண்டுள்ளது. கி.பி.1187-இல் சலாதீன் தாக்குதலுக்கு விழுந்தது.

இக்கால வரலாற்றில் பல தடவை பலரால் கைப்பற்றப்பட்டு; கி.பி. 1948-லிருந்து இந்நகர் இஸ்ராயேல் நாட்டைச் சேர்ந்ததாக உள்ளது. இந்நகரின் பழங்காலப் பகுதியில் அராபியர்கள் மட்டுமே குடியிருக்கின்றனர்; செலூக்கியர் காலத்தில் விரிவாக்கப்பட்ட

துறைமுகப் பகுதியில் யூதர்கள் வாழ்கின்றனர். அருகிலுள்ள கைப்பா இன்று முக்கியம் வாய்ந்து திகழ்கிறது.

ஆக்கோர் (ACHOR - தொந்தரவு, துயரம், கவலை)

எரிகோவுக்கு அருகிலுள்ள பள்ளத்தாக்கு. யூதர் நாட்டின் வட எல்லையின் ஒரு பகுதியாகும் (யோசு 15:7). இங்குதான் எரிகோவின் கொள்ளைப் பொருட்களை எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற கட்டளையை மீறியதற்காக ஆக்கானும் அவர் குடும்பமும் கல்லால் எறியப்பட்டு கொல்லப்பட்டனர் (7:24-26). சாக்கடல் ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டபின், இது ஏல்-புக்கெய்யா என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது கும்ரான் ஓடைக்கரையில் வடக்குத் தெற்கில் 6 கி.மீ. பரவியுள்ள ஒரு சமவெளியாகும்.

இறுதிக்கால இறைவாக்குகளில் உருவகமாகப் பயன்படுகிறது ஆக்கோர் என்ற பெயர். கி.மு. 8-ஆம் நூற்றாண்டில், பிரமாணிக்கமற்ற இஸ்ராயேலுக்கு நம்பிக்கை அளிக்கும் உருவகமாக, ''ஆக்கோர் என்கிற பள்ளத்தாக்கை நம்பிக்கையின் வாயிலாக்குவோம்'' என்று இறைவாக்கு கூறுகிறது (ஓசே 2:15). இஸ்ராயேல் திரும்ப அமைக்கப்படும் போது வறண்ட பாலைவனப் பள்ளத்தாக்கு செழிப்பானதாக மாறி மந்தைகளுக்கு மேய்ச்சல் நிலமாக மாறும். மெசியாக்காலத்தில் ''ஆக்கோர் பள்ளத்தாக்கு கூட மாட்டுத் தொழுவமாக இருக்கும்'' என ஏசயா கூறுகிறார் (ஏச 65:10).

ஆசரேல் (AZARI.. - யாவே உதவினார்)

1. சிக்கிலாகு என்னுமிடத்தில் தலைமறைவாயிருந்த தாவீதிடம் வந்து சேர்ந்த படை வீரர்களில் ஆசரேலும் ஒருவர். இவர் கோராகியர் ஆவார் (1 நாள் 12:6).

2. ஒரு லேவியர். ஆசரேல் ஏமானின் புதல்வர்களில் ஒருவர். தாவீதின் காலத்தில் இவர் ஓர் இசைவல்லுநராக இருந்தார் (1 நாள் 25:18). 25:4-இல் ஊசியேல் என்றழைக்கப்படுகிறார்.

3. இவர் எரொகாமின் மகன். தாவீதின் கீழ் தாண் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு இவர் தலைவராய் இருந்தார் (1 நாள் 27:22).

4. பினுயி என்பவரின் புதல்வர்களில் இவரும் ஒருவர். பினுயி புறவினப் பெண்ணை மனைவியாகக் கொண்டிருந்தார். எஸ்ராவின் ஆட்சியின்கீழ் அவர்களை அனுப்பிவிட வேண்டியிருந்தது (எஸ் 10:41).

5. இவர் ஒரு குரு. அகிசாயின் மகன், இம்மேரின் வழித்தோன்றல். அடிமைத்தளையிலிருந்து வந்தபின் எருசலேமில் தங்க வந்த அமாசாயின் தந்தை (நெக 11:13). நெக 12:36-இல் வரும் ஆசரேலும் இவரும் ஒருவராக இருக்கலாம்.

6. இவர் ஒரு குரு. எருசலேம் மதிலின் அர்ப்பணிப்பு நாளன்று நடந்த பவனியில் எக்காளம் இசைப்பவராக இருந்தார் (நெக. 12:36).

ஆசா (ASA - குணமளிப்பவர்)

1. யூதாவின் அரசர் (913-813). அபியாவுக்கு அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்ற அவரது மகன். இவர் நாற்பத்தோர் ஆண்டுகள் எருசலேமில் ஆண்டார். அபிசலோமின் மகள் மாக்கா என்பவளே இவருடைய தாய் (1 அர 15:10). ஆனால் இவள் அபியாவின் தாயாக இருக்கலாம். அவர் இறந்தபின்னும் அரசித் தாய் என்ற பட்டத்தைக்கொண்டிருக்க வேண்டும்.

பழைய ஏற்பாடு இவரை, இவர் தந்தையிடமிருந்து வேறுபட்டவராகவும், அவருக்குச் சாதகமாகவும் விவரிக்கிறது (1 அர 15:11; 2 நாள் 14:2).

ஆசாவின் முதல் பத்தாண்டு ஆட்சி அமைதியாக இருந்தது (2 நாள் 14:1). இது ஓரளவு இவரது தந்தை இஸ்ராயேலரின் அரசன் எரொபயாமின்மேல் கொண்ட வெற்றியின் பலனாகும். இஸ்ராயேல் அரசன் பாசாவோடு (910-887) எல்லை பற்றிய சண்டைகளை, ஒருவகை கொரில்லாச் சண்டை, கட்டுப்படுத்த இவரால் முடிந்தது (காண்க.1

அர 15:16). இவர் இக்காலத்தைத் தனது மக்களின் சமயப் பழக்கங்களைச் சீர்திருத்து வதிலும் (2 நாள் 14:2-5; 1 அர 15:12) பல நகரங்களைப் பலப்படுத்துவதிலும் (2 நாள் 14:6-8) செலவிட்டார்.

இவரது நல்லாட்சி, எகிப்தியனான செரா குவின் படையெடுப்பால் தடைப்பட்டது. எதிரியின் பெருஞ்சேனையைக் கண்டு அஞ்சி, ஆசா இறைவனிடம் வேண்ட அவ ரும் அவருக்கு எதிரிகளின் படைமேல் ஒரு வெற்றியைத் தந்தார் (14:9-15).

இறைவாக்கினர் அசரியாவால் ஊக்குவிக் கப்பட்டு, ஆசா தனது சீர்திருத்தத்தைத் தொடர்ந்து நடத்தினார். எருசலேமில் ஓர் ஆடம்பரச் சடங்கினில் ஆண்டவரோடு உடன்படிக்கையைப் புதுப்பிக்க மக்களைத் தூண்டினார் (15:1-15). அவரது பாட்டி மாக்கா பாலின வளர்ச்சித் தேவதையான அசேராவின் சிலையை வைத்திருந்ததால், அவளை அவளது பதவியிலிருந்து நீக்கி னார். சிலையை எரித்தார் (15:16; 1 அர 15:13). ஆசா தன் சீர்திருத்தத்தை முழுமையா கச் செய்தார். ஆனால் மேட்டு நில புனித இடங்களை அகற்றவில்லை. இதற்காக இவர் குறை கூறப்படவில்லை (2 நாள் 17; 1 அர 15:14).

அவரது ஆட்சியின் 16-வது ஆண்டில் (2 நாள் 16:1-இல் வருவதுபோல் 36-ஆம் ஆண் டில் அன்று) பாசா யூதாவின் மேல் படையெ டுத்து, பேத்தேலுக்கும் எருசலேமுக்குமிடை யிலுள்ள இராமா நகரைப் பலப்படுத்தினார். அதனால் தென் அரசை முற்றுகையிட்டார் (2 நாள் 16:1; 1 அர 15:17). இவர் ஒருவேளை பேத்தேல், எசானால், எப்பிரோன் ஆகிய நகரங்களையும் அவற்றைச் சுற்றிய ஊர்க ளையும் கைப்பற்றியிருக்கலாம். இவற்றை அவர் தந்தையிடமிருந்து முன்பு அபியா கைப்பற்றியிருந்தார் (2 நாள் 13:19). எகிப்தி யர் தாக்கியபோது ஆண்டவரிடம் காட்டிய விசுவாசத்தை இப்போது ஆசா காட்ட வில்லை. மாறாக சீரியாவிடம் உதவி நாடி னார். ஆலயத்திலும் அவர் அரண்மனையி லும் எஞ்சியிருந்த வெள்ளியையும் தங்கத் தையும் சீரியா பென்-அதாதுக்கு கொடை யாக அனுப்பினார். அவரும் இந்த அரசியல் நட்பு அடையாளத்தை ஏற்றுக்கொண்டார். அவர் பாசாவின் தந்தையோடு யூதாவுக்கு எதிராகக் கூட்டணியில் சேர்ந்திருந்தார். இப் போது அக்கூட்டணியை முறித்தார். அவர் வட அரசின் வட பகுதியிலுள்ள நகர்களைக் கைப்பற்றத் தொடங்கினார். அதனால் இரா மாவைப் பலப்படுத்துவதை பாசா கைவிட் டார். ஆசா, இராமாவில் பாசா பயன்படுத் திய கற்களையும் மரங்களையும் அகற்றி அவற்றைக் கொண்டு பென்யாமின் பகுதி யில் கெபா, மிசுப்பா ஆகியவற்றைக் கட்டி னார் (2 நாள் 16:10; 1 அர 15:22). 2 நாள் 17:2-இன்படி ஆசா சில எப்பிராயிமியர் நகரங்களையும் கைப்பற்றியிருக்க வேண் டும்.

சீரியாவின் உதவியை நாடியதை அரசரா கம ஆசிரியர் தீர்ப்பிடவில்லை. ஆனால் நாளாகமம் காட்சியாளர் கனானியின் கண்ட னத்தை எடுத்துக் கூறுகிறது (2 நாள் 16:7-10). செராகுவிடமிருந்து காப்பாற்றிய ஆண்ட வரை நம்பாததைக் கண்டனம் செய்வ தோடு, ஆசா சீரியர்களை நம்பி பென்-அதாதைத் தப்ப விட்டார், ஆகையால் யூதா வுக்கும் சீரியாவுக்கும் வருங்காலத்தில் இடைவிடாத போராட்டம் இருக்கும் எனக் காட்சியாளர் அறிவித்தார். ஆசாவின் செயல் அவருக்குப்பின் வந்த யூதாவின் அரசன் ஆகா சுக்கு ஒரு மாதிரிகையாயிற்று. ஆகாசு, பிற் காலத்தில், சீரியா, இஸ்ராயேல் சேர்ந்து செய்த படையெடுப்பைத் தடுக்க அசீரியா கள் உதவியை நாடுவார் (2 அர 16:5-9). காட்சியாளர் கூற்றைக் கேட்ட ஆசா கோபா வேசம் கொண்டு கனானியைச் சிறையிலிட் டார். தம் மக்களுள் பலரைக் கொன்று குவித்தார் (2 நாள் 16:10).

20 ஆண்டுகளுக்குப்பிறகு (873) ஆசாவுக்கு கால்களில் ஒரு கொடிய வியாதி உண்டாகி யது (16:12; 1 அர 15:23). இது அவர் மரிப்பதற்கு இரு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. ஆண்டவரது உதவியை நாடப்

போதிய காலம் இருந்தும், மருத்துவர்களின் உதவியை நாடினார். இவர்கள் ஒருவேளை குறி சொல்பவர்களாக இருக்கலாம். ஆசா 871-இல் மரித்தார். அரசர்கள் கல்லறையில் ஆடம்பரத்துடன் அடக்கம் செய்யப்பட்டார் (2 நாள் 16:12-14; 1 அர 15:24).

எருசலேமுக்குத் திருயாத்திரை செய்த இஸ்ராயேலரை இசுமயேல் கொலை செய்து அவர்களின் உடலை தற்காப்பிற்காக ஆசா வெட்டிய பள்ளத்தில் போட்டார் என்று எரே 41:9 கூறுகிறது. இயேசுவின் மரபு முறைப் பட்டியலில் அபியாவுக்குப் பின்னும் யோசபாத்துக்கு முன்னும் ஆசா இடம் பெறுகிறார் (மத் 1:7-8).

2. ஒரு லேவியர், எல்கானாவின் மகன், ஒபதியாவின் மூதாதையர். இவர் நெத்தோபாவியர் ஊர்கள் ஒன்றில் வாழ்ந்து வந்தார் (2 நாள் 9:16).

ஆசாபு (ASAPH - ஒன்று கூட்டுபவர்)

1. ஆசாபு கெரிசோம் குடும்பத்தைச் சேர்ந்த பெரக்கியாவின் மகனாவார் (1 நாள் 6:39). எருசலேமுக்குப் பெட்டகம் கொண்டு வரப்பட்ட போது ''பாடல் பணிக்கு''ப் பொறுப்பாக ஏமான், எதுத்தூன் ஆகியோரோடு நியமிக்கப்பட்டவர் (1 நாள் 6:39;15: 19). பேழை எருசலேமில் நிறுவப்பட்டபின் ''ஆண்டவரின் செயல்களை நினைவு கூர்ந்து '' அவரைச் சரியான முறையில் வாழ்த்திப் போற்றிவர நியமிக்கப்பட்ட லேவியரில் ஒருவர் (16:4-6). ஆசாபு முதன்மையாக ஒரு இளைஞன், பாணன் (15:19; 16:5). அவர் சங் 50;73-83-ஆகியவற்றை இயற்றியதாகக் கருதப்படுகிறது. (இச்சங்கீதங்களில் மேல் குறிப்புகளைக் காண்க). 2 நாள் 29:30-இல் வரும் காட்சியாளரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம் (காண்க நெக 12:46).

தாவீதின் ஆட்சிக் காலத்தில் ஆசாபின் புதல்வர்கள் தங்கள் இசையால் ''இறைவாக்குரைத்தனர்'' (1 நாள் 25:1-2). பிற்காலத்தில் அரசன் யோசியா காலத்தில் இவரது வழித்தோன்றல்கள் பாடகர்களாகத் தோன்றுகின்றனர் (2 நாள் 35:15). அவர்களில் பலர் (எஸ் 2:41-இன்படி 128 பேரும், நெக 7:44 இன்படி 148 பேரும்) பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்து பாடகர்களாகவோ, இசைஞர்களாகவோ, எருசலேமில் குடியேறினர். ஆலய அடிக்கல் திருநிலைப்படுத்தப்பட்டபோது தங்களுக்குரிய அலுவல்களைச் செய்தனர் (எஸ் 3:10). பிற்காலத்தில் இவர்கள் ஆண்டவரது ஆலயத்தில் லேவியரின் மேற்பார்வையாளர்களாகவும் (நெக 11:22) நகரச் சுவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டபோது எக்காளம் ஊதவும் நியமிக்கப்பட்டனர் (12:35).

2. அரசர் எசக்கியாவின் பதிவாளர், யோவாசின் தந்தை அல்லது மூதாதையராக இருக்கலாம் (2 அர 18:18.37; ஏச 36:3.22).

3. அர்த்தாசெருசுக்குச் சொந்தமான காடுகளைப் பாதுகாப்பவர். எருசலேமில் ஆலயமும் நகரச் சுவர்களும் கட்டி எழுப்பப்பட வேண்டிய மரங்களை அனுப்பும்படி இவர் அரசனால் கேட்டுக் கொள்ளப்பட்டார் (நெகு 2:8).

4. 1 நாள் 26:1-இல் குறிக்கப்படும் ஒருவர். இப்பெயர் அபியசாபின் மற்றொரு பெயராக இருக்கலாம். இவரும் 1-இல் குறிக்கப்பெறுபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

ஆசால் (AZAL - அருகிலுள்ள)

ஆசால் என்ற நகரான முற்காலங்களில் அடையாளங் கண்டுணரப்படாத நகரம் என்று கருப்பட்டது. போர்க் காலத்தில் ஆண்டவர் தம் மக்களுக்கு அளித்து வந்த பாதுகாப்பின் சூழ்நிலையில் இப்பெயர் செக் 14:5-இல் குறிக்கப்படுகின்றது. சில மொழிபெயர்ப்புகளில் இவ்வார்த்தையானது 'பக்கத்தில்' என்று மொழி பெயர்க்கப்பட்டது. வாசகம் குறிப்பது ஒரு ஓடையையா அல்லது இடத்தையா என்பது தெளிவாக இல்லை.

ஆசான் (ASHAN - புகை)

செப்பேலாவில் உள்ள ஒரு நகரம். தொடக்கத்தில் இது யூதாவுக்குப் பங்கு செய்யப்பட்டாலும் (யோசு 15:12), பிறகு இது

மிகப் பெரியதாக்கப்பட்டதால் (19:9), யூதா வினுள் சிமியோனுக்குக் கொடுக்கப்பட்டது (19:7; 1 நாள் 4:32). தாவீது தனது ஆட்சி அமைப்பைத் திருத்தி அமைத்தபோது, இந்ந கரம் யூதாவில் ஒரு லேவியர் நகரமாக்கப் பட்டு, ஆரோனியர் வாழ்ந்த இடமாகியது (1 நாள் 6:59).

1 நாள் 6:59-இல் காணப்படும் விவரிப் பின் அடிப்படையில் யோசு 21:16-இல் வரும் அயின் என்பதை ஆசான் என்று வாசிக்க அறிஞர்கள் ஆதரவு தருகின்றனர். அநேகமாக 1 சாமு 30:30-இல் வரும் போர சான் என்பதும் ஆசான் என்பதும் ஒரே இடத்தையே குறிக்கின்றன. ஆசான் பெயேர்-செபாவுக்கு மேற்கு வடமேற்கில் 8 கி.மீ தொலைவிலுள்ள இக்கால கிர்பெத்து-ஆசான் என்பதாக இருக்கலாம் என்று அடை யாளம் காட்டப்படுகிறது.

ஆசியா (ASIA)

ஆசியாக் கண்டத்தின் ஒரு சிறிய பகுதி. புதிய ஏற்பாட்டில் சிறிய ஆசியாவின் ஒரு மாநிலமாகும்.

இதன் உண்மையான பரப்பளவு, அதன் எல்லைகள் ஏதுவென்று ஒவ்வொருவரும் ஒரு கருத்துக் கொண்டுள்ளனர். ஏனெனில் பல்வேறு காலக் கட்டங்களில் இது வெவ் வேறு பகுதிகளாக அமைந்திருந்தது. வெவ் வேறு பகுதியை இது குறித்தது. கிரேக்கப் புவியியல் அறிஞர்களுக்கு ஆசியா என்றால் ஆசியாக் கண்டத்தையோ அல்லது அதன் பெரும்பகுதியையோ குறித்தது. உரோமை யர் இவ்வாறு குறிக்கவில்லை.

வெளிப்பாட்டு இலக்கியங்களில் இது செலூக்கிய அரசாங்கத்தையும், அவர்கள் நாட்டையும் குறிப்பதாகக் கொள்ளலாம். ஏனெனில் அதன் அரசர்கள் 'ஆசியாவின் அரசன்'' என்றே குறிக்கப்பட்டனர் (1 மக் 8:6; 2 மக் 3:3; 1 மக் 11:13; 12:39; 13:32). புதிய ஏற்பாட்டில் இது உரோமையின் ஆட் சிப்பகுதியில் ஒன்றாக அமைந்திருந்தது (அ.ப. 2:9; 19:10). ஒரு சில இடங்களில் மட்டும் இது வேறுசில இடங்களைக் குறித் தது.

உரோமையரின் ஆட்சியின் கீழ்: இது அத்தாலியர்களுள் ஒருவரான மூன்றாம் அத் தாலுசு என்பவரால் ஆளப்பட்டது. பிறகு ஒரு உரோமையர் மாகாணமாகியது. இது மிசியா, இலிதியா, காரியா கடற்கரைப் பகுதிகளையும் கொண்டது. கி.மு. 116-இல் பித்தினியா, இலிசியா, கலாத்தியா, ஏஜியக் கடல் இவற்றிற்கிடையே அமைந்த விரிந்த பகுதியாக இருந்தது.

இந்த உரோமை மாநிலத்தின் முதல் தலை நகரமாகப் 'பெர்கமோன்' இருந்தது. அகுஸ்து சீசர் ஆண்டபோது எபேசு தலைநக ராக்கப்பட்டது. ஏனெனில் எபேசு நகரம் துறைமுக நகரமாகவும் செய்தித் தொடர்பு மையமாகவும் முக்கியத்துவம் பெற்றதே அதற்குக் காரணம்.

உரோமை மூப்பர் அவைப் பொறுப்பில் அமர்த்தப்பட்ட ஆளுநர்கள் பலவகைகளில் இதனைச் சுரண்டியதால் மக்கள் அகுஸ்து சீசரின் ஆட்சியைக் கண்காணிப்பை வரவேற் றனர். ஏனெனில் அவர் அமைதியையும் வளமையையும் பொறுப்புள்ள நிலையான அரசாட்சி அமைப்பையும் அங்கு நிலவச் செய்தார். எனவே ஆசியாவும் பேரரசருக்கு மிகவும் விசுவாசமுள்ள ஒரு பகுதியாகத் திகழ்ந்தது. உரோமைய மாநிலங்களிலேயே மிகுந்த செல்வமிக்கது ஆசியா என்பதை சிசெரோகூட மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகி றார்.

அலக்சாந்தரின் காலத்திற்கு முன்பே கிரேக்கக் கலாச்சாரத்தில் வளர்ச்சிப் பெற்று கி.பி. முதலாம் நூற்றாண்டில் கிரேக்கப் பண்பாட்டின் சிகரமாகத் துலங்கிய சிறிய ஆசியாவின் ஒரு பகுதி இது. அலக்சாந்தி ரியா, அந்தியோக்கியா போன்று எந்த ஒரு பெரிய நகரமும் இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆனால் பல நடுத்தரமான நகரங்கள் இருந்தன. அவையும் தன்னகத்தே நன்கு வளர்ச்சி பெற்றுத் திகழ்ந்தன. அவற் றுள் எபேசு, சிமிர்னா, சார்தை, பெர்க

மோன், லேம்சாகுஸ், சிகிகுஸ் போன்றவை யும் சிறந்து விளங்கின.

ஆசியாவின் சமயங்களுள் பலவகையான வழிபாடும், சடங்குகளும் இருந்தன. அனத்தோலிய சமயங்களுள் மகா அன்னையை வழிபடுதலும் ஒன்றாகும். உரோமைத் தெய்வங்களான அர்தெமிஸ் தயானா (எபேசு நகர்) போன்றவற்றையும், அஸ்க்லேபியு (பெர்கமோன்) ஆகிய தெய்வங்களையும் வழிபட்டனர். தொடக்க காலத்தில் கிறிஸ்தவம் இங்கு வளர்வதற்கு பேரரசர் வழிபாடும் ஒரு முக்கிய காரணமாகும். முக்கியமாக, அமைதியை நிலைநாட்டிய அகுஸ்து சீசரின் வழிபாடு பெரிதும் ஆசியாவில் இருந்து வந்தது. இப்பகுதியினரே கி.மு. 29-இல் பேரரசரை வழிபட் உத்தரவு கேட்டனர். பின்னர் பேரரசரை வழிபட மறுத்த கிறிஸ்தவர்கள்மேல் வெறுப்புத் தோன்ற ஆரம்பித்தது.

புதிய ஏற்பாட்டில்:- ஒரு சில இடங்களைத் தவிர ஆசியா என்பது உரோமையின் ஒரு மாநிலத்தையே குறிக்கும். ஐம்பதாம் நாள் விழாவின்போது இப்பகுதியில் இருந்தும் யூதர்கள் வந்திருந்தனர், ஆனால் பிரிகியாவையும் இது உள்ளடக்கும் (அ.ப.2:9-10). அங்குள்ள யூதர்களின் எண்ணிக்கையும் ஸ்தேவனுடன் சிலர் விவாதம் செய்தது பற்றியும் கூறப்படுகிறது (6:9).

பவுலின் இரண்டாவது நற்செய்திப் பயணத்தின்போது இப்பகுதிக்குப்போக வேண்டாமென நற்செய்தி அறிவிக்க வேண்டாமென ஆவியால் அறிவுறுத்தப்பட்டாலும் துரோவா என்ற நகருக்குச் சென்றனர் (அ.ப. 16:6-8). கிரேக்கத்திலிருந்து திரும்பியபொழுது பவுல் எபேசு நகரில் சிறிது தங்கினார் (18:19-21). பவுல் தமது மூன்றாவது நற்செய்திப் பயணத்தின்போது எபேசும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் இறைவார்த்தையை நன்கு கேட்க வேண்டுமென்ற நோக்குடன் இரண்டு ஆண்டுகளை இப்பகுதியில் கழித்தார் (19:10). தனது இறுதிப் பயணத்தின்போது ஆசியா வழியாக செல்ல விரைந்தார். ஆனால் மிலேத்து துறைமுகத்தை மட்டுமே தொட்டுச் சென்றார் (20:16-17). எபேசு நகரில் அவர் நீண்ட காலம் தங்கினார் என்பது அவரது பல மடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (உரோ 16:5; 1 கொரி 15:32; 16:8; 2 கொரி 1:8).

திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியருக்கு ஆசியாவே மிகுந்த ஈடுபாட்டு மையமாக இருந்தது. அவர் குறிப்பிடும் ஏழு திருச்சபைகளும் ஆசியாவின் மேற்குப் பகுதியில் உள்ள இடங்களே. ஒருசில திருச்சபைகளையே அவர் தேர்ந்தெடுத்துப் பேசுவதிலிருந்து அவற்றை அவர் நன்கு அறிந்திருந்தார் எனத் தெரிகிறது. அவர் குறிப்பிட்டுப் பேசும் முக்கியமான மூன்று நகரங்கள் எபேசு, சிமிர்னா, பெர்கமோன் ஆகியவையே (திருவெளி 1:4). பிறகே இந்த வரிசையில் தியத்திரா, சார்தை, பிலதெல்பியா, இலவோதிக்கயா ஆகியவை வருகின்றன (1:11). ஆசியாவின் பிற நகரங்களாக புதிய ஏற்பாட்டில் கொலோசை, எராப்போலி, அதிராமித்தியம், ஆசோ ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறிஸ்துவத்திற்கேற்பட்ட எதிர்ப்பிலிருந்து ஆசியத் திருச்சபைகள் தப்பின. 5-ஆம் 6-ஆம் நூற்றாண்டுகளில் கிறிஸ்துஇயல் போதக வளர்ச்சியில் இத்திருச்சபைகள் முக்கியப் பங்கு வகித்தன.

ஆசியார்க்கு (ASIARCH - ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்)

இன்னும் தகுந்த ஆதாரங்கள் கிடைக்காததால் இந்த வார்த்தையின் சரியான தோற்றத்தையும், பொருளையும், விளக்கத்தையும் அளிக்க இயலவில்லை. இந்த வார்த்தை ஸ்த்ராபோவால் பயன்படுத்தப்பட்டுள்ளது. போலிகார்ப்பின் வேத சாட்சியம் என்ற நூலிலும் ஆசியா நகரங்களில் காணப்படும் கற்களிலும், நாணயங்களிலும் உள்ள பல குறிப்புகளில் இது காணப்படுகிறது.

ஆசியார்க்குகள் என்பவர்கள் ஆசியாவிலுள்ள உரோமை மாநிலங்களில் தாங்கள்

பிரதிநிதிகளாக இருந்த அல்லது தாங்கள் பணி செய்த நகரங்களில் செல்வந்தர்களாக வும், அதிகாரம் உடையவர்களாகவும் இருந் தார்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியும். இவர்கள் உரோமைய ஆட்சி அமைப்பைச் சேர்ந்தவர்களல்ல; ஆனால் மாமன்னரு டைய வழிபாட்டையும், உரோமைத் தேவ தையின் வணக்கத்தையும் பாதுகாத்து, வளர்ச்சியடையச் செய்ததால் இவர்கள் உரோமையராலே மதிப்பு மிக்கவர்களாகக் கருதப்பட்டனர். இப்படிப்பட்ட ஒரு சேவை திருவிழாக்கள், அதனுடன் சேர்ந்த விளை பாட்டுக்களுக்காக ஆகும் செலவுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒரு ஆசியார்க்கு தனது சொந்தச் செலவில் பொது குளிப்பிடத்தைச் சீர் செய்யலாம், அல்லது பரிசு அளிக்கப்படும் சண்டைப் போட்டிகளை நடத்தலாம். ஆசியார்க்குகள் சில சமயங்களில் தாங்கள் உள்ள ஊரில் உள்ள மாமன்னரின் வழிபாட்டை நடத்தும் கோவிலுக்குள் தலைமைக் குருவாகவும் அல்லது இன்னும் சிறப்பாக 'ஆசியாவின் தலைமைக் குரு' என்றும் அழைக்கப்பட்ட னர். இப்பதவி ஓர் ஆண்டுக்குத்தான் உரியதா னாலும், மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். பதவி போனபின்னும் பட்டம் நிலவலாம். இப்படிப்பட்டவர்கள் எபேசு போன்ற நக ரங்களில் பலர் இருந்திருக்க வேண்டும்.

ஆசியார்க்குகள் மேற்சொன்ன வேலைக ளைச் செய்தார்கள் என்றால், அவர்கள் அப் போஸ்தலர் பணியில் சொல்லப்பட்டிருப்ப தின் முக்கியத்துவம் தெரிகின்றது. பவுலுக்கு எதிராக எபேசில் செய்த கலகத்தில், ஆசி யார்க்குகள் பவுலுக்குத் துணை செய்ததாக லூக்காஸ் கூறுகின்றார். எபேசின் கல்வியு டைய மக்கள் நகரில் பவுல் போதிப்பதைத் தடுக்கவில்லை *(அ.ப.19:23-41)*.

ஆசிரியேல் (AZRIEL - இறைவன் என் உதவி ஆவார்)

1. யோர்தானுக்கு அப்பால் வாழ்ந்த மனா சேயின் பாதிக் குலத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர்களில் ஆசிரியேலும் ஒருவராவார் *(1 நாள் 5:24)*.

2. இவர் தாவீது காலத்தில், நப்தலியருக் குத் தலைவனாகிய எரேமோத்தின் தந்தை *(1 நாள் 27:19)*.

3. எரேமியாவின் இறைவாக்குப் பணிக்கா லத்தில் அரசர் யோயாக்கிமின் ஊழியர்க ளுள் ஒருவராகிய செராயாவின் தந்தை *(எரே 36;26)*.

ஆசேம் (HASHEM - கொழுத்த, பருத்த)

கிசோனிய குலத்தைச் சேர்ந்தவர். தாவீ தின் ''முப்பதின்மர்'' என்ற ஆற்றல்மிக்க படைவீரர்களுள் ஒருவர். 2 சாமு 23:32-இல் வரும் இணையான பகுதியில் இவர் யாசே னின் மகன் என்றழைக்கப்படுகிறார்.

ஆசேரியர் (ASHERITES)

ஆசேரின் இனத்தவர். ஆசேரின் ஐந்து பிள்ளைகளின் வழித் தோன்றல்கள் *(ஆதி 46:17; 1 நாள் 7:30)*. காண்க. ஆசேர்.

ஆசேர் (ASHER - மகிழ்ச்சியான)

யாக்கோபின் எட்டாவது மகனும் பன்னி ரண்டு இனங்களில் ஒன்றின் மூதாதையரும் ஆவார். இவர் லேயாவின் வேலைக்காரி சில்பாவுக்கு *(ஆதி 30:12-13)* பாதான்- ஆராமில் பிறந்தவர் *(35;26)*. இவர் காது என்பவரோடு கூடப் பிறந்த சகோதரர். ஆகையால் இவர் பெயர் மரபு முறைப் பட்டியலில் எப்பொழுதும் காதிற்கு அடுத்து வருகிறது *(ஆதி 35:26; 46:17; யாத் 1:4; 1 நாள் 2:2)*. ஆசேரின் வழித் தோன்றல்கள் செழிப்பான பகுதியில் வாழ்வர் என்று யாக் கோபின் ஆசிரில் முன்னறிவிக்கப்பட்டது *(ஆதி.49:20)*. மோசேயின் ஆசிர்களில் இது மீண்டும் புதுப்பிக்கப்பட்டது *(உப 33:24)*.

பாலஸ்தீனம் கைப்பற்றப்பட்டபின் ஆசே ரின் ஐந்து பிள்ளைகளின் வழித்தோன்றல்கள் ஆகிய *(ஆதி 46:17; 1 நாள் 7:30)* ஆசேரின் மக்கள் தொகை இரண்டாவது கணக்கெடுப் பின்படி 53,400 ஆகும் *(எண் 26:47)*. இவர்க ளுக்கு கர்மேல் மலையிலிருந்து வடக்கே சீதோன் வரையிலும், கிழக்கில் செபுலோன், நப்தலி ஆகிய பகுதிகளைக் கொண்ட நாடு

பங்கீடு செய்யப்பட்டது (யோசு 19:24-31). நீதி 1:31-32-இன்படி அவர்களால் ஆக்கோ, சீதோன் போன்ற நகரங்களைக் கைப்பற்ற முடியவில்லை. ஆகையால் கானானியருடன் வாழ வேண்டியிருந்தது. இந்த நிலையே மற்ற இஸ்ராயேல் இனத்தவர்களுக்கும் வாய்த்தது. கானானியர்களின் சில நகரங்களை மானாசே கைப்பற்றினார் (யோசு 17:11).

இதன் புவியியல் அமைப்பால், ஆசேர் நாடு கடல் வாணிபத்தில் தீர் நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. மிகச் சிறந்த இடத்தில் குடியேறியிருந்த ஆசேரியர்கள் இஸ்ராயேல் நாட்டு வாழ்வில் மற்ற இனத்தவரைப் போல் அவ்வளவு பங்கு கொள்ளவில்லை. இஸ்ராயேலர் கானானிய நாட்டு அரசர்களது கூட்டணியை எதிர்த்துப் போரிட்டபோது கடற்கரையில் வெறுமனே தனித்து நின்றதாக ஆசேரியரை தெபோரா குறை கூறியதைக் கண்டு வியப்பு அடைய வேண்டியதில்லை (நீதி 5:17). கானானியர்களை வெல்லச் செய்த முயற்சிகள் வீணானதும் (நீதி 1:31.தொ) ஆசேர் இவர்களிடம் கொண்டிருந்த வாடிக்கையான வியாபாரமும் இப்போரில் பங்கு எடுப்பதிலிருந்து ஆசேரியர்களைத் தடுத்து இருக்கவேண்டும் (நீதி 13:1தொ). மற்ற காலங்களில் இவர்கள் இஸ்ராயேலரோடு ஒத்துழைத்தனர். சான்றாக கிதயோன் மிதியானியர்களை இசிரியேல் என்ற சமவெளியில் தோற்கடிக்க உதவியதுமல்லாமல் (6:35) அவர்களை விரட்டியும் அடித்தனர் (7:23).

அரசாட்சிக் காலத்தில் ஆசேரின் நகரங்களில் நான்கு (யோசு 19:30) லேவியர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன (21.30-31; 1 நாள் 6:74-75).தீரின் கிராம் ஆலயம் கட்டுவதற்குப் பொருள்கள் வழங்கியதிற்குப் பதிலாக, காபூல் பகுதியைச் சேர்ந்த ஆசேரின் பல நகரங்கள் சாலமோனால் கிராமுக்கு அளிக்கப்பட்டன (1 அர 9:11-13).

அசிரிய மன்னர் 2-ஆம் சார்கோன் சமாரியாவைக் கைப்பற்றியபின், மற்ற வட இனத்தவர்களைச் சேர்ந்தவர்கள் போல், ஆசேரியரில் பெரும்பாலோர் நாடு கடத்தப்பட்டனர் (2 அர 17:6). விடப்பட்டவர்களில் சிலர், எருசலேமுக்கு வந்து பாஸ்கு விழாவில் பங்கெடுக்க எசக்கியா கொடுத்த அழைப்பை ஏற்றனர் (2 நாள் 30:11). யூதாவின் அரசன் யோசியா செய்த சீர்திருத்தத் திட்டத்தில் ஆசேரின் பகுதியும் உள்ளடங்கியிருக்கலாம். அரசன் வட பகுதியில் கானானிய வழிபாட்டை ஒழிக்க 622-இல் நப்தலி வரை சென்றார் (2 நாள் 34:6:33). எசக்கியேலின் இறைவாக்குப்படி நாட்டைப் பங்கீடு செய்ததில் ஆசேரியர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர் (எச 48:2-3).

பின்னால் வந்த நூல்களில் ஆசேரின் பெயர் பட்டியல்களிலும், பட்டியல்களைப் போன்ற இடங்களிலும் காணப்படுகின்றது. சில பட்டியல்களில் ஆசேர், காதிலிருந்து பிரிந்திருந்ததாகத் தாண் நப்தலிக்கு இடையில் இடம் பெறுகிறது (எண் 1:40; 2:27; 7:72; 10:26; 13:13; 26:44-47). வேறு சில இடங்களில் ஆசேர், இசக்காருக்கும் நெப்தலிக்கும் இடையில் வருகிறது (எண் 34:27). எபால் மலைமீது சாபமிட இருந்தவர்களில் காதுடன் ஆசேரும் இருக்கின்றார் (உப 27:13). லேவியர் நகரங்களில் ஆசேர் வடக்குக் குழுவில் இசக்காருக்கும், நெப்தலிக்கும் இடையில் வருகின்றார் (யோசு 21:6;30-31;1 நாள் 6:6 2;74-75).

புதிய ஏற்பாட்டில், இறைவாக்கினி அன்னா ''ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகள்'' என்று குறிக்கப்படுகிறார் (லூக் 2:36). இறைவனுடைய பாதுகாப்பு முத்திரைப் பெற்றவர்களில் காது குலத்தை அடுத்து அசேர் குலத்தைச் சேர்ந்தவர்கள் பன்னீராயிரம் என்று குறிக்கப்படுகிறது (திருவெளி 7:6).

ஆசேல் (AZEL - மேன்மையான)

ஆசேல் என்பவர் எலயாசாவின் மகனாவார். சவுலின் மகனாகிய யோனத்தானின் வழிவந்தவர்களில் ஒருவராவார். இவர் ஆறு ஆண் மக்களுக்குத் தந்தையாவார் (1 நாள் 8:37-38; 9:43-44).

ஆசோ (ASSOS - நெருங்குதல்)

ஆசியாவைச் சேர்ந்த உரோமை மாநிலத்திலுள்ள மிசியாவின் துறைமுகம் (அ.ப. 20:13-14). அதிராமித்தியம் வளைகுடாவின் மேல், இன்றைய பெக்ரும்கோய் என்ற கிராமமிருக்கிற இடத்தில் இது இருந்தது. இது முதன் முதலாக லெஸ்போசைச் சேர்ந்த ஏயோலிக் (கி.மு.900) குடியிருப்பாக இருந்தது. இது பெர்கமோன் அரசர்களால் மீண்டும் கட்டப்பட்டு இதற்கு அப்பொல்லோனியா என்று பெயரிடப்பட்டது.

இது செங்குத்தான எரிமலை மேல் அழகான தோற்றத்துடன் அமைக்கப்பட்டு இருந்தது. ஏறக்குறைய கடலுக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவிலும் செங்குத்தான அமைப்பினாலும் பாதுகாக்கப்பட்டது. இதனைச் சுற்றி இரண்டு மைல் நீளத்திற்கு 65 அடி உயரத்திற்கு பாதுகாப்புச் சுவர் உள்ளது. செயற்கை அகழியால் இதன் துறைமுகம் அமைந்துள்ளது. கடற்கரைக் கப்பல் போக்குவரத்துக்குப் போதியது. தொல்பொருள் ஆய்வுகள் பலவற்றைக் கண்டுபிடித்துள்ளன. இவற்றில், அத்தீனாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பல கலைப்பண்புகளையுடைய ஒரு தோரிக் ஆலயம், சுவர்கள், சந்தைக்கூடம், விளையாட்டு அரங்கம், குளியல் அறைகள், நாடக அரங்கம் ஆகியவையாகும்.

இங்கு தத்துவ அறிஞர் அரிஸ்தாத்தில் 3 ஆண்டுகள் படிப்பித்தார் (348-345). கிளெயான்தெஸ் என்ற ஸ்தோயிக் தத்துவ அறிஞர் வாழ்ந்த இடம் இது. இது பரந்த வேளாண்மை நிலத்தைக் கொண்டிருந்தது. இது ஏற்றுமதி செய்த கோதுமை தன்மைக்குப் புகழ்வாய்ந்தது.

பவுல் தனது தோழர்களைப், படகில் லெக்தும் முனையைச் சுற்றிச் செல்ல அனுப்பிவிட்டு (காண்க அ.ப.27:2) துரோவாவிலிருந்து ஏறக்குறைய 32 கி.மீ தொலைவிலிருந்த ஆசோவிற்கு தரை மார்க்கமாகச் சென்றார். இந்தப் பயணம் கடற் பயணத்தைவிடக் குறைந்த நேரம் எடுத்ததால், தன் தோழர்கள் ஆசோவிற்கு வந்து சேருமுன், பவுல் துரோவாவில் நீண்ட காலம் தங்க முடிந்தது (அ.ப.20:13-14).

ஆசோர் (AZOR - உதவி, உதவியாளர்)

இவர், யோசேப்பு, இயேசு ஆகியோரின், நாடு கடத்தப்பட்டதற்குப் பிற்காலத்திய மூதாதையரில் ஒருவர் (மத் 1:13-14).

ஆசிரும் சாபமும்

1. சமய சமுதாயத்தின் முழுமையானது பாதுகாக்கப்படவும், உறுதிப்படுத்தப்படவும், தீய சக்திகள் அடக்கப்படவும் அல்லது அழிக்கப்படவும், சடங்குகள் அல்லது மற்ற சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் சைகைகளோடும் அடையாளச் செயல்களோடும் சேர்த்துக் கூறப்படுகின்ற வலிமைமிக்க வார்த்தைகளே இவை. பழங்கால மேற்காசிய நாடுகளில், பெரும்பாலான கடந்து போன மற்றும் இன்றைய சமய சமுதாயங்களில் இருப்பது போன்று, ஆசீர்களும் சாபங்களும் கலாச்சாரத்தின் ஒரு நிலையான பகுதியாகவும் இருந்தன. அனுதின வாழ்விலும் ஒரு முதன்மையான இடத்தை பெற்றிருந்தன. ஆசீரும் சாபமும் அளிக்கின்றவனுடைய செயல்களும் வார்த்தைகளும் அவனுடைய கட்டுப்பாட்டிலேயே இருந்து, அவனுடைய ஏவுதலின் மூலம் அவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவனவாக உள்ள மாந்திரீக நிலையிலிருந்து தெய்வத்தின் (தெய்வீக அல்லது பேயின் உயிர்கள்) ஆற்றலிலும் குறிக்கோளிலும் இருந்து தங்களது தோற்றத்தையும் விளைவுகளையும் பெறுகிறதாகக் கருதப்படும். ஆசீர்கள், சாபங்களை வேறுபடுத்துவது பெரும்பாலும் கடினமானதாகும். இன்றைய வடிவில் பெரும்பாலான ஆசீர் மற்றும் சாப வாய்ப்பாடுகள் அவற்றிலிருந்து வெளிப்படும் ஆற்றலை இஸ்ராயேலின் இறைவனுக்கே சாற்றிக் கூறினாலும் ஆசீர் மற்றும் சாபம் பற்றிய பழைய ஏற்பாட்டுக்கருத்தில் மாந்திரீகக் கூறுகள் காணப்படுகின்றன (ஆதி 48:14-15; 1 சாமு 14:24; 1 கொரி 12:1-3; கலா 1:8).

ஆசீர்வதிக்கவோ சபிக்கவோ கூறப்பட்ட வார்த்தையின் மாயவித்தை ஆற்றலில், நாக

ரீக முதிர்ச்சியற்றப் பண்டைக்கால விசுவாசம் பற்றிச் சில சுவடுகளே பழைய ஏற்பாட்டில் உள்ளன. சில பழைய நிகழ்ச்சியுரைகள், மூடநம்பிக்கைகளின் சுவடுகளைக் கொண்டுள்ளன. ஆனால் அவற்றின் இறுதிப்பதிப்பில், ஆசீர்கள் இறுதியில் ஆண்டவரிடமிருந்தே வருகின்றன என்று இவை தெளிவாக்குகின்றன. இவ்வாறு யாக்கோபுக்கு ஈசாக் அளித்த ஆசீர், முதிர்ச்சியற்றப் பண்டைக் கால விசுவாசப்படி தள்ளுபடி செய்ய முடியாதெனினும், அது யாக்கோபை இறைவன் தேர்ந்தெடுத்ததின் விளைவே ஆகும் என்று யாவே பாரம்பரியம் சுட்டிக்காட்டுகிறது (ஆதி 25:23; 27:33-38). ஆசீரின் உண்மையான வடிவம் ஆண்டவரை நோக்கிய ஒரு மன்றாட்டாகும். இதில் மாயவித்தை ஆற்றல் பற்றிய எந்தச் சுவடுமில்லை (27:28). இறைவனோடு யாக்கோபு போராடிய நிகழ்ச்சியுரை (32:24-30) பழங்காலப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது. இது ஒருவேளை ஒரு தெய்வத்திடமிருந்து ஆசீர் வல்வந்தமாக பறிக்கப்பட்டது என்று சுட்டலாம். ஆனால் இதைத் திருப்பி அமைக்கும் யாவே பாராம்பரியம் இறைவன் தமது ஆசீரைச் சுதந்திரமாகவே அளித்தார் என்று தெளிவாகக் காட்டுகிறது (32:29).

எல்லா ஆசீர்களுக்கும் ஆண்டவரே ஊற்று என்று ஆழ்ந்த சமய உணர்வு கொண்டிருந்தனர் இஸ்ராயேலர். ஒருவரைச் சந்திக்கும் போது முகமன் கூறுவது, ஆண்டவரை நோக்கிய ஒரு மன்றாட்டாக அமைந்திருந்தது (ஆதி 24:31; ரூத் 2:4). அதன் விளைவு ஆசீர்வதிக்கும் வழக்கு முகமன் கூறி வாழ்த்துதலைக் குறித்தது (ஆதி 47:7-10; 1 சாமு 13:10). உயிருள்ளவற்றை எல்லாவற்றிற்கும் பலுகிப்பெருகும் சிறப்பான ஆற்றல் அளித்து இறைவன் அவற்றை ஆசீர்வதித்தார் (ஆதி 1:22.28). அவர் ஆபிரகாமுக்கு அளித்த ஆசீரும் பலுகிப்பெருகுவதோடு தொடர்புடையது (12:2-3). சில குறிப்பிட்ட நபர்கள் பிறர்மேல் இறைவனது ஆசீர்களை கூறச் சிறப்பான அதிகாரம் பெற்றிருந்தனர். இவ்வாறு தந்தை தன் பிள்ளைகள் மேலும் (9:26; 27:28; 49:25-26.28), அரசன் தன் குடிமக்கள் மேலும் (2 சாமு 6:18; 2 அர 8:14.55-61), குரு மக்கள் மேலும் (எண் 6:22-27) ஆசீர் கூறுவர். ஆசீர் கூறுதல் இஸ்ராயேல் வழிபாட்டின் முக்கியப் பகுதியாகும். பெரும்பாலும் சாபங்களோடு சேர்த்துக் கூறப்பட்டது (உப 11:29; யோசு 8:34). பிரமாணிக்கமாக வாழத் தவறுவது ஆசீரைச் சாபமாக மாற்றலாம் (மலா 2:2). அதேபோல் நல்ல வாழ்வு சாபத்தை ஆசீராக மாற்றலாம் (உப 23:5; நீதி 17:2; நெக 13:12).

ஒருவன் தன் தெய்வத்தைப் போற்றுவதால் அல்லது ஆசீர்வதிப்பதால் அதைப் பலப்படுத்தக் கூடும் என்ற கருத்து இஸ்ராயேலில் நிலவியதே இல்லை. யாவேயைப் போற்றுதலில் அல்லது ஆசீர்வதித்தலில் இஸ்ராயேலர் அவரைத் தங்கள் ஆண்டவராகவும் அரசராகவும் எல்லா ஆசீர்களின் ஊற்றாகவும் வெளிப்படையாக ஏற்று அறிக்கையிட்டனர். இச்சூழ்நிலையில் ''பராக்'' என்ற எபிரேய வினைச் சொல் போற்றுதலை அல்லது நன்றி கூறுதலை உணர்த்திற்று (ஆதி 24:48; உப 8:10; சங் 66:8; 103:1-2).

2. ஆசியளித்தல் மற்றும் சபித்தலின் வடிவங்கள்:- ஆசி கூறுதல் மற்றும் ஆசீரை வேண்டுதல் என்னும் இருவித முக்கிய வடிவங்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. முதல் வடிவம் கட்டளை வடிவிலும் (ஆதி 1:28; 24:60) கட்டிக்காட்டுகிற வடிவிலும் (ஆதி 27:29; 1 சாமு 25:33) காணப்படுகின்றன. இவை இரண்டுமே, ஆசீரில் கூறப்படும் வார்த்தையில் அடங்கியுள்ள ஆற்றலைப்பற்றி இஸ்ராயேலின் கருத்தை வெளிப்படுத்துகின்றன. இரண்டாவது வடிவம் பிற்கால இஸ்ராயேலின் வழிபாட்டில் முக்கியமானதாக உருவாகி, ஆசீரின் ஆற்றலானது எவ்வாறு தெய்வ நோக்குடன் பிரிக்க முடியாத அளவிற்கு இணைக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

அநேகமாக, உடன்படிக்கை புதுப்பித்தல் சமய சடங்கில் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடிய பழமையான ஆசியுரை வாய்ப்பாடு உப 28:3-6-இல் காணப்படுகின்றது. ஒவ்

வொரு ஆசீரும் 'ஆசீர் பெற்றிருப்பாய் என்னும் தொடரோடு தொடங்குகிறது. ஆசீர் பெறுபவர் இஸ்ராயேலாகவும் அல்லது பிள்ளைகள், மண், விலங்குகள் மற்றும் மண்ணின் விளைச்சல் முதலிய இஸ்ராயேலின் வாழ்வு சார்ந்துள்ள' அடிப்படை ஆதாரங்களாகவும் உள்ளன. மற்ற நிகழ்ச்சிகளில் ஆசீர் பெறுபவரின் பெயரும் கூறப்பட்டுள்ளது: ''உன்னத் இறைவனால் ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்படக்கடவானாக... உன்னத இறைவன் வாழ்த்தப்படுவாராக'' (ஆதி 14:19-20). ''யாவே அல்லது இறைவன் வாழ்த்தப்படுவாராக'' என்னும் வாய்ப்பாடே இஸ்ராயேலின் வாழ்த்தினுடைய மிகப்பொதுவான வடிவமாகும். அவர் புகழப்படுவதற்கான தெய்வசெயல் அதனைத் தொடர்ந்து காணப்படுகிறது (சங் 1:1; 84:12; எரே 17:7). ''மனிதன் ஆசீர்வதிக்கப்படுவானாக'' என்பதும் அடிக்கடி பயன்படும் ஆசி முறையாகும்.

பழைய ஏற்பாட்டின் முழுமையான சாப உரையானது உப 27:15-26 (மற்றும் 28:16-19)-இல் காணப்படுகிறது. இதில் சாபத்திற்கு உட்பட்ட செயல் புரிபவர்களும் குறிக்கப்படுகின்றனர். உ.ம். தனது தந்தையையும், தாயையும் அவமதிப்பவன், தனது அயலானுடய நிலத்தின் எல்லைக்கல்லை அகற்றுபவன், போன்றவர்கள் ''....மனிதன் சபிக்கப்படக் கடவானாக'' என்னும் கூற்றும் அங்கு தோன்றுகிறது (உப 27:15; எரே 17:5).

பழைய ஏற்பாட்டிலுள்ள சாபங்கள் பெரும்பாலும் சபதம் (1 சாமு 14:24), சோதனைகள் (எண் 5:16-28), அல்லது தடைக்குட்பட்டவைபால் மக்கள் அல்லது நகரோ காட்டும் பிரமாணிக்கம் (யோசு 6:26) ஆகியவற்றுடன் தொடர்புடையன. இத்தகைய சாபங்கள் அரிதாகவே இறைவனுக்கு சாற்றிக் கூறப்படுகின்றன. மனிதனுடைய பாவத்தின் விளைவாக பாம்பு (ஆதி 3:14) மற்றும் நிலம் மீதான சாபம் (ஆதி 3:17) போன்றவை இறைவனுக்கே சாற்றிக் கூறப்பட்டுள்ளன. இரண்டு சமயங்களில் சாபங்கள் யாவே முன்னிலையில் உரைக்கப்பட்டுள்ளன (யோசு 6:26; 1 சாமு 26:19). உடன்படிக்கையை கடைபிடிக்காத விசுவாசமற்ற மக்கள்மீது சாபங்களை அனுப்பவிருப்பதாக இறைவன் மிரட்டுகிறார் (உப 28:29).

தெய்வத்தை சபிப்பதானது கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது (யாத் 22:27; லேவி 24:23; யோபு 2:9). இக்குற்றம் எவ்வளவு பயங்கரமானதெனில், சாதாரணமாக சாபத்தைக் குறிக்கும் வினைச்சொற்களை யாவேயோடு சேர்த்துக் கூறப்படுவதில்லை (யாத் 22:27; 1 சாமு 3:13 எழுத்தர்கள் மூல வாசகத்தை மாற்றியமைத்துள்ள இடம்; யோபு 2:9). இறை பெயரை வீணாகப் பயன்படுத்துவதற்கு எதிரான தடையானது (யாத் 20:7; உப 5:11), ஒருவரது விரோதிகளின்மீது சாபமிடுவதற்கு இறை நாமத்தை உபயோகிக்கக்கூடாது, அல்லது அப்பெயரில் உள்ள வலிமையை பயன்படுத்தக் கூடாது என்பதை குறிப்பிடலாம்.

3. வழிபாட்டில் ஆசிகளும் சாபங்களும்:- இஸ்ராயேலின் வழிபாட்டில் ஆசிகளும் சாபங்களும் முக்கிய இடத்தை பெற்றிருந்தன. குலமுதியவர்களின் காலத்தில், இறக்கின்ற தந்தையின் ஆசி வாரிசுக்கு அளிக்கப்பட்டது (ஆதி 27:1-45; 49; உப 33). இச்சடங்கின் மூலம், உடல்நலன், சந்ததி, வளமை, போரில் வெற்றி, ஞானம் முதலிய அமைதிக்கான அனைத்து ஆற்றல்களும் குலத்தலைவருடைய மரணத்திற்கு பிறகும் தொடரப்பட்டன அல்லது மேம்படுத்தப்பட்டன. ஒரு முறை உரைக்கப்பட்ட இத்தகைய ஆசிகள் திரும்பப் பெற முடியாதவை (ஆதி 27:30-38). அரசாட்சி ஏற்படுவதற்கு முன்னர், இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களுக்குள், உடன்படிக்கை புதுப்பித்தல் விழாவின் சாதாரண அங்கமாக ஆசிகளும் சாபங்களும் இருந்தன (யோசு 24; உப 11:26-32; 27:9). எருசலேம் வழிபாடு நிறுவப்பட்டபின் (2 சாமு 6), ஆசி மற்றும் சாபங்களின் ஆற்றல்கள், அரசன், அரச வழிபாட்டின் குருத்துவம் மற்றும் வழிபாட்டு இறைவாக்கினர்கள் ஆகியோர் மீது மையம் கொண்டிருந்தன.

மோவாபின் அரசனாகிய பாலாக்கின் சார்பாக இஸ்ராயேலை சபிக்குமாறு பிலயாமிற்கு அளிக்கப்பட்ட பணிக்கு இணையான நிகழ்ச்சிகள் இஸ்ராயேல் *(1 அர 22)* மற்றும் யூதா *(எரே 23)* அரசர்களுடைய அரச வழிபாட்டு முறையிலும் காணப்படுகின்றன.

இஸ்ராயேலின் வழிபாட்டு முறையில், ஆசீர்பற்றிய அடிப்படை உணர்வு வளர்ச்சியடைந்தது. எல்லா ஆசிகளுக்கும் ஊற்று யாவேதான். தகுதியுடைவர்மேல் அவர் ஆசி வழங்கினாலும், ''எருசலேமின் அமைதிக்காக செபிக்க'' *(சங் 122:6)*, அவரது மக்கள் அவருடைய ஆசீரை இறைஞ்சுமாறு அறிவறுத்தப்பட்டனர். ஆரோனின் ஆசீருரையில் *(எண் 6:24-26)* ஆசீருரைத்தலும் ஆசீருக்காக வேண்டுதலும் ஒரே உரையில் இணைக்கப்பட்டிருந்தன. குரு, யாவேயின் பெயரால் மட்டும், இஸ்ராயேல் மீது ஆசீர் வழங்க அனுமதிக்கப்பட்டார், ஆசீருக்காக இறைவனிடம் வேண்டுவோரில் தலைமையானவராகவும் அவர் இருந்தார். பழைய ஏற்பாட்டில் ஆசீருக்கும், வரலாற்று அனுபவத்திற்கும் இடையில் உள்ள இணைப்பு ஆசிரின் தனிப்பட்ட பண்பாகும். இறைவனுடைய ஆசீரானது, தன்னுடைய மக்களுடனான வரலாற்று செயல் தொடர்புகளில் முதன்மையான வெளிப்பாட்டினை கொண்டிருந்தது. கடந்த காலத்தில் அவர் நிறைவேற்றிய அருட் செயல்களுக்காகப் புகழப்பட்டு, அவருடைய தொடர்ந்த ஆதரவு நாடப்பட்டது *(சங் 34:103)*.

அவ்வாறே, சாபங்களும் அதிகாரபூர்வ வழிபாட்டு முறைகளுக்குள் கொண்டுவரப்பட்டன. தொடர்ந்து அச்சுறுத்தி வந்த பழைய பேய் சக்திகள் விலக்கப்பட வேண்டும். இது, இனி மேலும், அவற்றினுடைய சக்திகளை விலக்கவோ அல்லது அழிக்கவோ சரியான சாப உரைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய செயலாக இல்லை. மாறாக, தனி நபர் அல்லது சமுதாயத்தின் மீது இத்தகைய சக்திகளின் பிடிப்பை முறியடிக்க யாவேயின் தலையீடு கோரப்பட்டது *(சங் 4:58-59; 91; 141....)*, நேர்மையானவர்களை அழிக்க தீய சக்திகள் யாரிடமெல்லாம் செயல்பட்டனவோ, அவர்கள் எல்லாம் அநீதியின், தீமையின் ஊழியர்களாகக் கருதப்பட்டனர். மரணம் மற்றும் பாதாளம் (செயோல்) ஆகியவற்றுடன் 'அழிவு மற்றும் கொள்ளை நோய்' போன்றவையும் *(ஓசே 13:14; சங் 91:6)* அவ்வப்பொழுது சுதந்தரமான உண்மைகளாகப் பேசப்பட்டன. ஆயினும், இச்சக்திகளில் ஒன்றுகூட யாவேயின் பாதுகாப்பு மற்றும் ஆசீர் போன்ற சக்திகளின் முன் நிற்க முடியாது. மேலும், இஸ்ராயேல் மீது நேரிட்ட சாபமானது, பாவம் மற்றும் கீழ்ப்படியாமையின் சாபமாகும். வாழ்வு மற்றும் மரணம், ஆசீர் மற்றும் சாபம் என்னும் இரண்டு உண்மைகளும் இஸ்ராயேல் முன் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருந்தன. தமது மக்களுக்கான இறைவனின் அழைப்பானது அவர்கள் வாழ்வை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே *(உப 30:19)*.

4. யூத மதம் மற்றும் புதிய ஏற்பாட்டில் ஆசீர்களும் சாபங்களும்:- யூத மதத்தில் ஆரோனுடைய ஆசிரை உரைப்பது குருவிற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது *(எண் 6:24-26)*. பதினெட்டு ஆசீர்கள் போன்ற பிற ஆசீர்கள் செபக்கூட வழிபாடுகளின் சாதாரண பகுதியாக இருந்தன. உணவிற்கு முன்னும் பின்னும் இறைவனுக்கு ஆசிர் கூறப்பட்டது; ஆசிர்வதிக்கப்படுவதற்கு முன்னர் எந்த உணவுமே உண்ணப்படக் கூடாது. சாபங்கள் முக்கியத்துவம் பெறவில்லை மேலும் தடை செய்யப்பட்டிருந்தன *(யோபு 31:30)*.

ஆசீருரைகள் புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்றன. பிற்காலத்திய புதிய உடன்படிக்கையின் அமைப்போடு இணைந்துள்ள ஆசீர்களின் புதிய தொகுப்பாகப் ''பேறுகள்'' *(மத் 5:3-12)* கருதப்பட்டிருக்கலாம் *(எரே 31:31-34; லூக் 6:20-26* ஆசீர்களையும் சாபங்களையும் ஒன்றாக கொண்டுள்ளது*)*. பவுலின் திருமுகங்களின் முன்னுரை, மற்றும் முடிவுரைகளிலும் மற்றும் திருவெளிப்பாட்டு நூலில் வரும் போற்றுரைகள், ஆசீர்கள் மற்றும் கேடுகளிலும் *(1:3; 4:8. 11; 5:9-10. 13-14:*

8:13; 11:17-18; 14:13; 18:2-8; 19:9; 22:7.14.18-19) புதிய ஏற்பாட்டில், ஆசீர், சாபங்கள் பற்றிய அதிகக் கூற்றுக்களைக் கொண்டுள்ளன. சாபங்கள் மிக அரிதாகவே தோன்றுகின்றன *(மாற் 11:12-14. 20-25).* இயேசுவை பின்பற்றிச் செல்பவர்கள் சபிக்கப்படும்போது அவர்கள் ஆசீர் கூற வேண்டும் *(லூக் 6:28; உரோ 12:14; யாக் 3:8-10).* இம்முறையிலேயேதான் இயேசு, சிலுவையின் சாபத்தை எதிர் கொண்டார் என்று கூறப்படுகிறது; ''தந்தையே, இவர்களை மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று இவர்களுக்கு தெரியவில்லை'' *(லூக் 23:34).* இயேசுவின் மரணத்திலும் உயிர்ப்பிலும், பாவம் மற்றும் மரணத்தினுடைய சாபமானது ஒரேயடியாக ஒழித்துக் கட்டப்பட்டது *(உரோ 5-8; கலா 3:14).* இறையாசியானது விருச்சசேதனம் செய்தோர் மீதும், செய்யாதவர் மீதும் ஒரே மாதிரியாக இறங்கியதாகக் கருதப்படுகிறது *(உரோ 4:6-9).* புதிய ஏற்பாட்டில், மனித குலத்தின் மீதான உறுதியான ஆசீர் இயேசு கிறிஸ்துவில் பொழியப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில், ஆசீர்வதித்தலின் இடம், லூக்காவின் நற்செய்தியில் எடுத்துக் காட்டப்படுகிறது. அதில் உயிர்த்த இயேசு ''கைகளை உயர்த்தி வானகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.... கோயிலில் கடவுளை இடைவிடாமல் போற்றிப் புகழ்ந்துகொண்டிருந்தனர்'' *(லூக் 24:50-53).* பழைய ஏற்பாட்டு ஆசீரின் இரு கூறுகளான இறைவனது கொடைகளை மனிதர்மேல் கூவி அழைத்தலும் இறைவனுக்கு நன்றி கூறுதலும் நற்கருணைச் சடங்கில் நிறைவான முறையில் செயல்படுகின்றன. இறுதி இரவுணவில் கிறிஸ்துவின் ஆசீர் இயேசு தந்தைக்கு நன்றிகூறும் செபமாகவும், தமது அர்ச்சிக்கும் ஆற்றலை அளிப்பதாகவும் அமைந்திருக்கிறது *(மத் 26:6; லூக் 24:30).* ''எயலோகேயோ'' என்ற புதிய ஏற்பாட்டுச் சொல் பெரும்பாலும் இறைவனது ஆசீரை அழைப்பதை உணர்த்திற்று. சில சமயங்களில் நன்றி கூறுதலையும் உணர்த்திற்று *(லூக் 1:64; 1 கொரி 14:16).* ''எயுகரிஸ்தேயோ'' என்ற சொல் நன்றி கூறுதலை மட்டும் உணர்த்தியது ''பராக்'' என்ற எபிரேயச் சொல் நன்றி குறிப்பதையெல்லாம் உணர்த்தவில்லை. உரோமை நற்கருணை மன்றாட்டில் வரும் ''நன்றி செலுத்தி வாழ்த்துரைத்து'' என்ற பதம் மாற்கு *14:22*-உம் *1 கொரி 11:24*-உம் சேர்த்த கூட்டமைப்பாகும். இது கிறிஸ்துவ ஆசீரின் இரு கூறுகளையும் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது.

ஆசீர் (Blessing)

I ஆசீரின் சிறப்புகள்:- ஆசீர் என்னும் சொல்லானது பெரும்பாலும் சமயத்தின் மேலெழுந்தவாறான வடிவங்களையே நமது மனக்கண்முன் கொண்டுவருகின்றது. ஆசீரின் வாய்பாடுகள் முணுமுணுக்கப்படும். பெரும்பாலும் பொருளுள்ள விதத்தில் கையாளப்படுவதில்லை. விசுவாசம் குறைவாக உள்ளவர்கள் இதைவிடாப் பிடியாகப் பற்றிக்கொள்வர். மற்றொருபுறத்தில், இன்றைய கிறிஸ்தவ உயிருள்ள பாரம்பரியமும் அதிமுக்கியமானவற்றை அருள் மற்றும் நன்றியுரைத்தல் ஆகிய பகுதிகளின்கீழ் தொகுத்துவிட்டு, விவிலிய வழக்கில் பொருள் குறைந்த ஆசீரின் வடிவங்களை மட்டுமே கொண்டுள்ளது. எனவே, ஆசீரளிக்கும் சொற்களுக்கும், அவை குறிப்பிடும் உண்மைக்கும் எதிராக ஒரு உண்மையான அக்கறையின்மை எழும்புகிறது.

ஆயினும், கிறிஸ்து தமது திருச்சபைக்கு அளித்த, உலகின் மீதான இறுதியான வெளிப்படையான செயல் அவருடைய ஆசீரே ஆகும் *(லூக் 24:50 தொ).* விவிலிய ஆசீரின் சிறப்புகளை விளக்குவதென்பது இறைதயாளக் குணத்தின் அற்புதங்களையும், இத்தயாளக் குணம் படைப்பின் மேல் ஏழச்செய்கின்ற அதிசயத்தின் சமயப் பண்பையும் உண்மையில் ஒளியூட்டுகிறது.

ஆசீர் என்பது வாழ்வையும் அதன் மறை பொருளையும் தொடுகின்ற கொடையாகும். அது வார்த்தையாலும் அதன் மறை பொருளாலும் வெளிப்படுத்தப்படுகின்ற அன்பளிப்பாகும். ஆசீர் என்பது எந்த அளவு

ஒரு நன்மையாக உள்ளதோ அந்த அளவிற்கு வார்த்தையாகவும் உள்ளது. அது கொண்டு செல்கின்ற ஒரு நன்மையானது ஒரு குறிப்பிட்ட பொருளாக இல்லாததாலும், கொண்டிருக்கின்ற அமைப்பை சார்ந்திராமல், அதாகவே இருத்தல் நிலையில் அமைந்திருப்பதாலும், இது மனிதனுடைய செயலைத் தவிர்த்துக் கடவுளின் படைப்பையே அழுத்திக் கூறுவதாலும், அது உண்மையான கொடையாக உள்ளது. ஆசீர்வதித்தல் என்பது ஆக்கவும் உயிரூட்டவும் கூடிய ஒரு கொடையைக் கூறுதலாகும். இது அந்த அன்பளிப்பு அளிக்கப்படுமுன் மன்றாட்டாகவும், அல்லது அது நிகழ்ந்தபின் நன்றியறிதலாகவும் வடிவெடுக்கும். ஆசீர் செபமானது இறைதயாளத்தினை முன் குறிப்பிட்டுக் காட்டுகிறது, நன்றியுரைத்தலானது அது வெளிப்படுத்தப்பட்டதைக் காட்டுகின்றது.

॥ ஆசீர் பற்றிய சொற்றொகுதிகள்:- எபிரேய மொழியில் ''ப்ரெக்'' என்ற ஒரே வேர்ச்சொல் (மூலச் சொல்) ஆசீரின் எல்லா வடிவங்களையும் எல்லா மட்டத்திலும் குறிக்கப் பயன்பட்டுள்ளது. ஆசீர் என்பது ஒரே நேரத்தில் அளிக்கப்பட்ட பொருளாகவும், அன்பளிப்பாகவும், அதை எடுத்துக்கூறும் வாய்ப்பாடாகவும் உள்ள நிலையை மூன்று சொற்கள் எடுத்துக் கூறுகின்றன. பெயர் சொல்லாக ''பெரக்கா'' என்ற சொல்லும் வினைச் சொல்லாக ''பரக்'' என்ற சொல்லும், பெயருரிச் சொல்லாக ''பரூக்'' என்ற சொல்லும் பயன்பட்டுள்ளது.

1. ஆசீர் - ''பெரக்கா'':- கொடை என்னும் மிகச் சமயச் சார்பற்ற இயற்பொருளிலும், இச்சொல் மனித சந்திப்பின் புலன்சார்ந்த நுட்ப வேறுபாட்டினைக் கொண்டுள்ளது. அபிகாயில் தாவீதுக்கும் (1 சாமு 25:14-27), தாவீதினால் யூதா கோத்திரத்திற்கும் (1 சாமு 30:26-31), குணமாக்கப்பட்ட நாமானால் எலிசாவுக்கும் (2 அர 5:15), யாக்கோபினால் ஏசாவுக்கும் (ஆதி 33:11) அளிக்கப்பட்ட அன்பளிப்புகள் அனைத்தும் ஓர் ஒன்றிப்பினையோ அல்லது ஒப்புரவையோ உறுதிப்படுத்தும் நோக்கத்துடனேயே அளிக்கப்பட்டன. ஆனால் இச்சொல்லானது சமயச் சூழ்நிலையிலேயே, பெருமளவு பயன்பட்டுள்ளது; ஆசீர் என்னும் சொல்லானது, இயற்பொருட்களின் செழிப்பினைக் குறிப்பதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவை இறைவனிடமிருந்தும் அவரது தயாளக் குணத்திலிருந்தும் வருகின்றன என்பதைக் குறித்துக்காட்டவே பயன்படுகிறது (பழ 10:6.22; சீரா 33:17), அல்லது ஆசீரை ஒரு நன்மையெனக் கொண்டுள்ள மக்களை மேம்படுத்திக்காட்டவும் பயன்படுகிறது (பழ 11:11; 28:20; சீரா 2:8). ஆசீரானது புனித செழிப்பையும் அதிர்ஷ்டம் மற்றவர்பால் காட்டும் தயாளக் குணத்தையும் (சீரா 7:32; பழ 11:26) இறைவனுடைய நற்செயல் ஆர்வத்தையும் வெளிப்படுத்துகின்றது.

இந்தச் செழிப்பையும் இந்த ஆறுதலையுமே எபிரேயர்கள் சமாதானம் என்று அழைத்தனர். ஆசீர் மற்றும் அமைதி ஆகிய இருசொற்களும் பெரும்பாலும் ஒன்றோடொன்று தொடர்புடையன. ஆனால், இரு சொற்களும் அதே செல்வச் செழிப்பை உணர்த்தும்போது, ஆசீரின் முக்கிய செல்வமானது வாழ்வு மற்றும் இனப்பெருக்க வளத்தையும் குறிக்கும்; ஆசீரானது ஏதோனைப் போன்று (சீரா 40:17) பூத்துக் குலுங்குகிறது (11:22). அதைக் குறிக்கும் சிறப்பான அடையாளம் நீராகும் (ஆதி 49:25; சீரா 39:22); நீர் ஒரு அத்தியாவசியமான ஒதுக்கமுடியாத ஆசீராகும் (எச 34:26; மலா 3:10); பூமியில் அது பேணிகாக்கின்ற வாழ்க்கையோடு, தனது விண்ணக தோற்றத்தின் மூலமாக இறைவனின் தாராளக் குணத்தையும் வள்ளன்மை மற்றும் உயிரூட்டும் வலிமையையும் வெளிப்படச்செய்கிறது. யோசேப்பின்மேல் யாக்கோபு கூறும் இறைகூற்று இனப்பெருக்கமுள்ள வாழ்வு, நீர், ஆகாயம் ஆகிய அனைத்து உருவங்களையும் ஒன்றாக சேர்க்கின்றது. ''மேலே வானத்திலிருந்து வரும் ஆசியாலும் கீழ் ஆழத்திலிருந்து வரும் ஆசியாலும் கொங்கைகளுக்கும் கர்ப்பத்துக்கும் உரிய ஆசியாலும் அவர் உனக்கு ஆசி வழங்குவார்'' (ஆதி 49:25). இயற்கையின் கொடைகளில் இறைவனது தாராளக்

குணத்தை உய்த்தறிதல் அவரது அருளின் தயாளத்தை ஏற்றுக்கொள்ள இஸ்ராயேலைத் தயாரித்தது.

2. ஆசீர்வதித்தல்:- இவ்வினைச் சொல்லானது, தெருவில் புதிய நபருக்கு கூறப்படுகின்ற பொதுவிட வாழ்த்து (2 அர 4:29) அல்லது வழக்கமான நாகரிக முறையில் வாழ்த்துக்கூறுதல் (ஆதி 47:7.10; 1 சாமு 13:10) ஆகியவற்றிலிருந்து இறை உதவியின் உயரிய கொடைகளை எடுத்துக் கூறுவது வரை பல்வேறு வகையில் பயன்பட்டுள்ளது. பெரும்பாலும் ஆசியளிப்பவர் இறைவனே ஆவார்; அவரது ஆசீர் வாழ்க்கையை எப்போதும் பொங்கி வழியச் செய்கிறது (சங் 65:11; ஆதி 24:35; யோபு 1:10). மேலும், உயிரினங்கள் மட்டுமே அதனைப் பெற தகுதியுள்ளவை. உயிரற்ற பொருட்கள் கடவுளின் பணிக்கென அர்ப்பணிக்கப்பட்டவையாகவும், அவரது பிரசன்னத்தால் புனிதப்படுத்தப்பட்டனவாகவும் உள்ளனவேயன்றி ஆசீர்வதிக்கப்பட்டவையாக இல்லை.

இறைவனுக்குப் பிறகு, வாழ்க்கையின் ஊற்றாக தந்தை இருப்பதால், ஆசீர்வதிக்கும் செயல் அவர்பால் விழுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவரது சாபம் அச்சமூட்டுவதாய் இருப்பது போன்று அவரது ஆசீரும் பயனுள்ளதாக உள்ளது (சீரா 3:8). தனது தந்தையிடம் அவருக்கு ஒரு மகன் பிறந்துள்ளான் என்று அறிவிக்க வந்த மனிதனைச் சபிக்கும் நிலையிலுள்ள எரேமியா தனது துன்பத்தின் உச்சநிலையில் இருந்திருக்க வேண்டும் (எரே 20:15; யோபு 3:3).

விநோதமான புதிராக எளியோர் வலியோரை ஆசீர்வதித்தல் (யோபு 29:13; சங் 72:13-16; சீரா 4:5) மற்றும் மனிதன் இறைவனை ஆசீர்வதிக்கத் துணிதல் என்பது அடிக்கடி நிகழ்கின்றது. ஏனெனில், செல்வந்தனுக்கு அளிக்க ஏழையிடம் ஒன்றுமில்லாததாலும், இறைவனுக்கு அளிக்க மனிதனிடம் ஒன்றுமில்லாததாலும், ஆசீரளிப்பதானது உயிரினங்களிடையே அடிப்படையான மற்றும் பரஸ்பரமான உறவினை ஏற்படுத்தி, அதன்மூலம் வலியவரின் தாராள மனப்பான்மை எளியவர் மீது பொழியப்படுவதை எளியவர் காணச்செய்கின்றது. ''எல்லா ஆசீருக்கும் மேலாக உள்ள'' (நெக 9:5) இறைவனை ஆசீர்வதிப்பதென்பது பொருளற்ற செயலல்ல; இது அவரது தயாளக் குணத்தை வெளிப்படுத்தி, அவருக்கு நன்றி கூறுவதேயாகும்; படைப்பினுடைய முதல் கடமை இதுவேயாகும் (உரோ 1:21).

3. ஆசீர்வதிக்கப்பட்ட:- ஆசீர் பற்றிய அனைத்துச் சொற்களிலும் இந்த ''பரூக்'' என்ற பெயருரிச்சொல்லே மிக்க வலிமையுடையதாகும். 'இவர் ஆசீர்வதிக்கப்படுவாராக' என்னும் இஸ்ராயேலுடைய ஆசீரின் எடுத்துக்காட்டான வாய்ப்பாட்டின் மையக் கருத்தினை இது கொண்டிருக்கிறது. சாதாரண வாக்கியமாகவோ அல்லது வெறும் வாழ்த்தாகவோ இல்லாமல், பேறுகளை விட ஆர்வமிக்கதாக உள்ள இவ்வாய்ப்பாடானது, எல்லோரினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டு இறைவன் தனது வல்லமையையும் தயாளத்தையும் இப்போதுதான் வெளிப்படுத்திய மனிதனுக்குமுன் கூக்குரலைப் போன்று முழக்கம் செய்கிறது. நாடோடி மக்களில் யாவேலும் (நீதி 5:24), நாடுகளில் இஸ்ராயேலும் (உப 33:24), பெண்களில் மரியாளும் (லூக் 1:24; யூதி 13:18) இப்படிப்பட்டவர்கள். தாம் தேர்ந்தெடுத்தவர்களில் இறைவன் செய்யக்கூடியது வியப்புக்குரியது. ஆசீர்வதிக்கப்பட்ட ஆள், உலகில் இறைவனின் வெளிப்பாடாக உள்ளார். சில ஆட்கள் ''யாவேக்குப் புனிதமானவர்கள்'' என்று அழைக்கப்படுவது போல் ''யாவேயால் ஆசீர்வதிக்கப்பட்டவர்'' என்னும் சிறப்பு பட்டத்தின் மூலம் இறைவனுக்கு உரியவராக இருக்கிறார். இறைவனுக்கென அபிடேகம் செய்கின்ற புனித நிலையானது சமயச்சார்பற்ற உலகத்தினின்று பிரிப்பது போல, ஆசீரானது இறைவன் குறிப்பிட்ட ஆளை ஒன்று கூட்டும் முனையாகவும், ஒளிபரப்பும் ஊற்றாகவும் உருவாக்குகிறது. 'புனிதர்' மற்றும் 'ஆசீர்வதிக்கப்பட்டவர்' ஆகிய இரண்டு சொற்களுமே இறைவனைக்

குறிப்பவையாயிருந்தாலும், 'புனிதர்' என்பது அவருடைய அடைய முடியாத மேன்மையையும் 'ஆசீர்வதிக்கப்பட்டவர்' என்பது அவரது வற்றாத தயாளக் குணத்தையும் குறிப்பிடுகின்றது.

'அவர் ஆசீர்வதிக்கப்படுவாராக' என்ற அடிக்கடி தன்னிச்சையாக வரக்கூடிய கூக்குரலுக்கு இணையாக 'கடவுள் ஆசீர்வதிக்கப்படுவாராக' என்னும் சொற்றொடரும் விளங்குகின்றது. கடவுள் தனது வல்லமையை வெளிப்படுத்த வருகின்ற செயலில் அனுபவிக்கின்ற அதிர்ச்சியினின்றே இது தோன்றுகின்றது. இது செயலின் முக்கியத்தைவிட, அதன் வியப்புத்தன்மையையும் அடையாளப் பொருளையுமே அதிகமாக வலியுறுத்துகிறது. ஆசீரானது, மீண்டும் ஒருமுறை, இறைவனின் வெளிப்பாட்டுக்கு மனிதனின் பதில் செயலாகவே உள்ளது (ஆதி 14:20- மெல்க்கிசதேக்கு; ஆதி 15:2- எலியேசர்; யாத் 18:10- இத்திரோ; ரூத் 4:14- ரூத்திற்கு போவாசு).

இறுதியாக, ஒரு முறைக்கும் மேலாக 'அவர் ஆசீர்வதிக்கப்படுவாராக' மற்றும் கடவுள் ஆசீர்வதிக்கப்படுவாராக என்னும் இரு கூக்குரல்களும் ஒன்றிணைந்து ஒன்றையொன்று எதிரொலிக்கின்றன; ''விண்ணையும் மண்ணையும் படைத்த உன்னதக் கடவுள் ஆபிரகாமிற்கு ஆசீ வழங்குவாராக! உன் எதிரிகளை உன்னிடம் கையளித்த உன்னதக் கடவுள் போற்றி! போற்றி!'' (ஆதி 14:19-20; 1 சாமு 25:32 தொ; யூதி 13:17 தொ). இந்த முழுமையான இலயத்தில் ஆசீரின் உண்மையான இயல்பு தோன்றுகின்றது. இது இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்முன் எழும் ஆனந்த பரவசத்தின் வெளிப்பாடாகும். ஆனால், இது தேர்ந்தெடுக்கப்பட்டவருடன் நின்றுவிடாமல் இந்த அடையாளத்தினால் தம்மையே வெளிப்படுத்திய இறைவனை நோக்கி மேலேறிச் செல்கிறது. அவரே, மற்றெல்லார்ரிலும் ஆசீர்வதிக்கப்பட்டவர் (பரூக்). அவர் எல்லா ஆசீரையும் முழுமையாகக் கொண்டுள்ளார். அவரை ஆசீர்வதிப்பதென்பது, அவரது சிறப்புகளில் புதிதாக ஒன்றை சேர்ப்பதல்ல; மாறாக, இந்த வெளிப்பாட்டினால் ஒருவன் தன்னையே அடித்துச்செல்ல அனுமதித்து, அவரைப் போற்றுவதற்காக உலகையே அழைப்பதாகும். ஆசீர் என்பது எப்போதும் இறை வல்லமையின் பொது வெளிப்பாடாகவும், அவரின் தயாளகுணத்திற்கு நன்றியளித்தலாகவும் உள்ளது.

III ஆசீரின் வரலாறு:- இஸ்ராயேலின் முழுவரலாறும் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்டு (ஆதி 12:3), மரியாளின் ஆசீர்வதிக்கப்பட்ட திருஉதரத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட திருக்கனியாகிய இயேசுவின் (லூக் 1:42) வழியாக உலகிற்கு அளிக்கப்பட்ட ஆசீரின் வரலாறு ஆகும். அதே சமயம், பழைய ஏற்பாட்டு நூல்களில் ஆசீரின் பரிமானங்கள் பல்வேறு நுண்ணிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளன; ஆசீரானது மாறுபட்ட வடிவங்களையும் ஏற்றுள்ளது.

1. ஆபிரகாம் வரை:- ஆதியிலே படைத்தவரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஆணும், பெண்ணும் (ஆதி 1:28), தங்களது பாவத்தினால் இறைவனுடைய சாபத்தினை அவிழ்த்துவிட்டனர். ஆயினும், பாம்பும் (3:14), நிலமும் (3:17) சபிக்கப்பட்டிருப்பினும், ஆணோ, பெண்ணோ சபிக்கப்படவில்லை. அவர்களது உழைப்பினாலும், துன்பத்தினாலும், பெரும்பாலும் அங்கலாயப்பை விலையாகக் கொடுத்து வாழ்வானது பொங்கியெழுவது தொடரும் (3:16-19). வெள்ளப்பெருக்கிற்குப் பின்னர், ஒரு புதிய ஆசீரானது மனித குலத்திற்கு வல்லமையையும் இனப்பெருக்க வளத்தையும் அளித்தது (9:1). ஆயினும், பாவமானது மனித குலத்தைப் பிரிப்பதையும் அழிப்பதையும் விட்டுவிடவில்லை; சேமின் மீதான கடவுளின் ஆசிருக்கு எதிரிணையாக கானான் மீதான சாபம் உள்ளது (9:26).

2. குலத்தந்தையரின் ஆசீர்:- ஆபிரகாமின் ஆசீரானது புதுவகையில் அமைந்துள்ளது. பிளவுபட்ட உலகில் ஆபிரகாம் சந்தேகத்திற்கிடமின்றி எதிரிகளைக் கொண்டிருப்பினும்,

அவரைச் சபிக்கின்ற எந்த தனிநபரையும் சபிப்பதன் மூலம் இறைவன் தம்முடைய பிரமாணிக்கத்தைக் காட்டுகிறார். ஆனால் இது ஒரு விதிவிலக்காகவே இருக்கும். ஏனெனில், உலகின் அனைத்து நாடுகளையும் ஆசீர்வதிக்கவேண்டும் என்பதே இறைவனின் எண்ணமாகும் (ஆதி 12:3). ஆதியாகமத்தின் அனைத்து நிகழ்ச்சியுரைகளும் இந்த ஆசீரின் வரலாறாகும்.

அ) தந்தையாரால் அறிவிக்கப்பட்ட ஆசீர்கள்:- தொன்மையான நடைமுறை காட்டுவது போன்று, பொதுவாக மரண சமயத்தில் தங்களது மக்களை அழைத்து அவர்கள் மீது, வாழ்வு மற்றும் இனவிருத்தி வளத்தில் வல்லமை, வானத்துப் பனி மற்றும் பூமியின் செழுமை (ஆதி 27:28), பாலாறு மற்றும் திராட்சை இரசம் (49:11-12), பகைவர்களை நசுக்கும் வலிமை (27:39; 49:8-9), தாங்கள் வாழ்வதற்கும் (27:28; 27:39; 49:9) தங்களது பெயரையும் ஆண்மையையும் நிலைத்து நிற்கச் செய்ய ஒரு நிலத்தையும் (48:16; 49:8..) தங்குமாறு அழைப்பார்கள். இத்தகைய இளமிக்க துணுக்குகளிலும் நிகழ்ச்சியுரைகளிலும், தங்களது சுதந்திரத்தைப் பாதுகாக்கப் பேரார்வம் உள்ளவர்களாக ஒரு தாய் நாட்டைத் தேடும் நாடோடி இனங்களின் கனவைக் காண்கிறோம். ஆனால் இவர்கள் சில தலைவர்களையும் சலுகைபெற்ற குலங்களைச் சுற்றி ஏற்கெனவே ஒரு சமுதாயமாக இருப்பதை உணருகின்றனர் (ஆதி 49). எல்லாவற்றிற்கும் மேலாக ஆசீர்பற்றிய கனவாக உள்ளது. அதை அடைய எல்லா மக்களும் தன்னிச்சையாய் விரும்புகின்றனர். அதை அடைய வன்முறை அல்லது தந்திரம் முதலிய எந்த வழியையும் பயன்படுத்தத் தயாராக உள்ளனர் (27:18-19).

ஆ) இத்தகைய வர்ணனைகள் மற்றும் பொதுப்பாணி நிகழ்ச்சியுரைகள் மீது, இறைவனே கூறும் வாக்குறுதிகளையும் ஆசீர்களையும் ஆதியாகமம் அமைக்கிறது. இப்படிச் செய்வதால் அந்நிகழ்ச்சியுரைகளை ஏற்க மறுக்கவில்லை; மாறாக இறைவனுடைய செயல்களில், அவற்றிற்குரிய இடத்தை அளிக்கிறது. ஆற்றல் மிக்க பெயர் (ஆதி 12:2) எண்ணமுடியாத வழிமரபினர் (15:5) நிலையாகக் குடியேறவிருக்கும் நாடு (13:14-17) முதலிய கருத்துக்களும் இதில் அடங்கியுள்ளன; ஆனால் இங்கு இறைவன் தம்முடையவர்களின் எதிர்காலத்தைத் தமது கையிலேயே எடுத்துக் கொள்கிறார்; அவர்களது பெயரை மாற்றுகிறார் (17:5-15), சோதனை (22:1) மற்றும் விசுவாசத்தில் (15:6) அவர்களை உட்படுத்துகிறார்; மற்றும் ஏற்கனவே அவர்கள் மீது ஒரு கட்டளையை சுமத்துகின்றார் (12:1; 17:10). விசுவாசத்திற்கு ஏற்றவாறு இருக்கும் நிலையில் மனிதனுடைய ஆசையை எவ்வாறு நிறைவேற்றுவதென்பதையும் அவர் அறிந்திருக்கிறார்.

3. ஆசீரும் உடன்படிக்கையும்:- ஆசீருக்கும் கட்டளைக்கும் இடையில் உள்ள பிணைப்பே, உடன்படிக்கையின் கோட்பாடாகவும் உள்ளது: இறைவனுக்கு தூய்மையானதாகவும் அதன் விளைவாக இறைவனின் ஆசீருக்கு உட்பட்டதாகவும் உள்ள வாழ்வினை மக்கள் வாழ, சட்டம் ஒரு சாதனமாகிறது. உடன்படிக்கைச் சடங்குகளும் இதனையே எடுத்துக்கூறுகின்றன. அக்கால சமய மனநிலையின்படி வழிபாடு என்பது, இறை ஆசீரை உறுதி அளிக்கும், புனித இடங்கள், காலங்கள் மற்றும் சடங்குகளோடு கொண்டுள்ள தொடர்பால், மனிதனுடையவும் உலகினுடையவும் மிகக்குறுகிய வலுவற்ற உயிராற்றலைப் புதுப்பிக்கும் சிறப்பான சாதனமாக அமைந்துள்ளது. யாவேயின் சமயத்தில், உடன்படிக்கையிலும், சட்டத்திற்கு உறுதியாக இருப்பதிலும் மட்டுமே வழிபாடு உண்மையாக உள்ளது. உடன்படிக்கை சட்டத்தின் ஆசீர்கள் (யாத் 23:25), யோசுவாவின் தலைமையில் சிக்கேமில் சபைக்கான எச்சரிக்கைகள் (யோசு 24:19), உப ஆகமத்தின் பெரும் ஆசீர்கள் (உப 28:1-14) ஆகிய அனைத்தும், இறைவிருப்பத்தை வெளிப்படுத்தும் ஒன்றிப்பு, ஒப்பந்தம், மக்களின் பிரமாணிக்கம், ஒப்பந்தத்தை முத்திரையிட்டு அதன் புனித மதிப்பீட்டை அளிக்கும் வழிபாட்டுச் சடங்கு ஆகியவற்றை உட்கொண்டுள்ளன.

4. இறைவாக்கினர்களும் ஆசிரும்:- இறைவாக்கினர்கள் ஆசீரின் மொழியினை அரிதாகவே அறிந்திருந்தனர். வார்த்தை மற்றும் அதனை செயல்படுத்தும் திறனின் மனிதர்களாக இருந்தாலும் *(ஏச 55:10-11)*, இறைவனின் செயலின் அடையாளங்களாக அவரால் அழைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை அறிந்திருந்தாலும் *(ஏச 8:18)* அவர்களில் இறைவனது செயல் மிகவும் உள்ளார்ந்ததாகவும், மிக கனமானதாகவும் சிறிதளவே காணக்கூடியதாகவும் அறிவிக்கக்கூடியதாகவும் உள்ளதாயும் இருந்ததால் அவர்களிலும் அவர்களைச் சுற்றிலும் ஆசீரின் குரலைத் தூண்டவில்லை. உடன்படிக்கையின் கருத்துக்களை நினைவுறுத்துவதாகவும், அவற்றை மீறுவதைக் கண்டிப்பதாகவும் உள்ள அவர்களது செய்தியானது, ஆசீர்வதிக்குமாறு மிக அரிதாகவே தூண்டுகிறது. அவர்கள் பயன்படுத்தும் இலக்கிய அமைப்புகளில், சபித்தலானது நன்கு அறிமுகமானதாகவும், ஆசீர்வதித்தலானது அறியப்படாததாகவும் உள்ளது.

ஆனால், சபித்தலின் மையத்திலும், ஆசீரைப்பற்றிய வாக்குறுதி நிலைத்துள்ளது என்றும், ஒரு பரிசுத்த வித்தினைப் போன்று *(ஏச 6:13)* பாழ்நிலையினின்று வாழ்க்கை தோன்றும் என்றும் அறிவிக்கின்ற உருவகம் அல்லது உறுதிப்படுத்தும் அறிவிப்பு மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வாறாக, நகரானது யாராலும் வெல்ல முடியாதது என்று நம்பிய புத்தியற்ற ஆட்சியாளர்களுக்கு *(ஏச 28:14-19)* எதிரான சாபத்தின் நடுவிலும், சீயோனில் மூலைக்கல் பற்றி வாக்குறுதிச் சுடர் வீசி வெளிப்படுகிறது; எசக்கியேலில், நீர், பூமி மற்றும் விளைச்சல் என்று ஆசீரின் உருவகங்களை முழுமையாக கொண்டுள்ள, ஆவியைப் பொழிதலைப் பற்றிய பெரும் இறைவாக்கு, இஸ்ராயேலைக் கண்டனம் செய்வதை இறை வாதமுறையுடன் முடிகின்றது *(எச 36:16-38)*.

5. ஆசீரின் பாடல்கள்:- இஸ்ராயேலின் செபத்தினுடைய முக்கிய மையக் கருத்துக்களில் ஆசீரும் ஒன்றாகும்; இதுவே, இறைவெளிப்பாடாகிய இறைவனின் செயல்களுக்கான பதிலுரையாகும். இது நன்றியுரைத்தல், புகழ்தல் அல்லது அறிக்கையிடுதல் ஆகியவற்றிற்கு மிக நெருக்கமாக அமைந்து, அதே முறையில் வளர்ச்சியை உண்டாக்குகிறது. ஆனால், இவை எல்லாவற்றையும்விட இறைவன் தம்மையே வெளிப்படுத்த வரும் நிகழ்ச்சியோடு இது மிக நெருங்கியுள்ளது. இது பொதுவாக எளிய தொனியைக் கொண்டுள்ளது: ''யாவே வாழ்த்தப்பெறுவாராக, ஏனெனில் என் மீது வியப்புக்குரிய இரக்கத்தைக் காட்டியுள்ளார்'' *(சங் 31:21)*; ''அவர் நம்மை எதிரியின் பற்களுக்கு இரையாகத்தரவில்லை'' *(சங் 124:6)*, ''அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்'' *(103:3)*. ஆண்டவரின் புகழைப் பாடுமாறு உலகை அழைத்து, தீச்சுவாலையில் மூன்று சிறுவர்கள் பாடிய பாடல்கூட இறைவன் அச்சமயம் நிறைவேற்றிய செயலை, தமது பார்வையிலிருந்து இழந்துவிடவில்லை; ''ஏனெனில், நெருப்பின் நடுவிலிருந்து நம்மைக்காத்தார்'' *(தானி 3:88)*.

IV கிறிஸ்துவின் ஆசீர்வதிக்கப்பட்டவர்:-

தமது மகனையே நமக்காகக் கையளித்த தந்தை எவ்வாறு நமக்கு எதையாவது மறுக்க முடியும் *(உரோ 8:32)*? அவர் நமக்கு அனைத்தையும் அவரில் அளித்துள்ளார்; நமக்கு அருட்கொடை எதிலும் குறையில்லை *(1 கொரி 1:7)*; மற்றும் விசுவாசமுள்ள ஆபிரகாமுடன் சேர்ந்துள்ளோம் *(கலா 3:9-14)*; தந்தை கொடைகள் அனைத்தும் பொழிந்து நமக்கு ஆசி அளித்துள்ளார் *(எபே 1:3)*. அவரிலே நாம் தந்தைக்கு அவரது கொடைகளுக்காக நன்றி செலுத்துகிறோம் *(உரோ 1:8; எபே 5:20; கொலோ 3:17)*. நம்மீது இறங்கும் அருளும், மேலெழும்பும் நன்றியுமாகிய ஆசீரின் இரு இயக்கங்களும் இயேசு கிறிஸ்துவில் ஒன்றிணைகின்றன. இந்த ஆசீருக்கு மேற்பட்டது எதுவுமில்லை; தங்களது இறுதி வெற்றியை இசைப்பதற்காக செம்மறிக்கும் அரியணைக்கும் முன்பாக குழுமியுள்ள தேர்ந்து கொள்ளப்பட்டவர்களின் திருக்கூட்டமானது ''போற்றியும் மகிமையும் ஞானமும் நன்றி

யும்... என்றென்றும் உரியனவாகுக'' (திரு வெளி 7:12) என்று இறைவனை நோக்கி அறிவிக்கின்றனர்.

புதிய ஏற்பாடு முழுவதும் இறைவனிடமிருந்து பெறப்பட்டு, அவருக்கே திரும்ப அளிக்கப்படும் நிறைவான ஆசீராக இருந்தாலும், அந்நூலானது ஆசீரின் வார்த்தைகளை நிரம்பக் கொண்டதாக இல்லை. இவை அரிதாகவும், குறிப்பிட்ட சூழ்நிலைகளிலுமே பயன்பட்டுள்ளது. இது விவிலிய ஆசீரின் பொருளைத் துல்லியமாகக் கணிக்க உதவுகிறது.

1. வருபவர் ஆசி பெற்றவர்:- நற்செய்தி நூல்கள் இயேசுவை நோக்கி கூறப்பட்ட ஆசீராக ஒரேயொரு நிகழ்ச்சியுரையையே குறிப்பிடுகின்றன: பாடுகளுக்கு முன்னதாக அவர் எருசலேமிற்குள் நுழையும்போது மக்கள் கூட்டம் எழுப்பிய குரலொலி: ''வருகிறவர் ஆசி பெற்றவர்'' (மத் 21:9 இ). இறைவன் தமது வல்லமையையும் வள்ளன்மையையும் (அ.ப. 10:38) சுடர்விடும் அடையாளங்களால் வெளிப்படுத்துகின்ற இயேசுவைப் போன்ற ஆசீர்வதிக்கப்பட்ட ஆள்பற்றிய விவரிப்பிற்கு, உறுதியாக யாருமே எப்போதுமே விடை கூறமுடியாது. உலகில் அவருடைய வருகையானது, எலிசபெத்து (லூக் 1:42), செக்கரியா (1:68), சிமியோன் (2:28) மற்றும் மரியாள் (குறிப்பிட்ட வார்த்தையை உபயோகிக்காமலே 1:46-47) ஆகியோர் மீது ஆசீர்களைக் கொண்டு வருகிறது. ஆசியின் மையமாக அவரே விளங்குகிறார். ''உமது திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே'' என்று எலிசபெத்து அறிவிக்கிறாள் (1:42). குருத்து ஞாயிறைத் தவிர்த்து வேறு ஒருபோதும் அவர் நேரடியாக ஆசீர்வதிக்கப்பட்டதில்லை. இந்நிலை தற்செயலானதாக இருக்க முடியாது. ஒருவரை ஆசீர்வதிப்பதென்பது ஒரு குறிப்பிட்ட பொருளில் அவரோடு இணைந்திருக்க வேண்டியிருப்பதால், இயேசுவிற்கும் மற்ற மனிதருக்கும் இடையில் தானாகவே உருவாக்கப்பட்ட இடைவெளியை இது வெளிப்படுத்துவதாக இருக்கலாம். அவரது பணி நிறைவுபெறாத வரையில், கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாட்டின் நிறைவுபெறாத பண்பையும் அவரது மரணம் மற்றும் உயிர்ப்புவரை அவரது ஆட்தன்மை பற்றிய தெளிவில்லாப் பண்பையும் குறிப்பதாகவும் இது இருக்கலாம். மறுபுறம், திருவெளிப்பாட்டு நூலில், பலியிடப்பட்ட செம்மறியானது உலகின் முடிவானது முத்திரையிடப் பட்டுள்ள நூலை பெறுவதன்மூலம், உலகின்மீதான தனது வல்லமையை உரிமையாக்கிக் கொள்ள வரும்போது, ''பலியான செம்மறி வல்லமையும், மகிமையும், போற்றியும் பெறத் தகுதியுள்ளவர்'' என்று விண்ணகம் முழுவதும் பாடுகின்றது (திருவெளி 5:12-13). இத்தகைய சூழ்நிலையில் ஆசீரானது இறைவனின் மகிமையைப் போன்று அதே அளவையும் அதே முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது.

2. ஆசீரின் கிண்ணம்:- அப்பங்களை பலுகச் செய்வதற்கு முன்னரும் (மத் 14:19 இ), தமது உடலாக மாறிய அப்பத்தைப் பகிர்வதற்கு முன்னரும் (மத் 26:26 இ) எம்மாவூரில் அப்பத்தை பிடுவதற்கு முன்னரும் (லூக் 24:30) இயேசு ஒரு ஆசிர் கூறுகிறார். ''நாமும் திருக்கிண்ணத்தை ஏந்தி ஆசீர் கூறுகிறோம்'' (1 கொரி 10:16). இப்பகுதிகளில் உள்ள ஆசீரானது தனிப்பட்ட செயலையோ அல்லது நற்கருணை வார்த்தைகள் என்று தனிப்பட்ட விதமாக அழைக்கப்படுவனவற்றினின்று மாறுபட்ட குறிப்பிட்ட வாய்ப்பாட்டையோ அல்லது தொடர்ந்து வரும் வார்த்தைகளுக்கான தலைப்பையோ குறிப்பிடுகிறதா? என்று பார்ப்பது அவ்வளவு முக்கியமானதல்ல. நற்கருணை வர்ணனையானது ஆசீரையும் நன்றியுரையையும் நெருக்கமாக இணைக்கிறது என்பதே உண்மை. இந்த இணைப்பில் ஆசீரானது சடங்கு மற்றும் பார்க்கக்கூடிய கூறு, செயல் மற்றும் வாய்ப்பாடு ஆகியவற்றைக் குறிப்பதாகவும், நன்றியுரையானது, செயல்கள் மற்றும் சொற்களின் உட்பொருளை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. புதிய உடன்படிக்கையின் சடங்காக இருப்பதனால், ஆண்டவர் தமது வாழ்நாளில் நிறைவேற்றியிருக்கக்கூடிய அனைத்திலும் இச்ச

டங்கு மட்டுமே நமக்கெனப் பாதுகாக்கப் பட்டுள்ளது (லூக் 22:20). இதிலே ஆசீரானது தனது இறுதியான நிறைவேறுதலை கண்டடைகின்றது. இது உடனடியாக செயலாற்றக் கூடிய வார்த்தையில் வெளிப்படுத் தப்பட்ட ஒரு கொடையாகும். தமது பிள்ளைகளுக்கு தந்தை அளிக்கும் எல்லா அருளையும் கொண்ட நிறைவான கொடையாகவும், நமது நன்றிகள் அனைத்தையும் தம்மோடு இணைத்து, தனது வாழ்வையே தந்தைக்குக் காணிக்கையாக அளிக்கின்ற மகனின் நிறைவான கொடையாகவும் இது உள்ளது. இது இனப்பெருக்க வளத்தின் கொடையாகவும், வாழ்க்கை மற்றும் ஒன்றிப்பின் மறைபொருளாகவும் உள்ளது.

3. தூய ஆவியின் ஆசீர்:- நற்கருணை கொடையானது இறைவனின் முழு ஆசீரையும் கிறிஸ்துவில் கொண்டிருந்தாலும், அவரது இறுதிச் செயல் திருச்சபைக்காக அவர் விட்டுச் செல்லும் ஆசீராகவும் (லூக் 24:51), அவளில் கிளர்ந்தெழச் செய்கிற ஆசீராக (24:53) இருந்த போதிலும், இயேசு கிறிஸ்துவே தந்தையின் ஆசீர் என்று புதிய ஏற்பாடு எங்குமே கூறவில்லை. உண்மையில் ஆசீரானது எப்போதும் ஒரு கொடையாகவும், பெறப்பட்டு ஒன்றுபடுத்தப்பட்ட வாழ்வாகவும் உள்ளது. இப்போது, எல்லாவற்றிற்கும் மேலான கொடையானது தூய ஆவியே. தூய ஆவியைவிட இயேசு கிறிஸ்து நமக்குக் குறைவாக அளிக்கப்பட்டார் என்றல்ல, மாறாக இறைவனிடமிருந்து பெறப்பட்ட கொடை நம்மில் இருப்பதற்காக ஆவியானவர் அளிக்கப்படுகிறார். புதிய ஏற்பாட்டுச் சொற்றொகுதி பொருள் பொதிந்தது. கிறிஸ்து நமக்குரியவர் என்பது உண்மையே. ஆனால் நாம் கிறிஸ்துவிற்குரியவர்கள் என்பது அதைவிட மேலான உண்மையாகும் (1 கொரி 3:23 இ; 2 கொரி 10:7). மறுபுறம் பல இடங்களில் ''ஆவியின் கொடை'' பற்றி ஒருவன் தன்னிச்சையாகப் பேசுகின்ற அளவுக்கு (அ.ப. 2:38; 10:45; 11:17), நாம் அவரைப் பெறுகிறோம் (யோவா 7:39; அ.ப. 1:8; உரோ 8:15); அவர் நமக்கு அளிக்கப்படுகிறார் (மாற் 13:11; யோவா 3:34; அ.ப. 5:32; உரோ 5:5); அவரை உரிமையாக்கிக் கொள்கிறோம் (உரோ 8:9; திருவெளி 3:1) என்று தூய ஆவியைப்பற்றி கூறப்படுகின்றது. இறைவனின் ஆசீர் என்பது, அவ்வார்த்தையின் முழுப்பொருளில், அவரது தூய ஆவியே ஆவார். இறைவனே இந்த இறைகொடையாவார். இக்கொடை ஆசீரின் எல்லாக் கூறுகளையும் வெளிப்படுத்துகின்றது. புத்துயிர் அளிக்கும் நீர், பிறப்பு மற்றும் இதயங்களின் ஒற்றுமை முதலான ஆசீரின் முக்கிய மையக் கருத்துக்கள் அனைத்தும் ஆவியின் கனிகளாக உள்ளன.

ஆசிர் அளித்தல் (BENEDICTION)

கடவுளின் ஆசீர் வேண்டி செபம் அல்லது கடவுளின் ஆசீர் அருகில் உள்ளது என உறுதி கூறுதல். பழைய ஏற்பாட்டில் ஆசீர் அளித்தலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆரோனின் ஆசீராகும் (எண் 6:24-26). அதே வேளையில் செபம் அல்லது ஆசீரோடு புதிய ஏற்பாட்டுத் திருமுகங்கள் முடிவடைவது, புதிய ஏற்பாட்டு ஆசீர் அளிக்கும் முறையைக் காட்டுகின்றது (உரோ 15:13; 2 கொரி 13:14; எபி 13:20-21).

ஆசை (DESIRE)

விவிலியத்திலே மனிதனின் பலவித விருப்பங்களையும், ஆவல்களையும், வேட்கையையும் கூற இந்த வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. பழைய ஏற்பாட்டில் ஆசை:- ஆசைகள் மனிதனுக்கு இயற்கையானவை என பழைய ஏற்பாடு கருதுகிறது (உப 18:6; 1 அர 10:13; சங் 107:30). இந்த ஆசைகளில், சிற்றின்ப ஆசை (உப 21:11; சங் 45:11; உ. ச. 7:10; ஆதி 3:16), உணவு உண்ண ஆசை (சங் 145:16; மீக் 7:1), அழகான பொருளின் மேல் ஆசை, நல்லவற்றின்மேல் ஆசை (1 சாமு 9:20; பழ 3:15; 8:11; 19:22; ஏச 53:2; எச 23:6; 12:23) போன்றவை அடங்கும். எபிரேயர் தபசு வாழ்க்கையைச் சிறந்ததாகக் கருதவில்லை. வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க ஆசைப்பட்டனர். அழகியவற்

றில், நீண்டவாழ்வில் (சங் 34:12), நண்பர்களின் தோழமையில் (சங் 133; பழ 19:22), செல்வச் செழிப்பில் (சங் 19:10), நல்ல மனைவியின் அன்பில் (சங் 128; எச 24:16), பிள்ளைகள் நிறைந்த குடும்ப வாழ்வில் (சங் 128) களிப்படைந்தனர். அவர்களுக்கு இறைவன் படைத்தவை யாவும் நல்லவை (ஆதி 1:31). ஆகவே அவற்றில் மகிழ்ச்சி கொண்டனர் (திருவுரை 2:10).

ஆயினும் ஆசைகள் இறைவனது தீர்ப்புக்குட்பட்டவையாகும். தொடக்கத்திலிருந்து ஆசைகள் யாவேயின் திருவுளத்துக்குப் பணிந்திருக்க வேண்டும் (ஆதி 3). ஆண்டவரை நம்பியவனே, தன் ஆசைகளின் உண்மையான நிறைவை அறிந்தவனாவான் (2 சாமு 23:5; 2 நாள் 15:15; சங் 21:2; 34:12 தொ; 37:4; 145:19; பழ 10:24; 11:23; 13:12.19). சாந்தமுள்ளோர் அவரிடம் நீதிகோருவர் (10:17). அவரில்மட்டும் தான் அவர்கள் நிறைவைக் காண முடியும் (யோபு 13:3). இவ்வாறு, எபிரேயனது ஆசையின் இறுதிநோக்கம் யாவேதான் (ஏச 26:9). சீயோனில் உள்ள ஆலயம் அவர்கள் கண்களுக்கு இன்பம் தருவதாகும் (எச 24:21.25). யாவேயின் பெயர் அவர்கள் ஆன்மாவின் ஆவலாகும் (ஏச 26:8; நெக 1:11). அவரது கட்டளைகள் பொன்னையும்விட மேலானவையாகும் (சங் 19:10). அவரோடு வாழ்தல் அவர்களின் இறுதி நன்மையாகும் (சங் 73:25). எல்லா ஆசைகளையும் விட ஞானம் மேலானது (பழ 3:15; 8:11). ஞானத்தின் தொடக்கம் இறை அச்சமாகும் (பழ 1:7).

இதற்குமாறாக, தீயோர்களின் ஆசை தீமையைக் குறிக்கோளாகக் கொண்டது (பழ 2:10; மீக் 7:3). தீயோரின் ஆசை கட்டுப்பாடற்றது, பேராசைமிக்கது, காமத் தன்மையுடையது (உப 5:21; 7:25). தீயவன் யாவேயைச் சபிக்கிறான் (சங் 10:3). அவரைப் பற்றிய அறிவைப் புறக்கணிக்கிறான் (யோபு 21:14). அவன் பக்தியுள்ளோரைக் கொள்ளையடிக்கிறான் (சங் 140:8). தன்னலத்தை மட்டுமே தேடுகிறான் (பழ 13:4; 21:25; 23:6-8) அவனது தோழமையைத் தவிர்க்க வேண்டும் (24:1). அவனுடைய ஆசையெல்லாம் அழியும் (சங் 112:10). உண்மையில் அவன் ஆசையையும் வாழ்வையும் கூட இழந்துவிடுவான் (திருவுரை 12:5).

ஆயினும் சமயம் சார்ந்த ஆசைகளுக்கும் வரையறையுண்டு. ஆண்டவரின் இறுதி வெற்றி மற்றும் தீர்ப்பின் நாளைப் பக்தியோடு எதிர்பார்ப்பவர்கள், அவர்களுடைய சுயநேர்மையுடைய பாதுகாப்பு யாவேயால் அழிக்கப்படும் என்று எச்சரிக்கப்படுகின்றனர் (ஆமோ 5:18; எரே 17:16). யாவேக்கும் விருப்பு வெறுப்புகள் உண்டு. அவர் புறவெளிச் சடங்குகளை விரும்பவில்லை (சங் 40:6; 51:16; ஓசே 6:6). அவர் தமது திருவுளத்திற்கு உள்ளார்ந்த கீழ்ப்படிதலையும், நிலையான அன்பையும் (ஓசே 6:6), உண்மையையும் (சங் 51:6) அவரது உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கத்தையும் விரும்புகிறார். நன்றி, போற்றுரையோடு கூடிய கீழ்ப்படிதல் எபிரேயன ஆசையின் சூழ்நிலையாக அமைந்தது.

2. புதிய ஏற்பாட்டில்:- புதிய ஏற்பாட்டில், ஆசைபற்றிய கருத்துக்கள் பழைய ஏற்பாட்டுக் கருத்துகளுக்கு ஒத்தே அமைந்திருந்தன. மனிதனின் ஆசைகள் ஒழுக்கச் சார்பற்றவையாக அரிதாகவே கருதப்பட்டது (லூக் 5:39; 8:20; 15:16; 16:21; 23:8; கலா 4:20; 6:13; 1 திமோ 1:7). ஆசைகள் இருபிரிவாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவது, தீய, காமத்தன்மையுடைய, பேராசைமிக்க கட்டுப்பாடற்ற ஆசைகள். இதில் பொருள்கள் மீது ஆசை (யாக் 4:2), காம இச்சை (மத் 5:28; உரோ 1:24; கலா 5:24; 1 தெச 4:5; 2 பேதுரு 2:10) ஆகியவை அடங்கும். ஆயினும் எல்லாத் தீய ஆசைகளும் பட்டியல் செய்யப்படவில்லை. புதிய ஏற்பாடு பாவங்களைப் பற்றி அதிகம் பேசாது, பாவத்தைப் பற்றி கிறிஸ்துவுக்குப் புறம்பான பழைய இயற்கை வாழ்வையும் ஆவிக்குப் புறம்பான, ஆகவே இறைவனது திருவுளத்துக்கு எதிரான, வாழ்வைப் பற்றியும் பேசுகிறது. (உரோ 6:12; 13:14; கலா 5:16; எபே 4:22; 1 பேதுரு 1:14; 4:2). ஊனின்

இச்சைகளால், பழைய ஆதாமின் ஆசைகளால் முழுவதும் ஆளப்படும் இத்தகைய வாழ்வைக் (உரோ 6:12; எபே 2:3; 4:22; தீத்து 3:3) கிறிஸ்துவில் புது வாழ்வுக்குள் புகும் கிறிஸ்துவன் கைவிட வேண்டும். இரண்டாவது வகை, கிறிஸ்துவில் புதுவாழ்வுக்கு ஒத்த ஆசைகளாகும். கிறிஸ்துவில் அளிக்கப்படும் அருளால், கிறிஸ்தவன் புதுப்பிறவியாகுகிறான் (தீத்து 2:12). உலகின் ஆசைகள் அவனை இனி ஒரு போதும் அடிமைப்படுத்துவதில்லை (2 பேதுரு 1:4). அவன் ஆசைகளுக்கு அடிமைப்படுவதில்லை. ஆண்டவருக்கு அடிமையாகிறான்.

ஆகவே கிறிஸ்தவன், தன் புதிய வாழ்வுக் கேற்ப புதிய ஆசைகளைக் கொண்டிருக்க வேண்டும். அவன் இறைவாக்கு, போதகம், குணமாக்குதல், எல்லாவற்றையும் விட விசுவாசம், நம்பிக்கை, அன்பு போன்ற மேலான வரங்களையே ஆர்வமாகத் தேட வேண்டும் (1 தெச 12:31; 13; 27-31; எபி 6:11). முழுக் கிறிஸ்தவத் தோழமையையும் (1 தெச 2:8:17) கிறிஸ்துவையும் பெரிதும் ஆசைப்பட வேண்டும். உண்மையில் கிறிஸ்தவனுக்கு உண்மையான வீடு பூமியன்று, விண்ணகமே ஆகும் (எபி 11:6; 1 பேதுரு 2:11). அவனது ஆண்டவரோடு இருப்பதுவே அவனது இறுதி ஆசையாகும் (பிலி 1:23). அவரே அவனது ஆசைகள் எல்லாவற்றையும் நிறைவு செய்கிறார். அவற்றின் முடிவாகவும் உள்ளார்.

ஆடு (SHEEP)

விவிலியத்தில் ஆட்டைப்பற்றி ஐந்நூறுக்கும் மேற்பட்ட இடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆதி 4-ஆம் அதிகாரத்திலுள்ள காயின், ஆபேல் கதை பாலஸ்தீனத்தில் ஆடுகள் வீட்டுவிலங்குகளாக வளர்க்கப்பட்டதாக இயம்புகின்றது. ஆடுகள் அவர்களுடைய முதன்மையான சொத்துக்களாகவும், உணவளிக்கும் பொருளாகவும் கருதப்பட்டன (1 சாமு 14:32); குடிப்பதற்கு பாலும் (ஏச 7:21-22), ஆடை நெய்வதற்கு மயிரும் (லேவி 13:47-48; யோபு 31:20; எச 34:3) தோலாடை (எபி 11:37; செக். 13:43; மத் 7:15) கூடார போர்வைகள் செய்வதற்குத் தோலும் (யாத் 26:14) கொடுத்தன. பண்டம் மாற்றுவதற்கு சாதகமாக இருந்தது (1 அர 3:4; எச 27:18-19). ஆடுகள் பலிகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன (யாத் 20:24; எண் 22:40; யோவா 2:14). தனப்பலிக்கும் (லேவி 1:10) பாவப் பரிகாரப் பலிக்கும் (4:32) குற்றப் பரிகாரப் பலிக்கும் (5:15) சமாதானப் பலிக்கும் (22:21) பயன்பட்டன.

இயற்கையிலேயே இந்த ஆடுகள் மிகவும் அன்புள்ளவை (2 சாமு 12:3). தாழ்மையாக துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் (ஏச 53:7; எரே 11:19; யோவா 10:3-4). அதே போல் தற்காப்பற்றவை (மீக் 5:8; மத் 10:16). அவற்றிற்கு எப்பொழுதும் கவனிப்பும், மேற்பார்வையும் தேவை (எண் 27:17; எச 34:5; மத் 9:36; 26:37). விவிலியத்தில் ஆட்டையும், ஆட்டு இடையனையும் சேர்த்தே இறையியல் கண்ணோட்டத்தில் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளன. ஒருவர் பழைய ஏற்பாட்டைப் படித்தவுடனே பின்வரும் வாக்கியங்கள் அவரது கவனத்தை ஈர்க்கும். ''என் ஆயன் ஆண்டவர், எனக்கென்ன குறை'' அல்லது ''அவர்கள் அனைவருக்கும் ஒரே ஆயன் இருப்பானாக..... நம் தந்தையின் நிலத்தில் வாழ்வார்களாக.... உங்களுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்வேன்.... நான் அவர்களை ஆசீர்வதிப்பேன்'' (எச 37:24 தொ.). ''நாம் நமது மந்தையில் மீதியிருக்கும் ஆடுகளை, அவை சிதறியுள்ள நாடுகளினின்று ஒன்று சேர்த்து, அவற்றின் கழனிகளுக்குத் திரும்ப அழைத்து வருவோம் .... இவற்றைக் கண்காணிக்க புதிய ஆயர்களை ஏற்படுத்துவோம். அவை இனி பயப்படுவதுமில்லை, திகிலடைவதுமில்லை, காணாமற் போவதுமில்லை என்கிறார் ஆண்டவர்'' (எரே 23:3-4), அல்லது இரண்டாம் ஏசயா கடவுளை ஆயராக மீட்பின் நிகழ்ச்சியிலே பார்க்கின்றார்.

''ஆயனைப் போல் தன் மந்தையைக்
காப்பார்,
செம்மறியை தன்னிடத்தில் சேர்ப்பார்
அவைகளை தன் தோள்மீது சுமந்து
செல்வார்

''அவற்றை அமைதியுடன் நடத்திச் செல்வார்''

புதிய ஏற்பாட்டிலே ஆயனும் ஆடுகளும் என்ற கருத்து ஓர் உயர்ந்த இடத்தை பிடித்துள்ளது. கிறிஸ்துவுக்கு நல்லாயன் என்ற பெயரளித்து கிறிஸ்துவ விசுவாசம் மகிழ்கிறது.

எபிரேயர்களுக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் முடிவில் வரும் ஆசிரில் ''ஆடுகளின் மகத்துவமிக்க மேய்ப்பரான நம் ஆண்டவராகிய இயேசு'' (13:20) என்று இந்த விசுவாசம் துணிவாக வெளிப்படுத்தப்படுகிறது. ஆடுகளுக்கும் ஆயனுக்குமுள்ள உறவு மாற் 6:34-இல் ''இயேசு கரையில் இறங்கியபோது பெருங்கூட்டத்தைக் கண்டார் ஆயனில்லா ஆடுகள்போல் இருந்ததால் அவர்கள் மீது மனமிரங்கி நெடுநேரம் போதிக்கலானார்'' என்று சுருக்கமாக ஆனால் அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆயன்பற்றி விவிலியத்தில் உள்ள இரண்டு நீண்ட உருவகங்கள் எச 34; யோவா 10-இல் வருகின்றன. பழைய ஏற்பாட்டுப்பகுதி ஆயர்களைச் சாபமிட்டுக் கொண்டு ஆரம்பிக்கின்றது. காரணம் அவர்கள் ஆடுகளை மேய்க்காமல் தங்களுடைய நலன்களைக் கவனித்து வந்தார்கள். எனவே ஆண்டவர், இஸ்ராயேல்மேல் இரக்கமும் அன்பும் கொண்ட ஆயரானார் என்று சொல்கின்றது. ''இதோ, நாமே இனி நம்முடைய ஆடுகளைத் தேடிப்போவோம்; ஆர்வத்தோடு தேடுவோம். மேய்ப்பன் தன் ஆடுகளுள் சில சிதறுண்டு போனால் எவ்வாறு அவற்றைத் தேடுவானோ, அவ்வாறு நாமும் நம்முடைய ஆடுகளைத் தேடுவோம். வேற்றினத்தாரிடமிருந்து கூட்டிவந்து தங்களுடைய சொந்த நாட்டுக்கு அவற்றைத் திரும்பக் கொண்டு வருவோம்'' (எச 34:11-12). இந்த நிகழ்ச்சி காணாமற்போன ஆட்டு உவமையை நம்முடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருகின்றது. காணாமற்போன ஓர் ஆட்டையும் சேமமாய் இருந்த தொன்னூற்றொன்பது ஆட்டையும் நல்லாயன் என்ற கிறிஸ்துவின் பாகத்தையும் நினைவுபடுத்துகிறது (மத் 18:10-14; லூக் 15:3-6).

எசக்கியேலின் உருவகம் தொடர்கிறது ''இஸ்ரேயேலின் மலைகளிலும், நீரூற்றுகளின் ஓரத்திலும்.... வளமான புல் வெளியில் அவற்றை மேய்ப்போம். செழிப்பான புல்தரையில் அவை படுத்திருக்கும். இஸ்ரயேலின் மலைகளில் உள்ள வளமான புல்லை அவை மேயும். நம்முடைய ஆடுகளுக்கு நாமே மேய்ப்பனாய் இருப்போம். அவற்றை நாமே இளைப்பாறச் செய்வோம். காணாமற்போனதைத் தேடுவோம், வழி தவறியதைத் திரும்பக் கொண்டு வருவோம்; எலும்பு முறிந்ததற்குக் கட்டுப் போடுவோம்; வலுவில்லாததைத் தேறும்படிச் செய்வோம்; கொழுத்ததையும் வலிமையுள்ளதையும் கண்காணிப்போம்; நமது நீதி விளங்கும் வகையில் அவற்றை மேய்ப்போம்'' (எச 34:13-16).

புதிய ஏற்பாட்டில் தன்னுடைய மந்தையை அவரே பாதுகாக்கிறார், வழி நடத்துகிறார், மீட்கின்றார். ''ஆட்டு மந்தைக்கு வாயில் நானே... நானே வாயில் என் வழியாக நுழைபவன் மீட்புப் பெறுவான், உள்ளே போவான் வெளியே வருவான், மேய்ச்சலைக் கண்டடைவான்'' (யோவா 10:7-9).

ஆனால் இதைத் தொடர்ந்து வரும் ஒரு சொற்றொடருக்கு பழைய ஏற்பாட்டில் முன்னறிவிப்பு ஏதுமில்லை. ஆனால் இறைவாக்கினர்கள் இறைவனது அறிவும் அரசும் உலகில் ஏற்பட மரிக்கும் இஸ்ராயேலை அல்லது ஆண்டவரின் ஊழியனை எண்ணிப் பார்த்தனர். ஆனால் இறைவனோ அல்லது இறைவனது மகனோ அப்படி மரிப்பார் என்று எண்ணிப் பார்க்கவில்லை. இறைவாக்கு உருவகம் ஆயன் தன் மந்தைக்காக இறப்பதாக ஒருபோதும் கருதியதில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் யோவானில் வரும் உருவகம் இதுபற்றி ஐயத்திற்கிடமற்ற தெளிவோடு பேசுகிறது. ''நல்ல ஆயன் நானே, நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தன்னுயிரையே கொடுப்பான்.. ஆகவே ஒரே ஆய

னும் ஒரே மந்தையும் உண்டாகும்'' (10:11-18).

ஆடை, உடை (CLOTHING, DRESS)

1. தொடக்கத்தில், பாலுணர்வால் உண்டான வெட்கத்தை மறைக்க ஆடை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், ஆகவே மானத்தை மறைக்கப் பயன்படும் ஒன்றாகவும் அது கருதப்பட்டது (ஆதி 3:7.21). எபிரேயர்கள் நிர்வானத்தை மிகவும் இழிவுக்குரியதாகக் கருதினர். போர் காலத்தின்போதும் நாடுகடத்தப்பட்டபோதும் ஏற்படும் துன்பங்களில் ''ஆடையின்றி இழுத்துச் செல்லப்படுதல்'' மிகவும் கொடுமையானதாகக் கருதப்பட்டது (ஏச 20:4; ஆமோ 2:16). கைது செய்பவர்கள் கைதிகளின் ஆடைகளை உரித்து அவற்றைத் தங்கள் கொள்ளைப் பொருளாகக் கருதியதாகத் தெரிகிறது. உள்ளாடைமட்டும் அணிந்திருப்பவனை ''நிர்வாணி'' என்றழைப்பது வழக்கம். ஆடைகளைக் குறிக்கப் பல எபிரேய சொற்கள் பயன்பட்டுள்ளன. அவை உள்ளாடை, மேலாடை, அங்கி, சட்டை, கச்சை போன்ற சொற்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றைத் துல்லியமாய் வேறுபடுத்துவது கடினம். ஆடைகளின் வடிவங்கள் பற்றியும் நெய்தல் முறைகள் பற்றியும் ஆங்காங்கே விவிலியத்தில் குறிப்புகள் உள்ளன. இவற்றை வேறுபடுத்த பழங்காலத்து ஓவியங்கள் ஓரளவு உதவியுள்ளன.

பாலஸ்தீன மக்களிடையேயும் பழம் மேற்காசிய மக்களிடையேயும் ஆடைகள் எளிமையாயிருந்துள்ளன. ஆடைப்பாணியும் ஓரளவு மாறாமல் நெடுங்காலத்திற்கு அமைந்திருந்தது. தொடக்க காலத்தில் மக்களிடையே ஆடைகள் தோலால் செய்யப்பட்டதாகத் தெரிகிறது (ஆதி 3:7; யாத் 25:5) காலப்போக்கில் கலாச்சாரம் வளர்ந்த நிலையில் கம்பளி ஆடையும் மெல்லிய சணல்நூல் ஆடையும் வழக்கில் வந்தது (லேவி 13:47). முரட்டு கம்பளி ஆடை., துக்கத்திற்கும் தபசிற்கும் அடையாளமாக அணியப்பட்டது (2 சாமு 3:31; மத் 3:4). எச 16:13-இல் பட்டு என்ற சொல் வந்தாலும், பழங்காலப் பாலஸ்தீனத்தில் பட்டு இருந்ததா என்பது ஐயத்திற்குரியது. அது ஒருவகை மெல்லிய துணியாய் இருந்திருக்கலாம் (நீதி 31:22). புதிய ஏற்பாட்டு காலத்தில் பட்டு உடைபற்றி நன்கு அறியப்பட்டதாகத் தெரிகிறது (திருவெளி 18:11).

2. ஆண்கள் ஆடை:-

அ. இடைக்கச்சை:- இடுப்பைச் சுற்றிச்சுற்றிக் கட்டப்படும் முண்டுபோன்ற பாவாடை. இது தோற்கச்சையாகவோ,



இடைக்கச்சை

துணிக்கச்சையாகவோ இருக்கலாம் (2 அர 1:8; ஏச 5:27; எரே 13:1 தொ; எச 23:15; மத் 3:4). இதைப் பெரும்பாலும் படைவீரர்களும் இறைவாக்கினர்களும் பயன்படுத்தினர். மெசியா அரசன் உண்மையை இடைக்கச்சையாக அணிவார் (ஏச 11:5) என்று குறிக்கப்படும்போது இவ்வகை ஆடையே சுட்டிக் காட்டப்படுகிறது. பழங்கால எகிப்தியர் உடுத்திய இடைக் கச்சை முழங்கால் வரை நீண்டிருந்தது. பாரவோன் மன்னர்கள் விழாக்காலங்களில் இத்தகைய ஆடையை அணிந்திருந்தனர் என்று தெரிகிறது. பிற்காலத்தில் படைவீரர்கள், அடிமைகள், கடின உழைப்பில் ஈடுபட்டவர்களும் தவிர மற்றவர்கள் இதன்மேல் உட்சட்டை அணிந்தனர்.

ஆ. உட்சட்டை அல்லது அங்கி:- இது கம்பளத்தாலோ, சணல் துணியாலோ செய்யப்பட்டது; கணுக்கால் வரை நீண்டு இருக்கும். இது கையுடனோ கையில்லாமலோ செய்யப்பட்டிருக்கும். நிர்வாணம் உடல்

மேல் அணியப்பட்டது. வேலையின் போதோ பயணத்தின்போதே இது இடைக் கச்சையோடு இணைத்துச் சுருக்கிக் கட்டப் பட்டது (யாத் 12:11; 2 அர 4:29; 9:1).

உட்சட்டை அல்லது அங்கி

சால்வை அல்லது போர்வை

யோசேப்பு சகோதரர்களிடையே பொறாமை எழுப்பிய ஆடை கையுடைய தாக இருக்கலாம் (ஆதி 37:3). இது பல அழகு வேலைப்பாடுடையதாக இருக்க லாம்; சீரியர்களும் கானானியர்களும் பல நிற ஆடைகளையும், எகிப்தியர் எப்போதும் வெண்ணிற ஆடைகளையும் பயன்படுத்திய தாக எகிப்திய ஓவியங்கள் காட்டுகின்றன. அங்கிமேல் பட்டையிட்ட ஆடை சுருள்வடி வில் அணியப்பட்டதாகத் தெரிகிறது. இது விழாக்காலங்களில் அணியப்பட்டது. இத்த கைய நார்ப்பட்டாடைகளைத்தான் சிம் சோன் பெலிஸ்தியர்களுக்குப் பந்தயத்தில் அளிப்பதாகக் கூறினார் (நீதி 14:12 தொ).

இ. சால்வை அல்லது போர்வை:- உள்ளா டைமேல் போர்வை அல்லது சால்வை அணியப்பட்டது. இதைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. ஒவ் வொரு சொல்லும் ஒருவேளை வேறுபட்ட ஆடைகளைக் குறிக்கலாம். வேறுபாடுகளை விளக்குவது கடினம். சால்வை சாதாரண மாய் சதுரவடிவமானது. இது இரு தோள்க ளைச் சுற்றியோ அல்லது ஒரு தோளிலோ போடப்பட்டிருக்கும். சால்வை இரவு நேரத் தில் போர்வையாகப் பயன்பட்டது. எபிரே யச் சட்டம் ஏழைகளிடமிருந்து சால்வையை அடமானமாகப் பெறுவதைக் கண்டித்தது (யாத் 22:25 தொ; உப 24:13). சால்வை வேலை நேரங்களில் அணியப்படவில்லை. பல்வேறு பொருள்களைக் கட்டி எடுத்துச் செல்லவும் இது பயன்பட்டது (யாத் 12:34; 2 அர 4:39; ஆகா 2:12). இது சிலசமயம் தலைமட்டும் நுழைவதற்கு துவரத்தோடு வட்டவடிவாய் அமைந்திருக்கும். குஞ்சங்க ளால் அணிய செய்யப்பட்டிருக்கும்.

ஈ. பட்டைவார்:- எல்லாவற்றிற்கு மேலாக தோலாலோ துணியாலோ செய்யப் பட்ட பட்டைவார் அல்லது கச்சை அணியப் பட்டது. இது 5 அங்குல அகலமிருக்கலாம். இதிலிருந்து பட்டை உறையும் பணப்பை யும் தொங்கவிடப்படலாம். குருக்களின் பட் டைவார் அணிசெய்யப்பட்டிருக்கும். சிலர் பொற்கச்சையைக் கட்டுவார்கள் (யாத் 28:8; திருவெளி 15:6). ஏழைகள் பட்டைவாருக் குப் பதிலாகக் கயிறு கட்டுவார்கள் (எச 3:24).

உ. மற்ற ஆடைகள்:- அரசர்கள் (1 சாமு 18:4; 24:5:11), பெரிய குரு(யாத் 28:31 தொ; லேவி 8:7), சாமுவேல் (1 சாமு 2:19; 15:27;

28:14) போன்றோர் தங்களின் பதவிக்கேற்ற சிறப்பான மேலாடை அணிந்திருந்ததாகத் தெரிகிறது. குருக்கள் இடுப்பு முதல் தொடை வரை நீண்டிருக்கும் அளவில் மெல்லிய நார்பட்டால் செய்யப்பட்ட கால் சட்டைகள் அணிவர் (யாத் 28:42; தானி 3:21). இறைவாக்கினர் ஒட்டகமயிரால் செய்யப் பட்ட ஆடை அணிந்தனர் (செக் 13:4; மாற்கு 1:6). விழாக்கால ஆடைகள் பழைய ஏற்பாட் டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடிக்கடி குறிக் கப்படுகின்றன (ஆதி 27:15; நீதி 14:12; மத் 22:11 தொ; லூக் 15:22 தொ). இவை விலையு யர்ந்த பொருட்களால் செய்யப்பட்டன. பகட்டான நிறங்களைக் கொண்டிருந்தன.

புதிய ஏற்பாட்டில் மேலாடையைக் கேட் பவனுக்கு உள்ளாடையையும் கொடுத்துவி டும்படி இயேசு கூறுகிறார் (மத் 5:40; லூக் 6:24). இவையிரண்டும் சால்வையையும் அங்கியையும் குறிப்பதாகத் தெரிகிறது. இரண்டு அங்கிகளைக் கொண்டிருப்பது செல்வத்திற்கு அடையாளமாகும். தம் சீடர் கள் இரு அங்கிகளைக் கொண்டிருப்பதைத் தடுக்கிறார் (மத் 10:10; மாற் 6:9; லூக் 9:3). இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, படை வீரர்கள் அவருடைய ஆடைகளை பங்கிட்டுக் கொண்டனர். அவரது அங்கி மேலிருந்து அடிவரை தையலில்லாமல் நெய்யப்பட்டிருந்ததால், அதைச் சீட்டுப் போட்டு எடுத்துக் கொண்டனர் (யோவா 19:23).

ஊ. தலைப்பாகை:- தலையில் பாகை அல்லது குல்லா தரிப்பது வழக்கம். இது, முக்கோண வடிவமாக மடிக்கப்பட்ட சதுரத் துணியை தலையில் சுற்றி கட்டப்பட்டிருக் கும் (யோபு 29:14; எச 24:17).

எ. காலணி:- காலில் செருப்புகள் அணிந் திருப்பர் (ஆதி 13:23; எச 16:10). எபிரேயர் காலணிகளை வீட்டுக்கு வெளியே போடு வார்கள். துக்க காலத்திலும், நண்பர்கள் வீட்டுக்குப்போகும்போதும் ஆலயத்திலும் காலணி அணிந்திருக்கமாட்டார்கள். இவை பல நிறங்களில் கவர்ச்சியாக அமைந்திருக் கும்.



காலணி

ஏ. பெண்கள் உடை:- பெண்களும், பொதுவாக, ஒரு அங்கியையும் சால்வையை யும் அணிந்திருந்தனர். இரு பாலினர்களுக் குள்ளே ஆடைகளை மாற்றிக் கொள்வது தடுக்கப்பட்டிருந்தது (உப 22:5). இது இரு வகை ஆடைகளுக்கும் வெட்டுவதிலும் பாணியிலும் வேறுபாடுகள் இருந்தன என்ப தைச் சுட்டுகிறது. பெண்களின் ஆடை ஆண் களின் ஆடையைவிட நீண்டதாயும் மெல் லிய பொருட்களால் செய்யப்பட்டதாயும் இருந்தது. பெண்கள் முக்காடு இட்டுக் கொண்டனர். இது, உடல் முழுவதையும் மூடக்கூடிய மெல்லிய சால்வையாகும். செல்வமிக்க பெண்கள் பல கவர்ச்சிகரமான

ஆடைகளையும் அணிவர். இவை ஏச 3:19-20; எச 16:10-12-இல் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் வடிவங்களை உறுதியாகக் கூறமுடியாது.



பெண்கள் முக்காடு

ஆடை அணிதல் *(CLOTHING)*

மனித வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளில் உணவு, இருப்பிடம் ஆகியவற்றுடன் உடையும் ஒன்றாகும் (சீரா 29:21). உணவும் உடையும் இறைவனுடைய ஆசீராகவும் (உப 10:18; ஆதி 28:20), பசியும் நிர்வாணமும் தண்டனையாக உள்ளன (உப 28:48). உடையானது பருவ காலங்களின் கடுமையிலிருந்து பாதுகாப்பதற்கென இருப்பதால், இரவின் குளிரானது ஏழையின் மீது படரும் போது அவனுடைய மேற்போர்வையானது அடகுக் கடையில் வைக்கப்பட்டிருக்கக் கூடாது. இத்தகைய அடிப்படை நோக்கிற்கு அப்பாற்பட்டு, ஆடை அணிதலின் அடையாளமானது மேலும் இரு பரிமாணங்களில் வளர்ச்சியடைகிறது: படைத்தவரிடமிருந்து வரும் திட்டமான அமைப்பின் அடையாளமாகவும் இன்பவனத்தில் இழந்த மகிமை பற்றி உறுதி மொழியினை நினைவுறுத்தும் அடையாளமாகவும் இது உள்ளது.

I ஆடை அணிதல்:- உலகில் இறை அமைப்பின் பிரதிபலிப்பு

படைத்தவர் அண்டம் முழுவதையும் முதலில் நிலவிய வெறுமையினின்று உருவாக்கித் திட்டத்துடன் அமைக்கப்பட்ட உலகில் ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய இடத்தை அளித்தார். இவ்வாறு ஆடை அணிதலானது மனிதனுடைய ஆள் அடையாளத்திற்கும், தனித்தன்மைக்கும் அடையாளமாகத் தோன்றுகிறது.

1. ஆடை அணிதலும் மனித ஆளும்:- முதல் நிலையில் ஆடையணிதலானது உடலை தட்பவெப்ப நிலையினின்றும், மனிதனை காம இச்சைப் பொருளாக தாழ்த்தக்கூடிய பார்வையினின்றும் பாதுகாக்கிறது; இப்படிப்பட்ட பார்வைகள், கடவுள் மனிதனைக் கொண்டுவந்த குழப்பமான தனித்தன்மையற்ற நிலைக்கே மீண்டும் மனிதனைக் கொண்டு சேர்க்கும். குடும்பச் சூழலுக்கும் இந்த அடிப்படையிலேயே ''ஆடை நீக்குதல்'' தடுக்கப்பட்டிருக்கிறது. இது குடும்பச் சூழலுக்கும் (ஆதி 9:20-27) அதன் தாய்மை (ஆதி 34; 2 சாமு 3) மற்றும் மணஉறவு (உப 22:13-24) ஆகிய கூறுகளுக்கும் பாதுகாப்பாகும். ஆடையணிதலானது இங்கு ஒவ்வொரு நபரின் தனிப்பட்ட சொந்த வாழ்வையும் பாதுகாக்கிறது.

ஆடையணிதல் பாலினங்களின் வேறுபாட்டை உறுதிப்படுத்தி, அவர்களின் உறவிற்கும் அடையாளமாக விளங்குகிறது. ஆணும் பெண்ணும் மாறுபட்ட ஆடைகளை அணிய வேண்டும் (உப 22:5; லேவி 19:19). திருமணத்திற்குமுன் ஆண் பெண் சந்திப்பு போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காக, பெண் தன் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வது, ஒருத்தியைத் தேர்ந்தெடுத்தவனுக்குக் காட்டும் சடங்கு அடையாளமாகும் (ஆதி 24:65). திரையிட்டு மறைப்பதானது, மணமகன் தனது போர்வையினை அவள் மீது போர்த்துவதன் மூலம் (ரூத் 3:9; உப 23:1) தனக்குரியதை அவளுடன் பகிர்ந்து கொள்ளுகிற செயலுக்கு ஒத்ததாகும். ஆனால் இதன் மூலம் அவன் அவளைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளவில்லை (ரூத் 4:7; உப 25.9; சங் 60:10).

மாறாக தேர்ந்தெடுக்கப்பட்டவள்மீது தனது சொந்தச் சிறப்பினை அளிப்பதாகும்.

ஆடையணிதலானது சமூகத்தில் வாழ்கின்ற வாழ்க்கைத் தரத்தினைப் பிரதிபலிக்கின்றது. சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஆடையணிதலானது, இணைந்து உழைப்பதால் உருவாகும் ஒற்றுமையான வாழ்விற்கும் (ஆடுகளுக்கு மயிர் கத்தரித்தல்: 1 சாமு 25:4-8; நெய்தல்: பழ 31:10-31; தைத்தல்: அ.ப. 9:39), திறமையான ஆட்சிமுறைக்கும் (பழ 31:30) மற்றும் ஒருவர்க்கொருவர் உதவி செய்வதற்கும் அடையாளமாக செயல்படுகிறது. ஒருவருடைய போர்வையைத் தருவதானது சகோதரத்துவத்தின் அடையாளமாகும். யோனத்தான் தாவீதுடனான உடன்படிக்கையை இவ்வாறே முத்திரையிடுகிறார் (1 சாமு 18:3 தொ). ஏனெனில், ஆடையணிதல் அந்த ஆளோடு நெருங்கிய தொடர்புடையது. அன்பு செய்யப்படுபவர்க்கு அந்த தொடர்பைத் தெளிவாக்குகிறது (ஆதி 37:33); சில சமயங்களில் இந்த இணைப்பானது ஆடைகளின் மணத்தினின்று தெளிவாகுகிறது (ஆதி 27:15.27). சமூக சமத்துவமற்ற நிலையினை வெட்கமின்றி குறிப்பிட்டு, அந்த வேறுபாட்டைத் தீர்க்க ஒன்றுமே செய்யாத பகட்டான ஆடம்பரமானது (சீரா 40:4; யாக் 2;2). இறைவாக்கினர் மற்றும் அப்போஸ்தலர்களின் சாபத்தை பெற்றுக் கொள்கிறது. ஆடையற்றவனை உடுத்துவதானது சமுதாய வாழ்வை சார்ந்துள்ள நீதியின் கட்டளையாகும் (எச 18:7); இதனை ஒதுக்குதலானது சமுதாய பிரிவினையை வரவேற்பதாகும். தனது உறுப்பினர்களின் குளிரை போக்குவதற்கும் மேலாக (யோபு 31:20). இக்கட்டளையானது ஒரு மனிதனைச் சமுதாய வாழிவில் புதிதாக நுழையச் செய்கிறது (ஏச 58:7). நிர்வாண மனிதனின் நிலையில் இச்செயலானது, குழப்பநிலையினின்று மனிதனை மீட்கின்ற, அனைத்து மனிதருக்காக இறைவனின் செயலின் மறுபதிப்பாக விளங்குகிறது (உப 10:18). இத்தகைய நீதியான செயல் இல்லாவிடில் அன்பு தன்னிலே உயிரற்றதாகும் (யாக் 2:15). ''உன் மேலாடையையும் கொடுத்து விடு'' என்று கிறிஸ்து கூறும் போது (மத் 5:40), மற்றவன் கேட்கும் போது தன்னையே கொடுத்துவிட வேண்டும் என்று பொருள்படும்.

2. ஆடையணிதலும் மனித செயல்களும்:- எல்லா காலங்களிலும் ஒரே விதமான ஆடை அணியப்படுவதில்லை. சமயச் சார்பற்ற மற்றும் புனிதம், வேலை மற்றும் விழாக்காலம் என காலங்களுக்கேற்ப ஆடை மாறுபடும். சில வேலைகளுக்காக ஆடைகளைக் கலைவது (யோவா 21:7) அவசியமாக இருக்கும். அதே சமயத்தில், பல்வேறு விழாக்கால ஆடைகளும் காணப்படுகின்றன. கடவுளின் காட்சிக்காக மக்கள் காத்திருத்தல் (யாத் 19:10; ஆதி 35:2) மற்றும் குருக்கள் உள்சந்நிதானத்தில் நுழைதல் மற்றும் வெளியேறுதல் (யாத் 28:2 தொ; லேவி 16:4; எச 44:17-18; செப் 3) போன்ற காலங்களில் ஆடை மாற்றுதல் சமயச்சார்பற்ற நிலையிலிருந்து புனிதத்திற்கு மாறுவதைக் குறிப்பிடுகின்றது. பல்வேறு கத்தம் மற்றும் அசுத்தம் ஆகிய பிரிவுகளுக்கும் இது பொருந்தும் (லேவி 13-15). அரச உடைகளில் (1 அர 22:30; அ.ப. 12:21) பொன் கொக்கியுடன் கூடிய கருஞ்சிவப்பு மேலாடையும் உண்டு (1 மக் 10:20.62.64; 11;58; 14:44). அபிடேகம் செய்யப்பட்ட அரசனுக்கு அங்கீகாரம் காட்டும் விதமாக மக்கள் தமது ஆடைகளை அவரது பாதங்களின் கீழ் விரிப்பர் (2 அர 9:13; மத் 21:8), ஏனெனில் அவர்களை மாட்சியால் நிரப்புவது அவரது பணியாகும் (2 சாமு 1:24). எலியா எலிசாவிற்கு இறைவாக்கு அழைப்பை அளிப்பதற்காக எறிந்த போர்வையைப்போன்ற (1 அர 19:19) மேலாடையை, தோலாடையின்மேல் இறைவாக்கினர் அணிவர் (செக் 13:14; மத் 3:4). இத்தகைய ஆடையணிதல் இறைவாக்கு உரைக்கும் அருங்கொடையை குறிக்கவல்லது (2 அர 2:13-14). புனித ஆடைகளை அணிவிப்பதன் மூலம் தலைமைக்குரு பதவி ஏற்கிறார் (லேவி 21:10). இத்தகைய அடையாள உடைகளோடு (யாத் 28-29; லேவி 16; எச 44; சீரா 45:7-12) பழிகளுக்கு அப்பாற்பட்ட மனிதன் இறைசீற்றத்தை எதிர்

கொள்ள முடியும், அழிப்பவன் பணிந்து போவான் (ஞான 18:23-24; 1 மக் 3:49).

II ஆடையணிதலும் நிர்வாணமும்: ஆன்மீக அடையாளங்கள்

இன்பவன நிகழ்ச்சியுரையிலும், புனித வரலாற்று விவரிப்புகளிலும் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று, ஆடையணிதலானது மனிதனுடைய ஆன்மீகக் கூறின் அடையாளமாகவும் உள்ளது.

1. இன்பவனத்தில்:- தடை செய்யப்பட்ட அறிவானது ஆதாம், ஏவாளின் கண்களைத் திறந்ததால் தாங்கள் நிர்வாணமாய் இருப்பதை அவர்கள் அறிந்தனர் (ஆதி 3:7). அந்நேரம்வரை, ஒரு வித அருளினால் உடையாக போர்த்தப்பட்டு, இறைசூழ்நிலையில் ஒன்றித்திருப்பதாகதங்களைக் கருதினர். இனிமேலிருந்து, அவர்களது பாலினம் மட்டுமின்றி முழு உடலுமே இறைவனது பிரசன்னத்திற்குமுன் தேவையால் குறிக்கப்பட்டிருக்கும். அத்தி இலை ஆடை மட்டுமே இனி போதுமானதாக இல்லை. இறை மாட்சிமைக்கு முன் அவர்களது வெட்கம் உருவாவதால் தோட்டத்து மரங்களுக்கு இடையில் பாவிகள் தங்களை மறைத்துக்கொள்கின்றனர்: ''நிர்வாணியாய் இருந்ததால் நான் பயந்து ஒளிந்து கொண்டேன்''. ஆண்டவருக்கு உரியவர்கள் என்னும் உணர்வை இழந்துவிட்டதால், இறைவனை உரிமையோடு நெருங்குவதை நியாயப்படுத்தக்கூடிய எந்த அடையாளமும் அவர்களிடம் இல்லை. இறைவனின் உருவத்தை பிரதிபலிக்காத கண்ணாடியைப் போன்று, தங்களது நிர்வாணத்தினால் அவர்கள் என்றென்றும் திடுக்கிடுகின்றனர்.

ஆயினும், இறைவன் அவர்களைத் தோல் ஆடைகளால் உடுத்தாமல் துரத்தவில்லை (ஆதி 3:21); இவ்வுடையானது அவர்களின் நிர்வாணத்தை வெளியிடாதிருக்கவில்லை. ஆனால் அவர்கள் இழந்துவிட்ட மேன்மைக்கு இடைவிடாமல் அழைக்கும் அடையாளமாக உள்ளது. வீழ்ச்சியடைந்த மனிதனுடைய சிறப்பை உறுதிப்படுத்துவதாகவும், இழந்த மாட்சிமையால் மீண்டும் உடுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பினையும் குறிக்கிற இருபொருள் நிலையை, ஆடையணிதலானது இப்போது சுட்டிக்காட்டுகிறது.

2. உடன்படிக்கையின் வரலாறு:- இது ஆடையணிதலின் உதவியால் அடையாளமாக குறிப்பிடப்படுகிறது. ஆடை அணிதல் இழந்துவிட்ட அல்லது வாக்களிக்கப்பட்ட மாட்சிமையினையே குறிப்பிடுகிறது. இறைவன் உடன்படிக்கையின் மூலம் தனது மாட்சிமையை நெருங்கிய விதத்தில் அளிக்கத் துவங்குகிறார். ஒரு ஆயனாக, பரந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அநாதைக் குழந்தையை உடுத்துகின்றார் (உப 32:10). ஒரு அரசனாக அவரது தொங்கலாடை கோயிலை நிரப்புகிறது (எச 6:1), ஒரு கணவனாக அவர் தனது ஆடையை மக்கள் மீது பரப்பி (எச 16:8-9), விலங்குகளின் தோல் ஆடையினால் அன்றி, அவர்களைக் குருக்களாக்குவது போல மெல்லிய பட்டு மற்றும் சணல் நூல் ஆடைகளால் அணிவித்தார் (யாத் 28:5.39.42). யாவே தம்முடைய மகிமையையே தமது மக்களுக்கு அளித்தாலும் (எச 16:13 தொ) அரச மணப்பெண் பிரமாணிக்கமாக நடக்கவில்லை. மேட்டுப் பகுதிகளில் சிலை வழிபாட்டுப் பழக்கங்களை எசக்கியேல் குறிப்பிடுகின்றார். அவர் அந்த உருவகத்தை வெளிப்படையாகப் பின்பற்றி, மணப்பெண் தனது நிர்வாணத்தை வெளிக்காட்டி, அனைவருக்கும் தன்னை அளிப்பதை சுட்டிக்காட்டுகின்றார். தனது ஆடைகளால் அவள் தனக்குப் பலவர்ண மேடைகளைச் செய்து போவோர் வருவோருடனெல்லாம் வேசித்தனம் புரிகின்றாள் (16:15-16; ஓசே 2:9-10). ஒருமுறை நீண்ட பாலைவனப் பயணத்தின்போது ஏற்பட்டது போன்று அவளுடைய ஆடைகள் பழைமையாகி கிழியாதிருக்க வேண்டும் (உப 8:4); ஆனால் இப்போது அது சிதைவதையும், கந்தலாவதையும் (எச 50:9), பூச்சிகளும் அரிபுழுக்களும் தின்பதையும் (51:8) இறைவன் பார்க்கிறார்.

ஆயினும், திமையிலிருந்து அதனுடைய பரிகாரத்தை எடுக்கின்ற மாற்றுச் செயலால் இறைவனின் கிட்டம் நிறைவேற்றப்படும்.

முதலாவதாக, அவளது காதலர்களின் காமத்தை அழிவின் சினத்திற்கு மாற்றி இஸ்ராயேலின் நாட்டை நிர்வாணமாக்குகிறார். எஞ்சியவர்கள் மட்டுமே மீட்பின் பலனை இறுதியில் அடைகின்றனர் (எச 16:37; எரே 13:26). பின்னர், அழகோ அல்லது சிறப்போ இல்லாத ஒரு ஊழியனை மரணம் வரை தாழ்த்தி, மக்களை அவர்களது இச்சைகளினின்று குணமாக்குவார் (ஏச 53:12). இவ்வாறு, சீயோன் அவளை அழித்தவர்களாலும், மீண்டும் கட்டியவர்களாலும் ஒரு மணமகளாக உருவாக்கப்படுவாள் (49:17 தொ). பின்னர், ஆண்டவர் நேர்மையை மார்க்கவசமாகவும், பழி வாங்குதலை ஆடையாகவும், பொறாமைத்தன்மையை மேலாடையாகவும் போர்த்திக்கொண்டு (59:17), தனது மணமகளை நீதியின் மேலாடையால் போர்த்த வருவார் (61:10).

3. கிறிஸ்துவிற்கு மகிமையை ஆடையாய் அணிவித்தல்:- இஸ்ராயேல் இவ்வாறு அழகு செய்யப்படுவதற்காக உண்மையான ஊழியனாகிய கிறிஸ்து, அவரது ஆடைகள் உரிக்கப்பட்டு (மத் 27:35; யோவா 19:23), நகைப்பிற்கிடமான அரச ஆடைகள் அணிவிக்கப்பட்டு (யோவா 19:2 தொ) நியாயமான தகுதி மறுக்கப்பட்டவராய், பிரித்தறிய முடியாத மனிதனாக வேண்டும். ஆனால், இம்மனிதனே அழிக்கமுடியாத மாட்சிமையுடைய இறைமகனாவார். ஏற்கனவே உரு மாற்ற நிகழ்ச்சியில், அவரது உடைகளின் வெண்மையில் அவரது உடலின் மகிமை காட்டப்படுகிறது (மத் 17:2). கெராசா நாட்டில் பேய் பிடித்தவனுக்கு மீண்டும் ஆடைகளை அணிவிக்க அவரால் முடிந்தது (மாற் 5:15; அ.ப. 19:16). உயிர்ப்பிற்கு பின்னர், அறிவிக்கின்ற வானதூதர்களைப் போன்று (மத் 28:3) அவரது மகிமையின் அடையாளமாகிய பேரொளியை மட்டுமே அத்தியாவசிய ஆடையாக ஆண்டவர் கொண்டிருந்தார் (அ.ப. 22:6-11; 10:30; 12:7). மரிய மகதலேனாள் மற்றும் எம்மாவு சீடர்களின் திறக்கப்படாத கண்கள் தோட்டக்காரரையும், உடன் பயணம் செய்பவரையும் தவிர மேலான எவரையும் முதலில் பார்க்கவில்லை (யோவா 20:15; லூக் 24:15 தொ); ஏனெனில் இம்மகிமையானது உயரிய விசுவாசத்திற்கு மட்டுமே வெளிப்படும். விசுவாசிப்பவருக்கு கிறிஸ்து, 'ஆண்டவர்கெல்லாம் ஆண்டவர், அரசர்க்கெல்லாம் அரசர்' என்று (திருவெளி 19:16) எழுதப்பட்ட ஆடையால் உடுத்தப்பட்டு எரிகின்ற, உணர்ச்சிமிக்க அன்பின் அழைப்பை விடுவிக்கிறார்.

4. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆடை:- படைக்கப்பட்ட உலகின் முறையான அமைப்பானது விசுவாச கண்களுக்கு இப்போது தெளிவாகத் தெரிகின்றது. பவுல் கூறுவது போல், தூதர்கள் முழுமையான அமைப்பையும் காண்கின்றனர் (1 கொரி 11:10); மற்றும் தலையாகிய கிறிஸ்து செய்வதைப் போன்று (1 கொரி 11:13 தொ), தனது திரையிடப்படாத முகத்தில் ஆதாம் இறைவனின் மகிமையை வெளிப்படுத்துகிறான் (2 கொரி 3:18). ஏவாள் ஆதாமின் பதிப்பாக இல்லாமல் துணையாகப் படைக்கப்பட்டதால் (1 கொரி 11:8), தன்னுடைய துணையான பங்கில் தன்னாண்மைத்திறத்தின் அடையாளத்தினை கொண்டிருக்க வேண்டும். இவ்வாறாக தனது திரையின் மூலம் குழப்பமான தாறுமாறான பார்வைகளுக்கு (1 கொரி 11:5-13; 1 திமோ 2:9-14) தனது மகிமையைக் கீழ்படுத்த அவள் மறுக்கிறாள் (1 கொரி 11:6, 10:15). இத்திரையானது, தான் எனும் தன்மையிலிருந்து பிரிதலுக்கு எதிரான, அவளது அபிடேகம் செய்யப்பட்ட நிலைமையின் முழுதான தன்னடக்க அமைதியினைக் குறிப்பிடுகின்றது. உயிர்த்தெழுந்த நாளில் மட்டுமே அவளின் மகிமை தெளிவுபடுத்தப்படும்.

உண்மையில், ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவால் ஆரம்பிக்கப்பட்ட மகிமையை நோக்கிய இயக்கத்தில் நுழையுமாறு அழைக்கப்படுகின்றான். உலகில் விதைக்கப்பட்ட சிறிய, ஒன்றுமில்லாத விதையினின்று பெரும்விளைச்சலைக் கொண்டுவர இறைவனால் முடியும்பொழுது, ஒவ்வொரு மனிதனின் உடலையும் அழிவற்றதாக அவரால் மாற்ற முடியும் (1

கொரி 15:37-42); அழியக்கூடிய மனித உடலின் மீது, அழியாமையினால் உடுத்த அவரால் முடியும் (2 கொரி 5:3-4). இது நிகழும் போது, மனித இனமானது கிறிஸ்துவை அணிந்துக்கொண்டு விடுதலை, மகன் என்னும் உரிமை, மற்றும் இறைமரபுரிமை ஆகியவற்றை அடைவதற்காக, தனது நிர்வாண நிலையினை விட்டுவிடும். பின்னர் இறைவன் விசுவாசத்தினாலும் ஞானஸ்நானத்தினாலும் (கலா 3:25-26), பழைய மனிதனைக் களைந்துவிட்டு, புதிய மனிதனை அணிந்து கொண்டவர்களைக் கொண்டு (கொலோ 3:10; எபே 4:24) முழுமையான ஒரே சமுதாயத்தை உருவாக்குவார். ஆவியாகிய புதிய கோட்பாட்டின்படி வாழ்வதன்மூலம் அவர்கள் கிறிஸ்துவில் ஒன்றாக உள்ளார்கள். இச்சமுதாயத்தின் உறுப்பினர்கள், நிர்வாண நிலையும் தங்களைக் கிறிஸ்துவிடமிருந்து பிரிக்காமலிருப்பதற்காக (உரோ 8:35), ஒளியின் கவசத்தை உபயோகித்து (உரோ 13:12) இன்னும் போராட வேண்டியுள்ளது.

வெற்றி பெற்றவர்கள் ''தங்களுடைய ஆடைகளை செம்மறியின் இரத்தத்தில் தோய்த்து வெண்மையாக்கிக் கொண்டார்கள்'' (திருவெளி 7:14; 22:14). பின்னர், மணமகள் எவ்வழியிலும் குறைவுள்ளவளாக இருக்கவே முடியாது; ஏனெனில், வரலாற்றின் நீண்ட காலமானது திருமணத்திற்கு அழகுபடுத்தும் செயல்முறையாகும். ''பகட்டான வெண்ணாடை அணிய அவள் அனுமதிக்கப் பட்டாள்'' (19:7). இறைவன் ஒருநாள் தனது காலத்திற்காகப் பணியினை புரிந்த வானத்தையும் பூமியையும் துணியாகச் சுருட்டி (எபி 1:11 தொ), அவ்விடத்தைப் புதிய வானம் புதிய பூமியால் நிரப்புவார். முக்கிய உறுப்பினர்கள் பெருமளவு வெண்மையான உடைகளில், தங்களுடைய இடங்களில் இருப்பர். பின்னர், புதிய யெருசலேம் மணமகளைப் போல ஆடை அணிந்து (திருவெளி 21:2) தனது மணமகனை எதிர்கொள்ளச் செல்லும். பின்னர், ''இறைவனின் மகிமை அதனை ஒளியால் நிரப்பியிருப்பதாலும், செம்மறியே அதன் விளக்காக இருப்பதாலும், நகரமானது சூரியன் மற்றும் சந்திரனுடைய ஒளியின்றியே செயல்பட முடியும்'' (2:23).

ஆடையக மேற்பார்வையாளர் (KEEPER OF THE WARDROBE)

இவர் அரசன், குருக்கள் அணியும் ஆடைகளைப் பொறுப்பாய்க் கண்காணிப்பவர் ஆவார். இத்தகைய ஒருவருடைய பெயர் கர்காசு என்று 2 அர 22:14-இல் குறிக்கப்படுகிறது. இவர் 2 நாள் 34:22-இல் கசுரா என்ற பெயரைக் கொண்டுள்ளார். 2 அர 10:22-இல் பாகாலை வழிபடுவோர், ஆடைகளைக் கண்கானிப்பவரால், சிறப்பான ஆடைகள் அளிக்கப்பட்டனர். இவை வழிபாட்டு ஆடையாக இருக்கலாம். இவற்றை வைத்திருப்பதற்கு தனிப்பட்ட அறைகள் இருந்திருக்கலாம்.

ஆட்சி அமைப்பு (GOVERNMENT)

விவிலியத்தில் பல்வகைப்பட்ட அரசியல் அமைப்புகள் காணப்பட்டாலும், அவை பற்றிய செய்திகள் துணுக்குகளாகவும் ஊகித்துத் தீர்மானிக்கப்படக் கூடியவையாயும் உள்ளன. ஆனால் ஆட்சி அமைப்பு எப்போதும் இறைவனோடு செய்து கொண்ட உடன்படிக்கை, அவர் உலகின் மேல் கொண்டுள்ள மேலாண்மை அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே புரிந்து கொள்ளப்படுகிறது.

இறையாட்சி, வழக்கமாக, இறைவனால் ஆட்சிஅமைப்பு நடத்தப்படுதல் அல்லது அவரது வெளிப்பாட்டு வழியாக, அல்லது குருக்கள் வழியாக நடத்தப்படும் ஆட்சி அமைப்பு என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது ஆட்சி அமைப்புப் பற்றிய விவிலியக் கருத்தை வலியுறுத்துகிறது.

இஸ்ராயேல், அவர்கள் மேல் மேலாண்மை அதிகாரமுடைய யாவே யோடு செய்து கொண்ட உடன்படிக்கையால் உருவான சமூகமாகும் (யாத் 19:4-6). அவரே அவர்களுக்குச் சட்டம் அளிப்பவர், நடுவர், ஆட்சி செய்பவர். இந்த உடன்படிக்கை ஒவ்வொரு அரசியல் அமைப்புக்கும்

சூழ்நிலையையும் மதிப்பீட்டளவையும் கொடுக்கிறது. ஆட்சி அமைப்புக்கள் வேறு பட்டாலும், யாவேயே இஸ்ராயேலின் உண்மையான அரசரும் ஆண்டவருமாவார் (நீதி 8:23; 1 சாமு 12:14-15; சங் 93-100).

குல அமைப்பு ஆட்சிக்காலத்தில் இறையாட்சி சிறப்பாக அழைக்கப்பட்ட தலைவர்கள் வழியாக நடந்தது. இவர்கள் ஆண்டவர் காரியங்களுக்காக மக்களை ஒன்று கூட்டிச் செயலாற்றச் செய்தனர். அப்படிப்பட்ட தலைவர்கள் இல்லாதபோது, மக்கள் இறைவனது நெறியை விட்டு விரைவில் விலகி நடந்தனர் (நீதி 2:17). அரசர்கள் ஆட்சிக் காலத்தில் இறையாட்சி அரசனை மையமாகக் கொண்டு திகழ்ந்தது. ஆனால் அரசன் இறைவனது சட்டத்திற்கும் திருவுளத்திற்கும் பணிந்து நடந்த அளவுக்குத்தான் இறையாட்சி நிலவியது (உப 17:14-20). இப்படி நடக்க மறுத்தல் இறுதியில் அரசின் அழிவிற்கு இட்டுச்சென்றது. நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின், இஸ்ராயேலின் ஆட்சி அமைப்பு தெளிவாக இறையாட்சியாகத் திகழ்ந்தது. பெரிய குரு, குருக்கள், சட்ட வல்லுநர்கள் ஆகியோரின் தலைமையில் நடந்தது.

புதிய ஏற்பாட்டில், விசுவாசிகள் இறைவன் நேரடியாக ஆட்சி செய்யும் நாளை எதிர்பார்த்திருந்தனர் (திருவெளி 21:3). இதற்கிடையில் உலக ஆளுநர்களோடு கொண்ட செயல்முறையான உறவு இறையாட்சி பற்றி பழைய ஏற்பாட்டில் நிலவும் கருத்துக்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் ''இயேசுக் கிறிஸ்து ஆண்டவர்'' என்ற விசுவாச அறிக்கையால் (பிலி 2:11) மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் அரசியல்களால் அல்லாமல் இறைவனால் நிறுவப்பட்ட மற்றொரு அரசின் குடிமக்களாக உலகில் வாழ்கின்றனர் (யோவா 18:36). அரசும் அதன் நிறுவனங்களும் இறைவனால் நிறுவப்பட்டுள்ளன (உரோ 13:1; யோவா 19:11). ஆகவே ஆட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் இறைவனது மேலாண்மைக்குக் கீழ்ப்பட்டவையாகும் (லூக் 20:25). இக்கருத்தைக் கிளர்ச்சி மிக்க விதத்தில் மறுப்பது ஆணவமிக்க வல்லாட்சியாக உருவெடுக்கிறது. அது ஓர் அருவருப்பாகும் (திருவெளி 13; காண்க. தானி 6:6-18; 11:31-32). நீதி வழங்கல், நல்லவற்றை ஆதரித்தல், தீமையைக் கண்டனம் செய்தல், தண்டித்தல் போன்ற சில பொறுப்புக்களை இறைவன் அரசுகளுக்கு அளித்துள்ளார் (உரோ 13:4). அவை, எல்லாரும் அமைதியாக வாழ்க்கை நடத்துமாறு பொதுநலனைத் தேடிப் பேண வேண்டும் (1 திமோ 2:2; காண்க. சங் 72:1-4). இத்தகைய பொறுப்புடைய அதிகாரத்தின்முன் கிறிஸ்துவக் குடியுரிமை, கீழ்ப்படிதல், வரிகளைச் செலுத்துதல், அதிகாரிகளுக்காக மன்றாடுதல் போன்றவற்றை உள்ளடக்கும் (உரோ 13:1-6; 1 திமோ 2:1-2; 1 பேதுரு 2:13-16). ஆயினும் கிறிஸ்தவப் பிரமாணிக்கம் நிபந்தனையற்றதாக ஒருபோதும் இருக்க முடியாது. ஏனெனில் அது முதலில் இறைவனுக்கே உரியது (அ.ப. 5:29).

பழைய ஏற்பாடு

1. குல அமைப்புக் கொண்ட இஸ்ராயேல்:- குலமூலவர்களிலிருந்து சவுலின் ஆட்சிவரை, இஸ்ராயேலின் ஆட்சி அமைப்பு குல அமைப்புக் கூட்டாட்சி கொண்டதாகும். இது அப்பகுதியிலுள்ள மற்ற மக்களிடையேயும் காணப்பட்டது (ஆதி 25:13-16). இந்தவடிவம் உறவினர் அமைப்பு அடிப்படையில் சித்தரிக்கப்படுகிறது. இந்த உறவு இரத்தம், திருமணம் (நீதி 1:16), உடன்படிக்கை (யோசு 14:14), பணி (ஆதி 17:27) ஆகியவற்றால் எடுத்துரைக்கப் படுகிறது.

குல அல்லது கோத்திர அமைப்புக் கொண்ட இஸ்ராயேலில் நான்கு படிகளை வேறுபடுத்தலாம் (யோசு 7:16-18). குடும்பம் அல்லது ''தந்தையின் வீட்டில்'' பெற்றோர், குழந்தைகள், பேரக் குழந்தைகள், திருமணமாகாத உறவினர்கள், அடிமைகள், அன்னியர் ஆகியோர் அடங்குவர். இவர்கள் ஒன்றாய்க் கூடி வாழ்ந்தனர். உறவுடைய பல குடும்பங்கள் அருகருகில் வாழ்ந்து குடும்பக்

குழுக்கள் தோன்றின. இவை பிற்காலத்தில் மாவட்டமாக அல்லது கிராமமாக உருவெடுத்தன. இந்தக் குடும்பக் குழுக்கள் விழாக்கள் கொண்டாடுவதற்கும் (1 சாமு 20:6-29) பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும் மையமாகத் திகழ்ந்தன. இவை போர்ச் சேவைக்கு அடிப்படைத் தலைக்கட்டாக விளங்கின (நீதி 6:15). ஒரே மூதாதையரிடமிருந்து தோன்றியதாக உரிமைகொண்டாடிய பல குடும்பக் குழுக்கள் ஒரு குலமாகும். இதற்கு ஒரு பொதுத் தலைவர் இருந்தார். அவரது தலைமையின்கீழ் ஒன்று கூடி செயல்பட்டனர். கானானில் குலம் இனப்பிரிவுகளைக் குறிப்பதைவிட, ஒரு நிலப்பரப்புப் பகுதியைக் காலப்போக்கில் குறித்தது. இஸ்ராயேலில் பன்னிரண்டு குலங்கள் இருந்தன. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து இஸ்ராயேல் மக்களாவர் (ஆதி 35:23-26; எண் 1:20-47). இவர்கள் இறைவனை மையமாகக் கொண்ட உடன்படிக்கையால் நிறுவப்பட்டவர்கள் (யாத் 19-23; யோசு 24). அதே விழாக்களையும் அதே சட்டத்தையும், பிற இனமக்களின் பழக்க வழக்கங்களைப்பற்றி அதே வெறுப்பையும் கொண்டிருந்தனர் (நீதி 19:30). இந்தக் குலங்கள் கருத்தளவில் வேறுபட்டிருந்தாலும், செயல் முறையில் வேறுபட்ட அரசியல் மட்டங்களிடையேயுள்ள வரையறைகள் தெளிவாக இல்லை (காண் 17:7; 18:1).

உடன்படிக்கையின் கீழ், போர்ச் சேவை செய்யத் தகுதிபெற்ற வயது வந்த ஆண்கள் அனைவரும் சபையின் அங்கத்தினராவர். இந்தச் சபை உடன்படிக்கையை அங்கீகரித்தது (யாத் 24:1-8); வழிபாட்டுச் சடங்குகளில் பங்கு பெற்றது (லேவி 8:3; எண் 8:9-10); அறிக்கைகளைக் கேட்டது (13:26 தொ); கொள்ளைப் பொருட்களை பங்கிட்டுக் கொண்டது (31:26-27).

குடும்பக் குழுக்களில், குலங்களில் அன்றாட ஆட்சியை மூப்பர்கள் நடத்தினர். இவர்கள் தலைவர்களும் நடுவர்களும் (யாத் 2:14; காண்க 4:29) பெருமக்களும் (யோபு 29:10), ஆயிரத்தலைவர்களும் (யோசு 22:14) வீட்டுத் தலைவர்களும், பொருளாதாரத்திலும் போர்ப்பணியிலும் சிறந்தவர்களும் (நீதி 6:12; ரூத் 2:1) ஆவார். செயல் அளவில், சமூகத்தின் பெயரால் உயர் குடிமக்கள் ஆட்சி செய்தனர் (நீதி 11:5). இவர்களுடைய பட்டம் சுட்டிக்காட்டுவது போல் இவர்கள் போரில் தலைமை தாங்கினர். பிரச்சினைகளில் தீர்ப்பளித்தனர், சட்டத்திற்கு விளக்கம் அளித்தனர். அன்றாடச் சமூகக் காரியங்களில் விவேகம் அளித்தனர். இவர்களிலிருந்து மோசே தனது தலைவர்களையும் நடுவர்களையும் நியமித்தார் (யாத் 18:13-26; உப 1:15).

மூப்பர்கள் சபையோடு இஸ்ராயேலின் குல அமைப்பில் பல பதவிகள் இருந்தன. சில இறைவனால் கட்டளையிடப்பட்டவை; மற்றவை மக்களால் நியமிக்கப்பட்டவை. இவர்களிடம் போதிய ஞானமும் ஆற்றலும் இருந்தன. தலைவர் குடும்பக் குழுவின் அல்லது குலத்தின் முக்கிய அரசியல் அதிகாரியாவார் (எண் 7:2). வழிபாட்டுக் காரியங்களில் மக்களின் பிரதிநிதியாகச் செயல்பட்டார் (11:16 தொ) போரில் தலைமை தாங்கினார் (1:1-16). யாவேயால் நியமிக்கப்பட்ட தலைவர் என்ற முறையில் (யாத் 3:10) மோசே, தலைவர்களின் பல பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருந்தார். அவரே நடுவர் (18:13). சமய வாழ்வில் இணைப்பாளர். போரில் தலைவர் (17:8-11). இத்தகைய அமைப்பு யோசுவா காலத்திலும் நிலவியது (உப 34:9). இஸ்ராயேல் மக்களும் போர்த் தலைவர்களையும் நடுவர்களையும் நியமித்தனர் (யாத் 18:25-26; உப 1:13; நீதி 11:11). இப்பதவிகள் அரசர்கள் ஆட்சிக் கால முழுவதும் நீடித்தது (16:18; காண்க. 1 நாள் 23:4). நீதிபதிகள் நூலில் கூறப்பட்டிருப்பது போல், சில குலங்களுக்கு அருங்கொடை பெற்ற தலைவர்களையும் (நீதி 2:16) நடுவர்களையும் இறைவன் தோன்றச் செய்தார். இந்தத் தனித் தன்மையுடைய பதவிகள் மரபுரிமையாக வருவதல்ல. ஏனெனில் யாவே ஒருவரே இஸ்ராயேலின் அரசர் (8:23).

2. அரசர்கள் ஆட்சி அமைப்பு:- தங்களுக்குள்ளே நிலவிய குழப்பங்களாலும் (நீதி 21:25) புறத்திலிருந்து வந்த அச்சுறுத்தல்களாலும் (1 சாமு 4:1-10; 11:1-2) தூண்டப்பெற்று இஸ்ராயேல் மக்கள் ஓர் அரசனைக் கோரினர். இத்தகைய நிலையை எதிர்பார்த்து, மோசே அரசாட்சி பற்றி இறையாட்சி முறைப்படி வழிகாட்டுதல் அளித்திருந்தார் (உப 17:14-20). ஆனால் அரசாட்சி பற்றிய இந்த வரையறைகளை இஸ்ராயேல் நிராகரித்தது. ''மற்ற நாடுகளுக்கெல்லாம் இருப்பது போல்'' ஓர் அரசனைத் தேடினர். இது சர்வாதிகாரத்திற்கும், போலி மகிமைக்கும், தவிர்க்க முடியாத சிலை வழிபாட்டுக்கும் இட்டுச் சென்றது (1 சாமு 8:5-18). வெகு அரிதாகத்தான், இறைவன் கூறியவாறு அரசர்கள் ஆட்சி அமைந்தது (2 அர 12:2; 18:3; 13:14).

அரசர்கள் ஆட்சி அமைப்பு, நடுவர்கள் என்ற முந்திய பதவியின் பல கூறுகளை நிலைப்படுத்தியது. அரசர் இறைவனின் அபிடேகம் பெற்றவர் (1 சாமு 9:16; 1 அர 1:39). ஆகவே அவரை மீறக்கூடாது (1 சாமு 24:6). அபிடேகத்தோடு அரசனுக்கு முடிசூட்டுதலோடு யாவேயின் பிரதிநிதி அரசர் என்ற அளவில் சட்டத்தின் நிபந்தனைகளும் அளிக்கப்பட்டன (2 அர 11:12; உப 17:18-20). திடீர் புரட்சிகள் நடந்தாலும் யூதாவில் அரச பதவி, தாவீதின் வழித்தோன்றல்களுக்கு மட்டும் உரிய மரபுரிமையாகத் திகழ்ந்தது (2 அர. 7:8-16). இஸ்ராயேலில் அரச பதவி பெரும்பாலும் அருங்கொடைத் தன்மையுடையதாக இருந்தது. வலிமைமிக்க தலைவர்கள் இறைவனால் அழைக்கப்பட்டு குருக்களால் அபிடேகம் செய்யப்பட்டனர் (1 அர 11:31; 14:7; 19:6; ஓசே 8:4).

அரசனின் கீழ், தளஆட்சி, முன்போலவே, மூப்பர்களின் கையிலிருந்து (1 அர 21:8). பெரிய ஊர்களிலும் நகரங்களிலும் அரசனுக்குரிய காரியங்களைக் கவனிக்கவும் வரிகளைச் சேகரிக்கவும் (22:26) அரசன் தனது பிரதிநிதியை நியமித்தான். நடுவர்களும், மற்ற அதிகாரிகளும் அரசனின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாயினர் (1 நாள் 23:4; 26:29).

ஆட்சி செய்வதற்கும் வரிகளைச் சேகரிப்பதற்கும் வசதியாக, சாலமோன் நாட்டை மாவட்டங்களாகப் பிரித்தார். வடபகுதிகளில் பன்னிரண்டு மாவட்டங்களாகவும், யூதா ஒரு தனிப்பட்ட மாவட்டமாகவும் அமைந்தன. ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைவர் இருந்தார் (1 அர 4:7-28).

பலவகையான அரசவை அலுவலர்கள் இருந்தனர். இவர்கள் அரச ஊழியர்கள் அல்லது அதிகாரிகள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் ஆட்சி அமைப்பை நடத்தினர். சாலமோன் காலத்திய முக்கிய அதிகாரிகளின் பட்டியல் 1 அர 4-இல் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் அரசனின் சொத்துக்களைக் கண்காணித்தவர். இவர் பிற்காலத்தில் பிரதம அமைச்சர் என்றழைக்கப்பட்டார். இவரது அதிகாரம் அரசனுடையதுக்கு மட்டும் அடுத்ததாகும் (2 அர 19:2; ஏச 22:15. 20-22; காண்க. ஆதி 41:40). பதிவாளர்: இவர் அரசனுக்குச் செய்திகளைக் கொண்டு வருபவர். அரசனின் பெயரில் பேசுபவர். அரசை மேற்பார்த்தார். அரசச்செயலர்: அரண்மனையின் மேலாளனுக்கு அடுத்த படியில் உள்ளவர் (2 அர 18:18). இவரின்கீழ் ஒரு பெரிய எழுத்தர்கள் குழு செயல்பட்டது. இவர்கள் அதிகார ஏடுகளையும், பட்டியல்களையும், கடிதங்களையும் கவனித்துக் கொண்டனர். (எரே 36:10-12). கட்டாய வேலைத் திட்டத்தைச் செயல்படுத்துபவர் (1 அர 12:18); முக்கிய வருவாய்த் துறை அதிகாரி (4:5): வரிகளைச் சேகரிப்பதும் அரசனது தேவைக்கான பொருட்களையும் கவனித்துக் கொள்வது இவரது கடமையாகும். ஆலோசகர் (2 சாமு 16:23), அரசனது குரு (20:26) அரசனது நண்பன் (1 அர 16:23) போன்ற பதவிகளும் விவிலியத்தில் குறிக்கப்படுகின்றன.

3. நாடு கடத்தலுக்குப்பின் வந்த காலம்:- பாரசீகர்கள் காலத்தில் யூதர்கள் கலாச்சார, சமயத் தன்னாட்சி கொண்டிருந்தனர்; போர்,

அரசியல், அதிகாரம், பேரரசின் ஆளுநர்களையும் அவர்களது அதிகாரிகளையும் சேர்ந்ததாகும். ஆற்றுக்கு அப்பாலுள்ள சிற்றரசின் ஒரு மாநிலமாக யூதா இருந்தது (எஸ் 5:6). வரிகளைச் சேகரிப்பதற்கு ஏதுவாக யூதா பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாவட்டமும் ஒரு ஆட்சியாளனைக் கொண்டிருந்தது (நெக 3:9-18). இந்த அடிப்படை அமைப்பு, எல்லைகள் வேறுபட்டாலும், உரோமையர் காலத்திலும் நீடித்தது.

மக்களின் சமய, கலாச்சார வாழ்வு பற்றிய காரியங்கள் பெரிய குரு (எஸ் 3:2) குருக்கள், லேவியர், மூப்பர்கள் ஆகியோரின் பொறுப்பில் இருந்தன. இவர்கள் சட்டத்தைப் போதித்தனர். அதற்கு விளக்கம் அளித்தனர் (7:6; 10). நீதி வழங்கினர். தண்டித்தனர் (10:8). ஆலயத்தை மீண்டும் கட்டி எழுப்பினர் (6:7) உரோமையர் காலத்தில் எழுபத்திரண்டு மூப்பர்கள், குருக்கள், சட்ட வல்லுநர்கள் அடங்கிய 'சனேதிரின்' என்ற பொது சங்கம் பாலஸ்தீனத்தில் யூதகாரியங்களைக் கவனித்துக் கொண்டது.

சிற்றூர்களில், முன்பு இருந்தது போலவே, மூப்பர்கள் அவை கூடி ஊரின் காரியங்களைக் கவனித்துக் கொண்டது (எஸ் 10:14; யூதி 7:23).

2. புதிய ஏற்பாடு:- கி.பி. முதலாம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் ஆட்சி அமைப்பு உரோமையரின் நேரடி ஆட்சியும் துணை அரசர்களின் ஆட்சியும் சேர்ந்த ஒட்டுமானமாய் இருந்தது. நூற்றாண்டு பெரிய ஏரோதன் பாலஸ்தீனத்தைக் கொடுமையாக ஆட்சி செய்தலோடு தொடங்கியது (மத் 2:16). அவரை அடுத்து அவருடைய மூன்று பிள்ளைகள் அரசுக்கு வந்தனர். அர்க்கெலா இதுமேயா, யூதேயா, சாமாரியா ஆகிய பகுதிகளை ஆண்டனர். அவரது இரத்த வெறி அவரது தகப்பனுடையதைப் போன்றே மோசமானதாக இருந்தது (2:22). ஆகவே கி.பி. 6-இல் உரோமையர் அவரை நாடு கடத்தினர். பிலிப்பு யோர்தானுக்கு அப்பாலுள்ள வடபகுதிக்குச் சிற்றரசனாக இருந்தார் (லூக் 3:1). ஏரோது அந்திப்பா கலிலேயாவுக்கும் பெரெயாவுக்கும் சிற்றரசனாக இருந்தார். இவர் திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டச் செய்தார். இயேசுவின் செயல்களை கண்காணித்தார். அவரது விசாரணையின் போது அவரை இழிவுபடுத்தினார் (9:7-9; 23:6-12). இவர்கள் மூவருக்குப்பின் ஏரோது அகிரிப்பா ஆட்சிக்கு வந்தார். ஒன்றித்த பாலஸ்தீனத்தை ஆட்சி செய்தார். ஆனால் செசாரியாவில் திடீரென்று இறந்தார் (அ.ப. 12). அர்க்கெலா நாடுகடத்தப்பட்டபின், பேரரசன் திபேரியு, போந்தியு பிலாத்தை யூதேயாவின் ஆளுநராக நியமித்தார். ஆளுநர்கள் போர்த் தலைவர்கள். கிளர்ச்சி செய்யும் அல்லது புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளை ஆட்சி செய்ய நியமிக்கப்பட்டவர்கள். பிற்காலத்தில் அந்தோனியு பெலிக்சு (23:24), போர்கியு பெஸ்து (24:27) யூதேயாவின் மேல் ஆளுநர்களாக ஆட்சி செய்தனர்.

வரிகளைச் சேகரிப்பவர்கள், (லூக் 19:2-10), நூற்றுவர் தலைவன் (7:1-10; அ.ப. 10:1; 27:1), காவலர்கள் (16:35) போன்ற சிறிய அதிகாரிகளும் இருந்தனர்.

ஆட்சி புரியும் அதிகாரம் (DOMINION)

1. இது பல சொற்களில் மொழிபெயர்ப்பு; ''ஆதிக்கம்'' என்ற பொருளையே கொண்டுள்ளது: மிதி, ஆட்சி செய்; மேல் ஆதிக்கம் செலுத்து, மேலாளராக இரு; அதிகாரம்; அரசுரிமை. இச்சொல் கடவுளின் அரசாட்சியையும், அரசியல் அதிகாரத்தையும், இயற்கையின்மீது மனிதனுக்குள்ள அதிகாரத்தையும், பாவம் மனிதன்மீது கொண்டுள்ள ஆதிக்கத்தையும் எடுத்துரைக்கின்றது. எபிரேயர்களுக்கு எல்லா ஆட்சி அதிகாரமும் கடவுளுக்குரியது (யோபு 25:2; சங் 22:28). சிலசமயம் இது மனிதன் இயற்கையின் மீது கொண்டுள்ள அதிகாரத்தினால் அவனால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது (ஆதி 1:26; சங் 8:6); ஆண்டவரால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட அரசனால் நாடுகளின் மேல் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது (சங் 2:7). இறுதிக் காலத்தில்

உன்னதரின் பரிசுத்த இனத்தார்க்கு அரசும் அரசுரிமையும் வானத்தின்கீழ் எங்கணுமுள்ள அரசுகளின் மகிமை பெருமையும் அளிக்கப்படும் (தானி 7:14-27). அடிக்கடி இச்சொல் போரில் பெறுகின்ற வெற்றியினால் கிடைக்கும் அதிகாரத்தையும், வல்லமையையும் குறிக்கின்றது (எண் 24:19; நீதி 14:4; 1 அர 4:24; நெக 9:28; சங் 19:13; 119:133). பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆசிரியர்கள் கடவுளின் முடிவில்லா அரசாட்சியைக் குறிப்பிடுகின்றனர் (சங் 72:8; தானி 4:3; செக் 9:10; 1 தீமோ 6:16; 1 பேதுரு 4:11; 5:11; யூதா 25; திருவெளி 1:6).

2. மற்றொரு இடத்தில் ''அரியணை சூழ்வோர்; அதிகாரம் தாங்குவோர் தலைமை ஏற்போர்; ஆட்சிபுரிவோர்'' ஆகிய வானதூதர்களின் வரிசைகளைக் குறிக்கின்றது (எபே 1:21; கொலோ 1:16). ஆட்சி புரிவோர் மேலாதிக்கம் என்பது வானத்தூதர்கள் வகித்த பதவிகளிலேயே அரியணை சூழ்வோரோடு மிகவும் சேர்ந்து உயர்ந்ததாகத் தோன்றுகிறது. ஒருவேளை இவர்கள் மூலத்தில் புறஇனத் தேவர்களாக இருக்கலாம். இவர்களை, இறைவனது அவையில் அங்கத்தினர்களாகவும் நாடுகளை மேற்பார்ப்பவர்களாகவும் எபிரேயர் கருதியிருக்கலாம் (உப 32:8; ஏச 24:21; தானி 10:13; சீரா 17:17). கொலோ 1:16-இல் இச்சொல் நல்ல பொருளில் பயன்படுகிறது. ஆனால் அவர்கள் வெற்றி கொள்ளப்படவேண்டும். ''தலைமை ஏற்போர், ஆட்சிபுரிவோர், வலிமை மிக்கோர் அனைவரையும் தகர்த்துவிட்டு கடவுளும் தந்தையுமானவரிடம் அரசை ஒப்படைப்பார்'' (உரோ 8:38; 1 கொரி 15:24; எபே 6:12; கொலோ 2:15).

ஆட்டுக் குட்டி (KJ)

இது பெரும்பாலும் வெள்ளாட்டுக் குட்டியைக் குறித்தது. பழம் இஸ்ராயேலில், வெள்ளாட்டின் தாயைவிடவோ, செம்மறிக் குட்டியைவிடவோ ஆண் வெள்ளாட்டுக் குட்டி மிகவும் கழித்துகட்டக் கூடியதாகவும், விலை குறைந்ததாகவும் கருதப்பட்டது. ஆகவே, விருந்தில், கறியாகவும், சிறிய பரிசாக அளிக்கவும் பயன்பட்டது (ஆதி 27:9; 38:17; நீதி 6:19; 13:15; 15:1; 1 சாமு 10:3; 16:20; லூக் 15:29). சடங்கு உணவில் பயன்பட்டது (எண் 11:15; நீதி 6:19; 2 நாள் 35:7). ஒருவயது நிரம்பிய ஆட்டுக்குட்டியே பாஸ்கா உணவுக்குச் சரியானதாகும் (யாத் 12:5; 2 நாள் 35:7); ஆட்டுக்கட்டிகளைப் பலியிடுவதற்கான விதிமுறைகள் பற்றி எண் 15:11-16-இல் காண்க; வருங்கால அமைதி பற்றி ஏசயா காணும் காட்சியில் வெள்ளாட்டுக் குட்டியோடு சிறுத்தைப் புலி படுத்துறங்கும் என்கிறார் (ஏச 11:6).

ஆட்டுக் குட்டியை அதன் தாயின் பாலிலே சமைக்காதிருப்பாய் என மீண்டும், மீண்டும் வலியுறுத்தப்படுகிறது (யாத் 23:19; 34:26; உ ப 14:21); இது அன்றைய கானானியர்களின் சடங்குக்கு எதிராகக் கூறப்பட்டதாக இருக்கலாம். இவ்வாறு செய்வது ஏன் தடை செய்யப்பட்டதென்பது தெளிவாக இல்லை. இச்செயல் சிலைவழிபாட்டோடு தொடர்புடையதாக இருந்ததாலோ என்னவோ இது தடை செய்யப்பட்டிருக்கலாம். உகரிட்டிக் நாடகத்தில் 'கடவுளின் பிறப்பு' என்பதில் ஒரு வெள்ளாட்டுக் குட்டி அதன் தாயின் பாலில் சமைக்கப்பட்டதாகக் காட்டப்படுகிறது. இது தொடர்ந்துவரும் ஏழு வருடங்களிலும் நல்ல விளைச்சல் விளைய வேண்டுமென்பதை நிச்சயப்படுத்த வேண்டுமென்பதற்காகவே. இது பின்னர் யூதர்களது உணவு முறையில் ஒதுக்க வேண்டிய ஒன்றாக மாறிவிட்டது.

ஆட்டுத் தோல்

விவிலிய பாலஸ்தீனத்தில் ஆட்டுத் தோல்கள்தான் பொதுவாக பயன்படுத்தப்பட்ட தோல்களாகும். இதைப் பற்றிய விவிலிய குறிப்புக்கள் சிலவே உள்ளன (யாத் 25:5; 26:14; 35:7.23; 36:19; 39:34).

எபி 11:37-இல் வரும் ''ஆட்டுத்தோலையும் செம்மறியின் தோலையும் போர்த்தி அலைந்தனர்'' என்ற விவரிப்பு கடந்தகால புனிதர்கள் அனுபவித்த வறுமையை எடுத்துக் கூறுகிறது.

ஆட்டுப்பட்டி (SHEEPFOLD)

ஆட்டு மந்தையைச் சுற்றி, ஆடுகளை இரவுநேர ஆபத்துக்களான, திருடர்கள், கொடிய மிருகங்கள், கால சூழ்நிலை இவற்றிலிருந்து காப்பாற்றுவதற்காக கட்டப்பட்டுள்ள பட்டி (ஆதி 31:39; 1 சாமு 17:34) சில நேரங்களில் பல இடையர்கள் ஒன்று சேர்ந்து எல்லா ஆடுகளையும் ஒரே பட்டியில் அடைத்துவிட்டு ஒரு வேலையாளை இரவு நேரத்தில் மேற்பார்வை செய்யும்படி அமைத்து விடுவார்கள். காலையில் அந்தந்த இடையர்கள் தங்களுடைய ஆடுகளை கூவி அழைத்துக் கொள்வார்கள் (யோவா 10:1 தொ). நிரந்தரமான இந்த மாதிரியான பட்டியில் கதவு இருக்கும் (10:2). அல்லது கல்லால் கட்டப்பட்ட சுவரைக் கொண்டிருக்கும் (எண் 32:16).

ஆட்டு வாயில், மந்தை வாயில் (SHEEP GATE)

எருசலேமின் வடகிழக்கு மூலையில் உள்ள ஒரு வாயில். நெகமியாவால் திரும்பக் கட்டப்பட்டது (நெக 3:1.32; 12:39). பெத்தசுதா குளத்துக்கருகில் இருந்தது (யோவா 5:2).

ஆணி (NAIL)

1. தச்சர்கள் பயன்படுத்தும் ஆணிகள். குலதெய்வங்களையும் பொருள்களையும் சுவரில் அசையாதபடி ஆணிக்கொண்டு அடித்து நிலைப்படுத்துவர் (ஏச 41:7; எரே 10:4). 1 நாள் 22:3 தாவீது எவ்வாறு கோவிலின் கதவிற்கு ஆணிகள் செய்வதற்காக இரும்பை சேகரித்து வைத்திருந்தார் என்று கூறுகிறது. 2 நாள் 3:9 சந்நிதானத்திற்குத் தேவையானத் தங்க ஆணிகளைப் பற்றிக் கூறுகின்றது.

விவிலியத்தோடு தொடர்புள்ள இடங்களைத் தோண்டி ஆராய்ச்சி செய்தபோது சில ஆணிகள் கிடைத்தன. பழைய ஆணிகள் பெரும்பாலும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன. பிற்காலத்தில்தான் ஆணிகள் இரும்பினால் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலும் சிறிய ஆணிகள் வெண்கலத்திலேயே உள்ளன. கண்டெடுக்கப்பட்ட ஆணிகள் இப்போது தயாரிக்கப்படும் ஆணிகளோடு சற்று ஒத்திருக்கிறது. சில ஆணிகள் நீளமாக உள்ளது. சதாரனமாக சமாரியாவில் கண்டெடுக்கப்பட்ட ஆணிகள் 7-9 அங்குலம் நீளம் இருந்தன; சிறிய ஆணிகள் 1-1.5 அங்குலம் நீளம் இருந்தன. சில ஆணிகளில் தலைகள் அகலமாகவும் கூம்பின் வடிவம் போன்றும் இருந்தன. ஆணியின் காம்புகள் சதுரவடிவில் கூராக இருந்தன. இப்போதுள்ள ஆணிகள் போன்று வட்ட வடிவில் கூராக அப்போது இல்லை.

இயேசுவின் கைகளை ஆணியால் சிலுவையில் அடித்து நிறுத்தினார்கள் என்று யோவா. 20:25-லிருந்து அறிகின்றோம். எருசலேமைச் சுற்றிய புதைபொருள் ஆராய்ச்சியில் 5-7 அங்குலம் உள்ள பல ஆணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை உரோமையர் காலத்தைச் சேர்ந்தவை.

2. கொலோ 2:14-இல் ''நமக்கு எதிரான விதிகள் பலகொண்ட கடன் பத்திரம் ஒன்று இருந்தது; அதை அழித்துவிட்டார். சிலுவையில் அதை அறைந்து ஒழித்துவிட்டார்'' என்று பார்க்கின்றோம். இதைவிளக்கச் சட்டங்கள் செல்லுபடியில்லை என்று அறிவிக்க அச்சட்டங்கள் அடங்கிய பிரதியை பொது இடங்களில் வைத்து ஆணியால் அறைவார்கள் என்ற பழக்கம் சுட்டிக் காட்டப்படும். இதற்கான ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஆணை, ஆணையிடல் (OATH)

இறைவனை (தேவர்களை)ச் சாட்சியாகக் கூப்பிட்டு அறிக்கையிடுவது அல்லது வெளிப்படையாக வாக்குறுதி அளித்தல், சமயச் சார்பற்ற வியப்புரை; இறைவனது பெயரைக் கவனமில்லாது பயன்படுத்துதல், அதனால் இறைநிந்தை.

1. பழைய ஏற்பாடு:- ஆணையிடுதல் இஸ்ராயேலின் சமூகத்திலும் பழம் மேற்காசியாவிலும் வாக்குறுதிக்கு உறுதிப்பாடு அளிக்கும் ஒரு முறையாகும். உடன்படிக்கையில் ஈடுபடும் கட்சியினர், தங்கள் உடன்பாட்டிற்குச் சாட்சியாக இருக்கும்படித் தங்

கள் தெய்வத்தை (தெய்வங்களை)க் கூப்பிட்டு, ஆசீர், சாபங்கள் போன்ற குறிப்பிட்ட தண்டங்களால் தங்களையே கட்டுப்படுத்திக் கொண்டனர். இது உருகும் மெழுகு உருவங்களால் அல்லது இரு பகுதியாக வெட்டப்பட்ட விலங்குகளால் அடையாளமாக உணர்த்தப்பட்டது (1 சாமு 11:7). ஆணையிடுபவர் சாதாரணமாய், தனது வலக்கரத்தை வானத்தை நோக்கி உயர்த்துவார் (உ ப 32:40; ஆதி 14:22; தானி 12:7). இந்தச் சைகையை இறைவன் பயன்படுத்துவதாகச் சித்தரிக்கப்படுகிறார் (ஏச 62:8; யாத் 6:8; எச 20:5). இறைவன் (அல்லது தெய்வங்கள்) உடன்படிக்கையை முறிக்கும் கட்சியினர்மேல் தண்டமாகக் குறிப்பிட்ட சாபங்களை நிறைவேற்றி, உடன்பாட்டைச் செயல்படுத்துவார் என்று எதிர் பார்க்கப்பட்டது (யோசு 9; 2 சாமு 21:1-9).

இஸ்ராயேலர் யாவேயின் பெயரால் ஆணையிட அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆகவே அவரது பெயரை அடிக்கடி கூவியழைத்தனர். எ.கா. ''கடவுள் எனக்குத் தகுந்த கைம்மாறு அளிப்பாராக (1 சாமு 14:44), ''இது உயிருள்ள ஆண்டவர் மீது ஆணை'' (நீதி 8:19; 1 சாமு 19:6; 2 அர 5:16-20). பழம் மேற்காசிய நாடுகளிடையே ஏற்பட்ட உடன் படிக்கைகளில் இருபக்கத்தினரும் தங்களது தேவர்களின் பெயரால் ஆணையிட வேண்டும். ஒரு கடவுளின் பெயரால் ஆணையிடுதல், அக்கடவுளையும் அவரது ஆற்றலையும் ஏற்றுக் கொள்வதாகும். இது, இறையொருமைக்கோப்புடைய இஸ்ராயேலர்களுக்குப் பிரச்சினை உண்டாக்கியது. பிற தேவதைகளின் பெயரால் ஆணையிடுபவர்களை, இறைவாக்கினர் கடுமையாகக் கண்டனம் செய்கின்றனர் (எரே 5:7; 12:16; ஆமோ 8:14; செப் 1:4-6).

ஆணைகள் முழுப்பற்றுடன் ஒருவர் தன்னையே கட்டுப்படுத்திக் கொள்ளுதலாகும். ஆகையால் எளிதில் ஆணையிடக் கூடாது. பத்துக் கட்டளைகளில் மூன்றாவது வீணாக ஆணையிடுவதைத் தடை செய்கிறது (யாத் 20:7; உப 5:11). ஒன்பதாவது பொய்ச் சாட்சி சொல்வதைத் தடை செய்கிறது (யாத் 20:16; உப 5:20; காண்க. 7:9). ஓர் ஆணை, செய்தபின், அது நிறைவேற்றப்பட வேண்டும் (நீதி 11:30-32; திருவுரை 5:4-5). ஆனால் சில நிபந்தனைகளுக்கேற்ப நீக்கப்படலாம் (எண் 30:1-15). ஆணை, அதைச் செய்தவரின் வழித்தோன்றல்களையும் கட்டுப்படுத்தக் கூடும் (ஆதி 50:25-26; யோசு 9). இதுவே, ஆணையிடுமுன், தொடையின் கீழ் (பிறப்புறுப்புகள் மேல்) கை வைக்கும் செயலின் அடையாளப் பொருளாகும் (ஆதி 24:9; 47:29-31).

இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆணையிடுதல் மிகவும் சிக்கல் மிக்கதாகியது. கும்ரான் சபையினருக்கு ஆணையிடுதல் முக்கியமானதாகும். மிஸ்னா இதுபற்றி ஒரு சிறு நூலையே கொண்டுள்ளது.

2. புதிய ஏற்பாடு:- யூதச்சட்டத்தின் மற்ற பிரச்சினைகள்மேல் காட்டுவதுபோல ஆணையிடுதலைப் பற்றி மத்தேயு நற்செய்தி ஒன்றே மிகவும் அக்கறை காட்டுகிறது. படிமரபுடைய ஆணைபற்றிய பரிசேயர்களின் சிக்கல் மிக்க முறையை மத்தேயு மட்டுமே குறிப்பிடுகிறார் (மத் 23:16-22). சட்டத்தை நிறைவேற்றுவதைப்பற்றிய உரையில் (5:17-48) ஆணையிடவே வேண்டாம் என்று தம்சீடர்களுக்குக் கற்பிக்கிறார் இயேசு (5:33-34 ; காண்க யாக் 5:12). மாறாக அவர்களது பேச்சு எவ்வளவு நம்பிக்கைக்குரியதாய் இருக்க வேண்டும் என்றால் எளிய ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்பதே போதும் (5:36-37). ஆயினும், பேதுரு, இயேசுவைத் தெரியாது என்று மும்முறை ஆணையிட்டு மறுதலிக்கிறார் (மத் 26:69-75; மாற் 14:66-72; லூக் 22:54-62).

ஒத்தமை நற்செய்திகளில் ''உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று இயேசு கூறுவது (மத் 5:18; 6:2; மாற் 3:28; 8:12; லூக் 4:24; 12:37) மென்மையான முறையில் ஆணையிடுவதாகும். இது மத்தேயுவால் தரப்படும் வழிகாட்டுமுறைக்கு ஒத்துப்

போகிறது. யோவான் தன் நற்செய்தில், அதிக அழுத்தமுடைய ''உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் '' என்ற வாக்கைப் பயன்படுத்துகிறார் (யோவா 1:51; 3:3; 6:26). பவுலும் தனது அக்கறையையும் ஈடுபாட்டையும் காட்ட மென்மையான ஆணை வாய்பாடுகளைப் பயன்படுத்துகிறார். எ.க. ''கடவுளைச் சாட்சியாகக் கூப்பிட்டு...'' (2 கொரி 1:23; ''கடவுள் சாட்சி'' (கலா 1:20); ''இதற்குக் கடவுளே சாட்சி'' (பிலி 1:8).

ஆண்டவரின் இரவுணவு, ஆண்டவரின் விருந்து - நற்கருணை

திருச்சபையின் பொதுவான புனித உணவிற்குப் பவுலால் அளிக்கப்பட்ட இத்தலைப்பு (1 கொரி 11:20), இறுதி உணவின் போது, தன்னுடைய இரண்டாவது வருகை வரை தன்னுடைய நீடித்த நினைவுச்சின்னமாக இருக்க இயேசுவால் ஏற்படுத்தப்பட்டு, இயேசு தன்னுடைய சீடருடன் கொண்டிருந்த விருந்துத் தோழமையின் தொடர்ச்சியினைக் குறிப்பிடுகின்றது.

1. சடங்கின் பெயர்கள்:- 'ஆண்டவரின் இரவுணவு அல்லது விருந்து' என்னும் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் பவுலைத் தவிர வேறு எவராலும் பயன்படுத்தப்படாவிடினும் திருவெளி 19:9-இல் உள்ள 'செம்மறியின் மணவிருந்து' இதனுடன் தொடர்புடையதாக இருக்கலாம். கிரேக்க ஆசிரியர்களிலும் கடவுள்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான ஒன்றிப்பை எடுத்துக்காட்டும் உணவுச் சடங்குகள் பற்றிய சுவடிகள் மற்றும் கல்வெட்டுகளிலும், இச்சொல் காணப்படுகிறது. ஆதித்திருச்சபையின் தந்தையர் இச்சொல்லை ஏன் மிக அரிதாக உபயோகித்தனர் என்று இச்சூழ்நிலை விளக்கலாம். அருட்சாதனச் சடங்காக் கருதப்படாத தோழமை மற்றும் அன்பு போன்ற நோக்கங்களுக்கான திருச்சபை கொண்டிருந்த தனிப்பட்ட இரவுணவான அன்பு உணவைக் (அகபே) குறிக்க அலக்சாந்திரிய கிளமெந்துவும், இப்போலித்துவும் இச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

லூக்கா நற்செய்தி, அப்போஸ்தலர் பணி ஆகியவற்றின் ஆசிரியர், திருவருட்சாதன மற்றும் சமூக பண்புகளைத் தெளிவாக வேறுபடுத்தாமல், திருச்சபையின் பொது உணவை குறிப்பிட, அப்பத்தை பிட்குதல் என்றும் சொற்றொடரைப் பயன்படுத்துகிறார் (அ.ப. 2:42-46; 20:11; லூக் 24:35). செபங்களுடன் சேர்ந்து இச்செயலானது, அப்போஸ்தலர்களுடன் திருச்சபை கொண்டிருந்த தோழமை அல்லது ஒன்றிப்பின் சிறப்பு அடையாளமாக இருந்தது. கிறிஸ்துவினுடைய அருட்சாதன உடல் மற்றும் இரத்தத்திற்குத் தெளிவான சுட்டுக் குறிப்புடன் 'பங்கு கொள்ளுதல்' என்னும் சொல்லைப் பவுல் ஓரிடத்தில் பயன்படுத்துகிறார் (1 கொரி 10:16). மற்ற இடங்களில் கிறிஸ்துவுடனும், தூய ஆவியுடனும், ஒருவர் ஒருவருடனும், மேலும் குறிப்பாக நற்செய்தியை பரப்புவதில் பங்கு பெறுவதிலும் மற்றும் ஏழைகளுக்கு உதவுவதிலும் கிறிஸ்தவரின் தோழமையின் பரந்த சூழ்நிலைகளில் ''பங்குகொள்ளுதலை'' அவர் பயன்படுத்துகிறார்.

இரண்டாம் நூற்றாண்டுமுதல் கிறிஸ்தவ ஆசிரியர்கள் (உ-ம்: திதாக்கே, இஞ்ஞாசியார், யுஸ்தின், இரேனேயஸ்) ஆண்டவரது இரவுணவின் முக்கிய சடங்கு முறையான, அப்பத்தின் மீதும் இரசத்தின்மீதும் கூறப்படும் நன்றியறிதலின்று பெறப்பட்ட 'நற்கருணை' என்னும் சொல்லையே பயன்படுத்தினர். 1 கொரி 14:16-யை தவிர்த்து, நற்கருணை என்னும் சொல் நிறைவான பொருளில் பயன் படுத்தப்படுவது புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. சில விளக்கவுரைகள் 'புகழ்ச்சி பலி'-யில் (எபி 13:15) இந்த அருட்சாதனத்திற்கு மறைவான ஒரு குறிப்பைக் கண்டாலும் கொலோ 3:16-17; எபே 5:19-20-ன் சுருக்கத்துடன் ஒப்பிடப்படக்கூடிய, கிறிஸ்தவ வாழ்வு மற்றும் வழிபாட்டின் விளக்கமே இதுவென சூழ்நிலையானது காட்டுகிறது.

2. கடைப்பிடிக்கப்படும் நேரங்கள்:- ஆண்டவருடைய இரவுணவின் அமைப்பும்

பொருளும், தனது பாடுகளுக்கு முன்னர் சீடர்களுடன் உண்ட இறுதி இரவுணவின் போது தமது சொற்களிலும் செயல்களிலும் இயேசுவால் திருச்சபைக்கு அளிக்கப்பட்டது. உயிர்ப்பைப் பற்றிய பாரம்பரியத்தில் வரும் விருந்துத் தோழமை மற்றும் பொது உணவுச் சூழ்நிலையில் உயிர்த்த இயேசு சீடர்களுக்கு அளித்த காட்சிகளில் வரும் பழமையான மீண்டும் மீண்டும் காணப்படும் கூறையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது (லூக் 24:30-43; யோவா 20:19; 21:9-14; அ.ப. 10:41; எரோனிமு குறிப்பிடுவது போன்று, எபிரேயருடைய நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள யாக்கோபின் காட்சி). 'அப்பம் பிட்குதலுடனான' உயிர்ப்பின் விசுவாசத்தினுடைய நெருங்கிய இணைப்பானது, அ.ப. 2:46-47-இல் சுருக்கி அளிக்கப்பட்டிருப்பது போல, திருச்சபையினுடைய தொடக்கத்திலிருந்தே ஆண்டவருடைய இரவுணவினுடைய கொண்டாட்டத்தின் சிறப்பியல்பு மற்றும் களிப்பான பண்பு ஆகியவற்றை விளக்குகிறது: ''நாடோறும் தவறாமல் ஒரே மனதாய் கோயிலில் கூடினர்; வீடுகளில் அப்பத்தைப் பிட்டு, மனமகிழ்வோடும் கபடற்ற உள்ளத்தோடும் உணவைப் பகிர்ந்து கொண்டனர். இங்ஙனம் கடவுளைப் புகழ்ந்து வந்தனர்; மக்கள் அனைவருக்கும் வேண்டியவர்களாய் விளங்கினர்''.

இப்பகுதி ஆதி யூத கிறிஸ்தவர்களின் இரவுணவு தோழமையானது அன்றாடப் பழக்கமாக இருந்ததைக் குறிப்பிடுகிறது. இரண்டாவது வருகையில் வானகத்தினின்று இயேசு திரும்பி வருவது உடனடியாக நிகழக்கூடியதென அவர்கள் கொண்டிருந்த உயிருள்ள எதிர்பார்ப்பின் நோக்கில், இத்தகைய நிலை இருந்திருக்கக் கூடும். இத்தகைய இறுதி உணவில் வரும் இயேசுவின் கூற்றுக்கள் அவரது அரசை வெளிப்படுத்துதல் பற்றிய இறைவனின் வாக்குறுதி உடனடியாக நிறைவேறுதலைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்தத் தொடக்க காலத்தில், திருச்சபையானது, தூய ஆவியின் வெளிப்படையான பொழிவின் மூலம், இறுதிக்காலங்களில் பங்கெடுக்கிறோம் என்ற மன நிலையால் மீண்டும் வலியுறுத்தப்பட்டு இருந்தமையால், மீட்பினுடைய தொடர் பாஸ்கா அனுபவத்தில் வாழ்ந்து வந்தது. ஆயினும், இயேசுவினுடைய வருகையின் தாமதமும், எருசலேம் சமூகத்தின் குறிப்பிட்ட எல்லைகளுக்கு அப்பாலும் திருச்சபை பரவியதும், அடிக்கடி பொதுக் கூட்டங்களில் பங்கு பெறுவது குறைந்த அவசரமானதாகவும், செயல்முறையானதாகவும் தோன்றச் செய்தன. கிறிஸ்தவர்கள் கூடும்பழக்கத்தின் வளர்ச்சியினை நாம் விரிவாக எடுத்துக்கூற இயலாவிட்டாலும், அப்போஸ்தலிக்க காலமுடிவிற்கு முன்னரே, அக்கூட்டங்களின் வழக்கமான நேரமானது, 'ஆண்டவரின் நாள்' என்று கிறிஸ்தவர்கள் அழைக்கின்ற 'வாரத்தின் முதல் நாளாகிய' ஞாயிற்றுக் கிழமையாகும் (அ.ப. 20:7; 1 கொரி 16:2; திருவெளி 1:10) என்பது தெளிவாக உள்ளது.

திருச்சபையினுடைய கூட்டான வழிபாட்டிற்குத் தனிப்பட்ட நாளாக ஞாயிறு உருவான வழிமுறையினை நாம் ஊகிக்க மட்டுமே முடியும். திருச்சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் யூதர்களாக இருந்து இயேசுவைப் பற்றிய யூத மற்றும் கிறிஸ்தவ விசுவாசங்களுக்கு இடையே விளங்கிய நெருக்கடிநிலை, தோழமையை வெளிப்படையான முறிக்கத் தூண்டாத வரையில், யூதக் கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளில் ஆலயத்திலும், செபக்கூடத்திலும் தொடர்ந்து வழிபாடு புரிந்தனர் என்று நாம் ஊகிக்கலாம். யூதர்களுக்கு ஏழாவது நாளின் முடிவையும், வாரத்தின் முதல் நாளின் துவக்கத்தையும் குறிப்பிடுகின்ற ஓய்வுநாளின் சூரியன் மறையும் நேரத்தில், கிறிஸ்தவச் சீடர்கள் 'அப்பம் பிட்குதலையும்' உள்ளடக்கிய தங்களுக்கே உரிய தனிப்பட்ட சடங்குகளுக்காக ஒன்றுகூடுவர். திருச்சபையானது உறுப்பினர் தொகையில் அதிக அளவு புறவினத்தாரைக் கொண்டதாக உருவானதாலும், யூதருடைய சமூகக் கூட்டங்களில் பங்கு பெறுவதிலிருந்து யூதக் கிறிஸ்தவர்கள் புறம்பாக்கப்பட்டதாலும் சனிக்கிழமை மாலை தொடங்கி பெரும்பாலும் விடியற்காலை வரை நீடித்த

கூட்டங்கள் (அ.ப. 20:7-11) கிறிஸ்தவ வழிபாட்டின் முதன்மை பெற்றன. திருச்சபையின் வழிபாட்டிற்காக வாரத்தின் முதல் நாளை தேர்வு செய்தமையானது தற்செயலானதாகவோ, அல்லது கிறிஸ்தவர்களுடைய திட்டமிட்ட தேர்வாகவோ இருப்பினும், அது இயேசுவின் உயிர்ப்பைப்பற்றிய கிறிஸ்தவ விசுவாசத்தைச் சுட்டிக்காட்டும் இறைவழிகாட்டுதலாக விரைவிலேயே புரிந்து கொள்ளப்பட்டது. திருச்சபையினுடைய வரலாற்றின் ஆரம்ப நூற்றாண்டுகள் முழுவதும், ஞாயிற்றுக் கிழமையில் ஆண்டவரது இரவுணவு பொதுவாகக் கடைப்பிடிக்கப் பட்டது. நற்கருணைச் சடங்குகளுடனான ஞாயிற்றுக்கிழமையின் ஒருமனதான இணைப்பானது, ஆண்டவரது இரவுணவை அவரது மரணத்தின் நினைவு கூறுதலாக மட்டுமில்லாமல், வருங்காலத்தில் முடிவில்லா வாழ்வின் அச்சாரமான அவரது உயிர்ப்பையும் புரிந்து கொள்வதற்கு, மற்ற எல்லாவற்றையும் விட, சிறப்பான முறையில் சாட்சியாக அமைந்துள்ளது.

3. சடங்கு முறை:- அப்போஸ்தலிக்கக் காலத்தில், ஆண்டவருடைய இரவுணவைப் பற்றி அதிக அளவில் விவாதிக்கப்பட்ட பிரச்சினை அது கடைபிடிக்கப்பட்ட முறையையாகும். இறுதி இரவுணவைப் போன்று, இக்கொண்டாட்டமும், ஒரு முழுதான இரவுணவையோ அல்லது உணவையோ கொண்டுள்ளதாக ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆண்டவருடைய சிறப்பான ஏற்பாட்டின் தெளிவான நினைவு கூர்தலாகப் பெறப்பட்ட அப்பம் மற்றும் திராட்சை இரசம் ஆசீர்வதிக்கப்பட்ட மூலம் பொருட்களை, மற்ற உணவு மற்றும் அதனுடன் இணைந்த வழிபாடுகளைவிட, அவை அதிக புனிதமானவையாகவும், அருட்சாதன குணத்தைக் கொண்டவையாகவும் இருந்தன என்று வேறுபடுத்தியிருந்தனர், என்பதைச் சில திறனாய்வாளர்கள் ஏற்க மறுக்கிறார்கள். அதாவது, ஆதிதிருச்சபையானது நற்கருணைக்கும் அன்பு விருந்திற்கும் இடையே தெளிவான வேறுபாட்டைக் கடைபிடித்ததா?

அ. பொது உணவாக:- நற்கருணை மற்றும் அன்பு விருந்து என்னும் இருவித வழக்கங்களும் பிரிக்கப்பட்டிருந்தன என்றில்லாமல், வேறுபடுத்தப்பட்டிருந்தன என்று வேதசாட்சியான யுஸ்தின் (கி.பி. 150) காலத்திலிருந்தே தெளிவாக உள்ளது. அதற்குள்ளாக, நற்கருணையானது அப்ப, இரச பொருட்களை ஆசீர்வதித்துப் பகிர்ந்து கொள்ளுதலைக் கொண்ட காணிக்கையைக் கொண்ட சடங்கு உணவை மட்டுமே குறித்தது. அதனுடைய அருட்சாதன பண்பினால், அன்பு விருந்து இறந்த கிறிஸ்தவர்களின் நினைவாக அளிக்கப்பட்ட விருந்து, மற்றும் இழவு விருந்து ஆகியவற்றின் தோழமை மற்றும் பிறர் உதவித் தன்மையிலிருந்து தெளிவாக வேறுபடுத்தப்பட்டிருந்தது. துணை அப்போஸ்தலிக்க காலத்து ஆசிரியர்களின் குறிப்புகள் இச்சடங்கின் தொடக்க கால வளர்ச்சியில் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய சான்றுகளை அளிக்கவில்லை. முன்பே சொன்னபடி ''அப்பம் பிடுதல்'' என்ற குறிப்பும் இதில் அடங்கும். 'திதாக்கே' 9-10. 14-இல் உள்ள முழுமையான கட்டளைகளும் சர்ச்சைக்குரியவையே. இந்நூலின் காலம், இடம் மற்றும் பொருள் முதலானவை பற்றிய பிரச்சினைகளினால், இந்நூலை உறுதியான வழிகாட்டியாக எடுத்துக்கொள்ளமுடியாது. எனவே, நாம் இவ்வாறு பவுலின் கூற்றாகிய 1 கொரி 11:17-34-யை மட்டுமே முழுவதும் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

யூதர்களிடையே மிகச்சாதாரண உணவும், குடும்பத்தலைவரால், உணவிற்கு முன்னும் பின்னும் இறைவனுக்கு அளிக்கப்பட்ட நன்றியாகிய ஆசீர்களால் புனிதப்படுத்தப்பட்டது. இந்த ஆசீர்களில் முன்பகுதி அப்பத்தை பிட்கும் போது உரைக்கப்பட்டது. மிகவும் பொதுவான, சமயச் சடங்குகளில் உணவிற்குப்பின், நீர் கலந்த இரசம் கொண்ட 'ஆசிரின் கிண்ணத்தின்' மேல் நன்றியுரை கூறப்பட்டு விருந்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் அளிக்கப்பட்டது. இவ்வாறு பொதுவில் பகிர்ந்து கொள்ளப்பட்ட சிறப்பான அருளானது, உணவின் புனிதப்படுத்தப்

பட்ட உட்பொருட்களுக்குப் பதிலாக, ஒரே ஆசியில் பங்கு பெறுதலில் மிகக்குறிப்பாக இணைந்திருந்தது. உணவும், பானமும் இறைவனின் கொடைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு போற்றப்பட்டன. கிண்ணத்தின் மீதான சிறப்பு நன்றியுரை இறைவனின் அருட்செயலின் நினைவை, மீட்பைப்பற்றிய பழைய செயல்களை நினைவு கூர்வதனுடனும், வரவிருக்கும் அவரது அரசைப்பற்றிய வாக்குறுதியுடனும் இணைக்கின்றது. இத்தகைய பின்னணியில் ஆதிக்கிறிஸ்தவ வேதபோதக பணியாளர்கள், கிறிஸ்துவின் மீட்புப் பணியை நினைவிற்கு கொண்டுவருதல், ஆவியினால் அவரது திருச்சபையை நிறைவேற்றுதல், அவரது அரசை நிறுவ அவர் உடனடியாக வருவிருப்பதைப் பற்றிய உறுதியான நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு ஆகியவையாக பழைய யூத விருந்து ஆசீர்களை மாற்றியமைத்து இறுதி இரவுணவின் பாரம்பரியத்தை மனம் மாறியவர்களுக்கு அளித்தனர்.

மனந்திரும்பிய புறவினத்தாரும், தங்களுடைய பழைய பின்னனியில் உணவு சடங்கு முறைகளை அறிந்திருந்தனர். இத்தகைய சடங்குக் கொண்டாட்டங்கள் அசாதாரண இரகசியமாக வைக்கப்பட்டிருந்ததால் உணவு முறைகளைப் பற்றிய விளக்கங்களை வெகு சிறிதே அறிந்திருக்கிறோம். அதற்கு மேலும், சமயப் பலிகளுக்குப்பின் வந்த விருந்துகள் இருந்தன. வியாபாரிகளின் கூட்டுறவு குழுக்கள் மற்றும் இழவுவினைக்கு ஏற்ற அமைப்புகள் தனிப்பட்ட காப்புத் தெய்வங்களுக்கு ஆராதனைச் செலுத்தும் விதமாக, அவற்றின் ஆதரவில் பொது விருந்துகளை நடத்தின. இத்தகைய உணவு கடவுளுக்குப் படைப்பட்ட பானங்களுடன் துவக்கப்பட்டன. பல நேரங்களில் பக்தர்களிடையே ஒருவராக பிரசன்னமாகக் கூடிய தெய்வத்திற்காக, சிறப்பான உணவுப் பொருட்கள் தனியாக காணிக்கையாக்கப்பட்டிருந்தன. பெரும்பாலும் யூதரல்லாதோரின் உணவுச் சடங்குகள், மிதமிஞ்சிய முறையில் உண்டு குடித்தல் முக்கிய இடம் பெற்று, அநாகரிக முறையில் நடந்தன.

ஆ. உணவின் பிரச்சினைகள்:- பவுலால் கொரிந்துவில் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையானது, கிறிஸ்தவ சபைகளுக்கு முன்னுதாரணமாக இல்லாமல் இருக்கலாம்; ஆனால், ஆண்டவரது இரவுணவின்போது அவர்களால் எழுப்பப்பட்ட பிரச்சினைகள், புறவின பின்னனியிலிருந்து மனம்மாறியவர்களிடையே, சமய உணவின் போது யூத பாரம்பரியத்தினுடைய ஒழுங்கான, புனித சூழ்நிலையை பாதுகாப்பதில் உள்ள கடினத்தைக் குறித்துக்காட்டுகின்றன என்பதில் சந்தேகமேயில்லை. பவுல் தன்னுடைய உரையில் ஆற்றல் மிக்க விதத்தில் எடுத்துக்கூறும் கொரிந்துவின் தனிப்பட்ட தவறுகள் மூன்றாகும். (1) இரவுணவை கொண்டாடுவதில் கொரிந்தியரிடையே உள்ள வெளிப்படையான பிளவுகள் (2) சில குறிப்பிட்ட உறுப்பினர்கள், ஒருவேளை செல்வாக்குடைய மற்றும் ஓய்வு உடையோர், திருச்சபையின் எல்லா உறுப்பினர்களும் வந்து சேருவதற்கு முன்னர் இரவுணவை கடைபிடிக்க ஆரம்பிப்பதன்மூலம் மற்றவர்களுக்குக் காட்டிய அசட்டை மனப்பான்மை மற்றும் (3) உண்பதிலும் குடிப்பதிலும் சில உறுப்பினர்களின் மிதமிஞ்சிய நிலை. கொரிந்திய திருச்சபையின் பிளவுகள் சமூக மற்றும் பொருளாதார நிலையில் மட்டுமின்றி, மொழி மற்றும் சமய நிலைகளிலும் காணப்பட்டன. ஏனெனில், அதே திருமுகத்தில் பவுல், பிற கடவுளுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியை உண்பது தொடர்பாக யூதர்-யூதரல்லாதோருக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையைக் குறித்தும், பல்வேறு இறைபணியாளருக்கு பிரமாணிக்கம் காட்டுவதில் மையம் கொண்ட பிரிவினை சச்சரவு பற்றியும் குறிப்பிடுகின்றார்.

ஆண்டவர் இறுதி இரவுணவை கொண்டாடிய மரபை நினைவுப்படுத்துவதன் மூலம், கொரிந்தியருடைய பழக்கமானது அதை நையாண்டி செய்வதாக அமைகிறது என்று பவுல் கடுமையாகக் கண்டிக்கிறார். உணவிற்கு உணவுப்பொருள் மற்றும் பானம் முதலியவைகளை அதிகமாக அளிக்க இயலாத ஏழை கிறிஸ்தவர்களுக்

கும், கிறிஸ்தவ அன்பின் முழு மரியாதையை அளித்து, அனைவரும் இரவுணவை ஒன்றாக இணைந்து ஆரம்பித்து, ஒன்றாக பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். சமூகப் பண்புகளுக்கு மேலாக அமைந்துள்ள, நிகழ்ச்சியின் சமய சிறப்பிற்கு அவர் அவர்களைத் திரும்ப அழைக்கிறார். நாகரீகமற்ற நிலையில் அதிகமாக உண்ண சோதனைக்குட்படுவர்களை அவர்கள் வீட்டிலேயேஉண்டு குடிக்குமாறு கேட்டுக்கொள்கிறார்.

இரவுணவானது, அப்பம் மற்றும் இரசத்தின் மீதான வெறும் சடங்கு முறை உணவு தான் என்று பவுலின் கட்டளைகளில் எந்தவிதக் குறிப்பும் இல்லை. இறுதி இரவுணவில் இருந்தது போல், அப்பத்தை ஆசீர்வதிப்பதற்கும் இரவுணவிற்குப் பின்னர் கிண்ணத்தை ஆசீர்வதிப்பதற்கும் இடையில் பொதுவான உணவைத் தொடர பவுல் அனுமதித்தார் என்பதை எல்லா விளக்கவுரையாளர்களும் பொதுவாக ஏற்றுக் கொள்கின்றனர். அவரது ஒரே கவனம், ஆண்டவரைப் பற்றிய பக்திமிக்க அடக்கமான நினைவுடன் அனைவரும் ஒன்று சேர்ந்து இவ்வுணவு செய்யப்படவேண்டும் என்பதாகும். பல திறனாய்வாளர்கள் செய்வது போன்று, உணவின் மற்ற பகுதியினின்று அப்பத்தையும் கிண்ணத்தையும் ஆசீர்வதித்துப் பகிர்கின்ற இருசெயல்களையும் உறுதியாக வேறுபடுத்திக் காட்டலாம். இச் செயல்களை அருட்சாதனமாகவும், சடங்காகவும் குறிப்பிடலாம். இக்கருத்துக்கு ஆதரவு 1 கொரி 10:16-இல் காண்ப்படுகின்றது ''திருக்கிண்ணத்தை ஏந்தி நாம் இறைபுகழ் கூறுகிறோமே அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அன்றோ? நாம் அப்பத்தை பிட்கிறோமே; அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அன்றோ?'' இறுதி இரவுணவில் ஆண்டவர் கூறிய வார்த்தைகளின் மூலம், விருந்தின் மற்ற எந்த பகுதியையும் விட ஆசீர்வதிக்கப்பட்ட அப்பமும் இரசக் கிண்ணமும் உண்மையாகவே உயர்ந்த சிறப்பைக் கொண்டிருந்தன. இதை மறுக்க முடியாது. ஆனால் 1 கொரி 11:20-இல் உச்சரிக்கும் போது 'ஆண்டவரின் விருந்து' என்னும் தலைப்பு, அப்பத்துடனும் கிண்ணத்துடனும் இணைந்துள்ள சொற்களையும் செயல்களையும் மட்டுமே குறிப்பதாகவும், உணவை முழுவதையும் அல்ல என்பது எம்முறையிலும் தெளிவாக இல்லை.

இ.உணவிலிருந்துவேறுபடுத்தப்படுதல்:- இறுதி இரவுணவிலிருந்து உணவு பிரிக்கப்பட்டு அருட்சாதன நற்கருணைக்கும் அன்பு விருந்தின் தோழமை உணவிற்கும் இடையே தெளிவான வேறுபாடு, எப்போது எங்கு ஏற்பட்டது என்பதற்கான சான்றுக் குறிப்பு எதுவுமே இல்லை. இரண்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குள், அதற்கு முன்பு இல்லாவிட்டாலும், திருச்சபை முழுவதும் இவ்வளர்ச்சியின் உலகளாவிய ஒரே மாதிரியான வளர்ச்சியின் காரணமாக, அப்போஸ்தலர்களுடைய அதிகாரத்தின் மூலம் இந்த அமைப்பு ஏற்பட்டதெனக் கருதப்படுகிறது. இப்படியிருந்திருக்கலாம். ஆனால் இது ஒரு நிருபனமாக அமையவில்லை. ஆயினும், அது நிகழக்கூடியதற்கான காரணங்களை நாம் ஊகிக்கலாம். கொரிந்துவில் ஏற்பட்டது போன்ற தவறுகளினின்று திருச்சபையின் மிகப்புனிதமான சடங்கு முறைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற அவசியம் ஒரு காரணமாகலாம். ஏனெனில் திருச்சபையின் அங்கத்தினரின் எண்ணிக்கையானது யூதரல்லாத பின்னனியைக் கொண்டுள்ள புறவினத்தாரையே அதிகமாகக் கொண்டிருக்கும்போது, இத்தகைய தவறுகள் மீண்டும் நிகழும் வாய்ப்புகள் அதிகமாயின.

இடநெருக்கடியானது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக அமைந்தது. சபையின் எண்ணிக்கை பெருகப் பெருக. கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சந்திக்கக் கூடிய செல்வர்களுடைய வீடு முதற் கொண்டு, எங்குமே அனைவரும் ஒரே நேரத்தில் முறையாக உணவு கொள்வது இயலாத ஒன்றாக இருந்தது. துரதிருஷ்டமாக, ஆதிகாலத்தின் வீட்டுக்கோவில் பற்றி ஒன்றும் அறியப்படவில்லை. மிகப்பழமை

யானது என்று கண்டுபிடிக்கப்பட்டு 'தூரா'-வில் உள்ள 242-ம் ஆண்டின் கட்டிடமானது, உள்ளூர் கோவிலாக உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட உடனேயே, தனிப் பட்ட உறைவிடமாகப் பயன்படுவது நிறுத் தப்பட்டது. நற்கருணையின் போது திருச் சபை கூடுவதற்குத் தேவையான இடத்தை அளிக்கும் விதமாக, பல அறைகளை இணைத்து ஒரு பெரிய சந்திப்பு அறை யினை உருவாக்குவதில், உட்புற ஒழுங்கு முறைகளில் உள்ள மாற்றங்களை அது வெளிப்படுத்துகின்றது.

பொதுவிருந்தினின்று நற்கருணையை பிரித்ததானது, சடங்கிலும் அதனை நிறை வேற்றும் முறையிலும் முக்கிய மாற்றத் திற்கு இட்டுச் சென்றது. விருந்திலிருந்து விடுவிக்கப்பட்டபின்னர், அப்பம் மற்றும் கிண்ணத்தின் மீதான பழைய தனிப்பட்ட நன்றியுரைகள், ஒன்றினைக்கப்பட்ட இரு பொருட்களின் மீதான ஒரே நன்றிச் செபமாக வடிவம் எடுத்தன. அது முதல், அப்பமும் இரசமும் ஒன்றாக காணிக்கையாக்கப்பட்டு, ஆசிர்வதிக்கப்பட்டு, இரு வடிவங்களிலு மான திருவிருந்து தொடரப்பட்டது. ஞாயிற் குக் கிழமைகளிலாவது, இந்த ஆடம்பர திருவிருந்திற்கு முன்னர் வாசகங்கள் மறை யுரை, செபங்கள், சமாதான முத்தம் ஆகி யவை அடங்கிய கூட்டு வழிபாடு நடந்தது. இவை யூத செபக்கூடத்தினின்று எடுக்கப் பட்டு வளர்ச்சியடைந்திருக்கலாம். பாது காப்பு காரணங்களுக்காக ஞானஸ்நானம் பெறாதோர் அழைப்பின்பேரின் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தாலும், ஒருவர் திருச் சபையின் உறுப்பினராக இருந்தாலும் இல் லாவிட்டாலும், அனைவரும் வாசகங்கள் மறையுரையும் ஆகியவற்றில் பங்கெடுக்க லாம். புனித மறைபொருளை அவசங்கைப டுத்துவதைத் தவிர்ப்பதற்காக, செபங்க ளுக்கு முன்னர், கிறிஸ்தவரல்லாதோறும் ஞானஸ்நானம் பெறாத தயாரிப்புக்கு உட் பட்டோரும் வெளியேற்றப்பட்டு, கதவுகள் மூடப்பட்டு விசுவாசிகளால் மட்டும் எஞ்சி யுள்ள சடங்கு அனுசரிக்கப்பட்டது. இதில், திருச்சபையினுடைய அருட்சாதன சடங்கா னது, இரகசிய சமயங்களின் வழிபாட்டு மரபுகளோடு சில குறிப்பிட்ட ஒப்புமைக ளைக் கொண்டிருந்தது. இத்தகைய விழா வைப்பற்றி நாம் கொண்டுள்ள பழமையான விரிவான விளக்கமானது வேதசாட்சியான புனித யுஸ்தீனுடைய முதல் நூல் 65-67-ல் தரப்பட்டுள்ளது.

4. சடங்கின் பணியாளர்கள்:- இஞ்ஞாசி யாரின் காலம் முதற்கொண்டு (110), ஆயர் மட்டுமே சடங்கிற்கு தலைமை ஏற்று, அப் பம் மற்றும் இரசத்தின் மீது நன்றியுரையின் அபிடேக செபத்தைக் கூறுவது பொதுவான வழக்கமாக இருந்தது. அவர் இல்லாத போது, தனது பணியினை மூத்த குரு ஒருவ ருக்கு அவர் அளிக்கலாம். தியாக்கோன்கள் மக்களுடைய காணிக்கையைப் பெறுவதி லும், வருகை புரிந்தோருக்கும், வராதோருக் கும் (நோயாளிகள் மற்றும் சிறைப்பட் டோர்) நற்கருணையை அளிப்பதிலும் சடங்கை நிறைவேற்றுபவருக்கு துணை புரிந்தனர். இக்கருத்தைப்பற்றி பவுலோ அப் போஸ்தலர் பணியோ துல்லியமான விவரம் எதுவும் தராமையால் இவ்வமைப்பானது அப்போஸ்தலிக்க காலத்திலேயே உருவா னதா, இல்லையா என்று உறுதியாகத் தீர்மா னிக்கமுடியாது. ஆனாலும் அப்போஸ்தலர் ஒருவர் அங்கு இருந்தால், சடங்கின் போது வருகை புரிந்துள்ள மற்ற எல்லா பணியாள ரையும் விட தலைமை தாங்க முன்னுரிமை அவர் எடுத்துக்கொள்வது பற்றி எச்சந்தேக மும் இருக்க முடியாது. ஓர் இறைவாக்கினர் தான் விரும்பியவாறு நன்றியுரை அளிக்க திதாக்கே 10:7 அனுமதிக்கின்றது. ஆனால் இப்பகுதியானது நற்கருணை மன்றாட்டை குறிப்பிடுகிறதா? அல்லது அன்பு விருந்தின் விருந்து ஆசீர்களை குறிப்பிடுகிறதா என்பது விளக்கவுரையாளர்களால் விவாதிக்கப்படு கிறது. ஆயினும் நற்கருணைப் பற்றி துல்லி யமாக குறிப்பிட்ட பின்னர், திதாக்கே ஆசிரி யர், 15-ஆம் அதிகாரத்தில், இறைவாக்கினர் மற்றும் போதகர்களுடைய சடங்குகளை யும், நிறைவேற்றுகின்ற 'ஆயர்களையும் தியாக்கோன்களையும்' நியமிப்பது பற்றி யும் குறிப்பிடுகின்றார். இக்கட்டளையா

னது, அந்தியோக்கியாவில் உள்ள இறை வாக்கினர்களும் போதகர்களும் அங்குள்ள திருச்சபைக்காக வழிபாடு புரிவதை விவரிக் கும் அ.ப. 13:1-3-ன் மீதான விளக்கவுரை யாக இருக்கலாம். 1 கிளமெ 44:4-இல், ஆயர் நற்கருணையின் பொருட்களாகிய கொடைகளை அளிப்பவர்களில் ஒருவர் என்று விவரிக்கப்படுகிறார். ஆயர் பதவி யின் உண்மையான, முதன்மையான பணியா னது நற்கருணைச் சடங்கை மேற்பார்வையி டுவதாகும் என்று பல அறிஞர்கள் நம்புகின் றனர்.

5. கோட்பாடு:- ஆண்டவருடைய இரவு ணவைப்பற்றி இறையியல் பொருளானது, ஆதிக் கிறிஸ்தவர்கள் இயேசுவின் ஆட் தன்மை மற்றும் பரிகாரம், அவர் தம் திருச்ச பையுடன் கொண்டுள்ள உறவின் பண்பு ஆகிய இயல்புகளுக்கு மரியாதை அளிக் கின்ற அவர்களுடைய அனுமானம் மற்றும் நம்பிக்கைகளால் பாதிக்கப்பட்டாலும், இறுதி உணவின் போதான அவரது சொல் மற்றும் செயல்களில் உள்ள இயேசுவின் எண்ணத்தையே சார்ந்துள்ளது. இயேசு விற்கு, இந்த இரவுணவானது அவரது மர ணத்திலும் உயிர்ப்பிலும் முத்திரையிடப் பட்ட புதிய உடன்படிக்கையின் அடையாள மாகும். இவ்வுடன்படிக்கை உடனடியாக வரவிருக்கும் அரசின் வாரிசாக கடவுளு டைய புதிய இஸ்ராயேலை உருவாக்குகி றது. அவரது மீட்புச் செயலின் பயன்களில் அவரது சீடர்கள் பங்குபெறுவர் என்பதன் உறுதிமொழியாக இது இருப்பதால், விண் ணக மீட்பின் பெருவிருந்தில் அவருடன் பங்கு கொள்வர் என்பதற்கு அச்சாரமாகவும் உள்ளது. முடிவில்லா வாழ்விற்கு வழியாக உள்ள தந்தையின் விருப்பத்திற்குத் தன் னையே அளிக்கின்ற முழுமையான காணிக் கைப் பலியில், இயேசுவுக்கு உரியவர்கள், அவரோடு சேர்வதற்கு உரிய சாதனமாக இரவுணவு உள்ளது.

ஆண்டவரின் இரவுணவின் (நற்கருணை) கொண்டாட்டம் பற்றிக் கத்தோலிக்கர்களும் பிரினைச் சகோதரரும் வேறுபட்ட விளக்கம் அளிப்பர். ''இது என் சரீரம், இது என் இரத்தம்'' என்ற வாக்குகளைக் கத்தோலிக் கர்கள் அவற்றின் இயற்பொருளில் எடுத்துக் கொள்வர். இந்த விளக்கத்தில், அப்பமும் இரசமும், ஒவ்வொரு திருப்பலியிலும், கிறிஸ்துவின் உண்மையான உடலாகவும் இரத்தமாகவும் வியத்தகு முறையில் மாறு கின்றன. பின் கிறிஸ்துவின் புதிய பலியாக இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கப்படுகின் றன. கத்தோலிக்க இறையியலில், நற்க ருணை என்ற அருட்சாதனம் ஒன்றை நிகழ்த் தும் காணிக்கையாகும். அது ஓர் அருள் அளிக்கும் சாதனமாகும். பிரிவினைச் சபை யோரின் இறையியலில், கிறிஸ்தவின் உடல் சிலுவையில் ஒரே ஒருமுறை இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறது. வரலாற்றில் மீண்டும் செய்யப்படக்கூடாத பலியாகும். ஆகவே ஆண்டவரது இரவு உணவு ஒரு பலியன்று, அடையாளக் கொண்டாட்டமே. அது, கிறிஸ்து உலக மீட்பை சிலுவையில் நிறைவேற்றிவிட்டார் என்ற நிகழ்ச்சியை வெறுமனே நினைவு படுத்துகிறது.

அ. ஒருவகையான திருவருட்சாதன உணவு:-

1. உணவு, சமய அறிகுறி:- உணவு அருந் தும்பொழுது நிறுவப்பெற்ற நற்கருணை உணவளிக்கும் ஒரு சடங்குமுறையாகும். மிகப் பழங்காலத்திலிருந்து, சிறப்பாக, செமித்திய இனத்தார் வாழ்ந்த பகுதியில், மக்கள் உணவுக்குப் புனிதமான மதிப்பு அளித்து வந்திருக்கிறார்கள்; காரணம், உணவு வள்ளன்மையுள்ள இறைவனின் கொடை என்றும், அது வாழ்வுக்கு ஆதாரம் என்றும் உணர்ந்திருக்கிறார்கள். அப்பம், நீர், இரசம், பழம் முதலியன எல்லாம் நலன்கள்; அவைகளுக்காக மனிதன் இறைபுகழ் கூறுகி றான். உணவு அருந்துதல் தன்னிலேயே சமயப் பொருள் உள்ளது; ஏனெனில், கூடி உணவு அருந்துதல், பந்தியில் அமர்ந்திருப்ப வர்களுக்கு இடையிலும், அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையிலும் புனிதமான உறவுகளை நிலைநாட்டுகிறது.

2. முன்னடையாளங்களிலிருந்து மெய்ம் மைக்கு:- எனவே, விவிலியத்தில் கண் டுள்ள இறை வெளிப்பாட்டில், உணவும்

உணவருந்துதலும், இறைவன் தம் மக்களோடு வாழ்வைப் பகிர்ந்து கொள்வதை உணர்த்த உதவுகின்றன. யாத்திராகமத்தில் காணப்படும் மன்னாவும் காடைகளும், மேலும் ஒரேபு என்னும் பாறையிலிருந்து வெள்ளம்போல் ஓடிய நீரும் (சங 77:20-29) முன்னடையாளமாயிருந்த நலன்கள் (1 கொரி 10:3...); முன்னடையாளங்கள் என்றளவில் அவை உண்மையான கொடையை உருவகமாய் முன்னுணர்த்துகின்றன; அக்கொடை கடவுளின் திருவாயினின்று வருவதாகும் (உப 8:3; மத் 4:4); அது வானத்தினின்று வரும் (யாத் 16:4) உண்மை அப்பமாகிய (இறைவனின்) வாக்கு ஆகும்.

இந்த முன்னடையாளங்கள் எல்லாம் இப்பொழுது இயேசுவிடம் நிறைவு பெறுகின்றன. அவர்தாம் 'உயிர்தரும் உணவு'; எவ்வாறெனில், முதலாவதாக அவர் தமது வாக்கினால் உணவாகின்றார்; அவ்வாக்கு விசுவாசங்கொள்பவர்களுக்கு முடிவில்லா வாழ்வின் வாயிலைத் திறந்துவிடுகிறது (யோவா 6:26-51); அடுத்து, அவர் தமது தசையைத் தின்னவும், தமது இரத்தத்தைக் குடிக்கவும் (6:51-58) கொடுத்து உணவாகின்றார். நற்கருணை பற்றி இவ்வாறு வாக்குறுதி அளிக்கும் சொற்களை இயேசு பாலைவனத்தில் மக்கட் கூட்டத்திற்குப் புதுமையாக உணவு அளித்த பின்னர் (6:1-15) கூறுகிறார். இயேசு வாக்களிப்பதும், மன்னா போன்றது அன்று என அவராலேயே வேறுபடுத்தப் பெறுவதுமான கொடை (6:31...49....), இங்கு யாத்திராகமத்தில் கண்டுள்ள வியத்தகு செயல்களோடு தொடர்புப்படுத்தப் பெறுகிறது; அதேபொழுது, அக்கொடை, மெசியா திருவிருந்தின் முன்சுவை என்றளவில்தான் வழங்கப்பெறுகிறது; திருவிருந்து என்பது விண்ணகப் பேரின்பத்திற்கு ஓர் உருவகமாகும்; இது, யூத மறையினருக்கும் (ஏச 25:6; யூதச் சட்ட வித்தகர்களின் ஏடுகள்), புதிய ஏற்பாட்டினருக்கும் (மத் 8:11; 22:2-14; லூக் 14:15; திருவெளி 3:20; 19:9) நான்கு தெரிந்த உருவகம்.

3. ஆண்டவரின் உணவும் நினைவு கூர்தலும் வாக்குறுதியும்:- இறுதி இராவுணவு, மெசியா திருவிருந்தினுக்கு இறுதியான முன்னேற்பாடுபோல் அமைந்துள்ளது; அவ்விருந்தினில் இயேசு, அடுத்து நிற்கும் சோதனைக் காலத்திற்குப் பின்னர் தம்மவர்களை மீண்டும் கண்டு கொள்வார். கடவுளின் அரசில் இயேசு அவர்களோடு 'நிறைவேறிய பாஸ்கா உணவை'யும் (லூக் 22:15..) 'புதிய இரசத்தை'யும் (மாற் 14:25) சுவைப்பார்; இறுதி இராவுணவின்போது இரசத்தையும் தம்மவர்களுக்காக ஆயத்தம் செய்கிறார்; எவ்வாறெனில், அப்பமும் இரசமும் புதியதொரு மெய்மையை, அதாவது, தமது உடலும் இரத்தமும் என்பதனைக் குறித்துக்காட்டச் செய்கிறார்.

இவ்வாறு செய்வதற்குப் பொருத்தமானதும் விரும்பத்தக்கதுமான ஒரு வாய்ப்பினை இயேசுவுக்குப் பாஸ்கா உணவு அருந்தும் சடங்குமுறை அளிக்கிறது. இவ்வேளையில், குடும்பத்தின் தந்தை பல்வேறு உணவுப் பொருட்களின் மீது, மிகச் சிறப்பாக, அப்பத்தின் மீதும் மூன்றாம் கிண்ணத்தின்மீதும் முறைப்படி கூறிய சொற்கள் அந்த உணவுப் பொருட்களுக்கு ஒருவகையான ஆற்றலை அளித்தன; அந்த ஆற்றலால், கடந்த காலம் நினைவுகூரப்பட்டது, வருங்காலத்திற்கான நம்பிக்கை தூண்டப்பெற்றது; இவ்வாறு பந்தியில் இருந்தோர் இந்த உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டவராய், யாத்திராகம காலத்துச் சோதனைகளுக்கு உண்மையில் திரும்பவும் ஆளாயினர்; அத்தோடு, மெசியாவின் வாக்குறுதிகளை எதிர் பார்த்தவராய் வாழ்ந்தனர். சொற்களில் அடங்கிய இத்தகைய படைக்கும் ஆற்றலைச் செமித்திய மக்களின் உள்ளம் உணர்ந்திருந்தது; இயேசுவும் இந்த ஆற்றலைப் பயன்படுத்தி, தமக்குரிய தலைமைத்துவ அதிகாரத்தால் அந்த ஆற்றலை இன்னும் வளர்த்துக் கொள்கிறார். அப்பத்திற்கும் இரசத்திற்கும் புதிய பொருளைக் கொடுக்கிறபொழுது இயேசு அதற்குக் காரணம் காட்டக் காணோம்; ஆனால் அவர் அவைகளில் பொருள் மாற்றம் விளைவிக்கிறார். இயேசு விளக்கம் தரக் காணோம்; ஆனால் அவர் தீர்மானிக்கிறார், கட்டளையிடுகிறார்; இது என் உடல் (அதா

வது, இது முதற் கொண்டு, இது என் உடல்தான்). 'இருக்கிறது' என்ற இணைப்பு வினைச்சொல் அரமெக் மொழியில் உள்ள மூலவாசகத்தில் தவறியுள்ளது தான் - அந்த வினைச்சொல் தானாகமட்டும் இந்த இயல் வாய்மையை (இந்த அப்பம் உடல்தான் என்று) எண்பித்திடாது; ஏனெனில், அந்த இணைப்பு வினைச்சொல் உருவகப்பொருளை மட்டும்கூட உணர்த்தக்கூடும்; இதற்கு எடுத்துக்காட்டாக 'அறுவடை, உலகின் முடிவு (முடிவாய் இருக்கும்); அறுப்போர் வான தூதர் (வானதூதராய் இருப்பர்)' (மத் 13:39) என்று உள்ளதைக் காணலாம். இறுதி இராவுணவுச் சூழ்நிலை வளம் நிறைந்த பொருள் ஒன்றினை வலியுறுத்துகிறது. இங்கு இயேசு ஓர் உவமையை எடுத்துரைப்பதில்லை; உவமையில் திட்டவட்டமான பருப்பொருட்கள் புலனாகாதப் பொருளைக் கண்டுக்கொள்ள உதவும். இங்கோ இயேசு ஓர் உணவுப் பந்தியில் தலைமை தாங்குகிறார்; இவ்வேளையில் சடங்கு முறைப்படி இறைபுகழ் கூறுதல் உணவுப் பொருட்களுக்கு மற்றொரு நிலைக்குரிய தகைமை வழங்குகிறது. தவிர, இயேசுவைப் பொருத்தளவில், இவ்வாறு வழங்கும் தகைமை இது மட்டும் கேட்டிராத அளவுக்கு நிறைவும் மெய்ம்மையும் கொண்டுள்ளது; இதற்குக் காரணம் வாக்குறுதி செய்யப்பட்ட அர்ப்பணமாகும்; அதுதான் மீட்பளிக்கும் சாவு; அச்சாவு உயிர்ப்பின் வழியாக இறுதிக் கால வாழ்வுக்கு இட்டுச்செல்கிறது.

ஆ. நற்கருணை: ஒருவகையான திருவருட்சாதனப் பலி:-

1. மீட்பளிக்கும் சாவை அறிக்கையிடல்:- சாவு மீட்பு அளிப்பதாகும்; ஏனெனில், இந்த உடல் 'உங்களுக்காக அளிக்கப்படும்' (லூக், 1 கொரி-இல் 'உங்களுக்காக' என்று மட்டும் உள்ளது; அத்தோடு இந்த வாசகத்தில் முக்கியமில்லா வேறுபாடுகளும் கண்டுள்ளன); இந்த இரத்தம் 'உங்களுக்காகச் சிந்தப்படும்' (லூக்) அல்லது 'பலருக்காகச் சிந்தப்படும்' (மாற்; மத்). பந்தியில் அப்பம் இரசம் என்று வகைப்படுத்துவதே உடலும் இரத்தமும் வன்முறையில் கூறுபடுத்தப்படுவதை உணர்த்துகின்றது; இயேசு, நெருங்கிக் கொண்டிருக்கும் தமது சாவைத் தெளிவாக அறிவிக்கிறார். அச்சாவு ஒரு பலி என அறிமுகப்படுத்துகிறார்; அப்பலி, பலி உயிர்களான ஆடுமாடுகளைப் பலியிடுவதோடு ஒப்பிடப்படக்கூடியது; பலி உயிர்களின் இரத்தம் சீனாய் மலையில் செய்த முதல் உடன்படிக்கைக்கு முத்திரையிடப்பட்டது (யாத் 24:5-8); இயேசுவின் பலி பாஸ்காச் செம்மறியோடும் ஒப்பிடத்தக்கது, இவ்வாறு ஒப்பிடுவது எந்த அளவுக்கு எனில், இயேசுவின் காலத்து யூத மறை பாஸ்காச் செம்மறியையும் ஒரு பலியாகக் கருதிய அளவுக்கு எனலாம் (1 கொரி 5:7 காண்).

இயேசுவோ 'புதிய உடன்படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும்' இரத்தம் எனக் கூறுகிறார்; இவ்வாறு அவர் கூறுகிற பொழுது, அவர் இறை ஊழியன் என்பதனைப்பற்றியும் சிந்திக்கவேண்டும்: அந்த இறை ஊழியன் 'சாவுக்குத் தம் ஆன்மாவைக் கையளித்தார்'; 'பலருடைய பாவத்தைத் தாமே சுமந்து கொண்டார்' (ஏச 53:12); அந்த ஊழியனை இறைவன் 'மக்களுக்கு உடன்படிக்கையாகவும், புறவினத்தாருக்கு ஒளியாகவும்' (42:7; 49:8) ஏற்படுத்தினார். இதற்கெல்லாம் முன்னரே, இயேசு இறை ஊழியனின் பணியைத் தமக்கே உரித்தாக்கியிருந்தார் (லூக் 4:17-21); இன்னும், இறை ஊழியனைப் போல, 'பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கும்' (மாற் 10:45 இ;ஏச 53) பணிவிடையை மேற்கொண்டதாகவும் உரிமை கொண்டாடியிருந்தார். இக்கட்டத்தில் இயேசு நாம் அறிந்து கொள்ளச் செய்வது என்னவெனில்: நெருங்கி வந்து கொண்டிருக்கும் அவருடைய சாவு பழைய உடன்படிக்கைப் பலிகளின் இடத்தை நிரப்பப்போகிறது. மக்களை இம்மைக்குரிய அடிமைத்தனத்திலிருந்து மட்டுமன்று, பாவத்தளையிலிருந்தும் விடுவிக்கப் போகிறது. இத்தகையப் பணிகளைத் தான் தேவை என இறைவன் தம் ஊழியனிடமிருந்து கேட்டிருந்தார், ஆகியனவாகும். எரேமியா முன்னறிவித்திருந்த இந்தப் 'புதிய

உடன்படிக்கையை' (எரே 31:31-34) இயேசு நிறுவப்போகின்றார்.

2. பலியில் பங்குகொண்டு உறவாடுதல்:- இங்கு மிகப் புதியது யாதெனில்: இயேசு தமது பலியின்பயனை உணவினுள் உள்ளடக்கினார் என்பதாகும். மற்ற எல்லாப் பழங்கால மக்களையும் போல், இஸ்ராயேல் மக்களும் பலிப்பொருளை உண்டு பலியின் பயனைப் பெறுதல் வழக்கம். இவ்வாறு, மக்கள் பலிப்பொருளோடும், அதை ஏற்றுக் கொண்ட இறைவனோடும் உறவு கொண்டு ஒன்றித்திடப் பார்த்தார்கள் (1 கொரி 10:18-21). விசுவாசிகள் பலியாக்கப் பட்ட இயேசுவின் உடலை உண்டும், அவர் தம் இரத்தத்தைப் பருகியும் அவருடைய பலியில் பங்குக் கொண்டு உறவாடுகிறார்கள். இவ்வண்ணம் அவர்கள், இயேசு அன்பினால் அளித்த பலிப்பொருளைத் தமதாக்குகிறார்கள், இயேசுவின் பலி திரும்பவும் கொணரும் அருள்வாழ்வினால் பயன் அடைகிறார்கள். மக்கள் இவ்வாறெல்லாம் எங்கு எப்பொழுதும் செய்யக் கூடுமாய் இருக்க வேண்டும் என்றுதான், இயேசு மிகச் சாதாரண உணவுப் பொருட்களைத் தேர்ந்து கொண்டு, அவைகளைப் பலிப் பொருளுக் குரிய நிலையில் தமது உடலாகவும் இரத்தமாகவும் ஆக்கினார்; அவர் தம் சீடர்களுக்கு கொடுத்த கட்டளைப்படி, அவருக்குப் பின்னர், சீடர்கள் அவருடைய அதிகாரத்தைக் கொண்டு, அவர் சொன்ன வார்த்தைகளை மறுபடியும் சொல்வார்கள்; அவ்வார்த்தைகள் மேற்படி மாற்றத்தை விளைவிக்கும். இவ்வாறு இயேசு தமது குருத்துவத்தில் சீடர்கள் பேராளர்களாய் (பிரதிநிதிகளாய்)ப் பங்கு கொள்ளச் செய்கிறார்.

இது முதற்கொண்டு கிறிஸ்வார்கள் இந்நிகழ்ச்சியைத் திரும்ப நிகழ்த்தும் ஒவ்வொரு முறையும் அல்லது அதில் பங்குகொள்ளும் ஒவ்வொரு முறையும், அவர்கள் 'ஆண்டவருடைய மரணத்தை அவர் வரும்பரையில் அறிக்கையிடுகிறார்கள்'' (1 கொரி.1:26); ஏனெனில், அவர்கள் உருவாக்கும் திருவருட்சாதனப் பிரசன்னம் கிறிஸ்துவின் பிரசன்னமாகும்; இங்குக் கிறிஸ்து தாம் பலியான நிலையில் பிரசன்னமாகிறார். இவ்வாறெல்லாம் கிறிஸ்தவர்கள் 'அவருடைய நினைவாகச்' (1 கொரி 11:25; லூக் 22:19) செய்கிறார்கள்; அதாவது, அவர்கள் இயேசு மீட்புக்காகச் செய்ததைத் தங்கள் விசுவாசத்தைக் கொண்டு நினைவுகூர்கிறார்கள்; அல்லது, ஒரு வேளை, இயேசு மீட்புக்காகச் செய்ததை விசுவாசிகள் இறைவனுக்கு நினைவுபடுத்துகிறார்கள் என்றால் இன்னும் பொருத்தமாயிருக்கும் (லேவி 24:7; எண் 10:9.. சீரா 50:18; அ.ப.10:4.31); இங்ஙனம் இயேசு செய்ததை இடையறாது புதுப்பிக்கப்படும் காணிக்கையாக விசுவாசிகள் நினைவுறுத்துகிறார்கள்; அக்காணிக்கை இறைவனின் அருளை வேண்டுகிறது. 'நினைவுகூர்தல்' என்பது இறைவன் ஆற்றிய வல்ல செயல்களை வியந்து பாராட்டும் வகையில் நினைவுகூர்ந்து, அவைகளை வியத்தகு செயல்கள் என ஏற்றுக்கொள்ளுதலாகும். அவற்றில் எல்லாம் தலைசிறந்தது. மக்களின் மீட்புக்காக இறைவனின் திருமகன் ஒப்புக்கொடுத்த பலியாகும். இப்பலி அன்பின் அதிசயம்; இப்பலியில் கிறிஸ்தவர்கள் பங்குகொண்டு, திருவிருந்தின்போது ஆண்டவரின் உடலோடும், அவரிடத்தில் அவர்தம் உறுப்பினர் அனைவரோடும் இணைந்து ஒன்றுபடுகிறார்கள் (1 கொரி 10:14-22). கிறிஸ்து செலுத்திய பலியின் திருவருட்சாதனமான நற்கருணை அன்பின் திருவருட்சாதனமும், கிறிஸ்துவின் உடலில் கொள்ளும் ஒன்றிப்பின் திருவருட்சாதனமும் ஆகும்.

இ. நற்கருணை: இறுதிக்காலத் திருவருட்சாதனம்:-

1. புதிய உலகில் கிறிஸ்துவின் பலி தொடர்ந் நிலைத்திருத்தல்:- புதிய உலகு ஒன்று உண்டு என்ற உண்மைதான், இத்தகைய அடையாளச் செயல்களுக்கும் சொற்களுக்கும் முழுப்பொருளைத் தருவதாகும்; இச்செயல், சொற்கள் எல்லாம் அவ்வுலகினுக்கு நுழைவாயிலாய் அமைந்துள்ளன. கிறிஸ்துவின் சாவு, உண்மையான வாழ்வில் மலருகின்றது; இந்த வாழ்வுக்கு முடிவு என்பது கிடையாது (உரோ 6:9..); இத்தகைய

வாழ்வுதான் இறுதிக்காலம், 'வரப்போகும் நன்மைகளின்' காலம்; அதனோடு ஒப்பிட்டால் நிகழ்காலம் 'நிழல்' தான் (எபி 10:1; 8:5; கொலோ 2:17). கிறிஸ்து தமது பலியை 'ஒரே முறையில் எக்காலத்திற்குமே' நிறைவேற்றி விட்டார் (எபி 7:27; 9:11. 26; 10:10; 1 பேதுரு 3:18); முடிவானதாக அவருடைய இரத்தம் பழைய உடன்படிக்கைப் பலி உயிர்களின் ஆற்றலற்ற இரத்தத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டது (எபி 9:12.18-26; 10:1-10); இயேசு இணைப்பாளராக இருக்கும் புதிய உடன்படிக்கை (12:2; 13:20) பழைய உடன்படிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து (8:13), 'முடிவில்லா உரிமையைப்' பெற்று விட்டது (9:15); இது முதற்கொண்டு, நம்முடைய தலைமைக் குரு 'கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார்' (8:1; 10:12); நாம் முடிவில்லா மீட்பைக் கண்டடையச்' செய்துவிட்டார் (9:12; 5:9); அவர் 'மாறாத குருத்துவத்தைப்' பெற்றுள்ளதால் (7:24). நமக்காகப் 'பரிந்து பேசுவதற்கென என்றுமே வாழ்கிறார்' (7:25; 9:24). கிறிஸ்துவின் பலி, நிலையற்ற நமது உலகின் கால வரையறையோடு தொடர்பு கொண்டு நிறைவேறியதளவில் கடந்த காலத்தியது என்றாலும், அப்பலி, கிறிஸ்து நுழைந்துள்ள புதிய உலகில் என்றென்றைக்கும் பிரசன்னமாக உள்ளது; எவ்வாறெனில், தம்மையே பலியாய் ஒப்புக்கொடுத்துப் புதிய உலகில் நுழைந்த கிறிஸ்து அங்குத் தொடர்ந்து தம் தந்தையிடம் தம்மையே காணிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார்.

2. நற்கருணை வழியாகக் கிறிஸ்தவன் இப்புதிய உலகத்தோடு ஒன்றித்து உறவாடுகிறான்:- பலிப்பொருளான நிலைமையில் நம் தலைமைக் குரு என்றென்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நற்கருணையோ விசுவாசியை இக்குருவோட தொடர்பு கொள்ளச் செய்கின்றது. அப்பம் உடலாகவும், இரசம் இரத்தமாகவும் ஆகும்பொழுது நிகழும் நிலைமாற்றம் (கடந்து செல்லுதல்) தனக்குரிய திருவருட்சாதன முறையில், பழைய உலகம் மாறிப் புதிய உலகம் ஆகும்படி கடந்து செல்லச் செய்கிறது. தமது சாவின் வழியாக வாழ்வுக்குக் கடந்து சென்ற கிறிஸ்து இந்தப் புதிய உலகினுள் நுழையலானார். பாஸ்காச் சடங்குமுறை, யாத்திராகமத்தில் கண்டுள்ள திருப்பயணத்தின் (கடந்து சென்றதின்) நினைவு விழாவாகும்; இவ்வாறு, அந்த யாத்திரையைப்போல, பாஸ்காச் சடங்குமுறையும் ஏற்கனவே, கடந்து செல்வது பற்றிய ஒரு சடங்குமுறையாக இருந்தது; எப்படியெனில், அது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வாக்குறுதி அளிக்கப்பட்ட நாட்டில் கிடைக்க இருந்த விடுதலைக்குக் கடந்து சென்றது பற்றிய சடங்குமுறையாகும்; அடுத்து, மேலும் மேலும் அது, துன்பம், பாவம், சாவு ஆகியவற்றை உள்ளடக்கிய அடிமைத்தனத்திலிருந்து, இன்பம், நீதி வாழ்வு ஆகியவை அடங்கிய விடுதலைக்குக் கடந்து செல்வது பற்றிய சடங்குமுறை ஆனது. ஆனால், இந்தப் பாஸ்காச் சடங்குமுறையில், மெசியா காலத்து ஆசிகள் (நலன்கள்) நம்பிக்கையளவில் இருந்து வந்தன; மேலும், அப்பொழுது மக்கள், தாங்கள் ஆசி கூறிய உணவுப் பொருட்களைக் கொண்டு உருவகமாகத்தான் மெசியாவின் ஆசிகளைத் துய்த்திடக் கூடுமாயிருந்தது. இந்நிலை, கிறிஸ்துபாஸ்காவில் மாறியுள்ளது; எவ்வாறெனில், மெசியாவின் உயிர்ப்பினால், அவருடைய காலம் உள்ளபடியே வந்துவிட்டது; எனவே. வாக்குறுதி அளிக்கப்பட்ட மெசியாவின் ஆசிகள் கிடைத்து விட்டன. வருங்கால ஆசிகளை முன்னர் உருவகமாய் மட்டும் உணர்த்திய சொற்களும் சைகைகளும் இனி அவைகளை நிகழ்காலத்திய ஆசிகளாக நடைமுறைப்படுத்தக்கூடும்.

ஆகவே, நற்கருணையில் வழங்கப்படும் உடலும் இரத்தமும், நிறைவு கண்டுவிட்ட, ஒரு நிகழ்ச்சியின் உருவக நினைவுச் சின்னங்கள் மட்டுமல்ல; அவை, கிறிஸ்து வாழ்ந்து கொண்டிருக்கும் இறுதிக்கால உலகத்தின் முழுப்பொருளுமாகும். திருவருட்சாதன அமைப்பு அனைத்தின் மையமாக இருப்பது, நற்கருணை. பழைய உலகிலேயே இன்னும் மூழ்கிக்கிடக்கும் விசுவாசியை திருவருட்சாதன அமைப்பு அனைத்தையும்

போல், நற்கருணையும் கிறிஸ்துவோடு உடல்சார்ந்த வகையில் இணைக்கிறது; இக் கிறிஸ்து புதிய, உயிர்த்தெழுந்த, ஆவி நிலையில் (யோவா 6:63) கொண்டுள்ள தமது இருப்பின் முழுநிறைவோடு உள்ளவர். நற்கருணையில் கையாளப்படுகின்ற உணவுப் பொருட்கள் தங்கள் இருப்பில் மாற்றமடைந்து, உண்மையான 'விண்ணோரின் உணவு' ஆகின்றன (சங் 78:25;, ஞான 16:2). இதுவே புது யுகத்தின் உணவு. இந்த உணவு பொருட்கள் பலிபீடத்தின் மீது பிரசன்னமாய் இருப்பதைக் கொண்டு, மரித்து உயிர்த்த கிறிஸ்து பலிக்குரிய தமது நித்திய மனநிலையில் மெய்யாகவே பிரசன்னமாயிருக்கிறார். இதனால்தான், திருபலி என்பது ஒரு பலியாகும்; இப்பலியும், வரலாற்றில் சிலுவைமீது நிறைவேறிய பலியும் ஒன்றே; இத்தகைய பலியில் கிறிஸ்து தமது அன்பு அனைத்தையும் கொண்டு காணிக்கையாகின்றார்; கிறிஸ்துவே திருப்பலியை ஏற்படுத்தியவர். வரலாற்றுப் பலியிலிருந்து திருப்பலி, தான் நிகழுகின்ற காலம், இடம் எனும் இன்றியமையக் கூடிய சூழ்நிலைகளால் மட்டுமே வேறுபடுகின்றது. உலகம் முடியும் மட்டும், எல்லா இடங்களிலும் திருப்பலியைக் கொண்டு திருச்சபை மக்களின் புகழ்ச்சிப்பலிகளையும் காணிக்கைகளையும், புகழ்ச்சியும் காணிக்கையும் நிறைவுபெற்ற கிறிஸ்தவின் பலியோடு ஒன்றாகச் சேர்த்து இணைக்கிறது. சுருங்கக் கூறின் , இதுதான் 'நற்கருணை'; இது மட்டுமே இறைவன் திருமுன் ஏற்புடையதாகும்; இது மட்டுமே மக்களின் புகழ்ச்சிப் பலிகளுக்கும் காணிக்கைகளுக்கும் மதிப்பு அளிப்பதாகும் (எபி 13:10.15).

ஆண்டவரின் ஊழியன் (SERVANT OF GOD)

'இறை ஊழியன்' என்ற பெயர் விவிலியத்தில் ஒரு பெருமைமிகு பட்டமாகும். ''யாவேயின் ஊழியன்'' என்ற சொல் விவிலியத்தில் எங்கும் காணப்படவில்லை. ஆனால் தம் திருத் திட்டத்தில் உடனுழைக்க தாம் அன்புடன் தேர்ந்து கொண்டவரை எல்லாம், ''என் ஊழியன்'', என்று யாவே அழைக்கின்றார்.

தமது திட்டத்தை முற்றிலும் நிறைவேற்ற அவர் தம் ஒரே மைந்தனை உலகிற்கு அனுப்பி வைக்கிறார். அவரே தொண்டர் குலத் திலகமாக விளங்கும் ''இறைவனின் ஊழியர்'' ஆவார். இப்பெயர் மீட்புப் பணியின் ஒரு புதிரான பண்பினை எடுத்துக் கூறுகிறது: கடவுளுக்குத் தொண்டு புரிய மறுத்த மனிதரின் பாவத்தைத் தமது உயிர்ப் பலியின்மூலம் நீக்கித் தூய்மை செய்து, அவர்களையெல்லாம் ஒரே இறைத்தொண்டினில் கிறிஸ்து இணைக்கின்றார்.

I இறைத் தொண்டர்களும் உடன்படிக்கையின் மக்களும்.

இறைத் தொண்டர்கள் என்ற பட்டம், தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களுக்குப் பணிபுரியச் சென்றோர்க்கெல்லாம் வழங்கப்பட்டது. உடன்படிக்கையின் இணைப்பாளராகிய மோசே அடிக்கடி இப்பெயரால் குறிக்கப் பெறுகிறார் (யாத் 14:31; எண் 12:7; உப 34:5; 1 அர 8:56), அடுத்து, அரச மெசியாவை முன்னுணர்த்தும் அடையாளமாக விளங்கிய தாவீதுக்கும் (2 சாமு 7:8; 1 அர 8:24 தொ; சங் 78:70; எரே 33:26), இப்பெயர் சூட்டப்பட்டது. மூதாதையாகிய ஆபிரகாம் (ஆதி 26:24), ஈசாக்கு (ஆதி 24:14), யாக்கோபு (யாத் 32:13; எசக் 37:25), யோசுவா (யோசு 24:29) ஆகியோருக்கும் இப்பெயர் வழங்கப்பட்டது. உடன்படிக்கையின் நியதிகளைச் செயலாக்கும் பொறுப்பைப் பெற்ற இறைவாக்கினர்க்கும் இப்பெயர் உரியதாயிற்று (எ.கா.எலியா,1 அர 18:36; ''என் ஊழியர்களாகிய இறைவாக்கினர்'': ஆமோ 3:7; எரே 7:25; 2 அர 17:23). குருகுலமான இஸ்ராயேல் மக்களின் பெயரால் திருவழிபாட்டுச் சடங்குகள் நிறைவேற்றி வைக்கும் குருக்களும் இப்பெயரால் அழைக்கப்பட்டனர் (சங் 134:1; காண் யாத் 19:5 தொ). இறைவனின் தொண்டில் என்றுமே வழுவாதிருக்கும் வானதூதர்களைப் போல (சங் 103:20 தொ), மக்களையும் வழுவாது இறைவனுக்குத் தொண்டு செய்யும் தொண்டர் குலமாக மாற்றுவதே இறைவன் தேர்ந்தெடுத்த இத்தனை ''இறை ஊழி

யரின்'' ஒரே கடமையாகும் (சங் 105:6 தொ. 26:45).

II. கடமை தவறிய ஊழியரும் கடமை தவறாத ஊழியரும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தொடக்கத் திலிருந்தே இறைவனின் ஊழியர்களாய் இருக்கும் அழைப்பிற்கு உண்மையுள்ளவர்க ளாய் நடந்து கொள்ளவில்லை; அத்துடன் அவர்களை நல்லவழியில் திருப்ப அவர்களி டம் அனுப்பப்பட்ட ஊழியர்களுக்கும் பணிய மறுத்தனர் (உப 9:24; எரே 7:25). ஆதலால் புறமதத்து அரசனாகிய நெபுக்கது னேசார் மூலம் அவர்கள் நாடு கடத்தப்பட் டுத் தண்டனைக்கு உள்ளாயினர். இதன்மூ லம் நெபுக்கதுனேசாரும் இறையூழியன் ஆகி றார். ஆனால், ''பாவியின் சாவை விரும் பாது, அவனது வாழ்வையே விரும்பும்'' இறைவன், தமக்கென்று கடமை வழுவாத எஞ்சிய சிலரைத் தேர்ந்து கொள்கிறார். அவர்கள் புதிய தாவீதாகிய இறை ஊழிய னின் ஆட்சியில் வாக்குறுதி வழுவாது வாழ் வார்கள் (எச 34:23 தொ; 37:24 தொ.). எஞ்சிய இச்சிறு தொகுதி மக்களுக்கே ஏசயா வின் ஆறுதல் செய்தி கூறப்பட்டது (ஏச 40-50).

1. கடமை தவிறய ஊழியன்:- ஆறுதல் நூலினை எழுதிய இறைவாக்கினர், 'இஸ்ரா யேல்-இறைவனின் ஊழியன்' என்பதை விரித்துரைத்து, அதனைச் 'சீயோன்-இறைவனின் துணைவி' என்பதோடு தொடர்புபடுத்திக் காட்டுகிறார். இத்து ணைவி இறைவனால் கைவிடப்பட்டதற்கு, அவளுடைய மக்கள் வாய்மையிலிருந்து வழுவியதே காரணம் ஆகும் (ஏச 50:1). இஸ்ராயேல், கருவிலிருந்தே பணிய மறுக்கி றான் (48:8); தன் சொந்தத் தவற்றினாலேயே சோம்பேறி ஊழியனாகவும் செவிடனாக வும் குருடனாகவும் இருக்கிறான் (42:18 தொ. 24; 43:8-22 தொ; 30:9 தொ). இத்தகைய ஊழியனை மறந்துவிடாமல் அவனை இறை வன் மன்னிக்கிறார் (44:21 தொ), மீட்க விரும்புகிறார் (41:8 தொ). இதற்குப் புறச் சமயத்தைச் சேர்ந்த சைரஸ் மன்னனைப் பயன்படுத்துகிறார். ஏனெனில் அவனும் அவர் அமர்த்திய ஆயனே; அவரிடம் அபி டேகம் பெற்றவனே; அவருடைய நண்பனே (44:28; 45:1; 48:14). இவ்வாறு மீட்பளிக்கும் மன்னனே 42:1-7-இல் புகழப்பட்ட ஊழிய னாகத் தோன்றுகிறான். ஆனால் சூழ்நிலை யைக் கவனத்தில் கொள்ளாமல் மேலோட்ட மாக இப்பாடலைப் படிக்கும்போது, இது, 'ஊழியன் இஸ்ராயேலை'ப் பற்றியதாகத் தான் தோன்றுகிறது. இறைவனுடைய அழைப்பு, தூது, பலி என்பனபற்றி இன் னும் மூன்று பாடல்கள் எடுத்துரைக்கின்றன (49:1-6; 50:4-9; 52:13-53:12). இத்தகைய பொருள் விளக்கம் எழுபது நூல் கிரேக்க மொழி பெயர்ப்பில் காணப்படுகிறது. பிறகு இது நற்செய்தியாளர் மத்தேயுவினால் எடுத் தாளப்படுகிறது (மத் 12:18-21). இது எப்படி யாயினும், சைரஸ் மன்னன் செய்த செயல்க ளின் காரணமாகத்தான், உண்மை வழுவிய ஊழியனாகிய இஸ்ராயேல் விடுதலைய டைந்து, புறமதத்தினருக்கு முன்னர் அவர்க ளின் ஊமைச்சிலைகள், தன் கடவுளும் மீட் பருமான யாவேயின் முன் ஆற்றலற்றவைக ளாக இருக்கின்ற தன்மைக்குச் சான்றாக விளங்கியது (40:10 தொ. 45).

2. உண்மையுள்ள ஊழியன்:- தானே விரும்பிச் செயலாற்றாது, பிறரது உந்துத லால் செயலாற்றும் மந்தமான ஊழியனை, செயலூக்கம் கொண்ட பிரமாணிக்கமுள்ள ஊழியனாக மாற்றவும், அவர் மூலம் மீட் பின் ஒளியைப் பிற நாடுகளுக்குக் கொண்டு வரவும் இறைவன் விரும்புகிறார். ஆறுதல் நூலின் இரண்டாவது பகுதியில் (ஏச 49-55), இறைவன் ''எனது ஊழியன்'' என்றழைக் கும் புதிர் மிகுந்த இறைவாக்கினர் ஒருவரின் உருவத்தோற்றம் மேம்பட்டு நிற்கிறது (49:3-6; 52:13). அவர் பெயரைக் கொண்ட வர்களும், அவர்களில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவருமான யாக்கோபை அவ ருடைய மக்களிடமிருந்து எவ்வாறு பிரிக்க இயலாதோ, அவ்வாறே எரேமியாவின் தன்

மைகளைக் கொண்ட இந்த ஊழியனையும் (49:1; 50:7; 53:7; காண் எரே 1:5; 15:20; 11:19), அவர் பெயர் கொண்டிருக்கும் இந்த இஸ்ராயேல் இனத்திலிருந்து, இறைவன் மகிமையடையும் இந்த எஞ்சியோரிடமிருந்தும் பிரிப்பது இயலாத செயலாகும். இருப்பினும் இஸ்ராயேல் பெற்ற அருட்கட்டளையினையே இவர் பெற்றிருப்பதாலும் (49:5 தொ), இஸ்ராயேலுக்கு அதை வலியுறுத்தி உணரச் செய்வதாலும் (50:4-10), இவ்வூழியரை இஸ்ராயேலிலிருந்து வேறுபடுத்திக் காட்டலாம். அவருடைய பொறுமை (50:6), தாழ்மை (53:7) என்பன, அவருடைய வாழ்வைப் பலியாக ஒப்புக்கொடுக்கவும், தாம் படும் பாடுகளின் மூலம் அனைத்து நாடுகளிலுமுள்ள பாவிகளை நெறிப்படுத்தவும் (53:8-11 தொ), இறைவனின் திட்டத்தை (53:4 தொ. 10) நிறைவேற்றவும் ஆற்றல் தருகின்றன. அவருடைய பலியின் மூலம் சீயோன் ஆறுதல் பெறுகிறது. குழந்தைப் பேறு இல்லாத மலட்டு மனைவி மறுபடியும் ஒரு நித்திய உடன்படிக்கையின் மூலம் இறைவனுடன் இணைந்து இறைத் தொண்டர் அனைவர்க்கும் தாயாகிறாள் (ஏச 54:1-55:4).

இறைவனின் ஊழியன் தன் பாடுகளினால் சாதிக்கவிருந்த மீட்பு அகில உலகுக்கும் பொதுவானது என்பதை அடிமைத் தளையிலிருந்து மீண்டு, தாயகம் திரும்பிய இஸ்ராயேல் மறந்துவிட்டது என்று நினைக்கத் தோன்றுகிறது. இந்தச் சமயத்தில் ஒரு புதிய இறைவாக்கினர் தோன்றுகிறார்; அவர் நாடு கடத்தப்பட்ட அடிமை மக்களுக்குப் புதிய எருசலேமின் மாட்சியினை வியந்துரைக்கிறார். பிறகு 'ஊழியன்' என்ற இந்தப் பட்டம் இறைவனால் செருபாபேலுக்குத் தரப்படுகிறது (ஆகா 2:23). அவர் தாவீதின் வழியில் ஆண்டவர் எழுப்பும் நீதியின் ''தளிர்'' ஆவார் (செக் 3:8; காண் எரே 3:5). இறைவனின் ஊழியர்களைப் பொறுத்த அளவில், அவர்கள் எதிர்பார்க்கும் பேரின்பம் கைகூடும்போது (ஏச 65:13 தொ. 17 தொ.) அவர்களின் துயரங்கள் எல்லாம் முற்றிலும் அகலும். ஆனால் முன்போல தகனப் பலிகளின் விளைவாக அவ்வின்பம் இனிமேல் இருக்காது. மாறாக இறைஊழியன் பாவிகளுக்காகத் தன்னையே பலியாக்கும் தியாகத்தின் விளைவாக இருக்கும் (காண் 53:10 தொ.).

III யாவேயின் துன்புறும் ஊழியன்:-

1. ஏசயாவின் பாடல்கள்:- ஏச 42:1-4; 49:1-6; 50:4-9; 52:13-53: 12 ஆகிய பகுதிகள் யாவேயின் ஊழியன் பற்றிய பாடல்கள் என்றழைக்கப்படும்; இவற்றைத் தம் என்ற செர்மன் அறிஞர் முதலில் பிரித்துக் காட்டினார். இப்பாடல்களில் 2-ஆம் ஏசயாவின் போதகம் உச்சநிலை அடைகிறது. இங்கு இப்பாடல்களின் பகுப்பாய்வும், அவைபற்றிய இலக்கியச் சிக்கல்கள், இந்த ஊழியர் யார் என்பனவற்றையும் இனிக் காண்போம்.

முதல் பாடலில் (42:1-4) இறைவனே பேசுகிறார். தாமே தேர்ந்தெடுத்து ''உள்ளம் பூரிக்கும்'' ஊழியனை அறிமுகப்படுத்துகிறார். இது நீதிபதிகளை இறைவன் அழைத்ததற்கு இணையாக உள்ளது. இறை ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு மக்களினங்களுக்கு நீதி வழங்குவது, உண்மையான சமயத்தை அளிப்பது, ஊழியனது அலுவலாகும். இதை எப்படிச் செய்யப் போகிறார்? நீதிபதிகள் போலவோ, வெற்றி வீரன் சைரசைப் போல படையெடுப்புகளாலோ அன்று. இங்கே போர்க்கோலமோ இரச்சலோ இல்லை. முற்றிலும் மாறுபட்ட விதத்தில் ஊழியன் தோன்றுகிறார். அமைதியாகவும் வன்முறை இல்லாமலும், இரக்கமிக்க, ஊக்கமூட்டும் தம் பணியைச் செய்கிறார். ''நெறிந்த நாணலை முறியார், புகையும் திரியை அணையார்''. உண்மையுள்ளவராய் உலகில் அறத்தை நிலைநாட்டும் வரை, அவர் மனந்தளர மாட்டார், ஊக்கம் குறைய மாட்டார். அவருடைய வருகைக்காகவும் சட்டத்திற்காகவும் நாடுகளும் தீவுகளும் காத்திருக்கும். அவர் உலகம் முழுவதிலும் நீதியை நிறுவுவார். சைரஸ் பெரும் புயல்போன்று உலக வர

லாற்றில் புகுந்தார். அவருக்குப்பின் இந்த ஊழியன் அமைதியோடு புகுகிறார். அதை ஒருவரும் காணவில்லை. ஆயினும் வரலாற்றில் பெரும் மாற்றங்களைச் செய்யப்போகிறவர் அவர்தான்.

இரண்டாவது பாடல் (49:1-6) ஊழியனுக்கும் இறைவனுக்கும் நடக்கும் உரையாடலாக அமைந்துள்ளது. ஊழியன் நாடுகளுக்குத் தன் அழைப்பைப்பற்றி எடுத்துக் கூறுவதோடு தொடங்குகிறது. அவர் உண்மையிலேயே யாவேயின் சித்தத்திற்குப் பணிந்திருக்கும் ஊழியன். அவர் தனது தூதைத் தேர்ந்தெடுக்கவில்லை; அது அவருக்கு அளிக்கப்படுகிறது. அதற்குப் பணிவதே அவரது கடமை. கருப்பையில் இருக்கும் போதே அவருக்கு ஆண்டவர் பெயரிட்டார். ''கூரிய வாளாகவும், தீட்டிய அம்பாகவும்'' இறை வார்த்தையை ஆண்டவர் அவருக்குக் கருவியாக அளித்தார். குறித்த காலம் வரை அவரைத் ''தமது அம்பறாத் தூணியில் ஒளித்து வைத்தார்''. ஊழியனைப் பார்த்து, ஆண்டவர் ''இஸ்ராயேலே, நீ நம் ஊழியன், உன்னில் நாம் மகிமை அடைவோம்'' என்று கூறுகிறார். ஆண்டவரே தன்னை அழைத்திருந்தாலும், தனது வாழ்வில் பொருளில்லை; அது பயனற்ற, வீணான வாழ்வாகும் என்று ஊழியன் முறையிடுகிறார்; ஆயினும் தமது வாழ்வின் விளைவுகளை இறைவன் பொறுப்பில் விட்டு விடுவதில் நிறைவடைகிறார். இந்த வலிமையற்ற மனிதனின் வல்லமை இறைவனே. இந்த மனிதன் வழியாக, இறைவன் இஸ்ராயேலை ஒன்று கூட்டுவார்; யாக்கோபின் மனத் திரும்புதலை நிறைவேற்றுவார். இதைவிட மிகப் பெரிய அலுவலை ஊழியனுக்கு வைத்திருப்பதாகக் கூறி இறைவன் அவரைப் பலப்படுத்துகிறார்; ஊக்குவிக்கிறார். அவரது உழைப்பு உலகிற்கெல்லாம் உரியதாகும். ''உலகின் எல்லைவரையில் நமது மீட்பு எட்டும்படி பிற இனத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினேன்''. இப்பாடலில் ஊழியன் இஸ்ராயேல் நாடுதான் என்று அடையாளம் காட்டப்பட்டு, அதிலிருந்து வேறுபடுத்தப்படுகிறார்.

மூன்றாவது பாடலில் (50:4-9) ஊழியனே பேசுகிறார். ''களைத்தவனை ஊக்குவிக்கவும்'', ''கற்றதை உணர்த்தவும்'' வேண்டிய நாவன்மையை இறைவன் அவருக்கு அளித்துள்ளார்; அவர் இறைவனுக்கு எப்போதும் செவிசாய்ப்பதால், ஆற்றலோடு பேசமுடிகிறது. பெரும் துன்பங்கள் ஏற்பட்டாலும் அவர் தனக்கு அளிக்கப்பட்ட அலுவலிலிருந்து சிறிதும் விலகவில்லை. அந்த அலுவல் அவருக்குப் பகைமையையே கொண்டு வந்தது. அவரது பகைவர்கள் அவரை அடித்துத் துன்புறுத்தினர்; காறி உமிழ்ந்தனர்; எள்ளி நகையாடினர்; தாடியைப் பிய்த்தனர்; அவரை இறைப் பற்றற்றவன் என்று நிந்தித்தனர். இவற்றையெல்லாம் பொறுமையோடு ஏற்றுக் கொண்டார். இறைவன் தனக்குத் துணை புரிவார்; தன்னை மெய்ப்பிப்பார் என்ற நம்பிக்கையில் தன் முகத்தைக் கருங் கல்லைப்போல் வைத்துக் கொண்டார். நீதி மன்ற உருவகத்தைப் பயன்படுத்தி, மூன்று பெரும் கேள்விகளை எழுப்புகிறார். தீர்ப்பு வழங்குகிறவரே அவருக்காக வழக்காடி எண்பிப்பதால், யாரும் அவரை வெல்ல முடியாது. அவரது எதிரிகள் அழிந்துபோவர். மனிதரிடமிருந்து வரும் மகிமை நைந்து போகும் ஆடை போன்றது. ஆண்டவரிடமிருந்து வரும் மகிமையே என்றும் நிலைத்திருக்கும்.

நான்காம் பாடலில் (52:13-53:12) தொடக்கத்திலும் முடிவிலும் இறைவன் பேசுகிறார். இடையில் மக்களும் தலைவர்களும் உரையாடலில் பங்கெடுக்கின்றனர். தொடக்கத்தில் இறைவன் தமது ஊழியனின் வெற்றியையும் உயர்வையும் அறிவிக்கிறார். ஊழியன் துன்பங்களால் விகாரம் அடைந்திருந்தால் மக்களும் அரசர்களும் வெறுப்பால் அவரைப் பார்ப்பதைக்கூடத் தவிர்த்தனர். ஆனால் அவரது வெற்றியைக் கண்டு வியப்படைவர். இந்தப் பெரிய திருப்பத்தால் திகைத்துப்போய் பேரச்சத்தால் ஆட்கொள்ளப்பட்டு யாவரும் அவர் முன் வாய்பொத்தி நிற்பர். அவர்கள் வெறுத்து ஒதுக்கிய ஒருவர் வழியாக இறைவன் தமது திட்டத்தை நிறைவேறச் செய்தது கண்டு, யாவரும் அப்போது

தங்கள் வியப்பை எடுத்துக் கூறுவர். ஏனெனில் பாலைவனச் செடிபோன்று அவரது புறத்தோற்றம் கவர்ச்சியில்லாது அருவருக்கத்தக்கதாயிருந்தது. அவர் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டார். தொழு நோயாளியிடமிருந்து தூர அகல்வதுபோல், இந்தத் துன்பமும் நோயும் நிறைந்த மனிதனிடமிருந்து மக்கள் வெறுப்போடு அகன்றனர். ஊழியன் அனுபவித்த துன்பங்கள் அவரது பாவங்களுக்குரிய தண்டனையே என்று நம்பினார்கள். ஆனால் அவரது துன்பங்கள் பகரத்தன்மையுடையன; அதாவது பதிலாகத் துய்க்கப்பட்டவை என்று இப்போது உணர்கின்றனர். அவர் அவர்களுடைய பாவங்களைச் சுமந்தார்; அவற்றிற்காகக் காயப்பட்டார். அவர்களைக் குணமாக்கத் தண்டனையை ஏற்றுக்கொண்டார். அவர்கள் யாவரும் ஆடுகள் போல் வழி தவறிப்போயினர். அவர்களது பாவங்களை ஊழியன்மீது ஆண்டவர் சுமத்தினார். ஊழியன் கொடுமையாக நடத்தப்பட்டாலும், தாழ்ச்சியோடு தாங்கிக் கொண்டார்; எதிர்க்கவில்லை; பழிக்குப்பழி கோரவில்லை. அநியாயமாய்த் தீர்ப்பிடப் பட்டார். அவரைப் பற்றி எவரும் அக்கறை கொள்ளவில்லை. பிறரது பாவங்களுக்காகக் கொல்லப்பட்டார். சொல்லிலும் செயலிலும் குற்றமற்றவராயினும் குற்றவாளிகளோடு அடக்கம் செய்யப்பட்டார்.

உரையாடலைத் தொடங்கிய இறைவனே அதை முடிக்கிறார். ஊழியனது வாழ்வின் இறைவனே செயலாற்றினார். மக்கள் விவரித்த யாவும் இறைவனது திட்டத்திற்கு ஏற்றவாறே நடந்தன. ஊழியனது துன்பங்கள் மக்களின் குற்றங்களைப் போக்கும், அவரது சொந்த வாழ்வு மகிமையோடு மீண்டும் அமைக்கப்படும். பெரியதொரு சந்ததியைப் பெற்று நீடு வாழ்வார். தனது துன்பத்தால் பலர் நீதிமான்களாக ஆக்கப்பட்டதை அறிந்து நிறைவு கொள்வார். இறந்தோரிடமிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, பெரும் சன்மானம் பெறுவார். ஏனெனில், அவர் தனது இரத்தத்தைச் சிந்தி, கொடியவர்களுள் ஒருவனாகக் கருதப்பட்டு, பலரின் பாவங்களைச் சுமந்து, பாவிகளுக்காகப் பரிந்து பேசினார்.

இப்பாடல்களில் வரும் ஊழியன் யார்? இக்கேள்விக்குப் பதில் அளிப்பதில் பலத்த வேறுபாடுகள் உள்ளன. முதல் கருத்து; இஸ்ராயேல்தான் ஊழியன். இத்தகைய நேரடியான குறிப்பு உள்ளது (49:3). இதைக் குழுப் பொருள் விளக்கம் என்போம். இப்பாடல்களில் வரும் ஊழியனைப் பற்றிய விவரிப்புகளுக்கும், ஏசயாவின் மற்றப்பகுதியில் வரும் ஊழியனாகிய இஸ்ராயேலைப் பற்றிய விவரிப்புகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை, இக்குழுப் பொருள் விளக்கத்திற்கு உறுதி அளிக்கிறது. இரண்டு பகுதிகளிலும் இறைவன் ஊழியனைத் தேர்ந்தெடுக்கிறார்; உருவாக்குகிறார்; ''தாங்குகிறார்'', தமது கையில் ஒளித்து வைக்கிறார்; ஆவியால் அவரை நிரப்புகிறார்; நாடுகளுக்கு அவரே ஒளியாக உள்ளார். அவரில் இறைவன் மகிமை பெறுகிறார். நூல் முழுவதிலும் ஊழியன் என்பவர் இஸ்ராயேல் நாட்டையே குறிக்கிறார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆகவே இப்பாடல்களிலும் ஊழியன் இஸ்ராயேலையே குறிக்கிறார் என்று நாம் கூறலாம். மேலும் அவரது தூதின் முக்கியபண்பு பகரத்தன்மையாகும்; அதாவது ஒருவருக்குப் பதிலாகச் செய்யும் அத்தூது எல்லாருக்கும் உரியது. இதை ஒரு தனி நபர், அவர் எவ்வளவு பெரியவரானாலும் செய்து முடிக்க முடியாது. ஆனால் இறைவாக்கினர் ஒரு தனிநபரைப்பற்றிய ஓவியத்தை வரைவதாகத் தோன்றுகிறது. ஆனால் நாடுகளையும் நகரங்களையும் தனி நபராக உருவகப்படுத்துதலும், குழுவுக்கு ஆள்தன்மை அளித்தலும் இந்த இறைவாக்கினரது சிறப்பாகும் (47:1-4; 54:1-8). அதே போல் இஸ்ராயேல் நாட்டிற்குக் குறிப்பிட்ட பண்புகளை அளித்து அதை ஒரு தனிநபராக இறைவாக்கினர் உருவாக்குகிறார்.

இந்தக் குழுப்பொருள் விளக்கத்திற்கு மாறாகப் பல எதிர்ப்புகள் உண்டு. பாடல்களில் வரும் தூதன் விரும்பித் துன்பப்படுகிறார். ஆனால் இஸ்ராயேலாகிய ஊழியன் விருப்பமின்றித் துன்புறுகிறார். பாடலின் ஊழியன் 'இஸ்ராயேலுக்கே தூது செய்கிறார்; இஸ்ராயேலிலிருந்து வேறுபடுத்தப்ப

டுகிறார் (49:5-6). மேலும் நாம் வரலாற்றில் அறிவதிலிருந்து இஸ்ராயேல் பிறநாடுக ளுக்கு ஒளியாக விளங்கவில்லை. அதன் துன்பங்கள், மனுக்குலத்தின் மனந்திரும்புத லையும், மீட்பையும் விளைவிக்கவில்லை. ஆகவே பாடல்களில் வரும் ஊழியன் இஸ் ராயேல் மக்களினமே என்ற குழுப் பொருள் விளக்கத்தைப் பலர் மறுப்பர்.

பாடலில் வரும் ஊழியன், இஸ்ராயே லின் வரலாற்றில் வரும் சில ஆட்கள்தான் என்று அடையாளம் காட்டச் சில ஆய்வாளர் கள் முயன்றுள்ளனர், நாடுகளுக்கெல்லாம் ஆசீர் கொண்டு வரும் ஆபிரகாம் (46:6 பின்; 49:6), உடன்படிக்கை அமைத்துக் கொடுத்த மோசே (42:6), ஊஸ்ஸா, எசக்கியா, யோசியா போன்ற அரசர்கள், முதலாம் ஏசயா, துன்புற்று மன்றாடும் ஊழியனான எரேமியா, 2-ஆம் ஏசயா போன்ற இறைவாக் கினர்கள் ஆகியோரில் ஊழியனை அடையா ளம் காண முயன்றுள்ளனர்.

ஆனால் இப்பாடல்கள் கடந்த காலத் தையோ நிகழ் காலத்தையோ சேர்ந்த எந்த வரலாற்றுத் தனி நபரையும் சுட்டிக் காட்டுவ தாகத் தோன்றவில்லை. ஏனெனில் நமக்குத் தெரிந்த எந்த ஒரு தனிநபரும், பாடல்களின் ஊழியன் செய்ததாகக் கூறப்படுபவைகளைச் செய்திருக்க முடியாது, செய்யவும் முடி யாது. மாறாக எடுத்துக் காட்டான ஓர் இஸ்ராயேலையே இப்பாடல்கள் சுட்டுகின் றன. இவர் யாவேயை உண்மையாக வணங்கி அவருக்குத் தன்னை முழுவதும் அர்ப்பணித்தவர். இஸ்ராயேலுக்கு மீட்பரா கத் திகழ்கிறார்; அதே சமயம் மக்கள் அனை வருக்கும் மீட்பைக் கொண்டு வருகிறார். இந்த ஊழியன் தன்னிலேயே பலருடைய ஆள்தன்மையையும் பணியையும் கொண் டுள்ளார்.

இப்பாடல்களுக்கு விளக்கம் அளிக்கும் போது இரண்டு கருத்துக்களை நாம் மனத் தில் கொள்வது நன்று. 1) குழுப்பொருள் விளக்கம், தனி நபர் விளக்கம் ஆகிய இரண் டில் ஏதாவது ஒன்றைத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. இரண்டு முறைகளிலும் விளக்கம் அளிக்கலாம். ஒன் றிலிருந்து மற்றதற்கு விரைவாக மாறுவ தற்கு எபிரேய சிந்தனை இடம் அளிக்கிறது. இந்த மாற்றம் எளிதாகவும் இயல்பாகவும் நடைபெறும். இறைவாக்கினரது எண்ணப் போக்கு இரண்டு உருவக முறைகளுக்கிடை யிலும் ஊசலாடுகிறது. இப்போது ஒரு முறையையும், பின்பு மற்ற முறையையும் இறைவாக்கினர் சிறப்பித்துக் கூறுவார். 2) இந்த நான்கு பாடல்களுக்கும் ஒரே பொரு ளில் விளக்கம் அளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. இறைவாக்கினரது சிந்தனை முக் காலங்களையும் கடந்து நிற்கிறது. மேலும் அது குழுவுக்கும் தனிநபருக்கும் இடையில் ஊசலாடுகிறது. இவை ஊழியன் தூது பற் றிய இறைவாக்கினரின் கருத்தில் ஒரு வளர்ச் சியாக இருந்திருக்க வேண்டும் என்றும் குழுவிற்கு ஆட்தன்மை கொடுக்கத் தொடங் கிய முயற்சி தனிநபரில் முடிந்தது என்றும் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு முதல்பா டல் ஐயமின்றி குழுப்பொருளைக் கொண் டுள்ளது. அதிலிருந்து 2-வது பாடலில் பிர மாணிக்கமுள்ள ''எஞ்சியோர்க்கு'' சிந் தனை மாறுகிறது. மூன்றாவது பாடலுக்குக் குழுப்பொருளிலும், தனிநபர் பொருளிலும் விளக்கம் அளிக்கலாம். 4-வது பாடல் ஐய மின்றி தனிநபர் பொருளைக் கொண்டுள் ளது. இந்தக் கருத்து வளர்ச்சி எது வலியுறுத் தப்படுகிறது என்பதைப் பொறுத்தது. ஏனெ னில் பலவாசகங்கள் ஐயமற இஸ்ராயே லைக் குறிக்கின்றன (49:3-5). ஆகையால் குழுப்பொருளை நாம் புறக்கணிக்க முடி யாது. ஆனால் ஆண்டவரின் ஊழியனைப் பற்றி இறைவாக்கினரின் காட்சி பலரை உள்ளடக்கும் ஒருவரைப் பற்றியதாகும். இந்த ஒருவர் தனது மூதாதையரோடு முழுவ தும் ஒன்றித்தவராகவும், அதே சமயம் அவர் களிடமிருந்து வேறுபட்டவராகவும் இருக்கி றார். இந்த ஒருவர் இஸ்ராயேலாகவும் அதில் எஞ்சியவராகவும் இருக்கிறார்.

கிறிஸ்துவப் பாரம்பரியம், ஊழியனுக்கு மெசியாப் பொருளில் விளக்கம் அளித்து, இயேசுக் கிறிஸ்துவே இந்த எதிர்கால எடுத்

துக்காட்டானவர் என்று அடையாளம் காண்கிறது. இதற்கு இயேசுவே வழிகாட்டுகிறார். இதைப் பின்பு பார்ப்போம். கிறிஸ்துவுக்கு முந்திய யூத ராபிகள் இப்பாடல்களுக்கு மெசியாப் பொருள் அளித்தனர். ஆனால் கிறிஸ்துவச் சமூகம் இப்பாடல்களை இயேசுவைப் பற்றியதாக விளக்கம் கூறத் தொடங்கியபின், யூத விளக்கவுரையாளர்கள் தங்கள் கருத்தை மாற்றி, இந்த ஊழியன் யூத நாட்டைக் குறிப்பதாகக் குழுப்பொருளில் விளக்கம் அளித்தனர். நான்காவது பாடல் இறைவனது எதிரியை விவரிப்பதாகக்கூட விளக்கம் அளித்தனர்.

2. நிறைவேறுதலும் புதிய ஏற்பாட்டு விளக்கமும்:- பாபிலோனின்வீழ்ச்சி, பாரசீகத்தின் எழுச்சி ஆகிய நிகழ்ச்சிகளுக்குப் பின் வந்த காலத்தில் 2-ஆம் எசயா முன்னறிவித்தவை எந்த அளவுக்கு நிறைவேறின? இறைவாக்கினர் ஆண்டவரின் வருகையையும் அவரது அரசு நிறுவப்படுவதையும் எதிர்பார்த்தார். சைரசிடம் பாபிலோன் வீழ்ச்சி அடையும்; நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலர்கள் விடுவிக்கப்பட்டுத் தாயகம் திரும்புவர். விடுதலை பெற்றவர்களை பாபிலோனிலிருந்து பாலஸ்தீனத்திற்குப் பாலை வழியாகத் தயாரிக்கப்பட்ட நேரடிப் பாதையில் இறைவனே இட்டுச் செல்வார். பள்ளத்தாக்குகள் மேவப்படும்; குன்றுகள் மட்டமாக்கப்படும். பாதைகள் செம்மையாக்கப்படும். பாலையில் ஆறுகள் ஓடும்; மரங்கள் வளரும். இந்தப் புதிய யாத்திரைக்காக இயற்கையே மாற்றி அமைக்கப்படும். ஆண்டவரது மகிமையையும் அவருடைய ஊழியனது நற்காலத்தையும் கண்ட பிற நாடுகள் மனந்திரும்பும். ஒரே உண்மையான இறைவனாகிய யாவேயை ஏற்று வழிபடும். இறைவாக்கினரது முன்னறிவிப்பின் சுருக்கம் இதுதான்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன? பாபிலோன் வீழ்ந்தது. ஆனால் சைரஸ் தனது வெற்றியை மார்டக் கடவுள் தந்ததாகக் கூறினார். இந்த வெற்றியை ''விண்ணக இறைவனாகிய ஆண்டவர்'' அளித்ததாக எஸ்ரா திருநூல் கூறுகிறது (எஸ் 1:2). சைரஸ் ஏற்றுக் கொண்ட மேலாண்மையுடைய இறைவன் இஸ்ராயேலின் இறைவனாக இருந்தால்தான் இருகூற்றுகளும் ஒத்துப்போகும். நாடு கடத்தப்பட்ட யூதர்கள் அவர்களது தாயகம் செல்ல சைரஸ் அனுமதித்தார். ஆனால் அவர்கள் செய்த பயணத்துக்கும் இறைவாக்கினரது உணர்ச்சிமிக்க பாடல்களில் விவரிக்கப்படும் பயணத்திற்கும் இணைவுத் தன்மையே இல்லை. உண்மையில் நடந்த பயணத்தில் ஆண்டவர் வெளிப்படையாகத் தோன்றிச் செயலாற்றவில்லை. பாலைவழி செம்மைப்படுத்தப்பட்ட பெரும் பாதையாக அமையவில்லை. இயற்கை மாற்றப்படவில்லை. விடுதலை பெற்ற அகதிகள் பெருங் கூட்டமாகத் திரும்பவில்லை. பல்வேறு சிறு குழுக்களாகத் திரும்பினர். அவ்வாறு திரும்பி வருவதற்குப் பல ஆண்டுகள் ஆகின. திரும்பியவர்கள் பல இன்னல்களைச் சந்தித்தனர். வறட்சி, மோசமான அறுவடை, ஏழ்மை, சுற்றியிருந்த மக்களின் எதிர்ப்பு, யூத மக்களிடையே நிலவிய அவநம்பிக்கை, ஐயப்பாடு ஆகிய துன்பங்களை அனுபவித்தனர். ஆலயம், எருசலேம் நகர்ச் சுவர்கள் ஆகியவை கட்டப்படுவதற்கும் தடைகள் எழுந்தன; ஆகவே அவற்றைத் தள்ளிப் போட்டனர். இறையரசு நிறுவப்படவில்லை; பூமி செழிப்படையவில்லை; பிறமக்கள் மனந்திரும்பவில்லை. இவ்வாறு 2-ஆம் எசயாவுக்குப் பின் வந்த காலத்தில் அவரது பெரும் முன்னறிவிப்புகள் நிறைவேறவில்லை. தமது மக்களின் விடுதலைக்காக இறைவன் உறுதியாகத் தலையிடுவார் என்ற அறிவிப்பு, காலம் கடத்தப்பட்ட, வருங்காலத்திற்குரிய நம்பிக்கையாயிற்று. இறைவாக்கினரின் உன்னத காட்சியில் காலம் கடந்த முறையில் காணப்பட்ட நிகழ்ச்சிகள், உலக வரலாற்றில் நீண்ட கால இடைவெளிகள.ால் பிரிக்கப்பட்டன.

2-ஆம் எசயா முன்னறிவித்த மீட்பரான இறைவனின் வருகை புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்படுகிறது. இந்நூலின் இறைவாக்குகள் இயேசுவிலும் அவரது சீடர்களிலும் வியத்தகு முறையில் நிறைவேறுவதாகப் புதிய ஏற்பாடு தெளிவாகக் குறிக்கிறது.

கத்தோலிக்க ஆய்வாளர்களும், பல கத்தோலிக்கரல்லாத ஆய்வாளர்களும் இந்நூலில் வரும் ஊழியன் நேரடியாகவோ எடுத்துக்காட்டாகவோ வருங்கால மெசியாவைச் சுட்டுவதாகக் கருத்தொற்றுமை கொண்டுள்ளனர். இக்கருத்துக்கு, கிறிஸ்துவுக்கு முந்திய யூதப் பாரம்பரியங்களும், திருச்சபைத் தந்தையரின் கருத்தொற்றுமை மிக்க ஒரே சீரான பாரம்பரியங்களும் பெரும் ஆதரவு அளிக்கின்றன.

இயேசுக் கிறிஸ்துவின் பணிபற்றிய நற்செய்தி விவரிப்புகள் யாவும் 2-ஆம் ஏசயாவிலிருந்து மேற்கோள் காட்டித் தொடங்குகின்றன (மத் 3:3; மாற் 1:2; லூக் 3:4-6; யோவா 1:23; ஏச 40:3). பாலைவனத்தில் ஒலிக்கும் கூக்குரலாகிய திருமுழுக்கு அருளப்பர், ஆண்டவரின் வருகைக்காகப் பாதையைத் தயாரித்தார். மக்களின் விடுதலைக்காக இறைவன் ஆற்றும் உறுதியான தலையீடு, கிறிஸ்துவின் பணி, இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றில் நிறைவேறுகிறது. இயேசுவின் திருமுழுக்கின் போது, ''நீரே! என் அன்பார்ந்த மகன்: உம்மிடம் பூரிப்பு அடைகிறேன்'' (மாற் 1:11; ஏச 42:1) என்ற குரலில் ஆவியானவர் இறங்கி வருதல் நிறைவேறுகிறது. இயேசுதான், ஆவியால் நிரப்பப்பட்ட ஆண்டவரின் ஊழியன். அவர் தமது குணமாக்கும் பணியில் ''நம் பிணிகளை ஏற்றுக் கொண்டார்; நம் நோய்களைச் சுமந்து கொண்டார்'' (மத் 8:17; ஏச 53:4). இவர்தான் பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும்'' (மாற் 10:45) ''உடன்படிக்கைக்கெனப் பலருக்காகத் தம் இரத்தத்தைச் சிந்தவும் '' (மாற் 14:24) வந்தார். இக்கூற்றுகளில் வரும் ''பலர்'' என்ற சொல் ஊழியனைப் பற்றிய 4-ஆம் பாடலைச் சுட்டுகிறது. இப்பாடலுக்கு ஏற்றவாறுதான் இயேசு தமது பாடுகள், சிலுவை மரணம் ஆகியவற்றுக்கு விளக்கம் அளித்தார்.

இந்த நான்கு பாடல்களில் வரும் சிந்தனைப் போக்கு, இயேசுவின் பணி, மரணம், உயிர்ப்பு ஆகியவற்றில், எடுத்துக்காட்டப்படுகிறது. முதல் பாடலில் வரும் சாந்தமிக்க ஊழியனைப்போல் நற்செய்தியின் போதகராய் இயேசு தமது பணியைத் தொடங்குகிறார். 2-வது பாடலில் ஊழியன் பிறநாடுகளுக்குத் தூது செல்லுமுன், இஸ்ராயேலுக்குத் தூது செல்கிறார். இயேசு ''சிதறிப்போன இஸ்ராயேல் குலத்து ஆடுகளுக்கே'' (மத் 10:6) தமது பணியை முதலில் செய்கிறார். உயிர்ப்புக்குப்பின் அவரது பணி யாவருக்கும் விரிவாக்கப்படுகிறது. அவரது சீடர்கள் ''எல்லா இனத்தாருக்கும்'' (மத் 28:19)''மண்ணுலகின் இறுதி எல்லைவரைக்கும்'' (அ.ப.1:8) அனுப்பப்படுவர். 3-ஆம் பாடலில் ஊழியனது பாடுகள் முதன்முறையாக எடுத்துக்கூறப்படுகின்றன. பிலிப்பை செசரியாவில் பேதுரு விசுவாச அறிக்கை செய்தபின், இயேசு தமது பாடுகளையும் மரணத்தையும் முன்னறிவிக்கத் தொடங்குகிறார் (மத் 16:21-23). சிலுவையின் நிழல் அவரது பணியின் பின்பகுதி முழுவதும் பரவி நிற்கிறது. 4-வது பாடலில் ஊழியனது துன்பங்கள், அவரது வெற்றியை ஒட்டி விவரிக்கப்படுகின்றன. இயேசு தமது பகரத்தன்மையுடைய துன்பங்களால் - அதாவது-பிறருக்குப் பதிலாகத் துய்க்கிற தற்பலியால், பாவம், சாவு ஆகியவற்றை வெற்றிகொள்கிறார். அவரது வெற்றி, உயிர்ப்பு, உயர்த்தப்படுதல் ஆகியவற்றில் நிலை நிறுத்தப்படுகின்றன.

இயேசுதான் இறைவனின் ஊழியன். இயேசுவின் சீடர்கள், இந்த நான்கு பாடல்களின் பின்னணியில், அவரது செயல்களுக்கு விளக்கம் அளித்தனர். அப்போஸ்தலர் பணி என்ற திருநூலில் காணப்படும் தொடக்ககாலத் திருச்சபையின் போதகம், துன்புறும் ஊழியனைப் பற்றியச் சிந்தனைப் போக்கில்தான் இயேசுவைச் சித்தரிக்கிறது (அ.ப. 3:13-26; 4:27-30). பிலிப்புவின் போதகம் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். எருசலேமிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த ஓர் எத்தியோப்பிய அமைச்சன் தன் தேரில் அமர்ந்து நான்காவது பாடலை வாசித்துக் கொண்டிருந்தான். இப்பகுதியை விளக்கிக் காட்ட அழைக்கப்பட்டபோது, ''பிலிப்பு மேற்சொன்ன மறைநூல் வாக்கை வைத்துக்

கொண்டு, இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தார்'' *(8:26-35)*. ஊழியனது அலுவலை இயேசு நிறைவேற்றினார். நிறைவான கீழ்ப்படிதலுள்ள பலியை அவர் ஒருவரே அளித்தார். மனுக்குலம் அனைத்தின் நன்மைக்காகவும் மீட்புக்காகவும் தமது பரிசுத்த வாழ்வை விரும்பிக் கையளித்தார். அவருடைய துன்பங்கள், வெற்றி ஆகியவற்றால் மனிதர் இறைவனுக்கு ஏற்புடைவர்களாகி நின்றனர்; முழுமை பெறுகின்றனர்; மனத்துக்கம் கொள்கின்றனர். அவர்களுக்காக அவர் துன்பப்பட்டார் என்று நன்றியுணர்வோடு ஏற்றுக் கொள்கின்றனர். பாடுகள்பட்டு, மகிமை அடைந்தவர் அவர்தான். அரசர்களும் அவர் முன் ''வாய்பொத்தி நிற்பர்.'' இயேசுக்கிறிஸ்து என்ற அந்த ஒரு மனிதரில்தான்'' ஊழியனது அழைப்பு நிறைவேறுகிறது.

மேலும், இஸ்ராயேலே ஊழியன். தமது மீட்பு அலுவலில் கிறிஸ்து ஒரு பிரதிநிதியாவார். தம்மிலே பலரை உள்ளடக்குகிறார். புதிய இஸ்ராயேலை நிறுவியவரான ''கிறிஸ்துவில்'' கிறிஸ்துவர்கள் உள்ளனர். அவர்கள் விண்ணகத் திராட்சையின் கிளைகளாவர்; அவரைத் தலையாகக் கொண்ட உடலின் அங்கங்கள் ஆவர். கிறிஸ்துவும் திருச்சபையும் இறைவனின் ஊழியராவர். அவரது ''துன்பங்களில் பங்கு கொண்டு தோழமை கொள்பவர்கள்'' வழியாகவும், ''திருச்சபையாகிய அவருடைய உடலின் பொருட்டு, கிறிஸ்து படவேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதை'' நிறைவு செய்பவர்கள் வழியாகவும், *(கொலோ 1:24)*, அவரது பாடுகளின் தனிச் சிறப்பான நன்மைகள் மனுக்குலம் முழுவதற்கும் அளிக்கப்படுகின்றன. மனுக்குலத்திற்கு அவர் மட்டுமே செய்யக்கூடியது (இது முடிந்துவிட்ட அலுவலாகும்). இவரைத் தலையாகக் கொண்ட உடலின் மற்ற அங்கத்தினர்களின் துன்பங்களாலும் பணியாலும் மனுக்குலத்திற்கு அளிக்கப்படுகிறது (இது முடிவு பெறாத தொடர்ந்து நடக்கும் அலுவலாகும்). ஊழியன் பற்றிய கருத்து மீண்டும் குழுவுக்கும் தனிநபருக்கும் இடையில் ஊசலாடுகிறது. பழைய ஏற்பாட்டில் குழுவிலிருந்து ஒருவருக்கும் இஸ்ராயேலிலிருந்து ''எஞ்சியவர்க்கும்'', கிறிஸ்துவுக்கும்'' செல்கிறது. புதிய ஏற்பாட்டில் ஒருவரிலிருந்து குழுவாகிய திருச்சபைக்கும் செல்கிறது. திருச்சபையின் வழியாக, உயிர்த்த உயர்த்தப்பட்ட கிறிஸ்து இப்போது, உலகிற்கெல்லாம் பணி செய்கிறார். 2-ஆம் ஏசயா முன்னோக்கி மொழிந்தது போல், இஸ்ராயேலின் தூது எல்லாருக்கும் உரியதாகும். இறைவனது ஒளி, அவரது ஊழியன் கிறிஸ்து வழியாக, இப்போது உலகெங்கும் ஒளி வீசுகிறது. அவரது மீட்பு உலகின் இறுதி எல்லை வரை எட்டுகிறது. ஆனால் இறைவாக்கினரது முன்னறிவிப்புகளும் எதிர்பார்ப்புகளும், இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. ஆண்டவராகிய கிறிஸ்து மகிமையோடும் ஆற்றலோடும் திரும்பி வரும் போதுதான் இறைவாக்கினரின் நம்பிக்கைகள் எல்லாம் நிறைவேறும். அப்போது ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள் நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும் மகிழ்ச்சியோடு, ''சீயோனுக்குத்'' திரும்புவர். ''படைப்பு அனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு இறைவனின் பிள்ளைகளுக்குரிய மகிமையையும் விடுதலையையும் பெற்றுக் கொள்ளும்'' *(உரோ 8:21)*. அப்போது இறைவாக்கினருக்கு வெளிப்படுத்தப்பட்ட இறைவனது திட்டம் நிறைவேறும். ''எல்லா முழந்தாளும் நமக்கு மண்டியிடும்; எல்லா நாவும் நம் பெயரால் ஆணையிடும் *(எச 45:24; பிலி 2:10-11)*.

IV. *உண்மை ஊழியன் மனிதரின் மீட்பர்.*

1. ஊழியனின் பணியை இயேசு தமதாக ஏற்றுக் கொள்கிறார்: அவர் இதயத்தில் சாந்தமும், மனத்தில் தாழ்ச்சியும் உள்ள தலைவர் (மத் 11:29); அவர் நற்செய்தியை ஏழைகளுக்கு அறிவிக்கிறார் (லூக் 4:18 தொ). அவர் தம் சீடர்களுக்கு நடுவில் ஊழியம் செய்பவராகத்தான் இருக்கிறார் (லூக் 22:27); ஆனால் அவரே உண்மையில் அவர்களின் ஆண்டவரும் தலைவருமாவார் (யோவா 13:12-15); இவ்வுலகில் தம்மவர்

மீது அன்புகூர்ந்த அவர், அந்த அன்பின் எல்லையைத் தமது தொண்டின் மூலமும் (13:1; 15:13) உலக மீட்புக்காகத் தமது உயிரையே கொடுத்த தியாகத்தின் மூலமும் மெய்ப்பித்தார் (மாற் 10:43 தொ ;மத் 20:26 தொ.). இதற்காகத்தான் அவர் ஒரு குற்றவாளியைப் போலக் கொடுமைக்குள்ளாகி (லூக் 22:37) சிலுவையில் இறக்கிறார் (மாற் 14:24; மத் 26:28); ஆனால் மனுமகனைப் பற்றி எழுதியுள்ளபடி, 'நான் உயிர்த்தெழுவேன்' என்ற நிச்சயம் அவருக்கிருந்தது (மாற் 8:31; 9:31; லூக் 18:3 தொ; 24:44; காண்.ஏச 53:10 தொ). அவர்தாம் மக்கள் எதிர்பார்த்த மெசியா என்பது உண்மையானால், அந்த 'மனுமகன்' தற்காலிகமான ஓர் உலகியல் அரசை நிலை நாட்ட வரவில்லை; மாறாக ஊழியனாகிய தம் இறப்பின் மூலம் தம் மகிமையில் நுழையவும், தம் மக்களையும் அம்மகிமைக்கு அழைத்துச் செல்லவுமே அவர் வருகிறார்.

2. இயேசுவின் மரணத்தின் மறைபொருளை அறிக்கையிடவும் (அ.ப. 3:13 தொ. 18; 4:27 தொ), அவரே பேறுகளின் ஊற்றாகவும், நானிலத்திற்கும் ஒளியாகவும் இருப்பதை எடுத்துரைக்கவும் (3:25 தொ; 26:23) அப்போஸ்தலர்களின் போதனைகள் இயேசுவுக்கு ஊழியன் என்ற பட்டத்தை வழங்குகின்றன. ஊழியனைப் போலவே அவரும் அநியாயமாகக் கொலையுண்ட ஒரு செம்மறி ஆவார் (8:32 தொ); அதன் மூலம் அவர் வழிதவறிய ஆடுகளையெல்லாம் மீட்டுள்ளார்; அவருடைய உடம்பில் ஏற்பட்ட காயங்கள், பாவிகளின் ஆன்மாக்களைக் குணப்படுத்தின (1 பேதுரு 2:21-25). மத்தேயுவின் கருத்துப்படி இயேசுதான் உலகிற்கு நீதியை அறிவிக்கும் ஊழியன் ஆவார். அவரது பெயரில்தான் அவர்களின் நம்பிக்கை நிலை கொண்டுள்ளது (மத் 12:18-21= ஏச 42:1-4). இறுதியாக, பவுல் ஒரு பாடலின் மூலம் கிறிஸ்துவின் மறைபொருளையும், அவரது அன்பையும் மிகச் சுருக்கமாகவும் ஆழமாகவும் எடுத்துரைக்கிறார்: அதன்படி கிறிஸ்து தமது தந்தைக்குக் கீழ்ப்படியும்பொருட்டு ஓர் அடிமையின் உருவினை எடுத்ததன் மூலமும், சிலுவையில் மரித்ததன் மூலமும் தமது மகிமையுள் நுழைந்துள்ளார் (பிலி 2:5-11). மனிதனாகிய இறைமகனின் மீட்புத்தரும் பலியைப் பற்றி இறைவாக்குகள் முன்னறிவித்தன. இதன் காரணமாகத் தான் இறைவனின் ஊழியனும், சிலுவையில் இறந்து உயிர்த்தவருமான இயேசுவின் பெயரே மீட்பின் அடிப்படையாகிறது (அ.ப. 4:14 தொ. 29 தொ).

3. இனிமேல், இறைவனின் ஊழியர்களெல்லாம் கிறிஸ்துவின் உழியர்களாவர் (உரோ 1:1; கலா 1:10; பிலி 1:1; காண் தீத் 1:1). ''இதோ ஆண்டவரின் அடிமை'' என்று கூறிய மரியாளை அவர் தமக்குத் தாயாகக் கொண்டதுபோல (லூக் 1:38. 43. 48), தமக்குத் தொண்டர்களாய் இருப்போரை எல்லாம் தம் நண்பராகவும் (யோவா 15:15), தம் தந்தையின் மைந்தராகவும் ஆக்குகிறார் (20:17). அவர்களும், தங்கள் தலைவரைப் போல, துன்ப துயரங்களின் வழியே நடக்க வேண்டும் (15:20). இவ்வுலகச் சோதனைகளில் வெற்றி காண்பதன் மூலமே, இறைவனின் ஊழியர்கள் இறையரசின் மாட்சியுள் நுழைவார்கள் (திருவெளி 7:3.14 தொ ; 22:3 தொ).

ஆண்டவரின் சகோதரர்கள் (BROTHERS OF THE LORD)

இவர்கள் பொதுவாக இயேசுவின் சகோதரர்களாகக் கருதப்பட்டவர்கள். இப்பதம் 1 கொரி 9:5-இல் வருகிறது. கலா 1:19- யாக்கோபை ''ஆண்டவரது சகோதரர்'' என்று குறிக்கிறது.

இயேசுவின் உறவினர்களைப் பற்றி பல குறிப்புக்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. மாற் 6:3-இல் ''இவர் தச்சன் அல்லரோ மரியாளின் மகன்தானே! யாக்கோபு, யோசேசு, யூதா, சீமோன் இவர்களுடைய சகோதரர்தானே! இவர் சகோதரிகளும் இங்கு நம்மோடு இல்லையா?'' என்ற கூற்று வருகிறது. இதற்கு இணையான மத் 13:55-இல் யோசேசுக்குப் பதிலாக, யோசேப்பு வருகிறது. இரண்டும் ஒரே பெய

ரின் இருவடிவங்களாகத் தெரிகிறது. இயேசு வின் சகோதரர்களைப் பற்றி மற்ற புதிய ஏற்பாட்டுக் கூற்றுகள்: மத் 12:46-50; மாற் 3:31-35; லூக் 8:4:21; யோவா 2:12; 7:3.5.10; அ.ப.1:14; 1 கொரி 9:5; கலா 1:19 ஆகிய வையாகும்.

இவ்வாசகங்களை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டவரின் சகோதரர்கள் என் பது பற்றி மூன்று கருத்துக்கள் கூறப்படும். 1. சகோதரர் என்பது உடன் பிறந்த ஆண் களை மட்டும்தான் குறிக்கும் என்ற பொரு ளில், இயேசுவுக்கு உடன் பிறந்த சகோதரர் கள் இருந்தனர். இவர்கள் யோசேப்புக்கும், மரியாளுக்கும் பிறந்தவர்கள். இக்கருத்துக்கு மாற் 6:3; மத் 13:5 பெரிதும் ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது. இக்கருத்தைக் கெல்விடியஸ் என்பவர் கொண்டிருந்தார். இவரது நூல் கிடைக்கவில்லை. ஆனால் அதிலிருந்து எடுத்துக்காட்டுக் கூறி ஏரோ னிமு அவரைக் கண்டனம் செய்கிறார். ஆனால் பிரிவினைச் சகோதரர்கள் சபைகள் இக்கருத்தை விடாப் பிடியாகக் கொண்டிருக் கின்றனர். 2. இயேசுவின் சகோதரர்கள் என்ற ழைக்கப்படுபவர்கள், மரியாளுக்குப் பிறந்த வர்கள் அல்லர். யோசேப்பின் முந்தைய திருமணத்தில் பிறந்தவர்கள் ஆவர். இவர் கள் மரியாளின் குழந்தைகளானால் இவர்கள் இயேசுவுக்கு இளையவர்களாக இருக்க வேண்டும். ஆனால், மாற் 3:31-இல் இவர் கள் இயேசுவைக் கட்டுப்படுத்த முயல்வதா கத் தெரிகிறது. யோவா 7.3-4 இவர்களை இயேசுவுக்கு முதியவர்களாகக் காட்டுகிறது. இயேசுவுக்கு உடன்பிறந்த சகோதரர்கள் இருந்திருந்தால், இயேசு தாம் மரிக்குமுன், தம்தாய் மரியாளை ஏன் தாம் அன்பு செய்த சீடரிடம் ஒப்படைக்க வேண்டும் (யோவா 19:26-27)? ஆகவே இவர்கள் இயேசுவின் சகோதரர்களாக இருக்க முடியாது. பெரியன் னையின் மக்களாக இருக்கலாம். இது எப்பி பானியஸ் என்பவரின் கருத்தாகும். இக்க ருத்து கி.பி. 3-ஆம் 4-ஆம் நூற்றாண்டுகளில் பிற்காலத்திலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. கிரேக்கத் திருச்சபையும் மற்ற கிழக் கத்திய திருச்சபைகளும் சில பிரிவினைச் சபைகளும் ஏற்றுக் கொள்ளுவார்கள். 3. ஆண்டவரின் சகோதரர்கள் என்று கூறப்படு வோர் இயேசுவின் நெருங்கிய உறவினர் களே ஒழிய, அவரது உடன் பிறந்த சகோதரர் கள் அல்லர். கலா 1:19-இல் வரும் ''ஆண்ட வரின் சகோதரரான யாக்கோபு, ''அல்பேயு வின் மகன் யாக்கோபு (மாற் 3:18), அல்லது யோசேசின் சகோதரரான ''சின்ன யாக்கோ பு'' (15:40) ஆவார். யாக்கோபும் யோசேசும் ''இயேசுவின் சகோதரர்கள் என்றடழக்கப்ப டுகின்றனர் (6:3). மரியாள் என்றழைக்கப்ப டும். அவர்களுடைய தாய் (மத் 27:56; மாற் 15:40). ''கிளோப்பாவின் மனைவியாகிய மரியாள்'' ஆவாள். இவர் இயேசுவின் தாயா கிய மரியாளின் சகோதரி ஆவாள் (யோவா 19:25). இது யாக்கோபையும் யோசேசையும் இயேசுவின் உறவினர்களாக்கும். இப்ப டியே யூதா, சீமோன் என்பவர்களுக்கும் விளக்கம் அளிக்கலாம். ஆகையால் இயேசு வுக்கு இவர்கள் உடன்பிறந்த சகோதரர்கள் அல்லர். உறவினராக, நெருங்கிய உறவின ராக இருந்திருக்கலாம். இயேசு ஒருவரே மரியாளின் ஒரே மகன். மரியாள் என்றும் கன்னியாவாள். இவ்விளக்கம் எரோனிமுவி னுடையதாகும். இக்கருத்தைக் கத்தோலிக்க திருச்சபை ஏற்றுப் போற்றி வந்துள்ளது.

இனி சகோதரர் என்பது எப்பொருட்களில் விவிலியத்தில் வருகிறதென்று சிறிது பார்ப் போம். சகோதரன் என்ற சொல் அதன் மிகக் குறுகிய பொருளில் ஒரே தாய் தந்தையருக் குப் பிறந்த ஆண்களின் உறவை எடுத்துக்கூ றப் பயன்படுகிறது. சான்று: ஆபேலும் காயின் (ஆதி 4:2. 8) அல்லது ஒரே தகப்ப னுக்குப் பிறந்த ஆண்களை (யோசேப்பு, பென்யாமீன் 35:24; 42:15) அல்லது ஒரே தாய்க்குப் பிறந்த ஆண்களை (சிமேயா, சோபாபு, நாத்தான், சாலமோன் 1 நாள் 3:5)க் குறிக்கலாம். மேலும் சகோதரன் என்ற சொல் மற்ற உறவுகளையும் குறிக்கலாம். பழைய ஏற்பாட்டில் பொதுவாக எந்த இரத்த உறவையும் (ஆபிரகாமும் அவரது தம்பி மகன் லோத்தும் சகோதரர் என்று குறிக்கப்படுகின்றனர் ஆதி 14:16), நண்ப னையும் (2 சாமு 1:26), கூட்டாளியையும்

1 அர 20:32), தோழனையும் (யோபு 30:29; பழ. 18:9) ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களையும் (எண் 8:26) மற்றொரு நாட்டைச் சேர்ந்தவனையும் (உப 23:7) குறிக்க, சகோதரன் என்ற சொல் பயன்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில், ''இறைவனது வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவர்களை'' தம் சகோதர்களாக இயேசு பாவிக்கிறார் (மத் 12:50; மாற் 3:35; லூக் 8:21). பவுல் தன் சக விசுவாசிகளைச் சகோதரர்கள் என்றழைக்கிறார் (உரோ 1:13). எபிரேயருக்குத் திருமுகம் எழுதியவரின் கருத்துப்படி, இயேசு, உடன்படிக்கையின் உறுப்பினர்களைச் சகோதரர்கள் என்றழைக்க வெட்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் அனைவருக்கும் உயிர்முதல் ஒன்றேயாகும் (எபி 2:11). மத் 7:3-4-இல் இயேசு சகோதரனையும் அயலானையும் ஒன்றாக்குகிறார். சீடர்கள் தங்களுக்குள்ளே ஒருவர் ஒருவரைச் சகோதரர் என்று குறிப்பிடுகின்றனர் (கொலோ 4:7.9.15; 2 பேதுரு 3: 15). ஆனால் இயேசுவைச் சகோதரன் என்று ஒருபோதும் குறிப்பிட்டதில்லை.

பெரும்பாலான மொழிகளில் சகோதரன் சகோதரி என்ற சொற்கள் குறுகிய பொருளில் உடன்பிறந்தவர்களைக் குறிக்கவும், பரந்த பொருளில் எந்த உறவையும் குறிக்கப் பயன்பட்டுள்ளது. இம்மரபு எபிரேயர்களிடமும் பழக்கத்தில் இருந்தது. சகோதர உறவையும், பிற உறவுகளையும் குறிக்க வெவ்வேறு சொற்களுடைய மொழிகளில், பரந்த பொருளில் சகோதர உறவைப் புரிந்து கொள்வது கடினம். பெரியப்பா, பெரியம்மா, சின்னம்மா, சித்தப்பா ஆகியோரின் பிள்ளைகளை சகோதரன் சகோதரி என்றழைக்கும் நமது இந்திய மரபில் இது கடினமாக இருக்கக் கூடாது.

ஆகவே, 1. மத்தேயுவும், லூக்காவும் இயேசுவின் பிறப்பிற்குமுன் மரியாள் கன்னியாய் இருந்தாள் என்றும், இயேசு தலைப்பேறான மகன் என்றும் கூறுவதால் (லூக் 2:7, 23; மத் 1:18-24). மாற் 6:3-இல் வருவோர் இயேசுவுக்கு மூத்த சகோதரர்களாக இருக்க முடியாது. இயேசுவைப் பிடிக்கப் புறப்பட்ட உறவினர்களில் (மாற் 3:21) அவருடைய சகோதரர்கள் இருந்திருந்தால் அவர்கள் அவருக்கு மூத்தவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் அவ்வாறு செய்ய இளையவர்களுக்கு அதிகாரமில்லை.

2. யோசேப்புக்கு முந்திய திருமணத்தில் பிறந்த பிள்ளைகளே இங்குக் குறிக்கப்படும் சகோதரர்கள் என்பதற்கு ஆதாரமில்லை. எகிப்துக்கு ஓடியபோது, பிற பிள்ளைகள் சூசையோடு இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் நான்கு ஆண்களும் இரண்டு அல்லது மூன்று பெண்களுமாவது இருந்திருக்க வேண்டும் (மத் 2:13-21; 12:46-47; 13:55).

3. ஆலயத்தில் மீண்டும் இயேசுவைக் கண்டுபிடிக்கும் நிகழ்ச்சியுரையில் (லூக் 2:41-52) பிற குழந்தைகளைப் பற்றிய குறிப்பு ஒன்றுமில்லை.

4. நசரேத்தூரில் யோசேப்பு-மரியாளின் குடும்பத்தில் வேறெந்தச் சமயத்திலும் வேறெந்தக் குழந்தைகளும் தோன்றவில்லை.

5. தனிப்பட்ட பெயர்களுடன் இருவாசகங்கள் உள்ளன (மாற் 6:3; மத் 13:55; கலா 1:19; காண்க லூக் 4:22 தொ). மாற். 6:3-இல் இயேசு சிறப்பான முறையில் மரியாளின் மகன் எனப்படுகிறார். ஆனால் யாக்கோபு, யோசேசு, யூதா, சீமோன் ஆகியோருடைய சகோதரன் என்று பொதுவாகக் கூறப்படுகிறார். சகோதரிகளின் பெயர்கள் கொடுக்கப்படவில்லை. இந்த நான்கு பெயர்களில் மூன்று அப்போஸ்தலர் பட்டியலிலும் வருகின்றன (மத் 10:2-4; மாற் 3:14-19; லூக் 6:12-16; அ.ப.1:13). இவற்றில் யாக்கோபு என்ற பெயர் இருமுறை வருகின்றது. ''அல்பேயுவின் மகன் யாக்கோபு, தீவிரவாதி எனப்படும் சீமோன், யாக்கோபின் சகோதரர் யூதா'' (லூக் 6:14-16) ஆகியோர் தான் ஆண்டவரின் சகோதரர்களின் என்றழைக்கப்படுபவர்கள் ஆவார் என்பதில் ஐயமில்லை. ''ஆண்டவரின் சகோதரர் யாக்கோபு'' என்று பவுல் குறிப்பிடுபவர் (கலா 1:19)

அநேகமாக அல்பேயுவின் மகன் யாக்கோபா கத்தான் இருக்க வேண்டும்.

மாற் 15:40; மத் 27:26, யாக்கோபு, யோசேப்பு ஆகியவர்களின் தாயார் மரியாளைப் பற்றிக் கூறுகின்றன. இந்த மரியாள் இயேசுவின் தாயல்லள். இவர் கிளோப்பாவின் மனைவியாக இருக்கலாம். கிளோப்பா அல்பேயுவின் வேறொரு வடிவமாகும். மாற் 3:18; லூக் 6:15; அப்போஸ்தலர் யாக்கோபை அல்பேயுவின் மகன் என்கின்றன. இந்த மரியாள் இயேசு கலிலேயாவிலிருந்த போது அவரைப் பின்தொடர்ந்து அவருக்குப் பணி புரிந்தவர்களுள் ஒருத்தியாவாள். யோவா 14:25-இல் இயேசுவின் தாயின் சகோதரி எனப்படுகிறாள். இவள் யாக்கோபு, யோசேப்பு ஆகியோரின் தாய் எனப்படுகிறாள். சீமோன், யூதா ஆகியோரின் தாய் எனப்படவில்லை. ஆகையால் மாற் 6:3-இல் வரும் பெயர்களுள் இருபிரிவுகள் உண்டு. யாக்கோபும் யோசேப்பும் ஒரு பிரிவினர். சீமோனும் யூதாவும் மற்றொரு பிரிவினர். ஆனால் இரு பிரிவினரும் இயேசுவின் சகோதர்கள் எனப்படுகின்றனர். ஆகையால் இருபிரிவினரும் இயேசுவின் உறவினர்களாக இருந்திருக்க வேண்டும். அவரின் உடன்பிறந்த சகோதரரர்கள் அல்லர். சீமோன், யூதா ஆகியோரைப் பற்றி இவ்விதமே கூறலாம். ஆனால் இவர்களைப் பற்றிய குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் அதிகம் இல்லை.

இயேசுவின் சகோதரர்கள் பற்றி வாசகங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறுபட்ட கருத்துக்கள், இந்த உறவைத் துல்லயமாகச் சுட்டிக் காட்டுவது கடினம் என்று காட்டுகின்றன.

6. இயேசுவுக்குப் பிற சகோதரர்கள் இருந்திருந்தால், அவர் தம் தாயை ஏன் யோவானிடம் ஒப்படைக்க வேண்டும்? (யோவா 19:26).

7. சமய உணர்வு: மீட்புத் திட்டத்தில், இறைவன் தமது மகனுக்கு தாயாக இருக்க வேண்டியவள் கன்னியாக இருக்க வேண்டும் என்று விரும்பிச் செயல்பட்டதாக மத்தேயு, லூக்கா நற்செய்திகள் தெளிவாகக் காட்டுகின்றன. பாவமில்லா கிறிஸ்துவின் இப்படிப்பட்ட தாய், பிறகு பாவ நிலையில் உள்ள பிற மக்களுக்குத் தாயானாள் என்பது நினைத்துப் பார்க்கக் கூடியதன்று. கிறிஸ்து நிறுவிய திருச்சபையின் முதல் அங்கத்தினர்களால் எழுதப்பட்டவையாகும் புதிய ஏற்பாட்டு நூல்கள். இவை தங்கள் நூல்களிலும், போதகத்திலும் இறையூக்கம் பெற்றவை. தொடக்க காலத்திருச்சபை விசுவாசத்தைப் பிரதிபலிக்கிறது. திருச்சபையின் பின்னனியில் வைத்து இவற்றை நோக்கும் போது தான் இவற்றைப் புரிந்து கொள்ளவும் விளக்கவும் முடியும். இந்தப் பின்னணியில்தான் ''இயேசுவின் சகோதரர்கள்'' என்பதுபற்றிய புதிய ஏற்பாட்டு வாசகங்களைப் புரிந்து கொள்ள முடியும். மரியாள் எக்காலமும் கன்னி என்பது பாரம்பரியமாகும். திருச்சபையின் விசுவாச சத்தியமாகும். நற்செய்தி வாசகங்கள் இதனை நேரடியாக எடுத்துக் காட்டவில்லையாயினும், இவ்விசுவாசத்திற்கு மாறாக ஒன்றும் கூறவில்லை. மீட்பு வரலாற்றின் உண்மைத் தன்மையையும், இதில் இயேசு, மரியாள் ஆகியோரின் தனிச் சிறப்பான பாகத்தையும் கருத்தில் கொண்டால், மரியாளுக்கு வேறு குழந்தைகள் இல்லை; ஆண்டவருக்கும் உடன் பிறந்த சகோதரர்கள் இல்லை; இவர்கள் உறவினர்களே ஆவர் என்று ஏற்றுக் கொள்வதே சிறந்தது எனத் தெரியும். இதற்கு மாறாக, வாசகங்களின் வெறும் வார்த்தைகளை எடுத்துக் கொண்டு, அவற்றின் குறுகிய ஒரே பொருளில் விளக்கம் அளிக்க முயன்றால் தவறான முடிவுக்கே வரவேண்டியிருக்கும்.

ஆண்டவரின் நாள் (DAY OF THE LORD)

எதிர்காலம் பற்றிய இறைவாக்கு எதிர்பார்ப்பில் இறைவனின் உறுதியான குறுக்கீடு பற்றிய குறிப்பீடாகும். வரலாற்றில் திட்டவட்டமான செயல்களை 'நாட்கள்' எனக்குறிப்பிடும் எபிரேய நடைமுறையானது, இச்சொற்றொடருக்குத் தக்க விளக்கத்தை அளிக்கலாம் (உ.ம். எச 9:4 மாதியானின் நாள்; நீதி 7:25).

பழைய ஏற்பாட்டில் ஆண்டவரின் நாளை குறிப்பிடும் மிகப் பழமையான பகுதி ஆமோ 5:18-20.

''ஆண்டவரின் நாளை பார்க்க
விரும்புகிறவர்களே,
உங்களுக்கு ஐயோ கேடு!
ஆண்டவரின் நாளுக்காக நீங்கள்
ஏங்குவதேன்?
அது ஒளிமிக்க நாளன்று, இருள் சூழ்நசத
நாள்தான்.
....
ஆண்டவரின் நாள் இருள் கவிந்தது
அல்லவா?
அது ஒளியின் நாளில்லையே!
வெளிச்சமில்லாத காரிருள்
அல்லவா?''

இப்பகுதியின் மூலம், ஆமோஸ் ஏற்கெனவே இருந்த ஒரு நம்பிக்கையைத் திரும்பக் கூறினாரேயன்றி, புதியதாக எதையும் குறிப்பிடவில்லை எனத் தெளிவாகிறது. இந் நாளை இஸ்ராயேலுக்கு மீட்பைக்கொள்ளும் வெளிச்சத்தின் நாள், எனக் கருதப்பட்ட எண்ணத்தை அவர் எதிர்க்கிறார். அவரது இறைவாக்கின்படி அது இஸ்ராயேலுக்கு ஆபத்தான, இருளான நாளாக இருக்கும். இதுமட்டுமே, ஆண்டவரின் நாள் என்பதன் பொருளில் உறுதியான மாற்றத்தை ஏற்படுத்திவிடவில்லை. ஏனெனில் தொடக்கத்திலிருந்தே ஆண்டவரது வருகையின் நாள் என்பது அவரது விரோதிகளுக்கு அழிவு மற்றும் தண்டனையினையும், விசுவாசிகளுக்கு மீட்பு மற்றும் விடுதலையினையும் கொண்டுள்ளது. எத்தன்மையுடைய ஆண்டவரின் நாள் அவர்களின்மீது வரும் என்ற கருத்திலே ஆமோஸ் தன் காலத்தவரிடமிருந்து வேறுபடுகின்றார். தங்களது பதிதத்தால் இறைவனுக்கு விரோதமாக மாறிய அவர்கள், இறைவனது விரோதிகளின் நிலையிலேயே உள்ளனர் (ஆமோ 1-2). ஆனால், மற்ற நேரங்களில் அவர்கள், இறைவனது தண்டனை மற்ற நாடுகளின் மீது மட்டுமே விழவேண்டும் என எதிர்பார்த்தனர். இவ்வாறு, ஆமோசின் இறைவாக்கு (6:3; 8:9) இஸ்ராயேலின் சராசரி பக்தியிலிருந்து வேறுபடுகிறது. சுயஉறுதியுடைய இந்தப் பக்தி இறைவன் தன் பக்கமிருப்பதாகக் கற்பனை செய்தது. 'அந் நாள்' என்பதில் மீட்பின் பொருளை ஆமோசும் அறிந்திருந்தார் என்பதை ஆமோ 9:11 உணர்த்துகிறது.

அடிமைத்தனத்திற்கு முந்தைய இறைவாக்குகளில் ஆண்டவரின் நாள் என்பது அழிவின் இறைவாக்காகவே அமைந்திருக்கிறது. ஆண்டவரது பயங்கர நாளின் உலகளாவிய பண்பை ஏச 2:9 வெளிப்படுத்துகிறது.

''அந்த நாள் சேனைகளின் ஆண்டவரது
நாள்;
பெருமையும் செருக்குமுடைய யாவற்றின்
மேலும்
அந்த நாள் வரும்
....
மனிதனின் அகந்தையெல்லாம் அடங்கும்
....
ஆண்டவர் உலகைத் தண்டிக்க
வரும்போது
அவருடைய அச்சந்தரும் திருமுன்னிருந்து
விலகி
அவருடைய மாண்புறு மகிமையினின்று
ஒதுங்கி,
மனிதர்கள் கற்குகைகளில் நுழைந்து
கொள்வார்கள்,
பூமியின் குழிகளில் புகுந்து
கொள்வார்கள்'' (ஏச 2:12.17.19),

உலகளாவிய மற்றும் கொடுமையாக நெருங்கி வரும் ஆண்டவரின் நாள் செப்பனியாவால் பெரிதும் விளக்கப்படுகிறது; எனவே அவர் ஆண்டவருடைய நாளின் இறைவாக்கினர் எனப்படுகிறார் (1:7. 14;2:2-3; 3:8). அண்ட மற்றும் அரசியல் விபரீதங்கள், இயற்கைப் பெருங்கேடுகள் மற்றும் போர் நிகழ்ச்சிகள் ஆகியவை ஒன்றாக இணைந்து அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன.

''ஆண்டவரின் மாபெரும் நாள்
அண்மையில் உள்ளது;
அண்மையில் விரைந்து வந்து
கொண்டிருக்கிறது;

ஆண்டவரது நாளின் பேரொலி கசப்பை உண்டாக்கும்,
மாவீரனையும் கலங்கி அலறும்படி செய்யும்,
அந்தநாள் கடுஞ்சினத்தின் நாள்,
துன்பமும் துயரமும் நிறைந்த நாள்;
பேரழிவும் பெருநாசமும் கொணரும் நாள்,
இருட்டும் காரிருளும் கவிந்த நாள்
கார்முகிலும் அடரிருளும் படரும் நாள்,
அரண்சூழ் நகாகளுக்கும் உயரமான கொத்தளங்களுக்கும்,
எதிராக எக்காளமும் போர்முரசும் கேட்கும் நாள் (1:14-16).

திரும்பத் திரும்பக் கறப்படும் சலிப்பைத்த ரும் இவ்வாக்கியங்கள், அசல் பகுதியில் உடனடி விளைவைக் கொண்டுள்ளது. இப் பகுதியே பிற்கால ''தீயஸ் ஈரே தீயஸ் இல்லா'' என்ற பாடலுக்கு மாதிரியாக அமைந்தது.

587-இல் ஏற்பட்ட பெருங்கேட்டிற்கு முன் னர், இஸ்ராயேலுக்கு எதிராகக் கூறப்பட்ட அழிவின் இறைவாக்கில் எச 7:7.10.12-இல் மீளவும் ஆண்டவரின் நாள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. 'முடிவு' பற்றிய அறிவிப் புடன் இங்கு அது இணைந்துள்ளது.

587-ஆம் ஆண்டின் பெருங்கேட்டை நோக் கும்போது, ஆண்டவரின் நாள் வந்துவிட் டது என்றும் கூறலாம் (புல 1-21; எச 34:12). ஆனால் மீண்டும் இறுதிக்காலப் பொருளில் ஆண்டவரின் நாள் குறிப்பிடப்ப டுகிறது; ஆனால் இப்போது பொதுவான இறைவாக்கின் வழியிலேயே, அழிவின் இறைவாக்கிலிருந்து மீட்பின் இறைவாக் காக மாறுகிறது. எழுதப்பட்ட பகுதிகளின் கருத்து மற்றும் நேரத்திற்கேற்ப, ஆண்டவ ரது நாளின் உலகளாவிய எச்சரிக்கைகள், தனிப்பட்ட பகை நாடுகளுக்கு விரோதமா கக் கூறப்படும் பகுதிகள் அவற்றின் பொரு ளும் நேரமும் மாறுபடுகின்றன. உம். ஏச 13:6.9.12 (பாபிலோன்); 34:8; 63:4 (ஏதோம்); எரே 46:10 (எகிப்து); 47:4 (பெலிஸ்தியர்); எச 30:3 (எகிப்தும் அதன் கூட்டணியும்); ஒப 15 (ஏதோம்). நம் ''ஆண்டவருடைய பழிவாங்கும் நாள்'' ''அழுகிறவர்கள் அனை வர்க்கும் ஆறுதல் அளிக்கும்'' (ஏச 61:2). இது கடவுள் பற்று அற்றவர்களுக்கு அழி வையும், கடவுளுக்கு அஞ்சுவோருக்கு புனி தத்தையும் மீட்பையும் அளிக்கிறது: ஏனெ னில் இவர்கள் எலியா இறைவாக்கினர் மூலம் ஆண்டவரது பயங்கர நாளுக்காகத் தயாரிக்கப்படுவர் (மலா 3:2; 4:1.5). யோவேல் 1-2-இல் கூறப்படும் வெட்டுக் கிளி வாதனை, மனந்திரும்புமாறு அழைக் கின்ற ஆண்டவரின் நாள் அண்மையிலிருப் பதைக் குறிக்கும் ஓர் அடையாளமாய் உள் ளது (1:15; 2:1-2.11). இறுதிக் காலம் பற்றிய விவரிப்பும் மேலும்மேலும் விரிவாகிறது. நாடுகளின்மீது இறுதித் தண்டனைக்குரிய காலம்வரும்போது வான்கோள்கள் இருள் அடைகின்றன (3:14-15). ஆனால் எருசலே மில் ஆண்டவரின் பெயரைக் கூவி அழைப்ப வர்களுக்கு மீட்பு உண்டு (3:5; 4:18). செக் 12-14 காட்டும் வடிவம் இணையானதும், அதிக விரிவானதும் கூட. இதில் ''அந்த நாளில்'' என்னும் சொற்றொடரைப் பலமு றையும், ஆண்டவரின் நாள் என்பதனை ஒரு முறையும் (14:1) காண்கிறோம். யாவே என் னும் இறைவன் பெயரை உபயோகிக்காத பிற்கால யூத இலக்கியத்தில் ஆண்டவரின் நாள் என்னும் சொற்றொடர் மறைந்து விடு கிறது; ஆனால், உலக காலத்தின் முடிவில் பெரும் பெரிய இறுதித் தீர்ப்புப் பற்றிய கருத்து மறையவில்லை. அசாதாரணமா கவே பழைய சொற்களின் வழியில் கடவு ளின் நாள் மற்றும் 'மெசியாவின் நாள்' என்னும் சொற்கள் காணப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டில், பழைய ஏற்பாட்டு சொற்கள் ஆழ்ந்த பின் விளைவுகளைக் கொண்டுள்ளன. உலகின் முடிவானது ஆண் டவரது நாள் என்றும் கடவுளின் நாள் என் றும் அழைக்கப்படுகிறது; திருவெளி 16:14-இல் கூறப்பட்டுள்ள கடைசிப் பேரா னது வல்லமைமிக்க கடவுளின் பெருநாள் எனப்படுகிறது. அந்நாள் லூக் 17:24-இல் மெசியாவின் இரண்டாவது வருகையாக மாறுகிறது. ''மின்னல் வானத்தின் ஒரு

முனையில் மின்னி எதிர்முனைக்குப் பாய்வது போலவே, மனுமகனும் தாம் வரும் நாளில் தோன்றுவார்''. புதிய ஏற்பாட்டின் இறுதிக் கால இயலுக்கு ஏற்ப, பவுலின் கருத்துப்படி இறுதித் தீர்ப்பின் நாள் என்பது கிறிஸ்துவின் இரண்டாவது வருகையோடு இணைந்து காணப்படுகின்றது. ஆண்டவரின் நாள் (1 தெச 5:2; 2 தெச 2:2); ''ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாள்'' (1:6.10; 2:16) பற்றி அவர் பேசுகின்றார். அப்போது கிறிஸ்து வாழ்வோரையும் மரித்தோரையும் தீர்ப்பிட வானகத்திலிருந்து இறங்கிவருவார் (அ.ப. 1:11). அவர் மீண்டும் வருவதற்காக ஆவலோடு காத்திருப்போருக்கு முடிவில்லா வாழ்வையும் (உரோ 2:7) மீட்பையும் (அ.ப. 2:21) அளிப்பார்.

விசுவாசிகளுக்குப் புதிய ஏற்பாடு நம்பிக்கையின் ஆறுதல் அளிக்கும் செய்தியை அளித்தாலும், மனந்திரும்பாதவர்களுக்கு அழிவைப்பற்றிய தெளிவான அச்சுறுத்தல் அதில் அடங்கியுள்ளது. ''கட்சி மனப்பான்மையுள்ளவர்களாய், உண்மைக்குப் பணியாமல், அநியாயத்திற்குப் பணிபவர்கள்மேல் இறைவனது சினமும் வெகுளியும் வந்து விழும்'' என்று பவுல் பேசுகிறார் (உரோ 2:8). தீர்ப்பின் நாளில் ஒவ்வொருவனுடைய செயல்களும் கடுமையாகச் சோதித்தறியப்படும் என்று 1 கொரி 3:13-15-இல் பவுல் அறிவிக்கிறார். யூதா, தன்திருமுகத்தில், தீயவர்களுக்கு எதிராக தீர்ப்பின் நாளைப்பற்றி பேசுகிறார். பேதுரு யோவேல் 2:30-31-ஐ எடுத்துக்கூறி இறுதிக்காலத்திய அண்ட மாற்றங்களை வலியுறுத்துகிறார் (அ.ப. 2:19-20).

ஆண்டவருடைய நாள் (LORD'S DAYS)

தொடக்ககால கிறிஸ்தவர்களால் வழிபாட்டு நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வாரத்தின் முதல்நாள், ஞாயிற்றுக்கிழமை ''ஆண்டவருடைய நாள்'' என்ற பதம் புதிய ஏற்பாட்டில் ஒரே ஒருதரம் திருவெளி 1:10-இல் வருகிறது. விரைவில் கிறிஸ்தவர்கள் நற்கருணையைக் கொண்டாடிய நாளைக் குறிக்கும் கலைச் சொல்லாகியது. தொடக்க காலத் திருச்சபையின் வாழ்வில், ஓய்வுநாளில் வேலை செய்வதற்குள்ள தடை ஆன்மீகப்படுத்தப்பட்டது. கி.பி. நான்காம் நூற்றாண்டுவரை, ஓய்வுநாள் பற்றிய கட்டளை, கிறிஸ்தவர்களால் ஞாயிற்றுக் கிழமைக்கு உரியதாகக் கருதப்படவில்லை. தெல்துல்லியன் ஞாயிற்றுக்கிழமையில் தொழில் செய்யாமையை ஓரளவு தூண்டினார். ஆனால் ஓய்வுநாள் அனுசரிப்பை அவர் மனதில் கொண்டிருக்கவில்லை.

காலத்தை ஏழுநாள் பிரிவாகக் கடைப்பிடித்தல், யூதத்துவத்திலிருந்து உரோமையர் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்விளைவாக ஏழாவதுநாள், அது ஓய்வுநாளன்றி ஞாயிற்றுக்கிழமையானாலும், வழிபாட்டு நாளாகக் கடைபிடிக்கும் வழக்கமாயிற்று. யூதவழக்கப்படி ஒருநாள் மாலையில் தொடங்கி அடுத்த நாள் மாலை முடிந்தது. உரோமையர் வழக்கப்படி நாள் இரவு 12-மணிக்குத் தொடங்கி அடுத்த இரவு 12-மணிக்கு முடிந்தது.

வாரத்தின் முதல் நாளாகிய (அ.ப. 20:7; 1 கொரி 16:2) ஞாயிற்றுக் கிழமையில் கிறிஸ்தவர்கள் வழிபாடு செய்வதற்கு, ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இயேசு உயிர்த்தெழுந்தது (மத் 28:1; மாற் 16:2.9; லூக் 24:1; யோவா 20:1.19) அடிப்படையாகியது. ஞாயிற்றுக்கிழமை ஆண்டவருடைய இறுதி உணவு நினைவு கூர்தல் கொண்டாடப்பட்டது (அ.ப. 20:7). இது, யூதக் கணிப்புப்படி, ஞாயிற்றுக்கிழமையின் தொடக்கமான சனிக்கிழமை மாலையாக இருக்கலாம் அல்லது உரோமையர் கணிப்புப்படி, ஞாயிற்றுக்கிழமையின் ஒரு பகுதியான ஞாயிறு மாலையாக இருக்கலாம் (காண்க லூக் 24:30). இந்த வழிபாட்டில் ''அப்பம் பிட்கப்பட்டது''. மறைநூலிருந்து வாசகங்கள் வாசிக்கப்பட்டன. மறைவிளக்கங்கள் அளிக்கப்பட்டன (காண்க அ.ப. 20:7.9). அவ்வழிபாட்டில் பிறரது நன்மைக்காகக் காணிக்கை எடுக்கப்பட்டது (1 கொரி 16:2), இதிலிருந்து வழிபடுவோரிடமிருந்து காணிக்கை சேர்க்கும் வழக்கு பிற்காலத்தில் தோன்றியது.

ஆண்டவருடைய போர்களின் நூல் (BOOK OF THE WARS OF THE LORD)

''ஆண்டவருடைய போர்கள்'' என்ற நூல் எண் 21:14 -இல் குறிப்பிடப்படுகிறது. இந்நூலிலிருந்து பாடல் வடிவில் ஒரு எடுத்துக் காட்டு கூறப்படுகிறது (21:14-15). இது மோவாபியர்களுக்கும் எமோரியர்களுக்குமிடையேயிருந்த எல்லையைப் பற்றிக் கூறுகிறது. இதை வாசகர்கள் அறிந்திருந்ததாக எடுத்துக் கூறப்படுகிறது. 21:17-18.27-30-இல் காணப்படும் எடுத்துக் காட்டுகளும் இந்நூலிலிருந்து எடுக்கப்பட்டதாக இருக்கலாம். ஆனால் இவற்றைக் கொண்டு, இந்நூலின் தன்மையைப் பற்றியோ, அதன் பொருளடக்கத்தைப் பற்றியோ ஒன்றும் கூறமுடியாது. ஏனெனில், இந்த எடுத்துக் காட்டுகள் புவியியல் குறிப்புகளாகத்தான் இருக்கின்றன. இந்நூல் யோசுவா, சவுல், தாவீது வாயிலாக கடவுள் நிகழ்த்திய போர்களைப் பற்றிக் கவிதை வடிவில் கூறும் ஒரு நூலாக இருக்கலாம், ஆண்டவருடைய போர்கள், ஆண்டவருக்காகவே ஆண்டவராலேயே நிகழ்த்தப்பட்டன என்ற உண்மையை இந்நூல் எடுத்துக்கூறலாம். இஸ்ராயேல் மக்கள், போருக்கும் ஆண்டவருக்கும் இடையே நிறைய தொடர்பு இருந்ததாகக் கருதினர். ஆண்டவரைச் ''சேனைகளின் கடவுளாக'' வருணிக்கிறார் சங்கீத ஆசிரியர் (சங் 24:10).

இந்நூல் குறிக்கப்படுவது, விவிலியம், கடந்தகால எழுதப்பட்ட, வாய் மொழியான பாரம்பரியங்களிலிருந்து எடுத்துப் பயன்படுத்தியுள்ளன என்பதற்கு ஒரு சான்றாகும். இந்நூல் யோசுவா நூலில் குறிக்கப்படும் ''யாசாரின் நூல்'' என்பதைப் போன்றதாக இருக்கலாம் (யோசு 10:12; 2 சாமு 1:18).

ஆண்டவர் (LORD)

திருவழிபாட்டில் திருச்சபை தனது ஒவ்வொரு மன்றாட்டையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாகத் தந்தைக்குச் சமர்ப்பிக்கின்றது. ஆதித் திருச் சபையின் மூல விசுவாசத்தை நினைவுறுத்தும் வகையில் ''இயேசுவே ஆண்டவர்'' (உரோ 10:9) என்ற பவுல் குறிப்பிடுவதிலிருந்து, தொடக்கத்திலிருந்தே இயேசுவுக்கு ஆண்டவர் என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது என்பது தெளிவாகிறது. ஆண்டவர் என்ற திருப்பெயர் கிறிஸ்து, மணமகன், இறைமகன் என்னும் பிற சிறப்புப் பெயர்களின் மறைபொருளையும் வெளியிடுகிறது. அத்துடன், ஆண்டவர் என்ற பெயர் [அதோனே(எபிரேயச் சொல்)- கூரியோஸ் (கிரேக்கச்சொல்)] ஒரு அரச பட்டமாக மட்டும் இல்லாது இறைவனுக்கே உரிய ஒரு திருப்பெயராகவும் இருந்தது என்பதைப் பழைய ஏற்பாடு பன்முறைக் காட்டுகிறது.

I. சொற்கள்:-

ஆண்டவர் என்ற பொருளுடைய எபிரேய அடிப்படைச்சொல் ''ஆதோன்'' என்பதாகும். மரியாதையும் மதிப்பும் காட்ட உயர்ந்தோருக்கு அளிக்கும் பட்டமாகும். சான்றாக அடிமை தன் தலைவனையும், குடிமகன் அரசனையும் அழைக்கப் பயன்பட்டது. இறைவன் ''உலகனைத்தையும் ஆளும் ஆண்டவர்'' என்றழைக்கப்படுகிறார் (சங் 97:5). அரசனைக்குறிக்க ஆதோன் என்று ஒருமையிலும் இறைவனுக்குச் சாற்றிக் கூறப்படும்போது பன்மையில் ''ஆதோனாய்'' என்றும் பயன்படுத்தப்பட்டது. பங்கப்படுத்திவிடுமோ என்ற அச்சத்தில் இறைவனது சொந்தப்பெயரான யாவே என்பதைப் பயன்படுத்த மக்கள் தவிர்த்தபோது, அதற்குப் பதிலாக ஆதோனாய் என்ற சொல்லைப் பொதுவழிபாட்டில் பயன்படுத்தினர்.

இறைவனைக் குறிக்கும் மற்றொரு சொல் பாகால் என்பதாகும். இது சிலசமயம் மனித தலைவர்களையும் குறிக்கிறது (என் 21:28; ஏச 16:8; 1:3). கானானியரின் கடவுள் பாகாலோடு தொடர்புடையது என்பதால், இஸ்ராயேலின் இறைவனுக்கு இப்பெயர் சாற்றிக் கூறப்படவில்லை (காண்க ஓசே 2:16).

ஆண்டவரைக் குறிக்கும் கிரேக்கச் சொல் ''கூரியோஸ்'' என்பதாகும். இது ''ஆதோன்'' என்ற சொல்லை மொழிபெயர்க்கப் பயன்படுகிறது.பெரும்பாலும் யாவே என்ற பெய

ருக்குப் பதிலாகப் பயன்பட்டுள்ளது. தலைவர் என்ற பொருளுடைய ''தெஸ்போட்டெஸ்'' என்ற கிரேக்கச் சொல்லும் பயன்பட்டுள்ளது.

II பழைய ஏற்பாடு:-

யாவேயின் ஆட்சி, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், அவரையே அரசராகப் பெற்றவருமான இஸ்ராயேல் மக்கள் மட்டும் உரியவராகக் கருதப்படவில்லை (1 சாமு 8:7 தொ; 12:12), யாவேதான் ''ஆண்டவருக்கு ஆண்டவர்'' ஏனெனில் அவரே ''கடவுளுக்குக் கடவுள்'' (உப 10:17; சங் 136:3). கானானியரின் தெய்வமான பாகால் நிலத்திற்கு மட்டும் உரிமையுடையவனாக அவர்களால் கருதப்பட்டான்; (பாகால் என்ற சொல் முதலில் உடையவனையும், கணவனையும் குறித்தது). ஆனால் யாவேயின் ஆட்சி பாகாலின் ஆட்சிபோன்று நிலவுலகைமட்டும் சார்ந்ததன்று; ஆதலால் பாகால் என்னும் பெயர் யாவேக்குச் சிறிதும் பொருந்தாது (ஓசே 2:18). இருப்பினும் ஏச 54:5-இல் இச்சொல் யாவேயே தம் மக்களின் தலையான நாயகன் என்ற பொருளில் அவரைக் குறிக்கப் பயன்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

உலகம் முழுமைக்கும் ஆண்டவர் என்பதால், கடவுள் தம் மக்களின் நன்மைக்காக எல்லாவிடங்களிலும் செங்கோல் ஓச்சுகின்றார் (உப 10:14-18). அவருடைய மேலான்மையை 'மெலக்கு' (அரசன்) ''ஆதோன்'' (ஆண்டவர்) என்னும் இரு சொற்கள் எடுத்தியம்புகின்றன. அரசன் என்னும் முதல்சொல் (ஏச 6:5; சங் 97:5), கடவுளின் ஆட்சி இஸ்ராயேல்மீது மட்டுமல்லாது உலகனைத்தின் மீதும் பரவிநிற்பதையும் (சங் 95:3), புறச் சமயத்து மன்னர்கள் மீதும் பரவி நிற்பதையும் (சங் 96:10), எடுத்துக் காட்டுகிறது. ஆதோன் என்னும் அடுத்த சொல், அனைத்துலகுக்கும் இறைவனே ஆண்டவர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது (யோசு 3:11 மீக் 4:13, சங் 97:5). இவ்வாறு 'ஆண்டவர்' என்று இறைவனை விளிக்கும் வழக்கம் பழங்காலத்திலேயே இருந்தது என்பதை ஆதி 15:2,8 போன்ற வசனங்களின் வாயிலாக அறிகிறோம். அத்துடன் இத்தகைய வழக்கு இறைவனின் ஆதிக்கத்தின்மீது அவருடைய ஊழியர்கள் வைத்திருந்த உறுதியான நம்பிக்கையும் வெளியிடுகின்றது (ஆமோ 7:2; உப 9:26; யோசு 7:7; சங் 140:8). ஆண்டவர் என்ற சிறப்புப்பெயர் காலப்போக்கில் கடவுளுக்கே உரிய சொந்தப் பெயராகவும் பொருள் மாற்றம் கண்டது.

மரியாதையின் காரணமாக வழிபாட்டில் யாவேயின் திருப்பெயர் சொல்லப்படாதபோது, அதன் இடத்தை 'ஆண்டவர்' (ஆதோனே) என்ற பெயர் பெற்றது. இதன் காரணமாகத்தான் எழுபதுநூல் கிரேக்க மொழிபெயர்ப்பு 'அதோனே' என்ற சொல்லை ''கூரியோஸ்'' (ஆண்டவர், தலைவர், அண்ணல்) என்ற சொல்லாலேயே குறித்துள்ளது. ஆதலால் கூரியோஸ் என்ற கிரேக்கச் சொல்லுக்கு இருபொருள் கூறலாம். சில சமயங்களில் இச்சொல் யாவேயின் தன்னாட்சித் தலைமையையும், வேறு சமயங்களில் சொல்லுக்குள் அடங்காத இறைவனின் சொந்தப் பெயரையும் சுட்டி நிற்கிறது.

புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாடு 'ஆண்டவர்' (கூரியோஸ்) என்ற பட்டத்தைக் கிறிஸ்துவுக்குச் சூட்டுகிறது. இந்தப்பெயர் மாற்றத்தை விளக்குவது என்பது கிறிஸ்துவ விசுவாசத்திற்கு ஓர் இலக்கணம் வகுப்பதாகும்.

1. தொடக்கத் திருச்சபையின் விசுவாசம்:- சங்கீதம் 110:1-இல் காணப்படும் சொல்வழக்கைப் பயன்படுத்தி, தாம் தாவீதின் மகனாக இருந்தபோதிலும், அவரைவிடப் பெரியவரும், அவருக்கும் முந்தியவருமாக இருக்கும் உண்மையை இயேசு மக்களுக்கு விளக்க விரும்பினார் (மத் 22:43 தொ; காண் லூக் 1:48; 2:11). இந்தச் சங்கீதத்தின் அடிப்படையில்தான், உயிர்ப்பின் மூலம் உண்மையாகிய இயேசுவின் ஆண்டகைத்துவத்தைத் தொடக்கத் திருச்சபை அறிக்கையிடுகிறது (அ.ப. 2:34 தொ.).அத்துடன் தன்னுடைய

செபத்திலும் பழைய அரமேயச் சொற்றொடரான ''மாரனா தா'' (எங்கள் ஆண்டவரே வாரும்) என்பதை நெடுங்காலமாகப் போற்றி வந்தது (1 கொரி 16:22; திருவெளி 22:20). இயேசுவின் உயிர்ப்பும் மறைநூலின் ஆய்வுமே, ''இயேசுவே ஆண்டவர்'' என்ற விசுவாச அறிக்கைக்குக் காரணமாயின (உரோ 10:9; 1 கொரி 12:3; கொலோ 2:6). இயேசுவுக்கு ஆண்டவர் என்ற பெயரை லூக்கா நற்செய்தியும் அப்போஸ்தலர் பணியும் பயன்படுத்துகின்றன (லூக் 17:5-6; அ.ப. 9:10-11.15.17). அப்போஸ்தல்பணிநூல் 'ஆண்டவர் இயேசு' என்ற பதத்தை அடிக்கடி பயன்படுத்துகிறது (4:13); ஆண்டவர் இயேசுவில் கொள்ள வேண்டிய விசுவாசத்தையும் (16:31), ஆண்டவர் இயேசுவின் பெயரில் திருமுழுக்கையும் (8:16; 19:5), பற்றிப்பேசுகிறது. ''இயேசு ஆண்டவர்'' என்பது தொடக்கக் கால விசுவாச அறிக்கைகளில் ஒன்று என்பது தெளிவு. அ.ப. 2:36-இல் ''இந்த இயேசுவையே இறைவன் ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினார்'' என்று பேதுரு பறைசாற்றுகிறார். இயேசு மெசியாவாக, விண்ணகத்தில் வீற்றிருந்து, தூய ஆவியின் அருட்கொடைகளால் இறையரசை நிலைநாட்டுவதாலும், (அ.ப. 2:33), இறுதிநாளை எதிர்நோக்கியிருக்கும் திருச்சபை கண்டுணரும்படியாக, நற்கருணை வழிபாட்டுச் சபையில் பிரசன்னமாக இருப்பதாலும் அவருக்கு ஆண்டவர் (மாரனா, கூரியோஸ்) என்ற மிக உயர்ந்த பட்டம் ஏற்றதாக இருக்கிறது. ஆதலால் இறைவனுக்கே உரிய திருப்பெயரான ஆண்டவர் (கூரியோஸ்) என்பது, இயேசுவை அழைக்கும் பெயராகக் கொள்ளப்பட்டது (2:20; தொ). அடுத்து இறைவன் வணங்கி வாழ்த்தும் செயல்களும், சொல் தொடர்களும் (பிலி 2:10=ஏச 45:23; யோவா 9:38; திருவெளி 15:4) 'அனைவருக்கும் ஆண்டவராகிய' (அ.ப. 10:36) இயேசுவின்மேல் ஏற்றிக்கூறப்பட்டன.

2. பவுல்:- ''ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து'' என்ற நிறைவான பதத்தைப் பவுல் அடிக்கடி பயன்படுத்துகிறார். அவர் ''ஆண்டவர் இயேசு'' (2 தெச 1:7) ''நம் ஆண்டவர் இயேசு'' (1 தெச 3:13) என்ற சுருக்கமான பதங்களையும் பயன்படுத்துகிறார். கடவுள்கள், ஆண்டவர்கள் என்று அழைக்கப்படும் பலரோடு ஒப்பிடும்போது, கிறிஸ்தவர்களுக்குத் தந்தையாகிய ஒரே இறைவனும், இயேசு கிறிஸ்துவான ஒரே ஆண்டவருமே உள்ளனர் (1 கொரி 8:5-6). அப்போஸ்தலர் பணிநூலின் ஆசிரியரைப்போல், பவுல் ''இயேசு ஆண்டவர்'' என்ற விசுவாச அறிக்கையை அறிந்திருக்கிறார். ''பரிசுத்த ஆவியின் ஏவுதலாலன்றி 'இயேசு ஆண்டவர்' என்று யாரும் சொல்ல முடியாது'' என்று அறிவிக்கிறார் (1 கொரி 12:3). பவுல் ''எம் ஆண்டவரே வாரும்'' (மாரனா தா) என்பதைக் கொரிந்தில் குறிப்பிட்டு, தாம் ஆண்டவர்-இயேசுவைப்பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களைக் கிரேக்கர்களிடமிருந்து பெறவில்லை என்றும், மாறாக பாலஸ்தீனக் கிறிஸ்தவர்களிடமிருந்து பெற்றதாகவும் கூறுகிறார் (அ.ப. 25:26). பேதுருவைப் போலவே இவரும் சங் 110-ஐக் கையாண்டு (1 கொரி 15:25; கொலோ 3:1; எபே 1:20) ஆண்டவர் என்ற சொல்லுக்கு மானிட, தெய்வீகப் பொருள்களைத் தருகின்றார். வேந்தன் என்ற முறையில், இயேசுவே அனைத்து மனிதருக்கும் (உரோ 14:9), அவருடைய பகைவர்களுக்கும், அதிகாரங்களுக்கும் (கொலோ 2:10,25), சாவுக்கும் (1 கொரி 15:24 தொ. 57; காண் 1 பேதுரு 3:22), அடிமைகளுக்கு ஆண்டவனின் தானத்தில் உள்ள முதலாளிகளுக்கும் (கொலோ 3:22; 4:1; எபே 6:5-9) ஆண்டவராக இருப்பதாகக் காட்டுகிறார். இறுதியாக அவர் ஆட்சி செய்து பேணும் அவரது உடலாகிய திருச்சபைக்கும் ஆண்டவர் ஆவார். அதை ஆட்சி செய்கிறார்; பேணி வளர்க்கிறார் (கொலோ 3:18; எபே 1:20 தொ; 4:15; 5:22-32). அத்துடன் வானும், நிலமும் நரகும் ஆகியவை அடங்கிய படைப்புக்கள் அனைத்துமே அவரையே ஆண்டவர் என்று போற்றுகின்றன (பிலி 2:10 தொ.) இந்த வசனம் இயேசுவின் தெய்வீகப் பண்பினை வலியுறுத்துகிறது; கடவுள் தன்மையிலிருந்து அவர் தம்மையே தாழ்த்தி ஓர் அடிமையின் உருவெடுத்தார்;

சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்தார்; அதனால் கடவுள் அவரை உயர்த்தி அனைத்திற்கும் மேலான ஒரு பெயரை அவருக்குச் சூட்டினார்; அவருடைய மாட்சி பெற்ற மானிடத்திலிருந்து ஒளிவீசும் தெய்வீகத் தன்மையையே இப்பெயர் குறிக்கிறது. இதுவே அவருடைய தன்னேரில்லாத உலகளாவிய மேலாண்மைக்கு அடிப்படையாக இருக்கிறது.

இவ்வாறு ''ஆண்டவர்'' என்ற சொல்லை மானிடம்-தெய்வீகம் என்ற இரண்டு கோணங்களிலும் இருந்து நோக்கும்போது, ''இயேசுவே ஆண்டவர்'' என்னும் வாய்பாடு, தெய்வத்தன்மைக்குச் சொந்தம் கொண்டாடும் மன்னர்களுக்கு எதிராக விடுக்கும் கண்டனக்குரலாகவும் தொனிக்கிறது. பொய்யான 'போலி ஆண்டவன்கள்' பலர் இருக்கலாம்; ஆனால் இயேசுவே உண்மையான அசல் ஆண்டவர் (1 கொரி 8:5; தொ.); மற்றவர் எல்லாம் அவரது ஆட்சிக்குப் பணிந்தவரேயாவர். ''ஆண்டவர்களுக்கு ஆண்டவர்'' என்ற பட்டம், கீழை நாடுகளில் ஏறக்குறைய கி.மு. 1100-இல் இருந்தே மன்னர்களுக்குச் சூட்டப்பட்டதாக இருந்தாலும், இயேசுவுக்கும், அவரது தந்தைக்குமே முற்றிலும் பொருந்தும் என்பதைத் திருவெளிப்பாடு தெளிவாக உரைக்கிறது (திருவெளி 17:14; 19:16; காண் உப 10:17; 1 திமோ 6:16).

உயிர்ப்பின் ஒளியில் இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நோக்கும்போது, அவரை 'ஆண்டவர்' என்ற சிறப்புப்பட்டத்தால் அழைப்பதையே லூக்கா விரும்புகிறார் (லூக் 7:13; 10:39. 41...). யோவான் இப்பட்டத்தை மிகக் குறைந்த அளவே பயன்படுத்துகிறார். ஆனால் அவர் அன்பு செய்த சீடர் கடற்கரையில் நின்றுகொண்டிருந்த ஆண்டவரை உடனே அடையாளம் கண்டுகொண்டதையும் (யோவா 21:7), தோமா இயேசுவை இனங்கண்டு அனைத்து விசுவாசிகளின் பெயராலும் 'என் ஆண்டவரே என் தேவனே' (20:28) என்று விளம்பியதையும் யோவான்தான் நினைவுக்குக் கொண்டுவருகிறார்.

ஆண்டவர் கற்பித்த செபம்

மத்தேயுவிலும், லூக்காவிலும் இயேசு கற்பித்ததாகக் கூறப்படும் வேண்டுதல்களின் இத்தொகுப்பானது, புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் இத்தலைப்பின் கீழ் குறிப்பிடப்படவில்லை. ''அப்பா! பிதாவே!'' என்ற இரட்டைச்சொல்லால் இது குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

1. செபத்தின் வாசகம்: மத்தேயுவிலும் லூக்காவிலும் வரும் இரு விவரிப்புகளையும் சொல்லுக்குச்சொல் மொழிபெயர்த்து பின்வரும் வரிசையில் ஒப்பிடப்படலாம்.

முக்கிய வேறுபாடுகள் லூக்காவில் காணப்படுகின்றன: உ.ம். 11:2 முக்கிய ஏடுகளில் நீண்டதாகக் காணப்படுகிறது; ஆனால், மற்றவற்றில் மத்தேயுவில் விரிவாக்கம் காணப்படுகிறது. இந்த வேறுபாடுகள் மத்தேயு வாசகத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம் லூக்காவிற்கு மட்டுமே சிறிய பகுதியானது மூலவாசகமாக உள்ளது.

2. இரட்டை மரபின் தோற்றமும் பின்னணியும்:- இச்செபத்தின் இரட்டை வடிவங்களையும் இயேசு வேறுபட்ட சூழ்நிலைகளில் வெளியிட்டார் என்ற கருத்து ஆய்வுக்கு அவ்வளவு உதவியாக இல்லை. ஒவ்வொரு நற்செய்தியாளரும் தனது வட்டார ஆலய சடங்குகளில் பிரபலமாயிருந்த அமைப்பை எடுத்துரைக்கின்றனர். இரண்டு அமைப்புகளுமே சுதந்திர மூலங்களிலிருந்து நம்மை வந்தடைகின்றன என்பதே ஏற்புடையதாக இருக்கலாம். முக்கியமான கூறுகள் அனைத்தும் குறுகிய அமைப்பிலேயே காணப்படுகின்றன. இவ்விரண்டு பதிப்புகளுக்குமான சடங்குமுறை தோற்றமானது பல்வேறு வழிகளில் சுட்டிக்காட்டப்படுகிறது. சில வாசகங்களில் காணப்படும் போற்றுரை மத்தேயுவின் வாசகம் நிலையான வடிவம் எடுப்பதற்கு முன்னர் வழிபாட்டு வளர்ச்சி இன்னும் தொடர்ந்து கொண்டிருந்தது என்பதை காட்டுகிறது. இந்த வேறுபாடுகள், குறிப்பாக மார்சியோன் மற்றும் நீசா கிரகோரியில் காணப்படும் லூக் 11:2-இன் அமைப்பு,

மத் 6	லூக் 11
9.அ. ஆதலால் நீங்கள் இவ்வாறு செபியுங்கள்	2.அ. நீங்கள் செபிக்கும்பொழுது இவ்வாறு சொல்லுங்கள்
ஆ. வானகத்திலுள்ள	
இ. எங்கள் தந்தாய்	ஆ. தந்தாய்
ஈ. உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக	இ. உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக
10.அ. உமது அரசு வருக	ஈ. உமது அரசு வருக
ஆ. உமது திருவுளம் ... நிறைவேறுக...	
இ. விண்ணுலகில் நிறைவேறுவது போல் மண்ணுலகிலும் நிறைவேறுக.	
11.அ. எங்கள் அன்றாட உணவை	3. அ. எங்கள் அன்றாட உணவை
ஆ. எங்களுக்கு இன்று அளித்தருளும்	ஆ. எங்களுக்கு நாள்தோறும் அறித்தருளும்
12. எங்களுக்கு எதிராக குற்றம் செய்தவர்களை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னித்தருளும்.	4.அ. எங்கள் பாவங்களை மன்னித்தருளும். ஏனெனில் எங்களுக்கு எதிராக குற்றம் செய்பவர் அனைவரையும் நாங்களும் மன்னிக்கிறோம்.
13.அ. எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்	ஆ. எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
ஆ. தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும்.	
இ. சில பகுதிகள் கீழ்வரும் முடிவுரையையும் கொண்டிருக்கும்: ''ஏனெனில் அரசும், வல்லமையும், மாட்சியும் என்றென்றும் உமதே''.	

வழிபாட்டு மரபுகளால் மேலாக விளக்கப்படலாம். மத்தேயுவுடன் ஒப்பிடும்போது நான்காவது வேண்டுதலின் லூக்காவின் வடிவம் வழிபாட்டுக்கு ஏற்ற தழுவுதலைக் காட்டுகிறது. உரோ *8:15* (*1* பேதுரு *1:17*) மற்றும் கலா *4:6*-ல் பயன்பட்டுள்ள ''அப்பா பிதாவே'' என்ற சொற்றொடரானது படிப்பவர் உணரக்கூடிய வழிபாட்டு உபயோகத்தைச் சுட்டுகிறது. அரமேயிக்கு மற்றும் கிரேக்க சொற்களின் இணைப்பானது இவ்விரண்டு மொழிகளுமே பயன்படுத்தப்பட்ட வழிவாட்டு சூழ்நிலைக்குச் சான்று பகர்கிறது. எருசலேமைத்தவிர பல இடங்களிலும் இவ்விதமே அமைந்திருக்கக்கூடும். யூத மரபுகளோடு ஒப்பிடுதலும், நற்செய்திகளின் பதிப்புப் பின்னணிகளும் இதையே சுட்டிக் காட்டுகின்றன.

சமய பழக்கவழக்கங்கள் பற்றி இணையமைப்புப்பகுதியின் ஓட்டத்தை ஒரு தடை செய்யுமுறையில் மலைப் பொழிவினுள் மத்தேயு இச்செபத்தை நுழைக்கிறார் (மத் *6:1-4. 5-6. 16-18*). லூக்காவும் அவ்வாறே பதிப்புக்குறிப்புடன் செபம்பற்றிய பகுதியு

டன் அதனை இணைக்கிறார் (11:5-13). ஆயினும் இது மத்தேயுவைப்போல் அவ்வளவு செயற்கையாகத் தோன்றவில்லை. லூக்காவின் உடனடி அறிமுகம் திருமுழுக்கு யோவானின் பழக்கத்தையும் ராபிகளின் பழக்கத்தையும் சுட்டிக்காட்டுகிறது (5:33). சுருக்கமான செபத் தொகுப்பை அளிப்பதென்பது அசாதாரணமானதல்ல. இயேசு அவ்வாறு செய்தாராயின், அதனுடைய வழிபாட்டு வரலாறானது தொடக்க கிறிஸ்தவ கூட்டங்களினின்று தொடங்கியிருக்கவேண்டும்.

எனவே, வாய்மொழி மரபில் இருந்திருக்கக் கூடிய சுருக்கமான மூல ஆதாரத்தை நாம் உறுதியாக சுட்டிக்காட்ட முடியாது. நற்செய்தி நூல்களில் இறுதியாக நுழைந்த வடிவங்களுக்குப் பின்னால் குறிப்பிடத்தக்க வரலாறு உள்ளது. அரமேயிக்கு மூலத்தை மீண்டும் அமைப்பதை பல்வேறு வழிபாட்டு தோற்றங்கள் பிரச்சினைக்குரியதாக்குகின்றன. இப்படி மீண்டும் அமைப்பது கூடுமான அளவில், இயேசுவினுடைய போதனையின் பெரும்பகுதியைப் போன்று, செபமானது நினைவினில் எளியதாக இருப்பதற்கு ஏதுவான அழுத்தம், எதுகை, செய்யுள் அமைப்பு ஆகியவற்றோடு கவிதையை நினைவுபடுத்தும் முறையில் சந்த வடிவில் இருப்பதை ஒவ்வொரு நற்செய்தியும் சுட்டிக்காட்டுகின்றன. சொற்களின் வடிவத்தை தீர்மானிப்பதில் இத்தகைய கருத்துக்கள் எச்சரிக்கையுடன் பயன்படுத்தப்படவேண்டும். அதேசமயத்தில் வாய்மொழிப்பாரம் பரியத்தைப் பாதுகாத்துக் கையளிக்கும் மேற்காசியர்களின் திறமை, இத்தகைய அமைப்பை இயலக்கூடியதாக்குகிறது.

3. செபத்தின் நோக்கமும் திட்டமும்:- செபிப்பதற்கு வழிகாட்டியாகவும், கூட்டாகவோ அல்லது தனியாகவோ, செபிப்பதற்கு வேண்டிய குறிப்பிட்ட அமைப்பை அளிப்பதாகவும் இரு வாசகங்களும் அமைந்துள்ளன. வழிபாட்டுப் பொருளாக மட்டுமே இதனை எடுத்துக் கொள்வதானது, உண்மையிலேயே நற்செய்தியாளர்களின் எண்ணத்தையும், இயேசுவின் எண்ணத்தையும் தவறாக புரிந்து கொள்வதாகும். நற்செய்தி நூல்கள் தொகுக்கப்பட்டபோது அது இந்த நோக்கத்தை தெளிவாக நிறைவுசெய்தது. கிறிஸ்தவ வழிபாடுகளில் தொடர்ந்து உச்ச இடத்தை வகிக்கலாயிற்று. அனைத்து செபத்திற்கும் அடிப்படையாகக் கொள்ள வேண்டிய, ஆண்டவர் கற்பித்த செபத்தின் மதிப்பை ஒவ்வொரு நற்செய்தியாளரும் சுட்டிக்காட்டுகின்றனர். தவறானவகை செபத்திற்கு பதிலாக இதனை அளிக்கின்ற மத்தேயு, இறைவன் மற்றும் அவருடைய அரசுக்கு முதன்மை அளிக்கிறார். இதில் அவ்வாறே லூக்காவும் இதனை ஒரு செபமாக கற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக, எவ்வாறு செபிக்க வேண்டும் என்ற வேண்டுகோளுக்குப் பதிலாக அளிக்கின்றார். இச்செபத்திற்கும் யூத வடிவங்களுக்கும் இடையிலான ஒப்பீடானது இதையே சுட்டுகிறது. செபத்தினுடைய உட்பொருளின் தொகுப்பாக அமைகிறது. யூத போதகர்கள் இத்தகைய தொகுப்புகளை அளித்துள்ளனர். பெராகோத்தினுடைய ஆய்வுக்கட்டுரை (290) பின்வருமாறு கூறுகிறது. ''பதினெட்டு ஆசிர்களின் சுருக்கம் என்ன? 'ஒவ்வொரு ஆசிரின் சுருக்கமே' என்று ராபி கூறுகிறார். 'உமது வழிகளை அறிந்து கொள்ள அறிவைத் தாரும் ஆண்டவரே என் இறைவனே' என்று சாமுவேல் கூறுகிறார். பதினெட்டு ஆசிகளையும் தொகுக்கின்ற சுருக்கமான செபம் பின்னர் தொடர்கிறது. இது இயேசுவின் காலத்திற்குப் பிற்பட்டதாக இருந்தாலும், இவ்வழக்கமானது தால்முத்திற்கு முற்பட்டது அல்ல என்று கூறுவதற்கு எவ்வித காரணமும் இல்லை. இயேசுவின் செபமானது பலவிதங்களில் செமோனே எஸ்ரே (பதினெட்டு ஆசிகள்)யின் சுருக்கமாக உள்ளது. மேலும் இது செபத்தின் உட்பொருளுக்கான திட்டத்தையும் அமைப்பையும் உள்ளடக்கும் சுருக்கமாகக் கொண்டுள்ளது.

திதாக்கேயில உள்ள ஆண்டவரது செபமானது ஆண்டவரால் கட்டளையிடப்பட்டதாகவும் ''வெளிவேடக்காரர்களைப் போல செபிப்பதற்கு'' பதிலாக அவர் அளித்ததாக

வும் கூறுகிறது. இந்நூல் மத்தேயுவின் சூழ்நிலையையும் வாசகத்தையும் அறிந்திருப்பதாகக் காட்டுகிறது. இச்செபம் ஒவ்வொருநாளும் மும்முறை சொல்லப்பட வேண்டும்.

4. ஆய்வு:-

அ. முகவுரை (மத் 6:9 ஆ,இ; லூக் 11:2 ஆ): இறைவனை தந்தையென விளிப்பது யூத செபங்களில் காணப்பட்டது. செபக்கூட வழிபாட்டில் அடிக்கடிப் பயன்பட்டது ''எம் தந்தாய், எம் அரசரே'' என்பதாகும். எனது தந்தாய் என்ற சொல்லானது ஐந்தாம் ஆசிரில் காணப்படுகிறது. ராபிகளின் ஏடுகளில் ''என் தந்தையே'' என்பது சில சமயம் காணப்படுகிறது. பழைய ஏற்பாடு இறைவனைத் தந்தையாக எண்ணி (படைப்பாளர்; உப 32:6; மலா 2:10), அவரை அவ்வாறே விளிக்கிறது (ஏச 63:16; 64:8; எரே 3:4.19). பிற்கால இலக்கியங்கள் இறைவனை இஸ்ராயேலுக்குள் ஒரே சிறு குழுவினரின் தந்தையாகக் கருதுவதாகத் தெரிகிறது.

ஆண்டவரது செபமானது இறைவனை அழைக்கும் இயேசுவின் முறையைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால் தந்தை என்ற சொல்லை இயேசு பயன்படுத்தும் இரு நிகழ்ச்சிகளை நற்செய்தி நூல்கள் குறிப்பிடுகின்றன [மத் 11:25-26 (லூக் 10:21); மாற் 14:36 (மத் 26:39; என் தந்தையே); லூக் 22:42]. மாற் 14:36 அப்பா தந்தையே என்ற சொற்களை கொண்டுள்ளது. மாற்கு தனது வழக்கமான மொழிபெயர்ப்பை இடைபுகுத்தாதது நினைவுகூர்ந்தலுக்குப் பதிலாக வழிபாட்டுப் பயன்பாட்டையே இது பிரதிபலிப்பதாக இருக்கக்கூடும். ''அப்பா'' என்ற அரபேமிக்குச் சொல் ''என் எங்கள்'' என்ற முன்சொற்களோடு வரலாம், அல்லது லூக்காவில் வருவதுபோல் வெறுமனே தந்தை என்று மொழிபெயர்க்கப்படலாம். இது லூக்காவின் புறஇன சூழ்நிலையால் விளக்கப்படலாம்.

யூத பக்தியானது, மத் 6:9-இல் உள்ளது போன்று ''வானகத்திலுள்ள'' என்பதை சேர்கலாம் (''உங்கள் விண்ணகத் தந்தை'' மத் 5:48; 6:14.26; ''வானகத்திலுள்ள'' மத் 5:16.45; 7:21). இப்பதம் லூக்காவில் இல்லாமை, அது மிகப் பழமையான வடிவம் என்பதின் அடையாளமாக இல்லாமல் யூதரல்லாதோரின் பயன்பாட்டின் அடையாளமாக உள்ளது. யூத நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டு இறைவனை தந்தையென அழைக்கும் இயேசுவின் ''பேச்சுத் தைரியத்தை'' ஓரிசன் குறிப்பிடுகிறார். மகனாகிய கிறிஸ்துவின்மூலம் இறைவனை அறிகின்ற கிறிஸ்தவ திருச்சபையில் இது தனிச்சிறப்பான முறையில் பயன்படுகிறது.

ஆ. முதல் வேண்டுதல் (மத் 6:9 ஈ; லூக் 11:2 இ):- முதல் மூன்று வேண்டுதல்களும் (லூக்காவில் இரண்டு) ஒத்த பொருளையே கொண்டுள்ளன. இறைவனின் பெயரைப் புகழ்தல் அரசிற்காகவும், அவரது சித்தத்தை நிறைவேற்றவும் செபித்தல், இவையனைத்தையும் இறுதிக்கால நம்பிக்கையால் இறைவனுடைய மேலாண்மையை உறுதியாக அறிவிப்பதாகும். இது இறுதிக்கால சூழ்நிலையில் வாழ்கின்ற ஒரு சமுதாயத்தின் செபம். இச்செபத்தை செபிக்கும் போது திருச்சபையும் இதே நிலையில்தான் உள்ளது.

மூன்று வேண்டுதல்களும் செயற்பாட்டு வினைச்சொல் வடிவங்களை பொதுவாக கொண்டுள்ளன. பிந்தைய வேண்டுதல்களில் மத்தேயுவினின்று லூக்காவின் வினைச்சொற்கள் வேறுபட்டிருந்தாலும் இங்கு மாறுபடுவதில்லை. செயற்பாட்டு ஏவல் வடிவங்களே செபத்தின் மொழி அமைப்பாகும். செயற்பாட்டு அமைப்பு மரியாதையின் வடிவமாகும். இறைவனைப்பற்றிய கூற்றுக்களிலும் செபங்களிலும் இவ்வடிவம் பரவலாகப் பயன்படுகின்றது (மத் 5:5.7.9; 7:1; லூக் 14:14). இறைவன் முதற்பொருளாகவும் இறைசூழ்நிலையானது புறப்பொருளாகவும் இல்லாத பிந்தைய வேண்டுதல்களில் செய்வினை வடிவம் பயன்படுகிறது.

இறைவனின் பெயரானது அவரது இயல்பையும் வல்லமையையும் உணர்த்துகிறது.

அபாயத்திற்கு எதிராக மன்றாட்டு உரோ. 2:24-25-இல் காணப்படுகிறது (சங் 74:10.18; ஏச 29:23; எச 36:22-23). ''இறைபெயரை குறிப்பிடாத ஆசிர் ஆசீரே அல்ல'' என பெரோகாத்து வலியுறுத்துகிறது. செபக்கூட வழிபாடு பின்வரும் வேண்டுதல்களை கொண்டுள்ளது. ''உமது பெயரைப் புனிதப் படுத்துகின்ற அவர்கள்மேல் உமது பெயரைப் புனிதப்படுத்தும், ஆம், உலக முழுவதும் உமது பெயரைப் புனிதப்படுத்தும்.. பலரிடையே உமது பெயரைப் புனிதப்படுத்தும் ஆண்டரே, நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்''. ''அவரது உயரிய நாமம் மகிமைப்படுத்தப்பட்டு புனிதப்படுத்தப்படுவதாக'' என்று செபக்கூடக் ''காதிசு'' தொடங்குகிறது. இறைவனின் பெயரைப் போற்றுவது அவரது இயல்பையும் கோரிக்கைகளையும் அறிந்து ஏற்றுக்கொள்வதாகும். இந்த வேண்டுதலுக்கான முழு பதிலானது இறுதிக்கால முழு நிறைவேறுதலைக் கருத்தில் கொண்டுள்ளது. இடைக்காலத்தில் எப்பொருளிலும் அது வேதபோதகச் செபமாக உள்ளது. ஏனெனில், அனைத்து மனிதரும் அதனைப் புனிதமானதாக பற்றிக் கொள்ளும்வரை இறைவனுடைய பெயரின் அறிவைப் பறைசாற்றுதலை அது உள்ளடக்கியுள்ளது (உரோ 10:12-15).

இ. இரண்டாம் வேண்டுதல் (மத் 6:10 அ; லூக் 11:2 ஈ):- இதுவும் முழுவதும் யூதசெபமாகும். ஆனால் கிறிஸ்துவனின் வாயில், இது கிறிஸ்துவின் சிறப்பான போதனையையும், அரசுடன் அவருக்கே உரிய தொடர்பையும் உள்ளடக்கியுள்ளது. ''அரசன்'' என்பது இறைவனுக்கு, அளிக்கப்படும் விருப்பமான பட்டமாகும். ''உமது வாழ்விலும், உமது நாட்களிலும், இஸ்ராயேலின் அனைத்து வீட்டாரின் வாழ்விலும் அவர் தனது அரசை அமைப்பாராக'' என்று செபக்கூட காதிசு கொண்டுள்ளது. இறைபெயர் பற்றிய கூற்றுக்கு யோகனானுடைய பதிலில் ''இறை அரசுத்தன்மையைப்பற்றி எவ்வித குறிப்பும் கொண்டிராத ஆசீர். அசீரே அல்ல'' என்று பேராகோத்து குறிப்பிடுகிறது.

லூக்காவில் இந்த வேண்டுதலுக்குப் பதிலாக, சில தந்தையரின் நூல்கள் ''உமது தூய ஆவி எம்மேல் இறங்கி, எம்மைத் தூய்மையாக்கட்டும்'' என்பதைக் கொண்டுள்ளன. தூயஆவி மீதான லூக்காவின் வலியுறுத்தலுக்கு இது பொருந்தினாலும் இது மூல வாசகமாக இல்லாமல் கிறிஸ்தவப் பாடபேதமாகத் தெரிகிறது.

இதுவும் ஒரு இறுதிக்கால செபமாகும். அரசானது வரவிருப்பது. ஆனால் ஏற்கனவே செயல்படுகிறது என்கின்ற இயேசுவினுடைய போதனையில் காணப்படும் நெருக்கடிநிலை மத்தேயுவின் மூன்றாவது வேண்டுதலில் மிகவும் வெளிப்படையாக உள்ளது.

ஈ. மூன்றாவது வேண்டுதல் (மத் 6:10 ஆ,இ):- மற்ற அனைத்து விருப்பங்களையும் புறம்பாக்கி இறைவனுடைய சித்தமானது முழுமையாக நிறைவேற்றப்படும்போது இறைவனது மேலாண்மை அவரது அரசில் அனைவருக்கும் வெளிப்படையாவதன் காரணமாக இறைவனுடைய சித்தம் நிறைவேறட்டும் என்பது அரசினுடைய வருகையின் விளக்கமேயாகும். இது முந்தைய வேண்டுதலின் விரிவாக்கமேயாகும்.

''விண்ணகத்திலுள்ள உங்கள் தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற சிறுத்தையைப் போல வலிமையுடனும் கழுகைப்போல துடிப்பாகவும், கலைமான் போல விரைவாகவும் சிங்கத்தைப்போன்ற தைரியத்துடனும் இரு'' என்றும் ஒரு யூதநூல் கூறுகிறது. ''உனது சித்தத்தை தமது சித்தமாக அவர் நிறைவேற்றுவதற்காக, அவர் சித்தத்தை உனது சித்தமாக செய். உனது சித்தத்திற்குமுன் மற்றவரின் சித்தத்தை அவர் அழித்துவிடுவதற்காக, அவரது சித்தத்திற்குமுன் உனது சித்தத்தை அழித்துவிடு'' என்று கமாலியேல் கூறுகிறார். இவ்வேண்டுதலை சேர்ப்பதற்கு ஆதரவளிக்கின்ற மாற் 14:36-இல் உள்ள இயேசுவின் செபத்துடன் இதனை ஒப்பிடலாம்.

விண்ணகத்தில் நடைமுறையிலுள்ள அதே சூழ்நிலை மண்ணுலகிலும் நிலவ

வேண்டும் என்னும் முழுமையான பொருளில் (கொலோ 1:20) இறைவனது சித்தத்தினை செயல்படுத்த வேண்டும் என்று இம்மன்றாட்டின் இரண்டாம் பகுதி (மத் 6:10 இ) கூறுகிறது. கிறிஸ்தவனுக்கு இந்த நிறைவேறுதல் நான்காம் நற்செய்தியில் விவரிக்கப்பட்டிதுப்போல, கிறிஸ்து தந்தைக்கு அளிக்கும் பதிலுக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். இதன் விளைவாக இறையரசு வருகைக்காகச் செபிப்பது கிறிஸ்துவின் வருகைக்காகச் செபிப்பதாகும்.

உ. நான்காவது வேண்டுதல் (மத் 6:11; லூக் 11:3):- எஞ்சிய வேண்டுதல்களில் வினைச்சொற்கள் செயற்பாட்டு நிலையிலிருந்து செய்வினை நிலைக்கு மாறுகின்றன. மத் 6:11 அ, மற்றும் லூக் 11:3 ஆ ஒன்றாய் உள்ளன. ''அன்றாட'' என்ற சொல்லைப் பற்றி பலதர்க்கங்கள் உண்டு. இதற்கு அவசியமான என்ற பொருளும் அளிக்கப்படும்,

ஊ. ஐந்தாவது வேண்டுதல் (மத் 6:12; லூக் 11:4 அ):- முதல் சொற்றொடரில் காணப்பட்ட வேறுபாடு மத்தேயுவின் குற்றங்களுக்குப் பதிலான லூக்காவின் பாவங்களாகும். ஆனால் இணையொத்த சொற்றொடரில் லூக்கா மத்தேயுவைப் பின்பற்றுவதால் இது அவ்வளவு பொருள் பொதிந்ததன்று. இயன்ற இடத்திலெல்லாம் லூக்கா ஒருபொருள் பிற சொற்களையே பயன்படுத்துகிறார். இரண்டிலும் பாவம் என்று மொழிபெயர்ப்பதே நன்று.

செமோனே எஸ்ரேயின் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆசீர்கள் இறைவனை ஆசீர்விக்கின்றன. மனமாற்றத்தில் பெருமகிழ்வு கொள்கின்ற அவர் அருளுடையவராகவும், அளவற்ற விதத்தில் மன்னிப்பவராகவும் உள்ளார். ஆனால் யூத செபங்களில் இம்மன்றாட்டுக்கு உண்மையாகவே இணையாக ஏதுமில்லை. மத்தேயுவில் (6:14-15-இல் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது) உள்ளது போன்ற மனிதனுடைய மன்னித்தலை இறைவனுடைய மன்னிப்பிற்கு நிபந்தனையாக்குவது செவிகளுக்கு விநோதமாகத் தோன்றலாம். மத்தேயுவின் இறந்த காலமானது (மன்னிக்கப்பட்டது) மனிதனுடைய செயலைச் சார்ந்து ஒரு கட்டுப்பாட்டை வெளிப்படுத்துவதாகத் தெரிகிறது. லூக்காவில் உடன் இயங்குகின்ற செயல்திறனை குறிப்பிடும் விதமாக நிகழ்காலம் பயன்படுகிறது. ஆயினும் காலமானது தீர்மானிக்கப்படாத அரமேயிக் வினைச்சொல்லைச் சுட்டிக்காட்டி நிகழ்காலமாக அல்லது எதிர்காலமாக வாசிக்கப்படலாம். புதிய ஏற்பாட்டு நிகழ்காலமானது சில நேரங்களில் எதிர்கால பொருளில் பயன்படுகிறது. லூக்காவின் பதிப்பை நிறைவேற்றப்பட்ட செயலாக இல்லாமல் குறிக்கோளாக வாசிக்கலாம். ''எங்கள் பாவங்களை மன்னியும் ஏனெனில் நாங்களும் மன்னிக்கிறோம்''. இப்போதுள்ள வாசகச் சூழ்நிலையில் இருப்பது போல, ஆண்டவரது செபத்தின் ஒரு பகுதியை மட்டும் விளக்குவதற்காக மத் 9:14-15-ஐப் புகுத்துவது, ஏற்புடையதாக அமையவில்லை. எதிர்காலப் பொருள் உணர்வானது இருநற்செய்திகளின் சீரியக் பதிப்புகளில் காணப்படுகிறது.

எ. ஆறாவது வேண்டுதல் (மத் 6:13 அ,ஆ; லூக் 11:4 ஆ):- யாக் 1:13-இன் நோக்கில் இவ்வேண்டுகோளானது விநோதமாகத் தெரியலாம். மேலும், ஒரு சில மொழிபெயர்ப்புகளிலும் பண்டைய வழிபாட்டு சடங்குகளிலும் ''சோதனைக்கு உட்படும்படி எங்களை விடாதேயும்'' என்று கூறப்படுகிறது. ''சோதனைக்குக் கீழ் எங்களை செல்ல விடாதேயும்'' என்று மொழிபெயர்த்து பொருள் கொள்ள முயற்சிகள் எடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ளன. காரணவினைச்சொல்லானது அனுமதிக்கும் உணர்வை கொண்டிருக்கக் கூடுமாயினும் எபிரேயம் காரண-காரியங்களை அவ்வளவு வேறுபடுத்துவதில்லை மற்றும் நிகழ்வது அனைத்தும் இறைவனின் ஆதிக்கத்தின் கீழ் வருவதாகக் கருதப்பட்டது. பெராகோத்தில் தூங்கப்போகுமுன் சொல்லப்படும், ஒரு செபமானது: ''பாவம், குற்றம், சோதனை அல்லது அவமதிப்பு ஆகியவற்றின் வல்லமைக்கு என்னை கொணராதேயும்; தீய தூண்டுதல்கள்

தவிர்த்து, நல்ல தூண்டுதல்கள் என்மீது ஆதிக்கும் கொண்டிருக்கக்கடவன'' என்று கூறுகிறது. இதனையொத்த சொற்கள் யூத செபநூலிலும் காணப்படுகின்றன. ''பாவத்திற்கோ அல்லது சோதனைக்கோ எங்களை நடத்திச் செல்லாதேயும்; தீய விருப்பங்கள் எம்மீது ஆட்சி செலுத்த விடாதேயும்''. மாற் 14:38-இல் இயேசு இத்தகையதொரு செபத்தையே அளிக்கிறார். இங்கு சோதனை என்ற சொல்லானது தேர்வாக அமையக்கூடிய உடனடி அபாயங்களைக் குறிப்பிடுகின்றன.

சோதனை என்பது முதன்மையாகத் தேர்வு என்று பொருள்படுமேயன்றி பாவத்திற்கு ஈர்ப்பதன்று. எழுபது நூல் வினைச்சொல்லையும் இடப்பெயரான மாசா என்பதையும் மொழிபெயர்க்கிறது (இறைவன் சோதனைக்குட்படுத்தப்பட்ட இடம்: யாத் 17:7; உப 6:16; சங் 94:6). வினைச்சொல்லானது 'அல்லலுருதல்' என்றும் மொழிபெயர்க்கப்படுகிறது. இச்சொல்லை விவிலியம் சிறப்பான முறையில் பயன்படுத்தும்போது, அது அதனுடைய சிறப்புரிமையான விவிலிய உபயோகமானது, மனிதரைச் சோதித்து அறிதலைக் குறிக்கிறது (ஆதி 22:1; யாத் 20:22; நீதி 2:22; தானி 1:14; எபி 11:17). இத்தகைய சோதனையானது இயேசுவிற்கும் (லூக் 22:28) எதிர்பார்க்கப்படவேண்டும் (சீரா 2:1-2). 1 கொரி 10:13-இன் நோக்கில் மீட்பிற்கான செபமானது, கடினமானதாகத் தோன்றலாம் (மாற் 14:35-36). இந்த வேண்டுதலானது, மெசியா காலக் கேடுகளாகிய சோதனையின் இறுதிக் காலத்தையே முதன்மையாக குறிக்கின்றன (மத் 24:21-29; மாற் 13:24; 1 பேதுரு 4:12). இறுதிக்காலப் பொருள் செபத்தில் பயன்படும் நோக்கத்திற்காக, சிறிது மாற்றப்பட்டிருக்கலாம் இச்செபம் சோதித்து அறியப்படுவதிலிருந்து விடுதலையைத் தேடுகிறது.

இறுதியாக, மத்தேயுவில் சேர்க்கப்பட்டுள்ள பகுதியைச் சேர்ப்பதாவது ''தீயோனிடமிருந்து (அதாவது சாத்தான், எதிர் கிறிஸ்து), எங்களை மீட்டருளும்'' என்று வாசிக்கப்பட வேண்டும். இச்சொற்கள் ஆண் பாலாகவோ அல்லது அஃறினையாகவோ இக்கலாம். ''தீயோன், தீமை'' என்ற இரண்டுமே புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. திதாக்கேயும் இத்தகைய வாசகத்தையே கொண்டுள்ளது. ஆனால் 10:5-இல் ''எல்லா தீமைகளினின்றும்'' என்று அஃறினையில் திருச்சபைக்குச் சாற்றிக்கூறப்படுகிறது. மேலே குறிப்பிட்ட யூத செபத்தில், தீமையானது தீயதூண்டுதலைக் குறிக்கிறது. தீமையானது மற்ற மனிதர், உட்தூண்டுதல், சூழ்நிலைகள், அல்லது இறுதியாக வெளிப்படுத்தப்படும் பகைவன் ஆகிய எவரிடமிருந்து வந்தாலும், மீட்பிற்கான செபம் பொருத்தமானதே. மேலும், இறுதியான, மூழ்கடிக்கும் சோதனையின்று விலக்கப்படுமாறு நாம் வேண்டலாம்.

ஏ. போற்றுரை (சில மொழிபெயர்ப்புகளில் மத் 6:13 இ):- திதாக்கே காட்டுவது போன்று இது ஒரு தெளிவான பிற்சேர்க்கை மற்றும் திருவழிபாட்டு வளர்ச்சி ஆகும். இது ''வல்லமையும் மாட்சியும் உமதே'' என்ற குறுகிய வடிவில் இது செபத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. இது பதிலுரையாக மக்களால் கூறப்பட்டது எனபது தெளிவு. ஆண்டவரது செபத்திற்கு பின்னர் இது கூறப்பட்டிருக்கலாம். திதாக்கே 9-10-இல் இது மும்முறை மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. முதல் இரண்டு பதிலுரைகள் ''மாட்சியானது என்றென்றும் உமதே'' (9:2-3; 10:2.4) என்றும் மூன்றாவது பதில் இயேசு கிறிஸ்துவின் வழியாக மாட்சியும் வல்லமையும் என்றென்றும் உமதே'' (9:4) அல்லது ''வல்லமை மற்றும் மாட்சிமை'' (10:5) என்றும் அமைந்துள்ளது. இவை அப்பம் மற்றும் திராட்சை இரசத்தின் மீதான ஆசிகள் மற்றும் செபங்களுக்கான பதிலுரைகளாகும் (9) மற்றும் அவற்றிற்கான நன்றியுரையும், திருச்சபைக்கான செபமுமாகும்(10).

போற்றுரையைச் சேர்ப்பது, ஆண்டவ்ரது செபத்தை மிக முழுமையான வழிபாட்டு செயலாக்குகிறது. பதிலுரை என்ற அளவில் ஒவ்வொரு வேண்டுதலின் பொருளையும்

அது தெளிவாக்கி வெளிப்படுத்தப்பட்ட நம் பிக்கைக்கு உட்பொருளை அளிக்கலாம். நிறைவேறுதலானது இறுதி நாளை எதிர் நோக்கியிருக்க வேண்டி இருந்தாலும் அரசு, வல்லமை மற்றும் மாட்சிமை முதலியன ஏற்கெனவே இறைவனின் கரங்களில் உள் ளன. அரசு அவருடையதென்பதற்காக இறைவனுடைய அரசிற்காகவும், மாட் சிமை அவருடையதென்பதற்காக அவரது திருப்பெயரைப் புனிதப்படுத்தவும், வல் லமை அவருடையதென்பதற்காக அவரது சித்தத்தைச், செயல்படுத்தவும் நாம் செபிக்க லாம். அப்பம், மன்னிப்பு, மற்றும் மீட்பு ஆகியவற்றிலும் நாம் பங்கேற்கலாம்; ஏனெ னில், இவை அரவது அரசுடன் வருகின்ற கொடைகள். அவை அவரது வல்லமையை எடுத்துக்கூறி அவரது மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன.

4. இறுதிக்காலமும் நிகழ் வாழ்வும்:- வாக்களிக்கப்பட்டு ஆனால் நிறைவேற்றப்ப டாத நிகழ்ச்சி நிலையைப்பற்றி போற்றுரை கூறுகின்றது. செபத்தை செபிக்க காரணமாக உள்ள விசுவாசத்திற்கு அடிப்படையாக இது உள்ளது. ஒவ்வொரு வேண்டுதலிலும் இறு திக்கால உண்மை மற்றும் நம்பிக்கை குறித்த முதன்மையான குறிப்பு இருப்பதை காண லாம். இது பெருமளவில் இப்போதுள்ள வாசகத்தில் காணப்படும் கடினத்தை விளக் குகிறது. முதல் மூன்று வேண்டுதல்களுக்கும் பதிலாக இறுதி உண்மை அமைய வேண் டும் என்பதை நாம் அறிந்துள்ளோம். ஏனெ னில் அவை இறைவன் எதை இறுதியாக முடிக்க வேண்டுமோ அதைப்பற்றிப் பேசு கின்றன,ஆயினும் ''விண்ணுலகில் நிறைவே றுவதுபோல் மண்ணுலகிலும்'' என்ற சொற் களின் மூலம், நமது சூழ்நிலையுடன் தொடர்பு கொள்ளுகின்றது. இறுதியான வேண்டுதல்கள் அரசினுடைய இந்த இறுதிக் கொடையுடன் நமது உறவைப் பற்றிப் பேசு கின்றன. அருகே வரவிருக்கும் அரசினு டைய நிறைவேறக்கூடிய கொடைகளை நமது இன்றைய நிலையுடன் ஈடுபடுத்துவ தற்காக வாசகம் ஏற்கெனவே மாற்றியமைக் கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இறுதிக்கால உணர்வு, முன்னேற்றபாடு, மன்னிப்பு மற்றும் மீட்பு ஆகியவற்றிற்காக மட்டுமின்றி இன்றைய அனுபவத்தின் எதிர் பார்ப்புக்களுக்காகவும் நாம் செபிக்கலாம். இவ்வாறு இறுதிக்கால அளவில் வரையறுக் கப்பட்ட ஒரு சமுதாயத்தின் செபமானது வழக்கில் நிகழ்காலத்திற்குரியதாகிறது.

5. இயேசுவினுடைய போதனையின் சுருக் கம்:- இந்த இடுக்கண்நிலையை வெளிப்ப டுத்துகின்றபோது ஆண்டவரது செபமா னது, அருகில் உள்ள அரசு மற்றும் இனி வரவிருக்கும் அரசு ஆகிய இரண்டிற்கும் இடையில் இயேசுவின் படிப்பினை(மற்றும் அனுபவம்)யில் இவ்விடுக்கண் நிலையிருப் பதை பிரதிபலிக்கிறது. இது, அவர் வலியு றுத்திய முதன்மைகளைப் பிரதிபலித்து, அவற்றை செபிக்கும் செயல்முறைக்குச் சாற் றிக் கூறுகிறது. கிறிஸ்துவுக்கு இருந்தது போல், இறைவனைச் சேர்ந்தவை நமது முதல் அக்கறையாக இருக்க வேண்டும். இந்த முன்னோக்கில் நமது தேவைகள் தங்க ளுக்குரிய இடத்தைப்பெறும் ஆண்டவர் கற் பித்த செபம் ''கடவுளின் அரசையும் அவ ருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங் கள்; இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த் துக் கொடுக்கப்படும்'' (மத் 6:33) என்னும் கட்டளையைச் செயல்படுத்துகிறது. நமது உண்மையான செல்வம் எங்குள்ளது என் பதை உறுதியாக எடுத்துக் கூறுவதால் நமது காரியங்களின் சரியான இயல்பை இம் மன் றாட்டுக்கள் நிர்ணயிக்கின்றன (6:9-21).

6. திருவழிப்பாட்டு மற்றும் தனிப்பட்ட வழக்கு:- வாசகங்களாலும், குறிப்பாக போற்றுரையாலும் வெளிப்படுத்தப்பட்ட வளர்ச்சியுற்ற வடிவங்கள், தனிப்பட்ட மற் றும் குழு (வழிபாடு) வழக்கின் தகுதியைச், சுட்டிக்காட்டுகின்றன. எது எப்படியிருந்தா லும் ஆண்டவருடைய செபமானது, தனிப் பட்ட வழக்கமுறையும் பொது வழிபாட்டு அல்லது திருவழிபாட்டு அமைப்பில் செயல் பட வேண்டிய முன்னுரிமைகளும் அடிப்ப டையாகக் கொள்ளவேண்டிய ஒருதிட் டத்தை அளிக்கிறது. ஒவ்வொருவழிபாட்டுச்

செயலிலும் செபத்தின் வேறுபாடற்ற உப யோகம் அவ்வழிபாட்டை ஒரு உச்சநி லைக்கு கொண்டு வரவும் அதே சமயத்தில் ''இவ்வாறு செபிக்க வேண்டும்'' என்று வழிபடுவோர் ஒவ்வொருவருக்கும் நினைவு படுத்தவும் துணைபுரிகிறது.

ஆண்டவர் முன் தடைப்பட்டிருத்தல் (DETAINED BEFORE THE LORD)

இப்பதம் ஏதோ ஒரு சமய நோக்கிற்காக குருக்களின் பாதுகாவலில் புனித இடங்க ளில் அடைபட்டிருப்பதை விவரிக்கிறது. ஆனால் அதன் பொருள் தெளிவாக இல்லை. சவுலிடமிருந்து தப்பியோடும்போது, நோபு என்ற இடத்தில் உள்ள புனித இடத்தில், தாவீது சந்தித்த ஏதோமியானான தோயேகு வைப் பற்றி இது கூறப்படுகிறது. சமயக் காரியங்களுக்காகத் தடை விதித்தலை உணர்த்தும் சொல்லும் (நெக 6:10; எரே 36:5) இப்பதமும் ஒரே வேரிலிருந்து வருவ தாகத் தெரிகிறது. ஒருவேளை தோயேகு ஏதோ ஒரு சுத்திகரச் சடங்கை அனுசரித்துக் கொண்டிருந்திருக்கலாம் அல்லது நேர்ச்சிக் கடனைச் செலுத்திக் கொண்டிருந்திருக்க லாம் அல்லது ஒரு வேளை வழக்கமாக வழிபட வந்தவர்களில் ஒருவராக இருக்க லாம். தொழுநோயுடையோர் என்று ஐயப் பட்டோரும் புனித இடத்தில் அடைபட்டி ருந்தனர் (காண்க லேவி 13:4.11.31).

ஆண்டு (YEAR)

விவிலிய காலத்தில், இஸ்ராயேல் மக்கள், தங்கள் அரசியல், பொருளாதார, சமூக, சமய வளர்ச்சியில் வேறுபட்ட காலக்கணிப் புகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஒவ் வொன்றிலும் ஆண்டு வெவ்வேறு விதத்தில் கணிக்கப்பட்டது.

மிகத்தொன்மையான ஆண்டுக் கணிப்பு கானானியர்களிடமிருந்து கடன் வாங்கப்பட் டது. இது, ஐம்பதுநாள் காலக் கணிப்பு என்று அழைக்கப்பட்டது. இது சாலமோன் காலம் வரைப் பின்பற்றப்பட்டது. இது விவசாயப் பண்புடையது; அறுவடையை முதன்மையாகக் கொண்டு கணிக்கப்பட் டது. இதன்படி முதல் கதிர்களை அறுவடை செய்யும் நாள் புத்தாண்டு நாளாகும். இதன் படி, ஆண்டு 50 நாட்கள் கொண்ட எழு வாரங்களும் ஒரு நாளும் அடங்கியிருந்து, முடிவில் வரும் நாள் புனித நாளாகும். இந்த ஏழு காலப் பிரிவுகளோடு, ஏழுநாட்கள் கொண்ட இரு விழாக் காலங்கள் சேர்க்கப் பட்டன. ஒன்று நான்காவது பிரிவுக்குப்பின் கொண்டாடப்பட்டது. இது கூடார விழாவா கும். மற்றது ஏழாவது பிரிவுக்குப்பின், ஆண்டு முடிவாகக் கொண்டாடப்பட்டது. இது பாஸ்கு - புளியாத அப்ப விழாவாகும். இதை அடுத்து ஒருநாள், புத்தாண்டு நாளா கச் சேர்க்கப்பட்டது. மிகவும் முக்கியமான நாளாகும். இவ்வாறு ஓர் ஆண்டில் 365 நாட்கள் அடங்கியிருந்தன. இக்கணிப்பு செயலளவில் சூரியனை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இக்காலக் கணிப்பு சந்திரனையும், மாதங் களையும் கவனத்தில் கொள்ளவில்லை. அறுவடைக் காலம் இடத்திற்கு இடமாறிய தால், இத்தகைய காலக் கணிப்பு அந்தந்த இடத்தைப் பொறுத்தது. ஆகவே நாடு முழு வதற்கும் ஒரே காலக் கணிப்பு முறை இருந் திருக்க முடியாது. ஆனால், இஸ்ராயேலர்க ளுக்கு முந்திய கானானியர் காலத்தில் நகர அரசுகள் விளங்கின. இஸ்ராயேலரிடையே இனம் அடிப்படையாக இருந்தது. இரண்டிற் கும் விவசாயம் முக்கியத்துவம் வாய்ந்திருந் தது. ஆகவே இத்தகைய காலக் கணிப்பு அன்றாட வாழ்வுக்கும் போதியதாக இருந் தது.

பல யூத இனங்களும் ஒன்றாக இணைந்து, தாவீது, சாலமோன் காலத்தில் இஸ்ராயேல் பேரரசாக உருவெடுத்து, அதன் விளைவாக சர்வதேச உறவுகளும் வாணிபமும் தொடங் கின. இந்நிலையில், ஐம்பதுநாள் காலப்பி ரிவு ஆண்டுக் கணிப்பு போதிய பயனை அளிக்கவில்லை. எல்லா யூத இனத்தவர்க ளுக்குப் பொதுவான மட்டுமல்ல, அயலா ரோடும் பொதுவான ஆண்டுக்குறிப்பேடு, அதாவது சர்வதேச ஆண்டுக் குறிப்பேடு தேவைப்பட்டது. கி.மு. 10-ஆம் நூற்றான்

டைப் போல் தீரியர்கள் குடியேறுவதிலும், வாணிபத்திலும் முதன்மைபெற்று விளங்கினர். அவர்களிடம் ஒரு சர்வதேச ஆண்டுக் குறிப்பேடு வழக்கில் இருந்தது. இது சூரியனை அடிப்படையாகக் கொண்டது. இதைச் சாலமோன் தனது தீரிய கூட்டாளிகளிடமிருந்து கடன்வாங்கி, இஸ்ராயேலர்களுக்கு அதிகாரப் பூர்வமானதாக்கினார். இலையுதிர் காலத்தில் இரவும் பகலும் சமமான நாளில் புத்தாண்டு நாளைக் குறித்தார் சாலமோன். இதோடு ஆண்டுகாலத்தைத் துல்லியமாகக் கணிக்க முடிந்தது. சூரியனை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆண்டில் வழக்கமாக 365 நாட்கள் இருந்தன. அவசியம் ஏற்படும்போது லீப் ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டது. இந்த ஆண்டுக் கணிப்பு முப்பது நாட்களைக் கொண்ட பன்னிரண்டு மாதங்களையும் கொண்டது. ஆண்டு முடிவில் 5 நாட்கள் அல்லது லீப் ஆண்டில் 6 நாட்களும் சேர்க்கப்பட்டன. தொடக்கத்தில் மாதங்கள் தீரியப் பெயர்களாலேயே அழைக்கப்பட்டன. அவற்றில் மூன்று பெயர்கள் விவிலியத்தில் காணப்படுகின்றன: சீவ் (1 அர 6:1.37), ஏத்தானிம் (8:2), பூல் (6:38). ஒருவேளை அபீபு (யாத் 13:4; 33:15; 34:18; உப 16:1) என்ற பெயரும் இதில் சேர்ந்ததாக இருக்கலாம். பிற்காலத்தில் அசீரிய காலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டு, மாதங்கள் எண்களால் குறிக்கப்பட்டன. ஆண்டு, வசந்தகால பகல்-இரவுச் சம நாளிலிருந்து கணிக்கப்பட்டது.

சூரியனை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆண்டுக் குறிப்பேடு, ஆலயம் இருந்த மட்டும், யூதாவில் அதிகாரப்பூர்வமானதாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் இது பழைய ஆண்டுக் குறிப்பேட்டை முழுவதும் அகற்றிவிடவில்லை. விவசாயிகளும் இடையர்களும் பழையதையே போற்றிக் கடைப்பிடித்ததாகத் தெரிகிறது. கி.மு. 586-இல் பாபிலோனியர் யூதாவை வென்று அழித்தபோது, நாட்டில் எஞ்சியிருந்தோரிடையே விவசாயம் முக்கியத்துவம் பெற்றது (2 அர 25:12). அதன் விளைவாக பழைய ஆண்டுக் குறிப்பேடு முதன்மைபெற்றது. ஆனால் கி.மு. 516-இல் இரண்டாவது ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டபோது, சூரியனை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுக் குறிப்பேடு, பாலஸ்தீனத்திலிருந்த யூதர்களிடையே கி.மு. 485-இல் 2வது ஆலயம் அழிக்கப்படும்வரை, அதிகாரப்பூர்வமானதாக இருந்தது. இக்காலத்திலும், பழைய ஆண்டுக் குறிப்பேடு கிராமப்புறங்களில் சிறப்புப் பெற்று விளங்கியது. இரண்டாவது ஆலயம் அழிக்கப்பட்டபின், இதுவே பாலஸ்தீன யூத மக்களிடையே பொதுவாகப் பயன்பட்டது. ஆனால் இதில், சூரியனை அடிப்படையாகக் கொண்ட காலக்கணிப்பிலிருந்து சில மாற்றங்கள் புகுத்தப்பட்டன. அவற்றில் ஒன்று ஆண்டை மாதங்களாகக் கணிப்பதாகும். இந்த மாற்றியமைக்கப்பட்ட ஆண்டில் 52 வாரங்கள் அல்லது 364 நாட்கள் அடங்கும். மேலும் மூன்றாவது, 6-வது, 9-வது, 12-வது மாத முடிவில் ஒருநாள் சேர்க்கப்பட்டது. இத்தகைய ஆண்டுக் குறிப்பேடு பெரும்பாலும் கிராம மக்களைக் கொண்ட பல யூதப்பிரிவுகளாலும், காலப்போக்கில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து, தங்கள் உள்நாட்டுக் காரியங்களிலும் சமய வழக்கிலும் பயன்படுத்தப்பட்டது. இந்த ஆண்டுக் குறிப்பேடு, யூபிலிநூல், ஏனோக்நூல், கும்ரான் ஏடுகள் ஆகியவற்றிலும் ஒரளவு புதிய ஏற்பாட்டிலும் இடம் பெற்றுள்ளது.

கி.மு. 450-ஐ ஒட்டி சந்திரனை அடிப்படையாகக் கொண்ட முழுவதும் புதியதோர் ஆண்டுக் குறிப்பேடு புகுத்தப்பட்டது. ஆனால் இதுபற்றி, விவிலியக் காலத்தைச் சேர்ந்த செய்திகள் வெகுசிலவே கிடைத்துள்ளன. குருக்கள் சட்டம் பற்றிய செய்திகளிலிருந்து இதுபற்றி சிறிது அறிகிறோம். இதன்படி சந்திரனை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆண்டுக்குறிப்பேட்டில் 354 நாட்கள் உண்டு; மாறிமாறி 30 அல்லது 29 நாட்கள் கொண்ட 13-வது மாதம், சந்திரன், சூரியன் அடிப்படையில் தேவைப்பட்டபோது, இடைமாதமாகச் சேர்க்கப்பட்டது.

மூன்றாவது ஆலயம் இருந்தமட்டும், இம்முறைக் கணிப்பு குருக்களால் ஒழுங்கு செய்

யப்பட்டது. இதில் எண்ணிக்கையால் மாதங்களைக் குறிக்கும் பழக்கம் ஒரு காலத்திற்கு நீடித்தது. காலப்போக்கில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த ஆண்டுக்குறிப்பேட்டில் மாதங்கள் பாபிலோனியப் பெயர்களால் குறிக்கப்பட்டன. ஒருவேளை இந்தக் காலத்தில்தான். சூரிய உதயத்திலிருந்து நாளைக் கணிக்கும் பழக்கம் கைவிடப்பட்டு, சூரிய மறைவிலிருந்து நாளைக் கணிக்கும் பழக்கம் வழக்கில் வந்தது. இந்த மாற்றங்களோடு, பாஸ்குவிழா, கூடார விழா ஆகிய இரு ஏழுநாட்கள் விழாக்கள் முதல், 7வது மாதங்களில் பௌர்ணமி நாட்களின் சூரிய மறைவோடு தொடங்கின. சந்திரனை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய ஆண்டுக் குறிப்பேடு விவிலியக் கால முடிவுரை யூதர்களால் கடைப்பிடிக்கப்பட்டது.

கி.பி. 70-ல் யூதநாடு வீழ்ச்சி, ஏரோது கட்டிய ஆலயம் உரோமையரால் அழிக்கப்பட்டது ஆகியவற்றுக்குப்பின் குருக்களின் அதிகாரம் விரைவில் மறைந்து போயிற்று. காலக்கணிப்பு ராபிகளின் பொறுப்பில் வந்தது. இவர்களால் அடுத்த மூன்று நூற்றாண்டுகளில், சந்திரனை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆண்டுக் குறிப்பேடு மேலும் வளர்ச்சியடைந்தது. இவர்கள் அம்மாவாசை நாளைத் துல்லியமாகக் கணித்தனர். இந்த ஆண்டுக் குறிப்பேட்டை, சூரியனை அடிப்படையாகக் கொண்ட காலக் கணிப்போடு ஒத்துப்போகச் செய்தனர். இத்தகைய ஆண்டுக் குறிப்பேடு இன்றுவரை யூத சமயக் காலக்கணிப்பில் பயன்படுகிறது.

ஆண்டுக் குறிப்பேடு (CALENDAR)

எல்லா பழங்கால மக்களைப்போல் எபிரேயரும் ஆண்டைக் கணிக்க ஒரு அமைப்பைப் பயன்படுத்தியுள்ளனர். இதில் இக்கால அறிவியல் துல்லியத்தைக் காண முடியாது. இஸ்ராயேலர் பயன்படுத்திய ஆண்டுக் குறிப்பேடுபற்றி முழுமையான விளக்கமும் அளிக்க முடியாது. ஆயினும் விவிலியத்திலும் பிற பழங்கால மேற்காசிய ஏடுகளிலிருந்தும் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு ஓரளவு போதிய தெளிவோடு இந்த ஆண்டுக் குறிப்பேட்டை பற்றிக் கூறலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எந்த ஆண்டுக் குறிப்பேட்டு முறையைப் பயன்படுத்தினார்கள் என்று உறுதியாகக் கூறுவது கடினம். அதோடு, விவிலியக் காலத்தில் ஆண்டுக் கணிப்பு முறை மாறிக்கொண்டே இருந்தது என்பதை மனதில் கொண்டிருப்பது நன்று.

இஸ்ராயேலிலும், பழங்கால மேற்காசியாவிலும் காலக்கணிப்பு, சூரியன், சந்திரன், விண்மீன்கள் போன்ற வான்கோள்களின் இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அடுத்து இந்தக் காலக் கணிப்பை, விவசாயப் பருவங்கள், வழிபாட்டு விழாக்கள், வரலாற்றில் யாவேயின் செயல்கள் போன்றவையும் பாதித்தன. இஸ்ராயேலின் இறையாட்சி முறையில் அரசியல் கருத்துக்கள் அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை. காலக்கணிப்பு அடிப்படைஅளவு ஆண்டு ஆகும். ஆனால் அது அளக்கப்பட்ட முறைகள் வேறுபட்டன.

ஆண்டு, சூரியன் சந்திரன் ஆகியவற்றின் இயக்கங்களைக் கொண்டு அளக்கப்பட்டது. சூரிய ஆண்டின் தொடக்கம் ஆண்டுதோறும் வரும் இரண்டு பகலிராச் சம நாட்களில் ஒன்றாகும். இது வசந்த காலத்தையோ, இலையுதிர் காலத்தையோ சார்ந்ததாக இருக்கலாம். சூரிய ஆண்டு சாதாரணமாக 364 அல்லது 365 நாட்களையும், முப்பது நாட்களைக் கொண்ட பன்னிரண்டு மாதங்களையும் கொண்டது. ஒவ்வொரு காலாண்டு முடிவிலும், ஆண்டின் தொடக்கத்திலும் ஒரு நாள் சேர்க்கப்பட்டது. இத்தகைய காலக்கணிப்பு யூபிலிநூல், 1 ஏனோக் நூலிலும், கும்ரான் இலக்கியங்களிலும் காணப்படுகிறது.

சந்திர ஆண்டுக்கணிப்பின் அடிப்படை அளவு மாதமாகும். மாதம், அம்மாவாசைக்குப்பின் பிறை காணப்பட்ட மாலையோடு தொடங்கியது. அம்மாவாசை புனிதமான நாளாகக் கருதப்பட்டது (எண் 10:10; 28:11; சங் 81:3; ஏச 66:23; ஓசே 2:11; ஆமோ

8:5). விழாக்கள் மாத மத்திய பௌர்ணமி யன்று கொண்டாடப்பட்டன (சங் 81:3). சந்திர ஆண்டில் 29.5 நாட்கள் கொண்ட பன்னிரண்டு மாதங்கள் இருந்தன. இதன்படி ஆண்டு 354 நாட்களைக் கொண்டிருந்தது. அதாவது சூரிய ஆண்டிலிருந்து 11 நாட்க ளைக் குறைவாகக் கொண்டிருந்தது. இரண்டு ஆண்டுக் கணிப்பையும் ஒத்துப் போகச் செய்ய அவ்வப்போது 13ஆம் மாதம் இடையில் செருகப்பட்டது. இதுவும் காலத் திற்கேற்ப மாறுபட்டது. பிற்கால யூதத்துவத் தில் ஒவ்வொரு 19 ஆண்டுகளில் ஏழு ஆண்டு களில் 13ஆம் மாதமான இரண்டாம் அதார் இடைச் செருகலாக அமைந்தது.

இஸ்ராயேலின் ஆண்டுக்கணிப்பில், சூரிய, சந்திரக் கூறுகளும் இடம் பெற்றன. இதற்குச் சான்றுகள்: யாத் 23:14-17; 34:18-26. விழாக்கள் சூரியக் கணிப்பைச் சேர்ந்தவை. அவை பகலிராச் சமநாட்களில் கொண்டா டப்பட்டன. ஆனால் மாதங்கள் சந்திரக் கணிப்பைச் சேர்ந்தன; புதிய ஆண்டு, வசந்த காலத்திய பகலிராச் சமநாளை ஒட்டிய பௌர்ணமியன்று தொடங்கியது. ஆகவே இஸ்ராயேலின் ஆண்டுக் குறிப்பேட்டை சூரிய-சந்திரக் காலக் கணிப்பென்று கூற லாம். இது, காலப்போக்கில் வேறுபட்டா லும், இஸ்ராயேல் வரலாறு முழுவதும் பயன்பட்டது.

மாதங்கள், சந்திரனின் இயக்கத்தின் அடிப் படையில், கணிக்கப்பட்டன. இஸ்ராயேலர் சந்திரனைப் பற்றி முழுதும் அறிந்திருக்க வில்லையென்றாலும் 29.5 நாட்களில் முழுநி லவு வரும் என்று அறிந்திருந்தனர். இடைச் செருகலாக இரண்டாம் ஆதார் என்ற 13ஆம் மாதம் எவ்வாறு கணிக்கப்பட்டது என்ப தற்கு எந்தச் சான்றும் காணப்படவில்லை. தொடக்கத்தில் மாதங்களைக் குறிக்க எண் களே பயன்பட்டதாகத் தெரிகிறது. பிறகு கானானியப் பெயர்களை இஸ்ராயேலர் ஏற் றுக் கொண்டனர். அப்பெயர்களில் நான்கு விவிலியத்தில் இடம் பெறுகின்றன (யாத் 13:4; 1 அர 6:1.37; 8:2). நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தில் பாபிலோனியப் பெயர் கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன (நெக 1:1; 6:15; எஸ்த 2:16; 3:7; 8:9; எச 1:7). ஆயினும் மாதங்களைக் குறிக்கும் எண்க ளைப் பயன்படுத்தும் முறை தெடர்ந்து இருந்து வந்தது (1 அர 6:1; எஸ்த 3:7; யாத். 12:2; 13:4; ஆதி 7:11; யாத் 19:1; உப 1:3; எஸ் 10:9). மூன்று கணிப்புகளும், வசந்தகா லத்தில் தொடங்கிய ஆண்டையும், 12 மாத அமைப்பையும் கொண்டிருந்தன.

விவிலியத்தில் காணப்படும் மாதங்களின் பெயர்கள்

இஸ்ராயேல் (எண்கள்)	கானானியர்	பாபிலோனியர்	இக்காலம்	தமிழ்
1	அபீபு	நீசான்	மார்ச்-ஏப்ரல்	பங்குனி
2	சீவ்	இயார்	ஏப்ரல்-மே	சித்திரை
3	—	சிவான்	மே-ஜுன்	வைகாசி
4	—	தம்முசு	ஜுன்-ஜுலை	ஆணி
5	—	அபு	ஜுலை-ஆகஸ்ட்	ஆடி
6	—	எலூல்	ஆகஸ்ட்-செப்டம்பர்	ஆவணி
7	ஏத்தானிம்	திசுரி	செப்டம்பர்-அக்டோபர்	புரட்டாசி
8	பூல்	மர்கேஸ்வன்	அக்டோபர்-நவம்பர்	ஐப்பசி
9	—	கிஸ்லூ	நவம்பர்-டிசம்பர்	கார்த்திகை
10	—	தெபேத்து	டிசம்பர்-ஜனவரி	மார்கழி
11	—	செபாத்து	ஜனவரி-பெப்ரவரி	தை
12	—	அதார்	பெப்ரவரி-மார்ச்	மாசி

வாரங்கள் (யாத் 3:22; லேவி 12:5), ஓய்வு நாட்கள் (லேவி 23:3.15; எண் 28:9), நாட்கள் (என் 28:3.16-18) ஆகியவை மற்ற கால அளவைகளாகும். விவசாயப் பருவங்கள் (யாத் 34:21; எண் 13:20; ரூத் 1:22), வரலாற்று நிகழ்ச்சிகள் (யாத் 12:40-42; 1 அர 6:1; எச 33:21), வழிபாட்டு விழாக்கள் ஆகியவையும் காலம் கணிக்கப்பயன்பட்டன. விழாக்கள் விவசாய வட்டத்தோடும் பகலிராச் சமநாட்களோடும் தொடர்புபடுத்தப்பட்டன. மூன்று முக்கிய விழாக்களான பாஸ்கு புளியாத அப்ப விழா (யாத் 23:15; லேவி 23:5-6) முதற்கனிகளின் அல்லது வாரங்களின் விழா (யாத் 23:16; லேவி 23:15-22) ஒன்று சேர்த்தலின் அல்லது கூடாரங்களின் விழா (யாத் 23:16; லேவி 23:33-36) ஆகியவை முறையே வசந்தகாலத்திலும், கோடைக்காலத்தின் தொடக்கத்திலும், இலையுதிர் காலத்திலும் நடைபெற்றன.

ஆண்டு வசந்த காலத்தில், நீசான் மாதத்தோடு தொடங்கியது என்பதற்கு பலத்த விவிலியச் சான்றுகள் உண்டு. இது மோசேயோடு தொடர்புடையது. பாபிலோனியக் காலக்கணிப்பும், எபிரேயக் காலக் கணிப்பும் வசந்த காலத்தில் தொடங்கின. ஆயினும் ஆண்டு இறையுதிர் காலத்தில் திசுரி மாதத்தோடு தொடங்கியது என்ற வாசகங்களும் உள்ளன (யாத் 34:22; லேவி 25:9; நெக 1:1; 2:1). இது மெசப்பொத்தாமிய கானானிய கலாச்சாரங்களின் பாதிப்பாக இருக்கலாம். மேலும் இது, விவசாய, பருவ காலக் கணிப்போடு தொடர்புடையது. அதிகாரப்பூர்வமானதன்று. நமது கால கல்வி ஆண்டு, நிதி ஆண்டு போன்றது. மேலும், பழயஏற்பாட்டில் புத்தாண்டு கொண்டாட்டம் பற்றி எந்த உறுதியான குறிப்பும் இல்லை.

புதிய ஏற்பாட்டில் சிலசமயம் ஆட்சி செய்யும் உரோமை அல்லது யூத அதிகாரிகள் (லூக் 2:1-2; 3:1-2) அல்லது பொதுவாக, யூதவழிபாட்டுக் கணிப்பு (யோவா 2:13; 7:2; அ.ப. 2:1; 1 கொரி 16:8) ஆகியவற்றோடு தொடர்புபடுத்திக் காலம் கணிக்கப்படுகிறது. கி.பி. 70க்கு முன் யூதர்கள் சதுசேயரின் கணிப்பைப் பின்பற்றினர். ஏனெனில் அப்போது இவர்கள்தான் ஆலயப் பணியை முறைப்படுத்தினர். அதற்குப்பின் பரிசேயர் கணிப்பு வழக்கில் வந்தது. யூதத் தலைவர்கள் பயன்படுத்திய ஆண்டுக்குறிப்பேடும், இயேசுவும் அவரது சீடர்களும் பயன்படுத்திய ஆண்டுக்குறிப்பேடும் வெவ்வேறானது என்பது யோவா. 18:20-இலிருந்து தெளிவாகுகிறது. ஏனெனில் பாஸ்குவிழா இரு குழுவினராலும் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்படுகிறது. ஒருவேளை இயேசு யூபிலி நூலிலும், கும்ரான் குழுவிலும் பயன்பட்ட காலக் கணிப்பைப் பின்பற்றியிருக்கலாம்.

ஆதா (ADAH - அணிகலன், ஆபரணம்)

1. இலாமேக்கின் இரண்டு மனைவியருள் முதல் மனைவியின் பெயரே ஆதா. இவள் யாபாலுக்கும், யூபாலுக்கும் தாய் (ஆதி 4:19-21.23).

2. ஏசாவின் மனைவியருள் ஒருத்தி. இத்தியனான எலோனின் மகளும் எலிப்பாசின் தாயும் ஆவாள் (ஆதி 36:2.4.10.12.16). ஏசா, ஆதா இவர்களது திருமணம், கானானிய பண்பாடு ஏதோமில் கலந்ததைக் குறிக்கிறது.

ஆதாது (ATAD - முட்புதர்)

யாக்கோபு அடக்கம் செய்யப்பட்டதை விவரிக்கும் பகுதியில் சொல்லப்பட்டுள்ள ஒரு கானானிய ஊர். மரண ஊர்வலம், கெபிரோனுக்கு செல்லும் வழியில் ஆதாத்திலுள்ள தானிய சாகுபடி நிலத்தில் நின்றது. இங்கு எகிப்தியர்கள் இறந்த குலமுதியவர்க்கு 7 நாள் துக்கம் அனுசரித்தனர். ஆகவே இவ்விடம் ஆபேல்-மிசுராயிம் என்ற பெயரையும் பெற்றது. இதன் பொருள் ''எகிப்தியர்களின் புலம்பல்'' என்தாகும் (ஆதி 50:10-14). இது ஆபேல்மிசுராயிம் என்ற பெயரின் ஒரு பொதுப்பணி விளக்கமாக இருக்கலாம்.

ஆதாது யோர்தானுக்குக் கிழக்கேயுள்ளது என்பது சிறிது குழப்பத்தை உண்டாக்குகி

றது. ஏனெனில் எகிப்திலிருந்து கெபிரோனுக்குச் செல்லும் நேர்வழியானது முழுவதுமாக யோர்தானுக்கு மேற்கேயிருக்கும். மரண ஊர்வலமானது சீனாய் தீபகற்பம் வழியாக பழைய வணிகப் பாதையில் சென்றது என்பது ஒருவகையான விளக்கமாக இருக்கலாம். யோர்தானுக்குக் கிழக்கே இருந்து கொண்டு ''யோர்தானுக்கு அப்பால்'' என்று சொல்லும்பொழுது அது ''யோர்தானுக்கு மேற்கே'' என்றாகிவிடுகிறது.

மேதேபாவிலுள்ள கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல வண்ண வரைபடம் எரிகோவுக்கும், சாக்கடலுக்குமிடையில் பேத்-அக்லாவுக்கு (விவிலிய பேத்து-கொகிலா) அருகில் ஆலோன் ஆதாது என்ற ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆதாமின் நூல்கள் (BOOKS OF ADAM)

இது, ஆதாம் ஏவாள் கதையை விவரிக்கும் திருமுறை சேராத புறநூல்களுக்குப் பொதுவான பெயர். இவற்றுள் மிக முக்கியமானவை ''மேசேயின் காட்சிகள்'' என அதன் முதல் பதிப்பாசிரியரால் தவறாகப் பெயரிடப்பட்ட கிரேக்க நூலும், ''ஆதாம் ஏவாளின் வாழ்க்கை'' என்ற இலத்தீன் நூலும் ஆகும். இரண்டும் நெருங்கிய தொடர்புடையன. ஆனால் ஒரே நூல் அல்ல. முதலில் ஒரே ஒரு எபிரேய அல்லது அரமேயிக் நூல் இருந்தது, அதிலிருந்து இவை இரண்டும் எழுதப்பட்டன, என்ற கருத்தை ஏற்பதோ, மறுப்பதோ மிகக்கடினம்.

மோசேயின் காட்சிகள் என்ற நூல் இன்ப வனத்திலிருந்து விரட்டப்படுவதாகத் தொடங்குகிறது. ஆபேலின் கொலைபற்றி ஏவாள் கனவு காண்கிறாள். சேத்தின் பிறப்பு வர்ணிக்கப்பட்டபின், ஆதாமின் வாழ்க்கை பற்றிய மற்ற காரியங்களை விட்டுவிட்டு ஆதாமின் இறப்பு விவரிக்கப்படுகிறது. வாழ்வில் முதல் முறையாக ஆதாம் நோயுற்று வேதனை அனுபவிக்கிறார். அதைக்கண்டு அவரது பிள்ளைகள் வியப்புறுகின்றனர். சேத்துவும், ஏவாளும் ஆதாமின் துன்பத்தைப் போக்க, வாழ்வின் மரத்திலிருந்து எண்ணெய் பெற்று வரலாமென்று இன்ப வனத்திற்கு ஓடி வருகின்றனர். வழியில் சேத் ஒரு விலங்கால் தாக்கப்படுகிறார். அவ்விலங்கு மனித வீழ்ச்சிக்குப் பின் ''கடவுளின் சாயலான'' மனிதனை மதிப்பதில்லை. ஆதாம் குணமடைய முடியாது. இறந்த ஆக வேண்டுமென்பதை மிக்கேல் விளக்குகிறார். திரும்பி வந்து ஆதாம் இறந்து கொண்டிருப்பதைக் காண்கின்றனர். ஆதாமின் வேண்டுகோளுக்கிணங்க ஏவாள், சாத்தான் பாம்பு வடிவில் வந்து தங்களை ஏமாற்றியதையும் அதன் சோதனைக்கு உட்பட்டதையும் கூறுகிறாள். ஆதாம் இறக்கிறார். அவரது ஆன்மா தூய்மையாக்கப்பட்டபின் மூன்றாம் வானத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதை ஏவாளும் சேத்தும் காண்கின்றனர். வான தூதர்கள் ஆதாம், ஆபேல் உடல்களுக்குள் நுழைவதை சேத் மட்டும் பார்க்கிறார். ஏனெனில் அவ்வுடல்களை ஏற்றுக் கொள்ள பூமி மறுத்துவிட்டது. ஒரு வாரம் கழித்து ஏவாள் இறக்கிறாள். அவளை எவ்வாறு அடக்கம் செய்ய வேண்டுமென்று மிக்கேல் கற்றுக் கொடுக்கிறார். ஆறு நாட்களுக்கு மேல் துக்கம் அனுபவிக்கக் கூடாதென்றும், ஏழாம் நாள் ஓய்வு நாளாதலின் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்:

இலத்தீன் படிவம், ஏவாள் தங்களது வீழ்ச்சி பற்றிக்கூறுவது பற்றிய நிகழ்ச்சியுரையைத் தவிர மற்றவற்றில் மோசேயின் காட்சிகளைவிடப் பொதுவாகச் சுருக்கமாக உள்ளது. ஆயினும் அதில் இல்லாத பின்வரும் பல நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது.

இன்ப வானத்திலிருந்து விரட்டப்பட்டபோது ஆதாமும் ஏவாளும் மனமுடைகின்றனர். துன்பங்களுக்கெல்லாம் தானே காரணமென்று கூறி தன்னைக் கொன்று விடும்படி ஏவாள் கேட்கிறாள். தங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாக பல நாட்கள் தண்ணீரிலேயே நிற்கலாமென்கிறார் ஆதாம். அவர் யோர்தான் நதியிலும், அவள் திகிரிசு நதியிலும் நிற்கின்றனர். பதினெட்டு நாட்களுக்குப்பின் சாத்தான், ஒளி மயமான வானதூதர் வடிவில்

ஏவாளுக்குத் தோன்றி, அவளுடைய பாவப் பரிகாரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் நீரை விட்டு வெளிவரலாம் என்று கூறியது. ஆனால் ஆதாம் சாத்தானை அடையாளம் கண்டு கொண்டார். உடனே சாத்தான் தான் அவர்களை வெறுத்ததற்கான காரணத்தைக் கூறியது. ஆதாம் ''கடவுளின் சாயலாகப்'' படைக்கப்பட்டபோது, அவரை வணங்கும் படி வான தூதர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். சாத்தான் தனது கௌரவத்தால், தன்னைவிடத் தாழ்ந்த படைப்புக்குத் தலை வணங்க மறுத்தான். எனவே இந்நிகழ்ச்சியின் விளைவாக அவன் வீழ்ச்சியடைந்து பாதாளத்திற்குத் தள்ளப் பட்டான் (முகமது பேயின் வீழ்ச்சி பற்றிய இந்த விவரிப்பை ஏற்றுக் கொள்கிறார்; கும்ரான் 7:1 தொ). மேலும் இலத்தீன் வடிவம் காயினின் பிறப்பையும், தான் கண்ட காட்சியை ஆதாம் சேத்திடம் கூறுவதையும் விவரிக்கின்றது.

இந்நூல்களில், ஆலயம் இருப்பது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப் படுகிறது. ஒரு வேளை கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்கத்தில் எழுதப்பட்டிருக்கலாம். கடவுளுக்கு எதிராகப் புரட்சி செய்து வீழ்ச்சியடைந்த வானதூதரான சாத்தான் பற்றி விரிவடைந்த கருத்து இக்காலத்தோடு ஒத்துப்போகிறது. ஆயினும் இன்ப வனத்துப் பாம்போடு சாத்தான் ஒன்றாக்கப்படவில்லை. இந்நூல் இறுதித்தீர்வு பற்றியும், உயிர்ப்புப் பற்றியும் பலமுறை கூறுகின்றன. ஆயினும் மெசியா பற்றி எதுவும் இல்லை. ஒரு சில இடங்களில் காணப்படும் சில கிரேக்கச் கவடுகள் தெரிகின்றன. அவை மொழி பெயர்ப்பாளர்களால் ஏற்பட்டதாகும். மற்றபடி இது பாலஸ்தீன, அக்கதா இலக்கியப் பாரம்பரியங்களோடு அதிகம் ஒத்துப் போகிறது.

தற்போது உள்ள நூல்கள் சில கிறிஸ்தவ பிற்சேர்க்கைகளைக் கொண்டுள்ளன. சில இடங்களில் மொழி பெயர்ப்பாளர்கள் கிறிஸ்தவ எண்ணங்களை யூதக் கருத்துக்கள் மீது திணித்துள்ளனர். இன்னும் பல ஆதாமின் நூற்கள் உள்ளன. அவை இந்நூற்களை மூலமாகக் கொண்டவை. இவற்றில் பாரம்பரியத்தைச் சேர்ந்த அல்லது அறிவியல் வாதத்தைச் சேர்ந்த கிறிஸ்தவக் கொள்கைகள் இன்னும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆயினும் யூத நூல்களோடு உள்ள தொடர்பு தெளிவாகத் தெரிகின்றது. சீரியா, எத்தியோப்பியா, அரபியா, அரமேய கிறிஸ்தவர்கள் பழைய கதையை மீண்டும் முழுவதும் திருத்தி எழுதியுள்ளனர். எடுத்து இயம்பியுள்ளனர். இவை கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவற்றில், கற்பைப் பாராட்டியும், திருமண வாழ்வை வெறுத்தும் கருத்துக்கள் காணப்படுகின்றன.

ஆதாம் (ADAM - மனுக்குலம்) - ஆள்

I ஆதாமும் ஆதாமின் மக்களும்

1. சொல்லின் பொருள்:- ஆதாம் என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல்லுக்குப் பலபொருள் கொடுக்கலாம். இது விவிலிய மொழிபெயர்ப்புகளில் மறைமுகமாகக் குறிப்பிடுவதற்கு மாறாக உள்ளது. ஒரு யூதன் இச்சொல்லைப் பயன்படுத்தும்போது முதல் மனிதனை மட்டும் முதன் முதலாகக் கருத்தில் கொள்வதில்லை. படைப்பு நிகழ்ச்சியுரையில் இச்சொல் இரு பொருள் மயக்கமுடையது. இந்நிகழ்ச்சியுரைக்குப் புறம்பே, ஆதாம் என்ற சொல், நான்கு இடங்களில்தான் முதல் மனிதனைத் தெளிவாகக் குறிக்கின்றது (ஆதி 4:1.25; 5:1-3 தொ; தோபி 8:6). சாதாரணமாக ஆதாம் என்ற சொல் சூழ்நிலைக்கேற்றாற்போல் மனிதனைப் பொதுவாகவோ (யோபு 14:1) ஒரு இனத்தையோ (ஏச 6:12) பலருள் யாரேனும் ஒருவரையோ (திருவுரை 2:12) பலரில் ஒரு ஆளையோ (1 அர 8:46; சங் 105:14), குறிப்பிட்ட ஒருவரையோ (செக் 13:5) ஒரு மனித இனத்தையோ குறிக்கலாம். (ஓசே 1:4; சங் 94:11). இவற்றில் எல்லாம் குழுப் பொருளே சிறப்புப்பெறுகிறது.

இதுவே ''ஆதாமின் மக்கள்'' என்ற சொற்றொடருக்கும் பொருந்தும். இது ஆதாம் என்ற தனிப்பட்ட ஒருவரின் வழித்தோன்றல்களைக் கருத்தில் கொண்டிருக்கவில்லை. இது மனிதன் என்ற சொல்லுக்கு இணையானது (யோபு 25:6; சங் 8:5). ஓர் ஆளையோ

(எரே 49:18.13; எ.கா. எசக்கியேல்), அல்லது குழுவையோ சுட்டுகிறது (பழ 8:31; சங் 45:3; 1 அர 8:39.42). இறைவனோடு ஒப்பிட்டுப் பயன்படுத்தப்படும்போது, இச்சொல், ''ஊன்'' என்கிற சொல்லைப் போன்று, மனிதத் தன்மையின் அழிந்து போகும் பலவீனமான நிலையைக் குறிக்கும். ''வானுலகிலிருந்து ஆண்டவர் பார்க்கிறார். ஆதாமின் மக்கள் எல்லாரையும் பார்க்கிறார்'' (சங் 33:13; ஆதி 11:5; சங் 36:8; எரே 32:19). ''ஆதாமின் மக்கள்'' என்ற சொற்றொடர், மனிதர்களை அவர்களுடைய இவ்வுலகு சார்ந்த நிலையில் குறிக்கின்றது. இது, பூமியைக் குறிக்கும் ''ஆதாமா'' என்ற சொல்லிலிருந்து ஆதாம் என்ற சொல் வந்தது என்ற பொதுவான சொல்லிலக்கணத்திற்கு ஒத்ததாயிருக்கிறது. ஆதாம் பூமியைச் சார்ந்தவன். பூமியின் களிமண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன்.

இந்தச் சொற்பொருள் இறையியல் சிறப்புப் பொருளைக் கொண்டுள்ளது. நாம் முதல் ஆதாம் என்று குறிப்பிடும்பொழுது பலரில் ஒருவரை மட்டும் குறிப்பிடுவதாக நாம் கருத முடியாது. இதை ''நமது உருவிலும் நம் சாயலிலும் மனிதனைப் படைப்போமாக. அவர்கள் ஆளுவார்கள்'' (ஆதி 1:26) என்ற வாசகத்தில் ஒருமையிலிருந்து பன்மையாக இறைவன் மாற்றிக் கூறுவதிலிருந்து காணலாம். ஆகவே ஆதியாகத் தொடக்க அதிகாரங்களில் ஆசிரியரது நோக்கம் என்ன?

2. படைப்பு நிகழ்ச்சியும் ஆதாமின் பாவமும்:- ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களும் ஐந்நூல் முழுவதற்குமே முன்னுரையாக அமைகிறது எனலாம். ஆனால் அவை ஒரே மூலத்திலிருந்து அமையவில்லை. குருக்கள் பாரம்பரியத்திலும் (ஆதி 1); யாவே பாரம் பரியத்திலும் (ஆதி 2-3) இருந்து வந்த இரு ஆசிரியர்களால் இரு காலங்களில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இவர்களைப் பற்றி கிறிஸ்துவுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் உள்ள இலக்கியத்தில் எவ்விதத் தடயமும் இல்லாதது நமக்கு வியப்பளிக்கலாம். கி.மு.2 ஆம் நூற்றாண்டில்தான், மனிதரின் சாவுக்குக் காரணமாகச் சீராக்கு நூல் பெண்ணையும் (சீரா 25:24), ஞானாகமம் பேயையும் (ஞான 2:24) பழித்துக் கூறுகின்றன. இதே நிகழ்ச்சியுரைகள் 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே சிறிது சிறிதாக வளர்ந்துள்ள ஒரு பொது அனுபவத்தைச் சுருக்கிக் கூறுகின்றன. இவற்றில் சில கூறுகளை இறைவாக்கு, ஞானாகமப் பாரம் பரியங்களில் காணலாம்.

அ. பாவம் அனைவரையும் சாரும் என்பதில் விசுவாசம்:- இது இப்பாரம்பரியங்களில், மேலும் மேலும் அழுத்திக் கூறப்படுகின்றது. இது ஒரு வகையில் ஆதாமைச் சார்ந்த நிலையாகும். இதைச் சங்கீத ஆசிரியர் நினைத்து அழுகிறார்: ''பாவ நிலையிலேயே என் அன்னை என்னைக் கருத்தரித்தாள்'' (சங் 51:7). மற்ற இடங்களில், மனிதன் வான தூதரைப் போன்ற வியத்தகு படைப்பாகவும், இன்ப வனத்தில் இறைவனால் படைக்கப்பட்டவனாகவும், அகந்தை என்னும் பாவத்தினால் வீழ்ச்சியுற்றவனாகவும் மனிதனின் பாவம் குறிப்பிடப்படுகிறது. (எச 28:13-19; ஆதி 2:10-15; 3:22 தொ).

ஆ. அதே சமயத்தில் படைத்தவரும் மீட்பருமான இறைவனில் விசுவாசம் உயிருள்ளதாக இருக்கிறது. இக்கடவுள் மனிதனை உருவாக்கும் குயவனாவார் (எரே 1:5; ஏச 45:9; ஆதி 2:7). அவனை மீளவும் மண்ணாகப் போகச் செய்பவரும் அவரேதான் (சங் 90:3; ஆதி 3:19). ''மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்? அவனைப்பற்றி அக்கறை கொள்ள அவன் யார்? வானதூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர்; மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர். உமது, படைப்புகள் அனைத்தின் மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்: அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர்'' (சங் 8:5 தொ; ஆதி 1:26 தொ; 2:19 தொ). பாவத்திற்குப் பின் அகந்தை மிக்கவர்களை அரியணையிலிருந்து வீழ்த்தி அவர்களுடைய எளிய தொடக்க நிலைக்குத் திரும்ப அனுப்பும்

(எச 28:16-19; ஆதி 3:23 தொ) புகழ்மிக்க ஆண்டவராக மட்டும் தோன்றவில்லை *(எச 28:13 தொ; ஆதி 2:10-14)* அவர் பொறுமை மிக்க இறைவனுமாவார். தம் குழந்தைக்கு மெதுவாகக் கற்றுக் கொடுக்கிறார் *(ஓசே 11:3 தொ; எச 16; ஆதி 2:8-3:21)*. அதே போல் இறைவாக்கினர் பழங்கால இன்பவனத்துக்கு ஒத்த இறுதிக் காலத்தையும் அறிவித்துச் சென்றுள்ளனர் *(ஓசே 2:20; ஏச 11:6-9)*. சாவு அழிக்கப்படும் *(ஏச 25:8; தானி 12:2; ஆதி 3:15)*. வானுலகத் தன்மையுடைய மறைபொருள் மிக்க ஒரு மனுமகன் வெற்றி வீரராக மேகங்களின் மேல் தோன்றுவார் என்றும் அறிவித்தனர் *(தானி 7:13 தொ)*.

3. நம் முன்னோரான ஆதாம்:- இதுவரை நாம் தந்த பாரம்பரிய விவரிப்பில், படைப்பு நிகழ்ச்சியுரையின் போதகம் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் காணலாம். மனித நிலைபற்றி எதிரொலிக்கும் முதல் முயற்சியில், யாவே பாரம்பரிய ஆசிரியர், முன்னோரில் அவரின் வழித்தோன்றல் உள்ளடங்கியுள்ளனர் என்று உறுதிகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதன்விளைவாக, எப்படி மனிதன் நன்மையுள்ளவனாக இறைவனால் படைக்கப்பட்டு, பாவம் செய்தான், ஒரு நாள் அவன் மீட்கப்பட வேண்டும் என்று ஒவ்வொரு மனிதனுக்கும் அறிவிக்கிறார். குருக்கள் பாரம்பரியம், மனிதன் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டான் *(ஆதி 1)* என்று வெளிப்படுத்துகிறது. குல மரபுக் கொடிகளைக் கொண்டு இஸ்ரவேல் மட்டுமன்று *(ஆதி 5:10)* எல்லா மனிதர்களும், ஒரு குழுவாக, மனுக்குலமாக ஆகின்றனர், என்று காட்டுகிறது.

II. புதிய ஆதாம்

1. புதிய ஆதாம் பற்றிய இறையியல் நோக்கு:- எல்லோரும் ஒரே மனிதனிடமிருந்தே தோன்றியதாகப் புதிய ஏற்பாடு கூறுகிறது *(அ.ப. 17:26)*. முதல் பெற்றோர் திருமண ஒன்றிப்பின் மூலஎடுத்துக்காட்டாவர் *(மத் 19:4 தொ; 1 திமோ 2:13 தொ)*. இவ்வொன்றிப்பு புதிய மனுக்குலத்தில் மீண்டும் நிறுவப்படும். அதன் செய்தியின் புதுமை இயேசுக் கிறிஸ்துவைப் புதிய ஆதாமாகக் காட்டுவதில் அடங்கியுள்ளது. போவிவிவிலிய நூல்கள், ஆதாமில் பாவிகள் யாவரும் ஒருங்கிணைகின்றனர் என்பதில் கவனம் செலுத்தின; சிறப்பாக, இயேசு மனுமகனாகவும், அதே சமயத்தில் உண்மையான மனிதனாகவும் தானியேலின் மகிமைமிக்க இறைவாக்கை நிறைவேற்றுபவராகவும் காட்டப் பெறுகிறார். ஒத்தமை நற்செய்திகள் இயேசுவையும் ஆதாமையும் ஓரளவு வெளிப்படையாக ஒப்பிடுகின்றன. இயேசு எப்படிக் காட்டு விலங்குகளோடு வாழ்ந்தார் என்று மாற்கு விவரிக்கிறார் *(மாற் 1:13)*. மத்தேயு, ''இயேசுவின் தலைமுறை நூலில்'' ஆதி 5:1-ஐ நினைவூட்டுகிறார் *(மத் 1:1)*. லூக்காவுக்கு, இப்போதுதான் சோதனைகளில் வெற்றி கொண்டவர் ''ஆதாமின் மகன், இறைவனின் மகன்'' ஆவார் *(லூக் 3:38)*; சோதிப்பவனையே எதிர்த்த உண்மையான ஆதாம். பவுல் பாடலிலும் *(பிலி 2:6-11)*, தன்னையே இறை நிலைக்கு உயர்த்தத் தேடிய ஆதாமுக்கும், கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டாத இயேசுவுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் கண்டுணரலாம். இந்த மறைமுகக் குறிப்புக்களோடு, நேர் முக ஒப்புமைகளையும் எடுத்துக் கூறலாம்.

2. இரண்டாவது உண்மையான ஆதாம்:- பவுல் *1 கொரி 15:45-49*-இல் ஒவ்வொரு மனிதனின் அமைப்பிலும் இரு மாதிரிப் படிவங்கள் இருப்பதை ஒன்றை இன்னொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறார். ஆதாமாகிய முதல் மனிதன் உயிருள்ள ஆன்மாவாக உலகைச் சேர்ந்தவனாக, ஆன்மீகச் செயல்கள் கொண்டவனாகப் படைக்கப்பட்டிருக்கிறான். இரண்டாம் ஆதாமோ உயிரளிக்கும் ஆவியானார். ஏனெனில் அவர் விண்ணகத்தைச் சேர்ந்தவர், ஆன்மீகமானவர். தொடக்க கால நிகழ்ச்சி இறுதிக்கால நிகழ்ச்சியோடு ஒத்துப்போகிறது. எனினும் ஒரு பெரும் அகழி, இரண்டாவதை முதலாவதிலிருந்தும், ஆன்மீகமானதை ஊனைச் சார்ந்ததிலிருந்தும், பிரிக்கிறது.

உரோ 5:12-21: ஆதாம் வரவிருப்பவரின் முன் உருவம் ஆவார் என்று பவுல் வெளிப்படையாகக் கூறுகிறார். எல்லாரையும் பாதிக்கும் முதல் ஆதாமின் செயலின் விளைவு சாவைக் கொண்டு வந்தது என்று உறுதியாக நம்புகிறார் (1 கொரி 15:21 தொ). அதே போல், இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் மீட்புச் செயலும் யாவரையும் பாதிக்கும் தன்மையுடையது என்று உறுதியோடு அறிவிக்கிறார். ஆனால் இருவருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். கிறிஸ்துவிலிருந்து கீழ்ப்படிதல்; மீட்பு, வாழ்வு முதலியன வந்தன. பாவம் ஆதாமினால் உலகில் நுழைந்தது. இறையருளோ அதன் ஊற்றான கிறிஸ்துவிலிருந்து மிகுதியாக அருளப்பட்டது. இறுதியாக ஆதாம் ஏவாள் ஆகியோருக்கு இடையேயுள்ள வளமுள்ள ஒன்றிப்பு கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்கும் உள்ள ஒன்றிப்புக்கு முன் உருவம் ஆகும். இது கிறிஸ்தவத் திருமணத்தை நிறுவும் மறை பொருளாகிறது (எபே 5:25-33; 1 கொரி 6:16).

3. கிறிஸ்தவனும் இரு ஆதாம்களும்:- பிறப்பால் ஆதாமின் மகனான கிறிஸ்தவன் விசுவாசத்தால் கிறிஸ்துவில் திரும்பப்பிறந்து முதலாம் இரண்டாம் ஆதாம்களோடு இரு உறவு கொண்டுள்ளான். இருப்பினும் இவ்வுறவுகள் தன்மையால், நோக்கத்தால், வேறுபட்டவை. தொடக்கக்கால விவரிப்பின் உண்மையான பொருளுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கிறான் கிறிஸ்தவன். கண்டனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முதல் மனிதனின் பாவத்தை ஒரு சாக்காகப் பயன்படுத்தமாட்டான். அவன் தான் பலவீனமும் பாவமும் சேர்ந்த ஆதாம் என்றும் பவுல் கூற்றுப்படி, பழைய மனிதனைக் களைய வேண்டியது தனது கடமையாகும் என்று உணர்வான் (எபே 4:22 தொ; கொலோ 3:9 தொ). இப்படிச் செய்வது ''புதிய மனிதனான இயேசுக் கிறிஸ்துவை அணிந்து கொள்வதற்காகும்''; ஆகவே அவனுடைய வாழ்க்கை விதி முழுவதும் இரு ஆதாம்களின் வாழ்க்கைகளில் அடங்கியுள்ளது. சங் 8:3 தொ என்ற பகுதி பற்றிய விளக்கவுரையாகிய எபி 2:5-9-இன்படி கிறிஸ்தவன் இயேசுக் கிறிஸ்துவில் எவராலும் மிஞ்ச முடியாத மனிதரைக் காண்கிறான். எல்லா மனிதரையும் மீட்கும் தகுதி பெறும் பொருட்டு, சிறிது காலத்திற்கு வான தூதர்களுக்கும் கீழானவர், விரைவில் உண்மையான ஆதாமுக்கு வாக்களிக்கப்பட்ட மகிமையை பெற்றுவிட்டார்.

ஆதாம் (ADAM - இடம்)

மோவாபு சமவெளியில் உள்ள யோர்தானுக்குக் கிழக்கே அமைந்துள்ள நகரம். இந்த இடம் எரிகோவிற்கு வெகு தொலைவில் இல்லை. இங்குதான் யோகவாவும், உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து வந்த குருக்களும், ஆற்றில் நீர் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தபோதிலும் ஆண்டவரின் புதுமையால் ஆற்றின் நடுவே உலர்ந்த தரையில் கால் ஊன்றி நின்றார்கள். மக்கள் அனைவரும் அந்த வறண்டு போயிருந்த ஆற்றின் வழியாக அக்கரைக்குக் கடந்து சென்றனர் (யோசு 9:3-17).

இவ்விடம் இக்கால தேல்-எத்-தம்மிசே ஆகும். இது, யப்போக்கு ஆறு யோர்தானோடு சேருமிடத்திற்கு இரண்டு கிலோ மீட்டர் தெற்கிலும், எரிகோவுக்கு எதிராகவும் அமைந்து, இஸ்ராயேல் யோர்தானைக் கடந்த இடத்திற்கும் வடக்கே 30 கி.மீ. தொலைவிலும் உள்ள இடம் ஆகும்.

ஆதார் (HADAR)

அதாது-3-இன் மற்றொரு வடிவம் (ஆதி 36:39).

ஆதியாகமம் (BOOK OF GENESIS)

காண்க, தொடக்கநூல்.

ஆத்தேர் (ATER - இடக்கைப் பழக்கம் உடையவன், முடவன்)

1. அடிமைத் தளையிலிருந்த செருபாபேலின் தலைமையில் பாலஸ்தீனத்திற்குத் திரும்பிய குடும்பங்களில் ஒன்றின் தலைவர் (எஸ் 2:16; நெக 7:21).

2. ஒரு லேவியர். செருபாபேலின் தலைமையில் எருசலேம் திரும்பியவர்களில்

ஆலய வாயில்காப்போர் குடும்பத்தின் தலைவர் (எஸ் 2:42; நெக 7:45).

3. நெகமியாவின் தலைமையில் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்ட போது அதில் கையொப்பமிட்ட இஸ்ராயேலர் தலைவர்களில் ஒருவர் (நெக 10:7).

ஆந்தை, கோட்டான் (OWL)

இரவில் இரைதேடும் ஒரு பறவை. அசுத்த பறவைகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது (லேவி 11:17; உப 14:16). பாலஸ்தீனத்தில் இருநூறுக்கு மேற்பட்டவகை ஆந்தைகள் காணப்படுகின்றன. இவற்றை தெளிவாக அடையாளம் காட்டுவது கடினம்.

ஆபதுநெகோ (ABEDNEGO)

தானியேலின் மூன்று தோழர்களில் ஒருவர். இப்பெயருக்கு சொல்லிலக்கணம் கூறுவது கடினம். ஒரு வேளை ''நாபுவின் ஊழியன்'' எனப் பொருள்படும் ஆபதுநெபோ என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம். அப்படியாயின், இது, ''யாவே உதவி செய்தார்'' எனப் பொருள்படும் அசரியா என்பதற்கு நேர்மாறானதாகும். இப்பெயர், இவரது தோழர்களின் பெயரோடு சேர்ந்து எப்போதும் சதிரக்கு, மேசாக்கு, ஆபதுநெகோ என்ற வரிசையில் வருகின்றது (தானி 1:7; 2:49; 3:12-13). இவர்களைப் பற்றி சதிரக்கு, மேசாக்கு, ஆபதுநெகோ என்ற தலைப்பின் கீழ் காண்க.

ஆபிரகாமின் அருகில் (BOSOM OF ABRAHAM)

ஆபிரகாம் அருகில், ஆபிரகாமின் நெஞ்சம், மடி என்று பலவாறு கூறலாம். நல்லோர் இறக்கும் நேரத்தில் அவர்கள் செல்லும் இடமாகும். அங்குத் தொடக்க நிலையாகவும், ஒரு வேளை கால முடிவில் வரும் இறுதித் தீர்ப்புக்குமுன் உள்ள ஆய்வு நிலையாகவும் தீர்ப்பு செய்யப்படும். பணக்காரனும், இலாசரும் என்ற உவமையில் (லூக் 16:19-31) இலாசரை அவரது இறக்குப்பின் வான தூதர்கள் தூக்கிச் சென்ற இடம் இதுவே (லூக் 16:22). இவ்விடம் வானுலகில், நீதிமான்களுக்கு அளிக்கப்படும் விருந்தில் ஆபிரகாமுக்கு அடுத்த இடத்தைக் குறிக்கலாம் (மத் 8:11; இத்தகைய பதங்கள் யோவா 13:23; 21:20-இல் காணப்படுகின்றன), அல்லது ஆபிரகாமோடு நெருங்கிய உறவு கொண்டுள்ள மகிழ்ச்சியான ஓர் இடத்தைக் குறிக்கலாம் (யோவா 1:18). இந்த இடம் எங்குள்ளதென்று அடையாளம் காட்டுவது முடியாத காரியம். அதைப்பற்றி நற்செய்தியிலிருந்து சிறிது கூறலாம். இது கீழுலகத்திற்கு அருகிலுள்ளது. ஆனால் அதைச் சேர்ந்ததன்று. இரண்டும் கூப்பிடு தொலைவில் இருக்கிறது. இரண்டையும் பெரும் பாதாளம் பிரிக்கிறது (லூக் 16:23-26).

இக்கருத்துப் பற்றி யூத இலக்கியங்களில் பல குறிப்புகள் உள்ளன. ஆனால் அவற்றில் சீரான கருத்து வளர்ச்சியோ, தெளிவோ இல்லை.

ஆபிரகாமின் ஏற்பாடு (TESTAMENT OF ABRAHAM)

இது ஒரு யூத புனைப் பெயர் நூலாகும். கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இது மூலத்தில் எந்த மொழியில் எழுதப்பட்டது என்பது உறுதியாகத் தெரியவில்லையானாலும், இதன் வாசகம் பல மொழிகளில் உள்ளது.

இந்நூல் ஆபிரகாமின் இறப்பைச் சுற்றி எழுதப்பட்டுள்ளது. அதி 1-9-இல் அதிதூதர் மிக்கேல், ஆபிரகாமின் ஆன்மாவை எடுத்துச்செல்ல முயலுகிறார்; ஆனால் ஆபிரகாம் படைக்கப்பட்ட உலகம் முழுவதையும் பார்க்குமுன் மரிக்க மறுத்து விடுகிறது. இதற்கு மிக்கேல் இணங்குகிறார். அதி 10-14-இல் ஆபிரகாம் உலகைப் பார்க்கும் அனுபவம் வெளிப்பாட்டு உருவகத்தில் விவரிக்கப்படுகிறது. அதி 15-20-இல் ஆபிரகாம் வீட்டுக்குத் திரும்பியபின் மரிக்க மறுத்து விடுகிறார். இறுதியில் மரணம், வானதூதனாக மாறு வேடம் பூண்டு ஏமாற்றி அவரது ஆன்மாவை எடுத்துச் செல்கிறது. இந்நூலின் ஆசிரியர் எந்த இறையியல் கருத்தையும் எடுத்துக் கூறுவதைவிட, ஒரு உருக்கமான கதையை எடுத்துக் கூறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆபிரகாமின் வெளிப்பாடு (REVELATION OF ABRAHAM)

இது ஒரு யூத புனைப்பெயர் நூலாகும். ஒரு வேளை கி.பி. 80-100-க்கு இடையில் எழுதப்பட்டிருக்கலாம். மூலத்தில் எபிரேயத்திலோ, அரமேயிக்கிலோ எழுதப்பட்டிருந்தாலும், இப்போது பழைய ஸ்லாவிக் வாசகமே வழக்கில் உள்ளது. இந்நூல் ஆதி 15:9-17-ஐப், பற்றிய ''மிட்ராஸ்'' ஆகும்.

முதல் எட்டு அதிகாரங்கள், ஆபிரகாம் சிலை வழிபாட்டிலிருந்து இறையொருமைக் கோட்பாட்டிற்கு மனந்திரும்பியதை விவரிக்கிறது. அதற்குப்பின் வெளிப்பாட்டுப் பகுதி வருகிறது. இப்பகுதியில் ஆபிரகாம் தமது வழித் தோன்றல்களின் வருங்காலத்தைப் பற்றி வெளிப்பாட்டுக் காட்சிகள் பெறுகிறார் (அதி 9-32). இறைவனோடு நன்மை தீமை பற்றித் துணிவாக உரையாடுகிறார். அதன் முடிவு தெளிவற்றதாக இருக்கிறது. இறுதி அதிகாரங்கள் கிறிஸ்தவ இடைச்செருகல்கள் உள்ளதாகத் தெரிகிறது. குறிப்பாக அதி 29, புதிய ஏற்பாட்டு நிலையிலிருந்து பெரிதும் வேறுபடுவதால், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

ஆபிரகாம் (ABRAHAM)

I. விவிலியத்தில் ஆபிரகாம்

1. பெயர்:- தொடக்கத்தில் இக்குலத்தலைவரின் பெயர் அபிராம் ஆகும் (ஆதி 11:26; 12:1). பிறகு இறைவன் இப்பெயரை ஆபிரகாமாக மாற்றினார் (17:5). இச்சொல்லைப் பலவாறு பிரித்துப் பொருள் கூறுவர். இப்பெயருக்குப் பொதுப்பாணி முறையில் ''பல இனத்தவருடைய தந்தை'' என்று பொருள் கூறுவர் (17:5-6). ''தந்தையின் அன்பு'', ''நல்ல முன்மரபுடையவர்'', ''என் தந்தை உயர்ந்தவர்'', ''இறைத் தந்தை உயர்ந்தவர்'' அல்லது வெறுமனே ''தந்தை உயர்ந்தவர்'' என்று பலவாறு பொருள் கூறலாம்.

சொல்லிலக்கணம் எதுவானாலும், உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டபோது (17:5) குலத் தலைவரின் பெயர் மாற்றப்பட்டது. அப்போது, அவருக்கு வேலைக்காரியின் வழியாகப் பிறந்த ஒரே மகன் இருந்தான். ஈசாக்கு இன்னும் பிறக்கவில்லை.

2. வாழ்க்கை வரலாறு:- அபிராம் எமோரியர் இனத்தைச் சேர்ந்தவர். இவ்வினம் ஒரு வகை நாடோடி இனமாகும். இவரது தந்தை தெராகு, சேமின் வழித் தோன்றல்களில் ஒருவராவார். நாகோர், ஆரான் ஆகியோர் இவரது சகோதரர்கள் ஆவர். லோத்து ஆரானின் மகனாவார் (11:27). ஆரான் தன் தந்தை தெராகு இறக்கு முன்பே, ஊர் என்ற கல்தேய நகரில் இறந்தார் (11:28). அபிராம் தன் ஒன்றுவிட்ட சகோதரியான சாராயியை (20:12) மணந்தார் (11:29). இருவருக்கும் பிள்ளைகள் பிறக்கவில்லை. சாராய் மலடியாக இருந்தாள். குருக்கள் பாரம்பரியப்படி தென் மெசபொத்தாமியாவின் கல்தேயத்தைச் சேர்ந்த ''ஊர்'' நகரம் அபிராமின் ஊராகும். யாவே பாரம்பரியப்படி வட மெசபொத்தாமியாவாகிய ''ஆராம் நகராயிமைச்'' சேர்ந்த காரான் அவரது ஊராகும். ஆய்வாளர்கள் கருத்துப்படி எமோரியர் படையெடுப்பின் விளைவாக, தெராகு தன் குடும்பத்துடன் ஊரிலிருந்து புறப்பட்டு 300 கி.மீ. வடக்கிலுள்ள காரான் நகரை அடுத்த பகுதியில் குடியேறினார் (11:31). அங்கு தெராகு தனது 205 வயதில் இறந்தார்.

காரானில் அபிராமுக்கு இறைவன் அழைப்பு வருகிறது. அதற்கு இணங்கிப் புறப்பட்டுக் கானானில் குடியேறினர் (12:1-5). அரசியல் பொருளாதாரக் காரணங்கள் குடியேற்றத்தைத் தூண்டியிருக்கலாம். ஆனால் விவிலிய உரைப்படி மறை காரணத்திற்காக இவ்வாறு குடியேறினார் என்று தெரிகிறது. அபிராம் தம் எழுபத்தைந்து வயதில் தம் நாட்டையும் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு இறைவன் காட்டவிருந்த நாட்டிற்குப் (எபி 11:8) புறப்பட்டார். 100 ஆண்டுகள் அலைந்து திரிந்தபின் தம் 175-ஆம் வயதில் இறந்தார். 100-ஆவது வயதில் அவருக்கு வாக்களிக்கப்பட்ட மகனான ஈசாக்கு பிறக்கிறான். இங்கே குறிக்கப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கை வெறும் கால அளவு மட்டுமன்று. அடையாளப் பொரு

ளையும் உணர்த்துவதாகத் தெரிகிறது. 100 நிறைவேறுதலின் எண்ணிக்கையாகத் தெரிகிறது.

அபிராம் தம் 75-வது வயதில் தன் மனைவி சாராயோடும், தன் சகோதரன் மகன் லோத்தோடும், மந்தைகளோடும் கானானில் குடியேறினார் (12:5). அங்கு மகிமையின் பள்ளத்தாக்கு எனப்படும் செக்கேம் வந்தடைந்தார். அங்கு இறைவன் தமது வாக்குறுதியை மீளவும் புதுப்பிக்கிறார் (12:6-7). அங்கிருந்து புறப்பட்டு பெத்தேலுக்குச் சென்று சிறிது காலம் தங்கினார். இரு இடங்களிலும் பீடம் எழுப்பி இறைவனைத் தொழுதார். அதன்பின் தெற்கே நேகேபு வரைச் சுற்றித் திரிந்தார் (12:4-9). அப்போது நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதனால் எகிப்துக்குச் சென்றார். அழகியான தம் மனைவியைக் கவர்ந்து கொள்ளும் பொருட்டு எகிப்திய மன்னன் தம்மைக் கொல்லக் கூடும் என்று அஞ்சிய அபிராம் சாராயைத் தம் சகோதரி என்று கூறித் திரிந்தார். சாராய் பாரவோனின் அந்தப்புரத்திற்குக் கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்டாள். ஆனால் அவள் பொருட்டு அபிராம் அரசனுடையவும், பிறருடையவும் தயவைப் பெறுகிறார். அபிராமுக்குச் செய்யப்பட்ட அவமரியாதையைக் கண்டு இறைவன் தம் வாக்குறுதியை நினைவு கூர்ந்து, பாரவோனின் வீட்டைக் கொடிய துன்பங்களால் தண்டிக்கிறார். உண்மையை அறிந்த பாரவோன் அபிராமைக் கடிந்து, சாராயை அபிராமிடம் திருப்பி அனுப்பிவிடுகிறான் (12:9-20).

அபிராம் திரும்பி வந்து மீண்டும் பெத்தேலில் தங்கினார். இதற்கிடையில் அவருக்கும், லோத்துக்கும் சொத்துகளும் மந்தைகளும் பெருகின. இருவருடைய வேலையாட்களுக்குள்ளே பிணக்குகள் உண்டாயின. அதன்விளைவாக, சமவெளியை இருவரும் இருபகுதியாகப் பிரித்துக் கொண்டனர். லோத் யோர்தான் பள்ளத்தாக்கை, அதாவது தீயவர்கள் வாழ்ந்த, செழிப்பான தெற்குக் கானானைத் தேர்ந்து கொண்டார் (12:2-13). அபிராம் பெத்தேலிலேயே தங்கினார். அங்கு ஆண்டவர் மீண்டும் தோன்றி, தம் வாக்குறுதியைப் புதுப்பித்தார் (13:14-17). அதன்பின் கெபிரோனில் உள்ள மமிரேயில் அபிராம் குடியேறினார். இந்நிலையில் சோதோம் கெமோராவுக்கு எதிராகப் போரிட்ட நான்கு அரசர்கள் கூட்டுப் படையைத் தாக்கி லோத்தை மீட்ட கதை வருகிறது (14:1-17). இக்கதை ஆபிராம் காலத்தையும் மேற்காசியாவில் நிலவிய வாழ்க்கைச் சூழ்நிலையையும் அரசியல் நிலையையும் எடுத்துக் காட்டுகிறது. அபிராம் இதில் ஒரு போர்த்தலைவராகத் தோன்றுகிறார். இக்கதை வெறும் வீர காவியம் மட்டுமன்று. அபிராமின் வாழ்க்கைக் காலத்தை வரையறை செய்ய ஓர் உதவியுமாகும். லோத்தை மீட்டுத் திரும்பும்போது மறைபொருள் மிக்க மனிதர் ஒருவர் அபிராமை எதிர் கொள்கிறார். ''சாலேமின் அரசனும் உன்னத கடவுளின் குருவுமாய் இருந்த மெல்க்கிசதேக்கு கைகளில் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் ஏந்தி வந்து (14:18) அபிராமை ஆசிர்வதிக்கிறார். அபிராம் தாம் கைப்பற்றிய பொருட்களில் பத்தில் ஒரு பங்கை இக்குருவுக்குக் கொடுக்கிறார். இப்பொருள்களில் பிறருக்குச் சேர வேண்டியதை அவர்களிடம் ஒப்படைக்கிறார் (13:18-24). இக்கதை குருவும் அரசனுமானவருக்கு ஓர் எடுத்துக்காட்டானவரைக் காட்டுகிறது. பிற்காலப் பாரம்பரியத்தில் முக்கியம் வாய்ந்ததாகும் (சங் 110:4; எபி 7).

இந்த நிகழ்ச்சிக்குப்பின் இறைவன் தம் வாக்குறுதியை மீண்டும் புதுப்பிக்கிறார். அபிராமுக்கு ஒரு புதல்வன் பிறப்பான் என்று வாக்களிக்கிறார். இறைவனது இவ்வாக்கை அபிராம் விசுவாசிக்கிறார். இறைவன்பால் கொண்ட இந்த விசுவாசத்தால் அபிராம் விசுவாசிகளின் தந்தையென உயர்ந்து நிற்கிறார் (15:1-6). இறைவனே அபிராமோடு ஓர் உடன்படிக்கை செய்து கொள்கிறார் (15:8-21). இதன்விளைவாக இந்த உடன்படிக்கை விருத்த சேதனக் கட்டளைக்கு இட்டுச் செல்கிறது. இதன்படி அபிராமின் வழித்தோன்றல்களில் ஆண்மகன் ஒவ்வொருவனும் விருத்தசேதனத்தை தன்

உடலில் ஏற்று, இவ்வுடன்படிக்கையைத் தொடர்ச்சியாக எக்காலத்தும் புதுப்பிக்க வேண்டும்.

சாராய் மலடியாக இருந்தாள். புதல்வன் பற்றிய இறைவாக்கை நிறைவேற்ற அபிராம் தன் மனைவி சாராயால் உந்தப்பட்டு, குறுக்கு வழியில் முயல்கின்றனர். இருவரும் தங்கள் அடிமை ஆகார் வழியாகப் பிள்ளைப் பேறு அடைய முயல்கின்றனர். இது அக்கால சட்ட முறைக்கு ஒத்ததே. ஆனால் இறைவன் இதை ஏற்க மறுத்து, சாராய் வழியாகப் பிறக்கும் மகனே வாக்குறுதியின் மகனாவான் என்று கூறுகிறார் (16-1-3). தான் கருவுற்றிருப்பதைக் கண்டு ஆகார் சாராயை அலட்சியம் செய்யவும், பழிக்கவும் தொடங்கினாள். அதனால் அபிராமின் அனுமதியோடு சாராய் கண்டிப்பாக நடத்தியது கண்டு ஆகார் ஓடிப்போனாள் (16:4-6). ஆண்டவரது தூதர் அவளுக்குத் தோன்றி அவளுடைய சந்ததியினரும் பலுக்கிப் பெருகுவர் என்ற வாக்குறுதியுடன் அவளது தலைவியிடம் திரும்பப் போகச் செய்தார். ஆகார் வழியாக அபிராமுக்கு இசுமயேல் பிறந்தார் (16:7-16). அபிராமின் 99-ஆம் வயதில் இறைவன் மீண்டும் அபிராமுக்குத் தோன்றி வாக்குறுதியைப் புதுப்பிக்கிறார். அபிராம் இனி ஆபிரகாம் என்றும், சாராய் சாரா என்றும் அழைக்கப்படுவர். சாராய், சாரா, என்ற இரு சொல்லுக்கும் இளவரசி என்று பொருள் கூறலாம் (17:1-22). அதன்பின் ஆபிரகாம் இறைவன் கட்டளைப்படி தன் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் அனைவருக்கும் விருத்தசேதனச் சடங்கை நிறைவேற்றுகிறார் (17:23-27).

இதற்குப் பின் இறைவன் மூன்று மனிதர் விடிவில் தோன்றி ஆபிரகாம் அளித்த விருந்தை உண்டபின் விரைவில் சாரா வழியாக மகன் பிறப்பான் என்று அறிவிக்கிறார் (18:1-5). அங்கிருந்து பிரிந்து செல்லும் போது சோதோம் கொமோராவின் அழிவை முன்னறிவிக்கிறார். ஆபிரகாம் சோதமுக்காகப் பரிந்து பேசுகிறார் (18:16-33). அடுத்த நாள் காலையில் ஆபிரகாம் சோதோம் கொமோரா இருந்த திசையை நோக்கிப் பார்த்தபோது சூளையில் எழும்பும் புகை போலப் பூமியிலிருந்து தீப்பொறி கிளம்பிக் கொண்டிருந்தது. அந்நகரங்கள் அழிந்தன. ஆனால் ஆபிரகாமின் பொருட்டு லோத்தும் அவன் குடும்பத்தாரும் காப்பாற்றப்பட்டனர். ஓடிப் போகும்போது லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். உடனே உப்புச் சிலையாக மாறினாள் (19:1-29). இந் நிகழ்ச்சியில் ஆபிரகாம் ஓர் இறைவாக்கினராகக் காட்டப்படுகிறார்.

இதற்குப்பின் ஆபிரகாம் கெபிரோனிலிருந்து புறப்பட்டு நெகேபை நோக்கிப் போய் காதேசுக்கும் சூருக்கும் இடையில் குடியேறினார். பின் கெரார் நாட்டில் சுற்றித் திரிந்தார் (20:1). இங்கும், ஆபிரகாம், தம் மனைவி சாராவை தம் சகோதரி என்று சொல்லிக் கொண்டமையால் கெராரின் மன்னனாகிய அபிமெலக்கு அவளைப் பிடித்துக் கொண்டு வரும்படிச் செய்தான். ஆண்டவரால் எச்சரிக்கப்பட்டு, அபிமெலக்கு ஆபிரகாமை அழைத்துக் கண்டித்து, சாராயைத் திரும்ப அவரிடம் அளித்தார். அதோடு பெருங்கொடைகளையும் அளித்தார். ஆபிரகாம் அபிமெலக்குக்காக இறைவனிடம் மன்றாட, இது வரை மலடிகளாக இருந்த அவனது மனைவியும் வேலைக்-காரிகளும் பிள்ளைப் பேறு பெற்றனர் (20:2-18).

இதற்குப்பின் நிறைவை அடையாளமாக உணர்த்தும் 100-ஆவது வயதில் ஆபிரகாமுக்கு வாக்குறுதியின் மகனான ஈசாக்கு பிறந்தார். பிறந்த எட்டாவது நாள் குழந்தைக்கு விருந்தசேதனம் செய்யப்பட்டது (21:1-7). குழந்தை பால்குடி மறந்த நாளன்று, ஆகாரின் மகன் இசுமயேல் ஈசாக்கைக் கேலி செய்ததைக் கண்டு, சினந்து, இசுமயேல் தனது மகன் ஈசாக்கோடு உடைமையுரிமைக்குப் போட்டியிடுவானோ என்று பயந்த சாரா, ஆபிரகாம் ஆகாரரையும் அவளது புதல்வன் இசுமயேலையும் துரத்தி விடச் செய்கிறாள் ஆகார் தன்னுரிமைபெற்றுத் தன் மக்களினத்தவரிடம் செல்கிறாள். இசுமயேலுக்கும் ஆசிர் அளிக்கப்படுகிறது.

''அவனையும் ஒரு பெரிய இனத்துக்குத் தலைவனாக்குவோம்'' (21:8-21). ஆதி 16; 21-இல் ஆகாரிடம் சாரா நடந்து கொள்ளும் விதம் பொறாமையும் கொடுமையும் மிக்க தாகத் தோன்றலாம். ஆனால் சாராவின் ஒவ்வொரு செயலும் அக்கால வாரிசுச் சட்டத் திற்கு முற்றிலும் ஒத்ததாகும். சாராவின் இச் செயல்கள் வழியாக இறைவனது திட்டம் தன் குறிக்கோளை நோக்கி முன்னேறுகிறது. இதற்குப்பின் இறைவன் ஆபிரகாமோடு இருப்பதை உணர்ந்த அபிமெலக்கு பெயேர்-செபாவிலுள்ள ஒரு கிணறின் பொருட்டு ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து கொள்கிறார்; ஆபிரகாம் பெலிஸ்தியர் நாட்டில் நெடுங்காலம் குடியிருந்தார் (21:22-34).

பெயேர்-செபாவில் தங்கியிருந்தபோது தான், இதுவரை எதிர் கொண்ட சோதனைகளைவிட கடுமையான சோதனையை அவரது விசுவாசம் எதிர் கொள்கிறது. ஆபிரகாம் தன் மகனைப் பலியிட வேண்டுமென்று இறைவன் கட்டளையிடுகிறார். ஆபிரகாமும் கீழ்ப்படிகிறார் (22:1-3). ஆண்டவர் காட்டிய இடத்திற்குச் சென்று ஈசாக்கைப் பலியிடப் போகும் இறுதி நேரத்தில் இறைவன் தூதர் தோன்றி பலியைத் தடுத்து விடுகிறார் (22:4-12). அருகில் முட்செடியில் கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாய் பலியாக ஒப்புக் கொடுக்கப்படுகிறது. ஆபிரகாம் அந்த இடத்திற்குப் பொருத்தமாக ''யாவே கொடுப்பார்'' என்று பொருள்படும் யாவே ஈரே என்ற பெயர் கொடுத்தார். (22:13-14). பின்பு ஆண்டவர் ஆபிரகாமை ஆசிர்வதித்து அவரது சந்ததியினர் பலுகிப் பெருகுவர் என்று வாக்களித்தார் (22:15-18). இந்நிகழ்ச்சியின் உரையைச் சரியான விதத்தில் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு ''நீ தெய்வ பயம் உடையவனாய் நம் பொருட்டு உன் ஒரே மகனையும் பலியிடத் தயங்கவில்லை'' (22:12) என்ற வாக்கு வழிகாட்டும்.

பின்பு பெயேர் - செபாவுக்கு ஆபிரகாம் திரும்பினார். சாரா தனது 127-ஆம் வயதில் கானானிலுள்ள கெபிரோனில் மரித்தாள். இத்தியனான எபரோனிடமிருந்து இரட்டைக் குகை என்ற மக்கபேலாவை வாங்கி அதில் சாராவை அடக்கம் செய்தார் (23:1-20). இந்த நிகழ்ச்சி பற்றிய பகுதி அக்காலத்தில் எப்படி ஓர் இடம் வாங்கப்பட்டது என்பதை விவரிக்கிறது. சாரா இறந்து மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு, ஈசாக்கு, நாகோரின் மகனான பெத்தூவேலின் மகள் ரெபேக்காவை மணந்தார் (ஆதி. 24).

ஆபிரகாம் கெத்தூரா என்ற பெண்ணை மணந்து, பல பிள்ளைகளுக்குத் தந்தையானார் (25:1-6). ஆபிரகாம் தமது 175-ஆம் வயதில் இறந்தார். அவரது புதல்வர்கள் ஈசாக்கும், இசுமயேலும், மக்கபேலாக்குகையில் அவரது மனைவி சாராவோடு அடக்கம் செய்தனர் (25:7-10).

3. பழைய ஏற்பாட்டு பிற நூல்களில் ஆபிரகாம்:- இறைவன் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதியும் அவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையும் பற்றிய குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் வருகின்றன (யாத் 32:13; எண் 32:1; உப 1:8; 2 அர 13:23; 1 நாள் 16:16; சங் 105:9.42). ஆபிரகாம் இறைவனுடைய ஊழியன் மட்டுமன்று (ஆதி 36:24; சங் 105:42), அவரது நண்பருமாவார் (2 நாள் 20:7; ஏச 41:8). யாவே ஆபிரகாமை மீட்டார் (ஏச 29:22). இஸ்ராயேலர் ஆபிரகாம் என்ற பாறையினின்று செதுக்கப்பட்டவர்கள். ஆபிரகாம் என்ற குழியினின்று வெட்டியெடுக்கப்பட்டவர்கள் (51:1-2). ஆபிரகாமின் விசுவாசத்தையும் அவர் இறைவனோடு கொண்டிருந்த நெருங்கிய உறவையும் எடுத்துக் கூறி, இறைவனிடம் இஸ்ராயேலர் மன்றாடினர் (யாத் 32:13; 2 மக் 1:2). ஆபிரகாமின் பொருட்டுத் தங்களது மன்றாட்டு கேட்கப்படும் என்று நம்பினர் (லேவி 26:42; உப 4:27; 29:13; 2 அர. 13:23; 1 நாள் 16:16; சங் 105:9-11).

4. புதிய ஏற்பாட்டில் ஆபிரகாம்:- பழைய ஏற்பாட்டுப் பெயர்களில் மோசேக்கு அடுத்தபடி அடிக்கடி வரும் பெயர் ஆபிரகாம்தான்.

கிறிஸ்து மனித உருவெடுத்ததை, இயேசுவின் தாய் மரியாள், ஆபிரகாமுக்கு இறைவன் அளித்த உறுதிமொழியின் நிறைவேறுதலாகக் கண்டு களிக்கிறாள். ''நம் முன்னோருக்கு அவர் சொன்னது போல் ஆபிரகாமும் அவர் தம் வழிவந்தோர்க்கும் என்றென்றும் இரக்கம் காட்ட நினைவு கூர்ந்து தம் அடியனாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்'' (லூக் 1:54-55). திரு முழுக்கு யோவானின் பிறப்பின்போது, செக்கரியா இறைவனது இரக்கத்தை ''நம் தந்தையாம் ஆபிரகாமுக்கு அளித்த உறுதிமொழியையும் தமது பரிசுத்த உடன்படிக்கையையும் நினைவு கூர்ந்தருளினார்'' (லூக் 1:75) என்று பாடுகிறார். ஆபிரகாம் யூதர்களின் தந்தையாவார் (மத் 3:9). அவர்கள் அவர் வழி வந்தவர்கள் (யோவா 8:33), யோவா 8-ல் வரும் தர்க்கம் யூதர்கள் தாங்கள் ஆபிரகாமின் வழி வந்தோர் என்று பாராட்டிய பெருமையை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பதற்கு உடல் சார்ந்த விதத்தில் வழித் தோற்றல்களாக இருப்பது மட்டும் போதாது என்று இயேசு சுட்டிக் காட்டுகிறார். தாம் ஆபிரகாமையும்விடப் பெரியவர் என்றும் ஆபிரகாமுக்கு முன்பே தாம் இருப்பதாகவும் இயேசு உரிமை கொண்டாடுவதில் சொற்போர் உச்ச நிலை அடைகிறது. பவுல் ஆதி 16:6-ஐ எடுத்துக் கூறி (உரோ 4:3; 9:8) ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாக இருப்பது உடலுறவால் வருவது அன்று; விருத்தசேதனத்தால் வரும் மரபு முறையும் அன்று. ஆபிரகாமுடையது போன்ற விசுவாசத்தால் வருவதாகும் (உரோ 4; எபி 11:17-19) என்று கூறுகிறார். கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வது ஒருவனை ஆபிரகாமின் உண்மையான பிள்ளையாக்குகிறது (கலா 3.29). நல்லோர் ஆபிரகாமின் மரபினரானதால், இறப்புக்குப் பின், மெசியாவின் விருந்தில் ''ஆபிரகாமின் அருகில்'' இளைப்பாறுவர் (லூக் 16:22-23). பவுல் போதகப்படி ஆபிரகாமின் இரு மனைவியரும் இரு உடன்படிக்கைகளைக் குறிக்கின்றனர். ஒன்று மோசேயால் சீனாய் மனையில் செய்யப்பட்டதாகும். இது அடிமைத்தனத்தின் உடன்படிக்கையாகும். ஆகார் இதைக் குறித்தாள். மற்றது இயேசுவில் செய்யப்படும் விடுதலை உடன்படிக்கையாகும். திருச்சபையேக் தன்னுரிமையுள்ள மனைவி சாராவால் குறிக்கப்படும், உறுதிமொழிகளுக்கு உரிமையான வாரிசு ஆகும் (கலா 4:4-31). இப்போதனையைக் கேட்ட யூதர்கள் பவுலை நகருக்குப் புறம்பே தள்ளி, கல்லால் எறிந்து கசையால் அடித்ததில் வியப்பில்லை (அ.ப. 14:5).

மெல்க்கிசதேக்கு கிறிஸ்துவின் அடையாளமாவார். இது கிறிஸ்துவின் உயர்தன்மையைக் காட்டுகிறது. ஏனெனில் ஆரோன் குருத்துவத்தின் முன்னோராகிய ஆபிரகாமிடமிருந்து மெல்க்கிசதேக்கு பத்தில் ஒரு பங்கைக் காணிக்கையாகப் பெற்றார் (எபி 7:1 தொ). திருச்சபையில் இது நற்கருணைப் பொருளோடு நோக்கப்பட்டது. கிறிஸ்துவின் பலிக்கு ஈசாக்கின் பலி ஒரு முன் எடுத்துக்காட்டாகக் கருதப்பட்டது. இப்பலி நற்கருணைப் பலிக்கு அடையாளமாகக் கருதப்பட்டது. நற்கருணை வழிபாட்டில் ''எங்கள் முதுபெருந்தந்தை ஆபிரகாமின் பலியையும் ஏற்றுக் கொண்டதுபோல் இவற்றையும் ஏற்றுக் கொள்ளும்'' என்று திருச்சபை வேண்டுகிறது.

ஆபிரகாமின் விசுவாசம் அவருக்கு நீதியாகக் கருதப்பட்டது (உரோ 4:3; கலா 3:6) அவர் விசுவாசிகளுக்கு எல்லாம் தந்தையாவார் (உரோ 4:16 தொ; எபே 2:14). ஆபிரகாமின் விருத்தசேதனம் அவரது விசுவாசத்திற்குப்பின் வந்தது என்று பவுல் குறிப்பிடுகிறார் (உரோ 4:9-13). இதற்கு மாறாக யாக்கோபின் கருத்துப்படி ஆபிரகாமின் விசுவாசம் செயல்களால் இறைவனுக்கு ஏற்புடையதாயிற்று, செயல்களால் நிறைவு பெற்றது (யாக் 2:21-22). எபிரேயர் திருமுகத்தின்படி, ஆபிரகாம் விசுவாசிகளில் எல்லாம் சிறந்தவர். ஏனெனில் தனது வாழ்க்கை முழுவதும், அவர் அசையாத அடித்தளமுள்ளதொரு (அதாவது விண்ணக வீட்டை) எதிர் நோக்கியிருந்தார் (எபி 11:10). ஆனால் யாக்கோபில், ஆபிரகாமின் விசுவாசம் உயிருள்ளது. ஏனெனில் அது ஈசாக்கைப் பலி

பீடத்தின் மேல் பலியிடச் சோதிக்கப்பட்டு வெற்றி கொண்டது (யாக். 2:17).

5. காலமும் வரலாற்றுப் பின்னிலையும்:- ஆபிரகாமின் காலம் பற்றிப் பெரிதும் வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. சிலர், அவர் கி.மு. 2000-1800-க்கு இடைப்பட்ட காலத்திலும், வேறுசிலர் கி.மு. 1400-1300-க்கு இடைப்பட்ட காலத்திலும் வாழ்ந்தார் என்பர். பெரும்பான்மையான அறிஞர்கள் கி.மு. இரண்டாயிரமாண்டு காலத்தின் தொடக்கத்தில் அவர் வாழ்ந்ததாகக் கூறுவர். அவர்கள் அளிக்கும் காரணங்கள்: 1. யோர்தானுக்கு அப்பாலுள்ள பகுதியில் கி.மு. 1900-1800-க்கு இடையில் மக்கள் தொகைக் குறைந்திருப்பது ஆதி 14-இல் குறிக்கப்படும் அழிவுகளின் படையெடுப்போடு ஒத்துப் போகிறது. இது ஆபிரகாம் கி.மு.1800-ஐ. ஒட்டி வாழ்ந்தார் என்று சுட்டுகிறது. 2. ஆதி 14-இல் குறிக்கப்படும் நான்கு அரசர்களில் மூன்று பேரை அடையாளம் காட்டலாம். இவர்கள் கி.மு.2000-1700-க்கு இடையில் வாழ்ந்தவர்கள். 3. இவ் வதிகாரத்தில் குறிக்கப்படும் மெசபொத்தாமிய அரசுகளின் கூட்டணி கி.மு.2000-1750-இல் சாதாரணமான வழக்காயிருந்திருக்கிறது. 4. குல மூதுவர்களுக்கு இணையான பெயர்கள் எகிப்திலும் மெசபொத்தாமியாவிலும் கி.மு.2000-1800-காலத்தில் காணப்படும். 5. நெகேபின் தென்மேற்குப் பகுதியில் 2100-1900-க்கு இடைப்பட்ட காலத்துக் குடியேற்றங்கள் ஆபிரகாம் ஈசாக்கு ஆகியோரின் மேய்த்தல், பயிர் செய்தல் போன்ற தொழில்களோடு ஒத்துப் போகின்றன. 6. ''எந்தையரின் இறைவன்'' என்ற பதம் குல முதியவர்களின் கருத்துக்கு இணையானது கி.மு.19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கப்பதோசியா ஆப்பு எழுத்து வடிவ வாசகங்களில் காணப்படுகிறது. 7. வேலைக்காரனை வாரிசாகத் தத்து எடுத்தல் (ஆதி 15:13), உரிமையை எடுத்துக்காட்ட வீட்டு விக்கிரகங்களை எடுத்து வைத்துக்கொள்ளல் (31:19) ஆகியவை குல முதியவர்களின் நிகழ்ச்சியுரைகளில் வரும் பல வழக்கங்களுக்கு இணையானவை. இவை மாரி (19 நூ) நூசி (15 நூ) வாசகங்களில் காணப்படுகின்றன.

ஆபிரகாம் ஒரு கற்பனைப் படைப்பு என்றோ, ஒரு இனத்தின் ஆட் தன்மையாக்கப்பட்டவர் என்றோ இப்போது ஒருவரும் கூறார். அவர் ஒரு வரலாற்று ஆள் ஆவார். யூதர்கள், கிறிஸ்தவர்கள், முகமதியர்கள் ஆகியோரிடையே பெரிதும் மதிக்கப்படுகிறார். யூதர்களுக்கு அவர் அவர்களது இஸ்ராயேல் இனத்தைத் தோற்றுவித்தவராவார் (சங் 105:6; 2 நாள் 20:7, ஏச 41:8). அவர் இறைவனது நண்பர் (ஏச 41:8). முகமதியர்களுக்கு அவர், இறையொருமை வழிபாட்டைத் தோற்றியவர் அல்லது சீர்திருத்தியவர். அவர் கொரானின் 25-ஆம் சூராவில் பல விவரங்களுடன் குறிக்கப் பெறுகிறார்.

6. ஆபிரகாமின் சமயம்:- ஆபிரகாமோடு விவிலியத் திருவெளிப்பாடு தொடங்குகிறது. ஆபிரகாமின் சிறப்பும் முதன்மையும் இதில் அடங்கியிருக்கின்றன. ஆபிரகாம் இன்னும் மக்களால் நினைவு கூறப்படுகிறார் என்பதற்கு, அவரோடு இறைவன் பேசினார், அவரில் மீட்பு வரலாறு புதியதொரு தொடக்கம் எடுக்கிறது என்பதைத் தவிர வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. இதை ஐயுற்றால், யூத, கிறிஸ்துவ விசுவாச மரபையே ஐயுறுவதாகும். ஆபிரகாமுக்குக் காட்சியளித்த இறைவன் முதலில் ஒரு குடும்பக் கடவுளாகத் தோன்றுகிறார். இவரை ஆபிரகாம் யாவேய் என்ற பெயரில் அறியவில்லை; ''ஏல் சடாய்'' என்ற பெயரில் அறிந்திருந்தார். இப்பெயருக்கு ''யாவும் வல்லவர்'' என்றும், ''மலையில் வாழ்பவர்'' என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விறைவன் நீதியுள்ளவர், நேர்மையுள்ளவர், தீமைகளைத் தண்டிப்பவர், உலகின் அனைத்தின் மேலும் வல்லமையுள்ளவர்; ஆபிரகாமுக்குக் கானானை உடைமையாகக் கொடுப்பவர். வழிபடுவோர் அவரை எளிதில் அணுகலாம். அவர்களின் மன்றாட்டுக்குச் செவிமடுத்து அருளுவார். பலிக் காணிக்கைகளை ஏற்றுக் கொள்வார். தமது ஆற்றலி

லும் வாக்குறுதியிலும் மக்கள் நிபந்தனை யற்ற விசுவாசம் கொள்ளவேண்டும்; அவருக்கு வழுவாப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்று கோருவார், அவரும் பிரமாணிக்கம் தவறார். தாம் வாக்களித்ததை உறுதியாக நிறைவேற்றுவார். அவருக்குத் துணைவரோ, துணைவியரோ இல்லை. அவர் தானாகவுள்ளவர். தனிச்சிறப்புடையவர். ஒப்புவமையில்லாதவர். இப்படிப்பட்ட இறைவனை ஆபிரகாம் பல இடங்களில் பீடம் எழுப்பி வழிபட்டார். அவற்றில் சில, செக்கேம், பெத்தேல், கெபிரோன், மாமிரே, பெயேர்-செபா முதலியவையாகும்.

II. இறையியல் சிந்தனை

ஆபிரகாம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் குலத்தலைவர். மீட்பு வரலாற்றில் சிறப்பிடம் வசிக்கிறார். இறைவன் இவரை அழைத்தது இறைத்திட்டத்தின் முதற்படியை மட்டும் தொடங்கி வைப்பதற்காக அன்று. அத்திட்டத்தின் அடிப்படைப் போக்கையே இவ்வழைப்பு தீர்மானிக்கிறது.

1. ஆபிரகாம் அழைக்கப்படுதல்:- ஆதியாகமம் ஆபிரகாம் வரலாறு பற்றிய வெறும் காலவரிசை முறையை மட்டும் தரவில்லை; ஒரு சமய நிகழ்ச்சியுரையையே வரைகிறது. அதில் முப்பெரும் மரபுகளின் அடிச்சுவடுகளைக் காணலாம். ''யாவே'' மரபு இறைவனுடைய ஆசீர்களையும், உறுதிமொழிகளையும் அழுத்திக் கூறுகிறது. ''எலோகீம்'' மரபு முழுவதும் சோதித்து அறியப்பட்ட குலத்தலைவர்கள் விசுவாசத்தையும், குருக்கள் மரபு உடன்படிக்கையையும், விருத்த சேதனத்தையும் அழுத்திக் கூறுகின்றன. இவற்றிலிருந்து ஆபிரகாம், இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவரால் ஈர்க்கப்பட்ட ஒரு பெரும் மனிதராகவும், எண்ணிக்கை கடந்த மக்களின் ஆசி பெற்ற தந்தையாகும்படி சோதனைகளை வென்றவராகவும் தோன்றுகிறார்.

அ. ஆபிரகாம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:- இறைவன் சுதந்திரமாய்த் தொடங்கும் செயலின் கீழ் ஆபிரகாமின் வரலாறு விரிகிறது. இறைவனே முதலில் தலையிடுகிறார். பல தெய்வங்களை வணங்கிய இனத்திலிருந்து (யோசு 24:2) ஆபிரகாமை அவர் தேர்ந்தெடுக்கிறார்; அவரை ''ஊர்'' என்ற ஓர் ஊரிலிருந்து வெளியேறும் படிச் செய்கிறார் (ஆதி 11:30-31). ஆபிரகாம் அறியாத நாட்டிற்கு அவரை இறைவன் இட்டுச் செல்கிறார் (எபி 11:8). இறைவனின் இத்தொடக்கச் செயல் அன்பு நிறைந்தது. திகைக்கச் செய்யும் முறையில் தமது தாராளத்தை இறைவன் ஆபிரகாமிடம் தொடக்கத்திலிருந்தே காட்டுகிறார். ''நாம் உனக்களிப்போம்'' என்ற வாக்கு பல்லவி போல் மீண்டும் மீண்டும் வருவது இங்கு கவனிக்கத்தக்கது. இறைவன் ஆபிரகாமுக்கு நாடளிப்பார் (ஆதி 12:7; 13:15 தொ; 15:18; 17:8); அவரை ஆசீர்வதிப்பார்; அவரது சந்ததியைப் பெருக்குவார் (12:2; 16:10; 22:17). ஆனால் சூழ்நிலையோ இவற்றிற்கு மாறாக உள்ளது. ஆபிரகாமோ ஒரு நாடோடி. சாரா பிள்ளைபெறும் காலத்தைக் கடந்தவளாக இருக்கிறாள். இச்சூழ்நிலைகள் இறைவாக்குறுதியின் கைம்மாறு கருதாக் கொடைத் தன்மையை மேலும் எடுத்துக் காட்டுகின்றன. ஆபிரகாமின் வருங்காலம் முழுவதும் இறைவனுடைய ஆற்றலையும் நன்மைத் தன்மையையும் சார்ந்து இருக்கிறது. இவ்வாறு எந்த முன் தகுதியுமின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினத்தைத் தம்முள்ளே அடக்கியுள்ளார் ஆபிரகாம். கடவுள் அவரிடமிருந்து அச்சத்திற்கு அப்பாற்பட்ட ஆழ்ந்த விசுவாசத்தையும், தம்முடைய திட்டத்தைத் தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளும் தன்மையையும் எதிர்பார்க்கிறார்.

ஆ. ஆபிரகாம் சோதிக்கப்படுதல்:- இவ்விசுவாசம் சோதனைகளால் புடம்போட்டுத் தூய்மையாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. இறைவனின் வாக்குறுதி ஈசாக்கின் வழியாகத்தான் செயல்பட வேண்டும். ஆனால் அவனையே பலியாக ஒப்புக்கொடுக்கும்படி கேட்டு ஆபிரகாமைத் தேர்ந்து தெளிகிறார் இறைவன். ஆபிரகாம் தம் ''ஒரே மகனையும் பலியிடத்'' தயங்க

வில்லை; மறுக்கவில்லை (ஆதி 22:1 தொ; 22:12.16) (கானானியர் வழிபாட்டில் குழந்தைகளைப் பலியிடுதல் வழக்கில் இருந்தது என்று அறிகிறோம்). ஆனால் இறைவனே ஈசாக்கைப் பாதுகாக்கிறார்; அவரே தகனப் பலிக்கு ஓர் ஆட்டுக் கிடாயையும் அளிக்கிறார் (ஆதி 22:8.13 தொ.). இவ்வாறு ஆபிரகாமின் ''தெய்வ பயமும்'' இறைப்பற்றும் வெளிப்படுகின்றன (22:12). அதே சமயத்தில் இறைவன், தம் திட்டம் சாவை நோக்கியதன்று, மாறாக வாழ்வை நோக்கியதென்று வெளிப்படுத்துகிறார். ''அவர் வாழ்வோரின் அழிவைக் கண்டு மகிழ்பவரல்லர்'' (ஞான 1:13; உப 12:31; எரே 7:31). சாவும் ஒரு நாள் வெல்லப்படும். அப்போது ''ஈசாக்கின் பலி'' ஓர் இறைவாக்குக் காட்சியாகத் தோன்றும் (எபி 11:19; 2:14-17; உரோ 8:32).

இ. ஆசீர் பெற்ற தந்தை ஆபிரகாம்:- ஆபிரகாமின் கீழ்ப்படிதலால் இறைவாக்கு மேலும் உறுதி செய்யப்படுகிறது (ஆதி 22:16 தொ). அதை எய்துதல் அப்போது அவருக்கு அரைகுறைப் படிவமாகத் தோன்றியது. ''ஆபிரகாம் எல்லாக் காரியங்களிலும் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டார்'' (ஆதி 24:1). ''மகிமையில் அவருக்குச் சரியொத்தவர் ஒருவரையும் கண்டதில்லை'' (சீரா 44:20). தந்தையாக ஆபிரகாம் அழைக்கப்பட்டது அவரது தனிப்பட்ட நலனுக்கன்று; அவரது மகிமை அவரது சந்ததியாகும். குருக்கள் மரபுப்படி அபிராமிலிருந்து ஆபிரகாமாகப் பெயர் மாற்றப்படுதல் இக்கருத்தைத் தெளிவுபடுத்துகிறது. ஏனெனில் புதுப் பெயர்'' அனேக மக்களின் தந்தை'' என்று மொழி பெயர்க்கப்படுகிறது (ஆதி 17:5) ஆபிரகாமின் ஊழ் பெரும் விளைவுகளைக் கொண்டதாகும். இறைவன் தாம் செய்யப் போகிறதை அவருக்கு மறைக்காததால், அழிவுக்கு அளிக்கப்பட்ட நகரங்களுக்காகப் பரிந்து பேசுவதை ஏற்கெனவே தமது கடமையாக ஏற்றுக் கொள்கிறார் (18:16-33) குலத் தலைவர். இக்குலத் தலைமை தனதாற்றலை இன்னும் விரிவுபடுத்தும்; அது எல்லா மனிதரையும் ஆதரிக்கும்: ''எல்லா இனத்தாரும் உன் சந்ததிக்குள் ஆசிர்வதிக்கப்படுவர்'' (22:18). இவ்விறைவாக்கைத் தியானித்து, யூத மரபு அதிலே ஆழ்ந்த பொருளைக் கண்டது: ''அவரது சந்ததிக்குள் எல்லா இனத்தாரையும் ஆசிர்வதிப்பதாக வாக்குறுதி கொடுத்தார்'' (சீரா 44:23).

இவ்வாறு பாவம் செய்த மனுக்குலத்தின் ஊழ் ஆதாமில் வரையப்பட்டால், மீட்கப்பட்ட மனுக்குலத்தின் ஊழ் ஆபிரகாமில் வரையப்படுகிறது.

2. ஆபிரகாமின் வழித்தோன்றல்கள்:-

அ. இறைவனின் பிரமாணிக்கம்:- ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அவரது வழித் தோன்றல்களுக்கும் அளிக்கப்படுகின்றன (ஆதி 13:15; 17:7 தொ). இவ்வுறுதிகளை இசுமயேலுக்கல்லாமல் ஈசாக்குக்கும், ஏசாவுக்கல்லாமல் யாக்கோபுக்கும் (17:5-22; 21:8-14:27; காண் உரோ 9) இறைவன் புதுப்பிக்கிறார் (ஆதி 26:3 தொ; 28:13 தொ). அவர்களும் அவ்வாக்குறுதிகளை ஒரு குடும்பச் சொத்தாக, அவர்கள் வழித்தோன்றல்களுக்கு அளிக்கின்றனர் (28:4; 48:15 தொ; 50:24). ஆபிரகாமின் புதல்வர்கள் எகிப்தில் துன்புற்றுப் புலம்பிய போது, அவர்களின் கூக்குரலுக்கு இறைவன் செவி சாய்த்தார். ஏனெனில் அவர், ''ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடன் செய்திருந்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார்'' (யாத் 2:23 தொ; காண் உப 1:8). ''தம் திருவாக்கை அவர் நினைவு கூர்ந்தார். தம் ஊழியன் ஆபிரகாமுக்குச் சொன்னதை அவர் மறக்கவில்லை. பெரும் மகிழ்ச்சியிடையே தம் மக்களை வெளியேற்றினார்'' (சங் 105:42 தொ). அவர்கள் நாடு கடத்தப்பட்டு அவதியுற்ற காலத்தில் ''நம் அன்பன் ஆபிரகாமின் வழித்தோன்றல்'' என்று அவர்களை அழைத்து அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறார் ஆண்டவர் (ஏச 41:8).

இன்னல்கள் மிகுந்து இஸ்ராயேல் அழிந்து போகும் நிலையில் இருந்தபோதும் இறைவாக்கினர் ஆபிரகாமின் அழைப்பை மக்களுக்கு நினைவுபடுத்தி அவர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துகின்றனர்,

ஊக்குவிக்கின்றனர். ''நீங்கள் எந்தப் பாறையினின்று செதுக்கப்பட்டீர்களோ, எந்தக் குழியினின்று வெட்டி எடுக்கப்பட்டீர்களோ அவற்றைச் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் தந்தை ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராவையும் நினைத்துப்பாருங்கள்'' (எச 51:1 தொ; காண் 29:22; நெக 9:7 தொ). இறைவனிடம் நன்மை பெற, ஆபிரகாமின் பெயரால் அதைக் கேட்பது உயர்ந்த மன்றாட்டாகக் கருதப்பட்டது: ''நீர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய உம் ஊழியர்களை நினைத்தருளும்'' (யாத் 32:13; உப 9:27; 1 அர 18:36). ''ஆபிரகாமுக்கு நிலையான அன்பையும் காட்டியருளும்'' (மீக் 7:20).

ஆ. ஊன் வழி மகனாதல்:- குலத்தலைவர்க்கு உண்மையான வாரிசாக இருப்பதற்கு அவருடைய உடல்வழி வாரிசாக இருப்பது மட்டும் போதாது; அது பயன் தராது. ஆன்மீக முறையில் அவரைச் சார்ந்திருத்தல் மிகத் தேவை. இவ்வாரிசுகள் இறைவனுக்குச் சீரிய முறையில் பணிந்திருக்காவிடில் அவர்கள் கொள்ளும் நம்பிக்கை போலித்தன்மை மிக்கதாகும்; பயனற்றதாகும். எசக்கியேல் தமது கால மக்களுக்கு இதை எடுத்துக் கூறுகிறார் (எச 33:24-29). இறைத் தீர்ப்பைப் பறைசாற்றும்போது திரு முழுக்க யோவான். உடலால் வரும் உறவாகிய தவறான கருத்தைக் கடுமையாகக் கண்டிக்கிறார்: ''ஆபிரகாமே எங்களுக்குத் தந்தை'' என்று சொல்லிக் கொள்ளத் துணிய வேண்டாம். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்கு மக்களை எழுப்பக் கடவுள் வல்லவர் என்று உங்களுக்குக் கூறுகிறேன்'' (மத் 3:9). உவமையில் வரும், தன்னையே மையமாகக் கொண்டு வாழ்ந்த பணக்காரன் ''தந்தை ஆபிரகாமே'' என்றழைத்தவில் பயனேயில்லை (லூக் 16:24 தொ). அவர்களிடையே ஒரு பெரிய பாதாளம் இருக்கிறது. இதே முறையில் நான்காம் நற்செய்தியும் சான்று கூறுகிறது: யூதர்கள் ஆபிரகாமுக்குச் சந்ததி வழி மக்களாயிருப்பினும், உண்மையில் அலகையின் மக்களாக மாறிவிட்டனர் என்பதை அவர்கள் செய்யும் கொலைத் திட்டத்தை வெட்ட வெளிச்சமாக்கும்பொழுது இயேசு தெளிவாக எடுத்துக் காட்டுகிறார் (யோவா 8:37-44); பிரமாணிக்கம் இல்லையேல் உடல் அளவில் மகனாயிருப்பதால் பயனேயில்லை.

இ. விசுவாசமும் செயல்களும்:- இப்பிரமாணிக்கம் உண்மையானதாய் இருக்க வேண்டும் என்றால், மற்றொரு தவறான போக்குத் தவிர்க்கப்பட வேண்டும். ஆபிரகாமின் கீழ்ப்படிதலும் (நெக 9:8; சீரா 44:20), சோதனையில் அவரது வீரமும் (1 மக் 2:52; ஞான 10:5-6) காலம் காலமாய் அவரது சிறப்புக்களாய்க் கூறப்படுகின்றன. இதைப் பின்பற்றிச் சில யூத குழுக்கள் இப்பண்புகளை மிகுதியாய் மதிப்பீடு செய்தனர். மனித செயல்களில் மிக நம்பிக்கை கொண்டனர். சட்டத்தை நுணுநுணுக்கமாகக் கடைப்பிடிப்பதை அழுத்திக் கூறினர். இறைவனைச் சார்ந்திருப்பதுதான் மிகத் தேவை என்பதை மறந்தனர்.

தன் செயல்களிலே நம்பிக்கை கொள்ளும் இந்த அகந்தை மிக்க போலித்தனம் பரிசேயன், ஆயக்காரன் உவமையில்சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டு மறுத்துக் கூறப்படுகிறது (லூக் 18:9-14); பவுலால் முழுவதும் தகர்த்தெறியப்படுகிறது. ''ஆபிரகாம் கடவுளை விசுவாசித்தார், அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது'' என்ற ஆதி 15:6-இல் உள்ள கூற்றை அடிப்படையாகக் கொண்டு பவுல் மீட்பின் அடிப்படை, செயல்கள் அல்ல, விசுவாசமே என்று எண்பிக்கிறார் (கலா 3:6; உரோ 4:3). மனிதன் தன்னையே மகிமைப்படுத்தக் கூடாது; தன்னிலே பெருமை பாராட்டக் கூடாது. ஏனெனில் எல்லாம் தகுதிபெறாமலே, நன்கொடையாக இறைவனிடமிருந்து மனிதனுக்கு வருகின்றன (உரோ 3:26-29; 4:1-4). நாம் செய்யும் எச்செயலும் இறைவனின் நன்கொடையை முந்துவதில்லை. எல்லாச் செயல்களும் இறைவனது நன்கொடையின் விளைவேயாகும். ஆபிரகாமின் வாழ்வில் இவ்வருள் பயன்பெறாமல் போகவில்லை. அதுபோல் இவ்வருள் ஒருபோதும் நமக்கும் பயன்

இல்லாமற்போகாது என்று நாம் உறுதி கொள்ளலாம் (கலா 5:6; காண் 1 கொரி 15:10). இதையே யாக்கோபும் எடுத்துக் கூறுகிறார் (யாக் 2:20-24; காண் எபி 11:8-19).

ஈ. உண்மையான வழித்தோன்றல்கள்:- ஆகவே தீர்மானமாக, ஆபிரகாமின் உண்மையான பிள்ளையாய் இருப்பது யார்? அவருடைய மகனான (மத் 1:1), அவரிலும் மேலான இயேசு கிறிஸ்துவே (யோவா 8:53). குலத்தலைவரின் வழித் தோன்றல்களில் எல்லாம் இவருக்கு மட்டும்தான் இறை வாக்குறுதி அளிக்கும் மரபுரிமை நிறையளவில் வந்து சேர்கிறது. மற்றெல்லாரையும் விட இவர்தான் ஆபிரகாமின் உண்மையான வழித் தோன்றல் (கலா 3:16). உண்மையில் இயேசுவின் வருகைக்காகவே தான் அழைக்கப்பட்டது முதல் ஆபிரகாம் உழைத்தார். அவருக்கு அளிக்கப்பட்ட பேற்றின் வழியாக அவ்வருகை நாளைக் காண்பதுவே அவருடைய பெரும் மகிழ்ச்சி (யோவா 8:56; காண் லூக் 1:54 தொ. 73).

இந்த ஒரே வழித் தோன்றலின் மேல் வாக்குறுதியை முழுவதும் ஒருங்கு குவித்தல், அதை வரையறை செய்வதற்கு அன்று. மாறாக அதை யாவர்க்கும், எல்லாவற்றிற்கும் உண்மையான முறையில் இறைவனின் திட்டப்படி உரியதாக்குவதற்கு அது ஒரு நிபந்தனையாகும் (கலா 4:21-31; உரோ 9-11). விருத்த சேதனம் பெற்றவரோ, பெறாதவரோ, இஸ்ராயேலரோ புற இனத்தவரோ, கிறிஸ்துவில் விசுவாசம் கொள்பவர்கள் யாவரும் ஆபிரகாமின் ஆசீர்களில் பங்கு கொள்ளலாம் (கலா 3:14). அவர் விசுவாசித்தார்; அப்போதிலிருந்து ''விசுவாசிக்கிற யாவர்கும் அவர் தந்தையானார்'' (உரோ 4:11 தொ). கிறிஸ்துவில் விசுவசிப்போரின் விசுவாசம் அவர்களை அவருடைய ஆன்மீக வழித்தோன்றல்களாக ஆக்குகிறது. ''கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே. நீங்கள் கிறிஸ்துவுக்கு உரியவர்களாயின், ஆபிரகாமின் வழிவந்தவர்களாய் இருக்கிறீர்கள். வாக்குறுதியின்படி உரிமையாளர்களாய் இருக்கிறீர்கள்'' (கலா 3:28 தொ).

விவிலிய வெளிப்பாடு இவ்வாறு உச்ச நிலை அடைகிறது. இறை ஆவியின் சொல்லாக உருவெடுக்கிறது. இதுவே குலத்தலைவராகிய ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்ட ''மிகச் சிறந்த பரிசு'' (ஆதி 15:1) பற்றிய இறுதிச் சொல்லுமாகும். அவருடைய தந்தைத் தன்மை விண்ணகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரியதாக விரிவடைகிறது. விசுவாசிகளின் இறுதியான இல்லம் ''ஆபிரகாமின் அருகாமையாகும்'' (லூக் 16:22). ஆன்மாக்கள் அங்கு செல்லத் தான் இறந்தோர்க்கான திருவழிபாட்டில் ஏங்கி வேண்டுகிறோம்.

ஆபேல் (ABEL - மூச்சு நிலையில்லாதது, வீணாவது) - ஆள்

ஆதாம் ஏவாளின் இரண்டாம் புதல்வர். இப்பெயருக்கு மூச்சு நிலையற்றது, வீணானது என்று பலவாறு பொருள் கூறலாம். ஏவாள் தன் முதல் மகன் காயினின் பெயருக்கு விளக்கம் அளிக்கிறாள். ஆனால் இரண்டாம் மகன் பெயருக்கு விளக்கம் அளிக்கவில்லை. இப்பெயர் மகன் என்று பொருள்படும் அப்லு என்ற அக்கேதியப் பெயரிலிருந்து வந்திருக்கலாம்.

ஆதியாகம விவரிப்புப்படி (4:1-16) காயின் நிலத்தைப் பயிரிட்டார். ஆபேல் ஆடு மேய்ப்பவர் ஆனார். காயின் தன் விளைச்சலின் பலனையும், ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுக்களில் மிகக் கொழுத்த ஆடுகளையும் ஆண்டவருக்குக் காணிக்கையாகச் செலுத்தினர். ஆண்டவர் ஆபேலையும் அவரது காணிக்கைகளையும் ஏற்றுக் கொண்டார். காயினையோ அவர் காணிக்கையையோ அவர் கண்ணோக்கவில்லை. இது காணிக்கைகளில் அடிப்படை வேறுபாடு இருந்தது என்றோ, அக்காலத்தில், விலங்குப்பலி, தானியப் பலியைவிட ஆண்டவருக்கு அதிக ஏற்புடையதாக இருந்ததாகவோ காட்டவில்லை. ஆண்டவர் தனது காணிக்கையை ஏற்காததைக் கண்ட

காயின் சினமுற்றார். பொறாமை கொண்டார். ஆண்டவர் எச்சரித்திருந்தும் (4:6-7) திட்டமிட்டு ஆபேலை வயல் வெளியில் கொன்றார். அதற்குரிய தண்டனை பெறுகிறார். ஆயினும் காயினுக்குப் பாதுகாப்பு அளித்து, அவரை யாரும் கொல்லாதபடிக்கு ஓர் அடையாளம் அளிக்கிறார் (4:15).

முதல் கொலை பற்றிய இந்தத் கதை, முதல் பெற்றோரின் வீழ்ச்சிக்குப்பின் மனுக்குலம் படிப்படியாக ஒழுக்கத்தில் சீர்கெட்டது என்ற விவரிப்பைத் தொடங்கி வைக்கிறது. இச்சீர்கேடு பெரு வெள்ளத்திற்கு இட்டுச் செல்கிறது. இக்கதை உழவர்களுக்கும் நாடோடித்தன்மையுடைய இடையர்களுக்கு மிடையே நிலவிய பகைமைப் போக்கைப் பிரதிபலிக்கிறது. இக்கதை இடையர்களுக்குச் சார்பாக இருக்கிறது. ஆபேல்தான் முதற் பலி செலுத்துகிறவர் ஆகிறார்.

நீதிமான் ஆபேல் துன்புறுகிறார் என்ற கருத்தை அடிப்படையாய்க் கொண்டு இக்கதை மனித இனத்தின் முதல் தலைமுறையிலேயே நடந்ததாகக் கூறப்படுகிறது. மனிதர்களின் சில அடிப்படைக் குணங்களை ஆதாரமாகக் கொண்டு, நீதி புகட்டும் பாணியில் இக்கதை அன்றாடச் சூழ்நிலையில் புனையப்பட்டிருக்கிறது. ஒரே தாயின் பிள்ளைகள் என்றாலும் காயினின் உள்ளத்துப் புகைந்து கொண்டிருந்த பகை ஆபேலைக் கொல்லச் செய்கிறது. இங்குப் பலியிடப்பட்ட பொருள்கள் முக்கியமல்ல, பலியின் நோக்கமும் முறையுமே முக்கியம். உள்ளத்தூய்மையை இக்கதை வலியுறுத்துகிறது. ஆபேல் நீதிமான்களின் மாதிரிப் படிவமாய் உள்ளார். இறைவனுக்கு ஏற்ற முறையில் நடக்கிறார். ஆனால் தீயோனாகிய காயினோ நீதிமானுக்கு விரோதமாக எழுந்து அவரைக் கொன்று போடுகிறார். அதனால் ஒதுக்கித் தள்ளப்படுகிறார் (சங் 10:9-11). இது ஒரு பொது விதி. ஆதியிலிருந்தே ஆபேல் முதல் அனைத்து நீதிமான்களின் இரத்தம் நீதி வேண்டி இறைவனை நோக்கிக் கூக்குரலிடுகிறது (ஆதி 4:10).

ஆதியாகமத்திற்குப் புறம்பே, பழைய ஏற்பாட்டில் ஆபேலின் பெயர் குறிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் ஆபேல் முதல் வேத சாட்சியாகவும் கிறிஸ்துவுக்கு மாதிரியாகவும் விளங்குகிறார் (மத் 23:35; லூக் 11:51; 1 யோவா 3:12) அவரது சாவு பாவத்திற்குச் சாட்சியாகவும், விசுவாசத்திற்குச் சான்றாகவும் உள்ளது (எபி 11:4). கிறிஸ்துவின் மரணத்திற்கு ஆபேலின் மரணம் ஒரு முன் மாதிரிகையாகும் (12:24).

நீதிமான்களை வாழவிடாத இந்தப் பாழுலகின் பொதுவிதிக்கு இயேசு விலக்கன்று. அவரும் இவ்விதிக்குப் பலியானார். தூயவரும் 'நீதிமானுமாகிய' (அ.ப. 3:14) அவரை அவர் இனத்தாரே கொன்றார்கள். இதுதான் உலகின் மிகப் பெரிய குற்றம். ''இவ்வாறு குற்றமற்ற ஆபேலுடைய இரத்தம் முதல், ஆலயத்திற்கும் பீடத்திற்கும் இடையே கொல்லப்பட்ட செக்கரியாவின் இரத்தம் வரை சிந்திய மாசற்ற இரத்தத்தின் பழி எல்லாம் இந்தச் சந்ததியின் மேல் விழும்'' (மத் 23:35 தொ). இப்படிப்பட்ட இருள் கவிந்த சூழ்நிலையில் இயேசுவின் சாவுக்கு யூதத்தலைவர்கள் மட்டுமல்ல, உலக மாந்தர் அனைவருமே பொறுப்பு. ஏனெனில் எட்டுத்திக்குகளிலும் குற்றமற்றவர்கள் கொல்லப்படுகின்றனர். அவர்களது இரத்தம் இரத்தப்பழிக்காகக் கதறுகிறது (திருவெளி 16:16; 18:24). என்றாலும் ஆபேலின் இரத்தத்தை விட உயர்ந்த உன்னதமான மற்றொருவரின் இரத்தம் இறைவனின் மன்னிப்புக்காக மன்றாடுகிறது (எபி 12:24). அதுதான் கிறிஸ்துவின் புனிதப்படுத்தும் இரத்தம். ''தந்தையே அவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை'' (லூக் 23:24). ஆக, ஆபேல் என்ற நீதிமானின் சாவினால் உருவான சூழ்நிலையைத் துன்புறும் நீதிமானாகிய இயேசு முற்றிலும் மாற்றுகிறார். ஆனால் ஈரமும், அன்புமில்லாத இதயம் கொண்ட காயினைப் போலன்றி (1 யோவா 3:12), ஆபேல் நேர்மைக்கும் நீதிக்கும் இட்டுச் செல்லும் விசுவாசத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார். அதனால்தான் இறந்தும்

ஆபேல் இன்னும் நம்மோடு உரையாடுகிறார் (எபி 11:4).

ஆபேல் (ABEL) - இடம்

1. இது பேத்து-செமேசுக்கு அருகிலுள்ள இடம். இங்குதான், இஸ்ராயேலரிடமிருந்து கைப்பற்றிய பெட்டகத்தைப் பெலிஸ்தியர்கள், அதை அவர்களிடம் திருப்பிக் கொடுத்தனர். இந்த இடம் பெரிய ஆபேல் என்று அழைக்கப்படுகிறது (1 சாமு 6:18).

2. ஆபேல் பேத்துமாக்காவின் மற்றொரு பெயர் (2 சாமு. 20:18).

ஆபேல்-கெராமிம் (ABEL-KERAMIM - திராட்சைத் தோட்ட நிலம்)

இந்த இடம் அம்மோனியருக்கு எதிராக நடத்தப்பட்ட போரில் இபிதாகால் கைப்பற்றப்பட்ட நகரங்களில் ஒன்று (நீதி 11:29-33). சில அறிஞர்களின் கருத்துப்படி இது அம்மானிலிருந்து 14 கி.மீ. தொலவில் உள்ள நாகூர் என்ற இக்கால நகரமாகும்.

ஆபேல் சித்திம் (ABEL-SHITTIM - புல்வெளி, வேலமர ஒடை)

இது பாலைவனத்தில் அலைந்து திரிந்து முடிவில், இஸ்ராயேலர் கூடாரம் அடித்துத் தங்கிய இடமாகும் (எண் 33:49). இது யோர்தானுக்குக் கிழக்கில், மோவாப் நாட்டில் உள்ளது. இந்த இடம் சாதாரணமாக சித்திம் என்றழைக்கப்படும். காண்க: சித்திம்-1.

ஆபேல்-பேத்து-மாக்கா (ABEL-BETH-MAACAH - மாக்கா வீட்டின் புல்வெளி, கொடுமை வீட்டின் புல்வெளி)

இது வட அரசாகிய இஸ்ராயேல் நாட்டில் மிகவும் உறுதியான மதிற்சுவர்களால் பாதுகாக்கப்பட்ட நகர் ஆகும். இங்குதான் பிக்கிரியின் மகன் சேபா அடைக்கலம் புகுந்து பின்னர் தாவீதுக்கு எதிராக நடைபெற்ற கலகத்தில் வெட்டப்பட்டார் (2 சாமு 20:14-18). பாசா ஆட்சி காலத்தில் (கி.மு. 9-ம் நூற்றான்டின் தொடக்கம்) தமஸ்குநாட்டின் பென் - அதாத்தினால் கைப்பற்றப்பட்டது (1 அர 15:20; 2 நாள் 16:4). 2 அர 15:20-இன் படி 3-ம் தெகிலாத்து பிலேசர், பெக்கா காலத்தில் இந்நகரை கைப்பற்றினார் (கி.மு. 733). இந்த இடம் அசீரிய வாசகத்தின் அபிலாக்கா எனப்படுகிறது.

இந்நகரை தேல்-அபில் என்ற திட்டை அடையாளமாகக் காட்டலாம். இந்தத் திட்டு கூலே ஏரிக்கு வடக்கே 18 கி.மீ. தொலைவில் உள்ளது. யோர்தானின் தோற்றுவாய்களில் ஒன்றான நகர்-கஸ்பானியின் கிளையாறான நகர்-பரேய்கித்தை ஒட்டியுள்ளது. மிகச் செழிப்பான இடம் ஆகும். ''நீர் நிலைப் புல் வெளி'' என்று பொருளுள்ள ஆபேல் மாயீம் என்ற இவ்விடத்தின் மற்றொரு பெயர் இதற்குப் பொருத்தமானதாகும். 2 சாமு 20:19-இல் வரும் ''இஸ்ராயேலின் தலைநகர்'' என்ற சிறப்புப் பெயர் அதன் அதிகாரத்தின் கீழ் மற்ற சிற்றூர்கள் அல்லது நகர்கள் இருந்தன என்பதைச் சுட்டுகிறது.

யூதித் 7:3-இல் வரும் பால்பாயிம் என்ற பெயரும் இவ்விடத்தைக் குறிக்கும்.

ஆபேல் மாயீம் (ABEL-MAIM - நீர்நிலைப் புல்வெளி)

ஆபேல்-பேத்து-மாக்காவின் மற்றொரு பெயர் (2 நாள் 16:4).

ஆபேல் மிசுராயிம் (ABEL-MIZRAIM - எகிப்தின் புல்வெளி)

ஆதாது என்னும் பெயருடைய இடத்திற்கு மற்றொரு பெயராகும். யோர்தான் கரையிலுள்ள இடமாகும். எகிப்திய மேலாளர்கள், பெரியோர் ஆகியோருடன், இங்கு வந்து, யோசேப்பு தனது தந்தை யாக்கோபுக்கு இழவு கொண்டாடினார் (ஆதி 50:7-11). ''யோர்தானுக்கு அக்கரையில்'' (50:10), ''கானான் நாட்டிற்குள் கொண்டு போய்'' (50:13) என்ற குறிப்புகளை வைத்து சில அறிஞர்கள் இந்த இடம் யோர்தானுக்குக் கிழக்கில் சாக்கடலுக்கு வடக்கில் இருந்தது என்பர். காண்க: ஆதாது.

ஆபேல்-மெகோலா: (ABEL-MEHOLAH - நடனமாடும் புல்வெளி)

யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள ஒரு நகர். பழைய ஏற்பாட்டில் இந்நகர் மூன்று முறை நேரடியாகக் குறிப்பிடப்படுகிறது. நீதிபதிகள் வாழ்ந்த காலத்தில்தான் முதன் முறையாய், இப்பெயர் குறிப்பிடப்படுகிறது. மிதியான் நாட்டினர் இசிரியேல் பள்ளத்தாக்கில் கிதையோனால் இரவில் திடீரென்று தாக்கப்பட்டு செரேரா வழியாக ஆபேல் மெகோலா மேட்டுப் பீடபூமிக்கரை வரை தப்பி ஓடினர் (நீதி 7:22).

சாலமோன் ஆட்சிக் காலத்தில், ஆபேல்-மெகோலா ஐந்தாவது அரச மாவட்டத்தின் கிழக்கு ஓரத்தில் இருந்தது. இந்த மாவட்டம் பேத்துசானை ஒட்டி யோர்தானின் இருபக்கமும் பரவியிருந்தது. இந்த மாவட்டம் பானாவுக்கு உரிமையாக்கப்பட்டிருந்தது (1 அர 4:12).

இந்த இடம் எலிசாவும், அவரது தந்தையும் வாழ்ந்த இடமாகும். எலியா ஓரேபு மலையிலிருந்து திரும்பியபோது உழுது கொண்டிருந்த எலிசாவையும் அவரது ஊழியர்களையும் கண்டார். எலியா எலிசாவிடம் சென்று தம் போர்வையை அவர்மேல் போட்டார். எலிசாவும் இந்த அடையாளத்தை இறைவாக்குரைக்க ஓர் அழைப்பாக ஏற்றுக் கொண்டார் (1 அர 19:16.19-20).

1 சாமு 18:19; 2 சாமு 21:8-இன்படி, சவுலின் புதல்வியருள் ஒருத்தியும், மேராபின் இரண்டாம் மனைவியுமான அதிரியேல் ஆபேல்-மெகோலாவில் வாழ்ந்து வந்தாள்.

இந்த இடத்தை இப்போது அடையாளங் காட்டுவதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. எரோனிமு மற்றும் யூசேபியு ஆகியோரைப் பின்பற்றி கெனசரேத்து கடலுக்கும், சாக்கடலுக்கும் நடுவிலுள்ள தேல் அபுசிப்ரியை இந்த இடத்திற்கு அடையாளம் காட்டுவர். இது யோர்தானுக்கு மேற்கிலுள்ள இடமாகும். வேறு சிலர் யோர்தானுக்குக் கிழக்கில் ஏல்யாபிஸ் என்ற ஓடையின் கரையிலுள்ள தேல்-ஏல்-மக்லப்-ஐ அடையாளம் காட்டுவர்.

ஆப்பிஸ் (APIS)

பூர்வீக வரலாற்றுக் காலத்திலிருந்து எகிப்தியர்களால் மெம்பிசு என்னும் இடத்தில், இனப்பெருக்க வளமையின் பொது கடவுளாக வணங்கப்பட்ட புனித எருது ஆகும். இது முதன்மையாக தா என்ற கடவுளின் வெளிப்பாடாக இருந்தாலும், இது தன்னுடைய இனப்பெருக்கச் செயலால், கிரேக்க-உரோமையர் காலத்தில் ஓசைரிஸ் என்ற கடவுளுடன் நெருங்கிய தொடர்புடையதாவும், ஓசைரிஸ்-ஆப்பிஸ் அல்லது செராப்பிஸ் என்ற பெயருடன் ஓசைரிசின் உரு என்றும் கருதப்பட்டது. இந்த அடையாள எருதானது இந்த வழிபாட்டை நடத்திய குருவால் மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டது. அது உயிரோடு இருந்தபோது இறைவணக்கத்துக்குரிய மரியாதையுடன் நடத்தப்பட்டது. அது இறந்த பிறகு கெடாமல் பதப்படுத்தப்பட்டு இதன் அடக்கத்திற்காக எகிப்தில் ஒதுக்கப்பட்டிருந்த பல இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இடத்தில் புதைக்கப்பட்டது.

ஆப்பியன் வழி; சாலை (APPIAN WAY)

உரோமையிலிருந்து காப்புவா வழியாக பிரன்திசியத்திற்குச் சென்ற ஒரு உரோமை நெடுஞ்சாலை; இரண்டாவது மிகப் பழைய சாலை.

இந்த வழி அப்பியு கிளாதியு சேக்குஸ் என்ற தணிக்கை அதிகாரியால் கி.மு. 312-இல் கட்டப்பட்டது. அதனால் இப்பெயர் பெற்றது. இது முதலில் காப்புவா வரையில்தான் போடப்பட்டது. ஆனால் அதற்கு அடுத்த நூற்றாண்டில் அதிரியாக் கடலில் உள்ள துறைமுகமான பிரண்திசியம்வரை நீட்டிவிடப்பட்டது. இங்கிருந்து எக்னேசியன் சாலையின் மேற்கு முடிவான எப்பிராசுக்குக் கப்பல்கள் செல்லலாம். 536 கிலோமீட்டர் நீளமுள்ள ஆப்பியன் சாலை இத்தாலியின் இரு கரைகளையும் இணைத்தது. இத்தாலியின் ஒருமைப்பாட்டிற்கு அவசியமானதாய் விளங்கியது. கிழக்குத் திசை வணிகத்திற்கும் பெரிதும் உதவியது. பிரன்திசியம் ஆப்பியன் சாலையின் முடிவு என்றும்,

அந்த வழியின்மேல் காப்புவா உள்ளது என்றும் ஸ்ட்ரபோ அடிக்கடி சொல்கின்றார். ஸ்தேசியஸ் இதை நன்கு பயன்பட்ட சாலை என்றும் ''நீண்ட சாலைகளின் அரசி'' என்றும் அழைக்கின்றார்.

நெயாப்போலிஸ் வளைகுடாவிலுள்ள புத்தயோலி துறைமுகத்தை அடைந்த பவுல் (அ.ப.28:13) அங்கிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவிலிருந்த காப்புவாவில் அப்பியன் சாலையை அடைந்திருக்கவேண்டும். அங்கிருந்து 212 கி.மீ. தொலைவிலிருந்த உரோமைக்கு இச்சாலைவழியாகச் சென்றிருக்க வேண்டும். இது, அப்பியன் சந்தை, மூன்று விடுதி வழியாகச் சென்றது. இந்த வழியாகச் பவுல் பயணம் செய்தபோது, உரோமைத் திருச்சபையின் தூதுச் குழுக்கள் முதலில் உரோமைக்குத் தெற்கில் 48 கி.மீ. தொலைவிலுள்ள மூன்று விடுதி என்ற இடத்திலும், பின் தலைநகரிலிருந்து தெற்கில் 64 கி.மீ. தொலைவிலுள்ள அப்பியன் சந்தையிலும் பவுலைச் சந்தித்தனர் (அ.ப. 28:15)

ஆப்பிரிக்கா (AFRICA)

ஆப்பிரிக்காக் கண்டம் விவிலியத்தில் குறிக்கப்படவில்லையென்றாலும் வட ஆப்பிரிக்க இடங்களும் மக்களும் பழைய ஏற்பாட்டில், புதிய ஏற்பாட்டில் நிகழ்ச்சிகளிலும் உருவகங்களிலும் இடம் பெறுகின்றன.

ஆதி 10-இல் நாடுகளின் பட்டியல், கூஸ், எகிப்து (மிசுராயிம்) பூத்து ஆகியோரை காமின் மக்களாகக் குறிக்கிறது. 10:13-இல், எகிப்து (மிசுராயிம்), உலூதிம் மற்றும் இலகாபிம் ஆகியோரின் தந்தையெனக் குறிக்கப் பெறுகிறது. பின்னால் உள்ள இருபெயர்களும் லிபியா மக்களைக் குறிப்பதாகப் பொதுவாகக் கருதப்படும். இலக்கியக் கலைச் சொல்லில் பல வட ஆப்பிரிக்க மொழிகள் காமிய மொழியாக பகுக்கப்படுகின்றன.

ஆப்பிரிக்காவில் இஸ்ராயேலரின் முதன்மையான அக்கறை, தங்களது பலம் வாய்ந்த எதிரியான எகிப்தியரைப் பற்றியதானாலும் பழைய ஏற்பாடு மற்ற ஆப்பிரிக்க மக்களையும், குறிப்பாகக் கூசியர் அல்லது எத்தியோப்பியர் பற்றிப் பேசுகிறது. கூஸ் மற்றும் எத்தியோப்பியா, சில சமயங்களில் எகிப்துக்கு அப்பாலுள்ள நாட்டைக் குறிக்கும் பொதுப் பெயராகப் பயன்பட்டுள்ளன (சங் 8:9). ஆனால் குறிப்பாக எகிப்துக்குத் தெற்கிலுள்ள பகுதியைக் குறித்தன (எச 29:10; எஸ்த 1:1; 8:9). இது வளம் செறிந்த நாடாகும் (யோபு 28:19). அதன் செல்வம், வணிகத்தால் மேலும் அதிகரித்தது (ஏச 45:14) எத்தியோப்பியா வலுவான நாடாக இருந்தது; எகிப்தையும் திர்காக்காவின் ஆட்சிக் காலத்தில் (கி.மு. 689-644; 25-வது அரச மரபு; 2 அர 19:9; ஏச 37:9) ஆண்டுள்ளது. இம்மக்களின் உடற் பண்புகள் யாவரும் அறிந்ததாகும் (ஏச 18:2; எரே 13:23). கூசா பெண்ணாகிய மிரியாமை மோசே மணந்தார் (எண் 12:1). எரேமியா, தன் மக்களால் பாழ்கிணற்றில் தள்ளப்பட்டபோது, அரசவை அதிகாரியான எத்தியோப்பிய எபெது-மெலக்கால் காப்பாற்றப்பட்டார் (எரே 38:7:13).

புதிய ஏற்பாட்டில் இயேசுவும் அவரது குடும்பமும் எகிப்தில் அடைக்கலம் புகுந்தனர் (மத் 2:13; தொ.). சிலுவையைச் சுமக்க இயேசுவுக்கு உதவி செய்த சீமோன் (மாற் 15:21) தொடக்க காலத் திருச்சபையின் முக்கிய மையங்களில் ஒன்றான சீரேனே ஊரைச் சேர்ந்த கிறிஸ்தவராக இருக்கக்கூடும் (அ.ப. 2:10; 11:19-20). நற்செய்தியாளர், பிலிப்பு, பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு, எத்தியோப்பிய அரசவையின் அண்ணகனுக்கு போதகம் அளித்து, பின் ஞானஸ்நானம் கொடுத்தார் (அ.ப. 8:26-39). இவன் ஒருவேளை ஒரு நுபியராக இருக்கலாம்.

ஆப்பிள், கிச்சிலிப்பழம் (APPLE)

ஒரு மரம் (சங் 2:3:8:5; யோவே 1:12); அதன் பழம் (பழ 25:11; உ.ச. 2:3.5; 7:8). கவிதை நயத்தில் அதன் நிழல், அழகு, மணம், இனிமையான பழம் இவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகிறது. உன்னத சங்கீதத்தில் காதலன் இம்மரத்திற்கு ஒப்பிடப்படுகிறான். இம்மரம் இன்பமிக்க நிழலையும்

இனிமையான கனியையும் தருகிறது (2:3). அதன் பழத்தைக் காதல் நோய் கொண்ட காதலி தேடுகிறாள் (2:5). அவள் மூச்சு கிச்சிலிப்பழங்கள் போல இனிய மணமுள்ளது (7:8). பழ 25:11-இல் சில வாசகங்கள் கிச்சிலிப் பழத்தையும் மற்றும் சில மாதுளைப் பழங்களையும் கொண்டுள்ளன. இது தங்க நிறமுடையது, அழகுடையது. யோவேல் 1:12-இல், அத்தி, மாதுளை, பேரிந்து, பேரிலந்தை முதலிய மரங்களோடு குறிக்கப்படுகிறது. இவை உழவர்களுக்கு முக்கியமானவையாகும். ''ஆண்டவரின் பயங்கர நாளில்'' இவையாவும் வதங்கிப் போய்விடும்.

அன்றைய பாலஸ்தினத்தில் ஆப்பிள் பழம் பயிரிடப்பட்டதா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. இதனை எலுமிச்சம்பழம், ஆரஞ்சு என மொழி பெயர்த்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. கிவின்ஸ் என்ற பழம் மேலானது என்று சிலர் கருதுவர். எழுப்து நூல் பழங்கொடுக்கும் ஒரு மரத்தின் பொதுப்பெயரைக் கொடுக்கிறது. ஆதி. 3:6-இல் வரும் ''விலக்கப்பட்ட பழம்'' ஆப்பிள் பழம்தான் என்பது அடிப்படையில்லாது கூறப்பட்ட ஒரு கருத்தாகும். உ.ச. 8:5-இல் வரும் மரத்தோடு தவறாக ஒன்றாக்கப்படுவதால் விளைந்த தவறாகும்.

ஆப்பு எழுத்துக்கள் (CUNEIFORM)

கி.மு. 500 ஆண்டு காலத்தில், கீழை நாடுகளில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான எழுத்துமுறை இந்த ஆப்பு எழுத்துக்களாகும். இதற்கு ஆப்பு எழுத்துக்கள் என்று கி.பி. 1712-இல்தான் பெயர் கொடுக்கப்பட்டது. ஏனென்றால், இவ்வெழுத்துக்கள் முதலில் ஈரமான களிமண் தட்டில் எழுதப்பட்டன. இதில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுதுகோலில் ஆப்பைப் போன்ற அச்சு பயன்படுத்தப்பட்டது. இந்த அச்சு ஒரு முனையில் கூர்மையாகவும் மறு முனையில் அகலமாகவும் அமைந்திருந்தது. இந்த அச்சைக்கொண்டு உருவங்கள் அமைத்து எழுதுவர். பச்சைக் களிமண்ணில் எழுதப்பட்டவை சூரிய ஒளியில் காயவைக்கப்படும், அல்லது நெருப்பு சூலையில் வைத்து சுடப்படும். இதுதான் மனிதன், தான் எழுதியதைக் காப்பாற்றிவைக்க ஆரம்பத்தில் கண்டு பிடித்த ஒரு முக்கியமான முறையாகும்.

இம்முறையை சுமேரியர்கள்தான் முதன் முதலில் கண்டுபிடித்தார்கள். கி.மு, 3000 ஆண்டிற்கு முன்பே இம்முறையைக் கண்டு பிடித்து விட்டனர். ஊருகு என்றயிடத்தில் மிகப் பழமையான இந்த ஆப்பு எழுத்துத் தட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகளில் இவ்வெழுத்துமுறை பட வடிவ முறையில் அமைந்திருந்தது. இதை எளிதாக புரிந்துக் கொள்ள முடிகிறது. ஆனால் காலப் போக்கில் பொருள் வடிவை விட்டுவிட்டு, அடையாள எழுத்துக்களைப் பின்பற்றினர். உதாரணமாக கி என்ற எழுத்து பூமி என்ற வார்த்தைக்கு அடையாளமாய் நின்றது.

பிறகு அக்காதியர்கள், சுமேரியர்களின் இந்த ஆப்பெழுத்தைத் தங்கள் மொழியை எழுதப் பயன்படுத்தினர். அவர்கள் அவ்வாறு பயன்படுத்தியபோது அதில் ஒரு முக்கியமாற்றம் செய்தனர். சுமேரியர்களின் முறைப்படி ஒரு எழுத்துப் ஒரு வார்த்தையைக் குறித்துக் காட்டும். ஆனால் அக்காதியர்கள், ஒரு எழுத்து, ஒரு தொனியினை மட்டும் குறிப்பதாய் நிர்ணயித்தனர். ஒரு வார்த்தையில் பல தொனிகள் இணைந்துவரும். இதனால் அக்காதியர்கள் பல புதிய எழுத்துக்களையும் கண்டுபிடித்தனர். இவ்வாறு மொத்தத்தில் நூற்றுக் கணக்கான எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.

அக்காதியர்கள், சுமேரியர்களின் எழுத்திற்கு மேலும் பல மேம்பாட்டினை செய்தனர். பெயர் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும், வேற்றுமை உருபு, விகுதிகள் அமைத்துத் தெளிவுபடுத்தினர். இவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட அக்காதியர்களின், எழுத்துத் தட்டுகள் கி.மு. 2350 ஆண்டைச் சார்ந்தவைகளும், கி.மு. 2000 ஆண்டைச் சார்ந்தவைகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கி.மு. 2350-இல் சார்கோன் என்ற அரசன் அக்காது நகரில் ஆட்சி செய்தார்.

கி.மு. 2000- ஆம் ஆண்டு ஊர் என்ற இடத்தி லிருந்து பிறந்த 3வது தலைமுறை அக்காதிய நாட்டை ஆட்சி செய்தது.

சுமேரியர்களிடமிருந்து அக்காதியர் பெற்றுக் கொண்ட இந்த எழுத்துமுறை மேலும் இரண்டு இடங்களுக்குப் பரவியது. பாபிலோனியர்களும் இவ்வெழுத்து முறையைப் பின்பற்றினார்கள். ஆனால் இவர்கள் நெபுக்கதுனேசார் காலத்திய பழைய எழுத்துமுறையுடன், இந்த அக்காதிய எழுத்துக்களையும் இணைத்துக் கொண்டனர். இதனால் இங்கு நிறைய அடையாள எழுத்துக்கள் பயன்படுத் தப்பட்டன.

அசீரியர்களும் இந்த அக்காதிய எழுத்துமுறையைப் பின்பற்றினர். இவர்கள் எழுத்துக்களின் அடையாள முறையை சீர்படுத்தினர். மேலும் இத்தித்தையர்களும் இந்த ஆப்பெழுத்து முறையைப் பின்பற்ற ஆரம்பித்தனர். பொகாஸ்கோய் என்றயிடத்தில், ஆப்பெழுத்துக்களால் எழுதப்பட்ட பல தட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடம் அக்காலத்தில் கித்தித்தியர்களுக்கு, சிறிய ஆசியாவின் தலைநகரம். இந்த தட்டுச்சுவடிகள், பலமொழிகளில் எழுதப்பட்டன. இத்தித்தியம், அக்காலத்தில் அரசியல் தொடர்பு மொழியாக விளங்கிய அக்காதியம், லுவியானியம், குரியானியம் ஆகிய மொழிகளில் அந்தத் தட்டுச் சுவடிகள் எழுதப்பட்டுள்ளன.

எலாமியர்களும் இந்த ஆப்பெழுத்து முறையைப் பின்பற்ற ஆரம்பித்தனர். ஆனால் அவர்களின் மொழியைப் பற்றி முழுமையாகத் தெரிந்துக்கொள்ள வாய்ப்பில்லை.

எகிப்து நாட்டில் அமர்னா என்றவிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கடிதங்களில், கானான் நாட்டு அரசர் எழுதியக் கடிதமும் காணப்படுகிறது. இக்கடிதம் எகிப்து பாரவோன் மன்னனுக்கு எழுதப்பட்டது. கானான் நாட்டு குறுநில மன்னன், பாரவோன் மன்னனுக்கு எழுதுகிறார். இக்கடிதத்தை அக்காதியம் மொழியில், ஆப்பெழுத்துகளைப் பயன்படுத்தி எழுதியுள்ளார். இந்நிகழ்ச்சி எவ்வாறு அக்காதியமும் ஆப்பெழுத்தும், நாடுகளுக்கிடையில் பயன்படுத்தப்பட்ட தொடர்பு கருவிகளாக விளங்கின என்பதை எடுத்துக் காட்டுகின்றது. உகரித்து மொழியிலும் இவ்வாப்பெழுத்து முறையைப் பின்பற்றியுள்ளனர். உகரித்து என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தட்டுச் சுவடிகளில்கூட அக்காத்தியம் மொழியில் எழுதப்பட்டவை நிறைந்துக் காணப்படுகின்றன. இவை உகரித்து மொழியில் எழுதப்பட்டுள்ளதைவிட அதிகமானவை.

உகரித்து மொழியில் நாம் தற்போது பயன்படுத்தும் அகரவரிசை எழுத்துக்களைப் போல பயன்படுத்தியுள்ளனர். 31 மெய் எழுத்துக்களை அவர்கள் பயன்படுத்தினர். ஆனால் இந்த எழுத்துமுறை உகாரித்து மொழியினர் கண்டுபிடிக்குமுன்பே நடைமுறையில் வந்திருக்கிறது.

பாரசீகர்களும் இந்த ஆப்பெழுத்து முறையைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இவர்கள் மொழியில் 36 எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு ஆப்பெழுத்துமுறை கி.மு. 75வரை பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாபிலோனிய அரசன் முதலாம் தாரியு பெகிஸ்டன் என்றவிடத்தில் மூன்று மொழிகளில் ஒரு சாசனம் அச்சடித்து வைத்தான். அதேபோல பெர்சபோலிஸ் என்றவிடத்தில் காணப்படும் அரண்மனையிலும் இதே போன்று மூன்று மொழிகளில் ஒரே வாசகம் எழுதப்பட்டுள்ளது. இவைகள்தான் இவ்வாப்பெழுத்து முறையை புரிந்துக்கொள்ள மிக உதவின. கி.பி. 1850-இலிருந்துதான் இவ்வாப்பெழுத்துக்களை சரியாக புரிந்துக் கொள்ள முடிந்தது. இவ்வாப்பெழுத்தைப் பற்றி அதிகமாக ஆராய்ச்சி நடத்தியவர்கள் கென்றி ராவில்சன், எட்வர்ட் கின்க்ஸ், ஜூல்ஸ் ஒப்பர்த்து என்பவர்கள் ஆவர் இவர்கள், அரசர்களின் பெயர்கள் ஒரேமாதிரியாக பழைய பாரசீகம், எலாமித்தியம், பாபிலோனியம் ஆகிய மொழிகளில் காணப்படுவதைக் கண்டுபிடித்தனர். இவர்களின் கண்டுபிடிப்பு சரியானதுதானா என்பதற்கு கி.பி.

1857-இல் ஒரு சோதனை நடத்தப்பட்டது. நால்வர் தனித்தனியாக, ஒரே பாபிலோனியப் பழம் ஏட்டை மொழிபெயர்த்தனர். பிறகு அந்த நான்கு மொழிபெயர்ப்பையும் ஒன்றிணைத்து பார்க்கிறபோது, மாறுபாடில்லாமல் ஒரே மாதிரியாக இருந்தன. இவ்வாறு ஆப்பெழுத்துமுறையை முழுமையாகப் புரிந்துக்கொள்ள வாய்ப்பேற்பட்டிருக்கிறது.

ஆமணக்குச் செடி (CASTOR PLANT)

இறைவனாகிய ஆண்டவரின் ஏற்பாட்டின்படி, இறைவாக்கினர் யோனாவுக்கு நிழல் அளித்த செடி இதுவாக இருக்கலாம் (யோனா 4:6-10). இது ஒரே இரவில் வளர்ந்து யோனாவுக்கு நிழல் அளித்தது. ஆனால் அடுத்த நாள் காலையில் உலர்ந்து போக, அவர் கடுவெயிலில் வாட வேண்டியிருந்தது. இந்நிகழ்ச்சியுரையின் நோக்கம் கிளர்ச்சிமிக்க இறைவாக்கினருக்கு ஒரு செயல்முறையான பாடம் கற்பிப்பதாகும். அவர் தனது சுகத்தை மட்டும் தேடக்கூடாது. அவர் போதிக்க மறுத்த நினிவேயின் மக்களின் நலனையும் தேடவேண்டும் (4:10-11). யோனா, தான் நட்டுவளர்க்காத செடிக்கு இரக்கம் காட்டும்போது, ''வலக்கை எது இடக்கை எது என்று கூடச் சொல்லத் தெரியாத'' பல்லாயிரம் மக்களுக்கு இறைவன் இரக்கம் காட்டக் கூடாதா?

ஆமால் (AMAL - *உழைப்பு, தொந்தரவு)*

ஆசேரின் வழி மரபுப் பட்டியலில் வருபவரும் ஒரு குடும்பத்தின் தலைவருமான ஏலமின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:35).

ஆமான் (HAMAN - *புகழ் பெற்றவன்)*

அகசுவேரு (செருசு) என்ற பாரசீக அரசரின் முதல் மந்திரி. எஸ்தர் புத்தகத்தில் இவர் யூதர்களின் எதிரி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அகாகியர் குலத்தைச் சேர்ந்த அம்மெதாத்தாவின் மகன் ஆவார் (எஸ்த 3:1.10; 8:3.5; 9:24). இந்தக் குறிப்பு 1 சாமு 15-இல் வரும் கீசின் மகன் சவுலின் அமலேக்கிய எதிரியான ஆகாக்கோடு இவரைத் தொடர்பு படுத்துவதற்காக இருக்கலாம். இவரை, எஸ்தரின் சிற்றப்பனும் கீசு குடும்பத்தைச் சேர்ந்தவருமான மோர்தெக்காய் என்ற யூத ஊழியன் மட்டும் மற்றவர்களைப்போல் மண்டியிட்டு வணங்குவதில்லை. மோர்தெக்காய் வணங்காததைக் கண்டு, அவர் ஒரு யூதன் என்பதை அறிந்து, அகசுவேரின் நாடெங்குமிருந்த யூதர்களை அழிக்க எண்ணினார் ஆமான். ஆனால் அகசுவேரின் மனைவி எஸ்தரால் அது தடைபட்டது. அதுமட்டுமல்லாமல் யூதர்களால் ஆமோனின் பத்துப் புதல்வர்களும் கொல்லப்பட்டார்கள்.

எஸ்தரின் கதை பாபிலோனின் கடவுள், ஏலாமின் கடவுள் ஆகியவர்களுக்கு இடையே நடந்த போராட்டம் பற்றிய இதிகாசக் கதையின் பிரதிபலிப்பாக இருப்பதாகச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆகவே ஆமோனை ஏலாமியரின் கடவுளான கும்மானாக அடையாளம் காண்கின்றனர். மற்றவர்கள் இதை பூரிம் விழாவோடு தொடர்புள்ள காதல் புதினம் என்கின்றனர். இன்னும் சிலர் இது 5-ஆம் நூற்றாண்டில் நடந்த உண்மையான நிகழ்ச்சியை எடுத்துக் கூறுகிறது என்பர். இதில் யூதர்கள், ஒரு கொடிய துன்புறுத்தலிலிருந்து தப்பினர். அப்படியானால் ஆமோன் என்பவர் ஒரு வரலாற்று ஆளாக இருக்கலாம்.

ஆமீ (AMI - *கட்டுகிறவன்)*

''சாலோமோனின் ஊழியர்களின்'' ஒரு குடும்பத்தின் மூதாதையர் (எஸ் 2:57). ஒரு வேளை இவரும் ஆமோன்-3-இல் குறிக்கப்படுபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

ஆமென் (AMEN - *உண்மையாகவே, அது உண்மையானது)*

அப்படியே ஆகட்டும்; முன்சொல்லப்பட்டதை அப்படியே ஏற்றுக் கொள்ளுதல் உறுதியை, அல்லது ஏற்றுக் கொள்ளுதலை வெளிப்படுத்தும் வியப்புரை. பெரும்பாலும் வழிபாட்டுச் சூழ்நிலையில் பயன்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் ஏச 65:16-இல் இச் சொல் உண்மை என்ற பொருளில் பெயர்ச் சொல்லாகப் பயன்பட்டுள்ளது. இதைத் தவிர மற்ற இடங்களில் அப்படியே ஆகட்டும் என்ற பொருளில் பயன்பட்டுள்ளது. மற்றவர் கூறியதற்குப் பதிலாக அமைகிறது. மற்றவர் கூறிய வாக்கையோ, கட்டளையையோ ஏற்பதையோ, ஒத்துக் கொள்வதையோ சுட்டிக் காட்டுகிறது. இவ்வாறு சாலமோனின் வருங்கால ஆட்சிபற்றிய தாவீதின் வாக்குறுதியை பெனாயா உறுதிப் படுத்துகிறார் (1 அர 1:36). கனனியாவின் இறைவாக்கு நிறைவேறுதல்பற்றி ஐயம் கொண்டிருந்தாலும், அது நிறைவேறும் என்ற தனது விருப்பத்தை எரேமியா எடுத்துக் கூறுகிறார் (எரே 28:6). உடன்படிக்கையை ஏற்றுக் கொள்வதில் 'ஆமென்' என்ற சொல் அடிக்கடிப் பயன்படுகிறது (காண்க எரே 11:5). இந்த உடன்படிக்கை உறவை ஏற்றுக் கொள்பவர்கள் அதன் கட்டளைக்குக் கீழ்படிவதைப் பொறுத்து, ஆசிரையோ, சாபத்தையோ ஏற்றுக் கொள்கின்றனர் (காண்க உப 27:15-26; நெக 5:13; எண் 5:22). புகழ்பாடல்களிலும் (சங் 41:14; 72:19; 89:53; 106:48), வழிபாட்டில் மக்கள் கூட்டத்தின் பதிலுரை செபமாகவும் (1 நாள் 16:36; நெக 8:6) சங்கீதங்களின் முடிவிலும் (சங் 106:48), சங்கீத நூலின் ஐந்து பகுதிகளில் நான்கின் முடிவிலும் (41:13; 72:19; 89:53; 106:48) ஆமென் வருவது கவனிக்கத் தக்கதாகும். ஆசீர்களின் முடிவிலும் (யூதி 13:26) தனிப்பட்டோரின் செபத்தின் முடிவிலும் (தோபி 8:8) வருகிறது.

புதிய ஏற்பாட்டில், நற்செய்திகளுக்குப் புறம்பே புகழ்பாடல்களிலேயே பெரும்பாலும் பயன்பட்டுள்ளது. உயிர்த்த இயேசுவின் வாக்குறுதிக்கும் (திருவெளி 22:20), தீர்ப்புக் காட்சிக்கும் (1:7) புகழ் பாடலுக்கும் (1:6; 5:14) பதிலாக ஆமென் வருகிறது. திருமுகங்களில் செபங்களின் முடிவிலும் (உரோ 15:33; 1 தெச 3:13) பெரும்பாலும் புகழ்பாடல்களின் முடிவிலும் (உரோ 1:25; 9:5; 11:36; 16:27; கலா 1:5; பிலி 4:20; 1 திமோ 1:17; 6:16; 2 தெச 4:18; 1 பேதுரு 4:11; 5:11) திருமுகங்களின் முடிவில் இறுதி ஆசிராகவும் (எபி 13:21; 2 பேதுரு 3:18; யூதா 25) ஆமென் வருகிறது. வழிபாட்டில், இயேசுவின் பெயரால் கூறப்படும் பதிலாக ஆமென் வருவது நிலையான வடிவமாகியது (காண்க 2 கொரி 1:20).

நற்செய்திகளில் இயேசு ஆமென் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துகிறார். இவற்றிற்கு இணையாக வேறெங்கும் ஆமென் பயன்படுத்தப்படவில்லை. உறுதியை எடுத்துக்கூற பயன்படுகிறது. (உண்மையிலும் உண்மையாகச் சொல்லுகிறேன் ஆமென், ஆமென்...மத். 5:18.26; 6:2; யோவா 1:51). இக் கூற்றுக்களில் உறுதியோடு அதிகாரக் குறிப்பும் சேர்ந்துள்ளது. திருவெளி 3:14-இல் இயேசு தம்மையே ''ஆமென் எனும் பெயருள்ளவர், உண்மையான, நம்பத் தக்க சாட்சியரவார்'' எநன்று அழைக்கிறார் (காண்க ஏச 65:16).

ஆமோசின் இறைவாக்கு நூல் (BOOK OF AMOS)

1. இறைவாக்குகள் அடங்கிய நூல்களை பின்வரும் தலைமுறைகளுக்கு விட்டுச் சென்ற ''எழுதும் இறைவாக்கினர்களின்'' வரிசையில் காலவரைப்படி முதலாவது வருபவர் ஆமோஸ் என்ற இறைவாக்கினர் ஆவார். இவரது நூல் ''சிறிய இறைவாக்கினர்'' தொகுப்பில் மூன்றாவது நூலாக வருகிறது.

2. காலம்:- ஆமோ 1:1-இன்படி யூதாவை ஊசியாவும் (கி.மு.783-742) இஸ்ராயேலை இரண்டாம் எரொபயாமும், ஆட்சி செய்த காலத்தில் (786-46) ஆமோசின் இறைவாக்குப் பணி நடந்ததாகத் தெரிகிறது. இஸ்ராயேல் செல்வச் செழிப்பில் மிதந்து கொண்டிருந்த காலத்தில் இவர் இறைவாக்குரைத்ததாகத் தெரிகிறது. ஆகவே எரொபயாமின் ஆட்சியின் பின் பகுதியில் இறைவாக்குரைத்திருக்கலாம். ஊசியா தொழு நோயால் வருந்தியதால் அவனது மகன் யோத்தாம் 750-ஐ ஒட்டி தன் தகப்பனுடன் இணைந்து ஆட்சி செய்யத் தொடங்கினார். ''நில நடுக்கம்

உண்டாவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன் '' ஆமோஸ் இறைவாக்குரைக்கத் தொடங்கினார் (ஆமோ 1:1). இந்நில நடுக்கத்தை ஆமோஸ் முன்னறிவித்தார் (8:8; 9:5). புதைப்பொருள் ஆய்வுகள் இரண்டாம் எரொபயாம் காலத்தில் ஒரு பெரும் நிலநடுக்கம் நடந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்று கூறுகின்றன. பாலஸ்தீன வரலாற்றில் இந்த நிலநடுக்கம் எவ்வளவு பயங்கரமானதென்றால், இரண்டரை நூற்றாண்டுகளுக்குப் பின்னும், இதைச் செக்கரியா தமது இறைவாக்கு நூலில் சுட்டிக் காட்டுகிறார் (செக் 14:5). ஊசியா தானே ஆலயத்தில் தூபக் காணிக்கை ஒப்புக்கொடுக்க முயன்றார். அதைச் செய்வதிலிருந்து குரு அசரியாவால் தடுக்கப்பட்டார். இத்தீயசெயலின் விளைவாக நிலநடுக்கம் ஏற்பட்டதாக யோசிபசு கூறுகிறார். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, அசீரியாவில் மூன்றாம் திகிலாத்து பிலேசரின் எழுச்சிக்கு முன் கி.மு.760-745-க்கு இடைப்பட்ட காலத்தில், ஒரு வேளை 750-ஐ ஒட்டி ஆமோஸ் இறைவாக்குரைத்திருக்க வேண்டும் எனக் கருதுவர் ஆய்வாளர்கள். அதற்குப்பின் ஆமோசோ அவரது சீடர்களோ இந்நூலை எழுதி வைத்தனர் என்று ஏற்றுக் கொள்ளலாம்.

3. பின்னணிகள்:-

அ) வரலாற்று அரசியல் பின்னணி:- இரண்டாம் எரொபயாம் இஸ்ராயேலை நாற்பது ஆண்டுகள் ஆண்டார். அண்டை நாட்டவரது வீழ்ச்சியைப் பயன்படுத்தித் தனது நாட்டை மேன்மைப்படுத்தினார். இவர் காலத்தில் இஸ்ராயேல் தனது பெருமையின் செழிப்பின் உச்சநிலையை அடைந்தது. போர் வெற்றிகளால் வடக்கிலும் தெற்கிலும் தனது நாட்டின் பரப்பை விரிவாக்கினார். வணிகப் பெருஞ்சாலைகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். அதன் விளைவாக வணிகம் வளர்ந்தது. நாட்டில் செல்வம் பெருகியது; ஆனால் சிலரிடமே சிக்கித் தேங்கிப் போயிற்று. வறுமையில் வாடிய ஏழைகளின் எண்ணிக்கையும் பன்மடங்கு கூடிற்று.

இக்காலத்தில் அசீரியர்களிடையே உள்நாட்டுப் பூசல்கள் நடந்து கொண்டிருந்தன. மூன்றாம் திகிலாத்து பிலேசா இன்னும் அரியணை ஏறவில்லை. அசீரியர்களிடமிருந்து தங்களுக்கு வரவிருக்கும் பேராபத்தை இஸ்ராயேல் எதிர் பார்க்கவில்லை. யூதாவும் பலவழிகளில் வளம் பெற்றிருந்தது. இரு அரசுகளும் ஒன்றொடொன்று சமாதானமாய் இருந்தன. இத்தகைய வரலாற்று அரசியல் பின்னணியில் அமைதி, பொருள் வளம் ஆகிய ஏமாற்றும் பாதுகாப்பில் சுகம் அனுபவித்துக் கொண்டிருந்த வடஅரசுக்கு ஆமோஸ் இறைவாக்குரைத்தார்.

ஆ) சமூகப் பின்னணி:- இக்காலத்தில் நாடு விரிவடைந்தது, வணிகம் பெருகியது. செல்வம்கொழித்தது. வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. ஆனால் இந்நலன்கள் எல்லாம் சிலருக்கே பயன்பட்டது பணக்காரன் ஏழை என்ற பாகுபாடு ஏற்பட்டது ஏழைகள் நசுக்கப்பட்டனர். அவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டது (2:6-12; 3:9-10.15; 4:1-15; 5:11-12; 6:4-6; 8:4-6). செல்வந்தர்கள் ஏழைகளைச் சுரண்டினர். கடனுக்காக ஏழைகளை அடிமைகளாக்கினர்; அடிமைகளாக விற்றனர் (2:6-7). வியாபாரங்களில் ஏமாற்றுதல் சர்வ சாதாரணம் (5:11-12; 8:5-6). நடத்தை கெட்ட பெண்களுக்குக் குறைவேயில்லை (4:1). இவ்வாறு பேராசையும் சொகுகம், விரும்பிய அநீதிமிக்க மக்களுக்கு எதிராக ஆமோஸ் இறைவாக்குரைத்தார்.

இ) சமயப்பின்னணி:- இத்தகைய அநீதியும் கொடுமையுமிக்க மக்களின் சமயவாழ்வில் புறச்சடங்குகளே சிறப்புப் பெற்றன. பெத்தேல், கில்கால் (4:4; 5:5), பெயேர்-செபா (5:5; 8:14), தாண் (8:14) போன்ற புனித இடங்களுக்குத் திருயாத்திரைகள் நடந்தன. பகட்டோடு வழிபாடுகள் நடந்தன (5:22-28). உண்மையான சமயப்பற்றின்மை பகட்டான வழிபாட்டுச் சடங்குகளால் மூடி மறைக்கப்பட்டது (2:8; 4:4-5; 5:21-24). புனித இடங்களில் நடந்த சடங்கு விபச்சாரங்கள் வழிபாட்டின் இழிநிலையைச் சுட்டுகின்றன. சிலை வழிபாடு புகுத்தப்பட்டது

(8:14). உண்மையான இறைவழிபாட்டுக்கு ரிய மனப்பக்குவம் மக்களிடம் இல்லை.

அரசியல் வெற்றிகள், பாதுகாப்பான நாடு, பொருளாதார வளர்ச்சி, சொகுசு மிக்க வாழ்க்கை ஆகியவை மக்களை சுயநிறைவு டையவர்களாக்கின. இவர்களின் இழிவான வாழ்க்கையையும் சமூக அநீதிகளையும். வெற்று வழிபாட்டுச் சடங்குகளில் ஆறுதல் கண்டு ஏமாறுவதையும் ஆமோஸ் கண்ட னம் செய்து இறைவாக்குரைத்தார்.

4. திட்டமும் பொருளடக்கமும்:-
அ. தலைப்பு (1:1-2).

ஆ. நாடுகள் மீது தீர்ப்பு (1:3; 2:16). இத்தீர்ப்பு தமஸ்கு, காசா, தீர், ஏதோம், அம்மோன், மோவாபு ஆகிய நாட்டினர் மேல் மட்டுமன்று (1:3; 2:3), யூதாவின் மேலும் (2:4-5), இஸ்ராயேல் மேலும் (2:6-6) வரும்.

இ. இஸ்ராயேலுக்கு அளிக்கப்பட்ட அச்சு றுத்தல்களும் எச்சரிக்கைகளும் (3:1-6:14). ''இந்த வாக்கைக் கேளுங்கள்'' (3:1; 4:1; 5:1) என்று தொடங்கும் மூன்று அறவுரைகள் (8:1-5:17). இஸ்ராயேலின் வழிபாடு, சமூகம் சார்ந்த பாவங்கள் கண்டனம் செய்யப்படு கின்றன. ''ஆயினும் நீங்கள் என்பக்கம் திரும்பவில்லை'' என்ற கூற்று (4:6; 8-11) ஐந்து முறைவருகிறது. பின் ''உங்களுக்கு ஐயோ கேடு'' (5:18; 6:1-4) என்று தொடங் கும் மூன்று சாபங்கள் (5:18-6:14).

ஈ. மனம் வருந்தித் திருந்தாத இஸ்ராயேல் மேல் வரவிருக்கும் அழிவுகள் பற்றிய ஐந்து அடையாளக் காட்சிகள் (7:1-9:8). வெட்டுக் கிளி (7:1-3); விழுங்கும் நெருப்பு (7:4-6); தூக்கு நூற்கண்டு (7:7-9); பழக்கூடை (8:1-14); பீடமும் புனித இடமும் அழிக்கப்ப டுதல் (9:1-10). இப்பகுதியின் இடையில் பெத்தேலில் நடந்த ஆமோசின் வாழ்க்கைக் குறிப்பு (7:10-17) இடைச் செருகல் செய்யப் பட்டுள்ளது.

உ. முடிவுரை: மெசியாவை முன்னோக் கல் (9:11-15). தாவீதின் கூடாரம் அழிக்கப் பட்டு மீண்டு அமைக்கப்படும்; மீட்பு முன் னறிவிக்கப்படுகிறது.

5. இலக்கியச் சிறப்பு:- முழு நூலும் பாடல் வடிவில் உள்ளது நூல் முழுவதும் இலக்கிய நயம் மிளிர்கிறது. ஆசிரியர் பாலை ஓரத்தில் வாழ்ந்த கிராமவாசி ஆவார். பாலையின் தன்மை அவரது இலக் கிய நடையையும் பாதித்தது. அவரது நடை கடுமையும் வெடுவெடுப்பையும் கொண் டது. ஏளனமும் பழிப்பும் மிக்கது. அவரது வாழ்க்கையில் கண்டவற்றை உயிர்ச்சித்திர மான உருவகங்களாக வர்ணிக்கிறார் (2:13; 3:4.5.12; 4:2.9; 5:19; 7:1-2; 8:1-2).

நாம் கொண்டிருக்கும் வடிவில் உள்ள ஆமோஸ் நூலில் தெளிவான ஒன்றிணைந்த ஒற்றுமை இல்லை என்பார். இதற்குச் சான் றாக நாடுகளுக்கு எதிரான வாக்குகள் (1:3-2; 16), ஆமோசைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு (7:10-17), மெசியா பற்றி முன் னோக்கு (9:9-15) ஆகிய பகுதிகளைச் சுட்டிக் காட்டுவர். ஆனால் இந்நூலில் காணப்படும் இறைவாக்குகள் பல சூழ்நிலைகளில் கூறப் பட்டிருக்க வேண்டும். சிலவற்றை ஆமோசே எழுதியிருக்க வேண்டும். அவற் றின் தொகுப்பு மக்களிடையே வழக்கில் இருந்திருக்கலாம். வழிபாட்டில் பயன்பட் டிக்கலாம். அதன் விளைவாக நூல் விரிவ டைந்திருக்கலாம். இந்நிலை ஆமோசின் சீடர்களோ, இறைவாக்கினர் குழுவோ, ஆமோசின் கூற்றுகளைத் தொகுத்து, பின்வ ரும் தலைமுறைகளுக்குப் பயன்படும்படி, நாம் கொண்டிருக்கும் வடிவில் வழங்கியி ருக்க வேண்டும்.

6. சிறப்புக் கருத்துக்கள்:- இந்நூல் கருத்தா ழம் மிக்கது. பல்வேறுபட்ட கருத்துகளையு டையது. அவற்றில் சில: அ) யாவையும் கட்டுப்படுத்தும் ''இயற்கைச் சட்டம்'' :-யாவே இஸ்ராயேலர்களுக்குமன்று யாவ ருக்கும் இறைவனாவார். எல்லா மக்கள் மேலும், எல்லா நாடுகளின் மேலும் ஆட்சி புரிகிறார். அவர் வரலாற்றின் ஆண்டவர். அவரது சட்டத்திற்கு யாவரும் பணிய வேண்

டும். அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தால் யாவே அக்கிளர்ச்சியைத் தண்டிக்கிறார். அவருடைய தீர்ப்பிலிருந்து எவரும் எதுவும் தப்ப முடியாது. இதை ஆமோஸ் ஆற்றலோ டும் கடுமையாகவும் பறைசாற்றுகிறார்.

ஆ) சமூக நீதி:- ஆமோஸ் இறைவனின் நீதியை, அவரது உடன்படிக்கையின் அடிப் படையில் போதிக்கிறார். நாட்டில் பரவியி ருந்த ஒழுக்கச் சீர் கேட்டைச் சிறிதும் இரக்க மில்லாமல் கண்டிக்கிறார். அயலானுக்குச் செய்யும் கொடுமை வெறும் சட்டத்தை மீறுவது மட்டுமன்றி, யாவேக்கும் எதிராகச் செய்யும் கிளர்ச்சியாகும்; அவரது உடன்ப டிக்கை உறவை முறிப்பதாகும். மக்களி டையே நிலவிய வகுப்பு வேறுபாடுகள், பலர் வறுமையில் வாட சிலர் மட்டுமே சொகுசாக வாழ்தல், ஏழைகளுக்கும் எளிய வர்களுக்கும் நீதி மறுக்கப்படுதல் முதலிய சமூகக் கேடுகளை ஆமோஸ் வன்மையாகக் கண்டிக்கிறார்.

இ) வழிபாட்டில் கேடு:- சமயக்கடைப்பி டிப்பு வெறும்புறச்சடங்குகளிலேயே அடங் கியிருந்தது. இவற்றில் தற்பெருமையும், சுய நேர்மையுமே மேலோங்கியிருந்தன. சிலை வழிபாடும், பாலினப் பெருக்கச் சடங்குக ளும் வழிபாட்டில் புகுந்தன. உண்மையான உள்ளார்ந்த சமயத்தின் பண்புகளாகிய யாவேயின் மேலாண்மையை ஏற்று, அவரி டம் சரண் அடைந்து, பணிவுள்ள உள்ளம் இச்சடங்குகளில் காணப்படவில்லை. இவற் றையெல்லாம் கண்டித்து, ஆமோஸ் உண் மையான சமயத்தைப் பெத்தேலில் போதிக் கிறார் (5:14-15).

ஈ) ஆண்டவரின் நாள்:- விவிலியத்தி லேயே முதல் தடவையாக இச்சொல் இந்நூ லில்தான் பயன்படுகிறது. பிற்கால இறை வாக்கினர் இச்சொல்லைப் பெரிதும் பயன்ப டுத்துவர். இது, சாதாரணமாய் எதிர்பார்க்கக் கூடிய வருங்காலத்தில் இறைவன் செய்யவி ருக்கும் இடையீட்டையும், அவர் உறுதியா கத் தலையிட்டுத் தீமையைத் தண்டித்து நன்மைக்குச் சன்மானம் அளிக்கும் தீர்ப்புக் கூறும் நாளையும் உணர்த்தியது. இத்தீர்ப்பு யாவர் மேலும் வரும். எல்லாரும் தங்கள் செயல்களுக்குக் கணக்குக் கொடுக்க வேண் டும். இந்நாள் இறைவனின் அஞ்சத்தக்க தண்டனை நாளாகும்; இருளின் நாளாகும் (5:18-20; 2:16; 8:9-10-13). ஆனால் இத்தண் டனை மக்கள் இறைவனிடம் திரும்ப வர வேண்டும் என்பதற்காகவே பயன்படுத்தப் பட்டது. அது முடிவன்று.

உ) எஞ்சியோர்-ஒளிமிக்க எதிர்காலம்:- கேடுகளை வருவிக்கும் இறைவனே, அவற் றிலிருந்து தப்பிக்க வழியையும் காட்டுகி றார். பாவிகளை மட்டுமே அவர் அழிக்கி றார். எஞ்சியோர் சுத்தி செய்யப்பட்டுக் கேடுகளிலிருந்து தப்பிப்பிழைப்பர். யாவே மீது பற்றுறுதியாக இருப்பவர்கள் மட்டுமே எஞ்சியிருப்பர். தாவீதின் கூடாரம் மீண்டும் கட்டி எழுப்பப்படும். நாடும், இதுவரை கண்டிராத முறையில் செழிப்புறும். மக்கள் அமைதியோடு வாழ்வார்கள் (9:11-15). அழி வைக் கொண்டு வந்த யாவேயே மீட்பையும் கொணர்வார். அவரே புதிய யுகத்தையும் படைப்பார். அதில் அவரது அரசு எதிர்ப் பின்றி சுதந்திரமாய்ச் செயல்படும். எஞ்சி யோர் என்ற கலைச் சொல்லை ஆமோசுதான் முதல் தடவையாகப் பயன்படுத்துகிறார்.

7. பழைய ஏற்பாட்டில் ஆமோஸ்:- இறை வாக்குரைக்கும் பாரம்பரியத்தில் ஆமோசின் நூல் பலபெரும் இறையில் கருத்துக்களைத் தொடங்கி வைக்கிறது. ஆமோஸ் தனது போதகத்தில் புதிதாய் எதையும் படைத்து விடவில்லை. மாறாக, இஸ்ராயேலின் பாரம்பரியத்தில் நிலை கொண்டு, சட்டநூ லில் வரும் போதகத்தையே, தனது காலத் திற்கு ஏற்றவாறு புதிய அழுத்தத்தோடும் ஆற்றலோடும் எடுத்துக் கூறுகிறார். அவ ரைப்பின்பற்றி, அவருக்குப்பின்வந்த இறை வாக்கினர்கள், அவர் தொடங்கிவைத்த கருத் துக்களை விரிவாக்குவர்; வளமிக்கதாக்கு வர்; ஆழ்ந்து சிந்தித்து, நயத்தோடு எடுத்தி யம்புவர். ஆனால் ஒவ்வொருவரும் தனக்கே உரிய கோணத்திலும், தன் கால மக்களுக்கு என்றவாறும் எடுத்துக் கூறுவர்.

8. ஆமோசுவும் புதிய ஏற்பாடும்:- திருமுழுக்கு யோவான் போதகத்தில் ஆமோசின் தொனியையும், மலைப் பொழிவில் ஆமோசின் போதகத்தையும் காணலாம். பேறுகளின் கருத்தையும் ஆன்மீக சமயத்தையும், இறைவனது அரசையும் அவரது நீதியையும் முதலாவதாகவும் முதன்மையாகவும் தேட வேண்டிய அவசியத்தையும் ஆமோஸ் போதித்தார். அ.ப. *7:42-43*-இல் ஆமோ *5:25-27* எடுத்துக் கூறப்படுகிறது. திருவெளி *10:7*, ஆமோ *3:7*-ஐ எதிரொலிக்கிறது. ''எஞ்சியோர்'' பற்றிய கடைசிக் காட்சியைத் திருவெளி *20:5-8*-இல் காண்கிறோம்.

ஆமோஸ் (AMOS - சுமை தூக்குபவர், ஆண்டவர் வலுப்படுத்துகிறார்)

1. கி.மு.*8*-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு இறைவாக்கினர் இவரது இறைவாக்கு நூல் சிறிய இறைவாக்கினர் நூல்களில் எபிரேய, இலத்தின் வாசகங்களில் மூன்றாவதாகவும், கிரேக்க வாசகத்தில் இரண்டாவதாகவும் இடம் பெறுகிறது.

இவரது ஊர் தெக்கோவா ஆகும் (ஆமோ *1:1*). இச்சிற்றூர் பெத்லகேமுக்குத் தெற்கில் *10* கி.மீ. தொலைவில் யூதாவின் பாலைவனப்பகுதியை நோக்கி உள்ளது. இவர் இறைவாக்குரைத்தலைத் தொழிலாகக் கொண்ட இறைவாக்கினர் குழுவைச் சேர்ந்தவரல்லர் (*7:14*). ஆடு மேய்ப்பவர், இதனால் ஆடுகளையும், மயிரையும் சந்தையில் விற்பதற்கு எருசலேம், சமாரியா போன்ற நகரங்களுக்குச் சென்றிருக்க வேண்டும். மேலும் ஆமோஸ், காட்டு அத்தி மரங்களைக் கண்காணிப்பவர் (*7:14*). இம் மரங்களின் பழங்கள், பழுப்பதற்குமுன், குத்திவிட வேண்டும் அல்லது கீரி விடவேண்டும். அப்போதுதான் அவை உணவாகக்கூடும். காட்டு அத்தி மரங்கள் தெக்கோவாவில் அருகில் வளரவில்லை. இவை பயிர் செய்யப்பட்ட மேற்கு யூதாவில் இவருக்கு ஓரளவு நிலம் இருந்திருக்க வேண்டும் (*1* அர *10:27*). ஆகவே நாட்டுப்புறத்தில் வாழ்ந்த ஒரு நிலக்கிழாராக இருந்திருக்கக் கூடும். இது அவர் தன் நூலில் பயன்படுத்தும் நாட்டுப்புற உருவகங்களில் பிரதிபலிக்கிறது (*3:4.8.12; 4:1; 5:8.19*). ஆடுகளை ஓட்டிக் கொண்டு போனவரைத் தெரிந்தெடுத்து வட அரசுக்கு இறைவாக்குரைக்க இறைவன் அனுப்பினார். இறைவனின் நியாயத்தையும், நேர்மையையும், நீதியையும் நிலை நாட்டுபவராக ஆமோஸ் திகழ்ந்தார். இவரது இறைவாக்குப் பணி பாலஸ்தீனத்தின் வட அரசாகிய இஸ்ராயேலில் பெத்தேலில் தொடங்கியது. அங்கிருந்து அவரது சாபத்தையும், கோபத்தையும் பொறுக்க முடியாமல் அதிகாரிகளால் துரத்தப்பட்டவர். ஆமோசைப் பொறுத்த மட்டில் யூதேயாவும், இஸ்ராயேலும் இறைவனின் பிள்ளைகள் எனக் கருதியதால், அவரது பணியை ஓர் குறிப்பிட்ட நாட்டுக்கும், பகுதிக்கும் அப்பாற்பட்டதாய், பரந்த மனப்பான்மையோடு எங்கும் இறைவாக்குரைக்கத் துணிந்தவர். அவரது போதனைக்கு குறுக்கீடாக இஸ்ராயேலைக் காட்டிலும் சமாரியாவில்தான் அதிகார வர்க்கம் இருந்தது. பண்பாடும், விசுவாசமும் ஏழை எளியவர்களிடத்தே தீவிரமாகக் காக்கப்படுகின்றன, வளர்க்கப்படுகின்றன என்கிறார். ஆமோஸ் எதையும் ஆழமாக உற்றுநோக்கி, இறைவனின் சித்தம் நிறைவேற்றப்படுகின்றதா என்பதில் கருத்தாயிருந்தார். வழிவழியாய் உதித்த இறைவாக்கினர்கள்கூட அநியாயத்தைத் கண்டிக்கத் தயங்கியபோது சாதாரண ஓர் இடையர் குலத்தில் பிறந்த ஆமோஸ் துணிவுடன் நீதியை நிலை நாட்டத் துணிந்தார்.

ஆமோஸ் பெத்தேலினின்று துரத்தப்பட்டபின் அவரது முடிவும், சாவும் பற்றியவை புதிராகவே இருக்கிறது; ஒன்றும் அறிவதற்கில்லை.

2. இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (மத் *1:10*; லூக் *3:25*). காண்க ஆமோன்-*1*.

ஆமோதிசு (AMOZ - வலுவான)

ஏசயா இறைவாக்கினரின் தந்தை (*2* அர *19:2*; ஏச *1:1*). ஒரு பாலஸ்தீன நாட்டு முத்திரையில் காணப்படும் ஆமோதிசு என்ற இப்பெயர் இறைவாக்கினர் ஆமோசினின்று வேறுபட்டது.

ஆமோன் (AMON - நம்பிக்கைக்குரிய, பிரமாணிக்கமுள்ள) - ஆள்.

1. யூதாவின் அரசனான மனாசேயின் (641-639) மகனும், அரச வாரிசுமாவார். இவர் 22 வயதில் அரசனானார். இருவருடங்கள் ஆட்சி செய்தார் (2 அர 21:19;2 நாள் 18:25-27). இவரது தாய், யோத்திபாவைச் சேர்ந்த காருசின் மகளான மெசுல்லமேத்து ஆவாள். யோத்திபா என்ற நகரம் கலிலேயாவில் உள்ளதாகும். (இதைத்தவிர அசீரிய கிரேக்க யோத்தபத்தா என்ற நகரமும் உண்டு). இந்தப் பெயர் வட நாடுகளோடு யூதா கொண்டிருந்த நெருங்கிய உறவைச் சுட்டுகின்றது. இந்த உறவு, யூதாவின் அக்கால வரலாற்றைப் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவும்.

ஆமோன் தன் தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினார். அசீரியாவோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தார். அதன் தெய்வங்களை வழிபட்டார். யாவேயின் வழிபாட்டைக் கைவிட்டார் (2 அர 21:20-22; 2 நாள் 33:22-23).

இவருக்கு 24 வயதாகியபோது, இவருடைய ஊழியர்கள் சதி செய்து இவரைக் கொன்று போட்டனர் (2 அர 21:28; 2 நாள் 33:24). இச்சதிக்கு மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. இச்சதிக்காரர்களை மக்களே கொன்று போட்டனர் (2 அர 21:23-26;2நாள் 33:25). அதற்குப் பின் ஆமோனின் எட்டு வயது மகனான யோசியாவை அரியணை ஏற்றினர்.

புதிய ஏற்பாட்டில், இயேசுவின் மரபு வழிப்பட்டியலில் இவர் ஆமோஸ் என்றழைக்கப்படுகிறார் (மத் 1:10; லூக் 3:25).

2. அரசர் ஆகாபு ஆட்சியில் சமாரியா நகரின் ஆளுநராக இருந்தவர். இமிலாவின் மகன் இறைவாக்கினர் மீக்காயா, ஆகாபு இராமோத்து-கிலயாதுக்கு எதிராகச் செய்யப்போகும் போர் தோல்வியில் முடியும் என்று எச்சரித்தார். இதற்காகத் தான் போரிலிருந்து திரும்பி வரும்வரை மீக்காயாவைச் சிறையில் வைத்திருக்கும் பொறுப்பை இந்த ஆமோனிடமும் தன் மகன் யோவாசிடம் ஆகாபு விட்டுச் சென்றார் (1 அர 22:26-28; 2 நாள் 18:25-27).

3. சாலமோனின் ஊழியர்களின் வழித்தோன்றல்களில் ஒருவர். பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுத் தாயகம் திரும்பியவருள் ஒருவர் (நெக 7:59).எஸ் 2:57-இல் இவர் ஆமீ என்றழைக்கப்படுகிறார்.

ஆமோன் (AMON) - தேவதை

ஆமோன் - ரா என்பது எகிப்தியப் பேரரசின் மிக உயர்ந்த கடவுளின் பெயராகும். காற்றின் கடவுள் (எரே 46:25). இக்கடவுளுக்கு வழிபாடு அளிக்கப்பட்ட முக்கிய மையம் திபிசுவிலுள்ள கர்னாக் கோவிலாகும்.

ஆமோன் (AMON) - இடம்

திபிசுவின் எபிரேயப் பெயரின் ஒரு பகுதியாகும்.

ஆயக்காரன் (TAX COLLECTOR)

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாலஸ்தினத்தில் இருந்த உரோமை ஆளுகைத் தலைவரி மற்றும் நிலவரியை வசூலிக்கும் பொறுப்பைக் கொண்டிருந்தார். பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏற்றிச் செல்பவர்கள்மேல் சுங்கவரி வசூலிக்கப்பட்டது. இது தனிப்பட்ட குத்தகைக் காரர்களுக்கு விடப்பட்டிருந்தது. இவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வரி வசூலிக்கும் உரிமையைப் பெற ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை அரசாங்கத்திற்கு செலுத்தியபின், அவர்கள் லாபம் ஈட்டினர். இவர்கள் ஆயக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும் உரோமையர்களாக இருந்தனர். ஆனால் பிறரும் இதில் பயன்படுத்தப்பட்டனர். அனேகமாக யூதன் சக்கேயு (லூக் 19:2-10) இவ்வாறுதான் செல்வம் சேர்த்திருக்க வேண்டும். அவர் எரிகோ பகுதியில் வசூலித்தார்.

ரோமை அதிகாரிகளும், யூதர்களும் தங்களுக்குக் கீழ் வேலையாட்களை அமர்த்தி வரி வசூலித்தனர். சுதந்திர நாடுகளிலும் வரி

வசூலிப்போன் புகழ் பெறுவதில்லை. இதைப் போலவே பாலஸ்தீனத்திலும் இவர்கள் மிகவும் இழிந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

கிறிஸ்தவ வரலாற்றின் தொடக்கத்தில், பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள், உரோமையர்கள் செய்த நன்மைகளில் சிலவற்றை ஏற்றுக்கொண்ட போதிலும், உரோமையர் ஆட்சியை வெறுத்தனர். அவர்கள் தங்களையே நசுக்கப்பட்டவர்களாகக் கருதியதால் விரைவில் தங்களுக்கு விடுதலை கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆளுநர்களின் கொடுமை அவர்களது வெறுப்பை அதிகரித்தது. புரட்சிக் குழுக்கள் மறைந்திருந்தாலும், சில சமயங்களில் கொந்தளித்து வெளிப்பட்டன. தீவிர வாதிகள் செசாருக்கு வரி செலுத்துவது கடவுளுக்கு எதிராக செய்யும் குற்றம் என்றுரைத்தனர். பல சமயங்களில் மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரி அதிகமாகவும், உரோமை அதிகாரிகளின் பணப்பைகளை நிரப்பவும், வரி வசூலிப்போருக்கு லாபம் தரவுமே பயன்பட்டது.

வரி வசூலிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த யூதர்கள் மிக மிக இழிந்தவர்களாகக் கருதப்பட்டு வெறுத்து ஒதுக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் இனத்துக்கு எதிராகவே அந்நியரோடு ஒத்துழைத்தனர். அவர்கள் உரோமையருக்கு வரியைச் செலுத்தினாலும் அவர்கள் வசூலித்ததன் ஒரு பகுதியை அவர்களே வைத்துக் கொண்டனர். ஆயக்காரர்கள் திருடர்களாக கருதப்பட்டனர். அவர்களும், அவர்களுடைய குடும்பமும் பொதுப்பணி புரிவதிலிருந்தும், யூத நீதிமன்றத்தில் சாட்சி கூறுவதிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். நான்கு நற்செய்திகளும், ''ஆயக்காரர், பாவிகள்'' என்று இணைத்து கூறுகின்றன *(மத் 9:10-11; 11:19; மாற் 2:15-16; லூக் 5:30)*. ஆயக்காரர்கள் விபச்சாரிகள் கூட்டத்தோடு சேர்க்கப்படுகின்றனர் *(மத் 21:31)*. திருச்சபையின் அதிகாரத்துக்கு கீழ்ப்படியாதவன் ''புறவினத்தானாகவும், ஆயக்காரனாகவும் நடத்தப்பட வேண்டும்'' என்று கூறப்படுகிறது *(மத் 18:17)*.

இயேசு ஆயக்காரருடன் உணவு கொள்ள இணங்கியதற்கு, அவர் அவர்களது தொழிலை ஏற்றுக் கொண்டார் என்றோ, பொறுத்துக் கொண்டார் என்றோ பொருளல்ல. மாறாக, இந்த ஒதுக்கப்பட்ட மக்களுக்குக் காட்டிய இரக்கத்தால் அவர்களுக்கு நல்வாழ்விற்குரிய வழி காட்டினார். விபச்சாரிகளுக்குக் காட்டிய இரக்கத்தால், அவர்கள் மனந்திரும்பி நல்ல ஒழுக்க வாழ்வு வாழ்வதற்கு இயேசு வாய்ப்பளித்தார். அதுபோல ஆயக்காரர்களுக்கும் மனந்திருந்தவும் சீர்திருத்தம் அடையவும் வாய்ப்பளித்தார். லேவி என்ற மத்தேயு, தனது ஆயக்காரத் தொழிலைக் கைவிட்டு, இயேசுவின் சீடரானார். செல்வந்தனான சக்கேயு, மனந்திரும்பி, ''தன் உடைமையில் பாதியை ஏழைகளுக்கும், எவனையாவது ஏமாற்றி எதையாவது கவர்ந்திருந்தால், நான்கு மடங்காகக் திருப்பிக் கொடுப்பதாகவும்'' *(லூக் 19:8)* உறுதி கூறுகிறார்.

ஆயத்த நாள் (DAY OF PREPARATION)

ஓய்வு நாளுக்கு முந்தியநாள் ஆயத்த நாளாகும். ஓய்வுநாளை மிகச் சரியாக அனுசரிக்க வேண்டும் எனும் யூதமத ஒழுங்கின்படி ஓய்வு நாளுக்கு முந்திய நாளே தங்களையே தயாரித்துக் கொள்ளத் தொடங்கினர். அன்று உணவைத் தயாரித்து, வியாபார காரியங்களை நிறுத்தி வைத்து ஓய்வு நிலைக்குச் சென்றனர். ஓய்வு நாளை அனுசரிப்பதில் சிறிதும் தவறக் கூடாது என்பதற்காக, அன்று சூரிய உதயத்துக்குப்பிறகு தொடங்கும் ஓய்வுநாளை அதற்கு முன்பே, கடைப்பிடிக்கத் தொடங்கினர். யூத, கிறிஸ்தவ செல்வாக்கினால் இப்பெயரே இந்நாளுக்கு நிலைத்து விட்டது.

நற்செய்திகளின்படி இயேசு சிலுவையில் அறையப்பட்டது ஆயத்த நாளில்தான். இதனை ஒத்தமை நற்செய்திகள் ஓய்வு நாளுக்கு முந்திய நாள் என்கின்றன *(மாற் 15:42; லூக் 23:54)*. இயேசுவின் இறுதி இராவுணவை *(மத் 26:17; மாற் 14:12; லூக் 22:7)* முந்திய இரவில் நடந்த யூதப் பாஸ்கு உணவாகக் கருதுகின்றனர். இப்படி அது

புளியாத அப்பத்திருவிழாவின் முதல்நாளா கும். ஆனால் நான்காவது நற்செய்தி இறுதி இரவு உணவை பாஸ்கா உணவுவிழா என்று கூறவில்லை (யோவா 13:1 தொ). யோவா 19:14 சிலுவையில் அறையப்பட்ட நாள் பாஸ்காவுக்கு ஆயத்த நாளாகும் என்று கூறு கிறது. பாஸ்காவுக்கு முந்திய நாள் மிக முக்கியத் தயாரிப்புக்கான நாள் ஆகும். மேலும் ''அடுத்தநாள் ஓய்வுநாளாகவும் பெரு விழாவாகவும் இருந்தது'', (யோவா 19:31) என்ற குறிப்பு புளியாத அப்பத்திருவி ழாவின் முதல்நாளைக் குறிப்பதாக அமைய லாம். சதுசேயர்களைத்தவிர முதல் நூற்றாண் டைச் சேர்ந்த மற்ற யூதர்களனைவரும் மிகச் சிறப்பானதும், பரிசுத்தமானதுமான பெரு விழாநாளை (லேவி 23:7) ஓய்வுநாளாகக் கருதினர். அதைவைத்தே, வாரங்களின் விழாவைக் கணித்தார்கள். எனவே இறுதி இராவுணவுக்கும், பாஸ்கா விழாவுக்கு முள்ள தொடர்பு, பின்னரே ஏற்பட்ட ஓர் இரண்டாந்தர வளர்ச்சியெனக் கொண்டால், ஆயத்தநாள் பற்றிக் கூறப்படும் குறிப்புகள் சரியெனலாம்.

ஆயப்பதிவேடுகள் நிலையம் (HOUSE OF ARCHIVES)

பொது ஆவணங்கள், வரலாற்றுப் பத்தி ரங்கள், சட்டங்கள் ஆகியவை சேர்த்துவைக் கப்பட்டு பாதுகாக்கப்பட்ட இடமாகும். இந்த இடமானது கோவில் வளாகத்திலோ அல்லது அரச கருவூலத்திலோ அமைந்திருக் கலாம். எரேமியா தந்த ஓலைச் சுருளை இத்தகைய இடத்தில் அநேகமாக வைத்தி ருக்கலாம் (எரே 36:20). யோசியா காலத்தில் ஆலயத்திலிருந்த இத்தகைய இடத்தில்தான் சட்டச் சுருள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும் (2 அர 22:8 தொ). சாலமோன் வரலாற்றுக் குறிப்பேடுகளை இதுபோன்ற சுவடிக் கூடங்களில் பாதுகாத்து வைத்திருந் தார். சாலமோன் மன்னனின் சில வரலாற் றுக் குறிப்பேடுகள் பழைய ஏற்பாட்டு வர லாற்று நூல்களில் சுட்டிக் காட்டப்பட்டுள் ளன. பிற்காலத்தில் தலைமுறை அட்டவ ணைகள் இச்சுவடிக் கூடத்தில் வைக்கப்பட் டிருந்திருக்கலாம் (எஸ் 4:15). நாடுகடத்தப்ப டுதலின் முடிவு பற்றி அறிய அரச பத்திரங் கள் இருக்கிறதா என்று பாரசீகச் சுவடிக் கூடங்களில் தேடிப்பார்த்தனர் (எஸ் 5:17; 6:1). ஆயப்பதிவேடுகள் நிலையத்தைக் குறிக்கும் அரமேயிக் பதத்திற்கு ''நூல்நிலை யம் அல்லது சுருள்களின் நிலையம்'' என்று பொருள் கொள்ளப்படுகிறது. எஸ் 5:17-இல் வருகின்ற கெனிசா என்ற அரமேயச் சொல் லானது, சிதைந்துபோன விவிலியச் சுருள்க ளைச் சேர்த்துவைக்கின்ற இடத்தைக் குறிக் கப் பயன்படுத்தப்பட்டது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பெர்சபோலிஸ், நினிவே, இராஸ்சம்ரா, கெயிரோ போன்ற இடங்களில் ஓலைச்சுருள்கள் அடங்கிய கரு வூலங்களையும், சுவடிக் கூடங்களையும் கண்டு பிடித்துள்ளனர்.

ஆயர், மேற்பார்வையாளர் (BISHOP, PASTOR)

அப்போஸ்தலர்கள் காலத்திற்குப்பின், தளத்திருச்சபையின் படிமுறை பணியாளர்க ளின் தலைவர் அல்லது அதிகாரியாவார். எபேசு மற்றும் பிலிப்பை ஆகிய திருச்சபைக ளின் ஆளுங்குழுக்களில் ஆயர்கள் இருந்தி ருக்கலாம் (அ.ப. 20:28; பிலி 1:1). பவுல் சிறைப்படுத்தப்பட்டபின் இப்பதவியை ஏற் றுக் கொண்டார் (1 திமோ 3:2; தீத்து 1:7).

''ஆயரும் மூப்பரும்'' திருச்சபையின் பணியாளரையும் மூப்பரையும் குறிக்கின் றன என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்ப டும் கருத்தாகும். புதிய ஏற்பாட்டில் இருவ ரும் ஒரே மாதிரியானவரே. ஆனால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அரச படிமுறை திருச்சபையில் எழுந்தது. மந்தையை மேற் பார்ப்பது ஆயர்களின் கடமையாகும் (அ.ப. 20:28). இது போதிப்பதையும் உள்ளடக்கும். இப்பதவிக்குரிய தகுதிகளும் கடமைகளும் 1 திமோ 3:1-7; தீத்து 1:7-9-இல் எடுத்துக் கூறப்படுகிறது.

பேதுரு கிறிஸ்துவை சிறிய ஆசிய கிறிஸ்த வர்களின் ''ஆயரும் காவலருமாவார்'' என்று கூறுகிறார் (1 பேதுரு 2:25). மூப்பர்க ளும் திருச்சபையின் ஆட்சிப் பணியில் ஈடு பட்டிருக்கலாம். ஆனால் கிறிஸ்துவின் திருச்

சபை உண்மையில் அவராலேயே ஆட்சி செய்யப்படுகிறது. பாதுகாக்கப்படுகிறது (2:4-8). அ.ப. 1:20-இல் அலுவல் அல்லது பதவி இறந்து போன யூதாசின் இடத்தை நிரப்பும் முறையான அப்போஸ்தல மரபைக் குறிக்கிறது. 1 பேதுரு 5:2 மூப்பர்களின் மேய்ப்புப் பணி மேற்பார்வையை விவரிக்கிறது. 1 பேதுரு 5:4, கிறிஸ்துவைத் தலைமை ஆயர் என்றழைக்கிறது.

ஆயலபு, ஆ-ஏலேப் (HA-ELEPH - எருது).

பெஞ்யாமீன் பகுதியைச் சேர்ந்த எருசலேமின் வட்டாரத்தில் உள்ள ஒரு நகரம். இந்தப் பெயர் அநேகமாக அதற்கு முந்திய சேலா என்ற சொல்லோடு சேர்த்து சேலா-ஆ-ஏலேப் என்று வாசிக்கப்பட வேண்டும். ஒரு வேளை இவ்விடம் எருசலேமிற்கும் கிபயோனுக்கும் இடையில் இருக்கின்ற இக்கால சாலாவாக இருக்கலாம்.

ஆயனும் மந்தையும் (SHEPHERD AND SHEEP)

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் குலத்தினர் அரமேயரின் நாடோடிப் பண்பாட்டில் ஆழ்ந்தவர்; மேய்ப்புப் பணியில் ஆர்வமுள்ளவர். எனவே, ''ஆடுகளை நடத்திச் செல்லும் ஆயன்'' என்ற உருவகம், அவர்களுக்கு ஒரு பழக்கப்பட்ட உருவகம்; இது நமக்குப் பழைய ஏற்பாட்டிலிருந்து தெரியவருகிறது. கொடிய மிருகத்திடமிருந்து மந்தையைக் காக்கும் வலிமையும் ஆடுகளைத் தன் குழந்தைகளாகக் கருதிக் கண்காணித்து, கரங்களில் ஏந்தி, தோள்களில் சுமந்து, அவைகளின் தேவைகளைத் தீர்த்து வைக்கும் கண்ணியமிகு இனிய தன்மையும் ஆயனுக்குண்டு (பழ 27:23; ஆதி 33:13; ஏச 20:11). ஆடுகளின்மேல் அவனுக்கிருக்கும் அதிகாரம், அன்பு பராமரிப்பின் அடிப்படையில் எழுந்தது. எனவேதான் ஆயன் என்பவன் ஆடுகளின் தலைவனெனவும், துணைவனெனவும் எண்ணப்பட்டான்.

பாபிலோனியாவிலும், அசீரியாவிலும் இருந்த அரசர்கள் தங்களை மேய்ப்பர்கள் என்று அழைப்பதிலே பெருமை அடைந்தார்கள்; இதையும் வரலாறு கூறும். ஏனென்றால் ஆயர்களாகிய தங்களிடம் மக்களாகிய ஆடுகளைக் காத்துக் கண்காணிக்கும் பொறுப்பு இறைவனால் அளிக்கப்பட்டது என்பது அவர்கள் எண்ணம். பாபிலோனியாவிலும் அசீரியாவிலும் வேரூன்றி நின்ற இந்த எண்ணச் சூழலில், எவ்வாறு இஸ்ராயேல் மக்கள் ''நல்லாயன்'' என்று அழைக்கப்படும் இறைமகன் கிறிஸ்துவழியாக இறைவனோடு தொடர்பு கொண்டுள்ளனர் என்பதை விவிலியம் நன்கு எடுத்துரைக்கிறது.

I. பழைய ஏற்பாடு

1. இறைவன் மந்தையின் தந்தை:- வரப்போகிற கிறிஸ்துவுக்கே ''நல்லாயன்'' என்ற சிறப்புப் பெயர் பேரளவில் வழங்கப்பட்டது; ஓரிரு இடங்களில் மட்டுமே (ஆதி 49:24; 48:15; சங் 23:1; 80:2) இறைவன் யாவேக்கு அப்பெயர் அளிக்கப்பட்டது. யாவேக்கென்று தனியாக இப்பெயர் அளிக்கப்படாதிருந்தாலும், அவர் இஸ்ராயேல் மக்களோடு கொண்டிருந்த தொடர்பை எண்ணும்போது அப்பெயர் அவருக்குத் தகும் என்பதை உணர்வோம். யாத்திரை ஆகமத்தில் இஸ்ராயேல் மக்களை ஆடுகளைப் போல யாவே வழிநடத்துகிறார் (சங் 95:7; 78:52 தொ; ஏச 40:11). பணிந்து நடக்கும் ஆடுகளாக இஸ்ராயேல் நடக்காததால், இஸ்ராயேல் குலம் துன்பத்திற்குள்ளாகிறது, அடிமைப்படுத்தப்படுகிறது (ஓசே 4:16; எரே 13:1). யாவே திரும்பவும் அவர்களை நீரூற்றுகளுக்கு அழைத்துச் செல்கிறார் (ஏச 49:10). சிதறிப்போனவைகளை மீண்டும் ஒன்று சேர்க்கிறார் (56:8); குரல் கொடுத்து அழைக்கிறார்; தூய உள்ளமுள்ளோர் அனைவரிடத்தும் தம் கருணையையும், அருளையும் பொழிகிறார்.

2. ஆயனும் ஆட்டு மந்தையும்:- தாமே ஆடுகளை மேய்ச்சலுக்கு நடத்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் யாவே, ஆடுகளை நடத்திச் செல்லும் பொறுப்பைத் தம் ஊழியர்களிடம் ஒப்படைக்கின்றார் (சங் 100:3;79:13;74:1;மீக் 7:14). மோசேயின் கைகளினால் அவர்களைக் காத்து வருகின்றார் (சங் 77:21). ஆயனில்லாக் குலமாக

இஸ்ராயேல் விளங்கக்கூடாது என்பதற்காக மோசேக்குப் பிறகு அந்தப் பொறுப்பை யோசுவாவிற்கு அளிக்கிறார் (எண் 27:15-20). அவரது ஆடுகளாகிய இஸ்ராயேலரை ஆள் வதற்கு ஆயர்குலச்சிறுவன் தாவீதைத் தெரிந் தெடுக்கிறார் (சங். 78:70தொ; 2 சாமு 7:8; 5:2; 24:17). நீதிபதிகள் (7:7), மக்களின் தலைவர்கள் (எரே 2:8), பிறநாடுகளின் அரசர்கள் (25:34தொ; நாகூ 3:8; ஏச 44:28) ஆகியோர்களுக்கு ஆயர் என்ற பட்டம் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆயனது பணி களை இஸ்ராயேல் மன்னர்கள் செய்தாலும் (1அர 22:17; எரே 23:1-2; எச 34:1-10) அவர்களுக்கு ''ஆயர்கள்'' என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்படவில்லை. அந்தக் கடமை அவர்களுக்கு அளிக்கப்படுகிறது, அந்தப் பெயர் வரப்போகிற புதிய தாவீதா கிய ''மீட்பருக்கே'' ஒதுக்கி வைக்கப்பட் டது. இது இறுதிக்கால நம்பிக்கையின் ஒரு கூறு ஆகும். இதுவே எசக்கியேல், எரேமியா போன்ற இறைவாக்கினரின் போதனையாக இருந்தது. தம் மக்களை வழிநடத்தும் அலு வலை யாவே மீண்டும் ஏற்று, அதை மெசி யாவிடம் ஒப்படைப்பார்.

இஸ்ராயேல் மக்களைக் கண்காணிக்கத் தலைமைப் பொறுப்பேற்று ''ஆயர்கள்'' என அழைக்கப்பட்டவர்கள், பொறுப்பற்ற வர்களாய், இறைவனுக்கு எதிராகவே கல கம் செய்தார்கள் (எரே 10:21; 2:8); தங்க ளைப் பற்றியே கண்ணும் கருத்துமாய் இருந் தார்கள்; ஆடுகள் சிதறுண்டுபோவதுபற் றியோ, மந்தையை விட்டு விலகிப்போவது பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை, (எரே 23:1தொ; 50:6; எச 34:1-10; எரே 22:22). இறைவாக்கினரின் கூற்றுக்களைப் படித்தோமென்றால் (மீக் 7:14தொ) இறை வனே தமது கரத்தால் ஆடுகளை எடுத்து, ஒன்று சேர்த்து அரவணைப்பார் என்றும் (எரே 23:3; மீக் 4:6; எரே 50:19; 31:10; எச 34:11-22), அதன் பிறகு ஆடுகளைப் பரிவோடும் பாசத்தோடும் காக்க தம் விருப் பத்திற்கிணைந்து வரும் ஆயர்களை அவர்க ளுக்குத் தலைவராக்குவார் என்றும் உணர்கி றோம் (எரே 3:15;23:4). எசக்கியல் என்ற இறைவாக்கினரின் கூற்றுப்படி, இறுதியில் ஆடுகளெல்லாம் புதிய தாவீதென்னும் ஒரே ஒரு நல்லாயனால் வழிநடத்தப்படும் (எச 34:23தொ; 36:37தொ); அவரது ஆட்சியின் போது யூதாவும் இஸ்ராயேலரும் ஒன்று சேர்க்கப்படுவர் (எச 37:22-24; மீக் 2:12தொ).

அடிமைப்படுத்தப்பட்டு விடுதலைய டைந்த இஸ்ராயேலரை வழிநடத்தும் தலை வர்கள் உயர்குணம் உள்ளவர்களாக விளங் காததால் இறைவன் அவர்களைத் தண்டிப் பார் என்று செக்கரியா கூறுகிறார் (செக் 10:3; 11:4-17;13:7). இப்படியாகத் துன்பத்தினால் தூய்மைப்படுத்தப்பட்ட குலத்தில் ஒருசிறு பகுதியே எச்சமாக எஞ்சிநின்றது (எச 13:8தொ). இந்தக் கண்ணோட்டத்தில்தான் துன்புறுத்தப்பட்ட ஆயனை (13:7) ஓர் அறி விலியாகக் காணாது (11:15தொ), ஒரு வீரத் தியாகியாகக் கண்டு, வாள் ஊடுருப்பட்ட ஆயனின் (12:10) இறப்பு இறைவாக்கினரால் போற்றப்படுகிறது (13:1-6). இந்த ஆயன் தான் ஓர் ஊமைச் செம்மறிபோலக் கொலைக்களத்துக்கு இழுக்கப்பட்டுத் தம் பலியால் சிதறுண்டோரை ஒன்று சேர்க்கும் யாவேயின் தொண்டனுடன் ஒப்பிட்டுப் பேசப்படுகிறார் (ஏச 58:6 தொ. 11தொ).

II. புதிய ஏற்பாடு

இயேசுகிறிஸ்துவின் காலத்தில், இடையர் களைக் கள்ளர்களென்றும், கொலை புரிப வர்களென்றும், சட்டம் கருதியது. இருப்பி னும் வரப்போகும் ''நல்லாயன்'' பற்றி இறைவாக்கு மறைந்திடவுமில்லை; மங்கிட வுமில்லை; இயேசு கிறிஸ்து வந்தார்; அதை நிறைவேற்றினார். இடையர்களைத் தம் ''சின்னஞ்சிறியோருள்'' அடங்கியவர்களா கக் கருதினர்ர். ஆயக்காரர்களைப் போல வும், விபச்சாரிகளைப் போலவும், சில ஆயர்களும் விருப்புடன் நற்செய்தியைக் கேட்டுணர்ந்தார்கள். மாடடைக் குடிவில் பிறந்த இயேசுவுக்கு இடையர்கள் செலுத் தும் மரியாதையை இந்தக் கண்ணோட்டத் தில் கவனிப்பது நல்லது (லூக் 2:8-20). விவிலியப் பாரம்பரியத்தைப் பின்பற்றி

இறைவனின் இரக்கப் பெருக்கைக் காணா மல்போன ஆட்டினைத் தேடிக் கண்டுபிடிக் கும் நல்லாயன் உருவில் இயேசு விவரிக்கி றார் (லூக் 15:4-7). நல்லாயனுக்காக ஆவ லோடு எதிர்பார்த்ததை இயேசுகிறிஸ்துவே நிறைவேற்றுகின்றார். திருச்சபையைக் கண் காணிக்கும் ஆயர்பணியையும் அவரே ஒருசி லருக்கு வழங்குகிறார்.

1. நல்லாயன் கிறிஸ்து:-

அ) ஒத்தமை நற்செய்திகளும் நல்லாய னின் நற்குணங்களை நன்கு எடுத்துரைக்கின் றன; இதில் யோவான் உருவகத்துக்கு முன் னோடியாக அமைகின்றன. பெத்லகேமில் இயேசு பிறப்பது மீக்கா என்பவரின் இறை வாக்கை நிறைவேற்றுகிறது (மத் 2:6; மீக் 5:1). ஆயனில்லா ஆடுகளை அழைத்து ஆறு தலளிக்கும் இயேசுவின் இரக்கத்தன்மை (மத் 9:36; மாற் 6:34), நல்லாயன் எப்படியி ருக்கவேண்டுமென்று மோசே விரும்பி னாரோ அதை மெய்ப்பிக்கிறது (எண் 27:17). இஸ்ராயேலில் தவறிப்போன ஆடுக ளிடம் அனுப்பப்பட்டவராகத் தம்மையே காண்கிறார் இயேசு (மத் 15:24; 10:6; லூக் 19:10) இயேசுவின் அன்பின் அரவணைப்பி லிருக்கும் அவரது சீடர்களின் சிறிய கூட்டம் (லூக் 12:32), புனிதர்களுக்கென்று வாக்க ளிக்கப்பட்ட இறுதிக்கால விண்ணரசைக் குறித்துக் காட்டுகின்றது (தானி 7:27). மந் தைக்குள்ளேயே ஆட்டுத் தோல் போர்த்திய ஓநாய்களாலும் (மத் 7:15) புறத்திலிருந்து ஓநாய்களாலும் (மத் 10:16; உரோ 8:36) ஆட்டு மந்தை சிதறடிக்கப்படும். ஆனால் துன்புறுத்தப்பட்ட நல்லாயனே சிதறுண்ட ஆடுகளை ஒன்று சேர்ப்பார் என்று செக்கரி யாவின் இறைவாக்கு கூறுகிறது (மத் 26:31 தொ; செக் 13:7). கடைசியாக உலக முடி வில் ஆடுகளில் ஆண்டவனே, நல்ல ஆடுக ளைத் தீய ஆடுகளினின்று பிரித்தெடுப்பார் (மத் 25:31 தொ).

ஆ) இந்த மூன்று நற்செய்திகளைப் பின் பற்றி, மற்றப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்க ளும், இயேசுவை, மகத்துவமிக்க மேய்ப்ப னென்றும் (எபி 13:20), மோசேயைவிட பெரியவரென்றும், ஆயர்களுக்கெல்லாம் தலைவர் என்றும் (1 பேதுரு 5:4), சிதறுண்ட ஆடுகளைக் காக்கச் சிலுவையில் மரித்த மாபெரும் ''ஆயரும் காவலரும்'' என்றும் (2:24) புகழ்கின்றனர். செம்மறியான இயேசு, வாழ்வில் ஊற்றுக்கு அழைத்துச் செல்லும் ஆயனாக மாறுவார் (திருவெளி 7:17).

இ) நான்காம் நற்செய்தி:- ஒரே ஆயனின் தலைமையில் விளங்கும் திருச்சபையின் தன் மையை, முன்பு கூறிய ஆயனின் குணங்கள் எல்லாம் ஒன்றிணைந்த நிலையாக நான்கா வது நற்செய்தி நன்கு எடுத்துரைக்கின்றது (யோவா 10). மேலும் நான்காம் நற்செய்திக் கென்று தனிக்குணங்களும் இருக்கின்றன. அதாவது, இயேசுவை அரசரென்றோ மந்தை யின் தலைவரேன்றோ அதிகம் விவரிக்கா மல், அவர் மக்களுக்கு இறைத்தந்தையின் அன்பை அளிக்க வந்த இறைமகன் என்ப தற்கே சிறப்பிடம் கொடுக்கிறது. இயேசு வின் சொற்பொழிவுகள் பழைய கருத்துக் களை நினைவுபடுத்தி, அவற்றிற்கு வளர்ச்சி யும் தருகின்றன. எசக்கியேல் சொல்வது போல் (எச 34:17), இயேசுவின் போதனை ஒரு தீர்ப்பு ஆகும் (யோவா 9:39). கள்வர்க ளாலும் கொள்ளைக் கூட்டத்தாலும் அடித் துத் துரத்திச் சிதறடிக்கப்பட்ட மந்தைபோன் றதே இஸ்ராயேல் மக்கள் (எச 34:3; 34:5 தொ; யோவா 10:1.10.12). யாவே போன்று இயேசுவும் அவர்களுக்கு விடுதலை அளித்து, பசும்புல் தரைக்கு அழைத்துச் செல்கிறார் (எச 34:10-14; யோவா 10:11.3.9.16). அதனால் அவர்கள் இயேசு வைத் தங்களுக்கு மீட்பளித்த ஆண்டவர் என அறிவார்கள், (எச 34:22; யோவா 10:9). அவரும் முன்னறிவிக்கப்பட்ட, 'நல்லாயன் நானே' என்று மொழிவார் (எச 34:24; யோவா 10:11).

இயேசு இன்னும் தெளிவாக எடுத்துரைக் கிறார். இயேசுவே இணைப்பாளராகவும், மந்தைக்கும் புல்வெளிக்கும் வாயிலாகவும், அமைகிறார் (யோவா 10:7; 10:9 தொ.); அவரே வாழ்வளிக்கிறார், தமக்குப் பதிலா கப் பிறரையும் ஆயராக நியமிக்கிறார் (21:15

தொ.). இறைத்தந்தைக்கும் இறைமகனுக்கும் உள்ள அன்பின் பிணைப்பை அடிப்படையாகக் கொண்டு, ஆயனுக்கும் ஆட்டு மந்தைக்கும் இடையே உள்ள உறவு அமைகிறது (10:3 தொ. 14 தொ; 14:20; 15:10; 17:8 தொ. 18-23). கடைசியாக இயேசுவே நிறைவான நல்லாயன் ஆவார். ஏனென்றால் தம் ஆடுகளுக்காகத் தம் உயிரையே அளிக்கிறார் (10:15.17 தொ.); அவர் ''வெட்டப்படுதல்'' மட்டுமன்றி அவராகவே தம் வாழ்வைக் கையளிக்கிறார் (மத் 26:31; செக் 13:7; யோவா 10:18). சிதறுண்ட ஆடுகள் அவர் குரலுக்குச் செவிமடுத்து இஸ்ராயேல் குலத்திலிருந்தும், மற்ற மக்கள் இனங்களிலிருந்தும் வருகின்றன (யோவா 10:16; 11:52). இப்படி அழைக்கப்பட்ட மந்தையானது என்றென்றும் ஒன்றித்திருக்கும்; ஏனென்றால் இது இறைத்தந்தையின் அன்பின் காவலில் முடிவில்லா வாழ்வு பெறுகிறது (10:27-30).

2. திருச்சபையும் அதன் ஆயர்களும்:- யோவான் எழுதிய நற்செய்தியின்படி, 'நல்லாயன் சொற்பொழிவு' திருச்சபையின் தொடக்கமாக அமைகிறது. ஆண்டவரால் குணமாக்கப்பட்ட பிறவிக் குருடனை யூதத் தலைவர்கள் வெறுத்து ஒதுக்க, ஆண்டவர் அவனை அன்புடன் வரவேற்கின்றார். ஆண்டவர் உயிர்த்த பிறகு, திருச்சபையைக் கவனிக்கும் பொறுப்பைப் பேதுரு பெறுகிறார் (21:16); மற்ற ஆயர்களும் (எபே 4:11) திருச்சபையைக் காத்துவரும் திருக்கட்டளையை ஏற்கின்றனர் (1 பேதுரு 5:1 தொ; அ.ப. 20:28). ஆண்டவரின் முன்மாதிரியைப் பின்பற்றி, அவர்களும் சிதறுண்ட ஆடுகளை ஒன்றுசேர்க்க வேண்டும் (மத் 18:12 தொ.) போலிப் போதகர்களான ஓநாய்களின் வாயினின்று அவைகளை விடுவிக்கவேண்டும்; தவறான போதனைக்கு அவர்கள் செவிமடுக்காது அவைகளைக் காத்துவர வேண்டும் (அ.ப. 20:28 தொ.) ''நல்லாயன்'' என்ற பெயரே, ஆயனின் நற்குணங்களையும் (பழைய ஏற்பாட்டில் பார்த்ததுபோல்), யாவேயின் அன்பின் ஏவுதலையும் கண்முன் கொண்டுவர வேண்டும். புதிய ஏற்பாடும் இந்தக் குணங்களை எடுத்துரைக்கின்றது. அன்புடனும் ஆர்வமுடனும் தன்னலமின்றித் திருச்சபையைக் காத்து அவர்களுக்கு முன்மாதிரியாக ஆயர்கள் விளங்க வேண்டும், அப்போதுதான்'' தலைமை ஆயர் தோன்றும் நாளில், மகிமையின் வாடாத வெற்றிவாகை சூட்டப் பெறுவீர்கள்'' (1 பேதுரு 5:4 தொ.) எனும் வாக்குறுதிக்கு உரியவர் ஆவார்கள்.

ஆயி (Ai - குவியல், அழிவு)

1. ஆயி பெத்தேலுக்குக் கிழக்கே எப்பிராயிமிலுள்ள நகரம்.

அ) விவிலிய ஆதாரக் கூறுகள்:- ஆபிரகாம் ஆயிக்கும், பெத்தேலுக்கும் இடையில் கூடாரம் அமைத்ததாக இரண்டு முறை கூறப்படுகிறது (ஆதி 12:8; 13:8) இஸ்ராயேலர் எரிகோவிற்கு அடுத்து தாக்க வேண்டிய நகரம் ஆயி ஆகும் என்று யோசுவா ஆகமத்தில் 7-8 அதிகாரங்களில் குறிப்பிடப்படுகிறது. இந்த சிறிய நகரத்தைத் தாக்குவதற்கு இஸ்ராயேலர் எண்ணிக்கையில் குறைந்த மக்களை அனுப்பியதால், எதிர்பாராத தோல்வியைச் சந்தித்து நம்பிக்கை இழந்தனர் (யோசு 7:2-5). உடனே யோசுவா இறைவனிடம் முறையிட, எரிகோவிலிருந்த எல்லா கொள்ளைப் பொருட்களையும் அழிக்காமல் விட்டுவிட்ட குற்றத்தினால் தான் இந்தத் தோல்வி ஏற்பட்டது என்று கடவுளின் வாக்கு அருளப்பட்டது. எனவே இந்தக் குற்றத்தைச் செய்தவர் யார் என்று கண்டுபிடிக்கச் சீட்டுப் போட்டுப் பார்த்தனர். இறுதியாக ''ஆக்கான்'' குற்றவாளியாகத் தீர்ப்பிடப்பட்டு கல்லால் எறிந்து கொல்லப்பட்டார் (7:6-26). பின் ஆயியைக் கைப்பற்றுவதற்குப் படைகளைத் திரட்டிச் சென்றனர். அவர்கள் வெற்றி பெற்றனர். ஆயி நகரமானது எரித்து சாம்பலாக்கப்பட்டது (யோசு 8:28-29).

ஆயி என்ற நகரத்திற்கருகில், அதே பெயரில் புதிய இஸ்ராயேலர் நகரம் ஏற்படுத்தப்பட்டது. அசீரியர்கள் எருசலேம் நோக்கிப் பயணம் சென்றபோது ''அய்யாத்து'' என்ற நகரத்தை முதன் முதல் உடைமையாக்கிக்

கொண்டனர் என்று ஏசயா ஆகமம் உரைக்கிறது (ஏச 10:28). செருபாபேலோடு திரும்பி வந்த நாடு கடத்தப்பட்ட மக்களில் 223 ஆட்கள் பெத்தேல், ஆயி நகரத்தைச் சேர்ந்தவர்கள் (எஸ் 2:28). இதற்கு இணையான வாசகமாகிய நெக 7:32, 123 ஆட்கள் என்று கூறுகிறது. அடுத்த நூற்றாண்டில் பெத்தேலுக்கு அருகிலுள்ள அய்யாவில் பெஞ்யாமீனின் மக்கள் குடியேறியதாகக் கூறப்படுகிறது (நெக 11:31).

ஆ. புதைபொருள் ஆதாரங்கள்:- பழமையான ஆயி நகரமானது பெத்தேலுக்குக் கிழக்காகவும், பெத்தேலின் இக்கால இடமான தேல்பெயிட்டின் தென்கிழக்காகவும் 3 கி.மீ தொலைவிலுள்ள எத்-தேல் என்ற இடத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதன்படி கி.மு. 3100-ஐ ஒட்டி, சுற்றுப் பாதுகாப்புச் சுவரற்ற ஒரு சிற்றூராக ஆயி ஆரம்பிக்கப்பட்டது. பின்பு 3000-ஐ ஒட்டி விரிவான பாதுகாப்புச் சுவர்களுடைய நகரம் எழும்பியது. இதில் எகிப்தியருடைய செல்வாக்குத் தெரிகிறது, பொது மாளிகைகளும் ஒரு கோவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கோவிலில் தந்தத்தால் செய்யப்பட்ட பாத்திரங்களும் கற்கள் பாவப்பட்ட நீர் தேக்கமும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த நகரம் 2400-ஐ ஒட்டி மூர்க்கத்தனமாக அழிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஒருவேளை இது எமோரியா படைஎடுப்பாலோ எகிப்தியர் படையெடுப்பாலோ நடந்திருக்க வேண்டும். பின் 1200 வரை கைவிடப்பட்டு அழிந்த நிலையிலேயே கிடந்தது. 1200-ஐ ஒட்டி மலை நாட்டிலிருந்து வந்த உழவர்கள் இவ்விடத்தில் குடியேறினர். ஊர் பாதுகாக்கப்படவில்லை. 1050-ஐ ஒட்டி ஒரு சிறு போருக்குப் பின் இந்த ஊர் முழுவதும் கைவிடப்பட்டது.

இவை யோசு 7-8-இல் வரும் நிகழ்ச்சியுரையோடு ஒத்துப் போகவில்லை. யோசுவாவின் தலைமையில் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீனம் கைப்பற்றப்பட்டது. ஆல்ப்ரைட்டின் கருத்துப்படி இந்நிகழ்ச்சியுரை பெத்தேல் நகரை வென்றது பற்றியதாக இருக்கலாம். ஆயி பெத்தேல் நகரின் பாதுகாக்கப்பட்ட புறக்காவல் நிலையமாக இருந்திருக்கலாம் (8:17). சில அறிஞர்கள், எரிகோவுக்கு நிகழ்ந்ததுபோல், அக்காலத்தைப் சேர்ந்த ஆயி நகரின் மட்டம் அரிக்கப்பட்டு அழிந்து போயிருக்கலாம் என்று கருதுகின்றனர். இந்த வேறுபாடுகள், புதைபொருள் ஆய்வுகளையும், பாலஸ்தீனம் கைப்பற்றப்பட்ட முறையையும், காலத்தையும் மீண்டும் ஆய்வு செய்ய வேண்டிய அவசியத்தைச் சுட்டுகின்றன.

நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் எஸ்ரா (2:28), நேகமியாவில் (11:31) குறிக்கப்படும் அய்யா நகரம் எத்-தேல்லுக்குத் தென்கிழக்கில் 2 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால கிர்பேத்-அய்யான்-ஆக இருக்கலாம்.

2. அம்மோனியாவில் உள்ள ஒரு நகரம் (எரே 49:3). இது எங்கிருந்தது என்று அடையாளம் காட்ட முடியாது.

ஆயிரம் (THOUSAND)

விவிலிய மொழிப்பெயர்ப்புகளில் பல இடங்களில் போர்வீரர்கள், மக்கள் ஆகியோரின் எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆயிரத்தைக் குறிக்கப்பயன்படும் ''எலேப்'' என்ற சொல், தொடக்கத்தில் எண்ணிக்கையைக் குறிக்கவில்லை. மாறாக ஒரு குறிப்பிட்ட அளவுடைய சமூகம், படை ஆகியவற்றில் மூல அளவைக் குறித்ததாகத் தெரிகிறது. நாம் பயன்படுத்தும் ''தலைக்கட்டு'' என்ற சொல்லைப் போன்றது (யாத் 18:21; உப 33:17; யோசு 6:15; 1 சாமு 10:19; 23:23; 1 நாள் 12:14). ஆனால் காலப்போக்கில் ''எலேப்'' என்ற சொல் ஆயிரம் என்ற எண்ணிக்கையைக் குறிக்கப் பயன்பட்டது. அதன் விளைவாக, வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த வாசகங்களை விளக்கும் போது குழப்பம் ஏற்படுவதுண்டு.

எண்ணிக்கை கூட செய்யப்படாத பெருங்கூட்டத்தைக் குறிக்க முழு எண்ணாக ஆயி

ரம் என்ற சொல் பயன்பட்டது. மிகைப்படுத்திக் கூறவும், எண்ணமுடியாதவற்றைக் குறிக்கவும் இச்சொல் பயன்பட்டது (யாத் 20:6; உப 7:9; சங் 68:17; 84:10; 90:4; தானி 7:10; மாற்கு 5:13; அ.ப. 2:41).

ஆயிரம் ஆண்டுக்காலம் (MILLENISM)

இது கிறிஸ்துவின் இறுதிக்கால ஆட்சி நிலவும் ஆயிரம் ஆண்டுக் காலத்தைக் குறிக்கும் (திருவெளி 20:2-7). இதற்குப் பலவிளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

திருவெளி 20-இன்படி ''ஆதியில் தோன்றிய பாம்பாகிய பறவை நாகத்தை அவர் பிடித்தார். அலகை என்றும், சாத்தான் என்றும் அழைக்கப்படும் அப்பாம்பைப் பிடித்து ஆயிரம் ஆண்டளவு கட்டிவைத்தார். பின் அதைப் பாதாளத்தில் எறிந்து குழியை அடைத்து, அதற்கு முத்திரையிட்டு, ஆயிரம் ஆண்டுகள் முடியும் வரை அது நாடுகளை வஞ்சிக்காமல் தடுத்தார்'' (20:2-3). தீர்ப்பிடும் அதிகாரம் பெற்றவர்கள் அரியணையில் அமர்ந்தனர் (20:4). ''இயேசுவுக்குச் சான்று பகர்ந்து கடவுளது வார்த்தையை அறிவித்ததற்காக தலை வெட்டுண்ட கிறிஸ்தவர்கள்'', ''மீண்டும் உயிர்பெற்று, கிறிஸ்துவோடு ஆயிரம் ஆண்டுகள் முடியும் வரை ஆட்சி புரிந்தார்கள்'' (20:4-6). இந்நிகழ்ச்சிகளோடு ஆயிரம் ஆண்டுக்காலம் தொடங்கி செயல்படுகிறது. இக்காலம் முடிந்ததும் சாத்தான் சிறையிலிருந்து விடுவிக்கப்படுகிறான். அவன் இறைவனுடைய விரோதிகளைப் போருக்கு ஒன்று சேர்க்கிறான். அவர்கள் தோற்கடிக்கப்படுகின்றனர். அவனது முடிவில்லாத் தண்டனை தொடங்குகிறது (20:7-10). அதற்குப்பின் இறந்தோரின் எஞ்சியோரின் பொது உயிர்ப்பு நிகழ்கிறது. அவர்கள் தீர்ப்பிடப்படுகின்றனர் (20:5.11-15) பின்பு ''புதிய வானகமும் புதிய வையகமும்'' தோன்றுகிறது.

வையகத்தில் அமைதியும் நேர்மையுமிக்க இடைக்காலம் பற்றிய கருத்து திருமறை சேராத யூத வெளிப்பாட்டு இலக்கியங்களில் காணப்படுகிறது. இது, ''புதிய வானத்தையும் புதிய பூமியையும்'' (ஏச 65:17) மையமாகக் கொண்ட உயர்ந்த நம்பிக்கைகளோடு, வருங்காலத்தைப்பற்றிய உலகு சார்ந்த மெசியா நம்பிக்கைகளை ஒத்துபோகச் செய்ய உதவியது. சில ராபிகளின் தர்க்கங்களில், இத்தகைய இடைக்காலம் ஏற்படுமா என்ற பிரச்சினை அல்லது, அது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்ற பிரச்சினையே இடம் பெற்றது.

திருவெளி 20, சாவின்மேலும், தீய சக்திகளின்மேலும் இருகட்ட வெற்றியை விவரிக்கிறது. இருகட்டங்களிலும் சாத்தான் தோற்கடிக்கப்படுகிறான். உயிர்ப்பு நிகழ்கிறது. தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இரு கட்டங்களும் ஆயிரம் ஆண்டுக் காலத்தால் பிரிக்கப்படுகின்றன. இந்த இடைக் காலத்தில் ''விலங்கையோ அதன் சிலையையோ தொழாதவர்களும், அதன் அடையாளத்தை நெற்றியிலோ கையிலோ பெற்றுக்கொள்ளாதவர்களும்'' கிறிஸ்துவோடு வெற்றியடைந்து ஆட்சி செய்கின்றனர் (20:4-6). இரண்டாம் கட்டத்தில், தீயசக்திகள், நித்திய தண்டனையாக ''நெருப்புக்கடலில்'' எறியப்படுவதற்காகவே விடுவிக்கப்படுகின்றன (20:5-14-15).

1. கிறிஸ்தவ மறை சாட்சிகளுடைய அரசின் தன்மை என்ன? இடம் எது? 2. எந்தப் பொருளில் சாத்தான் கட்டப்பட்டுள்ளான்? எந்த அளவுக்குச் செயலாற்றத் தடுக்கப்பட்டிருந்தான்? 3. ஆயிரம் ஆண்டுக்காலம், நிகழ்காலத்தோடும் இயேசுவின் இறுதிக் கால வருகையோடும் கொண்டுள்ள தொடர்பு என்ன? 4. ஆயிரம் என்ற எண்ணை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டுமா? அல்லது திருவெளிப்பாட்டு நூலில் வரும் மற்ற எண்களைப்போல் அதை அடையாளமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா? 5. திருவெளி 20-இல் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்கும் 19:11-21-இலும் நூலின் மற்ற பகுதிகளிலும் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்கும் உள்ள தொடர்பு என்ன? இக்கேள்விகளுக்கு அளிக்கும் பதிலைப் பொறுத்து ஆயிரம்

ஆண்டுக்காலம் பற்றிய வெவ்வேறு விளக்கங்கள் அமையும்.

''ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு'' எதிரான விளக்கம், திருவெளி 20-ஐ அப்படியே எடுத்துக்கொள்ளாமல் அடையாளமாக விளக்குகிறது. இதன்படி சாத்தான் ஏற்கெனவே இக்காலத்தில் பாதாளத்தில் கட்டப்பட்டுள்ளான். ஏனெனில் எல்லா நாடுகளுக்கும் நற்செய்தியை திருச்சபை போதிப்பதை சாத்தானால் தடுக்க முடியவில்லை (காண்க யோவா 12:31). வாழ்வை அடைந்து ஆட்சி செய்யும் கிறிஸ்தவர்கள், இப்போது கிறிஸ்துவில் வெற்றியடைந்து அவரது வருகைக்காகக் காத்திருப்பவர்கள் ஆவர். அல்லது, கிறிஸ்துவில் விசுவாசத்தினால் புதிய பிறப்பின் உயிர்ப்பையும், இக்காலத்தில் அவரது அரசின் செயலையும் அனுபவிப்பவர்களுமாவர் (காண்க. திருவெளி 1:6.9). திருவெளிப்பாட்டு நூலில் வரும் மற்ற எண்களைப்போலும், திருவெளி 20-இல் உள்ள மற்ற பகுதிகளைப் போலும், ஓர் ஆயிரம் என்பது அடையாளமானது உருவகமானது. அதை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது.

இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முந்திய காலத்தில் அவரது ஆட்சியில் உலகம் நிலையாக மாற்றியமைக்கப்படும் (காண்க மத் 13:31-33). இக்காலம் சாத்தானின் சிறைவாசம் என்று கருதப்பட போதிய நீண்ட காலமாக இருக்கும். உலகம் தன்மையிலே கிறிஸ்தவமயமாக்கப்படும். அதற்குப்பின் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிகழும். இது ஒருசாராரின் கருத்தாகும்.

மற்றொரு சாரார் திருவெளி 20-ஐ அதன் சொற்பொருளில் அப்படியே ஏற்று விளக்கமளிக்கின்றனர். இவர்கள், சாத்தான் இக்காலத்தில் மிகுந்த ஆற்றலோடு செயல்படுவதாகக் கருதுகின்றனர் (காண்க 1 பேதுரு 5:8). ஆனால் அவன் திருவெளி 20:1-3-இல் விவரிக்கப்பட்டிருப்பதுபோல், முழுவதும் செயலற்றவனாக ஆக்கப்படவேண்டும். ஆகவே ''ஆயிரம் ஆண்டுக்காலம்'' இன்னும் வரவிருக்கிறது. அது இயேசுவின் இரண்டாம் வருகைக்குப்பின் நிகழும். கிறிஸ்துவும் அவரைப் பின்பற்றுவோரும் உலகளாவிய நீதியும் அமைதியும் மிக்க ஆயிரமாண்டுக் காலத்திற்கு உலகை நேரடியாக ஆட்சி செய்வர். மெசியாவின் இந்த வரைக்கும்பட்ட ஆட்சிதான் 1 கொரி 15:23-26-இல் குறிக்கப்படுவது என்று இவர்கள் கருதுவார்கள்.

திருவெளிப்பாடு பற்றிய இந்தக் கற்பனை மிக்க கருத்து, உயிர்ப்புப் பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனையோடு ஒத்துப்போகவில்லை. அதன் அடையாளப் பொருளில் ஒருவேளை அதற்கு மதிப்பு அளிக்கலாம். ஆயினும் ஆயிரமாண்டுக் காலத்தை அதன் சொற்பொருளில் எடுத்துக் கொண்ட சில பதிதக் குழுக்கள் இருந்துள்ளன. திருச்சபைத் தந்தையர் சிலர் கூட இவ்வாறு கருதியதாகத் தெரிகிறது.

ஆரகு (ARAH - பயணி, வழிப்போக்கர்)

1. ஆசேரின் குலத்தைச் சேர்ந்த உல்லாவின் மூத்த மகன் (1 நாள் 7:39).

2. செருபாபேல் காலத்தில் பாபிலோனியாவிலிருந்து நாடு திரும்பியவர்களில் சிலரின் மூதாதையர் (எஸ் 2:5; நெக 7:10). மேலும் இணை வாசகங்களிலும், பழைய வாசகங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கைகள் வேறுபடுகின்றன (எஸ் 6:5-இன்படி 775 பேர்; நெக 7:10-இன் படி 652 பேர்).இந்தக் குடும்பத்தின் ஒரு அங்கத்தினரான செக்கனியாவின் பெயர் நெக 6:18-ல் சொல்லப்பட்டுள்ளது. செக்கனியா, அம்மோனிய தோபியாவின் மாமன் ஆவார்.

ஆரம் - தொங்கணி (PENDANT)

தொங்கட்டம் போன்ற அணிகலன், மிதியானியரிடமிருந்து கைப்பற்றப்பட்டு, கிதயோனுடைய எபோத்தில் சேர்க்கப்பட்ட பொருட்களில் இதுவும் ஒன்று (நீதி 8:26). யெருசலேம் பெண்களின் ஆடம்பர பொருட்களில் ஒன்று (ஏச 3:19). இந்த அணிகலன்கள் பல்வேறுபட்டவை. சில காதணிகளாக அணியப்பட்டன. நீதிபதி நூலில் குறிப்பிட்டுள்ளது போல சில சங்கி

லிகளில் கோர்க்கப்பட்டு, கழுத்திலிருந்து தொங்கவிடப்பட்டன. இது கழுத்து ஆரமாக இருக்கலாம் (பழ 1:9; உ. ச. 4:9). அகழ்வாராய்ச்சியில் கிடைத்தவற்றை நோக்கும் போது இவை மிக சிறப்பு வாய்ந்தவையாக காணப்பட்டன. பொன், வெண்கலம், எலும்பு, இரும்பு அல்லது பல்வேறு கற்களால் அவை செய்யப்பட்டிருந்தன.

ஆரா (ARA - சிங்கம்)

ஆசேரின் வழிமரபுப் பட்டியலில் எத்தேரின் புதல்வருள் ஒருவர் (1 நாள் 7:38).

ஆரா (HARA - குன்றுகள், மலைநாடு)

ரூபன், காது, மனாசேயின் பாதிக்குலம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள், அசீரிய அரசரால் இந்த இடத்திற்கு நாடு கடத்தப்பட்டனர் (1 நாள் 5:26). கோசானுக்கு (இக்கால தேல் கலாப்) அருகில், வடக்கு மெசபொத்தாமியாவின் நகர்களோடு இந்நகர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கோசான், குசானாவுக்கு வடக்கேயுள்ள மலைப் பகுதியின் பெயரே ஆரா என்று அழைக்கப்பட்டது என்று சிலர் கருதுகிறார்கள். இப்பெயர் எழுபது நூலில் இல்லை. மேலும் 2 அர 17:6-லும் 18:11-லும் ஆராவுக்குப் பதிலாக ''மேதியாவின் நகர்கள்'' என்று எபிரேய விவிலியத்திலும் ''மேதியா நாட்டின் மலைகள்'' என்று கிரேக்க விவிலியத்திலும் காணப்படுகிறது. எனவே மேற்குறிப்பிட்டவையே பழுதுபட்டு ஆரா என்றழைக்கப்பட்டிருக்கும் என்று சிலர் கூறுகின்றனர். அப்படியானால் இந்த இடம் திகிரிக நதிப்பள்ளத்தாக்கிற்கு மேற்கே இருக்கும் மலைப் பிரதேசத்தையே குறிக்கும். உயரமான இப்பகுதியை அராபியர்கள் ஏல்கெபால் அதாவது 'மலை' என்றே அழைத்தனர்.

அசீரிய அரசன் சார்கோனால் கைப்பற்றப்பட்ட மேதியா நாட்டு நகரான கர்கார் மருகி ஆரா ஆனது என்னும் சிலர் கருதுகிறார்கள். அசீரிய அரசன் இந்த நகரில் வெளிநாடுகளிலிருந்து சிறைப்படுத்தப்பட்டவர்களைக் குடியேறி இருக்கச் செய்தார். அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்ட தோபித் மேதியா நாட்டிற்குக் கொண்டுச் செல்லப்பட்ட தன் இனத்தாரான யூதர்களோடு தொடர்பு கொண்டிருந்தார் (தோபி 1:14 -15).

ஆரா என்ற ஊர் அதன் கிராமங்களோடு மூன்றாம் திகிலாத்து-பிலேசரால் குறிக்கப்படும் சமாத்தின் 19 மாவட்டங்களில் ஒன்றாகும்.

ஆராதனை (ADORATION)

யாவேயின் மகிமையை உணரும் எசக்கியேலும் (எச 1:28) உயிர்த்த கிறிஸ்துவைச் சந்திக்கும் சவுலும் (அ. ப. 9:4) தரையில் குப்புற விழுவதைக் காண்கிறோம். ஆம், எந்த ஆளையும் இறைவனின் புனிதமும் மேதகைமையும் திணறடிக்கின்றன. அவனது ஒன்றுமிலா இயல்பிலே அவனை அமிழ்ந்து போகச் செய்கின்றன.

இவ்விதம் ஒருவன் நேரடியாகக் கடவுளைச் சந்திப்பது விதிவிலக்கே. ஆனால், அண்டத்திலும், அன்றாட வாழ்விலும் இறைவனது பிரசன்னத்தையும், செயல்களையும் மகிமையையும் புனிதத்தையும் புரிந்துகொள்வது எளிது. அவ்வாறாக இறைவன் மிக அருகேதான் உள்ளார் என்ற உணர்வின் விளைவாக மனிதனிடம் பக்தி பிறக்கிறது. இது அவனது இயல்புக்கும் அறிவுக்கும் தனி விழைவுக்கும் சமய விதிகட்கும் ஏற்ப வெளி உரு எடுக்கிறது. இவ்விதம் எழும் பக்தியின் புறவெளிப்பாடே ஆராதனை ஆகும். மனிதன் தன் ஏழ்மையையும் பாவத்தையும் உணரும் நிலை, மௌனம், மனக்குழப்பம் (யோபு 42:1-6). வணக்கம், பயபக்தி (சங் 5:8) நன்றியுடமை (ஆதி 24:48) களிப்புமிக்க வழிபாடு (சங் 95:1-6) எனப்பல வழிகளில் வெளிப்படும்.

இறைவனைச் சந்தித்தல் மனிதனை முழுவதும் ஊடுருவுவதால் அவனது விசுவாசத்தின் பதில் வெளிச் செயல்களாயும் திண்ணமாய் உருவெடுக்கும். படைப்பின்மேலும் தன்மேலும் ஆண்டவர் கொண்டிருக்கும் மேலாண்மையை உணரும்போது மனிதன் தன் உடம்பையும் வளைத்து அதாவது ஒரு விதத்தில் தன் பணிவு வணக்கத்தை உள்ளும்

புறமும் காட்டுகிறான்; இதுவே மெய்யான ஆராதனை. இதயத்திலிருந்து எழும் இவ்வித ஆராதனையே இறைவனுக்கு உகந்த ஒரே ஆராதனை. ஆனால் பாவநாட்டமுள்ள மனிதன் இறைவனது அரவணைப்பிலிருந்து நழுவிவிடவும் வெறும் புறச்சடங்குகளோடு நின்றுவிடவும் முயலுகின்றான்.

I. ஆராதனைச் செயல்கள்

ஆராதனைச் செயல்களை விழுந்து வணங்குதல், முத்தமிடல் என இரு வகைப்படுத்தலாம். இவை பலவித வழிபாட்டிலே பல்வேறு தொழுகை வடிவங்களைப் பெறும். எனினும் இறைவன் திருமுன், அச்சம், மருட்சி, வியப்பு, கவர்ச்சி இவற்றிற்கு இடையே ஊசலாடும் மனித இயல்பினை ஆராதனைச் செயல்கள் இணைத்து வெளிப்படுத்தும்.

1. குப்புற விழுந்து வணங்குதல்:- தன்னிச்சையான செயலாகுமுன் இது வலிமிக்க எதிரி ஒருவன் எளியோர் மனத்தில் ஏற்படுத்தும் ஒரு அச்சுறுத்தும் மனநிலையாய் உள்ளது. எ.கா. சிசெரா என்பவன் யாயேலின் காலடியில் உருண்டு புரண்டு உயிரிழந்து கிடக்கிறான் (நீதி 5:27); பாபிலோன் இஸ்ராயேல் கைதிகளைக் குப்புற விழச் செய்து ஒடுக்குகிறது (ஏச 51:23). பிறகு, இப்படிக் கட்டாயமாய் விழவைக்கப்படும் முன்பே, வலுக்குறைந்தவன் வலியோன்முன் தானாகத் தன்னைத் தாழ்த்திக்கொண்டு இரக்கம் கோர முற்படுகிறான் (1 அர 1:13). இதனால் தான் அரசன்முன் குடிமக்கள் நெற்றி தரையில்பட மண்டியிட்டிருப்பதாக, அசீரியச் செதுக்கோவியங்கள் பொதுவாய்க் காட்டுகின்றன. இறுதியில்தான் இது வழிபாட்டுச் செய்கையாக மாறுகிறது. அனைத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்ட (1 நாள் 29:11) ஆண்டவராகிய யாவேக்கு எல்லா மக்களும் (சங் 99:1-5), ஏன் உலகம் அனைத்துமே (சங் 96:9) ஆராதனை செலுத்துவது தகுதியும் நீதியுமானதே..

2. முத்தமிடுதல்:- மதிப்பும் மரியாதையும், தொடுதலை விழையும் அன்பும் ஆர்வமும் சேரும்போது முத்தம் எழுகிறது (யாத் 18:7; 1 சாமு 10:1...). புற இனத்தார் தம் தெய்வச் சிலைகளைத் தொட்டு முத்தமிட்டனர் (1 அர 19:18). ஆனால் தான் தொடமுடியாத உன்னத கடவுளை வணங்கி முத்தமிட விரும்பும் விசுவாசி தன் கையைத் தன் வாய்முன் வைக்கிறான் (யோபு 31:26 தொ.); அக்கடவுளைத் தொடத் தனக்கிருக்கும் ஆவல் பெருக்கையும் அவர் இருக்கும் எட்டாத தொலைவையும் இச்செய்கையால் நன்கு விளக்குகிறான். உரோமைச் சுரங்கக் கோவிலில் மன்றாடுவதையோ, வாழ்த்துவதையோ குறிக்கும் பாவனையில் ஆராதிப்பவன் விரித்த கைகளோடு காட்டப்படுகிறான். இந்நிலையே இன்னும் கிறிஸ்துவ வழிபாட்டு முறையில் உள்ளது. இந்த நிலை நேரடியாகவும் தெளிவாகவும் முத்தத்தைக் காட்டாவிடினும், அதன் உள்ளார்ந்த செம்பொருளைச் சுட்டுகிறது.

3. திருவழிபாட்டுச் சைகைகள் எல்லாம் ஆராதனையே:- யாவே முன்னிலையில் (உப 26:10; சங் 22:28 தொ.) அல்லது பெட்டகத்தின் முன்னே (சங் 99:5), சடங்கு ஆசாரப்படி நெடுஞ்சான் கிடையாக விழுவது ஆராதனை என்பது தெளிவு. இதே போல், பலியிடுதல் உட்பட (ஆதி 22:5; 2 அர 17:36). பீடத்தின்முன்போ (2 அர 18:22) யாவேயின் ஆலயத்திலோ (2 சாமு 12:20) நிகழும் செய்கைகள் அனைத்துமே அதாவது இறைவழிபாட்டுக்குரிய செய்கைகள் எல்லாமே, ''யாவேயை ஆராதித்தல்'' (1 சாமு 1:3; 2 சாமு 15:32) என்பதில் அடங்கும். கடவுளின் பிரசன்னத்தில் வானவர் விழுந்து வணங்குகின்றனர் (நெக 9:6); பொய்த் தேவர்கள் மாயமாய் மறைகின்றனர் (செப் 2:11), தெய்வீகப் பிரசன்னத்துக்குக் காட்டும் இவ்வணக்கமே ஆராதனை ஆகும்.

II. உன் கடவுளாகிய ஆண்டவரை ஆராதிப்பாயாக

1. யாவே ஒருவரே மெய்யான ஆராதனைக்கு உரித்தானவர்:- பழைய ஏற்பாட்டிலே, சில பெரியார் முன்பாகவும் மக்கள் விழுந்து வணங்குவதைத் தெளிவாய்க் காண்

கிறோம், (ஆதி 23:7. 12;2 சாமு 24:20; 2 அர 2:15; 4:37). பன்முறை அப்பெரியாரில் தெய்வீக மகத்துவம் சிறிது மிளிர்வதை இவர்கள் உணர்வதால் இவ்விதம் செய்யத் தூண்டப்படுகின்றனர் (1 சாமு 28:14.20; ஆதி 18:2; 19:1; எண் 22:31; யோசு 5:14). ஆயினும் சிலைகள், விண்மீன்கள் (உப 4:19) புறமதத் தேவர்கள் (யாத் 34:14; எண் 25:2) போன்ற யாவேக்குப் போட்டியாக வைக்கக்கூடிய எதற்கும், ஆராதனை என்று கருதக்கூடிய எவ்விதச் செய்கையையும் பழைய ஏற்பாடு கடுமையாய்க் கண்டிக்கிறது, தடுக்கிறது. சிலைவழிபாடு இவ்விதம் தடை செய்யப்பட்டிருந்ததால்தான் உண்மை ஆராதனை உணர்வு இஸ்ராயேலரிடையே வெகு ஆழமாய் ஊன்றியிருந்தது; மெய்யான ஆராதனை தனிப்பட்ட சமய மதிப்பும் பெற்றிருந்தது. இதனால்தான், மோர்தொக்காய் ஆமானை மண்டியிட்டு வணங்க மறுத்தார் (எஸ்த 3:2.5); இவையாவும் ''உன் இறைவனாகிய ஆண்டவரை வணங்கி அவரைமட்டுமே ஆராதிப்பாயாக'' என்று (மத் 4:10 தொ.) இயேசு சோதிக்கும் அலகைக்கு அளிக்கும் பதிலில் அடங்கியுள்ளது. யூத இளவல்கள் நெபுக்கதுனேசார் அமைத்த பொற்சிலையைப் பணிந்து வணங்க மறுத்தனர் (தானி 3:18).

2. இயேசு கிறிஸ்து ஆண்டவர்:- கடவுள் ஒருவருக்கே என இருந்த ஆராதனை சிலுவையில் அறையுண்டு, கிறிஸ்துவும் ஆண்டவருமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட (அ.ப. 2:36) இயேசுவுக்கு உரித்தானது என்றும், திருச்சபை தோன்றிய முதல் நாளிலிருந்தே பறைசாற்றப்படுகிறது. ''அவருடைய பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுகின்றனர் (பிலி 2:9 தொ. திருவெளி 15:4). இவ்வித வழிபாட்டுக்கு இலக்கானவர் உயிர்த்து மகிமை பெற்ற கிறிஸ்துவே (மத் 28:9.17; லூக் 24:52). இன்னும் மரிக்க இருக்கின்ற மணமகனில், ஏன், புதிதாய்ப் பிறந்த பாலன் இயேசுவிலேயே (மத் 2:2.11; காண் ஏச 49:7) இறைமைந்தனைத் தம் விசுவாச ஒளியில் காண்கின்றனர், கண்டு ஆராதிக்கின்றனர் (மத் 14:33; யோவா 9:38). ஆம், கிறிஸ்தவர்கள் ஆண்டவராகிய இயேசுவை ஆராதிக்கின்றனர். ஆனால், வானதூதர்களுக்கோ (அ.ப. 9:10; 22:9) அப்போஸ்தலர்களுக்கோ (அ.ப. 10:25 தொ. 14:11-18) ஆராதனை எனக் கருதக்கூடிய எவ்வித வெளிச்செயலும் காட்டாது விழிப்பாயும் உறுதியாயும் அதை ஒதுக்குகின்றனர். மனிதனான கடவுளும் மீட்பருமான மெசியாவுக்கு ஆராதனை சாற்றுகின்றனர்; ஆனால், மிருகத்தால் குறிக்கப்படும் சீசெர் மன்னர்களை (திருவெளி 13:4-15; 14:9தொ) ஆராதிக்கப் பகிரங்கமாய் மறுக்கின்றனர்; அவர்களில் ஆதிக்க அட்டூழித்தையும் வீரமுடன் எதிர்த்து நின்றனர்.

3. ஆவியிலும் உண்மையிலும் ஆராதனை செலுத்தல்:- கிறிஸ்தவ ஆராதனையின் புதுமைப்பண்பு ஒரே கடவுள் தந்தை, மகன், ஆவி என மூன்று ஆட்களாகக் காண்பதில் மட்டுமன்று. இக்கடவுள் ஆவியானவர்; அவருக்கு உள்ளத்தால் செலுத்தப்படும் உயர்ந்த ஆராதனையே அவரே உவந்தேற்று நிறைவுறச் செய்கிறார் என்பதிலும் அடங்கியுள்ளது. எனவே, இக்காலத்தில் ஆவியானவரில் பிறந்தவர்கள் (யோவா 3:8) ''ஆவியிலும் உண்மையிலும்'' (4:24) இறைவனை ஆராதிக்கக்கூடும். வெளிச்செயல்களோ உருவப் படிவங்களோ இல்லாமல் மனத்தால் மட்டும் ஆராதிக்கும் நிலை என்று இதற்குப் பொருளன்று. இது ஆவி, ஆன்மா, உடல் (1 தெச 5:23) இவை கூடிய முழு மனிதனின் அர்ப்பணத்திலிருந்து எழும் மனநிலையாகும். இவ்வண்ணம், உள்ளியல்பார்ந்த முறையில் புனிதம் பெற்று உண்மையில் ஆராதிப்போருக்கு, எருசலேமோ கெரிசீமோ (யோவா 4:20-23) அல்லது தேசீய சமயமோ எதுவும் தேவையில்லை, எல்லாம் அவர்கட்கு உரியவை; ஏனெனில், அவர்கள் கிறிஸ்துவுக்கு உரியவர்கள், கிறிஸ்துவோ கடவுளுக்கு உரியவர் (1 கொரி 3:22 தொ).

ஆவியில் அளிக்கப் பெறும் ஆராதனை, இறைத்தந்தைக்கு உகந்த ஒரே கோவிலான, உயிர்த்த கிறிஸ்துவின் உடலிலேதான் (யோவா 2:19-22) இப்பொழுது நடக்கின்

றது. ஆவியினால் பிறந்தவர்கள் (3:8) தந்தை பூரிப்படையும் (மத் 3:17) இந்த ஒரே ஆராதனையில் இணைகின்றனர்; அவர் தம் அன்பார்ந்த மகன் எழுப்பும் 'அப்பா, தந்தாய்' (கலா 4:4-9) எனும் கூக்குரலை இந்த இறைமக்கள் எதிரொலிக்கவும் செய்கின்றனர். இறுதியாக, விண்ணக எருசலேமில் ஆலயம் எதுவும் இராது; அதனிடத்திலே கடவுளும் செம்மறியும் இருப்பர் (திருவெளி 21:22). அங்கு இரவும் பகலும் ஓய்வின்றி ஆராதனை நடக்கும் (4:8); என்றென்றும் வாழும் இறைவனுக்கு மகிமையும் மாட்சியும் செலுத்தி உயிர்கள் அனைவரும் வழிபடுவர் (4:10; 15:3 தொ).

ஆராத்திப் படையல், பலி, காணிக்கை (WAVE OFFERING)

வழிபாட்டுக்கு வந்திருக்கின்ற இஸ்ராயேல் மக்கள் விவசாயத்தின் பயனாக கிடைத்த கனிகளை ஆண்டவனுக்கு காணிக்கையாகக் கொடுக்கும் போது செய்யப்படுகின்ற வழிபாட்டுச் செயலைத்தான் மேற்சொன்ன வார்த்தை குறிக்கின்றது. பெரும் பகுதிகளைக் கொண்ட பலியில் இது ஒரு சிறு சடங்காகும், பிற்காலத்தில் வளர்ச்சியடைந்ததாகும். இந்தச் சொல் அந்த சடங்கின் நோக்கத்தைப் பற்றியோ அல்லது பொருளைப் பற்றியோ ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஆனால், யாவேயின் பலி பீடத்தின் முன் நின்று கையசைப்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. பலி பீடத்தை நோக்கி கையசைக்கும் போது, பலி பொருட்கள் ஆண்டவனுக்கு என்று சுட்டிக் காட்டுகின்றது. ஒரு வேளை இப்படி ஒப்புக் கொடுக்கப்பட்ட காணிக்கை, அளிப்பவர்க்கே திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கலாம். இச்சடங்கு பற்றி ஒன்றும் உறுதியாகச் சொல்ல முடியாது. பல்வேறு பொருட்கள் இப்படி ஆராத்தி செய்து ஒப்புக் கொடுக்கப்பட்டன. (உ-ம்) வெள்ளாட்டுக் குட்டியின் வெவ்வேறு பகுதிகள்; மேலும் பல்வகையான அப்பங்களும் (யாத் 29:22-26; லேவி 8:25-29). அறுவடையின் முதற்கனிகளும் (லேவி 23:11-14) அளிக்கப்படும். தொடக்க காலத்தில் இது ஒரு அடையாள செயலாக இருந்திருக்கலாம். ஆனால் காலப் போக்கில் அவை உண்மையான பலியாக மாறி இப்பொழுது அந்தப் பலி பொருட்கள் குருக்களுக்கு அளிக்கப்படுகின்றன. இதே மாதிரி மிருகங்களும், தானியங்களும் வெவ்வேறு சூழ்நிலைகளில் அளிக்கப்பட்டன. ஆட்டின் மார்புகள் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது (யாத் 29:26; லேவி 7:30; 19:14). ஆரோன், ''இஸ்ராயேல் மக்களிடமிருந்து ஆராத்திக் காணிக்கையாக'' லேவியர்களை அடையாளமாக ஒப்புக் கொடுக்கிறார் (எண் 8:11.15.21).

இந்த நிகழ்ச்சியானது மற்ற முதன்மையான பலிச் சடங்குகளுடன் நெருங்கிய தொடர்புள்ளது; எனவே இந்த ஆராத்தி சடங்கு பலிகளில் முக்கிய இடம் பெற்றதாகத் தெரிகின்றது. குரு பீடத்திற்கு முன்பாக பின்வரும் பலிப் பொருட்களை ஆராத்தி செய்து ஒப்புக் கொடுக்க வேண்டும். (அ) அறுவடையின் முதற் கனி (ஆ) புதிதாக கிடைத்த தானியத்தால் செய்யப்பட்ட அப்பம் (இ) தகனப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்ட வெள்ளாடுகளும், ஒரு எருதும், இரண்டு செம்மறி ஆடுகளும், (ஈ) குடிப்பதற்காக அளிக்கப்படும் பானம் (உ) பாவப்பலிக்கான ஓர் ஆட்டுக் கிடாயும், சமாதானப் பலிக்கான இரண்டு ஆண் செம்மறிகளும் (லேவி 23:15-20).

குழப்பமான பலிசெலுத்தும் முறைகளைக் கொண்ட லேவிய குருத்துவத்தில் மேற்கூறிய செயல் குருக்களால் செய்யப்பட வேண்டும் (யாத் 29:24). ''ஆரோனும் அவனுடைய மக்களும்'' என்ற சொற்றொடருக்கேற்ப இருந்த போதிலும், மோசேயும் இந்தச் சடங்கைச் செய்தார் (லேவி 8:29). லேவி 7:28-34 குறிப்பவை அவ்வளவு தெளிவாக இதைப்பற்றிக் குறிப்பிடுவதில்லை. ஆனால் குரு சட்டப் பூர்வமாக சமாதானபலியில் பங்கு கொண்டதால், குரு இந்த சூழ்நிலையில் இப்படி நடந்து கொண்டார் என்று ஊகிக்கப்பட்டது. மேற் கூறப்பட்ட பொருட்கள் வழிபடுவோரால் கொண்டு வரப்பட்டது. ஆனால், குரு அவருடன் இணைந்து அல்லது அவர் குருவுடன் இணைந்து இந்தக்

காணிக்கையை செலுத்துகின்றார் (யாத் 29:24-25). குரு காணிக்கைகளைக் கொண்டு வந்துள்ளவர்கள் மீது தன் கரத்தை நீட்டி அவர்கள் தலை மீது வைத்து வழிபடுவோர் ஆராத்தி செய்து இந்தப் பலியை செலுத்தி னர் என்று கருத இடமிருக்கிறது (எண் 6:19-20).

இந்தப் பலியானது, பலிப்பீடத்தின்முன் யாவேயின் முன் நடைபெற்றது. ஆகவே இது புனிதமானது; எந்த இழிவான (அசுத்த) நோக்கத்திற்கும் பயன்படுத்த முடியாது. இவை சுத்த செயல்களுக்காகப் பயன்படுத்து வதில், குருக்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தை நடத்துவதற்கு உதவியாக இருக்கும்படி அளிப்பது முதன்மை இடத்தை பெறுகின்றது. மற்றொரு வகை யான சடங்கில், குரு ஆராத்தி செய்தபின், காணிக்கைப் பொருட்களைக் கொண்டு வந்து பலி பீடத்தின் மீது வைத்து எரித்து விடுவார்கள் (யாத் 29:25; லேவி 8:28).

ஆராம் (ARAM - உயர்ந்த) - ஆள்

1. சேமின் ஐந்தாவது மகனாவார். கோவா வின் பேரன். ஊசு, கூல், கெத்தேர், மாசு போன்றவர்கள் ஆராமின் புதல்வர்களாவார் (ஆதி 10:22-25). ஆராமின் புதல்வர்களை ஒரு குறிப்பிட்ட ஆட்சிப் பகுதியோடு தொடர்புபடுத்த இயலாது. முதலாம் நாளாக மத்தில் (1:17) ஆராமின் புதல்வர்களாகக் கருதப்பட்டவர்கள் அவரது சகோதரர்களாக எண்ணப்படுகின்றார்கள். சேமின் புதல்வர் கள் செமித்திய மக்களின் பிரிவுகளை (வகை யினரைக்) குறித்துக் காட்டுகின்றனர். அவை மக்களையும், மொழியையும், நிலப்பரப் பையும் குறிக்கும். இந்த ஆராம் அரமேயர்க ளின் குல மூதாதையராகக் கருதப்படுவார் (ஆதி 10:22-28; 1 நாள் 1:17).

2. இவர் ஆபிரகாமின் சகோதரனாகிய நாக்கோரின் பேரனாகவும் (ஆதி 22:20-21) கெமூவேலின் மகனாகவும் கருதப்படுகின் றார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் கள் காரான் பகுதியைக் குறிப்பால் உணர்த்து கின்றன. இந்த தலைமுறைக் குறிப்பானது ஆராமின் மக்களுக்கும், இஸ்ராயேலரின் குல தலைவர்களுக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவைச் சுட்டிக் காட்டுகின்றது.

3. ஆசோரின் தலைமுறை அட்டவணை யில் செமேரின் மூன்றாவது மகனாக ஆராம் இடம் பெறுகிறார் (1 நாள் 7:34).

ஆராம் (ARAM) - இடம்

ஆராம் என்பது மெசபொத்தாமியா, சீரியா போன்ற பகுதிகளில் வாழ்ந்து வந்த ஒரு முக்கிய செமித்திய மக்களான அரமே யர்களை ஒருமையில் குறிக்க பயன்படுத்தப் பட்ட வார்த்தையாகும் (2 சாமு 8:5-6; 1 அர 20:20-21; 1 நாள் 2:23; 17:10.12). மேலும் சாமுவேல் நூல், அரசர்கள் நூல், நாளாகம நூல் போன்ற வகைகளில் 64 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. (ஆமோ 1:5; 9:7; ஏச 7:2.4-5.8; 9:12; 17:3; எரே 35:11; எச 16:57; 27:16). அரமேயர்களில் நிலப்பகு தியைக் குறிக்க ஒரு சில முறைகள் இவ் வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது (எண் 23:7; 2 சாமு 15:8; ஓசே 12:12; செக் 9:1). சில இடங்களில் மக்களையும், நாட் டையும் ஒருங்கே குறிக்கப் பயன்பட்டுள் ளது (நீதி 10:16; ஏச 7:1; அரசர்கள், நாளாக மம் நூல்களில் 43 தடவை).

ஆராம் நிலப்பகுதியானது யோர்தான் நதிக்கு அப்பால், வளமைமிக்க யூப்பிரதிசு, திகிரிசு பகுதிகளால் சூழப்பட்ட பாலஸ்தீ னத்திற்கு வடகிழக்கில் உள்ளது. அசீரியக் கல்வெட்டுக்களில் யூப்பிரதிசு நதிக்குக் கிழக்கே உள்ளதுதான் ஆராம் நிலப்பகுதியா கவும், மேற்குப் பகுதி இத்தியர்கள், எமோரி யர்கள் வாழ்கின்ற பகுதியாகவும் குறிக்கப் பட்டிருக்கிறது. குலத் தலைவர்களின் வர லாற்றினைப் பார்க்கும்பொழுது ஆராம் என்ற வார்த்தை மெசபொத்தாமியா பகுதிக ளைக் குறிக்கிறது.

இஸ்ராயேலின் அரசாட்சி தழைக்கத் துவங்கியபொழுது, அரமேயர்களின் ஆதிக் கம் தமஸ்கு நகரில் வேரூன்றியது. பின் அண்டை நாடுகளாகிய தமஸ்கும் இஸ்ரா யேலும் அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்

தன. அசீரியா நாடானது தமஸ்கு, இஸ்ரா யேல் போன்ற நாடுகளை அழிக்கும் வரை இருவரிடையேயும் போர் தொடர்ந்து நடை பெற்றது. இலக்கியத்தில் அரசாட்சி கால இலக்கியத்தில் ஆராம் என்பது தமஸ்கும், அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளையும்தான் குறிப்பதாகத் தோன்றுகிறது. காண்க: அரமே யர்கள்.

ஆரான் (ARAN - காட்டு வெள்ளாடு)

கோரியர் குலத்தின் தலைவரான தீசான னின் இரண்டாவது மகனாவார் (ஆதி 36:28; 1 நாள் 1:42).

ஆரான் (HARAN - மலைப் பாங்கான)

1. தெராகின் மகனும், அபிராம், நாகோர் ஆகியவர்களின் சகோதரனுமாவார். லோத்து, மில்க்கா, இசிக்கா ஆகியோரின் தந்தையும் இவரே. இவர் தன் தந்தையாகிய தெராகு இறக்குமுன்பே கல்தேய நகரான ஊர் என்னும் நகரில் இறந்தார் (ஆதி 11:26-31).

2. காலேப்புக்கும், அவருடைய வைப் பாட்டி ஏப்பாவுக்கும் பிறந்த மகன். யூத குலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 2:46).

3. கெரிசோம் குலத்தைச் சேர்ந்த சிமயி யின் புதல்வர். இவர் ஒரு லேவியர் (1 நாள் 23:9). தாவீது அரசன் காலத்தில் இலாதான் குடும்பத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்தார் (1 நாள் 23:9).

ஆரும் (HARUM - உயர்த்தப்பட்ட)

யூதாவின் குலத்தில் ஒரு குடும்பத்தலைவ ரின் பெயர். அகரேலின், தந்தையாவார் (1 நாள் 4:8).

ஆரோனியர் (AARUNITES)

இவர்கள் ஆரோன் வழி வந்தவர்கள் (1 நாள் 12-27), ஆரோனின் குலத்தவர், ஆரோ னின் வீட்டார் (சங் 118:3; 115:10.12), ஆரோ னின் இனத்தவர் (சங் 135:19) என்று பல வாறு அழைக்கப்படுவர். பழைய ஏற்பாட் டில் குருத்துவத்தை நிறுவியரும் அதன் தலைவருமான ஆரோனின் ஆண் வழித் தோன்றல்களுக்குக் கூட்டுப் பெயர் ஆகும். இவர்களும் குருக்கள் ஆக பணிபுரிய இறை வனால் அழைக்கப் பெற்றவர்கள். காண்க. குருக்கள், லேவியர்கள்.

ஆரோனின் கோல் (AARON'S ROD)

ஆரோனின் கோல் பயன்பட்ட விதம் பற்றிப் பல இடங்களில் பேசப்படுகிறது. இஸ்ராயேலை மீட்கப் பாரவோனின் ஆற்ற லுக்கும் யாவேயின் நோக்கத்திற்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் மோசே யின் கட்டளைக்கு இணங்க, 1) ஆரோன் தனது கோலைக் கீழே போடுகிறார். அது பாம்பாகி எகிப்திய மந்திரவாதிகள் செய்த பாம்புகளை எல்லாம் விழுங்கிவிட்டது (யாத் 7:8-13). 2) ஆரோன் தனது கோலைப் பயன்படுத்தி முதல் மூன்று வாதைகளை வரவழைத்தார் (யாத் 7:19-20; 8:5-7.16-19). குருக்கள் பாரம்பரியப்படி இவை இஸ்ரா யேலரை விடுவிக்கும் முயற்சியில் மோசே யின் உதவியாளரான ஆரோன் செயல்பட்ட தைக் குறிக்கும் நிகழ்ச்சி உரைகள் ஆகும். மற்ற இடங்களில் இது ''மோசேயின்'' கோல் என்றே காட்டப்படுகிறது (யாத் 4:2-14.16; 17:5.9)

எகிப்தில் நடந்த வாதைகள் உண்மையி லேயே யாவேயால் நிகழ்கின்றன என்பதை மோசே தன் இறைவாக்கால் விளக்குகிறார். இவற்றில் பயன்படும் கோல் மாய வித்தைக் காரரின் கோல் அன்று. அது மோசேயின் இறை வாக்குரைக்கும் அலுவலின் அடையா ளமாகும். இக் கோலுக்குத் தன்னிலேயே எந்த அருஞ்செயல் ஆற்றலும் இல்லை. இறைவனுடைய அருஞ்செயல் புரியும் ஆற் றலே செயல்படுகின்றது என்பதற்கு அடை யாளமாய்ப் பயன்படுகிறது. அது எகிப்திய மந்திரவாதத்தின் மேல் இறைவனது வெற் றியை அடையாளமாய் உணர்த்திற்று.

ஒவ்வொரு குலத்தவரின் பெயர் எழுதப் பட்ட பன்னிரண்டு கோல்களுடன் ஆரோ னின் பெயர் எழுதப்பட்ட கோலையும் சேர்த்து, அவற்றைச் சாட்சியக் கூடாரத்தில் ஆண்டவர் முன்னிலையில் மோசே வைத்

தார். மறு நாள் வந்து பார்த்த போது ஆரோனுடைய கோல் மட்டும் துளிர் விட்டுப் பூத்து மலர்ந்து இருப்பதைக் கண்டார் (எண் 17:16-26). இந்த நிகழ்ச்சி ஆரோனுடைய குருத்துவ அதிகாரத்தையும் மோசேயின் அதிகாரத்தையும் உறுதிப்படுத்தியது. இவர்களுக்கு எதிராய்க் கிளர்ச்சி செய்தவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாய் அமைந்தது. இறைவனின் கட்டளைப்படி இக்கோல் உடன்படிக்கைப் பேழை முன் வைக்கப்பட்டது (17:25). ஆனால் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் இக்கோல் பேழைக்கு உள்ளே வைக்கப்பட்டதாய்க் கூறுகிறது (எபி 9:4; காண்க 1 அர. 8:9).

ஆரோன் (AARON - இறைமொழி அளிப்பவர் என்று பொருள் கூறலாம். உறுதியாகக் கூற முடியாது. இப்பெயர் எகிப்தியர் மூலம் கொண்டிருக்கலாம்)

1. ஐந்நூல் அல்லது தோராவில் ஆரோன்:- இவர் லேவி குலத்தைச் சேர்ந்தவர். அம்ராம் - யோக்கபேது ஆகியோருக்கு யாத்திரை நிகழ்ச்சிக்கு 83 வருடங்களுக்கு முன் பிறந்தவர் (யாத் 6:20, எண் 26-59, 1 நாள் 6-3). மோசேக்கு மூன்று ஆண்டு மூத்தவர் (யாத் 7:7) ஆனால் மிரியம்முக்கு இளையவர்.

இஸ்ராயேலரை எகிப்திலிருந்து மீட்க ஆண்டவர் மோசேயை அழைத்தபோது, மோசே, தான் பேச்சுத்திறன் அற்றவனும், திக்குவாயனும் மந்த நாவும் உள்ளவன் என்று கூறித் தப்பிக்க முயன்றபோது, அவருக்குப் பதிலாகப் பேசவும் இறைவாக்கு உரைக்கவும், அவரது மூத்த சகோதரன் ஆரோனை நியமித்தார் ஆண்டவர் (யாத் 4:10-16; 7:1-2). இஸ்ராயேலருக்கு விடுதலை அளிக்க மோசேயும் ஆரோனும் என்ன செய்ய வேண்டும் என்று ஆண்டவர் கட்டளையிட்டார் (7:8;9:8). பாரவோனை இருவரும் முதல் முறை சந்தித்தபோது, மோசே சொல்ல ஆரோன் தனது கோலால் முதல் அடையாளச் செயலையும் (7:8-12) முதல் மூன்று வாதைகளைய்ம் நிகழச் செய்தார் (7:19-20; 8:5-6; 16-17). இந்நிகழ்ச்சியுரையில் ஆரோனின் பாகம் விளக்கப்பட்டுள்ளது. கடந்தேகும் நிகழ்ச்சியின் சடங்கு முறையை ஆண்டவர் மோசேக்கும், ஆரோனுக்கும் வெளிப்படுத்தினார் (12:1), இஸ்ராயேல் மக்களை எகிப்திலிருந்து வெளிநடத்திச் சென்றபோதும் (12:31) பாலைவனம் வழியாகப் பயணம் செய்தபோதும் (அதி. 16) ஆரோன் மோசேயோடு உடன் இருந்தார். மக்கள் மோசே, ஆரோனுக்கு எதிராக முணு முணுத்தனர் (16:2.6; எண் 14:2.26; 20:2) அமலேக்கியருக்கு எதிரான போரில் வெற்றி பெற மோசே ஒரு பாறையின் மேல் இறைவன் கொடுத்த கோலைக் கையிலேந்தி நிற்கையில், அவரது கைகள் அசந்துபோனபோது ஆரோனும், கூரும் அளித்த கல்லின்மேல் மோசே அமர, இருவரும் மோசேயின் கைகளைத் தாங்கிக் கொண்டனர் (யாத் 17:8-13).

இறையாற்றல் தோற்றத்தில் இறைவன் மக்களுக்குத் தம்மைக் காட்டிக் கொண்டபின் (19:16-19), ஆரோன் மோசேயோடு சீனாய் மலையில் ஏறிச் செல்ல இறைவன் அழைத்தார் (19:24). மீண்டும், இறைவன் மக்களுக்குச் சட்டத்தை அளித்தபின், மோசே, ஆரோன், நாதாபு, அபிகு மற்றும் இஸ்ராயேல் பெரியவர்களுள் எழுபதுபேரும் சீனாய் மலைக்கு ஏறிவர அழைக்கப்பட்டனர் (24-1). அங்கு இவர்கள் ஆண்டவரைக் கண்டபின் உண்டு குடித்தனர் (24:11). மோசே சீனாய் மலையில் ஏறிப்போய் அங்கு நாற்பது இரவும், நாற்பது நாளும் தங்கியிருந்தபோது, ஆரோனையும் கூரையும் மக்களுக்குத் தலைவர்களாக நியமித்துச் சென்றார் மோசே. அவர் மலையில் இருந்தபோது, பொறுமையிழந்து கிளர்ச்சி செய்யும் மக்கள் வழிபடுவதற்காய் பொற்கன்றுக்குட்டியை ஆரோன் செய்து கொடுத்தார் (32:1-6). இந்தப் பாவத்திற்கு மோசே விளக்கம் கேட்டபோது, சாக்குப் போக்கே கூறினார் (32:21-24). இப்பாவத்தினால் ஆண்டவர் சினமுற்றிருந்தாலும், மோசே மன்றாடியதால், ஆரோனைக் காப்பாற்றினார் (உப 9:20). பொற்கன்றை வழிபட்டவர்கள் மேல் மோசே கட்டளையிட்ட தண்டனையை நிறைவேற்றியதால், லேவியினர் முன் மாதிரியாகத் திகழ்ந்தனர் (யாத் 32:25-29).

இறைவன் கட்டளையிட்டவாறு உடன்படிக்கைப் பேழையை மோசே செய்த பின்னும் (35:30-39:43) வழிபாடுபற்றி இறைவனது போதகத்தைப் பெற்றனர் (லேவி 1-7). அதன்பின் ஆரோனும் அவரது புதல்வர்களான நதாபு, அபிகு, எலயாசர், இத்தாமார் ஆகியோரும் இறைவனது குருக்களாக அபிடேகம் செய்யப்பட்டனர் (லேவி 8; காண்க யாத் 29). ஆரோன் மட்டுமே அபிடேகத் தைலம் பெற்றார் (லேவி 8:12). இதிலிருந்து இவர் இஸ்ராயேலின் பெரிய குருவாகவும், நடுவராகவும் விளங்கினார். அவர் மட்டும், பரிகார நாளில் திருத்தூயகத்துள் செல்லலாம் (16:11-14). சந்திப்பின் கூடாரமும் பேழையும் அவருடைய பொறுப்பில் விடப்பட்டன (எண் 18). ஆரோனே முதல் பெரிய குருவும், குருத்துவக் குலத் தலைவருமாவார்.

ஆனால் அவரது குருத்துவப் பணியின் முதல் நாள் துன்பியலாக முடிந்தது. அவர் ஆண்டவருக்குத் தன் முதற் பலியை ஒப்புக்கொடுத்தபோது (லேவி 9:1-24) அவரது புதல்வர்கள் நாதாபும், அபிகுவும் தங்களுக்குக் கட்டளையிட்டிருந்ததை மீறி, ஆண்டவர் திருமுன் அன்னிய நெருப்பைச் சமர்ப்பித்தனர். அதனால் உடனே ஆண்டவரிடமிருந்து நெருப்புப் புறப்பட்டு அவர்களை எரித்து, அவர்கள் ஆண்டவர் முன்னிலேயே இறந்தனர் (10:1-2). மோசேக்குக் கீழ்ப்படிய ஆரோன் மனத்திடன் கொண்டிருந்ததாலும், தன் புதல்வர்களின் மரணத்தால் ஏற்பட்ட தந்தைக்குரிய துக்கத்தை அடக்கிக் கொண்டதாலும் (10:3), ஆரோனுடையவும் மற்ற இரு புதல்வர்களுடையுவும் குருத்துவத்தை ஆண்டவர் உறுதிப்படுத்தினார். மோசே வழியாக, ஆரோனும் அவரின் புதல்வர்களும் புனிதமாய் இருக்க வேண்டிய கடமையை ஆண்டவர் வலியுறுத்தினார் (10:6-7). பின், பெரிய குரு என்ற அளவில், ஆரோனுக்கு அவரது சமயக் கடமைகளை நேரடியாக எடுத்துக் கூறினார் (10:8-11).

சீனாயைவிட்டு இஸ்ராயேலர் புறப்பட்ட பின், ஆரோன் தனது ஒழுக்கப் பலவீனத்தை மீண்டும் ஒருமுறை காட்டினார். தன் சகோதரி மிரியாமால் தூண்டப்பெற்று, மோசே எத்தியோப்பியப் பெண்ணை மணந்ததற்காக, இருவரும் அவருக்கு எதிராகப் பேசினர். இறைவாக்கு அலுவல் மோசேக்கு மட்டும் உரியதன்று என்று முறையீடு செய்தனர் (எண் 12:1-2). மிரியாம் மட்டும் தொழுநோயால் தண்டிக்கப் பட்டாலும் (12:10) இரண்டு பேர் மேலும் இரக்கம் காட்டும்படி மோசேயிடம் ஆரோன் வேண்டினார் (12:9-12). இக் கதையிலும் பொற்கன்றுக் கதையிலும் ஆரோனின் குற்றத்தை எபிரேயப் பொதுப்பணிப் பாரம்பரியம் குறைத்துக் கூறுகிறது.

சில காலத்திற்குப் பின் கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோர் மோசேக்கு எதிராக மட்டுமன்றி ஆரோனுக்கு எதிராகவும் கலகம் செய்தனர். இதற்குத் தண்டனையாக நிலம் பிளந்து அவர்களையும் அவர்களுக்கு உரியவற்றையும் விழுங்கிற்று (16:1-40). இதைக் கண்ட மக்கள், மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முணுமுணுத்துக் கலகம் செய்தனர். இதற்குத் தண்டனையாக, ஆண்டவர் முன்னிலிருந்து கோபத் தீ புறப்பட்டு மக்களை வதைத்தது. அவர்களுக்காக மன்றாடுமாறு ஆரோனிடம் மோசே கூற, அவரும் இறந்தோருக்கும் உயிரோடிருந்தோருக்கும் இடையே நின்று மக்கள் பெயரால் மன்றாடினார். வாதையும் நின்று போயிற்று (16:41-50). ஆண்டவர் கட்டளைப்படி, ஒவ்வொரு குலத்தலைவரும் அவரவர் பெயர் எழுதப்பட்ட ஒரு கோலைக் கொண்டு கூடாரத்தில் பேழையின் முன்வைத்தனர். லேவியின் குலக் கோலில் ஆரோனின் பெயர் எழுதப்பட்டது. மறுநாள் வந்து பார்த்த போது, ஆரோனின் கோல் மட்டும் துளிர்த்துப் பூத்திருந்தது. இந்நிகழ்ச்சியால், ஆரோனின் குருத்துவத்தை ஆண்டவர் மீண்டும் உறுதிப்படுத்தினார் (17:16-26). இக்கதை, குருக்களுக்கும் லேவியர்களுக்குமிடையே நிலவிய பூசல்களைப் பிரதிபலிக்கிறது.

பாலைவனப் பயணத்தின் முடிவில் பாறையிலிருந்து நீர் வரச் செய்யும் நிகழ்ச்சி

யில் விசுவாசமற்ற, தாகமுள்ள இஸ்ராயேலர்முன், ஆண்டவரது புனிதத்தைப் பேணாமல் நடந்து கொண்டதால், மோசேயும், ஆரோனும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு மக்களை நடத்திச் செல்ல மாட்டார்கள் என்று ஆண்டவர் தண்டித்தார் (20:7-13). இதற்குச் சிறிது காலத்திற்குப் பின் ஆண்டவர் அறிவித்தபடி ஆரோன் கோர் மலையில் தனது 123-வது வயதில் இறந்தார் (20:28). மோசே அவருடைய ஆடையைக் கழற்றி எலயாசருக்கு அணிவித்து அவரைப் பெரிய குருவாக்கினார். உ.ப. 10:6, ஆரோன் மோசேராவில் இறந்தார் என்று கூறுகிறது. ஒரு வேளை இவ்விடம் கோர் மலைச் சுற்றுப்புறத்தில் இருந்திருக்க வேண்டும். ஆரோனைப் பற்றிய ஐந்நூலில் காணப்படும் கடைசிக் குறிப்பு உப 32:50-இல் வருகிறது. அதில் ஆரோனைப் போல் மோசேயும் இறப்பார் என்று ஆண்டவர் அவரிடம் கூறுகிறார்.

2. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டுப் பிற நூல்களில் ஆரோன்:- ஆரோனின் பலவகைப்பட்ட பணி பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. எகிப்திய வாதைகளிலும், இஸ்ராலேயரின் விடுதலையிலும், ஆரோனுடைய பாகத்தை யோசுவா நூல் எடுத்துக் கூறுகிறது (24:5-6; காண்க 1 சாமு. 12:6.8).

நாளாகம ஆசிரியர், பலிகளாலும் காணிக்கைகளாலும் இஸ்ராயேல் மக்களுக்குப் பரிகாரம் செய்த குருவாக ஆரோனைச் சித்தரிக்கிறார் (1 நாள். 6:49). அவருடைய வழித்தோன்றல்கள் அவரது இந்த அலுவலைத் தொடர்ந்து நடத்தினர் (23:13).

சங்கீத நூல் ஆரோனுடைய கடமைகளைப் பற்றிய ஓரளவு முழுமையான காட்சியை அளிக்கிறது. ஆரோன் எகிப்தை வாதைகளால் துன்பறுத்துகிறார் (சங். 105:26). பாலைவனத்தில் மக்களை நடத்திச் செல்கிறார் (77:20). அவரது தலைமைக்கு எதிராகக் கலகம் செய்யப்படுகிறது. 106:16-இல் மோசேயிடமிருந்து பிரித்தும், 133:2-இல் அவரது அபிடேகம் பற்றிய குறிப்போடும் அவரது பெரிய குரு என்ற பதவி குறிக்கப்படுகிறது. சங். 106) மட்டும்தான் அவரது மக்கள் தலைமைப் பதவியையும் சடங்குக் கடமைகளையும் பிரித்துக் கூறுகிறது.

ஆரோனைப் பற்றிய குறிப்புகள் இறைவாக்கினர் நூல்களில் அரிதாகவே வருகிறது. இது சிறிது வியப்பளிக்கலாம். இவை அவரது ஒழுக்கப் பலவீனத்தையோ அவரது எடுத்துக் காட்டான நடத்தையையோ, குறிக்கவில்லை. மீக். 6:4, மோசே, மிரியாம் ஆகியோரோடு சம பதவியுடைய தலைவராக ஆரோனைக் குறிக்கிறது (காண்க யோசு 24; 1 சாமு 12). திரும்ப அமைக்கப்பட்ட ஆலயம்பற்றிய விவரிப்பில் ஆரோனின் பெயர் காணப்படவில்லை. எசக்கியேல் ஆரோனைக் குறிக்கவில்லை. குருக்கள் சாதோக்கின் புதல்வர்கள் என்றழைக்கப்படுகின்றனர் (எச. 40-48).

3. புதிய ஏற்பாட்டில் ஆரோன்:- புதிய ஏற்பாட்டில், ஆரோன் மோசேயைவிட முக்கியத்துவம் குறைந்தவரே ஆவார். குரு செக்கரியாவின் மனைவியான எலிசபெத்து ஆரோனின் வழித்தோன்றல்களில் ஒருத்தி என்று லூக்கா குறிப்பிடுகிறார் (லூக் 1-5). பொற்கன்றைச் செய்து கொடுக்கும்படி இஸ்ராயேலரால் ஆரோன் கட்டாயப்படுத்தப்பட்டார் என்று அ.ப. 7:40 கூறுகிறது. ஆரோனின் பெரிய குரு என்ற பதவியைப் புதிய கோணத்தில் எபிரேயர் திருமுகம் நோக்குகிறது. இதன் ஆசிரியர் இறைவன் ஆரோனை அழைத்ததை ஏற்றுக் கொண்டாலும் (எபி 5:4) ஆரோனின் குருத்துவப் பதவி கிறிஸ்துவின் குருத்துவப் பதவிக்குத் தாழ்ந்ததே என்றும், மேலும் பழைய ஏற்பாட்டிலேயே மெல்க்கிசதேக்கின் குருத்துவ முறைக்கு ஆரோனின் குருத்துவம் கீழ்ப்பட்டதே என்றும் கூறுகிறார் (7:11 தொ). கிறிஸ்து குருத்துவப் பதவியைத் தானாகவே எடுத்துக் கொள்ளவில்லை. ஆரோனைப் போன்று கடவுளிடமிருந்து அழைப்புப் பெற்றார் (5:2-5). ஆரோனின் குருத்துவம் தலைமுறை தலைமுறையாக வருவதாகும். மாறாக, குல மர

புக் கொடி அறியப்படாத மெல்க்கிசதேக்கின் குருத்துவம் கிறிஸ்துவினுடையதை முன் அடையாளமாக உணர்த்திற்று (7:3.15-21). இறுதியாக கிறிஸ்துவின் குருத்துவத்தின் பண்பாகிய நிறைவுத் தன்மையை ஆரோனின் குருத்துவம் உரிமை கொண்டாட முடியாது (7:11.23-27).

ஆர் (AR - நகர்)

இப்பெயர் மோவாப் நாட்டின் ஒரு நகரையோ (எண். 21:28) அல்லது ஒரு பகுதியையோ அல்லது முழு நாட்டையோ (உப 2:9) குறிக்கலாம்.

ஒரு நகரம் என்றால், இஸ்ராயேல் மக்கள் யாத்திரையின் பொழுது, ஆர்னோன் ஆற்றின் தெற்குக்கரையிலும் (எண் 21:28; 22:36), மோவாபின் வடக்கு எல்லையிலும் இருந்த மோவாபியரின் ஒரு நகரம் (எண் 21:15; உப. 2:18). உப 2:9-இல் 'ஆர்' என்பது மோவாபிற்கு ஒரு பொருள் பிற சொல்லாகும். மோவாபியர்கள் ஆரிலும், ஏசாவின் புதல்வர்கள் சேயிரிலும் வாழ்ந்ததாக உப 2:29 கூறுகின்றது. ஏச 15:1-இல் 'ஆர்' என்பது கிரேக்கு இணைவார்த்தையாகும். மோவாபுக்கு எதிரான இறைவாக்கில் (15:1) அழிக்கப்பட வேண்டிய மோவாபின் இரு முக்கிய நகரங்களில் இதுவும் ஒன்று.

தலைநகரம் எல்லையில் இருப்பது கடினமாக இருந்தாலும் 'ஆர்' மோவாப்பின் தலைநகரமாக இருந்திருக்கலாம். பின்னால் அரெயோபோலி என்று அழைக்கப்பட்ட நாடு தான் ''ஆர்'' என்று கருதப்பட்டது (அநேகமாக கிரேக்கர்கள் போர்க்கடவுளான ஆரெஸ் என்பதை ''ஆர்''-உடன் தொடர்பு படுத்தினர்). இரப்பாத் மோவாபும் ஆரும் ஒன்று என்று கருதினர். ஆனால் இந்நகரம் ஆர்னோன் ஆற்றிலிருந்து தெற்கே 22 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆகவே இது விவிலிய ஆர் ஆக் இருக்கமுடியாது. இக்கால ஏல்மிஸ்னா ஆர் நகரமாகும் என்று அடையாளம் காட்ட முயற்சிகள் நடந்துள்ளன.

ஆர்சா (ARZA - பெருந்தன்மையுள்ள)

இஸ்ராயேலின் அரசனான ஏலாவின் திரிசாவிலுள்ள வீட்டுக் கண்காணிப்பாளர். இவர் வீட்டில் அரசன் குடிபோதையிலிருந்த போது சிமிரியால் கொல்லப்பட்டார் (1 அர 16:9).

ஆர்தமா (ARTEMAS)

இவர் முதல் கிறிஸ்துவர்களில் ஒருவர். பவுலின் தோழன். தீத்து நிக்கொப்போலின் நகருக்கு பவுலிடம் வந்து சேர்வதற்காக பவுலால் கிரேத்துக்கு அனுப்பப்பட விருந்தவர் (தீத் 3:12).

ஆர்தமி (ARTEMIS)

பல மாறுபட்ட குணங்களைக் கொண்ட ஒரு தேவதை. சந்திரத் தேவதை. கிரேக்க சமூகத்தினரால் வணங்கப்பட்டு வந்த எல்லாப் பெண் தேவதைகளைக் காட்டிலும் மிகவும் பலமும், புகழும் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

உரோமையின் பெண் தெய்வம் தயானவோடு ஒன்றுபடுத்தியும் பார்க்கப்படுகிறது. கிரேக்க இதிகாசங்களில் இவள் அப்பொல்லோவின் சகோதரி; லேத்தோ, செயூஸ் ஆகியோருக்குப் பிறந்தவள். அவளது பக்தர்களின் கற்புக்குப் பாதுகாவலியாகவும், கல்யாண வயதுப் பெண்களுக்குத் துணையாகவும், பெண்களின் பேறுகால வேதனையின் போது உதவுபவளாகவும், பெண்களுக்கு அமைதியான மரணம் அளிப்பவளாகவும் கருதப்படுகிறாள்.

இவள் எபேசில் பாலின வளர்ச்சித் தெய்வமாக வழிபடப்பட்டாள். இங்கு இவளுக்கு எழுப்பப்பட்ட கோவில் பழங்கால ஏழு வியப்புகளுக்குரியவற்றில் ஒன்றாகும். இது கி.மு.356-இல் அழிக்கப்பட்டது.

எபேசில் பவுலின் பணி, அ.ப. 19:23-41-இல் விவரிக்கப்படும் நிகழ்ச்சியோடு முடிவடைகிறது. அவரது மூன்றாம் வேதபோதகப் பயணத்தில் பவுலின் போதகத்தால் இந்நகர மக்கள் பலர் மனந்திரும்பினர். இவர்கள் இவள் உருவம் கொண்ட சிலைகளை வாங்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட தெமேத்திரியு என்ற வெள்ளி

ஆசாரி தன் தொழில்செய்பவர்களை ஒன்று கூட்டிப் பவுலைக் குற்றம் சாட்ட, பெரும் கலவரம் நிகழ்ந்தது. நகர அவைத்தலைவன் மக்களை அமைதிப்படுத்தி கலகக் கூட்டத் தைக் கலைத்துவிட்டார்.

ஆர்பகசாது (ARPHAXAD)

1. மேதியருடைய அரசன். இவர் தன் படை வலிமையினாலும், தேர்களின் சிறப்பி னாலும் தான் ஆற்றல் படைத்தவர் என்று பெருமை பாராட்டி வந்தவர் (யூதி 1:1-5. 13-15). நெபுக்கதுனேசாரால் கொல்லப்பட் டார்.

2. அருபகசாது என்ற பெயரின் புதிய ஏற்பாட்டு வடிவம் (லூக் 3:36).

ஆர்பாது (ARPAD - வலிய)

சீரியாவின் வட பகுதியில் அமைந்திருந்த சிறுமாகாணமும், தலைநகரும் ஆகும். அலேப்போவுக்கு வடகிழக்கில் 30 கி.மீ. தொலைவிலுள்ள குன்றாகிய தேல்-ரிப்காட் என்ற இடத்தை இதற்கு அடையாளம் காட் டுவர். பழைய ஏற்பாட்டில், எப்போதும் கெமாத்தோடு சேர்ந்தே, ஆர்பாது குறிக்கப்ப டுகிறது (2 அர 18:34; 19:13; ஏச 10:9; 36:19; 37:13; எரே 49:23). இரு நகரங்களும் அசீரியர் களால் அழிக்கப்பட்ட நகரங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கின. இந்த அழிவு கி.மு.740-இலும் 720-இலும் நிகழ்ந்திருக்க லாம் என்று யூகிக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் அமனா மலைகளுக்கும் யூப்பிரத்திசு நதிக்கும் இடையிலுள்ள முக் கிய நகரமாகத் திகழ்ந்தது. மூன்றாம் திகி லாத்து பிலேசர் என்ற அசீரிய மன்னன் மூன்று வருட முற்றுகைக்குப்பின் அதைக் கைப்பற்றினார் (740). இந்த வெற்றியின் எதிரொலி 701-இல் முற்றுகையிடப்பட்ட எருசலேமின் மக்களிடம் இரபிசகே பெருமை பாராட்டிய உரையில் இன்னும் கேட்கப்பட்டது (2 அர 18:34; ஏச 36:19; காண்க 10:9). தமஸ்குவுக்கு எதிராக எரேமி யாவின் இறைவாக்கும் இந்நிகழ்ச்சியைக் சுட்டிக் காட்டுகிறது. (எரே 49:23).

ஆர்போனா (HARBONA - கழுதை ஓட்டுபவர்)

அகசுவேரு அரசரின் ஏவலர்களாகப் பணி புரிந்து வந்த ஏழு அண்ணகர்களில் ஒருவர் (எஸ்த 1:10). மோர்தெக்காயைத் தூக்கிலிடு வதற்காக ஆமான் தயாரித்திருந்த தூக்கு மரத்திலேயே ஆமானைக் கட்டித் தொங்க விட வேண்டும் என்று ஆலோசனை கூறிய வர் இவரே (எஸ்த 7:9).

ஆர்மகதோன் (ARMAGEDOON)

எபிரேயத்திலே இச்சொல் பயன்படுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. கிரேக்க மொழி யைச் சார்ந்ததாக இருக்குமோ என்று யூகிக் கப்படுகிறது. திருவெளி 16:14-16-இன்படி நல்ல சக்திகள், தீய சக்திகளுக்கிடையே உலக இறுதி நாட்களில் வரவிருக்கும் இறு திப்போராட்டம் நடக்கும் இடமாகும்.

இங்குதான் ''எல்லாம்வல்ல கடவுளின் பெருநாளிலே போர் செய்யுமாறு உலக னைத்தலுமுள்ள அரசர்கள் ஒன்று சேர்வார் கள்''. இங்குதான் காலத்தின் இறுதியில் இறைவன் வல்லமையாலும் ஆற்றலாலும் எல்லாத் தீய சக்திகளும் இறுதியாக வெல் லப்பட்டு அழிந்துபோகும்.

இப்பெயர் கார்மேலுக்கு தென்கிழக்கி லுள்ள வரலாற்று மெகிதோ சமவெளியைக் குறிக்கும் என்று பொதுவாகக் கருதப்படும். மெகிதோவில்தான் பாராக்கும் தேபாராவும் சேர்ந்து கானானியரைத் தோற்கடித்தனர் (நீதி 5:19) இங்குதான் பாரவோன் நெக்கோ யூதாவின் அரசன் யோசியாவைக் காயப்ப டுத்தி சாவுக்குள்ளாக்கினார் (2 அர 23:29-30; 2 நாள் 35:22-24). செக் 12:1, மெகிதோ சமவெளியில் அதாதுரிம்மோனுக்காக புலம் புவதைக் குறிக்கிறது. சில வாசகங்கள் மெகிதோ நகரத்தில் அகசியா இறந்ததாகக் குறிக்கிறது (2 அர 9:27).

ஆர்மோனி (ARMONI)

அய்யாவின் மகளான இரிசிப்பா, சவுலுக் குப் பெற்ற இரு புதல்வர்களில் ஒருவர் ஆர்மோனி ஆவார். தாவீது அரசர் ஆர்மோ னியையும் அவரது சகோதரர் மேபிபொசேத்

தையும் மற்றும் சவுலின் வழிவந்தவர்கள் நால்வரையும் பிடித்துக் கிபயோனியர் கையில் இரத்தக் குற்றக் கட்டணமாக ஒப்படைத்தார். கிபயோனியர் அவர்களை ஆண்டவர் திருமுன் மலையின் மேல் சிலுவையில் அறைந்தார்கள். இவ்வாறு அவர்கள் சவுல் வீட்டார் மேல் இருந்த இரத்தக் குற்றப் பழியைத் தீர்த்துக் கொண்டனர் (2 சாமு 21:8-9).

ஆர்மோன் (HARMON)

விவிலியத்திலேயே ஒரே ஒரு தடவை காணப்படும் சொற்களில் ஒன்று. பொருள் தெளிவாக இல்லை. உறுதியாக ஒன்றும் கூற முடியாது. இது சமாரியாவின் குற்றம் செய்த பெண்கள் அனுப்பப்பட்ட இடமாக இருக்கலாம் (ஆமோ 4:3). அவ்வாறாயின் இது தமஸ்குவிற்கு அப்பால் உள்ள கைதிகள் நாடுகடத்தப்பட்ட இடமாக இருக்கலாம் (காண்க ஆமோ 5:27).

ஆர்வம் (ZEAL)

ஆர்வம் எனும் பொருள்படும் கிரேக்கச் சொல்லான Zelos மிகவும் வெப்பமான அல்லது கொதித்தெழும் நிலையில் உள்ள ஒன்றைக் குறிக்கும். Qinah என்ற எபிரேயச் சொல்லை, கிரேக்கம் அதன் பொருள் சிதையாது மொழிபெயர்த்துள்ளது. உணர்ச்சிமிகுதியால் தூண்டப்பட்டு அதனால் முகம் சிவப்படைவதை எபிரேயச் சொல் குறிக்கும். இவ்வாறு சீறியெழும் உணர்ச்சி வயப்பட்ட நிலை பொதுவாகக் கடுஞ்சினத்தை ஒத்திருக்கும் (உப. 29:19). சுடர்விட்டெரியும் தீப்பிழம்பையும் ஒத்திருக்கும் (செப் 1:18; ஏச 26:11). இவ்வுணர்ச்சி வேகம் பலதரப்பட்ட உளப்பாங்கிலிருந்து தோன்றலாம். தன்னலமற்ற அன்பு, பொறாமை (திருவுரை 9:6), பெரும்பகை, கோபம் (சீரா 40:4), கலக்கம் (30:24) மக்கள் நலன்பால் கொண்ட (2 சாமு 21:2) அல்லது கடவுளின் மகிமை பால் கொண்ட (எண் 25:11) ஆவல் போன்றவை மனித உள்ளத்தைக் கிளறிக் கடுஞ்சினத்தைத் தோற்றுவிக்கலாம் (பழ 27:4) அல்லது சாவிலே முடியலாம் (ஆதி 4:5.8; எண் 25:7 தொ). இவ்வுணர்ச்சிகளால் எழும் உளப்பாங்கைத் தவறு என்று தன்னிலே அறுதியிட்டுக் கூற இயலாது. இவ்வுணர்வு அலைகளால் ஒருவனுக்கு நன்மை விளைகின்றதா அல்லது தீமை விளைகின்றதா அல்லது இவை ஒருவனது சுயநலத்திலிருந்து வருகின்றனவா என்று பார்த்தபின் தான் உணர்வெழுச்சியைப் பற்றி நாம் தக்க முறையில் கணிக்க இயலும். பொதுவாக உணர்வுகளில் தன்னலத்தின் சாயல் இருப்பதை மறக்கலாகாது. பொறாமை எலும்புருக்கியாகும் (பழ 14:30) என்று அறிஞர் கூறுவதும் முறையானதெனத் தோன்றுகின்றது. சகோதரர்களிடத்தும் (ஆதி 4:5-11; 37:11) பெண்களிடத்தும் (30:1), காதலர்களிடத்தும் (பழ 6:24; எண் 5) இனங்களிடத்தும் (ஆதி 26:14; ஏச 11:13) ஏன் நீதிமான்களிடத்தும் பாவிகளிடத்துமே பொறாமை வளர்கின்றது (சங் 37:1; 73:3; பழ 3:31; 23:17). அழுக்காறு கிறிஸ்தவ சமுதாயங்களிடம் சண்டையும் (உரோ 13:13), சச்சரவையும் (1 கொரி 3:3; 2 கொரி 12:20), மனக்கசப்பையும், கட்சிமனப்பான்மையும் தோற்றுவித்து அவற்றின் ஒற்றுமையைக் குலைக்கின்றது (யாக் 3:14.16). இதுகாறும் கூறியவற்றால், திருவுரை ஆகமம் கருதுவதுபோல் ஒவ்வொரு மனிதச் செயலும் உணர்ச்சிப் பெருக்கும் பொறாமையிலிருந்து தோன்றுவதாக முடிவு கொள்ளலாகாது (திருவுரை 4:4). நல்மனத்துடன் எழுகின்ற ஆர்வத்திலும், சிலசமயம் குறுகிய மனப்பான்மை இருந்தாலும் (எண் 11:29), தூய்மையான அன்பின் அம்சமும் உள்ளது (உ.ச. 8:6). இறைவன் நம்மீது தனியுரிமையுடன் பாராட்டும் அன்பிலும் இதைக் காணுகின்றோம்.

I தனி உரிமை பாராட்டும் கடவுளின் அன்பார்வம்

1. ஏக கடவுளின் பற்று:- மனிதர்களிடம் உள்ள பல உணர்ச்சிகளைப் பழங்கதைகளில் காணப்படும் தெய்வங்கள் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். தெய்வங்கள் மனிதர்களின் இன்ப நிலையைக் கண்டு பொறாமை கொண்டு, தங்கள் சலுகைகளைக் கவனமாய்ப் பாதுகாக்கின்றனர். இதனால் மனிதர்களும் அவர்களைத் தம் வயப்படுத்த வேண்

டிய நோக்குடன் பற்பல வழிபாடுகள் நடத்துகின்றனர். இஸ்ராயேல் மக்களும், கடவுளின் உரிமை மக்களாய்த் திகழ்ந்தபோதிலும் (உப 18:13) இந்தக் கலப்புமதப் பழக்கத்தை வழக்கில் கொண்டிருந்தனர் (2 அர 23:4-14).

மனிதர்களிடையே காணப்படும் தாழ்ந்த குறுகிய மனப்பாங்கு கடவுளிடம் உள்ள பேரார்வத்தில் நாம் காணமுடியாது. கடவுள் உரிமை பாராட்டுகின்றார் என்றால் அவர் போட்டி உணர்வுடன் பிறிதொருவர் தமக்கு நிகராவார் என்ற எண்ணத்துடன் காட்டும் உரிமையன்று. மாறாகத் தமது சாயலாகப் படைத்த மனிதனிடமிருந்து தமக்கே உரிய வணக்கமும் ஆராதனையும் எதிர்பார்க்கின்றார். மனித முறைப்படி நாம் நோக்குமிடத்து, கடவுளின் இப்பண்பு, பிறதெய்வங்கள்பால் பொறாமை என்று விவரிக்கப்படுகின்றது. எனவே, பத்துக் கட்டளைகளில் முதற்கட்டளையான ''அவைகளை வணங்கித் தொழவும் வேண்டாம், உன் கடவுளாகிய ஆண்டவராய் இருக்கின்ற நாம் வல்லவரும் எரிச்சல் உள்ளவருமாய் இருக்கின்றோம்'' (யாத் 20:5; 34:14; உப 6:14..) என்று பழைய வாசகங்கள் உறுதியுடன் கூறுகின்றன. இவ்வாறு தனித்துவம் விரும்பும் கடவுளின் பண்பு மற்ற மதங்களில் நாம் காணாதவொன்று. இவை மிகவும் முந்திய அல்லது பிற்காலத்து வாசகங்களில் காணக்கிடக்கின்றன. எடுத்துக்காட்டாக, இறைவனின் இத்தன்மை ''எரித்து உண்கின்ற நெருப்புக்கு'' ஒப்பிடப்படும் (உப 4:24). சிலைவழிபாட்டிற்கு எதிராகக் கடவுள் சினந்தெழுகின்றார் (சங் 78:58; உப 32:16.21;1 அர 14:22). கோபமூட்டும் சிலைகள் என்று இவை விவரிக்கப்படுகின்றன (எச 8:3.5; 2 அர 21:7). இறுதியாக, இவ்வாறு இறைவன் உரிமை பாராட்டிக் கோபமுறுகின்றார் என்றால், இது, அவர் தூய்மையே உருவானவர், ஆதலால் தூய்மைக்குக் களங்கம் தரும் எதையும் அவர் வெறுக்கின்றார் என்பதைக் காட்டுகிறது.

2. சேனைகளின் ஆண்டவரது பேரார்வம்:- இஸ்ராயேலுடன் செய்துகொண்ட உடன்பாட்டின் வரலாற்றிலே, கடவுள் ஒடுக்கப்பட்டோரை ஆதரிப்பதையும், தீயோரைத் தண்டிப்பதையும் நாம் காண்கின்றோம். இச்செயல்களின் அடிப்படைக் காரணமாய் விளங்குவது கடவுள் தம் மக்கள் மீது தனி உரிமை பாராட்டுவதால் எழும் கோபமாகும். திருமண உறவுக்கு உடன்படிக்கையை ஒப்பிட்ட ஓசேயா, எரேமியா போன்ற இறைவாக்கினர் 'பொறாமை' என்ற சொல்லைப் பயன்படுத்தாது இறைவனின் அன்பின் ஆழத்தைக் காட்ட எரிச்சல் அல்லது சினம் போன்ற சொற்களைக் கையாளுகின்றனர். பழைய வாசகங்களிலும் (யாத் 20:3-6. 34:14), நாடு கடத்தலின்போது எழுதப்பட்டவற்றிலும் (உப 6:15; 29:19; எச 5:13; 16:38.42; 23:25) கடவுளின் தனி உரிமை பாராட்டும் பண்பு, இஸ்ராயேலும் கடவுளும் கொண்டிருந்த தனிஉறவை மையமாகக் கொண்டிருந்தது. கடவுளின் பரிசுத்தம் களங்கப்பட்டதால் எழுந்த உணர்ச்சி பேரெழுச்சியாகவும் தோன்றுகின்றது (நீதி 24:19; உப 4:23 தொ). கடவுளின் பரிசுத்தத்தை நிலைநாட்டும் சாதனமாகக் கொடூரமும் கோபமும் ஆத்திரமும் அமைகின்றன (எச 16:38.42; 23:25). ஆனால் கடவுளின் பெயரைத் தாங்கி நிற்கும் அவரது உரிமை மக்கள், நாடு கடத்தலில் இழிவுற்றபோது, இந்த இழிநிலை, கடவுளின் திருப்பெயர்க்கே விளைந்த இழுக்காய்க் கருதப்படுகின்றது (39:25; காண் 36:23). தமது திருப்பெயரின் மாண்பை நிலைநாட்ட, இறைவனின் சினம், அவமரியாதைக்குக் காரணமாய் அமைந்த புறவினத்தார் மீது பாய்கின்றது (35:11; 36:3-6). அதே சமயத்தில், இஸ்ராயேலுக்கு இது மீட்பு அளிக்கின்றது (எச 42:13; 59:17; 26:11). எனவேதான் இஸ்ராயேல் மனம்நொந்து, உள்ளம் உருக, மகனுக்குரிய வாஞ்சையோடு கடவுளது கருணைப் பெருக்கையும் உரிமை பாராட்டும் பண்பையும் உள்ளத்தில் கொண்டு கடவுளை இறைஞ்சும் வேளையில் (63:15) அவர் அவர்களுக்கு மீட்பின் காலம் மிக அண்மையில் உள்ளது என உறுதி கூறுகின்றார் (9:6). இதனால் தம் மக்கள் மத்தியில் வாழும் (உப 6:15) கடவுளின் உள்ளத்திலே உள்ள

பேரார்வம் அவரது பேரன்பின் விட்டுக்கொடாத் தன்மையின் அடையாளமாய் விளங்குகின்றது. இப்பெரு உணர்வு கடவுளின் இரக்கத்துடன் ஒப்பிடப்படுகின்றது (யோவே 2:18; காண் செப் 1:14 தொ; 8:2). கடவுளுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே துலங்கும் அன்பானது என்றும் வலிமையானது, பிரிக்க முடியாதது (உ.ச. 8:6).

II. கடவுளின் பேரார்வம்

1. கடவுளின் தீவிரவாதிகள்:- தம்மிடம் விளங்குகின்ற பேரார்வம் இஸ்ராயேலிடத்தும் தோன்ற கடவுள் வழிவகுக்கின்றார். பிற இனத்தாருக்குப் பரிவு காட்டுவதன் மூலம் தமது சொந்த மக்களுக்குச் எரிச்சலூட்டுகின்றார் (உப 32:21). பொதுவாகத் தமது உணர்வெழுச்சியைத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு அளிக்கின்றார். பினகாசு அவரைப் போல் கோபங்கொள்கின்றார் (எண் 25:11) கடவுளும் இதை ஏற்றுக் கொள்கின்றார். இதைப்போன்றே எலியாவும் தவறுதலாகத் தாம் ஒருவரே, எஞ்சியிருப்பதாக எண்ணும் போதும், மிகுந்த ஆர்வத்தால் தூண்டப்படுகின்றார் (1 அர 19:14; சீரா 48:2). இவ்வாறே சங்கீத ஆசிரியரும் ''உமது திருத்தலத்தின் மீது கொண்ட பேரார்வம் என்னைச் சுட்டெரித்தது'' (சங் 69:10; 119:139) என்று பெருமிதம் கொள்கின்றார். மக்கபேயரான மத்தத்தியாவும் தம் முன்னோரின் அடிச்சுவட்டிலே, கடவுள் மீது பேரார்வத்துடனும் பற்றுதலுடனும் விளங்குகின்றார் (1 மக் 2:54.58). சிலைவழிபடுவோர் கடவுளின் திருப்பெயருக்கு இழைத்த அவமரியாதையைக் அறிந்து மிகவும் மனங்கசிந்து துடித்தார் (2:24.27).

சிலை வழிபாட்டுக்கு இட்டுச் செல்லும், பிறமதப் பழக்க வழக்கங்களை எதிர்த்து (2 மக் 4:14) பக்தியுள்ள மக்கள் (1 மக் 2:42) கடவுளின் திருச்சட்டத்தையும் ஞானத்தையும் ஆர்வமுடன் தேடுகின்றனர் (சீரா 51:18). 'தீவிரவாதிகள்' எனப்பட்டோர், புறச் சமய மன்னருக்கு எதிராக் கிளர்ச்சி செய்யத் தூண்டுவது தமது கடமையெனக் கருதுகின்றனர் (அ.ப. 5:35 தொ). பவுல் போன்ற அப்போஸ்தலர்களுக்குத் தீங்கிழைப்பதைக் கடமையென எணணிச் செயலாற்றுகின்றனர் (23:12 தொ). ஏனெனில் அவரை அவர்கள் ஒரு புதிராகக் கருதினர்.

2. கிறிஸ்தவப் பேரார்வம்:- யூதமதத்தினரின் ஆர்வத்தால், கிறிஸ்துவைப் பின்பற்றியோர் கொடுந்துன்பத்திற்கு ஆளாகின்றனர் (அ.ப. 5:17; 13:45; 17:5). உண்மையான அறிவுக்கு ஏற்காத இந்த மறையார்வத்தால் தான் (உரோ 10:2) சவுல் ஆதித்திருச்சபையைத் துன்புறுத்தினார் (பிலி 3:6; கலா 1:14; அ.ப. 22:3). கிறிஸ்தவர்கள் இத்தகைய தவறான பேரார்வத்தில் ஈடுபடலாகாது (அ.ப. 21,20).

தீவிரவாதியின் பண்புகள் இயேசுவிடம் விளங்கவில்லை. செசாருக்கு எதிரான கிளர்ச்சியைச் சரியெனக் காட்ட இயேசு மறுக்கின்றார் (மத் 22:15-21). அவருடைய சீடர்களில் ஒருவரான சீமோன் தீவிரவாதி என்றழைக்கப்பட்டாலும் (மாற் 3:18), இடியின் மக்களின் கோப வெறியை இயேசு கண்டிக்கத் தவறவில்லை (3:17; லூக் 9:54). எனினும் அவருக்காகத் தங்கள் உயிரையும் அளிப்போம் என்று கூறும் சீடர்களின் உறுதிமொழிகளை மனமார ஏற்றுக்கொள்கிறார் (மத் 20:22). தம் பகைவர்களால் சிறைப்படுத்தப்பட்டவுடன் அவர்களுடன் எதிர்த்துப் போரிட மறுக்கின்றார் (மத் 26:51). ஒரு கொள்ளைக் கூட்ட மனப்பான்மையோ, அக்குழுவின் தலைவன் என்ற எண்ணமோ அவரிடம் இல்லை (26:55).

தீவிரவாதியின் பண்புகளை இயேசு உதறித் தள்ளியபோதும், பலவந்தத்திற்கு உள்ளாகும் (மத் 11:12) விண்ணரசு மீது அவர் பேராவல் கொண்டிருந்தார். அவரைப் பின் செல்ல விரும்பும் எவனும் அனைத்தையும், ஏன் உயிரையே, துறக்க முன்வர வேண்டும் (16:24 தொ). வியாபாரிகளைத் தேவாலயத்திலிருந்து விரட்டும் செயலையும் ஒரு நீதிமானின் ஆர்வமாகவே அவரது சீடர்கள் காண்கின்றனர் (யோவா 2:17).

இதுகாறும் கூறியதிலிருந்து, கிறிஸ்தவன் கொண்டுள்ள அல்லது கொள்ள வேண்டிய

பேரார்வம் நன்கு எளிதில் புலப்படும். இப் பேரார்வம் என்ன என்பது, மணவாளரான கிறிஸ்துவின் அன்பர் என்ற முறையில் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபைகளிடம் பவுல் காட்டிய ஆர்வத்தில் வெளிப்படுகிறது (2 கொரி 11:2). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மக்கள் எவ்வாறு கடவுள் மீது கொண்ட பற்றார்வத்தால் சிலைவழிபாட்டை வெறுத்தனரோ அவ்வாறே கிறிஸ்தவர்கள் தவறான போதனைகளிலிருந்து விலகியிருக்க வேண்டுமென்று பவுல் ஆர்வத்துடன் வலியுறுத்துகின்றார். யூத மக்கள் பால் பவுல் கொண்ட அன்பார்வம், கடவுள் புறவினத்தாருக்கு நன்மைகள் பல செய்து இஸ்ராயேலின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பியதை ஒத்திருக்கின்றது (உரோ 11:11.14; 10:19).

பேரார்வம் பல முறைகளில் காட்டப்படலாம். எடுத்துக்காட்டாக பிற சபைக்கு உதவும் நோக்குடன் பணம் திரட்டுவதில் காட்டும் ஆர்வம் (2 கொரி 9:2). மேலான வரங்களைத் தேடுவதிலேயே எப்போதும் ஆர்வம் காட்டப்பட வேண்டும் (1 கொரி 12:31; 14:1.12.39). ஏனெனில், கிறிஸ்துவில் அளிக்கப்படும் மீட்பு நற்செயல்களில் ஆர்வமிக்கதோர் இனத்தைத் தோற்றுவிக்கிறது (தீத் 2:14; 1 பேதுரு 3:13)

ஆர்வாதியர் (ARVADITES)

வட சீரியாவைச் சேர்ந்த ஆர்வாது என்ற நகர மக்கள். இவர்கள் கானானியர்களுள் அடங்குவர் (ஆதி 18:18; 1 நாள் 1:16).

ஆர்வாது (ARVAD - அலைந்து திரிதல்)

வட சீரியாவின் சிறுமாகாணமும், நகரும் ஆகும். இது இதே பெயரைக் கொண்டுள்ள தீவில் காணப்படும் ஓர் நகரம்.

இத்தீவு இன்று ரூவாத் என அழைக்கப்படும். இத்தீவானது திரிப்பொலிக்கும் வடக்கில் 48 கி.மீ. தொலைவில் உள்ளது. இத்தீவு ஒடுக்கமானதாகும். 730 மீட்டர் நீளமும் 460 மீட்டர் அகலமும் கொண்டது. ஆகையால் பல அடுக்கு மாடி வீடுகள் கட்ட வேண்டியது அவசியமாயிற்று. எகிப்திய ஆதிக்கம் வீழ்ச்சியுற்றபின் (கி.மு.1164) ஆர்வாது ஆறு பெனிசிய நகரங்கள்மேல் ஆதிக்கம் பெற்றது. அசீரிய ஆட்சியில் தப்பினாலும் ஆர்வாதியர் பெரிய அலக்சாந்தரிடம் சரண் அடைந்தனர். அவர் தங்கள் கப்பற்படையைத் தீரைக் கைப்பற்றப் பயன்படுத்த அனுமதித்தனர். இவ்வினத்தினர் நோவாவின் சந்ததியின் பெயர் பட்டியலில் கானானின் புதல்வர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர் (ஆதி 10:18). 1 நாள் 1:16; எச 27:8.11-இன்படி இவர்கள் சிறந்த கப்பலோட்டிகள், போர் வீரர்கள் எனத் தெரிகிறது.

கிரேக்கர், உரோமையர் ஆட்சிக் காலங்களிலும், இந்நகரம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இது 1 மக் 15:23-இல் அராதுசு என்ற கிரேக்க வடிவப் பெயரில் காணப்படுகிறது. யூதர்களை ஆதரித்து ஆளுநன் லூக்கியோவிடமிருந்து கடிதம் பெற்ற நகர்களில் இதுவும் ஒன்று.

ஆர்னான் (ARNAN - இரைச்சலான, கூச்சலிடுகின்ற)

செருபாபேலின் குலத்தைச் சேர்ந்தவர், இவர் தாவீது குலத்தின் நீண்ட மரபு முறைப் பட்டியலில் இடம் பெறுகிறார். இரப்பாயாவின் மகனும், ஒபதியாவின் தந்தையுமாவார் (1 நாள் 3:21).

ஆர்னி (ARNI)

லூக் 3:33-இன்படி இயேசுவின் தலைமுறைப் பெயர் பட்டியலில் இடம் பெறுவதால் இவர் இயேசுவின் மூதாதையர் என்றும் அழைக்கப்படுகிறார். மத் 1:3-4-இல் இப் பெயர் ஆராம் என்று குறிப்பிடப்படுகிறது.

ஆர்னோன் (ARNON - கூச்சலிடுகிற)

யோர்தானுக்கு அப்பால் எல்லைப்புற சமவெளியிலிருந்து பாய்ந்து ஓடி ஏங்கேதிக்கு எதிர்ப்புறத்தில் கலக்கின்ற ஓர் வற்றாத ஓடை. இதன் இன்றையப் பெயர் வாடிமோஜிப் ஆகும். பல சிற்றாறுகளும் ஓடைகளும் சாக்கடலுக்குக் கிழக்கில் 21 கி.மீ. தொலைவில் ஒன்று கூடி ஆர்னோன் ஆறாக மாறுகின்

றன. ஆறு ஒரு அருவி பாய்ந்து உண்டான கெவிமலைப் பள்ளம் வழியாக 3 கி.மீ. ஒடுகிறது. இப்பள்ளத்தின் மேல் அகலம் 31 மீட்டர் ஆகும். அடி அகலம் 37 மீட்டராகும். சில இடங்களில் இப்பள்ளத்தின் ஆழம் 700 மீட்டர் கூட இருக்கும். இதுவே மோவாபிய ருக்கும் எமோரியருக்கும் இடையிலுள்ள மோவாபின் எல்லை (எண் 21:13.26; உப 2:24). இதுவே பிறகு ரூபன் குலத்தெற்கு எல்லையாக அமைந்தது (உப 3:8.16; யோசு 13:16).

மேசா ஆர்னோன் பள்ளத்தாக்கில் ஒரு நெடுஞ்சாலை அமைத்ததாகக் கூறப்படுகிறது. இந்த இஸ்ராயேலின் தொடக்க கால வரலாற்றைத் தவிர, இது மீண்டும் மூன்றே இடங்களில் பழைய ஏற்பாட்டில் குறிக்கப்படுகின்றது. 2 அர 10:33-இல் சீரிய அரசான கசாயேல், ஏகூவின் ஆட்சிக் காலத்தில் இஸ்ராயேலின் பகுதியைக் குறுக்கினார். மோவாபுக்கு எதிரான இறைவாக்கில், ஆர்னோனின் ஆற்றுத்துறை அந்தக் கைவிடப்பட்ட இனம் பாதுகாப்புக்குச் செல்லும் வழியாக அமையலாம் என்று ஏசயா கூறுகிறார் (16:2). பின் வந்த இறைவாக்கினர் எரேமியா (48:20). ஆர்னேனில் நின்று மோவாபின் அழிவு அறிவிக்கப்படுவதை முன்னுரைக்கிறார். இந்த அழிவு கி.மு.582-இல் நடந்த நெபுக்கதுனேசாரின் படையெடுப்பைக் குறிக்கலாம்.

ஆலபு (ALEPH)

எபிரேய நெடுங்கணக்கில் முதல் எழுத்து இது. சங்கீதம் 119-இன் முதல் பகுதியில் உள்ள எல்லாவரிகளும் இவ்வெழுத்துடன் தொடங்குவதாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆலய ஊழியர்கள் (TEMPLE SERVANTS)

எஸ்ரா-நெகமியா, 1 நாள் 9:2-இலிருந்து ஆலயப் பணிகளைக் கவனிக்க பணியாளர்கள் குழுக்கள் இருந்தன என்பது தெளிவு. இவர்கள் பதவி உயர்வுப்படி, குருக்கள், வேலியர், பாடகர்கள், வாயிற்காவலர்கள், ஆலய ஊழியர் என வரிசைப்படுத்தப்படுகின்றனர் (எஸ் 2:70; 7:7; நெ 10:28). அநேகமாக இந்த ஆலய ஊழியர்கள், ஆலயப்பணியில் கீழ்தரவேலைகளைச் செய்திருக்க வேண்டும்.

ஆலய ஊழியர் குழு எப்படித் தோன்றியது என்பது தெளிவாக இல்லை. லேவியர் குழுவுக்கு உதவிசெய்ய ஆலய ஊழியர் தாவீதால் நிறுவப்பட்டதாகத் தெரிகிறது (எஸ் 8:20). லேவியர்களோ குருக்களுக்கு உதவியாகக் கொடுக்கப்பட்டனர் (எண் 3:9). ''ஆண்டவரின் ஆலயத்தில் இருந்த கூடாரத்தின் பணிகளைக் கவனிக்க நியமிக்கப்பட்டிருந்தனர்'' (1 நாள் 6:48). மோசே, மிதியானியப் போர்க் கைதிகளில் சிலரை லேவியர்களுக்குக் கொடுத்ததாக எண் 30:30-உம், யோசுவா கிபயோனியர்களை ''மரம் வெட்பவர்களாகவும் சபைக்கும் ஆண்டவரின் பீடத்திற்கும் தண்ணீர் எடுப்பவர்களாகவும்'' நியமித்ததாக யோசு 9:27-உம் கூறுகின்றன. இதிலிருந்தும், ஆலய ஊழியர்கள் குடும்பத் தலைவர்களின் அன்னியப் பெயர்களிலிருந்தும் (எஸ் 2:43-54; நெக 7:46-56) ஆலய ஊழியர்கள், பிற இன மக்களைச் சேர்ந்தவர்கள், ஒருவேளை தாவீதின் காலத்திலிருந்து, போர்கைதிகளின் வழித் தோன்றல்களாவர் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் வேறு சிலர் இந்த ஊழியர்கள் இஸ்ராயேல் இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்று கருதுகின்றனர். எது எப்படியிருந்தாலும் எஸ்ரா-நெகமியா காலத்திலிருந்து ஆலய ஊழியர்கள் இஸ்ராயேல் சபையின் முழு உறுப்பினராவர் (நெக 10:28-29). ஆகையால் எசக்கியேலின் எதிர்ப்பு இவர்களைக் குறிக்கவில்லை எனலாம் (எச 44:6-8).

நாடுகடத்தப்பட்டு செருபாபேலோடு எருசலேமுக்குத் திரும்பியவர்களுள் ஆலய ஊழியர்களும் சாலமோனின் ஊழியர்களின் சந்ததியினர்களும் சேர்ந்து 392 பேர் இருந்தனர் (எஸ் 2:58; நெக 7:60). ஏஸ்ரா எருசலேமுக்கு வந்தபோது தன்னோடு 200 ஆலய ஊழியர்களையும் கொண்டு வந்தார் (எஸ் 8:15-20). இவர்கள்தான் அவர்களுக்குரிய இருநகரங்களில் மீண்டும் குடியேறியவர்களில் முதலானவர்கள் (1 நாள் 9:2). ஆலயப்

பணியில் ஈடுபட்டிருநத மற்ற நான்கு குழுக் களைப் போல் இவர்களும் வரிவிடுப்புப் பெற்றிருந்தனர் (எஸ் 7:24).

ஆலயக் காவலர்த் தலைவன் (CAPTAIN OF THE TEMPLE)

ஆலயத்தில் தலைமைக் குருவிற்கு அடுத்த படியாக அதிகாரத்தில் உள்ளவர். இவர் நெக 11:11-இல் ''கடவுளின் ஆலய மேற் பார்வையாளார்'' என்றும், எரே 20:1-இல் ''ஆண்டவரின் கோயிலில் தலைவர்'' என் றும் மிஸ்னாவில் ''குருத்துவத்தின் தலைவர் '' என்றும் குறிக்கப்பட்டுள்ளார்.

தலைமக்குரு ஆலயத்தில் முதல் அதிகாரி ஆவார். ஆலயக் காவலர்த்தலைவனும் ஒரு குரு ஆவார். இவர் ஆலய வழிபாட்டையும் அங்கு பணிபுரியும் லேவியர், குருக்கள் ஆகியோரையும் மேற்பார்வையிட்டு பெரிய குருவுக்கு உதவியாளனாக விளங்கினார். லேவியர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப் பட்டு, அவர்களுக்குரிய இடைநிலைத் தலைவர்களின்கீழ், வாயிலைக் காப்பது, கரு வுலங்களைக் காப்பது, ஆலயத்தில் ஒழுங்கு நிலையைச் செயல்படுத்துவது போன்ற அலு வல்களைச் செய்து வந்தனர். இவர்களும், அவர்களது தலைவர்களும் ஆலயக் காவ லர்த் தலைவனின் கீழ் செயலாற்றினர்.

இப்படிப்பட்ட தலைவர்தான் பேதுருவை யும் யோவானையும் கைது செய்தவர் (அ.ப. 1:1-3; 5:24-26). லூக்கா தமது நற்செய்தியில் ''காவல் தலைவர்கள்'' என்று பன்மையில் இரு இடங்களில் குறிப்பிடுகிறார். இது லூக் 22:4-இல் ஆலயக் காவலர்த் தலைவரையும் 22:52-இல் இடைநிலைக் காவலர்த் தலைவர் களையும் குறிக்கலாம்.

ஆலயத் திரை (VEIL OF THE TEMPLE)

இத்திரை, உடன்படிக்கை, கூடாரத்தில் பேழையையும் இரக்கத்தின் அரியணையை யும் (யாத் 26:33; 35:12; 39:34; லேவி 24:3) கொண்டிருந்து அறைக்கு முன்னாலும், ஆல யத்தில் திருத்தூயகத்தின் வாயிலிலும் (2 நாள் 3:14) தொங்கவிடப்பட்டிருந்த திரைச் சீலை ஆகும். இத்திரை தூயகத்தையும் திருத் தூயகத்தையும் பிரிக்கும். அது ''நீலம், கருஞ் சிவப்பு, சிவப்புநிற நூலாலும், முறுக்கேற்றி நெய்த, மெல்லிய நார்ப்பட்டாலும் செய்யப் பட வேண்டும்''. அதில் கெருபுகள் கலைத் திறனுடன் அமைக்கப்பட்டிருக்கும் (யாத் 26:31; 36:35; 2 நாள் 3:14). இத்திரை சித்தீம் மரத்தால் செய்யப்பட்ட நான்கு தூண்களின் முன்புறத்தில் தொங்கவிடப்பட்டது (யாத் 26:32). தொடக்க காலத்தில் லேவிய குருக்க ளைத் தவிர யாரும் திரைக்குள் செல்ல இயலாது (எண் 18:7). பிற்காலத்தில் பரிகார நாளில் மட்டும் தலைமைகுரு மட்டுமே உள் செல்லலாம் (லேவி 16:2). கூடாரம் மற் றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது திரை இறக்கப்பட்டு பேழையை மூடப்பயன்பட்டது.

இயேசு இறந்தபோது (மத் 27:51; மாற் 15:28) அல்லது சிலுவையில் அறையப்பட்ட போது (லூக் 23:45) ஆலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாக கிழிந்து திருத்தூயகத்தை எல்லாரும் கான வெளிப்ப டுத்தியது. இப்போது கடவுளும் மனிதனும் சந்திக்கும் இடம் (யாத் 30:6) எல்லோருக் கும் பொதுவாக ஆனது. எபிரேயருக்கு எழு தப்பட்ட திருமுகத்தில், கிறிஸ்துவின் உட லுக்குத் திரைச்சீலை அடையாளமாகக் பயன்பட்டுள்ளது (எபி 10:20) அதன் வழி யாக விசுவாசிகள் நம்பிக்கையின் உள் ளார்ந்த புனித இடத்துக்குள் நுழைகின்றனர் (6:19; 9:3).

ஆலோசனை (COUNSEL)

இறைவன் அளிக்கும் ஆலோசனை யையோ, மனிதன் அளிக்கும் ஆலோசனை யையோ இச்சொல் குறிக்கும். இஸ்ராயே லில் ஞானிகளும் மூப்பர்களும் ஆலோ சனை அளிக்கும் பொறுப்புடையவர்களா வர் (எரே 18:18; 2 சாமு 15:31-34; பழ 1:25-30; 8:14). யாவேயின் ஆலோசனை, அரசர்கள், இறைவாக்கினர் வழியாகவும் சமூக வழிபாட்டில் பங்கெடுப்பதாலும் கிடைக்கிறது (1 அர 1:12; எரே 19:7; சங் 73:24). அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய

பின், இச்சொல், இறைவனிடமிருந்து வரும் ஆலோசனையைவிட, அரச காரியங்களில் அளிக்கப்படும் அறிவுரையையே குறித்தது (தானி 3:2-3; 4:24; 7:7; 2:14; 3:24-27).

ப.ஏ-இல் யாவேயின் அவையில், இறைவாக்கினர், அரசர்கள் அல்லது வழிபடுவோர் அனுமதிக்கப்படுவதோடு, உண்மையான, நிறைவான ஆலோசனை கொண்டிருப்பதை நேரடியாகத் தொடர்புபடுத்தாவிடினும், உண்மையான ஆலோசனையின் மூலம் யாவேயில் மட்டுமே உள்ளது என்பது தெளிவாகுகிறது. ஏச 11:1-9-இல் வரும் இறுதிக்கால அரசர் மீட்பரின் ஒருபண்பு, ''ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவி'' யாகும்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவை அழிக்கத் திட்டம் செய்யும் அவரது எதிரிகள் அடிக்கடி ஆலோசனை செய்கின்றனர் (மத் 12:14; 22:15; 26:4;....). இஸ்ராயேலின் ஞானப் பாரம்பரியத்திற்கோ, ஞானமிக்க ஆலோசகர்களுக்கோ புதிய ஏற்பாட்டில் இடம் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆனால் தொடக்ககாலத் திருச்சபையில், மூப்பர்கள், ஓரளவு இப்பாரம்பரியத்தைத் தொடரச் செய்தனர் என்று கூறலாம். பவுல் குறிப்பிடும் ''மறைபொருளான ஞானம்'' (1 கொரி 2:7) பழைய ஏற்பாட்டில் இறைவனது தீர்ப்பும் சட்டமும் முதலில் அறிவிக்கப்பட்ட விண்ணக அவையோடு நெருங்கிய தொடர்புடையதாகத் தெரிகிறது.

ஆலோசனையாளர் (COUNSELLOR)

ஆலோசனை சொல்பவர் அல்லது அறிவுரை கூறுகின்றவர். இஸ்ராயேல் அரச அவையில் ஆலோசனை கூறுகின்றவர்கள் சாதாரணமாக இருந்தார்கள் (2 நாள் 25:16; ஏச 1:26; 3:3). ஆலோசனை கூறுபவர் அரசனுக்கு அடுத்தபடியாக அதிக அதிகாரம் கொண்டிருந்திருக்கலாம் (மீக் 4:9; 3:14; 12:17). தாவீதின் ஆலோசகரான அகித்தோபல் சிறப்பான முறையில் இப்பெயர் பெற்றிருந்தார் (2 சாமு 16:23). அவர் கட்சிமாறி தற்கொலை செய்துகொண்ட பிறகு யோயதாவும் அபியத்தாரும் ஆலோசகர்களானார்கள் (1 நாள் 27:34). இக்காலத்தில் செலமியாவின் மகனான செக்கரியாவும், தாவீதின் உறவினனான யோனத்தானும் ஆலோசகர்களாக இருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் நாட்டின் பாதுகாப்பு (பழ 11:14) போரைத் திட்டமிடுதல் (2 நாள் 22:5) போன்ற முக்கிய காரியங்களில் ஆலோசனை அளித்தனர் (1 நாள் 26:14; 27:32). இரகபெயாம் தவறான ஆலோசகர்களின் பேச்சைக் கேட்டதால் இஸ்ராயேலுக்கும், யூதாவிற்கும் இடையில் பிளவு ஏற்பட்டது (1 அர 12:6-14). எகிப்தின் பாரவோன் (ஏச 19:11), பபிலோன்யாவின் நெபுக்கதுனேசார் (தானி 3:2), பாரசீக அரசன் அர்த்தாசெருசு போன்ற சுற்றியிருந்த அரசர்களுக்கும் ஆலோசகர்கள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பாரசீக அரசன் அகசுவேரு, பாரசீக, மேதியா ஆகிய பகுதிகளில் நியமித்த ஏழு அமைச்சர்களுக்கேற்ப (எஸ் 1:14), அர்த்தாசெருசு ஏழு ஆலோசர்களைக் கொண்டிருந்தார் (எஸ் 7:14). சிலசமயம் தாய் அரசிக்கும் இப்பதவி அளிக்கப்பட்டது (2 நாள் 22:3).

பொதுவாகக் பெற்றோர்கள் (பழ 1:8), முதியோர் (எச 7:26), ஞானிகள் (எரே. 18:18; 49:7), இறைவாக்கினர்கள் (2 நாள் 25:16; எரே. 38:15) ஆலோசகர்களாகச் செயல்பட்டனர். விவேகமுள்ளவன் ஒரு முக்கியமான படியெடுக்கும் முன்பு நிறைய பேரை கலந்தாலோசிப்பான் (பழ 11:14; 15:22; 20:18; 24:6). ஆனால் முட்டாள் ஆலோசனையை வெறுக்கின்றான் (பழ 1:25-30). நேர்மையுள்ளவரும், செல்வந்தருமான தன்னுடைய ஆலோசனையை மக்கள் மதித்த மகிழ்ச்சிமிக்க காலத்தை யோபு நினைவு கூறுகிறார் (யோபு 20:21). ஆனால் சிலர் தவறான ஆலோசனையால் தவறான வழியில் இட்டுச் செல்லப்படுகின்றனர் (2 நாள் 22:3; சங் 1:1; பழ 12:5; நெக 1:11).

உருவகமாக இறைவனே ஒரு ஆலோசகர் ஆவார் (சங் 16:7; 32:8; 33:11; 73:24). ஒருவரும் இறைவனுக்கு ஆலோசனை கூற

முடியாது (ஏச 40:13; உரோ 11:34). கடவுளின் சட்டமும், நியமனங்களும் மக்களின் ஆலோசகர்கள் ஆவர் (சங் 119:24). மெசியா தான் உண்மையான அரசன்; அவர் ''வியத்தகு ஆலோசகர்'' ஆவார் (ஏச 9:6). ''ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவி'' அவர் மேல் தங்கும் (11:2). பரிசுத்த ஆவியும் ஆலோசகர் ஆவார் (யோவா 14:16).

ஆல்கிமு (ALCIMUS)

தான் இழந்த தலைமைக் குரு பதவியை மீண்டும் அடைய, மக்கபேயர் காலத்தில் தெமேத்திரியு மன்னனுடன் சேர்ந்து (கி.மு. 162-150) திட்டம் தீட்டிய ஒரு கிரேக்கக் கட்சிக்கு மாறிய யூதர் (2 மக் 14:3). தெமேத்திரியு ஆட்சிப் பீடம் ஏறியவுடன், ஆல்கிமு, பல அதிருப்தியாளர்களைச் சேர்த்துக் கொண்டு அரசன்முன் ''யூதா மக்கபேயு அரசனுடைய எல்லா நண்பர்களையும் கொன்று நாட்டின் மீது அழிவைக் கொண்டு வந்ததாகப்'', பொய் சாட்சிகளை உருவாக்கினார். தெமேத்திரியு, ஆல்கிமுவை அவர் அடைய விரும்பிய பதவிக்கு உயர்த்தி, யூதாவைத் தண்டிக்க பாக்கிது தலைமையில் படைகளை அனுப்பினார் (1 மக் 7:8). சில யூதர்கள் சமாதானத்தை விரும்பினர். தலைமைக் குரு படையுடன் இருப்பதால், தங்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்று நம்பி வந்த 60 கசிதேயர்கள் ஏமாற்றப் பட்டு, துரோகமாய் கொல்லப்பட்டனர். யூதா ஆல்கிமுவை எதிர்த்தார்.

ஆல்கிமு மேலும் பல குற்றச் சாட்டுக்களை (1 மக் 7:25) யூதாவின்மீது சுமத்தினார். ஆகவே யூதாவைத் தண்டிக்க நிக்கானோர் படைகளுடன் அனுப்பப்பட்டார். ஆனால் கபர்ச்சாலாம் என்ற இடத்தில் தோற்றார். மீண்டும் தெமேத்திரியு பாக்கிதையும், ஆல்கிமுவையும் யூதாவிற்கு எதிராக அனுப்பினார். இதில் யூதா, எலசா என்ற இடத்தில் கொல்லப்பட்டார் (9:18). ''புறவினத்தார் செய்ததைவிட இஸ்ராயேல் மக்களுக்கு ஆல்கிமு கொடுந்துன்பங்களைச் செய்தார்'' என்று 1 மக் 7:23 கூறுகிறது.

ஆல்கிமு, இறைவாக்கினர் செய்தவற்றை அழிக்கும் நோக்கோடு இறைவனது ஆலயத்தின் உட்சுவர்களை இடிக்கவும் கட்டளையிட்டார் (1 மக் 9:54). யூதர்களும், புறவினத்தாரும் வணங்கும் இடங்கள் ஒன்றாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இவைகள் செய்யப்பட்டனபோல் தோன்றுகிறது. இது யூதத்தைக் கிரேக்க மயமாக்குவதின் ஒருபடியாகும். இந்த வேலையை ஆரம்பித்த சிறிது காலத்திற்கெல்லாம் ''ஆல்கிமு இறைவனால் தண்டிக்கப்பட்டார். அவர் துவக்கிய அலுவல்கள் நின்று போயின. அவர் வாய் அடைபட்டது. பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டு ஒன்றும் பேச முடியாமல் மிகவும் துன்பப்பட்டு இறந்தார்'' (1 மக் 9:54-57; அ.ப. 12:23).

சங். 74:79-80 ஆல்கிமுவின் பெரிய குருத்துவ காலத்தில் பக்தியுள்ள யூதர்களின் மன நிலையைப் பிரதிபலிக்கிறது என்று சிலர் கருதுவர்.

ஆல்தாசித்து (ALTASCHTH - அழிக்காதே)

இது சங். 53-59-இன் தலைப்பில் வரும் ஒரு இசைக் குறிப்பாக இருக்கலாம். இது இச்சங்கீதங்கள் பாடப்பட வேண்டிய மெட்டின் தொடக்கச் சொற்களாக இருக்கலாம். மற்றொரு விளக்கம் இவை வழிபாட்டுக் குறிப்பைக் குறிக்கலாம்.

ஆல்பாவும், ஓமேகாவும் (ALPHA and OMEGA - தொடக்கமும், முடிவும், அகரமும் னகரமும்)

இந்த ஆல்பா, ஓமேகா என்ற இரு எழுத்துக்களும் கிரேக்க நெடுங்கணக்கில் முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் ஆகும். தமிழில் அ, ''ன'', போன்றனவாகும். இது அகரமும் னகரமும் என்றும், தொடக்கமும் முடிவும் என்றும் (திருவெளி 21:6) ஆதியும் அந்தமும் (22:13) என்றும் தமிழில் கூறப்படும். புதிய ஏற்பாட்டில் இது இறைவனை (1:8) அல்லது கிறிஸ்துவைக் (22:13) குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே கருத்தை வேறு வடிவில் ''ஆதியிலே இருந்தவர், இருக்கின்றவர், இனி வருபவர் அவரே'' என்றும்,

''அவரிடமிருந்தும் அவருக்காகவும் எல்லாம் இருக்கின்றன'' என்றும் கூறப்படும்.

யூத வழக்கப்படி ஒரு கவிஞன் எபிரேய நெடுங்கணக்கிலுள்ள முதல் எழுத்து ஆன ஆலேப்பிலிருந்து கடைசி எழுத்தான ''தௌ'' வரை எல்லாவற்றையும் கூறி விட்டால் ஒரு தலைப்பைப் பற்றிச் சொல்லக் கூடியதை எல்லாம் முழுமையாகச் சொல்லிவிட்டதாக கருதப்படும் (லேவி *26:3-13*). எந்த ஒரு கருத்தும் தொடக்கமும் முடிவும் கருத்தில் கொண்டுதான் கூறப்படும். ''யாவும் இவரிடமிருந்து வந்தன, அவராலேயே உண்டாயின, அவருக்காகவே இருக்கின்றன'' ''(உரோ *11:36*)'' ''இருந்தவர், இருக்கின்றவர், இனி வருபவர்'' (திருவெளி *1:8*) என்ற மரபைக் காண்க. இதற்கு அடிப்படையான வாய்ப்பாடு ஏச *44:6; 48:12*-இல் வருகிறது. படைப்பவரும் மீட்பவருமான ஒரே இறைவனின் தனித்தன்மையை இவை வலியுறுத்துகின்றன. இருப்பவற்றிற்கு எல்லாம் அவரே மூலமும் ஆதாரமும் ஆவார். ''நம்மையன்றி, வேறு தெய்வம் இல்லை'' (*44:6*). அவர் ஆல்பாவாக (தொடக்கமாக) இருப்பதால் விண்ணின் மேலும், மண்ணின் மேலும் நிறைவான மேலதிகாரத்தைக் கொண்டுள்ளார். அவர் ஒருவரே எல்லாவற்றையும் புதியதாகப் படைக்க வல்லவர். அவர் ஓமேகாவாக (முடிவாக) இருப்பதால் அவர் ஒருவரே ''இனி வரப்போவதை அறிவிக்கமுடியும்'' (*44:7*). அவரே உயிர். ஆகவே அவர் ஒருவரே ''வாழ்வின் ஊற்றிலிருந்து இலவசமாய் நீர் கொடுக்கக் கூடும்'' (திருவெளி *21:6*). இவர் சாவையும், பாதாளத்தையும் அழிக்கக் கூடும். அவருடைய சன்மானமே இறுதியானது. இந்தப் பதங்கள் இயேசுவுக்குச் சாற்றி கூறப்படுவதால் அவரது தனித்தன்மை வாய்ந்த தலைமை உரிமையை இவை தெளிவாகக் காட்டுகின்றன. இது வெளிப்படையானதும், முக்கியமானதுமாகும் (*21:6*).

''முதலும் இறுதியும் நானே, வாழ்பவரும் நானே.....'' (*1:17*) என்ற கூற்று கிறிஸ்துவுக்குப் பொருந்தும். இதன் அடிப்படைப் பொருளில், கிறிஸ்து படைப்பில் கொண்டிருக்கும் முதன்மையை எடுத்துக் கூறும் பிற புதிய ஏற்பாட்டு வாசகங்களுக்கு இது இணையானது (யோவா *1:1* தொ; கொலோ *1:1*[?] தொ; எபி *1:1-3*; 1 யோவா *1:1*). அவரது வர விருப்பவர் என்ற பாகத்தையும் எல்லா வற்றிற்கும் இறுதிக்கால மீட்பர் என்பதையும் எடுத்துக் கூறுகிறது. எனவே கிறிஸ்துவின் செயல்களுக்குத் தொடக்கமும் முடிவும் இல்லை என்பதை உணர்த்துகிறது (எபி *7:3*). ஏனெனில் அவர் வழியாக, அவரால், அவருக்காகவே எல்லாம் உண்டாக்கப்பட்டன. அவரது முதன்மையும், முடிவுத் தன்மையும், எல்லாவற்றையும்விட அவரது மரணம் உயிர்பால் எண்பிக்கப்படுகின்றன. இவ்வாறு எழுத்துக்களை வைத்து இறைவனக் குறிப்பது கிரேக்கர்களிடையே காணப்படுகின்றது. ஆனால் அதன் அடிப்படை அடையாளத்தன்மை பழைய ஏற்பாட்டில் இருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இரு ஏற்பாடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு, கிறிஸ்துவே ஆல்பாவும், ஓமேகாவும் ஆவார் என்று முழுமையாக அடையாளம் காட்டுவதிலும், அவரது முதன்மையும், இறுதித்தன்மையும் உயிர்ப்பிற்கு மூலமாகக், காட்டுவதிலும் அடங்கியுள்ளது.

ஆல்பேயு (ALPHAEUS - *மாறுகின்ற*)

இது முழுக்க கிரேக்கப் பெயர். முதல் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்களால் பொதுவாக உபயோகப் படுத்தப்பட்ட பல பெயர்களில் இதுவும் ஒன்று. இது பழைய ஏற்பாட்டில் வரவில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் ஐந்து முறை வருகின்றது. மறைமுகமாகக் குறிக்கப்படும் இரண்டு ஆட்களைக் குறிக்கும் அடிப்படையில் இந்த ஐந்து பெயர்களும் பிரிக்கப்படுகின்றன.

1. அப்போஸ்தலரான யாக்கோபின் தந்தையின் பெயர் (மத் *10:3*; மாற் *3:18*; லூக் *6:15*; அ.ப. *1:13*). முதல் மூன்று குறிப்புகள் ஒத்தமைப் பகுதிகளாகும். இவை ஆல்பேயு என்பவர் யாக்கோபின் தந்தை என்பதைத் தவிர வேறு எதையும் குறிப்பிடவில்லை. இந்த யாக்கோபு செபதேயுவின் மகன் யாக்

கோபு அல்லர் என்று மத்தேயு, மாற்கு நற்செய்தி குறிப்புகளும் அ.ப. 1:13-ம் காட்டு கின்றன. ஒருவேளை இவர் மரியாளின் கணவனும், யாக்கோபு, யோசேப்பு ஆகியோரின் தந்தையுமான (மத் 27:56; மாற் 15:40; யோவா 19:25) கிளோப்பாவாக இருக்கலாம். லூக். 24:18-இல் வரும் கிளயோப்பாவும் ஒரே ஆளைக் குறிக்கலாம். இக்கருத்து உண்மையான சான்றுகள் அடிப்படையில் அல்லது, பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகும்.

2. மத்தேயு (மத் 9:9) என்றும் அழைக்கப்படும் லேவி என்பவருடைய தந்தை (மாற் 2:14). மத் 9:9; மாற். 2:14; லூக் 5:27 ஆகிய குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது லேவியும், மத்தேயுவும் ஒன்று என்று தோன்றுகின்றது. ஆகவே இந்த ஆல்பேயு யாக்கோபின் தந்தையான ஆல்பேயுவாக இருக்க முடியாது. புதிய ஏற்பாடு இந்த ஆல்பேயுவைப் பற்றி வேறொன்றும் சொல்லவில்லை

ஆவி (SPIRIT)

பண்டைக்கால உயர்தனிச் செம்மொழிகளிலும் விவிலிய மொழிகளிலும் ஆவி எனும் சொல் பல்வேறு பொருள்களைக் குறிப்பதாய் உள்ளது. 'ஆவியின் மனிதன்' என்றால் தெய்வத்திறம் வாய்ந்தவன் ஆகும்; 'ஆவியை நீத்தல்' என்றால் இறத்தல் ஆகும்; 'ஆவிக்கேற்ப வாழ்தல்' என்றால் புனித நிறை வாழ்வு வாழ்தல் ஆகும். இவை போன்ற பொருள் வேறுபாடுகளிடையே ஒரு சில ஒப்புமைகளும் உள. எப்பொழுதும் ஒரு பொருளின் புலனாகாத அடிப்படைக் கூற்றை ஆவி என்பது சுட்டிக்காட்டுகிறது. ஆவியே அப்பொருளை வாழச் செய்வது; அப்பொருளில் இயல்பாகவே அரும்புவது; மிகவும் தன்வயத்தனாய் இருப்பது; வலுவந்தமாய் எவருக்கும் அடிமையாக்கப்பெற இயலாதது.

I பழைய ஏற்பாடு

1. காற்று அலை:- ஆவி (எபிரேயத்தில் ரூஆக்) என்பது வீச்சு, குறிப்பாய்க் காற்று வீச்சு ஆகும். காற்று ஒரு புதிராகும்; சில வேளைகளில், தடுக்க முடியா வலுவந்தத்தோடு கடுங்காற்றாய் வீசி வீடுகளையும் ஆல மரங்களையும் ஆழ்கடலில் மிதந்தோடும் பெருங்கப்பல்களையும் தகர்க்கிறது (எச 13:13; 27:26); சிலவேளைகளில், தென்றலின் தழுவலாய் மிதந்து வந்து உள்ளே நுழைகிறது (1 அர 19:12); சிலவேளைளில், மிகக் கொடிய வெப்பக்காற்றாய் வீசிக் கடலைக் கட்டாந்தரை ஆக்குகிறது. கந்தக மழையாய்ப் பெய்து எதிரிகளை எரியவைக்கிறது (யாத் 14:21; காண் ஏச 30:27-33); சிலவேளைகளில், கார்முகில் திரள்கூட்டிப் பெருமழை பெய்வித்து வளநிலம் நல்விளச்சல் தரச்செய்கிறது (1 அர 18:45).

2. வாங்கிவிடும் மூச்சு:- உயிரற்ற நிலவுலகுக்கு (உயிர்கொடுக்கும்) காற்றைப்போல் காண்பதற்கரிய முறையில் ஊசலாடும் மனித மூச்சு, மனித உடலுக்கு அவனது மூச்சு உயிர்ப்பூட்டி அதன் பெரும் பகுதியை இயக்குவிக்கும் ஆற்றலாய் உள்ளது. இம்மூச்சு காண்பதற்கரிய முறையில் ஊசலாடும் ஒன்றாகும். சிறிதும் மூச்சுவிடாமல் நீண்டகாலம் மனிதனால் இருக்கமுடியாது; ஆயினும் அவன் அந்த மூச்சுக்கு மேலுரிமையாளன் அல்லன், மூச்சு, குறிப்பாக, மனித உயிர் மூச்சு, காற்றைவிட இன்னும் அதிக நேரடிமுறையில், கடவுளிடமிருந்து வருகிறது (ஆதி 2:2; 6:3; யோபு 33:4); சாவு வேளையில் அவரிடமே அது திரும்பிப் போகிறது (யோபு 34:14தொ; திருவுரை 12:7; ஞான 15:11).

3. மனிதனின் ஆவி:- இந்தத் தெய்வீக உயிர்மூச்சு மனிதனில் இருக்கும்வரை உண்மையில் அது அம்மனிதனுக்குச் சொந்தமானதாய் உள்ளது. சடமான அவனது ஊனுடலை உயிருள்ளதாகவும் செயலாக்கவல்லதாகவும் ஆக்குகிறது (ஆதி 2:7). மேலும், ஆன்மாவின் உணர்ச்சிகள், எழுச்சிகள் போன்றவை எல்லாம் மனித மூச்சில் வெளிக்காட்டப்படுகின்றன; அச்சம் (ஆதி 41:8), சினம் (நீதி 8:3), மகிழ்ச்சி (ஆதி 45:27) ஆணவம் இவை எல்லாமே மனிதனின் மூச்சைப் பாதிக்கின்

றன. எனவே, 'ரூஆக்' எனும் சொல் மனித சுயஉணர்வு நிலையையும் மனித ஆவியையும் குறிப்பிடும் சொல் ஆகிறது. கடவுளின் கையில் இந்த ஆவியை ஒப்படைத்தல் (சங்.31:5=லூக். 23:46) என்பது கடைசி மூச்சு விடுவது ஆகும்; அதேவேளையில், ஒருவன் தன் உள்ளிருப்பையே அதாவது தன்னிடமுள்ள உயர்தனிச் சொத்தையே கடவுளுக்குக் கையளிப்பதும் ஆகும்.

4. மனிதனின் ஆவிகள்:- மனிதன் சிலவேளைகளில் தனக்குரியதல்லாத வேறொரு வியத்தகு ஆற்றலால் தான் ஆட்கொள்ளப்படுவதை உணர்கிறான். இந்த ஆற்றல் அவனில் வாழ்கிறது. இது ஓர் ஆவியாகத்தான் இருக்க வேண்டும். இது எரிச்சல் (எண் 5:14-30), பகை (நீதி 9:23), விபசாரம் (ஓசே 4:12), தூய்மைக்கேடு (செக் 13:2) போன்ற ஒரு தீய ஆற்றலாக இருக்கலாம்; நீதி (ஏச 28:6); மன்றாட்டு (செக் 12:10) போன்ற ஒரு நன்மை பயக்கும் ஆவியாகவும் இருக்கலாம். மீட்பு இன்னும் நிறைவுறாத காரணத்தால், சாத்தானின் மூடு மறைவுகளைச் சரியாய் மனிதன் பகுத்துணர முடிவதில்லை; எனவே, பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் நெறிதவறிய ஆவிகளின் செயல்களுக்கும் கடவுள்தான் கர்த்தா என்று கூறுவதைத் தவிர வேறேதும் அறிந்திலர் (காண் நீதி 9:23; 1 சாமு 19:9; 1 அர 22:23...). எனினும் நல்ல ஆவிகள் எப்போதும் நேரடியாகக் கடவுளிடமிருந்து வருகின்றன எனத் தெளிவாய் எடுத்துரைக்கின்றனர். மேலும், எல்லா அகநிலை மாற்றங்களுக்கும் ஊற்றாய் உள்ள தூயவரையும் அர்ச்சிப்பு அளிப்பவராயும் உள்ள ஆவியானர் ஒருவர் இருப்பதையும், பழைய ஏற்பாடு வலியுறுத்துத்துகிறது (காண். ஏச 11:2; எச 36:26தொ).

II புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டில் போலவே புதிய ஏற்பாட்டிலும் ஆவி எனும் சொல்லுக்குப் பொருள் வேறுபாடு காணக்கிடக்கிறது. அஃதோடு, இயேசு கிறிஸ்துவில் தூய ஆவியின் அருட்கொடை அரும்புகிறது; மனித ஆவியினுடையவும் அவனைச் செயலாற்றவைக்கும் ஆவிகளினுடையவும் மெய்யான அளவு இயல்புகளை அது தெளிவுபடுத்துகிறது.

1. ஆவிகளின் ஆய்வுணர்வு:- சாத்தானின் முகமூடியைக் கிழித்தெறிந்து அவனுடைய தந்திரங்களையும் அவற்றின் பலவீனங்களையும் தெளிவாக்கும்போது இயேசு கிறிஸ்து தீய ஆவிகள்மேல் தமக்கிருக்கும் வல்லமையை வெளிப்படுத்துகிறார். கடவுளின் பரிசுத்தர் என அவரை அறிந்து அலறும் பேய்களைக் கடவுளின் ஆவியினால் ஓட்டுகிறார் (மத் 8:16; 12:28; மாற் 1:23-27; 9:27). தம் சீடர்களுக்கும் பேயோட்டும் அதே வல்லமையைக் கொடுக்கிறார் (மாற் 6:7; 16:17).

தூய ஆவியின் அருங்கொடைகளில் ஆவிகளின் ஆய்வுணர்வு (1 கொரி 12:10) முக்கியமானதொன்று; இறைவாக்கு உரைப்பது என்ற மதிக்கமுடியாத கொடையோடு இந்த அருங்கொடையும் மெய்யாகவே தொடர்பு கொண்டிருப்பதுபோல் உள்ளது; தூய ஆவியானவரால் கற்பிக்கப்பட்டு, ஆன்மீக வாழ்வு வாழ்வோரே, கடவுளின் கொடைகளை உணர்ந்து மதிப்பிடவும் (1 கொரி 2:11 தொ) மேலான வரங்களைத் தேடவும் (12:31; காண் 14:12) கூடிய தனிப்பண்பு கொண்டிருப்பர்.

2. தூய ஆவி நம் ஆவியோடு இணைந்து கொள்கிறார்:- கடவுளின் ஆவியைக் கண்டுணர்வது என்பது நம் சொந்த ஆளுமையைத் துறந்துவிடுவது ஆகாது; இதை அடக்கி ஆள்வதே ஆகும். பழைய ஏற்பாட்டுக் கருத்துக்கேற்ப, புதிய ஏற்பாடும் மனிதனிலே, ஒரே சமயத்தில் உடல், ஆன்மா, ஆவி எனும் மூன்றும் கூடிய பல்கூட்டான தொகுதி ஒன்றையே காண்கிறது (காண் 1 தெச 5:23). மூச்சு மற்றும் உயிரிலிருந்து பிரிக்க இயலாத ஆற்றல் ஒன்று (லூக் 8:55; 23:46), மன எழுச்சிகளைக் கூர்ந்து உணரக்கூடிய ஆற்றல் ஒன்று (லூக் 1:47; யோவா 11:33; 13:21; 2 கொரி 2:13; 7:13), ஊனியல்புக்கு எதிராய் அடிக்கடி எழுகின்ற ஆற்றல் ஒன்று (மத் 26:41; கலா 5:17) இருப்பதை உணர்கிறது. ஆனால் கடவுளின் ஆவியானவர் விசுவாசி

யின் ஆவியில் குடிகொண்டுள்ளார். அந்த ஆவியானவர் மனிதனைப் புதுப்பிக்கிறார் (எபே 4:23); அவனது ஆவியோடு ஒன்றாக இக் கொள்கிறார் (உரோ 8:16); இறைமக்களுக்கேற்ப அவர்களைச் செபிக்கத் தூண்டித் தாமே சொல்லொணா பெருமூச்சோடு பரிந்து பேசுகிறார் (8:26 தெ); ஆண்டவரோடு மனிதன் ஒன்றி ஒரே ஆவியாகும்படிச் செய்கிறார் (1 கொரி 6:17) என்பது புதிய ஏற்பாட்டின் தலையாய அனுபவமாகும்.

பல இடங்களில், சிறப்பாக, பவுல் நூல்களில், ஆவி என்ற சொல் மனித ஆவியைக் குறிப்பிடுகிறதா அல்லது கடவுள் ஆவியைக் குறிப்பிடுகிறதா என்று அறுதியிடுவது சற்றுக் கடினமாய் உள்ளது. எ.கா. ''ஊக்கம் தளராது, ஆவியின் ஆர்வம் தணியாது ஆண்டவருக்கு ஊழியம் செய்யுங்கள்'' என்கிறார் (உரோ 12:11); ''பரிசுத்த ஆவிக்குரிய செயல்கள், கள்ளமில்லா அன்பு'' என இரண்டையும் இணைத்துவைக்கிறார் (2 கொரி 6:6.....). மொழிபெயர்ப்பாளருக்குச் சிக்கலாயுள்ள இந்த இருபொருள் வழக்கு விசுவாசத்துக்கு ஓர் ஒளிக்கதிராய் உள்ளது; கடவுளின் ஆவியானவர் மனித ஆவியை ஊடுருவி உருமாற்றம் கொள்ளச் செய்கிறார்; எனினும், அவனது ஆளுமை நிறைவைச் சிறிதும் அவர் குலைப்பதில்லை என்பதற்கு இது ஒரு சான்று; தம் முன்னிலையில் தம் படைப்பை இருக்க வைத்துத் தம்முடைய தாக்கிக் கொள்ள வல்ல இறைவன் ஆவியாக இருக்கிறார் என்பதை (யோவா 4:24) இது சுட்டிக் காட்டுகிறது.

கடவுள் ஆவியானவர்; எனவே, கடவுளால் பிறப்பவர்கள் ஆவியால் பிறக்கின்றனர், ஆவியாய் உள்ளனர் (3:6); ஆவியிலும் உண்மையிலும் இறைவனுக்கு ஊழியம் புரியவும் (4:24) ஊனையும் சாவுக்குரிய செயல்களையும் (எபி 6:2) துறக்கவும் திறன் கொண்டவர் ஆகின்றனர். இங்ஙனம், உயிர் அளிக்கும் (யோவா 6:63) ஆவியானவரின் கனிகளைக் கொடுப்பவர் ஆகின்றனர் (கலா 5:22).

ஆவிகளை ஆய்ந்துணர்தல்

பவுலின் கருத்துப்படி ஆவிக்குரிய கொடைகளுள் இதுவும் ஒன்று (1 கொரி 12:10). தொடக்கக் காலக் கிறிஸ்தவ விசுவாசம் இதற்குப் பின்னணியாக உள்ளது. நல்ல ஆவி. தீய ஆவி என இருவகைகள் பேசப்பட்டுள்ளது (1 கொரி 12:3-11; 2 தெச 2:11; எபே 6:12). ஏவுதல் பெற்ற செய்திகள் இரண்டிலுமிருந்து வரலாம். எனவே ஏவுதல் எங்கிருந்து வருகிறது என்பதை தீர ஆராய வேண்டும் (1 யோவா 4:11). ஆவிகளையும், ஆவியின் ஏவுதல்களையும் பிரித்து அறியலாம் (1 கொரி 12:3; 14:32; 1 யோவா 4:2-3; காண்க 1 கொரி 2:12-15). இந்த ஆவிகளைத் தேர்ந்துதெளிதல் கிறிஸ்தவ உண்மையைப் பாதுகாக்க அவசியமானதாகும் (1 தெச 5:18-21). ''உண்மையின் ஆவி எது, ஏமாற்றும் ஆவி எது என்று'' பிரித்தறிய வேண்டும் (1 யோவா 4:6). இதற்குரிய சோதனைகள் அ) இறையியல் சார்ந்தது. இயேசு ஆண்டவர் என்றும், அப்போஸ்தல சாட்சியையும் உறுதியுடன் ஏற்றுக் கொள்ளுதல் (1 கொரி 12:3; 1 யோவா 1:1; 2:24; 4:2). ஆ) ஒழுக்க, செயல்முறை சார்ந்தது; தேவ ஆவிக்குரிய பலன்களால் சான்று பகர்தல் (மத் 7:15; கலா. 5:22-23; உரோ. 8:9; 1 கொரி. 13). அது திருச்சபைக்கு வளர்ச்சி தருவதாய் அமைந்திருக்க வேண்டும் (1 கொரி 14:14-26).

ஆவிக்குரிய உயிர்கொண்ட உடல் (SPIRITUAL BODY)

இது உயிர்ப்பின் உடல். இவ்வுலக வாழ்க்கையிலே மனிதனின் ஆன்மா மனித உடலை இயக்குகிறது. ஆனால் கிறிஸ்துவில் புதுவாழ்வு பெறும் கிறிஸ்தவனில் பரிசுத்த ஆவி வாழ்கிறார். அந்த அளவில் அவன் ஊனைமட்டும் சார்ந்தவன் அல்லன். அவன் ஓர் ஆவி ஆவான். மனிதனைப் பற்றி ஆவி என்ற சொல் பயன்படும்போது அது இறைவனோடு மனிதன் கொள்ளும் உறவை, அதாவது பரிசுத்த ஆவியால் செயலாற்றப்படுவதைக் குறிக்கிறது. மனிதன் இப்போதுள்ள ஊன் நிலைக்கேற்றபடி உடலைக் கொண்டிருக்கிறான். அதே போன்று உயிர்ப்

பில், முழுவதும் மீட்படைந்த நிலைக்கேற்ற ஆன்மீகப் பொருளால் ஆன உடலைக் கொண்டிருப்பான் என்பதைக் குறிக்க வில்லை. மாறாக, பரிசுத்த ஆவியில் முழுவதும் ஆட்கொள்ளப்பட்ட, அவருக்குகந்த சுருவியாக முழுவதும் மாறிய, கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பு வாழ்க்கைக்கு ஏற்றவாறு முழுவதும் மாற்றியமைக்கப்பட்ட உடலைக் கொண்டிருப்பான் (1 கொரி 15:45-49).

ஆவியின் கொடைகள் (SPIRITUAL GIFTS)

திருச்சபையினுடைய பணிக்கான அதனுடைய உறுப்பினர்களுக்கு சிறப்பாக அளிக்கப்படும் கொடைகளைக் குறிக்க புதிய ஏற்பாட்டில் இச்சொல் பயன்படுகிறது. தொடக்க நாட்களிலிருந்தான திருச்சபையை ஆவியினுடைய இயக்கத்தின் கீழுள்ள சமூகமாகப் புதிய ஏற்பாடு சித்தரிக்கிறது. திருச்சபையில் இருப்பதால் கிறிஸ்தவர்கள் ''ஆவியிலுமிருந்து'', ''ஆவியினுடைய முதற் கனிகளையும்'' சுவைத்துள்ளனர் (உரோ 8:9.23). ஆவியினுடைய பிரசன்னம் மற்றும் வல்லமையினுடைய அசாதாரணமான அறிகுறிகள் எங்கும் தெளிவாக உள்ளன. முதலில் இயேசுவால் அறிவிக்கப்பட்டு, பின்னர் அதனை பெற்றவர்களால் போதிக்கப்பட்ட மீட்பின் நற்செய்தியானது ''அருங்குறிகளாலும் அற்புதங்களாலும் பல்வேறு புதுமைகளிலும், தம் விருப்பத்தின்படி அளித்த பரிசுத்த ஆவியின் கொடைகளிலும் '' இறைவனால் உறுதிப்படுத்தப்படுகிறது (எபி 2:4). இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகள் ''ஆவியின் கொடைகள்'' என்று அழைக்கப்படுகின்றன. மெய்மறந்த நிலையினுடைய வலிமையான உணர்ச்சிவசப்பட்ட வெளிப்பாடுகள் முதல் சாதாரண, அன்றாட இறை சித்தத்தை நிறைவேற்றுதல் வரையிலும், வழிபடுவதற்கு துணைபுரிகின்ற திறமைகள் மற்றும் செயல்கள் முதல் அதற்கு சம அளவில் கிறிஸ்தவ சமுதாயத்தினுடைய பொதுவான தேவைகளை எதிர்கொள்ள அவசியமானவை வரையிலும் இக்கொடைகள் பலவகைப்படும். இத்தகைய வல்லமைகள் மற்றும் செயல்கள் அனைத்தும் இறைவனால் அளிக்கப்பட்டவை. அவற்றின் மதிப்பானது திருச்சபையினுடைய நலனை எந்த அளவிற்கு உயர்த்துகிறதோ அந்த அளவிற்கு கணிக்கப்படவேண்டும்.

1. இயல்பும் வேற்றுமையும்:- ஆவியின் கொடைகளை குறிப்பிடுவதற்கு ''ஆவிக்குரிய வரங்கள்'' (1 கொரி 12:1; 14:1) என்ற சொல்லானது சில நேரங்களில் உபயோகிக்கப்பட்டாலும் சிறப்பாக அடிக்கடி உபயோகிக்கப்படும் சொல்லானது 'இலவச கொடைகள்' என்பதாகும். புதிய ஏற்பாட்டிற்கு புறம்பே இது அரிதாகவே காணப்படுகிறது. 'ஆவிக்குரிய' என்ற சொல்லானது ஒருமுறை மட்டுமே அதனுடன் இணைக்கப்படுகிறது (உரோ 1:11) இருவகைகளில் இது உபயோகிக்கப்படுகிறது. பொதுவாக, இறை இரக்கம் அல்லது அருள் மூலமாக தனி நபரால் பங்கேற்கப்படும் குறிப்பிட்ட வரம் (2 கொரி 1:11), அல்லது திறன் (1 கொரி 7:7) அல்லது உண்மை (உரோ 1:11) அல்லது கொடை (கொரி 1:7) முதலியவை இச்சொல்லால் குறிக்கப்படுகின்றன. மற்றும் குறிப்பிட்ட முறையில் குழு ஒருமைப்பாட்டின் நலன் மற்றும் வளர்ச்சிக்காக ஏற்றுக்கொள்ளப்படும் குறிப்பிட்ட திறமைகள் அல்லது பொறுப்புகள் முதலியவற்றைக் குறிக்கின்றது (உரோ 12:3-8; 1 கொரி 12:14; எபே. 4:17-13; 1 பேதுரு 4:10-11; 1 திமோ 4:13). இவையாவும் இறைவனால் அளிக்கப்படுகின்றன. புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள், குறிப்பாக பவுல், வேறுபட்ட முழுமையின் அளவுகளில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவற்றில் சிலவற்றை கொண்டுள்ளான் என்ற நம்பிக்கையுடன், இத்தகைய கொடைகளைப்பற்றி பரந்த கருத்தைக் கொண்டுள்ளனர் (உரோ 12:6).

அ) பொதுவான வழக்கு:- ஆவியின் கொடைகள், அருளினுடைய ''அருட்கொடைகளாகும்.'' தனது பாவத்தின் காரணமாக மனிதன் தண்டனையையும் மரணத்தையும் மட்டுமே பெற்றபோது இறைவன் தனது இலவச கொடையின் மூலம் ஏற்புடைமையையும் வாழ்வையும் அளித்தார் (உரோ 5:15-17). மரணம், பாவத்தினுடைய சம்ப

ளம் ஆகும். ஆனால் முடிவில்லா வாழ்வானது ''இறைவன் அளிக்கும் இலவச அருட் கொடையாகும்'' (உரோ 6:23). ஆபத்தினின்று விடுவிக்கப்படுதல் நன்றி கோரும் கொடையாகும் (2 கொரி 1:11). ஒருவரது அனைத்து திறமைகளையும் வல்லமைகளையும் அழைப்பிற்கென அளிப்பதன் மூலம் மணமாகாத வாழ்வு வாழ்வதற்கான வல்லமையானது ஒரு கொடையாகும் (1 கொரி 7:7). ஒருவன் தன்னிலுள்ள கொடையையும் திறமையையும் புறக்கணிக்கக் கூடாது (1 திமோ 4:13-14). மனித இயல்பானது உண்மையில் முன்னேறக்கூடிய தன்மை உடையதால், மனிதன் 'மேலான வரங்களை' ஆர்வமாய்த் தேட வேண்டும் (1 கொரி 12:31; மத் 25:14-30). பிறருக்கும் செய்யும் ஊழியமானது ஒவ்வொருவரும் பெற்ற கொடைக்கு ஏற்ற விகிதத்தில் இருக்க வேண்டும் (உரோ 12:6; 1 பேதுரு 4:10). திருச்சபையினுடைய ஆசிகளும், சலுகைகளும், வல்லமைகளும் ஆவியின் கொடைகள். அவை என்றுமே திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவதில்லை (உரோ 11:29; 1 கொரி 1:7). நற்செய்தியின் உண்மையை தெரிவிக்க அப்போஸ்தலர் விரும்புவதுபோல, கொடையை ஒருவன் மற்றவருக்கும் அளிக்கலாம் (உரோ 1:11).

''அருட்கொடை'' என்னும் சொல்லைப் பயன்படுத்தும் வழக்கு தனி நபருக்கோ அல்லது திருச்சபைக்கோ இறைவனால் அளிக்கப்பட்ட சலுகையைக் குறிப்பிடுகிறது. தங்களுடைய கொடைகளைத் தனி நபர்கள் செயல்படுத்த வேண்டிய முறையை இரண்டாம் தரமாகவே குறிப்பிடுகிறது.

ஆ) குறிப்பிட்ட அல்லது சிறப்பு வழக்குகள்:- திருச்சபையும், ''இயேசுக்கிறிஸ்துவில் உள்ளவர்களின்'' தோழமையும் இங்கு முனைப்பான அக்கறை பெறுகின்றன. திருச்சபையின் நலனும் வளர்ச்சியும் முதன்மை அழுத்தம் பெறுகின்றன. ஒருவரது கொடைகளைப் பயன்படுத்தும்போது சுய முக்கியத்துவத்தைச் சிறிதும் காட்டக்கூடாது. ஆனால் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் உடலுக்குப் பணிசெய்யும்போது உண்மையான தாழ்ச்சி வெளிப்படவேண்டும். ஒவ்வொருவரும் அந்த உடலின் அங்கங்களாவர். அதன் நலனுக்காக, தனக்குரிய குறிப்பிட்ட அலுவலை நிறைவேற்ற வேண்டும் (உரோ 12:3-5; 1 கொரி 12).

''ஆவியின் கொடைகளுடைய'' ஓர் அட்டவனையானது கீழ்கண்ட வரிசையில் உள்ளது: ஞானம், அறிவு, விசுவாசம், குணமாக்குதல், புதுமை செய்யும் ஆற்றல், இறைவாக்குரைத்தல், ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறன், பல்வகை பரவசப் பேச்சு, மற்றும் அதனை விளக்கும் திறன் (1 கொரி 12:8-10). இதே வரிசையில் இல்லாவிடினும் பிற அட்டவணைகள் (உரோ 12:6-8; 1 கொரி. 12:28-30; எபே 4:11), திருச்சபையினுடைய பல்வேறுபட்ட பணிகளுக்கான சில சிறப்பான குறிப்புடன் அதே பொதுவான அமைப்பை வலியுறுத்துகின்றன. இந்த கொடைகளை இயல்பானவை அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்டவை, புதுமையானவை அல்லது புதுமையற்றவை என வகைப்படுத்துவதற்கான முயற்சிகள் அதிகம் வெற்றிபெறவில்லை. ஏனெனில் அத்தகைய வேறுபாடு எதையும் புதிய ஏற்பாடு வெளிக்கொணரவில்லை. இது அனைத்தையும் ஆவியினுடைய இயக்கத்திற்குச் சாற்றிக் கூறுகிறது. ஆவியைத் தந்தையுடனும் கிறிஸ்துவுடனும் ஒன்றிணைக்கிறது (1 கொரி 12:4-6; எபே 4:4-6) வழிபாட்டில் மிகவும் உபயோகமாக உள்ளவற்றை (இறைவாக்குரைத்தல், போதித்தல்) மிகவும் செயல் முறையான அல்லது பணிபுரிகின்ற கொடைகளினின்று (குணமாக்குதல், நடத்திச் செல்லுதல், ஊழியம்; 1 பேதுரு 4:10-11) பிரித்துக் காட்டச் சிலர் விரும்பலாம். பரவசப் பேச்சுகளில் அளிக்கப்படுவதுபோன்று (1 கொரி 14:13-19) தாராளநிலையை நோக்கி இயங்குகின்ற (உரோ 12:8) அனைத்து கொடைகளும் ஒன்றுபட்ட உடலாகிய திருச்சபையுடன் இணைந்துள்ளன. அதனுடைய தேவைகள் பல்வகையாக இருப்பதனாலும் அந்த உடல் சரியாகச் செயல்படுவதற்கு இக்கொ

டைகள் அளிக்கும் பங்கைப்பொறுத்து, இவை மதிப்பீடு செய்யப்படுகின்றன (1 கொரி 12:14-26)

மற்ற அனைத்திற்கும் ஊற்றாகிய முதன்மையான கொடை ஆவியாகும். அவரது மெய்யான தன்மையானது இயேசுவை ஆண்டவர் என்று அறிவிப்பதில் அடங்கியுள்ளது (1 கொரி 12:3). உயர்த்தப்பட்ட ஆண்டவராகிய ஆவி, தனது திருச்சபையின்மேல் கொடைகளை பொழிகிறார் (2 கொரி 3:17; எபே 4:9-11; பிலி 2:9-11). பன்னிரு அப்போஸ்தலர்களையும் அவர்களைப்போலவே நற்செய்திக்கு சான்று பகரவும்; திருச்சபையைப் பெருமளவில் நடத்திச்செல்லவும் அனுப்பப்பட்டவர்களையும் அவர் அளிக்கிறார் (உரோ 16:7; 1 கொரி 9:5; 2 கொரி 8:23; கலா 1:19).

ஞானம் நிறைந்த பேச்சுடைய இறைவாக்கினர்களை அவர் அளிக்கிறார். இவர்கள் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் திடமாகவும், சுதந்திரமாகவும் புரிந்துகொள்ளும் விதத்திலும் இறைசித்தத்தினுடைய தன்மை மற்றும் செயல்முறையின் உட்கருத்தை (ஞானம் மற்றும் அறிவு) வெளிப்படுத்துகின்றனர் (அ.ப. 4:20.31; 1 கொரி. 1:5; 12:8; 14:29; 2 கொரி. 8:7; எபே. 1:8-9.17; கொலோ. 1:9-10). மேலும் திருச்சபையை அதனுடைய அலுவலிலும் வழிபாட்டிலும் தேற்றவும், வலிமைப்படுத்தவும் வழிகாட்டவும் செய்கின்றனர் (அ.ப. 13:1-3; 1 கொரி. 14:3)

மனம் திரும்பியவர்களுக்கும், பொதுவாகத் திருச்சபைக்கும், விசுவாசம் மற்றும் செயல் பாட்டிலும் நற்செய்திமரபிலும் மறைநூலிலும் கற்பிக்கிறபோதகர்களை அவர் அளிக்கிறார். உண்மையான மற்றும் போலியான போதனைகளுக்கு இடையிலான வேறுபாடு இன்றியமையாததாக ஆகும்போது, இவர்கள் மேலும் மேலும் முக்கியத்துவம் அடைகின்றனர். ஆயர்கள் இக்கொடையை மேலான விதத்தில் கொண்டிருக்குமாறு எதிர்பார்க்கப்படுகின்றனர் (அ.ப. 20:28-31; உரோ 12:7; கொலோ 3:18-4:1; 1 திமோ 5:17; எபி 5:12; யாக் 3:1; 1 பேதுரு 2:18-3:7). மேய்ப்புப்பணியானது சில நேரங்களில் போதனையுடன் இணைக்கப்படுகிறது (எபே 4:1); இது அனேகமாக இவை இரண்டிற்கும் இடையிலான நெருக்கிய உறவினைச் சுட்டிக்காட்டலாம்.

நற்செய்தியாளர்களையும், பயணம் புரியும் போதகர்களையும் அவர் அளிக்கிறார். அப்போஸ்தலர்களையும் இறைவாக்கினரையும்விட இவர்கள் இருக்கும் நிலையில் சற்று குறைந்தவர்களாக இருந்தாலும், எங்கெங்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் நற்செய்தியைப் போதிப்பது சிறப்பான அழுத்தம் பெறுகிறது (அ.ப. 21:8; 2 திமோ 4:5).

இதுவரை கூறப்பட்ட கொடைகள் அனைத்தும், தனிப்பட்ட விதத்தில் இல்லாவிடினும் ஆதித்திருச்சபையினுடைய பணியுடன் தொடர்புடையவையாக உள்ளன. பல்வேறுபட்ட அலுவல்களைக்கொண்ட இப்பணியானது ஒன்றுபட்ட உடலின் நன்மைக்கென ஆவியால் தூண்டப்பட்டுள்ளது. ஆயினும், திறனுள்ள வழக்கமான செயல்முறையால் இடம்பெறுகின்ற பணிகள் ஒழுங்குமுறைப்படி அங்கிகரிக்கப்படுகின்றன (1 கொரி 16:15; எபே 4:7-16; 1 தெச 5:12). முதலிலிருந்து ''கைகளை விரிப்பதானது'' நபர்களை குறிப்பிட்ட பணிக்கென ஒதுக்கிவைக்கிறது (அ.ப. 6:6; 13:3). ஆனால் பின்னர் இச்செயல் மேய்ப்புப்பணி திருமுகங்களில் நற்செய்தியாளர் பணிபுரியும் அதிகாரத்தை திமோத்தேயுவிற்கு அளிப்பதுபோல, மிகவும் அதிகாரப்பூர்வச் செயலாக உருவாகிறது. இச்செயலானது கொடையை பொழிவதில்லை. ஆனால் திமோத்தேயு ஏற்கனவே காட்டிய ஆர்வத்திற்கும் திறமைக்கும் அதிகாரத்தையும் உறுதியையும் அளிக்கிறது. அதை அவர் தீயெனப் பற்றியெரியச் செய்ய வேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறார் (1 திமோ 4:14; 2 திமோ 1:6).

பணியில் பயன்படும் மற்றகொடைகளும் உள்ளன. ஆனால் அவை குறிப்பிடும் முறை

யில் அதற்குரியவை அல்ல. விசுவாசம் ஒரு கொடையாகும் (1 கொரி 12:9; பிலி 1:29). ஆவியானவர் அப்பா என்று கூக்குரலிடு மாறு விசுவாசியை தூண்டுவதனால், ''ஆவி யிலான'' செபமும் ஒரு கொடையே (உரோ 8:16; 1 கொரி 14:14; எபே 6:18-19). நற்செய் தியின் கிறிஸ்துவில் பிரசன்னமாகி, அவரது சீடர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள (மாற் 6:7; லூக் 9:1; 10:19) ''இறைவனுடைய வல்ல மையானது'' (மாற் 12:24) புதுமைகள் மற் றும் குணப்படுத்துதலின் கொடைகளைப் பொழிவதற்கென திருச்சபையில் இன்னும் செயல்படுகிறதென கிறிஸ்தவர்கள் விசுவ சிக்கின்றனர் (உரோ 15:18; 1 கொரி 12:28; கலா 3:5; எபி 2:4; யாக் 5:13-16). இரக்க செயல்களைப் புரிவோரும், கிறிஸ்தவ சமூ கத்தில் தாராளமாக உதவி புரிவோரும் ஊழி யத்தின் கொடையைக் கொண்டுள்ளனர் (1 கொரி 12:28; உரோ 12:8). அதே வேளை யில் பிற்கால ஆயர்களின் (அ.ப. 14:23; 20:17) முன்னோடிகளான திருச்சபைக் காரியங்க ளில் தலைவர்களும் மேற்பார்வையாளர்க ளும் ஆட்சிபுரிதலின் கொடையினைக் கொண்டுள்ளனர். அனைத்திலும், குறிப்பாக பரவசப்பேச்சுகளில், கிறிஸ்தவர்கள் தவறி னின்று உண்மையை வேறுபடுத்த வேண்டி யிருப்பதனால், தேர்ந்து தெளியும் திறன் சிலருக்கு அளிக்கப்பட்டுள்ளது (1 கொரி 12:10; 1 யோவா 4:1). பெருமளவில் ஆசிக் கப்பட்டாலும், மதிப்பிலும், அட்டவணை யிலும் பவுலால் இறுதியில் வைக்கப்படும் கொடையானது (1 கொரி 12:28) பல்வகை பரவசப்பேச்சுக்கள் ஆகும். இவை புரியாத பரவசக்கூற்றுக்களாகும். விளக்கம் அளிக் கும் கொடையும் இதனுடன் சேர்க்கப்படா விடின் இவற்றால் எப்பயனும் இல்லை. மேலும் இவை பொது நன்மையைப் பாதிக் கலாம் (14:18.23).

இவ்வாறு புதிய ஏற்பாடானது கிறிஸ்து வில் இறைவனின் அருளினுடைய ஆதாரங் களை முற்றிலும் சார்ந்துள்ள, ஆவியில் படைக்கப்பட்ட, ஆவியைக் கொண்ட சமூ கத்தை நம்முன் சித்தரிக்கிறது. அனேகமாக முதலில் பல்வகை பரவசப்பேச்சும். அதோடு தொடர்புடைய செயல்களும் அசா தாரணமான கொடைகள் மட்டுமே ஆவிக் குச் சாற்றிக் கூறப்பட்டிருக்கலாம். விரை வில் கிறிஸ்தவ இயக்கத்தின் ஒவ்வொரு தன்மையிலும் ஆவியானவர் செயல்படுபவ ராக உள்ளார் என்பது விசுவசிக்கப்பட்டது. வழிபாட்டிற்கு ''பாடல், போதனை, வெளிப்பாடு, பரவசப்பேச்சு அல்லது விளக் கம் அளித்தல்'' (1 கொரி 14:26) போன்ற கொடைகளை விசுவாசிகள் கொண்டு வந்த னர். மற்றவர்கள் திருச்சபையினுடைய நடைமுறை காரியங்களில் தங்களுடைய கொடைகளைச் செயல்படுத்தினர். கிறிஸ் தவ தோழமை வளர்ந்து, அதனுடைய தேவைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்ட நிலையில் அவற்றை நிறைவுசெய்ய புதிய ஆற்றல்கள் தேவைப்பட்டன; கண்டுபிடிக் கப்பட்டன. இது ஆவியினுடைய தொடர்ந்த முன்னேற்பாட்டினைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது. எனவே, ''பல்வேறு கொடைகள்'', ''பல்வேறு ஊழியம்'' பல் வேறு பணிகள் பற்றி பவுல் பேசுகிறார். ஆனால் அவர் அவற்றை வகைப்படுத்துவ தில் அவ்வளவு அக்கறை கொள்ளவில்லை, மாறாக ஆவியினுடைய செல்வாக்குமிக்க பலவித செயல்பாடுகள் சரிநிகரான செல் வாக்குமிக்க பலவித வேறுபட்ட விளைவுக ளில் தங்களை வெளிப்படுத்துகின்றன என்று சுட்டிக்காட்டுவதில் அக்கறை கொள்கிறார் (1 கொரி 12:4-6). ''கிறிஸ்து இயேசுவிலான '' வாழ்வினுடைய ஊற்றாகிய அதே ஆவியா னவர், அதே ஆண்டவர், அதே இறைவனிலி ருந்து அனைத்தும் தோன்றுகின்றன (1 கொரி 1:30; 2 கொரி 12:14).

2. இறுதிக்காலப் பின்னணி:- புதிய ஏற் பாட்டின் ஆவிக்குரிய கொடைகள் இறைவ னுடைய புதிய இஸ்ராயேலராகிய மெசியா சமுதாயத்தைக் கருத்தில் கொண்டுள்ளது. இச்சமூகம் ஆவியானவருடைய ஒவ்வொரு நல்ல, அவசியமான செயலிலும் அமைக்கப் பட்டு, காக்கப்படுகிறது. ஆவியின் வருகை யைப்பற்றிய பழைய இஸ்ராயேலுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை உரிமைச் சொத்தாகப் பெற்று அவை நிறைவேற்றப்ப

டுதலுக்குச் சான்று பகர்கின்றது (அ.ப. 2:16-17; 3:25-26; கலா 6:15-16; 1 பேதுரு 2:9-10). வல்லமைமிக்க ஆவியின் பிரசன்னத்தையும் மனிதர்கள் ''இறுதிநாட்களில் வாழ்கிறார்கள்'' என்பதையும் வியத்தகு அறிகுறிகள் எடுத்துக்காட்டுகின்றன. எனவே, ஆவியினுடைய செயலை புரிந்துகொள்வதற்கான திறவுகோலானது இறுதி காலப்பண்புடையதாகும். ஆண்டவருடைய நாள் தொடங்கியுள்ளது; இறைவனுடைய அரசு வந்துள்ளது. கிறிஸ்துவினுடைய பணி, மரணம் மற்றும் உயிர்ப்பின் மூலமாக இஸ்ராயேலின் வரலாற்றில் எதிர்பார்க்கப்பட்ட அனைத்தும் இப்போது நிறைவேறுகிறது என்பதே முதன்மையான போதனையாகும் (அ.ப. 2:17-21; 3:21.24; 10:43; மாற் 1:14-15). திருச்சபையாகிய கிறிஸ்துவின் உடலின் அங்கத்தினர்கள் என்ற நிலையில் எதிர்கால முழுநிறைவிற்காகக் காத்திருக்கும் வேளையில், கிறிஸ்தவர்கள் புதிய காலத்தின் ஆசீர்களால் தொடர்ந்து நிரப்பப்படுகின்றனர் (1 கொரி 1:7; 10:11; எபி 6:5). ஆவியானவரால் படைக்கப்பட்டு ஆவியால் நிரப்பப்பட்ட ஒப்புறவில் அவர்கள் வாழ்கின்றனர். ஆண்டவராகிய ஆவி அதன்மேல் ஆட்சி செலுத்துகிறார். அதற்கென அதனுடைய கூட்டுறவு வாழ்விற்கு இன்றியமையா அனைத்துக் கொடைகளையும் அருளையும் அவர் பொழிகிறார் (அ.ப. 2:33; உரோ 5:8; 1 கொரி 1:9; 2 கொரி 3:17; கலா 5:22-23). இவ்வாறாக, ஆவியானவர் கிறிஸ்தவர்கள் ஏற்கெனவே முன் சுவைத்துப் பங்கேற்கின்ற எதிர்கால உரிமைச்சொத்தினுடைய (எபி 6:4; 1 பேதுரு 4:14) ''முதற் கனிகளாகவும்'' (உரோ 8:23) அச்சாரமாகவும் உள்ளார் (2 கொரி 1:22; 5:5; எபே 1:14). இன்னும் முழுமைப்பெறாத இறைவனுடைய ஆட்சியானது 'நீதியிலும் அமைதியிலும் தூய ஆவிதுய்க்கும் மகிழ்ச்சியிலும்'' இப்போது வெளிப்படுகிறது (உரோ 14:17).

3. மதிப்பீடும் கட்டுப்பாடும்:- ஆவியின் கொடைகள் அனைத்துமே ஏற்புடையவையே. ஆனால் அனைத்தும் சம அளவில் நல்லவையல்ல. திருச்சபைக்கு அவை அளிக்கும் பயன் அவற்றின் மதிப்பை தீர்மானிக்கிறது. பரவச வல்லமைகள் குறிப்பாக பேச்சுகள் ஆகியவற்றுக்குத் தகுதியற்ற இடமும் முதன்மையும் அளிக்கப்பட்ட கொரிந்திய திருச்சபையின் பின்னணியில் பவுல் ஆவியின் கொடைகளை ஒழுக்க மற்றும் அறிவு சார்ந்த வழிகளில் நடத்திச் செல்வதன் அவசியத்தை காண்கிறார். அவர் உடலை ஓர் ஒப்புமையாகப் பயன்படுத்துகிறார். உடல் ஒன்றே; ஆனால் அதன் அங்கங்கள் வேறுபட்டவை அவற்றின் அலுவல்களும் வேறுபட்டவை; ஆனால் ஒன்றையொன்று சார்ந்தவை, ஒரே உடலாய் உள்ளன. அதுபோல் ஆவியின்கொடைகள் பல்வேறுபட்டவை; ஆனால் ஒன்றையொன்று சார்ந்தவை; ஆனால் யாவும் கிறிஸ்தவத் தோழமையின் ஒன்றிப்பு, கூட்டுறவு, நலமிக்க வளர்ச்சி ஆகியவற்றுக்கு எற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன (1 கொரி 12:12-26). எனவே அனைத்துக் கொடைகளும் இந்த நோக்கத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டு அதற்குப் பயனுள்ள அளவுக்கு மதிப்பும் பெறுகின்றன. இப்பணியானது முதிர்ச்சியடைந்த மனித நிலைக்கும் கிறிஸ்துவின் முழுமையினுடைய தோற்றத்தின் அளவிற்கும் திருச்சபையைக் கொண்டுவர அன்புடன் அளிக்கப்படுகின்றது (எபே 4:7-8). இறைவாக்கானது ஞான வளர்ச்சிக்காகவும் ஊக்கத்திற்காகவும் ஆறுதலுக்காகவும் அளிக்கப்படுகிறது (1 கொரி 14:3). ஒவ்வொரு கொடையும் திருச்சபையினுடைய விசுவாசம் மற்றும் அறிவு, அமைதி மற்றும் ஒழுங்கு ஆகியவற்றிற்குப் பயனுள்ள அளவிற்கேற்ப எண்பிக்கப்படுகிறது. தனது பல்வேறுபட்ட அருளினுடைய நல்ல கண்காணிப்பாளராக இருப்பதற்கென கிறிஸ்தவர்களை அழைத்த இறைவனுக்கு ஆழ்ந்த பொறுப்புணர்வுடன் இக்கொடைகள் செயல்படுத்தப்படவேண்டும் (1 கொரி 14:33.36; 1 பேதுரு 4:10-11).

அனைத்து கொடைகளும் திருச்சபையினுடைய பணிக்கென இருப்பதால் அவை எபபடிப் பயன்படுத்தப்படவேண்டும்? ஆவியின் கொடைகள் அனைத்திலும் மிகப் பெரிய கொடையாகிய அன்பினுடைய மேலான

வழியில் பவுல் விடை காண்கிறார் (உரோ 5:5; 1 கொரி 12:31-13:1). தான் தகுதியில்லாது இலவசமாகப் பெற்ற அருளினை மனிதன் முழுமையாகத் தன்னையே அளிப்பதின் மூலம் தனது அயலாரின்மேல் பொழிய வேண்டும். அன்பின் குறிக்கோள் முன்னேறுவதற்குப் பயன்படுவதற்கேற்ப கொடைகள் சார்புடைய முக்கியத்துவம் பெறுவதால், அன்பே அவற்றின் ஒப்புறவாகவும் கட்டுப்பாடாகவும் அமைகிறது. அன்பால் கட்டுப்படுத்துவதே பவுலின் ஒழுக்க நெறியியலின் அடிப்படையாகும். இந்த அடிப்படையில் கொரிந்திய திருச்சபையில் நிலவிய குழப்பத்தையும் ஒழுங்கின்மையையும் பவுல் திருத்துகிறார். இவ்வாறு கிறிஸ்தவ இயல்பினுடைய குறியீடுகளாக உள்ள ''ஆவியின் கனிகளில்'' ஆவியின் செயலை ஒழுக்க நெறிமுறையில் புரிந்துகொள்வதற்கு வழிவகுக்கிறார் (கலா 5:22; எபே 5:9).

ஆவென் (AVEN - *பாவம், கொடுமை)*

''ஆவென்'' என்ற வார்த்தை 'ஒழுக்கக்கேடான' அல்லது 'பழிபாவத்திற்கு அஞ்சாத' என்று பொருள்படும்.

1. ''ஆவென்'' என்பது ஒசே 10:8-இல் காணப்படுகின்ற சிலைவழிபாட்டின் உயர்ந்த இடங்களிலெல்லாம்'' என்ற வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு இடத்தைக் குறிக்கிறது. உயர்ந்த இடங்கள் என்பது தான், பெத்தேல், சமாரியா போன்ற இடங்களிலுள்ள புறவினத்தாரின் பலிபீடங்களை அல்லது புனித இடங்களை அநேகமாகக் குறிக்கலாம்.

ஒசேயா நூலில் (4:15; 5:8; 10:5) இடம் பெறுகின்ற பேத்து-ஆவேன் என்பது பெத்தேலைக் குறித்துக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒசேயா இவ்வார்த்தையைப் பயன்படுத்துவதின் மூலம் புனித இடங்களிலெல்லாம் ஒழுக்கக் கேடுகள் நிறைந்துள்ளன என்பதை உணர்த்துகிறார். அதற்காக ஓர் ஏளன, இழிவான குறிப்பாகப் பயன்படுத்துகிறார்.

2. ஓன் என்ற எகிப்தியப் பெயரைக் குறிக்கும் மற்றொரு பெயர். எசக்கியேல் நூலில் 30:17 என்ற பகுதியில் மட்டும் குறிப்பிடப் பட்டுள்ளது.

3. கானானியர்களின் வழிபாட்டைச் சாடுகின்றபொழுது ஏல், பாகல் போன்ற கானானியத் தெய்வங்களின் பெயர்களுக்குப் பதிலாக 'ஆவென்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைப் போன்றுதான் பெத்தேலுக்குப் பதிலாக 'பேத்தாவேன்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது (யோசு 7:2; 18:12; 1 சாமு 13:5). குறிப்பாக ஆவென் என்பது கூலே-சீரியா பள்ளத்தாக்கைக் குறிக்கிறது. இங்கு பெனிசிய தேவர்களின் வழிபாடு நிலவியிருந்தது. அறிஞர்கள் இச்சொல் பாகால்பெக் நகரத்திலிருந்த ஒரு ஆலயத்தைக் குறிப்பதாகக் கருதுகின்றனர். ஆமோ 1:5-இல் சீரியாவுக்கு எதிரான அழிவு பற்றிய இறைவாக்கில் குறிக்கப்படுகிறது.

ஆவே மரியா (AVE MARIA - *வாழ்க மரியே)*

ஆண்டவரின் தாயாகிய மரியாளை புகழ்ந்து எழுதப்பட்ட பாடல். அதிதூதர் கபிரியேலும், எலிசபெத்தும் மரியாளைப் புகழ்ந்த வார்த்தைகளைக் கொண்டது (லூக் 1:28:42). இது ஐந்தாம் நூற்றாண்டில் புனித யாக்கோபு (எருசலேம்), புனித மாற்கு (அலக்சாந்திரியா) ஆகியோரின் வழிபாட்டு முறையில் பயன்படுத்தப்பட்டது. இவற்றில் நற்கருணை செபத்தில், புனிதர்களை நினைவு கூறுவதற்கு முன்னதாக வைக்கப்பட்டது. உரோமைத் திருப்பலியில், கிறிஸ்து பிறப்பு அறிவிக்கப்பட்ட திருவிழா அன்று காணிக்கைப் பாடலாகப் பாடப்பட்டது. அதிலிருந்து இவ்வாழ்த்துப்பாடல் மரியாளை நினைவு கூறும் மற்ற திருப்பலியிலும், வருகை காலத்தின் நான்காவது ஞாயிறன்றும் பயன்படுத்தப்பட்டது. ஒரு சாதாரண பக்தி முயற்சியாக பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிவரை வரவில்லை. இதோடு விவிலியத்தில் இல்லாத ஒரு மன்றாட்டுப் பகுதியும் இணைக்கப்பட்டு ''அருள் நிறைந்த மரியே'' என்ற செபம் ஐந்தாம் பத்திநாதரின் திருச்சபையின் கட்டளைச் செபத்தில் கி.மு. 1568-இல் அதிகாரப் பூர்வமாகச் சேர்க்கப்பட்டது.

ஆழம் (THE DEEP)

படைப்புக் கதைகளைப் பின்னணியாகக் கொண்ட, தொடக்க காலப் பெருங்கடலா கும்.

1. மெசபொத்தாமிய இலக்கியம்:- இந்த எபிரேயசொல்லானது எனூமா ஏலிஸ் என் னும் படைப்பு இலக்கியத்தில் மார்துக்கினால் கொல்லப்பட்ட ஆழத்தின் பறவை நாகமாகிய 'தியாமாத்' என்னும் அக்காதிய தேவதையோடு தொடர்புடையது.

அப்சு (சுத்தமான நீர்) மற்றும் தியாமாத் திற்கும் (உப்புநீர்) அவர்களது வாரிசுகளா கிய கடவுள்களுக்கும் இடையில் சண்டை ஏற்பட்டது. 'எயா' என்னும் கடவுள் அப்சுவைக் கொன்று, தியாமாத்தை பதவியி னின்று வெளியேற்றியது. தியாமாத் பல அரக்கர்களைத் தனக்குதவ கருவீன்றது (யோபு 9:13); விதியின் பலவகைகளை 'கிங்கு' என்னும் காதலனுக்குக் கொடுத்து விட்டு (திருவெளி 5:1-5) கடவுள்களுடன் போருக்குத் தயார் செய்தது. அவளோடு போரிட 'எயா' வின் மகன் மார்துக் முன்வரும்வரை கடவுள்கள் கிலியடைந்திருந்தனர். அவனை விழுங்குவதற்குத் தியாமாத் வாயை திறந்தவுடன் அவளின் வயிற்றினுள் நான்கு காற்றுகளை நுழைத்து, ஒரு அம்பினால் அவளைக் கொன்றான். அந்த பெரிய உடலை, சிப்பியைபோன்று இரண்டாகப் பிளந்து, அதில் பாதியை வானத்தை படைக்கவும், விண்மீன் நட்சத்திரம், நிலா போன்றவற்றை அமைக்கவும் உபயோகித்தான். இதற்கு வெகுமதியாக பிற கடவுள்கள் விதியின் பலவகைகளை அவனுக்கு அளித்து பாபிலோனையும், எசாகிலா என்ற கோயிலையும் மார்துக்குக் கட்டினார்.

2. உகாரித்திய இலக்கியம்:- ஆழம் என்பது ஏலின் உறைவிடமாகும். அங்கு பற்பல கடவுள்கள் போய்ச் சேர்ந்தனர்.

3. பழைய ஏற்பாடு:- இச்சொல் குறிப்பிடும் பகுதிகள்:-

அ) கட்டுக்கதை பின்னனி இல்லாமலோ, அல்லது முதன்மை பெறாமலோ உள்ள படைப்பின் தொடக்ககால நீர் தொகுப்பாகும் (ஆதி 1:2). யோபு 38:16.30; சங் 104:6; பழ 8:24.27-28 ஆகியவற்றில் இச்சொல் பயன்படுவது குறிக்கத்தக்கது. சங் 33:7; 36:6; 78:15; ஆமோ 7:4-இல் காணப்படும் வழக்கு அவ்வளவு தெளிவாக இல்லை.

ஆ) யாத்திரையின்போது கடவுளால் இஸ்ராயேலருக்காகக் கட்டுப்படுத்தப்பட்ட நீர் (யாத் 15:5.8; கடல் நடுவில் ஆழங்கள் உரைந்துபோயின; சங். 106:9; ஏச 63:13)

இ) படைப்பின் திருப்பமான பெருவெள் ளம் (ஆதி 7:11; 8:2; பழ 3:20)

ஈ) சில இடங்களில் மனிதராலும் குதிரைகளாலும் கடக்க இயலாத ஆழமான நீர் நிலைகளும் (சங் 135:6), நல்ல பொருளில் நிலத்தை வளப்படுத்தும் நீரையும் (உப 8:7; ஏச 31:4; 34:18), கடலில் புயல்காற்றையும் (சங் 107:26), தீர் தீவினை மூடப்போகும் ஆழமான பரந்த நீர்ப் பரப்பையும் (எச 26:19; 27:34) குறிக்கிறது.

உ) நீருடன் தொடர்பே அற்ற நிலத்தின் பள்ளத்தாக்குகள் (சங் 71:20; 95:4); கீழுலகை அடைய ஒருவன் கடக்க வேண்டிய நீரினைப் பற்றிய தனிப்பட்டவர்களால் புலம்பலிலும் பயன்பட்டுள்ளது (சங் 42:7; யோனா 2:5; சங் 69:2. 14-15; 88:6; 130:1; யோனா 2:3).

ஊ) யாவேய்க்கும் குழப்பத்தின் செயல்களுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டத்தைப் பற்றி இதிகாசத்தின் எஞ்சியுள்ளவை யாகும்; ஆயினும், இவற்றில் அடக்கப்பட்ட மிருகத்தைப் பற்றிக் குறிக்க 'நாகாப்', 'லேவியாத்தான்', 'பறவை நாகம்' என்னும் பெயர்கள் பயன்பட்டுள்ளன (ஆதி 49:23; உப 33:13; சங் 77:16; அப 3:10; யோபு 28:14; சங் 148:7; யோபு 41:31; ஏச 51:9-10).

ஏரிடு மற்றும் பாபிலோனியாவிலுள்ள முக்கிய கடவுள்களின் கோவில்களைப் போலவே, எருசலேம் கோவிலும் படைப்பு கதையுடன் இணைக்கப்பட்டிருக்கலாம்.

சீயோன் மலையில் உள்ள கோவில், உலகின் உச்சமும் மையமுமாக கருதப்பட்டது; மேலும் கோவிலின் அடித்தளமாக இருந்த பாறை, ஆழத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. கோவில் ஆழத்திற்கு எதிராக நின்றதாக மிஸ்னாவும், கோவிலின் பாறை பாதாளத்தின் வாயை மூடியதாக தார்கூமும், கூறுகின்றன. தொடக்கக் கால நீரின்மீது இறைவன் கொண்ட வெற்றியும், படைப்பின்பொழுது அவற்றைக் கோவிலின் அடியிலுள்ள பாறைக்கு உட்படுத்தியது பற்றி சங் 29-இல் பிறபகுதிகளும் குறிக்கலாம்.

ஆழம் பார்த்தல் (FATHOM)

கரங்கள் விரிக்கப்பட்ட நிலையில் ஒரு கரத்தின் முனையிலிருந்து அடுத்தக் கரத்தின் மறுமுனைவரை உள்ள நீளத்தை அடிப்படையாக வைத்து உருவான ஓர் அளவு ஆகும். ஒரு ஆழம் நான்கு முழம் அல்லது ஆறு அடி நீளமாகும். பவுல் அதிரியாக் கடலில் கப்பல் பயணம் செய்தபோது, மாலுமிகள் விழுதுவிட்டு ஆழம் பார்த்ததாகக் கூறப்படுகிறது (அ.ப. 27:28).

ஆளுநர் (GOVERNOR)

ஒரு குறிப்பிட்ட பகுதியையோ மாநிலத்தையோ கண்காணித்துக் கொள்வதற்கு அரசர்களால் நியமனம் செய்யப்படும் ஒரு ஆட்சியாளர். இவர் தனது அதிகாரத்தினால் அல்லாமல் அரசரின் அதிகாரத்தால் அவ்விடத்தை ஆள்கின்றார். யேசேப்பு எகிப்தில் ஆளுநராக பாரவோனின் கீழ் ஆட்சிசெய்தார் (ஆதி 42:6; காண் திருவுரை 7:19; 10:5; ஆதி 45:26; அ.ப. 7:10). கெதலியா பாபிலோன் நாட்டு மன்னரால் ஆளுநராக நியமிக்கப்பட்டார் (எரே 40:5). பாபிலோனில் இருந்த ஞானிகளுக்கு தானியேல் ஆளுநராக இருந்தார் (தானி 2:48). தத்தனாய், சேசிபசாரி, செருபாபேல், நெகமியா ஆகியோர் யூதாவின் மேல் ஆட்சி செய்த பாரசீக ஆளுநர்களாவர் (எஸ் 5:3.14; நெக 5:4; ஆகா 1:1). எரேமியா 30:21-இல் பயன்படுத்தப்பட்ட எபிரேயச் சொல் எத்தகைய ஆட்சியாளரையும் குறிக்கும் (யோசு 12:2; சங் 105:20). உரோமைப் பேரரசின் மாகாணக் கருவூல அதிகாரிகளும், தூதர்களும் ஆளுநர்களாவர் (லூக் 2:2; 3:1; அ.ப. 23:24; 24:27).

ஆலயம், அதன் சுற்றுப்புறம், ஆகிய பகுதிகளின் அதிகாரம் கொண்ட தலைமை அதிகாரி ஆளுநர் என்றழைக்கப்பட்டார். இத்தகைய ஒருவரான பசிகூர் எரேமியாவை சிறையில் அடைத்தார் (எரே 20:1).

நாடுகடத்தப்படுதலுக்கு முந்திய காலத்தில் ஆளுநர் என்ற சொல் அரிதாகவும் தெளிவில்லாமலும் பயன்பட்டுள்ளது. ஆளுநர்கள் சிலசமயம் மக்கள் தலைவர்கள் என்று குறிக்கப்பெறுகின்றனர். மாவட்ட ஆளுநர்கள் ஆட்சிக் கடமைகளுடன் போர் அலுவல்களையும் செய்து வந்தனர் (1 அர 24:14 தொ). நகரத் தலைவனும் ஆளுநர் என்றழைக்கப்படலாம் (22:26).

புதிய ஏற்பாட்டில் உரோமை மாநிலங்களை ஆட்சி செய்தவர்களுக்கு ஆளுநர் என்ற பட்டம் அளிக்கப்படுகிறது (மத் 10:13; 1 பேதுரு 2:14). லூக்கா மூன்றுவகை உரோமை அதிகாரிகளுக்கு இப்பெயர் அளிக்கிறார்.

1) உரோமை மூப்பர் அவையின் கீழ் ஆட்சி செய்யப்பட்ட மாநிலங்களின் தலைவர்கள் (செருகியு பவுல் அ.ப. 13:7; அக்காயாவின் கல்லியோ 18:12-13). 2) பேரரசின் மாநிலத்தை ஆட்சி செய்த படைத்தலைவன் (சீரியாவின் கிரேனியு லூக் 2:2). 3) பேரரசரின் பெயரால் படையின் உதவி கொண்டு ஒருநாட்டை ஆண்ட தலைவன் (போந்தியு பிலாத்து லூக் 8:1; பெலிக்சு அ.ப. 23:4; பெஸ்து 24:27). தொடக்கத்தில் நிதி சம்பந்தப்பட்டவைகளிலும், பின்னர் இராணுவ அதிகாரிகளாகவும், உரோமையிலும் மாநிலங்களிலும் பேரரசரின் பிரதிநிதிகளாகப் பணியாற்றிய அரசு அதிகாரிகளே இவர்கள். பேரரசர் அகஸ்துவின் ஆட்சியில் குதிரைப் படையில் சிறந்தவர்கட்கு இராணுவம் அல்லாத, சமுதாய நிர்வாகங்களில் பெரும் பங்கு அளிக்கப்பட்டது. உணவு தானியங்கள் அளிப்பது, காவற்படையின் பொறுப்பாளர்களாக இருப்பது போன்றவைகளும் இவர்

கள் கடமைகளாகும். அகஸ்து, திபேரியு காலத்தில் இவர்கள் முக்கியமாக வரிவசூலிப்பவர்களாகவே இருந்தனர். பின்னர் அரசரின் பிரதிநிதிகளாக இராணுவத் தொடர்பான காரியங்களில் ஈடுபட்டவர்களும் இதே பெயரில் அழைக்கப்பட்டனர்.

இத்தகைய நிர்வாகிகள் கிமு. 66-க்குள் பன்னிரண்டுபேர் பாலஸ்தீனத்தில் பதவி வகித்தனர். அவர்களில் போந்தியு பிலாத்து, அந்தோனியு, பெலிக்சு, போர்கியு பெஸ்து ஆகியோரின் பெயர்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. பிலாத்து ஐந்தாவது ஆளுநர் ஆவர். இவர்கள் தங்கள் அதிகாரத்தின்கீழே பல நாணயங்கள் வெளியிட்டதற்கான சான்றுகள் பல இன்றும் உள்ளன. பாலஸ்தீனத்தில் மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக விலங்குகள், மனிதர்கள் தலையை அதில் பொறிப்பதைத் தவிர்த்தனர். தங்கள் அதிகாரத்தின் கீழுள்ள பகுதியில் அமைதியை நிலைநாட்ட வேண்டியது இவர்களது கடமை. யோசேபசின் கூற்றுப்படி கோபோனியவிடம் மரண தண்டனைக்குரிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது குறிப்பிடுவது யூத அதிகாரிகளிடமிருந்து மரணதண்டனைக்குரிய அதிகாரம் பறிக்கப்பட்டிருந்தது என்பதையா என்பது தெளிவாக இல்லை. அரசன் அரேத்தாவின் ஆளுநன், அரசனது பிரதிநிதி அல்லது அவ்விடத்துத் தலைவனாவான் (2 கொரி 11:32).

ஆளும் வரம் (GOVERNMENTS)

கடவுள் திருச்சபைக்கு கிடைத்துள்ள பரிசுத்த ஆவியின் அருட் கொடைகளில் ஒன்றாகும் இது. இச்சொல் குறிப்பிட்ட பதவியையோ பணி முறையையோ குறித்துக்காட்டும் சொல் அல்ல. இது பிறர் சேவையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு இருப்பதால் ஆயர்களாலும், மூப்பர்களாலும், தியாக்கோன்களாலும் அல்லது 'தலைவர்களாலும் செய்யப்படும் பணியையே சுட்டிக் காட்டும் மறைமுக சான்று ஆகும் என்று சிலர் கருதுகின்றனர் (உரோ 12:18; 1 தெச 5:12). கிரேக்கச் சொல்லில் அடங்கியுள்ள உருவகம் கப்பலில் கக்கானை இயக்குபவரை நினைவுபடுத்துகிறது.

ஆறு, நதி (RIVER)

நீரோட்டங்களைக் குறிக்க ஆறு, நதி என்று பொருள்படும் நான்கு எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. யூப்பிரதிசைக் குறிக்க ஆறு என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளன (ஆதி 2:10; 15:18; எண் 24:6; உப 1:7). நைலைக் குறிக்க நதி என்ற சொல்லும் (ஆதி 41:1; யாத் 1:22) பொதுவாகப் பயன்பட்டுள்ளன. யோர்தான் ஆறு என்று குறிக்கப்படுகிறது (மாற் 1:5).

விவிலியத்தில் கூறப்படும் ஆறுகள் அபானா; அகவா; கெபார், கீகோன்; கோசேன்; கிதக்கேல்; யாபோக்கு; கீசோன்; பர்ப்பார்; பீசோன்; எகிப்தின் ஆறு, ஊலாய் ஆகியவையாகும்.

பொதுவாக ஆறுகள் புவியியல் எல்லைகளைக் குறிப்பதற்காக வருகின்றன (யோசு 1:4; நீதி 4:13; 1 அர 4:21). இந்த ஆறுகள் வேளாண்மைக்கும், குளிப்பதற்கும் (யாத் 2:5), போக்குவரத்திற்கும் (ஏச 18:2), பாதுகாப்பிற்கும் (நாகூ 3:8), குடிப்பதற்கும் (யாத் 7:8), மீன் பிடிப்பதற்கும் (லேவி 11:9), குணப்படுத்துவதற்கும் (2 அர 5:10) பயன்படுகின்றன. இறை ஆற்றல் தோற்றத்திற்குரிய இடங்களாகவும் (யாத் 32:22-23), திருமுழுக்கு நடக்கும் இடங்களாகவும் (மத் 3:6) காட்டப்படுகின்றன.

உருவக முறையில் ஆறுகள் ஒரு நாட்டின் வளமையைக் குறிக்கவருகின்றன (எண் 24:6; சங் 65:9; ஏச 66:12). இவ்வாறு வளமையாக இருப்பது கடவுளின் ஆற்றலின் சக்தி வெளிப்பாடாகவும், ஆறுகள் வற்றிப்போவது துக்ககரமானதாகவும் கருதப்பட்டது (யோபு 14:11; ஏச 19:5). நீதியுடைமை (அல்லது) ஏற்புடைமை என்பது எப்பொழுதும் வற்றாத நீரூற்றுக்கு ஒப்பிடப் படுகிறது (ஆமோ 5:24). கடவுளின் அருள், ஆசீர் வாழ்வுதரும் நீரையுடைய ஆறாக உருவகப்படுத்தப்படுகிறது (திருவெளி 22:1). இன்பவனத்திலிருந்து ஓடிவரும் ஆறுபற்றியும் (ஆதி 2:10) புதிய யுகத்தில் ஆலயத்திலிருந்து ஓடிவரும் ஆறுபற்றியும் மிக விரிவா

கக் கூறப்படுகிறது (எச 47:1-12; சங் 14:8; திருவெளி 22:1-2; யோவா 7:38; திருவெளி 12:15)

ஆறுதல், தேற்றுதல் (COMFORT, CONSOLATION)

இப்பொருளுடைய கிரேக்கச் சொல்லான ''பராக்கலேயு''வுக்கு உதவிக்கு ஒருவரை தன் பக்கம் அழைப்பது என்ற பொருளோடு, ஆறுதல், ஊக்குவித்தல், கெஞ்சிக்கேட்டல், அறவுரைக் கூறுதல் என்று பலவாறு பொருள் கூறலாம். இது புதிய ஏற்பாட்டில் முக்கிய மையக் கருத்துகளில் ஒன்றாகும். மற்ற நற்செய்தி மையக் கருத்துக்களைப் போல் இதுவும் ஏசயாவின் நற்செய்திமுன்னுரையிலிருந்து (ஏச 40) தோன்றுகிறது. ''ஆறுதல் கொடுங்கள், நம்மக்களைத் தேற்றுங்கள் என்கிறார் உங்கள் கடவுள்'' (40:1). ''நாமே உங்களைத் தேற்றுவோம்'' (51:12; 49:13; 51:3.19; 61:2; 66:13).

புதிய ஏற்பாட்டில் கடவுள் ''ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றான கடவுள்'' (2 கொரி 1:3) என்று அழைக்கப்படுகின்றார். பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தை 'ஆறுதலின் திருமுகம்' என்று அழைக்கலாம். ஏனெனில் இதைப்பற்றி பவுல் மீண்டும், மீண்டும், சிறப்பாக 1:3-7; 7:4-13-ல் எடுத்துக் கூறுகின்றார். கடவுளின் ஆறுதலை அனுபவித்தவர்கள்தான் மற்றவர்களுக்கு ஆறுதல் கூறமுடியும். கொரிந்திலிருந்து தீத்து கொண்டுவந்த உறுதியளிக்கும் செய்தியால் ஆறுதல் அடைந்த பவுல், தன் கடிதத்தால் துயர் அடைந்த கொரிந்தியர்களுக்கு, ஆறுதலை நிறைவாக அளிக்க ஆர்வம் காட்டுகிறார்.

''துயருறுவோர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்'' என்று இயேசு போதிக்கிறார் (மத் 5:4). உலகிலே துன்ப துயரே பெற்ற இலாசர், மறுஉலகில் ஆறுதல் அடைகிறார் (லூக் 16:25). லூக். 2:25-இல் கிறிஸ்துவின் வருகையோடு, ''இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதல்'' நிறைவேறுகிறது. அ.ப. 4:36-இல் பார்னபா என்ற பெயருக்கு ''ஆறுதலின் புதல்வன்'' என்ற பொருள் அளிக்கப்படுகிறது.

ஆற்றல் (POWER)

ஒவ்வொரு சமயத்திலும் இறைத்தன்மையின் முக்கிய இயற்பண்பாக ஆற்றல் உள்ளது. கிறிஸ்தவ விசுவாசமானது விவிலிய இறைவெளிப்பாட்டின் முதல் கூற்றைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறது: ''பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவாசிக்கிறேன்''. இந்த வாய்பாடு உண்மையான இறைவனுடைய எல்லாம் வல்ல தன்மையின் மூன்று பண்புகளைச் சுட்டிக்காட்டுகிறது. இறைவனே அனைத்தையும் படைத்ததால், அவரது ஆற்றல் உலகளாவியதாக உள்ளது (ஆதி 1:1; யோவா 1:3). இறைவன் வானகத்திலுள்ள தந்தையாக இருப்பதால், இது அன்பானது (மத் 6:9); சில நேரங்களில் மனஉலைவு தரக்கூடிய தோற்றங்களில் விசுவாசம் மட்டுமே உய்த்துணரக்கூடியதாக இருப்பதால், இது மறை பொருளானது, மீட்புச் செயலுக்கு இட்டுச் செல்கிறது (1 கொரி 1:18; 2 கொரி 12:9-10). ஏனெனில், இந்த ஆற்றலானது மீட்பின் வரலாற்றினுடைய சூழ்நிலையில் செயல்படுகிறது.

I. இஸ்ராயேலின் இறைவனாகிய யாவேயின் ஆற்றல்

1. பூவுலகில் தமது தலையீடுகளின் மூலம் இறைவன் தமது பேராற்றலை வெளிப்படுத்துகின்றார். குலமுதியவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளில் இப்பேராற்றல் பொங்கி வழிகின்றது; ஏனெனில் இறைவனுக்கு முடியாதது ஒன்றுமே இல்லை (ஆதி 18:14). ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் பாதுகாத்து, அவர்களது நலனுக்காக தாம் விரும்பியதை நிறைவேற்ற அவரால் முடியும் (ஆதி 12:2-3; 28:13 தொ). இத்தகைய எல்லாம் வல்ல இறைவனுடன் யாக்கோபு போராட வேண்டியிருந்தது; அப்போராட்டத்தின் முடிவில் இறைவன் அவரை ஆசீர்வதித்து, இஸ்ராயேல் என்னும் பெயரை அவனுக்கு அளித்தார் (ஆதி 32:27-30). இப்பெ

யரே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைக் குறிப்பிட்டு, ''கடவுள் தன்னை வலியவராக காட்டுவாராக'' என்னும் அவர்களது விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறது. எனவே, இஸ்ராயேலின் வல்லமையானது அவர்களை தேர்ந்தெடுத்தவரும் (சங் 29:2-8 தொ; 44:5-9; 105:3-4; 124:8), யாக்கோபின் வல்லவருமாகிய (ஆதி 49:24; ஏச 1:24; 49:26; 60:16; சங் 132:2) இறைவனின் வேண்டுதலிலும் பாதுகாப்பிலுந் தங்கியுள்ளது. இந்த இறைவன் தமது வலிய கரத்தினாலும் (யாத் 3:19), ஓங்கிய கையாலும் (உப 4:34) யாத்திரைச் செயலை நிறைவேற்றி தமது மக்களை விடுவிக்கிறார். இத்தகைய வரலாறு காணாத மீட்பின் மூலம், இஸ்ராயேலின் இறைவனாகிய யாவே, வானகத்திலும் பூமியிலும் தாம் மட்டுமே எல்லாம் வல்லவராக இருப்பதை வெளிப்படுத்துகிறார் (உப 4:32-39).

இஸ்ராயேலின் படைகளுக்குத் தலைவராக இருந்து (யாத் 12:41) யாவே தமது மக்களுக்கு வெற்றியை பெற்றுத்தருகிற போர் வீரராக உள்ளார். ''சேனைகளின் ஆண்டவர்'' என்ற அவருடைய பெயரின் முதற் பொருள் இத்தகையதே (சங் 24:8 தொ; யாத் 15:2 தொ; 1 சாமு 17:45; 2 சாமு 5:10; ஆமோ 5:14-15). உடன்படிக்கைப் பேழையின் மூலமாக, எல்லாம் வல்லவர் தமது பிரசன்னத்தைத் தனது மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றார் (2 சாமு 6:2; சங் 132:8).

2. சில சமயங்களில் தமது மக்களையும் (உப 8:17-18) அவர்களது தலைவர்களான கிதயோன் (நீதி 6:12 தொ) போன்ற நீதிபதிகளையும், தாவீது போன்ற அரசர்களையும் (2 சாமு 7:9; 22:30 தொ; 1 சாமு 2:10) வலிமைபடுத்துவதற்காக இறைவனும் தலையிடுகிறார். கடவுளிடமிருந்து வந்து தங்களை வெல்லமுடியாதவர்களாக்குகின்ற வலிமையின்மீதே மக்கபேயரும் நம்பிக்கை கொண்டுள்ளனர் (1 மக் 3:18-19; 2 மக் 8:18). மற்ற சமயங்களில், மக்களுடைய வேண்டுதலுக்குப் பதிலாக அவர்கள் செய்வதற்கு ஒன்றுமே இல்லாதவாறு கடவுள் தலையிடுகிறார் (2 அர 19:35; 2 நாள் 20:15 தொ. 24). யோசுவாவின் தலைமையின் கீழ் நடைபெற்ற கிபயோன் போரில். இத்தகைய இருவித தலையீடுகளும் இணைக்கப்பட்டுள்ளன (யோசு 10:8-11).

ஆயினும், ஒவ்வொரு சூழ்நிலையிலும், இறைவனே தமது மக்களின் வலிமையாக உள்ளார். சங்கீதங்கள், தங்களது போற்றுரைப் பாடல்களில் (144:1-2; 28:7-8; 45:2; 67:34 தொ), உதவிக்கான வேண்டுதல்களிலும் (29:11) இதனையே பாடுகின்றன. இஸ்ராயேல் காப்பாற்றப்படுவதிலிருந்து தோல்வியடையாது. ஏனெனில், இஸ்ராயேலை அன்பு செய்து (சங் 59;17-18; 86:15 தொ) தாம் விரும்பிய எதையுமே செய்யக்கூடிய (சங் 114:3; ஏச 46:10) இறைவனின் வலிமையையே அது தனதாகக் கொண்டுள்ளது.

II படைத்தவர், மற்றும் அவரது சாயலாகிய மனிதனின் ஆற்றல்

1. இஸ்ராயேலின் கடவுள் வானத்திலும் பூமியிலும் எல்லாம் வல்லவராக இருக்கிறாரெனில், அதற்கு காரணம் அவற்றைப் படைத்தவர் அவரே (ஆதி 2:4). அவரால் இயலாதது ஒன்றுமேயில்லை (எரே 32:17). தமது வார்த்தையினாலும் வாய்மூச்சினாலும் படைத்தபிறகு (சங் 33:6-9; ஆதி 1), தமது கைவேலையை தாம் விரும்பியவாறு அவர் ஒழுங்கு படுத்துகிறார் (எரே 27:5). உலகிற்கு நிலையான தன்மையை அளித்து (சங் 119:90), பயங்கர கடல்போன்று (சங் 65:7; 89:10-11) அதன் ஒழுங்கைக் கலைக்கக் கூடிய ஆற்றல்களை கட்டுப்படுத்துகிறார். அவரே இவ்வொழுங்கை தீர்மானித்திருப்பதால் (யோபு 28:25-26; பழ 8:27 தொ; சீரா 43), விருப்பம்போல அதை மாற்றவும் அவரால் முடியும். இவ்வாறு, அவரது வல்லமையால் மலைகள் துள்ளிக் குதிக்கவும், புகைபோல் கரையவும் செய்யவும் (சங் 114:4; 144:5). அவர் வறண்ட நிலத்தை நீருற்றாகவும் கடலை கட்டாந்தரையாகவும் மாற்றுகிறார் (சங் 106:33-35; ஏச 50:2). அவர் முன்னிலையில் அனைத்து பொருட்களும் நடுங்குகின்றன (சீரா 16:18-19).

2. எனவே, கடவுளுடைய ஆற்றலானது அவரது படைப்புகளில் வெளிப்படுத்தப்படு கிறது (சங் 19:2; 104; ஞான 13:4; உரோ 1:20). அவரது பேராற்றலில் நிறைவான விசுவாசம் கொண்டுள்ளவர்கள் சார்பாக இது செயல்படுத்தப்படுகிறது. இவ்வாறே, ஒன்றுமில்லாமையினின்று உலகைப் படைத்தவர் இறந்தோரையும் உயிர்ப்பிக்கக் கூடும் என ஆபிரகாம் விசுவாசித்தார் (உரோ 4:16-21; எபி 11:19). அதனால்தான், கணக்கற்ற விசுவாசிகளைக் கொண்ட மக்க ளினத்தின் தந்தை என்னும் உரிமையை இறைவன் அவருக்கு அளித்தார் (ஆதி 22:16 தொ). இது யூதித்துக்கும் பொருந்தும், ஏனெ னில் உறுதியான நம்பிக்கை மற்றும் கேள்வி கேட்காத நம்பிக்கை ஆகியவற்றிற்கு எடுத் துக்காட்டாக தன்னையே இஸ்ராயேலுக்கு அளித்ததால் (யூதி 8:11-27; 13:19), அவளது கரத்தினால் இறைவன் தம்மை விண்ணிற் கும் மண்ணிற்கும் தலைவராக வெளிப்படுத் துகிறார் (9:12 தொ; 16:1-17).

தமது வார்த்தையால் அனைத்தையும் நிறைவேற்றக்கூடிய (எஸ் 4:17; ஞான 18:15), எல்லா இதயங்களையும் தனது விருப் பத்திற்கேற்ப வளைக்கக்கூடிய (பழ 21:1), அவரது கையிலிருந்து எவருமே தப்பிக்க முடியாத ஆற்றலையுடைய (தோபி 13:2; ஞான 11:17; 16:15) அவரிடம், ஏன் ஒருவன் தன்மையே ஒப்படைக்கக் கூடாது? இந்த ஆற்றலானது தனது படைப்பின் செயலிலும் உலகை இயக்குவதிலும் எல்லையற்ற ஞானத்தைக் கொண்டுள்ளது (ஞான 7:21.25; 8:1). ஆனால் படைப்பானது, இந்த எல்லையற்ற ஞானம் மற்றும் அதன் இடி போன்ற ஆற்றல் ஆகியவற்றின் மங்கலான எதிரொலியாகவே உள்ளது (யோபு 26:7-14). ஆனால் மிகவும் துன்பமான அனுப வங்களிலும் நேர்மையான மனிதன் இடறல் படாமல் எல்லாம் வல்லவரிடத்தில் அமை தியான ஆராதனை மூலம் தன்னையே ஒப்ப டைப்பதற்குப் போதிய தூண்டுதலாக உள் ளது (யோபு 38:1-42:6).

3. இறைவன் மீது விசுவாசம் கொண் டுள்ள மனிதன், அவருடைய படைப்பாக மட்டும் இல்லாமல் அவரது சாயலாகவும் இருப்பதால் (ஆதி 1:26 தொ) எல்லாம் வல்லவருடன் உடனுழைப்பாளனாகவும் உருவாகிறான். நிலம் மற்றும் விலங்குகள் மீது செலுத்துகின்ற ஆதிக்கத்தில், குறிப் பாக, மனிதன் தனது உடனுழைப்பிற்குச் சான்று பகர்கிறான் (சீரா 17:2 தொ). இயற் கைச் சக்திகளுக்கு அடிபணிந்து போவதற் குப் பதிலாக, மனிதன் அவற்றை தனக்கு அடிபணியச் செய்ய வேண்டும். தாழ்மை யான நம்பிக்கையுடன் தனது தலைவருக்குப் பணிந்து இருப்பதன்மூலம் மனிதன் இதைச் செய்துமுடிக்க முடியும். சுதந்தரத்தின்மீது பேரார்வம் கொண்டு ஆதாம் சாவுக்குரிய பாவத்தினைப் புரிந்து, இறைவனின் அன் புக்குரிய பேராற்றலின் மறைபொருளைத் தவறாகப் புரிந்து கொண்டார் (ஆதி 2:17; 3:5; உரோ 1:20-21). அதன் விளைவாக, உலகின் மீதான தனது ஆதிக்கத்தையும் அவர் இழந்துவிட்டார் (ஆதி 3:17-18).

III மனிதனை அடிமைப்படுத்தும் தீய ஆற்றல்கள்

மனிதனை இறைவனுக்கு விரோதமாக்கு கின்ற ஆற்றல் செயல்படுவதின் விளைவு களை ஆதியாகமத்தின் தொடக்கம் வெளிக் கொணர்கிறது. காயின் தனது சகோதரனைக் கொல்ல தனது உடல் வலிமையைப் பயன்ப டுத்துகிறான்; இலாமேக்கும் தன்னைக் காயப்படுத்திய ஒருவனைக் கட்டுபாடற்றுப் பழிவாங்குகிறான் (ஆதி 4:8.23-24). வன் முறை உலகை நிரப்புகிறது (6:11). பாபே லில் நிகழ்ந்த கூட்டுப் பாவமானது ஆதா மின் பாவத்தைப் போன்ற தன்மையுடை யதே. மனிதர்கள் தங்கள் சுய சக்தியாலே விண்ணகத்தை அடைய விரும்புகின்றனர். இறைவன் சிறிது வஞ்சப் புகழ்ச்சியோடு, ''அவர்களுக்கு இயலாதது எதுவுமில்லை'' (11:4 தொ) என்று அவர்களது வரம்புமீறிய நடத்தையைப் பற்றிக் கருத்துரைக்கின்றார். இத்தகைய வரம்புமீறிய நடத்தையானது மனிதர்களை இருவித அடிமைத்தனத்திற்கு நடத்திச்செல்கிறது. வலியோர் எளியோரை அடிமையாக்குகின்றனர்; மற்றும், தங்க ளைத் தாங்களே பேய்கள் போன்ற தீய

சக்திகளுக்கு அடிமைகளாக்கிக் கொள்கின்றனர்.

1. மனிதனை மனிதன் ஒடுக்குகின்ற நிலையானது, பூமியில் வலிமை மிக்கவர்கள் தங்களது வலிமை இறைவனிடமிருந்தே வருகிறது (*உரோ 13:1; 1* பேதுரு *2:13;* யோவா *19:11*), மற்றும் ஒவ்வொரு மனிதனிலும் எல்லாம் வல்லவருடைய சாயலை தாங்கள் மதிக்க வேண்டும் (ஆதி *9:6*) என்பதை மறந்த பிறகே, தோன்றுகிறது. யாவேக்கு மரியாதை தராத பார்வோன், இறைவனின் மக்களை அடிமைத்தளைக்கு உட்படுத்தியும், அவர்கள்மீது கடினமான வேலைகளை மேலும் மேலும் சுமத்தியும், ஒரு காட்சியை உருவாக்குகிறான் (யாத் *5:2; 6-18*). தங்களது அரியணையை விண்ணகத்தில் அமைத்து, இறைவனுக்குப் போட்டியாக விளங்க முயலும் கொடுங்கோலர்கள் மற்ற நாடுகளைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்த முயல்பவர் (ஏச *14:12* தொ). செருக்குடையோர் இந்த ஆற்றலை வன்முறைச் செயல்களில் தவறாகப் பயன்படுத்துகின்றனர். இது இஸ்ராயேலிலோ அல்லது புறவினத்தாரிடையிலோ நிகழ்ந்தாலும் இறைவாக்கினர்கள் கண்டனம் செய்கின்றனர் (ஆமோ *1:3-2:7*). தமது மக்களைத் தூய்மைப் படுத்த ஆண்டவர் புறவினத்தாரின் நாடுகளை உபயோகிக்கிறார் என்பது, அவர்களது வன்முறையின் நேர்மையற்ற நிலையை குறைக்கவில்லை (ஏச *47:6*). ஏழைகள் மீது நெருக்கடியைச் சுமத்தி, அவர்களோடு நேர்மையாகச் செயல்பட மறுத்து, தங்களது அதிகாரத்தைத் தவறாக உபயோகிக்கும் இஸ்ராயேலில் உள்ள அதிகார வர்க்கத்தினர், இன்னும் அதிக அளவு குற்றம் உடையவர்கள் ஆவர் (ஏச *3:14-15; 10:1-2;* மீக் *3:9* தொ; சங் *58:2-3*). தங்களைக் கடுமையாகத் தீர்ப்பிடக் கூடியவரை, உலகிலுள்ள வலிமை மிக்கோர் நினைவு கூர வேண்டும். அவர் எல்லோருக்கும் ஆண்டவர். அவரது விருப்பத்தை நீதியாக அவர்கள் போற்ற வேண்டும்.

2. மேலும், தங்களைப் படைத்த எல்லாம் வல்லவரை அறிந்து ஏற்றுக் கொள்ளாதவர்கள், தங்களது விருப்பத்திற்கேற்றவாறு அமைத்துக் கொண்ட ஆற்றலே இல்லாத கடவுள்களையே போற்றுவர். இறைவாக்கினர்களும் ஞானிகளும் ஆற்றலற்ற சிலைகளைப் பழிப்பதில், ஒருவரோடொருவர் போட்டியிடுவர் (ஏச *44:17* தொ; எரே *10:3* தொ; சங் *115:4-7;* தானி *14:3-27;* ஞான *13:10-19*). விண் மீன்களையோ அல்லது மற்ற பல படைப்புகளையோ வணங்குவதில், தாங்களே தெய்வீகப்படுத்திய இயற்கை சக்திகளைத் திருப்திப்படுத்தவே புறவினத்தார் முயற்சிப்பதால், அவற்றின் காரணராக உள்ள இயற்கையின் தலைவரைக் காண அவர்கள் தவறிவிடுகின்றனர் (ஞான *13:1-8*). எனவே, புறவினத்தாரின் இத்தகைய பொய்க்கடவுளர்களுக்கு பின்னால், பேய்களின் ஆற்றல் மறைந்துள்ளது (சங் *106:36-37;* உப *32:17; 1* கொரி *8:4; 10:19*). அலகை மனிதரை பாவம் செய்வதற்கு மயக்கிய பின்னர் (ஆதி *3:5;* ஞான *2:24*), அவர்களது ஆராதனையை பல்வேறு வடிவங்களில் விரும்புகிறது. இறைவனால் ஒரு குறிப்பிட்ட காலம்வரை அனுமதித்திருந்த ஆற்றலை வெளிப்படுத்துவதன் மூலம், அலகை அவர்களைத் தவறானவழிக்கு இழுக்கின்றது (*2* தெச *2:9;* திருவெளி *12:2-8;* மத் *4:8-9*). இறைவனை எதிர்ப்போரில் அலகையின் ஆற்றல் தீவிரமாக செயல்படுகிறது (எபே *2:2*); மரணம் பற்றிய பயத்தினால் அவன் மனிதரைத் தனக்கு அடிமையாக்கியிருப்பதால், அது இறந்தோருடைய ஆற்றலேயாகும் (எபி *2:14-15*).

பொய்க் கடவுள்களின் முன்னிலையில் ''சேனைகளின் ஆண்டவர்'' என்ற இறைவனின் பெயரானது ஒரு புதிய பொருளை வெளிப்படுத்துகிறது. உண்மையான இறைவன் சேனைகளின் இறைவனாவார். அதாவது, விண்மீன்களின் பெரும் எண்ணிக்கை (ஏச *40:26;* சங் *147:4*), வானதூதர்களின் சேனை (சங் *103:20-21; 148:2;* லூக் *2:13-14*) முதலிய உலகின் எல்லாச் சக்திகளுக்கும் இறைவனாக உள்ளார். இறைவன் மனிதனை விடுவிக்கத் தலையிடுவார்.

IV. மீட்பர் மற்றும் அவரது ஊழியனின் ஆற்றல்கள்

1. ஒடுக்கப்பட்டவர்களின் சமூக அடிமைத்தனத்திற்கும், பாவிகளின் ஆன்மீக அடிமைத்தனத்திற்கும் எல்லாம் வல்லவர் எவ்வாறு முடிவு கட்டுகிறார் என்பது யாத்திராகமத்திலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. யாத்திரை விடுதலை, மற்ற விடுதலைகளின் எடுத்துக்காட்டான மாதிரிகை ஆகும். அதன் நினைவுச் சின்னமாக இஸ்ராயேலில் பாஸ்கு விழா எக்காலத்திற்கும் விளங்குகிறது (யாத் 13:3). கொடுங்கோலனாகிய பாரவோனின் எதிர்ப்பே, அசாதரண வியப்புக்குரிய நிகழ்ச்சிகளால் படைப்பு அனைத்தின் மீதான தமது ஆற்றலை வெளிப்படுத்த இறைவனுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது (யாத் 9:14-15). இத்தகைய வியப்புகளுக்கும் இஸ்ராயேலின் விடுதலைக்குமான மனிதக் கருவியாக, மனிதரில் மிகவும் சாந்தமிக்கவராகவும் தனது குறைகளை அறிந்தவராகவும் உள்ள மோசே விளங்குகிறார் (எண் 12:3; யாத் 4:10-13). ஆயினும், அவரை இறைவன் ஒப்புவமையில்லா இறைவாக்கினராக ஆக்குகிறார் (உப 34:10 தொ).

விடுவிக்கப்பட்ட மக்களே தங்களை விடுவித்தவரை எதிர்க்கின்றனர். பல்வேறு புதுமைகளுக்குப் பின்னரும் தமது ஆற்றலை விசுவாசிக்காதவர்களை இறைவன் தண்டிக்கிறார். நாற்பதாண்டுகள் சுற்றித்திரிந்த பிறகு அவர்கள் பாலைவனத்தில் மடிவார்கள் (எண் 14:22-23). ஆனால், தமது மக்களைப் பாதுகாக்கக்கூடிய தமது திறனைப் பற்றியோ (எண் 14:16), அல்லது தமது ஆற்றல் அளிக்கவிருக்கின்ற மீட்பின் செயல் திறனைப்பற்றியோ (யாத் 32:12) புறவினத்தாருக்குச் சந்தேகம் எழக்கூடாது என்பதற்காக, மோசேயின் வேண்டுகோளுக்கிணங்கி, கடவுள் தம்மை எதிர்க்கிற மக்களை முழுமையாக அழிக்கவில்லை. மேலும், மன்னிப்பிலும் அவர் தமது ஆற்றலை செயல்படுத்துகின்றார் (எண் 14:17 தொ).

2. வரலாறு முழுவதும் இறைவனின் வழிகள் ஒரே மாதிரியாகவே உள்ளன. தமது திட்டத்தை நிறைவேற்றி முடிக்க, உலகிலுள்ள வலிமை மிக்கவர்களை அவர் கிளர்ந்தெழச் செய்கிறார். நாடு கடத்தலின் மூலமாகத் தமது மக்களைத் தண்டிக்க அவர் விரும்பியபோது, நெபுக்கதுனேசார் அவரது ஊழியனாக உள்ளார் (எரே 25:9). துன்பக்காலம் முடிந்த பின்னர், சீயோனுக்கு திரும்புவதற்கான ஏற்பாட்டிற்கான உலகலாவிய ஆற்றலை யாவேயிடமிருந்து சைரஸ் பெறுகிறார் (ஏச 44:28-45:4; 2 நாள் 36:22-23). அவரில் தங்களது நம்பிக்கையை வைப்போருக்குப் புதிய வலிமையை அளிக்கக்கூடிய எல்லாம் வல்லவருடைய செயலாக இந்த இரண்டாம் யாத்திரை உள்ளது (ஏச 40:10-11.29 தொ).

''ஊனாகிய'' மனிதனின் பலவீனத்தை, இறையாற்றலாகிய அவருடைய ஆவியோடு ஒப்பிட்டு வேறுபடுத்துகின்றனர் இறைவாக்கினர்கள் (ஏச 31:3; செக் 4:6). இறையாற்றலாகிய அவரது ஆவியாலும், அவரது எப்போதும் ஆற்றல் மிக்க வார்த்தையாலும் (ஏச 55:11), கடவுள் தாம் தேர்ந்தெடுத்த வலுக்குறைவான கருவிகளை உறுதிப்படுத்துகிறார். முடிசூட்டு தைலத்திலிருந்து ஆவியால் நிரப்பப்பட்ட ஆடு மேய்க்கும் சிறுவனாகிய தாவீது (1 சாமு 16:13), இஸ்ராயேலை அதனுடைய எல்லா பகைவர்களிடமிருந்து விடுவிக்கிறார் (2 சாமு 7:8-11). ''வல்லமை மிக்க கடவுள்'' என்னும் பெயருடைய மெசியா அவருடைய குடும்பத்தில் பிறப்பார்; ஆண்டவருடைய ஆவி அவர் மேல் தங்கும் (ஏச 9:5-6; 11:1-2); மற்றும் அவர் இறைவனையே தமக்குத் தந்தையாக கொண்டிருப்பார் (2 சாமு 7:14; சங் 89:27 தொ). சாதாரணமாக பேச இயலாத எரேமியா, இறைவனின் கரம் தனது வாயில் வைத்த வார்த்தைகளை எதிர்க்கமுடியாத சக்தியுடன் போதிக்கிறார் (எரே 1:6-10. 18-19). நாடு கடத்தப்பட்ட நிகழ்ச்சியால் தங்களது எல்லா நம்பிக்கையையும் இழந்துவிட்ட இஸ்ராயேல் மக்களும், ஆண்டவருடைய ஆவியால் புதுப்பிக்கப்படுவர் (எச 37:11-14). தங்களது பலத்திற்காக அவரைச் சார்ந்திருந்து, அவருக்கு பணி செய்யும் இந்த

மக்களை மீட்கும் நிலையிலும் (ஏச 49:3-7), மீட்பிற்கு ஆற்றலற்ற சிலைகளுக்கு எதிரான நிலையிலும், எல்லா நாடுகளும் ஆராதிக்க வேண்டிய எல்லாம் வல்ல ஒரே தனிச்சிறப் பான மீட்பர் என்று யாவே தம்மையே வெளிப்படுத்துகிறார் (ஏச 45:14-15, 20-24).

3. பாவத்திலிருந்து அனைவரையும் மீட் கவே இறைவன் விரும்புகிறார். யாவேயின் ஆற்றல் அவரது மறைபொருள்மிக்க ஊழி யன் மூலமாக இந்த மீட்புத் திட்டத்தை நிறைவேற்றுகிறது. துன்பம் மற்றும் அவ தூறு ஆகியவற்றைத் தாங்கியவாறு அவர் இறக்கிறார் (ஏச 53). இறைவல்லமை. அவ ரது மரணத்தின் மூலமாக, எண்ணற்றவர்க ளுக்கு வாழ்வளிக்கிறது. இது உண்மையில் உயிர்த்தலின் ஆற்றலாகும். பாவத்தின் விளைவாக மரணம் இருப்பதால், பாவத்தி னின்று தாம் மீட்பவர்களை இறைவன் மர ணத்தினின்றும் மீட்பார். நீதிமான் முடிவில் லாத வாழ்விற்கு உயிர்த்தெழுவான். நீதி மான்கள் தங்களது விசுவாசத்திற்காக மரண மடைய வேண்டிய நேரத்தில், ஞானிகளின் படிப்பினையாக இக்கருத்து நிலவியது (தானி 12:2-3). படைத்தவருடைய வலிமை யின் மூலமாக வரும் உயிர்ப்பைபற்றிய நம்பிக்கையானது, துன்புற்றவர்களைத் திடப்படுத்துகின்றது (2 மக் 7:9. 14.23). ஒரு முன்குறிக்கப்பட்ட நேரத்தில், ஒடுக்கியாளு பவர்களுடைய வலிமை முடிவுக்குக் கொண்டு வரப்படும்; பின்னர், வானக மேகங்களின்மீது வரும் மனுமகனுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற முடிவில்லா ஆதிக் கத்தை புனிதர்கள் திருக்கூட்டம் பகிர்ந்து கொள்ளும் (தானி 7:12. 18.27)

4. பழைய உடன்படிக்கையின் இறுதியில், மீட்பின் வரலாற்றைப் பற்றி தியானித்த ஞானி, அதனை இயக்கிய எல்லாம் வல்லவ ரைப் பற்றி இவ்வாறு சித்திரிக்கிறார். அதன் படி, அவர் தாம் படைத்த அனைத்தையும் அன்பு செய்கிறார் (ஞான 11:24 தொ). நீதியும் இரக்கமும் நிறைந்த அவர், மனந்தி ரும்புதலை அங்கீகரித்து, மனிதர்களுடைய இதயங்களிலும் அதனை எழுப்புகிறார் (11:23; 12:2. 10-18). நீதிமான்கள் இறைவ னது பாதுகாப்பிலிருக்கிறார்கள்; அவர் அவர்களுக்குத் தந்தையாக இருக்கிறார்; ஆகவே அவர்களைப் பாதுகாத்து முடி வில்லா வாழ்வை அவர் அளிப்பார் (2:1(தொ; 3:1; 5:15-16; மத் 22:29-32). ஆயினும் அவர்கள் இறப்பதைக் காணுமாறு விசுவாச மற்றவர்களை அனுமதித்து அதன்மூலம் அவர்களது நம்பிக்கையைச் சோதிக்கிறார். அவர்களது மணிமுடி அவர்களின் தகனப்ப லிக்குத் தக்க கைம்மாறாக இருப்பதற்காக இவ்வாறு நிகழ்கிறது (ஞான 3:2-9).

V கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களில் ஆவியின் ஆற்றல்

1. உண்மையில் புதிய உடன்படிக்கையை முத்திரையிடுவது ஒரு தகனப்பலியே. இயே சுவின் தகனப்பலியில் எல்லாம் வல்லவர் தம்மை முழுமையாக வெளிப்படுத்தி, அதன்மூலம் தமது திட்டத்தையும் நிறை வேற்றுகிறார். தாழ்மையான கன்னியின் உத ரத்தில் ஊனுடலெடுத்த எல்லாம் வல்ல வார்த்தை இயேசுவே (லூக் 1:27. 48-49; யோவா 1:14; எபி 1:2-3). இவ்வருகையா னது, இயலாதது எதுவுமற்ற மிக உன்னதரின் ஆற்றலாகிய தூய ஆவியின் பணியே ஆகும் (லூக் 3:22; யோவா 1:32; 3:34-35; ஏச 11:2; 42:1; 61:1). இயேசு தனது ஆற்றலை புதுமை களால் காண்பிக்கிறார். இப்புதுமைகள் அவ ரது பணிக்கு சான்று பகர்வதோடல்லாமல் (அ.ப. 2:22), இறைவன் அவரோடு உள்ளார் (யோவா 3:2; 9:33) மற்றும் அவர் தந்தை யால் அனுப்பப்பட்டவர் என்பதை நிரூபிப் பதோடு (5:36), 'நம்மோடு கடவுள்' எனப்ப டும் இம்மானுவேல் இவரே (மத் 1:23) என்பதையும் நிரூபிக்கிறது.

2. இவ்வுலகைச்சார்ந்த மெசியா பற்றிய யூத எதிர்பார்ப்புகளுக்கு ஒத்துப்போகும் முறையில் (மத் 4:3-7; யோவா 8:50) தனது ஆற்றலை தனது மகிமைக்காக செயல்படுத் தாமல் இயேசு, தந்தையின் மகிமையையும் அவரது திட்டம் நிறைவேற்றப்படுவதை யுமே தேடுகிறார் (யோவா 5:30; 17:4). இந்த தாழ்ச்சியே அவருடைய ஆற்றலின் மூலமா

கும். படைப்பு அவருக்கு அடிபணிகிறது (மத் 8:27; 14:19 தொ. இ). அவர் பாவங்களை மன்னித்து (மத் 9:6 தொ. இ) தூய ஆவியின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறார் (மத் 12:28 இ). தனது உயிரைக் கையளித்துவிட்டு மீண்டும் அதனை எடுத்துக் கொள்ளும் தனது ஆற்றலை அவர் அறிவிக்கிறார் (யோவா 10:18); அதாவது, சிலுவையில் தனது உயிரைச் சுதந்தரமாகக் கையளித்து, உயிர்த்தெழுதலில் மீண்டும் எழுவதைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார். இறுதியாக, இறுதிநாளில் ஒரு மேலாண்மையுடைய நீதிபதியாக தனது ஆற்றலைச் செயல்படுத்தவிருக்கும் தனது வருகையைப்பற்றி அவர் அறிவிக்கிறார் (மாற் 13:26; யோவா 5:21-29). ''மனுமகன் வல்லமையுள்ள இறைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்து, வானமேகங்கள் மீது வருவதை நீங்கள் இனிக் காண்பீர்கள்'' (மத் 26:64). இந்த உறுதிமொழியானது, இருளின் வலிமை வெற்றியடைவதாகத் தோன்றிய நேரத்தில், தலைமைச்சங்கத்தின் முன்னிலையில் அளிக்கப்படுகிறது (லூக் 22:53).

ஆனால், அவர் ஏற்கனவே அறிவித்தபடி ஒருமுறை உயர்த்தப்பட்ட உடனே, இயேசு தமது ஆட்தன்மையையும் (யோவா 8:28), வலிமையையும் வெளிப்படுத்துகின்றார். அதே நேரத்தில் உலகின் தலைவனாக தலைமை ஏற்போர் யாவரையும் கீழிறக்கி (கொலோ 2:15), அனைத்தையும் தம்பால் ஈர்த்துக்கொள்கிறார் (யோவா 12:31-32). இந்த நோக்கத்திற்காகவே, அவர் தனது ஆன்மீக அரசிற்கு, விசுவாசத்திலும் கீழ்படிதலிலும் எல்லா நாடுகளையும் கீழ்படுத்த, வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் கொண்டுள்ளார் என்று சான்று பகருமாறு, அவர் தமது சீடர்களை அனுப்புகிறார் (மத். 28:18 தொ). அவர்கள் தங்களுடைய பணியை நிறைவேற்றுவற்காக, அவர்களது போதனையைப் புதுமைகளால் உறுதிப்படுத்துவதோடல்லாமல் (மாற் 16:20), உலக முடியுமட்டும் எந்நாளும் அவர் அவர்களோடு இருப்பார். மேலிருந்து அவர்களுக்கு அனுப்புவதாக வாக்களித்த ஆற்றலாகிய அவரது ஆவியின் மூலம் அவர் அவர்களோடு இருப்பார் (லூக் 24:49; அ.ப. 1:8).

3. ஐம்பதாம்நாள் விழாவன்று அப்போஸ்தலர்களை நிரப்பிய ஆவியானது (அ.ப. 2:4) உயிர்த்த கிறிஸ்துவால் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது; அது அவரது ஆற்றலை மீட்பராக வெளிப்படுத்தும் கொடையாக வெளிப்படுகிறது (அ.ப. 2:32-36; 4:7-12). அவர்களது ஆற்றல்மிக்க போதனை மனிதர்களின் இதயங்களை மாற்றிய பின்னர் (2:37. 43; 4:4.33), அப்போஸ்தலர்கள் பாவங்களை மன்னிக்கவும் (யோவா 20:21 தொ), ஆவியை அளிக்கவும் (அ.ப. 8:17) தங்களுடைய ஆற்றலைச் செயல்படுத்தினர். திருச்சபை விரிவடைதலானது தமது சீடர்களுக்கு இயேசு அளித்த உறுதிமொழியை உறுதிப்படுத்துகிறது; அவரது செயல்களைவிட உயர்ந்தவற்றை அவர்கள் நிறைவேற்றுவர்; அவருடைய மகனின் பெயரால் கேட்பவை அனைத்தையும் தந்தை அவர்களுக்கு அருளுவார் (யோவா 14:12 தொ; 16:23-24). எனவே, விசுவாசமானது செபத்தை எல்லாம் வல்லதாகச் செய்கிறது (மாற் 9:23; 10:27; 11:22 தொ).

விசுவாசத்தினால் மனிதன் நற்செய்தியில் மீட்பின் ஆற்றலுக்குத் தன்னையே ஆளாக்குகிறான் என்னும் பவுலின் போதனை இயேசுவை எதிரொலிக்கிறது (உரோ 1:16). விசுவாசமானது ''கிறிஸ்துவின் அறிவையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளில் பங்குபெறுவதையும் அடைகிறது (பிலி 3:9-10). சிலுவையில் அறையுண்ட இயேசு நம்பிக்கையுள்ள விசுவாசிகளைக் காப்பாற்றுகிறார். ஏனெனில் அவர்களுக்கு இறைவனின் வல்லமை அவரே (1 கொரி 1:18. 23-24). இறைவனுடைய வலுவற்ற நிலையோ மனிதர்களைவிட வலுவானதாக உள்ளது; மற்றும், அவருடைய வல்லமையானது சாட்சிகளின் வலுமின்மையில் வெளிப்படுகிறது (1:25; 2 கொரி 12:9). பின்னர் இவர்கள் இயேசுவுக்காக உயிரையே இழக்குமாறு கொலைகாரர்களிடம் கையளிக்கப்படும் போது இயேசுவின் வாழ்வானது அவர்களில்

தெளிவுபடுத்தப்படுகிறது (4:10 தொ). ஏனெனில், இறந்தோரிடமிருந்து கிறிஸ்துவை உயிர்ப்பித்த இறைவனின் வல்லமைமீது அவர்கள் தங்களது நம்பிக்கையைக் கொண்டிருந்தனர் (கொலோ 2:12; 2 கொரி 13:4). அவர்களுடைய வார்த்தைகளை இறை வார்த்தையாக்கி, இறைவார்த்தையின் வல்லமையை அவர்களுக்கு அளிக்கும் (1 தெச 1:5; 2:13) ஆவியால் அவர்கள் வலிமையும் ஆற்றலும் பெறுகின்றனர் (எபே 3:16). ஒவ்வொரு சிந்தனையையும் எதிர்பார்ப்பையும் கடந்துள்ள இறைவல்லமையின் எல்லையற்ற பேராற்றல் அவர்களில் செயல்படுகிறது (2 கொரி 4:7; எபே 1:19 தொ; 3:20).

4. இறுதி நாட்களில் வெளிப்படவுள்ள மீட்பிற்கும் இதே வல்லமை அவர்களை பாதுகாக்கிறது (1 பேதுரு 1:5). அவருடைய எல்லாம் வல்ல கரத்தின் கீழ் தங்களைத் தாழ்த்துகிறவர்களையும், விசுவாசத்தினால் பேயை எதிர்க்கிறவர்களையும், அசைக்க முடியாதவாறு இறைவன் பாதுகாக்கிறார் (5:5-10). மற்றொருபுறம், விசுவாசமற்றவர்கள் பேயிடமிருந்து வருகின்ற வல்லமையை கொண்டவர்களால் தவறான வழிக்கு இழுத்துச் செல்லப்படுவர் (2 தெச 2:9-12; திருவெளி 13:2-7). இவர்களை, ஆண்டவர் தமது வருகையின் நாளில், தமது வாய்மூச்சினால் அழித்துவிடுவார் (2 தெச 2:8). அந்நாளில், எல்லா விரோதமான வல்லமையுடன் சேர்த்து, மரணமும் அழிக்கப்படும் (1 கொரி 15:24 தொ.) ஆவியானவர் தங்கியுள்ள உடல்களுக்கு உரியவர்களை இறைவன் தம்முடைய ஆற்றலால் உயிர்ப்பிப்பார் (6:14; உரோ 8:11). அவர் அனைத்திலும் அனைத்துமாய் இருப்பார் (1 கொரி 15:28). செம்மறியானவர் பகிர்ந்து கொள்கிற அரியணைக்கு உரிய எல்லாம் வல்ல ஆண்டவராகிய இறைவனைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் புகழ்ந்து பாடுவதை நாம் திருவெளிப்பாட்டில் கேட்கிறோம். ஒழுங்கற்ற நிலையில் ஆற்றலைக் குறிக்கும் துயரம் என்பதே இனி இல்லை என்ற நிலை நிலவக்கூடிய புதிய உலகை இறைவன் படைப்பார் (திருவெளி 21:1.5). ''அல்லேலூயா! எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர் ஆட்சி செலுத்தலானார்'' (19:6). அது அன்பின் அரசு. இதற்கு எல்லாம் வல்லவராக இருப்பவர், ''நமக்கு அன்பு செய்து தமது இரத்தத்தினால் நம்முடைய பாவங்களினின்று நம்மை விடுவித்தவருடைய தந்தையே. இவருக்கே மகிமையும் வல்லமையும் என்றென்றும் உரியனவாகுக ஆமென்'' (1:5-6).

ஆனா (ANAH - பதில் சொல்லி)

1. கோரியரான சிபயோனின் மகன். ஏசாவின் மனைவி ஒகலிபாமாவின் தந்தை (ஆதி 36:2.4.18; 1 நாள் 1:40). ஆதி 36:24-இன்படி இவர் பாலைவனத்தில் வெப்ப நீரூற்றுக்களைக் கண்டுபிடித்தார். ஆதி 36:2.14 மகள் என்று உள்ளது. மகன் என்று எடுத்துக்கொள்வதே மேல்.

2. ஏதோமில் குடியிருந்தவர்களான கோரியர்களின் தலைவரான சேயிரின் நான்காம் புதல்வர் (ஆதி 36:20.25.29; 1 நாள் 1:38.41) ஆனா 1-2க்கும் இடையிலுள்ள உறவு என்ன என்று வாசகங்கள் தெளிவுபடுத்தவில்லை.

ஆனிம் (ANIM - ஊற்றுக்கள்)

யூதாவின் தென்மேற்கு மலைப்பகுதியில் கிரியத்து-சேபர், எசுத்தமோவா ஆகிய நகரங்களுடன் சேர்ந்த ஓர் எல்லை நகரம் (யோசு 15:50). தென் கெபிரோனிலிருந்து 18 கி.மீ. அப்பால் இருக்கும் கிர்பேத்-கூவேயின் ஆக இருக்குமோ எனவும் யூகிக்கப்படுகிறது. யூசேபியு இந்த ஆனிமை அனாயாவோடு ஒப்பிட்டுச் சந்தேகிக்கிறார். அமர்னா ஏடுகளில் இது காவினா என்றழைக்கப்படுகிறது.

ஆனேம் (ANEM - இர ஊற்றுக்கள்)

இசக்கார் பகுதியிலுள்ள ஒரு லேவியர் நகரம். கெரிசோனியர்களுக்குக் கொடுக்கப்பட்டது (1 நாள் 6:73). யோசு 19:21; 21:29-இல் இது ஏன்-கன்னீம் என்றழைக்கப்படுகிறது. இது இக்கால எனீன் என்று அடையாளம் காட்டப்படுகிறது. இந்த இடம் தாபோர் மலைக்குக் கிழக்கில் 11 கி.மீ. தொலைவில் உள்ள ஓலாம் ஆகவோ,

ஓலாமுக்கு வடகிழக்கில் 3 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பேத் ஆனிம் ஆகவோ இருக்கலாம்.

ஆனேர் (ANER - பையன்) - ஆள்.

ஓர் எமோரியர். தன் சகோதரர்கள் மமிரே, எசுக்கோல், ஆகியோருடன், நான்கு கிழக்கு அரசர்களுடன் ஆபிரகாம் நடத்தியபோரில் அவருக்கு உதவியவர் (ஆதி 14:13-24). இந்த மூன்று பெயர்களும் இடங்களின் பெயராகவும் இருக்கலாம்.

ஆனேர் (ANER - இடம்.

மனாசேக்கு அளிக்கப்பட்ட பகுதியின் மேற்குப் பாகத்தின் ஒரு லேவியர் நகர் (1 நாள் 6:70). இது இருந்த இடம் தெரியவில்லை. யோசு 21:25-இன்படி இந்த இடம் இசிரியேல் சமவெளியின் தெற்குப் பகுதியிலிருந்த ஒரு நகரமாகும். இது தானாக் என்று வாசிக்கப்பட வேண்டும்.

ஆன்மா (SOUL)

மனிதன், உடல்பாதி ஆன்மா பாதி என்னும் கூட்டால் உண்டாவனன் என்று நினைப்பது தவறு. ஆன்மா, உயிர் மூச்சால் இயக்கப்படும் முழு மனிதனைக் குறிக்கிறது. உண்மையில், ஆன்மா, உடலில் வாழ்வதில்லை. ஆனால் உடலின் வழியாக ஆன்மா தன்னையே வெளிப்படுத்துகிறது. ஊனைப்போல் அது முழுமையான மனிதனைச் சுட்டிக் காட்டுகிறது. ஆன்மா ஆவியினுடைய தொடர்பால் ஆவிக்குரிய தொடக்கத்தை உடையது என்று விளக்குகிறது. ஆனாலும் இந்த ஆவிக்குரிய தன்மைக்கு இந்த உலகத்தோடு ஆழ்ந்த பற்றுக்கோடுள்ளது. இந்தச் சொல் பலவித விளக்கத்திற்குப் பயன்படுத்தப்படுவதிலிருந்தே இதை அறியலாம்.

I. ஆன்மாவும் உயிருள்ள ஆளும்

விவிலிய மொழிகளிலும் ஆன்மாவைக் குறிக்கும் நெப்பெஸ் (எபிரேய மொழி), சயுக்கே (கிரேக்கம்) அனிமா (இலத்தீன்) என்ற சொற்கள் உயிர் நாடியான மூச்சு என்ற கருத்தோடு தொடர்பு கொண்டுள்ளன.

1. உயிருள்ள மனிதன்:- மூச்சு அல்லது சுவாசித்தல் உயிர் உள்ளது என்பதைக் காட்டுகிறது. மூச்சு உள்ளவரை ஒருவன் உயிரோடு இருக்கிறான் (2 சாமு 1:9; அ.ப. 20:10). இறக்கும்பொழுது ஆன்மா பிரிந்து செல்கின்றது (ஆதி 35:18); வெளியே போகின்றது (எரே 15:9); அல்லது திரவத்தைப் போல் வெளியில் கொட்டப்படுகிறது (ஏச 53:12). உயிர் திரும்பினால் ஆன்மா மறுபடியும் அவனிடம் திரும்பி வருகிறது (1 அர 17:21).

கிரேக்கர்களுக்கும், செமித்திய மக்களுக்கும் இவ்விதம் தங்கள் கருத்துக்களைக் கூற முடியும். இந்த வகையான விளக்கத்திற்குள் பலவகைக் கண்ணோட்டங்கள் மறைந்திருக்கின்றன. கிரேக்கத் தத்துவஇயலில் ஆன்மா உடலின் தொடர்பின்றித் தனித்து இருக்கக்கூடிய கூறு என்றும், அது உடலில் காணப்படுகிறது மற்றும் அதிலிருந்து பிரிந்து செல்கிறது என்றும் பொதுவாகக் கருதப்பட்டது. இதற்குமாறாக, செமித்தியர் கருத்துப்படி உயிர் மூச்சு உயிரளிக்கும்; உடலிருந்து அதைப்பிரிக்க முடியாது. குறிப்பாக மனித செயல்முறை வாழ்க்கை வாழும் வகையை மூச்சு காட்டுகிறது. மேலும் மனிதன் அசையாது உறங்கும்போதும் சுவாசித்தல் நடைபெறுகிறது. ஒருவேளை இரத்தத்தையும் ஆன்மாவையும் ஒன்றாக்ககுவதற்கு இது ஆழ்ந்த காரணமாக இருந்திருக்கலாம் (சங் 72:14). ஆன்மா இரத்தத்தில் உள்ளது (லேவி 17:11), ஆன்மா இரத்தமேயாகும் (லேவி 17:14; உப 13:23), அதுவே உயிருள்ள மனிதன்.

2. உயிர்:- உயிருடன் இருத்தல் என்ற கருத்திலிருந்து வாழ்வின் பொருளுக்கு எளிதாகச் போகலாம். இவை இரண்டும் இணையாகப் பயன்படுவதிலிருந்து அறியலாம். ''உமக்குச் சொந்தமான புறாவின் உயிரைப் பருந்துக்கு இரையாக விட்டுவிடாதேயும்; உம்முடைய எளிய மக்களின் வாழ்வை ஒரு நாளும் மறவாதேயும்'' (சங் 74:19). பதிலுக்குப்பதில் என்ற சட்டப்படி ''ஆன்மாவுக்கு ஆன்மா'' என்பதை ''உயிருக்கு உயிர்'' என்று பொழிபெயர்க்கலாம் (யாத் 21:23).

ஆன்மாவும் உயிரும் இணைத்துக் கருதப்படு கின்றன. உடல் சார்ந்த வாழ்விற்கு மாறாக இருக்கும் ஆன்மீக வாழ்வோடு மட்டும் இங்குக் கருத்தில் கொள்ளப்படவில்லை. ஆனால் வெகுகாலமாய் இந்த உயிர் பூவுல கத்தைச் சேர்ந்ததாகவே கருதப்பட்டது. காலப்போக்கில், இறுதியாக அழியாத விண் ணுலக வாழ்வோடு தொடர்புள்ளது என்று வெளிப்படுத்தப்படுகிறது. ஆகையால் இந் தச் சொல் ஒவ்வொரு முறையும் எந்த இடத் தில் எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என் பதை அறிவது அவசியம்.

சில வழக்குமுறைகளில், ஆன்மா (உயிர்) இம்மை வாழ்வின் கூறாகக் கருதப்பட்டது. இதை இழப்பதற்கு ஒருவன் அஞ்சலாம் (யோசு 9:24; அ.ப. 27:34) அல்லது சாவின் பிடியிலிருந்து காப்பற்ற விரும்பலாம் (1 சாமு 19:11; சங் 6:5); அது ஆபத்திலதருப் பதை உணரும்போது அதைக் காக்கப் பாது காப்பான இடத்தில் வைக்க நினைக்கலாம் (லூக் 21: 19; உரோ 11:3=1 அர 19:10; மத் 2:20=யாத் 4:19; சங் 35:2; 37:12). இதற்குமா றாக அதைப்பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை (மத் 2:30) தன்னுடைய மக்களுக்காக உயிரைக் (ஆன்மாவை) கைய ளிக்கத் தயாராய் இருக்கவேண்டும் (பிலி 2:30; 2:8). இந்த உயிரைத்தான் இயேசு மனிதர்களுக்காகக் கையளித்தார் (மத் 20:18; யோவா 10:11. 15. 17). அவரைப் பின்பற்றி நம்முடைய உயிரை மற்றவர்களுக்காக அளிக்க வேண்டும் (யோவா 13:17; 15:13; 1 யோவா 3:16).

ஒருவன் இவ்வுளவு பெரிய தியாகத்தைச் செய்வது இறைவன் (யாவே) உயிரைத் திரும்பக் கொடுப்பார் என்று அறிந்ததினால் மட்டுமன்று (சங் 34:22; 72:14); மாறாக இயேசு அதே வார்த்தை வழியாக அரும்பெ ரும் கொடையாகிய அழியாத வாழ்வைப் பற்றி அறிவித்திருப்பதால்தான். அவரே இச் சொல்லைப் பலவகையில் பயன்படுத்தியுள் ளார். ''ஏனெனில், தன் உயிரைத் காத்துக் கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துவிடு வான். என்பொருட்டுத் தன் உயிரை இழப்ப வனோ அதைக் கண்டடைவான் (மத் 16:25 இ; 10:39; லூக் 14:26; 17:33; யோவா 12:25). இந்தக் காரணங்களால், ஆன்மாவில் உறை யும் முடிவில்லாத அழியா வாழ்வின் வெற் றியே ஆன்மாவின் மீட்பு ஆகும் (யாக் 1:21; 5:20; 1 பேதுரு 1:9; எபி 10:39).

3. மனித ஆள்:- உண்மையில் உயிர் மனிதனின் மிகச் சிறந்த பொருளாயிருப்பின் (1 சாமு 26:24) ஆன்மாவைக்காப்பது தன் னைக் காப்பது போன்றதாகும். கருங்கக் கூறின் ஆன்மா மனிதனைக் குறிக்கிறது.

முதன் முதலாக உயிருடன் இருக்கக்கூடிய உயிரினங்கள் அனைத்தையும் விலங்குகளை யும் கூடச் சேர்த்து ஆன்மா என்று குறிப்பிட லாம் (ஆதி 1:20. 24;2:29); ஆனால் பொது வாக இது மனிதர்களைக் குறிப்பிடுகிறது; ஆகையால் ''எழுபதுபேர் (ஆன்மா) கொண்ட கூட்டம்'' என்று சொல்லப்படுகி றது (ஆதி 46:27 = அ.ப. 7:14; உப 10:22; அ.ப. 2:41; 27:37). ஆன்மாதான் மனிதன். அது ஓர் ஆளாகும் (லேவி 5:1...; 24:17; மாற் 3:4; அ.ப. 2:43; 1 பேதுரு 3:20; திருவெளி 8:9). எடுத்துக்காட்டாக இது கப்பலிலுள்ள சரக்குக்கு மாறானது (அ.ப. 27:10). ஓர் இறந்த பிணத்தைக்கூட, அது முன்பு இருந்த நிலையை மனதிற்கொண்டு, ''இறந்த ஆன் மா'' என்று அழைப்பதில் புறநிலைப்படுத்து தல் உச்சநிலை அடைகிறது (எண் 6:6).

ஆன்மா, அகப்பொருளில், நான் என்ப தற்கு ஒப்பாகும். ஆனால் உள்ளார்ந்த, உயி ராற்றல் பொருளுடையது. ''நாம் நித்திய காலமாய் வாழ்கிறவர்'' என்பது (உப. 32:40; ஆமோ 6:8; 2 கொரி 1:23) ஒருவன் தான் எடுக்கிற சூளுரையில் எவ்வளவுக்குக் கடைப்பிடிக்கப் போகிறார் என்பதைக் காட் டும். தாவீது யோனத்தானைத் ''தன் உயிர் போல்'' அன்பு செய்தார் (1 சாமு 18:1,3). இறுதியாக இந்த நான் (ஆன்மா) என்ற சொல் ஆன்மீக செயல்களைத் தவிர, மற்றக் கருத்துக்களுக்காப் பயன்படுத்தப்பட்டிருக்கி றது. ஆகவே பெரிய செல்வந்தன் ''நெஞ்சே (ஆன்மாவே) பல்லாண்டுகளுக்கு வேண் டிய பொருள் உனக்கு ஏராளமாய் உள்ளது. இளைப்பாறு, உண்டு குடித்து விருந்தாடு

என்று சொல்லிக் கொள்வேன் என்றான். ஆனால் கடவுள், அறிவிலியே, இன்றிரவே உன் உயிரை (ஆன்மா) வாங்கப்போகிறார் கள்'' (லூக் 12:19, 20). ஆன்மாவைக் குறிப்பிடுவது வாழவிரும்புவதையும் தீர்மானத்தையும் அழுத்திக்கூறுகிறது. ''நீரின்றி வரண்டு கிடக்கும் நிலம் நீரை நோக்கியிருப்பது போல இதயமும் (ஆன்மாவும்) ஆண்டவரில் வாழ விரும்பி ஏங்கியிருக்கிறது'' (சங் 63:2). ''பசியுற்றவனுக்கு அவர் நிறைவளித்தார்,... நன்மையால் வாழ விரும்பி ஏங்கியிருக்கிறது'' (சங் 63:2); ''அவர் நிறைவளித்தார்,...நன்மையால் நிரப்பினார்'' (சங் 107:9; எரே 31:14). ஆன்மாவின் உணர்ச்சிகள் மகிழ்ச்சியிலிருந்து (சங் 86:4) கலக்கத்திற்கும் (யோவா 12:27) துன்பத்திற்கும் (மத் 26:38 = சங் 42:6) உற்சாகத்திலிருந்து (பிலி 2:19) சோர்வுக்கும் செல்கின்றன (எபி 12:3). தந்தையின் ஆசிரை எடுத்துரைக்கும் உறுதி பெறவும் (ஆதி 27:4), துன்பங்களைத் தாங்க வலிமை பெறவும் ஆன்மா விரும்புகிறது (அ.ப. 14:22). இந்த ஆன்மா அன்பு செய்வதற்கும் (ஆதி 34:3), வெறுப்பதற்கும் (சங் 11:5), சிலரிடம் அன்பால் பூரிப்படைவதற்கும் (மத் 12:18 = ஏச 42:2; எபி. 10:38 = அப. 2:4),கடவுளை முழுமனத்தோடு தேடுவதற்கும் (மத் 22:37 = உப 6:5;எபே 6:6; கொலோ 3:33) மேலும் ஆண்டவரை எப்போதும் வாழ்த்துவதற்கும் (சங் 103:1) உண்டாக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய பொருள் நிறைவில்தான் நாம் ''ஆன்மாக்களைப் புனிதப்படுத்துதல்'' (1 பேதுரு 1:22) போன்ற சொற்றொடர்களை மூலப்பொருளில் உய்த்துணர வேண்டும். இவர்களுக்காய்ப் பவுல் தம்மை முழுவதும் தியாகம் செய்கிறார் (2 கொரி 12:15); ஆன்மீகத் தலைவர்கள் இவர்களுக்காக விழிப்பாய் இருந்து கவனிக்கின்றனர்கள் (எபி 11:29). இவர்கள் தசை இரத்தத்திலான உயிரினங்கள். ஆனால் இவர்களில் உயிரின் விதையும் மறுஉலக வாழ்வின் கருவும் பொதிந்திருக்கின்றன.

II வாழ்வின் ஆன்மாவும் ஆவியும்.

1. வாழ்வின் ஆன்மாவும் மூலமெய்மையும்:- ஆன்மா உயிரின் அடையாளம் என்றால் உயிரின் மூலகாரணம் ஆன்மா அன்று. இதுதான் இரண்டாவது வேறுபாட்டின் அடிப்படை. இது பிளேட்டோ, செமித்திய ஆகிய இருமனப் போக்குகளைப் பிரித்துக் காட்டுகிறது. பிளேட்டோ ஆன்மாவையும் ஆவியையும் ஒன்றாக்குகிறார். மேலும் ஆன்மா ஆவியிலிருந்து வந்தது, மனிதனுக்குத் தனித்து இயக்கும் உரிமையை அளிக்கின்றது. ஆனால் செமித்திய மக்களுக்கு ஆன்மா வாழ்வின் மூலகாரணமன்று, இறைவன் தம் ஆவியினால் உயிரை அளிக்கிறார். ''ஆண்டவராகிய கடவுள் மனிதன் முகத்தில் உயிர் மூசசை ஊத, மனிதன் உயிருள்ளவன் ஆனான்'' (ஆதி 2:7). உயிரினங்கள் அனைத்திலும் உயிர்மூச்சு உள்ளது (ஆதி 7:22). இது இல்லையென்றால் அவை இறந்து விடுகின்றன. இந்த மூச்சு (உயிர்) மனிதனது இவ்வுலக வாழ்வுமுழுவதும் அளிக்கப்படுகிறது. ''அவற்றின் மூச்சை நீர் நிறுத்திவிட்டால் அவை மடிந்து மண்ணாகிவிடும். உமது ஆவியை நீர் அனுப்பினால் அவை படைக்கப்படும்'' (சங் 104:29.30). மனிதனின் உள்ளாழத்தில் உயிரின் கூறாகிய ஆன்மாவையும், உயிரின் மூலக்காரணமான ஆவியையும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரித்துக் காட்ட முடியும். இந்த மனிதனின் உள்ளாழத்தைக் கடவுள் வார்த்தைதான் ஊடுருவ முடியும் (எபி 4:12). இதைக் கிறிஸ்துவர்களின் கருத்திற்கு மாற்றினால், இந்த வேறுபாடு பற்றி ''ஆவியில்லாத இயல்புணர்ச்சியைப் பற்றி'' (யூதா 19) நாம் பேசமுடியும். ஞானஸ்தானத்தால் 'ஆன்மீக' நெறிக்கு மாற்றப்பட்ட சில விசுவாசிகள், அவற்றிலிருந்து தவறி, தம் 'இயல்புணர்ச்சிப்படி' 'இவ்வுலகிற்கேற்றபடி' நடப்பதை அறியலாம். (1 கொரி 2:14; 15:44; யாக் 3:15).

2. ஆன்மாவும் தொடர்ந்து வாழ்வதும்:- முன்பு கூறியவைகளின் விளைவாகப் பின்வரும் கருத்துக்களை ஊகிக்க முடிகிறது. ஆவியும் ஆன்மாவும் வேறுபட்டவை. ஆவி இறப்பதில்லை. அது யாவேயிடம் திரும்பும் என்று உறுதியுடன் கூறலாம் (யோபு 34:14; சங் 31:6; திருவுரை 12:7). இதிலிருந்து வேறுபட்டு ஆன்மா இறக்கலாம் (எண்

23:10; நீதி 16:30; எச 13:19), ஆன்மா, எலும்பு (எச 37:1-14), ஊன். (சங் 63:2; 16:9) போன்று சாவிற்குக் கையளிக்கப்படலாம் (சங் 78:50). ஆன்மா வாழ்வோரின் நாட்டிற்கு வெகுதூரத்திலுள்ள செயோல் என்ற இறந்தவர் உலகிற்குச் சென்று, நிழல் தன்மையான உயிரற்ற வாழ்வு நடத்துகிறது. மேலும் இது ''வாழ்வோரின் நாட்டைப் பற்றி'' ஒன்றும் தெரியாது தனித்து வாழ்கின்றது (யோபு 14:21; திருவுரை 9:5.10). கடவுளைவிட்டுப் பிரிந்தும் அவர் புகழ் பாட முடியாமலும் இருக்கின்றது (சங் 88:11); ஏனெனில் இறந்தோர் மௌனத்தில் வாழ்கின்றனர் (சங் 94:17; 115:25). சுருங்கக்கூறின் ஆன்மா இறந்தபின் இருப்பதில்லை (யோபு 7:8.21; சங் 39:14). இருப்பினும் எல்லாம் வல்ல இறைவன், இந்தக் கீழ் உலகத்திற்கு இறங்கிய ஆன்மாவை (சங் 30:3; 49:19; பழ 23:14) மீட்டு உயிருடன் எழுப்புவார் (2 மக் 7:19.14.23); பிரிந்த எலும்புகளை மீண்டும் கூட்டி உயிர் அளிப்பார். இதுபற்றிய விசுவாசம் உறுயானது. இந்த முழுமையான மனிதன் ஒரு ''உயிருடன் உள்ள'' ஆன்மாவாகவும், பவுல் கூற்றுப்படி ''ஆன்மீக உடம்புடனும்'', முழுமையாக உயிர்பெற்று எழுவான் (1 கொரி 15:45 = ஆதி 2:7).

3. ஆன்மாவும் உடலும்:- ஆன்மாக்கள் கீழ் உலகத்திற்குப் (செயோலுக்கு) போவதினால், அங்கு அவை உடலின்றி வாழ்கின்றன, என்பது பொருள் அன்று. அவைகளின் 'வாழ்வு' உண்மையான வாழ்வன்று; ஏனெனில் உடலின்றி ஆன்மாக்கள் தங்களையே வெளிப்படுத்த முடியாது. ஆகையால் மனிதனின் அழியாத்தன்மைக் கொள்கை ஆன்மாவின் ஆன்மீகத்தன்மையுடன் சேர்த்து ஒன்றாக்கப்படுவதில்லை. மேலும் ஞான நூல், விவிலிய நூலில் அறிவிக்கப்பட்ட பாரம்பரியத்தில், இந்தக் கொள்கையைப் புகுத்தவில்லை. கிரேக்கர்களின் எண்ணத்தில் ஊறிய ஞானநூலின் ஆசிரியர் சில சொற்களைக் கிரேக்க மக்களின் மனிதவியல் நூல்களிலிருந்து எடுத்து, தன் காலத்திற்கேற்றபடி பயன்படுத்தியுள்ளார். அவரது மனநோக்கு எப்போதும் கிரேக்கர்களிடமிருந்து மாறுபட்டது. உறுதியான, ''அழியக் கூடிய உடல் ஆன்மாவைப் பளுவாக்குகிறது இந்த மண் குடிசை சிந்தனை நிறைந்த மனத்தை அழுத்துகிறது'' (ஞான 9:15). ஆனால் இங்கு ஆன்மா மனிதனின் அறிவாற்றலைப்பற்றியேயன்றி வாழ்வின் ஆவியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும் இங்கு இவ்வுலகின் பொருளையோ (13:3) அல்லது உடலைப் பற்றியோ தாழ்வுபடுத்திப் பேசவில்லை; ''நல்லவனாய் இருந்ததால், மாசற்ற உடலுக்குள் புகுந்தேன்'' (8:19) என்று கூறுகிறார் ஆசிரியர்.

உடலுக்கும் உயிருக்கும் (ஆன்மாவுக்கும்) வேறுபாடு இருப்பது, ஆன்மா உண்மையிலே தனித்து இயங்கும் என்ற கருத்தினாலன்று. அக்கால யூத வெளிப்பாட்டு இலக்கியங்களில் காணப்படுவதுபோல் ஆன்மாக்கள் கீழ் உலகத்திற்குச் செல்கின்றன (16:13). ''ஆன்மாக்கள் கடவுளின் கையிலுள்ளன (3:1; 4:14). அவர் அவைகளை அழியா வாழ்வுக்காகப் படைத்ததால் அவைகளை மீண்டும் உயிர் பெற்று எழச் செய்யக்கூடியவர் (2:23).

உடல், ஆன்மா என்ற வேறுபாடு எழுந்ததின் காரணமாக, ஆன்மாக்களுக்காக கூறப்பட்டதையெல்லாம் விவிலியம் முழு மனிதனுக்குச் சாற்றிக் கூறுகிறது. இருப்பினும் விவிலியம் அழியாமையில்லாத விசுவாசத்தைக் கூறவில்லை. பீடத்தின் கீழேத் தங்களுடைய கைமாறுக்காகக் (ஞான 2:22) காத்திருக்கும் ஆன்மாக்கள் (திருவெளி 6:9; 20:4) திரும்ப உயிர்த்தெழும்படி கடவுளின் குரலுக்காகக் காத்திருக்கின்றன. உயிர்த்தெழுதல், ஆன்மாவில் உள்ள வலிமையின் செயலன்று; உயிர் ஆவியின் செயலாகும். இறைவன் முடிவில்லா வாழ்வின் விதையை ஆன்மாவில் விதைத்துள்ளார். அது உரிய காலத்தில் மலராக மாறும் (யாக் 1:21; 4:20; 1 பேதுரு 1:9). முழுமையான மனிதனும் மீண்டும் ''உயிருள்ள ஆன்மா'' (உயிருள்ளவன்) ஆவான். பவுல் கூறுவதுபோல், ''ஆவிக்குரிய உயிர் கொண்ட உடல்'' ஆவான். மீண்டும் அவன் முழுமையில் உயிர்த்தெழுவான் (1 கொரி 15:45 = ஆதி 2:7).

இ

இகாயோன் (HIGGA'ON)

எபிரேய வாசகத்தில் வரும் தெளிவில்லாத பொருளுடைய ஓர் இசைக் குறிப்பாகும். இசைக் கருவிகள் திடீரென்று ஒலிப்பதையோ அல்லது அமைதியாக ஒலிப்பதையோ குறிக்கலாம் (சங் 9:16). மற்ற இடங்களில் இந்த எபிரேயச் சொல் இசை ஒலி, பண் இசைத்து என்று மொழி பெயர்க்கப்படுகிறது (சங் 92:3). இது தியானத்தையும் சிந்தனையையும் குறிக்கலாம் (சங் 19:14; புல 3:62).

இகால் (IGAL - இறைவன் மீட்கிறார்)

1. இவர் மோசேயால் கானான் நாட்டைச் சுற்றிப் பார்த்துச் செய்தி கொண்டுவர அனுப்பப்பட்ட 12 ஒற்றர்களில் ஒருவர். இசக்கார் இனத்தைச் சேர்ந்த யோசேப்பின் புதல்வர் (எண் 13:7).

2. தாவீதின் வலிமை வாய்ந்த படைவீரர்களுள் ஒருவன், சோலாவிலிருந்த நாத்தானின் மகனாவார் (2 சாமு 23:36). 1 நாள் 11:38-இல் இப்பெயருக்குப் பதிலாக நாத்தானின் சகோதரன் யோவேலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. தாவீதின் வழித் தோன்றல்களில் அரசன் யோயாக்கினின் வழி வந்தவர். செமாயாவின் புதல்வர்களில் ஒருவர். செருபாபேலின் வழித்தோன்றல் (1 நாள். 3:22).

இகிதலியா (IGDALIA - யாவே பெரியவர்)

யூதா நாட்டைச் சேர்ந்த அதிகம் அறியப்படாத ஓர் இறைவாக்கினர், ஒரு இரக்காப்பியர். கானானின் தந்தை. இவருடைய பேரப்பிள்ளைகளோ சீடர்களோ, யோசியாவின் காலத்தில் ஆலயக் கருவூல அறைகளில் ஒன்றைப் பெற்றிருந்தனர் (எரே 35:4).

இக்காபோது (ICHABOD - மகிமை எங்கே?)

இவர் பினகாசின் மகனும் ஏலியின் பேரனும் ஆவார். இஸ்ராயேலிடமிருந்து உடன்படிக்கைப் பெட்டகத்தைப் பெலிஸ்தியர் கைப்பற்றினர். (இப்பெட்டகம் இஸ்ராயேலின் மகிமையும் பெருமையுமாகக் கருதப்பட்டது). இவரது தாய் இந்தப் பேரிழப்பின் நினைவாகவும், தன் மாமனாரும் கணவனும் இறந்து போனதாலும் ''இஸ்ராயேலரை விட்டுப் புகழ் நீங்கினது'' என்று சொல்லி தன் குழந்தைக்கு இக்காபோது என்று பெயரிட்டாள் (1 சாமு 4:21). இவர் பிறந்தவுடன் அவளும் இறந்து போனாள்.

இவர் பெயர் அகியாவின் மரபுப்பட்டியலில் வருகிறது. அகியா சவுல் காலத்தில் ஏபோது அணிந்திருந்தார். ஆனால் அகியா இக்காபோத்தின் நேரடி வழித்தோன்றல் அல்ல (1 சாமு 14:3).

இக்கேசு (IKKESH - வளைந்த, கோணலான, கொடிய)

தெக்கோவாவைச் சேர்ந்த இவரது மகன், ஈர், வலிமை மிக்க தாவீதின் படைவீரர்களுள் ஒருவராக இருந்தார் (2 சாமு 23:26; 1 நாள் 11:28). ஆறாவது மாதத்தில் தாவீதின் படைகளுக்கு தெக்கோவா ஊரானாகிய இக்கேசின் மகன், ஈர், தலைவனாய் இருந்தார் (1 நாள் 27:9).

இக்கோனியா (ICONIUM - உருவம், சிலை)

சிறிய ஆசியாவின் தென் மத்தியப் பகுதியிலுள்ள இலிக்கவோனியாவின் தலைநகரமாகும். பிரிகிய எல்லைக்கருகில் இலிசித்திராவுக்கு வடக்கில் அமைந்திருந்தது. தற்பொழுது இவ்விடத்தில் கொனியா என்ற துருக்கிய நகரம் அமைந்துள்ளது.

பழங்காலப் பாரம்பரியப்படி, இந்நகரம் பெரு வெள்ளத்திற்கு முன்னே இருந்தது. அதற்குப்பின் மீண்டும் கட்டப்பட்டது. கி.மு.7-ஆம் நூற்றாண்டிலிருந்து பிரிகியர்கள் இந்நகரில் குடியிருந்தனர் எனத் தெரிகிறது. இந்நகரம் இலீதியர்களாலும் பாரசீகர்களாலும், செலூக்கியர்களாலும், பெருகாமோன் அரசாலும் ஆட்சி செய்யப்பட்டது.

மூன்றாம் அத்தாலூசு, கி.மு.133-இல் உரோமையர்களுக்குக் கொடுத்த சொத்தில் ஒரு பகுதியாக அமைந்தது.

புதிய ஏற்பாட்டில், பவுலும் பார்னபாவும் தங்கள் முதல் மறைபரப்புப் பயணத்தில் இந்நகரை அடைந்தனர் (அ.ப. 13:51-14:6). அந்தியோக்கியாவில் நிகழ்ந்தது போலவே இங்குள்ள யூதர்கள் எதிராக எழுந்ததால் (2 திமோ 3:11), இவர்கள் இந்நகரை விட்டு ஓடவேண்டியிருந்தது. திரும்ப வரும்போது, மீண்டும் இந்நகர் வழியாக வந்ததாகத் தெரிகிறது (அ.ப.14:21). பவுல் தனது இரண்டாம் மறைபரப்புப் பயணத்தில் இங்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் இதன் அருகிலுள்ள தெருபை, இலிசித்திரா போன்ற அருகிலுள்ள நகரங்களையெல்லாம் சுற்றியிருக்கிறார் (அ.ப. 16:1). திமோத்தேயுவும் (16:2) தேக்கிலாவும் இக்கோனியாவைச் சேர்ந்தவர்களாவர்.

இக்துசு (ICHTHUS - மீன்)

மீன் அடையாளம். இது இரகசிய கிறிஸ்துவ அடையாளமாகவும் இலக்கியத்திலும் ஓவியங்களில் கிறிஸ்துவையும் நற்கருணையையும் எடுத்துக்காட்டு அடையாளமாகவும் தொடக்கக்காலத் திருச்சபையால் பயன்படுத்தப்பபட்டது. இயேசு தம் சீடர்களுக்கு ''மனிதர்களைப் பிடிப்பவர்கள்'' என்ற பட்டம் அளித்ததிலிருந்தோ (லூக் 5:10), இயேசு ஐயாயிரம் பேருக்கு அருஞ்செயலாக உணவளித்த நிகழ்ச்சியிலிருந்தோ (மத் 4:13 இ) இந்த அடையாளம் தோன்றியிருக்க வேண்டும்.

இச்சொல், சொற்களின் முதல் எழுத்துக்களைத் தொகுத்து உருவாக்கப்படும் புதுச் சொல்லாகக் கருதப்படும். இதன்படி, (Iesous), CH (Christos, TH (Theou) Y (Y os), S(Soter) ''இயேசு கிறிஸ்து இறைமகன் மீட்பர்'' என்று பொருள் கொடுக்கப்படும்.

இசக்கார் (ISSACHAR - கடவுள் இரக்கம் காட்டுவாராக, கூலி ஆள், ஈடுசெய்யப்பட்டடும்)

யாக்கோபின் ஒன்பதாவது புதல்வனும், இஸ்ராயேலின் 12 கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தின் இனப்பெயர் முதல்வருமாவார். லேயாளுக்குப் பிறந்த ஐந்தாம் மகன் ஆவார் (ஆதி 30:18). இதனால்தான் யாக்கோபின் இனத்தாரைப் பற்றிய பட்டியலில் இசாக்கார் செபுலோனுக்கு முன்னும் சிமெயோன், லேவி என்ற சகோதரர்களுக்குப் பின்னும் கூறப்பட்டுள்ளார் (ஆதி 35:23; 46:13; யாத் 1:3; 1 நாள் 3:1).

மனாசே இனத்தாரும் எப்பிராயிம் இனத்தாரும் நெருங்கியிருந்தது போலவே இசக்கார் இனத்தார் செபுலோன் இனத்தாரோடு உறவாடி நெருங்கி, வாழ்ந்தனர். இருவரும் ஒரே தொகுப்பாகக் கருதப்பட்டனர். இசக்கார் குலத்தினர் வாழ்ந்த நாட்டின் எல்லையே செபுலோன் குலத்தவரின் எல்லையாக இருந்தது. அந்த எல்லையில் தாபோர் மலையில் இரு குலத்தினருக்கும் பொதுவான புனித இடம் ஒன்று இருந்தது. இக்காரணத்தினால்தான் மோசே இவ்விரு குலத்தவரையும் சேர்த்தே ஆசீர் வழங்குகிறார்.

''செபுலோனே, உன் ஏற்றுத் துறைகளிலும், இசக்காரே, உன் கூடாரங்களிலும் மகிழக்கடவீர்கள். இவர்கள் மக்களை மலைகளிடம் அழைப்பார்கள். அங்கே நீதியின் பலிகளை இடுவார்கள்'' (உப 33:18-19). இங்கு ''மலைகள்'' 'தாபோர்' மலையையும், ''மக்கள்'' இவ்விரு குலத்தாரையும் குறிக்கின்றது. இங்கு செபுலோனும் இசக்காரும் சேர்த்துக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஆதி 30:18-இல் உள்ளதற்கு மாறாக, இளையவனான செபுலோன் மூத்தவனான இசக்காருக்கு முன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளான். எனவே, மனாசேயையும் எப்பிராயிமையும்போல, இசக்காரும் சேபலோனும் நில அமைப்பின் அடிப்படையில் தனியாக வளர்ச்சியுற்றனர் என்றும் முதலில் தங்கள் நாட்டில் குடியேறியபோது மிகவும் ஒற்றுமையாக இருந்தார்கள் என்றும் தெரிகிறது.

யாக்கோபின் இறுதி ஆசியுரையிலும் செபுலோனுக்குப் பிறகே இசக்கார் குறிப்பிடப்பட்டுள்ளார் (ஆதி 49:14-15). இது இசாக்கார் தன் முதன்மையை இழந்துவிட்டதை சுட்டுகிறது. இங்கு இசக்கார் குலத்தார் சொத்துக்கள் நடுவே படுத்துக் கொண்டிருக்கிற வலிமையுள்ள கழுதைக்கு ஒப்பிடப்படுகின்

றனர். வசதியான நாட்டில் அவர்கள் அடிமைகளாக இருப்பதாகக் கூறப்படுகின்றனர். தாபோர் மலைக்கும் வடக்கில் கின்னரோத்து ஏரியின் தென் எல்லைக்கும், தெற்கில் யாலூது நதிப் பள்ளத்தாக்கிற்கும் இடையில் உள்ள நாட்டில் (யோசு 19:17-23) கானானியர்கள் வாழ்ந்த நகரங்கள் பல இருந்தன. இசக்கார் குலத்தனர் இக்கானானியர்களோடு தொடர்பு கொண்டு வாழ்ந்ததால் மற்ற குலத்தினர் அவர்களைக் கண்டித்தனர்.

துரேயோ-தாங்கின் என்பவரால், 1922-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அமர்னா எடுகள் ஒன்றில், மெகிதோ நாட்டின் இளவரசன் அழிக்கப்பட்ட சூனேம் நாட்டிற்கு தானே பொறுப்பு என்றும், அங்கு குடியிருக்க வெளி நாட்டிலிருந்து மக்களைக் கொண்டு வரவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். சூனேம் பிற்காலத்தில் இசக்கார் குலத்தினரின் நாட்டில் இருந்தது. எனவே இந்தச் சூழ்நிலையில் இசக்கார் அல்லது இசக்கார் குலத்தினரில் பலர் அடிமைகளாக்கப்பட்டிருக்கலாம் என்று ஆல்ட் என்பவர் கூறுகிறார். இதைப் பற்றியே ''சுமைதூக்கத் தோள் சாய்ப்பான், அடிமை வேலைக்கு இணங்கிடுவான்'' (ஆதி 49:15) என்று கூறப்பட்டுள்ளது என்றும் அவர் கருதுகிறார்.

ஆனால் இஸ்ராயேலின் அரசாட்சி காலத்திற்கு முன்பே இசக்கார் குலத்தினர் மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்தனர். தெபோரா தொடுத்த போரில் இசக்கார் குலத்தினர் செய்த வீரச் செயல்களே இவ்வெழுச்சிக்குக் காரணமாக இருக்கலாம். தெபோராவின் பாடலில் இசக்கார் குலம் புகழப்பட்டுள்ளது (நீதி 5:15). ஆனால் அதற்கு இணையான உரைநடைப் பகுதியில் இசக்காரின் பெயர் காணப்படவில்லை. இசக்கார் குலத்தினனான தோலா இருபத்திமூன்று ஆண்டுகள் இஸ்ராயேலுக்கு நீதி வழங்கினார் (நீதி 10:1). சாலமோன் ஆட்சியின் போது இசக்காரின் நாடு தனி மாகாணமாக இருந்தது (1 அர 4:17). இசக்கார் குலத்தைச் சேர்ந்த பாசா வட அரசை ஆண்டார் (1 அர 15:27). அதிலிருந்து, இஸ்ராயேல் அரச குலத்தினர் தங்கியிருந்த இடமான இசிரியேல் இசக்காரின் நாட்டில் இருந்தது. இசிரியேல் சமவெளி கானானியரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோது வட நாட்டிற்கும் தென் நாட்டிற்கும் இடையில் இசக்கார் குலத்தினரே பாலமாக செயல்பட்டு வந்தனர். பழைய கானானிய நகரங்களில் முதலிலிருந்தே குடியேறிய ஒரே இஸ்ராயேல் குலத்தினர் இசக்கார் குலத்தினரேயாவர்.

குருக்கள் பாரம்பரியத்தில் இசக்கார் குலம் செபுலோனுக்கு முன்னும் லேயா குலத்தினரோடும் குறிப்பிடப்பட்டிருக்கிறது (எண் 1:8. 28-29; 13:7; 26:23-25). சில இடங்களில், யூதாவை அடுத்து அதன்பின் உடனே இசக்கார் கூறப்பட்டுள்ளது (எண் 2:5; 7:18; 10:15). எண் 34:26-இல் இசக்காருக்கு முன்னால் செபுலோன் கூறப்பட்டுள்ளது. உப 27:12-இல் மக்களுக்கு இசக்கார் குலத்தினரும் ஆசீர் அளிக்கின்றனர். யோசு 19-இல் திருவுளச்சீட்டின் மூலம் கிடைத்த நாடுகளில் செபுலோனுக்குப் பிறகே இசக்கார் குலம் குறிப்பிடப்பட்டுள்ளது. லேவியருக்கு நகரங்கள் அளிக்கப்படும் போது, ஒரு முறை இசக்கார் குலம் மூன்றாவது குழுவுக்கு தலைமையாகவும் (யோசு 21:6; 1 நாள் 6:62), மற்றொரு முறை இசாக்காருக்கு முன்னால் மனோசேயின் பாதிக் கோத்திரம் தலைமை தாங்குகிறது (யோசு 21:28; 1 நாள் 6:72), செபுலோன் நான்காவது குழுவில் கூறப்பட்டுள்ளது. எச 48:25லும் செபுலோனுக்கு முன்னதாக இசக்கார் குலம் முதன்மை பெறுகிறது சிறப்பாகப் போற்றப்படுகிறது (1 நாள் 12:32; 27:18; 12:40; 2 நாள் 30:18). நாள் 4-7-இல் வரும் குலமரபுப்பட்டியலில், இசக்காரின் தலைமுறைப் பட்டியல் 1 நாள் 7:1-5ல் காணப்படுகிறது. ஆனால் செபுலோனின் தலைமுறைப் பட்டியல் காணப்படவில்லை. அரசாட்சி காலத்தில் இசக்கார் ஆழ்ந்தறிவுக்கும் (1 நாள் 12:32), செல்வத்திற்கும் (12:40), தொடர்ந்த பிரமாணிக்கத்திற்கும் (2 நாள் 30:18) பெயர் பெற்றிருந்தார். புதிய ஏற்பாட்டிலும் முத்திரை இடப்பட்டவர்கள் பட்டியலில் இசக்கார் குலம் செபுலோன் குலத்துக்கு முன்னால் காணப்படுகிறது (திருவெளி 7:7).

2. தாவீதின் காலத்தில் லேவிய வாயிற் காவலராக இருந்த இவர் ஓபேது-ஏதோம் என்பவரின் மகன் (1 நாள் 26:5).

இசார் (IZHAR - இறைவன் ஒளிர்வாராக)

1. ஒரு லேவியர், கெகாத்தின் மகனும் கோராகின் தந்தையுமாவர் (யாத் 6:18.21; எண் 3:19.27; 16:1; 1 நாள் 6:2.18.38; 23:12.18). இவர் இசாரியரின் குலப்பெயர் முதியவராவார் (எண் 3:19; 1 நாள் 26:23). 1 நாள் 6:22-இல் இவர் அம்மினதாபு (2) என்றழைக்கப்படுகிறார்.

2. 1 நாள் 4:7-இல் சோகார் என்ற பெயரின் மறுவடிவமாகும். யூதாவைச் சேர்ந்தவர். இவரது தாய் கேலா என்பவள் ஆவாள்.

இசிகாய் (ISH-HAI - வலிமை மிக்கவன்)

2சாமு 23:20-இன்படி இவர்பெனாயா(1)-வின் தந்தையாவார். ஆனால் சில வாசகங்கள் இந்தச் சொல்லுக்குப் பதிலாக ''ஆற்றல் வாய்ந்தவன்'', அல்லது ''வலிமைமிக்கவன்'' என்று கொண்டுள்ளன. இதுவே மேலான வாசகம் என்று கருதுவோர் உளர்.

இசிகோது (ISHHOD - வீரமிக்க மனிதன், ஆற்றலுள்ள மனிதன்)

மனாசேயின் குலத்தைச் சேர்ந்த கிலயாதின் சகோதரியான அம்மோலெகேத்து என்பவரின் மகனாவார் (1 நாள் 7:18). இவை இனப் பெயர். முதல்வர்களின் பெயர்களாகும்.

இசிக்கா (ISCAH)

ஆரானின் மகளும், மில்க்கா (ஆதி 11:29) லோத்து (11:31) ஆகியோரின் சகோதரியுமாவாள்.

இசிதார் (ISHTAR - தலைவி)

பாபிலோனிய இனப்பெருக்க தேவதையான அத்தார் என்ற வீனஸ் விண்மீனின் பெயர். மூலத்தில் ஆண் தன்மையடையது. இனப்பெருக்க வழிபாட்டில், இராஸ் சம்ரா விலுள்ள ஆனத்தைப் போலவும், பாலஸ்தீன நாட்டிலுள்ள அசித்தோரேத்து போலவும், மெசபொத்தாமியாவிலுள்ள சமயத்தில் இசிதார் மிகவும் சக்தி வாய்ந்த தேவதையாகும். மேற்கூறிய தேவதைகளைப் போன்றும், எகிப்திலுள்ள ஐசீஸ் போன்றும், கிரேக்க நாட்டிலுள்ள தெமெத்தேர் போன்றும், இசிதாரும், தாவர இயல் வளர்ச்சி தெய்வமான தாமுசு என்ற தெய்வத்துடன் தொடர்பு படுத்தப்படுகிறாள். தொடக்க காலத்திலிருந்தே இத்தேவதை போரின் தேவதையாகக் கருதப்பட்டு வருகிறாள். அசீரியர்கள் ஆண்ட காலத்தில் அவர்களின் தேசியக் கடவுளான அசூரோடு இசிதாரும் போரின் தேவதையாக வணங்கப்பட்டு வந்தாள்; இவளது அடையாளம் 8 முனைகள் கொண்ட விண்மீனாகும். எல்லோரிலும் மேலான தலைவி என்று பொருள்படும் 'பேலித்' என்ற பெயரால் அழைக்கப்பட்டாள். இவளது வழிபாட்டில் சில சமயம் சடங்கு விபச்சாரமும் ஆவேச வாக்கு உரைத்தலும் இடம் பெற்றன. யூதாவின் பிற்காலத்தில் வழிபடப்பட்ட ''விண்ணக அரசி'' இசிதாரின் வடிவமாக இருக்கலாம். இது மனாசேயால் புகுத்தப்பட்டது (2 அர 21).

இசிபா (ISHBAH - இறைவனின் கோபம் தணிக்கப்படுவதாக)

யூதாவின் வழித்தோன்றல்களில் ஒருவர். மெரேது என்பவருக்கும், பாரவோனின் மகளாகிய பித்தியாவுக்கும் பிறந்தவர் (1 நாள் 4:17). எசுத்தமோவா நகரை நிறுவியவர் என்ற பொருளில், எசுத்தமோவாவின் தந்தை என்றழைக்கப்படுகிறார்.

இசிபாகால் (ISHBAAL - பாகாலின் மனிதன்)

இது சவுல் அரசனின் மகன் இசிபோசத்தின் மூலப்பெயராகும் (1 நாள் 8:33; 9:39). இதன் மற்றொரு வடிவம் எசுபாகால் ஆகும். இசிபாகால் என்ற பெயர் விவிலியத்தில் காணப்படவில்லை. பாகால் என்ற பெயரை உச்சரிக்கத் தயங்கியதால் அதற்குப் பதிலாக இசிபோசத்து என்ற பெயர் பயன்படுத்தப்பட்டது.

சவுலின் மரணத்துக்கப் பிறகு வட பகுதியிலுள்ள இஸ்ராயேல் மக்களை இசிபாகால்

- இசிபோசத்து என்பவர் ஆண்டார். எல்லா இஸ்ராயேல் மக்களுக்கும் தலைமை தாங்க விரும்பி தாவீதோடு சண்டையிட்டார். ஆனால் வெற்றி பெறவில்லை. தாவீதின் சட்டபூர்வமான அரசுக்கு ஊறு விளைவிக்கக் கூடாது என்ற நோக்கோடு நாளாகமத்தின் ஆசிரியர் இதைப் பற்றிக் கூறவில்லை.

கில்போவா மலையில் இஸ்ராயேலர்கள் தோற்கடிக்கப்பட்டனர்; சவுலும் அவனது மூத்த புதல்வர்களும் இறந்தனர் (1 சாமு 31). இதன்பின் பேராசை கொண்ட அபினேர், சவுலின் மகனான இசிபோசத்து என்பவனை அரசனாக ஏற்படுத்தினார் (2 சாமு 2:8). யோர்தானுக்கு அப்பாலுள்ள மகனாயிம் என்ற இடத்தில்தான் முடிசூட்டு விழா நடைபெற்றது. ஏனெனில் யோர்தானுக்கு மேற்கிலுள்ள பகுதி பெலிஸ்தியரின் ஆளுகைக்குட்பட்டு இருந்தது (1 சாமு 31:7). இசிபோசத்து கிலயாது, ஆசேர், இசிரியேல், எப்பிராயிம், பென்யாமின் மேலும் இஸ்ராயேல் அனைத்தின் மீதும் அரசராக இருந்தார் (2 சாமு 2:9). ஆனால் யூதா கோத்திரத்தார் மட்டும் தாவீதைப் பின்பற்றினர் (2:10). தாவீதின் அரசுக்கும் இசிபோசத்தின் அரசுக்கும் இடையில் உள்ள எல்லைப் பகுதி அய்யாலோன் பள்ளத்தாக்காகும் (2:12-13). பெலிஸ்தியருக்கு அடிபணிந்திருந்ததால்தான் இசிபோசத்தால் யோர்தானுக்கு மேற்கேயுள்ள பகுதியில் ஆட்சி செய்ய முடிந்தது. உண்மையில் தாவீதும் இசிபாகாலும் பெலிஸ்தியரின் சிற்றரசர்களாகத்தான் முதலில் ஆட்சி செய்திருப்பார்கள். இஸ்ராயேல் நாட்டில் இவ்விரு மன்னர்களுக்கிடையே ஏற்படும் போர் பாலஸ்தீனத்தில் ஒரு வல்லமை வாய்ந்த அரசு ஏற்படுவதைத் தடுக்கும் என்று பெலிஸ்தியர்கள் நம்பியிருந்தனர்.

தாவீதுக்கும் இசிபோசத்துக்குமிடையே கடும் போர் மூண்டது (2:12-17). இப்போரில் தாவீது முன்னேறி மேன்மேலும் வலிமை வாய்ந்தவரானார் (3:1).

வல்லமை மிகுந்த தலைமை இல்லாமையால் வடக்குப் பகுதியிலுள்ள இஸ்ராயேல் குலத்தாரின் பலம் குன்றியது. அபினேரின் அதிகாரத்தை இசிபோசத்தால் தடுக்க முடியவில்லை (3:6). அபினேர் சவுலின் வைப்பாட்டிகளில் ஒருத்தியான இரிசிப்பாவை வைத்துக் கொண்டிருந்தார். இச்செயல் அவர் அரியணை மீது ஆவல் கொண்டிருந்தார் என்பதைக் காட்டியிருக்கலாம் (16:22; 1 அர. 2:22). இசிபோசத்து இதை எதிர்த்தார். அபினேர் தான் இசிபோசத்துக்க பிரமாணிக்கமாக இருப்பதாகக் கூறிவிட்டு, உடனே வடபகுதியிலுள்ள இஸ்ராயேல் குலத்தினரையும் தாவீதின் ஆட்சிக்கு உட்படுத்த சதி செய்தார் (2 சாமு 3:7-19).

ஆனால் யோவாபு அபினேரைக் கொன்றதால் இம்முயற்சி முறியடிக்கப்பட்டது (3:26-27). அபினேர் இறந்தபின் இசிபோசத்து அரசைப் பற்றியிருக்கும் தனது நம்பிக்கையை இழந்தார்; இஸ்ரோயேலர்கள் தலைவனின்றித் தவித்தனர் (4:1). விரைவில் இசிபோசத்து தூங்கிக் கொண்டிருந்தபோது அவனது இரு படைத்தலைவர்கள் அவரைக் கொன்றனர் (4:5-12). தாவீது இவரை அபினேரின் கல்லறையிலேயே அடக்கம் செய்தார் (4:5-12). இதன்பின் தாவீது இஸ்ராயேல் அனைவருக்கும் அரசராக அபிடேகம் பெற்றார்.

இசிபாக்கு (ISHBAK - *அவர் வெற்றி பெறுவாராக*)

ஆபிரகாமுக்கும், அவரது வைப்பாட்டி கெத்தூராவுக்கும் பிறந்த ஐந்தாவது மகன் (ஆதி 25:27; 1 நாள் 1:32). ஒரு அரேபிய நாட்டினரின் குடும்ப மூதாதையர் ஆவார்.

இசிபி-பெனோபு (ISHBI-BENOB - *நோபின் குடிமகன்*)

இவர் பெலிஸ்திய அரக்க குலத்தினர். இவர் தாவீதைக் கொல்ல முயன்ற போது, அபிசாய் அவரைக் கொன்றார் (2 சாமு 12:16-17). இவர் பெலிஸ்தியர்களின் படையைச் சேர்ந்தவர். எனினும் இவ்விடத்தில் வாசகம் பழுதுபட்டுத் தெளிவாக இல்லை. பலரும் பலவாறு விளக்கம் அளிக்க முயன்றுள்ளனர்.

இசிபோசத்து (ISHBOSHETH - வெட்கத்தின் மனிதன்)

சவுலின் புதல்வர்களில் ஒருவர். சவுலுக்குப்பின் இஸ்ராயேலுக்கு அரசனானவர். இவனது மூலப்பெயர் ''பாகாலின் மனிதன்'' என்று பொருளுள்ள இசிபாகால் ஆகும் (1 நாள் 8:33; 9:39). பாகால் என்றால் ''ஆண்டவர்'', ''தலைவர்'' என்று பொருள்படும். யாவேக்கும் சாற்றிக் கூறப்பட்டது. நீதிபதிகள் காலத்திலும், இஸ்ராயேலின் முடியாட்சி காலத்தின் தொடக்கத்திலும் இப்பெயரோடு சேர்ந்து எபிரேயப் பெயர்கள் அமைக்கப்பட்டன. அப்போது, கானானியப் பாலினக் கடவுளோடு எத்தொடர்பும் கொண்டதாகக் கருதப்படவில்லை. தாவீதின் காலத்திற்குள் இத்தகைய தொடர்பு ஏற்பட்டு, பாகாலோடு சேர்த்துப் பெயர்கள் அமைக்கும் வழக்கு முடிந்து விட்டது. பாகால் வழிபாட்டுக்கு எதிரான இறைவாக்குக் கூற்றுக்கள், இப்பெயரைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தது (காண் ஓசே 2:16). இச்சொல்லுக்குப் பதிலாக ''வெட்கம்'' என்று பொருள்படும் போசத்து என்ற சொல் பயன்பட்டது.

இசிபோசத்தைப் பற்றிய மற்ற விவரங்களுக்குக் காண்க: இசிபாகால்.

இசிமா (ISHMA - இறைவன் கேட்பாராக)

யூதா, குலத்தைச் சேர்ந்த ஏதாமின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 4:3).

இசியா (ISSIAH - யாவே என் பாவங்களை மறப்பாராக)

1. இசக்கார் குலத்தைச் சேர்ந்த ஊசியின் வழித்தோன்றல், இசுராகியாவின் மகன் (1 நாள் 7:33).

2. சிக்கிலாகில் தாவீதோடு சேர்ந்து கொண்ட வலிமை மிகுந்த படை வீரர்களில் ஒருவர் (1 நாள் 12:6).

3. ஊசியேலின் இரண்டாவது புதல்வனான இவர் ஒரு லேவியர் (1 நாள் 23:20; 24:25).

4. ஒரு லேவியர். இரகபியாவின் குடும்பத் தலைவனான இவர், மோசேயின் வழித்தோன்றலாவார் (1 நாள் 24:21; 23:14-17).

இசியா (IZZIAH - யாவே தூய்மையாக்குவாராக)

பரோசின் மகன். எஸ்ரா காலத்தில் புறவின மனைவியரை அனுப்பிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டவர்களில் ஒருவர் (எஸ் 10:25).

இசிரியேலர் (JEZREELITE)

ஓர் இனப் பெயர், இசக்கார் பகுதியிலுள்ள இசிரியேலில் (இடம்) வாழ்ந்த நாபோத்தைக் குறிக்கும் (1 அர 21; 2 அர 9:21-25).

இசிரியேலப்பெண் (JEZREELITESS)

இது தாவீதின் மனைவி அகினோவாமின் இனப்பெயராகும். இவள் யூதாவிலுள்ள இசிரியேலிலிருந்து (1) வந்தவள் (1 நாள் 3:1; 2 சாமு 2:2; 3:2).

இசிரியேல் (JEZREEL - இறைவன் பயனுள்ள தாக்குவாராக, இறைவன் விதைக்கிறார்) - ஆள்.

1. யூதாவின் வழித்தோன்றல்களில் ஒருவராகிய இவர் ஏதாமின் மகனாவார் (1 நாள் 4:3). இப்பெயரில் ஒரு நகரமும் யூதாவில் உள்ளது. ஆனால் அது அமைந்த இடம் எதுவென்பது தெளிவாக இல்லை (யோசு 15:56). இவர் இந்நகரத்தின் இனப்பெயர் முதல்வரா அல்லது இப்பெயர் நகரமாக உருவகப்படுத்தப்பட்டதா (நகரமே ஒரு ஆளாக) என்பது தெளிவாக இல்லை.

2. இறைவாக்கினர் ஓசேயாவின் மனைவி கோமேருக்குப் பிறந்த தலைமகன் இவர். இஸ்ரேயேல் பள்ளத்தாக்கில் ஏகூ அரசன் இரத்தம் சிந்தி அதிகாரத்தைக் கைப்பற்றியதை நினைவூட்டுவதாக இடப்பட்ட அடையாளப் பெயர் இது (காண்க. 2 அர 9:17-26; 10:1-11). மேலும் ஏகூ சிந்திய இரத்தத்திற்கு கடவுள் பழிவாங்கப் போவதை முன்னறிவிப்பதாகவும் (ஓசே 1:4-5) இஸ்ராயேல்

வருங்காலத்தில் மீண்டும் அமைப்பதையும் அடையாளமாக எடுத்துக் கூறப் பயன்பட்டுள்ளது (2:2).

இசிரியேல் (JEZREEL - இறைவன் பயனுள்ள தாக்குவாராக, இறைவன் விதைக்கிறார்) இடம்

1. யூதாவின் நாட்டில் உள்ள ஒரு நகரம் (1 சாமு 15:56). தாவீதின் மனைவியரில் ஒருவளான அகினோவாமின் ஊராகும் (1 சாமு 25:43; 27:3; 30:5; 2 சாமு 2:2; 3:2). யோசு 15:56 கர்மேல், சிப்பு, யுத்தா ஆகிய நகர்களுக்கு அண்மையில் இந்நகரம் உள்ளதெனக் குறிப்பிடுகிறது. கெபிரோனுக்குத் தென்மேற்கே 9 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் தறாமா என்பதே இது அமைந்த இடமாக இருக்க வேண்டுமெனக் கூறினாலும் உண்மையான இடத்தைக் குறிப்பிடமுடியவில்லை.

2. கலிலேயாவைச் சமாரியாவிலிருந்து பிரிக்கும் (முழுப்) பள்ளத்தாக்கின் பழைய ஏற்பாட்டுப் பெயரே இது. இப்பள்ளத்தாக்கின் கிழக்குப் பகுதி மட்டுமே தற்பொழுது இசிரியேல் எனப்படுகிறது. மேற்குப் பகுதி எசுதிரலோன் பள்ளத்தாக்கு அல்லது மெகிதோ சமவெளி என்று அழைக்கப்படுகிறது. எனவே இப்பள்ளத்தாக்கு இருபெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பது பாலஸ்தீன வரைபடத்தைப் பார்த்தாலே தெளிவாகும்.

இசிரியேல் பள்ளத்தாக்கு நீரைச் சேகரித்து வைக்கும் தொட்டிபோல் இருப்பதால் இங்கு நீர் நிறைய வந்து சேர்கிறது. எனவே இப்பகுதி மிகுந்த வளமுடையதாய் உள்ளது (ஓசே 2:22). இப்பகுதியில் மத்தியதரைக் கடலோரத்திலுள்ள ஆக்கோவிலிருந்து பேத்துசான், யோர்தான் பள்ளத்தாக்கு, யோர்தானின் அக்கரைப் பகுதியில் உள்ள பீடபூமி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் சாலைகளும், தெற்கேயுள்ள எகிப்து, மலைப்பாங்கான நாடு ஆகியவற்றிலிருந்து கலிலேயா. சீரியா, பெனிசியா ஆகிய வடக்கிலுள்ள நாடுகளுக்குச் செல்லும் வழிகளும் பின்னிப் பரவிக் கிடக்கின்றன.

தொடக்க காலத்திலிருந்தே இசிரியேல் கானானியர் கைகளிலிருந்தது. இஸ்ராயேல் கானானை வெற்றி கொண்ட காலத்தில் இவர்களிடமிருந்த இரும்புத் தேர்களினாலும், ஆயுதங்களினாலும் மனாசேயும் எப்பிரயிமும் இவர்களை விரட்ட முடியாது போயிற்று (யோசு 17:6). மெகிதோ சமவெளிபோலவே இதுவும் பல போர்களைக் கண்டுள்ளது. நீதிபதிகள் காலத்தில் அமலேக்கியர்கள், மிதியானியர்கள், அப்பள்ளத் தாக்கில் வாழ்ந்தவர்கள் முதலியோர் இணைந்து போரிட்ட போது அவர்களை கிதயோனும், நாட்டின் வடபக்கத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் இனத்தினர் அனைவரும் இணைந்து தோற்கடித்தனர் (நீதி 6:33; 7:23). பெலிஸ்தியரோடு அருகிலுள்ள கில்போவா மலையில் போரிட்ட சவுலும், அவனுடைய புதல்வர்களும் யோனத்தான் உட்பட பலர் இறந்த செய்தி இங்கிருந்து தான் வெளியிடப்பட்டது (2 சாமு 4:4). அரியணைக்காக சவுலின் மகன் இசிபோசத்தும் தாவீதும் போட்டியிட்டுக் கொண்டிருந்த போது, இசிரியேல் இஸ்ராயேலின் ஒரு பகுதியாக இசிபோசத்தால் ஆளப்பட்டது (2 சாமு 2:9). இந்தப் பள்ளத்தாக்கில்தான் ஏகூவின் புரட்சிக்காலத்தில் இசிரியேல் நகரத்தில் கொலைகளைச் செய்த இஸ்ராயேலரின் வலிமையை ஆண்டவர் உடைத்தெறிவார் என ஓசே 1:5-இல் குறிப்பிடப்படுகிறது.

3. இசக்காரின் எல்லையில் அமைந்து நகரம் இது (யோசு 19:18). எனினும் வடக்கே 11 கி.மீ. தொலைவில் கில்போவா மலை அடிவாரத்தில் அமைந்துள்ள இன்றைய செரீன்தான் இந்த ஊர் எனக் கூறப்படுகிறது. இங்கிருந்து இசிரியேல் சமவெளியை முழுவதுமாகப் பார்க்க முடியும். இது மத்திய தரைக் கடல் ஓரத்திலிருந்து யோர்தான் பள்ளத்தாக்கை அடையும் வழியிலும் பாலஸ்தீனத்தின் தெற்கு வடக்கு செல்லும் வழியிலும் அமைந்திருந்தது. சாலோமோ

னது ஆட்சியில் பானாவின் தலைமையில் அமைந்த ஐந்தாவது பிரிவைச் சேர்ந்த ஒரு நகரமாக இருந்தது இது (1 அர 4:12). ஆனால் விவிலியத்தில் இது முக்கிய இடம் பெற்றது நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின்புதான். ஆகாபு ஆட்சி செய்தபோது இது அரசன் வசிக்கும் இடமாகியது (1 அர 18:45-46). ஒருவேளை குளிர்கால வாசம் செய்யும் இடமாக இருந்திருக்கலாம் (காண்க ஆமோ 3:15) எலியா மிகவும் வன்மையாகக் கண்டித்த நாபோத்தின் திராட்சைத் தோட்டம் பற்றிய நிகழ்ச்சி நடைபெற்றது இங்குதான் (1 அர 21). ஆகாபின் மகன் யோராம் அசீரிய அரசனான சுசாயேலிடம் தான்பெற்ற காயங்களைக் குணப்படுத்த இங்கு தான் வந்தான் (2 அர 8:29; 2 நாள் 22:6). ஏகூவின் கிளர்ச்சியின் போது இஸ்ராயேலில் வேறு எந்த நகரத்தையும்விட அதிகம் இரத்தம் சிந்தப்பட்ட நகரம் இதுவே. யோராம், ஈசபேல் மற்றும் இஸ்ராயேலின் அதிகாரிகள் கொல்லப்பட்டதும், யூதா நாட்டு அகசியா காயமடைந்ததும், ஆகாபின் புதல்வர்களது தலைகள் சமாரியாவிலிருந்து அனுப்பப்பட்டதும் இவ்விடம்தான் (2 அர 9:1; 10:11).

இசியா (ISSHIJAH - யாவே மறப்பாராக)

புறவின மனைவியை விலக்கி விடுமாறு எஸ்ராவால் வற்புறுத்தப்பட்ட ஒரு லேவியர் (எஸ் 10:31).

இசுபா (ISHPAH - இறைவன் நீதி வழங்குவாராக)

பென்யாமின் இனத்தைச் சேர்ந்த பெரியாவின் மகன் (1 நாள் 8:16).

இசுபான் (ISHPAN - இறைவன் நீதி வழங்குவாராக)

பென்யாமின் இனத்தைச் சேர்ந்த சாசாக்கின் மகன் (1 நாள் 8:22).

இசுமயேலர் (ISHMAELITES)

நில அமைப்பு இனக் குறிப்பு எதுவுமின்றி வட அராபியாவில் கெவிலா எகிப்து, யூப்பிரத்திசு இவைகளுக்கிடையே உள்ள பாலைவனப்பகுதியில் கி.மு. 8-ம் நூற்றாண்டு வரை வாழ்ந்த ஒரு குலத்தினரைக் குறிக்கும் பெயர். இவர்கள் சுற்றித் திரியும் வியாபாரிகளாகவும், கூடாரத்தில் வாழ்பவர்களாகவும், ஒட்டகம் வளர்ப்பவர்களாகவும் இருந்தனர் (ஆதி 25:18).

1. தோற்றம்:- இவர்கள் ஆபிரகாமுக்கும் ஆகாருக்கும் பிறந்த இசுமயேலின் வழித் தோன்றல்கள் (ஆதி 25:18-19). இசுமயேலின் தாய் எகிப்து நாட்டைச் சேர்ந்தவளாகையால் அவர்களின் நாளங்களில் சிறிது எகிப்திய இரத்தம் ஓடியது (ஆதி 16:1). இசுமயேலின் மனைவியும் எகிப்து நாட்டைச் சேர்ந்தவளே என்று ஒரு பிற்கால மரபுகூறுகிறது (ஆதி 21:8-21).

2. இசுமயேல்குலத்தினரும்யோசேப்பும்:- இசுமயேல் குலத்தினரைப் பற்றிய குறிப்பு விவிலியத்தில் சில இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. முதன் முதலில், எகிப்துக்கு வாசனைப் பொருட்களை ஒட்டகத்தின் மேல் ஏற்றிச் சென்ற இசுமயேலரிடம் யோசேப்பை விற்றதாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 37:25.27.28; 39:1). இஸ்மாயேலர் என்ற சொல் இங்கு பயன்படுத்தப்பட்டிருப்பது காலமயக்கமானது என்று பல வல்லுநர்கள் கருதுகிறார்கள். ஏனெனில், மூதாதையரின் தலைமுறை அட்டவணையின்-படி, இசுமயேல் யோசேப்பின் காலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். எனினும் மேலே கூறப்பட்டது போல இசுமயேலர்கள் குறிப்பிட்ட நில அமைப்போ இனக் குறிப்போ இல்லாத நாடோடி வியாபாரிகளாதலால், தெளிவான காலக்கணிப்பு இங்கு இல்லை எனலாம்.

3. இசுமயேலர்களும் மிதியானியர்களும்:- நீதிபதிகளின் காலத்தில் இசுமயேலர்களும் மிதியானியர்களும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். கிதயோன் மிதியானியர்களைத் தோற்கடித்தபோது, இஸ்ராயேல் மக்கள் மிதியானியர்களிடமிருந்து கொள்ளையடித்த கடுக்கன்களை அவரிடம் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள்

விடுத்தார். ''அவர்களிடம் கடுக்கன் இருந்தது. ஏனெனில் அவர்கள் (மிதியானியர்கள்) இசுமயேலர்களாவர்'' (நீதி 8:24) என்று கூறப்பட்டுள்ளது. இசுமயேலர்களும் மிதியானியர்களும் நாடோடிகளாக இருந்ததால் ''இசுமயேலர்கள்'' என்ற சொல்லும் ''நாடோடி வியாபாரிகள்'' என்ற சொல்லும் ஒரே பொருளைத் தருவனவாக இருக்கலாம்.

4. இசுமயேலரைப் பற்றிய மற்ற குறிப்புகள்:- சங் 83:6-இல் இசுமயேலர்கள், இஸ்ராயேலுக்கு எதிராக சதி செய்யும் ஏதோமியரோடு குறிப்பிடப்பட்டுள்ளனர். 83-ம் சங்கீதம் பிற்காலத்தைச் சேர்ந்தது என்று பல வல்லுநர்கள் கருதுகிறார்கள். சிலர் அது மக்கபேயர் காலத்தைச் சேர்ந்தது என்றும் கூறுகிறார்கள். ஆனால் அது பிற்காலத்தைச் சேர்ந்தது என்பதற்கு சங்கீதத்திலே ஒரு சான்றும் இல்லை. இச்சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர்களிலிருந்து (83:6-8) எட்டாம் நூற்றாண்டின் வரலாற்றுச் சூழ்நிலையில் இது எழுதப்பட்டது போன்று தெரிகிறது.

தாவீதின் சகோதரியான அபிகயில் இசுமயேல் குலத்தைச் சேர்ந்த எத்தேர் என்பவரை மணந்தாள் என்றும் (1 நாள் 2:17), தாவீதின் ஒட்டகங்களை இசுமயேல் குலத்தினனான ஒபில் கண்காணித்து வந்தான் என்றும் (1 நாள் 27:30) நாளாகமம் கூறுகிறது.

5. இசுமயேலர்களின் வழித்தோன்றல்கள்:- இசுமயேலிடமிருந்து 12 தலைவர்கள் உதித்ததாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 17:20; 25:12-16). இதன்மூலம் இசுமயேல் குலத்தார் ஒரு ''பெரிய இனமாக'' உருவானார்கள் என்பதை எபிரேயர்கள் அறிந்து கொண்டனர் (ஆதி 21:18). விவிலியத்திற்குப் புறம்பே உள்ள பல வரலாற்று ஏடுகளில் இசுமயேலயர் பலரின் பெயர் காணப்படுகிறது. 7-8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல அசீரிய இலக்கியங்களில் நெபயோத்து, கேதார், தூமா, அபிதேல், மாசா, தேமா போன்ற இசுமயேலர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. மிபிசாம், மிசிமா, அதாது ஆகியவர்கள் இன்னும் யாரென்று கூறமுடியவில்லை. முதல் இருவரும் சிமெயோனுடைய புதல்வர்கள் என்று 1 நாள் 4:24-25 கூறுகிறது. ஒருவேளை இவர்கள் அராபிய இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். எத்தூர் என்பவர் அசீரிய ஆவணங்களில் காணப்படும் அகரியர் என்ற குலத்தோடு தொடர்புடையவர்; கேதமா என்பவர் பெனேகெதேம் என்பவரின் வழித்தோன்றல் எனத் தெரிகிறது. இந்த இசுமயேலர்கள் எல்லோரும் பாலஸ்தீன் நாட்டிற்கு கிழக்கேயுள்ள சீரியா பாலைவனத்தில் கி.மு. முதலாம் ஆயிரம் ஆண்டுக் காலத்தின் முதலாம் நூற்றாண்டுகளில், செழிப்போடு வாழ்ந்து வந்தார்கள். கி.பி. முதலாம் நூற்றாண்டில் யோசிபஸ் இசுமாயேலர்களை அராபியாவோடு தொடர்புபடுத்தினார். ஆனால் பழைய ஏற்பாடு முழுவதிலும் இசுமயேலர்கள், அரபா தீபகற்பத்தில் குடியேறிய யோக்கிதான் இனத்தாரினின்று வேறுபடுத்தப்படுகிறார்கள்.

இசுமயேல் (ISHMAEL - இறைவன் கேட்டருளினார்)

முதலிலேயே இசுமயேல் என்ற பெயரின் பொருள் பற்றிய குறிப்பு விவிலியத்தில் தெளிவாக காணப்படுகிறது; ''''உன் இன்னலைக் கண்டு ஆண்டவர் இரங்கினதாலே'' அவனுக்கு இசுமயேல் என்று பெயரிடுவாயாக'' (ஆதி 16:11). இப்பகுதி யாவே மரபில் இருந்தாலும் மூலத்தில், இது ''எலோகீம்'' பாரம்பரியத்தில் இருந்திருக்க வேண்டும். இதைப் பெயரே சுட்டுகிறது.

விவிலியத்தில் மேலும் இரு பகுதிகளில் இதன் பொருள் பற்றிக் கூறப்பட்டுள்ளது; அவை எலோகீம் மரபிலிருந்து ஒன்றும் (ஆதி 21:17), குருக்கள் மரபிலிருந்து மற்றொன்றும் (17:20) ஆகும். இரண்டுமே 'கேட்டல்' என்றதன் முற்றுப்பெற்ற வினைச் சொல்லையே பயன்படுத்துகின்றன. ''கடவுள் கேட்கிறார்'', ''கடவுள் கேட்பார்'' என்று இதை மொழி பெயர்க்கலாம் என்றாலும் ''கடவுள் கேட்பாராக'' என்ற வியங்கோளில் மொழி பெயர்த்தலே நல்லது. மாரி

ஏடுகளில் இப்பழைய ஏற்பாட்டுப் பெய ருக்கு இணையாக யா-அஸ்-மா-அக்-அன் என்ற பெயர் காணப்படுகிறது.

1. ஆபிரகாமுக்கும் ஆகாருக்கும் பிறந்த வர். ஈசாக்கின் ஒன்று விட்ட சகோதரன் (ஆதி 25:12; 1 நாள் 1:28). ஆதியாகமத்தில் வரும் மூன்று மரபுகளிலும் இசுமயேலைப் பற்றிய மரபு காணப்பட்டாலும், இசுமயேல் என்ற நபரைப் பற்றி சிறு குறிப்புதான் காணப்படுகிறது.

யாவே மரபின் ஆசிரியர், இசுமயேல் என்ற சொல்லின் பொருளை விளக்கி விட்டு, ''அவன் கொடும் குணமுள்ள மனித னாய் வளர்வான். அவனுடைய கை எல் லோருக்கும் விரோதமாகவும், எல்லோரு டைய கையும் அவனுக்கு விரோதமாகவும் ஓங்கியிருக்கும். தன் சகோதரர் அனைவரும் வாழ்ந்து வரும் இடத்தில் அவர்களுக்கெதி ராக அவன் குடியிருப்பான்'' என்றும் கூறுகி றார் (ஆதி 16:12). ஆனால் இது இசுமயேலர் கள் என்னும் குலத்தைப் பற்றிக் கூறப்பட்ட தாகும்.

'எலோகிம்' மரபின்படி, இசுமயேல் சாரா வின் புதல்வனான ஈசாக்கோடு கேலி பண்ணி விளையாடுவதை சாரா கண்டு, பொறாமை கொண்டு, ஆகாரையும் இசும யேலையும் துரத்திவிட வேண்டுமென்று ஆபிரகாமை வற்புறுத்தினாள். பெயேர்-செபா என்னும் பாலைவனத்திலே ''கடவுள் குழந்தையின் குரலைக் கேட்டு'', தண்ணீர்க் கிணறு ஒன்றை ஆகார் காணச் செய்தார். கடவுளின் துணையோடு இசுமயேல் பரான் என்னும் பாலைவனத்தில் வாழ்ந்தான். அப் போது அவனுடைய தாய் எகிப்து நாட்டி னின்று ஒரு பெண்ணைக் கொண்டு வந்து அவனுக்கு மணமுடித்து வைத்தாள் (ஆதி 21:8-21). ''வில் வித்தையில் கைதேர்ந்தவனா னான்'' (21:20) என்ற குறிப்பு இசுமயேல ரைப் பற்றியதாகும். ஈசாக்கு, இசுமயேல் இவர்களின் பிரிவு பற்றி விவரிப்பு, இவர்க ளைப் பற்றியதைவிட இவர்களின் குலத்தின ரைப் பற்றியதேயாகும்.

குருக்கள் மரபு, இசுமயேலைப் பற்றி சில குறிப்புகளைத் தருகிறது. ஆகார் இசுமயே லைப் பெற்றபோது ஆபிரகாமுக்கு வயது எண்பத்தாறு என்றும், ஆபிரகாமால் அவன் பெயரிடப்பெற்றான் என்றும் (16:15-16) குருக்கள் மரபு ஆசிரியர் கூறுகிறார். 13-ம் வயதில் இசுமயேலுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது (17:22-27); ஆபிரகாம் இறந்த போது ஈசாக்கும் இசுமயேலும் சேர்ந்து அவரை அடக்கம் செய்தார்கள் (25:9); இசுமயேல் 137 வயது வரை வாழ்ந் தார் (25:17) என்ற செய்திகளையும் அவர் குறிப்பிடுகின்றார். மேலும், இசுமயேலின் வழித்தோன்றல்களாகிய அவரது 12 புதல்வர் களையும் (ஆதி 25:12-16; 1 நாள் 1:29-31), மகலாத்து என்ற புதல்வியையும் (ஆதி.28:9) குறிப்பிடுகின்றார். ஆனால் இப்பட்டியல் கள் இசுமயேலைவிட இசுமயேலர்களுக்கே மிகவும் பொருந்தும்.

இசுமயேலைப் பற்றி சிறிதளவே கூறப் பட்டிருப்பினும் இசுமயேல் என்ற குழந்தை மனிதனின் அவநம்பிக்கைக்கும் இறைவ னின் நன்மைத்தனத்திற்கும் சான்றாக விளங் குகிறது.

கடவுள் ஆபிரகாமுக்கும் சாராவுக்கும் ஒரு மகன் பிறப்பான் என்று உறுதியளித்திருந்தார் (ஆதி 15:4; 17:16.19.21; 18:10.14). இருந்தா லும், இறைவன் இவ்வாக்குறுதியை நிறை வேற்ற முடியுமா என அவர்கள் ஐயம் கொண்டனர் (17:17; 18:12-15; 15:2-3). விரக் தியடைந்த நிலையில், ஆகாரோடு சேர்ந்து ஆபிரகாமுக்குக் குழந்தை ஒன்று பிறந்தது (16:1-6). ஈசாக்கு பிறந்த பிறகு இசுமயேல் ஈசாக்கோடு பங்காளியாக இருக்கக் கூடாது என்பதற்காக சாரா ஆபிரகாமிடம் சொல்லி ஆகாரையும் இசுமயேலையும் துரத்தி விட் டாள் (21:8-10; கலா 4:21-31). ஆதி 21 மனிதனிடம் சந்தேகம் எவ்வாறு வளர்கிறது என்று காட்டுகிறது. சாரா அவநம்பிக்கை யுற்ற நிலையில் பிறந்த குழந்தையாகிய இசுமயேல் இறைவனின் நன்மைத்தனத்தை அவர்களுக்கு உணர்த்துவதற்கு தடையாக இருப்பதாக ஆபிரகாமும் சாராவும் நினைத்

தார்கள். இந்நிலையின் கொடுமையைக் குறைத்துக்காட்ட வல்ல, பத்து வருடங்கள் காத்திருத்தல் (ஆதி 16:3), வேலைக்காரியின் அலட்சியம் (16:4), சாராவின் வருத்தம் (16:5), ஆகார், இசுமயேல் இவர்கள்மேல் ஆபிரகாம் கொண்டிருந்த அன்பு (21:11,14) போன்ற சூழ்நிலைகள் இருந்தபோதிலும், இசுமயேலின் வரலாறு விசுவாசத்திற்கும் சந்தேகத்துக்கும் இடையே நிகழும் இடுக்கண் நிலையை படம் பிடித்துக் காட்டுகிறது. இக்கண்ணோட்டத்தில் பார்த்தோமென்றால், ஆபிரகாம், சாரா, ஆகார் எல்லாருமே விசுவாசம் குறைந்தவர்களென குற்றம் சாட்டப்படலாம்.

இசுமயேலின் வழியாக இறைவன் தாம் நம்பிக்கைக்குரியவர் என்றும், கருணை மிகுந்தவர் என்றும் நிரூபிக்கிறார். ஒவ்வொருவருக்கும் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவு செய்வதில் இறைவன் விசுவாசத்துக்குரியவர். இறைவன் ஆபிரகாமுக்கும் சாராவுக்கும் ஈசாக்கைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், ஆகாரின் குரலைக் கேட்டு இசுமயேலைக் காப்பாற்றி, அவனை மாபெரும் இனமாக விருத்தியடையச் செய்து, பன்னிரண்டு தலைவர்களைப் பெறச் செய்தார் (ஆதி 16:01; 17:20; 21:13; 25:16). யூத, மகமதியப் பாரம்பரியங்களில் இகமயேல் பாலைவனத்தில் வாழும் இனத்தின் மூதாதையராகக் கருதப்படுகிறார். அராபியர்கள் இவரைத் தங்கள் மூதாதையராக வணங்குகின்றனர். மகமதியப் பாரம்பரியப்படி இவரும் ஆகாரும் மெக்காவிலுள்ள புனித காபாவில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

2. நெத்தனியாவின் மகன். யூதாவின் அரச குலத்தில் பிறந்த இவர் நெபுக்கதுனேசார் கி.மு.586-இல் ஏற்படுத்திய யூதேய பொம்மை அரசாட்சியை வீழ்ச்சியடையச் செய்தார் (2 அர 25:25). அம்மோனிய அரசனின் தூண்டுதலால் (எரே 40:14; காண்க 41:10, 15), இசுமயேல் தன்னோடு பத்து பேரைச் சேர்த்துக் கொண்டு மிசுப்பாவுக்கு வந்து கெதலியாவையும் அவரோடிருந்த யூதரையும் கல்தேயர்களையும் வெட்டி வீழ்த்தினார் (எரே 40:7-10. 13-16; 41:1-3). பிறகு நம்பிக்கைத் துரோகம் செய்து மிசுப்பாவிற்குத் தொழ வந்த எழுபது இஸ்ராயேலர்களையும் கொன்றார் (எரே 41:4-9). மிசுப்பா நகரின் மற்ற குடிமக்களை அம்மோனியர்களிடம் ஒப்படைத்து அடிமைகளாக்கினார். இவர்களை யோகனான் மீட்டார். ஆனால் இகமயேலும் அவனது எட்டுக் கூட்டாளிகளும் தப்பியோடிவிட்டார்கள்.

3. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த சவுலின் வழித்தோன்றலான ஆசேல் என்பவரின் மூன்றாவது புதல்வர் (1 நாள் 8:38; 9:44).

4. கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் யோசாபாத்து அரசனின் காலத்தில் யூதாவில் ஆளுநராக இருந்த செபதியாவின் தந்தை (2 நாள் 19:11).

5. யோகானானின் மகன். யோவாசை அரசனாக்க உதவி செய்த ஐந்து ''நூற்றுவர் தலைவர்களில்'' ஒருவர் (2 நாள் 23:1).

6. எஸ்ராவின் காலத்தில் தங்களது புறவின மனைவிகளை விலக்கியவர்களில் ஒருவரான இவர், பசிகூரின் புதல்வராவார் (எஸ்ரா 10:22).

இகமாக்கியா (ISMACHIA - யாவே ஆதரவு அளிக்கிறார்)

அரசன் எசக்கியா காலத்திய ஒரு லேவியர். ஆலய வரிகளுக்கு மேற்பார்வையாளராக இருந்தார் (2 நாள் 31:13).

இசுமாயா (ISHMAIAH - யாவே கேட்கிறார்)

1. கிபயோனைச் சேர்ந்தவர். தாவீது சிக்கிலாகு நகரில் இருந்தபோது அவருடைய படையில் சேர்ந்த பென்யாமின் குலத்தினரான படைவீரர்களில் ஒருவர் (1 நாள் 12:4). தாவீதின் படையில் திறமை வாய்ந்த முப்பதின்மருக்கு இவர் தலைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தாவீதின் ஆரம்ப காலத்தில் இருந்த இந்த முப்பது பேரும் பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். பிற்காலத்தில் தாவீதின் வலிமைமிக்க

''முப்பது பேரிலிருந்து'' இவர்கள் வேறுபட்டவர்கள்.

2. தாவீது அரசனின் காலத்தில் செபுலோனியருக்குத் தலைவனாகத் திகழ்ந்தவர். ஒபதியாவின் மகனாவார் (1 நாள். 27:19).

இசுமெராய் (ISHMERAI - யாவே பாதுகாப்பாராக)

பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத் தலைவர். ஏல்பாவின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள். 8:18).

இசுரகியர் (IZRAHITE (தேவன்) ஒளிர்வாராக)

தாவீதின் படையில் 5-ஆம் பிரிவுக்குத் தளபதியான சங்கூத்துக்குச் சாற்றிக் கூறப்படும் ஓர் இனப்பெயராகும் (1 நாள் 27:8) இசுர என்ற குடும்பத்திலிருந்தோ நகரிலிருந்தோ வந்தவர். இப்பெயர் விவிலியத்தில் ஒரு தடவைதான் வருகிறது. இப்பெயர் இசுரகியா என்ற பெயரிலிருந்து வருவதாகச் சில அறிஞர்கள் கருதினாலும், இது அநேகமாக 1 நாள் 27:11-இல் வரும் செராகியரோடு தொடர்புடையதாக இருக்கலாம்.

இசுரகியா (IZRAHIAH - யாவே ஒளிர்வாராக, யாவே எழுவாராக)

இசக்காரின் இனத்தைச் சேர்ந்த தோலாவின் வழித்தோன்றலும் ஊசியின் மகனுமாவார் (1 நாள் 7:3).

இசுரகியா (JEZRAHIAH- P,)

நெகமியா ஆலயத்தில் லேவியர் பாடர் குழுவின் தலைவர் (நெக 12:42). 1 நாள் 7:3-இல் இசுரகியா (முபுமுபு)என்றழைக்கப்படுகிறார்.

இசுரி (IZRI - யாவே உருவாக்கினார்)

தாவீதின் காலத்தில் ஆலயப்பாடகர்களின் ஐந்தாம் குழுவின் தலைவர் (1 நாள் 25:11). ஒருவேளை எகுத்தூனின் மகனாக இருக்கலாம். 1 நாள் 25:3-இல் வரும் செரியும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

இசுலியா (IZLIAH - முடிவில்லாத)

பென்யாமின் குலத்தைச் சேர்ந்த சாரயிமின் வழித்தோன்றலும் ஏல்பாவின் மகனுமாவார் (1 நாள் 8:18).

இசுவா (ISHVAH - ஒத்திரு, போன்றிரு)

யாக்கோபு, சில்பா இவர்களின் வழி வந்த ஆசேரின் இரண்டாவது மகன் (ஆதி 46:17; 1 நாள் 7:30). இதற்கு இணையான எண் 26:44-இல் காணப்படும் பட்டியலில் இப்பெயர் குறிப்பிடப்படாததால், இப்பெயர் இசுவி என்ற பெயரின் வேறொரு வடிவமாக இருக்கலாம்.

இசுவி (ISHVI - கை முடமானவன்)

1. ஓர் இனப் பெயர் முதல்வரின் பெயர். ஆசேரின் மூன்றாவது புதல்வர் (ஆதி 46:17; எண் 26:44; 1 நாள் 7:30). இவரது வழித்தோன்றல்கள் இசுவியர் என்றழைக்கப்பட்டனர் (எண் 26:44).

2. சவுல் அரசனின் புதல்வர்களில் ஒருவர் (1 சாமு 14:49). சில அறிஞர்கள் இவன் இசிபோசத்துதான் எனக்கருதுகின்றனர்.

இசை (MUSIC)

யூதர்களின் கலாச்சாரத்தில் இசை என்பது ஒரு முக்கிய பங்கை வகித்துள்ளது என்பதை பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளிலிருந்து நாம் அறிகின்றோம். இலாமேக்கின் மகன் யூபால் ''யாழ் மீட்டுவோர், குழல் ஊதுவோர் அனைவரின் தந்தை'' என அழைக்கப்படுகின்றார் (ஆதி 4:21).

தொடக்க காலத்தில் இசை வெளி உலகக் காரியங்களுக்குத்தான் பயன்படுத்தபட்டது. பிறகுதான் இசை ஆலய வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டது. இசையைப் பற்றி முதல் குறிப்பு லாபான் தன் மருமகன் யாக்கோபு இரகசியமாக ஓடியதைக் கேட்டு, அவனிடம் ''எனக்கு ஒன்று அறிவிக்காமல் என்னை ஏமாற்றிவிட்டு, ஏன் இரகசியமாய் ஓடிவந்தாய்? நான் மேளதாள வாத்தியங்களுடன் மகிழ்ச்சியாய் உங்களை வழியனுப்பி வைத்திருப்பேனே'' என்று கூறுவதாகக்

காணப்படுகின்றது (31:27). மகிழ்ச்சியான நேரங்களில் பாடலுடன் ஆடலும் ஆடி நேரத்தைக் கழித்தார்கள். போருக்குப்பின் வெற்றியின்பாடல் பாடப்பட்டது (யாத் 15:1 தொ; நீதி 5:1 தொ.). பாரவோன் மன்னனும் அவன் குதிரைப்படையும் வீழ்ச்சியுற்றதைக் கேட்டு மோசேயின் தங்கை மிரியாமும் மற்றுமுள்ள பெண்களும் கஞ்சிராக் கொட்டிக் கொண்டு பாடியும், ஆடியும் கொண்டாடினர் (யாத் 15:20 தொ.). யோசபாத்தும் அவனுடைய மக்களும் இறைவன் தங்களுக்கு கொடுத்த வெற்றியைக் கண்டு, எருசலேமுக்கு வந்து தம்புருகளையும், சுரமண்டலங்களையும் எக்காளங்களையும் ஒலித்து ஆண்டவரின் ஆலயத்திற்குள் நுழைந்தனர் (2 நாள் 20:28). வழக்கமாக திருவிழாக்களில் இசை, பாடல், ஆடல் அனைத்தும் இருக்கும் (ஏச 5:12; ஆமோ 6:5), அறுவடையின் போது திராட்சைத் தோட்டங்களிலே பாடல்கள் பாடுவார்கள் (ஏச 16:10). திருமண விழாக்களிலும் (1 மக் 9:37.39) இவைகள் இருக்கும். அரசர்கள் தங்களுக்கு என தனியாக பாடகர் குழுவினரையும் இசைக்கலைஞர்களையும் வைத்திருந்தார்கள் (2 சாமு 19:35; திருவுரை 2:8). ஆடு மேய்க்கும் சிறுவன் கூட கையில் யாழ் வைத்திருந்தான் (1 சாமு 16:18). இளைஞர்கள் வாயினின்று இசையைக் கேட்டு மகிழ்ந்தார்கள் (புல 5:14). விலைமாதர்கள் வீணையைக் கையிலெடுத்து இசையை எழுப்பி தங்களை நினைக்கச் செய்தார்கள் (ஏச 23:16)

துக்கத்திலும் மகிழ்ச்சியிலும் இசையை எழுப்பினார்கள். இதற்கு புலம்பல் ஆகமமும், சவுல், யோனத்தான் மீது தாவீது பாடிய புலம்பலும் எடுத்துக்காட்டாக உள்ளன (2 சாமு 1:18-27). அடக்கத்தின் போது புலம்புவதற்காக புலம்புதலையே தொழிலாகக் கொண்டவர்களை வாடகைக்கு அமர்த்தினார்கள். இவர்களில் தாரை ஊதுவோரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (மத் 9:23). ஒரு ஏழையின் மனைவியின் அடக்கத்திற்கு கண்டிப்பாக இரண்டு புல்லாங்குழல் வாசிப்பவர்களும் ஒரு ஒப்பாரி வைக்கும் பெண்ணும் இருப்பார்கள் என்று பழம் ஏடுகளிலிருந்து அறிகிறோம்.

இசை யூதர்களின் கலாச்சாரத்தில் மட்டுமன்று அவர்களின் சமயத்திலும் முக்கிய பங்கை வகித்தது. 1 நாள் 15:16-24-இல் தாவீது எவ்வாறு லேவியர் பாடகர் குழுவை அமைத்தார் என்பது தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர இன்னும் பல குறிப்புகள் மறைமுகமாக இசை ஆலய வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறுகின்றன.

யூத இசைக்கலைஞர்கள் எந்த வகையைச் சார்ந்து இசையை இசைத்தார்கள்? ஏதாவது ஒரு முறையைக் கைப்பற்றினார்களா? என்பது நமக்கு தெளிவாகப் புலப்படவில்லை. யூதர்களின் இசைக்குறிமானத்தை வெளியிடுவதற்கு முயற்சி செய்கின்றார்கள். ஆனால் இவ்விசைக்குறிமானங்கள் ஒப்பிக்கும் முறையில்தான் உள்ளதே தவிர அவை இசைக்குறிப்பாகக் காணப்படவில்லை. இசைக்கருவிகளோடு இசைக்கப்பட்ட இசை (ஆலய வழிபாட்டில்) நமக்கு தெளிவாகத் தெரியவில்லை என்றாலும் சங்கீதங்களின் அமைப்பைக் கொண்டு, இது இருபாடகர் குழுவினால் பாடப்பட்டதா (சங் 13:20;38) அல்லது ஒரே பாடகர் குழுவினால் பாடப்பட்டதா (சங் 86:88) அல்லது பொதுநிலையினர் அனைவராலும் பாடப்பட்டதா என்பதைப் புரிந்து கொள்ளலாம். நாடு கடத்தப்பட்டபின் வந்த காலத்தில் பாடகர்குழுவானது ஆண்பாடகர்களையும் பெண்பாடகர்களையும் சமமாகக் கொண்டிருந்தது. அவர்கள் பாடினார்கள் என்று கூறுவதைக் காட்டிலும் ஓதினார்கள் என்று கூறலாம். ஆனால் எப்படி ஓதினார்கள் என்பது நன்கு தெரியவில்லை. கண்டிப்பாக இப்போதுள்ள முறையை விடுத்து வேறு விதமாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

இசைக்கருவிகள் (MUSICAL INSTRUMENTS)

ஏடுகளிலிருந்தும் தொல்பொருள் கண்டுபிடிப்புகளிலிருந்தும் விவிலியத்தில் வரும் இசைக் கருவிகளைப் பற்றி அறிகிறோம்.

இக்கருவிகளைப் பாகுபடுத்துவதும் தமிழில் மொழி பெயர்ப்பதும் கடினம். அவற்றிற்குரிய எபிரேயச் சொற்களைக் கொண்டே பாகுபடுத்திப் புரிந்து கொள்வது அவசியம்.

எபிரேயர்கள் தாங்கள் பயன்படுத்திய இசைக்கருவிகளை நரம்பிசைக் கருவிகள், குழல் இசைக் கருவிகள், தாளக்கருவிகள் என மூன்று பெரும் வகைகளாகப் பிரித்தனர் என்று கூறலாம்.

I. நரம்பிசை அல்லது தந்திக் கருவிகள்:- இவை கைவிரல்களால் அல்லது கம்பியினால் வருடி இசைக்கப்படும். மூன்று முதல் பன்னிரண்டு நரம்புகள் இருக்கும். பெரும்பாலும் செல்வந்தர்களால் பயன்படுத்தப்பட்டதால் வெள்ளியாலும் தந்தத்தாலும் செய்யப்பட்டிருக்கும். இவற்றில் குறிப்பிடத்தக்கவை:-



நரம்பிசை அல்லது தந்திக் கருவிகள்

1. ''கின்னோர்'' எனப்படும் யாழ் (ஆதி 4:21; 1 சாமு 10:5; 16:16; 2 சாமு 6:5; யோபு 21:12; சங் 150:4; ஏச 5:12).

2. ''நேபெல்'' எனப்படும் வீணை. கின்னோரைவிடப் பெரியது. பல நரம்புகளையுடையது (1 சாமு 10:5; 2 சாமு 6:5; சங் 150:3; ஏச 5:12; 14:11; ஆமோ 5:23; 6:5).

3. முக்கோணவடிவமுடைய நான்கு நரம்புகளைக் கொண்ட கருவி (தானி. 3:5.7.10.15).

குழலிசை அல்லது ஊது கருவிகள்:-

1. ''கலீல்'' எனப்படும் நாகசுரம். இது பலவகைப்பட்டது. சில சமயம் இரட்டைக் குழல் கொண்டதாக இருக்கும் (1 சாமு 10:5; 1 அர 1:40; ஏச 5:12; 30:29; தானி 3:5.7.10.15).

குழலிசை அல்லது ஊது கருவிகள்

2. ''ஊகாபு'' எனப்படும் பல குழல்கள் கொண்ட பல ஒலி எழுப்பக் கூடிய கருவி (ஆதி 4:21; யோபு 21:12; 30:31).

3. பைக்குழல் (தானி 3:5.7.10.15).

4. எக்காளம், கொம்பு: எபிரேயர்களி டையே இக்கருவிகள் ஆட்டுக்கொம்பாலும் மாட்டுக்கொம்பாலும் செய்யப்பட்டிருக்கும் (யோசு 6:4; தானி 3:5.7.10.15; நீதி 3:27; சங் 150:3). சில சமயம் வெள்ளியினாலும் *(எண் 10:1)* வெண்கலத்தினாலும் செய்யப் பட்ட எக்காளங்கள் பயன்பட்டன.

III. *தாளக்கருவிகள்:-*

1) ''தோபு'' எனப்படும் கஞ்சிரா, சிறுமு ரசு அல்லது கை முரசு. இது மேளம் என்றும் (1 சாமு 18:5; 2 சாமு 6:5; 18:1; ஏச 5:12) தம்புரு என்றும் (யாத் 15:20; யோபு 21:12; சங் 68:23; 150:4) கூறப்படுகிறது. இவற்றுள் தமுக்கு சதங்கை போன்றவை உள்ளடங்கும்.



தாளக்கருவிகள்

2) கைத்தாளம்: இது பலவகைப்பட்டது (2 சாமு. 6:5; 1 நாள் 16:5) சிங்கி, அல்லது சால்ரா போன்றவை இதனுள் அடங்கும்.

3) முக்கோணக்கருவி (1 சாமு 18:6)

V ஒவ்வொருகருவியும் எபிரேயக் கலாச் சாரத்தின் வெவ்வேறு கூறுகளோடு தொடர் புடையது. இவை வேறுபட்ட சூழ்நிலை யில் பயன்பட்டன. இவ்வாறு கின்னோர், நேபெல் போன்றவைக் கைத்தாளக் கருவிக ளுடன் ஆலய வழிபாட்டில் பயன்பட்டதா கத் தெரிகிறது *(1 அர 10:12; 1 நாள் 25:1; 2 நாள் 29:25).* குழலிசைக் கருவிகள் பொழு துபோக்கிற்கும் சிற்றின்பச் சூழ்நிலையிலும் பயன்பட்டன *(ஏச 5:12).* ஆகையால் ஆலய வழிபாட்டில் பயன்படவில்லை. புனித மேட்டு இடங்களுக்குப் போய் வரும் ஊர்வ லத்தில் பயன்பட்டன *(1 சாமு 10:5; 1 அர 1:40).* திருப்பயணிகள் விழா ஊர்வலத்தில் இவற்றைப் பயன்படுத்தினர் *(ஏச 30:29).* மரணதுக்க காலத்தில் இவை சிறப்பாக பயன்பட்டதாகத் தெரிகிறது *(எரே 48:36; மத் 9:23).* தோபு போன்ற கருவிகள் கொண் டாட்டங்களிலும் வரவேற்புகளிலும் பயன் பட்டன; இவற்றை பெரும்பாலும் பெண் களே கையாண்டனர் *(ஆதி 31:27; யாத் 15:20; நீதி 11:34; 1 சாமு 18:6).* முறையான சடங்குக் கொண்டாட்டங்களில் தவிர, இவை குழுக் கொண்டாட்டங்களிலோ இறைவாக்குப் பரவசநிலையிலோ பயன் பட்டிருக்கலாம் *(2 அர 3:15).*

எக்காளங்களும் கொம்புகளும் முறை யான இசைக்கருவிகள் அன்று. பேரொலி எழுப்பி அடையாளம் காட்டப் பயன்பட் டன *(1 நாள் 15:28; 2 நாள் 15:14; சங் 98:6; ஓசே 5:8).* போரை அறிவிக்க எக்கா ளம் பயன்பட்டது *(எண் 31:6; நீதி 7:19-20; 2 நாள் 13:12.14; 1 கொரி 14:8).* எக்காளங் கள் முக்கிய நிகழ்ச்சிகளையும் *(1 அர 1:34.39)* ஆலயச்சடங்குகளில் முக்கியகட்டங் களையும் *(எண் 10:2.7-8)* அறிவித்தன. பெரும் விழாக்களில் இன்றும் யூதர்கள் இதைப் பயன்படுத்துகின்றனர். இறுதிக்கா லத்தை முன்னறிவிக்கும் கருவியாக இது குறிக்கப்படுகின்றது *(மத் 24:31; 1 கொரி 15:52; 1 தெச 4:16).* ஆட்டுக்கொம்புகள், எருசலேமுக்குள் பெட்டகத்தைக் கொண்டு போதல் *(2 சாமு 6:15)* உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் சடங்கு *(2 நாள் 15:14)* போன்ற சிறப்புப் பொருள் பொதிந்த நிகழ்ச்சிகளில் பயன்பட்டுள்ளன. இதன் சடங்குப் பொருள்

எத்தகையதென்றால் பழைய ஏற்பாட்டு இசைக் கருவிகளில் இது மட்டுமே யூதச்சம யச்சடங்குகளில் இன்றும் பயன்படுகிறது.

இச்சை (LUST)

'இச்சை' என்ற வார்த்தையால் மொழிபெயர்க்கப்படும் விவிலிய வார்த்தைகள், ''உணர்ச்சி மிகுந்த ஆசை'' குறிப்பாக ''பாலுணர்வு சம்மந்தப்பட்ட ஆசைகள் '' அல்லது ''உலக இன்பங்களின் மீதான ஆசைகள்'' என்ற பொருளினை கொண்டதாக அமைந்துள்ளன.

பழைய ஏற்பாட்டில், இந்த வார்த்தை, மட்டுமீறிய புலனுணர்வு கொண்ட அன்பினைக் குறிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய உணர்ச்சி, மத விபச்சாரம் மற்றும் பாலுணர்வு இழிவு ஆகியவற்றின் பின்னணியில் முழு இஸ்ராயேல் மக்களுக்கும், மற்ற நாட்டினருக்கும் சாற்றிக் கூறப்படுகிறது. இச்சையை குறிப்பிடுவதற்கு வேறு பல உருவகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாபிலோன் ''மேய்ச்சலுக்குப் போன காளைகள் கும்மாளம் அடிப்பதாகவும், வலிமைமிக்க வரிக்குதிரைகள் கனைப்பதாகவும்'' விவரிக்கப்பட்டுள்ளது (எரே 50:11). இது நாட்டினுடைய நிலையைப்பற்றி குறிப்பிடுவதாக அமைந்தாலும் தனிப்பட்டவரின் இச்சைபற்றிய அநுபவங்களையும் பிரதிபலிக்கிறது.

புதிய ஏற்பாடு பாலுணர்வு ஆசையுடன் கூடிய ''இச்சை'', உணர்ச்சி பெருக்கு, ''பற்றியெரியும் காம ஆசை'' போன்ற சொற்களைக் கொண்டுள்ளது. ஒருவன் ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்க கூடாது (மத் 5:28). உடல் இச்சையில் மூழ்கும் பாவிகள், அவர்களுடைய உள்ளத்து இச்சைகளின்படி தங்களையே அசுத்தத்திற்குக் கையளித்து ஒருவரோடொருவர் தங்கள் உடல்களை இழிவு படுத்தினர் (உரோ 1:24). உலகிற்கடுத்தவைகளான தீய உணர்ச்சி, தீய விருப்பம் ஆகியவற்றை சாகச் செய்ய வேண்டும் (கொலோ 3:5); விசுவாசி, கடவுளை அறியாத புறவினத்தார் காம இச்சைகளுக்கு இடங்கொடுப்பதுபோல் செய்யாமல், தன் உடலை அடக்கி ஆண்டு மரியாதையாய் நடத்தி, பரிசுத்தமாய் காப்பாற்ற அறிந்திருக்க வேண்டும் (1 தெச 4:4-5). இளமைக்குரிய இச்சைகளைத் தவிர்த்து விடவேண்டுமென்று திமோத்தேயுவிற்கு அறிவுரை கொடுக்கப்பட்டுள்ளது (2 திமோ 2:22). ஏனென்றால் ஒருவன் சோதனைக்குட்படுவது, தன் சொந்த இச்சையாலேதான். இதுவே பாவமாக வளர்ந்து சாவை ஈன்றெடுக்கிறது (யாக் 1:14-15).

விசுவாசிகள் அனைவரும், ஆன்மாவிற்கு எதிராகப் போர்புரியும் ஊனியல்புக்குரிய இச்சைகளினின்று விலகி, புறஇனத்தாருக்கும் முன்மாதிரிகையாக நன்னடத்தையில் சிறந்து விளங்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறார்கள் (1 பேதுரு 2:11-12). இனி அவர்கள் மனித இச்சைகளின்படி வாழாமல், கடவுளின் திருவுளப்படி வாழ்பவர் ஆகின்றனர் (4:2). இச்சையும், தீய உணர்ச்சிகளுமே இவ்வுலகில் ஊழல்களையும், தீமையினையும் உருவாக்குகின்றன (2 பேதுரு 1:4; 2:10; 2:13-14. 18.20-22).

இஸ்ராயேலின் பெயர்களும் தொடர்புகளும்

1. முதுபெரும் தந்தை யாக்கோபுவின் பெயர்:- எலோகிம் (இறைவன்) யாக்கோபுடன் செய்த மற்போரைப்பற்றியும் அதன் விளைவாக யாக்கோபின் பெயர் இஸ்ராயேல் என மாற்றப்பட்டதையும் ஆதி 32:22 தொ குறிப்பிடுகின்றது. இந்நிகழ்ச்சி இப்பெயரின் பொதுப்பாணி சொல்லிலக்கத்தைக் கொடுக்கிறது. இதன்படி, இச்சொல் 'ஏல் மற்போரிடுகிறார்' என்று பொருள்படும். ஆனால், இவ்விளக்கமானது இப்பெயரின் உண்மையான பொருளை அளிக்கவில்லை என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய கருத்தாகும். ஆனால், இஸ்ராயேல் போன்ற பெயருக்கு முடிவான சொல்லிலக்கணம் கூறுவதும் இயலாத ஒன்றாகும். ஆயினும் இப்பெயரை 'நம்பிக்கைகுரிய, வெற்றிகரமான, மகிழ்ச்சிகரமான' என பொருள்படும் 'இஸ்ர்' என்னும் அடிப்படை சொல்லுடன் இணைத்து கூறப்படும் விளக்கம்

பொதுவாக ஏற்றுக்கொள்ளபடக் கூடியதாக உள்ளது. ஆப்பு வடிவ எழுத்து முறையிலும் 'இஸ்ர்-யில், அஸ்ரி-இலிசு' என்ற ஒத்த பெயர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ராயேலை தவிர்த்து பிற வழிகளில் இச்சொற்களை விளக்குவதென்பது செய்யக் கூடியதன்று. சொல்லிலக்கணமுறையில் இஸ்ராயேலை 'அசெர்' என்னும் சொல்லுடன் தொடர்புபடுத்தினால், இஸ்ராயேலானது மூலத்தில் கானானிய இனவிருத்தி தெய்வங்களுடன் தொடர்புடையதாய் கருத வேண்டியிருக்கிறது. ஏனெனில், 'அசெர்' என்னும் சொல்லானது அசேரா' என்னும் கானானிய பெண் தெய்வத்தின் ஆண் இணையினை குறிப்பிடுகின்றது. இப்படியாயின் 'இஸ்ராயேல்' என்னும் பெயர் பழைய ஏற்பாட்டு சமயத்தின் கானானிய அடிப்படையினை குறிப்பிடுகின்றது. மேலும், யாக்கோபின் பெயர் மாற்றமானது, கிழக்கிலிருந்து வந்த பல்வேறு இனத்தவரையும் கானானேய சமயத்தவருடன் இணைப்பதை குறிப்பிடுவதாய் உள்ளது. இத்தகைய நிலையில், 'இஸ்ராயேலின் பாறை' (ஆதி 49:24)-யானது வழிபாட்டு கல்லைச் சுட்டிக் காட்டுவதாகவும், ''யாக்கோபின் வலிமை மிக்க ஒருவர்'' என்பதற்கு இணையாகவும் உள்ளது. இறுதியில் காணும் சொற்றொடர் இனவிருத்தி கடவுளுக்கு அடையாளமாக காளை மாட்டை குறிப்பிடுகிறது.

2. இஸ்ராயேல் மக்களை ஒரினமாக குறிப்பிடும் பெயர்:- இஸ்ராயேல் நாட்டின் வளர்ச்சியைப்பற்றி பழைய ஏற்பாட்டு மரபுகளின்படி, குலமுதியவர்களே மக்களுடைய தொடக்க மூதாதையராக இருந்தனர். இவர்களைப்பற்றிய ஆராய்ச்சியில் பல்வேறு கருதுகோள்கள் கூறப்பட்டுள்ளன. ஒன்று அவர்கள் உண்மையான ஆட்கள் என்றும், மற்றொன்று அவர்கள் வழிபாட்டு நாயகர்களாவார் என்றும் கருதுகின்றன. குலத்தந்தையரைப்பற்றிய பல்வேறு மரபுச்செய்திகளும், அவை குறிப்பிடும் கால கட்டத்திற்கு பிற்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்டமையால், பிற்காலக் கருத்துக்களையும் பெரிதும் தம்முள் கொண்டுள்ளன. எனவே, அவற்றை உண்மையான வரலாற்று ஆதாரங்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுவாக, இவை பல்வேறு இனத்தவரின் தொடக்கக்கால குடியேற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. பிற்காலத்தில் அவற்றில் பல குழுக்கள் ஒன்றாக இணைந்திருக்கலாம். உண்மையில் அவை வழிபாட்டு மையங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. ஆபிரகாம் கெபிரோனுடனும், ஈசாக்கு பெயேர்செபாவுடனும், யாக்கோபு பெத்தேலுடனும் தொடர்புப்படுத்தப் படுகின்றனர். அவை வழிபாட்டுத்தலங்கள் தொடர்புடையவனவாக உள்ளன.

எகிப்திய அடிமை வாழ்வு, எகிப்திலிருந்து வெளியேறுதல், பாலைவன வாழ்வு, யோசுவாவின் தலைமையில் கானான் நாட்டில் நுழைதல் போன்ற நிகழ்ச்சிகளைக் கொண்ட பாரம்பரியங்களில் இஸ்ராயேல் அல்லது இஸ்ராயேல் மக்கள் என்னும் சொல் பொதுவாக இஸ்ராயேல் மக்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகவே குறிப்பிடுகின்றது. இப்பாரம்பரியங்களில் இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களும் அவ்வாறே அழைக்கப்படுகின்றன. பல பகுதிகளில் 'எபிரேயர்' என்ற சொல் உபயோகிக்கப்பட்டிருப்பதும் உண்மையே. கானான் நாட்டை வென்றபின்னர் கூறப்படும் பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளில், 'இஸ்ராயேல்' என்னும் சொல் பன்னிரு கோத்திரங்களையும் ஒன்றாகக்கொண்ட மக்களை ஒன்றாக குறிப்பிடும் சொல்லாகவே உள்ளது (உப ஆகமம்; சாமுவேல்). பன்னிரு கோத்திரங்களின் அட்டவணைகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது சில வேறுபாடுகளையும் நாம் காணலாம். ஆதி. 49-ல் யாக்கோபின் 12 மகன்களைக்காணும் நாம், உப 33-ல் சிமியோனின் கோத்திரம் விடுபட்டிருப்பதையும், யோசேப்பின் கோத்திரம் எப்பிராயிம், மனாசே என்று இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளதையும் காணலாம். பன்னிரு கோத்திர அமைப்பானது பாலஸ்தீனத்தில் உருவானது என்று இப்போது ஏற்றுக்கொள்ளப்படுவதால், முற்காலத்திற்கு குறிப்பிடப்பட்ட இந்த அமைப்பு, வரலாற்று பூர்வமான ஒன்று அல்ல என்பது தெரிகிறது. ஆரம்ப

கால நிகழ்ச்சிகள் அனைத்தும், பல நூற்றாண்டுகால வரலாற்று நிகழ்ச்சிகளின் திட்டமிடப்பட்ட சுருக்கமாக இருக்கலாம்.

3. வடக்கு அரசில் வாழ்ந்த மக்களைக் குறிப்பிடும் பெயர்:- 2 சாமு 2:9.17; 3:10; 19:41; 20:1; 1 அர 12:16 ஆகிய பகுதிகளில் இஸ்ராயேல் என்ற சொல், எப்பிராயிமை மையமாகக் கொண்ட வடக்கு கோத்திரங்களைப்பற்றி குறிப்பிடுகின்றது. இஸ்ராயேலின் மலையானது யோக 11:16.21-இல் காணப்படுகிறது. ஒன்றுபட்டு இருந்த அரசானது இரண்டாக பிரிந்த பின்னர் வடக்கு அரசு இஸ்ராயேல் என்றும் (1 அர 14:19) இஸ்ராயேலின் வீடு (1 அர 12:21; ஓசே 5:1; ஆமோ 5:1; மீக் 1:5) என்றும் அழைக்கப்பட்டது.

4. தெற்கு அரசில் வாழ்ந்த மக்களை குறிப்பிடும் பெயர்:- வடக்கு அரசின் வீழ்ச்சிக்கு பின்னர் சில பகுதிகளில் (ஏச 5:7; மீக் 3:1) தெற்கு அரசு இஸ்ராயேல் என்று அழைக்கப்பட்டது.

5. சமய வழிபாட்டுச் சமுதாயத்தைக் குறிப்பிடும் பெயர்:- பழமையான காலத்திலிருந்து இஸ்ராயேல் என்ற சொல்வானது இஸ்ராயேல் மக்களை, குறிப்பாக கானான் நாட்டில் வாழ்ந்த வடக்கு கோத்திரங்களை குறிப்பிடுவதாக இருந்தது. பெரும்பாலான இஸ்ராயேல் கோத்திரங்கள் கானானியராக அல்லது மற்ற இனக் கோத்திரங்களை சேர்ந்தவர்களாய் இருந்தமையால், இவ்வளர்ச்சியில் கானானியக் கூறுகள் முக்கிய பங்கு வகித்தன. ஆனால் இஸ்ராயேல் அரசு தனது தனிப்பட்ட அரச சிறப்பினை உணர்ந்த பின்னர். 'யாவே' மட்டுமே தேசிய தெய்வம் என்னும் விசுவாசமே இஸ்ராயேல் அரசின் அடிப்படையாக அமைந்தது. இத்தகைய விசுவாசத்தின் விளைவாக இஸ்ராயேல் என்னும் பெயர் யாவே வழிபாட்டோடு இணைந்த வழிபாட்டு ஒற்றுமையைக் குறிக்கும் பெயராக இருந்ததோடு, இஸ்ராயேல் என்ற உருவம் சமயக்குறிக்கோளும் ஆயிற்று (ஏச 1:3; 4:2; 49:3). சமய அடிப்படையுடன் கூடிய இத்தகைய நாட்டு உணர்வானது இஸ்ராயேல் மக்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கருத்திலும், உடன்படிக்கைக் கருத்திலும் குறிப்பாகக் காணப்படவேண்டும். இஸ்ராயேல் மக்களைப்பற்றிய பழைய ஏற்பாட்டு வரலாறு முழுவதிலும் இவையே மீண்டும் மீண்டும் காணப்படும் கருத்துக்களாகும். இஸ்ராயேலர் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்ற கருத்தானது, எருசலேம் ஆலயம் ஒன்று மட்டும்தான் உரிமையான வழிபாட்டு இடமான காலத்திலிருந்து, அதோடு தொடர்புபடுத்தப்படுவதால், இச்சமயக் கருத்துக்கள் காலந்தோறும் யூதர்களின் நாட்டுணர்வின் அடிப்படையாயின. எடுத்துக்காட்டாக, மக்கபேயர்கள், யூதர்களின் அரசினை குறிப்பிட, இஸ்ராயேல் என்னும் பெயரையே உபயோகித்தனர். இக்காலத்திலும், பாலஸ்தீனத்தில் உள்ள யூதஅரசு, இஸ்ராயேல் என்றே அழைக்கப்படுகிறது.

இஸ்ராயேல் (ISRAEL)

இஸ்ராயேல் என்னும் சொல்லுக்கு ''கடவுள் போராடுகிறார்'' ''கடவுள் வலிமையானவர்'' என்பது பொருள். பழைய ஏற்பாட்டில் இது ஒரு குறிப்பிட்ட இனத்தையோ முதுபெரும் தந்தையான யாக்கோபுவின் வழிவந்த பரம்பரையையோ குறிக்கிறது (ஆதி 35:10.20 தொ; 43:8; 50:2). யாக்கோபு ''கடவுளோடு போராடினார்'' என்னும் கதையிலிருந்து அவருக்கு இஸ்ராயேல் என்னும் பெயர் வழங்கப்பட்டதாய்த் தெரிகிறது (ஆதி 32:29; ஓசே 12:4).

I. பழைய ஏற்பாடு

1. இஸ்ராயேல், உடன்படிக்கையின் மக்கள்:-

அ) இஸ்ராயேல், ஒரு புனிதமான பெயர்:- இஸ்ராயேல் என்பது, ஏதோம், ஆரம், மோவாபு என்னும் மற்ற இனமக்களின் பெயர்போன்று வெறும் பெயர் மட்டுமன்று. அது புனித பெயராகும். உடன்படிக்கை மக்களின் பெயராகும். உடன்படிக்கை மக்கள் ஒன்றுகூடி 'இஸ்ராயேல் இனம்' என்று உருவாகிறார்கள் (யாத் 12:

3.6) இந்தப் பட்டப்பெயரின் உரிமையில் தான் அவர்கள் உபாகமத்தில் வாக்குறுதிகளைக் கேட்கிறார்கள் ('இஸ்ராயேலே, கேள்'... உப 5:1; 6:4; 9:1; காண் சங் 50:7; 81:9). இந்த வாக்கானது அவர்களுக்குத் தனிப்பட்ட இறைவாக்குறுதியாக அமைகிறது (ஏச 41:8; 43:1; 44:1; 48:1).

ஆ) இஸ்ராயேல், பன்னிரு கோத்திரங்கள் கொண்ட மக்களாவர்:- யாக்கோபின் பன்னிரு மகன்களின் வழிவந்த பன்னிரு கோத்திரங்களையும் ஒன்று கூட்டிய ஓர் அமைப்பாக, உடன்படிக்கை நாளிலிருந்து இருந்து வந்திருக்கிறது (யாத் 24:1). அத்தகைய கோத்திரங்கள் பட்டியலில் சிற்சில மாற்றங்களே ஏற்பட்டாலும் (காண் ஆதி 49; உப 33; நீதி 5; திருவெளி 7:5) பன்னிரண்டு என்னும் எண் புனிதம் குலைந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டு வந்தது; மேலும் பன்னிரு மாதங்களுக்குரிய வழிபாட்டு முறைகளோடு தொடர்பு கொண்டதாய் இருந்தது. இறைவனின் மக்கள் உலகில் ஏற்ற முதல் வரலாற்று அமைப்பு முறை இத்தகையது ஆகும்.

இ) யாவே இஸ்ராயேலின் கடவுள்; இஸ்ராயேல் யாவேயின் மக்கள்:- உடன்படிக்கை மூலம் கடவுள் இஸ்ராயேலோடு ஒருவிதத்தில் நெருங்கிய உறவு கொண்டுவிட்டார். அவர் அவர்களின் கடவுள் (ஏச 17:6; எரே 7:3; எச 8:4); அவர்களின் பரிசுத்தர் (ஏச 1:4; 44:14; சங் 89:19); அவர்களின் வல்லவர், மாமன்னர் (ஏச 43:15); அவர்களின் மீட்பர் (ஏச 44:6). தம்மையே வெளிப்படுத்தும் இறைவன், இவ்வாறு மனித வரலாற்றில், இஸ்ராயேலின் கடவுளாக நுழைகிறார். மேலும், இஸ்ராயேல் மக்கள்தான் கடவுள் விழையும் மீட்பின் வெளிப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுதற்குரிய உடன் ஊழியராக ஆகிவிடுகிறார்கள். இந்த வகையில் இஸ்ராயேலுக்குக் கொடுக்கப்படும் பெயர்கள் பொருள் பொதிந்தவை. இஸ்ராயேல் யாவேயின் மக்கள் (ஏச 1:3; ஆமோ 7:8; எரே 12:14; எச 14:9; சங் 50:7), அவரின் ஊழியன் (ஏச 44:21), அவரின் தேர்ந்தெடுக்கப்பட்டவர் (ஏச 45:4), அவரின் தலைப்பேற்றாண் (யாத் 4:22; ஓசே 11:1), அவரின் புனிதமானவர் (எரே 2:3), அவரால் சுதந்தரிக்கப்பட்டவர் (ஏச 18:25), அவருடைய மந்தை (சங் 95:7), அவருடைய திராட்சைத் தோட்டம் (ஏச 5:7), அவருடைய ஆட்சிக் களம்'' (சங் 114:2), அவருடைய மனைவி (ஓசே 2:4). இவ்வாறு, இஸ்ராயேல் மனிதனின் அரசியல் வரலாற்றோடுமட்டும் நின்றுவிடவில்லை. கடவுளின் தனிப்பட்ட அழைப்பின் காரணமாக அது சமயவரலாற்றின் மையமாக அமைந்திருக்கிறது.

2. இஸ்ராயேலும் யூதாவும்:-

அ. இஸ்ராயேலும் இருமுக அரசியலும்:- புனித குழுவாக இருந்துவந்த பன்னிரு கோத்திரங்களுக்கு அடியிலே ஒருவித அரசியல் பிரிவு நிலவி வந்ததென்பது, முக்கியமாக அரசர்களின் காலத்தில், தெளிவாகிறது. தாவீது முதலில் தெற்கிலிருந்து யூதாவிற்கு அரசராகவும், அதன் பின்னர் வடக்கேயிருந்த இஸ்ராயேலுக்கு அரசராகவும் ஆனார் (2 சாமு 2:4; 5:3). சாலமோன் இறந்தபோது இஸ்ராயேல் தாவீதின் வீட்டாரிடமிருந்து பிரிந்து (1 அர 12:19) ''உன் கூடாரங்களுக்கே செல்க, இஸ்ராயேல்'' என்று குரலெழுப்பிச் சென்றனர் (2 அர 12:16; காண்க. 2 சாமு 20:1). இவ்விதமாக இறைவனின் மக்கள் பிளவுபட்டனர். உடன்படிக்கைக்கு ஒவ்வாத முறையில், இத்தகைய பிளவுபட்ட நிலைக்கு ஏற்ப இறைவாக்குகளும் யூதாவுக்கும், இஸ்ராயேலுக்கும் உரைக்கப்பட்டன. வடதிசையில் மிகுந்த வலிமையோடு விளங்கிய எப்பிராயிம் கோத்திரத்தோடு இஸ்ராயேல், பேச்சில், ஒருங்குபடுத்தி வழங்கப்பட்டது (ஆமோ 2:4; ஓசே 4:15 தொ; ஏச 9:7 தொ; ... மீக் 1:5; எரே 3:6 தொ).

ஆ. இஸ்ராயேலும், யூத குலமும்:- சமாரியாவில் வீழ்ச்சிக்குப் பிறகு யூதா இஸ்ராயேலை ஒருங்கிணைக்கும் நிலைக்களனாக மாறிற்று (2 அர 23:19; .. 2 நாள் 30:1 தொ). எருசலேம் வீழ்ந்த பிறகு பன்னிரு கோத்திரங்களும் ஒன்றிணைந்த முந்தைய குழு அமைப்பை மீண்டும் அமைப்பதில் தங்க

ளது அடையாளத்தைத் தேடினர் இஸ்ராயேலர். இதில் யூதா எடுத்துக்கொண்ட முக்கிய பங்கின் காரணமாக அப்போதிலிருந்து, பல்வேறு இடங்களில் சிதறி வாழ்ந்து வந்த இவ்வின மக்கள் யூதர் என அழைக்கப்பட்டனர். ஒரே அமைப்பாக பின்னர் ஒன்று சேர்ந்த இவ்வின மக்களுக்கு யூதகுலம் என்னும் பெயர் வழங்கப்பட்டது (கலாத் 1:13 தொ). ஆனால் அதே நேரத்தில் இஸ்ராயேல் என்ற பெயர் தன்னுடைய புனிதத்தன்மையை மீண்டும் பெறுகிறது (நெக 9:1 தொ; சீரா 36:11; காண் மத் 2:20 தொ; அ.ப. 13:17; யோவா 3:10).

3. புதிய இஸ்ராயேலைப் பற்றி வாக்குறுதி:- இறுதிக்காலம் பற்றிய இறைவாக்கினரின் அறிவிப்புகள் பிரிந்துபட்ட இனம் மீண்டும் ஒன்றுகூடும், இஸ்ராயேலும் யூதாவும் ஒன்றுபடுவர் என்று கூறி வந்தன (எச 37:15). பல்வேறு இடங்களில் பிரிந்துகிடந்த பன்னிரு கோத்திரங்களின் வழிவந்த இஸ்ராயேல் மக்களனைவரும் ஒரே சபையாக மீண்டும் சேருவர் என உரைத்தன (எரே 3:18; 31:1; எச 36:24; 37:21;.. ஏச 27:12). இது யூதர் நம்பிக்கையின் அடிப்படைக் கருத்தாகும். இத்தகைய வாக்குறுதிகளால் எழும் நன்மைகள் உண்மையாகவே இஸ்ராயேலில் நன்னெறி நின்ற ''எஞ்சினோர்க்கே'' கிடைக்கும் (ஏச 10:20; 46:3; மீக் 2:12; எரே 31:7). இவ்வாறு யாவே எஞ்சி நின்றோரைப் புதிய இஸ்ராயேலாக ஆக்குவார். அவர் அதை விடுவித்து (எரே 30:10) அதன் நாட்டில் உறுதியாக மீண்டும் நிலைப்படுத்துவார் (31: 31). பல்வேறு நாடுகளும் இஸ்ராயேல் இனத்தில் உண்மையான இறைவனின் சந்நிதியைக் கண்டு உணர்ந்து (45:15) அவரை நோக்கித் திரும்ப வருவர்; அவர்களின் மனமாற்றம் இஸ்ராயேலின் மீட்போடும் (45:17) மகிமையோடும் (45:25) ஒன்றாகும்.

II. புதிய ஏற்பாடு

1. நற்செய்தியும் தொன்மை இஸ்ராயேலும்:- உலகின் மீட்பு இஸ்ராயேலின் வழியாகத் தோன்றவேண்டுமென்பதும், இஸ்ராயேல் உடன்படிக்கை மக்களாக வாழ்ந்து, மீட்புச் செய்தியை முதலில் பெறவேண்டுமென்பதும், இறைப்பராமரிப்பின் திட்டமாக இருந்துள்ளது. திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கின் குறிக்கோளும் அதுவே (யோவா 1:31). தாம் வாழ்ந்த காலத்தில், நம்மீட்பரும், அவருடைய சீடர்களும் முதலில் இஸ்ராயேல் மக்களிடம் மட்டுமே மீட்பினை அறிவித்தனர் (மத் 10:6.23; 15:24). அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் இஸ்ராயேலுக்கு மட்டுமே முதலில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது (அ.ப. 2:36; 4:10). அவருடைய பாடுகளில் ஈடுபட்ட இஸ்ராயேலும், மற்ற நாடுகளும் (4:27) விசுவாசத்திற்கு அழைக்கப்பட்டார்கள் (9:15). இருவரும் சமமாக அழைக்கப்பட்டாலும், முதலில் பிறப்பினால் இஸ்ராயேல் குலத்தைச் சார்ந்த யூதர்களாய் இருந்தவர்களுக்கும் (உரோ 9:4) அதன் பின்னரே மற்றவர்களுக்கும் (காண் உரோ 1:16; 2:9 தொ; அ.ப. 13:46), அது வழங்கப்பட்டது. இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர் பார்த்திருந்தவர்களுக்காகவும் (லூக் 2:2-5), இஸ்ராயேலின் மீட்புக்காகவும் (24: 21) இஸ்ராயேல் அரசின் மறுமலர்ச்சிக்காகவும் (அ.ப. 1:6) ஆவலோடு காத்திருந்த மக்களின் நம்பிக்கையை நற்செய்தி வழங்கிய மீட்பு நிறைவேற்றி வைக்கிறது. கிறிஸ்துவின் வழியாக இஸ்ராயேலுக்கு உதவியும் (லூக் 1:54), இரக்கமும் (1:68), மனம் திரும்பி பாவப்பரிகாரம் பெற அருளும் (அ.ப. 5:31) பெறும்படி கடவுள் வழிவகுத்திருக்கிறார். இயேசுதான் இஸ்ராயேலின் மகிமை (லூக் 2:32); அதன் அரசர் (மத் 27:42; யோவா 1:50; 12:13); அதன் மீட்பர் (அ.ப. 13:23 தொ). உயிர்த்தெழுதலின் மீதுள்ள புதிய நம்பிக்கையின் அடிப்படையில்தான் இஸ்ராயேலின் நம்பிக்கையும் அமைந்துள்ளது (அ.ப. 28:20). சுருங்கக்கூறின், மனித வரலாறு பெறுகின்ற மீட்பின் உறவுப் பாலமாக இஸ்ராயேல் அமைந்திருக்கிறது.

2. புதிய இஸ்ராயேல்:- இயேசுவின் காலத்திற்குப் பிறகு, இறைவாக்கினரால் உரைக்கப்பட்ட வாக்குறுதியான புதிய இஸ்ரா

யேல் இவ்வுலகில் தோன்றியுள்ளது. இதை ஒரு வளரும் அமைப்பாக ஆக்கவேண்டுமென்று, இயேசு பன்னிரு சீடர்களை அழைத்து, இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களின் அடிப்படையில் தம் திருச்சபையை அமைத்தார். மேலும் அவரின் பன்னிரு அப்போஸ்தலர்களையும், இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களுக்குந் நடுவராக நியமித்தார் (மத் 19:28). இந்தத் திருச்சபைதான், இறுதிக்காலத்தில் தோன்றும் இஸ்ராயேல்; இதற்காகவே கடவுள் புதிய உடன்படிக்கையை ஒதுக்கி வைத்தார் (எபி 8:8 தொ). இதன் வழியாகப் பன்னிரு கோத்திரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை பேரும் மீண்டு ஒன்று சேர்க்கப்படுவர் (திருவெளி 7:4). இது பன்னிரு அப்போஸ்தலர்களையும் அடிவாரமாகக் கொண்ட ஒரு புனித நகர்; இதன் கதவுகளில் பன்னிரு கோத்திரங்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ள (திருவெளி 21:12; காண் எச 40:30).

3. தொன்மை இஸ்ராயேலும், புதிய இஸ்ராயேலும்:- இவ்வாறு, புதிய இஸ்ராயேலான திருச்சபை பழைய இஸ்ராயேலின் நிறைவேற்றமேயாகும். பழைய இஸ்ராயேலில் பிறப்பின் அடிப்படையில் அங்கத்தினராயினர் (பிலி 3:5); புறமதத்தினர் அதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர் (எபே 2:12). அது ஊனின் அடிப்படையில் எழுந்த இஸ்ராயேல் இனம். ''இறைவனின் இஸ்ராயேலாவதற்கு'' இதுமட்டும் போதாது (1 கொரி 10:18). ஏனெனில் ''இஸ்ராயேலின்'' வழிவந்தோரனைவரும் இஸ்ராயேலரல்லர் (உரோ 9:6). கிறிஸ்துவோடும், அவருடைய நற்செய்தியோடும் எதிர்ப்பட்ட அவ்வினத்திலே பிரித்தெடுத்தல் நடைபெறுகிறது (காண் லூக் 2:34 தொ); திருச்சட்டங்களின் வன்நிலை நீதியை எதிர்பார்த்து, விசுவாசத்தின் வழி மீட்பு பெறுவர் என்னும் அறிவிப்பை வெறுத்து, கேட்டபோது தங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டவர்கள் வீழ்ச்சியுறுகிறார்கள் (உரோ 9:31; 11:7); அதே நேரத்தில் ''உண்மையான இஸ்ராயேலருக்கு'' (யோவா 1:48) மீட்பு வழங்கப்படுகிறது; இவர்கள் வேதாகமம் கூறி வந்துள்ள எஞ்சினோராவர் (உரோ 9:27 தொ). இவர்கள் மனந்திரும்பிய புறவினத்தாரின் வழியாகப் புதியஇஸ்ராயேலில் இணைகிறார்கள். பழைய இஸ்ராயேல் முற்றும் ஒதுக்கப்பட்டுவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தியைப் புரிந்து கொள்ளாதது கடவுள் அவர்களிடையே ஒருவிதப் பொறாமையைத் தூண்டிவிட விழைந்தார் எனத் தெரிகிறது (உரோ 10:9). புறவினத்தார் அனைவரும் ஒருங்கே மனந்திரும்பும் போது, இஸ்ராயேலின் ஒருவிதக் கடினத் தன்மை நீங்கும். இவ்வாறு ''இஸ்ராயேல் இனம் முழுவதும் மீட்புப் பெறும்'' (உரோ 11:26). அப்போது மீட்பு வழியில் நடந்து செல்லும் ஆன்மீக இஸ்ராயேலோடு மீண்டும் சேர்ந்துகொள்ளும்.

இஸ்ராயேல்: சமூக, பொருளாதார முன்னேற்றம்

பாலஸ்தீனத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள், பலதரப்பட்ட கலாச்சார வளர்ச்சி நிலைகளில், நீண்ட, சிக்கலான சமூக பொருளாதார முன்னேற்றம் கண்டனர்.

1. நாடோடி நிலை:- பழங்கால செமித்திய மக்களைப்போன்று இஸ்ராயேலரும் தங்களது பூர்வீகத்தை அரேபிய பாலைவனத்தில், குறிப்பாக வடசமவெளிகளில் கொண்டிருந்தனர். விவிலிய மரபுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் பாலைவனத்தில் தோன்றிய இஸ்ராயேல் ஓரினமாக இல்லாமல், தனிப்பட்ட, சுதந்திரமான நிலையற்ற குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் அமைந்திருந்தது. பாலஸ்தீனத்திற்குள் குடியேறுவதற்கு முற்பட்ட பாலைவன வாழ்க்கையில் அதற்கு ஏற்ற நாடோடி வாழ்க்கையினையே இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்தனர். செம்மறியாடுகளும் வெள்ளாடுகளுமே அவர்களது சொத்தாக இருந்தன. தங்களுக்கும் தங்கள் விலங்குகளுக்கும் உணவைத்தேடுவது அவர்களுக்கு எப்போதும் ஒரு பிரச்சினையாக இருந்தது.

சமய நம்பிக்கையும், பழக்கங்களும் பழமையானவையாகவும் திருந்தா நிலையிலும்

இருந்தன. இயற்கைக்கு மேற்பட்ட சக்தி களை தெய்வங்களாக கருதிய அவர்கள், தங்களது தனித்துவ, குழு, கோத்திர வாழ் விற்கு பொறுப்பாக அவற்றை கருதினர். தமது உடல் தேவைகளை நிறைவேற்றுதல், பெண்களையும் விலங்குகளையும் இனவி ருத்தியடையச் செய்தல், பாலைவன வாழ் வில் தங்களது பாதுகாப்பை உறுதியாக்கு தல், எதிரிகள் அனைவர்மேலும் வெற்றி கொள்ளுதல் ஆகியவற்றை கடவுளின் உட னடி தெய்வீகக் கடமைகளாக கருதினர். எல்லா விதங்களிலும் தனிப்பட்ட சமூக அமைப்பாக விளங்கிய ஒவ்வொரு கோத்திர மும், தமது கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு தனிப்பட்ட தெய்வங்களைக் கொண்டிருந் தன. தெய்வம் ஒரு மனிதரிலோ, மலை அல்லது வாழ்வளிக்கும் நீர்க்சுனை போன்ற ஒரு குறிப்பிட்ட இடத்திலோ இருப்பதாய்க் கருதினர்.

இத்தகைய செமித்திய, பாலைவன வம்சத் தினர் பெண்வழி திருமணத்தை பின் பற்றி னர். அதற்கேற்றவாறு, தாய்வழி உறவுமுறை யினை மட்டுமே கொண்டிருந்தனர். ஒரே இனத்துக்குள் திருமணம், உறவு தடைசெய் யப்பட்டிருந்தது. ஒரு வம்ச பெண்கள், வேறு வம்ச ஆண்களுடைய குறுகிய, அல் லது நீண்டகால உறவினை ஏற்றுக் கொண்ட னர். இத்தகைய இணை புணர்ச்சியால் பிறக் கும் குழந்தை தாயின் வம்சத்தை சேர்ந்தததா கக் கருதப்பட்டது. தந்தை யாரென்பது பலச மயங்களில், பெரும்பாலும் வழக்கமாகத் தெரியாமலிருந்ததால், முக்கியமுடையதா கத் தெரியவில்லை. ஆராய்ச்சியாளர் கருத் துப்படி பழமையான செமித்திய சமூகமா னது குலமுதியவரின் வழியில் அமைந்திருந் தது. அல்லது, சகோதர மற்றும் தாய்வழி அமைப்புகளுடன் தந்தை வழிக்கு முன்னு ரிமை கொடுத்து அமைந்திருந்தது.

ஒவ்வொரு வம்சத்தினுள்ளும் முழுமை யான சமூக சமத்துவமும், மக்களாட்சியும் நிலைபெற்றிருந்தன. எல்லாரும் எல்லாக்கா ரியங்களிலும் சமமானவர்கள். ஆண்கள், குறிப்பாக வயதில் மூத்த, அனுபவமிக்க, புத்திசாலித்தனமான பெரியவர்களின் தீர்மா னங்களுக்கு ஏற்ப, இனம்சார்ந்த செயல்கள் செயல்படுத்தப்பட்டன. நல்லது கெட்டது அனைத்தும் மரபு மற்றும் பழக்க வழக்கங்க ளின்படி தீர்மானிக்கப்பட்டன. காலங்கால மாக உள்ள மரபு மற்றும் பழக்க வழக்கங்க ளைக் காக்க உரிமைப்பெற்றவர்களாய்க் கரு தப்பட்ட ஆண்கள் நீதிபதிகளாய்ப் பணிபுரிந் தனர். பழமையான மரபுகள் மற்றும் பழக் கங்களுக்கு ஏற்ப தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்புகளை அமல்படுத்தும் உரிமையினை நீதிபதிகளிடமிருந்தும் இனத்திலிருந்தும் கூட முழுமையான மக்களாட்சியின் அடிப் படை கோட்பாடு விலக்கி வைத்திருந்தது. இனத்தின் மக்களின் பொது எண்ணமே இவ்வுரிமை செயல்படுத்தியது. எந்த உறுப் பினரும், விரும்பினால், நீதிபதிகளின் முடிவை ஏற்காமல் இருக்கலாம். ஆனால், இப்படிப்பட்ட சமயங்களில் மக்களின் தீர் மானம் அவனை இனத்திலிருந்து விலக்கி வைத்து, குலதெய்வம் மற்றும் இனத்தவரின் பாதுகாப்பு போன்ற சலுகைகளை அவ னுக்கு மறுத்து, தனித்தவனாக ஆக்கியது. இந்நிலை பாலைவன வாழ்விற்கு இடறல் மிக்கதாகும் (ஆதி 4:14).

2. வேளாண்மை நிலை:- இயற்கையி லேயே பாலஸ்தீன நாடு இரு பிரிவுகளாக காணப்படுகின்றது. எருசலேமிற்கு வடக் கில், கிழக்கு மேற்காக ஒரு கற்பனைகோடு வரைந்தாலே பிரிவு தெளிவாகும். வடபகுதி முழுவதும் வளமையாகவும் நீர்வசதி மிக்க தாயும் உள்ளது. அதற்கேற்ப இம்மக்களின் அடிப்படை தொழில் விவசாயம். தென்பகு தியானது வறண்டதாகவும், நீர்பாசன வசதி குறைந்ததும், சில இடங்களில் தரிசாகவும் காணப்படுகின்றது. விவிலிய காலத்தில் அவர்களது முக்கிய தொழிலாக செம்மறி ஆடு வளர்த்தல் இருந்தது.

இத்தகைய தென்பகுதியானது ஏறக்குறை கி.மு.பதின்மூன்றாம் நூற்றாண்டின் மத்தி யில் யூதவம்சத்தினரால் கைப்பற்றப்பட்டு, அவர்களின் ஆளுகைக்கு உட்பட்டது. லேவி யரான மோசேயின் தலைமையில் தென்ப

குதி வழியாக அவர்கள் பாலஸ்தீனத்துக்குள் நுழைந்தனர். பாலஸ்தீனத்தின் தென்கோடிப் பகுதியில் அவர்களது நிலை உறுதிபடுத்தப் பட்டு, வாழ்க்கைமுறை மாறினாலும் பழமையிலிருந்து சிறிதளவே மாறுபட்டதாய் இருந்தது. தாவீது, இத்தகைய அனைத்து வம்சங்களையும் இணைத்து யூதாவின் கோத்திரமாக்கி, அதனுடன் தென் பகுதியிலிருந்த பிற நாடோடி வம்சங்களையும், கோத்திரங்களையும் சேர்த்து யூத அரசினை உருவாக்கி, துவக்க கட்டத்தில் தன்னையே அதன் அரசனாக ஆக்கிக் கொண்டார்.

இயற்கை வளத்தினாலும், மக்கள் தொகைக்கு உதவக்கூடிய நிலையினாலும் இஸ்ராயேலரின் வருகை ஏற்கனவே நிகழ்ந்திருந்ததினாலும், வடபகுதியானது முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்தது. இசிரியேல் பள்ளதாக்கிற்கு வடக்கிலுள்ள மாநிலத்தில், இஸ்ராயேலர் தங்களை நிரந்தரமாக உறுதிபடுத்திக் கொண்டனர். வடபகுதியை முழுமையாக கைப்பற்றும் பணியானது மற்ற இஸ்ராயேலரின் நாடோடி குழுக்களால் 1300-ஆம் ஆண்டிற்குள் முடிவு பெற்றது. இத்தோடு நில்லாமல், வம்சத்திலிருந்து இனச்சமுதாய அமைப்புகளாக மாறும் நிலையானது, இந்நாட்டிற்குள் நுழைவதற்கு முன்பே தொடங்கியிருக்கக்கூடும். மதியானிய நாடோடி கொள்ளைக்காரர்களின் தாக்குதல்களினாலும், அவர்கள்மேல் கிதயோனின் வெற்றியினாலும், மாக்கீர், யாயீர், அபியேசர் மற்றும் எஞ்சியிருந்த பிற வம்ச இனத்தவரையும் இணைத்து, மனாசே இனம் பாலஸ்தீனத்தில் தோன்றியது. தனக்கு அளிக்கப்பட்ட அரச பதவியை கிதயோன் மறுப்பதன்மூலம் (நீதி 8:22-23) இவ்வம்சங்களின் எண்ணத்திலும் கலாச்சாரத்திலும் நிலவிவந்த மக்களாட்சியின் நாடோடித்தன்மை தெளிவாகிறது. மேலும், தனது இனத்தவரின் மீது செலுத்தக்கூடிய அதிகாரத்தோடு கூடிய அரசுரிமை என்ற எண்ணமே அவருக்கு அருவருப்பை தந்தது என்பதும் தெளிவாகிறது.

படையெடுத்து வந்த இந்த இஸ்ராயேலரின் இரண்டாவது பிரிவினர் யோர்தான் பள்ளதாக்கினை ஒட்டியுள்ள மத்திய பாலஸ்தீனத்தின் மலைப்பகுதிகளில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டதாக தெரிகிறது. அப்பகுதியில் ஏற்கெனவே வாழ்ந்து வந்த கானானியரின் எதிர்ப்பு, பொதுவான பாலைவன பின்னணி, சமயம் மற்றும் கலாச்சாரம் ஆகியவை வடக்கு இஸ்ராயேல் குலங்களையும் இனங்களையும் நெருக்கமில்லாத இனக்கூட்டாட்சியாக இணைத்தன. முக்கியத்துவம் வாய்ந்த தானாக்குப் போரின் போது (நீதி 4-5) இந்த நிலையே நிலவியது. இசிரியேல், பள்ளத்தாக்கோடு ஒட்டியிருந்த இனத்தவர் கானானிய நகர அரச அமைப்புகளால் தொல்லைக்குட்பட்டனர். ஆகவே இவர்கள்தான் இப்போரிலும் பங்கு கொண்டனர். இவ்வெற்றியானது, வடபகுதி முழுவதின் மேலும் இஸ்ராயேலரின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தியது.

தங்களை உறுதியாக நிலைப்படுத்திக் கொண்ட பின்னர் வடஇஸ்ராயேல் வம்சத்தினரும், கோத்திரத்தினரும், கானானிய வாழ்க்கை முறை, வேளாண்மை முறைமைகள், அமைப்புகள், மொழி மற்றும் சமயங்களை வெகுவிரைவில் ஏற்றுக் கொண்டனர். காலப்போக்கில், எஞ்சியிருந்த கானானியருடன் ஏற்பட்ட உறவின் முறைமைகளினாலும், முன்னர் நிலவிய கானானிய ஆபத்து ஒழிந்தபடியினாலும், கோத்திரங்களுக்கிடையே வளர்ந்து வந்த ஒன்றுபட்ட அமைப்பு குறைந்துவிட்டது. இசிரியேல் பள்ளத்தாக்கிற்கு வடக்கில் வாழ்ந்த கோத்திரங்களும், ஓரளவிற்கு யோர்தானின் கிழக்கு பகுதியில் வாழ்ந்தவர்களும், தென்மேற்கு பகுதியில் கடற்கரை ஓரமாக வாழ்ந்த ''தாண்'' கோத்திரத்தினரும், கோத்திரங்களுக்கு இடையில் நிலவிய கடமைகளை சிறிது சிறிதாக விலக்கிக்கொண்டு, தத்தம் பாதையில் செல்லத் தொடங்கினர். இதன் விளைவாக, மத்திய பாலஸ்தீனத்தில் வாழ்ந்த எப்பிராயிம், மனாசே மற்றும் பென்யாமின் கோத்திரத்தார், தங்களுக்கிடையில் ஒன்றுபட்ட அமைப்பினை உருவாக்கிக் கொண்டனர். இவ்வமைப்பு உறுதியான ஒன்றாக இல்லாவிட்டாலும், வட இஸ்ரா

யேலரிடையே இது நாள்வரை நிலவிவந்த வற்றை விட, நெருக்கமான ஒன்றாக இருந்தது. இக்காலம் அவர்களுக்கு, குறிப்பாக மத்திய பாலஸ்தீனத்தில் வாழ்ந்த கோத்திரத்தாருக்கு தங்களது வாழ்க்கை, கலாச்சாரம், வளர்கின்ற வளமை, பாதுகாப்பு, நாட்டுப் பற்று ஆகியவற்றில் சீரான வளர்ச்சியை கொண்ட காலமாக இருந்தது.

ஆனால், 12-ஆம் நூற்றாண்டில் துவங்கிய பெலிஸ்தியரின் வருகை இவை அனைத்தையும் மாற்றிவிட்டது. கிரேத்துத் தீவிலிருந்து குடியேறிய அவர்கள், தென் பாலஸ்தீனக் கடற்கரைப் பகுதிகளில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர். இரும்பு உற்பத்தி செய்தல், இரும்பினாலான ஆயுதங்கள், கருவிகள் செய்தல் போன்றவற்றை மேற்காசிய கலாச்சாரத்திற்கு அவர்கள் அறிமுகப்படுத்தினர். காலப்போக்கில் தங்களது ஆட்சிப்பரப்பினை பெரிதுபடுத்த ஆரம்பித்தனர். 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பென்யாமினுடைய வடஎல்லையிலிருந்து இசிரியேல் பள்ளத்தாக்கின் வடவிளிம்பு வரையில் உள்ள மத்திய பாலஸ்தீனம் முழுவதும் பெலிஸ்தியரின் கொடுமைமிக்க ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

ஆயினும், அரை நூற்றாண்டிற்குப் பின்னர், தன்னுடைய எப்பிராயிம் கோத்திரத்திலிருந்தோ, அல்லது நசுக்கப்பட்ட நிலையிலிருந்த மனாசே கோத்திரத்திலிருந்தோ ஒரு மீட்பளிக்கக் கூடிய தலைவன் தோன்றுவது கடினம் என்பதை உணர்ந்த சாமுவேல் இறைவாக்கினர், மிகச் சிறியதாய், ஆனால் இன்னும் வெல்லப்படாமல் இருந்த பென்யாமின் கோத்திரத்தின்மீது தனது பார்வையைத் திரும்பினார். இக்குறிக்கோளை அடைய, முன்னர் நிலவிய உறுதியற்ற கோத்திரங்களுக்கிடையிலான இனக்கூட்டாட்சி அமைப்பைவிட, மிக நெருங்கிய, சிறப்பான உறுதியான கோத்திரங்களுக்கிடையிலான அமைப்பு தேவை என்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆதலின், நல்ல நாளான புத்தாண்டு நாளில், பென்யாமின் குலத்தைச் சார்ந்த சவுல் தன்னிடம் வந்தபொழுது, கடவுளே அவனைத் தேர்ந்தெடுத்துத் தன்னிடம் அனுப்பியுள்ளார் என்று உணர்ந்த சாமுவேல், உடனே அவனை அரசனாக அபிடேகம் செய்தார் (1 சாமு 9:1-10:1). ஒன்றுபட்ட இஸ்ராயேலுக்கு அரசனாக நியமிக்கப்பட்டாலும், இஸ்ராயேல் என்பது பென்யாமின் கோத்திரத்தையும் எஞ்சியிருந்த எப்பிராயிம் மற்றும் மனாசே கோத்திரத்தாரையும் மட்டுமே கொண்டிருந்தது. இவ்வாறு, இஸ்ராயேலில் முடியாட்சி ஏற்படுத்தப்பட்டது.

சவுலின்ஆட்சி முழுவதும் பெலிஸ்தியருக்கு எதிராக, இடைவிடாத ஆனால் பயன் அற்ற போரிலேயே கழிந்தது. எப்பிராயிம் இனத்தாரும், மனாசே இனத்தாரும் அவரோடும் இணையாமையால், நாட்டைப் பாதுகாக்கும் பணியிலேயே முழுதாய் ஈடுபட வேண்டியிருந்தது. சாமுவேல் அவருக்கு அளித்த பணியில் முழுதாக தோல்வியடைந்ததைப்பற்றி ஒரு சிலரே ஆச்சரியப்படுவர். அவரது மரணத்திற்கு பின்னர் பென்யாமின் கோத்திரமும் பெலிஸ்தியரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

சவுலுக்கு பின்வந்த தாவீது தலைசிறந்த நிர்வாகியாக விளங்கினார். சவுலின் மருமகன் என்ற நிலையினை இரண்டாம் பட்சமாக்கி, யூதாவின் அரசன் என்னும் உறுதியான நிலையிலேயே அவர் செயல்பட்டார். அதன் மூலம் தொடக்கக்காலத்தில் மேற்கு நாடுகளில் நிலவிய ஒரே வாரிசுமுறைக்கு ஏற்பவும், அதே சமயம், பென்யாமின் மற்றும் வடக்கு கோத்திரங்களுக்கும் அரசராக விளங்கினார். இதுவரை வெல்லப்படாமல் இருந்த கானானிய நகராக-அரசாகிய எருசலேமையும் அவர் கைப்பற்றினார். மிக முக்கிய வியாபார வழிகளான தெற்கு அரேபியாவிலிருந்து அக்காபா வளைகுடாவின் வடக்கு முனையிலுள்ள எசியோன்- கெபேர் வழியாகவும், கீழ் அராபா, யூதா, இஸ்ராயேல் ஆகிய பகுதிகளின் வழியாக 'தீர்' பகுதி வரை செல்லும் அனைத்து மார்க்கங்களும் எருசலேம் வழியாகவே சென்றன. வட, தென் பகுதிகளோடு இணைந்து விளங்கிய எருசலேமைக் கைப்பற்றியதன் மூலம்

நாவீது, யூதா மற்றும் இஸ்ராயேல் அரசுகளை ஒன்றாக இணைத்து, ஒன்றுபட்ட அரசினை உருவாக்கினார். சவுலின் மகள் மீக்காளைத் தனது மனைவியாக்கிக் கொண்டு, சவுலினுடைய அரச வாரிசாக தன்னை ஏற்படுத்திக்கொண்டு, தனது அரச உரிமையினை உறுதிப்படுத்திக் கொண்டார் (2 சாமு 3:12-16). பெலிஸ்தியர்கள் அடிமை நிலைக்கு தாழ்த்தப்பட்டனர். தனது நாட்டைச் சுற்றியுள்ள எகிப்து, இத்தியர், அசீரியா மற்றும் பாபிலோனிய ஆகிய நாடுகளின் வலிமையற்ற நிலையினைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு, தாவீது தெற்கில் எசியோன்-கெபேரிலிருந்து, வடக்கில் காதேசு வரையும் மத்தியதரை கடற்கரைப்பகுதியில் உள்ள கர்மேல் மலையிலிருந்து கிழக்கில் லெபனோன் மலைப்பகுதி வரையுள்ள பகுதியில் தாவீது இஸ்ராயேல் பேரரசை நிறுவினார். இயற்கையாகவே, இஸ்ராயேலின் ஒன்றுபட்ட அரசில், தாவீதினுடைய திறமையான, உறுதியான நிர்வாகத்தின்கீழ், அவருடைய யூதா கோத்திரமே முதன்மை பெற்று இருக்கிறது.

3. பன்னாட்டு - வணிக நிலை:- 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில், 'தீர்' பகுதி உலக முழுமைக்கும் ஒரு வியாபாரத்தலமாக உருவாயிற்று. ஒன்று பட்ட இஸ்ராயேல் எருசலேம் வழியாக செல்லும் எசியோன்-கெபேர் வணிக மார்க்கத்தின்மூலம், தீருக்கு நெருங்கிய, அண்டை நாடாக விளங்கிற்று. நட்பு மற்றும் உடன்பாட்டு உறவுகள் துரிதமாக ஏற்படுத்தப்பட்டன. தீர் நாட்டு வியாபாரிகள் இஸ்ராயலில், வெளிநாட்டுப் பொருட்களைக் கொண்டு பண்டமாற்று வியாபாரம்மூலம் இஸ்ராயேல் பொருட்களை வாங்கினர். தாவீதின் பேரரசு கிட்டதட்ட அரை நூற்றாண்டு காலம் நிலைத்திருக்கக் கூடிய அமைதியை மேற்காசியா முழுவதும் ஏற்படுத்திற்று. பாலஸ்தீன மக்கள் தங்களது அன்றாட அலுவல்களை எந்தவித தொல்லையுமின்றி நிறைவேற்ற முடிந்தது. வடக்குப் பகுதி இஸ்ராயேல் விவசாயிகள் தேவைக்கும் அதிகமான விளைச்சலை பெற ஆரம்பித்தனர். அதிக விளைச்சலைப் பெனிசிய வியாபாரிகளுக்கு விற்றனர். இந்நிலை சீரான வளர்ச்சியடைய ஆரம்பித்தது. வெளிநாட்டுப் பொருட்கள் அதிக அளவில் பெருகவே, வாழ்க்கைத் தரமும் அதனுடன் சேர்ந்து உயரலாயிற்று. குறிப்பிட்ட கால அளவில், வியாபாரிகளின் வர்க்கம் உருவாயிற்று. அவர்களது செயல்கள் சீராகப் பெருகுவதற்கு ஏற்ப, அவர்களின் செல்வமும், செல்வாக்கும் பெருகலாயிற்று. காலப்போக்கில் தங்களது வியாபாரத்தை பரந்த அளவிலும், இலாபகரமாகவும் செயல்படுத்த, அவர்கள் தங்களது வியாபார செயல்களையும் இருப்பிடத்தையும் நகரங்களிலேயே ஏற்படுத்திக் கொண்டனர். ஆடம்பர வீடுகளை கட்டி பணியாட்களையும், அடிமைகளையும் அமர்த்தினர். தங்களது பல்வேறு வியாபார பணிகளுக்காகக் குதிரைகள் பூட்டிய இரதங்களில் பயணம் செய்தனர். வெளிநாட்டுப் பொருட்களே அவர்களது தினசரி தேவைகளை நிவர்த்தி செய்தன. நகரங்கள், முக்கியமான தலைநகரான எருசலேம், பரப்பிலும், செல்வத்திலும், பொருளாதார நிலையிலும் பெரும் வளர்ச்சியடைந்தன. வகுப்புவேறுபாடுகள் தோன்றின. ஒருபுறம் நகரில் வசிக்கும் ஆட்சியாளர்களாகிய அரசவை அலுவலர்கள், படைத்தலைவர்கள், நீதிமன்ற அலுவலர்கள் மற்றும் செல்வமிக்க வியாபாரிகளைக் கொண்ட வகுப்பும், மறுபுறம் அதற்கு முற்றிலும் மாறுபட்ட பெருவாரியான மக்களைக் கொண்ட வடபகுதி விவசாயிகள், தென்பகுதி மேய்ப்பர் மற்றும் சிறுவிவசாயிகளை கொண்ட வகுப்பும் தோன்றின. பண்டமாற்று வியாபாரத்திற்கு அதிக பொருட்களையும் விவசாயப்பொருட்களையும் கொண்ட வடபகுதி, மேய்ப்புத் தொழிலைக் கொண்ட தென்பகுதியைவிட பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்திலும் பெரிதும் முன்னேறி இருந்தது.

தாவீதினால் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், அவருக்கு பின்வந்த அவரது மகன் சாலமோனின் திறமையினால் பெரிதும் விரிவுபடுத்தப்பட்டது. 'தீர்'-நாட்டுடன் உறவு நெருக்கமடைந்தாலும், மற்ற அண்டை நாடுகளுடனும் இஸ்ராயேல் நேரடி வியாபாரத்

தொடர்புகளைத் தொடங்கியது. குதிரைகளிலும், இரதங்களிலும் வாணிகம் குறிப்பாக வளர்ச்சி அடைந்தது (1 அர 10:14-29). அடிமை ஊழியர்களின் மூலமாக நாட்டினுடைய கனிப்பொருட்கள், சிறப்பாக அராபாவிலுள்ள தாமிரச் சுரங்கங்களிலிருந்து பெருமளவில் எடுக்கப்பட்டன. சாலமோன், எசியோன்-கெபேரைத் துறைமுகமாக்கித் தனது கப்பற்படையின் துணையுடன் செங்கடல் மற்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் நிலவிய செல்வாக்கு மிக்க வாணிபத்தைத் தனக்குச் சாதகமாக மாற்றலானார் (1 அர 9:21-29). நாட்டின் செல்வம் சீராகப் பெருக ஆரம்பித்தது; அதன் பன்னாட்டுத் தொடர்பு விரிவடைந்தது. அதன் வாழ்க்கை முறை, சமூகஅமைப்பு மற்றும் கலாச்சாரம் போன்றவை குறிப்பாக நகரவாசிகளிடையே மாற்றம் காணத் தொடங்கின. அவ்வாறே, பேரரசின் நிர்வாகம் மற்றும் பன்னாட்டு வணிக வளர்ச்சி ஆகியவற்றின் தேவைக்கேற்ப இக்காலத்தில் எழுத்துப் பணியில் வளர்ச்சியும், எபிரேய இலக்கியமும் தொடங்கப் பெற்றன.

இப்புதிய இஸ்ராயேலின் கலாச்சாரம், தலைநகராகிய எருசலேமில் உறுதியான நிலையான இடத்தைப் பிடித்திருந்தது. மற்ற நகரங்கள், குறிப்பாக விவசாய வடபகுதி இத்தகைய மாற்றங்களை கொண்டிருந்தாலும், எருசலேமைவிடத் தாழ்ந்த நிலையிலேயே இருந்தன. இந்நிலையில் முன்னேற்றமும் வகுப்புவாத நோக்கும் கொண்ட நகரவாசிகளுக்கும், குறிப்பாக எருசலேம் வாசிகளுக்கும், பழமை வாத எண்ணம் கொண்ட வடபகுதி விவசாயிகள் மற்றும் தென்பகுதி மேய்ப்பர்களுக்கும் இடையே, கலாச்சார மற்றும் சமய நோக்கிலும் பழக்க வழக்கங்களிலும் பிரிவும் மறைமுகமான எதிர்ப்பும் உருவாயின.

சாலமோனின் மரணத்துடன் இஸ்ராயேல் பேரரசு கலைந்துவிட்டது. ஒன்றுபட்ட பேரரசு இருபிரிவுகளாக, விவசாய வடபகுதி மற்றும் மேய்ச்சல் தென்பகுதி என்ற நிலையில், இஸ்ராயேல் மற்றும் யூதா என்ற பெயரில் இரு அரசுகளாகப் பிரிந்தன. சிலசமயங்களில் பலதரப்பட்ட விரோத மனப்பான்மை அவர்களை தனித்தனியாகப் பிரித்திருந்தது. பெரும்பாலும் எசியோன்-கெபேரிலிருந்து தீர் வரையிலான வணிக மார்க்கத்தின் மீதான உரிமை போன்ற தன்னிறைவிற்கான அடிப்படைத்தேவைகளுக்காக இணைந்து சார்ந்திருக்க வேண்டிய அவசியமானது, இருவரையும் 'தீர்'-பகுதியுடன் இணைப்பதற்காகவும், ஆராமிற்கு எதிராக போட்டியிடவும் சமாதானத்தையும் கூட்டுறவையும் அவர்களிடையே ஏற்படுத்தியிருந்தது.

அரசின் பிளவினாலும், பன்னாட்டு உறவு துண்டிக்கப்பட்டதனாலும், வடக்கு அரசாகிய இஸ்ராயேல் மீண்டும் வேளாண்மைப் பொருளாதாரத்திற்கே திரும்பியது. ஆயினும், ஆகாபு மற்றும் 2-ஆம் எரொபயாம் ஆகியோரது ஆட்சியின் கீழ், யூதா மற்றும் தீர் நாடுகளுடன் ஏற்பட்ட நெருங்கிய, ஒன்றுபட்ட கூட்டுறவின் விளைவாக, பன்னாட்டு வியாபாரம் மீண்டும் புத்துயிர் பெற்றது. சமூகப் பாகுபாடுகளுடன் கூடிய நகர வாழ்க்கை, குறிப்பாக வட பகுதியில், மீண்டும் பெருமளவில் பரவியது. கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மக்களாட்சி வாழ்க்கை முறைக்கும் கடவுளுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்கு அடிப்படையாக அதனை ஏற்றுக்கொண்ட மக்களுக்கும் விரோதமாக, செல்வந்தர்களின் செல்வம் மற்றும் அதிகாரத்தில் மட்டுமே வளர்ச்சி, ஆடம்பர மற்றும் சுகபோக வாழ்க்கை, அநீதியான வியாபார நெறிகள், ஏழைகளை அடிமையாக்கி கொடுமைப்படுத்துதல் போன்ற சமூக, பொருளாதாரத் தீமைகள் பெருகின. இந்நிலையே, ஆகாபின் காலத்தில் எலியா மற்றும் 2-ஆம் எரொபயாமின் காலத்தில் ஆமோஸ் என்னும் மேய்ப்பர் ஆகிய இறைவாக்கினர்களைச் செயல்படத் தூண்டியது.

யூதாவின் நிலைமை முன்பிருந்ததைப் போலவே இருந்தது. எருசலேமின் நகர கலாச்சார மற்றும் சமூக நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்ட ''அம்கா அரேஸ்'' என்று

''மண்ணின் மக்கள்'' எனப்படும் யூதாவின் கிராம மேய்த்தல் பணிபுரியும் மக்களைப் பெருமளவில் கொண்ட நிலை காணப்படுகிறது (2 அர 11:14. 18-20). இத்தகைய சமூக, பொருளாதார, கலாச்சார நிலையானது இஸ்ராயேல் 721-இல் ஆசிரியர்களால் வெல்லப்படும் வரையிலும், யூதா 586-இல் பாபிலோனியர்களால் வெல்லப்படும் வரையிலும் நிலவியது.

4. நாடு கடத்தப்பட்டதற்கு பிந்திய காலம்:- பாபிலோனிய அரசனாகிய நெபுக்கதுனேசார், எருசலேம் மற்றும் யூதாவின் மதில் சூழ்ந்த பிற நகரங்களைக் கைப்பற்றி, அழித்து நாட்டு மக்களைப் பாபிலோனியாவிற்கு நாடு கடத்திக் கொண்டு சென்றார் (2 அர 24:11-16; 25:22). இதனுடன் நகர வாழ்க்கையும் அத்துடன் சேர்ந்திருந்த சமூக பொருளாதார நிலைகளும் ஒரு முடிவிற்கு வந்தன. சமூகத்தில் பின்தங்கிய குறிப்பாக கிராம மக்கள் மட்டுமே நாட்டில் தங்கியிருந்தனர். விவசாயமும் ஆடு மேய்த்தலும் முக்கிய தொழில்களாகின. விவசாய தொழிலிலும் அத்துடன் இணைந்த மற்ற செயல்களிலும் ஏற்பட்ட மாறுதல்களின் விளைவாக, யூதேய சமூதாயமானது கடந்தகால விவசாய நிலைக்கு மாறியது. நாடு கடத்தப்பட்ட காலத்தின் தொடக்கத்தில், யூத விவசாயிகளுக்கு, அவர்கள் நாட்டிலே வாழ்வு கடினமானதாக இருந்தது. நாளாவட்டத்தில் சிலமயம் குறைந்த விளைச்சலே இருந்தாலும் சிலர் மாட மாளிகைகளில் வசிக்கவும், ஆலயத்தைத் திரும்ப கட்டக்கூடிய அளவிற்கும் வாழ்க்கையில் உயர்ந்தனர் (ஆகா 1:2-11). கோவில் இடிந்து கிடந்த இந்த எழுபதாண்டு காலத்தில் (586-516), யூதேய விவசாயிகள் தங்களது சமய வழிபாட்டிற்கு மையமாகச் செபக்கூடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தனர். இதன் விளைவாக, கோவிலை திரும்பக்க கட்ட வேண்டும் என்னும் ஆகாயின் வேண்டுகோளுக்கு முதலில் அக்கறை செலுத்தாமலே இருந்தனர்.

பாபிலோனியாவிற்கு கொண்டுசெல்லப்பட்ட யூதேயருக்கு 2-ஆம் ஏசயா இறைவாக்கினரால் கூறப்பட்ட செய்தியானது, அவர்களைவிட, யூதேயாவில் தங்கியிருந்த சமுதாயத்தினையே பெரிதும் கவர்ந்திருந்தது. யாவேயின் ஒன்றுபட்ட உலகளாவிய பண்பு மற்றும் வல்லமை, அவரே உலகின் ஒரே கடவுள், உலகின் ஒற்றுமை, கடவுளின் திட்டப்படி மனிதகுலத்தின் ஒற்றுமை, உலகத்தின் அரசனாகவும், மீட்பராகவும் இருக்க கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாரசீக மன்னனாகிய சைரஸ் மூலம் நிறுவப்பட இருக்கும் உலகளாவிய அரசு ஆகியவை பற்றிய செய்தியை அவர் அறிவித்தார் (ஏச 45:1). இஸ்ராயேல் என்பது இனி ஒரு அரசியல் அமைப்போ, நாடோ அல்ல; மாறாக, கடவுளின் மக்கள், அவரது ஊழியராக இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், அனைத்து மக்களினத்தாருக்கும் அளிக்கப்படவுள்ள மீட்பின் பிரதிநிதி, பாபிலோனிய அடிமைத் தளையினின்று சைரசின் மூலம் விடுவிக்கப் படப்போகின்ற பணியினை நிறைவேற்ற வேண்டியவர்கள் என்றும் 2-ஆம் ஏசயா கூறுகிறார்.

பாபிலோனிய அடிமைத்தளையின் இறுதிக்கட்டத்தில், பாலஸ்தீன யூதேயசமுதாயமானது தேசியவாதிகள் என்றும், உலகளாவிய மனப்பான்மை உடையவர்கள் என்றும் இரண்டாகப் பிளவுபட்டிருந்தது. உப ஏசயாவின் செய்திக்கு பதிலளிக்கும் செயலில் மட்டும், இரு குழுவினரும், தமது கோட்பாட்டிலும் செயல்திட்டத்திலும் உலகளாவியவர்களாகவே இருந்தனர். திரும்ப பெறவுள்ள யூதேய அரசியல் சுதந்திரம், தாவீதின் சந்ததியினர் வழியில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர்களால் நிறுவப்பட உள்ள யூதேய அரசைப்பபற்றிய நம்பிக்கையைத் தேசியவாதிகள் போற்றிக்காத்து வந்தனர். கி.மு.522-ல் 'கேம்பிசசின் தற்கொலை, நிகழ்ந்த குறுகிய ஆயுள்கால சைரஸ் அரசின் வீழ்ச்சி, அத்துடன் விளைந்த குழப்பங்கள், பாரசீகப் பேரரசை எதிர்நோக்கியிருந்த வீழ்ச்சி ஆகியவை தேசியவாதிகளின் நம்பிக்கையையும், திட்டங்களையும் ஊக்குவித்தன. இறைவனால் ஏற்படுத்தப்படவுள்ள அரசைப்பற்றிய ஏசயாவின் செய்தியை ஒருப

குதியை ஏற்றுக்கொண்ட அவர்கள் மற்றொரு பகுதியை ஏற்க மறுத்தனர். இஸ்ராயேலரை தவிர்த்து மற்றவர்களும் ஆட்சிபுரிவர், தாவீதின் சந்ததியினர் மட்டுமல்ல, பிறரும் அரசராக இருப்பர் என்ற எண்ணம் இஸ்ராயேலரின் ஒரே கடவுளாகிய 'யாவே'-க்கு இருக்கும் என்பதனை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். யாவேயை ஒரே ஒரு கடவுளாகவும் உலகமனைத்திற்கும் கடவுளாகவும் ஏற்றுக்கொண்டாலும் அவர் முதன்மையாக தங்கள் கடவுளே என்று கருதினர். தங்களது திட்டம் நிறைவேறுவதற்கு காலமும் கனிந்துள்ளது என்று அவர்கள் நம்பினர். இதன்விளைவு, 520-519-ல் நிகழ்ந்த செருபாபேலின் பயனற்ற கிளர்ச்சியில் முடிவடைந்தது (ஆகா 2:20-23; செக் 4:6-7).

செருபாபேல் கிளர்ச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர், உலகளாவியவர்கள் முன்னிலைக்கு வந்தனர். இக்குழு 2-ம் ஏசயாவின் செய்தியையும், திட்டத்தையும் கிட்டதட்ட முழுமையாக ஏற்றுக்கொண்டது. பாரசீக அரசின் உதவியுடன் இரண்டாவது கோவில் எழுப்பப்பட்டு 516-ம் ஆண்டின் புத்தாண்டு நாளில் அர்ப்பணிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி ஒரு பொருள் பொதிந்த முக்கிய கட்டமாகும். யாவே, இஸ்ராயேலை ஒரு நாடாக தாவீதின் சந்ததியினரால் ஆளப்பட வேண்டிய ஒன்றாக இல்லாமல், தமது மக்களாக, ஊழியராக மனுக்குல மீட்பிற்கு பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தார் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். இதன் விளைவாக, அவர்கள் தங்கள் யூத நாட்டை, இறைவனை மட்டுமே ஒரே அரசராகவும், அவரது உலக நிர்வாகி மற்றும் பிரதிநிதியாக ஆலயத்தின் தலைமைக்குருவையும் கொண்ட ''யாவேயின் சமூகம்'' எனப்படும் சமய மக்களைக் கொண்ட இறை ஆட்சியாக மாற்றி அமைத்தனர். மேலும், இஸ்ராயேலை யாவே-யின் ஊழியனாகவும், உலக மீட்பின் பிரதிநிதியாகவும் நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்ட இவர்கள், மதமாற்றத் திட்டத்தை துவக்கினர். அதன் விளைவாக, பலரும் யூத மதத்தில் சேர்ந்து, யாவே சமூகத்தின் உறுப்பினரானார்கள். இரண்டாம் ஆலயம் இருந்தவரை, உலகளாவியவர்களின் குழு முன்னணியில் இருந்தவரை இத்திட்டம் தொடர்ந்தது. ஆனால், இது முப்பதாண்டுகள் மட்டுமே நிலைத்தது.

486-ஆம் ஆண்டின் இறுதியில் முதலாம் தாரியுசின் மரணத்திற்கு பின்னர், பாரசீகத்திலிருந்து தேசிய வாதிகளால் இரண்டாம் முறை தொடங்கப்பட்ட கிளர்ச்சியின் விளைவாக, திடீரென, அழிவுக்குரிய இம்முடிவு ஏற்பட்டது. யூதாவிற்கு நெருங்கியிருந்த பகைவர்களான ஏதோம், மோவாபு, அமோன் மற்றும் பெலிஸ்தியரை யூதாவின் மேல் படையெடுக்க அனுமதித்துத் துணை புரிந்ததன் மூலம் முதலாம் தாரியுசிற்கு பின்னர் வந்த 'செருசு' இக்கிளர்ச்சியை விரைவிலும் கடுமையாகவும் அடக்கினார். யாவே அனைத்து நாடுகளையும் தனக்குக் கீழ்ப்படுத்தி யூத உலக பேரரசை நிறுவுவார் (உப 20:10-20) என்ற யாவேயின் உறுதிமொழி மீது மட்டுமே தேசியவாதிகள் நம்பிக்கை கொண்டிருந்ததால் அவர்களிடமிருந்து எதிர்ப்பு எதுவும் எழவில்லை. நாடு முழுதும் சூறையாடப்பட்டது; எருசலேம் கைப்பற்றப்பட்டு அதனுடைய சுவர்களும் கதவுகளும் அழிக்கப்பட்டன. இரண்டாவது ஆலயம் அடியோடு எரிக்கப்பட்டது. பெரும்பாலான மக்கள் ஈவு இரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். மற்றவர்கள் சிறைபிடிக்கப்பட்டு, தீர் மற்றும் காசாவிலுள்ள அடிமை சந்தையில், உலகின் எல்லையில் உள்ள பகுதிகளுக்கெல்லாம் விற்கப்பட்டனர் (யோவேல் 3:1-8). யூதேயாவின் முன்பிருந்த நிலையில், பரிதாபகரமாக எஞ்சியிருந்த யூதே சமுதாயத்தினரின் ஒரு சிறு பகுதியினர் மட்டுமே உயிரோடு விடப்பட்டனர் (நெக 1:2-3).

பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று 458-ல் திரும்பிய பிறகு, பாரசீக ஆதிகாரம் மற்றும் உதவியுடன், எஸ்ரா மற்றும் அவரது உதவியாளர்களால் ஆலயம் மூன்றாவது முறையாக கட்டியெழுப்பட்ட பின்னர், பாஸ்தீனத்திலிருந்து யூதேய சமுதாயத்தினரின் நிலையானது, மீண்டும் மெதுவாக

ஆனால் சீராக ஒரு உறுதியான நிலையினை அடைந்தது. எருசலேமில் நகர வாழ்வு மீண்டும் புத்துயிர் பெற்றது. 444-ல் நகர சுவர்களை கட்டியெழுப்பும் பணியினை நெகமியா தொடங்கியவுடன், இந்நிலை வளரத் தொடங்கியது. பாபிலோனியாவில் எஸ்ராவையும் அவரை பின்பற்றியவர்களையும் பிரதிநிதியாக கொண்டிருந்த பாபிலோனில் இருந்த யூத சமுதாயத்தினர் பல்வேறு சவால்களை சமாளிக்க வேண்டியிருந்தது. நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலர் அனைவரும் மீண்டும் தமது தாயகத்திற்கு கொண்டுவரப் பட்டு, எல்லா பாவங்களையும் நீக்கி புதியதொரு இதயத்தினை அதற்கு அளித்து (எச 36:16-36), புதிய முடிவில்லா உடன்படிக்கை ஒன்றை அமைப்போம் (எரே 24:4-7; 31:30-33) என்ற எரேமியாவின் செய்தியை ஏற்று அவர்களுடன் இருந்த சாதேக்கின் மரபைச் சேர்ந்த எசக்கியேல் மறுவிளக்கம் அளித்ததை ஏற்றுக்கொண்டனர் அம்மக்கள். அன்னிய நாட்டில் புதிய மக்கள், புதிய உயர்ந்த கலாச்சாரம் ஆகியவற்றினிடையே, யாவே அறிவித்த நோக்கம் தங்களிடையே நிறைவேறும் காலம் வரையில், தமது யூத அடையாளத்தை எவ்வாறு நிலையாகக் கொண்டிருப்பது, என்னும் பிரச்சினை அவர்களிடையே பெரிதாக உருவெடுத்தது. இதற்குத் தீர்வாக, யூதர்கள், பிறமக்களிலிருந்து பிரிந்து தனித்து வாழ்வதுதான் என்று கருதப் பட்டது. இது உலகளாவியக் கருத்துடையவர்களின் போக்கிற்கு நேர்மாறாகவும், பெருமளவு தேசியவாதிகளின் நிலை போன்றதாகவும் அமைந்தது.

பாபிலோனில் பிறரிடமிருந்து பிரிந்து தனித்து வாழும் யூதமரபை பாலஸ்தீன யூத சமுதாயத்தின் மீதும் எஸ்ரா செயல்படுத்தத் தொடங்கினார். யூத மதத்திற்குப் பிறரை மதம் மாற்றுதல் முழுமையாக நிறுத்தப்பட்டது. அன்னியருடன் திருமணம் புரிதல் தடைசெய்யப்பட்டது. அரசியல் நாட்டமைப்பிற்கு முற்றிலும் எதிரானதான இஸ்ராயேலர் ஒரு சமயம் சார்ந்த மக்களே என்ற முந்தைய உலகளாவிய கோட்டாட்டை எஸ்ராவும் அவரைச் சேர்ந்தவர்களும் முழுமையாக ஏற்றுக்கொண்டாலும், அது எல்லாரையும் உள்ளடக்கும் ஒன்றல்ல, யூதர்களை மட்டும் உள்ளடக்கும் தனித்தன்மையுடையதாகும். இஸ்ராயேல், பிறமக்களிலிருந்து பிரித்து வைக்கப்பட்டு, யாவேயின் மக்களாவர். அவருக்கு மட்டுமே உரியவர்களாவார். எஸ்ரா மற்றும் நெகமியா ஆகியார் மரபுப் பெயரான ''ககால் யாவே'' அதாவது 'யாவே-யின் சமூகம்' என்ற பெயரிலேயே யூத மக்களை அழைக்கலாயினர் (எஸ் 10:2. 14; நெக 7:66; 8:17). ஆனால் ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிக்குள் 'இஸ்ராயேலின் சபை' என்று பொருள்படும் 'அதாத் இஸ்ராயேல்' என்ற சொல், பழைய வார்த்தைக்குப் பதிலாக உபயோகிக்கப்படலாயிற்று (யாத் 12:3.6.47; 2 நாள் 5:6). பழைய வார்த்தையுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, இவ்வார்த்தை கொண்டுள்ள முற்றிலும் மாறுபட்ட தனித்து ஒதுங்கியிருக்கும் பொருள் தெளிவாக புலனாகிறது. எஸ்ராவின் அமைப்பினால் உண்டான கடுமையாக ஒதுங்கியிருக்கும் பண்பு முக்கியத்துவம் பெற்றது. இது சபையின் ஒற்றுமைக்கு எதிராக நடப்பவர்களையும், யாவே-யுடனான உறவை துண்டிக்க வழிகோலுபவர்களையும் வெளியேற்றுதல், அதாவது வெட்டிவிடுதல், இஸ்ராயேல் சபையினின்றே ஒதுக்குதல், வெட்டிவிடுதல் போன்ற தண்டனைகளில் தெளிவாகிறது. யூதரல்லாதோருடன் திருமணம் புரிந்ததாக கருதப்பட்ட சமாரியரும், அக்கால எகிப்திய யூத சமுதாயத்தினரும் யூதரே அல்லர் என்று கூறப்பட்டு, இஸ்ராயேல் சபையினின்று வெளியேற்றப் பட்டது, அவர்கள் பின்பற்றிய யூத தனித்துவத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

எஸ்ராவினால் மூன்றாவது கோவில் கட்டி முடிக்கப்பட்டபின், இரண்டாம் ஆலயத்தைச் சேர்ந்த லேவிய குருக்களுடன் ஏற்பட்ட, முந்திய குருப்பணியாளர்கள் ஆரோன் குருக்களா? அல்லது சதோக்கிய குருக்களா? (எச 44:10-16) என்ற விவாதத்தினை முடித்தது. கி.மு.5-ம் நூற்றாண்டின் இறுதிக்குள் குருக்களைப் பற்றிய விதிமுறைகள் தொகுக்கப்பட்டது, புதிய சந்திர-சூரிய

நாட்காட்டி மூலம் திருவிழா மற்றும் சமயச்ச டங்குகளை முறைப்படுத்தியது ஆகியவற் றோடு, அதிகாரபூர்வமான யூதரின் பண்பு கள் மற்றும் யூதமக்களின் வாழ்க்கை முறை போன்றவை அடுத்து ஐந்து நூற்றாண்டுக ளுக்கு நிலைப்படுத்தப்பட்டது எனலாம்.

சிரிய அரசன் 4-ஆம் அந்தியோக்கு யூதமக் களின் சமயத்தின் மீது செலுத்த விரும்பிய தீவிரமான மாற்றங்களுக்கு யூதர்கள் காட்டிய எதிர்ப்பின் விளைவாக 'அசமோனிய' அரசு உருவாயிற்று. 'அசமோனியர்' தாவீதின் பரம்பரையைச் சேர்ந்தவர்களல்லர். பழங்கா லத்தில் எதிர்பார்க்கப்பட்டது போலும், இன்னும் சிலர் கருதியதுபோலும் அவர்களு டைய அரசு மீண்டு எழுந்த யூதா அரசு அல்ல. முதல் அசமோனிய ஆட்சியாளர்கள் அரசை பொறுப்புடனும், ஜனநாயக முறை யிலும் நடத்திச் சென்றனர். பிற்கால அரசர் களோ ஏகாதிபத்திய வழியில் செல்லத் தொடங்கினர். அவர்களுக்குக் கீழாக அர சவை கட்சியினரும், அதன் விளைவாக அதிகாரவர்க்கத்தினரும் தோன்றினர். அதன் பயனாக சமூக வேறுபாடுகள் தோன்றத் தொடங்கின. இந்நிலையைப் பரிசேயர், சது சேயருக்கு இடையிலான போராட்டங்கள் பெருமளவு பிரதிபலிக்கின்றன. ஏரோது மற் றும் அவரது பரம்பரையின் கீழ், இந்நிலை குறிப்பிடத்தக்க அளவு பரவலாயிற்று. அதி கார வர்க்க அமைப்பு யூத மக்களின் உண்மை யான ஜனநாயக முறைமைக்கு எப்போதுமே ஏதோ ஒருவிதத்தில் அந்நியமாக இருந்தது. தங்கள்மீது கண்டிப்பாகத் திணிக்கப்பட்ட இந்த அமைப்பை, யூதமக்கள் மனப்பூர்வ மாய் வெறுத்தனர். கி.பி.70-ல் எருசலேம் ஆலயம் உரோமையரால் முற்றிலும் அழிக் கப்பட்டு, யூத அரசு முடிவிற்கு கொண்டுவ ரப்பட்டது வரையிலான ஏரோதியர்களின் காலம் முழுவதிலும், ஏகாதிபத்திய மேல்கு டியாட்சிக்கும், பொது மக்களின் ஜனநாயக எண்ணத்திற்கும் இடையே நிலவிய வேறு பாடுகள் தெளிவாகப் புலப்பட்டன. அதன் விளைவாக, யூத மக்களிடம் நிலவிய ஜனநா யக நோக்கு உறுதிப்படுத்தப்பட்டது.

இஸ்ராயலின் வரலாறு - I - ஆபிரகாமுக்கு முன்வரலாறு

1. வரலாற்றிற்கு ஆதாரங்கள் வேண்டும். இஸ்ராயல் மக்களின் வரலாற்றிற்குத் தற் போது பல ஆதாரங்கள் வகையாய் கிடைக் கின்றன. தொல் பொருள் ஆராய்ச்சி, அதோடு தொடர்புடைய ஆய்விலக்கியங் கள் ஆகியவை இஸ்ராயல் மக்களின் வர லாற்றை மட்டுமல்ல, இஸ்ராயல் மக்களின் முன்னோர்களின் வரலாற்றினையும், தெரிந் துக் கொள்ளப் பாலமாக அமைந்துள்ளன. இத்துடன் இஸ்ராயல் மக்களைச் சுற்றி வாழ்ந்த மற்ற மக்களின் வரலாறும் மேற் கண்ட ஆராய்ச்சிகளால் வெளிச்சத்திற்கு வந் துள்ளன. ஆனால் சுமார் 150 வருடங்களுக்கு முன்பாக, இவ்வித ஆய்வு பூர்வமான இஸ் ராயல் வரலாற்றை நாம் காண வாய்ப் பில்லை. முன்பெல்லாம் இஸ்ராயல் வர லாற்றை நிலைநிறுத்த, இரண்டுவித ஆதாரங் கள் மட்டுமேத் துணையாய் நின்றன. ஒன்று விவிலியம், மற்றொன்று எரோதோதுசு என் பவரின் எழுத்துப்படைப்பு. ஆனால் மேற் கண்ட இரண்டு ஆதாரங்களும் அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் என்று சொல்ல முடி யாது. ஏனென்றால் விவிலியம் ஒரு குறிப் பிட்ட நோக்கத்தை மனதில் வைத்து எழுதப் பட்டது. எரோதோதுசுவின் எழுத்துப்ப டைப்பும் முழுமையாக அறிவியல் பூர்வமா னது என்று சொல்ல முடியாது. ஆகவே தற்போதுக் கிடைத்திருக்கும் ஆதாரங்களின் அடிப்படையில் இஸ்ராயலின் வரலாற்றை இங்கு பகுத்துப் பார்க்கலாம். ஒருவிதத்தில் புதிய வரலாற்றுக் கண்டுபிடிப்புகள், விவிலி யத்தில் கூறப்படுவைகளுக்கு மாறுபாடுக ளைத் தருகின்றன. இதனால் விவிலிய அறி ஞர்கள் ஆழ்ந்த ஆராய்ச்சியில் நுழைந்திட, இந்நவீன வரலாற்றுக் கண்டுப் பிடிப்புகள் காரணமாக அமைந்தன. மற்றொரு வகை யில் இப்புதிய வரலாற்று ஆதாரங்கள் மிகுந்த பயனுள்ளவையாய் அமைந்துள் ளன. ஏனென்றால் விவிலியத்தில் காணப்ப டும் நிகழ்ச்சிகளை உலகின் ஒட்டு மொத்த வரலாற்றுடன் இணைத்துப் பார்ப்பதற்கு இப்புதிய வரலாற்றுக் கண்டுபிடிப்புகள் உத வியுள்ளன. இன்னும் விவிலியப்பகுதிகளை

விளக்கிப் பார்க்கவும் இவ்வாய்வுகள் துணை செய்துள்ளன. உதாரணமாக ஆதியாகமத்தின் முதல் பதினொரு அதிகாரங்களின் இலக்கிய அமைப்பைப் புரிந்துக் கொள்ள இவ்வாய்வுகள் பெரிதும் உதவியுள்ளன.

மனிதன் தோன்றியது முதல், அவனின் வரலாற்றை பல படிகளாகப் பிரித்துப் பார்த்தனர் அறிஞர்கள். காலபோக்கில் மனிதன் கருவிகளையும், ஆயுதங்களையும், உருவாக்கிப் பயன்படுத்தினான். இக்கருவிகளைச் செய்ய பலவித மூலப் பொருள்களைப் பலவிதக் காலக்கட்டங்களில் பயன்படுத்தியுள்ளான். அவ்வாறு கருவிகளைச் செய்ய அவன் பயன்படுத்திய மூலப்பொருள்களையே, அக்காலத்திற்குரிய பெயராக அறிஞர்கள் பொருத்திக் கூறியுள்ளனர். இவ்வடிப்படையில்தான் கற்காலமென்றும், செம்புக் காலமென்றும் வகுத்துக் கூறுவர். இவ்வாறு குறிப்பிட்ட மூலப் பொருட்கள், கருவிகள் செய்ய பயன்படுத்தப்பட்டது ஒரு குறிப்பிட்ட காலத்தோடு தொடர்புடையனவையாகும். இம்மூலப் பொருட்கள் மாற்றப்பட்டது பல்லாண்டுகள் இடைவெளிக்குப் பின்பாகும். கீழேக் கொடுக்கப்படும் கால வரையரை தோராயமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

2. கற்காலம்:- கி.மு.3200க்கு முற்பட்டக் காலத்தைக் கற்காலம் என்றழைப்பர். இக்கற்காலத்தை பழைய கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் என்று பிரித்துக் கூறுவர்.

அ. பழைய கற்காலம்:- விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியின்படி, நமது உலகம் 3 லட்சம் கோடி வருடத்திற்கு முன் தோன்றியிருக்க வேண்டும் என்று கணிக்கின்றனர். இதில் 50 கோடி வருடத்திற்கு முன்தான் உயிரினங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்றும் கருதுகின்றனர். நமக்குக் கிடைத்திருக்கும் தொல்பொருட் ஆராய்ச்சியின்படி, 6 லட்சம் வருடத்திற்கு முன்பாக வாழ்ந்த மனிதனின் மண்டை ஓடுகள் நமக்குக் கிடைத்துள்ளன. இவை சாவா, ஒல்டுவாயு என்றஇடங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை. இப்பழைய மனிதனுக்கு 'செல்லயன்' மனிதன் என்று பெயர் வைத்துள்ளனர். மேலும் கிழக்குத் தெற்கு ஆப்பிரிக்காவிலும் இதைப் போன்ற பழங்காலத்து மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மண்டையோடுகள் மேற்கண்ட 'செல்லயன்' மனிதனை விட சுமார் 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பானக் காலத்தைச் சார்ந்தவை. ஆனால் அவர்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்கள்தானா? என்பதில் அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் உண்டு. இந்த 'செல்லயனை' ஆரம்ப மனிதன் என்றழைக்கலாம். இந்த 'செல்லயனை' யொத்த மனிதர்கள் உலகில் பலப் பகுதிகளில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதற்கும் நமக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. செர்மனியில் கைடல்பர்கு என்றவிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோடு 5 இலட்சம் வருடங்களுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்தது. சீனாவைச் சேர்ந்த பீகிங் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோடு 4 லட்சம் வருடங்களுக்கு முந்தியது. இங்கிலாந்தைச் சேர்ந்த சுவான்ஸகோம்பு என்றவிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோடும், செர்மனி நாட்டைச் சேர்ந்த ஸ்டெயின்கெயிம் என்ற விடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோடும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இவ்வாறாக நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஒருவித முன்மனிதன் வாழ்ந்திருக்கிறான். இந்தப் பிரிவின் கடைசியில் நெயான்தெர்த்தால் என்ற வகை மனிதனும் வாழ்ந்து வந்திருக்கிறான். மேற்கண்ட மனித வர்க்கத்தைத்தான் குகை மனிதன் என்றும் அழைப்பர். கி.மு.40,000 ஆண்டுவாக்கிலிருந்துதான் தற்காலத்து நாகரீக மனிதர்களைப் போன்று முழுவளர்ச்சியடைந்த மனிதன் வாழ்ந்து வந்துள்ளான். இவர்களை ''அறிவுடைய மனிதர்கள்'' (Homo Sapiens) என்று அழைக்கிறோம். இந்த மெய்யறிவு மனிதர்கள் ஐரோப்பாவில்தான் முதலில் தோன்றியிருப்பதாகத் தெரிகிறது. அதே சமயத்தில் தென் மேற்கு ஆசியாக் கண்டத்திலும் இம்மெய்யறிவு மனிதர்கள் சற்று காலத்தால் முற்பட்டே தோன்றியுள்ளதாகத் தெரிகி

றது. இதற்குக் கர்மேல் மலையில் கண்டெடுக்கப்பட்ட மண்டையோடுகள் சான்றாக உள்ளன. இவர்கள் கி.மு.75,000 ஆண்டிலிருந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

இப்பழையக் கற்காலத்தில் மனிதன் நாடோடியாகத்திரிந்து வாழ்ந்து வந்திருக்கிறான். பலவிடங்களுக்குத் திரிந்தே வாழ்ந்திருக்கிறான். இக்காலத்தில் மனிதன், கோடைக் காலங்களில் திறந்த வெளியிலும், குளிர் காலங்களில் குகைகளிலும், பொந்துகளிலும் தங்கி வாழ்ந்திருக்கிறான். இக்காலத்தில் அவனுக்கு முக்கியமான வேலை தனக்குரிய உணவைத் தேடுவதாகும். மிருகங்களை வேட்டையாடியும், மற்ற உணவுப் பொருட்களைத் தேடிச் சேர்ப்பதிலும் தன் நாட்களைக் கழித்து வந்தான். இப்போது தீயைக் கட்டுப்படுத்தவும் தெரிந்து வைத்திருந்தான்.

கி.மு.40,000 ஆண்டிற்குப் பிறகுதான் தன் நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டு ஓரிடத்திலேயேத் தங்கி வாழ மனிதன் முற்பட்டான் என்பதை ஆதாரங்கள் எடுத்துக் கூறுகின்றன. இப்போது உணவை தேடுவதோடு மட்டுமல்லாமல், உணவைச் சேமித்து வைக்கவும் தலைப்பட்டான். இச்சூழ்நிலையில் தான் சுமார் கி.மு.20,000 ஆண்டின்வாக்கில் மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர் பேரிங் என்ற இரு கடல் நீர் நிலைகளின் இடைக்கழியைத் தாண்டி அமெரிக்கக் கண்டத்தில் குடியேறியிருக்கின்றனர்.

ஆ. இடைக் கற்காலம்:- இக்காலத்தில், மனிதன் உணவைத் தேடிச் சேர்த்து வைக்கும் முயற்சியில் அதிக வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் தானே உணவுத் தானியங்களை விளைவிப்பதிலும் முற்பட்டான் மனிதன். மிருகங்களைப் பிடித்து பழக்கியும், அவைகளைத் தனக்குப் பயன்படுத்திக் கொண்டான். இவ்வாறு மனிதனின் வாழ்க்கை முறையில் அடிப்படையான புதுத் திருப்பம் ஒன்று உண்டாகியது. இந்த அடிப்படை முன்னேற்றம் மேற்காசிய நாடுகளில்தான் கி.மு.10,000-7,000-திற்கும் இடைப்பட்டக் காலத்தில் உண்டாகியிருக்கிறது. இங்கிருந்துதான், இம்முன்னேற்றம் ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் பரவி சென்றிருக்கிறது. இத்தகைய வாழ்க்கை முன்னேற்ற முயற்சி, தொடர்ந்து மற்றொரு முறை இக்காலத்திலேயே, கிழக்காசிய நாடுகளிலும், மத்திய அமெரிக்காவிலும் உண்டாகியிருக்கிறது. அன்று உண்டாகிய அதே முன்னேற்றப் படியில், இன்னும் உலகின் பல உட் கண்டங்களில் மனிதனின் வாழ்க்கைநிலை தேங்கி நிற்பதையும் நாம் காணமுடிகிறது.

இந்த இடைக் கற்காலம் தோன்றியது மேற்காசிய நாடுகளில் என்று சொன்னோம், ஈரான், ஈராக், துருக்கி, சீரியா, பாலஸ்தீனம் ஆகிய இந்நாடுகளிலுள்ள, மழைவளம் பெற்ற மலைப் பகுதிகளில் தான் இந்நாகரிக வளர்ச்சி ஆரம்பமாகியிருக்கிறது. இப்பகுதிகள் 2,000 அடிமுதல் 5,000 அடி வரையிலான உணர்ந்த மலைகளுக்கிடைப்பட்ட சமவெளிப் பகுதிகளாகும். துருக்கியில் பெல்டிபி, ஈராக்கில் காரிம் சாகிர், மெலேபாத், சாவி செமி என்றவிடங்களிலும், கர்மேல் மலையிலும் தொல்பொருட் ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. இவ்விடங்களில் இடைக் கற்கால நாகரீக வளர்ச்சியின் தடையங்கள் கிடைத்துள்ளன. இங்கு மனிதர்கள் பயிர்செய்து உணவுப் பெற்றதையும், மிருகங்களைப் பழக்கிப் பயன்படுத்திக் கொண்டதையும் பார்க்கிறோம்.

இ. புதிய கற்காலம்:- கி.மு.7000 முதல் 4000 வரையுள்ள காலப்பகுதி புதிய கற்காலம் என்றழைக்கப்படும். இக்காலத்தில், மனிதன் உணவை உண்டாக்கிச் சேர்ப்பதில் முழுக்கவனத்தையும் செலுத்தியிருக்கிறான். இப்போது வேட்டையாடுவோர், மீன் பிடிப்போர், பழங்கள், கனிகள் சேர்ப்போர் இவர்கள் தனிதனிச் சிறு குழுக்களாகச் சேர்ந்து வாழ முனைந்தனர். இச்சிறு குழுக்கள், தாங்கள் தங்கியவிடத்தில வேண்டிய உணவு கிடைக்காதபோது வேறுவிடத்திற்கு இடம் பெயர்ந்து சென்றனர். இக்குழுக்கள் உணவுப் பொருட்களை சேமித்து வைக்க வாய்ப்

பில்லை. ஏனென்றால் அவ்வளவு அதிக மான உணவு பொருட்கள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அத்துடன் சில உணவு வகைகளை சேர்த்து வைக்கவும் அவைகள் முடியாத வகையிலிருந்தன. இப்போது தங் கள் ஆடையாக, மிருங்களின் தோல்களை உடுத்திக் கொண்டனர். இக்காலத்தில், பாத் திரங்களைச் செய்து பயன்படுத்தியதாகவும் தெரியவில்லை. மண்பாத்திரங்களெல்லாம் இன்னும் தோன்றவில்லை. ஏனென்றால் பொருட்களை உண்டாக்குவதும் பாதுகாப்ப தும்தான் அவர்களுக்கு முழுமையான வேலைகளாயிருந்தன. ஆனால் இப்போது பலவிடங்களுக்குத் திரிந்து வாழ்ந்த மனிதன் ஓரிடத்தில் தங்கி வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனென்றால் ஓரிடத்தில் அவன் பயிர் செய்தபோது, விளைந்த கனிகளை அறுவடையாக்க அதேயிடத்தில் தங்க வேண்டி அவசியம் உண்டாகியது. இதனால் தனக்கு வேண்டிய வீட்டினையும் கட்டிக் கொள்ளத் தொடங்கினான் மனிதன். ஒரேயி டத்தில் பலருக்குத் தேவையான உணவை பயிரிடவும் முடியும் என்னும் தெரிந்துக் கொண்டான். இத்தகைய சமூகக் கூட்டு வாழ்க்கையினால் கிராமங்கள் உருவாகின. அந்த சமுதாயத்தில், எல்லோரும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகளும், பொதுவான பழக்கங்களும் அங்குப் பிறந்தன. அடுத்து இயற்கையில் கிடைத்தப் பொருட்களைத் தனக்குப் பொருத்தமான முறையில் மாற்றிய மைத்துப் பயன்படுத்தவும் முற்பட்டான் மனிதன். ஏனென்றால் அந்த அளவிற்கு சமுதாய வாழ்வு அவனுக்கு புதுவசதிகளைத் தந்திருந்தது. இப்போது தான் மட்பாண்டங் கள் செய்யத் தலைப்பட்டான். துணிகளை நெய்தலில் ஒரு சிலர் திறமையை இயற்கை யாகப் பெற்றிருக்கலாம். அவர்கள் தங்கள் வாழ்க்கை தொழிலாகவே அவைகளை மேற்கொண்டு, அத்தொழிலின் பொருள் களை விற்று, அதனால் தங்கள் உணவை பெற்றிருப்பர். கி.மு. 7000 ஆண்டில் இத்த கைய கிராம வாழ்க்கை நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. இதனை தொல் பொருள் ஆராய்ச்சி கண்டுபிடித்திருக்கிறது. ஈராக் நாட்டில் யார்மோ, கசுனா, என்றவி டங்களிலும் எரிகோ நகரிலும் நடத்தப்பட்ட தொல்பொருட் ஆராய்ச்சி, கி.மு. ஏழாயிரம் ஆண்டுகளில் நடைமுறையிலிருந்த கிராம வாழ்க்கை முறைக்குச் சான்றுபகர்கின்றது. அதேபோன்று எகிப்து நாட்டில் பயூம், தாசா, என்றயிடங்களிலும் மேற்கு ஆசியா வில் பிப்லோஸ், இராஸ் சம்ரா, நினிவே முதலிய நகரங்களில் நடந்த தொல் பொருள் ஆராய்ச்சிகள் கி.மு. ஐந்தாயிரம் ஆண்டுக ளில் அவ்விடங்களில் நடந்து வந்த கிராம கூட்டு வாழ்விற்கு சான்றுகளாய் அமைந்துள் ளன.

3. செப்புக் கற்காலம்:- கி.மு.4000-3200-க்கு இடைப் பட்டக்காலம் செப்புக்கற்கா லம் என்றழைக்கப்படும். இக்காலத்தில் புதிய கற்காலத்திலிருந்ததை விட, விவசா யம் மிகவும் முன்னேற்றம் கண்டது. இத னால், பெருகி வந்த மக்கள் தொகைக்கு ஈடுகொடுக்கும் வகையில் உணவு பொருட் கள் உற்பத்தில் பெருகின. அத்துடன் மக்க ளின் கலாச்சாரமும் உயர்ந்து வளரத் தொடங் கியது. வடமெசபொத்தாமியாவின் மலைப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள், சிறிது சிறிதாய் மலையடிவாரத்திலிருந்து சமவெளிகளுக்கு இறங்கி வந்து குடியேற ஆரம்பித்தனர். மலையடிவாரத்தில், ஆறுகளின் கரையோ ரங்களில் மண் வளமுள்ளயிடங்களில் அவ் வாறு குடியமர்ந்தனர். உதாரணமாக பாக் குசு, சமாரா என்ற இடங்களில் இவ்வாறு குடியமர்ந்தனர். இங்கு விவசாயிகள் சேர்ந்து வாழ்ந்த சிறு கிராமங்கள் தோன்றின. இக்கி ராமங்களில் மட்பாண்டம் செய்தல், துணி நெய்தல் போன்ற தொழில்களும் வளரத் தொடங்கின. அதாவது இத் தொழில்க ளையே வாழ்வாக்கிக் கொண்டவர்களின் எண்ணிக்கை பெருகியது. இக்காலத்தில் ஒரு புதிய பழக்கம் உண்டாகியிருக்கிறது. அதா வது மட்பாண்டங்களில் வர்ணங்களைக் கொண்டுப் படங்கள் வரைந்து அழகுப்படுத் தினர். மெசபொத்தாமியாவின் வடப்பகுதி இவ்வாறு மக்கள் நிறைந்தயிடமாக மாறி யது. இதே காலத்தில் பாலஸ்தீனத்திலும், கிராமச் சமுதாயங்கள் பலயிடங்களில் அமைந்து வளர்ந்தன.

வடக்கு பெசபொத்தாமியாவிலிருந்து பரவ ஆரம்பித்த இக்கிராம கூட்டு வாழ்க்கை முறை தென் மெசபொத்தாமியாவிற்கு பரவ ஆரம்பித்தது என்று மேலே கண்டோம். இந்தத் தெற்கு மெசபொத்தாமியாவிற்கு இறங்கி வந்த இந்த கிராம நாகரீகம், மற்றொரு புது வளர்ச்சியையும் இங்கு கண்டது. இங்குதான் கிராம அமைப்பிலிருந்து நகர்புற நாகரீகத்திற்கு வளர்ச்சி உண்டாகியது. இந்நகர அமைப்பில் பலவிதங்களில் புது அம்சங்கள் புகுத்தப்பட்டன. உதாரணமாக அரசரோ குழுக்களோ தலைமையாயிருந்த அரசியல் நிர்வாக முறை அறிமுகப் படுத்தப்பட்டது. சட்டங்கள் அரசால் இயற்றப்பட்டன. சாலைகள், துறைமுகங்கள், கன்மாய்கள் போன்ற பொதுத் துறைப் பணிகள் செய்யப்பட்டன. காவலர்கள், இராணுவ அமைப்புகள் இவைகள் எல்லாம் கொண்டுவரப்பட்டன. பலவிதக் கலை நுணுக்கங்களும் வளர்ச்சி கண்டன. இவ்வாறு, நகர் கலாச்சாரம் தென் மெசபொத்தாமியாவில், அதாவது திகிரிசு, யூப்பிரத்திசு ஆகிய நதிகள் பாய்ந்த, வண்டல் மண் நிறைந்த தென்பகுதியில் வளர்ச்சிப் பெற்று வந்தது. இவ் வளர்ச்சி நடந்து வந்தக் காலம் கி.மு.4000 ஆண்டின் வாக்கில், குறிப்பாக எரிது, ஆல் உபாயிது, வார்க்கா, ஊர், சூசா ஆகியவிடங்கள் நகர்கலாச்சாரம் வளர்ந்து வந்தவிடங்களாகும்.

இவ்வாறு ஆறுகளின் கரைகளில் குடியேறிய மக்களிடையே மற்றுமொரு முன்னேற்றம் தோன்றியது. ஆற்றின் நீரை கன்மாய்கள் செய்து, தூரத்து பகுதிகளுக்கு கொண்டு சென்றனர். இதனால் மழையில்லாவிட்டாலும், ஆற்று நீரின் உதவியால் வளமுள்ள நிலங்கள் பயிர் செய்ய விளைநிலங்களாகின. இப்போது மக்கள் இப்பகுதிகளிலும் விரைந்துக் குடியேறினர். இந்த கன்மாய்கள் அமைத்துத் தண்ணீரைப் பயன்படுத்தும் முறைக்கு மக்களின் ஒற்றுமை, சேர்ந்து திட்டமிடல் இவைகள் மிகவும் அவசியமாயின. இந்த கூட்டு வாழ்வினால், மக்களின் அரசாங்க நிர்வாக முறையிலும், தொழிற் துறையிலும், சமுதாய ஒழுக்க முறைகளிலும் பெரிதும் முன்னேற்றங்கள் உண்டாயின. இவ்வளர்ச்சிகளின் நடுவே முனைத்து வந்ததுதான், எழுத்து முறையின் புதிய கண்டுபிடிப்பு. மொழியை எழுத்து வடிவமாக்கியது கி.மு. 3200-ஐ ஒட்டித் தொடங்கியிருக்கிறது. இதன் நடுவே நாடுகளுக்கு நாடு வர்த்தகத் தொடர்பும் ஆரம்பமானது, இதனால் கலாச்சாரப் பரிமாற்றமும் இடம் பெற்றது- முக்கியமாக மெசபொத்தாமியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளுக்குள் இத்தகைய பரிவர்த்தனம் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு தென் மெசபொத்தாமியாவில் புதிய கலாச்சார வளர்ச்சியைத் தோற்றுவித்த மக்களின் பெயர் சுமேரியர்கள். இவர்களைப் பற்றி விரிவாக இன்னும் தெரிந்துக் கொள்ள வாய்ப்பில்லை. இவர்கள் எவ்வினத்தைச் சேர்ந்தவர்கள், எங்கிருந்து வந்தவர்கள் என்பதெல்லாம் தெரிந்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் இவர்கள் தென் மெசபொத்தாமியாவில் கி.மு. 4000 ஆண்டு வாக்கில் வாழ்ந்தார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. ஆனால் அவர்களின் மொழி, எம்மொழியுடனும் தொடர்பில்லாத தனித்த மொழியாக, விளங்கியது. நமக்குக் கிடைத்திருக்கும் மிகப் பழமையான எழுத்துச் சுவடிகள், இந்த சுமேரிய எழுத்துச் சுவடிகள்தான். அனேகமாக இச்சுமேரியர்கள்தான் ஆப்பெழுத்து முறையை உருவாக்கியிருக்க வேண்டும்.

இதே சமயத்தில் எகிப்திலும் இக்கலாச்சாரம் முன்னேறியும் இடம் பெற்றிருக்கிறது. இங்கும் இம்முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தது, ஆற்று நீரை கன்மாய்கள் வழியாக கொண்டு செல்ல மக்கள் செய்த வழியாகும். இவ்வாறு பெற்ற வளர்ச்சியில் நோம்ஸ் என்ற அரசியல் நிர்வாக அமைப்பை அவர்கள் ஏற்படுத்தியிருந்தனர். இந்த நோம்ஸ்கள் சிறு கிராமம் போன்றவை என்று சொல்லலாம். பல நோம்ஸ்களைப் ஒன்றித்து ஓர் அரசாக அமைத்தனர். வடக்கு எகிப்து, தென் எகிப்து என்ற இருபெரும் அரசுகள் இங்கு தோன்றியிருக்கின்றன. எகிப்தில் செம்பு உலோகத்தைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இவர்கள் படவடிவ எழுத்துமுறை

யைக் கண்டுபிடித்தனர். இவர்கள் மெச பொத்தாமியா, பாலஸ்தீனம், முதலிய நாடு களுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்த னர்.

4. வெண்கலக் காலம்:- கி.மு. 3200 முதல் 1550 வரையிலான இடைப்பட்டக் காலத்தை வெண்கலக் காலம் என்றழைப்பர். இக்கா லத்தின் உண்மையான வரலாற்றை அறிவி யல் பூர்வமாக நாம் அறிந்துக் கொள்ள முடிகிறது. ஏனென்றால் பல கல்வெட்டுக ளும், பல ஆவணங்களும் இக்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமாக உள்ளன. இக்காலத்திலிருந்து தான் உண்மையான வர லாறு ஆரம்பமாகிறது என்று கூடக் கூற லாம். இக்காலத்தில் மெசபொத்தாமியா, எகிப்து, பாலஸ்தீனம் ஆகியநாடுகள் ஒவ் வொன்றிலும் வேறுபட்ட காலக்கணிப்புகள் பயன்பட்டிருக்கின்றன. எனவே ஒவ்வொரு நாட்டிலும் நடந்த நிகழ்ச்சிகளை நாம் தனித் தனியாகத்தான் காண முடியும். இவ்வெண்க லக் காலத்தை ஆரம்ப வெண்கலக் கால மென்றும், மத்திய வெண்கலக் காலமென் றும், பிந்திய வெண்கலக் காலமென்றும் பிரிக்கலாம்.

அ) ஆரம்ப வெண்கலக் காலம்:- கி.மு. 3200 முதல் 2050 வரையுள்ளக் காலத்தை ஆரம்ப வெண்கலக்காலம் என்று அழைப்பர்.

1) மெசபொத்தாமியாவில் ஆரம்ப வெண் கலக் காலம்:- சுமேரியர்கள் இங்கு வாழ்ந்த வந்த காலத்தில் (2800-2360) நகர அரசுமுறை அமைப்பு இங்கு நிலவி வந்தது. அதாவது சிறு சிறு நகரங்கள் தன்னாட்சிப் பெற்று அமைந்திருந்தன. ஒரு சில நகரங்கள் மட் டும் மற்ற நகரங்களை விட சற்று வலிமை யில் உயர்ந்து விளங்கின. ஆனால் இந்நகரங் களில் இறையாட்சி என்ற கொள்கையை மக்கள் பின்பற்றினர். நகரங்கள் கடவுளின் காணிநிலம், ஆலயம் தலைவனாகியக் கடவு ளின் வீடு, மக்கள் கடவுளின் வயலில் வேலை செய்யும் பணியாளர்கள், என்ற விளக்கம் அவர்களிடம் காணப்பட்டது. ஆனால் தொடக்கத்தில் நகரின் நிர்வாக வேலைகளை நகரின் பொது மக்களே கவ னித்துக் கொண்டனர். இதன்பிறகுதான் அர சர்கள், முதலில் அவசரக்கால நடவடிக்கை யாகவும், பின்பு நிலையான நிறுவனமாக வும் அங்குத் தோன்றினார்கள். ஆனால் அர சர்கள் கடவுளின் பிரதிநிதிகள் மட்டுமே என்று கருதினர். இக்காலத்தில் அதிகமாகச் சண்டையோ போர்களோ நடக்கவில்லை, பொதுவாக அமைதியும் சமாதானமும் இப் போது நிலவியது. அதனால் பொருளாதார முன்னேற்றமும் அங்கு வளர்ந்தது. கலையும் தொழிலும் உயர்ந்தன. ஆலயங்களில் பள்ளி கள் நடந்தன. பள்ளிகளில் சமய சம்மந்த மான பல நூல்கள் புதிதாக எழுதப்பட்டன.

இவ்வாறு சுமேரியர்கள் சமுகமாக வாழ்ந்து உயர்ந்து வந்த காலத்தில், மெச பொத்தாமியாவின் மேற்கு எல்லையின் வழி யாக, சில நாடோடி கும்பல்கள், உள்ளே நுழைந்துக் கொண்டிருந்தன. இது நடக்கத் தொடங்கியது கி.மு. 2500 ஆண்டுவாக்கில் ஆகும். இந்த நாடோடிக் கும்பல் செமித்தி யர் என்ற இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்க ளுக்குப் பெயர் அக்காதியர்கள் என்பதாகும். இந்த அக்காதியர்கள், மெசபொத்தாமியா வில் முன்பிருந்து வாழ்ந்த சுமேரியர்களுடன் ஒன்றிணைந்து வாழத்தலைப்பட்டனர். அவர்களின் கலாச்சாரத்தோடு இணைந்து வாழ்ந்தனர். ஒரு சில நகர்களின் தலைவர்க ளாக விளங்கும் அளவிற்கு அக்காதியர்கள் அங்கு அந்நாட்டு மக்களுடன் இரண்டற ஒன்றித்தனர்.

இவ்வாறு ஒன்றித்து வாழ்ந்த அக்காதியர் உச்சநிலைக்கு, உயர்ந்தனர். கி.மு. 24ஆம் நூற்றாண்டில், மெசபொத்தாமியா முழுவ தும் அக்காதியர் அதிகாரத்திற்குள் உட்பட் டது. வரலாற்றிலேயே முதன்முதலாக ஓர் உண்மையான பேரரசை ஏற்படுத்தியவர்கள் என்ற பெருமை அக்காதியரையே சாரும். இவ்வக்காதியர் அரசைத் தோற்றுவித்தவன் சார்கோன் என்பவனாவார். இவர் கிஸ் என்ற விடத்தில் தன் வெற்றி வரலாற்றைத் தொடங்கினார். தொடர்ந்து பாரசீக வளை

குடா வரையிலுமுள்ள பகுதிகளையெல்லாம் கைப்பற்றினார். இதில் சுமேரியர்களையெல்லாம் தனக்கு அடிபணியச் செய்தார். அக்காது என்ற நகரை இவர் தன் தலைநகராக்கிக் கொண்டார். இந்த அக்காது நகரம் பிற்கால பாபிலோனுக்கு அருகில் இருந்தது. பிறகு சார்கோனின் மகன்களும் அவனுடன் சேர்ந்து, அரசை விரிவுபடுத்துவதில் வேகத்துடன் செயல்பட்டனர். இதனால் மத்தியத் தரைக்கடல் வரையிலுள்ள மெசபொத்தாமியாவின் வடபகுதியும், சிறிய ஆசியாவும், தென் கிழக்கு அரபியப் பகுதியும் இந்த அக்காதியர் ஆட்சிக்குள் உட்பட்டன.

இந்த அக்காதியர் ஆட்சியும் பல நாட்களுக்கு நீடிக்க வில்லை. ஏனென்றால் சக்ரோசு என்ற மலையில் வாழ்ந்து வந்த பழங்குடியினர் மெசபொத்தாமியாமீது தொடர்ந்து 100 ஆண்டுகளுக்குப் படையெடுத்து வந்து அக்காதியரின் ஆட்சியை அலைக்கழித்து சிதறடித்தனர்.

2) எகிப்தில் ஆரம்ப வெண்கலக் காலம்:- கி.மு. 29-ஆம் நூற்றாண்டில் வடக்கு எகிப்தின் அரசர்கள், இரு பிரிவாக நின்ற எகிப்தை ஒன்றாகயிணைத்தனர். இப்புதிய ஒன்றிணைந்த அரசிற்கு மெம்பிசு தலைநகராக விளங்கியது. இவ்வரசு பழைய பேரரசு என்றழைக்கப்பட்டது. இப்பழைய பேரரசு கி.மு. 29-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 23-ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. இப்பழைய பேரரசின் காலத்தில்தான் பெரும் வளர்ச்சி எல்லாத் துறைகளிலும் தோன்றியது. முக்கியமாக எகிப்து அரசர்களின் மூன்றாவது அரச மரபின் தோற்றத்துடன் இவ்வளர்ச்சி விரிந்து வளர்ந்தது. புதிய கண்டுபிடிப்புகள் பலுகிப் பெருகின. கலாச்சாரம் உச்சநிலை எட்டியது. பிரமிடுகள் பிரமாண்டமாக உயர்ந்துக் கட்டப்பட்டன. கட்டிடக் கலையும், இலக்கியத் துறையும், சித்திரம், சிலை வடிப்பு கலைகளும் இக்காலத்தில் வானுயர வளர்ந்தன.

அரசாட்சி அமைப்பு முறையில் எகிப்து, மெசபொத்தாமியர்களிடமிருந்து மாறுபட்டு விளங்கினர். அரசர்கள் இறைவனின் பிரதிநிதியல்ல. மாறாக அரசர்கள் இறைவனின் அவதாரங்கள் என்றே ஏற்றுக் கொண்டனர். எகிப்து நாடு முழுவதும் இறைவனாகிய அரசனின் உடைமை. இவ்வுடமை ஓர் அமைச்சரைத் தலைமையாகக் கொண்ட நிர்வாக அமைப்பு முறையால் நிர்வகிக்கப்படும். இங்கு நாட்டில் சட்டத் தொகுப்புகள் செய்யப்படவில்லை. ஏனென்றால் கடவுளின் அவதாரமான அரசரின் வார்த்தைகளே சட்டமாக அமைந்தன.

ஆனால் கி.மு. 22ம் நூற்றாண்டிலிருந்து இந்த எகிப்தின் பழைய பேரரசு சரிவடையத் தொடங்கியது. அக்காதிய ஆதிக்கத்தைக் குத்தி என்ற பழங்குடியினர் தாக்கி அரசைச் சிதைத்தார்கள். ஆனால் எகிப்தில் உள்நாட்டுக் குழப்பங்களால் அரசு பலத்தையிழந்தது. பல போட்டி மன்னர்கள், அரசாட்சி தங்களுக்கு வேண்டுமென்று போட்டியிட்டனர். சில அரசு அலுவலர்கள் குறுநிலப் பகுதிகளைத் தங்களுக்கென்று பிடித்துக் கொண்டனர். அத்துடன் சில நாடோடி வகுப்பினரும் எகிப்தைத் தொடர்ந்துத் தாக்கிக் கொண்டிருந்தனர். இதனால் குழப்பங்கள் உண்டாகி அமைதியற்ற நிலை உண்டாகியது. இக்குழப்பங்களினால் நாட்டில் ஏற்பட்ட முன்னேற்றங்களெல்லாம் முடங்கவும் ஆரம்பித்தன.

3. பாலஸ்தீனத்தில் ஆரம்ப வெண்கலக் காலம்:- இக்காலத்தில் பாலஸ்தீனத்தில் பலப்புதிய நகர அரசுகள் தோன்றின. எரிகோ, பெத்துசான், ஆயி, செக்கேம், கெசர், இலாக்கிசு முதலிய நகரங்கள் புதியதாகவே உண்டாயின. யோர்தான் ஆற்றை அடுத்துள்ள கிழக்குப் பகுதிக்கும் கி.மு. 2500ம் ஆண்டு வாக்கில் இத்தகைய நகர அரசு அமைப்பு முறை பரவியிருக்கிறது.

ஆனால் பாலஸ்தீனம், மெசபொத்தாமியா மற்றும், எகிப்தைப்போல, கலாச்சாரத்திலும் பொருளாதாரத்திலும் அவ்வளவு முன்னேற்றம் காணவில்லை. அரசியல் அமைப்பிலும் பாலஸ்தீனத்தில் ஒன்றுபட்ட, வலி

மைமிக்க ஆட்சி தோன்றவில்லை. இக்காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் கானானியர் ஆவர். இவர்கள் செமித்திய இனத்தை சேர்ந்தவர்கள். இக்கானானியர்கள் கி.மு. 4000 ஆண்டுவாக்கில் பாலஸ்தீனத்தில் குடியேறி யிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

கி.மு. 2250க்கு பிறகு பாலஸ்தீனம் பெரும் அழிவுகளுக்கு உள்ளாகியிருக்கிறது. அதாவது ஒரு வகை நாடோடி மக்கள் தொடர்ந்து பாலஸ்தீனத்தைத் தாக்கினர். இதனால் பல நகர்கள் அடியோடு அழிந்தன. இதனால் நகர்களும் குடியேற்ற பகுதிகளும் மக்கவின்றி பாலைவனங்கள் போல் கைவிடப் பட்டன. யோர்தான் ஆற்று கிழக்குப் பகுதி அதிகமாக மக்களில்லா பகுதியாக மாறியது. இவ்வாறு படையெடுத்து அழிவைக் கொண்டு வந்த மக்கள், எமோரியர்களின் வழிவந்தவர்கள், இவர்கள்தான் எகிப்தையும் முதலில் சீரழிவதற்கு ஆளாக்கியவர்கள்.

ஆ) மத்திய வெண்கலக் காலம்:- கி.மு. 2050 முதல் 1550 வரையுள்ளக் காலத்திற்கு இப்பெயர் வழங்கப்படுகிறது.

1) மெசபொத்தாமியாவில் மத்திய வெண் கலக் காலம்:- ஆரம்ப வெண்கலக் காலத்தின் கடைசியில் மெசபொத்தாமியாவை குத்தி என்ற பழங்குடியினர் கைப்பற்றினர் என்று மேலே பார்த்தோம். ஆனால் இந்த மத்திய வெண்கலக் காலத்தில் பலவித ஏற்ற யிறக்கங்களை நாம் காணமுடிகிறது. இந்த மத்திய வெண்கலக் காலத்தின் தொடக்கதில் எரேக்கு என்ற இடத்தின் அரசன் குத்தி என்ற பழங்குடியினர் மீதுத் தாக்கி அவர்களின் மெசபொத்தாமிய ஆக்கிரமிப்பை முற்றிலுமாக முறியடித்தான். ஆனால் எரேக்கு அரசனின் செல்வாக்கு அதிக நாட்கள் நீடிக்க வாய்ப்பில்லை. ஆபிரகாமின் பிறந்தகமாகிய ஊர் நகரின் அரசன் ஊர்-நம்மு என்பவர் எரேக்கு அரசனை முறியடித்தார். ஊர்-நம்மு சுமேரியயினத்தைச் சேர்ந்தவர். அவரைத் தொடர்ந்த ஊர் நகரின் மூன்றாம் அரசமரபு, மெசபொத்தாமியாவில் சுமேரியரின் ஆட்சியை மீண்டும்கொண்டு வந்தது. இதனால் சுமேரியரின் கலாச்சாரம் மெசபொத்தாமியாவில் மீண்டும் மலரத் தொடங்கியது. ஆனால் குறுகிய காலத்திற்கே நீடித்தது. இப்புதிய சகாப்தத்தைத் தோற்றிவித்த ஊர்-நம்மு அழகிய கட்டிடங்களைக் கட்டி, கட்டிடக் கலையை வளர்த்தார். அத்துடன் இலக்கிய வளர்ச்சியிலும் அதிக ஆர்வம் காட்டினார். அனைத்திற்கும் மேலாக சட்டத் தொகுப்பு ஒன்றை இயற்ற செய்தார். இத் தொகுப்புதான் இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் மிகப் பழமையான சட்டத் தொகுப்பாகும்.

இவ்வாறு ஊர்-நம்மு புது மறுமலர்ச்சியைக் கொடுத்தாலும் சுமேரியர்களின் தனிப்பட்ட கலாச்சாரம் மறைந்து போகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. ஏனென்றால் ஆரம்ப வெண்கலக் காலத்தில் நுழைந்த அக்காதியர் மொழி, சுமேரிய மொழி மீண்டும் தலையெடுக்காத வகையில் அதனை அகற்றிவிட்டது. சுமேரியர்களும் செமித்தியர்களும் கலந்த ஒரு புது இனம் புதுக் கலாச்சாரம் தோன்றியது. இந்த கலப்பட கலாச்சாரம்தான், இஸ்ராயல் மக்கள் தோன்றுவதற்கு முன்னமே அப்பகுதியில் அரசாட்சி செய்தது. ஆனால் சுமேரியர்கள், பலவித புது கலாச்சார அம்சங்களை உலகிற்கு அளித்திருப்பதை யாராலும் மறுக்க முடியாது. குறிப்பாக அவர்கள் இயற்றிய சட்டத்தொகுப்பு, ஆப்பெழுத்து முறை, சந்திரனை அடிப்படையாகக் கொண்ட காலக்கணிப்பு, நீரினால் இயங்கிய கடிகை, சூரியன் தரும் நிழலினால் அளவிடப்படும் கடிகை, தேர், படை வீரர் அணியும் கவசம், கோபுர அமைப்புகள், வளைவுகள் இவைகளெல்லாம் சுமேரியர்கள் புதிதாகக் கண்டுபிடித்தவை. அனைத்திற்கும் மேலாக அவர்கள் பின்பற்றிய பல தெய்வங்களின் சமய முறை, பண்டைய நாளில் உலகின் பலபாகங்களில் பின்பற்றப்பட்டிருக்கிறது.

ஊர்-நம்முவால் ஆரம்பிக்கப்பட்ட இப் புது மறுமலர்ச்சியும் ஆட்டம் கண்டது. ஊர் நகரின் மைய அதிகாரம் சீர் குலைந்தது. இதனால் மெசபொத்தாமியாவிலிருந்த நகர்

ஆட்சிகள், தாங்கள் தனி தனியே அதிகாரம் பெற்றன.

இச்சமயத்தில்தான் அதாவது கி.மு. 2250 ஆண்டிற்குப் பிறகு எமோரியர்கள், பாலஸ்தீனத்தையும் அதைச் சுற்றியிருந்த நாடுகளையும் தாக்கி அவைகளைப் பிடித்துக்கொண்டு வந்தனர். மெசபொத்தாமியாவும் வலிமைக் குன்றி நின்றதால் முதலில் வடக்கு மெசபொத்தாமியாவைத் தாக்கி அதனைப் பிடித்தனர். பிறகு மெசபொத்தாமியா முழுவதையும் இவர்கள் வளைத்துப் பிடித்தனர். இவ்வாறு கி.மு. 18-ஆம் நூற்றாண்டில் மெசபொத்தாமியா முழுவதும் எமோரியர்களின் கையிலிருந்து.

இதன் பிறகு, மெல்ல மெல்ல மூன்று வல்லரசுகள் மெபொத்தோமியாவிற்காக மோதிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகியது. அசீரியா, மாரி, பாபிலோன் என்பவைதான் அப்போது தோன்றிய புதிய மூன்று வல்லரசுகள்.

அசீரியாவின் ஆதிக்கம் கி.மு. 18-ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்தது. முதலில் இவர்கள் வியாபாரத்தின் மூலமாக பலவிடங்களுக்கு பரவினார்கள். இவர்கள் மற்ற நாடுகளுடன் வியாபாரத் தொடர்புகள் வைத்திருந்தனர் என்பதற்கு கப்பதோகியா ஏடுகள் போன்ற பல தொன்மையான ஏடுகள் ஆதாரமாய் நிற்கின்றன. ஆனால் அசீரியாவே எமோரியர்களின் பிடியில் ஒரு சில காலம் இருந்தது. எமோரியர்களை அகற்றி அசீரியர்கள் கி.மு. 1748-1730 ஆண்டுகளில் வெற்றி பெற்றனர்.

ஆனால் முன்னுக்க வந்துக் கொண்டிருந்த அசீரியரை மாரி நாட்டினர் பின்னுக்குத் தள்ளினர். கி.மு. 1730-1697-இல் மாரி நாட்டினர், அசீரியர்களை வென்று மெசபொத்தாமியாவில் ஆட்சி நடத்தினர். இக்காலத்தில் எழுதப்பட்ட பல ஆவணங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவ்வாவணங்களில் வியாபார சம்பந்தப்பட்டவைகளும். அரசு வைத்திருந்த தொடர்புக் கடிதங்களும் அடங்கும்.

அசீரியாவை வென்ற மாரியை மற்றொரு நாடு அடக்கியது. அதுதான் பாபிலோனியா. கமுராபி என்ற பாபிலோனிய அரசன், அசீரியா, மாரி ஆகிய நாட்டு மன்னர்களைத் தோற்கடித்து, மெசபொத்தாமியாவைத் தன் ஆட்சிக்குட்படுத்தினார். இவர் காலத்தில் செல்வமும் அமைதியும், மெசபொத்தாமியாவில் கொழித்தது. இந்த பழைய பாபிலோனிய பேரரசு காலத்தில் எழுதப்பட்ட பல நூல்கள் இன்றும் நமக்கு கிடைக்கின்றன. இவ்வேடுகளில்தான், பாபிலோனியாவில் வழங்கி வந்த, உலகப் படைப்பைப் பற்றிய புராணம், வெள்ளம் அழிவைக் கொண்டு வந்த கதை இவைகளெல்லாம் காணப்படுகின்றன. இந்த பழைய ஏடுகளில் மற்றுமொரு முக்கிய தொகுப்பு நமக்குக் கிடைக்கிறது. அதுதான் கமுராபி அரசன் இயற்றிய சட்டத் தொகுப்பாகும். இச்சட்டத் தொகுப்பு அக்காலத்திய சமுதாய வாழ்க்கை முறையை அறிந்துக் கொள்ள பெரிதும் உதவுகிறது. இச்சட்டத்தொகுப்பு விவிலிய ஐந்நூலில் காணப்படும் சட்ட முறைகளுடன் நிறைய ஒத்துக் காணப்படுகிறது.

இதன் பிறகு இன்னும் அதிகமாக குழப்பங்களுக்கும், பல பல இனத்தவரின் படையெடுப்பும் தொடர்ந்து மெசபொத்தாமியாவில் உண்டாகின. பாபிலோனியர் மெசபொத்தாமியாவை ஆண்டு வந்த போது பல திசைகளிலிருந்தும், பல இனத்தார் வழியாகத் தாக்குதல் உண்டானது. பல புதிய இனத்தவர் புதிய பலம் பெற்று தாக்குதலில் ஈடுபட்டனர்.

ஆர்மேனிய மலைப்பகுதியில் வாழ்ந்து வந்தவர்கள் கூரியர் என்றயினத்தவர். இவர்கள் மெசபொத்தாமியாவின் வட பகுதியில் நுழைந்து கி.மு. 24-ஆம் நூற்றாண்டில் எண்ணிக்கையில் குறைந்தவராய் பரவியிருந்தனர். ஆனால் கி.மு. 17-16 நூற்றாண்டுகளில் கூரியர் இனத்தவர் திடீரென்று, எண்ணிக்கையில் பெருகி வெட்டுக்கிளிகளைப் போல, மெசபொத்தாமியாவின் வடபகுதியிலும், சிறிய ஆசியாவிலும், சீரியா, பாலஸ்தீனத்திலும் பறந்து வந்துக் குடியேற தொடங்கினர்.

இத்தோடு மெசபொத்தாமியாவை அடுத்து மித்தானி என்ற அரசு இருந்து வந்தது. இதன் அரசர்கள் இந்திய-ஆரியயினத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் அடிப்படையில் அவர்களும் கூரியர் இனத்தைச் சார்ந்தவர்கள்தான். இந்த மித்தானி அரசுதான் அருகிலிருந்த அசீரிய அரசினை அடக்கி வைத்து, அவர்களை சிற்றரசைப் போல வாழச் செய்தது. இந்த கூரியர்கள் சில நல்ல பணிகளையும் செய்தனர். இவர்கள்தான் மெசபொத்தாமியாவில் தொடங்கிய சுமேரிய, அக்காதிய கலாச்சாரத்தை மற்ற இடங்களுக்கும் பரப்பியவர்கள். முக்கியமாக சிறிய ஆசியா நாட்டிலும் இத்திதயர் நடுவிலும் சுமேரியர் அக்காத்தியர் கலாச்சாரம் பரவிட, கருவிகளாக விளங்கினார்கள்.

நூசியென்ற இடத்தில் பல மண் தட்டு ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கி.மு.15-14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இந்த மண் தட்டுகள் கூரியர்கள் காலத்தைச் சார்ந்தவை. ஏனென்றால் மேற்கூறப்பட்ட நூசி நகரம் கூரியர்களின் நகரம். இந்த மண் தட்டுகளில் எழுதப்பட்டுள்ள செய்திகள், விவிலியத்தில் கூறப்படும் ஆபிரகாம் காலத்தின் பல பழக்க வழக்கங்களைப் புரிந்துக் கொள்ள மிகவும் உதவியாய் நிற்கின்றன.

இவ்வாறு வடக்கிலிருந்து கூரியர்கள் மெசபொத்தாமியாவில் நுழைந்துக் கொண்டிருக்க, மெசபொத்தாமியாவின் கிழக்குப் பகுதியிலிருந்து காசித்தையர்களும் மெசபொத்தாமியாவில் நுழைந்துக் கொண்டிருந்தனர்.

இத்துடன் மெசபொத்தாமியாவிற்கு மேலேயிருந்த சிறிய ஆசியா நாட்டில் இத்தியர்கள் என்பவர்கள் வலிமை பெற்று வந்தார்கள். இவர்கள் கி.மு.2500-ஆம் ஆண்டின் வாக்கில், சிறிய ஆசியாவில் மற்ற மக்களுடன் நுழைந்தவர்கள். ஆனால் இத்தியர்கள் மெல்ல மெல்ல வலிமைப் பெற்று கி.மு.16ம் நூற்றாண்டில் தனித்த ஒரு வல்லரசைச் சிறிய ஆசியாவில் ஆரம்பித்தார்கள். இவர்கள் இத்துடன் நில்லாது, சிறிய ஆசியாவுக்கு தென்பகுதியிலிருந்து சீரியா மீது படையெடுத்தனர். அடுத்து கி.மு.1530-இல் யூப்பிரத்திசு நதி வரையிலும் படையெடுத்து அங்கு ஆட்சி செய்த பாபிலோனியரை வென்றனர். இவ்வாறு பரவி வந்த இத்தியர்களின் வெற்றி பல நாட்கள் நிலைக்கவில்லை. ஏனென்றால் மெசபொத்தாமியாவின் கிழக்குப் பகுதியிலிருந்து கூரியர்கள் இத்தியர்களைத் தடுத்து நிறுத்தினர். அத்துடன் இத்தியர்களிடையே நிலவிய உட்பூசல்களும், இத்தியர் திரும்பவும் தங்களின் சொந்த நாடான சிறிய ஆசியாவுக்குத் திரும்பிப் போகச் செய்தன.

இந்தக் காலத்தில் மேலே கூறப்பட்ட காசித்தையர்கள், மெசபொத்தாமியாவில் அதிகாரத்தைப் பிடித்து ஆட்சி நடத்த ஆரம்பித்தனர். இவர்கள் சுமார் 400 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இவர்கள் ஆட்சி செய்தக் காலம், இருண்டக் காலமென்ற முறையில் எவ்வித முன்னேற்றமுமின்றி முடங்கிக் கிடந்தது.

2) எகிப்தில் மத்திய வெண்கலக் காலம்:- கி.மு.2000 தொடக்கத்திலிருந்து, எகிப்து மற்றொரு புதிய முன்னேற்ற சகாப்தத்தை ஆரம்பித்தது. இம்முன்னேற்ற வலிமை கி.மு.21 நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை மூன்று நூற்றாண்டுகளுக்கு நீடித்தது. இக்காலத்தை எகிப்தின் மத்திய பேரரசு என்றழைப்பர். இக்காலத்தில் எகிப்து முழுவதும் மீண்டும் ஒன்றாகயிணைந்தது. பொருளாதாரம் பெருகியது. கலாச்சாரம் உயர்ந்தது. அரசியல் அளவிலும், எகிப்து வலிமையுடன் விளங்கியது. இதனால் அண்டை நாடுகளான நுபியா, லிபியா, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளைத் தன் பிடியில் வைத்திருந்தது எகிப்து. இவ்வாறு எகிப்தின் பொற்காலமாக விளங்கியது இக்காலம்.

ஆனால் கி.மு.18ம் நூற்றாண்டிலிருந்து கி.மு.16 ஆம் நூற்றாண்டு வரை எகிப்தின் முன்னேற்றமும் வலிமையும் தாழ்வடைய ஆரம்பித்து. இதற்கு முக்கியமான காரணம் எகிப்திலிருந்த ஒற்றுமையற்ற நிலையாகும்.

இக்குழப்பமான நிலையை இன்னும் மோச மாக்குகின்ற அளவில் கைக்சோசு என்ற ஓரினத்தினர் எகிப்து மீதுத் தொடர்ந்துத் தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். இந்த கைக் சோசு இனத்தவர் பாலஸ்தீனத்திலிருந்தும், தெற்குச் சீரியாவிலிருந்தும் வந்தவர்கள். இவர்கள் கனானியர் அல்லது எமோரியர் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண் டும். இந்த கைக்சோசு இனத்தவர் சிறிது சிறிதாக எகிப்தைப் பிடித்தனர். முதலில் எகிப்தின் வடக்குப் பகுதியையும், பின்பு எகிப்து முழுவதையும் தங்களின் பிடியில் கொண்டு வந்தனர். தொடர்ந்து பாலஸ்தீனத் திற்கு வடக்கேயுள்ள சீரியா நாடு வரையி லும் அவர்களின் ஆதிக்கம் அதிகரித்தது. இந்த கைக்சோசு இனத்தவரின் ஆட்சி சுமார் நூறு ஆண்டுகளுக்கு எகிப்தில் நிலவியது. அரக்கராக தங்கள் தலையில் அமர்ந்து விட்ட கைக்சோசு மக்களை விரட்டியடித்து, உண் மையான சுதந்திரத்தைப் பெறுவதுதான் எகிப்தியரின் பெரிய போராட்டமாக மாறி யது. இப்போராட்டத்தில் எகிப்தியர் கி.மு.1 580-1550 என்ற காலக் கட்டத்தில் வெற்றியும் பெற்றனர். இந்த வெற்றிக்குப் பிறகு எகிப் தின் காலம் புதிய பேரரசு என்ற புதியசகாப் தத்தில் அடியெடுத்து வைத்தது.

3. பாலஸ்தீனத்தில் மத்திய வெண்கலக் காலம்:- ஆரம்ப வெண்கலக் காலத்தில், எமோரியர்களின் ஆக்கிரமிப்பால், பாலஸ்தீ னம் பாலைவனத்தைப் போல ஆனது என்று பார்த்தோம். ஆனால் கி.மு.19-ஆம் நூற் றாண்டிலிருந்து, ஒரு புது மறுமலர்ச்சி பாலஸ்தீனத்தின் உண்டாகியது. முக்கிய மாக மேற்கு பாலஸ்தீனத்திலும், யோர்தா னின் கிழக்குப் பகுதியின் வடக்குப் பாகமும் முன்னேற்றங்களை வெகுவாகக் கண்டன. இங்குப் புதிய நகரங்கள் உதயமாயின. ஆக்கி ரமித்து, கலாச்சார அழிவைக் கொண்டு வந்த எமோரியர்களும், பாலஸ்தீனமக்களுடன் ஒன்றிணைந்து, பாலஸ்தீனத்தின் மொழி, கலாச்சாரம் இவைகளை ஏற்றுக் கொண்டு ஒன்றித்த வாழ்வு வாழத் தொடங்கினர். இருப்பினும் இம்மறுமலர்ச்சி, முழுமை யான முன்னேற்றத்தைக் கொண்டு வந்தது என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் பாலஸ்தீனத்தின் மையப்பகுதிகள் இன்னும் வளர்ச்சிக் குன்றியே நின்றன. இம்மையப் பகுதியில் மக்கள் சென்று குடியேற்றம் செய் யவேயில்லை. இச்சூழ்நிலைகளின் நடுவில் தான் பாலஸ்தீனத்தில் நகர் ஆட்சி முறை நடைமுறைக்கு வந்தது. கைக்சோசு இனத்த வரின் ஆட்சியின் காலத்தில்தான் பாலஸ்தீ னம் என்றுமில்லா வளர்ச்சியையும் முன் னேற்றத்தையும் கண்டது.

இம்மத்திய வெண்கலக் காலத்தின் பின்ன ணியில்தான் ஆபிரகாம் முதல் யோசேப்பு வரையுள்ள, இஸ்ராயலின் மூதாதையர்க ளின் வரலாற்றை நாம் நோக்க வேண்டும். அதாவது ஆதிஆகமம் 12 முதல் 50 வரை யுள்ள அதிகாரங்களுக்கு மத்திய வெண்கலக் காலம் பின்னணியாக அமைந்துள்ளது. பின் வெண்கலக் காலம் நமக்கு உடனடி தொடர் பைத் தராததால் பின் வெண்கலக் காலத்தின் விளக்கங்கள் இங்கு விடப்பட்டுள்ளது.

இஸ்ராயேல் வரலாறு - II - குலமூதாதையர்க ளின் காலம்

கி.மு.2000 முதல் கி.மு.1700 வரையிலான காலத்தில் இஸ்ராயேலரின் குலமூதாதைய ரின் காலம் இடம் பெறுகிறது.

1. ஆபிரகாம், ஈசாக்கு, யாகோபு:- இந்த மூதாதையர்களைப்பற்றி விவிலியம்மட்டும் தான் நமக்கு விபரம் தெரிவிக்கிறது. மற் றெந்த நூற்களிலும், பழம் ஆதாரங்களிலும் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்பட வில்லை. அத்தோடு இந்த மூதாதையர்களின் காலத்தையும் சரியாகக் கணித்துக் கூறவும் வழியில்லை. பொதுவாக இவர்கள் வாழ்ந்த காலம் கி.மு.2000 முதல் 1700 வரையென்று கூறுவதுவழக்கு.இதனால் இம்மூதாதையர்க ளெல்லாம் கற்பனையால் கொண்டுவரப்ப பட்டவர்கள் என்றும் சொல்ல முடியாது. ஆனால் ஒரு சில அறிஞர்கள், இம்மூதாதை யர்கள் புராணப் பாத்திரங்கள் என்று கூட முடிவுக் கட்டினார்கள். ஆனால் தொல்பொ ருள் ஆராய்ச்சி, விவிலியம், மூதாதையர்க ளைப் பற்றி கூறும் விபரங்கள் துள்ளியமா

னவை என்று நிரூபித்துக் காட்டியுள்ளது. இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் மத்தியில், வரலாற்று அடிப்படையில் நிலவிவந்த பராம்பரியத்தை வைத்துத்தான், மூதாதையர்களின் வாழ்க்கை விவிலியத்தில் விளக்கப்பட்டிருக்கிறது என்பது இதனால் தெளிவாகிறது

அதே நேரத்தில் இந்த மூதாதையர்களின் பராம்பரியச் செய்தி, செம்மையான ஒரு வரலாறு என்றும் கூற முடியாது. ஏனென்றால் அவைகள் வழிவழிவந்த பராம்பரியங்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. வரலாற்று நிகழ்ச்சியிலிருந்து பிறந்த இந்த பராம்பரியங்கள் காலப்போக்கில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை தன்னுள் பின்னிக் கொண்டன. எனவே என்னதான் அப்போது வரலாற்று பூர்வமாக நடந்தது என்பதை நாம் கணக்கிட முடிவதில்லை. ஆனால் தற்போதுக் கிடைக்கும் ஆதாரங்களை வைத்து, அவர்கள் வாழ்க்கையின் ஒட்டுமொத்த வரலாற்று சூழ்நிலையை நாம்கண்டுக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

ஆபிரகாம், மெசபொத்தாமியாவிலிருந்து கானான் நாட்டிற்குச் சென்று குடியேறுகிறார் என்று ஆதி ஆகமம் கூறுகிறது (ஆதி 12:5). ஆபிரகாம் இவ்வாறு பாலஸ்தீனத்தில் குடியேறிய காலம், அனேகமாக எமோரியர்கள் மெசபொத்தாமியாவிலும் பாலஸ்தீனத்திலும் மெல்ல மெல்ல ஆக்ரமித்துக் கொண்டிருந்த நேரம் என்று சொல்லலாம். ஆபிரகாம் ஆடுகள் மேய்த்துக் கொண்டு ஒரு அரைகுறை நாடோடியைப் போல வாழ்ந்து வந்தார். புல்லிருக்குமிடமெல்லாம் ஆடுகளை ஓட்டிச் சென்று பிழைப்பை நடத்தி வந்தார். ஆனால் அவர் பாலஸ்தீனத்தில் குடியிருந்த ஊராக மமிரே-கெபிரோன் பகுதி குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு ஆபிரகாமைப் பற்றி சித்தரிக்கப்படும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் கி.மு.2000 ஆண்டுகளில் இருந்த உண்மையான வரலாற்று பின்னனியை நன்கு படம் பிடித்துக் காண்பிக்கின்றன. அதாவது கி.மு.2000 ஆண்டுகளில் பாலஸ்தீனப் பகுதியில் மக்கள் பொதுவாக ஒரு நாடோடி வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். அதே பாணியில்தான் ஆபிரகாமின் வாழ்க்கை அமைந்திருப்பதை விவிலியம் கூறுகிறது. ஆபிரகாமின் ஆடுமேய்த்து நாடோடியாக வாழ்ந்த வாழ்க்கை முறை அக்காலத்தில் எழுதப்பட்ட சில எழுத்தோவியங்களுடன் ஒத்திருக்கிறது. உதாரணமாக சினுகே என்பவரின் கதையும், மாரியெனுமிடத்தில் கிடைத்த ஆவணங்களும், பெனிகசான் என்றவிடத்தில் காணப்படும் கல்லறையொன்றில் 19- ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட சித்திரமும், ஆபிரகாமின் வாழ்க்கை முறையை அப்படியே ஒத்திருக்கின்றன.

அத்துடன் ஆபிராகம் என்றபெயர், கி.மு. 16-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பாபிலோனியாவின் சுவடிகளில் பலயிடங்களில் காணப்படுகிறது. நாகோர் என்பது ஆதிஆகமத்தில் ஓர் ஆளின் பெயராகவும் (ஆதி 11: 22), ஓர் நகரின் பெயராகவும் (ஆதி 24:10) வருகிறது. இந்த நாக்கோர் என்ற பெயர் மாரியென்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பழம் ஏடுகளில் காணப்படுகிறது. இப்பழம் ஏடுகள் கி.மு.16-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. அதே போன்று யாக்கோபு என்ற பெயரும் கி.மு.18-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மெசபொத்தாமிய சுவடிகளில் காணப்படுகிறது. யாக்கோபு-கார் என்பது கைக்சோசு அரசன் ஒருவனின் பெயராக அங்குக் குறிப்பிடப்படுகிறது. யாக்கோபின் மகன்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல பெயர்கள், பென்யாமின், லேவி போன்றவை கி.மு.16 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மாரி சுவடிகளிலும் காணப்படுகின்றன.

இன்னும் மூதாதையர்கள் வாழ்க்கையில் குறிப்பிடப்படுகின்ற சில பழக்கங்கள், கி.மு.16-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டு நூசி, மாரி முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பழம் சுவடிகளிலும் அப்படியே காணப்படுகின்றன. ஆதி 15:1-4-இல் ஆபிரகாம், தனக்குப் பிள்ளையில்லாததால், தன்னிடம் வேலை செய்து வந்த எலியேசர் தனது வாரிசாக ஆவான் என்ற வழக்கத்தைக்

குறிப்பிடுகிறார். இவ்வாறு தன் அடிமையையே வாரிசாக வைத்துக் கொள்ளும் பழக்கம் நூசி என்றவிடத்தில் இருந்து வந்திருக்கிறது. அதேபோன்று ஆதி 16:3-4-இல் ஆபிராம் தன் வேலைக்காரி ஆகாரை மனைவியாகப் பெற்று, குழந்தை பெறுகிறார். ஆனால் தன் சொந்த மனைவிக்குக் குழந்தைப் பிறந்ததும் ஆகாரையும், மகன் இசுமயேலையும் வெளியே அனுப்பிவிடுகிறார். நூசி என்றவிடத்தில் வழங்கி வந்த ஒழுங்கின்படி, தன் காமக்கிழத்தி ஒருவளை, ஒருவன் மணம் செய்துக் கொள்வதற்கு அனுமதியிருந்தது. ஆனால் அவர்களை ஆபிரகாம் செய்தது போல், விரட்டி விடும் வழக்கமில்லை. இவ்வாறு ஆதியாகமத்தில் காணப்படும் மற்றொரு பழக்கமும், கி.மு.16- ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட பழக்கத்திலொன்றாக விளங்குகிறது.

ஆதி 31:50ல் காணப்படுகின்ற, லாபானின் மகள்களைத் தவிர மற்றவர்களை யாக்கோப் மணக்கக் கூடாது என்று லாபான் போட்டத் தடையும், லாபானின் மகள் ராக்கேல் தன் தந்தையின் சிலைகளை திருடி வைத்துக் கொண்ட நிகழ்ச்சியும் (ஆதி 31:19; 34-35), நூசி நகரில் வழங்கிய பழக்கங்களால் விளக்கங்களைப் பெறுகின்றன. அதாவது தந்தையின் வீட்டுச் சிலைகளை ஒருவர் தக்க வைத்திருந்தால் அது தந்தையின் சொத்துக்களில் பங்குக் கொள்வதற்கு ஓர் அடையாளமாகும். ஆதி. 23 ஆம் அதிகாரத்தில் காணப்படும் மமிரேயில் ஆபிரகாம், தன் மனைவியைப் புதைக்க, குகைகளை வாங்கிய நிகழ்ச்சியில் காணப்படும் சடங்குகள், அதற்காக இத்தியர் கூறும் சட்ட ஒழுங்குக்கு ஒத்து நிகழ்ந்திருப்பதையும் நாம் காண முடிகிறது.

மூதாதையர்கள், அவர்களின் தந்தையர்களின் கடவுளை வழிபட்டார்கள் என்று படிக்கிறோம். ஆதி 31:42-இல் ''என் தந்தையாகிய ஆபிரகாமின் கடவுளும், ஈசாக்கின் அச்சமும் என்னை மீட்டுக் காப்பாற்றின'' என்று வருகிறது. ஆதி 49:24-இல் ''யாக்கோபின் வல்லபக் (கடவுளால்) அவன் கையிலும் புயத்திலும் இருந்த சங்கிலிகள் உடைக்கப்பட்டன'' என்று வருகிறது. ஆக, 'தந்தையரின் கடவுள்', 'அச்சம்', 'வல்லமை' முதலிய சொற்கள் கடவுளைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டன. தந்தையரின் கடவுள் என்று சொல்லும்போது, அவர்களின் மூதாதையர்களோடு தனிப்பட்ட உறவு கொண்ட கடவுள் என்பது பொருளாகிறது. அக்கடவுள் ஓர் இடத்தின் கடவுளல்ல. மாறாக மூதாதையர்களோடு உடன்படிக்கை செய்துக் கொண்டக் கடவுள். அக்கடவுள் அவர்களின் தலைமுறையையே எல்லாக் காலங்களிலும் காப்பாற்றுகிறவர். இறைவனுக்கு, 'என்றுமுள்ளவர்', (எபிரேயத்தில், ஓலாம்), 'அனைத்திலும் உயர்ந்தவர்' (எபிரேயத்தில் எலியோன்), என்ற புனைப் பெயர்களையும் ஆதியாகமத்தில் பார்க்கிறோம். இப்பட்டங்களையெல்லாம் கானானிய தெய்வங்களுக்கு அப்போது மற்ற மக்கள் கொடுத்திருந்தார்கள். அதே பட்டங்களைத் தங்களின் யாவேயாகிய இறைவனுக்கு மக்கள் அளித்து மகிழ்ந்தனர். இவையெல்லாம் மூதாதையர்களைப் பற்றி விவிலியத்தில் கூறப்படுபவை. கி.மு.16-ஆம் நூற்றாண்டில் விளங்கிய சூழ்நிலையை அப்படியே பிரதிபலிக்கின்றன என்பதைத் தான் காட்டுகின்றன. எனவே மூதாதையர்களின் வரலாறு, உண்மையான வரலாற்றை பின்னணியாகக் கொண்டவை என்பது விளங்குகிறது.

2. யோசேப்பின் வரலாறு:- யோசேப்பின் வரலாறு அதனைப் படிப்போரின் உள்ளத்தை தவறாது கவர்ந்திழுக்கிறது. அம்முறையில்தான் இவ்வரலாறு, படிப்போரின் ஆவலைக் கடைசிவரை நீடிக்கச் செய்யும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இவ்வரலாற்றின்பின்னே மறைந்திருக்கும் மையக் கருத்து, கடவுளின் பராமரிப்பு என்பதாகும் (ஆதி. 45:5-8; 50:20). யோசேப்பு, எகிப்தில் இளவரசனான காலம், கைக்சோசு மக்கள் எகிப்தை ஆட்சி செய்த காலமாகத்தானிருக்க வேண்டும். அதாவது 1720-1550 என்ற கால வேளையில் இது இடம் பெற்றிருக்க வேண்டும். இக்கதைக்கு இருவகை விளக்கங்கள் கொடுக்கப்படும். ஒன்று போன்-ராடு என்பவர், யோசேப்புக்கதையை விளக்க அநேக

மாக சாலமோன் அரசரின் காலத்தில் இது எழுதப்பட்ட படைப்புப்பற்றிய ஞானப் பாரம்பரியக் கதையைக் கொடுக்கிறார். ஆனால் அவரது விளக்கத்தில் வரலாற்றுத் தன்மை ஒதுக்கிவிடப்படுகிறது. மற்றது பெர்கோட்டு என்பவர் யோசேப்புக்கதையில் வரும் எகிப்தியக் கூறுகளைக் கவனமாய் ஆராய்ந்தபின், இக்கதையில் வரலாற்றுச் சுவடுகள் பதிந்துள்ளன என்று வாதிடுகிறார். அவரின் கருத்தின்படி, இஸ்ராயல் மக்கள் எகிப்தில் பெற்ற அனுபவங்களின் நினைவுச் சாயல் இந்நிகழ்ச்சிகளில் பதிந்திருக்கிறது என்கிறார். இதன்படி, மூதாதையர்களின் வரலாற்றைப் போலவே யோசேப்பின் வரலாற்றிலும் எகிப்தின் அன்றைய வாழ்க்கைச் சூழ்நிலை பிரதிப்பலிப்பதை நாம் காண முடிகிறது. நிகழ்ச்சிகளும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. எனவே யோசேப்பின் வரலாறு, அப்பட்டமாகக் கட்டப்பட்டக் கதையென்று கூறுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் யாக்கோபின் பிள்ளைகளைப் பற்றிய முழு வரலாற்றையும் ஆதியாகமத்தில் நாம் காண முடியவில்லை. எத்துணைப் பேர் எகிப்து சென்றார்கள்; எத்துணைப் பேர் பாலஸ்தீனத்திலேயேத் தங்கிவிட்டனர், என்று துல்லிய விளக்கங்களையும் நாம் காணமுடியவில்லை. யோசேப்பின் வரலாற்றில் மறைந்திருக்கும் வரலாற்று நிகழ்ச்சியென்னவென்றால், எகிப்தில் இஸ்ராயல் சென்று குடியேறினார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் அடிமைகளாக வதைக்கப்பட்டார்கள். இவ் வரலாற்று செய்தியினைத்தான் யோசேப்பின் வரலாறு நமக்குத் தருகிறது.

இஸ்ராயேல் வரலாறு - II - விடுதலைப் பயணமும் விடுதலை வீரர்களும்

1. இஸ்ராயலின் அடிமை விலங்கு:- கைக்சோசு அரசர்கள் எகிப்தைப் பிடித்து ஆட்சி செய்தக் காலத்தில்தான், யாக்கோபின் மைந்தர்கள் எகிப்தில் நுழைந்திருக்க வேண்டும். அதாவது கி.மு.1720-1550 என்ற காலக்கட்டத்தில் இது நிகழ்ந்திருக்க வேண்டும். கைக்சோசு என்றாலே அன்னிய ஆட்சியாளர்கள் என்று பொருள். இவர்கள் ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்து, எகிப்தையும் பாலஸ்தீனத்தையும் ஆண்டு வந்தார்கள் என்று ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இவர்கள் ஆவாரிசு (தானிசு சோவான்) என்ற நகரைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். இவ்வாறு அன்னியர்கள் எகிப்தை ஆட்சி செய்தபோது, இஸ்ராயேல் மக்கள் எளிதாக எகிப்தில் நுழைவதற்கு ஏற்ற வாய்ப்பாக இருந்தது. அத்தோடு கைக்சோசு இனத்தவர், இஸ்ராயேல் இனத்தவருடன், செமித்தியர் என்ற முறையில் உறவு கொண்டவர்கள். இவ்வாறு அன்னிய அரசர்கள், அதிலும் உறவு தொடர்புள்ளவர்கள் ஆட்சி செய்ததால் யோசேப்பும் பதவி உயர்வு பெற வாய்ப்பு உண்டானது. அத்துடன் பாலஸ்தீனம் அக்காலத்தில் எகிப்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது. இதனால் எகிப்திற்கும் பாலஸ்தீனத்திற்கும் எளிதான போக்குவரத்தும் நடைபெற்றிருக்கிறது. யாத் 1:8-இல் ''புதிய அரசன் எகிப்தை ஆள எழுந்தான், இவனோ யோசேப்பை அறியாதவன்'' என்ற குறிப்பினைப் பார்க்கிறோம். இக்குறிப்பு, கைக்சோசு அரசர்களுக்குள்ளேயே நடந்த ஒரு மாற்றத்தைக் கூறவில்லை. மாறாக கைக்சோசு அரசர்களை எகிப்தியர்கள் தோற்கடித்து மீண்டும் எகிப்து அரசர்களின் ஆட்சி அங்கு மலர்ந்ததைத்தான் இது சுட்டிக் காட்டுகிறது. எகிப்தின் 18-வது தலைமுறையைச் சார்ந்த அமோசிசு என்பவன்தான், கைக்சோசு அரசர்களைத் தோற்கடித்து, எகிப்தின் புதிய சகாப்தத்தைத் தொடங்கியவன். இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் எகிப்து மன்னனின் வெறுப்பிற்கு ஆளானது வரலாற்று உண்மையாகும்.

இஸ்ராயேல் மக்கள் எகிப்து மன்னனால் வதைக்கப்பட்ட நிகழ்ச்சி, அப்போது அங்கு நடந்ததைப் போலவே அப்படியேத் தரப்படவில்லை. இஸ்ராயேல் மக்கள் நசுக்கப்பட்ட வரலாறு, மோசேயின் பிறப்பிற்கு முன்னோடி முன்னுரையாக வைக்கப்பட்டுள்ளது. யாத்திரையாகமம் முதல் அதிகாரத்தில் இந்த வதைப்பு நிகழ்ச்சியைப் பற்றிய விவரிப்பு ஆரம்பமாகிறது. இதனை யாவே பாரம்பரியம் வர்ணிக்கிறது. இதில் கூறப்ப

டுகின்ற கட்டிடம் கட்டும் பணிகள் கி.மு.1290-1224 ஆண்டுகளில் அரசாண்ட இரண்டாம் இராம்சேக காலத்தில் பித்தோம், இரமசேக ஆகிய இடங்களில், அவன் கட்டி வந்த கட்டிட பணியின் போது நடந்திருக்க வேண்டும். அக்காலத்தில் வரையப்பட்ட படங்களில் ஆசியாவிலிருந்து எகிப்து வந்த மக்கள் அடிமை வேலைகள் செய்வதாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அத்தகையப் படங்கள் இன்னும் அழியாமல் நமக்குச்சான்று கூறி நிற்கின்றன.

எகிப்தில் கி.மு.15-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.12ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட ஏடுகளில் அபிரு அல்லது கபிரு என்பவர்களைப் பற்றி அடிக்கடி குறிப்புகள் காணப்படுகின்றன. ஒருவேளை இந்த அபிரு மக்கள் தான் இஸ்ராயேல் மக்களோ என்ற எண்ணமும் நமக்குத் தோன்றலாம். ஆனால் அவ்வளவு சுலபமாக இஸ்ராயேல் மக்களை அபிரு மக்களுடன் இணைத்துப் பார்க்க முடியாது. அபிரு என்ற வார்த்தை ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சுட்டிக் காட்டும் பெயராக அல்லாமல், பல இனத்தையும் உள்ளடக்கிய ஒரு வகுப்பினரைக் குறிப்பதாகத் தெரிகிறது.

இஸ்ராயேல் மக்களை அடியோடு அழிக்கும் திட்டத்தில், கடுமையான வேலைகளைச் சுமத்தியதோடு, பிறக்கும் ஆண்பிள்ளைகளைக் கொன்றிடவும், இரண்டு தாதிகளை மன்னன் நியமிக்கிறான். அந்தத் தாதிகளின் பெயர்களும், சிப்பிரா, பூகா என்று அங்குத் தரப்படுகிறது (யாத் 1:15). மேற்கூறிய பெயர்கள் எகிப்தில் எழுதப்பட்ட மற்ற மிகப்பழைய நூல்களிலும் காணப்படுகின்றன. அடுத்து, இத்தாதியர்களின் கைக்குத் தப்பும் குழந்தைகளை ஆற்றில் தூக்கியெறிய வேண்டுமென்று மன்னன் கட்டளைப் பிறப்பிக்கிறான். இந்த மன்னனின் கட்டளை, மோசே தண்ணீரிலிருந்து கண்டெடுக்கப்படுவதற்குத் தயார் செய்யும் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. மோசே நாணல்கள் நடுவேயிருந்து கண்டெடுக்கப்பட்ட நிகழ்ச்சியைப் போலவே, கி.மு.2300-இல் வாழ்ந்த அக்காது நாட்டின் சார்கோன் என்பவனுடைய வாழ்க்கையிலும் நடந்ததாக, நாம் பழம் ஏடுகளில் படிக்கிறோம். இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாகத் துன்புறுத்தப் பட்டதை விவிலியம் கூறுவதை, மற்ற ஆதாரங்களும் உறுதி செய்கின்றன.

2. மோசே:- மோசேயின் பணிகளை யாத்.3- ஆம் அதிகாரத்திலிருந்துப் பார்க்கிறோம். யாத் 3:1-4:7-என்ற பகுதியை யாவே பாரம்பரியமும், யாத் 6:2-7:13-என்ற பகுதியைக் குருக்கள் பாரம்பரியமும் நமக்குத் தருகின்றன. மோசே செய்த பணிகளுக்கு முக்கிய காரணம் யாத் 2:24-இல் கூறப்படுகின்றது. இறைவன் இஸ்ராயேலின் மூதாதையர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையாகும். ''இஸ்ராயேல் மக்கள், வேலைகளின் பொருட்டுத் துயரப்பட்டுப் பெரும் கூக்குரலிட்டனர். அவர்கள் முறைப்பாடு அவர்கள் வேலை செய்த இடத்தினின்று இறைவனுக்கு எட்டியது. கடவுள் அவர்களுடைய புலம்பலைக் கேட்டு, தாம் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடன் செய்திருந்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார்''. தனது உடன்படிக்கையை நிறைவேற்றவே மோசேயைத் தம் கருவியாகத் தேர்ந்தெடுக்கிறார் இறைவன். எகிப்தியன் ஒருவனைக் கொன்ற காரணத்திற்காக மோசே எகிப்து நாட்டினின்று வெளியேறும் அவசியம் ஏற்படுகிறது. இதனால் மிதியான் நாட்டிற்கு தப்பிச் செல்கிறார் மோசே. அங்கு மிதியான் நாட்டு மங்கையொருவளை மனைவியாகப் பெறுகிறார். மிதியான் நாட்டில் வாழ்ந்த நாட்களில்தான் ஆண்டவரின் அழைப்பை ஏற்கிறார் மோசே. மோசே மிதியான் நாட்டில் இறைவனின் காட்சியைக் கண்டதால், இஸ்ராயேல் மக்கள் வணங்கும் யாவே இறைவன், மிதியான் நாட்டினர் வழிபட்ட தெய்வம்தான் என்று வாதிடுவர் சில அறிஞர்கள். மற்றொரு வகையில் பார்க்கும் போது மோசே காலத்திலிருந்து இஸ்ராயேல் மக்கள் மத்தியில் ஒரே கடவுள் கொள்கை வளர்ச்சி கண்டது. இந்த ஒரே கடவுள் கொள்கை எகிப்தில் அக்கெனாதோன் என்ற அரசன் காலத்தில், மக்களால் பின்பற்றப்பட்டது. இந்த அக்கெனாதோன்

கி.மு.1370-1383 என்ற காலக் கட்டத்தில் வாழ்ந்தவர். எனவே எகிப்தில் பின்பற்றப் பட்ட அதே ஒரே கடவுள் கொள்கைதான் மோசே துவங்கி வைத்த சமயக் கொள்கையில் காணப்படுகிறது என்று சிலர் வாதிடுவர். ஆனால் ''நாமேயிருக்கிறவர்'' என்று தன்னையே மோசேக்கு வெளியிடும் கடவுள் (யாத் 3:14), அவர்களின் மூதாதையரின் கடவுளான ஏல்சத்தாய் (மலைக்கடவுள்) என்பதை வலியுறுத்திக் கூறுகிறார் (யாத் 3:16). இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் கொண்டிருந்த சமயக் கோட்பாடு தனித்தன்மை வாய்ந்தது, தொடர்ச்சியானது. அதுவே மோசேயின் அழைப்பு நிகழ்ச்சியிலும் காணப்படுகிறது. மோசேயின் இறையழைப்பையடுத்து, பாரவோனுடன் மோசே மோதும் காட்சி தொடர்கிறது.

3. எகிப்தியரைத் தாக்கிய கொள்ளை நோய்கள்:- பாரவோன் இஸ்ராயேல் மக்களை விடுவிக்க மறுக்கிறான். இதனால் மோசே வழியாக எகிப்தியர்மீது பல தண்டனைகளால் புதுமையாகத் தாக்குகிறார் இறைவன். இந்நிகழ்ச்சிகள் யாத் 7-11-இல் வர்ணித்துக் கூறப்படுகின்றன. ஒருசில அறிஞர்கள் யாத்திராகமத்தில் கூறப்படும் இந்தப் பத்துக் கொள்ளை நோய்களும் வழக்கமாக எகிப்தில் நடைபெறும் இயற்கைச் சீற்ற நிகழ்ச்சிகள் என்று விளக்கம் தருவர். உதாரணமாக தண்ணீர் இரத்தமாக மாறும் நிகழ்ச்சி, ஆண்டுதோறும் நைல் நதியில் சிகப்பு நிறம் கொண்ட தண்ணீர் வெள்ளப் பெருக்காக வருவது என்பர். ஆனால் விவிலிய ஆசிரியர் இவைகளை இயற்கையின் சீற்ற நிகழ்ச்சிகள் என்று கருதவில்லை. அவைகளை நாம் கருதுவது போல நடக்கமுடியாதது நடக்கும் புதுமைகள் என்றும் கருதவில்லை. மாறாக அவைகள் ''அருங்குறிகளும் அற்புதங்களும்'' என்றே கருதுகிறார். யாத்திரையாகமத்தில் கூறப்பட்டிருக்கின்ற இந்த பத்துக் கொள்ளை நோய்களின் வர்ணனையில், பல பாரம்பரியங்கள் கொடுத்த தகவல்கள் சேர்த்திணைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். குறிப்பாக எலோகிம் பாரம்பரியமும், குருக்களின் பாரம்பரியமும் சேர்த்து இணைக்கப்பட்டு, இப்பகுதி எழுதப்பட்டிருக்கிறது.

இக்கொள்ளை நோய்கள் ஒரு குறிப்பிட்டக் கருத்தை உணர்த்திக் காட்டத்தான், எகிப்திய மக்களைத் தாக்குவதாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது இறைவனுக்கும் பாரவோனுக்கும் இடையில் நடக்கும் போட்டியில் காணப்படும் உணர்ச்சிவசமானப் போராட்டத்தைத்தான் நாம் இங்குக் காண்கிறோம். கடைசியில் பாரவோனின் மந்திரவாதிகள், மோசே, ஆரோன் ஆகியோர் செய்யும் அதிசயங்களைச் செய்ய முடியாமல் தோற்றுப்போகின்றனர்.

இந்த பத்துக் கொள்ளை நோய்களும், கடைசியில் வருகின்ற பாஸ்கா விழாக் கொண்டாட்டத்திற்கு முன்தயாரிப்பைப் போல் அமைந்துள்ளன. எனவே இந்தக் கொள்ளை நோய்களின் வர்ணனைகள், பிற்காலத்தில், பாஸ்கா விழாக் கொண்டாட்டத்தினை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளன. எனவே யாத்திரையாகமத்தில் கூறப்பட்டிருப்பது, அந்நிகழ்ச்சிகள் அன்றைய நாளில் நடந்ததை அப்படியே தருவதாகயில்லை. அதற்கு மேல், அந்நிகழ்ச்சிகள் எப்படித்தான் நடந்தன என்பதையும் நாம் கண்டறிய வாய்ப்பில்லை. இவ்வாறு பாஸ்கா விழாவினையும், புளியாத அப்பத்திருவிழாவையும், வரலாற்று நிகழ்ச்சியில் வைத்துக் காட்டத்தான், இக்கொள்ளை நோய் பகுதி முன்னுரையாக எழுதப்பட்டுள்ளது என்பது நன்குத் தெரிகிறது. ஆனால் இம்முக்கிய விழாவின் பொருள், இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலைப் பெற்ற நிகழ்ச்சியாகும் என்பதையும் நம் நினைவில் நிறுத்த வேண்டும்.

4. செங்கடலா அல்லது நாணல் கடலா?:- இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்து சென்றார்கள் என்பது வழக்கமாகும். இஸ்ராயேல் மக்கள் கடலைக் கடந்த நிகழ்ச்சி யாத்திராகமம் 14-ஆம் அதிகாரத்தில் கூறப்படுகிறது. ஆனால் இங்கு கடல் என்று மட்டும்

கூறப்படுகிறது (யாத் 14:16. 21-27). எபிரேய மொழியில் அதாவது விவிலியமூலத்தில் யாம்சுப் என்று இக்கடலைக் குறிப்பிடுகி றார்கள். யம்சுப் என்றால் நாணல் கடல் என்பது பொருள். எனவே இஸ்ராயேல் மக்கள் கடலைக் கடந்தது செங்கடலில் அல்ல. மாறாக சுக்கோத்து என்ற இடத்திற்கு அருகிலுள்ள கசப்பு ஏரி என்றவிடமென்று எல்லோராலும் இப்போது ஏற்றுக் கொள் ளப்படுகிறது. இப்பகுதி சதுப்பு நிலமான பகுதியாகும். இந்நிகழ்ச்சி யாத் 15:1-20-இல் மிரியாமின் பாடலில் கொண்டாடப்படுகி றது. இப்பாடல் விவிலியத்தில் காணக் கிடக்கின்ற காலத்தால் மிகப் பழமையான பாடலாகும். இப்பாடல் முழுவதும், இஸ்ரா யேல் மக்கள் அற்புதமாகக் கடலைக் கடந்து வந்த நிகழ்ச்சியைப் புகழ்ந்து பாடுகிறது. எனவே இஸ்ராயேல் மக்கள் அற்புதமாகக் கடந்து வந்ததும் வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்ச்சி என்பது தெளிவாகிறது.

யாத் 12:37-இல் ஆறு இலட்சம் மக்கள் எகிப்தை விட்டு வெளியேறினார்கள் என்று கூறப்படுகிறது. எண்ணாகமம் 1-ஆம் அதிகா ரத்திலும் 26-ஆம் அதிகாரத்திலும் பெரிய மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்படுவதை யும் பார்க்கிறோம். இவ்வளவு பெரியத் தொகையுள்ள மக்கள், இவ்விடுதலைப் பய ணத்தில் பங்குப் பெற்றனரா என்பதும் கேள் விப் குறியாக உள்ளது. ஏனென்றால் 6 இலட்சம் மக்கள் அவர்கள் என்றால் அவர் கள் எல்லோரும் எப்படி ஒரேயிரவில் கடலை கடந்திருக்க முடியும்? எவ்வாறு இவ்வளவு பெரிய மக்களுக்கு இரண்டுதாதி யர் மட்டும் பணி செய்ய முடிந்தது என்ப தெல்லாம் வரும் சந்தேகக் கேள்விகள். எனவே ஒரு சில ஆயிர மக்கள் மட்டுமே இப்பணயத்தில் பங்குப் பெற்றிருக்க முடி யும் என்று அறிஞர்கள் கணிக்கின்றனர்.

அடுத்து, எந்தெந்த கோத்திரங்கள் இப்பய ணத்தில் பங்குப் பெற்றார்கள்? என்பதும் சர்ச்சைக்குரிய கேள்வியாகும். எப்பிராயிம், யோசேப்பு குலத்தைச் சார்ந்த மனாசே, பென்யாமின், லேவி, யூதா, சிமியோன் இவர்களின் மக்களெல்லாம் நிச்சயமாக இப் பயணத்தில் பங்குப் பெற்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இஸ்ராயேல் மக்களின் இந்த விடுதலைப் பயணத்தைப் பற்றி, விவிலியத்தை விடுத்து மற்றெந்த நூல்களிலும் இதைப்பற்றிய குறிப் புகளை நாம் காணமுடியவில்லை. கி.மு.12 20-இல் வடிக்கப்பட்ட மெர்நெப்தா என்ற கல்வெட்டில் இஸ்ராயேல் என்ற பெயர் காணப்படுகிறது. இஸ்ராயேல் என்று அம் மக்களைத்தான் குறிப்பிடுகிறது. அவர்களின் நாட்டை குறிப்பிடுவதாயில்லை. இவ்விஸ் ராயேல் மக்கள் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்தார்கள் என்று அக்கல்வெட்டு கூறுகி றது. ஆகவே இக்கல்வெட்டு, யோசுவா காலத்திலிருந்த நிலைமையைத்தான் சுட்டிக் காட்டுகிறது, விதலைப் பயணத்தைப் பற் றிய குறிப்பு அல்ல அது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அதே நேரத்தில், அக்கல் வெட்டில், அக்கால முறைக்கொத்த மிகைப் படுத்திக் கூறுதலும் இணைந்துள்ளது என் பதை மனதில் வைத்துக் கொள்ள வேண் டும். எனவேதான் இஸ்ராயலை மிகத்தரம் தாழ்த்தி, எழுதி வைத்துள்ளனர்.

அடுத்து இந்த விடுதலைப் பயணம் எவ் வாண்டுகளில் நடைப்பெற்றது என்பதையும் அறிஞர்கள் கணிக்க முயற்சிக்கிறார்கள். 1 அரச 6:1-இல் சாலமோன் கட்டிய ஆலய வேலை தொடங்கும் காலத்தைக் குறிப்பிட, ''இஸ்ராயேல் மக்கள் எகிப்து நாட்டிலி ருந்து வெளியேறின நானூற்று எண்பதாம் ஆண்டிலும்......'' என்று வருகிறது. சால மோன் அரசரின் காலம் கி.மு.10 ஆம் நூற் றாண்டு. அத்தோடு மேற்கண்ட 480 ஆண்டுக ளையும் சேர்த்துப் பார்த்தால் விடுதலைப் பயணம் நடந்தக் காலம் கி.மு.15 ஆம் நூற்றாண்டு என்று கணக்கு வருகிறது. ஆனால் தொல் பொருள் ஆராய்ச்சியின் முடிவுகளை வைத்துப் பார்க்கிற போது, இவ்விடுதலைப் பயணம் கி.மு. 13 ஆம் நூற்றாண்டில் நடைபெற்றிருக்க வேண்டும் என்று தெரிகிறது. தொல் பொருள் ஆராய்ச்சி யில் கீழ்காணும் தடயங்கள் நமக்கு கிடைத்

துள்ளன. பாலஸ்தீனத்திலுள்ள பல நகரங்கள் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் பலத்த சேதத்திற்கு ஆளாகியுள்ளன. குளுவெக்கு என்பவர் யோர்தான் நகரில் நடத்திய தொல்பொருள் ஆராய்ச்சியும் 13-ஆம் நூற்றாண்டையே விடுதலைப் பயணத்தின் ஆண்டுகளாகச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது. மேற்கூறப்பட்ட மெரிநெப்த்தா கல்வெட்டும் இந்த 13-ஆம் நூற்றாண்டையே குறித்துக் காட்டுகின்றது. இவைகளையெல்லாம் நோக்கும்போது கி.மு.13-ஆம் நூற்றாண்டே, விடுதலைப் பயணம் நடந்த காலம் என்ற முடிவை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் 1 அர 6:1-இல் கூறப்படும் 480 ஆண்டுகள் குறிப்பு ஓர் அடையாள எண்ணாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். 13-ஆம் நூற்றாண்டில், இஸ்ராயேல் மக்களை வதைத்து வாட்டிய எகிப்தின் மன்னன் இரண்டாம் இராம்சேசுதான் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

5. பாலைவனத்தில் அலைச்சல்:- யாத் 13:17-18-இல் எவ்வாறு இஸ்ராயேல் மக்கள், தங்கள் சொந்த நாட்டிற்குச் செல்ல ஒரு சுற்றுப் பாதையை எடுத்துக் கொண்டார்கள் என்ற குறிப்பைப் பார்க்கிறோம். ''பாரவோன் மக்களைப் போகவிட்டபின் போரைக் கண்டால் அவர்கள் மனமுடைந்து எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று கடவுள் எண்ண, அவர்களைப் பெலஸ்தியரின் நாட்டுக்குறுக்கு வழியாய்க் கொண்டு போகாமல், செங்கடல் ஓரத்திலிருக்கும் பாலைநிலம் வழியே சுற்றிச் சுற்றிப் போகச் செய்தார்'' எண்ணாகமம் 33-ஆம் அதிகாரம் இஸ்ராயேல் மக்கள் தங்கி பாளையமிறங்கின 40 இடங்களைக் கூறுகிறது. இத்தனைக் குறிப்புகள் இருந்தாலும், எந்த வழியாகச் சென்றார்கள் என்பதைப் பற்றி தின்னமாகத் தெரிந்துக் கொள்ள வழியில்லை.

இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் வழிநடந்த நிகழ்ச்சியை யாத்திரையாகமம் விவரிக்கிற போக்கில் பலமுக்கியமான நிகழ்ச்சிகளையும் நாம் காணமுடிகிறது. இறைவனுக்கெதிராக மக்கள் முணுமுணுத்தல், மேகத்தூண், மன்னா, காடை, 40 ஆண்டுகளாக அலைதல், அமலேக்கியருடன் போர் முதலிய மற்ற நிகழ்ச்சிகளையும் நாம் காண முடிகிறது. இப்பாலைவன அலைச்சலின்போது நடந்த மிக முக்கியமான நிகழ்ச்சியென்னவென்றால், சீனாய் மலையில் ஏற்பட்ட உடன்படிக்கை நிகழ்ச்சியாகும். இவ்வுடன்பாட்டை மணி சுருக்கமாக இங்குக் குறிப்பிடலாம். ''நீங்கள் எமது மக்கள், நாம் உனது கடவுள்''. சீனாய் மலை உடன்படிக்கையில் பல சடங்குகள் இடம் பெறுவதைப் பார்க்கின்றோம். இவைகள் இத்தித்யர்களின் மத்தியில், பேரரசன் ஒருவனுக்கும் அவனுக்குக் கீழிருக்கும் சிற்றரசர்களுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தத்தை மாதிரியாக வைத்து அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தை மாதிரிகையாக வைத்து, இறைவனுக்கும் இஸ்ராயலுக்கும் உள்ள தனித்த உறவை விளக்கியுள்ளார்கள்.

யாத்திரையாகமம் 25-ஆம் அதிகாரம் கூடாரம், உடன்படிக்கைப் பேழை ஆகியவைகள் செய்வதைப் பற்றி விளக்கிக் கூறுகிறது. நடமாடும் கோவிலாக இக்கூடாரமும் உடன்படிக்கைப் பேழையும் அமைந்திருந்தன. ஏனென்றால் பயணத்தில், அவர்கள் சென்றவிடங்களிலெல்லாம் அதனை எடுத்துச் சென்றார்கள். இஸ்ராயேல் மக்கள் பயணம் செய்து தாயகம் வந்தார்கள் என்பதற்கு, இந்த நடமாடும் கூடாரத் தயாரிப்பும் ஓர் ஆதாரமாகும்.

பாலைவனத்தில் 40 ஆண்டுகளாய் அவர்கள் பயணம் செய்தார்கள் என்பது கணக்காகும் (சங் 94:10). 40 என்பது ஒரு தலைமுறையின் வருட எண்ணிக்கையாகும். இவர்கள் காதேசு பார்னேயாவிலிருந்து எளிதாக பாலஸ்தீனத்தில் நுழைய வாய்ப்பிருந்தாலும், அவ்வழியில் எதிர்ப்பிருந்ததால் (எண் 14:39) அவ்வழியே நுழையவில்லை. மாறாக. ஏதோம், மோவாப் அம்மோன் ஆகிய நாடுகளைச் சுற்றிக் கொண்டு, யோர்தான் ஆற்றின் கிழக்குப் பகுதியிலிருந்து, யோர்தானைக் கடந்து பிறகு பாலஸ்தீனத்தில் நுழைகிறார்கள். ஆனால் எண் 21:1-3;

நீதி 1:9-16 ஆகிய பகுதிகள் இஸ்ராயேல் மக்கள் தென்பகுதி வழியாகவும் பாலஸ்தீனத்தில் நுழைந்தார்கள் என்று கூறும் முகமாக அமைந்துள்ளன.

சிகோன், ஒகு இந்நகரங்கள் மீது இஸ்ராயல் மக்கள் வெற்றி கொள்கின்றனர். இவ்வெற்றிதான் அவர்கள் பெற்ற முதல் வெற்றியாகும். இதனையே அவர்களின் தலைமுறைகளெல்லாம் மறக்காமல் புகழ்ந்துப் பாடுவதைப் பார்க்கிறோம் (எண் 21:21-35; சங் 135: 19-20). மோசே நேபோ மலையில் மரிக்கிறார். வாக்களிக்கப்பட்ட நாட்டினுள் புகாமல் அவர் இறந்ததற்கும் காரணங்களைத் தருகிறது விவிலியம் (எண் 20:12; உப 1:37).

6. கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் கானான் நாடு:- கி.மு. 13-ஆம் நூற்றாண்டில், கானான் நாடு பலயினமக்களைத் தன்னுள் கொண்டிருந்தது. கானானிய இனத்தவர் கடலோரப் பகுதிகளிலும், தெற்கு மற்றும் மத்திய பாலஸ்தீனிய பகுதிகளிலும் பெரும்பாலும் வாழ்ந்து வந்தனர். அதே சமயத்தில் இத்தியர், கோரியர் போன்றோரும் கானான் நாட்டில் வாழ்ந்து வந்துள்ளனர்.

இக்காலத்தில் அரசியல் நிர்வாக அமைப்பைப் பொருத்தவரை, நகர ஆட்சி முறை பரவலாக பாலஸ்தீனத்தில் பழக்கத்திலிருந்தது. அதே நேரத்தில் பல நூற்றாண்டுகளுக்குப் பாலஸ்தீனம் எகிப்தின் கண்காணிப்பின் கீழேயே இருந்து வந்துள்ளது. பாலஸ்தீனத்திலிருந்த சிற்றரசர்கள், எகிப்திற்கு விசுவாசமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். தவறாது கப்பங்களைக் கட்டி எகிப்தின் நம்பிக்கைக்குரியவர்களாக அவர்கள் விளங்கினர். கி.மு. 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அமர்னா கடிதங்கள் பாலஸ்தீனத்தில் அபிரு என்பவர்களின் அக்கிரமம் அதிகரித்து வருவதாக, அங்குள்ள அரசர்கள் எகிப்திற்குத் தெரிவிப்பதாகக் கூறுகின்றன. .

கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் நகர ஆட்சிகள், பாலஸ்தீனத்தில் பெருகின. ஆனால் அவைகள் ஒன்றிணைந்து, பாலஸ்தீனத்தைத் தங்கள் வசமாக்கிக் கொள்ள முன்வரவில்லை. ஆனால் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதிகள், எகிப்திற்குக் கட்டுப்படாமல், தாங்களே ஏதோம், மோவாப், அம்மோன் என்ற தனித்தனி நாடுகளை உண்டாக்கிக் கொண்டன.

பாலஸ்தீனத்தின் கலாச்சாரம் இந்நாட்களில், எகிப்தின் கலாச்சாரத்தின் தாக்கத்தைப் பெற்றிருந்தது. ஆனால் கானானியரின் சமயம், மற்ற சமயங்களின் சாயல்களைப் பெறாமல் தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொண்டது. பல கடவுளின் பேராலயம் பாலஸ்தீனத்தின் வடக்கிலிருந்த மலையின் மீது அமைந்திருந்தது. அவ்விடத்தின் பெயர் செப்போன் என்பதாகும். கடவுள்களின் தலைவர் எல் என்பவர்; அவரின் மற்றொரு பெயர் பாகால்.

பெண் தேவதைகளில் மூவர் முக்கியமானவர் ஆவர். 1, அசேரா (கடவுள்களைப் படைக்கும் தேவதை) 2. அசித்தார்த்தி (அசித்தரேத்து) 3. அனாத்து இவர் ஒரு கன்னிப் பெண். ஆனால் வீரமிக்கவள். கானானியர்களின் வழிபாட்டில் தேவதாசி முறையிருந்தது. நிலத்தின் வளத்தை இறைவனிடம் வேண்டி, திருத்தலங்களில் உடலுறவு செய்து வழிபட்டனர்.

7. கானான் நாடு யோசுவாவின் கையில்:- யோசுவா ஆகமத்தில், யோசுவா பாலஸ்தீனத்தைச் சண்டையிட்டுப் பிடித்த நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றோம். ஆனால், இப்புத்தகத்தில் நிகழ்ச்சிகள் தரப்பட்டிருக்கின்ற முறை, வரலாற்று நிகழ்ச்சிகளை யெல்லாம், ஒரு வீரக் காவியமாக்கித் தரப்பட்டிருக்கின்றது. ஏனென்றால் யோசுவாவை கதாநாயகனாக்கி, அவரது கைகளால் அனைத்து வெற்றியும் கிடைப்பதாக அமைத்திருக்கிறார்கள். யோசுவா ஆகமத்தை நுணுகிப் படித்தால், பாலஸ்தீனத்தின்மீது அவர் ஒரு திட்டமிட்ட, தீர்க்கமான, தொடர்ந்த போரினை யோசுவா மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகும். சிற்சில இடங்களை ஆங்காங்குத் தாக்கி அவைகளைப் பிடித்திருப்பது

விளங்குகிறது. முதலில் பாலஸ்தீனத்தின் மையப் பகுதியிலுள்ள எரிகோ, ஆயி என்ற இடங்களைப் பிடிக்கிறார்கள். பிறகு கிப யோனியரின் உதவியுடன் பாலஸ்தீனத்தின் தென்பகுதிகளுக்கு படையெடுக்கின்றனர். அதன்பிறகு பாலஸ்தீனத்தின் வட பகுதிக் குப் போர் தொடுத்துச் செல்கின்றனர். அங்கு காசோர் நகரைப் பிடிக்கின்றனர். இவைக ளேயல்லாமல், வேறுசில தனித்த போர்க ளையும் யோசுவா நடத்தியதாகவும் பார்க் கின்றோம். உதாரணமாக யோசு 13:2-6; 15:13-19; 23:7-13; நீதி 1; ஆகிய பகுதிகளில் அத்தகையப் போர்கள் நடந்ததாகப் பார்க் கின்றோம்.

யோசுவா நடத்தியப் போர்களில் கேரம் (அர்ப்பணப்போர்) என்ற வழக்கம் பின்பற் றப்பட்டது. இவ்வழக்கின்படி, போரில் பிடிப்பவைகளையெல்லாம் சுத்தமாக அழித் துவிட வேண்டும். கொள்ளைப் பொருட்கள் என்று எதனையும் அள்ளிவரக் கூடாது. யோசுவா பலபோர்களைத் தொடுத்து வெற் றிகளைப் பெற்றிருந்தாலும், அங்கிருந்த கானானேயர் அனைவரையும் அவர் முற்றி லுமாக அழித்துவிட்டதாக நாம் கூறமுடி யாது. பல கானானியரை இஸ்ராயேல் மக் கள் அழித்துவிடாமல் அவர்களை விட்டுவி டுவதையும் பார்க்கின்றோம் (யோசு 2:21-23; 3:2)

யோசுவா ஆகமத்தில், முதலில் ஒற்றர் களை அனுப்பி யோசுவா பாலஸ்தீன நாட்டை வேவுப் பார்த்து வர அனுப்புகி றார். அதன்பிறகு யோர்தான் ஆற்றை, ஆற் றில் தண்ணீர் வற்ற அற்புதமான முறையில் அதனைப் கடக்கின்றார்கள். பிறகு எரிகோ நகரை முதலில் பிடிக்கிறார்கள் (யோசு 3-4). ஏழு நாட்கள் யெரிக்கோவைச் சுற்றி வந்து, ஏழாம் நாளில் எக்காளம் ஊதி, சுவர்கள்விழ அதனைப் பிடித்துக் கொள்கிறார்கள். இது ஒரு போர் முறையாகத் தெரியவில்லை; மாறாக ஒரு வழிபாட்டு ஊர்வலத்தைப் போல் அங்கு நடைபெறுகிறது. எரிகோவில் பல தொல்பொருள் ஆராய்ச்சிகளை நடத்தி னார்கள். ஆனால் கி.மு. 13-ஆம் நூற்றாண் டில் இந்நகரம் வீழ்ச்சியடைந்தது என்பதற் கானத் தடையங்கள் அங்கு கிடைக்க வில்லை. ஆனால் யோசுவா ஆகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வழிகளைப் பார்க்கும்போது, எரிகோ நகரை அவர்கள் நிச்சயம் முதலில் பிடித்திருக்க வேண்டும் என்பது அவசியமாகியது.

அடுத்து ஆயி நகரைப் பிடிக்கின்றார்கள் (யோசு 8). ஆயி அழிவு என்று பொருள்ப டும். ஆயி நகரத்திலும் தொல் பொருள் ஆராய்ச்சி நடந்துள்ளது ஆனால், இந்நகர மும் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் அழிவைக் கண்டதற்கான அடையாளங்கள் ஒன்றையும் இங்குக் காணமுடியவில்லை. ஆனால் ஆயி நகரின் அருகிலுள்ள பெத்தேல் நகர் 13-ஆம் நூற்றாண்டில் அழிக்கப்பட்டுள்ளது என்பதற் குத் தடையங்கள் கிடைத்துள்ளன. எனவே பெத்தேல் என்பதற்குப்பதிலாக ஆயி என்று குறிப்பிட்டுவிட்டார்கள் என்று ஒரு சில அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அதே போல யோசு. 9-இல் வருகின்ற கிபயோன் நகரில் நடந்த தொல்பொருள் ஆராய்ச்சியும், கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் இந்நகரம் அழிக்கப்பட்டது என்பதற்குத் தட யங்களைத் தருவதாயில்லை.

ஆனால் இலாக்கிசு, தெபீர், காசோர் ஆகிய இடங்களில், கி.மு. 13-ஆம் நூற்றாண் டில் அந்நகரங்கள் அழிக்கப்பட்டன என்ப தற்கு, தொல் பொருள் ஆராய்ச்சியின் முடிவு கள் சான்று பகர்கின்றன. யோசுவா 10-11 அதிகாரங்கள் மேற்கண்ட நகரங்களின் அழி வைத் தெரிவிக்கின்றன. அதில் கூறப்படுவ தற்கும், தொல் பொருள் ஆராய்ச்சியின் ஆதா ரங்களும் ஒத்திருக்கின்றன.

செக்கேம் நகர் எவ்வித போராட்டமில்லா மல் இஸ்ராயலரின் கைகளில் விழுந்ததாகப் பார்க்கிறோம். செக்கேம் நகரில் நடத்தப் பட்ட தொல் பொருள் ஆராய்ச்சியில், இந்நக ரம் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் எவ்வித சேதத்திற்கும் ஆளாகவில்லையென்று கண் டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே இஸ்ராயேல் மக்கள், தங்களின் நாட்டிற்கு வந்தபோது, எகிப்திற்கு செல்

லாது அங்கேயே தங்கயிருந்த அவர்களின் மூதாதையரின் வாரிசுகள் இஸ்ராயேல் மக்களை இனம் கண்டு கொண்டு, அவர்கள் குடியமர உதவி செய்திருப்பதற்கு வாய்ப்புகள் இருந்திருக்கின்றன.

அடுத்து யாத் 12:38-இலும், எண் 11:4-இலும் இஸ்ராயேல் மக்களுடன் மற்றயினத்தவரும் சேர்ந்து இந்த விடுதலைப் பயணத்தில் பங்குக் கொண்டார்கள் என்று பார்க்கிறோம். ''இஸ்ராயேலரோடு கூட வந்திருந்த பலயின மக்கள் இறைச்சி உண்ணவேண்டுமென்று பேராசைக் கொண்டனர்''. எனவே எகிப்திலிருந்து பாலஸ்தீனத்திற்கு, காலபோக்கில் மக்கள் வருவதும் போவதுமாகயிருந்திருக்கிறார்கள் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்கயிடமிருக்கிறது.

இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் பெரும்பாலும் சமாதான முறையிலும், ஒரு சில இடங்களில் போராடியும் பாலஸ்தீனத்தில் குடியமர்ந்தார்கள். யோசுவா ஆகமத்தில் கூறப்பட்டிருப்பதுபோல தொடர்ந்த பெரிய போர்கள் அங்கு நடைபெறவில்லை என்பதையே ஆகமம் காப்பிய நடையில், பலயிடங்களில் மிகைப்படுத்தியும் அழகுப்படுத்தியும் கூறுகிறது.

இவ்வாறு எகிப்திலிருந்து விடுதலைப் பெற்றுவந்து, பாலஸ்தீனத்தில் குடியேறிய மக்கள், எப்போது ஓரினமாக இணைந்தார்கள் என்ற கேள்வியும் எழுகிறது. பிரைட், ஆல்பிரைட் என்ற அறிஞர்கள், எகிப்திலிருந்து விடுதலைப் பெற்ற மக்கள் சீனாய் மலையில் நடைபெற்ற உடன்படிக்கை நிகழ்ச்சியின் வழியாகத்தான், தாங்கள் ஒரே மக்கள், ஒரேயினம் என்று இணைந்தார்கள் என்று கருத்து தெரிவிக்கிறார்கள். ஆனால் நோத்து என்ற அறிஞர், மக்கள் பாலஸ்தீனத்தில் வந்து குடியமர்ந்தபிறகுதான் இந்த ஒரேயினம் என்ற எண்ணம் உண்டானது. ஏனென்றால் பாலஸ்தீனத்தில், எகிப்திலிருந்து வந்தவர்கள் அனைவரும் ஒரு திருத்தலத்தில் கூடி வழிபடுவார்கள். அத்திருத்தலத்தை ஒவ்வொரு குலத்தவரும் சுற்றுமுறை வைத்துக் கொண்டு கண்காணித்து வந்தனர். இவ்வாறு பாலஸ்தீனம் வந்தடைந்த பிறகுதான், இத்தகைய கூட்டங்கள் வழியாக, தாங்கள் ஒரேயினம் என்ற எண்ணத்தைப் பெற்றார்கள் என்கிறார் நோத்து.

யோசுவா 13-ஆம் அதிகாரத்திலிருந்து, பிடிக்கப்பட்ட பாலஸ்தீன நாடு, கோத்திரம் வாரியாகப் பகிர்ந்துக் கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம். இந்த 12 கோத்திரங்கள் எனப்படுபவை, யாகோபின் பிள்ளைகளின் நேரடி வாரிசுகளா? என்ற கேள்வியையும் அறிஞர்கள் எழுப்புகின்றனர். அவ்வாறு இவர்களை யாக்கோபு பிள்ளைகளின் வாரிசுகள் என்று சொல்ல முடியாது என்கின்றனர். ஏனென்றால், மக்கள் அவர்களின் சமய நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஒன்றித்திருந்தனர். இரத்த உறவு அடிப்படையில் அவர்கள் பிரிந்து நின்றதாக குறிப்புகள் காணப்படவில்லை. அதனால்தான் யூதாவின் குலத்தவரோடு சிமியோன் குலத்தவர் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். காது குலத்தவருடன் ரூபன் குலத்தவரும் இணைக்கப்பட்டனர். எப்பிராயிம், மனாசே இரு குலத்தவரும், யோசேப்பு குலத்தவராக இணைத்துக் கூறப்படுகின்றனர் (ஆதி 49:1-27). எனவே யோசுவா 13-ஆம் அதிகாரத்தில் கூறப்படுகின்ற 12 கோத்திரங்களின் எல்லைகள் என்றும் நிலைத்து நின்ற எல்லைகள் அல்ல என்பது தெளிவாகிறது. இவ்வாறு யோசுவாவின் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் பாலஸ்தீனத்தில் குடியேறிய வரலாற்று நிகழ்ச்சியை, யோசுவா ஆகமம் காப்பிய வடிவில் கூறுகிறது.

8. விடுதலை வீரர்களின் காலம்:- யோசுவாவின் காலத்தையடுத்து, பாலஸ்தீனத்தில் இஸ்ராயேல் மக்களிடத்தில் ஒரு புதுவித சூழ்நிலை உண்டாகிறது. நாட்டில் குடியேறிய மக்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்தும் வழிகளைத் தேட ஆரம்பித்தார்கள். நாடோடியாக வாழ்ந்தவர்கள் வீட்டில் தங்கி வாழத் தலைப்பட்டனர். அந்நாட்டில் நடந்த தொழிலைக் கைக்கொண்டு அதனால் தங்கள் வயிற்றிற்கு வழிதேடினர். அப்போது

பாலஸ்தீன நாட்டில் விவசாயம்தான் முக்கியத் தொழில். எனவே பயிர் தொழிலைப் பாங்காகச் செய்ய முற்பட்டனர். உழவு தொழிலிற்கு வானைப் பார்க்க வேண்டும். வான் பொய்த்தால் வாழ்க்கைப் பொய்த்து விடும். தேவையான மழையை, தேவையான நேரத்தில் பெற்றிட பாலஸ்தீனத்தில் அப்போது வாழ்ந்த கானானியர் பாகால் என்ற கடவுளை வழிபட்டனர். இவ்வழிபாட்டில், ஆலயத்தில் உடலுறவு கொள்ளும் வழக்கம் இருந்தது. விவசாயம் செய்த இஸ்ராயேலர், கானானியர் நிலத்தின் வளத்திற்காகச் செய்து வந்த அதே வழிபாட்டில் பங்கு பெறவும் தலைப்பட்டனர். ஓரிடத்தில் நிலைத்து வாழத் தலைப்பட்டவர்கள் தங்கள் சமுதாய ஒற்றுமையை மறந்து வாழவும் தலைப்பட்டனர். அத்தோடு அருகிலிருந்த பிறமக்கள் இஸ்ராயேல் மக்களின் இடங்களை ஆக்கிரமித்து தொந்தரவு அளிக்கவும் ஆரம்பித்தனர். குறிப்பாக, முதலில் கடல் மக்கள் என்று அழைக்கப்பட்ட பெலிஸ்தியர்கள், எகிப்தைத் தாக்கிக் கொண்டிருந்தனர். இவர்களை எகிப்து முறியடித்து திருப்பி அனுப்பிவிட்டது. இவர்கள் இஸ்ராயேல் அருகில் தனிநாட்டை உருவாக்கி வாழ்ந்து வந்தனர். இவர்கள் அடிக்கடி இஸ்ராயேலில் நுழைந்து துன்புறுத்தி வந்தனர். இச்சமயத்தில் தான், கடவுளின் அழைப்பை உணர்ந்த வீரர்கள் வெளிவந்து மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்தனர். இத்தகைய விடுதலை வீரர்கள் இஸ்ராயேலை சுமார் 150 ஆண்டுகள் வழிநடத்தி வந்தனர். இவர்கள் இவ்வாறு மக்களை வழிநடத்தி வந்தக் காலம் கி.மு. 1200 முதல் கி.மு. 1050 என்றும் நாம் கணக்கிடலாம். இவ்விடுதலை வீரர்கள் மொத்தம் பன்னிருவர். அறுவர் பெரிய நீதிபதிகள் என்றும், அறுவர் சிறிய நீதிபதிகள் என்றும் அ.ைழக்கப்படுகின்றனர். இப்பாகுபாடு அவர்களின் சிறப்பினை வைத்துக் கொடுக்கப்பட்டதல்ல. மாறாக, பெரியவர்கள் அறுவரின் வாழ்வைப் பற்றிச் சற்று அதிகமாக நீதிபதி ஆகமத்தில் எழுதியுள்ளார்கள். சிறியவர்களைப் பற்றி ஒரு சில வாக்கியங்களில் கூறிவிடுகின்றனர்.

இந்த விடுதலை வீரர்களைச் சரியாகக் காலவாரியாக வரிசைப்படுத்திக் கூற வில்லை நீதிபதியாகமம்; மாறாக பலவிடங்களில் தோன்றி பணியாற்றிய இவ்வீரர்களைப் பற்றி, ஒரு குறிப்பிட்ட வாய்ப்பாட்டைப் பின்பற்றிக் கூறியிருப்பதாகத் தெரிகிறது. இதை நீதி 2:10-3:6 என்ற பகுதி எடுத்துக் கூறுகிறது. முதலில் இஸ்ராயேல் மக்கள் யாவேயை மறந்து பாவம் செய்வது குறிப்பிடப்படும். பிறகு அதற்குத் தண்டனையாகக் கடவுள், அன்னிய அரசர்களை அவர்கள் மீது படையெடுக்கச் செய்வார். அன்னியர்களின் பிடியில் சிக்கிய மக்கள் இறைவனைப் பார்த்து முறையிடுவர், மனந் திரும்புவர். இப்போது இறைவன் அவர்களை மீட்க ஓர் விடுதலை வீரரை அனுப்பி வைப்பார். இந்த நான்கு படி கொண்ட வாய்ப்பாட்டைத்தான் ஒவ்வொரு விடுதலை வீரரின் வாழ்க்கையை வடித்து எழுதும்போது, நீதிபதியாகமம் பின்பற்றுகிறது.

இவ்விடுதலை வீரர்கள் எந்தெந்த எதிரிகளை எதிர்த்து வெற்றிக் கொண்டனர் என்பதைப் பற்றியும் நீதிபதியாகமம் குறிப்பிட்டுக் கூறுகிறது. முதலில் கூறப்பட்ட பெலிஸ்தியர் மட்டுமல்ல, பல திசைகளிலிருந்து இஸ்ராயேல் மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களின் ஒற்றுமையை மறந்திருந்த மக்கள் எதிரிகளின் தாக்குதலுக்கு எளிதாக இரையானார்கள். கடவுள் அனுப்பியவிடுதலை வீரர்களின் மற்றொரு முக்கியமானப் பணி, மக்களை ஒன்று சேர்ப்பதாகும். இவ்வாறு மக்களை ஒற்றுமைப்படுத்தி, எதிரியை எதிர்க்கச் சென்றனர்.

ஒதினியேல் என்ற விடுதலை வீரர் கிரியத்து-சேபர் நகரைப் பிடிக்க யூதாவிற்கு உதவுகிறார் (நீதி 1:11-16). இடக்கையன் ஏகூது, மோவாப் அரசன் எகிலோனைத் தந்திரத்தால் கொல்லுகிறார் (நீதி 3:15-25). இதனால் மோவாபு மக்கள் யோர்தான் ஆற்றினைத் தாண்டி இஸ்ராயேல் மக்களைத் தாக்கத் துணியாது, அவர்கள் நாட்டோடு அடங்கிப்போய் இருந்தார்கள். இறைவாக்கினள் தெபோரா, பாராக்கு என்ற வீரரைத்

தூண்டியெழுப்புகிறாள். இருவரும் சேர்ந்து, பாலஸ்தீனத்தின் வடபகுதியிலிருந்த மக்களையெல்லாம் ஒன்று திரட்டுகின்றனர். தங்களைத் தாக்கி வந்த கானானிய அரசன் யாபீனை எதிர்த்துப் போரிட செல்கின்றனர். இப்போர் எசுதிரலோன் என்ற சமவெளியில் நடக்கிறது. யாபீன் அரசனின் தளபதி சிசாரச இஸ்ராயலுக்கு எதிராக தலைமையேற்றுப் போரை நடத்துகிறான். சிசாரா கெபேரின் மனைவி யாயேலால் கொல்லப்படுகிறான், இப்போரில், கானானேயர்கள் தேர்ப்படையைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் அப்போது பெய்த மழையினால் கிசோன் நதி வெள்ளப்பெருக்கெடுத்தது. இதனால் தேரெல்லாம் சகதியில் மாட்டிக்கொண்டு பயன்படாது போகின்றன (நீதி 5:20-21). இந்நிகழ்ச்சி கி.மு. 1125-ஆம் ஆண்டு நடந்திருக்க வேண்டும் என்று ஆல்பரைட் என்ற அறிஞர் கருதுகிறார். அதற்கு அவர் மெக்கிதோ, தானாக்கு முதலிய இடங்களில் நடந்த தொல்பொருள் ஆராய்ச்சியின் சான்றுகளை அங்குக் காட்டுகிறார். இவ்வெற்றியை மையமாக வைத்து இயற்றப்பட்ட தெபோராவின் பாடல் (நீதி 5) காலத்தால் மிகப்பழமையான பாடல்களில் ஒன்றாகும்.

மிதியானியரும், அமலேக்கியரும் ஒட்டகங்கள் மீது வந்து, இஸ்ராயல் மக்களைச் சூறையடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை கிதேயோன் சந்தித்து விரட்டியடித்து வெற்றி கொள்கிறார் (நீதி 6-8). பிறகு கிதயோனின் மகன் அபிமெலக்கு இஸ்ராயலுக்கு அரசனாக முயற்சி செய்கிறான். செக்கேமில் சிலகாலம் அரசனாகவும் ஆட்சி செய்கிறான் (நீதி 9). கிதயோன் செய்த மற்றொரு முக்கிய பணி, பாகாலின் ஆலயங்களை இடித்து அழித்ததாகும் (நீதி 6:25-32).

இபிதாகு ஒருவிலைமாதின் மகன். மக்களால் விரட்டப்பட்டு, கொள்ளைக்காரர்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார். அம்மோனியர் கிலயாத்தைக் கைப்பற்றியபோது கிலயாத்தின் மக்கள் இபிதாகின் உதவியை நாடுகின்றனர். இபிதாகு போரிட்டு அம்மோனியர்களைத் தோற்கடிக்கிறார். இச்சமயத்தில் மிக வருத்தமான நிகழ்ச்சி நடை பெறுகிறது. தனது வெற்றிக்கு நன்றியாக, யாரை முதலில் காண்பாரோ அவரை பலியிடுவதாக வேண்டுதல் செய்திருந்தார். அவர் மகளை, அவர் வெற்றிக் கொண்டு திரும்பி வரும்போது முதலில் சந்திக்கிறார். அதனால் பலிக்கொடுக்க நேருகிறது (நீதி 10-11).

சிம்சோன் பெலிஸ்தியர்களுடன் போராடி, இஸ்ராயேல் மக்களைக் காப்பாற்றுகிறார். இஸ்ராயல் மக்கள் பெலிஸ்தியர்களால் எவ்வளவு வாதையுற்றனர் என்றால் தாங்கள் தப்பித்துக் கொள்ள தங்களின் வீரனையே, கட்டி, பெலிஸ்தியர்களிடம் அனுப்பிவைக்க முன்வருகின்றனர் (நீதி 15:12-14). சிம்சோனின் அலாதியான வீரமும் பலமும் இஸ்ராயேலின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கின.

சமானிய விடுதலை வீரர்கள், போர்களில் ஈடுபடுவதைவிட, மக்களையிணைக்கும் பாலங்களாக விளங்கியுள்ளார்கள். இவ்வகுப்பைச் சேர்ந்த சில வீரர்கள், இஸ்ராயல் இனத்தைச் சார்ந்தவர்களாக கூட இல்லை.

இஸ்ராயேல் வரலாறு - IV மன்னர் ஆட்சிக்காலம்

விடுதலை வீரர்களின் காலத்தையடுத்து, கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் மன்னர் ஆட்சிமுறை பாலஸ்தீனத்தில் அடியெடுத்து வைத்தது. இந்த நூற்றாண்டின் துவக்கத்தில், இஸ்ராயேல் மக்களின் பெரும் தலைவலியாக விளங்கியவர்கள் பெலிஸ்தியர்கள். இப்பெலிஸ்தியர்கள், பாலஸ்தீனத்தின் தென்பகுதியில் கடற்கரை ஓரங்களில் காசா, காத்து அசுக்கலோன், அசுதோது, எக்கரோன் என்ற நகரங்களைப் பிடித்து அவைகளில் தனித்து அரசாட்சியை நடத்தி வந்தனர். இவர்கள் இஸ்ராயேல் மக்களை விட அதிக வலிமை வாய்ந்தவர்களாக அக்காலத்தில் விளங்கியிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. சிம்சோன் பெலிஸ்தியர்களுடன் கொண்ட போராட்டத்தை நீதி 13-16 என்ற பகுதி விவரிக்கிறது. பெலிஸ்தியர்கள், இரும்பினை உருக்கும் இரகசியத்தைத்

தெரிந்து வைத்திருந்திருந்தார்கள். எனவே தான் இஸ்ராயேல் மக்கள் கொல்லர்களைத் தேடி பெலிஸ்தியர் நாட்டிற்குச் சென்றார்கள் என்று 1 சாமு 13:19தொ- தெரிவிக்கின்றது. இப்பெலிஸ்தியர் அபேக்கு என்ற இஸ்ராயே லின் நகரைப் பிடித்து பாலஸ்தீனத்தின் வட பகுதியில் நுழைந்தனர் என்று 1 சாமு 4 தெரிவிக்கின்றது. அபேக்கு என்ற ஊரில் நடந்தப்போர், வரலாற்றில் முக்கியம் வாய்ந் தது. ஏனென்றால், இஸ்ராயேலின் பலகுலத் தவரும் ஒன்றிணைந்து பெலிஸ்தியரை எதிர்த்துப் போராடியுள்ளார்கள்.

1. முதல் அரசன் சவுல் (கி.மு. 1020):- பெலிஸ்தியர்கள் இஸ்ராயேலை விழுங்கிவிடத் தருணம்பார்த்துக் கொண்டிருந்தனர், இச் சூழ்நிலையில் இரண்டு முக்கிய மனிதர்கள் இஸ்ராயேலில் தோன்றினார்கள். சாமுவேல் என்பாரும் சவுல் என்பவரும்தான் இக்காலத் தில் தோன்றிய மனிதர்கள்.

சாமுவேல்பற்றி தகவல்கள் பலவித மொழிநடைகளில் வடிவம் பெற்று உலாவி வந்தன. அவருடைய பிறப்பு, அழைப்பு, பணிகள் இவைகள் ஒவ்வொன்றும் தனித் தனி பாணியில் மக்கள் மத்தியில் செய்திக ளாக நிலவிவந்தன. எனவேதான், அவரைப் பற்றிய தெளிவானக் குறிப்புகளை நாம் காணமுடியவில்லை. இளமையில் சிலோவா திருத்தலத்தில் ஏலியின் ஏவல னாக விளங்குகிறார். இத்திருத்தலத்தில் இவ் வாறு பணிபுரிந்தது அவருடைய தாய் எடுத் துக்கொண்ட நேர்ச்சியின் காரணமாகத்தான் (1 சாமு 1:11; எண் 6). இதையடுத்து, சாமுவேல் ஓர், இறைவாக்கினராகவும் காட் சியாளராகவும் சித்தரிக்கப்படுகிறார். இவர் இஸ்ராயேல் மக்களின் பழைய பாரம்பரியங் களைத் திண்மையுடன் கட்டிக் காப்பவராக நிற்கிறார். எனவேதான், சவுல் முதல் அரச னாக ஆவதற்குமுன் அரசமுறை நுழைவதை எதிர்த்து நிற்கிறார். சாமுவேல் இறைவாக்கி னராகச் செயற்படுங்கால், அவரைச் சுற்றி ஒரு சீடர் கூட்டம் சேர்ந்து வாழ்ந்து வந்திருக் கிறது. இச்சீடர்கள் பரவச நிலையில் ஆடுப வர்களாகவும் குறிசொல்பவர்களாகவும் விளங்கியுள்ளனர். இச்சீடர்களின் செயல்வ முக்கங்கள் கானானியர்களின் இறைவாக்குப் பூசாரிகளின் வழக்கங்களை ஒத்திருந்தன.

இதையடுத்து சாமுவேல் ஓர் விடுதலை வீரராகவும் விளங்கினார் (1 சாமு 7:2-17). அதிலும் இவர் இஸ்ராயேலின் வரலாற்றில் கடைசி விடுதலை வீரராக விளங்கியிருக்கி றார். இவ்வாறு இவர் பெத்தேல், கில்கால், மிசுபா என்ற நகரங்களில் விடுதலை வீரர்க ளின் பணியை செய்துவந்திருப்பதும் நமக் குத் தெரிகிறது. விடுதலை வீரர்களின் பணி யில் இவர் இடம் பெறுவதால்தான் பெலிஸ் தியருடன் இவர் போரிட்டு அவர்கள் மீது அவர் வெற்றிக் கொண்டதாக 1 சாமு 7:10- இல் பார்க்கிறோம்.

விடுதலைவீரர் கிதயோனின் மகன் அபி மெலக்குதான் அரசனாக முயற்சி செய்தார் அவரது நோக்கம் என்னவென்றால் ஒருமன் னனின் குடையின் கீழ் எல்லா இஸ்ராயே லின் குலங்களையும் இணைப்பதாகும். ஆனால் அவரின் முயற்சி பயனளிக்காது தோல்விக் கண்டது. அபிமெலக்கு அப் போது ஏற்றிய விளக்கு பெலிஸ்தியர்களின் தொல்லைகளால் பற்றி எரிய ஆரம்பித்தது. எதிரிகளான பெலிஸ்தியரை அழிக்க இஸ்ரா யல் அனைவரும் அரசன் என்ற தலை மையை வைத்து அவன் கீழ் ஒன்று கூட ஏதுவாயிற்று.

மன்னர் ஆட்சிமுறை, இஸ்ராயேலில் எவ் வாறு தோற்றம் கண்டது என்பது பற்றி இரண்டு வகையான பாரம்பரியங்களைச் சாமுவேல் ஆகமத்தில் நாம் காண முடிகி றது. 1 சாமு 9:1-10; 16:11 ஆகிய பகுதிகள் மன்னர் ஆட்சி முறை தோன்றியதை ஆதரிப் பதைப் போலத் தெரிகிறது. ஆனால் 1 சாமு 8;10: 17-27; 12 ஆகிய பகுதிகள் மன்னர் ஆட்சி முறைக்கு எதிராக அமைந்துள்ளன.

1 சாமு 9:1-10; 16:11 என்ற பகுதியில் நாம் காண்பது: சவுல், தன் வீட்டிலிருந்து காண மற்போன கழுதைகளைத் தேடிச்செல்கிறார். அப்போது இராமாவில் சாமுவேலால் அபி டேகம் செய்யப்படுகிறார். இந்நிகழ்ச்சியைத்

தருகின்ற பாரம்பரியம் மிகவும் தொன்மை யானதாகும் என்று அறிஞர்கள் கருதுகின்ற னர்.

1 சாமு 8;10:17-27; 12- என்ற பகுதியில் சவுல் முதல் மன்னனாக ஆக்கப்படுவது வேறு விதத்தில் அமைந்துள்ளது, அதாவது, சாமுவேல் விருப்பமில்லாமல் மக்களின் வற்புறுத்தலுக்காகவே சவுலை முதல் அரச னாக ஆக்குவதாக உள்ளது. இதில் சாமு வேல் கடைசி விடுதலை வீரராகவும், அவ ரைத் தொடர்ந்து சவுலும் அந்த விடுதலை வீரர் பாணியிலேயே பணி செய்ததாகவும் இப்பகுதி விளக்குகிறது. எனவேதான் அவர் மன்னராக அபிடேகம் செய்யப்பட்டார் என் பதில் 1 சாமு 10:1 ''நாகித்'' என்ற எபிரேய வார்த்தை அரசனைக் குறிக்கப் பயன்படுத் தப்பட்டுள்ளது. நாகிது என்றால் தலைவன் இளவரசன் என்றுதான் பொருள் (2 சாமு 7:8), அதனைப் படைத்தலைவன் என்று கூட மொழிபெயர்க்கலாம் என்கிறார் ஆல்பி ரைட் என்ற அறிஞர்.

எனவே மன்னர்களின் சரியான அமைப்பு ஆட்சிமுறை ஒரே காலக் கட்டத்தில் திடீ ரென உண்டாகாமல் படிப்படியாக வளர்ந்தி ருக்கிறது என்பதைத்தான் இந்த இரு பாரம் பரியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஆல்பி ரைட் என்ற அறிஞர் கிபயா என்ற இடத்தில் தொல் பொருள் ஆராய்ச்சி நடத்தினார். அவ்விடத்தில் சவுல் அரசனில் அரண்மனை யைக் கண்டு பிடித்தார். இவ்வரண்மனை எளிமையான முறையில் கட்டப்பட்டுள் ளது. ஏனென்றால் சவுலின் காலத்தில் முழு மையான நிர்வாக அமைப்பு முறைகளும் அரச ஆடம்பரங்களும் ஆரம்பத்திலேயே தோன்றவில்லை.

சவுல் தனது பணியின் துவக்கத்திலேயே பல வெற்றிகளைக் கண்டார்; அவை அவ ருக்குப் பெரும் ஆர்வத்தை அளித்தன. சான் றாக யபேசு-கிலயாதை ஆம்மோனியர்கள் முற்றுகையிட்டபோது அவர்களை முறிய டித்தார் சவுல் (1 சாமு 11). இப்போரில் பெலிஸ்தியர் தலையிடாமல் ஒதுங்கியே நின்றுள்ளனர். அடுத்து அவர்களின் பயங்கர எதிரியாக விளங்கிய பெலிஸ்தியரையும் எதிர்த்து ஒருமுறை வெற்றி கொண்டார் சவுல். பெலிஸ்தியரை தோற்கடித்த இப்பெ ரும்போரில் சவுலின் மகன் யோனத்தான் தலைமையேற்று இவ்வெற்றிக்குக் காரண மாக விளங்கினார் (1 சாமு 14).

முதல் அரசனான சவுல் சிலதவறான வழி களிலும் சென்றார். தன்னை திருநிலைப்ப டுத்திய சாமுவேலுடனேயே மோதினார். இத்தகைய இருமோதல்களை 1 சாமு 13; 15; நமக்குத் தெரிவிக்கின்றன. அதாவது பெலிஸ்தியருடன் போர் துவங்குமுன் இறைவாக்கினர் சாமுவேலுக்குப் பதிலாகத் தானே பலியை நிறைவேற்றுகிறார் சவுல். அமலேக்கியரைச் சவுல் தோற்கடித்தபோது அவர்களின் சட்டப்படி கொள்ளைப் பொருட்களை முழுவதுமாக அழிக்காமல் சிலவற்றை தன்னுடன் தக்க வைத்துக் கொள் கிறார் சவுல். இவை சவுல் இறைவனின் வழிகளை விடுத்துச் சென்றதைக் காட்டுகின் றன. இதனால் சவுலுக்கும் சாமுவேலுக்கும் சச்சரவு உண்டானது. இதையடுத்து அவர் இறைவனால் கைவிடப்பட்டதாக நினைத்து வெதும்பி மனம் உடைந்து போய் மன நோய்க்கு ஆளாகிறார். இச்சூழ்நிலையில் தான் தாவீது சவுல் முன் தோன்றுவதாக சில பகுதிகளில் காண்கிறோம். அடுத்து சவுல் செய்த பெரிய தவறான செயல் நோபில் குருக்களைக் கொலைசெய்தது. இச்செயல் சவுலின் வீழ்ச்சியை முத்திரையிட்டது. பல விதத் தோல்விகளின் மத்தியில் செய்வதறி யாது எந்தோர் என்ற இடத்தில் குறிசொல்ப வளிடம் சென்று சாமுவேலின் ஆவியை அழைத்து வரச்சொல்லி பேசமுயற்சிக்கும் நிகழ்ச்சி சவுலின் முற்றிலும் இயலா நிலையை விளக்கிக் காட்டுவதாக உள்ளது.

கடைசியில் பெலிஸ்தியர்களின் நெருக் குப்பிடி அதிகரிக்கிறது. கில்போவா மலை யில் நடந்தபோரில் யோனத்தான் பெலிஸ்தி யர்களால் கொல்லப்படுகின்றார். சவுல் மன முடைந்து தற்கொலை செய்துகொள்கிறார். இவ்வாறு முதல் மன்னர் சவுலின் ஆட்சி பரிதாப நிலையில் முற்றுப் பெற்றது.

2. தாவீது அரசன் (கி.மு.1000-962):-

தாவீது மன்னர், சவுலின்முன் முதன் முதலாக கொண்டு வரப்படும் நிகழ்ச்சி, இரண்டு விதங்களில் கூறப்படுவதை சாமுவேல் ஆகமத்தில் பார்க்கிறோம். 1 சாமு 16:14-23; 17:1-11.32-53-என்ற பகுதியில் சவுல் தீய ஆவியால் அலைக்கழிக்கப்படும்போது அவருக்குமுன் யாழ்வாசிக்க, தாவீது சவுல் முன் அழைத்து வரப்படுகிறார். ஆனால் 1 சாமு 17:12-30; 17:55-18:2 என்ற பகுதியில் தாவீது தன்மூத்த சகோதரர்களைப் போர்க்களத்தில் சந்திக்கிறார். அங்கு கோலியாத்தின் அட்டகாசத்தைப் பார்த்து, பிறகு அவனைக் கொன்று வெற்றிபெற சவுல் அரசனிடம் சென்று அனுமதி வேண்டுகிறார். இந்நிகழ்ச்சியிலும் தாவீது சவுல்முன் முதன்முதலாக தோன்றுவதாகக் கூறப்பட்டுள்ளது.

தாவீது, சவுல் அரசனின் அரசவையில் தோன்றும் நிகழ்ச்சிகளும், பிறகு சவுல் அவரைக் கொல்லத் தேடுகிற நிகழ்ச்சிகளிலும் இரட்டிப்பு நிகழ்ச்சயுரைகளைக் காண்கிறோம் உதாரணமாக தாவீது சவுலின் உயிரைக் காப்பாற்றும் நிகழ்ச்சி இரண்டுமுறைக் கூறப்பட்டுள்ளது. தாவீதை சவுல் அம்பால் குத்திக் கொலை செய்ய முயற்சிக்கும் நிகழ்ச்சியும் இரண்டு முறை கூறப்பட்டுள்ளது.

தாவீதுத் தனது போரிடும் திறமையால், படிப்படியாக முன்னுக்கு வருகிறார். எந்த அளவிற்கு என்றால் சவுல் அரசனின் மகளான மீக்காளையே மணமுடித்துக் கொள்கிறார் தாவீது. ஆனால் உயர்ந்து வந்த தாவீதிற்கு, ஆபத்தும் தாழ்வும் அடுத்தாற்போல் காத்துக் கொண்டிருந்தன. சவுல் தாவீதைச் சுத்தமாகத் தொலைத்துவிடுவதற்கு பேயாய்ச் செயல்பட்டார். சவுலின் சாவுப்பிடியிலிருந்துத் தப்பித்துக் கொள்வதற்காக பாலைவனத்தில் பதுங்குகிறார் தாவீது. அங்கு தன்னுடன் நானூறு பேர் கொண்ட ஒரு சிறிய படையை ஏற்படுத்திக் கொள்கிறார். இப்படையின் வீரர்களெல்லாம் சவுலிடமிருந்து தப்பித்து வந்தவர்கள். பாலைவனத்தில் பதுங்கி வாழ்ந்த காலத்தில் தந்திரமாகத் தங்களின் பகைவரான பெலிஸ்தியர்களுடன்கூட இரகசிய உறவை உண்டாக்கிக் கொள்கிறார். காத்து நகர பெலிஸ்திய அரசனுடன் நல்லுறவு கொண்டு சவுல் அரசன் இறக்கும் முன்னமே சிக்கிலாகு நகரின் சிற்றரசன் ஆனார் தாவீது.

சவுல் இறந்தபின், இஸ்ராயேல் நாட்டின் தென்பகுதியான யூதாவிற்கு அரசனாகிறார் தாவீது. கெபிரோன் அவரது தலைநகரமாகிறது. இவ்வாறு தாவீது சவுலை அடுத்து அரசனாகுவதற்கு, பலவித சாதகமான சூழ்நிலைகள் அப்போது நிலவின. யூதாவில் குடியிருந்த மக்கள் தாவீதின் குலத்தைச் சார்ந்தவர்கள். எனவே, தங்கள் இனத்தானாகிய தாவீதைத் தங்கள் அரசனாக ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கவில்லை. மேலும் அபிகாயில் அகினோவாம் என்ற யூதா குலத்தைச் சேர்ந்த பெண்களைத் தாவீது மணந்திருந்தார். ஆனால் யோர்தானையடுத்த மகனாயிம் என்ற பகுதியில் சவுலின் மகன் இசிபாகால் (இசிபோசத்து) அரசனாக அரசாட்சி செய்தார். இசிபாகாலுக்கு சவுலின் படைத் தலைவன் அபினேர் பக்கபலமாய் நின்று, இசிபாகாலை அரசனாக்கினார். இசிபாகாலுக்கும் தாவீதிற்கும் சில சிறு சண்டைகள் நடந்தன (2 சாமு 2:10). ஆனால் இசிபாகாலின் ஆதரவாக விளங்கிய அபினேர், தாவீது பக்கம், கட்சிமாறினார்.

தாவீது அரசியல் தந்திரத்தில் மிகச் சிறந்து விளங்கியிருக்கிறார். இசிபாகால் பயங்கரமாகக் கொல்லப்பட்டார். தாவீதின் படைத்தலைவர் யோவாபு. இசிபாகாலின் படைத்தலைவராகிய அபினேரை வஞ்சகமாகக் கொலை செய்தார். இவ்விரு கொலைகளிலும், தனக்கு எவ்விதத் தொடர்புமில்லை என்ற விதத்தில் நிகழ்ச்சிகளை அமையச் செய்தார் தாவீது. இவ்வாறு அவருடைய எதிரிகள் மறைந்தது, தாவீது இஸ்ராயேலின் ஒரே மன்னன் என்று பட்டம் தரித்துக் கொள்வதற்கு தகுந்த வழிவகுத்தது. கெபிரோனின் பெரியவர்கள், ஒன்றுகூடித் தாவீதுக்கு மகுடம் சூட்டினர் (2 சாமு 5:1-5). இதே கெபிரோனில்தான் தாவீது ஏழு ஆண்டுகள் இதற்கு முன்பாக யூதாவின் அரசனாக ஆண்

டுவந்தார். தாவீது ஒரே அரசனாக நாட்டை ஆண்டு வந்தாலும், யூதா இஸ்ராயேல் என்று இரண்டு பகுதிகளாகவே பிரித்து, அப்போதும் கூறப்பட்டது (2 சாமு. 5:5).

அடுத்து, தாவீது, தன் அரசை விரைவாக விரிவாக்கம் செய்தார். வடக்கில் எமோரியரை வென்றார். தாவீது அரமேய அரசன் அதாதெசரைத் தோற்கடித்து சோபா நாட்டினைக் கைப்பற்றினார். அதேபோல் தமஸ்குவைச் சேர்ந்த சிலபகுதிகளையும் வென்று, தன் அரசில் இணைத்தார். கமாத்து, தீர் அரசுகளுடன் ஒப்பந்தங்களையும் செய்தார். எனவே, தாவீதின் அரசு யூப்பிரத்திசு வரையிலும் பரவி நின்றது என்று கூறும் அளவிற்கு (2 சாமு 8:3) அவரது அரசு விரிவடைந்தது. யோர்தானையடுத்த கிழக்கு எல்லையிலும் பல நாடுகளையும் கைப்பற்றினார் தாவீது. அம்மோன், ஏதோம் .... நாடுகளைத் தோற்கடித்தார். மோவாபில் தனக்குக் கட்டுப்பட்ட சிற்றரசனை நியமித்து, மோவாபும் தன் ஆட்சிக்குள் வரச் செய்தார். இவ்வாறு தாவீதின் பேரரசு தெற்கில் எசியோன் - கெபேர் வளைகுடாவிலிருந்து வடக்கில் கோம்சு வரையிலும் மேற்கில் மத்திய தரைக்கடல் முதல் கிழக்கில் யூப்பிரத்திசு நதி வரையிலும் பரவிநின்றது.

பழைய கனானியரின் கோட்டைகளும் மெதுவாக, தாவீதின் கைவசமாக்கப்பட்டன. உதாரணமாக மெகிதோ கோட்டை தாவீதின் வசமாகியது. இவ்வாறு பாலஸ்தீனத்தில் அரசியலில் ஒருபுதிய திருப்பத்தையே கொண்டுவந்தார் தாவீது. ஏனென்றால் இதற்கு முன்பாக பாலஸ்தீனம் எகிப்தியர்களின் காலடியிலேயே வீழ்ந்து கிடந்தது.

இவ்வாறு தாவீது தலையெடுத்து வருவதற்கு, அகில உலக அரசியல் சூழ்நிலைகள் அவருக்குச் சாதகமாக விளங்கின. அக்காலத்தில் வல்லரசாக விளங்கிய எகிப்து தனது பலத்தில் மங்கிக் கொண்டே வந்தது. பிற்காலத்தில் மற்றொரு வல்லரசாக விளங்கிய அசிரியாவும் அப்போது வல்லரசாக இன்னும் எழுச்சிபெறவில்லை. இஸ்ராயேலை அச்சுறுத்தி வந்த பெலிஸ்தியரின் பற்களையும் தாவீது பிடுங்கியிருக்க வேண்டும். சாமுவேல் ஆகமத்தில் இதற்கான விரிவான தகவல்களை நாம் காண முடியவில்லை. ஒருசிலயிடங்களில் காணப்படும் குறிப்புகளை வைத்து (2 சாமு 5:17; 21:15 தொ.) தாவீது பெலிஸ்தியர்களையும் வென்று அவர்கள் தனக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களாகத் தன் காலடியில் வைத்திருந்தார் என்பதை நன்றாக நாம் யூகிக்கலாம்.

தாவீது செய்த சீர்திருத்தங்களின் கோபுரமாக விளங்குவது எருசலேமைத் தனது தலைநகராக மாற்றியதாகும். எபூசியரிடமிருந்து இவ்விடத்தைப் பிடித்து இதனைத் தன் அரசின் தலைநகரமாக மாற்றினார் தாவீது. இந்த நகரம் அமைந்துள்ள வகையில் இது இஸ்ராயேலின் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் நடுநாயகமாக விளங்கியது. இதனால் தலைநகர் வடக்கைச் சார்ந்தது அல்லது தெற்கைச் சார்ந்தது என்ற போட்டி உணர்வுகளுக்கு இடமில்லாமல் போயிற்று. இந்நகரம் குன்றுகளால் சூழப்பட்டிருந்தது. வடக்கில் மட்டும் வழி கொண்டு சுற்றிலும் குன்றுகளால் சூழப்பட்டிருந்தது இந்நகரம். எனவே எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு இந்நகரின் அமைப்பு பொருத்தமாக அமைந்திருந்தது. இந்நகர் ஒப்பேல் என்று அழைக்கப்பட்டது. பிறகு தாவீதின் நகர் என்றும் அழைக்கப்பட்டது. இந்நகருக்கு உடன்படிக்கையின் பேழை கொண்டு வரப்பட்ட பிறகு, சமய வழியிலும் இந்நகரம் முக்கியத்துவத்தைப் பெற்றது. எபூசியர்களிடமிருந்து பெறப் பெற்ற இந்நகரத்தில் நடந்துவந்த இஸ்ராயலின் வழிபாட்டுச் சடங்குகளில், எபூசியர்களின் வழிபாட்டுத் தடையங்களும் நிச்சயமாக இடம் பெற்றிருக்க வேண்டும் என்று தின்னமாக யூகிக்கலாம். ''மெல்க்கிசெதேக்கு முறைமைப்படியான குரு'' என்பது (சங் 10:4) எபூசியர்களின்வழி இஸ்ராயேலுக்கு கிடைத்த சொற்றொடர்களில் ஒன்று.

தாவீதின் அரசுமுறையிலிருந்த குறைகள்:- தாவீது, தனது அரசுநிர்வாகத்தை எகிப்தியர்

களின் நிர்வாக முறையைப் பின்பற்றி அமைத்திருந்தார். தாவீது தனக்காக, பலவித மெய்காப்பாளர்களை தந்திரத்துடன் அமைத்திருந்தார். கெரேத்தியர் பிலேத்தியர் என்ற வெளிநாட்டு அடியாட்களைத் தன் மெய்க்காப்பாளர்களாக வைத்திருந்தார் தாவீது.

இவ்வாறு தாவீது, இஸ்ராயேல் மக்கள் மத்தியில், ஒரு புதிய உலகத்தையே உருவாக்கினார் என்று சொல்லலாம். இராணுவம், ஆட்சிசெய்ய சிறந்த நிர்வாக அமைப்பு இவைகளின் செலவுகளைச் சமாளிக்க மக்கள் மேல் சுமத்தப்பட்ட வரிப்பளு மக்கள் மத்தியில் ஒரு புதிய பயத்தையே உண்டாக்கியது என்று சொல்லலாம். பழைய கோத்திரங்களின் கூட்டாட்சி முறையில் மக்கள் சுவைத்து வந்த தனிச்சுதந்திரம் இவ்வரச நிர்வாக முறையால் முற்றிலும் மாறிப்போயிற்று (2 சாமு 8:15-18; 20:23-26).

2 சாமு 9:20; 1 அர. 1-2 என்ற பகுதிகள் தனிமதிப்பைப் பெற்றவை. ஏனென்றால் அவை தாவீது அரசரின் அரசவை குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டு தகுந்த ஆதாரத்துடன் எழுதப்பட்டவையாக விளங்குகின்றன. இப்பகுதியில் தாவீதிற்குப் பிறகு எவ்வாறு, அரசபதவியைப் பிடிக்க பெரும் போட்டி நடந்தது என்று தத்ரூபமாகத் தரப்பட்டிருக்கிறது. இப்போட்டிகளைத் தவிர்க்க தாவீதாலேயே முடியாமல் திணறுவதும் அங்குதரப்பட்டுள்ளது. தாவீது எல்லோரும் பெருமைப்படக்கூடிய ஒரு புதிய சகாப்தத்தையே உண்டாக்கினார். எனவே அப்புகழ்மிக்க பதவியை யார்பெறுவார்கள் என்பதில்தான் போட்டியும் பொறாமைகளும் தோன்றின.

தாவீது மூத்தமகன் அம்மோன் அரியணை ஏறமுடியவில்லை. ஏனென்றால் அம்மோன் தன் சகோதரன் அபிசலோமின் சகோதரியைக் கற்பழித்து விட்டார். எனவே அபிசலோம் ஆள்வைத்து அம்மோனைக் கொல்கிறார். அடுத்து அபிசலோம் தன் தந்தை தாவீதிற்கு எதிராகப் போர்க்கொடி பிடிக்கிறார். ஆனால் அவர் எழுப்பிய கலகத்திலேயே அவர் கொலை செய்யப்படுகிறார். கடைசியில் அதோனியாவுக்கும் சாலமோனுக்கும் போட்டி தோன்றுகிறது. இப்போட்டியில் சாலமோன் வெற்றி பெற்று அரியணை ஏறுகிறார்.

இவ்வாறு தாவீதின் அரசவாரிசுகளின் போராட்டத்தை பல அதிகாரங்கள் கவனமுடன் விளக்கி எழுதுகின்றன. இப்பதவி போராட்டத்தை விளக்கும் பகுதியில் பலவித குணசித்திரங்களையும் நாம் காண முடிகிறது. ஒருபக்கத்தில் தன் பிள்ளைகளின் பாசத்தால் பற்றியெரிந்த மன்னன் தாவீது; மற்றொருபுறத்தில் யோவாபு, அமாசா என்ற படைத்தளபதிகள்; சாதோக்கு, அபியத்தர் என்ற குருக்கள்; சீபா, பர்சில்வாய் என்ற சாதாரணமக்கள்; தாமார், பதுசேபா என்ற பெண்டிர், தெக்கோவா என்ற ஊரைச் சேர்ந்த விதவை ஆகியவர்களைப் பற்றியும் ஆதாரபூர்வமாகச் செய்திகளைத் தருவதாக உள்ளது இப்பகுதி.

அம்மோன், அபிசலோம், தாவீது இவர்களின் வரலாற்றைக் கூறும் நிகழ்ச்சிகளில், தீமைகளும் அதனால் கிடைத்த தண்டனை என்ற கருத்தும் இழையோடி வருவதை நாம் காணலாம் (2 சாமு 11:27; 12:24; 17:14) இறைவனின் கரம் எல்லா நிகழ்ச்சிகளிலும் பின் நிற்கிறது என்ற இறையியல் கருத்தை நாம் காண முடிகிறது. நேரடியான இறையியல் தீர்ப்பு அரிதாகவே கூறப்படுகிறது.

தாவீதிற்கு எதிராக அவர் மகன் அபிசலோம் என்பவரும் பிறகு இஸ்ராயலின் வடபகுதியைச் சேர்ந்த சேபா என்பவரும் (2 சாமு 20) போர்க்கொடிபிடித்தனர். ஆனால் சேபா செய்த கலகம் பிற்காலத்திலும் புறையோடக் கூடியதாய் விளங்கியது. (2 சாமு 20). தாவீது இஸ்ராயேலின் தென்பகுதியான யூதாவின் பெரியவர்களுக்கு தனித்த மதிப்புக்காட்டி வந்தார் என்பது இஸ்ராயேலின் வடபகுதியினருக்கு இருந்து வந்த ஆதங்கமாகும். இதனால் சேபா எழுப்பிய எதிர்ப்புக் குரலுக்கு இஸ்ராயேலின் வடபகுதி மக்களும் ஆதரவு தந்தனர்.

ஆனால் இந்தக்கலகம் யோவாபு என்ற வலிமைவாய்ந்த தாவீதின் படைத்தலைவனின் தலைமையில் அடியோடு அடக்கி ஒடுக்கப்பட்டது. ஆனால் சேபா மூட்டிய பிரிவினைத் தீ பிற்காலத்தில் நன்றாகப் பற்றிக் கொண்டு எறிந்தது.

இஸ்ராயேலின் அரசை நிலையான அரசாக ஆக்கிய பெருமை தாவீது அரசனையே சாரும். சாலமோன் அரசன் காலத்தில்தான் இஸ்ராயேல் எல்லாவிதத்திலும் வளமையையும் பெருமையையும் பெற்றது. ஆனால் அதற்கு அசையாத ஆழ்ந்த அடிதளமிட்டவர் தாவீது அரசன் தான். இஸ்ராயேலின் முதல் அரசன் சவுலைப் போல தாவீது மக்களுடன் நெருங்கிய தொடர்புக் கொண்டிருக்கவில்லை என்பது போலத் தோன்றுகிறது. ஆனால் தாவீது அளவற்றத் திறமைகளின் பெட்டகமாக விளங்குகிறார். எனவேதான், இறைவன் தாவீதுடன் இருந்தார் என்று பிறகு மக்கள் அவரைப் புகழ்ந்துப்பாடினர்.

அத்துடன் தாவீது பல பரந்த மனிதாபிமான நற்குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். எனவேதான் அவைகளில் ஒருசில சாமுவேல் ஆகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் காணமுடிகிறது. உதாரணமாக வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மெய்க்காப்பாளன்கூட ''வாழ்ந்தாலும், இறந்தாலும் தாவீதோடே இருப்பேன்'' என்று சபதம் செய்கிறார் (2 சாமு 15:18-22). பெலிஸ்தியருடன் சண்டையிடும் போது தண்ணீர் தாகம் கொள்கிறார் தாவீது. எதிரிகள் பிடித்திருந்த இடமாகிய பெத்லகேமுக்குச் சென்று தாவீதின் வீரர்கள் தண்ணீர் கொண்டு வருகின்றனர். தன் வீரர்களுக்கே தண்ணீர் இல்லாதபோது, தனக்கு ஏன் தண்ணீர் என்று அவர்கள் கொணர்ந்த தண்ணீரைக் கீழே ஊற்றி விடுகிறார் தாவீது (2 சாமு 23:13-17). இவ்வாறு மற்றவர்களின் அன்பை பற்றியிழுக்கக்கூடிய பல நற்குணங்களைப் பெற்றிருந்தார் தாவீது.

ஆனால் அனைத்திற்கும் மேலாக தாவீதைத் தனிப்பட்ட பெருமைக்கு உயர்த்தியது இறைவாக்கினர் நாத்தான் உரைத்த இறைவாக்காகும் (2 சாமு 7). தாவீதின் குலம் என்றென்றும் நிலைக்கும் என்று கூறிய நாத்தானின் இறைவாக்கு தாவீதின் குலத்தைச் சேர்ந்தவர் பலநூற்றாண்டுகளுக்கு ஆட்சியில் அமர வழிவகுத்தது. இதனால்தான் இஸ்ராயேலின் தென்பகுதியான யூதாவில் அரசர்களின் ஆட்சி வடநாட்டை விட பல காலம் நீடித்து நின்றது.

3. சாலமோன் (961-922):-

இஸ்ராயேலில் சாலமோனின் ஆட்சி ஒரு ஒப்பற்ற காலமாகக் கருதப்படுகிறது. சாலமோன் முதலில் தன்னைச் சுற்றியிருந்த வெளிநாடுகளுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்கிறார். இவ்வொப்பந்தம் பல வழிகளில் நடைப்பெற்றுள்ளது. உதாரணமாக எகிப்து மன்னனின் மகளை மணந்து கொண்டதன் மூலம் அவனின் ஆதரவு சாலமோனுக்குக் கிடைக்கிறது. கெசர் என்ற நகரே திருமண சீதனமாக எகிப்து அரசனால் அளிக்கப்பட்டது. தீர் அரசன் கிராம் என்பவருடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டதால் அவனின் நட்பும் உதவியும் சாலமோனுக்குக் கிடைத்தது.

அடுத்து சாலமோனின் காலத்தில் வர்த்தகத்தையும் விரிவுப்படுத்தி, இதனால் வெளிநாட்டுச் செல்வங்கள் இஸ்ராயேலில் வந்து குவிய வழிவகுத்தார் சாலமோன். எசியோன்கெபேர் என்றவிடத்தில் கப்பல் தளமொன்றுக் கட்டினார். இதனால் அக்காபா வளைகுடாவழியாக வணிகம் செழித்தது. அரபிய நாடுகளுடனும் ஆப்பிரிக்க நாடுகளுடனும் இஸ்ராயேல் வாணிபத்தில் நுழைந்தது. எனவேதான் அரபிய நாட்டைச் சேர்ந்த சேபா நாட்டு அரசி சாலமோனிடம் வருகிறாள் (1 அர 10:1-10). ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த ஒபிர் நாட்டைப் பற்றியும் சாலமோனின் வரலாற்றில் குறிப்பிடப்படுவதை பார்க்கிறோம்.

எகிப்து நாட்டிலிருந்து குதிரைகளையும் தேர்களையும் வாங்கி சிலிசியாவிற்கு அவைகளை விற்று இலாபம் சம்பாதித்தார் சால

மோன் (1 அர 10:28). பலஇடங்களில் இராணுவமுகாம் அமைத்து அவைகள் தேர் படைகளுக்கும் இராணுவத்திற்கும் உதவியாக அமைய ஏற்பாடு செய்தார். அடுத்து சாலமோன் பல கட்டடங்களைக் கட்டி எழுப்பிய கலைஞராகவும் விளங்கினார். அவர் கட்டிய கட்டிடங்களின் முடியாக விளங்குவது எருசலேம் நகர ஆலயம். இதனை பெனிசிய கட்டடக் கலைமாதிரியைப் பின்பற்றி கட்டி அமைத்தார். அடுத்து அரண்மனை அரச அலுவலகங்களையும் ஆடம்பரமான முறையில் கட்டி முடித்தார்.

சாலமோன் மெய்யறிவு போதனைகளிலும் மற்ற கலைகளிலும் கருத்தார்வம் காட்டினார். அனேகமாக பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களில் காணப்படும் யாவே பாரம்பரியமும் எலோகீம் பாரம்பரியமும் சாலமோன் காலத்தில்தான் எழுத்து வடிவத்தைப் பெற்றது என்று கூறலாம். போன் நாடு என்ற அறிஞர் சாலமோனின் காலம் மெய்யறிவின் காலம் என்று வர்ணிக்கிறார்.

அரசராகம ஆசிரியர் உபஆகம பராம்பரியத்தோடுத் தொடர்பு கொண்டவர். அவர் சாலமோனைச் சிலயிடங்களில் சாடிக் குறிப்பிடுகிறார். குறிப்பாகச் சாலமோன் தனது வெளிநாட்டு மனைவியருக்கு அவர்களின் தெய்வ வழிபாட்டிற்கு ஏற்ற கோவில்களைக் கட்டிக் கொடுத்ததைக் கோபத்துடன் நோக்குகிறார் (1 அர 11:1-8). தன் மனைவிகளை மகிழ்ச்சிப்படுத்த சாலமோன் செய்த செயல் இஸ்ராயேலில் கலப்பு மதத்தையும் சிலைவழிபாட்டையும் ஏற்படச் செய்தது. இஸ்ராயேல் மதத்தில் வேற்றுமதத்தின் அம்சங்களும் இணைந்திட வழிவகுத்தது. இஸ்ராயேலின் வழிபாட்டு மையமாக எருசலேமிலேயே சிலைவழிபாடும் நடைபெறுவதற்கு இடம் உண்டாயிற்று. இது சாலமோனை அடுத்து வந்த சில அரசர்களாலும் பின்பற்றப்பட்டது. இரண்டு அரசராகமங்களும் அரசர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு சாலமோன் ஆரம்பித்து வைத்த சிலை வழிபாட்டைப் பின்பற்றினர் என்று குறிப்பாக சுட்டிக் காட்டுகின்றன.

சாலமோன் அரச நிர்வாக முறையில் பல நல்ல மாறுதல்களைச் செய்தார். தனது அரசு முழுவதையும் பன்னிரண்டு மாவட்டங்களாகப் பிரித்தார். இப்புதிய எல்லைப் பிரிவு பழைய கோத்திரங்களின் பிரிவு அமைப்பு முறையைச் சார்ந்ததாக அமையவில்லை. சாலமோன் அரசு அதிகாரங்கள் அனைத்தும் தன்னிடமிருந்து புறப்பட்டுச் சென்று செயல்படுவதாகச் செய்தார். இதனால் நிர்வாகம் மிகத்திறமையாக நடந்தது. இவ்வாறு ஏற்பட்ட அரச ஆடம்பரங்களுக்கு, மக்கள் தான் பலிக்கிடாக்கள் ஆனார்கள். ஏனென்றால் ஆடம்பரச் செலவுகளைச் சமாளிக்க மக்கள் மீது பளுவான வரிசுமத்தப்பட்டது.

இவ்வாறு தாவீது, சாலமோன் காலங்களில் இஸ்ராயேல் மக்கள் நடுவில் அவர்களின் வாழ்க்கை முறையில் பெரியமாறுதல் உண்டானது. இதற்குமுன் அவர்கள் மத்தியில் நிலவிய கோத்திரங்களின் நிர்வாக அமைப்புச் சிதைந்து அரசு என்ற அமைப்பு திண்ணமாக இங்கு நிலைபெற்றது. மக்களின் விவசாய வாழ்க்கை முறையும் ஆடுகள் மேய்த்து ஊர் ஊராக சுற்றிவரும் வாழ்க்கை முறையும் மாறி நகர நாகரிகம் அங்குப் பிறந்தது. இந்நகர வாழ்வு மக்களுக்குத் தந்த பாதகமானநிலையாதெனில், மக்களிடையே உண்டான ஏற்றத் தாழ்வுள்ள சமுதாயம். சாலமோன் காலத்தில் சுமார் எட்டு இலட்சம் மக்கள் குடிமக்களாகயிருந்தனர் என்று ஆல்பிரைட் என்ற அறிஞர் கூறுகிறார்.

சாலமோனின் காலத்தில் எல்லாமே சுமுகமாக நடந்துவிடவில்லை. ஏதோமின் சிலப் பகுதிகளையும் தமாஸ்குவின் சிலப் பகுதிகளையும் சாலமோன் இழந்தார் (2 அர 11:14 தொ.) எரொபயாம் என்பவன் சாலமோனை எதிர்த்துக் கலகம் செய்தான். ஆனால் அவனின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. அவன் எகிப்திற்குச் சென்று எகிப்து மன்னனிடம் தஞ்சம் புகுந்தான். எகிப்து மன்னனும் எரொபயாமிற்கு ஆதரவு தந்தான். சால

மோன் இறந்த பிறகு அவன் மகன் இரகபெயாம் ஆட்சிப் பொறுப்பையேற்றபோது எரொபயாம் எகிப்திலிருந்து திரும்பி வந்து, இஸ்ராயலின் வடபகுதியைத் தனிநாடாகப் பிரகடனம் செய்தான். சாலமோன் செய்த மற்றொரு தீங்கானச் செயல் மக்களை அரசிற்காக பலவிதத்தில் உடலுழைப்பால் பாடுபடசெய்ததாகும். ஏழைமக்கள் அரைவயிற்றுடன் பலத்திட்டங்களில் கடினப்பட்டு உழைத்தனர். இதனால் மக்கள் மத்தியில் அரசனைப் பற்றிய மதிப்பு குறைந்தது. இவ்வாறு வளர்ந்து வந்த மக்களின் மனவெறுப்பினைப்பற்றி சற்றும் கவலையின்றி செயல்பட்டார் சாலமோன் அரசனின் மகன் இரகபெயாம். எனவே இஸ்ராயேல் நாடு இரண்டாக எளிதில் உடைந்தது.

4. பிளவுபட்ட நாடு: இஸ்ராயேல்-யூதா (கி.மு. 922-842)

விடுதலை வீரர்களின் காலத்தில் வழிபாட்டுமையமாக விளங்கிய செக்கேம் நகரமே (யோசு 24) இஸ்ராயேல், யூதா என்று இரண்டு நாடுகளாக பிரியும் புரட்சிக்கு ஆரம்ப இடமாக விளங்கியது. இந்தச் செக்கேம் நகரில்தான் சாலமோன் மகன் இரகபெயாம் (கி.மு. 922-915) இஸ்ராயேலின் ஒரே அரசன் என்று மக்களால் ஒரே குரலாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் இரகபெயாம் பெரியோர்களின் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காமல் நடந்ததாலும் சாலமோனைவிட அதிகக் கொடூரமாக மக்களை இரும்புக் கரம் கொண்டு அடக்க முயன்றதாலும் மக்களின் பிரிவினைப் புரட்சி வெடித்தது. ''இஸ்ராயேலே உன் கூடாரத்திற்கு போய் விடு'' (1 அர 12:16) என்பது புரட்சியின் தாரக மந்திரமாய் அமைந்தது. இப்புரட்சியை அடக்கியொடுக்க பெருமுயற்சி செய்தார் இரகபெயாம். ஆனால் மக்கள் ஒன்றுபட்டு வரவில்லை. பென்யாமின் குலத்தவர் மட்டும் யூதாவுடன் சேர்ந்துக் கொண்டனர். ஏனென்றால் இரகபெயாம் பென்யாமின் குலத்தவர் வாழ்ந்தபகுதியினை உடனடியாக தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார் (2 நாள் 11:12).

இஸ்ராயேல், யூதா என்ற இப்பிரிவினை புரட்சியுடன் மற்றும் பல பிரச்சினைகளையும் இரகபெயாம் சந்திக்க வேண்டியிருந்தது. இந்நேரத்தில்தான் எகிப்திய மன்னன் சீசாக்கு பாலஸ்தினத்தின் மீது படையெடுத்து வந்தார். இப்போது சாலமோன் உருவாக்கிய எருசலேம் நகரின் செல்வங்களையெல்லாம் அவர் கொள்கையிட்டு எடுத்துச் சென்றார். இவ்வாறு சீசாக்கு பாலஸ்தீனத்தில் படையெடுத்து பெற்றுக்கொண்டுவந்த வெற்றியினைப் பற்றி கார்னாக்கு என்றவிடத்தில் உள்ள அமான் என்ற ஆலயத்தின் சுவர்களில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. எகிப்திலிருந்து புறப்பட்டுவந்த சீசாக்கு பாலஸ்தீனத்தின் தென்பகுதியை முதலில் தாக்கிவிட்டு பிறகு வடபகுதிக்கும் முன்னேறி சென்றுள்ளார். அங்கு புரட்சிக் கொடிப்பிடித்த இஸ்ராயேல் என்ற புதிய நாடும் பாலஸ்தினத்தின் அண்டைநாடான ஏதோமும் எகிப்தின் தாக்குதலுக்கு ஆளாயிருக்கின்றன இச்செய்திகளையெல்லாம் தருகிறது கார்னாக் ஆலயத்தின் கல்வெட்டுகள்.

இக்குழப்பக்காலத்தில் சாலமோனின் மகன் இரகபெயாம் தன் நாட்டின் வடபகுதியில் கிபயா, இராமா போன்றயிடங்களில் கோட்டைத்தளங்களைக் கட்டினார். இதனால் எளிதாக உள்நாட்டுப் புரட்சிகளை தடுத்து நிறுத்தலாம் என்பது அவரின் கணிப்பு. அத்துடன் தன்நாட்டின் தென்பகுதியிலும் கோட்டைக் கொத்தலங்களைக் கட்டினார். இரகபெயாம் தென் பகுதியில் கட்டப்பட்ட கோட்டைக் கொத்தலங்கள் எகிப்தின் படையெடுப்புகளைத் தடுக்கும் எண்ணத்தில் எழுப்பப்பட்டவை. இலாக்கிசு போன்றயிடங்களில் இத்தகைய பாதுகாப்பு இடங்கள் இரகபெயாமால் எழுப்பப்பட்டன என்று 2 நாள் 11:5; தொ. தெரிவிக்கிறது. இக்குழப்ப நேரத்தில் தாவீது சாலமோன் இவர்களால் இஸ்ராயேலின் ஆளுகைக்குள் வைக்கப்பட்டிருந்த அண்டைநாடுகளும் தங்களின் சுதந்திரத்திற்காகக் கொடிபிடித்தன. முதலில் பெலிஸ்திய நாடு இஸ்ராயேலிலிருந்து பிரிந்துச்சென்றது. அதைத் தொடர்ந்து அரமேயர்களும் மோவாபியர்களும், அம்

மோனியர்களும் இஸ்ராயேலின் ஆட்சியிலிருந்து அகன்றுச் சென்றனர்.

5. வடபகுதி, இஸ்ராயேல் நாடாக வளர்ந்த கதை:-

எரொபயம் வடபகுதியில் தனிநாடுக் கேட்ட புரட்சித் தலைவனாக விளங்கினார். அவரது புரட்சிக் குரலிற்கு இறைவாக்கினர் அகியா என்பவரும் வழி மொழிந்தார். இந்தப் புரட்சித் தலைவனே பிறகு வடபகுதியின் மக்களின் அரசனானார். இவர் விடுதலை வீரர்களைப் போல அரச ஆடம்பரங்களின்றி மக்களோடு நின்று போராடி வந்தார். இவர் முதலில் செக்கேமைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். பிறகு பெனுவேல் என்றவிடத்தைத் தன் தலைநகராகக் கொண்டார். கடைசியாக திரிசா என்ற இடத்தில் தன் தலைநகரை அமைத்தார். வடபகுதியின் மக்கள் எருசலேமிற்கு வழிபாட்டிற்காகச் சென்று திரும்புவதால் தென்பகுதியில் இணைத்துக் கொள்ளாமலிருக்க சமய அடிப்படையிலிலும் எரொபயாம் சில ஏற்பாடுகளைச் செய்தார். அதாவது தாண், பெத்தேல் ஆகிய இடங்களில் புதிய வழிபாட்டு மையங்களை உண்டாக்கினார். இம்மையங்கள் ஏற்கனவே விடுதலை வீரர்களின் காலத்திலேயே வழிபாட்டு மையங்களாகத் திகழ்ந்தன. இவ்வாறு வடநாட்டு மக்கள் இப்புதிய திருத்தலங்களுக்குத் திருப்பி விடப்பட்டனர். அதனால் மக்கள் எருசலேம் செல்லாமலிருக்க மறைமுகமாக ஏற்பாடு செய்தார்.

எரொபயாம் புதுவிதமான வழிபாட்டுச் சின்னத்தையும் புதியத் திருத்தலங்களில் நிறுவினார். அதாவது பொன்னால் செய்யப்பட்ட காளை வாகனத்தைத் தன் புதிய வழிபாட்டு மையங்களில் அமைத்து வைத்தார். இக்காளை மாட்டு வாகனத்தின்மீது அமர்ந்து யாவே மறைவாக நிற்கிறார் என்று எரொபயாமின் விளக்கம் தந்தார். ஆனால் பிற்காலத்தில் மக்கள் இதனைத் தவறாகப் புரிந்துக் கொண்டு செயல்பட்டனர். அதாவது காளை வாகனமே யாவேயின் பிரசன்னமாகக் கருதினர். இதனால் யாவே மட்டும் இறைவன் என்ற கொள்கையில் தளர்வு உண்டாகி, மற்ற சமய கொள்கைகளையும் ஏற்றுக்கொண்ட ஒரு நிலை உண்டானது. இதைத்தான் அரசராகமம் ஆசிரியரும் உபஆகம ஆசிரியரும், ''எரொபயாமின் பாவம்'' என்று பலயிடங்களில் ஒரு உரிச்சொல்லாக வேப் பயன்படுத்துகிறார்கள்.

அரசராகம புத்தகங்களை எழுதிய உபஆகமபாரம்பரிய ஆசிரியர் அரசர்களின் வரலாற்றைத் தனது கொள்கையின் பின்னணியில் எடைப்போட்டுப் பார்த்து எழுதுகிறார். அதாவது அரசர்கள் எருசலேம் ஆலய வழிபாட்டிற்கு பிரமாணிக்கமாய் இருந்தார்களா? என்ற கேள்வியின் அடிப்படையில் தான் அரசர்களின் வரலாறு தீட்டப்பட்டுள்ளது. எனவே அரசர்கள் ஆண்ட வருடங்கள் அரசர்களின் நிர்வாகத் திறமைகள் இவைகளெல்லாம் இவ்வரலாற்றில் இடம் பிடிக்கவில்லை. கி.மு. 721-இல் அசீரியர்கள், கி.மு. 587-இல் பாபிலோனியர்கள் இஸ்ராயேல்மீது படையெடுத்து வந்து இஸ்ராயேலை அடிமைப்படுத்திய அவமான நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளிப்பதாகத்தான் அரசராகம வரலாறு வரையப்பட்டுள்ளது. அன்னியர்கள் இஸ்ராயேலை அடிமைப்படுத்தியதற்குக் காரணம், இஸ்ராயேல் மக்கள் உண்மை இறைவனாகிய யாவேயைப் பிரிந்து சென்றதாகும் என்பதுதான் அரசராகமஆசிரியர் தனது நூலின் வழியாக நமக்குக் கூறவிரும்பும் பாடமாகும். ஆனால் அரசராகம ஆசிரியர் பல்வேறு ஆதாரங்களோடும் தொடர்பு கொண்டு அவைகளிலிருந்து செய்திகளைப் பெற்று தன் நூலை எழுதியுள்ளார் என்பதும் தெரிகிறது. ஏனென்றால் 'இஸ்ராயல் அரசர்களின் நாளாகமம்' என்ற நூலை பதினாறு முறையும் 'யூதேயா அரசர்களின் நாளாகமம்' என்ற நூலை பதினான்கு முறையும் தனது நூலில் மேற்கோள்காட்டி எழுதுகிறார் அரசராகம ஆசிரியர். அத்துடன் எலியா, எலிசா என்ற இறைவாக்கினர்களைப் பற்றி விளக்கி வந்த பாரம்பரிய கதைகளையும் தன் புத்தகத்தில் இணைத்து எழுதியுள்ளார் அரசராகம ஆசிரியர்.

6. முதலாம் எரொபயாம் கி.மு. 922-இல் இஸ்ராயேல் என்ற வடநாட்டை உண்டாக்கி அதன் முதல் அரசனானார். அவர் காலத்திற்

குப் பின் சுமார் ஐம்பது ஆண்டுகள் அரச வாரிசு ஏற்பதில் பல குழப்பங்கள் உண்டாயின. எரொபயாமை அடுத்து அவன் மகன் நாதாபு இரண்டாண்டுகள் அரசாட்சியை ஏற்று நடத்தினார். ஆனால் நாதாபு, பாசா என்பவரால் கொலை செய்யப்பட்டார். பாசாவைத் தொடர்ந்து பாசாவின் மகன் ஏலா அரியணையேறினார். ஆனால் சிமிலி என்பவர் ஏலாவைக் கொன்று அரசனாகப் பதவியேற்றார். ஆனால் சிமிரியும் சோகமான முடிவுக்குள்ளானார். ஏனென்றால் ஒமிரி என்ற படைத்தளபதி இராணுவ புரட்சி செய்து இஸ்ராயேல் நாட்டை தன் அதிகாரத்தில் கொண்டு வந்தார். இதைக் கண்ட சிமிரி தானே தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

இதற்கிடையில் இஸ்ராயேல் என்று பிரிந்த வடநாட்டிற்கும் யூதா என்ற தென்பகுதிக்கும் தொடர்ந்து மோதல்கள் நடந்து வந்தன. முக்கியமாக யூதாவின் ஆசா என்ற அரசனும் (கி.மு. 913-873) இஸ்ராயேல் அரசன் பாசாவும் (கி.மு. 900-877) அடிக்கடி போரிட்டுக்கொண்டனர். இதில் யூதாவின் ஆசா, தமாஸ்கு அரசனான பென்அதாது என்பவருடன் தனக்குப் போரில் உதவும்படி உடன்படிக்கை செய்து கொண்டார். இதனால் தாமாஸ்கு அரசன் பென்அதாது இஸ்ராயேல் மீது போர்தொடுத்து கலிலேயாவின் வடபகுதியைக் கைப்பற்றினார் (1 அர 15:18). இவ்வாறு யூதா அரசன் சீரியாவின் உதவியைப் பெற்ற காரணத்தால் இஸ்ராயேல் தன் பலமின்மையை உணர்ந்து, எதிர்த்து நிற்காமல் அமைதியானது.

7. இஸ்ராயேலில் சிமிரிக்குப் பின் ஒமரி அரசனானார். ஒமிரி ஓர் திறமை வாய்ந்த அரசன். ஆனால் அரசராகமம் அவரைப் பற்றி விரிவாக எழுதவில்லை. ஏனென்றால் அரசராக ஆசிரியர் சமயத் தொடர்பானவைகளை மட்டும் குறித்து வைப்பதிலேயே கவனம் செலுத்துகிறார். ஆனால் ஒமிரி எவ்வளவு பெயர் பெற்றவனாய் விளங்கினார் என்றால் ஒமிரி காலத்திற்குப் பிறகு அசீரிய அரசன் இரண்டாம் சார்கோன் அரசாண்ட கி.மு. 700 ஆண்டு காலவாக்கில் இஸ்ராயேல் நாடு ஒமிரி நாடு அல்லது ஒமிரியின் வீடு என்றழைக்கப்பட்டது. 1 அர 20:34-இல் ஒமிரி அரமேயர்களிடம் தோற்று பல நகரங்களை இழந்தது குறிப்பிடப்படுகிறது. ஆனால் மோவாபு அரசனைத் தோற்கடித்து அவனை இஸ்ராயேலுக்குக் கப்பம் கட்ட செய்தார். இது மேசா கற்றூனில் பொறிக்கப் பட்டுள்ளது. தென் நாடான யூதாவுடன் போர்தொடுக்காமல் சமாதானமாக வாழ்ந்து வந்தார். இவர் இஸ்ராயேலின் வடபகுதியிலுள்ள பெனிசியாவுடனும் சமாதான ஒப்பந்தம் செய்துக் கொண்டார். இச்சமாதான ஒப்பந்தம் தன்மகன் ஆகாபுக்கு பெனிசியா மன்னன் எத்துபாகாலின் மகள் ஈசபேல் என்பவளை மணமுடிப்பதில் மலர்ந்தது. இவ்வாறு பெனிசியா நாட்டைத் தனக்கு உறவுகொண்ட சம்மந்திநாடாக மாற்றினார். இத்துடன் புதிய தலைநகராகச் சமாரியாவை ஆக்கினார். இந்நகரம் உயர்ந்த மலையில் அமைந்து அவரது அரசநிர்வாகத்திற்குப் பெரிதும் உதவியது. இவ்வாறு ஒமிரி இஸ்ராயேலின் ஒருசிறந்த அரசனாக விளங்கினார்.

8. ஆகாபு (869-850):-

ஒமிரியின் மகனான ஆகாபு தமஸ்கு நகரைத் தலைநகராகக் கொண்ட அரமேயர்களுடன் மோதிப் போர் தொடுப்பதிலேயே இவன் காலமெல்லாம் செலவானது என்று சொல்லலாம். ஆனால் கி.மு. 853-இல் இவ்விரு எதிரிகளும் புதிதாகத் தோன்றிய பெரிய எதிரி ஒருவனை எதிர்த்து நிற்பதற்காக ஒன்று சேர்ந்தனர். அதாவது அசீரியநாட்டு அரசன் மூன்றாவது சால்மனேசர் தன் படையுடன் பாலஸ்தீனத்தை நோக்கி வந்தபோது இஸ்ராயேலும் அரமேயர்களும் ஒன்று சேர்ந்து அவரை எதிர்த்து நின்றனர். இவ்வாறு அசீரிய படைகளும் இஸ்ராயேல் அரமேயர் இணைந்த படைகளும் கார்கார் என்றவிடத்தில் மோதின. இப்போரில் அசீரியப் படைகள் தற்காலிகமாகப் பின்வாங்கிக் கொண்டன. இப்போரைப்பற்றி அசீரிய அரசன் குறிப்பொன்றை எழுதிவைத்துள்ளார்.

இதில் ஆகாபு மட்டும் இரண்டாயிரம் தேர்களையும் பத்தாயிரம் காலாட்படை வீரர்களையும் அனுப்பி வைத்ததாக எழுதிவைத்துள்ளார். மோவாபு நாட்டு மன்னரும் ஆகாபை எதிர்த்துப் போரிட்டுத் தங்கள் நாட்டைத் தனிசுதந்திர நாடாக ஆக்கிக் கொண்டனர். மோவாபின் வெற்றியைப் பற்றி மேசா என்றவிடத்தில் காணப்படும் கற்றூணின் கல்வெட்டு எடுத்துக் கூறுகிறது. இதில் இஸ்ராயேல் அடியோடு நகக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அது தற்புகழ்ச்சிக்காக மிகைப்படுத்தி அவ்வாறு எழுதப்பட்டது எனலாம் ஆனால் உண்மை அதுவல்ல. மோவாபு இஸ்ராயேலின் ஆட்சியிலிருந்தும் பிரிந்து தனி சுதந்திரம் பெற்றது என்பதுதான் உண்மை.

ஆகாபின் சமய வாழ்வைப் பற்றி 1 அர 17-19; 21 என்ற நான்கு அதிகாரங்களில் நாம் தெளிவாகப் பார்க்கமுடிகிறது. இந்நான்கு அதிகாரங்களும் எலியா இறைவாக்கினரின் பணியினைப் பற்றிக் கூறுகின்றன. ஆகாபு 'யாவே ஒருவரே உண்மைக் கடவுள்' என்ற கொள்கையில் பற்றின்றி ஏனோதானோவென்று வாழ்ந்தது வெள்ளிடைமலையாகிறது. இந்நிலை அவனது மனைவி வேற்று நாட்டைச் சேர்ந்த ஈசபேலால்தான் ஏற்பட்டது என்று சொல்லலாம். ஈசபேல் தான் பிறந்த தீர்நாட்டில் விளங்கிய பாகால் கடவுளின் வழிபாட்டை இஸ்ராயேலில் பரப்புவதில் மிகத் தீவிரம்காட்டிவந்தாள். இஸ்ராயேலின் தலை நகராகிய சமாரியாவிலேயே பாகாலின் கோவில் கட்டப்பட்டக் குறிப்பை 1 அர 16:32-இல் பார்க்கிறோம். இவ்வாறு பாகாலின் வழிபாடு தீவிரமாக பரவுவதைத் தடுக்க இறைவாக்கினர் ஏலியா மிகவும் பாடுபட்டார். இவரது எதிர்ப்புப் பணிதான் கர்மேல் மலையில் 450 பாகாலின் பூசாரிகளும் 400 அசேராவின் பூசாரிகளும், இணைந்து நடத்திய பலிப்போட்டியில் வெளிப்படுகிறது. இதில் எலியா இறைவாக்கினர் வெற்றி பெறுகிறார். மற்ற 850 பூசாரிகளும் கொலை செய்யப்படுகின்றனர். இவ்வாறு இஸ்ராயேலின் பாரம்பரிய சமய வழிபாடுஎலியாவால்இஸ்ராயேலில்நிலைநிறுத்தப் படுகிறது. பாகாலின் வழிபாட்டை இஸ்ராயேலில் புகுத்துவதைத் தன் நோக்கமாகக் கொண்டிருந்த ஈசபேல் அரசி எலியாவைத் தீர்த்துக் கட்ட முயற்சிக்கிறாள். கடைசியில் ஆகாபு அரமேயர்களுடன் நடந்த போர் ஒன்றில் இராமோத்து-கிலயாது என்றவிடத்தில் இறக்கிறார்.

9. ஆகாபின் காலத்தில் யூதா:-

ஓமிரியும் அவர் மகன் ஆகாபும் வடநாடாகிய இஸ்ராயேலில் அரசர்களாக ஆட்சி செய்த காலத்தில் தென் நாடாகிய யூதா வலிமையற்றுக் கிடந்தது. ஒரு விதத்தில் இஸ்ராயேலின் அடிமைநாடாகவே யூதா இக்காலத்தில் விளங்கியது. 2 நாள் 19:4-11 என்றபகுதி, யூதா அரசன் யோசபாத்து நீதித் துறையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதாகக் கூறுகிறது. இந்த யோசபாத்து, இஸ்ராயேலின் அரசன் ஆகாபின் சமகாலத்தவர். இவர் ஆகாபுடன் இராமோத்து-கிலாயாது என்ற இடத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டான். அத்தோடு ஆகாபிற்கு அடுத்து வந்த யோராம் என்பவனுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டு மோவாபு அரசனுக்கு எதிராக இருவரும் சேர்ந்து போர்த்தொடுத்தனர் (1 அர 22; 2 நாள் 20).

யோசாபாத்து ஏதோமையும் தன் அடியில் கொண்டு வந்தார், நாளாகமம் மோவாபு மீதும் யோசபாத்து படையெடுத்து வெற்றியெய்தினார் என்று கூறுகிறது. ஆனால் ஒபீர் நாட்டுடனிருந்த வியாபார ஒப்பந்தத்தை மீண்டும் புதுபித்துக் கொள்ளத் தவறியிருக்கிறார் யோசபாத்து.

யூதாவில் யோசபாத்தை அடுத்து யோராம் (கி.மு. 949-842) என்பவரும் அகாசியா என்பவரும் (கி.மு. 842) அரசர்களாகப் பதவியேற்றனர். இவர்கள் இருவரும் அத்தாலியா என்ற அரசியின் புதல்வர்கள். அத்தாலியா அரசி இஸ்ராயேல் அரசன் ஆகாபின் சொந்த மகள். இவள் யூதாவின் அரசர்களாக பதவியேற்ற தன்பிள்ளைகள் யோராம், அகசியா என்பவர்களைத் தன் கைப்பொம்மைகளாக வைத்துச், செயலாற்றி வந்தாள். தாயின்

அடிமைத் தலைமையர்களாக விளங்கினர். இவ்விருவரும் கி.மு. 842-இல் இஸ்ராயேல் நாட்டில் ஓர் திடீர் புரட்சி நடந்தது. அப்புரட்சியை உண்டாக்கியவர் ஏகூ என்பவர். இவர் வடபகுதியில் செய்த புரட்சி தென்நாடாகிய யூதாவிலும் பிரதிபலித்தது. இப்புரட்சியின் குழப்பத்தில் தென்நாட்டில் அரசன் அகசியா கொல்லப்பட்டார். இத்தருணத்தைப் பயன் படுத்தி அகாசியாவின் அன்னையான அத்தாலியாவே ஆட்சியை தன் கைக்குள் கொண்டு வந்தாள். இவள் கி.மு. 342-முதல் 837 வரை அரசாண்டாள். இவள் அறியணை ஏறியவுடன் அரச வாரிசுகள் எல்லோரையும் அடியோடு தீர்த்துக்கட்டினாள். இவள் ஆடிய காளிவேட்டைக்குத் தப்பிய ஒரே அரச வாரிசு யோவாசு என்பவர் மட்டும்தான். இக்காலத்தில் யாவேதான் ஒரேக்கடவுள் என்ற சமயக் கொள்கை மிகவும் சேதப்பட்ட நிலையை அடைந்தது. எவ்வளவு தூரம் என்றால் மத்தான் என்ற பாகாலின் பூசாரி அரசவையிலேயே இடம் பெற்றிருந்ததாக 2 அர. 11:18 தெரிவிக்கிறது. இவ்வாறு யாவேயின்மீது உண்மைப் பற்றுதலின்றி ஆட்சி செய்து வந்த அத்தாலியா அரசியும் அரசாட்சியிலிருந்து அகற்றப்பட்டாள். யோயதா என்ற குரு திடீர் புரட்சி செய்து அத்தாலியாவை அகற்றி யோவாசை அரசனாக நியமித்தார்.

இஸ்ராயேலில் ஆகாகபை அடுத்த அரசர்கள்:- இஸ்ராயேலில் ஆகாபையடுத்து ஆகாபின் மகன் அகாசியா ஓராண்டு ஆட்சி செய்தார் (கி.மு. 850-849). இவர் காலத்தில் தான் எலியா இறந்தார் (2 அர 1). அகசியாவையடுத்து யோராம் அரசரானார். இவரும் ஆகாபின் மற்றொருமகன். இவர் கி.மு. 849 முதல் 842 வரை ஏழு ஆண்டுகள் இஸ்ராயேலை அரசாண்டார். இவர் காலத்தில்தான் எலிசா தன் பணிகளைச் செய்தார் (2 அர 2-9). யோராமின் காலத்தில் இஸ்ராயேலின் பிடியிலிருந்த மோவாப்பு விடுதலையைப் பெற்றுக் கொண்டது. அரமேயர்களும் இஸ்ராயேல் நாட்டிலிருந்து பிரிந்து தனி நாடாக அறிவித்துக் கொண்டனர். எலிசாவைச் சுற்றி பரவசநிலை இறைவாக்கினர் கூட்டங்கள் உருவாகின. இக்கூட்டத்தினர்தான் ஒமிரி வாரிசு வளர்ந்து நீடிப்பதைத் தடுத்து, புதிய அரசவாரிசை ஏற்படுத்தினர். அதாவது இந்த பரவச நிலை இறைவாக்கினர் கூட்டத்தின் ஓர் அங்கத்தினர் ஏகூ என்பவரை அபிடேகம் செய்து அவர் அரச பதவியை ஏற்கவும் அவர் புதுபுரட்சியை உண்டாக்கவும் வழிவகுத்தார்.

10. ஏகூவின் வாரிசுகள் (842-746):-

பரவசநிலை இறைவாக்கினர் ஒருவரால் அபிடேகம் செய்யப்பட்ட ஏகூ இரத்தக்களரியை உண்டாக்கி அரியணையைப் பிடித்தார். முதன் முதலில் சீரிய அரசன் கசயேல் என்பவனுடன், போர் தொடுத்துக் காயப்பட்டுக் கிடந்த இஸ்ராயேலின் அரசன் யோராமைத் தீர்த்துக் கட்டினார் ஏகூ. தொடர்ந்து, இஸ்ராயேலின் அரசனுடன் நல்லுறவு கொண்டு இஸ்ராயேல் அரசனை அப்போது காணவந்திருந்த அகசியா என்ற யூதேயாவின் அரசனையும் தன் வாளிற்கு இறையாக்கினார் ஏகூ. தலையலங்காரம் செய்து கொண்டிருந்த ஈசபேலைக் கீழேத்தள்ளச் சொல்லி அவளையும் கொன்றார். சமாரியாவில் வாழ்ந்துவந்த ஆகாபின் எழுபது புதல்வர்களின் தலைகளை அந்நகர பெரியோர்கள் வழியாக கொய்து எடுத்துவர ஏற்பாடு செய்தார். ஏகூ யூதா அரசன் அகசியாவின் சகோதரர் நாற்பத்திரண்டு பேரை ஒரு குழியில் வெட்டிக் கொன்றார். கடைசியாக சமாரியாவில் பாகாலின் ஆலயத்தில் பாகாலின் பூசாரிகளையும் பக்தர்களையும் ஒன்றாகக் கூட்டி அவர்கள் அனைவரையும் ஒருவரைக் கூட விடாமல் தீர்த்துக் கட்டினார் ஏகூ. இவ்வாறு இரத்தக்களரி கொண்டு பாகாலின் வழிபாட்டை அழித்து யாவேயின் பக்தியினைத் திரும்பவும் நிமிரச் செய்தார். இவரது இக் கொடியச் செயல்களைக் குறிப்பிட்டு ஒசேயா இறைவாக்கினர் பிறகு இறைவாக்கு உரைப்பார் (ஒசே 1:4).

இவ்வாறு பலவுயிர்களைக் குடித்து அரசனாக அரியனையேறிய ஏகூ அரசியல் தளத்தில் அவ்வளவு திறமையுள்ளவராகத் திகழவில்லை. ஆசீரிய அரசன் மூன்றாம் சாலப

னேசர் என்பவன் பொறித்து வைத்த கல் வெட்டில் ஏகூவின் திறமையில்லா நிலையை நன்கு விளக்கி சித்திரம் ஒன்று வரைந்துள்ளார். அதில் அசீரிய அரசனுக்கு ஏகூ முழந்தாற்படியிட்டு தங்கமும் வெள்ளி யுமாக கப்பம் கட்டுவதைச் சித்தரித்துள்ளார். இங்கு ஏகூ ஓமிரியின் மகன் என்றே கூறப் பட்டுள்ளான். ஏகூ, தமஸ்கு அரசன் கசயேல் என்பவனிடமும் படுதோல்வி கண்டுள்ளார். இந்த தமஸ்கு அரசனை அசீரிய அரசனே அடக்க முடியாமல் திண்டாடினார். இத்த கையப் பலம் வாய்ந்த கசயேல் ஏகூவைத் தோற்கடித்து யோர்தானின் மேற்குப் பகு தியை தன் வசப்படுத்திக் கொண்டார். இதனை 2 அரச 10:32 தெரிவிக்கிறது. இவன் யூதாவின் அரசன் யோவாசையும் கப்பம் கட்ட கட்டாயப்படுத்தியுள்ளார் (2 அர 12:18).

இவ்வாறு கட்டுக்கடங்காது துள்ளிக் கொண்டிருந்த கசயேலை அடக்கியவர்கள் அசீரிய அரசர்கள்தான். அசீரிய அரசர்களை கடவுளால் அனுப்பப்பட்ட ''மீட்பர்கள்'' என்றே அரசராகமம் வர்ணிக்கிறது (2 அர 13:5). அசீரிய அரசன் அதாவது நிராரி (810-783) என்பவர் அரமேயர்கள் மீது பலமு றைப் போர்தொடுத்து, கடைசியாக தமஸ்கு அரசனை கி.மு. 802 தோல்வி காணச் செய் தார். ஏகூவின் மகன் யோவகாசுதான் (801-786) அசீரியர்கள் செய்த பழித் தீர்ப்பிற்குப் பலியாடாக மாறினான் (2 அர 13:7). ஆனால் யோவகாசின் மகன் யோவாசு (801-786) தன்தந்தையிழந்ததை மீண்டும் மீட்டுக் கொண்டான். தமஸ்கு அரசன் கசாயேலிற் குப் பிறகு அரசனாக வந்த பென்அதாது அவ்வளவு திறமை மிக்கவர் அல்லர். என வேதான் தன் தந்தையிழந்ததை யோவாசு மீண்டும் எடுத்துக் கொள்ள முடிந்தது.

11. இரண்டாம் எரொபயாம் என்பவர் இஸ்ராயேலின் அரசனாக கி.மு. 786-இல் பதவியேற்றார். இவர் கி.மு. 746 வரை நாற்பதாண்டுகள் அரசாட்சிச்செய்தார் இவர் இஸ்ராயேலை ஒரு பெருமைக்குரிய நிலைக்கு உயர்த்தினார். இவர் காலத்தில் இஸ்ராயேல் கமாத்து முதல் அராபா கடல் வரை பரவி நின்றதாக 2 அர 14:25 கூறுகி றது. தொல்பொருள் ஆராய்ச்சி கூட இவர் சமாரியாவில் கட்டிய கோட்டைக் கொத்த ளங்களை அடையாளம் கண்டுள்ளது. இவர் காலத்தில் மக்கள் மத்தியில் செல்வம் செழித் தது. இதனால் ஏழை, செல்வந்தர் என்ற வகுப்பு பேதகம் தோன்றியது. சமய வாழ்வி லும் மக்கள் முறையாக வாழவில்லை. என வேதான் ஆமோஸ், ஓசேயா இறைவாக்கி னர்கள் அங்கு தோன்றி நாட்டில் நிலவிய அநீதியைத் தட்டிக் கேட்டனர். ஆமோஸ், ஓசேயா என்ற இரு இறைவாக்கினர்களும் எலியா, எலிசா இவர்களைச் சார்ந்த பரவச நிலை இறைவாக்கினர்களின் குழுக்களைச் சார்ந்தவர்கள் அல்லர் (ஆமோ 7:14). ஆனால் இறைவனிடமிருந்து நேரடியாக அழைப்பினைப் பெற்றவர்கள். இவர்கள் அரசன், குருக்கள் என்ற எவ்வித தயக்கமு மின்றி எங்கெல்லாம் அநீதி நடந்ததோ அங் கெல்லாம் கொதித்தெழுந்து இறை நீதியை சுட்டிக்காட்டிப் பேசினார்கள். இவர் கள் முக்கியமாக மக்கள் மத்தியில் நிலவிய சமுக அநீதி, மக்களின் சொகுசு மோகம், கட்டுப்பாடற்ற காமக் களியாட்டங்கள் , உண்மையற்ற வழிபாடுகள், சிலைவழிபாடு ஆகியவைகளைக் கடுமையாகக் கண்டித்த னர். இவர்கள் எதையும் புதிதாகப் போதிக்க வில்லை மாறாக அவர்கள் சூழ்நிலையைப் பராம்பரிய விசுவாச வெளிச்சத்தில் சோதித் துப் பார்த்து தவறானதைப் போக்குவதற்குக் குரல் கொடுத்தனர்.

ஆமோஸ் தென்நாடான யூதாவைச் சார்ந்த வர். இவர் இஸ்ராயல் மக்கள் எதிர்பார்த்து வந்த ஆண்டவரின்நாள், சோகத்தின் நாளாக வும் இருளின் நாளாகவும் விடியும் என்று ரைத்தார். ஓசேயா தனது பிரமாணிக்கமற்ற மனைவியுடன் போராடிய அதேநிலைதான் இஸ்ராயேலுக்கும் இறைவனுக்கும் நிலவிய உறவு என்று உணர்ந்து விளக்கிக் காட்டி னார். கட்டிய கணவனை விட்டு விட்டு கண்டவரோடும் ஓடிய மனைவியைப் போலவே இஸ்ராயேல் மக்கள் யாவேயிடம் பிரமாணிக்கமின்றி நடந்துக்கொண்டனர்

என்று சுட்டிக் காட்டினார் ஓசேயா (ஓசே. 15:4.8).

சற்று வேகமாக வல்லமையில் வளர்ந்த வடநாடு இஸ்ராயேல் விரைவிலேயே வீழ்ச்சியைக் கண்டது. அதற்கு இரண்டுக் காரணங்களைக் காட்டலாம். ஒன்று இஸ்ராயேல் மக்கள் யாவேக்கு ஏற்ற மக்களாக நடக்கவில்லை. எனவேதான் ஓசேயா, ஆமோஸ் இறைவாக்கினர்கள் கடிந்து தாக்கிப் பேசினர். அத்தோடு இச் சமயத்தில்தான் மூன்றாம் திகிலாத்து-பிலேசர் என்ற அசீரிய அரசன் மேற்கு நோக்கி நாடுகளைப் பிடிக்கும் திட்டத்துடன் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார்.

12. ஏகூ ஏற்படுத்திய கலகத்தால் தென்னாட்டில் உண்டான மாற்றங்கள்:-

இஸ்ராயேலில் ஏகூ செய்தப் புரட்சி யூதாவிலும் பலவித மாற்றங்களைக் கொண்டு வந்தது. பலபேரைக் கொன்று பதவியேறிய அத்தாலிய அரசியலை அவளின் அரண்மனைச் சகாக்களே சதிச்செய்து அவளைக் கீழே தள்ளினர். அவளுக்குப் பதிலாக யோவாக என்ற ஏழுவயது சிறுவனை அரிபணை ஏற்றினர். இவர் 37 ஆண்டுகள் ஆட்சி செய்தார் (கி.மு. 837-800). இவர் சிறுவயதிலேயே அரசனாகப் பதவியேற்றதால் யோயாதா என்ற குரு இவரின் ஆலோசகராக விளங்கினார். அண்டை நாட்டினரான கசாயேல் என்ற சீரிய அரசன் யூதாவிடமிருந்து கப்பம் வசூலித்தான். ஆனால் யோவாசு ஆலயத்தைப் புதுப்பிக்கும் பணியைச் செய்தார். யோவாசின் நீண்டக் கால ஆட்சியும் அவர் கொலை செய்யப்பட்டதுடன் முடிவடைந்தது. யோவாசைச் சதிசெய்து கொலை செய்தவர்கள் யோவாசின் பணியாளர்கள். யோவாசுக்குப்பிறகு அவர் மகன் அமசியா தன் தகப்பனைக் கொன்றவர்களைப் பழி வாங்கி அரியணையேறினார். இவரும் சுமார் பதினேழு ஆண்டுகள் அரசாட்சி செய்தார் (கி.மு. 800-783). அமசியா ஏதோமையரைத் தோற்கடித்து, மூடப்பட்டிருந்த பழைய வர்த்தகச்சாலையைத் திறந்து விட்டார் ஆனால் அமசியா செய்த யூகமற்ற செயல் எதுவென்றால் இஸ்ராயேல் அரசன் யோவாசை சண்டைக்கிழுத்ததாகும் (2 நாள் 25). இஸ்ராயேலின் அரசன் யோவாசு, தன்னை எதிர்க்கும் அமசியா, ஏற்க வேண்டியிருக்கும் பிற்காலப்பாதிப்புகளைப் பற்றி எச்சரித்தும் அமசியா கவனிப்பதாயில்லை. யோவாசு ஓர் விடுகதை மூலமாக தன் எச்சரிக்கையைச் சொல்லியனுப்பினார். லீபானின் நெருஞ்சிமுள் லீபானின் கேதுருமரத்திடம் பெண் கேட்டதாம் என்று எச்சரிக்கை செய்தார் (1 அர 14:9-10). எச்சரிக்கையைத் துச்சமாக நினைத்தார் அமசியா. எனவே யோவாசு தென்நாடான யூதா மீது படையெடுத்து அமசியாசைத் தோற்கடித்து, எருசலேம் பேராலயத்தையும் கொள்ளையடித்துச் சென்றார். கடைசியில் அமசியாவும் அவனின் தந்தை யோவாசைப் போலவே அரண்மனை அதிகாரிகளின் சதியால் கொல்லப்பட்டார். அமசியாவையடுத்து அவனின் மகன் ஊசியா என்றழைக்கப்பட்ட அசரியா அரியணையேறினார்.

அசரியா யூதேயாவில் அரசாண்டபோது (783-742) இரண்டாம் எரொபயாம் என்பவர் இஸ்ராயேலில் அரசனாக ஆட்சிசெய்தார். இவ்விருவரும் சம காலத்தவர்; திறமையான முறையில் அரசநிர்வாகத்தை நடத்திவந்தனர். இவர் பல சீர்திருத்தங்களைச் சிறப்பான முறையில் கொண்டு வந்தார். சாலமோன் அரசன் காலத்தில் சிறப்பாக நடைபெற்ற ஏலாத் வியாபாரச் சந்தையை மீண்டும் திறந்து விட்டார். எருசலேமைச் சுற்றிலும் காவல் கோட்டைகளைக் கட்டினார். கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற தனது நாட்டின் எல்லைகளில் இராணுவத்தை நிறுத்தி எதிரிகளைக் கண்காணித்து விழிப்பாக நிற்கச் செய்தார் (2 நாள் 26:6 தொ). இவ்வளவு திறமையாகப் பணியாற்றி வந்த அசரியா தொழுநோயினால் பாதிக்கப்பட்டுத் தன் ஆட்சிப் பொறுப்பை மற்றவர்களுக்கு மாற்றிக் கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டது. எனவே தன்மகன் யோத்தாம் என்பவனிடம் தன் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார்.

யோத்தாம் சுமார் பதினைந்து ஆண்டுகள் யூதாவை ஆட்சிச்செய்தார் (கி.மு. 750 - 735). இவர்கட்டிய கட்டடங்கள், போர்கள் பற்றி 2 நாள் 27:1-9-இல் தெளிவுப்படக் கூறுகிறது. அசீரிய அரசர்களின் ஆண்டுக்குறிப்பேட்டில் அஸ்ரியோ என்பவரைப் பற்றி ஒரு தகவல் எழுதப்பட்டுள்ளது. பல அறிஞர்கள் இந்த அஸ்ரியோ என்பவர் வேறு யாருமல்ல இந்த அசரியவேதான் அவ்வாறு குறிப்பிடப்படுகி றார் என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். இந்த அஸ்ரியோ என்பவர், அசீரிய அரசர்க ளின் குறிப்பின்படி மூன்றாம் திகிலாத்து பிலேசர் என்ற அசீரிய அரசனை சுமார் கி.மு. 743-இல் எதிர்த்து நிற்கிறார் என்று எழுதப் பட்டுள்ளது.

1931-ஆம் ஆண்டு ஒலிவ மலையில் அமைந்துள்ள உருஸ்ய பொருட்காட்சிச் சாலையில் கண்டுபிடிக்கப்பட்ட கண்ணாம் புக்கல் கல்வெட்டொன்றில் கீழ்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது. ''யூதேயாவில் அரசன் ஊசியாவின் எலும்புகள் இங்குக் கொண்டு வரப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. இதனை யாரும் திறக்க வேண்டாம்'' என்று எழுதப் பட்டுள்ளது.

13. வடநாடான இஸ்ராயேலின் அழிவு:-

இஸ்ராயேல் நாட்டை இரண்டாம் எரொ பயாம் என்ற அரசன் நீண்ட காலமாகத் திறமையுடன் ஆண்டுவந்தான். அவனின் மறைவிற்குப் பிறகு இஸ்ராயேல் நாடு தகுந்த தலைவனின்றி பலகுழப்பங்களுக்கு ஆளானது (ஓசே 7:3-16). அத்தோடு அசீரிய மன்னன் மூன்றாம் திகிலாத்து பிலேசர், புதிதாக வளர்ந்த பலமுள்ள பாயும் புலியாக மேற்கு நாடுகளை நோக்கிப் போர் தொடுத் தார். அவரின் எண்ணம் மற்ற நாடுகளைத் தாக்கி அவைகளை தனக்குக் கப்பம் கட்டும் நாடுகளாக மாற்ற வேண்டும் என்ற எண்ண மல்ல. மாறாக, மற்ற நாடுகளைப் பிடித்து, அவைகளைத் தன் பேரரசின் ஓர் பகுதியாக மாற்ற வேண்டுமென்பது அவரது பேராசை. எனவே பலமற்றுப்போன இஸ்ராயேல் பாய்ந்து வந்த புலியின் பற்களுக்கு எளிதில் இரையானது.

இரண்டாம் எரொபயாமையடுத்து அவர் மகன் செக்கரியா ஆட்சிக்கு வந்தார். அவர் ஆறுமாதங்களே நீடிக்க முடிந்தது. ஏனென் றால் செக்கரியா சல்லூம் என்பவரால் கொலை செய்யப்பட்டார். ஆனால் இந்த சல்லூமின் அரச வாழ்வும் ஒரு மாதமே தாக்குப் பிடித்தது. ஏனென்றால் மெனகேம் என்பவர் சல்லூமைக் கொலை செய்து ஆட் சியைப் பிடித்தார். இந்த மெனகேம் ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்தார் (745-738). ஆனால் இவர் அசீரிய அரசன் மூன்றாம் திகிலாத்து பிலேசருக்கு மடிநிறையக் கப்பம் கட்டித்தான் தன் ஆட்சியை நீடிக்கச் செய்ய முடிந்தது.

மெனகேமைத் தொடர்ந்து அவரது மகன் பெக்காசியா அரசனானார். ஆனால் அவர் ஒருவருடமே (738-737) ஆட்சியில் நீடிக்க முடிந்தது. ஏனென்றால் அவர் பெக்கா என்ப வரால் கொலைச் செய்யப்பட்டார். இந்தப் பெக்கா ஐந்து ஆண்டுகள் (737-732) வரை ஆட்சிசெய்தார். இவரை ஏசயா இரமலியா வின் மகன் என்று அழைக்கிறார் (ஏச 7:4)

இந்தப் பெக்கா என்பவர் தங்களை அடி மையாக வைத்திருந்த அசீரியரின் அடக்கு முறையைத் தூக்கியெறியும் திட்டத்தில்தான் பெக்காசியா என்ற அரசனைக் கொலை செய்து ஆட்சியைப் பிடித்தார். அத்தோடு தமஸ்குவைத் தலைநகராகக் கொண்ட சீரியர் களையும் தன் எதிர்ப்புக் கூட்டணியில் அணி சேர்த்துக் கொண்டார். இக்கூட்டணியில் யூதாவையும் சேர்த்துக் கொள்ள அழைப்புக் கொடுத்தார் பெக்கா. ஆனால் யூதா கூட்டணி யில் சேர்ந்துக்கொள்ளும் அழைப்பிற்கு மறுப்பு சொல்லி விட்டது. ஏனென்றால் இந்நேரத்தில் யூதா ஏதோமையர்களுடன் போரிட்டு எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது (2 அர 16:6). தங்களுடன் சேர்த்துக் கொள்ள முன்வராத யூதாவை இஸ்ராயேலும் சீரியா வும் இணைந்துத் தாக்கியது. இப்போரில் யூதா தோல்வியடைந்தால் தாவீதின் வாரிக அரியணையிலிருந்து இறக்கப்பட்டு பென்த பயேல் என்பவன் நியமிக்கப்படுவார் என்று அச்சுறுத்தினார் இஸ்ராயேல் அரசன் பெக்கா.

ஏசயா ஏழாம் அதிகாரத்தின் தகவலின் படி, ஆகாசு யாவே மீது நம்பிக்கை வைக் காது அசீரிய அரசர்களின் துணையை நாடி ஓடினார். இவ்வாறு ஆகாசிற்குத் துணையாக வந்த அசீரிய அரசன் மூன்றாம் திகிலாத்து பிலேசர் சீரியா மீதும் இஸ்ராயேல் மீதும் பெரும் தாக்குதல் ஒன்றை கி.மு. 734-732 ஆண்டுகளில் மேற்கொண்டார். இதில் சீரி யாவின் தலைநகரான தமஸ்குவைத் தரை மட்டமாக்கினார். இஸ்ராயேலைத்தாக்கி, கலிலேயா, யோர்தானின் மேற்குப் பகுதி என்ற பகுதிகளைத் தன் அரசுடன் இணைத் துக் கொன்டார். அத்துடன் ஓசியா என்ப வனை இஸ்ராயேலின் அரசனாக்கி, இஸ்ரா யேல் தனக்குக் கப்பம் கட்டும் அடிமை நாடாக ஆக்கிக் கொண்டார்.

இப்போருக்குப் பிறகு, அசீரிய அரசன், மூன்றாம் திகிலாத்து பிலேசர் இறந்தார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இஸ்ரா யேலின் அரசன் எகிப்தின் உதவியை நாடி அவர்களுடன் உடன்படிக்கை செய்துக் கொள்ள, எகிப்தின் சாயிஸ் என்றவிடத்தில் செயல்பட்ட அரச சபைக்கு தூதனுப்பினார். இவ்வாறு தங்களுக்குக் கப்பம் கட்டாது புதிய கட்சிக்குத் தாவிய இஸ்ராயேலைப் பற்றி கேள்வியுற்ற, அசீரியாவின் புதிய அர சன் நான்காம் சால்மனேசர் மிக்க கோபமுற் றான். எனவே இஸ்ராயேல் மீதுப் படையெ டுத்து தங்களது கட்டுப்பாட்டிற்கு அடங் காது வெளியே தள்ள முயன்ற ஓசியாவை பிடித்துச் சிறையில் வைத்தார். ஓசியா எவ் வாறு இறந்தான் என்று அரசராகம ஆசிரியர் தெரிவிக்கவில்லை.

அசீரிய அரசன் நடத்திய இப்போர் இரண்டு ஆண்டுகள் நீடித்தது (734-732). இதில் நான்காம் சால்மனேசரைத் தொடர்ந்து இரண்டாம் சார்கோன் என்ற அசீரிய மன்னன் போரை நடத்தி வெற்றி வாகைச் சூடினார். இப்போரில் இஸ்ராயே லின் தலைநகர் சமாரியா முற்றுகையிடப் பட்டு தகர்க்கப்பட்டது. இவ்வெற்றியைப் பற்றி இரண்டாம் சார்கோன், தனது ஆண்டுக் குறிப்பில் எழுதிவைத்திருக்கிறார். துர்சருக் கின் என்ற தனது புதிய தலைநகரிலும் கல்வெட்டில் இவ்வெற்றியைப் பற்றி பொறித்து வைத்திருக்கிறார். சார்கோன் அர சன் அக்கல்வெட்டில் கீழ்கண்டவாறு எழு தப்பட்டுள்ளது. ''நான் சமாரியாவை முற்று கையிட்டு வெற்றியடைந்தேன். அதில் 27,290 பேரைப் ·போர் பணயமாகக் கொண்டுச் சென்றேன்'' என்று எழுதப்பட்டுள்ளது. அக் காலத்தில் போர்நடந்து ஓர் அரசன் வெற்றிக் கொள்ளும் போது அவன் தோல்வி கண்ட நாட்டின் மக்களை தன் நாட்டிற்குக் கடத்திச் சென்று தோல்வி கண்ட நாட்டில் தனது நாட்டு மக்களைக் கொண்டு வந்து குடி அமர்த்துவான். வெற்றி பெற்ற அரசனுக்கு எதிரான புரட்சி வெடிப்பதற்கு வழியில்லா மல் செல்வதற்குத் தான் இவ்வாறு செய்வர். அதே வழக்கத்தைப் பின்பற்றிதான் இஸ்ரா யேல் மக்கள் ஆயிரக்கணக்கானோர் அசீரிய நாட்டுக்கு அடிமைகளாக எடுத்துச் செல்லப் பட்டனர். அசீரிய மக்களும் பாலஸ்தீனத்தில் குடியமர்த்தப்பட்டனர். இஸ்ராயேல் அசீரி யாவின் ஒருபுதிய மாநிலமாக ஆக்கப்பட் டது. இவ்வாறு அசீரிய இஸ்ராயேலை அழித்து அடிமைப்படுத்திய நிகழ்ச்சியைத் தான் 2 அர 17-ஆம் அதிகாரம் தனக்குரிய இறையியல் கருத்துக்களை அதில் பொதித்து அதன் முறையில் கூறுகிறது.

14. யூதேயா அரசர்கள் ஆகாசும் எசக்கியா வும்:-

அ) ஆகாசு:- அரசராகமத்தை எழுதிய உபாகமப்பாரம்பரிய ஆசிரியர் ஆகாசைப் பற்றி வன்மையாகக் கண்டித்து எழுதியிருக் கிறார். இவர் தன் மகனையே பொய்தேவர்க ளுக்கு பலியிடத்தயங்கவில்லை (2 அர 16:3) என்று இவனது உறுதியற்ற விசுவாசத்தை சுட்டிக்காட்டுகிறது அரசராகமம். ஏசயா இறைவாக்கினரின் அறிவுரையையும் இவன் பொருட்படுத்தாது நடந்ததும், இவனது சமய பற்றின்மையைத் தெரிவிக்கிறது (ஏச 7:1தொ)

சீரியாவும் இஸ்ராயேலும் தங்களின் கூட் டணிக்கு ஆகாசை அழைத்தபோது ஆகாசு அவர்களுடன் சேராமல் அசீரிய அரசன் மூன்

றாம் திகிலாத்து பிலேசரின் உதவியை நாடுகிறான் அதனால் அசீரிய மன்னனுக்கு அடிபணிந்து, அதற்குரிய நிறைந்த கப்பத்தையும் இவன் கட்டுகிறான். இவன் அசீரியர்களுக்கு அடிபணிந்து வாழ்ந்தபோக்கு, இவனது சமய வாழ்விலும் அது பிரதிபலித்தது. தமஸ்கு நகரில் தான் பார்த்த பீடத்தைப் போன்று, புதிய பீடம் ஒன்றை எருசலேம் ஆலயத்தில் நிறுவினான் ஆகாசு (2 அரச 16:10-16). இவன் ஆட்சியில் அநீதத்திற்கும் குறைவில்லை. எனவேதான் இறைவாக்கினர் ஏசயாவும் மீக்காவும் ஆகாக யூதாவை ஆட்சி செய்தக் காலத்தில் அங்கு நடந்து வந்த அநீதிகளைச் சுட்டிக்காட்டி கண்டிக்கிறார்கள் (ஏச 3:13-15; 5:8-13; மீக் 2:1-10).

ஆ. எசக்கியா:- எசக்கியா உபாகமப்பாரம்பரிய ஆசிரியரால் வானளாவப் புகழப்படுகிறார். இதற்குக் காரணம் இவர் மக்களின் சமய வாழ்வில் கொண்டு வந்த புது மறுமலர்ச்சிதான். மக்கள் அனைவரும் எருசலேம் ஆலயத்தைத் தங்களின் மைய வழிபாட்டுத் தலமாகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார் எசக்கியா. எல்லா கோத்திரங்களும் ஒன்று கூடி வழிபட்டு ஒன்றித்திருந்த யோசுவா காலத்து பழக்கத்தை (யாத் 20:24) மீண்டும் கொண்டு வந்து அதை நிலை நாட்ட ஏற்பாடு செய்தார். இவ்வாறு மக்கள் ஒன்றுபட்டு ஒரே திருத்தலத்தில் வழிபடும் முறை தங்கள் சமயத்தில் புகுந்துவிட்ட மற்றைய மதத்தினரின் கொள்கைகள் சடங்குமுறைகள் இவைகளை அகற்றுவதற்கு நல்வழியாகவும் அமைந்திருந்தது.

2 நாள் 30:1 தொ என்ற பகுதியில் எசக்கியா அசீரியர்களின் அடியில் வாழ்ந்து வந்த எப்பிராயிம் மனாசே என்ற கோத்திரத்தைச் சார்ந்த மக்களையும் எருசலேம் வந்து பாஸ்காவிழாவைக் கொண்டாட அழைத்ததைக் கூறுகிறது. வடக்கில் வாழ்ந்த தங்கள் மக்களையும் ஒன்றிணைக்க எசக்கியா கொடுத்த அறைகூவலின் அபாயத்தை அசீரியர்கள் உணர்ந்து, எசக்கியாவை எச்சரித்தார்களா? என்பது பற்றி நமக்குத் தகவல் இல்லை. ஆனால் எசக்கியா கொண்டு வந்த சமய மறுமலர்ச்சி ஒருதாய் மக்கள் என்ற நாட்டுபற்றையும் அரசியல் விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் தூண்டிவிட்டது.

வடநாடான இஸ்ராயேலை பிடித்துவிட்ட அசீரியாவோடு எசக்கியா எத்தகைய உறவை வைத்திருந்தார் என்று தெளிவாகச் சொல்ல முடியவில்லை. நிச்சயமாக இவர் அசீரியருக்கு எதிராகப் போர் கொடி பிடித்திருக்கத்தான் வேண்டும். குறிப்பாக கி.மு. 713-711 ஆண்டுகளில் பெலிஸ்தியரின் அகதோது மற்ற நகர அரசுகள் அசீரியரை எதிர்த்து எழுந்தபோது அவர்களோடு எசக்கியாவும் இணைந்து எதிர்ப்புக் குரல் கொடுத்திருக்சு வேண்டும். இவர்களோடு ஏதோம் மோவாபியர்களும் இணைந்து அசீரியர்களுக்கு எதிராக எழுந்திருக்க வேண்டும். அசீரியர்களின் எதிர்ப்பாளர்கள் அனைவருக்கும் எகிப்து பேரரசு ஆதரவுக்கரம் கொடுத்தது.

இவ்வாறு எகிப்தின் துணையை நம்பி பல நாடுகள் அசீரியாவை எதிர்த்து எழுந்த நேரத்தில்தான் ஏசயா யூதாவை எச்சரிக்கிறார். ஏச. 20-இல் ஏசயா ஆடையின்றி வெறும் காலோடு நடக்கும் அடையாள செயல்கள் எகிப்தின் துணையை நம்பியிருக்க வேண்டாம், அது விரைவில் வீழ்ச்சியடைய இருக்கிறது, என்ற கருத்தை அறிவுறுத்தித்தான் அவ்வாறு செய்தார்.

எசக்கியா பலவிதக் கட்டிடங்களையும் கட்டினார். இவைகளைப் போர்மூண்டால் நாட்டைக் காப்பாற்றும் திட்டத்தில் செய்தார். 2 அர 20:20; 2 நாள். 32:3-5. 30 ஆகிவற்றில் குறிப்பிடப்படும் எசக்கியா கட்டிய குடிநீர்கால்வாய் போர் சூழ்நிலையை மனதில் வைத்தே கட்டப்பட்டது. போர் மூண்டால், நகர அரணுக்குள் வாழ்ந்து வரும் மக்களுக்கு அருகேயிருந்த அருவியிலிருந்து ஆழமுள்ள கால்வாய் வழியாக, எருசலேமிற்குத் தண்ணீர் பெறத்தான் இக்கால்வாயை வெட்டினார் எசக்கியா. இக்கால்வாயில்தான் சிலோவாம் கல்வெட்டு என்ற பழங்கால தடையம் இடம் பெற்றுள்ளது.

வலிமை குன்றியிருந்த அசீரியாவை பாலஸ்தீனமும் மற்ற சிறு அண்டை நாடுகளும் சேர்ந்து எதிர்த்து நிற்க திட்டமிட்ட வேளையில் அசீரியா தன் சுய வடிவை இவ்வெதிர்ப்பாளர்க்குக்காட்டிடத் திண்ணம் கொண்டது. கி.மு. 705 இல் பெலிஸ்தியர்களின் நகர்களான அசுக்கலோன், எக்கரோன் என்ற நகரங்கள் அசீரியர்களை எதிர்க்க வெளிப்படையாய் கொடிப்பிடித்தன. இவர்கள் எகிப்துப் பேரரசு தங்களுக்குத் துணைநிற்கிறது என்ற துணிச்சலில்தான் அவ்வாறு வெளிவந்தனர். இந்நிகழ்ச்சி சீறிக் கொண்டிருந்த சிங்கத்திற்கு வாய்ப்பளித்தது போல் ஆகிவிட்டது. அசீரியர்கள் உடனே படையெடுத்து புரட்சிக் கொடிப்பிடித்த அசுக்கலோன், எக்கரோன் என்ற இரு பெலிஸ்தியர் நகரங்களை அழித்தனர் இதை ஏச 30-31 அதிகாரங்களில் நாம் காண்கிறோம்.

கி.மு. 704-இல் சனகெரிபு என்பவர் அசீரியாவில் அரச பதவியேற்றார். அவர் தன் அரசுக்கு அடங்காதவர்களையெல்லாம் அடக்கி ஒடுக்கத் திட்டமிட்டார். முதன் முதலாக பாபிலோனியாவில் பணியாது குரல் கொடுத்த மெரொதாக்கு பலதானின் புரட்சியை அடக்கினார் (704). அசீரியர்களுக்கு எதிராக எழுந்த இந்த பாபிலோனியர்கள் எருசலேமையும் தங்கள் அணியில் இணைத்துக் கொள்ள முயற்சித்திருக்கிறார்கள். எனவேதான், இப்பாபிலோனியர்கள் தாங்கள் அசீரியர்களால் நசுக்கப்படுவதற்குச் சற்று முன்பாக எருசலேமிற்கு தூதனுப்பியிருக்கவேண்டும் (2 அர 20:12-19; ஏச 39).

பாபிலோனியர்களைப் பணியச் செய்த அசீரிய மன்னன் அடுத்து பெனிசியாவிற்குப் பாய்ந்து சென்றார். ஏனென்றால் பெனிசியாவும் அசீரியாவிற்கு எதிராக எழுந்த கூட்டணியில் இடம் பெற்றிருந்தது, பெனிசியர்களையும் கொடுமைப்படுத்தினார் அசீரிய மன்னன். அடுத்து அங்கிருந்து தெற்கு நோக்கி வந்து பெலிஸ்த்தியர்களையும் அடுத்து தாக்கினார். அடுத்து எருசலேமை நோக்கி தன் அனல்பார்வையைத் திருப்பினார் சனகெரிபு. எருசலேமின் அரசனான எசக்கியா அசீரியாவின் எதிர்ப்பு அணியில் முக்கிய நபராக விளங்கியதால், அசீரிய அரசன் அவனுக்கு சரியான படிப்பினையும் அடியும் கொடுக்க விரும்பினார். பெலிஸ்தியர் நகர் எக்கரோனின் அரசன் பாடி என்பவர் அசீரியர்களுக்கு ஆதரவாகப் பேசி வந்தார். எனவே ஆத்திரமடைந்த அந்நகர் மக்கள் அவரை எருசலேம் அரசன் எசக்கியவிடம் கையளித்தனர். அவ்வாறு அசீரியர்களுக்கு எதிரான அணியில் தீவிரமாக செயல்பட்ட எசக்கியா அசீரியர்களின் ஆத்திரத்திற்கு ஆளானதில் வியப்பில்லை.

அசீரிய அரசன் சனகெரிபு யூதேயாவை முற்றுகையிட்டு வெற்றி பெற்றதைப் பற்றி தனது ஆண்டுக்குறிப்பில் எழுதிவைத்துள்ளார். அதில் யூதேயாவின் 46 நகரங்களைத் தான் கைப்பற்றியதாகவும் எசக்கியாவை எருசலேமில் ஒரு கூட்டுப் பறவையைப் போல அடைத்து வைத்திருந்ததாகவும் எழுதிவைத்துள்ளார். அசீரிய அரசனின் இப்படையெடுப்பைப் பற்றியும் அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள்பற்றியும் 2 அர 18:13-19:34 என்ற பகுதியில் தத்ரூபமாக விளக்கப்பட்டுள்ளது. ஏசயா 36-37 அதிகாரங்களிலும் இதைப் பற்றிய குறிப்பைக் காணலாம். மேற்கண்ட அரசராகமம் பகுதியில் இரண்டுவித வர்ணிப்புகள் இடம் பெறுவதைப் பார்க்கின்றோம்.

அசீரியர்களின் இராணுவம் கொள்ளை நோய்க்கு உள்ளாவதை அரசராகமம் குறிப்பிட்டு இதனால் அசீரிய அரசன் பாலஸ்தீனத்தைத் தொடர்ந்துத் தாக்காது, தன்நாடு திரும்பினான் என்று அரசராகமம் கூறுகிறது. அசீரியர்களைக் கொள்ளைநோய் தாக்கியது இறைவனின் கரமென்றாலும் அசீரியர்கள் பலமாகவே யூதேயாவிற்கு அடிக்கொடுத்திருக்கிறார்கள். இதை ஏச 1:7 தொ என்ற பகுதி குறிப்பிடுகிறது. இதையடுத்து அசீரியவின் அடிமை நாடாகவே பல்லாண்டுகள் யூதா வாழ்ந்து வந்தது.

15. மனாசே (607-642):- இவரது நாற்பத்தைந்து ஆண்டுகள் அரசாட்சியில் இவர்

அசீரியர்களின் அடிமை அரசராகவேயிருந்து யூதாவை ஆட்சி செய்து வந்தார். 2 நாள் 33:11தொ என்ற குறிப்பு மனாசே பாபிலோனியாவில் சிறிதுகாலம் சிறையில் வைக்கப் பட்டிருந்தார் என்று கூறுகிறது. இது அசீரியர் அரசர் அசூர்பானிப்பாலின் சகோதரன், அசூர்பானிபாலிற்கு எதிராகப் புரட்சி செய்த காலத்தில் நடந்திருக்கலாம். மனாசேயின் செபம் என்ற போலியான வேதாகமநூல் ஒன்று காணக்கிடைக்கிறது. இந்நூல் மனாசே மனந்திரும்பியதை மையமாக வைத்துப் பிற்காலத்தில் எழுதப்பட்ட நூலாக இருக்கலாம். மனாசே மனந்திரும்பி வாழ்ந்தாரோ இல்லையோ தெளிவாகத் தெரிந்துக்கொள்ள நமக்குச் சான்றுகள் இல்லை. ஆனால் அவரின் ஆட்சிக் காலம் முழுவதும் சிலை வழிபாட்டு பழக்கங்கள் செழித்தோங்கி வளர்ந்து வந்தன என்பது நிச்சயமாகத் தெரிகிறது. மனாசேயின் காலத்தில் எசக்கியா ஏற்படுத்திய சமய மறுமலர்ச்சி மீண்டும் காய்ந்து சருகாகி விட்டது என்று சொல்லலாம் ஏனென்றால் எருசலேம் ஒரே வழிபாட்டு மையம் என்று எசக்கியா நிலைநிறுத்தியது இவரின் காலத்தில் தளர்ச்சியடைந்தது. மண்வளத்திற்காக மனிதர்கள் சடங்கு உடலுறவுகொள்ளும் அன்னிய வழிபாட்டு முறை மனாசேயின் காலத்தில் மீண்டும் யூதாவில் செயல்படத் தொடங்கியது.

எருசலேம் பேராலயத்தில் அசீரியர்கள் வழிபட்ட தேவதைகளுக்கும் பீடங்கள் கட்டப்பட்டன. தேவதாசி முறையும் ஆலயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு யாவேயை விட்டுப்பிரிந்து சென்ற மன்னனாகவே மனாசே வாழ்ந்து வந்தார். மனாசேயை அடுத்து அவரின் மகன் ஆமோன் ஆட்சிக்கு வந்தார். அவர் ஆட்சி இரண்டாண்டுகளே நீடித்தது (642-640). ஏனென்றால் அவர் ஆட்சி செய்த இரண்டாவது ஆண்டில் சதியினால் கொலை செய்யப்பட்டார். இதனால் எட்டே வயது நிரம்பிய சிறுவனான யோசியா அரசனாக ஆக்கப்பட்டார்.

16. யோசியா ஆட்சியை ஏற்ற போது அவருக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலைகள் உருவாகின. பேரரசாக அண்டை நாட்டாரையெல்லாம் உருட்டிக் கொண்டிருந்த அசீரிய பேரரசு சரிய ஆரம்பித்தது. மேதியர்களும் பாபிலோனியர்களும் வல்லமையில் வளர ஆரம்பித்தார்கள். கி.மு. 626 முதல் 612 வரை பாபிலோனியாவின் நபுபோலாசார் அசீரியர்களை எதிர்த்துப் புரட்சிக்குரல் கொடுத்துவந்தார். கி.மு. 612-இல் நபுபோலாசார் அசீரியாவின் தலைநகரான நினிவேயை வீழ்த்தினார். இப்போது அசீரியா வீழ்ச்சியடைந்தது. இவ்வாறு தன்னை மிதித்து அடக்கிக் கொண்டிருந்த அசீரியர் ஆட்டம் காண தொடங்கியதும் இச்சந்தர்ப்பத்தை யோசியா நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். யோசியா அசீரியர்களிடமிருந்து விடுதலை பெற்று தன்நாடு தனி சுதந்திரநாடு என்று பிரகடனமும் செய்தார் அரசியல் ரீதியில் மட்டுமல்ல சமய வாழ்விலும் தங்களது சுதந்திரத்தை உரிமையுடன் அறிக்கையிட்டார்.

எசக்கியாசைவிடவும் சமய அளவில் முழுமையான மறுமலர்ச்சியைக் கொண்டு வந்தார் யோசியா. இவர் இவ்வாறு செய்த சமய மறுமலர்ச்சியை உபகாகம பாரம்பரிய ஆசிரியர் புரட்சி என்பர் ஏனென்றால் உபாகமத்தில் கூறப்பட்டுள்ள திட்டங்களின் வழியில் இம்மறுமலற்சி நடைப்பெற்றது. யோசியா 621-இல் எருசலேம் ஆலயத்தை சீர்திருத்திய போது பழைய சட்டபுத்தகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இக்கண்டெடுக்கப்பட்ட புத்தகத்தில் இருந்தவைகளைத்தான் உபாகமம் 12-26 அதிகாரங்களில் நாம் பார்க்கிறோம். எருசலேமே வழிபாட்டின் ஒரே மையம் என்ற கருத்தும், சிலைவழிபாட்டினை அழிக்க வேண்டும் என்ற கருத்தும் யோசியா கொண்டுவந்த மறுமலர்ச்சியின் முக்கிய அம்சங்களாகவிளங்கின. மக்கள் கடவுளின் உடன்படிக்கையை உய்த்துணர்ந்து வாழ வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார் யோசியா இம்மறுமலர்ச்சி மக்களைப் பார்த்து குறை கூறி கண்டிக்காமல் அவர்களுக்கு உற்சாகமளித்துத் தட்டிக் கொடுக்கும் முறையில் அமைந்திருந்தது.

பாஸ்காவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார் யோசியா இவ்விழாவில் பங்கேற்க வடநாடான இஸ்ராயேலுக்கும் அழைப்புக் கொடுத்தார். இவ்வாறு இஸ்ராயேல் மக்களை அரசியல் தளத்திலும் சமய அளவிலும் ஒன்றுசேர்க்க வழிவகுத்தார் யோசியா.

இவ்வாறு நல்லெண்ணத்துடன் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தார் யோசியா, ஆனால் இம்மறுமலர்ச்சி வாழ்வோடிணைந்த புரட்சியாக அமையாமல் வெறும் சமய சம்பிரதாயமாகவே மாறிவிட்டது. இதைத்தான் எரேமியா இறைவாக்கினர் சுட்டிக் காட்டி யோசியா காலத்தில் கண்டிக்கிறார்.

இவ்வாறு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த யோசியாசு மெகிதோவில் எகிப்தியரின் வாளிற்கு இரையாகி மடிகிறார். இவர் மறைவினால், இவர் துவங்கி வைத்த மறுமலர்ச்சியும் விரைவில் புதைந்துப்போகத் தலைப்பட்டது. யோசியாவை அடுத்து அவரது மகன் யோவாகாசு அரசனானார். ஆனால் அப்போது ஏற்பட்ட உலக அரசியல் சூழ்நிலை யூதா அரசை அடியோடு அழிக்கும் நிலைக்குக் கொண்டுவந்தது.

கி.மு. 612-இல், படையெடுத்து வந்த பாபிலோனியர்களுடன் மோதி அசீரிய பேரரசு தோல்வி கண்டதை முதலிலேயே கண்டோம். இத்தோல்வியில் அசீரியாவின் தலைநகரான நினிவே பாபிலோனிய கைக்குச் சென்றது. தங்கள் தலைநகரைப் பறிகொடுத்து விட்டு தப்பித்துக் கொள்ள காரான் என்றவிடத்திற்கு பின் வாங்கினர் அசீரியர். ஆனால் பாபிலோனியர் விடுவதாயில்லை. காரனுக்கும் அசீரியர்களைத் துரத்திச் சென்று அந்நகரையும் தன் கைவசமாக்கினர் பாபிலோனியர்.

இதற்கிடையில் மற்றொரு பேரரசான எகிப்து பாபிலோனியாவின் படையெடுப்புகளைக் கண்டு விழித்தெழுந்தது. புதிதாக முளைத் தெழுந்த முரட்டுப் பாபிலோனியாவைத் தடுக்காவிட்டால் தனக்கும் பாதகம் ஏற்படும் என்ற உணர்வில் எதிர்த்துச் செயல்பட ஆரம்பித்தது. ஏற்கெனவே அசீரியா எகிப்திற்கு எதிரி. இருப்பினும் கொடிய பாபிலோனியாவைத் தடுக்க வேறுவழியில்லாது, தன் எதிரியான அசீரியாவுடன் சேர்ந்துக் கொண்டு அது புது எதிரியைத் தாக்கப் புறப்பட்டது. அப்போது எகிப்தின் வேந்தனாக விளங்கியவர் இரண்டாம் நேக்கோ கி.மு. 609 முதல் 593 வரை எகிப்தை அரசாண்டவன். இவன் அசீரியர்களுடன் சேர்ந்துக் கொண்டு பாபிலோனியர்களைத் தாக்க, அசீரியர்கள் பின்வாங்கிய காரான் நகரை நோக்கி எகிப்திலிருந்து சென்றுக் கொண்டிருந்தான். வழியில் பாலஸ்தீனத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். அவ்வாறு நேக்கோ செல்கையில் யோசியா எகிப்து அரசனை எதிர்த்து தடுத்து நிறுத்தினார். இதனால் எகிப்திய பெரும் படைக்கும் பாலஸ்தீனப் படைக்கும் போர் மூண்டது. இப்போர் மெகிதோ என்றவிடத்தில் கி.மு. 609-இல் நடந்தது. இப்போரில்தான் யோசியா படுகொலைச் செய்யப்பட்டார். இடையில் தடுத்த பாலஸ்தீனத்தை அடித்து நொறுக்கி விட்டு எகிப்து மன்னன் யூப்பிரத்திசு நதியை நோக்கி தன் இராணுவத்தை நகர்த்திச் சென்றான். அசீரியாவும் எகிப்தும் சேர்ந்து போரிட்டும் பாபிலோனியர்களைச் சாய்க்க முடியவில்லை. எனவே தோல்வியுடன் தன் நாடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தான் எகிப்து மன்னன். இதற்கிடையில் பாலஸ்தீனத்தில் யோசியாவையடுத்து யோவகாசு அரசனாக நியமிக்கப் பட்டிருந்தார். ஆனால் தன்நாடு செல்லும் வழியில் யோவகாசை அகற்றிவிட்டு எலியாக்கிம் என்ற யோசியாவின் மற்றொரு மகனை யூதாவின் மன்னனாக ஆக்கினார் எகிப்து மன்னன். புதிதாக தான் நியமித்த எலியாகிம் என்பவனின் பெயரை யோயாக்கிம் என்றும் மாற்றியமைத்தார் எகிப்து அரசன். யூதா அரசன் தனது அடிமையரசன் என்று காட்டவே அப்படி இப்பெயர் மாற்றம் செய்தார்.

17. யூதாவின் வீழ்ச்சி (609-587):- எகிப்தால் ஏற்படுத்தப்பட்ட யோயாக்கிம் என்ற யூதா அரசன் திறமையற்றவன். சமய பற்றும்

குறைந்தவன். அவன் காலத்தில்தான் இறை வாக்கினர் எரேமியா பணி புரிந்தார் யோயாக்கிமின் திறைமையில்லா நிலையை எரேமியா பலவிடங்களில் கட்டிக் காட்டிக் கண்டித்தார். உதாரணமாக எரே 3-ஆம் அதி காரம் இதைச் சித்தரிக்கிறது. அரசன் யோசியா செய்த உபாகமப்பாரம்பரிய மறு மலர்ச்சிகளை யெல்லாம் சருகுகளாக்கி னான். எரே 7:16-20; எச 8 ஆகிய பகுதிகள் யோவாக்கிம் காலத்தில் எவ்வளவு தூரம் யூதா மக்கள் யாவே இறைவனின் வழிபாட் டிலிருந்து வெகுவாக விலகியிருந்தனர் என் பதை எடுத்துக் கூறுகின்றன.

இந்நேரத்தில் பாபிலோனியாவும் எகிப் தும் மோதிக் கொண்டிருக்க யூதா அவர்கள் மத்தியில் உருட்டப்பட்ட ஓர் பகடைக் காயைப் போல விளங்கியது. ஆனால் பாபி லோனியா உண்மையிலேயே பெரும் வல்ல ரசாக உருப்பெற்றுக் கொண்டிருந்தது. இக் காலங்களில்தான். பாபிலோனியாவின் இத் தகைய வளர்ச்சியைப் பற்றி பாபிலோனியர் களின் ஆண்டுக்குறிப்புகள் தெளிவாகக் கூறு கின்றன.

கி.மு. 605-இல் பாபிலோனியாவும் எகிப் தும் கார்கெமிசு என்ற விடத்தில் சந்தித்து போர் செய்தன. இதில் பாபிலோனியா எகிப் தியர்களை விரட்டியடித்து வெற்றி கொடி நாட்டியது. இப்போது பாபிலோனியாவின் மன்னனாக விளங்கி இவ்வெற்றியைப் பெற் றவன் மன்னன் நெபுக்கதுனேசார். இதனை எரேமியா 46:2-12 என்ற பகுதியில் குறிப் பிட்டு எழுதியுள்ளார்.

எகிப்தின் மன்னன் நெக்கோ இத்தோல்வி யைச் சந்தித்ததும் அடிப்பட்ட பாம்பைப் போல ஆனார். எனவே கி.மு. 601-இல் மீண்டும் பாபிலோனியர்களை எதிர்த்துத் தாக் கினார். இம்முறை எகிப்திய அரசன் வெற்றி பெற்றார். இவ்வெற்றியில் தன் மனதைப் பறிகொடுத்த யூதா அரசன் யோயாக்கிம் எகிப்தியர்கள் பாபிலோனியர்களைவிடப் பலம்வாய்ந்தவர்கள் என எண்ண ஆரம்பித் தார். இதனால் பாபிலோனியாவை புறக்க ணிக்கவும், ஆரம்பித்தார் யோவாக்கிம். ஆனால் யூதாவில் எகிப்தியரைச் சார்ந்திருப் பதா அல்லது பாபிலோனியரைச் சார்ந்திருப் பதா? என்பதில் மக்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாக ஆரம்பித்தன. யோயாகிம் பாபிலோனியர்களைப் பகைத் துக் கொள்வது என்று தீர்மானித்து எதிர்ப்புக் குரல் கொடுத்தபோது, பாபிலோனியா உட னடியான எதிர் நவடிக்கை எடுக்கத் தொடங் கியது.

பாபிலோனிய அரசர்களின் நாட்குறிப்பு எவ்வாறு எருசலேம் பாபிலோனியாவிற்கு இப்போது அடிபணிந்தது என்பதை விவரிக் கிறது. அதார் மாதத்தின் இரண்டாம் நாள் அதாவது கி.மு. 597 மார்ச் மாதத்தின் மத்தி யில் யெருசலேம், பாபிலோனியர்களுக்கு அடிபணிந்தது என்று அக்குறிப்பு கூறுகிறது. இத்தோல்வியில் யோயாக்கிம் ஏற்கனவே சதியினால் கொலை செய்யப்பட்டுவிட்டார். பாபிலோனியர்கள் தாக்கியபோது யூதாவின் அரசனாக விளங்கியவர் யோயாக்கிமின் மகன் யோயாக்கின். இவர் அரியணையே றிய ஒரு சில மாதங்களிலேயேதான் இத்தாக் குதல் நடந்தது. பாபிலோனியர்கள் குறிப் பின்படி யோயாக்கினும் மற்றும் நிறைய மக்களும் பாபிலோனியாவிற்குப் போர் கைதிகளாக நாடு கடத்தப்பட்டனர். வைட் னர் ஏடுகளில் யோயாக்கின் எவ்வாறு கொடு மையாகத் தண்டிக்கப்படாமல் அரசனுக்கு ரிய மதிப்புடன் பாபிலோனியர்களால் நடத் தப்பட்டார் என்று எழுதிவைக்கப்பட்டுள் ளது.

செதேக்கியாதான் யூதாவின் கடைசி அர சன். இவர் கி.மு. 597 முதல் 587 வரை அரசாண்டார். இவர் காலத்தில் நடந்துவந்த பேரரசுகளின் போராட்டத்தில் அரசியல் தந் திரத்துடன் விழிப்புடன் தப்பித்துக் கொள் ளத் தெரியாதவர். சுருக்கமாகச் சொன்னால் செதேக்கியா திறமையற்றவர்; நிலையாக எதையும் சிந்தித்துச் செயல்படத் தெரியாத வர். இதனைத்தான் எரேமியாவின் 32-38 அதிகாரங்களில் நாம் காண்கிறோம். பாபி லோனியா, எகிப்து என்ற இரண்டு பேரரசுக

னில் எகிப்தையே தேர்ந்துக் கொண்டார் செதேக்கியா. இப்பேகது எகிப்தில் மன்னர்களாக விளங்கியவர்கள் இரண்டாம் காமட்டிக்குஸ் என்பவரும் ஒபிரா என்பவரும் ஆவர்.

இவ்வாறு செதேக்கியா எகிப்தின் பக்கம் சேர்ந்ததால் பாபிலோனியா பாய்ந்தெழுந்தது. பாபிலோனியாவின் அரசன் நெபுக்கதுனேசார் கி.மு. 589-இல் எருசலேமை முற்றுகையிட்டார். இதே நேரத்தில் யூதாவிலிருந்த நகரங்கள் இராணுவமையங்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கினார். அசேக்கா, இலாக்கிசு என்ற இரண்டு நகரங்கள் மட்டுமே அவரின் தாக்குதலிலிருந்து தெய்வாதினமாகத் தப்பி நின்றன.

இவ்வாறு பாபிலோனிய அரசன் எருசலேமை முற்றுகையிட்டிருப்பதைக் கேள்வியுற்று, தன் அணியில் நின்ற யூதாவிற்கு உதவி செய்ய விரைந்தான் எகிப்தின் மன்னன். இதனால், முற்றுகையிட்ட பாபிலோனியா எருசலேமிலிருந்து சற்று விலகி நின்றது. ஆனால் பாபிலோனியா தளர்ச்சியடையாமல் தங்களை எதிர்க்கத் துணிவுக் கொண்ட எருசலேமை அழித்தது. எருசலேமின் மதில் சுவர்களையெல்லாம் கல்மேல் கல்லில்லாமல் அழித்தது. இவ்வாறு எருசலேம் நகரம் கி.மு. 587-இல் பாபிலோனியாவால் முழுவதும் அழிக்கப்பட்டது. இக்கோர நிகழ்ச்சியைக் காணப்பொறுக்காது ஓட்டம் பிடித்தான் யூதாவின் அரசன் செதேக்கியா. ஓடியவனை விடாது வளைத்துப் பிடித்தனர் பாபிலோனியர். முதலில் அவரின் கண்முன்னாலேயே அவனின் பிள்ளைகள் வெட்டிக் கொள்ளப்பட்டனர். பிறகு செதேக்கியாவின் கண்கள் பிடுங்கப்பட்டன. நெபுக்கதுனேசார் எருசலேமை அடியோடு அழிக்கக் கட்டளையிட்டார். எருசலேமின் குடிமக்கள் பெரும்பாலானோர் பாபிலோனியாவிற்குக் கைதிகளாக நாடு கடத்தப்பட்டனர். இப்போது அகிக்காமின் மகன் கெதலியாவை யூதாவின் ஆளுநராக நியமித்தார் நெபுக்கதுனேசார். இந்த கெதலியாதான் இறைவாக்கினர் எரேமியாவை ஆதரித்தவர். இப்புது ஆளுநன் மிசுப்பா என்ற இடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, நாட்டை நிர்வகித்தார்.

கெதலியா இசுமயேல் என்பவனால் கொலைச் செய்யப்பட்டார். இசுமயேல் யூதா அரச வழியைச் சேர்ந்தவர். தான் ஏற்படுத்திய ஆளுநன் கொலை செய்யப்பட்டது தனக்கு வெளிப்படையாகக் கொடுக்கப்பட்ட எதிர்ப்பின் குரல் என்று நெபுக்கதுனேசார் மீண்டும் யூதா மக்களை அடக்க அவர்களைப் பலவாதனைகளுக்கு ஆளாக்கினார். இம்முறையிலும் சுமார் கி.மு. 582-இல் பல யூதா மக்கள் நாடுக்கடத்தப்பட்டனர். இதனைத் தான் எரே 52:30 என்ற பகுதி குறித்துக் காண்பிக்கிறது.

கெதலியாவின் ஆதரவாளர்களால் அவரைக் கொலை செய்தவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. இதனால் இவர்கள் அச்சம் கொண்டு இறைவாக்கினர் எரேமியாவைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு எகிப்திற்குத் தப்பிச் சென்றார்கள். இது எரே 42-இல் கொடுக்கப்படுகிறது.

இஸ்ராயோல் வரலாறு - V - பாபிலோனில் அடிமை வாழ்வும் மீளுதலும்

1. பாபிலோனில் யூதா மக்களின் அடிமை வாழ்வு (கி.மு.587-539):- யூதா பாபிலோனிய அரசின் ஒரு மாநிலமாக மாற்றப்பட்டது. இம்மாநிலத்தின் தலைநகர் சமாரியாவாக விளங்குகிறது. யூதாவிலிருந்து பாபிலோனியாவிற்கு மக்கள் நாடுக் கடத்தப்பட்டார்களேயன்றி வெளிமக்கள் யூதேயாவிற்கு கொண்டுவந்து குடியமர்த்தப்படவில்லை. நெபுக்கதுனேசார் கடுமையாகத் தாக்கியதால் யூதா பாலைவனம் போல் காட்சியளித்தது. ஒரு சில மக்களே அங்கு வாழ்ந்து வந்தனர். நெபுக்கதுனேசாரின் படையெடுப்பைப் பயன்படுத்திக் கொண்டு, யூதாவின் அண்டை நாடுகள் யூதாவைக் கொள்ளையடித்தன. இவ்வாறு யூதாவைக் கொள்ளையடித்தவர்களில் குறிப்பிடப்படக்கூடியவர்கள் அதன் தென்பகுதியில் வாழ்ந்த ஏதோமியர். இவர்களைக் குறிப்பிட்டுக் கூறுகிற ஒபா.11;

எச 25:1-4 என்ற பகுதிகள் அம்மோனியர்களும் இவ்வாறு இந்த நேரத்தில் கொள்ளையடித்ததைக் கூறுகிறது.

யூதாவின் மக்கள் கூட்டம் முக்கியமாக பாபிலோனியாவில் அடிமைகளாக வாழ்ந்தனர். எரே 52:28-30 என்ற பகுதி நாடுகடத்தப்பட்ட யூதா மக்கள் எண்ணிக்கையில் 4600 என்று கூறுகிறது. இந்த 4600 பேர், பெண்கள் குழந்தைகள் இவர்களைத் தவிர்த்த ஆண்களின் எண்ணிக்கை மட்டுமேயாகும். எசக்கியேல் இறைவாக்கினர் பாபிலோனியாவில் தெல்-அபில் என்ற விடத்தில் எவ்வாறு யூதா மக்கள் வாழ்ந்தார்கள் என்று விளக்கிக் கூறுவதை அவர் நூலில் நாம் காண்கிறோம்.

பாபிலோனியாவிற்கு நாடுகடத்தப்பட்ட யூதா மக்கள் சிறைகளில் அடைக்கப்படவில்லை. மாறாக அவர்கள் அந்நாட்டில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டனர். யூதாமக்கள் தாங்கள் கொண்டுவரப்பட்டப் புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு அனுசரித்து நடந்துக் கொண்டனர். அவர்களின் சமயச் சடங்குகளையும் முறைப்படிப் பின்பற்றவும் அவர்கள் சுதந்திரம் பெற்றிருந்தனர். அவர்களின் முக்கியச் சடங்குகளான விருத்தசேதனம், ஓய்வுநாள் அனுசரிப்பு ஆகியவை இவர்களை ஒருகுலமக்களாக ஒன்றிணைக்கும் கருவிகளாகத் திகழ்ந்தன.

தாங்கள் தாங்கமுடியாத வேதனைகளுக்கும் அவமானங்களுக்கும் ஆளாக்கப்பட்டிருந்தாலும் மக்கள் தங்களின் கடவுள்பற்றுதலை விட்டுக் கொடுக்கவில்லை. எருசலேம் அசைக்க முடியாது, இறைவனின் தனி உடன்படிக்கைக்குத் தாங்கள் உரிமைக் கொண்டவர்கள் என்ற நம்பிக்கையெல்லாம் தவிடுபொடியானாலும் அவர்களின் சமயபற்று வைரமாக உறுதிப்பட்டது. சமய வழிபாடுகளிலும் சமய வாழ்க்கையிலும் இப்போது அதிக ஈடுபாடு காட்டினர்.

இஸ்ராயேல் மக்களின் வாய்மொழிப் பாரம்பரியங்கள் இக்காலத்தில்தான் ஒன்று சேர்க்கப்பட்டு எழுத்துவடிவில் பதிப்பிக்கப்பட்டன. குறிப்பாகக் குருக்களின் வழிவந்தோர் இஸ்ராயல் மக்கள் பாலைவனத்தில் வழிநடத்ததுமுதல் யெருசலேம் ஆலயத்தில் வழிபாட்டு சடங்குகளின் ஒழுங்குமுறை வரையுள்ள பாரம்பரியங்களைச் சட்டத் தொகுப்பாக ஒன்று சேர்த்தனர். இத்தோடு, தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், தங்களுக்கென்று தனி ஒழுங்குகள் உண்டு என்ற புது சட்டத்தொகுப்பையும் செய்யும் முயற்சி இப்போது நடந்து வந்தது. யோசுவாமுதல் அரசர்கள் காலம் வரையுள்ள வரலாற்றை இந்நேரத்தில் தான் வகுத்து தொகுத்து எழுதினார்கள். இறைவாக்கினர்கள் எழுதிவைத்தவைகளையும் இச்சமயத்தில்தான் தொகுத்துச் சேர்த்தார்கள்.

எசக்கியேல் இறைவாக்கினர் இவ்வடிமைத் தனத்தில் வாழ்ந்த மக்கள் மத்தியில் நின்று பணிபுரிந்தனர். அவர் இஸ்ராயேல் புதிய நாடாக உயிர்த்தெழும் என்ற நம்பிக்கைச் சங்கை ஊதினார். ஆனால் ஏசயா ஆகமத்தின் 40 முதல் 55 வரையுள்ள அதிகாரங்களை எழுதிவைத்த இறைவாக்கினர்தான் இந்த இஸ்ராயல் மக்கள் மனந்திரும்பிடக் கருவியாக விளங்கியவர். இவர் இரண்டாவது ஏசயா என்றழைக்கப்படுகிறார். இவர்தான் இறைவனைப் பற்றிய உண்மைக் கருத்துக்களை மக்களுக்குக் கூறி இந்தச் சிக்கலான நேரத்தில் மக்களை வழிநடத்தினார். இந்த இரண்டாவது ஏசயாதான் பாரசீக அரசன் சைரசை இறைவன் அபிடேகம் செய்து இஸ்ராயல் மக்களை விடுவிக்க நியமித்துள்ளார் என்று மக்களுக்கு அடித்துக் கூறினார். யாவே ஒருவரே உண்மையான கடவுள்; அவரே மக்களை விடுவிக்கும் வல்லமை பெற்றவர்; அவர் புதிய பாஸ்காவை செய்து மக்களை விடுவிப்பார் என்றும் விடுதலை நாதத்தை மக்களுக்கு ஓதினார். இக்கருத்துக்களை ஏச 43:14-21; 48:20-21; 52:11-12 என்ற பகுதிகளில் நாம் காணலாம்.

இரண்டாம் ஏசயா முன்னுரைத்தவாரே பாரசீக மன்னன் சைரஸ் தனது வெற்றி பயணத்தைத் தொடங்கினார். இந்த சைரஸ் பாரசீகத்தைச் சேர்ந்த அன்சான் என்ற இடத்தின் அரசன். இவர் கி.மு.553-இல் மேதியர்

களை வென்றார். அதைத் தொடர்ந்து கி.மு.546-இல் குரோசயர்களின் நாடான இலிதியாவைப் பிடித்தார். கி.மு.550-இல் பாபிலோனியரைமிரட்ட ஆரம்பித்தார். இப்புதிய அரசன் தங்களை அடிமைப்படுத்தியர்களை அழிக்கப் போகிறார் என்று அவனின் வெற்றிக்காக ஆவலுடன் காத்திருந்தனர் இஸ்ராயேல் மக்கள். கடைசியாக கி.மு.539-இல் பாபிலோனிய அரசன் நபோனிது என்பவரை திகிரிசு என்றவிடத்தில் தோற்கடித்தார் சைரஸ். இந்த அரசன் எழுதிபுதைத்து வைத்த பெட்டகம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் அவர் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையைப் பின்பற்றியது பற்றி தெளிவான குறிப்பு காணக்கிடக்கிறது. சைரஸ் அரசன் கி.மு.538-இல் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்த பாலஸ்தீன மக்கள் தங்கள் நாட்டிற்குச் திரும்பிச் செல்லலாம் என்று கட்டளையை பிரகடனம் செய்தார்.

2. பாபிலோனியாவிலிருந்து விடுதலை (கி.மு.539-333):-

யூதாவிற்கு மக்கள் திரும்புதல்; புதிய ஆலயம் அமைக்கும் பணி ஆரம்பமாதல்:-

யூதாவின் மக்கள் பாபிலோனியாவிலிருந்து தங்கள் சொந்த நாடு போய்ச் சேரலாம் என்று சைரஸ் அரசன் அரசு ஆணையைப் பிறப்பித்தார். இவ்வாணையைப் பற்றி எஸ்ரா 1:2-4; 6:3-5 என்ற பகுதிகளில் பார்க்கிறோம். யூதா மக்களை விடுவிக்கும் ஆணையுடன் அவர்களின் இடிக்கப்பட்ட ஆலயத்தைத் திரும்பவும் அரசு உதவியுடன் கட்டியெழுப்பவும் அனுமதியளித்தார். அத்துடன் நெபுக்கதுநேசார் எருசலேம் ஆலயத்திலிருந்து எடுத்துச் சென்ற புனிதப்பாத்திரங்களையும் அவர்கள் திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம் என்ற உத்திரவையும் கொடுத்தார்.

சைரசால் விடுதலை பெற்ற யூதர்கள் மகிழ்வுடன் யூதாவின் தலைவனான சேசிபசார் தலைமையில் ஒரு குழுவினர் புறப்பட்டு வந்தனர் (எஸ் 1:9). இந்த சேசிபசார் அநேகமாக யோசக்கிமின் மைந்தர்களில் ஒருவனாயிருக்கவேண்டும். இந்த யூதாவின் தலைவன் யூதாவின் ஆளுனராக பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால் பாரசீக அரசர்களின் மேற்பார்வையின் கீழ் செயல்படவேண்டும்.

இவ்வாறு பாபிலோனியாவிலிருந்து விடுதலைபெற்று வந்த மக்களைப்பற்றி விரிவாகச் செய்திகள் நமக்குக் கிடைப்பதற்கில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். பாபிலோனியாவிலிருந்து நாடுத்திரும்பியர்களில் பெரும்பாலோர் யூதா, பென்யாமின் குலத்தைச் சார்ந்தவர்கள்.

எஸ்ரா ஆகமம் மூன்று முதல் ஆறு அதிகாரங்கள் செருபாபேல் என்பவர் மக்களுக்கும் தலைமைத் தாங்கி பணியாற்றுவதைப் பற்றி ஆர்வத்துடன் எடுத்துக் கூறுகின்றன. அடிமை விலங்கிலிருந்து விடுபட்டு, தங்கள் நாடு வந்து சேர்ந்த யூதா மக்கள் ஆர்வம் மிகுந்து விளங்கினர். எனவே தங்களின் கனவான ஆலயத்தை மீண்டும் கட்டிக் எழுப்பத் திட்டம் தீட்டினர். அதற்காக முதன் முதலில் எளிய பீடமொன்றை எழுப்பினர். பிறகு ஆலயத்திற்கான அடிதளத்தையிட்டனர். இவ்வாறு ஆர்வத்தோடு இவர்கள் செயல்பட்டாலும் உண்மையாகவே ஆலயம் கட்டும்பணி கி.மு.520-இல்தான் முழு மூச்சுடன் ஆரம்பித்தது. இச்சமயத்தில் ஆகாய், செக்கரியா என்ற இறைவாக்கினர்கள் தோன்றி மக்களின் ஆலயம் கட்டும் ஆர்வம் அணையாது தூண்டிவிட்டுக் கொண்டேயிருந்தனர். இவ்வாறு கி.மு.515-இல் செருபாபேலும் யோசுவா என்ற பெரியகுருவும் இணைந்து செயல்பட்டு மக்களின் மகத்தான முயற்சியுடன் புதிய ஆலயத்தைக் கட்டி முடித்தனர். ஆகாய், செக்கரியா என்ற இறைவாக்கினர்கள் இக்காலத்தில் பணி புரிந்தபோது தாவீதின் குலத்தில் மெசியாத் தோன்றுவார் என்ற நம்பிக்கைத் தென்றலையும் வீசச் செய்தனர்.

யூதாவின் தலைவனாக விளங்கிய செருபாபேல்மீது பாரசீகர்கள் நம்பிக்கையிழந்து சந்தேகப்படவும் தொடங்கினர். இதனால்

அவர்மீது என்ன நடவெடிக்கையெடுத்தனர் என்று அறிந்துக்கொள்ள நமக்கு வாய்ப் பில்லை. ஆனால் செருபாபேல் யூதாவின் வரலாற்றில் மீண்டும் தோன்றாமல் அடை யாளமின்றியே மறைந்துவிட்டார்.

இதற்கிடையில் கி.மு.522-இல் காம்பி சேஸ் என்ற பாரசீக அரசன் இறந்த நேரத்தில் பாரசீக அரசில் ஓர் தடுமாற்றம், குழப்பம் ஏற்பட்டது. இத்தடுமாற்ற நேரத்தில் யூதா வுக்கும் பாரசீகத்தின் அடிமையிலிருந்து முற் றிலுமாக ஓர் விடுதலை கிடைக்கலாம் என்று எதிர்பார்த்தனர் யூதமக்கள். ஆனால் பெரிய தாரியு என்ற அரசன் காம்பிசேசை அடுத்து அரியணையேறியபோது நிலவிய குழப்பங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தார். இந்தத் தாரியு கி.மு.522 முதல் 486 வரை அரசாண்டார்.

ஆனால் தாரியு அரசன் யூத மக்களிடம் கடுமையாக நடந்து கொள்ளவில்லை. மாறாக அவர்களுக்குச் சாதாகமாகவே நடந் துக் கொண்டார். உதாரணமாக யூத மக்கள் எருசலேமில் புதிய ஆலயம் கட்டத்துவக்கிய போது சமாரிய நாட்டில் குடியிருந்த யூதமக் கள் அதை விரும்பவில்லை. எனவே சமாரி யாவில் பாரசீக அரசனின் பதிலாளியான ஆளுநன் தாத்தேனாய் என்பவனிடம் சமாரி யர்கள் முறையிட்டனர். எருசலேம் ஆலயம் எழுப்பப்படுவதைத் தடுத்து நிறுத்த ஆணை யிடும்படிக் கேட்டுக் கொண்டனர். அதை ஆளுநன் தாத்தேனாய் தாரியு அரசனிடம் தெரிவித்தபோது, தாரியு ஆலயப்பணியைக் கைவிட வேண்டியதில்லை; ஏனென்றால் அது சைரஸ் அரசனால் முறையான வகை யில் அனுமதிக்கப்பட்ட பணி என்று யூத மக்களின் சார்பாகவே எடுத்துச் சொன்னார் (எஸ் 6-7).

இவ்வாறு புதிய வாழ்வைத் துவக்கிய யூதா கி.மு.520 வாக்கில் சுமார் 20,000 குடிமக் களைத் தன்னுள் கொண்டிருந்தது. இப்புதிய மக்களுக்கு பலப்பிரச்சனைகள் அவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக நின்றன. இவைக ளில் முக்கியமானவை அவர்களின் கருத்து வேற்றுமைகள், பொருளாதாரப் பிரச்சினை கள், எருக்கு முளைத்தயிடத்திலே மீண்டும் பயிர்செய்து பலன்காண வேண்டிய சவா லான சூழ்நிலை, இவற்றிற்கு மேலாக தங் கள் நாட்டின் வடக்குப் பகுதியில் வாழ்ந்த சமாரியர்களின் தொந்தரவு ஆகியவையாகும் இவற்றைப் புதிய உலகம் காண வந்த யூதமக் கள் சந்திக்க வேண்டியிருந்தது. சமாரியர்கள் இவர்களுக்கு மிகுந்த தொந்தரவு கொடுத்து வந்தனர். ஏனென்றால் சமாரியர்களும் யாவேயே தங்களின் கடவுள் என்று வழிபட் டனர். இதனால் யூதாவும் இவர்களைச் சார்ந் தது என்று வாதிட்டனர்.

செருபாபேல் ஆலயம் அமைக்க ஆரம்பித் தபோது சமாரியர்களும் இப்பணியில் கலந் துக்கொள்ள முன்வந்தனர். ஆனால் செருபா பேல் அவர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ள முடியாது என்று தெரிவித்து விட் டார். எனவே சமாரியாவிற்கும் யூதேயாவிற் கும்மிடையே பகையுணர்வு வளரத்தொடங் கியது. இப்பகையுணர்வு குறைய வழியில் லாமல் காலப்போக்கில் வளர்ந்து கொண்டே சென்றது. இதனை பின் வரலாற் றிலும் காணலாம். கி.மு.515 முதல் 450 வரை நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விரிவாக ஒன் றும் தெரியவில்லை. எஸ்ரா நான்காம் அதி காரத்திலும் நெகமியா ஆகமத்திலும் மலாக் கியா ஆகமத்திலும் மேற்கண்ட காலத்தில் மக்கள் பெற்றனுபவித்தத் துன்பங்களைப் பற்றி சிறிதளவு பார்க்கிறோம் இக்காலத்தில் யூத மக்கள் பெரும் அல்லல்களுக்கு ஆளா னார்கள் என்று தயங்காமல் கூறலாம்.

3. நெகமியா, எஸ்ரா ஆகியவர்களின் பணிகள்:-

நெகமியா பாபிலோனியாவில் அடிமை யாக வாழ்ந்த யூதர்களில் ஒருவர். இவர் முதலாம் அர்த்தாசெருக்கு என்ற பாரசீக அரச னுக்கு உணவுப் பரிமாறும் பணியைச் செய் துவந்தார். இவர் இவ்வாறு பணி செய்து வாழ்ந்து வந்த இடம் சூசா என்பது. இவர் சுமார் கி.மு.445-இல் எருசலேம் எவ்வாறு இழிவான நிலையில் இருந்தது என்பதை கேள்விவாயிலாகத் தெரியவந்தார். எனவே

அவர் மனம் கொதித்தெழுந்தது. இழிவில் மூழ்கிவிட்ட எருசலேமை சீருடன் அமைக்க ஆவன செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டார்.

எனவேதான் பணி செய்த மன்னனிடம் மன்றாடி யூதாவின் ஆளுநராகத் தன்னை நியமித்து அதனின் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு யூதா வந்து சேர்ந்தார். இவர் தன் முதல்பணியாக எருசலேமைச் சுற்றி மதில் சுவர் எழுப்பவேண்டும் என்று திட்டம் தீட்டினார். இச்சுவர் பற்றி எவ்வாறு கவனமாக திட்டம் தீட்டப்பட்டுக் கட்டப்பட்டது என்பது பற்றி நெக 2-4-இல் காணலாம்.

நெகமியாவின் பணிகளுக்கு நிறையத் தடைகளும் எதிர்ப்புக்களும் தோன்றின. முக்கியமாக உணர்வற்று ஊக்கமற்று நின்ற யூத மக்களைத் தட்டியெழுப்பி அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதே நெகமியாவிற்கு பெரியச் சாதனையாக இருந்தது. அத்துடன் யூதாவைச் சுற்றியிருந்த ஆளுநர்கள் நெகமியாவின் புதுமறுமலர்ச்சி முயற்சிகளுக்கு எதிர்ப்பாக நின்றனர். குறிப்பாக சமாரியாவின் ஆளுநனாக விளங்கிய சம்பல்லாத்து என்பவரும் யோர்தானில் மேற்குப் பகுதியின் ஆளுநன் அம்மானில் வாழ்ந்த தோபியா என்பவரும் அராபிய பகுதியின் ஆளுநனாக விளங்கிய கெசம் என்பவரும், நெகமியா செய்து வந்த பணிகளுக்குப் பெரும் எதிர்ப்பு கொடுத்து வந்தனர். இதில் சமாரியாவின் ஆளுநன் சாம்பல்லாத்து அநேகமாக யூத இனத்தைச் சார்ந்தவனாயிருந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவருடைய மகன்களின் பெயர்கள் அதனைக் குறித்துக் காட்டுகின்றன. அவருடைய மக்களின் பெயர்கள் தெலாயா, செலமியா என்பவை யாகும். இவ்வாளுனர்கள் யூதாவிலேயே நெகமியா வின்பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை பயன்படுத்தி நெகமியா தான் நினைத்த மறுபலர்ச்சியைக் கொண்டுவருவதில் தடையாய் நின்றனர். உதாரணமாக யூதாவில் அக்காலத்தில் பெரிய குருவாகயிருந்தவர் யோயதா என்பவர். இவர் எலியாசிபு என்பவரின் மகன். இவர் நெகமியாவின் எதிர்ப்பாளர்களில் முக்கியமான ஒருவர். இவரையும் பயன்படுத்திக் கொண்டுதான் சுற்றிலும் வாழ்ந்த மேற்குறிப்பிட்ட ஆளுநர்கள் நெகமியாவை எதிர்த்து வந்தார்கள். ஆனால் நெகமியா அஞ்சாநெஞ்சம் கொண்டவராய் வந்த தடைகளையெல்லாம் பற்றிப் பொருட்படுத்தாது தான் எடுத்துக் கொண்டத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தார் (நெக 5-6:14).

நெகமியா யூதாவுக்கு வந்த நாட்களில் யூதா ஒரு சிறிய மாநிலமாகவே திகழ்ந்தது; தெற்கே பெத்தேல் முதல் வடக்கே பேத்சூர் வரை பரவியிருந்தது. நெக 7 அம்மாநிலத்தில் வாழ்ந்த மக்களின் விவரங்களைக் கூறுகிறது. இம்மக்களின் குறிப்புகளைப் பார்க்கின்றபோது, இவர்கள் பலவிடங்களின் தோன்றியவர்களாகவும் பல குலத்தைச் சார்ந்தவர்களாகவும் இருப்பது தெரிகிறது. ஆல்பிரைட் என்ற அறிஞரின் ஆராய்ச்சியின் படி, நெக 7, எஸ் 2-இல் குறிப்பிட்டுள்ள மக்கள் இரண்டு வகுப்பினராகப் பிரிக்கப்படலாம் என்கிறார். அதாவது ஒரு பிரிவினர் பாபிலோனியாவிலிருந்து சைரஸ் மன்னன் விடுதலை வழங்கியபோது யூதயாவிற்கு வந்து சேர்ந்தவர்கள். இவர்களின் பெயர்கள் வெளிநாட்டு வாடையுடன் விளங்குவதைக் காணமுடிகிறது. உதாரணமாக பிகிவாய், ஏலாம் என்ற பெயர்கள். மற்றொரு பிரிவினர் முதலிலிருந்தே யூதாவில் வாழ்ந்தவர்கள் அல்லது சைரஸ் அரசன் விடுதலை வழங்குதவற்கு முன்னமே யூதாவிற்கு வந்து சேர்ந்தவர்கள்.

நெகமியா கண்டிப்புடன் நிர்வாகத்தை நடத்தி வந்தார். அத்தகைய கண்டிப்பினால் தான் அப்போது மக்களை அரசியல் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் வளர்க்க முடிந்தது. இவ்வாறு யூதாவைத் தனிமாநிலமாக அமைத்து இதனைத் தனிநாட்டைப் போல உருவாக்கியப் பெருமை நெகமியாவையேச் சாரும். இவ்வாறு தன் பணிகளை யூகாவில் செய்த பிறகு நெகமியா மீண்டும் கி.மு.433-இல் பாரசீகம் திரும்பினார். தான் யூதாவில் தங்கியிருந்த பன்னிரண்டு ஆண்டு

களில் தான் திட்டமிட்டதையெல்லாம் செய்ய முடிவில்லையே என்ற மனப்பாரத்துடன் தான் பாரசீகம் திரும்பினார். எனவே பாரசீகத்தில் அவர் அதிகக் காலம் தங்கியிருக்க அவருக்கே பிடிக்கவில்லை. எனவே மீண்டும் யெருசலேமிற்கு தனது மறுமலர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றத் திரும்பினார்.

இவர் எருசலேமைவிட்டு நீங்கியிருந்த சில காலத்திலேயே பலவிதத்தில் மக்களின் வாழ்க்கைப் பாழ்பட்டிருந்தது. எனவே முழுமையான சமய சீர்திருத்தம் செய்தாக வேண்டும் என்று உணர்ந்தார் நெகமியா. எனவே அவர்களின் சமயக் கொள்கைகளில் நுழைந்து கொண்ட பல அன்னிய சடங்குமுறைகளையெல்லாம் கவனமாக அகற்ற ஆரம்பித்தார் நெகமியா. உதாரணமாக அம்மோனிய மனிதன் தோபியாசு என்பவருக்கு ஆலயத்திலேயே ஒரு தனி அறையை அமர்த்திக் கொடுத்திருந்தார் எலியாசிபு என்ற பெரிய குரு (நெக 13:4 தொ). நெகமியா இந்த தோபியாவின் அறையை ஆலயத்திலிருந்து அகற்றினார். லேவியர்களுக்குச் சேரவேண்டிய வருமானத்தின் பத்தில் ஒரு பங்கை சரியாக அவர்களுக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். ஓய்வு நாட்களில் வியாபாரம் செய்யக் கூடாது என்ற பழக்கத்தை மீண்டும் மக்கள் மத்தியில் நிலவிடச் செய்தார். யூதாவைச் சார்ந்த யூதர்கள் மற்றயினத்தவரோடு எந்தவித திருமணஉறவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு புதுச் சட்டத்தையும் கொண்டு வந்தார். இவ்வாறு இரண்டாவது முறையாக யூதாவின் ஆளுநராக வந்த நெகமியா விளங்கினார். ஆனால் எத்தனையாண்டுகள் இந்த இரண்டாவது தவணையில் ஆளுநராக விளங்கினார் என்பதை அறிந்துக் கொள்ள முடியவில்லை. இவர் இவ்வாறு தன்னையேத் தியாகம் செய்துகொண்டு யூதாவின் ஒரு புது வாழ்வை உயிர்ப்பித்தார் என்று சொல்லலாம் இவர் மக்களிடம் கண்டிப்பாக நடந்து கொண்ட அதே வேளையில் மக்களின் நலனே தன் ஒரே நோக்கம் என்பதற்காக தன் சுகங்களையும் வசதிகளையும் மிகக் குறைத்து வாழ்ந்து வந்துள்ளார் (நெக 5:14-19).

பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த யூதேயா மக்கள் மத்தியில் பணிபுரிந்த மற்றொருவர் எஸ்ரா என்பவர். அவர் எவ்வாண்டில் யூதாவிற்கு வந்து பணிபுரிந்தார் என்பதில் சில சிக்கல்களைப் பார்க்கிறோம். எஸ் 7:7, எஸ்ரா அர்த்தாசெருசு ஆட்சியின் ஏழாம் ஆண்டில் யூதாவுக்கு வந்தார் என்று கூறுகிறது. அர்த்த செருசு என்பவர் முதலாம் அர்த்தாசெருசு என்று எடுத்துக் கொண்டால் இங்குக் குறிப்பிடப்படுகிற ஆண்டு கி.மு.458 ஆகும். அப்படிபார்த்தால் நெகமியா யூதாவிற்கு வந்த கி.மு.455ஆம் ஆண்டிற்கு முன்பே எஸ்ரா அங்கு வந்துவிட்டார் என்று கணக்காகிறது. நெகமியாவிற்கு முன்பாக எஸ்ரா யூதேயாவிற்கு வந்து விட்டார் என்பது சரியான உண்மையல்ல.

வேறுவழியில் எஸ் 7:7-இல் குறிப்பிட்டுள்ள அர்த்தாசெருசு இரண்டாம் அர்த்தாசெருசு என்று வைத்து கணக்கிட்டுப் பார்த்தால் இங்கே குறிப்பிடப்படும் ஏழாம் ஆண்டு கி.மு.398-ஆம் ஆண்டு பாபிலோனியாவிலிருந்து யூதமக்கள் திரும்பி வந்த காலத்திற்கு மிகவும் பின்பாக காலத்தைக் குறைத்து பொருத்தமில்லா காலத்தைக் குறித்துக் காண்பிக்கிறது.

ஒருசிலர் கீழ் காணும் முறையில் எஸ் 7:7க்கு விளக்கம் கூறுவர். அதாவது எஸ் 7:7-இல் கூறப்பட்டுள்ளது முதலாம் அர்த்தாசெருசின் ஏழாமாண்டு அல்ல. மாறாக முதலாம் அர்த்தாசெருசின் முப்பத்திஏழாம் ஆண்டு என்று கூறுவர். இக்கணக்கின்படி பார்த்தால் எஸ்ரா யூதாவுக்கு வந்த ஆண்டு கி.மு.428 ஆகும். இவ்வாண்டு நெகமியா இரண்டாம் முறை யூதாவில் பணியாற்றிய போது எஸ்ராவும் யூதாவில் பணிசெய்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இந்தக்கருத்தை 37-ஆம் ஆண்டு என்பதை தன் ஒரு யூகமாவே ஆல்பிரைட் என்ற அறிஞர் கூறுகிறார். இந்த யூகத்திற்கு சான்று பகர எஸ்ராவின் புத்தகத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை.

எஸ்ரா, நெகமியா ஆகியோருடைய சீர்திருத்தங்களைப் பற்றிய காலவரையறைபற்றிய பிரச்சினைக்குக் கருத்தொருமைமிக்க விடைகாண்பது எளிதன்று. எஸ்ராவும் நெகமியாவும் தனித்தனியே வேறுபட்ட காலங்களில் பாபிலோனியாவிலிருந்து திரும்பி வந்து யூதர்கள் மத்தியில் பணிபுரிந்தனர் என்று சில அறிஞர்கள் கூறுவர். வேறுபலர் இருவரும் ஒரே காலத்தில் உழைத்தனர் என்று கூறுவர். இது வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு மிக நெருங்கியதாகத் தெரிகிறது. இதன்படி, நெகமியாவின் இருதூதுகளுக்கிடையில் எஸ்ராவின் தூது அமைகிறது. தனது தூதின் முதற்பகுதியின் முடிவில் சமய வழி பாட்டுக் காரியங்களில் நிலவிய அமைதியற்ற நிலையைக் குருவல்லாத ஒருவரால் சமாளிக்க முடியாது என்பதை நெகமியா ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இதன்படி, எஸ்ரா, ''விண்ணக இறைவனின் திருச் சட்ட நூலில் வல்லுநர்'' (எஸ் 7:12) என்றபட்டத்தோடு எருசலேமுக்கு அனுப்பப்படுகிறார். சில அறிஞரது கருத்துப்படி நெகமியாவோடு எஸ்ராவும் உண்மையான நிலையை அறிய எருசலேமுக்குப் பயணமானார். அங்கு நிலவிய அவலநிலையை அறிந்த பின், அவர் பாபிலோனுக்குத் திரும்பிவந்து வேண்டிய அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு புதியதோர் நாடு திரும்பும் குழுவினரோடு எருசலேமுக்கு வந்தார். இக்கருதுகோளுக்கு ஏற்றபடி எஸ் 7:7-இல் ஒருதிருத்தம் அவசியமாகிறது. ஏழாம் ஆண்டு என்பதற்குப் பதிலாக இருபத்தேழாம் அல்லது முப்பத்தேழாம் ஆண்டு என்று வாசிக்க வேண்டும். 27-ஆம் ஆண்டைத் தேர்ந்து கொண்டால், சட்டம் பகிரங்கமாக வாசிக்கப்படும்போது நெகமியாவோடு எஸ்ரா இருப்பதையும், சட்ட வல்லுநரின் செயல் ஆளுநரின் செயலோடு இணைக்கப்பட்டால் எஸ்ராவின் அறிக்கை ஏன் இடம் பெயர்ந்தது என்பதையும் எளிதில் விளக்க முடியும் (நெக 7:73-8:9). இக்கருத்தின்படி எஸ்ராவும் நெகமியாவும் ஒருவரையொருவர் சார்ந்து செயல்பட்டனர்.

4. எஸ்ரா:- எஸ்ரா ஒரு குரு. இவருக்கு ''விண்ணகக் கடவுளின் திருச்சட்ட நூலில் வல்லுநரான குரு'' என்ற அதிகாரப் பூர்வமானப் பட்டமும் கொடுக்கப்பட்டிருந்தது (எஸ் 7:12-26). இவ்வாறு இவர் நெகமியாவைப் போல் அரசியல் தலைவராக இல்லாமல் சமயத் துறைக்கு மட்டும் பொறுப்பாளராகத் திகழ்ந்தார். இவருடையபணி யூதர்கள் சமயச் சட்டங்களை யூதர்களுக்குப் போதித்தலும் அதனை மக்கள் கடைப்பிடிப்பதை மேற்பார்வை செய்தலுமாகும் இதற்காக இவர் பாரசீக அரசர்களின் அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.

எஸ் 7; செக் 8-இன்படி எஸ்ரா ஒரு குழுவினரை அழைத்துக் கொண்டு, பாபிலோனியாவிலிருந்து பாலஸ்தீனம் வருகிறார். அவர் யூதா வந்து சேர்ந்ததும் தன் முதல் பணியாக எருசலேமில் மக்களையெல்லாம் கூட்டி அவர்கள் நடுவில் சட்டங்களை வாசிக்கிறார். அவ்வாறு அவர் வாசித்த நாள் புதுவருட திருவிழா. வாசிக்கப்பட்டச் சட்டங்கள் ஐந்நூல்கள் என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இச்சட்ட வாசிப்பைத் தொடர்ந்து மனஸ்தாப வழிபாடு ஒன்றை நடத்துகிறார் எஸ்ரா (எஸ் 10). இவ்வழிபாட்டில் தங்கள் இனத்தைச் சாராத மற்ற இனப் பெண்ணை யாரும் மனைவியாக்கியிருந்தால் அவர்களை விவாகரத்து செய்வதென்று உறுதியெடுத்துக் கொண்டனர் மக்கள். நெக.9-10-என்ற பகுதி எஸ்ரா தலைமையில் மக்கள் உடன்படிக்கையை புதுப்பித்த சடங்கை நிறைவேற்றியதையும் தங்களின் விசுவாசத்தை உள்ளம் நெகிழ அறிக்கையிட்டதையும் தெரிவிக்கின்றது. தங்களின் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்ட உறுதியில் கீழ்கண்டவைகளைக் கடுமையாகக் கடைப்பிடித்து வாழத் தீர்மானம் கொண்டனர். இனிமேல் எவ்விதத்திலும் தங்கள் இனத்தைச் சாராதப் பெண்களை மணமுடித்துக் கொள்வதில்லை; இரண்டாவதாக ஓய்வு நாள் கடமைகளை ஒருபிசகில்லாமல் பின்பற்றுவது; மூன்றாவதாக புதியதாகக் கட்டப்பட்ட எருசலேம் ஆலயத்தை உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவது. மேற்கண்டத் தீர்மானங்களில் முக்கியமானது வேற்றினப் பெண்களுடன் திருமணம் செய்வது சட்ட

விரோதமானது என்பதாகும். அதனால் அத்தி ருமணம் செல்லுபடியாகாது என்றும் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு கலப்புத் திருமணங்களுக்கு எஸ்ரா தடைவித்தது போலவே நெகமியாவும் கலப்புத் திருமணங்கள் யூதேயாவில் நடைபெறுவதை நிறுத்தி வைத்திருந்தார்.

இந்த எஸ்ராவைப் பற்றிப் பிற்காலத்தில் பலவித கட்டுக் கதைகள் பிறக்க ஆரம்பித்தன. எஸ்ராவை புகழ்ந்துக் கூறும் வகையில் தான் இக்கதைகள் ஏற்பட்டன. இவர் இரண்டாவது மோசே என்றழைக்கப்பட்டார். இவரே பழைய ஏற்பாட்டின் புத்தகங்களைத் தொகுத்து, அவைகளே அனைவரும் வாசிக்க வேண்டிய அதிகாரம் பெற்ற புத்தகங்கள் என்று ஏற்பாடு செய்தவர் என்றும் சில பாரம்பரியங்கள் கூறுகின்றன. இவைகள் இப்படியிருப்பினும், சட்டமே வாழ்வின் உயிர் என்ற முறையில் யூத மக்கள் வாழ்வதற்கு முக்கியக் காரணமாக விளங்கியவர் எஸ்ரா. சட்டத்தின் மீது அளவுக்கு மீறிய பற்றுதல் இதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. இதனால் மக்கள் சட்டங்களுக்கு அடிமையாகும் நிலையேற்பட்டது. இம்மன நிலைத்தான் இயேசுபிறந்த காலத்திலும் மக்கள் மத்தியில் நிலவி வந்தது. இதனைத்தான் இயேசு கடுமையாகச் சாடினார்.

எஸ்ராவின் காலத்தில் புத்தகங்கள் எழுதப்பட்டு, அப்புத்தகங்களை மக்கள் படித்துப் பயன்பெறும் பழக்கம் பரவலாகயிருந்தது. ஆனால் எஸ்ரா நூற்களைத் தொகுத்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. எஸ்ரா நாளாகமங்களில் ஆசிரியர் என்றும் ஒருசிலர் கூறுவர். இக்கூற்றிற்கும் எவ்வித ஆதாரமுமில்லை.

நாளாகம ஆசிரியர் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்கிறார். அவர் சிந்தனையின் கனிகளைத் தனது புத்தகத்தில் வரிவடிவமாக்குகிறார். நாளாக ஆசிரியர், பாபிலோனிய அடிமைத்தனத்தின் காலத்தை விட மிகவும் பிற்பட்டவர் அவரின் முக்கிய இறையியல் கருத்து என்னவென்றால், அவர்களின் மக்கள் பின்பற்றி வந்த சடங்குகள் ஒழுங்குகள் முறையானவை; முற்காலத்தில் மோசே, தாவீது ஆகியவர்களால் எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டதோ அதே முறையில் பழுதில்லாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்ற கருத்தை சொல்வதற்குத்தான் சிரத்தையெடுத்துக் கொள்கிறார் நாளாகம ஆசிரியர். உருடால்ப் என்ற அறிஞர் நாளாகம ஆசிரியரின் நோக்கம் மேற் குறிப்பிட்டிருப்பதுதான் என்று தனது ஆராய்ச்சியின் முடிவாகக் கூறுகிறார். அதாவது இறைவனின் திட்டம் இஸ்ராயேலில் நிறைவேறியது என்பதுதான் அவர் கூறவிரும்பும் முக்கியக் கருத்தாகும்.

இவ்வாறு இறையியல் கருத்துக்கள் நாளாகம புத்தகத்தில் நிரம்பி நின்றாலும், கி.மு. நான்காம் நூற்றாண்டின் யூதாவின் வரலாற்றினை அறிந்துக் கொள்வதற்கு ஓர் ஆதார நூலாக இந்நாளகமம் விளங்குகிறது இல்லையென்றால் யூதாவின் கி.மு. நான்காம் நூற்றாண்டு வரலாற்றைப் பற்றி விவரித்துக் கூறும் ஆதாரபுத்தகங்கள் நமக்கு வேறு கிடைக்கவில்லை. இவ்வாறு தனிப்பட்ட தன்மைக் கொண்ட நாளகமத்தை எஸ்ரா எழுதினார் என்பதற்கு முடிவான ஆதாரமில்லை.

பாபிலோனிய அடிமை நிலையிலிருந்து விடுபட்டு வந்த யூதா மக்களும் எருசலேம் குடிவாழ்வோரும் தாங்கள் மற்ற நாடுகளிலிருந்து வேறுபட்டவர்கள், அவர்களை விட்டு பிரிக்கப்பட்டவர்கள் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர்கள். இவ்வாறு இவர்கள் மற்றவர்களைவிட வேறுபடுவதற்குக் காரணம், இவர்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதாகும். இதனால்தான் பாபிலோனிய அடிமைத்தனத்தில் மிதிபடும் விதியேற்பட்டாலும், அதிலிருந்து அற்புதமாக மீட்டுக் கொண்டு வரப்பட்டனர். மேலும் யூதாவில் வந்து குடியேறிய மக்களைத்தான் நெகமியாவும் எஸ்ராவும் ஆலயத்தில் இறைவனுக்கு அர்ப்பணித்தனர். இவர்களைத்தான் மதில்சுவர்களைக் கட்டி, மற்றவர்களுடன் கலந்து களங்கப்படுத்திக் கொள்ளாமல் காப்பாற்றினர்.

5. பாரசீகர்களின் ஆட்சி:- யூதா பாரசீகர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தைப் பற்றி நாம் அதிகமாகக் கூற முடியாது. எஸ்ரா, நெகமியா ஆகமங்கள் தரும் தகவல்கள்தான் நாம் இக்காலத்தை பற்றி அறிந்துக் கொள்ளும் செய்திகளாகும். யூதாவின் வரலாற்றில் இக்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி தெளிவாகத் தெரிந்துக் கொள்ள வாய்ப்பில்லை என்றாலும், இக்காலத்தில் யூத மக்களிடம் நிலவிய சமயச் சூழ்நிலையைப் பற்றி ஓரளவிற்கு ஊகித்துக் கூறலாம்.

இக்காலத்தில் யூத மக்களுக்கு தங்களின் பாரம்பரிய சட்டங்கள்மீது தனிப்பற்றுதல் ஏற்பட்டிருக்கிறது. எருசலேம் ஆலயத்தில், தலைமைக்குருக்கள், லேவியர்கள் ஆகியவர்களைத் தலைமையாக வைத்துப் பாரம்பரிய வழிபாடு ஊக்கமுடன் நடத்தப்பட்டிருக்கிறது. இதைத்தான் நாளாகம ஆசிரியர் தன் நூலில் தொட்டுக் காட்டி எழுதியுள்ளார். இவர்கள் வழக்கமான மூன்று முக்கிய திருவிழாக்களுடன் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யும் விழாவையும் சிறப்பாக கொண்டாடியுள்ளனர். இவர்களுடைய சமுதாய வாழ்வில், தலைமைக்குரு மக்களின் தலைவராக பணியாற்றியிருக்கிறார். இத்தலைமைக் குருக்கள், தாவீதின் குரு சாதோக்கின் வழித்தோன்றல்களாக விளக்கவேண்டும் என்ற நியதியையும் வைத்திருந்தனர்.

தொல்பொருள் ஆராய்ச்சியின் மூலமாகவும், இக்காலத்தைப் பற்றி அதிகம் தெரிந்துக் கொள்ள வாய்ப்பில்லை. இக்காலத்தில் யூத மக்கள் தங்களுக்கு வேண்டிய நாணயங்களை அச்சடித்துக் கொள்ளும் உரிமையைப் பாரசீக அரசன் அவர்களுக்குத் தந்திருந்தார் என்று தெரிகிறது. இதனை தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் தெரிவிக்கின்றன. பல நாணயங்களில் 'யூதா' என்று எபிரேய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

இலாக்கிசு என்ற நகரில் நடத்தப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியில், அங்கு கி.மு. 400-ஆம் ஆண்டுக் காலத்தின் பாரசீகர்களின் அரண்மனையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அநேகமாக அவ்வரண்மனைக் கட்டிடம், பாரசீக ஆளுநர் வாழ்வதற்காகக் கட்டப்பட்டிருக்க வேண்டும். இந்த ஆளுநர் பாரசீக அரசின் தென்பகுதியான ஏதோமைக் கண்காணித்திருக்க வேண்டும்.

எகிப்து நாட்டின் எலபன்டைன் என்றவிடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட புல்தாள் கவடிகள் இக்காலத்தில் வெளிநாடுகளில் வாழ்ந்த யூதர்களின் சமய வாழ்க்கை எம்முறையில் அமைந்திருந்தது என்பதைக் கண்டுகொள்ள மிகவும் உதவுகின்றன. இச்சுவடிகள் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். எகிப்து அரசன் பல யூதர்களை படை வீரர்களாக வைத்திருந்தான். அவர்கள் எலபன்டைன் நகரில் குடியமர்த்தப்பட்டிருந்தனர். இந்த யூத வீரர்கள் முக்கியமாக எத்தியோப்பியர்களை எதிர்த்து நிற்க ''சீன்'' என்ற நகரில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் மேற்சொன்ன, எலபன்டைன் தீவில் ஒரு நூற்றாண்டிற்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். இந்த எலபன்டைன் தீவு நைல் நதியில் உள்ளது. இவர்கள், யூதாவைச் சேர்ந்த யூதர் மரபுகளிலிருந்து மாறிய ஒரு புது விதமான முறையில் யாவேயின் வழிபாட்டை தங்களுக்கென்று தனித்த வகையில் அமைத்துக் கொண்டனர். இவர்கள் உப ஆகமம் கூறும் ஒழுங்கினை மீறி, தங்களுக்கென்று ஒரு தனி ஆலயத்தைக் கட்டிக் கொண்டனர். (யூதர்களுக்கு எருசலேம் ஆலயம் ஒன்றுதான் உண்மையான ஆலயம் என்று உப ஆகமம் கூறுகிறது). இவர்கள் தங்கள் வழிபாட்டைக் கானானியர் வழிபாட்டு சடங்குமுறைகளையும் பின்பற்றி அமைத்திருந்தனர். கனானியரின் அனத் என்ற தெய்வம் யூதர்கள் வழிபட்ட ஆண்டவர் என்பவருடன் உறவு கொண்டவர் என்று விளக்கம் கொடுத்தனர்.

எலபன்டைனில் கிடைத்தச் கவடிகளில் எசம்பெத்தேல், ஏரம்பெத்தேல் அனத் பெத்தேல் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. ஆல்பிரைட் என்ற அறிஞர், இவை 'இறைவ

னின் வீட்டின் பெயர்', 'இறைவன் வீட்டின் தூய்மை', 'இறைவன் வீட்டின் அடையாளம்' என்ற எபிரேயப் பெயர்கள் தழுவிய பெயர்கள் என்று விளக்கம் தருகிறார்.

கி.மு.525-இல் காம்பிசேஸ் என்ற பாரசீக அரசன் எகிப்தின் மீது படையெடுத்து அதை வெற்றி கொண்டார். அப்போது எலபன்டைனில் வாழ்ந்த யூதர்களை அவன் தாக்கவேயில்லை. அதற்கு மாறாக அவர்களுக்கு சாதகமாகவே பாரசீக அரசர்கள் நடந்து வந்துள்ளார்கள். உதாரணமாக கி.மு.419-இல் இரண்டாம் தாரியு அரசன் அர்சாமெஸ் என்றவிடத்தின் ஆளுனனுக்கு அரச ஆணைகள் அனுப்பியபோது, யூதர்களின் புளியாத அப்பத்திருவிழாவைப் பற்றி அறிவுறுத்தி எழுதியனுப்பினார்.

கி.மு.410-இல் எலபன்டைனில் சூழ்நிலை மாறியது. அர்சாமெஸ் என்ற ஆளுநனுக்குப் பதிலாக விட்ரேங்கு என்ற பாரசீக அலுவலன் ஆளுநனாக நியமிக்கப்பட்டான். அவனின் காலத்தில் எலபன்டைனிலிருந்த யூதர்களின் ஆலயத்தை எகிப்தியர்கள் இடித்து விட்டனர். எலபன்டைனில் கண்டெடுக்கப்பட்ட சில கடித சுவடிகள், இச்சூழ்நிலையில் தங்களின் ஆலயத்தை மீண்டும் கட்டி எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டனர் எலிபன்டைன் யூதர்கள் என்று கூறுகிறது.

எலிபன்டைன் யூதர்கள், அப்போது எருசலேமில் பெரிய குருவாக விளங்கின எலியாசிபு மகன் யோகனானுக்குப், புதிய ஆலயம் கட்ட உதவி வேண்டிக் கடிதம் எழுதினர். இக்கடிதத்திற்குப் பெரிய குரு பதில் எழுதவேயில்லை. ஏனென்றால் யூதர்களுக்கு, எருசலேம் ஆலயத்தைத் தவிர்த்து மற்றொரு ஆலயத்தை நினைத்துக் கூட பார்க்க முடியாது. பெரியகுருவிடமிருந்து மறுமொழி வராத காரணத்தால் பகோவா என்ற யூதேயாவின் ஆளுநனுக்கு உதவிக் கேட்டுக் கடிதம் எழுதினர். இத்துடன் சமாரியாவின் ஆளுநர்களுக்கும் புதிய ஆலயம் கட்ட உதவிக் கேட்டு எலபன்டைன் யூதர்கள் கடிதம் எழுதினர். சம்பல்லாத்து தெலாயா, செலமியா என்பவர்களின் புதல்வர்கள் அப்போது சமாரியாவின் ஆளுநர்களாக விளங்கினார்கள். இவ்வாளுநர்கள், தங்களால் இயன்ற உதவிகளை எல்பன்டைனில் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்த புதிய ஆலயத்திற்காக அனுப்பிவைத்தனர். இவ்வாலயம் கட்டும் பணிக்கு பாரசீகர்களின் உதவி தொடர்ந்து கிடைத்திருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் பாரசீகர்களின் ஆட்சி கி.மு.400 முதல் எகிப்தில் இல்லாமல் எகிப்தியர் பாரசீகர்களைத் தோற்கடித்து அவர்களை நாட்டிலிருந்து விரட்டியடித்தனர்.

விவிலியத்தில் இக்காலத்தைப் பற்றி விரிவாக கொடுக்கப்படாததைப் போலவே, யோசிபசின் வரலாற்றுக் குறிப்பிலும் பாரசீகர்களின் காலத்தைப் பற்றி சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளது. இவர் கூறும் நிகழ்ச்சிகள், உண்மையாகவே நடத்திருக்க முடியாது என்று சில அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். உதாரணமாக, யோகனான், யோசுவா என்ற இரு சகோதரர்களைப் பற்றி எழுதிவைத்திருக்கிறார் யோசிபஸ். யோசுவா எருசலேமின் பெரிய குருவாக, பாரசீக ஆளுநர் பகோவா என்பவனால் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவருடைய சகோதரன் யோகனான் யோசுவாவை எருசலேம் ஆலயத்திலேயே வைத்து வெட்டிக் கொலை செய்து விட்டான். இதையறிந்த பாரசீக ஆளுநன் பகோவா தானே ஆலயத்திற்குள் நுழைந்து, யோசுவாவின் கொலையால் உண்டானக் குழப்பத்தைத் தீர்த்து வைத்தான். தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனையும் விதித்தான் பகோவா. இந்நிகழ்ச்சியை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக யோசிபஸ் உருவாக்கி சொல்லியிருக்க வேண்டும் என்கின்றார்கள் சில அறிஞர்கள். அதாவது எஸ்ராவை, முதலாம் அர்த்தாசெருசு கி.மு.400-இல் எருசலேமிற்கு அனுப்பிவைத்தார். எருசலேமில் குழப்பங்கள் நிலவிவந்ததால் அதை அமைதி செய்யும் முகத்தான் எஸ்ரா அனுப்பி வைக்கப்பட்டார் என்று கூறுவதற்காகவே யோசுவா, யோக

னான் ஆகியவர்களின் கதையை யோசிபஸ் எழுதினார் என்பர் ஒரு சில அறிஞர்கள்.

இஸ்ராயேல் வரலாறு - VI - கிரேக்கர் காலம் *(கி.மு.333-63)*

1. அலெக்ஸாண்டர் முதல் செலூக்கியர்களின் ஆக்கிரமிப்பு வரை (333-175):-

பாரசீக அரசர்கள் கிரேக்க நாட்டில் படையெடுத்துச் சென்றதைப் பற்றி எரதோத்துசு, லிவி என்ற ஆசிரியர்கள் தங்களது நூல்களில் குறிப்பிட்டு எழுதியுள்ளனர். கிரேக்க நாடுகளின்மீது படையெடுத்த பாரசீகர்கள், அப்போர்களினாலேயே தோல்வி கண்டு மண்ணைக் கவ்வினர்.

மக்கதோனியாவின் அரசன் பிலிப்பு என்பவர், கிரேக்க நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே நாடாக விளங்க ஏற்பாடு செய்தார். பிலிப்புவின் மகன் அலக்சாந்தர் கிரேக்கப் பேரரசு, அடுத்து கிரேக்க நாட்டையும் தாண்டி மற்ற நாடுகளையும் கைப்பற்ற தன் இராணுவத்தை இயக்கினார். தன் நாட்டின்மீது படையெடுத்து வந்து அதைப்படித்திருந்த, பாரசீகர்களைக் கிரானிகுஸ் என்ற ஆற்றில் தோற்கடித்தார் அலக்சாந்தர். இவ்வாறு பாரசீகர்களை முறியடித்து சிறிய ஆசியாவைக் கைப்பற்றினார். கி.மு.333-இல் ஈசுஸ் என்ற இடத்தில் நடந்த போரிலும் அலக்சாந்தர் வெற்றிமாலைசூடி சீரியா நாட்டில் அடியெடுத்துவைத்தார்.

யூதேய எழுத்தாளர் யோசிபஸ் அலக்சாந்தர் எருசலேம் வழியாக எகிப்திற்குப் படையுடன் சென்றதைத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். கி.மு.331-இல் எகிப்தியநாட்டில் தனது பெயரில் அலக்சாந்திரியா என்ற புதிய பொழிவான நகரை உருவாக்கி அமைத்துவிட்டு மீண்டும் வடக்கு நோக்கி தனது நாடுகள் பிடிக்கும் பயணத்தை ஆரம்பித்த தார் அலக்சாந்தர். இப்பயணத்தில் திகிரிசு நதியின் அடுத்த கரையில் அரபெலா பாரசீகர்களைச் சந்தித்தார் அலக்சாந்தர். அப்போரில் பாரசீகர்களை அடியோடு தோற்கடித்தார். அவர் வெற்றிபயணம் அத்துடன் நிற்கவில்லை. இந்தியாவின் சிந்து நதிவரை படையெடுத்துச் சென்றார். அங்கு தன் முன்னேற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தன் நாடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தபோது கி.மு. 323-இல் பாபிலோனியாவில் அவர் இறந்தார்.

வரலாற்று ஆசிரியர் யோசிபஸ் தனது நூலில் எருசலேம் நகரின்வழியாக அலெக்சாந்தர் எகிப்திற்குச் சென்றதாகக் குறிப்பிடுகிறார். இக்கூற்றைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் நடுவில் பெருத்த விவாதம் உண்டு. ஆனால் இவற்றைவிட அதிகமாக, சமாரியர்கள் எப்போது தனியாகப் பிரிந்தார்கள்? அவர்கள் கெராசிம் நகரில் எப்போது தங்களின் ஆலயத்தை எழுப்பினார்கள்? என்ற கேள்விகள் சரியான பதிலைப் பெற முடியாதக் கேள்விகளாகவே நிற்கின்றன.

சமாரியர்கள், யூதர்கள் இவர்களுக்கிடையான விரோதம் நாடு மீண்டும் அமைக்கப்படுவதற்கு முன்பிருந்தே வலுக்க ஆரம்பித்தது. கி.மு. 539-இல் யூதேயமக்கள் பாபிலோனியாவிலிருந்துத் திரும்பி வந்து, புதிய ஆலயம் கட்ட ஆரம்பித்தபோது இந்த விரோதம், பகைவெறியாக மாறியது. ஆனால் சமாரியாவில் கெராசிம் நகரில் எப்போது தங்களின் ஆலயத்தை சமாரியர்கள் கட்டினார்கள் என்பதைத் துல்லியமாகக் கூற முடியாத நிலையில் உள்ளோம். ஏனென்றால் சமாரியர்கள் தங்களின் வேதநூலாக தற்போது ஐந்நூல்களை மட்டும் தான் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் பாரசீகர்களின் காலத்திலும் அதற்கு முன்பாகவும் ஐந்நூல்களை மட்டும் வரையறுத்துத் தங்களின் வேதநூலாகப் பயன்படுத்திய பழக்கம் இல்லை. எனவே கிரேக்கர்கள் பாலஸ்தீனத்தைத் தங்களின் ஆட்சியின் கீழ் வைத்திருந்தக் காலத்தில்தான் சமாரியா யூதேயா என்ற தெளிவான பிரிவும், இதனால் சமாரியர்கள் தங்களுக்கென்று தனியாக கெராசிம் நகரில் ஆலயம் கட்டிய சூழ்நிலையும் உண்டானது. தற்போது கெராசிம் நகரின் ஆலயம் அமைந்திருந்தயிடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி நடந்து வருகிறது. ஒருசில அறிஞர்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில்தான் இத்தகைய பிரிவினை உண்டானது என்பர்.

1962-ஆம் ஆண்டில் வாடி எத்தவியா என்ற குகையில் சமாரியா புல்தான் பழம் சுவடியினைக் கண்டுபிடித்தனர். அதில் காணப்படும் வசனங்கள் சமாரியர்களுக்கும் அலக்சாந்தர் அரசனுக்கும் தொடர்புயிருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

வரலாற்று ஆசிரியர் யோசிபசின் கூற்றுப்படி சமாரியர்கள் அலக்சாந்தருக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அவருக்கு அப்படியே அடிபணிந்தனர். ஆனால் இப்பணிவு வெகுநாட்கள் நீடிக்கவில்லை. அலக்சாந்தர் சமாரியாவை ஆளுவதற்கு நியமித்துச் சென்ற ஆளுநருக்கு எதிராகப் புரட்சிக்குரல்கள் வெடித்தன. இதைக் கேள்வியுற்ற அலக்சாந்தர் தான் எகிப்தை வெற்றிக்கொண்டு திரும்பி வரும் வேளையில் தனக்கு எதிர்ப்பு தெரிவித்த சமாரியர்களுக்குச் சரியான பாடம் புகட்டினார். புரட்சியாளர்களைச் சுத்தமாக அடக்கி வைத்துச் சமாரிய நகரைச் சுத்தமாகத் தரைமட்டமாக்கினார். தொல்பொருள் ஆராய்ச்சியில் சமாரியா நகரம் கிரேக்க மரபுப்படி பிறகு கட்டியெழுப்பப்பட்டுள்ளது தெரியவருகிறது. அத்தோடு அந்நகரில் கிரேக்க நாட்டைச் சேர்ந்த மக்கதோனியர்கள் குடியமர்த்தப்பட்டதும் தெரியவந்துள்ளது.

இதேவேளையில் அலக்சாந்தரின் படையெடுப்பிற்குப் பயந்து ஓடியவர்கள் செக்கேம் நகரில் தஞ்சம் புகுந்தனர். அவ்வாறு அங்குக் குடியேறிய சமாரிய மக்கள் செக்கேம் நகரைச் சிறப்பாகக் கட்டியெழுப்பினார்கள். அலெக்சாந்தருக்கு அஞ்சி ஓடியவர்களில் பலர் செக்கேம் நகருக்குச் செல்லும் வழியிலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். அவ்வாறு நிறுத்தப்பட்டவர்கள் வாடிதாலியா என்றவிடத்தில் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இதற்கெல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சி சான்று பகர்கின்றது. அலக்சாந்தரின் இறப்பிற்குப்பிறகு திறமையற்றவர் பலர், அவர் அமைந்த பேரரசை ஆண்டு வந்தனர். வல்லமையற்றவர்களால் அப்பேரரசை கட்டிக் காக்க முடியவில்லை. எனவே அலக்சாந்தர் சேர்த்து வைத்த பரந்த பேரரசு நான்கு பாகங்களாக உடைந்தது. இந்நான்கில் இரண்டு பாகங்களில் நடந்து வந்த அரசுகள்தான் விவிலிய வரலாற்றுடன் தொடர்பு கொண்டவை. எனவே அலக்சாந்தர் உருவாக்கிய பேரரசிலிருந்து பிரிந்த இந்த இரண்டு அரசுகள், பாலஸ்தீன வரலாற்றுடன் எவ்வாறு தொடர்புக் கொண்டிருந்தன என்பது மட்டும் இங்குக் காண்பிக்கப்படும். லாகுஸ் என்பவரின் மகன் தோலமி என்ற அலக்சாந்தரின் தளபதி எகிப்து நாட்டினை வளைத்துக் கொண்டு, அதன் அரசனாகத் தன்னை அறிவித்துக் கொண்டார். அதே போல செலூக்கு என்ற தளபதி ஆசிய நாடுகளைப் பிடித்துக்கொண்டு அதன் அரசனாகத் தன்னை அறிவித்துக் கொண்டார். இந்த தோலமி, செலூக்கு அரசுகள்தான் பாலஸ்தீனப்பகுதியைத் தங்கள் நாட்டின் பகுதியாக மாற்றிக் கொள்ள போட்டியிட்டன. 1,2 மக்கபேயர் ஆகமங்கள் செலூக்கஸ் மன்னர்களின் ஆட்சியில் நடந்த நிகழ்ச்சிகளைதான் குறித்துக் கூறுகின்றன. கி.மு. 312-311-ஆம் ஆண்டுகளில்தான் செலூக்கஸ் அரசர்களின் ஆட்சி ஆரம்பமானது.

கி.மு. 300 முதல் 200 வரை தோலமி வழிவந்த அரசர்களின் அடியில் யூதர்கள் குடிமக்களாக வாழ்ந்தனர். தானியேல் ஆகமம் 11-ஆம் அதிகாரத்தில் காணப்படுபவை, இக்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் கருத்துச் சுருக்கம் என்று சொல்லலாம். இச்சமயத்தில் தான், யூதேயாவை விட்டு வெளிநாடுகளில் வாழ்ந்து வந்த யூதர்கள், குறிப்பாக அலக்சாந்திரியாவில் வாழ்ந்து வந்த யூதர்கள் எபிரேய மொழியிலிருந்த பழைய ஏற்பாட்டினை கிரேக்க மொழியில் மொழிபெயர்த்திட வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தனர்.

பாலஸ்தீனத்தில், யூதர்களின் வாழ்க்கை பழைய மாமூல் வாழ்வாகவே இந்நாட்களில் அமைந்திருந்தது. இப்போது யூதர்கள், சமயத்தை மையமாக வைத்து வாழ்ந்த ஒரு சமதாயமாக விளங்கினார்கள். இச்சிறுசமுதாயத்திற்கு பெரிய குரு என்பவர் தலைவராக விளங்கினார். இவர் சமய ஒழுங்குகளுக்கும், வழிபாட்டுச் சடங்குகளுக்கும், மற்ற

சமுதாய வாழ்விற்கும், மக்களை வழிநடத்தும் அதிகாரம் கொண்ட தலைவராக விளங்கினார். கெருசியா என்ற பெரியவர்களின் குழு பெரிய குருவிற்கு நிர்வாகங்களில் உதவிச் செய்யும் அமைப்பாக விளங்கியது. இவ்வாறு யூதேயா ஒரு சிறு சமுதாயமாக விளங்கியது. இப்போது மற்ற சுற்று வட்டாரநாடுகளுடன் அது அதிக தொடர்பு வைத்துக் கொள்ளாது வாழ்ந்து வந்தது. ஆனால் கிரேக்கக் கலாச்சாரம் யூத மக்களின் மத்தியில் அதிகமாக வேரூன்றி வளர ஆரம்பித்தது.

கிரேக்கக் கலாச்சாரம் பாலஸ்தீனத்தில் படரத் தொடங்கியதன் முக்கிய அடையாளம் பாலஸ்தீனத்தில் நகரங்களில் சுய ஆட்சி முறை பல இடங்களில் தோன்றியதாகும். உதாரணமாக பெலிஸ்தியர் நாட்டில் காசா, அசுதோது, அசுக்கலோன் என்ற நகரங்கள் கிரேக்கரின் நகர சுய ஆட்சி முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. மேற்குக் கடலோரப்பகுதியில் யோப்பா, தோலமாயிஸ் என்ற நகரங்களும் சமாரியா, ஸ்கூத்தாபொலி என்ற உள்நாட்டில் அமைந்திருந்த நகரங்களும் கிரேக்கர்களின் நகர சுய ஆட்சி முறையைப் பின்பற்றி நகரங்களின் நிர்வாகங்களைச் செய்தன.

1. மக் 1:13-15 என்ற பகுதியிலும் 2. மக் 4:10-15 என்ற பகுதியிலும் கிரேக்கர்களின் பழக்கவழக்கங்கள் எருசலேமிலேயே பரவி ஆரம்பித்ததைப் பற்றிக் குறிப்புகளைப் பார்க்கிறோம். இதனால் யூதர்களின் பாரம்பரியமான சமய கோட்பாடுகள், பழக்கங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதை, யூதர்கள் விரும்பவில்லை. எனவே கிரேக்கக் கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்டவர்கள் என்றும், யூதர்களின் பழைய பாரம்பரியத்தைக் காப்பாற்று கின்ற கசிதிம் என்ற பிரிவினர் என்றும் மக்களிடையே பிளவுகள் உண்டாயின (1 மக் 2:42).

தோபியாது என்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கிரேக்கக் கலாச்சாரம் கலந்த புதிய கலப்படமான யூத முறைக்கு முன் மாதிரியாக விளங்கினர். பாபிலோனியாவிலிருந்து திரும்பி வந்த யூதமக்களைத் தலைமையேற்று நடத்தி வந்த நெகேமியாவிற்குப் பல எதிரிகள் இருந்தனர். அவர்கள் அனைவரும் அராக்கு எல்எமிர் என்ற பழைய அம்மோனியர் நகரில் சேர்ந்து வாழ்ந்தனர். சீனோ என்ற பழங்காலப் புல்தாள் சுவடியில் இக்காலத்தின் சூழ்நிலையைப் பற்றிய ஓர் தகவல் நமக்குக் கிடைக்கிறது. அதாவது கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே ஆளுநர்கள் இப்பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டு அவர்கள் மூலமாக நிர்வாகம் நடத்தப்பட்டிருக்கிறது. வரலாற்று ஆசிரியர் யோசிபசின் கூற்றுப்படி, யோசேப்பு என்ற ஒருவர் கி.மு. 245-221 ஆண்டுகளில் அரசாண்ட மூன்றாம் தோலமி என்ற அரசனுடன் மிக்க நட்புறவுக்கொண்டு வாழ்ந்து வந்துள்ளார். அதனால் அவ்வரசன் யோசப்புக்கு பாலஸ்தீனத்தில் வரிவசூலிக்கும் உரிமையை அளித்தார். இந்த யோசேப்பு, தனக்குக் கிடைத்த நல்ல தருணத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டார். இதனால் நிறைய செல்வத்தைச் சேர்த்துக்கொண்டார். வரிவசூலித்து செல்வந்தனாகிய யோசேப்பின் மகன் இரிக்கானு,- ஒருவேளை யோசேப்பின் பேரனாகவும் இருந்திருக்கலாம்-எஸ்போன் என்றவிடத்திற்கு வடகிழக்கிலுள்ள அராக்கு எல்-எமிர் என்ற கோட்டைக் கொத்தளத்தைச் சரிசெய்து மீண்டும் கட்டியெழுப்பியுள்ளான். எழுத்தாளர் யோசிபஸ், இரிக்கானு அராக்கு-ஏல்-எமிர் என்ற கோட்டையைப் புதிதாகவே கட்டியெழுப்பினார் என்று கூறுகிறார். 2. மக் 3:11-இல் வரும் குறிப்பு இரிக்கானு எருசலேம் ஆலயத்தின் சொத்துக்களையெல்லாம் தன்னிடம் பாதுகாத்து வந்தார் என்று கூறுகிறது. மக்கபேயர்கள் கிரேக்க கலாச்சார கலப்படத்திற்கு எதிராகப் புரட்சி செய்ததால், தோபியாது குடும்பத்தினர் செல்வாக்கெல்லாம் இல்லாது போனது. தொடர்ந்து அந்தியோக்கு எப்பிபான் என்ற கிரேக்க அரசன் அரியணையேறியபோது தோபியது குடும்பத்தின் சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்தான்.

கி.மு. 200-ஆம் ஆண்டில, செலூக்கியப் பிரிவைச் சேர்ந்த கிரேக்க அரசன் மூன்றாம்

அந்தியோகுஸ் என்பவன் ஐந்தாம் தோலமி என்ற அரசனை, யோர்தான் ஆறு ஆரம்பமாகும் இடத்திற்கு அருகிலுள்ள பணியோன் என்றவிடத்தில் தோற்கடித்தான். இதனால் பாலஸ்தீனம் தோலமியர் கைகளினின்று, செலுக்கியரின் ஆட்சிக்கு மாறியது. செலூக்கிய குடும்பத்தைச் சேர்ந்த அந்தியோக்கு. பாலஸ்தீனத்தைத் தன் கைக்குள் பெற்றவுடன் யூதேயாவிற்கும், எருசலேமிக்கும் பல வித நன்மைகளைச் செய்துள்ளான். எருசலேம் ஆலயத்தைப் பழுதுபார்த்து புதுப்பிக்க நிதியைத் தந்து உதவினான். அத்தோடு ஆலயத்தின் செலவினங்களுக்கு உதவித் தொகையும் அளித்தான். யூதேயாவில் அப்போது நடைமுறையிலிருந்த பெரிய குருவைத் தலைமையாக வைத்து நடந்துவந்த நிர்வாக முறையைத் தொடர்ந்து நடக்க அனுமதி அளித்தான். அந்தியோக்கு அத்துடன் யூதத் தலைவர்களுக்கு வரிவிலக்குச் சலுகையையும் அளித்தான். இச்செய்திகளையெல்லாம் நமக்குத் தருகிறார் வரலாற்று ஆசிரியர் யோசிபஸ்.

அந்தியோக்கு அரசன் பாலஸ்தீனத்தில் அடியெடுத்து வைத்த போது, அப்போது பேரரசாக முனைத்து வந்துக்கொண்டிருந்த உரோமைய பேரரசுடன் மோத வேண்டியிருந்தது. கி.மு. 188-இல் அபாமேயா என்றவிடத்தில் உரோமையர்களுக்கு அடிபணிந்து, அந்தியோக்கு ஓர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டான். அவ்வொப்பந்தப்படி, சிறிய ஆசியா பகுதியை அந்தியோக்கு, உரோமையர் கையில் ஒப்புவித்து, அவ்விடத்திலிருந்து அவன் அகன்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் ஒருபெருந்தொகையைக் கப்பமாக உரோமையர்களுக்குக் கட்டவும் வேண்டியதாயிற்று. இப்பெருந்தொகையைச் சேர்ப்பதற்காக பலவிடங்களுக்குப் படையெடுத்துச் சென்றான் அந்தியோக்கு. அவன் கி.மு. 187-ஆம் ஆண்டு ஏலாம் என்றவிடத்தில் இறந்தான். அவனைத் தொடர்ந்து அவன் மகன் நான்காம் செலூக்கு அரசனாக அரியணையேறினான். அவன் கி.மு. 187 முதல் 175 வரை பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தான். செலூக்கஸ் அரியணையேறியதும், உரோமைய அரசு அவனின் தகப்பன் அந்தியோக்கு செலுத்த வேண்டிய பாக்கிக் கப்பத்தொகையை உடனடியாகக் கட்ட வற்புறுத்தியது. அத்துடன் நிற்காது நான்காம் செலுக்கசின் தம்பி அந்தியேக்குவைக் கப்பத்திற்குப் பணயமாக உரோமையில் பிடித்து வைத்திருந்தது. இதனால் நான்காம் செலூக்கஸ் அரசன் தனது அமைச்சர்களில் ஒருவரான எலியேதோரசு என்பவனை எருசலேமிற்குச் சென்று எருசலேம் ஆலயநிதியிலிருந்து தான் கப்பம் கட்டுவதற்காக பணம் வசூலித்து வர விரும்பினான். இதனை 2 மக். மூன்றாம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.

ஆனால் நான்காம் செலூக்கசின் அந்தரங்க அமைச்சனாக விளங்கிய எலியதோரசு தன் அரசன் செலுக்கஸைச் சதிசெய்து கொலை செய்தான். இந்த சதிக்குப் பின்னால் செலூக்குவின் தம்பி அந்தியோக்கு. தன் அண்ணன் கொலை செய்யப்பட்டவேளையில் உரோமையிலிருந்து விடுதலைப் பெற்று நான்காம் அந்தியோக்கு என்ற பெயருடன் அரியணையில் அமர்ந்தான். இந்த நான்காம் அந்தியோக்கு எப்பிபான் என்ற புனைப்பெயரையும் தன் பெயருடன் சேர்த்துக் கொண்டான். எப்பிபான் என்றால் வெளிப்பாடு என்பது பொருள். ஒலிம்பிய சேயுஸ் என்ற கிரேக்க தேவதையின் வெளிப்பாடு என்று அப்பெயருக்கு நான்காம் அந்தியோக்கு விளக்கம் தந்தான். தற்பெருமைப்பிடித்த இவனுக்கு மக்கள் வேறுபட்டபெயர் வைத்தார்கள். அவன் தன்னை எப்பிபான் என்று அழைக்கச் சொன்னான், ஆனால் மக்கள் அவனை எப்பிமான் என்று அழைத்தனர். எப்பிமான் என்றால் பைத்தியம்பிடித்தவன் என்று பொருள். இந்த அந்தியோக்கு எப்பிபான் இரண்டு கொள்கைகளை தீவிரமாகச் செயலாக்க விரும்பினான். ஒன்று தனது ஆட்சிக்குட்பட்ட மக்களை எல்லாம் ஒற்றுமைப்படுத்துவது. இரண்டாவது தன் அரசை விரிவுபடுத்துவது. தன் ஆட்சியின் கீழுள்ள மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்றால் அவர்கள் தங்களின் பாரம்பரிய கலாச்சாரத்தைக் களைத்துவிட்டு, கிரேக்கக் கலாச்சாரத்

தையே பின்பற்ற வேண்டும். அதுவே நாட்டின் ஒற்றுமையைக் கொண்டு வரும் என்று வலியுறுத்தினான் அந்தியோக்கு எப்பிபான்.

இவ்வாறு தன் அரசைப் பரப்பிடவும் மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டவும், இத்திட்டங்களுக்கு நிறைய நிதித் தேவைப்பட்டது.

2. மக்கபேயரின் புரட்சி (கி.மு. 175-135):-

அந்தியோக்கு எம்பிபானின் பேராசை மிக்க திட்டங்களுக்கு யூதேயாவின் உள்நாட்டுச் சிக்கல்கள் அவனுக்கு உதவிசெய்வதாய் விளங்கின. மூன்றாம் ஒனியா என்பவர் எபிபானஸ் அரியணையேறியபோது எருசலேமில் பெரிய குருவாக விளங்கினார். இதற்காக செலூக்கிய அரசர்களுக்கு கையூட்டுக் கொடுக்கவும் தயாராகயிருந்தார். இவ்வாறு ஒனியாவும், யாசோனும் போட்டி போட்டுக் கொண்டு அந்தியோக்கு எப்பிபான் முன்பாக நின்றனர். எப்பிபான் அரசன் அப்போது பெரியக் குரு பதவியிலிருந்து ஒனியாவை நீக்கிவிட்டு, யாசோனை தலைமைக் குருவாக நியமித்தான். இந்த யாசோன் கி.மு. 174 முதல் 171 வரை மூன்றாண்டுகள் தலைமைக்குருவாக விளங்கினார். இவர் கிரேக்கக் கலாச்சாரத்தை யூதர்களிடம் பரப்புவதில் மிகத் தீவிரம் காட்டினார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எப்பிபான் யூதேயா மக்கள் அனைவரும் கிரேக்கக் கலாச்சாரத்தை முழுமையாகப் பின்பற்ற வற்புறுத்தினான். யூதேயாவின் தலைநகரான எருசலேம் கிரேக்கக் கலாச்சாரத்தால் புது வடிவம் பெற்றது. எருசலேம் மக்கள் அந்தியோக்கிய நகரின் குடிமக்களாகவும் மாறிட மக்களுக்கு வசதிசெய்துத் தரப்பட்டது. இதனை 2. மக் 4:9-16 என்ற பகுதியில் பார்க்கிறோம்.

அதே நேரத்தில் யூதேயாவின் யூதர்களில் பெரும்பாலானோர் தங்களின் பாரம்பரியக் கொள்கைகளைத் தவறாமல் கடைபிடித்து வந்தனர். குறிப்பாக கசிதியர் தங்களின் பாரம்பரியங்களைக் கடைபிடித்து வாழ்வதில் மிகத் தீவிரம் காட்டினார். (காண் 1 மக் 2:42; 7:13).

இதற்கிடையில் எப்பிபான் அரசனுக்கு லஞ்சம் கொடுத்து தலைமைக்குருவான யாசோனுக்கு ஆபத்து ஏற்பட்டது. அரசன் எப்பிபான் தலைமைக் குருவாக விளங்கிய யாசோனுக்குத் தெரியாமலேயே மெனலாவு என்பவரைப் புதிய தலைமைக் குருவாக நியமித்தான். இதையறிந்த யாசோன் பயந்துக் கொண்டு யோர்தானின் அக்கரைப் பகுதிக்குத் தப்பித்து ஓடினார். புதிதாக வந்த மெனலாவு என்ற தலைமைக்குரு கிரேக்கக் கலாச்சாரத்தை எருசலேமிலும் யூதேயாவிலும் முழுவீச்சுடன் பரப்புவதில் ஆர்வம் காட்டினார். அத்துடன் யாசோனுக்கு முன் பாகத் தலைமைக் குருவாயிருந்த மூன்றாம் ஒனியாவையும் கொலை செய்வதற்கு ஏற்பாடு செய்தார்.

மூன்றாம் ஒனியாவைக் கொலை செய்தவன் அந்திரோனி என்பவன் ஆவான். இவனை எப்பிபான் அரசன் அடையாளம் கண்டுபிடித்து அவனைக் கொலைத் தண்டனைக்கு ஆளாக்கினான். ஆனால் எப்பிபானின் கொடுமையான ஆட்சியால் மக்கள் மத்தியில் வெறுப்பு தலை தூக்கி நின்றது. இந்த வெறுப்பு புரட்சிவெடிப்பதற்கு வேண்டிய சூழ்நிலையைத் தயாரித்துத் தந்தது.

எப்பிபான் எகிப்தின் மீது கி.மு. 169-ஆம் ஆண்டு படையெடுத்துச் சென்றான். அவன் அங்கிருந்து திரும்புகையில், எருசலேமின் தலைமைக் குரு மெனலாவின் அனுமதியுடன் எருசலேம் ஆலயத்திலிருந்த பொருட்களையும் அணிகலன்களையும் அபகரித்துச் சென்றான். இதற்கிடையில் தலைமைக் குரு பதவியை இழந்துவிட்ட யாசோன் எருசலேம் நகரைப் பிடித்து தன்னாட்சியில் வைக்க முயற்சித்தார். இதனால் மக்கள் மத்தியில் நிறைய குழப்பங்கள் நிலவி வந்தன. எனவே எருசலேம் கோட்டையில் சிரிய நாட்டு துருப்புக்களின் ஒருபகுதி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

கி.மு. 168-இல் எப்பிபான் இரண்டாம் முறையாக எகிப்திற்கு படையெடுத்துச் சென்றான். இச்சமயத்தில் உரோமைத் தள

பதி போப்பிலியு என்பவன் எபிபானஸ் உடனடியாக எகிப்தை விட்டு வெளியேற வேண்டும், இல்லையென்றால் பின் விளைவுகளை ஏற்க வேண்டியிருக்கும் என கடுமையான எச்சரிக்கை கொடுத்தார். இதனால் எப்பிபான் உடனடியாக பாலஸ்தீனத்திற்குத் திரும்பி வந்தான். இச்சமயத்தில் யூதேயமக்களை அடக்கிவைப்பதற்கு கடுமையான நடவடிக்கையெடுத்தான்.

இப்போதுதான் யூதமக்கள் தங்களின் சமயத்தின் பெயரால் பெருத்த வாதனைகளுக்கு ஆளானார்கள். யாவே இறைவனுக்கு பலி செலுத்துதல், விருத்தசேதனம் முதலிய சடங்குகளை யூதமக்கள் செய்யக் கூடாதென்று சட்டபூர்வமாக தடைசெய்யப்பட்டது. இதை மீறி தங்களின் பாரம்பரியச் சமய பழக்கங்களைப் பின்பற்றுகிறவர்கள் மரண தண்டனைக்கு ஆளாவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டது. இதற்கெல்லாம் முடிவைத்தாற்போல எருசலேம் ஆலயத்தில் கிரேக்கக் கடவுள் சேயுஸ் என்பவருக்கு ஒரு பீடம் அமைக்கப்பட்டது.

இவ்வாறு எப்பிபான் யூதர்களின் மறையை அழிக்க முயன்றபோது, யூதர்களில் பலர் தங்களின் சமயத்தைக் காத்திட தங்கள் உயிரையும் இழக்கத் தயாராக இருந்தனர். இச்சூழ்நிலையில்தான் எலயாசர் மற்றும் ஏழுபிள்ளைகளின் தாய் எவ்வாறு மரணத்தின் பிடியிலும் தங்கள் விசுவாசத்தை சற்றும் விட்டுக்கொடுக்காது, உறுதியாக நின்றனர் என்று இரண்டாம் மக்கபேயர் ஆகமம் கூறுகிறது (2 மக் 18-7; 42). பாரம்பரியத்தை தங்கள் உயிரெனக் கருதிய கசிதியர்கள் இவ்வாதனை நேரத்திலும் தளர்ந்திடவில்லை. சனிக்கிழமை ஓய்வுநாளில் அவர்கள் போருக்குச் செல்லமாட்டோம் என்று பிடிவாதமாய் நின்றதை முதல் மக்கபேயர் ஆகமம் தெரிவிக்கிறது (1 மக் 2:29-38).

இக்காலத்தில் தான் மக்கபேயர் குடும்பத்தினர் புரட்சிச் சங்கு ஊதினர். இச்சங்கிற்கு யூதர்களில் உறுதிக்கொண்ட உள்ளத்தினர் பலர் பதில் கொடுத்தனர். மக்கபேயர் குடும்பத்தின் தந்தை மத்தத்தியா ஆவார். அவர் இப்புரட்சி இயக்கத்தைத் துவக்கி வைத்து விட்டு கி.மு. 166-இல் இறந்தார். அவருக்குப் பிறகு யூதா மக்கபேயர் அப்புரட்சி இயக்கத்தின் தலைவரானார். மக்கபேயர் என்றால் சுத்தியல் என்று பொருள். மக்கபேயர் என்பதற்கு சுத்தியல் என்பது சரியான பொருஎல்ல என்று வாதிக்கும் அறிஞர்களும் உண்டு. இம்மக்கபேயர் குடும்பத்தினர் யோவரிபு என்ற குருக்களின் குடும்ப வழியில் வந்தவர்கள் (1 மக் 2:1).

தற்போது தலைவராக விளங்கிய யூதாவை ஒழித்துக் கட்டுவதற்கு கிரேக்க அரசன் பெரிதும் முயன்றான். ஆனால் யூதா மறைந்திருந்து தாக்கும் கொரில்லாப்போர் முறையைப் பின்பற்றிக் கிரேக்க படையினரோடு போர் புரிந்தார். யூதா, பலமிகுந்த கிரேக்கப் படையைப் பல இடங்களில் தோற்கடித்தார். 1 மக் 3:12 யூதா அப்பொல்லோனியு என்பவரைத் தோற்கடித்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. இதனால் யூதா பயன்படுத்திய ஒரு வாளைக் கூட புகழ்ந்து பாடுகின்ற ஒரு பாரம்பரியம் உண்டாகிறது. பேத்து-கோரன் என்றவிடத்தில் சேரோன் என்பவர் தலைமையில் வந்த கிரேக்கப் படையை முறியடிக்கிறார் யூதா. இவ்வாறு கிரேக்கர்களைத் தகர்க்கின்ற வலிமை கொண்ட யூதாவைச் சுற்றி பல யூத இளைஞர்கள் ஒன்றிணைந்தனர். தலைமையேற்று நடத்தும் அரியப் பண்பினை நிறைவாகப் பெற்றிருந்தார் யூதா (1 மக் 3:4). இவ்வேளையில்தான் தானியேல் ஆகமம் எழுதப்பட்டது. குறிப்பாகத் தானி. 7-12 அதிகாரங்கள் தங்களை அழிக்க வரும் அரசுகளை இறுதியில், இறைவனின் மக்கள் தோற்கடித்து வெற்றி பெறுவதை எடுத்துக் கூறுகின்றன. அத்தோடு இறைவனுக்குத் தங்களையே அர்ப்பணித்து, அதனால் அரசர்களை எதிர்த்துப் போராடியவர்களின் வீரக் காவியம் சிலவற்றையும் மேற்கண்ட அதிகாரங்களில் பார்க்கலாம்.

இறுதியாக கிழக்கில் பார்த்தியருடன் போரிட வேண்டிய அந்தியோக்கு புரட்

சியை அடக்குவதற்கென இலிசியாவை ஆளுநராக நியமித்தார். இலிசியாவோ தோலமி, நிக்கானோர் மற்றும் கோர்க்கியா என்னும் மூன்று தளபதிகளை அனுப்பினார். ஆனால், எருசலேமுக்கு வடக்கே மிசுபா வில் ஒரு பிரமாணிக்கமுள்ள குழுவை யூதா பலப்படுத்திக்கொண்டார். எனவே மீண்டும் கோர்க்கியாவின் படைகளுக்கு எதிராக எம் மாவுவிலும், அடுத்த ஆண்டில் பேத்தசூரில் இலிசியாவிற்கு எதிராகவும், யூதா வெற்றி கொண்டார். இலிசியா அந்தியோக்கியா விற்கே திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. கிரேக்கர்களின் இந்தப் பலவீனத்தைப் பயன் படுத்தி, அக்ரா கோட்டை காவற்படை பார்த்துக் கொண்டிருக்க, ஆலயத்தின் ''பா ழாக்கும் அருவருப்பைத்'' தூய்மைப்படுத்த 164-இல் யூதா தீவிரமாக முனைந்தார். கனுக்கா விழாவானது மூன்றாண்டு கால அவதூறினை துடைத்து விட்டது.

இந்நிலையில் மக்கபேய புரட்சியின் முழுத்தாக்கம் வெளிப்படையாயிற்று. ஆல யத்தை மீண்டும் அடைந்ததானது மேலும் சுதந்திரத்தையும் அடையத் தூண்டியது. பாலஸ்தீனம் மற்றும் யோர்தானுக்கு அப் பாற்பட்ட பகுதிகள் முழுவதும், சிறப்பாக கிரேக்க நகரங்களிலும், யூத சிறுபான்மை குழுக்கள் எஞ்சியிருந்தன. இதுமேயா, அம் மோன், கிலயாது, கலிலேயா மற்றும் பெலிஸ்திய சமவெளி முதலிய இடங்களில் பிறமதத்தினருடன் நடத்திய தொடர்ச்சி யான போராட்டங்களால் சக யூதர்களுக்கு யூதா உதவினார். அவர்களில் பலரை எருச லேமுக்கு மீட்டுக் கொண்டு வந்தார். அதே வேளையில் அவரது சகோதரர் சிமோன் கலிலேயாவில் அவ்வாறே செயலாற்றினார். இதன் நோக்கமானது மக்கபேய வல்லமை யைப் பலப்படுத்தி பரவச் செய்வதாகும்.

அந்தியோக்கு எப்பிபானின் மரணத்துடன் இலிசியா செயலளவில் தலைவராகவும் இளைய ஆட்சியாளர் 5-ஆம் அந்தியோக்குக ளின் பகர ஆளுநராகவும் ஆனார். 163-இல் எருசலேம் அக்ராவை யூதா தைரியமாக முற்றுகையிட்டபோது பேத்து செக்கரியா வில் இலிசியா யூதாவைத் தோற்கடித்தார் (எலயாசரின் வீர மரணம் 1 மக் 6:43-46). தன்னுடைய அரசியல் அதிகாரத்தைக் காப் பாற்றிக் கொள்வதற்காக அந்தியோக்கியா விற்கு திரும்புமாறு வற்புறுத்தப்படாமலி ருந்தால், இலிசியா எருசலேமை கைப்பற்றி யிருப்பார். ''தங்களுடைய சட்டங்களேயே பின்பற்றும்'' விடுதலையை யூதர்களுக்கு அளிக்கும் உடன்பாட்டிற்கு அவர் உட்பட வேண்டியிருந்தது (1 மக் 6:59). மக்கபேயரு டைய புரட்சியின் நோக்கம் நிறைவேறிவிட் டதாகத் தோன்றியது. ஏனெனில் 4-ஆம் அந்தியோக்குவால் துவக்கப்பட்ட அடக்க முறை முடிந்துவிட்டது. ஆனால் அதிக சுதந் திரம் மற்றும் அரசியல் வலிமைபெற வேண் டிய முன்னோக்கு மக்கபேயரைத் தூண்டிக் கொண்டே இருந்தது.

கிரேக்க மரபைச்சார்ந்த யூதர்கள் யூதாவை எதிர்த்தனர். அவருக்கெதிராக பாதுகாப்பிற் காக புதிய அரசன் முதலாம் தெமேத்திரியவி டம் (சோதெர்) புகலிடம் தேடினர். அவர்க ளது பிரதிநிதி ஆல்கிமுவை தலைமைக் குருவாக அரசன் நியமித்தார். இக்காலத்தில் யூதர்களிடையே நிலவிய பிளவு எப்போ துமே தெளிவாக இருந்ததில்லை. ஆல்கிமு கிரேக்கரல்லாத யூதரால் ஆதரிக்கப்பட்டிருந் தாலும், அவர் குருத்துவ சந்ததியைச் சேர்ந்த வராய் இருந்ததால் கசிதேயரும் சட்ட வல்லு நரும் அவருக்கு ஆதரவளித்தனர். ஆனால் யூதா அவரை எதிர்த்தார். கசிதேயரை ஆல் கிமு கொலை செய்தது யூதாவின் நிலையைச் சரியென நிரூபித்தது. இறுதியாக ஒரு பெரிய படையின் தலைவராக நிக்கானோர் அந்தி யோக்கியாவிலிருந்து அனுப்பப்பட்டார். யூதர் அவரை கபர்ச்சலாமாவில் தோற்கடித் தார். பின்னர், அதார்மாதம் 13-ஆம் நாளில் (மார்ச் 28, 160) பேத்து-கோரோனிலும் அத சாவிலும் நடந்த போர்களில் அவரை முழு மையாகத் தோற்கடித்தார். இதன் விளை வாக ''நிக்கனோரின் நாளானது'' அடிக்கடி நிகழும் விழாவாயிற்று (1 மக் 7:49). ஆனால் இந்த வெற்றியினை தனக்கு ஆதாய மாக்கிக் கொள்ள யூதாவால் இயலவில்லை. ஏனெனில் அதற்கு பதிலடியாக பாக்கிதின்

தலைமையில் தெமேத்திரியு ஒரு பெரிய படையை அனுப்பினார். எருசலேமிற்கு வடக்கிலுள்ள பெரோயா மற்றும் எலசா பரப்பில் அவர்கள் யூதர்களைத் தோற்கடித்த வர் (1 மக் 9:4-5). இப்போரில் யூதா கொல்லப்பட்டார். மக்கபேயர் குழுவிற்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடங்கின.

அவருடைய இடத்தை ஏற்ற அவரது சகோதரர் யோனத்தானினால் (160-143) 159-இல் பெத்பாசியில் பாக்கிதை எதிர்த்து நிற்க வாவது முடிந்தது. ஆனால் யோனத்தானு டைய தாக்குதல்கள் அளவானவையாக இருந்தன. சமாதான காலத்தின்போது மிக்கி மாசுவில் (159-152) பண்டைக்கால நீதிபதிக ளைப் போன்ற ஒருவராகத் தன்னை நிலை நிறுத்துவதில் திருப்தியடைபவராக இருந் தார் (1 மக் 9:73). வளர்ச்சி வாய்ப்புக்காக அவர் காத்திருந்தார். அலக்சாந்தர் பாலா என்பவர் தோலமேயில் வந்திறங்கி முதலாம் தெமேத்திரியுவை எதிர்த்தபோது அது அவ ருக்கு நல்லதொரு வாய்ப்பாய் அமைந்தது. ஒரு படையை உருவாக்கும் பொறுப்பை தெமேத்திரியு யோனத்தானுக்கு அளித்தார். ஆனால் அலக்சாந்தரோ ஆல்கிமுவின் மர ணத்திற்குப் பின் காலியமாக உள்ள தலைமை குருத்துவப் பதவியை அளிப்பதா கக் கூறினார். யோனத்தான் இரு கோரிக்கை களை ஏற்றுச் செயல்புரிந்தாலும் முடிவாக அலக்சாந்தருக்கு ஆதரவளித்தார். அலக்சாந் தர் தெமேத்திரியுவை வென்று 150-இல் அரசனானார். அலக்சாந்தர் மற்றும் தோலமி யின் மகள் கிளியோப்பத்திராவின் திருமணத் திற்கு வருகை புரிந்ததன் மூலம் யோனத் தான் மேலும் பெருமைகளைப் பெற்றார். அவர் அரச உடையில் உடுத்தப்பட்டு யூதே யாவிற்கு தளபதியாகவும் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார் (1 மக் 10:65).

மக்கபேயருடைய வல்லமையின் வளர்ச் சியில் ஒரு புதிய காலம் தொடங்கிற்று. செலூக்கிய அரசர்களை ஒருவருக்கொருவர் எதிராக தூண்டிவிட யூத தலைவரால் முடிந் தது. 148-இல் இரண்டாம் தெமேத்திரியு அரியணையை அடைய முயன்றார். கூலே-சிரியாவின் ஆளுநராகிய அப்பொல்லோ னியு அவருக்கு ஆதரவளித்தார். அலக்சாந்த ருக்குப் பிரமாணிக்கமாய் இருந்த யோனத்தா னால் அப்பொல்லோனியு தோற்கடிக்கப்பட் டார். அதற்கு வெகுமதியாக எக்கரோன் நகரம் யூதருக்கு அளிக்கப்பட்டது. 145-இல் அலக்சாந்தரைக் கொன்று தெமேத்திரியு அரி யணைக்கு வந்த பின்னரும், வரிவிலக்கு கோரும் அளவிற்கு வலிமையுள்ளவராக யோனத்தான் இருந்தார். எப்பிராயிம், இலிதா மற்றும் இரமத்தாயிம் முதலியவை யூதேயாவிற்கு அளிக்கப்பட்டன. 141-ஆம் ஆண்டில் அந்தியோக்கியாவில் ஒரு புரட் சியை கட்டுப்படுத்த யோனத்தான் துணைபு ரிந்தால் எருசலேமிலிருந்த சிரிய ஆதிக்கத்தி லுள்ள கோட்டையையும் அளிப்பதாக தெமேத்திரியு வாக்களித்தார். இந்த வாக்குறு தியில் தெமேத்திரியு தொடர்ந்து நிலைத்தி ருக்க தவறினாலும், அவரது காலம் முடிவை நெருங்கிக்கொண்டிருந்தது. திரிபோ என்பவ ரால் ஆதரிக்கப்பட்ட ஆறாம் அந்தியோக்கு அரியணைக்கு உரிமை கோரினார். யோனத் தான் தனது ஆதரவையும் அவர்களுக்கு அளித்தது, பல போர்களில் ஈடுபட்டார். இதன் விளைவாக அவர் வலிமைமிக்கவரா னார். மேலும் உரோமை மற்றும் ஸ்போர்க் தாவுடன் அவர் அரசியல் தொடர்பும் கொண்டார் (1 மக் 12:1-23). இவையனைத் தும் கவனிக்கப்படாமலில்லை. யோனத் தான் மிகவும் அபாயமானவர் என திரிபோ தீர்மானித்தார். அவர் யோனத்தானை தந்திர மாக தோலமேயில் சிறைப்படுத்தினார் (143).

யூதர்களுடைய எதிர்செயல் உடனடியாக எழுந்தது. யோப்பா நகரை கைப்பற்றியதன் மூலம் மூன்றாவது மக்கபேய சகோதரனா கிய சீமோன் (143-134) தாக்குதலுக்கு தயாரா னார். ஆனால் யோனத்தானுடைய மர ணத்தை அவரால் தடுக்க முடிவதில்லை. யோனத்தான் மக்கபேய சொந்த நகராகிய மோதினில் அடக்கம் செய்யப்பட்டார். யூத சுதந்திரத்தின் அங்கீகாரத்திற்கு ஈடாக, இப் போது சீமோன் 2-ஆம் தெமேத்திரியுவை ஆதரிக்கலானார். 142-இல் சீமோன் தலை

மைக் குருவாகவும் ஆளுநராகவும் தளபதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ''இஸ்ராயேல் மக்கள் புறவினத்தாரின் அடிமைத்தளையினின்று நீங்கினார்கள்'' (1 மக் 13:41). உண்மையானதொரு இறைவாக்கினர் தோன்றும்வரை ஆட்சியாளர் மற்றும் தலைமை குருத்துவத்திற்காக மக்கபேய உரிமைகள் யூதராலேயே சட்டநெறிபடுத்தப்பட்டன (14:41). அடுத்த ஆண்டில் கசாராவினருடைய செலூக்கியப் பாதுகாப்பு அரணைக் கைப்பற்றி எருசலேமிலுள்ள அக்ராவை சரணடைய வற்புறுத்துவதில் வெற்றி பெற்றார். மக்கள் சில ஆண்டுகள் அமைதியாகக் கழித்தனர். செலூக்கிய அரியணைக்கு அந்தியோக்கு சிதேத்தெக என்னும் புதிய வாரிசு தோன்றினார். அவரது கோரிக்கைகளை மதிக்க சீமோன் மறுத்துவிட்டார். அதனைத் தொடர்ந்து போரில் அந்தியோக்குவினுடைய தளபதி கெந்தபேயுவை 138-இல் சீமோனின் புதல்வர்கள் வென்றனர் (1 மக் 16). ஆனால் எரிகோவிற்கு அருகாமையிலுள்ள தோக்கு கோட்டையில் சீமோன் தனது மருமகன் தோலமியால் தந்திரமாக வெட்டிக் கொல்லப்பட்டார். சீமோனின் மகன் யோவான் இரிக்கானு அவரைத் தொடர்ந்து பதவியேற்றார். இங்கே 1 மக்கபேயர் நூலின் குறிப்பு முடிவடைகிறது. இரிக்கானு மற்றும் அவரது வாரிசுகளின் ஆட்சிபற்றிய விவரங்களுக்கு நாம் பெருமளவில் யோசிபசைச் சார்ந்திருக்க வேண்டும். கிறிஸ்தவ ஆசிரியர்கள் இரிக்கானுவிடைய சந்ததியின் வரிசையை விவரிக்க ''அசமோனியர்'' என்னும் பெயரை உபயோகிக்கின்றனர். ஆனால் யூத ஆசிரியர்களோ யோசிபஸ் மற்றும் தால்மூதினுடைய அமைப்பைப் பின்பற்றி இரிக்கானுவின் முன்னோராகிய மக்கயேயு சகோதர்களையும் இதே பெயரின் கீழ் குறிப்பிட்டனர். அசமோனியப்பெயரின் உண்மையான மூலத்தைப்பற்றி நாம் ஒன்றும் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் பாரம்பரியப்படி மத்தாத்தியாசினுடைய (யூதா மக்கபேயுவினுடைய தந்தை) கொள்ளு தாத்தாவுடன் யோசிபஸ் அடையாளப்படுத்துகின்ற அசமோனையோயுடன் இது தொடர்புபடுத்தப்படுகிறது.

3. அசமோனிய ஆட்சியாளர்கள் (134-63):- சீமோனுடைய மகன் முதலாம் யோவான் இரிக்கானு (134-104) படுகொலை நேரத்தில் காசாராவில் இருந்தாலும் தோலமியின் கொலை திட்டங்களினின்று தப்பித்து விட்டார். தனது தந்தையைத் தொடர்ந்து தலைமை குருவாகவும் ஆட்சியாளராகவும் ஆன இவர் தோலமியை தண்டிக்க முயன்றார். ஆனால் அவர் யோர்தானுக்கு அப்பாலுள்ள பகுதிக்கு தப்பியோடி விட்டார். இரிக்கானுவின் ஆட்சியில் முதல் சில ஆண்டுகள் மகிழ்ச்சியற்றவையாக இருந்தன. உடனடியாக ஏழாவது அந்தியோக்கு சிதெதெக யூதேயாவை அழித்த பின்னர் எருசலேமை முற்றுகையிட்டார். ஆனால் எதிர்பாராதவிதமாக உரோமையிலிருந்து நெருக்கடியால் அவர் இரிக்கானுவுடன் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டு முற்றுகையை நீக்கினார். இழப்பீடுகள் இலேசானவையாகவே இருந்தன. ஆனால் அடுத்த சில ஆண்டுகளில் பார்த்தியருக்கு எதிரான போரில் உதவி, இரிக்கான அந்தியோக்குவிற்கு ஊழியம் புரிந்தார். நிகழ்ச்சிகள் இப்போது சாதகமான திருப்பத்தை அடைந்தன. 128-இல் போரில் அந்தியோக்கு கொல்லப்பட்டபோது இரண்டாம் தெமேத்திரியு அரியணை ஏறினார். அதனால் உள்நாட்டுப் போரில் ஈடுபட வேண்டியவரானார். யூதேயாவிலும் அதற்கு அப்பாலுள்ள நகர்களையும் கைப்பற்ற இரிக்கானுவிற்கு இது உதவியாக இருந்தது. நீண்ட முற்றுகைக்கு பின்னர் யோர்தானுக்கு அப்பாலுள்ள மேதபாவை அவர் கைப்பற்றினார். நெகேபிலுள்ள இதுயேரரைக் கீழ்படுத்தி விருத்தசேதரத்தையும் யூதச் சட்டத்தையும் அவர்கள் மேல் திணித்தார். கெரிசிம் மலை மீதிருந்த சமாரிய கோவிலையும் அவர் அழித்தார். அந்நிய கடற் படையினரின் உதவியுடன் இந்த இராணுவம் வெற்றி அடைந்தன. இக்காலத்தில் செலூக்கியருடைய வல்லமையானது உள்நாட்டு பிரச்சினைகளின் காரணமாக சீர்குலைந்து. இரிக்கானு தனது ஆதாயங்களை உறுதிப்படுத்த எந்த தடையும் இல்லாது போயிற்று. 107-க்குள் செலூக்கிய அரசன் ஒன்பதாம் அந்தியோக்குவின் (சிசிசென) தலையிட்டாலும்,

இரிக்கானவின் மக்களாகிய அரித்தோபுல் மற்றும் அந்திக்கோனு ஆகியோரின் தலைமையில் யூதப்படைகளால் சமாரியா கைப்பற்றப்பட்டது. இக்காலத்தில் யூத இனத்தில் மிகவும் சிறப்பான வளர்ச்சியானது பரிசேயர் மற்றும் சதுசேயர் எண்ணம் இரு குழுக்களின் தோற்றமாகும்.

யோவானுடைய மூத்த மகன் அரித்தோபுல் (104-103) ஆட்சி செய்து கொண்டிருந்திருக்கக்கூடிய) தனது தாயையும் மூன்று சகோதரர்களையும் சிறைப்படுத்திவிட்டு வன்முறையால் அரியணை ஏறினார். (தன்னையறியாமலே தான் மரணத்திற்குட்படுத்திய) அந்திகோனுவுடன் சேர்ந்து அவர் வெற்றிகளைத் தொடர்ந்தார். வடக்கு கலிலேயா வரை தனது வல்லமையைப் பாரவச்செய்து அதனை யூதமயமாக்கினார். (கலிலேயாவை யூத மயமாக்கியது கிறிஸ்தவ காலம் வரை நிலைத்திருந்தது) நாணயங்களில் ''யூதா'' என்று அறியப்பட்டாலும், அவரது கிரேக்கப் பெயரும் 63-வரை அவரும் அவரது வாரிசுகளும் உரிமை கொண்டாடிய அரசன் என்ற பதவியும் கிரேக்க மயமாதலின் பாதிப்பிற்குச் சான்றுகளாய் உள்ளன. ஆனால் அசமோனிய மரபின் பொதுவான ஒழுக்கச் சீர்குலைவு தொடர்ந்தது என்று கூறலாம். அரித்தோபுல் ஒராண்டு மட்டுமே ஆட்சிபுரிந்தார். சிறப்புமிக்க பெண்ணாகிய அவரது விதவை சலோமி அலக்சாந்திரா அவருடைய சகோதரர்களை விடுவித்து அவர்களுள் ஒருராகிய அலெக்சாந்தர் யன்னாயுவை மணம் புரிந்து கொண்டாள். அவர் தலைமைத் குருபதவியையும் அரியணையையும் ஏற்றுக்கொண்டார். அலக்சாந்தர் யன்னாய பலபோர்களின் விளைவாகப் பாலஸ்தீனம் முழுவதையும் அவரது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தார். தோலமேயிசிற்காக ஒன்பதாம் தோலமி இலத்திருவுடன் அவர் மேற்கொண்ட போரில் தோல்விடைந்தார். துரத்தப்பட்டு, சைப்ரசிற்குத் திரும்புமாறு எகிப்தினால் வற்புறுத்தப்படாமலிருந்ததால், தோலமி பாலஸ்தீனத்தையும் கைப்பற்றியிருப்பார். மத்திய யோர்தானக்கு அப்பாற்பட்ட பகுதியில் காதாராவையும் யோர்தானில் அமாதுவையையும் யன்னாயு முன்றுகையிட்டு கைப்பற்றினார். கடற்கரையில் யன்னாய காசாவை சூறையாடி எரித்தழித்தார். அமாதுவை மீண்டும் வெல்வதற்காகத் திரும்ப வேண்டியதாயிற்று. மேலும் வடக்கு நோக்கி நபத்தேயருடன் அவர் போராட வேண்டியிருந்தது. நபத்தேய அரசன் ஒபேதசு கிட்டதட்ட அவரைப் பிடித்துவிட்டார். ஆனால் அவர் தப்பி எருசலேமுக்குத் திரும்பினார். ஆனால் எருசலேமும் அவருக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டது. கூலிப்படையினரின் துணையுடன் அவர் புரட்சியாளர்களை அடக்கினார். ஆனால் பரிசேயர்கள் செலூக்கிய அரசன் மூன்றாம் தெமேத்திரகயு யுகைரோசை அவருக்கெதிராக செக்கேமில் கொண்டுவந்தபோது அவர் கிட்டதட்ட அரியணையினின்று நீக்கப்பட்டார் (ஏறக்குறைய கி.மு.88). யூத தேசபக்கர்களில் சிலர் (6000 பேர்) அவரை ஆதரித்தனர். பின்னர், அவர் தனக்கெதிராக எழுந்த யூதரைப் பழிவாங்கக் தொடங்கினார். கும்ரான் நூலில் குறிப்பிடப்படுவதாகத் தோன்றும் புகழ்பெற்ற சிலுவையிலறையப்படும் காட்சி இதுவாக இருக்கலாம். அரேத்தா நபாத்தேயரின் அரசனான பின்னர் யூதேயாவிற்குள் நுழைந்து யனனாயுவைத் தோற்கடித்தார். உரிய சலுகைகளை பெற்ற பின்னரே அவர் வெறியேறினார். யன்னாயு இப்போது தனது கவனத்தை யோர்தானுக்கு அப்பாலுள்ள பகுதிகளை நோக்கி திருப்பினார். கி.மு. 84-81-இல் நடந்த போர்களில் அவர் பெல்லா, கெராசா, கோலான் மற்றும் பல நகரங்களைக் கைப்பற்றினார். அவருடைய நெறிதவறிய வாழ்வு ஒரு முடிவுக்கு வந்த போது யோர்தானுக்கு அப்பால் இராகாபாவை முற்றுகையிடுவதில் ஈடுபட்டிருந்தார். அக்காலத்திற்குள் யூதேயா நிலப்பரப்பானது குறிப்பிடத்தக்க அளவிற்கு விரிவடைந்திருந்தது. அதாவது தாவீதின் அரசினுடைய பழைய எல்லைகள் இப்போது நிறைவடைந்தன. கிரேக்க நகரங்கள் யூத மயமாக்கப்பட்டன.

யன்னாயுவின் விதவையாகிய சலோமி அலக்சாந்திரா (76-69) அவரது மரணத்திற்கு

பின் தலைமைக்குரு பதவியை பயனற்ற மூத்த மகன் இரண்டாம் இரிக்கானுவிற்கு அளித்துவிட்டு, ஆட்சிபுரியக் துவங்கினாள். போர்களின்றி நாட்டை காப்பதில் அவள் வெற்றி பெற்றாள். ஆனால் அவளது மரணத்திற்கு பின்னர் யூதேயா அரியணைக்கு இரகக்கானும் அவரின் மிக்க பேராசை இளைய மகன் அரித்தோபுலும் போரிட்டனர்.

சதுசேயரின் ஆதரவைப்பெற்ற இரண்டாம் அரித்தோபுல் (69-63) எரிகோவில் இரிக்கானுவை விரைவிலேயே வென்று அவரை எருசலேமில் சிறைப்படுத்தினார். எனவே அரித்தோபுல் அரசராகவும் தலைமைக்குருவாகவும் ஆனார். ஆயினும் இது மேயாவின் ஆளுநராகிய அந்திபாத்தர் இரிக்கானுக்கு ஆதராவாக சூழ்ச்சி செய்தார். தைரியமாக ஒரு முயற்சியில் நபாத்தேயரின் அரசனாகிய அரேத்தாவிடம் அடைக்கலம் நாடுமாறு அவர் இரிக்கானுவை தூண்டினார். பெத்திராவிலுள்ள அரச நகருக்கு அவரும் உடன் சென்றார் ஒரு ஒப்பந்தம் உருவாக்கப் பட்டது. மோவாபிலுள்ள சில குறிப்பிட்ட நகர்களை நபத்தேயருக்கு அளித்தால், இரிக்கானு மீண்டும் அரியணையில் அமர்த்தப்படுவார். நபத்தேயர்கள் யூதயோவிற்குள் புகுந்து அரித்தோபுலுவை எருசலேமில் பூட்டி வைத்தனர். உரோமையர் தலையிடாமலிந்தால் இரிக்காணுவை மீண்டும் அரியணையில் ஏற்றுவதில் அவர்கள் வெற்றி பெற்றிருப்பர். இரு பிரிவினரும் சீரியாவிலுள்ள பாம்பேயின் பிரதிநிதியாகிய எமிலியுஸ்காருவின் ஆதரவை நாடினர். உரோமையர் முற்றுகையை நீக்கக் கட்டளையிட்டனர். பூசலிடும் இரு சகோதரர்களுடைய விதியை தீர்மானிப்பது பாம்பேயின் கையில் இருந்தது. 63-இல் அவர் தமஸ்குவில் நுழைந்து, இறுதியாக எருசலேமிற்குள் நுழைந்தார். அரித்தோபுலு ஆலயத்தை அவரிடம் ஒப்படைக்கத் தவறியதால் அங்கு அவர் ஆலயத்தை முற்றுகையிட வேண்டியதாயிற்று. ஏறக்குறைய 1200 யூதர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் இரண்டாம் இரிக்கானுவை தலைமைக்குருவாக ஏற்றுக் கொண்டு அரிஸ்தோபுலுவைச் சிறைப்படுத்தினார். ஸ்தாருவினால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட சீரியாவின் உரோமை மாநிலத்தில் ஒரு பகுதியாக பாலஸ்தீனம் ஆயிற்று. யூதருக்கென மக்கபேய குடும்பத்தினரால் வெல்லப்பட்ட சுதந்திரமானது ஒரு முடிவிற்கு வந்தது.

இஸ்ராயேல் வரலாறு - VII - உரோமையர் காலம்

I பாலஸ்தீனத்தில் யூத இயக்கங்கள்:- புதிய ஏற்பாட்டு காலமும் பாலஸ்தீனத்தை உரோம் கைப்பற்றியிருந்த காலமும் பெருமளவில் ஒத்த காலமானவையாகும். யூதர்களை அடக்கிவென்று அவர்களது ஆலயத்தில் கால்வைத்த முதல் உரோமையர் பாம்பே ஆவார். இது உரோமையரின் ஆதிக்கத் தொடக்கத்தின் அடையாளச் செயலாகும். இந்த ஆதிக்கம் புதிய ஏற்பாட்டுக் காலம் முழுவதும் நீடித்தது. அச்சமயத்தில் பாலஸ்தீன யூதர்கள் தங்களுடைய தேசிய மற்றும் சமய ஒருமைப்பாட்டிற்கு, ஒன்றுபட்ட மக்களாக இருக்கவில்லை. சட்டம் மற்றும் ஆலயம் பற்றிய அவர்களுடைய நோக்கில் அவர்களிடையே வேறுபாடுகள் நிலவின. இவை பெரும்பாலும் பல்வேறுபட்ட அரசியல் சார்புடையமையாலும் உட்கிளர்ச்சிகளாலும் மோசமாயின. இக்காலத்தில் அவர்களிடையே ''பரிசேயர், சதுசேயர், எஸ்ஸேனியர்'' என்னும் மூன்று பிரிவுகளைப்பற்றி யோசிபஸ் குறிப்பிடுகிறார். இப்பிரிவினர்களைப் பற்றி பரிசேயர், சதுசேயர், எஸ்ஸேனியர் ஆகிய தலைப்புகள் பற்றிய காட்டுரைகளில் காண்க.

II. இயேசுவின் வாழ்நாளுக்கு முன் உரோமை பாலஸ்தீனம் (கி.மு. 64-4):-

63-37 வரையிலான காலத்தில் பாலஸ்தீனத்தில் உரோமை வல்லமை உறுதியாக நிலைப்படுத்தப்பட்டது. அசமோனிய சந்ததி முடிவைக் கண்டது. இந்த ஆளும் குடும்பத்தின் வீழ்ச்சியும் அதன் இடத்தில் ஏரோதியர் ஆட்சி தோன்றியதும் பற்றிய வரலாறு சிக்கல்மிக்கது, சூழ்ச்சிகள் நிறைந்தது. அதைச் சுருக்கமாக இங்குத் தருகிறோம்.

1. பாம்பே, யூலியு சீசர், மாற்கு அந்தோணி:- பாம்பே எருசலேமைக் கைப்பற்றியபின்னர் மாற்றியமைக்கப்பட்ட சீரியா மாநிலத்தில் அவர் பாலஸ்தீனத்தை சேர்த்தார். அது உரோமைப் பிரதிநிதி ஒருவரால் ஆளப்பட வேண்டியிருந்தது. நாம் ஏற்கனவே கண்டவாறு வலுவற்ற இரண்டாம் இரிக்கானுவை தலைமைக் குருவாக நியமிக்க பாம்பே தீர்மானித்தார். ஆனால் இரிக்கானுவின் வழிபாட்டு மரபை உண்மையிலேயே அங்கீகரித்த யூதர்கள் வாழுமிடத்திற்கு மட்டும் இரிக்கானுவின் சமயஅதிகாரத்தை பாம்பே கட்டுப்படுத்தினார் (எருசலேம் மற்றும் யூதேயா, பெரேயா, கலிலேயா, சமாரியாவின் தென் பகுதி, மற்றும் வடக்கு இதுமேயா). கடற்கரைப் பகுதிகளும் சமாரியாவின் பிற பகுதிகளும் சீரியாவின் உரோமை ஆளுநரின் நேரடி ஆட்சிக்குட்படுத்தப்பட்டிருந்தன. இந்த மாற்று அமைப்பு யூதருக்கு சமாதானத்தையும் புதுப்பிக்கப்பட்ட நலனையும் கொண்டு வந்தது. உரோமை ஆதிக்கத்தினுடைய அடுத்த சில ஆண்டுகளின் ஒரே களங்கம் கி.மு. 60-இல் மூவர் குழுவில் ஒருவரான இலிசினியு கிராசுவினால் மாநிலமானது சூறையாடப்பட்டதாகும். 53-இல் அவர் எருசலேம் ஆலயத்தின் கருவூலத்தைக் கொள்ளையடித்தார். யூத சமுதாயம் இதனை எதிர்த்து போராடியது. ஆனால் இந்த எதிர்ப்பைப் பண்டாகராகிய காசியு இலொங்கினு உடனடியாக அடக்கினான்.

49-ஆம் ஆண்டில் யூலியு சீசர் உரூபிகோனை கடந்தார். உரோமை வரலாற்றின் தொடரும் வளர்ச்சிக்கு இச்செயலானது குறிப்பிடத்தக்க விளைவுகளைக் கொண்டிருந்தது. அவருடைய எதிரியாகிய பாம்பே தன்னைப் பின்செல்பவர்களுடன் கிழக்கு நோக்கிப் பின்வாங்கினார். முதலில் இரண்டாம் இரிக்கானுவும் அவரது இதுமேய நண்பர் அந்திப்பாத்தரும் கிழக்கின் ஆட்சியாளராக வருவார் என்று எண்ணிய பாம்பேயின் ஆதரவை நாடினர். ஆனால், எகிப்திய முகத்துவாரத்திலுள்ள பர்சாலுவில் பாம்பே தோற்கடிக்கப்பட்டவுடன் அவர்கள் தங்களுடைய பற்றுறுதியை விரைவாக சீசருக்கு மாற்றிக்கொண்டனர். அந்திப்பாத்தரின் தலைமையில் சீசருக்கு உதவிபுரிய இரிக்கானு படைகளையும் அனுப்பினார். அவருக்காக பெலுசியுவை அவர்கள் வென்றனர். சீசருக்கு ஆதரவளிக்குமாறு அலக்சாந்திரிய யூதர்களை இணங்கவைப்பதில் இரிக்கானு வெற்றி பெற்றார். 47-இல் சீசர் சீரியாவை அடைந்த பின்னர் இரிக்கானுவிற்கு மாகாண ஆட்சியாளர் (ஒரு மாநிலத்தில் ஒரு இனத்தினுடைய ஆட்சியாளர்) என்னும் பட்டத்தை அளித்தார். அவரது தலைமை குருத்துவமானது உறுதியாக்கப்பட்டது. அவரும் அவரது சந்ததியினரும் உரோமை குடிமக்களின் தோழர்கள் என்று அறிவிக்கப்பட்டனர். சூழ்ச்சிமிக்க அந்திபாத்தருக்கு உரோமை குடியுரிமை அளிக்கப்பட்டு, யூதேயாவின் அதிகாரி என்னும் பதவியும் தரப்பட்டது. அவரது மகன்களில் இருவராகிய பாசேல் மற்றும் ஏரோது ஆகியோர் முறையே எருசலேமிற்கும் கலிலேயாவிற்கும் ஆளுநராக நியமிக்கப்பட்டனர். அடுத்த சில ஆண்டுகள் உரோமை ஆளுநர்களுடைய ஆதரவை வெல்வதற்கு அல்லது தக்கவைத்துக் கொள்வதற்கான யூத தலைவர்களுடைய முயற்சிகளின் தொடர்ச்சியான சூழ்ச்சிகள் மிகுந்து காணப்பட்டன.

கி.மு. 44-ஆம் ஆண்டு மார்ச் 15-ஆம் நாளில் யூலியு சீசர் படுகொலை செய்யப்பட்டார். அவருக்காக யூதர்கள் புலம்பியதைப் போல் எந்த உரோமை குடிமகனும் புலம்பவில்லை, கொலையாளிகள் கிழக்கு நோக்கி தப்பிய பின்னர், காசியு சீரியாவிற்கு வந்து, மாநிலம் மற்றும் அதனுடைய படைகளின் மேல் ஆதிக்கத்தைக் கைப்பற்றினார். அவருக்கு துணைபுரிய யூதேயாவிலும் கலிலேயாவிலும் 700 தாலந்துகளைச் சேர்த்து அளிப்பதில் இரண்டாம் அந்திபாத்தரும் அவரது மகன் ஏரோதும் சிறப்பாகச் செயல்பட்டனர். ஆனால் 43-இல் அந்திப்பாத்தர் இரிக்கானுவினுடைய ஊழியனால் நஞ்சு கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டார். தனது அசுமோனிய குடும்பத்திற்கும் அதற்கு எதிரான இதுமேயருக்கும் இடையிலுள்ள உறவுகளை

பலப்படுத்துவதற்கென இரண்டாம் இரிக்கானு தனது பேத்தி மரியம்மேயை அந்திப் பாத்தரின் மகன் ஏரோதிற்குத் திருமணம் செய்து வைத்தார். திருமண நிச்சயம் 42-இலும் திருமணம் 37-இலும் நடைபெற்றன.

மாநிலத்தை சூறையாடியபின் காசியு 42-இல் மாநிலத்திலிருந்து பின்வாங்கினார். இறுதியாக பிலிப்பியில் மாற்கு அந்தோணி மற்றும் ஆக்டேவியன் ஆகியோரால் தோற்கடிக்கப்பட்டார். அச்சமயத்தில் சீரியா மாநிலத்தில் உரோமை ஆதிக்கமானது பலவீனமாய் இருந்ததால் பழைய பாரசீக பேரரசினுடைய வாரிசுகளாகிய பார்த்தியர்கள் அதன் மேல் 40-இல் படையெடுத்துப் புகுந்தனர். தலைமை குருத்துவத்தை விரும்பியவரும் இரண்டாம் இரிக்கானுவின் மகன் இரண்டாம் அரித்தோபுலின் மகனுமான அந்திகோனுவின் ஆட்சியை அவர்கள் ஆதரித்தனர். பார்த்தியருடைய உதவியுடன் அவர் மூன்று ஆண்டுகள் (40-37) அரசனாகவும் தலைமைக் குருவாகவும் இருந்தார். பாசேலையும் (ஏரோதுவின் சகோதரன்) இரண்டாம் இரிக்கானுவையும் அவர் சூழ்ச்சியால் கைப்பற்றினார். பாசேல் தற்கொலை செய்து கொண்டார். இரிக்கானுவின் காதுகளை அந்திகோனு வெட்டச் செய்தார். (இவ்வாறு அது முதல் அவரைத் தலைமைக்குருவாக பணியாற்ற தகுதியற்றவனாக்கினார் லேவி 21:17-23). இரிக்கானு பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டார். ஆனால் ஏரோது தப்பித்து உரோமைக்குச் சென்று அங்கு முதலில் அந்தோணியின் ஆதரவையும் பின்னர் ஆக்டேவியனுடைய ஆதரவையும் பெற்றார். அங்கு ஆலோசனைக்குழுவின் அறிக்கைப்படி (டிசம்பர் கி.மு. 40) அவர் ''யூதேயாவின் அரசன்'' என்று அறிவிக்கப்பட்டார், ஆனால் அவரது அரசை அவர் இன்னும் வெல்ல வேண்டியிருந்தது. மூன்றாண்டுகளுக்குப் பின்னர், அந்தியோக்கியாவில் உரோமையரால் அந்திகோனு தூக்கிலிடப்பட்ட பிறகு, உரோமைப்படைகளின் ஆதரவுடன் அவர் அரசுக்கு வந்தார்.

2. பெரிய ஏரோது (கி.மு. 37-4):- 37-இல் சுறுசுறுப்புமிக்க விளையாட்டு வீரனும், பழிக்கஞ்சாத சூழ்ச்சியாளனும் உணர்ச்சிக்கு ஆட்பட்ட ஏகாதிபதியுமான ஏரோது பாலஸ்தீனத்தினுடைய எவ்வித எதிர்ப்புமில்லாது தலைவனானார். உரோமைக்கு உட்பட்ட சிற்றரசன் என்ற முறையில் அவர் அருகிலுள்ள சீரியா மாநிலத்தின் பிரதிநிதியை சார்ந்திராமல் நேரடியாக உரோமிற்கு பொறுப்புடையவராக இருந்தார். திறமையுள்ள அரசியல்வாதி என்ற நிலையில் அவர் முதலில் மாற்கு அந்தோணியை ஆதரித்தார். ஆனால் 31-இல் அக்தியுமில் அவரது தோல்விக்குப்பின் உரோது தீவில் ஏரோது ஆக்டேவியனை சந்தித்து வெற்றியாளரின் முன்னிலையில் தனது கிரீடத்தை அகற்றித் தனது நிலையினை விளக்கினார். ஆக்டேவியன் அவரது கிரீடத்தை மீண்டும் அளித்து அவரது அரசுரிமையை உறுதிப்படுத்தி அறிவித்தார். ஏரோது உரோமையின் தோழமை அரசனானான். முழுமையான உள்ளார்ந்த தன்னாட்சியையும் கப்பம் கட்டுவதிலிருந்து சுதந்திரத்தையும் அவர் அனுபவித்தாலும் போர் மற்றும் வெளிநாட்டுக் கொள்கை முதலியவற்றில் உரோமைத் தலைமைக்கு உட்பட்டிருந்தார். ஏரோதுவின் ஆட்சியை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

அ. கி.மு. 37-25:- இந்தத் தொடக்க ஆண்டுகள் அவரது வல்லமையை நிலைப்படுத்தவே முதன்மையாக பயன்பட்டன. தனது அதிகாரத்துடன் போட்டியிடும் எவனையும் இரத்தம் சிந்தி, திட்டமிட்டு ஒழித்துக்கட்டுவதில் இந்த ஆண்டுகள் கழிந்தன. (முன்னர் அவர் தலைமைக்குருவாக ஏற்படுத்தியிருந்த மூன்றாம் அரிஸ்தோபுல், அவர் சகோதரி சலோமியின் கணவர் யோசேப்பு, இரண்டாம் இரிக்கானு, அவருடைய மனைவி முதலாம் மரியம்மே, மாமியார் அலக்சாந்திரா ஆகிய சிலர் முக்கியமானவர்கள் ஆவர்). திருப்தி செய்ய முடியாதபோது பேராசையில் வேரூன்றியிருந்த அவரது கொடூரமானது நாடறிந்த ஓர் அவபெயராகும். ஆயினும் அவர் தனது வாழ்விற்காகவே போராடவேண்டியிருந்தது. ஏனெனில் சூழ்ச்சியும் சதியும் அவரைச் சூழ்ந்திருந்தன

ஆ. கி.மு. 25-13:- அவரது அதிகாரத்துக்கு எதிர்ப்புகள் நீங்கிய பின்னர் வரிப்பணத்தை உபயோகித்துத் தனது அதிகார எல்லையில் ஆடம்பர வள்ளல்தன்மையுடைய கலாச்சார முன்னேற்றங்களில் ஏரோது காலத்தை கழித்தார். பேரரசன் வழிபாட்டை அவர் ஆதரித்தார். அதனுடைய நான்காண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் கொண்டாட்டத்தை உயர்த்துவதற்கென பேரரசனுக்குக் கோவில்கள், அரங்கங்கள், களியரங்குகள், உடற்பயிற்சிக் கூடம், குளியலறைகள் மற்றும் புதிய நகர்கள் முதலியவற்றை கட்டுவித்தார். எருசலேமில் அவர் ஓர் அரங்கத்தையும் வட்டரங்கத்தையும் பூங்கா மற்றும் தோட்டங்களையும் நீர்ச்சுனைகளையும் அரச அரண்மனையையும் அந்தோனியா கோட்டையையும் உருவாக்கினார். தன்னுடைய ஆட்சியின் 18-ஆம் ஆண்டில் (கி.மு. 20) எருசலேமில் இரண்டாம் ஆலயத்தைப் புதுப்பிக்கத் தொடங்கினார். ஆலயம் மட்டும் விரைவிலேயே முடிக்கப்பட்டாலும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளைப் புதுப்பிக்கும் பணி அவருக்கு பின்னர் நீண்ட காலம் தொடர்ந்தது. அது மீண்டும் அழிக்கப்படுவதற்கு எழு ஆண்டுகளுக்கு முன்னர் கி.பி. 63-இல் அப்பணி முழுமை பெற்றது. எருசலேமிற்கு வெளியிலும் அதையொத்த கட்டுமானப்பணிகளை அவர் செயல் படுத்தினார். சமாரியாவானது மீண்டும் கட்டப்பட்டு அரசனுக்கு மதிப்பளிக்கும் விதமான செபஸ்தே (அகுஸ்துவிற்கு இணையான கிரேக்கச் சொல்) என்று அழைக்கப்பட்டது. அதில் அகுஸ்துவிற்கு ஒரு கோவில் கட்டப்பட்டது. கடற்கரையிலிருந்த ஸ்த்ராத்தோவினுடைய கோபுரமானது செசரியா மார்திமா என்னும் முக்கிய துறைமுக நகராக மாற்றியமைக்கப்பட்டது. ஆபிரகாமின் நினைவிற்கு புனிதமாக இருந்த மமிரேயைச் சுற்றி பிரமாண்டமான ஏரோதினுடைய கட்டுமான வேலைகள் நடந்தன. நாடு முழுவதும் (சைப்ரசு, அலக்சாந்திரியும், ஏரோதியும், இரிக்கானியா, மக்கேரு, மசாதா) கோட்டைகள் கட்டப்பட்டன, அல்லது புதுப்பிக்கப்பட்டன. அவற்றில் சில இடங்களில் அரசப் பகுதிகளும் கட்டப்பட்டன. எரிகோவானது ஏரோதினுடைய விருப்பமான உறைவிடமாயிற்று. அவர் அதனை அரங்கம், குதிரைப் பந்தய மைதானம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கோபுரம் ஆகியவற்றால் அழகு படுத்தினார்.

இவை அனைத்திலும் அகுஸ்துவின் காலத்தினுடைய கலாச்சார முன்னேற்றங்களால் ஏரோது தூண்டப்பட்டார். ஏனெனில் அவர் தன்னைச் சுற்றிலும் கிரேக்க மெய்யியல் அறிஞர்களையும் பேச்சாளர்களையும் ஆலோசகர்களாக கொண்டிருந்தார். இவர்களில் மிகவும் புகழ் பெற்றவர் அரிஸ்டாட்டில் வழி வந்த விஞ்ஞானியும் மெய்யியல் அறிஞரும் வரலாற்று ஆசிரியருமான தமஸ்குவைச் சேர்ந்த நிக்கோலாஸ் ஆவார். ஆனால் உள்ளத்தளவில் கிரேக்கனாய் இருந்தமையால் ஏரோது யூதத்துவத்தின் மேல் ஆர்வமற்றவனாக இருந்தார். யூதர்களுக்கு அரசனாக இருந்தாலும் அவர் யூத அரசனாக இருக்கவில்லை. உண்மையில் அவரை வெறுத்த யூதர்களுடைய ஆதரவை பெறுவதில் அவர் என்றுமே வெற்றி பெறவில்லை. இதுமேயனானதால் அவர் அவர்களுக்கு ஒரு பாதி யூதனாகவே இருந்தார். தங்களுடைய அசுமோனிய சார்பின் காரணமாக, சதுசேயரல்லாதவர்களை விருப்பம்போல் தலைக்குருவாக நியமித்தார். இவர்கள் கிரேக்கக் கலாச்சாரத்திலும் மெய்யியலிலும் பயிற்சி பெற்றவர்கள். ஆகவே பரிசேயர்கள் இவர்களை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவர்கள் இருமுறை ஏரோதுவிற்கும் பேரரசனுக்கும் பற்றுறுதியை அளிக்க மறுத்தனர். இதன் விளைவாக யூத மக்களைக் கட்டுபடுத்த ஏரோது சில சமயங்களில் வன்முறைகளைப் பயன்படுத்தினார். அதன் விளைவாக நாடு முழுவதும் கோட்டைகளைக் கட்டுவித்தார்.

இ. கி.மு. 13-4:- ஏரோதுவினுடைய ஆட்சியின் இறுதிக் காலம் அவரது குடும்பப்பூசல்களில் கழிந்தது. அவர் பத்து மனைவியரை மணந்திருந்தார். சில நேரங்களில் அவர்களையும் அவர்களது பிள்ளைகளையும் ஏற்கவும் மறுத்தார். அவருக்கு உண்மையான தொந்தரவு மரியம்மேவிற்கு பிறந்த (இறுதியாக அவரால் கி.மு. 7-ல் கொல்லப்

பட்ட) அலக்சாந்தர் மற்றும் அரித்தோபுல் என்னும் மூத்த மகன்களிடமிருந்தும் அவரது மரணத்திற்கு ஐந்து நாட்கள் முன்னதாக தூக்கிலிட்ட மூன்றாம் அந்திபாத்தரிடமிருந்தும் வந்தது. அவருடைய இறுதி சுகவீனத்தின்போது அவர் இறந்து விட்டார் என ஒரு பொய் வதந்தி பரவியது. உடனடியாக எருசலேமில் ஏரோதினுடைய ஆலய வாசலினின்று பொன் கழுகினைப் பிடுங்கியெறியுமாறு மக்களைப் தூண்டிவிட இரு சட்ட வல்லுநர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். இதனை அறிந்தவுடன் ஏரோது அவர்களை உயிரோடு எரிக்குமாறு கட்டளையிட்டு பழிதீர்த்துக் கொண்டார். பாஸ்காவிற்கு சற்று முன்னதாக கி.மு. 4-இல் எரிகோவில் அவர் இறந்தார். பெத்லகேமிற்கு சில மைல் தென்கிழக்கே எரிகோவிலிருந்து ஏரோதியும் வரை அவரது உடலுடன் பெரும் இறுதி ஊர்வலம் சென்றது. அங்கு அவர் புதைக்கப்பட்டார்.

III இயேசுவின் காலத்தில் உரோமானிய பாலஸ்தீனம் (கி.மு. 4- கி.பி. 30)

1. இயேசுவின் பிறப்பு (லூக் 1:5; 2:1; மத் 2:1) - ஏரோது மற்றும் அகுஸ்து பேரரசருடைய நாட்களில் இயேசுவின் பிறப்பை லூக்கா குறிப்பிடுகிறார். இந்த ஆண்டு உறுதியாக கணிக்கப்படமுடியாவிட்டாலும் பிறப்பானது கண்டிப்பாக கி.பி. 1-இல் நிகழவில்லை. கிறிஸ்தவக்காலம் அல்லது ''பொதுக் காலம்'' இயேசுவினுடைய பிறப்பு ஆண்டில் தொடக்கப்பட்டதாகக் கருதப்பட்டது. இயோக்ளேசியனுடைய காலக்கணிப்பிற்கு எதிர்ப்பளித்த உரோமை துறவற மடத்தின் மடாதிபதியும் ஸ்கித்திய துறவியுமான தியோனிசியு எக்கிகுயுவினால் கி.பி. 525-இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தவறான கணிப்பினை இது உண்மையில் அடிப்படையாகக் கொண்டது. ஆண்டவரது ஆண்டை, உரோமை நகர்கட்டப்பட்ட 754-உடன் சமப்படுத்துவதன் மூலம் அவர் கிட்டதட்ட நான்காண்டுகளைத் தவறவிடுகிறார். இதை எவ்வாறு செய்தார் என்று உறுதியாகக் கூற முடியாது. அலக்சாந்திரிய கிளமெந்துவால் பாதுகாக்கப்பட்ட ஒரு மரபினை தியோனிசியு அறிந்திருந்தார் என்று கருதப்படுகிறது. அதன்படி அகுஸ்து 43 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். லூக் 3:1.23-ஐ அடிப்படையாகக் கொண்டு இயேசுவின் பொதுப் பணியின் ஆண்டான அவரது முப்பதாம் ஆண்டு திபேரியசின் ஆட்சியின் 15-ஆம் ஆண்டுடன் சமன்படுத்தப்படுகிறது. எனவே இயேசு, அகுஸ்துவின் ஆட்சியில் 15 ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும்; மேலும் அவருடைய 28-வது ஆண்டைக் கணக்கிடுவதன் மூலம் 754-ஆம் ஆண்டு கி.மு. 1 ஆக உருவாகியது. ஆயினும் ஏரோது 750-இல் இறந்தார். ஏனெனில் ''உரோமையரால் அரசனாக நியமிக்கப்பட்டதற்கு'' 37 ஆண்டுகளுக்கு பின்னும் (714) ''நாட்டின் ஆதிக்கத்தை ஏற்றதற்கு'' 34 ஆண்டுகள் பின்னரும் (717) அவர் இறந்ததாக யோசிபஸ் குறிப்பிடுகிறார். தியோனிசியுவினுடைய கணிப்பானது ஏரோதுவினுடைய இறப்பிற்கு நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் இயேசு பிறந்தார் என்று பொருள் படும்.

பாம்பேயின் காலம் முதல் சீரியா மாகாணமானது உரோமைப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டு வந்தது. லூக் 2:2-இல் சுல்பிசியு கிரேனியு பற்றிக் குறிப்பிட்டிருப்பதன் காரணமாக இங்கு விவாதத்திற்கு உரியவர்கள் இயேசுவினுடைய பிறப்பை ஒட்டிய காலத்திற்கு உட்பட்ட பிரதிநிதிகளில் வரிசை பின்வருமாறு தோன்றுகிறது: அகிரிப்பா (கி.மு. 25-13); தித்தியு (கி.மு. 10); சென்கியு சதுர்னினு (கி.மு. 9-6); குவின்திலியு வாரு (கி.மு. 6-4) சீசர் (கி.மு. 1 - கி.பி. 4); வொலுசியு சதுர்னினு (கி.பி. 4-5); சுல்பிசியு கிரேனியு (கி.பி. 6-7); சேசிலியு கிரேதிகுசிலான (கி.பி. 12-17).

கி.பி. 6-7-இல் (759) கிரேனியு பிரதிநிதியாக இருந்தார்; அந்த ஆண்டில் (ஆக்தியும் போருக்கு (கி.மு. 31; 723) 37 ஆண்டுகளுக்கு பின்னர்) குடிக்கணக்கு எடுத்தார் என்பதும் உறுதி. முதல் குடிக்கணக்குப்பற்றிய லூக்காவின் குறிப்பானது குறிப்பிடத்தக்கதென்றால் கி.பி. 6-7-ஐச் சேர்ந்த குடிக்கணக்கானது இரண்டாவது என்பது இயலாத ஒன்றல்ல

ஆனால் முதல் குடிக்கணக்கு எப்போது எடுக்கப்பட்டது? ஏரோதுவினுடைய வாழ்வின் இறுதி ஆண்டுகளில் (கி.மு. 9-4) உள்ள பிரதிநிதிகள் உறுதியாக அடையாளப்படுத்தப்படக் கூடியவர்களாகத் தெரிகின்றனர். கிரேனியு கி.மு. 12-இல் ஆட்சியாளராக இருந்ததாக அறியப்படுகிறது. மேலும் அதற்கு சில காலம் கழித்து தாசித்துவினாலும் ஸ்திராபோவினாலும் குறிப்பிடப்படுகின்ற சிலிசியொவைச் சேர்ந்த ஓமோனதென்சியருக்கு எதிராக போரிட்டபோது கிரேனியு பிரதிநிதியாக இருந்திருக்கக்கூடும். அதே சமயத்தில் சென்சியு சதுர்னினு சீரியாவின் பிரதிநியாக இருந்தவேளையில் குடிக்கணக்கு எடுப்பதற்கான அதிகாரத்தை கிரேனியு கொண்டிருக்கக் கூடும். அவரால் எடுக்கப்பட்ட குடிக்கணக்கோடு இயேசுவின் பிறப்பை தெர்துல்லியன் தொடர்புபடுத்துகிறார். ஆனால் இவை அனைத்தும் பிரச்சினைக்குரியதாகவும் இயேசுவினுடைய பிறப்பை மிக முந்தையதாக ஆக்குவதாகவும் உள்ளன. அனேகமாக உலகளாவிய பட்டியலின் ஆணையை ஏரோது மற்றும் அகுஸ்துவின் நாட்களில் தோராயமாக அமைந்தவாறு காலத்தினுடைய பொதுவான சுட்டுக்குறிப்பினை மட்டுமே லூக்கா அளிக்கலாம் (அதே போன்ற பொது அமைப்பிற்குக் காண்க. அ.ப. 11:28)

2. அகுஸ்து சீசர் (கி.மு. 27-கி.பி. 14):- புதிய ஏற்பாட்டுக் காலம் துவங்கிய போது அகுஸ்து உரோமைப் பேரரசராக இருந்தார். யூலியு சீசரின் மரணத்திற்குப் பின்னர் மாற்கு அந்தோணி மற்றும் ஆக்டேவியன் என்னும் இருவர் அதிகாரத்திற்காக போட்டியிட்டனர். கி.மு. 31 செப்டம்பரில் அக்தியுமில் அந்தோணியை தோற்கடித்ததன் மூலம் ஆக்டேவியன் இறுதியாக வெற்றி பெற்றார். விரைவிலேயே அவர் உரோமானிய உலகின் ஒரே தலைவராக உருவானார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது வெற்றியின்போது அவர் மீட்டளித்த சமாதானத்தை அடையாளப்படுத்தும் விதமாக 200 ஆண்டுகளில் முதன் முறையாக யானுவினுடைய உரோமைக் கோவிலின் கதவுகள் மூடப்பட்டன. கி.மு. 27-இல் உரோமைக்கு அவர் செய்த சிறப்பான ஊழியத்தை அங்கீகரிக்கும் விதமாக ஆட்சிப்பேரவையானது அகுஸ்து (வணக்கத்துக்குரிய) என்னும் பட்டம் ஆக்டேவியனுக்கு அளித்தது. இவ்வாறு இப்பட்டத்தைப் பயன்படுத்தும் உரோமைப் பேரரசர்களின் மரபு துவங்கியது (அ.ப. 25:21.25; நீரோ). ஆனால் உரோமைப் பேரரசினுடைய தொடக்கத்தினை இக்காலத்திலிருந்து துவக்குவது மரபாகும். அகுஸ்துவினுடைய ஆட்சியானது உண்மையில் நலம்பேணும் சர்வாதிகாரமாகவே இருந்தது. ஆயினும் நீண்டகாலத்திற்குப் பெரும்பாலான மத்திய தரை உலகில் சமாதானமும் வளமையும் நிலவியதன் மூலம் உரோமைச் சமாதானம் ஆட்சி புரிந்தது.

3. ஏரோதுவின் வாரிசுகள்:- ஏரோதுவின் உயில் அவரது அரசை அவரது மூன்று புதல்வர்கள் அர்க்கெலா, ஏரோது அந்திப்பா, மற்றும் பிலிப்பு ஆகியோருக்கிடையே பிரித்தளித்தது. பெரிய ஏரோதுவின் பேரில் யூதர்களின் வெறுப்பு ஆட்சியாளர்களாக அவரது மகன்களின் வாரிசுரிமைக்கு எதிர்ப்பை உருவாக்கிய வேளையில், குடும்ப உட்பூசலும் தொடர்ந்தது. அனைத்து பிரிவினராலும் தூதுக்குழுக்கள் உரோமைக்கு அனுப்பட்டன. இறுதியில் அகுஸ்து ஏரோதினுடைய விருப்ப ஆவணத்திற்கு மதிப்பளித்தார்.

அ. அர்க்கெலா (கி.மு. 4-கி.பி.6):- மால்தேக்கேயின் மூத்த மகனான இவர் அரசில் பாதியை (யூதேயா, சமாரியா, இதுமேயா) அடைந்தார். அரச பதவியை இவர் அடைய வேண்டுமென ஏரோது விரும்பினார். ஆனால் உரோமையர் சிற்றரசப் பதவியை மட்டுமே அளித்தனர். அவருடைய தான் தோன்றித்தனமான சர்வாதிகாரவழிகளின் காரணமாக ஏரோதினுடைய பிள்ளைகளிலேயே இவரை மக்கள் அதிகம் வெறுத்தனர். அர்க்கெலா தலைமைக் குருக்களைப் பதவியினின்று விருப்பம்போல் நீக்கினார். பரந்த அளவிலான கட்டுமாணப்பணிகள் செய்தார். வள்ளன்மையான பல திட்டங்

களை நிறைவேற்றினார். ஆனால் அவரது முறையற்ற அரசிற்கு எதிராக முறையிடுமாறு உரோமைக்கு எருசலேமிலிருந்தும் சமாரியாவிலிருந்தும் முக்கிய மனிதர்களைக் கொண்ட தூதுக்குழுவை அனுப்புமளவிற்கு அவர் யூதரைக் கிளர்ந்தெழுமாறு செய்தார். இது அவருடைய ஒன்பதாண்டு கால ஆட்சிக்கு ஒரு முடிவைக் கொணர்ந்தது. கி.பி.6-இல் தெற்கு காலில் உள்ள வியன்னாவிற்கு அவர் நாடு கடத்தப்பட்டார். யூதேயா, சமாரியா மற்றும் இதுமேயா ஆகியவற்றை உரோமை மாநிலமாக மாற்றுவதற்கு உரோமை இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டது.

ஆ. ஏரோது அந்திப்பா (கி.மு. 4-39):- மால்தேக்கின் இளைய மகனாகிய இவர் கலிலேயா மற்றும் பெரேயாவிற்கு மண்டல ஆளுநராக ஆனார் (நிலப்பரப்பின் நான்கில் ஒரு பகுதியை ஆண்டு வந்த ஒரு சிற்றரசன் லூக் 3:2.19; மத் 14:1. ஆனால் மாற் 6:14 அவரை ''அரசன்'' என அழைக்கிறது). கலிலேயக் கடலின் மேற்கு கரையில் திபேரியாவில் அவர் தனக்கென ஒரு அழகிய தலைநகரைக்கட்டிப் பேரரசரின் பெயரை அதற்கு இட்டார். ஆனால் ஏரோது அந்திப்பா தனது தந்தையின் குணங்கள் சிலவற்றைக் கொண்டிருந்தார். அவர் வீண்பெருமையுடையவராகவும் சோம்பேறியாகவும் பகைமையுடையவராகவும், சூழ்ச்சியுடையவராகவும் இருந்தார் (லூக் 13:32 ''அந்தக் குள்ளநரி''). உரோமையின் ஆதரவை எவ்வாறு பெறுவதென அவர் அறிந்திருந்தார். நபத்தேய அரசன் நான்காம் அரேத்தாவின் மகளை திருமணம் செய்துகொண்டபின் அவளை நீக்கிவிட்டு இரண்டாம் மரியம்மேயின் மகனும் தனது ஒன்றுவிட்ட சகோதரனுமான ஏரோதுவின் மனைவி ஏரோதியாளை மணந்து கொண்டார் (லூக் 3:19; மத் 14:3; மற்றும் மாற். 6:17-இல் ஏரோதியாள் பிலிப்புவின் மனைவியாக தோன்றுகிறாள். ஏரோது மற்றும் ஏரோதியாளின் மகள் மூன்றாம் சலோமியின் கணவனாகிய மண்டல ஆளுநனாகிய பிலிப்புவாக அவன் இருக்க முடியாததாகையால் ஏரோதியாளின் கணவனாகிய ஏரோது பிலிப்பு என்னும் பட்டப்பெயரைத் கொண்டிருக்கக் கூடுமென விளக்கவுரையாளர்கள் யூகிக்கின்றனர். ஆனால் இந்த யூகத்திற்கு மற்றபடி எந்த ஆதாரமுமில்லை). இச்சம்பவத்தின் காரணமாக திருமுழுக்கு யோவான் ஏரோது அந்திப்பாவினால் கொலை செய்யப்பட்டார் (மாற் 6:17-29; மத் 14:3-12). அரேத்தா அரசனுடைய மகளை விலக்கியதானது ஏரோது அந்திப்பாவினுடைய நாட்டில் கொரில்லா போர்முறையைக் கொண்டு வந்தது. சீரியாவிலுள்ள உரோமைப்பிரதிநிதியாகிய விதேல்லியு (கி.பி. 35-39) அவனுக்கு உதவத் தவறியபோது ஏரோது கி.பி. 37-இல் அரேத்தாவினால் தோற்கடிக்கப்பட்டார். இறுதியாக பேரரசராகிய கலிகுலா அவரை 42 ஆண்டுகால ஆட்சிக்குப் பின்னர் இலயன்சுக்கு நாடு கடத்தினார் (கி.பி. 39).

இ. பிலிப்பு (கி.மு. 4-34) எருசலேமைச் சேர்ந்த கிளியோபத்திராவின் மகனாகிய பிலிப்பு கலிலேயா கடலுக்கு கிழக்கிலும் வடக்கிலும் உள்ள அவுரானிதிசு, பதனேயா, திரக்கோனித்து முதலிய பகுதிகளுக்கு மண்டல ஆளுநன் ஆனார். ஆனால் திரக்கோனித்து மற்றும் இத்துரேயா பற்றிமட்டும் லூக். 3:2 குறிப்பிடுகிறது. இவை யூதரல்லாதோர் பெருமளவில் குடியிருந்த பகுதியாகும். நபத்தேயர் மற்றும் பார்த்தியரின் தாக்குதல் தடுக்கும் பகுதிகளாகும். மூன்றாம் சலோமியின் கணவராகிய பிலிப்பு நல்ல ஆட்சியாளர். அவருடைய தயாள மனப்பான்மைக்காகவும் நீதிக்காகவும் அவர் அடிக்கடி புகழப்பட்டார். கி.மு. 2-விற்கு சற்று முன்னர் மீனவக் கிராமமாகிய (கலிலேயக் கடலின் வட கரையில் உள்ள) பெத்துசயிதாவை தனது தலைநகராக்கி, அகுஸ்துவின் மகள் யூலியாவின் பெயரால் அதனை அழைத்தார். யோர்தான் நதியின் ஊற்றுகளில் பழைய கிரேக்க நகராகிய பனேயாவை மீண்டும் கட்டியெழுப்பி அதற்கு செசரியா பிலிப்பி என்று மறு பெயரிட்டார் (மாற் 8:27; மத் 16:13). 37 ஆண்டுகால ஆட்சிக்கு பின்னர், ஒரு வாரிசின்றி, கி.பி. 37-இல் அவர் இறந்தார். அவரது நிலப்பரப்பானது முறையாக சீரியாவின் உரோமை மாநிலமாயிற்று.

4. கருவூல அதிகாரிகள் அல்லது ஆளுநர்கள்:- அர்க்கெலாவின் வீழ்ச்சிக்கு பின்னர் (கி.பி. 6) யூதேயா, சமாரியா மற்றும் இதுமேயா ஆகியவை அடங்கிய அவரது நிலப்பரப்பானது ஒரு மாகாணமாக அமைக்கப்பட்டு, குதிரைப் படை அமைப்பைச் சேர்ந்த கொப்போனியு என்பவர் அதற்கு ஆளுநராக அனுப்பப்பட்டார். மரண தண்டனை விதிக்குமளவிற்கு அவருக்கு எல்லா அதிகாரமும் பேரரசரால் அளிக்கப்பட்டது. இவ்வாறு பெரிய ஏரோதுவினுடைய பரந்த அரசின் முக்கிய பகுதியானது இனியும் மண்டலச் சிற்றரசர்களால் ஆளப்படாமல் (கி.பி. 41-44-ஐ தவிர்த்து) உரோமை ஆளுநர்களாலேயே ஆளப்பட்டது. இவர்கள் செசரியாவிலோ அல்லது எருசலேமில் ஏரோதுவினுடைய அரண்மனையிலோ தங்கியிருந்து அரச மாகாணத்தை ஆண்ட கருவூல மற்றும் படை ஆட்சியாளர்களாவர். தேவையானபோது சீரியாவிலுள்ள பிரதிநிதியை உதவிக்கு அழைக்கலாம். பேரரசருக்கான வரி வசூலிப்பதையும் பொது ஒழுங்கு கடைபிடிக்கப்படுவதையும் அவர்கள் கண்காணித்தனர். புதிய மாகாணமானது உருவாக்கப்பட்டபோது சீரியாவின் பிரதிநிதியாகிய சுல்பிசியு கிரேனியு குடிக்கணக்கு எடுக்குமாறு கட்டளையிடப்பட்டார். உரோமைக்கெதிரான ஒரு சிறுகிளர்ச்சி செய்ய இது பாலஸ்தீன யூதருக்கு ஒரு சந்தர்ப்பமளித்தது. உண்மையில் யாவே அவர்களுடைய ஆண்டவராக இருக்கின்ற வேளையில் கோழைத்தனத்தால் உலகத் தலைவர்களை ஏற்றுக் கொண்டதற்காகத் தனது நாட்டினரைக் கடிந்து கொண்ட கலிலேயனாகிய யூதாவினால் இது தூண்டிவிடப்பட்டது (அ.ப. 5:37). பெரும்பாலான கருவூல அல்லது படை அதிகாரிகளைப் பற்றி அவர்களது பெயர்களைத்தவிர சிறிதளவே அறியப்படுகிறது: கொப்போனியு (கி.பி. 6-9); அம்பிவியு (9-12); அன்னியு உருபு (12-15); வலேரியு கிராத்து (15-26); போந்தியு பிலாத்து (26-36); மார்செல்லு (36-37); மரூல்லூ (37-41); குசுபியு பாது (44-46); திபேரியு யூலியு அலக்சாந்தர் (46-48); வெந்திதியு குமானு (48-52); அந்தோனியு பெலிக்சு (52-60); போர்க்கியு பெஸ்து (60-62); லூக்கேயு ஆல்பினு (62-64); கெசியு புலோரு (64-66).

5. போந்தியு பிலாத்து (கி.பி. 26-36):- யூதேயாவின் ஆளுநர்களில் நன்கு அறியப்பட்டவர் இவர் (லூக் 3:1). பேரரசரின் நினைவாக கட்டியெழுப்பப்பட்ட திபேரியும் என்று அழைக்கப்படும் கட்டிடத்தைச் சேர்ந்த அர்ப்பணிப்பு கல்வெட்டானது செசரியா மரித்திமாவில் கண்டெடுக்கப்பட்டது. திபேரியுவின் காலத்தில் பிலாத்துவினுடைய பிரசன்னத்திற்கு அது சான்றளித்து, யூதேயாவின் ஆளுநர் என்ற பெயரையும் அவருக்கு அளிக்கின்றது. திபேரியுவினுடைய யூத எதிர்ப்பு ஆலோசகராகிய செயானவினால் பதவியிலமர்த்தப்பட்ட பிலாத்து வலிமை வாய்ந்த கண்டிப்பான ஆட்சியாளராக இருந்ததோடு யூதர்களுக்குத் தன்னை உகந்தவராக்கிக் கொள்வதற்கென முயற்சி எடுக்கவில்லை. பேரரசர் கலிகுலாவிற்கு எழுதிய கடிதத்தில் ''முரண்டுப்பிடியாய் இயற்கையாய் வளைந்து கொடுக்காத கொடூரமான'' மனிதன் என பிலாத்துவைப்பற்றி முதலாம் ஏரோது அகிரிப்பா விவரிக்கிறார். ''சுரண்டல், அவமதிப்பு, திருட்டு, தாக்குதல், பழிப்புரை, விசாரணையற்ற மரண தண்டனைகள், முடிவில்லா பயங்கர கொடூரம்'' ஆகிய குற்றங்களை பிலாத்துமேல் சாற்றுகின்றார். பிலாத்து முதலில் யூதேயாவை வந்தடைந்தபோது பேரரசருடைய முத்திரை பதித்த இராணுவப் பட்டயங்களை இரவில் எருசலேமிற்குள் கடத்தி வந்தார். இத்தகைய உருவங்களைத் தடுக்கின்ற வழக்கங்களையுடைய யூதர்களுடைய உணர்வுகளை இது பாதித்தது. அவற்றை நீக்குமாறு அவர்கள் பிலாத்துவை மன்றாடினர். ஆனால், பிலாத்து அதற்கு உடன்பட மறுத்தபோது செசரியாவில் அவனது வீட்டைச் சுற்றி மௌனப் போராட்டமாக ஐந்து நாட்கள் நின்றனர். அவர்கள் போராட்டத்தை தொடர்ந்தால் அவர்களை உடனே கொல்லுமாறு உருவிய வாட்களுடன் போர்வீரர்களை யூதரைச்சுற்றிப் பிலாத்து நிற்கச் செய்தார். ஆனால் யூதர்களோ பத்து கட்டளைகளை மீறுவதற்கு பதிலாக தங்களது உயிரை

இழக்கவும் தயாராயிருந்தனர். இதைக்கண்டு வியப்படைந்தவராய் பட்டயங்களை நீக்கு மாறு பிலாத்து கட்டளையிட்டார். ஆனால் மற்றொருமுறை மிக அவசியமான ஆனால் சமயம் சாராத கால்வாய் கட்டுவதற்கென புனிதக் கருவூலத்தின் பணத்தை பிலாத்து உபயோகித்ததை யூதர்கள் எதிர்த்தபோது கிளர்ச்சியாளர்களுடன் தனது போர் வீரர்களையும் பிலாத்து கலக்கச் செய்து அவர்களைத் (மத் 27:6) தடியால் அடிக்கச் செய்தார். அடிகளாலும் கூட்டத்தின் மிதிபாடுகளாலும் பல யூதர்கள் இறந்தனர். கலிலேயருக்கு எதிராக பிலாத்து நிறைவேற்றிய வன்முறைச் செயலுக்கான மறைமுகமான குறிப்பை லூக் 13:1 பாதுகாத்துள்ளது; அவர்கள் எருசலேமிற்கு காணிக்கைகளை கொண்டு வந்த போது, ''அவர்களது பலிகளுடன் அவர்களது இரத்தத்தை அவன் கலந்தான்''.

ஆயினும், மாகாண மக்கள்பால் பிலாத்து காட்டிய தான்தோன்றித்தனம் அவரது அழிவிற்கு இட்டுச் சென்றது. கி.பி.35-இல் தங்களுடைய புனித மலையில் மோசேயால் புதைக்கப்பட்டதாக கருதப்பட்ட புனித கலன்களின் கண்டுபிடிப்பைக் காணுவதற்கு கெரிசிம் மலையில் ஒன்று கூடிய சில அப்பாவியான சமாரியரை பிலாத்து தாக்கிச் சிறைப்படுத்திக் கொன்றார். எவ்வித போராட்ட எண்ணமுமின்றி கெரிசிம் மலைக்கு திருப்பயணம் மேற் கொண்ட சமாரியர்கள் இத்தாக்குதலைப்பற்றி சீரியாவின் பிரதிநிதியாகிய விரெல்லியுவிடம் முறையிட்டனர். அவர் உடனடியாக பேரரசரின்முன் தனது செயல்களுக்கு விளக்கம் தருமாறு பிலாத்துவை உரோமைக்கே அனுப்பி விட்டார். இதற்குபின் பிலாத்துவிற்கு என்ன நிகழ்ந்தது என்பது பற்றி தெரியவில்லை. கலிகுலாவின்கீழ் அவர் தற்கொலை செய்து கொண்டதாக அல்லது நீரோவின்கீழ் மரணதண்டனை அடைந்ததாகப் பிற்கால கதைகள் கூறுகின்றன. மனதளவில் அவன் ஒரு கிறிஸ்தவன் என தெர்துல்லியன் நம்பினார். பிலாத்துவின் காலத்தில்தான் திருமுழுக்கு யோவானும் இயேசுவும் தங்கள் பணியைச் செய்தனர். இவர் காலத்தில்தான் இயேசுவின் இயக்கத்தால் கிறிஸ்து வத்திருச்சபை தோன்றியது.

V இயேசுவின் காலத்திற்கு பின் உரோமைப் பாலஸ்தீனம் (கி.பி.30-135).

1. கிறிஸ்தவ திருச்சபை பரவுதல்:- தொடக்க கால கிறிஸ்தவ சமுதாயம் ''இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தியை'' (மாற் 1:1) அறிவிக்க வேண்டிய தனது கடமையைப் பற்றி மேலும் மேலும் உணரலாயிற்று. பாலஸ்தீன யூதர்களை மனந்திருப்பிய ஆரம்ப கட்ட வெற்றிக்கு பின்னர் (அ.ப. 2:47; 6:7) அப்போஸ்தலிக்க போதகர்கள் உரோமைப் பேரரசின் நகராட்சி மையங்களை நோக்கித் திரும்பினர். படிப்படியாக நற்செய்தியானது எருசலேமிலிருந்து ''மண்ணுலகின் கடை எல்லைவரை'' (1:18), முதலில் சிதறிப்போன யூதருக்கும் பின்னர் புறவினத்தாருக்கும் அறிவிக்கப்பட்டு பரவியது.

அனேகமாக கி.பி.36-இல் போந்தியு பிலாத்து உரோமைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு மர்செல்லு ஆளுநராக அறிவிக்கப்பட்டபோது (36-37), ''திருச்சபையினுடைய பெரும் கலாபனை'' (8:1) நிகழ்ந்தது. புதிய ஆளுநரை நியமிப்பதானது இத்தகைய எதிர்பாராக் கிளர்ச்சிக்கு பொருத்தமானதாக தோன்றுகிறது. எவ்வாறாயினும் இளைய பாலஸ்தீனிய கிறிஸ்தவ சமுதாயத்தின்மீதான கலாபனையில் ஸ்தேவான் கொல்லப்பட்டதும் தார்சு நகரச் சவுல் தனது கொலைத் திட்டங்களை வெளிப்படுத்தியதும் நிகழ்ந்தன (9:1-2). துல்லியமாக கணிக்க முடியாத சவுலின் மனமாற்றமானது இக்காலத்துக்குரியதாக இருக்கலாம்.

2. முதலாம் ஏரோது அகிரிப்பா (கி.பி.37-44):- கி.பி.37-ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் நாள் திபேரியு பேரரசர் மரணமடைந்தார். புதிய பேரரசர் கயுகலிகுலா (37-41) பற்றிய செய்தி எருசலேமை எட்டியபோது பிலாத்துவினால் கோபமூட்டபட்ட பாலஸ்தினயூதரின் உணர்வுகளை திருப்திபடுத்த முயல்பவராய் சீரியாவின் பிரதிநிதி விதேல்லியு அங்

கேயே இருந்தார். புதிய பேரரசருக்கு தங்கள தது பற்றுறுதியை முதலில் வாக்களித்த அவரது ஆட்சியை புகழ்ந்தவர்கள் சீரியாவின் குடிமக்களில் யூதர்களேயாவர். அவரது ஆட்சி முதல் 18 மாதங்களுக்கு சமாதானம் நிறைந்ததாகவும் அமைதியானதாகவும் இருந்தது. ஏனெனில் திபேரியு பேரரசர் வழிபாட்டினை விலக்கியிருந்தார். ஆனால் கலிகுலா இப்போது அதனை வலியுறுத்த ஆரம்பித்தார். பேரரசில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் கோவில்களிலும் (செபக்கூடங்களிலும்) தனது உருவத்தை தெய்வமாக நிறுவ விரும்பினார்.

பெரிய ஏரோதுவின் பேரனும் ஏரோதியாவின் சகோதரனுமான தனது நண்பன் முதலாம் ஏரோது அகிரிப்பாவிற்கு வடக்கு யோர்தானுக்கு அப்பாலுள்ள பிலிப்புவின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளை கலிகுலா விரைவில் அளித்தார். இந்த சலுகையுடன் அரசபட்டமும் கிடைத்தது. பாலஸ்தீனத்திற்குத் திரும்பிச் செல்லும் வழியில் ஏரோது அரசன் அலக்சாந்திரியாவில் சிறிதுகாலம் தங்கினார். அங்கே அவருக்கும் அங்குக் குடியேறியிருந்த யூதர்களுக்கும் எதிராக அவதூறான கிளர்ச்சி எழுந்தது. உரோமை படையதிகாரியாகிய அவில்லியு பிளாக்கு இதனை அனுமதித்தார். யூதருக்கு எதிரான வன்மையான கலாபனை ஒன்று அங்கே தொடங்கியது (கி.பி.38). அதற்கு எதிர்ப்பாகத் தங்களுடைய நிலையை பரிந்துரைப்பதற்கென, இறுதியாக கி.பி.40ல் அலக்சாந்திரிய யூதர்கள் பேரரசரிடம் ஒரு குழுவை அனுப்பினர். அதில் குறிப்பிடத்தக்க ஒரு உறுப்பினர் மெய்யியலறிஞர் பிலோ ஆவார். ஆனால் தூதுவர்கள் எதிர் பார்த்த வெற்றியை அடையவில்லை.

39-இல் எரோது அந்திப்பா நாடு கடத்தப்பட்டபோது அவருடைய நிலப்பரப்பானது (கலிலேயா மற்றும் பெரேயா) முதலாவது ஏரோது அகிரிப்பாவின் ஆட்சிப்பரப்புடன் சேர்க்கப்பட்டது. எகிப்திலுள்ள உரோமை படை அதிகாரியால் அவமானப்படுத்தப்பட்ட ஏரோது அகிரிப்பா 39-இல் கலிகுலாவினால் வெளியேற்றப்பட்ட சீரியாவின் பிரதிநிதி பெத்ரோனியுவின் மேல் செல்வாக்குச் கொண்டிருந்தார். பேரரசர் வழிபாட்டை வலியுறுத்த வேண்டாமென எரோது அரசன் அவனை வற்புறுத்தினார். இதன் விளைவாக எருசலேமைப் பொறுத்த மட்டில் பெத்ரோனியு இவ்வழிபாட்டைத் தாமதப்படுத்தினார். ஆனால் கடற்கரை நகராகிய யாம்னியாவின் புறவின குடிமக்கள் பேரரசருக்கென ஒரு கொடூரமான பீடத்தை கட்டியபோது அவ்வூர் யூதரால் அது தரைமட்டமாக்கப்பட்டது. இச்சம்பவம் பற்றி பேரரசரிடம் கூறப்பட்டது. அதற்கு பதிலடியாக எருசலேம் ஆலயத்தில் தன்னுடைய பிரம்மாண்டமான ஒரு சிலையினை அமைக்குமாறு அவர் கட்டளையிட்டார். ஆனால் இந்த ஆணையை நல்அருளுடன் ஏற்குமாறு யூதத் தலைவர்களை இணங்கச்செய்ய பெத்ரோனியு முயன்றார். ஆனால் காலந்தாழ்த்திக் கொண்டேயிருந்தார். இதனால் அச்சமுற்றவர்களாய் பெத்ரோனியு தங்கியிருந்த தோலமேயியில் யூதர்கள் அனைவரும் ஒன்றுகூடி சிலையை ஏற்படுத்த வேண்டாமென அவரை இறைஞ்சினர். இதைப்பற்றி பெத்ரோனியு கலிகுலாவிற்கு கடிதம் எழுதினார். அது அவர் மீது கலிகுலாவைச் சினமுறச் செய்தது. இந்த கட்டளையை திரும்பப் பெறச் செய்யும் நம்பிக்கையுடன் ஏரோது அகிரிப்பா கலிகுலாவை சந்தித்தார். பெத்ரோனியுவின்மீது ஆத்திரமுற்றவராய் அவரை தற்கொலை செய்து கொள்ளுமாறு பேரரசர் கட்டளையிட்டார். மேலும் கி.பி.41 ஜனவரி 24-இல் கலிகுலா கொலை செய்யப்பட்டதுடன் முழுப்பிரச்சினையும் தீர்க்கப்பட்டுவிட்டது.

உரோமைப் படைகளின் ஆரவாரத்துடன் கிளாதியு (41-54) அரியணை ஏறிய போது யூதருக்கு ஆதரவான சகிப்புத்தன்மையின் கட்டளையுடன் அவரது ஆட்சி தொடங்கியது. உரோமை ஆட்சிக்கு முதலாம் ஏரோது அகிரிப்பா அளித்த ஆதரவிற்கு வெகுமதியாக அன்று முதல் அர்க்கெலாவின் பரப்பு (யூதேயா, சமாரியா, இதுமேயா) அவருக்கு அளிக்கப்பட்டது. அன்று முதல் அவரது

மரணம் வரை பெரிய ஏரோதுவின் ஆட்சிப் பரப்புக்கு ஒத்த பகுதியை ஆட்சி செய்தார். எருசலேமினுடைய மூன்றாவது வடக்கு சுவரை கட்டும் பணியை ஏரோது அகிரிப்பா ஏற்றுக்கொண்டார். இப்பணியானது முடிக் கப்பட்டிருப்பின் நகரானது அசைக்க முடி யாத அரண்மிக்கதாயிருந்திருக்கும். ஆனால் அது கட்டி முடிக்கப்படுவதற்கு முன்னதா கவே சீரியாவின் பிரதிநிதியாகிய மவுருசி னால் எச்சரிக்கப்பட்ட கிளாதியு அப்ப ணியை அத்துடன் நிறுத்திவிட்டார். இச்சுவர் அமைந்த இடம் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்களின் விவாதத்திற்கு உட்பட்டதாக உள்ளது. தோராயமாக இன்றைய பழைய நகரின் வடக்கு கவருடன் ஒத்திருக்க வேண் டும். அல்லது பழைய நகரின் வடக்கிலுள்ள பண்டைய கவரின் வரிசையில் அமைந்திருக் கவேண்டும். ஆயினும் காத்லின் கெனி யோன் என்பரால் 1965-இல் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாராய்ச்சியானது சுகேனிக்கி யின் சுவருக்கு அறுபதுகளுக்கு முற்படாத ஒரு தேதியை பரிந்துரைக்கிறது. இது அகி ரிப்பாவினால் கட்டப்படாமலிருக்கப்பட வேண்டும் அல்லது மூன்றாவது சுவருக்கு அடிப்படை மட்டும் அகிரிப்பாவினால் இடப்பட்டு உண்மையான கட்டுமானப் பணியானது முதல் யூதப் புரட்சியின் போதோ அல்லது பார் கோக்பாவின் காலத் திலோ நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

ஏரோது அகிரிப்பா குறிப்பிடத்தக்கவராய் இல்லாவிடினும் பக்தியுள்ள அரசராய் இருந் தார். அன்னிய நாட்டில் கிரேக்க கலாச்சாரத் திற்கு தாராளமாக பரிந்துரை செய்தும் பெரித்தின் (இன்றைய பெய்ரூட்) புறவின அமைப்புகளுக்கு தாராளமாக உதவிபுரிந்தி ருந்ததாலும் சொந்த நாட்டில் பரிசேயத்தன் மைக்கு ஆதரவளித்ததால் அவரது மரணத் தின்போது மக்கள் துக்கம் கடைபிடித்தனர். பரிசேய இயக்கத்திற்கு அவர் ஆதரவு அளித் ததால் அப்போது தோன்றி வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த கிறிஸ்தவ திருச்ச பையை அவர் துன்புறுத்தியதைக் கண்டு வியப்படைய வேண்டியதில்லை(அ.ப.12:1-19). அவர் கி.பி.44-இல் செபதேயுவின் மக னான யாக்கோபுவைக் கொலை செய்தார். கி.பி.44-இல் பேரரசருக்கு மதிப்பளிக்கும் விளையாட்டுக்களுக்கு வருகை புரிந்த போது செசரியாவில் ஏரோது அகிரிப்பா திடீரென மரணமடைந்தார் (12:20-23).

3. இரண்டாம் அகிரிப்பாவிலிருந்து முதல் கிளர்ச்சிவரை:- முதலாம் ஏரோது அகிரிப்பா வின் மரணத்தின்போது நாடானது கருவூல அதிகாரிகளால் ஆளப்படும் விதமாக கிளா தியு பேரரசர் மீண்டும் நாட்டை உரோமை மாநிலமாக மாற்றியமைத்தார். ஆயினும் அப்பகுதியில் ஓரளவு ஆட்சிசெய்த ஏரோது வின் குடும்பத்தைச் சேர்ந்த கடைசி ஆட்சி யாளர் ஏரோது ஆகிரிப்பாவின் மகனாகிய இரண்டாம் மாற்கு யூலியு அகிரிப்பா ஆவார். தனது குடும்பத்தின் பெரும்பாலா னோரைப் போன்று இவரும் உரோமையி லேயே வளர்க்கப்பட்டார். இவருடைய தந்தை இறந்த போது இவருடைய வயது 17 மட்டுமே. இவர் தனது தந்தையின் உரி மையை உடனடியாக பெறவில்லை. ஆனால் அவரது தாய் மாமன் கால்கிசினு டைய ஏரோது இறந்த பின்னர் (48) எதிர்லெ பனோனின் சரிவுகளில் அமைந்திருந்த சிறு பகுதிக்கு இவர் ஆட்சியாளரானார். பின்னர் இவர் அதனையும் விட்டு விட்டு (52) பிலிப் புவினுடைய பழைய ஆட்சி மண்டலத்தை கிளாதியுவிடமிருந்து பெற்றார். அப்பகுதியு டன் பிற்காலத்தில் கலிலேயா பெரேயா ஆகியவற்றை நீரோ சேர்த்தார். தனது சகோ தரி பெர்னீக்காவுடன் கொண்டிருந்த (தகாத) உறவுமுறைகள் உரோமையில் அவதூற்றை உருவாக்கின. செசரியாவில், இந்த அகி ரிப்பா மற்றும் பெர்னீக்காவின் முன்னிலை யில் கைதியாகிய பவுல் தனது வழக்கை விளக்க வேண்டியதாயிற்று (அ.ப. 25:23-25). எருசலேமின் வீழ்ச்சிக்குப் பின்னர், இரண் டாம் அகிரிப்பா உரோமைக்குச் சென்று பெர்னீக்கவுடன் அங்கு வாழ்ந்தார். சிலகா லம் அவர் குற்றவியல் நடுவராக இருந்து, 93-100க்கு இடைப்பட்ட காலத்தில் இறந் தார். பாலஸ்தீனத்தை ஆண்ட காலத்தில், யூத மக்கள் மீது சிறிதளவே செல்வாக்கு கொண்டிருந்தார். அவர் குருக்களால்

தொடர்ந்து எதிர்க்கப்பட்டார். தன் விருப்பப் படி அவர் தலைமை குருக்களைத் தொடர்ந்து நியமித்தும் நீக்கியும் வந்தார். ஏரோது மரபினுடைய முடிவானது மகிமைக்குரியதாக இல்லை.

இக்காலத்தில் மிகக்குறிப்பாக திபேரியு யூலியு அலக்சாந்தருடைய ஆட்சிக்காலத்தில் *(46-48)*, யூதேயாவும் கிழக்கு மத்திய தரைஉலகின் மற்ற பகுதிகளும் கொடிய பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டன. அது முழு உலகையும் பாதிக்கும் என்ற முன்னறிவிப்பு அ.ப. 11:28-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சத்தில் சிக்கிய பாலஸ்தீன மக்களுக்கு, அதிபேனுடைய அரசியாகிய ஏலன் என்னும் யூத சமயம் மாறியவருடைய உதவியால் எகிப்திலிருந்து கொணரப்பட்ட தானியம் உதவியது. அநேகமாக இப்பஞ்சமானது பார்னபா மற்றும் பவுல் ஆகியோர் எருசலேமுக்குச் செல்ல ஒரு வாய்ப்பாய் இருந்திருக்கக்கூடும் *(11:29-30; 12:25)*. காலம் துல்லியமாகக் குறிக்கப்பட முடியாததாயினும், அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்களின் கூட்டம் எருசலேமில் 49-இன் கோடை காலத்தில் நடைபெற்றிருக்கக்கூடும். புறவின கிறிஸ்தவரின் விருத்தசேதனம் மற்றும் மோசேயின் சட்டத்தை கடைபிடிக்க வேண்டிய கடமை ஆகியவற்றிற்கு எதிராக எருசலேம் சபை தீர்மானித்தது(அ.ப.15:2-12). கிறிஸ்தவ திருச்சபையை அதனுடைய யூத தோற்றத்தினின்று விடுவித்த முடிவு இதுவே.

இக்காலத்தில் பாலஸ்தீனத்தின் உண்மையான ஆட்சியாளர்கள் கருவூல அதிகாரிகளே. யூத மக்களை புரிந்து கொள்வதற்கு எவ்வித முயற்சியையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. பொதுமக்களின் உணர்ச்சிகளுக்குச் சிறிதளவே ஆதரவு அளித்தனர்; மேலும், அவர்களை தொல்லைப்படுத்துவதற்கான வாய்ப்பையே எதிர்நோக்கியிருந்தனர். இக்காலத்தில் அடுத்தடுத்த சிறு கிளர்ச்சிகள் எழுந்தன. இக்காலத்தில் மிக அவப்பெயருடைய கருவூல அதிகாரி அந்தோனியு பெலிக்சு என்பவராவார் (52-60). இரண்டாம் அகிரிப்பாவின் சகோதரி துருசில்லாவின் இரண்டாவது கணவனாவார். அதன் மூலம் இவர் ஏரோதுவின் குடும்பத்தைச் சேர்ந்தவனானார். இவர் ஆட்சியில் கிளர்ச்சிகள் வெளிப்படையான போராட்டங்களாகின. உரோமையில் வாழ்ந்து வந்த பதவி நீக்கம் செய்யப்பட்ட ஒரு தலைமைக்குருவின் (யோனத்தான்) வேண்டுகோளின்படி பேரரசரால் அவர் பாலஸ்தீனத்திற்கு அனுப்பப்பட்டார். ''அடிமையின் தன்மையுடன் எல்லா வித கொடூரம் மற்றும் இச்சைகளுடன் அவன் அரச கடமைகளைச் செயல்படுத்தினான்'' என பெலிக்சைப் பற்றி தசித்து எழுதியுள்ளார் (காண்க அ.ப. 24:24-26). பாலஸ்தீனத்தில் அவரது வருகைக்கு முற்பட்ட காலங்கள் உரோமை ஆக்கிரமிப்பைக் கடுமையாக எதிர்க்கின்ற யூத தீவிரவாதிகளின் வளர்ச்சியைக் கண்டன. யோசிபஸ் அவர்களைக் கொள்ளையர் என்று குறிப்பிடுகிறார். நாட்டை அவர்களிடமிருந்து விடுவிப்பதற்கென பெலிக்சு எண்ணற்றோரை சிலுவையிலறைந்தார் என அவர் குறிப்பிடுகிறார். சிகாரியி என்ற குழுவினர் அப்பொழுது தோன்றினர். இவர்கள் குருவாள் கொண்ட தேசிய வாதிகள்; தங்களுடைய அரசியல் எதிரிகளைக் பெரும்பாலும் பொது நிகழ்ச்சிகளில் கொலைசெய்து அழிப்பதற்கெனத் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அரசியல் கொலைகள் கிட்டதட்ட தினசரி நிகழ்ந்தன. அவர்களுடைய முதல் பலி தலைமைக்குருவாகிய யோனத்தான் ஆவார். அவரை நீக்கியதில் பெலிக்சும் பெருமகிழ்வு கொண்டார். மேலும் தூய கரங்களுடனும் மிகக் கொடிய எண்ணங்களுடனுமான பாதகர்களின் மற்றொரு குழுவும் அங்கே எழுந்தது. உரோமைக்கு எதிராக மக்களிடைய பெரும் ஆர்வத்தை அவர்கள் உருவாக்கினர். அவர்கள் இதை ஓர் இறைபணியாக உரிமை கொண்டாடினர். அப 21-38-இல் குறிக்கப்படும் எகிப்திய வஞ்சகனுடைய குழப்பமானது இக்காலத்திற்குரியதாக இருக்கலாம். தன்னுடைய சொல்லால் எருசலேமின் சுவர்கள் இடிந்து விழும்; உடனே அவர்கள் நகருக்குள் நுழைந்து உரோமையரிடமிருந்து அதனை கைப்பற்றலாம் என்று உறுதிமொழியளித்த இந்த யூத

போலி இறைவாக்கினர், ஒரு மக்கட் கூட்டத்தை ஒலிவ மலைக்கு நடத்திச் சென்றார். பெரும்படையுடன் பெலிக்சு அவர்களை எதிர்கொள்ளச் சென்றார். எகிப்தியன் தப்பி விட்டாலும் அவனுடைய படையின் பெரும் பகுதி கைப்பற்றப்பட்டது அல்லது கொல்லப்பட்டது. பெலிக்சின் ஆட்சியின் இறுதி இரண்டு ஆண்டுகளில் பவுல் செசரியாவில் சிறையிலிருந்தார் (அ.ப. 23:23-26:32). பெலிக்சினுடைய ஆட்சிக் காலத்தில் பேரரசர் கிளாதியு இறந்து (13 அக்டோபர் 54) நீரோ அரியணை ஏறினார்.

பெலிக்சை தொடர்ந்து ஆட்சிபுரிய போர்கியு பெஸ்துவை (60-62) நீரோ அனுப்பினார். இவர் நேர்மையான ஆட்சியாளராக இருக்க உண்மையாக முயன்றார் (யூகருக்கும் தயவு காட்டினார் அ.ப. 24:27). ஆனால் பெலிக்சின் கீழ் வளர்ச்சியுற்ற கிளர்ச்சியானது எவ்வித நீடித்த தீர்விற்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. பெஸ்து வந்தவுடனே, செசரியாவில் தங்கியிருந்த யூகருக்கும் சீரியருக்குமிடையே ஒரு பிரச்சினை எழுந்தது. பேரரச கட்டளையின் மூலமாக சீரியருக்கு ஆதரவாக அது தீர்மானிக்கப்பட்டது. இது யூகருக்கு மேலும் வெறுப்பூட்டியது. உரோமைக் குடிமகன் என்ற அளவில் நீதிக்காக பேரரசரிடம் வேண்டும் தனது உரிமையைப் பயன்படுத்தியபோது பவுலை இறுதியாக உரோமைக்கு அனுப்பியவர் பெஸ்துவே (25:11-13). அடுத்த கருவூல அதிகாரியான அல்பினுவின் கீழ் சூழ்நிலையானது முன்னேறவேயில்லை. அவனுடைய அட்டூழியமானது அளவற்றதாக இருந்தது. அவன் நிறைவேற்றத் தவறிய குற்றம் என்று எதுவுமே இல்லை என்று கூறப்படுகிறது.

4. முதல் புரட்சி (66-70):- உரோமை கருவூல அதிகாரிகளில் இறுதியானவர் கெசியு புலோரு ஆவார் (74-66). இவருடன் ஒப்பிடும்போது இவருக்கு முந்தைய அதிகாரி நற்குணத்தில் சிறந்தவராகத் தெரிகிறார். இவர் வெளிப்படையாகவே நாட்டை சூறையாடினார்; கொள்ளையடித்தார்; நகரங்களை அழித்தார்; மேலும் கொள்ளையரிடமிருந்து இலஞ்சம் வாங்கினார். புறவினத்தாருக்கு மேலான குடிமக்கள் உரிமைகளை அளிக்க நீரோ தீர்மானித்தபோதும் கிரேக்க இனத்தவர் செபக்கூட வாசல்முன் கடைகளை கட்டி நுழைவுரிமையை தடுத்த போதும் செசரியாவில் யூதர்கள் பெரிதும் இழிவுபடுத்தப்பட்டனர். கெசியு புலோரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தாலும், சூழ்நிலையைச் சீர்படுத்த அவர் எதையும் செய்யவில்லை. பின்னர், கோவில் கருவூலத்திலிருந்து அவன் 17 தாலந்துகளை எடுத்தபோது எருசலேம் யூதரால் இனியும் தங்களை கட்டுப்படுத்திக் கொண்டிருக்க முடியவில்லை. வஞ்சப்புகழ்ச்சியுடனும் இகழ்ச்சியுடனும் வறுமைப்பட்ட புலோருக்கு அளிப்பதற்கென உதவி சேகரிப்பதற்கு தங்களுடைய சமுதாயத்தைச் சுற்றி ஒரு கூடையை அனுப்பினர். இந்த அவமானத்திற்காக அவன் அவர்களை இரத்தப்பழி வாங்கி நகரின் ஒரு பகுதியை சூறையாடுவதற்கென தனது போர்வீரர்களுக்கு அளித்தான். இச்சம்பவங்களின்போது குருக்கள் யூதர்களைக் கட்டுபடுத்த முயன்றதாலும் பொறுமையாயிருக்க அவர்களுக்கு ஆலோசனை அளித்ததாலும், போர்வீரர்களுக்கு எதிராக செயல் படாத மக்களின் பொறுமையை வீரர்கள் வெறுப்பாக எடுத்துக் கொண்டனர். ஆகவே படுகொலை நிகழ்ந்தது. யூதர்கள் கோவில் எல்லைக்குள் பின்வாங்கி விரைவிலேயே கோவிலுக்கும் அந்தோனியா கோட்டைக்கும் இடையிலான தாழ்வாரப் பாதையைத் துண்டித்தனர். இத்தருணத்தில் கிளர்ச்சியாளரை தடுக்கும் வலிமையற்றிருந்த புலோரு செசரியாவிற்கு பின்வாங்குமாறு வற்புறுத்தப்பட்டார். உரோமைக்கு எதிரான புரட்சியானது முறையானதாயிற்று.

இப்போது எலயாசர் யூதர்களின் தலைவராக இருந்தார். தீவிரவாத தலைவராகிய கலிலேய யூதாசின் மகன் மெனகேம் இவருக்குத் துணைபுரிந்தார். நாடானது போருக்குத் தயார் செய்யப்பட்டது. சனேதிரின் சங்கம் கலிலேயாவை மத்தியாவின் மகனும் குருவும் பரிசேயருமா

கிய யோசேப்புவிடம் ஒப்படைத்தது. ஆயினும் அவர் கலிலேய தீவிரவாதி தலைவராகிய கிஸ்கலா யோவானால் பிரமாணிக்கம் இல்லாதவராகச் சந்தேகிக்கப்பட்டார். ஏனெனில் யோசேப்பு பெரும்பாலான நேரத்தை கிளர்ச்சிக் காரர்களை ஒழுங்குபடுத்துவதை விட அடக்குவதிலேயே செலவழித்தார். முதலில் யூதர்கள் புலோரின் படைகளைத் தோற்கடிப்பதில் வெற்றி கண்டனர். அவனுடைய உதவிக்கென அழைக்கப்பட்ட சீரிய பிரதிநிதி செஸ்தியு கால்லுசின் படைகளும் தோற்கடிக்கப்பட்டன. இதன் விளைவாக அனுபவமிக்க படைத்தளபதி வெஸ்பாசியனை நீரோ அனுப்பி வைத்தார். அவர் 66-67-இன் குளிர்காலத்தில் அந்தியோக்கியாவில் தனது படை அலுவலைத் தொடங்கி விரைவில் கலிலேயாவிற்கு எதிராகப் படையெடுத்தார். ஓராண்டிற்குள் யோதபதாவில் யோசேப்பு சரணடைதலுடன் கலிலேயாவின் அனைத்து இடங்களும் வீழ்ந்தன.

வடக்கு பாலஸ்தீனம் மீண்டும் ஒருமுறை உரோமைக்குக் கீழ்படுத்தப்பட்டது. உரோமையரின் ஐந்தாவதும் பதினைந்தாவதுமாகிய இரு சேனைகள் செசரியாவில் பனிக்காலத்தில் நிறுத்தப்பட்டன (67-68). பத்தாவது சேனை ஸ்சிதோபோலிசில் (பேத்துசான்) அமர்த்தப்பட்டது. இதற்கிடையில் யூதர்கள் இதுமேயரின் உதவியை நாடினர். ஆனால் உதவிசெய்யவந்த இதுமேயர்கள், சூழ்நிலை மோசமானது என்பதை விரைவில் உணர்ந்து பின்வாங்கி விட்டனர். அந்நேரத்தில் எருசலேம் கிறிஸ்தவர்கள் பெரேயாவிற்கு தப்பியோடி பெருமளவில் பெல்லா-வில் தங்கியதாகத் தெரிகிறது.

68-இன் இளவேனிற்காலத்தில் யோர்தான் பள்ளத்தாக்கு வழியாக, வழியிலிருந்த எதிரிகளின் தலைமையிடங்களைக் (சமாரியா, எரிகோ, பெரேயா, மக்கேரு, கும்ரான் முதலிய) கைப்பற்றி எரித்தழித்துக்கொண்டு வெஸ்பாசியான் எருசலேமை நோக்கி முன்னேறினார். 68-ஆம் ஆண்டு ஜுன் 9-இல் நீரோ இறந்திராவிடின் அவர் உடனடியாக எருசலேமைத் தாக்கி இருப்பார். இக்காரணத்தினால் வெஸ்பாசியான் தனது செயல்களை நிறுத்திவிட்டு உரோமையில் நடப்பதை கவனிக்கலானார். 69-ன் இளவேனிற்காலத்தில் எருசலேமில் ஒரு உள்நாட்டுப் போர் மூண்டது. நாட்டில் உரோமையர்கள் விட்டுச் சென்றதை சூறையாடியவனாய் கியோராவின் மகன் சீமோன் தன் குழுவினரோடு வெற்றி உலா வந்தான். இறுதியாக அவன் எருசலேமை நோக்கித் திரும்பினான். கிஸ்கலா யோவானுடைய கொடுங்கோலாட்சியினால் சோர்வுற்றிருந்த அம்மக்கள் புதிய தலைவரை வரவேற்றனர். சீமோன் நகரிலேயே ஆட்சிபுரிந்த வேளையில் யோவானும் அவனது குழுவினரும் கோவிலுக்குள் பின்வாங்கித் தங்களை மூடிக் கொண்டனர்.

5. எருசலேமின் முற்றுகை (69-70):- அது நான்கு பேரரசர்களின் ஆண்டாக இருந்தது. உரோமையில் நீரோவிற்கு பின் வந்த கால்பா 69 ஜனவரியில் கொல்லப்பட்டார். பின்னர் ஓத்தோ பேரரசரானானாலும் விரைவிலேயே விதேல்லியுவினால் மாற்றப்பட்டார். அவரும் 69 டிசம்பர் வரை மட்டுமே ஆட்சி புரிந்தார். 69 ஜுனில் வெஸ்பாசியான் எருசலேமிற்கு எதிராக போர் தொடங்கி இயக்கியதாலும், உரோமைப் படைகள் ஜுலை 1-இல் அவரை வெற்றி வீரர் என்று போற்றியதாலும், எருசலேமின் முற்றுகையைத் தொடருமாறு தனது மகன் தீத்துவை விட்டு விட்டு அவர் உரோமைக்குத் திரும்பினார்.

முறையான முற்றுகையானது பாஸ்காவிற்கு சற்று முன்னர் 70-இன் இளவேனிற்காலத்தில் தொடங்கியது. நகரானது வடதிசையினின்று மட்டுமே நுழையக் கூடியதாக இருந்த காரணத்தினால் (மேற்கு, கிழக்கு மற்றும் தெற்கு திசைகளில் ஆழமான பள்ளத்தாக்குகள் அதனை சூழ்ந்திருந்தன), வடகிழக்கு திசையில் ஸ்கோபு மலைமேல் தீத்து பாளையம் இறங்கினார். பாஸ்காவின் போது உரோமையரின் பார்வையில் நகருக்குள் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால் யூதரோ பொது எதிரியை சந்திக்க ஒன்றுப்

பட்டனர். பின்னர் தீத்து மதில்சூழ்தலை மேற்கொண்டார். நகரக் காப்பாளர்களின் பார்வையிலேயே முற்றுகையிடப்பட்ட நகரினின்று தப்பியோட முயலும் அனைவரையும் சிலுவையில் அறைந்துகொன்று குவித்தார். பசியும் தாகமும் பெருமளவில் காணப்பட்டன. இதன் விளைவாக ஜுலையில் உரோமையர் அந்தோனியா கோட்டையில் நுழைந்து அதைத் தரைமட்டமாக்கினர். இந்த வலிமையான இடத்தினின்று கோவிலை நோக்கி செல்வதற்குத் தீத்துவால் முடிந்தது. அபுமாதம் (ஆகஸ்ட்) 8-ஆம் நாளில் வாயில்களுக்கு தீயிடப்பட்டு அடுத்த நாள் வழி ஏற்படுத்தப்பட்டது. தீத்து கோவிலை விட்டுவிட விரும்பினாலும் சரணடைதலை விலையாகக் கேட்டார். ஆனால் மக்களோ மறுத்தனர். 10-ஆம் நாள் போரானது மேலும் தொடர்ந்தபோது ஒரு போர்வீரன் கோவிலின் அறைகளுள் ஒன்றில் எரியும் தீப்பந்தம் ஒன்றை வீசினான். அதனை அணைக்கத் தீத்து முயன்றாலும், நிலவிய குழப்பத்தினால் மேலும் பல நெருப்புப் பந்தங்கள் வீசப்பட்டன. புனித இடமானது அழிவதற்கு முன்னர், தீத்துவும் அவருடைய சில அதிகாரிகளும் அதனுள் நுழைந்து பார்வையிட முடிந்தது. கிழக்கு வாசலுக்கு எதிராக உரோமைப் பட்டயங்கள் விரைவிலேயே நடப்பட்டன. போர்வீரர்கள் உரத்த குரலில் தீத்துவை வெற்றி வீரர் என்று அறிவித்தனர்.

யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். கிஸ்கலா யோவான் மேல்நகரிலிருந்த ஏரோதுவின் அரண்மனைக்கு பின்வாங்கினார். மீண்டும் ஒருமுறை முற்றுகை அமைக்கப்பட்டது. 70 செப்டம்பருக்குள் நகரானது கைப்பற்றப்பட்டு, சூறையாடப்பட்டு, தரைமட்டமாக்கப்பட்டது. சில பகுதிகளை தவிர்த்து அதனுடைய சுவர்கள் நொறுக்கப்பட்டன. ஓர் உரோமைப்படையானது நகரில் நிறுத்தப்பட்டது. கிஸ்கலா யோவான், கிரோவின் மகனான சீமோன், கோவிலிலிருந்து எடுக்கப்பட்ட ஏழு கிளைகளையுடைய விளக்குத்தண்டு முதலியன உரோமையில் 71-இல் நடைபெற்ற தீத்துவின் வெற்றிப்பவனியில் அங்கம் வகித்தன. நாடு முழுவதிலும் கிளர்ச்சியாளர்களின் சிறுசிறு குழுக்களை (எரோதியும், மசாதா, மக்கேரு) வெல்ல வேண்டியிருந்தது. மசாதாவினை 73 வரை அடிபணியவைக்க முடியவில்லை.

அதுமுதல் உரோமை மாகாணத்திற்கென பொறிக்கப்பட்ட நாணயங்களில் ''கைப்பற்றப்பட்ட யூதேயா'' என்ற சொற்றொடரே தோன்றியது. இஸ்ராயேலின் இக்கால நவீன நாட்டை உருவாக்கும்வரை, யூதமக்கள் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டிய ஒரு உண்மையை இச்சொற்றொடர் வெளிப்படுத்தியது. கோசிபாவின் மகன் சீமோன் குறுகிய காலத்திற்கு ''எருசலேமிற்கு விடுதலை'' அளித்தார். அப்போது கோவில் பலியானது மீண்டும் துவக்கப்பட்டது. இதைத் தவிர்த்து, 70-இல் நிகழ்ந்த எருசலேமின் அழிவானது புனித நகரைத் தரைமட்டமாக்குவதைவிட ஆழ்ந்த பொருளைக் கொண்டிருந்தது. எருசலேமில் மட்டுமே யாவேக்கு பலியிடுகின்ற பல்லாண்டு செயலானது எருசலேமினை யூதருக்கு உலகின் மையமாக்கியது. இனி கோவில் அங்கு இல்லை. இதுவரை இல்லாத அளவிற்கு நாட்டின்மேல் உரோமை ஆதிக்கம் செலுத்தியது. எருசலேமின் வீழ்ச்சி கடந்த காலத்தினுடன் கொண்ட முடிவான முறிவைக் குறிப்பிட்டுக் காட்டியது. இனிமேலிருந்து யூத சமயமானது வேறுபட்ட திசையில் வெளிப்படும். இந்த அழிவினால் கிறிஸ்தவ சமயமும் பாதிக்கப்பட்டது. உரோமையருக்கு அவர்களும் யூதரைப்போன்ற அடிமைப்படுத்தப்பட்ட மக்களாவர். யூதருக்கு துரோகிகளாகவும் இருந்தனர். சிதறிப்போன பாலஸ்தின கிறிஸ்தவ அகதிகள் இயேசுவினுடைய வாழ்வின் நினைவுகளையும் நற்செய்தி நூல்களில் நாம் காணும் பாலஸ்தின நிலைமைகளையும் உடன் கொண்டு சென்றனர்.

6. புரட்சிகளுக்கு இடைப்பட்ட காலம் (71-132):- எருசலேமைச் சிதைவுகளில் விட்டுவிட்டு தீத்து சென்றபின்பு உரோமை இராணுவ ஆதிக்கத்தைத் தொடர ஒரு காவல் படை அங்கு நிறுத்தப்பட்டது. யூதருடைய

வாழ்வு எளியதாக இல்லை. உரோமை குடி மக்கள் பிளாவியா நெயாபோலிசில் (இன்றைய நப்லுக) குடியமர்த்தப்பட்டனர். எம்மாவுவில் 800 ஓய்வுபெற்றவர்களுக்கு சொத்து வழங்கப்பட்டது. அக்கால எலும்புக்கலங்களும் கல்லறைகளும் சான்று பகர்வதுபோல எருசலேமிலும் பழைய குடிமக்களாகிய யூதரும் கிறிஸ்தவரும் உரோமையருடன் சேர்ந்து வாழ்வதற்காகத் திரும்பி வந்தனர். வெஸ்பாசியான் யூதாவின் மொத்த நிலத்தையும் தனது தனிச்சொத்தாக உரிமை பாராட்டினார். மக்கள் குத்தகை வார விவசாயிகளாக அந்நிலத்தில் உழைத்தனர்.

யாவேயின் கோவிலுக்கு அரை செக்கிலை வரியாக செலுத்திவந்த யூத சமுதாயத்தவர் அதே அளவு பணத்தை இப்போது யூபிடர் கபிதோலினுவின் உரோமை கோவிலுக்கும் அளிக்க வேண்டியதாயிற்று. சமய செயல்முறையானது செபக்கூட வழிபாட்டின் சில முறைகளுக்கும் தோராவைத் தீவிரமாகப் படிப்பதற்கும் மாறியது. தோரா யூதரை ஒன்று கூட்டும் குறிக்கோளாக ஆகியது. கோவிலின் அழிவுடன் தலைமைக்குருவை தலைவராகக் கொண்ட சனேதிரின் சங்கச் செல்வாக்கும் மங்கியது. முறையே முதலில் சக்காயின் மகனாகிய யோகனான் ராபியின் தலைமையின் கீழும், பின்னர் இரண்டாம் கமாலியேல் ராபியின் கீழும் யாமீனியாவில் அமைக்கப்பட்ட 72 மூப்பர்களைக் (ராபிகளைக்) கொண்ட புலமைமிக்க சனேதிரின் சங்கம் யூத சமுதாயத்தில் அதிகாரப்பூர்வ நிலையை மேற்கொண்டது. யூதேயா உரோமையரால் ஆளப்பட்டு வந்தாலும் இந்த சனேதிரின் சங்கம் ஒரு குறிப்பிட்ட அளவு தன்னாட்சியை கொண்டிருந்தது. காலக்கணிப்பை அது குறிப்பிட்டது. நீதி மன்றமாகவும் அது செயல்பட்டது.

பாலஸ்தீனத்திலும் சிதறிப்போன பகுதிகளிலும் இஸ்ராயேலை மீண்டும் அமைப்பதற்கான ஏக்கம் மக்களிடையே எப்போதுமே இருந்தது. கி.மு.586-இல் எருசலேமின் அழிவிற்குப்பின் நடைபெற்றவை பற்றிய நினைவால் இந்த ஏக்கம் தூண்டப்பட்டது. தனது ஆட்சியின் முடிவில் பார்த்தியருடைய அச்சுறுத்தலைத் திரேசன் எதிர்கொண்டிருந்த போது 115-116-இல் பேரரசின் பல்வேறு பகுதிகளில் (சீரேனே, எகிப்து, சைப்ரசு, மெசபொத்தாமியா) யூதருடைய கிளர்ச்சிகள் நிகழ்ந்தன. இந்த எழுச்சிகள் ஓரளவிற்கு கொடுமைப்படுத்தப்பட்டதிலிருந்தும், யூதரிடையே அப்போது நிலவிய மெசியா எதிர்பார்ப்புகளினின்றும் தோன்றின. மெசபொத்தாமியா புரட்சியை இறுதியாக அடக்கிய தளபதி உரோமையனாக்கப்பட்ட மூராகிய லூசியு குயேத்து என்பவராவார். இதற்குச் சன்மானமாக யூதேயாவின் ஆளுநர் பதவி அவருக்கு அளிக்கப்பட்டது. ஆயினும் இச்சூழ்நிலையை கையாள்வதற்கு அனுபவமிக்க தலைமை வேண்டியிருந்தது என்பதை இந்த நியமனம் கட்டிக் காட்டுகிறது.

7. இரண்டாவது புரட்சி (132-135):- யூதேயாவில் தீர்க்கப்படாத நிலைகள் இறுதியாக இரண்டாவது புரட்சியாக வடிவம் எடுத்தன. அதற்கான காரணங்கள் உறுதியாக அறியப்படவில்லை. எருசலேமின் இடத்தில் ஒரு கிரேக்க உரோமை நகரைக் (ஏலியா காபிதோலினா) கட்டவும் யாவேயினுடைய ஆலயச் சிதைவுகளின் மேல் யூபிடருக்கு ஒரு ஆலயம் கட்டுவதற்கும் அதிரியான் எடுத்த முயற்சியே இப்புரட்சியைத் தூண்டிவிட்டது என எதியோ காசியு குறிப்பிடுகிறார். விருத்தசேதனத்தை தடை செய்யும் அரச ஆணையே இப்புரட்சிக்கு காரணம் என அதிரியனின் வாழ்வு என்னும் நூல் குறிப்பிடுகிறது. அதிரியன் முன்னர் விதையடித்தலை தடை செய்திருந்தார். ஆனால் இக்காலத்திலோ அத்தடையினை புதுப்பித்து விருத்தசேதனத்தையும் அதனுடன் இணைத்தார். இந்த ஆணையானது நேரடியாக யூதருக்கென விதிக்கப்படாவிடினும் ஒருமுக்கிய சமய பிரச்சினையில் அது அவர்களை பாதித்தது. இரண்டு காரணங்களுமே உண்மையாக இருக்கலாம்.

எவ்வாறாயினும் யூதர்கள் மீண்டும் ஒரு முறை உரோமையருக்கு எதிராக எழுந்தனர். அவர்கள் இந்த எழுச்சியை ''எருசலேமின்

விடுதலை'' என்றும் ''இஸ்ராயேலின் மீட்பு'' என்றும் கருதினார்களென அவர்களால் பொறிக்கப்பட்ட நாணயங்கள் காட்டுகின் றன. ராபி அகீபா அவர்களது சிந்தனைத்த லைவராகவும், குரு எலயாசர் அவர்களது ஆன்மீக தலைவராகவும் கோசிபா எனப்ப டும் சீமோன் அவர்களது இராணுவத் தளபதி யாகவும் இருந்தனர். கோசிபா கிறிஸ்தவ ஏடுகளில் பார்கோக்குபா (கோக்குபாவின் மகன்) என்றழைக்கப்படுகிறார். இவர் இரா ணுவத்தலைவராக மட்டுமின்றி விடுவிக்கப் பட்ட எருசலேமில் இருந்திருக்கக்கூடிய தனது தலைமையகத்தினின்று அரசியல் அள விலும் நாட்டை ஆண்டார். உரோமையர்கள் உருவாக்கிய யூதேயாவின் ஆட்சிப் பிரிவுக ளையும் பரந்த ஆட்சி அமைப்பினையும் அவர் காத்து வந்தார். யூதேயா இப்போது அவருடைய தனிப்பட்ட சொத்தாக இருந் தது. வார விவசாயிகள் தங்களுடைய வாட கையை அவருடைய கருவூலத்திற்குச் செலுத்தி வந்தனர். உரோமையருக்கு எதி ரான அவருடைய போர் தந்திரங்கள் கொரில்லா போர்முறையை சேர்ந்தனவாக இருந்தன. நாடு முழுவதிலும் பல கிராமங்க ளிலிருந்தும் புறக்காவல் பகுதிகளிலிருந்தும் தனது தாக்குதல்களை நடத்திவந்தார்.

புரட்சியின் தொடக்கத்தில் உரோமை ஆளுநராகிய தினேயு உருபு உரோமைப் படைகளை நாட்டில் கொண்டிருந்தாலும் உதவியற்றவனாக இருந்தார். சீரியாவின் பிர திநிதியாகிய புப்லிசியுமர்செல்லு தனது படைகளுடன் துணைக்கு வந்தார். ஆனால் அதிரியான் பிரிட்டனிலிருந்து தனது சிறந்த தளபதி செக்ஸ்து யூலியு செவெருசை அழைத்து யூதேயாவிற்கு அனுப்பி வைத் தார். வலிமையான இடங்களிலும் பாலைவ னக் குகைகளிலும் அடைக்கலம் புகுந்திருந்த யூதர்களை நீண்ட காலத்திற்கு பட்டினியால் துன்புறுத்திய பிறகே, புரட்சியை அடக்குவ தில் செவெரு வெற்றி பெற்றார். வீட்டு உடமைகள், விவிலிய சுருள்கள், குடும்ப பழம்பொருட்கள் ஆகியவற்றுடன் தப்பிய குடும்பத்தினர் முராபாத், ஏவெர், செயலிம் பள்ளத்தாக்குகளில் குகைகளை உபயோகித் தனர். எங்கேதியிலிருந்த அதிகாரிகள் தங்க ளுடைய தளபதியான கோசிபாவின் மகன் சீமோனுடைய கடிதங்களை எடுத்துக் கொண்டு ஏவெர் குகைகளுக்கு தப்பியோடி னர். எருசலேமானது உரோமையரால் மீண் டும் கைப்பற்றப்பட்ட போது சீமோன் பின் வாங்கி பெத்தேரில் (இன்றைய பித்தீருக்கு அருகில் எருசலேமிற்கு 9கி.மீ. மேற்கு தென் மேற்கில்) தனது இறுதி எதிர்ப்பை காட்டி னார். அங்கே அதிரியானுடைய ஆட்சியின் 18-ஆம் ஆண்டில் (134-135) போர் தனது உச்ச கட்டத்தை அடைந்தது. உரோமையரால் முற்றுகையிடப்பட்டு பெத்தேர் இறுதியாக வீழ்ந்தது. உடனடியாக ஏலியா காபிதோலி னாவை கட்டுவதற்கென அதிரியான் எருச லேமை மீண்டும் தரைமட்டமாக்கினார். ''தொலைவிலிருந்தும் தனது மூதாதையரு டைய இல்லத்தை பார்க்க முடியாதபடிக்கு யூத மக்கள் அனைவரும் அந்நேரம் முதல் எருசலேமை சுற்றியுள்ள பகுதிகளில் நுழை வதினின்று முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும்'' என அவர் அவர் கட்டளையிட் டார்.

இரண்டாவது புரட்சியில் யூதரின் தோல் வியானது 1800 ஆண்டுகளுக்கு அவர்களது முடிவிற்கு முத்திரையிட்டது. 1967 வரை, பண்டைய புனித நகருக்கும் பல்லாண்டுகா லம் அந்த இனத்திற்கு ஒன்று கூட்டும் இட மாயிருந்த கோவில் வளாகத்திற்கும் அவர் கள் தலைவர்களாக இருக்கவில்லை. கி.பி. 70-இன் அழிவிற்கு பின்னர் நகரும் கோவி லும் மீண்டும் கட்டப்படும் என்ற நம்பிக்கை நிலவியது. கோசிபாவின் மகன் சீமோனு டைய தோற்றத்தினால் இந்த நம்பிக்கை வலுவூட்டப்பட்டது. மெசியா உருவமாக வும் அவர் கருதப்பட்டார். (எனவே ''விண் மீனின் மகன்'' என்னும் பெயர் ராபி அகீபா வினால் அவருக்கு அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. காண்க எண் 24:17). ஆனால் இது நிறைவு செய்யப்படாத நம்பிக்கையா கவே முடிந்தது. இன்றைய காலங்கள்வரை யூதர்கள் கொண்டிருந்த கடைசி முக்கிய பாலஸ்தீன அரசியல் தலைவர் இவரே. இக்கால முதல் எருசலேமிற்கு திரும்புதலும்

கோவிலை திரும்பக் கட்டுவதும் யூதருடைய செபத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது.

இக்காலத்தில் யூதேயாவில் நிலவிய கிறிஸ்தவ திருச்சபையைப் பற்றி சிறிதளவே அறியப்படுகிறது. இப்போதுதான் செபக்கூடத்திற்கும் திருச்சபைக்கும் இடையிலான தெளிவான முறிவு நிகழ்ந்தது என்பது உறுதி. 70-க்குபின்னர் கிறிஸ்தவர்கள் எருசலேமிற்கு திரும்பிய போது 107-இல் வேதசாட்சியாக மரிக்கும் வரை ஆயராக இருந்தவரும் கிளோப்பாவின் மகனுமான சிமெயோன் திருச்சபைக்குத் தலைமை வகித்தார். (காலிபாத் முறையில் இயேசுவின் உறவினர்களின் வாரிசுகளே எருசலேம் திருச்சபையை ஆண்டனர் என்று காட்ட சிலர் இவரை இயேசுவின் சகோதரர் சீமோனுடன் அடையாளப் படுத்தமுயன்றுள்ளனர்) சிமெயோனுக்குப் பிறகு, அதிரியான் ஆட்சி காலம் வரை (ஏறக்குறைய 132 வரை) 13 மற்ற யூத கிறிஸ்தவ ஆயர்கள் எருசலேம் திருச்சபையை ஆண்டனர். அவர்கள் முறையே யுஸ்து, சக்கேயு, தொபியா, பென்யாமின், யோவான், மத்தியா, பிலிப்பு, செனெக்கா, யுஸ்து லேவி, எப்பிரேம், யோசேப்பு மற்றும் யூதாசு ஆகியோராவர். ''சிமெயோனின் வேதசாட்சி மரணத்தின்மூலம் பல்லாயிரக்கணக்கான விருத்தசேதனம் செய்யப்பட்டோர் கிற்ஸ்துவில் விசுவசிக்கலாயினர்'' என யுசேபியு குறிப்பிடுகிறார். சிதறிப்போன இடங்களில் மட்டுமின்றி யூதேயாவிலும் ஆக்கப்பூர்வமான மேய்ப்புப்பணி திட்டம் இருந்தது என்பதை இது வலியுறுத்துகின்றது.

இடறு குழி (PITFALL)

புலம்பல் 3:47; சங் 119:85; உரோ 11:9. ஒரு மனிதன் மறைபொருளாகவும், புரிந்து கொள்ள முடியாததுமான ஓர் ஆபத்தில் அல்லது தவறுதலில் அல்லது தவிர்க்க முடியாத கொடுமையில் வீழ்வதை இவ்வார்த்தை உருவகமாகக் குறிக்கிறது.

இடறும் கல் (STUMBLING BLOCK)

இது மனிதனை இடறிவிழச் செய்யும் கல் (*லேவி 19:14; எரே 6:21*). தங்கமும் வெள்ளியும் இடறலாய் உள்ளது என எசக்கியேல் இறைவாக்கினர் கூறுகிறார் (*7:19; 14:3-4.7; 44:12*). விசுவாசமற்றவருக்கு இறைவனே இடறல் கல்லாய் இருப்பார் (*ஏச 8:14*). இக்குறிப்பு பொறி, கண்ணி என்ற பொருளில் பயன்பட்டுள்ளது. இக்குறிப்பு சிறப்பான முக்கியத்துவமுடையது. ஏனெனில் புதிய ஏற்பாட்டில் இது இருமுறை இயேசுவுக்கே சாற்றிக் கூறப்படுகிறது (*உரோ 9:32-33; 1 பேதுரு 2:8*). புதிய ஏற்பாடு இடறும் கல்லை உருவகமுறையில் மட்டுமே பயன்படுத்தியுள்ளது. இது மெசியாப் பொருளையும் ஒழுக்கப் பொருளையும் கொண்டுள்ளது. கிறிஸ்துவுடனோ (*மத் 11:6; 13:21.57; 15:12; 16:23; 17:27; 24:10; 26:31; யோவான் 6:61; உரோ 9:32-33; 11:9; 1 கொரி 1:23; கலா 5:11; 1 பேதுரு 2:8*), மற்றவர்களுடனோ (*மத் 13:41; 18:6.7; உரோ 14:13-21; 16:17; 1 கொரி 8:13; 2 கொரி 11:29; 1 யோவா 2:18; திருவெளி 2:14*) தகுதியற்ற உறவு கொள்ளுதல் ஆன்மீக அழிவையே கொண்டுவரும்.

இடித்துப் பிழிந்த தூய்மையான எண்ணெய் (BEATEN OIL)

இது, திருஉறைவிடத்தில் எரியும் விளக்குகளுக்குப் பயன்படுத்தப்பட்ட (*லேவி 24:2; யாத் 27.20*), அல்லது நாள்தோறும் பலிகளோடு பயன்படுத்தப்பட்ட (*யாத் 29:40; எண் 28:5*), ஒர் உயர்ரக எண்ணெய் ஆகும். இது சாலமோன் ஈராமோடு பண்டமாற்றாகப் பயன்படுத்திய பொருட்களில் ஒன்றாகும் (*1 அர 5:11*). பழுத்த ஒலிவ விதைகளை உரலில் போட்டு அரைப்பதால் இந்த எண்ணெய் கிடைக்கிறது. செக்கில் போட்டு ஆட்டப்படாத எண்ணெய் மிக சுத்தமான சிறந்த எண்ணெய் என்று கருதப்பட்டது. அவ்வாறு செக்கில் தயாரிக்கப்பட்ட எண்ணெய்யானது இரண்டாம் தரமானது; அது மீண்டும் செக்கில் போட்டு ஆட்டப்பட்டால் முதல்தரமான எண்ணெய் என்று கருதப்பட்டது.

இடியின் மக்கள் (BOANERGES)

தெளிவற்ற பொருளில் செபதேயுவின் மக்களாகிய யாக்கோபுக்கும் யோவானுக்கும்

இயேசுவால் அளிக்கப்பட்ட பெயர் (மாற் 3:17).

இச்சொல்லானது ஏன் பொருத்தமாக உள்ளது என்பதை குறிப்பிடாமலே ''போவனேர்கெஸ்'' என்பதை ''இடியின் மக்கள்'' என்று மாற்கு மொழி பெயர்க்கிறார். இச்சகோதரர்கள் தங்களுடைய மன இயல்பில் புயல் போன்றவர்களா (மாற் 9:38; லூக் 9:54)? அவர்கள் ஒரு காலத்தில் தீவிரவாதிகளாகவோ அல்லது புரட்சிகர கிளர்ச்சியாளர்களாகவோ இருந்தவர்களா (மாற் 10:37)? அவர்கள் இரட்டையர்களாக இருந்து, அதனால் இப்பெயரானது தியோஸ்கூரி (விண்ணக இரட்டையர்) பற்றிய பழமையான புராணக் கதையின் சிந்தனை வெளிப்பாடாக உருவானதா?

இச்சொல்லானது அடிப்படையில் செபதேயுவின் மக்களை மட்டுமின்றி அனைத்து அப்போஸ்தலர்களையுமே இவ்வாறு வர்ணித்தது என்பதற்கு சிறிதளவு எழுத்து மூலமான ஆதாரம் உள்ளது.

இடியும் மின்னலும் (THUNDER AND LIGHTENING)

வழக்கமான ஆனால் அச்சமூட்டக்கூடிய இடியும், மின்னலும், விவிலியக் கண்ணோட்டத்தில் இறைவனின் வல்லமையை வெளிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. இஸ்ராயேல் நாட்டில் இலையுதிர் காலத்திலும், வசந்த காலத்திலும், இடியும், மின்னலும், மழையும் தோன்றுவது வழக்கம் (யோபு 26:14; சங் 77:18; ஏச 29:6; மாற் 3:17; யோவா 12:29; உப 4:12; திருவெளி 14:2; யாத் 19:16; எரே 10:13; மத் 24:27; 28:3). மேற்கண்ட மேற்கோள்கள் இடியையும், சத்தத்தையும் குறிக்கின்றன. கீழ்காணும் மேற்கோள்கள் மின்னலையும் அதன் ஒளியையும் குறிக்கின்றன (யோபு 36:32; 37:3.11.15; அ.ப. 9:3; யாத் 9:23; 20:18; 1 அர 18:38; சங் 28:7). மேகங்களுக்கிடையேயான நேர், எதிர் மின்சாரத்தினால் மின்னலாகிய ஒளியும், இடியாகிய ஒலியும் ஏற்படுகின்றன. விவிலியத்தில் இடி, மின்னல் ஆகியவற்றின் வருணனை மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. மின்னும் மின்னல் (சங் 143:6; எச 21:10) பூமியை திடீரென ஒளிரச் செய்யும் ஒளிவெள்ளம் (மத் 24:27), அம்பு போன்ற பாய்ச்சல் (நாகூ 2:4), அருங்காட்சியாக பூமியை வந்தடையும் விதம் (லூக் 10:18), குறிப்பிட்ட இலக்கை அடையும் விதம் (யோபு 36:32), இடியின் அதிர்வு முழக்கம் (ஏச 6:4) இவை அனைத்தும் விவிலிய ஆசிரியர்களின் உயிர் சித்திரமாய் விவரிக்கும் திறனைக் காட்டுகின்றன. மின்னல் யாவேயின் வாளாகவும் (உப 32:41), வேலாகவும், அம்பாகவும் (அப 3:11) கூறப்படுகின்றது. இடி அவரது குரலாகவும் விவரிக்கப்படுகிறது (உப 5:22; சங் 28:3-9; சீரா 45:5; யோவா 12:28-29). பெரும் இடியுடன் கூடிய புயல் இறைக்காட்சி தோற்றத்தைச் சுட்டுகிறது (யாத் 19:16-20; சங் 17:7-15; அப 3:4-15). எனவே இடியும் மின்னலும், வானுலக அரியணையோடு தொடர்புள்ளதாக வருணிக்கப்படுகிறது (எச 1:4-28; திருவெளி 4:5). இயற்கைச் சக்திகளின் மேல் யாவே கொண்டிருக்கும் கட்டுபாட்டை புயல் எடுத்தியம்புகிறது (யோபு 28:26; எரே 10:13); அவரது ஆற்றலின் கருவியாகும் (சங் 104:4); குறிப்பாக அவருடைய எதிரிகளைத் தண்டிப்பதற்குப் பயன்படும் கருவியாகும் (உப 32:41; திருவெளி 16:18). நீதி 5:4-5; அப 3:3-இல் குறிக்கப்படும் இடியுடன் கூடிய புயல் ஏதோம் திசையிலிருந்து வருவது தற்செயலானதன்று, தண்டனையாக வருவதாகும். சாதாரணமாய் இத்தகைய புயல் தெற்கிலிருந்து வந்தது.

இடைக் கச்சை (WAIST CLOTH)

இடுப்பில் அணியப்பட்ட உள்ளாடையாகும். இது தோலாலோ (2 அரச 1:8) அல்லது துணியாலோ (எச 13:1) செய்யப்பட்டது. வேலையாட்கள் வேலை செய்யும்போது வெளி ஆடையைக் களைந்துவிட்டு உள்ளாடையுடன் (இடைக் கச்சை) வேலை செய்தனர் (யோபு 12:18; ஏச 5:27; எரெ 13:1-2.4.6-7.10-11). காண்க ஆடை.

இணைப்பாளர் (MEDIATOR)

பொருள்:- தாவீதைக் கொல்ல சவுல் விரும்பியபோது, யோனத்தான் தாவீதைக் காப்பாற்றத் தலையிட்டது (1 சாமு 19:1-7) விவிலிய வரலாற்றிலும், பிற வரலாறுகளி

லும் இடையீட்டாளர் இடைநின்று இணக்கம் ஏற்படுத்தும் செயலுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும் (1 சாமு 25:1-35; எஸ்த 7:1-7; அ.ப.12:20). இவ்வித இணைப்பாளரது குறுக்கீட்டால் முறியவிருந்த பல உறவுகள் முறியாது காக்கப்படுகின்றன. சமாதானம் செய்விக்க முயலும் இணைப்பாளர் அச்சுறுத்தும் ஆளிடம் சென்று, அஞ்சிடும் ஆளுக்காகப் பரிந்துரை செய்து, இருதரப்பாருக்கும் அமைதியும் இணக்கமும் ஏற்படுத்துவார். இவ்வாறு, ஒத்த ஆற்றல் கொண்ட இரண்டு கட்சிகளுக்கிடையே சென்று அமைதி ஏற்படுத்த இணைப்பாளர்கள் தேவை என்பதை இஸ்ராயேலரின் திருச்சட்டம் முன்னுணர்ந்தது (யாத் 21:22; யோபு 9:33). பிளவும் மோதலும் எற்படும்போதுதான் இணைப்பாளரின் பணி தேவைப்படுகிறது என்பதில்லை. பிற நேரங்களிலும் தேவைப்படுகிறது. இத்தகைய நேரங்களில், தலைவன் ஒருவன் தனக்குக் கீழிருப்போரிடையே சில பணிகளைச் செய்து முடிப்பதற்காகச் சிலரை அனுப்பி வைக்கலாம்; அத்தகையோரும் இணைப்பாளர், இடையீட்டாளர் என்று ஒரு பரந்த பொருளில் பெயர் பெறுவர்.

பழைய ஏற்பாட்டு எபிரேய மொழியில் சமாதானம் செய்வித்தல், பரிந்துரைத்தல் போன்ற பணிகளைச் செய்யும் '' இடையீட்டாளர்'' என்பதற்கு நேரடியான தனிச்சொல் இல்லை. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள உறவைச் சுட்டும்பொழுது இப்பணியின் தனித்தன்மை தெளிவாகிறது. ஆதலால், விவிலியத்தைச் சேராத பழங்காலப் புறச்சமயத்தார் தங்களுக்கும் தங்கள் தலைமைத் தெய்வங்களுக்கும் இடையே தொடர்பேற்படுத்தும் பாலங்களாகப் பல குட்டித் தெய்வங்களையும், ஆவிகளையும், பிறகு அரசன், பூசாரி போன்ற மனிதர்களையும் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்பதில் வியப்பில்லை. அவர்களின் தலைமைத் தெய்வங்கள் யாவும் கடந்தநிலைத் தத்துவம் கொண்டவையாக இல்லாத காரணத்தால், இத்தகைய இடையீட்டாளர்களும் பரிந்துரையாளர்களும் தோன்ற வாய்ப்பிருந்தது. ஆனால் இஸ்ராயேலரின் இறைவன் தனித்தன்மை வாய்ந்த தனியொருவர்; அனைத்தையும் கடந்து முழுமை நிறைந்த கடவுள். இவ்வாறு முற்றிலும் வேறுபட்ட கடவுளுக்கும் மனிதருக்கும் நடுவே இடைநின்று பரிந்துரை செய்ய யாரால் இயலும்? பவுல் கூறுவது போல ''ஒருவர் மட்டுமே இருந்தால் இணைப்பாளருக்கு இடமில்லை, கடவுளோ ஒருவர்தான்'' (கலா 3:20). அதே நேரத்தில் விவிலிய மனிதன் கடவுளுக்கு முன்னால் தனக்குள்ள பொறுப்புகளை நன்கு உணர்ந்து செயல்படுறான். தனிமனிதன் ஒருவன் தான் வாழும் கூட்டத்தில் முற்றிலும் அழுந்திப் போயிருந்த அப்பழங் காலத்திலும் மேலே குறிப்பிட்ட தனிமனிதனின் பொறுப்புணர்வு தெளிவாக உணரப்பட்டது. ''கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்த ஒருவனுக்காக அவரிடம் பரிந்து பேசக் கூடியவன் யார்?'' என்று ஏலி தம் முதுமை வயதில் மொழிகிறார். ஆதலால் ''நமக்கிடையே இன்று வழக்குத் தீர்ப்பவன் எவனுமில்லையே!'' என்று இறைவனிடம் யோபு கூறுவது முற்றிலும் உண்மையாகிறது (யோபு 9:33). இருந்தும், பல இணைப்பாளர்களையும் பரிந்துரையாளர்களையும் நாம் விவிலியத்தில் காண்கிறோம். இது நமக்கு வியப்பானதாகவும், முரணானதாகவும் தோன்றலாம். ஆனால் இவர்கள் எல்லாம் கடவுளிடமிருந்து திருக்கட்டளை பெற்றவர்கள் என்ற பரந்த பொருளில்தான் இணைப்பாளர்களாகின்றனர். முரணாகத் தோன்றும் இச்செயல்தான், இறைவன் உறவற்ற ஒருவராக இருக்க விரும்பவில்லை என்பதையும் மனிதருடன் ஒன்றிய உறவு கொள்ள விரும்புகிறார் என்பதையும் நமக்கு எடுத்துரைக்கிறது.

புதிய ஏற்பாட்டில், மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே சமரசம் செய்விப்பவராக இயேசு வருகை தருகிறார். அவர் ஒருவரே கடவுளும் மனிதனும் ஆனவர் என்ற முறையில் கடவுளின் பெயரால் மனிதரிடமும், மனிதரின் பெயரால் கடவுளிடமும் பேசுவதற்கு ஏற்புடையவராய் இருக்கிறார். இவ்வாறு மனித வரலாற்றிலேயே முதல் முறையாகவும், இறுதி முறையாகவும்

''மனுக்குலத்துக்கும் இறைவனுக்குமிடையே இணைப்பாளராக'' இருக்கப் பெருமைபெற்றவர் இயேசு ஒருவரே ஆவார் (1 தீமோ 2:5; காண் எபி 8:6; 9:15; 12:24).

II. பழைய உடன்படிக்கையில் இணைப்பாளர்கள்:-

1. வரலாற்று இணைப்பாளர்கள்:- அ. ஆபிரகாமின் வழியாகத்தான் ''மண்ணின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்'' (ஆதி 12:3). அவர் வழியாகத்தான் இஸ்ராயேலரும் தம்மண்ணின் வளத்துக்கும், மக்களின் பெருக்கத்துக்கும் ஆசிபெற்றனர். ஒரு சில மரபுப்படி, புறமதத்து அரசர் அபிமெலக்குவிற்காகவும் (ஆதி 20:7. 17 தொ), சோதோம் நகருக்காகவும் (18:22-32) ஆபிரகாம் இறைவனிடம் பரிந்து பேசினார்.

ஆ. மோசே:- இஸ்ராயேல் மக்களை விடுவிக்கவும், அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவும், அவர்களுக்குத் திருச்சட்டம் நல்கவும், வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தவும் யாவே இறைவன் மோசேயைத் தேர்ந்து கொண்டார். ஆண்டவருக்கு முன்னால் அவரது மக்களுக்குத் தாமே பொறுப்பு என்பதால், அவர்களுக்குத் தலைவராகவும், சட்ட திட்டங்களை வகுப்பவராகவும், இறைவனிடம் பரிந்துரை செய்பவராக மோசே செயலாற்றுகிறார். இவர் தாம் பெற்ற திருக்கட்டளையின் காரணமாக, இயேசுவுக்கு அடுத்தபடியில் ''இடையீட்டாளர்'' என்ற சிறப்புப் பட்டத்திற்கு உரியவர் (கலா 3:19) என்பதில் ஐயமில்லை. இருப்பினும் இப்பட்டம் இவருக்கு முன்குறிப்பிட்ட பரந்த பொருளில்தான் பொருந்தும்.

விடுதலைப் பயணத்திற்குப் பிறகு, மோசே தன்னிடமிருந்த பொறுப்புகளையும் அதிகாரங்களையும் ஒரு சிலருடன் பகிர்ந்து கொள்கிறார்.

இ. குருக்கள்:- லேவியர்களின் குருத்துவம், வழிபாட்டிற்கும், திருச்சட்டத்திற்கும் பணிபுரிய இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அவர்களின் வழிபாடுகள் இறைவன் இஸ்ராயேலுக்காகச் செய்த வியத்தகு செயல்களையும், அதனால் அவருக்கு அவர்கள் மீது இருக்கும் உரிமைகளையும் எடுத்துரைத்து, அவர்களுக்கு இறைவனின் ஆசியைப் பெற்றுத் தருகின்றன (எண் 6:24-27). மக்கள் தனியாகவோ, குழுவாக இணைந்தோ செலுத்தும் புகழ்ச்சிகளையும், வேண்டுதல்களையும் இறைவன்முன் படைப்பது குருக்களின் கடமையாகும்.

ஈ. அரசன்:- அடுத்து, தூய ஆவியினால் நிரப்பப் பெற்று, நடுவர்களின் வாரிசாக அரசன் நியமிக்கப்படுகிறான் (நீதி 6;34; 1 சாமு 10:6; 16:13). மக்களுக்குத் தொண்டு செய்ய அவன் அரசனாய் நியமனம் பெற்றதை இறைவாக்கினர் அவனுக்குத் தெரிவிக்கின்றனர் (1 சாமு 9-10; 16). அவன்தான் அபிடேகம் பெற்றவன், யாவேயின் மெசியா. யாவே அரசனைத் தன் மகனென நடத்துகின்றார் (2 சாமு 7:14; சங் 2:7). அவனுடைய மக்கள் அவனை ஒரு தேவதூதனாகவே கருதுகின்றனர் (2 சாமு 14:17). கடவுளுக்கு முன்னால் அரசன் தன் மக்களின் பிரதிநிதியாக நிற்கிறான், குரு என்ற பட்டம் அவனுக்கில்லை. எனினும் அவன் வழிபாட்டுச் சடங்குகளையும் நிறைவேற்றுகிறான்; குருக்களின் அணியாகிய எப்போத்தை அணிந்தும், பலிகளை ஒப்புக்கொடுத்தும், இஸ்ராயேல் சார்பாக மன்றாடியும் ஒரு குருவுக்குரிய பணிகளைச் செய்கிறான். இஸ்ராயேலின் இறைவனே உலக வரலாற்றை நடத்திச் செல்வதால், மற்ற அன்னிய மன்னர்களின் செயலிலும் இறைவனின் திட்டம் நிறைவேறுவதை இறைவாக்கினர் கண்டறிந்து கூறுகின்றனர் (எ.கா.) நெபுக்கதுனேசார் (எரே 27:6), சைரஸ் (ஏச 41:2-5; 44:28; 45:1-6).

உ. இறைவாக்கினர்:- பரம்பரையாக வரும் குரு, அரசன் இவர்களிலிருந்து இறைவாக்கினர் வேறுபட்டவர். யாவேயே, அவரது வாழ்வில் தலையிட்டு, அவரைத் தம் பணிக்கு அழைத்து அவருக்குத்தன் அருட்கட்டளையைத் தருகிறார். இறைவன் மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள், பாவத்திற்கு அவர் விடுக்கும் தீர்ப்புகள், நல்லோ

ருக்கு அவர் கொடுக்கும் வாக்குறுதிகள் ஆகிய இறைவார்த்தைகளை ஏந்திச் செல்வதே இறைவாக்கினரின் தலையாய கடமையாகும். இதன் விளைவாக, தன் மக்களின் இன்பதுன்பங்களுக்கும், நன்மை தீமைகளுக்கும் தானும் பொறுப்பாளி என்ற உள்ளுணர்வுடன், தன் மக்களுக்காக இடைவிடாது இறைவனிடம் பரிந்துரை செய்கின்றனர்: (எ.கா) சாமுவேல் (1 சாமு 7:7-12; 12:19-23), ஆமோஸ் (7:1-6), எரேமியா (15:11; 18:20; 42:2). இறுதியாக எசக்கியேல் (9:8; 11:13) இறைவனின் மக்களுக்குத் தீங்கு ஏதும் நேராது காக்கின்ற காவல் வீரனாக இறைவன் தன்னை நியமித்துள்ளதை ஒரு காட்சி வாயிலாகக் கண்டுணர்ந்தார் (எச 33:1-9; 3:17-21).

இவ்வாறு, இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில், பொறுப்பான பலரை இறைவன் நியமித்து, உடன்பாட்டின் நியதிகள் ஒழுங்காக நிறைவேறுமாறு பார்த்துக் கொள்ளச் செய்தார். ஆனால் இதுபோன்ற சிறப்புப் பணிகளால், பொதுமக்கள் இறைவனுடன் கொள்ளும் தனியுறவு தடுக்கப்படவில்லை. மாறாக இச்சிறப்புப் பணிகள் அனைத்தையும் மக்களின் நலனுக்காகவும், அவர்களுக்காக இடைநின்று பரிந்துரை செய்வதற்காகவுமே இறைவன் ஏற்படுத்தினார்.

2. இறுதிக்கால வருகையின் இணைப்பாளர்கள்:- வரலாற்று இணைப்பாளர்களின் பண்புக்கூறுகள் பலவற்றை, இறுதிக்காலத்தில் வரவிருந்த ஒப்பற்ற இணைப்பாளரின் மேல் இறைவாக்கினர் ஏற்றிக் கூறினர். ஆனால் அவர்கள் தீட்டிய சித்திரங்கள் இயேசுவைப் பற்றி ஓரளவு முன்னறிவித்த, பழைய மறைபொருள் மிக்க உருவங்களின் தன்மைகளை விஞ்சியதாக இருந்தன.

'புதிய மனுக்குலம்' அழைக்கப்படும் வேளையில், பழைய இணைப்பாளர்களைப் போல பலர் புதிதாகத் தோன்றுகின்றனர். சில சமயங்களில் அரச மெசியாவாகவும், சில சமயங்களில் இறைவாக்கினராகவும், மீட்பின் நற்செய்தியை அறிவிப்பவராகவும் (எச 61:1 தொ; உப 18:15 - யூதர்களின் விளக்கவுரையின்படி), மிகச் சில சமயங்களில் குருவாகவும் (செக் 4:11 - இப்பண்பு கும்ரான் மரபினரால் வளர்ச்சி பெற்றது), இவர்கள் தங்கள் இணைப்புப் பரிந்துரைப் பணியைச் செய்கின்றார்கள்.

ஏசயா 40:55-இல் காட்டப்படும் இறை ஊழியனின் உருவகம் சிறிது புதிரானது. அவர் இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே புரியும் இணைப்பாளர் பணியின் காரணமாக இஸ்ராயேலரின் எஞ்சிய மக்கட் தொகுதிக்கு ஓர் உருவக வடிவம் தருகிறார். ''நீதித் தீர்ப்பைப் புறவினத்தாருக்குக் கொண்டுவரவும்'' (ஏச 42:1), சிதறிப்போன இஸ்ராயேலரை ஒன்று திரட்டவும் புறவினத்தாருக்கு ஓர் ஒளியாக இருக்கவும் (42:6; 49:5-6), மக்களின் உடன்படிக்கையாக இருக்கவும் (42:6; 49:8), அதாவது மீட்படைந்த இஸ்ராயேலையும், மனம் திரும்பிய நாடுகளையும் ஒன்று சேர்க்கவும், இறைவன் அவரை ஒரு இறைவாக்கினராக அழைத்துள்ளார். எனவே அவரது பணி முன்னைய இறைவாக்கினரைப் போல மீட்பின் நற்செய்தியை அறிவித்தலும், மக்களுக்காக மன்றாடுவதும் மட்டுமன்று, மாறாக இப்பொழுது அவர் ''அனைவரின் பாவங்களையும் சுமக்க வேண்டும்'', அத்துடன் அவரது துயரப்பாடுகளின் மூலம் மக்களின் மீட்புக்கு வழிவகுக்க வேண்டும் (52:14; 53:13). அவர் தமது உயிரையே ஒரு புனிதப்பலியாக ஒப்புக் கொடுக்கிறார் (53:10). இதன்மூலம் ஒரு புதுவகையான குருத்துவ இணைப்பாளர் நிலையை அவர் அறிமுகம் செய்கிறார்.

தானியேல் 7:13. 18-இல் கூறப்படும் மனுமகன், கடவுளின் தீர்ப்பால் மகிமைப் படுத்தப்படுவதற்கு முன்னர், புறமதத்தினரால் கொடுமைக்குள்ளாகும் புனித மக்களைக் காட்டும் உருவகமாக உள்ளார். அவர் உலகனைத்தையும் ஆளுவார் (7:14.27). அதன் மூலம் யாவேயின் அகில உலக அரசாட்சியை உறுதிப்படுத்துவார். பழைய ஏற்பாட்டில். இறுதிக்காலத்தில் தோன்றும் இப்பல்வேறு இணைப்பாளருக்கிடையேயுள்ள உற

வும், தொடர்பும் வரையறுக்கப்பட வில்லை, இந்த முன்னறிவுப்புகள் எல்லாம் இயேசுவில் நிறைவேறும் போதுதான் முன்னர்க் குறிப்பிட்ட பல்வேறு இணைப்பாளர்களின் பண்புகளும் இவரிலே ஒன்றிணைந்த அழகும் உண்மையும் புலனாகும்.

3. வானதூதர்களின் பரிந்துரைக்கும் பணி:- மனித இணைப்பாளர்களின் இயலாமையை நெடுங்காலமாகவே புறமதத்தினர் உணர்ந்து வந்தனர். ஆதலால்தான் அவர்கள் இடையிருந்து பரிந்துரை செய்ய, சிறிய தேவதைகளின் துணையை நாடினர். ஆனால் இஸ்ராயேலர் இந்தப் பலதெய்வக் கொள்கை அனைத்தும் கடந்த இணைப்பாளர் ஒருவரின் வருகைக்கு அவர்களைத் தயார் செய்தது. பெத்தேல் என்னும் புனிதத் தலத்தின் வானதூதர்கள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஓர் ஏணி அமைத்ததுபோல யாக்கோபு காட்சி கண்டதாக ஒரு விவிலியக் குறிப்பு கூறுகிறது (ஆதி 28:12). பாபிலோன் அடிமைத் தனத்திலிருந்து தாயகம் திரும்பிய பின் வானதூதர் பற்றிய கொள்கை இஸ்ராயேலரிடையே பெருவளர்ச்சி கண்டது. மக்களுக்காக வானதூதர் வேண்டுவதும் (செக் 1:12 தொ.), இஸ்ராயேலரின் சார்பில் அவர்கள் தலையிடுவதும் (தானி 10:13. 21; 21:1), விசுவாசிகளுக்கு அவர்கள் கொணர்ந்த உதவியும் (தானி 3:49 தொ 6:23; 14:34-39; தோபித்து), அன்பர்களின் செபங்களை அவர்கள் ஆண்டவர் முன் சமர்ப்பித்ததுவும் (தோபி 12:12) விவிலியத்தில் இடம்பெறுகின்றன. மலாக்கியாவும், விந்தைக்குரிய தூதர் ஒருவரைப் பற்றி விளக்குகிறார். அவர் உடன்படிக்கையின் வானதூதர், அவரது ஆலய வரவு இறுதிக்கால மீட்பினைத் தொடங்கி வைத்தது (மலா 3:1-4). இங்குக் கூறப்படும் வானதூதர் ஒரு படைப்புப் பொருள் அல்லர்; மாறாக இறைவனே, தம் மக்களின் கறைநீக்கவும், அவர்ளை மீட்டு உய்விக்கவும் வானதூதர் வடிவிலே வருகை தருகிறார்.

புதிய ஏற்பாட்டின் இணைப்பாளர்:-

புதிய ஏற்பாட்டின் நுழைவாயிலில், மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே நிகழப் போகும் ஒரு புதிய உடன்படிக்கைக்கு முன்னுரையாக, விண்ணிலிருந்து வந்த இணைப்பாளரான கபிரியேல் தூதர் ஒரு கலந்துரையாடலைத் தொடங்கி வைக்கிறார் (லூக் 1:5-38). திட்டவட்டமான பதில் ஒன்றை மரியாள் அவருக்குத் தெரிவிக்கின்றாள். 'சீயோனின் மகள்' என்ற முறையில் தன் இனத்தாரது சார்பில் பேசி, இறைமகனும், அரச மெசியாவுமானவருக்குத் தாயாக மாற இணக்கம் தெரிவிக்கிறாள். யோசேப்பு (மத் 1:18-25). எலிசபெத்து (லூக் 1:39-56), சிமியோன், அன்னாள் (2:33-38) ஆகிய அனைவரும் ஆண்டவரின் மீட்புக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மரியாளின் வழியாக வந்துதித்த 'மீட்பரை' ஏற்றுக் கொள்வதல்லால் வேறு செயல் ஒன்றுமில்லை (2:11). அவள் வழியாகத்தான் மனுக்குலம் இயேசுவை அறிகிறது; இயேசுவும் மனுக்குலத்தை அறிந்து கொள்ளுகிறார். அவர் இறைவனின் ஒரே மகனாக இருந்தபோதிலும், அவர்தம் தொண்டினைத் தொடங்கும் நாள் வரும்வரைக்கும் (யோவான் 2:1-12), மரியாள்-யோசேப்பு இவர்களின் விருப்பத்துக்குப் பணிந்து ஒழுகுகிறார்.

1. ஒப்பற்ற இணைப்பாளர்:- கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே இயேசுக்கிறிஸ்துதான், பழைய உடன்படிக்கையைவிடச் சிறந்த (எபி 8:6) புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர் ஆவார் (9:15; 12:24). இனிமேல் அவர் வழியாகத்தான் மனிதர் கடவுளை அணுக இயலும் (7:25). இந்த உண்மை பலவடிவங்களில் புதிய ஏற்பாட்டில் இடம் கண்டுள்ளது. இஸ்ராயேலின் எஞ்சிய மக்களின் பெயராலும், அவர்களின் நலனுக்காகவும், அத்துடன் உலக மக்கள் அனைவருக்காவும் இயேசு இறந்து, உயிர்த்து, தூய ஆவியைப் பெற்றார். அவரது இணைப்பாற்றல் அனைத்துப் படைப்புகளையும் (கொலோ 1:16; யோவா 1:3), பழைய உடன்படிக்கையின் வரலாற்றையும் நிறைவு செய்கிறது (1 பேதுரு 1:11). தந்தை இயேசுவை அழைத்தாலும் (எபி 5:5) அவ்வழைப்பினை இயேசு ஏற்றதாலும்தான் (10:7

தொ.) இயேசு இணைப்பாளர் ஆகிறார். இது பழைய ஏற்பாட்டு இணைப்பாளர்களுக்கும் பொருந்தும் (காண் 5:4). ஆனால் இயேசுவைப் பொறுத்த அளவில் அழைத்தலும் ஒப்புதலும் அவருடைய வாழ்வு என்னும் மறைபொருளின் மையப் பொருளாக இருக்கிறது. ''மகன்'' என இருந்த அவர் (1:2 தொ), ''ஊனும் இரத்தமும் பெற்றுக் கொண்டு'' (2:14) ''மனிதனானவர்'' (1 தீமோ 2:5). இவ்வாறு அவர் தான் உறவுபடுத்தி வைக்கும் இரண்டு சாராருக்கும் சொந்தமானவர் ஆகிறார்.

இறுதிக் கால இணைப்பு முயற்சிகளை நிறைவேறச் செய்வதன் மூலம், ''மகன்'' பழங்கால இணைப்பு முயற்சிகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறார். அவர்தாம் ''ஆபிரகாமின் வழித்தோன்றல்'' (கலா 3:16), அவர் வழியாகத்தான் இஸ்ராயேலரும், மற்ற நாட்டினரும், ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட வாக்குறுதிகளைப் பெறுகின்றனர் (கலா 3:15-18; உரோ 4). அவரே புதிய மோசே, புதிய விடுதலைப் பயணத்தின் வழிகாட்டி; புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர், புதிய இறைமக்களின் தலைவர், அவர் இனிமேல் இறைவனின் ஊழியனாக இருப்பதில்லை; மாறாக '' மகனாகவே'' இருந்து மேற்குறிப்பிட்ட புதிய பணிகளை ஆற்றுகிறார். (எபி 3:1-6). அவர் ஒரே சமயத்தில் அரசரும், தாவீதின் மகனும் (மத் 21:4-9) ஏசயாவால் முன்னறிவிக்கப்பட்ட இறைவனின் ஊழியனும் (மத் 12:17-21), இறைவாக்கினரும், மீட்பின் நற்செய்தியை அறிவிப்பவரும் (லூக் 4:17-21), மனுமகனும், இறுதி நாளின் நீதிபதியும் (மத் 26:64), தம் வருகையால் ஆலயத்தைப் புனிதப்படுத்தும் தேவதூதனும் (காண் லூக் 19:45 தொ யோவா 2:14-17) ஆகிய அனைவரும் ஆவார். அவர் தம் மக்களின் மீட்பையும் உய்வையும் முற்றிலும் முடிவுற்றதாக்கப் பாடுபடுகிறார். அவர் தம்மில் அரசுரிமை, குருத்துவம், இறைவாக்குரிமை ஆகிய மூன்று பண்புகளையும் கொண்டுள்ளார். அவரே இறைவனின் வார்த்தையானவர். ஆதலால் அவரது வருகை மனித வரலாற்றுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு புதியபோக்கைக் கொண்டு வருகிறது. ''மனிதக் கரங்களால் கட்டப்படாத ஆலயத்தில்'' அவர் இருந்து கொண்டு (எபி 9:11), தம் உடன்பிறப்புகளுக்காக எப்போதும் மன்றாடும் இணைப்பாளராக உறைகிறார் (7:5). உண்மையில் ''கடவுள் ஒருவரே; கடவுளையும் மனிதரையும் இணைப்பவரும் ஒருவரே'' (1 தீமோ 2:5). அவரே மனிதனான இயேசு கிறிஸ்து, எக்காலத்துக்கும் உரிய உடன்படிக்கையின் இணைப்பாளர்.

2. ஒப்பிலா இணைப்பாளரும், அவரது திருச்சபையும்:- கிறிஸ்துதான் தன்னேரிலாத் தனித்தன்மை பொருந்திய இணைப்பாளர் என்பதால், மீட்பின் வரலாற்றில் மனிதனின் முயற்சியும் பங்கும் அகற்றப்படுவதில்லை. அவரது திருச்சபையில் பணிபுரியும் அனைவரையும் அவரது இணைப்புப் பணியில் பங்கு பெற அவர் அழைக்கிறார். ஏனெனில் இயேசு தம் உடலாகிய திருச்சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரையும் தன் இணைப்புப் பணியில் தொடர்புடையவராக மாற்றுகிறார்.

அ. அப்போஸ்தலர்:- இயேசு தாம் உலக வாழ்வின்போது, தமது நற்செய்தியைப் போதிக்கவும் இறையரசு வேரூன்றியதற்கான அறிகுறிகளைச் சாதிக்கவும் தம்மோடு உழைக்க மனிதர்களை அழைத்தார் (மத் 10:7 தொ). இவர்கள் இயேசுவின் இணைப்புச் செயலைத் தொடர்ந்து ஆற்றுகின்றனர். அவரது இறப்பு-உயிர்ப்பு இவற்றிற்குப்பின் தமது இணைப்புப் பணியைத் தொடருமாறு அவர் அவர்களுக்குக் கொடுத்த திருக்கட்டளை, உலகனைத்திலும், இனிவருகின்ற எல்லாக் காலத்திலும் அவர்களால் நிறைவேற்றப்படும் (மத் 28:19 தொ). இந்த இணைப்புப் பணியை அவர் காணமுடியாத உலகிலிருந்து செயலாற்றுவார். இவருடைய வார்த்தைக்கும், திருச்சபைக்கும், திருமுழுக்கிற்கும் நற்கருணைக்கும், பாவ மன்னிப்புக்கும் இனி அவருடைய அப்போஸ்தலர்களே பொறுப்பாவார்கள்.

ஐம்பதாம் நாள் திருநாளிலிருந்து, அவர் தம்தந்தையிடமிருந்து தாம் பெற்ற தூய ஆவியால் திருச்சபையை நிரப்பிக் கொண்டிருக்கிறார். அன்றிலிருந்து, ''ஒரே உடலும் ஒரே ஆவியும்... ஒரே ஆண்டவரும்... ஒரே கடவுளும்....'' (எபே 4:4 தொ) என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் இந்த உடலுள் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்குத் திருமுழுக்குத் தருதல் வேண்டும் (அ.ப. 2:38), தூய ஆவியைத் தருவதற்கு அவர்கள் மேல் கைவிரித்தல் அவசியமாகிறது (8:14-17). உடலின் வாழ்வையும் வளர்ச்சியையும், இறைவனின் கொடைகளைப் பகிர்ந்து பங்கிடு செய்தலையும் தூய ஆவி கவனித்துக் கொள்வார். இக்கொடைகளைப் பெற்றவருள் சிலர் தற்காலிகமாகத் தொண்டு புரிவர்; வேறு சிலர் நிரந்தரமாகத் தொண்டாற்றுவர். இவர்களின் பல்வேறு தொண்டுகளும், அப்போஸ்தலர்கள் திருச்சபையின் வளர்ச்சிக்காகச் செய்த பல்வேறு பணிகளின் தொடர்ச்சியே ஆகும். ஆதலால் இப்பணிகளைச் செய்வோர் உண்மையில் வேறு புதிய இணைப்பாளர்கள் ஆவதில்லை; இவர்களின் தொண்டு ஒரே இணைப்பாளரான இயேசுவின் பணிக்குப் புதிதான அம்சங்கள் எதையும் அளிப்பதில்லை; மாறாக அனைத்து மக்களையும் அடைவதற்கு ஏற்ற கருவிகளாக இயேசுவே இவர்களைத் தொண்டாற்றச் செய்கிறார்.

கிறிஸ்துவின் உடலுறுப்புகளாகிய கிறிஸ்தவர்கள் இவ்வுலகை நீத்து மாட்சியிலிருக்கும் தங்கள் தலையாகிய கிறிஸ்துவுடன் ஒன்றிணைந்த பின்னர் அவர்களது பணிகள் நிறைவு பெறுகின்றன. ஆனால் இன்னும் இவ்வுலகில் இடைவிடாது போராடிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு, வெற்றியைச் சுவைக்கும் விண்ணகக் கிறிஸ்தவர்கள் பேருதவி புரிகின்றனர். அவர்கள் கிறிஸ்துவின் அரசுரிமையில் பங்கேற்றவர்களாய் (திருவெளி 2:26 தொ 3:21; காண் 12:5; 19:15) இறைவனின் நீதி விரைவில் வெளித்தோன்ற வேண்டுமென விரும்பும் (6:9 முழு 8:2-5; 9:13) மண்ணகப் புனிதரின் மன்றாட்டுகளை இறைவன் முன் எடுத்துச் செல்கின்றனர் (5:8; 11:18). இறுதியில் வரும் நிறைவான வெற்றி ''செம்மறியின் செந்நீரையும்'', சாட்சிகளின் வீர மரணத்தையும்'' சார்ந்ததாக இருக்கும் (12:11). கிறிஸ்து தம் விண்ணேற்றத்திற்கும், இறுதி வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில், தமது மக்களின் பங்கேற்பு இல்லாமல் தம் அரசுரிமையை அவர் செயலாற்றுவதில்லை. அவ்வரசுரிமை ஒரே சமயத்தில் மண்ணிலும் நிலவுகிறது (12:6; 14; 22:17; காண் 7:1-8), விண்ணிலும் மகிமை துலங்க விளங்குகிறது (12:1; 21:2; காண் 14:1-5).

ஆ. மரியாள்:- உயிர்த்த கிறிஸ்துவின் இணைப்புப் பணியில் மரியாளுக்கு ஒரு தனியிடம் உண்டு. விண்ணக இணைப்பாளர் உலகுக்கு வருகை தரும்போது, அவருக்குத் தாயாக இருக்க மரியாள் அழைக்கப்பட்டாள்; அத்துடன் அவர் செய்த முதல் அருங்குறி அவளது வேண்டுதலின் பேரில்தான் நிகழ்ந்தது. இவற்றை நோக்கும்போது, திருச்சபையைப் பொறுத்த வரையில் கண்ணுக்குத் தெரியாத வகையில் கன்னிமரி செய்கின்ற செயல் என்ன என்ற கேள்வி பிறக்கிறது. தொடக்கத் திருச்சபையில், மரியாள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவளாக இருந்த போதிலும், ஏனையோரைப்போல ஓர் உறுப்பினராகத்தான் இருந்தாள் (அ.ப. 1:14); அவளுக்கெனத் தனிச் சிறப்புகளோ, சலுகையோ இருந்ததாகத் தெரியவில்லை. அப்போஸ்தலர் செய்த பணிகளுடன் ஒப்பிடுகையில் அவள் எவ்விதச் சிறப்புப் பணியையும் செய்யவில்லை. ஆனால் விண்ணக இணைப்பாளர் இறக்கும் தருவாயில், தம்முடையவர்க்குத் தாயாக விளங்கும் திருகட்டளையைத் தம் தாய்க்கு விட்டுச் செல்கிறார் (யோவா 9:26-27). அப்படியானால், மரியாளின் இறப்புக்குப்பின் இந்தத் திருக்கட்டளை தீர்ந்து விட்டது என்று எண்ணமுடியுமா? தான் இறந்த பின்னும், தன் திருமைந்தன் தனக்கிட்ட திருக்கட்டளையைத் தலைமேற்கொண்டு கண்ணுக்குப் புலனாகா வகையில் கடமையாற்ற மாட்டாளா? தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரையும் போல, மரியாளும் இயேசுவின் அரசுரிமையிலும், அவரது பரிந்துரைப் பணியிலும் பங்கு பெறுகிறாள்.

அத்துடன், புதிய ஏற்பாடு அவளுக்கு "இறைமகனின் தாய்", "இறைமக்களின் தாய்" என்ற சிறப்புப் பெயர்களைச் சூட்டி மகிழ்கிறது. இதைப் புதிய ஏற்பாடும் சுட்டிக் காட்டுகிறது.

3. இயேசுவும் வானதூதரும்:- ஒப்பற்ற ஒரே இணைப்பாளராகிய கிறிஸ்து, இறைவனின் திருமுன்னிருந்து இறங்கி வந்து, மறுபடியும் திரும்பிச் சென்று விட்டார். இச்செயல் அவரைப் பழைய ஏற்பாட்டு வானதூதர்களுடன் ஒப்புமைப்படுத்துவதுபோலக் காட்டலாம். இதனாலும், மத்திய ஆசியப் புறச்சமயங்களின் செல்வாக்காலும், ஆதிக்கிறிஸ்தவர் சிலர் இயேசுவையும், வானதூதர்களையும் ஏறக்குறைய ஒரே படியில் வைத்து ஒப்பிடலாயினர். இந்தத் தவறான கருத்துகளைத் தகர்த்தெறிய சில சீரிய விளக்கங்கள் தேவைப்படுகின்றன (கொலோ 2:18 தொ; எபி 1:4-14; காண்க: திருவெளி 19:10). கிறிஸ்து 'வானதூதர்களுக்கும்' தலையானவர் (கொலோ 2:10); அவரோடு சேர்ந்து கிறிஸ்தவர்களும் வானதூதருக்குத் தீர்ப்பிடுவார்கள் (1 கொரி 6:3). புதிய ஏற்பாட்டிலும், வானதூதர்கள், பரிந்துரைக்கும் பணியையும், இறைவனின் திட்டங்களை நிறைவேற்றும் கருவிகளாய் இருக்கும் பணியையும் (எபே 1:14), தொடர்ந்து செய்கின்றார்கள். ஆனால் இப்பணிகளை அவர்கள், இணையற்ற இணைப்பாளராகிய 'மனுமகனின் தூதுவர்களாக'த் தான் செய்து முடிக்கிறார்கள் (மத் 24:30).

IV முடிவுரை:- இறைவனையும் இவ்வுலக மக்களையும் இணைக்கின்ற ஏணிகளாய் இருந்து இறைமக்கள் செய்யவிருந்த ஏற்ற மிகு இணைப்புப்பணியை முன்னறிவிப்பதாகவும், அதற்கு ஆயத்தம் செய்வதாகவும் தான் இறைவன் தமக்கும் தம்மக்களுக்கும் இடையே பாலமாக விளங்க ஏற்படுத்திய பல்வேறு இணைப்பாளர்களின் பணி தோற்றம் அமைகிறது. இஸ்ராயேலின் இவ்விணைப்புப் பணி இயேசுவின் பணியில் முற்றுப் பெற்றது. அப்பொழுது அவர் இறைவனின் ஒரே மகனாக, எடுத்தியம்பவியலாத மாட்சியில் இருப்பதால், அவர் ஒருவரே ஈடு இணையற்ற இணைப்பாளர் ஆகிறார். இருந்தும், புதிய இஸ்ராயேல் என்னும் உடலின் தலை என்ற அளவில், தம் உடலின் மூலம் தான் இப்பொழுது அவர் தம் இணைப்புப் பணியைச் செய்கிறார்.

மனுமகனின் மகிமை பொருந்திய வருகையின்போது, மனிதர் புரியும் இணைப்புப் பணி மங்கி மறைந்து போகாது, பட்டொளி வீசி பாரெல்லாம் தெரியுமாறு துலங்கும். இது முரணாகத் தோன்றலாம். இதற்கு இறுதிக்காரணம் அன்பே உருவான இறைவன் தான் (1 யோவா 4:8). மனிதருடன் இருக்கவும் (மத் 1:23; திருவெளி 21:3), அவர்களுடன் தமது தெய்வீகத் தன்மைகளைப் பகிர்ந்து கொள்ளவும் (2 பேதுரு 1:4) அவர் விழைகிறார்; ஆதனால் தம்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்களுடன் இணைந்தே அவர் செயலாற்றுகிறார். மனிதன் மனிதனுடன் கொள்ளும் ஒன்றிப்பின் மூலமாகத்தான், தாம் மனிதருடன் ஒன்றி இணையும் ஒப்பற்ற கொடையை மனிதருக்கு இறைவன் தந்தருளுகின்றார் (1 யோவா 1:3).

இதயத்தின் கடினத்தன்மை (HARDNESS OF HEART)

இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்ட மனிதனுடைய படிப்படியான காழ்ப்பானது இதயத்தின் கடினத்தன்மை அல்லது குருட்டுத் தன்மை என்று அழைக்கப்படுகிறது. இதயத்தைக் கடினமாக்குவதென்பது, ஒருவன் பிடிவாதமும் கல்மனமும் கொண்டிருக்கும்படியாக இதயத்தைக் கொழுக்க வைப்பது, காதுகளை மூடிக்கொள்வது, கண்களை மறைப்பது, உறங்குவது, மயக்க நிலையினை உண்டாக்குவது, அல்லது மந்த நிலை, அல்லது பொய்ம்மை நிலையினை உருவாக்குவதென்பதாகும். இந்நிலையானது, புறவினத்தாரையும், இஸ்ராயேலர்களையும் மற்றும் இயேசுவின் சீடர்களையும் கூட அனைத்து மக்களையும் பாதிக்கலாம்.

1. இதயத்தினுடைய கடினத்தன்மையின் தொடக்கத்தில்:-

அ. உண்மை நிகழ்வு:- யாத்திராகமம் மற்றும் ஏசயா நூல்களிலிருந்து இரு முக்கிய

வாசகங்கள் இஸ்ராயேலின் சமய சிந்தனையை எடுத்துக்காட்டுகின்றன. பாரவோன் இஸ்ராயேலைச் செல்ல அனுமதிக்காததன் காரணம், இறைவன் அவனுடைய இதயத்தைக் கடினமாக்கியதே (யாத் 4:21; 7:3; 9:12; 10:1; 20:27; 11:10; 14:4), அல்லது அவனே தன்னுடைய இதயத்தைக் கடினமாக்கிக் கொண்டதே (யாத் 7:1;3-14.22; 8:15; 9:7. 34-35). முதலாவதை இரண்டாவது திருத்துவதாகத் தவறான எண்ணத்தை எழுப்பாமல் இருக்க, இப்பகுதிகளில் இவ்விரு விளக்கங்களும் அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இதனால் ஓர் இறையியல் பிரச்சினை எழுகிறது. மனிதனுடைய இதயத்தின் கடினத் தன்மைக்கு அவனே காரணமென்பதில் வியப்பில்லை. ஆனால் இறைவனே இதற்கு ஆதரவு அளித்து அதற்குக் காரணமாகவும் உள்ளார் என்பதை எவ்வாறு அனுமதிப்பது?. ''தாம் விரும்புவது போல் இறைவன் ஒருவன் மேல் இரக்கம் வைக்கிறார். இன்னொருவனை அடங்காமனத்தினர் ஆக்குகிறார்'' என்று (உரோ 9:18) பவுல் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் இறைவன் ஏசயாவிற்கு ஒரு பணியினை அளிக்கின்றார்; ''நீ போய் இந்த மக்களுக்கு. 'கேட்டுக் கேட்டும் நீங்கள் உணராதீர்கள், பார்த்துப் பார்த்தும் நீங்கள் அறியாதீர்கள்' என்று சொல். அவர்கள் கண்ணால் காணாமலும் காதால் கேட்காமலும் உள்ளத்தால் உணராமலும் இருக்கும்படி இம்மக்களின் உள்ளத்தை மழுங்கச் செய்; காதுகளை மந்தமாக்கு; கண்களை மூடு'' (ஏச 6:9-10). தவறானது என்று ஒதுக்கப்பட வேண்டிய இப்பகுதியானது, இஸ்ராயேல் கிறிஸ்துவை எதிர்க்க பயன்படுத்திய மறுதலிப்பை விளக்குவதற்கு இயேசுவாலும் (மத் 13:13), அவருடைய சீடர்களாலும் (மத் 13:14-15; அ.ப. 28:25 தொ) பொருள் அளவில் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. பாவமும் இதயத்தின் கடினத்தன்மையும்:- மக்களுடைய இதயத்தின் கடினத்தன்மையானது கடவுளால் நேரடியாக விரும்பப்படாமல், முன்நோக்கப்பட்டது என்று கூறுவது மட்டுமே போதுமான விளக்கமாகுமா? உண்மையில், செமித்திய மொழியின்படி, இறைவன் அனுமதிப்பதை நேரடியாக விரும்புவதாகக் கூறுவது மரபாகும். இப்பதிலானது, ஒரு குறிப்பிட்ட எல்லைவரை ஏற்புடையதாய் இருந்தாலும், தட்டிக் கழிப்பதாக தோன்றுகிறது. இறைவனை மன்னிப்பதற்குப் பதிலாக, இதயத்தினுடைய கடினத் தன்மையின் அச்சுறுத்தல்களும். அது செயல்படுதலும் எப்பின்னணியில் வடிவமைக்கப்பட்டன என்று கவனிப்பது சரியானதாகும். இதயத்தைக் கடினப்படுத்துவதென்பது ஏற்றுக் கொள்ள மறுப்பதன்று; மாறாக, இது பாவ நிலையின் மீது தீர்ப்பைக் கொண்டு வருதலாகும்; பாவமானது புலப்படும் விதத்தில் தன் கனிகளை வெளிக்கொணர விரும்புதலாகும். எனவே; இதயத்தின் கடினத்தன்மையானது, இறைச் சீற்றத்தினால் உண்டாவதன்று; மனிதன் துக்கப் படாத பாவங்களுக்காக அவனைத் தண்டிக்கிறார் இறைவன். மனிதன் தனது இதயத்தைக் கடினமாக்கும் போது பாவம் புரிகிறான். இறைவன் இதயத்தைக் கடினமாக்கும் போது பாவத்தின் ஊற்றாக இல்லாமல், நடுவராக இருக்கிறார். இதயத்தின் கடினத்தன்மையானது, மனம் மாற மறுத்து, இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்ட நிலையிலேயே உள்ள பாவியினுடைய பண்பை விவரிக்கிறது. அது பாவத்தின் உள்ளடங்கிய தண்டனையாகும்; பாவியினுடைய தீய இயல்பைக் காட்டுகிறது. ''எத்தியோப்பியன் தன் தோல் நிறத்தை மாற்ற இயலுமா? சிறுத்தை தன் புள்ளிகளை மாற்ற முடியுமா? அப்படி முடியுமானால், தீமையே செய்யப் பழகிக் கொண்ட நீங்களும் நன்மை செய்யக்கூடும்'' (எரே 13:23).

2. பொருள்:- அ. இறைவனின் திட்டத்தில்:- இத்தகைய சூழ்நிலையில் பொருளைக் காண பவுல் முயற்சித்தார். முதலாவதாக, இறைவனுடைய பராமரிப்புத் திட்டத்திற்குள் அவர் செல்கிறார். இறைவனிடமிருந்து எதுவுமே தப்புவதில்லை. பாரவோனுடைய தனிப்பட்ட முடிவில் பவுல் அக்கறை கொள்ளாவிடினும், இறுதியாக இறைம

கிமை ஒளிவீசுவதற்கு அவன் கருவியாக உள்ளான் (யாத் 9:16; 14:17-18). இஸ்ராயேல் தன்னுடைய இதயத்தின் கடினத்தன்மையால், புறஇனத்தவர் திருச்சபைக்குள் வருவதற்கு அடிகோலுகிறது (உரோ 9); மேலும் இறைவனது திட்டமானது, உயிர் வாழ வேண்டிய எஞ்சியுள்ளோருக்காகவே முழுவதுமாக பணிக்கப்பட்டுள்ளது. அடுத்து, இஸ்ராயேலுடைய இதயத்தின் கடினத்தன்மையானது இறைவனின் கடுமையையும், அவரது கோபத்தின் எல்லையையும் காட்டுகிறது. இறைவன் மக்களோடு உடன்படிக்கை செய்வதென்பது வேடிக்கைக்காக அன்று. அப்படியிருக்க, கவனமின்மை (லூக் 17:26-29), தன்னிறைவு (உப 32:15). இறுமாப்பு (உப 8:12 தொ; நெக 9:16) ஆகியவற்றை அவர் எவ்வாறு பொறுத்துக் கொள்வார்? இறுதியாக இதயத்தின் கடினத்தன்மையானது இறைவனின் பொறுமையினையும் காட்டுகிறது. அவர் பாவியை அழிக்காமல், கிளர்ச்சி செய்பவர்களுக்குத் தொடர்ந்து தனது கரத்தை நீட்டுகிறார் (உரோ 10:21; ஏச 65:2; ஒசே 11:1-2; எரே 7:25; நெக 9:30). இவ்வாறு இறைவன் பாவியைத் தம்பால் ஈர்க்க விரும்புகிறாரோ அல்லது அவனுடைய நிலையிலேயே அவனை விட்டுவிடுகிறாரோ, எப்படியிருப்பினும், தமது இரக்கத்தை மீண்டும், மீண்டும் காட்டுகிறார்.

ஆ. இருமனச் சூழ்நிலை:- ஒளியின் உருவகத்தின் மூலமாக இவ்வுண்மையை மேலும் ஆழமாகப் புரிந்துக்கொள்ள யோவான் முயற்சிக்கிறார். தன்னைப் பெறுவதற்குத் தயார் செய்யப்படாதவர்களை ஒளியானது குருடாக்குகிறது (யோவா 3:19 தொ). அதேபோல் இறைவனும், என்றும் பிரசன்னமாயிருக்கும் தனது அன்பினால், பாவியின் மனத்தில் மறுக்கும் எதிர்ச்செயலைத் தூண்டுகிறார். இதனாலேயே, இறைவனின் முன் தயாரிக்கும் செயல்களாகிய புதுமைகள், பாரவோனுடைய இதயத்தைக் கடினமாக்குகின்றன; பாலைவனத்தில் மோசேக்கு எதிராகவும் (எண் 14:11; சங் 106:7), அப்பங்களைப் பலுகச் செய்தபிறகு மீண்டும் இயேசுவிற்கு எதிராகவும் (யோவா 6:42-43) முணுமுணுக்கின்ற இஸ்ராயேலருக்குப் புதுமைகள் மதிப்பற்றவையாக விளங்குகின்றன. அவர்களுடைய உள்ளங்கள் மழுங்கியிருந்ததால், இயேசுவின் சீடர்களும் அவற்றை அறிந்து கொள்ள முடியவில்லை (மாற் 6:52; 8:17-21). மனிதர்கள் தூய ஆவிக்கு வருத்தமூட்டுவதற்காக (ஏச 63:10; அப 7:51), அதேபோல் குணமாக்கும் மருந்தாக, அளிக்கப்படும் இறை தண்டனைகள் (ஆமோ 4:6-11), அல்லது மனமாற்றத்திற்கான இறைவாக்கினரின் வேண்டுகோள்கள், செயலற்றவையாகவும், சில நேரங்களில் எதிர்விளைவை ஏற்படுத்துபவையாகவும் உள்ளன (2. அர 17:13-14; எரே 7:25 தொ). அதனால் மனிதர் தூய ஆவியைத் துயருறச் செய்கின்றனர் (ஏச 68: 10; அ.ப. 7:51).

3. இறைவனின் வெற்றி:- தன் தன்மையிலிருந்தே ஊட்டமளிக்கப்படுகின்ற இந்த இதயத்தின் கடினத்தன்மை, பாவத்தின் உறுதியானது, மனமாற்றத்தினாலன்றி, வேறுமுறையில் நீங்காது; ''இன்று நீங்கள் அவரது குரலை கேட்பீர்களாகில், உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்'' (சங் 95:7-8; எபி 3:7-8. 12). ஆனால், கடினமான பாவியை எவ்வாறு மனமாற்றுவது? ''ஆண்டவரே, உம் வழிகளிலிருந்து நாங்கள் பிறழும்படி விட்டதேன்? உமக்கு அஞ்சாதபடி எங்கள் உள்ளத்தைக் கடினமாக்கியதேன்? உம்முடைய ஊழியர்களை முன்னிட்டும் உம் உரிமைச் சொத்தாகிய கோத்திரங்களை முன்னிட்டும் எங்கள் பக்கமாய்த் திரும்பியருளும்'' (ஏச 63:17). இறைவன் தீமையின் அழிவை நொறுக்கி, தனது மனமகளின் இதயத்திற்குள் செல்லும் வழியை அறியமுடியும் என்று விசுவாசி அறிந்திருக்கிறான் (ஒசே 2). இறுதி வார்த்தை இறைவனுக்கே உரியது. ஆகையால்தான், மனிதனுடைய கல்லான இதயமானது ஒருநாள் உணர்ச்சியுள்ள இதயத்தினால் மாற்றப்படும் என்றும் (எச 36:26) இறைவனின் ஆவியானவர், மனிதனால் செய்ய முடியாததையும் செய்யக்கூடியவர் ஆவார் என்றும் இறைவாக்கினர் அறிவிக்கிறார். இப்போது கிறிஸ்து வந்துவிட்டார். இறைவனுடைய

படிப்பினைகளுக்கு ஆர்வமிக்கவனாக ஒருவனை உண்டாக்க ஆவியை அவர் அளித்துள்ளார். எனவே, இஸ்ராயேலின் வாரிசாகிய திருச்சபையானது, நமது விரோத மனப்பாங்கையும் அவரது இரக்கத்தினால் வலிந்து மாற்றுமாறு இறைவனிடம் வேண்டுகிறது (வழிபாட்டு செபம்).

இதயம் (HEART)

I. முன்னுரை:- 'இதயம்' என்னும் சொல் எபிரேயமொழியில் பரந்துபட்ட பொருளில் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக நமது வழக்கில் இதயம் என்பது உணர்வுகளோடு தொடர்பு கொண்ட ஒன்றாகவே கருதப்படும். ஒருவன் தனது இதயத்திலிருந்தே பிறரை அன்பு செய்கின்றான், அல்லது வெறுக்கின்றான்; ஆசைப்படுகின்றான், அல்லது அச்சம் கொள்கின்றான். அறிவு சார்ந்த வாழ்வில் இதயம் எவ்விதப் பங்கும் ஏற்பதில்லை.

ஆனால் எபிரேயத்திலோ 'இதயம்' என்ற சொல் மனிதனுள்ளிருக்கும் அனைத்தையும் உள்ளடக்கும் பொருளில் கையாளப்படுகிறது. உணர்வு (2. சாமு 15:13; சங் 21:3; ஏச 65:14), எண்ணம். ஆராய்வு, திட்டமிடல் போன்ற பொருள்களிலும், நினைவு, விழிப்புணர்ச்சி, மனம் போன்ற பொருள்களிலும் அடிக்கடி 'இதயம்' என்ற சொல் எடுத்தாளப்படுகின்றது. 'பரந்த இதயம்' (1. அர 5:9) என்பது அகன்ற அல்லது ஆழமான அறிவைக் குறிக்கிறது. 'உன் இதயத்தை எனக்குக் கொடு' என்பது 'எனக்குச் செவிசாய்ப்பாய்' (பழ 23:26) என்று பொருள்படும். 'கடின இதயம்' என்னும் தொடர் குறுகிய, ஏற்க மறுக்கும் மனத்தைக் குறிக்கும். 'இதயம்' என்ற சொல்லின் பொருள் சூழ்நிலைக்கேற்ப அறிவு சார்ந்ததாகவோ (மத் 8:17), அறிவுக்கு அப்பாற்பட்டதாகவோ (அப 7:51) அமையலாம். எனவே மனிதனின் இதயம் அவனது உணர்ச்சிமிகு, அறிவார்ந்த, சுதந்திரமான, தனித் தன்மையாகும். இதயத்துக்கு இணையாக உளம், மனம், உள்மானம் என்ற சொற்களும் பயன்பட்டுள்ளன.

II. மனிதனின் இதயம்:- 1. உடலின் ஒரு பகுதி:- இப்பொருளில் இதயம், அல்லது மனம் அரிதாகவே பயன்பட்டுள்ளது (1. சாமு 25:37; 2. அரச 9:24). மனம் உணவால் திடம் பெறலாம் (நீதி 19:5) திராட்சை இரசத்தால் மகிழ்வுறலாம் (சங் 104:15).

2. உணர்ச்சிகளின் இருப்பிடம்:- மனிதனுடைய எல்லா உணர்ச்சிகளும் இதயத்துக்கு அல்லது மனதுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. மனம் மகிழலாம் (பழ 27:11; அப 14:17); வருத்தப்படலாம் (நெக 2:2); கலக்கமுறலாம் (2. அர 6:11); ஆற்றல் கொண்டிருக்கலாம் (2. சாமு 17:10); உரமில்லாது போகலாம் (ஏச 35:3); அஞ்சலாம் (35:4); பொறாமையால் ஏங்கலாம் (பழ 23:17); நம்பலாம் (32:11); முழுமனதுடன் ஒப்புக் கொடுக்கலாம் (2. நாள் 29:31); பகைமை கொள்ளலாம் (லேவி 19:17); அல்லது அன்பு செய்யலாம் (உப 13:3). இதயத்தின் உணர்ச்சிகள் சில சமயங்களில் உயிர்ச்சித்தமாகவும் புலனீடாகவும் விவரிக்கப்படுகின்றன. மனம் கலக்கமுறுகிறது (ஆதி 42:28); அதிர்ச்சியுறுகிறது (45:26); உருகிப் போகிறது (சங் 22:14; லூக் 24:32); திகிலடைகிறது (1. சாமு 28:5); துடிக்கிறது (சங் 38:10); வயிற்றெரிச்சல் கொள்கிறது (உப 19:6); சோர்வடைகிறது (பழ 13:12); உடைந்து போகிறது (சங் 69:20). இதயம், தீய (உரோ 1:24), நல்ல (10:1) ஆசைகளின் இருப்பிடமாகக் கருதப்பட்டது.

3. அறிவின் இருப்பிடம்:- முன்பு கூறியது போல் எபிரேயர் கருத்துப்படி இதயம் அல்லது உள்ளம் அறிவு வாழ்க்கையின் மையமாக இருந்தது. எண்ணும் செயல் உள்ளத்தில் நிகழ்கிறது (நீதி 5:16; மாற்கு 2:6). சிந்தனைக்குரிய இடம் இதயமே (1. நாள் 29:18). வாழ்வின் ஆழ்ந்த உண்மைகள் உள்ளத்தில் தியானிக்கப்பட்டன (சங் 4:4; லூக் 2:18). எபிரேய மொழி புலனீடான முறையைக் கொண்டிருந்ததால், ''சிந்திப்பதை'' ''தனக்குள் (இதயத்துக்குள்) சொல்லிக் கொள்ளல்'' என்று (ஆதி 27:41; சங் 10:6) விவரித்தனர். இதயத்தில் மனிதன் திட்டங்கள் செய்கிறான், அறிவைத் தேடுகிறான்.

நினைவுகளைச் சேர்த்து வைக்கிறான். இதயத்துக்கும் சிந்தனைக்கும் உள்ள தொடர்பு எவ்வளவு நெருங்கியதென்றால், இதயத்தை அறிவு (யோபு 3:3) என்று மொழிபெயர்க்கலாம்.

4. சித்தம் மற்றும் ஒழுக்க வாழ்வின் இருப்பிடம்:- இதயம் அறிவு வாழ்வின் மையம் என்ற கருத்திலிருந்து அது சித்தம் மற்றும் ஒழுக்க வாழ்வின் மையமாகும் என்ற கருத்து இயற்கையாக அமைகிறது. உள்ளம் சதித்திட்டங்களை வகுக்கிறது (பழ 6:18). அது தீயதாகவும் வஞ்சகமிக்கதாகவும் ஆகக் கூடும் (11:20; எபி 3:12). அதனால் அதிலிருந்து தீய எண்ணங்கள் வெளிவரும் (மத் 15:19). அது செருக்குறலாம் (உப 8:14). அது கடினப்படலாம் (செக் 7:12); முரட்டுத்தனம் கொள்ளலாம் (மத் 19:8). அது கனமாகிவிடலாம் (சங் 119:70); இறைப் பற்றற்றதாக இருக்கலாம் (யோபு 36:13); அது இறைவனிடமிருந்து மாறி விடலாம் (1. அர 11:2). கடின அல்லது முரட்டு இதயம் ''விருத்த சேதனம் செய்யப்படாமை'' என்று விவரிக்கப்படுகிறது (எரே 9:26; அ.ப. 7:51). ஒருவன் தன் இதயத்தையே முழுவதும் நம்பியிருக்கலாம் (எண் 15:39). அல்லது அவன் இதயம் ஏமாற்றப்படலாம் (ஏச 44:20). வஞ்சநாவால் இரண்டகம் பேசலாம் (சங் 12:2). மனிதனிடம் விரும்பப்படுவது மென்மையான இதயமே, கடின இதயமன்று (2. அர 22:19). நல்ல இதயம் ஆண்டவர் முன் நிறைவுள்ளது (1. அர 8:61), குற்றமற்றது (சங் 119:80), சுத்தமானது (51:10), நேர்மையானது (32:11), சீரிய செம்மனமானது (லூக் 8:15) தூயது (மத் 5:8), ஒருமனப்பட்டது (எபே 6:5), விருத்த சேதனம் செய்யப்பட்டது (எரே 4:4; உரோ 2:29), நொருங்குண்டது (சங் 34:18); நிறைவையும், முழுமையையும் குறிக்க ''முழுஇதயத்தோடும்'' என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது (உப 6:5). மனிதன், விரும்பினால், இதயத்தைத் தூய்மைப்படுத்தலாம் (சங் 73:13) அல்லது புதுப்பிக்கலாம் (எச 18:31). இதயம் கல்வி பயிலக் கூடியது; ஆண்டவரைத் தேடி பின்பற்ற (2. நாள் 12:14) அல்லது சட்டத்தின்படி நடக்க (எஸ்ரா 7:10) மனம் வைக்கலாம். மெய்யறிவிலும் (பழ 2:1) அல்லது நன்னெறியிலும் (23:19) மனத்தைச் செலுத்தலாம்; பொதுவாக இதயம் வஞ்சனையுள்ளது, மிகவும் கெட்டுப் போனது (எரே 17:9), நம்பத்தகுந்ததன்று (பழ 28:26), தீமை நிறைந்தது (ஆதி 8:21; திருவுரை 9:3).

5. இதயமும் புறத்தோற்றமும்:- 'இதயம்' கண்ணுக்குப் புலப்படாத உள்ளுறுப்பே; எனினும் ஒருவன் பிறரோடு கொள்ளும் தொடர்புகளில், உறவுகளில் இருப்பிடமாகக் கொள்ளும் மனப்பான்மையே மனிதனுக்கு முக்கியமானது என்பது தெளிவு. பொதுவாக, ஒருவனின் புறத்தோற்றம் உள்ளத்தில் இருப்பதன் வெளிப்பாடாக அமைய வேண்டும். இவ்வாறிருந்தால் ஒருவருக்குள்ளிருக்கும் இதயத்தை அவரின் முகப்பாவங்களிலும் (சீரா 13:25), வார்த்தைகளாலும் (பழ 16:23), செயல்களாலும் (லூக் 6:44) மற்றவர் மறைமுகமாகவாகிலும் அறிகின்றனர். ஆனால் நடைமறையில் ஒருவனது வார்த்தைகளும் செயல்களும் அவனது இதயத்தை எடுத்துக்காட்டுவதற்கு மாறாக அதனை மூடி மறைக்கப் பயன்படுகின்றன (பழ 26:23-26; சீரா 12:16). ஏனெனில் மனிதன் மறைக்கும் ஆற்றலுள்ளவன்; இப்பண்பு மிகவும் ஆபத்தானது; உள்ளொன்று வைத்துப் புறமொன்று காட்டுவதால் இதயமே ஏமாற்றுதலின் இருப்பிடமாக மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட இரண்டகப் போக்கு மிகப் பெரிய தீவினை (பாவம்) ஆகும். இப்போக்கினை விவிலியம் தீவிரமாக கண்டிக்கிறது (சீரா 27:24; சங் 28:3 தொ).

6. இறைவனும் இதயமும்:- இறைவன் தன்னை அழைப்பதை உணர்ந்தாலும் ஏமாற்று வழியில் தப்பிக்க மனிதன் எத்தனிக்கின்றான். இறைவன் எரியும் நெருப்பு (உப 4:24). இறைவனின் அடிப்படையான ஆணைகளை ஒருவன் எவ்வாறு நிறைவேற்ற இயலும்? இறைவனின் மக்களாம் இஸ்ராயேலரே தமது கடமைகளை ஆற்றுவதில் தயக்கமும்,ஏமாற்று வேலையும் காண்பித்தார்கள். உண்மையான மனமாற்றத்தைத்

தவிர்ப்பதற்காகப் புறச் சடங்குகளாலும் (வெளி வழிபாடுகளாலும்) (ஆமோ 5:21) வஞ்சக வார்த்தைகளாலும் (சங் 78:36 தொ) இறைவனைச் சாந்தப்படுத்த முயல்கின்றனர்.

எனினும் இம்முயற்சி பொய்த் தோற்றமே யாகும். மனிதனைப் போலக் கடவுளை ஏமாற்ற முடியாது: ''மனிதன் வெளித்தோற் றத்தைக் காண்கின்றான்; ஆனால் இறைவன் இதயத்தின் ஆழத்தை நோக்குகின்றார்'' (1. அர 16:7) ''இறைவன் இதயத்தைத் தேடுகின் றார்; ஒவ்வொருவருடைய நடத்தையையும் பரிசோதிக்கிறார்'' (எரே 17:10; சீரா 42:18); அவர்களுடைய பொய்யை ஆண்டவர் வெளிக்கொணர்கிறார். ''இம்மக்கள் உதட் டால் நம்மைப் போற்றுகின்றனர்; அவர்க ளது உள்ளமோ நம்மை விட்டுத் தொலை வில் இருக்கின்றது'' (ஏச 29:13) என்கின்றார். ஆன்மாவில் உள்ள ஆழத்தையும் ஆவியின் உள்ளாழத்தையும் ஆண்டவர் ஊடுருவிப் பார்க்கின்றார் (எபி 4:12...) என்பதை மனி தன் அறிந்திருக்கின்றான். ஆண்டவரை அணுகுவதென்பது அவரில் அவனது இத யத்தை இழக்கத் துணிவதேயாகும் (எரே 30:21).

7. புதிய இதயம் தேவை:- புறச்சடங்குகள் மட்டும் போதாது என்பது படிப்படியாக இஸ்ராயேலருக்குப் புலப்பட்டது. கடவு ளைக் காண வேண்டின், ஒருவன் தன்முழு இதயத்தோடு அவரைத் தேட வேண்டும் (உப 4:29), தன் நெஞ்சத்தை நிரந்தரமாக இறைவனோடு இணைக்க வேண்டும் (1. சாமு 7:3), தனது முழு ஆன்மாவோடு ஆண்டவரை அன்பு செய்ய வேண்டும் (உப 6:5) என்பதை இஸ்ராயேலர் தெளிவாக உணரத் தொடங்கினர். இச்செயல் இறைச் சட்டங்களுக்குப் பணிய வேண்டும் என்ப தையும் உள்ளடக்குகிறது. ஆனால் இஸ்ரா யேலரின் வரலாற்றை முறையாக நோக்கி னால் இதனைச் செயலில் காட்டும் திறம் இல்லாதவர்களாகவே தென்படுகின்றனர். அவர்களது பாவம் அவர் தம் இதயத்தையும் பாதிக்கிறது. ''இம்மக்கள் கடின இதயமும் அடங்காத போக்கும் கொண்டவர்கள்'' (எரே 5:23) ''தூய்மையில்லா இதயமுடைய வர்கள்'' (லேவி 26:41) ''இருமனம் கொண் டவர்கள்'' (ஒசே 10:2), இறைவனில் நம் பிக்கை கொள்ளாமல் தங்களது சொந்தச் சிந்தனைகளின்படியும், தீய உள்ளத்தின் பிடி வாதப்படியுமே நடந்தவர்கள்'' (எரே 7:24; 18:12). இதன் பலனாகத் தீராத் தீவினை அவர்களைத் தீண்டியது. அவர்கள் ஆற்றக்கூ டிய அறச் செயலாக இருந்த ஒன்றே ஒன்று அவர்களது இதயங்களைக் கிழித்துக் கொள் வதும் (யோவேல் 2:13), உடைந்த உள்ளத் தோடும், திருந்திய மனத்தோடும் இறைவ னுக்குத் தங்களையே தகனப் பலியாக்குவ தும் (சங் 51:19) தங்களில் தூய்மையான உள்ளத்தைப் படைக்க ஆண்டவரை வேண் டுவதுமே (சங் 51:12) ஆகும்.

II புதிய இதயம்:- 1. உறுதி மொழி:- இஸ்ராயேலருக்கு அமைதி அளிக்க இறை வன் தேர்ந்த திட்டமும், செய்த அறிக்கையும் இதுவேயாகும். இறைவனின் நெருப்பு, அன்பின் நெருப்பு, இறைவன் தன் மக்களை அழிக்காமல் இருப்பதற்கு இவ்வன்பு நெருப்பே காரணமாகிறது. இந்த எண்ணமே அவரது இதயம் பூரிக்கச் செய்கிறது (ஒசே 11:8). மீண்டும் அவளது உள்ளத்தோடு உரை யாடவே, உறுதியற்ற தன் மனைவியாம் இஸ்ராயேலை இறைவன் பாலைவனத் திற்கு இட்டுச் செல்கின்றார் (ஒசே 2:16). இச்சோதனைகளுக்கெல்லாம் ஒரு முடிவு வரும்; ஒரு புதிய காலம் பிறக்கும். இப்பு திய காலத்தில் இஸ்ராயேலரின் இதயவாழ் வில் இறைவனே புனிதம் பூக்கச் செய்கிறார். ஆண்டவர் இஸ்ராயேலரின் இதயத்தையும் அவர்களது மரபினரின் இதயத்தையும் விருத் தசேதனம் செய்து, அவர்கள் தம் முழு இதயத்தோடும் ஆன்மாவோடும் அவரை அன்பு செய்ய அழைக்கின்றார்; ஏனெனின் இறைமக்கள் என்றென்றும் வாழ வேண்டு மென்பது இறைத்திட்டம் (உப 30:6) இஸ்ரா யேலர் இனிமேல் முணுமுணுக்கவோ முரண்டு பிடிக்கவோ மாட்டார்கள். ஏனெ னில் ''இறைவன் அவர்களுடன் ஒரு புதிய உடன்படிக்கையைச் செய்வார்; தமது திருச்

சட்டத்தை அவர்களது உள்ளங்களில் பதிப் பார்; இஸ்ராயேலரின் இதயங்களின் மீது அதனை எழுதுவார்'' (எரே 31:33). இவற்றை யெல்லாம்விட மேலானதாக, இஸ்ராயேல ருக்கு இறைவன் புதியதோர் மனத்தை அரு ளுவார் (எரே 32:39). 'அவர் ஆண்டவர்' என்று அறிந்து கொள்ளும் இதயத்தை அவர் களுக்கு அருளுவார் (எரே 24:7; உப 29:3). 'உங்களில் புதியதோர் உள்ளத்தையும் புதிய மனத்தையும் உங்களுக்கென உண்டாக்கி கொள்ளுங்கள்' (எச 18:31) என்னும் கட்ட ளைக்குபின் அவர்களிடமிருந்து தாம் எதிர் பார்க்கும் இதனை அடைய அவரே அவர்க ளுக்கு அருந்துணையாய் இருக்க உறதியளிக் கின்றார். ''நாம் உங்கள் மேல் தூய நீரைத் தெளிப்போம்; உங்களுக்கு புதியதோர் உள் ளத்தை அருளுவோம்; அதனில் புதிய ஆவியை ஊட்டுவோம்! உங்கள் உடலிலி ருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு உணர்ச்சியுள்ள உள்ளத்தை உங்களுக்குக் கொடுப்போம்'' (36:25...). இவ்வாறு, இறை வனுக்கும் இறைமக்களுக்கும் இடையே நிலைத்து நிற்கும் தொடர்பு உறுதிப்படுத்தப் படுகிறது.

2. இறைவன் அளிக்கும் கொடை:- கிறிஸ்து இயேசுவின் வழியாகவே இறைவ னின் உறுதி மொழி நிறைவேறியது.

அ. ஒத்தமை நற்செய்திகளில், இறைவாக் கினரின் படிப்பினைகளைப் போதித்துக் கொண்டு போகும்போது பரிசேயரின் சட்ட முறைகளை, கண்டிப்பினைச் சாடுகிறார் இயேசு. பாவம் என்பது இதயத்திலிருந்து வெளிவருவதே என்பதைச் சுட்டிக் காட்டு கின்றார். ''உள்ளத்தினின்றே தீயஎண்ணம், கொலை, விபச்சாரம், மோகம், களவு, பொய்ச் சான்று, பழிச்சொற்கள் ஆகியவை வெளிவரும். இவையே மனிதனை மாசுப டுத்துகின்றன'' (மத் 15:19. தொ) இறைவன் எதிர்பார்க்கும் தாராள உள்ளத்தை நினைவுப டுத்துகின்றார். மனிதன் இறைவனின் வார்த் தையைச் சீரியசெம்மனத்தில் ஏற்க வேண் டும் (லூக் 8:15). 'தன் முழு உள்ளத்தோடும் முழு ஆன்மாவோடும் இறைவனை அன்பு செய்ய வேண்டும்' (மத் 22:37). தன் சகோதர னைத் தன் முழு உள்ளத்தோடு மன்னிக்க வேண்டும் (மத் 18:35). தூய உள்ளத்தோர் இறைவனைக் காண்பார்கள் என்று வாக்க ளிக்கின்றார் (மத் 5:8). இதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் உள்ளவன் இறைவாக்கினரிலும் மேம்பட்டவன்; ஏனெனில் தூய்மையே உரு வான தேவன் தம் சீடர்களுக்குத் தூய்மையி னைத் தருகின்றார் (மத் 9:2; 26:28). தமது உயிர்ப்பிற்குப்பின் தம் அப்போஸ்தலர்க ளுக்கு உள்ளொளி தருகின்றார். அவர்க ளோடு உரையாடுகின்றார்; மறைநூலைத் தெளிவாக்குகின்றார்; அப்போஸ்தலர்களின் உள்ளம் உருகியது (லூக் 24:32).

ஆ. கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவா சமே, கிறிஸ்துவை நமது இதயத்தில் ஏற்றுக் கொள்வதே, உள்ளத்திற்குப் புத்துயிர் அளிக் கின்றது; வேறொன்றால் இவ்வுயிரைப் பெற முடியாது. பவுல் கூறுகின்றார்; 'இ யேசு ஆண்டவர்' என உன் வாயினால் அறிக்கையிட கடவுள் அவரை இறந்தோரிட மிருந்து உயிர்ப்பித்தார் என உன் உள்ளத்தில் விசுவாசித்தால் நீ மீட்புப் பெறுவாய். ஆம், உள்ளத்தால் விசுவசிப்பவன் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆவான்; வாயினால் அறிக் கையிடுகிறவன் மீட்புப் பெறுவான்; ஏனெ னில் 'அவர்மேல் விசுவாசம் வைக்கிற எவ னும் ஏமாற்றம் அடையான்' என்பது மறை நூல் வாக்கு'' (உரோ 10:9...). விசுவாசத்தி னால் நம் அகக்கண்கள் ஒளி பெறுகின்றன (எபே 1:18); விசுவாசத்தினால் கிறிஸ்து உள்ளங்களில் குடிகொள்கிறார் (3:17); விசு வாசிகளின் உள்ளங்களுக்குப் புதியதோர் ஆவி அனுப்பப்படுகிறது; அந்த ஆவி 'அப்பா, தந்தாய்' என்று அழைக்கின்றார் (கலா 4:6). ஆவியோடு ''இறைவனின் அன் பும்'' உள்ளங்களில் பொழியப்படுகிறது (உரோ 5:5). இவ்வாறு, 'அறிவையெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவுக் குள் நமது உள்ளத்துக்கும் மனத்துக்கும் அரணாக இருக்கும் (பிலி 4:7); இதுதான் ''நிந்தனையால் உள்ளம் உடைந்தவரின்'' பலியின் மேல் அமைக்கப்பட்ட புதிய உடன்படிக்கையாகும்.

இ. யோவான்:- கலக்கத்திலிருந்தும் மருட்சியிலிருந்தும் நம்மை விடுவிக்கும் வண்ணம் உண்மை இறைவனை அறியும் ஆற்றலையும், இறைத் தொடர்பையும், அன்பையும், முடிவில்லா வாழ்வையும் அண்ணல் கிறிஸ்து அடியவருக்கு அளித்தார் (யோவா 14:27; 1 யோவா 5:20; எரே 24:7; 1 யோவா 1:3); சிலுவையில் அறையப்பட்டு மேன்மையுற்ற கிறிஸ்துவின் வழியாகவே இவையனைத்தும் நமக்குக் கிட்டுகிறது. இயேசுவில் விசுவாசம் கொள்பவர்களின் உள்ளத்திலிருந்து உயிருள்ள நீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும் (யோவா 7:38; 19:34; 4:14). விசுவாசிகளுக்கு வாழ்வளிக்கும் பொருட்டு இயேசுவே இவர்களின் இதயத்திற்கு எழுகின்றார் (6:56). யோவானின் நற்செய்தியின்படி இயேசுவே புதிய இஸ்ராயேலர் இதயம் என்று கூட இயம்பலாம். இந்த இதயம் இறைத் தந்தைக்கும் இறைமக்களுக்கும் (விசுவாசிகளுக்கும்) இடையே ஒரு புதிய உறவையும் ஒற்றுமையையும் உருவாக்குகின்றது. ''நான் அவர்களுக்குள்ளும், நீர் எனக்குள்ளும் இருப்பதால் அவர்களும் ஒருமைப்பாட்டின் நிறைவை எய்துவார்களாக'' (17:23; 11:52; அ.ப. 4:32) ''நீர் என் மீது கொண்டுள்ள அன்பு அவர்களுக்குள் இருக்கவும் நானும் அவர்களுக்குள் இருக்கவும் உமது பெயரை அவர்களுக்கு அறிவித்தேன், இன்னும் அறிவிப்பேன்'' (யோவா 17:26).

இதலா (IDALAH - நினைவு)

செபுலோனில் உள்ள ஒரு நகரம் (யோசு 19:15). இந்நகரம், கலிலேயாவிலுள்ள பெத்திலகேமுக்குத் தென் பகுதியில் ஒரு கி.மீ. தொலைவிலுள்ள இக்கால கிர்பெத்-ஏல்-கவாரா என்று பொதுவாகக் கருதப்படும். தால்மூத்தில் இந்நகரம் 'குரியே' என்றழைக்கப்படுகிறது.

இதிபாசு (IDBASH - தேனைப்போல் இனிப்பு)

யூதா குலத்தைச் சேர்ந்த ஒருவர். ஏதாமின் மகன் (1 நாள் 4:3).

இதிரயாம் (ITHREAM - கூட்டமான, மக்கள் நிரம்பிய)

தாவீது கெபிரோனில் இருந்த போது எகிலா மூலமாகத் தாவீதுக்குப் பிறந்த ஆறாவது மகன் இதிரயாம் ஆவர் (2 சாமு 3:5; 1 நாள் 3:3)

இதிரா (ITHRA - நிறைவான)

அமாசாவின் தந்தை. இவர் தாவீதின் சகோதரியான அபிகாயிலை மணந்திருந்தார் (2 சாமு 17:25). இதன்படி இவர் இஸ்ராயேலான இதிரா என்றழைக்கப்பட்டார். ஆனால் எழுபதுநூல் வாசகத்தில் 1 நாள் 2:17-இன் படி அவர் இசமயேலான இதிரா என்று அழைக்கப்படுகிறார் (2 சாமு 17:25; 1 அர 2:5.32). இது மேலான வாசகமாகத் தெரிகிறது.

இதிரான் (ITHRAN - மேன்மையான)

1. குலத்தலைவர் தீசோனின் மகனும், ஏதோமைச் சேர்ந்த கோரியரான சேயிரின் பேரனும் ஆவார் (ஆதி 36:26; 1 நாள் 1:41).

2. ஆசேர் இனத்தைச் சேர்ந்த சோப்பாக்கின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:37). ஒருவேளை இவரே எத்தேர் (4) ஆக இருக்கலாம்.

இதிரியர் (ITHRITES - ஈடெடுப்பற்ற, முதன்மையான)

இதிரியர்கள் கிரியத்து - எயாரிமோடு தொடர்புடைய யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் (1 நாள் 2:53). தாவீதின் வலிமை மிக்க வீரர்களுள் ஈரா, காரேபு ஆகிய இரு இதிரியர்கள் இருந்தனர் (2 சாமு 23:38; 1 நாள் 11:40). சில விளக்கவுரையாளர்கள் இவர்கள், எத்தேர் என்ற ஆணின் பெயரிலிருந்தோ அல்லது யாத்திர் அல்லது எத்தேர் என்ற பெயருடைய நகரிலிருந்து தோன்றியவர்கள் என்று நம்புகின்றனர்.

இதிலாபு (JIDLAPH - அவர் அழுகிறார் அல்லது தூக்கமற்றிருக்கிறார்)

நாகோருக்கும் மில்க்காவுக்கும் பிறந்த ஏழாவது மகன் (ஆதி 22:22).

இதினான் (ITHNAN - கொடுக்கப்பட்ட)

யூதாவின் பகுதியின் தென் எல்லையில் நெகேபில் உள்ள ஊர் (யோசு 15:23). கெதேசு மற்றும் சிப்புக்கு அருகிலுள்ளது (1 நாள் 4:7). யூதாவின் வழித் தோன்றலான எதினானோடு தொடர்பு படுத்தப்படலாம். இவ்விடத்தை உறுதியாக அடையாளம் காட்ட முடியவில்லையென்றாலும் பெயேர்-செபவுக்கு தென்மேற்கில் 60 கி.மீ. தொலைவில் வாடி உம்-எதினானின் மேலுள்ள இக்கால கிர்பேத்-ஏல்-செபரீயேவாக இருக்கலாம். சில அறிஞர்கள், இதற்கு முன் வரும் பெயரோடு இதையும் சேர்த்து காசோர்-இதினான் என்று வாசிப்பர்.

இதுமா (ITHMAH - தூய்மை)

தாவீதின் வலிமை மிக்க வீரர்களுள் ஒருவர். தாவீதின் 30 வலிமை மிக்கவர்களோடு நாளாகம ஆசிரியரால் சேர்க்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர். இவர் மோவாபு இனத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 11:46).

இதுமேயா (IDUMEA - ஏதோமித்தரின் நாடு)

ஏழுபது நூலாலும் யோசிபசாலும் ஏதோமிற்குப் பதிலாக இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இப்பகுதி சாக்கடலுக்கு தென் கிழக்கில் உள்ளது. எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு (கி.மு. 586) யூதாவின் வடபகுதியை ஏதோமியர் கைப்பற்றினர் என்பது பல சுட்டிகாட்டுதல்களால் அறியப்படுகிறது (சங் 137:7; எச 25:12; 35:12-15; ஒப). இந்த ஆக்கிரமிப்பு ஏதோமியர்களால் மட்டுமல்ல, அராபிய குலத்தினராலும் ஏற்பட்டது. அராபியர்கள் கி.மு. 4 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஏதோமை கைப்பற்றியதாகத் தெரிகின்றது. புதிய ஏற்பாட்டு காலத்திற்குமுன் பழங்கால ஏதோம் நபத்தேய அரசாக மாறியது. இதுமேயாவுக்கும் யூதேயாவுக்குமிடையேயுள்ள எல்லை கெபிரோனுக்கு வடக்கில் பேத்துசூருக்கு அருகில் ஓடுகிறது. இந்த எல்லைக்குத் தெற்கில் நெகேபிலுள்ள பகுதிகள் இதுமேயாவைச் சேர்ந்தவையாகும். இப்பகுதி செலூக்கியர்கள், அசமோனியர், ஏரோதியர் ஆகியோரின் காலத்தில் அடிக்கடி கைமாறியது. கி.மு. 164-இல் யூதா மக்கபேயு, சுதந்திரமான இதுமேயாவுக்கு எதிராக பேத்துசூரைப் பலப்படுத்தினார் (1 மக் 4:61). இதுமேயாவை, அழித்து பாழ்படுத்தினார் (5:33.65). இதுமேயாவை அசமோனிய ஆட்சியாளர் யோவான் இரிக்கானு (கி.மு. 135-105) கைப்பற்றினார். இவர் இதுமேயர்களை யூதமதத்தை ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தினார். பெரிய ஏரோதின் குடும்பம் இதுமேயர்களைச் சார்ந்தது. கி.மு. 63-இல் பாம்பே இதுமேயாவுக்கு தல தனியாட்சி அளித்தார். கி.மு. 37-இல் பெரிய ஏரோது, இப்பகுதியை மீண்டும் யூதேயாவோடு சேர்த்தார். யோவான் இரிக்கானு இதுமேயாவை கைப்பற்றிய பின்பு, இதுமேயா யூதேயாவின் ஒரு பகுதியாகவே (அசமோனியர், ஏரோது, உரோமையர் ஆகியோரால்) செயல்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில் இதுமேயா ஒருமுறைதான் குறிக்கப்படுகிறது. இயேசுவின் பொதுப்பணிக் காலத்தில், இதுமேயாவிலிருந்தும் திரளான மக்கள் அவரிடம் வந்தனர் (மாற் 3:8).

இதுலா (ITHLAH - உயர்ந்த இடம்)

தாண் இனத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர் (யோசு 19:42). இடம் சரியாக அடையாளம் தெரியவில்லை. ஆயினும் சிலர் பேத்து-கோரோனுக்கு வடமேற்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத்திய சில்தாவை அடையாளம் காட்ட முயன்றுள்ளனர்.

இத்தாமார் (ITHAMAR - பனைமர நிலம்)

குருக்கள் பாரம்பரியத்திலும் நாள் ஆகமத்திலும், எஸ்ரா நூலிலும் மட்டும் இப்பெயர் காணப்படுகிறது. ஆரோனின் புதல்வர்கள் நாதாபு, அபிகு, எலயாசர், இத்தமார் ஆகியவர்களில் இத்தாமார்தான் கடைசி. பாபிலோன் அடிமைத்தனத்திற்குப் பின்பு வந்த மரபின்படி, ஆரோனின் 4 புதல்வர்களும் அவர்கள் தந்தையோடு குருத்துவப் பணிக்காக அர்ச்சிக்கப்பட்டார்கள் (யாத் 28:1; எண் 3:2-3; 1 நாள் 24:2; காண்க எண் 20:25-28; லேவி 8-9). நாதாபும் அபிகுவும் தங்கள் தந்தைக்கு முன்னரே மகப் பேறின்றி இறந்து போயினர். எலயாசர், இத்தாமார் ஆகியோர்

குருக்களாகப் பணிபுரிந்தனர் (லேவி 10; எண் 3:4; 1 நாள் 24:2). எலயாசர் தலைமைக் குருவாக்கப்பட்டார். எப்படியிருப்பினும் இத்தாமார் பாலைவெளியில், எல்லா லேவியர்களுக்கும் (யாத் 38:21), கெரிசோனிய வம்சத்தினருக்கும் (எண் 4:28), மெராரியின் புதல்வர்களுக்கும் (எண் 4:33, 7:8) தலைவராக இருந்தார். இத்தாமாரிலிருந்து ஏலியின் குடும்பம் தோன்றியது (1 சாமு 14:3; 22:9; 1 நாள் 24:3). பாபிலோனிலிருந்து எஸ்ராவோடு எருசலேமிற்கு இத்தாமார் குடும்பத்தைச் சேர்ந்த குருக்கள் வந்தனர் (எஸ் 8:2).

இத்தாய் (ITTA - யாவேயோடு)

1. இத்தாய் பற்றுறுதியுடைய பெலிஸ்தியப் போர் வீரர். அவர் தன் சொந்த நாடான காத்திலிருந்து நாடுகடத்தப்பட்டவர். தன்னைப் பின்பற்றிய 600 பேர்களோடும் அவர்களுடைய குடும்பங்களோடும், அப்சலோம் கிளர்ச்சியின் போது, தாவீது எருசலேமை விட்டு ஓடியபோது, அவர் தடுத்தும் அவரைப் பின் தொடர்ந்து சென்றார் (2 சாமு 15:19-22). எப்பிராயிம் காட்டில் நடந்தபோரில் யோவாபு, அபிசாய் ஆகியவர்களோடு சேர்ந்து இவரும் தாவீதின் படைக்குத் தலைமை தாங்கினர். இந்தப் போரில் அபிசலோமின் கிளர்ச்சி அடக்கப்பட்டது (2 சாமு 18:2 தொ).

2. பென்யாமின் இனத்தில் இரிபாயின் மகன் இவர். தாவீதின் ஆற்றல் மிக்க போர்வீரர் ''முப்பது'' பேரில் ஒருவர் (2 சாமு 23:29). 1 நாள் 11:31-இல் ஈத்தாய் என்றழைக்கப்படுகிறார்.

இத்தாய் (HIDDAI - மகிழ்ச்சியான)

இவர் 'முப்பதின்மர்' என்று அழைக்கப்படும் தாவீதின் ஆற்றல் மிக்கவர்களுள் ஒருவர் (2 சாமு 23:30). இவர் எப்பிராயிம் மலைநாட்டில் காகசு நீரோடை அருகே வாழ்ந்து வந்தவர் (2 சாமு 23:30). 1 நாள் 11:32-இல் 'கூராய்' என்று அழைக்கப்படுகின்றார்.

இத்தாலா (ITALA)

காலத்தால் முந்திய விவிலிய இலத்தீன் வாசகம். இது வுல்கத்தா வாசகத்திற்கு முன்பே அல்லது அதைச் சாராது எழுதப்பட்டது என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் சில அறிஞர்கள் இதையும் வுல்கத்தா வாசகத்தையும் ஒன்றாக்குவர். சில சமயம் இத்தாலா தொல் இலத்தீன் வாசகங்களின் தொகுப்பைக் குறிக்கப்பயன்படுகிறது; குறிப்பாக அதன் இத்தாலியப் பிரிவைக் குறிக்கப்பயன்படுகிறது. ஒருவேளை இத்தாலா என்ற பெயர் வட இத்தாலியில் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட வாசகத்திலிருந்து வந்திருக்கலாம்.

இத்தாலியா (TA_Y)

திரேனியன் கடலுக்கும், அதிரியாதிக்குக் கடலுக்கும் இடையில் அமைந்த ஒரு நீண்ட தீபகற்பம். வடக்கில் ஆல்ப்ஸ் மலையிலிருந்து தெற்கில் கடல்வரை பரவியுள்ள இத்தாலியா நாடு 1120 கி.மீ. நீளமுடையதாகவும், 160 முதல் 240 கி.மீ. அகலமுடையதாகவும் உள்ளது. அப்பெனின் மலைத்தொடரே இத்தீபகற்பத்தின் முதுகெலும்பாக அமைந்துள்ளது. இதன் மேற்குப் பகுதியில் வளம்நிறைந்த சமவெளிகளும் பள்ளத்தாக்குகளும் காணப்படுகின்றன. மிகப்பெரிய நதியாகிய தைபர் எத்ரூரியாவுக்கும் லாத்தியுமுக்கும் இடையில் பாய்கிறது. இதற்குத் தென்பக்கத்தில் மிகவும் வளம்நிறைந்த கம்பானியா உள்ளது. தலைசிறந்த துறைமுகங்கள் மேற்கில் நேப்பிள்சிலும், ஜெனோவாவிலும், கிழக்கில் பிரிண்டிசியிலும் உள்ளன.

கி.மு. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிராக்குசைச் சேர்ந்த அந்தியாக்கு என்னும் வரலாற்று ஆசிரியரின் கூற்றுப்படி, கி.மு. 13-ம் நூற்றாண்டில் இத்தாலியின் தென்மேற்குப் பகுதியை ஆண்ட 'இதாலோஸ்' என்ற அரசனின் பெயரிலிருந்தே 'இத்தாலி' என்ற பெயர் அந்நாட்டுக்கு சூட்டப்பெற்றது. முதலில் இப்பெயர் இந்நாட்டின் தென்மேற்குப் பகுதிக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. நாளடைவில், வடக்கில் உரோமையர்களின் இத்தாலிக்கும், சிஸ்ஸால்பைன் காலுக்கும் எல்லையாக அமைந்து ரூபிகோன் நதிவரை உள்ள பகுதிக்கு இப்பெயர் அளிக்கப்பட்டது. பொது வழக்கில் இப்பெயர் ஆல்ப்ஸ்

மலை அடிவாரம் வரையிலுமுள்ள முழு நாட்டிற்கும் வழங்கப்பட்டது. உரோமையர், இத்தீபகற்பத்தில் உரோமையைச் சேராத மக்கள் வாழ்ந்த பகுதியைக் குறிக்க இப்பெயரைப் பயன்படுத்தினர்.

புதிய ஏற்பாட்டில் அ.ப. 18:2; 27:1; 27:6; எபி 13:24 முதலியவற்றில் இத்தாலியா குறிப்பிடப்பட்டுள்ளது. அ.ப. 10:1 இத்தாலியப் பட்டாளத்தைப் பற்றிக் கூறுகிறது. புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இத்தாலிய நகரங்களாவன: ஆப்பியன் சாலை, சந்தை, புத்தெயோலி, இரேகியும், உரோமை, 'மூன்று விடுதி''.

உரோமையிலிருந்து யூதர்களைப் புறம்பாக்கிய கிளாதியு சட்டத்தின் விளைவாக இத்தாலியிலிருந்து விரட்டப்பட்டபின், அக்கிலா, பிரிசிக்கில்லா, ஆகியோரை கொரிந்தில் பவுல் சந்தித்தார் (அ.ப.18:2). அகிரிப்பாவால் பவுல் விடுதலை அடைந்தபின், அவரும் அவரது தோழர்களும் உரோமையை நோக்கி செல்லும் அலக்சாந்திரியாக் கப்பலில் பயணம் செய்தனர் (27:1-6). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம், ''இத்தாலிய நாட்டுச் சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்'' (எபி 13:24) என்று ஒரு தெளிவில்லாத குறிப்பைத் தருகிறது.

இத்தாலியப் பட்டாளம் - (ITALIAN COHORT)

உரோமைப் படையின் ஒரு பகுதி. கி.பி. 69-157ல் செசரியாவில் இரண்டாவது இத்தாலிக்கா பட்டாளம் ஒன்று இருந்ததாக எழுத்துப் பொறிப்புகள் கூறுகின்றன. கி.பி. 69-ம் ஆண்டுக்கு முன்பே செசரியாவில் இத்தாலிக்கா பட்டாளம் இருந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லையெனினும், இத்தகைய பட்டாளம் ஒன்றை மனத்தில் வைத்தே லூக்கா இவ்வாறு எழுதுகிறார். உரோமைக் குடியுரிமையோடு இத்தாலியைச் சேர்ந்தவர்கள்தான், அதாவது சுதந்திரக் குடிமக்களோ அல்ல விடுதலை செய்யப்பட்டவர்களோ இப்பட்டாளத்தில் அதிகமாக இருந்திருப்பார்கள் என்று லூக்கா கருதியிருக்கலாம்.

''இறைவனுக்கு அஞ்சி வாழ்ந்த'' நூற்றுவர் தலைவன் இப்படிப்பட்ட ஒரு படைப்பிரிவின் ஓர் அதிகாரி.

இத்தியர் (HITTITES)

இத்தியர் என்பவர்கள் சிறிய ஆசியாவிலும் வடக்கு சீரியாவிலும் உள்ள மக்களாவர். இவர்கள் எகிப்திய பதிவேடுகளில் 'கெத்த' என்றும் அசீரிய பதிவேடுகளில் 'காத்தி' என்றும் பழைய ஏற்பாட்டில் ஏத்தையர்கள் அல்லது ஏத்தின் புதல்வர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். 1906-இல் துருக்கியில் உள்ள போகாஸ்கோய் என்ற இடத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து கிடைத்த குறிப்புக்களிலிருந்துதான் இத்தியர்களைப் பற்றி அறியமுடிகிறது. கி.மு. மூன்றாவது ஆயிரம் ஆண்டுகாலத்திலே இத்தியர்கள் எல்லையாக கருதப்பட்ட பகுதியில் மக்கள் குடியேறியிருந்த போதிலும் இத்திர்கள் கி.மு. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களாகக் குறிப்புகள் உணர்த்துகின்றன. ஆனால் கி.மு. மூன்றாவது ஆயிரம் ஆண்டில் வாழ்ந்தவர்கள் இத்தியர்கள்தானா என்பது சந்தேகத்திற்குரியது. இந்தோ-ஐரோப்பிய மக்களாகிய இத்தியர்கள் கி.மு.2 000க்கு முன்னால்தான் சிறிய ஆசியாவில் குடியேறினார்கள். இன்று போகாஸ்கோய் என்று அழைக்கப்படும் தலைசிறந்த நகரமாகிய கத்துசா கி.மு.1900 வரையிலும் இத்தியரின் கைக்கு மாற்றப்படவில்லை. இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் இத்தியரின் வரலாற்றை மூன்று காலங்களாகப் பிரிக்கின்றனர்.

1) பழைய அரசாட்சி:- கி.மு.1900 முதல் 16 ஆம் நூற்றாண்டுவரை இத்தியரின் ஆட்சிப் பகுதியானது அனத்தோலியாவை மையமாகக் கொண்டிருந்தது. மேலும் வடக்கு சீரியா வெற்றிகொள்ளப்பட்டது. மெசபொத்தாமியா இத்தியரின் படையினால் தாக்கப்பட்டு அவர்களின் ஆட்சிப்பகுதியானது பெரிதாக்கப்பட்டது. இத்தியர் அரசாட்சியில் ஏற்பட்ட குழப்பத்தினால் இத்தியர்களைக் கூரியர்கள் தாக்கி வடக்கு சீரியாவை தனிப்பட்ட ஆட்சிப்பகுதியாக்கினர்.

2) இத்தியரின் பேரரசு:- கி.மு.15ஆம் நூற்றாண்டில் இரண்டாம் துதலியாவின்கீழ் இத்தியரின் ஆட்சிப்பகுதியானது வெளியிலிருந்து வரும் தாக்குதல்களை எதிர்த்து நிற்கின்ற அளவிற்கு வளர்ச்சி அடைந்தது. கப்பிலுவியுமாவின் ஆட்சிக்காலத்தில்தான் இத்தியரின் ஆட்சியானது உச்சநிலையை அடைந்தது. எகிப்திய அரசனான இரண்டாம் இராமசேசு இத்தியரின் ஆட்சிப்பகுதியை கைப்பற்றும் நோக்குடன் வடக்குப் பகுதி நோக்கி படையெடுத்துச் சென்ற பொழுது காதேசு என்ற இடத்தில் முவாட்டலி என்பவரால் தோற்கடிக்கப்படுகின்றார். சில ஆண்டுகள் கழித்து எகிப்தியருக்கும் இத்தியருக்குமிடையே ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தமானது இத்தியரின் இளவரசியை பாரவோனுக்கு மணம் செய்து கொடுத்ததின் மூலம் உறுதி செய்யப்பட்டது. கி.மு.1200க்குப்பின் இந்த அரசு பெலிஸ்தியர்களால் தோற்கடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

3) புதிய இத்திய அரசுகள்:- தைஉருசு, வடக்கு சீரியா போன்ற இடங்களில் புதிய இத்திய அரசுகள் உருவெடுத்தன. கி.மு. பன்னிரெண்டாம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டுவரை வடசீரியாவானது காத்தியின் நிலப்பகுதியாக விளங்கிற்று என்று அசீரிய பதிவேடுகளில் காணப்படுகின்றது. இந்த ஆட்சிப்பகுதிகள் கி.மு.9 அல்லது 8-ஆம் நூற்றாண்டில் அசீரியர்களால் கைப்பற்றப்பட்ட அசீரியர்கள் மாகாணங்களோடு சேர்க்கப்பட்டன.

இத்தியர்களின் அரசியல் அமைப்பைப் பொறுத்த வரையில் அதிகாரம் முழுவதும் அரசனின் கையில் இருந்தது. விவசாயம் தான் அவர்களது முக்கியமான தொழிலாகும். அவர்களது பொருளாதாரமே விளைச்சலை வைத்துதான் நிர்ணயிக்கப்பட்டது. இத்தியர்கள் கொண்டிருந்த சட்டங்களைப் பற்றிய இரண்டு தொகுப்புக்கள் இன்றும் காக்கப்பட்டு வரப்படுகின்றன. ஆனால் கமுராபியின் சட்டநூலைப் போன்று அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சட்டத் தொகுப்புகள் அல்ல.

ஆயிரம் ஆண்டுகளாக பண்டைக்காலக் கிழக்கத்திய நாடுகளில் நடந்த போர்களில் பயன்படுத்தப்பட்ட எளிதான முறையில் அமைக்கபெற்ற குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களை உருவாக்கித்தந்த பெருமை இத்தியர்களைச்சாரும்.

இத்தியர் ஆட்சிப்பகுதியானது பல மொழிகள் பேசப்பட்டுவந்த பகுதியாகும். இத்தியமொழி இந்தோ-ஐரோப்பிய மொழியாகும். லூவாயின் என்பது இத்திய மொழியோடு தொடர்புடைய மற்றொரு இந்தோ-ஐரோப்பிய மொழியாகும். இத்திய வரலாற்று பதிவேடுகளில் சுமேரியமொழி, அக்காதிய மொழி, கூரிய மொழி போன்ற அன்னிய மொழிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

இத்தியரின் சமயமானது எண்ணிலடங்காத தெய்வங்களைக் கொண்டிருந்தது. இவர்கள் வானிலையைக் குறிக்கும் தெய்வமாகிய தெசுப்பு, அவரது மனைவியாகக் கருதப்பட்ட கெப்பா, இவர்களின் புதல்வர் சருமா போன்ற கூரியர்களின் தெய்வங்களைத் தங்கள் தெய்வங்களாகக் கொண்டு வழிபட்டனர். சூரியக்கடவுளைப் பாதுகாவலராகக் கொண்டிருந்தனர்.

இவர்களின் இலக்கியங்களில் தனித்தன்மையுடைய கூறுகள் ஒன்றும் இல்லை. ஆனால் வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும்பாணி சிறிது வித்தியாசமானதாக இருக்கும். இத்தியர்களின் ஓவியங்கள், சித்திரவேலைப்பாடுகளில் அழியாமல் எஞ்சியிருப்பவைகள் இன்னும் பேணிக் காக்கப்பட்டுவருகின்றன. இத்திய ஓவியங்களில் அதிகமானவை புதிய ஆட்சிகாலத்தைச் சேர்ந்தவையாகும்.

4. பழைய ஏற்பாட்டில் இத்தியர்கள்:- இத்தியர் இனத்தின் குலப்பெயர் முதியவர் கேத்து ஆவார். கேத்து கானானின் புதல்வராவார் (ஆதி 10:15; 1 நாள் 1:13) இவ்வாறு இவர்கள் கானானியர்களோடும் சீரியா பாலஸ்தீனத்தில் உள்ள பெனிசியர்களோடும் இணைத்துக் கூறப்படுகின்றனர். ஆதி

23-இன்படி, ஆபிரகாம் கெபிரோனில் இருந்த காலத்தில் இத்தியர்களும் அங்கு வாழ்ந்து கொண்டிருந்தனர். ஏசா இத்தியப் பெண்களை மனைவியாக்கிக் கொண்டார் (ஆதி 26:34; 27:46; 36:2). இஸ்ராயேல் மக்களுக்கு முன்னால் கானான் நாட்டில் குடியிருந்தவர்களாக கூறப்படுகின்றவர்களில் இத்தியர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர். யோசுவா நூலில் (1:4) பாலைவனமும் லெபனோனும் தொடங்கி யூப்பிரத்திசு மாநதிவரையிலும் மேற்கே பெருங்கடல் வரையிலும் அடங்கிய இத்தியருடைய நாடெல்லாம் உங்களுக்கு எல்லையாக இருக்கும் என்று வாக்களிக்கப்பட்ட நாடு என்ற பகுதிக்கு விளக்கம் தரப்படுகின்றது. இருப்பினும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ள எல்லைப்பகுதிகளுக்கும் கானான் நாட்டின் எல்லைப் பகுதிகளாக தரப்பட்டிருந்த மற்ற குறிப்புகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எனவே யோசு 1:4 என்ற பகுதி இத்திய நாட்டின் எல்லைப்பகுதியை விவரித்து இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

நீதி 1:26-இல் இத்தியர்களின் நாடு என்பது சீரியாவிற்கு வட பகுதியிலுள்ள அசீரியர்களின் கத்தி நாட்டைத் குறிக்கின்றது. இத்தியரான அகிமெலக்கும் (1 சாமு 26:6) ஊரியாவும் (2 சாமு 11:3 தொ) தாவீதின் ஆட்களாகக் கருதப்பட்டனர். சாலமோன் ஆட்சியிலும் இத்தியர்களும் இருந்தார்கள் (1 அர 9:20). சாலமோனின் அன்னிய நாட்டைச் சேர்ந்த மனைவிகளில் இத்தியப் பெண்களும் உள்ளடங்குவர் (1 அர 11:1). சாலமோன் மன்னன் குதிரைகள், தேர்கள் போன்றவைகளை விற்பனை செய்த பொழுது அந்த வியாபாரத்தில் இத்தியர்களும் பங்கு கொண்டார்கள் (1 அர 10:29). எருசலேமின் தந்தை ஓர் எமோரியர், தாய் ஒரு இத்தியப்பெண் என்று எசக்கியேல் கூறியபொழுது இத்தியர்களின் மரபும் வாழ்ந்து வந்திருக்கவேண்டும் (எச 16;3.45) இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டிற்கு வருவதற்கு முன்னால் அந்நாட்டில் இத்தியர்களும் வாழ்ந்தார்கள் என்பதைப்பற்றிய குறிப்புகள் இத்தியர்களின் பதிவேடுகளில் காணப்படவில்லை. இருப்பினும் ஒரு நிலத்தை வைத்து கெபிரோனில் செயோரின் புதல்வராகிய எப்பிரோனுக்கும் ஆபிரகாமிற்கும் ஏற்படுகின்ற ஒப்பந்தத்தின் சிலகூறுகள் இத்தியர்களின் சட்டத்தைப் பிரதிபலிப்பது போல் தோன்றுகிறது (ஆதி 23:11.17)

வடக்கு சீரியாவிலுள்ள இத்தியர்களின் ஆட்சிப்பகுதியானது விவிலியத்திற்கு அப்பாற்பட்ட பதிவேடுகள் குறிப்பிட்டுள்ள எல்லைப்பகுதியைவிட தென்புறத்தில் பரந்து விரிந்து சென்றிருக்க வாய்ப்புக்கள் உண்டு. பழைய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் கானானேயர்களுடன் இத்தியர்களை இணைத்துக் காலமயக்கமாக்க கூறியிருக்கவும் வாய்ப்புக்கள் உண்டு. மேலும் ஆங்காங்கே பிரிந்து வாழ்ந்த இத்தியர்களின் குடும்பங்களிலிருந்து அகிமெலக்கும் ஊரியாவும் வந்திருக்கலாம் என்று ஏற்றுக் கொள்வதில் அல்லது எண்ணுவதில் எந்தவித பிரச்சினையுமில்லை.

இத்திரோ (JETHRO - மேதகு, மேன்மையுள்ள)

மிதியான் நாட்டுக் குரு. மோசேயின் மாமனார் (யாத் 3:1; 4:18). இவர் யாத் 2:18-இல் இரகுவேல் என்று அழைக்கப்படுகின்றார் (மேலும் காண் கோபாபு). எகிப்திலிருந்து தப்பியோடியபோது மோசே மிதியானில் இத்திரோவிடம் அடைக்கலம் புகுந்தார். இவருடைய புதல்விகளுக்குப் பாதுகாப்பு அளித்ததற்காக மோசே இவர்கள் வீட்டில் வரவேற்கப்பட்டார். பிறகு, இவரது மகள் சிப்போராவை மணந்து மோசே இவருடைய மந்தையைக் கவனித்து வந்தார் (யாத் 2:16; 3:1). மோசே எகிப்துக்குத் திரும்பிய போது அவரது மனைவி சிப்போராவும், புதல்வர்கள் கெரிசோமும், எலியேசரும் இத்திரோவுடன் தங்கியிருந்தனர். மோசே இஸ்ராயேலரை எகிப்திலிருந்து விடுவித்து நடத்திக் கொண்டு வந்தபோது இத்திரோ மோசேயை சீனாய் மலையில் சந்தித்தார். இஸ்ராயேலர் விடுதலை அடைந்தது பற்றியும் யாவேயின் வெளிப்பாடு பற்றியும் மகிழ்ந்து, நன்றிப்பலிகள் ஒப்புக்கொடுத்தார். நீதி வழங்குவது பற்றி மோசேக்கு

ஆலோசனை அளித்தார் (யாத் 18). இந்நிகழ்ச்சியுரை நீதித்துறையை வழிபாட்டுத் துறையிலிருந்து பிரித்து, அதை மோசேயின் அதிகாரத்திற்குட்பட்டதாக்குகிறது. இது யூக நீதி வழங்கும் முறை இத்திரோவின் ஆலோசனையால் தோன்றியது என்பது விநோதமாக இருக்கிறது. ஒருவேளை தொடக்கக்காலத்தில் இஸ்ராயேலர் தங்கள் நீதி வழங்கும் முறையில் மிதியானிய அல்லது கேனியா முறைகளைச் சார்ந்திருந்திருக்கலாம். இத்திரோவும் அவருடன் இருந்தவர்களும் மோசேயுடன் செல்லவில்லை (18:27). மோசேயின் மாமனாரின் வெவ்வேறு பெயர்களை ஒத்துப்போக வைப்பது முடியாத காரியம். இத்திரோ எலோயீம் பாரம்பரியத்தில் காணப்படுகிறது. இத்திரோ ஒரு கேனியர் ஆவார். மிதியானியருடன் தொடர்புடைய அலைந்து திரியும் கொல்லனாக இருக்கலாம் (நீதி 1:16). சில அறிஞர்கள், இவரிடமிருந்துதான் யாவேயைப் பற்றி மோசே அறிந்திருக்கக்கூடும் என்று கருதுவர். போதிய சான்றுகள் இல்லை. வேறு சிலர் இத்திரோ பிதாக்களின் இறைவனாகிய ஏலின் குருவாவார் என்று கருதுவர் (காண்க இரகுவேல் என்பதற்கு ஏலின் நண்பன் என்பது பொருள்).

இத்துரேயா (ITUREA - எத்தூரைச் சேர்ந்த)

இத்துரேயா என்பது கலிலேயாவிற்கு வடகிழக்கே எதிர்-லெபானோனில் உள்ள ஒரு பகுதியாகும். இங்கு இசுமயேல் இனத்தைச் சேர்ந்த அராபியர்கள் வாழ்ந்து வந்தனர். பிலிப்புவின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் இத்துரேயாவும் கூறப்பட்டுள்ளது (லூக் 3:1). இசுமயேலின் புதல்வராகிய எத்தூரின் வழிவந்தவர்கள்தான் இத்துரேயர்கள் (ஆதி 25:15). இவர்கள் காது, ரூபன், மனாசே ஆகிய இனத்தவர்களுக்கு எதிரிகளாக விளங்கினதாக 1 நாள் 5:19-இல் கூறப்பட்டுள்ளது.

'இத்துரேயா' என்ற இடம் இருந்த எல்லைப் பகுதியை நில ஆராய்ச்சியாளர்களால் அறுதியிட்டு உறுதியாகக் கூற இயலவில்லை. வடக்கு பாலஸ்தீனத்தைச் சேர்ந்த இத்துரேயர்களைப்பற்றி கிரேக்க, உரோமை எழுத்தாளர்கள் அடிக்கடி குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இத்துரேயாவும், திரக்கோனித்தும் இரண்டு வேறுபட்ட மாவட்டங்களா, அல்லது ஒரே மாவட்டம் தானா என்பது தெளிவாக இல்லை. கலிலேயாவிற்கு வடக்கே இத்துரேயர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்று யோசிபஸ் கூறுகின்றார். இத்துரேயர்கள் எதிர்-லெபானோனின் மேற்கு மலைச்சரிவுப் பகுதியில் வாழ்ந்த மலை தேசத்தைச் சேர்ந்த மக்களாவார்கள்.

கிரேக்கர், உரோமையர்களைப் பொறுத்த வரையில் இத்துரேயர்கள், நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம் இல்லாத மக்களாகவே கருதப்பட்டனர். பாலஸ்தீனத்தில் உரோமையர்களின் ஆட்சி ஆரம்பிப்பதற்குச் சற்று முன்னால்தான் பிரிந்து கிடந்த அவர்கள் ஒரு மக்கள் குழுவாக ஒன்று சேர்கின்றனர். இத்துரேயர்கள் வாழ்ந்த லெபனோன் பகுதியானது மென்னேயுசின் புதல்வர் தோலமியால் கி.மு.85 முதல் 40 வரை ஆட்சி செய்யப்பட்டது. இவருக்குப்பின், பாம்பே, லெபனோனில் இருந்த பல கோட்டைகளை அழித்தார். அரசின் பரப்பளவையும் சுருக்கினார். இந்நிலையில் இத்துரேயர்களுக்கு முதலாம் லிசானியாஸ் அரசனானான். அவன் கி.மு. 36-இல் இறந்தான். அந்தோனியின் தூண்டுதலின் பேரில் இவ்வரசின் பெரும்பகுதி கிளியோபத்திராவுக்குக் கொடுக்கப்பட்டது. இதற்குப்பின் இப்பகுதியின் வரலாறு தெளிவாக இல்லை. ஒருவேளை இப்பகுதி நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, இதில் ஒரு பகுதி லிசானியாவுக்கு அடுத்து ஆட்சிக்கு வந்தவனும் கிளியோபத்ராவின் சிற்றரசனுமான செனோதோரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம். இப்பகுதியை அகுஸ்து பெரிய ஏரோதுக்கு அளித்தார். இதில் ஒரு பகுதிக்கு கி.மு.4-இல் ஏரோதனின் மகன் பிலிப்பு சிற்றரசனானான். அவன் கி.பி.34-இல் இறந்தபோது, இப்பகுதி அகிரிப்பாவின் ஆட்சிக்குள் சேர்க்கப்பட்டது.

இத்தோ (IDDO - யாவே அறிவார்)

1. அபினதாபின் தந்தை. அபினதாபு, யப்போக்கு ஆற்றுக்கரையிலுள்ள மகனாயிம் பகுதிக்குத் தலைவனாகச் சாலமோனால் நியமிக்கப்பட்டவராவர் (1 அர 4:14)

2. கெரிசோன் குலத்தைச் சேர்ந்த ஒரு லேவியர் (1 நாள் 6:21). இவர் 6:41-இல் அதாயா என்றழைக்கப்படுகிறார்.

3. செக்கரியாவின் மகன். கிலயாத்திலுள்ள மனாசேயின் பாதி இனத்தவர்களுக்கு தாவீதால் தலைவனாக நியமனம் செய்யப்பட்டவர் (1 நாள். 27:21).

4. சாலமோன் (2 நாள் 9:29), இரகபெயாம் (12:15), அபியா (13:22) மற்றும் இஸ்ராயேல் அரசன் எரொபயாம் ஆகியோரின் ஆட்சிக் கால வரலாற்றுக்கு மூலநூல்களில் ஒன்றுக்கு ஆசிரியராகக் கூறப்படும் இவர் ஒரு காட்சியாளரும் இறைவாக்கினருமாவார். இவர் யூதாவின் அரசர்களான இரகபெயாம் மற்றும் அபியாவுக்கு எதிராகவும், இஸ்ராயேல் அரசன் எரொபயாமுக்கு எதிராகவும் கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் இறைவாக்கு உரைத்தார். இந்த இறைவாக்குகளின் தொகுப்பை, தன் வரலாற்றுக்கு மூலநூலாக நாளாகம ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

5. இறைவாக்கினரான செக்கரியாவின் தாத்தா (செக் 1:17; எஸ் 5:1; 6:14). இவர் கீழே 7-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

6. பாபிலோனில் கெபார் ஆற்றங்கரையிலிருந்த யூத அகதிகளின் குடியிருப்பான கசிப்பியாவில் இருந்த ஒரு லேவியர் குடும்பத் தலைவர். இவரது குடும்பம், எஸ்ராவின் வேண்டுதலுக்கு இணங்கி, ஆலய ஊழியர்களாக இருக்க அவரோடு எருசலேமுக்குச் சென்றது (எஸ் 8:16-17).

7. பாபிலோனிய அடிமைத்தனத்துக்குப் பின் எருசலேமிற்கு திரும்பிய குருக்கள் குடும்பம் ஒன்றுக்குத் தலைவர் (நெக 12:4.16). இவர் 5-இல் மேற் குறிக்கப்பட்டவராகவும் இருக்கலாம்.

8. புறவின மனைவியை ஒதுக்கி விடுமாறு எஸ்ராவால் கட்டாயப்படுத்தப்பட்டவர்களுள் ஒருவர். இவர் யாதாய் என்று எஸ்ராவில் (10:43) அழைக்கப்படுகின்றார்.

இந்திய யானைப் பாகன் - (INDIAN DRIVER)

யானையை நடத்திச் செல்பவர். ஐந்தாம் அந்தியோக்கு மன்னனின் ஒவ்வொரு போர் யானைக்கும் ஓர் இந்திய நடத்துனர் இருந்ததாகக் கூறப்படுகிறது (1 மக் 6:37).

இந்தியா (INDIA)

ஆசியாவில் இமய மலைகளுக்குத் தெற்கே உள்ள ஒரு நாடு. இரு முறை எஸ்தர் நூலில் அகசுவேரு அரசனின் நாட்டின் கிழக்கு எல்லையாக இந்நாடு குறிப்பிடப்பட்டுள்ளது (எஸ் 1:1; 8:9).

இந்தியா, அக்கேமேனியப் பேரரசின் (கி.மு.559-330) மாகாணமாக இருந்தது என்று பாரசீகநாட்டு எழுத்துப் பொறிப்புகள் கூறுகின்றன. ஆனால் இந்தியாவின் பரப்பளவு பற்றி அவை ஒன்றும் கூறவில்லை. இந்தியாவைப் பற்றி ஒரு சில குறிப்புகள் மட்டுமே இருந்ததால், தங்கள் நாட்டுக்குள்ளேயே வாழ்ந்து வந்த பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு தொலைநாடான இந்தியாவைப் பற்றி தெரியாமலிருப்பதில் வியப்பொன்றும் இல்லை. இந்தியா அக்கேமேனியப் பேரரசின்கீழ் இருந்தபோது அதைப் பற்றி பாலஸ்தீன நாடு சிறிது அறிந்திருக்கலாம். ஆனால் அலக்சாந்தர் பேரரசின் காலத்தில்தான் (கி.மு.323), சிந்து நதிப் பள்ளத்தாக்கைப் பற்றியும் அங்கு வாழ்ந்த மக்களைப் பற்றியும் மத்திய தரைக் கடல் நாடுகள் அறிய வந்தன. எஸ்தர் நூலும், முதலாம் மக்கபேயர் நூல்களும் இக்காலத்தைச் சேர்ந்தவையே ஆகும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் செலூக்கிய அரசனுடைய படையில் யானைகளும், இந்திய யானைப் பாகர்களும் இருந்ததாக முதலாம் மக்கபேயர் நூல் கூறுகிறது (1 மக் 6:37). ஆனால் 1 மக் 8:8-இல் மூன்றாம் அந்தியோக்கு மன்னன் (223-187 கி.மு.) இந்தியாவை தனது ஆளுகைக்குள் வைத்திருந்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. இது தவறானதாகும்.

கிரேக்கர், உரோமையர் காலத்தில் புவியியல் அறிவு வளர்ச்சியுற்றாலும், உரோமையர் எகிப்து, செங்கடல் வழியாக இந்தியா

வோடு போதிய வியாபாரம் செய்துவந்தாலும், பழைய ஏற்பாட்டைப்போல், புதிய ஏற்பாடும் இந்தியாவைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அல்லது அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

இந்தியர் (INDIAN)

யானையை நடத்துகின்ற யானைப்பாகன். ஐந்தாவது அந்தியோக்கு அரசனின் ஒவ்வொரு போர் யானையும், ஒரு இந்திய யானைப்பாகனை கொண்டிருந்ததாக கூறப்படுகிறது (1 மக் 6:37).

இபிதாகு (JEPHTHA - அவர் (இறைவன்) கருப்பையைத் திறப்பார்)

1. பெயரும் பொருளும்:- இபிதாகு என்ற எபிரேயப் பெயர் ஒரு இடப்பெயராகவும் வருகிறது (யோசு 15:43). இது இபுதாவேலின் சுருக்கமாகும். இபுதாவேலுக்கு ''இறைவன் (கருப்பையைத்) திறக்கிறார்'' அல்லது ''இறைவன் (கைதியை) விடுவிக்கிறார்'' என்று பொருள் கூறலாம் (யோசு 19:14-27). இதோடு தொடர்புடைய மற்ற எபிரேய ஆள் பெயர்கள் ''யாவே திறந்துவிட்டார்'' என்று பொருள்படும் பெத்தகியாவும் (1 நாள் 24:16; எஸ் 10;23; நெக 9:5; 11:24) தேல்-ஏல் அமர்னா ஏடுகளில் வரும் யப்திக் அத்தாவும் ஆகியவையாகும்.

2. இபிதாகின் வரலாறு:- இபிதாகு ஒரு படைத்தலைவர். யோர்தானுக்கு கிழக்கில் அம்மோனியர், பெலிஸ்தியர்களைத் தோற்கடித்து, இஸ்ராயேலில் ஒரு நடுவராக ஆனார் (நீதி 10:6; 12:1).

இவர் கிலயாத்து என்பவருக்கு ஒரு விலைமகள் வழியாகக் கிலயாத்து என்ற ஊரில் பிறந்தவர். இவரது ஒன்று விட்ட சகோதரர்கள் வளர்ந்த பின், தங்களோடு இவருக்கு உரிமையில்லை என்று கூறி இவரைத் துரத்தி விட்டனர். இபிதாகு வடகிழக்கிலுள்ள தோபு நாட்டிற்கு ஓடிப்போய், திக்கற்றவர்களும் கொள்ளையடிப்போரும் அடங்கிய ஒரு குழுவிற்குத் தலைவனானார் (நீதி 11:1-3).

இதற்கிடையில், இஸ்ராயேலரின் சிலை வழிப்பாட்டுக்குத் தண்டனையாக இறைவன் அவர்களை பெலிஸ்தியர், அம்மோனியர்களிடம் கையளித்தார். இவர்கள் இஸ்ராயேலர்களை 18 ஆண்டுகள் ஒடுக்கித் துன்புறுத்தினர் (10;6-8). இவர்கள் யோர்தானைக் கடந்து, நாட்டைப் பாழாக்கினர் (10:9). கிலயாத்தில் பாளையம் இறங்கினர். துன்புற்ற இஸ்ராயேலர் தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்தி, இறைவனிடம் விடுதலை வேண்டினர் (10:10-16).

அப்போது கிலயாத்தில் ஆற்றல் மிக்க தலைவர் இல்லை. ஆகவே, கிலயாத்தின் பெரியோர் இஸ்ராயேல் படைக்குத் தலைமை தாங்க இபிதாகை அழைத்தனர். இவர் தனக்குச் செய்யப்பட்ட அநீதியை நினைவுபடுத்த, கிலயாத்தின் பெரியோர், போருக்குப் பின் இபிதாகே தலைவராக இருப்பார் என்று உறுதி அளித்தனர் (11:4-11).

இபிதாகு கிலயாத்துக்குத் திரும்பிய பின் அம்மோனியர்களின் அரசனுக்குத் தூது அனுப்பினார். அவன், இஸ்ராயேலர் எகிப்திலிருந்து வருகையில் அநியாயமாகத் தனது நாட்டை எடுத்துக் கொண்டதாகக் குற்றம் சாட்டினான். இதற்கு, இஸ்ராயேலர் அமைதியாகவே அவனது நாட்டைக் கடந்து செல்லவே விரும்பினர்; ஆனால் முந்தைய அம்மோனிய அரசன் சீகோன் இஸ்ராயேலின் வேண்டுகோளைப் புறக்கணித்து, அவர்களோடு வன்மையாகப் போரிட்டான்; இறைவன் இஸ்ராயேலர்களுக்கு வெற்றி அளித்து அம்மோனிய நாட்டையும் கொடுத்தார்; அவர்களும் அங்கு பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்துள்ளனர் என்று இபிதாகு பதில் அளித்தார். ஆனால் அம்மோனிய அரசன் இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து, போருக்குத் தயாரானான் (11:12-28).

ஆண்டவரின் ஆவி இபிதாகின்மேல் வந்தது. அவரும் அம்மோனியர்களுக்கு எதிராகப் போர் செய்ய முன்னேறினார். அப்படிச் செல்லும் போது அவர் வெற்றி பெற்றால்

போரிலிருந்து திரும்பி வரும்போது தன் வீட்டின் வாயிலிருந்து எவர் வருவாரோ அவரை ஆண்டவருக்கு பலியாக ஒப்புக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார். அவர் வெற்றி பெற்று திரும்பிய போது அவரது ஒரே பிள்ளை, கன்னியான மகள், நடனமாடி அவரை எதிர் கொண்டாள். அவரது வாக்குறுதியிலிருந்து காப்பாற்ற அவளுக்குக் கணவனோ மகனோ இல்லை. அவளும், தான் தன் தோழியரோடு இரண்டு மாதங்களுக்கு காடுகளில் சுற்றித் திரிந்து தன் கன்னிமையை முன்னிட்டு கதறி அழுதபின் அவரது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிக் கொண்டாள். இபிதாகு இதற்கு ஒப்புக்கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குப்பின் தன் வாக்குறுதியை நிறைவேற்றினார். இந்நிகழ்ச்சிகளின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் நான்கு நாட்களுக்கு இபிதாகின் மகளுக்காக இஸ்ராயேலர் மங்கையர்கள் புலம்புவது ஒரு வழக்கமாயிற்று *(11:34-40)*.

போர் வெற்றியுடன் முடிந்தபின் எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்த சிலர், அம்மோனியர்களுக்கு எதிராகப் போர் செய்யச் சென்ற போது தங்களை அழைக்காதற்காக, தண்டனையாக இவரையும் இவர் வீட்டையும் எரிக்கப்போவதாக சவால் விட்டனர். இரு குழுவினருக்கும் போர் நடந்தது. எப்பிராமியர்கள் தோல்வியுற்றனர். யோர்தான் துறைகளைக் கிலயாத்தியர்கள் பிடித்து, தப்பியோடிய எப்பிராயிமியர்களை மொழி உச்சரிப்பு மாறுபாட்டால் அடையாளம் கண்டுபிடித்து, அத்துறைகளிலேயே கொன்று போட்டனர். *12:1-6*-இன்படி 42 ஆயிரம் எப்ராயிமியர்கள் அப்போரில் கொல்லப்பட்டனர்.

இபிதாகு இன்னும் ஆறு ஆண்டுகள் நடுவராக ஆட்சி செய்தார். அவர் இறந்தபின் கிலயாத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

3. பிரச்சினைகள்:- இபிதாகின் நிகழ்ச்சியுரை பல கேள்விகளை எழுப்புகிறது. அவற்றில் ஒன்று மனிதப்பலியாகும் (காண் ஆதி *22; 2 அர 16:3; 21:6*-உம் தொல்பொருட்சான்றுகளும் இப்பழக்கத்திற்குச் சான்று பகர்கின்றன). இவர் தனது வாக்குறுதியில் மனிதப்பலியை மனதில் கொண்டிருந்தாரா என்பதை உறுதி செய்ய ஒரு வழியுமில்லை. அப்படிக் கொண்டிருந்தாலும் தனது ஒரே பிள்ளையின் உயிரைப் பலியிட அவர் எண்ணியிருக்க மாட்டார். ஆயினும் அவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றியதாக நிகழ்ச்சியுரை கூறுகிறது.

4. பொருள்:- முக்கிய நடுவர்களில் ஒருவராக, யாவே தம் மக்களுக்கு அளித்த முக்கிய விடுதலை வீரர்களுள் ஒருவராக இபிதாகு நினைவு கூறப்படுகிறார் *(1 சாமு 12:11)*. புதிய ஏற்பாட்டில் எபிரேயருக்கு மடல் எழுதிய ஆசிரியர் இபிதாகை விசுவாசத்தின் வீரர்களில் ஒருவராகப் போற்றுகிறார் *(எபி. 11:32)*.

இபிரி (IBRI - எபிரேயன், ஊழியன்)

தாவீதின் சமகாலத்தில் வாழ்ந்த ஒரு லேவியன். யாசியாவின் புதல்வர். மெராரியின் வழித்தோன்றல் *(1 நாள் 24:27)*.

இபினியா (IBNIJAH - யாவே கட்டுவாராக)

ஒரு பென்யாமின் குலத்தினர். எருசலேமில் வாழ்ந்தார். இரகுவேலின் தந்தையாவார் *(1 நாள் 9:8)*. இவர் அதே வசனத்தின் முன்பகுதியில் வரும் இபுனயாவாக இருக்கலாம்.

இபுகார் (IBHAR - அவர் (இறைவன்) தேர்ந்தெடுக்கிறார்)

எருசலேமில் தாவீதுக்குப் பிறந்த புதல்வர்களில் ஒருவர். இவருடைய தாய் தாவீதுடைய மனைவியருள் ஒருவராவர். வைப்பாட்டி அல்ல *(2 சாமு 5:15; 1 நாள் 3:6; 14:5)*.

இபுசாம் (IBSAM - வாசனைப் பொருள்)

இசக்கார் இனத்தைச் சேர்ந்த தோலாவின் புதல்வர்களில் ஒருவர் *(1 நாள் 7:2)*. குடும்பத் தலைவராக விளங்கினார்.

இபுசான் (IBZAN - விரைவான (குதிரை))

சிறிய நீதிபதிகளில் ஒருவர். இவர் இபிதாகுக்குப் பிறகு, இஸ்ரயேலுக்கு ஏழு ஆண்டு

கள் நீதி வழங்கி வந்தார். இவருக்கு முப்பது புதல்வர்களும் முப்பது புதல்வியர்களும் இருந்தனர். இந்த எண்ணிக்கை இவரது செல் வத்தைக் குறிக்கிறது. இவர் தமது முப்பது புதல்வியர்களையும் தனது இனத்துக்கு வெளியில் மணம் முடித்துக் கொடுத்தார். அதே போன்று வெளியிடத்துப் பெண்க ளைத் தமது புதல்வர்களுக்கு மணம் முடித்து வைத்தார். இது இவரது பரந்த செல்வாக்கை எடுத்துக் காட்டவல்லது (நீதி 12:8-10). இவ ரது ஊரான பெத்திலகேம், நாசரேத்துக்கு வடகிழக்கில் ஆசேலின் எல்லையில் செபு லோனில் இருந்தது (யோசு 19:15). வர லாற்று ஆசிரியர் யோசிபசிலிருந்து தொடங்கி சில விளக்கவுரையாளர்கள், இந்த ஊர் புகழ்பெற்ற பெத்திலகேம் என்று கருதி, ரூத்தின் கணவரும் தாவீதின் மூதாதை யருமான போவாசுதான் இந்த இபுசான் என்ற கருதியுள்ளனர்.

இபுதா (IPHTHA இறைவன் (கருப்பையைத்) திறப்பாராக)

இலிபுனா-மாரேசா மாவட்டத்திலுள்ள செப்பேலாவிலுள்ள யூதாவைச் சேர்ந்த ஒரு சிற்றூராகும் (யோசு 15:43). இது ஆசானுக்கு அருகில், வாடி தார்குமியாவுக்கும் வாடி அப்ராதிசுக்கும் இடையில், கெபிரோனுக்கு வடமேற்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள இலாக்கீசு நகருக்குக் கிழக்கேயுள்ள இப்போ தைய தார்குமியா என்ற ஊராக இருக்கலாம்.

இபுதாவேல் (IPHTAHEL - இறைவன் திறப்பா ராக)

செபுலோனுக்கும் ஆசேருக்கும் இடையி லுள்ள எல்லையில் அமைந்துள்ள ஒரு பள் ளத்தாக்கு (யோசு 19:14, 27). நாசரேத்துக்கு வடமேற்காக உள்ள வாடி ஏல் மெலக்கு இப்பள்ளத்தாக்காக இருக்கலாம்.

இபுதேயா (IPHDEIAH - யாவே மீட்பாராக, விடுவிப்பாராக)

சாசாக்கின் புதல்வர்களில் ஒருவர். பென் யாமின் குலத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் தலைவர் (1 நாள் 8:25).

இபுலயாம் (IBLEAM - மக்களின் குழப்பம் அழிக்கிற)

இசக்கார் இனத்தைச் சேர்ந்த நகரங்களில் ஒன்று. இஸ்ராயேலுக்கும் மெகிதோவுக்கும் இடையில் அமைந்திருந்தது (2 அர 9:27). மனாசேக்கு அளிக்கப்பட்ட இசக்கார் ஆசே ரில் உள்ள நகரங்களின் பட்டியலில் குறிக்கப் படுகிறது (யோசு 17:11). ஆனால் அங்கி ருந்து மனாசேயால் கானானியரை விரட்டிய டிக்க முடியவில்லை (நீதி 1:27). தாவீது காலத்தில்தான் இவ்விடம் வெல்லப் பட்டது.

இவ்வூரின் அருகில்தான் ஏகூவின் படையி னர் யூதாவின் அரசனான அகசியாவை கூர் என்ற ஏற்றத்தில் கொன்று போட்டனர் (2 அர 9:27). எழுபது நூல் வாசகப்படி இங்கு தான் சல்லூம் யூதாவின் அரசன் செக்கரியா வைக் கொலைசெய்து ஆட்சியைக் கைப்பற் றினார் (2 அர 15:10). யோசு 21:25-இன் எழுபது நூல் வாசகப்படி இந்த ஊர் மனாசே யில் கெகாத்தியருக்குரிய லேவியர் நகரங்க ளில் ஒன்றாகும். இதுவே பலியாம் என்ற ஊராகும் என்று கருத இடமிருக்கிறது (1 நாள் 6:70).

கி.மு.15-ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீனத் தில் மூன்றாம் துட்மோசால் கைப்பற்றப் பட்டு அவன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட நகரங்களில் ஒன்றாக இந்த ஊர் குறிக்கப்படுகிறது. யூதித் 4:4-இல் குறிக்கப்ப டும் பேல்மாயின் நகரமே இதுவாக இருக்க லாம்.

இது மெகிதோவுக்கு தென் கிழக்கில் 16 கி.மீ. தொலைவிலும், எனீனுக்குத் தெற்கில் 2 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்கால தேல்-பெலாமே தான் இந்த ஊர் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

இபுனயா (IBNEIAH - யாவே கட்டுகிறார்)

பாபிலோனிய அடிமைத்தளையிலிருந்து திரும்பி வந்து எருசலேமில் வாழ்ந்த பென் யாமின் குலத்தினர். எரோகாமின் புதல்வரா வார் (1 நாள் 9:8).

இமனேயு (HYMENAEUS)

இமனேயு ஒரு கிறிஸ்தவர். பவுலின் எதிர்ப்பாளர்களான இமனேயுவும் அலக்சாந்தரும் விசுவாசத்தையும் மனச்சாட்சியையும் புறக்கணித்ததால் சாத்தானிடம் கையளிக்கப்பட்டார்கள் (1 திமோ 1:20). இமனேயுவும் பிலேத்தும் உயிர்த்தெழுதல் ஏற்கனவே நிகழ்ந்து விட்டது என்று சொல்லிச் ''சிலருடைய விசுவாசத்தையே தகர்த்தவர்கள்'' (2 திமோ 2:18).

இமால்க்குவே (IMALKUE)

அலக்சாந்தரின் புதல்வன் அந்தியோக்கு என்பவனை வளர்த்து வந்த அராபிய மன்னன் இமால்க்குவே ஆவார். இது கிரேக்க, உரோம எழுத்தாளர்களிடமிருந்தும் விவிலியப் பகுதிகளிலிருந்தும் (2 சாமு 4:4; 2 அர 10:2; 11:2) இளவரசனின் தோழர்கள் முக்கிய பதவிகள் வகித்தனர் என்பது தெளிவாகிறது. தெமேத்ரியுவுக்கு எதிராக படைவீரர்கள் முணுமுணுத்தபோது, முன்பு அலக்சாந்தரின் ஆதரவாளரான திரிபோ, தெமேத்திரியுவுக்கு எதிராக ஒரு போட்டி அரசனை நிறுவும் வாய்ப்பைக் கண்டார். அலக்சாந்தரின் மகன் ஆறாம் அந்தியோக்குவை அரசனாக அறிவிக்கும் சூழ்ச்சிக்கு இமால்க்குவேயின் உதவியை நாடினார் (1 மக் 11:38-40). சூழ்ச்சி வெற்றி பெற்றது. அந்தியோக்கு அரசனானான். தெமேத்திரியுவின் வீரர்கள் அவனைப் புறக்கணித்து, அந்தியோக்குவோடு சேர்ந்து தெமேத்திரியுவுக்கு எதிராகப் போரிட்டு அவனைத் தோற்கடித்து விரட்டினர் (11:54-55).

இமிரா (IMRAH - முரண்டு செய்பவன், விடாப்பிடியாளன்)

ஆசேரின் இனத்தைச் சேர்ந்த சோப்பாகின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:36).

இமிரி (IMRI - யாவே உறுதியளித்தார், பேச்சாற்றல்)

1. பாபிலோனிலிருந்து திரும்பி வந்த யூதாவைச் சேர்ந்த ஊத்தாயின் மூதாதையர் (1 நாள் 9:4). நெக 11:14-இல் காணப்படும் அமரியாவும் இவரும் ஒருவராக இருக்கலாம்.

2. நெகமியாவின் காலத்தில் எருசலேம் சுவரைப் பழுது பார்க்க உதவிய சாக்கூர் என்பவரின் தந்தை (நெக 3:2).

இமிலா (IMLAH - நிறைவு)

இறைவாக்கினரான மீக்காயாவின் தந்தை இமிலா என்பவர் ஆவார். (1 அர 22:8-9; 2 நாள் 18:7-8).

இமினா (IMNA - கடவுள் பாதுகாப்பாராக)

ஆசேர் இனத்தைச் சேர்ந்த ஏலமின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:35).

இமினா (IMNAH - நற்பேறு)

1. ஒரு குடும்ப முதல்வரது பெயர். ஆசேரின் புதல்வர்களில் ஒருவர். இவரது வழித்தோன்றல்கள் இமினியர்கள் என்றழைக்கப்பட்டனர் (ஆதி. 46:17; எண். 26:44; 1 நாள் 7:30).

2. ஒரு லேவியர். அரசன் எசக்கியாவோடு சமகாலத்தவரான கோரேயின் தந்தை (2 நாள் 31:14).

இம்மானுவேல் (IMMANVEL - இறைவன் நம்மோடு)

ஏச 7:10-17-இல் பிறப்பு அறிவிக்கப்பட்டுள்ள குழந்தைக்கு ஏசயா அளிக்கும் பெயர் இது. இப்பகுதியின் பின்னனியானது கி.மு.7 35-இல் நிலவிய நெருக்கடி நிலையாகும் யூதாவை அசீரியாவிற்கு எதிராக கூட்டணியில் சேர்ப்பதற்கென இஸ்ராயேலின் பெக்காவும் தமஸ்குவின் இரசீனும் யூதாவைத் தாக்க அச்சுறுத்தினர். அப்போது அசீரியாவின் உதவியை நாடுவது ஆகாசின் எண்ணமாகும்; உண்மையில் அப்படி நாடவும் செய்தார். இந்த எண்ணத்திற்கு எதிராக எதிராளிகளின் முயற்சி வெற்றிபெறாது என்ற உறுதிமொழியின் அடையாளத்தை ஏசயா அரசனுக்கு அளித்தார். பக்தியைவிட அவிசுவாசம் கொண்டவராய் ஆகாசு அடையாளத்தை மறுத்துவிட்டார். அசீரிய போர்க்கலங்களின்மீது அவர் அதிக நம்பிக்கை வைத்

தார். அப்போது ஆண்டவருடைய அருங்குறியினையே ஏசயா அளிக்கின்றார். தனது குழந்தை பருவத்தில், தெய்வங்களின் உணவாகிய பால் மற்றும் தேனால் ஊட்டப்படும் குழந்தை உடனடியாக பிறக்கும். குழந்தையானது சிந்திக்கும் வயதை அடைவதற்கு முன்பே எதிரிகளின் தாக்குதல் கைவிடப்படும். ஆனால் அரசானது இதுவரை அறிந்திராத தொல்லைகள் அதனைத் தொடரும். அநேகமாக ஏச 7:18-25 என்றபகுதி தனித்தனி கூற்றுக்களின் தொகுப்பாகும். பொருளடக்கம் அல்லது தூண்டு சொற்களோடு கொண்ட ஒப்புமையால் பதிப்பாசிரியர்களால் இங்கு இணைக்கப்பட்டிருக்கலாம். குழந்தையை அடையாளம் கண்டபிடிப்பது பற்றியபிரச்சனைக்கு இவை எவ்வித உதவியும் அளிக்கவில்லை. 8:8-இல் உள்ள சொற்றொடரானது சமய மனவல்லயச் செபமாகப் பயன்பட்ட வழிபாட்டு மொழியாக இருக்கலாம்.

விளக்கவுரையாளர்கள் பரந்த அளவில் வேறுபட்ட கருத்துக்களை அளித்துள்ளனர். அதில் எதுவுமே எளிதானதல்ல. சில பழைய விளக்கவுரையாளர்கள் தாயும் சேயும் அக்காலத்தில் பிறந்த குழந்தைகள் அனைவரையும் குறிக்கும் கூட்டுப்பெயராகும் என்றும் இவர்கள் யாவரும் இறைவாக்கினருடைய முன்மொழிகளுக்கு கால அட்டவணையாக அமைவர் என்றும் விளக்கினர். வேறுசிலர் பெண்ணையும் குழந்தையையும் ஏசயாவினுடைய மனைவி மற்றும் மகன் என்று எண்ணினர். பெருமளவு ஏற்கத்தக்க கருத்தின்படி, ஆகாசை தொடர்ந்து அரியணை ஏறிய அவரது மகன் எசக்கியாவே அக்குழந்தை என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு கருத்தாகும். இக்கருத்தானது கால வரையறைப் பிரச்சினைகளை எழுப்புகிறது. ஆனால் இக்காலத்தைச் சேர்ந்த கால வரையறை தெளிவாக இல்லை. ஆகவே இது ஒரு கடுமையான தடையாக அமையவேண்டியதில்லை.

இறைவாக்கினர் அளித்த அருங்குறியினை நினைவுபடுத்துவதற்கு பொருத்தமானவரான எசக்கியா தோன்றுகிறார். இந்த அருங்குறியானது ஒரே சமயத்தில் உறுதிமொழியும் அச்சுறுத்தலுமாகும். வரவிருக்கும் ஆபத்திலிருந்தான உடனடி மீட்பின் உறுதிமொழியாகவும், பிற்கால பேரழிவினுடைய அச்சுறுத்தலாகவும் இது உள்ளது. சூழ்நிலையைப் பொறுத்தமட்டும் ஆகாசினுடைய விசுவாசிமின்மை மற்றும் சமயம் சாராத கொள்கைக்கான தண்டனையாக மட்டுமே இந்த அச்சுறுத்தல் உரைக்கப்படலாம். வாக்குறுதியின் அடிப்படையானது தாவீதினுடைய மரபினுடைய மெசியா கருத்தின் ஒளியிலேயே புரிந்து கொள்ளப்படவேண்டும். மெசியா கோட்பாட்டில் தாவீதினுடைய மரபின் நீடித்த நிலையானது அடிப்படையானதாகும். மரபிற்கான வாரிசினுடைய பிறப்பானது மரபினுடைய தொடர்ச்சிக்கும் அதன்மேல் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்குமான அடையாளமாகும். கூடிய விரைவில் தொடரவிருக்கின்ற குழந்தையின் குழந்தைப்பருவத்தில் வாக்குறுதிகளின் உண்மைத்தன்மைகள் காணப்படும். ஆகவே குழந்தையானது ஒரு அருங்குறியாக உள்ளது. நீண்டகால இடைவெளிக்குப்பின் தொடரவிருக்கும் அச்சுறுத்தலின் மெய்மை வாக்குறுதியினின்று வெளிப்படும். அரசின் மீது அன்னியப் படையெடுப்பின் தண்டனையைக் கொணரவிருக்கும் இன்றைய பிரதிநிதியின் அவிசுவாசத்திற்கும் அப்பாற்பட்டு, குழந்தையின் பிறப்பானது மரபின் நீடித்த நிலையினை உறுதிப்படுத்துகிறது. இந்த அருங்குறியானது மரபு பற்றிய எண்ணத்துடன் நெருங்கி இணைக்கப்பட்டிருப்பதால் அக்காலத்தில் பிறந்த குழந்தைகளையோ, எசயாவின் குழந்தைகளையோ விட அரியணை வாரிசையே அடையாளம் உணர்த்துகிறது.

இப்பகுதியினுடைய மரபுவழி கருத்தானது இயேசுவினுடைய கன்னிப்பிறப்பின் நேரடி முன்னுரைப்பதாகும். பல இக்கால விளக்கவுரையாளர்கள் இயேசுவினுடைய அல்லது ஆள் அடையாளம் நிர்ணயிக்கப்படாது மெசியாவினுடைய பிறப்பை நேரடியாக முன்னுரைப்பதாகக் கொள்கின்றனர். இக்கருத்துக்கு எதிராக சில ஆய்வுகள்

உண்டு. ''ஆல்மா'' என்ற எபிரேயச் சொல் எழுபது நூலில் கன்னி (பார்த்தனோஸ்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது சரியென்று கூற முடியாது. ''ஆல்மா' என்ற சொல் கலியாண வயதுடைய இளமங்கையை உணர்த்திற்று. இந்த இளம் பெண் பொதுவாக இன்னும் திருமணம் ஆகாதவள்; ஆனால் கன்னியை உணர்த்தவில்லை. கன்னியைக்குறிக்க ''பெத்துலா'' என்ற எபிரேயச் சொல் பயன்பட்டது. ''பார்த்தனோஸ்'' என்ற சொல் கிரேக்கத்தில் சில சமயம் கன்னியல்லாத பெண்களையும் குறிக்கப்பயன்பட்டுள்ளது. ஆகவே எழுபதுநூல் இச்சொல்லைப் பயன்படுத்தும்போது கன்னிமையை உணர்த்துகின்றதா என்பது தெளிவாக இல்லை. மத் 1:22-23-இல் இப்பகுதியைப் பயன்படுத்தியிருப்பது இயேசுவினுடைய கன்னிப் பிறப்புப்பற்றிய முன்னறிப்பாகப் புரிந்து கொள்வதாகத் தெரிகிறது. இங்கு புதிய ஏற்பாட்டில் பழையஏற்பாட்டினை இத்தகையச் சூழ்நிலையில் பயன்படுத்தும் முறையை மனதில் கொள்ளவேண்டியது அவசியமாகும். இத்தகைய பகுதிகள் பரந்த ஒப்புமையிலும் அல்லது தூண்டு சொற்கள் பற்றிய கோட்பாட்டிலும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. எபிரேய வாசகத்தோடு எவ்வித தொடர்புமில்லாத ''பார்த்தனோஸ்'' என்ற தூண்டுசொல்லை மத்தேயு பயன்படுத்துகிறார். ஆனால் இக்கருத்தின் பின்னணியினின்று மத்தேயு கன்னிப்பிறப்பு பற்றிய வாசகத்தை உபயோகிக்கிறார் என்பது முழுவதும் தெளிவாக இல்லை. தாவீது மரபின் வாரிசினுடைய பிறப்புப்பற்றிய முன்னறிவிப்பாக ஏசயா கொள்ளும் பொருளையே மத்தேயுவும் சுட்டிக்காட்டலாம். தாவீது மரபுவரிசை இங்கே முழுமையாக அடைகிறது. இப்போது மரபிற்கான ஒவ்வொரு வாரிசும் தோன்றும்போது உறுதியளிக்கப்பட்ட அரசமரபின் வழியாக வரும் மீட்பு இயேசுவில் நிறைவெய்துகிறது. இந்த வரிசையை அவர் முடித்து வைக்கிறார்.

வேறுசிலர் இப்பிரச்சினைக்கு இரட்டை அடையாள விளக்கமளிப்பர். ஆகாசின் காலத்துச் சூழ்நிலையும் ஏச 7:14-க்கு மத்தேயு அளிக்கும் விளக்கத்தையும் சேர்த்துப் பார்க்கும் கணிப்பு இரட்டை நிறைவேறுதலைக் கோருவதாகத் தெரிகிறது. இதில் இம்மானுவேலும் அவருடையதாயும் அடையாளப்பொருள் கொள்கின்றனர். அதாவது இளமங்கை உடனடியாக ஆகாசு அல்லது ஏசயாவின் மனைவியையும், முன்னோக்காக கன்னி மரியாளையும் குறிக்கின்றது; அதேபோல் இம்மானுவேல் உடனடியாக எசக்கியா அல்லது ஏசாயாவின் மகனையும் முன்னோக்காக இயேசுவையும் குறிக்கின்றது.

இம்மானுவேலின் அக்கால அடையாளம் பற்றிய மற்ற வரலாற்றுச் சான்று இன்மை இத்தகைய விளக்கத்தைப் பாதிக்க வேண்டியதில்லை. இத்தகையச் சான்றுகள் இன்மையால், இம்மானுவேலின் ஆள் பற்றிய எந்த விளக்கமும் யூகமாகவே இருக்கும். மேற்கூறிய விளக்கம் இம்மானுவேல் இறைவாக்கு மெசியா மற்றும் தாவீது பற்றிய சூழ்நிலைக்கு பொருந்துவதாக உள்ளது. இவ்வாறு இயேசுவின் பிறப்பு இம்மானுவேல் (இறைவன் நம்மோடு) என்பதின் இறுதி நிறைவேறுதலாக அமைகிறது. இறைவன் தமது மக்களோடு கொண்டுள்ள உடன்படிக்கை வரலாற்றில் எப்போது நிலையாகவுள்ள கருத்தின் உச்ச நிலையாகவும் பாவத்தினின்றும் சாவினின்றும் மனுக்குலம் பெறும் விடுதலையின் அடையாளமாகவும் உள்ளது.

இம்மேர் (IMMER - செம்மறி) - ஆள்

தாவீது காலத்தைச் சேர்ந்த குருக்களின் ஒரு பிரிவிற்கு தலைவர் ஆவார் (1 நாள் 24:14). எரேமியாவின் எதிரியான பசிகூர் என்பவர் இப்பிரிவைச் சேர்ந்தவராக அடையாளம் காட்டப்படுகிறார் (எரே 20:1). இப்பரம்பரை பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்த குருக்களைக் கொண்டுள்ளது (1 நாள் 9:12; எஸ் 2:37; காண்க நெக 7:40). இவர்களில் இருவர் எஸ்ராவால் புறஇன மனைவியரை ஒதுக்கி விடுமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். (எஸ்ரா 10:20). இக்குடும்பத்தைச் சேர்ந்த சாதோக்கு என்பவர் நெகமியா எருசலேம் மதிலை பழுதுபார்க்க உதவி செய்தார் (நெக 3:29).

இவர்கள் நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் எருசலேமில் வாழ்ந்த குருக்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் (நெக 11:13).

இம்மேர் (IMMER - செம்மறி) - இடம்

பாபிலோனியாவில் உள்ள ஒரு இடம். இவ்விடம் இன்று கண்டுபிடிக்கப்படவில்லை. இங்கிருந்து யூத அகதிகள் பாலஸ்தீனத்திற்கு திரும்பி வந்தனர். ஆனால் இவர்களிடம் தாங்கள் இஸ்ராயேலின் வழி வந்தவர்கள் என்று நிரூபிக்கக் கூடிய மரபுக்கொடிச் சான்றுகள் எதுவும் இல்லை (எஸ் 2:59; நெக 7:61).

இயசேர் (IEZER)

அபியேசரின் சுருக்கமாகும். மனாசேயின் வழித்தோன்றல் இவர். இயசேரியரின் குடும்ப மூதாதையரானார் (எண் 26:30). காண்க அபியேசர் - 1.

இயந்திரம் (ENGINE)

2 நாள் 26:15- கருவி, கண்டுபிடிப்பு; எச 26:9-மதில் இடிக்கும் இயந்திரம்.

ஆற்றலை வேலைக்குப் பயன்படுத்த உதவும் இயந்திரக் கருவி. இங்கு போரில் உதவும் கருவியை இது குறிக்கிறது.

1. வரலாறு:- போர் இயந்திரங்கள் முதலில் அசீரியர்களால் மேற்கு ஆசியாவில் பயன்படுத்தப்பட்டன. அவர்கள் முற்றுகையிடுவதற்கும், வில் எய்துவதற்கும் சக்கரங்கள் உள்ள கோபுரங்களைப் பயன்படுத்தினர். கற்களையும், ஈட்டிகளையும் எறிய உதவும் கவண்கள் பிற்காலத்தில்தான் கிரேக்க நாட்டிற்கு வந்தன. இத்தகைய போர்க் கருவிகள் அலக்சாந்தராலும் (356-323 கி.மு.) அவருக்குப் பின் கிரேக்க படைகளாலும், உரோமையர்களாலும் பயன்படுத்தப்பட்டன (1 மக் 6:51-52; 13:43).

2. பழைய ஏற்பாட்டில் போர்க்கருவிகள்:-

அ) மதிலை இடிக்க உதவும் இயந்திரம்:- போரின் போது சுவர்களையும் வாயில்களையும் இடிக்கப் பயன்பட்டது (எச 26:9).

ஆ) கவண்கள்:- யூதாவின் ஊசியா கோபுரங்களிலிருந்தும், மதிலின் எல்லா மூலைகளினின்றும் அம்புகளையும் பெரிய கற்களையும் எறியக் கூடிய பலவிதக் கருவிகளைச் செய்தார் என்று 2 நாள் 26:15 கூறுகிறது. ஆனால் மத்தியதரைக்கடல் பகுதிகளில் கவண்களும், அதைப் போன்ற மற்ற கருவிகளும் ஊசியாவின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகே பழக்கத்துக்கு வந்தன. நாளாகமம் ஏறக்குறைய கி.மு.300-ம் ஆண்டில் எழுதப்பட்டது என்று கூறப்படுவதால், 2 நாள் 26:15-இல் கால முரண்பாடு இருப்பதாகத் தோன்றுகிறது.

இயற்கைக்கு மாறான பாலினப் பாவம் (HOMOSEXUALITY)

இது ஆண் மற்றொரு ஆணோடு புணர்ச்சிக் கொள்ளும் செயலாகும். பழங்கால மேற்காசிய நாடுகளில் இயற்கைக்கு மாறான பாலினச் செயல்கள் பெருமளவில் பரவியிருந்தன என்பது விவிலிய குறிப்புகளின் மூலம் தெளிவாகத் தெரிகிறது. லோத்-தின் விருந்தாளிகள் மீது இத்தகைய தகாத பாவச் செயலில் சோதோம் நகர மக்கள் ஈடுபடமுயன்றதன் மூலம், அந்நகரின் இழிந்த நிலையும் புலனாகிறது (ஆதி 19:4-5; நீதி 19:22). சட்ட நூல்களில் இத்தகைய பாலினப்பாவங்கள் மரண தண்டனைக்குரிய அருவருப்பான செயல்கள் என்ற நிலையில் தடை செய்யப்பட்டிருந்தன (லேவி 18:22; 20:13). நேர்ச்சைகளை செலுத்த 'நாயின் சம்பளம்' கடவுளின் ஆலயத்தில் பயன்படுத்தப்படலாகாது என்னும் அறிவிப்பானது சமய சார்புடைய ஆண் விபச்சாரத்தைக் குறிப்பிடுவதாய் இருக்கலாம். அன்னிய சமயசடங்குகளுடன் இணைந்த இப்பழக்கமானது, இப்பாலினப் பாவத்தை விவிலியம் வெறுப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இத்தகைய ஆண் விபச்சார விடுதிகள் யோசியா அரசனால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன (2 அர 23:7; 1 அர 14:24; 15:12; 22:46).

இத்தகைய பாவச்செயல்களில் ஈடுபடுவோர்கள், பவுல் பழித்தும் கண்டனம் செய்வோரில் அடங்குவர் (1 கொரி 6:9; உரோ

1:27). சட்ட திட்டங்கள் நாத்திகர், பாவிகள் மற்றும் சோதோமியருக்காக அளிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது (1 தீமோ 1:10) யூதா 7, சோதோம் கொமோராவின் இந்த இயற்கைக்கு மாறான காம இச்சையினையும் அதற்காக தண்டனையினையும் நினைவுப்படுத்துகின்றது. இயற்கைக்கு மாறான பாலுணர்ச்சி, மணவாழ்வில் தாறுமாறு, விபச்சாரம் போன்றவை ஞான 14:26-ல் பழித்துக் கண்டணம் செய்யப்படும் தீயச் செயல்களுள் சிலவாகும்.

இயார் (IYYAR)

எபிரேய ஆண்டுக் குறிப்பேட்டில் இரண்டாம் மாதம் இது. ஏப்பரல்-மே, - சித்திரை மாதங்களுக்கு இணையானது. அக்காதிய வழக்கிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் முன்னாளைய கானானியப் பெயர் ''சிவ்'' என்பதாகும்.

இயே - அபாரிம் (IYE-ABARIM - அபாரிமின் அழிவு)

இஸ்ராயேல் மக்கள், அவர்களது பாலைவனப் பயத்தில் ஒபோத்துக்கு அடுத்து செரேது பள்ளத்தாக்கு (எண் 21:11-12) அல்லது தீபோன்காதுக்கு (33:44-45) முன் பாளையம் இறங்கிய இடமாகும். கிழ்த்திசையை நோக்கிப் பயணம் செய்து நேராய் மோவாவுக்கு எதிரிலுள்ள பாலைவனத்தில் இருக்கும் இயே அபாரிம் என்னும் இடத்தில் பாளையம் இறங்கினார்கள். அங்கிருந்து புறப்பட்டு செரேது சமவெளியில் பாளையம் இறங்கினார்கள். இயே அபாரிம் மோவாபின் தென்கிழக்கு எல்லையில் அமைந்துள்ள ஒரு பாலைவனப் பகுதியாகும். எண்.33:45-இல் இது ஈயீம் என்றழைக்கப்படுகிறது. இது சாக்கடலுக்கு தென்கிழக்கில் செரேது ஓடைக்கருகிலுள்ள மகாயி அருகில் இருந்திருக்கலாம்.

இயேசு (JESUS - யாவே மீட்டார்)

1. சிராக்கின் தந்தையும் சிராக் நூலின் ஆசிரியரின் பாட்டனுமாவார் (சிராக் நூலின் முன்னுரை).

2. சிராக்கின் மகன். சிராக் நூலின் ஆசிரியர்.

3. இயேசுக் கிறிஸ்து. காண்க.

4. இயேசுக் கிறிஸ்துவின் முன்னோரில் ஒருவர் (லூக் 3:29).

5. இயேசு பரபா. காண்க பரபா

6. யுஸ்து (3) என்றழைக்கப்பட்ட ஒரு யூத கிறிஸ்தவர் (கொலோ 4:11).

இயேசு கிறிஸ்து

இயேசுவிற்கு இறைவனின் செம்மறி, தாவீது மகன், இறைமகன், மனுமகன், இணைப்பாளர், இறைவார்த்தை, இறைவாக்கினர், தூயவர், மீட்பர், ஆண்டவர், இறைவனின் ஊழியர் போன்ற பட்டங்களுடன் அவரது பணியினைக்குறிப்பிடும் மெசியா என்னும் பட்டத்துடன் திருப்தியடையாத ஆதித்திருச்சபையானது இயேசு என்னும் சொந்தப் பெயரையும், கிறிஸ்து என்னும் அலுவல் பெயரையும் ஒன்றாக இணைத்தது (மத் 1:1.18; 16:21; மாற் 1:1; யோவா 1:17; 17:3). இயேசுகிறிஸ்து என்று கூறும்போது, திருச்சபையானது விசுவாசிகளால் அறிவிக்கப்பட்ட பட்டத்தையும் மற்றும் உலகில் வாழ்ந்த வரலாற்று மனிதரையும், நெருக்கமாக இணைக்கிறது. இதுவே மூல உண்மையும் விளக்கமும் ஆகும். இரண்டு சொற்களில் ஒன்று மற்றதைத் தன்னுள் மறைத்துக் கொள்ளும் எந்த விவரிப்பும் நற்செய்தியைப் பிரதிபலிக்கவில்லை. பின்னர் இயேசுவைப் பற்றிய அறிவுக்கு இட்டுசெல்லும் இயக்கத்தை, திறனாய்வு இரண்டு காலக்கட்டங்களாகப் பிரிக்கவேண்டும்; செபத்துடன் கூடிய தியானத்தின்மூலம், உயிருள்ள மனிதருடன் தொடர்பினை ஏற்படுத்த, முறையாக அதனை மீண்டும் அமைக்கவேண்டும். இக்கட்டுரையானது, இயேசு செய்த அனைத்தையும்பற்றி விரிவாகக் கூறப்போவதில்லை; ஏனெனில், அதைப்பற்றி எழுதப்படக்கூடிய நூல்களைத் தாங்கிக் கொள்ள இவ்வுலகே போதாது (யோவா 21:25); தலைவரின் ஆட்தன்மை

மீதே முழுக்கவனம் செலுத்துகிறது. இலக்கிய திறனாய்வின் கண்டிப்போடு, நாசரேத்தூர் இயேசுவை அறிவதென்பது, புதிய ஏற்பாடு ஆசிரியர்கள் பதிலளிக்க முயலும், 'நீங்கள் என்னை யாரென்று கூறுகிறீர்கள்?' என்று இயேசுவே கேட்ட கேள்விக்கு செவி மடுப்பதாகும். இதற்கான விடையானது இக் கேள்வியை எழுப்பிய வரலாற்று மனிதரிடமே ஒருவரை மீண்டும் கொண்டு வந்து சேர்க்கின்றது.

நாசரேத்தூர் இயேசு:-

நற்செய்தி நூல்கள் இன்றைய வரலாற்று நூல்களினுடைய கோட்பாட்டின்படி தொகுக்கப்பட்ட இயேசுவின் வரலாறுகள் அல்ல. அவை விசுவாசத்தை வளர்த்து உறுதிப்படுத்துவதற்காக விசுவாசிகளால் எழுதப்பட்டவை; அவர்களிடையே ஒளியை பரப்பி, பாஸ்கா விசுவாசத்தினால் மாற்றப்பட்டு, அவரைப்பற்றிய நினைவுகளை ஒன்றாக இணைத்து முறைப்படுத்தி எழுதப்பட்டவை. ஆனால் இவை உன்னிப்பான திறானய்விற்கு உட்படுத்தப்படும்போது, நாசரேத்தூர் இயேசுவிடம் உறுதியுடன் சென்றடைய ஏதுவாகின்றன.

1. இயேசுவின் இறுதிக்கால நிலை:- தன்னுடைய வார்த்தையினால் இறையரசு தொடங்கியுள்ளது என்பதே இயேசு அறிவித்த நற்செய்தியாகும். ''உங்கள் கண்களோ பேறு பெற்றவை; ஏனெனில் அவை காண்கின்றன. காதுகளும் பேறுபெற்றவை; ஏனெனில் அவை கேட்கின்றன. நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்; இறைவாக்கினர், நீதிமான்கள் பலர் நீங்கள் காண்பதைக் காணவிரும்பியும் காணவில்லை. நீங்கள் கேட்பதைக் கேட்கவிரும்பியும் கேட்கவில்லை'' (மத் 13:16-17 இ). அப்படியானால் அவர்கள் கண்டதும் கேட்டதும் என்ன? முதலாவதாக இயேசுவே விளக்கும் பேய் ஓட்டுதல்: ''நான் பேய்களைஓட்டுவது கடவுளின் விரலால் என்றால், கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது'' (லூக் 11:20 இ); உண்மையில், பகைவன் வெல்லப்படுகிறான்: ''வானத்தினின்று மின்னலைப் போலச் சாத்தான் விழக்கண்டேன்'' (10:18). அடுத்து, இயேசுவே கூறவதுபோல, புதிய காலம் தொடங்கிவிட்டது என்பதை எடுத்துக்காட்டும் புதுமைகள் உள்ளன; 'குருடர் பார்க்கின்றனர், முடவர் நடக்கின்றனர், தொழுநோயாளர் குணமடைகின்றனர், செவிடர் கேட்கின்றனர், இறந்தவர் உயிர்க்கின்றனர்''. இறுதியாக, உறுதியான தேர்வாக இயேசு குறிப்பிடுவது; 'எளியவர்க்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது' (மத் 11:5-6 இ). ஏனெனில், இயேசு இவ்வாறு பேசும் போது ஏசயாவின் இறைவாக்கு நிறைவேறுகிறது என அவர் கூறுகிறார் (ஏச 29:18; 35:5; 61:1).

அவருடைய நோக்கில் அறிவிப்பு இறுதிக் காலத்தைச் சேர்ந்ததாகும் என்பதே உண்மை. சுருக்கக்கூறினால் கடவுளின் திட்டத்தை இது நிறைவேற்றுகிறது. இயேசு, பழைய ஏற்பாட்டை பொறுத்தவரை இத்தகைய நிலையினையே எடுக்கிறார். இறைவாக்கினர்களில் இறுதியானவரும் மிகப் பெரியவரும் ஆவார் யோவான் என்று அவர் கூறுகிறார்; ''நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். பெண்களிடம் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானுக்கு மேலான எவரும் தோன்றவில்லை'' ஆனால், இறைவனின் ஆட்சியானது புதிய காலத்தனை புகுத்தியிருப்பதால், ''விண்ணரசில் மிகச் சிறியவன் அவரினும் பெரியவன்'' என்று தொடர்ந்துரைக்கின்றார் (மத் 11:11).

இறையரசினுடைய அடிப்படை புதுமையானது, அது அங்கே இருக்கிறது என்பதில் மட்டுமில்லாமல் அதனுடைய தன்மையிலும் அடங்கியுள்ளது. ''திருமுழுக்கு யோவான் நாள்முதல் இதுவரை, விண்ணரசு பலவந்தத்திற்கு உள்ளாகி வருகிறது; பலவந்தம் செய்வோர் அதை (நுழைய விரும்புகிறவர்களிடமிருந்து) கைப்பற்றுகின்றனர்'' (மத் 11:12). எனவே, சட்டவல்லுநர்கள், தங்களது வாதங்கள் மற்றும் நுட்பம் ஆகியவற்றால் ஏற்படுத்திய ஓய்வு நாள் மற்றும் சமய சடங்குகளின் அமைப்பைப் போற்றிக் காப்போருக்கு எதிராக இயேசு ஒரு நிலை

யினை எடுக்கவேண்டும் (மத் 15:1-20; 23:1-33). ஆனால், அதே சமயம் இறையரசை நாட்டுப்பற்று மற்றும் உலக விடுதலையோடு இணைத்து குழம்பியுள்ள அவரது காலத்தவரின் நம்பிக்கைகளையும் அவர் தூய்மைப்படுத்த வேண்டும் (மத் 16:22; 20:21; 21:9 இ; லூக் 19:11; 22:38; 24:21; யோவா 6:15; அ.ப. 1:6). இயேசு தனது அணுகுமுறையில் திருமுழுக்கு யோவானிடமிருந்தும் மாறுபட்டவராக உள்ளார் (மத் 11:3). யோவானைப் போன்று நிறைவான மனமாற்றத்தைக் கோரினாலும், பழிவாங்கும் இறைவனின் உடனடித் தண்டனையினைப்பற்றி அறிவிக்காமல் (மத் 3:7-12), அருள்தரும் ஆண்டினைப்பற்றி அவர்களுக்கு போதிக்கிறார் (லூக் 4:19). இதையே தமது தனிச்சிறப்பான சூழ்நிலையென, இயேசு கருதுகின்றார். புதையலை கண்டுபிடிப்பவர்களுக்கு மகிழ்ச்சி உறுதியளிக்கப்படுகிறது (மத் 13:44). இந்த நேரத்தை அனுபவிப்பவர்கள் பேறுபெற்றோர்.

2. இயேசுவைப்பற்றிய தீர்மானம்:- இந்த நேரம் எப்போது வரும் என்று வியந்து கொண்டிருப்பதில் ஒரு பொருளும் இல்லை; ''இறைவனின் அரசு கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது. 'இதோ இங்கே! அதோ அங்கே!' என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், இறைவனின் அரசு இதோ! உங்களிடையே உள்ளது'' (லூக் 17:20-21). இறைவனின் ஆட்சி என்பது இனியும் ஒரு எதிர்காலத்தில் வருவதன்று. எல்லாருக்கும் எட்டக்கூடியதாக உள்ளது. மெசியாவின் காலத்தை அறிந்து கொண்டு இயேசுவை நோக்கினாலேபோதும், அப்படியானால் இவர் யார்?

அதிகாரத்துடன் போதிப்பதால் (மாற் 1:22), இந்த இயேசு விவிலியத்தை விளக்கும் சாதாரண போதகர் மட்டுமல்லர். இறைவாக்கினர்களைப் போன்று இறைவனின் கூற்றுக்களை அவர் வெறுமனே அறிவிக்கவில்லை; மாறாக, ''இதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்...''(மத் 5:22.28.34.39.44) என்றும், இரகசியமாக கேட்ட வினாவிற்கு, எல்லாரும் அறிய பதிலுரைப்பது போல, ''நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்...'என்னும் முன்னுரையுடன் உறுதியான அறிவிப்பாகக் கூறுகிறார். பழைய ஏற்பாட்டின் தலைசிறந்த மனிதர்களுடன் தம்மை ஒப்பிட்டு பேசவும் துணிகிறார்: ''யோனாவிலும் மேலானது இதோ! இங்குள்ளது. சாலமோனிலும் மேலானது இதோ! இங்குள்ளது'' (மத் 12:41-42; லூக் 11:31-32).

இதனால்தான், இறைவனை நோக்கிய மனமாற்றம் என்பது இயேசுவைப் பின்பற்றி, அவரைச் சார்ந்தோ அல்லது எதிராகவோ தேர்வு செய்வதாகும். ''என்னோடு இல்லாதவன் எனக்கு எதிராய் இருக்கிறான். என்னோடு சேகரிக்காதவன் சிதறடிக்கிறான்'' (மத் 12:30). இயேசுவிற்கு செவிமடுப்பது இறைவனுக்கே செவிமடுப்பதாகும். ஏனெனில், பாறையின் மீது ஒருவனது வீட்டைக் கட்டுவதற்கு இது ஒப்பாகும் (மத் 7:24). ஆனால் புரியாத நிலையிலான இயேசுவின் நடத்தை எதிர்படும் போது, இத்தகைய தேர்வை எவ்வாறு செய்வது? இயேசு இதனை நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறார்; ''என்னைப்பற்றி இடறல்படாதவன் பேறுபெற்றவன்'' (மத் 11:6).

ஆதலின் இயேசு தமது உரிமைக் கோரிக்கையை எண்பிக்க வேண்டும். தமது தன்மையை ஏற்க மறுக்காமல் தந்தையுடன் தனக்குரிய தனிப்பட்ட உறவினை வெளிப்படுத்த வேண்டும். அனைத்து விசுவாசத்திற்கும் முன்னடையாளம் என்று கூறப்படும் விசுவாசத்தை (எபி 12:2), அவர் கொண்டிருந்ததால் (மாற் 9:23) அவருக்கு எல்லாம் முடியும். இறைவனிடம் அவர் தமது அப்பாவிடம் (மாற் 14:36) பேசுவதுபோலவே பேசுகிறார். தானியேலின் வெளிப்பாட்டு மரபோடு தம்மை இணைத்தவராய் (தானி 2:23-30), தந்தையிடம் தனிப்பட்ட உறவினைக் கொண்டுள்ள மகனாகத் தாம் இருப்பதால், மறையுண்மைகள் தமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறவும் அவர் துணிகிறார் (மத் 11:24 தொ இ), அப்படியிருந்தும் அனைத்தையும் பற்றி தமக்கு தெரி

யும் என்று உரிமை கொள்ளாமல் (மாற் 13:32) தமது விருப்பத்தினை தமது தந்தையிடமே ஒப்படைக்கிறார் (14:36; மத் 20:23). ஆயினும், கடவுளின் தூதர்களின் நீண்ட அட்டவணையில் தமக்கென ஒரு சிறப்பான இடத்தினை உரிமை கொண்டாடியவராய் (மாற் 12:6), இறையரசைத் தம்மோடு ஒன்றாக்குகிறார். இதையே விதைப்பவன் உவமை எடுத்துக்காட்டுகிறது (மத் 13:3-9 இ). இறைவனின் தனிப்பட்ட அணுகுமுறையின் அடையாளமான (லூக் 15) ஏழைகள் மற்றும் பாவிகளுடன் அவர் நடந்து கொள்ளும் முறையும் இதனையே வலியுறுத்துகின்றது.

3. இயேசுவும் எதிர்காலமும்:- இயேசுவினுடைய வாழ்வு ஒரு நல்ல யூதனுடைய வாழ்வாக உள்ளது. ஆனால், யூத மரபுகளுக்கு மேற்பட்டவராய், ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இறைவனுடனான தமது தனிப்பட்ட உறவின் மூலமாக, இறைவனின் விருப்பத்திற்கேற்ப அவற்றினை மதிப்பீடு செய்கிறார். சட்டங்களையும், இறைவாக்குகளையும் நிறைவேற்றவே அவர் வந்தார் (மத் 5:17). அவர் எடுத்துக்கூறும் முழுமையான அன்புபற்றிய மேல்வரிச்சட்டம் நுட்பமான வாதமுறைகளை விலக்கிவிட்டு, இயேசுவை பின்பற்றாதவர்களுக்கு இயலாத ஒன்றாக உள்ளது. அவரோடு நெருங்கி சார்ந்திருந்தால் மட்டுமே, இதனைக் குறிவைத்து அடையமுடியும்: ''என்னிடம் வாருங்கள்.. என் நுகம் இனிது, என் சுமை எளிது'' (மத் 11:25-30). அவரது காலத்தவருக்கும் அப்பாற்பட்டவராய், புறவினத்தாரும் மீட்பு பெறுவர் என்று அறிவிப்பதன் மூலம், இறைவாக்கு மரபிற்கும் பிரமாணிக்கம் உள்ளவராக இயேசு இருக்கிறார் (லூக் 13:28 இ)

இக்குறிக்கோளை அடைவதற்காக, தாம் விட்ட இடத்திலிருந்து திருச்சபை இப்பணியினைத் தொடரும் என்று இயேசு எண்ணியிருந்தாரா? இன்று நாம் காணும் வடிவில் திருச்சடையினை இயேசு ஏற்படுத்தினார் என்று நம்புவது சூதற்றநிலையாகும். அவரது மரணத்திற்குப் பின்னர் இரண்டாம் வருகைக்கு முன் (ஆண்டவரின் நாள்) ஓர் இடைப்பட்ட காலத்திற்கு இடமில்லை என்று எண்ணுவதும் தவறாகும்.

தம்மைச் சுற்றிச் சீடர்கள் குழுவை (லூக் 10:1), அதிலும் குறிப்பாக பன்னிருவர் குழுவைத் தம்மோடு சேர்த்துக் கொண்டார் (மாற் 3:12). இவர்கள் அவரைப் பின்பற்றி (லூக் 9:57-61) அவரது செயல்களையும் பிரசன்னத்தையும் பரப்பவேண்டும். இது ஏற்றுக் கொள்ளப்படும் வரலாற்று நிகழ்ச்சியானாலும் எப்போது நிகழ்ந்தது என்று துல்லியமாகக் கூறமுடியாது. கும்ரானில் உள்ள பிரிவினைச் சமுதாயத்தினைப் போன்று திருச்சபையினைத் தொடங்க அவர் எண்ணவில்லை என்பது உறுதி. ஆனால் உண்மையான இறைமக்களை முன்னறிகுறி காட்ட விரும்புகிறார் (மத் 19:28 இ). அதே சமயம், திருமுழுக்கு யோவானைப்போல் இல்லாமல், இறைவனின் ஆட்சியானது வளரக்கூடியது (மாற் 4:29; மத் 13:24-30); சீமோன் தனது தோழர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்த வேண்டும் (லூக் 22:32); அவரது மரணத்திற்குபின் அவரது சீடர்கள் துன்புற வேண்டும் (மத் 9:15 இ; மாற் 8:34 இ; லூக் 6:22 இ) என்பதை அவர் உறுதியாக அறிந்திருந்தார். இதனால்தான், இறைவன் தேர்ந்தெடுத்தோர் அடங்கிய இறுதிக்கால சமூகத்தை விவரிக்க கும்ரானில் பயன்படுத்தப்பட்ட ''சோத்'' அல்லது ''ஏதா'' என்ற அரமேயிக்குச் சொல்லுக்குச் சமமான, ''எக்லேசியா'' அல்லது திருச்சபை என்ற சொல்லை இயேசு பயன்படுத்தியிருக்கக்கூடும். ஆனால் திருச்சபை என்ற சொல் நற்செய்திகளில் இருமுறைதான் வருகிறது (மத் 16:18; 18:17). இயேசு தமது மரணத்திற்கு பின்னர் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தினைப்பற்றிய எண்ணம் கொண்டிருந்தார் என்பதை மறுப்பதானது, புதிய ஏற்பாட்டின் உண்மைகளை மிக எளிமைப்படுத்துவதாகும். ஆயினும், அவரது மரணத்தோடு, முடிவு நிகழும் என்னும் தனிப்பட்ட தீர்மானத்தினை இது விலக்கவில்லை (மாற் 9:1).

இறுதி வாக்கியத்தின் பொருளை நன்குபுரிந்து கொள்வதற்கு, இயேசுவின் மற்ற வாக்

குகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உயிர்த்தெழுதலைப்பற்றிக் குறிப்பிடாத இறைவாக்குகள் தெளிவாக காட்டுவது போல், இயேசு தாம் விரைவில் சாகப்போவதைப்பற்றி முன்அறிந்திருந்தார் (லூக் 13:31 தொ; 17:25; மாற் 9:12). அவர் தமது மரணத்தை இறைவனுடைய திட்டமாக ஊழியமாக, பரிகாரப்பலியாக காண்கிறார் (மாற். 10:45); தமது மரணத்திற்கு முந்தின நாள், ஒருவருக்கொருவர் சேவை புரிதலைத் தமது மரபுரிமை உடமையாகத் தமது சீடர்களுக்கு விட்டுச் செல்கிறார் (லூக் 22:25-27).

இயேசு தமது விருப்பத்திற்கு மாறாக, தம்மைவிட வலிய பகைவரின் கரங்களால் கொல்லப்பட்ட மனிதன் என்று நாம் தீர்மானிப்பதைத் தடுக்க இக்குறிப்புகள் உதவுகின்றன. பல விரிவுரையாளர்கள் இறை ஊழியனோடு இயேசு தம்மை ஒன்றாக்குவதாக மேலும் விளக்கம் அளிப்பர். இயேசு, மனுமகனின் முடிவான தமது முடிவினைப்பற்றி ஏசயா நூலில் வரும் ஊழியனைப் பற்றிய பாடல்களின் சொற்களில் எடுத்துக் கூறுகின்றார் (ஏச 52:13-53:12); 'அவரது கீழ்ப்படிதலானது அவர் 'பட வேண்டும்' என்று கூறப்படுவதில் வெளிப்படுகிறது (லூக் 17:25); அவரது வாழ்வின் பலி பலருக்காக ஒப்புக்கொடுக்கப்படுகிறது (மத் 20:28 இ; 26:28 இ; லூக் 22:16.28.30); மற்றும் அது அவர் ஏற்படுத்தும் உடன்படிக்கையுமாகும் (லூக் 22:20).

தமது மரணத்தைப்பற்றி இம்முறையில் அறிந்திருந்தால் இயேசு, ஏன் தமது உயிர்த்தெழுதலைப் பற்றியும் அறிந்திருக்கக்கூடாது? இயேசுவின் இறப்பு மற்றும் உயிர்ப்புப் பற்றிய மூன்று துல்லியமான பெரிய முன்னறிவிப்புகளும் (மத் 16:21 இ; 17:22 தொ இ; 20:18 தொ. இ; லூக் 24:25 தொ 45) முதல் சமுதாயத்தின் செல்வாக்கை ஐயமின்றி வெளிப்படுத்துகின்றன; ஆனால், குறுகிய காலத்திற்குள் தாம் உயிர்ப்பது பற்றிய இயேசுவின் விசுவாசத்தினையும் அவரது வார்த்தைகளிலேயே காணலாம். எல்லா பக்தியுள்ள யூதரைப்போன்று, காலத்தின் இறுதியில் தாமும் உயிர்த்தெழுவோம் என்பதை அவர் அறிந்திருந்தார் (மத் 22:23-32 இ); மேலும், காலத்தின் இறுதிக்கட்டத்திலும், ஏற்கனவே குறிப்பிட்டது போல், தமக்கென ஒரு சிறப்பிடத்திற்கு அவர் உரிமைக் கொண்டாடினார். இறைவனுடனும், மனிதருடனும் தாம் கொண்டிருந்த தனிப்பட்ட உறவினைப்பற்றி உறுதியாக அறிந்திருந்த இயேசு, தமது பணியின் இறுதிக்கட்ட வெற்றியினைப்பற்றியும் தமது சார்பாக தமது தந்தையின் சிறப்பான குறுக்கீடு பற்றியும் எவ்வாறு சந்தேகப்பட்டிருக்க முடியும்? ஆனாலும், உயிர்த்தெழுதலில் கொண்டிருந்த இத்தகைய நம்பிக்கையானது, அவர் மனித நிலையில் பங்குபெறவில்லை என்று கூறவில்லை: கெதுசமனியில் அவர் திகிலும், மனக்கலக்கமும் உற்றார் (மாற் 14:36). இறைவனாலும் தாம் கைவிடப்பட்டுவிட்டதாக உணர்ந்தார் (மாற் 15:34); ஆயினும் தாமே மகன் என்பதை அவர் அறிந்திருந்தார்.

இறுதிக் கேள்வியாக, தாம் யாரென்று வெளிப்படுத்த, இயேசு ஒரு குறுக்கு வழியினை தேர்ந்தெடுத்து, யூதர் மத்தியில் நிலவிய மெசியா, இறைமகன், மணமகன் போன்ற சொற்களைப் பயன்படுத்தினாரா? நற்செய்தி நூல்களில் இதற்கிணையான பட்டங்களை இயேசு பயன்படுத்தியுள்ளார். இயேசுவினால் பயன்படுத்தாதவை என்று உறுதியிட்டு கூறப்படமுடியாத சொற்களான 'மகன்', 'மனுமகன்' என்ற சொற்களை தவிர்த்து, ஆதித்திருச்சபை, இயேசுவைத் தாம் 'இறைமகன்' மற்றும் 'மெசியா' என்று சொல்லச் செய்தபோது ஆதித்திருச்சபையானது இயேசுவின் எண்ணத்தை விளக்குகிறதேயன்றி, சிதைக்கவில்லையென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மெசியா என்னும் சொல்லின் தெளிவற்ற நிலையானது சிலுவை மரணத்தின்மூலமாக மட்டுமே நீக்கப்படும் என்பதால், இயேசு தம்மை 'மெசியா' என்று அறிவிக்க முயற்சி எடுக்கவில்லை. தனது உண்மைநிலையினை வெளிப்படுத்த வேண்டாமென தமது சீடர்களை தடுக்கும் போதும் (மாற் 8:27-30 இ), யெருசலேமில் நுழைகையில் தம்மை தாவீ

தின் மகன் என்று போற்றுவதற்கு அனுமதிக்கும் போதும் (மத் 21:1-9 இணை), 'நீர் கடவுளின் மகனா? என்ற தலைமைக்குருவின் கேள்விக்கு 'நீரே சொன்னீர்' என்று மறைபொருள்மிக்க முறையில் பதிலுரைக்கும் போதும் (மத் 26:64), தம்மைப்பற்றி தனது காலத்தவர் சரியாக அறிந்துகொள்ள ஆவன செய்கிறார். 'வெளிப்படுத்துபவர்' என்னும் தமது நிலைமையில், தாம் மனிதருடன் ஏற்படுத்த விரும்பிய உண்மையான உறவினைப் பற்றி தவறான வடிவத்தை அளித்திருக்கக்கூடிய இப்பட்டங்களுக்கு, இயேசு எத்தகைய முக்கியத்துவமும் அளிக்கவில்லை. அவர் தம்மை இறைவனுடனும், அனைத்து மனிதருடனும் தனிப்பட்ட உறவு கொண்ட மனிதனாக வெளிப்படுத்தும் போது, ''நீங்களோ நான் யாரென்று சொல்லுகிறீர்கள்?'' என்னும் இறுதியான கேள்வியை அவர்களிடம் கேட்கிறார் (மத் 16:15 இ).

II இயேசு, ஆண்டவர், கிறிஸ்து மற்றும் இறைமகன். இயேசு சிலுவையில் மரணமடைந்து, பல்வேறு காட்சிகளில் தம்மை உயிருள்ளநிலையில் வெளிப்படுத்தும்வரை, சீடர்களால் இக்கேள்விக்கு சரியான பதில் காண இயலவில்லை. இயேசுவின் முன்முயற்சிக்குத் தங்களது விசுவாசத்தினால் பதிலுரைத்ததன் மூலம், நாசரேத்தூர் இயேசு என்பவரின் வாழ்வு மற்றும் மறையுண்மையின் பொருளை சீடர்கள் கண்டுபிடித்தனர். இப்பொருளை விளக்குவதற்காக, மரபுமொழியில் நிலவிய சொற்களை எடுத்து அவற்றிற்கு புதிய பொருளை அளித்து, இயேசுவைப்பற்றி அவர்கள் பேசினர். ஒவ்வொரு ஆசிரியரின் விளக்க முயற்சிகள் அவர்கள் பெற்ற கொடைகளுக்கும், வாழ்ந்த சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பலவகைப்பட்டதும், தடவித்தேடும் தன்மையும் கொண்டதாகவும் இருந்தன. இந்த கிறிஸ்து இயல் உறுதியாகவே வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டதாயினும், அதன் மூலக்கூறுகள் பாலஸ்தீன அடிப்படையினையும் கிரேக்க விளக்கங்களையும் ஒன்றாகக் கொண்டதாய் இருப்பதனால், அதனுடைய அடிப்படையினை உறுதியாக காணமுடியாது. ஆயினும், இயேசுவின் மறையுண்மையை வெளிப்படுத்தும் முதல் முயற்சிகளைச் சுட்டிக்காட்டி வெவ்வேறு நற்செய்தியார்களின் தனிப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூறலாம்.

1. மறையுண்மை பற்றிய முதல் அறைகூவல்:- பாஸ்கா அனுபவத்தை வெளிப்படுத்தும் பல்வேறு வழிகளின் மூலம், ஓரளவு உறுதியான வரலாற்று வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் நான்கு கருத்துக்களை நாம் குறிப்பிடலாம். இரண்டாம் வருகைபற்றிய எண்ணம் கிறிஸ்துவாகிய இயேசுவின் விண்ணக உயர்வை உறுதிப்படுத்துகின்றது. மீட்பளிக்கும் சிலுவைபற்றிய எண்ணம் ஊழியன் மேல் தனது கவனத்தை நிலைப்படுத்துகிறது. இறுதியாக, மனிதராகிய இயேசுவைப் பற்றி. அவருடைய மனிதநிலை மற்றும் உலகத்துடன் அவர் கொண்டுள்ள உறவினைப்பற்றிய மறையுண்மைகளைப் பற்றிய கேள்விகள் கேட்கப்படுகின்றன. பவுலின் இறையியல் மற்றும் நற்செய்தி படைப்புகள் ஆகியவற்றிற்கு முந்திய விசுவாச அறிக்கைகள் மற்றும் பாடல்களை முதன்மையாக இக்கட்டுரை பயன்படுத்துகிறது. ஆனாலும், புதிய ஏற்பாடு இறையியலால் ஏற்பட்ட முன்னேற்றங்கள் சுட்டிக் காட்டப்படும்.

அ. விண்ணகத்திற்கு உயிர்ப்பிக்கப்பட்ட இயேசு, ஆண்டவர் மற்றும் கிறிஸ்து:- உயிருள்ள இயேசுவுடன் தொடர்பு கொண்ட பின்னர், ''இறைவன் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச்செய்தார்'' என்று சீடர்கள் பறைசாற்றுகின்றனர் (1 தெச 1:10; உரோ 10:9; [illegible]; கலா 1:1; 1 பேதுரு 1:21; அ.ப. 4:10). இந்த அறிவிப்பு மறைநூல் வாசகம் ஒன்றின் மீதான சிந்தனையின் விளைவு அன்று (1 கொரி 15:4). இயேசு உயர்த்தப்படுவதையும் அரியணை ஏறுதலையும் பாஸ்கா அனுபவம் கோருகிறது என்ற விசுவாசத்தின் உடனடி அறிவிப்பாகும். இது ஸ்தேவான் (அ.ப.7:56), பவுல் (7:3; 22:6; 26:13) ஆகியோரின் அனுபவங்களில் தெளிவாகுகிறது. இதை எடுத்துக்கூறும் போது, உயிர்ப்புப்

பற்றிய யூத இறையியல்நடை பயன்பட்டுள்ளது.

இந்த கிறிஸ்தவ விசுவாசத்தினுடைய தொடக்ககாலச் சான்றுக்கு ஒத்தவாறு, 'எமது ஆண்டவரே, வாரும்' என்ற பொருளுடைய 'மாரனாதா' (1 கொரி 16:22; அ.ப. 22:20; 1 கொரி 11:26) என்னும் பழமையான அரமேயிக் வாழ்த்தொலி காணப்படுகின்றது. மகிமைப்படுத்தப்பட்டு, விண்ணக அரியணையில் அமர்ந்துள்ள இந்த இயேசுவே இறுதிக்கால 'நீதிபதி' என்பதை இது தெளிவுப்படுத்துகின்றது. காலத்தின் இறுதியில் வருகின்ற சாதாரண வருகையாக இல்லாமல், ''இயேசுவே வரலாற்றின் ஆண்டவர்' (மத் 28:20) என்பதை மனித வரலாறு முழுவதும் தொடர்ந்து வெளிப்படுத்துகின்ற, மகிமைப் படுத்தப்பட்ட இயேசுவின் இரண்டாம் வருகையினைப் (அ.ப. 1:11) பற்றிய உண்மையான பொருளையும் இது அளிக்கின்றது.

கிரேக்க திருச்சபையின் படைப்பாகக் கருதப்படும், விசுவாசத்தின் வெளிப்பாடாகவும், சமய சடங்குகளின் பின்னணியிலும் உபயோகிக்கப்படும், ''இயேசு ஆண்டவர்'' (1 கொரி 12:3; உரோ 10:9; பிலி 2:11) என்பது மற்றுமொரு சொற்றொடராகும். இது விசுவாசத்தின் வறண்ட கொள்கையாக இல்லாமல், ஆண்டவரை அறிந்து, அடிபணியும் செயலாகும். இதுவே இயேசுவின் வருகையின் குறிக்கோள்.

இவ்வாறு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சியின் இயல்பானது, மறைநூல்களின் மூலம் தெளிவாக்கப்படும். மெசியா பற்றிய முன்னறிவுப்புகளின் துணையால் (2 சாமு 7:14; சங் 2:7; 110:1), இயேசுவே 'ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கப்பட்டார்' (அ.ப. 2:36); அவரே இறைவனின் மகனாக நியமிக்கப்பட்டார் (உரோ 1:4; அ.ப. 13:33); அவர் கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார் (அ.ப. 7:56; 2:33 தொ; 5:31; மாற் 14:62 இ; உரோ 8:24); மற்றும் இறுதியாக, இறைவனின் எல்லாம் வல்ல நிலையில் அவர் பங்கு பெறுகிறார் (மத் 28:18) என்று அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

உயர்த்தப்படுதல் என்ற கருத்தின் நோக்கில், மெசியா இறைமகன், ஆண்டவர் என்றும் சிறப்புப் பெயர்கள் முதலில் ஒத்த பொருளையே கொண்டிருந்தன; இவை இயேசுவின் மரணம் அல்லது உலக வாழ்வுடன் நேரடித்தொடர்பு கொண்டவையல்ல; நாசரேத்தூர் இயேசு இஸ்ராயேலின் நம்பிக்கைகளை நிறைவேற்றி, எல்லா காலத்திற்கும் ஆண்டவராக உருவானார் என்று சாதாரணமாக இவை கூறுகின்றன.

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களின் இறையியல் வளர்ச்சிகள் இங்கிருந்து துவங்குகின்றன. எனவே பவுல், எழுபது நூல் மொழிப் பெயர்ப்பில் இறைவனை மட்டுமே குறிக்கின்ற 'ஆண்டவர்' என்னும் பெயரை இயேசுவிற்கு மாற்றுவதை ஏற்றுக்கொள்வதோடு (உரோ 10:2; பிலி 2:11; 1 கொரி 2:8; 15:25; எபே 1:20), ''புறவினத்தாரின் ஆண்டவர்களிடமிருந்து '' இயேசுவை வேறுபடுத்தியும் கூறுகிறார் (1 கொரி 8:5; 10:21); ''நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து'' என்னும், சொற்றொடரின் தொடக்கம் இதுவே. எனவே, நற்செய்தியாளர்கள், மக்கள் இயேசுவை வெறுமனே ராபி அல்லது 'போதகர்' என்று அழைக்காமல் 'ஆண்டவர்' என்று அழைக்கின்றதைச் சித்தரிக்கின்றனர் (மத் 8:25; லூக் 7:19 இ).

ஆ) இயேசுவின் நன்மை விளைவிக்கும் மரணம்:- இயேசுவின் அவமானத்திற்குரிய மரணத்தினால் ஏற்பட்ட இடறலின் காரணமாக, பாஸ்கா விசுவாசமானது மறைநூல்களில் புரியக்கூடிய பொருளைத் தேடுகின்றது. தமது உலக வாழ்வின் போது இயேசு, துன்புறும் மற்றும் மாட்சிமைபடுத்தப்படும் ஊழியனைப்பற்றிய முன்னறிவிப்புக் குறிப்புகளின் மூலமாக, தனது முடிவைப்பற்றி மறைமுகமாக விளக்கினார். ஆதித்திருச்சபை தனது ஆண்டவருக்கு 'ஊழியன்' என்னும் பெயரை அளித்து (அ.ப. 3:26; 4:25-30), ஏசயாவின் வார்த்தைகளினால், நிகழ்ந்து

விட்ட நிகழ்ச்சிகளின் பொருளை விளக்கு கின்றது (ஏச 52:13 - 53:12). இயேசு உயர்த்தப் பட்டு(அ.ப.2:33; 5:31), மகிமைபடுத்தப்பட் டுள்ளார் (3:13). இவ்வாறு இயேசுவின் பாடு கள், பேதுருவின் திருமுகத்திற்கு (1 பேதுரு 2:21 - 25) முந்திய ஒருவாசகத்திலும், பிலிப்பு வின் உபதேசத்திலும் விளக்கப்படுகிறது (அ.ப. 8:30 - 35). விசுவாசத்தின் தொன்மை யான வாசகங்களில் ஒன்று இயேசு 'மறைநூ லில் உள்ளபடி நமது பாவங்களுக்காக இறந் தார்' (1 கொரி 15:3) என்று கூறுகின்றது. நமக்காக என்னும் இந்த முன்னிடைச்சொல் இங்கும், மற்ற பகுதிகளிலும் (கலா 1:4; 2 கொரி 5:14 தொ 21; உரோ 4:25; 8:32; 1 பேதுரு 3:18; 1 யோவா 2:2), குறிப்பாக நற்கருணை சொற்றொடரிலும் (லூக் 22:20; 1 கொரி 11:24) இயேசுவின் மரணத்தினு டைய மீட்பின் மதிப்பினை குறிப்பிடுகின் றது.

ஊழியன் என்னும் பெயரின் பொருளுக்கு ஒத்த பொருளையுடைய மற்ற சிறப்பு பெயர் களும் அதே உண்மையினை வெளிப்படுத் தவே பயன்பட்டுள்ளன. இயேசுவே 'நீதி யுள்ளவர்'(அ.ப.3:14); மனிதரை வாழ்விற்கு நடத்திச்செல்பவர்(அ.ப.3:15; 5:31); இறைவ னின் மாசற்ற செம்மறி (1 பேதுரு 1:19 தொ; யோவா 1:29, 36). இவரே பாவமாசற்ற தலைமைக் குரு; புதிய ஏற்பாட்டின் இணைப்பாளர் (எபி 2:14-18; 4:14).

இதுமுதல், பவுலின் பிற்காலத் திருமுகங் களில் காணப்படும் 'மீட்பர்' என்னும் சொல் (தீத் 1:4; 2:13; 3:6; 2 திமோ 1:10) கிரேக்க சமயங்களின் கூட்டுச் செல்வாக்கினால் பழக் கத்தில் கொண்டுவரப்படுகின்றது. பரிகாரக் கோட்பாட்டை ஆழமாகப் புரிந்துகொள்ளு வதற்கு (உரோ 3:23 தொ) இட்டுச் செல் கின்ற, மரித்து உயிர்த்த கிறிஸ்துவோடு ஒன் றுபட்ட ஞானஸ்நானம் பெற்றவர்களைப் பற்றிய பவுலின் மறைபொருள் மிக்க போத கத்தின் (கலா 2:19; உரோ 6:3 - 11) முன்னேற் றத்தினையும் இப்போது முதல் நாம் காண லாம்.

இ) மனிதனாகிய இயேசு:- மரணத்திற்கு பின்னும் உயிருடன் இருக்கின்றவரின் தோற் றம் பற்றி அதிக அக்கறை கொள்ளும் போது, அப்போஸ்தலிக்க திருச்சபையா னது, விரைவிலேயே தனது கவனத்தை இயேசுவின் உலக வாழ்வின்மீது திருப்புகி றது.

இவ்வாறு, உயிர்த்தெழுந்தார் என்று தான் விசுவாசிப்பவரின் வாழ்வை மற்றவருக்கு தெரிவிக்கவும் (அ.ப. 10:37 தொ), விசுவாசி கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக அதனை எடுத்துரைக்க வும், ஏற்பட்ட இரட்டை தேவைகளுக்கு விடையாக நற்செய்தி மரபு உருவெடுக்கி றது. ஆண்டவராகிய இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தையே ஒற்றுமைப்படுத்தும் கூறா கக் கொண்டு அவரைப்பற்றிய கடந்த கால நினைவுகள் படிப்படியாக ஒன்று சேர்க்கப் பட்டு விளக்கப்பட்டன. இதனைச் சுற்றி இந்த வாழ்க்கைக்கும் புத்தொளி அளித்து உருமாற்றம் அளிக்கும் இந்த ஒளியில் மனித னாகிய இயேசுவின் உருவம் வெளிப்படுகி றது.

அவருடைய வார்த்தைகள் மற்றும் மீட்ப ளிக்கும் மரணத்தைவிட அவரின் உலக வாழ் வின் மீது பவுல் குறைந்த அளவே ஆர்வமு டையவராயிருக்கிறார். எபிரேயருக்கு எழு தப்பட்ட திருமுகம் இயேசுவினுடைய துன் பங்களின் பொருளை விளக்குகின்றது. இயேசு தனது மரணத்தைத்தாமாகவே விரும்பி ஏற்றுக் கொண்டார் (எபி 10:7); துன்பங்களினால் அவர் நிறைவாக்கப்பட் டார் (2:10); மகிழ்ச்சிக்குப் பதிலாகச் சிலு வையின் நிந்தையைத் தாங்கினார் (12:2); துன்பங்களின் மூலம் அவர் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் (5:7 தொ); நம்மை விசுவாசத்தில் நடத்திச்சென்று, அதனை முழுமைக்கு கொண்டு வருபவர் இவரே (12:20).

துவக்கத்திற்குத் திரும்புகின்ற இந்த இயக் கமானது, நாத்தான் போன்றவர்களின் முன் னறிவிப்புகள் (2 சாமு 7:12 தொ) அல்லது

சங் 16:10-தொ ஆகியவற்றின் துணைக் கொண்டு அமையும் இயேசுவின் தோற்றம் பற்றிய கேள்விகளைக் கொண்டதாக உள் ளது. இயேசுவின் வாழ்வானது, உடலள வில் உலகைச் சார்ந்ததாகவும், ஆவியினால் விண்ணகத்தைச் சார்ந்ததாகவும் (உரோ 1:3 தொ; 1 பேதுரு 3:18; 1 திமோ 3:16) இருவகை முறைகளைக் கொண்டதாக உள் ளது. ஆவியின் மூலம் உள்ளார்ந்த முறை யில் மாற்றப்பட்டவராய், இயேசு அபிடே கம் பெறுகிறார். இது முதலில், அவர் அரி யணை ஏறும் சமயத்திற்கான அரச அபிடேக மாகவும் (எபி 1:9), பிறகு அவரது பணியின் நிமித்தம் திருமுழுக்கின்போது இறைவாக்கு அபிடேகமாகவும் (அ.ப. 10:38; 4:27; லூக் 4:18), பொருள் கொள்ளப்படும். தாவீதிற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியின் நிறைவேற்ற மாகக் கருதப்படும் உயிர்தெழுதலானது (அ.ப.2:34 தொ; 2 திமோ 2:8), இயேசுவைத் தாவீதின் மகனாகக் காண இட்டுச் செல்கி றது (உரோ 1:3 தொ; 2 திமோ 2:8; அ.ப. 13:22 தொ; 15:16; மாற் 12:35 தொ). இதற் கொத்த முறையில் இயேசுவின் தலைமு றைப்பட்டியல்களும் அமைக்கப்படுகின்றன (மத் 1:1-17; லூக் 3:23-37). மறைநூல்களின் நிறைவேற்றமான வெளிப்படையான கிறிஸ் தியலாக இருந்தாலும், இயேசுவின் பால பருவம் பற்றி (மத் 1-2; லூக் 1-2) மரபுகளால் உருவாக்கப்பட்ட நற்செய்திகளின் முகவுரை ளிலும் இது எடுத்துக்காட்டப்படுகிறது. மிக ஆழமான இறையியலை வெளிப்படுத்துகிற நிகழ்ச்சியுரை வரலாறானது, 'ஆண்டவர் என்று நாம் வழிபடுகிறவரின் ஆரம்பம் என்ன?' என்னும் கேள்வியை எழுப்பிப் பதில் அளிப்பதிலேயே முக்கியமாகக் கவ னம் செலுத்துகிறது.

ஈ) அனைத்து படைப்பிலும் முதல் பேறா னவர்:- மேலும், இன்னும் முந்திய காலத் திற்குச் செல்லுகிறது. இக்கருத்து மீட்பரா கிய இறைவன் மறையியல் ஞானவாதிக ளின் புராணக் கதையினால் தூண்டப்படா மல், படைப்பிற்கும் இறுதி காலத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமையினைக்காட்ட ஆர் வமாக உள்ள யூத வெளிப்பாட்டு மரபுக ளால் தூண்டப்பட்டதாகத் தெரிகிறது. இவ் வாறு, ஏனோக்கின் நூலில் மனுமகனின் முந்தையவாழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது; மற்ற சில பகுதிகளில், சில குறிப்பிட்ட யூத வட்டாரங்கள், படைப்பின் துவக்கத்திலே செயலாற்றும் ஞானத்தைத் தியானிப்பது வழக்கம் (யோபு 28:20-28; பாரு 3:32-38; பழ 8:22-31; சீரா 24:3-22; ஞான 7:25 தொ). பிலி 2:6-11-இன் பின்னணியில் அமைந்துள்ள மிகப் பழமையான பாடலானது, ஒன்றன் பின் ஒன்றாகக் கொண்ட மூன்று கட்டங்க ளில் இயேசுவை விவரிக்கிறது. அவர் இறை வனின் தன்மையில் இருந்தார். உலக வாழ்க் கையின் போது தம்மையே வெறுமையாக்கி னார். பின்பு விண்ணகத்திற்கு உயர்த்தப்பெற் றார். இறை ஆளால் ஒருவித மண்ணக இயல்பு எடுத்துக் கொள்ளப்பட்டதென இப் பகுதி கூறவில்லை; மாறாக, இயேசுவின் பிரசன்னமானது எல்லா காலகட்டத்திற்கும் பரவியுள்ளது என்று காட்டவே முயல்கிறது. இயேசுவின்மூலமே அனைத்தும் வாழ்கின் றன; அவர்மூலமே நாமும் கடவுளிடம் வரு கிறோம் (1 கொரி 8:6); பாலைவனத்தில் மக்களைப் பின்தொடர்ந்த பாறையும் இவரே (10:4). இறுதியாக, பவுலின் இறையி யல் வளர்ச்சிக்கு முன்னதாக, இயேசுவே காணப்படாத கடவுளின் சாயல், எல்லா படைப்புகளிலும் முதல் பேறானவர் (கொலோ 1:15), இறைத்தன்மை முழுமை யாகக் குடிகொண்டுள்ளவர் (2:9) என்று அழைக்கிறார்.

இயேசுவின் முழுமையான நீதி மற்றும் புனிதத்துவத்தை உறுதிப்படுத்திய பின்னர் (அ.ப.3:14), புதிய ஏற்பாடு, அவரது இறைத் தன்மையைப் பற்றி அறிவிக்கிறது. நாசரேத் தூர் இயேசு கூறிய கட்டிகாட்டல்கள் வெளிப்படும் பொருளிலும், பவுலுக்கு இறைவனால் வெளிப்படுத்தப்பட்டு (கலா 1:12), அவரால் போதிக்கப்படும் நற்செய் திக்கு உரிய (உரோ 1:9) மகனுடைய முந் தைய வாழ்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், மெசியாப் பொருளுக்கு அப்பாலும் செல்லும் பொருளிலும் இறைம கன் ஆவார். இயேசுவே இறைமகன்: மக

னைப்பற்றிய இயேசுவின் வார்த்தைகளை எதிரொலித்து (மத் 11:27 இ; 21:37 தொ இ; 24:36 இ), நற்செய்தியில் அடிக்கடி போதிக்கப்படும் (மாற் 1:11; 9:7; 14:61; லூக் 1:35; 22:70; மத் 2:15; 14:33; 16:16; 27:40. 43), கிறிஸ்தவவிசுவாசம் இதுவே (1 யோவா 4:15; 5:5). இத்தகைய முன்னேற்றமுள்ள வெளிப்பாட்டின் உச்சநிலை, இயேசு இறைவனோடு இறைவனானர் என்ற அறிவிப்பாகும் (இது அநேகமாக உரோ 9:5 - இலும் ஓரளவிற்கு எபி 1:8; தீத் 2:13-இலும் உறுதியாக யோவா 1:1. 18; 20:28-இலும் உள்ளடங்கியுள்ளது).

முந்தைய வாழ்வின் துணைமுடிவாக இயேசுவின் திருச்சபை மற்றும் அண்டம் சார்ந்த கூறு வெளிப்படுத்தப்படுகின்றது. திருச்சபை அவரது உடல்; அதற்கு அவரே தலைவர் ஆவார் (கொலோ 1:18); விண்ணகம், மண்ணகம், கீழுலகம் ஆகிய முப்பகுதிகளிலும் அவர் பயணம் செய்தமையால் (பிலி 2:10), அவரது ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது. அவர் இறந்தவரினின்று பிறந்த தலைப்பேறு ஆனமையால் (கொலோ. 1:18), அவரே 'மகிமையின் ஆண்டவர்' (1 கொரி 2:8) அல்லவா?

இக்கருத்துடன் பல்வேறு சிறப்புப்பெயர்கள் இணைந்துள்ளன. இயேசுவே புதிய ஆதாம் (1 கொரி 15:15. 45; உரோ 5:12-21); அவரிலேயே கடவுள் அனைத்தையும் ஒன்று சேர்க்கிறார் (எபே 1:10); மக்களை ஒன்றாய் இணைப்பதால் அவரே நம் சமாதானம் (2: 13-16). அவரே புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர் (1 திமோ 2:5; எபி 9:15; 12:24).

2. நற்செய்தி விளம்பும் மறைபொருள்:- இயேசுவின் மறைபொருளை உணர்வதற்கான முதல் முயற்சிகளை நாம் செயற்கையான முனையிலேயே ஒன்று சேர்த்துள்ளோம். ஆனால், நற்செய்தி நூல்கள் மட்டுமே அதிகாரப் பூர்வமான உண்மையான கிறிஸ்தியல்களாகும். நான்கு நற்செய்திகள் எழுதப்படுவதற்கு முன்னர், இயேசுவைப் பற்றிய மறைபொருளை நற்செய்தி மரபு விளக்கிக் கூறுவதில் ஈடுபட்டிருந்தது. கிறிஸ்து இயல் பற்றிய ஒவ்வொரு நற்செய்தியின் பகுதியிலும் மற்றும் ஒத்தமை நற்செய்தி அமைப்புக்கு முந்திய அமைப்பிலும் இதைக் கண்டுணரலாம். இயேசுவின் உலக வாழ்வு பற்றிய ஆர்வமானது, இயேசுவின் எந்த வாழ்க்கை வரலாற்றையும் சாராமல், தன்னிலேயே குறிப்பிட தக்க அளவில் பொருள் பொதிந்தது. இன்னும் துல்லியமாக, அது இருவகை அக்கறை காட்டுகிறது. முதலாவதாக அது ஒரு வகை புராணக்கதை என்னும் நிலைக்குத் தாழ்த்த முயற்சிப்பவர்களுக்கு எதிராக, இயேசுவின் வெளிப்பாடு வரலாற்றை ஆதாரமாகக் கொண்டது என உறுதியோடு கூறுகிறது. அடுத்து, பழமையை தோண்டுவதிலேயே முனைப்பாக உள்ள தொல்பொருள் ஆராய்ச்சியாளருக்கு எதிராக, முன்னர் வாழ்ந்த இயேசு இன்றும் வாழ்கிறார்; நிகழ்காலக் கிறிஸ்தவர்களோடு பேசுகிறார் என்று உறுதியோடு வெளிப்படுத்துகிறது. நற்செய்தி நூல்கள், நாசரேத்தூர் இயேசு என்னும் நிகழ்ச்சியின் உண்மை வடிவங்களேயாகும்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து இயல் என்று ஒன்று இருக்குமாயின் அது நற்செய்தி நூல்களுக்கு முற்பட்ட நற்செய்தியே ஆகும். இந்த கிறிஸ்து இயலானது, ஒரு முறையாக அமைக்கப்பட்டதோ, கடிதங்களை ஒன்று சேர்த்து அமைக்கப்பட்டதோ அன்று; இப்போது ஆண்டவராக உள்ள இயேசுவின் மறைபொருளைப் பிரசன்னப்படுத்தி வெளிப்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் உருவாக்கப்பட்டது. நான்கு நற்செய்திகளும், தூய ஆவியில் அறிவிக்கப்பட்ட ஒரே நற்செய்தியைக் குறிப்பிட்டு, இவ்வெளிப்படுத்துதலின் பல்வேறு கூறுகளை நமக்கு அளிக்கின்றன. இந்த ஆய்வானது, இத்தலைப்பின் கீழ் சில சுருக்கமான குறிப்புகளை அளிப்பதன்மூலம் முடிவடையும்.

அ) புனித மாற்கு:- சாத்தானை வென்றதன் மூலம் நம்மை மீட்ட நாசரேத்தூர்

இயேசுவில் இறைமகனை கண்டுணருமாறு தமது வாசகர்களை அழைக்கிறார். காலத்தின் இறுதியில்தான் இயேசுவில் தனிப்பட்ட முறையில் ஆட்தன்மையில், இறைவனைச் சந்திக்கும் உண்மை நிகழும் என்பதை வலியுறுத்துகிறார். மத்தேயு அல்லது லூக்காவுடன் ஒப்பிடும்போது, மாற்கு 'இறைமகன்' என்னும் சொல்லை அளவோடு பயன்படுத்துவதை நாம் நோக்குவது அவசியம், ஒரு நிகழ்ச்சியில் பேய்களின் வாயினின்று வரும் சொற்களிலும் (மாற் 5:7), பேயோட்டுதலின் தொகுப்பிலும் (மாற் 3:11) தவிர்த்து, வெளிப்பாட்டின் மூன்று உச்சக்கட்டங்களில் மட்டுமே இச்சொல் வருகிறது. திருமுழுக்கின்போது (1:11) மறு உருவானபோது (9:7) இறைவனே இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். இறுதியில் நூற்றுவர் தலைவன் இச்சொல்லைக் கொண்டு இயேசுவுக்கு அஞ்சலி செலுத்துகிறான். யூத மதத்தின் காலம் முடிவுக்கு வந்துவிட்டது என்பதை குறிப்பிட, ஆலயத்திரை கிழிகிறது; இந்த நிலையிலேயே, புறவினத்தாரின் சொற்களாகக் கூறப்படும் ''உண்மையில் இவர் கடவுளின் மகன்'' (15:39) என்னும் சொற்றொடர், இயேசுவினுடைய மரணத்தின் ஆற்றலைப் பறைசாற்றுகின்றது.

ஆ) புனித மத்தேயு:- உயிர்த்த இயேசுவின் கொள்கை வெளிப்பாட்டுடன் நற்செய்தியினை உச்சநிலைக்குக் கொண்டு வருகிறார்; ''எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நான் உலகமுடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்'' (மத் 28: 18-20). இறைவாக்கினர் தானியேல் முன்னறிவித்ததுபோல (தானி 7:13), உலகளாவிய உரிமை அளிக்கப்பட்ட மனுமகனாக இயேசு தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறார். தந்தை அனைத்தையும் அவருக்குக் கையளித்துள்ளதால் (11:27), சாத்தானிடமிருந்து இத்தகைய உரிமையினைப் பெற மறுத்துவிடும் இயேசு (4:8 தொ) எவ்வாறு பகைவர்களை வெற்றி கொண்டார் என்பதைக்காட்ட இந் நற்செய்தி முயல்கிறது. இறைவனின் அரசு கிறிஸ்துவுனுடைய அரசாகும். இதைக் காட்ட, இயேசு இஸ்ராயேலின் பழமைக்கு நிறைவு அளிக்கவே வந்தவர் என்பதால், மத்தேயு ஆதித்திருச்சபையின் மறைநூல் வாதத்திற்கு முக்கியத்துவம் தருகிறார். மற்றவற்றைவிட இவர் ஓர் ஒப்பற்ற திருச்சபையின் நற்செய்தியை எழுதியுள்ளார். கடந்த கால நிகழ்ச்சிகளை அவரது காலத்திற்குப் பிரசன்னப்படுத்துகிறார்.

இ) புனித லூக்காஸ்:- தான் திருச்சபையின் மீது கொண்டுள்ள அக்கறையைத் தனது நூலாகிய அப்போஸ்தலர் பணியில் வெளிப்படுத்துகிறார். மேலும் இறைவாக்கினருடைய அறிவிப்பின் காலத்திற்கும் திருச்சபையின் காலத்திற்கும் இடையில், இயேசுவின் காலம் என்ற ஒன்று உண்டு என்றும் உறுதியாகக் சுட்டிக்காட்டுகிறார் (லூக் 16:16; 22:35-38; அ.ப. 2:1). திருச்சபையின் காலத்திற்கு இயேசுவின் வாழ்வு முக்கியத்துவம் அடைகிறது. திருச்சபைக்கான இறைவனின் திட்டத்தில், எடுத்துக்காட்டான மதிப்புடைய முதல் செயலாகும். இதனை அடிப்படையாக் கொண்டே வரவிருக்கும் காலமானது செயல்படுகிறது. கடந்தகால நிகழ்ச்சி எப்போதும் பிரசன்னமாக உள்ளது. மற்றொரு கோணத்தில் இயேசுவின் உருவமானது ஏழைகளுக்காக (லூக் 4:18), பாவிகளுக்காக (லூக் 15), உலகில் உரிமையற்றவர்களுக்காக தம்மையே அளிக்கின்ற இரக்கமிக்க மீட்பரைப் பற்றியதாகப், (லூக் 3:6; 9:38. 42;அ.ப. 10:38) பெரும்பாலும் உள்ளது. இறுதியாக, 'இறைமகன்' என்னும் சொல்லிற்கு ஒரு கண்டிப்பான பொருளைத்தந்து, 'கிறிஸ்து' என்னும் பெயரிலிருந்து அதனைத் தெளிவாக வேறுபடுத்தி காட்டுகின்றார் (லூக் 1:35; 22:70).

ஈ) புனித யோவான்:- இயேசுவின் முன் வாழ்வு பற்றிய பாரம்பரிய அறிக்கையுடன் நூலைத் தொடங்கி கிறிஸ்துவில் தந்தையின் மகிமையினையும், தனது உலக வாழ்வுக் காலத்தில் அவர் நிறைவேற்றிய செயல்களில் அடையாளமாக ஏற்கெனவே காணக்கூடிய உயிர்ப்பின் மகிமையினையும் காட்டுகிறார். விண்ணகத்திலுள்ள மனுமகன். இங்கே இருக்கிறார், விண்ணகம் திரும்புகிறார்

(யோவா 3:13.31; 6:62; 13:1; 14:28; 16:28; 17:5). இயேசுவின் சாவுக்குரிய உடலில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் வார்த்தை அவரே *(யோவா 1:14).* இவர் மட்டுமே நிறைவான தீர்மானமாக வெளிப் பாட்டாளர். அவருக்கு விசுவாசத்தை அளிப் பது வாழ்வாகும் *(யோவா 3:16, தொ 36; 11:25 தொ).* முடிவில்லா நிலை *(யோவா 8:58; 10:38)* அல்லது தந்தையில் இயல்பாக உள்ள நிலை *(யோவா 10:30; 14:9 தொ 20; 17:21)* பற்றிய வாக்குகள் அவரிடமிருந்தே வருகின்றன.

யோவானின் நூல் மற்வர்களிடமிருந்து பெரிதும் வேறுபட்டதாகும். திருச்சபை வாழ்விற்கு பொருளளிக்ககூடிய நாசரேத்தூர் இயேசுவின் ஆள் மற்றும் அவரது உலக செயல்களுக்கு விசுவாசிப்பவரை மீண்டும் மீண்டும் நடத்திச் செல்வதால், ஒப்பற்ற நற்செய்தி என்று அழைக்கப்படலாம். அருட் சாதன வாழ்வு, திருமுழுக்கு *(3:22-30)* மற் றும் நற்கருணை *(யோவா 6)* ஆகியவற்றி லும் இந்நிலை உண்மையானதே.

முடிவுரை:- முடிப்பதற்கு முன்னே, 'திருவெளிப்பாடு' என்னும் நூலிலும் சில குறிப்புகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம். அது பல முக்கிய செய்திகள் குறிப்பாக சமயச்சடங்கு முறை வாழ்வுக்கு சந்திக்குமிடமாக உள்ளது. திருச்சபையினை நடத்திச்சென்று ஆள்கின்ற *(திருவெளி 1-3)* ஆண்டவராகிய உயிருள்ள கிறிஸ்துவை இந் நூல் காட்டுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக துன்புற்ற பாடுகளின் தழும்புக ளைத் தாங்கிய செம்மறியின் உருவத்தை அதில் காண்கிறோம் *(திருவெளி 5).* பகை வர் மீதான திருச்சபையின் வெற்றியினை உறுதிப்படுத்துகிறார் *(6:15 தொ; 17:14).* தமக்கும் திருச்சபைக்கும் இடையிலான திரு மணத்தை இறுதிக்காலத்திற்குக் குறித்து வைக்கிறார் *(திருவெளி 19:7 தொ; 21:9).* மனித வரலாற்றின் ஆண்டவராகிய இவரே 'முதலும் இறுதியும்' *(1:17),* தொடக்கமும் முடிவும் *(22:13),* அகரமும் னகரமும் *(1:8; 21:6),* ஆமென் *(3:14),* இறைவனின் அபிடே கம்பெற்றவர், மற்றும் இறுதியாக, எல்லா மாட்சிமைக்கும் மகிமைக்கும் உரிய அரச ருக்கெல்லாம் அரசர் ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவர் *(19:19; 17:14)* ஆவார்.

இப்போது ஆண்டவரும் கிறிஸ்துவுமாக உள்ள நாசரேத்தூர் இயேசுவின் மறைபொரு ளைப் பற்றிய இத்தகைய செய்திகளை ஒரே திட்டத்திற்குள் வரையறை செய்வதென்பது இயலாதது. நமக்காக வாழ்ந்து மரித்த இந்த இயேசுவின் பிரசன்னத்தை சில குறிப்பிட்ட மக்களுக்கு உண்மையென வெளிப்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட ஒரு இயக்கத்தை இவை வெளிப்படுத்துகின்றன. இயேசு என் னும் உண்மை மற்றும் கிறிஸ்தவ விளக்கம் என்பவற்றிற்கு இடையிலான உறுதியான இணைப்பைக் கொண்டு மரபுக் கோட்பாடு மதிப்பிடப்படுகிறது. ''ஊன் உருவில் வந்த இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும், கொள்ளச் செய்யும் ஏவுதல் எல்லாமே இறை வனிடமிருந்து வருகிறது'' *(1 யோவா 4:2).* தம்மையே வெளிப்படுத்தவும், பிறருக்கு அறிவிக்கவும், விசுவாசமானது தனது ஆரம்ப பருவத்தில் பாலஸ்தீன யூதர், பரவி யுள்ளோர், சுற்றியுள்ள கிரேக்கர் போன்ற அக்காலத்திய பல்வேறு கலாச்சாரங்களைச் சார்ந்திருப்பதாகத் தன்னை காட்டியது. பல வேறு நாகரீங்களுக்கு ஏற்ப இவ்வாறு தன்னை மாற்றியமைத்துக் கொள்வதன் மூலம் திருச்சபை எல்லாவித எதிர்கால விளக்கங்களுக்கும் வழியேற்படுத்தி, முன்கு றித்துக் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டிற்கு பின்னர், திருமறையை விளக்கவுரையாளர் கள், இவ்வியக்கத்தைக் தொடர்கின்றனர். சான்றாக, விளக்கமானது எல்லா காலத்திற் கும் உரியது என்று குறிப்பிடப்படாமல் இயேசுவின் தன்னறிவு, அவரது இயல்பு மற்றும் அவரது ஆட்தன்மை, ஆகியவை பற்றி காலப்போக்கில் பல விவாதங்கள் எழும். இன்றும் இயேசு கிறிஸ்துவின் மீதான விசுவாசம் காணப்படும் பல்வேறு கலாச்சாரங்களில் இம்முறை கடைபிடிக்கப் பட வேண்டும்.

இயேசு சோதிக்கப்பட்டது

ஆவியானவரால் தூண்டப் பெற்று பாலை வனத்துக்குச் சென்ற இயேசு அலகையால் நாற்பது நாள்காலம், சோதிக்கப்பட்டார் *(மாற் 1:12-13; மத் 4:1-11; லூக் 4:1-13; எபி 2:18; 4:15).* இறைமகன் இயேசு மனிதனாகப் பிறந்தார் சோதிக்கப்பட்டார். கடவுளின் மனிதரெனக் காட்ட சோதனையை வென் றார். ''அவர் நம்மைப் போல ஒருவராயிருப் பதால், பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் சோதனை, துன்பங்களுக்கு உட்பட்டவரா னார்'' ஆகவே அவர் நம்முடைய சோதனை வேளையில் இரக்கம்கொண்டு உதவக் கூடி யவர் *(எபி 4:15)* என்று எபிரேயருக்கு எழு தப்பட்ட திருமுகம் கூறுகிறது. யோவான் நற்செய்தி இயேசு சோதிக்கப்படுவதைக் கூற வில்லை. மற்ற நற்செய்திகள் இதைப்பற்றி 5 கருத்துக்களைக் கூறுகின்றன. அ. இயேசு சோதனையைச் சந்தித்தார். ஆ. பாலைவனத் திலே சோதிக்கப்பட்டார். இ. நாற்பது நாள் பாலைவனத்தில் இருந்தார். ஈ. ஆவியால் தூண்டப்பட்டு அங்கு சென்றார். உ. சாத்தா னால் சோதிக்கப்பட்டார்.

மாற்கு நற்செய்தி மட்டும் காட்டுவிலங்கு களைப் பற்றிக் கூறுகிறது. ஆனால் நோன் பைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மத்தேயு, லூக்காஸ் நற்செய்திகளில் இயேசுவுக்கும் சாத்தானுக்குமிடையே நடந்த உரையாடல் நாடகப் பாணியில் தரப்பட்டுள்ளது. அல கையின் கருத்துக்களை உபாகமத்திலிருந்து மேற்கோள் கூறி *(6:13.16; 8:3),* இயேசு அவற்றை உறுதியாக நிராகரிக்கிறார். இறை மகன் என்ற அளவில், அப்பத்தினால் மட் டும் வரும் வாழ்வுக்கு ஊக்கமளிக்கவும், இறைவனைப் போலிப்பகட்டான புதுமை யால் சோதிக்கவும், இறைவன்பால் கொண் டுள்ள முழுப்பிரமாணிக்கத்தைக் கைவிட வும் மறுத்து விடுகிறார்.

இயேசுவின் சோதனையைப் பற்றிய நிகழ்ச்சியுரைகள் பல விதங்களில் புரிந்துக் கொள்ளப்படுகின்றன.

1. இவை இயேசுவின் சுய வாழ்க்கை விவரிப்பாகும். இதை இயேசு மட்டும் தான் சீடர்களுக்கு தம் மெசியாத் தூதை விளக்கிக் காட்ட, அவர் கூற, சீடர்கள் எழுதியிருக்க லாம். ஆனால் இயேசு தம் போதனையில் சுயவாழ்க்கை குறிப்புகளை வெகு அரிதாகத் தான் தருகிறார். மேலும் இந்நிகழ்ச்சியின் இலக்கிய வடிவம், இயேசுவின் கூற்றைவிட அவரைப்பற்றிய சிந்தனையையே சுட்டிக் காட்டுகின்றது.

2. இவை இயேசுவும் இவ்வுலகில் மனித னாகப் பிறந்து பிறமனிதரைப் போலவே சோதிக்கப்பட்டார் என்பதை விளக்குவதற் காக எழுதப்பட்டவை பக்திமிக்க கற்பனை யாகும். இதில் வெற்றி பெற மறைநூலில் போதிய கருவிகளையும் உதவிகளையும் கண்டார்; பகட்டான புதுமைகளை அடிப்ப டையாகக் கொண்ட விசுவாசத்தை நிராகரிக் கிறார். ஒரு காலத்திற்குத் தனிமையையும் நோன்பையும் அனுபவித்தார்; அலகையின் ஏமாற்றும் தாக்குதல்களை வென்றார் என்று காட்ட எழுதப்பட்டதாகும் இந்த கற்பனை மிக்க நிகழ்ச்சியுரையாகும்.

3. இறுதியாக இயேசுவின் பணிக் காலத் திற்கு முன்னுரையாக அவர் சாத்தானையும் அதன் அதிகாரத்தையும் வென்றார் எனக் காட்டுவதற்காக எழுதப்பட்டது இது.

மத்தேயுவின் வரிசை லூக்காவின் வரிசை யிலிருந்து மாறுபடுகிறது. லூக்கா தரும் இரண்டாம் சோதனையை மத்தேயு மூன்றா வதாகத் தருகிறார். இதில் யாருடைய வரிசை சரியானது? எருசலேமை மையமாகக் கொண்ட தமது இறையியலுக்கேற்ப, எருச லேமில் சோதனைகள் முடிவு எய்துகின்றன என்று காட்ட லூக்கா வேண்டுமென்றே சோதனை வரிசையை மாற்றிக் கூறுகிறார் என்று கூற இடமிருக்கிறது. மத்தேயுவும் லூக்காவும் இயேசுவுக்கும் அலகைக்குமி டையே ஒரு நாடகப் பாணி உரையாடலைப் புகுத்தித் தங்கள் நிகழ்ச்சியுரைகளைத் தரு கின்றனர். அலகை எளிதில் நம்பத் தகுந்ததா கத் தோன்றும் மூன்று பிரச்சினைகளை எழுப்புகிறது. உபாகமத்திலிருந்து எடுத்துக் காட்டு கூறி, அவற்றை இயேசு நிராகரித்து விடுகிறார்

இச்சோதனைகள் எவ்வாறு நிகழ்ந்தன? அலகை ஏதோ ஒரு புலப்படும் உருவத்தில் இயேசுவின் முன்நின்றும், இயேசுவை மலைச் சிகரத்திற்கும் தேவாலய முகட்டிற்கும் தூக்கிச் சென்றும் அவரைச் சோதித்தது என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமா? அவசியமன்று. இவையாயும் இயேசுவின் மனதிலேயே நிகழ்ந்திருக்கக்கூடும். ''மிக உயர்ந்த மலை'' (மத் 4:18); அதிலிருந்து '' ஒரு நொடிப் பொழுதில்'' உலக அரசுகள் அனைத்தையும் அவற்றின் மாட்சிமையையும் காட்டுதல் போன்ற குறிப்புகள், இயேசுவின் மனச் சோதனையை நற்செய்தியாளர்கள் நாடகப் பாணியில் எடுத்துக் கூறுகின்றனர் எனக் காட்டுகின்றன. இயேசு பாலைவனத்தில் தான் இருந்த இடத்திலேயே சோதிக்கப்பட்டார். இது மத் 4:1-11-இலிருந்து தெளிவாகிறது. சோதனை முடிவில் இயேசுவை அவர் இருந்த இடத்திலேயே காண்கிறோம். அலகை புலப்படும் வடிவம் எடுத்திருக்கத் தேவையில்லை. நாடகப் பாணியில் கூறும் இலக்கிய அமைப்பை இறையியல் உட்கருத்துடன் குழப்பக்கூடாது.

இந்நிகழ்ச்சியுரை பற்றிய குறிப்புகள் இயேசுவிடமிருந்தே தோன்றியிருக்க வேண்டும். நாம் கொண்டிருக்கும் வடிவில், இந்நிகழ்ச்சியுரை ஆதித்திருச்சபையின் படைப்பாகும். சோனைகள் உண்மையானவையே (எபி 2:18; 4:15). அவை புறத்திலிருந்து வந்தன; அவரது ஆன்மாவைப் பாதிக்கவில்லை. சோதனைகளால் அவர் களங்கமடையவில்லை. பாவத்தில் விழவில்லை. அலகை அவரை வெல்ல முடியவில்லை.

ஞானஸ்நானத்திற்கும் பொதுப்பணிக்கும் இடையில் வரும் இச்சோதனை நிகழ்ச்சி, இயேசுவின் வாழ்வில் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. ஞானஸ்நானத்திலே இயேசு மெசியாவாகத் திருநிலைப்படுத்தப்படுகிறார். யாவேயின் துன்புறும் ஊழியனாக நியமிக்கப்படுகிறார். இந்த அலுவலிலிருந்து வழுவச் செய்ய-இறைவனது சித்தத்துக்குப் பணியாது இருக்கச் செய்ய-அலகை இயேசுவைச் சோதிக்கிறது. இது இஸ்ராயேலரின் வரலாற்றை ஒத்ததாகும். இறைமக்களாக இருக்க அழைக்கப்பட்ட மக்கள் பாலைவனத்தில் சோதிக்கப்பட்டனர் (உப 8:3; 6:13. 16). ஆனால் பிரமாணிக்கம் தவறிப் போயினர். இயேசுவோ தமது அழைப்பிலிருந்து வழுவவில்லை. பிரமாணிக்கமுள்ளவராகத் திகழ்ந்தார். சோதனையில் இயேசு வெற்றி பெறுகிறார் (லூக் 4:4.8.12). அவரே உண்மையான இஸ்ராயேல், யாவேயில் உண்மையான ஊழியன். இச்சோதனைகள் இயேசு எத்தகைய மெசியாவாக இருப்பார் என்று காட்டுகின்றன. அவரால் ஏற்படுத்தப்பட்ட புதிய இஸ்ராயேல் இறைவனது வார்த்தைகளால் வாழுகிறது. அவரது வாக்குறுதிகளின் மேல் நம்பிக்கை இழப்பதில்லை. உலகத்தையன்று, இறைவனைமட்டுமே ஆராதித்துப் பணி செய்கிறது.

இஸ்ராயேலர் பாலைவனத்தில் சோதிக்கப்பட்டதை மாதிரிகையாகக் கொண்டு மத்தேயு, லூக்கா தங்களுடைய மூன்று சோதனைகளையும் அமைத்திருக்கலாம். உபாகமத்திலிருந்து கொடுக்கப்படும் எடுத்துக்காட்டுகள் இதனைச் சுட்டுகின்றன. 40 நாட்கள் உண்ணா நோன்பு இருந்தபின் இயேசு சோதிக்கப்பட்டார் என மத்தேயு கூறும்போது, இயேசு நாற்பது நாளும் சோதிக்கப்பட்டதாக லூக்கா கருதுவதாகத் தெரிகிறது. இந்த நிகழ்ச்சியுரையில் கொடுக்கப்பட்டிருக்கும் சோதனைகள் நீண்டகாலச் சோதனைகளின் உச்ச கட்டமாகும்.

இயேசுவின் ஞானம் - (WISDOM OF JESUS)

இது ஒரு ஞானவாத நூலாகும். இதற்கு முதல் மூன்று நூற்றாண்டுகளில் காலம் குறிக்கலாம். இது மூலத்தில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. ஆனால் இப்போது இது இரு கோப்திக் கையெழுத்து பிரதிகளில் மட்டும்தான் நமக்குக் கிடைத்துள்ளது. இதில் ஒன்று எகிப்தில் செனோபோஸ்கின் என்ற இடத்திலுள்ள பழங்கால கிறிஸ்தவ துறவியர் இல்லத்தில் 1946-இல் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது நாக் கம்மாதி நூல் நிலையத்தில் உள்ளது. இது யுக்னோஸ்தோசின் கடிதத்தை அடிப்படையாக வைத்து

எழுதப்பட்டதைப் போல் உள்ளது. இது, உயிர்த்த இயேசு, பன்னிரு சீடர்கள், ஏழு பெண்கள் இவர்களுக்கிடையில் நடக்கும் ஒரு உரையாடல் போல் உள்ளது. இவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வழியாக இயேசு, கண்ணுக்குப் புலப்படாதவைகள், மனிதக் கணிப்புக்கு அப்பாற்பட்ட வானங்களுக்கு மேலான உலகம், அங்கு வாழும் தெய்வீகமானவர்கள் ஆகியவற்றைப் பற்றிய பல அண்டம் சார்ந்த வெளிப்பாடுகளை அறிவிக்கிறார். இவையெல்லாம் யூக்னோஸ்தோசின் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதன் பின்சேர்க்கைப் பகுதியில், மரிய மக்தலேன் (ஞானவாத இலக்கியத்தில் முக்கிய இடம் பெற்றவர்) சீடர்களின் தொடக்கம் பற்றியும், பணி பற்றியும் விபரம் அறிகிறாள்.

இந்த நூலுக்கும் பெர்லினில் உள்ள புகழ் பெற்ற இதே தலைப்பைக் கொண்ட கையெழுத்து நூலுக்கும் உள்ள தொடர்பு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

இயேசுவின் பெயர்

இக்கட்டுரையானது, 'இயேசு' என்னும் பெயர் பலபெயர்களில் ஒன்று என்கிற நிலையில், என்ன கூறுகிறது, எதைக் குறிப்பிடுகிறது என்பதைப்பற்றி விளக்கும்.

1. ''இந்த இயேசு'':- பெயரானது, சாதாரணமாக மனித மொழியில், குறிப்பாக விவிலிய மொழியில் குறிப்பிடப்படுவதைப் போல, தனிப்பட்ட மனிதனையும், அவனது நிலையான தனித்துவத்தையும் குறிப்பிடுகின்றது. மற்றவரல்லாத, எல்லாமும் அவராகவே உள்ள, பல இடங்களில் (அ.ப. 1:11; 2:36; 5:30; 9:17) குறிப்பிடப்படும் இந்த இயேசுவை இப்பெயர் குறிப்பிடுகின்றது. மனித உருவில் தோன்றியவர் மற்றும் விசுவாசத்தினால் இறைமனிதர் என அறிக்கையிடப்படுபவர் என்ற இரண்டிற்குமுள்ள தொடர்ச்சி மற்றும் அது பற்றிய பல்வேறு கிறிஸ்தவ உண்மைகளை இச்சொல் குறிப்பிடுகின்றது. ''நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவை, கடவுள் ஆண்டவராகவும் மெசியாவாகவும் ஆக்கினார்'' (அ.ப. 2:36), ''உங்களிடமிருந்து எடுக்கப்பெற்ற இயேசு,.....அவ்வாறே மீண்டும் வருவார்'' (1:11). இவர் பாடுபட்டு இறந்ததால் 'மகிமையும் மாட்சிமையும்' இவருக்கு முடியெனச் சூட்டப்பட்டதையும் காண்கிறோம் (எபி 2:9). ''நீ துன்புறுத்துகிற இயேசுவே நான்'' (அ.ப. 9:5; 22:8; 26:15) என்று கூறி தமஸ்குவிற்கு செல்லும் வழியில் பவுலை மனம் மாற்றிய காட்சியும் இத்தகையதே. தனது மக்களை விட்டு அகலாமல் உள்ள அவர், கடவுளின் பிரசன்னத்தைமட்டுமல்லாமல், பவுல் அப்போது அனுபவித்த வல்லமையைக் கொண்டுள்ள விண்ணக மனிதரும், பகைமையோடு பவுல் துன்புறுத்திவரும் கலிலேயாவைச் சேர்ந்த ''இறைநிந்தனையாளரும்'' உண்மையில் ஒருவரே என்பதையும் இக்காட்சி பவுலுக்கு வெளிப்படுத்துகின்றது. ''ஊனக்கண் கொண்டு கிறிஸ்துவைப் பார்க்காமல்'' (2 கொரி 5:16) பவுல் செயல்பட்டிருக்கலாம். எக்காலத்திற்கும் அவரைக் கிறிஸ்து இயேசு ஆட்கொண்டார் (பிலி 3:12). ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் அறிவைப்பற்றி எண்ணும்போது, அவர் இதுவரை கொண்டிருந்த அனைத்து சிறப்புகளும் ஒன்றுமில்லாதவையாக உள்ளன (பிலி 3:8). உலகை இறைமுழுமையால் நிரப்புகின்ற இந்தக் கிறிஸ்து (கொலே 1:15-20), 'ஆண்டவராகிய இயேசு' என்று நீங்கள் ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவாகவே உள்ளார்'' (2:6).

2. நாசரேத்தூர் இயேசு:- மனித உடலுடன், சட்டத்திற்கு உட்பட்டவராக, ஒரு பெண்ணிடம் (கலா 4:4), சீரியாவின் ஆளுநராக கிரனேயு ஆண்டபோது (லூக் 2:2), தாவீதின் குடும்பத்தின் வழிவந்த யோசேப்பின் குடும்பத்தின் மூலம் (1:27) இயேசு உலகில் தோன்றினார். கலிலேயாவில் உள்ள நாசரேத்து என்னும் ஊரில் வாழ்ந்தார். எல்லா யூத குழந்தைகளைப் போன்று, சுத்திகரிப்பின்போது அவர் பெற்ற பெயரானது (லூக் 1:31; 2:21; மத். 1:21; 25), இஸ்ராயேலில் தனிச்சிறப்புமிக்க ஒன்றல்ல (சீரா 51:30). ஆனால், இச்சிறுகுழந்தையில் கடவுள்

இம்மானுவேலாக, 'கடவுள் நம்மோடு, தோன்றுவதன் மூலம் (மத் 1:23), அவரோடு இருந்து அவரில் மீட்பரான யாவே தோன்று வார் (உப 31:71) என்று முதல் இயேசுவாகிய யோசுவாவிற்கு அளித்த வாக்குறுதி நிறை வேற்றப்படுகிறது. அவரது தோற்றம் சாதார ணமான ஒன்றாக இருந்ததால், அவரைக் குறிப்பிடுவதற்கு வழக்கமாக நடைமுறை யில் உள்ளதுபோல் அவரது தந்தையின் பெயரையோ, முன்னோரின் பெயரையோ இணைத்து கூறாமல் (சீரா 51:30), அவர் வாழ்ந்த ஊராகிய நாசரேத்தின் பெயரை அவரது பெயருடன்சேர்த்து அழைக்கலாயி னர். பிற்காலத்தில் மத்தேயு மற்றும் லூக்கா வின் தலைமுறை அட்டவணைகள் இயேசு வின் அரசவழி மரபினை வலியுறுத்துகின் றன. விசுவாசத்தின் முதல் அறிவிப்புகள் நிகழ் காலத்தில் அவர் அழைக்கப்பட்டபடி யும், அவர் சென்றபிறகு நிலவிய நினைவுக ளின் படியும் 'நாசரேத்தூர் இயேசு' என்று அழைத்தனர் (யோவா 19:19;அ.ப.2:22; 4:10; 6:14; 22:8).

3. நற்செய்தி நூல்களில் இயேசு:- கிறிஸ்து வையும் அவரது பணிகளையும் குறிப்பிட நற்செய்தி நூல்கள் 'இயேசு' என்னும் பெய ரைரே பயன்படுத்தின. பொதுவாக அவர் தலைவர் அல்லது குரு என்னும் பொருள் பட 'ராபி' என்றும் (மாற் 4:38; 5:35; 10:17), இறந்து மாட்சிமை அடைந்த பின்னர் 'ஆண் டவர்' என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரி கிறது. சில குறிப்பிட்ட விதிவிலக்குகளைத் தவிர்த்து (மத் 21:3; லூக் 7:13; 10:1), நற்செய் திகள் எப்போதும் வெறுமனே இயேசுவைப் பற்றியே கூறுகின்றன. இயேசு தமது மாட் சியை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு முன்னர், மக்கள் அனைவரும் அவரைச் சாதாரண மனிதனாகப் பார்த்த காலத்திற்கு முன் நிலவிய மொழியைச் செயற்கையாக மீண்டும் கொணர முயலும் முயற்சி அன்று இது. செயற்கைமுறை எதுவுமில்லாமல் விசு வாசத்தின் இயக்கத்தைப் பின்பற்றி ஆண்ட வர் (அ.ப. 1:21; 2:36; 9:17), கிறிஸ்து 2:36; 9:22; 18:28), மீட்பர் (5:31; 13:23), இறைவ னின் மகன் (9:20; 13:33), கடவுளின் ஊழி யன் (4:27. 30) போன்ற மீட்பு மற்றும் இறைப்பட்டங்களையே ''இந்த இயேசுவுக் கு'' நற்செய்திகளும் அளிக்கின்றன. இவை இயேசுவைப்பற்றிப் பேசும்போதெல்லாம், நற்செய்தி என்பது இயேசுவின் (8:35), கிறிஸ்து இயேசுவின் (5:42; 8:12), ஆண்டவ ராகிய இயேசுவின் (11:20; 15:35) நற்செய்தி யைப் போதித்தலே என்பதைச் சரியான மரபாகக் கொண்டுள்ளன. இயேசுவின் தெய் வீகக் குணங்களையம், அவரது எல்லா செயல்களிலும் ஒரே மகனின் மாட்சிமையி னையும் (யோவா 1:14), மனுமகனுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பினையும் (1:51; 3:14) அடிக்கடி சுட்டிக்காட்டும் யோவான் நற்செய்தி, இயேசுவின் பெயரை உச்சரிக்கக் கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் விடாமல், அது தேவைப்படாத நிலையி லும், சாதாரண உரையாடல்களில் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறது (யோவா 4:6. 21; 11:32-41); இவ்வார்த்தை வரும்பொழு தெல்லாம், 'இயேசு கிறிஸ்து மனிதனாக வந்தார்' (1 யோவா 4:2) என்பதை அறிக்கையி டக் கொண்டுள்ள விருப்பத்தால், இப்பெய ரானது அதுவரும் இடங்களில் எல்லாம் வாழ்வின் வார்த்தையினுடைய (1:1) செல வாக்கினை வெளிப்படுத்துவது தெளிவாகி றது.

4. எல்லா பெயர்களிலும் மேலான பெயர்:- இயேசுவின் பெயரினின்றும், அது வெளிப்படுத்தும் தாழ்ச்சி, உண்மையான மனிதத் தன்மை ஆகியவற்றினின்று கிறிஸ் துவ விசுவாசம் விலகாமல் இருப்பதன் காரணம், இப்பெயர் எல்லாப் பெயர்களி னும் மேலாக இருப்பதும், விண்ணிலும், மண்ணிலும், மண்ணிற்குக் கீழும் அனைத் தும் அதற்குமுன் முழந்தாளிட்டு இருப்பது மேயாகும் (பிலி 2:9 தொ). இயேசு என்ற பெயர் ஆண்டவரின் சொந்தப் பெயராகவும் ஆயிற்று. இஸ்ராயேல் மீட்பிற்காக கடவு ளின் பெயரை அழைத்தபோது (யோவே 3:5), அவர்களை மீட்க எப்போதும் அவர்க ளோடே இருக்க, கடவுளே அளித்த 'யாவே' என்னும் பெயரையே உச்சரித்தனர் (யாத் 3:14 தொ). இப்பெயரானது, அசாதாரண

மான அழுத்தமும் திடமும் உள்ள ஒரு ஆட்தன்மையை வெளிப்படுத்தியது. இயேசுவின் பெயரும் அதேபோன்ற எல்லாம் வல்ல இறைவலிமையினையும், வெல்லமுடியாத ஆற்றலையும் கொண்டிருந்தாலும், நமக்கு அறிமுகமான பண்புகளையே, கொண்டிருந்தது. நமக்குச் சொந்தமான, தம்மையே எப்போதும் நமக்களித்த ஒருவரின் முன்னிலையில் நாம் நம்மையே காண்கிறோம்.

மனுக்குலத்தின் தனிப்பட்ட மீட்பும்(அ.ப. 4:12), திருச்சபையின் தனிப்பட்ட செல்வாக்கும் (3:6), திருச்சபையின் தனிப்பட்ட வல்லமையும் இயேசுவேதான்: ''இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்'' (9:34). திருச்சபையின் முழுப்பணியும் இயேசுவின் பெயரால் பேசுவதாகும் (5:40). இவ்வாறு தனது மனமாற்றத்திற்கு அடுத்த நாள், தமஸ்குவில் உள்ள செபக்கூடத்தில், பவுல் இயேசுவைப் பற்றிப் போதிக்கிறார் (9:20). ஏதென்சிலுள்ள மக்கள் மன்றத்தில் ''இயேசுவைப் பற்றியும், உயிர்ப்பைப் பற்றியும் அறிவிக்கிறார்'' (7:18. கொரிந்துவில், ''சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பற்றி அறிவிக்கிறார்'' (1 கொரி 2:2). அனைத்து கிறிஸ்தவரின் வாழ்க்கையானது ''ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயருக்காகத் தனது வாழ்வையே அர்ப்பணிப்பதில்'' அடங்கியுள்ளது (அ.ப. 15:26). மேலான மகிழ்ச்சி இயேசுவின் பெயருக்காக இழிவு படத்தக்கவர்களாகக் கருதப்படுவதிலும் (5:41), ஆண்டவராகிய இயேசுவின் பெயருக்காகச் சாவதிலும் (21:13) அடங்கியுள்ளது.

இயேசுவின் போதனைகள்

இது, நான்கு நற்செய்திகளில் மட்டும் தனிப்பட்ட விதத்தில் காணப்படும் போதனைகளின் தொகுப்பாகும். புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளில் அரிதாகவே இயேசுவின் போதனைகள் நேரடியாகக் குறிக்கப்படுகின்றன (1 கொரி 11:24-25 நேரடிக்கூற்றுக்கு எடுத்துக்காட்டாகும்). இயேசுவினுடையவை என்று பிற மூலங்களினின்று குறிப்பிடப்படும் போதனைகள், அவற்றின் உண்மைத் தன்மை ஏற்கக்கூடியதாக இருப்பினும் அவரது முக்கிய போதனைகளுக்கு சிறிதளவே புதிய கருத்துக்களைச் சேர்க்கின்றன. புதிய ஏற்பாடானது, விண்ணகம் சென்ற இயேசுவுக்கு உரியவை என்று கூறப்பட்டு, ஆவியால் நிரப்பப்பட்ட மனிதனுக்கு இறைவாக்கு முறையின் மூலமாக அறிவிக்கப்பட்ட (திருவெளி 1:10-3:22) வார்த்தைகளைக் கொண்டுள்ளது. மேலும், ஆதித்திருச்சபையில் முதன் முதலாக சேகரிக்கப்பட்ட இறை ஏவுதலுக்கு உட்பட்ட சிந்தனைகளையும், இயேசுவின் மரணத்திற்கு முற்பட்ட, நினைவு கூறப்பட்ட சொற்களையும் நற்செய்திகள் கொண்டுள்ளன என்று கூறலாம். நற்செய்தியாளர்களோ அல்லது அவர்கள் கையாண்ட மரபுகளோ நடுநிலைமையுடைய போதனைகளை எடுத்துக்கூறிய செய்தியாளர்கள் அல்ல. ஆனால், அவரையோ அல்லது அவருடைய செய்தியைப்பற்றிய தங்களுடைய உறுதிப்பாட்டை ஓரளவாவது எடுத்துக்காட்டவே அவரது போதனையை அவர்கள் பதிவு செய்தனர்.

நற்செய்தி நூல்கள் ஆராயப்பட்டு, இலக்கிய மற்றும் வரலாற்று திறனாய்வு முறைகளால் ஒப்பிடப்படும்போது, இயேசுவின் போதனையில் மைய முக்கியத்துவத்தைக் கொண்டு, அவருடைய சொற்களுக்கும் செயல்களுக்கும் (உ.ம். இறையரசின் வருகை, பாவிகளுக்கு மன்னிப்பு அளித்தல், மற்றும் துன்புற்று மரணம் அடைவது வரையிலான கீழ்படிதல்) ஒன்றிணைப்பை அளிக்கின்ற சில குறிப்பிட்ட தலைப்புகள் தோன்றுகின்றன. இவற்றை விளக்குவதோடு, இறைவன் மற்றும் நமக்கான அவருடைய சித்தம் பற்றிய போதனைகளும், தம்முடைய மனிதத்துவம் மற்றும் பணி பற்றிய இயேசுவே புரிந்து கொண்ட விதத்தையும் காண நாம் முயலவேண்டும்.

இயேசுவின் போதனைகளின் விளைவுகளை வெளிக்கொணருவது பிற்கால சந்ததியினரது கடமையாக இருந்திருக்கிறது. இவ்விளைவுகள், அவரது கூற்றுக்கள் நேரடியாக அறிவித்த தலைப்புகளும் அவருடைய கூற்

றுக்களில் உட்கருத்தாக அமைந்த தலைப்புகளும் ஆகும். ஒத்தமை நற்செய்திகள் எழுதி முடிக்கப்பட்ட காலத்திலேயே இவ்வலுவல் துவங்கிவிட்டது என்று கருத காரணம் உள்ளது. நான்காவது நற்செய்தியின் தோற்றத்துடன் இயேசுவின் போதனையானது புதிய ஏற்பாட்டு காலத்தில் மிகத் தெளிவான மற்றும் மிகவும் ஒன்றிணைந்த மறு வடிவமைப்பினைப் பெற்றது. யோவான் மற்றும் ஒத்தமை நற்செய்திகளுக்கு இடையே உள்ள உறவுபற்றி எந்தநிலை எடுக்கப்பட்டாலும், எந்தத் தலைப்பையும், அதைப்பற்றி அதன் இரு வேறுபட்ட அமைப்புகளில் முதலில் படிக்காமல் அது பற்றிய இயேசுவின் போதனைகளை இரு அமைப்புகளிலிருந்தும் தாறுமாறாக ஒன்று சேர்த்து ஒரு விவரிப்பை அளிக்க பெரும்பாலான அறிஞர்கள் உடன்படுவதில்லை.

1. இயேசு போதகர்:- இயேசு, அவருடைய சீடர்களாலும் எதிரிகளாலும் (மாற் 12:14) பொதுவாக மக்களாலும் போதகர் என்று கருதப்பட்டார். லூக்கா தவிர மற்ற நற்செய்தியாளர்கள் அனைவரும் ''ராபி'' அல்லது அதன் வேறுவடிவமான ''ரபோனி என்னும் 'அரமாயிக்' சொல்லையே கொண்டுள்ளனர். அவர் வெளிப்படையாக திறந்த வெளியிலும், செபக்கூடங்களிலும், ஆலயத்திலும் போதித்தார். தனது சீடர்களுக்கு தனியாகப் போதித்தார். அக்கால யூத போதகர்களைப் போன்றே அவர் சீடர்களைச் சேர்த்தாலும், அவர்களைப்போல விவிலிய விளக்கப்பள்ளியை உருவாக்காமல், தனது போதனைகளை அறிவிக்கத் தமது சீடர்களை அனுப்புகிறார் (மாற் 6:7-13). ஏற்றுக்கொள்ளப்பட்ட போதகர் என்ற நிலையில் நடத்தை மற்றும் கோட்பாடு பற்றிய கேள்விகளில் அவர் கலந்தாலோசிக்கப்பட்டார். விவாகரத்து உரிமை பற்றி அவரிடம் கேட்கப்பட்டபொழுது மாறுபட்ட சிறப்பான போதனையை அவர் பதிலாக அளித்ததை நற்செய்தி நூல்கள் குறிப்பிடுகின்றன (மாற் 10;1-12). மேலும், விபச்சாரம் பற்றிய தனிப்பட்ட குற்றச்சாட்டு (யோவா 7:53-8:11), ஒரு குடும்பத்தகராறு (லூக் 12:13-15, சொருக்கு யூதர்கள் வரி செலுத்த வேண்டிய சட்டமுறை (மாற் 12:13-17) பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இறையியல் கேள்விகளில், மிக முக்கிய கட்டளை பற்றிய கருத்து (மாற் 12:28-34; லூக் 10:25-28), உயிர்ப்பு பற்றிய சதுசேயருடைய எதிர்ப்பிற்கு பதில் (மாற் 12:18-27), வரவிருக்கும் காலத்தில் வாழ்வுபெற நிபந்தனைகள் அளித்தல் (மாற் 10:17-22), பிறவியிலேயே குருடனான ஒருவனைப்பற்றிய சீடர்களின் சந்தேகத்தை தீர்த்தல் (யோவா 9:2-3), மீட்பு பெற குறிக்கப்பட்டோரின் எண்ணிக்கைப் பற்றி ஓரளவு உறுதியளித்தல் (லூக் 13:23-24), போன்றவற்றைப்பற்றிக் கேட்கப்பட்டு பதிலளிக்கிறார். சங்109-யைக் குறிப்பிட்டு, மெசியா தாவீதின் வழிவந்தவரா என்பதுபற்றிய விவாதத்தைத் தொடங்கி வைப்பவராக இயேசுவே காட்டப்படுகின்றார் (மாற் 12:35-37). இத்தகைய அனைத்துச் செயல்களிலும், இயேசு அக்கால போதகர்களின் எண்ணத்திற்கு உட்பட்டு நடப்பவராகவும் சில கருத்துக்களிலாவது அவர்களைப் போன்றவராகவும் உள்ளார்.

மேலும் இயேசு தமது செயல்களுக்கு விளக்கமளிப்பவராகவும் (மாற் 11:15-17), அல்லது மலைப்பொழிவு மற்றும் மாற் 13-ல் உள்ள வெளிப்பாட்டு உரை முதலிய விரிவான சொற்பொழிவுகளை அளிப்பவராகவும் காட்டப்படுகிறார். இச்சொற்பொழிவுகள்பற்றிய ஆய்வு இவை ஓரளவு நற்செய்தியாளர்களின் தொகுப்பையும், அவற்றில் உள்ள போதனைகள், கேள்விகள் மற்றும் திறனாய்விற்கு அளிக்கப்பட்ட பதில்கள் என்றும் சுட்டுகிறது. மாற் 4:1-33-இல் உள்ளது போன்ற உவமைகளின் தொகுப்பு, அல்லது மத் 13-இல் உள்ள பெரிதும் விரிவுபடுத்தப்பட்ட தொகுப்பு போன்றவையும் இத்தகையனவே. இறையரசைப்பற்றி உவமைகளில் அறிவிப்பவராக இயேசு காட்டப்படுகின்றார். மாற் 4:10-12-இல் உள்ள கடினமான போதனைகள், இயேசு தம்மீது தாமே வித்தித்துக்கொண்ட பணிக்கும், பொது இறைவாக்குரைத்தல் மற்றும் தனிப்பட்ட அறிவுரை அளித்தல் (ஏச 6:9-10; 8:16) என்னும்

இறைவாக்கினரின் இருவித பொறுப்பபிற்கும் இடையில் ஒரு இணைந்த நிலையினைக் காட்டுகின்றன. ''பொது அறிவிப்பு மற்றும் தனிப்பட்ட விளக்கம்'' என்னும் முறையானது யூத போதகர் முறைகளிலிருந்து அறியப்படுகிறது. இதற்கு இயேசுவின் போதனைகளில் எடுத்துக்காட்டுகள் காணப்படுகின்றன (மாற் 7:1-23; 10:2-12). மாற்கில் இம்முறை காணப்படுவதை, உவமைகளில் காணப்படும் மறைவுத் தன்மையை விளக்க நற்செய்தியாளர் பயன்படுத்தும் செயற்கை யுக்தியாகப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். இது எவ்வாறு இருப்பினும், சில உவமைகள் முதலில் கேள்விகளுக்குப் பதிலாகக் கூறப்பட்டன. அவை இப்போது காணப்படும் சூழ்நிலையிலிருந்து அவற்றைப் பிரித்து எத்தகைய கேள்விகளுக்கு அவை பதிலளிக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, அவற்றை மிகவும் நிறைவான முறையில் புரிந்து கொள்ள இயலும்.

இயேசுவிற்கும் ராபிகளுக்கும் இடையில் இணையமைப்புத் தன்மை இருந்தாலும், அவருடைய காலத்தவரைக் கடிந்து கூறுகின்ற சொற்களை நற்செய்தி நூல்கள் கொண்டுள்ளன (மத் 23:1-36-ல் உள்ள நீண்ட விவாத உரையில் பதிக்கப்பட்டுள்ள மாற் 12:38-40-இன் சுருக்கமான கூற்றுக்கள்). அவர்களுடைய, போதனையின் தொகுப்பு ''மனிதர்களின் பாரம்பரியமாகக்'' கருதப்படுகிறது (மாற் 7:7), மேலும், இயேசுவின் போதனையானது பொது வியப்பையும் சில நேரங்களில் மறுப்பையும் உருவாக்கியது (மாற் 1:22, 27; 6:2; 11:18). கப்பர்நகூம் செபக்கூடத்தில், அவருடைய சொற்களும் பேயோட்டுதலும், மறைநூல் அறிஞர்களைப்போலன்றி அதிகாரத்துடன் உரைக்கப்பட்ட இப்புதிய போதனைபற்றிக் கேட்பவரை வியப்படையச் செய்தன (அதாவது, அவர் சாதாரண போதகர்களைப் போலன்றி, புதிய கோட்பாடுகளை அறிமுகப்படுத்தக்கூடிய சலுகையுடைய நியமிக்கப்பட்ட போதகரைப்போன்று போதித்தார் என்ற பொருள்படலாம்). போதகர் என்ற நிலையில் அவருடைய பணியானது குணமாக்குவதோடு நெருங்கிய தொடர்புடையதும் (லூக் 5:17; 6:6; 13:10-11), ஆற்றல் மிக்க செயலைச் செய்யுமாறு அவர் வேண்டப்பட்டபோது 'போதகரே' என்ற அழைக்கப்படுவதும் (மாற் 4:38; 5:35; 9:17; 38; 10:51; இக்கருத்து யோவா 3:2-இல் வெளிப்படையாக உள்ளது) குறிப்பிடத்தக்கன. இப்பெயரானது, இக்கால வழக்கைவிட பரந்ததாக பொருள் கொண்டது. ஆகவேதான் இதற்குப்பதிலாக ''தலைவர்'' என்ற மாற்றுச்சொல்லை சில நேரங்களில் லூக்கா பயன்படுத்துகிறார். வரவிருக்கும் காலத்தில் உயர்ந்த இடங்களுக்கான செபதேயவின் மக்களுடையவேண்டுகோளும் (மாற் 10:35-37) உருமாற்றத்தின் போதான பேதுருவின் மதி மயங்கிய கூற்றும் (மாற் 9:5), இப்பெயருக்கு, சாதாரண பொருளுக்கும் அதிகமாக பொருள் அளிக்கும் ஆதிகால கிறிஸ்தவப் போக்கைக் காட்டுகின்றன. இப்போக்கு நான்காம் நற்செய்தியில் வெளிப்படையாகிறது. அதில் ''ராபி'' என்ற சொல்லை இறைமகனுடனும் இஸ்ராயேலின் அரசனோடும் ஒன்றாக்குவது மட்டுமில்லாமல் (யோவா 1:49), இயேசுவினுடைய போதனையின் பொருளடக்கம் அவருடைய சுய வெளிப்பாடாகவும் (யோவா 17:14-31; 8:12-30) அமைந்துள்ளது.

எல்லா நற்செய்திகளிலும் இத்தகைய போதனைச்செயலின் பொருள் இன்னும் சிறிது விரிவாக்கப்படுகிறது. பொதுமக்களின் கருத்தின்படி, அவர் ஒரு இறைவாக்கினர், திருமுழுக்கு யோவானின் வாரிசு அல்லது முந்தைய காலத்தின் இறைவாக்கு ஆவியைப் புத்துயிர் ஊட்டுபவர் (மாற் 6:15; 8:28). ''சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டில் தவிர மற்றெங்கும் இறைவாக்கினருக்கு மதிப்பு உண்டு'' (மாற் 6:14) என்னும் பழமொழியானது, இயேசு இக்கருத்தினைக் குறிப்பாக ஏற்றுக்கொள்வதை வெளிப்படுத்துகிறது. ''இறைவாக்கின் எருசலேமுக்கு வெளியே மடிவது முறையாகாதே'' என்னும் லூக் 13:33-ன் கூற்று, இறைசெய்திக்காக துன்புற்ற இறைவாக்கினர்களுடன் இயேசு தம்மை ஒன்றாக்குவதாகக் கூட்டுகிறது. அவருடைய போதனையின் பெரும்பகுதியானது

அமைப்பிலும், முறையிலும், உட்பொருளிலும் இறைவாக்கினரின் போதனையோடு நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. மாற் 1:15-இல் வரும் அவருடைய செய்தியின் தொடக்க சுருக்கமானது, அதனுடைய சொல் தேர்வின்மூலம் இறைவாக்கை நிறைவேற்றுவதன் முன்னோடியாக, இயேசுவுக்கு இறைவாக்கினர் மரபில் உடனடியாக இடமளிக்கிறது. அவருடைய அழைப்புப்பற்றிய அவருடைய ஐயமற்ற உணர்வை, 'போதகர்' என்னும் பெயர் போதிய அளவு வெளிக்கொணரவில்லை. பொதுமக்களின் கருத்து ஓரளவிற்கு இறைவாக்கினர் கருத்துடன் நெருங்கி வந்தது. தாம் செய்வதை கட்டிக்காட்டுவதற்கு, அவரே மனுமகன் என்ற பெயரையே தேர்ந்தெடுத்ததாகத் தெரிகிறது.

2. போதனையின் வடிவங்கள்:- இயேசுவினுடைய போதனையின் வடிவங்கள், வடிவத்திறனாய்வு அமைப்புகளின் மூலம் அறியப்படலாம். உவமைகளும் கூற்றுக்களும் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தாலும், இரண்டிற்குமிடையே பரந்த வேறுபாடு உள்ளது. கூற்றுக்கள் அவற்றின் மாதிரிகைப்படியோ (அதாவது மேற்கோளுரை, அறிவுரை, மற்றும் ஆசிர் போன்று) அல்லது அவை வெளியிடபட்ட கலாச்சார சூழ்நிலையின்படியோ (இறைவாக்கு, வெளிப்பாடு மற்றும் ஞான மரபுகளைப் போன்று) தொகுக்கப்படலாம். கூற்றுகள் பற்றிய இத்தகைய ஆய்வானது, எழுதப்பட்ட இயேசுவினுடைய மரபினுடைய பல்வேறு கருத்துகளுக்குள்ளும் சிறிது நுண்ணோக்கு அளிக்கிறது. கூற்றுகளின் மூலத்தன்மையைத் தீர்ப்பிட வாய்ப்பளிக்கிறது. அவை பிறருக்கு எடுத்துக் கூறப்பட்ட தொடக்க காலத்தில் அவற்றைப் பாதித்தவைகளையும் அறிய வாய்ப்பளிக்கிறது.

இந்த கூற்றுக்கள் மூலத்தில் அரமாயிக் மொழியில் கூறப்பட்டன. இந்நற்செய்திகளுடைய கிரேக்க வாசகத்தின் பின்னணியில் அரமாயிக் நடை, மொழி மற்றும் மரபுக்கூறு பற்றிய தெளிவான ஆதாரங்கள் இருப்பதைக் காட்ட அறிஞர்கள் பெரிதும் விழைந்துள்ளனர். தனிப்பண்புகள் மற்றும் பல்வேறு இணையமைப்புகளுடன் கூடிய எபிரேய பாடல் வடிவங்கள் அடிக்கடி காணப்படுவது கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. இக்கூற்றுக்களைப் பாலஸ்தீன அரமாயிக் மொழிக்கு மீண்டும் மொழிபெயர்ப்பதானது, செமித்திய பாவகையின் பொதுவான இயல்பாகிய வார்த்தைகளை வைத்து விளையாடும் பண்பைக் காட்டுவதாகத் தெரிகிறது. அரமாயிக் மொழியில் இக்கூற்றுகள் முன்னரே உன்னிப்பாக படிக்கப்பட்டு தியானிக்கப்பட்டு ஏசாயாவின் நடையையும் கம்பீரத்தையும் பின்பற்றி அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும். இத்தகைய இறைவாக்கு வடிவம் மற்றும் மொழியை பயன்படுத்துவதன் மூலம், தனது சொற்கள் மறக்கப்படாமலிருக்க என்று போதகர் உறுதி செய்துள்ளார்.

இயேசுவின் போதனைகள் அனைத்தும் உவமைகள், தொடர்பற்ற போதனைகள் மற்றும் சொற்பொழிவுகளால் வெளிப்படுத்தப்படுவதில்லை. ஒத்தமை நற்செய்திகளில் ஓர் அளவுப்பகுதி ''அறிவிப்புக்கதை'' அல்லது சிறிய நிகழ்ச்சியுரையாக இருக்கலாம் (உ.ம். மாற் 2:15-17). இது சூழ்நிலையை மிகச் சுருக்கமாக எடுத்துக்கூறி, அதில் ஈடுபடும் ஆட்களைப்பற்றிக் கவலைப்படாமல், கேள்விக்குப் பதிலாகவோ அல்லது ஒரு செயலுக்குப் விளக்கமாகவோ அமையும் இயேசுவின் கூற்றுக்கு இட்டுச் செல்லுகிறது. இயேசுவினுடைய போதனையானது பேச்சோடு நின்று விடாமல், ஓரளவு செயல்களிலும் அறிவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. திருமுழுக்கு யோவான், இயேசுவின் பணியைப் பற்றி அறிந்துவர தூதுவர்களை அனுப்பிய பொழுது, அவருடைய பதிலானது அவரது குணப்படுத்தும் பணியையும் சுட்டிக்காட்டுகிறது (மத் 11:2-6; லூக் 7:18-23). இவ்வாறு, ஒத்தமை நற்செய்திகளில் நன்கு குறிப்பிடப்பட்ட வடிவை உடைய ''புதுமை நிகழ்ச்சி''களையும் பொதுவான அல்லது நன்கு குறிப்பிடப்பட்ட வடிவம் இல்லாவிடினும் இயேசுவே ஆண்டவர் என்பதை வெளிப்படுத்துகின்ற ''ஆண்டவர் நிகழ்ச்சிகளையும்'' கணக்கில் எடுத்துக்கொள்வது அவசியமா

கும். சீடர்களை அழைத்தல், இயேசுவே மெசியா என்று அறிவித்தல், உருமாற்றம், எருசலேமிற்குள் நுழைதல் மற்றும் ஆலயத்தைத் தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றை இவை கொண்டுள்ளன.

நான்காவது நற்செய்தியில் உவமைகள் இல்லை எனலாம். சில முதுமொழிகளே உள்ளன. அவையும் உரையாடல்களிலும் நீண்ட உரைகளிலும் உள்ளடங்கிப் போகின்றன. இந்த நூலில் வரும் நாடக உரையாடலானது (உ.ம். நிக்கோதேமுவுடன் 3:1-15), ஒத்தமை நற்செய்திகளில் அதிகம் காணப்படுவதில்லை. இந்நூலில் வரும் நீண்ட பின்னிப்பிணைந்த உரைகள் ஒத்தமை நற்செய்திகளில் வரும் தளர்வான தொகுப்புகளுக்கு ஒத்ததாய் இல்லை. மாறாக கிரேக்க மெய்யியல் சமய உரைகளோடு ஒப்புமை கொண்டுள்ளது. யோவானின் சொற்பொழிவுகளில் காணப்படும் கிரேக்க மாதிரி சொல்வழக்கு, எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் பாலஸ்தீனத்தில் அறியப்பட்டு இருந்ததாக சாக்கடல் ஏடுகள் காட்டினாலும், நான்காவது நற்செய்தியில் இயேசுவின் போதனை தோன்றுகின்ற வடிவங்கள், ஒத்தமை நற்செய்திகளின் எளிய வடிவங்களை வேண்டுமென்று மாற்றியமைத்திருப்பதாகவே இன்னும் தோன்றுகிறது.

3. பாரம்பரியத்தில் மாற்றங்கள்:- இயேசுவின் சொற்கள் (மற்றும் செயல்கள்) எந்த அளவிற்கு நம்பகமான விதத்தில் பாதுக்காக்கப்பட்டிருந்தன என்பது பற்றிய முடிவில் அறிஞர்கள் பெரிதும் மாறுபட்டு உள்ளனர் என்றாலும், நான்காவது நற்செய்தி எழுதப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே, இந்த மாற்றங்கள் நடைபெற்றிருந்திருக்கலாம். முதலில் நிரூபிக்கப்பட வேண்டியது என்ன என்பது பற்றி முதலில் தெரிந்து கொள்ளாமல், மூலப்படிவத்திலிருந்து இரண்டாவது தரமானவற்றைப் பிரித்தெடுப்பதற்கானப் புறநிலை அளவைக் கண்டுபிடிப்பது எளிதானதல்ல. இயேசுவின் போதனையை எடுத்துக்கூறும்போது, ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தின் எந்த பழக்கங்களும் விருப்பங்களும் அவரது சொற்களையும் செயல்களையும் நினைவு கூறும்படிச் செய்தன என்பதை நினைவிற் கொள்வது அவசியமானதாகும். தொடக்கத்திலிருந்தே ஒருவித தேர்வு முறை ஏற்பட்டிருக்கக்கூடும். சொற்களும் மையக்கருத்துக்களும் எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்பது, எழுதப்பட்ட நற்செய்திகளை ஒப்பிடுவதன் மூலம் இயலும்.

பல உவமைகளில், பிற்கால மாறிய சூழ்நிலைகளின் செல்வாக்கைக் கண்டுணரலாம். உதாரணமாக, மத் 22:1-14-இல் வரும் திருமண விருந்து உவமையினை அதற்கிணையான லூக் 14:16-24-இல் வரும் பெருவிருந்து பற்றிய உவமையுடன் ஒப்பிடும்போது, உவமையின் மூலக்கரு உடனே தெரிகிறது. அது அழைக்கப்பட்ட விருந்தினருக்கு உயர்ந்த உணவை தயாரித்து, பின்னர் அவர்கள் வரமறுத்தபோது அனைவருக்கும் பொதுவாக அதனை அளித்த மனிதனைப்பற்றிய உவமை ஆகும். இயேசுவிற்குப் பதிலளிக்க மறுத்து, பாவிகளுக்கு அவர் நற்செய்தி அளிப்பதைக் குறை கூறிய பரிசேய விரோதிகளுக்கு இவ்வுவமை உடனடியாகப் பொருந்துகிறது. நகருக்கு வெளியிலுள்ள மக்களை மீண்டும் மீண்டும் அழைக்கின்ற லூக்காவின் வடிவமானது (லூக் 14:23-24), திருச்சபையின் புறவினத்தாருக்கான பின் வந்த பணியின் தொடர் உருவகமாகத் தெரிகிறது. மத் 22:6-7-இல் கிறிஸ்தவ பணியாளர்களின் வேதசாட்சி மரணம் மற்றும் எருசலேமின் அழிவு ஆகியவற்றை மறைவாக சுட்டிக் காட்டுகின்ற பரந்த தொடர் உருவக வளர்ச்சி உள்ளது. இவ்வாறு, இறைவாக்கினர்கள் முதல் இறுதித்தீர்ப்பு வரையிலான வரலாற்றின் திட்டமாக உவமையை அது மாற்றுகின்றது. முதலில் ஒரு தனிப்பட்ட உவமையாகத் தோன்றிய மிகவும் புதிரான மத் 22:11-14 என்ற பகுதி (லூக்காவில் இல்லை) அதற்கு முந்திய ஒன்றோடு சேர்க்கப்பட்டு ஒழுக்கமற்ற, மனந்திருந்தாத புறவினத்தாரை அனுமதிப்பதிலிருந்து ஆதித்திருச்சபையை காப்பதற்கான ஒரு எச்சரிக்கையாக அமைந்திருக்கலாம்.

இயேசுவின் காலத்தவருக்குக் கூறப்பட்டதை மாற்றி அமைத்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் தொடர் உருவமாக்குதல் மூலமாக தங்களது அவசியத்திற்கேற்ப பயன்படுத்துகின்ற ஆதித்திருச்சபையின் மனப்போக்கை இந்த உதாரணம் தெளிவாக்குகிறது. அவர்கள் இறுதிக்கால சவாலை (உடனடி) எதிர்காலத்திற்கு மாற்றினர், திருச்சபையின் புறவினத்தார் பணிக்கு இடமளித்தனர், மற்றும் அறிவுரை பாணியளித்து தங்களது வாழ்விற்கான விதிமுறைகளைக் கண்டுபிடித்தனர்.

ஒத்தமை நற்செய்திப் பாரம்பரியத்தின் தனிப்பட்ட அமைப்புகளை இப்போது ஆராய்ந்தால் சில குறிப்பிட்ட தனிக்கூறுகள் ஒவ்வொன்றிலும் ஆதிக்கம் செலுத்துவதாகத் தோன்றுகிறது. இவ்வாறு, மத்தேயுவிற்கேயுரிய பகுதிகளில் மனுமகனின் வருகையை முன்னறிவித்தலை நோக்கிய போதனையின் மீது குறிப்பிடத்தக்க கவனமும், யூத சட்டத்தினுடைய நிலையான முக்கியத்துவத்தின் மீதான அதிக அழுத்தமும் உள்ளன. லூக்காவின் சிறப்புப் பகுதிகள், புறவினத்தார் மற்றும் அவபேறுடையோர் ஆகியோருக்கான கிறிஸ்தவப் பணியில் தனிப்பட்ட நாட்டம் கொண்டுள்ளன. அவ்வாறே மாற்குவும் தனக்கே உரிய அக்கறையைக் கொண்டுள்ளது. அவரது போதனையைப் பற்றிய ஒருமித்த வடிவமைப்பதற்காக, இயேசுவின் சொற்கள் மதிப்பீடு செய்யப்படும்போது, அவை காணப்படும் அமைப்பு வகைகளுக்கும், அவற்றை மாற்றியமைக்க காரணமாக இருந்தவற்றிற்கும் சிறிது முக்கியத்துவம் அளிப்பது அவசியமானது.

4. முக்கியத் தலைப்புக்கள்:- ஒத்தமை நற்செய்திகளில், இறையரசானது இயேசுவின் போதனையில் ஆதிக்கம் செலுத்துகிறது. இச்சொற்றொடரின் அடிப்படையான உட்பொருளானது, ராபிகளின் மரபு வழியாக, பழைய ஏற்பாட்டிலிருந்து (சிறப்பாக சங்கீதங்கள், மற்றும் உபஏசயவிலிருந்தும்) எடுத்துக்கையாளப்படுகிறது. அவற்றில் இறைவன் ஏற்கனவே அரசராக உள்ளார் மற்றும் அவரது வெளிப்படையான வெற்றியில் இறுதியாக ஆட்சிபுரிவார் என்னும் இரட்டை உறுதிப்பாட காணப்படுகிறது. வளர்ச்சி பற்றிய கருத்தைச் சார்ந்துள்ள இயேசுவின் உவமைகளில் இந்த இரட்டை நிலை உள்ளது. எபிரேய எண்ணத்தில், இயற்கையினுடைய புரிந்துக்கொள்ளமுடியாத நடைமுறைகள் (மாற் 4:27), இறைவன் தனது மக்களின்அன்றாடவாழ்வினைப்பாதுகாக்கின்ற மறைபொருளான மேலாண்மைக்கு அடையாளமாகும். அதே நேரத்தில், உருவகத்தினுடைய உவமேய போதகம் வரலாற்றின் கால கட்டத்தில் இந்த மேலாண்மை ஆற்றலுடன் செயல்படுவதைச் சுட்டிக்காட்டுகிறது. முதல் நூற்றாண்டு பாலஸ்தீனத்தில், இத்தகைய இறைமேலாண்மையின் விளக்கம் உடனடி வெற்றி பற்றிய ஆர்வமிக்க எதிர்பார்ப்பிற்கு நேரடி பதிலுரையாகத் தோன்றுகின்றது. பக்திமிக்க அமைதிப்போக்கு மற்றும் புரட்சிகரமான தீவிரவாதம் என்னும் இந்நம்பிக்கையின் இருவடிவங்களும், கும்ரான் பிரிவினை இலக்கியத்தில் ஒன்ற சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பரந்த அளவில் புகழ்பெற்று விளங்கிய வெளிப்பாட்டு இலக்கியங்கள் பிரபல்யமாயிருந்தன; எதிர்பார்ப்புகளை ஊக்குவித்தன. இதைப்பற்றி இயேசு கவலைப்படவில்லை என்று கூற முடியாது. இது அவருடைய போதனையில் தானி.7- கொண்டிருந்த பாதிப்பிலிருந்து தெரிகிறது. இப்பகுதியிலிருந்து மனுமகன் என்னம் சொல்லும், துன்பத்தின் அவசியமும், ''மிக உன்னதரின் புனிதர்களாக'' விளங்க சீடர்களை ஒன்று சேர்ப்பதும் பெறப்பட்டிருக்கலாம். இதற்கு மாறாக இயேசு எவ்விதத்திலும் வெளிப்பாட்டு இலக்கிய உணர்வுகளுடன் தம்மை ஒன்றுபடுத்தவில்லை. சுத்தி செய்தல் மற்றும் இஸ்ராயேலின் வெற்றி, மற்றும் எதிரியின் தோல்வி ஆகியவை வரலாற்று இறையரசுக்கும் தேவையாகும் என்ற வெளிப்பாட்டு எதிர்பார்ப்பை நினைவில் கொள்ளும்போது, அவரது போதனையின் தனிச்சிறப்பைக் காணலாம். எதிரி என்பது பேய்களின் சக்திகளையோ, அல்லது புறவின பகைவர்களையோ, அல்லது இரண்

டும் சேர்ந்ததாகவோ கருதப்படலாம். சில யூதர்கள் புறவினத்தாருடைய சிலைவழி பாடு மற்றும் ஒழுக்கமுறையைக் கண்டனம் செய்து, அவர்களுடைய மனமாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு உயிரோட்ட முள்ள இயக்கத்தைத் துவக்கினர் (மத் 23:15). மற்றவர்களோ, இறைவன் இக்காலத்தை தீய சக்திகளிடம் ஒப்படைத்துள்ளார்; இறை வன் தலையிட்டு தமது வெற்றியை உறுதிப் படுத்துகின்ற வரவிருக்கும் காலம்பற்றிய அடையாளத்தைப் பெறும் வரையில் ஒன் றும் செய்வதற்கில்லை என்று குறைந்த அளவு நம்பிக்கையுடையவராக இருந்தனர்.

இயேசு இத்தலைப்புக்களை மாறுபட்ட விதத்தில் பயன்படுத்தினார். ஒரு வகையில் அவர் எதிரியை பேயின் சக்திகளுடன் ஒப் பிட்டார்; அவரது பேயோட்டும் செயல்கள் இதற்கு தெளிவான சான்றாக உள்ளன. தீமை யின் போட்டி அரசு பயங்கரமாகப் பிளவு பட்டு இறுதியை நோக்கி செல்கிறது என் பதை உறுதியுடன் அறிவிக்க (சாத்தானின் வீழ்ச்சி பற்றிய காட்சி: லூக் 10:18) அரசு உருவகத்தை அவர் பயன்படுத்தியிருக்கக்கூ டும் (மாற் 3:24). இக்காலமானது பேயிடம் அளிக்கப்பட்டுள்ளது என்னும் கோட் பாட்டை அவர் நிராகரித்தார் (லூக் 4:5-8) என்னும் மரபினை, இயேசுவின் சோதனை பற்றிய நிகழ்ச்சியுரை காத்துவருகின்றது. மேலும், இயேசுவினுடைய குணப்படுத்தும் செயலானது பேயோட்டுவதைவிட பரந்த தாக உள்ளது. அவர் முடமானவர்களைக் குணப்படுத்தி அசுத்த நோய்களின் அவமதிப் பினின்று மனிதர்களை விடுவித்தார். இயேசு வைப் பொறுத்தவரையில் இறைவனின் அர சுரிமைக்கான முக்கிய எதிர்ப்பானது, தவ றான வழியில் செல்கின்ற மக்கள் நிறைந் துள்ள தவறான உலகமேயாகும்.

புறவினத்தார்பால், குறிப்பாக யூதர்கள் தினமும் தொடர்பு கொண்டவர்கள்பால், இயேசு பொறுமை, மன்னிப்பு மற்றும் அன்பு ஆகியவற்றைக் காட்டினார். போதித் தார் (லூக் 6:27-35). ஆயக்காரர் மற்றும் பாவிகளுடனான தொடர்பின் காரணமாக அவர் அவப்பெயர் பெற்றார் ('பாவிகள்' என்பது சட்டத்தைப்பற்றி கவலைபடாத யூதர்களை விட, புறவினத்தாரையே அதிகம் குறிப்பிட்டது). அவர் புறவினத்தாரை அவர் களுடைய அறியாமை மற்றும் அநீதிக்காக வெறுக்கவுமில்லை, மற்றும் அவர்களது வழிகளை ஏற்றுக்கொள்ளவுமில்லை (மாற் 7:37-இல் வரும் வஞ்சப்புகழ்ச்சி பற்றிய சிறந்த விளக்கம், மாற் 7:15-இல் வரும் பிரிவுபடுத்தும் சடங்கு உணவு விதிமுறை களை அவர் நிராகரிப்பதாகும்). நெருக்கடி செய்யப்பட்டால் ஒழிய (மத் 8:5-13), மற்ற நேரங்களில் அவர் தமது போதனையை தமது மக்களுக்கு மட்டுமே அளித்தார். தமது சீடர்களுக்கும் அவ்வாறே கற்பித்தார் (மத் 10:5-6). ஆனால் அதே நேரத்தில், அவர்களி டையே உள்ள புறவினத்தார் மீது அவர்க ளுக்கு ஒரு புதுப்பொறுப்பை அளித்து, தொடர்ச்சியான விரோதக் கொள்கையால் விளையப்போகும் அழிவைப்பற்றியும் எச்ச ரிக்கிறார். (மாற் 13-இன் வெளிப்பாட்டு மொழியானது இவ்வாறு, ஒருவகையில் விளக்கப்படவேண்டி உள்ளது).

இயேசுவின் போதனையில் அரசின் வரு கையை தடைசெய்பவர்களாக புறவினத்தார் இல்லாமல், மனந்திருந்தாத இஸ்ராயேலரே இருந்தனர்; அவரது முதன்மையான அறி விப்பானது, ''இறையரசு நெருங்கிவிட்டது; மனந்திரும்பி இந்த நற்செய்தியை நம்புங்கள் '' (மாற் 1:15) என்பதாகும். மனந்திரும்புத லுக்கான கோரிக்கையானது யூத போதனை யைச் சார்ந்ததாகும், திருமுழுக்கு யோவான் இதை ஏற்கனவே போதித்துள்ளார். (மத் 3:2). இயேசுவுடனான வேறுபட்ட, முரண் பாடான வடிவமானது, அவர் கடினமான, மனந்திருந்தாத இதயத்தை, பாவிகளிடையே இல்லாமல், நீதிமான்களிடையே கண்டதா கும் (மாற் 2:17). இவர்கள்தான் பாவிகளுக் கும் அவர் நற்செய்தி அளிப்பதைக்கண்டு சீற்றங்கொண்டார்; ஊதாரி மைந்தன் மற்றும் திருமண விருந்து போன்ற உவமைகளில் (லூக் 15:11-32; மத் 22:1-10) அவரது பதிலைக் கேட்டனர். புதிய இறைசெயலுக்கு முன்ன டையாளம் தவறானது என்று விவாதித்து,

காலத்தின் அடையாளங்களைப் படிக்க முடியாதவர்கள் என்று கடிந்து கொள்ளப்பட்டவர்களும் இவர்களே (லூக் 12:54-56). ஓய்வு நாளில் அவர் குணப்படுத்திய செயல்கள் இறைவனின் மாட்சிமைக்கு அவமதிப்பானவை என்று கூறி, மறைநூல் வல்லுநர்களின் விதிகள் பற்றிய பிரச்சினையை உருவாக்கியவர்கள் உண்மையில் பரிசேயரே. இது, விதியை கடைபிடிப்பதை வெளிப்படையானதாக மட்டுமே உண்டாக்கி, அதனுடைய இறைவாக்கு மற்றும் சுயமான சவாலை அழித்ததற்கு எதிரான இயேசுவின் வன்மையான கண்டனங்களை (மத் 23:1-36; லூக் 11:37-52) உண்டாக்கியது.

சுமையான சட்டத்தைக் கடைப்பிடிப்பதை இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஒரு நிபந்தனையாக ஆக்காததால், சட்டம் பற்றிய மறைநூல் அறிஞரின் சுமைக்கு மாறாக இயேசுவின் நுகம் எளிதானதாக இருந்தது (மத் 11:29-30). ஆனால், ஒருமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டு சீடனாக்கப்பட்ட பிறகு, ஒரு குழந்தையைப் போன்று ஆகவேண்டும் (மாற் 10:5); தீய ஆசைகளை வெட்டிவிட வேண்டும் (மாற் 9:43-47); தேவையானால், தனிப்பட்ட உடமைகளையும் (மாற் 10:17-27), தனது உயிரையுமே இழக்கவும் (மாற் 8:34-35) தயாராயிருப்பதும் அவசியமாகும். இத்தகைய கடுமையான கோரிக்கைகள் இயேசுவினுடைய பணியின் நெருக்கடியான சூழ்நிலையில் உருவாயின என்பதில் சந்தேகமேயில்லை (மாற் 6:7-11-இல் சீடருக்கான அறிவுரையில் காண்க). ஆனால், அவை புனித இறைவனுக்கு அவருடைய மாட்சிமையில் எவ்விதத்திலும் குறையாத மேல் வரிச் சட்டத்தையே மனிதர் முன்நிறுத்தும் விளைவைக் கொண்டிருந்தன. மறைந்துள்ள புதையல் மற்றும் விலை உயர்ந்த முத்து பற்றிய உவமைகள் காட்டுவது போன்று (மத் 13:44-45), மனிதனை தீர்மானம் செய்யும் நிலைக்குக் கொண்டு வருவது இயேசுவின் எண்ணமாகும். மறைநூல் அறிஞரின் பாரம்பரியம் போலன்றி, அவரது நன்னெறி போதனையின் பொதுவான நோக்கம் இதுவே. இறை அன்பு, மன்னித்தல் போன்ற இறைவனின் மேலாண்மைப் பண்புகளில், ஒருவகையில், பங்குபெறுவதாகிய ''இறையரசிற்கும் நுழையும்'' பொறுப்பை அவர் மனிதருக்கு அளித்தார் (மத் 18:23-25; அரசு மற்றும் வாழ்வு: மாற் 9:43-47; அரசு மற்றும் நேர்மை: மத் 6:33). துறத்தல் என்பது இயேசுவினுடைய போதனையின் ஒருதலைப் பண்பன்று; மனிதர் இறைவாழ்வைப் பெற்றுப் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனில், அது ஒரு உள்ளார்ந்த தேவையாகும்.

தீர்மானத்திற்குரிய வாய்ப்பானது வரையறையில்லாமல் திறந்திருப்பதன்று. அவருடைய வேண்டுகோளுக்கு பதிலளிக்காததால் தன் காலத்தவருக்கு ஏற்படவிருக்கும் பயங்கர விளைவுகளைப் பற்றி இயேசு எச்சரித்தார். தீர்ப்பு பற்றிய குறிப்பானது அவரது போதனையில் முதன்மையானதாக மட்டுமன்று (பெரும்பாலும் கணக்குக் கொடுத்தல் உருவகத்தால் வெளிப்படுத்தப்படுவது: மத் 25:14-30), அவசரமானதாகவும் உள்ளது. இஸ்ராயேலானது, வெட்டப்படும் அபாயத்திலுள்ள கனிகொடாத அத்திமரம் போன்று உள்ளது (லூக் 13:6-9). சில கூற்றுகளில் (மாற் 9:11), இஸ்ராயேலின் ஊழை முடித்துவிட்டு, அரசின் புதிய காலத்தை துவக்குகின்ற விரைவான முடிவை நோக்குபவராக இயேசு தோன்றுகிறார்.

இத்தகைய எல்லா போதனைகளிலும், சீடர்களின் குழுவை இயேசு தம்முடன் நெருங்கி இணைத்துக் கொள்கிறார். அவர்கள் அவரது போதனையைக் கற்று, பிறருக்கும் அளிக்கவே வேண்டும்; அவர்கள் போதித்தல், குணப்படுத்துதல் என்னும் அவருடைய பணிகளைப் பகிர்ந்து கொண்டனர். சீடர்களை வரவேற்பதோ அல்லது ஒதுக்குவதோ என்பது இயேசுவையே வரவேற்பது அல்லது ஒதுக்குவதாகும் (மத் 10:40; லூக் 10:16). குரு மற்றும் சீடர்களுக்குள் உள்ள இந்த ஒன்றிப்பு இயேசுவின் போதனைப்படி திருச்சபையின் அடித்தளமாகும். இவர்களே அரசினைப் பெறவேண்டிய (லூக் 13:32), மேலாண்மையிலும் தீர்ப்பிலும் பங்கு

கொள்ள வேண்டிய (லூக் 22:28-29), எல்லா வற்றிற்கும் மேலாக இயேசுவுடன் துன்புற வேண்டிய (மாற் 8:34-35) சிறு மந்தை ஆகும். ஒரு கட்டத்திலாவது, அரசு வருவ தற்கு முன்னதாக சில சீடர்கள் மணமகனின் துன்பத்தில் பங்கேற்பார்கள் (மாற் 10:35-45) என்று இயேசு நம்புவதாகத் தெரிகிறது. அப்பத்தையும் இரசத்தையும் அவர் தமது இறுதி இரவுணவில் அளித்தபோது கூறிய வார்த்தைகள், அவருடைய வாழ்வை (உடலை) பகிர்வதற்கு நிபந்தனையாக அவர்கள் அவரது பலியிலும் (இரத்தத்தி லும்) பங்கு கொள்ளவேண்டும் என்று பொருள் கொள்வதாகத் தெரிகிறது. இறுதி யில், முழுமையான தோல்வியின் மூலமே அவரது மேலாண்மையைக் கொணரவேண் டும் என்பதே, இறைவனின் சித்தம் என் பதை உறுதியாக உணர்ந்தும், தாம் இறந்தது இறைவனுக்காக மட்டுமன்றி, ''பலருக்காக வும்'' ஆகும் என்ற நம்பிக்கையோடும் மர ணத்திற்குத் தனியாகவே சென்றார்.

தமது மரணத்திற்குபின் என்ன நிகழும் என்றும் இயேசு எதிர்பார்த்தார் என்பது பற்றி அறிஞர்களிடையே சிறிதளவே ஒற் றுமை உள்ளது. நேரடியான அறிவிப்பு, உவமைகள் மற்றும் செயல்கள் மூலமாக (லூக் 11:20), தம்மையும் தமது சீடர்களையும் எண்பிப்பதாயும், அக்கறையில்லாதவர்க ளுக்கு தண்டனையாகவும் அமையவிருந்த அரசின் அருகாமையைப் பற்றி அவர் அறி வித்தார். தமது மரணமானது உயிர்ப்பில் எண்பிக்கப்படும் என அவர் எதிர்பார்த்தார் என்பது (சீடர்கள் இப்பொருளை கொண்டி ராவிட்டாலும்) பாரம்பரியத்தில் உறுதியாக நிறுவப்பட்டுள்ளது. மனிதனுடனான இறை செயல்களை முடிப்பதானது உடனேயோ அல்லது நீண்ட அல்லது குறுகிய இடைவெ ளிக்குப் பின்னரோ நடைபெறும் என்று அவர் எதிர்பார்த்தார் என்பது மட்டுமே தெளிவில்லாமல் உள்ளது. இறைவனைப் பற்றிய இயேசுவின் போதகம்: காண்: இறை வன் (பு. ஏ); அவரது ஆட்தன்மையைப் பற்றி: காண்க: கிறிஸ்து மற்றும் பிறதனிப் பட்ட தலைப்புகள், குறிப்பாக: மணமகன்; அவரது பொதுப் போதகம்: காண்க. ஒழுக்க நெறிஇயல் (பு. ஏ).

5. வளர்ச்சி:- இயேசுவினுடைய போத னையின் வளர்ச்சியானது, மூன்று முக்கிய கோணங்களில் நான்காவது நற்செய்தியில் நிகழ்கின்றது. ஒத்தமை நற்செய்தியின் இறு திக்கால இயல் மறுஆய்வு செய்யப்படுகி றது; ''இறையரசு'' என்பது ''முடிவில்லா வாழ்வு'' என்பதற்கு முழு இடம் அளிக்கி றது. தூய ஆவியைப் பற்றி போதனை வளர்ச்சியடைகிறது. ஒத்தமை நற்செய்தி ஏடுகளில் மறைந்துள்ள கிறிஸ்து இயல் விளக்கம் பெறுகிறது. மற்றும், சீடர்களின் சமூகம் தொடர்வதின் பொருள் பற்றிய உணர்வு சார்ந்த சிந்தனை உள்ளது. மேலும் காண்க: யோவானின் நற்செய்தி.

இயேசுவின் விசாரணை

1. யூதர்களின் தலைமைச் சங்கமும் நீதிமன் றமுமான செனத்திரீன் முன்னால் நடந்த இந்த விசாரணை நற்செய்திகளில் விவரிக்கப் பட்டிருக்கும் வடிவில், யூத நீதிமுறைக்குப் புறம்பானது என பெரும்பாலோர் கருதுகின் றனர். எனவே புதிய ஏற்பாட்டிலே உள்ள இந்த நிகழ்ச்சி தவறாக இருந்திருக்க வேண் டும். ஏனெனில் யூதர்கள் தங்கள் நீதிமு றையை மிக நுணுநுணுக்காய்க் கடைப்பிடித் தனர். இதற்கு மாறாக, இரு பதில்கள் தரப்ப டுகின்றன. அ) கி.பி. 70-இல் யெருசலேம் அழிக்கப்பட்டபோது இந்நிகழ்ச்சி நடந்த காலம் பற்றிய குறிப்பும் அழிந்திருக்க வேண்டும். ஆ) புதிய ஏற்பாட்டு விவரிப்பு கள், முந்திய அல்லது பிந்திய வழக்கத்தோடு ஒத்துப்போகவில்லை என்றால் பிலாத்து வின் விசாரணைக்கு இயேசுவைக் கைய ளிக்க நடந்த முன்விசாரணையாக இது இருக் கலாம். யூத தலைவர்கள் அளவுக்கதிகமாக இயேசுவின் மேல் வெறுப்புக் கொண்டிருந்த தால் நீதிமுறையான விசாரணை அவசியமற் றதாகக் கருதியிருக்கலாம்.

இயேசு மெசியா என்று உரிமை கொண் டாடியது யூதர்களுக்கு ஒரு குற்றமாகப்பட வில்லை. மோசே சட்டத்தை மீறியதாக

அவரைக் குற்றம் சாட்டவில்லை. ஆனால் சட்டத்திற்குப் பரிசேயர் அளித்த விளக்கத்திற்கு மாறான விளக்கம் அளித்தார் என்றும், சட்டத்தை மீறியவர்களோடு நட்புக் கொண்டார் என்றும் கூறினர். இயேசுவின் மேல் சாட்டப்பட்ட மற்ற குற்றங்கள் பல. இயேசுவைப் பேல்செபூல் பிடித்திருக்கின்றது என்றனர் (மத் 10:25; மாற் 3:22 தொ; 6:14). இயேசு வியாபாரிகளை விரட்டியது கோயில் குருக்களை மதிக்காததாகும் (மாற் 11:15-19). எந்த அதிகாரத்தால் தமது செயல்களைச் செய்வதாக விளக்க இயேசு மறுத்துவிடுகிறார் (மாற் 11:27-33). மேலும் இயேசு மக்களைத் தூண்டி குழப்பத்தை விளைவித்து அதன் விளைவாக உரோமையரின் பதிலடிக்குக் காரணமாகலாம் என தலைமைச் சங்கத்தினர் கருதினர் (யோவா 11:47 தொ). இறைநிந்தனை கூறுவதாகவும் குற்றம் சாட்டினர். மத்தேயுவும் மாற்கும், மெசியா, இறைநிந்தனை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களையும் சேர்த்தே கூறியுள்ளனர் (மத் 26:63-64; மாற் 14:61-62). ஆனால் இவைகளைத் தனித்தனியாகக் கூறும் லூக்காவின் விவரிப்பே சரியென அறிஞர்கள் கருதுகின்றனர் (லூக் 22:67-69). யூத வழக்கப்படி இறைநிந்தனையைக் கேட்கும்போது ஒருவர் ஆடையைக் கிழித்துக் கொள்வார். அதையே பெரிய குரு செய்கிறார். மெசியா உரிமை கொண்டாடியதன்று, இறைநிந்தனையே, மோசே சட்டப்படி, சாவுத் தண்டனைக்கு உகந்ததாகும் (லேவி 24:16; யோவா 19:7). ஆனால் இக்குற்றச்சாட்டுகள் பிலாத்துவின் முன் செல்லாது. ஆனால் மரணதண்டனை அளிக்கத் தலைமைச் சங்கத்திற்கு அதிகாரமில்லை. அதற்கு பிலாத்து ஒப்புதல் தர வேண்டியது அவசியம் (யோவா 18:31). எனவே குருக்கள் இயேசுவுக்கு எதிராகப் பல குற்றச் சாட்டுகளைச் சேகரித்தனர். இக்குற்றச் சாட்டுகளைக் கொண்டாவது பிலாத்து இயேசுவுக்கு மரணதண்டனை அளிப்பார் என எண்ணினர்.

2. பிலாத்துவுக்கு முன்னால்:- நற்செய்தியாளர்கள், குறிப்பாக லூக்கா, உரோமையர்களைப் பற்றி உயர்வாகவே எழுதியுள்ளனர். ஏனெனில் அவர்கள் புற இனத்தாரை மனந்திருப்ப இது ஒரு வழியெனக் கருதினார். பிலாத்து ஒரு கொடூரமான மனிதன். யூதர்களின் பாஸ்காப் பண்டிகையின்போது எத்தகைய குழப்பமும் நேரிடாமல் பார்த்துக் கொள்வதில் கருத்தாயிருந்தவர். இருப்பினும் அவர் இயேசுவின் மேல் மிகுந்த தயை காட்டினார்.

இயேசுவின்மேல் சாட்டப்பட்ட பல குற்றங்களில் (மாற்கு 15:3) மூன்று மட்டும் சிறப்பாக லூக் 23:4-இல் குறிக்கப்படுகின்றன. அவை:

அ. இயேசு மக்களிடையே கிளர்ச்சி செய்தார் (லூக் 23:2)

ஆ. செசாருக்கு வரிசெலுத்த வேண்டாமென்கிறார். ஆனால் லூக் 20:25-இல் பின்னணியில் இது பொய்க் குற்றமாகும்.

இ. தானே அரசரென உரிமை கொண்டாடினார். இக்குற்றம் ஒவ்வொரு நற்செய்தியிலும் நான்கு முறையாவது வருகிறது. யோவான் பன்னிரண்டு முறை குறிப்பிடுகிறார். இவைகளைக் கேட்டு மனம் குழம்பிப் பிலாத்து தீர்ப்பை மற்றவர்கள் எடுக்க விட்டு விடுகிறார். ஏரோதிடம் அனுப்புகிறார் (லூக் 23:6-13). ஆனால் அவருக்கு இயேசுவின் மேல் அதிகாரம் இல்லையாதலால் அவர் இயேசுவைப் பிலாத்துவிடம் திருப்பியனுப்பினார். மேலும் பிலாத்து இயேசுவை, பரபாவுக்குப் பதிலாக விடுதலை செய்ய நினைத்தார். அதுவும் முடியாமல் போகவே அவர் கையைக் கழுவி, தன் தீர்ப்புக்குத் தான் பொறுப்பில்லை என்று கூறுகிறார் (மத் 27:24).

ஒத்தமை நற்செய்திகளில், இயேசு இந்த விசாரணையின்போது பெரும்பாலும் மௌனம் காக்கிறார். ''நீ யூதர்களின் அரசனோ?'' என்ற பிலாத்துவின் கேள்விக்கு இயேசு அளிக்கும் பதில் பிலாத்துவை மேலும் குழப்புகிறது (யோவா 18:33-38). சிலுவையின் மேல் வைக்கப்பட்ட குற்ற அறிக்கை, இயேசு அரசஉரிமை கொண்டாடியதால்,

உரோமைக்கு எதிராகக் கிளர்ச்சி உண்டாக்கியவராக அறிவிக்கிறது (19:18).

இயோன் (IJON - அழிவு, சிதைவு)

பாலஸ்தீனத்தின் வடகோடியில் இருக்கும், இஸ்ராயேலின் முக்கியமான நகரமாகும். சீரியநாட்டு அரசன் பென்-அதாத், பாசா ஆட்சிக் காலத்தில், யூதாவின் அரசன் ஆசாவின் தூண்டுதலால் இஸ்ராயேலின் நகரமான இயோனைக் கைப்பற்றினார் (1 அர 15:20; 2 நாள் 16:4). பிற்காலத்தில் அசீரிய நாட்டைச் சேர்ந்த மூன்றாம் திகிலாத்து பிலேசர் (733. கி.மு.) பெக்காகின் காலத்தில் இந்நகரைக் கைப்பற்றி அங்குள்ள மக்களை நாடு கடத்தினார் (2 அர 15:29).

1 அர 15:20-இல் சீரியர்கள் தமஸ்குவிலிருந்து படையெடுத்து வந்தபோது நகரங்கள் வடக்கிலிருந்து தெற்காக வரிசையில் குறிக்கப்படுகின்றன. ஆகவே இயோன் ஆபேல்-பெத்து மாக்கவுக்கு வடக்கிலுள்ள சமவெளியில், வித்தானி மற்றும் கெசிபானி ஆறுகளுக்கிடையில் இடம் காட்டப்படுகிறது. ஆனால் அதற்குப் போதிய தொல்பொருள் ஆய்வு ஆதரவு இல்லை. மெர்ச்-அய்யூன் என்ற நகரமும் மாவட்டமும் இப்பெயரை ஒத்து வந்துள்ளன.

இய்யிம் (IIM - பாழடைந்த சிதைவுகள், அழிவுகள்)

யூதாவின், தென் கோடியில் ஏதோமின் எல்லை ஓரமாக யூதாவின் இனத்தவர்களுக்கு அளிக்கப்பட்ட நகர்களில் ஒன்று (யோசு 15:29). இது பாகலாவுக்கும் ஏசேமுக்கும் இடையில் உள்ளது. பேயோர்-செபாவுக்கு வடக்கிலும் அனாபுக்குத் தெற்கிலும் உள்ள இக்கால தெயிர்-ஏல்-காமி என்ற இடத்தில் இய்யிம் இருந்திருக்கலாம்.

இரகபியா (REHAB'AH - யாவே விரிவாக்கினார்)

இரகபியா என்பவர் மோசேயின் பேரபிள்ளையும் எலியேசரின் புதல்வனுமாவார் (1 நாள் 23:17; 24:21; 26:25). தேவாலயத் திருப்பணிக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட லேவியக் குடும்பங்களில் ஒன்றிற்குத் தலைவராயிருந்தார்.

இரகபெயாம் (REHOBOAM - மக்கள் பெருகுவார்களாக)

இரகபெயாம் சாலமோன் மன்னரின் புதல்வரும் வாரிசும் ஆவார் (கி.மு. 922-915; 1 அர 11:43; 1 நாள் 3:10; 2 நாள் 9:31). இவர் செக்கேமில் இருந்த முதியோர்களின் பேச்சைக் கேட்காமல் சர்வாதிகார ஆட்சி ஆளத் தலைப்பட்டார். மக்கள் இதை எதிர்த்தனர். யூதா இஸ்ராயேலிலிருந்து பிரிய இது காரணமாயிருந்தது (1 அர 12:1-20; 2 நாள் 10:1-19). சாலமோனின் சிலைவழிபாடு இப்பிளவுக்குக் காரணமாயிற்று என்று விளக்கப்படுகிறது (1 அர 11:29-36; 12:15). பிரிக்கப்பட்ட யூதாவின் முதல் மன்னர் இவரே. இவர் தன் நாற்பத்தி ஒன்றாம் வயதில் அரசபதவி ஏற்று பதினோரு வருடங்கள் அரசாண்டார். இவருடையதாய் அம்மோனிய வம்சத்தைச் சார்ந்த நகாமா என்பவராவார். தன் ஆட்சியில் மக்களைக் கடுமையாக நடத்தினார். சிலை வழிபாட்டில் ஈடுபட்டார். அதற்குத் தண்டனையாக எகிப்தின் அரசனாக விளங்கிய சீசாக்கு பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்துப் பெருஞ்சேதம் விளைவித்தார் (1 அர 14:21-31). இதற்கு முக்கிய காரணம் இரகபெயாமின் பாவமே என்றும், மனம் திருந்தியதால் அழிவு குறைவே' என்றும் ஓர் விளக்கம் தரப்படுகிறது (2 நாள் 12). இரகபெயாம் இஸ்ராயேலோடு போரிடத் துணிந்ததைச் செமாயா என்ற இறைவாக்கினர் தடுக்கிறார் (2 நாள் 11:1-4). எகிப்திய படையெடுப்பைத் தடுக்க பல அரண்கள் அமைக்கப்பட்டன. சீசாக்கின் இறப்பிற்குப்பின் எகிப்து பாலஸ்தீன நாட்டைத் தாக்கத் துணியவில்லை. இன்றும் இலாக்கீசிலும் அசெக்கிலும் உள்ள கோட்டை அரண்கள் பாழ்பட்டுக் கிடக்கின்றன.

இரகாபயாமுக்கு 18 மனைவிகளும் 60 வைப்பாட்டிகளும் 28 புதல்வர்களும் 60 புதல்வியரும் இருந்தனர் (2 நாள் 11:21). தன் புதல்வர்களை நாட்டின் பல பகுதிகளுக்குத் தலைவர்களாக்கினார். அவர்களுடைய

விருப்பப்படி மாக்காவுக்கு பிறந்த இரகபெயாமின் மகன் அபியா அரசனானார் (11:22-23).

இரகலாயா (REELAIAH - யாவே இடி முழங்கினார்)

பாபிலோனியாவிலிருந்து செருபாபேலுடன் நாடு திரும்பியவர்களில் பட்டியலில் முதலில் இடம் பெறுபவர்களின் பெயர்களில் இவரும் ஒருவர் (எஸ் 2:2). நெக 7:7-இல் இராகமிய என்றழைக்கப்படுகிறார்.

இரகுவேல் (RAGUEL - இறைவனின் நண்பர்)

1. இவன் எகுபத்தானாவில் வாழ்ந்த நப்தலியின் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் எதினாவின் கணவனும் சாராவின் தந்தையுமாவார். இந்த சாரா தோபியாவின் மனைவி (தோபி 3:7).

இரகுவேல் (REUEL - இறைவனின் நண்பன்)

1. இவர் எசாவுக்கும் இஸ்ராயேலின் மகளான பாசமாத்துக்கும் பிறந்த மகன் ஆவார். ஏதோணியக் குலத்தலைவர்களான நகாத்து, சேரா, சம்மா, மிசா போன்றவர்களின் தந்தையும் இவரே (ஆதி 36:4; 10:13;17; 1 நாள் 1:25;37). இத்தலை முறைக் குறிப்பு இஸ்ராயேலர், ஏதோமியர் மற்றும் அராபிய குலங்கள் போன்றவற்றிற்கு உள்ள நெருங்கிய தொடர்பைப் புலப்படுத்துகிறது.

2. யாவே பாரம்பரியப்படி மோசேயின் மாமனாருடைய பெயர் இரகுவேல் ஆகும் (ஆதி 2:18; எண் 10:29). இவர் சாதாரணமாக எத்திரோ என்றழைக்கப்படுகிறார்; இரகுவேல் இனப் பெயராக இருக்கலாம்.

3. காது கோத்திரத்தின் தலைவரும் எலியாசாபு என்பவரின் தந்தையும் ஆவார் (எண் 2:14). இவர் தெகுவேல் என்றும் அழைக்கப்படுகிறார் (1:14; 7:42.47; 10:20).

4. இவர் பென்யாமின் குலத்தைச் சேர்ந்த மெசுல்லாம் என்பவரின் பாட்டனார் ஆவார் (1 நாள் 9:8).

இரகூ (REU - நண்பன் நட்பு)

இரகூ, சேம் என்பவரின் வழித்தோன்றலும் பெலேகு என்பவரின் மகனும் செரூக்கு என்பவரின் தந்தையும் ஆவார். ஆபிரகாம், இயேசு ஆகியோரின் மூதாதையர் (ஆதி 11:18-21; 1 நாள் 1:25; லூக் 3:35).

இரகொபோத்திர் (REHOBOTH -IR)

இது அசீரியாவில் நினிவே, காலா முதலிய நகரங்களுக்கு இடையில் நிம்ரோது என்பவரால் கட்டப்பட்ட நகரமாகும் (ஆதி 10:11).

இரகொபோத்து (REHOBOTH - பரந்த இடம்)

1. கெரார் பள்ளத்தாக்கில் ஈசாக்கும் அவரின் உடனுழியர்களும் தோண்டிய கிணறுகளில் ஒன்றின் பெயர் இராகாபோத்து ஆகும் (ஆதி 26:17-22). முன்பு வெட்டிய இரு கிணறுகளையும் பெலிஸ்தியர்கள் கைப்பற்றிக்கொண்டதால், ஈசாக்கு மூன்றாவது கிணற்றைத் தோண்டி அதற்கு இப்பெயரைச் சூட்டினார். பேயேர்செபாவுக்கு தென் மேற்கே சுமார் 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிர்பெத்துருகெய்பே என்ற இடத்தில் பழைய இரகொபோத்து இருந்திருக்கலாம். இங்குப் பல அகன்ற கிணறுகள் உள்ளன.

2. ஏதோமியரின் தொடக்கக் கால அரசர்களில் ஒருவரான சாவூல் வாழ்ந்த இடமாகும் (ஆதி 33:37; 1 நாள் 1:48). இது பற்றி ஒன்றும் அறிவதற்கில்லை.

இரகோபு (REHOB - திறந்தவெளி, சந்தை)-ஆள்

1. சோபாவின் அரசன் அதாதெசர் என்பவரின் தந்தை இரகோபு ஆவார் (2 சாமு 3:3.12)

2. நெகமியாவின் காலத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் ஒருவர் இரகோபு ஆவார் (நெக 10:11).

இரகோபு (REHOB) - **இடம்**

1. ஒர் அரமேய அரண் (எண் 13:21). காண்க பேத்து-இரகோபு.

2. ஆசேர்குலத்தவருக்கு யோசுவாவால் பங்கிடு செய்யப்பட்டு ஆக்கோ சமவெளி

யில் அமைந்திருந்த ஒரு நகரம் (யோசு 19:28.30). இது இஸ்ராயேலரின் தாக்குதலை எதிர்த்து நின்றது. கானானிய மக்கள் இங்குத் தொடர்ந்து வாழ்ந்து வந்தனர் (நீதி 1:31). பிற்பாடு இது ஒரு லேவிய நகரமாக்கப்பட்டது (யோசு 19:32; 1 நாள் 6:75). இது இருந்த இடமாக ஆக்கோவிலிருந்து கிழக்குத் தென் கிழக்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள தேல் ஏல்-கார்பி அடையாளம் காட்டப்படுகிறது.

3. கானானிய, இஸ்ராயேலர் காலங்களில் பேத்துசான் பள்ளத்தாக்கில் இருந்த முக்கிய நகரம். இவ்விடம் விவிலியத்தில் குறிப்பிடப்படவில்லையென்றாலும் இவ்விடம் பற்றிய குறிப்புகள் எகிப்திய ஏடுகளில் காணப்படுகின்றன. இவ்விடத்தில் நிகழ்ந்த அகழ்வாய்வுகள் இதுவரைக் கண்டுபிடிக்கப்பட்டவைகளில் கற்களில் பொறித்த நீண்ட எபிரேய வாசகங்களை வெளிக் கொணர்ந்துள்ளன.

இரக்கத்தின் இருக்கை (MERCY SEAT)

இது உடன்படிக்கை பெட்டகத்தின் மேல் தங்கத்தாலான ஒரு தட்டாகும். 2 1/2 முழ நீளமும் 1 1/2 முழ அகலமும் கொண்டது. இதுவே 'இரக்கத்தின் இருக்கை' என அழைக்கப்படுகிறது. இதைக் குறிக்கும் எபிரேயச் சொல்லுக்கு ''பரிகாரம் செய்யும் இடம்'' என்று பொருள். இந்த தங்கத்தாலான தட்டு பெட்டகத்தின் 'மூடி' அல்ல. மாறாக இது பெட்டகத்தின் மேலே உள்ள இரண்டு கெருபிம்களைத் தாங்க அவற்றோடு இணைக்கப்பட்ட அடித்தளமாகும். இது கடவுளின் கால்மனை என்று அழைக்கப்பட்டது. இதில்தான் கடவுள் தங்கி இருந்தார் (1 நாள் 28:2; சங் 99:5; 132:7). பரிகார நாளில் இதன் மேல் தலைமைக்குரு பலி விலங்கின் இரத்தத்தை தெளிப்பார்.

இரக்கம், இரக்கமுள்ள (MERCY, MERCIFUL)

விவிலியத்தில் ''இரக்கம்'' பல இடங்களில் வேறுபடுகின்றது. கடவுளுக்கும் இயேசுவுக்கும் இதைப் பயன்படுத்தும்போது' அவர்கள் பாவிகள்மேல் கொண்ட உள் ஒத்துணர்வையும் அல்லது மக்களுக்கு உதவிபுரிகின்றபோது உண்டாகின்ற அன்புத் தனமையையும் குறிக்கலாம். இது பெற்றோர்கள் பிள்ளைகள்மேல் கொள்ளும் பாச உணர்வை அல்லது ஏக்கத்தைக் குறிக்கலாம்; மன்னிக்கும் மனப்பான்மையைக் குறிக்கலாம். பொதுவாக இறையன்பைக் குறிக்கிறது. இவ்வன்பு உடன்படிக்கை மக்கள்பால் இறைவன் காட்டும் அருள்மிக்க மீட்புச் செயல்களில் வெளிப்படுகின்றது. மனிதனின் இரக்கம் என்பது ஒரு மனிதன் மற்றொரு மனிதன் தேவைகளை நிறைவு செய்ய முற்படும் நல்ல குணம் ஆகும். இது சமூக உறவால் விளக்கப்படும்.

1. பழைய ஏற்பாட்டில் கடவுளின் இரக்கம்:- இரக்கம், பரிவு என்பது பொதுவாக ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் தங்களுக்குள் காட்டிக்கொள்ளும் அன்பின் வெளிப்புற அடையாளம் அல்லது தாய் பிள்ளைகளுக்குக் காட்டும் அன்பாகும். யாவேயின் இரக்கமும் இதே குடும்பச் சூழ்நிலையிலேயே விளக்கப்படுகின்றது. யாவே இஸ்ராயேலின் தந்தையாக இருக்கின்றார் (சங் 103: 13; ஏச 63:15-16; எரே 31:20); தாயாக இருக்கின்றார் (ஏச 49:15); கணவனாக இருக்கின்றார் (ஏச 54:4-8; ஓசே 1-3). ஆண்டவர் பாவம் செய்த மனிதனை அல்லது நன்றி மறந்த மனைவியை அன்போடும் மன்னிக்கும் மனப்பான்மையோடும் வரவேற்கின்றார்.

யாவேயின் இரக்கத்தை குடும்ப அன்பு உணர்வாக மட்டும், உள்ளார்ந்த உணர்வாக மட்டும், பார்ப்பது தவறு. பழைய ஏற்பாட்டில் இறைவனின் இரக்கமானது அவரது பிரமாணிக்க நேர்மை தீர்ப்பு (ஓசே 2:14) மற்றும் நிலையான அன்பு ஆகியவற்றில் வெளிப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடன் செய்த உடன்படிக்கையின்பால் காட்டும் பற்றுதியிலும் வெளிப்படுகின்றது (யாத் 33:19; ஏச 63:9). உடன்படிக்கை உறவுக்குப் புறம்பான மக்களுக்கு இரக்கம் அருளப்பட்டதாக ஒருதரம் கூடக் கூறப்படவில்லை. இறை ஆள்தன்மைக்குள் உள்ள அன்பை அல்லது பாசத்தை இரக்கம் உணர்த்தினா

லும் (2 நாள் 36:15), அது வரலாற்றில் புறச்செயல்களில் செயல்முறையாகக் காட்டபடுவதைத்தவிர, அது பழைய ஏற்பாட்டில் ஒருபோதும் விவரிக்கப்படுவதில்லை. பொதுவாக, தமது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களோடு உடன்படிக்கை உறவைப் பிரமாணிக்கமாக நிலைப்படுத்தும் யாவேயின் அன்புச் செயலே இரக்கமாகும்.

கடவுள் பல வழிகளில் தனது இரக்கத்தை வெளிப்படுத்தினார். தனிப்பட்டோர் அல்லது நாட்டின் உறவை அவரோடு மீண்டும் அமைக்கும் மன்னிப்பின் வழியாக (உப 13:17;2 சாமு 24:14; 2 அர 13:23; சங் 25:6; 40:11; 51:1; 79:8; 103:4; ஏச 54:8; 55:7; புலம்பல் 3:32; தானி 9:9.18; ஓசே 1:6-7; யோவே 2:18; மீக் 7:19; அ.ப. 3:2; செக் 1:12.16); தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை அவர்களுடைய பகைவர்களிடமிருந்து காப்பாற்றுவதின் வழியாக (நெக 9:27-28; சங் 25:6; 40:11; 69:16; 79:8; ஏச 30:18; எச 42:12); தமது உறுதிமொழியை நிறைவேற்றுவதின் வழியாக (உப 13:17; எச 33:26); நாடுகடத்தப்பட்ட தமது மக்களை ஒன்று சேர்த்து அவர்களது நாட்டில் மீண்டும் அமைத்தல் வழியாக (உப 30:3; ஏச 14:1; 49:13; எரே 12:15; எச 39:25); பாலைவனத்தில் அவர்களுக்குத் துணைபுரிவதின் வழியாக (நெக 9:19; ஏச 49:10); அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக செய்வதின் வழியாக (2 அர 13:23; ஓசே 2:19.23), இறைவன் தமதுப் புறச்செயல்கள் வழியாகத் தொடர்ந்து அவர்களை அன்பு செய்கிறார். அவர்களது தேவைகளை நிறைவு செய்கிறார். தீமையிலிருந்து பாதுகாக்கிறார் (யாத் 33:19; ஏச 54:10). உடன்படிக்கைக் கடமைகளை, வெறும்கடமைக்காக அன்று, அன்பினால் நிறைவேற்றுவதே யாவேயின் இரக்கமாகும்.

இஸ்ராயேல் மக்கள் எந்த நேரத்திலும் இறைவனின் இரக்கத்தை நாடலாம் (சங் 51:1; 57:1; 79:8; 86:16; 123:2; தானி 9:18; ஏச 33:2). தங்கள் நேர்மையின் நிமித்தமோ எந்த உரிமையின் பொருட்டோ இப்படி நாடவில்லை. மாறாக இறைவன் அவர்களோடு உடன்படிக்கை செய்திருந்தார். கடவுளே இஸ்ராயேல் மக்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். எனவேதான் அவர்கள் இறைவனிடம் இரக்கத்தை எதிர்பார்த்தார்கள். எனவேதான், மோசே ''எல்லா அதிகாரமும் கொண்டுள்ள ஆண்டவராகி கடவுளே, அருள்நோக்கும் தயவும் பொறுமையும் அளவில்லாத இரக்கமும் பொருந்திய கடவுளே'' (யாத் 34:6; நெக 9:17; சங் 86:15; 103:8; 145:8; யோவே 2:13; யோனா 4:2) என்று கூறுகின்றார். இறைவனின் இரக்கம் இஸ்ராயேல் வரலாற்றில் நிரம்பிக் காணப்படுகின்றது. வரலாறு முடியும்போது, இறுதிக்கால நன்மைகளில் இறைவனின் இரக்கமும் காணப்படும் என்று இஸ்ராயேலர் நம்பினர் (ஏச 14:1; 49:13; 54:7; எரே 12:15; 33:26; எச 39:25; செக் 1:16). சில இடங்களில் கடவுள் இரக்கமற்றவராகக் காணப்படும்போது, அவரது உடன்படிக்கையின் நிலையை வைத்தே இவைகளை நாம் பார்க்க வேண்டும் (யோபு 27:22; புலம்பல் 2:17. 21; 3:43; செக் 11:6; எரே 13:14; எச 7:4; 5:11; 7:9; 8:18; 9:10; 24:14).

2. பழைய ஏற்பாட்டில் மனிதனின் இரக்கம்:- பழைய ஏற்பாட்டில் மனிதனின் இரக்கம் மற்றொரு மனிதன் துன்பப்பட்டபொழுது, வறிய நிலையிலிருக்கும்போது எழுகிறது. இத்தகை இரக்கமின்மையே பொதுவாக விவரிக்கப் படுகிறது. வெகு அரிதாகவே போரில் தோற்றவர்களுக்கு இரக்கம் காட்டப்பட்டது (உப 7:2; 16; எரே 6:23; 21:7). சிலசமயங்களில் தோற்றவர்களுக்கு இரக்கங்காட்ட இறைவன் தலையிடுகிறார் (1 அர 8:50; 2 நாள் 30:9; சங் 106:46; எரேமி 42:12). சிலைகளை வணங்கியவர்களுக்கும் (உப 13:8) கொலையாளிகளுக்கும் (உப 19:13) பொய்ச்சாட்சி கூறியவர்களுக்கும் (உப 19:21) நீதிமுறையிலும் இரக்கம் மறுக்கப்பட்டது. ஆனில் நெகமியா (1:11), தானியேல் (1:9), சவுல் (1 சாமு 23:21) போன்றோர் தங்களைக் கைதியாகக் கொண்டிருந்தவர்களிடமிருந்து எதிர்பாராத முறையில் இரக்கம் பெறுகின்றனர்.

எங்கே குடும்பங்கள் இருக்கின்றனவோ அங்கே இரக்கம், அன்பு, உதவி செய்தல் போன்றவைகள் இருந்தன. சமூக உறவுகள் இவற்றை வரையறை செய்தன. இவ்வாறு இரக்கம் சகோதரர்களுக்குக் காட்டப்பட்டது (ஆமோ 1:11; செக் 7:9). இரக்கம் பெறுவதில் அடுத்த முக்கிய இடத்தைப்பெறுவது இனம் அல்லது சமூகமாகும். அயலாரும் நண்பர்களும் இரக்கம் பெற்றனர் (யோபு 19:21; பழ 21:10). பிறரைச் சார்ந்திருப்பவர்களான பிள்ளைகள், முதியவர்கள், ஏழைகள், அனாதைகள், விதவைகள் ஆகியோர் இரக்கம் பெறச் சிறப்புரிமை பெற்றிருந்தனர். ஏனெனில் சமூகத்தின் அக்கறையும் உதவியுமில்லாவிட்டால் இவர்கள் கதியற்றவர்களாகவும் வறியவர்களாகவும் ஆவார் (சங் 72:13; எச 16:5). போரில் வெற்றிபெற்றோர் இத்தகைய கைவிடப்பட்டவர்களுக்கு இரக்கம் காட்டவில்லை (2 நாள் 36:17; ஏச 13:18; 47:6). பழைய ஏற்பாட்டில், இறை இரக்கத்தைப் போல் மனித இரக்கமும் உறவுச் சூழ்நிலையில் புரிந்துக் கொள்ளப்படுகிறது. மனித உறவு, இறைவனோடு கொள்ளும் உறவின் பகுதியாகுகிறது. உண்மையிலே இறைவனை அன்புசெய்ய விரும்பினால், ஒருவன் தன் அயலானை அன்பு செய்ய வேண்டும். மனிதனுக்குக்காட்டும் இரக்கம் ஆண்டவருக்குச் செலுத்தும் வழிபாடாகும்.

3. புதிய ஏற்பாடு:-

அ) இயேசுக் கிறிஸ்துவின் இரக்கம்:- நற்செய்திகளில் நோயுற்றோர், துன்புறுவோர் மீண்டும் மீண்டும் இயேசுவின் இரக்கத்தை வேண்டுகின்றனர் (மத் 9:27; 15:22; 17:15; 20:30-34; மாற் 5:19; 9:22; 10:47; லூக் 17:13; 18:38). இந்த வேண்டுதல் உதவிக்கும் குணமாக்குவதற்கும் எழுப்பப்பட்ட கூக்குரலாகும். இரக்கம் காட்டுதல் உதவி செய்வதாகும் என்று புரிந்து கொள்ளப்பட்டது. மக்களின் துன்பங்களைப் பார்க்கும்பொழுது இயேசு அவர்கள்மீது மனம் இரங்கினார் (மத் 9:36; 14:14; 20:34; 15:32; மாற் 8:2; 1:41; 6:34; லூக் 7:13). இந்த உள்ளுணர்வு புறச்செயலாக உருவெடுக்கிறது. இயேசுவின் இரக்கச் செயல் குருடனைப் பார்வைப்பெறச் செய்தது (மத் 20:34); தொழுநோயாளியைக் குணமாக்கியது (மாற் 1:41); நெடுநேரம் போதிக்க வைத்தது (மாற் 9:34); இறந்தவனை உயிர்ப்பிக்கச் செய்தது (லூக் 7:13); பசியாய் இருப்பவர்களை வயிறார உண்ணச் செய்தது (மத் 15:32; மாற் 8:2). இயேசுவின் இரக்கம் மனிதனுக்கு முழுமையை அளித்தது. பாவங்களை மன்னிப்பதில் இயேசுவின் இரக்க குணம் வெளிப்பட்டதாக எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் பார்க்கின்றோம் (2:17; 4:6). புதிய ஏற்பாட்டில் இரு இடங்களில் அது இறுதிக்காலப்பொருளில் விவரிக்கப்படுகிறது (2 தீமோ 1:16.18; யூதா 21). 1 பேதுரு 1:3-இல் ''இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலால் இறைவன் தம் இரக்கப்பெருக்கத்திற்கேற்ப நமக்கு வற்றாத நம்பிக்கை தரும் புதுப்பிறப்பை அளித்தார்'' என்று பார்க்கிறோம்.

ஆ) கடவுளின் இரக்கம்:- பழைய ஏற்பாட்டுக் கண்ணோட்டத்தில் கடவுளின் இரக்கமும் புதிய ஏற்பாட்டுக் கண்ணோட்டத்தில் கடவுளின் இரக்கமும் ஒன்றாகவே உள்ளது. இறைவன் உடன்படிக்கையின் போது கொடுத்த வாக்குறுதிகளின்படி தவறாதவர் என்பதை லூக் 1:50.54.72.78-இல் காண்கின்றோம். 1 பேதுரு 2:10 என்பது ஓசே 2:23ஐ நமக்கு நினைவூட்டுகின்றது. இரக்கம் பற்றிய பழைய ஏற்பாட்டுப் பின்னணியிலேயே, உரோ 9-இல் வரும் தர்க்கமும் கலா 6:16; 1 திமோ 1:2; 2 யோவா 3; யூதா 2-இல் வரும் ஆசீர்களும் அமைந்துள்ளன. இரக்கம் பற்றிய புதிய ஏற்பாட்டுப் பொருளைப், பழைய ஏற்பாட்டு ஒளியில்தான் நிறைவாகப் புரிந்து கொள்ளக்கூடும். புதிய ஏற்பாட்டில், மத் 5:7; உரோம 12:1; எபே 2:4; யாக் 5:11; 1 பேதுரு. 1:3-இல் காணப்படும் 'இரக்கம்' பழைய ஏற்பாட்டில் காணப்படும் இரக்கத்தினால் புதிய பொருளைப் பெறுகின்றது. இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிய இஸ்ராயேலர் திருச்சபையாக மாறிவிட்டனர். இறைவனது அன்புநிறை பிரமாணிக்கம் என்றும் மாறாமலே இருந்தது. இறைவன் இரக்கத்தை பலவழிகளில் காட்டியுள்ளார். மலடி எனப்படும் எலிசபெத்துக்கு

முதிர்ந்த வயதில் குழந்தை பெறும் பேற்றினைத் தந்தார் (லூக். 1:58); நோயுற்ற எப்பாப்பிராதித்துக்கு குணமளித்தார் (பிலி 2:27). கிறிஸ்தவர்களைச் சித்திரவதைச் செய்த சவுலுக்கும் மன்னிப்பும் புதுவாழ்வும் தந்தார் (1 தீமோ 1:13). இறைவனின் இரக்கத்தால் திருப்பணியை மேற்கொண்டவர்கள் தளராமல் ஊழியம் புரிந்தார்கள் (2 கொரி 4:1). கடவுளின் இரக்கம் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு மீட்பு கொடுத்தது (உரோ 9:23; 11:30-32; 12:1; எபே 2:4). கிறிஸ்துவில், இறைவனது உடன்படிக்கை, இறுதியான அன்புநிறைந்து, நிறைவான உறுதிப்பாட்டையும் எந்த சக்தியாலும் உடைக்க முடியாத முத்திரையையும் (உரோ 8:38-39) அளிக்கிறது.

இ) மனிதனின் இரக்கம்:- மறுபடியும் பழைய ஏற்பாட்டு கண்ணோட்டத்தில் இரக்கம் இங்கு வெளிப்படுகின்றது. ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்குச் செய்யும் உதவிகளின் வழியாக இரக்கம் வெளிப்படுகின்றது (மத் 18:27; லூக் 10:37; 16:24; உரோ 12:8; பிலி 2:1; கொலோ 3:12; எபி 10:34; யாக் 3:17; 1 யோவா 3:17). சமுதாயத்தில் இருப்பவர் யாராக இருந்தாலும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து இரக்கத்தைக் காட்ட வேண்டும். ''உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்'' (லூக் 6:36; மத் 5:7) என்று இயேசு கூறுகின்றார்.

இரக்கா (RECAH - முழுவதுமான)

இது யூதாவில் உள்ள ஓர் இடம் (1 நாள் 4:12). இது இருந்த இடம் தெரியவில்லை. வாசகமும் பழுதுபட்டிருக்கலாம். எழுபது நூல் இவ்விடத்தை இரக்காபு என்றழைக்கிறது (2:55)

இரக்காத்து (RAKKATH - கடற்கரை)

இது நப்தலி நாட்டிலுள்ள ஓர் அரண் சூழ்ந்த நகரம் (யோசு 19:35). இது திபேரியுவுக்கு வடக்கே சுமார் 2.5 கி.மீ. தொலைவில் கலிலேயாக் கடற்கரையில் தேல் கெலத்தியே அல்ல தேல் அரக்காத்து என்ற இடத்தில் இருந்திருக்க வேண்டும்.

இரக்காபு (RECHAB - தேரோட்டி)

1. இவன் பேரோத்தில் இருந்த பென்யாமின் குலத்தவராகிய இரிம்மோனின் மகன் சவுலின் மகன். இசிபோசத்தின் தலைமையில் இயங்கி வந்த கூட்டத்தில் இவரும் பானாவும் தளபதிகளாக இருந்தனர். இவர்கள் தங்கள் தலைவனின் தலையை வெட்டி (2 சாமு 4:2 5:8) அதைத் தாவீதிடம் கொண்டு வந்து, அதற்காகத் தாவீது பரிசளிப்பார் என எதிர்பார்த்தனர். ஆனால் தாவீது அவ்விருவரையும் கொன்றுவிடக் கட்டளையிட்டார் (2 சாமு 4:9-42).

2. ஆகாபின் வீட்டாரின் ஆட்சியை முடிவடையச் செய்த ஏகூவின் ஆதரவாளனான யோனதாபு என்பவரின் தந்தை அல்லது மூதாதை (2 அர 10:15-27). இவரது பெயரால் நாடோடிகளாய் வாழ்ந்த ஓர் இனம் இரக்காபியர்கள் என்றே அழைக்கப்பட்டது (எரே 35). இவர்கள் யூதாவின் பாழ்வெளிகளில் சுற்றிக் கொண்டிருந்ததால், நெபுக்கதுனேசார் யூதாவை தாக்கியபோது இவர்கள் எருசலேமில் அடைக்கலம் புகுந்தனர். எரேமியா அனைவரையும் ஆலயத்தில் உள்ள ஓர் அறையில் அடைத்து வைத்து அவர்களுக்குத் திராட்சை ரசம் அளித்து குடிக்கும்படிக் கூறினார். அவர்களோ மறுத்து விட்டனர். ஏனென்றால் இரக்காபின் மகன் யோனதாபு அவர்களுக்கு இட்ட கட்டளைபடி அவர்கள் திராட்சை இரசம் குடிக்கவோ வீடுகட்டவோ விதை விதைவிதைக்கவோ கூடாது. அவர்கள் காலமெல்லாம் கூடாரங்களிலேயே வாழ வேண்டும். இந்த கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து வாழ்ந்ததாக கூறினார்கள். இந்தப் பற்றுறுதியை எரேமியா யூதாவின் மக்களுக்கு உதாரணமாய்க் காட்டி இஸ்ராயேலர் எப்படி கடவுளின் கட்டளைகளுக்கு பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்று கற்பிக்கிறார். அதே நேரத்தில் இரக்காபியரை வாழ்த்துகிறார் (எரே 35:6-19).

இஸ்ராயேலர் பாபிலோனியாவிலிருந்து திரும்பியபின் இவர்களும் ஓர் குழுவாக வாழ்ந்தனர் என்பதற்கான திடமான ஆதாரங்கள் இல்லை. நெகமியா எருசலேமைப்

புதுப்பித்தபோது அதன் ஓர் வாயிலை பழுது பார்க்கும் பணி இரகாப்பியனான மல்கியா விடம் ஒப்படைக்கப்பட்டதாக நெக 3:14-இல் வாசிக்கிறோம். பிற்காலத்தில் சூழ்நிலைகள் இவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்தது. நாடு திரும்பியபின் இவர்கள் யபேசில் வாழ்ந்தனர் (1 நாள் 2:55). ''ஆண்டவர்முன் நிற்பது'' என்பது யூதர்களின் வழிபாட்டைக் குறிக்கும். யூத மரபுச் செய்திப்படி இந்த இரக்காபியர்கள் யூத குருக்களுக்கு தங்கள் புதல்வியரை மணம் முடித்துக் கொடுத்து அதன் மூலம் ஆலய பணியில் நுழைந்தனர் எனலாம்.

இவர்கள் பல இடங்களில் வசிக்கிறார்கள் என சுற்று பயணிகள் கூறுகிறார்கள். பென்யாமின் தூதெல்லா என்பவர் அரேபியாவில் திராட்சை இரசம் பருகாமலும் இறைச்சி உண்ணாமலும், திருநூல் படிப்பதிலுமே காலத்தைச் செலவிடும் ஒரு இலட்சம் யூதர்களைக்கண்டதாக குறிப்பிட்டுள்ளார். 19-ஆம் நூற்றாண்டில் யோசேப்பு உல்பு என்பவர் இவர்களை மெசபொத்தோமியாவிலும் ஏமனிலும் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். வேறு சிலர் இத்தகைய ஒரு குழு சாக்கடல் அருகில் வாழ்வதாகவும் கூறுகின்றனர். 9-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சிலர் குடிபழக்கத்தை முற்றிலும் ஒதுக்கிப் பக்தியோடு வாழ்ந்து வந்தனர். இவர்களும் தங்களை இரக்காபியர் என அழைத்துக் கொண்டனர்.

3. நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் பேத்து-கக்கரேம் மாவட்டத்தை ஆண்ட மல்கியாவின் தந்தை (நெக 3:14). இவர் 2-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம். அப்படியென்றால், மல்கியா, இரக்காபின் மகன் என்ற அளவில் ஓர் இரக்காபியர் ஆவார்.

இரக்காபியர் (RECHABITES)

காண்க இரக்காபு-2.

இரக்கேம் (REKEM - நட்பு) - ஆள்.

1. யாவேயின் கட்டளைப்படி மோசே இஸ்ராயேல் மக்களுடன் சேர்ந்து கொன்ற எமோரிய மன்னன் சீகோனின் சிற்றர்சர்களான ஐந்து மிதியானிய அரசர்களில் இவரும் ஒருவர் (எண் 31:8; யோசு 13:21), மிதியானியர் பாகால்-பேயோர் வழிபாட்டை இஸ்ராயேலில் புகுத்தியதாலும், சிமியோனின் வழித்தோன்றலான சிம்ரி என்பவன் மிதியானிய இளவரசி கொசுபி என்பவளை மனைவியாக்கிக் கொண்டதாலும் இறைவன் மிதியானியரை இவ்வாறு பழிவாங்கினார் (எண் 25).

2. யூதாவைச் சேர்ந்த இவர் காலேபுடைய வழித் தோன்றலும், எபரோனின் மகனும் சம்மாய் என்பவனின் தந்தையும் ஆவார் (1 நாள் 2:43;44).

இரக்கேம் (REKEM) - இடம்

இது யோசுவா பென்யாமின் கோத்திரத்திற்கு ஒதுக்கிய பகுதியின் எல்லைக்குள் இருந்த ஒரு நகரம் ஆகும் (யோசு 18:27). இது இருந்த இடம் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

இரக்கோன் (RAKKON - கடற்கரை, நெருக்கமான இடம்)

இது தாண் பகுதியில் உள்ள ஓர் கிராமம் (யோசு 19:46). இது மத்தியதரைக்கடலின் வடக்கில் தேல் ஏல்-ரெக்செயித்து என்னுமிடத்தில் இருந்திருக்கலாம்.

இரசீன் (REZIN)

இரசீன் என்பவர் தமஸ்கு நகர கடைசி அரமேய மன்னன். தமஸ்குக்கு அருகே அமைந்திருந்த மிட்-காதாரா என்னும் ஊரில் பிறந்து தமஸ்குவின் தலைவனானார் (கி.மு. எட்டாம் நூற்றாண்டு) (ஏச 7:8). அசீரிய அரசனான திகிலாத்து பிலேசார் என்ற மன்னனுக்கு சீரியா மன்னன் இஸ்ராயேல் மன்னர்களைப்போல் கப்பம் கட்டினார் (2 அர 15:19. 20). இரசீன் மன்னன் இஸ்ராயேல் அரசனான பெக்கா என்பவனுடன் சேர்ந்து கொண்டு, யூதேயாவையும் ஆசீரியாவை எதிர்க்கும் கூட்டணியில் சேர வற்புறுத்தினான் ஆனால் யூதாவின் மன்னன் ஆகாசு அதில் சேரவில்லை, எனவே யூதேயாமீது படையெ

டுத்து வந்து ஏலாத்தின் யூதர்களை துரத்தி விட்டு அரமேயர்களை அங்குக் குடியேற வைத்தனர் (2 அர 16:5.6; ஏச 7:1.6). எருசலேமின்மீது செய்த ஆக்கிரமிப்பு தோற்ற பின்னும், ஆகாசு மன்னன் பயந்து தன் நாட்டுச் செல்வங்களைக்காட்டி அசீரிய மன்னனின் துணையை நாடினார். ஆனால் இறைவாக்கினர் ஏசயா பயப்படாமல் இறைவன் மீது நம்பிக்கை வை எனக் கூறிய அறிவுறையைப் பொருட்படுத்தவில்லை கி.மு.733-இல் மூன்றாம் திகிலாத்து பிலேசார் இஸ்ராயேலின் மீது படையெடுத்து பெக்காவைக் கொன்று ஓசேயாவை அரசனாக்கினார் (2 அர 15:29. 30). இரசின் 'புல்லிமானைப்போல்' தமஸ்குவிற்குத்தப்பி ஓடினார். அங்கும் அசீரியப் படைகள் முற்றுகையிட்டன. கி.மு.732-இல் தமஸ்குவை அசீரியர்கள் கைப்பற்றினர். இரசின் கொல்லப்பட்டார் (2 அர 16:9).

இரசேப்பு (RESHEPH - தீப்பிழம்பு)-ஆள்

1. இவர் எப்பிராயிம் குலத்தைச் சேர்ந்தவர். இவர் இரப்பா என்பவரின் மகனும் தேலா என்பவரின் தந்தையும் ஆவார் (1 நாள் 7:25).

இரசேப்பு என்ற சிறப்புப் பெயரைப்பொதுப் பெயர்ச்சொல்லாக மொழிப்பெயர்த்துள்ளனர் (உப 32:24; சங் 76:4; 78:48; யோபு 5:7; உ.ச. 8:6)

2. இரசேப்பு என்பது ஒரு கானானியக் கடவுளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் உருவம் தலைப்பாகையுடனும் கொம்புகளுடனும் காணப்படுகின்றது. எனவே இது கொள்ளைநோயின் கடவுள் என்றும் அழிவின் கடவுள் என்றும் வர்ணிக்கப்படுகிறது (உப 32:34; சங் 78:48).

இரசேப்பு (REZEPH - சூடாக்கப்பட்ட கல், அரண் செய்யப்பட்ட இடம்) - இடம்

எசக்கியாவுக்குச் சனகெரிபு மன்னனின் படைத்தளபதி அறிவித்த செய்தியில் குறிப்பிட்ட கோசான், காரான் ஆகிய நகரங்களுடன் இரசேப்பு நகரமும் குறிப்பிடப்பட்டது (2 அர 19:12; எச 37:12). இவை அசீரியர்களால் கைப்பற்றப்பட்டன எனவும் இவ்விடத்தின் தெய்வங்கள் அவைகளைக் காப்பாற்ற முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. ஏபெல் சிங்கர் என்ற இடத்திற்கு மேற்கில் இரசேப்பு அமைந்துள்ளது. இது அசீரியர்களின் முக்கியமான இடமாகக் கருதப்பட்டது. இது மூன்றாம் சால்மனேசர் காலத்திலேயே அசீரியாவுடன் இணைக்கப்பட்டது.

இரசேன் (RESEN - பாதுகாக்கப்பட்ட இடம், கடிவாளம்)

அசீரியாவில் நினிவே நகருக்கும், காலா நகருக்கும் இடையே நிம்ரோத்து என்பவரால் கட்டப்பட்ட மாபெரும் நகரம் இரசேன் ஆகும் (ஆதி 10:12).

இரசோன் (REZON - மேல் குடி மகன், இளவரசன்)

இவர் எலியதாவின் மகன். இரசோன் என்பவர் சாலமோன் மன்னனுக்கு பகைவனாக இருந்த ஓர் அரமேயத் தலைவனாவார். தன் வாழ்வின் தொடக்கத்தில் சோபாவின் அதாதெசர் என்பவனுக்கும் பணியாளனாக இருந்தார். பின் அங்கிருந்து பிரிந்துசென்று திருடர் கூட்டத்திற்கு தலைவனானார். சாலமோன் காலத்தில் தமஸ்குமேல் இஸ்ராயேலரின் பிடிப்பு வலிமையிழக்கும் நிலையிலிருந்தபோது இரசோன் அதை வென்று புதிய வலிமைமிக்க ஒரு அரமேய ஆட்சியை உண்டாக்கினார் (1 அர 11:23-25). முதலாம் பென்-அதாது என்பவரின் பாட்டனாரான கெசியோன் என்பவரும் இரசோனும் ஒரே ஆள் எனக் கருதப்படுகிறது (15:18).

இரட்டை நாவுள்ளவர்கள் (DOUBLE-TONGUED)

இச்சொல்லின் பொருள் அவ்வளவு தெளிவாக இல்லை. இது விவிலியத்தில் 1 தீமோ 3:8-இல் மட்டும் தான் காணப்படுகிறது. இச்சொல்லின் கிரேக்க மூலம் சொல்லின் பொருள் ''சொன்னதே சொல்லுதல்; செய்ததே செய்தல்'' ஆக இருக்கலாம். மற்றொரு மொழி பெயர்ப்பில் ''உண்மையில்லாத'' என்று கூறப்பட்டுள்ளது. திருத்தொண்டர்கள் அனைவரும் உண்மையைப் பேச வேண்டும். இரட்டை நாவுள்ளவர்கள் என்ற பதம்

நேர்மையற்றவர்கள், வாய்மை அற்றவர்கள் என்பதை உணர்த்தலாம். ஆசிரியர், திருத் தொண்டர்களைச் செய்ததையே திரும்பிச் செய்யாதீர்கள், சொன்னதையே மறுபடியும் சொல்லாதீர்கள் என்று அறிவுரை கூறியது சந்தேகப்படக்கூடியதாக இருக்கின்றது. கிரேக்க சொல்லும் இலத்தீன் சொல்லும் 'இரண்டு மொழிகளைப் பேசுவதை' மட்டும் குறிக்கவில்லை; ஏமாற்றுதல், வேடம் பூணுதல் என்ற பொருளையும் கொடுக்கின்றன.

இரண்டாம் தொகுதி அல்லது பகுதி *(SECOND QUARTER)*

இது எருசலேமின் ஒரு பகுதியாகும். இங்குதான் குல்தா என்ற இறைவாக்கினி வாழ்ந்து வந்தாள். இப்பகுதி ஆலயத்தின் மேற்கு பகுதி சுவருக்கும், பாதுகாப்பு சுவரின் வடக்கு பகுதிக்கும் இடையில் அமைந்துள்ளது (2 அர 22:14; 2 நாள் 34:22). இது தாவீது நகருக்கு மேற்கில், திரோப்பியன் பள்ளத்தாக்கின் குறுக்கில் அமைந்திருந்தது. இது அரசர்கள் காலத்தில் வளர்ச்சியடைந்தது. பிற்காலத்தில் இது, நெகமியாவால் கட்டப்பட்ட சுவற்றுக்குள் சேர்க்கப்பட்டது. செப் 1:10-இல் இது புதிய நகர் பகுதி என்று குறிக்கப்படுகிறது. குல்தா என்ற இறைவாக்கினிதான் இஸ்ராயேலின் அரசனான யோசியாவின் ஆட்சியில் ஆலயம் பழுதுப்பார்க்கப்பட்டபோது கிடைத்த சட்ட நூலை 'இறைவனுடைய வார்த்தைதான்' என்று உறுதியாகக் கூறி ஏற்கச் செய்தாள்.

இரண்டாம் வருகை *(SECOND COMING)*

கிறிஸ்துவின் இறுதிக்கால வருகையைக் குறிக்கப்பயன்படும் ஒரு சொற்றொடராகும். ஆண்டவர் மீண்டும் தோன்றுவதைப் பற்றி எபி 9:28; 2 பேதுரு 1:16 ஆகிய பகுதிகள் விவரித்தாலும், இரண்டாம் வருகை என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. மத் 24:3; 1 தெச 2:19; யாக் 5:27; 2 பேதுரு 3:4 ஆகிய இடங்களில் வருகை என்று மட்டும் பேசப்பட்டாலும் கூறவரும் கருத்து ஒன்றே. இச்சொற்றொடர் கி.பி.150-ஐ ஒட்டி வாழ்ந்த யூஸ்தீன் காலத்திலிருந்து ஒரு கலைச் சொல்லாகப் பயன்பட்டதாகத் தெரிகிறது.

இரண்டாவது ஆதாம் *(SECOND ADAM)*

உரோ 5:14-19; 1 கொரி 15:21-23. '45-50; ஒருவேளை பிலி 2:5-11 ஆகிய பகுதிகளில் கூறப்படும் கிறிஸ்து பற்றிய கருத்துக்களை விவரிக்கப் பயன்படும் சொற்றொடராகும்.

முதல் மனிதன் ஆதாம், மண்ணிலிருந்து வந்தவர், மண்ணைச்சார்ந்தவர். அவரது பாவம் சாபத்தைக் கொண்டு வந்தது. அவரில் எல்லா மனிதரும் மரிக்கின்றனர். இதற்கு மாறாக, இரண்டாம் அல்லது கடைசி ஆதாம் அல்லது விண்ணிலிருந்து வந்த இரண்டாம் மனிதனாகிய கிறிஸ்து மகிமை பெறுகிறார்; உயிர்தரும் ஆவியாகிறார். அவரில் விசுவாசிகள் உயிர் பெறுகின்றனர்; மகிமைப்படுத்தப்படுகின்றனர்.

இரண்டாவது மரணம் *(SECOND DEATH)*

திருவெளிப்பாட்டில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள இச்சொற்றொடர், ''நெருப்பு மற்றும் கந்தகத்தால் எரியும் கடல்'' என (திருவெளி 21:8; 20:14) யோவானால் அடையாளச் சொற்களில் விவரிக்கப்படுகிறது. உடலின் மரணத்தால் மறைசாட்சி கூறித் துன்புறுவோருக்கு (2:10-11) வாக்களிக்கப்பட்ட வாழ்வின் வெற்றி வாகையின் பின்னணியில் இக்கருத்து யோவானின் வழக்கில் தெளிவாக விவரிக்கப்படுகிறது. மேலும், தூய்மையாக உள்ளோரும், புனிதப்படுத்தப்பட்டவரும் புதிய வாழ்வின் முதல் உயிர்ப்பில் பங்கு பெற்றிருந்தால், இதனை அனுபவிக்க மாட்டார்கள் (20:6).

இரண்டாவது மரணம் என்பது, விசுவாசிகளுக்கு வாக்களிக்கப்பட்ட இறைமுன்னிலையில் வாழும் வாழ்க்கைக்கு எதிர்மாறானது (திருவெளி 21:3-4; 22:3-5). வாழ்வின் நூலில் பெயர் எழுதப்படாதவர்களோடு (20:15), சாவும், பாதாளமும் இந்த இரண்டாம் மரணத்தை அனுபவிக்கும் (20:14). இச்சொற்றொடர் ராபிகளின் மரபிலிருந்து வருவதாகத் தெரிகிறது (உப 33:6; எரே 51:39).

இரண்டு சுவர்களுக்கிடையேயுள்ள வாயில்

எருசலேமின் தென் கிழக்கில் உள்ள நகர வாயில் (2 அர 25:4; எரே 39:4; 52:7). ஒருவேளை இது ஊருணி வாயிலாக (நெக 2:14; 3:15) இருக்கலாம்.

யூதாவின் அரசனான செதேக்கியாவும் அவனுடைய போர் வீரர்களும் இரண்டு சுவர்களுக்கு இடையிலிருக்கும் வாயிலின் வழியாக இரவோடு இரவாய் பட்டணத்தை விட்டு வெளியேறி பாலை நிலத்தை நோக்கித் தப்பியோடினார்கள்.

இரதாமின் (RATHAMIN)

தெமேத்திரியு என்ற சீரிய மன்னன் (கி.மு. 150) சமாரியாவிடமிருந்து யோனத்தான் மக்கபேயுக்கு அளித்த 3 நகரங்களில் ஒன்று (1 மக் 11:34). மற்ற இரு நகரங்களான அபேய்ரேமாவும் இலிதாவும் பாலஸ்தீனத்தில் இருப்பதால் இந்நகரம் பாலஸ்தீனத்திலே தான் இருக்கவேண்டும். ஆனால் இதற்கு வேறெந்த அடிப்படையும் இல்லை. இது சாமுவேலின் சொந்த ஊரான இராமாவைச் சூழ்ந்த ஒரு பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இரத்த ஊறல் (DISCHARGE)

மேக வெள்ளை, வெட்டை போன்ற நேய்களைக் குறிக்க ஐந்நூல் பயன்படுத்தும் ஒரு சொல்லாகும். ஆதிபெற்றோரின் பாவத்தால் வந்த வியாதிகளில் இதுவும் ஒன்று, இது ஒரு கொடிய தொற்று வியாதி; இது பெண் குறியின் வழியில் அரிப்பை உண்டு பண்ணும். லேவி 15:19-இல் இரத்த ஊறலில் மாதவிடையையும் சேர்த்துக் கூறுகிறது. காண்க: இரத்தப் போக்கு.

இரத்த நிலம் (FIELD OF BLOOD)

அப 1:19-இல் மட்டும் சிறப்பாகக் குறிப்பிடப்படும் வார்த்தை. 'அக்கலிதாமா' என்ற மூலச் சொல் கிரேக்க மொழியில் பலவிதமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளதால் மூலச் சொல் எது என்று குழப்பமாக உள்ளது. காண்க. அக்கலிதாமா.

இரத்தப் பழி (BLOOD GUILT)

விலங்குளின் அல்லது மனித இரத்தத்தைச் சிந்துதல் சட்டமுறைப்படி பழிக்குரியதாகும். திருடன் கன்னமிட்டுத் திருடுகையில் வேண்டுமென்று அவனைக் கொல்லுதல் (யாத் 22:2-3), வீடு கட்டுகையில் மேல்மாடியிலிருந்து கால் நழுவிக் கீழே விழுந்து மடிதல் (உப 22:8), கொலை செய்தவனை அடைக்கல நகருக்குள் இரத்தப் பழிவாங்குதல் (உப 19:10; 2 நாள் 19:10) போன்றவை இரத்தப் பழிகளாகும்.

இரத்தப் பழிபற்றிய ஒழுங்குகளுக்கு அரசர்களும் கட்டுப்பட்டவர்களாவர். கிபயோனியர்களைக் கொன்றதற்காக, சவுலின் மேல் இரத்தப் பலிவாங்கத் தாவீது கோரப்படுகிறார் (2 சாமு 21:1 தொ). உரியாவைக் கொன்றதற்காக தாவீதே இரத்தப்பழிக்குரிய தண்டனை பெறுகிறார் (51:14). ஆனால் மெசியாக் காலத்தில் ''எருசலேமின் இரத்தக் கறைகளும்'' தூய்மைப்படுத்தப்படும் (ஏச 4:4).

இரத்தப்பழி என்ற பதம் புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லையாயினும், பிலாத்து இயேசுவில் ''இரத்தத்தின் மட்டில்'' தான் குற்றமற்றவன் என்று, பொறுப்பை முழுவதும் யூதர்கள் மேல் சுமத்த முயலுகிறார் (மத் 27:24-25). அப 5:28-இல், யூதச் சங்கத்தினர் ''அந்த மனிதனின் இரத்தப் பழியை'' தங்கள் மேல் சுமத்துவதாக அப்போஸ்தலர்களைக் குற்றம் சாட்டினர்.

இரத்தப் பழிவாங்குவோன் (AVENGER OF BLOOD)

தன் இனத்தின் ஒருவனைக் கொலை செய்தவனின் குடும்பத்தையோ இனத்தையோ சேர்ந்த ஒருவனைக் கொன்று பழிதீர்க்கும், கொல்லப்பட்டவனின் இரத்த உறவினனோ அல்லது இனத்தைச் சேர்ந்தவனோ இரத்தப் பழிவாங்குவோன் என்றழைக்கப்பட்டான். இப்பழக்கம் பழங்கால மேற்காசிய மக்களிடையே இருந்தது போல், இக்கால ஆதிவாசிகளிடையேயும் காணப்படுகிறது. இறப்பால் தகர்க்கப்பட்ட சமன்பாட்டை மீண்டும்

அமைப்பது இந்த இரத்தப் பழிவாங்கும் வழக்கத்திற்கு ஒரு விளக்கமாகும். ஒரு கொலை மற்றொரு கொலையால் சமன் செய்யப்படுகிறது.

பழைய ஏறபாட்டில் கொலை செய்யப் பட்டவனின் நெருங்கிய உறவினனே இப் பழி தீர்க்க வேண்டும். உறவுமுறை இரத்த பழிவாங்குவோனைக் கவனமாக விவரிக்கிறது (எண் 35:12). அவருடைய பொறுப்பும் தெளிவாக விவரிக்கப்படுகிறது (35:19-21; உப 19:12).

தற்செயலாக நடக்கும் கொலையை வேண்டுமென்று செய்த கொலையிலிருந்து வேறுபடுத்தி, மோசே சட்டம் இரத்தப் பழி வாங்குதலைக் கட்டுப்படுத்துகிறது. தற்செயலாகக் கொலை செய்தவன், ஆண்டவருடைய பீடத்திற்கோ (யாத் 21:14; 1 அர 2:28-31) அல்லது ஆறு அடைக்கல நகரில் ஒன்றுக்கோ (யாத் 21:13; எண் 35:9-15; உப 19:6-10; யோசு 20:1-9) ஓடி அங்கு அடைக்கலம் தேடலாம். அங்கு அதன் எல்லைக்குள் அதன் குரு சாகும்வரை, பாதுகாப்பாக இருப்பான். அடைக்கல நகரம் அவனுக்கு நாடுகடத்தப்பட்ட இடமாக, உண்மையில் ஒரு சிறைச் சாலையாக அமைந்தது.

இந்த இரத்தப் பழிவாங்கும் நிகழ்ச்சிகளில் சில பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்படுகின்றன. தன் சகோதரர்களின் சாவுக்குப் பொறுப்பான மிதியானியர்களைக் கிதயோன் கொன்றார் (நீதி 8:18-21). சவுல் காரணமாகிய தங்கள் சககுடிமக்களின் இறப்பைக் கிபயோனியர் புழிதீர்த்தனர் (2 சாமு 21:1-9). ஆனால் போரில் கொல்லப்பட்ட தன் சகோதரன் அசாயேலின் இறப்பை யோவாபு பழிதீர்த்தது, இரத்தப் பழிதீர்தலுக்கு ஒரு மாதிரிகையன்று (2 சாமு 3:27.30. 31 தொ; 2 அர 2:5).

பிற்காலத்தில் பல அரசாங்க நிறுவனங்கள் நீதி வழங்கத் தொடங்கிய பின் இப்பழக்கம் இஸ்ராயேலில் கைவிடப்பட்டது.

இரத்தப் போக்கு, பெரும்பாடு (FLOW OF BLOOD)

லூக்கா பயன்படுத்தும் இந்த சொல் ஹிப்போகிரடெஸ், திஸ்கோரிதஸ், காலன் இவர்களின் மருத்துவ நூல்களில் காணப்படுகிறது.

லேவியர் சட்டப்படி, மாதவிடாய் இரத்தப் போக்கு ஒரு பெண்ணை ஏழு நாட்களுக்குத் தீட்டுடையவர்களாக, தூயமையற்றவளாக ஆக்கியது (லேவி15:19 தொ). இக்காலத்தில் அவளைத் தொட்டவர்களும் அந் நாள் மாலைவரைத் தீட்டுடையவர்களானார்கள்.

இரத்தப் போக்குடைய ஒருபெண்ணை இயேசு குணமாக்கியது தனிச்சிறப்புடையது (லூக் 8:43; மாற் 5:25). எக்காரணத்தினால் இந்த இரத்தப் போக்கு அவளிடம் ஏற்பட்டதாயிருந்தாலும், இரத்தம் தொடர்ந்து வடிவது அவளைத் தொடர்ந்து தீட்டுடையவளாக ஆக்குகிறது. அவள் இயேசுவின் ஆடையைத் தொட்டது, அவரைச் சடங்குமுறைத் தீட்டுடையவராக ஆக்கினாலும்,ஆற்றல் மாய சக்தியாகப் பாய்வதால் என்பதை விட அவளது விசுவாசமே அவளுக்குக் குணமளித்தது என்பதுவே இந்நிகழ்ச்சியுரையின் செய்தியாகும்.

இரத்த மணமகன் (BRIDEGROOM OF BLOOD)

சிப்போரா தன் கணவன் மோசேக்குக் கொடுத்த பெயராகும் (யாத் 4:25-26).ஆண்டவரது கோபத்தைத் தணிக்கவும் மோசேயின் உயிரைக்காப்பாற்றவும், சிப்போரா, தங்கள் தலைமகன் கெரிசோமுக்கு விருத்தசேதனம் அதாவது நுனித்தோல் அறுவை செய்தாள். இப்படி அறுக்கப்பட்ட நுனித்தோலால், தன் கணவனின் பிறப்புறுப்புகளைத் தொட்டாள். இதை வாசகம், ''மோசேயின் பாதங்களைத் தொட்டு'' என்று செயற்கை மொழியில் கூறுகிறது. இச்செய்கையால் மோசேக்கும் இச்சடங்கைச் செய்தாள் என்று கூறலாம் (ஏனெனில் அவருக்கும் இச்சடங்கு இதுவரை செய்யப்படவில்லை எனத் தெரிகிறது). இதுவரை, பருவம் எய்தியபோதோ அல்லது திருமணத்தின் போதோ செய்யப்

பட்ட இச்சடங்கு குழந்தைகளுக்கும் செய்யப்படும் சடங்காக மாற்றியதற்கு விளக்கமாக இந்த நிகழ்ச்சியுரை புகுத்தப்பட்டிருக்கலாம்.

இரத்தம் *(BLOOD)*

மனித, விலங்கு, தாவர வாழ்வுக்கூட அவசியமான நீர்த்தன்மையுடைய பொருளாகும் (காண்க ஆதி 49:11-12; உப 32:14).

1. பழைய ஏற்பாடு:- இச்சொல்லின் இயல்பான பொருளைத்தவிர, உயிருக்கே சமமான பொருளில் உருவகமாகவும் இதற்குப் பொருள் அளிக்கலாம். இவ்வாறு ஆபேலின் இரத்தத்தின் ''குரல்'' பழிவாங்கக் கதறுகிறது (ஆதி 4:10). ஆதி 9:4-6-இல் நோவா, மனிதனுடைய அல்ல விலங்கின் ''இறைச்சியை அதன் உயிராகிய இரத்தத்தோடு'' உண்ணக் கூடாது என்று தடை செய்யப்படுகிறார். இரத்தம் வடிக்கப்படாத விலங்கின் இறைச்சியை உண்ணக்கூடாது என்று தடை உயிருள்ள விலங்குகளையோ அல்லது இன்னும் சூடான இரத்தத்தைக் கொண்டுள்ள விலங்குகளையோ உண்ணும் கொடிய, காட்டுமிராண்டிப் பழக்கத்தை எதிர்ப்பதற்காகவும் இருக்கலாம். ஒரு வேளை இத்தடை, பலிக்காக ஒப்புக் கொடுக்கப்படும் இரத்தத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்தலாம். இறைவன் மனிதனைத் தம் உருவில் உண்டாக்கியிருந்ததால் மனித இரத்தம் சிந்தப்படுவது தடை செய்யப்பட்டிருந்தது (9:6). மனித இரத்தத்திற்கு இறைவன் கணக்குக் கேட்டபோது, அவர் மனித உயிரைத் தமது பாதுகாப்பில் எடுத்துக் கொண்டார். இரத்தத்திற்கும் உயிருக்குமிடையே நெருங்கிய உறவை அமைத்தார். இதனால் ஆபேலைக் காயின் கொன்றதோடு தொடங்கிய கொலை செய்யும் பழக்கத்தைத் தடுக்க இறைவன் எதிர் பார்த்தார்.

இந்த தடையை மோசேயின் சட்டம் மாற்றவில்லை, விலங்குகளின் இரத்தமும் கொழுப்பும் பீடத்திற்குக் கொண்டுவரப் பட்டு, அவை மனிதனுக்கல்ல இறைவனுக்கே சொந்தமானவை என்பது சுட்டிக் காட்டப்பட்டது. குருக்கள் பீடத்தின்மேல் இரத்தத்தைத் தெளிக்கலாம். ஆனால் மற்ற இஸ்ராயேலர்களைப் போல் அவர்களும் அதையும் கொழுப்பையும் உண்ணக்கூடாது (லேவி 3:16-17; 7:22-27). பீடத்தின் மேல் ஒப்புக் கொடுக்கப்பட்ட கொழுப்பும் இரத்தமும் அடையாளமாகப் பரிகாரத்தை உணர்த்தின; ஆகவே அவை இறைவனுக்கே சொந்தமானவையாகும். பாலைவனத்தில் இஸ்ராயேலர் அலைந்து திரிந்த காலத்தில் மாட்டையோ, செம்மறியாட்டையோ வெள்ளாட்டையோ கொன்று பலிசெலுத்துதல் சாட்சிக் கூடார வாயிலின் முன்புதான் செய்யப்பட வேண்டும் (லேவி 17:3-5). பாலஸ்தீனத்தை வென்று குடியேறியபின், பாலஸ்தீனத்தில் எங்கும் விலங்குப்பலி செலுத்த குரு அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆனால் விலங்கின் இரத்தத்தை உண்ணக் கூடாது (உப 12:15-16. 21-25; 1 சாமு 14:35).

லேவி 17:11-இன்படி இறைவன், தமது மக்களின் ஆன்மாக்களுக்குப் பாவப் பரிகாரமாக, இரத்தத்தை அளித்திருந்தார். ஏனெனில் உயிருள்ள காரணத்தால் இரத்தமே பரிகாரம் செய்கிறது. விலங்கு இரத்தத்தை உண்ணக் கூடாது என்ற தடை மீண்டும் மீண்டும் கூறப்பட்டு; யூதர்களால் கடைப்பிடிக்கப்பட்டது (17:10.12-13). பரிகார நாளில், விலங்கு இரத்தம் சிந்தும் சடங்கின் வழிபாட்டுப் பொருள் உச்சநிலை அடைந்தது எனலாம். அன்று, பெரிய குரு இரத்தத்தைத் திருத்தூயகத்தினுள் கொண்டு சென்று, இரக்க இருக்கையின் மீது தெளித்தார் (4:6. 14-15). உயிரின் சாரம் என்ற அளவில், விலங்கு இரத்தம் உண்மையான உயிருக்காகப் பரிகாரம் செய்தது. அடையாளமுறையில் பலி ஒப்புக் கொடுப்பவரின் பாவங்களுக்காகப் பரிகாரம் செய்தது.

2. புதிய ஏற்பாடு:- பழைய ஏற்பாட்டில், ஆபிரகாம் இறைவனோடு உடன்படிக்கை செய்து கொண்டபோது, தனது சொந்த இரத்தத்தையே சிறிது சிந்த வேண்டியிருந்தது (ஆதி 17:24). பிற்காலத்தில் மனிதப் பாவங்களுக்குப் பரிகாரமாக விலங்கு இரத்தம்

கோரப்பட்டது. புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவின் இரத்தத்தினால் மக்கள் பரிகாரம் அடைகின்றனர்; 1 யோவா 1:7-இன்படி ''இறைமகன் இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்துகிறது''. சிலுவையில் கிறிஸ்துவின் குற்றமற்ற இரத்தம், மனுக்குலத்தின் பாவமிக்க இரத்தத்திற்குப் பதிலாக, சிந்தப்பட்டது. ஆண்டவரது இறுதி இரவுணவில், திராட்சை இரசம் கிறிஸ்துவின் இரத்தமாக மாறி, பரிகார இரத்தமாகிறது.

புதிய ஏற்பாட்டில் நற்கருணையின் இரத்தம், எபிரேயக் கருத்திலிருந்து சிறிது வேறுபடுகிறது. இயேசுவின் இரத்தம் பானமாக அளிக்கப்படுகிறது (மத் 26:27 தொ; மாற் 14:23 தொ; லூக் 22:20; யோவா 6:53 தொ; 1 கொரி 11:25 தொ). ஆனால் அதன் அருட்சாதனப் பொருள் எபிரேய மாதிரிகையையே கொண்டுள்ளது. ஏனெனில் இரத்தம் உயிராக இருக்கிறது. அது நற்கருணைவழியாக இயேசுவிடமிருந்து அவரது சீடர்களுக்கு அளிக்கப்படுகிறது (யோவா 6:53 தொ; 1 கொரி 10:16). நற்கருணை நிறுவின நிகழ்ச்சியுரைகளில் எல்லாம், நற்கருணை இரத்தம் புதிய உடன்படிக்கையின் இரத்தமாகும். இங்கு யாத் 24:8 சுட்டிக் காட்டப்படுகிறது. மத்தேயுவிலும் மாற்கிலும், பாவக் காணிக்கை மற்றும் குற்றக் காணிக்கையின் இரத்தத்தைப்போல், நற்கருணை இரத்தம் பரிகாரம்செய்யக் கூடியது. இயேசுவின் இரத்தம் பரிகாரம் செய்யக் கூடிய பலியாகும் என்ற கருத்து திருமுகங்களில் அடிக்கடியும் தெளிவாகவும் காணப்படுகிறது. இயேசு அவரது இரத்தத்தால் பரிகாரச் சாதனமாவார் (உரோ 3:25). அவருடைய இரத்தத்தால் நாம் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகுகிறோம் (5:9). அவரது இரத்தத்தின் வழியாய் நாம் மீட்பு அடைகிறோம் (எபே1:7). அவரது இரத்தத்தால் இறைவனுக்கு அருகே கொணரப்பெறுகிறோம் (2:13). அவர் சிந்திய இரத்தத்தால் இறைவனுக்கும் மனிதருக்குமிடையே சமாதானம் உண்டாக்குகிறார் (கொலோ 1:20). இயேசுவின் இரத்தத்திற்கும், பலி விலங்குகளின் இரத்தத்திற்குமிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமை எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் நீண்ட அளவில் தரப்படுகிறது. இயேசுவின் இரத்தம் விலங்குகளின் இரத்தத்தைவிட மேலானது (எபி 9:12 தொ). இரத்தம் மட்டுமே ஆற்றலோடு சுத்தி செய்யும் சாதனமாகும் (9:20 தொ). இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை (9:22). ஆனால் விலங்கின் இரத்தம் பாவங்களை நீக்க முடியாது (10:4). கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தால் மீட்பை நிறைவேற்றியுள்ளார் (9:12). அவருடைய இரத்தத்தின் ஆற்றலால் தூயகத்துள் நுழைய நமக்குத் துணிவு உண்டு (10:19). ஆபேலின் இரத்தம் பழிவாங்கக் கூக்குரலிடுவதைவிட (12:24) புதிய முடிவில்லா உடன்படிக்கையில் இரத்தம் (13:20) பாவமன்னிப்புக்காக மிக உரத்த குரலில் கூக்குரலிடுகிறது. இயேசுவின் இரத்தம் நம்மேல் தெளிக்கப்படுகிறது (1 பேதுரு 1:2). அது மாசு மறுவற்ற செம்மறி போன்ற கிறிஸ்துவின் விலைமதிப்பில்லா இரத்தமாகும் (1:19). அது எல்லா பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்துகிறது (1 யோவான் 1:7). அவற்றிலிருந்து நம்மை விடுவிக்கிறது (திருவெளி 1:5). இயேசு தமது இரத்தத்தால் மக்களை மீட்டார் (5:9). அவரது இரத்தத்தினால் புனிதர்கள் வென்று விட்டனர் (12:11).

எருசலேம் சங்கத்தில், புறஇனக் கிறிஸ்தவர்கள் ''மிருக இரத்தத்தை''... உண்ணக்கூடாது என்று அப்போஸ்தலர்கள் தீர்மானம் செய்தனர் (அ.ப. 12:29). இங்கு உயிருள்ள விலங்குகளின் இரத்தம் குறிக்கப்படுகிறது. இவ்வாறு, கலப்பு மக்களினங்களைக் கொண்ட கிறிஸ்துவ மக்களிடையே, பழைய ஏற்பாடு யூதச் சட்டத்தைக் கட்டாயப்படுத்தினர். அதே சமயம், இப்பழக்கத்தை மிகவும் வெறுப்பாகக் கருதிய யூதக் கிறிஸ்துவர்களுக்கு இதில் விட்டுக் கொடுத்தனர்.

இரத்தம் சிந்துதல் (SHEDDING OF BLOOD)

எபிரேயருக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியரின் கருத்துப்படி ''இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு என்பது இல்லை'' (எபி

9:22). உடன்படிக்கை செய்தல், தூய்மைப்படுத்துதல் முதலியவற்றைப் பற்றி மோசே சட்டத்தின் நிபந்தனைகளை ஆசிரியர் குறிப்பிடுகிறார். ''இளங்காளைகள், ஆட்டுக்கிடாய்களின்'' இரத்தம் சிந்திய பலி, சுத்தி செய்ய அவசியமானதாகும் (9:19-21. 25-26). இந்தப் பழக்கத்தைக் கிறிஸ்து கடந்து சென்று, ''பல்லோர் பாவங்களைப் போக்கும் பொருட்டு ஒரே முறையில்'' அவரது இரத்தத்தையே ஒப்புக் கொடுத்தார் (9:28). முடிவில்லாத உடன்படிக்கை ஆற்றலுள்ளதாக ஆவதற்கு இணைப்பாளரின் மரணம் தேவைப்பட்டது.

இரத்த வியர்வை (BLOODY SWEAT)

லூக் 22:44-இல் ''கொடிய வேதனைக்குள்ளாகவே, மேலும் உருக்கமாகச் செபித்தார். அவருடைய வியர்வை பெரும் இரத்தத் துளிகளாக நிலத்தில் விழுந்தது'' என்று கூறப்பட்டுள்ளது. இப்பகுதி சில முக்கிய கையெழுத்துச் சுவடிகளில் காணப்படவில்லை. இரத்தம் வியர்வையாகக் கொட்டிற்றா அல்லது வியர்வை இரத்தத்தைப் போல் பெருந்துளியாக வீழ்ந்ததா என்று கூறமுடியாது. இக்கூற்று இயேசு அனுபவித்த மிகுந்த துன்பத்தைக் காட்டுகிறது. சிலர் இக்கூற்றை உருவகமாக எடுத்துக் கொண்டிருக்கின்றனர். வியர்வையும் இரத்தமும் கலந்தது என்பது இயற்கையான விளக்கமாயினும் அப்படியிருக்க வேண்டும் என்பதில்லை. எப்படியிருந்தாலும் இது இயேசுவின் மனிதத் தன்மைக்குத் தெளிவான சான்றாகும். இப்பகுதி போன்றவை இயேசுவின் மனிதத்தன்மையை மிகைப்படுத்தி அவருக்கு இழுக்காகலாம் என்பதனால் இவ்வசனம் பல பிரதிகளில் நீக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இப்பகுதியில் காணப்படும் நடை லூக்காவுக்கே உரியது. ஆகவே இதை லூக்காவே எழுதினார் என்று ஏற்றுக் கொள்ளலாம்.

இரபா (RABBAH - பெரிய நகரம்)

1. யூதாவின் பகுதியில் கிரியத்து எயாரிம் அருகிலுள்ள ஓர் ஊர் (யோசு 15:60). இது அமர்னாஏடுகளில் உருபத்து என்றும் எகிப்திய வாசகங்களில் உருபுத்தே என்றும் அழைக்கப்படும் இடமாக பொதுவாக அடையாளம் காட்டப்படுகிறது. ஒரு வேளை இரபா உருபுத்து எம்மாவுக்கு அருகிலுள்ள கிபெத்து பிர்-ஏல்.கிலூ (கிர்பெத்து அமீதா) இருக்கிற இடத்தில் இருந்திருக்கலாம்.

2. இது அம்மோனின் தலைநகரம் (யோசு 13:25; உப 3:11). இது யோர்தான் நதிக்குக் கிழக்கே 36 கி.மீ. தொலைவில் யாபோக்கு சிற்றாறு பாயும் பள்ளத்தாக்கில் உள்ளது. யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதியிலே அம்மோனியர்களுக்கு உரிய நகரமாக மறைநூலில் பேசப்படுகிறது இந்நகரம் மட்டுமே (2 சாமு 12:26). இது நீரால் சூழப்பட்ட நகரம் என்றும் கூறப்படுகிறது (12:27). ஆறாம் நூற்றாண்டில் அழிக்கப்பட்ட இந்நகரம் கிரேக்கர்களின் காலம் வரை மீண்டும் கட்டியெழுப்பப்படவில்லை. கிரேக்கர்கள் இந்நகரை எழுப்பி அதற்கு பிலதெல்பியா எனப் பெயரிட்டனர். ஆனால் அராபியர் இதைக் கைப்பற்றியவுடன் இப்பெயர் மறைந்துவிட்டது. இப்போது அம்மானை என்றே அழைக்கப்படுகிறது. தமஸ்குவிற்கும் அரேபியாவிற்கும் இடையேயான வாணிப வழி இந்நகரின் வழியே செல்கிறது.

புதைபொருள் ஆராய்ச்சியின்படி இந்நகரம் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். கி.மு. 10-ஆம் நூற்றாண்டிற்கு முன் நடந்த நிகழ்ச்சிகளை மறைநூல் விளக்கும்போது இரண்டு இடங்களில் மட்டுமே இந்நகரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது (உப 3:11; யோசு 13:25). தாவீது அரசர் அம்மோனியரின் தலைநகரை முற்றுகையிட்ட நிகழ்ச்சியை விளக்கும் போது இந்நகரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது (2 சாமு 11-12). இதற்கு இணையான மற்ற விவிலிய பகுதிகளிலும் இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது (1 நாள் 20:1-3). இதன்பின் இரபா இஸ்ராயேலர்களின் கைவசமே இருந்தது. ஆனால் 9-ஆம் நூற்றாண்டில் இது தன்னை இஸ்ராயேலிடமிருந்து விடுவித்துக் கொண்டது. ஆமோஸ் இந்நகரத்தைச் சபித்தார் (ஆமோ 1:14). இதன்பின் கி.மு. 7ம் நூற்

றாண்டில்தான் ஏரேமியா இதைப்பற்றிப் பேசுகிறார் (ஏரே 49:2-3). இறுதியாக அரேபி யர்கள் வந்து இந்நகரை முற்றிலுமாக அழிக் கபோவதை எசக்கியேல் குறிப்பிடுகிறார் (எசே 21:20; 25:5). இதற்குப்பின் மறைநூலில் இந்நகரைப்பற்றி எங்கும் பேசப்படவில்லை.

இரபா (REBA - நான்காவது)

இவர் மோசே தலைமையில் சென்ற இஸ் ராயேலர்களின் படை கொன்ற ஐந்து மிதியா நாட்டு அரசர்களில் ஒருவர் (எண் 31:8; யோசு 13:21). இஸ்ராயேல் மக்கள் மிதியா நாட்டு வழிபாடுகளை ஏற்றதை எதிர்த்து நடந்த போர் இது என எண் 2:31-இல் கூறப்பட்டுள்ளது. இந்த 5 மிதியா நாட்டு அரசர்களும் எமோரிய அரசனான சிகோ னின் சிற்றரசர்களாவர். சீகோனின் நாடு பிற்பாடு ரூபானியர்களுக்குப் பங்கிடு செய் யப்பட்டது.

இரபாவேல் (REPHAEL - இறைவன் குணமாக் குகிறார்)

இவர் ஒபேது ஏதோம் குடும்பத்தைச் சேர்ந்த செமாயா என்பவரின் இரண்டாம் புதல்வர் (1 நாள் 26:7). இவர் எருசலேம் ஆலயத்தில் வாயிற்காவலராகப் பணியாற் றிய ஒரு திறமைமிக்கவர். பாரம்பரியத்தின் படி தாவீது இவரை அப்பணிக்கு நியமித்தார் எனக் கருதப்படுகிறது.

இரபிசாகே (RAB-SHAKEH)

அரசனுக்குப் பானம் அளிப்பவர்களின் தலைவன் என்பது இச்சொல்லின் பொருள். பொதுவாக அரசர்களுக்கு பணிவிடை புரிப வர்களின் தலைவன் இப்பெயரால் அழைக் கப்பட்டான் (2 அர 18:17; ஏச 36:2-37:8). அசீரியாவிலும் பாபிலோனியாவிலும் இத்த கைய மேலதிகாரிகள் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். மேலும் இவர்கள் சில சம யங்களில் படைத்துறை நிர்வாக பொறுப் பையும்கூட கொண்டிருந்தார்கள்.

இரபிசாரி (RAB-SARIS - உடனிருக்கும் பணி யாள்)

ஓர் அசீரிய (2 அர 18:17) மற்றும் பாபிலோ னிய (எரே 39:13) அதிகாரியின் பட்டம்.

இது தலைமை அண்ணகளைக் குறிக்கும் (தானி 1:3). இது எபிரேய மொழியிலும் மற்ற செமித்திய மொழியிலும் பயன்படுத் தப்பட்ட ஓர் அசீரியச் சொல். அசீரிய அரச வையில் இவர்களுடைய பணிகளைப் பற் றிச் சில அசீரிய ஏடுகள் குறிப்பிடுகின்றன.

இரபிதிம் (REPHIDIM - ஓய்வு, சமவெளி)

இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வாக் களிக்கப்பட்ட கானான் நாட்டுக்குச் செல் லும் வழியில் சின் பாலைவெளிக்கும் சீனாய் பாலைவெளிக்கும் இடையே அவர் கள் தங்கிய ஓரிடம் (யாத் 17:1; 19:2; எண் 33:14.15). இந்த இடம் நமக்கு மூன்று நிகழ்ச் சிகளை நினைவுபடுத்துகிறது. இங்குதான் இஸ்ராயேல் மக்கள் மோசேயிடம் தண்ணீ ருக்காக முறையிட்டனர். எனவே தான் இதை 'மாசா மெரிபா' என்றழைப்பர். அம லேக்கு என்ற மன்னன் தோற்கடிக்கப்பட்டது இவ்விடத்தில்தான். இதன் நினைவாக ஒரு பலிப்பீடம் இங்கு அமைக்கப்பட்டதால் 'யாவே நிசி' (கடவுள் என்னை உயர்த்தி னார்) என்று அழைக்கப்படுகிறது (யாத் 17:1-16). மேலும் மோசேயின் மாமனார் எத்திரோ நீதிபதிகளை நியமிக்கும்படி ஆலோசனை கூறியது இவ்விடத்தில்தான் (யாத் 18).

இவ்விடம் சீனாய் தீபகற்பத்தின் தென்மு னையில் அமைந்துள்ள எபெல் மூசா, வாடி பெய்ரான் மற்றும் வாடி ரெபாயீடு போன்ற மூன்று இடங்களுள் ஒன்றாகும் எனக் கருதப் படுகிறது.

இரபித்து (RABBITH - அநேக)

இது இசக்காரின் எல்லைப்புறத்தில் அமைந்துள்ள ஒரு நகரம் (யோசுவா 19:20). இது, ஒருவேளை செபுலோன் எல்லையி லுள்ள (19:12) ஒரு லேவியர் நகரமான (21:18; 1 நாள் 6:72) தபராத்தோடு அடையா ளம் காட்டப்படலாம்.

இரபிமாகு (RABMAG)

நெபுக்கதுனேசாரின் அதிகாரிகளுள் ஒருவ ரான நேரிகால்- சரசேர் என்பவரின் பட்டம்

(எரே 39:3). பொதுவாக பாபிலோனிய அரசனின் அவையில் பணியாற்றிய அதிகாரிகளில் சிலர் இப்பெயரால் அழைக்கப்பட்டனர். இது அக்காடியச் சொல்லான ரபி - முகி என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம். இந்த அக்காடியச் சொல் அசீரிய ஏடுகளில் காணப்படுகிறது. ஆனாலும் இதன் பொருள் இன்னும் தெளிவாகப் புலப்படவில்லை.

இரப்பா (REPHAH ஆதரவு, செல்வம்)

இவர் எப்பிராயீம் குலத்தில் தோன்றியவராவார். யோசுவாவின் மூதாதையர் *(1 நாள் 7:25)*.

இரப்பாயா (REPHAAH - யாவே குணமளிக்கிறார்)

1. இவர் தாவீது, சாலமோன், செருபாபேல் ஆகியோரின் வழித்தோன்றல்களில் ஒருவர். எசாயா என்பவரின் மகனும், ஆர்னான் என்பவரின் தந்தையும் ஆவார் *(1 நாள் 3:21)*.

2. சேயிர் மலையில் வாழ்ந்த அமலேக்கியர்களை அழித்துவிட்டு அங்குக் குடியேறிய ஐந்நூறு சிமியோனியர்களில் ஒருவர். ஈசியின் புதல்வர்களில் ஒருவர் *(1 நாள் 4:42)*.

3. இவர் இசக்கார் குலத் தோன்றலும் தோலா என்பவரின் மகனும் ஆவார் *(1 நாள் 7:2)*.

4. இவர் பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்த யோனத்தானின் வழிவந்த சவுலின் வழித்தோன்றல்களில் ஒருவர் ஆவார். இவர் பினியா என்பவரின் மகனும் எலயாசா என்பவரின் தந்தையுமாவார் *(1 நாள் 9:43)*. இவர் இரப்பா என்றும் அழைக்கப்படுகிறார் *(8:3)*.

5. கூர் என்பவரின் மகனும் நெகமியாவின் காலத்தில் எருசலேமின் மதிற்சுவரைக் கட்ட உதவியவர்களுள் ஒருவரும் ஆவார். யூதேயாவின் ஐந்து மாகாணங்களில் ஒன்றின் ஒரு பாதிக்குப் பொறுப்பாக இவர் அமர்த்தப்பட்டார் *(நெக 3:9)*.

இரப்பாமீம் (RAPHAM)

இவர் யூதித்தின் மூதாதையர். யூதித்தின் மரபுமுறை அட்டவணையில் இவர் அகிதூபு என்பவரின் மகனும் கிதயோனின் தந்தையுமாவார் என குறிப்பிடப்பட்டுள்ளது *(யூதி 8:1)*.

இரப்பாயீம் (REPHAIM - அசுரர்கள் வலிமைமிக்கவர்கள்) - ஆள்

1. இஸ்ராயேல் மக்களுக்கு முன்னால் பாலஸ்தீன நாட்டில் வசித்த மக்கள் இரப்பாயிம் எனப்பட்டனர் *(1 நாள் 20:4)*. இவர்களை அசுரர்கள் எனக் கூறுவதுமுண்டு. இவர்களை மோவாபியர்கள், ஏமியர் எனவும், அம்மோனியர்கள், சமுசம்மியர் எனவும் அனாக்கியர் *(உப 2:11.20)* எனவும் அழைப்பர். ஓர் இனத்தைக் குறிக்கும் பெயராக உகரித்திய இலக்கியங்களிலும் காணப்படுகிறது.

2. இச்சொல் நிழல்களையும் இறந்தவர்களையும் யூதத் தத்துவப்படி செயோல் எனப்படும் பாதாளச் சிறையில் குடியிருப்பவர்களையும் குறிக்கிறது. அவர்கள் கடவுளைப் போற்றமுடியாது *(சங் 88:10)*. அவர்களுக்கு ஞானமும் புரிந்து கொள்ளும் சக்தியும் இல்லை *(பழ 9:18; 21:18)*.

இரப்பாயீம் (REPHAIM) - இடம்

யோர்தானுக்கு அப்பால் வாழ்ந்தவர்களாக இரப்பாயியர் குறிக்கப்படுகின்றனர். இவர்களின் வழித்தோன்றல்கள் பெலிஸ்கியாவில் காணப்பட்டனர். எருசலேமுக்கு அருகிலுள்ள ஒரு பள்ளத்தாக்கு இப்பெயரைக் கொண்டுள்ளது. யோசு 17:15 இவர்கள் யோர்தானுக்கு அப்பால் வாழ்ந்ததைக் குறிக்கலாம். ஆனால் உறுதியாகக் கூறமுடியாது. யோர்தானுக்கு அப்பாலுள்ள வட பகுதியிலுள்ள பாசான் பகுதி முழுவதும் ''இரப்பாயியர் நாடு'' என்றழைக்கப்பட்டது *(உப 3:13)*. பாசினின் அரசனான ஒகு இரப்பாபியரில் கடைசியானவர் என்றழைக்கப்படுகிறார் *(உப 3:11; யோசு 12:2; 13:12)*.

எருசலேமுக்கு தென்மேற்கிலுள்ள இரப்பாயிம் பள்ளத்தாக்கு யூதாவுக்கும் பென்யாமினுக்கும் எல்லைகளாக அமைந்திருந்தது (யோசு 15:8). இது பெத்திலகேமுக்கு வெகு தொலைவில் இருக்கவில்லை (2 சாமு 23:13-14; 1 நாள் 11:15-15). இப்பகுதியில் பலதடவை தாவீது பெலிஸ்தியேரோடு போர் செய்தார் (2 சாமு 5:17-1; 23:13-14; 1 நாள் 14:8-9). இவற்றிலிருந்து இவ்விடம் தன் பெயரைப் பெற்றிருக்கலாம். இது ஒரு செழிப்பான பகுதி (ஏச 17:5). இதன் இக்காலப் பெயர் ஏல்-பாகா ஆகும்.

இரப்பான் (REPHAN)

பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது இஸ்ராயேலர் வழிப்பட்ட ஒரு தெய்வத்தின் பெயரின் சிதைவாகும். பாபிலோனிய மொழியில் சனிக்கிரகத்திற்கு இதே பெயர் வழங்கப்படுகிறது (அ.ப 7:43).

இரப்பியா (RAPHIA)

காசாவிலிருந்து தென்மேற்கே 24 கி.மீ. தொலைவில் அமைந்திருந்த ஒரு நகரம். விவிலியத்தில் இது குறிப்பிடப்படவில்லை என்றாலும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசியாவுக்கும் எகிப்துக்கும் இடையில் உள்ள ராணுவசாலையில் பாலஸ்தீனத்தின் கடைசி நகரமாய் இருந்ததால் முக்கியத்துவம் பெற்றிருந்தது. எகிப்திய எல்லையில் உள்ளதால் இது பல போர்களைக் கண்ட ஊராகும். இங்குதான் இரண்டாம் சார்கோன் எகிப்தை கி.மு. 720-இல் தோற்கடித்தார். நான்காம் நூற்றாண்டுவரை பெரும்பாலும் இது யூதர்களின் கைவசமிருந்தது. எகிப்தின் தொலமி பிலோபாத்தர் இதனை ஆட்சி செய்து வரும் காலத்தில் கி.மு. 217-இல் முதலாம் பெரிய அந்தியோக்குவைத் தோற்கடித்தார். இதன்பின் அலக்ஸாண்டர் யன்னாயு கி.மு. 97-இல் கைப்பற்றினார். அதன்பின் கி.மு. 55-இல் கபினூ இதை ஒரு கிரேக்க நகரமாக மாற்றினார்.

இரப்பு (RAPHU)

இவர் பென்யாமின் குலத்தைச் சேர்ந்த பலித்தியின் தந்தை. கானான் நாட்டுக்குள் மோசேயால் அனுப்பப்பட்ட பன்னிரண்டு உளவாளிகளுள் ஒருவர் (எண் 13:9).

இரப்போன் (RAPHON)

இது கர்னயிம் என்ற இடத்திற்கு அருகே அமைந்திருந்த ஓர் நகரம். இங்குதான் யூதா மக்கபே சீரிய தளபதியான தெமோத்தியுவை தோற்கடித்தார் (1 மக் 5:37-43).

இரமலியா (REMALIAH - யாவே மகிழ்ச்சியுற்றார்)

இவர் தகாத முறையில் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்ட பெக்கா என்பவரின் தந்தை ஆவார் (2 அர 15:25).

இரமியா (RAMIAH யாவே உயர்த்தப்பட்டார்)

எஸ்ராவின் காலத்தில் புறவின பெண்களை மணம் முடித்தவர்களின் பட்டியலில் இவர் பெயரும் இடம் பெறுகிறது (எஸ் 10:25).

இரமேத்து (REMETH - உச்சி)

இது இசக்காருக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள ஓர் எல்லையோர நகரம் ஆகும் (யோசு 19:21). இதுவும் இராமோத்து (1 நாள் 6:73) மற்றும் யாரிமுத்து (யோசு 21:29) ஆகிய நகரங்களும் ஒரே இடத்தின் பல பெயர்களாக இருக்கலாம்.

இரயாயா (REAIAH - யாவே பார்த்தார்)

1. இவர் யூதா நாட்டைச் சேர்ந்தவர். இவர் சோபாலின் மகனும் யாகாத்துவின் தந்தையுமாவார் (1 நாள் 4:2). 1 நாள் 2:52-இல் இவர் அரோயே என அழைக்கப்படுகிறார்.

2. இவர் ரூபன் குலத்தைச் சார்ந்தவர். இவர் மீக்காவின் மகனும் பாகாலின் தந்தையுமாவார் (1 நாள் 5:5).

3. ஆலய ஊழியர்களின் குடும்பத்தின் தலைவன் அல்லது செருபாபேலோடு நாடு திரும்பிய நெத்தினிமியர்களின் தலைவன் (எஸ் 2:47; நெக 7:50).

இரயுமா *(REUMAH - மிக உயர்ந்த, மேலான)*

இவள் ஆபிரகாமின் சகோதரர் நாகோரின் வைப்பாட்டியும் தேபாகு, ககாம், தகாசு, மக்கா ஆகியோரின் தாயும் ஆவாள் (ஆதி 22:24). இவர்கள் தமஸ்குவின் வடக்கில் அமைந்துள்ள அரமேயக் கோத்திரங்களின் தலைவர்களாவர்.

இரவு *(NIGHT)*

இரவு என்பது சூரியன் மறைந்ததிலிருந்து அடுத்த நாள் சூரியன் உதிக்கும் வரைக்கும் உள்ள நேரம் ஆகும். யூதர்களுக்கு இருளும் ஒளியும் எவ்வாறு மாறுபட்டதோ அவ்வாறே இரவும் பகலும் ஆகும் (ஆதி 8:22; சங் 1:2). நாட்களை பகலும் இரவும் என்றே கூறுவார்கள் (ஆதி 7:4.12; யாத் 24:18; 1 அர 19:8). பழைய ஏற்பாட்டில் ''இரவு'' என்ற சொல் இருநூறு தடவைக்கு மேல் வந்துள்ளது. இரவின் தொடக்கம் ''மாலை'' என்றும் அதன் முடிவு விடியல் என்று அழைக்கப்படும். யூதர்கள் கூறுகின்ற ''நள்ளிரவு'' (யாத் 11:4; 12:29; 1 அர 3:20) இரவைச் சமமாகப் பிரித்தது (சங் 90:4; புல 2:19; சங் 130:6; ஏச 21:11-12). பிற்கால யூதர்கள் இரவை மூன்று சாமங்களாகவும், கிரேக்க, உரோமையர்கள் நான்கு சாமங்களாகவும் பிரித்தனர்.

சில இரவுகள் மட்டும் முக்கியமான இரவுகளாக கருதப்படுகின்றன. விழாக்காலத்து இரவுகள் (ஏச 30:29); வேதனைமிக்க இரவுகள் (யோபு 7:3); நகரம் அழிவுற்ற இரவு (ஏச 15:1). ஏசயா நூலில் இரவுகள் ஆசீர்கவின் அடையாளமாகவும் (ஏச 16;3); மீக்கா நூலில் இரவுகள் குழப்பத்தின் அடையாளமாகவும் (மீக் 3:6), குறிப்பாக யோபுவில் இரவு நேரம் களக்கமும் குழப்பமும் நிறைந்த நேரமாகவும் கூறப்படுகின்றது (யோபு 4:12 தொ; 24:14; 35:10; 36:20). இரவு என்பது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் இறைவெளிப்பாடு அறிவிக்கப்படும், கனவு தோன்றும் காலமாக எண்ணப்பட்டது (தானி 7:2). இரவு பேய்களின் செயல்களுக்குரிய நேரம் என்பதற்கு பழைய ஏற்பாட்டில் அதிகச் சான்றுகள் இல்லை. இக்கருத்து பிற்கால யூதத்துவத்தைச் சேர்ந்தததாகும்.

புதிய ஏற்பாட்டுக் காலங்களில் இரவுகள் மணிகளாகவும் சாமங்களாகவும் (லூக் 12:39) பிரிக்கப்பட்டுள்ளன. மாலை, நள்ளிரவு, கோழி கூவும் பொழுது, காலை என்று மாற் 13:35 பிரிக்கிறது. யோவான் நற்செய்தியில் இரவு ஒரு தீய அறிகுறியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா 9:4; 11:10). இது சாவுக்கும், வேலையின் முடிவுக்கும் ஓர் அடையாளம். உரோ 13:12-இல் இரவானது தீமையின் இருள்சூழ்ந்த நேரமாகும். மீட்பின் நாள் தோன்றும் போது, இந்த இரவு மறைந்துவிடும். இரு எதிர் முரண்பட்ட ஆன்மீகக் கோட்பாடுகளின் அடையாளமாக இருளுக்கும் ஒளிக்கும் உள்ள வேறுபாடு முனைப்பாக எடுத்துக் கூறப்படுகிறது. இவையாவும், அடிப்படையில், ஒழுக்க எதிர்நிலைகளைக் காட்டுகின்றன. கும்ரான் சமூகத்தில் இத்தகைய எண்ணங்கள் நிலவி வந்ததாகக் கண்டெடுக்கப்பட்ட சுவடியிலிருந்து தெரிகின்றது.

இராகமா *(RAAMA, RAAMAH - நடுங்குகிறது, ஆடுகின்ற)*

இவர் 'கூச'வின் மகள். இவருக்கு சேபா, தெதான் என்ற இருபிள்ளைகள் உண்டு. இப்பெயர்களைப் பார்க்கும்போது இவை அரேபிய பகுதிகளின் இடப்பெராக இருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது (ஆதி 10:7; 1 நாள் 1:9). சேபா, இராகமாவிலிருந்து வணிகர்கள் மிக அருமையான வாசனைப் பொருட்களையும் சிறந்த தைலங்களையும் இரத்தினக் கற்களையும் பொன்னையும்'' விற்றுப் பண்டமாற்றம் செய்தனர் (எச 27:22).

எழுபதுநூலில் இப்பெயர் இரக்மா என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இது பாரசீக வளைகுடாவில் தோலமி என்ற வரலாற்று ஆசிரியரால் அதேபெயரில் கூறப்படும் நகராக இருக்கலாம் என கருதப்படுகிறது. வேறு சிலர் தென்மேற்கு அரேபியாவில் உள்ள 'மா' என்ற இடத்திற்கு அருகில் உள்ள

இராகமா என்ற நகரமே இது என்றும் கூறுவர்.

இராமிய (RAAMIAH)

இரகலாயாவின் மற்றொரு பெர். பாபிலோனிலிருந்து செருபாபேலோடு திரும்பியவர்களில் ஒருவர் (நெக 7:7).

இராகாபு (RAHAB - அகன்ற, பெரிய)

1. யோசுவா எரிகோ நகருக்கு ஒற்றர்களை அனுப்பியபோது அவர்களுக்கு தங்குமிடம் கொடுத்து அவர்கள் உயிரைக்காத்த ஒரு விலைமகளின் பெயர் இது (யோக 2:1-21). இதற்குப் பதிலாக இஸ்ராயேல் நகரைக் கைப்பற்றும்போது தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றுமாறு அவர்கள் வாக்குறுதி செய்யுமாறு கேட்டாள். அவர்களும் இணங்கினர். அவள் தனது வீட்டின் சன்னலின் சிவப்புக் கயிற்றை அடையாளமாகக் கட்டிவைத்தாள். நகரம் பிடிபட்டபோது யோசுவா இந்த வாக்குறுதியை நினைவுகூர்ந்து இராகபுவையும் அவள் குடுப்பத்தையும் காப்பாற்றினார் (6:17.22-25) பழைய ஏற்பாட்டிலே வேறெங்கும் இதைப்பற்றி பேசப்படவில்லை. ராபிகளின் பாரம்பரியம் இவள், உலகத்தில் இருந்த நான்கு அழகான பெண்களில் ஒருத்தி என்றும், எரேமியா உள்ளிட்ட இறைவாக்கினர்களுக்கும் குல்தா இறைவாக்கினர்களுக்கும் மூதாதை என்றும் கூறுகிறது.

புதிய ஏற்பாட்டில் மத்தேயு அளிக்கும் இயேசுவின் மரபுமுறைக் கொடியில் இராகாபு சால்மோனின் மனைவியும் போவாசின் தாயுமாவாள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (மத் 1:5). ஆனால் மத்தேயு குறிப்பிட்ட இந்த இராகாபுதான் யோசுவா நூலில் வரும் இராகாபு என்னும் கருத்து ஐயத்திற்குரியது. ஆயினும் மீட்பு வரலாற்றில் இறைவன் புறவினத்தைரையும் சேர்த்துள்ளார் என்று நினைவுபடுத்த மத்தேயு இராகாபுவைப் புகுத்தியிருக்கலாம். நற்செயல்களால் நீதிமான் பிழைப்பான் என்பதற்கு உதாரணமாக இந்த இராகாபு யாக் 2:25-இல் கூறப்பட்டுள்ளாள். இந்த இராகாபு எபி 11:31-இல் விசுவாசத்தினால் அழிவிலிருந்து தப்பினாள் எனக் கூறப்பட்டுள்ளது.

2. தொடக்கக் காலத்தில் யாவேயால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் புராணத்தில் வரும் வேதாளமாகும். இது பற்றிய கதைகள் பாபிலோனிய, கானானிய மதங்களில் உண்டு; இஸ்ராயேலின் இறைவனின் மேலாண்மை வல்லமையை கட்டிக்காட்ட வல்லமை மிகுந்த இக்கதைகளைப் பழைய ஏற்பாடு சுட்டிக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டிலே இப்பெயர் கவிதை வடிவில் எழுதப்பட்ட பகுதிகளில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது (யோசு 9:13; 26:12; சங் 89:10; எச 30:7; 51:9-10). இவையாவும் கி.மு. 7-ஆம் நூற்றாண்டிற்குப்பின் எழுதப்பட்ட நூல்களிலேயே காணப்படுகின்றன. இச்சொல்லின் பொருள் இன்னும் தெளிவாகப் புலப்படவில்லை. சிலர் இது கர்வமுள்ள முரட்டுத்தனமுள்ள என்ற பொருளைக் குறிக்கிறது என்பர். மற்றும் சிலர் கோபம் என்று பொருள் படும் அக்காதிய சொல்லிருந்தும் கர்ச்சித்தல் என்று பொருளுடைய எகிப்தியச் சொல்லிலிருந்தும் வந்திருக்கலாம் என்பர்.

இராகாம் (RAHAM - இரக்கம், பரிவு)

இவர் யூதாவின் வழித்தோன்றலில் ஒருவர். இவர் சேமாவின் மகனும் யோர்க்கயாமின் தந்தையும் ஆவார் (1 நாள் 2:24).

இராகியு (RAGES)

இது பாரசீக பேரரசின் வடகிழக்கே உள்ள அரண் சூழ்ந்த முக்கியமான நகரங்களில் ஒன்று; தோபி 1:14; 4:1.20; 5:5; 6:12; 9:2- ஆகிய 6 இடங்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குத் தோபித்து தன் உறவினன் கபேலுக்குப் பத்து தாலந்து வெள்ளியைக் கடன் கொடுத்திருந்தார் (4:1.20). இரபேல் என்ற வானதூதர் இப்பணத்தை வாங்கிவர இராகியுவுக்கு சென்று வர தோபித்துவின் மகன் தோபியாவுக்கு வழிகாட்டினார் (5:5; 6:12; 9:2). யூதி 1:5.15-இல் இது பொதுவான ஒரு பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி ஆர்பகசாதுக்கு எதிராக நெபுக்கதுனேசார் இப்பகுதியில்தான் போரிட்டார். அம்போர்ஸ் மலைத்தொடரின் தெற்கே

அமைந்துள்ள இந்நகரம் காஸ்பியன் கட லுக்கு எல்லையாக விளங்கியது. மேதியா வின் மகா அலக்சாண்டர் மற்றும் அவரது வழி வந்தவர்களின் காலத்திய போர்களில் இந்நகரம் முக்கிய பங்கு வகித்தது. ஈரானில் பழங்காலத்தில் நாகரிகத்தோடு விளங்கிய நகரங்களில் இதுவும் ஒன்று. புதைபொருள் ஆராய்ச்சியின்படி இந்நகரில் கி.மு.5000 லிருந்து மக்கள் குடியிருந்திருக்க வேண்டும் எனக்கூறலாம். இடையிடையே நில நடுக் கத்தாலும், அரேபியர்கள், மொகலாயர்கள், ஆப்கானியர்கள் பார்த்தியர்கள் ஆகியோரின் தாக்குதலாலும் இந்நகர் சேதப்படுத்தப்பட் டது. சொரோயாஸ்திரிய மதம் இவ்விடத் தில் சிறந்து விளங்கியது. கி.பி.7-13 நூற் றாண்டுகளில் இது மகமதியர்களின் செல் வாக்கு உள்ள நகராக விளங்கிற்று.

இராக்கால் *(RACAL - வணிகம்)*

இது யூதாவின் தென்பகுதியில் உள்ள ஓர் ஊர். ஆனால் இதன் சரியான அமைவிடம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இந்த ஊருக்குத்தான் தாவீது அமலேக்கியர்களிட மிருந்து கைப்பற்றிய செல்வங்களில் ஒரு பகுதியை அனுப்பிவைத்தார் (1 சாமு 3029).

இராக்கேம் *(RAKEM - பூப்பண்ணை)*

இவன் மனாசேயின் பேரனும் செரேசு வின் மகனும் ஆவார் (1 நாள் 7:16).

இராக்கேல் *(RACHEL)* - காண்க ராக்கேல்

இராசி *(RASSIS)*

இது சிலிசியாவுக்கு அருகே உள்ள ஓர் இடம் அல்லது பகுதி. இவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் ஓலபெரினேயின் படைக ளால் நாசமாக்கப்பட்டனர் (யூதி 2:23). தார்சு என்ற பெயர்தான் இவ்வாறு மருவி வழங் கப்பட்டது என்பர் சிலர். வேறுசிலர் இன் றைய ஆர்சுஸ் அன்று இராசி எனப்பட்டது என்பர்.

இராஸ் ஸம்ரா *(RAS-SHAMRA)*

இது சீரியாவில் உள்ள ஓர் மலையின் பெயர். இதற்கு சதக்குப்பி (சீரகம்) மலை எனப் பொருள்படும். இங்குதான் பழங்கால உகாரித்து அமைந்திருந்தது என்பர்.

இராதாய் *(RADDAI - மிதிப்பவன்)*

இவர் பெத்திலகேமைச் சார்ந்த ஈசாயின் ஐந்தாவது மகன். எனவே இவர் தாவீதினு டைய மூத்த சகோதரன் (1 நாள் 2:14) ஆவார்.

இராபேல் *(RAPHAEL - இறைவன் குணமாக்கி னார்)*

தொபியாநூலில் அசரியா என்ற பெயரில் மேதியாவிலுள்ள இராகியுவுக்கு தொபியாவு டன் செல்கிறார். அசுமதேயு என்ற தீய சக்தியை கட்டுப்படுத்தி அதனால் இரகுவே லின் மகளான சாராளை தொபித்தின் மக னான இளைய தொபியா மணம் முடிக்க உதவுகிறார். தொபித்தின் கண்களில் இருந்த வெள்ளை படலத்தை நீக்கி அவர் பார்வைச் பெறச் செய்ய அனுப்பப்பட்ட ஓர் குணம ளிக்கும் வானதூதர். இவர் பெயர் வேதாக மத்தில் காணப்படுகிறது.

இப்பெயர்கள் பார்திய மற்றும் பாபிலோ னிய மூலங்களிலிருந்து வந்திருக்கலாம் எனத் தால்மூத் கூறுகிறது. இவை பெரும்பா லும் திருமறை நூல் வரிசையில் இடம் பெற்றுள்ள நூல்களில் காணப்படுவதில்லை. ஏனோக்கு ஆகமம் 20:3-இல் இராபேல் வானதூதர்களின் வரிசையில் இரண்டாவது இடத்தையே வசிக்கிறார் எனக்கூறப்படுகி றது.

பலவழிகளில் இராபேலும் மிக்கேலும் ஒப்புமை படுத்தப்படலாம். பிற்கால இலக் கியங்களிலேயே இப்பெயர்கள் காணப்படு கின்றன. வானதூதர்கள் மனிதர்களின் பிரச்ச னைகளில் தலையிடுகிறார்கள் என்று வளர்ந்து வந்த ஒரு நம்பிக்கையை இது குறிக்கிறது. ஏனோக்கு நூலில் தீர்ப்புநாள்வ ரைத் தடுத்து வைப்பதற்காக அசாசேலை இருளில் இராபேல் தள்ளுகிறார். காட்சிக ளுக்கு விளக்கம் அளிக்கிறார். இறைவனு டைய இறுதித் தீர்ப்பைச் செயல்படுத்தும் வானதூதர்களில் இவரும் ஒருவர்.

இராப்பா (RAPHA - இறைவன் குணமாக்கினார்)

இவர் பென்யாமினின் ஐந்தாவது மகன் (1 நாள் 8:2). ஆனால் இது ஆதி 46:21-இல் கொடுக்கப்பட்டுள்ள பென்யாமின் புதல்வர்களின் பட்டியலில் குறிக்கப்படவில்லை. இந்த பட்டியலின்படி நாமான் என்பவனே ஐந்தாவது மகன். எகிப்தில் பிறந்த இராப்பாவுக்குப் பிள்ளைகள் இல்லாமலிருந்திருக்கலாம் அல்லது வெகு சிலராய் இருந்திருக்க வேண்டும். அவர்கள் பென்யாமினின் மற்ற வழித்தோன்றல்களுடன் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இராப்பா (RAPHAH)

இவர் பென்யாமின் குலத்தைச் சேர்ந்த சவுலின் வழிவந்தவர் (1 நாள் 8:37). இவன் பினியாவின் மகனும் எலயாசாவின் தந்தையுமாவார். 1 நாள் 9:43-இல் இவர், இரப்பாயா என்றழைக்கப்படுகிறார்.

இராமசேசு (RAMSES, RAAMESES, RAMESSES - ரா பெற்றெடுத்தாள்) - ஆள்

எகிப்தை ஆண்ட பத்தொன்பதாம், இருபதாம் அரசமரபுகளில் பதினொரு பேர் இப்பெயரை கொண்டிருந்தனர். அமர்னா காலத்திற்குப்பின் இக்காலத்தில் எகிப்திய அரசாங்கம் மீளவும் கழிமுகப்பகுதியில் அமைக்கப்பட்டது.

1. முதலாம் இராமசேசு (கி.மு. 1319-1320). ஹோரேமேபுவின் முதல் அமைச்சரும் அவருக்குபின் ஆட்சிக்கு வந்தவரும் ஆவார். பத்தொன்பதாம் அரசமரபைத் தொடங்கி வைத்தார். ஓனைச் சேர்ந்த சூரியகடவுளான ராவையும், பாலைவனம், இடி, மலைகள் ஆகியவற்றின் கடவுளான சேத்துவையும் இவர் காலத்தில் மக்கள் வழிப்பட்டனர்.

2. இரண்டாம் இராமசேசு (1299-1232). இவரது அறுபத்து ஏழு ஆண்டுகள் நீண்ட ஆட்சி, எகிப்தில் ஓர் அழியாத நினைவை ஏற்படுத்தியது. பல நினைவுச் சின்னங்கள் எழுப்பி தன் பெயரையும் அதோடு சேர்த்துக் கொண்டார். அபு-சீம்பல், கர்னாக்கு போன்ற கோயில்கள் இவர் காலத்தில் கட்டப்பட்டன. இவருடைய வெற்றி இவரது வழித்தோன்றல்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிற்று. இவருக்குபின் எகிப்தில் உள்நாட்டு, வெளிநாட்டு குழப்பங்கள் அதிகரித்தன. இவர்தான் எகிப்தின் கழிமுகப் பகுதியில் கிடங்கு நகரான இராமசேசு நகரை கட்டினார். இவர்தான் இஸ்ராயல் மக்களை அடிமைப்படுத்திய பாரவோன். இவரின் ஆட்சியின் தொடக்கத்தில் இத்தியர்கள் பெலிஸ்தியர், மைசியர்கள் ஆகியோரால் பெரும் தொல்லைகள் ஏற்பட்டன. இவர்கள் கடல் வழியாகவும் நிலவழியாகவும் எகிப்தை தாக்கினர். இரண்டாம் இராமசேசுவின் 21-ஆம் ஆண்டில் இத்தியர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். இதன்படி இருவரும் இணைந்து மற்ற பகைவர்களை அழிக்க வேண்டும். எனெனில் அப்போது அசீரியர்களின் பலம் சிறிது வளர்ந்திருந்தது. இதன்பின் 40 ஆண்டுகள் அமைதி நிலவியது. இவர் வாழ்ந்த காலத்திலேயே இவரை மக்கள் கடவுளாக வழிப்பட்டனர். இவருக்கு பின் வந்த மெர்-நெப்தா ஆட்சிக்குப்பின் இந்த அரசமரபு ஆட்சி முடிவுற்றது. இதன் பின் எகிப்தின் 20-ஆம் வம்சத்தினர் பொறுப்பேற்றனர்.

3. மூன்றாம் இராமசேசு (கி.மு. 1198-1167) இருபதாம் அரசமரபின் இரண்டாம் அரசன் தன் முன்னோர்களைப் பின்பற்றி தன் ஆட்சியையும் சிறப்பாக அமைக்க முயன்றார். ஆனால் இவர் ஆட்சி காலத்தில் குழப்பங்கள் மிகுந்திருந்தன. இவர் இரண்டு முறை தனது மேற்கு எல்லைப்பகுதியை லிபியாவிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவரது ஆட்சியின் இறுதியில் சூழ்ச்சிகளும் உள்நாட்டு குழப்பங்களும் போர்களும் மிகுந்திருந்தன. அதன் விளைவாகக் கொலை செய்யப்பட்டார். இவருக்கு பின்வந்த அரசர்கள் அவ்வளவு குறிப்பிடும்படியாக அமையவில்லை.

4. நான்காம் முதல்-பதினோறாவது இராமசேசு (கி.மு. 1167-1085). இந்த எட்டுப்பேரும் 21-ஆவது அரசமரபைச் சேர்ந்தவர்கள். நான்

காம் இராமசேசின் சிலை ஒன்று கானானிய நகரான மெகிதோவில் கண்டெடுக்கப்பட்டது.

கி.மு. 1100-இலிருந்து பாரவோனின் ஆட்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. அரச குலத்தவரும், படை தளபதிகளும் திபிசுவில் உள்ள அமோன் ஆலய குருக்களும் பதவிக்காக போட்டியிட்டுக் கொண்டனர். இப்போட்டியிலிருந்து படை தளபதி ஒருவன் கி.மு. 1090-இல் எகிப்தின் 21-ஆம் வம்சத்தை துவங்கினான். இந்த அரசு, அரச குலத்தவர் சிலருக்கும் குருக்களுக்கும் பிரித்து கொடுக்கப்பட்டது.

இராமசேசு (RAAMSES, RAMESES - ராம்சேசின் மாளிகை) - இடம்

எகிப்தின் பத்தொன்பதாம், இருபதாம் அரசமரபுகள் (கி.மு. 1319-1085) ஆண்டகாலத்தில் நைல்நதியின் வடகழிமுகப்பகுதியில் அமைந்திருந்த அரசர் தங்கும் நகரம் இது. இராமசேசப்பகுதியை இஸ்ராயேலின் மூதாதையர்களுக்கு யோசேப்பு அளித்தார் (ஆதி 47:11). பாரவோனுக்காக இஸ்ராயேலர் உணவுக்கிடங்குகள் கட்டிய இரு இடங்களில் இதுவும் ஒன்று. இஸ்ராயேல் மக்கள் எகிப்தின் அடிமை தனத்திலிருந்து மீண்டு கிளம்பிய போது இந்நகரத்திலிருந்தே கிளம்பியிருக்க வேண்டும் (யாத் 12:37; எண் 33:3-6). எகிப்திய ஆதாரங்களின்படி பார்த்தால் இரண்டாம் இராமசேசுதான் இந்நகரை யெழுப்பி இப்பெயரையும் அதற்கு இட்டார் எனலாம். திபிசு தெற்கே உள்ள பருவகால தலைநகராகவும் இராமசேசு வடக்கே உள்ள நிரந்தரமான நிர்வாகத் தலைநகராகவும் விளங்கின (ஆதி 47:11). இங்கே துறைமுகமொன்றும் இருந்தது. எகிப்திய கவிதைகளில் இந்நகர் பழவளமும் மீன்வளமும் மிகுந்த நகர் என புகழப்பட்டுள்ளது. சிலர் இது சீனாய் பாலைவனத்திற்கு அருகாமையில் இருந்தது என்பர். எனினும் இதன் அமைவிடம் பற்றிய தெளிவான கருத்து எதுவும் கூறமுடியாது.

இராமத்து மிசுபே (RAMATH-MIZPEH - காவல் கோபுர உச்சி)

இது யோர்தானுக்கு அப்பால் காது இனக் குடியிருப்பின் எல்லையைக் குறிக்கும் நகர்களில் ஒன்று (யோசு 13:26); வழக்கமாகக் கிலயாத்தைச் சேர்ந்த மிசுபே என்று அடையாளம் காட்டப்படும். யோர்தானுக்கு 23 கி.மீ. தொலைவிலும் யாப்போக்கு ஆற்றுக்குத் தெற்கில் 8 கி.மீ தொலைவிலுமுள்ள கிர்பெத்து எலாதா என்னுமிடத்தில் இருந்திருக்கலாம்.

இராமத்து லெகி (RAMATH-LEHI - தாடை எலும்புக்குன்று)

இந்த இடத்தில் சிம்சோன் கழுதையின் தாடை எலும்பை ஆயுதமாகக் கொண்டு 1000 பெலிஸ்தியர்களைக் கொன்று தீர்த்தார் (நீதி 15:17).

இராமா (RAMAH - உச்சி, உயர்ந்த)

1. இது பென்யாமின் கோத்திரத்தாருக்கு கிடைத்த யூதா, இஸ்ராயேல் நாடுகளின் எல்லைப்பகுதியில் உள்ள ஓர் நகரம் (யோசு 18:25; மத் 2:18). சவுலின் ஊரான கிபயாவுக்கு அருகில் உள்ளது (நீதி 19:13). யூதர் நாட்டை வடக்கிலிருந்து தாக்குவதற்காக இஸ்ராயேலின் மன்னனான பாசா இந்நகரை பலப்படுத்தினார். பாசா தன் வடக்கு எல்லைபகுதிகளைச் சீரியாவிடமிருந்து காப்பாற்றுவதில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கையில் யூதாவின் அரசனான ஆசா இராமாவை தாக்கி அந்நகரின் கற்களையும் மரங்களையும் எடுத்துச் சென்று தனது நகர்களான கெபா, மிசுப்பா ஆகிய நகரங்களை பலப்படுத்த பயன்படுத்திக் கொண்டார் (1 அர 15:17.21-22; 2 நாள் 16:1.5-6). கி.மு. 587-இல் நெபுக்கதுனேசார் தளபதிகள் இஸ்ராயேல் மக்களை இந்நகரிலேதான் கூட்டி, பின் பாபிலோனியாவுக்கு அழைத்துச் சென்றனர். இங்கு எரேமியா இறைவாக்கினருக்கு விடுதலை அளிக்கப்பட்டது (எரே 40:1.4). பென்யாமின் மக்கள் நாடு திரும்பியபின் இந்நகரிலேயே தங்கினர் (எஸ் 2:26; நெக 7:30;11:33). இந்நகருக்கு அருகிலேதான் இராக்கேலின்

கல்லறை உள்ளது (1 சாமு 10:2; எரே 31:15; மத் 2:18).

எருசலேமின் வடக்கே உள்ள நகரங்களை பற்றி பேசும் போது இராமா அடிக்கடி பேசப்படுகிறது (நீதி 4:5; 19:13-14; யோசு 18:25; ஏச 10:29; ஓசே 5:8; எஸ் 2:26; நெக 7:30). இதையெல்லாம் பார்க்கும் போது எருசலேமுக்கு வடக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ள ஏர்-இராம் என்ற நகரமே இராமாவாக இருந்திருக்கலாம்.

2. இது ''நெகேபின் இராமா'' ஆகும். சிமியோன் கோத்திரத்தைச் சேர்ந்த ஊர். இதன் மற்றொரு பெயர் பாகலாத்து-பேர் ஆகும் (யோசு 19:8). இவ்வூர் மக்களுக்கு தாவீது அமலேக்கியர்களிடமிருந்து பெற்றக் கொள்ளைப்பொருட்களில் ஒரு பகுதியைக் கொடுத்தார் (1 சாமு 30:2). எபிரோனுக்கு தென்-தென் கிழக்கில் 45 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து காசாவாக இருந்திருக்கலாம்.

3. ஆசேர் பகுதியின் எல்லையில் உள்ள ஓர் நகரம் இது (யோசு 19:29). ஆசார் பகுதியில் வடக்கு பகுதியில் இது அமைந்திருந்தது என்பது விவிலியத்திலிருந்து தெளிவாகிறது. இருந்தாலும் இதன் சரியான அமைவிடம் இன்னும் சரியாக புலப்படவில்லை. ஆசாரில் உள்ள ''இராமாவும்'' நப்தலியில் உள்ள ''இராமாவும்'' ஒன்றே என்று சிலர் கூறுவர். சில சமயம் தீருக்கு தென் தென்கிழக்கில் 21 கி.மீ. தொலைவிலுள்ள இரமியேவாக அடையாளம் காட்டப்படுகிறது.

4. நப்தலியில் இருந்த ஓர் அரண் சூழ்ந்த நகரம் (யோசு 19:36). இது மேற்கூறப்பட்ட மூன்றாவது இடத்தோடு அடையாளம் காட்டப்பட்டாலும் சப்பேத்துக்கு மேற்கு-தென்மேற்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால ஏர் இராமேயாக இருக்கலாம்.

5. இது எப்பிராயிம் மலைநாட்டில் உள்ள ஓர் சிறு நகரம். இதன் மற்றொரு பெயர் இராமத்தியிம்-சோபீம் ஆகும். இது சாமுவேலின் சொந்த ஊர். இங்கேயே இவர் தங்கியிருந்தார்; பின் இங்கேயே அடக்கம் செய்யப்பட்டார் (1 சாமு 1:1.19; 2:11; 7:17; 8:4; 25:1; 28:3). இவரின் சொந்த ஊரான இராமாவிலிருந்து இவருடைய பெற்றோர்கள் ஆண்டுதோறும் 'சீலோ'வுக்கு சென்று வழிபாடு நடத்துவதுண்டு (1 சாமு 1:3). சாமுவேல் இங்கு ஓர் பீடத்தை எழுப்பினார். இங்கிருந்து கில்கால், பெத்தேல், மிசுப்பா ஆகிய பிற இடங்களுக்கும் சென்று பணியாற்றினார். சவுல் இங்குதான் அபிசேகம் பெற்றார் (8:4-10). தாவீதை அரசனாக அபிடேகம் செய்தபின், இந்நகருக்கு சாமுவேல் திரும்பினார். தாவீது சவுலின் பகைமையிலிருந்து தப்பித்துக்கொள்ள இந்நகருக்கே விரைந்தார் (19:18). கி.மு. 145-இல் இந்நகரும் இதை சூழ்ந்திருந்த பகுதியும் சமாரியாவிலிருந்து பிரிக்கப்பட்டு யூதாவோடு சேர்க்கப்பட்டது (1 மக் 11:34). யூசேபியு இந்நகர்தான் புதிய ஏற்பாட்டிலே வரும் அரிமத்தியா என்கிறார் (மத் 27:57; யோவா 19:38).

6. இராமோத்து கிலயாதின் மற்றொருபெயர் (2 அர 8:29; 2 நாள் 22:6).

இராமாவியர் (RAMATHITE)

சிமொயி (13)-இன் இனப்பெயர். இவர் தாவீதரசருடைய திராட்சை தோட்டத்தின் தலைமை விவசாய மேற்பார்வையாளர் ஆவார் (1 நாள் 27:27). இதற்கு இராமா நகரத்தைச் சேர்ந்தவர் என்று பொருள் கொள்ளலாம். பல நகரங்கள் இப்பெயரில் இருந்ததால் இங்கு இது எதைக் குறிக்கும் என்று தெளிவாக கூறிவிடமுடியாது.

இராமோத்து (RAMOTH - உச்சி)

1. கிலயாத்தில் உள்ள ஊர் (உப 4:43; யோசு 28:8; 21:38; 1 நாள் 6:80). காண்க இராமோத்-கிலயாத்து.

2. நெகேபின் இராமோத்து (1 சாமு 30:27). காண்க இராமா-2

3. இசக்கார் பகுதியிலுள்ள கெரிசோமியருக்கு அளிக்கப்பட்ட ஒரு லேவிய நகரமாகும் (1 நாள் 6:73). யாரிமுத்து-2 ஆகவோ

(யோசு 21:29) அல்லது இரைமேத்து ஆகவோ (19:21) இருக்கலாம். இது, பேத்து-சானுக்கு வடக்கில் 12 கி.மீ. தொலைவிலுள்ள கோகபு ஏல்-காவா என்ற இடமாக இருந்திருக்கலாம்.

இராமோத்து கிலயாது (RAMOTH-GILEAD)

இது 'காத்' தின் கிழக்கு பகுதியில் இருந்த கிலயாத்தில் இருந்த ஓர் முக்கியமான கோட்டை. இது சில நேரங்களில் வெறுமனே இராமா எனவும் அழைக்கப்படுகிறது. யோர்தானுக்கு அப்பால் இருந்த மூன்று அடைக்கலம் புகும் நகரங்களில் ஒன்றாகவும் (உப 4:43; யோசு 20:8), ஒரு லேவியரின் நகராகவும் (யோசு 21:38; 1 நாள் 6:80) இது விளங்கியது. சாலமோனின் ஆறாவது பகுதியின் ஆளுநர் இந்நகரிலேயே தங்கினார் (உப 4:43; யோசு 21:38; 1 அர 4:13). இஸ்ராயேல் அரசு இரண்டாக பிரிந்தபோது (கி.மு.935) இது சீரியர்களால் தாக்கப்பட்டு அவர்கள் நாட்டோடு சேர்க்கப்பட்டது (1 அர 15:20). ஆகாபு இதை மீண்டும் கைப்பற்ற முயற்சி செய்து தோற்றார் (1 அர 22). பத்தாண்டுகளுக்கு பின் ஆகாபுவின் மகனான யோராமும் யூதாவின் அகசியாவும் இந்நகரை கைப்பற்றி அங்கே ஏகூவைக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தினர். இங்குதான் எலியாவின் சீடர் ஏகூவை அரசனாக அபிடேகம் செய்தார் (2 அர 8:28-9:28). இதைப்பற்றி விவிலியம் பின் குறிப்பிடவில்லை.

இது யோர்தானுக்குக் கிழக்கில் 45 கி.மீ. தொலைவிலும் வாடி சோமேரின் கரையிலுள்ள அம்மானுக்கு வடக்கில் 66 கி.மீ. தொலைவிலும் உள்ள தேல் இராமித்து இருக்கிற இடமாக இருந்திருக்கலாம்.

இராம் (RAM - உயர்ந்த)

1. இவர் கெசிரோனின் மகன். தாவீதின் மூதாதையரில் ஒருவர். எனவே இவர் இயேசுவுக்கும் மூதாதையர் (ரூத் 4:19; 1 நாள் 2:9; மத் 1:3-4).

2. யூதாவைச் சேர்ந்த ஏரகுமேல் என்பவரின் மூத்தமகன் (1 நாள் 2:25.27).

3. இவன் எலிகூ குடும்பத்தின் தலைவர். இந்த எலிகூ யோபுவின் நண்பர்களில் ஒருவர் (யோபு 32:2).

இராயப்பர் (PETER)

காண்க பேதுரு

இரிக்கானு (HYRCANUS)

1. தோபியாவின் பேரனும் யேசேப்பின் எட்டாவது மகனும் ஆவர் இவர் கி.மு.226-இல் பிறந்த இவர், தோலமி ஆட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டதால் தனது குடும்பத்தினின்று உறவு முறிந்தவனானார். தனது சகோதரர்களில் இருவரை கொன்ற பின்னர், அராகு-ஏல்-எமீரிலுள்ள யோர்தானுக்கு அப்பாலுள்ள கோட்டைக்கு தப்பியோடினார். மூன்றாவது பெரிய செலூக்கிய, மூன்றாம் அந்தியோக்கு சீரிய-பாலஸ்தீனத்தை வென்ற பின்னரும் தோலமிகளுக்குப் பிரமாணிக்கமுள்ள நேர்மையான ஒரு சுதந்திர ஆட்சியாளராக அவர் அங்கு தன்னை ஏற்படுத்திக்கொண்டார். சுற்றியுள்ள மக்களைச் சூறையாடிச் சேர்த்த குறிப்பிடத்தக்க செல்வங்களை அவர் ஆலய கருவூலத்தில் சேமித்துவைத்ததாகத் தெரிகிறது (2 மக் 3:11). 175-இல் வலிமைமிக்க நான்காம் அந்தியோக்கு எப்பிபான் அரியணை ஏறிய சிறிது காலத்திற்குள்ளாக இரிக்கானு தற்கொலை செய்து கொண்டார்.

2. முதலாம் யோவான் இரிக்கானு:- அசமோனிய பெரிய குருவும் யூதேயாவின் அரசனுமானவர் (கி.மு.135-104). சீமோன் மக்கபேயுவின் இளைய மகனாகிய இவர் 137-இல் யுதேயாவின் மீதான செலூக்கிய படையெடுப்பைத் திருப்பியடித்து, இரண்டு வருடங்களுக்கு பிறகு தனது தந்தையும் இரு சகோதரர்களும் கொல்லப்பட்டபின், அரியணையைக் கைப்பற்றினார். ஏழாவது அந்தியோக்கு சிதேதெசு யூதேயாவிற்கு எதிரான தனது முற்றுகையை உடனடியாக புதுப்பித்தார். இரிக்கானுவை எருசலேமில் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முற்றுகையிட்ட பின்னர், இரிக்கானுவை பெரும் கப்பம் கட்டச் செய்தார்; போர்க்கைதிகளைக் கூட்

டிச் சென்றார். மற்றும் யூத படைகளின் போர்கருவிகள் அகற்றினார். 129-இல் பார்த்தியரால் அந்தியோக்கு கொல்லப்பட்டது மற்றும் அவரது வாரிசாகிய இரண்டாம் தெமேத்திரியு எதிர்கொண்ட உள்நாட்டு குழப்பத்தையும் பயன்படுத்தி, உரோமையுடனான தனது தந்தையின் தோழமையை இரிக்கானு மீண்டும் புதுப்பித்துத் தனது சுதந்திரத்தை மீண்டும் அடைந்தார். யோர்தானுக்கு அப்பால் மெதேபாவையும் வடக்கில் செக்கேமி வரையிலும் தெற்கே இதுமேயா வரையிலும் வென்று யூத ஆதிக்கத்தை அவர் பரப்பினார். சில ஆண்டுகள் கழித்து அவரது பிள்ளைகள் சமாரியாவையும் எசுதிரலோன் பள்ளத்தாக்கையும் கைப்பற்றினார்.

கெரிசிம் மலையிலிருந்த சமாரியர்களின் கோயிலை அழித்தார். விருத்த சேதனத்தையும் யூத சட்டத்தையும் ஏற்குமாறு இதுமேயரை வற்புறுத்தினார். இவ்வாறு அச்சத்திற்குரிய ஆட்சியாளராக இரிக்கானு விளங்கினார். மேலும் ஆதிக்கமிக்க பரிசேயருடன் இவர் தனது உறவை முறித்துக்கொண்டு தன்னுடைய கிரேக்க அரச முறை எண்ணங்களுக்கு சார்பாக இருந்த சதுசேயருடன் சேர்ந்து கொண்டார். இவ்வாறு யுதேயாவினுடைய சுதந்திரத்தை மீண்டும் ஏற்படுத்தி அதனுடைய அரசியல் ஆதாயங்களை உயர்த்திய வேளையில் இரிக்கானு அசமோனிய மரபினை சமயம் சாராத சக்தியாக மாற்றியமைத்தார். அவரைத் தொடர்ந்து அவரது ஐந்து மகன்களில் மூத்தவனாகிய முதலாம் அரித்தோபுல் அரியணை ஏறினார்.

3. இரண்டாம் யோவான் இரிக்கானு:- அலக்சாந்தர் யன்னேயு மற்றும் சலோமி அலக்சாந்திராவின் மூத்த மகனும், முதலாம் யோவான் இரிக்கானுவின் பேரனுமாவார். கி.மு. 76-இல் தனது தந்தைக்குப் பின்னர் இவர் பெரிய குருவானார். 67-இல் மறைவிற்கு பின்னர், மாகாண ஆட்சியாளரானார். ஆனால் மூன்று மாதங்களுக்குப் பின்னர், தனது மூர்க்கமான இளைய சகோதரன் இரண்டாம் அரித்தோபுலுக்கு அப்பதவியை விட்டுக் கொடுக்குமாறு அவர் வற்புறுத்தப்பட்டார். 63-இல் பாம்பே எருசலேமை கைப்பற்றிய பின்னர், இரிக்கானுவை மீண்டும் தலைமைக்குருவாக ஏற்படுத்தினார். ஆனால் உண்மையான அதிகாரம் இதுமேய அந்திப்பத்தரிடம் இருந்தது. அரித்தோபுல் மற்றும் அவரது புதல்வர்கள் அலக்சாந்தர் மற்றும் கபினு ஆகியோரின் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து, உரோமை புறமாகான ஆளுநர் பாலஸ்தீன ஆட்சி முறையை மாற்றியமைத்து, இரிக்கானுவைப் பதவியினின்று நீக்கினார். யூலியு சீசர் பாம்பேயை வென்ற பின்னர் இரிக்கானு தனது பிரமாணிக்கத்தை எடுத்துக்காட்டினர். அதனால் சீசர் அவரை மீண்டும் தலைமைக் குருவாகவும் பெயரளவு ஆட்சியாளராகவும் ஏற்படுத்தினார். ஆனால் மீண்டும் அவர் யூதேயாவின் கருவூல அதிகாரியாக இருந்த அந்திப் பத்தரின் கைப்பொம்மையாகவே இருந்தார். 47-இல் அந்திப்பத்தர் தனது புதல்வர்கள் பெரிய ஏரோது மற்றும் பாசேல் ஆகியோரை முறையே கலிலேயாவிற்கும் எருசலேமிற்கும் ஆளுநர்களாக ஏற்படுத்தினார். அவர்களும் இரிக்கானுமேல் ஆதிக்கம் செலுத்தினர். 42-இல் மாற்கு அந்தோணி அவர்களை யூதேயாவின் மண்டல ஆளுநர்களாக ஏற்படுத்தினார். இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் இரிக்கானுவையும் பாசேலையும் பதவியினின்று நீக்கி, தான் அரசனாவதற்கென அரித்தோபுலுவின் மகன் அந்திகோனு பார்த்தியரின் உதவியை நாடினார். இரிக்கானுவின் செவிகளை வெட்டி விட்டு அதன் விளைவாக தலைமைக் குரு நிலையை மீண்டும் அடைவதற்கு அவரை தகுதியற்றவராக்கினார். இரிக்கானு சிறைப்படுத்தப்பட்டுப் பார்த்தியாவிற்கு கொண்டு செல்லப்பட்டாலும் திரும்புவதற்கு 36-இல் அனுமதிக்கப்பட்டார். அவர் பெரிய ஏரோதுவால் 30-இல் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறாக அரியணைக்கான அசமோனிய உரிமம் முடிவுற்றது.

இரிசா (RISSAH - *மழை தெளிக்கப்பட்ட*)

பாலையில் அலைந்து திரிந்தபோது இலிபுனாவுக்கும் கெகாலாதாவிக்கும் இடையே இஸ்ராயேல் மக்கள் தங்கிய ஓர் இடம் (எண் 33:21-22).

இரித்தமா (RITHAMAH)

பாலைவனத்தில் கசரோந்துக்குப் பிறகு, இஸ்ராயேலர் தங்கிய இடம் (எண் 33:18-19).

இரிசிப்பா (RIZPAH - கனலான நிலக்கரி)

இவள் அய்யாவின் மகளும் சவுலின் வைப்பாட்டியும் ஆவாள். சவுல் இறந்தபின் அபிநேர் இவளைத் தன் மனைவியாக்கி கொண்டார் (2 சாமு 3:7). இது ஆட்சிக்கு உரிமை கோருவதற்குச் சமமாகும் (1 அர 2:22). பெயராவில் அரசனாக இருந்த சவுலின் மகன் இசிபகால் அபிநேரின் பிரமாணிக்கத்திற்குச் சவால் விட்டார். எனவே அபிநேர் இஸ்ராயேலின் தலைவனான தாவீதுடன் தொடர்பு கொண்டார் (2 சாமு 3:7-21). சவுல் கிபயோனியரைக் கொன்றதால் தான் பஞ்சம் வந்தது என்று நினைத்த தாவீது சவுலின் ஏழு புதல்வர்களையும் இரிசிப்பாவின் இருபுதல்வர்களையும் மேராப்பின் ஐந்து புதல்வர்களையும் தூக்கிலிடக் கிபயோனியர் கைகளில் ஒப்படைத்தார் (2 சாமு 21:1-9). இரிசிப்பா இவர்களின் சடலங்களை அறுவடைக் காலம் முதல் மழைக் காலம் வரை பறவைகளும் விலங்குகளும் உண்ணாமல் பாதுகாத்து வந்தாள். இதை அறிந்து தாவீது அவர்களுக்கு முறையான அடக்கம் அளித்தார். அதன் பின் ஆண்டவர் நாட்டின் மீது இரக்கம் கொண்டார் (21:10-14).

இரிசியா (RIZIA)

இவர் ஆசேரின் குலத்தில் ஒரு குடும்பத்தின் தலைவனும் வலிமை மிக்க போர் வீரனுமாவார். உல்லாவின் மகன் (1 நாள் 7:39).

இரித்தமா (RITHMAH)

பாலைவனத்தில் கெசரோத்துக்குப் பிறகு இஸ்ராயேலர் தங்கிய இடம் (எண் 33:18-19).

இரிபாத்து (RIPHATH - பேசப்பட்ட)

இரிபாத்து என்பவர் கோமேரின் மகனும் யாப்போத்துவின் பேரனும் ஆவார் (ஆதி 10:3). இவர் செமித்திய இனத்தவரல்லர். இவருடைய சகோதரர்களான அசுக்கனாசு, தோகருமா மற்றும் தந்தை கோமேரைப் போல இவரும் அன்டோலியனாக இருக்கலாம். இப்பெயர் கோமோரில் தோன்றிய இனத்தையும் குறிக்கும். 1 நாள் 1:6-இல் இரிபாத்துக்குப் பதிலாக தீபாத்து பயன்பட்டிருக்கிறது.

இரிபாய் (RIBAI)

பென்யாமின் குலத்தின் கிபயா என்ற இடத்திலிருந்து தாவீதின் வலிமை மிக்க முப்பது வீரர்களில் ஒருவராக மாறிய இத்தாய் என்பவரின் தந்தையே இரிபாய் ஆவார் (2 சாமு 23:29; 1 நாள் 11:31).

இரிபிலா (RIBLAH - செழிப்பான)

ஒரோன்தெசு ஆற்றின் கிழக்குக் கரையிலுள்ள காதேசு பகுதியில் உள்ள கூம் என்ற ஏரிக்கு தெற்கே 34 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு சிறிய நகரம் இரிபிலா ஆகும் (எச 6:14). எகிப்தியர்கள் மற்றும் பாபிலோனியர்களுடன் யூதா நாடு போரிட்ட காலத்திலிருந்து இரிபிலா நகரம் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இஸ்ராயேலின் எல்லையைக் குறிக்கும் இடங்களில் இரிபிலாவும் ஒன்று (எண் 34:11; எச 6:14). மெகிதோ, காதேசு ஆகிய இடங்களில் கிடைத்த வெற்றிகளுக்குப்பின் இரண்டாம் நெக்கோ இரிபிலாவில் எகிப்திய படைத் தலைமையகத்தை நிறுவினார். கி.மு. 609-இல் இவர் இஸ்ராயேலின் அரசன் யோவாசவைச் சிறைப்பிடித்தார்.

நெபுக்கதுனேசாரைக் கொதித்தெழச் செய்யும் எக்காரியத்தையும் செதேக்கியா மன்னன் செய்யக்கூடாது என எரேமியா இறைவாக்கினர் கூறியதைக் கேட்காமல், போர் காரியத்தில் இறங்கியதால், இரிபிலா நகரை நெபுக்கதுனேசார் படைத்தளமாக மாற்றினார். எருசலேமை பாபிலோனியர் அழிக்கையில் செதேக்கியா எரிகோவுக்குத் தப்பி ஓடினார். ஆயினும் அவரைப் பிடித்து, அவரின் முன்னால் அவரது புதல்வரைக் கொன்று, அவரையும் பாபிலோனுக்கு எடுத்துச் சென்றனர் (2 அர 25:5-7. 20-21; எரே 39:5-7; 52:9-11. 26-27).

இரிம்மோனோ (RIMMONO)

இரிம்மோன்-2 என்ற இடத்தின் மற்றொரு பெயர் (1 நாள் 6:77).

இரிம்மோன் (RIMMON - மாதுளை, இடி இடிப்பவர்) - ஆள்

1. இவர் ஒரு பேரோத்தியர். இசிபோசத்தைக் கொன்ற பானா, இரக்காபு என்பவர்களின் தந்தை (2 சாமு 4:2.5.9).

2. சீரியனாகிய நாமானும், சீரியா அரசனும் வழிபட்ட தெய்வம் ரிம்மோன் ஆகும். அசீரியர்கள் இதை இரமானு என அழைப்பர் (2 அர 5:18).

இரிம்மோன் (RIMMON) - இடம்.

1. தென் யூதாவில் நெகேபு பகுதியில் அமைந்துள்ள ஒரு நகரம். இதன் முழுப்பெயர் 'ஆயின் ரிம்மோன்' ஆகும். இந்நகரம் சிமியோனுக்குக் கொடுக்கப்பட்டபோது (1 நாள் 4:32) பேயேர்செபா மாவட்டத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டது (யோசு 15:32). அடிமைத்தனத்திலிருந்து நாடு திரும்பிய மக்கள் இவ்விடத்திலேயும் குடியேறினர் (நெக 11: 29). செக்கரியாவின் கடைசி அதிகாரத்தில் இரிம்மோன் வரையிலுள்ள யூதாவின் மலைநாடு சமவெளியாகும், எருசலேம் ஓங்கி உயர்ந்து நிற்கும் என்று கூறப்பட்டுள்ளது (செக் 14:10).

2. அசோகிசு என்ற சமவெளியின் தென் கோடியில் மத்திய செபுலோனில் உள்ள இன்றைய உருமன்னே என்ற நகராக இரிம்மோன் அடையாளம் காட்டப்படுகிறது (யோசு 19:13). இது நசரேத்தூருக்கு வடக்கு வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இது மெராரியப்பிரிவைச் சேர்ந்த ஒரு லேவிய நகரமாகும் (1 நாள் 6:77). யோசு 21:35-இல் உள்ள திம்னா,இரிம்மோனாகத் திருத்தப்படவேண்டும்.

3. கிபயாவிற்கு அருகில் உள்ள ஒரு பாறை. பென்யாமின் கோத்திரத்தில் எஞ்சியிருந்தவர்கள் தங்களை அழிக்க வந்த இஸ்ராயேலுக்கு அஞ்சி இரிம்மோனுக்கு ஓடிப் போனார்கள் (நீதி 20:45-47; 21:13-14). பிறகு இஸ்ராயேலர் தூது அனுப்பி, அங்கிருந்த 600 பென்யாமின் குலத்தினரை அழைத்துவந்து கிபயாவிலுள்ள யாபெசு மற்றும் சீலோ போன்ற இடங்களிலிருந்த பெண்களுக்கு மணமுடித்து வைத்தனர். பேத்தேலுக்குக் கிழக்கில் 6 கி.மீ. தொலைவிலுள்ள (நீதி 21:13-14) இக்கால இரமுன் என்ற கிராமம் இருக்கும் இடமாக இருந்திருக்கலாம்.

இரிம்மோன் பேரேசு (RIMMON-PEREZ - கனவாய் மாதுளை)

இது யாத்திரைப் பயணத்தில் இரித்தமாவுக்கும் இலிபுனாவுக்கும் இடையே இஸ்ராயேல் மக்கள் தங்கிய இடம் ஆகும் (எண் 33:19-20).

இரியா (RIJAH - யாவே பார்க்கிறார்)

பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஒரு காவலாளி. எரேமியா அனாத்தோதில் இருந்த தமது சொத்தைக் குடிமக்கள் முன்னிலையில் பாகம் பிரிக்கக் கருதி எருசலேமை விட்டுப் புறப்பட்ட போது, அவர் நாட்டைப் புறக்கணித்து கல்தேயர் பக்கம் சேரப் போவதாகக் குற்றம் சாட்டி அவரைக் கைது செய்தவர், ஒரு வேளை, இவராக இருக்கலாம் (எரே 37:11-14).

இரின்னா (RINNAH - பாடல் கூச்சல்)

இரின்னா என்பவர் சீமோனின் புதல்வரும் யூதாவின் தென் குலத்தில் ஒருவரும் ஆவார் (1 நாள் 4:20).

இரு கடன்காரர்கள் - உவமை.

இந்த உவமை கடவுள் பாவமன்னிப்பளிப்பதை எடுத்தியம்புகிறது. பரிசேயன் சீமோனுடைய வீட்டு விருந்தின்போது பாவி ஒருத்தி ஆண்டவரை அணுகிப் பாவ மன்னிப்பு கோருகிறாள். அந்நேரத்தில் சீமோன், இயேசு உண்மையான இறைவாக்கினரா என ஐயப்படுகிறார். எனவே இயேசு இந்த உவமையைக் கூறுகிறார் (லூக் 7:36-50). தலைவனொருவன் கடன்காரர் இருவரது கடனை மன்னிக்கின்றான். அதில் யாருக்கு அதிகமாக மன்னித்தானோ அவனே தலைவனை அதிகமாக அன்பு செய்கிறான். அதுபோல

இயேசுவின் கால்களைக் கண்ணீரால் கழுவி எண்ணெய் பூசியவள் அவரை அதிகமாக அன்பு செய்கிறாள். எனவே அவளது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஆனால் விருந்தோம்பலை சரியாகச் செய்யாத சீமோன் இயேசுவை அன்பு செய்யவில்லை. பாவ மன்னிப்பையும் விரும்பவில்லை. இந்த உவமையில் கடன்காரர்கள் பாவிகளாவர். கடன் கொடுத்தவர் இறைவனாவார். அதிகமாக மன்னிப்புப் பெற்ற கடன்காரன் தன் சுமை அகற்றப்பட்டு இறைவனுக்கு அன்பையும் நன்றியையும் தெரிவிப்பான்.

''இருக்கிறவராக இருக்கிறவர் நானே''

எரியும் முட்புதரில் மோசே சந்தித்த, இஸ்ராயேலின் இறைவனுடைய உடன்படிக்கைப் பெயரான யாவேயை விளக்கும் சொற்றொடராகும் (யாத் 3:14). இக்கூற்றுக்கு ''நான் யாராய் இருப்பேனோ அவராய் இருப்பேன்'', ''நான் படைப்பவற்றையெல்லாம் நான் படைக்கிறேன்'' என்று ஆய்வாளர்கள் பலவாறு விளக்கம் அளிப்பர். இது யாவே என்ற சொல்லின் வேர்ச் சொல்லின் பொருளாகிய ''இருத்தல், நிகழச் செய்தல்'' போன்றவற்றை வைத்துச் சொல்லாடலாகும். நான்காவது நற்செய்தியில் வரும் ''நானே'' என்று தொடங்கும் வாக்குகள் (யோவா 6:35; 14:6;....), யாத் 3:14-இல் எதிரொலிப்பதாக கருதப்படுகிறது.

இருக்கை, இடம்

இது சிம்மாசனம், நாற்காலி(2 அர 4:10) அமர்வதற்குப் பயன்படும் எந்த சாதனத்தையும், இடத்தையும் குறிக்கப் பயன்பட்டுள்ளது. விவிலிய ஆதாரக் கூறுகளை வைத்து நாற்காலி, முக்காலி இவற்றை பிரித்துக் காட்டுவது கடினமாக உள்ளது. சில வேளைகளில் சிம்மாசனத்திற்கும் நாற்காலிக்குமிடையேயுள்ள வேறுபாடு அவ்வளவு தெளிவாக இல்லை. பெரும்பாலும் அரச சிம்மாசனம் இறைவனுடைய சிம்மாசனத்துக்குத் தொடர்புடையதாக காட்டப்பட்டுள்ளது.

அதேபோல் இது எவ்வாறு செய்யப்பட்டது, எந்தெந்தப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டன என்பதைப் பற்றி அதிகம் சொல்வதற்கில்லை. எகிப்தியர்களின் புதை பொருள் ஆராய்ச்சியை வைத்துத்தான் நாம் இதைப்பற்றிச் சொல்ல முடியும். ஏனெனில் மரவேலை செய்வதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்திருந்தன மேற்காசிய நாடுகள். ஆனால் பாலஸ்தீனர்கள் எந்த அளவுக்கு இதைப்பற்றி அறிந்திருந்தார்கள் என்பது ஊக மதிப்பாகத்தான் சொல்ல முடியும். ஏறக்குறைய கி.மு. 701-ல் யூதாவின் அரசனான எசேக்கிய செனகெரிப்புக்கு கொடுத்த பொருட்களில் நாற்காலியும், படுக்கையும் இடம் பெற்றுள்ளன.

அ. அரியணை, அரசவை இருக்கை:- இது மோவாபு அரசனான எகிலோனின் அரியணையையும் (நீதி 13:20), சவுல் அரசவையில் உணவு உண்ண பயன்படுத்தும் இருக்கையையும் (1 சாமு 20:18.25), சாலமோனின் அரியணை அருகில் பதுசேபா அமர இடப்பட்ட இருக்கையையும், சாலமோனின் இருக்கையையும் (1 அர 10:19), அரசு அதிகாரிகளுக்காக அரசவையில் அமைக்கப்பட்டிருந்த இருக்கைகளையும் (1 அர 10:5), பாரசீக நாட்டு அரசவையிலே ஆமானுக்கு கொடுக்கப்பட்ட இருக்கையையும் குறிக்கின்றது.

ஆ. பல்லக்கின் இருக்கை (உச 3:10)

இ. சாதாரண நாற்காலி அல்லது முக்காலி:- இது ஆலய வாசற்படியில் இருந்த ஏலியின் இருக்கையையும் (1 சாமு 1:9), சாலையோரங்களில் உள்ள இருக்கையையும் (1 சாமு 4:13, 18), எலியாவின் மேற்அறை இருக்கையையும் (2 அர 4:10) குறிக்கின்றது.

ஈ. செபக்கூட இருக்கைகள்:- முதல் நூற்றாண்டு செபக்கூடங்கள் அனைத்துமே அழிந்து விட்டன. ஆனால் கப்பர்நாகூம் ஊரில் இருந்த கி.பி. 3-ஆம் நூற்றாண்டு செபக் கூடத்தை தோண்டியெடுத்தபோது இரண்டு கல்லாலான இருக்கைகள் கிடைத்தன. நற்செய்தியில் சொல்லப்படுகின்ற ''முதல் இருக்கைகள்'' (மத் 23:6; மாற் 12:39; லூக் 11:43; 20:46) மூப்பர்களுக்கு ஒதுக்கப்பட்டவை. அவர்களின் முதுகு பேழையை

நோக்கியும், மக்களை பார்த்தவர்களாகவும் அமர்ந்திருந்தனர். ''மோசேயின் இருக்கை'' (மத் 23:2) யானது சிறப்பான இருக்கை, இந்த யூத மூப்பர்களில் ஒருவருக்காக ஒதுக்கப்பட்டதாகும். இவர் புலமைச் சிறப்பு பெற்றவராக இருந்திருக்கலாம்.

உ. உருவகப் படுத்தப்பட்ட இருக்கை: யோபு நூலில் (யோபு 23:3) ''இருக்கை'' ஆண்டவர் வாழும் இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எச 28:2-இல் தீர் தான் ''தெய்வங்களின் இருக்கையில் அமர்ந் திருப்பதாகச் செருக்குற்றாள்'' என்று சொல் லப்பட்டுள்ளது. பழ 9:14 மடமை, தன்னை ஒரு ஒழுக்கம் கெட்ட பெண்ணாக ஆக்கிக் கொண்டு பொது இடத்தில் அமர்ந்திருப்ப தாக சொல்கிறது. சங் 1:1-இல் ''பழிகாரர் கூட்டம்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே போல் ஆமோஸ் 6:3-இல் ''வன் முறையின் அரியணை'' என்பது அநீதிகள் நாட்டில் நிலவி வருவதைக் குறிக்கின்றது. எச 8:3 ''இருக்கை'' என்பது சிலையோ அல்லது உருவங்களோ வைப்பதற்கான அடித்தளத்தையோ அல்லது மடக்குழி யையோ குறிக்கின்றது.

ஊ. பேழையின் மேற்பகுதி இரக்க இருக்கை என்றழைக்கப்பட்டது.

இருபொருள் வாதம் (DUALISM)

இச்சொல் பதினெட்டாம் நூற்றாண்டிலி ருந்து, இருவேறு தத்துவங்களாகக் கொள் ளும் கோட்பாடுகளுக்கு பயன்படுத்தப்ப டும் சொல். ஒன்று சோராஸ்டிரியன் நம்பிக் கையில் இருந்து வருகின்றது. இதில் இரு சமமான எதிர் சக்தியுள்ள கடவுள்களி டையே உள்ள போராட்டத்தில் நம்பிக்கை யுள்ளது. இதை ''அண்ட இருபொருள் வாதம்'' என்றழைக்கலாம். அக்ரீமான் என்ப வர் தீயவைகளின் கடவுள்; ஓர்மசாடு நல்ல வைகளின் கடவுள் என்று எண்ணப்பட்ட னர். தீமைகள் நிறைந்த இவ்வுலகம் அக்ரீ மான் அடியில் உள்ளது. இவ்வுலகின் நல்ல எதிர்காலம் ஓர்மசாடு கைகளில் உள்ளது. இருவருக்குமிடையே போராட்டம் இருந்து கொண்டே இருக்கும். தீமையின் கடவுளை எதிர்த்து நல்லவர்கள் எதிர்காலத்தில் கைம் மாறு பெறுவார்கள். இது போன்ற இரு மைக் கொள்கை, தீமை என்ற பிரச்சினைக் குப் பதில் அளிப்பதாகக் கருதப்பட்டது.

இரண்டாவது வகை. ''இயல் கடந்த இரு பொருள் வாதம்'' ஆகும். இது உடல், ஆன்மா ஆகியவற்றின் ஒத்துப்போகாத் தன் மையைப் பற்றி ஆராய்கின்றது. இதைப் பித்தாகொரியன், ஓர்பிக் சமயங்கள் போதித் தன. பிளேட்டோ மற்றும் சில தத்துவ ஆசிரியர்கள் இதை நம்பினார்கள். இந்த வாதத்தின்படி ஆகாயத்தில் முன்பே இருக் கும் ஆன்மாவுக்கு உட்பட்டது உடல். உடல் ஆன்மாவின் சிறைச்சாலையாக இருக்கின் றது. ஆன்மாவின் கல்லறையாக இருக்கின் றது. அதை இழிவுபடுத்துகிறது. உடலிலி ருந்து ஆன்மாவுக்கு கொடுக்கப்படும் விடு தைலதான் மீட்பு ஆகும். மேலும் உடலிலி ருந்து ஆன்மா விடுதலை பெற வேண்டுமா னால் உடலை ஒறுக்க வேண்டும். நோன்பு வாழ்க்கை மேற்கொள்ள வேண்டும்; மறை பொருளின் சமய சடங்குகளில் பங்கு கொள்ள வேண்டும். ஆன்மா உடலிலிருந்து முழுவதுமாக விடுதலை அடைந்து என் றென்றும் வான்லோகத்தில் வீற்றிருக்க வேண்டுமானால், கட்டுப்பாடுகளுடனும், சமயக் கோட்பாடுகளுடனும் நாம் எண்ணிக் கையில்லா மறுபிறவி எடுக்க வேண்டும். இக்கருத்தோடு வேறொரு கருத்து ஒன்றிப் போகின்றது; உலகப் பொருட்கள் யாவும் நிறைவற்றவை; ஆனால் ஆவி நிறைவுள் ளது; நல்லது.

அடிமைத்தனத்திற்கு முன்பு வாழ்ந்த யூத மக்களிடையே அண்டம் சார்ந்த இரு பொருள் வாதம் சிறிது காணப்பட்டது. இதற்கு பதிலாக 'ஒரே கடவுள்' என்ற கோட்பாடு அவர்களால் வளர்த்துப் பராம ரிக்கப்பட்டது. உலகத்தையும் மனிதனையும் படைத்து ஆட்சி செய்யும் யாவே நேரிடை யாகவோ அல்லது மறைமுகமாகவோ, உல கத்தில் காணப்படும் தீமைகளுக்கெல்லாம் பொறுப்பு; அதே நேரத்தில் நன்மைகளுக்

கும் அவரே பொறுப்பு. அதே சமயத்தில் மக்கள் அசுத்த ஆவியை நம்பினார்கள் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. ஆனால் இது பின்னணியிலேயே இருந்தது. சாத்தான் கடவுளால் அனுப்பப்பட்ட ஆள். கடவுளுக்கு சரிநிகரானது அல்ல; அவருடைய எதிரியுமல்ல.

எப்படியிருப்பினும் அடிமைத்தனத்திற்குப் பிறகு சாத்தான் கடவுளுக்கும் மனிதனுக்கும் பகைவனாக எண்ணப்பட்டான். சாத்தான் சோதனை கொடுப்பவன் மட்டுமல்ல; மக்களை கொடுமைப்படுத்தி அழுத்துவதும், பாவத்திற்கும் தீயசெயல்களுக்கும் காரணமாக இருப்பதும் சாத்தானின் வேலைகளாகும். இக்கருத்தையொட்டியே பெர்கியாவில் காணப்பட்ட சமயங்கள் இருவுலக வாழ்வை நம்பினார்கள். இவ்வுலகம் தீமை நிறைந்தது; ஏனென்றால் சாத்தானால் இவ்வுலகம் ஆளப்படுகின்றது. மறுவுலகம் நன்மை நிறைந்தது. ஏனென்றால் அது கடவுளால் ஆளப்படுகின்றது. ஆனால் சொராஸ்டிரியன் இருபொருள் வாதம் இஸ்ராயேலரிடையே இடம் பெறவில்லை. எப்படியிருப்பினும் எல்லாம் யாவேயின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கின்றது. கடவுள் தன்னுடைய நோக்கத்திற்காகவே சாத்தானையும் தீமைகளையும் இவ்வுலகில் இருக்க விடுகின்றார்.

கிரேக்க மொழியும் வழியும் பின்பற்றிய யூதர் சமுதாயத்தில் தவிர, யூத சமுதாயத்தில் இயல்கடந்த இருமைக் கோட்பாடு காணப்படுவதில்லை. இறைவன் எல்லா ஞானமும் அறிவும் நன்மையும் உள்ளவராக இருக்கின்றார். எனவே அவர் மனிதனின் நலனுக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் உண்டாக்கப்பட்ட உடல் உட்பட்ட உலகம் நல்லதாகவே இருக்கின்றது. தவ்மிருத்தல் விதிவிலக்காகவே தான், ஒழுங்கன்று. இறப்புக்குப் பின் மறுவாழ்வு உண்டு என்று நம்பப்பட்டது. உடலோடு உயிர்த்தெழுதல் என்ற மதக்கோட்பாடு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இறந்தபின் பாதாளங்களில் இருக்கும் உடலானது ஆன்மாவோடு ஒன்று சேர்ந்து உயிர்த்தெழுகின்றது. மனிதன் நல்லது, தீமையானது என்ற இரு உணர்வுகளோடு படைக்கப்பட்டிருக்கின்றான். இது யூத சமுதாயத்தில் காணப்படும் மனிதவியல் இருபொருள் கோட்பாடு ஆகும்.

யூத சமூகத்திலிருந்து அண்டம் சார்ந்த இருபொருள் தத்துவத்தை கிறிஸ்துவ மதம் பெற்றுக் கொண்டது. சாத்தான் என்பது தீமையே சுயமானதாக, ஆட்தன்மைப்படுத்தப்பட்டதாகப் பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு கருத்தாகும். இரு கருத்துக்களில் ஒன்று தீமை உருவானது, மற்றொன்று நன்மையே உருவானது. ஆன்மாவோடு உடல் உயிர்த்தெழும். திருவெளிப்பாட்டில் இந்த இருபொருள் வாதம் உச்சநிலையை அடைகின்றது. மேலும் கிரேக்க மொழியும் வழியும் பின்பற்றிய யூதர் சமுதாயத்தில் காணப்பட்ட இயல் கடந்த இருமைக் கோட்பாட்டைக் கிறிஸ்துவ மதம் ஏற்றுக் கொண்டது. பவுல் இரு கோட்பாடுகளையும் இணைக்கிறார். பவுலுக்கு சரீரமாகிய உடல், ஆசைகள் அதிகம் கொண்டிருப்பதால் அது தீயதாகக் காணப்படுகின்றது. இதுவே பாவத்திற்கும் சாவிற்கும் காரணமாகும். அவர் உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொண்டார். எப்படியிருப்பினும் உயிர்த்த உடல் சரீரத்தாலும் இரத்தத்தாலும் ஆவதல்ல. ஆனால் ஆன்மீக உடலாக மாற்றப்படுகின்றது. ஏனெனில் மனிதனின் சரீரமும் இரத்தமும் இறையரசை உரிமையாகப் பெற முடியாது.

கிறிஸ்துவ ஞானவாதம் கிரேக்க மொழியும் வழியும் பின்பற்றிய யூதர் சமுதாயத்தில் காணப்பட்ட இயல் கடந்த இருமைக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளது. உலகப் பொருள்கள் கீழான அல்லது தீய ஆவியால் உண்டாக்கப்பட்டுத் தன்மையாலே தீமையானவை. ஆவியின் உலகம் நல்லது. மனிதன், முன்பே இருக்கும் நல்ல ஆன்மாவையும் இதனை சிறைப்படுத்தியும் கறைப்படுத்தியும் இருக்கும் உடலை (சரீரம்)யும் கொண்டவன். மீட்பு என்பது உடலில் அடைபட்டிருக்கும் ஆன்மா அடைகின்ற சுதந்திரமே. இதை நோன்பினாலும், ஒறுத்தல்களினாலும்

சமய சடங்குகளினாலும் அடையலாம். அதற்கு ஞானவாதம் மனிதன் ஒருமுறை மறுபிறவி எடுக்கமுடியும் என்று கூறுவது போல் தோன்றுகிறது. இயல்கடந்த இருமைக்கோட்பாட்டை கிறிஸ்துவ சமுதாயம் ஏற்றுக் கொண்டது. இதுவே கிறிஸ்துவ மதத்தில் ஒறுத்தல் வாழ்க்கைக்கும் சந்நியாச வாழ்க்கைக்கும் வழிகோலியது எனலாம்.

இரு மக்கள் - உவமை - *(மத் 21:28-32).*

இங்கே உண்மையான, நேர்மையான மனமாற்றம் விண்ணரசை அடைய ஒரே வழி என்கிறார் இயேசு. மாறாக வெளிவேடமானது அழிவுக்கே மனிதனை இட்டுச் செல்லும். ஆலயத்திலே தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும் இயேசுவின் அதிகாரத்தை எதிர்த்த வேளையிலே அவர் இந்த உவமையைக் கூறினார். தோட்டத்திற்குப் போக மாட்டேன் எனக் கூறி, பின்னர் மனம் வருந்திச் சென்றவனைப் போல ஆயக்காரரும் விலைமாதரும் செயது, இறைவனின் அன்பைப் பெறுவார்கள். போகிறேன் எனக் கூறி போகாத மகன்போல் யூத சமயத்தலைவர்கள் தங்களைத் தாங்களே புண்ணியவான்களாகக் கருதுபவர்கள், இறைவனை இழப்பார்கள். எனவே விசவாசமும் மனமாற்றமும் விண்ணரசில் நுழைய அவசியம் தேவை.

இருமனத்தோர் *(DOUBLE-MINDED)*

இச்சொல் உறுதியற்ற, தள்ளாடும் மனநிலையுள்ளவர்களைக் குறிக்கிறது. நம்பிக்கையுறுதியின்மை, ஐயப்பாடு, நிலையற்ற தன்மை, நேர்மையற்ற தன்மை, ஏமாற்றுதலையும் கூட குறிக்க வல்லது.

இச்சொல் புதிய ஏற்பாட்டிலும், திருச்சபை தந்தையரின் நூல்களிலும் காணப்படுகிறது. செபத்தில் காணப்படும் ஐயத்தையும் தயக்கத்தையும் குறிக்கிறது. யாக் 1:7-8; 4:8-இல் விசுவாசத்திற்கும் உலகிற்கும் இடையில் ஊசலாடும் நிலையற்ற போக்கைக் குறிக்கிறது. தந்தையரின் நூல்களில், இச்சொல் விசவாசமின்மையால் எழும் ஐயத்தையும், இறைவன் ஒருவருடைய மன்றாட்டைக் கேட்டு அருள தான் தகுதியற்றவன் என்ற உணர்வையும் குறிக்கிறது. சில நூல்களில், இறைவனது ஆற்றலின்மேல் நம்பிக்கையின்மையும், இறைவனது நோக்கம் நிறைவேறும், இயேசு விரைவில் தோன்றுவார் என்பவற்றில் விசவாசமின்மைக்கும் இச்சொல் குறிக்கிறது. இது இருதலைவர்களுக்குப் பணிபுரிபவர்களிடம் காணப்படும் விசுவாசமின்மைக்கும் பற்றுறுதியின்மைக்கும் ஒத்தது *(மத் 6:24; லூக் 16:13).*

இரும்பு

1. சில்லா பெற்ற தூபால் - காயீன் என்பவன் வெண்கலத்தாலும் இரும்பாலும் எல்லா விதமான கருவிகள் செய்யும் கொல்லன் ஆனான் என்று வாசிக்கிறோம் *(ஆதி 4:22).*

விவிலியத்தில் இரும்பு, வாள், ஈட்டி முனை *(1 சாமு 17:7)*, அம்பு முனை, தளவாடங்கள், விவசாயக் கருவிகள் *(2 சாமு 12:31; யோபு 19:24; எரே 17:1; ஆமோ 1:3)* படுக்கை *(உப 3:11)* முதலியனவை செய்யப் பயன்பட்டுள்ளது. எருசலேம் ஆலயம் கட்டுவதில் ஏராளமான இரும்பு பயன்பட்டுள்ளது *(1 நாள் 22:3.14.16; 29:2)*. அரசவையினர் ஆலயப் பணிக்காக 100,000 தாலந்து (3450 மெட்ரிக் டன்) இரும்பைக் கொடுத்தனர் *(1 நாள் 29:7).*

கி.மு. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பலவகைக் கருவிகளும் அணிகலன்களும் பாலஸ்தீனத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விவிலிய பெனுயேல் என்ற இடத்திற்கருகில் முகாரேத்-ஏல்-வார்தே என்னுமிடத்தில் பழங்காலத்து இரும்புச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரும்பு உருக்குவேலைகள் சேர்ந்த பல பணிமனைகள் மெகிதோ மற்றும் தேல் செம்மே போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவை சாலமோன் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

பெலிஸ்தியரின் வருகைக்குமுன்பே, கானானியர் இரும்பைப் பயன்படுத்தியிருந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு எரிகோவை

அழித்தபோது ஆண்டவரது கருவூலத்தில் சேர்த்த பொருட்களில் இரும்புப் பாத்திரங்களும் அடங்கும் (யோசு 6:24). கானானியர்களிடமிருந்தும் (22:8), மிதியானியர்களிடமிருந்தும் (எண் 31:22) கொள்ளையடித்தப் பொருட்களில் இரும்பும் குறிப்பிடப்படுகிறது. மேலும், ஏபால் மலையில் பீடம் கட்டிய போது இரும்புக் கருவிகளைப் பயன்படுத்துவதை மோசே தடுத்ததாகக் கூறப்படுகிறது (உப 27:4). யோசுவா காலத்தில் பேத்து செயான், இசிரியேல் பள்ளத்தாக்கு கடற்கரைச் சமவெளி ஆகியவற்றில் வாழ்ந்த கானானியர் இரும்பால் செய்த தேர்களைக் கொண்டிருந்தனர் (யோசு 17:16; நீதி 1:19). கோலியாத்தினுடைய ஈட்டி முனை அறுநூறு செக்கேல் (8 கிலோ) இரும்பால் செய்யப்பட்டிருந்தது (1 சாமு 17:7). பெலிஸ்தியர் எபிரேயர்களை வென்ற போது, எபிரேயர் இரும்புக் கருவிகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்துவதற்குத் தடை விதித்தனர். எபிரேயர்களிடையே அரசாட்சி ஏற்பட்டபின், இரும்பினால் செய்யப்பட்ட பொருட்களும், போர்க்கருவிகளும் முக்கிய இடம் பெற்றன (2 சாமு 8:8; 12:31; 1 அர 22:11; 2 அர 6:5; 1 நாள் 20:3; 22:3; 29:7; எச 27:19).

2. உருவக முறையில் இரும்பு:- விவிலியத்தில் இரும்பு வலிமைக்கும் கடினத்தன்மைக்கும் அடையாளமாகப் பயன்பட்டுள்ளது (உப 28:48; ஏச 48:4; யோபு 19:24; எரே 17:1; சங் 2:9; 105:18; திருவெளி 2:27; 12:5; 19:15). எகிப்து இரும்புக் காளவாய்க்கு ஒப்பிடப்பட்டுள்ளது (உப 4:20; 1 அர 8:51; எரே 11:4). நீர் யானையின் உறுப்புகள் இரும்புக் கம்பிகள் போல் இருந்தன (யோபு 40:20). இலவியதாத்தான் இரும்பை வைக்கோலைப் போல நசுக்குகிறது (41:18). முரண்டு செய்யும் இஸ்ராயேலின் கழுத்து இரும்புக் கப்பிக்கு ஒப்பிடப் படுகின்றது (ஏச 48:4). தானி 7:7-இல் வரும் நான்காம் விலங்கு, அஞ்சி நடுங்கவைக்கும் தோற்றமும் மிகுந்த வலிமையும் கொண்டதாய் இருந்தது. அதற்குப் பெரிய இரும்புப் பற்கள் இருந்தன. அவற்றைக் கொண்டு தூள் தூளாக நொறுக்கி விழுங்கியது. மிகச் சிறந்த உருவகம் ''இரும்பு இரும்பைக் கூர்மையாக்கும்; ஒருவனது அறிவு இன்னொருவனால் கூர்மையாக்கப் பெறும்'' (பழ 27:17) என்ற கூற்றில் வருகிறது.

இரும்புக் கொல்லன்

இரும்புத் தாதுவினின்று அதனைப் பிரித்தெடுத்து இரும்பினின்று கருவிகளை உருவாக்குபவனே கொல்லன். தாவீதின் காலம் வரை இத்தியரும், பெலிஸ்தியருமே இத்தகைய கொல்லர்களைத் தம்மிடம் கொண்டிருந்தனர் (நீதி 1:19; 1 சாமு 13:19-21). இரும்பு வாள்களையும் (1 சாமு 17:7), தேர்களையும் (யோசு 17:16) இஸ்ராயேலர்கள் கொண்டிருக்கவில்லையாதலால் அவர்கள் பலம் குறைந்திருந்தனர். கொல்லர்கள் கோடாலிகளையும் (உப 19;5), சங்கிலிகளையும் (சங் 105:18; 107:10), உளிகளையும் (யோபு 19:24), சிலைகளையும் (தானி 5:4); சிறைக் கதவுகளையும் (அப 12:10) இன்னும் பலவற்றையும் செய்தனர்.

இருள் (DARKNESS)

ஒளியின்மை இருளாகும். 'இருள்' பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இரண்டிலுமே உருவக வழக்கிலே கூறப்பட்டிருக்கிறது.

1. பழைய ஏற்பாடு:- இருளானது பெருங் குழப்பத்தின் ஆக்கக் கூறாகும். தொடக்கத்தில் ஆழத்தின்மீது இருள் பரவியிருந்தது. கடவுளின் முதல் படைக்கும் செயலானது ஒளியைப் புகுத்தி இருளை மறையச் செய்ததாகும் (ஆதி 1:2-3). ஆதி 1:2 பகுதியில் இருளினுடைய புராண, கற்பனைக் கதைப் பண்பானது ஓரளவு மறைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் கடவுள் இருளை இரவு என்று அழைக்கிறார். இரவையும் பகலையும் அடுத்தடுத்து நிலைப்படுத்துகிறார். குறிப்பிட்ட காலத்தில் வெளிக்கொணரும்படி ஓர் அறையில் இருளைத் தொகுத்து வைக்கிறார் (யோபு 38:19; சங் 104:20).

இருள் குழப்பத்தின் ஆக்கப்பொருளாக இருப்பதால், அது சீரழிவு, மற்றும் தீமை

யின் ஆக்கப்பொருளாக அமைந்திருக்கிறது. உருவ வழக்கில், கற்பனைக் கதை பண்புக ளையும் கொண்டிருக்கிறது. இருளானது பேரிடரைக் குறிக்கிறது (ஏச 5:30). உலக அழிவின் போது, தோன்றும்போதே கதிர வன் இருண்டு போவான் (13:10). எகிப்திய ரைத் துன்புறுத்திய பத்துக் கொள்ளை நோய் களில் இருளும் ஒன்று (யாத் 10:22). மிகவும் வருத்தும் பேரிடரானது நண்பகலில் இருள் சூழ்வதாகும் (ஆமோ 8:9). இஸ்ராயேலரு டைய விடுதலை நாள் என எதிர்பார்க்கப்ப டும் ஆண்டவருடைய நாள் ஒளிமிக்க நாளன்று, இருள் சூழ்ந்த நாள் தான் (யோவே 2:2; ஆமோ 5:18 தொ செப் 1:15 தொ). இருள் சூழ்ந்த நாள் தீயவனுக்கு அருகில் இருக்கிறது (யோபு 15:23).

யூதா அரசானது இருளில் மலையின்மேல் அகப்பட்ட வழிப்போக்கனைப் போன்றது. இருள் அவனை மூடிக்கொள்கிறது. அவன் இடறிவீழ்ந்து மடிகிறான் (எரே 13:16). இருள் தோல்வி, அடிமை நிலை, அடக்கு முறையாகும் (ஏச 9:1; 42:7; 47:5). இருள் தீமையின் மூலப்பொருள். காரிருளில் தீய வன் தன் வேலைகளைச் செய்கிறான் (யோபு 24:16; எச 8:12). இருளானது சாவைச் சார்ந் தது. சவக்குழியிலும், பாதாளத்திலும் இருள் சூழ்ந்துள்ளது (யோபு 10:21; 17:13). ஒளி இறைவனைச் சார்ந்தது. இறைவன் ஒளியில் உறைகிறார். ஒரு சில வாசகங்களில் இறை வன் இருளில் தன் இருப்பிடத்தை அமைத் துக் கொள்வதாகக் காண்கிறோம். இங்கு இருள் எனப்படுவது, இறையருள் வெளிப் பாட்டுத் தோற்றத்தின் மேகங்களைக் குறிக் கிறது (2 சாமு 22:12; 1 அர 8:12; சங் 18:12). யாவே மனிதனுக்குத் தோன்றும் போது தம் ஒளியை மறைக்க வேண்டும். ஏனெனில் எந்த மனிதனும் இறையின் ஒளியைக் கண்ட பின் உயிரோடிருக்க முடியாது. இருளைப் பற்றிய பழைய ஏற்பாடு உருவகங்கள் கும் ரான் ஏடுகளிலும் காணப்படுகின்றன. ''ஒளி யின் மக்களுக்கும் இருளின் மக்களுக்கும் நடைபெறும் போராட்டம்'' என்ற ஆவணத் தில் நாம் இத்தகைய உருவகங்களை காண லாம்.

2. புதிய ஏற்பாடு:- பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட உருவகங்கள் புதிய ஏற்பாட்டி லும் கையாளப்படுகின்றன. உன் கண் கெட் டிருந்தால், தீயவை கொண்டிருந்தால், உன் உடல் முழுவதும் இருண்டிருக்கும் (மத் 6:23). பாவிகள் இருளினுள் தள்ளப்படுவார் கள் (8:12; 22:13; 25:30). மத் 24:29; மாற் 13:24 என்ற பகுதிகளில் இறுதித்தீர்வையின் போது தோன்றும் பேரழிவுஇருள் குறிப்பி டப்படுகிறது. பாவமாகிய இருள் மிக்க உலகினுள், ஒளியாகிய மனுஉரு எடுத்த இறை வார்த்தை ஒளிர்கிறது. இருளோ அதனை ஏற்றுக் கொள்ளவில்லை (யோவா 1:5). இயேசுவைப் பின்செல்பவன் இருளில் நடக்க மாட்டான் (8:12; 12:46). கடவுள் ஒளியாயிருக்கிறார். இருள் என்பது அவரி டம் இல்லை (1:5). மனிதர்கள் ஒளியை விட இருளையே விரும்புகிறார்கள் (3:19).

புனித பவுலுக்கு இருள் என்பது தீய நெறியாகும் (உரோ 13:12; 2 கொரி 6:14). கிறிஸ்துவர்கள் ஒரு காலத்தில் இருளில் இருந்தவர்கள். இப்பொழுது ஆண்டவருக் குள் ஒளியாய் இருக்கிறார்கள் (எபே 5:8). அவர்கள் இருளின் பயனற்ற செயலைச் செய்பவரோடு சேரக் கூடாது (5:11). இவ்வு லகு இருளில் மூழ்கியிருக்கிறது (6:12). கிறிஸ்து இருளின் ஆதிக்கத்தினின்று நம்மை விடுவித்துள்ளார் (கொலே 1:13). தீயவருக்கு இருளுலகம் ஒதுக்கப்பட்டுள்ளது (2 பேதுரு 2:17).

இரகேம் *(REGEM - நண்பன்)*

இவர் யூதாவின் கலேபியப் பிரிவின் யாதாய் என்பவனின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 2:47).

இரகேம்-மெலக்கு *(REGEM-MELECH - அரச நண்பன்)*

செக்கரியா இறைவாக்கினார் காலத்தில், நோன்பைப் பற்றி ஆலய குருக்களிடம் விசா ரித்துவர பெத்தேல் கிராம மக்களால் சரேச ரோடு எருசலேமுக்கு அனுப்பப்பட்ட துணையாளர்களுள் ஒருவரே இரகேம்-மலேக்கு என்பவர் ஆவார் (செக் 7:2-3).

இரகூம் (REHUM - இரக்கம்)

1. இவர் பாபிலோனிய அடிமைத்தளையி லிருந்து செருபாபேலோடு நாடு திரும்பிய வர்களில் ஒருவர் (எஸ் 2:2). நெக 7:7-இல் உள்ள 'நெகூம்' என்ற வார்த்தையை எழுதும் போது ஏற்பட்ட தவறாக இருக்கலாம்.

2. இவர் பாலஸ்தீனம் உட்பட யூப்பிரத் திசு நதிக்கு அப்பால் உள்ள மாகாணத்தை ஆண்ட ஒரு பாரசீக அரச அலுவலகர்; நாடு திரும்பிய பின் அர்த்தாசெருசு என்ற மன்ன னுக்கு எருசலேமைக் கட்டியெழுப்பும் யூதர் களுக்கு எதிராக கடிதம் எழுதிய சிமிசாய் எனும் மறைநூல் வல்லுனனுடன் இவர் இணைந்து செயல்பட்டார் (எஸ் 4:8-16). இவ்விருவரும் தங்களின் துணையாளர்களு டன் இணைந்து அரசாணை பெற்று வேலையை நிறுத்தினர் (எஸ் 4:17-24).

3. பானியின் மகனான இரகூம் ஒரு லேவி யராவார். எருசலேமின் மதிற் சுவர்களைப் புதுப்பிப்பதில் நெகமியாவுக்கு உதவியவர்க ளில் இவரும் ஒருவராவார் (நெக 3:17).

4. இவர் எஸ்ராவின் உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களில் ஒருவர் ஆவார் (நெக 10:25). இவர் 3-இல் குறிப்பிடப்பட்ட வராக இருக்கலாம்.

5. நாடுகடத்தலுக்குப்பின், செருபாபே லோடு திரும்பியவர்களில் இவர் ஒரு குருகு லத்தின் மூதாதையர் (நெக 12:3). இவர் காரீம்-1-ஆக இருக்கலாம் (12:15).

இரெபேக்கா (REBECAH) காண்க. ரெபேக்கா.

இரே, இரா (RE, RA)

இது எகிப்திய சூரியகடவுளின் பெயர். திபிசு நகரம் இக்கடவுளின் முக்கியமான வழிபாட்டு மையமாக விளங்கிற்று.

இரேகியம் (RHEGIUM)

இது தென் இத்தாலியில் மெசினா சலசந்தி யில் அமைந்துள்ள ஓர் துறைமுக நகரம் ஆகும். பவுல் தனது உரோமைப் பயணத் தின்போது இங்கே சிலகாலம் தங்கினார் (அ.ப. 28:13). இப்போது இது டி-கலபிரியா என்று அழைக்கப்படுகிறது.

இரேசா (RHESA - தலை)

இவர் இயேசுவின் முன்னோர்களில் ஒருவ ரும் செருபாபேலின் வழித்தோன்றலும் ஆவார் (லூக் 3:27)

இரேயி (REI - நட்பான)

இவர் தாவீது மன்னனின் அரியணைக்காக நடந்த போராட்டத்தில் அதோனியா கிளர்ச்சி செய்தபோது, சாலமோனுக்குத் துணையாயிருந்த ஓர் யூதேய நாட்டு அலுவ லகர் (1 அர 1:8).

இலகாது (LAHAD - சோம்பேறி)

இலகாது யூதாவின் வம்சத்தைச் சேர்ந்த வர். யாகாத்தின் புதல்வர் (1 நாள் 4:2). இவரது குடும்பம் சோராயர் குடும்பங்க ளைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

இலகாபிம், இலகாபியர் (LEHABIM)

எகிப்தியரின் சந்ததியில் வந்தவராகப் பெயரிடப்பட்ட ஒரு குழு. இவர்கள் உலூ திம், அனாமிம், நெப்துகிம், பத்துரூசிம், கசுலுகிம், கப்பதோரிம் போன்ற சந்ததியின ரில் ஒருவராகக் கருதப்படுகின்றனர். இவர் கள் பொதுவாக லிபியர் என்று அடையாளம் காட்டப்படுகின்றனர். காண்க. லிபியா

இலகி (LEHI - தாடை எலும்பு)

யூதாவில் தாடைபோன்று இயற்கையிலே அமைந்த ஒரு இடத்திற்குக் கொடுக்கப்பட்ட பெயராக இருக்கலாம். அல்லது நீதி 15:9-17.19-இல் உள்ள நிகழ்ச்சியைப் பிரதிப லிக்கும் பெயராக இருக்கலாம். அதாவது சிம்சோன் பெலிஸ்தியர்களின் பயிர்களை எரித்ததால், அவர்கள் இலகிக்கு ஒரு படையு டன் வந்தபோது, யூதாவினர் அவரைப்பிடித் துக் கயிறுகளால் பிணைத்து அவர்களிடம் ஒப்படைத்தனர். அப்போது, சிம்சோன் அங் குக்கிடந்த ஒரு கழுதையின் தாடை எலும்பை எடுத்து ஆயிரம் பெலிஸ்தியர்க ளைக் கொன்றார். எனவே அவ்விடம் ''தாடை எலும்புக்குன்று'' எனும் பொருள்

படும்படி இராமாத்து-லேகி'' என்றழைக்கப் பட்டது. இது 2 சாமு 23:11-12-இல் குறிக்கப் படும் நிகழ்ச்சி நடந்த இடமாகவும் இருக்க லாம். இது பேத்து செமேசுப்பகுதியில், சோராவுக்கும் திமினாவுக்கும் இடையில் இருந்திருக்கலாம்.

இலகுமாம் (LAHMAM - அப்பம், ரொட்டி.

செப்பேலாவில் இலாக்கீசு மாவட்டத்தின் யூதாவின் ஊர்களில் ஒன்று (யோசு 15:40). இது பெயித் இப்ரினுக்குத் தெற்கில் 4 கி.மீ. தொலைவிலும் இலாக்கீசுக்கு அருகிலு முள்ள இக்கால கிர்பெத் ஏல்-இலகும் ஆக இருக்கலாம்.

இலகுமி (LAHMI - வீரன்)

இவர் இத்தியரான கோலியாத்தின் சகோத ரன். யாயிரின் மகன் எல்கனானால் கொல் லப்பட்டார் (1 நாள் 20:5). 2 சாமு 21:19-இன்படி, இவர் கோலியாத்தையே கொன்ற தாகத் தெரிகிறது. இது எழுத்தரின் பிழை யாக இருக்கலாம்.

இலகேம் (LEHEM)

யூதாவில் உள்ள கண்டுபிடிக்க இயலாத ஒரு இடமாகும் (1 நாள் 4:22). இந்த இடம் இருந்ததா, இல்லையா என்ற சந்தேகம் இருந்தாலும், இருந்திருந்தால் இது, மோவாபை ஆண்டு முடிந்தபின் யோவாசும் சாராபும் வந்து தங்கிய இடமாக இருக்க வேண்டும் என்பதே பலர் கொள்வதாகும். இலகேம் என்ற பெயர் அங்குக் குறிக்கப்பட் டால் இது பெத்திலகேமின் சுருக்கமாகும். இந்த விளக்கம் யூதாச் சூழ்நிலையில் பொருத்தமாகவுள்ளது.

இலக்கதேமானியர்

இலக்கதேமானியர், கிரிசின் தென்பகுதி யான இலக்கோனியாவின் தலைநகரான இலக்கதேமோனில் வாழ்ந்தவர்கள். கி.மு.2 70-க்கு முற்பட்ட காலத்திலிருந்தே இவர்க ளுக்கும் யூதருக்குமிடையே நட்புறவு இருந் தது. கி.மு.168-இல் பெரியகுரு யாசோன் இலக்கதேமோனில் அடைக்கலம் புகுந்தத னால், அங்கு ஒரு யூத குடியிருப்பு இருந்தி ருக்க வேண்டும் என்பது புலனாகிறது (2 மக் 5:9). மக்கபேயருக்கும், ஸ்பார்த்தருக் கும் இடையே இருந்த நட்புறவு யோனத்தா னின் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது என்பது யோனத்தான், ஏறக்குறைய கி.மு.146-இல், ஸ்பார்த்தருக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெளிவாகிறது (1 மக் 12:6-18). இக்கடிதத் தைப்பற்றி பல சந்தேகங்கள் எழுந்தாலும், அறிஞர் பலர் இதை ஒரு சிறந்த சான்றாகவே கருதுகின்றனர். ஸ்பார்த்தரின் மன்னர் முத லாம் அரையோசு தலைமைக்குரு ஒனியா வுக்கு வாழ்த்து கடிதம் அனுப்பியதாக யோனத்தான் எழுதுகிறார் (1 மக் 12:20-23). 1 மக் 14:20-22 ஸ்பார்த்தர் யோனத்தானுக்குப் பின்வந்த சீமோனுக்கு எழுதிய கடிதத்தைக் கொண்டுள்ளது. 1 மக் 15:16-22 உரோமைய ருக்கும் யூதருக்கும் இடையே உள்ள உறவை கூறுகையில் ஸ்பார்த்தரைப் பற்றியும் கூறுகி றது.

இலக்கியம்

பரந்த பொருளில் இலக்கியம் என்பது எழுதப்பட்ட அனைத்தையும் குறிக்கும். முத லில், எழுதப்பட்டவை செயல் நோக்கத்திற் காக உபயோகப்படுத்தப்பட்டன. பழைய ஏற்பாட்டில் வணிக சாசனங்கள், கணக்கு கள், கடிதங்கள், அரசு அதிகாரிகளின் அட்ட வணைகள் (1 அர 4), வரி அட்டவணைகள், மக்கள் தொகை அட்டவணைகள் (எஸ் 2) மற்றும் ஆட்சியமைப்பு சாசனங்கள் போன்ற பல்வேறு வகையான இலக்கியங்கள் குறிப் பிடப்பட்டுள்ளன. தொடக்கத்தில் சாபங்க ளும் அவற்றின் வல்லமையை மேம்படுத் திக் காட்ட, மந்திர எழுத்துக்களால் எழுதப் பட்டு இருக்கலாம் (செக் 5:1; எச 2:9 தொ).

மிகக் குறுகிய பொருளில், இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட இனத்தவரின் வாழ்க்கை மற்றும் எண்ணங்களைப் பற்றிய கலை நயமான கட்டுரைகள், கவிதைகள் மற்றும் உரை நடைப்பகுதிகள் ஆகியவற் றைக் குறிக்கும். விவிலிய இலக்கியமானது, மேற்காசிய மற்றும் கிரேக்க-உரோமை இனங்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கி யங்களுக்கு இணையாக உள்ள பல்வேறு வகைகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

1. தோற்றம்:- பழைய ஏற்பாட்டின் எல்லா விதமான இலக்கிய முறை, நடைகளுக்குப் பின்னாலும் பாரம்பரியத்தால் கையளிக்கப் பட்ட வாய்மொழி அமைப்பு உள்ளது. கோத்திரங்களின் பிரதிநிதிகளுடைய காலத்தில் ஆட்சியமைப்பிற்கோ, சடங்குகளுக்கோ எழுத்துமுறை தேவையாயில்லை. அரச அமைப்பிலிருந்ததுதான் எழுத்து இலக்கியம் தோன்றியது. அண்டை நாடுகளுடன் உறவுமுறையை வளர்ப்பதற்காக அரசனுக்கு, உலக நிகழ்ச்சிகளில் பரந்த அறிவு மனப்பான்மையையும், தங்கள் பணியை வெளிப்படுத்துவதற்கு தேவையான பல்வேறு முறைகளையும் அறிந்த எழுத்தாளர் தேவைப்பட்டனர். 'அறிஞர்களுடைய ஞானத்தின் புரவலனாக சாலமோன் இருந்தான்' என்னும் வரலாற்று மைய உண்மையானது, அரண்மனை மற்றும் கோவில் சம்மந்தமாக சாலமோன் அறிஞர்களுக்கு ஒரு பள்ளியை ஏற்படுத்தியதன் காரணமாக இருக்கலாம். மற்ற நாட்டு மொழிகளைப் படித்தல், மற்றும் எழுது முறையினை அறிந்து அரச எழுத்தர்கள் தகுந்த முறையில் நடத்தல் ஆகிய இரண்டுக்கும், எழுத்தர்களுக்கு மாதிரிகையும், வாசகங்களும் அவசியமாயின. கானானியரை வழிமரபாகக் கொண்டு தனது வாழ்க்கை நிலைக்கேற்ற மாதிரிகைகள், நடை ஆகியவற்றோடு அகில உலக இலக்கியப் பாரம்பரியத்தில் இஸ்ராயேல் காலெடுத்து வைத்தது. இஸ்ராயேல் இலக்கியத்தின் பெரும்பகுதி, வகைகள், நடை, வார்த்தையமைப்பு மற்றும் சமய, நல்லொழுக்கு எண்ணங்கள் முதலியவற்றில் பழங்கால மேற்காசிய இலக்கியத்திற்கு இணையாகவே உள்ளது.

2. ஞான இலக்கியம்:- எழுத்தர்களின் கலையையும் தன்னுள் அடக்கிய ஞானம் என்னும் சொல் உலகளாவியது. எகிப்து மற்றும் பாபிலோனியாவில் வாழ்ந்தவர்கள் தங்களது எழுத்துத்திறன் மற்றும் பொருள் அமைப்பினால் கல்வி, ஒழுக்கம், வாழ்க்கை முறை மற்றும் இலக்கிய வடிவம் ஆகியவைப்பற்றி தங்களது சுய ஞானத்தையும், எண்ணங்களையும், குறிக்கோள்களையும் ஞான நூல்களில் வெளிப்படுத்தினர். இந்நூல்களின் மூலமாகவே முதலில் சாலமோனுடைய அறிஞர்களும் கல்விக் கூடமும் பயிற்சி பெற்றனர். இவற்றை நன்கு அறிந்திருந்தனர். பழமொழி ஆகமத்தில் இணைக்கப்பட்டிருக்கும் பல்வேறு சிறு சேர்க்கைகளில் ஒன்று எகிப்தைச் சார்ந்த 'அமெனமோப்-பின் ஞானம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். இஸ்ராயேலின் பழமையான இலக்கியம் மற்ற நாடுகளின் ஞான நூல்களின் மொழிபெயர்ப்பு மற்றும் அவற்றின் தழுவல்கள் ஆகும். இவை படிப்படியாக வளர்ந்து யாவேயின் ஆற்றலைக் காட்டும் இஸ்ராயேலின் ஞானமாக உருவெடுத்தன என்பதில் சிறிதளவே சந்தேகம் இருக்க முடியும். மற்ற நாட்டு மாதிரிகளுடன் ஒப்பிடும்போது பொதுப்பாணி பழமொழியின் தாக்கமானது முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இல்லை.

பழங்கால ஞானமானது செயல்முறையானதும் ஒருதலையானதுமாகும். வாழ்க்கைக்கு ஏற்ற பல அறிவுரைகளை நோக்கும்போது இத்தகைய ஞானமானது அரச அதிகாரிகளின் வட்டாரத்தில் தோன்றியது என்பது தெரிகிறது (பழ 25:1). பிற்காலப்பகுதியான பழ 1:9-இல் காணப்படும் சேர்க்கையானது ஞானத்தின் மீபொளதீகத் தன்மை பற்றிய அன்னியச் சிந்தனைத்தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. சமயம் மற்றும் வாழ்க்கை மெய்யியல் ஆகியவற்றின் பிரச்சினைகளும் காலப்போக்கில் உணரப்பட்டு ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதை யோபு நூலில் காணலாம். இந்நூலில் காணப்படும் ஞானமும் சங்கீதமும் கலந்த நடை, பிற்காலச் சங்கீதங்களிலும், திருவுரை நூலிலும் காணப்படுகிறது. ஆனால், சீராக் நூலோ பாரம்பரியமான வழியிலேயே செல்கின்றது. சாலமோனின் ஞான நூல் கிரேக்கப் பொதுப்பாணி மெய்யியல் தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. இதில் பழங்கால யாப்பு அமைப்பு பெருமளவுக்கு இல்லை எனலாம்.

3. சட்டங்கள்:- அரண்மனை எழுத்தர்கள் அரச கோவில், ஆலயம் போன்றவற்றின்

செயல்களிலும் ஈடுபாடு செலுத்த வேண்டியிருந்தது (2 அர 22:3; எரே 36:10-12). சடங்குகளைப்பற்றிய பாரம்பரியங்களைப்பற்றிக் குறிப்பிட்ட முறையில் எழுதுவதற்கு இது பெரிதும் ஒரு விதத்தில் தூண்டியிருக்கலாம். ஒரு விதத்தில் எழுத்தர்கள் வழிபாட்டு இலக்கியத்தின் பாரம்பரியக் காப்பாளர்கள் ஆனார்கள். நாடு அமைக்கப்படுவதற்கு முன்பே உப 26:1-6-இல் குறிப்பிட்டிருப்பது போல சங்கீதங்களின் ஏட்டுத் தொகுப்பும், குருக்களின் ''தோராவும்'' இருந்திருக்கலாம். பெரும்பாலும் ஒரு நாட்டின் முதல் தேவையாக எழுதப்பட்ட சட்டங்கள் இருந்திருக்கின்றன. இஸ்ராயேலில் சட்டத்தின் தொடக்கம் இருவகையானது; ஒன்று இறைவனின் பெயரால் அளிக்கப்பட்ட குருவின் கட்டளைகள், அறிவுரைகள், சோதனைகள் ஆகியவற்றின் வாய்மொழிப் பராம்பரியம்; மற்றது தர்க்கவாதத் தீர்ப்புகளில் வெளிக்கொணரப்பட்ட சமூக உரிமைகள் பற்றியதாகும். பின்னவை நடையிலும், கருத்திலும் மேற்காசிய சட்டமுறைமையைத் தழுவியவையாகும். இவை கானானியரிடமிருந்து எடுக்கப்பட்டவை என்று உறுதியாகக் கூறலாம். விரைவில் இவையும் இறைவனின் சட்டங்களாகவே கருதப்பட்டன. சாதாரண மனிதன் எல்லாவற்றையும்விட சமூக உரிமைச் சட்டங்களிலேயே, அக்கறை காட்டினான். அறிஞர்களும், சமூக நிகழ்ச்சி மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் தாங்கள் ஈடுபடவேண்டிய முறைகளைப் பற்றிய விதிகளை எழுதவே முதலில் விரும்பினர். எனவே, முதன் முதலில் எழுதப்பட்ட தொகுப்புகளில் ஒன்று நீதிநெறி சட்டங்களைப் பற்றியது (யாத் 21:1-22;27) என்று கூறுவதற்கு தக்க காரணமுண்டு. இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள (22:17-27) குருத்துவச் சட்டங்களின் மறுக்க முடியாத முறையில் வலியுறுத்திக் கூறும் சட்டநடை யாவே பாரம்பரியத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டு ஆலயத்தோடு தொடர்புடைய வட்டாரங்களில் போதிக்கப்பட்டன என்று காட்டுகிறது.

இத்தகைய எண்ணத்துடனும் நோக்கத்துடனும் பல விதிகள் இருந்ததால் அவற்றை பலகையில் பொறித்து பொதுவாக வைக்க வேண்டியது அவசியமாயிருந்தது. எனவே 'தோரா' என்னும் எபிரேயச் சொல்லிலிருந்தும் வெட்டுதல், பொருத்துதல், பொறித்தல் என்னும் சொற்களிலிருந்தும் வார்த்தைகள் உருவாயின. புனித இடத்தில் நுழைவதற்கும், ஆசீர் பெறுவதற்கும் நிபந்தனையாக இத்தகைய புனித சட்டங்கள் வாயிலில் பொறித்து வைக்கப்பட்டன. இத்தகைய புனித சட்டங்களின் பிரதிபலிப்பை 2 சாமு 5:6-8-ல் வரும் காரணகாரியக் கதையில் காணலாம். ''குருடரும், முடவரும் உமது இல்லத்தில் (அதாவது ஆலயத்தில்) நுழையார்''. எருசலேமில் இத்தகைய, ஆலயத்தில் நுழைவதைப்பற்றி கட்டளைகள் பத்துகட்டளைகள் போன்ற அமைப்பில் உடன்படிக்கையில் அடிப்படை கட்டளைகளுடன் இணைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு, நுழைவதற்கான கட்டளைகள் என்ற முறையில் (சங் 14;23:1-4) திருவழிப்பாட்டிலும், வருடாந்தர உடன்படிக்கையை புதுப்பித்தலிலும் (சங் 81:94) இடம் பெற்றன. யாத் 32-இல் உள்ள சம்பவம் மற்றும் யாத் 24:7-இல் உள்ள உடன்படிக்கையின் புத்தகம் ஆகியவற்றின் பின்னணியில் அக்காலத்தில் பலவகையான பத்து கட்டளைகள் எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

வாய் மொழியாலும், எழுத்தினாலும் அமைந்த இச்சிறு நூல்களின் தொகுப்புகளைக் கொண்டே, பெரிய சட்ட நூல்கள் எழுதப்பட்டன. யோசியாவின் காலத்தில் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட சட்ட நூல் உபஆகமத்திற்கான மூலநூல்களில் ஒன்றாகும். நாடு கடத்தப்பட்டு மீண்டும் அமைக்கப்பட்ட (கி.மு.520) யூத இனத்தாரின் சட்ட நூல் என உப ஆகமம் (உப 4:45-27:9; 28) விளக்கப்படுகின்றது. புனிதம் பற்றிய சட்டம் (லேவி 17-26), எச 40:48-இல் கொடுக்கப்படும் ஆலய ஒழுங்கு, குருக்கள் பாரம்பரியத்தில் தொகுக்கப்படும் சட்டம் ஆகியவை சற்றுப் பிற்காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

4. வரலாற்று இலக்கியம்:- இஸ்ராயேல் இலக்கியமானது மற்ற பண்டைய மேற்காசிய நாடுகளினின்று வேறுபட்டு நிற்கும் இரு பண்புகளில் இதுவும் ஒன்று. தொடக்கத்திலிருந்து அரச ஆண்டு குறிப்புகளைத் தொகுப்பது எழுத்தர்களின் பணியாகும். அவையில் கூறப்பட்ட கதைகள், தாவீதின் செயல்கள், சாலமோனின் சிறப்பு ஆகியவற்றை அவர்கள் அறிந்திருந்தனர். ஆலயத்துடன் அவர்கள் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பின் காரணமாக யாத்திராகமக் கதைகள், 'எகிப்திலிருந்து உன்னை வெளி நடத்திய உன் கடவுளாகிய இறைவன்' என்னும் விசுவாசக் கோட்பாடு போன்ற திருவிழாக்களில் கூறப்பட்ட கதைகளையும் பாரம்பரியங்களையும் அறிந்திருந்தனர். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்னும் இஸ்ராயேலின் வரலாற்று அடித்தளம், யாவே தான் வரலாற்றின் ஆண்டவர் என்ற சமய உணர்வை வரலாற்றுக்கு அளித்தது. இதைப் பழங்கால மேற்காசிய மக்கள் அறியார்.

இதன் ஆரம்ப கட்டமானது அவையின் உயிருள்ள பாரம்பரியமும், பெரும் சம்பவங்களுடன் ஆன வாய்மொழித் தொடர்பு மாகும். சவுல்-சாமுவேல் மற்றும் சவுல்-தாவீது போன்ற பாரம்பரியங்களிலும், தாவீதின் இறுதி ஆண்டுகள் மற்றும் சாலமோனின் வளர்ச்சி போன்றவற்றிலும் வாய்மொழி நடையையும், வீரகாவியப் பாணியையும் எளிதில் காணலாம். அவை, முதன் முதலாக எப்போது எழுதப்பட்டன என்று யாரும் கூற இயலாது. அவற்றில் சில சாலமோனின் பணிகளைப் பற்றிய புத்தகத்திலிருந்து (1 அர 11:41) சேர்க்கப்பட்டிருக்கலாம். யூத மற்றும் இஸ்ராயேல் அரசர்கள் பற்றிய நாளேடுகள் பெரும்பாலும் அரசர் ஆகமத்தில் குறிக்கப்படுகின்றன. இவை மூல ஏடுகள் என்று கூற முடியாது. இவை பெரும்பாலும் வீரகாவிய, பொதுப்பாணி விவரிப்புகள், இறைவாக்கினர்களைப் பற்றிய கதைகள் ஆகியவை அடங்கிய தொகுப்புகளாகும்.

பழைய ஏற்பாட்டு வரலாற்றின் பெரிய தொகுப்பு, யாவே பாரம்பரியத்தில் காணப்படும் நாட்டுக் காவியமாகும். மூலக் தொடக்கக்காலம், குல முதியவர்கள், யாத்திரை ஆகியவை பற்றிய வீரகாவியக் கதைகளையும் காரணக் கதைகளையும் பயன்படுத்தி, படைப்பு முதல் கானான் மீதான வெற்றிவரையுள்ள தாவீது பாரம்பரிய இஸ்ராயேலின் வரலாற்றை யாவே பாரம்பரிய ஆசிரியர் எழுதினார். அழைப்பு மற்றும் தந்தையருடனான உடன்படிக்கையை நிறைவேற்றுதல் என்னும் சமய கண்ணோட்டத்துடன் இவ்வரலாறு எழுதப்பட்டது. நிலையான பாரம்பரியத்தின்மீது பெருமதிப்பு கொண்டிருந்தாலும், யாவே பாரம்பரிய ஆசிரியர், வெறும் தொகுப்பாளர் அல்லர். அவர் உண்மையான ஆசிரியர், தனது பாரம்பரியத்தில் தனது முத்திரையைவிட்டுச் சென்றுள்ளார்.

இவை அனைத்தின் அடிப்படையில், உப ஆகமம்வரை வரலாறு எழுதப்பட்டது. இது மோசேயின் இறுதி நாட்களிலிருந்து எருசலேமின் அழிவு (கி.மு.597) வரையிலான வரலாற்றையும், 27 ஆண்டுகளுக்கு பின்னர் யோயாக்கின் விடுதலை செய்யப்பட்டது பற்றியும் விவரித்தது. யாத்திரையிலிருந்து யோர்தான் வரையிலான நிகழ்ச்சிகளை, யாவே பாரம்பரியத்தைச் சார்ந்து, மிக சுருக்கமாக மோசேயின் உரையில் கூறுகிறது. ஆசிரியரின் இறையியலுக்கும் சமய செயல்பாட்டிற்கும் மூலமாகிய சட்டம் பின்னரே துவங்குகின்றது. மக்களின் விதியானது, சட்டத்துடன் கொள்ளும் தவறான அல்லது சரியான உறவைப் பொறுத்தவாறு அமைக்கப்படுகிறது. யூத சமூகம் மீண்டும் அமைக்கப்பட்டபின் வரலாற்றை அறிவதன் மூலம் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளுமாறு இந்நூல் எழுதப்பட்டது. நாடு கடத்தப்படுவதற்குமுன் தொடங்கி, பின்னர் புதுப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று.

நெகமியாவின் நினைவுச் சின்னமானது மேற்காசிய அரச குறிப்புகளின் இலக்கிய நெறியைப் பின்பற்றி ''நான்'' நடையையும்

அரசனுடைய செயல்களை விவரித்தலையும் கொண்டுள்ளது. ஆளுநருடைய இத்தகைய நற்செயல்கள் அனைத்தும் எழுதப்பட்டு, கடவுள் அவரை நினைவுகூர்வதற்காக, ஆலயத்தில் கடவுளின் திருமுன் வைக்கப்படுவதற்காக எழுதப்பட்டன. இடைபுகுத்தப்பட்ட சடங்குகளுக்கான விதிமுறைகள் பெரும் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. வரலாறு சில புதிய சற்று கட்டுக்கதையான சம்பவங்களைக் கொண்ட ஒரு சிறிய அமைப்பே ஆகும். பின்னர், குருக்கள் பாரம்பரியம் விவரிக்கப்பட்ட யாவே பாரம்பரியத்துடன் இணைக்கப்பட்டது. இந்த இணைந்த நூலும் உபஆகமம் வீரகாவியமும் ஒன்று சேர்க்கப்பட்டது. அதன் விளைவாக இந்த ஒன்றிப்பின் முதல்பகுதியாகிய ஆதியாகமம்-உபஆகமம் தொகுப்பு சட்டநூல் பண்பைக் கொண்டுள்ளது. அதன் உரிமையிலேயே அது ஒரு நூலாகும்.

முன்னோரின் வரலாறு பற்றிய மெய்யில் விளைவுகளை நாளாகமப் பாரம்பரியம் ஏற்றுக்கொண்டது. இதில், இஸ்ராயேல் என்பது யூதாவை மட்டுமே குறிக்கிறது. இதன் வரலாறு தாவீது முதல் எஸ்ரா வரையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. பழைய கால வரலாறு அனைத்தும் பழைய குல மரபுப்பட்டியல் வடிவில் கொடுக்கப்படுகின்றது. பழைய பாரம்பரியங்களும் அறிவு பூர்வமான முடிவுகளும் சேர்ந்து அமைந்துள்ளது. கதைகளின் மூலமான பாரம்பரியத்தின் வளர்ச்சி, ஆசிரியருடைய கருத்தியலான செயல்திறனை வெளிப்படுத்துவதை எளிதாக எடுத்துக்காட்டுகிறது. மூல நாளாகம ஏடுகளில் நெகமியாவிற்கு இடமே இல்லை. அது எஸ்ரா நிகழ்ச்சிக்குக் கொடுக்கப்பட்டது. அது நெகமியாவை பின்பற்றி தனிப் பாரம்பரியமாக விளங்குகிறது.

பிற்காலத்தில், யூத வரலாற்று இலக்கியமானது, உண்மையான வரலாற்று உணர்வை இழந்து, அதிகமதிகமாய் கட்டுக்கதையாக மாறிவிட்டது. ஆனால் மக்கபேயர்களின் விடுதலை போராட்டம் பற்றிய நூல்களில் மீண்டும் புத்துயிர் பெறுகிறது.

5. கவிதை இலக்கியம்:- கவிதையும் தொடக்கத்தில் வாய்மொழி முறையிலேயே விளங்கிற்று. நிலைப்படுத்தப்பட்ட பாரம்பரியம் இருந்தாலும் அறிந்தோ அறியாமலேயோ கவிதைகள் மொழியிலும் கருத்துகளிலும் நவீனப்படுத்தப்பட்டிருக்கலாம். தவறுகளும் புகுந்திருக்கலாம். எழுதப்பட்ட ''ஊர்'' வாசகம்கூட பல்வேறு வடிவங்களில் இருந்திருக்கலாம்.

'வாழ்க்கை' பற்றிய பழைய இஸ்ராயேலின் கருத்திலிருந்து புனிதமான கவிதைகளுக்கும் மற்ற கவிதைகளுக்கும் இடையில் எந்தவித கூர்மையான வேறுபாடும் காண இயலாது. ஆனால் புனிதமான கவிதையை தவிர்த்துப் பொதுப்பாணி கவிதையைப் பற்றி பேச இயலும்.

அ. பொதுப்பாணி கவிதைகள்:- பழைமையான வகைகளில் ஒன்று. வல்லமை பொருந்திய, சந்தம் பொருந்திய ஆசீர்களாகும். இவை திருமணம் போன்ற தனிவாழ்வின் ஆடம்பரங்களின் போதும் (ஆதி 24:60) அல்லது இறக்கும் தந்தையின் இறுதி வார்த்தைகளாகவும் (ஆதி 27) மற்றும் சமுதாய சடங்குகளிலும் (எண். 6:22-27) மற்றும் சாபங்களாகவும் (எண் 22-24) கூறப்பட்டன.

இவ்விதக் கவிதைகள் குலம் போற்றும் பாடல்களுடன் இணைந்தே காணப்படுகிறது. இவை குல இயல்பு மற்றும் ஊழியைப் பற்றி எடுத்துக் கூறுகின்றன (ஆதி 4:23; 27:27-29.34-40). ஆற்றல்மிக்க கூற்றாக உருவாக்கப்பட்டு, பெரும்பாலும் இறக்கின்ற மூதாதையரின் வாயினின்றுவரும் கூற்றாக அமைக்கப்பட்டிருக்கும். ஒரு வம்சத்தின் விதியும், அன்றைய நிலையும் அதன் முன்னோருடைய ஆசீர் அல்லது சாபத்தின் விளைவு என்று விளக்கப்படுகின்றன. இத்தகையவற்றின் தொகுப்பினை ஆதி 49; உப 33, பாலாமின் அருள்வாக்கு மற்றும் தாவீதின் இறுதி வார்த்தைகள் (2 சாமு 23:1-7) ஆகியவற்றில் காணலாம்.

திராட்சை தோட்டதிலும் அறுவடையின் போதும் பணியாளர் பாடும் சிறு பாடல்

களை (நெக 4:4), நாடோடிப்பாடல்களில் சேர்க்கலாம். ஆற்றல் மிக்க மந்திரகுணம் உடையதாகவும் இப்பாடல் இருக்கும்: (உ.ம்.) கிணறு தோண்டும் பொழுது, ''மேன் மக்கள் தண்டாயுதங்களைக் கொண்டு உன்னைத் தோண்டினர்'' என்று பாடும் பாடல் (எண் 21:17-18); மற்ற உதாரணங்கள்: பெரும்பாலும் வேசியின் பாடலைப் பற்றி பாடும் இகழ்ச்சிப் பாடல்கள் (ஏச 23:16); குடிகாரப்பாடல் (22:13); மற்றும் காவல்கார னின் பாடல் (5:1).

கல்லறையில் புதைக்கும்பொழுது ''எங்க ளது சகோதரனே'' என்று ஒப்பாரி வைக்கும் பெண்களாக தொழில்புரிபவர்கள் (2 சாமு 3:33-34; எரே 9:16; 22:18) பாடும் பாடல்கள் ஒலித்தன. தனிப்பட்ட துக்ககரமான பாடல் களுக்கு அவை தூண்டுதல் அளித்தன (2 சாமு 1:19-27). நகரின் அல்லது மக்களின் அழிவின் போது பாடும் பாடல்களில், அவற்றின் நடை சாதாரணமாகவும், வஞ்சப் புகழ்ச்சியா கவும் இருந்தது. பெரும்பாலும் இவை இறைவாக்கினர்களால் பின்பற்றப்பட்டும் (ஆமோ 5:2), சில நேரங்களில் வெற்றிகர மான இகழ்ச்சிப்பாடலின் தொனியிலும் அமைக்கப்பட்டன (ஏச 47).

திருமணம் மற்றும் கூட்டங்களின் போது, பாடல்களிடையே காதல் பாடல்களும் இடம்பெற்றன. புகழ்பெற்ற விளையாட்டு மற்றும் பாடல்களால் அமைக்கப்பட்ட பழைய பாலினப்பெருக்கச் சடங்குகளின் எதிரொலிகளும் இப்பாடலில் காணப்பட் டன.

போர்க்களத்திலோ, அல்லது போரிலிவி ருந்து வீரர்கள் வெற்றிகரமாய் திரும்பி வரும் பொழுதோ கட்டப்பட்ட சிறிய போர்ப்பா டல்களிலிருந்து (நீதி 11:34; 1 சாமு 18:7) பெரிய பாடல்கள் தோன்றின. (உ-ம்) புகழ்ச் சிப் பாடலின் நடையின் தாக்கத்திற்கு உள் ளாகி அமையப்பெற்ற தெபோரா-வின் பாடல் (நீதி 5); மிரியாமின் பாடல் (யாத் 15) பொதுப்பாணி பாடலாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், இறைவனின் வெற் றிச் செயல்களைப் புகழ்ந்து திருவிழாச் சடங் குகள் தோறும் பாடப்படும் பாடலாகும். இவ்வாறு, இது புனிதப் பாடலாக அமைகி றது.

ஆ. வீரகாவியக் கவிதைகள்:- வீரகாவியக் கவிதைகளும், பண்டைய இலக்கியங்களில் காணப்படுகின்றன. 'ஆண்டவனின் போர் கள்' என்ற நூலும் 'யாஸார்' நூலும் ஒன்றே என்று கருதுவதற்கு தக்க காரணங்களும் உள்ளன. வெற்றிகள் மற்றும் முதல் அரசர்க ளைப் பற்றி செய்யுள் நடையில் எடுத்துக்கூ றும் நாட்டுப்பற்றுடைய வீரப்பெருங்காப் பிய வகையை சேர்ந்தது இந்நூல். சுதந்திர, தனிப்பட்ட வீரபராக்கிரம காவியங்களின் பாடல்களிலிருந்து இக்கவிதைகள் தோன் றின.

இ. புனிதச் சடங்கிற்கான கவிதை:- இவற் றில் பல்வேறு பிரிவுகளுடன் கூடிய சங்கீதங் களான சடங்குகளுக்கான பாடல்கள் அடங் கும். இவை, வெவ்வேறான சடங்கு, வழி பாட்டுச் செயல்கள் மற்றும் சூழ்நிலைக ளோடு குறிப்பிட்ட பிரிவும் பலதரப்பட்ட சடங்கு மற்றும் திருவழிபாட்டு செயல்களி லும் தருணங்களிலும், தத்தம் அலுவலு டையவை; வேறுபட்டவை. மேலும் புனிதச் சடங்குக் கவிதைகளில், பொதுவான புகழ்ச் சிப் பாடல்கள், குறிப்பிட்ட விழாக்களுக் கான பாடல்கள், முக்கியமாக, இறைவன் அரியணை ஏறும் விழாவின் பாடல்கள், பொதுத்துன்பம், ஆபத்து போன்ற காலத் தின் செப தப நாட்களில் பெரும்பாலும் அரசனால் பாடப்படும் தேசிய புலம்பல் சங்கீதங்கள், பொது செப சங்கீதங்கள், நோயிலோ மற்ற துன்பத்திலோ வருந்திய தனிமனிதன் 'பாவ காணிக்கை' செலுத்தும் போது பயன்படுத்தும் தனிப்பட்ட புலம்பல் சங்கீதங்கள், தனிப்பட்ட நன்றிச் சங்கீதங் கள், சடங்குகளின் விழா பவனியின் வருகை, ஆலய வாசல்களின் வழியே நுழை தல், போன்ற பல்வேறு செயல்களை விளக் கும் விழா வழிபாடுகளைப் பிரதிபலிக்கும் பாடல்கள் முதலியவை அடங்கும்.

புனித சடங்கிற்கான கவிதைகளுடன் வழி பாட்டுமுறை, இறைவாக்கினர்களின் இறை கூற்றுகள் சேர்க்கப்பட வேண்டும். (உ-ம்) அரசனை அபிடேகம் செய்தல் (சங் 2;109;71), அல்லது புலம்பல் சங்கீதத்தைப் பாடும் போது கூறப்படுபவை; மேலும், திருவழி பாட்டின் சாதாரண அல்லது காரண பகுதியா கக் குரு கூறும், ஆசீர்கள் மற்றும் சாபங்கள், இவை இறைகூற்றுகளைப்போன்று மாற்றப் பட்டு சங்கீதங்களோடு இணைக்கப்பட்டன. அரசனுடைய சத்தியமும், உறுதிவாக்கும் உரிமைப்பத்திரமும் (சங் 101) கூட குறிப்பி டப்படலாம்.

அபக்கூக்கு மற்றும் யோவேல் போன்ற இறைவாக்கினர்களின் நூல்களும் குறிப் பிட்ட சமயத்தில் மரபுமுறை வழிபாடுக ளாக தோன்றியிருக்கலாம்.

ஞான சங்கீதங்கள் அவற்றின் நோக்கத்தி லும் உந்து காரணத்திலும் சமய மனப் பான்மை உடையவையாகவே விளங்கின. மேலும் மேலும், அத்திசையிலேயே அவை செல்கின்றன. ''கடவுளின் மீதான அச்சமே ஞானத்தின் ஆரம்பம்''.

ஈ. எழுதப்பட்ட வாசகங்கள்:- எழுதி வைக்கும் முறை காலப்போக்கில் ஏற்பட ஆரம்பித்தது. ''ஆண்டவனின் போர்கள்'' என்பது எழுதப்பட்ட நூல் என விரிவான யாவே பாரம்பரியத்தாலும் உபாகம பாரம்ப ரியத்தாலும் எடுத்துக் கூறப்படுகிறது. நாடு கடத்தப்பட்டதற்குப் பிற்காலத்தில் தோன் றிய கவிதைகள் அனைத்தும் உடனே எழுதப் பட்டதாக தெரிகிறது. இதற்குச் சான்றாக புலம்பலாகமத்திலும், பிற்காலச் சங்கீதங்க ளிலும் காணப்படும் அகர வரிசை அமைப்பு களைச் சுட்டிக்காட்டலாம். இது செவியை விட கண்ணிற்கே முக்கியத்துவம் தரும் அலங்காரம் ஆகும்.

எ. அங்கீகரிக்கப்பட்ட திருமுறைப்பட்டி யலுக்குப்பின் தோன்றிய சமயக் கவிதைகள்:- இவற்றில் ஒருபகுதி அவ்வப்போது எழுதப் பட்டு, கதை இலக்கிய தலைவர்களின் வாய் மொழியாகக் கூறப்படும் கவிதைகளும் தானியேல் மற்றும் அவருடைய, நண்பர் கள், தோபியா, யூதித்து, அல்லது சீராக் நூலைப் போன்ற ஞானிகளின் நூல்களும் ஆகும். மற்றொரு பகுதி சாலமோனின் சங்கீ தங்கள், சாக்கடல் சுருள்கள் போன்ற தனிப் பட்ட தொகுப்புகளாகும். பாரம்பரிய பாதையில் செல்ல இது முயல்கிறது; ஆனால், சங்கீதத்தையும் ஞானாகம நடை மற்றும் எண்ணங்களையும் இணைத்து வெளிப்படுத்துகிறது. கும்ரான் ஏடுகள் ஏரா ளமான விவிலிய நினைவுகூர்தல்களையும் பாரம்பரிய நன்றி சங்கீதங்களின் நடையின் சிதைவுகளையும் கவிஞனின் வெளிப்படை யான மற்றும் மறைபொருளான அனுபவத் தின் சுட்டிக்காட்டல்களையும் மற்றும் சமய சிந்தனைகளையும் சிறப்புப் பண்புகளாகக் கொண்டுள்ளன.

6. இறைவாக்கு இலக்கியம்:- இது இஸ்ரா யேலின் இலக்கியத்தின் தற்படைப்பாற் றலை விளக்கும் இரண்டாவது அங்கமா கும். இவற்றில் எகிப்திய மற்றும் பாபிலோ னிய மாதிரிகள் பயன்பட்டிருப்பதுபோல் தோன்றினாலும், பண்டைய மேற்காசிய நாடுகளில் இறைவாக்கு இலக்கியத்தோடு ஒப்பிடுவதற்கு எதுவுமில்லை எனலாம். தோற்றத்திலும் உள்ளத்திலும் இஸ்ராயே லின் இறைவாக்கினர்கள் பண்டைய மேற்கா சிய நாடுகளுக்கு ஒத்த கருத்துக்களை கொண் டிருந்தனர். அந்நாடுகளைச் சேர்ந்த நபிகள் கூறியவை அற்ப ஆயுசுடன், காற்றோடு மறைந்து போயின. இஸ்ராயேலில், இறை வாக்கினரின் சொற்கள் மாத்திரமே உலகளவு சிறப்பு மிக்க இலக்கியத்தை ஏற்படுத்தின. இறைவாக்கினர்களின் ஆன்மீக தற்படைப் பாற்றல் சிறப்பும், உண்மையும், இஸ்ராயே லின் சமயத்தினுடைய தனித்துவமுமே இதற்கு காரணமாகும். அதாவது, இறைவ னைப் பற்றிய அவர்களது எண்ணமும், அனு பவமுமேயாகும். சங்கீதங்களின் சமயம், ஆலயத்துடனும் வழிபாட்டுச் சடங்குகளுட னும் நெருங்கிய உறவு கொண்டிருந்த இறை வாக்கினர்களின் ஆன்மீகப் பின்னணியாகும்.

அ. இறைவாக்கினரின் கூற்றுகளும் கவி தைகளும்:- இறைவாக்கினர்களின் ஆரம்ப

காலக் கூற்றுக்கள் அந்தந்த நேரத்தின் பரவச மான உந்துதல்களிலிருந்து தோன்றின. இவை சிறுசிறு, தனிப்பட்ட பகுதிகளாகும். இவை இறைவனது நற்பேற்றையோ அல்லது தீமையானவையோ பற்றிய இறைகூற்றுக்கள் அல்லது குறிப்பிட்ட வரலாற்று நிலைக்கேற்ற படிப்பினைகள் (2 சாமு 5:19. 23-24) ஆகியவற்றைப் பற்றியவையாகும். தோற்றத்திலும் வடிவத்திலும் இவை சமய பரவச நிலையுடையாரோடும், பழைய காட்சியாளரின் காட்சிகளுடனும் (எண் 24:17) அவர்களது ஆசிர் அல்லது சாபங்களின் வல்லமை பொருந்திய சொற்களோடும் தொடர்புடையன. இவை வரப்போகும் செயல்களைப் பாதிக்கும் ஆற்றல் கொண்டிருந்தன. காட்சிகள், கருத்தமைப்பு, வரப்போகும் நிகழ்ச்சிகளைப் பற்றிய உயிர்சித்தமான விவரிப்பு, உணர்ச்சிகள் ஆகியவை இறைவாக்கினரின் மனதில் சித்திரங்களால் மாறும் காட்சிகள், விவரிப்பதற்கு பதிலாக குறிப்பாக சுட்டிக்காட்டுதல், உருவகங்கள் முதலியவற்றைத் தோன்றச் செய்தன. இவை அனைத்தும் பரவச நிலையுடனும் காட்சிகளுடனும் உள்ள உறவை சுட்டிக்காட்டுகின்றன. இதுவே பிற்காலத்திற்கும் பொருந்தும். இறைவனுடைய ஏவுதல் என்ற கருத்தின் பாதிப்பால், இறைகூற்றின் மரபான வடிவாயிற்று, இது ''இறைவன் சொல்வதாவது; இவர்களுக்கு போய் சொல்'' என்னும் தூதுவரின் செய்தியாயிற்று. இந்த பிற்கால வடிவில், செவிப்புலன் முக்கியத்துவம் பெற்றதாய் விளங்குகிறது. ஆனால் காட்சியில் இது இல்லாமல் இல்லை.

இறைவாக்கு உரைகளில் காணப்படும் ஆசிர் மற்றும் சாபம் பற்றிய அமைப்புகள், வரவிருக்கின்ற நற்பேறு அல்லது அழிவினைப்பற்றிய விவரிப்புக்களைக் கொடுக்க வாய்ப்பு அளிக்கின்றன. பாரம்பரிய இறைவாக்கு நடை ஆமோசிற்கு முன்பே முழுவளர்ச்சியை அடைந்துவிட்டது. யாவே என்ன செய்வார் என்பதைப்பற்றி மட்டும் கூறாமல், பழைய நிலையினின்று மாறுபடுகிறது. இதன் அமைப்பு பின் வருமாறு உள்ளது; ''ஏனெனில், இன்னார் இதை இப்படி செய்ததால் (சொன்னதால்), நான் இப்போது இதை, அதை இவ்வாறு செய்வேன்'', அல்லது ''நான் இப்படி செய்வேன்; ஏனெனில் இவர் இப்படி செய்தார்''. இவை, விவரிக்கப்பட்ட அல்லது உள்நோக்குடன் அமைக்கப்பட்ட இறைவாக்குகள் என்று கூறப்படும். கருத்தின்படி, அழிவு (மிரட்டல்கள்) பற்றிய இறைகூற்றுக்கள், நற்பேறு மற்றும் மீட்புப் (வாக்குறுதிகள்) பற்றிய இறைகூற்றுக்கள் என வேறுபடுத்தலாம். முன்னதில் திட்டுதல் மற்றும் கடிந்துரைத்தல், அடிக்கடி சங்கீதங்களின் புலம்பல் நடையைப் பயன்படுத்தும் மக்களின் பாவங்களைப் பற்றிய பட்டியல், சாபத்திற்கு இணையான மிரட்டல் ஆகியவை முதன்மை பெறுகின்றன. பின்னதில் அதாவது வாக்குறுதிகள், நாடுகடத்தப்பட்ட காலம் மற்றும் அதற்கு பிந்திய காலங்களில், முதன்மை பெற்றன. இவற்றில் யாவே உடன்படிக்கையை நினைவுகூர்தல், அவரது நம்பிக்கை மற்றும் அன்புடன் கூடிய கருணை போன்றவை சாதாரண உந்து காரணங்களாகின்றன.

இறைவாக்கினர்களின் கதைகளிலும், ஆமோசிலும் காணப்படுவது போல, பழைய கூற்றுக்கள் குறுகியவையாக இருந்தன. இவற்றில் அறிமுக மற்றும் முடிவுரை வடிவங்களைக் கொண்டு மூல அமைப்புகளை ஒன்றிவிருந்து ஒன்றை எளிதாகப் பிரிக்கலாம். இவை இரண்டு அல்லது மூன்று முதல் எட்டு அல்லது பத்து விவிலிய வசனங்களை மாத்திரமே கொண்டிருக்கும். விவரிக்கப்பட்ட இறைகூற்றுக்கள் நீண்டதாக இருக்கலாம். ஆயினும், இரண்டாம் ஏசயாவின் தொகுப்புக்கூட 46 தனித்தனியான கூற்றுக்களைக் கொண்டிருக்கிறது. அவருடைய சீடர்களிடமிருந்து தோன்றிய 3-ஆம் ஏசயா என்றழைக்கப்படும் இறைவாக்குகள் நீண்டவையாகவும், மரபு வழி பாட்டு அமைப்புகளைப் பின்பற்றியவையாகவும் உள்ளன. இந்த பதினொரு அத்தியாங்களும் 14 வேறுபட்ட இறைவாக்குகளைக் கொண்டுள்ளன. எரே 2 போன்ற நீண்ட உரைக்கோவைகளும், சிறிய அமைப்புகளின் மூலம் தனித்தனிப்பண்பை வெளிப்ப

டுத்துகின்றன. ஆயினும், இங்கும் நியாய மான உண்மையான தொடர்பு தளர்ச்சியா கவே உள்ளது.

தங்களது கருத்துக்களை உள்ளத்தில் பதிய வைக்க, காலப்போக்கில் இறைவாக்கினர் கள் எல்லா காவிய நடைகளையும் அமைப்பு களையும் பயன்படுத்தியுள்ளனர். இறை வாக்கினரின் கூற்றுக்களே, கவிதைகளாக அமைந்தன. பெரும்பாலும் யாப்பு அமைப் போடு கூடிய நிறைவான கவிதைகளாக அமைந்தன. சிறப்பாக எரேமியாவின் இறைவாக்குகள், பல் வேறுபட்ட இலக்கிய வகைகளின் இலக்கணமாக உள்ளன. எரேமி யாவிலும் (முக்கியமாக புலம்பல் சங்கீதம்) 2-ம் ஏசயாவிலும் (புகழ்ச்சிக் கீதங்களின் எண்ணங்கள் மற்றும் வடிவங்கள், குறிப்பாக அரியணையேற்ற கீதம்) சங்கீத நடையின் தாக்கம் முதன்மை பெறுகிறது.

ஒருவேளை சட்ட ஆசிரியர்களாக ''ஞான-எழுத்தர்களின்'' பாதிப்பின் விளைவாக உரைநடையில் இறைவாக்கு மறையுரைகள் வெளிவந்தன. இவை உபஆகம அறவுரை மற்றும் எச்சரிக்கைகளுக்கு ஒத்தவை. இவை, எரேமியா மற்றும் எசக்கியேல் நூல்க ளைப் போன்று சார்ந்தவையாகவும், இலக்கி யமாகவும் அமைந்திருந்தன. இதன் வளர்ச்சி யிலும் இறைவாக்கு உரைகளின் வாய்மொ ழிப் பாரம்பரியம் ஒரு பங்கு வகித்தது.

ஆ. நூல்கள்:- இறைவாக்கு நூல்கள் என் பவை, வாய்மொழியாக வழிவந்த சிறுநூல்க ளின் தொகுப்புகளாகும். இவை பின்வரும் முறையில் அமைக்கப்பட்டவை ஆகும்: அழிவைப்பற்றிய இறைவாக்குகள் முதலி லும், பின்னர் மீட்பு மற்றும் மீண்டும் அமைத்தல் பற்றிய இறைவாக்குகள். இறை வாக்குகள் பெரும்பாலும் தூண்டு சொற் களை மையமாக வைத்துத் தொகுக்கப்பட் டன. சில இடங்களில், பாரூக்கின் நூல் அல்லது ஆமோ 7:10-இல் உள்ளது போன்று வாழ்க்கை கதைகளும், கட்டுக்கதைகளும் இவற்றுடன் இணைக்கப்பட்டன. முன் னுரை மற்றும் முடிவுரை விதிமுறைகள் பாதுகாக்கப்பட்டன. குறுகிய இறைக்கூற் றுக்கள் பெரும்பாலும் இணைப்புச் சொற் களே இல்லாமலும், சில சமயங்களில் 'ஏ னெனில்' அல்லது 'எனவே' என்னும் சொற் களாலும் சேர்த்து இணைக்கப்பட்டன.

ஒரு பகுதி வாய்மொழியாகவும் மறுபகுதி எழுத்து மூலமாகவும் உள்ளவற்றை இணைத்துப் பதிப்பிக்கும் செயலில், ஏசயா வின் சீடர்கள் போன்ற அமைப்புக்கள் முக் கிய பங்கினை வகித்துள்ளன. ஏசயா மற்றும் 2-ஆம் ஏசயா ஆகியோர் இணைந்த நூல்க ளின் தொகுப்பு இத்தகைய வகையைச் சேர்ந் ததே. இஸ்ராயேல் அரசை மீண்டும் நிலைநி றுத்தும் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும், நல்லறிவு புகட்டவும் வேண்டிய நோக்கத் திற்காக, சமூகத்தின் சமய தேவைகளுக்காக இந்த இணைத்துப் பதிப்பித்தல் தேவைப் பட்டது எனலாம்.

7. வெளிப்பாட்டு நூல்களும் மிட்ராசிக் நூல்களும்:- இறைவாக்கு இலக்கியத்தின் கடைசி பிரிவாக இருப்பது வெளிப்பாட்டு நூல்களும், மிட்ராசிக் நூல்களுமாகும். பழைய ஏற்பாட்டிலேயே வெளிப்பாட்டு இலக்கியத்தின் ஆரம்பத்தை தொடக்கத்தை ஏச 24-27; யோவே; செக் 9-14; எசக்கியேலின் ஒரு பகுதி; மற்றும் தானியேல் ஆகியவற் றில் காண்கிறோம். தானியேல் நூல் வர லாற்று கதைகளான மிட்ராசிக் இலக்கியத்து டன் இணைந்து உள்ளது.

அ. வெளிப்பாட்டு இலக்கியம் என்பது புலமைமிக்க பொதுப்பாணியைச் சேராத இலக்கிய வகையாகும். இவற்றின் ஆசிரியர் களிடம், தாங்கள் ஏவுதல் பெற்றவர்கள் என்ற உணர்வு ஆழ்ந்து கிடக்கிறது. இவர்கள் தங்களது சொந்த இறை அனுபவங்களை எடுத்துக் கூறினர். பழைய இறைவாக்குக ளைப் புரிந்து கொள்ளும் உரிமை தங்க ளுக்கு மேலிருந்து வந்ததாகவும் தங்களை இறைவாக்கினர்களின் வாரிசாகவும் கருதி னர்.

ஆ. மிட்ராசு இலக்கியம்:- இது விவிலி யப் பகுதிகளுக்கு அளிக்கப்பட்ட விளக்கவு

ரைகளின் தொகுப்பாகும். இது அலாக்கா, அக்கதா என இரு வகைப்படும். அலாக்கா விவிலியச் சட்டப் பகுதிகளுக்கு அளிக்கப் பட்டவிளக்கங்களின் தொகுப்பாகும். இது மோசேயின் ஒழுக்கச் சட்டங்களிலிருந்தும் சடங்குச் சட்டங்களிலிருந்தும் அதிகாரப்பூர் வமான வாழ்க்கை முறையை எடுத்துக்கூறும். இது அந்த அந்தக் காலத்தில் ஏற்படும் பொருளாதார, குடும்ப, அரசியல், சமூக, சமய மாற்றங்களுக்கேற்ப யூத ஆன்மீகத் தலைவர்கள் அளித்த மாற்றங்கள், தழுவிய விளக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

சட்டமல்லாத விவிலியப் பகுதிகளுக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களின் தொகுப்பாகும் அக்கதா என்ற இலக்கியம். யூத வரலாற்றிலிருந்து, விசுவாசிகளின் ஆன்ம வாழ்வுக்கு நலம் தரும் பாடங்களையும் எடுத்துக் காட்டுகளையும், அறிவுரைகளையும் வெளிக்கொணர, யூத ராபிகளின் முயற்சியின் விளைவாகும் இந்த இலக்கிய வகை. இதில் குறுகிய அல்லது நீண்ட வரலாற்றுக் கருவை அடிப்படையாகக் கொண்ட ஒரு கதை பல கற்பனை விவரங்களுடன் சுதந்திரமாகவும் தாராளமாகவும் விவரிக்கப்பட்டு, ஆசிரியரின் நோக்கத்திற்கேற்ப வாசகர்களுக்குப் போதகம் அளிக்கப்பட்டு, அறிவுரை வழங்கப்பட்டது. இதை ஒரு துணைவரலாற்று வடிவம் எனலாம். இந்த வகைக்கு ஞான 10-14-இல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு காணப்படுகிறது. இந்த விளக்கங்கள் அடங்கிய தொகுப்புகள் எதுவும் நூல் வடிவம் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால் ரூத், யோனா, தோபியா, யூதித்து, எஸ்தர்-போன்ற நூல்களும், தானியேலில் சில பகுதிகளும் (1-6; 13-14) அக்கதா மிட்ராசு இலக்கியத்திற்குத் தொடக்க மாதிரிகைகளாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுவர்.

இலக்கூம் (LAKKUM - தடை, கோட்டை)

நப்தலி நாட்டின் எல்லையில் உள்ள ஓர் ஊர் (யோசு 19:33). இவ்வூர் கிர்பெத்து கெராக்குக்குத் தென்மேற்கில் சுமார் 4 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்துஏல்-மன்சூராவாக அடையாளம் காட்டப்படுகிறது. இங்கு யோர்தான் நதி கலியேயக்கடலிலிருந்து தொடங்குகிறது.

இலசம் (LESHEM)

இலாயிசு-1-இன் மற்றொரு பெயர்.

இலசயா (LASEA)

கிரேத்துவின் தெற்கு கடற்கரையிலுள்ள நகரம் (அ.ப. 27:8). இது செந்துறை அல்லது நல்ல துறைமுகம் என்றழைக்கப்பட்ட இடத்துக்கருகில் இருந்தது. இப்பெயர் வெறெந்தப் பழங்கால இலக்கியங்களிலும் காணப்படவில்லை.

இலசாரோன் (LASHARON - சாரானைச் சேர்ந்த)

இவ்விடத்தைச் சேர்ந்த அரசனை யோசுவா வென்றார் (யோசு 12:18). அநேகமாக 'சாரோன்' என்பது நகரத்தின் பெயர் அல்ல. ஆனால் உண்மையில் இது சொற்றொடரின் ஒரு பகுதியாகும். ''சாரோனின் அபேக்கு'' என்றும் சொற்றொடரில் சாரோனின் அபேக்கை மற்றவற்றிலிருந்து வேறுபடுத்திக்காட்ட, 'சாரோன்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலத்தீன்

உரோமையர்கள் பேசிய மொழியே இலத்தீன். இயேசு அறையப்பட்ட சிலுவையில் எழுதப்பட்டக் குற்ற அறிக்கை எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது (யோவா 19:20; லூக் 23:38). இத்தாலியில் உள்ள ஒவ்வொரு படித்தவனும் இலத்தீன், கிரேக்கம் ஆகிய இருமொழிகளையும் பயன்படுத்தினான். பாலஸ்தீனத்தில், அரசு அலுவர், இராணுவம், சட்டம் இவற்றில் ஈடுபட்டவர்களே இலத்தீன் மொழியை அறிந்திருந்தனர்.

இலத்தீன் வுல்கத்தா மொழிபெயர்ப்பு (LATIN VULGATE)

கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதியில், எரோனிமு என்பவரால் செய்யப்பட்ட விவிலியத்தின் இலத்தீன் மொழிபெயர்ப்புத்தான் வுல்கத்தா மொழி பெயர்ப்பு என்று அழைக்

கப்படுகிறது. ''வுல்காத்துஸ்'' என்றால் பொதுமை, எளிமை என்பது பொருள். உயரிய இலக்கிய நடையில் எழுதாமல், எல்லோருக்கும் விளங்கும் வண்ணம், எளியவர்களும் படிக்கும் வகையில், விவிலியம் இலத்தீனில், மொழியாக்கம் செய்யப்பட்டது. அதற்கு தான் வுல்கத்தா அல்லது எளிமையான மொழிபெயர்ப்பு என்று பெயர் கொடுத்து அழைத்தார்கள். இந்த வுல்கத்தா மொழிபெயர்ப்பின் பாதிப்பு பல நூற்றாண்டுகளுக்கு, ஏன் இன்றைய நாளில் கூட காணப்படுகிறது. இந்த எளிமையான வுல்கத்தா எப்படிப் பிறந்து வளர்ந்தது என்பதைத் தொடர்ந்துக் காணலாம்.

கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதியில், அப்போது நிலவிவந்த விவிலியத்தின் பழைய இலத்தீன் மொழி பெயர்ப்பு எல்லோர்க்கும் திருப்தி அளிப்பதாயில்லை. குறிப்பாக உரோமை திருச்சபையின் தலைவர்கள், இதில் காணப்பட்ட குறைகளைக் களைய வேண்டும் என்று விருப்பம் கொண்டனர்.

பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு எழுபது நூல் என்ற கிரேக்க மொழி மொழிபெயர்ப்பையே தழுவி எழுதப்பட்டது. பழைய ஏற்பாடு எழுதப்பட்ட மூல மொழியாகிய எபிரேய விவிலியத்தை இதில் பின்பற்றவில்லை. அத்துடன் காலப் போக்கில், பழைய இலத்தீன் மொழி பெயர்ப்பில் படிவம் எடுத்தமுறையில், பல தவறுகள், பிழைகள் புகுந்து வளர ஆரம்பித்தன. இச்சூழ்நிலையில் தான், கி.பி. 382 ஆண்டை ஒட்டியக் காலத்தில் தமாசுஸ் என்ற பாப்பானவர், இப்பழைய இலத்தீன் மொழி பெயர்ப்பைத் திருத்த திட்டமிட்டார். எனவே அப்போது விவிலிய அறிஞராயிருந்த யுசேபியு எரோனிமு என்பவரை, இத்திருத்தம் செய்யும் பணியை செய்ய பணித்தார். இந்த எரோனிமு இன்றைக்கு ஜெரோம் என்று அழைக்கப்படுகிறார். இவரும் இப்பெரும் பணியை ஏற்றுக் கொண்டு, வேலையைத் தொடங்கினார். இயேசு பிறந்த பெத்திலகேமில் தங்கி இப்பணியை செய்தார். கி.பி. 383-ஆம் ஆண்டு தனது முதல் திருத்தத் தொகுதியை தமாசுஸ் பாப்பானவருக்கு அனுப்பினார். இம்முதல் தொகுதியில் 4 நற்செய்திகளையும் திருத்தம் செய்திருந்தார். இதற்கு எழுதிய முகவுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ''நான் பல பழைய கிரேக்க சுவடிகளை ஒப்பிட்டுப் பார்த்து இத்திருத்தத்தை செய்திருக்கிறேன். ஆனால் எங்கு அவசியமானத் தேவையிருந்ததோ அங்கு மட்டும்தான் திருத்தம் செய்துள்ளேன். மற்றபடி, மக்கள் இதுவரை, பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பில் பழக்கத்தில் பயன்படுத்திவந்த சொற்றொடர்களை அப்படியே வைத்திருக்கிறேன்'' என்று விளக்கியிருக்கிறார்.

இவ்வாறு எரோனிமு எடுத்துக்கொண்ட கொள்கை முறையினால்தான், பலயிடங்களில் ஒரே வார்த்தை வேறுவிதமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக பெரியகுரு என்பது மத்தேயு நற்செய்தியில் முக்கிய குரு என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதே வார்த்தை மாற்கு நற்செய்தியில் உயர்ந்த குரு என்றும், யோவான் நற்செய்தியில் நிறைவான குரு என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து, புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களை, எரோனிமு எப்போது எவ்வாறு திருத்தம் செய்தார் என்பதைப் பற்றி கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடையே காணப்படுகின்றன. பொதுவாக, நற்செய்தியல்லாத மற்ற புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை, மேலெழுந்த வாரியாகவே எரோனிமு திருத்தம் செய்தார் என்று பலரும் கருதுகின்றனர். ஒருசில அறிஞர்கள், கீழ்க் காணும் கருத்தைத் தெரிவிக்கின்றனர். வுல்கத்தா மொழிபெயர்ப்பில், நற்செய்தியல்லாத மற்ற புத்தகங்களை எரோனிமு தொட்டுத் திருத்தவேயில்லை என்பர். எரோனிமு அல்லாத மற்றவர்கள் தான் புதிய ஏற்பாட்டில் நற்செய்தியல்லாத புத்தகங்களை திருத்தினர் என்று வேறு சிலர் கூறுவர். ஆனால் பின்பு எரோனிமுவே அத்திருத்தத்தை செய்தார் என்று அவர் பெயரை அதற்குக் கொடுத்தனர் என்பர்.

பழைய ஏற்பாட்டைப் பொறுத்தவரை, எரோனிமு நற்செய்தி நூல்களைத் திருத்தி முடித்தவுடன் முதலில் சங்கீதங்களைத் திருத்தினார். இதற்கு எழுபதுநூல் என்ற கிரேக்க மொழி பெயர்ப்பையே நோக்கீட்டுச் சுவடியாகப் பயன்படுத்தினார். எரோனிமு செய்த இந்த சங்கீத திருத்தத்திற்கு உரோமைச் சங்கீதம் என்று பெயரிட்டு அழைத்தார்கள். இத்திருத்திய சங்கீதங்கள் கிறிஸ்துவ வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டன. இன்றும் உரோமையில் பேதுருவின் பேராலயத்திலும் மிலானிலும் இப்பழைய மொழிபெயர்ப்புதான் வழிபாட்டில் பயன்படுத்தப்படுகிறது.

மேற்கண்ட மொழிபெயர்ப்பில் எரோனிமுவிற்கே திருப்தியில்லை. ஏனென்றால் அவர் திருத்தியபோது பயன்படுத்திய கிரேக்க மொழிபெயர்ப்பு சிறந்ததல்ல என்று அவர் கருதினார். எனவே செசரியா நகர் நூலகத்திலிருந்து, ஒரிஜன் தயாரித்த ஆறுபடிவ விவிலியத்தில், ஐந்தாவது பத்தியில் எழுதப்பட்டிருந்த எழுபது நூல் பிரதியைப் பெற்று, அதன் அடிப்படையில் மற்றொரு புதிய திருத்தத்தை சங்கீதங்களுக்கு கொடுத்தார். இவ்வாறு எரோனிமுவால் இரண்டாம் முறையாக செய்யப்பட்ட சங்கீதங்களின் திருத்தம், ''கால் சங்கீதங்கள்'' என்று அழைக்கப்பட்டது. அவை பிரான்சு நாட்டில் அதிகமாக வழிபாட்டில் பயன்படுத்தினர். எனவே அந்நாட்டின் பெயரை வைத்து அவை ''கால் சங்கீதங்கள்'' என்றழைக்கப்பட்டன.

இந்த இரண்டாம் முறையில், எரோனிமுவால், மொழிபெயர்க்கப்பட்ட கால் சங்கீதங்கள்தான் விவிலியத்தின் வுல்கத்தா மொழிபெயர்ப்பில் இடம் பெற்றுள்ளன. இந்த கால் சங்கீதங்கள்தான் கவர்டேல் என்பவர் செய்த ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு நோக்கீட்டுச் சுவடியாக அமைந்தது. அதேபோல 'பெரிய விவிலியம்' என்ற விவிலிய ஆங்கில மொழிபெயர்ப்பிற்கும் இது அடிப்படையாய் அமைந்தது.

இதன் பிறகு எரோனிமு, மூன்றாவது முறையாக சங்கீதங்களை மொழி பெயர்த்ததாகத் தெரிகிறது. இம்முறை எபிரேய மூல மொழி சங்கீதங்களைப் பெற்று, அதனுடன் ஒப்பிட்டுப் பார்த்து திருத்தம் செய்தார். இம்மொழி பெயர்ப்பு மிகவும் நுணுக்கமாக, மூலநூலை ஒத்திருக்கும் வகையில் செய்தார். இவ்வளவு நல்ல மொழிபெயர்ப்பு மக்களிடத்தில் நல்ல வரவேற்பு பெறவில்லை என்றுதான் சொல்லலாம். அதனால்தான் இப்போது இம்மொழிபெயர்ப்பு ஒரு சில பழம் ஏடுகளிலேயே காணக்கிடக்கிறது. இம்மூன்றாம் மொழிபெயர்ப்பிற்கும், கால் மொழி பெயர்ப்பிற்கும் பலயிடங்களில் முக்கியமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக சங் 14:3-இல் காணப்படும் வசனம் (உரோ 3:13) எரோனிமுவின் மூன்றாவது மொழிபெயர்ப்பில் காணப்படவில்லை. ஆக அது பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட வசனம் என்பது புரிகிறது. ஆனால் இவ்வசனம் கால் சங்கீத மொழிபெயர்ப்பில் காணப்படுகிறது.

இவ்வாறு சங்கீதங்களைத் திருத்தி முடித்தபின், பழைய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களையும் திருத்தி முடித்தார் எரோனிமு. இதற்கும் எழுபது நூல் என்ற கிரேக்க மொழிபெயர்ப்பையே எரோனிமு பயன்படுத்தினார். ஆனால் இந்த திருத்தத்திலும் எரோனிமுவிற்குத் திருப்தியில்லை. கடைசியாக விவிலியத்தின் எபிரேய மூல நூலிலிருந்து மொழிபெயர்ப்பு செய்வதுதான் சரியான முறை என்றுணர்ந்தார். எனவே மறுபடியும் விவிலியத்தை, எபிரேய மூலநூலையே நோக்கீட்டுச் சுவடியாக பயன்படுத்தி திருத்தம் செய்தார். மொழிபெயர்ப்பில் சந்தேகங்கள் எழுந்த போது, எபிரேயமொழி அறிஞர்கள், ராபிகளை கலந்தாலோசித்தார். எனவேதான் சில நேரங்களில் வுல்கத்தா மொழிபெயர்ப்பும் தார்கும் என்று அழைக்கப்படும் அரமேய மொழிபெயர்ப்பும் ஒத்து செல்வதை நாம் காணலாம்.

இவ்வாறு அரும்பணி செய்து, தயாரித்த எரோனிமுவின் வுல்கத்தா மொழிபெயர்ப்பினை பலர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத்துவங்கினர். பழைய வசனங்களில் பழகி

போன பக்தர்களுக்கு எரோனிமு புதியதாக புகுத்திய மாற்றங்கள், புதிய சொற்றொடர் கள், விவிலியத்தின் புனிதத்தை புதைத்துவி டும் என்ற அச்சத்தை உண்டாக்கியது. எனவே எரோனிமு மீது குற்றபழி சுமத்தவும் தலைப்பட்டனர். எரோனிமு மூல மொழி யின் உண்மைகளைத்தான் மக்களுக்குத் திறந் துக் காட்டினார் என்பதை அவர்களால் புரிந் துக் கொள்ள முடியவில்லை. புனித அகுஸ் தினார்கூட எரோனிமு பணியின் மீதுக் கோபம் கொண்டார். எழுபதுநூல் என்ற கிரேக்க மொழிபெயர்ப்பை விட்டுவிட்டு, ஏன் எபிரேய விவிலியத்தை பின்பற்ற வேண்டும்? அப்படியென்றால் எழுபதுநூல் இறைவனின் ஏவுதலால் எழுதப்பட்டது என் பதை சந்தேகிக்கின்றீர்களா? என்ற கேள்விக் கணையை விடுத்தார்.

எரோனிமுவும் சற்று கோபத் தன்மைக் கொண்டவர், காரணத்தைத் தெரிந்துக் கொள்ளாமல் குற்றப்பழி கூறியவர்களைக் கடுமையாக கண்டித்து சாடினார். தன் நண் பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், தன்மீது இவ்வாறு குற்றம் சாற்றுபவர்களை அவர் கள் இரண்டு கால் கழுதைகள் என திட்டி சாடுகிறார்.

இந்த எதிர்ப்புகள் தற்காலிகமாகவே எதி ரொலித்தன. பிறகு அனைவரும் எரோனிமு செய்த மொழிபெயர்ப்பின் மேன்மையை புரிந்துக் கொண்டனர். மேலைய நாடுகள் முழுவதும் எரோனிமு செய்த இலத்தீன் மொழிபெயர்ப்பை ஆர்வமுடன் ஏற்றுக் கொண்டன. இவ்வாறு இது பொதுவான எளிதான மொழிபெயர்ப்பு என்ற பட்டத்தை யும் பெற்றுக் கொண்டது.

ஆனால் காலப்போக்கில், எரோனிமு தயாரித்த இவ்வழகிய மொழி பெயர்ப்பில் பிழைகள் புகுந்தன. இப்பிழைகளில் படி வம் செய்பவர்களால் அறியாமலேயே செய் யப்பட்டவைகள் உண்டு. அல்லது வேண்டு மென்றே, பழைய இலத்தீன் சொற்றொடர்க ளில் மனதைப் பறிகொடுத்தவர்கள், அக்கு றிப்பிட்ட சொற்றொடர்களை எரோனிமு வின் மொழிபெயர்ப்புடன் சேர்த்து எழுதிய தும் உண்டு.

இவ்வாறு பிழைகள் நிரம்பிய எரோனிமு வின் மொழிபெயர்ப்பை திருத்த மத்திய நூற்றாண்டுகளில் பல முயற்சிகள் நடந்தன. பல திருத்தங்களும், திருத்திய பதிப்புகளும் செய்யப்பட்டன. ஆல்குயின், தெயோடல்ப், லான்பிரான்க், ஸ்டீபன் கார்டிங் என்பவர் கள் எரோனிமு செய்த வுல்கத்தா இலத்தீன் மொழிபெயர்ப்பை, மத்திய நூற்றாண்டுக ளில் திருத்தம் செய்த முக்கியமானவர்களா வர்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பாரீஸ் பல்க லைக் கழகமும், மற்றவர்களும், வுல்கத்தா மொழிபெயர்ப்பில் செய்ய வேண்டிய திருத் தங்களைப் பற்றி ஒரு தொகுப்பு செய்தனர். ஆனால், இவ்வாறு பலரும் திருத்த முற்பட் டபோது, அங்கு மேலும் பல பிழைகளும் தவறுகளும் சேர்ந்துக் கொண்டேதானிருந் தன. தற்போது நமக்கு, 8000த்திற்கும் அதிக மான வுல்கத்தா மொழிபெயர்ப்பு பழஞ் சுவடிகள் கிடைக்கின்றன. அத்தனை பழஞ் சுவடிகளும் ஒன்றுக்கொன்று ஏதாவது ஒரு விதத்தில் வேறுபாடுகளைக் கொண்டிருக் கின்றன. சில வேறுபாடுகள் நம்மால் புரிந் துக் கொள்ள முடியாமல் மாறுபட்ட கருத் துக்களை தருவதாய் அமைந்துள்ளன.

1546-இல் நடைப் பெற்ற திரிதெந்தீன் பொதுசங்கம், இலத்தீன் மொழிபெயர்ப் பைப் பற்றி ஒருமுடிவெடுத்தது. அதாவது விவிலியத்திற்கு ஒரு சிறந்த இலத்தீன் மொழிபெயர்ப்பைத் தயாரிக்க வேண்டும் என்பதுதான். இச்சங்கத்திற்குப் பிறகு, சங்கத் தின் தீர்மானத்தின்படி, ஐந்தாம் சிக்ஸ்டஸ் என்ற பாப்பானவர் 1590-ஆம் ஆண்டு இலத் தீன் மொழிபெயர்ப்பின் ஒரு புதியப் பதிப்பை திருத்தங்களுடன் வெளியிட்டார்.

ஐந்தாம் சிக்ஸ்டஸ் இறந்தபிறகு இவருக் குப் பின்வந்த எட்டாம் கிளமென்ட் என்ற பாப்பு 1592-இல், மற்றொரு இலத்தீன் மொழிபெயர்ப்பின் திருத்தியப் பதிப்பை வெளியிட்டார். இவர் தனக்கு கிடைத்த

பழைய எல்லா மொழி பெயர்ப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, இப்பதிப்பை வெளியிட்டார். சிக்ஸ்டஸ் வெளியிட்ட பதிப்பிற்கும், கிளமென்ட் வெளியிட்ட பதிப்பிற்கும் வேறுபாடுகளிலிருந்தன. குறைந்தது 3000 வேறுபாடுகள் அங்குக் காணப்பட்டன.

எட்டாம் கிளமென்ட் வெளியிட்ட இலத்தீன் மொழி பெயர்ப்பின் பதிப்புதான், திருச்சபை அங்கீகரித்த மொழிபெயர்ப்பாக, இன்றும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில் பயன்படுத்தப்படுகிறது.

1901 ஆண்டிலிருந்து ஆசீர்வாதப்பர் சபையைச் சார்ந்த விவிலிய அறிஞர்கள், இலத்தீன் மொழிபெயர்ப்பில் மீண்டும் ஒரு புதிய திருத்திய பதிப்பைக் கொண்டு வர முயற்சி செய்கின்றனர். பழைய ஏற்பாட்டு புத்தகங்களைத் திருத்தி முடித்து வெளியிட்டுள்ளனர்.

இதைவிடுத்து இங்கிலாந்தில் ஆங்கிலிக்கன் சபையைச் சார்ந்த விவிலிய அறிஞர்கள் புதிய ஏற்பாட்டின் திருத்திய இலத்தீன் மொழி பெயர்ப்பை வெளியிட முயற்சி எடுத்துக் கொண்டனர். 1889-ஆம் ஆண்டு மத்தேயு எழுதிய நற்செய்தியை வெளியிட்டார்கள், 1954-ஆம் ஆண்டு புதிய ஏற்பாட்டின் நிறைவாக திருவெளிப்பாட்டின் இலத்தீன் மொழி பெயர்ப்பை வெளியிட்டார்கள்.

இலத்தூசிம், இலத்தூசியர் (LETUSHIM - கூர்மையான)

இவர்கள் ஆபிரகாம், கெத்தூரா ஆகியோரின் பேரரான தெதானின் வழித்தோன்றல்களான அராபிய மக்கள் (ஆதி 25:3). இவர்கள் சீனாய் தீபகற்பத்தில் வாழ்ந்திருக்கலாம். தெதானின் மற்ற வழித் தோன்றல்கள் அசூரியர் மற்றும் இலயூமியர் ஆவர்.

இலபனோன் (LEBANON)

- காண்க. லெபனோன்.

இலபானா (LEBANA - வெள்ளையான)

பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று திரும்பியவர்களின் அட்டவணையில் ஒரு குடும்பத்தின் பெயராகும் (நெக 7:48).

இலபோனா (LEBONA)

செக்கேமுக்குப் போகும் வழியில், சீலோவுக்கு வடமேற்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு நகர் (நீதி 21:19). இது கான் ஏல்-லூப்பான் என்ற இக்காலக் கிராமம் இருக்கும் இடத்தில் அமைந்திருந்திருக்கலாம்.

இலப்பிதோத்து (LAPPIDOTH - தீவட்டிகள், மின்னல்ஒளி)

இலப்பிதோத்து என்பவர் இராமா, பேத்தேல் என்னும் ஊர்களுக்கு இடையே வாழ்ந்த தெபோரா என்னும் இறைவாக்கினளின் கணவர் ஆவார். (நீதி 4:4).

இலமுவேல் (LEMUEL - இறைவனுக்குச் சொந்தமான)

மாசாவின் ஓர் அரசன் (பழ 31:1.4; 30:1). ''தாயால் கற்பிக்கப்பட்டவன்'' என்று சாற்றிக் கூறப்படும் ஓர் அரசன். மாசா என்ற எபிரேயச்சொல் இறைகூற்று அல்லது இறைவாக்கு என்றும் மொழிபெயர்க்கப்படலாம். இது இப்பகுதியில் வரும் போதனை, தாய் தன் மகனான அரசனுக்கு அளிக்கும் ஞானமாகும் என்று சுட்டுகிறது.

ஆதி 25:14; 1 நாள் 1:30-இல் மாசா ஓர் இடப் பெயராகும். வட அராபிய மக்களோடு தொடர்புடையது.

இலயூமியர் (LEUMMIM - மக்கள் கூட்டம்)

ஆபிரகாம், கெத்தூரா ஆகியோரின் பேரரான தெதானின் வழியாகத் தோன்றிய அராபிய மக்களில் ஒரு குழுவினர் (ஆதி 25:3)

இலவங்கம் (CINNAMON, CASSIA)

கி.மு. 1650-ஐ ஒட்டி சீனாவிலிருந்து பாலஸ்தீனத்திற்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் கொண்டு வரப்பட்ட ஒரு மரமாகும். அதன் பட்டை நறுமணமிக்க எண்ணெய்யைக் கொண்டிருக்கும். சில இடங்களில் கருவாப்பட்டை என்றும் கூறப்படுகிறது. இது படுக்கை அறைகளிலும் (பழ 7:17) ஆடைகளிலும்(உ.ச.4:14) பரிசுத்த அபிடேக எண்ணெய் செய்வதிலும் (யாத் 30:23) பயன்

பட்டுள்ளது. பாபிலோனின் விற்பனைப் பொருள்களில் இலவங்கமும் ஒன்றாகும் (திருவெளி 18:13).

இலவங்கத்தின் காய்ந்த மலர்கள் இஸ்ரா யேலர்களால் விரும்பிப் பயன்படுத்தப்பட் டன. அது '' கசியா'' என்று அழைக்கப்பட் டது. இந்தக் காய்ந்த மலர்கள், வெள்ளைப் போளம், சந்தனம் ஆகியவற்றோடு சேர்ந்து, நறுமணப் பொருட்களாக பயன்பட்டன (சங் 45:8). தீரின் விற்பனைப் பொருட்களில் இதுவும் ஒன்று (எச 27:19). யோபுவின் இரண்டாம் புதல்வி '' கெத்சியா'' என்ற ழைக்கப்பட்டாள் (யோபு 42:14). கும்ரானின் மூன்றாம் குகையில் கண்டெடுக்கப்பட்ட செப்புச் சுருளில் ''கசியா மரத்தால் செய்யப் பட்ட தூப பாத்திரம்'' என்ற வாசகம் உள் ளது.

இலவியத்தான் (LEVIATHAN)

படைப்பின் தொடக்கத்தில் யாவேயால் அடக்கி ஒடுக்கப்பட்ட தொடக்க காலத்தைச் சேர்ந்த வேதாளத்தின் பெயர். எஸ்திராஸ், ஏனோக் போன்ற வெளிப்பாட்டு இலக்கி யங்களில், புராணக் குழப்பத்தைச் சேர்ந்த படைப்பாகவும் பெண் உருவமுடைய அச் சந்தரும் கொடும் விலங்காகவும் விவரிக்கப் படுகிறது. இதைப்போன்ற விவரிப்புகள் பாபிலோனிய இலக்கியங்களில் காணப்படு கின்றன. இவற்றில் இலவியத்தான் தரைவி லங்காகும். ஆனால் இஸ்ராயேல் இதை ஒரு கடல் விலங்காக கருதினர்.

யாவே தமது வாளினால் இலவியத்தான் எனும் பாம்பைத் தண்டித்தார் (எச 27:1). அவனது தலையை உடைத்து விட்டார் (சங் 74:14). இதேசொல் திமிங்கிலத்தைக் குறிப்ப தாகவும் பெரும் மீனைக் குறிப்பதாகவும் அமைகிறது (யோபு 41:1 தொ; சங் 104:26). இலவியத்தான் என்பது புராணங்களில் வரும் தீயசக்தியின அடையாளமான ஒரு இராட்சச விலங்கு ஆகும். இத்தீயசக்தி எப் பொழுதும் இறைவனால் தோற்கடிக்கப்பட் டுக் கொண்டேயிருந்தாலும். இந்த யுகத்தின் முடிவில் அது விடுவிக்கப்பட்டு முடிவான ஒரு தோல்வியை அடையும் எனக் கூறப்படு கிறது.

இலவோதிக்கயா (LAODICEA)

இது தென்மேற்குச் சிறிய ஆசியாவைச் சேர்ந்த ஒரு நகரம். இது மேயாண்டரின் துணை நதியான இலிக்குசின் பள்ளத்தாக் கில் இருந்தது. சிலசமயம் இது பிரிகியாவின் தென் மேற்கில் இருந்ததாகவும் காரியாவைச் சேர்ந்ததாகவும் கருதப்படுகிறது. தென் மேற் கில் இலாவோதிக்கயா இருக்கும் மட்ட மான குன்று இலிக்குசின் துணைநதிகளான அசோப்பு, கப்புருசு ஆகியவற்றால் பாதுகாக் கப்படுகிறது. இந்நகரம், எபேசு நகரிலிருந்து மேயாண்டர் வழியாக சீரியா செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்திருந்தது. இல வோதிக்கயாவின் கிழக்கில் 16 கி.மீ. தொலைவில் கொலேசையும், வடக்கில் 13 கி.மீ. மைல் தொலைவில் எராப்பொலியும் உள்ளன.

பிளினி இலவோதிக்கயாவின் முந்தையப் பெயர்களாகத் தியேசுப்பொலி, இரோவாசு ஆகியவற்றைக் கொடுக்கிறார். இது செலூக் கியர்களால், ஒருவேளை இரண்டாம் அந்தி யோக்கு அரசனால், சுமார் கி.மு.250-இல் அமைக்கப்பட்டது. இவர் அந்நகரத்தைத் தன் மனைவியின் பெயரான இலவோதிக்கா என்னும் பெயரால் அழைத்தார். இத செலூக் கியர்களின் கோட்டையாக இருந்தது. கி.மு.1 90-இல் மகனேசியாவில் மூன்றாம் அந்தி யோக்குவின் தோல்விக்குப்பிறகு, இலவே திக்கயா பெர்கமு ஆட்சியின்கீழ் வந்தது. ஆனால் கி.மு.133-க்குப்பிறகு உரோமையர் ஆட்சியில் இது எல்லா துறைகளிலும் வளர்ச்சி அடைந்தது. கி.பி.முதல் நூற்றாண் டில் இலவோதிக்கயா புவி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டபின், அதன் முக்கியத்துவம் குறைந்துவிட்டது.

இலவோதிக்கயா நல்ல வளமையான நிலங்களாலும், மேய்ச்சல் நிலங்களாலும், கம்பளம் நெய்யும் தொழிலாலும் பெயர் பெற்றிருந்தது. ஐயோனியவின் நகரங்களு டன் போட்டி போடும் அளவுக்குச் சிறந்து

விளங்கியது. கி.மு.2-ஆம் நூற்றாண்டிலேயே அது தனக்கென்று தேவதைகளின் உருவம் பொறித்த நாணயங்களை அடித்தது. இங்கு கிரேக்க மொழி பேசுவோரும், சீரியர்களும், உரோமையர்களும், உரோமையர்களாக மாற்றப்பட்ட அதே நாட்டைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்து வந்தனர்.

இலவோதிக்கயா திருவெளிப்பாட்டில் கூறப்படும் திருச்சபைகளுள் ஒன்று (திருவெளி 1:11; 3:14). இலவோதிக்கயா, கொலோசை (கொலோ 2:1; 4:15), எராபோலி (கொலோ 4:13) ஆகிய நகரங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களோடு கொண்டிருந்த உறவு இலிக்குக பள்ளத்தாக்கில் ஏற்பட்ட சமய வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. இந்நகரம் செலூக்கியர், துருக்கியர் படையெடுப்புகளால் நாசமாக்கப்பட்டு 13-ஆம் நூற்றாண்டுக்குப்பின் கைவிடப்பட்டது. நகரத்தின் அகழ்வாராய்ச்சியில் பல உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நகரின் சுற்றுச்சுவர் காணப்படுகிறது. நகரின் தென்மேற்கு பகுதியில் உரோமானிய கலையில் கட்டப்பட்ட அரைவட்ட வடிவமான விளையாட்டு அரங்கம் உள்ளது. வாட்போர்களும் நடைபெற்றன. விளையாட்டு அரங்கத்தின் அருகிலுள்ள பெரிய கட்டிடம் உடற்பயிற்சி நிலையமாகவோ, நீச்சல் குளமாகவோ இருக்கலாம்.

இலவோதிக்கயாருக்குத் திருமுகம்

இது கொலோ 4:16-இல் குறிக்கப்படும் இலவோதிகயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதிய கடிதமாகும். இது ஒரு சுற்றுமடல் அல்லது பகிரங்கத் திருமுகமாகும். இது எப்போது எழுதப்பட்டது என்று கூறமுடியாது. ஆனால் நான்காம் நூற்றாண்டில் திருச்சபையின் தந்தையர் இதற்கு எதிராக எச்சரிக்கின்றனர். இது ஒரு திருமுறை சேராத நூலாகும். ஆனால் பல இலத்தீன் கையெழுத்துப்பிரதிகளில் அவ்வப்போது காணப்படுகிறது. சிக்கல்மிக்க வரலாற்றையுடையது. சிலகாலங்களில் திருமுறையைச் சேர்ந்த நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சிலகாலங்களில் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

இது இலத்தீன் மொழியில் உள்ளது. ஆனால் இதில் கிரேக்கப்பாதிப்பு காணப்படுகிறது. இது ஒரு தொகுப்பு நூலாகும். திருமுறை சேர்ந்த பவுலின் திருமுகங்களிலிருந்து அப்படியே எடுக்கப்பட்ட தொடர் பற்ற பதங்களைக் கொண்டது. பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகத்தைப் பெரிதும் சார்ந்து எழுதப்பட்டுள்ளது. இதில் கலாத்தியர், 1,2 திமோத்தேயு, 1, 2 பேதுரு, மத்தேயு ஆகியவற்றின் பாதிப்பும் சுவடுகளும் காணப்படுகின்றன.

இலத்தீன் பிரதியில் 247 சொற்கள் உள்ளன. புதிதாக ஒன்றையும் கூறவில்லை. ''மனிதர்களாலும் மனிதன் வழியாகவோ ஏற்படுத்தப்படாமல் இயேசுக்கிறிஸ்துவினால் அப்போஸ்தலராக ஏற்படுத்தப்பட்ட பவுலாக நான் இலவோதிகயாவிலுள்ள சகோதரர்களுக்கு'' என்று தொடங்குகிறது. அவர்கள் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்காக நன்றி கூறுகிறது. பதிதத்தைப்பற்றி எச்சரிக்கிறது. கிறிஸ்துவில் துன்புறும் எல்லாருடனும் பவுல் கொண்டுள்ள பிணைப்பை எடுத்துக் கூறுகிறது. அவர் துன்புறுபவர்களில் மகிழ்ச்சியடைகிறார். ஏனெனில் அவர்களில் இறைவனே செயலாற்றுகிறார். மன்றாட்டுகள் வெளிப்படையாகச் செய்யப்படவேண்டும். உண்மை எதுவோ, கண்ணியமானது எதுவோ, நீதி எதுவோ, தூயது எதுவோ, இனியது எதுவோ, எதெல்லாம் நற்பண்புடையதோ, எதெல்லாம் புகழ்ச்சிக்குரியதோ அவற்றைச் செய்யும்படி பணிக்கிறது இந்நூல். ''இக்கடிதத்தை நீங்கள் வாசித்தபின் கொலொசைத் திருச்சபையிலும் வாசிக்கச் செய்யுங்கள். கொலொசையிலிருந்து வரும் கடிதத்தை நீங்களும் வாசியுங்கள்'' என்று இம்மடல் முடிகிறது.

இலாக்கீசு (LACHIS - கைப்பற்ற முடியாத)

இலாக்கீசு யூதாவின் முக்கிய நகரங்களில் ஒன்றாகும். அந்நகரம் இருந்த இடம் எருச

லேமின் தென்மேற்கில் 45 கி.மீ. தொலைவில் செப்பேலாவிலுள்ள தேல் எத்-துவேய்ராக என்னும் இடத்தில் இருந்திருக்கலாம். இந்நகரம் அபிருக்கு உதவி செய்ததாகவும், அவர்கள் அரசனைக்கொன்று, எகிப்துக்கு விசுவாசம் உடையவர்களாய் இருந்தார்கள் என்றும் அமர்னா ஏடுகளில் கூறப்பட்டுள்ளது. இலாக்கீசு யோசுவாவினால் முற்றுகையிடப்பட்டு கைப்பற்றப்பட்ட நகரங்களில் ஒன்று (யோசு 10). யூதாவின் நகரங்களுள் ஒன்றாக கருதப்பட்ட இலாக்கீசிலிருந்துதான் செனகெரிபு எருசலேமின் மீது படையெடுத்தார் (2 அர 18;14). இங்குதான் அமசியா கொலை செய்யப்பட்டார் (2 அர 14:19; 2 நாள் 25:27). இரகபெயாம் இதை பலப்படுத்தினார் (2 நாள் 11:9). நெபுக்கதுனேசார் எசக்கியாவுக்கு எதிராக படையெடுத்து வந்தபோது, எருசலேம் வீழுமுன், கடைசியாக கைப்பற்றப்பட்ட இரண்டு நகரங்கள் இலாக்கீசும், அசக்காவும் ஆகும்.

இலாக்கீசின் அகழ்வாராய்ச்சி ஸ்டாக்கே (1932-1938) என்பவரால் நடத்தப்பட்டது. இலாக்கீசு 18 ஏக்கர் பரப்பளவுடையது. இது முடியாட்சியில் எருசலேமைவிட பெரியதாக இருந்திருக்க வேண்டும். வெண்கல காலத்தில் (கி.மு.1250-1200) இது இஸ்ராயேல் மக்களால் அழிக்கப்பட்டது. அதன்பின் மக்கள் இந்நகரத்தில் குடியேறியதற்கான தடயங்கள் ஏதுமில்லை. ஆனால் இந்நகரம் கி.மு.701-இல் அசீரியர்களால் அழிக்கப்பட்டது தெளிவாக உள்ளது. கி.மு.588-587-இல் இது பாபிலோனியர்களால் சூறையாடப்பட்டு கி.மு.586-400 வரை கைவிடப்பட்டிருந்தது.

இரும்பு காலத்தில் இது இரகபெயாம் அரசனால் பலப்படுத்தப்பட்டது. இதில் கோட்டையுடன் கூடிய அரண்மனையும், இரட்டைச்சுவரும் முக்கியமானவை. இரட்டைச்சுவர் செங்கற்களால் பாறை மீது கட்டப்பட்டுள்ளது. இந்தக் கோட்டைச் சுவரில் இடையிடையே கோபுரங்கள் கட்டப்பட்டன. கி.மு.1600-1200 இடைப்பட்ட காலத்தில் இருந்த கோவிலின் சில பகுதிகளும், விக்கிரகங்களும், தூப கலசங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பல முத்திரைகளும், முத்திரை பதிக்கப் பெற்ற சாடியின் கைப்பிடிகளும், தொன்மையான எழுத்தினால் எழுதப்பட்ட சாசனங்களும் மிகவும் முக்கியமானவை ஆகும். இது பாபிலோனியர்களால் அழிக்கப்படுமுன் கோட்டைத் தலைவனுக்கு எசேக்கியாவால் எழுதப்பட்ட இலாக்கீசு கடிதங்கள் குறிப்பிடத்தக்கவை. இக்கடிதங்கள் விவிலியத்தில் குறிப்பிடப்படாத ஒரு இறைவாக்கினரைப்பற்றிப் பேசுகின்றன. இவற்றில் பல அரசர்கள் பண்பாட்டைத் தாழ்த்துவதாகக் குறை கூறப்பட்டுள்ளனர்.

இலாசருஸ் திவேசும் (LAZARUS AND DIVES)

ஏழையும் பணக்காரனும்; இலாசர்=இறைவனால் உதவி செய்யப்பட்டவன்)

இலாசர் இயேசுவால் கூறப்பட்ட ஏழையும் பணக்காரனும் உவமையில் வரும் ஏழை (லூக் 16:19-31). இலாசர் சாதாரணமாக யூதர்களிடையே நிலவிய பெயர். இயேசுவின் உவமையில் ஏழையின் பெயர் இலாசர் என்று கூறப்படுகிறது. ஆனால் பணக்காரனின் பெயர் கூறப்படவில்லை. ஆனால் இவ்வுவமையில் வரும் இலாசரும், பெத்தானியாவின் இலாசரும் வேறு வேறு நபர்கள். இந்த இரண்டு பேருக்கும் இடையே தொடர்பு உண்டா என்பதைப் பற்றி பல்வேறுபட்ட கருத்துகள் கூறப்படுகின்றன.

உவமை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. 1. பூலகக் காட்சி: புண்களால் மூடப்பட்ட உடலுடைய இலாசர் பணக்காரன் வீட்டு வாயிலில் அமர்ந்திருக்கின்றார். ஆனால் பணக்காரன் பட்டாடை உடுத்தி பகட்டான வாழ்க்கை நடத்தினார். அப்பணக்காரனின் பந்தியில் சிந்தினவற்றைக் கொண்டு பசியாற இலாசர் விரும்பினார். நாய்கள் கூட அவரது புண்களை நக்கும். 2. மறுஉலகக் காட்சி: சாவு அவர்களுடைய வாழ்க்கை நிலையை மாற்றி அமைத்தது. இலாசர் வானதூதர்களால் ஆபிரகாமுக்கு அருகில் அழைத்து செல்லப்பட்டார். பணக்

காரனோ கீழுலக நெருப்பில் தள்ளப்பட்டார். இலாசர் உவமையில் பேசியதாகவே கூறப்படவில்லை. ஆனால் பணக்காரன் தன் நாவைக் குளிர வைக்க இலாசரை அனுப்பும் படி ஆபிரகாமை கேட்கின்றார். ஆபிரகாம் மறுத்துவிடுகிறார். ஏனெனில் அவர் துன்புறுவது நீதியாகும். மேலும் இடையே உள்ள பாதாளத்தை கடக்க இயலாது. மீண்டும் பணக்காரன், இலாசரைத் தன் சகோதரர்களிடம் அனுப்பும்படி கேட்கிறார். ஆபிரகாம் மீண்டும் மறுக்கிறார். ஏனெனில் அவர்களை வழிகாட்ட மோசேயும் சட்டங்களும் உள்ளன. இவற்றைப் புறக்கணித்தால் உயிர்ப்பு போன்ற புதுமைகளும் ஒருவனை மனவருந்தச் செய்ய முடியாது.

இவ்வுவமையானது தன்னலமுள்ள பணக்காரர்களுக்கு எச்சரிக்கை. ஏழை பணக்காரர்களின் மாறுபட்ட முடிவுகள், இறைவனுடைய போதனையை கேட்கவில்லை என்றால் உயிர்ப்புபோன்ற புதுமைகளும் மனமாற்றத்தை உண்டாக்க முடியாது என்னும் கருத்துகளைக் கூறுகின்றது.

இலாசர் (LAZARUS - கடவுள் உதவிசெய்கிறார்)

இலாசர் பெத்தானியாவில் வாழ்ந்தவர். இவர் இயேசுவின் நண்பரும், மார்த்தா, மரியா ஆகியோரின் சகோதரனும் ஆவார். இயேசுவால் உயிர்ப்பிக்கப்பட்டபின், பாஸ்காவிற்கு ஆறு நாட்களுக்குமுன் இரவு உணவின்போது இருந்தார் (யோவா 11:1-44; 12:1-11). இந்நிகழ்ச்சி யோவான் நற்செய்தியைத் தவிர வேறு எந்த நற்செய்தியிலும் கூறப்படவில்லை. இலாசரின் உயிர்ப்பும், இறப்பிற்கும் உயிர்ப்புக்கும் இடைப்பட்ட நாட்களும் இயேசுவினுடைய உயிர்ப்பின் வெளிப்படையான முன்னடையாளங்களாகும்.

இலாசா (LASHA - பிளவு)

இலாசா கானானியர் வாழ்ந்த பகுதியில் எல்லைகளைக் குறிக்கும் நகரங்களில் ஒன்று (ஆதி 10:19). ஆனால் இந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை. இலாசா இலாயிசுதான் என்ற நகருடன் ஒப்பிடப்படுகிறது (யோசு 19:47; நீதி 18:20). யூத பாரம்பரியத்தைக் கொண்டு, கல்லிரோலுக்கு கிழக்கிலுள்ள மலைப்பிளவும் வெப்பநீர் ஊற்றுகளுக்குப் புகழ் பெற்றதுமான கல்லிரோவாக இருக்கலாம் என்று எரோனிமு கூறுகிறார். பெரிய ஏரோது நோய்வாய்ப்பட்டிருந்தபோது இந்த இடத்திற்குச் சென்றார்.

இலாசுதன் (LASTHENES)

யோனத்தான் காலத்தில் இவர் கூலே-சீரியாவின் ஆளுநராயிருந்தார். யோசிபஸ் இவரை கிரேத்தனான இலாசுதன் எனக் கூறுகிறார். இவர் கூலிப் படைகளைத் தெமேத்திரியு மன்னனுக்குக் கொடுத்தார். மேலும் இவர் ''உறவினன்'' என்ற பட்டப் பெயரையும் பெற்றிருந்தார். யோனத்தானும் அவரது அரசாங்கமும் தெமேத்திரியுவால் அங்கிகாரம் பெற்றபோது, அவர் இலாசுதனுக்கு எழுதப்பட்ட மடலின் ஒரு நகல் பெற்றார். அதில் யூதர்கள் நண்பர்கள் என எழுதப்பட்டிருந்தது. அரசன் அவர்களுக்கு நன்மை செய்யக் கோருகிறார். யூதேயா முழுவதையும் சமாரியாவினின்று பிரிக்கப்பட்ட அபேய்ரேமா, இலிதா, இராமத்தாயிம் முதலிய மூன்று நகரங்களையும், அவர்களுக்குக் கொடையாகத் தரும்படியும், இவைகளிலிருந்து வரும் வருமானத்தையும், நிலம், மரம், இவைகளிலிருந்து வரும் வருமானத்தையும் எருசலேமில் பலியிடுகிறவர்கள் பராமரிப்புக்காக பயன்படுத்தவும், பத்திலொரு பகுதியும், திரையும், உப்புத் தீர்வையும் மன்னித்ததாகவும் அந்த மடலிலே அரசர் எழுதுகிறார்.

இலாதா (LAADAH - பருத்த கழுத்து அல்லது தொண்டை உடையவர்)

இவர் யூதாவின் குலத்தைச் சேர்ந்தவர். செலாகுவின் வழித்தோன்றல். மரேசாவின் மக்களின் மூதாதையர் (1 நாள் 4:21; யோசு 15:44).

இலாதான் (LADAN - தொண்டையில் சதைப் பிடிப்புடைய)

1. இலாதான் யோசுவாவின் மூதாதையரில் ஒருவர். ஓர் எப்பிராயிமியர் (1 நாள் 7:26)

2. இலாதான் கெரிசோனிய லேவியர். இவருடைய பெயரிலிருந்துதான் பல குடும்பப்பெயர்கள் வருகின்றன. இவர் கெரிசோனியர்களின் மூதாதையர் (1 நாள் 23:7-9; 26:21). இவரும், யாத் 6:21; எண் 3:18-இல் வரும் இலிபுனியும் ஒருவரே என்று தோன்றுகிறது.

இலாபான் (LABAN) - காண்க. லாபான்.

இலாமேக்கு (LAMECH - வலிய இளைஞன்)

1. யாவே பாரம்பரியம்:- இலாமேக்கு, காயினின் வழிவந்த மத்துசாவேலின் மகனும், ஆதா சில்லா ஆகியோரின் கணவரும் ஆவார். ஆதா கூடாரவாசிகளுக்கும், ஆயர்களுக்கும் தந்தையான யாபாலையும், வீணையும் கின்னரமும் வாசிப்பவர்களின் தந்தையான யூபாலையும் பெற்றாள். சில்லா இரும்பு, பித்தளை இவற்றை கொண்டு வேலை செய்வோரின் தந்தையான தூபால்க் காயினையும் அவன் தங்கை நாகமாவையும் பெற்றாள் (ஆதி 4:18-24). இலாமேக்கிலிருந்துதான் பல தாரங்களை மணந்து கொள்ளும் வழக்கம் ஆரம்பமாயிற்று என்று கருதப்படுகிறது.

2. குருக்கள் பாரம்பரியம்:- இலாமேக்கு சேத்துவின் வழி வந்த மெத்துசாவேலின் மகனும், நோவாவின் தந்தையும் ஆவார் (ஆதி 5:25-28). நோவா பிறந்தபோது இலாமேக்கின் வயது 182. அவர் மேலும் 595 ஆண்டுகள் வாழ்ந்து தம் 777 வயதில் இறந்தார். எனினும் ஆதி 5:29 யாவே பாரம்பரியத்தைச் சேர்ந்தது. இறைவனின் சாபத்தை மட்டுப்படுத்துபவராக விவரிக்கப்படும் இந்த நோவா வெள்ளத்தோடு தொடர்பு உடையவராக மூலத்தில் இருந்திருக்கமாட்டார்.

3. இலாமேக்கின் பாடல்:- வாளின் பாடல் என கூறப்படும் இப்பாடல் இலாமேக்கினால் இயற்றப்பட்டது (ஆதி 4:25-24) இது மனநிலையில் நீதி 15:16; 1 சாமு 18:7-ஒடு ஒத்துள்ளது. இது மனித அகந்தையும் பாவமும் பெருகியிருப்பதைப் பிரதிபலிக்கிறது.

4. பொருளில் ஒற்றுமை:- மனித இனம் நாகரிகத்தில் வளர்ந்ததுபோல பாவத்திலும் வளர்ந்தது; என்றாலும் இது ஓரளவாவது மன்னிப்புப் பெற்றது. ஏழு என்ற எண் பல முறை வருவது ஒருமைப்படுத்தும் உந்து நோக்கத்தை கொண்டுள்ளது: காயீன் பொருட்டு 7 முறை பழி, இலாமேக்கின் பொருட்டு 77 முறை பழி, அவர் 777 ஆண்டுகள் வாழ்ந்தார்.

5. புதிய ஏற்பாட்டில்:- லூக். 3:36-இல் கூறப்பட்டுள்ள தலைமுறை அட்டவணை குருக்கள் பாரம்பரியத்தோடு ஒத்து போகின்றது. அளவிடமுடியாத தவறை மன்னிப்பது பற்றிய இயேசுவின் கூற்று (மத் 18:22) இலமேக்கின் பாடலைச் சுட்டிக் காட்டுவதாகத் தெரிகிறது.

இலாயிசா (LAISHAH - சிங்கம்)

எருசலேமின் வடகிழக்கிலுள்ள பென்யாமின் கோத்திரத்தின் ஊர்களில் ஒன்றாகும் (ஏச 10:30). ஏசயா இறைவாக்கினர் எருசலேமின் மீது படையெடுத்துவரும் எதிரியைப் பற்றி கூறும்போது இலாயிசாவைக் கல்லீம், அனதோத்து ஆகிய ஊர்களுக்கு இடையில் கூறுகின்றார். அது இருந்த இடம் இன்றைய கிர்பெத் ஏல்-இசவியே-ஆக இருக்கலாம். அது பழங்கால அனதோத்து ஆகிய அனாத்துக்குத் தென்கிழக்கில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

இலாயிசு (LAISH - சிங்கம்) - ஆள்

இலாயிசு பலித்தியேலின் தந்தை ஆவார். சவுல் தன் மகளும், நாடுகடத்தப்பட்ட தாவீதின் மனைவியுமான மீக்காளை பலித்தியேலுக்கு மணம் செய்து கொடுத்தார் (1 சாமு 25:44). இசிபாகல் அவளை பலித்தியேலிடமிருந்து கொண்டுவந்து தாவீதிடம் ஒப்படைத்தார் (2 சாமு 3:15).

இலாயிசு (LAISH - சிங்கம்) - இடம்.

யோசு 14:47-இல் இலசம் என்றும் பின் 'தாண்' என்றும் அழைக்கப்பட்ட இலாயிசு வடக்குப் பாலஸ்தீனத்திலுள்ள கானானியரின் நகரமாகும் (நீதி 18:7.14.27.29).

இலாயேல் (LAEL - இறைவனுக்குச் சொந்த மான)

கெர்சோனிய லேவியரான இவர் எலியா சாபுவின் தந்தை (எண் 3:34).

இலிக்கவோனியா (LYCAONIA)

இலிக்கவோனியா சிறிய ஆசியாவின் மத்திய பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 900 மீட்டர் உயரத்திலுள்ள அனத்தோலிய பீடபூமியாகும். இதனைச் சுற்றி, கிழக்கில் கப்பதோக்கியா, வடக்கில் கலாத்தியா, மேற்கில் பிரிகியா, பிசிதியா, தென்கிழக்கில் சிலிசியா ஆகியவை அமைந்துள்ளன. முற்காலத்தில் கொள்ளையர்களால் சீரழிக்கப்பட்ட இது பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியதாகவும், வரலாற்று முக்கியத்துவம் அற்றதாகவும் விளங்கியது. இதன் முக்கிய நகரங்களான தெர்பை, இல்சித்திரா, இக்கோனியா முதலியவற்றைப் பவுலும் பார்னபாவும் தமது முதல் நற்செய்திப் பயணத்தில் பார்வையிடுகின்றனர் (அ.ப. 14:6). இங்கு யூதர் பலர் வாழ்ந்தனர், இவர்கள் இலிக்கவோனிய மொழியில் பேசினர் என அப்போஸ்தலர் பணி குறிப்பிடுகிறது (14:6-11). கி.மு. 25-லிருந்து இலிக்கவோனியாவின் பெரும்பகுதி உரோமைப் பேரரசின் கீழ் கலாத்தியா மாகாணத்தைச் சேர்ந்ததாய் இருந்தது.

திமோத்தேயுவின் தாய் ஒரு யூதப்பெண். இவர் இலிசித்திராவில் சிறிது காலமாவது தங்கியதாகத் தெரிகிறது (16:1-2). பவுல் இலிக்கவோனியா வழியாக இரண்டுமுறை கடந்து சென்றார் (14;16:1-5). மூன்றாம் முறையும் சென்றிருக்கக் கூடும் (18:23). இலிக்கவோனியத் திருச்சபைகள் பவுலின் வேதபோதகத்தால் ஏற்படுத்தப்பட்டவையாகும். கலாத்தியருக்கு எழுதப்பட்ட திருமுகம் இவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கலாம். ஆனால் இலிசித்திராவுக்கு பவுல் முதல் தடவை வந்தது பற்றிய செய்திகளை விட (14:6-20) இந்தத் திருச்சபைகள் பற்றி அதிக விவரங்கள் கொடுக்கப்படவில்லை. மூன்றாம் நூற்றாண்டில் இங்குத் திருச்சபை மிகவும் முன்னேறியிருந்தது.

இலிக்கி (LIKHI - எடுத்தல்)

மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த செமிதாவின் மகன் (1 நாள் 7:14). இது கேலேக்குக்குப் பதிலாக எழுத்தரால் செய்யப்பட்ட பிழையாக இருக்கலாம் என்று இதற்கு இணையான பெயர்பட்டியல் காட்டுகிறது (எண் 26:30; யோசு 17:2). இப்பகுதியில் வரும் மற்ற பெயர்களைப்போல், இது ஓர் இடத்தைக் குறிக்கலாம்.

இலிக்கியா (LYCIA)

சிறிய ஆசியாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்த மலைப்பாங்கான மாவட்டமே இலிக்கியா. இதன் வடமேற்கே காரியாவும், வடக்கே பிசிதியாவும், பிரிகியாவும், வட கிழக்கே பம்பிலியாவும், கிழக்குத் தெற்கு, மேற்கில், மத்திய தரைக்கடலின் வடபகுதியான இலிக்கியக் கடலும் இலிக்கியாவை சூழ்ந்துள்ளன.

உரோமையரின் ஆட்சிக்குமுன் இலிக்கியா பாரசீகர்களாலும், மகா அலக்சாந்தராலும் தோலமியினராலும் ஆளப்பட்டது. கி.பி. 43-இல் உரோமை ஆட்சியின்கீழ் வந்தது. 74-இல் பம்பிலியாவோடு இணைக்கப்பட்டது. அப்போதும் இலிக்கியர் தங்களுக்குள் ஒற்றுமையாக கூட்டாட்சி நகரங்களாக இணைந்து வாழ்ந்தனர்.

இலிக்கியா நாட்டுத் துறைமுகங்களில் முக்கியமானவை மீராவும்(அ.ப.27:5) பாத்தராவும் (21:1) ஆகும். இவை இயற்கையிலே அமைந்த துறைமுகங்களாகும். மேலும் மத்தியதரைக் கடலின் மேற்குப் பகுதியிலிருந்து எருசலேம் விழாவுக்குச் செல்லும் யூதர்கள் பயணத்தில் தங்கிச் செல்லும் துறைமுகங்களாகவும் இருந்தன.

பவுல் தனது மூன்றாம் பயணத்திலிருந்து திருப்பியபோது, பாத்தராவில் கரையிறங்கினார். அங்கிருந்து, தீருக்குக் கப்பல் ஏறினார் (அ.ப.21:1-3). பவுல் உரோமைக்கு அனுப்பப்பட்டபோது, அவர் பயணம் செய்த கப்பல் மீராவில் தங்கியது. இங்கு பவுலும் மற்ற கைதிகளும் இத்தாலிக்குப் போகும் அலக்

சாந்திரிய கப்பலுக்கு மாற்றப்பட்டனர் (27:1-8).

இலிசானியா (LYSANIAS)

இயேசு தமது பணிவாழ்வைத் தொடங்கியபொழுது இலிசானியா அபிலேனே நாட்டுச் சிற்றரசனாக இருந்தார் (லூக் 3:1-2). எந்த இலிசானியாவைப் பற்றியும் எக்குறிப்பும் இல்லை. ஆனால் யோசிபஸ் கி.மு. 36-இல் அந்தோனி, கிளியோபத்திராவினால் மரணத்திற்குட்பட்ட ஒரு இலிசினியாவைப் பற்றிக் கூறுகிறார். ஆனால் இது புதிய ஏற்பாட்டுக் குறிப்புக்கு ஒத்துவராது.

இலிசானியாவை அபிலேனே நாட்டுச் சிற்றரசனாகக் காட்டும்போது லூக்கா தனது காலக்கணக்கிட்டில் தவறுகிறார் எனக் காட்டுவதுபோல் தோன்றுகிறது. ஆனால் அதே பெயரால் பலர் அபிலேனே நாட்டை ஆண்டிருக்கலாமென்பதால் லூக்கா இங்கு எவ்விதத்திலும் தவறவில்லையெனப் பலர் கருதுகின்றனர். மேலும் ஏன் லூக்கா இங்கு இலிசானியாவைக் குறிப்பிடுகிறார் என்பது தெளிவாக இல்லை. இயேசு அபிலேனே நாட்டில் புகவே இல்லை.

இலிசித்திரா (LYSTRA)

இது இலிக்கவோனிய நகரங்களில் ஒன்று. இக்கோனியா நகரை விட்டுச் செல்லுமாறு வற்புறுத்தப்பட்ட பவுலும் பார்னபாவும் அடுத்து இலிசித்திராவுக்குத்தான் சென்றனர் (அ.ப. 14:6). இங்கு ஒரு முடவனைப் பவுல் குணப்படுத்த, அவர்களைச் சேயுஸ், எரிமசு எனவும், கடவுளே தங்கள் மத்தியில் இறங்கி வந்ததாகவும் கொண்டாடிய இலிசித்திரா நகர மக்கள் (14:6-18) அவர்களுக்குப் பலியிட ஆரம்பித்ததைப் பவுல் தலையிட்டு மிகமுயற்சி எடுத்து நிறுத்தினார். அங்கு நற்செய்தியைப் போதித்தார்.

இக்கோனியாவிலிருந்து வந்த யூதர்கள் இந்நகரக் குடிகளிடம் பவுலும் பார்னபாவும் ஏமாற்றுக்காரர்கள் என்று கூறி நம்ப வைத்தனர். இதனால் அவர்கள் பவுலை உணர்விழக்கும் வண்ணம் கல்லாலெறிந்தனர் (14:19). ஆனால் இந்நிகழ்ச்சி அவர்கள் மீண்டும் வந்து மனந்திரும்பியவர்களை உறுதிப்படுத்த எவ்வகையிலும் தடையாயில்லை (14:21; 16:1). பவுலும் சிலாவும் இந்நகர்வழியாகத் திரும்பிய போது திமோத்தேயு அவர்களுடன் சேர்ந்து கொண்டார் (16:1-3).

இலிசித்திரா திமோத்தேயுவின் சொந்த ஊராகும் (16:2). பவுல் இலிசித்திராவில் பட்ட துன்பம் 2 திமோ 16:2-இல் குறிப்பிடப் படுகின்றது. இலிசித்திரா இருந்த இடம் எதுவென்று தெரிந்தாலும் பழைய நகரத்தின் நினைவுச் சின்னங்கள் எதுவும் இங்கில்லை.

இலிசிமாக்கு (LYSIMACHUS)

1. தோலமியின் மகன் ஆவார். எஸ்தர் ஆகமத்தைக் கிரேக்க மொழிக்குக் கொணர்ந்தவர் இவர் எனக் கூறப்படுகிறது (எஸ்த 11:1).

2. இவர் மெனலாவுவின் சகோதரர். மெனலாவு பெரியகுரு யாசோனைப் போட்டி விலை கூறி அகற்றிவிட்டு, நான்காம் அந்தியோக்கு எப்பிபானிடமிருந்து பெரிய குருப் பதவியைப் பெற்றார் (கி.மு. 171). மெனலாவு ஒரு கொடுங்கோலன் என்றும் காட்டு விலங்குபோல் கோபமுள்ளவரென்றும் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம் (2 மக் 4:25). இவர் தான் இல்லாதபோது தனது சகோதரன் இலிமாக்குவை ''தலைமைக் குருவின் பகரஆளாக'' நியமித்தார் (4:29).

தன் சகோதரனுடைய உதவியோடு கோவில் சொத்துக்களை அபகரித்து விற்றார். மக்களின் கோபத்திற்கு ஆளானபோது மக்களின்மேல் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட போர் வீரர்களை ஏவினார். ஆனால் மக்கள் அவர்களை எதிர்த்துப் போராடி ஆலய கருவூலத்திற்கருகே இலிசிமாக்குவைக் கொன்றனர் (4:39-42).

இலிதா (LYDDA)

இது யோப்பாவுக்கு தென்கிழக்கில் 18 கி.மீ. தொலைவிலுள்ள பழைய ஏற்பாட்டு உலோத்து ஆகும். நாடுகடத்தலுக்குப்பின், இங்கு யூதர்கள் மீண்டும் குடியேறினர் (எஸ்

2:3; நெக 7:37; 11:35). கிரேக்கர்கள் காலத்தில் இது இலிதா என்றழைக்கப்பட்டது. சேலூக்கிய அரசன் இரண்டாம் தெமேத்திரியு இந்த நகரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் அசமோனிய யோனத்தான் மக்கபேயுவுக்கு, கி.மு. 145-இல் கொடுத்தார் (1 மக் 11:34). யூலியு சீசர் யோவான் இரிக்கானுவின் கீழ் யூதர்களுக்கு ஆதிக்கம் அளித்தார். காசியு 45-இல் நகரைக் கைப்பற்றி மக்களை அடிமைகளாக விற்றார். அவர்களை மாற்கு அந்தோனி விடுவித்தார். கி.பி. 66-இல் எருசலேமை நோக்கிப் படையெடுத்த செசித்திய கல்லு இந்நகரை அழித்தார். இருவருடங்களுக்குப்பின் வெஸ்பாசியன் படையெடுப்பின்போது இங்கு மக்கள் குடியேறினர். 200-ஐ ஒட்டி உரோமைக் குடியிருப்பாக மாறியது. தியோசுபொலி என்று பெயர்பெற்றது.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஒரு தொடக்கத் திருச்சபையின் இல்லமாக இருந்தது (அ.ப. 9:32.36). இங்குதான் பேதுரு, ஐனேயா என்ற திமிர்வாதக்காரனைக் குணப்படுத்தினர் (9:33.34). கி.பி.70-இல் எருசலேம் அழிக்கப்பட்டபின் இந்நகரம் ராபிகளின் கல்விக்கூடமையமாக மாறியது.

இலிதெபீர் (LIDEBIR)

கிழக்குக் கிலயாதிலுள்ள ஓர் இடம் (யோசு 13:26). காண்க தெபீர்-2-இடம்.

இலிபியா (LIBYA) - காண்க லிபியா.

இலிபுனா (LIBNA - வெள்ளையான)

1. பாலைவனத்தில் இஸ்ராயேலர்கள் பாளையம் இறங்கிய ஓரிடம். இது லாபானாக இருக்கலாம் (உப 1:1) என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் இது எந்த இடம் என்று தெரியவில்லை.

2. செப்பேலாவிலுள்ள ஒரு கானானிய நகர். பெலிஸ்திய எல்லைக்கருகில் மக்கேதாவுக்கும் இலக்கீசுக்கும் இடையில் உள்ளது. இது கைப்பற்றப்பட்டு (யோசு 10:29-30; 12:15) யூதாவின் பகுதியில் சேர்க்கப்பட்டது (15:42); பிற்பாடு ஒரு லேவிய நகரமாக ஒதுக்கப்பட்டு குருக்களுக்கு அளிக்கப்பட்டது (21:13). யூதாவில் யோரம் ஆட்சி செய்தபோது இந்நகர் கிளர்ச்சி செய்தது (2 அர 8:22). பிற்காலத்தில் அசீரிய அரசன் சனகெரிபு இலக்கீசைக் கைப்பற்றியபின், இந்நகரைத் தாக்கினார் (14:8; ஏச 37:8).

இலிபுனா எங்கு இருந்தது என்பது அறியப்படவில்லை. இது வாடி ஏலாவின் தென் கரையிலுள்ள தேல் எஸ்-சாபியாக முன்பு அடையாளம் காட்டப்பட்டது. இலக்கீசுக்கு வடவடமேற்கில் 10 கி.மீ. தொலைவிலும் காதுவிலிருந்து தெற்கில் 6 கி.மீ.தொலைவிலும் உள்ள தேல்-போர்னாவாக இருக்கலாம்.

இலிபுனி (LBN - வெள்ளையான, இலிபுனாவைச் சேர்ந்தவர்)

1. இவர் இலிபுனா நகரத்திலிருந்த லேவியரின் கோத்திரத்தைச் சேர்ந்த குரு ஆவர்; கெரிசோனின் மக்களில் ஒருவராவார் (யாத் 6:17; எண் 3:18.21; 1 நாள் 6:17.20). இலிபுனியர் என்றழைக்கப்பட்ட கெரிசோனிய குடும்பத்தின் குலப்பெயர் மூதாதையர் (எண் 3:21). இலிபுனி தனி மனிதனின் பெயராகவும் அவரின் வழித்தோன்றல்களான அந்நகரத்தவரையும் குறிப்பதாக அமைகிறது.

2. மெராரியின் வழித்தோன்றலான ஒரு லேவியர் (1 நாள் 6:29).

இலிலித்து (LILITH - அருவருப்பான, நாற்றமுடைய கிளவி)

இதனைத் தனிமையான இடங்களில் உலவும் பெண்பேய் என்கின்றனர் (எச 34:14). கி.மு.8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கானானிய நாட்டுப்புற இலக்கியங்களிலும் விவிலியத்திற்குப் பிற்பட்ட யூத நாட்டுப்புற இலக்கியங்களிலும் குழந்தையைத் திருடிச் செல்லும் சூனியக்காரியாக வருணிக்கப்படுகிறது. இப்பெயர் சுமேரியச் சொல்லாகிய காற்று அல்லது ஆவி எனும் பொருளிலிருந்து பெறப்பட்டதேயொழிய எபிரேயச்

சொல்லாகிய 'இரவு' என்பதிலிருந்து வந்தது அல்ல.

ராபிகளின் பாரம்பரியப்படி இவள் ஆதாமின் முதல் மனைவியாவாள். தனக்குச் சமத்துவம் கொடுக்கப்படாததால் அவரை விட்டகன்றுபோனாள். இவளைச் சுமேரிய பேலித்-இலி அல்லது கானானிய பாகலாத்துக்குச் சமமாக்குகின்றனர். பிற்கால யூதப் பாரம்பரியத்தில் இவளுடைய சந்ததிகள் ''இலிலித்துவின் புதல்விகள்'', மனிதர் தங்கள் கனவில் புணர்ச்சி கொள்ளும் காமம் நிறைந்த பேய்களாவர்.

இலினு (LINUS - வலை)

இவர் திமோத்தேயவுக்கு வாழ்த்து அனுப்பும் ஒரு கிறிஸ்தவர் (2 திமோ 4:21). இவரைக் கிளாதியாவின் மகன் எனக் கூறுவது நம்பக் கூடியதாக இல்லை. இரேனியு தமது மடலில் ''பேதுருவும் பவுலும் உரோமைத் திருச்சபையை உருவாக்கி அதை ஒழுங்குபடுத்தி வைத்தபின் அங்கு இலினுவை ஆயராக நியமித்தார்கள். அந்த இலினுவே திமோத்தேயுவுக்கு வாழ்த்து அனுப்புபவர்'' என்று குறிப்பிடுகின்றார். இரேனியுவைத் தொடர்ந்து பல திருச்சபைத் தந்தையர்கள் இப்பரம்பரைக் கருத்தையே ஏற்றுக் கொண்டாலும் தெர்துல்லியன் கூற்றுப்படி கிளமெந்துதான் உரோமையின் அப்போஸ்தலரால்லாத முதல் ஆயர். எனவே பல சந்தேகங்கள் எழுந்தாலும் யுசேபியுவின் குறிப்புப்படி கி.பி.64-72 வரை இவர் ஆயராக இருந்திருக்க வேண்டும். மேற்கத்தியத் திருச்சபை இவரது விழாவை செப்டம்பர் 23-ஆம் நாள் கொண்டாடுகிறது.

இலீசியா (LYSIAS)

கி.மு.166-165-இல் அந்தியோக்கு எப்பிபானால் சீரியாவின் மேற்பார்வையாளராக அனுப்பப்பட்டவரே இந்த இலீசியா. இவர் யூதா மக்கபேக்கு எதிராகத் தோலமி, நிக்கானோர், கோர்க்கியா எனும் படைதளபதிகளை அனுப்பித் தோல்வி அடைந்ததால், அடுத்த ஆண்டில் தாமே அவரை எதிர்த்துச் சென்றார். இலீசியா எருசலேமுக்குத் தெற்கே பேத்சூர் என்னுமிடத்தில் தம் படைகளோடு தங்கினார். ஆனால் யூதா மக்கபேயும் இதில் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை (1 மக் 4:34-35). எனவே அந்தியோக்கு எப்பிபானின் ஒப்புதலின்பேரில் இருவரும் ஒரு சமாதான உடன்படிக்கைக்கு வந்தனர் (2 மக் 11). இதனால் யூதர்கள் வழிபாடு செய்வதற்கான தடைகள் நீங்கின. இது பக்திமிகுந்த யூதர்களுக்குப் பெருமகிழ்ச்சி தருவதாக அமைந்தது. இதைத் தொடர்ந்து 'யூதா ஆலயத்தை செயூஸ் வழிபாட்டினின்று' தூய்மைப்படுத்தினார். யூதர்கள் ஆலய அர்ப்பண விழாவை கொண்டாடினர்.

கி.மு.164-இல் மீண்டும் இலீசியா எருசலேமைப் பிடித்தாலும் ஆட்சியில் ஏற்பட்ட பல குழப்பங்களால் யூதர்களோடு ஒரு உடன்படிக்கைக்கு வந்தார். கி.மு.162-இல் தெமேத்திரியு, அரசனானபோது இலீசியா இறந்தார் (1 மக் 6:28-7:4).

இலீசியா கிளாதியு (LYSIAS CLAUDIUS)

இலீசியா கிளாதியு என்பவர் பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்டபோது ஆயிரம் போர் வீரர்கள் கொண்ட உரோமைப் படையின் தளபதியாக இருந்திருக்க வேண்டும். இவர் தனது உரோமைக் குடியுரிமையை விலைக்கு வாங்கி (அ.ப. 22:28) அதனைப் பெற்றார்.

எருசலேமில் பவுலைக் குறித்துக் கலவரம் ஏற்பட்டபோது இவர் அவரைக் கூட்டத்தினின்று விடுவித்து (அ.ப. 21:31.36;22:24), அவர் உரோமைக் குடிமகனென்று கண்டுபிடித்து (22:24-29), யூதத் தலைமைச் சங்கத்தால் விசாரிக்கச் செய்து (22:30), பின்பு செசரியாவுக்குத் தக்க பாதுகாப்புடன் பவுலை அனுப்பி வைத்தார் (23:23-33). ஆளுநன் பெலிக்சுக்கு இவர் அனுப்பிய கடிதம் அப்போஸ்தலர் பணியின் ஆசிரியராலே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இலீதியா (LYDIA) - ஆள். காண்க வீதியா.

இலீதியா (LYDIA) - இடம்

இலீதியா சிறிய ஆசியாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள நாடாகும். முன்காலத்தில் இலீதியர்கள் இங்கு வாழ்ந்ததால் இது

இவ்வாறு அழைக்கப்படுகிறது. இதன் அதிக மான பகுதிகள் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலே அமைந்துள்ளன. தங்கள் கடற்படையை விரிவுபடுத்தும் ஆவல் இன்றி வாழ்ந்தனர். அதே நேரத்தில் தங்கள் நாட்டின் எல்லைப்புறத்திலிருந்த கிரேக்க நகரங்களோடு அடிக்கடி போர்புரிந்தனர். இவர்களது தலை நகரமாகிய சார்திசு அமைந்திருப்பதிலிருந்தே அவர்கள் உள்நாட்டுப் பலத்தையே பெரிதும் நம்பினர் என்பது புலனாகும்.

இலீதியா, இத்தியர் காலத்தில் அவர்களின் கலாச்சார தாக்கத்திற்கு உட்பட்டது. வெண்கலக் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இலீதிய அரசுபற்றி அசீரிய, பாரசீக, கிரேக்கக் குறிப்புகளில் காணப்படுகிறது. இலீதிய அரசர்களில் மிகச் சிறந்தவனான கிரோசு (கி.மு.1560-546) வரலாற்று ஆசிரியர்களின் பார்வையில் அன்றைய செல்வம் மிகுந்த ஆசிய பேரரசர்களில் ஒருவனாகத் தோன்றினார். எபேசு நகரில் இவர் கட்டிய அர்தெமி கோவில் கிரேக்கக் கலை வளர்வதற்கு இவர் எவ்வளவு உதவியுள்ளார் என்பதைக் காட்டுகிறது.

பாரசீக மன்னனான சைரஸ் கி.பி.546-இல் இலீதியாவின் தலை நகரான சார்திசைக் கைப்பற்றிவிட்டார். எனவே கி.மு.334 வரை இலீதியா தன் ஆட்சி உரிமையை இழந்தது. பின் இது மகா அலக்சாந்தரின் ஆட்சிக்குட்பட்டது. அப்பொழுதும் இதன் பண்பாடும் கலைகளும் கட்டிக் காக்கப்பட்டன. பின் செலுக்கியர்களாலும் (1 மக் 3:3) பிற மன்னர்களாலும் சிலகாலம் ஆளப்பட்டது. உரோமையர் ஆட்சியின்கீழ் எல்லாவகையிலும் சிறப்புற்று விளங்கியது. தியோக்கிளேசியன் கி.பி.297-இல் இதனைத் தனி மாவட்டமாக்கினார்.

இவர்கள் பேசிய மொழி என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. இலீதியாவின் கலை கிரேக்கு, பாரசீகக் கலையின் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. துணிகளுக்கும், கம்பளங்களுக்கும் பெயர் பெற்றது இலீதியா. இலீதியர்கள் கம்பளி தயாரிப்பதிலும், வண்ணமிடுதலிலும் வாசனைத் திரவியங்கள் செய்வதிலும் வல்லவர்கள். அனடோலிய தாய் கடவுளையும், இளமைமிக்க ஆண் கடவுளையும் இவர்கள் வழிபட்டனர். இலீதியாவிலும் பிரிகியாவிலும் மூன்றாம் அந்தியோக்கின் (கி.மு.223-187) காலத்தில் 2000க்கும் மேற்பட்ட யூதர்கள் பாபிலோனிலிருந்து இங்கு வந்து குடியேறினர். திருவெளிப்பட்டில் குறிக்கப்படும் ஏழு ஆசிய திருச்சபைகளில் முக்கியமான தியத்தைரா, சார்திசு, பிலதெல்பியா ஆகியவை இங்கிருப்பதன்மூலம் கிறிஸ்தவம் இங்கு பெற்றுள்ள வளர்ச்சியை அறிந்து கொள்ளலாம்.

இலெந்துலுவின் கடிதம்

கி.பி.13-15 நூற்றாண்டுகளைச் சேர்ந்த நூல்; கிறிஸ்துவின் உடல் தோற்றத்தை விளக்கும் நூல் ஆகும். இது ''உரோமையரின் நாளேடு'' வடிவில் இருந்தாலும் யூதேயாவில் இருந்து ஓர் உரோமை அதிகாரியான இலெந்துலு உரோமை மூப்பர் சபைக்கு எழுதிய கடிதவடிவில் உள்ளது. இது மத்திய காலத்தில் நிலவிய கிறிஸ்துவின் தோற்றம் பற்றிய கருத்துக்களை விவரிக்கிறது. இத்தலைப்பு தொடக்காலத்திலிருந்தே மக்களிடையே பெரிதும் விரும்பப்பட்டது. யுசேபியு கிறிஸ்து, பேதுரு, பவுல் ஆகியோரின் வண்ணத்தில் வரையப்பட்ட படங்களைப் பார்த்திருப்பதாகக் கூறுகிறார். இப்படிப்பட்ட பல படங்களை லூக்கா வரைந்தார் என்பது தொன்மையான பாரம்பரியமாகும்.

இலேக்கா (LECAH - நடந்து போகிற)

ஏர் என்பவரின் மகனும் சேலாவின் வழித்தோன்றலும் ஆவார் (1 நாள் 4:21). ஆனால் வாசகச் சூழ்நிலையில், இலேக்கா, யூதாவின் பகுதியைச் சேர்ந்த ஒரு கிராமமாகத் தெரிகிறது. இதே சூழ்நிலையில் குறிக்கப்படும் மரேசா, எபிரோனுக்கு வடமேற்கில் அமைந்திருப்பதால், இலேக்காவும் இதே பகுதியில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இதை அடையாளம் காட்ட முடியவில்லை.

இலேயா (LEAH) - காண்க லேயா.

இலேவி, இலேவியர் (LEVI, LEVITE) காண்க லேவி, லேவியர்

இல்லிரிக்கும் (ILLYRICUM - மகிழ்ச்சி)

அதிரியாக் கடலின் கிழக்கு கடற்கரைப்பகுதியில் உள்ள ஒரு உரோமையர்களின் மாகாணம் ஆகும். புனித பவுலின் பயணங்களின் முடிவு எல்லையாக இவ்விடம் சொல்லப்படுகின்றது (உரோ 15:19). இவர் இவ்விடத்தை அடைந்தற்கான எவ்வித சுட்டிக்காட்டலும் கிடையாது. ஏனெனில் பவுலின் பணிக்கால முடிவில் தல்மத்தியாவுக்கு தீத்து சென்று விட்டதாக உள்ள குறிப்பைத் தவிர (2 திமோ 4:10) வேறு இல்லை. இம்மாகாணம் கி.பி.9-ஆம் ஆண்டில் உரோமையர்களால் தல்மத்தியா, பன்னோனியா, மேசியா என்று மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

இல்லேல் (HILLEL - இறைவனைப் போற்றினார்)

1. எப்பிராயிமிலுள்ள பிராத்து என்ற ஊரிலிருந்த நடுவர் அபிதோனின் தந்தை (நீதி12: 13-15)

2. முதியவரான இல்லேல்:- தால்மூது பற்றிய அறிவாற்றல் மிக்கவர். மேலும் வாய்மொழி வழக்குச் சட்டத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய வல்லுநர் (60 கி.மு. - கி.பி. 20)

தால்மூது மூலங்கள் இல்லேலைப் பற்றி எண்ணிக்கையற்ற கதைகளையும், பல கூற்றுகளையும், உவமைகளையும், கட்டளைச் சட்டங்களையும் இவர் தந்ததாக சொன்னாலும், அவரது வாழ்க்கைக்கு ஒரு முழு உருவம் கொடுக்க வேண்டிய பொருட்கள் மிகவும் உறுதியற்று இருக்கின்றன. இல்லேல் பாபிலோனியாவைச் சேர்ந்தவர். வெகு முன்னேறிய பாலஸ்தீன கல்விக்கூடங்களில் அவருடைய படிப்பை தொடரப் பாலஸ்தீனத்திற்கு வந்தார். முக்கியமாக செமாயா, அப்தாலியோன் ஆகிய இரண்டு பெரிய விரிவுரையாளர்களிடம் கல்வி கற்க வந்தார். ஏழ்மையிலிருந்தாலும் அவர் முயற்சியால் முன்னேறிய கதை மக்களிடையே பரவியது. அவருடைய காலத்திய அலாக்கா முறை விளக்கவுரையாளர்களைத் திருப்திபடுத்தும் வகையில் அவர் சட்டப்பூசலுக்குத் தீர்வு கண்டதிலிருந்து அவருடைய மேன்மைமிக்க திறமைகள் வெளிப்பட்டன. பெனே பாத்திராவை அதாவது பாஸ்கு காலத்தில் காணிக்கை கொணர வேண்டிய கடமை, ஓய்வு நாளில் விலக்குகளையும் தாண்டிச் செல்கிறது என்பதை இவர்தான் ஏற்படுத்தினார்.

'நாசியாக' அதாவது கோயில் வரவு செலவு பார்ப்பவர்களின் தலைவராக இல்லேல் நியமிக்கப்பட்டார் என்று வரலாறுகள் கூறுகின்றன. நவீன விளக்கவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதில் நிபுணராக இருந்ததால் வாய்மொழி தோராவின் கொள்கையை விரித்துக்கூறுவதிலும், ஆழமாக ஆராய்ச்சி செய்வதிலும், தால்மூதை படித்து ஆய்ந்து அதன் வளர்ச்சியை காண்பதில் முக்கிய பங்கு வகிக்கிறார். விவிலிய விளக்கவுரையில் அவர் பயன்படுத்திய ஏழு விதிமுறைகள் பிறகு வந்த விளக்கமுறைக் கோட்பாடுகளுக்கு மாதிரிகையாகவும் அடித்தளமாகவும் அமைந்தன.

சக நண்பன் சம்மாய்க்கும் அவருடைய போதனை கூடத்திற்கும் மாறாக, இல்லேல் தன்னுடைய போதனைக்கூடத்தில் தாராள தன்மையைக் காட்டினார். அதாவது பெரும்பாலும் சட்டம் சொல்லுவதை அப்படியே விளக்கி அதன்படி நுணுநுணுக்கமாக நடப்பதைத் தூண்டுவதைவிட தாராளமான முற்போக்குக் கொள்கையை ஆதரித்தார்.

மூல வரலாறு பல கதைகளைத் திரும்பத் திரும்பச் சொல்வதில் மகிழ்கின்றன. அவையெல்லாம் இல்லேலின் பொறுமையான குணத்தையும், சம்மாயின் அதிருப்திபடக்கூடிய குணத்தையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஒற்றைக் காலில் நின்று கொண்டு தோரா முழுமையும் ஒரு மாணவனை சம்மாய் படிக்கச் சொன்னாராம். அவன் இல்லேலிடம் போனபோது ''மற்றவர்கள் உனக்கு செய்யும் எதையெல்லாம் வெறுக்கிறாயோ அதையெல்லாம் நீயும் அவர்களுக்குச் செய்யாதே''. ''இதுதான் தோரா, மற்றதெல்லாம்

விளக்கவுரைகளே, நீ போய் கற்றுக்கொள்'' என்று அவனை அனுப்பி வைத்தாராம்.

பிர்க் ஆபோத் என்ற ஒருவர் வேறு எந்த ஒரு அறிஞனையும் விட இல்லேலின் வாக்குகளை அதிகம் எடுத்தாளுகின்றார்.

இல்லேல் இரண்டு பெரிய சட்டங்களை மாற்றி அமைப்பதில் பொறுப்புமிக்கவராக இருந்திருக்கிறார். ஒன்று, ஓய்வு ஆண்டின் போது வரவேண்டிய கடன்களைத் தள்ளிவிடுவது பற்றியது (உப 15:2), மற்றது, நகரங்களுக்கு மதில்களை எழுப்பும்போது வீடுகளை விற்பனை செய்வது சம்பந்தமானது (லேவி 25:29-30). இல்லேலின் வழித்தோன்றல்கள் 'நாசி' என்ற பதவியில் இருந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் இளவரசன் யூதா ராபி (கி.பி.220); இவர் மிஸ்னாவைத் தொகுத்தவர். இல்லேலின் முறையில் அழுத்திச் சொல்வது பரிசேய, தால்மூது யூதமதத்தில் அதிகமாக காணப்பட்டது. இவர், பவுலின் ஆசிரியர் கமாலியேல்-1-இன் தந்தையாகவோ தாத்தாவாகவோ கருதப்படுகிறார்.

இவ்வா (WAH - அழிவு, சிதைவு)

இவ்வா என்பது ஒரு நகரம். அது இருந்த இடம் அறியப்படவில்லை. எசக்கியா ஆண்ட பதினான்காம் ஆண்டில் அசீரிய அரசன் சனகெரிபு யூதாவிலிருந்த அரண் சூழ்ந்த நகர்கள் அனைத்தையும் முற்றுகையிட்டுப் பிடித்தார். அசீரியாவிற்கு எதிராக எசக்கியா கொண்டிருந்த கொள்கையை விட்டுவிடச் செய்ய, அசீரிய தூதர்கள், கெமாத், அரபாத், செப்பர்வயீம், ஏனா, இவ்வா ஆகிய நகரங்கள் கைப்பற்றப்பட்டதைச் சுட்டிக் காட்டினர் (2 அர 18:34; 19:13; ஏச 37:13).

இது ஒரு சிரியா நகர நாடாகும். கி.மு.8-ஆம் நூற்றாண்டில் அசீரியர்களால் கைப்பற்றப்பட்டது. இது அவ்வாவாக இருக்கலாம். அவ்வாவின் மக்களை அசீரியர்கள் நாடுகடத்தி, வட அரசு வீழ்ச்சிக்குப்பின் சமாரியாவில் குடியேற்றினர்.

இளஞாயிறு (DAWN)

இது அதிகாலைப் பொழுதைக் குறிக்கும் சொல் (யோபு 38:12; லூக் 1:78). இதையெல்லாம்விட முக்கியமாக இது காலையில் தோன்றும் வீனஸ் நட்சத்திரத்தில் வெளிப்படும் ஒரு எமோரிய தெய்வத்தின் பெயராகும். யோபு ஆகமத்தில் 'விடியற்கால விண்மீன்கள்'' என குறிப்பிடப்பட்டிருப்பது மேலே கூறிய பொருளில்தான் (யோபு 3:9; 41:18). லூக் 1:78-79-இல் இளஞாயிறு பாவ இருள் அகற்றும் மெசியாவின் ஒளியைக் குறிக்கும்.

இளமான் (FAWN)

இளமான் (உ.ச.4:5;7:4), கலைமான் (2:9), இளங்கலைமான் (2:17; 8:14) ஆகிய சொற்கள் உருவகமாக, காதலன், காதலி ஆகியோரின் அழகை விவரிக்கப் பயன்பட்டுள்ளன.

ஆதி 49:21-இல் ''அழகிய மான் குட்டிகள் ஈனும் கட்டவிழ்ந்த பெண்மானுக்கு'' நப்தலி ஒப்பிடப்படுகிறார்.

இளைப்பாறுதல், ஓய்வு (REST)

மனித வாழ்வானது குழப்பம், அமைதி, உழைப்பு மற்றும் இளைப்பாற்றி ஆகியவை மாறி மாறி வரும் தன்மை கொண்டது. முழு வாழ்வானது, துரத்துதல், மற்றும் பற்றிக்கொள்ளல், தேடுதல் மற்றும் மகிழ்ச்சியோடு உடைமையாகக் கொள்ளல், ஆசை மற்றும் திருப்திகொள்ளல் என எதிர்மறைகள் இணைந்து அமைவதைக் கோருவதாகத் தெரிகிறது. மனிதன் வெற்றிபெற்றால், திருப்தியின்றி மீண்டும் முயல்வதற்காகவே அது உள்ளது. இந்தப் போக்கை அறிந்துகொண்ட திருவுரையாளர் இத்தகைய வருவதும் போவதுமான நிலையை மறுத்து ஒதுக்கிவிட்டு வீணான யாவற்றையும் முடிவுக்குக் கொண்டுவரும் சாவை எதிர்பார்க்கிறார் (திருவுரை 1-2). ''இரவிலும் பகலிலும் மனிதனுக்கு ஓய்வென்பதே இல்லை; ஒருவன் எப்போதுமே கண்டுபிடிக்காத நிலையில், அதனை விரும்புவதில் என்ன நன்மை?'' (திருவுரை 8:16-17). இறைவனின் விழிப்பான கண்களின் கீழ், இப்போதைய தருணத்தின் தன்னடக்கமான மகிழ்வை ஏற்றுக்கொள்ளுதலே போதுமானதாகும். விவிலிய மரபானது பொதுவாக மாறுதல்களை ஏற்

றுக்கொண்டு, அவற்றின் பொருளை கண்டு பிடிக்கிறது. மனிதரில் முன்னணியில் உள்ளவையும், பின்னடைந்தவையும் ஒன்றிணைக்கப்பட்டு, இறைவனில் தூய்மைப்படுத்தப்படுகின்றன. உண்மையான இளைப்பாற்றி செயலற்ற நிலையன்று, செயலின் நிறைவாகும். இவ்வுலகின் இவ்வகையான ஓய்வானது, விண்ணகத்தின் முன் சுவையாகும்.

I. ஓய்வும் வேலையம்:- அதனுடைய தொடக்கத்திலிருந்து இஸ்ராயேலானது ''ஓய்வு நாளை புனிதப்படுத்தவேண்டியிருந்தது'' (யாத் 20:8). அறுவடை காலத்திலும், மற்ற வேலை மிக்க காலங்களிலும், ஆண்டவருக்கென ஒரு ஓய்வு நாளை ஒப்புக் கொடுக்க வேண்டியிருந்தது (34:21). இக்கட்டளைக்காக இரண்டு முக்கிய காரணங்கள் அளிக்கப்பட்டன.

1. இளைப்பாறுதல், விடுதலையின் ஒரு அடையாளமாகும்:- விலங்குகளும், வயல் ஊழியர்களும் இளைப்பாற அனுமதிக்கப்பட வேண்டுமென உடன்படிக்கை நூல் கூறுகிறது (23:12). இந்த மனிதத்தன்மையுள்ள நோக்கோடு, உபஆகமம் வரலாற்றிலிருந்து இன்னொரு காரணத்தையும் சேர்க்கிறது: இஸ்ராயேல், எகிப்தில் தன்மீது சுமத்தப்பட்ட உழைப்பினின்று பெற்ற விடுதலையை இவ்வாறு நினைவு கூறவேண்டும் (உப 5:15). இளைப்பாற முடியுமென்பது, விடுதலையின் ஒரு அடையாளமாகும்.

2. இளைப்பாறுதல், படைத்தவரின் ஓய்வில் பங்கு பெறுதலாகும்:- குருக்கள் மரபின்படி, மனிதன் ஓய்வுநாளைக் கடைபிடிக்கும்போது, வானத்தையும், பூமியையும் படைத்த பின்னர் வேலையை நிறுத்தி விட்டு, ஏழாம் நாளில் ஓய்வெடுத்த இறைவனை பின்பற்றுகிறான். ஓய்வுநாளை கடைபிடிப்பது யாவேயையும் அவருடைய விசுவாசிகளையும் ஒன்றிணைக்கிறது (யாத் 31:17; ஆதி 2:2-3). எனவே, ஓய்வு நாள் புனிதமானதாயிருப்பின், அதனை புனிதப்படுத்துபவர் இறைவனே (எச 20:12). இளைப்பாறுதல் என்பது உள்ளிருக்கும் இறைவனின் சாயலை வெளிப்படுத்துவதாகும்; ஒருவன் சுதந்திரமானவனாக மட்டுமின்றி, இறைவனின் மகனாகவும் இருக்கிறான்.

3. இறைப்பாறுதலும் விழா கொண்டாட்டமும்:- ஓய்வு நாள் என்பது வேலை செய்வதை நிறுத்துவதோடு நின்றுவிடாமல், படைத்தவரும் மீட்பருமானவரை மகிழ்வுடன் புகழ்வதில், ஒருவருடைய ஆற்றல்களை திருப்புவதில் அடங்கியுள்ளது. ஓய்வு நாளை பொறுப்புடன் கடைப்பிடிப்பவன் ''ஆண்டவரில் தனது மகிழ்ச்சியைக் கண்டடைவதால்'' (எச 58:13-14), அது ''மகிழ்ச்சி'' என்றும் அழைக்கப்படலாம். ஓய்வு நாளானது கடவுளுடைய மறைபொருளுக்குள் செல்ல வழியளிக்கிறது; ஆனால் ஓய்வு நாளின் இளைப்பாறுதலையும் இறைவனையும் ஒன்றாக்க கிறிஸ்து தோன்ற வேண்டும்.

II. இறை ஓய்வினை நோக்கி

மற்றுமொரு வழியில், இஸ்ராயேலானது, தனக்கு அளிக்கப்பட்ட இளைப்பாறுதலின் ஆன்மீக குணத்தை கண்டுபிடிக்க நடத்தி செல்லப்படுகிறது. உறங்குதல், சுவாசித்தல் மற்றும் ஆபத்து அல்லது உழைப்பிற்கு பின்னர் ஏற்படும் இடைஓய்வு போன்ற மற்ற கருத்துக்கள், ஓய்வு நாள் கருத்தோடு சேர்க்கப்படவுள்ளன. அலைந்துதிரிதல், போர் மற்றும் நாடு கடத்தப்படுதல் போன்ற தொல்லையூட்டும் அனுபவங்களுக்குப்பிறகு, இறைவன் மட்டுமே ஓய்வளிக்க முடியும் என்பதை இஸ்ராயேல் அறிந்து கொள்ளும்.

1. வாக்களிக்கப்பட்ட நாடு, இறை ஓய்வின் அடையாளம்:- எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட எபிரேயர்கள் அடிமைத்தனத்தினின்று சுதந்திர நாட்டிற்கு ஓடினர். தாவீது அரசன் ''தன்னுடைய பகைவர் அனைவரிடமிருந்தும் இளைப்பாறுதல் அளிக்கப்படும்'' (2 சாமு 7:1) வரை, ஓய்விற்கான நம்பிக்கையானது, படிப்படியாகப் பெறும் வெற்றியின் கனியாக இருக்கும் (நீதி 1:19.21; யோசு 21:43-44). ஆலயத்தை அபிடேகம் செய்யும் போது, சாலமோன், ''தாம் மொழிந்தபடியே தம் மக்கள் இஸ்ராயேலுக்குச் சமாதா

னத்தை அருளிய ஆண்டவர் போற்றி'' (1 அர 8:56) என்று அறிவிக்க முடியும். ''அமைதியின் அண்ணலுடைய'' நாட்களில், இறைவன் இஸ்ராயேலுக்கு ''அமைதியும் சமாதானமும்'' அருளுவார் (1 நாள் 22:9). அதுமுதல், ''ஒவ்வொருவனும் தன்தன் திராட்சைத் தோட்டத்தின் நடுவிலும், அத்திமரத்தின் அடியிலும் பாதுகாப்போடு'' வாழ்வான் (1 அர 4:20; 5:5). இது முழுவதும் பூவுலகைச் சேர்ந்த ஓய்வாக இருப்பினும் யாவேயே இந்த ஓய்வுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார். அவரே ஆலயத்தில் ஓய்வெடுக்க தீர்மானித்துள்ளார் (சங் 132:14). தம்மை நாடியவர்களை அவர் நாடிச்சென்று, அவர்களுக்கு இளைப்பாறுதல் அளிக்கிறார் (2 நாள் 14:6).

எனவே, இவ்வுலகைச் சார்ந்த ஓய்வின் இயல்பும், கால அளவும், உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருப்பதைப் பொருத்ததாகும். ஆனால் ஓய்வானது விரைவாக இறைவனுக்கு எதிரான கிளர்ச்சி மற்றும் பின்னடைதலாகச் சீர்கேடடைகிறது (உப 32:15; நெக 9:25-28). அமைதியான மனந்திரும்பும் சூழலில் மீட்பு ஏற்படும் போது (ஏச 30:15), ஆகாக யாவேயின் பகைவர்களுக்கு அஞ்சுகிறார் (7:2.4); தன்னுடைய விசுவாசக் குறைவினால் இறைவனைச் சோர்வடையச் செய்கிறார் (7:13). அதன் விளைவாக, நாடு கடத்தப்பட்டு அலைந்துதிரிய வேண்டிய அச்சம் மக்கள் மேல் விழுகிறது. ஆனால், தண்டனைகளின் துன்பங்களுக்குப்பின் யாவேயாலேயே தாங்கள் மீட்கப்படுவோம் என்பதை மக்கள் புரிந்துக்கொள்வார்கள் (எரே 30:10-11). இஸ்ராயேல் மீண்டும் ஒரு முறை இளைப்பாறுதல் (31:2), கவலையற்று நடனமாடுதல், மகிழ்ச்சி மற்றும் இறை ஆசியின் நிறைவு (31:12-13) முதலியவற்றை நோக்கித் தனது வழியை அமைத்துக் கொள்ளும். ஆயன் தனது ஆடுகளை நல்ல மேய்ச்சல் நிலத்திற்கு நடத்திச் செல்கிறார் (எச 34:12-16; ஏச 40:10-11). இந்த முன்நோக்கில், கொடை அளிப்பவராகிய இறைவன் அளிக்கப்பட்ட நாட்டிற்கு வழி நடத்துகிறார். இஸ்ராயேல் இறை ஓய்வின் பாதையில் பயணம் செய்கிறது.

2. உறுதியான இளைப்பாற்றியின் முன் சுவை:- இஸ்ராயேலானது, ஆன்மீக இளைப்பாற்றியின் மகிழ்ச்சியை பல்வேறு வழிகளில் கண்டுபிடிப்பதற்கு முன்னர், ஆண்டவரின் நாளுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. துன்பம் (சங் 55:8), சோதனை (66:12) மற்றும் தன்னுடைய ஒன்றுமில்லாமை (39:14) ஆகிய அனுபவ நேரங்களில் ''எளிதாக சுவாசிக்க'' அனுமதிக்குமாறும், அல்லது 'தனது ஊனுடலுக்கு பாதுகாப்பு'' அளிக்குமாறும் (16:9) சங்கீத ஆசிரியர் இறைவனிடம் கேட்கிறார். இளைப்பாற்றியை அளிக்கும் நீர் அருவிக்கு அழைத்துச் செல்கின்ற மேய்ப்பரிடம் தன்னை ஒப்படைக்கிறார் (சங் 23:1 தொ). இத்தகைய உள்ளமைதியைச் சட்டம் அளிக்கிறது; நன்மைதனத்திற்கான வழியை எடுப்பதென்பது ''ஓய்வு பெறுவதாகும்'' (எரே 6:16). ''அச்சுறுத்துவோர் யாருமின்றி மந்தைபோல மேய்ந்து இளைப்பாற'' ஏழைகளால் முடியும் (செப் 3:13). ஆனால், அதற்கு முரண்பட்ட நிலையில், தீமைபுரிவோர், அமைதிப்படுத்த முடியாத கொந்தளிக்கும் கடலைப் போன்று இருப்பார்கள் (ஏச 57:20).

தேடுதல் மற்றும் அவா நிறைவு, ஆர்வம் மற்றும் மகிழ்ச்சியோடு அடைதல் போன்ற பல்வேறு நிலைகளை ஒரே நேரத்தில் கொண்டிருக்கும் அன்பின் அனுபவத்துடன், உன்னத சங்கீதத்தின் காதலி அலைதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற முழுமையான ஓய்வினைப்பற்றி நண்பகல் வேளையில் கனவு காண்கிறார் (உ.ச. 1:7). உண்மையில், ஒரு சமயத்தில், தனது அன்பிற்கு உரியவரின் அரவணைப்பில் அன்பின் நோயை கொண்டிருப்பதாக கருதினாலும் (2:5-6), மற்றொரு சமயத்தில், தான் மீண்டும் விட்டுவிடக்கூடாது என்று கருதுபவரின் பின்னால், முழுமூச்சுடன் தேடிச் செல்கிறாள் (3:1-2. 4). உண்மையான பொருளில், அன்பிற்குரியவர் மரணத்தின்மூலம் அவளுடைய பாதையை செம்மைப்படுத்தும்வரை, இந்த நிலையற்ற ஏற்ற இறக்கத்தை அவள் கடக்க மாட்டாள் (8:6). ஞானம், தன்னுடைய பங்கிற்கு, தன்னைத் தேடுபவர்களுக்கு இளைப்பாற்றியை

வாக்களிக்கிறது. இது தேடுதலுக்குரிய பரிசாகும் (சீரா 6:28). ''நான் சொற்ப முயற்சி செய்தேன்; ஆனால் வெகு இளைப்பாற்றியைக் கண்டேன்'' (51:27) என்று ஞான ஆசிரியர் கூறுவதற்கு, உயர்வான செயலான இளைப்பாற்றிக்கும் அதற்கே உரிய ஓய்வின் இடத்திற்கும் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுக்க, ஞானம் முதல் முயற்சியை எடுத்ததே காரணமாகும் (24:7-11).

யோபுவிற்குத் தன்னுடைய துன்பங்களை மேற்கொள்ள இறைவனுடைய ஓய்வின் இந்த முன்சுவையே போதுமானதாக இருந்ததா? ''மூச்சு விடவும்'' இறைவன் அவரை அனுமதிக்கவில்லை (யோபு 9:18). பின்னர் ஏன் அவர் மரணத்தையும் அதன் ''அமைதியான உறக்கத்தையும்'' விரும்பியிருக்கக்கூடாது (3:13)? ஆனால், கல்லறையின் காரிருளை உயிர்ப்பின் ஒளி ஊடுருவும் போது, எல்லாம் மாற்றமடையும்: ''நீ இறுதிவரை பிரமாணிக்கமாயிரு; நீ இறந்து அமைதி பெறுவாய், முடிவு காலம் வந்தவுடன் உனக்குரிய பங்கை பெற்றுக் கொள்ள நீ எழுந்து வருவாய்'' (தானி 12:13). எனவே, விசுவாசிப்பவருக்கு, இறந்தோரின் உறக்கமானது, இறைவனது ஓய்வின் முன்சுவையாகும்.

III இயேசு கிறிஸ்து, ஆன்மாக்களின் இளைப்பாற்றி

1. இளைப்பாறுதலும் மீட்பும்:- பரிசேயருக்கு எதிராக, ஓய்வு நாளின் உண்மையான பொருளை இயேசு வெளிக்கொணர்கிறார்: ''ஓய்வு நாள் இருப்பது மனிதனுக்காக; மனிதன் இருப்பது ஓய்வுநாளுக்காக அன்று'' (மாற் 2:27); எனவே, இது வாழ்வை காப்பதற்காக உண்டாக்கப்பட்டது (3:4); இளைப்பாறுதலானது மனிதனுடைய விடுதலையைக் குறிப்பிட்டு, படைத்தவருடைய மகிமையை'' போற்ற வேண்டும். நோய்களைக் குணமாக்குவதன்மூலம் இயேசு இந்த அடையாளத்திற்கு உண்மையான பொருளைக் கொடுக்கிறார். பல ஆண்டுகளாக ''கட்டி வைக்கப்பட்டிருந்த'' பெண்ணை விடுவிக்கிறார்'' (லூக் 13:16). ஓய்வு நாள் முன்குறித்துக் காட்டியதை அடைவதன் மூலம் அவர் தன்னை ''ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்'' என்று காட்டுகிறார் (மத் 12:8). கிறிஸ்துவின் மூலமாக, இளைப்பாறுதலானது இறைவனுடைய பிள்ளைகளின் விடுதலையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. நமக்கு இந்த இளைப்பாற்றியையும் விடுதலையையும் அளிப்பதற்காக, தலைசாய்க்கவும் இடமில்லாத நிலையை (மத் 8:20) மீட்பர் விரும்புகிறார். சிலுவையில் மரணமடையுமட்டும் அவர் ஓய்வுகொள்ள மாட்டார் (யோவா 19:30).

2. இறைவனுடைய இளைப்பாற்றியின் வெளிப்பாடு:- ஓய்வு நாளில் தாம் செயலாற்றுவதை எண்பிக்க, இயேசு ''என் தந்தை இந்நேரம் வரை செயலாற்றுகிறார்; நானும் செயலாற்றுகிறேன்'' என்கிறார் (யோவா 5:17) இறைவனில் இளைப்பாறுதலும் பணிபுரிதலும் ஒன்றையொன்று ஒதுக்குவன அன்று; இறைவாழ்வின் யாவும் கடந்த பண்பினை வெளிப்படுத்துபவைகளாக உள்ளன. பணிபுரியும்போது இளைப்பாறுதலின் மறைபொருளை ஞானம் அறிவிக்கிறது (சீரா 24:11). அறுவடை செய்வோர் மற்றும் இயேசுவினுடைய பணியானது, சோர்வுற்று வேதனைப்படுகின்ற ஆடுகளுக்கு மகிழ்ச்சி அளிப்பதற்காகவே (மத் 9:36; யோவா 4:36 தொ); ஏனெனில், தன்னிடம் வருகின்ற ஆன்மாக்களுக்கு இயேசு இளைப்பாற்றியை அளிக்கிறார் (மத் 11:29).

3. விண்ணக ஓய்வு:- வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் புகுதலால் தங்களை எதிர்நோக்கியுள்ளதாக எபிரேயர்கள் விசுவசித்த ''இறைஅமைதி''யானது ''கடவுளுடைய மக்களுக்கும்'', இயேசுகிறிஸ்துவிற்கு விசுவாசமாகவும் கீழ்ப்படிதலோடும் நடந்து கொண்டவர்களுக்கும் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. எபிரேயர்களுக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர். சங் 95-க்கு அளித்த விளக்கவுரை இத்தகையதே (எபி 3:7-4:11). இந்த இளைப்பாற்றி விண்ணகமே. அதை ''ஆண்டவரில் இறந்தோர் கண்டடைவர்; ''இனித் தங்கள் உழைப்பினின்று இளைப்பாறுவார்கள். ஏனெனில் அவர்கள் செய்த நன்மையே

அவர்களோடு கூடவரும்'' (திருவெளி 14:13). மேலும், விண்ணகத்தில் இளைப்பாறுதல் என்பது, தங்களது செயல்களை நிறுத்துவதாக இல்லாமல், முழுமைப்படுத்துவதாகும். செம்மறியை ஆராதிப்பவர்கள் பகலிலோ, இரவிலோ ஓய்வெடுப்பதே இல்லை (14:11). (நான்கு) உயிருள்ள படைப்புகளும், மும்மடங்குத் தூய்மையுடைய இறைவனின் புகழை, இரவிலும் பகலிலும் ஓய்வின்றிப் பாடுகின்றன (4:8).

இழவுத்துயர் (MOURNING)

புலம்புதலும் மற்ற அடக்கச் சடங்கு முறைகளும் அடக்கத்தைப் போலவே முக்கிய கடமைகளாகவே கருதப்பட்டன. இவைகளில் பங்கு பெற முடியாதவர்களுக்கு இது ஒரு பேரிழப்பாகத் தோன்றியது (1 அர 14:13; யோபு 27:15; எரே 16:4.6; 22:18; 25:33; 34:5). துக்கத்தில் பங்குக் கொண்ட அனைவரும் புலம்பலிலும் பங்கு கொண்டார்கள் (1 சாமு 25:1; 28:3; 2 சாமு 1:12; 2:31; 1 அர 13:29-30; எரே 16:5; 22:18). முதன் முதலாக குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் இதில் பங்குக் கொண்டார்கள் (ஆதி 23:2; 50:10; 2 சாமு 11:26; எச 24:16). கோணி ஆடை உடுத்தி (எரே 4:8; 49:3; யோவே 1:13; மீக் 1:8) ''ஐயோ! ஐயோ!'' (ஆமோ 5:16) என்று புலம்புவார்கள். அரசன் அல்லது அரசியோ இறந்தால் ''ஐயோ சகோதரனே! ஐயோ சகோதரியே!'' (எரே 22:18; 1 அர 1330) என்று புலம்புவார்கள். இறந்து மறுபடியும் வாழ்வு பெறும் தெய்வத்தின் துக்கத்தைக் கொண்டாடுவதின் முறையை செக் 12:11-14-இல் விளக்குகின்றார். கண்ணீர் சிந்த வேண்டிய நேரத்தையும் இடத்தையும் குறிப்பிடுகின்றனர் (மலா 2:13; மத் 11:17; லூக் 7:32). இறந்தவுடன் புலம்பல் ஆரம்பமாகின்றது (ஆதி 33:2). அதுவும் இறந்த உடல் முன்பு ஆரம்பமாகின்றது (மத் 9:23; மாற் 5:38). கல்லறைக்குச் செல்லும்போது புலம்பினர். துக்கம் இறந்த உடலை அடக்கம் செய்ததோடு முடிவு பெறுவதில்லை; அது ஏழு நாள் வரைக்கும் நீடிக்கும் (ஆதி 50:10; 1 சாமு 31:13; 1 நாள் 10:12; யூதி 16:24). ஆனால் மோசேக்கும் ஆரோனுக்கும் இத்துக்கம் முப்பது நாள் கொண்டாடப்பட்டது (எண் 20:29; உப 34:8). யாக்கோபுக்கு யூதர்களின் முறைப்படி எழுபது நாள் கொண்டாடப்பட்டது (ஆதி 50:3).

புலம்பல் சடங்குகளில் புலம்புதலையே தொழிலாகக் கொண்டவர்கள்தான் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர் (2 நாள் 35:25; சங் 12:5; எரே 9:17; எச 27:32; ஆமோ 5:16). குறிப்பாக பெண்கள் இதில் முக்கிய இடம் பெற்றனர். அவர்கள் ''பாடகிகள்'' (2 நாள் 35:25) என்றும், '' ஒப்பாரி வைக்கும் பெண்கள்'' (எரே 9:17) என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்கள் இதில் மந்திர அறிவும் கொடையும் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இதன் இரகசியத்தை, தலைமுறை தலைமுறையாகத் தங்கள் தோழியர்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள் (எரே 9:20). பெண்கள் தங்கள் உள்ளத்துக் கிளர்ச்சிகளை ஒப்பாரி வழியாக எடுத்துரைப்பதில் சிறப்புப் பெற்றவர்கள். ஒப்பாரி வைப்பதைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டது. புலம்புவதை அவர்கள் பெரும்பேறாகக் கருதினார்கள் (மத் 9:24). ஒப்பாரி வைப்பவர்கள் வெறும் அழுகையோடு நிற்பதில்லை. மாறாக ஒப்பாரியில் கவிதை புனைவார்கள். கவிதையின் நீளம் இறந்தவரின் முக்கியத்துவத்தைப் பொருத்து இருக்கும். பழைய ஏற்பாட்டில் பல இரங்கற்பாக்கள் காணப்படுகின்றன. தாவீது சவுலின் மீதும் அவர் மகன் யோனத்தான் மீதும் புலம்பல் பாடினார் (2 சாமு 1:18-27). மேலும் தாவீது அப்னேரின் பொருட்டு ஒப்பாரியிட்டு அழுதார் (2 சாமு 3:33-34). எரேமியாவின் ஒப்பாரியிலும் பாபிலோன், தீர், எகிப்து நாட்டின் மீது பாடப்படும் ஒப்பாரியிலும் வசையும் வஞ்சகப்புகழ்ச்சியும் கலந்திருப்பதை நாம் பார்க்கலாம் (ஏச 14:4-21; எச 27:2 தொ; 32:2-16). பொதுவாக ஒப்பாரிகளை அலசிப்பார்க்கும் போது மூன்று முக்கிய கருத்துக்களைக் காணலாம்.

1. இறந்தவனைப்பற்றி பாடப்படும் புகழுரை:- இப்புகழுரை வரலாற்று உண்மையை அளவுகடந்து செல்லும். இறந்தவ

னின் அழகையும், பெருந்தன்மையையும், தாராள குணத்தையும், உடல் வலிமையை யும், அவன் செய்த நல்லவைகளையும், அவன் குடும்ப வரலாற்றை பின்னணி வைத் தும் பாடப்படும் (எச 19:2.10); போரில் அவன் காட்டிய வீரச் செயல்கள் (2 சாமு 1:27; எச 32:27); அவனுக்கே உரித்தான மற்றவரோடு ஒப்பிடமுடியாத மனித தன்மை (2 சாமு 1:19; ஏச 14:10; எச 27:32) ஆகியவை இடம் பெறும், மேலும் இறந்தவ னின் பெயர் இப்பாடலில் இடம்பெறும் (2 சாமு 1:26; 3:33; எச 19:2 தொ; 26:17 தொ; 27:3 தொ; 28:12 தொ; 32:2 தொ).

2. ''ஒப்பாரி'' பெரும்பாலும் ''எவ்வாறு'', ''என்ன'' என்ற சொற்களிலேயே ஆரம் பிக்கும். கொடிய சாவினை அடைந்தவ னைப்பற்றி உணர்ச்சிப் பெருக்கோடு பாடப் படும். பகைவன் மீது பழித்தீர்க்கும் உணர்ச் சியையும் அல்லது சாப உணர்வையும் இப் பாடலில் காணலாம் (2 சாமு 1:21). குறிப் பிட்ட மரணங்களினால் உண்டாகும் மகிழ்ச்சி தடுக்கப்படுகிறது (2 சாமு 1:20). முன்பிருந்த மேன்மையையும் வளமையை யும் தற்போதுள்ள துன்பத்தோடு ஒப்பிட்டு புலம்புவார்கள். உதாரணமாக புலம்பல் ஆக மம் 1; வானின்று வீழ்ந்த விடிவெள்ளி (ஏச 14:12); சிறைபட்ட சிங்கம் (எச 19:8); கேதுரு மரங்களின் செருக்குற்ற நிலை (31:10) ஆகிய உருவகங்கள். செயோலில் உள்ள அயர்ச்சி நிறைந்த வாழ்வு, இவ்வுலக வாழ்வோடு அடிக்கடி ஒப்பிடப்படுகிறது.

3. ''ஆறுதல் கூறுவது'' ஒப்பாரியின் மற் றொரு கருத்தாகும். அவன் இவ்வுலகில் விட்டுச்சென்ற செல்வங்கள், பெற்ற நற்பெ யர்கள், அடக்க சடங்குகள் நிறைவுபெற்றத் தன்மைகள் அனைத்தும் ஆறுதல் கூறுவன வாக உள்ளன.

புலம்பற் பாட்டில் இரண்டாம் பாகம் எப்போதுமே முதல் பாகத்தைவிடச் சிறிய தாகத்தான் இருக்கும். உரையாடல் வகை யைச் சேர்ந்த புலம்பல்களும் காணப்படுகின் றன. முடிவில் ''கீழுலகுக்கு இறங்கு; அங்கே விருத்தசேதனமில்லாதவர்களுடன் உறங்கு'' (எச 32:19), ''வலியோர் வீழ்ந்தது எங்ஙனம்'' (2 சாமு 1:19.25.27); ''ஐயோ! ஐயோ! வல்லமை மிக்க நகரே!'' (திருவெளி 18:10); ''நாங்கள் புலம்பினோம் நீங்கள் மாரடிக்கவில்லை'' (மத் 11:7) ஆகிய பல்ல விகளை பாடகர் குழு பாடும்.

புலம்பற் பாட்டை இசைக்கருவிகளுடன் பாடினார்கள். புல்லாங்குழல்தான் பெரும் பாலும் பயன்படுத்தப்பட்டது (எரே 48:36). புலம்பலுக்கு மட்டுமன்று மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகளுக்கும் புல்லாங்குழலே ஊதப் பட்டது (1 அர 1:40; ஏச 5:12; 30:29). சாதாரண ஒரு ஏழையின் அடக்கத்திற்குக் கூட இரு புல்லாங்குழல்கள் ஊதப்பட்டன என்று அறிகிறோம்.

இப்புலம்பல்களில், இறைவனது பெயர் குறிக்கப்படுவதில்லை. இறப்புக்கும் யாவே யின் வழிபாட்டுக்குமிடையேயுள்ள உறவு ஏற்றுக்கொள்ளப்பட்ட காலத்திலும் அவர் பெயர் குறிப்பிடப்படவில்லை (2 சாமு 1:14 தொ-யை 1:14-ஓடும்; 3:39-ஐ 3:33-ஓடும் ஒப்பிடுக). இதிலிருந்து இறந்தவர்கள் தெய் வமாக்கப்படவில்லை என்று எண்ணிவிடக் கூடாது. தெய்வங்களுக்காகப் புலம்புதல், பாலினப்பெருக்க வழிபாட்டின் முக்கிய கூறாகும் (நீதி 11:30-40).

உலகில் வாழ்ந்து மரித்த மனிதனைப்பற்றி பாடப்படும் புலம்பல் பெரும்பாலும் அவன் உலகில் பெற்ற நல்ல மதிப்பீடுகளை வைத்தே அமைகின்றது. அவன் மறுவுலகில் பெறவிருக்கும் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு அமையவில்லை.

இறக்கை (WING)

இவ்வார்த்தை பல பொருள்களில் விவிலி யத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொது வாக இது ஒரு பறவையின் இறக்கைகளைக் குறித்தாலும், இது உருவகமாகப் பயன்படு தல் சிறப்புமிக்கதாகும். படையெடுப்பை யும் (எரே 48:40; 49:22), மேலும் பகைவர்க ளின் அச்சத்தையும் (ஏச 10:4), நாட்டின் பெருமைமிக்க பொறுமையையும் வல்ல

மையையும் (எச 17:3,7), யாவே இஸ்ராயேல்பால் காட்டிய நிலையான கவனிப்பையும் (யாத் 19:4; உப 32:11), மறைந்து போகும் செல்வத்தையும் (பழ 23:5), தீர்ப்பின் புயலையும் (ஓசே 4:19), விடியற்காலையின் விரைவையும் (சங் 138:9) இறக்கை உவமையாக விவரிக்கின்றது. ''சிறகடித்து ஒலியெழுப்பும் உயிரினங்கள் உடைய நாடு'' என்பது பூச்சிகளோ அல்லது சிறகு போன்ற பாய்களையுடைய கப்பல்களோ நிறைந்த நைல் நதி கழிமுகத்தைக் குறிக்கலாம் (யாத் 25:20; ஏச 6:2; 18:1; எச 1; 3:14; 10). யாவே மேகத்தின் இறக்கைகள் மேல் பறப்பதாகக் கூறப்படுகிறது (உப 33:26; சங் 18:10; 68:4; 104:3). யாவேயின் இறக்கைகள் பாதுகாவலின் சின்னங்களாகும் (சங் 16:8; 35:7; 56:1; 65:7). எருசலேம் தேவாலயம் யாவேயின் இறக்கை ஆகும் (சங் 56:1). இறக்கைகளையுடைய இதிகாச விலங்குகள் யாத் 25:20; ஏச 6:2; எச 1; 3:14; 10; திருவெளி 4:6 தொ 9:9 ஆகிய பகுதிகளிலும் இறக்கையுடைய பெண் உருவங்கள் செக் 5:11; திருவெளி 12:14-இலும் குறிக்கப்படுகின்றன.

இறந்த உடல்களைப் பாடம் பண்ணுதல்

இறந்த உடல்கள் அழியாதவாறு பாதுகாக்கும் கலை எகிப்தில் ஆரம்பமானது. விவிலியத்தில் இதைப் பற்றி அவ்வளவாக குறிப்பு காணப்படாததாலும், கானான் நாட்டின் கல்லறைகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட உடல்களின் நிலையிலிருந்தும், எபிரேயர்களிடையே இப்பழக்கம் இல்லை என்பது தெரிகிறது.

விவிலியத்தில், இறந்த உடலைப் பாடம் பண்ணுவதைப் பற்றிய நேரடிக் குறிப்பு ஆதி 50:2-3. 26-இல் மட்டுமே காணப்படுகிறது. இங்கு யாக்கோபின் உடலும், யோசேப்பின் உடலும் பரிமளவகைகள் பூசி பாடம் பண்ணப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் எகிப்தில் முக்கியமானவர்கள் என்று காட்டுவதற்கும், கானான் நாட்டில் புதைக்கப்படும் வரை அவர்கள் உடலை அழியாமல் காப்பதற்காகவுமே அவர்களின் உடல்கள் பாடம் பண்ணப்பட்டன (ஆதி 50:13; யாத் 13:19; யோசு 24:32). ஆசாவின் உடலுக்கும் (2 நாள் 16:14), இயேசுவின் உடலுக்கும் (யோவா 19:39-40), பரிமளத்தைலங்கள் பூசப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அது உடலைப் பாடம் பண்ணுவதற்காக அல்ல; மாறாக அது ஒரு சுத்திகரிப்புச் சடங்கேயாகும்.

பாடம் பண்ணுதலுக்கான எபிரேயச் சொல் ஆதி 50:2-3.26-லும், உ.ச. 2:13-லும் மட்டுமே காணப்படுகிறது. யாக்கோபின் உடலைப் பாடம் பண்ண நாற்பது நாட்கள் ஆனது. மேலும், யோசேப்புக்குச் சேவை செய்து வந்த மருத்துவர்களே அதைச் செய்தார்கள். எபிரேயர்கள் முடிவற்ற வாழ்வு, உயிர்ப்பு போன்றவற்றை நம்பியதாலும், எகிப்திய மதத்தை அவர்கள் வெறுத்ததாலும், பாடம் பண்ணுவதற்கு அதிகச் செலவானதாலும் எபிரேயர்கள் இப்பழக்கத்தைக் கடைப் பிடிக்கவில்லை.

இறந்தோரின் உறைவிடம்

இஸ்ராயேலின் ஆசிரியர்களும் இறைவாக்கினர்களும் இறந்தவர்களிடம் குறி கேட்டலையும் மற்றும் இரகசியச் சிந்தனைகள் ஆகியவற்றையும் தடுத்தனர் (உப 18:11; சங் 106:28; ஏச 8:19). '' மறைவான காரியங்கள் நம்முடைய இறைவனாகிய ஆண்டவருக்கே உரியவை; வெளிப்படுத்தப்பட்டவைகள் மட்டுமே நமக்கு உரியவை'' என்று சட்டம் கூறுகிறது (உப 29:29). இறந்தோரின் முடிவு மற்றும் விதியினைப் பற்றி பழைய ஏற்பாடு எந்த முறையான கோட்பாட்டையும் கூறவில்லை. அது கூறுவதெல்லாம் பிரபலமான பொதுப்பாணி கதைகளில் உள்ள கருத்துக்களையே. புதிய ஏற்பாடு இறுதித் தீர்ப்பின் போதான வெகுமதி மற்றும் தண்டனைப் பற்றித் தெளிவாக குறிப்பிட்டாலும், இறந்தோரின் உடனடி நிலை பற்றி ஒன்றுமே தெளிவாக கூறவில்லை.

1. எபிரேய கருத்து:- பழங்காலத்தைச் சேர்ந்த மற்றவரைப் போலவே எபிரேயரும், இறந்தோர் உலக வாழ்வை முடித்துக் கொண்டாலும், வாழ்க்கையை முடிக்க

வில்லை என நம்பினர். உலகிற்கு வெளியே, கடவுள் அணுகக்கூடிய இடத்தில் அவர்கள் வாழ்கின்றனர் (யோபு 26:6; சங் 139:8; ஆமோ 9:2); பழைய வாழ்வைப்பற்றி மறந்து அங்குத் தங்குகின்றனர் (சங் 88:12); உலக இன்பங்கள் அங்குக் கிடைக்காது (சீரா 14:16); சரீர இச்சையினின்று விடுதலை பெற்றவர்களாய் (யோபு 3:7), அதே சமயத்தில் கடவுளது பிரசன்னத்தினுடைய அனுபவத்தைக் கொண்டிருக்க மாட்டார்கள் (சங் 88:6). ஆகவே, போற்றுவதற்கும், நன்றி கூறுவதற்கும் ஏதுமின்றி இருந்தனர் (சங் 6:5; 30:9; 88:12-13; 115:17; ஏச 38:18; சீரா 17:27-28). இப்பகுதியானது வழக்கமாக பூமியின் அடியிலும் (எண் 16:30), பெருங்கடலின் கீழ்ப்பகுதியிலும் (யோபு 26:7), மலைகளின் அடியிலும் (யோனா 2:6) அமைந்திருப்பதாகக் கருதப்பட்டது. சூரியன் மறையும் மேற்கு பகுதியில் இப்பகுதி இருப்பதாக (ஏனோக் 22:1-5) மற்றொரு கருத்து கூறுகிறது. வாழ்வோர் அனைவரின் இறுதிப் பொது இடமாக வர்ணிக்கப்படும் இப்பகுதி (யோபு 20:3; ஏனோக் 22:3), இருளும் பேயிருட்டும் உள்ளதாகவும் (யோபு 10:20-21), ஆழ்ந்த நிசப்தம் சூழ்ந்ததாகவும் (சங் 94:17; 115:17), அல்லது கதவுகளை உடைய நகரமாகவும் (யோபு 38:17; ஏச 38:10; ஞான 16:13; சீரா 51:9; மத் 16:18) காட்டப்படுகிறது.

இந்த இடத்தில் குடியிருப்போர், உறுதியற்ற துவக்கமும் பொருளும் கொண்ட 'ரெபாயிம்' என்று அழைக்கப்பட்டுள்ளனர். உலகப்பதவி நிலையை அவர்கள் திரும்பப் பெற்றாலும் (ஏச 14:9-10; எச 32:21.24), களைப்புற்றவர்களாகவும் (யோபு 3:17), வலிமையற்றவர்களாயும் விவரிக்கப்பட்டனர் (சங் 88:4). அதன் தனிப்பட்ட அம்சமாக அவர்கள் எப்போதும் தாகத்தால் தவித்தனர் (ஏச 5:13). இறந்தோரின் உறைவிடத்திற்குச் செல்லும்வழி, ஒரு வழிப்பாதையானாலும் (யோபு 16:22), ஆலோசனைக்காக தனிப்பட்ட ஆவிகள் அழைக்கப்படலாம் (1 சாமு 28:13). இம்முறையில் அவர்கள் ''ஒளி'' என்றும் உலகிற்கு வந்த 'கீழுலகப்பார்வையாளர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

2. பண்டைய கிழக்கத்திய கலாச்சாரத்தின் இணையான கருத்துகள்:- மெசபொத்தாமியா மற்றும் கானானிய, இலக்கியத்திலிருந்து இணையான கருத்துக்களை குறிப்பிடுவதன் மூலம், விவிலிய எழுத்தாளர்கள் செமித்திய கதைகளிலிருந்து கருத்துக்களை வெளிப்படுத்தினார்களேயன்றி புதியதாக எதையும் கண்டு பிடிக்கவில்லை என்பது தெரிகிறது.

அக்காதிய நூல்களிலும் இறந்தோரின் உறைவிடம் நிலத்திற்குக் கீழான ஆட்சி எனவும், சில இடங்களில் நீருக்கு அடியிலும், அல்லது மேற்கில் உள்ளதாகவும், கதவுகளை கொண்ட நகரமாகவும் காட்டப்படுகிறது. இப்பகுதி இருள் சூழ்ந்ததாயும் திரும்ப முடியாத பாதையைக் கொண்டதாகவும் உள்ளது. மற்றவர்களின் கருத்துகளை போலவே, இங்கு வாழ்வோர் இடைவிடா தாகத்தால் துன்புற்றனர். இராஸ்சம்ரா உகாரித்திய பாடல்களில் இவ்விடம் நிலத்திற்கு அடியிலும் மலைகளுக்கு அடியிலும் உள்ளதாகவும் ஒரு நகரமாகவும் விவரிக்கப்படுகிறது. அந்நகரின் தலைவன் மண்ணை உண்பவராகவும், அதனை முழுமையாக குடிப்பவராகவும் விவரிக்கப்படுகிறார்.

3. பழைய ஏற்பாட்டுச் சொற்றொடர்:- பழைய ஏற்பாட்டில் இறந்தோரின் தங்கும் இடம் பல பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலானவை ஒரே பொதுவான பெயர் சொல்லின் பல்வேறு வடிவங்களாகும். மெசபொத்தாமிய வாசகங்களுக்கு இணையாகவும் இவற்றை குறிப்பிடலாம்.

அ) பாதாளம் (யேர்பு 33:18; சங் 16:10; 30:9; ஏச 38:17; 51:14; யோனா 2:6). ஆனால் பழைய வடிவங்கள் இதனை 'பாழான' என்னும் சொல்லில் இருந்து பயன்படுத்துகின்றன.

ஆ) படுகுழி (சங் 28:1; 88:4. 6; ஏச 14:15; எச 32:18).

இ) மரணத்தின் நாடு (யோபு 28:22; 30:23; 38:17; சங் 6:5; 9:13; பழ 7:27). மரணத்தின்

வீடு; சங் 22:15-இல் இச்சொல் ''மரணத்தின் தூசி'' எனப்படுகிறது. இச்சொற்றொடருக்கு இணையான சொல்லும் அக்காதிய இலக்கியத்தில் காணப்படுகிறது.

ஈ) பூமி (யாத் 15:12; சங் 71:20; யோனா 2:6) 'கீழுலகு' என்றும் கூறப்படுகிறது (எச 31:14). பூமிக்கு மூன்று பகுதி கீழுள்ள இடம் என்னும் அக்காதிய சொற்றொடரும் இதனையே குறிப்பிடுகிறது.

உ) கீழுலகம் (யோபு 26:6; 28:22; சங் 88:11; பழ 15:11; 27:20; திருவெளி 9:1).

ஆயினும் சிறப்புப் பெயரின் முழு அழுத்தமும் கொண்ட ''செயோல்'' என்ற ஒரு பெயருள்ளது. இச்சொல் 66 முறை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் வேறு எந்தச் செமித்திய மொழியிலும் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே அதன் சொல்லியலும், துல்லியமான பொருளும் விவாதத்திற்குரியன. இச்சொல், ''கேள், விசாரி'' என்னும் சொற்களிலிருந்து தோன்றியதாகவும் இறந்தவர்களிடமிருந்து தீர்க்கத்தரிசனம் கேட்கப்பட்ட இடம் என்றும் கூறும் கருத்து, பொதுவாக ஏற்கப்படக் கூடியதாய் உள்ளது. இவ்வினைச் சொல்லானது பழைய ஏற்பாட்டில் தடுக்கப்பட்ட, இறந்தவர்களிடமிருந்து குறிகேட்டலோடு இணைத்துக் கூறப்படுகின்றது (உப 18:11; 1 நாள் 10:13). இதனுடைய அக்காதிய சொல் ஆவிகளிடம் ஆலோசனை பெறுபவனையும், தென் அரேபியமொழி சில நேரங்களில் 'தீர்க்கத்தரிசனத்தையும்' குறிப்பிடுகிறது. எனினும், இச்சொல்லானது புறவினத்தாரின் தொல்பொருள்களில் பாதுகாக்கப்பட்ட ஒன்றாகும். எழுபதுநூல் வழக்கமாய் ''பாதாளம்'' என்னும் சொல்லையே பயன்படுத்துகிறது.

4. புதிய ஏற்பாடு:- இறந்தோரின் உறைவிடம் ''பாதாளம்'' என்று மட்டுமே அழைக்கப்படுகிறது (மத் 11:23; 16:18; லூக் 10:15; 16:23; அ.ப. 2:27.31; திருவெளி 1:18; 20:13-14). இதனுடைய பழைய ஏற்பாட்டு விளக்கத்துடன் புதிதாக எதுவும் இணைக்கப்படவில்லை.

5. ஆட்தன்மைப்படுத்துதல்:- இறந்தோரின் உறைவிடமானது அகன்ற தொண்டையுடன் அல்லது திறந்த வாயுடன், இடைவிடா பசியுடன் அலையும் பேயினைப்போன்ற ஆட்தன்மைப் படுத்தப்படுகின்றது (பழ 1:12; எச 5:14; அ.ப. 2:5). இராஸ்சம்ரா உகாரித்திய கதையிலிருந்து இம்முறை எடுத்தாளப்படுகிறது. நரகத்தைப் பற்றிய இடைக்காலப் படங்களில் இவ்வுருவகம் காணப்படுகின்றது.

கானானிய கதைகளில் 'கீழ் குழி' என்னும் சொல்லானது, உகாரித்திய ''கவ்ரான்'' என்று கடவுளாக ஆட்தன்மைப்படுத்தப்படுகிறது. இச்சொல்லானது, பழைய ஏற்பாட்டில் ''பேத்கோரோன்'' என்ற பெயரில் காணப்படுகிறது (யோசு 16:5).

6. இறந்தவரின் உறைவிடம் மற்றும் நரகம்:- இறந்தோரின் உறைவிடம் தண்டனைக்குரிய அல்லது துன்புறும் இடமாகப் பழைய ஏற்பாட்டில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. பயங்கரமான நரகம் என்னும் கோட்பாடு, ஈரானிய எண்ணங்களால் கிரேக்க காலத்தில் இஸ்ராயேலில் வளர்ந்தது. இச்சொல் முதலில் ஏனோக்கு நூலில் காணப்பட்டாலும், இறந்தோரின் உறைவிடத்திற்கும் பாவிகள் தண்டனை பெறுமிடத்திற்கும் பல வேறுபாடுகள் இந்நூலிலேயே கூறப்படுகின்றன. பாதாளத்தில் வாழ்வைத் திருத்துதல் என்பது இல்லை என சீராக்கின் மகன் இயேசு கூறுகிறார் (சீரா 41:4). புதிய ஏற்பாட்டில் மற்ற இடங்களில் எல்லாம், முக்கியமாக திருவெளி 20:13-14-இல், இதே வேற்றுமை நிலவுகிறது. லூக் 16:23-இல் மட்டும் தான், உவமையில் வரும் செல்வந்தன் பாதாளத்தில் துன்புறுவதாகக் கூறப்படுள்ளது. 'பாதாளம்' என்னும் சொல், 'செயோல்' என்பதனையோ அல்லது செமித்திய எண்ணங்களையோ குறிப்பிடாமல், அன்றைய கிரேக்க மரபையே பிரதிபலிக்கலாம். 2 பேதுரு 2:4-இல் 'படுகுழியில் தள்ளி' என்பது, எதிராகக் கிளம்பிய தூதர்களைப் பயங்கரத் தண்டனைக்கு உட்படுத்துவதை குறிக்கிறது. கிரேக்க 'பாதாளம்' எனும்

சொல் 'படுகுழி' என்பதன் மறுசொல்லாக மாறியது போல, இவ்வித்தியாசமும் தெளிவில்லாமல் இருக்கிறது (ஞான 30:10-14; 4:10-19; 5:1). இது, வளர்கின்ற எண்ணம் என்பதைவிட, குழப்பம் என்றே கருதப்பட வேண்டும். ஏனெனில் பிற்கால யூத சிந்தனைகளிலும் இறந்தோரின் உறைவிடமும், துன்புறும் இடமும் வித்தியாசப் படுத்தப்படுகின்றன.

இறந்தோர் தொடர்பு சாதனம் (ஆவியுலக இடையீட்டாளர்)

வருங்காலம் பற்றிய செய்தியை தரக்கூடியவராகவும், பயனுள்ள அறிவுரை தரக்கூடிய திறமை உள்ளவராகவும் ஊகிக்கப்படும் இறந்தோரின் ஆவிகளிடம் ஆலோசனை கேட்க மாந்திரீகம், குறிகூறுதல் போன்றவற்றில், ஈடுபடுபவர் இவ்வாறு அழைக்கப்படுகிறார் (ஏச 8:19). இதனுடைய எபிரேயச் சொல்லானது, இரகசிய கலைகளைக் கடைபிடிப்பவரால் பெறப்படும் அறிவினையோ அல்லது கடைபிடிப்பவருடன் கலந்தாலோசிக்கப்படுகின்ற ஆவிகளுடனான நெருக்கத்தினையோ குறிப்பிடுகின்றது. ''அறிமுகமாக ஆவியைக் கொண்டிருப்பவரோ'' அல்லது கலந்தாலோசிப்பவரோ இவ்வாறு அழைக்கப்படுகிறார். எபிரேயச் சொல்லானது ''தந்தை, முன்னோர்'' அல்லது ''இறத்தல், குழி'' ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கலாம். இறந்தோருடன் ஆலோசனை செய்வது பற்றி விவிலியத்திற்கு புறம்பான கதைகள், சில நேரங்களில் ஆவியை அழைப்பதற்காகத் தூண்டுதலையும் கொண்டிருக்கும் (1 சாமு 28:13; ஏச 29:4). இச்சொல்லானது எப்போதும் பில்லி சூனியக்காரன் பற்றிய சொல்லுடன் இணைந்ததாகவும், ஒருமுறை ''இறந்தவர்களிடம் குறி கேட்கிறவனையும்'' குறிப்பிட்டுக் காணப்படுகிறது (உப 18:11).

மோசேயின் சட்டம் மரண தண்டனை விதிப்பதன் மூலம் (லேவி 20:27), பில்லி சூனியக்காரரை நாடிச் செல்வதைத் தடை செய்கிறது (19:31; 20:6). வாக்களிக்கப்பட்ட நாட்டிலிருந்து இஸ்ராயேலால் வெளியேற்றப்பட்ட மக்களினங்களுடன் இத்தகைய குறி கூறுதல் தொடர்பு கொண்டிருத்தல் (உப 18:9-14), அநேகமாய் எகிப்தோடு கொண்ட தொடர்பும் (ஏச 19:3), மற்றும் இறைவாக்குரைத்தலுக்கும் (குறி கூறுதலின் பிற வகைகளான) மாந்திரீகத்திற்கும் இடையிலான வேறுபாடு (உப 18:9-22) முதலியவையே இதற்கான காரணங்களாகும். வருங்காலத்தைப் பற்றிய செய்திக்காக இறைவாக்கினர்கள் மற்றும் ஆவியுலக இடையீட்டாளர்கள் ஆகிய இருவரிடமும் நாடினாலும், மாந்திரீகர்களின் கூற்றை நம்பக் கூடாது (ஏச 8:16-20). சவுல் இறைவாக்கினர்கள் மூலமும் மற்ற உரிய வழிகள் மூலமும் ஆண்டவரிடமிருந்து இறைகூற்றைப் பெறமுடியாத போது (1 சாமு 28:6), ஒரு சூனியக்காரியின் மூலம் இறந்த சாமுவேலுடன் தொடர்பு கொள்கிறார் (1 சாமு 28:7-14). சாமுவேல் பொதுவான அறிவுரை தர மறுத்து, ஒரு இறைவாக்கினராக, உயிரோடிருந்த இறைவாக்கினர்களிடமிருந்து வாக்கு பெற முடியாமை மறைமுகமாகக் குறிப்பிடும் நிராகரிப்பை உறுதிப்படுத்துகிறார் (1 சாமு 28:15-19; 13:13-15; 15).

சில சமயங்களில் இஸ்ராயேலிலும், யூதாவிலும் சூனியக்காரர்கள் நீக்கப்பட்டிருந்தாலும் (1 சாமு 28:3; 2 அர 23:24), அவர்களது கலைகள் முழுமையாக அழிக்கப்படவில்லை (21:6). ஆணும் பெண்ணும் குறி சொல்வதில் ஈடுபட்டிருந்தாலும் (லேவி 20:27), சவுல் குறிப்பாக ஒரு பெண்ணையே நாடினார் (1 சாமு 28:7).

இறப்பு

பழைய ஏற்பாட்டில் சாவைப்பற்றி இஸ்ராயேலர் கொண்டிருந்த கருத்துக்களில் வளர்ச்சியைக் காண்கிறோம். ஆனால் இம் முன்னேற்றம் முற்போக்காகப் படிப்படியாக வளர்ந்தது அன்று. உதாரணமாக பல்லாண்டுகளுக்குப் பின்னர் உருவாகிய சீராக் ஆகமத்தில் இறப்புப் பற்றிக் காணப்படும் கொள்கை, முதலில் உருவாகிய ஐந்நூல்களில் காணப்பட்ட கொள்கையிலிருந்து எந்த வகையிலும் வேறுபடவில்லை. பழைய ஏற்

பாட்டில் இறப்பைப்பற்றிக் கூறப்பட்ட கருத்து, மரணத்தோடு வாழ்வு முடிவடைகிறது என்பதே.

சாதரணமாக வாழ்க்கையைப்பற்றி ஒருவன் எத்தகைய கருத்து கொண்டிருக்கின்றானோ, அதன் அடிப்படையில் தான் இறப்பைப்பற்றிய கருத்தும் அமையும். இது இஸ்ராயேலரைப் பொறுத்த வரையில் மிகவும் உண்மை. அவர்கள் மனிதனை உயிரோட்டமுள்ள ஒரு உடலாகத்தான் எண்ணினார்களே ஒழிய, உடலெடுத்த ஆன்மாவாகக் கருதவில்லை. இந்த எண்ணத்தின்படி உடலில் உயிரோட்டம் முடியும்போது, அனைத்து இன்றியமையாத செயல்களும் முடிவு பெறுவதாக அவர்கள் கருதினார்கள்.

ஒருவன் இறக்கும் போது அவனுடைய ஆன்மா, உடலிலிருந்து பிரிந்து செல்கிறது. அது ''ஓர் உள்ளுயிராக'' (NEPES) தனிதன்மையோடு 'செயோலில்' வாழ்கிறது. ஆனால், அதனால் இன்றியமையாத எத்தகைய செயலையும் செய்ய இயலாது. இறந்தவர்கள் இறைவழிபாடுகளில் பங்கு பெற இயலாது (சங் 6:6; 30:10; 88:11; 115:17; எச 38:11.18). இந்தப் பின்னணியில்தான் இயேசு, ''கடவுள் வாழ்வோரின் கடவுளேயன்றி இறந்தோரின் கடவுள் அல்லர்'' (மத் 22:32; மாற் 12:27; லூக் 20:38) என்று கூறினார். இறப்பு மனிதனின் இயற்கையான முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது (2 சாமு 14:14). முதியவனாக நிறைந்த வாழ்நாட்களைக் கடந்து, வலிமை குன்றாமல், நல்ல கிழப்பருவத்தில் இறப்பது நிறைவான சிறந்த இறப்பாகக் கருதப்பட்டது (ஆதி 25:8; யோபு 21:23 தொ; 29:18-20). இத்தகைய நிறைவான இறப்பைப் பெறுபவன், எளிதாக அமைதியாக இறக்கிறான். நொடிப் பொழுதில் செயோலைச் சென்றடைகிறான் (யோபு 21:13). அவன் உரிய காலத்திற்கு முற்பட்ட இறப்பை அடையான். நோயும் அவனை வாட்டாது. நோயுள்ள இறப்பு ஒருவனுக்குக் கசப்பூட்டுகிறது (யோபு 21:15).

இன்பவனம் பற்றிய கதை (ஆதி 2-3) எதை உணர்த்துகிறது என்றால், மனிதன் இறக்க வேண்டியவனாக இறைவனால் படைக்கப்படவில்லை. முதல் பாவத்தின் காரணமாய் மனிதன் அந்நிலையைப் பெற்றான். இன்பவனம் பற்றிய கதையில் வரும் உருவகவத்திலும் மனிதன் வாழ்வு தரும் கனியைத் தின்பதால் முடிவில்லா வாழ்வைப் பெறுகிறான். பாவம் புரிந்ததால் அவன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டான். அவன் வாழ்வு தரும் கனியை உண்ண அனுமதிக்கப்படவில்லை.

இக்கதையானது மெசபொத்தாமியாவில் வழங்கிய 'கில்காமிசின் கதையோடு ஒத்திருக்கிறது. இக்கதையில் கில்காமிஸ் வாழ்வின் கனியைத் தேடிக் கண்டுபிடிக்கிறான். ஆனால் திருட்டின் காரணமாக அதை இழக்கிறான். அதே போன்று ''அடபா'' கதையிலும், வான்வீடு கதையோடு ஒற்றுமையைக் காண்கிறோம். 'அடபா' கடவுளர்கள் திருமுன் அனுமதிக்கப்படுகிறான். அவனுக்கு அங்கு இறப்பின் உணவு, இறப்பின் பானம் அளிக்கப்பட்டால் பெற்றுக் கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை வழங்கப்பட்டது. ஆனால் அவனுக்கு உண்மையில் வழங்கப்பட்டது 'வாழ்வின் நீரும் வாழ்வின் உணவும் தான்'. அவன் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை.

இறப்பு முதல் பாவத்தின் வழியாகத்தான் வந்தது என்பது சீரா 25:24-க்குமுன் பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் கூறப்படவில்லை. ஆனால் இறப்போடு வாழ்வு முடிந்துவிடவில்லை என்ற கருத்தைக் காண்கிறோம். சங்கீத ஆசிரியர் 16:9 பகுதியில் ''என் ஆன்மாவைப் பாதாளத்தில் விடமாட்டீர். உம் புனிதர் அழிவு காண விடமாட்டீர்'' என்று மகிழ்கிறார். சங் 49:6-இல் கடவுள் தம்மைப் பாதாளத்திலிருந்து காப்பார் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார். இத்தகைய கருத்துக்கள் சங்கீதங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. இவை திடீரென்று வரும் உரிய காலத்திற்கு முற்பட்ட மரணத்திலிருந்து இறைவன் காப்பதைத்தான் குறிக்கும்.

இருந்தாலும் சங்கீதங்களில், இத்தகைய குறுகிய எல்லையைக் கடந்து வாழ்வைப் பற்றியும் இறப்பைப்பற்றியும் பல இடங்களில் காண்கிறோம். உதாரணம் சங் 49. இதைவிடத் தெளிவாக இருப்பது சங் 73:23-இல் காணப்படும் குறிப்பு: ''ஆண்டவரைவிட எனக்கு வானுலகிலோ, மண்ணுலகிலோ உள்ளவர் யார்?'' ஆண்டவருடைய வாக்குறுதிகளும் அவருடைய இரக்கப்பெருக்கும் முடிவற்றதாக இருந்தால், பற்றுறுதி கொண்ட இஸ்ராயேலன் அவற்றை எந்த விதத்திலாவது அனுபவிக்கும் வாய்ப்புப் பெற வேண்டும். எவ்வாறு அனுபவிப்பது என்பது பற்றி இஸ்ராயேலருடைய முதல் கட்ட நம்பிக்கையில் எதுவும் தெளிவாகக் கூறப்படவில்லை.

சாவைப்பற்றி இஸ்ராயேலர் கொண்டிருந்த நம்பிக்கையானது பெருமளவு படைப்பைப்பற்றிய அண்ட இதிகாசங்களில் ஊறியிருந்தது. குழப்பத்திற்கும் அமைதியான ஒழுங்கிற்கும், இருளுக்கும் ஒளிக்கும் நடைபெறும் போர், சாவிற்கும் வாழ்விற்குமான போருமாகும். அக்காலத்திய செமித்திய கதைகளில் வாழ்வும் சாவும் மாறி மாறி வெற்றி கண்டு வந்தன. ஆனால் இஸ்ராயேலர் யாவே மீது கொண்ட நம்பிக்கை எத்தகையதென்றால் இறைவன் வல்லமையால் தீமையை அழிக்க முடியாது அல்லது சாவின் மீது வெற்றிக் கொள்ள முடியாது என்று அவர்களால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. கண்டிப்பாக அனைவரையும் தொடும் சாவு இறைவனைத் தொட முடியாது.

அவர்கள் யாவே, இறுதியில் இருள், தீமை, குழப்பம் அனைத்தின் மீதும் வெற்றிக் கொள்வார் என்று நம்பினர். இந்த நம்பிக்கை யாவே இறப்பின் மீது வெற்றிக் கொள்வார் என்ற நம்பிக்கையாக வளர்ந்தது. இது பழைய ஏற்பாட்டில் சற்றுப் பிற்பட்ட காலத்தில்தான் வளர்ந்தது. தானியேல் ஆகமத்திற்குமுன் பழைய ஏற்பாட்டில் இறந்தவர்களின் உயிர்ப்பு பற்றிய நம்பிக்கை எங்கும் காணப்படவில்லை. கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தானியேல் ஆகமத்தில் தான் முதலில் காண்கிறோம். ஆன்மாவின் முடிவில்லா வாழ்வைக் கூறும் ஞான ஆகமம், அலக்சாந்திரியா பிரிவைச் சார்ந்த யூதமதத்தின் படைப்பாகும். ஆன்மாவின் முடிவில்லா வாழ்வு யூத நம்பிக்கைக்கும் மனப்பான்மைக்கும் புறம்பானதாகும். இது எப்போதுமே பழைய ஏற்பாட்டிலோ புதிய ஏற்பாட்டிலோ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

2. புதிய ஏற்பாடு:- புதிய ஏற்பாடு இறப்பு பாவத்தின் விளைவு, தண்டனை என்று வெளிப்படையாக, தெளிவாகக்கூறுகிறது. உரோ 5:12 தொ என்ற பகுதியில் இதனைத் தெளிவாகக் காண்கிறோம். இங்கு ''ஒரு மனிதனுடைய பாவத்தால் பலருக்கும் சாவு விளைந்தது போல, ஒரே ஒருவருடைய ஏற்புடைய செயலால் எல்லா மனிதருக்கும் வாழ்வு அளிக்கப்பட்டது'' என்று வாசிக்கிறோம். ஆதாமில் எல்லோரும் இறந்தது போல கிறிஸ்துவில் அனைவரும் உயிர் பெறுவர் (1 கொரி 15:22). புதிய ஏற்பாட்டில் வழங்கும் இன்னொரு கருத்து ''கிறிஸ்து தன் இறப்பின் வழியாகச் சாவின் மீது வெற்றி கொண்டார்'' என்பது. சாவுதான் கிறிஸ்து வெற்றிக்கொண்ட இறுதி எதிரி (15:25). அவர் சாவின் வல்லமையை அழித்தார் (2 திமோ 1:10). அவர் சாவைத்தன் கையில் கொண்டிருந்த அலகையைச் சாவின் வழியாகவே அழித்து விட்டார் (எபி 2:14). கிறிஸ்து இயேசுவுக்குள் உயிர்தரும் ஆவியானவரின் சட்டம் என்னைப் பாவம், சாவு என்பவற்றின் சட்டத்தினின்று விடுதலை செய்து விட்டது (உரோ 8:2). கிறிஸ்து இறந்ததும் உயிர்த்ததும் இறந்தோர் மீதும் வாழ்வோர் மீதும் ஆட்சி செலுத்தவே (14:9). இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து இனிமேல் இறக்க மாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர் (6:9) அனைவருக்காகவும் ஒருவர் இறந்தார் என்றால் அனைவரும் இறந்து போயினர். அவர் அனைவருக்காகவும் உயிர் துறந்ததோ வாழ்கிறவர்கள் இனி தங்களுக்கென வாழாமல், தங்களுக்காக இறந்து உயிர் துறந்தவருக்

கென வாழ வேண்டும் என்பதற்காகவே (2 கொரி 5:14 தொ). கிறிஸ்து சாவை ஏற்கும் அளவுக்குத் தாழ்த்தினார். எனவே கடவுள் மகிமையையும் மேலான பெயரையும், அவருக்கு அளித்தார் (பிலி 2:5 தொ). கிறிஸ்துவின் இறப்பில் பங்கு கொண்டால் கிறிஸ்து சாவின் மீது கொண்ட வெற்றியிலும் பங்கு பெறுவோம். இது உரோ 6:2 தொ என்ற பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

கிறிஸ்துவன் கிறிஸ்துவின் மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெற்று, புதுவாழ்வுக்கு அவரோடு உயிர்த்தெழுந்தவன். அவருடைய மரணத்தில் பங்கு கொண்டால் அவரோடு இணைக்கப்படுவோம் (உரோ 6:5). பழைய மனித இயல்பு கிறிஸ்துவோடு சிலுவையில் அறையுண்டுள்ளது. நாம் கிறிஸ்துவோடு இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் (6:8). நாம் பாவ வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் செத்தவர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுளுக்காக வாழ்கிறவர்கள் (6:11). ஊனியல்புக்கு ஏற்றபடி வாழ்ந்தால் சாவோம். ஆனால் ஆவியானவரின் செயலால், உடலின் செயல்களைச் சாகடித்தால் வாழ்வோம் (8:13). ''நான் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். இனி, வாழ்வது நானல்ல. என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே'' (கலா 2:20) என்று பவுல் கூறுகிறார். ''உலகம் எனக்கு அறையுண்டதாய் இருக்கிறது. நான் உலகத்திற்கு அறையுண்டவனாய் இருக்கிறேன்'' (6:14).

கிறிஸ்துவில் விசுவாசம் ஒருவனை இறப்பினின்று காப்பதில்லை. ஆனால் ஒருவன் எப்போதும் சாகான் என்று உறுதியளிக்கிறது (யோவா 11:26). திவ்ய நற்கருணையில் பங்கு கொள்வதால் ஒருவன் சாகான். முடிவில்லா வாழ்வைப் பெறுவான்'' என்று கூறப்படுகிறது (6:50). முடிவில்லா வாழ்வு என்ற கருத்தோடு இணைந்திருக்கும் மற்றொரு கருத்து ''இரண்டாவது சாவு'' என்பதாகும் (திருவெளி 2:11; 20:6,14; 21:8). இரண்டாவது சாவினால் ஒருவன் முடிவில்லா வாழ்வை இழக்கிறான். கிறிஸ்துவர்கள் இறக்கும் போது கிறிஸ்துவிலே இறக்கிறார்கள் (1 தெச 4:16).

இறுதி இராவுணவு (LAST SUPPER)

ஒத்தமை நற்செய்திகளும் (மத் 26:17-30; மாற் 14:12-26; லூக் 22:7-38) பவுலும், (1 கொரி 11:23-26) கிறிஸ்து தாம் பாடுபடுவதற்கு முந்தின நாள் இரவு தம்முடைய சீடர்களோடு உண்ட இறுதி உணவின் நிகழ்ச்சியுரைகளை எடுத்துக் கூறுகின்றன. ஆனால் யோவான் இந்த உணவைப்பற்றி குறிப்பிட்டாலும் (13:2 தொ), ஆண்டவரின் இரவு உணவு ஒரு திருவருட்சாதனமாக ஏற்படுத்தியது பற்றி துல்லியமான குறிப்பு இல்லை. ஆனால் அப்பம் பலுகிய பின் வரும் அறவுரையில் குறிப்பாக (6:51-56) திருவருட் சாதனத்தன்மை எடுத்துக்கூறப்படுகிறது.

இந்த இறுதி உணவு விவரிப்புப் பற்றிய சூழ்நிலை, வார்த்தைகள், நோக்கம், இவற்றைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் நிலவுதல் தவிர்க்க இயலாத ஒன்று. மறையுண்மை பற்றித் திருச்சபைகளில் நிலவும் மாறுபட்ட கருத்துக்கள், இறுதி இரவுணவுபற்றிய பிரச்சினையை மேலும் சிக்கல் மிக்கதாக்குகின்றன. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. இராவுணவிற்கான சூழ்நிலைகள்:- இராவுணவு பற்றிய பிரச்சினைகள் பாடுகள் பற்றிய காலவரையரையுடன் தொடர்புடையதாக அமைகின்றன. மற்றும் திருச்சபையிலே இருந்து வருகின்ற பாரம்பரியங்களும் நற்செய்தியாளர்கள் நால்வரும் இறுதி இராவுணவானது இயேசு பாடுபட்ட வெள்ளிக்கிழமைக்கு முந்திய வியாழன் இரவு நடந்தது என்று ஒத்துக் கொள்கிறார்கள். யூதர்கள் நேரத்தை கணிப்பிடும் முறையில் அதாவது, சூரியன்மறைவதிலிருந்து அடுத்த சூரியன் மறையும் வரை கணக்கிட்டால், ஒத்தமை நற்செய்தியார்கள் இராவுணவும் பாடுகளும் பாஸ்கா திருவிழா நாளில், அதாவது நீசான் மாதம் 15-ஆம் நாள், நடந்தது என்று கருத இடமிருக்கிறது. இக்கணிப்பின்படி இறுதி இரவுணவு பாஸ்கு உணவாகும். ஆனால் யோவான் தன்னுடைய நற்செய்தியில் வெளிப்படையாகவும், தெளிவாகவும் பாடுகளானது பாஸ்காவிற்கு முந்திய நாள், அதா

வது பாஸ்காவிற்கு தயாரிப்புநாளில், அதாவது நீசான் 14-ஆம் நாள், நடந்தது என்று கூறுகின்றார். அதாவது இயேசு பாடுபட்ட அந்த ஆண்டு பாஸ்கா திருவிழா வெள்ளிக்கிழமை அன்று ஓய்வு நாளன்றே வந்தது (யோவா 18:28; 19:14, 31). எனவே இதை வைத்துப் பார்கின்றபோது இறுதிஇராவுணவு பாஸ்கா உணவாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் பாஸ்கா செம்மறியானது மதிய வேலைக்குப் பிறகுதான் கொல்லப்பட வேண்டும். அதாவது இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த சமயம் ஆகும். இது இயேசுவின் மரணத்தையும் பாஸ்குச் செம்மறியையும் இணைக்கும். பவுவின் கருத்துடன் ஒத்து போவதாய் அமைகின்றது (1 கொரி 5:7). விவிலிய ஒத்தமை நற்செய்தி காலக்கணிப்பா அல்லது யோவானின் காலக்கணிப்பா என்ற பிரச்சினை பற்றி அறிஞர்கள் வலுவாக வேறுபடுவர். திருச்சபை வழக்கில் உரோமைக் கத்தோலிக்கத் திருச்சபை நற்கருணையில் புளியாத அப்பத்தைப் பயன்படுத்தி ஒத்தமை நற்செய்திகளுக்கு ஆதரவு அளிக்கிறது. கிரேக்கத் திருச்சபை, சடங்கில் புளித்த அப்பத்தைப் பயன்படுத்தி, யோவான் காலக்கணிப்பைப் பின்பற்றுகிறது.

2. இந்த மாறுபட்ட கருத்துடைய பாரம்பரியங்களை ஒற்றுமைப்படுத்த பல கருதுகோள்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சிலரது கருத்துப்படி மாற்கிலுள்ள காலவரைக் குறிப்புக்கள் முரணானவையாக உள்ளன. குறிப்பாக 14:12-இல் ''புளியாத அப்பத் திருவிழாவின் முதல் நாள்'' (நீசான் 15) ''பாஸ்காச் செம்மறியைப் பலியிடும்'' நாளோடு (நீசான் 14) தவறாக ஒன்றாக்கப்பட்டுள்ளது. தொடக்கத்திலே யோவானின் பாரம்பரியத்தை ஒத்திருந்த மாற்கு பாரம்பரியம் பாஸ்கா உணவோடு இறுதி இரவுணவை ஒன்றாக்கிப் பிற்காலத்தில் இடைச்செருகப்பட்டதாகவும், குறைந்த உண்மைத் தன்மையுடையது என்றும் சிலர்கருதுவர். மற்றும் சிலர், இந்த வேறுபாட்டிற்குக் காரணம் அரமேயிக்கிலிருந்து கிரேக்கத்திற்குத் தவறான மொழி பெயர்ப்புதான் என்று கருதுகின்றனர். வேறுசிலர் லூக் 22:15-இல் வரும் குறிப்பை, பாஸ்கு உணவை உட்கொள்ளும் ''நிறைவேறாத ஆவல்'' என்று விளக்கமளித்து, யோவனின் மரபில் சேர்க்கின்றனர். ஆனால் வேறுசிலர், அதே குறிப்பு, இயேசுவின் ஆழ்ந்த ஆவலை எடுத்துக்காட்டும் செமித்திய மொழி மரபே தவிர, நிறைவேறாத ஆவலைக் குறிக்கவில்லை என்று கருதுவர். அறிஞர்கள் கிறிஸ்து இறந்த ஆண்டு பாஸ்கா விழாவானது பரிசேயர், சதுசேயர் இவர்களால் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்பட்டது; இதற்குக் காரணம் அந்த ஆண்டு முழுநிலவு பற்றிய கணிப்பு இரு குழுவினரிடையே வேறுபட்டது என்பர்; ஆனால் இதற்குப் போதிய உறுதியான சான்றுகள் இல்லை. இதற்குக் காரணம் காலத்தைக் கணிப்பதில் அவர்களிடம் விளங்கிய அறியாமையும் கிறிஸ்து இறந்த ஆண்டுக்கணிப்பு தெளிவாகவும், குறிப்பாகவும் தெரியாததும் ஆகும். எனவே அறிஞர்கள் ஏதாவது ஒரு நற்செய்தி பாரம்பரியத்தைத் தங்களுக்கு ஆதாரமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். எனவே பொதுவாக பாஸ்கா உணவையும் இறுதி இரவுணவையும் ஒன்றாகக் கருதும் அறிஞர்கள் அதற்கான விளக்கத்தை ஒத்தமை நற்செய்திகளில் ஆராய்கின்றனர்.

இறுதி இரவுணவுக்குப் பாஸ்கா விளக்கம் அளிப்பதை மறுத்துக் கூறுபவர்கள் பின்வரும் காரணங்களைச் சுட்டிக் காட்டுகின்றனர். அ) பாஸ்கா உணவின் முக்கிய கூறாகிய பாஸ்காச் செம்மறி குறிக்கப்படவே இல்லை. ஆ) புளியாத அப்பத்தைக் குறிக்கும் கலைச் சொல்லுக்குப் பதிலாக, சாதாரண அப்பத்தைக் குறிக்கும் கிரேக்கச் சொல் பயன்பட்டுள்ளது. இ) பாஸ்காச் சடங்கில் வரும் நான்கு இரசக் கிண்ணங்களுக்குப் பதிலாக ஒன்று, அல்லது அதிகம் போனால் இரண்டு மட்டுமே குறிக்கப்பட்டுள்ளன. மேலும் தொடக்கக் காலத்திருச்சபை சடங்கு முறை பாஸ்கா உணவின் சிறப்புக்களைக் கொண்டிருக்கவில்லை. நற்கருணை ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலை பாஸ்கா உணவானால் அது ஆண்டுக்கு ஒரு முறைதான் கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் திருச்சபையின் மரபு வாரம்தோறும், ஏன் நாள்தோறும், நற்கருணையைக் கடைபிடித்துள்ளது.

இந்த காரணங்கள் உறுதியானவை அன்று. நற்செய்தியாளர்களின் நோக்கம் பாஸ்கு உணவை விவரிப்பது அன்று. கிறிஸ்துவின் சிறப்பான சொற்களையும் செயல்களையும் தொகுத்துத் தருவதே, அல்லது அவை திருச்சபையால் கடைப்பிடிக்கப்பட்ட முறையில் எடுத்துக் கூறுவதே ஆகும். பழைய ஏற்பாட்டிலும் மற்ற யூத,கிரேக்க இலக்கியங்களிலும் புளியாத அப்பத்தைக் குறிக்கும் சொல்லுக்குப்பதிலாகச் சாதாரண அப்பத்தைக் குறிக்கும் சொல் பயன்பட்டுள்ளது என்பது அறிஞர்களால் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இறுதிக்கால நோக்கில், வரவிருக்கும் காலத்தில் நிகழவிருக்கும் ''செம்மறியின் இரவுணவின்'' முன்னோடியாக அல்லது முன் சுவையாக, திருச்சபை ஆண்டவரின் இரவுணவை அடிக்கடி கடைப்பிடித்ததாகத் தெரிகிறது.

மற்றுமொரு கருத்து:- இயேசுவும் அவருடைய சீடர்களும் நண்பர்கள் குழுவாக இருந்தனர். நண்பர்களில் சிலநேரங்களில் ஒன்று கூடித் தங்களுடைய உள்ளார்ந்த அன்பை, சமய உணவைப் பகிர்ந்து கொள்வதில் வெளிப்படுத்திக் கொண்டனர். இத்தகைய பகிர்ந்து உண்ணுதல், விழாக் காலங்களில், குறிப்பாகக் கலியாணம், இறப்பு, விருத்தசேதனம் ஆகிய நாட்களில் இடம் பெற்றது. ஆயினும் இவை சமயம் சார்ந்தவை என்பதற்கு எவ்விதச் சான்றுகளும் இல்லை. இருப்பினும், யூதர்கள் தங்கள் குடும்பங்களில் நண்பர்களுடனோ அல்லது குடும்பத்துடனோ சேர்ந்து உண்ட உணவு எப்போதும் சமயப் பண்புடையது. ஏனெனில் அப்பம், இரசத்தின்மேல் இறைவனுக்கு ஆசீர் கூறப்பட்டது.

3. பின்வரும் விளக்கம் சிறிது திருப்தி அளிப்பதாக உள்ளது. (அதையும் சுருக்கமாகவே தருகிறோம்). கிறிஸ்து ''ஜூப்லி''க் காலக்கணிப்பைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அதன்படி பாஸ்கு விழா எப்போதும் புதன் கிழமையன்று கொண்டாடப் பெற்றது. ஆகவே இயேசு தமது இறுதி உணவாகிய பாஸ்கு உணவைச் செவ்வாய்க் கிழமை மாலை உண்டிருக்க வேண்டும். அதிகார வர்க்கத்தைச் சார்ந்த குருக்களும் மற்ற சதுசேயரும் மற்றொரு காலக் கணிப்பைப் பின்பற்றி வெள்ளிக்கிழமை மாலை பாஸ்கு உணவை உண்டிருக்க வேண்டும். அன்றுதான் அவர்கள் பாஸ்கு செம்மறியைக் கொன்றிருக்க வேண்டும். ஆகவேதான் இயேசுவின் இறுதி உணவின்போது செம்மறியைப் பற்றிய குறிப்பு ஒன்றும் காணப்படவில்லை. இவ்விரு காலக்கணிப்புகளையும் மனதில் கொண்டால், இறுதி உணவு, பாடுகள் பற்றி ' பல முரண்கள் எளிதில் தீர்கின்றன. ஆனாலும் முற்றிலும் நாம் தெளிவு அடைவதில்லை.

ஆதிக் கிறிஸ்துவமும், நமது வழிபாட்டு முறையும், இறுதி இரவு உணவு பாஸ்கு உணவுதான் என்று ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. பாஸ்கு உணவு விழா ஆதிக் கிறிஸ்தவர்களிடையே வழக்கில் இருந்தது (அ.ப.12:3; 20:6; 1 கொரி 5:7-8). இன்றும் நமது பூசைப் பலி உணவில் புளியாத அப்பத்தைப் பயன்படுத்துகிறோம். பாஸ்கு உணவுக்கும் நற்கருணைப் பலியுணவுக்கும் உள்ள தொடர்பு லூக் 22:16-ஆல் குறிப்பாக அறியப்படுகிறது. கிறிஸ்துவின் இறப்பு பாஸ்கு விழாவின்போது நடந்ததால் பாஸ்கு விழா பற்றிய கருத்துக்கள் நமது பரிசுத்த வார வழிபாட்டுச் சடங்கிலும், பாஸ்குக் கால வழிபாட்டிலும் பெரிதும் இடம் பெறுகின்றன. இவையாவும், இறுதி இரவு உணவு பாஸ்கு உணவுதான் என்று உறுதியாக நிரூபிக்காவிட்டாலும், இறுதி இரவு உணவு பாஸ்கு விழாச் சூழ்நிலையில் நடந்தேறியது என்று நாம் ஐயமின்றி அறிய ஏதுவாகுகின்றன.

இறுதிக்கால இயல் (ESCHATOLOGY)

இது இறுதி நாட்களில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளைப்பற்றிய விவிலியக் கருத்தாகும் (எபி 1:2; ஏச 2:2-4; ஓசே 3:5). பழைய

ஏற்பாடு சமுதாயத்தின் (இஸ்ராயேல்) எதிர் காலத்தை முக்கியத்துவப்படுத்துகின்றது; புதிய ஏற்பாடு தனிப்பட்டவரின் ஊழி பற்றி கவனம் செலுத்துகின்றது.

I பழைய ஏற்பாடு

எபிரேயர்கள் யாவேயை வரலாற்றின் ஆண்டவராக வழிபட்டனர். அவர் சீனாய் மலையில் (இஸ்ராயேலை எகிப்தினின்று மீட்ட பின்னர்) யாவே தமது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடன் உடன்படிக்கையினை ஏற்படுத்தியதோடு நில்லாமல், புதியதாக தோற்றுவிக்கப்பட்ட எபிரேய நாட்டையும் ஆதரித்துக் காத்து வந்தார். ஐந்நூலின் சில நூல்கள் பாலைவனத்தில் திரிந்த போது இறைவன் வழிகாட்டியதை விவரிக்கின்றன; 1-2 சாமுவேல் மற்றும் 1-2 அரசர் நூல்கள் இஸ்ராயேலின் அரசாட்சி முறையுடன் இறைவனின் அணுகுமுறைகளைப் பற்றி விவரிக்கின்றன. பிற்கால இறைவாக்கினர்களின் சில நூல்கள் வழக்கமாக ஆண்டவரின் நாள் (அல்லது தீர்ப்பின் நாள்) என்ற கருத்தின் அடிப்படையில் இஸ்ராயேலுடன் எதிர் காலத்தில் இறைவன் கொள்ளும் தொடர்பினைக் குறிப்பிடுகின்றன.

1. இறைவாக்கினர்கள்:- இறைவாக்கினர்களுக்கு ஆண்டவரின் நாளானது நேர்மையானவர்களுக்கு மீட்பு, நம்பிக்கை மற்றும் நியாயம், உரிமை மெய்ப்பித்தலின் நாளாகவும் நேர்மையற்றவர்களுக்கான தீர்ப்பு மற்றும் அழிவின் நாளாகவும் இருக்கும். இது, உடன்படிக்கையின் ஒப்பந்தங்களைப் பின்பற்றுவோருக்கு ஆசியையும், தங்களது பொறுப்பை புறக்கணிப்பவர்களுக்கு சாபங்களையும் உறுதியளிக்கின்ற மோசேயின் உடன்படிக்கைக்கு இணையானதாகும். பிற்கால வெளிப்பாட்டுக் காட்சியாளர்களைப் போல இல்லாமல், அவரது நாள் வரும் வரை ஆண்டவர் வரலாற்றை தொடர்ந்து ஆள்வார் என்று இறைவாக்கினர்கள் நம்பினர்.

அ. நாடுகடத்தலுக்கு முன்னர்:- ஆண்டவரின் நாளைப்பற்றி பேசும் இவ்வாக்கினர்களில் கி.மு.8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆமோஸ் மற்றும் ஓசேயா ஆகியோரும் இருந்தனர். கடுமையான ஆமோஸ், ஆண்டவரின் நாளானது அவர்கள் எதிர் பார்ப்பது போல ஒளியாக இல்லாமல், இருளும் சோர்வும் கொண்டதாக இருக்குமென சமாரிய எபிரேயருக்குக் கூறுகிறார் (ஆமோ 5:18-20). பாவம் நிறைந்த இஸ்ராயேலுக்கான இறைவனின் இரக்கத்தையும் கருணையினையும் ஆமோஸ் குறைத்துக்கூறினாலும் (ஆமோ 9:11-15) ஓசேயா பெருமளவில் அதனை ஈடுகட்டுகிறார். இறைவனுடைய தண்டனையினை ஒதுக்கிவிடாமல், ஓசேயா எப்பிராயிமின்பால் இறைவனின் அன்பையும் (ஓசே 11:1 தொ), தமது 'மகனை' அழிக்க விருப்பமில்லாமல் இருப்பதையும் (11:8-9), அவனை புதுப்பித்து மீண்டும் எழுச்சியூட்ட விரும்பும் இறைவனின் ஆவலையும் (2:15-23) அழுத்தமாகக் கூறுகின்றார்.

ஆ. நாடு கடத்தப்பட்ட நிலையில்:- 587-586-இல் ஏற்பட்ட எருசலேமின் வீழ்ச்சி மற்றும் தென்னாட்டு அரசினரை பாபிலோனுக்கு நாடு கடத்தியதைத் தொடர்ந்த, யூதாவின் எதிர்காலமானது இருள் சூழ்ந்ததாய்க் காணப்பட்டது. பாபிலோனுக்கு அருகில் வசித்த நாடு கடத்தப்பட்டவர்களுடன் தம்மை ஒன்றுபடுத்திக் கொண்ட எசக்கியேல் தீர்ப்பைப்பற்றிய வார்த்தைகளைப் பயன்படுத்தாமல், யூதாவின் புதிய இதயம் மற்றும் கீழ்ப்படிதல் தன்மை பற்றி முன்னறிவித்தார் (எச 36:26-27). அதன் தந்தையரின் நாட்டிற்கு திரும்புதல் பற்றியும் அவர் குறிப்பிட்டார் (36:28 தொ). மேலும், வடக்கு மற்றும் தெற்கு அரசுகளின் இணைப்பு (37:15-27), இறந்தோரிடமிருந்து அவர்களின் உயிர்ப்பு (37:1-14), புதிய ஆலயம் மற்றும் நிலத்தை பகிர்தல் பற்றியும் (40-48) அவர் கூறுகிறார். அதே முறையில் இறைவாக்கினர் ஏசயா அல்லது அவரை தொடர்ந்து வந்தவர், இஸ்ராயேலின் எதிர்கால மீட்சி (ஏச 60-62) மற்றும் யூதாவின் சமாதான ஆட்சி (65:13-25) ஆகியவை பற்றிக் கூறிவிட்டு, ''ஆண்டவரை வழிபட அனைத்து மானிடரும்'' வந்து சேரும் புதிய வானம்

மற்றும் புதிய பூமி பற்றிய காட்சியுடன் (66:22-24) தனது ஆறுதல் செய்தியை முடிக்கி றார்.

இ. நாடுகடத்தலுக்கு பிற்பட்ட இறைவாக் கினர்கள்:- முந்தைய இறைவாக்கினர்கள் இறை தீர்ப்பை இஸ்ராயேல், யூதா மற்றும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளுடன் இணைத் தது போல, செப்பனியாவைப் போன்று (செப் 1:14-18; 2:4-15), இறைவாக்கினர் மலாக்கியாவும், இறை தீர்ப்பானது தீமை புரியும் மற்றும் அகந்தை மிக்க எல்லா நாடுகளையும் உள்ளடக்குமாறு விரிவுபடுத் துகின்றார் (மலா 3:19). அவரது செய்தி நேர்மையற்றவர்களுக்கு துயரமிக்கதாய் இருந்தது போன்றே, விசுவாசிகளுக்கு எழுச் சியூட்டுவதாகவும், ஊக்கமூட்டுவதாகவும் இருந்தது. நீதிக் கதிரவனின் குணமளிக்கும் சிறகுகளின் பாதுகாப்பை அவர்கள் விரை வில் அனுபவிப்பர் (3:20).

2. இறை வெளிப்பாட்டுக் காட்சியாளர் கள்:- நன்மை தீமை ஆகிய வரலாற்றுச் சக்திகள் மீது முழுமையான ஆதிக்கத்தை இறைவன் கொண்டுள்ள வரலாறுபற்றிய இறைவாக்கினர்களின் நோக்கை , திருவெ ளிப்பாட்டு நோக்கிலிருந்து அறிஞர்கள் வேறுபடுத்துகின்றனர். இறைவாக்கினர்களு டன் சேர்ந்து ஆண்டவரின் பெரும்மாற்றத் தின் நாளினை ஏற்றுக்கொள்ளும் இறைவெ ளிப்பாட்டுக் காட்சியாளர்கள், மனித செயல் களின்மீது இறைவன் தனது ஆதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தக்கூடிய ஓர் இறை தலையீட்டை எதிர்பார்த்தனர். தானி 7-12, அரசினையும் தீர்ப்பிடக்கூடிய திறமையி னைப் பெறக்கூடிய புனிதர்களுக்கு எதிரான போர் (7:21-22), தன்னை மட்டுமே சிறப் பித்து, தனது பெயரை மட்டுமே புகழக்கூ டிய ஒரு அரசனின் தோற்றம் (11:36-43), பெருங்கலாபனை மற்றும் விடுதலை (12:1-4) ஆகியவை பற்றி வெளிக்காட்டுகின்றது. மற்றொரு இறைவெளிப்பாட்டு விவரிப்பில் (ஏச 24-27), இறைவன் உலக அரசனை தண்டிப்பார் (24:21-23), தீமையை குறிப் பிட்டு நிற்கும் பெயர் தெரியாத நகரை அழிப்பார் (25:1-5), இலவியாத்தான் என் னும் மிருகத்தை வெட்டி வீழ்த்துவார் (27:1) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனு டன், அவர் யூதாவிற்கு முழுமையான சமா தானத்தை அளித்து (26:1-5), யாக்கோபின் செல்வத்தை மீட்டுதருவார். இரு ஏற்பாடுக ளுக்கும் இடைப்பட்ட காலத்தில் இடைப் பட்ட ஊழிகளால் நிரப்பப்படும்படியாக, இறைவனுக்கும் உலகிற்கும் இடையில் கரு தப்பட்ட இடைவெளி விரிவடைந்தது.

புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டில் ஆண்டவரின் நாள் பற்றிய கருத்தை மீண்டும் உறுதிப்படுத்துவ தோடல்லாமல், புதிய ஏற்பாடு அதனை விரிவடையவும் செய்கின்றது. ஆண்டவரின் நாள் என்பது இயேசுவின் முதல் மற்றும் இரண்டாவது வருகையை குறிப்பிடுவதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வருங்கால மீட் பின் நிறைவேறுதலில் இஸ்ராயேல் தன் முதன்மையை இழக்குகிறது, தனி நபரின் ஊழ் முக்கியத்துவம் பெறுகிறது.

இயேசுவும் அப்போஸ்தலரான பவுலும் எதிர்காலம் பற்றிய தங்களுடைய அக்கறை யைத் தங்களது படிப்பினை மற்றும் போத னையின் திட்டத்திற்குள் உள்ளடக்கினர். தமது துன்பம் மற்றும் மரணத்திற்குச் சில நாட்கள் முன்னர், ஆலயத்தில் தமது இறுதி அறிவுரைக்குப் பின்னர் ஆலயத்தின் அழிவு பற்றிய சீடர்களின் கேள்விக்கு இயேசு பதில ளிக்கும்போது, ஆலய அழிவு மற்றும் உலக முடிவிற்கு முன்னர் ஒரு சில அடையாளங் கள் தோன்ற வேண்டுமெனக் குறிப்பிடுகின் றார் (மாற் 13). ஏறக்குறைய கி.பி. 51-இல் எழுதிய இரண்டு திருமுகங்களில், தனது இரண்டாவது வேதபோதகப் பயணத்தின் போது தெசலோனிய விசுவாசிகளுடன் விவாதித்து, இயேசுவின் வருகையைப் பற் றிய சில தவறான கருத்துக்களைத் திருத்துவ தற்குப் பவுல் முயல்கிறார். அவர்கள் கிறிஸ் துவின் இரண்டாவது வருகைக்கென ஆவலு டன் காத்திருப்பதைப் பாராட்டுகின்ற அதே வேளையில் (1 தெச 1:10), இறந்தோரிடமி ருந்து உயிர்த்தெழுந்தவர்களும் இன்னும்

உயிரோடு இருப்பவர்களும் ஒன்றாக இணைந்து ''வான வெளியில்'' (4:17), அறியாத நேரத்தில் (5:2, இரவில் திருடன் வருவதைப்போல) ஆண்டவரை சந்திப்போம் என்று குறிப்பிட வேண்டியது அவசியமெனப் பவுல் கருதுகின்றார். தெசலோனிக்காவில் மதம் மாறியவர்கள், இயேசுவின் உடனடிவருகையின்' காரணமாய் இனி உழைக்கத் தேவையில்லை என்று அவரது முதல் திருமுகம் சுட்டுவதாகப் புரிந்து கொண்டபோது, ஒரு சில நிகழ்ச்சிகள் நடப்பதற்கு முன்னர் கிறிஸ்து திரும்பிவரமாட்டார் (2 தெச 2:1-4); எனவே சோம்பேறியாக மாறியுள்ள விசுவாசிகள் மீண்டும் பயனளிக்கும் ஊழியத்தில் ஈடுபட வேண்டும் என்று பவுல் தனது இரண்டாவது திருமுகத்தில் பதிலளிக்கிறார் (3:6-13). தனது பிந்தைய கடிதங்களில் இத்தகைய விளக்கங்களைப்பற்றி அப்போஸ்தலர் குறிப்பிடாவிட்டாலும், வரவிருக்கும் தீர்ப்பின் நாளைப்பற்றி விசுவாசிகளை மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறார்.

1. நிகழ்கால இறுதிக்கால இயல்:- இயேசுவும் பவுலும் அரசின் நிகழ்கால ஆரம்பத்தையும் அரசின் எதிர்கால முழுமையினையும் வேறுபடுத்துகின்றனர். இயேசுவின் கலிலேய பணிக்கு முன்னர் அவரது அறிவிப்பினை மாற்கு குறிப்பிடுகின்றார், ''காலம் நிறைவேறிற்று, கடவுளின் அரசு நெருங்கி விட்டது, மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற் 1:14; மத் 4:17). அதில் இறையரசு தொடங்கப்பட்டுவிட்டது; பேய்களின்மீது வெற்றி கொண்டவராக இயேசு காட்டப்படுகிறார். மத்தேயுவின் கருத்துப்படி பல்வேறு புதுமைகளை நிறைவேற்றி (மத் 11:4-5) சாத்தானின் அரசினை வீழ்ச்சியடையச் செய்த இயேசு (12:28) பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களும் நீதிமான்களும் எதிர்பார்த்த நிலையினை உருவாக்கினார் (13:17).

மத்தேயு மற்றும் மாற்கு அரசின் முழுநிறைவு பற்றிய கருத்தினை ஒதுக்காவிட்டாலும் (மத் 19:28; 25:31-46; மாற் 13:3-37), அரசின் எதிர்கால முழுநிறைவினைப் பற்றி மற்ற இரு ஒத்தமை நற்செய்தியாளர்களையும்விட லூக்கா மிகவும் அழுத்திக் கூறுவதாகத் தெரிகிறது. லூக்கா நற்செய்தி கி.பி. 70-க்கு பின்னர் எழுதப்பட்டிருப்பின், மாற் 1:14 (லூக் 4:14-15) மற்ற பகுதிகள் பற்றிய அவரது விளக்கத்தின்படி, கிறிஸ்துவின் வருகை தாமதப்படுவதை ஏற்று அவரது நற்செய்தி அமைவதாக நமக்குத் தோன்றலாம். அதே சமயம், 'இறுதிக்காலத்திலிருந்து' ''இன்றைய நாளுக்கு'' லூக்கா கொண்ட மாற்றமும், சாத்தானின் வீழ்ச்சி மற்றும் சீடர்களின் அதிகாரம் பற்றிய இயேசுவின் வார்த்தைகளும் (10:18-19), இயேசுவின் வருகையின் தாமதத்தால் ஆதித்திருச்சபையில் ஏற்பட்ட குழப்பத்தை நீக்குவதற்காக, இயேசுவின் இறுதிக்காலம் பற்றிய கருத்தினை லூக்கா பயன்படுத்தவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

ஒத்தமை நற்செயதியாளர்களின் நிகழ்காலம், வருங்காலம் என்னும் தளமட்டமான வேறுபாட்டினை, அப்போஸ்தலரான யோவான் செங்குத்தான இருமைவாதமாக மாற்றுகிறார். அதில் விசுவாசிகள் கீழிலிருந்து மேலாக, அதாவது இறப்பு மற்றும் உலகினின்று வாழ்வு விண்ணகம் செல்லும் விதமாக மாற்றியமைத்திருப்பதாக முதல் நோக்கிலேயே தோன்றுகிறது. விசுவாசிகள் இந்த வாழ்விலேயே முடிவில்லா வாழ்வை கொண்டுள்ளனர் என்னும் இயேசுவின் உறுதிமொழி (யோவா 3:36; 5:24). இறந்தோரினின்று இலாசரை உயிர்ப்பித்ததன் மூலம் உயிர்ப்பின் இன்றைய உண்மை நிலை மற்றும் முடிவில்லா வாழ்வின் தொடர்நிலை ஆகியவற்றை வெளிப்படுத்துதல் (11:25-44), தனது காலத்தவர்கள் ஒளியாகிய தம்மை ஏற்று, ஒளியின் மக்களாக வேண்டும் என்னும் அவசர செய்தி (12:35-36) ஆகியவை இயேசுவின் வாக்குகளில் முனைப்பானவையாகத் தெரிகின்றன. ஆனால் யோவான் தளமட்டமான அல்லது காலம் சார்ந்த இறுதிக்கால இயலை பிளேட்டோ அல்லது ஞானவாதிகளின் செங்குத்தான இருமைவாதமாக மாற்றவில்லை. உண்மையில், தனிநபரின் நிறைவேறிய செங்குத்தான ஊழுக்கு

ஒரு திருத்தமாக அண்டத்தின் எதிர்கால தளமட்டமான நிறைவு தேவைப்படுகிறது, என்று அவர் விளக்குகிறார் (யோவா 12:47-48; 5:28-29). நிகழ்காலம் பற்றிய இதே போன்ற அழுத்தம் பவுலின் நூல்களிலும் காணப்படுகின்றது. 2 கொரி 6:2-இல் ஏச 49:8-யைப் பற்றி விளக்கும்போது 'ஏற்புடைய காலமும்' 'மீட்பின் நாளும்' வந்துவிட்டதாகக் கூறுகின்றார். மற்ற பகுதிகளில், மீட்பு மிக அருகில் இருப்பதால், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுமாறு தனது சீடர்களைத் தூண்டுகிறார் (உரோ 13:11-14; 'மிக அருகில்' பிலி 4:5).

2. எதிர்கால இறுதிக்கால இயல்:- மக்கள் அனைவரின் பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொண்டு, மீட்பை நிகழச்செய்த கிறிஸ்து (எபி 9:26), தமது மீட்புப்பணியை முழுமைப்படுத்த மீண்டும் ஒருநாள் வருவார் (எபி 9:28; 10:25; யாக் 5:7-9; 1 பேதுரு 1:5) என்று மற்ற புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் குறிப்பிடுகின்றன. கிறிஸ்துவின் மீட்பானது தனிநபர் மற்றும் சமுதாயம் ஆகிய இரண்டையும் கொண்டிருப்பதால், உடல் மரணம், ஆன்மாவின் இடைக்காலநிலை, உடலின் உயிர்ப்பு ஆகிய தனி நபரின் முடிவை கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, தீர்ப்பின் நாள், இறையரசு மற்றும் வானமும் வையகமும் மீண்டும் உருவாதல் ஆகியவற்றை ஒன்றாகக் கொண்ட உலகின் எதிர்கால நிறைவின் ஒரு பகுதியாகக் கருதுவது மிக அவசியமாகும்.

அ. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை:- உயிர்த்தபின்னர் நாற்பது நாட்கள் கழித்து விண்ணகம் சென்ற கிறிஸ்து (அ.ப.1:3, 11) அனைவரும் காணும் விதத்தில் (திருவெளி 1:7), வல்லமையோடும் மாட்சியோடும் மீண்டும் வருவதாக வாக்களித்தார் (மத் 24:30; 1 தெச 4:16-17). இயேசுவும் பவுலும் இந்நிகழ்ச்சி விரைவில் நடைபெறப்போவதாகப் போதித்திருந்தாலும், இரண்டாவது வருகைக்கான குறிப்பிட்ட நாளைப்பற்றிக் கணக்கிடுதலுக்கு எதிராக அவர்கள் எச்சரிக்கின்றனர் (மத் 24:27,36; 1 தெச 5:2).

ஆ. உயிர்ப்பு:- மனித உடலின் உயிர்ப்பைப்பற்றிய பழைய ஏற்பாட்டு உட்கருத்துக்களைப் புதிய ஏற்பாடு தெளிவுபடுத்துகின்றது. ஆண்டவர் இறந்தவருக்கெல்லாம் உயிருள்ளவரின் இறைவனாக உள்ளார் (மத் 22:32) என்னும் இயேசுவின் வார்த்தைகளை நற்செய்தி நூல்கள் கொண்டுள்ளன. மேலும், இயேசு உயிர்ப்பை நம்பினார் என்றும் அவை குறிப்பிடுகின்றன. (இக்கருத்தில், உயிர்த்தெழுதலை மறுக்கும் சதுசேயரிடமிருந்து விலகி, அவர் பரிசேயருக்கு நெருங்கியிருந்தார்). பவுலும் உடலின் உயிர்ப்பை ஏற்றுக்கொண்டார். தெசலோனிக்கா மக்களுக்கு எழுதும் போது, இறந்து மீண்டும் உயிர்த்து எழுந்ததாக தான் விசுவசிக்கும் இயேசு (1 தெச 4:14), மீண்டும் வரும்போது "உறங்குபவர்களை" எழுப்புவார், அதாவது, ஏற்கனவே இறந்தவர்களையும் உயிருடன் உள்ளவர்களுடன் ஒருங்கு சேர்ப்பார் (4:14-18). விசுவாசிகளின் உயிர்ப்பானது இயேசுவின் உயிர்ப்பிலேயே நங்கூரமிட்டிருப்பதாக, அவர் கொரிந்தியருக்கு விளக்குகின்றார். ஏனெனில், இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து (1 கொரி 5:4), தாம் மீண்டும் வரும்போது தமக்குரியவர்களை வாழ்விற்கு உயிர்ப்பிப்பார் (15:23).

விசுவாசத்தினாலும், அவருக்கு ஏற்பட்ட கிறிஸ்துவினுடைய காட்சியின் சான்றாலும் உடலின் உயிர்ப்பை ஏற்றுக்கொண்டாலும், மனித உடலின் இறப்பிற்கும், உயிர்த்த உடலுடனான ஆன்மாவின் ஒன்றிப்புக்கும் இடையிலான ஆன்மாவின்நிலை பற்றி பவுல் சிறிதளவே எழுதியுள்ளார். அழிவில்லாமை இறைவனுக்கு மட்டுமே உரியதாக அவர் கருதினார் (1 திமோ 6:16); மனித உயிர்கள் இச்சிறப்பை கொண்டிருப்பதாக அவர் ஒருபோதும் கற்பிக்கவில்லை. உடலளவில் இறந்தவுடன் மனிதன் வாழும் நிலையினை இழக்கிறான் என்று சுட்டிக்காட்டாமல் இருப்பதில் உன்னிப்பாக இருந்தாலும், ஆன்மாவிற்கு இயல்பாகவே அழிவில்லை என்னும் பிளேட்டோவின் கருத்திற்கு பவுல் ஆதரவு தரவில்லை. கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலும் அழியும்

வாழ்வானது உடனடியாக விண்ணகத்தி லுள்ள ஆண்டவருடனான புதிய வாழ்க்கை யுடன் இணைவதற்காக, உயிர்த்த உடலி னால் உடுத்தபட தான் ஏங்குவதாக அவர் அறிவிக்கிறார் (2 கொரி 5:1-4).

இ. தீர்ப்பு:- நேர்மையானவர்களுக்கு மீட்பு, நேர்மையற்றவர்களுக்கு அழிவு என் னும் இறைவாக்கு வேறுபாட்டைப் புதிய ஏற்பாடு தொடர்ந்து கடைப்பிடிக்கிறது. இயேசு, காட்சி வெளிப்பாட்டின் மனுமகனு டன் தம்மை ஒன்றுபடுத்தி, நாடுகள் இருகு ழுவாகப் பிரிக்கப்படுமாறு அவர்முன் ஒன்று சேர்க்கப்படும் என்று தமது சீடர்களிடம் கூறுகின்றார்; நேர்மையான வாழ்வு வாழ்ந்த வர்கள் முடிவில்லா வாழ்வையும் இறையர சையும் பெறுவர்; நற்செயல் புரியத்தவறிய வர்கள் முடிவில்லா தண்டனையைப் பெறு வர் (மத் 25:31-46). யோவானின் விவரிப்புப் படி ஒருவர் செய்த நன்மை தீமைக்கேற்ப வாழ்வு அல்லது தீர்ப்புக்கேற்ற உயிர்ப்பை இயேசு போதிக்கின்றார் (யோவா 5:28-29; திருவெளி 21:12-15). பவுலும் அதே போன்ற தொரு தீர்ப்பைப் பற்றிக் கற்பிக்கிறார் (உரோ 2:1-11; கலா 6:7-10).

ஈ. எதிர்கால வாழ்வு:- நீதிமான்கள் என கிறிஸ்துவால் தீர்ப்பிடப்பட்டவர்கள் அவ ரோடு முடிவில்லா வாழ்வு வாழ்வார்கள். புதிய ஏற்பாடு ஆசிரியர்கள் முடிவில்லா வாழ்வு பற்றி மட்டுமே கூறிவிட்டு, அதனு டைய இயல்பைப்பற்றி கூறாவிட்டாலும், அது பாவத்தின் ஆதிக்கமற்ற, ஆசிர்வதிக்கப் பட்ட அனுபவமாகும் என்று குறிப்பிடுகின் றனர். இத்தகைய விண்ணக வாழ்வானது உண்ணுதல், குடித்தல், உடலுறவு போன்ற பொதுவான செயல்கள் இல்லாத ஒன்றாகும் என இயேசு குறிப்பிடுகிறார் (மத் 22:30 இ). பவுலும் ஆன்மீக உயிர்த்த உடலை, இன் றைய மனித பருப்பொருளான, மண்சார்ந்த உடலிலிருந்து வேறுபடுத்துவதாகத் தோன் றுகிறது (1 கொரி 15:42-50).

இறைவன் மனிதனை முடிவில்லா துன் பத்திற்கும் நரக தண்டனைக்கும் தீர்ப்பிடுவ தாக விவிலியம் எங்குமே குறிப்பிடாவிட் டாலும், ஒரு சிலர் இறைவனுடன் கொள் ளும் முழுமையான தோழமையினை இழந் துவிடுவதை புதிய ஏற்பாடு கட்டிக்காட்டு கின்றது. மக்கள் நேர்மையற்றவர்களாக வாழ்வதை விவிலியம் கண்டித்து, அவர் களை மனந்திரும்பி, விசுவாசித்து, நற்செ யல் புரியுமாறு தூண்டுகிறது.

பவுலின் கூற்றின்படி, கிறிஸ்து தமது மீட்புப்பணியை முழுமையாக நிறை வேற்றி, படைத்த ஆண்டவரின் மேலாண் மையை அனைத்துப் படைப்புகளுக்கும் தெளிவுபடுத்திய பின்னர், நிகழ்காலத்தின் இறுதி நாளில், உலக அதிகாரத்தின் அனைத்து வல்லமைகளும் வெற்றிக்கொள் ளப்படும்; இங்கே குறிக்கப்படும் இறுதி வெற்றியானது கடவுளின் அதிகாரத்திற்குச் சாவையும் பாவத்தையும் அடிபணியச் செய் வதாகும் (1 கொரி 15:24-27).

உ. புதிய வையகம்:- பழைய ஏற்பாட்டு, குறிப்பாக ஏசயாவின் உருவகங்களைக் கையாண்டு, வயது முதிர்ந்த அப்போஸ்தல ரான யோவான் பாவம் மற்றும் போரினால் அச்சுறுத்தப்படாத மக்களுடன் இறைவன் நேரடியான தோழமை கொண்டுள்ள புனித நகரமாக புதிய எருசலேமைக் காண்கிறார் (திருவெளி 21:1-2). வீழ்ச்சிக்கு முன்பிருந்த தைப்போன்று வானமும் பூமியும் ஒன்றுபட் டிருப்பதை கண்டபின்னர் (21:2), இறைவ னின் அரியணையிலிருந்து புறப்படும் வாழ் வளிக்கும் நீரினால் ஊட்டப்பெற்று மீண்டும் உருவாகும் ஏதேன் தோட்டத்தினை யோவான் படம்பிடித்து காட்டுகின்றார் (22:1-3). மனித உயிர்கள் முழுமையான மீட்பை இவ்வுலகில் அனுபவிப்பர் என் பதை யோவான் உறுதிப்படுத்துகின்றார்.

III. இறையியல் சிந்தனைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இறுதிக்கா லம் பற்றிய படிப்பினைகள் பெருமளவு ஒதுக்கப்பட்டன. இவ்வுலகைச் சார்ந்த வாழ் வில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு ஆட்பட்டு இவ்வாறு நிகழ்ந்திருக்கலாம். ஆனால்,

இதற்கு நேர்மாறாக 20-ஆம் நூற்றாண்டில் குறிப்பாக பெரிய சமூக எழுச்சிகளின் காலத்தில், இறுதிக்கால இயலின் சில குறிப்பிட்ட கருத்துக்கள், குறிப்பாக பழமைவாத கிறிஸ்தவரிடையே, முக்கிய கவனத்தைப் பெற்றன.

1. காலத்தின் அடையாளங்கள்:- இரண்டாவது வருகைக்குமுன் நிகழக்கூடிய அடையாளம் பற்றிய இயேசுவின் விளக்கமானது, எருசலேம் ஆலயத்தின் அழிவுபற்றிய சீடர்களின் கேள்வி, தலைவர்களுக்கு இறைவன் (மாற் 13:1-4) அளித்த அடையாளங்களை அவர்கள் விளக்க இயலாமை பற்றிய இயேசுவின் கருத்து (மத் 16:2-4; லூக் 12:54-56) ஆகியவற்றின் பின்னனியில் நோக்கப்பட வேண்டும். அவர் இந்த அடையாளங்களை, எதிர் கிறிஸ்து (மத் 24:4-5), போர்கள் மற்றும் போர்களைப் பற்றிய வதந்திகள் (24:6), இன்னல் (24:10-12.24), மற்றும் அண்ட மாற்றங்கள் (24:29) என முறையாக வரிசைபடுத்தியிருந்தாலும், இந்நிகழ்ச்சிகள் காலவரிசைப்படி நிகழும் என்று இயேசு குறிப்பிடவில்லை. தமது காலத்தவர் தமது மறுவருகையின் நேரத்தைப்பற்றிக் கணிப்பதை தடுக்கும் அவர் (24:27.36), முதலாம் மற்றும் இரண்டாம் வருகைக்கு இடைப்பட்ட காலமானது இன்னல் மற்றும் அழிவு ஆகியவற்றால் நிரம்பியதாக இருக்கும் எனச் சுட்டிக் காட்டுகிறார். ஆனாலும், நற்செய்தியின் உலகளாவியபோதனையை அனுமதிப்பதற்கும், செயல்படுத்தப்படுவதற்கும், இறைவனின் அருளுக்கு அவர் பெருமளவு இடைவெளி அமைக்கிறார் (மத் 24:14; உரோ 11:25-26).

தெசலோனிக்கிய கிறிஸ்தவர்களை அமைதிப்படுத்துவதற்காக இரண்டாம் வருகைக்கு முந்தைய காலத்தைப்பற்றிய தனது விவரிப்பைப் பவுல் எளிமைப்படுத்துகின்றார். எதிர்கால நிகழ்ச்சிகளை மனிதப்போராட்டத்துடனும் சமய வலிமையினைப்பெற முயற்சி செய்கின்ற அக்கிரமி மனிதனின் தோற்றத்துடனும் அவர் நிறுத்திக் கொள்கிறார் (2 தெச 2:3-12). இயேசுவைப் போன்று பவுலும், விழிப்பாயிருந்து தங்களது நேரத்தை இறைவனின் பணியில் பயன்படுத்துமாறு விசுவாசிகளைத் தூண்டுகிறார்.

ஆ. திரு ஆயிர ஆண்டுக்கோட்பாடு:- சாத்தானின் இறுதித் தாக்குதலுக்கு முற்பட்ட கிறிஸ்துவின் மற்றும் உயிர்துறந்த விசுவாசிகளின் ஆயிரம் ஆண்டு ஆட்சி பற்றிக் குறிப்பிடும் திருவெளி 20:1-8-இல் காணப்படும் தெளிவில்லாத கருத்து கவனம் ஈர்த்துள்ளது. ஆனந்தப்பரவசம், இன்னல்கள், மற்றும் ஆயிரமாண்டு ஆட்சி ஆகியவற்றிடையே எழும் சிக்கலான உறவுமுறை பற்றிய பல்வேறு விளக்கங்கள், பழமையான கிறிஸ்தவர்களைத் தொடர்ந்து பிரித்து வருகின்றன.

காண்க ஆண்டவரின் நாள், ஆயிரமாண்டுக்காலம்.

இறுதிச்சாவை வருவிக்கும் பாவம்

பொதுவாக பாவம் நம்மை சாவுக்கு அழைத்துச் செல்கின்றது. புதிய ஏற்பாட்டில் 1 யோவா 5:16-17-இல் நான்கு முறை 'பாவம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. யோவான் இறுதிச்சாவை வருவிக்காத பாவம், இறுதிச் சாவை வருவிக்கும் பாவம் என்று பிரித்துக் காட்டுகின்றார். கடவுளிடமிருந்து பிறக்காதவர்களே இவ்விரு பாவத்தையும் செய்கின்றார்கள் (1 யோவா 5:18). யோவான் எண்ணப்படி சாவான பாவம் செய்பவர்கள் திருச்சபையினின்று வெளியே தள்ளப்படுவார்கள். உதாரணமாகத் தன் சகோதரனை வெறுக்கிற எவனும் கொலைக்காரன். கொலைகாரன் எவனிடத்திலும் முடிவில்லா வாழ்வு நிலைத்திருப்பதில்லை (3:15) அல்லது இயேசுவை மறுக்கச் செய்யும் எந்த ஏவுதலும் கடவுளிடமிருந்து வருவதன்று. எதிர் கிறிஸ்துவை ஏவும் ஆவயே அது. இவர்களை மனம் திரும்பி புத்துணர்வு பெறச் செய்வது அரிது. எனவே இவர்களுக்காக வேண்டுவது தேவையற்றது (எபி 6:4-6; 10:26-31; 12:15-17). காண்க பாவம், பாவிகள்.

இறுதி விருப்பப்பத்திரம், ஏற்பாடு (TESTAMENT)

இது ஒருவர் தனது நிலத்தையோ சொத்தையோ இறுதிவிருப்ப ஆவணத்தின் மூலம்

எழுதிக் கொடுப்பதாகும். இது அவர் இறந்த பின் செயல்படுத்தப்படும் ஈசாக்கின் ஆசீர் வாதம் (ஆதி 17); எலியாவின் ஆவியை இரண்டு மடங்கு பெற எலிசாவின் வேண்டு கோள் (2 அர 2:9); செலோபகாத்துவின் பெண்கள் (எண் 36); இவற்றில் நிலத்தைக் கொடுப்பதைப்பற்றி பேசப்பட்டாலும் மிக வும் குறைந்த குறிப்புகளே காணப்படுகின் றன. இஸ்ராயேலின் சட்ட முறைகளின்படி சொத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டிருக்க லாம் ஒரு அறிவாளி அல்லது தத்துவ மேதை யின் ஞான செல்வத்தைக் குறிக்க இதே எபிரேயச் சொல் பயன்படுத்தப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் தியாதெக்கே என்னும் கிரேக்க வார்த்தை ஏற்பாடு என் னும் பொருள்படும். ஆனால் அரிஸ்தோபா வின் ஒரு பகுதியில் அதே சொல் உடன்ப டிக்கை என்ற பொருளில் வந்துள்ளது. இந்த உடன்படிக்கையில் இருவருக்கிடையே ஒப் பந்தம் செய்யப்பட்டு அதில் ஒருவராவது சத்தியம் செய்வதால் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாட்டைப் பின்பற்றி, உடன்படிக்கை என்ற சொல் லையே பயன்படுத்துகிறது. ஆனால் எபி 9-இல் இந்தச் சொல் விருப்ப ஆவணம் என்ற பொருளில் வந்துள்ளது. இந்த விருப்ப ஆவ ணம் கொடுப்பவரின் இறப்புக்குப் பின்தான் செயல்முறைக்கு வருகின்றது. அதுபோ லவே பழைய ஏற்பாட்டில் பலிப்பொருளின் இறப்பு பழைய உடன்படிக்கையை ஏற்படுத் தியதுபோல், கிறிஸ்துவின் இறப்பு புதிய உடன்படிக்கையைஏற்படுத்தியது. கலா3:15-18-இல் பவுல் இதே ஒப்புமையைப் பயன்ப டுத்துகிறார். ஆபிரகாமோடு செய்த உடன்ப டிக்கை கட்டுப்பாடுடையது. ஆகையால் அவருக்கு பின்வந்த சந்ததியார் மாற்ற முடிய வில்லை. பிற்காலச் சட்டம் என்ன கூறியிருந் தாலும், உடன்படிக்கையின் சந்ததியான கிறிஸ்து வாக்குறுதியைப் பெறுகிறார்.

''ஏற்பாடு, உடன்படிக்கை'' ஆகிய இரண்டு வார்த்தைகளும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. இந்த இரண்டு வார்த் தைகளும் பெறுபவர் மாற்றமுடியாத ஏற் பாட்டைக் குறிக்கின்றன.

இறை அரசு

இறைவனால் ஆளப்படும் அரசு பற்றி விவிலியத்தில் குறிக்கப்பட்டிருந்தாலும் இக் கருத்திலே தொடர்ச்சியான வளர்ச்சியிருந் தது என்பதை மறுக்க முடியாது. ''இறைவ னின் அரசு அருகில் உள்ளது'' இதுவே திருமுழுக்கு யோவான், இயேசு இவ்விரு வர் போதனையின் முக்கிய குறிக்கோள் (மத் 3:1; 4:17). இயேசு மண்ணுலகில் நிலை நாட்ட வந்த புலன்களுக்கெட்டாத இந்த உண்மைப்பொருள் எதில் அடங்கி உள்ளது, அதன் இயல்பு என்ன, அதன் வேண்டுகோள் கள் யாவை என்று அறிய நாம் புதிய ஏற்பாட்டைப் புரட்ட வேண்டும். இருப்பி னும் இக்கருத்து பழைய ஏற்பாட்டில் உரு வாகிறது. இறையரசின் வருகைக்காகத் தயா ரித்து வருகையை அறிவித்த பொழுது அதன் முக்கியத் தோற்றங்களைப் பழைய ஏற்பாடு குறிப்பிட்டுள்ளது. இக்கருத்து தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது.

I பழைய ஏற்பாடு:- தெய்வீக அரசு என் பது முற்கால மேற்காசிய மதங்களுக்கெல் லாம் பொதுவான கருத்தாகும். இறையர சின் மண்ணுலகப் பிரதிநிதியாகிய மனித அரசனின் புனிதச் சிறப்பை எடுத்துரைக்கப் புராணங்கள் இக்கருத்தைப் பயன்படுத்தின. தெய்வீக ஆட்சியை விளக்கும்பொழுது பழைய ஏற்பாடு, ஒரே கடவுளை வணங்கும் தன்மை, தம் அரசியல் அதிகாரம் பற்றிய கருத்து, இறுதிக்கால மறை உண்மை அனைத்தோடும் ஒரு புதிய பொருளைப் புகுத்தியது.

1. இஸ்ராயேல் இறைவனின் அரசு:- யாவே-அரசன் என்ற கருத்து பழைய ஏற் பாட்டின் தொடக்கத்திலிருந்தே உருவாக வில்லை. ஆபிரகாம்; ஈசாக், யாக்கோபின் கடவுள், மோசேக்குத் தம் பெயரை வெளியி டும்போதும் கூட அரச குணங்களைக் கொண்டிருக்கவில்லை (யாத் 3). ஆனால்

கானான் நாட்டில் இஸ்ராயேலை நிலை நிறுத்தியபின் யாவேயினுடைய தனித் தன்மையையும் அவர் மக்களின் நிலையையும் சுட்டிக்காட்டும் வெளியடையாளமாக இக்கருத்து தோன்றுகிறது. யாவே இஸ்ராயேல் மேல் ஆட்சி செய்கின்றார் (நீதி 8:23; 1 சாமு 8:7). இறைவழிபாடு, விண்ணுலகில் அவருடைய வான தூதர்கள் செய்வதுபோல மண்ணுலகிலும் அவர் மக்கள் நிறைவேற்றும் ஒரு பணி; வழிபாட்டுப் பாடல்களிலும் (சங் 24:7-10), இறைவாக்கினரின் கவித்தத்துவத்திலும் (எச 6:1-5) இந்த அடிப்படைக் கருத்தைக் காணலாம். இதன் பல்வேறு பண்புகளை விவிலிய ஆசிரியர்கள் விவரிக்கின்றனர். விண்ணுலகிலும் (சங் 11:4; 103:19), மண்ணுலகிலும் (47:3) அவர் படைத்த முழு உலகிலும் (93:1 தொ; 95:3 தொ.) யாவே என்றென்றும் ஆட்சி புரிகின்றார் (யாத் 15:9). எல்லா நாடுகள் மேலும் அரசாட்சி நடத்துகின்றார் (எரே 10:7.10). இருப்பினும் அவைகளுக்குள் ஒரு நாட்டை தனித்த விதமாகத் தம் சொந்த ஆட்சிப் பகுதியாகத் தேர்ந்தெடுத்துள்ளார். அதுதான் இஸ்ராயேல். அதைத் தம் உடன்படிக்கையால் குருத்துவ அரசாகவும் புனிதப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நாடாகவும் ஆக்கியுள்ளார் (யாத் 19:6). எனவே யாவேயின் ஆட்சி தமது அரசாகிய இஸ்ராயேலில் தனிப்பட்ட முறையில் வெளியாகிறது. எருசலேமில் தன் மக்கள் நடுவே (சங் 48:3; எரே 8:19) அந்தப் பேரரசன் இருக்கின்றார். அங்கிருந்து தன் மக்களுக்கு ஆசி வழங்குகின்றார் (சங் 134:3). ஓர் ஆயன் தன் மந்தையை நடத்துவதுபோல (சங் 80; காண் எச 34) வழிநடத்துகின்றார், காப்பாற்றுகின்றார், ஒன்று சேர்க்கின்றார். இவ்வாறு உடன் படிக்கைக் கோட்பாடு தெய்வீக அரசுக்கருத்து வடிவில் சிறந்த முறையில் உருவெடுக்கின்றது. அதற்கு முழுவதுமே ஒரு புதுப்பொருளை அளிக்கிறது. சேனைகளின் தலைவராகிய (எச 6:5) யாவே உலகத்தின் போக்கைக் கட்டுப்படுத்துவதால் அவர் அதை ஆட்சிபுரிகின்றார். அதன் நிகழ்ச்சிகளை வழிமுறைப்படுத்துபவர் அவரே. ஏனெனில் அவர்தான் அவைகளை வழிநடத்திச் செல்கின்றார், அவைகள் மேல் தீர்ப்பிடுகின்றார். யாவே உலகின் அரசர் என்ற உண்மை அவருடைய மக்கள் அனுசரிக்கும் ஒழுங்குமுறையிலிருந்து தெரியவேண்டும், அவரது ஆட்சி வெளிப்படவேண்டும் என்று விரும்புகின்றார். இந்த முதல் வேண்டுகோள் அவர் ஆட்சிக்கு அரசியல் வடிவம் கொடுக்கவில்லை, ஒழுக்க நெறிவடிவம் கொடுக்கிறது. இது தெய்வீக அரசைச் சார்ந்த பழைய கருத்துக்களையெல்லாம் துண்டித்து விடுகிறது.

2. இறை அரசும் இஸ்ராயேலின் அரசுத் தன்மையும்:- இருப்பினும் இஸ்ராயேலான இறையரசு ஓர் அரசியல் அமைப்பைப் பெற்றுள்ளது. அது காலப்போக்கோடு வளர்ச்சியடைகிறது. ஆனால் மக்கள் தமக்கென ஓர் அரசனை ஏற்கும்பொழுது அந்த மனித நிறுவனம் யாவேயின் அரசுக்குக் கட்டுபட்டதாய் இருக்க வேண்டும். உடன்படிக்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இறையாட்சியின் ஓர் அங்கமாக அமைய வேண்டும். இவ்வுண்மை ஒரு பக்கம் முடியரசுக்கு எதிராக அப்போது எழுந்த எதிர்ப்பை விளக்குகிறது, (1 சாமு 8:1-7.19தொ); மற்றொரு பக்கம் இறைவன் பெயரால் வந்த தூதர்கள், சவுல் (10:24), தாவீது (16:12), இறுதியாக தாவீது அரச மரபினர் அனைவரும் யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கின்றனர். இப்போதிலிருந்து இறையரசு பக்கத்திலுள்ள பிற மக்களைப்போல அகில உலக அரசியலில் ஈடுபட்டுப் பூவுலக ஆதரவுக்காக ஒரு மனித அரசாட்சியைக் கொண்டிருந்தது. சந்தேகமின்றி இஸ்ராயேலின் அரசர்கள் சாதாரண அரசுத்தன்மையை நிலைநாட்டவில்லை. யாவேயிடம் இருந்து தங்கள் அரசுத்தன்மையைப் பெறுகின்றனர். அவருக்கு அவர்கள் பணிபுரியவேண்டும் (2 நாள் 13:8; காண் 1 நாள் 28:5). தாவீதின் வழித்தோன்றல்களைத் தன் புதல்வர்களாக யாவே கருதுகின்றார் (2 சாமு 7:14; சங் 2:7). இருப்பினும் முடியரசின் செயல் முறை தெளிவின்றித் துலங்குகின்றது. இறை ஆட்சியின் குறிக்கோள் அரசர்களின் இவ்வுலகப் பேராசையோடு ஒன்றுபடவில்லை. சிறப்பாக அவர்கள் இறைச்சட்டத்தைக் கண்டுண

ரத் தவறினர். எனவே இறைவாக்கினர், அரசியல் திட்டம் திருமறைத் திட்டத்திற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென ஓயாது நினைவூட்டுகின்றனர். அரசர்களின் பாவத்திற்காக அவர்களைக் குறை கூறுகின்றனர். வரவிருக்கும் தண்டனைகளை எடுத்துரைக்கின்றனர் (எடுத்துக்காட்டாக தாவீது 2 சாமு 12; 24:10-17). விசுவாசமுள்ள யூதர்களுக்குப் பெரிய குழப்பத்தை இறுதியாகக் கொணர்ந்து எருசலேமின் அழிவுநாள் இந்த அரசுச் செயல்முறையை முடிவுறச் செய்யும் வரை இஸ்ராயேல் அரசு வரலாறு கண்ணீரிலும் குருதியிலும் எழுதப்படுகின்றது (சங் 89:39-46). மானிட அரசர்கள் தாம் அதிகாரத்தைப் பெற்ற அரசரிடமிருந்து பிரிந்துகொண்டதே தாவீது அரச மரபின் அழிவிற்கு மூல காரணம் (காண் எரே 10:21).

3. யாவேயின் இறுதி ஆட்சிக்காக எதிர்பார்த்தல்:- இஸ்ராயேலின் அரசு வீழ்கின்ற காலத்தில் அந்நாட்டின் சமயத் தலைவர்கள் முடியாட்சிக் காலத்தைத் தாண்டி, தாங்கள் மீளவும் நிலைநாட்ட விரும்பிய முன்னைய மூல இறையாட்சியை (காண் யாத் 19;6) எதிர்நோக்கியிருக்கின்றனர். இறுதிக்காலத்தில் இஸ்ராயேல் தம் சொந்த இயல்புகளைத் திரும்பப் பெறும் என்று இறைவாக்கினர் அறிவிக்கின்றனர். உறுதியாக அவர்கள் தங்கள் வாக்குறுதிகளுள் வருங்கால அரசன், மெசியா, தாவீதின் புதல்வனுக்கும் இடம் கொடுக்கின்றனர். சிறப்பாக நாடு கடத்தலின் இறுதிக்காலத்திலிருந்து யாவேயின் அரசுக்கருத்து மீண்டும் மிக முக்கியத்துவத்தைப் பெறுகிறது. யாவே ஓர் ஆயனைப்போலத் தம் மந்தைகளைக் காப்பாற்ற, மீண்டும் ஒன்று சேர்க்க, தம் நாட்டிற்கு வழிநடத்தத் தொடங்குகிறார் (மீக் 2:13; எச 34:11...; ஏச 40:9தொ) எருசலேமில் அறிவிக்கப்படும் ஒப்பற்ற நற்செய்தி: ''உங்கள் கடவுள் ஆட்சி புரிகின்றார்'', என்பதாகும் (ஏச 52:7; காண் செப் 3:14 தொ). மேலும் இந்த ஆட்சி படிப்படியாக அகில உலகிற்கும் பரவுவதை அங்குக் காணலாம். எல்லா இடங்களிலிருந்தும் யாவே அரசரை வழிபட மக்கள் எருசலேமுக்கு வருவார்கள் (செப் 14:9; ஏச 24:23).

இந்த ஒளிமயமான வாக்குறுதிகள் ஒரு வழிபாட்டுச் சூழ்நிலைக்கு மாற்றப்பட்டு சில பழைய சங்கீதங்களின் கருத்துக்களை இசைத்து நாடுகடத்தலுக்குப் பின்னெழுந்த பாடல்கள் இறுதிக்கால இறையாட்சியை முன்னதாகவே இசை முழக்கம் செய்கின்றன. அந்த உலகலாவிய பேராட்சி தெய்வீகத் தீர்ப்பினால் வெளியிடப்பட்டு எல்லா நாடுகளிலும் பறைசாற்றப்படுகிறது, கண்டு உணரப்படுகிறது (சங் 47; 96-99; காண் 145; 11தொ). இறுதியாக அந்தியோக்கு எப்பிபானின் துன்புறுத்தல் காலத்தில் தானியேலின் திருவெளிப்பாடு பெருமிதத்தோடு இறைவாக்கினரின் வாக்குறுதிகளைப் புதுப்பிக்கிறது. இறைவனின் யாவும் கடந்த ஆட்சி மனிதப் பேரரசுகளின் அழிவின் மேல் நிலைநாட்டப்பெறும் (தானி 2:44). இக்கருத்தை விளக்க இவ்வுலகில் அரசியல் அதிகாரங்களைச் சுட்டிக்காட்டும் மிருகச் சின்னங்களுக்கு மாறாக மனுமகன் விண்ணக மேகங்களில் வருகிறார் என்ற சின்னம் பயன்படுகிறது (7). அவர் வருகை தீர்ப்போடு வரும், அதன்பிறகு அரசுரிமை மனுமகனுக்கும் இறைவனின் புனித மக்களுக்கும் என்றென்றும் வழங்கப்படும் (7:14.27). இவ்வாறு யாவேயின் ஆட்சி மக்களையே உறைவிடமாகக்கொண்ட தெளிவான அரசாய்த் துலங்கும் (காண் யாத் 19;6). ஆனால் அந்த அரசு இனிமேல் இந்த உலகத்தைச் சார்ந்ததாக இராது. அத்தகைய வாக்குறுதியைத்தான் ஞானாகமம் எதிரொலிக்கிறது. தீர்ப்புக்குப் பின் நீதிமான்கள் நாடுகளுக்குக் கட்டளையிடுவர், மக்களை ஆண்டு வருவர். ஆண்டவர் என்றென்றும் அவர்களை ஆண்டு நடத்துவார் (ஞான 4:8).

திருமுறைப் புற இலக்கியங்கள் காட்டுவதைப்போல, பல நூற்றாண்டுகளாகத் தயாரித்தபின் யூத மக்கள் இனிமேல் அந்த ஆட்சியை எதிர்நோக்கியே வாழ்வர். அடிக்கடி அந்த எதிர்நோக்கு அரசியல் வடிவத்தில் வெளிப்படுகிறது. மெசியா தாவீதின் அரசை மீண்டும் நிலைநாட்டுவார் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இறை நெறியில் முதிர்ந்த மக்கள் இங்கு உள்ளார்ந்த

A

உண்மையைக் கண்டுணர அறிவர். யூத மறை வல்லுநரின் கூற்றுப்படி, சட்டத்திற்குச் கீழ்ப் படிந்துதான் நீதிமான் விண்ணக அரசின் ஊழியத்தை ஏற்றுக் கொள்கின்றார். அரசின் நற்செய்திக்குச் செவிமடுக்க வேண்டிய நம் பிக்கை அத்தகையது. வலிமை மிக்க ஆனால் இரு பொருள்படும் இத்தகைய நம்பிக்கைக்கு அரசு பற்றிய நற்செய்தி பதில் அளிக்கும்.

I புதிய ஏற்பாடு

1. சொல்:- மத்தேயு நற்செய்தி இறையரசு என்ற சொல்லை நான்கு முறைதான் பயன்ப டுத்தப்படுகிறது (12:28; 19:24; 21:31-43). இதற்குப் பதிலாக விண்ணரசு என்ற சொல்லை முப்பத்து நான்கு முறைப் பயன் படுத்துகிறது. விண்ணரசு என்ற சொல் புதிய ஏற்பாட்டில் மற்ற நூல்களில் காணப்பட வில்லை. இது அரமேயிக் பதத்தின் சொற் பொருள் மொழிபெயர்ப்பாகும். தனது யூத-கிறிஸ்தவர்களின் உணர்வுகளுக்கு மதிப்ப ளித்து மத்தேயு இதைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

-மற்ற புதிய ஏற்பாட்டு நூல்களில் இறைய ரசு என்ற சொல்லே பயன்பட்டுள்ளது. மாற் கில் பதினான்கு தடவையும், லூக்கில் இரு பத்திரண்டு தடவையும் யோவானில் இருத டவையும், அப்போஸ்தலர்பணியில் ஆறு தடவையும் பவுலின் திருமுகங்களில் எட்டுத் தடவையும், திருவெளிப்பாட்டில் ஒரு தட வையும் இச்சொல்பயன்பட்டுள்ளது. இந் நூல்களில் இச்சொல்லுக்கு இணையான மற்ற சொற்களும் இறையரசை உணர்த்தப் பயன்பட்டுள்ளன.

2. இறையரசின் நற்செய்தி:-

அ) இயேசு தம் போதனையில் இறையர சிற்கு முதலிடம் கொடுக்கின்றார். கலிலே யாவின் சிறு நகரங்களில் அவர் அறிவித்தது அரசின் நற்செய்தியாகும் (மத் 4:23; 9:35). ''இறையரசு'' என்று மாற்கு எழுதுகின்றார். யூதமறை வல்லுநர் மொழிக்கு உடன்பட்டு, ''விண்ணரசு'' என்று மத்தேயு எழுதுகின் றார். இந்த இரண்டு சொற்றொடர்களும் ஒரே பொருள் கொண்டவை. போதனை யைத் தொடர்ந்து புதுமைகளும் அரசின் முன்னிலைக்கு அடையாளங்களாகத் துவங் குகின்றன. அதன் பொருளை அவைகள் நம்மை உணரவைக்கின்றன. அதன் வருகை யோடு பாவம், சாவு ஆகியவை மூலம் அலகை மனிதன் மேல் கொண்ட ஆட்சி முடிவிற்கு வருகின்றது. ''இறைவனின் வல் லமையால் நான் தீய ஆவிகளை ஓட்டுகின் றேன் என்றால் இறையரசு உங்கள் மத்தியில் வந்துள்ளது'' (மத் 12:28). ஓர் உறுதியான முடிவு இருக்க வேண்டியது இதன் விளைவு. இயேசுவின் சீடராக அரசின் வேண்டு கோளை ஏற்கக் கட்டாயம் மனம் திரும்ப வேண்டும்.

ஆ) அப்போஸ்தலர்கள் தம் தலைவரோடு வாழ்ந்ததிலிருந்து அரசின் நற்செய்தியைப் பறைசாற்றும் பணியை, ஏற்கின்றனர் (மத் 10:7). ஐம்பதாம் நாள் விழாவிற்குப் பின்னர், புனித பவுலின் போதனையிலும் கூட, அரசு நற்செய்தி போதனையின் மையக் கருத்தாக விளங்குகிறது (அ.ப. 19:8; 20:25; 28:23.31). இறை அரசில் நுழைவதற்காகவே மனம் திரும்பிய விசுவாசிகள் எண்ணற்ற இன்னல் களை அனுபவிக்கின்றனர் (14:22). ஏனெ னில் இறைவன் தன் மாட்சிமைக்கும் அரசுக் கும் அவர்களை அழைத்துள்ளார் (1 தெச 2:12). இனிமேல் நற்செய்தியின் முழுப்பொ ருள் அழைப்புக்கும் இறையரசோடு இயேசு வின் பெயரை மட்டும்தான் சேர்த்துக் கொள் ளவேண்டும்; அரசை அடைய இயேசுவில் விசுவாசம் கொள்ள வேண்டும் (அ.ப. 8:12).

3. இறையரசின் மறையுண்மைகள்:- இறையரசு புலனறிவைக் கடந்த உண்மை. அதன் இயல்பை இயேசு மட்டும்தான் தெரிவிக்க முடியும். இருப்பினும் சிறியோ ருக்கும் தாழ்ச்சியுள்ளோருக்கும் மட்டுமே அவர் அதை வெளிப்படுத்துகிறார். இவ்வு லக விவேகிகளுக்கும் அறிவாளிகளுக்கு மன்று (மத் 11:25). வெளிமக்களுக்கன்று, ஆனால் தன் சீடர்களுக்கு அறிவிக்கின்றார். வெளிமக்களுக்குப் புரியாத புதிராக இருக் கின்றது (மாற் 4:11). நற்செய்திகளைக் கற்பிக்

கும் முறை, குறிப்பாக உவமைகளில், அரசின் மறையுண்மைகளைப் படிப்படியாக வெளிப்படுத்துதலிலே பெரும்பாலும் அடங்கியுள்ளது. உயிர்ப்புக்குப் பிறகு இந்தக் கற்பிக்கும் முறை முழுமை பெறும் (அ.ப. 1:3); தூய ஆவியின் செயல் இதை முடிவுக்குக் கொண்டு வரும் (காண்க: யோவா 14:26; 16:13தொ).

அ) அரசின் முரண்பாடுகள்:- யூதத்துவம் பழைய ஏற்பாட்டின் இறுதிக்காலம் பற்றிய வாக்குரைகளைச் சொல்லுக்குச் சொல்லோடு கூடிய பொருளை எடுத்துக்கொண்டு அரசின் வருகை வியப்புத் தருவதாயும் உடனடியாக வருவதாயும் வெளிப்படுத்தியது. இயேசு அதை முழுதும் வேறு முறையில் புரிந்து கொள்கின்றார். இறை வார்த்தை மனிதர்களுக்கு உரைக்கப்பட்டபோது அரசு வருகிறது. அத்தகைய விதை நிலத்தில் விதைக்கப்பட்டு வளர வேண்டும் (மாற் 4:26-29), மாவில் புதையுண்ட புளிக்காரம் போல உலகை மேலுயர்த்தும் (மத் 13:33). அதன் தாழ்ச்சியான தொடக்கம் இவ்வாறு அதற்கு வாக்களிக்கப்பட்ட வருங்காலத்திற்கு வேறுபாடாக உள்ளது. உண்மையில் இயேசு பாலஸ்தீனத்தைச் சார்ந்த யூதர்களுக்கு மட்டும் அவ்வார்த்தையை உரைக்கவில்லை. அவர்களிலும் ஒரு சிறிய மந்தையான சீடருக்கு அரசு அளிக்கப்படுகிறது (லூக் 12:32). ஆனால் அதே அரசு வானகத்துப் பறவைகளெல்லாம் தங்கும் ஒரு பெரிய மரமாக மாற வேண்டும் (மத் 13:31தொ). அது எல்லா நாடுகளையும் தன்னுள் ஏற்றுக் கொள்ளும். ஏனெனில் அது எந்த ஒரு நாட்டுக்கும், யூத மக்களுக்கும்கூட, கட்டுப்பட்டதன்று. இந்த உலகில் எந்த அளவிற்கு மனிதர்கள் இறைவாக்கை ஏற்கின்றனரோ அந்த அளவிற்கு (மத் 13:23) அது கண்ணுக்குப் புலப்படாத உண்மைப் பொருளாகத் துலங்கக் கூடும். உண்மையில் அதன் வருகை எந்தவித உலக வெளித் தோற்றத்தினாலும் கண்டுணரும்படி அமையவில்லை (லூக் 17:20 தொ). இருப்பினும் ஒரு நிலத்தில் கோதுமை களைளுடன் கலந்திருப்பது போல அது வெளித் தோற்றத்தில் காணப்படுகிறது (மத் 13:24). இதைப்பெற்ற சிறிய மந்தை (லூக் 12:32) பேதுருவின்மேல் கட்டப்பட்ட திருச்சபை, புதிய இஸ்ராயேல் என்ற மண்ணுலக உருவத்தோடு தோன்றுகிறது. விண்ணக அமைப்பு மனித ஆட்சியைப் போல் இல்லாதிருப்பதை கவனிக்க வேண்டும். மக்கள் தம்மை அரசனாக்க விரும்பிய பொழுது இயேசு தம்மையே மறைத்துக் கொள்கின்றார் (யோவா 6:15). முழுவதுமே தனிப்பட்ட பொருளில், மெசியா என்ற பெயரால் தன்னை அழைக்க அனுமதிக்கின்றார்.

ஆ) அரசின் வளர்ச்சிப் பருவங்கள்:- அரசு வளர்ச்சி பெறுகிறது என்று எண்ணும்பொழுது அது காலக் கணிப்பையும் மனதிற் கொண்டிருக்க வேண்டும். ஒரு பெருளில், காலம் உறுதியாக நிறைவு பெற்றுவிட்டது. அரசு இங்கே இருக்கிறது. திருமுழுக்கு யோவானிலிருந்து அரசின் சகாப்தம் தொடங்கியுள்ளது (மத் 11:12 தொ). இது திருமணத்தின் காலம் (மாற் 2:19; காண் யோவா 2:1-11). அறுவடையின் காலம் (மத் 9:37 தொ; காண் யோவா 4:35). ஆனால் வளர்ச்சியின் உவமைகள் (விதை, கடுகு விதை, புளிக்காரம், களையும் நல்ல கோதுமையும், மீன்; காண் மத் 13) அரசின் வரலாற்றுத் தொடக்கத்திற்கும் அதன் முழு நிறைவுக்கும் இடையே உள்ள தாமதத்தைக் குறிப்பிடுகின்றன. இயேசுவின் உயிர்ப்பிற்குப்பின் மாட்சிமையில் அவர் புகுதலும், நீதிபதியாகத் திரும்ப வருதலும் ஆகிய இவ்விரண்டின் பிரிவு (அ.ப. 1:9 தொ) இந்த இடைக்காலத்தின் தன்மையை வெளிக் காட்டி முடிவுறும். இதுவே சாட்சியின் காலமாக இருக்கும் (அ.ப. 1:8; யோவா 15:27). இதுவே திருச்சபையின் காலம். இக் காலத்தின் இறுதியில் தன் முழுநிறைவில் அரசு வந்து சேரும் (காண் லூக் 21:31). கடந்து செல்லல் நிறைவேறும் (லூக் 21:14 தொ). இதுவே இறுதிக்காலத்தின் விருந்து (லூக் 21:17). அங்கே எல்லா இடங்களிலிருந்தும் அழைக்கப்பட்டோர் குல முதியவர்களோடு விழாக் கொண்டாடுவார்கள் (லூக் 13:28 தொ; காண் 14:15; மத் 22:2-10; 25:10). இந்த அரசின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை,

அவர்களின் உடல் உயிர்ப்பும் மாற்றுருவும் பெற்ற பிறகு (1 கொரி 15:50; காண் 6:10; கலா 5:21; எபே 5:5) விசுவாசிகள் அதைத் தம்முரிமையாக்கிக் கொள்ள அழைப்புப் பெறுகின்றனர் (மத் 25:34). இதற்கிடையே, தம் செபங்களால் அதன் வருகைக்காகத் தொழுது வேண்டுகின்றனர் ''உமது அரசு வருக'' (மத் 6:10இ)

இ. அரசில் நுழைய நிபந்தனைகள்:- அரசு இறைவனின் தலைசிறந்த கொடை, உண்மையான வெகுமதி, தன் உடைமையெல்லாம் விற்று அக்கொடையைப் பெற வேண்டும் (மத் 13:44 தொ), ஆனால் அதைப் பெறுவதற்கு, சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். அது, நீதியின்படி கருதப்படும் வெகுமதியன்று;இறைவன் தன் திராட்சைத் தோட்டத்தில் மனிதர்களைத் தாமாகவே வேலைக்கு அமர்த்துகிறார், தாம் விரும்பியதைத் வேலையாட்களுக்குக் கொடுக்கின்றார் (மத் 20:1-6). இருந்தபோதிலும், எல்லாம் இறையருளாக இருந்தால், மனிதன், அந்த அருளுக்குப் பதில் அளிக்க வேண்டும் ''தீமையில் வண்மை பெற்ற பாவிகள்'' கிறிஸ்துவுக்கும் இறைவனுக்கும் உரிய அரசில் உரிமைப் பேறு அடையார். அரசைத் தமதாக்கிக் கொள்ளமாட்டார்கள் (1 கொரி 6:9தொ; கலா 5:21; எபே 5:5; காண் திருவெளி 22:14 தொ). ஆன்மாவில் ஏழ்மை (மத் 5:3), குழந்தைபோன்ற மனப்பாங்கு (18:1-4; 19:14), இறைவனுடைய அரசையும் அவருடைய ஏற்புடையதையும் முதலில் தேடுதல், அரசுக்கும் அதன் நீதிக்காகவும் முயற்சித் தேட்டம் (6:33), இடுக்கண்களை ஏற்றுக் கொள்ளல் (5:10; அ.ப. 14:22; 2 தெச 1:5), தன் உடைமையெல்லாம் துறத்தல் (மத் 13:14 தொ; காண் 19:23), பரிசேயர்களை விடச் சிறந்த ஒழுக்கம் (5:20), சுருக்கமாக, தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றல் (7:21), சிறப்பாக சகோதர அன்புச் செயலை நிறைவேற்றுதல் (25:34); அரசில் நுழைந்து இறுதியில் அதைத் தன் உரிமையாக்கிக் கொள்ள விரும்புகிறவரிடம் இவை அனைத்தும் கோரப்படுகின்றன. ஏனெனில் எல்லோரும் அழைக்கப்பட்டிருந்தாலும் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். திருமண உடையில்லா விருந்தினன் வெளியே அனுப்பப்படுவான் (22:11-14) தொடக்கத்தில் மனத் திருப்பம் தேவை (காண் 18:3). இந்தப் புதிய பிறப்பு இல்லையெனில் இறை அரசைக் காண முடியாது (யோவா 3:3 தொ). பழைய ஏற்பாட்டுக் காலத்தைப் போல யூத மக்களினத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்க வேண்டுமென்பது இறையரசுக்கு இனிமேல் முக்கிய நிபந்தனை அன்று. ''விண்ணக அரசின் விருந்தில் பங்குபெற கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் அநேகர் வருவர். அதே வேளை அரசைச் சார்ந்த மக்கள் வெளியே தள்ளப்படுவர்'' (மத் 8:11 தொ). சில உவமைகள் தீர்ப்பின் நிலையைத் தெளிவாக விளக்குகின்றன. களையையும் நல்ல கதிர் மணியையும் பிரித்தல் (13:24-30), மீன்களைப் பொறுக்கி எடுத்தல் (13:24-30), கணக்குக் கொடுத்தல் (21:8-15; 25:15-30): இவைகள் அனைத்தும் ''விழித்திரு'' என்ற வேண்டுகோளை உள்ளடக்கியவையாகும் (25:1-13).

4. இறையரசும் இயேசுவின் அரசுத் தன்மையும்:- புதிய ஏற்பாட்டில் இறையரசு, மெசியாவின் ஆட்சி இவ்விரண்டு கருத்துக்களும் நெருங்கிய தொடர்புடையன. ஏனெனில் மெசியா அரசர் இறைமகனேயாவார். அரசு பற்றிய மறையுண்மையின் மையத்தில் இயேசுவின் இந்த இடம், ஒன்றன்பின் ஒன்றாக மூன்று நிலையில் காணப்படுகிறது. அந்நிலை வழியே அரசின் மறையுண்மை செல்ல வேண்டும். இயேசுவின் மண்ணுலக வாழ்வு, திருச்சபையின் காலம், பொருட்களின் இறுதி நிறைவு பெறல்.

அ. தம் வாழ்நாளில் இயேசு அரசன் என்ற பெயரைப் பயன்படுத்த மிகவும் தயங்குகின்றார். இறைவாக்கினரின் வாக்குறுதிக்கு இணங்கி (மத் 21:1-11) மெசியாவின் பெயரை ஏற்றுக் கொண்டால் அவர் அதனுடைய அரசியல் தொடர்புகளை ஒதுக்கிவிட வேண்டும் (காண் லூக் 23:2). அவர் வெளிப்படுத்தும் அரசு ''இந்த உலகைச் சார்ந்தது அன்று''. அது உண்மைக்குச் சான்று பகரும் சாட்சிகளினால் வெளிப்படுத்தப்படுகின்றது

(யோவா 18:36 தொ) மாறாக இறையரசின் குறிக்கோளைத் தமதோடு ஒன்றாக்க அவர் தயங்கவில்லை. இறையரசுக்காக எல்லாவற்றையும் விட்டுவிடல் (லூக் 18:29), அவர் பெயருக்காக எல்லாவற்றையும் விட்டுவிடுதல் ஆகும் (மத் 19:29; காண் மாற் 10:29). மனிதர்களுக்காகக் காத்திருக்கும் இறுதிக் கால பரிசை முன் கூட்டியே விளக்கும் போது, மனுமகனின் அரசையும் தந்தையின் அரசையும் ஒன்றுபடுத்திப் பேசுகிறார் (மத் 13:41 தொ). அவர் தந்தை அவருக்குக் கொடுத்ததுபோல அவர் அப்போஸ்தலருக்கு அந்த அரசை அளிப்பதாக உறுதி கூறுகிறார் (லூக் 22:29 தொ).

ஆ. அவரது உழைப்பின் நேரம்வரை அவர் அரச நியமனம் நடைபெறாது. அதன் பிறகுதான் தம் தந்தையோடு அதே ஆசனத்தில் அமர்கின்றார் (திருவெளி 3:21). பிறகுதான் இறைவன் வலப்புறம் அமர்ந்து மகிமைபெறுகின்றார் (அ.ப. 2:30-35). திருச்சபையின் நிறைவு காலத்தில் இறைவனின் ஆட்சி கிறிஸ்துவின் ஆட்சி வழியாக மனிதர்கள் மேல் செலுத்தப்படுகின்றது. அவரே உலகனைத்திற்கும் ஆண்டவர் (பிலி 2:11). தந்தை தம் மகனை அரசர்களுக்கு அரசராக ஆண்டவர்களுக்கு ஆண்டவராக நியமித்துள்ளார் (திருவெளி 19:16; 17:14; காண் 1:5).

இ. காலக்கடைசியில் கிறிஸ்து, தன் பகைவர்களையெல்லாம் வென்றவர், தந்தை இறைவனுக்கு அரசைக் கையளிப்பார் (1 கொரி 15:24). பிறகு இந்த அரசுரிமையை நமது ஆண்டவர் கிறிஸ்து முழுவதும் பெற்றடைவார் (திருவெளி 11:15; 12:10). விசுவாசிக்ன் கிறிஸ்துவினுடையதும், இறைவனுடையதுமான அரசை உடைமையாக அடைவார்கள் (எபே 5:5). இவ்வாறு, இறைவன், எல்லாவற்றிற்கும் தலைவன், தன் அரசின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வார் (திருவெளி 19:6). இயேசுவின் சீடர்கள் இந்த அரசின் மாட்சிமையில் பங்கு கொள்ள அழைக்கப்படுவர் (3:21). ஏனெனில் இவ்வுலகில் இயேசு அவர்களின் கடவுளும் தந்தையுமானவர்க்கு அரச குருக்களாக அவர்களை ஆக்கியிருந்தார் (1:6; 5:10; 1 பேதுரு 2:9; காண்க யாத் 19:6).

இறை ஆவி (SPIRIT OF GOD)

இறை ஆவியானவரை இறைத்தந்தையிடமிருந்தும் இறைமைந்தனிடமிருந்தும் பிரிக்கமுடியாது. அவர் மற்ற இருவரோடும் ஒன்றியே இயேசு கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்துகிறார். ஆயினும், அவர் தனி ஆளாய் இருப்பதால் தமக்கே உரித்தான முறையில் தம்மை வெளிப்படுத்துகிறார். மகன் தாம் யாரென்றும், தாம் இடைவிடாது கண்ணோக்கும் இறைத்தந்தை யாரென்றும் தாம் எடுத்துக் கொண்ட நம் மனித இயல்பிலே தெளிவாய் விளம்புகிறார். ஆகவே, இத்திருமைந்தனுடையவும் திருத்தந்தையுடையவும் தனிச் சிறப்புகள் சிலவற்றை நம்மால் சிறிது உணர முடிகிறது. ஆனால், தூய ஆவியானவரைக் குறித்துக் காட்டும் தனி வடிவோ சொல்லோ நம் மனித அனுபவத்தில் காணோம். எல்லா மொழிகளிலும் அவரது பெயர், இயல் நிகழ்ச்சியிலிருந்து எடுக்கப் பெற்ற காற்றையோ மூச்சையோ குறிக்கும் ஆவி எனும் பொதுப் பெயரே. (எபிரேயத்தில் ''ரூஆஹ்'' கிரேக்கத்தில் ''ப்னவுமா'', இலத்தீனில் ''ஸ்பீரித்துஸ்'' காண்க) இதனால்தான், ''உமது ஆவியை நீ அனுப்பினால் அவை (விலங்குகள்) படைக்கப்படும்; உலகனைத்தும் புத்துயிர் பெறும்'' (சங் 104:30) என, ஒரே வசனத்தில், கால மாறுபாட்டைக் கணித்தாலும் தெய்வீக மூச்சின் அண்ட சாயலையும், இதயங்களுக்கு உயிர் ஊட்டும் தூய ஆவியின் அருட்பொழிவையும் சம பொருத்தமாக வைத்துக்கூற ஆசிரியரால் முடிந்தது.

ஆவியானவரைத் தொட்டுணர முடியாது. அவரது குரலைக் கேட்கலாம் அல்லது அவர் கடந்து செல்வதைச் சில வியத்தகு அருங்குறிகளால் சற்று உணரலாம்; ஆனால், எங்கிருந்து வருகிறார், எங்குச் செல்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள இயலாது (யோவா 3:8). தாம் ஆட்கொண்டு உருமாற்றிய இன்னொருவர் வழியாகவே அவர் எப்போதும் செயலாற்றுகிறார். மாபெரும் அறிகுறிக

ளால் உலகனைத்துக்கும் புத்துயிர் அவர் அளிக்கின்றார் (சங் 104:30) என்பதற்கு ஐய மில்லை. ஆனால் அவரது செயல் எப்பொழு தும் உள்ளே இருந்தே அரும்புகிறது; ஒரு வித உள்ளுணர்வாலேயே அவரை நாம் உணர்ந்துகொள்கிறோம்; ''உங்களில் அவர் தங்கி இருப்பதால் அவரை நீங்கள் அறிவீர் கள்'' (யோவான் 14:17). ஆவியானவரின் பெரும் அடையாளங்கள் - நீர் தீ, காற்று போன்ற இயற்கை உலகைச் சார்ந்தவை; தெளிவான உருவடிவம் கொண்டிராதவை. இவை, நம்மைச் சூழ்ந்திருக்கும் ஒருவித பிரசன்னத்தையும், எதிர்க்க முடியா வண் ணம் மேன்மேலும் நம்மை அதிரவைக்கும் ஒரு விரிவாக்கத்தையும் எல்லாவற்றிற்கும் மேலாய் நமக்கு நினைவுறுத்துகின்றன. இறைத் தந்தை, திருமகன் இவர்களைப் போல ஆவியானவரும் அதே அளவு மறை பொருள் ஆனவர்தான். ஆயினும் கடவுள் ஒரு மறை பேருண்மை என்பதை ஆவியான வர்தான் அதிகம் நமக்கு நினைவுபடுத்துகி றார். ''கடவுள் ஆவியானவர்'' (யோவான் 4:24) என்பதையும், ''ஆண்டவர் ஆவியான வர்'' (1 கொரி 3:17) என்பதையும் ஒருபோ தும் நாம் மறந்துவிடாதபடி இந்த இறை ஆவியானவர் செய்கிறார்.

I பழைய ஏற்பாடு:- இறை ஆவி இங்கு ஓர் ஆளாக இன்னும் வெளிப்படுத்தப்பட வில்லை; ஆனால், அரும்பெரும் செயல்க ளைச் செய்யும்திறனைக் கொண்ட மனிதர் களை உருவாக்கும் ஒரு தெய்வீகச் சக்தியா கக் காட்டப்படுகிறார். இச்செயல்கள் இறை மக்கள் தம் அழைத்தலில் உறுதியாயிருக்கத் துணைபுரிபவையாயும், தூய கடவுளின் தொண்டர்களாயும் ஒத்துழைப்பாளர்களா யும் அவர்கள் உருவெடுக்க உதவுபவையா யும் இருக்கின்றன. இந்த ஆவி கடவுளிடமி ருந்து வருகிறது. கடவுளிடம் இட்டுச் செல்கி றது: எனவே, இது புனித ஆவி ஆகும். இஸ்ரயேலரின் கடவுளிடமிருந்து வருகிறது, உடன்படிக்கை செய்து கொண்ட அக்கடவு ளுக்கு அவர்களை அர்ப்பணிக்கின்றது: எனவே, இது புனிதப்படுத்தும் ஆவி ஆகும். இச்செயலும் இவ்வெளிப்பாடும், மீட்பின் மெசியா வழி, வார்த்தை மற்றும் சாட்சி ஆகியவை கூறும் இறைவாக்கினர் வழி, திருநிலைத் தொண்டு, அர்ப்பணம் ஆகிய பலி வழி எனும் மூன்று வழிகளில் கூறப்படு கின்றன: இம்மூன்று வழிகளிலும் ஆவியைக் குறையறப் பெற்றுக்கொள்ள இஸ்ரயேல் மக்கள் அழைக்கப்படுகிறார்கள்.

1. ஆவியும் மீட்பும்:-

அ. நீதிபதிகள்:- இஸ்ரயேலரின் நீதிபதி கள் இறை ஆவியால் எழுப்பப்படுகிறார் கள். இவ்வலுவலை அவர்கள் எதிர்பார்க்க வில்லை; இதற்காக எம்முறையிலும் அவர் கள் முன்தயாரிப்பு கொண்டிருக்கவில்லை. இதை எதிர்த்து மறுக்க அவர்களுக்குத் திற னும் இல்லை. சிம்சோன் கிதயோன், சவுல் போன்ற நாட்டுப்புறத்து எளிய மக்கள் திடீரென முழு உருமாற்றம் பெறுகின்றனர். வலுவும் முனைப்பும் சார்ந்த வீரச் செயல்க ளைப் புரியும் ஆற்றல் படைத்தவர்களாய் இவர்கள் மாறுவது மட்டுமன்று; புது ஆளுமை பெற்றுக் குறிப்பிட்ட ஓர் அலு வலை ஆற்றி மக்களை விடுவிக்கும் தூதை நிறைவேற்றும் திறம்பெற்றவர்களாகவும் ஆகின்றனர். இவர்களின் கரங்களாலும், ஆவியாலும் இறை ஆவி யாத்திரை மற்றும் பாலைவனம் எனும் வீரகாவியத்தை நீடிக்கச் செய்கிறார்; இஸ்ரயேலரின் ஒன்றிப்புக்கும் மீட்புக்கும் உறுதியளிக்கிறார்; ஆகவே, பரி சுத்த மக்களின் ஊற்றாய் அவர் உள்ளார். அவரது செயல் திடீரென எழும் இனம் புரியாத கட்டுப்பாட்டைச் சுட்டிக்காட்டும் உவமை உருவக அணிகளால் விளக்கப்படி னும், இவற்றிலும் இறை ஆவியின் செயல் உள்ளரங்கமானதாகவே உள்ளது. ஓதினி யேல்மேலும், இபிதாகின்மேலும், ஆவியா னவர் திடீரென இறங்கி இருக்கிறார் (நீதி 3:10; 11:29); கழுகு தன் இரைமேல் வந்து பாய்வதுபோல அவர் இறங்குகிறார் (நீதி 14:6; 1 சாமு 11:6); ஒருவன் கவசத்தை அணிந்து கொள்வதுபோல் ஆட்கொள்கிறார் (நீதி 6:34).

ஆ. அரசர்கள்:- நீதிபதிகள் தற்கால மீட்பர் களே; அவர்களது தூது முடிந்ததும் ஆவியா

னவர் அவர்களிடமிருந்து நீங்கிவிடுகிறார். அவர்கட்குப்பின் வரும் அரசர்களோ நிலையான அலுவலைப் பெறுகின்றனர். இவர்களைத் திருநிலைப்படுத்தப் பயன்படுகின்ற அபிடேகச் சடங்கு, ஆவியானவரின் அழியாத முத்திரையை இவர்கள் பெறுவதையும், அதனால் இவர்கள் புனித மகத்துவம் பெறுவதையும் தெரிவிக்கிறது (1 சாமு 10:1; 16:13).

இ. மெசியா:- இஸ்ரயேலருக்கு மீட்பு, நீதி, அமைதி ஆகியவற்றை அளிக்கும் பிரமாணிக்கமுள்ள இறைத் தொண்டர்களாக அரசர்களை ஆக்க, அபிடேகச் சடங்கு மட்டும் போதுமானதாய் இல்லை. இதை நிறைவுறச் செய்ய, ஆவியானவரின் ஆழ்ந்த ஊடுருவலான செயல் தேவைப்பட்டது. இதோ மெசியா (தனி அபிடேகம் பெற்றவர்) எனச் சுட்டிக்காட்டப்படக்கூடிய நேரடி இறை அபிடேகம் தேவையாய் இருந்தது. இந்த மெசியா மேல் தூய ஆவி இறங்கி வருவார் என்பது மட்டுமன்று; அவர் மேல் வந்து தங்குவார் (ஏச 11:2) அவரில், பெசலேல் (யாத் 35:31) அல்லது சாலமோனில் காணப்பட்டதுபோல, ஞானம், அறிவுக்கூர்மையும், தாவீதிடம் காணப்பட்டது போல் விவேகமும் வலிமையும், இறை அறிவும் அச்சமும் ஆகிய எல்லாக் கொடைகளும் இருக்கச் செய்வார். சுருங்கக்கூறின் இஸ்ரயேலரிடையே விளங்கிய சீரிய இறைபக்தர்களின் எடுத்துக்காட்டாக இம்மெசியாவை ஆவியானவர் ஆக்குவார். இவ்வாறு, இக்கொடைகள் இவ்வழியில் ஆளப்படும் நாட்டிற்கும் புனிதமும் மகிழ்வும் நிறைந்த காலத்தைக் கொண்டு வரும் (ஏச 11:9).

2. ஆவியும் சாட்சியும்:-

அ. 'நபி' யார்கள்:- இறைவாக்கினருக்கு முன்னோடிகளாய் இருந்த இப்பெரியார்கள் சமய உயர் எழுச்சியில் கைதேர்ந்தவர்கள், ஆனால், இறைச் செயலால் எழும் ஞானப் பரவசத்தை, மனிதத் தூண்டுதலால் எழும் வெளி மயக்கத்திலிருந்து பிரித்துத் தெளிய பன்முறை இவர்கள் தவறிவிடுகின்றனர். எனினும், யாவேயின் வல்லமைக்குச் சான்று பகர்வதால், இவர்கள் இஸ்ராயேலரிடையே உயிருள்ள சக்திகளாய் விளங்குகின்றனர். மெய்யங்கடவுளின் பேரால் இவர்களை இப்படிப் பேசவைக்கும் இந்த வல்லமையில், இறை ஆவியானவரின் பிரசன்னத்தை நாம் புரிந்துகொள்ளலாம் (யாத் 15:20; எண் 11:25 தொ; 1 சாமு 10:6; 1 அர 18:22).

ஆ. இறைவாக்கினர்:- முக்கியத்துவம் அல்லது மதிப்புப்பெற்ற இறைவாக்கினர்கள், குறிப்பாக, மிகப் பழையவர்களில் எவரும் ஆவியைப் பற்றிக் குறிப்பிடக்காணோம். தம்மை ஆட்கொள்ளும் சத்தியை இறைவனின் கரம் என அழைக்கவே அடிக்கடி விரும்புகின்றனர் (ஏச 8:11; எரே 1:9; 15:17; எச 3:14). இப்படிச் செய்வது, இறை ஆவியைத் தாம் கொண்டிருப்பதை அவர்கள் உணரவில்லை என்பதனால் அன்று; முன்னோடிகளாயிருந்த நபிமாரைப் போன்றன்றி வேறுவிதத்தில் அவரைத் தாம் கொண்டிருப்பதை உணர்ந்ததாலேதான். இவர்களின் அழைப்பும் கடமையும் வேறுப்பட்டவை, சிறப்பானவை. இக்கடமையை முழுவதும் இவர்கள் உணர்கின்றனர். அதைத் தவிர்க்க இவர்கள் தம் முழு ஆளுமையோடு ஏங்கினாலும், பேசும்படி வற்புறுத்து!் உயர்ந்தொரு ஏவுதல் தம்மில் இருப்பதை இவர்கள் உணர்கிறார்கள் (ஆமோ 3:8; 7:14 தொ; எரே 20:7 தொ). அவர்கள் கூறும் வாக்கு அவர்களுக்கே தொல்லைதான். இருப்பினும் அவ்வாக்கு அவர்களிடமிருந்தே வருகிறது; ஆனால் அது அவர்களின் சொந்தப் படைப்பு அன்று: அவர்களை அனுப்பும் இறைவனின் வாக்கு அது. இம்முறையில்தான், இறைவார்த்தையானவருக்கும் இறை ஆவியானவருக்கும் இடையே இருக்கும் இணைப்பு காட்டப்படுகிறது. எலியா காலத்திலிருந்தே இந்த இணைப்பு வெளிப்படுகிறது (1 அர 19:12 தொ). இந்த இணைப்புக்கு முடிவு இல்லை. எனவே ஆவியானவர் தம் செயலாக்கத்துக்குத் தொண்டுபுரியப் புதுப்புது இறைவாக்கினரை உருவாக்குவதோடு நின்றுவிடாமல், இச்செயலின் உள்ளார்ந்த மறைபொருளைச் சிறிது அவர்கள் உணரவும் செய்கிறார். ஆவியானவர் வெறும் புத்தியும்

பலமும் மட்டும் அல்லர்; இறைவனைப் பற்றியும் அவரின் வழிகளைப் பற்றியுமான திரு அறிவும் ஆவர் (காண் ஏச 11:3).

இந்த ஆவியானவர் இறைமாட்சியை வெளிப்படுத்தும் அளவுக்குத் (எச 3:12; 8:3) திருவாக்கை இறைவாக்கினருக்குத் தெளிவு படுத்துகிறார். அதே வேளையில், மக்களோடு பேசவோ (11:5), வர இருக்கும் தீர்வையை அவர்கள்முன் நின்று பறைசாற்றவோ தேவையான வலுவையும் கொடுக்கிறார் (2:1; 3:24). இங்ஙனம், இவர்களை ஆவியானவர் சாட்சிகள் ஆக்குகிறார்; இச்செயலால் அவரே இறைவனுக்குச் சான்று பகர்பவர் ஆகிறார் (நெக 9:30; காண் செக் 7:12).

3. ஆவியும் அர்ப்பணமும்: யாவேயின் ஊழியன்:-

மெசியா சார்பிலே விடுதலை அளிக்கும் ஆவியானவரின் பங்கும், வார்த்தையும் தீர்வையையும் அறிவிக்கும் இறைவாக்கினரின் பங்கும், ஏற்கெனவே ஏசயா காட்டும் மெசியாவில் மிளிர்கின்றன; யாவேயின் ஊழியனில் நிறைவுறுதியாய்க் கூறப்படுகின்றன. கடவுள் தம் ஆவியை அவர்மேல் தங்கச் செய்கிறார்; ஆகவே மக்களினங்களுக்கு அவர் நீதியை அறிவிப்பார் (ஏச 42:1; காண் 61:1 தொ). இறைவாக்கினர்தான் நீதியைப் பறைசாற்றுவார், ஆனால் அரசர் நீதியை வழங்குவார்; யாவேயின் ஊழியனோ தம் வேதனையின் பலனால் பலரை நீதிமான்களாக்குவார் (53:11). அதாவது நீதியில் அவர்கள் நிலைத்திருக்கும்படி செய்வார். இங்ஙனம், இவரது தூதுப்பணியில் அரசுரிமைப் பண்பும் கலந்துள்ளது. இறைவாக்கினர் வேலையும் மீட்பாளர் வேலையும் அதே ஆவியால் இவரில் ஒன்றாய்க் கூடி இணைகின்றன. இத்தோடு தமக்கு உரித்தான பலிகளில் இறைவன் மகிழ்வதுபோல, இந்த ஊழியன் மீதும் அவர் பூரிப்படைகிறார் (42:1); இந்த ஊழியனின் வாழ்வு, சாவு முழுவதுமே பாவிகளின் பரிகாரமாகவும் அனைவரின் மீட்பாகவும் இறைவனுக்க நேர்ந்துவிடப்படுகிறது. இவ்வண்ணம் தூய ஆவியானவர் புனிதப்படுத்துபவராயும் உள்ளார்.

4. மக்கள் மீது ஆவியானவர்:-

இறைவாக்கினரிலும் இறை ஊழியரிலும் ஆவியானவர் ஆற்றும் செயல் இறைவாக்குரைப்பதாய் உள்ளது: பாலைவனத்தை விளைநிலமாக்கும் நல்ல மழையைப் போல (ஏச 32:15; 44:3; எச 36:25; யோவே 3:1 தொ), அல்லது உலர்ந்த எலும்புகட்கு உயிரூட்டும் மூச்சுப்போல (எச 37), மக்கள் யாவர்மீதும் ஆவியானவர் பொழியப்படுவார் என்பதை அறிவிப்பதாய் உள்ளது. ஆவியானவரின் இந்த அருள் மழை ஒருவிதப் புதுபடைப்பாகும்; செழிப்பான வயல் வெளியில் நேர்மையும் நீதியும் வீற்றிருப்பதாகும் (ஏச 32:16) புகழ்பாடி (சங் 51:15) உருக்கமாய் மன்றாடும் (செக் 12:10), வார்த்தைக்கு இயல்பாகப் பணியும் (ஏச 59:21; சங் 143:10), அவரது குரலுக்குச் செவிமடுக்கும் நெஞ்சங்களையும் உருவாக்குவதாகும். ஆவியானவரால் புதுப்பிறப்பு அடையும் இஸ்ரயேலர் தம் கடவுளைக் கண்டுணர்வர்; கடவுளும் தம் மக்களைக் கண்டடைவார்: ''இஸ்ரயேல் வீட்டார் மேல் நமது ஆவியைப் பொழிவோம்; இதன்பின், அவர்களிடமிருந்து நம் முகத்தை மறைக்கமாட்டோம்'' (எச 39:29).

இந்தக் காட்சி பழைய ஏற்பாட்டிலே எதிர்பார்க்கப்படும் நம்பிக்கையாகவே உள்ளது. ''ஆவியானவர் இன்னும் அருளப்படவில்லை''; எனவே, அவர் நிலையாகத் தங்கியிருக்கக் கூடுமாயில்லை. ஐயமின்றி, தொடக்கத்திலேயே, செங்கடல் கடத்தல், மேகம் என்பவற்றில், தூய ஆவியானவர் மோசே வழியாகச் செயலாற்றி, இஸ்ரயேலரை இளைப்பாறும் இடத்துக்கு இட்டுச் செல்வதைக் காண்கிறோம் (ஏச 63:9-14). அதே வேளையில், மக்கள் பரிசுத்த ஆவிக்கு வருத்தம் கொடுக்கவும் அவரது செயலுக்கு ஊனம் வருவிக்கவும் கூடுமானவர்களாய் இருப்பதையும் பார்க்கிறோம் (63:10). இந்தக் கொடை நிறைவானதாயும் இறுதியானதாயும் ஆக, இந்த ஆவி நேரடியாகத் தாமே இறங்கி வந்து செயலாற்ற வேண்டும்.

''நீரே, யாவே, நீரே எங்கள் தந்தை... யாவே, உம் வழிகளிலிருந்து நாங்கள் பிறழும்படி விட்டதேன்?...ஆ, வானத்தைக் கிழித்து நீர் இறங்கிவர மாட்டீரா?'' (63:15-19) என்று மக்கள் கதறும் வண்ணம் கடவுள் ஈடு இணையற்ற ஓர் அருங்குறியை அளிக்க வேண்டும். இதே வானங்கள் திறக்கும், தந்தையான கடவுள் இவ்வுலகில் இறங்கி வருகிறார். இறைவன்பால் இதயங்கள் திரும்புகின்றன: இவையே தூய ஆவியின் செயல் நிகழ்ச்சியாய் இருக்கும்; அது கிறிஸ்து இயேசுவில் இறுதித் திட்டமாய் அவர் தரும் வெளிப்பாடாய் இருக்கும்.

5. ஆவியும் வார்த்தையும்:-

பழைய ஏற்பாட்டின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை, கடவுளின் ஆவியும் வார்த்தையும் எப்பொழுதும் இணைந்தே செயலாற்றுகின்றனர். மோசேக்குக் கடவுள் கொடுத்த சட்டவாக்கை மெசியா அனுசரித்து அதன் நிறை நீதியைப் பெற முடிகிறது என்றால், ஆவியை அவர் கொண்டிருக்கிறார் என்பதே இதற்குக் காரணம். வார்த்தைக்கு இறைவாக்கினர் சாட்சி பகர்கிறார் என்றால், அவரை ஆவியானவர் ஆட்கொண்டுள்ளார் என்பதே காரணம். மக்களினத்தாருக்கு மீட்பு வார்த்தையை இறை ஊழியர் கொணர முடிகிறது என்றால், அவர்மேல் ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்பதே காரணம், ஒரு காலத்தில் இஸ்ரயேலர் தம் இதயத்தில் இந்த வார்த்தையைக் கொண்டிருக்கக்கூடும் என்றால், ஆவியானவரில்தான் இது நிகழும். வார்த்தையும் ஆவியும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை; ஆயினும் தத்தம் தனிச் சிறப்புப் பண்புகளைக் கொண்டுள்ளன. ஊனைப்பிளந்து காட்டும் வாளைப்போல வார்த்தை வெளியிலிருந்து உள்ளத்தை ஊடுருவுகிறது; ஆவியோ நீர்மம் போன்றது; புலப்படா நுண்பொருளாய் எங்கும் பரவுகிறது. வார்த்தை தன்னை யாவரும் கேட்டு உணரும்படி செய்கிறது எனவே புலன்களுக்குப் புலப்படுகிறது. ஆவியோ காணக்கூடாத விதமாகவே இருந்துவிடுகிறது. எனவே புலன்களுக்கு அப்பாற்பட்டது. வார்த்தை ஒரு வெளிப்பாடு; ஆவியோ ஓர் உள்மாற்றம். வார்த்தை நிமிர்ந்து நின்று மேடையில் முழக்கமிடுகிறது; ஆவியோ இறங்கி வந்து, எங்கும் பரவி, இரண்டற இணைந்துவிடுகிறது. இவ்விதக் கூறுகளின் பகுப்பும் அவைகளுக்கிடையே உள்ள தொடர்பும் புதிய ஏற்பாட்டில் காணக்கிடக்கின்றன; ஆவியானவரின் செயலால் மனுவான இறைவார்த்தையானவர் அதே ஆவியானவரால் அன்றி எதையும் செய்கிறதில்லை; அவரது அலுவலின் முழுநிறைவு அந்த ஆவியானவரைக் கொடையாகப் பொழிவதாகிறது.

II. புதிய ஏற்பாடு

1. இயேசுவில் ஆவியானவர்:-

அ. இயேசுவின் திருமுழுக்கு:- திருமுழுக்கு யோவான் மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தார். அதேவேளை, தம் முழு வல்லமையோடு இறங்கிவரும் ஆவியானவருக்காகவும் காத்திருந்தார். அந்த ஆவியானவர் வெறும் மனித வேலையை அகற்றிடுவார்; அதனிடத்தில் எதிர்க்கவொண்ணா இறைச் செயலை ஆற்றிடுவார்; ''நீங்கள் மனந்திரும்பியதைக் காட்ட உங்களுக்கு நான் நீரால் ஞானஸ்தானம் கொடுக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்'' (மத் 3:11). பரம்பரை வழிவரும் அடையாளங்களிலே மிக எளிதில் எவரும் அணுக முடியாத தீயை மட்டும் எடுத்துக் காட்டி யோவான் இங்குப் பேசுகிறார். இயேசு இதை மறுக்கவில்லை; ஆனால், யோவானுக்குக் குழப்பம் ஏற்படுத்தும் முறையில் இயேசு அதை நிறைவுபடுத்துகிறார். இயேசு திருமுழுக்குப் பெறுகிறார்; அவ்வேளையில் ஆவியானவர், வானங்கள் திறக்க, அவர் மீது புறாவைப்போல் இறங்கி வருகிறார். எளிய உருவம், ஆனால், தெய்வீக உருவம் இது, காற்றோடும் நீரோடும் தொடர்பு கொள்ளும் ஒரு சாதாரணப் பறவை வடிவம் இது. ஒழிக்கப்படப்போவதாய் யோவான் நம்பும் நீர்முழுக்கு இயேசுவின் செயலால் ஆவி முழுக்காக ஆகிறது. பாவிகளோடு ஒட்டுறவாடும் இயேசு எனும் இம்மனிதரே, வாக்களிக்கப்பெற்ற மெசியா என்றும் (லூக் 3:22; சங் 2:7), உலகின் பாவத்திற்காகப் பலியிடப்

படும் செம்மறி என்றும் (யோவா 1:29), அன்பார்ந்த மகன் என்றும் (மாற் 1:11) ஆவியானவர் சுட்டிக்காட்டுகிறார். ஆனால், வெளியே தம்மைப் பகட்டாய்க் காட்டிக் கொள்ளாமல் மூடுமறைவான முறையில் செயலாற்றுகிறார். மைந்தன் திருமுழுக்குப் பெறுகிறார்; தந்தை மகனோடு பேசுகிறார்; ஆவியோ ஒன்றும் பேசவும் காணோம், செய்யவும் காணோம். ஆயினும், தந்தை மகன் உரையாடலுக்கு ஆவியானவரின் பிர சன்னம் தேவை. ஆவி இருப்பது தேவைப்ப டினும், இவர் மௌனமாயும் செயலற்றவர் போலும்தான் இருக்கிறார். தந்தையின் பேச் சிலே இவர் ஒரு சொல்லும் கூட்டக் காணோம்; மைந்தனின் செயலைச் சிறிதும் இவர் பெருக்கக் காணோம்; அப்படியென் றால், இவர் என்னதான் செய்கிறார்? தந்தை மகன் இணைப்பு நிகழக் காரணமாய் உள் ளார்: தந்தையிடமிருந்து வரும் அன்பு, ஆத ரவு, பெருமிதம் எத்தகையது என்பதை இயேசுவுக்கு எடுத்து உணர்த்துகிறார்; மைந் தனுக்கேற்ற மனநிலையை இயேசுவிடம் உருவாக்குகிறார்; கிறிஸ்துவின் அர்ப்பணம் அன்பார்ந்த மகனது பலியின் முதற்கனிக ளோடு திருத்தந்தை திருமுன் தூபம் போல் வரவைக்கிறார்.

ஆ. தூய ஆவியினால் இயேசு கரு எடுத் தார்:- இயேசுவில் ஆவியானவர் பிரசன்னம் அவர் திருமுழுக்குப் பெறும்போது அறிவிக் கப்படுகிறது; ஆனால், தொடக்கத்திலி ருந்தே அவரோடு இருந்தார். இயேசுவின் திருமுழுக்கு ஓர் அழைப்பன்று; மெசியா பணி சூட்டல் ஆகும்; 'இதோ' என்று முன்பே இறைவாக்கினர் வழியாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தாலும் (எச 42:1; 52:13), காலம் வரும் வரை மறை பொருளாயிருந்த தம் ஊழியனும் மைந்தனுமானவரைக் கட வுள் தம் மக்கட்கு அறிமுகப்படுத்துவதா கும். நீதிபதிகள், இறைவாக்கினர், அரசர்கள் போன்றோர் தூய ஆவியால் சிலவேளைக ளில் ஆட்கொள்ளப்படுகின்றனர். பிறக்க மூன்று மாதங்களுக்கு முன்பே திருமுழுக்கு யோவான் ஆவியால் கவர்ந்து கொள்ளப்படு கிறார். இயேசுவிலே முன்பில்லாத புதிய ஆளுமைப்பண்பு எதையும் ஆவியானவர் உண்டாக்கக் காணோம். இயேசுவின் முதல் நொடியிலிருந்தே, அவரோடு ஆவியானவர் இருக்கிறார். தாயின் கருப்பையிலிருந்தே அவருக்கு இருப்புக் கொடுக்கிறார்; அவரை இறைமகனாக அமைந்து உருவாக்குகிறார். குழந்தைப் பருவத்தைக் குறிப்பிடும் இரு நற்செய்திகளும் இந்தத் தொடக்கச் செய லைக் கோடிட்டுக் காட்டுகின்றன (மத் 1:20; லூக் 1:35). பழைய ஏற்பாட்டு அறிவிப்புக ளோடு மரியாள் பெற்ற அறிவிப்பை ஒப் பிட்டு, வெறும் அர்ப்பணம் மட்டுமன்று, அதைவிட மேலான காரியம் இங்கு நிகழ்கி றது என்பதை லூக்கா தெளிவாய்க் காட்டு வது விளங்கும். சிம்சோன் (நீதி 13:5), சாமுவேல் (1 சாமு 1:11), திருமுழுக்கு யோவான் (லூக் 1:15) மூவரும் கருவிலி ருந்தே ஏறத்தாழ முழுமையாகவும் நேரடியா கவும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப் பட்டனர். இயேசு எந்தச் சடங்கின் துணை யாலுமன்று, எந்த மனிதனின் இடையீட்டா லும் அன்று, மரியாளில் ஆவியானவர் ஆற் றும் செயலால் மட்டுமே இறைவனுக்கு அர்ப்பணமாகிறார். உருவெடுப்பதால் மட் டுமன்று தம் இருப்பு முழுவதாலுமே தூய கடவுளின் மகனாகிவிடுகிறார் (லூக் 1:35).

இ. ஆவியானவரில் இயேசு செயலாற்றுகி றார்:- தம் செயல் தொடர்பு அனைத்திலும் தம்மில் ஆவியானவர் செயலாற்றுதை இயேசு வெளிப்படுத்துகிறார் (லூக் 4:14) அலகையினால் சோதிக்கப்பட இயேசு ஆவி யானவரால் அழைத்துச் செல்லப்படுகிறார் (மத் 4:1); பேய் பிடித்தவர்களை ஆவியான வரால் விடுவிக்கிறார் (12:28); நற்செய்தியை யும் இறைவாக்கையும் ஏழைகளுக்கு வழங் குகிறார் (லூக் 4:18). ஆவியானவரில் அக்க ளிப்போடு தந்தையை அணுகுகிறார் (லூக் 10:21). தீமை மீதும் சாவின் மீதும் வெற்றிக் கொள்ளும் அவர்தம் புதுமைகள், அவரது வார்த்தையின் வன்மை மற்றும் உண்மை, இறைவனோடு அவர் கொள்ளும் உள் ளார்ந்த நேரடி உறவு இவை எல்லாம் அவர் மேல் ஆவியானவர் தங்கியுள்ளார் என்பதற் கும் (எச 61:1), அவரே எதிர்பார்க்கப்பெற்ற

இறைவாக்கினர், மீட்புத் தரும் மெசியா, அன்பார்ந்த ஊழியன் என்பதற்கும் சான்று பகர்கின்றன.

தேவ ஆவியால் தூண்டப் பெற்ற இஸ்ர யேலர்களிலே ஆவியானவரின் வெளிப்பாடு சிறிது காலம் மட்டும் நீடிப்பதாயும் தற்காலி கமானதாயுமே இருந்தது. இயேசுவிலோ இது நிரந்தரமானதாய் உள்ளது. இறைவாக்கை ஏற்பவராய் அவர் இல்லை. அதை அறிவித்து விளக்குபவராய் உள்ளார். புதுமை ஆற்றுவதில் நொடிநேரமும் அவர் காத்திருப்பதில்லை. மிகச் சாதாரண செயலா கவே அது அவரிடம் தோன்றுகிறது. இறை மறை உண்மைகளை அவர் புதிதாய் அறியவ ருவதில்லை. மூடு மறைவின்றி இறைவன் திருமுன்னே அவர் எப்பொழுதும் வாழ்கின் றார். அவரைப்போல எவரும், அளவில்லா முறையில் (யோவா 3:34) ஆவியானவரைக் கொண்டிருக்கக் காணோம்.

ஆம், ஆவியானவரை இயேசு கொண்டி ருந்ததுபோல, வேறு எவரும் எக்காலத்தி லும் கொண்டிருந்ததில்லை. தேவ ஏவுத லைப் பெற்றிருந்த பழைய ஏற்பாட்டுப் பெரியார்கள் தம் ஆளுமையோடு தம்மை விட அதிக வலுவுள்ள சக்தி ஒன்றால் தாம் ஆட்கொள்ளப்படுவதை உணர்ந்தனர். இயே சுவில், இத்தகைய வலுவந்த ஏவுதலோ தூண்டுதலோ இருப்பதை நமக்குச் சுட்டும் அறிகுறி எள்ளளவேனும் காணோம். இறை வனின் வேலைகளைச் செய்ய ஆவியானவ ரின் வெளி உதவி அவருக்குத் தேவை இல்லை என்றுகூடச் சொல்லலாம். தந் தையை எப்படி அவர் உதறித் தள்ள முடி யாதோ அப்படியே ஆவியானவரையும் அவர் உதறிவிட முடியாது; இது உண்மை. தந்தை எப்போதும் அவரோடு இருக்கிறார் (யோவா 8:29). ஆவியானவரும் அவரைக் கைநெகிழ்ந்திருக்க முடியாது. ஆவியானவ ரின் தாக்குதலோ வலுவந்தமோ இயேசுவி டம் இல்லை என்பதே இவரது இறைத்தன் மையின் அடையாளமாயுள்ளது. வெளியிலி ருந்து தாக்கும் ஒரு சக்தியாக ஆவியானவரை இயேசு உணரவில்லை. ஆவியானவரில் அவர் இருக்கிறார். அவரில் ஆவியானவர் இருக்கிறார்; அவர்தம் சொந்த ஆவியானவ ராயிருக்கிறார் (காண் யோவா 16:14 தொ).

2. ஆவியானவரை அனுப்புவதாக இயேசு வாக்களிக்கிறார்:-

இயேசு ஆவியானவரால் நிரப்பப்பெற்ற வர்; ஆவியானவராலேயே அனைத்தையும் செய்பவர்; எனினும் வெகு அரிதாகவே அவர் ஆவியானவரைப்பற்றிப் பேசுகிறார். தம் செய்கைகள் எல்லாவற்றிலும் ஆவியான வரைச் சுட்டிக் காட்டுகிறார்; எனினும் இயேசு நம்மோடு இருக்கும்வரை தம்மிலி ருந்து வேறுபட்ட ஆள் ஆவியானவர் என எடுத்துக்காட்ட அவரால் முடியவில்லை. ஆவியானவர் பொழியப்பட்டு அறியப்பட, இயேசு வானகம் சென்று மகிமை பெற வேண்டும் (யோவா 7:39; 16:7). அப்பொ ழுது இயேசுவிடமிருந்து வரும் இந்தத் தேவ ஆள் ஆவியானவர் என்று மனிதர் கண்டுணர் வர். மேலும், இயேசு தம் சீடர்களிடமிருந்து பிரியும் கட்டம் வரும்போதுதான், தற்காலிக மாகச் சீடர்களை அனுப்பும்போதும் (மத் 10:20), சாவினால் அவர்களை விட்டு நிரந்தர மாகப் பிரியும் முன்பும் (யோவா 14:16 தொ. 26; 13:13 தொ) தூய ஆவியைப் பற்றி அவர்களிடம் பேசுகிறார்.

ஒத்தமை நற்செய்திகளில், இக்கட்டு வேளை, கலாபனைக் காலம், நீதிமன்றங்கள் போன்ற முக்கிய கட்டங்களில் மட்டும்தான் ஆவியானவர் தம்மை வெளிக்காட்டுவது போல் தோன்றுகிறது (மாற் 13:11). ஆனால், இறுதி இரவு உணவுக்குப்பின் வரும் பிரியா விடை உரையில்தான் இயேசு மனம் திறந்து பேசுகிறார். தீய உலகம் இயல்பாகவே இயே சுவை வெறுக்கிறது; எனவே, சிலவேளைக ளில் கொடும் கலாபனைகளை எழுப்பும்; அவருடைய சீடர்களை இடைவிடாது பய முறுத்தி நசுக்கப்பார்க்கும் (யோவா 15:18-21). அதனாலே ஆவியானவர் ஒவ்வொரு நாளும் அவர்கட்குத் துணையாய் இருப்பார் (14:16 தொ).

இயேசு தம் வாழ்க்கையால் தம் தந் தையை அறிவித்தார் (யோவா 5:41; 8:50;

12:49); இதேபோல், சீடர்களும் ஆண்டவருக்குச் சாட்சி பகரவேண்டும் *(மாற் 13:9; யோவா 15:27)*. இயேசு அவர்களோடு இருந்தபோது அவர்கள் எதற்கும் அஞ்சவேண்டியிருந்ததில்லை; அவரே அவர்களுக்குத் துணையாளராயிருந்தார்; அவர்கள் சார்பில் வாதாடி ஆதரித்தார்; பல இக்கட்டுகளினின்றும் அவர்களைக் காப்பாற்றினார் *(யோவா 17: 12)*. ஆனால், அவர் அவர்களை விட்டுப்பிரிந்து விண்ணகம் சென்றபிறகு அவரது இடத்தில் ஆவியானவர் துணையாளராயிருப்பார் *(14:16; 16:7)*. இயேசு அல்லர் அவர்; ஆயினும், அவர் தம் சொந்தப் பெயரால் பேசார்; ஒருபோதும் பிரியாது இணைந்திருக்கும் இயேசுவைப்பற்றியே பேசுவார்; பேசி இயேசுவை மகிமைப்படுத்துவார் *(16: 13 தொ)*. ஆவியானவர் சீடர்களுக்கு ஆண்டவரின் செயல்களையும் சொற்களையும் நினைவுறுத்துவார்; ஆழமாய் அறிவுறுத்துவார் *(14:26)*. இயேசுவின் பெயரால் உலகை நேருக்கு நேர் சந்திக்கவும், அவரது சாவின் செம்பொருளை உய்த்துணரவும், இந்த அதிர்ச்சிதரும் சாவு நிகழ்ச்சியில் நிறைவேற்றப்பட்ட பாவத்தின்மேல் தீர்ப்பு, சாத்தானின் தோல்வி, இறை நீதியின் வெற்றிவிழா *(16:8-11)* போன்ற இறைபெருண்மைகளுக்குச் சாட்சியம் கூறவும் தேவையான வலுவைச் சீடர்களுக்கு ஆவியானவர் அளிப்பார்.

3. ஆவியானவரை இயேசு அனுப்புகிறார்:-

மரித்து உயிர்த்த இயேசு தம் ஆவியானவரைத் தம் கொடையாகத் திருச்சபைக்குக் கொடுக்கிறார். ஒரு மனிதனின் உயிர் எவ்வளவு உயர்ந்து இருப்பினும், அவனது செல்வாக்கு எவ்வளவு சிறந்து இருப்பினும், அவன் மரித்ததும், இறந்த காலக் கூறாக அவன் மாறிவிடுகிறான். அவன் தொடங்கிய வேலை தொடர்ந்து நடைபெறலாம்; ஆனால், அது அந்த ஆளுக்குச் சொந்தமானதாகாது. மனிதர்களின் போக்கில் அதுபோகட்டும் என்று விட்டுவிடுவதைத் தவிர அந்த ஆளால் வேறொன்றும் செய்ய முடியாது. இயேசு சாகும் போதோ, கடவுளின் கையில் தம் ஆவியைக் கையளிக்கிறார்; அதே செயலால், தம் திருச்சபைக்குத் தம் ஆவியானவரைக் கையளிக்கிறார் *(யோவா 19:30)*. இயேசு உயிரோடிருக்கும் வரை, இயேசுவின் மனித உருவாலும் அவரது செயல்துறையாலும் ஆவியானவர் வரையறுக்கப்பட்டதுபோல் இருந்தார். ஆனால், இதோ, மனுமகன் தந்தையின் வலப்பக்கம் உயர்த்தப்பட்டு மகிமை பெறுகிறார் *(12:23)*; எனவே, மீட்புப் பெற்ற மனுக்குலம் முழுவதையும் இயேசு இறைபாதம் ஈர்க்கிறார் *(12:32)*, ஆவியானவரை அதன்மேல் பொழிகிறார் *(7:39; 20:22 தொ; அ.ப. 2:33)*.

4. ஆவியானவரைத் திருச்சபை பெறுகிறது

கடவுளிடமிருந்து பிறப்பவை அனைத்தும் ஆவியானவரிடமிருந்தே பிறக்கின்றன *(யோவா 3:5)* தொ). ஆகவே, புதுப்பிறப்பாகிய திருச்சபையும் அவரிடமிருந்தே பிறக்க முடியும், இதனால்தான், அப்போஸ்தலர் பணி 'ஆவியானவரின் நற்செய்தி' ஆகத் திகழ்கிறது.

இந்த அப்போஸ்தலர் பணியில் நான் காணும் ஆவியின் செயல், ஏற்கெனவே பழைய ஏற்பாட்டில் காணக்கிடக்கும் இரு இறை பண்புகளையும் கொண்டு விளங்குகிறது. ஒன்று, பொது முறை கடந்த வியத்தகு நிகழ்ச்சிகள் பல உள: இறை ஆவியைப் பெற்றுப் பரவசமாகும் மக்கள் *(அ.ப. 2:4.5. 11)*, உடல் நலம் மீண்டும் பெறும் பிணியாளரும் பேய்பிடித்தோரும் *(3:7; 5:12.15)*, சீடர்களின் வீரமும் துணிவும் *(4:13.31; 5:20; 10:20)*. மற்றொன்று, இந்த அதிசயங்கள் இறுதியான மீட்பின் அடையாளங்களாயும், மனந்திரும்புதல் சாத்தியமானது, பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, திருச்சபையில் கடவுள் தம் ஆவியானவரைப் பொழியும் நேரம் வந்துவிட்டது' எனும் உண்மைக்கு உறுதி அளிப்பவையாயும் உள்ளன *(2:38; 3:26; 4:12; 5:32; 10:43)*

இந்த ஆவியானவர் இயேசுவின் ஆவியே. இவர் இயேசுவின் வேலைகளை மீண்டும் ஆற்றுகிறார்; இயேசுவின் சொற்கள் மீண்

டும் பறைசாற்றப்படவும் *(4:30; 5:42; 6:7; 9:20; 18:5; 19:10.20)*, அவரது செபம் மீண்டும் செபிக்கப்படவும் *(அ.ப. 7:59 தொ=லூக் 23:34.46; அ.ப. 21:14=லூக் 22:42)* அப்பம் பிடுவதில் அவரது நன்றிப்புகழ் எந்நாளும் மீண்டும் ஒலிக்கப்படவும் செய்கிறார். இயேசுவைச் சூழ்ந்திருந்த சீடர்களிடையே இருந்த சகோதர ஒற்றுமையை மீண்டும் நிலவச் செய்கிறார் *(அ.ப. 2:42; 4:32)*. கிறிஸ்து வாழ்ந்தபோது சீடர்கள் கொண்டிருந்த வாழ்க்கையை மீண்டும் அவர்கள் வாழ முயற்சித்ததனால்மட்டும் இந்த ஒன்றியம் உருவாகவில்லை. தாம் உயிரோடிருந்த போது இயேசு அவர்களை ஒன்றாய் இணைத்துவைக்க எவ்வளவோ முயன்றார்! இப்போது அவர் அவர்களது கண்களுக்கு மறைந்துவிட்டார். அவரது மாதிரிகை தங்களைச் சிலுவைக்கு இட்டுச் செல்லும் என அவர்கள் நன்கு அறிவார்கள் எனினும், அவர்கள் ஒரே மனமும் ஒரே உள்ளமும் உடைத்தோராய் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றனர்; இயேசுவின் ஆவியானவரை அவர்கள் பெற்றுக்கொண்டதே இதற்குக் காரணம்.

புதிதாய்ப் பிறந்த திருச்சபையை 'மண்ணுலகின் இறுதி எல்லைவரைக்கும்' *(அ.ப. 1:8)* இட்டுச் செல்லும் வல்லமை இந்தப் பரிசுத்த ஆவியே. விரைவில் இவர் புற இனத்தாரையும் நேரடியாக ஆட்கொள்கிறார் *(10:44)*: இங்ஙனம், ''எல்லார் மேலும் தாம் பொழியப்பட்டுள்ளதை'' *(2:17)* எண்பிக்கிறார்; பிலிப்பு *(8:26.29 தொ)*, பேதுரு *(10:20)*, பவுல், பார்னபா *(13:2.4)* போன்று தாம் விரும்பியவர்களைத் திடீரெனத் தேர்ந்தெடுத்துத் தூதுரைக்க அனுப்புகிறார். தொடக்கத்தில் மட்டும் அன்று; தொடர்ந்து அவர்களுக்குத் துணையாயிருந்து, அவர்களின் அப்போஸ்தலச் செயல் அனைத்தையும் வழி நடத்துகிறார் *(16:6 தொ)*. அவர்கள் எடுக்கும் முடிவுகட்கு அவர் தம் அதிகார முத்திரையை அளிக்கிறார் *(15:28)*. ''கடவுளின் வார்த்தை நம்பப் பெற்றுப் பரவி வருகிறது'' என்றால் *(6:7; 12:24)*, மகிழ்வோடு முன்னேறும் இந்த உந்துதலுக்கு உள்ளார்ந்த ஊற்று தேவ ஆவியானவரே ஆவார் *(13:52)*.

5. புனித பவுலில் ஆவியானவரின் அனுபவம்:-

அ. ஆவியானவர்: நம்மில் உள்ள கிறிஸ்துவின் மகிமை:- தம் புனித ஆவியின் வல்லமையால் இயேசுவை உயிர்ப்பித்து *(உரோ 8:11)* உயிர்தரும் ஆவியாக அவரை ஆக்கிய *(1 கொரி 15:45)* இறைத் தந்தையே, உயிர்த்த ஆண்டவரின் மாட்சியாக *(2 கொரி 3:18)* அந்த ஆவியானவரை ஆக்கியுள்ளார். தம் சாயலாக நம்மை உருவாக்கும் ஆண்டவரின் மாட்சி நம்மில் இருப்புக்கொள்வதே இத் தூய ஆவியின் அருட்கொடை ஆகும். இதனால்தான், கிறிஸ்துவையும் ஆவியானவரையும் பிரித்துவைத்துப் பேசுவதற்கில்லை. கிறிஸ்துவில் வாழ்வது ஆவியில் வாழ்வதே; வாழ்வது கிறிஸ்துவே *(கலா 2:20)* உள்ளுயிர் ஆவியானவரே *(உரோ 8:2.10)*; கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பது *(உரோ 8:1)* ஆவியானவருக்குள் வாழ்வதே *(8:5..-)* என்று பவுல் கூறுகிறார்.

ஆ. ஆவியானவரின் அடையாளங்கள்:- ஆவியானவரில் வாழ்வது இன்னும் அவரை முகமுகமாய்க் கண்டுணர்ந்து இன்புறும் வாழ்வன்று; விசுவாச வாழ்வாகவே இன்றும் உள்ளது. எனினும் நிகழ்ச்சி உறுதிபெறும் உண்மை அனுபவம் அது; அடையாளங்கள் வழியாக அவரது பிரசன்னம் தெளிவுபெறும் அனுபவம் அது. இந்த அடையாளங்கள் தம்மில் பெரிதும் வேறுபடலாம். எனினும், நோய்களைக் குணமாக்கும் வரம், பல்வகைப் பரவசப் பேச்சுவரம், போன்ற வெளியரங்க அருங்கொடைகளும் சரி *(1 கொரி 12:28 தொ; 14:12)*, விசுவாசம், நம்பிக்கை அன்பு ஆகிய உள்ளார்ந்த உயர்கொடைகளும் சரி *(12:31)*, எல்லாமே நற்செய்திக்குச் சான்று பகர்ந்து பணிபுரிய உள்ளன *(1 தெச 1:5 தொ; 1 கொரி1:5 தொ)*; கிறிஸ்துவின் மறை உடலைக் கட்டி எழுப்ப உள்ளன *(1 கொரி 12:4-30)*.

மனிதனின் புறச்செயல்கள், உளநிலைகள், கடவுள் நமக்கருளும் கொடைகள்

இவற்றின் வழியாக (1 கொரி 2:12) இந்த அடையாளங்கள் எல்லாம், ''ஓர் ஆள் பிரசன்னமாயிருக்கிறார்; நம்மில் இவர் சான்று பகர்கிறார் (உரோ 8:16), பரிந்து பேசிச் செபிக்கிறார் (8:26), நம் உளத்தோடு தம்மையே ஒன்றிக்கிறார் (8;16) நம் உள்ளங்களில் 'அப்பா' எனக் கதறுகிறார் (கலா 4:6), மெய்யாகவே நம்மில் இவர் இருக்கிறார்'' என்பதை நாம் கண்டுணரச் செய்கின்றன.

இ. ஆவியானவர்: புது வாழ்வின் ஊற்று:- *பல்வேறு உரு எடுப்பினும், ஆவியானவரின் அனுபவம் அடிப்படையில் ஒன்றே. குற்றம் சாட்டப்பட்டு ஏற்கனவே சாவுக்குத் தீர்வையிடப்பட்ட மனிதனின் அவல நிலை இடத்திலே உயர்வாழ்வு வருகிறது; நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்த எழுத்துச் சட்டத்தின் இடத்திலே ஆவியானவரின் புதுநெறி நுழைகிறது (உரோ 7:6). சட்டத்தின் சாப இடத்திலே வாக்களிக்கப்பட்ட ஆவியானவரில் ஆபிரகாமுக்குக் கிடைத்த ஆசி அரும்பிச் சட்டத்தின் சாபத்தை அகற்றுகிறது (கலா 3:13 தொ). சாவை விளைவிக்கும் எழுத்துச் சட்ட உடன்படிக்கை இடத்திலே வாழ்வு தரும் ஆவியானவரின் உடன்படிக்கை இருப்புக் கொள்கிறது (2 கொரி 3:6). ஊனியல்பு சட்டத்தால் வரும் பாவப் பிடி நீங்கி, ஆவியானவருடையவும், நீதியினுடையவும் சட்டம் இடம் பெறுகிறது (உரோ 7:18-25; 8:24). ஊனியல்பின் செயல்கள் நீங்கி ஆவியானவரின் அருட்கனிகள் இடம் பெறுகின்றன (கலா 5:19-23); பாவியின்மேல் தாக்க இருந்த தேவ கோபத்தின் வேதனையும் நெருக்கடியும் நீங்கி (உரோ 2:9), ஆவியானவரின் மகிழ்ச்சியும் அமைதியும் இடம் பெறுகின்றன (1 தெச 1:6; கலா 5:22).*

இந்த வாழ்வு நமக்குத் தரப்பட்டுள்ளது; ஆவியானவரில் வாழும் நமக்கு அருட்கொடை எதிலும் குறைவே இல்லை (1 கொரி 1:7). ஆயினும், நாம்போராட வேண்டும்: ஏனெனில், இவ்வுலகில் இதுவரை ஆவியானவரை அச்சாரமாகவும் (2 கொரி 1:22; 5:5; எபே 1:14) முதற்கனியாகவும் மட்டுமே (உரோ 8:23) நாம் கொண்டுள்ளோம். ஊனுக்கு எதிராகப் போராட ஆவியானவர் நம்மை அழைக்கிறார். அவர் நம்மோடு ஏற்கெனவே இருக்கிறார் என்பதற்கு அடையாளங்கள் பல இருப்பினும், அவர் நமக்கு இடைவிடாது விடும் ஆணைகளும் அவற்றோடு கலந்தே உள்ளன. ''ஆவியானவரே நமக்கு உயிர் ஊட்டுபவராயிருப்பதால், ஆவியானவரே நாம் செயலாற்றவும் செய்கிறார்'' (கலா 5:25; காண் 6:9; உரோ 8:9.13; எபே 4:30); ஊனியல்பு உள்ளவர்களாய், கிறிஸ்துவில் குழந்தைகளாய் இருந்த நம்மை ஆவி பெற்றவர்களாய் முதிர்வடைந்த மனிதர்களாய் உருவாக்குகிறார் (1 கொரி 3:1).

ஈ. ஆவியானவரும் திருச்சபையும்:- *திருச்சபையே ஆவியானவரில் பிறந்த இந்தப் புதுப்படைப்பு. இத்திருச்சபையை ஆவியானவரிடமிருந்து பரிக்க முடியாது; திருச்சபையில் ஆவியானவரின் அனுபவம் கிட்டுகிறது; அதன் பேருண்மைகளை உணர அது உதவுகிறது. திருச்சபையைக் கட்டி எழுப்பவும் தேவ ஆலயத்தைத் திருநிலைப்படுத்தவும் (1 கொரி 3:16; எபே 2:22) மிகப் பயனுறுதியாக உதவுவதால்தான் அருட்கொடைகள் அதிக மதிப்புள்ளவையாய் உள்ளன (1 கொரி 12:7; 14:4). ஆவியானவர் இடைவிடாது தம் செயலையும் மறை உடலின் ஒற்றுமைக்காக ஓயாது உழைத்துக் கொண்டேயிருக்கிறார் (1 கொரி 12:13). நட்புறவின் ஆவியானவர் (எபே 4:3; பிலி 2:1) இதயங்களில் அன்பு எனும் ஒப்புயர்வற்ற கொடையைப் பொழிகிறார் (1 கொரி 13:2 கொரி 6:6; கலா 5:22; உரோ 5:5). தம்முடைய ஒன்றியத்துள் மக்கள் அனைவரையும் ஈர்க்கிறார் எபே 4:4).*

உ. கடவுளின் ஆவியானவர்:- *''ஒரே உடலும் ஒரே ஆவியும் உண்டு....ஒரே ஆண்டவர்...ஒரே கடவுள்'' (எபே 4:4 தொ). கடவுளின் ஆவியானவராய்த் தாம் இருப்பதால் அவர் அனைவரையும் ஒன்றிக்கிறார்; பரிசுத்த கடவுளின் ஆவியாய் இருப்பதால் அனைவரையும் பரிசுத்தமாக்குகிறார் (2 கொரி 1:22). இறைவனை நாம் அண்டிவரத்*

துணைபுரியவும், இறைவனோடு உயிருள்ள தொடர்பு கொண்டவர்களாய் நம்மை ஆக்கவும், தெய்வீக உள்ளத்தின் ஆழத்தை நாம் கண்டுணரவும், கடவுளின் மறைபொருளைச் சிறிது நாம் உய்த்துணரவும் (1 கொரி 2:10 தொ), ஆவியானவரின் எல்லாச் செயல்களும் நம்மைத் தூண்டுகின்றன. ஆவியானவரில்தான் நாம் கிறிஸ்வை அறிகிறோம்; இயேசு ஆண்டவர் என அறிக்கையிடுகிறோம் (12:3); இறைவனைப் பார்த்துச் செபிக்கிறோம் (உரோ. 8;26); அவரை, 'அப்பா, தந்தாய்' எனப்பெயர் சொல்லி அழைக்கிறோம் (உரோ 8:15; கலா 4:6). ஆவியானவரை நாம் கொண்டிருக்கும் முதல் நொடியிலிருந்தே, உலகில் எதுவும் நம்மை அழிக்க இயலாது; ஏனெனில், கடவுள் தம்மையே நமக்குக் கொடுக்கிறார்; நாம் அவரில் வாழ்கிறோம்.

இறை ஏவுதல் (INSPIRATION)

கத்தோலிக்கக் கோட்பாட்டில், விவிலியமும் பாரம்பரியமும் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாட்டின் எழுதப்பட்ட, வாய்மொழி மூலங்களாகும். பொதுவாக இறை ஏவுதல் என்பது விவிலியத்தின் தோற்றத்தில் இறைவனது செயலைக் குறிக்கும். நாம் இதனை, இறை ஏவுதலில் விசுவாசம், இறை ஏவுதலின் பரப்பு, இறை ஏவுதல் பற்றிய இறையியல் கருத்து மற்றும் தவறின்மை ஆகிய தலைப்புகளின் கீழ் காண்போம்.

1. இறை ஏவுதலில் விசுவாசம்:- பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த நிலையில் பாதிக்கக் கூடிய இந்த விசுவாசத்தின் வேர்கள் மோசே, இறைவாக்கினர்கள், ஞான இலக்கிய ஆசிரியர்கள், போதிக்கும் தொழிலைக் கொண்ட குருக்கள் ஆகியோரை இறை ஏவுதல் செயல்படச் செய்தது என்ற இஸ்ராயேலின் விசுவாசத்திலிருந்து தொடங்குகின்றன. இவர்கள் இதில் வேறுபடலாம். மோசே இறைவனின் விருப்பத்தை இஸ்ராயேலுக்கு அறிவிக்கின்ற தனிச்சிறப்பான இடையீட்டாளராக இருந்தார். ஆண்டவரின் வார்த்தையைப் பேசுபவராக இறைவாக்கினர் இருந்தார். ஞானம் 'யாவேயின் கொடையாக இருந்தது. குருக்கள், மோசேயுடைய போதிக்கும் பணியினை, தழுவிய முறையில், தொடர்ந்து செயல்படுத்தினர். எரே 18:18 குருவின் அறிவுரை, ஞானிகளின் ஆலோசனை, மற்றும் இறைவாக்கினரின் வார்த்தை என்னும் மூன்று அருங்கொடைகளைப்பற்றி கூறுகிறது.

கி.மு.400-க்கும் கி.பி.100-க்கும் இடைப்பட்ட காலத்தில் திருநூல்களின் இறைதுவக்கம் பற்றிய உறுதியான விசுவாசம் யூதமதத்தில் தோன்றுகிறது. ராபிகள் இறை ஏவுதலின் உயர்நிலையை ஐந்நூல்களுக்கும் அதற்கடுத்த நிலையை இறைவாக்கினர்களுக்கும் அதற்கும் கீழான நிலையினை மற்ற நூல்களுக்கும் அளித்தனர். இறைவன் சொல்லச் சொல்ல, இறை ஏவுதல் பெற்ற ஆசிரியர்கள் வாசகங்களை எழுதினர் என்று இறை ஏவுதலைப் புரிந்து கொண்டனர். ஆகையால் ராபிகளின் வாதங்களில் ஒவ்வொரு வாக்கியமும் இறைவெளிப்பாட்டைக் கொண்ட இறைக்கூற்றாகவும் எந்தப் பிரச்சினையினையும் தீர்க்கக்கூடிய மீறமுடியாத விவாதமாகவும் கருதினர். திருநூல்களின் இறைதுவக்கம் பற்றிய யூத விசுவாசத்தையும் சொல்லச் சொல்ல எழுதப்பட்டது என்னும் கோட்பாட்டையும் வேறுபடுத்தி நோக்க வேண்டும்.

திருநூல்களின் இறைதொடக்கம் மற்றும் அதிகாரம் பற்றிய யூதமதத்தின் நம்பிக்கையில் இயேசுவும், புதிய ஏற்பாடு ஆசிரியர்களும் பங்கு கொண்டனர் என்பதைக் காட்டக் கூடிய விதத்தில் புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 350 பழைய ஏற்பாட்டு வாசகங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இறை ஏவுதல் பற்றிய புதிய ஏற்பாட்டின் கருத்து 2 திமோ 3:14-17 மற்றும் 2 பேதுரு 1:19-21-இல் வெளிப்படையாக உள்ளது. கிறிஸ்தவ இறையியலில் 'இறை ஏவுதல்' என்னும் சொல்லுக்கு மூல ஆதாரமாக 2 திமோ 3:14-17 என்ற பகுதி உள்ளது. ஆயினும், இச்சொல் விளக்கப்படவில்லை. சொல்லச் சொல்ல எழுதப்பட்டது என்ற கருத்தும் இல்லை. 2 பேதுருவின் பகுதி இறைவாக்கி

னைப்பற்றி வெளிப்படையாகக் கூறுகிறது. இறைவாக்கு ஒரு போதும் மனிதரின் விருப்பத்தால் உண்டானதில்லை. மனிதர் பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டு கடவுளின் ஏவுதலால் பேசினர். இந்த உருவகம் இறைத்தூண்டுதலையும் இயக்கத்தையும் சுட்டிக் காட்டுகிறது. சொல்லச் சொல்ல எழுதும் கருத்தை அன்று.

புதிய ஏற்பாடும் இறை ஏவுதலுக்கு உரிமை கொள்ளவில்லை, இந்த விசுவாசத்தின் வளர்ச்சியைப்பற்றித் தடம் காணமுடியாது. ஆயினும் தொடக்கத் திருச்சபை இஸ்ராயேல் கொண்டிருந்த இறைவாக்குரைக்கும் அருங்கொடையினைத் தானும் கொண்டிருப்பதாக நம்பியது (அ.ப. 2:16-20; 11:27; 13:1; 1 கொரி 12:28-29; 14:37; எபே 4:1).

தொடக்கத்திலிருந்தே திருச்சபையின் தந்தையர் விவிலியத்தின் இறைத்தொடக்கம் மற்றும் விவிலியத்தின் அதிகாரம் பற்றிய நம்பிக்கையை ஏற்றுக் கொண்டிருந்தனர். பலர் இறை ஏவுதலை விளக்குவதற்காகச் ''சொல்லச் சொல்ல எழுதுதல்'' என்னும் சொற்றொடரையே பயன்படுத்துகின்றனர். யூதமதத்திலிருந்து இச்சொல்லை எடுத்தாளுகின்றனர்; பல தந்தையர்கள் இக்கருத்தையும் ஏற்றுக் கொண்டனர். மற்ற தந்தையரின் கருத்துக்கள் இத்தகைய கருத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் கருத்துப்படி விவிலியத்தின் ஆசிரியர் இறைவனே; மனித ஆசிரியர் இறைவனின் கருவியே ஆவார்; விவிலியம் இறைவனின் வார்த்தை ஆகும். 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தந்தையரின் இலக்கியம், புதிய ஏற்பாட்டைப் பழைய ஏற்பாட்டுக்குச் சம அதிகாரமுடையதாக எடுத்துக்காட்டத் தொடங்குகின்றன. இந்த விசுவாசத்தின் வளர்ச்சிக்குத் தடம் காட்டமுடியாது. ஆனால் அதன் வேர்களை ஆதித்திருச்சபையின் இறைவாக்குரைத்தல் மற்றும் அப்போஸ்தலத்துவம் பற்றிய கருத்துகளில் காணலாம்.

இறையியல் பற்றி வாதம் 19-ஆம் நூற்றாண்டுவரை, உடனடி இறையியல் பிரச்சினையாகத் திருச்சபையில் உருவாகவில்லை; 1870-ஆம் ஆண்டின் வத்திக்கான் சங்கத்தின் அதிகாரப்பூர்வமான அறிவிப்புவரை திருச்சபையின் அறிவிப்புகள் எந்நோக்குடனும் இப்பிரச்சினையைத் தொடவில்லை. புனித நூல்கள், மனிதத் தொடக்கம் கொண்டவை யானாலும் தன்னுடைய அதிகாரத்தால் ஒப்புதல் அளித்ததாலோ அல்லது எந்தவிதத் தவறுமின்றி இறைவெளிப்பாட்டை அவை கொண்டிருப்பதனாலோ திருச்சபை அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை; மாறாகத் தூய ஆவியின் இறை ஏவுதலால் இறைவன் அவற்றின் ஆசிரியராக இருப்பதன் பொருட்டே திருச்சபை அவற்றை ஏற்றதாக அச்சங்கம் அறிவித்தது. விவிலியத்தின் இறை ஏவுதலை மறுப்பதானது பதிதமாகக் கண்டனம் செய்யப்பட்டது. சங்க அறிவிப்பானது இறை ஏவுதலின் இயல்பினைப் பற்றிப் பல்வேறு விறுவிறுப்பான இறையியல் ஆய்வுகளையும் தர்க்கங்களையும் தொடங்கி வைத்தது. 13-ஆம் சிங்கராயர் 1893-ஆம் ஆண்டு ''பராமரிப்புமிக்க இறைவன்'' என்னும் திருமுகத்தின்மூலம் தலையிட்டு, ''இறைவன், இறை ஏவுதல் பெற்ற ஆசிரியர்களைத் தமது இயற்கை கடந்த செயலால் இயக்கி எழுதும்படித் தூண்டினார். தாம் கருதியவற்றை மட்டுமே அவர்கள் எழுதும்படி தூண்டினார். அவற்றை அவர்கள் சரியானபடி அறிந்து, பிரமாணிக்கமாய் எழுதவிரும்பி, தகுந்த சொற்களால் வழுவா உண்மையோடு அவற்றை வெளிப்படுத்தும்படி அவர்களுக்கு உதவினார். இவ்வாறாக மட்டுமே இறைவன் விவிலியத்தின் ஆசிரியராக இருக்க முடியும்'' என்று அறிவித்தார். நூலினை எழுதுவதற்கான எல்லா செயல்களிலும் முதல் காரணமாக இறைவன் செயலாற்றுகிறார் என்னும் வலியுறுத்தப்பட்ட அறிவிப்பு 1893-ஆம் ஆண்டிலிருந்து இறையியல் சிந்தனையானது இயங்குவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது.

2. இறை ஏவுதலின் அளவு:- அ) இறை ஏவுதலுக்கு உட்பட்ட நூல்கள் எவையென எவ்வாறு தீர்மானிப்பது? ஆ) தனி நூல்களில் இறை ஏவுதலுக்கு உட்படாத பகுதிகள் ஏதே

னும் உள்ளனவா? என்னும் இருகேள்விகளை இங்கு நாம் ஆய்வு செய்வோம்.

அ. இறை ஏவுதல் என்பது அனுபவத்தினால் வருவதன்று; மற்றும் நூல்களின் அமைப்பு மற்றும் சிறப்பியல்புகளின் மூலம் அறியப்படக்கூடியதுமன்று. பதித சீர்திருத்த வாதிகளுக்கு இப்பிரச்சினை அவசரம் மிக்கதாய் ஆயிற்று. அவர்கள் வேதசத்தியப் பாரம்பரியத்தை நிராகரித்துவிட்டு வாசகருடன் பேசுகிற ஆவியானவரின் உள்சான்றைத் தவிர, வேறு எந்த அளவு கோலினையும் காணமுடியவில்லை. புறவியலான அளவு கோலினைத் தேடுதல், இறைவாக்குகள் மற்றும் அப்போஸ்தலத்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட அளவுகோலை உருவாக்குவதற்குப் பிரிவினைச்சபை இறையியல் வல்லுநர்களை இட்டுச் சென்றது. நவீன காலப் புலமையில் இந்நூல்களின் இலக்கியத் தோற்றம் பற்றிய நோக்கு இக்கோட்பாட்டினை ஆதரிப்பதைக் கடினமாக்குகிறது. தன்னுடைய பாரம்பரியத்தைத் தவிர்த்து வேறு எந்த அளவு கோலும் தகுதியுடையதன்று என்னும் கருத்தினைக் கத்தோலிக்கத்திருச்சபை எப்போதுமே கொண்டிருந்தது. ஏனெனில், மனிதனுக்கு வெளிப்பாடு எந்த வேறு வழியிலும் வந்தடையவில்லை. வருவதற்கு வேறு எந்த இடைநிலையும் இல்லை; மற்றும் இறைஏவுதலானது இறைவெளிப்பாட்டின் மூலம் மட்டுமே அறியப்படமுடியும்.

ஆ. சில விளக்கவுரை பிரச்சினைகள், வாசகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சமமாக இறை ஏவுதல் செலுத்தப்படவில்லை என்று கூறுமாறு சில இறையியல் அறிஞர்களை இட்டுச் சென்றன. இக்கோட்பாடுகள், பொதுவாக, வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடுகளைக் கொண்ட பகுதிகள் மட்டுமே அல்லது வெளிப்படுத்தப்பட்ட பகுதிகள் மட்டுமே இறைஏவுதலுக்கு உட்பட்டவை என்ற வடிவம் எடுத்தன. இவை, பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக் காட்டப்பட்ட பகுதிகள் போன்ற முக்கியம் குறைந்த பகுதிகளை இறை ஏவுதலினிருந்து விலக்கின. இக்கோட்பாடுகள் விவிலியத்தில் சமயத்தின் முக்கியத்துவத்தைச் சரியாக வலியுறுத்தின. ஆனால் கோட்பாட்டுடன் சமயத்தைத் தவறான முறையில் ஒன்றாக்கின. இலக்கிய அமைப்புகளின் கொள்கையை ஒதுக்கின. 13-ஆம் சிங்கராயர் தனது திருமுகத்தில் இக்கோட்பாடுகள் அனைத்தையும் வெளிப்படையாக நிராகரித்தார்.

3. இறை ஏவுதல் பற்றிய இறையியல் கோட்பாடு:- இறை ஏவுதல் பற்றிய பாரம்பரிய விசுவாசத்தின் போதனையை, இறைஏவுதல், இறை ஆசிரியத்தன்மை, மற்றும் இறைவார்த்தை ஆகிய கூறுகளில் சுருக்கிக் கூறலாம். பொதுவாக இக்கூறுகள் முறைப்படி ஒரே தன்மையுடையவை அல்லது; அவற்றினிடையேயுள்ள வேறுபாட்டை, ''இறை ஏவுதலின் மூலமாக, விவிலியம் தன்னுடைய வார்த்தையாக இருக்கும் விதத்தில் இறைவனே விவிலியத்தின் ஆசிரியராவார்'' என்ற கூற்றில் காணலாம். பாரம்பரிய விசுவாசம் இக்கூறுகளின் பொருளை விளக்கிக் கூறவில்லை; அறிவுசார்ந்த முறையிலும், கோட்பாட்டில் சரியான முறையிலும் அவற்றினை விளக்குவது இறையியலின் கடமையாக உள்ளது.

சொல்லச் சொல்ல எழுதுதல் ஆகிய ராபிகளின் கோட்பாடு பல தந்தையரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை கத்தோலிக்க மற்றும் பிரிவினைச் சகோதரனின் இறையியலில் ஆதிக்கம் செலுத்தியது. திருநூல்களில் அமைப்பிலும் நடை முறையிலும் உள்ள வித்தியாசங்களைக் கணிப்பிலே கொள்ளாமல் கீழ்த்தரமான மற்றும் இயந்திரத்தனமான கருத்தாக இது உள்ளது. இக்கோட்பாட்டைத் தவிர்க்க மேற்கொள்ளப்பட்ட சில இறையியலாரின் முதிர்ச்சியடையாத முயற்சிகள் சரியாக உருவாக்கப்படவில்லை. லெயோனார்டு லேசியுஸ் (1587) என்பவர் மனித முயற்சியால் உருவாக்கப்பட்ட நூலானது, பின்வந்த இறை ஒப்புதலினாலும் அங்கீகாரத்தினாலும், இறை ஏவுதலுக்கு உட்பட்டதாக ஆகலாம் என்று கூறினார். சியன்னா சிக்ஸ்து (1575) என்பவர் திருச்சபை அங்கீகாரம் மட்

டும் போதுமானது என்று கூறினார். வத்திக்கான் சங்கத்திற்குச் சற்று முன்னர் இக்கருத்து மீண்டும் 'கானேபெர்க்' (1850) என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. ஜாக்ன் (19-ம் நூற்றாண்டின் தொடக்கம்) என்பவரின் கருத்துப்படி இறை ஏவுதலானது தவறின்மைக் கொடையில் அடங்கியுள்ளது. ஆனால் சிக்ஸ்து மற்றும் ஜாக்ன் ஆகியோரின் கருத்துக்கள் வத்திக்கான் சங்கத்தினால் வெளிப்படையாகவே நிராகரிக்கப்பட்டது.

அண்மைக்கால இறையியல் கருத்துக்கள், புனித நூல்கள் தோன்றுவதில் நேரடியான இறை தூண்டுதலில் அடங்கியுள்ளது இறை ஏவுதல் என்ற நிலையைக் கொண்டுள்ளன. இந்நிலை, பின்பு வந்த இறை அல்லது திருச்சபையின் அங்கீகாரம், அல்லது தவறில்லாதிருக்க எதிர்மறையான உதவி போன்ற கோட்பாடுகளைவிட அதிகமானது. இது சொல்லச்சொல்ல எழுதுதல் ஆகிய கோட்பாட்டின் ஒன்றுமின்மையையும் கருத்தில் கொள்கிறது. இந்த ஆய்வுகளின் விளைவாகப் புனித நூல்களை உருவாக்குகின்ற இறை ஏவுதலுக்கும், உண்மைக்கு இறைவனால் அளிக்கப்படுகிற சான்றாகிய வெளிப்பாட்டிற்கும் இடையிலுள்ளவேறுபாடு வெளிப்படுகிறது. இறைஏவுதல் பெற்ற ஆசிரியர் எழுதுவது வாசிப்பவர்களுக்கு வெளிப்பாடாகும்; தனது அறிவைச் சாதாரண மனித முறையிலேயே பெற்றிருக்கலாம் என்பதால், அது ஆசிரியருக்கு அது வெளிப்பாடாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

1870-இல் விவிலியக் கருத்துகளையும் அவற்றின் வார்த்தை அமைப்புகளையும் வேறுபடுத்தக்கூடிய ஒரு கருத்தை பிரான்சேலின் முன் மொழிந்தார். இதன்படி இறைஏவுதல் கருத்துகளை மட்டுமே பாதிக்கிறது; இக்கருத்துக்கள் வெளிப்பாட்டின் மூலமாகவோ அல்லது ஆசிரியர் ஏற்கெனவே கொண்டிருக்கும் கருத்துக்களைக் குறிப்பாகத் தெரிவித்தலாலோ ஆசிரியருக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. வார்த்தை அமைப்பானது ஆசிரியருடையதே; இதில் தவறுகளுக்கு எதிரான எதிர்மறை உதவியினைத் தவிர்த்து வேறு எந்த இறைத்தாக்கமும் இல்லை. பேசப்பட்ட சிந்தனை, பேசப்படாத சிந்தனை என்ற வேறுபாட்டைப் புகுத்தியதற்காக இறையியல் வல்லுநர்கள் இந்தக் கோட்பாட்டைக் குறை கூறியுள்ளனர். இத்தகைய வேறுபாட்டை இக்கால உளவியல் ஏற்றுக்கொள்ளாது. மேலும் இலக்கிய வடிவங்கள் பற்றிய அண்மைக்கால ஆய்வுகள், இந்த முறையில் வடிவத்தையும் பொருளடக்கத்தையும் பிரிப்பதைக் கடினமாக்குகின்றன. விவிலியத்தின் பொருளடக்கத்தில் பெரும்பகுதிகளைக் கோட்பாட்டுக் கருத்துக்களாக ஆக்கமுடியாது என்பதையும் இக்கோட்பாடு கணக்கிலேயே கொள்ளவில்லை. வாதத்திற்கு ஏற்றதாக இல்லாத நம்பிக்கை, பயம், ஆசை, கோபம் மற்றும் இதே போன்ற உளவியல் நடைமுறைகளையும் விவிலியம் கூறுகிறது. இறுதியாக, இக்கோட்பாடானது வார்த்தைகள் மற்றும் வார்த்தைகளுக்கான எதிர்மறை உதவியைச் சேர்த்தல் ஆகியவற்றுக்குப் பதிலாக, சொல்லச் சொல்ல எழுதும் முறையை கருத்துகளுக்குச் சாற்றிக் கூறுகிறது.

1895-1896-இல் எம்.ஜே. லெக்ரான் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தினை முன்மொழிந்தார். பிரான்சேலின் தனது அடிப்படை கோட்பாடாக கொண்டிருந்த ஆசிரியர் என்னும் எண்ணத்திற்குப் பதிலாக, இறைஏவுதல் என்னும் எண்ணத்தின்மேல் லெக்ரான் தனது கருத்தை உருவாக்கினார். இறைவனுக்கும் மனித ஆசிரியருக்கும் இடையில் உள்ள கூட்டுறவானது, மூலகாரணத்திற்கும், துணைக்காரணமாகிய கருவிக்கும் இடையில் உள்ள கூட்டுறவினைப் போன்று புரிந்துக் கொள்ளப்பட வேண்டும். துணைக் காரணம் பற்றிய தாமஸ் அக்வீனாஸின் கருத்துப்படி, முழுவிளைவில் ஒவ்வொரு காரணமும் காரணமாக இருக்கக் கூடிய கூட்டுறவு காரண அமைப்பு இது ஒன்றேயாகும். துணைக்காரணமானது தனக்குரிய ஆற்றலைக் கொண்டிருந்தாலும் மூலகாரணத்தின் ஆற்றலினால் உயர்த்தப்பட்டுச் செயல்படுத்தப்படுவதால் தன் விளைவை அடைகின்றது. எனவே, இறை

வன், வரலாற்றில் அவனுடைய காலம், நிலைமை, ஆளுமை, சிந்தனை மற்றும் பேச்சில் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றோடு கூடிய முழு மனிதனை ஏற்றுக் கொள்கிறார். மூலக்காரணத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவது இப்பண்புகள் எதையும் மாற்றாமல், எதிர்பார்க்கும் முடிவிற்கு அவற்றைப் பயன்படுத்துகின்றது. மனிதனுடைய கருவி தகுதியானது, நூல் எழுதுவதற்கான அவனது ஆற்றலாகும். முழு மனிதனும் அவன் இருக்கும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ளப்படுவதால் அவனால் உருவாக்கப்பட்ட நூலும் பிறருடையதாக அன்றி அவனுடையதாகவே உள்ளது. இறைவாக்கினர் தான் அறிவிக்கும் உண்மையானது வெளிபடுத்தப்பட்டதாகவோ அல்லது அனுபவத்தினால் அறிந்ததாகவோ இருந்தாலும், அதனைப் புரிந்துக்கொள்ள உதவும் ''இறைவாக்கு ஒளி அளித்தல்'' என்னும் அக்வினாசின் கருத்தை, லெக்ரான் மற்றும் பிறரும் சேர்ந்து ஏற்றுக்கொண்டனர். அறிவின் சக்திகளில் இயல்பான நிலைகளும் மேலான விதத்தில் புரிந்து கொள்ளச் செய்யும் தனிப்பட்ட இயக்கமாக இந்த ஒளி அளித்தல் புரிந்து கொள்ளப்படுகிறது. இந்த ஏற்பாடானது விருப்பம், செயலாற்றும் சக்திகளை இயக்குகின்றது. இவ்வாறு, லக்ரானின் கருதுகோளில் கருத்துக்களின் அமைப்பும் அவற்றைச் சொற்களாக எடுத்துக் கூறுதலும் இறை ஏவுதல் பெறுகின்றன. ''வார்த்தை இறை ஏவுதலை'' இவ்வாறு புரிந்து கொள்ளுதலைப் பழங்காலத்து சொல்லச் சொல்ல எழுதுதலோடு குழப்பிவிடக் கூடாது.

மேலும் பல அண்மைக்கால ஆசிரியர்கள் இக்கருத்தினை மேலும் நயப்படுத்தியுள்ளனர். பி.பேனோவின் கருத்துப்படி எழுத்தாளரின் பிரச்சினையானது புரிந்து கொள்ளுவதைப்பற்றி அன்று, எடுத்து கூறுதலைப்பற்றியதாகவே உள்ளது. எனவே குறிப்பாக, இறை ஏவுதலுக்கு உட்பட்ட எழுத்தாளரை இயக்குகின்ற 'இறைவாக்கு ஒளி அளித்தல்' ஆராய்ச்சி சிந்தனையைச் சார்ந்ததன்று; அவரது நோக்கத்திற்கு ஏற்ற வடிவம் நடை ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்க எழுத்தாளருக்கு வாய்ப்பளிக்கின்ற செயல்பாட்டு இயக்கமாகும். எழுதப்பட வேண்டியதன் செயல்பாட்டுத் திறனாய்வின் ஒளி அளித்தலில், அவர் இறைஏவுதல் அருங்கொடைக்கு இடம் அளிக்கிறார். விவிலிய நூல்கள் உருவாக்கப்படலில் உள்ள சிக்கலான இலக்கிய முறையைக் கருத்தில் கொண்டு இப்பிரச்சினையைப் போனோதான் முதலில் ஆராய்ந்தவர். செயல்பாட்டு திறனாய்வுக்கு ஒளி அளித்தல், இறைஏவுதலுக்குட்பட்ட நூலைத் தயாரிக்க பங்குகொண்ட அனைவரையும், அவர்களுடைய பங்கிற்கேற்ப பாதித்தது, 'ஆசிரியர்' மற்றும் 'நூல்' என்பவை நவீன கருத்துக்களாகும். அவற்றை அப்படியே பழைய உலகிற்கு மாற்றிக் கூறக் கூடாது.

கார்ல்ரானரின் கருத்துப்படி இறைஏவுதல் அருங்கொடையானது பிற்காலத் தலைமுறைகளில் தொடராமல், ஆதித்திருச்சபைக்கு மட்டுமே உரிய சிறப்பியல்புகளில் ஒன்றாகும். தனிப்பட்ட எழுத்தாளர்கள் என்று இல்லாமல். திருச்சபையே புதிய ஏற்பாட்டை எழுதியது. பிரிங்மேனின் கருத்துப்படி இக்கொடையானது அப்போஸ்தலர்களையும் அவர்களது நெருங்கிய துணையாளர்களையும் கொண்ட, அப்போஸ்தலிக்கப் பணியின் ஒரு பகுதியாகும்.

இறைஏவுதல் கோட்பாடானது பலவழிகளில் முழுமையடையாமலேயே உள்ளது என்பதை இறையியலார் பொதுவாக ஏற்றுக் கொள்கின்றனர். 'ஆசிரியர்' மற்றும் 'நூல்' என்னும் சொற்களை நவீன அளவில் புரிந்து கொள்ளும் இக்கோட்பாட்டின் வெறும், ஏட்டுத்தன்மை, பேனோவில் நூல்களிலும் போதுமானமட்டும் விலக்கப்படவில்லை. சில விவிலிய நூல்களே ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவை. பெரும்பாலானவை பெயர் தெரியாதவர்களை ஆசிரியர்களாகக் கொண்டுள்ளன. அவை வளர்ச்சியின் நீண்ட கால முறையின் முடிவுகளாக உள்ளன. எல்லாம் இல்லாவிடினும், பெரும்பாலான விவிலிய நூல்கள் அமைக்கப்பட்டு வாய்மொழியாகவே கையளிக்க அனுப்பப்பட்டன. இத்தகைய நூல்களில் எழுதுவதை

மட்டுமே பாத்திக்கும் இறைஏவுதல் அருங்கொடையினைப்பற்றிப் பேசுவது உண்மைக்கு ஏற்றதாக இல்லை. எதிர்கால ஆய்வுகள், இறைஏவுதலின் சமூகப் பண்பை வலியுறுத்தும் என்பதில் ஐயமில்லை. இந்தச் சமூகப் பண்பு பழங்கால இலக்கிய அமைப்புகளின் சமூகப்பண்புகளுக்கேற்ப விளக்கப்படும். ஆதிகால ஏழுத்தாளரோ அல்லது பேச்சாளரோ தன்னைத் தனிப்பட்ட கலைஞராகக், கருதவில்லை. எந்தச் சமூகத்தில் எந்தச் சமூகத்திற்காகப் பேசினாரோ அந்தச் சமூகத்தின் பிரதிநிதியாகவே பேசினார். ஒருவிதத்தில் இஸ்ராயேலும் திருச்சபையுமே விவிலியத்தின் உண்மையான ஆசிரியர்களாகக் கருதப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டில், குருக்கள், இறைவாக்கினர்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் ஞானிகள், புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் போன்ற தங்களது பிரதிநிதிகளென, கருதப்பட்டவர்கள் மூலம் இரண்டும் தங்கள் பணியினைச் செயல்படுத்தினர்.

4. தவறாமை அல்லது வழுவாமை:- இது திருச்சபையின் விளக்க உரையின் பொருளாக எப்போதும் இருந்ததில்லை. ஆனால் திருச்சபையில் எவ்வளவு தெளிவாக விசுவாசிக்கப் பட்டதென்றால் இறையியல் வல்லுநர்கள் இதை ஒரு விசுவாச சத்தியமாக ஏற்றுக் கொண்டனர். துணைமுடிவான தவறாமை என்ற கருத்து ஓரளவு சிக்கலான இறை ஏவுதல் கருத்தைப் பொறுத்தது. தவறாமைப் பற்றிய அடிப்படைவாதிகளின் கருத்தை ஆதரிக்க முடியாது. சில விளக்கவுரை பிரச்சினைகள், தவறாமை பற்றி இன்னும் துல்லியமான கருத்தினை உருவாக்குமாறு நவீன இறையியல் வல்லுநரைத் தூண்டின. ஆனால், பெரும்பாலான கருத்துக்கள் முதிர்ச்சியடையாதவையாகவும், சரியாக உருவாக்கப்படாதவையாகவும் இருந்தன. ஆதியாகமம் பொய்யான கதைகள் மூலம் உண்மையை வெளிப்படுத்துவதாக ஒருவர் கூறுகிறார். வேறுசிலர் திருச்சபையின் வழுவாமை போன்ற விசுவாசம் மற்றும் ஒழுக்கம் சம்மந்தப்பட்ட காரியங்களுக்குள் விவிலியத்தின் தவறாமையை வரையறை செய்தனர். வேறொருவர் ''தொடர்பு உண்மை'' என்னும் கோட்பாட்டினை எடுத்துக்கூறினார். அதன்படி ''முழுமையான அல்லது வரம்பில்லாத உண்மை'' என்னும் சொல்லை வேறு பொருளில் பயன்படுத்தினார். ''ஒரு கலாச்சாரத்தின் கருத்துக்கள் மற்றொரு கலாச்சாரத்திற்கு உரியவை அல்ல'' என்றார்.

இக்கோட்பாடுகள் நவீன வரலாற்று மற்றும் இயற்கை இயலுக்கு ஏற்ப ''தவறாமை'' என்னும் கருத்தை நயப்படுத்த எடுத்த முயற்சிகளேயாகும். வரலாறும் இயற்கை அறிவியலும் விவிலியத்தின் ஒரே சிரோகவுள்ள இறை அறிவு சார்ந்த வழுவாமையைப் பாதுகாக்க இயலாத ஒன்றாக ஆக்குகின்றன. நவீன விளக்கவுரையானது இத்தகைய எளிய, பரந்த பலவற்றையும் உள்ளடக்கும் விளக்கத்தைத் தேடுவதில்லை. ஒவ்வொரு பிரச்சனையும் அதனுடைய பின்னணியிலேயே தீர்க்கப்பட வேண்டும் என்று நினைக்கின்றது. ஆயினும், இப்பிரச்சினைகளை நடத்தும் முறையினைக் கவனிக்கின்ற விளக்கவுரை படிப்பினைகளிலிருந்து சில பொதுவான விதிமுறைகள் உருவாயின.

அ) மனித ஆசிரியர் எந்தப் பொருளில் சொல்கிறாரோ, அதே பொருளில் மட்டுமே விவிலிய வார்த்தைகள் எப்போதும் உண்மையாக உள்ளன. அந்தப் பொருள் என்ன என்பதை உறுதியாக அறிவதற்கு முன்னர், விவிலிய எழுத்தாளர்களின் முறைமைகளையும் பேச்சுகளையும் ஒருவன் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

ஆ) வழுவுகின்ற மனிதனிலிருந்து வழுவாத எழுத்தாளரை ஒருவன் வேறுபடுத்திக் காட்டவேண்டும். தவறான நம்பிக்கைகளை மனிதன் கொண்டிருக்கலாம். அவை சில நேரங்களில் தங்களையே உறுதியாகக் காட்டிக்கொடுத்துவிடும். வழுவாமை என்பதற்கு இத்தவறுகள் கூறப்படவில்லை என்பது பொருள். இவை புலப்படாதவை என்பதல்ல.

இ) வழுவாமை என்பது வழக்கமான மனித மொழியில் வழக்கு முறையில் புரிந்து

கொள்ளப்பட வேண்டும். விவிலியமானது, பொதுப்பாணி முறையையும் கலைச் சொல் தன்மையற்ற மொழியையும், உருவகங்க ளையும், முரணுரைகளையும், தோராயமான கூற்றுக்களையும், தொலைநோக்கு நிகழ்ச்சி யுரைகளையும், நாடோடிப் பாடல்களையும் கதைகளையும், புராணங்களையும் பயன்ப டுத்துகிறது.

ஈ) வழுவாமை என்பது மேற்காசியமக்க ளின் மனப்போக்கையும், செமித்திய மொழி களின் பண்புகளையும் கணக்கில் கொள்ள வேண்டும். மேற்காசிய மக்களின் மனப் போக்கு மீபௌதீகத் தன்மையோ வாத முறையோ கொண்டதல்ல. எபிரேய மனப் போக்கு தொடர்ந்து கருத்தியலான சிந்தனை யையும் நுட்பமான வேறுபாடுகளையும் எடுத்துக்கூறவல்லது அன்று. அதனுடைய கூற்றுக்கள் யாவும் ஒரே தர இலக்கணத் தன்மையுடையன, நுட்பவேறுபாடுகள் இல் லாதவை.

உ) வழுவாமை இலக்கிய வடிவங்களின் அமைப்பில் சிந்திக்கப்பட வேண்டும்.

ஊ) தவறாமை எழுத்தாளர்களின் தனிப் பட்ட நடை அமைப்பில் கருதப்பட வேண் டும்.

எ) எழுத்தாளர் பொருட்களைப்பற்றி அவை உள்ள நிலையிலேயே பேசுவதற்கு எப்போதும் விரும்புவதில்லை. இவ்வாறு, பொருட்கள் அவற்றின் வெளிப்புறத் தோற் றத்தின்படி விவரிக்கப்படுகின்றன; பொது வான செம்மையற்ற அடையாளங்கள் பயன் படுகின்றன. குறிப்பிட்ட பின்னனிக்கு மட் டுமே ஏற்புடைய அறிவுரை அளிக்கப்படுகி றது. எதிரடித்தாக்கு முறை பயன் பட்டுள் ளது. பொதுப்பாணி உரையின் பண்புகளும் காணப்படுகின்றன.

தவறாமைக்கு எதிராக இயற்கை அறிவிய லிலிருந்து எழுதப்பட்ட பிரச்சினைகள், விவிலிய மொழியானது அறிவியல் தன்மை யற்றது என்றும், பருப்பொருள் பற்றிய கருத் துக்கள் அதனுடைய காலங்களைச் சேர்ந் தவை என்றும் காட்டுகின்றன. ''அறிவியல் உண்மை'' மற்றும் ''அறிவியல் தவறுகள்'' ஆகியவை நவீன கருத்துக்கள் என்பதை இப்போது நாம் காண்கிறோம். இவை விவி லியத்தில் தோன்றவில்லை. உண்மையோ தவறோ எந்த அறிவியல் கூற்றையும் விவிலி யம் கூறவில்லை. தவறாமை அல்லது வழு வாமை என்பதற்கு எதிராக எழுப்பப்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் இலக்கிய அமைப்புகள் வரலாறு, வரலாற்று நூல் பற் றிய பழங்கால கருத்துக்கள் ஆகியவற்றில், விடை காண்கின்றன.

இறைஏவுதல் என்பதின் விளைவுகளான பலவற்றில் விவிலியத்தில் ஒற்றுமையும் அதன் பயனுடைமையும் மற்ற சிறப்புக் கருத்துக்களாகும்.

இறைச்சிப் பாத்திரம் (FLESH POT)

கறிசமைக்க உதவும் கொதி கெண்டி அல் லது இறைச்சி நிறைந்த பாத்திரம் என்பதைக் குறிக்கும். ''நாங்கள் எகிப்திலே இருந்து போது இறைச்சி நிறைந்த பாத்திரங்க ளண்டை உட்கார்ந்து, வயிறாரா அப்பம் சாப்பிட்டு வருவோமே'' என்று பாலைவ னத்தில் இஸ்ராயேல் மக்கள் முறையிட்டார் கள் (யாத். 16:3). 'எகிப்தில் நிறைய இறைச் சியும், அப்பமும் அவர்களுக்கு உண்ணக் கிடைத்தது' என்று இஸ்ராயேலர் உரிமை கொண்டாடுவது உண்மையில் அதிர்ச்சித ரும் வாக்கு மூலமாக இருக்கிறது. ஏனென் றால் இறைச்சி எளிதாக ஏழைகளுக்கு கிடைக்கும் உணவல்ல.

இறைத்திட்டம் (PLAN OF GOD)

'முந்தினவற்றைச் செய்து முடித்தவரும்' 'ஒன்றுக்குப்பின் ஒன்றாகத் திட்டமிட்டவ ரும்' (யூதி 9:5) ஆகிய இறைவன் அனைத்தை யும் 'அளவோடும், கணக்கோடும், நிறை வோடும்' (ஞானம் 11:21) ஏற்பாடு செய்கி றார். அதாவது, மனித வரலாறு அறிவற்ற விதியின் தூண்டுதலுக்கேற்ப அமைவ தில்லை. இறைவனின் திருவுளத்தின் பல னாகத் தனது முடிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வரலாறாக ஒருமுகப்படுத்

தப்படுகிறது. காலங்களுக்கு முன்பே இறைவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கும் அந்த இறுதிநிலை இரு முக்கியமான அம்சங்களைக் கொண்டுள்ளது: கிறிஸ்துவில் மீட்பும், மாந்தர் அனைவரின் மீட்பும் ஆகும். இறைவனின் திருவுள்ளத்தின், கால நிறைவில் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்ற ஏற்பாடாக அவர் வைத்திருந்த இந்தத் தயவான திட்டத்தின் மறைபொருள் இத்தகையதே (எச 1:9-10; 3:11). இது மிகப் பல நூற்றாண்டுகளாக மறைத்துவைக்கப்பட்டிருந்து, பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து மனிதனாக நுழையும் வரை முழுமையாக அறிவிக்கப்படவில்லை (எபே 1:9-10; 3:11). இது மிகப் பல நூற்றாண்டுகளாக மறைத்துவைக்கப்பட்டிருந்து, பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து மனிதனாக நுழையும்வரை முழுமையாக அறிவிக்கப்படவில்லை (3:1-12). இருந்தபோதிலும் இத்திட்டம் எல்லாத் திரு வரலாற்றிற்கும் விவிலியத்திற்கும் ஒற்றுமையும் தெளிவும் வழங்குகிறது. குறிப்பிட்ட பதங்களில் (சொற்களில்) அதனுடைய தனிச்சிறப்பான அறிவிப்பு பழைய ஏற்பாட்டில் அரிதாக இருப்பினும் இத்திட்டம் பழைய ஏற்பாட்டின் அமைப்பு முழுவதிலும் மென்மையாக இழைந்தோடுகிறது.

I. பழைய ஏற்பாடு:- இறைத்திட்டத்தின் முடிவற்ற தறகாலிகமான முதல் அளவீடுகளை நமக்கு வழங்குகிறது பழைய ஏற்பாடு. இஸ்ராயேலின் திருவரலாற்றுப் பின்னணியில் அதன் விசுவாசத்தின் பல்வேறு நிலைகளுக்கொத்த வேறுபட்ட இலக்கிய வழக்குகளில், இத்திட்டத்தின் முதல் அறிவிப்புகள் காணக்கிடக்கின்றன.

1. விசுவாச அறிக்கைச் சடங்குகள்:- உபாகமம் பல சடங்கு உரை மூலங்களைக் கொண்டிருக்கிறது. விசுவாச அறிக்கைகள் (உப 26:5-10), மறைக்கல்வி விதிமுறைகள் (யாத் 12:26-27; உப 6:20...), குருக்களின் மறையுரைக்குறிப்புகள் (யோசு 24:2-15) யாவும் ஒரே படிவத்தைப் பின்பற்றி எழுதப்பட்டிருக்கின்றன. இது இஸ்ரயேலின் இறைநம்பிக்கையின் (விசுவாசத்தில்) மையமாக இறைத்திட்டம் இருந்ததைக் காட்டுகிறது. அப்போது ஒரு தனி இனம் என்ற முறையில் இஸ்ராயேல் தனது வரலாற்றை மறையுணர்வோடு புரிந்துக்கொண்டது. இறைவன், தமது பங்காக, இஸ்ராயேலின் முன்னோர்களைத் தேர்ந்துகொள்ளல், ஒரு தலைமுறையையும் நாட்டையும் வழங்க உறுதியளித்தல், மனிதர் கணிக்க முடியா நிகழ்ச்சிகள் மூலம் உடன்படிக்கையை நிறைவேற்றல், விந்தையான விடுதலைப் பயணம். சீனாய் மலையில் உடன்படிக்கை, திருச்சட்டமளிப்பு, கானான் மீது வெற்றி - இத்தனையையும் செய்திருந்தார். வருங்காலம் காத்திருக்கிறது. செயல்களில் ஓரளவு வெளிப்படுத்தப்பட்டிருந்த திட்டத்தை இறைவன் முழு நிறைவிற்குக் கொண்டு வருவார் என்பதில் ஐயம் என்ன இருக்கமுடியும்? இஸ்ராயேல் மக்கள் அப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் நாடகமொன்றில் முழுமையாகப் பங்கேற்கிறோம் என உணர்ந்திருந்தார்கள். ஆயினும் நாடகத்தின் முடிவு ஓரளவே அறிவிக்கப்படுகிறது.

2. நிகழ்ச்சிகளைப் பற்றிய இறைவாக்கினர் உணர்வு:- இந்த முற்கோளுக்கு (முன்னுணர்வு) இறைவாக்கினர் புது அம்சங்களைக் கொண்டு வருகின்றனர். உண்மை என்னவென்றால், ''தம் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களுக்குத் தம் மறைபொருளை வெளிப்படுத்தாமல் ஆண்டவராகிய இறைவன் ஏதும் செய்வதில்லை'' (ஆமோ 3:7). நிகழ்ச்சிகள் நடப்பதற்கு முன்னால் அவைகளுக்குக் காரணமாக இறைவனின் ஒரு நோக்கம் (ஏச 5:19; 14:26; 19:17; 28:29; 46:10; எரே 23:18-22), ஒரு திட்டம் (மீக் 4:12), ஒரு விருப்பம் (ஏச 44:28; 46:10; 48:14; 53:10) எப்போதும் இருக்கிறது. இறைவாக்கினர் இறைமக்களுக்கு உணர்த்தும் மறையுண்மையும் இதுவே. இவ்வுண்மைக்கு அவர்களது நாட்டின் வரலாற்றிலுள்ள சான்றுகளைக் கவனித்திற்குக் கொணருகின்றனர். எகிப்திலிருந்து வந்த பயணத்திலிருந்து இஸ்ராயேலை மகனின் நிலைக்கு உயர்த்த இறைவன் விரும்பினார் (எரே 3:19.20). இவ்வுண்மையின் ஒளியிலே இந்த நன்றி மறந்த மக்களின் தற்போதைய வாழ்வு ஆராயப்பட

வேண்டும். இவ்வுண்மை இம்மக்களின் உண்மையான மனமாற்றத்தினுடைய தேவையை உணர்த்துகிறது. ஏனெனில் இறைத்திட்டம் இன்றைய வரலாற்றையும் தொடர்ந்து இயக்கிய வண்ணம் இருக்கிறது. நெபுக்கதுனேசார் தனது நுகத்தை இஸ்ரா யேல்மீதும் சுற்றியுள்ளநாடுகள்மீதும் சுமத்து கிறாரென்றால், அது கடவுளின் ஊழியன் என்றமுறையில்தான் (எரே 27:4.8), பாவம் புரிந்த இம்மக்கள்மீது கடவுள் கொண்ட கோபத்தின் கருவி (எரே 25:15) என்ற முறை யில்தான் அவர்செயல்படுகிறார். புறவின நாடுகளில் ஒன்று தனது அழிவைச் சந்திக்கிற தென்றால், அது இறைவனின் முடிவின் பலனாக, அவரது தீர்ப்பை அறிவிப்பதற்கா கத் தான் (எரே 49:29; 50:45). சைரஸ் அரசன் கீழைநாடுகளின் தலைவன் ஆகிறாரென் றால் அது இறைவனின் விருப்பத்தை நிறை வேற்றவும் இஸ்ரயேலின் விடுதலையை உறுதிப்படுத்தவுமே (ஏச 44:28; 46:10; 48:14). கடைசியாக, இறுதிநாட்களைப் பற்றிய தங் களின் முன்னறிவிப்புகளில், இறைவாக்கி னர் எந்த முடிவை நோக்கி இறைவன் வரலாற்றை நடத்திக் கொண்டிருக்கிறார் என் பதை அறிவிக்கின்றனர். இஸ்ராயேலும், எல்லா நாடுகளும் பங்குபெறும் ஒரு மீட்பு தான் அது (2:1-4). கடந்த கால நிகழ்ச்சிகள் எந்த அளவுக்கு இம்மீட்பின் முன்னடையா ளங்களாக இருந்தனவோ அந்த அளவுக்கு இம்மீட்பைப்பற்றிய விளக்கம் கூறுகின்றன. ஆனால் இம்மீட்பு காலவரைக்குட்பட்ட எத் திட்டத்தையும் கடந்ததாக இருக்கும்; ஏனெ னில் இறைத்திட்டத்திற்கொப்ப, பாவிகளின் மீட்பிற்கு அழைப்பு விடுப்பதாக அது உள் ளது. இத்திட்டத்தின் முழுமையும் உள்ளடக் கும் ஓவியம் ஒன்றைத் தீட்டுகின்றனர் இறை வாக்கினர். சிலவேளைகளில் இத்திட்டத் தின் எல்லா அம்சங்களும் ஒரே சேர்க்கையில் இணைகின்றன. ஒன்றன் பின் ஒன்றாக இஸ் ராயேலின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் மூன்றையும் கண்முன் கொணரும் எசக்கியேலின் உவமை இதற்கோர் எடுத்துக் காட்டு (எச 4:16).

3. வரலாற்றுத் தொகுப்புகள்:- விசுவாச அறிக்கைகளும் நிகழ்ச்சிகள் பற்றி இறை வாக்கினர் உணர்வும் வரலாற்று விளக்கத் திற்கு அதன் தனிப்பட்ட அம்சமான எண்ண அமைப்பை வழங்குகின்றன. இன்றைய அறிவியலின் கணிப்புப்படி, வரலாற்றுக் கூற்றுகள் வேறுபட்ட மூலங்களையும் மதிப் பையும் உடையனவாயிருக்கின்றன என்றா லும், அவைகளை ஒன்றிணைத்துப் பயன்ப டுத்துதல் இம்முயற்சிகளுக்கு வெறும் ஏட்ட ளவில் உள்ள விளக்கங்களைக் கடந்த, ஒரு நிலையான மதிப்பைத் தருகின்றது. விசுவா சம் வரலாற்றின் தொடர்ச்சியை வெளிப்ப டுத்துவதன் மூலம் அதனை ஒன்றுபடுத்துகி றது. (யாவே பாரம்பரியத்தின் தொகுப்பி லேயே இவ்வுண்மை காணக்கிடக்கிறது). விசுவாசம் இறைவின் சட்டங்களைச் சுட்டிக் காட்டி வரலாற்று வளர்ச்சியை விளக்குகி றது (நீதி 2:11.13-இல் உள்ளது போல்). இக்கோணத்தில் நோக்கும்போது எல்லா நிகழ்ச்சிகளும் ஒரே மீட்புத் திட்டத்திற்குள் ளேயே காணப்படுகின்றன. இஸ்ரயேலின் எதிர்காலமே நேரடியாகக் குறிப்பிடப்பட் டாலும் அகில உலக நோக்கும் அதில் இருக்கிறது (ஆதி 9:12; 10; 12:3; 49:10). காலம் உருண்டோட புது நிகழ்ச்சிகள் திட் டத்தின் அடிப்படையான அம்சங்களை இன் னும் தெளிவாக அறிவிக்கின்றன. குருகுல வரலாற்று அறிஞன் பின்பு சுருக்கி திருத்திய மைத்த முன்னைய மரபுகளின் தொகுப்புக ளோடு, உபாகமத்தின் ஆசிரியர், வெற்றி யின் வரலாற்றையும் (யோசுவா), நீதிபதிக ளின் வரலாற்றையும் (நீதிபதி) அரசாட்சி வரலாற்றையும் (சாமுவேல், அரசராகமம்) நாட்டு நிறுவனங்களின் தோல்விவரை, இணைக்கின்றார். அதே அடிப்படையான குறிப்புகளை உபயோகித்து நாள் ஆகமப் பாரம்பரிய, ஆசியர் யூத இனம் மறுபடியும் சக்தி பெறுவதன் வரலாற்றைச் (நாளாகமங் கள், எஸ்ரா, நெகமியா) சேர்ப்பதன் மூலம் விளக்கத்தை நிறைவு செய்கிறார். இங்கே மனித திட்டங்களை முறியடிக்கும் சக்தி வாய்ந்த இறைவனின் முடிவற்ற திட்ட மொன்று செயல்படுகிறது என்று நிரூபிக்கப் படுகிறது (சங் 33:10தொ). உண்மையில் இவ்வரலாற்றுத் தொகுப்புகள் நேரடியாக இஸ்ராயேலின் செபமாக ஆகின்றன (சங்

77:78; 105;106). வரலாற்று நிகழ்ச்சிகள் வாயிலாக அறிவிக்கப்படும் இறைத்திட்டத்தை அறிவதன் மூலம் விசுவாசம் ஊட்டம் பெறுகிறது.

4. ஞான மரபின் சிந்தனைகள்:- அதே காரணத்திற்காக, மற்றவேளைகளிலெல்லாம் உலக எண்ணங்களிலிருந்து விடுபட்டிருக்கும் ஞானிகளின் சிந்தனை, சில பாடங்களைப் புகட்டுவதற்காக வரலாற்றைப் பயன்படுத்துகிறது. ஞானமரபு, மனிதரின் வழிகளிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளது (ஏச 55:8). பாவிகள் புரிந்துக்கொள்ள முடியாததாக உள்ளது (சங் 94:10). இறைவனின் வழிகளை ஆராய்கிறது. இந்த ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பவர் சங்கத்திருவுரையாளர் ஆவர். தொடர்ந்து சுழன்று கொண்டேயிருக்கும் உலகியல்பு நிகழ்ச்சிகளையும் (திருவுரை 1:4.11), காலத்தின் புரிந்துகொள்ள முடியாமையைப் பற்றியும் (3:1-11) அவர் பழிக்கிறார். மறைபொருளின் உணர்வு உள்ளத்தில் ஆழப் பதிந்துள்ள அவருக்கு எளிதான தீர்வுகள் திருப்திகரமாக அமைவதில்லை. மற்ற பகுதிகளில் எண்ணப் போக்கு முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. சீராக்கு, தன் மூதாதையரின் மாதிரிகையைப் பற்றித் தியானிக்கிறார் (சீரா 44-50). ஞானகமத்தின் ஆசிரியர் குலமூலத் தந்தையருடையவும் விடுதலைப் பயணத்தினுடையவும் வரலாற்றில், இறைவன் தனது திட்டத்தை உலகில் நிறைவேற்றும்போது மீண்டும் மீண்டும் கையாளும் அவரது வழி காட்டுதலின் அடிப்படைச் சட்டங்களைக் கண்டுபிடிக்கிறார் (ஞான 10-19). இத்திட்டத்தில் தாங்கள் பங்கு பெறுவதையும் அதன் மாபெரும் நிறைவுக்காகக் காத்திருப்பதையும் அறிந்த மனிதர்களுக்கு இது ஒரு முக்கியமான பாடம்.

5. வெளிப்பாட்டு நூல்களின் பங்கு:-
ஞானமும் இறைவாக்கும் சந்திக்கின்ற இடத்தில், வெளிப்பாட்டு வழக்கு, இறைவெளிப்பாட்டால் எழுதப் பெற்ற விவிலியத்தின் முதல் நூல்களில் ஒளியில் மீட்புத் திட்டத்தைப் பற்றிய இஸ்ராயேலின் சமீப கால எண்ணத்தை இறுதியாக ஒன்றுபடுத்தி வழங்குகிறது. ஏற்கனவே இறைவாக்கினர் ஏசயா (ஏச 25:1) தீமையின், நகரத்தினுடைய அழிவு இறைத்திட்டத்தின் விளைவுதானென்று விளக்குகிறார். ஆனால் தானியேல் நாட்டின் பழைய வரலாறு, இன்றைய நிலை, இறுதிநாட்களைக் கொண்டுள்ள எதிர்காலம் இவையனைத்தும் உள்ளடக்கிய ஒரு கருத்தை வழங்குகிறார். அரசுகள் மாறிக் கொண்டேயிருக்கின்றன. ஆனால் அவைகளின் தொடர்ச்சி பல்லாண்டுகளாக வாக்களிக்கப்பட்ட இறைவனின் அரசிற்குத் தயார் செய்கிறது (தானி 2:7). துன்புறுத்தும் சக்திகள் இறைவனின் மக்கட்கு எதிராகச் சதித் திட்டங்கள் தீட்டுகின்றன. இஸ்ரயேல் தன் மீட்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது, அச்சக்திகளோ அழிவைநோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன (8:19-26; 10:20-12:4) இதுதான் மறைபொருள் (2:22, 27,28); அதன் கருப்பொருள் ஏற்கெனவே வேதாகமம் சுழியில் அடங்கியுள்ளது (தானி 9). போலி வெளிப்பாடுகளிலும் இதே கருத் தொன்றிப்பு காணக்கிடக்கிறது. அதுவே புதிய ஏற்பாட்டுக்காலத்து யூத மறையின் தனி அம்சமாகவும் விளங்குகிறது.

இவ்வாறாகத் திட்டம் பழைய ஏற்பாடு முழுவதிற்கும் அடிப்படைப் பொருளாக அமைந்திருக்கிறது. திருவரலாறு திட்டத்தின் நிறைவு ஆகும். இறைவார்த்தை வெளிப்பாட்டில் அதனை அறிவிக்கிறது. இங்ஙனம் இறைவனைப் பற்றிய மறையுண்மைகளின்மீது மனிதன் ஒரு வகையான சொந்தம் கொண்டாடலாம் என்று அன்று, மாறாக இறைவன் தன் அன்பினால் தனது திட்டத்தைப்பற்றிய அறிவை மனிதனுக்குச் சிறிது சிறிதாக வழங்குகிறார். அதே வேளையில் மனித வாழ்வின் பொருளையும் தெளிவாக்குகிறார்.

I புதிய ஏற்பாடு:- அதே திரையில்தான் புதிய ஏற்பாடு முழுவதும் தீட்டப்பெறுகிறது. அது மிகவும் முக்கியமான, இறுதிக் கொடையை வெறுமனே அறிவிக்கிறது; ஏனெனனில் இயேசுவெனும் வரலாற்று

நிகழ்ச்சியில் இறைத்திட்டத்தின் முழுமையும், அதன் நோக்கமும் வரலாற்றின் உருவில் நிறைவேற்றப்படுதலும் அறிவிக்கப்படுகின்றன.

1. இறைத்திட்டத்தில் இயேசு:- அ) தயாரிப்புக்காலத்தின் சிகரத்தில், காலத்தின் நிறைவில், இயேசு இறைத் திட்டத்தின் மையத்தில் தம்மைக் காண்கிறார். இந்த உணர்வு பல்வேறு கூற்றுகளில் வெளிப்படையாகக் காணப்படுகிறது: தந்தை இயேசுவை அனுப்புதல் (மத் 15:24; யோவா 6:57; 10:36), இவ்வுலகில் அவரின் வருகை (மத் 5:17; மாற் 10:45; யோவா 9:36), தந்தையின் திருவுளத்தின் நிறைவு (யோவா 4:34; 5:30; 6:38), மறை நூலின் நிறைவு (லூக் 22:37; 24:7; 26:44; யோவா. 13:18; 17:12), அல்லது அவரது பாடுகளின் தேவை (''மணமகன் .... வேண்டும்'' மாற் 8:31; லூக் 17:25; யோவா 3:14; 12:34), அவருடைய நேரம் வருதல் (யோவா. 12:23). இக்கூற்றுகளெல்லாம் ஓர் இடுக்கண்மிக்க நிலை நீடிப்பதை வெளிப்படுத்துகின்றன. இயேசுவின் செயல்கள் எப்போதும் இவ்வாழ்க்கைச் சூழ்நிலையின் விளைவுகளே ஆகும். அரசின் நற்செய்தியை அவர் போதிக்கிறாரென்றால் (மத் 4:17-23), நோயுற்றோரைக் குணமாக்கி (11:3) தீய ஆவிகளை விரட்டுகிறார் என்றால், அது வரவேண்டியவர் அவர்தானென்றும் இறையரசு அண்மையிலுள்ளதென்றும் (12:28) காட்டுவதற்காகவே. எனவே அவரில் இறைத்திட்டம் முக்கியமானதொரு திருப்பம் பெறுகிறது. முடிவை முன்னறிவித்த மறைநூல் அவரில் நிறைவு பெறுகிறது. சிலுவையிலிருந்து மகிமைக்குக் கடக்கும் அவரது உலக வாழ்வின் முக்கியத்துவத்தை மறைநூல் தெளிவாக்குகிறது. அதேவேளையில் இறைவாக்குகள் யாவும் எப்படி உண்மை நிகழ்ச்சிகளோடு ஒன்றுபடுத்தப்படவேண்டும் என்பதை விளக்குவதன் மூலம் அவரது உலக வாழ்வு மறைநூலைத் தெளிவாக்குகிறது.

ஆ) செயல்கள் வழியாக அறிவிக்கப்படும் இவ்வெளிப்பாட்டோடு, இயேசு இன்னும் தெளிவான கூற்றுகளைச் சேர்த்தார். அரசின் மறையுண்மைகளை அறிவிக்கும் உவமைகள் மூலம் (மத் 13:11...) மீட்புத் திட்டம் எப்படி ஒரு மாறுபாடான முறையில் நிறைவெய்தும் என்பதைக் காட்டுகிறார். அவரின் இறப்பு திட்டத்தின் மையப்புள்ளி (21:38-36). ''கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக் கல்லாய் அமைந்தது'' (21:42), அதன் பயனாக, அரசு என்ற திராட்சைத் தோட்டம் இஸ்ரயேலிடமிருந்து எடுக்கப்பட்டு மற்ற குடியானவர்களிடம் அளிக்கப்படும் (21:43). இறுதி, காலத் திருமணத்தைக் கொண்டாடும் விருந்திற்குத் தேர்ந்து கொள்ளப்பட்ட இஸ்ராயேல் மக்கள் வர மறுக்கவே, வெளியிலுள்ள ஏழைகளுக்கும் பாவிகளுக்கும் அது அளிக்கப்படுகிறது (22:1-11 இ). உலகில் அரசு நிறுவப்படுதல், அகில உலகும் திடீரென மாற்றப்படுவதன் மூலம் நிகழாது. இயேசு விதைக்கும் இறைவார்த்தை, மண்ணில் விதைகள் போல, இதயங்களில் மெல்ல வேரூன்றும், தோல்விகளும் மிகச் சிறந்த வெற்றிகளும் அதற்கு வரும் (13:1-9; 18-23). அனைத்தையும் கடந்து, சிறியதொரு விதையிலிருந்து வளர்ந்த மரம்போல (13:31-32இ) இறுதியில் அரசு உலகனைத்தையும் நிரப்பும். மாவில் வைக்கப்பட்ட புளிப்புமாவைப்போல அது புவியை மாற்றும் (13:33 இ). பலகாலம் கடக்க வேண்டியிருக்கும். எனவே நெருங்கிவிடும் அவரது பாடுகள், மூன்றாம் நாளில் அவரது உயிர்ப்பு, மனுமகனாக மாட்சியில் விண்ணகம்செல்லுதல் ஆகிய (24:30-31) வரவிருக்கும் பல்வேறு நிலைகளை இயேசு உணர்கிறார். விண்ணரசு நிறுவப்படலைப்பற்றி அவர் பேசும்போது, அதன் ஆரம்பமும் நிறைவும் வெவ்வேறானவை என்பதைச்சுட்டிக்காட்டுகிறார் (13:24-30. 47-49இ). ஆகவே முடிவுக்காலம்பற்றிய இறைவாக்குகளுள், இதுவரை எதுவும் திருமுழுக்கு யோவானின் போதனைகூட காணமுடியாத ஒன்றைப் புதிதாகச் சேர்க்கின்றனர். இறைவனின் திட்டத்தில் நாட்களின் முடிவுக்கும் காலத்தின் நிறைவுக்கும் இடைப்பட்ட ஒரு புதிய பொழுதிற்கு இடமிருக்கிறது (28:20). இந்த இடைக்காலத்தை முன்கூட்டியே உணரும் இயேசு, தம் திருச்ச

பையை நிறுவுவதன்மூலம் அரசிற்குக் காணக்கூடிய ஒரு உருவமொன்றை வழங்கு கிறார் (காண்க மத் 16:18).

2. மீட்பின் திட்டத்தைப் போதித்தல்:- ஆதிக்காலத் திருச்சபை பிரமாணிக்கமாக இவ்வுண்மைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டது. உலகிற்கு அது போதிக்கும் நற்செய்தி அரசைப் பற்றியதுமட்டுமன்று; மீட்பரும் இறைமகனுமான இயேசுவில் வந்துள்ள, அவரின் பெயரில் விசுவாசம்கொள் ளும் அனைவரும் பெறக்கூடிய மீட்பைப் பற்றியதும் ஆகும் (அ.ப. 2:36-39; 4:10-12; 10:36; 13:23). இங்ஙனம் இறைத்திட்டத்தின் இறுதி இரகசியத்தை வெளிப்படுத்துவதில், அப்போஸ்தலர் காலத்துத் திருச்சபை, யூத ருக்குப் போதிக்கும்போது, சிலுவையின் மூலம் விளைந்த இடறலை வெல்ல வேண் டியிருந்தது. தாம் அனுப்பிய மீட்பரின் இறப்பை கடவுள் அனுமதித்திருக்க முடியும் என்பதை எவரேனும் எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? ஆனால் விவிலியம் மீண்டும் மீண்டும் தெளிவாக்குவதுபோல, இந்த இறப்பு மிகவும் கவனமாய்த் தீர்மானிக்கப் பட்ட திட்டத்தின் விளைவாகும்; இறைவன் முன் அறிந்த ஒன்றாகும் (அ.ப. 2:23; 4:28). மறையுண்மைகளைக் காக்க முனையும் போது எழும் பிரச்சினை மட்டுமன்று இது. சிலுவையின் முரண்பாட்டைப்பற்றிய கிறிஸ்துவச் சிந்தனை நேரடியாக இறைத் திட்டத்தின் மையத்திற்கே செல்கிறது. ''மறைநூலில் உள்ளபடி கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார்'' (1 கொரி 15:3). துன்புறும் நீதிமானைப் பற்றிப் பலவழிக ளில் மறைநூல்கள் முன்னறிவிப்பது தற்செய லாக நிகழ்ந்த ஒன்றன்று. இவ்வாறாக மனும கன் எங்ஙனம் மீட்பைப் பெற்றுத் தருவார் என்பதை மறைநூல் காட்டுகிறது

3. இறைத்திட்டத்தின் மறையறிஞரான பவுல்:-

அ. ஒரு நிறைவான பொதுநோக்கு:- புனித பவுலின் இறையியல் முழுவதும் இறைத் திட்டத்தை அதன் முழுமையில் முன்னறிவிப்பதன்றி வேறன்று (அ.ப. 20: 27). புனித பவுல் ஆதித் திருச்சபையின் எண்ணங்களைக் குறிப்பாக சிலுவையின் முரண்பாட்டை எடுத்துக்கொண்டு வடிவம் வழங்குவதால், அவரின் திருமுகங்களில் எல் லாவிடங்களிலும் அடிப்படைப் பொருளாய் அமைவது இதுவே (1 கொரி 1:17-25; 2:1-5). இரு இடங்களில் இப்பொருள் அவரது கருத் தின் முன்னனிக்கு வந்து பேசப்படுகிறது. முதலாவது கிறிஸ்துவிலும் அவரது திருச்ச பையிலும் முடிவுறும் இறைத்திட்டத்தின் முழுநோக்கைச் சுருக்கமாகத் தரும் இணைப்பு. கடவுள் அன்பு செய்யும் மனித ருக்கு இத்திட்டம் இணைக்கப்பட்ட பல் வேறு நிலைகளில் அறிவிக்கப்படுகிறது. அந் நிலைகள், முன்னேற்பாடு, அழைப்பு, ஏற்பு டைமையாக்கப்படல், மகிமைபடுத்தப்ப டல் ஆகியவையாகும் (உரோ 8:28-30). இக் குறிப்புகள் எபேசியருக்கு எழுதப்பட்ட திரு முகத்தின் தொடக்கத்திலுள்ள பாடலில் இன் னும்விரிவாக விளக்கம் பெறுகின்றன (எபே. 1:3-14). முன்னமேயே முடிவு செய் யப்பட்டு, காலத்தின் நிறைவில் நிறைவேற் றப்பட்ட அந்த 'தயவான திட்டம்' அங்கே இறை சித்தத்தின் மறைபொருளாகக் குறிப் பிடப்படுகிறது. கிறிஸ்து முழுவதும் தெளி வாக்கிய மறைபொருள் இதுவே. இதன் பணியாளராகத்தான் பவுல் நியமிக்கப்பட் டார்.

ஆ. இஸ்ரயேலின் ஊழ்:- இந்த நிறை வான நோக்கிற்குள், இறைத்திட்டம், மிக வும் முரண்பட்ட முறையில் நிறைவேற்றப் பெறும், ஒரு காரியத்தைச் சுட்டிக்காட்டுகி றார் பவுல். அது மீட்பின் திட்டத்தில் இஸ்ர யேலின் ஊழ் ஆகும். எல்லா மனிதரின் மீட்பை உறுதிப்படுத்த ஒரு தனிப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்களைப் பிரித்து வைத்து, அவர்களுக்கு தனி உரிமைகள் வழங்குவதும் (உரோ 9:4 தொ), வெளித் தோற்றத்திற்கு அவர்களை மட்டும் மீட்பின் பாதையில் நடத்துவதும் ஏற்கெனவே ஒரு விநோதமான முறையாக இருந்தது. ஆனால் அவருடைய இந்த மக்கள் இயேசுவைப் புறக்கணிப்பதோடு திருப்தியடையாமல், நற்செய்தியை மறுத்து இதயத்தைக் கல்லாக்

இக் கொள்ளும்போது அதைப்பற்றி என்ன சொல்லமுடியும்? இம்முறையும் இடறல் மிகுந்ததாக இல்லையா? யாருடைய அழைப்பும் கொடைகளும் மாற்றத்திற்கு அப்பாற்பட்டவையாக உள்ளனவோ (11:29) அந்த இறைவன் இஸ்ராயேலை நிராகரித்து விட்டாரா? (11:1). ஒருபோதும் இல்லை. இந்த இதயத்தைக் கல்லாக்கிக் கொள்ளுதலே மறை நூலில் முன்னறிவிக்கப்பட்டது (9:23; 10:19-11:10); மீட்பின் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆகிறது. இறைவன் தனது இரக்கத்தில் அனைவரையும் பங்குபெறுவோர்களாக்க, கீழ்ப்படியாமையிலும் அனைவரையும் சேர்க்க விரும்பினார் (11:30-32) இடைக்கால நடவடிக்கையாகப் பலன் தராத ஒலிவக்கிளைகளை வெட்டிவிட்டு, அவைகட்குப் பதிலாகப் புறவினத்தாரை ஒட்ட வைக்க விரும்பினார் (11:16-24). இவ்வாறாக மீட்புத்திட்டத்தில் இஸ்ரயேலின் தனிச்சலுகை என்னவென்று விளங்குகிறது. இஸ்ராயேலின் வழியாக இறைவன் மனிதரோடு தன் உறவைப் புதுப்பித்துக்கொண்டார். இஸ்ரயேலின் பாவத்தின் மூலம் அவர் இறுதியில் மீட்பைக் கொணர்ந்தார். தனிச்சலுகையின் காலம் முடிவுறுகிறது. யூதரையும் புறவினத்தாரையும் ஒரே திருச்சபையில் இணைப்பதன்மூலம் இறைவன் எல்லா மனிதரையும் கிறிஸ்துவில் ஒன்று சேர்க்க விரும்புகிறார் (எபே 2:14-22). இந்த ஏற்பாட்டிற்கு இஸ்ராயேலின் எஞ்சியோர் மட்டுமே பதில் அளிக்கின்றனர் (உரோ 11:1-6). ஆனால் மக்களில் பெரும்பகுதியினர், எல்லாப் புறவினத்தாரும் திருச்சபையில் சேர்ந்தபின் தாங்களாகவே பதிலிறுப்பர் (11:25-27). எனவே பழங்காலத்தில் இஸ்ராயேலின் வரலாறு செய்தது போல, திருச்சபையின் வரலாறு கடவுளின் திட்டத்திற்கிணங்காது நழுவித் தப்பிப்பதில்லை. திருச்சபையின் வரலாறு இறைவனின் இறுதித்திட்டத்தை வெளிப்படுத்துகிறது.

4. வருங்காலத்தில் இறைத்திட்டத்தின் நிறைவு:-

பழைய ஏற்பாட்டில் அறிவிக்கப்பட்டபடி, இறைத்திட்டம் இறுதிக்காலத்தில் நிறைவெய்தும். திருநூல்கள் இம்முடிவை முன்னறிவித்தன. இது இப்போது அடையப் பெற்றுள்ளது; தொடங்கப்பட்டு காலத்தின் மையத்திலிடப்பட்டுள்ளது என்ற உண்மையைப் புதிய ஏற்பாடு அறிந்துள்ளது. இருந்தபோதிலும் அத்திட்டம் முழுவதும் நிறைவெய்தவில்லை. திருச்சபையின் காலமே இறைத்திட்டத்தின் இறுதி நிலையாகும். ஆனால் திருச்சபையின் காலமும் ஒரு முடிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, எல்லாவற்றின் நிறைவையும் நினைவுக்குக் கொண்டுவரும் ஒரு கிறிஸ்தவ இறுதிக்காலவியலுக்கு இடமிருக்கிறது. இந்த முன்னோக்கில் முடிவுக்குத் தயார் செய்யும் வரலாறும் இடம் பெறுகிறது. முதல் மூன்று ஒத்தமை நற்செய்தியில் இறுதிக்கால வெளிப்பாடாக அமைந்த கூற்றுகளுடையவும் (மாற் 13இ), பவுலின் சொற்களுடையவும் (1 தெச 4:13-17; 2 தெச 2:1-12; 1 கொரி 15:20,28), யோவானின் திருவெளிப்பாட்டினுடையவும் முக்கிய செய்தி இதுவே. யோவானின் திருவெளிப்பாடு பழைய விவிலியச் சான்றுகளை, கிறிஸ்துவினுடையவும், திருச்சபையின் அனுபவத்தினுடையவும் ஒளியில் விளக்குவதோடு மட்டுமன்றி, வருங்காலத்தை உறுதியோடு ஆராய்ந்து இறைத் திட்டத்தை அதன் நிறைவுக்குக் கொண்டு வரும் நிகழ்ச்சிகளை நேரடியாக நோக்குகிறது. எதிர்க்கிறிஸ்துவின் தூண்டுதல்கள், தண்டனைகள், வரலாற்றின் தீய திருப்பங்களில் எழுதப்படும் இறுதித் தீர்ப்பின் முன்னோடிகள் இவையாவும் தற்செயலாக நடப்பவை அல்ல. இறைவன் முன்னமேயே அவைகளை அறிந்திருக்கிறார். இவைகள் வழியாகவே, தாம் தேர்ந்து கொண்டோரின் எண்ணிக்கை நிறைவடையும் நாளை நோக்கி மீட்பு செல்லும்படி இறைவன் செயலாற்றுகிறார் (திருவெளி 7:1-8). அப்போது கடவுளே அனைத்திலும் அனைத்துமாய் இருக்குமாறு (1 கொரி 15:28) மகன் தந்தையிடம் அனைத்தையும் திருப்பி ஒப்படைக்க முடியும் (15:24).

இறைநிந்தை (BLASPHENEY)

முதலில் இச்சொல் இறைவனுக்கு எதிரான நிந்தையை மட்டும் குறிக்கிறது. இது,

இறைவனையோ அவரது பெயரையோ செயல்களையோ சொல்லாலோ செயலாலோ இழிவுபடுத்துவது, பழித்துக் கூறுவதாகும், இது தெரிந்து, விரும்பிச் செய்யும் பாவம் (எண் 15:30), இறைவனுக்கு எதிராக அவமரியாதையாகப் பேசுதல் (ஏச 37:6), அவரைச் சபித்தல் (லேவி 24:11,16; 1 சாமு 3:13; திருவெளி 16:9.11.21). இரண்டாவது, அவதூறு கூறுதல், குற்றங்கூறுதல், சபித்தல், புறக்கணித்தல், பழித்துக் கூறுதல் வசை கூறுதல் ஆகியவற்றைக் குறிக்க நிந்தை என்ற சொல் பயன்படலாம் (காண்க உரோ 3:8; 1 கொரி 4:13; 1 பேதுரு 4:4).

இறைவனின் மூல மாதிரி எதிரிகள் எப்போதும் அவரை நிந்தை செய்பவர்களாவர் (2 மக் 9:28; திருவெளி 13:1; 17:3). பழைய ஏற்பாட்டில், பாலைவனத்தில் இஸ்ராயேலர் தங்கக் கன்றை வழிபட்டதை ஒரு இறை நிந்தையாக நெகமியா விளக்குகிறார் (நெக 9:18). இரபிசகேயின் பழித்துரை ஆண்டவருக்கே எதிராகச் சொன்ன பழிப்பாகும் என்று ஏசயா யூதாவின் அரசன் எசக்கியாவுக்கு ஆறுதல் கூறுகிறார் (ஏச 37:6). ஏலியின் மக்களுடைய குருத்துவப் பணி மிக திடுக்கிடச் செய்யவல்லது. அது இறைவனுக்கு சாபமாகும். இறை நிந்தனைக்குத் தண்டனை கல்லால் எறிந்து கொள்ளப்படுதலாம் (லேவி 24:16).

புதிய ஏற்பாட்டில் இயேசு பாவத்தை மன்னித்ததை இறை நிந்தனை என்று யூதர்கள் குற்றம் சாட்டினர் (மத் 9:3). இயேசு தமது விசாரணையின்போது, தாம் இறைமகன் என்று உரிமை கொண்டாடியது இறை நிந்தனையாகும். ஆகவே அவர் சாவுத் தீர்புக்குள்ளாக வேண்டும் என்று யூதத் தலைமைச் சங்கம் கூக்குரலிட்டது (மத் 26:63-66; மாற் 14:61-64; யோவா 10:33,36).. பிற்பாடு ஸ்தேவானுக்கு எதிராக அவர்கள் இதே குற்றம் சாட்டுகின்றனர் (அ.ப. 6:11). நற்செய்தியைப் பவுல் போதித்தபோது . யூதர்களே நிந்தையான மொழியைப் பயன்படுத்துகின்றனர் (அ.ப. 13:45; 18:6). நிந்தை என்ற புறவினப் பாவத்துக்கு யூதர்களின் மாதிரிகளையே காரணம் என்றார் பவுல் (உரோ 2:24). அவர் தான் மனந்திரும்புமுன், கிறிஸ்தவர்களை இறைநிந்தனை சொல்லும்படி வலுவந்தம் செய்தார் (அ.ப. 26:11). அவரே இறைவனை நிந்தித்தார் (1 திமோ 1:13). இறைவன் பெயருக்கு இழுக்கு ஏற்படாது பார்த்துக் கொள்ளும்படி எச்சரிக்கிறார் (1 திமோ 6:1).

பரிசுத்த ஆவிக்கு எதிராகச் செய்யும் பாவம் இறைநிந்தனையின் மிகக் கொடிய வடிவமாகும். யூதர்கள் இயேசு பேய் பிடித்தவர் என்று குற்றம் சாட்டியபோது, பரிசுத்த ஆவிக்கு எதிராக அவர்கள் செய்யும் பாவத்தின் பயங்கர விளைவை அழுத்திக் கூறுகிறார். இத்தகைய பாவம் இம்மையில் மட்டுமன்று மறுமையிலும் மன்னிக்கப்படாது (மத் 12:32). அது என்றென்றும் தீராத பாவமாக இருக்கும் (மாற் 3:28-30).

இறைபற்றில்லாதவர்

நிலையிலும் செயலிலும் இறைவனிடமிருந்த, தொடர்பு நீங்கிப் புறம்பாக்கப்பட்டவர்கள்; இறைவனுக்கு எதிரானவர்கள், அவருக்கு எதிராகச் செயலாற்றுபவர்கள். இவர்கள் இறைவன் அருகே வரமாட்டார்கள் (யோபு 13:16). இவர்களது மகிழ்ச்சி இமைப்பொழுதில் மறையும் (20:5). இவர்களது நம்பிக்கை அழிந்து போகும் (8:13; 27:8; பழ. 11;) தங்கள் சினத்தைப் பேணுவர் (36:13), நல்லவர்களைக் கொடுமைப்படுத்துவர் (சங் 119); தீயன செய்வர்; பேதமை பேசுவர் (ஏச 9:17). இக்கருத்தில், இவர்கள், இறைவனைத் தவிர்த்த, சிலைவழிபாடு (எரே 2:11; ஓசே 4:12), உலகப்பற்று (எரே 23:15) போன்றவற்றில் ஈடுபாடு உடையவர்கள். இதோடு தொடர்புடைய மற்ற சொற்கள் தீயவர்கள் (யோபு 16:11; சங் 74:18), அறிவிலிகள் (சங் 14:1; 74:22) போன்றவையாகும்.

புதிய ஏற்பாட்டில், இறைபற்றின்மை ''இலெளகீகக் கட்டுக் கதைகளையும்'' (1 தீமோ 4:7) ''இலெளகீக வீண் பேச்சுக்களையும்'' (6:20; 2 தீமோ 2:16), ஒருவேளை, ஞானவாதக் கதைகளையும் போதனைகளையும்

குறிக்கிறது. பாவ நிலையிலுள்ள எல்லா மனுக்குலத்தையும் குறிக்க இச்சொல் பயன் பட்டுள்ளது (யூதா 14-19). இவ்வாறு இறை பற்றற்றவர்களுக்கே சட்டம் கொடுக்கப்பட் டுள்ளது (1 தீமோ 1:19). கிறிஸ்து பாவிகளுக் காக மரித்து ஏற்புடையவர்களாக மாற்றுகி றார் (உரோ 4:5; 5:6).

இறைப்பற்றுள்ளவர் (GODLY)

பிறர்பால் அன்பு, இரக்கம் காட்டுபவர்க ளையும் (மீக் 7:2) இறைவனிடம் பிரமாணிக் கமுள்ளவர்களையும் (சங் 12:1; 86:2) குறிக் கும் சொல்லாகும். இது மேய்ப்புப்பணி திருமுகங்களிலும் 2 பேதுருவிலும் முதன் மையாகக் காணப்படுகிறது. இது பக்தியைக் குறிக்கிறது (1 தீமோ 2:2-பக்தியும் ஒழுக்க மும் உடையவர்களாய்க் கலக்கமில்லா அமைதி வாழ்வு நடத்துமாறு). இத்தகைய பக்திமிக்க வாழ்வு ஞானவாதிகளின் பக்தி நோக்கிலிருந்து வேறுபடுத்தப்படுகிறது (4:7-8). 2 பேதுரு திருமுகத்தின் ஆசிரியர் கிறிஸ்துவர்களின் ஒழுக்க வாழ்வைத் தவ றான நெறியில் வாழ்பவர்களின் நடத்தையி லிருந்து வேறுபடுத்த இச்சொல்லைப் பயன் படுத்துகிறார் (2 பேதுரு 1:6-7; 3:11; 2:9).

இறை புகழ்ச்சியுரை (DOXOLOGY)

இது இறைபுகழ்ச்சி வாய்ப்பாடு எனப்ப டும். ஐந்நூலில் ஆண்டவரின் செயல்கள் போற்றப்படுகின்றன என்று கூறப்படுகிறது (ஆதி 24:27; யாத் 18:10). யூதச் சடங்குகளில் இந்த ஆசீர், எல்லாப் பாடலுக்குப் பின்னும் (1 நாள் 16:36; சங் 41:13; 72:18; 89:52; 106:48; 150:1-6). நீண்ட செபங்களின் முடிவிலும் அல்லது கடவுளின் பெயரை உச்சரிக்கும் ஒவ்வொரு சமயமும் கூறப்பட்டது. பாஸ் குச் சடங்கில் இரசம் பருகப்படும் போதெல் லாமும், கூடாரத் திருவிழாவில் கூடாரம் கட்டப்படும் போதும் இப்புகழ்ச்சியுரை கூறப்பட்டது. இது சில நேரங்களில் செபங்க ளின் தொடக்கத்திலும் காணப்படுகிறது (1 நாள் 29:10; தானி 2:20; லூக் 1:68; 2 கொரி 1:3; எபே 1:3; 1 பேதுரு 1:3) மனிதர்களின் பாவத்தினால் வரும் தண்டனைகளிலிருந்து இறைவனின் புகழைப்பாடுபவர்கள் காப் பாற்றப்படுவார்கள் (உரோ 1:25; 2 கொரி 11:31).

சங்கீதம் 29-இல் மற்றொரு புகழ்ச்சி கீதம் ஆரம்பமாகின்றது. இதில் இறைவன் செய்த நன்மைகளுக்காக ஆண்டவரைப் போற்று கின்றார்கள். 'அவர் புகழ்பாடுங்கள்' என் றும், ''என்றென்றும் போற்றுங்கள்'' என் றும் கூறப்பட்டுள்ளது.

கிறிஸ்துவர்களின் புகழ்ச்சிக் கீதம் கடவு ளுக்கே உரியது. அரிதாகத்தான் கிறிஸ்துவுக் குக் கூறப்படுகிறது (மத் 21:9; மாற் 11:9; லூக் 19:38; உரோ 9:5; திருவெளி 5:12). சில நேரங்களில் 'கிறிஸ்துவின் வழியாய்'' (உரோ 16:27; 1 பேதுரு 4:11) என்றும் ''பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில்'' என்றும் முடிவடையும்.

பவுலில் திருமுகங்களில், முகமன் கூறுவ திலும் (கலா 1:5) நன்றியுரைத் தொடக்கத்தி லும் (1 கொரி 1:3-5), இறுதி ஊக்குரையிலும் (1 திமோ 6:15-16) முடிவுரையிலும் (பிலி 4:20) இப்புகழ்ச்சியுரை வருகிறது.

ஆண்டவரின் செபத்தின் முடிவில் சில பிரதிகளில் காணப்படும் ''ஏனெனில் அர சும் வல்லமையும் மாட்சிமையும் என்றென் றும் உமக்குரியதே'' என்ற புகழ்ச்சியுரை லூக்காவில் காணப்படவில்லை (லூக் 11:4). மத்தேயு நற்செய்தியின் நம்பத்தகுந்த, முக் கிய பிரதிகளிலும் காணப்படவில்லை. இந்த முடிவுரை 1 நாள் 29:11-யை அடிப்படையா கக் கொண்டதாக இருக்கலாம். இது திதாக்கே என்ற திருச்சபை நூலில் காணப்ப டுகிறது.

இறைமகன் (SON OF GOD)

எபிரேய மொழி வழக்கில் ''மகன், மக்கள்'' என்பன நேரிடையான இரத்த உறவை மட்டும் குறிப்பிடுவதில்லை. ஒரு குழுவைச் சார்ந்திருப்பதையும் அவை குறிக்கின்றன; ''இஸ்ராயேல் மக்கள்'', ''பாபிலோனிய மக்கள்'' (எச 23:17) ''சீயோன் மக்கள்'' (சங் 149:2), ''இறைவாக்கினர் மக்கள்'' (2 அர 2:5), ''மனுமக்கள்'' (எச 2:1; தானி 8:17);

அத்துடன் ஒருசில குணநலன்களைக் கொண்டோரையும் 'மகன்' என்ற சொல் சுட்டி நிற்கும்; சமாதானத்தின் மக்கள் (லூக் 10:6), ''ஒளியின் மக்கள்'' (லூக் 16:8; யோவா 12:36). மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள உறவை எடுத்துக் கூறவும் இச்சொல் பயன்படுகிறது; இப்பொருளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

I பழைய ஏற்பாடு:-

இறைவனது பேரவையில் உள்ள வானதூதர்களே ''இறை மக்கள்'' என்று ஒரு சில இடங்களில் பழைய ஏற்பாடு குறிக்கிறது (உப 32:8; சங் 29:1; 89:7; யோபு 1:6). இது கானானிய புராண வழக்கிலிருந்து பெறப்பட்டதாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனால் அவ்வழக்கில் மகன், மக்கள் என்பவற்றால் இரத்த உறவே சுட்டப்பட்டது; விவிலியத்தில் யாவேக்கு துணை இல்லையாதலால் இப்பொருள் பொருந்தாது. ஆதலால் விவிலிய வழக்கில் ''மக்கள்'' என்ற சொல்லிற்கு வான தூதர்கள் கடவுளின் வானக வாழ்வில் பங்கேற்றிருக்கிறார்கள் என்பதே பொருளாக அமையும்.

1. இஸ்ராயேல் என்னும் இறைமகன்:- ''மகன்'' என்ற சொல்லை இஸ்ராயேலுக்குப் பொருத்திப் பார்க்கும்போது, இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் உள்ள தொடர்பு, மனித உறவினருக்குள் இருக்கும் உறவுபோல் தோன்றுகிறது. விடுதலைப்பயண நிகழ்ச்சிகளில் இஸ்ராயேல் சுவீகார மகவுரிமையை உணர்ந்துவிட்டது (யாத் 4:22; ஓசே 11:1; எரே 3:19; ஞான 18:13); இறுதிக்கால விடுதலையைப் புதிய விடுதலைப் பயணம் என்று எரேமியா முன்னறிவிக்கும்போது இதையே குறிக்கிறார் (எரே 31:9.20). இந்த அனுபவத்திலிருந்து மகன் என்கிற பட்டம் (பன்மையிலுந்தான்) இறைமக்கள் கூட்டத்திற்கு உரியது என்றே கொள்ளலாம்; மக்கள் தந்தையாகிய இறைவனுக்கு தங்களை ஒப்புக் கொடுத்த சமய அர்ப்பணத்தின் மேன்மையை வலியுறுத்தவும் (உப 14:1 தொ. காண் சங் 73:15), அவர்கள் நன்னெறியிலிருந்து தவறிய போது கண்டித்துத் திருத்தும் உரிமையைச் சுட்டவும் இவ்வுறவுப் பெயர் உதவியது (ஓசே 2:1; ஏச 1:2; 3:1.9; எரே 3:14). யூதர்கள் தம் பக்தி முறையில் தாமெல்லாம் இறைமக்கள் என்று கொண்ட உணர்வு மிக முக்கியமானதாகும். இவ்வுணர்வே கல்லறைக்கு அப்பாலுள்ள வருங்கால மீட்பைப்பற்றிய நம்பிக்கைக்கு அடிகோலியது (ஏச 63:8; காண் 63:16; 64:7; ஞான 2:13.18). நீதிமான்கள் வானதூதர்களைப் போல் இறைமக்களென என்றுமே போற்றப் பெறுவர் (ஞான 5:5).

2. அரசன் என்னும் இறைமகன்:- அரசர்களின் தெய்வீகத் தோற்றத்தை மேற்காசிய நாடுகள் சமயவுண்மையாக ஏற்றன. பழைய ஏற்பாடு இதை ஏற்கவில்லை. சாதாரண மனிதன் போலவேதான் அரசனும்; தெய்வச் சட்டங்களை அவனும் கடைபிடிக்க வேண்டும்; அவனும் அதே விதமான நீதித் தீர்ப்புக்கு உள்ளாவான். தாவீதையும் அவரின் சந்ததியையும் கடவுளே தேர்ந்து கொண்டார். இதனால் இறை மக்களின் கதியோடு அவர்களும் இரண்டறக் கலந்துள்ளது தெளிவாகும். யாவே தமக்கும் அரச குலத்திற்கும் உள்ள உறவை வெளிக்காட்டவே நாத்தான் என்னும் இறைவாக்கினர் மூலம் அறிவிக்கிறார்; ''நாம் அவனுக்குத் தந்தையாக இருப்போம்; அவனும் நமக்கு மகனாக இருப்பான்'' (2 சாமு 7:14; காண் சங் 89:27 தொ). இப்போதிருந்து யாவேயின் மகன் என்பது ஓர் அரச பட்டமாகும். அரசர்களுக்கெல்லாம் 'யாவேயின் மைந்தன்' என்னும் பட்டம் மெசியாவின் பட்டமாகப் பின்னர் மாறியது (ஏச 7:14; 9:1; சங். 2:7).

II புதிய ஏற்பாடு

1. இயேசு. இறைவனின் ஒரே மைந்தன்:-

அ. ஒத்தமை நற்செய்திகளில்:- 'கிறிஸ்து' என்னும் பெயருடன் தொடர்புபடுத்தப்பட்டு, 'இறைமகன்' என்ற சிறப்புப் பெயர், மெசியாவின் சிறப்புப் பட்டங்களுள் ஒன்றாகத்தான் தோன்றும் (மத் 16:16; மாற் 14:61 தொ). இதன் காரணமாக ஏற்படும் குழப்பங்களைத் தீர்த்து வைப்பது இயேசுவிற்கு அவசியமாகிறது; தொடக்கத்திலிருந்தே, பாலை

வனச் சோதனை நிகழ்ச்சி இரண்டு மாறுபட்ட விளக்கங்களை வெளியிடுகிறது; சாத்தானைப் பொறுத்த அளவில், இறைமைந்தனாய் இயேசு இருந்தால் அவர் மனித சக்திக்கு மீறிய ஆற்றலையும், சிறிதேனும் அகலாத இறைவனின் பாதுகாப்பையும் கொண்டிருத்தல் வேண்டும் (மத் 4:3.6); இயேசுவைப் பொறுத்த அளவில், இறைமைந்தன் கடவுளின் சித்தம் அன்றி வேறு உணவையோ உதவியையோ எதிர்பாராது இருத்தல் வேண்டும் (4:4.7). மண்ணக மெசியா பற்றிய கருத்துக்களை உதறித்தள்ளியதன்மூலம் இயேசு தமக்கும் தம் தந்தைக்கும் இடையேயுள்ள பிரிக்க முடியாத நெருக்கமான உறவினை உறுதி பெறச் செய்தார். பேய் பிடித்தோர் முன்பு இயேசுவின் இந்த மனப்போக்கைச் சிறப்பாகக் காணலாம் (மாற் 3:11; 5:7). பேய் பிடித்தோரின் பேச்சு, இயேசு உண்மையில் யார் என்பதைப் பேய்கள் அறிந்து அறிக்கையிடுவது போலத் தோன்றுகிறது (1:34); ஆனால் அவை தெளிவில்லாமல் இருந்த காரணத்தால் இயேசு அவ்வறிக்கைகளைத் தடை செய்கிறார். ஆனால், ''நீரே கிறிஸ்து; நீரே இறைவனின் திருமகன்'' என்று பேதுரு கூறியது (மத் 16:16 தொ) அவரது ஆழ்ந்த விசுவாசத்தின் அறிக்கையாகும். இருந்தும் எத்தகைய தவறும் நேர்ந்துவிடாதபடி இயேசு கவனமாய் இருந்துகொள்கிறார். ஏனெனில் அவரது இறைமகன் என்ற பட்டம் அவருக்கு எதிர்கால இவ்வுலக மகிமையை உறுதிப்படுத்தவில்லை. மாறாக மனுமகன் தம் சாவின்மூலமே மகிமையை அடையமுடியும் (16:21).

''இறைவனின் மகனாகிய மெசியா நீர் தானோ?'' என்று கயபா கேட்டபோது (மத் 26:63; மாற் 14:61), இத்தொடர் மண்ணக மெசியாவையே குறிக்கக்கூடும் என்று இயேசு உணர்ந்தார். வேறொரு கோணத்தில் கவனத்தைத் திருப்பும் வகையில் இயேசு மறைமுகமாகப் பதிலுரைத்தார்; மனமகனுக்குரிய பண்புகளுடன் தலைமை நீதிபதியாகத் தாம் வரவிருப்பதை முன்னறிவிக்கிறார். ''அப்படியானால் நீ இறைவனின் மகனோ?''... ''நான் கடவுளின் மகன் என்று நீங்களே சொல்லுகிறீர்கள்'' (லூக் 22:70) என்ற ஆணித்தரமான பதிலில், மெசியா என்பதற்கும் மனுமகன் என்பதற்கும் இயேசு தெய்வீகத் தன்மை தருகிறார் என்பது தெளிவாகிறது. இது ஒரு புதிரான வெளிப்பாடாகும். கடவுளால் கைவிடப்பட்டுச் சிலுவையில் தொங்கிய போதும் இயேசு தமது உரிமைக் குரலில் உறுதி தளராது இருந்தார். இறக்கும் மட்டும் தந்தைமீது அவருக்கிருந்த நம்பிக்கை சிறிதும் குறையவில்லை (லூக் 23:46). அவரது சாவு அனைத்துப் புதிர்களையும் குழப்பங்களையும் நீக்கி, கிறிஸ்துவ விசுவாசத்தின் தொடக்கமாக இருந்தது என்பதை, நூற்றுவர் தலைவனின் அவிசுவாச அறிக்கை வெளிப்படுத்துகிறது (மாற் 15:39).

அப்போதுதான், தமக்கும் தம் தந்தைக்குமுள்ள உறவின் தன்மைபற்றி இயேசு முன்னர் கூறிய சில விளங்காத புதிர்கள் விளங்கின. இறைவனுக்கு அவர் திருமைந்தன் (மத் 11:27; 21:37; 24:36). அதனால்தான் அவரால் இறைவனை ''அப்பா தந்தையே'' என்று அன்புடன் அழைக்க முடிகிறது (மாற் 14:36; லூக் 23:46). அவருக்கும் இறைவனுக்கும் இடையே மிகநெருக்கமான உறவு இருந்தது; ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருந்தனர்; உள்ளவற்றை எல்லாம் இருவரும் பகிர்ந்து கொண்டனர் (மத் 11:25 தொ). ''நீரே என் அன்பார்ந்த மகன்'' (மாற் 1:11; 9:7) போன்ற தேவ அறிக்கைகளுக்கு இயேசு இவ்வாறு முழுப் பொருளையும் கொடுக்கிறார்.

ஆ. இயேசுவின் மகன் உறவின் மறைபொருளை அவரது உயிர்ப்பின் பின்னர்தான் அப்போஸ்தலர்களால் புரிந்து கொள்ள முடிந்தது. உயிர்ப்புத்தான் சங்கீதம் 2:7-ஐ நிறைவு செய்தது (அ.ப. 13:33). இயேசு கயபாவுக்கு முன்னரும், சிலுவையிலும் தாம் இறைமைந்தனே என்று கூறியது உயிர்ப்பில்தான் உண்மையென மெய்ப்பிக்கப்பட்டது. ஐம்பதாம்நாள் விழாவிலிருந்து அப்போஸ்தலர்களின் சாட்சியமும், கிறிஸ்துவ விசுவாச அறிக்கையும் ''இயேசு இறைமைந்தன்'' என்பதையே பொருளாகக்

கொண்டு விளங்கின (அ.ப. 8:37; 9:20). இயேசுவின் குழந்தைப் பருவத்தைக் கூறும்போது மத்தேயுவும், லூக்காவும் இவ்வறிக்கையினை மறைமுகமாக வலியுறுத்துகின்றனர் (மத் 2:15; லூக் 1:35). இக்கருத்து பவுலின் திருமுகங்களில் இன்னும் வளர்ச்சியடைந்து காணப்படுகிறது. இறைவன் தம் ஒரே மைந்தனை உலகுக்கு அனுப்பியுள்ளார் (கலா 4:4; உரோ 8:3). அவரது இறப்பின் மூலம் நம்மையெல்லாம் தம்முடன் சமாதானம் செய்துவைப்பதே இறைவன் கொண்ட நோக்கமாகும் (உரோ 5:10). இப்போது அவரைத் தம் ஆற்றலில் இறைவன் நிலைப்படுத்தியுள்ளார் (1:4). இறைவன் நம்மைத் தம் மகனோடு இணைந்திருக்க அழைக்கிறார் (1 கொரி 1:9). ஏனென்றால் அவர் நம்மைத் தமது மகனது அரசிற்குள் அழைத்துக் கொண்டார் (கொலோ 1:13). கிறிஸ்தவ வாழ்க்கை என்பது நம்மீது அன்புகூர்ந்து, நமக்காகத் தம்மையே கையளித்த இறைமகன்மேல் நம்பிக்கை வைத்து வாழ்வதும் (கலா 2:20), இறைவனின் கோபத்திலிருந்து நம்மை விடுவிக்க அவர் வானத்திலிருந்து வரும் நாளுக்காகக் காத்திருப்பதும் ஆகும் (1 தெச 1:10). இதே கருத்து எபிரேயர் திருமுகம் முழுவதிலும் நிறைந்துள்ளது (எபி 1:2; 5:8).

இ. யோவானின் இறையியலில் இயேசுவின் இறைமகவுரிமை மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு மையக் கொள்கை ஆகிறது. ஒரு சிலரின் விசுவாச அறிக்கை கட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுகிறது (யோவா 1:34. 51; சிறப்பாக 11:27). ஆனால் இயேசு, தந்தைக்கும் மகனுக்குமுள்ள உறவினை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். இருவருக்கும் இடையே செயலிலும், மாட்சிமையிலும் ஒற்றுமை உண்டு (யோவா 5:19.23; 1 யோவா 2:22 தொ). தந்தை தம் மகனுக்கு அன்பு செய்வதால், வாழ்வளிக்கும் ஆற்றலையும் (யோவா 5:21.25 தொ), நீதி செலுத்தும் ஆற்றலையும் (5:22.27) எல்லாவற்றையும் வழங்குகின்றார் (5:20). இயேசு தந்தையை மகிமைப்படுத்துவதால், அவர் தந்தையிடம் திரும்பும்போது தந்தை அவரை மகிமைப்படுத்துவார் (யோவா 17:1; 14:13). இவ்வாறு வார்த்தை மனுவுருவான செய்தி தெளிவும் செறிவும் பெறுகின்றது. உலகைக் காப்பதற்காக இறைவன் தம் மகனை உலகுக்கு அனுப்பி வைத்தார் (யோவா 4:9.14). அவரே இறைவனை வெளிப்படுத்தும் ஒரே மைந்தன் ஆவார் (1:18). அத்துடன் அவரே தந்தையிடமிருந்து வரும் முடிவில்லா வாழ்வை மனிதருக்கு வழங்குகிறார் (1 யோவா 5:11 தொ). மைந்தனில் விசுவாசத்தை ஏற்படுத்துவதே தலையாய பணி ஆகும் (யோவா 6:29; 20:31; 1 யோவா 3:23; 5:5.10). மைந்தனை விசுவசிப்பவன் நித்திய வாழ்வடைவான் (யோவா 6:40); அவரை விசுவசியாதவனோ தண்டனைக்குள்ளாவான் (3:18).

2. மனிதர்-கடவுளின் தத்துப் பிள்ளைகள்:-

அ. ஒத்துமை நற்செய்திகளில்:- பழைய ஏற்பாடு வளர்ப்புப் பிள்ளைகள் பற்றிக் கொண்டிருந்த கருத்து புதிய ஏற்பாட்டிலும் அடிக்கடி வலியுறுத்தப்படுகிறது. இயேசு, தம் சீடர்களுக்குக் கடவுளை, ''எங்கள் தந்தையே'' என்று அழைக்கக் கற்றுக் கொடுப்பதோடு, சமாதானம் செய்பவர்களையும் (மத் 5:9), கருணையுடையவர்களையும் (லூக் 6:35), உயிர்த்தெழும் உத்தமர்களையும் (20: 36) 'கடவுளின் மக்கள்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கிறார்.

ஆ. பவுலின் திருமுகங்களில்:- இக்கொள்கை விரிவும் விளக்கமும் பெறுகிறது. இஸ்ராயேலரின் தனிச் சலுகையாகக் கருதப்பட்ட வளர்ப்புப் பிள்ளைகளின் சிறப்புரிமை (உரோ 9:4), கிறிஸ்துவின் மேல் கொண்ட விசுவாசத்தால் கிறிஸ்துவர் அனைவருக்கும் இன்னும் உயர்ந்த முறையில் உரியதாகின்றது (கலா 3:26; எபே 1:5). தங்களை இறைவனின் தத்துப் பிள்ளைகளாக மாற்றும் தூய ஆவியை அவர்கள் தம்முள் கொண்டுள்ளனர் (கலா 4:5 தொ; உரோ. 8:14-17). ஆதலால் அவர்கள் அந்த ஒரே மைந்தனின் உருவத்தைத் தம் வாழ்வில் உருவாக்கவும் பிரதிபலிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகின்

றனர் (உரோ 8:29). அவருடன் அவர்களும் உடன் உரிமையாளர் ஆகின்றனர் (8:17). இதனால் அவர்கள் மகினின் உண்மை வாழ்வில் பங்கேற்று, புதிய பிறப்பெடுகின்றார்கள் (தீத் 3:5; 1 பேதுரு 1:3; 2:2). இவ்வாறு ஒரு புத்தம் புதிய வாழ்வினை வாழச் செய்வதே திருமுழுக்கின் பயனாகிறது (உரோ 6:4). எனவே உண்மை மகன் கிறிஸ்துவில் நாமனைவரும் உரிமை மக்கள் ஆகிறோம். இறைவன் நம்மைத் தண்டித்துத் திருத்திப் பணி கொள்ளச் செய்யும்போதும் (எபி 12:5-12), நம்மை தமது மக்களாகவே நடத்துகிறார்.

இ. யோவானின் நூல்களிலும் இக் கொள்கை இதைப் போலத்தான் விளக்கம் பெறுகிறது. மனிதன் நீரினாலும் ஆவியினாலும் புதுப்பிறப்பு பெறவேண்டுமென இயேசு நிக்கோதேமுவிற்குக் கூறுகிறார் (யோவா 3:3.5). கிறிஸ்துவில் விசுவாசம் வைப்போருக்கு இறைமைந்தர் ஆகும் ஆற்றலை கடவுள் வழங்குகிறார் (1:12). இதனை உலகம் உணராவிட்டாலும் நாமனைவரும் இறைமகனின் வாழ்வில் திளைக்கிறோம் என்பது நமக்கு ஒரு நிகழ்கால உண்மையாகும் (1 யோவா 3:1). இறுதிநாள் வரும்பொழுது இவ்வுண்மை அனைவருக்கும் தெளிவாகப் புலப்படும். அப்பொழுது நம் இறைவனை நேராகக் காண்பதால் நாமும் இறைவனைப் போலவே இருப்போம் (1 யோவா 3:2). ஆதலால் 'இறைமகன்' என்பது இனிமேல் இறைவனின் அன்புக்குரியவர்களைச் சுட்டிக்காட்டும் வெறும் சிறப்புப் பட்டம் மட்டுமன்று; மாறாக மனிதர் அனைவரும், தமது உரிமை மக்களாக்கிய இறைவனின் இயல்புகளில் இரண்டறக் கலந்து உவப்படையும் உயர்வினைக்காட்டும் உறவுப் பெயராகும் (2 பேதுரு 1:4).

இறை மகிமைக்காட்சி (THEOPHANY)

இது மனிதனுக்கு கேட்காமலே அளிக்கப் படுகின்ற இறை உயிரினுடைய அல்லது இறைவனுடைய தோற்றம் அல்லது சிறிது காலத்திற்கே இருக்கக் கூடிய நிலையற்ற வெளிப்பாடாகும். இந்த வரையறையின் ஒளியில் விவிலிய நிகழ்ச்சிகளின் பொருளைக் கீழ்கண்டவாறு தரப்படுத்தலாம்.

அ) தற்காலிக வெளிப்பாடுடைய இறைமகிமை காட்சிப் பொருள்,

ஆ) ''பெயர்'' மற்றும் ''மகிமை'' என்னும் கருத்துக்கள் மூலம் ''கூடாரத் தோற்றம்'' என்று அழைக்கப்படுவதுடன் தொடர்புடை பொருள். இல்பொருளானது கண்டிப்பான முறையில் இறைமகிமைக் காட்சியின் பொருளாக இல்லை. ஏனெனில், மனிதரிடையே இறைவன் உறைவது போன்ற வெளிப்பாட்டின் மிக நிலையான வடிவை இது சுட்டுகிறது. இ) முழு மனித வாழ்வின் இறைவெளிப்பாடாகிய மனு உருவாதல் பற்றிய மிக முன்னேறிய பொருள் இங்கு உள்ளது. இக்கட்டுரை, முதல் வகை பொருளைப்பற்றி மட்டுமே கவனம் கொண்டுள்ளது.

சிறிது காலமே இருக்கக் கூடிய நிலையற்ற காட்சிகள் விவரங்கள் இன்றி குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு யாவேயின் குரல் தோட்டத்தில் நடந்தவாறு கேள்வி கேட்பதும், தண்டனைகளை அறிவிப்பதாகவும் உள்ளது (ஆதி 3:8). 16:7-14; 21:17-இல் உள்ள ஆகார் கதைகளில், விண்ணிலிருந்து வரும் குரல், மீண்டும் 22:11.15-இல் காணப்பட்டாலும் அதை இறை மகிமை காட்சிக்கு என்று கூறுவது கடினம். மேலும், பாலாம் கதையிலும் (எண் 22:21-35) தடைசெய்யும் தோற்றமாக உள்ள ஆண்டவரின் தூதர் இவ்வாறே உள்ளார். மேலும், குருக்கள் மரபும் 'தோன்றுதல்' என்னும் சிறப்புச் சொல்லை, அதிக விளக்கமின்றி பயன்படுத்துகின்றது (ஆதி 17:1; 35:9; யாத் 6:3). யாக்கோபு (ஆதி 32:22-32) மற்றும் மோசே மீதான தாக்குதல்கள் (யாத் 4:24-26; ஆதி 38:7), உண்மையில் இயற்கையான செயல்களின் உதாரணங்களாக உள்ளன. இவ்வாறாக முதல் நிகழ்ச்சியில், தோல்வியுற்ற ஒரு பேயின் கதை யாவேக்கு மாற்றப்பட்டுள்ளது; மற்ற இரண்டு பகுதிகளில், நோயும் மரணமும் இறைவனுடைய செயல்களாக விளக்கப்பட்

டுள்ளன. இவ்வாறே, கனவுகளும் (ஆதி 23:3; 28:10-17) இறை மகிமைக் காட்சிகளாக ஆவதில்லை. ஆனால், காட்சிக்கும், இறை மகிமை காட்சிக்குமிடையே வேறுபாடு காணப்படுவது எப்போதுமே இயலக் கூடிய தல்ல.

இவ்வாறு, ஆதி 15-இல் உள்ள இறைமகிமைக் காட்சியானது ஒரு காட்சியாகவே விவரிக்கப்பட்டுள்ளது. யாவேயின் வார்த்தைகளை அறிமுகப்படுத்த ''அஞ்சாதே'' என்னும் சிறப்பு சொற்றொடர் உள்ளது. சூரியன் மறையும் வேளையில், ஆபிரகாம், ஆழ்ந்த தூக்கத்தில், வெட்டப்பட்ட உடன்படிக்கை விலங்குகளின் துண்டங்களுக்கிடையில், புகைகின்ற ஒரு தீச்சட்டியையும், உலவி நின்ற ஒரு தீப்பந்தத்தையும் காண்கிறார். 15:12-இல் உள்ளஆழ்ந்த தூக்கமானது இயற்கைக்கு அப்பாற்பட்ட உறக்கமாகும் (ஆதி 2:21; யோபு 4:13 = 33:15); புகையும் நெருப்பும் (ஆதி 15:17) இறை மகிமைக்காட்சியின் சிறப்பியல்புகளாகும். ,ஆயினும், இறை வார்த்தையின் காட்சி (15:1), ஆழ்ந்த தூக்கம் (15:12), மற்றும் தீச்சட்டி மற்றும் தீப்பந்தம் (15:17) ஆகியவை, இறை மகிமைக்காட்சி வகையிலிருந்து இக்கதையினை நீக்குகின்றன. இவ்வாறே, ஆதி 18-இல் வரும் கதை இறை உருவமாற்ற வகையைச் சேர்ந்ததாகும். இம்மரபின் பல தெய்வ பின்னணி, தெளிவாக உள்ளது. ஆபிரகாமிற்கு மூன்று மனிதர்கள் தோன்றுகின்றனர், மற்றும் ஆண்டவர் அவருக்குத் தோன்றி பேசுகிறார். இறைவன் தோன்றிப் பேசுகின்ற கதையானது, மூன்று தெய்வங்கள் மனிதனுக்கு தோன்றுகின்ற கதையின் மேல் திணிக்கப்பட்டிருக்கலாம்; அல்லது, இறைவன் இம் மூன்று மனிதர்களில் ஒருவராக உருமாற்றம் கொண்டிருக்கவேண்டும்.

1. மனித தன்மையில்லாத வடிவில் இறை மகிமைக்காட்சிகள்:- ஒரு எரியும் தீப்புதரில் ஆண்டவரின் தூதர் எவ்வாறு மோசேக்கு தோன்றினாரென யாத். 3 விவரிக்கின்றது. இவ்வாறு, இறை மகிமை காட்சியானது இறைவனின் காட்சியையும், அவருடைய சொற்களின் விவரத்தையும் (கேட்டல்) கொண்டுள்ளது. இப்பகுதியின் சிறப்பியல்பானது எரியும் சுடராகும் (யாத் 13:21; 19:18; 24:17; லேவி 10:1-3; எண் 11:1-3; 16:35). எலியா கதைகளிலும் (1 அர 18-19; 2 அர 1; 2:11) இலக்கிய இறை மகிமைக்காட்சிகளிலும், புதிய ஏற்பாட்டிலும் சிறப்பியல்பாக எரியும் தீ அமைந்துள்ளது. இறைவனுடைய மகிமையைப் பற்றிய பல குறிப்புகள் உண்மையில் இறை மகிமைக்காட்சிகளாக இல்லை; ஆனால், மகிமையினின்று திடீரெனத் தண்டிக்கும் தோற்றம் (எண் 14:16; 16:19; 20:6) மேலே குறிப்பிடப்பட்ட திடீர் நெருப்பிற்கு இணையானது. இவ்வாறு, தீயானது மகிமைபோன்று திருத்தலத்தில் நிலையாக உள்ளது. ஆனால், இறைவனுடைய கோபத்தினைச் செயல்படுத்த திடீரென வெளிப்படுகின்றது.

''மேகமானது'' (யாத் 24:15-18; 40:34-35; எண் 9:15-23) இறை மகிமைக் காட்சியை பற்றியல்லாமல், ''கூடாரத்தோற்றத்தை'' விவரிக்கின்றது. ''பெயர்'' என்பது தோன்றுவதற்குப் பதிலாக தங்கியிருப்பதால், ''பெயர்'' என்ற பொருள் கூடாரத் தோற்றத்தின் சிறப்பியல்பை அதிகமாக கொண்டுள்ளது. ஆயினும், ஏச 30:27-28-இல் இறைவனின் பெயரானது, எரிகின்ற நிலையில் புகையுடன், தீர்ப்பிடுவதற்கென கிழக்கிலிருந்து வருகிறது.

யாத். 19-இன் கம்பீரமான இறை மகிமைக் காட்சியில், மேகத்தினுடைய கருமையான பகுதியில் தன்னை மறைத்துக்கொண்டு (19:9), ஆண்டவர் இஸ்ராயேலிடம் தனிப்பட்ட விதமாக வருகிறார். சடங்குளால் தயாரிக்கப்பட்ட மக்களை நோக்கி (19:14-15), குறிப்பிட்ட காலத்தில் (19:16), இடி, மின்னல் கருமேகம் மற்றும் தொடர்ச்சியான முரசொலி ஆகியவை தொடர பேசுவதற்காக ஆண்டவர், தீயில் மலைமீது வந்தமர்கிறார். மக்கள் ஆண்டவரைப் பார்க்க விரும்பி எல்லை மீறி வராதபடி எச்சரிக்கை செய்யப் படுகின்றனர். ஆனால் மோசே மேலே செல்கிறார். இயற்கை நிகழ்ச்சிகளும், வழிபாட்டு

சிறப்புகளும், புராண மொழியும், பழைய ஏற்பாட்டின் உயர்ந்த இறைமகிமைக்காட்சியினை முன்னிருத்துவதற்கென ஒன்று சேர்கின்றன. இதனின்றும், மற்ற இறைமகிமைக் காட்சிகளினின்றும் சிறப்புப் பண்புகள் வெளிப்படுகின்றன. அவை இறை முன்முயற்சி, பல்வேறு வெளிப்பாட்டு வாய்ப்பாடுகள், இறைவனுக்கும் மனிதருக்கும் இடையிலான சந்திப்பும் உறவும், இறைமகிமைக் காட்சியின் நோக்கம் பற்றிய விவரம், மற்றும் மனிதரிடையே ஏற்படும் பக்திமிகு அச்சம் ஆகியவையாகும்.

2. மனித வடிவில் ஆன இறை மகிமைக் காட்சிகள்:- சீனாய் மலைக்காட்சிகளே, பழைய ஏற்பாட்டின் உண்மையான இறை மகிமைக்காட்சிகளாகும். மோசே, ஆரோன். நதாபு, அபியூ மற்றும் இஸ்ராயேல் பெரியோரில் எழுபது பேர் எவ்வாறு இறைவனை கண்டார்களென *யாத் 24:9-11* விவரிக்கிறது. அவர்கள் ஒரு உருவை கண்டனர் என்பது உட்பொருளாகும். பாதங்களைப்பற்றிய குறிப்பு மனித வடிவைச் சுட்டுகிறது. அவர்கள் இறைவனைக் கண்டு, எவ்வித தீங்கினையும் அடையாமல் இருந்தனர் என்பதால் இக்கதை குறிப்பிடத்தக்கதாகும். இது இறைவனைக் காண்பதோ அல்லது அவரது குரலைக் கேட்பதோ (*உப 4:33; 5:24*), உயிருக்கு ஆபத்தானதாக இல்லாவிட்டாலும், மிகவும் ஆபத்தானது (*யாத் 33:20; நீதி 13:22*) என்னும் கருத்திற்கு முரண்பட்டதாக உள்ளது. ஆயினும், இப்பகுதி காட்டுவதுபோல் மனிதர்கள் இறைவனைக் கண்டும், கேட்டும் உயிருடன் வாழ்ந்தார்கள் (*யாத் 3:6; 19:21; எண் 12:6-8; நீதி 6:22-23; ஏச 6:5*). பழைய ஏற்பாட்டுக் காட்சிகளில் இறைவனுடைய சொற்களைக் குறிப்பிடாமல், அமைதியாக இருப்பதாக இது மட்டுமே உள்ளதால், இக்கதை தனித்துவமிக்கதாக உள்ளது. இது ஒரு கேட்டல் அன்று, இறைமகிமைக் காட்சியாகும். அனேகமாக இக்கதையானது, முக்கிய உடல்சார்ந்த மற்றும் ஆன்மீக செயல்களை அருகருகே வைக்கும் நோக்கத்தை மட்டும் கொண்டதாக இருக்கலாம்.

யாத் 33:17-25-இல் ஆண்டவருடைய முகத்தையன்றி (மகிமை?), பின்புறத்தை மட்டும் காண மோசேக்கு வாக்களிக்கப்படுகின்றது. ஆனால் *ஆதி 32:20; எண் 12:6-8; யோபு 4:12-16* ஆகியவை போன்று, *யாத் 33:11* என்ற பகுதி வேறுபட்ட ஒரு கதையைக் கூறுகின்றது. *எண் 24:4; ஏச 6; எச 1; தானி 7* ஆகியவற்றில் இறைவனுடைய மனித உருவமானது காட்சி அல்லது கனவிலும் பார்க்கப்படுகிறது; அதாவது, இறைமகிமைக்காட்சிப் பொருளின் ஒரு பகுதி மட்டும் இவற்றில் உள்ளது. மேலும் இறைவனின் தூதர் யாவேயின் தூதர் போன்ற மனித குணநலன்களுடன் இறைவன் தோன்றுவதைப்பற்றிக் கூறுகிற பல கதைகள் உள்ளன. நிகழ்ச்சியுரைகள் சுட்டுவது போல் இவையெல்லாம் யாவேயைப்பற்றிய கதைகளே (*ஆதி 16:13; யாத் 3:2. 5-7*).

3. இலக்கிய இறைமகிமைக் காட்சிகள்:- *நீதி 5:4 (சங் 114:5-8)* நிலநடுக்கம் பற்றியும் இடிமின்னல், புயல் பற்றியும் கூறுகின்றது. இயற்கைச் செயல்கள் *சங் 18:7-15; 29; 68:7-9; 77:16; 97:4-6; 144:5* ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. வழிபாட்டுச் செயல்கள் மூலமாக மட்டுமே இவை எவ்வாறு விளக்கப்பட முடியும் என்பதை காண்பது கடினமாக உள்ளது. இறுதிக்கால இறை மகிமைக்காட்சிகளை, *ஏச 30:27; 63:1-6; செப் 1:14; உப 33:2; அப 3* ஆகியவற்றில் காணலாம்.

4. புதிய ஏற்பாட்டில் இறைமகிமைக் காட்சிகள்:- புதிய ஏற்பாடு, *அ ப 7:30; எபி 12:18.29* ஆகியவற்றில், பழைய ஏற்பாட்டு பகுதிகளைச் சுட்டிக்காட்டுகிறது. இறைமகிமைக்காட்சியுடன் உடன் நிகழ்பவை உள்ளன. அவை (அ) தீ (*அ.ப. 2:3; 1 கொரி 3:13; 2 தெச 1:7*); (ஆ) வான தூதர்கள் (*2 தெச 1:7*); ஆனாலும், அப்போஸ்தலர் பணியில் பல வானதூதரின் காட்சிகள் உள்ளன (*அ.ப. 5:19; 8:26; 10:3; 12:7; 27:23; மத் 14:11 இ; மாற் 1:13; லூக் 22:43*); (இ) இறைமாட்சிமையின் கெருபிம் (*எபி 9:5*); (ஈ) இறைமகிமை (*லூக் 2:9; 1 கொரி 15:40; 2 கொரி 3:7*) என்பவையும் உள்ளன. உண்

மையில், புதிய ஏற்பாட்டில் உண்மையான இறைமகிமைக் காட்சிகளே இல்லை. ஏனெனில், அவற்றின் இடத்தை கிறிஸ்துவிலான இறை வெளிப்பாடு எடுத்துக்கொண்டுவிட்டது (யோவா 1:14; கொலோ 1:15; எபி 1:1-3). இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையானது, அன்மையில் நிகழவிருக்கும் இறை மகிமைக்காட்சியாகும்; இறைமகிமைக்காட்சியின் சொற்றொடர்களால் விவரிக்கப்படுகிறது (மத் 16:27; 24:30; 26;64; மாற் 8:38; 13:26; லூக் 9;26). உயிர்த்த கிறிஸ்துவின் காட்சிகளும், உருமாற்றமும் இறைமகிமைக் காட்சிகள் என்று சரியாகக் கூற முடியாது.

இறை மனிதன் *(MAN OF GOD)*

இஸ்ராயேலில் தொடக்க கால இறைவாக்கினர்களுக்கு அளிக்கப்பட்ட பெயராகும். குறிப்பாக இறைகூற்று அளிப்பதும் (சில நேரங்களில் குறிப்பார்க்கும் முறையிலே) வியப்பானவைகளை நிறைவேற்றுவதும் இதில் அடங்கும். இச்சொல்லானது, பெயரிடப்படாத இறைவாக்கினர்கள் (1 சாமு 2:27; 1 அர 13; 2 நாள் 25:7.9), மோசே (உப 33:1; யோசு 14:6; 1 நாள் 23:14; 2 நாள் 30;1; எஸ் 3:2), இறைவாக்கினரென எண்ணப்பட்ட ஆண்டவரின் தூதர் (நீதி 13:6,8), சாமுவேல் (1 சாமு 9:6-10) செமேயியா (1 அர 12:22; 2 நாள் 11:2), எலியா (1 அர 17:18.24) மற்றும் எலிசா (2 அர 1:9-13; 5:8-15) ஆகியோருக்குப் பயன்படுகிறது. பிற்காலங்களில் இறைவாக்கினர்களைத் தவிர்த்து, தாவீது போன்று இறைவனுடன் சற்று சிறப்பான தொடர்பினைக் கொண்டவர்களாகக் கருதப்பட்ட சிலருக்கும் இச்சொல் பயன்பட்டதாகத் தெரிகிறது (நெக 12:24.36; எரே 35:4). 1 திமோ 6:11 மற்றும் 2 திமோ 3:17-இல் இச்சொல் பயன்படும் போது, கிறிஸ்தவப் பக்தியைக் கருத்தில் கொண்டுள்ளது.

இறையாட்சி முறை *(THEOCRACY)*

இறைவனால் ஆளப்படும் ஒரு நாட்டின் நிர்வாகமே இறையாட்சி எனப்படும். இந்த வார்த்தை விவிலியத்திலிருந்து தோன்றாவிட்டாலும், எபிரேய மக்கள் வாழ்க்கையிலே இது முக்கிய இடத்தைக் கொண்டிருந்தது. இவ்வார்த்தை முதன்முதலாக யோசிபசால் என்பவரால் பயன்படுத்தப்பட்டது. இவர் இதைக் குடியாட்சி, முடியாட்சி போன்றவற்றுடன் வேறுபடுத்திக் காட்டுகின்றார். இறையாட்சி, இறைவன் மக்களை ஆள்பவர், சட்டத்தைத் தருபவர், உலகை ஆள்பவர் போன்ற எண்ணங்களைக் குறிக்கிறது. வரலாற்றிலே இறைவனது ஆட்சி இடையாளர் இல்லாத இறையாட்சியாகத் தோன்றவில்லையானாலும் வரலாற்றின் முடிவிலே இவ்வாட்சி செயல்படும் என்பது உறுதி என விவிலியம் கருதுகிறது.

இறுதிக்கால இறையாட்சி இருவிதங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்று, இறையாட்சி, ஆண்டவரின், உடனடியான, இடையாளர் இல்லாத ஆட்சியாகும் (ஏச 2:2-4; 24:23; செப 2:8-13). மற்றது. மெசியாவைப் பிரதிநிதியாகக் கொண்ட இறையாட்சியாகும் (ஏச 9:2-7; 11:1-9; ஆமோ 9;11). இங்கு வரலாற்று எல்லைக்குள் அடங்கும் இறையாட்சியைப் பற்றிப் பார்ப்போம்.

இஸ்ராயேலர் வரலாற்றிலே மூன்று விதமான இறையாட்சி பேசப்படுகிறது.

1. அருங்கொடை இறையாட்சி:- சீனாய் மலையிலே இஸ்ராயேல் மக்கள் உடன்படிக்கைச் செய்த வேலையிலே இறைவன் அம்மக்களுக்கு அரசரானார் (யாத் 19:6). இஸ்ராயேல் கூட்டு இன ஆட்சி முறை பெற்றனர். இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்கள் இத்தகைய அரசாட்சிக்கு முந்திய கூட்டுஇன ஆட்சியையே குறிக்கின்றன (ஆதி 29:31-30:24; 49:2-27). இந்தக் குழுவின் தலைவர், அரசர் இறைவனே ஆவார் (நீதி 8:23; 1 சாமு 8:7). பேழையே இந்த அமைப்பின் மையப் புனித இடமாகும் (எண் 10:35-36; எரே 3:16-17). இந்த ஆட்சியிலே சேனைகளும், அரசியல் அமைப்புகளும் இல்லை. ஆனால் ஆபத்தான வேளையிலே ஆண்டவரின் ஆவி சிலர் மேல் இறங்கிவர அவர்கள் அந்த ஆபத்தை முறியடித்தனர் (நீதி 3:10; 6:34). இவர்கள் நீதிபதிகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அருங்கொடை பெற்ற தலை

வர்கள், ஆண்டவரின் ஆவியின் ஆற்றலில் அவரது பிரதிநிதியாக விளங்கினர். இவர்கள், ஆவியின் ஆற்றலின் கீழ் ஆண்டவரது திருவுளம் பற்றி இறைவாக்கு உறுதி கொண்டிருந்தனர். மக்களை ஒன்றுகூட்டிச் செயல்படச் செய்தனர் (நீதி 3:28; 7:7.9.15. 8:7). நீதிபதிகளைத் தவிர குருக்களும் இறைவாக்கினர்களும், அரசாட்சிக்கு முந்திய காலத்து இறையாட்சியில் இறைகருவிகளாக விளங்கினர் (4:4-7; 20:28; 1 சாமு 14:41).

2. அரச இறையாட்சி:- இஸ்ராயேலர் அரசர்கள் வேண்டுமெனக் கேட்டபோது, ஆண்டவரை அவர்கள் ஒதுக்கி விடுவார்களோ என அஞ்சி இந்த வேண்டுதல் மறுக்கப்பட்டது (1 சாமு 8:7; 10:27); கண்டனம் செய்யப்பட்டது (ஒசே 8:4; 9:9; 13:10-11). இருப்பினும் அரசர்கள் இறைவனாலேயே நியமிக்கப்படுகிறார்கள் எனவும் மக்கள் நம்பினர் (1 சாமு 12:12). இறைவாக்கினர்கள் அரசர்களை நியமிக்கவும் நீக்கவும் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர் என அவர்கள் நம்பினர் (13:14; 15:23; 2 அர 9:1-13). அரசர் என்பதற்குப் பதிலாக '' ஆண்டவரின் அபிடேகம் செய்யப்பட்டவர்'' (சங் 2:2) என அழைக்கப்பட்டார். ஆண்டவரின் உரிமையின் பேரில் மன்னன் ஆவார் (1 சாமு 10:1). இஸ்ராயேலர் அரசனின் மக்கள் அல்லர்; யாவேயின் மக்களாவார் (13:14; 2 அர 9:6). அரசர் யாவேயின் மேய்ப்பர் (2 சாமு 5:2). இறைவன் அரசனைத் தத்து மகனாக ஏற்றுக் கொண்டதால் அவருக்கு அரசனாகும் உரிமை கிடைக்கிறது. அப்போதும் யாவேயே அரசராவார் (ஏச 6:1). அது ஒரு விசுவாச சத்திமாகும் (ஏச 43:15; 44:6; செப் 3:15).

3. குருத்துவ இறையாட்சி:- நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய பின் காலத்தின் தொடக்கத்தில் அரசனும் குருவும் கடவுளின் பிரதிநிதிகளாகக் கருதப்பட்டனர் (செக் 4:14; 6:12-13). சைரசின் கட்டளையால் அங்கீகரிக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட்ட யூதாவிலுள்ள சமயச் சமூகம் (எஸ் 6:3-5) குருத்துவத்திற்கும் குருக்களுக்கும் அதிக முக்கியத்துவத்தை கொடுத்தது. பாரசீகர், ஆட்சியின் கீழ், யூத அரசாட்சியின்மை குருக்களின் அதிகாரத்தை வளரச் செய்தது. '' தலைமைக்குரு'' அல்லது ''பெரிய குரு'' என்ற பட்டம் முதல் முறையாகத் தோன்றுகிறது (ஆகா 2:2; செக் 3:1). பாரசீகர், கிரேக்கர் உரோமையர் காலத்தில் குருகுலத்தவர் ஆன்மீக, சமயக் காரியங்களில் நடுவர்களாகவும் இணைப்பாளர்களாகவும் விளங்கினர்.

இறையாட்சி பற்றிய புதிய ஏற்பாட்டுக் கருத்து முதன்மையாக இறுதிக் காலத்தைச் சேர்ந்ததாகும். காண்க. இறையரசு.

இறைவனிடம் ஆலோசனை கேட்டல் (INQUIRE OF GOD)

இதை இறை வழிநடத்துதலை நாடுதல் எனலாம். குருவின் மூலமோ, இறைவாக்கினரின் மூலமோ அல்லது கடவுளை நேரடியாகக் கேட்பதன் மூலமோ இந்த இறைவழி நடத்துதல் அதாவது பிரச்சனையான சமயங்களில் இறைவனிடம் ஆலோசனை கேட்கப்படுகிறது. பழங்காலத்தில் இஸ்ராயேலர்கள் குருவின் மூலமும் (நீதி 18:14. 17; 1 சாமு 22:10) இறைவாக்கினரின் முன்னோடியான காட்சியாளர் மூலமாகவும் (9:9) கடவுளிடம் ஆலோசனை கேட்டனர். குருவும், இறைவாக்கினரும் ஆலயத்தின் பீடப் பணிகளைச் செய்தனர். இறை சித்தத்தை அறிந்து கூறினர். ஊரீம் தும்மீம் என்ற திருவுள சீட்டாலோ (எண் 27:21; 1 சாமு 14:36-42), ஏபோத்து (1 சாமு 23:9-13; 30:8), ஒருவேளை தெராபீம், திருஉருவங்கள் (நீதி 18:14), பலிகள் (ஓசே 3:4) ஆகியவற்றைப் பயன்படுத்தி குருகள் இறைசித்தத்தை அறிந்து கூறினர். இறைவாக்கினர் எப்படி விசாரிப்பார் என ஒருவரும் அறியார். காண்பதும் கேட்டலும் காட்சியாளரின் சிறப்புச் செயல்களாகும். இவர் பரவசக் காட்சியையும் பயன்படுத்தினார். சில நேரங்களில் இசையும் முழங்கும் (1 சாமு 10:5; 2 அரச 3:15).

தனிப்பட்டவரின் நலனுக்காக அல்லது நாட்டு நலனுக்காக இவ்வாறு விசாரிக்கப்படும் (1 சாமு 9:9); குறிப்பாக அரசன்,

போருக்குச் செல்லுமுன் இவ்வாறு குரு மூலம் வெற்றி தனக்குக் கிட்டுமா என விசாரித்தான் (1 சாமு 23:2.4; 2 சாமு 5:19.23; 2 அர 3:11; 2 நாள் 18:4.6-7; நீதி 1:1; 20:23). கனவுகளும், ஊரீமும், இறைவாக்கினரும் கடவுளின் சித்தத்தை அறியப் பயன்பட்டன (1 சாமு 28:6). இவற்றைத் தவிர சில குறி சொல்பவர்களும், மந்திரவாதிகளும் கூட இருந்தனர் (1 சாமு 28:3; ஏச 8:19; உப 18:10-11). இறந்தோர் ஆவி மூலம் வருங்காலம் உரைப்பவர்களும் (1 சாமு 28:8; ஏச 8:19) தெரபீமும் (நீதி 17:5; 18:13-14.17-18.20; ஓசே 3:4; செக் 10:2), தூணும் (ஓசே 3:4), பெட்டகமும் (நீதி 20:27) பீடமும் (2 அர 16:15) ஆகியவையும் பயன்பட்டன. மேலும் பாகால்-செப்பு (2 அர 1:2-3, 16) மில்கோம் (செப் 1:5) போன்ற அந்நிய தேவர்களும் ஆலோசனை கேட்கப்பட்டனர்.

இறைவாக்கினர்கள் தோன்றியபின் இறைவாக்கினர்கள் மூலமாகவே மக்கள் கடவுளிடம் ஆலோசனை கேட்டுக் கொண்டனர். பிந்தைய இறைவாக்கினர் உள் உந்துதலிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். பாபிலோனிய அடிமைதளத்தினின்று மீண்டு வந்தபின் குருக்கள் இதில் சிறப்பிடம் பெற்றனர். சாலமோன் காலத்திலிருந்து அன்றாடக் காரியங்களில் தேவ திட்டத்தை அறிய மக்கள் ஞானிகளை விசாரித்து அறிந்து கொண்டனர் (எரே 18:18). செபக்கூடங்கள் வந்ததும், செபத்தில் நேரடியாக கடவுளை ஆலோசனை கேட்கும் பழக்கம் எற்பட்டது. புதிய ஏற்பாட்டு காலத்தில் இறைவனிடம் ஆலோசனை கேட்க செபம் முக்கிய சாதனமாகியது. கிறிஸ்தவர்கள் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செபிக்க கற்பிக்கப்பட்டனர் (யோவா 14:13-14; 15:16; 16:23.26; அ.ப. 2:21; உரோ 10:13).

இறைவனின் உருவும் சாயலும்

பழைய ஏற்பாட்டில் 'இறைவனின் சாயல்' என்பதன் பொருளை விளக்கும் போது, கிறிஸ்தவ காலத்தில் நிலவிய இறையியல் அனுமானங்களைத் தள்ளி வைப்பது மிகவும் அவசியம். அது புதிய ஏற்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களிலிருந்து ஒதுக்கி, அச்சொற்றொடரைத் தனித்து நோக்க வேண்டும். இதன்மூலம் மட்டுமே, பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுக்கருத்துக்களை, அவற்றிற்குரிய வித்தில் புரிந்து கொள்ளக் கூடும்.

மனிதன் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டதாக ஆதியாகமத்தில் குருத்துவப் பாரம்பரிய நிகழ்ச்சியுரை கூறுகின்றது. இது புலனீடாக ஒத்திருத்தலை முதன்மையாக உணர்த்துகிறது. ஆனால் இறைவனோடு தொடர்பு கொண்ட நிலையில் மனித ஆளுமை என்ற கருத்தியலான கூறையும் உணர்த்துகிறது. வீழ்ச்சியின் மூலம் கடவுளின் சாயலை மனிதன் இழந்து விட்டதாகப் பழைய ஏற்பாடு எப்போதுமே கூறியதில்லை.

புதிய ஏற்பாட்டில், இறைவனின் சாயல் என்பது (இரண்டு பகுதிகளைத் தவிர்த்து) மனிதனுக்கு உரியதன்று என்றே கூறப்படுகிறது. மூல முன்மாதிரிகையான முழுமையான பிரதிபலிப்பாகிய கிறிஸ்துவின் சாயலாக அது கருதப்படுகிறது. கிறிஸ்துவோடு கொண்ட உறவின் மூலம், விசுவாசிகள் அதே சாயலாக மாற்றப்படுகிறார்கள். இந்நிலையானது இறுதிக்கால நம்பிக்கையாகவும், (ஓரளவிற்கு) இன்றைய உண்மையாகவும் உள்ளது.

1. பழைய ஏற்பாடு

அ. ஆதாரம்:- முதன்மையான பழைய ஏற்பாட்டு ஆதாரங்கள் குறைந்த அளவிலேயே உள்ளன. இக்கருத்து காணப்படும் பகுதிகள் ஆதி 1:26-27; 5:1-3; 9:1-7 ஆகியவை ஆகும். இவை யாவும் குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்தவை. 'இறைவனின் சாயல்' என்னும் சொல் காணப்படாவிட்டாலும், இக்கருத்து சங் 8-இல் கவிதை நடையில் காணப்படுகிறது. இவற்றோடு சம்பந்தப்படாதவையாக இருந்தாலும், சீரா 173; ஞான 2:23-24; 7:25 என்னும் குறிப்புகளும் சேர்க்கப்படலாம்.

ஆ. மொழிவாரியான ஆய்வு:- மொழிவாரியான பிரச்சினைப்பற்றி சில பூர்வாங்க குறிப்புக்கள் உதவியாக இருக்கும். ஆதி 1:26-இல் ''உருவிலும் சாயலிலும்'' என்ற இரு சொற்கள் பயன்பட்டுள்ளன. ஆதி 1:26-இல் செய்யப்பட்ட தீர்மானம் 1:27-இல் நிறைவேற்றப்படும் பொழுது, முதல் சொல் மட்டுமே பயன்பட்டுள்ளது. ஆதி 5:1 இரண்டாவது சொல்லும், ஆதி 9:6-இல் முதல் சொல்லும் மட்டுமே பயன்பட்டுள்ளன. 5:3-இல் ஆதாமிற்கும் அவரது மகன் சேத்திற்கும் இடையிலுள்ள ஒத்தநிலையினைப்பற்றிக் கூறும் போது இரண்டு வார்த்தைகளும், ஆனால் நேர்மாறான வரிசையில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

உருவம் என்ற சொல் பழைய ஏற்பாட்டில் பதினேழு முறை காணப்படுகின்றன. பரிசேலனையில் உள்ள பகுதிகளில் இச்சொல் ஐந்து முறை காணப்படுகின்றது. மற்ற பத்துப் பகுதிகளில் இச்சொல்லுக்கு (சிலை, மாதிரி, படம்) என்ற பொருள் தெளிவாக உள்ளது. மீதியுள்ள இரு பகுதிகளில் (சங் 39:7; 73:20) நிழல், கனவு என்னும் பொருள் பொருத்தமாக உள்ளது. இவ்விரண்டு இடங்களில் வரும் சொல் வேறுபட்ட அராபிக் மூலச் சொல்லிலிருந்து வந்ததா என்பதும், மற்ற பத்து பகுதிகளில் 'வெட்டுதல்' என்று பொருள்படும் அராபிக் சொல்லிருந்து வந்ததா என்பதும் பற்றிய கருத்து விவாத்திற்குரியதாகும்.

ஆதி 1:26-இல் காணப்படும் 'சாயல்' என்னும் இரண்டாவது சொல் கருத்தியலான பொருளையுடையது. அவ்விதத்திலேயே பயன்பட்டுள்ளது. ஆயினும், 'திட்டம்' என்னும் பொருளிலும் பயன்படலாம்.

1:26-இல் இரண்டு சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடினமாக ஒரு கருத்தை வெளிப்படுத்த ஆசிரியரின் போராட்டத்தைச் சுட்டலாம் அல்லது ''உருவம்'' என்ற சொல் புலனீடான பொருளில் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுவதைத் தவிர்ப்பதற்காக இருக்கலாம். மொழிவாரியான சுருக்கமான ஆய்வுப்படி, சொற்களும் பயன்பட்டுள்ள விதத்தில் அதிக வேறுபாடு இல்லை என்பதைச் சுட்டுகிறது.

இ. விளக்கம்:- குருக்கள் பாரம்பரிய ஆசிரியரின் சொற்களுக்குப் பொருள்காண பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு கோடி எல்லையில் 'உருவம்' மற்றும் 'சாயல்' ஆகிய வார்த்தைகளை மிகவும் புலனீடான பொருளில் ஏற்று, சொற்பொருள், உடல் அளவில் ஒத்திருக்குமுறையில் இறைவனின் புலனீடான உருவமாவான் என்று அல்லது இறைவனின் புலனீடான உண்மையான உருவத்தையோ மாதிரியையோ பாவனையாக வைத்து மனிதன் செய்யப்பட்டவர் என்று விளக்கமளிப்பதாகும். கில்கமிஷ் இதிகாசத்தில் விவாதத்திற்குரிய ஒரு பகுதியானது இந்த இரண்டாம் விளக்கத்திற்கு ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது. ஆனால் அதில் வரும் சிக்ரூ என்னும் சொல்லானது 'மாதிரி' என்றில்லாமல் ''மனரீதியான உருவம்'' என்றே பொருள் படுகிறது. மனிதனைக் கடவுளின் உருவகமாகப் படைப்பது பற்றி பாபிலோனிய அல்லது சுமேரிய இதிகாசங்களில் (பல்வேறு உதாரணங்கள் உண்டு) உள்ள புராணக் குறிப்புகள் கற்பனை செய்யப்படக் கூடியவையே, ஆயினும் ஆதி. 1-இன் மற்ற பகுதிகளில் புராணக் கதைகளில் கவனம் கொள்ளும் ஆசிரியர் அவற்றை வேண்டுமென்றே நிராகரித்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. மனிதன் கடவுளின் இரத்தத்தினைத் தனது நரம்புகளில் கொண்டுள்ளான் எனும் பாபிலோனிய நம்பிக்கை உறுதியாக இங்கு இல்லை. ஆதி 1:27-இல் உள்ள நிலையின்படி மனிதன் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டான் என்னும் கருத்திலிருந்து, ஆணும், பெண்ணும் என்ற வேறுபாடு பற்றிய கூற்று தெளிவாக பிரிக்கப்பட்டிருப்பது, ஆணும், பெண்ணும் முறையே ஆண் கடவுள் மற்றும் பெண் கடவுளின் சாயலாக படைக்கப்பட்டவர்கள் என்னும் சுமேரிய சமய சடங்குகளில் நிலவும் கருத்தினை முற்றிலும் விளக்குவதாக இருக்கலாம்.

மற்றொரு கோடி எல்லையில், உருவம் என்னும் சொல்லுக்குப் புலனீடானபொருள் அளிப்பதை விலக்கி அதற்கு 'ஆளுமை', 'தன்னறிவு', 'தன் முடிவுரிமை', 'அழியாமை' (ஞான 2:23-24), 'காரணம்', 'தீர்ப்பிடும் திறன்', 'சுதந்திர முடிவாற்றல்', 'ஒழுக்கத்திறன்'என்பன போன்ற சொற்களைப் பயன்படுத்தி முழுவதும் ஆன்மீக விளக்கம் அளிக்கப்படும்.

குருக்கள் பராம்பரிய ஆசிரியரின் கருத்துப்படி இறைவனின் உருவம் என்பது அனைத்து மக்களுக்கும் உரிய என்பாகும். எகிப்திய கருத்துப்படி அரசருக்கு மட்டுமே உரியதல்ல, தனிப்பண்பதாகும். வீழ்ச்சி பற்றி நிகழ்ச்சிரையை அவர் எங்குமே குறிப்பிடவில்லை. உண்டாக்கப்பட்ட மனிதன் இறைவனின் உருவமாக இன்னும் இருப்பதை, அவன் கொலை செய்யக்கூடாது என்று பெரும் வெள்ளத்திற்குப்பின் அளிக்கப்பட்ட காரணமாகக் கூறுகிறார்.

மனிதன் இறைவனை ஒத்திருப்பது, சேத்தன் தந்தை ஆதாமை ஒத்திருப்பதற்கு இணையானது. இதில் உடல் அளவிலான சாயல் முழுவதும் ஒதுக்கப்படவில்லை. இன்னும் பையன் அவனது தந்தையின் உயிருள்ள உருவம் என்றே பேசுகிறோம்.

ஆதி 1:26-இல் மனிதன், படைக்கப்படுதல் அறிமுகப்படுத்தும் முறையும், 9:1-7-இல் மனித வாழ்வு விலங்கின் வாழ்வைவிட உயர்ந்தது என்றும், இத்தகைய மாறுபாடு இறைவனின் உருவம் என்பதோடு தொடர்புடையது என்றும் சுட்டிக்காட்டப்படுவதும் இறைவனின் உருவம் என்ற சொற்றொடரால் ஆசிரியர் மனிதனுடைய தனிச்சிறப்பை விளக்க முனைகிறார் என்பதும் தெளிவாகின்றது.

ஓர் இடத்தில் இல்லாத ஆட்சியாளருக்குப் புற அடையாளமாகச் சிலை இருப்பது போல (தானி 3) மனிதன் இறைவனின் உருவமாக இருக்கிறான் என்று ஆசிரியர் கருதியிருக்கக் கூடும் என்று ஏற்றோம் என்றால் உடனடியாக மனிதன் இறைவனின் பிரதிநிதியாகச் சிறப்பையும், அதிகாரத்தையும் பெறுகிறான் என்பது தெளிவாகும். விலங்குகளோடு ஒப்பிடும்போது மனிதன் நிமிர்ந்து நிற்கும் நிலைபற்றிய குறிப்பும் இங்கு உள்ளடங்கலாம். மனிதனும் விலங்குகளும் வேறுபட்டவை; அவற்றின் வேறுபாடு தெளிவாகவே இருக்க வேண்டும் (லேவி 20:15-16). இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உடற்கூறு ஒற்றுமை இங்குக் கருத்தில் உள்ளடங்கும் என்பது, உப 4:15-24-இன் பின்னணியில் ஒதுக்கப் படக்கூடாது. 'ஒரேப்' மலையில் எத்தகைய வடிவமும் காணப்படாவிடினும் இறைவனுக்கு வடிவமுண்டு என்பது மறுக்கப்படவில்லை. பழைய ஏற்பாட்டில் வரும் சில இறைமகிமைத் தோற்றக்காட்சிகளில் (ஏச 6; எச 1) அவர் வடிவம் கொண்டிருந்தார் என்பது வெளிப்படையாகுகிறது. பழைய ஏற்பாட்டில் இறைவனைப் பார்க்க முடியும், பார்க்க முடியாது என்பது பற்றி விநோதமான ஊசல்நிலை காணப்படுகிறது. ஆதியாகமத்தின் ஆசிரியர் கூறவிரும்புவது மனிதர் இறைவனின் உருவத்தைச் செய்யலாம் என்பதன்று. இதை அவர் கடுமையாக மறுத்திருப்பார். மனிதனைத் தமது உருவமாகப் படைத்தார் என்று மட்டுமே கூறுகிறார். 'சாயல்' பற்றி குறிப்பிட்டு, இருவருக்குமிடையேயுள்ள இடைவெளியினையும் விளக்குகின்றார். வெளிப்புற ஒத்தநிலையினைக் குறிப்பிடுவதன் மூலம் ஆன்மீக ஒத்தநிலை மறுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பழைய ஏற்பாடு மனிதனை உடலும், ஆன்மாவும கொண்ட இருமைப் பொருளாகக் கருதவில்லை; மனிதப்பண்புகளை இறைவனுக்குச் சாற்றிக் கூறுவது பல இடங்களில் காணப்கிறது. இது முதிராத சிந்தனைப் போக்கின் அடையாளமன்று. மறுபுறத்தில் குருக்கள் பாரம்பரிய ஆசிரியர் இறைவனுக்கு மனிதப் பண்புகளைச் சாற்றிக் கூறும் முறையை முடிந்த அளவு தவிர்க்கிறார். ஆகவே உருவம் என்னும் புலனீடான சொல்லைப் பயன்படுத்தும்போது, கருத்தியலான ஒன்றை எடுத்துக் கூற விரும்புகிறார் எனலாம்.

மனிதனுககும், இறைவனுக்கும் புறஒத்த தன்மை இருப்பதாய் பொதுவாக கருதப்பட்டாலும் குருக்கள் பாரம்பரிய ஆசிரியர் கருத்தியலாகக் கூறும் முறையை ஓரளவு கொண்டிருந்ததாகத் தெரிகிறது. அவர், இறைவனின் உருவம் என்பதற்கு ஆளுமை என்று பொருள் கொண்டார் என்று நாம் ஏற்றுக் கொள்ளலாம். இப்படிக் கூறும் போது, தத்துவ இயல் அறிஞர்கள் கூறுவதுபோல், ஆளுமை தன்னாட்சியுடைய சுயமாக- நிர்ணயிக்கும் உயிர் என்று பொருள் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இறைவன் மனிதனை அவனுடைய படைப்பவர் என்ற அளவில் நிர்ணயிக்கிறார். இறைவனின் உருவம் என்பது அதிகாரத்தை அளிப்பதையும், இறைவன் மனிதனை அந்த அதிகாரத்தைச் செயல்படுத்தும் முறையில் அமைந்திருப்பது பொறுப்பினையும் உள்ளடக்குகிறது.

'இறைவனது உருவம்' என்பது கீழான படைப்புகளை ஆள்கின்ற திறன் அல்லது அவ்வாறு செய்யக்கூடிய திறன் என்று விளக்கப்படக் கூடாது என்றாலும் (சீரா 17:3), இரண்டும் நெருங்கிய தொடர்புடையனவாகும். மனிதர் மீதான கடவுளின் அன்பு, பிரிவு, வானதூதரைவிடச் சிறிதளவே தாழ்ந்த நிலையினை அவனுக்கு அளித்தது, அவனுடைய ஆளுமையை செயல்படுத்த அரச மரியாதைகளை அளித்தது போன்றவற்றை குறிப்பிடும் சங் 8-இல் இத்தகைய நிலை காணப்படுகின்றது. மகிமை மற்றும் பெருமை ஆகியவற்றால் மனிதன் மூடிசூட்டப்பட்டிருப்பது அவனது வெளிப்புற அழகினையும் உட்புறச் சிறப்பினையும் வெளிப்படுத்துகின்றது. ஏதேனில் உள்ள தீர் நாட்டு அரசனைப்பற்றிய புராணக் கதையானது (எச 28:12.17) அழகு மற்றும் ஞானம் ஆகிய இரண்டும் இணைந்த ஒரு நிலையினைக் குறிப்பிடுகின்றது. மனிதனுடைய சிறப்பு, வல்லமை மற்றும் நற்பண்புகள் போன்றவை, மனிதனது கலாச்சாரப் பணிக்காக இறைவனால் அளிக்கப்பட்ட கொடைகள் (ஆதி 1:26.28) என்று சங் 8-இல் கூறுவதாகவும் நான் கருதலாம்.

2. புதிய ஏற்பாடு

அ. புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு கருத்துக்களின் சுவடுகள்:-

'இறைவனின் உருவம்' என்ற பழைய ஏற்பாட்டுக் கருத்து, எவ்வித மாற்றமுமின்றி புதிய ஏற்பாட்டில் 1 கொரி 11:7; யாக் 3:9 ஆகிய இரண்டு இடங்களில் காணப்படுகின்றது. 1 கொரி 11:7-இல் 'உருவம்' மாட்சியோடும் இணைத்துக்கூறப்படும்போது, யாக்கோபு சாயல் என்ற சொல்லைப் பயன்படுத்துவது கவனிக்கத்தக்கது. அவ்வாறே, உரோ 1:23-இல் சாயல் பண்பட்டுள்ளது. உருவம் என்பது மூல முன்மாதிரிகையை உணர்த்துவதாகத் தெரிகிறது. உருவம் என்ற சொல்லின் இந்தப்பொருள் மாற்றம் எபி 10:1-இலும் காணப்படுகிறது. அங்கு நிழலோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது.

ஆ. புதிய ஏற்பாட்டில் கருத்து மாற்றம்:-

'உருவம்' என்பதிலிருந்து ''மூலமுன்மாதிரிகையின் நிறைபிரதிபலிப்பு'' என்று பொருள் மாறுபடுவது, புதிய ஏற்பாட்டில் முடிவாகத் தீர்மானம் செய்வதாக அமைகிறது. மூலமுன்மாதிரிகையோடு நிறை ஒற்றுமையுடையது. இந்தப் பொருளில் கிறிஸ்துவே இறைவனின் உருவம் என்னும் கருத்தைவிட வேறெதுவும் கிறிஸ்துவில் இறைவனின் வெளிப்பாட்டின் மிகப்பெரும் தாக்கத்தைத் தெளிவாக்குவதில்லை. ஞானம் என்பது, 'எல்லாம் வல்லவரது மகிமையொளியுடன் தூயசுடர்', 'முடிவில்லா ஒளியின் எதிரொளி', 'கடவுளுடைய வேலைத்திறனின் கறைபடியாக் கண்ணாடி', 'அவருடைய நம்மைத்தனத்தின் சாயல்' என்றெல்லாம் ஞான 7:25-26 விவரிக்கின்றது. மகன் என்ற அளவில் கிறிஸ்துவுக்கு இந்த விவரிப்பு எபி 1:3-இல் எடுத்துக் கூறப்படுகிறது; ''கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், உள்ளியல்பின் சாயலாகவும் விளங்கும் இவர்'' என்று தொடக்கத்திலேயே கூறுவதன் மூலம், கிறிஸ்து உண்மை ஆகிறார் என்னும் உறுதியால் நூல் முழுவதிலும் ஆசிரியர் ஆட்கொள்ளப்பட்டுள்ளார் என்று காட்

டுகிறார். யோவானின் நூல்களில் ''இறைவனின் உருவம்'' என்ற சொற்றொடர் காணப்படாவிட்டாலும் அதுவே அவற்றிற்கு மையக் கருத்தாக உள்ளது. மனுஉடல் எடுத்த கிறிஸ்துவில் 'தந்தையிடமிருந்து வந்த ஒரே மகன் என்னும் மகிமையானது வெளிப்படுகிறது' (யோவா 1:14), மற்றும் 'கிறிஸ்துவைக் காண்பது தந்தையைக் காண்பதற்குச் சமம்' (யோவா 12:45; 14:9) ஆகும். மனிதர்கள் ஏற்கெனவே இறைவனின் பிள்ளைகளாக இருந்தாலும், கடவுளுடைய அல்லது கடவுள் வெளிப்படும் கிறிஸ்துவினுடைய உருவாக விளங்கிடும், மேலும் அதிக மகிமையுடன் கூடிய எதிர்காலம் உண்டு என்னும் சிந்தனையிலேயே முக்கியத்துவம் கொண்டதாக 1 யோவா 3:2 அமைந்துள்ளது. பவுலின் சிந்தனைகளில் இக்கருத்து மாற்றம் முழுமையாக செயல்படுத்தப்படுகிறது.

இ. பவுலின் கருத்து:-

கிறிஸ்துவே இறைவனின் சாயல் என்னும் புதிய சிந்தனை பவுலின் நூல்களில் மிக நிறைவாக விளக்கப்பட்டு, மனிதனின் ஊழி என்னும் பிரச்சினையுடன் இணைக்கப்படுகிறது. ''அன்பார்ந்த மகனாகிய'' (கொலோ 1:13) கிறிஸ்துவே ''கட்புலனாகாக் கடவுளின் சாயல்'' என்று கொலோ 1:15 குறிப்பிடுகிறது; ''கடவுளது சாயலான கிறிஸ்து'' என்று 2 கொரி 4:4-இல் நாம் வாசிக்கிறோம். ஆனால், இவற்றில் பவுல் எல்லாவற்றிற்கும் மேலாகச் செயல்முறை விளைவுகளைப் பற்றியே அக்கறை உள்ளவராக இருக்கிறார். அவரைக் கவர்ந்திருப்பது அவருடைய நற்செய்தியே அன்றித் தத்துவம் அன்று. பீலோவில் காணப்படுவது போல் விண்ணக மனிதனுக்கும் (ஆதி 1:26) மண்ணக மனிதனுக்கும் (ஆதி 2:7) இடையேஉள்ள வேறுபாட்டுடன் கூடிய ஆதி 1:2 என்ற பகுதிபற்றிய விளக்கத்தை ஏற்றுக் கொண்டு பீலோ இறைவனின் உருவான மனிதனை வார்த்தையோடு ஒன்றாக்குவது போல் பவுல் இறைவனின் உருவான மனிதனைக் கிறிஸ்துவோடு ஒன்றாக்குகிறார் (1:26) இதை 1 கொரி 15:45-46-இல் தெளிவாகக் கூறுகிறார். இப்பகுதியில் மண்ணிலிருந்து படைக்கப்பட்ட, ஆகவே மண்ணகத்தைச் சேர்ந்த, படைப்பில் உயிர் உள்ளவன் ஆன முதல் மனிதன் ஆதாமையும், உயிர் தரும் ஆவியான இறுதியான அல்லது இரண்டாம் ஆதாமையும் ஒப்பிட்டு வேறுபடுத்துகிறார். ஈரானிய மனுஉரு புராணத்துடன் ஏதாவது தொடர்பு இருக்க கூடுமாயின், பிற பகுதிகளில், பவுல் கிறிஸ்துவின் முந்தைய வாழ்வைப்பற்றிச் சாதரணமாகக் குறிப்பிட்டிருந்தாலும் (கொலோ 1:15 'படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர்', பிலி 2:6 'கடவுள் தன்மையில் விளங்கிய அவர்') இப்பகுதியில் கிறிஸ்துவின் முந்தைய வாழ்வைப்பற்றி ஒன்றும் கூறவில்லை, மாறாக வேண்டுமென்றே இக்கருத்தைத் தவிர்ப்பதாகத் தெரிகிறது. விண்ணிலிருந்து வந்த மனிதன் (1 கொரி 15:47) முந்தைய வாழ்வுடையவர் அல்லர். ஆதி 1:26-இல் உள்ள இறைவனின் சாயலான மனிதனோடு கிறிஸ்துவை ஒன்றாக்கும் பவுல், அண்டவியல் மீட்பு பொருளில் அல்லது இயல் பொருளிலேயே அக்கறை கொள்கிறார் என்பது தெளிவு.

''இறைவனது உருவாகும்'' (ஆதி 1:26) என்பது மனிதனுக்கு ஒரு வாக்குறுதியாகவே இருந்தது. இதை மனிதன் கிறிஸ்துவோடு கொள்ளும் தொடர்பில் மட்டும் தான் அடைய முடியும் என்ற சிந்தனை பவுலை முழுவதும் ஆட்கொள்கிறது. பிலி 2:6-8-இல் கிறிஸ்து தமக்கு உரிமையாகிய இறைவன் வடிவத்தை அல்லது இறைவன் தன்மையைக் கைவிட்டு அடிமையின் வடிவத்தையும் மனிதனின் சாயலையும் ஏற்றார் என்று பவுல் கூறுகிறார். இரண்டிலும் இருத்தலின் வடிவத்தையே குறிப்பிடுகிறார்.

கிறிஸ்தவர்கள் இக்கிறிஸ்துவில் இருப்பதனால், கிறிஸ்தவ சமுதாயத்தில் நிலவும் உறவுமுறைகளில் இந்த உறவுமுறை செயல்படும்.கொலோ 3:9 தொ-இல் பழைய மனிதனைப் புதியமனிதனாக மாற்றிக் கொள்ளும்படி பவுல் அறிவுரை கூறுகிறார். இப்புதிய மனிதர் ''தன்னை உண்டாக்கியவரின் சாயலுக்கேற்ப உண்மை அறிவில்'' புதுப்பிக்கப்

படுகிறார். இப்புதிய மனிதர் சாதி. சமூக, சமய பிரிவினைகள்பொருள் அற்றும்போகும் புதிய சமூகத்தை உருவாக்குவார். அதில் ''கிறிஸ்துவே எல்லாமுமாகவும் எல்லாரிலும் இருப்பார்'' *(காண்க எபே 4:22-26)*. எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்தவர்கள் 'எல்லா நற்பண்புகளையும் பிணைத்து நிறைவு அளிக்கின்ற அன்பை அணிந்து கொள்ள வேண்டும்' *(கொலோ 3:14)*. 'அவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்ற உருவைத் தாங்குவதும் *(உரோ 8:29)*, ஆகவே இறைவனின் சாயலைத் தாங்குவதுமே மனிதர்களுக்குரிய இறைவனின் திட்டமாகும். ஏனெனில் இரண்டு சாயல்களுக்கும் வேறுபாடு இல்லை. இது இறுதிக்கால நம்பிக்கையாக இருந்தாலும் ஓரளவு நிகழ்கால உண்மையுமாகும். ஏனெனில் ''நாமனைவரும் மூடுதிரையில்லா முகத்தினராய் ஆண்டவரின் மாட்சிமையைக் கண்ணாடி போல் காட்டுகிறோம். ஆகவே மேன்மேலும் மாட்சிமை ஒளிபெற்று, அதன் சாயலாகவே உருமாற்றம் அடைகிறோம். இவையெல்லாம் ஆவியாகிய ஆண்டவரின் செயலே'' *(2 கொரி 3:18; பிலி 3:20-21)*.

இறைவனின் கடுஞ்சினம் (WRATH OF GOD)

இறைவனின் புனிதத்தையும் அன்பையும் அறியாமல் அவருடைய கடுஞ்சினத்தைப் பற்றிப் பேசுவது வெறுப்பைத் தருவதாக இருக்கும். ஆனால், இறைவனுடைய அருளைப் பெறுவதற்கு மனிதன் தனது பாவங்களுக்காக மனம் வருந்தவேண்டி இருப்பது போல, விசுவாசியும் இறைவனின் அன்பைச் சரியான முறையில் அணுக வேண்டுமாயின், இறைசினத்தின் மறைபொருளையும் அறிய வேண்டும். இறைசினத்தின் மறைபொருளை மனித அனுபவத்தின் புராண வெளிப்பாடாக குறைக்க விரும்புவது, பாவத்தின் விபரீதத்தை தவறாகப் புரிந்து கொள்வதாகும், இறையன்பின் துன்பியல் கூறை மறந்துவிடுவதாகும். புனிதத் தன்மைக்கும் பாவத்திற்கும் இடையில் அடிப்படையான ஒவ்வாமை உள்ளது. மறுப்புக்கிடமின்றி, மனித கோபமே, இறைசினமாகிய மறைபொருளின் உண்மையை வெளிப்படுத்த நமக்கு ஏதுவாகுகிறது; ஆனால், மறைபொருளின் நமது அனுபவமானது, முதன்மையாக மொழியுடன் தொடர்புடையதாகவும், வேறொரு தோற்றத்தைக் கொண்டதாகவும் உள்ளது.

1 மனிதனின் கோபம்

அ) கோபம் கண்டிக்கப்படுதல்:- காயினுடைய பொறாமை *(ஆதி 4:5)*, ஏசாயுவினுடைய சீற்றம் *(ஆதி 27:44 தொ)*, மற்றும் தங்களுடைய சகோதரி கற்பழிக்கப்பட்ட பின்னர் சிமேயோன் மற்றும் லேவி ஆகியோரால் எடுக்கப்பட்ட அளவு கடந்த பழி வாங்குதல் *(ஆதி 49:5 தொ; 34:7-26; யூதி 9:2)* போன்ற பிறருக்கு எதிரான சீற்றத்தின் வன்மையான எதிர்செயல்களை இறைவன் கண்டிக்கிறார். இத்தகைய கோபம் பொதுவாக கொலை செய்வதற்கு இட்டுச் செல்கிறது. தங்களுடைய காலத்தில் ஞான ஆசிரியர்கள், ''தங்களுடைய நாசித்துவாரங்களின் மூச்சையே அடக்க முடியாதவர்'' என்று, உருவகமாக விவரிக்கப்பட்ட முன் கோபிகளின் முட்டாள்தனத்தை *(பழ 29:11)* கண்டிக்கிறார்கள். அநீதிக்கு வழிகோலுகிற கோபத்தினையுடைய *(பழ 14:17; 29:22; யாக் 1:19-20)* மூர்க்கர்களிலிருந்து (குறுகிய சுவாசமுடைய மனிதன்) *(பழ 14:29; 15:18)* வேறுபடுத்தி தன்னடக்கமுள்ள ஞானிகளை (நீண்ட சுவாசமுடையோர்) அவர்கள் வியந்து பாராட்டுகின்றனர். இயேசு, கோபத்தை அதனுடைய சாதாரண விளைவுகளின் மட்டத்தில், கொலைக்குச் சமமாக்கும் அளவிற்குச் செல்கிறார் *(மத் 5:22)*. பவுல் கோபத்தினை பிறரன்புடன் ஒவ்வாததாக தீர்ப்பிட்டு *(1 கொரி 13:5)*, அதை முழுக்க முழுக்கத் தீமையெனக் கூறுகிறார் *(கொலே 3:8)* இறைவன் அருகாமையில் இருப்பதனால், கோபத்திற்கு வழிவகுப்பதை விட்டுவிட வேண்டும் *(1 திமோ 2:8; தீத் 1:7)*.

2. தூய கோபம்:- மனிதனுடைய கிளர்ச்சிக்குப் பதிலான கடவுளின் எதிர் செயலின் காணக் கூடிய வெளிப்பாட்டினை எடுத்துக் கூறும் தூய கோபத்தின் எடுத்துக்காட்டுகளை விவிலியம் நமக்குத் தருகிறது. இவ்

வாறு இஸ்ராயேலரின் விசுவாச மின்மைக் காக (யாத் 16:20), ஓரேபில் நடந்த பதிதத்திற் காக (யாத் 32:19.22), வழிபாட்டினை புறக்க ணித்ததற்காக (லேவி 10:16), கொள்ளை பொருளுக்கு எதிரான கட்டளையைக் கடைப்பிடிக்கத் தவறிய தற்காக (எண் 31: 14), அவர்களுக்கெதிராக மோசே சினந்தெழு கிறார். இறைவனே புகழ்கிற ஆர்வமுடைய பினகாசு (எண் 25:11), மற்றும், போலி இறைவாக்கினர்களைக் கொன்று (1 அர 18:40), அரசனுடைய ஐம்பது வீரர்கள் மீது வானின்று நெருப்பை வரவழைத்த (2 அர 1:10.12) எலியா ஆகியோர் இத்தகையவர் களே. இறுதியாக, ஏத்தென்ஸ் சிலைவழி பாட்டிற்கு எதிராகப் பவுல் கொண்ட சீற்றம் நம் கண்முன் வருகிறது (அ.ப. 17:16). இந்த இறைமனிதர்கள், சிலைகள் மற்றும் பாவத் திற்கு முன்னால், எரேமியாவைப் போன்று இறை சினத்தினால் நிரப்பப்பட்டிருந்தனர் (எரே 6:11; 15:17). இவ்வாறு அவர்கள் இயேசுவின் சினத்தை ஓரளவு முன்னடையா ளமாகக் குறித்துக் காட்டுகின்றனர் (மாற் 3:5).

ஆனால், இறைவன் மட்டுமே முரண்பா டின்றி கோபத்துடன் எதிர் செயலாற்ற முடி யும். பழைய ஏற்பாட்டில் கோபம் மற்றும் சினத்துடன் தொடர்புள்ளசொற்கள், மனித னுக்குச் சாற்றிக் கூறப்படுவதுபோல் ஐந்து மடங்கு இறைவனுக்கும் சாற்றிக் கூறப்படு கின்றன. ஒரு முறைக்கும் மேலாகக் கடும் சீற்றம் கொண்ட பவுல் (அ.ப. 15:39) பின்வ ரும் அறிவுரையை கொண்டுள்ளார்: ''நீங் களே பழிவாங்காதீர்கள், அதை இறைவ னின் சினத்திற்கு விட்டுவிடுங்கள். ஏனெ னில், பழிவாங்குவது என் உரிமை; நானே பதிலுக்கு பதில் செய்வேன் என்கிறார் ஆண் டவர் என்று எழுதியுள்ளது'' (உரோ 13:19). இவ்வாறு, சினமானது இறைவனுக்கே உரி யது; மனிதனுக்குரியதன்று.

II இறைவனின் சினம்

அ. பழைய ஏற்பாடு:

1. உருவங்களும் உண்மையும்:-

அ) இது உண்மையானது:- இறைவன் கோபத்தில் எதிர் செயலாற்றுகிறார். இறை வனின் சினத்தை வெளிப்படுத்துகின்ற எல் லாவிதமான இறைஏவுதல் பெற்ற உருவங்க ளையும் ஏசயா சேகரித்துத் தருகிறார். அவ ரது உதடுகள் கடும்சினத்தால் துடிக்கின்றன. அவர் நாக்கு பொசுக்கும் நெருப்பைப் போன்றது. அவர் மூச்சு, கழுத்தளவு பாயும் வெள்ளம் போல் வருகிறது. அவர், பொங்கி யெழும் சீற்றம் கொண்டு, விழுங்கும் நெருப்பு, பெருமழை, சுறாவளிக்காற்று, கல் மழை, இவற்றால் தம் தண்டிக்கும் ஆற் றலை வெளிப்படுத்துவார். நெருப்புக்குழி ஒன்று அரசனுக்கும் தயாராக்கப்பட்டுள்ளது; ஆழ்ந்து அகன்ற அக்குழியில் நெருப்பும் விறகும் ஏராளமாக நிறைந்துள்ளன; ஆண்ட வரின் மூச்சு கந்தக மழைப்போல் அவற்றின் மேல் நெருப்பு மூட்டும்'' (ஏச 30:27-33). நெருப்பு, சுவாசம், சூறாவளிக் காற்று, மற் றும் பெருவெள்ளம் போன்று, அவரது கோபம் தீ மூட்ட, அது பரவுகிறது (எச 20:33). போதையளிக்கும் மதுவைப்போன்று (எரே 25:15-38), இதுவும் கிண்ணத்திலிருந்து குடிக்கப்பட வேண்டும் (ஏச 51:17).

இச்சினமானது மரணத்தையும், அதனு டன் செல்கின்ற அனைத்தையும் தனது விளைவாக கொணர்கிறது. பஞ்சம், ஓட்டம் மற்றும் கொள்ளைநோய் ஆகியவற்றில் ஒன் றினை தாவீது தேர்ந்தெடுக்க வேண்டும் (2 சாமு 24:13 தொ). மற்ற சமயங்களில் இறை வனின் சினமானது நோய்கள் (எண் 17:11), தொழுநோய் (எண் 12:9-10), அல்லது மர ணம் (1 சாமு 6:19) ஆகியற்றைக் கொணர்கி றது. அவரது சினமானது, எல்லா கடினப் பட்ட பாவிகள் மேலும், முதலில் இஸ்ரா யேல் மீதும், விழுகிறது. ஏனெனில் இஸ்ரா யேல் எல்லா தூய்மையும் நிறைந்த இறைவ னுக்கு அருகிலுள்ளது (யாத் 19:32; உப 1:34; எண் 25:7-13). இச்சினம் சமுதாயத்தையும் (2 அர 23:26; எரே 21:25) அல்லது தனிநபர்க ளையும், இறுதியாக முழு நாடுகளையும் (1 சாமு 6:9) தாக்குகிறது; ஏனெனில், யாவேயே உலகம் முழுமைக்கும் இறைவ னாக உள்ளார் (எரே 10:10). இந்த உறுதிப்

பாட்டை வெளிப்படுத்த தவறுகின்ற நூலோ. ஏடோ விவிலியத்தில் இல்லை எனலாம்.

ஆ) வன்முறை உணர்வை உடையவராக விவரிக்கப்படும் இறைவனின் முன்னிலையில், அறிவு எதிர்த்தெழுந்து, அவருக்கு ஏற்றனவையல்ல என்று தீர்மானிக்கப்பட்ட உணர்வுகளினின்று இறைத்தன்மையை தூய்மைப்படுத்த முயல்கிறது. இவ்வாறு, விவிலியத்தின் ஒரு போக்கு சாத்தானை இறைசினத்தின் பிரதிநிதியாக ஆக்குதலாகும் (1 நாள் 21; 2 சாமு 24). மற்ற மதங்களில் இப்போக்கு மிகவும் பொதுவானதாக உள்ளது. எது எப்படியிருந்தாலும், இறைசினத்தினுடைய மறைபொருள் உண்மையைப் புராணக்கதையாக்கும் திசையிலோ அல்லது இறைசினத்தினை மற்றவர்களுக்குச் சாற்றிக் கூறியோ விளக்குவதற்கு விவிலியத்தின் சமய உணர்வானது ஒருபோதும் இடமளிப்பதில்லை.

வெளிப்பாடானது நமக்கு மனித உருவங்களில் வந்தாலும் அவை சாதாரண உருவங்களாக மட்டுமே இருந்துவிடுவதில்லை. உண்மையான உணர்ச்சிகளால் கிளறப்பட்டவராகத் தோன்றிய இறைவன், அவற்றிற்கு இடமளிக்கிறார்; அவற்றை, அடக்குவதில்லை (ஏச 9:11) அல்லது திசை திருப்புவதில்லை (எரே 4:8), ஆனால் தம்மிடம் திரும்ப வருகிறவர்களிடம் அவர் திரும்புவது போல் (2 நாள் 30:6; யாத் 34:6; ஏசா 63:17), தம்முடைய சினத்தையும் அவரால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும், கட்டுப்படுத்துகிறார் (ஒசே 14:5; எரே 18:20). இறைவனின் கோபம் மற்றும் இரக்கத்தின் உணர்வுகள் ஒன்றுக்கொன்று எதிராக முனைகின்றன (ஏச 54:8 தொ சங் 30:6). ஆனால், இரண்டும் தமக்கே உரிய வழிகளில், மனிதன்பால் இறைவன் கொண்டுள்ள ஆர்வமிக்க பற்றை வெளிப்படுத்துகின்றன. அவருடைய சினமானது நரகத்துடன் ஒப்பிடப்படவுள்ள இறுதிநாள்வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அவருடைய இரக்கமுள்ள அன்பு விண்ணகத்தில் என்றும் ஆட்சி புரிகின்றது. ஆனால் இப்போது பாவியை மனந்திரும்ப அழைக்கின்ற தண்டனைகளில் இங்கு செயல்புரிகிறது. இஸ்ராயேல் படிப்படியாகவும், பல்வேறு வழிகளிலும் வெளிக்கொணர்ந்த இறைசினத்தின் மறைபொருள் இதுவே.

2. சினமும் புனிதத் தன்மையும்:-

அ) மிகவும் புனிதமிக்க இறைவனை ஆராதித்தல்:- தொன்மையான வாசகங்களின் ஒரு தொகுதியானது இதன் அறிவுக்குப் பொருந்தாக பண்பை வெளிப்படுத்துகிறது. யாவேயின் புனிதத்துவத்தை நோக்கி கண்மூடித்தனமாக நெருங்குபவர்களை மரணம் அச்சுறுத்துகிறது (யாத் 19:9-25; 20:18-21; 33:20; நீதி 13:22). பேழையைத் தாங்கச் சென்றபோது ஊசா மின்னலால் தாக்கப்பட்டார் (2 சாமு 6:7). இதன் ஒளியிலேதான் சங்கீத ஆசிரியர்கள் துயரம், நோய், வயதுக்கு முற்பட்ட மரணம் மற்றும் பகைவர்களின் வெற்றி ஆகியவற்றை புரிந்து கொள்வர் (சங் 88:16; 90:7-10; 102:9-12). இத்தகைய நோக்கு, தீமையை அது இருக்கும் தன்மையிலேயே பார்ப்பதால் ஊடுருவிச் செல்லும் தன்மையுடையது; ஆனால் விளக்கப்படாத தீமையை இறைசினத்திற்குச் சாற்றிக் கூறுவது அறிவுக்கு ஒத்ததாகத் தெரியவில்லை. ஆயினும், இத்தகைய சினத்திற்குக் கீழே எல்லா நிகழ்வுகளிலும் உள்ள இறைபிரசன்னம் பற்றிய ஆழமான விசுவாசமும், இறைவனுடைய புனிதத்தன்மையின் முன்னிலையில் மரியாதைக்குரிய பய உணர்வும் அமைந்துள்ளன (ஏச 6:5).

ஆ) சினமும் பாவமும்:- பிற்கால வாசகங்களில், விசுவாசியினுடைய வாழ்வைப் பற்றியே வினா எழுப்பக் குறுக்கிடுகின்ற இறைவல்லமையின் மீதான அச்சமிக்க வழிபாட்டோடு விசுவாசி மனநிறைவு பெறுவதில்லை. மாறாக, இறை சினத்தின் பொருளைக் காண முயலுகிறான். இஸ்ராயேல் இதனை வஞ்சக வெறுப்பாகவோ தான் தோன்றித்தனமாகவோ எடுத்துக் கொள்ளவில்லை. இத்தகைய கருத்தானது ஒருவருடைய குற்றத்தையே மற்றொருவருக்கு மாற்றிவிடுவதாய் இருக்கும். மாறாக, இஸ்ரா

யேல் தன்னுடைய பாவத்தை ஏற்றுக்கொள்கிறது. முணுமுணுப்பவர்களையும் (எண் 11:1), கொடிய நாக்குடைய மிரியாமையும் (எண் 12:1-10) தண்டிக்கும் போது, இறைவனே அடிக்கடி குற்றம் புரிந்தவர்களைச் சுட்டிக்காட்டுகிறார். சில நேரங்களில் சமுதாயமே, இறை சினத்தைத் தன்மேல் வரவழைக்கிறது (யாத் 32). ஆக்கானைப் பொறுத்தவரை, குற்றவாளியைக் கண்டுபிடிக்க திருவுளச்சீட்டுகள் போடப்பட்டன (யோசு 7). மனிதனுடைய பாவம் இருந்ததால்தான் அங்கு இறைசினமும் இருந்தது. நீதிபதிகள் நூலின் தொகுப்பாளர் இஸ்ராயேலுடைய வரலாற்றினைப் பொது மக்களின் பதிதம், இறைசினம் மற்றும் இஸ்ராயேலின் மனமாற்றம் என்னும் மூன்று நிலைகளில் வடிவமைக்கும் போது, இத்தகைய உறுதிப்பாட்டினால் வழிநடத்தப்படுகிறார்.

இவ்வாறு, பாவியால் இறைவனுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நடவடிக்கைகளில் எண்பிக்கப்படுபவர் இறைவன் ஒருவரே (சங் 51:6). இறைசினத்தின் அடிப்படை பொருளானது, தூய அன்பின் பொறாமையே என்பதை பாவி கண்டறிவான். இறைவாக்கினர்கள், உடன்படிக்கையின் மீதான மக்களின் விசுவாசமற்ற நிலையின் மூலம், கடந்த காலத் தண்டனைகளை விளக்குகின்றனர் (ஒசே 5:10; ஏச 9:11; எச 5:13). அரிபுழு, உளுப்புப் பூச்சி, சிங்கம், வேடன், கரடி முதலான ஒசேயின் அச்சமூட்டும் உருவங்கள் (ஒசே 5:12,14; 7:12; 13:8) இறை அன்பு எவ்வளவு முக்கியத்துவமிக்கது என்பதைக்காட்ட முயல்கின்றன. இஸ்ராயேலின் தூயவர். தன்னுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களில் பாவத்தை அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணியை நாடுகள் தாண்டிச் செல்லுமாறு செய்கின்ற அவர்களுடைய அகந்தைக்கு ஏற்றவாறு, சினமானது நாடுகளின் மீது விழுகின்றது (ஏச 10:5-15; எச 25:15 தொ). இறைவனுடைய சினமானது இவ்வுலகின்மீது சுற்றி வட்டமிடுகிறதெனில், அதற்கு அது ஒரு பாவ உலகாக இருப்பதே காரணம். இந்த அச்சுறுத்தும் சினமானது பேரச்சத்தினால் மனிதனைத் தாக்கி அவன் தனது பாவத்தை அறிக்கையிட்டு, அருளை எதிர்நோக்கச் செய்கிறது (மீக் 7:9; சங் 90:7-8).

3. சினத்தின் காலம்:-

சமய உணர்வின் வளர்ச்சியானது இன்னும் நிறைவு பெறவில்லை. குருட்டு வழிபாட்டிலிருந்து, பாவத்தை வெளியிடும் நிலைக்குமாறி, பாவியைத் தாக்கி வீழ்த்துகின்ற புனிதத்தன்மையைப் பற்றிக் கொள்ளும் நிலையை அடைந்தபின்னர், பாவியை மீண்டும் வாழ்விற்கு கொணர்கின்ற அன்பினை ஏற்றுக் கொள்வதற்கு மனிதன் இன்னும் முன்னேற வேண்டும்.

அ) சினமும் அன்பும்:- தமது சினத்தை வெளிப்படுத்தும்போது, இறைவன் வலிமையற்ற மனிதனைப்போல் நடந்து கொள்வதில்லை. அவர் தமது உணர்ச்சிகளை அடக்கியாளுகிறார். சில நேரங்களில் சினமானது ''பற்களிடையே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்று கொண்டிருக்கும்போதே'' (எண் 11:33) எபிரேயர்களை உடனடியாகத் தாக்குகிறது. மிரியாமின் நிகழ்ச்சியிலும் இவ்வாறு நிகழ்கிறது (எண் 12:9). ஆனால், இது பொறுமையற்ற நிலையல்ல; ஏனெனில், இறைவன் ''சினங்கொள்ள தாமதிப்பவர்'' (யாத் 34:6; ஏச 48:9; சங் 103:8). அவருடைய இரக்கம் எப்போதும் மிக அருகாமையில் உள்ளது (எரே 3:12). வன்மையான உருவங்களின் இறைவாக்கினர் எனப்படும் ஒசேயா நூலிலும், ''நமது கோபத்தின் ஆத்திரத்தை நிறைவேற்ற மாட்டோம். மறுபடியும் எப்பிராயிமை அழிக்க மாட்டோம்; ஏனெனில் நாம் இறைவன், வெறும் மனிதனல்ல'' (ஒசே 11:9) என்று நாம் வாசிக்கிறோம். இறைவன் சினத்தினுடைய இறைவனாக இல்லாமல், இரக்கத்தின் இறைவனாக உள்ளார் என்பதை மனிதன் படிப்படியாக உணர்கிறான். நாடு கடத்தப்பட்ட அடையாள தண்டனைக்குப் பிறகு, இறைவன் இஸ்ராயேலிடம் கூறுவதாவது: ''குறுகிய காலந்தான் நாம் உன்னைக் கைவிட்டோம், ஆனால் மிகுந்த இரக்கத்தோடு உன்னைச் சேர்த்துக் கொள்வோம்.

பொங்கிய கோபத்தில் ஒரு நொடிப்பொழுது உன்னிடமிருந்து நம் முகத்தைத் திருப்பிக்கொண்டோம்; ஆயினும், முடிவில்லாத அன்போடு உன்மேல் இரக்கம் கொள்வோம்'' (ஏச 54:7-8). இரக்கத்தின் வெற்றியானது, மக்களுடைய பாவங்களுக்காக மரணத்திற்கு வீழ்த்தப்பட்ட விசுவாசமிக்க ஊழியனின் துன்பத்தைக் கருத்தில் கொள்கிறது; இது அநீதியையே நீதியாக மாற்றுகிறது (ஏச 53:4.8).

ஆ) சினத்திலிருந்து விடுவிக்கப்படுதல்:- இறைவன் தமது சினத்தினால் கொணர்ந்த தண்டனைகள் படிப்பிக்கும் நோக்கத்தை மனிதனுனக்கு வெளிப்படுத்துகிறார் (ஆமோ 4:6-11). ஏனெனில், இறைவன் கட்டுக்கடங்காத தூண்டுதலுக்கு உட்படாமல். தனக்குரிய காலத்திலேயே தண்டிக்கிறார். இறைசினமானது, இரக்கத்தின் பெருந்திட்டத்தின் ஒரு பகுதியாக தன்னையே வெளிப்படுத்துகிறது. எனவே, இது மனிதனை முடக்குகின்ற அழிவுக்குரிய பேயுருவாக இல்லாமல், இறைவனுடைய அன்பினுக்கு மனம் மாறுவதற்கான, அவனுக்கு விடப்பட்ட அழைப்பாக உள்ளது (எரே 4:4).

இறைவனுடைய நோக்கமானது இதயம் நிறைந்த அன்பு என்பதால், அவருடைய சினத்திலிருந்து விடுவிக்கப்படுமாறு இஸ்ராயேல் வேண்டலாம். அதனுடைய பலிகள், மந்திரத்தின் மூலம் இறை ஆற்றலை மயக்குகின்ற விருப்பத்தினின்று எழாமல், இறைநீதியின்மீது கொண்ட விசுவாசத்தினின்று எழுகின்றன. இது இறைவன் தமது சினத்தைத் திரும்ப பெற்றுக்கொள்வார் என்பதையே வேண்டுதல் செபங்களும் வெளிப்படுத்துகின்றன. மோசே விசுவாசமற்ற மக்களுக்காகவும் (யாத் 32:11.31-32; எண் 11:1-2; 14:1-12...), அல்லது தனிப்பட்ட பாவிக்காகவும் (எண் 12:13; உ.ப. 9:20) வேண்டுகிறார். இவ்வாறே, ஆமோஸ் இஸ்ராயேலுக்காகவும் (ஆமோ 7:25) எரேமியா யூதாவிற்காகவும் (எரே 14:7 தொ; 18:20), யோபு தனது நண்பர்களுக்காகவும் (யோபு 42:7-8) வேண்டுகிறனர். இதன் விளைவாக, இறைசினத்தின் விளைவுகள் குறைகின்றன (எண் 14; உப 9); அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றன (எண் 11; 2 சாமு 24). வேண்டுதல்களைச் சமர்ப்பிக்கும் விதம், இஸ்ராயேலுக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள உறவு முறியவில்லை எனக்காட்டுகின்றன (யாத் 32:12; எண் 14:15-16; சங் 74:2). இந்த உரையாடலில், வேண்டுபவர்கள் தங்களது வலிமையற்ற நிலைக்காக மன்றாடி (ஆமோ 7:2.5; சங் 79:8), இறைவன் எல்லாவற்றிற்கும் மேலாக இரக்கமும் பிரமாணிக்கமும் உள்ளவர் என்று அவருக்கே நினைவூட்டுகின்றனர் (எண் 14:18).

இ) சினமும் தண்டனையும்:- கடினமான பாவியை வீழ்த்துகின்ற சினத்தை அழுத்திக் கூறும் நிலையினின்று, பாவியினுடைய மனமாற்றத்திற்காகவும் திருந்துதலுக்காகவும் ஏற்ற தண்டனைகளை வலியுறுத்தும் நிலைக்கு முன்னேறும்போது, இறைவனது சினத்தைப்பற்றிய முந்தைய கருத்தினை இஸ்ராயேல் முழுமையாக விலக்கிவிடுவதில்லை. மாறாக, துல்லியமாக அதற்குரிய இடத்தை அளிக்கிறது. அதாவது, இறுதிநாளில் அது நிறைவேறும். ஆமோஸ் குறிப்பிட்ட இருளின் நாளானது (ஆமோ 5:18 தொ.), பாவங்கள் மன்னிக்கப்பட்ட பக்தியுள்ளோரைத் தவிர (சங் 30:6; 65:3-4; 103:3) யாருமே தப்பிக்க முடியாத, ''சினத்தின் நாளாக'' (செப் 1:5-2:3) மாறுகிறது. இந்நாள் புறவினத்தாருக்கும் (சங் 9:17-18; 56:8; 79:6 தொ), இஸ்ராயேல் சமுதாயத்தில் உள்ள பாவிகளுக்கும் (சங் 7:7; 11:5-6; 28:4; 94:2) சினத்தின் நாளாக உள்ளது.

இவ்வாறாக. இருவிதமான சினம் வேறுபடுத்தப்பட்டது. வரலாற்றின் காலப்போக்கில், இறைதண்டனைகள் நிரந்தரமாக தாக்கி வீழ்த்துகின்ற இறைசினமாக இல்லாமல், இறுதி சினத்தை முன்குறிக்கின்ற உருவங்களாக உள்ளன. அவற்றின் மூலம், காலத்தின் இறுதியில் விழவேண்டிய சினமானது, எல்லா புனிதமும் மிக்க இறைவனுடைய அன்பின் ஒரு கூறை வெளிப்படுத்தி நலந்த

ரும் பணியைச் செய்கின்றது. தம்முடைய பாவம் நிறைந்த மக்களோடு இறைவன் கொள்ளும் இந்த சந்திப்புகள், இந்த இறுதி சினத்தின் பொருளிலேயே புரிந்து கொள் ளப்பட வேண்டும். இப்போது பொறுமை யோடு வருகிறார். இறுதிச் சினத்தைச் செயல்படுத்துவதைத் தள்ளிவைக்கிறார் (2 மக் 6:12-17). அருளின் இறுதிக்காலத்திற்கு முன் சினத்தின் காலம் செல்லவேண்டும் என்பதை வெளிப்பாட்டு இலக்கிய ஆசிரியர் கள் தெளிவாகக் கண்டனர்: ''எம்மக்களே, உங்கள் அறைகளில் நுழைந்து கொள்ளுங் கள், உள்ளிருந்து கதவைச் சாத்திக் கொள் ளுங்கள்; ஆத்திரம் தணியும் வரையில் கொஞ்ச நேரம் நீங்கள் மறைந்திருங்கள்'' (ஏச 26:20; தானி 8:19; 11:36).

ஆ. புதிய ஏற்பாடு

முன்னோடியான திருமுழுக்கு யோவா னின் போதனையிலிருந்து (மத் 3:7) புதிய ஏற்பாட்டின் இறுதி பக்கங்கள்வரை (திரு வெளி 14:10) அருளின் நற்செய்தியானது தனது செய்தியின் அடிப்படை உறுப்பாக இறைவனின் சினத்தைக் கொண்டுள்ளது. அதனை விட்டுவிடுவதென்பது, கடவுளின் சினமென்பது ''நல்ல இறைவனுக்கு'' முற் றிலும் புறம்பானது என்று கூறிய மார்சியோ னின் பதிதக் கருத்தை மீண்டும் புதுப்பிப்ப தாக இருக்கும். ஆனால், கிறிஸ்துவின் வரு கையானது, பழைய ஏற்பாட்டின் அடிப்ப டைக் கருத்துக்களை நிறைவேற்றும் போது அவற்றை மாற்றியும் அமைக்கின்றது.

1. உருவங்களும் உண்மையும்:-

அ) இறை ''உணர்ச்சியும்'' சினத்தின் விளைவுகளும்:- பழைய ஏற்பாட்டு உருவங் கள் தொடர்ந்தாலும் பொருளில் மாற்றமுள் ளது. நெருப்பு (மத் 5:22; 1 கொரி 3:13.15), அடியோடழிக்கும் ஆவி (1 தெச 1:8; 2:8), மது, கிண்ணம், மதுப்பிழியும் ஆலை, சினத் தின் எக்காளங்கள் (திருவெளி 14:10.8; 16:1 தொ) ஆகிய அனைத்துமே உபயோகிக்கப் பட்டாலும், இறைவனுடைய எதிர்செய லின் உளநிலையை விளக்குவதற்குப் பதி லாக, அதன் விளைவுகளை விவரிக்கின்றன. நாம் இறுதிக்காலங்களில் நுழைந்துள் ளோம். திருமுழுக்கு யோவான் தண்டனை யின் நெருப்பைப் போதிக்கிறார் (மத் 3:12). திருமண விருந்து பற்றிய உவமையில் இயேசு அவருடைய சொற்களை எதிரொ லிக்கிறார் (மத் 22:7). இயேசுவினுடைய கருத்தின்படியும், பகைவனும் நம்பிக்கையற் றவனும் அழிக்கப்பட்டு (லூக் 19:27; 12:46) முடிவில்லா நெருப்பில் எறியப்படவேண் டும் (மத் 13:42; 25:41).

ஆ) இயேசுவின் சினம்:- புதிய ஏற்பாடு, இறைஏவுதல் பெற்ற வார்த்தைகளின் பேரச் சத்திற்கு அப்பாலும், புனிதம் நிறைந்த இறைவனுக்கும் அவருடைய பாவமிக்க மக் களுக்கும் இடையில் மூழ்கடிக்கப்பட்ட இறைவாக்கினர்களின் துன்பியலுக்கு அப்பா லும் செல்கிறது. இவை இரண்டிற்கும் மேலான பேரச்சமும் துன்பியலும் நிறைந்த தாக கடவுளாகிய மனிதனின் எதிர்செயல் உள்ளது. இயேசுவில் இறைவனின் சினம் வெளிப்படுத்தப்படுகிறது. இயேசுவின் நடத்தையானது, எப்போதுமே கிளர்ந்தெ ழாத 'ஸ்டோயிக்' கினுடையது போன்றதாக இல்லை (யோவா 11:33). ஏனெனில், அவர் ஆற்றலுடன் சாத்தானை ஆணையிடுகிறார் (மத் 4:10; 16:23) பேய்களை அச்சுறுத்துகிறார் (மாற் 1:25). பேய்த்தனமான சூழ்ச்சிகளையு டைய மனிதர்களுக்கு எதிராக (யோவா 8:44), குறிப்பாக பரிசேயர்களுக்கு எதிராகக் (மத் 12:34) கடும் சினம் கொள்கிறார். அவரு டைய கோபமானது இறைவாக்கினர்களைக் கொன்றவர்களுக்கு எதிராகவும் (23:33), போலி வேடதாரிகளுக்கு எதிராகவும் எழுகி றது (15:7). யாவேயை போன்று இயேசுவும், இறைவனை எதிர்க்க எழுகின்றவனை நோக்கி தமது சினத்தைத் திருப்புகின்றார்.

கீழ்படியாதவர்களையும் (மாற் 1:43; மத் 9:30), குறைவான விசுவாசத்திற்காக தமது சீடர்களையும் (மத் 17:17) இயேசு கடுமையா கக் கடிந்து கொள்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, இரக்கத்தின் தந்தையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊதாரி மைந்தனின் மூத்த சகோதரனைப்போன்று (லூக் 15:28), இரக்

கம் காட்டாதவர்களுக்கு எதிராக (மாற் 3:5) அவருடைய சினம் கிளர்ந்தெழுகிறது. இறுதியாக, விருந்தளித்த தலைவனைப் போன்றும் (லூக் 14:21). அல்லது இரக்கமற்ற ஊழியனின் தலைவனைப் போன்றும் (லூக் 18:34), நீதிபதியின் சினத்தை இயேசு காட்டுகின்றார். எனவே, அவர் மனம் வருந்தாத நகரங்களைக் கண்டிக்கிறார் (மத் 11:20-21), மற்றும் ஆலயத்திலிருந்து விற்பனையாளர்களை விரட்டுகிறார் (மத் 21:12-13), மற்றும் கனிகொடாத அத்திமரத்தை சபிக்கிறார் (மாற் 11:21). இறைவனுடைய சினத்தைப் போன்று, செம்மறியின் சினமும் வெறுமையான வார்த்தையல்ல (திருவெளி 6:16; எபி 10:31).

2. சினத்தின் காலம்:-

அ) நீதியும் சினமும்:- தம்முடைய மண்ணுலக வருகையின்மூலம் நமதாண்டவர் மீட்பின் வரலாற்றை இரண்டு கால கட்டங்களாகப் பிரித்தார். இந்தப் புதிய செய்திக்குப் பவுல் இறைவல்லுநர் ஆவார். விசுவாசிப் போர் அனைவரின் நலனுக்காக இறைவனின் நீதியையும் அவிசுவாசிக்கு இறைவனின் சினத்தையும் கிறிஸ்து வெளிப்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் வலியுறுத்தப்பட்ட புலன்சார்ந்த தண்டனைகளைப் போன்று, இச்சினமும் இறைவனின் இறுதி சினத்தை முன்நோக்குகிறது. திருமுழுக்கு யோவானின் நோக்கில் மெசியாவின் இவ்வுலக வருகை இறுதிக்கால வருகையோடு இணைகின்றது. அதனால் இயேசுவின் பணி மக்கள்மேல் வரும் இறுதித் தீர்ப்பாகிறது. நீதியும், இறைசினமும் இறைசெயலின் இரு பரிமாணங்களாக, முழுமையாக வெளிப்படுத்தப்படும் இடைக்காலத்தை இயேசு துவக்கினார் என்று பவுல் கற்பிக்கிறார் சமுதாய சக்தியை இறைவனுடைய கருவியாக, ''தீமை செய்பவனைப் பழிவாங்கக் கடவுளால் குறிக்கப்பட்ட ஏவலாளர்களாக'' (உரோ 13:4) பயன்படுத்துவதுபோன்ற சில பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களைப் பவுல் கொண்டிருக்கிறார். ஆனால் பவுலின் முக்கிய பணியானது இறைவனின் முன்னால் மனிதனுடைய புதிய நிலையை விவரிப்பதாகும்.

ஆ) சினத்திலிருந்து இரக்கத்திற்கு:- தொடக்கத்திலிருந்து மனிதன் பாவியாவான் (உரோ 1:18-32), மரணத்திற்கு உரியவன் (3:20). அவர் உண்மையில், அழிவின் விளிம்பில் உள்ள ''சினத்தின் கலன்'' (9:22; எபே 2:3), இறைசினத்தின் குறியாக உள்ளான். ''கடவுளின் சினமே விசுவாசம் கொள்ளாதவன்மேல் வந்து தங்கும்'' (யோவா 3:36) என்று எழுதுவதன் மூலம் யோவான் இதனை மாற்றியமைக்கிறார். மனிதன் பிறவியிலேயே பாவியாக இருப்பதால், இறை அமைப்புகளில் மிகமிக புனிதமானதையும் அவன் தீமைக்கு மாற்ற முடியம். எனவே, புனித சட்டமானது ''சினத்தை கொணர்கிறது'' (உரோ 4:15). ஆனால் இறைவனுடைய திட்டமானது இரக்கமிக்கதாய் இருப்பதனால், சினத்தின் கலன்கள், மனமாற்றத்தை தேர்ந்தெடுத்து, மகிமைக்கென அவர் முன்னரே தயாரித்து வைத்த ''இரக்கத்தின் கலன்களாக'' மாறலாம் (9:23). புறவினத்தாரோ யூதரோ யாரும் இதைச் செய்யலாம் ''ஏனெனில், அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காக இறைவன், அனைவரும் கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கச் செய்தார்'' (11:32). பழைய ஏற்பாட்டில் உள்ளது போன்றே, இறைவன் தமது சினத்திற்குக் கட்டுக்கடங்காத சுதந்திரம் அளிப்பதில்லை. பாவியை பொறுத்துக் கொள்வதால் தமது ஆற்றலையும், பாவியை மனமாற்றத்திற்கு அழைப்பதால் தமது நன்மைதனத்தையும் வெளிப்படுத்துகிறார்.

3. சினத்தினின்று விடுவிக்கப்படுதல்:-

அ) இயேசுவும் இறைவனின் சினமும்:- கிறிஸ்துவின் வருகையினால் ஏற்பட்ட அடிப்படை மாற்றமானது, ''வரவிருக்கும் சினத்தினின்று'' (மத் 3:7) நம்மை விடுவிப்பது இதுமுதல் சட்டமாக இல்லாமல், இயேசுவே ஆவார் (1 தெச 1:10) என்பதாகும். இறைவன் இனி ஒருபோதும், நம்மை சினத்திற்கு ஆளாக்காமல் மீட்பிற்கு உட்படுத்தினார்'' (1 தெச 5:9). ''இறைவனுக்கு ஏற்பு

A

டையவர்களாகி, இறுதித்தண்டனைக்குத் தப்பி மீட்பு பெறுவோம்'' என அவர் நமக்கு உறுதியளிக்கிறார் (உரோ 5:9). மேலும், நம்முடைய விசுவாசமே நம்மை ''மீட்பு பெறுபவர்களுடன்'' சேர்க்கிறது (1 கொரி 1:18). அவர் மூலமாக நாம் இறைவனுடைய நீதியாக உருவாவதற்காக (2 கொரி 1:18) இயேசு, பாவமாக உருவாகி, ''உலகின் பாவத்தை போக்கிவிட்டார்'' (யோவா 1:29). நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்காக, சிலுவையில் இறப்பதன்மூலம், அவர் சபிக்கப் பட்டவரானார் (கலா 3:13). அன்பு மற்றும் புனிதத்தின் வலிமை இயேசுவில் ஒன்று சேர்ந்ததன் மூலம், பாவம் ஆகியவர்மேல் சினம் விழும்போது, அன்பே வெற்றிக் கொள்கிறது. சினத்திற்கு பின்னால் அன்பினைத்தேடி அலைகின்ற மனிதனின் நீண்ட பயணமானது, இயேசுவின் மரணத்தில் நிறைவுபெற்று ஒன்று சேர்கிறது. அவரில் விசுவாசங்கொள்வோர் அனைவரும், எப்போதும் சினத்தினின்று விடுவிக்கப்படுவதற்காக, இறுதி சினத்தை எதிர்நோக்குகின்ற தருணமாக இது உள்ளது.

ஆ) சினத்தின் நாளினை எதிர்பார்த்திருத்தல்:- இறைவனின் சினத்தினின்று முழுமையாக விடுவிக்கப்பட்ட பின்னர், திருச்சபையானது சாத்தானுடன் போர் புரியும் இடமாகத் தொடர்ந்து உள்ளது. ஏனெனில், ''அலகை கடுங்கோபத்துடன் நம்மிடையே வந்துள்ளது'' (திருவெளி 12:12). அவன் பெண்ணுடனும், அவளுடைய சந்ததியுடனும் போரிட்டு, இறைசினத்தினுடைய கொடிய மதுவினால் நாடுகளை மயக்க வந்துள்ளான் (14:8 தொ). ஆனால், திருச்சபையோ இறைசினத்தின் மீதான இந்த நையாண்டியின் மீது எப்பயமும் கொள்ளவில்லை; புதிய பாபிலோன் வீழ்ச்சியுறும் என்பதில் அது உறுதியாக உள்ளது. ஏனெனில், ''எல்லாம் வல்ல இறைவனின் கடுஞ்சினம் என்னும் ஆலையின் மீது நடக்கின்ற'' (19:15) அரசர்க்கெல்லாம் அரசரானவர் வருகிறார். இவ்வாறு, இறுதி நாளில், இறைவனுடைய வெற்றியைப் பற்றி அது உறுதி கொண்டுள்ளது.

இறைவனின் செம்மறி (LAMB OF GOD)

புதிய ஏற்பாட்டின் பல நூல்களில் (யோவான், அப்போஸ்தலர் பணி, 1 பேதுரு. மற்றும் குறிப்பாக திருவெளிப் பாடு), கிறிஸ்து செம்மறியாகக் காட்டப்படுகிறார்; இக்கருத்தானது பழைய ஏற்பாட்டிலிருந்து, இரு வேறுபட்டநோக்குகளிலிருந்து வளர்ச்சியுறுகிறது.

1. இறைவனின் ஊழியன்:- தனது விரோதிகளால் துன்புறத்தப்பட்ட நிலையில் இறைவாக்கினர் எரேமியா தன்னை ''வெட்டுவதற்குக் கூட்டிக் கொண்டு போகப்படும் செம்மறிக்கு'' ஒப்பிடுகின்றார் (எரே 11:19). இதன் விளைவாக, ''அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும், உரோமம் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறியாடு போலும்'' (ஏச 53:7) தோன்றுகிற, மரிக்கும்போதும் மக்களின் பாவங்களுக்காக மன்றாடும் இறைவனின் ஊழியனுக்கு இந்த உருவகம் சாற்றிக் கூறப்படுகின்றது. ஊழியனுடைய தாழ்ச்சியினையும், வருவதை ஏற்றுக் கொள்ளும் பொறுமையினையும் வலியுறுத்தும் இப்பகுதியானது, எத்தியோப்பிய அரசியின் அண்ணகனுக்குப் பிலிப்பு விளக்குவதுபோல, கிறிஸ்துவின் இறுதி நிலையினைப்பற்றி முழுமையாக அறிவிக்கின்றது (அ.ப. 8:31.35) தலைமைச்சங்கத்தின்முன் இயேசு பேசாதிருந்ததையும் (மத் 26:63), பிலாத்துவிற்குப் பதில் கூறாமல் நின்றதையும் (யோவா 19:9), நற்செய்தியாளர்கள் குறிப்பிடும்போது இந்நிகழ்ச்சியினையே பின்நோக்குகின்றனர். நான்காவது நற்செய்தியின்படி, இயேசுவை, ''உலகின் பாவங்களைப் போக்குகிற இறைவனின் செம்மறி'' (யோவா 1:29; ஏச 53:7.12; எபி 9:28) என்று திருமுழுக்கு யோவான் சுட்டிக்காட்டும்போது, இதனையே குறிப்பிடுவதாகக் கருதலாம்.

2. பாஸ்காச் செம்மறி:- அடிமைகளாயிருந்த தமது மக்களை எகிப்தியரிடமிருந்து விடுவிக்க கடவுள் தீர்மானித்தவுடன், 'மறுவற்றதும், ஆண் பாலானதும், ஒரு வயதுடையதுமான' (யாத் 12:5) செம்மறியை நெருப்

பில் சுட்டு, இரவில் அதனை உண்டு, அதனுடைய இரத்தத்தினால் தங்களது வீட்டு வாசல் முகப்பில் முத்திரையிடுமாறு, ஒவ்வொரு எபிரேய குடும்பத்திற்கும் இறைவன் கட்டளையிடுகின்றார். இந்த முத்திரையின் மூலம், எல்லா எகிப்திய தலைப்பேறுகளையும் அழிக்க வரும் இறைவனின் தூதரிடமிருந்து, அவர்கள் மட்டும் காப்பாற்றப்படுகிறார்கள். பழைய கருத்தை மேலும் வளப்படுத்தி, யூத மரபானது பிற்காலத்தில் செம்மறியின் இரத்தத்திற்கு மீட்பின் பொருளை அளிக்கின்றது: ''விருத்தசேதன உடன்படிக்கையின் இரத்தத்தினாலும், பாஸ்கா இரத்தத்தினாலும். நாம் உங்களை எகிப்தினின்று விடுவித்தோம்''. பாஸ்கா செம்மறியின் இரத்தத்தினாலேயே எகிப்திய அடிமைத்தனையினின்று எபிரேயர் விடுவிக்கப்பட்டு, புனிதப்படுத்தப்பட்ட மக்களாகவும் குருக்களின் அரசாகவும் ஆனார்கள் (யாத் 19:6), உடன்படிக்கையால் இறைவனோடு பிணைக்கப்பட்ட மோசேயின் சட்டத்தின்படி ஆளப்பட்டனர்.

கிறிஸ்துவ மரபானது கிறிஸ்துவில் உண்மையான பாஸ்காச் செம்மறியைக் காண்கிறது (பாஸ்கா திருப்பலியின் தொடக்கவுரை). பேதுருவின் முதல் திருமுகத்தின் அடிப்படையாகவும் யோவானின் நூல்கள் மற்றும் எபிரேயருக்கான திருமுகத்தில் எதிரொலிப்பதாகவும் உள்ள ஞானஸ்நான உபதேசத்தில், அவரது மீட்புப்பணி முழுமையாக விவரிக்கப்படுகின்றது. இயேசுவே, தமது இரத்தத்தினை விலையாகக்கொடுத்து மனிதரை மீட்கின்ற (1 பேதுரு 1:18 தொ; திருவெளி 5:9 தொ; எபி 9:12-15), மறுவற்ற (யாத் 12:5), அதாவது பாவமற்ற (1 பேதுரு 1:19; யோவா 1:29; திருவெளி 5:6) செம்மறியாவார். சிலைவழிபாட்டிலிருந்து தோன்றிய (1 பேதுரு 1:14.18; 4:2 தொ) ஒழுக்கக் கேட்டிற்கு அளிக்கப்பட்ட தீய உலகிலிருந்து, மண்ணுலகினின்று அவர்களை, அவர் இவ்வாறு மீட்டார் (திருவெளி 14:3). அதனால் அவர்கள் இப்போதுமுதல் பாவத்தினை ஒதுக்கி (1 பேதுரு 1:15 தொ; யோவா 1:29; 1 யோவ 3:5-9), அரச குருத்துவத்திருக் கூட்டமும், உண்மையான பரிசுத்த குலமும் ஆகின்றனர் (1 பேதுரு 2:9; திருவெளி 5:9 தொ; யாத் 19:6), பழி கூற முடியாத வாழ்க்கையின் புனித வழிபாட்டை இறைவனுக்கு அளிக்கக்கூடியவர்களுமாகிறார்கள் (1 பேதுரு 2:5; எபி 9:14). இறையரசின் ஒளிக்காக அவர்கள் புறஇனத்தாரின் இருளை விட்டு விட்டனர் (1 பேதுரு 2:9); இதுவே அவர்களது புனித யாத்திரையாகும். செம்மறியின் இரத்தத்தினால் (திருவெளி 12:11) பாரவோனை மாதிரியாகக் கொண்ட சாத்தானை வெற்றி கொண்டதனால் அவர்களுடைய மீட்பினைக் கொண்டாடும் ''மோசேயின் மற்றும் செம்மறியின் நன்றிப்பாடலை'' (திருவெளி 15:3; 7:9 தொ; 14-17; யாத் 15) அவர்கள் இசைத்துப் பாடலாம்.

கிறிஸ்துவில் உண்மையான பாஸ்கா செம்மறியைக் காணும் இப்பாரம்பரியம் கிறிஸ்தவத்தின் துவக்கத்திற்கே செல்கின்றது. நமது பாஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டதால், ''நேர்மை, உண்மை'' என்னும் புளியாத அப்பத்தையே உண்ணுமாறு பவுல், கொரிந்து நகர விசுவாசிகளுக்கு அறவுரை கூறுகிறார் (1 கொரி 5:7). செம்மறியாகிய கிறிஸ்துவைப்பற்றிப் புதிய படிப்பினை எதையும் இங்கு அவர் பரிந்துரைக்கவில்லை. கி.பி.55-57-இல் இத்திருமுகத்தை எழுதுவதற்கு முன்னர் நிலவிய, கிறிஸ்தவ பாஸ்காவின் சமயச்சடங்குப் பாரம்பரியத்தையே அவர் குறிப்பிடுகின்றார். யோவானின் காலக்கணிப்பினை ஏற்கும் பட்சத்தில், கிறிஸ்துவின் மரணம் பற்றிய நிகழ்ச்சியே இம்மரபிற்கான அடிப்படையினை அளித்திருக்கக் கூடும். புளியாத அப்பவிழாவிற்கு முந்திய இரவில் (யோவா 18:29; 19:14.31), இவ்வாறு சட்ட முறைமைகளின்படி பாஸ்கா நாளில், கோவிலில் செம்மறியாடுகள் பலியிடப்படும் அதே பிற்பகல் வேளையில் (யோவா 19:33). இயேசு கொலை செய்யப்பட்டார். அவரது மரணத்திற்குப் பின்னர், மற்ற குற்றவாளிகளுக்கு செய்தது போல, அவருடைய கால்களை அவர்கள் முறிக்கவில்லை (யோவா 19:33). பாஸ்கா செம்மறி பற்றிய சடங்குமுறைக் குறிப்பு

நிறைவேறுவதை நற்செய்தியாளர் இந்நிகழ்ச்சியில் காண்கிறார் (யோவா 19:36; யாத் 12:46).

3. விண்ணகச் செம்மறி:- பாஸ்கா செம்மறியாகிய கிறிஸ்து பற்றிய கருத்தினை முழுமையாகப் போற்றிக் காக்கும் அதே வேளையில், பலியிடப்பட்ட செம்மறியின் வலுக்குறைவானநிலைக்கும் விண்ணக மாட்சிமைக்கு அவர் உயர்த்தப்படுதல் அளிக்கின்ற வல்லமைக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாட்டினை திருவெளிப்பாடு ஏற்படுத்துகிறது (திருவெளி 5:9 தொ). மீட்பின் பலியினால் செம்மறியாக உள்ள கிறிஸ்து, அதே நேரத்தில், தீமையின் வல்லமையின் கீழ் அடிமைகளாக இருந்த இறைமக்களை விடுவித்த வெற்றியின் மூலம் ஒரு சிங்கமாகவும் உள்ளார் (5:5 தொ 12:11). இறைவனின் அரியணையினை அனுபவித்துக் கொண்டு (22:1.3) விண்ணக உயிரினங்களின் ஆராதனையினை பெறுகின்ற அவர் (5:8.13; 7:10), இறைவல்லமையினை அணிந்தவராக உள்ளார். அவரே கொடியவர்களுக்கு எதிராக இறைவனுடைய தீர்ப்புக்களைச் செயல்படுத்துகிறார் (6:1). அவருடைய சினம் அவர்களைப் பயத்தில் ஆழ்த்துகின்றது (6:16). ஒன்றுபட்ட தீயவர்களின் வல்லமைக்கு எதிராக அவர் நடத்திச் செல்கின்ற இறுதிக்கால போரின் வெற்றியானது, 'அரசருக்கெல்லாம் ஆண்டவர்' என்று அவரைப் புனிதப்படுத்தும் (17:14; 19:16...). திருச்சபையை அடையாளமாகக் குறிக்கும் விண்ணக எருசலேமுடன் மணவிழா நிறைவேற்றப்படும் போது, அவருடைய மூலகருணை நிலையினை அவர் திரும்பப் பெறுவார் (19:7.9; 21:9) பின்னர், விண்ணக ஆசீரின் உயிருள்ள நீரின் ஊற்றுகளுக்கு நடத்திச் செல்வதற்கென, செம்மறியானவர் ஒரு மேய்ப்பனாகத் தோன்றுவார் (7:17; 14:4).

இறைவனின் செயல்கள் (WORKS OF GOD)

''செயல்கள்'' என்னும் சொல் எண்ணற்ற அர்த்தங்களைக் கொண்டிருக்கலாம். அசைவு, உழைப்பு, உண்டாக்கப்பட்ட பல பொருட்கள் மற்றும் குறிப்பாக ஊனுடலின் பணி போன்ற பலவற்றை இது குறிப்பிடலாம். இறைவனுக்குக் குறிப்பிடும்போது, அவரது வெளிச்செயல்களின் அனைத்தையும் இது குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், அதனை நிறைவேற்றிய பணியாளரைக் குறிப்பிடுவதால் மட்டுமே, அச்செயலினைப் புரிந்து கொள்ளமுடியும். ஒவ்வொரு மனித செயலின் பின்னும், இறைவனின் இணையற்ற செயலான அவருடைய சொந்த மகனைக் கண்டுபிடிக்கும் முயற்சியுள்ளது. அம்மகனோடு செயல் தொடர்பு கொள்கிறது; தனக்கே உரிய வழியில் அவரை எடுத்தியம்புகிறது.

I பழைய ஏற்பாடு

1.இறைவனின் செயல்:- முதலில், இறைவனின் செயல்கள் வரலாற்றிற்குள் உட்படாதவையாக, ஆனால், தனது உண்மையில் வரலாற்றைக் கொண்டதாக உள்ளன என்பது முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். இறைச்செயல், படைப்பு, மீட்பு ஆகிய இரு கூறுகளைக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் வெளிப்பாடு ஒரு குறிப்பிட்ட திசையிலேயே செல்கிறது: இஸ்ராயேல் கடவுளின் படைப்புச் செயலில் ஆர்வம் கொள்வதற்கு முன்பாக, அவர் தனது வரலாற்றில் செயல்படுவதை உணர்ந்து கொள்கிறது.

அ) வரலாற்றில் இறைவனின் செயல்:- இறைச்செயலானது 'ஒப்பிடமுடியாத செயல்கள் மற்றும் வல்லமைகளிலும்'' (உப. 3:24), இஸ்ராயேலின் மீட்பு, மக்கள் பாலைவனத்தில் கண்ட யாவேயின் வியத்தகு நிகழ்ச்சிகள் (சங் 95:9), வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறுதல் (உப. 11:2-7; யோசு 24:31) ஆகியவற்றிலும் தம்மையே வெளிக்காட்டத் தொடங்குகின்றது. இந்தக் கடந்தகாலம் பற்றிய சிந்தனைகள் ஆர்வத்தைத் தூண்டுகின்றன: ''இறைவனின் செயல்களை வந்து பாருங்கள்'' (சங் 66:3-6). கடந்த காலத்தை நினைவுகூர்தல் மட்டும் போதாது (சங் 77:12); இடைவிடாமல் அனைத்தையும் அமைப்பவரின் (ஏச 22:11)

இன்றைய செயல்களும் கவனிக்கப்பட வேண்டும் (ஏச 5:12; சங் 28:5). பாபிலோனுக்குக் கடத்தப்படுவேதோ (அப 1:5) அல்லது அடிமைத்தளையினின்று விடுதலையோ (ஏச 45:11), எதுவாயினும் அவரது நாளில் அவரது செயல் வருவதை முன்குறித்துக் காட்டுவது அவசியம் (ஏச 28;21). நாடுகளையோ (ஏரே 51:10) அல்லது மீட்பாளர் சைரசையோ (ஏசா 45:1-6) இடையாளராகக் கொண்டு செயலாற்றி இறைவன் தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாகிய இஸ்ராயேலருக்காகத் (ஏச 43:1; 44:2) தனது மீட்புப் பணியினை நிறைவேற்றுவார் (ஏச 41:4).

இறைச்செயலானது அனைத்திற்கும் மேலாக, குழுவாகக் கருதப்படும் இஸ்ராயேலின்மீது தமது கவனத்தைத் திருப்புகின்றது. இதனால் அது த~ரிப்பட்டவர்கள்மீது அக்கறை கொள்ளவில்லை என்று கூறமுடியாது. இறைவனால் தமது மக்களுக்கெனத் தேர்ந்து கொள்ளப்பட்ட மோசே மற்றும் ஆரோன் (1 சாமு 12:6), தாவீது மற்றும் இறைவாக்கினர்கள் ஆகியோர்மேல் மட்டுமின்றி, தொபியா நூல் விரிவாகக் கூறுவது போல ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர் மேலும் அவர்களின் அன்றாட வாழ்விலும் கூட இறைச்செயல் அக்கறை கொள்கிறது. முழுமையான (உப 32:4), பிரமாணிக்கமும் உண்மை உள்ளதுமான (சங் 33:4), ஆழ்ந்த பண்புள்ள (சங் 92:5-6), நன்மையும் அன்பும் நிறைந்த (சங் 146:9-17; 138:8) அவரது செயல்கள் இத்தகையவையே. இவை மனிதன் இதயத்தில் பொங்கிவழியும் மகிழ்ச்சியை எழச்செய்யவேண்டும்.

ஆ) படைப்பில் இறைவனின் செயல்:- தொடக்கத்திலிருந்தே இஸ்ராயேலானது, வானமும் பூமியும் படைத்தவரை (ஆதி 14:19), பல்வேறு விண்மீன்களையும், மலைகளையும் காற்றையும் உருவாக்கியவரை (ஆமோ 5:8; 4:13) வியந்து போற்றியது. நாடுகடத்தப்படுதலோடு படைப்புச் செயலானது வரலாற்று ஆண்டவரின்மீது நம்பிக்கை கொள்ளத் தூண்டுதலுக்குக் காரணமாகிறது. இத்தகைய நிலையான சிறப்புமிக்க, ஆற்றல்மிக்க செயலானது ஆண்டவரின் ஆற்றல் மற்றும் பிரமாணிக்கத்திற்கு உறுதியான உத்தரவாதச் சான்றாக இருப்பது உண்மையில்லையா (ஏச 40;12 தொ)? வானங்கள் (சங் 19:2), பூமி (சங் 102:26), அனைத்துப் படைப்பிற்கும் மேலாக அமைக்கப்பட்ட மனிதன் (சங் 8:4-7) போன்ற அவரது கரங்களின் அனைத்துச் செயல்களுக்காகவும் அவர் புகழப்படுகின்றார். ஏற்றுக்கொள்ளப்படுகிற வியக்கத்தக்க அழகுமிக்க (யோபு 36:24 தொ) அவரது செயல்களுக்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் (சங் 145:10). தான் இறைவனின் படைப்பு என்பதை அறிந்தவனாய், இறைவன் தனது படைப்பினை வெறுக்க மாட்டார் (யோபு 10;3) என்பதால் மனிதன் இத்தகைய உறுதிப்படுத்தப்பட்ட விசுவாசத்தினின்று உண்மையான துணிவு கொள்ள வேண்டும்; அதேசமயம் மனிதனும் அதே போன்ற அளவற்ற தாழ்ச்சியினைக் கொண்டிருக்க வேண்டும்; ஏனெனில், ஒரு படைப்புப் பொருள் படைத்தவரை நோக்கி 'நான் உன்னுடைய செயலல்ல' என்று கூறமுடியுமா? (ஏச 29:16; 45:9; ஞான 12; உரோ 9:20-21).

இ) ஞானம், இறை கைவினைஞர்:- வரலாற்று இறைவனிலிருந்து படைத்த இறைவன் வரையிலான இயக்கமானது, இறைவனில் படைப்பாற்றல் மிக்க வார்த்தையான உலகின் வளர்ச்சியை இயக்குகின்ற ஆவியைக் காணும் இறுதி முயற்சியில் முடிவடைகின்றது, படைப்பிலும் (சீரா 42:15-43:33), காலத்திலும் (44:1-50:29) இறைசெயலினைப்பற்றி சீராக் நூல் தியானிக்கிறது. ஞானநூல் வரலாற்றின் இறையியலைக் காண முயல்கிறது (ஞான 10-19). இவ்வுலகில் இறைஞானம் செயல்படுவதை இரண்டுமே அடையாளம் காண்கின்றன. படைப்பின் சிற்பியான (பழ 8:3) இந்த அரச ஞானமானது, இறைவனது திட்டத்தின் தொடக்கத்திலேயே, அவரது தொல் பழங் காலத்துச் செயல்களுக்குமுன் அவரால் உண்டாக்கப்பட்டது. ஞானம் குறிப்பாக இஸ்ராயேலில் வாழ்வதையே தேர்ந்தெடுத்தது

(சீரா 24:3-8). ஆனால், அனைத்துப் பொருட்களின் சிற்பியாக இருந்தமையால் (ஞான 7:21), அனைத்திற்கும் முன்னரே இருந்தது (சீரா 24:9). தனது செயல்களின் மூலம், மனிதர்கள், இயற்கை மற்றும் வரலாற்றின் ஆண்டவரை அறிந்து கொள்ள இது உதவுகிறது.

2. மனிதனின் செயல்கள்:-
தன்னைப் படைத்த கடவுளைப் போன்று, மனிதனும் இடைவிடாமல் வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

அ) மனித செயலின் தொடக்கம்:- மனிதனைச் செயல்படுத்துவது அவனது உள்ளார்ந்த தேவை மட்டுமல்ல, இறைவனின் சித்தமும் ஆகும். இன்பவனக் காலத்திலிருந்தே இறைவனின் திட்டத்துடன் ஒத்திருக்கும் கட்டளையின் வடிவத்தில் இந்நிலை அவனுக்கு வெளிப்படுத்தப்படுகிறது (ஆதி 2:15-16). இவ்வாறு இறைச்செயலில் இருந்து பொங்கிவருவதாக மனித செயல்கள் தோன்றுகின்றன. ஆயினும் அவை அவனிடமிருந்து தனது நிலையிலான சுயமுயற்சியையும் ஈடுபாட்டையும் தேர்ந்தெடுத்தலையும் கோருகின்றனர். மனித சுதந்திரத்திற்கு இறைவனின் சித்தம், அவனுக்குப் புறம்பான சட்டவடிவில் செயலளவில் அளிக்கப்படுகிறது. அச்சட்டத்திற்கு அவன் பணிய வேண்டும்.

ஆ) மனிதனின் முக்கிய செயல்கள்:- சட்டத்தின் கட்டளைகள் உருவாவதற்கு முன்னரே உழைப்பு மற்றும் பலுகிப்பெருகுதல் என்னும் இரு முக்கியப் பணிகள் மனிதனால் நிறைவேற்றப்பட வேண்டியவை என, படைப்புப் பற்றிய விவரிப்பு வெளிப்படுத்துகின்றது.

மனிதன் பலுகிப்பெருகும் பணியைக் கொண்டுள்ளான். உலகினை மக்கள் இனத்தினால் நிரப்ப (ஆதி 1:28) இறைவனின் சாயலை வெளிப்படுத்துகின்ற தனது சாயலில் (5:1 தொ) பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும். இத்தகைய கடமையின் விளைவாகவே, குலமுதியவர்களின்இனம் இஸ்ராயேல் மக்களை ஈன்றெடுக்கிறது. இம்மக்கள் உலகிலுள்ள எல்லாக்குடும்பங்களுக்கும் இணைப்பாளர்களாக இருக்கின்றனர். இம்மக்களிலிருந்தே கிறிஸ்து பிறக்கிறார். இவ்வாறு படைப்பு மற்றும் மீட்பின் வரலாறு என்னும் இருவித காரணங்களினால், ஊனுடலின் செயலானது பொருள் கொள்கிறது. மனிதனுடைய பாவத்தினால் நிலம் சபிக்கப்பட்டிருப்பினும் (ஆதி 3:17 தொ), மனிதன் உலகில் ஆதிக்கம் செலுத்தி அதனைக் கீழ்படுத்த உழைக்க வேண்டும் (1:28). உழைப்பு மனிதனை வாழ அனுமதித்தாலும் (3:19), வழிபாட்டில்தான் உழைப்பு முழுமையான சமயச் சிறப்பினை அடைகின்றது. இறைவனின் மகிமைக்காகக் கட்டப்பட்ட தேவாலயமே இஸ்ராயேலில் தலைசிறந்த படைப்பாகும்.

பலுகச் செய்வதைத் தீட்டுபடுத்துவதாலோ (உரோ 1:26-27), தமது கைகளால் செய்யப்பட்ட பேசமுடியாத சிலைகளை வணங்குவதாலோ (1 கொரி 12:2), மனிதன் தனது இருமுக்கிய பணிகளின் நோக்கத்திலிருந்து தவறிப்போகக்கூடிய அபாயத்திலிருப்பது உண்மையே. மனிதச் செயல்கள் இத்தகைய இழி நிலை அடைவதைத் தடுக்க சட்டத்தின் கட்டளைகள் விரும்புகின்றன. சட்டமும் கட்டளையிடும் பல்வேறு மற்ற செயல்கள் உள்ளன. இவற்றிலிருந்து யூதமதம் பிச்சையிடுதல், நோயளிகளைச் சந்தித்தல், இறந்தவரை அடக்கம் செய்தல் போன்ற அயலாரைப் பற்றிய செயல்களைப் பொறுக்கி எடுத்துப் போதிக்கிறது. இவை யாவும் முதன்மையான நற்செயல்களாகும்.

இ. செயல்களின் நோக்கம்:- சட்டத்தினால் குறிப்பிடப்பட்ட செயல்கள் அனைத்தும் இறையரசிற்குக் கொண்டு செல்பவை என்னும் உண்மையை யூதமதம் ஒருபோதும் மறந்ததேயில்லை. ஆயினும், வாதத்திறமையானது மனிதனுடைய முயற்சியைச் சட்டத்தினுடைய சொற்களின்மேல் திருப்பிவிட்டு, பலசமயங்களில் நிறைவேற்றப்படவேண்டிய செயல்களின் உண்மையான பொருளை மறைப்பதாய் உள்ளது. எல்லாவற்றிற்கும்

மேலாக உடன்படிக்கையினை ஓர் ஒப்பந்தம் என்று தவறாகப் புரிந்து கொண்டு, அதைச் செயல்படுத்துபவர்களிடையே தங்களால் இயலக்கூடியவற்றின்மீது அதிக நம்பிக்கையினை உண்டாக்கி, நிறைவேற்றப்பட்ட செயல்கள், மனிதனுக்கு இறைவன் மீது உரிமையை அளிப்பதாகவும் அவனுக்கு உள்ளார்ந்த நேர்மையை அளிக்கவல்லதாகவும் எண்ணச் செய்தது. கடவுளின் மகிமையை வெளிப்படுத்துதல் மட்டுமே மனிதனில் செயல்படுகிறது என்னும் மனித செயல்களின் தனிச்சிறப்பான பொருளை எடுத்துக் கூற இயேசு, சமயத்தை இழிவுபடுத்தும் எண்ணத்திற்கு எதிராகப் போராடுகிறார்.

II. புதிய ஏற்பாடு

1. இயேசு கிறிஸ்துவின் செயல்:- ''என் தந்தை இந்நேரம் வரை செயலாற்றுகிறார்; நானும் செயலாற்றுகிறேன்'' (யோவா 5:17). இவ்வார்த்தைகளில் தந்தையினுடையவும் மகனுடையவும் செயல்களின் ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறார். தந்தையின் செயல் மகனின் செயலில் முழுமையாக வெளிப்படுகிறது.

அ) இயேசு கிறிஸ்து, இறைவனின் தலைசிறந்த படைப்பு:- தந்தையின் காணக்கூடிய உருவமாக உள்ள இயேசுவே பழைய ஏற்பாட்டில் பேசப்படும் ஞானமாகும். அவர் வழியாக அனைத்தும் தொடக்கத்தில் உண்டாக்கப்பட்டன. அவராலேயே மீட்புச் செயல் வரலாற்றில் நிறைவேறுகிறது. தமது உவமைகளில் படைப்பு மீண்டு உயிர்பெறச் செய்கிறார். எடுத்துக்காட்டாக கோதுமை மணி, மற்றும் பலியினுடைய வளர்ச்சியின் முறைகளின் தொடர்பை வெளிப்படுத்தும் உவமை (யோவா 12:24). ஊன் சார்ந்த முறையில் பலுகிப்பெருகுதலில் மறைந்துள்ள பொருளையும் (லூக் 11:27-28), ஆலயம் வழிபாடு ஆகியவற்றின் ஆழ்ந்த பொருளையும் (யோவா 4:21-24) எடுத்துக்கூறி, மனிதச் செயல்களைத் தவறாகப் புரிந்து கொள்வதிலிருந்து காப்பாற்றுகிறார். அரசின் எதிர்பார்ப்பினையும், சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியதையும் அவர் தம்மிலேயே ஒருமுகப்படுத்துகின்றார். மனிதனுடைய செயலானது இறைவனுடைய சாயலில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது உண்மையாயின், இனிமேல், தந்தையின் விருப்பப்படி எவ்வாறு நடப்பது என்பதை அறிய, இயேசு எவ்வாறு செயலாற்றுகிறார் என்று கண்டால் மட்டும் போதுமானதாகும்.

ஆ) இயேசுவும் தந்தையின் செயல்களும்:- ஒத்தமை நற்செய்திகள், இயேசுவின் புதுமைகள் மற்றும் அவரது திருச்சபையின் வருகைக்காகத் தயாரிக்கும் பணிகளைப் பற்றி விவரித்தாலும் இயேசுவின் செயல்களைப் பற்றி அரிதாகவே பேசுகின்றன (மத் 11:2). ஆனால், முற்றிலும் மாறுபட்ட நிலையில், தந்தை அளித்த செயல்கள் அனைத்தையும் கிறிஸ்து நிறைவேற்றினார் என்பதை யோவான் காட்டுகின்றார் (யோவா 5:36). அவர் மெசியா மட்டுமன்று, இறைமகனும் ஆவார் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன; ஏனெனில், செயலாற்றுபவர்களிடையே குழப்பம் விளைவிக்காமல், அவை தந்தையின் செயல்களோடு ஒருமைப்பாடு கொண்டுள்ளன. தாமே அனைத்துச் செயல்களுக்கும் காரணம் என்பது போல, தந்தை மகனுக்கு முழுவதும் நிறைவேற்றப்பட்ட செயல்களை அளிக்கவில்லை (யோவா 14:10; 9:31; 11:22.41-42), மேலும் நிறைவேற்றச் சொல்லிக் கட்டளையிடுவது போலவும் அவர் செயல்களை அளிக்கவில்லை (யோவா 4:34; 5:10). உலகில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இறைவன் விரும்பிய, அனைவரின் மீட்பு என்னும் தனிச்சிறப்பான பணியினை நிறைவேற்றித் தந்தையை மகிமைப்படுத்துவதே மகனின் பணியாகும். இச்செயலின் நிறைவே சிலுவையாகும் (யோவா 17;4). கிறிஸ்துவின் அனைத்துச் செயல்களும் இதனுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. அவை, இயேசுவின் பணியினுடைய முத்திரையாக மட்டுமல்லாமல் (6:27), மகனின் மூலமாக தந்தையையும் வெளிப்படுத்துகின்றன (14:9-10). பிரிக்கமுடியாத அளவு தம்மைத் தந்தையுடன் இணைக்கின்ற அன்பிலும், மகன் என்ற அளவிலும், தந்தையைப்போன்று தாமும்

செயலாற்றுபவராக இருப்பதை மகன் காட்டுகிறார்.

இ) கிறிஸ்து, மனித செயல்களை வெளிப்படுத்துபவர்:- பாவ உலகிற்கு வந்த பின், இயேசு மனித செயல்களையும் வெளிப்படுத்துகிறார். இவ்வெளிப்பாடானது தேர்வாகவும் தீர்ப்பாகவும் உள்ளது, ''இப்போது இதுதான் தீர்ப்பு; ஒளி உலகிற்கு வந்துள்ளது. மனிதர்களோ ஒளியைவிட இருளையே விரும்பினர். ஏனெனில் அவர்களுடைய செயல்கள் தீயனவாயிருந்தன. பொல்லாது செய்பவன் எவனும் ஒளியை வெறுக்கிறான். தன் செயல்கள் தவறானவை என்று வெளியாகாதபடி அவன் ஒளியிடம் வருவதில்லை. உண்மைகேற்ப நடப்பவனோ, தன் செயல்கள் கடவுளோடு ஒன்றித்துச் செய்தவையாக வெளிப்படும்படி ஒளியிடம் வருகிறான்'' (யோவா 3:19-21), கிறிஸ்து மனிதரிடையில் தோன்றி, அவர்களின் நிலையை வெளிப்படுத்துகின்றார். இச்சந்திப்பிற்கு முன்னர், ஒரு விதத்தில் அவர்கள் இருளிலேயே வாழ்ந்தனர் (1:5); இதைப் பாவநிலை என்று குறிப்பிட முடியாது (9:41; 15:24). கிறிஸ்து தம் வருகையால், மனிதரின் தன்மையின் ஆழத்தை வெளிப்படுத்துகிறார். அதுவரை, அதன் நன்மை தீமை பற்றி அரை குறை உணர்வே கொண்டிருந்தனர். தங்களுடைய கடந்தகால வாழ்க்கையின் அடிப்படையில் மனுமகனைப்பற்றி அவர்கள் எடுக்கும் தீர்மானம், அவர்களுடைய கடந்த காலத்தைத் தொகுத்துத் தருகிறது; அது இருக்கும் நிலையை வெளிப்படுத்துகிறது. நற்செயல்கள் கிறிஸ்துவுக்குக் காட்டும் இறுதிப்பற்றினைத் தகுதியாகப் பெறுவதில்லை; மாறாக, இப்பற்றானது செயல்களின் நன்மைத்தனத்தை வெளிப்படுத்துகின்றன (எபே 5:6-14)

2. கிறிஸ்தவனின் செயல்கள்:- விசுவாசி தன் செயலை இயேசு கிறிஸ்துவின் செயலை மாதிரியாக வைத்து அமைக்கும் போது தன் செயலுக்கு முழுப்பொருள் அளிக்கிறான். தூய ஆவியின் மூலம், அன்பின் புதிய சட்டத்தினை நிறைவேற்றவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்புவதில் ஒத்துழைக்கவும் அவனால் கூடுமானதாகுகிறது.

அ) விசுவாசம், தனித்தன்மையுடைய செயல்:- ஒத்தமை நற்செய்திகளின் படி, தூய கருத்துடன் நற்செயல்களைச் செய்யவேண்டும் என்று இயேசு கோருகிறார் (மத் 5:16) இது முதன்மையான கட்டளைகளில் (மத் 22:36-40) சட்டத்தின் கட்டளைகளிடையேயுள்ள ஒற்றுமையினை இயேசு காட்டுகிறார். இந்த முறையில் யூதமரபினால் திணிக்கப்பட்ட எண்ணற்ற செயல்களில் இன்றியமையாதவையான எளிமை மற்றும் தூய்மையினை அவர் செயல்படுத்துகிறார். நான்காவது நற்செய்தியில் இந்த எளிமை மேலும் தெளிவாகத் தோன்றுகிறது. ''கடவுளுக்கேற்ற செயல்களைச் செய்ய நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' எனக் கேட்கும் யூதருக்கு ''அவர் அனுப்பியவரை விசுவாசிப்பதே கடவுளுக்கேற்ற செயல்'' என்று இயேசு பதிலுரைக்கின்றார் (யோவா 6:28-29). தந்தையின் செயல்களை நிறைவேற்றுகின்ற இயேசுவின் மேல் கொண்ட விசுவாசத்தால் இறைவனின் சித்தம் சுருக்கமாகத் தரப்படுகிறது.

ஆற்றலோடு விவாதித்திடக் கூடியவரான பவுல் சட்டத்தின் செயல்களால் ஏற்புடைமை என்னும் கருத்தை நிராகரிக்கும் போது இதனையே கூறுகின்றார்; மீட்பின் மூல ஆதாரமாக இருப்பது சட்டமோ, செயல்களோ அல்ல; மாறாக, விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிலுவையும் அருளுமே. செயல்களால் மட்டுமே மீட்புப் பற்றிய திறனாய்வானது யூத சட்டத்திற்கு மட்டுமே உரியதன்று. தாங்களாகவே மீட்படையக்கூடும் என்று தற்புகழ்ச்சி கொள்ளும் எல்லாச் சமய வழக்கிற்கும் இது பொருந்தும்.

ஆ) அன்பு, விசுவாசத்தின் செயல்:- செயல்கள் மீட்பின் முல ஆதாரமாக இல்லாவிட்டாலும், அவை விசுவாசத்தின் அவசியமான வெளிப்பாடாக உள்ளன. யாக்கோபு

இதனை வற்புறுத்துகிறார் (யாக் 2:14-26); பவுலும் அவ்வாறே (எபே 2:10). ஆவியின் கொடைகளாக உள்ள 'விசுவாசத்தின் செயல்களும்' சில உள்ளன (கலா 5:22-23). 'அன்பின் மூலம் செயல்படும்' விசுவாசத்தையே இயேசு கேட்கிறார் (கலா 5:6). பலவாறாக உள்ள தீய செயல்களுக்கு மாறாக (கலா 5:19 தொ), முழுசட்டத்தினையும் கொண்டுள்ள கட்டளையினைக் கடைப்பிடிப்பதில் விசுவாசத்தின் செயல்கள், தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன (கலா 5:14). 'விசுவாசத்தின் செயலும், அன்பின் உழைப்பும்' இத்தகையதே (1 தெச 1:3). அவரது வருகைக்காக எதிர்பாத்திருக்கும் வேளையில் தனது விளக்கினைப் பற்ற வைத்தும் (மத் 25:1-13), தாலந்துகளை இலாபகரமாகப் பயன்படுத்தியும் (25:14-30), சகோதரரை அன்பு செய்தும் (25:31-46) நாம் இருக்க வேண்டும் என்று இயேசு கற்பித்தார். அன்பின் கட்டளையானது அவருடைய சொந்த ஏற்பாடேயாம் (யோவா 13:34). அப்போஸ்தலர்கள் இப்படிப்பினையை ஏற்றுக் கொண்டு அதனுடைய விளைவுகளை வெளிக்கொணர்ந்தனர்.

இ) கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையினை கட்டியெழுப்புதல்:- சில குறிப்பிட்ட தனிப்பட்டவர்களுக்குக் கொண்டுவரப்பட்ட ஆறதலில் அன்பின் செயலானது முழுமையினைக் காண்பதில்லை. இந்தக் குறிக்கோளுக்கு அப்பால் நித்தியத்திலிருந்து முன்னோக்கப்பட்ட, அவரது உடலாகிய திருச்சபையினைக் கட்டியெழுப்பும் கிறிஸ்துவின் மாபெரும் பணியில், அன்பு ஒத்துழைக்கிறது. ஏனெனில் ''அவரது கைவேலையாக உள்ள நாம் செய்ய வேண்டுமென்று இறைவன் முன்னேற்பாடு செய்த நற்செயல்களில் நாம் ஈடுபடுவதற்கே கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் படைக்கப்பட்டோம்'' (எபே 2:10). மனிதனுடைய செயலின்மேல், சிறப்பையும் முடிவற்ற முக்கியத்துவத்தையும் அளித்து எல்லாவற்றிலும் செயலாற்றுகிற இறைவனின் செயலுடன் மனிதன் ஒத்துழைப்பதாகிய மறைபொருள் இதுவே (1 கொரி 1:9; 15:58; உரோ 14:20; பிலி 1:6). இந்த புதிய முன்னோக்கில் விண்ணக வெகுமதியானது, மனிதன் இவ்வுலகில் செய்யும் செயல்களுடன் இணைக்கப்படலாம்: ''ஆண்டவருக்குள் இறப்பவர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் செய்த நன்மையே அவர்களோடு கூட வரும்'' (திரு 14:13).

இறைவனின் பிரசன்னம்/திருமுன் (PRESENCE OF GOD)

விவிலியத்தின் இறைவன் மிக உயர்ந்தவர் மட்டுமின்றி, எல்லாவற்றிக்கும் மிக அண்மையில் உள்ளவரும் ஆவார் (சங் 119:151). தமது முழுநிறைவினால் உலகினின்று பிரிந்து நிற்கும் மேலானவர் மட்டும் அல்லவர்; மாறாக உலகோடு இணைக்கப்படக்கூடிய உண்மையாகவும் அவர் உள்ளார். இந்த இறைவன் தமது படைப்புகளுக்கு படைப்பாளியாகவும் (ஞான 11:25; உரோ 1:20) தம் மக்களுக்கு மீட்பராகவும் (யாத் 19:4 தொ), அவரது மகனுக்கும் (யோவா 8:29) மகனின் ஆவியால் உயிரூட்டப்பட்டு அவருடைய பிள்ளைகளாக அவரை அன்பு செய்பவர்களுக்குத் தந்தையாகவும் (உரோ 8:14.28) விளங்குகிறார். முதலும் இறுதியுமாக உள்ள அவர் காலத்தில்மீது ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் எல்லாக் காலங்களிலும் பிரசன்னமாக உள்ளார் (ஏச 44:6; 48:12; திருவெளி 1:8.17; 22:13). ஆனாலும், இறை பிரசன்னமானது புலன் சார்ந்த அடையாளங்களால் தன்னையே வெளிப்படுத்தினாலும் அது ஆன்மீக உயிரின் பிரசன்னமேயாகும். தமது படைப்பைச் சூழ்ந்து கொண்டுள்ளது. அவரது அன்பு (ஞான 11:24; சங்139) அதற்குப் புத்துயிர் அளிக்கின்றது (அ.ப. 17:25-28) இறைவன் தமது அன்பை மனிதனுக்கு அளித்து, தமது பிரசன்னத்தின் ஒளிமிக்க சாட்சியாக அவனை ஆக்க விரும்புகிறார் (யோவா 17:21).

I. பழைய ஏற்பாடு

மனிதனைப் படைத்த இறைவன், அவனுக்குப் பிரசன்னமாக இருக்க விரும்புகிறார். மனிதன் பாவத்தின் மூலம் இந்தப் பிரசன்னத்திலிருந்து விலகி ஓடிவிட்டாலும்,

இறை அழைப்பானது வரலாற்றின் மூலம் அவனைப் பின்தொடர்ந்தவாறே உள்ளது; ''ஆதாம், நீ எங்கே இருக்கிறாய்?'' *(ஆதி 3:8-9)*.

1. இறை பிரசன்னம் பற்றிய வாக்குறுதி:- தமது பிரசன்னத்தைப்பற்றி உறுதியளித்திருந்த சலுகை பெற்ற ஆன்மாக்களுக்கு இறைவன் முதலில் தம்மைக் காண்பித்தார். இவ்வாறு அவர், தமது உடன்படிக்கையைச் செய்துகொண்டு ஏற்படுத்திய தந்தையார்களுக்கும் *(ஆதி 17:7; 26:24; 28:15)*, தமது மக்களை விடுவிக்கப் பொறுப்பேற்றிருந்த மோசேக்கும் *(யாத் 3:12)* இறைவன் தம்மைக் காண்பித்தார். இவர்களுக்கு அவர் தம்முடைய பெயரையும் அதன் பொருளையும் வெளிப்படுத்தி, அவர்களுடைய தந்தையரோடு இருந்தது போல, அவர்களுடைய தந்தையரின் இறைவன் அவர்களோடும் இருப்பார் என்று உறுதியளிக்கிறார். இறைவன் தம்மை யாவே என்று அழைத்து, முடிவற்றவர், மாறாதவர் மற்றும் நம்பிக்கைக்கு உரியவர் என்று பொருள் படுமாறு ''இருக்கிறவர் நாமே'' என்று தம்மை விவரிக்கின்றார். அல்லது மீண்டும், அங்கு எப்போதும், எல்லா இடங்களிலும் தம்முடைய மக்களுடன் நடந்து செல்கின்றவர் என்ற பொருளில் ''இருக்கிறவர் நாமே'' என்றும் *(3:13 தொ; 33:16)* விவரிக்கின்றார். உடன்படிக்கைக் காலத்திலிருந்து அளிக்கப்பட்ட இந்த எல்லாம் வல்ல பிரசன்னத்தின் உறுதிமொழியானது *(34:9-10)*, இறைவன் தமது மக்களை நடத்திச் செல்லப் பயன்படுத்திய யோசுவா மற்றும் நீதிபதிகள் *(யோசு 1:5; நீதி 6:16; 1 சாமு 3:19)*, அரசர்கள் மற்றும் இறைவாக்கினர்கள் *(2 சாமு 7:9; 2 அர 18:7; எரே 1:8.19)* முதலிய தூதுவர்களுக்கும் புதுப்பிக்கப்படுகிறது. ஏசயா முன்னறிவிக்கப் பிறந்து, மக்களின் மீட்பாக விளங்கவிருக்கும் குழந்தையினுடைய பெயரும் பொருள் மிக்கதாகும்; ''இம்மானுவேல், அதாவது கடவுள் நம்மோடு'' *(ஏச 7:14; சங் 46:8)*.

இறைவன் தமது மக்களை நாடுகடத்துவதன் மூலம் தண்டிக்க வேண்டியுள்ளபோதும், அவர் அவர்களைக் கைவிட்டுவிடவில்லை. அவரது ஊழியனாகவும் சாட்சியாகவும் விளங்குகின்ற இம்மக்களின் மேல் *(ஏச 41:8 தொ; 43:10)* அவர் ஆயனாகவும் *(எச 34:15-16.31; ஏச 40:10-11)*, அரசனாகவும் *(ஏச 52:7)*, மணமகனாகவும், மீட்பராகவும் *(54:5-6; 60:16)* விளங்குகின்றார். தமதுவாக்குறுதிகளின்மீதான உறுதியின் பொருட்டு இம்மக்களைச் சுதந்திரமாக விடுவிக்கப் போவதாகவும் *(52:3.6)* ''யாவே அங்கே இருக்கிறார்'' *(எச 48:35)* என்று இனி அழைக்கப்படவுள்ள புனித நகருக்கு அவருடைய மகிமை திரும்பும் என்றும் அவர் அறிவிக்கிறார் *(ஏச 52:3, 6)*; இவ்வாறு, எல்லா நாடுகளுக்கும் தமது பிரசன்னத்தைத் தெளிவாக்குவார் *(45:14-15)*. அவர் அவைகள் அனைத்தையும் தமது ஒளியில், எருசலேமிற்குக் கூட்டிச் சேர்ப்பார் *(ஏச 60)*. இறுதியாக, இறுதிநாளில், அவர் உலகளாவிய நீதிபதியாகவும் அரசராகவும் விளங்குவார் *(மலா 3:1; செக் 14:5.9)*.

2. இறைப்பிரசன்னத்தின் அடையாளங்கள்:- இறைவன் பல்வேறு அடையாளங்களின்மூலம் தம்மை வெளிப்படுத்துகிறார். சீனாயி மலையில் நிகழ்ந்த இறைமகிமைத் தோற்றம் புயல், இடி, நெருப்பு மற்றும் காற்று ஆகியவற்றினால் *(யாத் 20:18 தொ)* இறையச்சத்தை ஏற்படுத்தியது. இவ்வடையாளங்களை இறைவனது மற்ற இடையீட்டுகளிலும் காண்கிறோம் *(சங் 29;18:8-16; ஏச 66:15; அ.ப. 2:1 தொ; 2 பேதுரு 3:10; திருவெளி 11:19)*. ஆனால், தமது நண்பர்களாகிய ஆபிரகாம் *(ஆதி18:23-33)*. மோசே *(யாத் 33:11)* மற்றும் எலியா *(1 அர 19:11 தொ)* ஆகியோருடன் உரையாடும் போது, தென்றல் வீசும் இன்பவனத்தின் அமைதியான நிலையைப் போன்ற *(ஆதி 3:8)* முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையிலும் ஆண்டவர் தோன்றுகிறார்.

இறைப்பிரசன்னத்தின் அடையாளங்கள் ஒளி வீசுகின்றவையாக இருந்தாலும், இறைவன் மறைபொருளில் பொதியப்பட்டுள்ளார் *(சங் 104:2)*. மேகம் மற்றும் நெருப்புத்

தூணின் மூலமாக அவர் தனது மக்களைப் பாலைவனத்தில் வழிநடத்துகிறார் (யாத் 13:21), முதலில் உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டிருந்த கூடாரத்தையும் (யாத் 40:34) பின்னர் திருத்தூயகத்தையும் (1 அர 8;10 தொ) தம்முடைய மகிமையால் நிரப்பியவராய் அவர் அவர்களிடையே வாழ்கிறார்.

3. இறை பிரசன்னத்திற்கான நிபந்தனைகள்:- இத்தகைய மறைபொருள்மிக்க, பரிசுத்த பிரசன்னத்தை அணுகுவதற்கு, தேவையான நிபந்தனைகளை இறைவனிடமிருந்து அறிவது அவசியமாக உள்ளது.

அ) இறைவன் மீதான ஆர்வம்:- இறைவன் அளிக்கின்ற அடையாளங்களுக்கு மனிதன் பதிலளிக்க வேண்டும். இக்காரணத்தினால், இறைவெளிப்பாட்டின் நினைவு இணைந்துள்ள பெயேர் செபா மற்றும் பெத்தேல் (ஆதி 26:23 தொ; 28:16-19) போன்ற இடங்களில், மனிதன் இறைவனை வழிபடுகின்றான். ஆனால், இறைவன், எந்த இடத்திற்கோ, அல்லது பருப்பொருளால் ஆன உறைவிடத்திற்கோ மட்டும் கட்டுப்பட்டவரல்லர். உடன்படிக்கைப் பேழையை அடையாளமாகக் கொண்ட இறைப்பிரசன்னமானது, பாலைவனத்தில் தாம் வழிகாட்டுகின்ற மக்களோடு சேர்ந்து பயணம் செய்கிறது. அவர்களிடையே தமது இருப்பிடத்தையும் புனித உறைவிடத்தையும் ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறது (யாத் 19:5; 2 சாமு 7:5-6.11-16). தாவீதின் சந்ததியோடும், தாவீதின் வீட்டிலும் வசிக்க இறைவன் விரும்புகிறார். சாலமோன் அவருக்கு ஒரு தேவாலயத்தைக் கட்டுவதை ஏற்றுக்கொண்டாலும், இந்த ஆலயம் அவரைத் தன்னுள்ளேயே கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றலை பெறவில்லை என்னும் உணர்வு அங்கு நிலையாக உள்ளது (1 அர8:27; ஏச 66:1). அவருடைய பெயரை உண்மையில் அழைக்கும் அளவிற்கு அவர் அங்கு உள்ளார் (1 அர 8:29-30.41 தொ; சங் 145:18). அதாவது, விசுவாசமிக்க இதயத்துடன், உண்மையான வழிபாட்டின்மூலம் அவருடைய பிரசன்னத்தை அங்கு தேடும் அளவிற்கு, அவர் அங்கு காணப்படுகிறார்.

மேட்டு இடங்கள் மற்றும் அவற்றின் சூழல்களை அழித்து, இத்தகைய வழிபாட்டை ஏற்படுத்தும் எண்ணத்துடன் உபாகமச் சீர்திருத்தம், ஆண்டிற்கு மூன்று முறை எருசலேம் யாத்திரை செல்வதை ஏற்படுத்தி, மற்ற இடங்களில் பலிகளை அளிப்பதைத் தடை செய்தது (உப. 12:5; 16:16). எருசலேமிற்குச் செல்வதென்பது, ஆண்டவரைக் கண்டடையப் போதுமானது என்ற பொருளில் கூறப்படவில்லை. அங்கு மக்களால் நிறைவேற்றப்படுகின்ற வழிபாடானது, நம்மைச் காண்கிற இறைவனுக்கு அளிக்க வேண்டிய மரியாதை, மற்றும் நம்மோடு பேசும் இறைவனுக்குரிய நமது விசுவாச உறுதிப்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும் (சங் 15:23). இல்லையென்றால், ஒருவன் தனது இதயத்தில் அவரிடமிருந்து மிகத்தொலைவில் இருக்கிறான் (எரே 12:2). மேலும், மனிதர்கள் ஆலயத்தைக் கள்வர்களின் குகையாக மாற்றிவிட்டதால், அதனுடைய அழிவைப்பற்றி அறிவித்து, கடவுள் அதனை விட்டுவிடுகிறார் (எரே 7:1-15; எச 10-11).

மற்றொரு புறம் மூதாதையரைப்போல இறைவனுடன் நடப்பவர்களுக்கும் (ஆதி 5:22; 6:9; 45:15) எலியாவைப் போன்று அவர் முன் செயலாற்றுபவர்களுச்கும் (1 அர 17:1) வாழ்பவர்களுக்கும் (சங் 16:8; 22:4; 119:168), தங்களது துன்பங்களில் அவரை வேண்டுகின்றவர்களுக்கும் (சங் 34:18 தொ) தாழ்ந்த நொறுங்கிய உள்ளத்துடன் (ஏச 57:15) நன்மையை நாடுகின்றவர்களுக்கும் (ஆமோ 5:4, 14), துன்புறுவோர்க்கு உதவி செய்பவர்களுக்கும் (ஏச 58:9) அருகிலேயே உள்ளார் இறைவன். இத்தகைய விசுவாசிகளே ஒழுக்கக்கேட்டிற்கு உள்ளாகாமல் இறைவனின் பிரசன்னத்தில் என்றென்றும் வாழ்வர் (ஞான 3:9; 6:19).

ஆ) இறைவனின் கொடை:- ஆனால், இத்தகைய உறதி மனிதனுடைய ஆற்றலில்

உள்ளதா? தூய இறைவனின் முன்னிலையில், இறைவனால் மட்டுமே குணமாக்கப்படக்கூடிய சீர்கேடாகிய (எரே 17:1.14) தனது பாவத்தைப்பற்றி மனிதன் உணருகிறான் (ஏச 6:1-5). மனிதனுடைய இதயத்தைமாற்றி, அதில் தம்முடைய சட்டத்தையும் தமது ஆவியையும் முத்திரையிட இறைவன் வந்தால், எவ்வளவு நல்லது! (எரே 31:33; எச 36:26 தொ). புனிதப்படுத்தப்பட்ட மக்களை இறைவனுடைய உறைவிடமாக மாற்றுகின்ற புதிய உடன்படிக்கையின் கனியாகிய இம்மறுமலர்ச்சியை இறைவாக்கினர்கள் அறிவிக்கின்றனர் (எச 37:26 தொ). மனிதரிடையே உறைவதால் மகிழ்வடைகின்ற ஞானத்தைத் தங்களுக்குள் பெறுவதன் மூலம், அவருடைய சித்தத்தினை அறிந்து, அவருடைய நண்பர்களாக உருவாக, இறைவன் தமது ஞானத்தையும், தமது தூய ஆவியையும் அனுப்புவாரென ஞான ஆசிரியர்களும் அறிவிக்கின்றனர் (பழ 8:31; ஞான 9:17 தொ; 7:27-28).

II. புதிய ஏற்பாடு

1. இயேசுவில் பிரசன்னத்தின் கொடை:- கன்னி மரியாளின் மீது இறங்கியதன் மூலம், இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட கொடையினை, தூய ஆவி கொண்டு வந்தார்: ஆண்டவர் அவளோடு உள்ளார் மற்றும் இறைவன் நம்மோடு உள்ளார் (லூக் 1:28.35; மத் 1:21 தொ). உண்மையில், தாவீதின் மகனாகிய இயேசு ஆண்டவரும் ஆவார் (மத் 22:43-44). சிறியோர்களுக்குத் தமது பிரசன்னம் வெளிப்படுத்தும் (மத் 11:25 தொ) உயிருள்ள இறைவனின் மகன் ஆவார் (மத் 16:16). நம்மிடையே வாழ்வதற்காகவும் (1:14), அவருடைய தந்தையின் மகிமையை வெளிப்படுத்துவதற்காகவும் ஊனுடலெடுத்த (யோவா 1:14) இறைவனின் வார்த்தை அவரே. அவரது உடலே உண்மையான ஆலயம் (2:21). தம்மோடு என்றுமுள்ள தமது தந்தையைப்போன்று ''இருக்கிறவர் நாமே'' என்று அழைக்கப்படுகிறார் (யோவா 8:28-29; 16:32), அப்பெயரில் உள்ளடங்கியுள்ள,, பிரசன்னத்தின் உறுதிமொழிக்குத் தமக்கேயுரிய நிறைவேற்றத்தை அளிக்கிறார். இதன் விளைவாக, அவரிலேயே இறைத்தன்மையின் முழுமையும் உள்ளது (கொலோ 2:9). தமது பணியை முடித்தபின்னர், தம் சீடர்களோடு என்றும் இருப்பதாக அவர்களுக்கு உறுதியளிக்கிறார் (மத் 28:20; லூக் 22:30; 23:42-43).

2. ஆவியில் பிரசன்னத்தின் மறைபொருள்:- உயிர்த்த இயேசு தனது சீடருக்குத் தோன்றுவதென்பது, அவர்களிடையே தமது பிரசன்னத்தை உடலுக்குரியதாகச் செயவதற்கன்று; ஏனெனில், அக்கணம் முதல் அவர்கள் அதனை இழப்பது நல்லது (யோவா 16:7). ஆனால் அவர் வாழ்கின்ற இடத்தில், விசுவாசத்தின் மூலம் அவரைக்கான அவர்களைத் தூண்டுவதற்கு இது உதவியாக உள்ளது. அவர் தமது தந்தையுடன் வாழ்கிறார் (20:17); துன்புறுவோர் அனைவரிலும் அவர் பிரசன்னமாகியுள்ளார்; அவர்களிலே பணிபுரியப்பட வேண்டுமென விரும்புகின்றார் (மத் 25:40). அவருடைய வார்த்தையைக் கொண்டுவருபவர்களிடம் இருக்கிறார். அவர்களிலே தாம் செவிமடுக்கப்பட வேண்டுமென அவர் விரும்புகிறார் (லூக் 10:16); அவருடைய பெயரால் செபிக்க ஒன்று கூடுவோரின் இடையிலும் அவர் உள்ளார் (மத் 18:20).

விசுவாசிப்போரிடையில் மட்டுமே கிறிஸ்து இருப்பதில்லை. தமது மகிமையை வெளிப்படுத்தி அதே நேரத்தில் ''நீ துன்புறுத்துகிற இயேசு நாமே'' (அ.ப. 9:5) என்று பவுலுக்கு வெளிப்படுத்தியதுபோல், அவர்கள் துன்புறும்போது அவர்களிலேயே உள்ளார். உண்மையில், விசுவாசத்தினால் தம்மைப் பெற்றவர்களிலும் (கலா 2:20; எபே 3:17), தமது உடலினால் ஊட்டம் பெறுவோரிலும் (1 கொரி 10:16-17) அவர் வாழ்கிறார். அவருடைய ஆவி அவர்களில் வாழ்ந்து, உயிரளித்து (உரோ 8:9. 14), அவர்களை இறைவனின் ஆலயமாகவும் (1 கொரி 3:16-17; 6:19; எபே 2:21-22), கிறிஸ்துவின் உறுப்பினர்களாகவும் ஆக்குகிறது (1 கொரி 12:12-13. 27).

அதே ஆவியினால், அவருடைய உடலை உண்டு இரத்தத்தைக் குடிப்போரில் இயேசு வாழ்கிறார் (யோவா 6:56-57, 63). அவருடைய தந்தை அவரில் இருப்பது போன்று, அவர் அவர்களில் இருக்கிறார் (14:19-20). இந்த ஒன்றுபட்ட நிலையானது, இயேசு தந்தையிடம் திரும்பிச் சென்று தனது ஆவியை அனுப்பியுள்ளார் என்று சுட்டிக் காட்டுகிறது (16:28; 14:16 தொ), இதனாலேயே, உடலுக்குரிய நிலையில் அவர் அவர்களிடையே இல்லாமல் இருப்பது மேலானது (16:7). அப்படி இல்லாமலிருத்தல் ஆவியின் கொடையால் அடைகின்ற உள்ளார்ந்த பிரசன்னத்திற்கு நிபந்தனையாகும். இக்கொடையின் விளைவாக, தந்தையையும் மகனையும் இணைக்கின்ற அன்பினைச் சீடர்கள் தம்முள் கொண்டுள்ளனர் (17:26). இக்காரணத்திற்காக, இறைவனும் அவர்களில் உறைகின்றார் (1 யோவா 4:12).

3. தந்தையின் மகிமையில் பிரசன்னத்தின் முழுமை:-

நமக்கென பவுல் ஆசிக்கின்ற, இந்த ஆண்டவரின் பிரசன்னம் (2 தெச 3:16; 2 கொரி 13:11), நமது அழியக்கூடிய உடலிலிருந்து நாம் விடுவிக்கப்படாதவரையில் முழுமை பெறாது (2 கொரி 5:8). பின்னர், நம்மில் உள்ள ஆவியின் மூலம் உயிர்த்தபின் (உரோ 8:11), எல்லோரிலும் எல்லாமுமாய் உள்ள இறைவனை நாம் காணலாம் (1 கொரி 13:12; 15:28). பின்னர், அவருக்கு அருகில் இயேசு நமக்கென ஆயத்தம் செய்திருக்கும் இடத்தில், அவருடைய மகிமையை (யோவா 14:2-3; 17:24), மனிதரிடையே இறைவனின் உறைவிடமாகிய புதிய எருசலேமின் ஒளியைக் (திருவெளி 21:2-3.22-23) காண்போம். பின்னர், ஆவியினுடைய கொடையின் மூலம் தந்தை மற்றும் மகனுடைய பிரசன்னம் நம்மில் முழுமையடையும் (1 யோவா 1:3; 3:24).

விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் அளிக்கின்ற பிரசன்னம் இத்தகையதே. ''நான் கதவண்டை நின்று தட்டுகிறேன்'' (திருவெளி 3:20). இப்பிரசன்னமானது ஊனுடலுக்கு எட்டக்கூடியதோ (மத் 16:17), ஒரு குறிப்பிட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்டதோ (கொலோ 3:11), ஒரு இடத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டதோ அன்று (யோவா 4:21). தமது முழுமையைக் கொண்டுள்ள கிறிஸ்துவின் உடலில் அனைவருக்கும் அளிக்கப்பட்ட (கொலோ 2:9) ஆவியின் கொடையாகும் இது (உரோ 5:5; யோவா 6:63). இந்த முழுமையில் நுழைகின்ற விசுவாசியில் அவர் வாழ்கின்றார் (எபே 3:17 தொ). மணமகளுடன் சேர்ந்து ஆவியின் மூலமாக ''வாரும்'' (திருவெளி 22:17) என்று அவருக்குப் பதிலளிக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இக்கொடையை அளிக்கின்றார்.

இறைவனின் பிள்ளைகள் (CHILDREN OF GOD)

1. 'இறைமகன்' என்னும் ஒருமைச் சொல்லானது முக்கியமாக கிறிஸ்துவிற்கும், பழைய ஏற்பாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் அரச பிரதிநிதி அல்லது மக்கள் அனைவரையும் மொத்தமாகக் குறிக்கவும் பயன்படுகிறது.

இறைவனின் ''பிள்ளைகள்'' மற்றும் ''புதல்வர்கள்'' என்பனவற்றிற்கு இடையே வேறுபாட்டை வலியுறுத்துவதன் மூலம் நாம் பெறக்கூடியது சிறிதளவே. எந்நிலையிலும் இச்சொல்லானது பழைய ஏற்பாட்டிலும் புதிய எற்பாட்டிலும், பெரும்பாலும் இறைவனுடனான நல்லொழுக்க அல்லது ஆன்மீக உறவினையே குறிப்பிடுகின்றது. ''இஸ்ராயேலர்'' என்று குறிப்பிடும் போதும் உடல்சார்ந்த உறவைக் கடந்து செல்லுகிறது. புதிய ஏற்பாட்டில், விசுவாசிக்கும் புறவினத்தார் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, விசுவாசியாத இஸ்ராயேலர்கள் விலக்கப்படுவதில் இது முற்றிலும் தெளிவாகிறது. மனித குலம் இறைவனின் பிள்ளைகளாக இருக்கக்கூடிய தகுதியுடையதாக இருந்தாலும், அவர்கள் அப்படி உண்மையில் இருந்ததாக, சில விதிவிலக்குகளைத் தவிர்த்து, இச்சொல்லானது அவர்களுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால், கிறிஸ்துவிலும், கிறிஸ்துவின் மூல

மாகவும் மட்டுமே மனிதர்கள் இவ்வுறவிற்குள் சுவிகாரமாக ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லத மீண்டும் பிறக்கவோ செய்கின்றார்கள். மனித இனத்திற்கான இறைவனுடைய மகிமை மிக்க திட்டமானது, கிறிஸ்துவின் மூலம் ஏராளமான பிள்ளைகளை மகிமைக்கு கொண்டுவருவதன் மூலம்-அதாவது, கிறிஸ்துவினுடைய மகனுக்குரிய கீழ்ப்படிதலைப் பிறருக்கு மாற்றுவதன் மூலம்-நிறைவேற்றப்படும். இவ்வாறேயன்றி, வேறெந்த, தானாகே உருவாகும் வேறு எந்த வளர்ச்சியினாலும், ''இறைவனின் பிள்ளைகளுடைய மகிமை மிக்க விடுதலை'' வருவதில்லை (உரோ 8:21). இவ்வாறே ''கிறிஸ்துவினுடைய முழு பருவத்தின் அளவை அடைந்து முதிர்ச்சி பெற்ற மனிதனாவோம்'' (எபே 4:13).

2. இறைவனின் பிள்ளைகளின் (மக்களின்) சொற்றொடர்கள்:- ''பிள்ளைகள்'' மற்றும் ''மக்களுக்கு'' இடையே ஏதாவது வேறுபாடு இருக்குமாயின், அவ்வேறுபாடானது இயற்கை அல்லது தோற்றம் மற்றும் தரம் அல்லது உறவு ஆகியவற்றிற்கிடையே உள்ளது போன்று அழுத்த வேறுபாடு உடையதே. இத்தகைய வேறுபாடானது புதிய ஏற்பாட்டில் மங்கலான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டாலும், பழைய ஏற்பாட்டில் வேறுபாட்டினைக் குறிப்பிடுவது இயலாததாக உள்ளது. இந்த உறவைக் குறிப்பிட, அழுத்தவேறுபாடுடைய பல சொற்கள் பயன்பட்டுள்ளன.

3. பழைய ஏற்பாட்டு வழக்கு:- விவிலிய நூல்களின் இறுதிப் பதிப்பில் குறிப்பிடப்படுவது போன்று, உடல் சார்ந்த முறையில் தந்தை மற்றும் பிள்ளைகளைப் பெற்று, கோத்திரம் அவரினின்று உருவாதல் போன்ற இறைவனைப்பற்றிய யூதரல்லாதோரின் கருத்திற்கு எபிரேயச் சிந்தனையில் இடமே இல்லை எனலாம். உப 32:6; மலா 2:10; சங் 2:7; 110:3 ஆகிய பகுதிகளுக்கு புறவினத்தாரின் இறைவனைப்பற்றிய கருத்தின் அடிப்படையில் பொருள் கொடுக்கக் கூடுமானால், அது விதிவிலக்கே ஆகும்.

இறைவன், உடல் சார்ந்த முறையில் அல்லாமல், அறஒழுக்க முறையிலேயே தந்தையாகக் கருதப்படுவதே பொது மரபாகும். ஏச 1:2-இல் உள்ள குறிப்பானது தந்தையின் அக்கறை மற்றும் பிள்ளைகளின் கல்வி பற்றியதென தெளிவாக உள்ளது.

''பிள்ளைகளைப் பேணினோம், வளர்த்தோம்;
அவர்களோ நம்மை எதிர்த்தார்கள்''.

ஒருவகை உடல் சார்ந்த பொருளில் இல்லாமல், அரை குறையான இயல்பான நிலையிலில்லாமல், இத்தகைய பொருளிலேயே நாம், ''இஸ்ராயேல் நம் மூத்த புதல்வன்'' (யாத் 4:22); ''நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவருடைய பிள்ளைகளாக இருங்கள்'' (உப 14:1); ''எகிப்திலிருந்த நம் மகனை அழைத்தோம்'' (ஓசே 11:1) என்பனவற்றைப் புரிந்துக்கொள்ள வேண்டும். ஓசேயாவில்தான் இச்சொல்லில் ஒழுக்க உட்பொருளானது தனிப்பட்ட விதமாக தெளிவுபடுத்தப்படுகிறது. ஓசே 1:10-இல் பதிதம் மற்றும் அவிசுவாசநிலை ஆகியவற்றிற்கான தண்டனையானது நிறைவேற்றப்பட்டு முடிந்து விட்டது என்று கருதப்படும் எதிர்காலத்தில் மட்டுமே, இஸ்ராயேலானது ''உயிருள்ள இறைவனின் மக்கள்' என்று அழைக்கப்படும். ''எம் மக்கள் அல்லர்'' (ஓசே 1:9) என்னும் சொற்றொடரில் அழிவு முழுவதும் மாறும் என்ற எதிர்காலத்திற்கான நம்பிக்கை அடங்கியுள்ளது. எனவே, எதிர்கால மீட்பின் காட்சியில்,

இஸ்ராயேலுக்கு நாமே தந்தை

எப்பிராயிமோ நமக்குத் தலைப்பேறான பிள்ளை (எச 31:9).

என்று இறைவன் கூறுகிறார்; மற்றும் ஏச 43:6; 2 கொரி 6:18-இல் இது கட்டிக் காட்டப்படலாம். தண்டித்து திருத்தப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டு, இறுதியாகத் திரும்பி வருகின்ற நாடுகடத்தப்பட்டவர்கள் இறைவனுடைய மகன்களாகவும், மகள்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர் (ஏச 30:1,9; எச

3:4.19.22). பாரம்பரிய யூதர்களால் அவர்கள் சபையிலிருந்து விலக்கப்பட்டிருந்தாலும், ஆபிரகாமும் இஸ்ராயேலும் தங்களைச்சொந்தம் பாராட்டாவிடினும், இறைவன் தங்களுடைய தந்தை என்று உரிமைக் குரலெழுப்புபவர்களுடைய இறைவனை நோக்கிய உணர்ச்சியூட்டும் உரையில், ஏசா 63:16-இல் சமய உறவே தெளிவாக உள்ளது (திருமுழுக்கு யோவானின் உரையில் மத் 3:8-9=லூக் 3:8: மனந்திருந்தியவர்க்கேற்ற செயலைச் செய்து காட்டுங்கள். 'ஆபிரகாமே எங்களுக்குத் தந்தை' என்று சொல்லிக் கொள்ளத் துணிய வேண்டாம். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்கு மக்களை எழுப்பக் கடவுள் வல்லவர் என்று உங்களுக்குக் கூறுகிறேன்'').

வெளிப்பாட்டு நூல்களில், பின்வரும் வழக்குமுறைகள் குறிப்பிடப்படலாம்; ஞான 2:18-இல், நேர்மையான இறைபற்றுடைய மனிதர், அவனை துன்புறுத்தத் தயாராகும் பகைவர்களால் பழிக்கப்படுகின்றனர்ர். இறைவன் அவரைக் காப்பாற்றி, அவர் இறைவனின் மகன் என்று கூறுவதை நிரூபிக்கிறாரா பார்ப்போம் என்று அவர்கள் கூறுகின்றனர் (சிலுவையில் இயேசுவின் பால் கூறப்பட்ட வசைமொழிகள்; மத் 27: 40). ஞான .5:5-இல் அவர்கள் ஒரு மறுதலிப்பை உரைக்கின்றனர் (ஏச 53:4-இல் உள்ள மனமாற்றத்தைப் போன்று): ''அவருடைய வாழ்வை நாம் மடமை என்று எண்ணினோம், அவர் முடிவு இழிவானதென்று நினைத்தோமே!. கடவுளின் புதல்வர்களுள் அவருக்கு இடம் கிடைத்ததெப்படி?'' மற்ற பகுதிகளில் இறைவனின் மக்கள் என்பவர்கள் புறவின நாடுகளினின்று வேறுபட்ட இஸ்ராயேலர் ஆவார் (எண் 21:29-இல் மோவாபியர் கேமோசின் மகன்களாகவும் மகள்களாகவும் இருப்பதைக் காண்க: மலா 2:11; யூதி 9:4.13; எஸ்த 16:16; ஞான 9:7; 12:19.21; திருவுரை 36:12: தலைப்பேறான மகன்).

2. புதிய ஏற்பாட்டு வழக்கு:-

அ. ஒழுக்க உட்பொருள்:- புதிய ஏற்பாட்டில் இச்சொல் (பிள்ளைகளோ அல்லது புதல்வர்களோ) இஸ்ராயேலுக்கு மட்டும் சாற்றிக் கூறும் குறுகிய பொருள் கைவிடப்பட்டு ''இறைவனின் இஸ்ராயேலுக்கு'' (ஏச 63:16) சாற்றிக் கூறப்படும் அளவுக்கு இச்சொல்லின் ஒழுக்கப்பொருள் மிக உறுதியாக அமைக்கப்பட்டதாகஉருவாகிறது. ஓசே1:10-இல் எடுத்துக் கூறப்பட்டு, புறவினத்தாரை ஏற்றுக்கொள்வதற்குச் சாற்றிக் கூறப்படும் உரோ 9:7-8.25-36-இல் இது குறிப்பிடத்தக்க வகையில் காணப்படுகிறது (கலா 3:7: ''விசுவாசத்தில் வாழ்கிறவர்களே ஆபிரகாமின் மக்கள்''). மாறுபட்ட நிலையில் ஆழ்ந்த ஆன்மீக மனப்பான்மையினின்று விலக்கப்பட்டு சாதாரண தேசிய உரிமையானது யோவா 8:41-42. 44-இல் கடுமையாக மறுக்கப்படுகிறது. ''எங்களுக்கு ஒரே தந்தை உண்டு; கடவுளே அவர்''. இயேசு அவர்களை நோக்கி கூறியது ''கடவுள் உங்கள் தந்தையாயிருப்பின் எனக்கு அன்பு செய்வீர்கள்..அலகையே உங்கள் தந்தை'' (பிந்தைய சொற்றொடருக்கு காண்க: மத் 13:38; ''தீயோனுடைய மக்கள்''; அ.ப. 13:10: ''அலகையின் வழிவந்தவனே''). மேலே குறிப்பிடப்பட்ட திருமுழுக்கு யோவானின் சொற்களுடன் இவை ஒப்பிடப்படலாம் (மத் 3:8-9 இ).

ஆ. இயேசுவின் வாக்குகள்:- பவுலின் திருமுகங்களிலிருந்து சில பகுதிகளில், இயேசுவின் இறப்பு மற்றும் உயிர்ப்பைத் தொடர்ந்து, கிறிஸ்தவ புறவினத்தாரை அனுமதிப்பதன்மீது பிரச்சினைகளின் சிந்தனைகள் காணப்படுகின்றன. யோவா 8-இல் ஏற்கனவே சுட்டிக்காட்டப் பட்ட பகுதியானது இதே முத்திரையைக் கொண்டிருக்கிறது என்று கூறலாம். இதனுடைய கருத்தானது, பவுலின் எண்ணத்திற்கு குறிப்பிடத்தக்க முறையில் ஒத்த சொற்களைக் கொண்டுள்ளது: ''வீட்டில்அடிமைக்கு நிலையான இடமில்லை; மகனுக்கே எப்பொழுதும் இடமுண்டு. எனவே, மகன் உங்களுக்கு விடுதலையளித்தால்தான். உங்களுக்கு உண்மையான விடுதலை கிடைக்கும்'' (யோவா 8:35-36). இத்தகைய பகுதிகளில், உயிர்த்தெழுதலுக்கு பிறபட்ட திருச்சபையின் எண்

ணம் மனப்போராட்டம் ஆகியவற்றின் எதி ரொலியை காணக்கூடுமாயின், இயேசுவினு டைய பணியின் உண்மையான நிலைக்கு இயல்பாகவே பொருந்துவதாக தோன்று கின்ற பழைய ஏற்பாட்டுச் சிந்தனையைத் தொடர்ந்து, அதை இன்னும் ஆழப்படுத்து கின்ற சொற்கள், ஒத்தமை நற்செய்திகளிலும் உள்ளன. இத்தகைய பகுதிகள், மத் 5:9: ''சமாதானம்செய்வோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் இறைவனின் மக்கள் எனப்படுவர்'' (அவர்கள் வானதூதர்களாக மாற குறிக்கப்பட்டுள்ளனர் என்று லூக் 20:36-இல் வருவதுபோல் பொருள் அளிக்க இடம ளிக்கிறது). மற்றும், மத் 5:44-45; ''நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் பகை வர்களுக்கு அன்பு செய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள். அப்பொழுது வானகத்திலுள்ள உங்கள் தந்தை யின் மக்களாயிருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கிறார்''. தங்களது அயலார் மீது ஆழ்ந்த அக்கறையுள்ளவர்களாகவும், குணத்தினால் இறைவனுடனே சேர்ந்தும் உள்ள நடுநிலை தவறாத நல்லோர் இவர்களே. காண் லூக் 6:35 (''உன்னதரின் மக்கள்'').

இக்கருத்தை, கிறிஸ்தவர்கள் என்பவர்கள் தந்தை கவனம் செலுத்தாத வேசிப்பிள்ளைக ளாக இல்லாமல், விண்ணக தந்தையின் கவனமுள்ள கண்டிப்பின் கீழுள்ள, இறைவ னின் உண்மையான மக்கள் என்பதற்கு துன்பம் ஓர் அடையாளமாக விளக்கப்படுகின்ற எபி 12:5-8-இல் உள்ள சொற்களோடு ஒப்பி படலாம். இயேசுவின் மற்றொரு போதனை யும் உண்டு. அதாவது, மத் 12:48-50 (மாற் 3:33-35; லூக் 8:21); ''யார் என் தாய்? யார் என் சகோதரர் என்று சொல்லி, தம் சீடர் பக்கம் கையைக்காட்டி, 'இதோ, என் தாயும் என் சகோதரரும். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடக்கிறவன் எவனோ அவனே என் சகோதரனும் சகோத ரியும் தாயும் ஆவான்''. மகனுடைய கீழ்ப்படி தல், மற்றும் எல்லா சகோதரரிலும் முதல்பே றான இயேசு ஆகிய பவுலின் கருத்துக்கள் இங்கே உள்ளன. மீண்டும் மத் 11:25; லூக் 10:21-22-இல் உள்ள புகழ்பெற்ற சொற்றொ டரானது இதே எண்ணத்தை நினைவூட்டுகி றது; ஏனெனில், இங்கு கிறிஸ்து, மகன் என்ற தனிப்பட்ட நிலையில் மற்றவர்க ளுக்கு இறைவனின் தந்தை நிலையை வெளிப்படுத்தக் கூடியவராக உள்ளார். இவ்வாறு, அவர்களும் சுவிகாரப் பிள்ளைகளாகி றார்கள்.

இ. சொல்லின் வரையறுக்கப்பட்ட பொருள்:- பழைய ஏற்பாடானது தேர்ந்தெ டுக்கப்பட்ட மக்களைவிட, (அல்லது ஒர ளவு சிறப்பான பொருளில் அவர்களது துணையாளர்களையும் சேர்த்து) மற்றவர் களை இறைவனின் மக்களாகப் பார்ப்பதை விட மேற்பட்ட நிலையில், புதிய ஏற்பாடா னது அனைத்து மக்களும் இறைவனின் பிள் ளைகள் என்னும் கோட்பாட்டினை அளிப்ப தாகத் தெரியவில்லை. லூக்காவின் தலை முறை அட்டவணையில் ஆதாம் கடவுளின் மகன் என்பது உண்மையே (3:38). மற்ற மனிதர்கள் அனைவரும் அவரினத்தைச் சேர்ந்தவர்களே (அ.ப. 17:28). ஆனால், இப் பகுதிகளை எடுத்துக்காட்டாகப் பயன்ப டுத்த முடியாது. யோவா 10:35-இல் சங்.82: 6-யை விநோதமான முறையில் எடுத்துக் கூறல் (சங்கீதத்தில் ''உனைதரின் மக்கள்'' என்பதுடன் தொடரக் கூடிய ''நீங்கள் தேவர் கள்'') இறைவனின் வார்த்தை யாருக்கு வந்ததோ அவர்ளுக்கு மட்டுமே உரித்தாக்கப் பட்டுள்ளது. இவ்வாறு, எல்லா மக்களும் இறைவனின் பிள்ளைகளாகக் கூடியவர்க ளாக இருந்தாலும், உண்மையில் சுவிகரிக் கப்பட்டவர்கள், அல்லது ஈன்றெடுக்கப்பட் டவர்கள் அல்லது புதிதாய் பிறந்தவர்கள் (யோவா 3:3; 1 பேதுரு 1:3; 2:2) அல்லது இறைவனால் பிறப்பளிக்கப்பட்டவர்கள் (யாக் 1:18) மட்டுமே இறைவனின் பிள்ளை களாகின்றனர்.

சுவிகாரம், ஈன்றெடுத்தல், பிறப்பு போன்ற பல்வேறு உருவங்கள், பிள்ளைகள் மற்றும் புதல்வர்களுக்கிடையே புரிந்துக் கொள்ளக்கடிய வேறுபாடு இருப்பதாகச்

சுட்டுகின்றன. ''பிள்ளைகள்'' என்பது பிறத்தல் அல்லது ஈன்றெடுத்தல் என்னும் உருவகங்களுக்கும், ''புதல்வர்கள்'' என்பது சுவிகரித்தல் மற்றும் தகுதியளித்தல் என்னும் உருவகங்களுக்கும் பொருத்தமானதாக உள்ளது. ஆனால், இவற்றிற்கு இடையிலுள்ள வேறுபாட்டை வலியுறுத்துவதில் எவ்வித பயனுமில்லை. ''புதல்வர்கள்'' மற்றும் ''பிள்ளைகள்'' ஆகிய இரண்டு சொற்களையுமே பவுல் பயன்படுத்துகிறார். யோவான் ''பிள்ளைகள்'' என்ற சொல்லை மட்டுமே உபயோகிக்கிறார் (கிறிஸ்துவைப் பற்றிய குறிப்புகளையும் யோவா 8:35-யையும் தவிர்த்து) இவ்வாறு பயன்படுத்துவது நடையைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

ஈ. இறைவனின் தயவால் பிள்ளைகள் ஆகுதல்:- இச்சொல்லின் வரம்புக்குட்பட்ட பொருளில் புதிய ஏற்பாட்டின் ''இந்த புதல்வர்கள்'' என்ற கருத்தின் மிகச்சிறப்பான கூறை மிக நெருங்கி ஆய்வு செய்யவேண்டும். அக்கூறு மகன் என்ற நிலை தன்மையாலும் உள்ளார்ந்த பண்பாலும் கிறிஸ்துவுக்கு மட்டுமே உரியது. அவர் இடையாளராக இருந்து மனிதனுக்கு அளிக்கலாம். அவரில் மட்டுமே அது மனிதனுக்கு உரிமையாகக் கூடும் என்பதாகும். இவ்வாறு, யோவா 1:11-12: ''தமக்குரிய இடத்திற்கு வந்தார்; அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அவர் தமது பெயரிலே விசுவாசம் வைத்துத் தம்மை ஏற்றுக் கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார்''; அல்லது, பவுலின் சொற்களில் (உரோ 8:29): ''கடவுள் யாரை முன்பே தேர்ந்து கொண்டாரோ, அவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்ற உருவைத் தாங்கும்படி முன்குறித்திருக்கிறார்; சகோதரர் பலருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்றே இப்படிக் குறித்தார்'' (காண் எபி 2:10).

அதே பொருளை மற்றொரு முறையில் கூறும் விதமாக பவுல் (அடிக்கடி இல்லாவிட்டாலும்) ''சுவிகாரம்'' என்ற ஒப்புமையை உபயோகிக்கிறார். அடிமை நிலையினை மகனின் நிலையோடு ஒப்பிட்டு வேறுபடுத்தி இயேசுவே உரைத்த மகனுக்குரிய கீழ்ப்படிதலின் கூக்குரலை உரைக்கக் கூடியதானது ''பிள்ளைகளாகும் தேவ ஆவியின்'' (அல்லது சுவிகாரத்தைக் கொண்டு வருகின்ற ஆவியின்) கொடையே என்றும் பவுல் கூறுகின்றார்; ''பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக் கொண்டீர்கள் (சுவிகாரத்தைக் கொண்டு வருகின்ற ஆவி). அந்த ஆவியினால் நாம், ''அப்பா, தந்தாய்'' எனக் கூப்பிடுகிறோம். நாம் இவ்வாறு கூப்பிடும் போது தேவ ஆவியானவரே நாம் கடவுளின் பிள்ளைகள் என்று சான்று பகர்கிறார்'' (உரோ 8:15-16). கலா 3:23-4:7-இல் இந்த மகனுக்குரிய மனப்பான்மையானது விசுவாசத்தினுடைய முழு உணர்வுள்ள பதிலுடன் இணைந்தே செல்கின்றது என்பதைக் காட்டும் விதமாக, இந்த சிந்தனையானது முழு விவரத்துடன் அமைந்துள்ளது. எனவே, பிலி 2:15-இல் மற்றவர்களுக்கு மிகவும் மாறுபட்ட நிலையில் கிறிஸ்தவர்கள்தான் நேர்மையற்ற தவறான போக்குடையவர்களின் நடுவில், குற்றமற்ற மாசற்ற இறைவனின் பிள்ளைகள் (உப 35:5-இல் உள்ள, அவரது தகுதியற்ற பிரதிநிதிகளாகிய இறைவனின் குற்றமற்ற பிள்ளைகளை மறைவாகச் சுட்டிக்காட்டி) என்று விவரிக்கப்படுகின்றனர்.

''ஞானஸ்நான மறுபிறப்பு'' என்பது இவ்வுறவினுடைய அருட்சாதன விளம்பலாகும். யோவா 3:5-இல் வரும் நீர் மற்றும் ஆவியை மறுபிறப்புடன் இணைப்பதானது அதனில் ஒரு மறைவான சுட்டிக்காட்டலைக் காணச்செய்கிறது. மற்ற விதத்தில் இப்பதத்திற்கு நெருங்கி வரும் புதிய ஏற்பாட்டுப் பகுதி தீத் 3:5-இல் உள்ளது: ''புதுப்பிறப்பைத் தரும் முழுக்கினாலும் புத்துயிர் அளிக்கும் பரிசுத்த ஆவியினாலும்''; ஞானஸ்நானக் கருத்து சுவிகாரச் சுட்டிக்காட்டலைக் கொண்டிருந்தால் 1 பேதுரு 3:21:21-வும் இதனுடன் சேர்க்கப்பட வேண்டும்.

1 யோவா 3:1-இல் சில விளக்கவுரையாளர்கள், சாதாரண சுவிகாரத்திற்கும் தன்மை

யால் வரும் உறவு முறைக்கும் இடையில் சிறிது வேறுபாட்டினைக் காண்கின்றனர் என்பதும் கூறப்பட வேண்டும்: ''பரம தந்தை நம்மிடம் காட்டிய அன்பு எவ்வளவு என்று பாருங்கள்! நாம் கடவுளின் மக்கள் என்று அழைக்கப்படுகிறோம். அவருடைய மக்களாகவே இருக்கிறோம்'' ஆயினும், மற்றவர்கள் ''அவருடைய மக்களாகவே இருக்கிறோம்'' என்பதை வெறுமனே ''அழைக்கப்படுகிறோம்'' என்பதைவிட அடுத்த வசனத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ள வருங்கால நிலையோடு சேர்த்து, வேறுபடுத்தும் முறையில் கையாளுவர்.

உ. மகன் தன்மையும் எதிர்காலமும்:- கிறிஸ்தவர்கள் ஏற்கனவே இறைவனின் பிள்ளைகளாக இருந்தாலும், இந்நிலையின் முழுமையான வெளிப்பாடு இன்னும் வர வேண்டி உள்ளது (அல்லது கிறிஸ்துவின் இன்னும் முழுமை வெளிப்பாட்டில் உறுதிப்பாடு எதிர்பார்க்கப்படுகிறது) என்னும் அறிவிப்பை 1 யோவா 3:1-இல் காண்கிறோம். கிறிஸ்து தோன்றும்போது இவ்வாறு நிகழும் இறைவனுக்கு மகனாய் இருக்கும் தன்மையானது, இறுதியாக வெளிப்படுத்தப்பட வேண்டிய உயர்ந்த முடிவுடன் ஊழைக் கொண்டுள்ளது என்னும் புதிய ஏற்பாடு கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது. இது ''இறைவனின் பிள்ளைகளுக்குரிய மகிமையும் விடுதலையும்'' என உரோ 8:21-இல் விவரிக்கப்படுகின்றது. இச்சூழ்நிலையில், இது நம்பிக்கையிழப்பு, அழிவு மற்றும் மரணத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுதலை அடைவதை உணர்த்துவதாகத் தெரிகிறது. இவ்விடுதலையானது, உண்மையான மகன் தன்மையினுடைய மாட்சிமை பெறப்பட்ட உடனே பலரறிய வெளிப்படுத்தப்படும். இதே ஊழை ''புதல்வர் பலரை மகிமைக்கு அழைத்துச் செல்லுதல்'' என எபி 2:10 விவரிக்கின்றது. முழுமையாக கீழ்ப்படிந்தவராகவும், இறைவனுடைய நிறைவான மகனாகவும் உள்ள கிறிஸ்து வழியைத் தொடங்கி வைத்துள்ளார் (எபி 2:10-18; 5:8-9). அவர்களுக்கென்ற இறைவனின் திட்டம் முழுமையாக நிறைவேறுதலுக்கு அவரில் மற்றவர்களைக் கொண்டு வருவதென்பது இன்னும் மீதமுள்ளது. இத்தகைய நம்பிக்கையைத் தனிப்பட்ட நபர்களுக்கு எடுத்துக்கூறி, வெற்றிபெறும் ஒவ்வொருவனும் இறைவனின் மகன் ஆவான் என திருவெளி 21:7 வாக்களிக்கின்றது. இதுவே கிறிஸ்தவனுக்குச் சாற்றிக்கூறப்படும் மெசியாவின் உறுதிமொழியாகும் (2 சாமு 7:14). ஆனால் எபே 4:13-இல் இந்நம்பிக்கையானது முழுவளர்ச்சி அடைந்த முதிர்ச்சியின் உயர்ந்த எதிர்பார்ப்பாகத் தோற்றம் பெற்றுள்ளது; ''இறுதியாக நாம் எல்லோரும் கடவுளின் திருமகனைப்பற்றிய விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பாட்டை எய்துவோம், கிறிஸ்துவினுடைய முழுப்பருவத்தின் அளவை அடைந்து முதிர்ச்சிபெற்ற மனிதனாவோம்'' இதுவே மனித இனத்தினுடைய வரவிருக்கும் காலமாக இருக்கும்.

இறைவனின் பெயர்கள் (NAMES OF GOD)

இறைவனின் பெயரைப் பற்றி அறிந்திருப்பது, இறைவன் பற்றிய விவிலியத்தின் கோட்பாட்டைப் புரிந்து கொள்ள மிகவும் அவசியமானது. விவிலியத்தின் கேள்வி இறைவன் இருக்கிறாரா என்பதன்று. மாறாக இறைவன் யார்? எப்படிப்பட்டவர்? என்பதேயாகும். இறைவன் இருக்கின்றார் என்ற உண்மையை விவிலியம் விளக்குவதில்லை. மாறாக இறைவன் எப்படி மனிதனிடம் உறவு கொண்டுள்ளார் என்பதை விளக்குகிறது. இஸ்ராயேல் மக்களின் இறைவன் யாவேயாவார். 'யாவே' என்னும் பெயரைத் தவிர வேறுபல பெயர்களும் விவிலியத்தில் அவருக்கு வழங்கப்படுகின்றன. ஒருவரின் பெயர், அவருடைய முழுத் தன்மையை விளக்கிக் காட்டும். ஒரு பெயர் ஒரு நபரின் முழுமையான தோற்றத்தைக்கூட எடுத்துக்காட்டலாம். மோசேக்குக் கடவுள் தம்மை வெளிப்படுத்தத் தமது பெயரைச் சொல்லுகிறார் (யாத் 3.) கடவுளின் பெயரிலிருந்தே அவரை நாம் அறிந்து கொள்கிறோம். விவிலியத் திருநாட்டின் அண்டைய நாடுகளில் பல்வேறு கடவுள்களின் பெயர்கள் வழங்கப்பட்டு வந்தன. இப்பெயர்களுக்

கிடையில் இஸ்ராயேல் மக்களும் தங்கள் கடவுளுக்கென ஒரு பெயரை அறிந்திருந்த னர். கடவுளின் முழுத்தன்மையும் அவரு டைய பெயர்களில் வெளிப்படுகின்றது (யாத் 23:20-21). கடவளின் பெயர் சக்திமிக்க தாகவும், புனிதனமானதாகவும், அதிகாரம் கொண்டதாகவும் காணப்படுகிறது (யாத் 20:7; உப 5:11). கடவுளின் பெயர் மக்களி டையே அவர் கொண்டுள்ள பிரசன்னத்தைக் குறிக்கிறது. கடவுளின் பெயர் மகிமை நிறைந்ததாகும். கடவுளின் பெயரை வெளிப் படுத்தியவர் கடவுளே. மனிதனோடு உறவு கொள்ள விழையும் கடவுளின் திருவெளிப் பாடே அவரது பெயராகும். ஒரு பெயருக் கும், அப்பெயரைத் தாங்கிய நபருக்கும் இடையேயான உறவு மிகவும் நெருக்கமான தாகும். கடவுளின் பெயரை அறிவது அவரை அறிவதாகும் (சங் 9:10; 91:14). இயேசுவின் பணி இறைவனின் பெயரை வெளிப்படுத்துவதேயாகும் (யோவா 17:6, 26).

கடவுளின், 'யாவே' என்னும் பெயர் மோயீசன் வழியாக அருளப்படுகிறது. யாவே என்பது மீட்பின் கடவுள் எனப் பொருள்பட்டது. யாவே, தாம் ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் எனக் கூறுகிறார் (யாத் 6:2-3). யாவே என்னும் பெயருக்கு, உங்களுக்கு உதவ உங்களோடு இருக்கிறேன் என்பதா கும். (காண்க:யாவே). யாவே என்னும் இப்பெயரைத்தவிர கடவுளுக்கு விவிலியத் தில் வேறுபல பெயர்களும் வழங்கப்படு கின்றன. அவை பொதுவாகக் கடவுளின் தெய்வீகத்தன்மையின் பட்டப் பெயர்களா கவே அமைந்துள்ளன.

கிழக்கித்திய மக்கள் பொதுவாக 'ஏல்' என்னும் சொல்லைக் 'கடவுள்' என்னும் பொருளில் பயன்படுத்தினர். எனவே கட வுளை ஒரு பெயரிட்டு அழைத்தால் 'எல்' என்னும் சொல் அப்பெயருக்கு முன்னால் இணைக்கப்படும். யாவேயுக்கு, ''ஏல்'' என்று ஆரம்பிக்கக் கூடிய வேறுபல பெயர்க ளும் உண்டு.

1. ஏல் சத்தாய்: இது 'எல்லாம் வல்லவர்' கடவுள் என்னும் பொருளில் பயன்படுத்தப் பட்டது. மூதாதையர்களின் காலங்களில், யாவேக்குப் பதிலாகக் கடவுளுக்கு இப்பெ யர் வழங்கப்பட்டது. 'மலைகளில் ஒருவர்' எனவும் இப்பெயர் பொருள்பெற்றது.

2. ஏல் எலியோன்: இது 'உயர்த்தப்பட்ட வர்' கடவுள் என்னும் பொருளில் பயன்ப டுத்தப்பட்டது. கடவுள்களிலேயே உயர்த்தப் பட்டவர் இவர் எனப் பொருள்பட்டது. மெல்க்கிசதேக்கு ஏல் எலியோனின் குருவா வார் (ஆதி 14).

3. ஏல் ஒலாம்:- இது 'முடிவில்லாதவர்' கடவுள் என்னும் பொருளில் பயன்படுத்தப் பட்டது (ஆதி 21:33). உயிருள்ள கடவுள் எனவும் இது பொருள்பட்டது. யாவே முடி வில்லாக் கடவுள் என அழைக்கப்படுகிறார் (ஏச 40:28).

4. ஏல் பெத்தேல்:- கடவுள் பெத்தல் எனும் இடத்தில் தம்மை வெளிப்படுத்தி யதை இது குறிக்கும் (ஆதி 35:7).

5. ஏல் ராய்: 'கடவுள் என்னைப் பார்க்கி றார்' என்ற பொருளில் இப்பெயர் கடவு ளுக்கு வழங்கப்பட்டது (ஆதி 16:13).

6. ஏல் பெரித்: 'உடன்படிக்கையின் கட வுள்' என இது பொருள்பட்டது (நீதி 9:46).

7. ஏல் எல்லோகே இஸ்ராயேல்: ''ஏல், இஸ்ராயேலின் கடவுள் ஆவார் என இது பொருள்பட்டது (ஆதி 33:19-20).

கடவுளுக்கு எலோகிம் என்ற பொதுப் பெயரையும் விவிலியம் குறிப்பிடுகிறது. இது தவிர எலோவா, பாகால், ஆதோன் போன்ற பெயர்களும் சில இடங்களில் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கூறிய பெயர்களைத் தவிர, கடவுளைக் குறிக்கப் பல நபர்களும் பொருள்களும் உருவமாகப் பயன்பட்டுள்ளன.

1. பாறை:- யாவே பாறையாக வருணிக் கப்படுகிறார் (ஏச 30:29; ஆதி 49:24). பாறை

என்பது வலிமை மற்றும் நிலையானது என்பதன் சின்னமாகும். எனவே பாறை இறைவனின் வலிமையையும், நிலையான நிலையையும் குறிக்கிறது.

2. தந்தை,சகோதரன், உறவினன்:- கடவுள் தந்தையாகவும் (எண் 1:9), சகோதரனாகவும் (எண் 1:12), உறவினனாகவும் (எண் 1:12) கூறப்படுகின்றார்.

3. அரசன், நீதிபதி, மேய்ப்பன்:- கடவுள் இஸ்ராயேலின் அரசனாகவும் (நீதி 8:23) நீதிபதியாகவும் (ஆதி 18:25), மேய்ப்பனாகவும் (ஏச 40:11) கூறப்படுகிறார்.

இஸ்ராயேலின் கடவுள் உயிருள்ள கடவுளாகவும் (1 சாமு 17:26. 36; 2 அர 19:4.16; எரே 10:10), தொடக்கமும் முடிவுமாகவும் (ஏச 44:6; 48:12) ''என்றும் வாழ்ந்தவர்'' என்றும் (7:9, 13, 22) கூறப்படுகிறார்.

இறைவனின் மக்கள் (PEOPLE OF GOD)

பழைய ஏற்பாட்டில் யாவேக்கும் அவருடைய மக்களுக்குமிடையே நிலவிய தனித்துவமிக்க உறவுமுறையினை சுட்டிக்காட்டுகின்ற பல்வேறு சொற்றொடர்களில் ஒன்று (எண் 11:29; 16:41; நீதி 5:11.13; 1 சாமு 2:24; 2 சாமு 6:21; 2 அர 9:6; செப் 2:10; நீதி 20:2; 2 சாமு 14:3); அதையொத்த பொருளில் புதியஏற்பாட்டிலும் பயன்படுகிறது.

1. பழைய ஏற்பாடு:- இஸ்ராயேலானது யாவேயின் ''சொத்து, உடைமை, உரிமைச் சொத்து'' (யாத் 19:5; உப 4:20; 7:6; மலா 3:17); அவரது ''ஊழியன் (சங் 135:14; ஏச 48:20); அவரது ''மகன்'' (யாத் 4:22-23; ஓசே 11:1); அவரது ''மந்தை'' (சங் 95:7); அவரது ''புனித மக்கள்'' (உப 14:2; 28:9; ஏச 62:12). ''இறைவனின் மக்கள்'' என்னும் பதம் சில முறையே தோன்றினாலும், மக்கள் என்னும் சொல்லானது உடைமை உரிச்சொல்லுடன் (''எனது மக்கள்'', ''உமது மக்கள்'', ''அவரது மக்கள்'') அடிக்கடி வருகின்றது.

''யாவேயின் மக்கள்'' என்னும் பதம், பொதுவான விரோதிக்கு எதிராக பாதுகாப்புப் போர் புரிய ஒன்று சேர்ந்த உடல் வலிமையுள்ளவர்களின் கூட்டத்தினைக் குறிப்பதாக, முடியாட்சிக்கு முன்னர் இனக் கூட்டாட்சிக்காலத்தில் புனிதப் போரின் வழிபாட்டு அமைப்பில் தோன்றியிருக்கலாம் (நீதி 5:11. 13; 20:2), இந்த அமைப்பிற்கு பின்னால், தனித் தன்மையுடைய உடன்படிக்கை உறவு உள்ளது. இதன்படி வரலாற்றில் சில குறிப்பிட்ட வலிமை மிக்க செயல்களின் மூலம் இஸ்ராயேல் மக்களை ஏற்படுத்தி அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்ட யாவேயை விசுவாச அறிக்கை செய்தனர் (உப 26:5-9; யோசு 24:2-13). உடன்படிக்கை சட்டத்திற்குப் பிரமாணிக்கத்தோடு கூடிய இவ்வுடன்படிக்கையின் வழிபாட்டுப் புதுப்பித்தல், தொன்மையான இஸ்ராயேலின் வழிபாட்டின் மையமாக அமைந்திருந்ததாகத் தெரிகிறது.

உப 4 (யாத் 19:4-6; உப 7:6-12; 32:8; சங் 135) இஸ்ராயேலோடு யாவே கொண்டிருந்த உறவின் தன்மையை ஏழாவது நூற்றாண்டு இறையியல் சொற்களில் எடுத்துக் கூறுகிறது. இஸ்ராயேலின்மீது இறைவன் அன்பை வெளிப்படுத்தும் அளவிற்கு அதனில் கவரக் கூடியதாகவோ (உப 7:7) அல்லது நற்குணமுடையதாகவோ (9:5-6) ஒன்றுமில்லாவிடினும், அன்பில் உருவாக்கப்பட்ட அவருடைய மகிமையான தேர்வின் காரணமாக (4:37; 7:6; 14:2; சங் 135:4), இஸ்ராயேல் யாவேயின் உடைமையாக உள்ளது (உப 4:20). உடன்படிக்கையின் வாக்குறுதிகளை இஸ்ராயேல் அனுபவிப்பதென்பது கடமைகளுக்கு பிரமாணிக்கமாயிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டுள்ள நிலையில் (4:40), யாவே தமது உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக உள்ளார் (4:31).

தாவீது மற்றும் சாலமோனுடைய பேரரசின் பரந்த மாட்சிமையானது, இறைவனோடு இஸ்ராயேல் கொண்டிருந்த சிறப்பான உறவுமுறையை, அதனுடைய வாழ்வின் அடித்தளமாகவும் விதிமுறையாகவும் சுருக்கித் தருவதாகத் தோன்றும்போது, ஒன்பதிலிருந்து ஏழாவது நூற்றாண்டு வரையி

லான இறைவாக்கினர்கள், இவ்வுறவுமுறையானது இஸ்ராயேலைத் தீர்ப்புக்குள்ளாக்கியது என்று போதித்தனர்; இஸ்ராயேலின் பிரமாணிக்கமின்மையால் உடன்படிக்கையானது முறிக்கப்பட்டு விட்டது; எனவே இனிமேல் அவர்கள் ''என் மக்கள்'' அல்லர் (ஓசே 1:9; உப 4:27; ஏச 1:10; ஆமோ 3:2).

ஆயினும், ஆண்டவரின் விசுவாசம் மாறாததாக உள்ளது (ஓசே 2; உப 4:31). மனந்திருந்திய ''எஞ்சியோர்'' ஆண்டவரின் மக்கள் என்று இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்படுதலை இன்னும் எதிர்பார்க்கலாம் (ஓசே 2:23; எரே 31:31-34; ஏச 11:16-20). அடிமைத்தனத்திற்கு பிற்பட்ட இறைவாக்குகளில் மீண்டும் அமைக்கப்படுதல் பற்றிய கோட்பாடானது, எல்லா நாடுகளையும் உள்ளடக்குமுறையில் சில நேரங்களில் நாட்டு எல்லைகளையும் முறித்துக் கடந்து செல்கிறது (செக் 2:10-12; ஏச 45:18-25; 49:6; 55:4-7). ஆனால் இத்தகை உலகவியலான பொதுமைப்பண்புக்கு எதிராக ஒரு வலுவான ஒதுங்கியிருக்கும் சமயம் போக்கு எழுந்தது; பிற்கால யூதத்துவத்தின் வழிகாட்டும் கூறாக அமைந்தது.

2. புதிய ஏற்பாடு:- ''இறைவனின் மக்கள்'' மற்றும் அது தொடர்பான பதங்கள், ''பழைய இஸ்ராயேலை'' விவரிக்க பயன்படடிருக்கலாம் (எபி 11:25; மத் 1:21; லூக் 1:68; உரோ 11:1-2). ஆனால், முடிவான புதிய ஏற்பாட்டு வழக்கு, இயேசு கிறிஸ்துவின் மீது கொண்ட விசுவாசத்தில் அமைக்கப்பட்ட திருச்சபையோடு இறைவனின் மக்களை ஒன்றாக்குகிறது (உரோ 9:25-26; 2 கொரி 6:14; தீத் 2:14; எபி 8:10; 1 பேதுரு 2:9-10; திருவெளி 21:3). அதே போன்ற பழைய ஏற்பாட்டு நிறைவேறல் என்ற இதையொத்த பணித்திட்டத்தில், புதிய ஏற்பாடானது திருச்சபையை உண்மையான இஸ்ராயலாகவும் (உரோ 9:6; 1 கொரி 10:18; கலா 6:16), ஆபிரகாமின் உண்மையான வித்தாகவும் (கலா 3:29; உரோ 9:7-8), உண்மையான விருத்தசேதனமாகவும் (பிலி 3:3) மற்றும் உண்மையான ஆலயமாகவும் (1 கொரி 3:16) காண்கிறது.

இறைவனின் மலை, யாவேயின் மலை (MOUNTAIN OF GOD, OR YAHWEH)

கடவுள் வசிக்கும் இடங்களைப் பற்றிய கானானியர் மற்றும் மெசபொத்தாமியர்களின் நம்பிக்கைகளை நினைவுபடுத்தும் முறையில், இஸ்ராயேலின் இறைவன் தங்கியுள்ள, அல்லது தமது மக்களுக்கு தமது பிரசன்னத்தை அவர் அளித்த இடத்தினை அவர்கள் பெரும்பாலும் மலை என்றே குறிப்பிட்டனர். ஆனால், எப்போதும் ஒரே குறிப்பிட்ட மலையினை அவர்கள் குறிப்பிடவில்லை. சீரியப்படையின் தளபதிகள், மலை நாட்டில் இஸ்ராயேலர்களிடம் தாங்கள் தோல்வியுற்றதற்குக் காரணம், கனானியத் தெய்வங்களைப்போன்று இஸ்ராயேலின் இறைவனும் ஒரு மலை தெய்வமாக இருப்பதே என்று பென்-காதாதிற்கு அறிவுறுத்துகின்றனர் (1 அர 30:23). தொன்மையான உலகில், தேவர்களின் இல்லங்களாக கருதப்பட்ட மலைகள், வழிபாட்டு இடங்களாகவும் கருதப்பட்டன (உப 12:2); அவ்வாறே, இஸ்ராயேலிலும், இறைவனுடன் தொடர்பு கொண்டிருந்த மலைகள், வழிபாடு மற்றும் திருயாத்திரை இடங்களாவும் இறைமகிமைத் தோற்றத்திற்குரிய இடங்களாகவும் கருதப்பட்டன.

பழைய ஏற்பாட்டில் இரண்டு மலைகள் ''இறைவனின் மலை'' அல்லது ''ஆண்டவரின் மலை'' என்று அறியப்படுகின்றன; ஒன்று சீனாய் அல்லது ஓரேபு (யாத் 3:1; 4:27; 18:5; 24:15; எண் 10:53; 1 அர 19:8) மற்றது எருசலேமிலுள்ள தேவாலயக் குன்று (ஆதி 22:14; ஏசா 2:3 ஆண்டவரின் மலை; 30:29; சங் 24:3 ஆண்டவரது மலை). பின்னர் குறிப்பிடப்பட்டது ''அவருடைய அல்லது என்னுடைய (இறைவனுடைய) புனித மலை'' (சங் 48:1; ஏச 65:11) என்றும் அழைக்கப்படுகிறது. ஆனால், இச்சொற்றொடரானது இஸ்ராயேலின் முழு நாட்டையும் குளிப்பிடுகின்றது (ஏச 65:25; எச 20:42; யாத் 15:17). இறைவன் உறையவிரும்பும் மலையாகிய எருசலேமிலுள்ள ஆலய மலையைக் கண்டு கடவுள்களின் மலையான

பாசான் பொறாமைப்படுவதாக சங் 68:15-17 விவரிக்கின்றது.

இறை வழிபாட்டினை ஒரு மலையுடன் தொடர்புபடுத்திய மக்களுக்கு, வேறு தெய்வத்துடன் தொடர்புள்ள வேறு எந்த மலையிலும் யாவேயை வழிபடாமலிருப்பது முக்கியமானதாகும் (உப 12:2). இறைவனை எந்த மலையில் வழிபட வேண்டும் (சீயோன் அல்லது கெரிசீம்) என்பது யூதரையும் சமாரியரையும் பிரிக்கின்ற முக்கிய பிரச்சினையாக இருந்தது; இயேசு இப்பிரச்சினையைத் தீர்க்க விரும்பினார் (யோவா 4:20-24).

சில கிரேக்க திருத்தங்கள் கிபயோனின் நகரில் ஒரு ''ஆண்டவரின் மலையைக்'' குறிப்பிடுகின்றன (2 சாமு 21:6,9). ஆனால், உண்மையில் ''ஆண்டவர் தேர்ந்துகொண்ட சவுலின் நகராகிய கிபயோன்'' என்பதே சரியான வாசகமாக இருக்கலாம்.

இறைவனின் விரல், கைவண்ணம் (FINGER OF GOD)

கடவுளின் சக்தியை குறிக்கும் ஒரு உருவகம். விரல் வேலைசெய்ய உதவும் ஒரு கருவியாக நோக்கப்படுகிறது. கடவுளுக்குச் சாற்றிக் கூறும்போது இது சிறப்பாக உண்மையாகும். பலதடவைகளில் விரல், கை என்றும் புரிந்துக் கொள்ளப்பட்டு, இரண்டும் தெய்வீகச் சக்தியைத்தான் குறிக்கிறன. இவ்வாறு கடவுளுடைய கரம்தான் எகிப்திய பாரவோன் மன்னன் மேலும் அவனுடைய மாந்திரிகர்கள் மேலும் கொள்ளை நோய்களைக் கொண்டுவந்தது (யாத் 8:19). கல் பலகையில் சட்டம் கடவுளுடைய விரலினால்தான் எழுதப்பட்டது (யாத் 31:18; உப 9:10). விண்ணகம் படைக்கப்பட்டது கடவுளுடைய விரல்களின் வேலையாகும் (சங் 8:3). கடவுளின் விரலால்தான் இயேசு பேய்களை ஓட்டினார் என்று கொள்ளலாம். அதாவது தீய ஆவிகளின் மேல் தெய்வீக சக்கதியை அவர் பெற்றிருந்தார் (லூக் 11:20):

இதற்கு எதிர்மாறாக மனிதர்களுடைய விரல்களும் கரங்களும் சிலைகளைச் செய்வதிலும் (ஏச 2:8), வேறு மதிப்பற்ற செயல்களைச் செய்வதிலும் ஈடுபடுகின்றன (17:8). துன்ப காலத்தில் விசுவாசிகள் இறைவனது கரம் ''குறுகிவிட்டதாக'' எண்ணக்கூடாது (59:1); மாறாக அவர்களின் கைகள் இரத்தப் பழியால் கறைபட்டுள்ளதாலும், அவர்களின் விரல்களில் அக்கிரமம் நிறைந்துள்ளதாலும் அவர்கள் இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்பதுவே அவர்களது துன்பங்களுக்குக் காரணம் (59:3).

இறைவனின் வீடு (HOUSEHOLD OF GOD)

இறைவனின் வீடு என்பது விசுவாசிகளின் கூட்டமான உயிருள்ள கடவுளின் திருச்சபையே ஆகும். திருச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்தே இந்த கடவுளின் வீடு அல்லது குடும்பம் என அழைக்கப்படுகின்றர் (1 திமோ 3:15; 1 பேதுரு 4:17; எபே 2:19).

இறைவனுக்கு அஞ்சுவோர் (GOD-FEARERS)

யூதசமயத்தில் பக்தி கொண்டு செபக்கூட வழிபாட்டில் பங்கெடுத்த புறவினத்தார் இறைவனுக்கு அஞ்சி வாழ்ந்தவர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் யூத சட்டங்களில் சிலவற்றையும் கடைப்பிடித்தனர் (அ.ப. 10:2; காண்க 13:50; 16:14; 17:4:17; 18:7). இவர்கள் யூத மதத்திற்கு முழுவதும் மனந்திரும்பியவர்கள் அல்லர். ஏனெனில் இவர்கள் இன்னும் விருத்த சேதனம் பெறவில்லை. ஆனால், பக்தியுள்ள புறவினத்தார் ஆவர்.

இறைவன் (GOD)

முன்னுரை

விவிலிய நூலானது இறைவனைப்பற்றி கட்டுரையோ அல்லது ஒரு தொகுப்பு நூலோ அன்று. தனித்து நின்று பிற பொருட்களை விவரிப்பதுபோல், இறைவனை ஒரு பொருளாக எண்ணி, அது விவரிப்பதும் இல்லை, இறைவனைப்பற்றிப் பேசவும் அழைப்பதில்லை. மாறாக, இறைவனின் குரலைச் செவிமடுத்துக் கேட்கவும், பின் அதற்குத் தக்கவாறு, அவரது மகிமையை உணர்ந்து, அவருக்குப் பணிவிடை புரிவது

மான நமது பதிலை அளிக்கவும் அது நம்மைக் கூவி அழைக்கிறது. நாம் பணிவும், நன்றியும் கொண்ட உள்ளத்தோடு வாழ்வோமேயானால், இறைவன் தம்மைப்பற்றி என்ன கூறியுள்ளார் என்பதை விவிலிய நூலிலிருந்து வரைப்படுத்திக் கொள்ள முடியும். பழைய ஏற்பாட்டில் இறைவாக்குரைப்பவர்கள் மூலமாகவும் பின் புதிய ஏற்பாட்டில் தம் ஒரே மகனின் (இயேசு கிறிஸ்து) வழியாகப் பேசிய பொழுதும், ஒரே மாதிரிகையாக இறைவன் தம்மைப்பற்றிப் பேசவில்லை (எபி 1:1 தொ). மற்ற எந்தக் கருத்தையும் விட, பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள இந்த முக்கிய வேற்றுமையை நாம் கண்டுணர வேண்டும்; ஏனெனில் ''கடவுளை யாரும் கண்ணால் கண்டதில்லை; தந்தையின் அணைப்பிலுள்ள ஒரேபேறானவர்தாம் அவரை வெளிப்படுத்தினார்''. (யோவா 1:18). எனவே, பழைய ஏற்பாட்டில் காணும் பழிவாங்கும் கடவுளுக்கும், புதிய ஏற்பாட்டில் காணும் அன்பின் கடவுளுக்கும் இடையே உள்ளதாகக் கருதப்படும் மாற்றுக் கொள்கையை நாம் தவிர்க்க வேண்டும். அதேபோல், இரு ஏற்பாட்டிலும் காணும் ஒரே இறைவனின் மறைபொருளை, கிறிஸ்து ஒருவர்தான் வெளிக்கொணருகிறார் என்ற உண்மையையும் நாம் பற்றிக் கொள்ள வேண்டும்.

II. பழைய ஏற்பாடு

1. இறைவனே முதலானவர்:- ''ஆதியிலிருந்தே'' (ஆதி 1:1; யோவா 1:1) இறைவன் இருக்கிறார்; அவர் இருப்பது, வேறெந்த விளக்கமும் கூறவேண்டாத முதல் உண்மையாகும். அவருக்குத் தோற்றமும், உருவாகுதலும் இல்லை. பழங்கால மேற்காசிய நாடுகளில் உள்ள மதங்களில், எப்படித் தெய்வங்களின் தோன்றுதலால் உலகம் உண்டாயிற்று என்று கூறுகின்ற இறை மரபுக்காவியங்களை, நாம் பழைய ஏற்பாட்டில் காண்பதில்லை. ஏனெனில் ''அவர் ஒருவரே முதலும், முடிவுமாவார்'' (எச 41:4; 44:6; 48:12), இவ்வுலகமானது முழுவதும் அவரது கைவேலை, அவரது படைப்பு.

அவரே முதலாக இருப்பதால், தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ளத் தேவை அவருக்கு இல்லை. தாம் கடவுளாக இருக்கின்ற ஒரே காரணத்தால், மனிதன் தம்மை ஆவியின் மூலம் அறிந்துகொள்ளல் வேண்டும் என எதிர்பார்க்கிறார், மாறாக, இறைவன் இருப்பதை ஒரு படைப்புப் பொருளைக் கண்டுபிடிப்பதுபோலவோ அல்லது படிப்படியாக அறிந்து ஏற்றுக்கொள்வது என்றோ கருதக்கூடாது. ஏனெனில் அவரை அறிவது என்பது அறியப்படுவதும் (ஆமோ 3:2) ஒருவர் இருப்பதின் அடிமூலத்திலே அவரைக் கண்டுபிடிப்பதும் ஆகும். அவரிடமிருந்து விலகி ஓடுங்கால், அவரது பார்வையே நம்மைத் தொடர்ந்து வருவதாகக் காண்பதுமாகும் (ஆதி3:10; சங் 139:7).

இறைவனே முதலாவதாக இருப்பதால், அவர் தம்மை வெளிப்படுத்திய உடனே, அவரது ஆள்தன்மை, எதிர்ச்செயல்கள், அவரது திட்டங்கள் எல்லாம் திட்டவட்டமாக வரையறுக்கப்படுகின்றன. ஒரு மனிதன், சிறிதளவு அவரை அறிந்துகொண்ட உடன், அந்த வினாடியிலிருந்து கடவுள் தன்னிடமிருந்து குறிப்பான ஒன்றை விரும்புகிறார் என்பதையும், தான் எங்கு செல்கிறோம், என்ன செய்கிறோம் என்பதையெல்லாம் அறிந்துள்ளார் என்பதையும் உணருகிறான்.

இவ்வாறு இறைவனின் வரம்பில்லா முன்னுரிமையை, பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களில் இருவகை ஒன்றையொன்று நிறைவு செய்யும் வழிகளில் நாம் காண்கிறோம். யாவே மரபுவழியானது, யாவேயை உலகத்தின் முதலிலிருந்து நிலைநிறுத்தி, எரியும் முட்புதர்காட்சிக்கு முன்னதாகவே, தமது திட்டத்தைச் செயல்படுத்துபவராகவும் காண்பிக்கிறது. அதற்கு மாறாக, ஏலோகிம் என்கிற மரபு வழியானது இறைவன் திருநாமத்தை மோசேக்குத் தெளிவுபடுத்தியதை அவ்வளவு வலியுறுத்தவில்லை; ஆனால் அதே நேரத்தில் இந்த இரு மரபு வழக்கு கொள்கைகளும் ஏல் என்கிற திருநாமத்தை ஏறக்குறைய விளக்கும் இருபெயரைக் குறித்தாலும், அவற்றின் அடித்தளத்

தில், இறைவன் தம்மை ஏற்கனவே வெளிப் படுத்திக் கொண்டிருக்கிறார் என்கிற உண் மையை நமக்குப் புலப்படுத்துகின்றன. ஏனெனில், மோசே கண்ணுக்குத் தெரியாத ஆனால் தெளிவாகக் கடவுளை ஏற்கெனவே உணர்ந்திருந்ததால் மட்டுமே, யாவேயை உண்மையான இறைவன் என அறிந்து கொள்ளுகிறார். இவ்வாறு அறிவால் கண்டு ணரும் கடவுள், வெளிப்பாட்டின் கடவுளாக ஒன்றிணைகிறார். இறைவனின் இந்த ஒன்றி ணைப்பின் முன்னுரிமை, மனிதனின் ஆவிக் கும் தெளிவுபடுத்தப்படுகிறது. இந்த உண் மைதான், விவிலிய நூல் முழுவதிலும் இறைவனை யாவே, ஏலோகிம் என்று உட னடியான, நிலையான ஒன்றிணைப்பதாக வும், இஸ்ராயேல் மக்களுக்கு தம்மை வெளிப்படுத்தும் கடவுளை, மற்ற நாட்டு மக்களால் பெயரிடப்படுகின்ற கடவுளோடு ஒன்றிணைப்பதாகவும் நாம் அறிகிறோம்.

இதனால்தான் எப்பொழுதெல்லாம் இறைவன் தம்மைக் காட்சிகளில் வெளிப்ப டுத்துகிறாரோ, அப்பொழுதெல்லாம் தம்மை ''உங்கள் தந்தையின் கடவுள்'' (யாத் 3:6), ''உங்கள் தந்தையர்களின் கடவுள்'' (3:15) ''உங்கள் கடவுள்'' (6:7), ''இரக்கமும் தயவும் உள்ள இறைவன்'' (34:6), ''உன் கடவுள்'' (நெருங்கிய உறவில்) (ஏச 41:10: 43:3) அல்லது சாதாரணமாக'', ''கடவுள் '' (1 அரச 18:21 36 தொ) என்ற பொருள்களைக் குறிக்கும் ''ஏல், ஏலோகிம்'' என்ற பெய ரால் தம்மைப் பெயர் சொல்லி அழைக்கின் றார். 'கடவுள்' என்ற பெயருக்கும்; 'யாவே' என்ற பெயருக்குமிடையில், ஒரு உயிருள்ள உறவு ஏற்படுத்தப்படுகிறது. அதோடு புலன் கடந்த மெய்ம்மை விவாத, முறையையும் நாம் காண்கிறோம். எவ்வாறெனின் தம்மை 'யாவே' என்று அறிவிப்பதற்காக, இஸ்ரா யேலின் கடவுள் தம்மைக் கடவுளாகக் காண் பிக்கிறார். ஆனால் அதே நேரத்தில் தம்மை 'யாவே' எனக் காண்பிப்பதில் 'கடவுள் யார், ' அவர் எப்படிப்பட்டவர்' என்பதையும், புதுவகையிலே தெரிவிக்கிறார்.

2. ஏல், ஏலோகிம், யாவே:- 'ஏல்' என்கிற சொல்லானது நடைமுறையில் 'ஏலோகிம்' என்ற சொல்லின் பொருள் கொண்ட தொன் மையான காவியச் சொல்லாகும். 'ஏலோ கிம்' அல்லது நாம் கூறும் கடவுள் என்ற சொற்களைப் போல், 'ஏல்' எனும் சொல், இறைத்தன்மை உடைய பொதுப் பெயராக வும், அத்தன்மையை உடையவர் யார் எனக் குறிப்பிடும் தனி நபரின் சிறப்புப் பெயராக வும் உள்ளது. 'ஏலோகிம்' என்ற சொல் பன்மையைக் குறிக்கும். ஆனால் மாட்சிமை சம்பந்தமாக அன்று. ஏனெனில் எபிரேய மொழியில் இத்தகைய கருத்து இல்லை. மேலும் பல கடவுள் கொள்கையினைக் குறிக்கும் பன்மையும் அன்று. ஏனெனில் இத்தகைய மனநிலை இஸ்ராயேல் மக்களி டத்தில் இல்லை. ஆனால் இத்தகைய பன் மையான கருத்து, ஒருவேளை செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்களின் பொது எண்ண மாக இருக்கலாம். ஏனெனில் அவர்கள்தான் இறைத்தம்மையை சக்திகளின் சேர்ப்பு எனப் பன்மையில் கண்டறிந்தனர்.

அ) ஏல்:- 'ஏல்' என்பது, இஸ்ராயேல் இனத்தவர்க்குப் புறம்பே அறியப்பட்டு வழி படப்பட்டது. அது ஒரு பொதுப்பெயராக நிற்கையில், செமித்திய இனத்தார் கொள் ளும் இறைத்தன்மையைச் சுட்டிக் காட்டுகி றது. ஆனால் தனி நபரின் பெயராக நிற்கை யில், மேற்காசிய நாடுகளில், அதுவும் குறிப் பாக பெனிக்கியா, கானான் என்ற பகுதிக ளில், அது எல்லாவற்றிற்கும் மேலான ஒரு கடவுளைக் குறிப்பதாக உள்ளது. செமித்திய இனத்தாரின் தூய ஆனால் வலுவற்ற, பின் னால் தோன்றிய கவர்ச்சியூட்டிச் சீரழிக்கும் பல தெய்வங்களைக் கொண்ட மதங்களால் மறைக்கப்பட்டு வழிபடப்பட்ட 'ஏல்' தனித் தன்மையும் மேலாண்மையும் கொண்ட பொதுக் கடவுளா? 'ஏல்' என்கிற கடவுள், செமித்திய இனத்தாரின் பல்வேறு குழுக்க ளைக் கட்டிக் காக்கும் முதற் கடவுளா? அல்லது ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனி யாக கடவுளாக இருந்து, மற்ற குழுக்களு டன் ஏற்படும் போராட்டத்தில் ஒற்று மையை ஏற்படுத்த முடியாமல், இறுதியில் பலதெய்வங்களைவைத்து வழிபடும் கோயி லில் சரணடைந்த ஒரு உருவமோ? இந்த

வரலாறு தெற்றெனப் புலனாகாவிட்டாலும், ஒரு உண்மை நிச்சயமாகத் தெரிகிறது. அதாவது மூதாதையர்கள் 'ஏல்' என்ற கடவுளை, ''ஏல் ஏலியோன்'' *(ஆதி 14:22)*, ''எல் ராய்' *(16:13)*, 'எல் சத்தாய்' *(17:1; 35:11; 48:3)* ''எல் பெத்தேல்'' *(35:7)*, 'ஏல் ஓலாம்'' *(21:33)* என்ற பெயர்களால் அழைக்கின்றனர். அதுவும் குறிப்பாக சாலேம் நாட்டு அரசனான மெல்க்கிசதேக்கு என்பவரின் கடவுளான 'ஏல் ஏலியோன்' என்ற பெயரில் உள்ள 'ஏல்' எனும் கடவுள், ஆபிரகாமின் கடவுளுக்குச் *(14:20 தொ.)* சமமாகக் கருதப்பட்டார். இந்த உண்மைகள் எல்லாம், இஸ்ராயேலரின் கடவுள் ''உலகத்தின் நடுவராகவும்'' *(18:25)* அதே நேரத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களைத் தவிர்த்த புற இனமக்களாலும் உண்மையான கடவுள் என அறிந்து கொள்ளப்பட்டு, வழிபாடு பெறுபவராகவும் இருக்கிறார், என்ற உண்மையினை விளக்குகிறது.

இவ்வாறு ஏற்றுக்கொள்ளல் விதிவிலக்கான ஒன்றாகும். பெரும்பாலான நிகழ்ச்சிகளில் புற இனத்தாரின் கடவுள்கள், கடவுள்கள் அல்லர் *(எரே 2:11; 2 அர 19:18)*. ஏல் ஏலோகிம், நடைமுறையில் யாவே என்ற பெயரில் தமது மக்களுக்கு வெளிப்படுத்துவதால் மட்டுந்தான் உண்மையான கடவுளாக அறியப்படுகிறார். ஒப்புமையற்ற ஆள்தன்மையுடன் விளங்கும் யாவேயின் திருமுகம் பலவகைப்பட்ட புறஇனத்தவரால் விகாரப் படுத்தப்பட்டுத் தெளிவில்லாமல் இருந்தாலும், ஏற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தும் நிலையமைதியையும் உயிராற்றலையும் கொண்டிருந்தது.

ஆ) யாவே:- யாவே என்ற பெயரில் கடவுள் தாம் யார், தாம் செய்வது என்ன, தமது பெயர் என்ன, தமது செயல் முறை யாது என்பவற்றைத் தெளிவுபடுத்துகிறார். அவரது செயல் முறை இதுவரையில் கேட்டிராத, வியத்தகு ஒன்று; அவரது பெயரோ மறைபொருளானது. 'ஏல்' தம்மை, மூதாதையர்கட்குப் பழகிய நாட்டில் எளிய, சாதாரணமாக அறியும் வகையில் தம்மை வெளிப்படுத்தியதால், யாவே, கொடூரமான பாலைவனச் சூழ்நிலையிலும், துயரம்நிறைந்த நாடு கடத்தலிலும், அஞ்சத்தக்க நெருப்பின் உருவமாகத் *(யாத் 3:1-15)* தம்மை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். *யாத் 33:18-23; 34:1-7*-இல் வரும் ஒன்றையொன்று நிறைவு செய்யும் இறைவன் வெளிப்பாடானது அச்சம் தருவதாகவே உள்ளது. இருப்பினும், இவ்வாறு தூய்மையில் எரிக்கும் இறைவன், பிரமாணிக்கமுள்ளவரும் மீட்பளிக்கும் இறைவனாகவும் உள்ளார். அவர் ஆபிராகாமையும், அவரது இனத்தையும் *(3:6)* நினைவு கூறுகிறார்; எகிப்து நாட்டில் எபிரேயமக்கள்படும் அவதியினைக் காண்கிறார் *(3:7)*; அவர்களை விடுவிக்க உறுதி கொள்கிறார் *(3:8)*; மேலும் அவர்களுக்கு வளம் அளிக்கச் சித்தம் கொள்கிறார்; யாவே என்ற பெயரில் அவர் தம்மை வெளிப்படுத்துவதானது, அவர் செய்யும் வேலைக்குச் சான்று பகர்வதாய் உள்ளது. எனவே இப்பெயரானது உண்மையிலே மறைத்தன்மை கொண்டது; ''இருக்கிறவராக இருக்கிறவர் நானே'' *(3:14)* என்ற நெருங்க முடியாத உண்மையினை எடுத்துக்கூறுகிறது. யாரும் அவரைக் கட்டாயப்படுத்தவோ அல்லது உட்புகுந்து அறியவோ முடியாது. ஆனால் அதே நேரத்தில் இப்பெயரானது ஓர் நேர் உண்மையைக் கூறுகின்றது. அதாவது ''நான் இருக்கிறேன்'' என்ற மீளமுடியாத உறுதியையும், வெற்றி கொள்ளமுடியாத மீட்பு அளிக்கும், சக்தியும் அசாதாரண ஆக்கமும் கவனமும் கொண்ட இறைவன் திருச்சந்நிதியையும் அது விளக்குகிறது. யாவே என்ற பெயர் சுட்டிக்காட்டுவது 'இருத்தல்' என்ற வினைச் சொல்லையே. அந்த வினைச்சொல்லும் முழுமுதற் கடவுளை மெய்யியல் கருத்துப்படி உடனே எடுத்துக் கூறாவிட்டாலும், சாதாரண ஒரு 'இருத்தல்' ஆக இல்லாமல், எப்பொழுதும் இருந்து, பயன்தரும் 'இருக்குத் திருச்சந்நிதியாக' நமக்கு எடுத்துக்காட்டுகிறது. ஆனால் இறைவன் இந்தத் திருச்சந்நிதானம் படைப்பு முழுவதையும் அதன் தொடக்க நாளிலிருந்து முடியும் நாள் வரைக்கும், தழுவிய ஒன்றாகவும், காலம் மூன்றையும் ஒருங்கிணைப்பதாகவும் உள்ளது; ஏனெ

னில், ''தொடக்கத்திலிருந்தே தலைமுறைக ளைப் பிறப்பித்தவர் யாரோ, அவரே யாவே ஆகிய நாம். முதலும் இறுதியும் ஒன்றாகிய யாவே நாமே'' (ஏச 41:4). ஏல், ஏலோகிம் என்ற பெயர்கள், இயற்கைசார்ந்த மதங் களை, உண்மைக் கடவுளுடன் தொடர்புப டுத்தும் உறவினைக் காட்டுகின்றன. இருப்பி னும் 'யாவே' எனும் பெயர் இஸ்ராயேல் மக்களுக்கு மட்டும் அறிவிக்கப்பட்ட தொன்று; மேலும், அச்சொல்லின் உட்பொ ருளை, யாவேயின் வழிகாட்டினை வாழ் வில் அறிந்தவர்களால் தான், உணரமுடியும். எனவேதான், மூதாதையர்களின் மதத்தினை யும், அவர்கள் வழிபட்ட கடவுளின் முகத் தோற்றத்தையும் ஆராய முற்படுவோமேயா னால், மோசேக்கு முன்னமே 'யாவே' எனும் கடவுள் தெரிந்தவரா என்பது தேவை யற்ற ஒரு ஆராய்ச்சியாக முடிகிறது. அப்படி கடவுளின் பெயர் மற்ற மதங்களில் தெரியப் படுத்தியதொன்றாக இருந்தாலும், அது ஏதோ ஒரு பொருளான தொடர்ச்சியாகும். எப்படியெனில் யாவே, தனக்குமட்டும் உரிய, மனித நிலைக்கு அப்பாற்பட்ட முதல் முயற்சியால் தம்மை வெளிப்படுத்துகிறார். அம்முதல் முயற்சியாலேயே, அவர் இஸ்ரா யேல் மக்களை 'விலைக்கு வாங்கி', தனது உரிமை மக்களாக உருவாக்குகின்றார்.

3. கடவுள் தம்மைப்பற்றியே கூறுகின் றார்:-

யாவே எனும் பெயர், இறைவனால் தம்மை ''நான் இருக்கிறேன்'' என்னும் பொருள் படும் ''யாக்வே'' எனும் சொல் லால் தன்மையில் வெளிப்படுத்தியதை மனி தன் படர்க்கையில் அவரைப்பற்றிக்கூறும் சொல்லாகும். இறைவன் தம்மைப் பல் வேறு வாய்ப்பாடுகளில் வெளிப்படுத்தும் பொழுது எல்லாவற்றையும் குறிக்கும் இப் பெயருக்கு விளக்கம் அளிக்கிறார்.

அ) உயிருள்ள இறைவன்:- இறைவன் தம்மைப்பற்றி, ''நான் வாழ்ந்து கொண்டுள் ளேன்'' எனும் வாய்ப்பாடானது, ஒரு வேளை பிற்காலத்தில் எசக்கியேல் இறைவாக் கினரின் படைப்பாக இருக்கலாம். எது எப் படி இருப்பினும், தொன்றுதொட்டு இஸ்ரா யேல் மக்களிடையே வழங்கிவரும் ''உயி ருள்ள யாவே'', ''வாழும் ஆண்டவர்'' (நீதி 8:19; 1 சாமு 17:26.36; 2 அர 19:16) 1 அர 17:1; என்ற இறைவனைப் பற்றிய பொது வாய்பாட்டுரையே அது. அப்பெயர் கடவுள் திருச்சந்நிதியின்முன் மனிதன்பெற்ற அனுப வத்தை எடுத்துக் கூறுகிறது. உடனடியான, முழுவதும் தானே இயங்கும் அவரது சிறப் பான செயல்புரியும் திருசந்நிதியைக் குறிப்பி டுகின்றது; அச்சந்நிதியானது ''சோர்வோ களைப்போ, இல்லாததாகும்'' (ஏச 40:28) ''கண்ணயர்வோ தூக்கமோ இல்லாதவரின்'' (சங் 121:4), தமது மக்களை யார் தொட்டா லும் உடனே செயலாற்றும் திருச்சந்நிதியா கும் (1 சாமு 17:26.36; ஒசே 2:1; தானி 6:21). ஓரேபு மலையில், அவர் தமது பெயரை வெளிப்படுத்தியபோது அவர் பேசிய மொழி அவரது வாழ்வின் உட்செறிவையும், அவர் செயலின் கருத்தையும் விவரித்துக் கூறுகின்றது. ''நான் கண்டேன்...நான் குர லையும் கேட்டேன்...நான் அறிவேன்...நான் உறுதி கொண்டுள்ளேன்.. நான் உன்னை அனுப்புகிறேன்'' (யாத் 3:7-10). இந்த வெளிப்பாடுகளால் தயாரிக்கப்பட்டு ''நான் இருக்கிறேன்'' என அறிவிக்கப்பட்ட வாக் கானது இவற்றைவிடக் குறைவான செயல் திறன் கொண்டதாக இல்லை.

ஆ) புனிதமான இறைவன்:- ''எனது புனி தத்தால் நான் அதை உறுதி கூறுகிறேன்'' (ஆமோ 4:2), ''நாமே புனிதமானவர்'' (ஒசே 11:9) வாழ்வினை வழங்கவும், கட்டெரிக்க வுமான, இந்தத் தவிர்க்கமுடியாத, செறி வுற்ற உட்சக்தியைத்தான் 'புனிதம்' என்கி றோம். ''இறைவன் புனிதமானவர்'' (ஏச 6:3), ''அவரது திருப்பெயர் புனிதமாமே'' (ஆமோ 2:7; லேவி 20:3; ஏச57:15). அவரது புனிதத்தன்மையானது அவரது மக்களைத் தூயதாக்குகின்றது (யாத் 19:6). இத்தகைய அவரது தூய்மையானது இறைவனுக்கும், மனிதருக்குமிடையில் எந்த ஒரு மனிதனும் கடக்கவொண்ணா, அதள பாதாளத்தைத் திறந்து காட்டுகிறது. எந்த மனிதனும் அவ ரது வருகையைத் தாங்க முடியாது. வான

மண்டலம் சுழல்கின்றது, மலைகள் உருகுகின்றன'' (நீதி 5:4 தொ; யாத் 19:16). எல்லா உயிரினமும் நடுங்குகின்றது, பாவம் செய்த மனிதன் மட்டுமன்று, கொழுந்துவிட்டு ஒளிரும் சேராபீம்களும் இறைவன் முன் தோன்றதற் தகுதியற்றவர்களாய் நடுங்குகின்றனர்'' (ஏச 6:2)

இ) ''நாம் பொறாமை நிறைந்த கடவுள்'' (யாத்20:5):- இறைவனின் உள்ளுரைச் செறிவின் மற்றொரு குணம் யாதெனில் அவரது பொறாமை பொதிந்த ஆர்வக்கனலாம். இதையே தாம் செய்வதிலும், தொடுவதிலும் வெளிப்படையாக்குகின்றார். அவருக்கு முக்கியமானதொன்றையோ அல்லது அவரால் தூய்மைப்படுத்தப்பட்டு புனிதமாகக் கொள்ளப்பட்ட எதையுமோ, எந்த ஒரு வெளிச்சக்தியும் மாசுபடுத்துவதை அவரால் பொறுத்துக்கொள்ள முடியாது. அவர் எடுக்கின்ற எந்த ஒரு செயலும் தோல்வி அடைவதைப் பொறுத்துக் கொள்ள முடியாது (யாத் 32:12; எச 36:22..) அதோடு அவர் ''தன் மகிமையையும் யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது''.

ஈ) ''என்னைத் தவிர பிறிதொரு கடவுள் உங்களுக்கு இல்லை'' (யாத் 20:3):-

இறைவனின் பொறாமை எதில் அடங்கியுள்ளது என்றால், தம்மைத் தவிர்த்த பிறிதொரு கடவுளை ஏற்பதில்தான். இஸ்ராயேல் மக்களின் இறையொருமைக் கொள்கையானது அவர்களால் ஆழ்ந்து சிந்தித்துக் கண்ட மீபௌதிக உண்மையுமன்று; அரசியல் ஒன்றிப்பினாலோ மத வளர்ச்சிக் கொள்கையாலோ ஏற்பட்டதுமன்று. இஸ்ராயேலில் இருந்த நம்பிக்கை கொள்கைகளைப் போலவே, இந்த ஒரு கடவுள் விசுவாசமும் தொன்மையானது. ஏனெனில் எல்லா நாடுகளுக்கும் உரிமையாளரான ஒரே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உரிமை நாடு இஸ்ராயேல்; எனவே அக்கடவுளையே எங்கள் முழு முதல் இறைவனாக ஏற்றுக் கொள்கிறோம்'', என்ற தேர்வின் உறுதியால் எழுந்த கொள்கையாகும். இவ்வாறு இந்த இறையொருமை விசுவாசம், பலகாலமாகவே பல தெய்வங்களைக் குறிக்கும் சின்னங்களைப் பொறுத்துக் கொள்ள முடிந்தது. உதாரணமாக மோவாபு (நீதி 11:23) மலையில் கெமோசு என்ற தெய்வத்தை ஏற்றுக் கொண்டது, ''யாவேயின் மரபுரிமை'' (1 சாமு 26:19; 2 அர 5:17) கடந்த நாடுகளில் அவரை வணங்க இயலாமல் இருந்தது. ஆனால் தொடக்கத்திலிருந்தே அத்தகைய தெய்வங்கள் யாவேயோடு சேர்ந்து இருப்பதை, யாவே பொறுத்துக் கொள்ளவில்லை. மேலும் இஸ்ராயேல் நாட்டு வரலாறு, யாவே, எகிப்து நாட்டு கடவுள்கள், கானான் நாட்டு பாகால், அசூர், பாபிலோன் நாட்டு அரச தேவர்கள் ஆகியோர்மீது வெற்றிகொண்டு இறுதியில் வேறெந்த பொய்க் கடவுளும் இல்லாதவாறு செய்வதையே விளக்குகிறது. இத்தகைய வெற்றிகள் சிலசமயங்கள் அருஞ்செயல்கள் மூலமாக இருந்தாலும், அடிப்படையில் ஒரு கடவுளின் மேல் வைத்த விசுவாசத்தையே நிலையான அடிப்படையாகக் கொண்டது. யூதா, எருசலேம் நகர்களின் அழிவை முன்கூட்டியே அறிவித்த எரேமியா எனும் இறைவாக்கினர், புறநாடுகளின் கடவுள்கள் ''கடவுள்களே அல்ல'' (எரே 2:11) எனவும் ''அவைகள் இருப்பது இல்லை'' (5:7) எனவும் சாதாரணமாகவே குறிப்பிடுகின்றார். நாடுகடத்தலின்போது, சிலைவழிபாட்டின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு, தோற்றுப்போய், அவமானத்தால் நிலையிழந்து இருந்த மக்கள் உள்ளத்திலிருந்தும் ''எமக்கு முன்னமேயோ அல்லது பின்போ எந்த ஒரு கடவுளும் தோன்றவில்லை; நாமே யாவே, எம்மைத் தவிர வேறு மீட்பர் உங்களுக்கு இல்லை'' (ஏச 43:10 தொ.) என்ற இறைவனின் குரலொலி முழங்குகிறது. ஓரேபு மலையின் ஞாபகம் நிலைத்திருக்கிறது. அதோடு வேறுபட்ட பகுதிகளிலும் காணக்கிடக்கும் ஆன்மீகத் தொடர்ச்சி ஊன்றி கவனிக்க வேண்டியதொன்றாகும். யாவே ஒருவர்தான் கடவுள், ஏனெனில் அவர் ஒருவர்தான் மீட்பளிக்க முடியும்; ''முதலும் முடிவும் அவரே''; வெகு அருகில் உள்ளவர்; உற்றுக் கவனிப்பவரும் அவரே. சிலைவழிப்பாடானது, மக்களை மீட்கும் அவரது உறுதியை சவாலுக்கு

அழைப்பதோடு, என்றும் எங்கும் இருந்து செயல்படும் யாவே என்பதை மறுப்பதால், அது தனக்கு எதிராகப் போரிடும் சக்தி என யாவே கருதுகிறார்.

உ. ''நாம் கடவுள், மனிதனல்ல'' (ஓசே 11:9):- இறைவன் மனிதனிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர். அவர் ஆவியானவர், மனிதன் ஊனுடல் (ஏச 31:3) வலு வற்றவன்; புல்லைப்போல் அழிந்துவிடுபவன் (ஏச 40:7). இந்த மாறுபாடு, எவ்வளவு அடிப்படையில் வேறுபட்டதென்றால், மனிதன் அதைத் தவறாகவே விளக்கிக் கூறுகிறான். இறைவனின் சக்தியில் மனிதன் பயனுள்ள சக்தியை மட்டுமே காண்கிறான், ஆனால் அவருடைய பிரமாணிக்கத்தைக் காண்பதில்லை (எண் 23:19); ''நானே புனிதமாக உங்கள் மத்தியில் வாழ்கிறேன், அழிவை நான்விரும்புவதில்லை'' (ஓசே 11:9) என்று கூறும் இறைவனின் புனிதத்தில் அவரது அருகாமையும் இளகிய உள்ளத்தையும் காணாது, தனக்கும் இறைவனுக்குமிடையில் உள்ள கடக்க முடியாத இடைவெளியையே காண்கிறான். இறைவன் எல்லாவற்றையும் கடந்து நிற்கின்றார் என்ற கட்புலனுக்கடங்காத அதே உண்மைதான், உயர்ந்ததும், புனிதமானதுமான இடத்தில் உறையும் உயர்ந்த கடவுள் என்ற உண்மையையும் அதே கடவுள்தான் மனம் வருந்தி தாழ்ந்த நிலையில் வாழும் மனிதனோடும் வாழுகிறார் (ஏச 57:15) என்ற உண்மையையும் ஒரே சமயத்தில் வெளிக் கொணர்கிறது. எல்லா சக்தியையும் கொண்டவர், அதே நேரத்தில் வறியவர்களின் கடவுள். புயல் மத்தியிலும் (யாத் 19:18 தொ) தென்றல் காற்றின் நடுவிலும் (1 அர 19:12) தமது குரலொலியை மக்கள் கேட்கும்படிச் செய்கிறார். மோசே கூட அவர் முகத்தைப் பார்த்திராத அளவுக்குக் கண்ணால் காணக்கூடாதவர் (யாத் 33: 23). ஆனால் மனிதனின் ஏக்கத்திற்கு செவிமடுக்கையில், தமது இதயத்தையே அளிக்கிறார். மனிதன் தன் கைவண்ணத்தால் வழிபாடு செய்யும் எந்த ஒரு தன்னுருவையும், அவர் தடுத்தார். ஆனால் அதே நேரத்தில் நாம் காணும் எந்த ஒரு பொருளின் அடித்தளத்திலும், நமது கற்பனைக்குத் தன்னைவெளிப்படுத்துகிறார். எந்தவித ஒப்புமையும் இல்லாத, ''தனித்த அவர்'' (ஏச 40:25) ''முழுவதும் மற்றவர்''; ஆனால் அதே நேரத்தில் எங்கும் நிறைந்து, நமக்கு வேற்று ஆளாய் இல்லாமல் இருக்கிறார். நாம் செய்யும் செயல்களாலே, தன்னுடைய செயல் முறையையும் எதிர்மறைச் செயல்களையும் விளக்குகின்றார்: உதாரணமாக, களிமண்ணைத் தமது கையால் எடுத்து மனிதனாக உருவாக்குகின்றார் (ஆதி 2:7). நோவாவின் பெட்டகத்தில் நுழைந்த எவரும் அழிவுறாவண்ணமாய், அப்பெட்டகத்தின் கதவுகளைத் தாழிடுகிறார் (ஆதி 7:16). போரில் வெற்றிக் கொண்ட தலைவனைப்போல் முழுங்குகிறார் (யாத் 15:3) தனது மந்தையின் மீது ஆயன்காட்டும் பரிவுபோல், நம்மீதும் காண்பிக்கிறார் (எச 34:16). அண்டசராசரங்களைத் தன்கையில் அடக்கியுள்ள அவர்தாம், சிறிய நாடான இஸ்ராயேலுக்கு, திராட்சைத் தோட்டத்திற்கு அதைப் பயிரிடுவோர் காட்டு பரிவையும் (ஏச 5:1-7), தந்தையும் தாயும் மகனுக்குக் காட்டும் அன்பையும் (ஓசே 11:1; ஏச 49:15), காதலில் கட்டுண்ட மனிதன்காட்டும் உணர்ச்சி விழைவினையும் (ஓசே 2:16) காண்பிக்கிறார். இவ்வாறு மனிதப் பண்புகளை இறைவனுக்குச் சாற்றிக் கூறுதல் எளிமையாக இருந்தாலும், அது உண்மைக் கடவுளின், முக்கிய குணங்களை, ஆழ்ந்த, செறிந்த அளவில் வெளிக்கொணர்கின்றது; ஏனெனில், இறைவன் மனிதனைத் தன்னுருவில் படைத்தார் என்றால் தம்மை மனிதனின் எதிர்ச்செயல்களாலே விளக்க முற்படுகின்றார். சந்ததியோ, துணையோ அல்லது பாலினப்பண்போ எதுவுமில்லாமல் நம்மைக் கடந்து இருந்தாலும், மனித அளவில் நமக்குக் குறைந்த அளவில் அவர் இல்லை. ஆனால் மாறாக மனிதனைப் பற்றி நாம் கனவு காணும் முழுமையை அவர் பெற்றிருக்கிறார்; ''பொய் சொல்வதற்குக் கடவுள் மனிதன் அல்லர்; மனத்தை மாற்றிக்கொள்ள ஒரு மனிதப்பிறவியும் அல்லர்'' (எண் 23: 19). இறைவன் எப்போதும் நம்மைக் கடந்தவர். அதுவும் எப்போதும் நாம் எதிர் பார்க்காத முறையில் கடந்தவர்.

4. மனிதன் கடவுளுக்கு அளித்த பெயர்கள்:-

பழைய ஏற்பாட்டின் இறைவன், தன்னை அறிந்து கொண்டவர்கள் பழகும் விதத்திலும் அழைக்கும் பெயர்களிலும் தம்மை வெளிப்படுத்துகிறார். கூட்டு வழிபாட்டில் இறைவனுக்கு வழங்கும் அதிகாரபூர்வமான பெயர்களுக்கும், அவரவர் தனிப்பட்ட பக்தியினால் இறைவனுக்கு வழங்கும் பெயர்களுக்கும் பிரித்து வேறுபாடு காண்பித்துவிடலாம் என முதலில் நாம் எண்ணக்கூடும். உண்மையில் அதே பெயர்களும் தொனியும் கூட்டு வழிபாட்டிலும் தனிநபரின் செபத்திலும் காணப்படுகின்றன. இறைவன் ''இஸ்ராயேலரின் பாறை'' (ஆதி 49:24; 2 சாமு 23:3) என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை இறைவன் ''என் பாறை'' (சங் 18:3 தொ; 144:1) என்பதும், அல்லது வெறுமனே ''பாறை'' (சங் 18:32) என்பதும்; அதைப் போலவே ''எனது கேடயம்'' (சங் 18:3; 144:2) ''நமது கேடயம்'' (சங் 84:10; 89:19) என்பவையும்; அதைப்போலவே, ''அவரது மக்களின் ஆயன்'' (மீக் 7:14) ''எனது ஆயன்'' (சங் 23:1) என்பவையும் ஆகும். இவைகளெல்லாம் இறைவனை எதிர்கொள்ளுதல், நேரடியானது உயிருள்ளது என்பதின் அடையாளங்களாகும்.

இந்தச் சொற்றொடர்களெல்லாம் ஒவ்வொருநாளிலும் நாம் பயன்படுத்தும் எளிமையான அன்றாட வாழ்வினை விளக்கும் சொற்கள்தாம். விவிலிய நூலானது, புறஇனத்தெய்வங்கட்கு எகிப்திலும், பாபிலோனியாவிலும் வழங்கும் நீண்ட பிரார்த்தனைத் தொடர்களை, அறிந்ததில்லை. இஸ்ராயேலரின் கடவுள் அளவுகடந்த வல்லமையுள்ளவர், ஆனால் அதே நேரத்தில் மனிதருக்கு எளிதாகத் தோன்றுபவர். அவரே 'மிக உயர்ந்தவர்' (ஏலியோன்), 'என்றும் உறைபவர்' (ஓலாம்), 'புனிதமானவர்' அதே நேரத்தில் ''என்னைக் காணும் இறைவன்'' (ஏல் ராய், ஆதி 16:13). இறைவனின் ஏறக்குறைய எல்லாப் பெயர்களுமே அவருடைய மக்களுக்கும், அவருக்குமிடையே உள்ள உறவைத் தெரிவிப்பதாகவே உள்ளன: ''ஈசாக்கின் பேரச்சம்'' (ஆதி 31:42. 53), ''யாக்கோபின் வல்லமை மிக்கவர்'' (ஆதி 49:24), ''ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் கடவுள்'' (யாத் 3:6), ''இஸ்ராயேலின் கடவுள்'', 'நமது கடவுள்', 'எனது கடவுள்', 'எனது ஆண்டவர்'. மேலும் ஊனுருக்கொண்ட மனிதனிடமிருந்து பிரிக்கும் மிக முக்கியமான சொற்றொடராகிய '' புனிதமான இவரே'' என்பது கூட, ''இஸ்ராயேலரின் புனிதமானவர்'' (ஏச 1:4) எனக்குறித்து, புனிதம் என்பதே இறைவனின் மக்களுக்குத்தான் உரியது என்பதையும் விளக்குகிறது. இவ்வாறு ஒன்றோடொன்று கொண்ட இருவகை சொத்துரிமையில்தான், உடன்படிக்கையின் மறைபொருளையும் இறைவன் தம்மால் ஈன்றெடுக்கப்பட்ட தனது ஒரே திருமகன் இயேசு கிறிஸ்துவோடு இணையும் உறவினைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துவதையும் நாம் காண்கிறோம்.

புதிய ஏற்பாடு

1. இயேசு கிறிஸ்துவில் தந்தையை அணுகுதல்:-

இயேசுவில்தான், இறைவன் முழுவதும் வரையறுக்கப்பட்டவிதமாகவும், தம்மை வெளிப்படுத்துகிறார்; தமது சொந்த மகனையே நமக்குக் கொடையாக அளித்துள்ளார். அதற்கு மேல் தமக்கென எதுவும் மீத்துக்கொள்ளவோ அல்லது கொடுக்கவோ அவரிடம் ஏதும் இல்லை (உரோ 8:32). கிறிஸ்துவின் வாழ்வு, இறப்பு, உயிர்ப்பின் மூலம் மனிதன் கடவுளை அணுக முடியுமாறு இறைவன் செய்த இந்த ஒப்பற்ற செயலை, புதிய ஏற்பாட்டில் தாய்த்திருச்சபை கண்டுணர்ந்து உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு இறைவனின் சிறப்பான, உறுதியான செயலானது, அவரவரின் தொலைநோக்கிற்கேற்ப, பல்வேறு பெயர்களைத் தாங்கி நிற்கிறது. மிகப் பழைய விசுவாச அறிக்கை இவ்வாறு விளக்குகிறது: ''சிலுவையில் அறையப்பட்ட இந்த இயேசுவையே இறைவன், ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் ஏற்படுத்தினார்.....இந்த வாக்குறுதி உங்களுக்கும், உங்கள் மக்களுக்கும், வெகுதொலைவில் உள்ள மற்றவர்கட்கும்

உரியது'' (அ.ப.2:36-39); ''அவர் வழியாக, மனந்திரும்புதலும், பாவப்பொறுத்தலும் அடைவர்'' (அ.ப.5:31). இந்தச் சொற்றொடர்கள் வெளிப்படையாக எதையும் குறிக்காவிடினும் ''கிறிஸ்துவென்னும்'' (கொலோ 1:27: 2:2) இறைவனின் மறை உண்மையைப் பற்றிக் கீழ்க்கண்ட பவுலின் சுருக்க விளக்கத்திற்குச் சான்று பகர்கின்றன: ''அவர் வழியாக நாம்...தந்தையை அணுக (எபே 2:18; 3:12). மேலும் யோவானின் விளக்கத்தையும் எண்பிக்கிறது: ''ஒருவரும் இறைவனை என்றுமே கண்டதில்லை, தந்தையின் அணைப்பிலுள்ள ஒரே பேறானவர்தாம் கிறிஸ்துவின் மேல், இறைவனின் உறைவிடமாகிய விண்ணகம் திறக்கப்படுகிறது (அ.ப.7:56; யோவா 1:51; மாற் 1:10) என்று அறிந்திருக்கிறது. ''இறைவனின் திருவருட்செயல் வெளிப்பாடு'' (உரோ 3:21), ஒப்புரவாக்கல் (உரோ 5:11; எபே 2:16), ''நமது முகங்களில் இறைவனின் மாட்சிமையின் ஒளிவீச்சு'' (2 கொரி 3:18) ''இறையறிவு'' (யோவா 17:3) ஆகிய பல்வேறு அமைப்புகளிலும் பெயர்களிலும் வெளிப்படுத்தப்படும் உண்மைகளும் நாம் உய்த்துணரும் கிறிஸ்து வாழ்வின் அகநிலைகளின் அடிப்படையும் ஒன்றானதாகும். அதாவது இறைவன் அண்மையில் உள்ளார்; கிறிஸ்துவில், கேட்டிராத முறையில் தமது சக்தியையும், அன்பையும் வெளிப்படுத்துவதன் மூலம், அவரை ஏற்றுக் கொள்பவர்கட்குத் தம்மை அளிக்கிறார்.

எனவே இறுதியில் நாம் அறிவது இந்த ஒன்றுதான் - இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து உண்மைக் கடவுளை அறிவதாம்; ''நித்திய வாழ்வு என்பது...உண்மையான இறைவனையும் அவர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதுமே'' (யோவா 1:3). இயேசுவைச் சந்திப்பதன்மூலம், ஒருவன், அவன் யூத மதத்திலிருந்தோ புறமதத்தாரிடமிருந்தோ வந்தவனாக இருந்தாலும், அவன் அறிவினால் உருவாக்கப்பட்டவனாகவோ, இஸ்ராயேல் மரபுப்படி வந்தவனாகவோ இருந்தாலும், இறைவனின் உண்மையான திருமுகத்தையும், அவரது உயிருள்ள திருச்சந்நிதியையும் கண்டுணர்வான்.

2. இயேசு கிறிஸ்துவில், உண்மைக் கடவுளின் திருவெளிப்பாடு:-

அ) சிலை வழிபடுவோர்:- சிலைவழிபடுவோர், கிறிஸ்துவில், உண்மைக் கடவுளின் திருமுகத்தையும், தனது பாவத்தின் உள்சாயலையும் காண்கிறான். கிறிஸ்துவின் நற்செய்தியானது ஒரே சமயத்தில், ''அழிவில்லாக் கடவுளின் மாட்சிமையை விடுத்து, அதற்குப் பதிலாக அழிந்துபோகும்'' (உரோ 1:23) உருவங்களுக்கு மாறுகின்ற புறவின விவேகத்தின் நெறிபிறழும் தன்மையையும் அந்த நெறி பிறழும் தன்மையின் மூலத்தையும் நமக்குத் தெற்றெனக் காட்டுகின்றது. இந்த நெறிபிறழும் தன்மையின்மூலம் ''கடவுளை மறந்து, படைப்புப்பொருட்களுக்கு வழிபாடு செய்வதிலும்'' (1:25) ''அவருக்கு மகிமை அளிக்க மறுப்பதிலும்'' (1:21), இறுதியாக, ''மனிதனின் இழிந்த நிலையிலும், அவனது இறப்பிலும்'' (1:32) அடங்கியுள்ளது. இத்தகைய ''சிலை வழிபாட்டைக் கைவிடுவதிலும்...இயேசு கிறிஸ்துவிற்காக ஏங்கி நிற்பதிலும்'', புறஇனத்தவன்'' வாழும் உண்மைக் கடவுளைக் காண்கின்றான்'' (1 தெச 1:9); ''எந்த இறைவனின் மகிமையிலிருந்து அவன் துரத்தப்பட்டிருக்கிறானோ (உரோ 3:23) அந்த இறைவனின் மகிமையை (2 கொரி 4:6) அவன் கிறிஸ்துவின் முகத்தில் காண்கிறான்.

ஆ) இறைவனைத் தேடும் புற இனத்தவன்:- தட்டுத்தடுமாறி இறைவனைத் தேடும் புற இனத்தவன் (அ.ப.17:27) ஆக இருப்பினும், ஞானத்தின் உதவியால் இறைவனைப் பற்றுகின்ற நிலைமையைக் கொண்டிருந்தால் (1 கொரி 1:2; உரோ 1:20-இல் இயேசு கிறிஸ்துவில் அவன் கண்டுணரும் உண்மை, புதியதன்மையில் குறைந்தது அன்று; ஏற்படுகின்ற மாற்றமும் குறைவுள்ள ஒன்றும் அன்று. இயேசு கிறிஸ்துவின் கடவுளில், அவன், உண்மையாகவே என்றுமிருக்கும், மாற்றமில்லா, எல்லா சக்தியையும் கொண்ட, எல்லா அறிவையும் உள்ளடக்

கிய, அளவிடமுடியாத நம்மையையும், விரும்பத்தக்கதுமான' 'இறைத்தன்மையை காணுகிறான். ஆனால் இந்த அடைமொழிகள், பேதமற்ற, மீபௌதீக நிரூபணங்களைக் கொண்டிருப்பதில்லை; ஆனால் இறைவன் தம் திருமுகத்தை நம் பக்கம் திருப்பி, தமது அருளை பொழிகின்ற (எண் 6:25) அவரது தொடக்க முயற்சிகளை மறை பொருளாக விளங்குகின்றன. அவரது யாவும் அறிந்த தன்மை, நம்மைத் தொடர்ந்து வரும் அவரது இரகசியப்பார்வையாகவும் (மத் 6:4), நமது உள்ளத்தின் ஆழத்தை ஊடுருவி ஆராய்வதாகவும் உள்ளது (லூக் 16:15). அவரது எல்லாம் வல்ல சக்தி எவ்வளவு பெரியது என்றால், ''இக்கற்களிலிருந்து ஆபிராகாமுக்கு சந்ததியை எழுப்பவல்லது'' (மத் 3:9); ''அது ஏதாவதொரு படைப்பை உருவாக்குவதாயிருந்தாலும்'' சரி, (உரோ 4:17), ஆபிரகாமுக்கு ஒரு மகனைப் பிறப்பிப்பதாக இருந்தாலும் சரி, இறந்துபோன இயேசுவை மீண்டு உயிர் பெற்று எழச் செய்வதாயினும் சரி (4:24) அவரால் முடியாத கரியம் எதுவுமில்லை. தாம் கூறிய வார்த்தையில் அவர் காட்டும் உறுதிப்பற்றும், தமது உறுதிமொழிக்கு அவர் கொடுக்கும் வலுவும், அவரது நித்திய நிலைபேறுடைமையாகும்; ''மேலும் தன்னுடைய உரிமை மக்களுக்கு, உலகம் உண்டானது முதலிலிருந்தே அவர் நிச்சயப்படுத்தி இருக்கும் அரசாகும்'' (மத் 25:34). ''நாம் அவரது பகைவர்களாய் இருந்தபொழுதே (உரோ 5:10), அவர் நம்மை முதலில் அன்புசெய்தது (1 யோவா 4:10.19) என்பது அவரது நன்மைத்தனம் இதுவரைக் கேட்டறியா வியப்பு என்று எடுத்தியம்புகிறது. இறைவனைப் பற்றிய இயற்கையான அறிவு - அது உண்மையானதால்- இறுதியிலே, உலகத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவாகும்; இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியது, இறைவனின் நேரடித் திருச்சந்திதானமும், உயிர்வாழும் இறைவனின் தனிப்பட்ட அன்பின் தழுவலுமாகும். ஏனெனில் '' இறைவனை அறிவது, அவரால் அறியப்படுவதாகும்'' (கலா 4:9).

இ) யூதர்கள்:- இறைவனின் வருகைக்காகக் காத்திருந்த யூதர்கள், ஒருவகையில் இறைவனை முன்பே அறிந்தவர்கள்தான். தமது தனிப்பட்ட தேர்வின் மூலம், தமது அழைப்பை யூதர்கள் உணரும்படி செய்துள்ளார். உடன்படிக்கை மூலம், அவர்களது வாழ்விற்குப் பொறுப்பேற்றுள்ளார். இறைவாக்கினர்கள் வழியாக அவர்களுக்குத் தமது வார்த்தையை ஏற்கெனவே பேசியுள்ளார் (எபி 1:1), தன்னுடன் உரையாடும் படி அவர்களை அழைக்கும் உயிருள்ள கடவுள் அவரே. ஆனால் இந்த உரையாடல் எந்த அளவிற்குச் செல்லும் என்றோ, அந்த அளவில் கடவுளை உட்படுத்தும் என்றோ, என்ன பதிலை இம்மனிதன் அளிப்பான் என்றோ, பழைய ஏற்பாடு அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. ஏனெனில் இறைவனுக்கும், அவரது உண்மையுள்ள ஊழியர்கட்குமிடையே இன்னும் இடைவெளி அதிகமுண்டு. இறைவன், ''இரக்கமும் தயவும் உள்ளவர்'' (யாத் 34:6); வாழ்க்கைத் துணையிடம் காணும் உள்ளக் கிளர்ச்சியை நம் மீது பொழிபவர்; தந்தையின் இரக்கத்தோடு நம்மை அணுகுபவர்; ஆனால் இத்தகைய உருவக தோற்றங்களுக்குப் பின்னால், நமக்கென இரகசியமாக இறைவன் என்ன வைத்திருக்கிறார் என்பது நமக்கு திரைமறைவாகவே உள்ளது.

ஆனால் இந்த இரகசியத்தை, இயேசு கிறிஸ்துவில் இறைவன் வெளிப்படுத்துகிறார். அவர் வழியாக, உள்ளங்கள் ஒன்றையொன்று பரிமாறிக்கொள்ளுதலும் நீதித் தீர்ப்பும் நடைபெறுகிறது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் அவரது தந்தையே ''எங்களது கடவுள்'' எனக்கூறுவது வீணாகும். ஏனெனில் அவர்கள் அவரது தந்தையை அறியாதவர்கள், பொய் பேசுபவர்களே (யோவா 8.54; காண்க 8:19). ஆனால் இயேசுவை ஏற்பவர்களுக்கு, எந்த இரகசியமும், அது எப்படிப்பட்டதாயினும் மறைக்கப்படுவதில்லை அந்த இரகசியத்தை, ஊடுருவிச் செல்ல முடியாத இறைவனின் மறைபொருளை, கண்டுணர்வார்கள். அவரது திருமகன் ''நான் தந்தையிடம்

கேட்டதெல்லாவற்றையும், உங்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்'' (யோவா 15:15) என நம்பிக்கையுடன் கூறும்பொழுது, அவர்கள் அதை கண்டுணர்வர். இனிமேல் அவர்கட்கு எந்தவித உருவகமோ அல்லது உவமையோ, உண்மையை விளக்கத் தேவையில்லை. ஏனெனில் இயேசு அவர்களுக்குத் தந்தையை முழுவதும் திறந்து காட்டுகிறார் (16:25 இனிமேல் அவர்கள் கேள்வி ஏதும் கேட்கத் தேவையில்லை (16:23), அமைதியற்று அல்லலுறுவதில்லை (14:1); ஏனெனில் அவரது சீடர்கள் அவரது தந்தையைக் கண்டு கொண்டார்கள் (14:7).

ஈ) கடவுள் அன்புருவானவர்:- ''நம்மீது வானகத் தந்தை கொண்டுள்ள அன்பின் இரகசியத்தை'' (யோவா 4:16), இயேசு கிறிஸ்துவின் மூலமாக அல்லாமல் வேறெவரிடமிருந்தும் நாம் அறியமுடியாது (4:8.16). பழைய ஏற்பாட்டிலே இத்தகைய அன்பை நாம் ஓரளவுக்குத்தான் காணமுடிகிறது. ஏனெனில் 'அன்புசெய்' என்பது இறைவனின் பெருங்கட்டளையாகும் (உப 6:5; மத் 22:37); மேலும் இறைவனின் தன்மையை எடுத்துக்கூறுகையில் (யாத் 34:6) அவர் அளவு கடந்த நன்மை உள்ளவர் (உ.ச. 8:6தொ) என்பதும் இதனாலே. ஆனால் இவையெல்லாம், உருவகங்களை மாற்றி அமைக்கும் மனிதனால் கையாளப்பட்ட சொற்களாகும். ஆனால் இயேசு கிறிஸ்து ஒருவரில்தான், உலகத்தின் படைப்பு, அமைப்பு, இறுதி முடிவு என்கிற செயல்களெல்லாம், தமது அன்பின் செயலே என ஐயமற்ற முறையில் இறைவன் நிரூபிக்கிறார். ''அவரால் மிக்க அன்பு செய்யப்பட்ட அவரது ஒரே மகனை'' (மாற் 1:11; 12:6) நமக்காக சாவுக்கு கையளித்தபோது, 'தான் படைத்த இவ்வுலகத்தை அன்பு செய்வதே' (யோவா 3:16) தமது உறுதியான நோக்கு என்பதை ஆணித்தரமாக விளக்குகிறார் (உரோ 5:8); மேலும் இவ்வாறு தம் ஒரே மகனை நமக்குக் கையளிப்பதின் மூலம், தமது ஒரே மகனை எவ்வளவு அதிகமாக அன்பு செய்தாரோ, அதே அளவு நம்மையும் அன்பு செய்கிறார் என்பதையும், நாமும் அவரை, அவரது திருமகன் எவ்வளவு அதிகமாக அன்பு செய்தாரோ அதே அளவு, அன்பு செய்யக்கூடியவர்களாகவும் ஆக்குகிறார். தந்தையையும், மகனையும் இணைக்கும் தூய ஆவியாக அன்பெனும் கொடையை நமக்குப் பரிசாக அருளுகிறார்.

3. இயேசு கிறிஸ்துவின் திருமுகத்தில் இறைவனின் மகிமை:- இறைவனின் உண்மையில் பங்குபெறும் பேற்றினை உய்த்துணரும் கிறிஸ்தவ உறுதிப்பாடு அறிவு சார்ந்த முறையில் வரும் தீர்மானம் அன்று. அதாவது ''தமது ஒரே மகனைக் கையளித்த இறைவன், நமக்குத் தேவையான எதையும் தர மாட்டாரா? (உரோ 8:32) என்பதை அறிவு தெளிவாக்கலாம். ஆயினும் இந்த உண்மை, நமது பகுப்பறிவின் அறிவால் வருவதில்லை. மாறாக, ஊனுடலில் வாழும் நமக்காக நம்மில், வார்த்தை மனு உருவெடுத்து நம்மில் தங்கி வாழ்ந்து செயலாற்றுகிறார் என்ற நிபந்தனையற்ற வெளிப்பாட்டிலிருந்து நாம் அறிகிறோம். உண்மையில் கிறிஸ்துவில் ''மனிதன் மேல் இறைவன் கொண்டுள்ள அன்பு வெளிப்படுகிறது'' (தீத் 3:4). ''யாரும் பார்த்திராத'' (யோவா 1:18) அவரைத்தான் கிறிஸ்து நமக்கு வரைபடமாக்கி விளக்கிக் காட்டுகிறார். ''தந்தையின் மாட்சிமையின் சுடரொளியாகவும் அவருடைய உள்ளியல்பின் சாயலாகவும் (எபி 1:3) அவர் ''என்னைக் காண்பவன், தந்தையைக் காண்கிறான்'' (யோவா 14:9) என்பதன் மூலம், தந்தையைக் காணப்படக்கூடியவராக்கி, நாம் அவரைப் பார்க்கச் செய்கிறார். இச்செயல் ஏதோ, ஒருபொருளின் மறு உருவமில்லை; ஒரு நகலின் மறு பிரதி அல்ல. ஆனால் அவர் ஒருவர் மட்டும் அவரால் ஈன்றெடுக்கப்பட்ட மகன் ஆதலாலும், தந்தையில் இருப்பவராதலாலும், தன்னில் தந்தையைக் கொண்டிருப்பவர் ஆதலாலும் (யோவா 14:40), இயேசுவால், தந்தையை நோக்காமல், ஒரு வார்த்தை கூறவோ, ஒரு செயலைச் செய்யவோ, தம்முடைய மன எழுச்சிகளை அவரிடமிருந்து பெற்றிடாமல், அல்லது தனது செயலையும் அவரை நோக்கிச் செயல்படுத்தாதவராக இல்லாமல்

(யோவா 5:19 தொ.30) ஒரு வார்த்தை கூறவோ, ஒரு செயலைச் செய்யவோ முடியாது. தந்தையைக் கண்ணுறாமல் எதுவும் செய்ய முடியாதவராக இருப்பதுபோலவே தாம் யார் என்பதையும், தந்தையை விட்டுப் பிரிந்து தனித்து நின்று சொல்ல முடியாதவராக இருக்கிறார் (மத் 11:27). அவர் செய்கின்ற எல்லாச் செயல்கட்கும், அவர் இருக்கின்ற நிலைக்கும் அடித்தளமாக, தந்தையின் அன்பும், திருச்சந்நிதியும் உள்ளன. இதுவே அவரது ஆளுமையின் இரகசியமாகவும், அவரது முகத்தில் ஒளிரும் மகிமையின் அறிவொளியாகவும் (2 கொரி 4:6) இருப்பதோடு, அவரது ஒவ்வொரு செயலையும் முத்திரையிடுகிறது.

4. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கடவுள்:- இயேசுவின் கடவுள் அவர் தந்தையே, அவரை இயேசு அழைக்கையில் சிறு குழந்தைக்குரிய உரிமைப்பாங்குடனும், மன உணர்ச்சியுடனும் 'அப்பா' என்கிறார். தந்தை, அதே சமயத்தில், இயேசுவின் கடவுளும் ஆவார். ஏனெனில் தந்தையானவர், யாரிடமிருந்தும் பெறாமல் தனக்குத் தானே இறைத்தன்மையைக் கொண்டிருப்பதோடு, தொடக்கத்திலிருந்தே தாம் ஈன்ற ஒரே மகனுக்கு அதைக் கொடுப்பவராகவும், தந்தையும் மகனும் இணைந்து வாழும் தூய ஆவிக்கும் அவரே அந்த இறைத்தன்மையை அளிப்பவராகவும் உள்ளார். இவ்வாறு இயேசுவே, தந்தையும், கடவுளும் ஒருங்கிணையும் இறைத்தன்மையாகிய மறை உண்மையையும், ஒரே இறைவன் மூன்று ஆட்களாய் உள்ளார் என்ற மறை உண்மையையும் நமக்கு வெளிப்படுத்துகிறார். இதைத்தான் பவுல் மும்முறை எடுத்துக்கூறுகிறார்: ''நமது இயேசு கிறிஸ்துவின் தந்தையும், கடவுளுமானவர்'' (உரோ 15:6; 2 கொரி 11:31; எபே 1:3). மூவொருகடவுளை, நாம் புரிந்து கொள்ளும் வகையில் இயேசு விளக்குகிறார். இதற்காக, இறைவன் பிள்ளைக்குரிய சார்புடைமையில், அவருடைய சாயலில் நம்மைப் படைத்து, முன்னேற்பாடு செய்துள்ளார்.

இறைவன் திருமுன் உள்ள படைப்புகளில் கிறிஸ்து ஒருவரே முழுமை பொருந்திய மாதிரியாக இருப்பதால், அவர் உண்மைக் கடவுளின் மொத்த உருவமைப்பைத் தந்தையில் வெளிக்காட்டுகிறார்; அக்கடவுள் யாரெனில், தம்மை இஸ்ராயேலருக்கு வெளிப்படுத்தியவரும், நேர்மையுள்ள ஞானத்தோடு தம்மை வெளிப்படுத்துபவரும் ஆவார். இயேசுவின் கடவுளானவர், பழைய ஏற்பாட்டில் தம்மைப்பற்றித் தாம் அறிவித்த குணங்கள் அனைத்தையும், மனிதன் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு முழுமையாகவும், தனிச்சிறப்பாகவும் கொண்டவர். நம் யாருக்கும் இல்லாதது போல், அவர் இயேசுவுக்கு 'முதலும், முடிவுமாவார்'. அவரிடமிருந்தே கிறிஸ்து வருகிறார்; மீண்டு அவரிடமே கிறிஸ்து திரும்பச் செல்லுகிறார்; எல்லாப் பொருட்களின் விளக்கம் அவரே, அவரிடமிருந்தே எல்லாம் உருப்பெருகின்றன; அவரது திருவுள்ளம் எப்படியும் நிறைவுபெற வேண்டும்; அதே நேரத்தில் தன்னிறைவு கொண்டவரும் அவர் ஒருவரே; தூய்மையும், நன்மையும் நிறைந்தவர் அவரே, ஒரே அண்டவரும் அவரே. ஒப்புமை இல்லாத ஓர் உயிர் அவரே. இத்தந்தையின் மதிப்பை எடுத்துக் காட்டுவதற்காக, ''தாம் (அன்பு செய்யும்) அத்தந்தையை உலகம் அறியும்பொருட்டு (யோவா 14:31), இயேசு; படைப்பின் மகிமை எல்லாவற்றையும் தியாகம் செய்கிறார்; அலகையின் சக்தியை நேருக்கு நேர் சந்திக்கிறார்; இறுதியில் சிலுவையின் கொடுமையையும் தாங்கிக் கொள்ளுகிறார். இயேசுவின் கடவுள் உயிர்வாழும் கடவுள்; தமது மக்களை, பாசத்தோடும், உள்ளக்கிளர்ச்சியோடும் அன்பு செய்து, அவர்களைக் கண்ணும் கருத்துமாய்க் கட்டிக் காப்பவர், எனவேதான், இப்படிப்பட்ட இறைவனின் அன்பின் கனல், (பாவத்தால் இழந்த) அரசை, மீண்டும் தமது தந்தையிடம் சேர்க்கும் வரையில் (லூக் 12:50) கிறிஸ்துவைச் சுட்டெரித்துக் கொண்டே இருக்கிறது.

5. இறைவன் ஆவியானவர்:- தந்தையும், மகனும் இவ்வாறு தூய ஆவியில்தான் எதிர்

கொள்கின்றனர். இந்த ஆவியில்தான் கிறிஸ்து தம்மைப்பற்றி ''நீரே எனது மகன்'' என்று தந்தை கூறுவதைக் கேட்கிறார், தமது மகிழ்வையும் பெறுகிறார் (மாற் 1:10). இவ்வாறு அத்தந்தைக்கு மகனாக இருக்கும் மகிழ்வை இந்த ஆவியில்தான் மீண்டும் தந்தைக்கே திருப்பி அளிக்கிறார் (லூக் 10: 21). இவ்வாறு இயேசு ஆவியில் மட்டும் தான் தந்தையோடு இணையக் கூடுமாதலால், தந்தையை அறிவிக்கையில் இயேசு தூய ஆவியை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது.

இவ்வாறு ஆவியை ஓர் ஆள் என விவரிக்கையில், இயேசு, ''இறைவன் ஆவியானவர்'' (யோவா 4:24) என்றும், அதே நேரத்தில் இது என்ன பொருள்படுகிறது என்பதையும் வெளிப்படுத்துகிறார். இவ்வாறு தந்தையும், மகனும் ஆவியில் ஒன்றித்திருப்பது மற்றவரை உடைமையாகக் கொண்டு மகிழ்வதற்காக அன்று; மாறாக ஒருவர் தம்மை மற்றவருக்குக் கொடுக்கவே; கொடுப்பதை இந்த ஒன்றிப்பு உண்டாக்குகிறது. இவ்வாறு கொடையாகவுள்ள, தூய ஆவி, தந்தையும், மகனும் இணையும் இந்த ஒன்றிப்பை முத்திரை இடுகிறதென்றால், தன்மையாலே, அவர்கள் இருவரும் கொடையாக இருக்கிறார்கள்; அவர்களின் பொதுவான உட்தன்மை, கொடுப்பதும், 'அடுத்தவரில் வாழ்வதும், அடுத்தவருக்கு வாழ்வு அளிப்பதுமேயாகும். இவ்வாறு வாழ்வு, தொடர்பு, தனியுரிமை ஆகியவைகளின் சக்தியாக இருப்பவர் ஆவியாகும். கடவுள் ஆவியானவர் என்பது அவர் எல்லாம் வல்லவர் என்பதையும், தம்மையே முழுவதும் அளிக்க வல்லவர் என்பதையும், தம்மையே மேலாண்மையோடு உறுதிப்படுத்திக் கொள்பவர் என்பதையும், அதே நேரத்தில் எல்லாவற்றினின்றும் முழுவதும் விலகி நிற்கவும் முடிபவர் என்பதையும் உணர்த்துகின்றது. மேலும் தமது படைப்புப் பொருள்களை முழுவதும் தமக்கே உரிமையாக்கிக் கொள்ளவும், அதே நேரத்தில் அப்படைப்புப் பொருள்கள் தங்கள் தனித்தன்மையுடன் வாழும்படி அமைக்கவும் வல்லவர் என்று உணர்த்துகின்றது. இது கடவுள் சடப்பொருளால் ஆனவர் இல்லை என்று கூறுவதிலிருந்து முழுவதும் வேறுபட்டது; எல்லா வரைமுறைகளையும் கடந்து, எல்லாப் பின்வாங்கு நிலைகளையும் கடந்து நிற்பதாகும். முடிவில்லாக் காலத்திற்கும், அதே நேரத்தில் ஒவ்வொரு வினாடியும் வாழ்வு மற்றும் ஒன்றிப்பின் ஒரு புதிய, முழுமையான ஆற்றலாகும்.

இறைவன் சித்தம் (WILL OF GOD)

இறைவனின் சித்தம் மற்றும் திட்டம் ஆகியவற்றின் உள்ளுறைத் தன்மைப்பொருள் ஒன்றேயாகும். ''எல்லா மனிதரும் மீட்பு பெறவேண்டும் என்பது இறைவனுடைய விருப்பம்'' (1 திமோ 2:4) என்று கூறுவதன் மூலம் பவுல், எல்லா இறைவாக்குகளையும், இயேசுவினுடைய செய்தியையும் தொகுத்துத் தருகிறார். இறை சித்தத்தின் எல்லா வரலாற்று வெளிப்பாடுகளும், ஞானத் திட்டத்தில், ஒரே முழுதான திட்ட அமைப்பின்படி ஒருங்குபடுத்தப்படுகின்றன. ஆயினும், முழு திட்டத்தினுடைய ஒவ்வொரு தனிப்பட்ட வரலாற்று வெளிப்பாடும், ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியின்மீது அக்கறை கொண்டுள்ளது. அந்நிகழ்ச்சியில் கடவுளுடைய தலைமை நிலையை ஏற்றுக் கொள்வதற்காக மனிதன், ''உமது சித்தம் நிறைவேறட்டும்'' என்று செபிக்கிறான். இவ்வாறு, ஏற்கனவே முடிவடைந்த வரலாறானது, காலத்திற்கு முன்னரே அனைத்தையும் முன்குறித்து வைத்த இறைவனின் திட்டத்தை வெளிப்படுத்துகின்றது. அதே நேரத்தில், இறைவனின் சித்தத்திற்கு கீழ்ப்படிகின்ற மனிதன், கடவுள் எதிர்காலத்தை நடத்திச் செல்கிறார் என்பதை அறிந்தவனாய், எதிர்காலத்தை உறுதியான நம்பிக்கையுடன் எதிர்கொள்கிறான்.

உள்ளார்ந்த உடன்பாடு மற்றும் விரும்பி செயலாற்றும் கடமை மனிதனுக்கு இருப்பதால், மனிதனுக்கான இறைவனுடைய சித்தமானது ஒரு சிறப்பான அமைப்பினை ஏற்றுக்கொள்கிறது. மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள இறைசித்தமானது தவிர்க்க முடியாத விதியாக இல்லாமல், ஒரு அழைப்பாக, ஒரு

கட்டளையாக, மனிதன் மீது விடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோளாக உள்ளது. சட்டமானது, இறைவன் விரும்புவது என்ன என்பதை, தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட ஒரே தொகுப்பாக ஒன்று சேர்த்துத் தருகிறது. சட்டம் என்பது ஒரு அமைப்பாக இருக்கும் வரையில், அது செயலற்றதாக உள்ளது. என்றும் நிகழ்கால நிகழ்ச்சியாக உள்ள, மனிதனுடைய பதிலை தூண்டியெழுப்புகின்ற, உரையாடலைத் தொடங்குகின்ற தன்னியலான விருப்பத்தினை சட்டத்தில் கண்டுபிடிக்க முயற்சி தேவைப்படுகிறது. இவ்வொளியில் காணும்போது, சொல்லும் செயலுமாக உள்ள அவருடைய வார்த்தையை ஒத்ததாக இறைவனின் சித்தம் உள்ளது. இறைவனின் சித்தமானது, முதலில் அவருடைய விருப்பத்தினை வெளிப்படுத்துகின்ற செயலாக உள்ளது. இப்பொருளில் இறைவனுடைய சித்தத்தை ஒரு முழுத்திட்டமாகத் தொகுத்துத்தரும் அவரது திட்டத்தோடோ அல்லது அவரது விருப்பத்தைச் செயல்முறையில் விளக்கும் சட்டத்தோடு மட்டும் ஒன்றாக்கப்படுவதில்லை.

முன் குறித்தல், தேர்ந்தெடுத்தல், அழைத்தல், விடுதலை, உறுதிமொழிகள், தண்டனைகள், மீட்பு முதலான இறைசித்தத்தின் பல்வேறு வெளிப்பாடுகளைப் பற்றிய விளக்கங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக, விண்ணுலகில் நிறைவேற்றப்படுகின்ற அதே நேரத்தில் மண்ணுலகிலும் அது நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாம் காட்ட வேண்டும் (மத் 6:10). இறைவனின் மீட்புச் சித்தமானது தன்னிலேயே பயனிறைவுடையது; மனிதனுடைய விருப்பத்தினை ஒடுக்குவதற்காக இல்லாமல், முழுமைபடுத்துவதற்காக இறைசித்தம் அதனை எதிர்கொள்கிறது. இதனை அடைய, இறைவன் மனிதனுடைய தீமையை வென்று, விருப்பங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பழைய ஏற்பாடு

தொடக்கத்திலிருந்தே படைத்தவரது சித்தமானது ஆதாமிற்கு இருவிதங்களில் தோன்றுகிறது. முதலாவது அது விலங்குகளின் மீதான ஆற்றல் மற்றும் நிறைவான கூட்டாளியின் பிரசன்னம் ஆகியவற்றுடன் இணைந்த தாராளமான ஆசீராகும். இரண்டாவது, மனித சுதந்திரத்திற்கான வரையறையாகும்: ''நீ.. உண்ணாதே'' (ஆதி 2:17). பின்னர், நாடகம் துவங்குகிறது. அவனுடைய உண்மையான சுதந்திரத்தின் மையமாகிய சார்ந்துள்ள நிலைக்கு துணைபுரிய உருவாக்கப்பட்ட, படிப்பிக்கின்ற சோதனையாக இத்தடையை அறிந்து கொள்ளாமல், தன்னுடைய மேலாண்மை நிலையின் மீதான பொறாமையின் சித்தம் என்று கருதும் ஆதாம் கீழ்ப்படிய தவறுகிறார் (3:5 தொ). இறைவன் மீண்டும் உரையாடலை தொடங்கும்போது (3:9), இறை சித்தமானது பாம்பின்மீதான சாபமாக உருவாகிறது (3:14); ஆணுக்கும் பெண்ணுக்கும் இறுதி வெற்றி பற்றிய வாய்ப்பினால் ஓரளவு ஒளிமயமாக்கப்பட்ட தண்டனையின் அறிவிப்பாக இது உள்ளது (3:15-19). பழைய ஏற்பாட்டில் இறைவனின் சித்தம் பற்றிய பிரச்சனையின் அடிப்படை இத்தகையதாகும்.

1. இறைவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துதல்:-

இந்நிலையின் இறைசித்தமானது பாவமிக்க மனித சமுதாயத்திற்கு நேரடியாகவும், உலகலாவிய முறையிலும் ஒருபோதும் இனி வெளிப்படுத்தப்படப் போவதில்லை. இறைவன் வரலாற்றின் இடையில் நுழைவதன் மூலமும், சட்டத்தை அளிப்பதன் மூலமும், ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கான இறைசித்தம் பற்றிய தனிப்பட்ட அறிவிப்பாக இது உள்ளது.

அ. வரலாற்றில்:- இஸ்ராயேல் முதலில் யாவேயின் பெரும் செயல்களில் அவரது இரக்கம் மிக்க, அன்பான சித்தத்தைத் தெரிந்துக் கொள்கிறது. இஸ்ராயேலை தம்முடைய மக்களாக உருவாக்குவதே அவருடைய விருப்பமாக இருந்ததால் (1 சாமு 12:22), எகிப்தின் அடிமைத்தளையினின்று இஸ்ராயேலை விடுவித்து (யாத் 3:8), கழுகுகளின் இறக்கைகளின் மேல் அதனை உயர்த்த (19:4) யாவே தீர்மானித்தார். நாடு

கடத்தப்பட்ட சோதனை காலத்திற்குப் பின்னர், புறவினத்தாரின் உதவியையும் கொண்டு எருசலேமை மீண்டும் அமைக்கவும், பேராலயத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் ஆண்டவர் விரும்புகிறார் (ஏச 44:28). இதன் மூலம், இறைவன் சாவையன்று வாழ்வையே (எச 18:32), துன்பத்தையன்று, அமைதியையே (எரே 29:11) விரும்புகிறார் என்பதை இஸ்ராயேல் உணரவேண்டும். இத்தகைய வெளிப்பாட்டினைக் கொண்டிருக்கும் விருப்பமானது அன்பையே சுட்டிக் காட்டுகிறது.

சட்டத்தை அளிப்பது அன்பின் அடையாளமே. ஏனெனில் ''நீ அந்தக் கட்டளையின்படி நடக்கும் பொருட்டு, அது உனக்கு மிகவும் அண்மையிலேயே இருக்கிறது: அது உன் வாயிலும் இதயத்திலும் உள்ளது'' (உப. 30:14) என்பதை இஸ்ராயேல் புரிந்துக் கொள்வதற்குச் சட்டம் வழிவகுக்கிறது. சங்கீத ஆசிரியர்கள், இறைசித்தத்துடனான தொடர்பின் அனுபவமான, ஒப்பிடமுடியாத பெருமகிழ்ச்சியின் ஊற்றை பாடல்களில் தொகுத்தனர் (சங் 1:2). நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட இலக்கியத்தில் ''இறை சித்தத்தினால்'' ஆசிர்வதிக்கப்பட்டவராக தோபியா தோன்றுகிறார் (தோபி 12.13). ''உம் திருவுளப்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும்'' (சங் 143:10) என்னும் ஆர்வமிக்க செபமும் உள்ளது.

ஆ. இறைஏவுதல் பெற்ற சிந்தனையில்:- இறைவாக்கினர்கள், ஞானிகள் மற்றும் சங்கீத ஆசிரியர்கள் இறைசித்தத்தின் யாவும் கடந்த நிலையை உணர்கிறார்கள்; இந்த இறை விருப்பத்தை உயர்ந்த முறையில் ஆராதிக்க, ஒவ்வொவரும் அதன் எதாவது ஒரு பண்பை வலியுறுத்துகின்றனர்.

(i) அதன் மேலாண்மையான சுதந்திரம்:- ''அவர் தீர்மானிக்கிறார்; அவர் முடிவை யார் மாற்றக்கூடும்? எதை விரும்புகிறாரோ அதை அவர் செய்து முடிக்கிறார்'' (யோபு 23:13). அவர் உலகுக்கு அனுப்புகின்ற வார்த்தையானது, ''அவர் விரும்பியதையெல்லாம் செய்து முடிக்கிறது'' (ஏச 55:11). அழிவைப்பற்றியதாக இருந்தாலும் அது நடைபெறுகிறது (10:23), கடவுள் மனித பரிந்துரைகளை விட்டுவிட்டு தன்னுடைய விருப்பத்தையே பின்பற்றுகிறார் (40:13). இறைவனின் எல்லாம் வல்லமை மற்றும் முழுச் சுதந்திரம் ஆகியவை பற்றிய இத்தகைய உறுதிக்கூற்றுகள் காணப்படுகின்றன. படைத்தவர் என்னும் நிலையில் வானத்திலும் பூமியிலும் எல்லா ஆற்றலையும் அவர் கொண்டுள்ளார்; இயற்கையின் சக்திகள் அவருக்கு உட்பட்டு பணிகின்றன (சங் 135:6; யோபு 37:12; சீரா 43:13-17). தமது வேலைப்பாட்டின் தலைவர் என்னும் நிலையில், மனித இதயத் துடிப்பிற்கும் அவர் வழிகாட்டுகிறார் (பழ 21:1); விருப்பப்படி அரசுகளை அளிக்கிறார் (தானி 4:14.22.29). அவர் விரும்பிய போது உயர்த்தவும் தாழ்த்தவும் செய்கிறார் (தோபி 4:19). சில நேரங்களில் தன்னிச்சையாகத் தோன்றும் இறை விருப்பத்தின் மேலாண்மையான சுதந்திரத்துடன் முரண்படும்போது (எச 18:25) ஆகாமைப்போன்று எதிர்த்தெழ மனிதன் சோதிக்கப்படலாம். இந்நிலையில் குயவன் களிமண்ணைத் தனது விருப்பத்திற்கேற்ப உருவாக்கும் பாரம்பரிய உதாரணத்தைப் பயன்படுத்தி, படைக்க பட்டவன் என்ற நிலையில் மனிதனுடைய அடிப்படை சார்புநிலையை மறைநூல் அவனுக்கு நினைவுறுத்துகிறது. ''அவருடைய விருப்பத்தை யார் எதிர்க்கக்கூடும்? அற்ப மனிதா! கடவுளுக்கு எதிர்வினா விடுக்க நீ யார்? (உரோ 9:19 தொ; எரே 18:1-6; ஏச 29:16; 45:9; சீரா 33:13; ஞான 12:12). படைப்பானது, தன்னை படைத்தவருடைய சித்தத்தின் எந்தவொரு வெளிப்பாட்டையும் தாழ்மையுடன் ஆராதிக்க வேண்டும்.

(ii) இறைசித்தத்தின் ஞானம்:- மறைபொருளை ஆராதிப்பதென்பது, அறிவாற்றலை இழப்பதன்று; அவரது சித்தத்தைச் செயல்படுத்துவதை ஆள்கின்ற ஞானம், இறைநீதி, குறிக்கோள் மற்றும் திட்டத்தை பற்றிய அறிவு ஆகியவற்றின் மீதான செழுமைமிக்க விசுவாசத்தைச் சார்ந்திருப்பதாகும். வெறும் சாதாரண மனித

அறிவாற்றல் இறைவனுடைய சித்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது (ஞான 9:13); ஆனால் அதற்காக செபிப்பவனுக்கு ஞானத்தின் கொடையானது நுண்ணிறிவு அளிக்கின்றது (9:17). அப்போது ''என்றென்றும் நிலைத்திருக்கும் ஆண்டவருடைய திட்டமும் அவரது இதயத்தின் எண்ணங்களும்'' (சங் 32:11) மனிதனுடையவற்றினின்று முற்றிலும் மாறுபட்டிருப்பதை (பழ 19:21) நாம் காணலாம்.

(ஈ) நற்செயலாற்றும் விருப்பம்:-

இறைவனுடைய சித்தமானது நற்செயலாற்றுதல், நல்ல விருப்பம், இரக்க உணர்வு, கருணை உணர்வு போன்ற சொற்களில் இங்கு வெளிப்படுத்தப் படுகிறது. மற்ற மொழிகளில் உள்ளதுபோல எபிரேய மொழியிலும் ''ஒருவரை விரும்புதல்'' என்பது, அவரை அன்பு செய்வதாகும். இப்பொருளில் இறைவன் தமது ஊழியனையும் (ஏச 42:1), தமது மக்களையும் (சங் 44:4), நேர்மையாளர்களையும் (சங் 22:9) விரும்புகிறார். தம்முடைய தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இரக்கம், மன்னிப்பு மற்றும் நன்மைத்தனம் (ஓசே 6:6; மீக் 6:8; எரே 9:23; ஏச 58:5 தொ) ஆகியவற்றை அன்பு செய்கிறார் அதாவது விரும்புகிறார்.

2. மனிதனுடைய மறுப்புடன் முரண்பாடு:-

இறைவனுடைய அன்புச் சித்தமானது மனிதனுடைய பாவ விருப்பத்துடன் மோதுகிறது. ஆதாமினுடைய வரலாறு எப்போதுமே நிலவுகிறது. சான்றாக, இறைவாக்கினர் ஆமோஸிற்கு செவிமடுப்போம். விசுவாசமற்ற இஸ்ராயேலுக்கு ஆசீயளிக்கும் விருப்பமானது தண்டிக்கும் விருப்பமாக உருவாகிறது (ஆமோ 1:3.6); தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருப்பதன் விலை இதுவே (3:2). மனிதன் தன்னுடைய ஆண்டவரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் (4:6-11), இறுதி தண்டனைக்கு அவன் தயாராகட்டும் (4:12). இதயத்தைக் கடினப்படுத்துவதன் மிரட்டலானது மனிதன்மீது பளுவைச் சுமத்துகின்றது. தண்டனைக்கான இறைவனின் சித்தமானது உணர்ச்சியற்றதன்று; ஏனெனில், எஞ்சியிருப்போராவது உயிர்பிழைப்பர் (ஏச 6:13; 10;21) என்று கூறும்போது தமது முடிவிலிருந்து ''திரும்புவதற்கு'' தம்முடைய விருப்பத்தை மாற்றுவதற்கு அவர் எப்போதும் தயாராக உள்ளார் என்பது தெரிகிறது (எரே 18:1-12; எச 18; யாத் 32:14; யோனா 3:9-10). ''அக்கிரமி தன் தீய வழியை விட்டு மனந்திரும்பி உயிர்வாழ வருவதை'' (எச 18:23) காணும்போது அவர் பெருமகிழ்ச்சி கொள்கிறார்.

இறைவனே பாவியின் நிலையை தமது கரத்தில் எடுக்காத வரையில், இச்சித்தமானது பயனற்ற எண்ணமாகவே இருக்கும். அவருடைய முறையானது, தமது, விசுவாச மற்ற துணையாளரின் சித்தத்தை உள்ளார்ந்த கவர்ச்சியால் ஈர்ப்பதும் (ஓசே 2:16), இஸ்ராயேல் தன்னுடைய சித்தத்தைப் பின்பற்ற அதற்கு ஒரு புதிய இதயத்தை அளிப்பதுமாகும் (எச 36:26-27; எரே 31:33). இம்முடிவிற்காக, ஒரு ஊழியனை உருவாக்கி, தம்முடைய சித்தத்திற்கு கீழ்ப்படியக்கூடிய விதத்தில் அவனை அமைக்க (சங் 39:8-9), தினமும் காலையில் அவனுடைய செவியை அவர் திறந்துவிடுகிறார் (ஏச 50:5). இந்த ஊழியன் காரணமாக, ''ஆண்டவரின் திருவுளம் நிறைவேறும்'' (53:10). அதே சமத்தில், இறைவனின் சித்தமானது கட்டாயத்தை விடுத்து அன்பையே பயன்படுத்துகிறது. அன்புக்குரியவர், தனது மணமகள் விரும்புவதற்குமுன் அவளை எழுப்புவதில்லை (உ.ச. 2:7; 3:5; 8:4). ஆனால், அவள் தனது காதலனிடம் திரும்பிவர விரும்பும்போது (ஓசே 2:17-18), ''என் அன்புடையாள்'' (ஏச 62:4) என்று இறைவனாலேயே அழைக்கப்பட அவள் தகுதியுடைவளாகிறாள்.

· புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டின் தொடக்கத்திலேயே, அருள் நிறைந்தவளும் ஆண்டவருடைய அடிமையுமாகிய மரியாள், தாழ்ச்சியோடும் கீழ்ப்படிதலோடும் இறைவனின் சித்தத்தை வரவேற்கிறாள் (லூக் 1:28.38). ஒப்புயர்வற்ற நீதிமானாகிய இயேசு, ''இதோ இறைவா

உமது திருவுளத்தை நிறைவேற்ற'' (எபி 10:7.9) உலகிற்கு வருகிறார். ''இறைவனு டைய மனதிற்கு உகந்தவராக, அவர் விரும் பியதெல்லாம் செய்யக்கூடிய மனிதனாகிய அவர்'' (அ.ப. 13:22), தாவீதை விட உயர்ந்த வராக உள்ளார்.

1. கிறிஸ்துவும் இறைவனின் சித்தமும்:-

அ) இயேசு தந்தையின் முன்னுரிமை களை வெளிப்படுத்துகிறார்:-

இறைவனுடைய இதயத்தை ஒடுக்க விரும்புகின்ற பரிசேயர்களுடைய தொல் லைப்படுத்தும் மனப்போக்குக்கு எதிராக, இறைவன் தமது நன்மைகளை அளிப்பதில் முற்றிலும் கட்டுபாடற்றவராக உள்ளார் என்று இயேசு அறிவிக்கிறார். அன்பினால் ஆளப்படும் இந்தச் சுதந்திரம், திராட்சைத் தோட்டமும் உரிமையாளரும் என்னும் உவ மையில் தோன்றுகிறது. ''உனக்குக் கொடுத் தபடியே கடைசியில் வந்த இவனுக்கும் கொடுப்பது என் விருப்பம். என் விருப்பம் போலச் செய்ய எனக்கு உரிமையில்லையா? நான் நல்லவனாய் இருக்கிறேன் என்பதால் உனக்குப் பொறாமையோ?'' (மத் 20:14-15). அவ்வாறே, மெசியாவின் வெளிப்பாட் டைச் சிறுவருக்கென ஒதுக்கி வைப்பதும் (11:25), அரசைக் கொடையாகத் தம்முடைய சிறு மந்தைக்கு அளிப்பதும் (லூக் 12:32), இறைவனின் விருப்பமாகும். அவரது விருப் பத்தை நிறைவேற்றுவோர் மட்டுமே இந்த அரசில் நுழைவர் (மத் 7:21); ஏனெனில், அவர்கள் மட்டுமே அவரது குடும்பத்தின் உறுப்பினர்களாக உள்ளனர் (12:50).

ஆ) தனது தந்தையின் விருப்பத்தை இயேசு நிறைவேற்றுகிறார்:- நான்காவது நற்செய்தியில் இயேசு தம்முடைய தந்தை யின் சித்தத்தைப்பற்றி பேசாமல், ஒரு பணியை உள்ளடக்கிய இறைவனின் சித்த மாகிய, தம்மை அனுப்பினவரின் சித்தத்தைப் பற்றிப் பேசுகிறார். இவ்விருப்பத்தினால் இயேசு ஊட்டமளிக்கப்படுகிறார் (யோவா 4:34); அதனை நிறைவேற்றுதலே அவரு டைய ஒரே ஆசை (5:30); ஏனெனில், தன்னை அனுப்பினவரைத் திருப்திபடுத்தும் அனைத்தையும் அவர் செய்கிறார் (8:29). தன்னிடம் வருகிற அனைவருக்கும் உயிர்ப் பையும், முடிவில்லா வாழ்வையும் கிறிஸ்து அளிக்க வேண்டுமென்பதே இறைவனு டைய சித்தம் (6:38 தொ). இச்சித்தமானது இயேசுவிற்கு ஒரு ''கட்டளையாக'' தோன் றினாலும் (10:18), மகனுடைய கீழப்படித லானது தந்தையின் சித்தத்தில் அவரது சித்த மும் பங்கு பெறுவதற்காக (15:10), ''தந்தை அவரை அன்பு செய்கிறார்'' (10:17) என்ப தன் அடையாளத்தை அதில் காண்கிறார்.

இறை சித்தத்துடனான இயேசுவின் முழு மையான பற்றுதலானது, ஒத்தமை நற்செய் திகளின் படி, பாடுகளில் காணவேண்டிய துன்பமிக்க ஏற்பினைத் தாழ்த்தாமல், தெளி வானதாகச் செய்கிறது. கெதுசமனியில் 'நான் விரும்புவதும்', நீர் விரும்புவதும்' எதிரிடையாக இருப்பதை இயேசு தொடர்ந்து காண்கிறார் (மாற் 14:36). ''என் விருப்பம் அன்று, உம் விருப்பமே நிறைவே றட்டும்'' என்னும் இயேசுவின் விடாப்பிடி யான செபமானது மனப்போராட்டத்தினை அழிக்கிறது (லூக் 22:42). அக்கணம் முதல், தந்தையால் முழுவதும் கைவிடப்பட்டதா கத் தோன்றினாலும், தாம் ''அன்பிற்குரிய வன்'' என்று கிறிஸ்து தொடர்ந்து உணர்கி றார் (மத் 27:43 இ; சங் 22:9). தமது உலக வாழ்வின்போது, எருசலேமின் பிள்ளை களை மீண்டும் ஒன்று சேர்க்கவேண்டும் என்ற ஆசையினை இயேசு அடைய முடிய வில்லை (23:37); ஆனால், தம்மையே பலி யாக்கும் தமது சித்தத்தின் மூலம் அவர் மண்ணுலகில் தீயை மூட்டினார் (லூக் 12:49).

2. ''உம்முடைய சித்தம் செய்யப்படுவ தாக'':-

வானகத்தைப் போலவே பூமியிலும் இறைவனின் சித்தம் இயேசுவில் நிறைவே றியதால், ஆண்டவர் கற்பித்த செபத்தில் கேட்கப்படுவோம் என்பதில் கிறிஸ்தவன் உறுதியாக இருக்கலாம் (மத் 6:10). கிறிஸ் துவை உண்மையாகப் பின்செல்பவர், அச் சித்தத்தினை அறிந்து, செயல்படுத்த வேண் டும்.

அ) இறைவனின் சித்தத்தை உய்த்துணர்தல்:- இறைவனின் சித்தத்தை உய்த்துணர்தலும், செயற்படுத்துதலும் ஒன்றையொன்று சார்ந்த நிபந்தனைகளாகும். இயேசுவின் கோட்பாட்டைப் பாராட்டுவது இறைவனின் சித்தத்தை நிறைவேற்றக் கோருகிறது (யோவா 7:17); ஆனால், மற்றொரு புறம், இயேசுவிலும் அவருடைய கட்டளைகளிலும், கடவுளின் கட்டளைகளை அறிய வேண்டியது அவசியமாகிறது (14:23-24). பாவியின் விருப்பம் மற்றும் இறைவனின் விருப்பம் என்னும் இரு விருப்பங்களுக்கு இடையிலான சந்திப்பின் மறைபொருள் இங்கே உள்ளது. இயேசுவிடம் வருவதற்கு ஒருவன் தந்தையால் ''ஈர்க்கப்பட'' வேண்டும் (6:44). கிரேக்கச் சொல்லின்படி இந்த ஈர்ப்பு வலுக்கட்டாயமானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் உள்ளதாகும். இறைவனின் சித்தத்தினை அறிந்துகொள்வதற்கு, சட்டத்திலுள்ள சொற்களை மட்டும் தெரிந்து வைத்திருத்தல் போதாது (உரோ 2:18). இயேசுவால் அளிக்கப்பட்ட தூய ஆவியால் மட்டுமே இயலக் கூடியதாயினும், ஒரு நபருடனான பற்றுதல் மிக அவசியமானது (யோவா 14: 26).

வேறுபடுத்துதலின் மனித ஆற்றலானது மெய்ப்பிக்கப்பட்டால், ''இறைவனின் சித்தம் என்ன, நல்லது ஏது, தூய ஆவியினால் இறைவனுக்கு உகந்தது எது, தலை சிறந்தது எது'' ஆகியவற்றை தூய ஆவியினால், உய்த்துணர அவனால் முடியும் (உரோ 12:2). உய்த்துணர்தலின் இந்த ஆற்றலானது, அன்றாட வாழ்வையும் கடந்து பாதிக்கிறது; ஏனெனில், ''அவரது சித்தம், ஞானம், மற்றும் ஆன்மீக உணர்வு ஆகியவற்றின் முழு அறிவிற்கு'' (கொலோ 1:9) அது திறந்துவிடுகிறது. இத்தகைய நிலையானது ஆண்டவருக்கு உகந்த வாழ்வை உருவாக்குகிறது (1:10; எபே 5:17). ''இறைவன் விரும்பினால்'' என்னும் சொற்றொடர் (1 யோவா 5:14) முற்றிலும் புதிய பரிணாமத்தைப் பெறுகிறது (அ.ப. 18:21; 1 கொரி 4:19; யாக் 4:15), ஒவ்வொரு செபமும் ''அவருடைய விருப்பப்படியான'' செபமாக வெளிப்படுகிறது (1 யோவா 5:14). ஏனெனில். ''இறைவனுடைய சித்தத்தின் மறைபொருளுக்கு'' (எபே 1:13-14) ஏற்ற சூழ்நிலையை முன்கொள்கிறது.

ஆ) இறைவனின் சித்தத்தைச் செயல்படுத்துதல்:- தலைவர் விரும்புவதை அறிந்து கொண்டு, அதனைச் செயல்படுத்தாமலிருப்பதில் என்ன நன்மை உள்ளது (லூக் 12:47; மத் 7:21; 21:31)? இந்தச் செயல்முறை இவ்வ முக்கமானது, மனித உணர்ச்சியால் வழிநடத்தப்படும் வாழ்விற்கு (1 பேதுரு 4:2; எபே 6:6) எதிரான கிறிஸ்தவ வாழ்வை (எபி 13:21) உண்மையில் உருவாக்குகிறது. நமக்கான மேலும் துல்லியமான, இறைவனின் சித்தம் என்பது, தூய்மை (1 தெச 4:3), நன்றியுணர்வு (5:18), பொறுமை (1 பேதுரு 3:17). நல்வாழ்வு (2:15) என்பவையாகும். ''நீங்கள் எதையும் விரும்பவும் செயலாற்றவும் தம் திருவுளம் நிறைவேற, உங்களில் செயலாற்றுபவர் கடவுளே'' (பிலி 2:13) என்பதால், இறைவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது இயலக்கூடியதே. இந்நிலையில், விருப்பங்களின் ஒற்றுமையும், அருள் மற்றும் விடுதலையின் உடன்பாடும் அங்குள்ளது.

இறைவன் தரும் படைக்கலன்கள் (ARMOUR OF GOD)

''இறைவன் தரும் படைக்கலன்கள்'' என்ற பதம் ஒரு போர் வீரனுக்கு தேவையான அனைத்து ஆயுதங்களையும் குறிக்கிறது. இது இறைவன் தம் தலைமைக்குட்பட்டவர்களுக்கு அளிக்கும் ஆற்லையும் உதவியையும் உருவகமாகக் குறிக்கின்றது. பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் ஆயுதங்களை உருவகமாகப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் காலத்துப் போர் ஆயுதங்களைக் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆன்மீக ஆயுதங்களோடு ஒப்பிடுகின்றனர். இந்த உருவக முறையைக் குறிக்க ''படைக்கலமாக அணிந்து கொள்ளுதல்'' என்ற பத்த்தைப் பயன்படுத்துகின்றனர் (1 பேதுரு 4:1). பொதுவாக ஆயுதங்களைக் குறிக்கும் பகுதிகள்: உரோ 6:13; 13:2; 2

கொரி 6:7; 10:4; சில இடங்களில் தாக்கும் அல்லது பாதுகாக்கும் தனி ஆயுதங்கள் குறிக்கப்படுகின்றன: மார்புக் கவசம் (1 தெச 5:8; திருவெளி 9:9), தலைச் சீரா (1 தெச 5:8; ஏச 19:17), வாள் (எபி 4:12).

எல்லா ஆயுதங்களும் இரண்டு இடங்களில் பேசப்படுகின்றன. லூக்கா. 11:22-இல் வரும் இயேசுவின் உவமையில் பேல்செபூல் தன் உடைமைகள் பறிபோகாமல் போராடப் பயன்படுத்தும் எல்லா ஆயுதங்களையும் மனதில் வைத்து ஆசிரியர் பேசுகின்றார். ஆனால் அவனிலும் வலியவன் வரும்போது சாத்தானின் ஆயுதங்கள் பறிக்கப்படுகின்றன; உடைமைகள் பங்கிடப்படுகின்றன.

இரண்டாவது (எபே 6:11.13) இடத்தில் இறைவனின் ஆயுதங்கள் தொடர் உருவகத்தில் பேசப்படுகின்றன. இங்கே இவற்றின் அடையாளப் பொருள்கள் முழுவதுமாகத் தெளிவாகப் பேசப்படுகின்றன. இந்தப் போர் இறைவனுக்கும் அலகைக்குமிடையே நடக்கின்றது. மனிதனின் பகைவன் மனிதன் அல்லன்; மனிதத் தன்மையைக் கடந்தவன். மனிதன் கடவுளின் பலத்தை நம்பினால்தான் இதில் வெற்றியடைய முடியும். கடவுளின் ஆயுதங்கள் உண்மை, நீதி, அமைதி, விசுவாசம், மீட்பு, ஆவி இவற்றை உள்ளடக்கியது. ஆவியில் செபிப்பதும், கடவுளின் வார்த்தை என்னும் வாளை முழுவதும் நம்புவதும், எல்லாத் தாக்குதலையும் எதிர்க்க இடைவிடாது விழிப்போடு இருப்பதும், வெற்றிக்காக முழுவதும் அர்ப்பணித்திருத்தலும், ஆகியவற்றால் கிறிஸ்துவின் படை சாத்தானின் எல்லா எதிர்ப்புக்களையும் தாக்குதல்களையும் முறியடிக்க முடியும். படை வீரர்கள் இந்தக் கருவிகளை முழுமையாகப் பயன்படுத்தினால் மட்டுமே தீயசக்திகளுக்கு எதிராகச் செய்யும் ஆன்மீகப் போரில் வெல்ல முடியும். இந்த ஆயுதங்கள் இறைவனால் கொடுக்கப்பட்டாலும், மனிதன் அவற்றை அணிந்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் உடனடிச் சோதனைகளை மேற்கொள்வதன் மூலம், ''இருளில் மூழ்கிய இவ்வுலகின் மீது ஆதிக்கம் செலுத்துவோராகிய'' எல்லாச் சோதனைகளின் மறைந்திருக்கும் மூலத்தை வெல்ல முடியும்.

பவுல் இந்தப் போரை நற்செய்தியின் மறைபொருளோடு தொடர்புபடுத்துகிறார். செபத்தின் மூலம் கடவுளை முற்றிலும் நம்பினால், கடவுளின் சக்தி மனித பலவீனத்தில் செயலாற்றுகிறது. கடவுளின் அமைதி இறுதி வெற்றிக்குச் சாதனமாகிறது. இப்போர் நற்பண்புகள் தீமையை வெற்றிக் கொள்வதல்ல. அல்லது மனித எதிரிகளுக்கு எதிராக சுயநேர்மையின் போராட்டம் அல்ல; அல்லது மன, உளவியல் சமன்பாடு அடையும் வழியல்ல; மாறாக மூலத்தீமையின் தந்திரத்தை விசுவாசி தன் இதயத்திலேயே எதிர்கொள்ளும் எந்த சூழ்நிலையிலும், கடவுளின் அதிகாரம் சாத்தானின் அதிகாரத்தின்மேல் எண்பிக்கப்படும் வழியாகும். எந்த ஆயுதம் அதிகப் பலனளிக்கும் என்பது மனிதனின் தேவையைப் பொறுத்ததல்ல. மாறாக வெற்றி பெற வேண்டிய பகைவனின் வலிமையைப் பொறுத்தது. சாத்தானின் ஆயுதங்கள் மனிதனைத் தோற்கடிக்கப் போதுமானவை. ஆனாலும் இறைவனின் சக்தியை மேற்கொள்ள போதாதவை. கடவுளின் ஆயுதங்கள் (ஆவி, வார்த்தை...) மனிதனால் பயன்படுத்தப்படும் போது சாத்தானின் தாக்குதலை வெற்றியோடு போராட வேண்டிய ஆற்றலை மனிதனுக்கு அளிக்கின்றன.

இறைவாக்கினர் (PROPHETS)

I பழைய ஏற்பாடு:- 1. இஸ்ராயேலில் இறைவாக்கின் வேறுபாடும் ஒருமைப்பாடும்:- பண்டைய எல்லா மேற்காசியப் பகுதிகளிலும் வருவதுணர்த்துதலைத் தொழிலாகக் கொண்டு (எண் 22:5 தொ; தானி 2:2; 4:3-4) அதன் மூலம் உயர்ந்த உயிர்களிடமிருந்து செய்திகளைப் பெறத் தகுதியானவர்கள் என்று கருதப்பட்ட மனிதர்கள் இருந்தனர். பெரும் காரியத்தைத் தொடங்குவதற்கு முன்னதாக, அறிவுரைக்காக, இப்படிப்பட்டவர்களை மக்கள் அவ்வப்போது அணுகினர். இத்தகைய செயல்களை நிறைவேற்றுவதும்,

இஸ்ராயேலுடைய இறைவாக்கினர்களின் கடமைகளில் ஒன்றாகும் (1 அர 22:1-29). ஆனால் அவர்கள் அளித்த செய்தியின் இறைத்தோற்றம், தொடர்ச்சி, பொருளடக்கம் ஆகியவை இஸ்ராயேலின் இறைவாக்கினர்களை முன்பு கூறியவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டின.

அ. தொடக்கம்:- விவிலிய இறைவாக்கு எங்குத் தொடங்குகிறது? இறைவாக்கினர் என்னும் தலைப்பு ஆபிரகாமிற்குத் தரப்பட்டாலும் இப்பெயர் காலமயக்கமாக அவருக்குப் பிற்காலத்தில் அளிக்கப்பட்டதாகும் (ஆதி 20:7). கடவுளின் உண்மையான பிரதிநிதியாகிய மோசே (யாத் 3:4). ஏதோ மற்றொரு இறைவாக்கினர் என்பதற்கு மேலாக (எண் 12:6-8), இறைவாக்குப் பணியினையே உருவாக்கியவராக உள்ளார் (யாத் 7:1; எண் 11:17-25). உபஆகமம் மட்டுமே அவருக்கு இப்பெயரை அளித்தாலும் (உப 18:15), பல இறைவாக்கினர்களில் ஒருவராக அவரைக் குறிப்பிடவில்லை. அவருக்கு பின்னர் அவருக்கு நிகராக எவரும் இருந்ததில்லை (உப 34:10). நீதிபதிகளுடைய காலத்தின் இறுதியில் 'இறைவாக்கினர் புதல்வர்கள்'' (1 சாமு 10:5-6) என்று சில குழுக்கள் தோன்றின. அவர்களுடைய தவறான செயல்கள் (1 சாமு 19:20-24), அவர்கள் கானனேனியரின் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தனர் என்று காட்டின. அவர்கள் அழைக்கப்பட்டவர் என்னும் பொருளுடைய ''நாபி'' என்ற பெயர் பெற்றனர். ஆனால், இப்பெயருடன், பழைய பெயர்களாகிய 'திருக்காட்சியாளர்' (1 சாமு 9:9), 'காட்சி காண்பவன்' (ஆமோ 7:12), மற்றும் எலியா மற்றும் எலிசாவின் முக்கியப் பெயரான (2 அர 4:9) 'கடவுளின் மனிதர்' (1 சாமு 9:7-8) என்பன வழக்கில் நிலைத்திருந்தன. மேலும் நாபி என்ற பெயர் யாவேயின் உண்மையான இறைவாக்கினர்களுக்கு மட்டுமே உரிய ஒன்றாக இருக்கவில்லை. அவர்களோடு பாகாலின் தீர்க்கதரிசிகளும் ''நெபியீம்'' என்றழைக்கப்பட்டனர் (1 அர 18:22). இவர்கள் இறைவனால் உந்தப்படாமலே, ஆனால் இறைவாக்குரைத்லைத் தொழிலாகக் கொண்ட போலி இறைவாக்கினர்களாவர் (1 அர 22:5-6), இறைவாக்குரைத் தலைப் பற்றிய பல்வேறு சொற்களைப் பற்றிய ஆய்வானது, இறைவாக்கின் பல்வேறு பண்புகளை வெளிப்படுத்துகிறது. ஆய்வு மேலும் தொடரும்போது, அடிப்படையாக அமைந்துள்ள ஒற்றுமையானது தெளிவாகும்.

ஆ. தொடர்ச்சி:- இறைவாக்கினர்களுடைய சீடர்களின் மூலமாக, உண்மையான இறைவாக்குப் பாரம்பரியம் தோன்றியது. மோசேக்கு அளிக்கப்பட்டதுபோன்று (எண் 11:17), எலியாவிடமிருந்து எலிசாவிற்கு தரப்பட்டது போன்று (2 அர 2) ஆவி அருளப்படுகிறது. ஏசயா தனது சீடர்களைப் பற்றி குறிப்பிடுகிறார் (ஏச 8:16); எரேமியாவுடன் பாருக்கு சேர்ந்து காணப்படுகிறார். மோசேக்கும் மேலாக இறைவாக்கு பணியினை செயல்படுத்துகின்ற யாவேயின் ஊழியன் தான் கேட்டதைப் போதிக்கின்ற இறைவாக்கினரின் மனப்பான்மையை ஏற்கிறார் (ஏச 50:4-5; 42:2 தொ). உயிருள்ள இம்மரபில் மறைநூல் காலத்துடன் வளர்கின்ற ஒரு பங்கை இயல்பாகக் கொண்டுள்ளது (ஏச 8:16; எரே 38:4). எசக்கியேலின் வாயில், யாவே தனது வார்த்தைகளை மட்டுமன்றி, நூலையே வைக்கிறார். குறிப்பாக நாடு கடத்தலின் தொடக்கத்திலிருந்தே, இறைவாக்கு மரபுபற்றிய உணர்வு, இஸ்ராயேலைப் பின்னோக்காகப் பாதிக்கிறது (எரே 7:25; 25:4; 29:19; 35:15; 44:4). ஆறுதலின் நூலானது (ஏசயாவின் குழுவைச் சேர்ந்தது) ஆண்டவருடைய பழைய இறைவாக்குகளை நினைவுகூறும்போது இத்தகைய பாரம்பரியத்தையே சார்ந்துள்ளது (ஏச 45:21; 48:5). ஆனால், இத்தகைய அளவுக்கூறுகளினின்று மாறுபட்ட ஒற்றுமையின் ஊற்றினை இறைவாக்கு மரபு கொண்டுள்ளது. பலர் இறைவாக்கின் தொடக்கமாக ஆவியைக் குறிப்பிடாவிட்டாலும் (1 சாமு 10:6; மீக் 3:8; ஒசே 9:7; யோவே 3:1-2; எச 11:5) ஆதியிலிருந்தே அனைத்து இறைவாக்கினர்களும், அதே இறை ஆவியால் உயிரூட்டப்பட்டனர். அவர்கள் இடையிலான சார்பு நிலை எவ்வாறு இருப்பினும் கடவுளிடமி

ருந்தே அவர்கள் வார்த்தையைப் பெற்றனர். இறைவாக்கு அருங்கொடை, மனிதன் தனது சொந்த முயற்சிகளால் கண்டுபிடிக்க முடியா தவற்றை அறியச் செய்கின்ற வெளிப்பாட்டின் அருங்கொடையாகும் (ஆமோ 3:7; எரே 23:18; 2 அர 6:12). அதே சமயம், அதனுடைய இலக்கானதுபலதரப்பட்டதாகவும்தனித்துவ மிக்கதாகவும் உள்ளது; அதாவது இயேசு கிறிஸ்துவில் ஒருமுகப்படுத்தி, நிறைவேற்றப்படவுள்ள மீட்பின் திட்டமாகும் (எபி 1:1-2).

இ. சமுதாயத்தில் இறைவாக்கினர்:- இவ்வாறு, ஒரு மரபினை உருவாக்கிய பின்னர், இறைவாக்குப் பணியானது, இஸ்ராயேல் சமுதாயத்தில் ஒரு உறுதியான நிலையினையும் கொண்டுள்ளது. அதனுடன் ஒன்றியைந்ததாய் இருந்தாலும், சமுதாயத்தினை அது ஈர்த்துக் கொள்வதில்லை. இறைவாக்கினர் குருவுடன் சேர்ந்து அரசனுடைய முடிசூட்டுச் சடங்கில் ஒரு பங்கு வகிப்பதைக் காண முடிகிறது (1 அர 1). வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலம் வரை, அரசர், குரு மற்றும் இறைவாக்கினர் ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் மாறானவர்களாக வேறுபடுத்தப்பட்டவர்களாக இருந்தாலும், பொதுவாக ஒருவரையொருவர் சார்ந்துள்ள நிலையில் இணைக்கப்பட்டு, இஸ்ராயேல் சமூகத்தினுடைய மூன்று தூண்களாக உள்ளனர். எங்கெல்லாம் நாடானது ஓர் அமைப்பைக் கொண்டிருந்ததோ, அங்கெல்லாம் அரசனுக்கு ஆலோசனை கூற இறைவாக்கினர்கள் இருந்தனர்; நாத்தான், காது, எலிசா, குறிப்பாக ஏசயா மற்றும் சில சமயங்களில் எரேமியாவும் இவ்வாறு செயலாற்றியுள்ளனர். எடுக்கப்பட்டுள்ள செயலானது இறைவனுடைய விருப்பத்திற்கேற்ப உள்ளதா? ஒரு கொள்கை மீட்புத் திட்டத்திற்குத் தெளிவாகப் பொருந்துகிறதா? என்று தெரிவிக்க வேண்டியது அவர்களுடைய முன்னுரிமையாக இருந்தது. ஆனாலும், குறுகிய, துல்லியமான பொருளில் இறைவாக்குப் பணியானது, அரச பதவி மற்றும் குருத்துவம் போன்று ஒரு நிறுவனமன்று. இஸ்ராயேல் தன்னுடைய முயற்சியினாலேயே ஒரு அரசனை உருவாக்க முடியும். ஆனால், ஒரு இறைவாக்கினரை உருவாக்க முடியாது (உப 17:14-15), இறைவாக்கினர், வாக்களிக்கப்பட்டவராயினும் (உப 18:14-19) இலவசமாக அளிக்கப்பட்ட இறைவனுடைய தூய கொடையாவார். இறைவாக்கு தடைசெய்யப்பட்ட காலத்தில் இது குறிப்பாக உணரப்பட்டது (1 மக் 9:27; சங் 73:9). ஏற்கெனவே வாக்களிக்கப்பட்ட இறைவாக்கினரை எதிர்பார்த்து இஸ்ராயேல் அக்காலத்தில் வாழ்ந்தது (1 மக் 4:46; 14:41). இத்தகைய சூழ்நிலைகளில் திருமுழுக்கு யோவானின் போதனைகளுக்கு யூதர்கள் ஏன் உணர்ச்சிப்பூர்வமாக பதிலளித்தனர் என்பதைப் புரிந்து கொள்ளுதல் எளிதானதே (மத் 3:1-12).

2. இறைவாக்கினரின் தனிச்சிறப்பான ஊழ்:- அ. இறை அழைத்தல்:- சமுதாயத்தில் இறைவாக்கினர் தனக்கென ஒரு இடத்தைக் கண்டாலும், அவரை இறைவாக்கினராக நிலைப்படுத்துவது இறையழைத்தலே. மோசே, சாமுவேல், ஆமோஸ், ஏசயா, எசக்கியேல் மற்றும் சிறப்பாக யாவேயின் ஊழியன் ஆகியோருடைய அழைப்பில் இது தெளிவாகிறது. எரேமியாவின் பாடல்வடிவ சுய வெளிப்பாடுகள் இக்கருத்தைக் கூறுகின்றன. இறைவன் முழுவதும் முன்முயற்சி எடுக்கிறார். இறைவாக்கு மனிதரின்மீது ஆதிக்கம் செலுத்துகிறார்; ''ஆண்டவராகிய யாவே பேசுகிறார், இறைவாக்கு உரைக்காதவன் எவன்? (ஆமோ 3:8; 7:14-15). தாயின் கருவிலேயே கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட (எரே 1:5; ஏச 49:1) எரேமியா, இறைவன் தன்னை ஏமாற்றிவிட்டதாகப் பேசுகிறார் (எரே 20:7 தொ). இறைவனது கரம் தன்மீது உறுதியாக அழுத்துவதை எசக்கியேல் உணர்கிறார் (எச 3:14). அழைப்பானது, இயலாமை பற்றிய உணர்வை எரேமியாவில் வெளிக்கொணர்கிறது (எரே 1:6). ஏசாயாவில் பாவ உணர்வை எழுப்புகிறது (ஏச 6:5). இறைவனுடைய வார்த்தையைப் பேசுகின்ற, இறைவாக்கினருடைய வாயையே உபகரணமாகக் கொண்ட ஒரு பணிக்கு இது எப்போதும் நடத்திச் செல்கி

றது (எரே 1:9; 15:19; ஏச 6:6-7; எச 3:1 தொ).

ஆ. இறைவாக்கினருடைய செய்தியும் அவரது வாழ்வும்:- சில அர்த்தமுள்ள (முப்பதுக்கும் மேற்பட்ட) அங்க அசைவுகள், வாய் வார்த்தையினுடைய வெளிப்பாடுகளுடனோ அல்லது அதற்கு முன்போ நிகழும் (எரே 28:10; 51:63; எச 3:24-5:4; செக் 11:15). வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையானது வெறும் வார்த்தையாக இல்லாமல், வாழ்வாக உள்ளது. அறிவிப்பதை நிறைவேற்றுகின்ற இறைவனின் செயலில் ஒரு அடையாளப் (மந்திரமல்ல) பங்கேற்பினை இது உடன் கொண்டுள்ளது. நிலத்தை வாங்குதல் (எரே 32), நோய் மற்றும் மன அங்கலாய்ப்பு (எச 3:25-26; 4:4-8; 1:18) போன்ற சில அடையாளச் செயல்கள் உடனடி விளைவுகளைக் கொண்டுள்ளன. பெரிய வெளிப்பாடுகளில் திருமண மற்றும் குடும்ப வாழ்வானது வெளிப்படுத்துதலில் வாகனமாக அமைவது அவசியம் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். ஒசேயின் திருமணம் இத்தகையதே (1:3). ஏசயா 'இறைவாக்கினள்' (ஏச 8:3) என்று மட்டுமே குறிப்பிட்டாலும், அவளும் அவளுடைய பிள்ளைகளும் மக்கள் திரளுக்கு அறிகுறியாக அமைகின்றனர் (8:18). நாடு கடத்தலின்போது இந்த அடையாளங்கள், எரேமியாவின் கன்னிமை (எரே 16:1-9), எசக்கியேலின் மனைவியை இழந்த நிலை (எச 24:15-27) போன்றவை, எதிர்மறை அடையாளங்களாக உருவாகின்றன. இவை, கற்பனை செய்யப்படாத, ஆனால் வாழ்ந்து காட்டப்பட்ட, ஆகவே உண்மையுடன் இணைக்கப்பட்ட பல்வேறு அடையாளங்களாகும். செய்தியானது, அதனைக் கொண்டிருப்பவர்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியாது. இது, இறைவாக்கினரால் உருவாக்கப்பட்ட கருத்தாக இல்லை, அவரிலேயே உயிருள்ள இறைவனை (எலியா) தூய இறைவனை (எசாயா) வெளிப்படுத்துவதாகும்.

இ. துன்பங்கள்:- அனுப்பப்படாமல் (எரே 27:15). தங்களுடைய சொந்தத் தூண்டுதலையே பின்பற்றி (எச 13:3), தங்களுடைய பெயராலேயே பேசுகிறவர்கள் (எரே 14:14-15; 23:16), போலி இறைவாக்கினர்களாவர். உண்மையான இறைவாக்கினர்கள் மற்றொருவர் தங்களைப் பேசச் செய்கிறார் என்பதை உணர்ந்தனர். அதனால் தங்களுடைய அனுபவத்திலிருந்து மட்டும் பேசியபின் (2 சாமு 7) தங்களைத் திருத்திக் கொள்ளவேண்டிய கடமையை உணர்கிறார்கள். இந்த மற்றொருவரின் பிரசன்னமும் (எரே 4:19), பெரும்பாலும் ஒரு உள் போராட்டத்தை உருவாக்குகிறது. ஏசயாவின் அமைதியானது இப்போராட்டத்தை ஒரு கணநேரக் காட்சியை மட்டுமே காட்டுகிறது: ''தம் முகத்தை மறைத்துக் கொள்ளும் யாவேக்காக நான் காத்திருப்பேன்'' (ஏச 8:17). ஆனால் மோசேயும் (எண் 11:11-15) எலியாவும் (1 அர 19:4) சோர்வின் நெருக்கடியை அனுபவிக்கின்றனர். கசப்புடன் புகார் செய்கின்ற எரேமியா, ஒரு கட்டத்தில் தன்னுடைய அழைப்பினின்று திரும்பி விடுபவராகவும் காணப்படுகிறார் (எரே 15: 18-19; 20:14-18). எசக்கியேல் மனக் கசப்பினாலும் கோபத்தினாலும் நிரப்பப்பெற்று, மதி மயங்கியிருந்தார் (எச 3:14-15). யாவேயின் ஊழியன், தோற்றத்திற்கு மடத்தன்மையையும் அமைதியின்மையும் அனுபவிக்கிறார் (ஏச 49:4). இறுதியில், அரிதாகவே கடவுள், இறைவாக்கினர்கள் தங்களது பணியில் வெற்றியடையும் நம்பிக்கையினைப் பெற அனுமதிக்கிறார் (ஏச 6:9-10; எரே 1:19; 7:27; எச 3:6-7). ஏசயாவினுடைய நம்பிக்கையானது மக்களுடைய இதயங்களைக் கடினமாக்குவதில் முடிவடைகின்றது (ஏச 6:9-10 = மத் 3:14-15; யோவா 15:22). ''மனிதன் செவிமடுப்பானோ இல்லையோ'' அதைப் பற்றிக் கவலைப்படாது எசக்கியேல் பேச வேண்டும் (எச 2:5-7; 3:11.27); இதனால், ''நானே யாவே என்பதை மனிதர் அறிந்து கொள்வர்'' (எச 36:38). ஆனால், இறைவனை அறிந்து ஏற்றுக் கொள்ளுதல் பின்னரே வரும். இறைவார்த்தையானது அதனுடைய உடனடி விளைவுகளை எல்லா வழிகளிலும் கடந்து செயல்படுகிறது. ஏனெனில், அதனுடைய செயல்திறமையானது இறுதிக் கால நிலையில் அமைந்துள்ளது. 'வார்த்

தையோ இறுதியில் நம்மீதே கவனத்தைச் செலுத்துகிறது (1 பேதுரு 1:10 தொ).

ஈ. மரணம்:- ஆகாபின் ஆட்சிக் காலத்திலும் (1 அர 18:4.13; 19:10.14), அநேகமாக மனாசேயின் காலத்திலும் (2 அர 21:16), உறுதியாக யோயாக்கிமின் காலத்திலும் (எரே 26:20-23) இறைவாக்கினர்கள் ஒட்டு மொத்தமாகப் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலைகளில் அசாதாரணமான எதையும் எரேமியா காணவில்லை (எரே 2:30). நெகமியாவின் காலத்தில், அவர்களைப்பற்றிக் குறிப்பிடுவது சாதாரணமாகி விட்டது (நெக 9:26): ''இறைவாக்கினர்களைக் கொன்ற எருசலேமே'' என்று இயேசவும் கூறுகிறார் (மத் 23:37). இறைவாக்கினர்களின் மரணமே அவர்கள் அனுபவித்து வாழ்ந்த இறைவாக்குகளின் மனிமுடி என்னும் எண்ணமானது இந்த அனுபவத்தின் ஒளியில் மெதுவாக வெளிப்படுகிறது. இறைவாக்குப் பாரம்பரியத்தின் சுருக்கமாக அமைந்துள்ள யாவேயின் ஊழியனின் பணியானது, அவரது விருப்பப்படியான காட்சியில் தொடங்கி (ஏச 42:2), கொலை செய்யப்பட்ட செம்மறியின் மௌனத்தில் முடிவடைகின்றது (ஏச 53:7). இந்த நிறைவேறுதல் முன்னோக்கப்பட்ட சிகரமாக உள்ளது. மோசே காலத்திலிருந்தே இறைவாக்கினர்கள் மக்களுக்காக வேண்டுகின்றனர் (ஏச 37:4; எரே 7:17; 10:23-24; எச 22:30). யாவேயின் ஊழியன், பாவிகளுக்காக வேண்டுகிற அதே வேளையில், தனது மரணத்தினால் அவர்களை மீட்பார் (எச 53:5.11-12).

3. இறைவாக்கினரும் அக்கால நிறுவனங்களும்:- இறைவாக்கினருக்கும் மக்களுக்கும் இடையிலான திடீர் சந்திப்பானது, பழைய உடன்படிக்கையோடும் அதனுடன் தொடர்புடைய சட்டம், சமூக அமைப்புகள், வழிபாடு, ஆகிய நிறுவனங்களோடும் எவ்வாறு செயல்பட்டது என்பது பற்றிச் சிறிது பார்ப்போம்.

அ. சட்டம்:- இறைவாக்குப்பணியும் சட்டமும் இரு மாறுபட்ட விருப்பங்களையோ, அல்லது இரு வேறுபட்ட மனப்பாங்குகளையோ காட்டவில்லை. மாறாக அவை வேறுபட்ட அலுவல்கள், வேறுபட்ட செல்வாக்குடையவை, ஆனால், ஒன்றையொன்று ஒதுக்குபவை அல்ல. முழுநிறைவு எய்துவதில் உள்ளார்ந்த தொடர்புடையவை. எல்லாக் காலங்களுக்கும், எல்லா மனிதருக்கும் உள்ள கடமை என்ன என்று சட்டம் முடிவு செய்கிறது. இறைவாக்கினருடைய முதல் பணியானது சட்டத்திற்கு எதிரான குற்றங்களைக் கண்டிப்பதாகும். சட்டத்தின் பிரதிநிதிகளிடமிருந்து அவரை வேறுபடுத்துவதென்பது, ஒரு வழக்கின்மீது தீர்ப்பிடுவதற்கு முன்னர் அதனைப் பற்றிச் சுட்டிக்காட்டும்வரை இறைவாக்கினர் காத்திருக்க வேண்டியதில்லை; ஆனால், உரிய சட்ட அதிகாரமோ அல்லது உரிமைச் சான்றோ இல்லாமல் தனது அதிகாரத்தை செயல்படுத்துவார். அப்போதைய தருணத்தில், இறைவன் அவருக்கு வெளிப்படுத்துவதிலிருந்து, நிலவுகின்ற சூழ்நிலைக்குச் சட்டத்தைப் பொருத்திக் காண்பிப்பார். நாத்தான் தாவீதிடம் 'நீரே அம்மனிதர்' (2 சாமு 12:7) என்று கூறியதுபோல, அவர் பாவியிடம் குற்றச்சாட்டுகளைக் கூறுவார். அவர் பெரும்பாலும் திடுக்கிடச் செய்யும் முறையில் (1 அர 20:38-43) உண்மைகளை எடுத்துரைப்பார் (1 அர 21:20). ஓசே (4:2), எரேமியா (7:9) ஆகியோர் பத்துக்கட்டளைகளுக்கும், எசக்கியேல் (18:5-18) சட்டங்கள் மற்றும் நிலையான பழக்கங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றனர். சம்பளத்தைத் தராமவிருத்தல் (எரே 22:13; மலா 3:5), மோசடி (ஆமோ 8:5; ஓசே 12:8; மீக் 6:10-11), நீதிபதிகள் கையூட்டுப்பெறுதல் (மீக் 3:11; ஏச 1:23; 5:23), குறிப்பிட்ட காலத்தில் அடிமைகளை விடுவிக்க மறுத்தல் (எரே 34:8-22), பணம் கடன்தருவோரின் மனிதாபிமானமற்ற நிலை (ஆமோ 2:8) மற்றும் ''எளியோரின் முகத்தை உருக்குலைத்தல்'' (ஏச 3:15; ஆமோ 2:6-8; 4:1; 8:4 தொ) போன்றவை சட்டத்திற்கும் உடன்படிக்கைக்கும் எதிரான பல்வேறு குற்றங்களாகும். இறைவாக்கினர்கள் வேண்டுகோள் விடுக்கின்ற சட்டத்தினுடைய சாரமானது, எழுதப்பட்ட வாசகத்தை

மட்டும் கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், இறைவாக்கினர் தமக்குச் செவிமடுப்பவர்களுடன் செயல்படுத்துவதை எழுத்துப்படிவம் நிறைவேற்ற முடியாது. இறைவாக்கினர் தன்னிலுள்ள அருங்கொடையின் ஆற்றலால், ஒவ்வொருவருடையவும் மனச்சாட்சியைத் தூண்டியெழுப்பி, ஒளியை ஏற்கவோ நிராகரிக்கவோ செய்யத் தூண்டுகிறார். எனவே, இறைவாக்கு எழுகின்ற உண்மைச் சூழ்நிலையில், சரியானதானது மறுக்கப்படுவதோடு மட்டுமன்றி, தகாத வழியில் பயன்படுத்தப்பட்டு (மீக் 3:9-10; எரே 8:8; அப 1:4), கசப்பானதாக மாற்றப்படுகிறது (ஆமோ 5:7; 6:12). நன்மையானது தீமையென்றும், தீமையானது நன்மையென்றும் அழைக்கப்படுகிறது (எச 5:20; 32:5). இத்தகைய ஏமாற்றுதலைச் சோர்வின்றி எரேமியா கண்டிக்கிறார் (எரே 6:6). மேய்ப்பர்கள் செம்மறியினுடைய நீரைக் கலக்கிக் குழப்புகின்றனர் (எச 34:18-19). வலிமையற்றோர் வழிதவறி நடத்திச் செல்லப்படுகின்றனர் (ஏச 3:12-15; 9:15; ஆமோ 2:7). மக்கள் குற்றமுடையவர்களாயினும் தனிப்பட்ட முறையில் நடத்தப்படுவதில்லை (ஓசே 4:9; எரே 6:28; ஏச 9:16), ஆனால், இறைவாக்கினர்கள், சட்டங்களைத் தடுத்து நிறுத்தி (ஓசே 5:1; ஏச 10:1) அவற்றைப் பொய்யாக்குகின்ற குருக்களையும், மற்ற அனைத்துப் பொறுப்பாளர்களையும் வன்மையாகத் தாக்குகின்றனர் (ஏச 3:2; எரே 5:4-5). இத்தகைய சூழ்நிலைக்கு எதிராக, சட்டம் பாதுகாப்பின்றி உள்ளது. உரிய விதிமுறைகள் இல்லாத நிலையில், தனிநபர், இறைவனுக்கும் தீயோனுக்கும் இடையில், ஆவிகளைத் தேர்ந்து தெளிதலைக் கடைப்பிடிக்கவேண்டும். இத்தகைய சூழ்நிலையில், இறைவாக்கினர் இறைவாக்கினரை எதிர்ப்பதைக் காண்கிறோம் (எரே 28).

ஆ. மரபுகள்:- பாவம் மட்டுமே கேள்விக்குரியதாக இல்லாமல், சமூகமும் மாறிவிட்டது. இறைவாக்கினர்கள், ஆடை அணிதல் (ஏச 3:16-23), இசை (ஆமோ 6:5); அல்லது சமூக உறவுகள் ஆகியவைப்பற்றிய பாரம்பரிய ஒழுக்க முறையில் புகுந்துவிட்ட புதுமைகளையும் அறிந்திருந்தனர். எல்லாச் சமூக நிலைகளிலும், மாறுதல்கள் வளர்ச்சியடையவே, சாமுவேல் முன்னோக்கிய சூழ்நிலையை இஸ்ராயேல் இப்போது அனுபவிக்கத் தொடங்கியது (1 சாமு 8:10-18). எகிப்தில் தங்கிய நாள்முதல், தலைவன்-அடிமை என்ற உறவு, சமூகத்தின் மையக் கூறாகிறது. முடியாட்சிக்கு எதிரான சில கருத்துக்களைத் தவிர (ஓசே 13:11), பழைய நிலைக்குத் திரும்பிச் செல்ல இறைவாக்கினர்கள் விரும்பவில்லை. அது அவர்களுடைய பணியாக இருக்கவில்லை. இக்காலத்திலும் தங்களை நடத்திச் செல்லக்கூடியதாக எதிர்பார்க்கப்பட்ட, பழைய சாதனையின் பேரின்ப உருவத்திலுள்ள பொது நன்மையை எதிர் நோக்குகின்ற, யூதர்களின் பழமைச்சிந்தனையை அவர்கள் எதிர்க்கின்றனர். ''ஆண்டவர் நம் நடுவில் இருக்கிறார் அல்லவா?'' (மீக் 3:11) என்று கூறுகிறவர்களுடையவும் ''என் இளமையின் நண்பரே'' (எரே 3:4; ஓசே 8:2) என்று ஆண்டவரை அழைக்கின்றவர்களுடையவும் உற்சாகம் இத்தகையதே. ஒரு கணநொடியில் ''ஆண்டவர் தமது முந்தைய வியத்தகு செயல்களையெல்லாம் அவர்களுக்காகப் புதுப்பிப்பார்'' (எரே 21:2) என்று எண்ணுபவர்களும் இத்தகையோரே. இறுதியாக, எதுவுமே மாறவில்லை ''நாளை என்பது இன்றைய தினத்தைப் போன்றதே'' (ஏச 56:12; 47:7) என்று நம்புகிறவர்களுடைய உற்சாகமும் இத்தகையதே, போலி இறைவாக்கினர்களின் மென்மையான வார்த்தைகளால் மனநிறைவடைந்து (எரே 23:17), இன்றைய நிலைமையின் உண்மைக்குத் தங்களுடைய கண்களைத் திறக்க இயலாதவர்களாக உள்ளனர். ஆனால், இறைவனுடைய இறைவாக்கினர்கள் பழமைக்கு எதிரானவர்களாக இருக்கவில்லை. ஏலியா ஒரேபிற்குத் திரும்புகிறார்; ஓசேயாவும் (11:1-5), எரேமியாவும் (2:2-3) பாலைவன நினைவுகளாலும், இரண்டாம் ஏசயா யாத்திரை நினைவுகளாலும் (ஏச 43:16-21) ஈர்க்கப்படுகின்றனர். ஆனால், அவர்கள் உண்மையான பழமையினை அதன் அழிந்து கொண்டிருக்கும் சுவடுகளோடு குழப்புவதில்லை. நாட்டினுடைய சமயத்தின் உண்மையான அடிப்படையை

மீண்டும் சிறப்பித்துக்காட்ட அவர்கள் பழமையைப் பயன்படுத்துகின்றனர்.

இ. வழிபாடு:- இறைவாக்கினர்கள், பலிகளுக்கும் (எரே 7:21-22; ஏச 1:11 தொ; ஆமோ 5:21-25) பேழைக்கும் (எரே 3:16), ஆலயத்துக்கும் (எரே 7:24-26:1-15) எதிராகக் கடுமையாகச் சாடுகின்றனர். ஆனால் அதே ஆலயத்தில்தான் ஏசயா தன் அழைப்பைப் பெற்றார் (ஏச 6); எரேமியா போதித்தார் (எரே 7). பெத்தேலில் உள்ள புனித இடத்தில் ஆமோஸ் போதித்தவாறே அவர்களும் போதித்தனர் (ஆமோ 7:13). அவர்களது சொற்கள் உண்மையான சூழ்நிலையைக் கருத்தில் கொள்கின்றன; பலிகள் புனிதத்துவத்தைப் பாழாக்குகின்ற நிலையை அடையும்போது, அவர்கள் அவற்றைக் கண்டிக்கின்றனர். கிறிஸ்தவ வழிபாட்டுச் செயல்கள், இதே நிலையில் நிறைவேற்றப்படும் போது அவை இதே கண்டனத்துக்குரியவையே. இதில் அவர்கள் அடையாளங்களின் சார்புடைய மதிப்பீட்டைப் பற்றியே பேசுகின்றனர். இந்த அடையாளங்கள் எப்போதும் இருந்ததில்லை. அவைகளில் நிகழ்கால வடிவத்தில் எப்போதும் இருக்கப் போவதில்லை (ஆமோ 5:25; எரே 7:22). இவைகள் தங்கள் சொந்த ஆற்றலால் தூய்மையாக்குவதுமில்லை, மீட்பதுமில்லை (எபி 10:1). இப்பலிகள் கிறிஸ்துவினுடைய தனிச்சிறப்பான பலியோடு உறவு கொண்டிருந்தால் ஒழிய எந்தவித மதிப்பும் இல்லாதவையாகின்றன. இறைவாக்கினர்களுடைய நிகழ்கால முறையீடு, இறைவெளிப்பாட்டில் அளிக்கப்பட்டுள்ள, பலியினைப் பற்றி இறுதியாக மற்றும் உறுதியாகப் புரிந்து கொள்வதற்கான வழி கோலுகின்றன. நாடு கடத்தலுக்குப்பின் வழிபாடு மற்றும் இறைவாக்குப் பணியும் எசக்கியேல் (எச 40:48; ஏச 58:13), மலாக்கியா, ஆகாய் ஆகியோரில் ஒன்றிணைந்தன. பிற்காலத்திய யூத சடங்கு முறையானது, பெருமளவிற்குஇறைவாக்கினரின் செல்வாக்கால், தூய்மைப்படுத்தப்பட்டதாகும். சட்டமில்லாத சமூகத்தையோ, வழிபாட்டுச் சடங்கு முறையில்லாத சமயத்தையோ இறைவாக்கினர் ஒருபோதும் கற்பனை செய்ததில்லை.

4. இறைவாக்கினரும் புதிய முறைமையும்:- இறைவாக்கினர்கள் உயிருள்ள இறைவனை அவரது படைப்புகளோடு இன்றைய தருணத்தின் தனித்துவத்தில், உயிருள்ள நிகழ்காலமெனும் தனித்தன்மை நேரத்தில் இணைத்தனர். ஆனால். இந்தக் காரணத்திற்காகவே, அவர்களது செய்தி எதிர்காலத்தை நோக்கியுள்ளது. அவர்கள் எதிர்காலத்தைத் தண்டனை, மற்றும் மீட்பு என்னும் அதன் இரு கூறுகளோடு வருவதைக் காண்கின்றனர்.

அ. தண்டனை:- தனிப்பட்ட குற்றச் செயல்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஏசயா, எரேமியா மற்றும் எசக்கியேல் ஆகியோர் சமுதாயத்தினுடைய பாவத்தின் தொடர்ச்சியைக் காண்கின்றனர் (மீக் 7:2; எரே 5:1). இப்பாவம் வரலாற்று நிகழ்ச்சியில் வேரூன்றியுள்ள கடுமையான உண்மையாகும் (ஏச 48:8; எச 20; ஏச 64:5) இப்பாவமானது செதுக்கப்பட்டுள்ளது (எரே 17:1). துருவைப்போலும் தோலின் நிறத்தைப் போலும் ஒட்டிக் கொள்கிறது (எரே 13:23; எச 24:6). இறைவாக்கினர்கள் இந்தச் சூழ்நிலையினை வரலாற்றுக் காலத்தில் எடுத்துரைக்கின்றனர். பாவமானது இத்தருணத்தில் தனது உச்ச நிலையை அடைந்துவிட்டது என்று அவர்கள் அறிவிக்கின்றனர். சோதோம் நிகழ்ச்சியில் இறைவன் ஆபிரகாமை பார்க்க அனுமதித்தது போல (ஆமோ 4:11; ஏச 1:10). இவர்களையும் பார்க்க அனுமதிக்கின்றார். இவ்வாறு அவர்களுடைய செய்தியானது, குறிப்பிட்ட தற்காலிகக் குறிப்புகளோடோ அல்லது அவை இல்லாமலோ, ஆனால் மிக விரிவான அளவில், ஒரு கண்டனத்தை அறிவிக்கும். இஸ்ராயேல் உடன்படிக்கையை முறித்துவிட்டதால் (ஏச 24:5; எரே 11:10), உறுதியான விளைவுகள் பின் தொடரும் என்று இறைவாக்கினர் எதிர்பார்க்கிறார். யாவேயின் நாளை வெற்றி தரும் தருணமாக நாடு

எதிர்நோக்குகிறது; ஆனால், எதிர்மாறான சூழ்நிலைகளில் அந்நாள் வரவிருப்பதை இறைவாக்கினர்கள் அறிவிக்கின்றனர் (ஆமோ 5:18 தொ). கனிகொடாது ஏமாற்றும் திராட்சைத் தோட்டமானது, தோட்டக்காரரால் அழிக்கப்படும் (ஏச 5:1-7).

ஆ. மீட்பு:- இறைவன் தண்டிக்கக் கூடியவர் மட்டுமல்லர்; எல்லாவற்றிற்கும் மேலாக அவர் மீட்பராவார் என்பதை ஆமோசின் காலத்திலிருந்தே இறைவாக்கினர்கள் நன்கு அறிவர். பின்னர், ''பிடுங்கிப் பறிக்கவும், இடித்துத்தகர்க்கவும், அழித்து ஒழிக்கவும், கவிழ்த்து வீழ்த்தவும், கட்டி உயர்த்தவும், நட்டு வைக்கவும்'' எரேமியா அனுப்பப்படுகிறார் (எரே 1:10). இஸ்ராயேல் உடன்படிக்கையை முறித்துவிட்டாலும், அதுவே முடிவன்று. உடன்படிக்கையின் காரணராகிய யாவேயும் தனது வாக்குறுதிகளை முறிக்க எண்ணுகின்றாரா? இக் கேள்விக்குப் பதிலளிக்க எந்த ஞானியும் முன்வரமாட்டார். ஏனெனில், இஸ்ராயேலர் கடந்த காலத்தில் இறைவனுடைய பற்றுறுதியை பணயம் வைத்தனர். அவருக்குப் பிரமாணிக்கமற்றவர்களாயினர். அதனால் பாவத்தில் சிறையுண்டனர். ஆனால், ஞானி மௌனமாக இருக்க வேண்டிய இடத்தில் (ஆமோ 5:13), இறைவாக்கினர் பேசுகிறார். உரிய தண்டனைக்குப் பிறகு, தாம் செய்ய வேண்டுமென்பதற்காக இல்லாமல் (எச 16:61), மகிமைக்காக மட்டுமே (ஏச 48:11) தம் மக்களை மன்னிப்பதில் கடவுள் வெற்றி பெறுவார் என்று இறைவாக்கினர் மட்டுமே சொல்லக் கூடியவராய் உள்ளார். உடன்படிக்கை பற்றிய பிரச்சினைகளுக்கான இறைவாக்குக்குப் பதிலாக, திருமணம் என்னும் உருவகத்தின்கீழ் உடன்படிக்கை பற்றி கோட்பாடு வளர்ந்தது. ஒசேயாவின் காலம் முதல், இந்த உட்கருத்து புரிந்து கொள்ளப்படுகிறது. திருமணம் என்பது ஒரு ஒப்பந்தமாக இருந்தாலும் அன்பிற்குப் புறம்பே அதற்குப் பொருளில்லை. எனவே அன்பு என்பது கண்டிப்பான பழிவாங்குதலை இயலாததாகவும், மன்னிப்பினை இயலக்கூடியதாகவும் மாற்றுகிறது.

இ. புதிய உடன்படிக்கையின் முன்னறிவிப்பாளர்கள்:- நாடு கடத்தலும், அதைத் தொடர்ந்த சிதறிப்போதலும் தண்டனையை நிறைவேற்றுகின்றன. சட்டமானது இஸ்ராயேல் தனது வலிமையற்ற நிலையினை உணரச் செய்ததாயின் (உரோ 7), இந்த உண்மைக்குச் சமுதாயத்தினுடைய கண்களை இறைவாக்கினர்கள் திறந்து விட்டதே காரணமாகும். பின்னர், இரக்கத்தின் காலம் தொடர்கிறது. நாடு கடத்தப்பட்ட காலம்முதல் வருங்காலத்திற்கான உறுதிமொழிகளை அளிக்கும்போது இறைவாக்கினர்கள் இரக்கத்தைப்பற்றிப் பேசுகின்றனர். முந்தைய அழிந்து மறைந்து கொண்டிருக்கும் நிறுவனங்களை மீண்டும் அமைப்பது பற்றி அவர்கள் உறுதிமொழி அழிக்கவில்லை (எரே 31:32), மாறாகப் புதியதோர் உடன்படிக்கையைப் பற்றப் பேசுகின்றனர். எரேமியாவால் அறிவிக்கப்பட்ட இந்தப் புதிய உடன்படிக்கை (எரே 31:31-34). எசக்கியேல் (எச 36:16-38) மற்றும் இரண்டாவது ஏசயா (ஏச 55:3; 54:1-10) ஆகியோரால் மீண்டும் எடுத்தியம்பப்படுகிறது. புதிய தொலைநோக்கில் சட்டமானது அடக்கி வைக்கப்படவில்லை; புதிய நிலையை ஏற்றுக் கொள்ளுகிறது. வாக்குறுதியின் ஒரு நிபந்தனையாக இருப்பதிலிருந்து, உறுதிமொழியின் 'ஓர் இலக்காக மாறுகிறது (எரே 31:33; 32:39-40; எச 36:27). இது ஒரு பெரிய புதிய அமைப்பாகும். ஆனால் விவிலிய வெளிப்பாட்டின் எல்லாக் கூறுகளையும் பொருத்தமட்டில், இறைவாக்கினர்கள் மேலும் பல புதியவற்றை அமைக்கின்றனர். இறைவாக்கு அனுபவமானது அனைத்தையும் புதுப்பிப்பதற்காக, எல்லாவற்றுடனும் தொடர்பு கொண்டுள்ளது. தங்களது வாழ்க்கை முறை மற்றும் கோட்பாடுகளின் மூலமாக, 'பழைய சட்டத்தில் கிறிஸ்தவர்கள்' என்று குறிப்பிடத் தகுதிபெற்ற மக்கள் திரளின் தலைவர்களாக இறைவாக்கினர்கள் திகழ்ந்தனர்.

ஈ. உறுதியான ''இன்று'':- மீட்புப் பற்றிய கருத்துக்களை இவ்வாறு புதுப்பித்தலானது, நாடு கடத்தப்படுதல் மற்றும் திரும்பி வருத

வினுடைய சூழ்நிலைகளினின்று பிரிக்கப் பட முடியாததாக உள்ளது. அவருடைய அருங்கொடையின் சிறப்பினால் இரண்டு உண்மைகளும் அவருக்கு வெளிப்படுத்தப்ப டுகின்றன. மனிதன் துணையற்ற தனது ஆற் றலால் அடைய முடியாத அறிவின் வடிவங் களில், வருங்காலத்தைப் பற்றி முன்னுரைத் தலானது பல்வேறு வடிவங்களை எடுக்க முடியும். இது சில நேரங்களில் அண்மை எதிர்காலத்தில் நிகழ்வதைப்பற்றியதாக இருக்கலாம். இவை அவ்வளவு முக்கியத்து வம் கொண்டவை அல்லவாயினும் இவை முழுவதும் எதிர்பாராமல் நிகழ்வன (ஆமோ 7:17; எரே 28:15-16; 44:29-30; 1 சாமு 10:1-2; லூக் 22:10 தொ). இத்தகையமுன்னறிவிப்பு கள், ஒருமுறை நிறைவேற்றப்பட்டபின், மிகத் தூர எதிர்காலத்தில் நிகழக் கூடியவற் றைச் சுட்டிக்காட்டும் அடையாளங்களாகின் றன. இந்த எதிர்கால நிகழ்ச்சிகளே முக்கியம் மிகுந்தவை. இந்தத் தூர எதிர்காலம் மற்றும் வரலாற்றின் இறுதி விளக்கத்தையே இறை வாக்கு தனது முக்கிய குறிக்கோளாக நோக் குகிறது. இறைவாக்கு உருவாக்கப்பட்ட சூழ்நிலைகள் எப்போதும், இஸ்ராயேலினு டைய தற்கால வரலாற்றுப் பின்னனியோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. ஆனால், தீர்மானமான உலகளாவிய உட்கருத்தும் உடன்சேர்ந்து அறிவிக்கப்படுகிறது. காட்சி யாளர்கள் தாங்கள் அனுபவிக்கிற நிகழ்ச்சிக ளின் வழியாக மீட்பினை விவரிக்கிறார்கள் என்றால், அது அவர்களுடைய சூழ்நிலை யின் வரையறைகளின் விளைவாகும்: ஆனா லும் எதிர்காலம் ஏற்கெனவே நிகழ்காலத் தில் செயல்படத் தொடங்கிவிட்டது என் றும், அது குறிப்பிடுகிறது. வருங்காலமா னது 'சிறப்பு மிக்க ''இன்று'' ஆக இருப்ப தால், இறைவாக்கினர்கள் நிகழ்காலத்தை வருங்காலத்துடன் இணைத்துத் தொடர்புப டுத்துகின்றனர். எதிர்கால உண்மையானது, நிகழ்காலச் சூழ்நிலையில் காணப்படுகின்ற எல்லா வரலாற்று இலக்குகளையும் விஞ்சி அமையும் என்பதை உயர்வு நவிற்சி அணி பயன்படும் முறை நன்கு எடுத்துக்காட்டுகி றது. தனது இலக்கிய வடிவங்களைப் பாராட்டச் செய்வதற்குப் பதிலாக, இறை வாக்கு முறையில் பேசுவது செவிமடுப் போரை அல்லது வாசகர்களை ஒரு முழுமை நிகழ்ச்சியை நோக்கி வழிப்படுத்துகிறது. வெளிப்பாட்டு இலக்கியமானது பழைய சட்டத்தின் இறைவாக்குகளைவிட அதிக அளவில் அரசியல் விருப்பு வெறுப்புகளி னின்று விலகியிருப்பதால் சிறப்பு மிக்க வெளிப்பாடாக உள்ளது. காலத்தை வரை யறை செய்தல், எண்கள் மற்றும் கற்பனை யான படைப்புகள் ஆகியவற்றைப் பயன்ப டுத்தும் போது, அது இத்தகைய வெளிப் பாட்டை நோக்கியே செயல்படுகிறது. எல் லாவற்றிற்கும் மேலாக நிகழ்கால வரலாறு பதிவு செய்கின்ற அனைத்திலும், வரலாற் றின் மையமாகவும் முடிவாகவும் இருக்க போகும் இந்த முழுமையான நிகழ்ச்சி யையே அது முன்குறிக்கின்றது.

புதிய ஏற்பாடு

1. இறைவாக்குகள் நிறைவேறுதல்:- புதிய ஏற்பாடானது பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளின் உணர்வுப் பூர்வமான நிறைவேறுதலாகும். இறைவாக்குரைகள் அனைத்தின் சுருக்கத்தையும் குறிப்பாக ஊழி யன் பாடல்களைத் தன்னகத்தேயும் கொண் டுள்ள ஏசயாவின் நூலானது, இரு ஏற்பாடுக ளுக்கும் இடையில் இன்றியமையாத இணைப்பாக உள்ளது. இறைவாக்கு நிறை வேறுதலின் முறையையும், அதன் வரவிருக் கும் உண்மை நிலையினையும் முன்னுரைப் பதால், இது இவ்வாறு உள்ளது. மீட்பின் நற்செய்தி பெற்ற குறைவான வரவேற்பி னைக் குறிப்பிடுவதற்கு நற்செய்தியாளர்கள், ஏசயாவின் வாசகத்தையே பயன்படுத்துகின் றனர் (மத் 13:14-15; யோவா 12:39-40). அ.ப. 28:26-27 ஆகிய பகுதிகளில் ஏச 6:9-வும்; உரோ 10:16; யோவா 12:38 ஆகிய பகுதிகளில் ஏச 53:1-வும்; உரோ 10:21-வில் ஏச 65:2-வும் எடுத்துக் கூறப்படுகின்றன).

உண்மையில், இறைவாக்குகளை நிறை வேற்றுகின்ற இயேசுவினுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் புதிய ஏற்பாடு வலியுறுத்து மாயின், இறைவாக்கினர் அனைவரும் ஒன் றுபட்ட நிலையில் (அ.ப. 3:18-24; லூக்

24:27) மிகமுக்கியமான மறைபொருளாகிய அவரது இறப்பு மற்றும் உயிர்ப்பு ஆகியவற்றைத் தமக்கேயுரிய முறையில் எதிர்நோக்கியிருந்தனர் என்பதை நாம் மறக்கக்கூடாது. இறைவாக்கின் இலக்காகப் பாடுகளே பல முறை குறிப்பிடப்பட்டிருந்தாலும் (மத் 26: 54-56; அ.ப. 3:18; 13:27), அடிக்கடி இரண்டுமே ஒன்றாகக் கொள்ளப்பட்டுள்ளன, நற்செய்தியைப் பதிப்பித்தலின்போது உபயோகிக்கப்பட்ட, எம்மாவு பாதையில் நமது ஆண்டவருடைய விளக்கவுரையானது, கிறிஸ்துவின் மறைபொருளைப் பற்றிக் கூறுகின்ற நூல்களைப் பல்வேறு வகைகளாகப் பிரித்துக்காட்டும். சொல்லமைப்புகளை மீண்டும் இணைக்கிறது. ''இறைவாக்கினர்கள்''. ''மோசேயும் மற்ற எல்லா இறைவாக்கினர்களும்'', ''எல்லா மறை நூல்களும்'', ''மோசேயின் சட்டமும் இறைவாக்கினர்கள் மற்றும் சங்கீதங்களும்'' (லூக் 24:25.27.44; அ.ப. 2:30; 26:22; 28:23; உரோ 1:2; 1 பேதுரு 1:11; 2 பேதுரு 3:2) போன்ற சொற்றொடர்களை, எம்மாவுக்கப் போகும் வழியில் இயேசு அளித்த விளக்கமுறை மீண்டும் இணைக்கிறது. இம்முறையே நற்செய்திகளின் பதிப்பிலும் பயன்பட்டுள்ளது. பழைய ஏற்பாடு முழுவதும் புதிய ஏற்பாட்டின் இறைவாக்கு ஆகிறது; ''இறைவாக்கு நூலாக மாறுகிறது'' (2 பேதுரு 1:19-20).

2. புதிய அமைப்பில் இறைவாக்குப் பணி:-

அ. இயேசுவின் சூழ்நிலை:- செக்கரிய (லூக் 2:36), எல்லாருக்கும் மேலாக திருமுழுக்கு யோவான் ஆகியோருடைய இறைவாக்குரைகளின் பொருளாக இயேசு தோன்றுகிறார். இறைவாக்குப் பணிக்கும் அதனுடைய இலக்காகிய கிறிஸ்துவிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை வெளிப்படுத்த யோவானுடைய பிரசன்னம் தேவைப்பட்டது. ஒவ்வொருவரும் யோவானை இறைவாக்கினராகவே பார்க்கின்றனர். பழைய இறைவாக்கினர்களைப் போன்று அவரும் சட்டத்தை வாழ்கின்ற அனுபவங்களாக மொழி பெயர்க்கின்றார் (மத் 14:4; லூக் 3:11-14). இறைவனின் சினம் மற்றும் மீட்பு உடனடியாக வருவதைப்பற்றி அவர் அறிவிக்கின்றார் (மத் 3:2.8). குறிப்பாக, பிறரால் யார் என்று அறியப்படாமல் அருகிலிருப்பவரை இறைவாக்கினால் உணர்கிறார் யோவான்; அவரை சுட்டிக் காட்டுகிறார் (யோவா 1:26.31). இயேசுவைப்பற்றிச் சான்றுரைத்த அனைத்து இறைவாக்கினர்களும் யோவான் வழியாகப் பேசுகின்றனர்; ''திருச்சட்டமும் இறைவாக்கினர் அனைவரும் யோவான் வரை இறைவாக்கு உரைத்தனர்'' (மத் 11:13; லூக் 16:16).

ஆ. இயேசு:- இயேசுவினுடைய நடத்தையானது திருமுழுக்கு யோவானிடமிருந்து தெளிவாக வேறுபடுத்தப்பட்டிருந்தாலும் (மத் 9:14). பல இறைவாக்குக் குணங்கள் அவரிடம் காணப்படுகின்றன. அவர் 'காலங்களின் அருங்குறிகளைத் தெரியப்படுத்துகிறார்' (16:2-3), அவை நிறைவேறுவதைப் பற்றி அறிவிக்கின்றார் (மத் 24-25), ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீடுகளை அவர் அணுகுமுறையானது, இறைவாக்கினருடையதைப் போன்று ஆய்வு செய்வதாக இருந்தது; இதற்குச் சில எடுத்துக்காட்டுகள்: அதிகாரத்தின் திறவு கோல்களைத் தம்மிடம் கொண்டு, மற்றவர்கள் நுழைவதைத் தடுப்பவர்கள்பால் காட்டிய கடுமை (லூக் 11:52); சமய வெளிவேடத்திற்கு எதிரான கோபம் (மத் 15:7; ஏச 29:13); யூதர்கள் பெருமை பாராட்டுகின்ற 'ஆபிரகாமின் பிள்ளைகள்' என்னும் பெயருக்கு எதிரான சவால் (யோவா 8:39; 9:28); அறிவதற்குக் கடினமாக உள்ள, ஆன்மீக உரிமைப் பேறு பற்றிய விளக்கம்; ஆலயத்தைத் தூய்மைப்படுத்துதல் (மாற் 11:15 தொ; ஏச 56:7; எரே 7:11); சடப்பொருட்களால் ஆன தலப்புனித இடம் அழிக்கப்பட்டபின் வரும் முழுமையான வழிபாடு பற்றிய அறிவிப்பு (யோவா 2:16; செக் 14:21). எல்லாவற்றிலும் இறுதியாக, தனது செய்தியானது இறைவாக்கினர்களைக் கொன்ற அதே எருசலேமினால் (மத் 23:37-38; 1 தெச 2:15) மறுக்கப்பட்டு (மத் 13:13 தொ) நிராகரிக்கப்படுதலை அவர் காண்கிறார். இந்தக்கூறு முந்தைய இறைவாக்கு நூல்களில் காணப்படுகிறது. தமது மர

ணத்தை அறிவித்து அதன் பொருளையும் விளக்கிறார். அவரே அவருக்கு இறைவாக்கினர். தமது கதியின் தலைவர் தாமே என்று காட்டுகிறார். இறைவாக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தந்தையின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, அந்தக் கதியை ஏற்றுக்கொள்கிறார்.

புதுமையான அடையாளங்களுடன் சேர்த்து மேற்கூறப்பட்டவைகளைக் கருத்தில் கொண்டால், மக்கள் கூட்டம் அவருக்கு இறைவாக்கினர் என்ற பட்டத்தைத் தன்னிச்சையாக அளித்ததில் வியப்பில்லை (மத் 16:14; யோவா 4:19; 9:17). தனிப்பட்ட சூழ்நிலைகளில் இப்பட்டத்திற்கு, மறைநூலில் முன்னறிவிக்கப்பட்ட மிகச் சிறந்த இறைவாக்கினர் என்பது பொருளாகும் (யோவா 1:21; 7:40). ஆனால் இயேசு இச்சிறப்புப் பெயரை முக்கியமல்லாத விதத்திலேயே ஏற்றுக் கொள்கிறார் (மத் 13:57); ஆதித்திருச்சபையும் இப்பெயரை வெகுசிறிதே பயன்படுத்தியுள்ளது (அ.ப. 3:22-23; லூக் 24:19). இயேசுவினுடைய ஆளுமை, ஒரு இறைவாக்கினரைச் சூழ்ந்துள்ள மரபை விட எல்லாவிதத்திலும் மேம்பட்டு உள்ளது; அவரே மெசியா, இறைவனின் ஊழியன், மனுமகன். தமது தந்தையிடமிருந்து அவர் பெற்றுள்ள அதிகாரமானது, முழுவதும் அவருக்கே உரியது. மகனுக்குரிய அந்த அதிகாரம் அவரை இறைவாக்கினர் நிலைக்கு மேம்பட்டவராக நிறுவுகிறது (எபி 1:1 தொ.) அவர் தமது செய்தியைப் பெறுவது உண்மையே. ஆனால் யோவான் கூறுவது போல அவரே மனுவுருவான இறைவனுடைய வார்த்தை ஆவார் (யோவா 1:14). இதன் விளைவாக, எந்த இறைவாக்கினராவது உண்மைக்கும் வாழ்விற்கும் ஊற்றாகத் தன்னையே அளிக்கமுடியுமா? ''ஆண்டவர் கூறுவதாவது'' என்றே இறைவாக்கினர்கள் வழக்கமாகக் கூறுவர். ஆனால், இயேசுவோ ''உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்கிறேன்'' என்கிறார். அவரது பணியும் ஆட்தன்மையும் வேறுபட்ட அமைப்பைச் சேர்ந்தவை.

இ. திருச்சபை:- ''ஒருநாள் இறைவாக்கு வரம் இல்லாமற்போகும்'' என்று பவுல் விளக்குகிறார் (1 கொரி 13:8). ஆனால், அது காலத்தின் இறுதியில் நிகழும். இவ்வுலகிற்குள் கிறிஸ்துவின் வருகையானது, இறைவாக்கு அருங்கொடையை அழிப்பதற்குப் பதிலாக, ஏற்கனவே முன்னறிவித்ததைப் போன்று அது மேலும் பரவும்படியாகத் தூண்டுகிறது. ''எல்லாரும் இறைவாக்கினர் ஆக வேண்டும்'' என்பதே மோசேயின் விருப்பமாகும் (எண் 11:29). இந்த விருப்பமானது 'இறுதி நாட்களில்' நிறைவேறுவதை யோவேல் காண்கிறார் (யோவா 3:1-4). பெந்தகொஸ்தே நாளில் இவ்விறைவாக்கு நிறைவேறியதாக பேதுரு அறிவிக்கிறார்: இயேசுவின் ஆவியானது எல்லாஊனுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இறைவனுடைய புதிய மக்களில், காட்சியும் இறைவாக்கும் சாதாரண நிகழ்ச்சிகளாக உள்ளன. அப்போஸ்தலிக்க திருச்சபையில் இறைவாக்குக் கொடையானது ஆற்றல் மிக்கதாக அடிக்கடி நிகழ்கிறது (அ.ப. 11:27-28; 13:1; 21:10-11). தான் உருவாக்கிய திருச்சபைகளில், இப்பணியானது குறைத்து மதிப்பிடப்படக்கூடாதென பவுல் விரும்புகின்றார் (1 தெச 5:20). அதைப் பரவசப் பேச்சு வரத்திற்கு மேலானதாகக் கருதுகிறார் (1 கொரி 14:1-5). ஆனாலும், எல்லைகளுக்கு உட்பட்டு சமூகத்தின் நன்மைக்காக இது செயல்படுத்தப்பட வேண்டியது அவசியமாக உள்ளது (14: 29-32).

பழைய ஏற்பாட்டைப் போலவே, புதிய ஏற்பாட்டிலும் இறைவாக்குப் பணியானது, வருங்காலத்தை முன்னறிவிப்பதையே ஒரே செயலாக கொண்டுள்ளது, அது ''ஞான வளர்ச்சி தருகிறது, ஊக்கம் ஊட்டுகிறது, ஆறுதல் அளிக்கிறது'' (14:3); போதிக்கும் பணியை ஒத்திருக்கின்ற இச்செயல்கள். திருவெளிப்பாட்டின் இறைவாக்கு ஆசிரியர், இறைவாக்கினர் (1 கொரி 14:32) மற்றும் அதிகாரத்திலுள்ளோரின் கட்டளைகளுக்கு (14:37) ஏற்ற முறையில், ஏழு திருச்சபைகளுக்கும் அவற்றின் உண்மை நிலையினை வெளிப்படுத்துவதோடு தொடங்குகிறார்

(திருவெளி 2-3). இறைவாக்கினர், சமுதாயத்தைத் தனக்குகீழ் கொண்டு வருவது போன்றோ திருச்சபையை ஆள்வது போன்றோ நடிக்கவில்லை (1 கொரி 12:4-11). ஆவிகளைத் தேர்ந்து தெளிதல்பற்றிய விதிமுறைகளின் மூலமாக, உண்மையான இறைவாக்குரைத்தலானது இறுதிவரை கண்டுணரப்படும். பழைய ஏற்பாட்டிலும், உபாகம ஆசிரியர், இறைவாக்கினர்கள் போதித்த படிப்பினைகளில் அவர்களுடைய இறைப்பணியின் உண்மையான அடையாளத்தை காணவில்லையா (உப 13:2-6)? இன்றும் அது அவ்வாறே உள்ளது. ஏனெனில், இறைவாக்குரைத்தலானது அப்போஸ்தலிக்க காலத்தோடு முடிந்துவிடவில்லை. திருச்சபையில் பல்வேறு புனிதர்களின் பணிகளை, இறைவாக்கு கொடையடன் குறிப்பிடாமல் புரிந்து கொள்ள முயல்வது கடினமானதே. இறைவாக்குரைத்தலானது பவுல் குறிப்பிட்ட விதிமுறைகளுக்குக் கீழ்ப்பட்டதாகவே உள்ளது.

இறைவாக்கினர் புதல்வர்கள் (SONS OF THE PROPHETS)

இச்சொற்றொடர் பெரும்பாலும் இறைவாக்கினர்களின் சொந்த மகன்களைக் குறிப்பதில்லை. மாறாக ஒரு குறிப்பிட்ட பிரிவையோ, குருவின் சீடர்களையோ குறித்து நின்றது. இச்சொல் கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் சவுல், சாமுவேல் காலத்தில் வழக்கிற்கு வந்தது. பின் நாளடைவில் இறைவாக்கினர்களின் கூட்டம் என்றும் (1 சாமு 10:5) குழு என்றும் (1 சாமு 19:20), மாறியது. மீண்டும் கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் எலிசாவின் காலத்தில் இக்குழுச் சொல் வழக்கிற்கு வந்தது (2 அர 2:3; 3:11; 4:1.38; 6:1-2). பொதுவாக அரசர்களே இவர்களை அலுவலர்களைப் போல அமர்த்தியிருந்தனர். ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு கடவுளின் விருப்பத்தை அறிந்து கூறுவது இவர்களது பணியாகும். சில போலியான இறைவாக்கினர்களும் அரசர்களிடம் இருந்து கொண்டு அவர்களை தவறான பாதைக்கு வழிநடத்தியிருக்கிறார்கள். எருசலேம் நகரம் அழிந்த போது இவர்களது காலமும் முடிவுற்றது (1 அர 18:4; 22:6; 2 அர 23:2; எரே 26:7-8.11).

இறை வார்த்தை (WORD OF GOD)

'வாழும் கடவுள் மனிதனோடு பேசுபவர்': இது மறைநூல் தன் இறைவனிடம் கண்ட அரும் பெரும் பண்புகளில் ஒன்று. எனவேதான் ''ஊமைச்சிலைகளைப்'' (1 கொரி 12:2) பார்த்து, ''உங்களுக்கு வாய் உண்டு, பேசுவதில்லை'' (சங் 115:5; பாரு 6:7) என்று மறைநூல் எள்ளி நகையாடிற்று. மனுவுருவான இறைவனின் வார்த்தையை (லோகோஸ்) மையமாகக் கொண்டு கழலும் புதிய ஏற்பாட்டிற்குத் தயார் செய்ய, பழைய ஏற்பாடு இவ்வார்த்தைக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கலாயிற்று.

பழைய ஏற்பாடு

1. இறைவன் மனிதனோடு பேசுகின்றார்:- அலக்சாந்திரியா நாட்டு ஞானிகள் தங்கள் சிந்தனையின் மூலம் உருவாக்கிய கற்பனைச் சித்திரம், ''லோகோஸ்''. ஆனால் பழைய ஏற்பாட்டு மனிதன் கண்ட தேவ வார்த்தையோ தன் அன்றாட அனுபவ வாயிலாகத் தெளிந்த உண்மையாகும். ஏனெனில் தனது இறைவன் சலுகை பெற்ற சிலரோடு நேரடியாகப் பேசி, அவர்கள் மூலம் தம் மக்களோடும் மனித இனத்தோடும் உறவு கொள்ள விழைவதை அவன் கண்கூடாகக் கண்டான்.

அ) இறைவாக்கு உரைப்பது பழைய ஏற்பாட்டின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும்:- எப்படியெனில் எல்லாக்காலங்களிலும் தாம் தேர்ந்தெடுத்த சிலரோடு இறைவன் பேசுகின்றார். தாம் பேசிய வார்த்தையைப் பிறருக்கு அறிவிக்கும்படி அவர்களுக்கு ஆணையிடுகின்றார். இவ்வாறு இறைவாக்கை ஏந்திச் செல்வோரே இறைவாக்கினர் என்று பொதுவாக அழைக்கப்படுகின்றனர். இறைவாக்கினர்களோடு இறைவன் பேசும் விதம் பற்பல: ''காட்சிகளிலும் கனவுகளிலும்'' (எண் 12:6; காண் 1 அர 22:13-17) பேசுகின்றார்; ஒருவித இனந்தெரியா உள்ளத் தூண்டுதலால் பேசுகின்றார் (2

அர 3:15; எரே 1:4); மோசேயுடனோ ''நேர் முகமாகப்'' பேசுகின்றார் *(எண் 12:8)*. ஆனால் பல சந்தர்ப்பங்களில் அவர் எப்ப டிப் பேசுகின்றார் என்பது பற்றிய செய்திகள் தெளிவாகத் தெரிவதில்லை *(ஆதி 12:1)*. எனினும் இறைவன் எப்படிப் பேசுகின்றார் என்பது அவர்களுக்கு முக்கியமன்று. இவ்வி றைவாக்கினர் அனைவரும் 'இறைவன் தங்க ளோடு பேசுகின்றார்' என்பதையும், இறை வார்த்தை தங்களுள் எப்படியாவது, வன்மு றையைப் பயன்படுத்திக்கூட *(ஆமோ 7:15; காண்க: 3:8; எரே 20:7 தொ)*, நுழைந்து விடுகிறது என்பதையும் எவ்வித ஐயத்திற் கும் இடமின்றி உணர்கின்றனர். மேலும் தங்களுடைய வாழ்வின் போக்கையே மாற் றியமைப்பது இவ்வார்த்தைதான் என்பத னையும் உணர்கின்றனர். தங்களுள் வார்த் தையானது கொந்தளித்துக் குமுறி கொப்பு ளித்து எழும் விதங்கண்டு, 'இது இறை ஆவியின் செய்கையே' என்று அவர்கள் விளம்புகின்றனர். இருப்பினும், சில சமயங் களில் சில விந்தையான முறைகளில், ஆனால் உளவியல் விதிகட்குட்பட்ட விதங் களில் இறைவார்த்தை எழுவதும் உண்டு. மனித உள்ளங்களைத் தொட இறைஞானம் இம்முறைகளையே பயன்படுத்தி *(பழ 8:1-231.32-36; ஞான 7-8)*, நல்வாழ்வுக்குரிய முறைகளைக் கற்பிக்கின்றது; மறை உண் மைகளின் உட்பொருளை வெளிப்படுத்து கின்றது *(தானி 5:11தொ; காண்க: ஆதி 41:39)*. வார்த்தை வரும் வழி எத்தகையது ஆயினும், மனிதனின் வார்த்தையைப் போன்று அது மாறுபடுவதில்லை; தவறுக் குள்ளாவதில்லை. ஏனெனில் இவ்விறை வாக்கினரும் ஞானிகளும் தங்கள் வார்த் தையை வாழும் இறைவனிடமிருந்து நேரடி யாகப் பெறுகின்றனர்.

ஆ) இறை வார்த்தையானது, இன்றிருந்து நாளை மறையும் மண்ணவர் கண்களில் படாமல் மறைத்து வைக்கப்பட வேண்டிய இரகசியமும் அன்று; அல்லது சிறப்புச் சலுகை பெற்ற விண்ணவர் குழுவிற்கே உரிய அமுத மொழியும் அன்று. மாறாக இறைவாக்கினர் வழியாக இறைவன் தொடர்புகொள்ள விழையும் இறைமக்கள் ஒவ்வொருவருக்கும் அறிவிக்கப்பட வேண் டிய நற்செய்தியாகும். எனவே ஒருசில ஞானிகளே தவமிருந்து பெறக்கூடிய அனுப வம் அன்று தேவ வார்த்தை; ஏனெனில் ''தமது தூதுவர் மூலம் தங்கள் அனைவரோ டும் இறைவன் பேசியுள்ளார்'' என்பதை உலகறிய ஏற்றுக்கொள்ளவே இஸ்ராயேல் அழைப்புப் பெற்றுள்ளது. எடுத்த எடுப்பில் இவ்வார்த்தை தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டு, புறக்கணிக்கப்பட்டால் *(எரே 36)*, ஐயத்திற்கு இடமில்லாத அருங்குறிகள் தோன்றி, அதன் உண்மைக்குச் சான்று பக ரும். புதிய ஏற்பாட்டுக் காலத்தையொட்டி, ''பற்பல முறையிலும் பல்வேறு வகையி லும் முற்காலத்தின் இறைவன் நம் முன்னோ ரிடம் பேசினார்'' *(எபி 1:1)* என்பது யூதகு லத்தின் அறிக்கையாகவே மாறிவிடுகின்றது.

2. இறைவார்த்தையின் இயல்புகள்:- இறைவார்த்தை அ) வெளிப்படுத்தவும் ஆ) செயல்புரியவும் வல்லது. இவ்விரு இயல்பு களும் பிரிக்கமுடியாத ஆனால் வேறுபட்ட கூறுகளாகும்.

அ) இறைவன் தம் பேச்சின் மூலம் வெளிப்படுத்துகின்றார்:- மனிதனின் சிந்த னையோடு தம் சிந்தனைகளைத் தொடர்புப டுத்த விரும்பி இறைவன் பேசுகின்றார். அதன் விளைவாக இறைவனின் சொற்கள் மனித வாழ்வின் சட்டமாகவும் நியதியாக வும் மாறிவிடுகின்றன; அவன் கண்கள் காணும் பொருள்கள், சம்பவங்கள் ஆகிய வற்றின் உட்பொருளை வெளிப்படுத்துவ தாக அமைகின்றன; அவன் எதிர்காலத்துக்கு உறுதியளித்து, வரவிருப்பவைகளை முன் அறிவிப்பதாவும் அமைகின்றன.

1) தங்கள் வரலாற்றின் ஆரம்பத்திலி ருந்தே இஸ்ராயேல் மக்கள் இறைவாக்கைத் தங்கள், வாழ்வின் சட்டமாகவும் நியதியாக வும் ஏற்றுவந்திருந்தனர். சீனாய் மலையின் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட காலத்தில் மோசே மக்களுக்குப் பத்து ''வாக்குளில்'' அடங்கிய பத்துக் கட்டளைகளை இறைவன்

பெயரால் அளித்தார் (யாத் 20:1-17; உப 5:6-22; காண்க: யாத் 34:28; உப 4:13; 10:4). இப்பத்துக் கட்டளைகள் ஒழுக்கத்தையும் மதத்தையும் அடிப்படையாகக் கொண்டதொரு சாசனமாக இருந்தன. இறைவன் ஒருவரே என்ற இவ்வறிக்கையும், இறைவன் கொடுத்த அடிப்படையான கட்டளைகளுமே ''இறைவன் பேசுகின்றார்'' என்பதை இஸ்ராயேல் உணர்வதற்கு முதன்முதலாக வழிகோலின. இக்கருத்தை வலியுறுத்த எண்ணிய சில விவிலியப் பகுதிகள் சீனாய்மலைக் காட்சியைப் புனைந்து பெரிது படுத்திக் காட்டலாயின; மேகத்தின் நடுவிலிருந்து இறைவன் நேரடியாக இஸ்ராயேல் மக்களோடு பேசுவதாகவும் படம் பிடித்துக் காட்டின (காண்க: யாத் 20:1; உப 4:12). எது எப்படி அமைந்தாலும், இறைவனின் திருச்சட்டம் இறைவார்த்தையின் பெயரால்தான் அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. எனவேதான் ஞானிகளும் சங்கீத ஆசிரியர்களும் சட்டத்தை இன்பம் சொட்டும் தேன்கூடாகக் கருதலாயினர் (பழ 18:13; 16:20; சங் 119).

2) ''எகிப்து நாட்டிலிருந்து உன்னை விடுவித்த ஆண்டவராகிய நாமே, உன் கடவுள்'' (யாத் 20:2); இத்தகைய அறிக்கை ஒன்று இறைவன் கொடுத்த ஒவ்வொரு திருச்சட்டத்தோடும் என்றுமே இணைந்து வந்திருந்தது. இவ்வறிக்கை இறைவனின் குணங்களையும், அவர் இவ்வுலகில் ஆற்றிவரும் அருஞ்செயல்களையும் வெளிப்படுத்திற்று. உண்மையில், சட்டம் அதிகாரம் பெறுவதே இவ்வறிக்கை விளம்பும் உண்மையின் அடிப்படையில் தான். மேலும் இஸ்ராயேல் ஒருவரே கடவுள் எனும் ஞானத்தைப் பெற்றது தன் சுயசிந்தனையால் அன்று; மாறாக ''தாம் ஒருவரே கடவுள்'' (யாத் 3:13-15; காண்க: உப 6:4) என்று இறைவன் தம்மைப் பற்றியே முன்னோருக்கும், பிறகு மோசேக்கும் வெளிப்படுத்தியதின் விளைவேயாகும். மேலும் மீட்பின் வரலாறு படிப்படியாக மலர்ந்தபோது, அவ்வரலாற்றின் உட்பொருளை இஸ்ராயேலுக்கு விளக்கிவந்தது இறைவார்த்தையாகும். நாட்டிற்கு ஏற்பட்ட பெருஞ்சோதனைகளில் இறைவனின் உள்ளத்தில் இருந்த திட்டத்தை வெளிப்படுத்தியதும் இறைவார்த்தையே (யோசு 24:2-13). இவ்வாறு இறைவனின் திட்டத்தை வரலாற்று நிகழ்ச்சிகளில் காணும்அறிவு, மனிதன் தானாக கண்டுபிடித்த ஒன்றல்ல; மாறாக, தேவவார்த்தையைப் பெற்ற இறைவாக்கினர் இவ்வறிவை எடுத்தியம்பினர்; ஞானிகள் இதற்கு மெருகேற்றினர் (ஞான 10-19); சுருங்கச் சொல்லின் இறைவனின் வார்த்தையே இஞ்ஞானத்தைக் கூற்றுக்கொடுத்தது.

3) இறுதியாக, இறைவார்த்தை காலவரையைக் கடந்து எதிர்கலத்தையும் வெளிப்படுத்த வல்லமை உடையது. இறைவனின் திட்டத்தில் அடுத்த கட்டத்தைப் படிப்படியாக வெளிப்படுத்துகின்றது (ஆதி 15:13-16; யாத் 3:7-10; யோசு 1:1-5). உடனடியாக நடக்க இருப்பவைகளைக் கூறுவதோடு இறைவன் தம் திட்டத்தை நிறைவுக்குக் கொண்டு வரும் 'இறுதி நாட்களில்' நிகழவிருப்பவைகளையும் இறைவார்த்தை வெளிப்படுத்துகின்றது. இறைவனது அரசு முழுமையாக நிறுவப்படும் விதத்தைப்பற்றி இறைவாக்கினர் எடுத்துரைப்பவை அனைத்தும் இதனுள் அடங்கும்: இவ்வாறு இறைவார்த்தையின் கூறுகளான சட்டம், வெளிப்பாடு, வாக்குறுதி ஆகிய மூன்றும் இஸ்ராயேல் வரலாறு முழுவதிலும் ஒன்றோடு ஒன்று இணைந்தும் சார்ந்தும் காணப்படுகின்றன. இவை மூன்றும் மனிதனின் பதிலுக்காக எதிர்பார்த்து நிற்கின்றன. இதைப்பற்றிப் பிறகு பார்ப்போம்.

ஆ) பேசும்போதே இறைவன் செயலாற்றுகின்றார்:- இறைவார்த்தை மனிதனின் சிந்தனைக்கு விருந்தாக அமைவதோடு கூட, இறைவனின் விருப்பத்திற்கேற்ப அனைத்தையும் சாதிக்கக்கூடிய சக்தியாகவும் திகழ்கின்றது (யோசு 21:45; 23:14; 1 அர 8:56). இறைவன் தம் வார்த்தையை ஓர் உயிருள்ள தூதுவனாக அனுப்புகின்றார் (ஏச 9:7; சங் 107:20; 147:15). எவ்விதத்திலாவது அது மனிதனை வசப்படுத்திவிடுகின்றது (செக் 1:6).

தன் பணியை முடிக்கும்வரை இறைவன் அவ்வார்த்தையைக் கண்காணிக்கின்றார் (எரே 1:2). உண்மையில், தான் அறிவிப்பது வரலாற்றைச் சார்ந்ததாயினும் சரி, அண்டங்களைச் சார்ந்ததாயினும் சரி, அல்லது மீட்புத் திட்டத்தின் முடிவைப்பற்றியதாயினும் சரி, அனைத்தையும் வார்த்தை தவறாது நிறைவேற்றுகின்றது (எண் 23:19; ஏச 55:10 தொ).

1) வார்த்தையின் இத்தகைய ஆற்றலைப் பிற மேற்காசிய மக்களும் அறிந்திருந்தனர். ஆனால் அத்தகைய ஆற்றலை மாயா மந்திர சக்தியாகக் கருதினர். பழைய ஏற்பாடு வார்த்தையின் செயல்திறனை முதன்முதலில் இறைவாக்கினரின் வார்த்தையில்தான் கண்டது; இறைவன் வெளிப்படுத்துகிற திட்டங்களை அவர் நிச்சயம் நிறைவேற்றுவார் என்பது உறுதி. எனவே வரலாறு என்பது இறைவன் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேறுவதாகும் (காண்க: உப 9:5; 1 அர 2:4; எரே 11:5). இறைவன் திருவாய் மலர, காரியங்கள் நிகழ்கின்றன (ஏச 44:7 தொ). எகிப்தில், ''ஒரு வார்த்தை சொன்னார்; பூச்சிகள் படையெடுத்தன'' (சங் 105:31,34). பாபிலோனில் அடிமைத்தனத்தின் முடிவின் போது அவ்வாறே ஆண்டவர் எருசலேமைப் பார்த்து, ''நீ குடியிருப்பு ஆவாய்'' என்றார். சைரஸ் அரசனை நோக்கி ''நீயே நமது மந்தையின் மேய்ப்பன்'' (ஏச 44:26.28) என்று மொழியலானார்.

2) மேற்கூறியவை யாவும் வரலாறு கண்ட உண்மைகள் என்றால், வரலாறு மட்டுமன்று, இறைவனின் படைப்புப் பொருள்கள் அனைத்துமே அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிகின்றன என்பதில் சந்தேகம் கொள்ளலாமா? ''அவர் ஒரு வார்த்தை சொல்லவே எல்லாம் உண்டாயின'' (சங் 33:6-9; காண்க: ஆதி 1; புல 3:37; யூதி 16:14; ஞான 9:1; சீரா 42:15) என்று படைத்தவரின் முதல் செயலை வார்த்தையின் வடிவில் குறிப்பதும் பொருந்தும். அந்நாளிலிருந்து இன்றுவரை அதே வார்த்தை விண்மீன்களையும் (ஏச 40:26), கடல்களையும் (44:27), இயற்கையனைத்தையும் (சங் 107:25; 147:15-18; யோபு 37:5-13; சீரா 39:17. 31) ஆட்சி செய்து, வையகத்தில் செயலாற்றிவருகின்றது. வயலில் விளைந்தவை மனிதனை உண்பித்து உயிரூட்டுவதைக் காட்டிலும், இவ்வார்த்தை விண்ணிலிருந்து விழுந்த மன்னாவாக இறைப்பற்றுள்ளவர்களை உண்பித்து, உயிர் கொடுத்துப் பாதுகாத்து வருகின்றது (ஞான 16:26; காண்க: உப 8:3).

3) படைப்பிலும் வரலாற்றிலும் இறை வார்த்தையின் ஆற்றல் மெய்ப்பிக்கப்பட்டது. ஆதலால் இறுதி நாட்களில் மீட்புத் தருவதாக இறைவன் அளித்த வாக்குறுதிகளும் மெய்யாகும் என்பது உறுதி. ''இறைவனின் வார்த்தை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்'' (ஏச 40:8) இக்காரணத்திற்காகவே ஒவ்வொரு நூற்றாண்டிலும் இறைமக்கள் தங்கள் எதிர்காலத்தை எடுத்துக்கூறும் வார்த்தைகளைப் பயபக்தியுடன் தொகுத்து வைக்கின்றனர். ''இறுதி நாட்கள்'' வரும்வரை நிகழும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அர்த்தம் உண்டு என்பது இவர்களின் நம்பிக்கையாகும் (தானி 9).

3. பேசும் இறைவனின் முன் மனிதனின் நிலை:- இறைவார்த்தை உள்ளத்தைத் தட்டுகிறது என்பது மனித அனுபவமாகும். அதை அவன் தட்டிக் கழிக்க முடியாது. வார்த்தையை ஏந்திச் செல்பவனின் பணியோ மிகவும் பொறுப்பு வாய்ந்ததாக அமைகின்றது. வார்த்தையைக் கேட்பவனோ தான் விதியையே மாற்றியமைக்கக் கூடிய ஒரு நிலைக்கு அமைக்கப்படுவதை உணர்கின்றான்.

அ) பழைய ஏற்பாட்டில் இறைவார்த்தை ஏந்திச் செல்லும் பணியாளன் ஆனந்தப் பரவசம் அளிப்பவனாக இருந்ததில்லை. மாறாக இறைவாக்கினர் எதிர்ப்புக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளாவதைக் காண்கிறோம். இறைவன் தம் வார்த்தைகளை இறைவாக்கினர்க்கு அளித்து, அவைகளை அவர்கள் பயமின்றி அறிவிப்பதற்கு வேண்டிய சக்தியையும் அளிக்கின்றார் என்பதில் சந்தேகம் இல்லை (எரே 1:6-10). இறைவாக்கினரோ

தாம் ஏந்தும் பணிக்கு இறைவன்முன் பொறுப்பாளியாகின்றார். ஏனெனில் மனித வாழ்வின் தலையெழுத்தையே இப்பணி நிர்ணயிக்கின்றது (எச 3:16-21; 33:1-9). தன் கடமையிலிருந்து அவர் தப்பிஓட முயன்றாலோ (யோனாவின் வாழ்வில் நடந்தது போல்: யோனா 1:3), இறைவன் வன்முறையைப் பயன்படுத்தி அவரை இழுத்துக் கொள்ள முடியும். பல இறைவாக்கினர் மனஅமைதியையும், ஏன், உயிரையும் கூடப் பொருட்படுத்தாது தங்கள் பணியை நிறைவேற்றி உள்ளனர். இத்தகைய ஆழ்ந்த கடமையுணர்ச்சிக்கு அவர்கள் பெற்றது எண்ணற்ற தொல்லைகளே (எரே 15:16 தொ). இத்தகைய கடின உழைப்பிற்கு உடனடியாக ஊதியமும் கிடைப்பதில்லை (1 அர 19:14).

ஆ) வார்த்தைக்குச் செவிமடுத்தல்:- வார்த்தையைக் கேட்போர் உள்ளத்தில் பணிவும் நம்பிக்கையும் நிறைந்திருக்க வேண்டும். இவ்வார்த்தை இறைவனது வெளிப்பாடாகவும் மனிதவாழ்வின் நியதியாகவும் விளங்கும்பட்சத்தில், அது அவர்களுக்கு ஒளியாகின்றது (சங் 119:105). இவ்வார்த்தை வாக்குறுதி என்ற அளவில் மனிதனின் எதிர்காலத்திற்கு உறுதியளிப்பதாயும் அமைகின்றது. எனவே இத்தகைய வார்த்தையை ஏந்திவருபவனின் நிறைகுறைகளைப் பாராது (மோசேயாக இருக்கட்டும் அல்லது இறைவாக்கினராய் இருக்கட்டும்) செவிமடுப்பது கடமையாகின்றது (உப 6:3; ஏச 1:10; எரே 11:3-6). பெற்ற வார்த்தையை ''உள்ளத்தில் பதித்து'' (உப 6:6; 30:14), அதன்படி நடப்பதோ (உப 6:3; சங் 119:9.17.101) அதை அடித்தளமாக்கி நம் நம்பிக்கையை அதில் எழுப்பவதோ கேட்பவனின் பொறுப்பாகும் (சங் 119:42.74.81; 130:5). இறைவார்த்தையை ஏற்று வாழ்பவனிடம் செறிவுமிக்க ஓர் ஆழ்ந்த ஆன்மீகப் போக்கு உண்டாகும். அம்மனப்பான்மையில் ஞானவாழ்வின் அனைத்துத் தடயங்களையும் காணலாம். வாழும் இறைவனையும் அவர் திட்டங்களையும் வார்த்தை வெளிப்படுத்துவதால், அங்கு விசுவாசத்தைக் காணலாம். இறைவனின் இல்லத்தில் நுழைய வார்த்தை வாக்குறுதியாக அமைவதால், நம்பிக்கைக்கு இடமுண்டு. வார்த்தை வாழ்க்கையின் சட்டமாக (காண்க: உப 6:4) மாறுவதால் அன்பு சுடர்விடுகின்றது.

4. ஆட்தன்மைப்படுத்தப்பட்ட இறை வார்த்தை:- தேவ வார்த்தையைப் பழைய ஏற்பாட்டின் பல அம்சங்களில் ஒன்றாக மட்டும் கருதுவது தவறு. மாறாக, வரலாற்றையே படைத்து, அதற்குப் பொருளும் தந்து அனைத்திற்கும் உயிரோட்டம் அளிக்கின்றது தேவ வார்த்தை. அதே வார்த்தை மனிதரிடையே நற்செய்தியாக உலவும் போது, அது அவர்களின் விசுவாச வாழ்க்கையின் வளர்ச்சிக்குப் பெருந்துணையாக உள்ளது. இவ்வளவு முக்கித்துவம் வாய்ந்த வார்த்தை, ஞானமும், இறை ஆவியும் உருவம் பெற்றதுபோல, ஓர் ஆளாக உருவகம் பெற்றது என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. வார்த்தையானது (இறைவனை) வெளிப்படுத்தும் போதும் (சங் 119:89); குறிப்பாக இறைவனின் ஆணைகளை நிறைவேற்றும் போதும் (சங் 145:15; 107:20; ஏச 55:11; ஞான 18:14 தொ) இவ்வாறு உருவகம் பெற்றது. புதிய ஏற்பாடு வார்த்தையின் செயல்களை முழுமையாக மனிதருக்கு வெளிப்படுத்துவதற்கு முன்னரே விவிலியத்தின் பிற பகுதிகளில் இறைவார்த்தையின் அளப்பரிய ஆற்றல் அறிந்து போற்றப்பட்டது.

II புதிய ஏற்பாடு

இறைவார்த்தை பற்றிய பழைய ஏற்பாட்டின் கருத்துக்கள் புதிய ஏற்பாட்டிலும் சில பகுதிகளில் காணக்கிடக்கின்றன (காண்க: மத் 15:6). வானதூதர் வாயிலிருந்து மலர்ந்த வார்த்தையிலே (லூக் 1:37 தொ. 45) மரியாள் நம்பிக்கை கொள்கிறாள். திருமுழுக்கு யோவானும், பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் பெற்றதுபோல, வார்த்தையைப் பெறுகின்றார் (லூக் 3:2). ஆனால் இக்காலம் முதல் வார்த்தையான மறைபொருள் இயேசுவையே மையமாகக் கொண்டுள்ளது.

1. இறைவனின் வார்த்தையும் இயேசுவின் வார்த்தையும்:-

அ) வார்த்தை செயலாற்றுகின்றது, வெளிப்படுத்துகின்றது:- பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினருக்கு அறிவிக்கப்பட்ட வகையில் இறைவார்த்தையானது இயேசுவுக்கும் அறிவிக்கப்பட்டதாக ஓரிடத்திலும் நாம் வாசிப்பதில்லை. எனினும் அவ்வார்த்தை பழைய ஏற்பாடு கூறுவது போல, எதையும் சாதிக்கவல்ல சக்தியாகவும், வெளிப்படுத்தவல்ல ஒளியாகவும் யோவான் நற்செய்தியிலும் ஒத்தமை நற்செய்திகளிலும் விளங்குகின்றது.

சாதிக்கவல்ல சக்தி:- தமது வார்த்தையால் இயேசு இறையரசின் வெளி அடையாளங்களான அருங்குறிகளைச் செய்கின்றார் (மத் *8:8,16;* யோவா *4,50-53*). அதே வார்த்தையால் இயேசு பாவமன்னிப்பு ஈந்து (மத் *9:1-7*), உள்ளத்திற்கு நலன் அளிக்கிறார். (இவ்வுள நலனின் வெளிச்சின்னமே அருங்குறியாகும்). பன்னிருவருக்குத் தமது அதிகாரத்தை வழங்கி (மத் *18:18;* யோவா *20,23*), புதிய உடன்படிக்கையின் அடையாளச் சின்னங்களை ஏற்படுத்துவதும் தமது வாயிலிருந்து மலர்ந்த சொல்லால்தான் (மத் *26:26-29*). இவ்வாறு படைக்கும் சக்தி வாய்ந்த வார்த்தை, அவரில், அவர் வழியாக வையகத்திற்கு மீட்பளித்துச் செயலாற்றி வருகின்றது.

வெளிப்படுத்தவல்ல ஒளி:- இயேசு இறையரசின் நற்செய்தியை அறிவிக்கின்றார்; அவ்விறையரசின் மறையுண்மைகளை உவமைகள் வழியாக வெளியிட்டு (மத் *13:11*), ''வார்த்தையை அறிவிக்கின்றார்'' (மாற் *4:33*). வெளித்தோற்றத்தில், ஓர் இறைவாக்கினராகவோ (யோவா *6:4*) இறைவன் பெயரில் கற்பிக்கும் சட்டவல்லுநராகவோ (மத் *22:16*) தோன்றினாலும், இயேசு தமக்கே உரிய 'அதிகாரத்துடனும்' (மாற் *1:22*), 'என்னுடைய வார்த்தைகளோ ஒழியவே ஒழியா! '' (மத் *24:35*) என்ற உறுதியோடும் பேசுகின்றார். இயேசுவின் இத்தகைய மனநிலை மற்றொரு உண்மைக்கு நம்மை இட்டுச் செல்கின்றது. (இவ்வுண்மையில் நான்காம் நற்செய்தியாளரும் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றார்). அதாவது, இயேசு 'பேசுவது கடவுளின் வார்த்தைகளாகும்'' (யோவா *3:34*). ''தந்தை அவருக்குக் கற்பித்ததையே'' (*8:28*) இயேசுவும் கூறுகின்றார். எனவேதான், 'அவருடைய வார்த்தைகள் ஆவியும் உயிருமாகின்றன' (*6:63*). இயேசுவிடம் காணப்பட்ட இத்தனிப்பட்ட பண்பை வலியுறுத்த எண்ணி, இந்நற்செய்தியாளர், 'பேசுதல்' என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துகின்றார் (*3:11; 8:25-40; 15:11; 16:4*). ஏனெனில் இயேசு 'தம்மை பற்றிப் பேசாது' (*12:49* தொ; *14:10*). 'தம் தந்தை அவருக்கு முன்பு கூறியவற்றையே' (*12:50*) பேசுகின்றார். இவ்வாறு இறைவாக்கினர் வழியாகப் பழைய ஏற்பாட்டில் அறிவிக்கப்பட்ட வார்த்தை இயேசுவில் முழுமை பெறுகின்றது.

ஆ) மனிதன் வார்த்தையை எதிர் கொள்ளல்:- தேவ வார்த்தை மனிதனை இறைவனோடு நேரடியாகத் தொடர்புக் கொள்ளச் செய்வதால், அதனை எதிர்க்கொள்ளும் போது, மனிதன் அவருக்குச் சார்பாக அல்லது எதிராக வாழ்க்கை நிலையை மாற்றியமைக்க அழைக்கப்படுகிறான். இவ்விரு நிலைகளில் எந்நிலையைத் தேர்ந்தெடுப்பினும் அதன் விளைவுகளைக் குறித்து இயேசு கூறியவற்றை ஒத்தமை நற்செய்திகள் நமக்குத் தெளிவாக அளிக்கின்றன. விதை விதைப்பவன் உவமையில் மனிதர் வெவ்வேறு விதங்களில் வார்த்தையை (இறையரசை) ஏற்றுக் கொள்வதைக் காண்கிறோம். எல்லோரும் 'கேட்கின்றனர்', ஆனால் 'அதைப் புரிந்து கொண்ட' (மத் *13:23*) அல்லது 'ஏற்றுக்கொண்ட' (மாற் *4:20*) அல்லது தங்கள் மனதில் 'பதித்துக்கொண்ட' (லூக் *8:15*) ஒரு சிலரே அதன் பலனைப் பெறுகின்றனர். மலைப்பொழிவில் புதியசட்டத்தை அறிவித்தப்பின் இயேசு 'தம் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடப்பவர்களின்' நிலைமையை வேறுபடுத்திக் காண்பிக்கின்றார் (மத் *7:24-36;* லூக் *6:47-49*). முதல்நிலை பாறையின் மீது எழுப்பிய வீட்டிற்கு ஒப்பா

கும்; மற்றதோ மணலில் கட்டப்பட்ட வீட்டிற்குச் சமமாகும். இவ்வுவமைகள் மனிதன் தான் தேர்ந்தெடுக்கும் நிலையைப் பொறுத்து தீர்ப்புக்குள்ளாவதை விளக்குகின்றன. மனிதன் வார்த்தையை ஏற்றுக் கொள்ளும் விதத்தைப் பொறுத்து தீர்ப்பு பெறுவான். 'என்னைப் பற்றியும் என் வார்த்தைகளைப் பற்றியும் வெட்கப்படுகிறவன் எவனோ, அவனைப் பற்றி மனுமகனும் தன் தந்தையின் மாட்சியில் வரும்போது வெட்கப்படுவார்' (மாற் 8:38).

நான்காம் நற்செய்தி இக்கருத்துக்களை இன்னும் அழுத்தம் திருத்தமாக விவரிக்கின்றது. இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட மக்களிடையே ஏற்படும் பிரிவினையை எடுத்துக்காட்டுகிறது (யோவா 10:19); ஒரு சாரார், அவர் மீது விசுவாசம் கொண்டு (2:22; 4:39. 41.50) அவருடைய வார்த்தையைக் கேட்டு (5:54), கடைப்பிடித்து (8:51 தொ; 14:23 தொ; 15:20) அதில் நிலைத்திருக்கின்றனர் (8:31). வார்த்தையும் அவர்களுள் நிலைத்திருக்கின்றது (5:38; 15:7), இவர்கள் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளனர் (5:24); என்றுமே சாகார் (8:51). இயேசுவின் வார்த்தைகள் மற்றொரு சாரார்க்குக் கடினமாகத் தோன்றுகின்றன (6:60); இவர்கள் அவ்வார்த்தையைக் 'கேட்கமுடிவதில்லை' (8:43). எனவே வார்த்தையை ஏற்காது, கிறிஸ்துவையும் மறுதலிக்கின்றனர். இறுதி நாளில் இவர்கள் இயேசுவின் வார்த்தையைக் கொண்டே தீர்ப்பிடப்படுவர் (12:48). ஏனெனில் இவர்கள் ஏற்க மறுத்தது இயேசுவின் வார்த்தைகளை அல்ல, உண்மையே உருவான (17:17) தந்தையின் வார்தைகளையேயாகும் (12:49; 17:14). எனவே ஒருவன் தன் வாழ்வை இயேசுவைக் குறித்தோ, அவரது வார்த்தையைக் குறித்தோ, இறைவனைக் குறித்தோ அதற்கேற்ப அமைத்துக் கொள்வதில் வேற்றுமைகள் இருக்க முடியாது, அனைத்தும் ஒன்றுதான். வார்த்தையின் வழிவாழ முடிவெடுத்தவன் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றும் கலந்த தெய்வீக வாழ்வில் இடம் பெறுகின்றான். வார்த்தைக்குச் செவிசாய்க்க, வாழ்க்கையை மேற்கொள்பவன் இருள் சூழ்ந்த தீய உலகில் புகுகின்றான்.

2. திருச்சபையில் வார்த்தை ஆற்றும் பணி:-

அ) தேவ வார்த்தையின் சாதனைகள்:- இயேசு ஆரம்பித்த மீட்புப்பணியை, இறை வார்த்தை தொடர்ந்து நடத்திச் செல்லும் காட்சியை, அப்போஸ்தலர் பணியும் அவர்கள் எழுதிய மடல்களும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் ஏதோ தங்கள் குரு ஆற்றிய அறிவுரைகளை வரிசையாகத் தொகுத்து வார்த்தைக்கு வார்த்தை அப்படியே எடுத்துரைத்தவை என்று கூற முடியாது. மாறாகத் தொடக்க காலத்திருச்சபையின் போதகத்தில் அறிவிக்கப்பட்ட நற்செய்தியையே அவர்கள் மாற்றமின்றிப் போதித்தார்கள் (காண் மத் 10:14; 1 கொரி 7:10.12.25). வார்த்தைக்குத் தொண்டாற்றுவதே அப்போது அப்போஸ்தலர்களின் தலையாய பணியாக அமைந்தது (அ.ப. 4:29 தொ; 6:24). உலகனைத்தும் கேட்கும்படி அவர்கள் இவ்வார்த்தையைப் போதிப்பதிலும் (8:4.25; 13:5; 18:9 தொ; 1 தெச 1:8), கள்ளங்கபடற்ற உள்ளத்தோடும் கடுகளவும் திரித்துக் கூறாமலும் எடுத்துரைப்பதிலும் (2 கொரி 2:17; 4:2) எவ்விதப் பயமுமின்றித் துணிவுடன் தேவ வார்த்தையை அறிவிப்பதிலும் (அ.ப. 4:31; பிலி 1:14) அவர்களின் பணி அடங்கியிருந்தது.

இவ்வார்த்தை தன்னிலேயே மீட்பளிக்கும் ஆற்றலுடையது. எனவேதான் வார்த்தை வளரும்போது அது திருச்சபையின் வளர்ச்சியாகக் கருதப்பட்டது (அ.ப. 6:7; 12:24; 19:20). ஒரு அப்போஸ்தலரைக் கட்டுப்படுத்தக்கூடிய விலங்குகளுக்கு அவர் அறிவிக்கும் வார்த்தையைக் கட்டுப்படுத்த சக்தி கிடையாது (2 திமோ 2:9). இறைவனின் வார்த்தை 'மீட்பளிக்க வல்லது' (அ.ப. 13:26); 'வாழ்வு வழங்க வல்லது' (பிலி 2:16); உண்மையானது (1 திமோ 1:15; 2 திமோ 2:11; தீத் 3:8); உயிருள்ளது; ஆற்றல் மிக்கது (எபி 4:12). விசுவாசியின் உள்ளத்

தில் வார்த்தையின் செயல்திறனை எடுத்துரைக்க எத்தனை சொற்கள்! மேலும் விசுவாசிகள் தங்கள் திருமுழுக்கின்போது புதுப் பிறப்பு அடைந்தது வார்த்தையில் அவர்கள் கொண்ட விசுவாசத்தால்தான் (1 பேதுரு 1:23; யாக் 1:18; காண் எபே 5:25). பழைய ஏற்பாட்டில் இறைவனின் படைப்பிலும், பிறகு இஸ்ராயேலின் வரலாற்றிலும் வெளிப்பட்ட வார்த்தையின் அதே ஆற்றல், மீட்புப்பணியிலும் வெளிப்பட்டது. அவ்வாற்றல் இயேசுவின் வார்த்தைக்கு உரியதாக நற்செய்திகள் விளம்பின. அதே ஆற்றல் அப்போஸ்தலர் பணியிலும் வெளிப்பட்டதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் விண்ணேற்பு அடைந்து, இறைவனின் வலப்புறத்தில் அமைந்திருக்கும் இயேசுதானே அப்போஸ்தலர்கள் வழியாகப் பேசி, அவர்கள் போதிக்கும் வார்த்தையையும் அருஞ்செயல்களால் உறுதிப்படுத்துகின்றார் (மாற் 16:20).

ஆ. இறைவார்த்தையின்முன் மனிதன்:- இயேசு நற்செய்தியை அறிவித்தபோது நிகழ்ந்ததுபோல், அப்போஸ்தலர் அவர் வார்த்தையை அறிவிக்கும்போதும் கேட்டவரிடையே பிரிவினை, பிளவு ஏற்படுகின்றது. சிலர் தேவ வார்த்தையைப் புறக்கணித்தார்கள் (அ.ப. 13:46; 1 பேதுரு 2:8; 3:1); வேறு சிலர் அதை ஏற்றுக் கொண்டார்கள் (1 தெச 1:6); இக்கூட்டத்தார் வார்த்தையைப் பெற்று (1 தெச 2:13), அதற்குச் செவிமடுப்பவர்கள் (கொலோ 1:5; எபே 1:13). வாழ்க்கையில் அதைக் கடைபிடிக்கும் வண்ணம், இவர்கள் பணிவோடு ஏற்றுக்கொள்கின்றனர் (யாக் 1:21 தொ); மீட்படைவதற்காக அதன்வழி ஒழுகுகின்றனர் (1 கொரி 15:2; காண் திருவெளி 3:8). இறைவார்த்தை தங்களுள் குடிகொள்ளுமாறு (கொலோ 3:16; 1 யோவா 1:10; 2:14) அதை அவர்கள் மகிமைப்படுத்துகின்றனர் (அ.ப. 13:48). அவசியமானால் வார்த்தையின் பொருட்டு அவர்கள் துன்புறவும், மறைசாட்சிகளாய் உயிர்துறக்கவும் தயங்குவதில்லை (திருவெளி 1:9 தொ; 6:9; 20:4). இறுதியில் அதே வார்த்தையின் உதவி கொண்டு தீயசக்திகளை முறியடிக்கின்றனர் (திருவெளி 12:11). இவ்வாறு தேவ வார்த்தை வரலாற்றில் செயலாற்றி, மனிதனின் உள்ளத்தில் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய வித்துக்களை விதைக்கிறது.

3. இறைவார்த்தை பற்றிய மறையுண்மை:-

அ. மனுவுருவான வார்த்தை:- இறைமகன் இயேசு என்னும் மறையுண்மையோடு வார்த்தையை மிகவும் நெருங்கிய முறையில் ஒப்பிடுவதன் மூலம் யோவான் மிக ஆழ்ந்த உண்மைகளை நமக்கு அளிக்கின்றார். இறைமகன் என்ற முறையில் இயேசுவே தம்மிலே நிலைகொள்ளும் வார்த்தையாவார். அதாவது இயேசுவே இறைவனின் வார்த்தையாவார். படைப்பிலும் வரலாற்றிலும், மீட்பின் இறுதிப்பணியிலும் வெளிப்பட்ட வார்த்தையின் ஆற்றல் அனைத்துக்கும் மூல காரணம் அவரே. 'இறைவாக்கினர் வழியாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள், இப்போது தம் மகனின் வாயிலாக நம்மோடு பேசுகின்றார்' (எபி 1:1 தொ) என்று கூறும் எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலிலிருந்து தெளிவாகின்றது.

வார்த்தை என்ற தகுதியில், இயேசு ஆதியில் கடவுளோடு இருந்தார். கடவுளாயும் இருந்தார் (யோவா 1:1 தொ.). உண்டானவை அனைத்தையும் படைத்த வார்த்தை அவரே (1:3; காண்க எபி 1:2; சங் 33:6 தொ). உலகின் இருளைப்போக்கி மனிதருக்கு இறைவனைக் காட்டிய ஒளிமயமான வார்த்தை அவரே (யோவா 1:4.9). பழைய ஏற்பாட்டில் வார்த்தையின் செயல்திறனிலும் வெளிப்படுத்தும் தன்மையிலும் மறைமுகமாகத் தம்மை அவர் வெளிப்படுத்திக் கொண்டு வந்தார். காலம் நிறைவேறிய போதோ, வார்த்தையானவர் மனுவுருவாகி (1:14), வெளிப்படையாகவே வரலாற்றில் புகுந்தார். பிறகு ' அவரது மாட்சிமையைக் கண்டோம்' (யோவா. 1:14) என்று சொல்லும் வகையில் மனிதன் தொட்டு உணர்வதற்கு உரியவரானார் (1 யோவா 1:1 தொ).

இதன்மூலம் இயேசு தம் இரட்டைப் பணிகளாகிய இறைவனை வெளிப்படுத்துதலையும், மனிதருக்கு மீட்பளிப்பதையும் முழுமைபெறச் செய்துள்ளார். தந்தையின் ஒரே மகன் என்று விளம்பி, மனிதர் தந்தையை அறிந்துக்கொள்ளச் செய்திருக்கிறார் (யோவா 1:18). மனிதரின் மீட்புக்காக உலகிற்கு அருளையும் உண்மையையும் கொண்டு வந்துள்ளார் (1:14.16 தொ). உலகுக்கு வந்த வார்த்தை, அன்றிலிருந்து, மனித வரலாற்றின் இதயமாக மாறிவிட்டது. எப்படியெனில் அவர் வருகைக்குமுன், வரலாறு அவரது மனுப்பிறப்பை எதிர்நோக்கி ஏங்கி நின்றது; அவர் வருகைக்குப்பின் அவருடைய இறுதி வெற்றியை எதிர்நோக்கி நடைபோடுகின்றது. ஏனெனில் அவரே இறுதியுத்தத்தில் தம்மையே முழுமையும் வெளிப்படுத்தியும், தீயசக்திகளை முறியடித்தும் இறையரசு இவ்வுலகில் நிரந்தரமாக வெற்றிவாகை சூடுவதற்கு வழிகோலுவார் (திருவெளி 19:13).

ஆ. மனுவுருவான வார்த்தையை மனிதன் ஏற்கும் விதம்:- தம்மிலே நிலைக்கொண்டிருக்கும் வார்த்தையாகிய கிறிஸ்து மனுவுரு எடுத்த பிறகு, அவரையும் அவரது வார்த்தைகளையும் மனிதன் ஏற்றுக்கொள்ளும் விதத்தைப் பொறுத்தே அவன் இறைவனோடு மேற்கொள்ளும் உறவும் அமையும் என்பது சொல்லாமலே விளங்கும். அவருடைய வருகை உலகை இரண்டாய்ப் பிரித்துவிட்டது. ஒருபுறம், இருள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை (யோவா 1:5); தீய உலகு அவரைத் தெரிந்து கொள்ளவில்லை (1:10); ஏன், அவருடைய சொந்த மக்களே அவரை ஏற்றுக் கொள்ளவில்லை (1:11). இந்நிலைதான் அவருடைய வாழ்வு பாடுகளில் முடிவதற்கு வழிகோலிற்று. அதே சமயத்தில் சிலர் 'அவர் பெயரில் விசுவாசம் கொண்டனர்' (1:12); இவர்கள் ''அவருடைய நிறைவிலிருந்து அருளுக்கு மேல் அருளைப் பெற்றனர்'' (1:16). இயற்கையிலேயே கடவுளின் பேறான அவர் (1:14.18), அவர்களுக்குக் கடவுளின் மக்களாகும் உரிமையளித்தார் (1:12).

இவ்வாறு மனுவுருவான வார்த்தையை மையமாகக்கொண்டு நிரந்தரமான ஒரு நாடகமே நடப்பதைக் காண்கிறோம். இறைவாக்கினர் வழியாக இறைவன் மனிதனோடு பேசி இந்நாடகத்தைத் துவங்கிவைத்தார். இவ்விறைவாக்கினர் மலர்ந்த இறைவாக்குகள் வழியாக வார்த்தையானவர் தம்மையே வெளிப்படுத்தலானார். பிறகு மனிதனோடு நேரடித் தொடர்பு கொள்ளத் துடித்தார்; தந்தையும் இவ்வுலகிற்கு அவரை அனுப்ப மனம் உவந்தார். காலம்நிறைவுற்றபோது, வார்த்தை மனுவுருவானார். அன்று மறைவாகச் செயலாற்றித் தம் வருகைக்கு முன்னேற்பாடுகள் செய்துவந்த அவர், இன்று மனிதர் புலன்களால் உணரும் வண்ணம் அவர்களிடையே குடிகொள்ளலானார். இவ்வாறு கடவுளே பூமிக்கு வந்துவிட்டதால், வார்த்தையின் சவால் மாறினதாக எண்ணலாகாது. ஏனெனில் இன்றும் வார்த்தையில் விசுவாசம் வைத்து, அவரை ஏற்றுக்கொள்பவனே இறைமகனுக்குரிய (1 யோவா 1:12) வாழ்வில் இடம் பெறுகின்றான். வார்த்தையை ஏற்காது புறக்கணிப்பவனோ இருளில் தள்ளப்பட்டு தீர்ப்புக்குள்ளாகின்றான் (காண் 3:17 தொ). உலகில் தோன்றும் ஒவ்வொரு மனிதனும் இவ்வாழ்க்கைப் பிரச்சினையைச் சந்தித்தே ஆகவேண்டும். இயேசு கிறிஸ்து அறிவித்த நற்செய்தியை நேரடியாகக் கேட்க வாய்ப்புப் பெற்றவர் யாவரும் அறியும் வண்ணம் பதிலிருக்க வேண்டும். அவருடைய வார்த்தையை (இன்னும்) முழுமையாக அறிய வாய்ப்புப் பெறாதோர் தங்கள் அறிவுக்கெட்டிய நிலையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் வார்த்தையானவர் பேசுகின்றார்; அவனது பதிலுக்காகவும் காத்து நிற்கின்றார். அவன் தரும் பதிலைப் பொறுத்தே அவனுடைய நித்திய வாழ்வு அடங்கியுள்ளது.

இறை வெளிப்பாடு (REVELATION)

விவிலியத்தின் மறை வரலாற்றுவெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இந்த அடிப்படையே அம்மறையை மற்ற மறைகளிலிருந்து பிரித்துச் சிறப்பிக்கிறது.

சில மறைகள் எந்த வெளிப்பாட்டையும் ஏற்பதில்லை. எடுத்துக்காட்டாக பௌத்த மதம் ஒரு தத்துவ ஞானியின் மனித அறிவுக்கு உட்பட்ட அனுபவத்தைத் தன் தொடக்கமாகக் கொண்டுள்ளது. மற்ற மறைகள் தங்கள் கொள்கைகளை விண்ணக வெளிப்பாடாகக் காட்டுகின்றன. வெளிப்பாட்டையும் புராணக் கதாநாயகர்களோடு இணைத்துக் காட்டுகின்றது. மாறாக விவிலியத்தில் வெளிப்பாடு வரலாற்று உண்மை நிகழ்ச்சியாகவும், அதன் நோக்கம் வெளிப்படையாகவும் உள்ளது. நூல் வடிவிலோ வலிமையான பாரம்பரியம் வழியாகவோ வெளிப்பாட்டின் சொற்கள் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. குரானும் இக்கோணத்தில் விவிலியத்தை ஒத்துள்ளது. ஆயினும் விவிலிய வெளிப்பாட்டை உறுதிப்படுத்துகின்ற அடையாளங்கள் தவிர ஒரே ஒருவரின் போதனையை அடிப்படையாகக் கொண்டு அமையவில்லை. வெளிப்பாடு அதன் மையமும் முழுமையுமான கிறிஸ்துவில் நிறைவு பெறுமுன் 15 அல்லது 20 நூற்றாண்டுகளின் வளர்ச்சியைக் கொண்டுள்ளதைக் காண்கிறோம். கிறிஸ்தவனுக்கு விசுவாசம் என்பது வரலாற்று வாயிலாக மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வெளிப்பாட்டை ஏற்றலாகும்.

பழைய ஏற்பாட்டில்:-

ஏன் இத்தகைய வெளிப்பாடு? மனிதனுடைய சிந்தனைக்கும் சொல்லுக்கும் முழுவதும் அப்பாற்பட்டவர் இறைவன் என்பதே இதற்குக் காரணம் (யோபு 42:3). அவர் மறைவாயிருக்கும் இறைவன் (ஏச 45:15). மனிதன் தன் பாவத்தால் அவரோடு கொண்ட நெருங்கிய உறவை இழந்து விட்டதால், அவர் அவனால் இன்னும் எட்டாத் தொலைவில் அணுக முடியாதவராகிவிட்டார். அவருடைய திட்டம் ஒரு மறைபொருள் (ஆமோ 3:7). தன்முன்னிருக்கும் பாதையைக் காண இடமளிக்காமலே மனிதனின் அடிச் சுவடுகளை வழிநடத்துகிறார் (பழ 20:2). வாழ்க்கைப் புதிர்களுக்கு மனிதன் தன் சுய பலத்தால் விளக்கம் காண இயலாது (சங் 73). அவற்றைக் கண்டுபிடிக்க ''அனைத்தையும் தன்னுள் மறைத்து வைத்திருக்கும்'' (உப 29:28) இறைவனை நோக்கி அவன் திரும்ப வேண்டும். இல்லையெனின் ''அவருடைய மாட்சியைக் (யாத் 33:18) காண இயலாது (தானி 2:17 தொ). இவ்வாறு மனிதன் இறைவனை நோக்கித் திரும்பு முன்னரே இறைவன் மனிதனுடன் உரையாட முன்முயற்சி எடுக்கின்றார்.

1. இறைவன் தன்னை வெளிப்படுத்தும் முறை:-

அ. பழங்கால முறைகள்:- இரகசியங்களைக் கண்டுபிடிக்க, பழைய ஏற்பாட்டு மேற்காசிய மக்கள் குறி சொல்லுதல், சகுனம் பார்த்தல், கனவுகள், சீட்டுப்போடுதல், சோதிடம் போன்றவற்றைப் பயன்படுத்தினர். பழைய ஏற்பாட்டு மக்கள், நெடுங்காலத்திற்கு இம்முறைகளில் சிலவற்றைக் கையாண்டனர். இம்முறைகளில் காணப்பட்ட பலதேவர்கள் கோட்பாடு அல்லது மாய வித்தைகளை அகற்ற முற்பட்டாலும் (லேவி 19:26; உப 18:10 தொ; 1 சாமு 15:23; 28:3;) அவற்றிற்கு சில சமயங்களில் முக்கியத்துவம் அளித்து வந்தனர். தன் மக்களின் இத்தகைய குறைமிகு முறைகளை மாற்றியமைக்கும் வண்ணம் இறைவன் தம் வெளிப்பாட்டைப் பாரம்பரிய முறைகள் வாயிலாக அளித்தார். குருக்கள் ஊரீம் தூமீம் வழியாக அவரிடம் ஆலோசனைகேட்டு (எண் 27:2; உப 33:8; 1 சாமு 14:41; 23:10 தொ) அதன்படி மக்களுக்குப் போதித்தனர் (யாத் 18:15 தொ; 33:7-11; நீதி 18:5 தொ). யோசேப்பு சகுனம் பார்க்கும் கோப்பை ஒன்றை வைத்திருந்தார் (ஆதி 44:2-5). கனவுகள் விண்ணகச் செய்திகளைத் தாங்கி வருபவைகளாகக் கருதப்பட்டன (ஆதி 20:3; 28:12-15; 31:11 தொ; 37:5-10). இக்கருத்து பிந்திய காலங்களிலும் நிலவி வந்தது (நீதி 7:13 தொ; 1 சாமு 28:6; 1 அர 3:5-14). ஆயினும் இறைவனால் இறைவாக்கினருக்கு அனுப்பப்பட்ட கனவுகளினின்று (எண் 12:6; உப 18:20) சகுனம் பார்ப்பதையேத் தொழிலாகக் கொண்டவர்களின் கனவையும் (லேவி 19:26; உப 18:20) பிரித்துணர்வதில் காலப்போக்கில் முன்னேற்றம் காணப்பட்டது. சகுனம் பார்ப்பவர்களுக்கு எதிராக இறைவாக்கினர்களும் (ஏச 28:7-13;

எரே 23:25-32), ஞான நூல் ஆசிரியர்களும் (திருவுரை 5:2; சீரா 34:1-6) போராடி வந்தனர்.

ஆ. இறைவாக்கு வெளிப்பாடு:- மேற்கூறப்பட்ட முறைகளை இறைவாக்கினர் எப்போதும் கடந்து நின்றனர். இறைவெளிப்பாட்டு அனுபவங்கள் இரண்டு முறைகளில் அவர்களுக்க வழங்கப்பட்டன. காட்சிகள் வாயிலாகவும், இறைவார்த்தையைக் கேட்பதன் வழியாகவும் (எண் 23:3 தொ. 15தொ) அளிக்கப்பட்டன. காட்சிகள் தம்மிலே புதிராக உள்ளன. இறைவாக்கினர்கூட இறையுண்மைகளைப் பற்றியோ அல்லது எதிர்கால நிகழ்ச்சிகளைப் பற்றியோ தெளிவாக அறிய இயலவில்லை. காட்சியில் காணப்படுபவை அடையாளங்களாகவே மறைத்து வைக்கப்படுகின்றன. இந்த அடையாளங்களில் சில கீழைநாட்டு மறைகளில் ஏற்கெனவே வழக்கிலிருந்தவை (1 அர 22:16; எச 6:1 தொ; எச 1). வேறு சில புதிதாக உருவாக்கப் பெற்றவை (ஆமோ 7:1-9; எரே 1:11 தொ; எச 9). ஒவ்வொரு காட்சியிலும் உள்ள அடையாளங்களுக்கு இறைவார்த்தையே பொருள் கொடுக்க வேண்டும் (எரே 1:14 தொ; தானி 7:15-18; 8:15...). காட்சிகளின்றியே பலமுறை இறைவார்த்தை அளிக்கப்பட்டது. இறைவார்த்தையைப் பெற்றுக் கொண்ட வழிபற்றிக்கூட குறிப்பிட்டுக்கூற இயலாத நிலையில் அவற்றைப் பெற்றனர் இறைவாக்கினர் (ஆதி 12:1 தொ; எரே 1:4 தொ). பழைய ஏற்பாட்டு இறைவெளிப்பாட்டோடு இணைந்த அடிப்படை அனுபவங்கள் இத்தகையதே.

இ. ஞானத்தின் சிந்தனைகள்:- இறைவாக்கினர்களைப் போலன்றி தத்துவ ஞானிகள் நேரடி வெளிப்பாட்டின் முடிவாகத் தங்கள் கொள்கைகளை வெளியிடவில்லை. ஞானம் மனித சிந்தனைக்கும் அறிவுக்கும் ஏற்றது (பழ 2:1-5; 8:12.14). ஆயினும் அது இறைவனின் கொடையே (பழ 2:6). ஏனெனில் அறிவனைத்தின் ஊற்று ஞானமேயாகும் (8:15-21; 32:36; 9:1-6). இன்னும் குறிப்பிட்டுக் கூற வேண்டுமாயின் இறையூக்கம் பெற்ற சிந்தனைக்குப் பொருளாய் அமைந்தவை அனைத்தும் முழுமையாக இறைவெளிப்பாட்டிலிருந்தே எடுக்கப்பட்டவை. அவையாவன: படைத்தவரைத் தனக்குரிய முறையில் வெளிப்படுத்தும் படைப்பு (சங் 18:1; சீரா 43), அவர் திட்டங்களை அறிவிக்கின்ற வரலாறு (சீரா 44:50); இறைச்சட்டத்தையும், இறைவாக்கினரின் கூற்றுகளையும் கொண்ட திருநூல் (39:1 தொ) போன்றவை. இத்தகைய ஞானம் மனித கண்டுபிடிப்பன்று, மாறாக இறைவாக்கு வெளிப்பாட்டை நிறைவு செய்கின்ற மற்றொரு முறையாகும். வெளிப்பாட்டிற்குத் துணை நிற்கும் இறை ஞானத்தைப் பொறுத்தமட்டில் அதன் வழிகாட்டியான ஆவியானவர் எப்படி யாவும் கடந்த உண்மையோ அவ்வாறே இறைத் தன்மையின் பிரதிபலிப்பின் ஞானம் என்பதும் யாவும் கடந்த உண்மையாகும் (ஞான 7:15-21). இவ்வாறு மனிதருக்கு அது அளிக்கின்ற ஒளி இயற்கை கடந்த இறை அறிவாகும் (7:25 தொ; 8:4-8).

ஈ. வெளிப்பாட்டு இலக்கிய வெளிப்பாடு:- பழைய ஏற்பாட்டின் இறுதியில் இறைவாக்கு நூல்களும் ஞானம் பற்றிய நூல்களும் வெளிப்பாட்டு இலக்கியத்தில் கலந்து காணப்படுகின்றன. இறைவனைப் பற்றிய மறைபொருளை வெளிப்படுத்துதல் என்பதே வெளிப்பாட்டு இலக்கியத்தின் இலக்கணமாகும். இத்தகைய விளக்கம் இறை ஆவியைவிட (தானி 4:5 தொ; 15:5.11.14) ஞானத்தோடு அதிகத் தொடர்பு கொண்டுள்ளது (தானி 2:23; 5:11.14). கனவுகளையும் காட்சிகளையும் இதற்கு மூலமாகக் கொள்ளலாம். திருநூலை ஆழ்ந்து தியானிப்பதன் வழியும் வெளிப்பாடு தூண்டப்படலாம் (9:1 தொ) எவ்வாறாயினும் கனவுகள், காட்சிகள், திருநூல் யாவற்றிற்கும் பொருள் காணச் செய்வது இயற்கை கடந்த இறை ஒளியளிக்கும் இறைவார்த்தையாகும்.

2. இறைவன் வெளிப்படுத்துபவை:- இறைவெளிப்பாட்டின் நோக்கம் மறையைச் சார்ந்தவையாகவே எப்போதும் உள்ளது. பெரும்பான்மையான பழங்கால மறை

களில் உள்ள திருநூல்களில் மிதமிஞ்சி காணக்கிடக்கின்ற அண்டக் குறிப்புகளோ இயல்கடந்த ஆராய்ச்சிச் சிந்தனைகளோ இறைவெளிப்பாட்டில் இல்லை. மனித மீட்புக்கு வழிகோலும் தம் திட்டங்களை இறைவன் வெளிப்படுத்துகின்றார். மனிதன் இறைவனைச் சந்திக்க வேண்டுமென்பதற்காக இறைவன் தம்மையே வெளிப்படுத்துகின்றார்.

அ. இறைவன் தன் திட்டங்களை வெளிப்படுத்துகின்றார்:- பாவம் செய்த குலத்தின் உறுப்பினனாகத் தோன்றியதால் இறைவன் தன்னிடம் என்ன எதிர்பார்க்கின்றார் என்பதைக் குறிப்பிட்டு அறிய இயலாதிருக்கின்றான் மனிதன். எனவே அவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான சட்டங்களைக் கொடுக்கின்றார் இறைவன். அவருடைய வார்த்தை அறிவுரையாகவும், சட்டமாகவும் மாறுகின்றது (யாத் 20:1 தொ). இவ்வாறு மனிதன் தான் அனுசரிக்க வேண்டிய (உப. 29:28) ''வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளை'' கொண்டிருக்கிறான். திருச்சட்டத்தின் மதிப்பீடு இறைவனிடமிருந்து பிறந்தது. எனவே மற்றெல்லா நியமங்களை விட உயர்ந்ததாகவும், இறை வழி நிற்போருக்கு இனிமையானதாகவும் மாறுகின்றது (சங் 119:24.97 தொ). சமூக நிறுவனங்கள் (எண் 11:16 தொ), அரசியல் நிறுவனங்கள் (1 சாமு 9:17), பண்பாட்டு அம்சங்கள் (யாத் 25:40) போன்ற இறைமக்களின் நிறுவனங்கள் அனைத்தும் வெளிப்பாட்டின் பொருளாகின்றன. பழைய ஏற்பாட்டு இறைமக்களைப் போலவே இந்நிறுவனங்களும் தற்காலிகமானதாக இருந்தாலும் புதிய ஏற்பாட்டில் நிறைவுபெற்ற மீட்புக்கு முன்னடையாளங்களாக இருந்தன. முன்னுரைக்கப்பட்ட அறிகுறிகளாகவும் உள்ளன.

இறைப் பராமரிப்பில் இறைமக்கள் அனுபவித்த நிகழ்ச்சிகளின் பொருளைத் தம்மக்களுக்கு வெளிப்படுத்துகின்றார் இறைவன். மீட்புத் திட்டத்தில் காணக்கூடிய தொடர் அம்சங்களைக் கொண்டதாக இந்நிகழ்ச்சிகள் உள்ளன. மீட்புத்திட்டத்தின் இறுதி நிறைவுக்கு முன் தயாரிப்பாகவும், முன்வடிவமாகவும் ஆகின்றன. இத்தகைய இருவித பணியினால் இந்நிகழ்ச்சிகள் கண்ணுக்குப் புலப்படாத மறைத்தன்மையுடைய ஒரு தோற்றத்தை அளிக்கின்றன. ''இறைவன் தன் திட்டத்தைத் தம் ஊழியர்களான இறைவாக்கினருக்கு வெளிப்படுத்துகின்றாரேயன்றி வேறல்ல'' (ஆமோ 3:7). வரலாற்றாசிரியர்கள், இறைவாக்கினர்கள், சங்கிதாசிரியர்கள், தத்துவ ஞானிகள் ஆகியோர் இறைவார்த்தைக்கும் வரலாற்று உண்மைக்குமிடையே ஏற்பட்ட இணைப்பிலிருந்து தோன்றி, இறைப்பராமரிப்பினால் உருவான வரலாற்றுக்குச் சமயப் பொருள் கொள்வதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்கின்றனர். நிகழ்ச்சிகள் இறைவார்த்தையை நம்பச் செய்து, மக்களை விசுவாசத்திற்கு இட்டுச் செல்கின்றன. ஏனெனில் நிகழ்ச்சிகளும் அடையாளங்களை ஒத்தவையே (யாத் 14:30 தொ) இறை வெளிப்பாட்டு நிகழ்ச்சிகளை அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளாகவோ அல்லது தற்செயலாக நடந்தவைகளாகவோ கருதாது (எரே 27:4-11; ஏச 15:1-6) இறைத்திட்டத்தில் இடம் பெற்றவைகளாகக் கொள்ளும் வண்ணம் இறைவார்த்தை ஒளியூட்டுகின்றது.

கடைசியாக ''இறுதி நாட்களைப்பற்றிய'' மறைபொருளைப் படிப்படியாக இறைவன் வெளிப்படுத்துகின்றார். அவருடைய வார்த்தை ஒரு வாக்குறுதியாகின்றது. வாக்குறுதி என்ற முறையில் நிகழ்காலத்தையும் உடனடியான எதிர்காலத்தையும் கடந்து மீட்புத் திட்டத்தின் முடிவை முன்னறிவிக்கின்றது. தாவீது மரபின் எதிர்காலத்தை வெளிப்படுத்துகின்றது (2 சாமு 7:4-16); எருசலேம் மற்றும் ஆலயத்தின் இறுதி மாட்சி (ஏச 2:1-4:60; எச 40-48) துன்புறும் ஊழியனின் பணி (ஏச 52:13-53:12) போன்றவை பற்றியும் அறிவிக்கின்றது. இந்த இறைவாக்கு வெளிப்பாடு இன்றும் உருவகமாக மறைந்து காணப்பட்டாலும் புதிய ஏற்பாட்டின் அறிவை முன்னறிவிக்கிறது.

ஆ. இறைவன் தம்மையே வெளிப்படுத்துகிறார்:- இவ்வுலகில் நடைபெறச் செய்கின்ற

நிகழ்ச்சிகள் வாயிலாகவும் இறைவன் தம்மையே வெளிப்படுத்துகின்றார். அவருடைய படைப்பு அவரை அவருடைய ஞானத்திலும் மேலாண்மையான வல்லமையிலும் வெளிப்படுத்துகின்றது (யோபு 25:7-14; பழ 8:23-31; சீரா 42:15-43:33). படைப்பு அவரை உருவகமாக வெளிப்படுத்தும் அடையாளங்களின் தொகுப்புப் போன்றது. எடுத்துக்காட்டாக, மேகத்தில் மறைந்தும் (யாத் 13:21), நெருப்புப்போல எரிந்தும் (யாத் 3:2; ஆதி 15:17), பேரிடியாக முழங்கியும் (யாத் 19:16), தென்றல் வாயிலாகவும் (1 அர 19:12 தொ) இறைவன் தம்மை வெளிப்படுத்தியிருக்கின்றார். இந்த அடையாளங்களைப் புறவினத்தவர் ஏற்றுக்கொண்டாலும் அவற்றிற்கு மாறான வேறுபொருள் கொண்டனர் (ஞான 13:1 தொ). படைப்பு வழி வந்த வெளிப்பாடு படைத்தவரின் ஆற்றலையும், அழகையும் ஒப்புமையால் இறைமக்கள் கண்டுணரச் செய்கின்றது (13:3 தொ).

இஸ்ராயேலின் வரலாற்றில் எல்லாவிடத்தும் இறைவன் தம்மை தனிச்சிறப்பு வாய்ந்த முறையில் வெளிப்படுத்துகின்றார். அவருடைய செயல்கள் அவர் யார்? எத்தன்மையர்? என்பதை எடுத்துக் காட்டுகின்றன. தீர்ப்பளிக்கும், அச்சத்திற்குரிய இறைவன், போரிடுகின்ற இறைவன், வெற்றி கொள்ளும் வல்லமையுள்ளவர், ஆறுதல் அளிக்கும் இரக்கத்தின் இறைவன் (ஏச 40:1), மீட்பளிக்கும் இறைவன் என எடுத்துரைக்கின்றன. விவிலியத்தில் இறைவனுக்கு இலக்கணம் கூறுவது (யாத் 34:6 தொ.) தத்துவ சிந்தனையின் பயனாலன்று. மாறாக வாழ்க்கை அனுபவத்தின் பயனாகவே, பல நூற்றாண்டு அனுபவத்தின் வாயிலாக அடைந்த இந்த அடிப்படை உண்மை இறைவன் மீது விசுவாசம், நம்பிக்கை, அச்சம், அன்பு ஆகிய உணர்வை ஏற்படுத்துகின்றது. இந்த உணர்வு மறைசார்பு கொண்டவர்களிடம் இயல்பாகவே காணக்கிடக்கின்ற உணர்வை குறை நீக்கி நிறைவு செய்கின்றது. இறைவன் படைத்தவர், தலைவர், அரசர், ஆண்டவர். ஆனால் இஸ்ராயேலரிடம் தந்தையாகவும், கணவராகவும் தன்னைக் காட்டுகின்றார். எனவே இறைவன்மீது கொள்ள வேண்டிய அச்சம் பக்தியோடு இணைந்து அன்புறவுக்கு இட்டுச் செல்ல வேண்டும் (ஒசே 6:6).

பழைய ஏற்பாட்டு இறைவன் தம்மைத் தம் ஆள் உறவில் வெளிப்படுத்தினாரா என்ற வினா தேவையாகின்றது. இங்கு எடுத்து இயம்ப இயலாத அனுபவ உலகில் நுழைகின்றோம். யாவேயின் தூதர்கள் வெளிப்படுத்திய ஒரு சில காட்சிகள் பழைய ஏற்பாட்டு நூல்களில் சித்தரிக்கப்படுகின்றன. இவைகளின் வழியாக மறைந்திருக்கும் இறைவன் காணக்கூடிய உரு எடுக்கின்றார் (ஆதி 16:6; 21:17; 31:11; நீதி 2:1). ஆபிரகாம், மோசே, எலியா, மிக்கேயா, ஏசாயா, எசக்கியேல், செக்கரியா போன்றோரின் காட்சிகள் இந்நூற்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆயினும் இறைமாட்சி அடையாளங்களால் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றது. இறைமாட்சியைக் (1 அர 22:18; ஏச 6:1 தொ) குறிக்கும் சின்னங்களான நெருப்பு, காற்று போன்ற அண்ட அடையாளங்களும், பாபிலோனிய கலைவழி வந்த அடையாளங்கள் (எச 1) சிலவும் இதற்குச் சான்றுகள். இருப்பினும், யாவே தம்மைப்பற்றிய விளக்கத்தை ஒருபோதும் அளித்ததில்லை (எச 1:27 தொ). ''முகமுகமாய்'' (எச 33:11; எண் 12:8) நின்று இறைவனோடு பேசிய மோசேகூட அவரைக் கண்டதில்லை (யாத் 33:20; 30:11; எண் 12:8). அவரை உற்றுநோக்காதிருக்கும் வண்ணம் தம் கண்களை மூடிக்கொண்டனர் மக்கள் (யாத் 3:6; 1 அர 9:9 தொ) மோசேக்குப் பெயரை அறிவித்தலாகிய உயர்ந்த வெளிப்பாட்டை அளிக்கின்றார் (யாத் 3:14). ஆயினும் அவருடைய தன்மை இன்றும் மறைபொருளாகவே உள்ளது. ஏனெனில் மோசேக்கு ''இருக்கிறவர் நாமே'' என்றே பதிலளிக்கின்றார். இப்பதிலுரை ஒரு மறைபொருளின் அறிக்கை என்பது தெளிவு. இஸ்ராயேல் மக்களைச் சுற்றியிருந்த புறவினத்தவர் தம் கடவுள் மீது ஆதிக்கம் செலுத்தியது போல இஸ்ராயேல் மக்கள் தம் இறைவன் மீது செலுத்தும் முறையில் அவருடைய பெயரை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

தம்மைப் பற்றிய மறைபொருளை ஓரளவு மனிதனுக்கு அறிவித்தாலும் இறைவன் முழுவதும் கடந்து நிற்கின்றார். அவருடைய ஆளுமையில் இணையாவிடினும் அவருடைய வார்த்தையாலும், அவருடைய ஞானத்தின் செயலாலும் ஒளிபெற்றுள்ளனர். அவருடைய ஆவியால் புனிதப்படுத்தப் பட்டுள்ளனர். ''இறுதி நாட்களில்'' இன்னும் அதிகம் அவர்களுக்குச் செய்வார். அப்போது ''அவருடைய மாட்சிமை'' வெளிப்படுத்தப்பட்டு அனைத்து மாந்தரும் அதைக் காண்பர் (ஏச 40:5; 52:8; 60:1). இதுவே உன்னத வெளிப்பாடாகும். அதுபற்றிய குறிப்புகளும் விளக்கங்களும் முன்னறிவிக்கப்படவில்லை. இறுதி மாட்சியை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியே அது எப்படி நிகழும் என்று வெளிப்படுத்தும்.

II புதிய ஏற்பாடு:- பழைய ஏற்பாட்டில் தொடங்கிய வெளிப்பாடு புதிய ஏற்பாட்டில் நிறைவு பெறுகிறது. ஆனால் பழைய ஏற்பாட்டில் பல நடுவர்கள் வழியாக ஒருவரிடமிருந்து மற்றவருக்க அளிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில், ஒரே சமயத்தில் வெளிப்பாட்டின் ஊற்றும் பொருளுமாகிய இயேசு கிறிஸ்துவையே மையமாகக் கொண்டுள்ளது. கிறிஸ்துவிலுள்ள வெளிப்பாடு மூன்று படிகளைக் கொண்டது. முதலாவது; இயேசுவே தம் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்பாட்டை அளிக்கின்றார். இரண்டாவது நிலையில் அப்போஸ்தலர்கள் மற்ற மக்களுக்கு அறிவிக்கின்றனர். தூய ஆவியின் துணையால் திருமறையும் மக்களுக்கு எடுத்துரைக்கின்றது. மூன்றாவது நிலையில் இறையுண்மைகளை நேரடிக் காட்சி மனிதர்களுக்கு விசுவாச அறிவின் இடத்தை நிரப்பும்போது, வெளிப்பாட்டின் இறுதிக் கட்டம் நிறைவேறும். இம்மூன்று நிலைகளையும் வேறுபடுத்திக்கூறும் பொருட்டு புதிய ஏற்பாட்டில் வேறுபட்ட சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெளிப்படுத்துதல், காட்சியளித்தல், அறிவித்தல், விளக்குதல், காட்டுதல், வெளிப்படையாகப் பேசுதல், அப்போஸ்தலர் எடுத்துரைத்தல், போதித்தல் போன்றவையாகும் அச்சொற்கள். இக்கருத்துக்கள் அனைத்தும் புதிய ஏற்பாட்டு பல்வேறு நூற்களில் காணக்கிடக்கின்றன.

1. ஒத்தமைப்பு நற்செய்திகளும் அப்போஸ்தலர் பணியும்:-

அ. இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு:-

1. நிகழ்ச்சிகள் வழி வெளிப்பாடு:- பழைய ஏற்பாட்டில் இறைவனின் மீட்புத் திட்டம் பற்றிய அறிவு மறைத்தே வைக்கப் பட்டிருந்தது. அதன் இறுதி நிறைவு வாக்களிக்கப்பட்டிருந்தாலும் அடையாளங்கள் வழியே அளிக்கப்பட்டது. இத்திரையைக் கிழித்து, ஐயம் அனைத்தையும் களைந்தெறிவது கிறிஸ்து என்னும் நிகழ்ச்சியாகும். இயேசுவின் மரணத்தினாலும் உயிர்ப்பினாலும் உச்சநிலை அடைந்த அவருடைய வரலாற்று முடிவு வரலாற்றில் நிறைவேறும் வாக்குறுதியின் உண்மையான உட்பொருளை எடுத்துரைக்கின்றது.

2. வார்த்தை வழி வெளிப்பாடு:- இயேசு தம் செயல்களுடையவும் வாழ்வினுடையவும் மறைபொருளை வார்த்தைவழி மக்களுக்கு எடுத்துரைக்காவிடில், நிகழ்ச்சிவழி வந்த வெளிப்பாடு புரியாத ஒரு புதிராகவே இருந்திருக்கும். விண்ணரசுபற்றிய உவமைகளில் ''உலகம் தோன்றியது முதல் மறைந்துள்ளதை'' வெளியாக்குகின்றார் (மத் 13: 35). அவர் தம் போதகங்களை அடையாளங்களிலேயே மக்கள் கூட்டத்திற்கு மறைந்திருந்தாலும் விண்ணரசைப்பற்றித் தம் சீடர்களுக்குத் தெளிவாக விவரிக்கின்றார் (மாற் 4:11; மத் 13:10; லூக் 8:9). மீட்புத் திட்டத்தின் இறுதிநிலையே விண்ணரசாகும். மனுமகன் பாடுபடவும், கொலையுண்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழவும் வேண்டும் (மத் 16:21; மாற் 8:31-33; லூக் 9:22) என்பதை எடுத்துரைக்கும்போது மறைநூலில் கூறியிருப்பவைகளின் உட்பொருளை வெளிப்படுத்துகின்றார். அவர் வழியாக வெளிப்பாடு தன் முழுமை நோக்கிச் செல்கின்றது. ''வெளிப்படாதபடி ஒளிந்திருப்பது ஒன்றுமில்லை. வெளியாகாதபடி மறைந்திருப்பதும் ஒன்றுமில்லை'' (மாற் 4:22; லூக் 8:17).

3. இயேசுவழி வெளிப்பாடு:- இயேசுவின் போதனைகளிலும் போதனை வழியாகவும், அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் வாயிலாகவும் அவரில் நிறைவு பெற்ற வெளிப்பாட்டை மக்கள் காண இயலும். இயேசு தாம் எடுத்துரைத்த விண்ணரசையும் மீட்பையும் தம்மிலே கொண்டிருந்தது மட்டுமல்ல, அவரே இறைவனின் உயிருள்ள வெளிப்பாடும் ஆவார். உயிருள்ள இறைவனின் மகனாக இருப்பதால் (மத் 66:16) அவர் மட்டுமே தந்தையை அறிவார். அவருக்கே தந்தையை வெளிப்படுத்தும் ஆற்றலுமுண்டு (மத் 11:27; யோவா 1:18; 3:35; 17:29; 10:14-15). இது ஒருபுறமிருக்க, ஊனும் இரத்தமும் அறிந்துகொள்ள இயலாத அளவு அவருடைய ஆளுமையின் மறைபொருள் உள்ளது. அதைத் தந்தை வெளிப்படுத்தினாலன்றி தெரிந்துகொள்ள முடியாது (மத் 16: 17). இவ்வெளிப்பாடு ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் மறைக்கப்பட்டு சிறுவருக்க மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது (மத் 11:25; லூக் 10:21-22). பழைய ஏற்பாட்டில் காண இயலாத தந்தைக்கும் மகனுக்கும் இடையேயுள்ள இத்தகைய நெருங்கிய உறவே இயேசு அறிவித்த வெளிப்பாட்டில் உச்சநிலை அடைகிறது. இயேசு தாம் துன்புற வந்த மனுமகன் என வெளிப்படுத்துகின்றார் (மாற் 8:31 தொ). உயிர்த்தபின்னர்கூட இயேசு தம் மாட்சியின் முழுமையில் தம்மை உலகிற்குக் காட்டவில்லை.

ஆ. வாய்மொழி வந்த வெளிப்பாடு:-

1) திருச்சபையில் வெளிப்பாடு:- இயேசுவின் செயல்களையும் சொற்களையும் ஒருசிலரே அறிந்திருந்தனர். அறிந்தவர்களிலும் வெகுசிலரே அவரில் நம்பிக்கை கொண்டு அவருடைய சீடராயினர். ஆனால் அவர் அறிவித்த வெளிப்பாடு உலக முழுமைக்கும் உரியது. எனவேதான் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு அறிவித்ததோடு பிறமக்களுக்கும் அவர்கள் அறிவிக்க வேண்டுமெனப் பணிக்கின்றார் (மத் 19:26 தொ). அவர்கள் உலகெங்கும்போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவிப்பர் (மத் 28:19 தொ; மாற் 16:15). அவர் உயிர்த்தபின் அவர்களைத் தம்சாட்சிகளாக்குகின்றார் (அ.ப. 1:8). அவரைக் கண்டோம், அவருடைய வார்த்தைகளைக் கேட்டோம் என்ற அளவில் மட்டும் அவர்கள் அவருக்குச் சான்று பகரவில்லை. அவருடைய சொற்களையும், செயல்களையும் எடுத்துரைக்கும் ஆற்றலும் பெற்றிருந்தனர். உங்களுக்கு செவிசாய்ப்பவன் எனக்கு செவி சாய்கிறான் (லூக் 10:16) என்று கூறி அவர்களுடைய சான்றை உறுதிப்படுத்துகின்றார். உலக வரலாற்றில் எவ்வாறு இயேசுவின் வெளிப்பாடு நுழைந்தது என்பதை அப்போஸ்தலர் பணி நன்கு விளக்குகின்றது. இறைவார்த்தை எருசலேமிலிருந்து உலகின் கடையெல்லை வரை பரவுகின்றது. திருமறையின் பணி, அப்போஸ்தலர் பணியின் தொடர்ச்சி, பரிசுத்த ஆவியின் வருகை முதல் உலகின் இறுதி நாள் வரைத் தொடரும் பணி இது.

2) தூய ஆவியின் வெளிப்பாடும் செயலும்:- திருச்சபையில் அறிவிக்கப்பட்ட வெளிப்பாடு, தூய ஆவியின் செயல் இவற்றின் தொடர்பு பற்றி அப்போஸ்தலர் பணி எடுத்துரைக்கின்றது. ஐம்பதாம்நாள் முதல் திருச்சபைக்குத் தூய ஆவி அளிக்கப்படுகின்றார். அப்போஸ்தலர்களின் சான்றுபற்றி அறுதியிட்டுக்கூறத் துணைபுரிந்தவர் அவரே (அ.ப. 18:2; 2:1-21). அவருடைய ஒளியால் திருநூலின் முழுப் பொருளையும் கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்வின் பொருளையும் கண்டுணர்வர் அப்போஸ்தலர். இவ்விரு (திருநூல், கிறிஸ்துவின் வாழ்வு) கோணங்களின்று அவர்கள் அவருக்குச் சான்று பகர்வர் (அ.ப. 2:22-41). இவ்வாறு மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்ட வெளிப்பாட்டை ஆவிக்குப் பணிவோர் விசுவாசத்துடன் பெறுவர். திருமுழுக்குவழி மீட்புப் பாதையில் நுழைவர் (2:41-47).

இ. வெளிப்பாட்டின் முழுமையை நோக்கி:- இயேசுவினால் ஆரம்பிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களாலும் திருச்சபையாலும் போதிக்கப்பட்ட வெளிப்பாடு இன்னும் அடையாளங்களால் மறைத்து வைக்கப்பட்டிருப்பதால் நிறைவடையவில்லை. ஆனால்

இக்குறைபட்ட வெளிப்பாடு வரலாற்றின் இறுதியில் வரவிருக்கின்ற முழுமையான வெளிப்பாட்டை முன்னறிவிக்கின்றது. மனு மகன் தன் மாட்சிமையோடு தம்மை வெளிப்படுத்துவார் (லூக் 17:30; மாற் 13:2-6; மத் 24:30). ''இப்போதைய உலகிலிருந்து'' ''வரவிருக்கின்ற உலகிற்குள்'' மக்கள் கடந்து செல்லுவர்.

2. அப்போஸ்தல மடல்கள்:-

அ. இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடு:-

1) மீட்பின் வெளிப்பாடு:- அப்போஸ்தலர்களின் மடல்களில் இயேசுவின் சொற்களைப் பற்றிய குறிப்புகள் அதிகம் காணப்படாவிடினும் அவருடைய மரணமும் உயிர்ப்பும் அவற்றின் மையமாக அமைந்துள்ளன. இந்நிகழ்ச்சிகள் வழியாக இஸ்ராயேலருக்கு வாக்களிக்கப்பட்ட மீட்பு வெளிப்படுத்தப்படுகின்றது. உலகம் தோன்றுமுன்னே முன்னறிவிக்கப்பெற்ற மாசுமறுவற்ற செம்மறியாம் கிறிஸ்து இந்த இறுதிக்காலத்தில் நமக்காக வெளிப்படுத்தப்பட்டார் (1 பேதுரு 1:20). தம்மைத்தாமே பலியிட்டு, பாவங்களைப் போக்க ஒரே முறை உலகில் தோன்றினார் (எபி 9:26). நம் மீட்பராம் இயேசுகிறிஸ்து உலகிற்குப் பிரசன்னமானதால் இறையருள் வெளிப்படையாயிற்று (2 திமோ 1:10). திருச்சட்டமும் இறைவாக்கினரும் முன்னறிவித்த திருவருட்செயல்முறை அவரில் வெளியாக்கப்பட்டுள்ளது (உரோ 3:21; 1:17). தலைமுறை தலைமுறையாக மறைவாயிருந்த இறைத்திட்டம் அவரில் வெளிப்பட்டது (உரோ 16:26; கொலோ 1:26; 1 திமோ 3:16). தலைமை ஏற்போருக்கும் அதிகாரம் தாங்குவோருக்கும் வெளிப்படுத்தியுள்ளது போலவே (எபே 3:10), இறைவன் தம் திருவுளத்தின் மறைவான திட்டத்தை நமக்கு அறிவித்தார் (எபே 1:9). இதுவே மீட்புத் திட்டத்தின் இறுதியான மறைபொருளாகும்.

2) இறைமறையுண்மையின் வெளிப்பாடு:- கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டது மீட்பு வரலாறு மட்டுமன்று, இறைவனே அவரில் வெளிப்படுத்தப்பட்டார். படைப்பு அவருடைய கட்புலனாகா நிறைவின் முதல் வெளிப்பாடு. ஆயினும் பாவிகளான மக்களினம் அதை விரைவில் மறந்துவிட்டது (உரோ 1:19 தொ). எனவே பழைய ஏற்பாடு அவருடைய மாட்சி பற்றிய வெளிப்பாட்டை ஓரளவே கொணர்ந்தது. இறுதியாக ''கிறிஸ்துவின் முகத்தில் இறைமாட்சிமையின் அறிவொளி மிளிரும்படி செய்கின்றார் இறைவன் (2 கொரி 4:6). இவ்வாறு ஏச 40:5-இல் கூறியுள்ள இறைவாக்கு நிறைவுறச் செய்கின்றார். அவருடைய செயலிலும், அவருடைய ஆள் தன்மையிலும் விளங்கிய, கிறிஸ்து என்பவரின் ஆழ்ந்த பொருள் இதுவே.

ஆ. அறிவிக்கப்பட்ட வெளிப்பாடு:- வெளிப்படுத்தப்பட்டவை அனைத்தையும் அப்போஸ்தலர்கள் தங்கள் சுய ஆற்றலால் புரிந்துக்கொள்ள இயலவில்லை. ஆனால் அவற்றைப் புரிந்துகொள்ள உள்ளொளியூட்டும் அறிவுத்திறன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது (மத் 16:17). மகனைப் பவுலுக்கு வெளிப்படுத்த தந்தை திருவுளங்கொண்ட போது இயேசு கிறிஸ்து அருளிய திருவெளிப்பாட்டின் வாயிலாக நற்செய்தியைப் பெறுகின்றார் பவுல் (கலா 1:12.16). எல்லாவற்றையும் ஊடுருவிக் காண்கின்ற, ஏன் இறைவனின் உள்ளத்தின் ஆழத்தையுங்கூடக் காண்கின்ற ஆவியானவர் உண்மை ஞானமாகிய சிலுவையின் மறைபொருளை அவருக்கு உணர்த்தினார் (1 கொரி 2:10). தேவ ஆவியின்வழியாகக் கிறிஸ்துவின் மறைபொருள் அப்போஸ்தலர்களுக்கும் இறைவாக்கினருக்கும் அறிவிக்கப்பட்டது போல இவருக்கும் அறிவிக்கப்பட்டது (எபே 3:3 தொ). எனவேதான் அப்போஸ்தலர் அறிவித்த நற்செய்தி மனிதனின் சிந்தனையில் உருவான கட்டுக்கதையன்று (கலா 1:11). அது ''விசுவசிக்கும் ஒவ்வொருவருக்கும் மீட்பளிப்பதற்கு கடவுளின் வல்லமையாய் உள்ளது'' (உரோ 1:16). நற்செய்தியின் மறைபொருளை எடுத்துரைக்கும் போது (எபே 6:19) பவுல், ஊழூழியாக மறைத்து வைக்கப்பட்டிருந்து இப்போது வெளிப்படுத்தப்பட்ட மறைபொருளான திட்டத்தை

எல்லோருக்கும் எடுத்துரைக்கின்றார் (3:9 தொ). மீட்பை உறுதியளிக்கும் விசவாசத்திற்கு இட்டுச் செல்லும் இறைவெளிப்பாட்டை எடுத்துரைப்பதே அப்போஸ்தலப் போதகத்தின் தன்மையாகும்.

இ. முழு வெளிப்பாட்டை நோக்கி:- விசுவாசத்தின் முதன்மை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே நிலைத்திருக்கும். இயேசுவின் இவ்வுலக வாழ்வில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் அன்பை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது (தீத் 3:4). இயேசு ஏற்கெனவே தம் மாட்சிமையை அடைந்துவிட்டாலும் இது தொடர்ந்து நடைபெறுகிறது. ''மகத்துவமிக்க இறைவனும், நம் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்து மாட்சிமையில் பிரசன்னமாகும்போது'' (தீத் 2:13; லூக் 17:30) இது முடிவடையும். இயேசுவின் இந்த வெளிப்பாடு (1 பேதுரு 1:7-13) தலைமை ஆயரின் இந்தத் தோற்றம் (5:4) கிறிஸ்தவ நம்பிக்கையின் பொருளாகிறது (2 தெச 1:7; 1 கொரி 1:7; தீத் 2:13). நம்முடைய உயிராகிய கிறிஸ்து தோன்றும்பொழுது நாமும் அவரோடு மாட்சிமையில் தோன்றுவோம் (கொலோ 3:4). நம்மோடு, இத்தகைய மகிமையுடன் கடவுளுடைய மக்கள் வெளிப்பட வேண்டுமென்று படைப்பனைத்துமே ஏக்கத்தோடு எதிர் நோக்கியிருக்கின்றது (உரோ 8:19-23). விசுவாச வாழ்வுக்குப் பதிலாக அவரை முகமுகமாய்க் காணும் பேறுபெறும் (1 கொரி 13:12; 2 கொரி 5:7) விவரிக்க இயலா ஒப்பற்ற நிகழ்ச்சியாகும் அது.

3. புனித யோவான்

யோவானின் நூல்களில் வெளிப்பாட்டின் கருத்து ''காட்டினார்'' அல்லது ''வெளிப்படுத்தினார்'' என்ற சொலலாலேயே குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும் வெளிப்பாடு பற்றிய கருத்துக்களை நூல்களின் எல்லா பகுதிகளிலும் காணலாம்.

அ) இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு:-

1) இயேசுவின் காணக்கூடிய வெளிப்பாடு:- மனுவுருவெடுத்த இறைமகன் இயேசுவின் ஆளுமை வெளிப்பாட்டின் மையமாக அமைந்துள்ளது. ''அவர் இஸ்ராயேலருக்கு வெளிப்படும் பொருட்டே திருமுழுக்கு யோவான் சாட்சியம் பகர்ந்தார்'' (யோவா 1:31). அதன் பயனாக ''அவர் தோன்றினார்'' (1 யோவா 3:5-8), அதாவது புலன்களால் தொட்டுணரும் பொருளாக மாறினார். அவருடைய சாகோதரர் விரும்பியதுபோல பொது மக்கள் கவனத்தைக் கவரும் (யோவா 7:4) வெளிப்பாடு அன்று அவர் கொடுத்த வெளிப்பாடு. மாறாக, ஓரளவு இரகசியமான, முரண்பாடான, புரிந்துக்கொள்ள இயலாத வெளிப்பாடு, சிலுவையில் உயர்த்தப்படுதலில் முடிவடைந்த வெளிப்பாடு (12:32); பாவங்களைப் போக்கவும் அலகையின் செயல்களைத் தொலைக்கவும் வந்த வெளிப்பாடு (1 யோவா 3:5-8). தாம் உயிர்த்த பின்னரே தம் சீடர்களை உறுதிப்படுத்தும் பொருட்டு தம் மாட்சிமையைக் காட்டினார் (யோவா 21:1-14).

2) இயேசு கிறிஸ்துவில் இறைமாட்சிமையின் வெளிப்பாடு:-

புலனுக்குட்பட்ட இயேசுவின் தோற்றத்தில் யாவும் கடந்த பொருள் பொதிந்திருந்தது. இறைவன் மக்களுக்களித்த தலைசிறந்த வெளிப்பாடு இதுவே. இயேசுவின் சொற்கள் வாயிலாக வெளிப்பாடு அளிக்கப்பட்டது. இறைவனைக் கண்ட இறைமகன் (யோவா 1:18) இறைமாட்சிமையை முதலில் மறைமுகமாகவும், பின் தம் இறுதி உணவின்போது தெளிவாகவும் எடுத்துரைக்கின்றார் (16:19). அவருடைய செயல்கள் வழியும் வெளிப்பாடு கொடுக்கப்பட்டது. மக்கள் அவரில் விசுவாசம்கொள்ளும் பொருட்டு அவர் செய்த அருஞ்செயல்கள் அவருடைய மாட்சிமையை எடுத்துரைக்கும் அடையாளங்களாயிருந்தன (2:11). தந்தையிடமிருந்து அவர் பெற்ற மாட்சிமை ஒரே பேறான அவருக்கு ஏற்ற மாட்சிமையே (1:14). இவ்விரு (போதனை, அருஞ்செயல்கள்) முறைகளில் அவர் தந்தையின் பெயரை மக்களுக்கு வெளிப்படுத்தினார் (17:6). அதாவது தந்தையின் தன்மையை வெளிப்படுத்தி

னார். அது பழைய ஏற்பாட்டு வெளிப்பாட்டனைத்தின் சிகரமாய் அமைந்தது (1:17). வாழ்வளிக்கும் வார்த்தையைக் கண்டு, கேட்டு, தொட்டுணர்ந்த நற்செய்தியாளர் (1 யோவா 1:1) இயேசுவில் உயிர் வெளிப்படுத்தப்பட்டது (1:2), இயேசுவில் இறைவன் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது (4:9) என்று தனது அனுபவத்தின் பொருளைச் சுருக்கமாகத் தருகிறார்.

ஆ) போதிக்கப்பட்ட வெளிப்பாடு:-

இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவரை ஒரு சிலரே அறிந்திருந்ததால் மட்டும் இது நிகழவில்லை. அவரை ஏற்றல் என்பது ஒரு தனி அருள் ஆகும். ''என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவனும் என்னிடம் வர இயலாது'' (யோவா 6:44). எனவேதான் ''கடவுளிடமிருந்து கற்றுக் கொள்பவர்'' (6:45) சிலரே. பலர் ஒளியை வெறுத்து இருளை விரும்பினர் (3:19). ஏனெனில் அவர்கள் பொல்லாத தலைமுறையைச் சார்ந்தவர்கள். எனவேதான் உலகிலிருந்து பிரித்து, தந்தை இயேசுவுக்கு அளித்தவர்களுக்கு மட்டுமே தந்தையின் பெயரை வெளிப்படுத்துகின்றார் (17:6). தந்தையின் பெயரை யாருக்கு வெளிப்படுத்தினாரோ அவர்களிடம் தமக்குச் சான்று பகரும் பணியையும் ஒப்படைக்கின்றார் (16:27). இப்பணி மிகவும் கடினமானது. இப்பணியை நிறைவேற்ற இயேசுவின் சொற்களையும் செயல்களையும் பற்றிய ஆழ்ந்த அறிவு தேவை. ஆகவேதான் அவர் இவ்வுலகை விட்டுச் சென்றபின் நிறையுண்மையை நோக்கி வழி நடத்தும் ஆவியானவரை அவர்களுக்கு அனுப்புவார் (16:12 தொ). மக்கள் அனைவரும் விசுவாசித்து வாழ்வு பெறும் பொருட்டு இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாட்டை அப்போஸ்தலர்களின் சான்று ஆவியின் துணையுடன் எடுத்துரைத்தது. ''உயிர் வெளிப்படுத்தப்பட்டது அதனை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கின்றோம்'' (1 யோவா 1:2). ''தந்தை தம் மகனை உலகில் மீட்பராக அனுப்பினாரென்று கண்டோம்; அதற்குச் சான்று பகர்கின்றோம்'' (4:15). இந்தச் சாட்சியை ஏற்பதால் முதல் சாட்சிகளைப் போல், ஒவ்வொருவரும்'' பரம தந்தையோடும் அவர் மகன் இயேசு கிறிஸ்துவோடும் உள்ள நட்புறவில்'' (1:3 தொ) பங்குகொள்ள இயலும்.

இ) முழு வெளிப்பாட்டை நோக்கி:-

இறைமாட்சிமை விசுவாசத்தின் வாயிலாகத்தான் இன்னும் சிந்திக்கப்பெறுகின்றது. இச்சிந்தனை ஊனுருவான வார்த்தையிலும், வார்த்தை வழியும்தான் நடைபெறுகின்றது. மனிதன் இறைவனில் வாழ்கின்றான். ஆனால் அவன் தன்னிறைவை இன்னும் அடையவில்லை. ''இப்போது நாம் இறை மக்களாயிருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை''. அவரது வருகையின்போது அவருடைய மாட்சியில் தம்மைக் கிறிஸ்து வெளிப்படுத்தும் நாள் வரும் (2:28). அப்போது அவரோடு நாமும் வெளிப்படுத்தப்படுவோம். ''அவரைப் போலவே நாமும் இருப்போம். ஏனெனில் அவர் இருப்பது போல் அவரைக் காண்போம்'' (3:2). கிறிஸ்தவ நம்பிக்கையின் பொருள் இத்தகையதே.

4. திருவெளிப்பாடு:-

யோவானின் திருவெளிப்பாடு நூல் உண்மையிலேயே ஒரு வெளிப்பாடாகும் (திரு வெளி 1:1). இயேசுவின் இவ்வுலக வாழ்வு பற்றி இந்நூல் கூறுவதில்லை. மாறாக திருச்சபையின் உலக வரலாற்றையும் முன்னுரையாகக் கொண்ட அவருடைய இறுதி வெளிப்பாடு பற்றியே கூறுகின்றது. கிறிஸ்தவ இறைவாக்கு வடிவம் என்ற அளவில் (1:3) கிறிஸ்துவின் பாடுகள், உயிர்ப்பு ஆகியவற்றின் வழிவந்த மீட்பு பற்றிய செய்தியையும் கொண்டுள்ளது. இக்கோணத்திலிருந்து காட்சியாளர் பழைய இறைவாக்கு நூல்களுக்குத் திருந்திய பொருள் (5:1; 10:8 தொ) அளிக்கிறார். இவ்விறைவாக்குகளுக்கு விளக்கம் அளிக்கும் திறவுகோலைக் கொண்டிருப்பதால், அதைப் பயன்படுத்தி கிறிஸ்து என்

னும் மறைபொருளை அவருடைய பிறப்பிலிருந்தே விளக்கிக் காட்டுகின்றார் (12:5). சிலுவையில் அடைந்த மரணம் பற்றியும் (1:18; 5:6), மாட்சியில் அவர் தோன்றும் நாள் பற்றியும் (19:11-16) எடுத்துரைக்கிறார். திருச்சபை ஏங்கி எதிர் நோக்கியிருக்கும் கிறிஸ்துவின் வருகை எனும் இந்த இறுதி நாள் நிகழ்ச்சியில் (22:17) யோவானுடைய சான்றின் தாக்கம் அடங்கியிருக்கிறது.

யோவானின் திருவெளிப்பாடு இரண்டு உறுதியான இறைவெளிப்பாடுகளிலிருந்து எழுகின்றது. ஒன்று வேதாகமம் எடுத்துரைப்பவை. மற்றொன்று அவற்றை நிறைவு செய்யும் கிறிஸ்துவின் வெளிப்பாடு. இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று ஒளியூட்டும் விசுவாசத்தின் அறிவுச் சுனைகளாகக் கொண்டு நூலாசிரியர் இறுதி நிறைவளிக்கின்றார். உலகின் மீதும் சாத்தான் மீதும் இறைச்சக்தி வெற்றிக்கொள்ள, வேதகலாபனை ஒரு முரண்பாடான வழியென்பதை இந்நூலிலிருந்து திருச்சபை தெளிவாகக் கண்டுணரக்கூடும். விண்ணக யெருசலேம் பற்றிய முழு வெளிப்பாட்டிற்காகக் காத்திருக்கும் கிறிஸ்தவர்கள் (22:22) துன்பங்களின் மத்தியில் விசுவாசத்தின்வழி அதைக் காண முடிகிறது. இவ்வாறு ''நேற்றும் இன்றும், என்றுமே மாறாத இயேசு கிறிஸ்து'' (எபி 13:8)வின் வெளிப்பாடு உலக வரலாற்றை அதன் தொடக்க முதல் இறுதிவரை ஒளிர்விக்கின்றது.

இன்னாசியார் எழுதிய திருமுகங்கள் (EPISTLES OF IGNATIUS)

சீரியாவிலுள்ள அந்தியோக்கு ஆயர் இன்னாசியார். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தாம் உரோமைக்குக் கொலைக் கைதியாக எடுத்துச் செல்லப்பட்டபோது ஏழு திருமுகங்களை எழுதினார். சிமிர்னாவிலிருந்து எபேசு, மக்னேசியா, திராலெஸ், உரோமை ஆகிய இடங்களிலுள்ள சபைகளுக்கும் துரோவாவிலிருந்து பிலதெல்பியா, சிமிர்னா சபைகளுக்கும், போலிகார்ப்பு என்னும் சிமிர்னா ஆயருக்கும் எழுதினார். இந்த் திருமுகங்களில் காணப்படும் முக்கிய செய்தி என்னவென்றால், கிறிஸ்துவுக்காக நாம் படும் துன்பம் மிகவும் சிறந்தது என்பதாகும். இந்தத் திருமுகங்களை எழுதியவராகிய இன்னாசியார், பல இன்னல்கள் பட்டபின் கொலையாவதற்காகவே உரோமைக்கு கைதியாகப் போகிறார். ஆதித் திருச்சபைக்கு வேதகலாபனைகளின் காரணமாக பயங்கரமான சோதனைக்காலம் ஆரம்பமானது. வேதகலாபனைகள் குறிப்பாக உரோமைய மன்னர்களால் ஏற்பட்டது. இத்திருமுகங்கள் திருச்சபைத் தந்தையர்களின் இலக்கியத்தில் ஒரு முக்கிய பாகமாகத் திகழ்கிறது. இவை திரேசன் காலத்தில் (கி.பி. 98-117) எழுதப்பட்டவை. சொற்றொடரிலும், நடையிலும், கருத்திலும், சுட்டிக்காட்டல்களிலும் இத்திருமுகங்கள் புதிய ஏற்பாட்டுத் திருமுகங்களை ஒத்திருக்கின்றன. ஆசிரியர் பவுலையும் யோவானையும் அறிந்திருக்கிறார். இந்தத் திருமுகங்களில் திருச்சபையின் நிர்வாக அமைப்புமுறை அழகாக விளக்கப்படுகிறது. ஆயர் பதவியின் அதிகாரத்தை வலிமையாக ஆதரித்துப் பேசுவதால் இவை இறையியல் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு ஆயரின் பணிகள் எவ்வாறு அமைய வேண்டுமென இவை எடுத்துரைக்கின்றன. ஆயரின் பிரசன்னம் அல்லது அனுமதியின்றி எந்த வழிப்பாட்டு நிறுவனத்திற்கும் மதிப்பில்லை. கிறிஸ்துவுக்குப் பணிவது போல, ஆயருக்கு எல்லா விசுவாசிகளும் பணிய வேண்டும். இத்திருமுகங்கள் குறிப்பாக ஆசியாவிலுள்ள திருச்சபைகளுக்கே எழுதப்பட்டன; ஆசியத் திருச்சபைகளில் யூதர்களின் பல சடங்கு முறைகள் நுழைய அரம்பித்ததால் ஆயர்களின் பணிகள் விளக்கப்படுகின்றன. தோசேத்திய பதிதத்திற்கு எதிராக இயேசு கிறிஸ்துவின் உண்மையான மனித உடல் பற்றி சிந்தனைகளையும் இத்திருமுகங்களில் நாம் காணலாம். கத்தோலிக்கத் திருச்சபை என்னும் சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் இவரே. இத்திருமுகங்கள் நல்ல நடையில் எழுதப்பட்டவை. இன்னாசியாரின் உள்ளக்கருத்துக்களை அவை படம் பிடித்துக் காட்டுகின்றன.

இன்னோம் (HINNOM - மகன்களின் பள்ளத் தாக்கு)

பென்யாமின், யூதா கோத்திரங்களுக்கு இடையே எல்லையைக் குறிக்கும் எருசலேமின் தெற்கே உள்ள ஆழமானப் பள்ளத் தாக்கு (யோசு 15:18; 18:16). எரே 19:2-இன்படி கர்சித் வாயில் அல்லது ''பானை ஓட்டு வாயில்'' நகரத்திலிருந்து இப்பள்ளத் தாக்குக்கு இட்டுச்சென்றது. இக்கால யாப்பா வாயிலுக்கு அருகிலுள்ள வாடி-ஏர்-ராபாபி என்பதுதான் இப்பள்ளத்தாக்கு என்று பொதுவாக கருதப்படுகிறது. இது பழைய நகரத்தின் மேற்கு மதிலுக்குக் கீழே வடக்கு தெற்காக பரவியிருக்கிறது. பிறகு கெதிரோன் திசையில் கிழக்குப்பக்கமாக கூர்மையாக வளைந்திருக்கிறது. இன்னோம் என்ற பெயர் தாவீது நகரத்தின் கிழக்கே தீரோப்போயோன் கணவாய்க்கு முதலில் சூட்டப்பட்டது என்பதற்கு ஒரு சில மூல ஆதாரங்கள் இருக்கின்றன. முடியாட்சி காலத்தில் வாடி-ஏர்-ராபாபிக்கு இப்பெயர் மாற்றப்பட்டிருக்கலாம் என்று அவைகள் கூறுகின்றன.

அரசர், நாள், எரோமியா ஆகமங்கள் இப் பள்ளத்தாக்கு கெதிரோனோடு சந்திக்கும் இடத்திலுள்ள தோப்பேத்து என்றழைக்கும் இடத்தில் மோலக்கு, பாகால் சிலைகளுக்கு நேர்ச்சையாக குழந்தைகளை எரித்து பலி கொடுப்பதையும், அன்னிய கடவுளர்களுக்கு வழிபாடு செய்வதையும் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகின்றன (2 அர 23:10; 2 நாள் 28:3; 33:6; எரே 32:25). இவ்வாறு இன்னோம் பள்ளத்தாக்கு கெட்ட பெயர் பெற்று விளங்கியதால்தான் ஏரேமியா பள்ளத்தாக்கின் சிலை வழிபாடுகளை கண்டித்த போது பெயர் சொல்லாமல் கண்டனம் செய்தார் (எரே 2:23). இது ''பழிவாங்குநாளில்'' 'படுகொலைப் பள்ளத்தாக்கு' என்று அழைக்கப்படும் என்று கூறுகிறார் (எரே 7:31-32; 19:5-6). இந்தமாதிரி எரித்து பலிகொடுக்கும் கண்ணோட்டமே 'நெருப்பாலான நரகம்' என்ற கற்பனைக்கு வழி வகுத்தது (மத் 5:22). கிரேக்கத்தில் 'கேகன்னா' என்று அழைக்கப்படுகிறது. 'இன்னோம் பள்ளத் தாக்கு' நாடு கடத்தலுக்குப்பின் யூதா, சிமியோன் இவர்களின் பழைய பகுதி முழுவதும் பெயேர்செபா வரையிலும் உள்ள பகுதியில் பரவி அமைந்திருந்த குடியிருப்புகளுக்கு வடக்கு எல்லையாக கொடுக்கப்படுகிறது (நெக 11:30).

யூத, ஆதி கிறிஸ்தவர்களின் கல்லறைகளை (ரோமையர் காலத்திலிருந்து பைசாண்டியன் காலம் வரை உள்ளவைகள்) பள்ளத்தாக்கின் தெற்கு பகுதியில் மலைமுகடுகளில் இன்றும் காணலாம். அங்கு யூதாசின் வெள்ளிக் காசுகளுக்கு வாங்கிய 'குயவனின் நிலம்' இருந்ததாக பாரம்பரியம் கூறுகிறது.

ஈ

ஈ இரண்டு எபிரேய வார்த்தைகளின் மொழி பெயர்ப்பு.

அ) ''போவதும் வருவதுமாக இருப்பது'' என்று பொருள்படும் ''செபுஸ்'' என்ற சொல். இவை ''உஸ்ஸ்'' என்று சத்தம் எழுப்பும். சில மொழி பெயர்ப்புகள் கொசு என்று பொருள் கொண்டுள்ளன.

ஆ) கலப்பு பூச்சிகள், வண்டின் கூட்டம் (யாத் 8:17-18. 20. 25. 27; சங் 78:45; 105:31).

இரண்டுமே இரண்டு இறகுள்ள பூச்சிகள். முதல் ரகம் (அ)''வீட்டு ஈ''-யாக புரிந்துக் கொள்ளப்படுகிறது. பரிமள தைலத்திற்குள் விழுந்து தைலத்தின் நறுமணத்தை அழிப் பதே இதனுடைய பழக்கமாகும் (திருவுரை 10:1). ஆனால் கீழை நாட்டில் இந்த இனம் தொல்லை கொடுப்பதாகவும், மிக வலுவந் தமானதாகவும் கருதப்பட்டது. இது கைப் பற்ற வருகிற எகிப்திய படையை உருவகமா கக் காட்டுகிறது. குளவி வகையான குதிரை ஈ குதிரைகளையும், கால்நடைகளையும் வாகனத்தில் செல்லுகின்ற மனிதர்களைக்கூட டத் தாக்குகிறது. எக்கரோனின் மக்கள் ஈக்க ளின் தெய்வமான பாகால்செபூபை, ஈக்கள் செய்கின்ற தீய செயல்களைத் தவிர்ப்பதற் காக வழிபட்டார்கள் (2 அர 1:2-3).

இரண்டாவது (ஆ)வகை யாத்திரையின் போது நான்காவது கொள்ளை நோயாகக் கடவுளால் அனுப்பப்பட்ட கொட்டுகின்ற ஈ-ஆகும். சங்கீதங்களிலும், யாத்திரை ஆக மத்திலும் ''ஈக்களின் திரள்'' என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இது பல்வேறு வகைக ளைக் குறிப்பிடுகிறது: வீட்டு ஈ, ஊதாநிறப் புட்டி ஈ, நாய் ஈ, பார்காஸ் கொசுவினம் அல்லது தபநித் ஈ; பார்காஸ் கொசு அறுவ டையின்போது வேலைசெய்பவர்களுடைய கண்கள், காதுகள், மூக்கு ஆகியவற்றில் நுழைந்து தொல்லை கொடுக்கவல்லது. 'ஸ் தோமாக்ஸில் ல்சித்ரான்ஸ்' என்ற ஈ மனி தன், விலங்கு ஆகியவற்றின் கால்களைக் கடிக்கிறது. முட்டைப்புழு (யோபு 25:6; ஏச 14:11), புழு (யாத் 16:24; உப 28:39; யோபு 7:5; 17:14) ஆகியவைகள் ஈக்களின் லார்வாக் கள்.

ஈசபேல் (JEZEBEL - இளவரசன், உயர்த்தப் பட்ட, பாகாலைப் போற்றும்)

பாகாலைப் போன்றும் ஒரு பெனிசியப் பெயரின் மாற்றமடைந்த எபிரேய வடிவ மாக இருக்கலாம் (1 அர 19:2).

1. இஸ்ராயேலின் அரசனான ஆகாபின் மனைவி. சீதோனியர்களின் அரசனான எத்து பாகாவின் மகளான இவள் பெனீசிய குலத் தைச் சேர்ந்தவள் (1 அர 16:31). மென்ாண்ட ரின் கூற்றுப்படி இவள் பெனீசியா பாகால் வழிபாட்டின் குரு. ஈசபேல் கீழை நாட்டு அரச வம்சத்தின் முழுமையான உரிமைக ளைக் கட்டிக்காக்கவும், பெனிசிய பாகால் வழிபாட்டில் ஊன்றி நிற்கவும் தன் வாழ் நாள் முழுவதும் மிகவும் பாடுபட்டாள். இப்போக்கைத் தன் கணவன் ஆகாபின் ஆட் சியின்போது மட்டுமின்றி, தனது இரு புதல் வர்களாகிய அகசியா, யோராம் ஆகியோ ரின் ஆட்சியிலும் கடைப்பிடித்தாள். யூதா வின் அரசியான இவளது மகள் அத்தாலியா வும் தன் தாய் ஈசபேலின் போக்கைத் தொடர்ந்து பின்பற்றினாள் என்று கூறப்படு கிறது (2 அர 8:18). மற்றெந்த வெளிநாட்டு அரசிகளைப்போலவே ஈசபேலும் தொடக் கத்திலிருந்தே தனக்கே உரிய வழிபாட்டு உரிமையைக் கோரி வந்ததாகத் தெரிகிறது (1 அர 16:31-33; காண்க 11:8). பாகாலின் இறைவாக்கினர்களை ஆதரித்து, அவ்வழி பாட்டை இஸ்ராயேலில் புகுத்துவதிலும் (1 அர 18:19), யாவேயின் இறைவாக்கினர் களை துன்புறுத்துவதிலும் (18:4), எலி யாவை நாட்டை விட்டே வெளியேற்றுவதி லும் (19:1-3) அளவுக்கதிகமான முயற்சி எடுத்து அவற்றில் வெற்றியும் கண்டாள். 2 அர 9:22-இல் கூறப்படும் ஈசபேலின் ''வே சித்தனமும், மாயவித்தையும்,'' யாவேயின்

வழிபாட்டுக்கெதிராக அவள் செய்த கொடு மைகளைக் குறிப்பதற்காகவே என்பது தெளிவு (காண்க ஓசே 4:12).

நாபோத்தின் திராட்சை தோட்டம் பற்றிய நிகழ்ச்சியில் சீழை நாட்டுப் பேரரசரின் பண்பு, இஸ்ராயேல் நாட்டு மன்னனின் பண்பிலிருந்து எவ்வளவு மாறுபட்டதெனப் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. நாபோத்து தனது திராட்சைத் தோட்டத்தை விற்கமாட்டேன் என்று கூறியபோது ஆகாபு அரசன் அதனை ஏற்றுக்கொள்ள விழைந்த போது, ஈசபேல் ''நீர் இஸ்ராயேலை இப்ப டித்தான் ஆட்சி செய்து வருகிறீரா'' (1 அர 21:7) என்று எள்ளி நகையாடினாள். சட்டப் படி நாபோத்தின் மேல் நடவடிக்கை எடுப்ப தாக நடித்து நாபோத்தைக் கல்லாலெறியச் செய்தவளும் இவளே. இவள் சாவதற்கு முன்னால் தன் கண்களில் மைதீட்டி, தலையை அலங்கரித்து, ஏகூவிடம் மரியா தையின்றிப் பேசினாள். பின் மாடியிலிருந்து தள்ளப்பட்டு இறந்தாள். அவளது இரத்தம் சுவரை நனைத்தது. அவள் குதிரைகளால் மிதிக்கப்பட்டாள். அவளது உடலை நாய் கள் தின்றன. இவ்வாறு அவளைப் பற்றிய எலியாவின் வாக்கு நிறைவேறிற்று. இந்த மனசாட்சியற்ற, சபிக்கப்பட்ட அரசப்பெண் ணின் முடிவு யாவருக்கும் பாடமாயிற்று (2 அர 9:30-37).

2. தியத்திரா நகரக் கிறிஸ்தவர்களைச் சிலை வழிபாட்டுக்கு இட்டுச் சென்ற போலி இறைவாக்கினிப் பெண்ணுக்கு ஈச பேல் என்ற பெயர் திருவெளி 2:20-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஈசாக்கு (ISAAC - அவர் சிரித்தார்)

ஈசாக்கு என்பவர் ஆபிரகாமிற்கும் சாரா விற்கும் மகனாகப் பிறந்தவர். இவர் அவரது தந்தை ஆபிரகாமிற்கு நூறாவது வயது நடக் கும் பொழுது பிறந்தார் (ஆதி 21:5.7). ஈசாக் கிற்கு நாற்பது வயது நடந்தபொழுது ரெபேக்காவை மணந்து கொண்டார் (24:64; 25:20). 60 வயதில் ஏசாவும், யாக்கோபும் இவருக்குப் பிறந்தனர் (25:26; 1 நாள் 1:34). இவர் கெபிரோனில் தனது 180வது வயதில் இறந்தார் (ஆதி 35:27-29). மக்கபேலாவி லுள்ள குகையில் தன் மனைவியுடன் அடக் கம் பண்ணப்பட்டார் (49:31).

சொல் விளக்கம்:-

ஈசாக்கு என்ற பெயரின் தோற்றத்திற்கான பல பொதுப்பாணி விளக்கங்கள் உண்டு. முதிர்ந்த வயதில் தனக்கு மகன் பிறக்கப் போகிறார் என்ற வாக்குறுதியை எண்ணி புன்முறுவல் பூக்கும் ஆபிராகாமின் சிரிப் போடும் (ஆதி 7:17 தொ), சாராயின் இகழ்ச் சியான சிரிப்போடும் (18:11-15), அவனது பிறப்பால் 'இறைவன் எனக்கு மகிழ்ச்சி அளித்தார்' என்று சாராள் கொள்ளுகின்ற மகிழ்ச்சியோடும் (21:6) நெருங்கிய தொடர் புடையதாகும் இப்பெயர். இவ்வாறு அவர்க ளின் சிரிப்பை உணர்த்தும் வகையில் தோன் றிய பெயர்தான் 'ஈசாக்' ஆகும். ஆனால் இறையருளை உணர்த்தக்கூடிய விளக்கம் உண்மைக்கு நெருங்கியதாகும். ''இறைவன் சிரிப்பாராக'' அதாவது, ''அவன் மேல் அன்போடும் கருணையோடும் நோக்குவரா க'' என்பது சாலப் பொருந்தும்.

பழைய ஏற்பாட்டில் ஈசாக்கு:-

ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு ஆகி யோரோடு ஒப்பிடும்போது ஈசாக்கின் கதை தன்மையிலும் எடுத்துக் கூறப்படும் முறையி லும் பலவீனமானது. அவர் அவ்வளவு முக் கியத்துவம் வாய்ந்தவர் அல்லர். அவர் தம் தந்தைக்காகவோ, அல்லது மகனுக்காகவோ வாழ்வதாகத் தெரிகிறது. அவர்களின் நிழலா கவே அமைகிறார்.

பெயேர்-செபா மற்றும் பெயேர்-லாகாய்-ரோயி போன்ற வழிபாட்டு மையங்களில் அவரது கதைகள் தொகுக்கப்பட்டு பாதுகாக் கப்பட்டதாகத் தெரிகிறது. இந்த இடங்க ளின் முக்கிய ஆளாகத் தெரிகிறது. அவரது வாழ்வு முக்கியமாக இவ்விடங்களைச் சுற் றியே சுழலுகிறது (ஆதி 21; 22:19; 26:23.33; 28:10; 24:62; 25:11). இக்கதைகளில் ஆபிரகா முக்கும் யாக்கோபுக்கும் இணைப்பாளரா கவே தோன்றுகிறார்.

ஈசாக்கு வாக்குறுதியினால் பிறந்த குழந் தையாவார். இறைவன் இஸ்ராயேல் மக்கள்

மீது கொண்டிருக்கும் பிரமாணிக்கமான உறவினைச் சுட்டிக் காட்டும் உயிருள்ள அடையாளமாக ஈசாக்கு விளங்குகின்றார். வாக்குறுதி கொடுத்த இறைவன் அதை நிறைவேற்றுகிறார். எனவே இஸ்ராயேல் மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்து அவரைச் சார்ந்து வாழலாம். ஈசாக்கு குறிப்பிடத்தக்க ஒருவராகத் தோன்றவில்லையென்றாலும் இறைவன் அவர் வழியாகத்தான் இஸ்ராயேல் மக்களுக்கு மீட்பளிக்கின்றார், எதிர்காலத் தலைமுறையினருக்கு தனது அருளை வழங்குகின்றார். ஈசாக் ஆசிர் அளிக்கப்பட்ட மகனாவார்.

1. ஈசாக்கின் பிறப்பு (ஆதி 21:1-7):- ஆபிரகாம் வயதானவராகவும், சாரா மலடியாகவும் இருந்தபோதிலும் இறைவன் அவர்களுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று வாக்களிக்கின்றார் (ஆதி 15:4; 17:15-19; 18:9-15; 15:5). சாரா கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுக்கின்றாள். அவனை ஈசாக்கு என்று அழைத்து, ''கடவுள் எனக்கு மகிழ்ச்சி அளித்தார்'' என்றும் இதைக் கேட்கிற யாவரும் என்னோடு சேர்ந்து மகிழ்வார்கள் என்றும் சாரா சொன்னாள் (ஆதி 21:6). சாராவின் அவநம்பிக்கைக்கு மாறாக இறைவன் தம் வாக்குறுதியில் வழுவாமைக்கு ஒரு சிறந்த அடையாளமாகக் குழந்தை திகழ்கிறான். ஆனால் பெற்றோர் நன்றியுணர்வோடு உடன்படிக்கையினால் பிறந்த மகன் என்ற முறையில் ஈசாக்கு பிறந்த எட்டாம் நாள் அவருக்கு விருத்தசேதனம் செய்கின்றனர். (லூக் 1:59; 2:21; அ.ப.7:8; பிலி 3:5; ஆதி 21:4).

2. ஈசாக்கும், இசுமயேலும் (ஆதி 21:8-14; 25:9-11):- ஈசாக்கு இறை ஆசிரைப் பெற்றுத் தன் குலத்தைப் பலுகி பெருக்கச் செய்வார் என்ற இறைவனின் வாக்கில் நம்பிக்கை கொண்டிராத சாரா இசுமயேலை வீட்டை விட்டு துரத்தி விட வேண்டுகிறாள். ஈசாக்கு பால்குடி மறந்த நாளன்று விருந்து நடந்து கொண்டிருந்த பொழுது இச்மயேல் தனது மகன் ஈசாக்கோடு கேலி பண்ணி விளையாடுவதைக் கண்டு இசுமயேல் தனது மகனின் உரிமையில் பங்காளியாகி விடுவானோ என்று அஞ்சி இசுமயேலையும், அவனது தாயையும் வெளியே அனுப்பி விடுமாறு ஆபிரகாமிடம் கூறுகின்றாள்.

ஆபிரகாம் இதைக் கேட்டு மனம் வருந்துகின்றார். ஆனால் இறைவன் சாரா கூறுவதின்படி நடக்குமாறு கூறி, ஈசாக்கின் வழியாகத்தான் ஆபிரகாமிற்கு சந்ததி தோன்றும் என்றும் உறுதி அளிக்கின்றார் (ஆதி 21:12; உரோ 9:7; எபி.11:18). கடவுளின் வாக்குறுதிகள் அனைத்தும் இயல்புமுறைப்படிப் பிறந்த இசுமயேலின் வழியாக அல்லாமல், வாக்குறுதியின் பயனாய்ப் பிறந்த ஈசாக்கின் வழியாக இஸ்ராயேல் மக்களுக்கு அருளப்பட்டு நிறைவேற்றப்படும் (கலா 4:21-31). எனவே ஆபிரகாமும் ஆகாரையும் அவளது பிள்ளையையும் வீட்டை விட்டு அனுப்புகின்றார்.

ஆபிரகாமின் வழிவந்த இவர்கள் பலுகிப் பெருகி இஸ்ராயேலர்களாகவும், இசுமலேயர்களாகவும் பிரிந்து வாழ்ந்தனர் என்று மரபு கூறுகின்றது. விவிலியமானது ஆபிரகாமின் இறப்பைப் பற்றி கூறியுள்ள பகுதியில் தான் இசுமயேலையும், ஈசாக்கையும் சேர்த்து குறிப்பிட்டிருக்கின்றது (ஆதி 25:9-11).

3. ஈசாக்கை பலியிடச் செல்லல் (ஆதி 22:1-19):- ஈசாக்கின் சிறுபிராயத்தில் ஒரே ஒரு நிகழ்ச்சி எடுத்துக் கூறப்படுகிறது. ஆபிரகாம் கடவுளின் கட்டளைப்படி ஈசாக்கைப் பலியிட அழைத்துச் செல்கின்ற நிகழ்ச்சியில் விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகிய இரண்டு பண்புகள் மேலோங்கி நிற்கின்றன. ஆபிரகாம் இறைவன் கேட்டது என்னவென்று அவருக்கு நன்கு தெரிந்து, ஈசாக்கு கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிதலோடு பதிலளிப்பார் என்றும் நம்பிக்கை கொண்டு செயல்படுகின்றார். ஈசாக்கு தந்தையின் அன்பிலும், இறைவனின் பராமரிப்பிலும் நம்பிக்கை கொள்கின்றார் (ஆதி 22:6-8; ஞான 10:5; எபி 11:17-19). ''இதோ நெருப்பும் கட்டைகளும் இருக்கின்றன. தகனப்பலிக்கு வேண்டிய விலங்கு எங்கே?'' (ஆதி 22:7) என்ற ஈசாக்கின் கேள்வி வெகுளித்தனமானதன்று. அவரது தந்தை வழிநடத்திச் செல்லும் பயணம்

அசாதாரணமானது என்பதை சிறுவன் உய்துணர்ந்திருப்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஆகவே ஈசாக்கு தன்னைப் பலியிடுவதற்காகப் பயன்படுத்தப் போகும் விறகுக் கட்டைகளைச் சுமந்து கொண்டு கீழ்ப்படிதலோடு நடந்து செல்வதாக காட்டப்படும் காட்சியானது, பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் மனநிலையை படம் பிடித்துக் காட்டுகின்ற நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்ற காட்சிகளில் முதல் தரத்தில் வைத்து மதிக்கப்படுகின்றது.

ஆபிரகாம் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையினால் தனது மகனை இரண்டாம் முறை கொடையாகப் பெறுகின்றார் (ஆதி 21:1-3). ஆபிரகாமின் முந்தைய அவிசுவாசத்தோடு ஒப்பிடும் போது, ''ஈசாக்கு'' என்ற கொடை பொருள் பொதிந்ததாகும். ஏனெனில், அது இறைவனின் அசைக்கமுடியாத பற்றுறுதியை எடுத்துக்காட்டுகிறது.

4. ஈசாக்கும் ரெபேக்காளும் (24:62-67):- ஆபிரகாம் முதிர்ந்த வயதினராய் இருந்தபொழுது தனது நம்பிக்கையுள்ள பணியாளன் ஒருவனை ஆரான் பகுதிக்கு அனுப்பி, அங்குள்ள தனது உறவினர்களின் பெண்களில் ஒருத்தியை ஈசாக்கிற்கு மனைவியாக அழைத்து வருமாறு அனுப்புகின்றார் (ஆதி 24:1-61). இதன்மூலம் அவர் சமயத்தின் தூய்மையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று விரும்புகின்றார். மேலும் ஈசாக்கிற்குக் கானானியப் பெண்களை மணப்பதற்கான வாய்ப்பினையும், வாக்களிக்கப்பட்ட நாட்டை விட்டு வெளியே செல்வதற்கான வாய்பினையம் இச்செயலின் மூலம் தடுத்து நிறுத்துகின்றார்.

ஆபிரகாம் அனுப்பிய பணியாளன், பெத்துவேலின் மகளும், லாபானின் தங்கையுமாகிய ரெபேக்கா என்பவளை அழைத்து வந்தான். ஈசாக்கு அவளை மணந்து கொண்டார்.

5. ஏசா, யாக்கோபு ஆகியோரின் பிறப்பு (ஆதி 25:19-28):- சாராளைப் போன்று ரெபேக்காவும் மலடியாக இருக்கின்றாள். ரெபெக்காவின் மலட்டுத்தன்மை யாவேயின்மேல் கொண்டிருக்கும் விசுவாசத்தை சோதித்துப் பார்ப்பதற்கான வழிபோல் தோன்றுகின்றது. ஆனால், ஈசாக்கு மனம் சோர்ந்து விடாமல் தனது மனைவிக்குப் பிள்ளைப்பேறு அளிக்குமாறு இறைவனிடம் மன்றாடுகின்றார். அவரது மன்றாட்டு கேட்கப்பட்டு (ஆதி 25:21) ரெபேக்கா ஏசா, யாக்கோபு என்ற இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்றாள். வயிற்றில் இருக்கும் போதே போரிட்டுக் கொண்டிருந்தது இந்த இருவரின் எதிர் காலம் பற்றி ஆண்டவரின் திருவுள்ளமானது என்ன என்று அறிவிக்கப்பட்டபொழுது வாக்குறுதி புதுப்பிக்கப்படுகின்றது.

மேலும் குழந்தை பிறக்கும் பொழுது மூத்தவனின் சூலை, இரண்டாவது புதல்வன் பிடித்துக் கொண்டு பிறந்ததால் கடவுள் அளித்த வாக்குறுதியின்மட்டில் மீண்டும் அச்சம் ஏற்படுகிறது. பெற்றோரின் மாறுபட்ட அன்பும் இந்த அச்சத்தை மேலும் வலுப்படுத்துகிறது. ஈசாக்கு வேட்டைக்காரனான ஏசாவையும், ரெபேக்கா அமைதியான யாக்கோபையும் அன்பு செய்தனர் (ஆதி 25:28).

6. ஈசாக்கும், அபிமெலக்கும் (ஆதி 26):- ஈசாக்கு தனக்கும் அபிமெலக்குக்கும் இடையே ஏற்பட்ட தொடர்புகளில் மட்டும் தான் தனித்து நின்று செயல்படுபவராக காட்டப்படுகின்றார். மற்ற நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் தந்தை அல்லது மனைவியின் சொல்படி செயல்படுகின்றார். இந்நிகழ்ச்சியில் ஈசாக்கு ஆசீர்வதிக்கப்பட்ட மனிதராகக் காட்டப்படுகின்றார்.

நாட்டில் பஞ்சம் உண்டானபொழுது ஈசாக்கு அபிமெலக்கின் ஆட்சிப் பகுதியாகிய கெரார் நாடு செல்கின்றார். அப்பொழுது ''ஆண்டவர் அந்நாட்டிலே குடியிரு. நாம் உனக்குத் துணையாயிருப்போம்; உன்னை நாம் ஆசீர்வதிப்போம் என்கின்றார்'' (ஆதி 26:3). ரெபேக்காவின் அழகை முன்னிட்டு தனக்கு ஏற்படும் தீங்கினை நினைத்து ஈசாக்கு அஞ்சியபொழுது, கடவுளின் பாதுகாப்பால் அந்த அச்சம் நீக்கப்படுகின்றது (26:6-11). ஈசாக்கு அந்த நாட்டிலே விதை விதைத்தார். ஆண்டவர் அவரை ஆசீர்

வதித்தபடியால் நூறுமடங்குப் பலனை பெற்றார். செல்வமுள்ளவராகவும், செல்வாக்கு உள்ளவராகவும் திகழ்ந்தார் (26:12-13). இவ்வாறு வலிமையுடையவராக வளர்ந்ததால் அபிமெலக்கு ஈசாக்கை நாட்டை விட்டு போகும்படி வேண்ட அவரும் புறப்பட்டு போய் கெரார் பள்ளத்தாக்கில் குடியேறினார். அந்தப் பள்ளத்தாக்கில் கிணறு ஒன்றை வெட்ட அதிலிருந்து நீரூற்று ஒன்று சுரந்தது (26:17-22).

பின் ஈசாக்கு பெயேர்-செபாவுக்குச் சென்றபொழுது யாவே அவருக்குத் தோன்றி 'உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நாமே' என்று கூறி அவரை ஆசீர்வதிப்பதாக வாக்களிக்கின்றார். ஈசாக்கு அங்கே ஒரு பீடத்தை எழுப்பி இறைவனைத் தொழுதார் (26:23-25). மேலும் அபிமெலக்கும் அவரது உற்ற நண்பர்களுடன் ஈசாக்கிடம் வந்து, அவர் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பதை அறிந்து கொண்டு அவரோடு உடன்படிக்கை செய்து கொள்ளத் தீர்மானித்திருப்பதாகக் கூறுகின்றார்.

7. ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தார் (ஆதி 27):- ஈசாக்கின் வாழ்க்கையில் இந்நிகழ்ச்சி மிகவும் மனத்தை உருக்கும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. மிகுந்த கலைப்பண்போடும், ஆற்றலோடும், இக்கதை யாவே பாரம்பரியத்தால் எடுத்துக் கூறப்படுகிறது. ஈசாக்கு தனது மூத்த மகனை ஆசீர்வதித்து பிறப்புரிமை வழங்க விரும்புகின்றார். இருப்பினும் தனது தாயினால் ஊக்குவிக்கப்பட்ட உற்சாகப்படுத்தப்பட்ட இளையமகன் தந்திரமாக நடித்து ஈசாக்கின் ஆசிரையும் பிறப்புரிமையும் பெற்று விடுகின்றார்.

தனக்கு அளிக்கப்பட வேண்டிய ஆசிரை யாக்கோபு பெற்றுச் சென்று விட்டதை அறிந்தவுடன் ஏசா அலறி, ஏங்கித் தன்னையும் ஆசிர்வதிக்குமாறு தந்தையிடம் வேண்டுகிறார். இருப்பினும் யாக்கோபிற்கு அளிக்கப்பட்ட ஆசிரை திரும்பிப் பெற இயலாது என்பதால் ஈசாக்கு மனம் உருகி ''நீ உன் வாளினாலே வாழ்க்கை நடத்தி உன் தம்பிக்கு பணிபுரிவாய், ஆனால் ஒரு காலத்தில் அவனது அதிகாரத்தை உதறித்தள்ளிவிடுவாய்'' என்று ஆசிரளிக்கின்றார் (27:40).

ஏசா அவனது சகோதரன் மேல் வெறுப்புக் கொண்டு அவனைக் கொலை செய்வதற்காக வழிதேடுகின்றார். யாக்கோபு வாக்களிக்கப்பட்ட நாட்டிலிருந்து ஓடி விடுகின்றார் (27:41-45). தன் தாயை மீண்டும் பார்க்கவில்லை.

8. ஈசாக்கின் இறப்பு (ஆதி 35:27-29):- ஈசாக்கிற்கு 180-வது வயது நடக்கும் பொழுது கெபிரோனில் இறந்து விடுகின்றார். பின் மக்கபேலாவிலுள்ள குகையில் தனது புதல்வர்களால் அடக்கம் பண்ணப்படுகின்றார். இக்குகையில்தான் ஆபிரகாம், சாரா, ரெபேக்கா போன்றவர்களும் அடக்கம் பண்ணப்பட்டனர் (35:27-29; 49:32). ''முதுமையும் ஆயுள் நிறைவும் உள்ளவராய்'' (35:29) என்ற பதம் அவர் வாழ்வில் பெற்ற ஆசீர்களின் சான்றாய் உள்ளது.

''ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்'' (யாத் 3:6.15-16) ''ஈசாக்கின் பயபக்தி'' (ஆதி 31:42) போன்ற சொற்றொடரில் இஸ்ராயேல் பாரம்பரியத்துக்கு ஈசாக்கின் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. ஆமோ 7:9 ஈசாக்கு வட அரசைக் குறிக்க, இஸ்ராயேலுக்கு இணையாகப் பயன்படுத்தப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் ஈசாக்கு:-

ஆதியாகம கதையினைப் பொறுத்தவரையில் ஈசாக்கைப் பலியிட அழைத்துச் செல்லும் நிகழ்ச்சிதான் புதிய ஏற்பாட்டில் தெளிவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் தன் ஒரே புதல்வனைப் பலியிடப் போகும் நிகழ்ச்சிக்கும், கிறிஸ்துவின் பலிக்குமிடையே உள்ள தொடர்பினை பவுல் விளக்கவில்லையென்றாலும் 'நாமும் ஈசாக்கைப் போல வாக்குறுதியின் பிள்ளைகள்' (கலா 4:28; உரோ 9:6-13) என்று நினைவுறுத்துகின்றார். இறப்புவரைக்கும் ஈசாக்கு பணிந்திருந்ததுபோல, கிறிஸ்துவும் தந்தையின் திருவுளத்துக்குப் பணிந்து தம்மையே பலியாக்கினார். தம்மை வழங்குகின்ற இந்த ஒப்பற்ற பலியில் பங்கு கொள்ள கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டிருக்

கின்றனர். ஈசாக்கின் பலி கிறிஸ்துவுக்கு ஒரு அடையாளம். அப்பலியை முழுமையாக நிறைவேற்றிக் காண்பித்தவர் கிறிஸ்துவே; ஈசாக்கின்பலி கிறிஸ்தவர்களுக்கு ஒரு அடையாளம்; ஏனெனில் அவர்களே ஆவியில் ஆபிரகாமின் வித்துக்கள். இத்தகைய கருத்தினை ஆதி திருச்சபை விரிவாகப் போதித்து வந்திருக்கின்றது.

ஈசாக்கின் ஏற்பாடு *(TESTAMENT OF ISAAC)*

ஒருவேளை கி.மு. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு பழைய ஏற்பாட்டு போலி வாழ்க்கை நூலாகும். இதை கி.பி.2-ஆம் அல்லது 3-ஆம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் மாற்றி அமைத்தனர். ஆனால் அதன் மூலத் தன்மையைப் பாதுகாத்தனர். இது கும்ரான் குழுவின் போக்கை ஒத்திருக்கிறது. நோன்பு, சடங்கு, ஒழுக்கத் தூய்மை ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன.

ஈசாய் - *(JESSE)*

இப்பெயர் அபிசாய் என்ற பெயரின் கருக்கமாகலாம். இவர் யூதா இனத்தவரும் பேரேசின் வழித்தோன்றலும் போவாசு, ரூத் ஆகியோரின் பேரனும், ஓபேத்தின் மகனும், அரசன் தாவீதின் தந்தையுமாவார் (ரூத் 4:21-22; மத் 1:5-6; லூக் 3:31-32).

ஈசாய் யூதா இனத்தைச் சேர்ந்த ஒரு நிலக்கிழார். பெத்லகேமின் பெரியோர்களில் ஒருவர் (1 சாமு 16:4-5). இவருக்கு ஏழு புதல்வர்கள் இருந்தனர் என்று கூறப்பட்டாலும் நான்கு பேரின் பெயர்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களில் கடைசியானவர் தாவீது ஆவார் (17:12-14; 1 நாள் 2:13-15). சவுலின் அரசவைக்கு தாவீது அழைக்கப்பட்டபோது, ஈசாய் அரசனுக்கு அன்பளிப்பு அனுப்பி வைத்தார் (1 சாமு 16:20). பிற்காலத்தில் சவுலிடமிருந்து தப்பியோடி தாவீது அகதியாகத் திரிந்தபோது, ஈசாயும் அவரது வீட்டாரும் அதுல்லாம் குகையில் தாவீதோடு சேர்ந்து கொண்டனர். அவர்களை அவர் பாதுகாப்பிற்காக மோவாபுவுக்கு அனுப்பி வைத்தார் (22:1-4). இந்நிகழ்ச்சி மோவாபிய பெண்ணான ரூத்தின் வழியாகத் தாவீது குடும்பம் தோன்றியது என ரூத் 4:21-தொ-இல் கூறப்படும் பாரம்பரியத்தோடு ஒத்துப் போவதோடு, நெருங்கிய உறவையும் சுட்டுகிறது. தாவீது ''ஈசாயின் மகன்'' என்று நகைப்பாக அழைக்கப்பட்டாலும் (22:7-9; 1 அர 12:6), அதுவே வணக்கத்திற்குரியதாக மாறியது (1 நாள் 29:26; அ.ப.13:22). மெசிய அரசன் ''ஈசாயின் தளிர்'' என்றழைக்கப்படுவது அவர் தாவீதின் வழித்தோன்றல் என்பதைக் குறிக்கிறது. இப்பதம் இறைவனது வாக்குறுதிகள் மெசியாவில் நிறைவேறுதலின் அடையாளமாயிற்று (ஏச 11:1-10; உரோ 15:12).

ஈசி *(ISHI)* - இறைவனின் பெயர்

இஸ்ராயேலோடு இறைவன் கொண்டிருந்த உடன்படிக்கையை எடுத்துக் காட்டும், இறைவனுக்குச் சாற்றிக் கூறப்படும் அடையாளப் பெயராகும் (ஒசே.2:18). இதை சில வாசகங்கள் ''என் கணவன்'' என்று மொழி பெயர்க்கின்றன. புறவினத்தாரைப் போன்று ''பாகால்'' என்று இறைவனை அழைக்காமல், மீட்பின் நாளில் இஸ்ராயேலர்கள் இறைவனை இப்பெயர்கொண்டு அழைப்பர்.

ஈசி *(SHI* - இறைவன் காப்பாற்றி விட்டார், நலம் தருகின்றன) - ஆள்

1. யூதா இனத்தைச் சேர்ந்த எரகுமேல் குலத்தைச் சேர்ந்த ஒருவர். அப்பாயிமின் மகன் (1 நாள் 2:31).

2. யூதா இனத்தவருள் ஒருவர். சோகேத்து, பென்சோகேத்து ஆகியோரின் தந்தை (1 நாள் 4:20).

3. சிமியோனின் வழித் தோன்றல்களில் ஒருவர். இவரின் புதல்வர்கள் அமலேக்கியரைச் சேயீர் மலையில் தோற்கடித்து, அங்கு குடியேறினர் (1 நாள் 4:42-43).

4. மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரின் குடும்பத் தலைவர்களில் ஒருவர் (1 நாள் 5:24). இக்குடும்பம் யோர்தானுக்கு அப்பாலுள்ள பகுதியைக் கொண்டிருந்தது.

ஈசோப்பு அல்லது ஏசோப்பு *(HYSSOP)*

ஈசோப்பு என்பது சீரிய நாட்டு மணப்பூண்டுச் செடி என்றும் கூறப்படும் ஒருவகை

சிறிய புதர்ச்செடியாகும். யோவா 19:29-இல் இது குறிக்கப்படுவதால், இது எத்தகைய செடி என்பது பற்றி பல நூற்றாண்டுகளாக விவாதங்கள் நடந்துள்ளன. கிரேக்க சொல்லின் பொருள் முழுமையாக கூறப்படாவிட்டாலும் இது இன்னும் பதினொரு இடங்களில் குறிக்கப்படுவதால், அதன் பொருளைக் கண்டுபிடிப்பது அதிக கடினமானதன்று. இது நீல நிற மலர்களுடன் தென் ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் செடிஅன்று, ஏனெனில் இது பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்ததன்று.

முதல் பாஸ்காவின் போது, பலியிடப்பட்ட செம்மறியாட்டின் இரத்தத்தை எபிரேய வீடுகளின் வாசலின் மேற்புறத்தில் பூச "ஈசோப் கொத்து" பயன்பட்டதாகக் குறிக்கப்பட்டிருப்பது (யாத் 12:22), மற்ற பல குறிப்புகளுக்கு அடிப்படையாக இருக்கலாம். தொழுநோயை தூய்மைப்படுத்துவது பற்றிய லேவியர் சடங்குகளில் (லேவி 14:4. 6.49. 51-52), செங்கிடாறி சடங்கு (எண் 19:6. 18) ஆகிய சடங்குகளில் கேதுருக் கட்டை மற்றும் சிவப்பு நூல் ஆகியவற்றுடன் ஈசோப்பும் குறிப்பிடப்படுகிறது. லேவியர் சட்டத்தில் இவை மூன்றும் சேர்ந்து பலி பறவையின் இரத்தத்தில் தோய்க்கப்பட்டு தொழுநோயிலிருந்து தூய்மைப்படுத்தப்பட வேண்டிய மனிதன் அல்லது வீட்டின்மீது ஏழுமுறை தெளிக்கப்பட்டது. செங்கிடாறிச் சடங்கில் பலியிடப்படும் செங்கிடாறியுடன் சேர்த்து இவைமூன்றும் எரிக்கப்பட்டன.

அரசராகம ஆசிரியர் சாலமோனைப்பற்றி கூறும்போது, "கேதுருவிலிருந்து... சுவரிலிருந்து கிளம்பும் ஈசோப்புவரை மரங்களைப் பற்றி பேசினார்" (1 அர 4:33) என்கிறார். இச்சொற்றொடர் மிகப்பெரிய மரத்திலிருந்து மிகவும் தாழ்ந்த புதர்ச் செடிவரை அனைத்து மரவகைகளையும் குறிப்பிடுகின்றது. தாவீதுக்குரியதாக கூறப்படும் மன்னிப்பு சங்கீதத்தில், தூய்மைப்படுத்தும் சடங்கில் ஈசோப்பினை அடையாள உபயோகமாக அரசர் குறிப்பிடுகிறார் (ஈசோப்பினால் என்னை தூய்மையாக்கும் சங் 50:7).

மோசே சீனாய் மலையின் மேல் பழைய உடன்படிக்கையைப்பற்றி வாசித்த பின்னர் (யாத் 24:6-8) செந்நிற கம்பளி மற்றும் ஈசோப்பினால் இரத்தத்தினையும் நீரையும் மக்கள்மீதும் புத்தகத்தின்மீதும் தெளித்து முத்திரையிடுவதையும் பற்றி எபி 9:19 குறிப்பிடுகிறது. ஆனால், பழைய ஏற்பாட்டுப் பகுதி ஈசோப்பினைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை.

மத் 27:48; மாற் 15:36 ஆகிய பகுதிகள் கோலினைப்பற்றி குறிப்பிட்டாலும், யோவா 19:29-இன் படி சிலுவையில் இயேசுவிற்கு காடியினை அளிக்க ஈசோப்பு உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஈசோப்பு இந்நிகழ்ச்சியில் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. ஆகவே அறிஞர்கள் பலவாறு விளக்கம் அளிக்க முயன்றுள்ளனர். இப்பகுதியில் ஈசோப்புக்குப்பதிலாக ஈட்டி அல்லது வேல் என்ற சொல்லை அரமேயிக் மொழிபெயர்ப்பு பயன்படுத்துகிறது. இது, மத்தேயு, மாற்கில் வரும் கோல் என்ற சொல்லோடு ஒத்துப்போகிறது. யோவான் கையாண்ட முறை உள்நோக்கமுடையதாகவும், உருவகப் பொருளுடையதாகவும் இருக்கக்கூடுமா?

பழைய ஏற்பாட்டு மீட்பு இறையியலில் ஈசோப்பு ஒரு இணைந்த பங்கு வகித்தது. இங்கு அது இயேசுவினுடைய மரணத்தின் பலித்தன்மையைச் சுட்டலாம். மற்றொரு கருத்தின்படி ஈசோப்பும் கடற்காளானும் கோலில் வைக்கப்பட்டன. இதன்விளைவாக, ஈசோப்பு இவைகளின் குளிர்விக்கும் செயல் சேர்க்கப்படுவதால், அது குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

ஈத்தாய் (ITHAI - யாவேயோடு)

பென்யாமின் இனத்திற்குரிய கிபயாவைச் சேர்ந்த இரிபாயின் மகன் ஈத்தாய் ஆவார். தாவீதின் வலிமை மிக்க 30 படை வீரர்களுள் இவரும் ஒருவர் (1 நாள் 11:31). இந்த வாசகத்திற்கு இணையான பகுதியில் இத்தாய் (2) என்றழைக்கப்படுகிறார் (2 சாமு 23:29).

ஈத்தியேல் ([illegible] - இறைவன் என்னோடு இருக்கிறார்)

1. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த சல்லுவின் வழி மூதாதையர். நாடுகடத்தப்பட்டுத்

திரும்பியபின் இவர் எருசலேமில் வாழ்ந்தார் (நெக 11:7).

2. இவர் பழமொழி 30:1-இல் சொல்லப்படுகின்ற இருவரில் ஒருவர். மற்றவர் உக்கால் என்பவராவார். இவர்களைப் பார்த்து யாக்கேயின் மகனான ஆகூர் தனது ஞான உரையை வழங்குகிறார். ஏழுபது நூலும் வுல்கத்தாவும் மேற்கண்ட இரு பெயர்களையும் ஆட்களின் பெயராக எடுத்துக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, பலவாறான மொழி பெயர்ப்புகள் அளிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஈட்டி

இது ஒரு கூரிய எறியும் கருவியாகும். யோவாபு மூன்று ஈட்டிகளை அபிசலோமின் இதயத்தில் பாய்ச்சிக் கொன்றார் (2 சாமு 18:14).

1 மக் 6:51-இன்படி இக்கருவி இயந்திரத்திலிருந்து எறியப்பட்டது. இது எரியக்கூடிய பொருளுடன் பிணைத்து கொளுத்தப்பட்டு எறியப்பட்டது (எபே 6:16 - தீக்கணை).

ஈட்டுத்தொகை, மீட்புப் பணம்

அடிமைப்பட்ட ஒருவனை அல்லது எக்காரணத்தினாலே ஒரு குறிப்பிட்ட நிலைக்கு ஆட்பட்டவனை அந்நிலையிலிருந்து மீட்க, விடுவிக்க, அவனது சுதந்திர நிலையை மீண்டும் அடையத் தரப்படும் விலையே அல்லது பணமே ஈட்டுத்தொகை, அல்லது மீட்புப் பணம் (யாத் 21:30; 1 சாமு 14:45; யோபு 33:24; 36:18-19; சங் 49:7-9; பழ 6:35; ஏச 43:3; எரே 31:11). இயேசு வாழ்ந்த வாழ்க்கையும், அவரது துயரமும், சிலுவைச் சாவும் நாம் பாவம், சாவு, சட்டம் ஆகியவற்றினின்று விடுதலைபெற அளிக்கப்பட்ட விலையாகும் (மத் 20:28; மாற் 10:45; 1 திமோ 2:6; காண்க ஏச 52:13-53:12).

ஈயம்

நீலமும், சாம்பல் நிறமும் கலந்த உலோகப் பொருளாகும். இப்பொருள் கனமானது, எளிதில் வளையக்கூடியது, நிறம் மங்கிப் போகக்கூடியது.

ஈயம் கனமான உலோகமாகக் கருதப்பட்டது (சீரா 47:18-20). உலோகப் பொருள்களின் பட்டியலில் ஈயமானது கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (எண் 31:22; எச 22:18.20). சீராக்கு நூல் 22:14-இல் இதற்கு அறிவற்றவன் அல்லது மூடன் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. எப்படியிருப்பினும் இது ஒரு முக்கியமான உலோகமாகும். மேலும் ஈயத்தோடு வெள்ளியை சேர்த்து மட்கலத்தினுள் இட்டு உருக்கப்பட்டு தூய்மையான வெள்ளிபோக, மற்றவைகள் நீக்கப்படுகின்றன (எரே 6:27-30). ஈயமானது எடைகுண்டுகள், மீன் வலையில் இணைக்கப்பட்டுள்ள குண்டுகள் (யாத் 15:10), தூக்கு நூல் குண்டுகள், கனமான மூடிகள் (செக் 5:7-8) தயாரிக்கப் பயன்படுகின்றது. எகிப்து, பாலஸ்தீனா நாடுகளில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈயத்தால் செய்யப்பட்டிருந்த சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இரும்பு எழுத்தாணியால் பொறிக்கப்பட்ட ஈயப்பலகைகளுக்கு அல்லது பாறைகளில் வெட்டப்பட்ட எழுத்து வடிவங்களில் ஊற்றப்பட்ட ஈயத்திரவத்திற்கு யோபு ஆகமம் 19:24-இல் குறிப்புக் காணப்படுகிறது. ஆமோ 7:7-8-இல் 'தூக்கு நூற்குண்டு' என்று மொழிபெயர்க்கப்படும் எபிரேயச் சொல் 'ஈயத்தைக்' குறிக்கலாம்.

தீர் நாட்டில் வெள்ளீயம், காரீயம் போன்ற உலோகப் பொருட்கள் விற்கப்பட்டன (எச 27:12). சிறிய ஆசியாவில் ஈயச்சுரங்கங்கள் காணப்பட்டன. கி.மு.3400-க்கு முன்னால் ஈயக்கலவையானது எகிப்தில் கண் மையாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஈயிம் (YIM)

இயே-அபாரிம் என்ற பெயரின் சுருக்கமாகும் (எண் 33:45).

ஈரா (IRA - கவனிப்புள்ள)

1. மனாசே இனத்தைச் சேர்ந்த யாயீர் வழி வந்தவர். இவர் தாவீதின் குருவாக இருந்த அதிகாரிகளில் ஒருவர் (2 சாமு 20:26). இப்பதவி குருத்துவத்தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இதைப் போன்ற தாவீதின் அலுவலர்கள் பட்டியலில் (2 சாமு 8:18) குருவின் அலுவல் அரசர் பணியில் முதலிடங்களை வகிப்பதாகும் என்று கூறப்பட்டுள்ளது (1 நாள் 18:17).

2. இக்கேசின் மகன். தெக்கோவா ஊரைச் சேர்ந்தவர். தாவீதின் வல்லமை மிக்க படைவீரர்களில் ஒருவர் (2 சாமு 23:26; 1 நாள்

11:28). தாவீதின் படையில் ஆறாவது மாதத்திற்குப் பொறுப்பான பிரிவிற்கு இவர் தலைவனாய் இருந்தார் *(1 நாள் 27:9)*.

3. இதிரியரான இவர் தாவீதின் வலிமைமிக்க 30 வீரர்களில் ஒருவர் *(2 சாமு 23:38; 1 நாள் 11:40)*. இவரை யாயீரியர் என்றழைக்கும் சில பழங்கால வாசகங்களின் அடிப்படையில் 1-இல் மேலே குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

ஈராது *(IRAD - வேகமான)*

யாவே பாரம்பரியப்படி காயின் வழித்தோன்றல்களில் பெருவெள்ளத்திற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த மூதாதையரில் ஒருவர். காயினின் பேரனும் ஏனோக்கின் மகனும் ஆவார். இவர் மெகுயாவேலின் தந்தையாவார் *(ஆதி 4:18)*. ஆதி 5:15-20-இல் வரும் யாரேத்தும் இவரும் ஒருவராகக் கருதப்படுகின்றனர்.

ஈராம் *(IRAM - விழிப்புள்ள)*

ஏதோம் இனத்தில் குலமுதல்வர்களில் ஒருவர் *(ஆதி 36:43; 1 நாள் 1:54)*.

ஈரி *(IRI - கவனிப்புள்ள)*

இவர் பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர் *(1 நாள் 7:7)*. ஒரு வேளை ஈரி என்பதும் ஈர் என்பதும் ஒரே பெயராக இருக்கலாம்.

ஈரு *(IRU - கவனிப்பவன்)*

யூதா குலத்தினரின் தலைமுறைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எப்புன்னேயின் வழிவந்த காலேபின் புதல்வர்களில் ஒருவர் *(1 நாள் 4:15)*.

ஈரோன் *(YIRON)*

நப்தலி இனப் பகுதியிலுள்ள நன்கு பாதுகாப்புடைய நகரமாகும் *(யோசு 19:38)*. இது ஒரு வேளை இக்கால யாருனாக இருக்கலாம்.

ஈர் *(IR - கழுதைக் குட்டி, காவலாளி)*

பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர் *(1 நாள் 7:12)*. 1 நாள் 7:7-இல் குறிப்பிட்டிருக்கும் உராயி (ஈரி) என்பவரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

ஈர்சேமேசு *(IR-SHEMESH - சூரியன் நகரம்)*

தாண் இனத்தவருக்கு அளிக்கப்பட்ட கானானிய நகரம் *(யோசு 19:41)*. தாண் இனத்தவர் வெல்ல முடியாத கார்-கரேச நகரமாக இருக்கலாம் *(1:35)*. மற்ற இடங்களில் பேத்துசெமேசு (1) என்றழைக்கப்படுகிறது. இவ்விடம் தேல்-ஏர்-ரூமெயிலே என்று அடையாளம் காட்டப்படுகிறது.

ஈர்நாகாசு *(IR-NAHASH - பாம்பின் நகரம்)*

இப்பெயர் நகரையா அல்லது ஆளையா குறிக்கிறது என்பது தெளிவாக இல்லை. யூதா குலத்தினர் வாழ்ந்த ஒரு நகரம். இது எங்கிருந்தது என்பது தெரியவில்லை *(1 நாள் 4:12)*. 1 நாள் 4:14-இல் ''தொழிலாளிகளின் பள்ளத்தாக்கு'' பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இப்பகுதி எழுதப் பெற்ற காலத்தைக் கணித்துக் கொள்ளலாம் (காண்க நெக 11:35). அப்படியானால், இந்நகரம் பென்யாமின் நாட்டில் எருசலேமுக்கு வடக்கே இருந்திருக்க வேண்டும்.

பெயித் கிப்ரினுக்கு அருகில் உள்ள தெயிர் நாகாஸ்தான் இந்நகரம் என்று சிலர் கூறுவதை நாம் புறக்கணிக்க முடியாது. ஆனால் இந்நகரம் அராபாவிற்கு வட எல்லைக்கருகிலுள்ள கிர்பெத் ஏன்-நாகாஸ் தான் என்று கூறுவது அநேகமாக தவறானதாகும்.

1 நாள் 4:12-இல் யூதாவைச் சேர்ந்த தெஹின்னா ஈர்நாகாசின் தந்தையராக அல்லது நிறுவியவராக விவரிக்கப்படுகிறார்.

ஈர்ப்பேல் *(IRPEEL - இறைவன் குணமளிக்கிறார்)*

பென்யாமின் குலத்தாருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு நகரம் *(யோசு 18:27)*. இதனோடு குறிப்பிடப்பட்டிருக்கும் மற்ற நகரங்களிலிருந்து, இந்நகர் எருசலேமிற்கு வட மேற்கில் உள்ள மலைப் பகுதியில் அமைந்திருந்தது என்பது தெளிவாகிறது. இந்நகர் அநேகமாக எருசலேமிலிருந்து வடமேற்காக 10.5 கி.மீ. தொலைவிலும், கிபயோனுக்கு வடக்கிலும் அமைந்துள்ள இக்கால ராபாத் நகரமாக இருக்கலாம்.

ஈலாய் *(ILAI - உயர்த்தப்பட்ட)*

அகோகியரான ஈலாய் தாவீதின் வலிமைமிக்க 30 படைவீரர்களுள் ஒருவராவர் *(1 நாள் 11:29)*. 2 சாமு 23:28-இல் இவர் சல்மோன் என்று அழைக்கப்படுகின்றார்.

வரைபடம் 1


முதுபெரும் தந்தையர் காலத்து
விவிலிய உலகு
ஆபிரகாமின் அழைப்பும் பயணமும்
காஸ்பியன் கடல்
மத்தியதரைக் கடல்
செங்கடல்
பாரசீக வளைகுடா
இத்தியார்
கோமேர்
அராரத்து
மெசபொத்தாமியா
யூப்பிரத்தீசு நதி
திகிரிசு நதி
அக்காது
பாபிலோனியா
பாபிலோன்
ஊர்
மாரி
நினிவே
அசிரியா
காலாகு
அசூர்
ஆரான்
தோகருமா
கர்க்கமிசு
அலெப்போ
அமாது
உகரித்து
பிபுலோசு
சீதோன்
தமஸ்கு
ஆசோர்
மெகிதோ
செக்கேம்
அம்மோன்
ஆயி
பெத்தேல்
சோவான்
சாலேம்
கெரார்
கெபிரோன்
மம்ரே
பெயேர்-செபா
ஏதோம்
லோத்து
கெலியோப்பொலி
பிரமிடுகள்
சீனாய்
மிதியான்
தெதான்
அரேபியா
பாலைவனம்
லிபியா
எ ப் து
0 100 200 300 400 500



இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணம்

(அறிஞர்களின் பொதுவான கருத்துப்படி)


கானான் நாடு
(இஸ்ராயேலின் 12 கோத்திரங்கள்
வாழ்ந்த நிலப்பகுதிகள்)
0 5 10 20 40
சீதோன்
சீதோனியர்
லெபனோன் மலை
சீரியா
தமஸ்கு
எர்மோன் மலை
தீர்
தாண்
காதேசு
காசோர்
மேரோம் ஏரி
ஆக்கோ
யோர்தான் நதி
பாசான்
கின்னரோத் ஏரி
கோலான்
கர்மேல் மலை
தாபோர் மலை
தோர்
தானாக்கு
பெத்சான்
தோத்தான்
பெருங்கடல்
கிலெயாது
எபால் மலை
கெரிசிம் மலை
செக்கேம்
இராமோத்து
பெனுவேல்
சுக்கோத்து
அமோரியர்
யோப்பா
சீலோ
ஒபிரா
யாசேர்
இரபா
எக்கரோன்
பெத்தேல்
ஆயி
எரிகோ
கில்கால்
இராமா
எருசலேம்
எசிபோன்
நெபோ மலை
பெத்லகேம்
அசோத்து
அஸ்கலோன்
பிலிஸ்தியர்
கெபிரோன்
சீப்பு
சாக்கடல்
பெசேர்
அரேபியர்
காசா
தெபீர்
பெயேர் செபா
அரோயேர்
இத்தியர்
மோவாபியர்
இராகொபோத்து
தாமார்
ஏதோம்
1 2 3 4 5 6 7 8 9 10 11 12
1. ரூபன்
2. சிமியோன்
3. மனாசே
4. யூதா
5. தாண்
6. நப்தலி
7. காது
8. ஆசேர்
9. இசக்கார்
10. செபுலோன்
11. எப்பிராயீம்
12. பென்யமீன்


சைப்ரஸ்
தாவீது-சலமோனின் பேரரசு
(கி.மு. 1000-930)
பெனிசியா
சோபா
பெருங்கடல்
இஸ்ராயேல்
அம்மோன்
யூதா
மோவாபு
ஏதோம்
அரேபிய பாலைவனம்

வரைபடம் V


பாலஸ்தீன் நாடு
(இயேசுவின் காலத்தில்)
Scale: 1 1,700,000
0 5 10 15 20
வ
சீதோன்
லெபனோன் மலை
இத்துரேயா
அபிலேன்
தமஸ்கு
சரெப்தா
எர்மோன் மலை
சீரியா
தீர்
பெனிக்கியா
பிலிப்புச் செசரியா
தாண்
திரக்கோனித்து
கொராசின்
பெத்து சயிதா
கப்பர்நகூம்
தொலமாய்
கானாவூர்
மகதலா
கலிலேயா
கலிலேயாக் கடல்
கர்மேல் மலை
திபேரியா
நாசரேத்து
தாபோர் மலை
காதாரா
நயீன்
சலேம்
தெக்காப்பொலி
செசரியா
சமாரியா
ஐனோன்
யோர்தான் நதி
சமாரியா
ஏபால் மலை
கெரிசிம் மலை
சிக்கார்
செக்கேம்
அப்பொல்லோனியா
யாக்கோபின் கிணறு
கெராசா
அந்திப்பத்திரி
யோப்பா
அரிமத்தியா
பேத்து பாரா
பெத்தேல்
எப்பிராயிம்
இலிதா
பிலதெல்பியா
எரிகோ
ஒலிவ மலை
எம்மாவு
பெரயா
எருசலேம்
கும்ரான்
அயின் கெரேம்
எசிபோன்
பெத்தானியா
அசோத்து
யூதேயா
பெத்திலகேம்
அசுக்கலோன்
யூதேயாவின் பாலைநிலம்
சாக்கடல்
காசா
எபிரோன்
பெயேர்-செபா
இதுமேயா
மத்தியதரைக்கடல்



பெத்து சயிதா குளம்
இயேசு தீர்ப்பிடப்படுதல்
பிலாத்து அரண்மனை (அந்தோனியா)
எரிகோ
தமஸ்கு வாயில்
கொல்கொத்தா
சிலுவை சுமந்து செல்லல்
போதித்தல்
ஆலயம்
தங்க வாயில்
வியாபாரிகளைத் துரத்துதல்
அரச முற்றம்
கெதுசமனித் தோட்டம் (இயேசு பிடிபடுதல்)
பாலம்
அழைத்துச்
ஏரோது அந்திப்பாவின் அரண்மனை
யோப்பா
பெத்லேகேம்
ஒலிவ மலை
அழைத்துச் செல்லப்படுதல்
கயபாவிடம்
இயேசு ஆலோசனைக் குழுவின் முன்னிலையில்
கயபா (அரண்மனை)
பேதுரு மறுதலித்தல்
கெதுசமனித் தோட்டத்துக்கு
சீலோவாம் குளம்
பெத்தானியாவிலிருந்து வருதல்
இரத்த நிலம் (குயவன் நிலம்)
இன்னோம் பள்ளத்தாக்கு
1
2
3
4
5
6
7
8
9
எருசலேம் — பாடுகளின் பாதை
மீட்டர்
0 50 100 150

வரைபடம் VII



புனித பவுலின் தூதுரைப் பயணங்கள்
கருங்கடல்
மத்தியதரைக் கடல்
அதிரியாக் கடல்
இத்தாலியா
சிசிலி
மால்த்தா
கிரேத்து
லிபியா
எகிப்து
தல்மாத்தியா
மக்கதோனியா
திராக்கே
மோசியா
தாகியா
ஆசியா
கலாத்தியா
கப்பதோக்கியா
சிலிசியா
பம்பிலியா
சைப்பிரஸ்
சீரியா
0 100 200 300


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
இரண்டாம் பயணம்
கி.பி. 49—52 (அப். பணி 15:39—18:22)
மூன்றாம் பயணம்
கி.பி. 53—57 (அப். பணி 18:22—21:16)
கருங்கடல்
போந்து
பித்தினியா
மீசியா
ஆசியா
பிரிகியா
கலாத்தியா
பிசிதியா
பம்பிலியா
கிலிசியா
சீரியா
பெனிக்கியா
சைப்ரஸ்
கிரேத்து
மத்தியதரைக்கடல்
எகிப்து
மக்கதோனியா
அம்பிப்பொலிஸ்
பிலிப்பி
தெசலோனிக்கா
பெரோயா
நெயாப்பொலி
சமொத்திராக்கு
துரோவா
ஆசோ
மித்திலேன்
கீயு
சாமு
எபேசு
மிலேத்து
கோசு
உரோது
பாத்தரா
சிமிருனா
சர்தை
தியத்திரா
இக்கோனியா
இலிஸ்திரா
தெர்பை
தார்சு
அந்தியோக்கியா
செலூக்கியா
தீர்
தொலமாய்
செசரியா
எருசலேம்
அலக்சாந்திரியா
கொரிந்து
அக்காயா
அத்தேன்ஸ்
0 100 200 300

ஆசிரியரது பிற நூல்கள்

விவிலிய அறிமுக நூல்கள்

1.	"தோரா" அல்லது "ஐந்நூல்"	(ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்)
2.	வரலாற்று நாயகன்	(யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2, அரசர்கள், 1,2 நாள், எஸ்ரா, நெகேமியா, 1,2, மக்கபேயர்கள்)
3.	இஸ்ராயேலின் காவலர்கள் – I	(பொது முன்னுரை, ஆமோஸ் ஒசேயா, மீக்கா)
4.	இஸ்ராயேலின் காவலர்கள் – II	(எசாயா, செப்பனியா, நாகூப், அபக்கூக்கு, எரேமியா, எசேக்கியேல், ஆகாய், செக்கரியா, ஒதியா, மாலக்கி, யோவேல்)
5.	ஞான நூல்கள்	(யோபு, பழமொழி, சங்கீதங்கள், திருவுரை, உன்னத சங்கீதம், ஞானநூல், சீராக்கு)
6.	சில கதைகளும் காட்சிகளும்	(யோனா, ரூத்து, தோபியா, எஸ்தர், புலம்பல், பாரூக்கு, தானியேல், யூதித்து)
7.	நான்கு வடிவ நற்செய்திகள்	(மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகள்)
8.	புனித பவுலின் திருமுகங்கள் – I	(பவுலின் வாழ்க்கை வரலாறு, மற்றும் 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 & 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன் ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்கள்)
9.	புனித பவுலின் திருமுகங்கள் – II	(2–ஆம் தெசலோனிக்கர், கொலோசையர், எபேசியர், தீத்து, 1–ஆம், 2–ஆம் திமொத்தேயு ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்களும், பவுலின் இறையியலும்)

விளக்கவுரை நூல்

10.	லூக்காவின் நற்செய்தி	(அருள்வாக்கு மன்றப்பதிப்பு)
11.	விவிலியச் சித்திரக் கதைகள்	**பழைய ஏற்பாடு:** (காயின் ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சிம்சோன் ரூத்து, சாமுவேல், சவுல், தாவீது, அரசன் தாவீது)
12.	விவிலியக் களஞ்சியம் – I	**புதிய ஏற்பாடு:**
13.	விவிலியக் களஞ்சியம் – II	
14.	விவிலியக் களஞ்சியம் – III	
15.	விவிலியக் களஞ்சியம் – IV	
16.	விவிலியக் களஞ்சியம் – V	

தயாரிப்பில் உள்ளவை :

1. விவிலியச் சித்திரக் கதைகள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)

கிடைக்குமிடம்

தியான ஆசிரமம்

13, மாதா கோவில் தெரு, சென்னை – 600 028.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

"தியாகு"

விவிலியக் களஞ்சியம்

II

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்
சென்னை - 28

விவிலியக் களஞ்சியம்

II

உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ,
க, கா, கி, கீ, கு, கூ

பதிப்பாசிரியர்
"தியாகு"

விவிலிய அறிமுகம்
தியான ஆசிரமம்
சென்னை-28.

முதல் பதிப்பு : மே 1992
மறுபதிப்பு : ஜூன் 1995
மறுபதிப்பு : ஜனவரி 1998
மறுபதிப்பு : அக்டோபர் 2002
மறுபதிப்பு : நவம்பர் 2005
மறுபதிப்பு : அக்டோபர் 2010

Nihil Obstat
P.C. Thomas.

Imprimatur
+ M. Arockiasamy,
Archbishop of Madurai.

விலை : ரூ 250/-

நூல் கிடைக்கும் இடங்கள்
அருள் கடல்
சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை
மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

Type Setting : Savithri Laser Printing, Chennai.

Printed at : **Hi-Tech Offset Private Limited,**
#11, Srinivasa Nagar Main Road,
Koyambedu, Chennai - 107.
Ph : 044-2479 3339

அர்ப்பணம்

இறைவனின் வார்த்தையை இதயத்தில் ஏற்று வார்த்தையாம் இறைவனை உதரத்தில் வளர்த்து மனு உருவான வார்த்தையை உலகிற்கு அளித்த இறைவனின் அன்னையாம் மரியாளுக்கு அன்பு கலந்த அர்ப்பணம்

முன்னுரை

விவிலியக் களஞ்சியம் - இரண்டாம் பாகத்தைத் தமிழ்கூர் நல்லுலகிற்கு அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். தமிழ்க் கிறிஸ்தவர்கள் முதல் பாகத்திற்கு அளித்த ஆர்வமிக்க வரவேற்பு, இம்முயற்சியைத் தொடர்ந்து செய்து இந்த இரண்டாம் பாகத்தை வெளிக் கொணரப் பெரிதும் உற்சாக மூட்டியது. இந்த வரவேற்பு அளித்த அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றி.

இங்குச் சில குறிப்புகள் தருவது நல்லது. ஆள், இடம் ஆகியவற்றின் பெயர்களின் மூல எபிரேய, கிரேக்க உச்சரிப்புக்கள் தமிழ் இலக்கண மரபுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. உதவியாக ஆங்கிலச் சொற்களும் அடைப்புக் குறிகளுக்குள் தரப்பட்டுள்ளன. சங்கீதங்களின் எண்கள் எபிரேய முறையில் தரப்பட்டுள்ளன. இறையியல் கட்டுரைகளில் பெரும்பகுதி Xavier Leon-Dufour இன் Dictionary of Biblical Theology என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டுள்ளன.

இனி நன்றி நவில்தல் என்ற இனிய கடமைக்கு வருகிறேன். முதல் பகுதிக்கு எழுதிய முன்னுரையில், தமிழ்க் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் முதல் முயற்சியான இது பலர் சேர்ந்த கூட்டு முயற்சி என்று கூறியிருந்தேன். இவர்கள் பல கட்டுரைகளின் பொருட்களையும் செய்திகளையும் தொகுத்துத் தருவதில் பெரிதும் உதவியுள்ளனர். ஒவ்வொருகட்டுரைக்குப் பின்னும் அதைத் தொகுத்தவரின் பெயர் கொடுக்கப்படவில்லை. இவர்கள் அனைவரின பெயர்ப் பட்டியல் பின்பு தரப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் என்று நன்றி உரித்தாகுக.

இந்நூலகத்தொகுப்பைத் திட்டம் செய்த காலத்தில், அறிவுரை கூறியும் உற்சாகப்படுத்தியும் பொருள் உதவி நல்கியும் ஊக்கமளித்த மேதகு கர்தினால் சைமன் D. லூர்துசாமி ஆண்டகை அவர்களுக்கு எனது உளம்கனிந்த நன்றி உரியதாகும். தயாரிப்புக் காலத்தில் பொருள் உதவிசெய்த Adam Schall von Bell E.V., Koln, பதிப்பித்தலுக்குப் பொருள் உதவி செய்த Missio, Munchen ஆகிய இரு நிறுவத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றி. இவர்களின் உதவியின்றி இந்நூலை இவ்வளவு மலிவாகக் கொணர்ந்திருக்க முடியாது.

முதல் பகுதிக்கு அணிந்துரை வழங்கிய, தமிழ்நாடு விவிலிய ஆணைக்குழுத் தலைவர், மதுரைப் பேராயர் மேதகு M. ஆரோக்கியசாமி ஆண்டகையே இப்பகுதிக்கும் அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும், இறையியல் கட்டுரைகளில் பலவற்றைத் தணிக்கை செய்து உதவிய அருட் தந்தை P.C. தாமஸ் அடிகளார்க்கும், இப்பகுதியின் தயாரிப்பில் நெடுகலும் பிரதிகளைத் திருத்தியும் பலவாறு உதவியும் செய்து வந்துள்ள தமிழாசிரியர் U. மீனாட்சி சுந்தரம், அருட்தந்தையர்கள் சேவியர் இளங்கோ, U. சுந்தரம் ஆகியோர்களுக்குச் சிறப்பான முறையில் நன்றிகூறுகிறேன். இம்முயற்சியில் எனக்கு ஊக்கமளித்த இயேசுசபை மதுரை மாநில முன்னாள் தலைவர் அருட்தந்தை மைக்கிள் ஜெயராஜ் அடிகளார்க்கும், தயாரிப்புக் காலத்தில் எங்கள் குழு தங்குவதற்கு இடமளித்து, விருந்தோம்பி நல்லுதவிகள் செய்த திருச்சிராப்பள்ளி, புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியினருக்கும், அன்போடு பராமரித்து உதவிசெய்த எனது இல்லங்களாகிய லோயோலாக் கல்லூரி, தியான ஆசிரமம் ஆகியவற்றின் இயேசுசபைச் சகோதரர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. வரைபடங்கள் கொடுத்துதவிய திண்டிவனம், தமிழ்நாடு முப்பணிநிலையத்தனருக்கும் எனது மனமுவந்த நன்றி. அச்சு அமைத்த Savithri Laser Printers, Hi-Tech Offset Private Limited, சென்னை ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இறைவார்த்தையை நன்குணர்ந்து, அன்பு செய்து, அதன்படி வாழ்வதற்கு இந்த விவிலியக் களஞ்சியம் பெரிதும் துணை செய்யும் என்று நம்புகிறேன். இக்களஞ்சியத்தைத் தயாரிப்பதில் நெடுகலும் ஊக்கமும் உரனும் அளித்து வழிநடத்திய இறைவன் திருவருள் துணைக்குச் சிரம்தாழ்த்தி நன்றியுடன் வணக்கம் செலுத்துகிறேன். இந்நூலும் இதற்குப்பின் வரும் நூல்களும் விவிலிய அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையில் இந்நூலை வெளியிடுகிறேன்.

"தியாகு"

விவிலியக் களஞ்சியம்
அணிந்துரை

சுவாமி 'தியாகு'வின் விவிலியக் களஞ்சியம் (2-ஆம் பகுதி) விரைவில் வெளிவருவது மகிழ்ச்சியான செய்தி, பாராட்டுக்குரிய நிகழ்ச்சி. ஏறத்தாழ 1000 பக்கங்களைக் கொண்ட இப்பகுதி உயிரெழுத்தில் உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, மெய்யெழுத்தில் க, கா, கி, கீ, கு, கூ எழுத்துக்களில் தொடங்கும் தலைப்புகள் கொண்டது.

முதல் பகுதி ஒரு கனிமரத்தோப்பு என்று சொன்னது உண்மையே. பலருக்குப் பயன்பட்டுள்ளது. தமிழகக் குருக்கள் அதைச் சுவைத்துள்ளனர். துறவறச் சகோதரிகளும் அதைச் சுவைப்பர் என எதிர்பார்க்கலாம். இரண்டாயிரம் பிரதிகளாக அச்சிடப்பட்ட அம்முதற்பகுதியில் இருநூறு பிரதிகளே எஞ்சியுள்ளன.

தமிழகக் கிறிஸ்தவர்கள் இந்தப் பழத்தோப்பை மேன்மேலும் பயன்படுத்துவார்களாக. இத்தோப்பை நாளும் பேலி வளர்த்து வரும் ''தியாகு'' சுவாமியின் பணி நிலைத்த பயன் அளிப்பதாக.

+ M. ஆரோக்கியசாமி,
மதுரைப் பேராயர்,
தமிழ்நாடு விவிலிய ஆணைக்குழுத் தலைவர்.

இந்நூலைத் தயாரிப்பதில் உடன் உழைத்தவர்கள்

அந்தோனிசாமி A.
அந்தோனிராஜ்
அமல்ராஜ் P.T.
அம்புரோஸ் G.
ஆரோக்கியசாமி C.
ஆரோக்கிய நாதன் P.
ஆன்ரு டிரோஸ்
இருதயராஜ் A.
இதயன் A.
உபால்டு M.
சந்தனசாமி
சந்தியாகு M.
சவரிமுத்து X.
சார்லஸ் குமார் N.A.
சுந்தரம் B.
சுந்தரம் U.
சூசை ஆரோக்கியசாமி
சேவியர் இளங்கோ
ஜான்சன் ராஜ் S.
ஜெரால்டு S.
ஜேம்ஸ் ரொசாரியோ B.
ஜோ I.F.
ஜோ லாரன்ஸ்
ஜோசப் லயனல் S
ஜோனாஸ் N.
ஞானப்பிரகாசம் F.
தாஸ் F.X.
தீஸ்மஸ் P.
பாப்புராஜ் B.
பால்ராஜ் B.
பால்ராஜ் L.
பீட்டர் சகாயராஜ்
பிரான்சீஸ் M.
போனவென்சர்
மரிய அருள்
மரியதாஸ் I.
லூர்து Y.A.
லூர்து சாமி A.
லூர்துராஜ் G.G.
வின்சென்ட் G.

விவிலியத் திருறைப் பட்டியலும் சுருக்கக் குறிப்பும்

I. பழைய ஏற்பாடு

1.	ஆதி ஆகமம் (தொடக்கநூல்)	ஆதி.
2.	யாத்திராகமம் (விடுதலைப் பயணநூல்)	யாத்
3.	லேவியராகமம் (திருப்பணியாளர் நூல்)	லேவி
4.	எண்ணாகமம் (எண்ணிக்கை நூல்)	எண்
5.	உப ஆகமம் (துணைச்சட்டநூல்)	உப
6.	யோசுவா ஆகமம்	யோசு
7.	நீதிபதிகள் ஆகமம் (விடுதலைத் தலைவர்கள் நூல்)	நீதி
8.	ரூத்து ஆகமம்	ரூத்
9	1 சாமுவேல் ஆகமம்	1 சாமு
10.	2 சாமுவேல் ஆகமம்	2 சாமு
11.	1 அரசர்கள் ஆகமம்	1 அர
12.	2 அரசர்கள் ஆகமம்	2 அர
13.	1 நாள் ஆகமம் (ஆட்சிக் குறிப்பேடு)	1 நாள்
14.	2 நாள் ஆகமம் (2 ஆட்சிக் குறிப்பேடு)	2 நாள்
15.	எஸ்ரா ஆகமம்	எஸ்
16.	நெகமியா ஆகமம்	நெக
17.	தோபியா ஆகமம்	தோபி
18.	யூதித்து ஆகமம்	யூதி
19.	எஸ்தர் ஆகமம்	எஸ்த
20.	யோபு ஆகமம்	யோபு
21.	சங்கீதங்கள் (திருப்பாடல்கள்)	சங்
22.	பழமொழி ஆகமம் (நீதி மொழிகள்)	பழ
23.	திருவுரையாளர் ஆகமம்	திருவுரை
24.	உன்னத சங்கீதம் (பேரின்பப் பாடல்)	உ.ச.
25.	ஞான ஆகமம்	ஞான
26.	சீராக்கு ஆகமம்	சீரா
27.	ஏசயா ஆகமம்	ஏச
28.	எரேமியா ஆகமம்	எரே
29.	புலம்பல் ஆகமம்	புல
30.	பாரூக்கு ஆகமம்	பாரூ
31.	எசக்கியேல் ஆகமம்	எச
32.	தானியேல் ஆகமம்	தானி
33.	ஓசேயா ஆகமம்	ஓசே
34.	யோவேல் ஆகமம்	யோவே
35.	ஆமோஸ் ஆகமம்	ஆமோ
36.	ஒபதியா ஆகமம்	ஒப
37.	யோனா ஆகமம்	யோனா
38.	மீக்கா ஆகமம்	மீக்
39.	நாகூம் ஆகமம்	நாகூ
40.	அபக்கூக் ஆகமம்	அப
41.	செப்பானியா ஆகமம்	செப்
42.	ஆகாய் ஆகமம்	ஆகா
43.	செக்கரியா ஆகமம்	செக்
44.	மலாக்கி ஆகமம்	மலா
45.	1 மக்கபேயர் ஆகமம்	1 மக்
46.	2 மக்கபேயர் ஆகமம்	2 மக்

II. புதிய ஏற்பாடு

47.	மத்தேயு நற்செய்தி	மத்
48.	மாற்கு நற்செய்தி	மாற்
49.	லூக்கா நற்செய்தி	லூக்
50.	யோவான் நற்செய்தி	யோவா
51.	அப்போஸ்தலர் பணிநூல் (திருத்தூதுவர் நூல்)	அ.ப.
52.	உரோமையர்	உரோ
53.	1 கொரிந்தியர்	1 கொரி
54.	2 கொரிந்தியர்	2 கொரி
55.	கலாத்தியர்	கலா
56.	எபேசியர்	எபே
57.	பிலிப்பியர்	பிலி
58.	கொலோசியர்	கொலோ
59.	1 தெசலோனிக்கர்	1 தெச
60.	2 தெசலோனிக்கர்	2 தெச
61.	1 திமோத்தேயு	1 திமோ
62.	2 திமோத்தேயு	2 திமோ
63.	தீத்து	தீத்
64.	பிலமோன்	பில
65.	எபிரேயர்	எபி
66.	யாக்கோபு	யாக்
67.	1 பேதுரு	1 பேதுரு
68.	2 பேதுரு	2 பேதுரு
69.	1 யோவான்	1 யோவா
70.	2 யோவான்	2 யோவா
71.	3 யோவான்	3 யோவா
72.	யூதா	யூதா
73.	திருவெளிப்பாடு	திருவெளி

துணை நின்ற நூல்கள்

Anderson G.N.	:	A Critical Introduction to the O.T.
		A History and Religion of Israel.
		The Living Word of the O.T.
A New Catholic Commentary on Holy Scripture.		
Bright J	:	A History of Israel.
Claus Schedl	:	History of the O.T.
Danielou J	:	The Lord of History
Daniel-Rops	:	Sacred History
Edman Jacob	:	God, the Lord of History
Elis P.F	:	The Men and Message of the O.T.
Grelot P	:	Introduction to the Bible
Harry Thomas Frank	:	Discovering the Biblical World
Helmer Ringgren	:	Israelite Religion
James Hastings	:	Dictionary of the Bible
Leon-Dufour X	:	Dictionary of the Bibical Theology
Louis Hartman	:	Encyclopedic Dictionary of the Bible
Mc Kenzie J.L	:	Dictionary of the Bible
Moriarty F.L	:	Introducing the O.T.
Osmund Lewry O.P	:	Introducing the O.T.
Robert A & Feuillet A	:	Introduction to the Bible
Robert A & Tricot A	:	Guide to the Bible
The Eerdmans Bible Dictionary		
The Harper's Dictionary of the Bible		
The Interpreter's Dictionary of the Bible 5 Vols		
The Jerome Biblical commentary		
The Jerusalem Bible		
Weather head	:	A Guide to the Bible
William P. Baber	:	Everyone in the Bible
''தியாகு''	:	*விவிலிய அறிமுகம் (10 பாகங்கள்)*

உ

உகாரித்து (UGARIT)

1. பண்டைய சீரிய கடலோர நகரமும் அரசுமாகும். பிற்கால வெண்கலக் காலப் பண்பாடுகள் பற்றிய அதிகமான செய்திகள் அடங்கிய ஏடுகள் இவ்விடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பழைய ஏற்பாட்டுப் பின்னணிக்கு முக்கியமுள்ள பல செய்திகளைத் தரவல்லன. இவ்விடம் இக்கால இராஸ் ஸம்ராவாகும். இது சைப்பிரசின் கிழக்கு முனைக்கு எதிராகவுள்ள சீரியன் கடற்கரையிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் இக்கால லடாக்கியாவிற்கு வடக்கில் 11 கி.மீ. தொலைவிலும் உள்ளது. கி.மு.6-ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்களால் ''வெள்ளைத் துறைமுகம்'' என்றழைக்கப்பட்ட இக்கால மினெத்து-ஏல்-பெயிதாவோடு நெருங்கிய தொடர்புபடுத்தப்படுவதும் ஆகும்.

2. அகழ்வாய்வுகள்:-

1929-இலிருந்து தொடர்ச்சியாக நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள், புதிய கற்காலத்தைச் சேர்ந்த அரண் சூழ்ந்த மூன்று காலக்கட்டத்தையுடைய ஒரு குடியிருப்பு இவ்விடத்தில் இருந்ததாகச் சுட்டுகின்றன (கி.மு.6500-5250). அதற்குப் பின் வந்த செம்புக்காலத்தைச் சேர்ந்த (5250-3000) மூன்று சிறிய குடியிருப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை வலிமையான கோட்டை கொத்தளங்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. தொடக்க வெண்கலக் காலத்தில் (3000-2300) உகாரித்து செழிப்புமிக்க, அரண் சூழ்ந்த நகரமாக விளங்கியுள்ளது. எபிலாயித்துப் பெயர்ப் பட்டியலில் (2400-2250) உகாரித்து என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அக்காதிய, எபிலாயித்துப் பேரரசுகள் காலத்தில் இந்நகர் வீழ்ச்சியுற்றதாகத் தெரிகிறது. (2300-2150). நகரம் கைவிடப்பட்டது அல்லது அழிக்கப்பட்டது எனலாம். ஒருகாலத்திற்கு இங்கு யாரும் குடியிருக்கவில்லை. இக்காலம் பாலஸ்தீனத்தில் நான்காம் தொடக்க வெண்கலக் காலத்தோடு ஒத்ததாகும்.

மத்திய வெண்கலக் காலத்தில் மீண்டும் குடியிருப்பு ஏற்படுகிறது (2100-1650). உலோகத் தொழிலுடைய அந்நியர் இந்நகரச் சிதைவுகளில் குடியேறினர் (2100-1900). உகாரித்து அரசு எமோரியர்கள் வருகையோடு தொடங்கியது என்று பொதுவாகக் கருதப்படும். எகிப்தின் பன்னிரண்டாவது அரச மரபு, மாரி, கிரேத்து, அலாலாக்கு ஆகியவற்றோடு கொண்ட வலிமைமிக்க தொடர்புகளால் இவ்வரசு வளர்ச்சிபெறுகிறது (1900-1750). இக்காலத்தைச் சேர்ந்த பாகாலுக்கும் தாகோனுக்கும் எழுப்பப்பட்ட இரு கோவில்களும், பலவகைப்பட்ட சிலைகளும், தூண்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை பிற்கால ஏடுகளில் குறிக்கப்படும் சமயம் ஏற்கனவே வழக்கில் இருந்தது என்று சுட்டுகின்றன. மூன்றாவது காலக்கட்டத்தில் (1750-1600) உகாரித்து செல்வமிக்க இரண்டாம் தரச் சக்தியாக விளங்கியது. முதலில் யாம்காதிலும் பின்பு மித்தானியிலும் மையம் கொண்டிருந்த பெரிய சீரிய அரச அமைப்போடு உகாரித்து ஒன்றியிருந்தது.

பிற்கால வெண்கலக் காலத்தில் (1600-1185) நகரம் கலப்புத் தன்மை கொண்டிருந்தது. இக்காலம் பொதுவாகப் பொற்காலம் என்று சரியாக அழைக்கப்படுகிறது. உகாரித்து தீமை தரும் கூட்டணிகளைத் தவிர்த்தது; மித்தானி எழுச்சியுற்றபோது நடுநிலை வகித்தது; நான்காம் துத்துமோசு ஆட்சியில் (1426-1417) எகிப்துக்குப் பணிந்திருந்தது; பின்பு தனது கூட்டுறவை இத்தியர்களுக்கு மாற்றியது (1336). பின்பு 1185-இல் ஒரு பெரும் தீயால் நகரம் அழிக்கப்பட்டது. இதற்குக் கடல் மக்கள் காரணமாயிருந்தனர் என்று கருதப்படுகிறது. நகரின் சில சிதைவுகள் பாரசீகர்களும், கிரேக்கர்களும் (550-200) உரோமையர்களும் (கி.மு.2-ஆம் நூற்றாண்டு) இங்கு ஆதிக்கம் செலுத்தியதாகக் காட்டுகின்றன.

தொல்பொருள் மற்றும் ஏட்டுச் சான்றுகள், தானியம், திராட்சை இரசம், எண்

ணெய் போன்ற பொருட்களைக் கொண்ட வலுவான விவசாயப் பொருளாதாரத்தை இந்நகர் கொண்டிருந்ததாகச் சுட்டுகின்றன. கப்பல்கட்டுதல், கருஞ்சிவப்புச் சாயம் செய்தல் போன்ற தொழில்கள் இருந்திருக்கின்றன. விவசாயப் பொருட்கள், பீதாம்பரம் ஆடைகள், செம்பு, சுகபோகப் பொருட்கள் ஆகியவற்றைப் பெரிய, அரச மற்றும் தனிப்பட்டோரின் கப்பல்கள் மத்தியதரைக்கடலில் கிழக்குப் பகுதி முழுவதிலும் வியாபாரம் செய்துள்ளன. ஒரு வலுவான கடற்படை இவ்வணிகத்தைப் பாதுகாத்தது. சீரியாவிற்கும் அதற்கப்பாலும் செல்வதற்கு உகாரித்து ஒரு பண்ட மாற்றும் துறைமுகமாக விளங்கியது. இந்த அகில உலகப் பொருளாதாரத்தை, ஐந்து வகை எழுத்துமுறைகளைப் பயன்படுத்தி எழுதப்பட்ட ஏழு மொழிகளில் உள்ள வாசகங்களும் கல்வெட்டுக்களும், கூரியர்களின் இதிகாசங்களையும் சமய வாசகங்களையும் கொண்ட ஒரு புனித இடமும், குறிகூறப் பயன்பட்ட கல்லீரல் மாதிரிகைகளும், கூரிய தெய்வங்களின் செம்புச் சிலைகளும் பிரதிபலிக்கின்றன.

இவற்றின் விளைவாகச் செழிப்பு மிகுந்தது. பாதுகாப்பும் வலிமை பெற்றது. கோட்டைகளும், பெரிய கோபுரங்களும், நினைவு வாயில்களும் தொண்ணூறு அறைகளும், ஐந்து மண்டபங்களும் கொண்ட ஒரு பெரிய அரண்மனையும், அணிகலன் செய்வோர் பொற்கொல்லர்கள், தந்தப் பொருட்கள் செய்வோர், எழுத்தர்கள் போன்றோர் தொழில் செய்த இடமும், தனிப்பட்டோரின் பெரிய வீடுகளும், அவற்றின் அடியில் அழகு செய்யப்பட்ட அடக்கம் செய்யும் இடங்களும், பரந்த குடியிருப்புப் பகுதிகளும் அவற்றின் புனித இடங்களும், பலவகைப்பட்ட கலைப்பொருட்களும், பொன், வெள்ளியால் செய்யப்பட்ட சிலைகளும் இந்நகரில் காணப்பட்டன.

இதே காலத்தில் துறைமுக நகரமான மினெத்து-ஏல்-பெயிதாவில் குடியிருப்புகளும், வழிபாட்டு இடங்களும், கானானியர்களின் என்பது எண்ணெய் மற்றும் பழரசச் சாடிகள் கொண்ட களஞ்சியமும், படிகச் சிமிழ்களும் அழகான தந்தப்பொருள்களும், அழகு செய்யப்பட்ட கல்லறைகளும், பெரும் எண்ணிக்கையில் பாத்திரங்களும் சாடிகளும், சீரிய, அனத்தோலிய, சிப்பிரியத்து மற்றும் மைசீனிய தட்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச்செழிப்பிற்கு உகாரித்துவின் அரச கோடை விடுதியாக விளங்கிய கடற்கரை நகரமான இராஸ் இபான் கானியும் சான்று பகர்கிறது.

3. உகாரித்து வாசக ஏடுகள்:-

பிற்கால வெண்கலக் காலத்திலிருந்து பல களிமண்தகடு ஏடுகள் கிடைத்துள்ளன. இவை உகாரித்தை ஒரு முக்கிய கண்டெடுப்பாக ஆக்கியுள்ளன. இவை அக்காதிய மொழியிலோ, இப்போது உகாரித்து என்றழைக்கப்படும் வடமேற்கு செமித்திய மொழியிலோ ஆப்பு எழுத்துமுறையில் எழுதப்பட்டுள்ளன. பின்னது, விவிலிய எபிரேய மொழியோடு நெருங்கிய தொடர்புடையது. இந்த ஏடுகள் அரச, குருக்கள், மற்றும் தனிப்பட்டோரின் ஆவண நிலையங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை, பெரிய தேவர்கள் பற்றிய இதிகாச புராணங்கள், கெரேத்து, தானேல், அக்காத்து போன்ற பழங்கால வீரத்தலைவர்கள் பற்றிய காப்பியங்கள், தேவர்களின், மற்றும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பலிகளின் பட்டியல்கள், வழிபாட்டுச் சடங்குகள், சோதிடக் கூறுகள், குறிகூறுதல் ஆகியவைபற்றிய வாசகங்களைக் கொண்டுள்ளன. சில மருத்துவம், குதிரை பராமரிப்புப் பற்றிப் பேசுகின்றன. உடன்படிக்கைகள், ஆட்சி மற்றும் சட்டம் பற்றிய ஏடுகள், பலவகையான அதிகாரப்பூர்வமான கடிதங்கள் ஆகியவைகளும் இங்குக் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. உகாரித்துவில் கண்டெடுக்கப்பட்ட ஆப்பு எழுத்து ஏடுகள் மற்ற பல இடங்களிலும் காணப்படுகின்றன. இவையாவும் சேர்ந்து அக்காலத்தில் வளர்ச்சியுற்ற நகர அரசுப்பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் பற்றிய மதிப்புமிக்க அறிவை அளிக்கின்றன.

புராணக் கதைகளைப் பொருத்தமட்டும் புயல் கடவுளான பாகால் அவரது துணைவி

அனாத்து ஆகியோர் பற்றிய புராணங்கள் புகழ்பெற்றவையாகும். இவை ''பாகாலின் சுழல்'' எனப்படும். முதல் கதையில் பாகால், குழப்பமிக்க கடல் சக்திகளின் பிரதிநிதியான யாமோடு(கடல்) போரிட்டு, தோற்கடிக்கிறார். இதன் விளைவாக ஏல் என்ற உயர் கடவுளின் கீழ் அரசு பெறுகிறார். இந்த வெற்றி ஒரு அரண்மனையை விரும்பவும், வாய்ச்சாலகத்தாலும் தந்திரத்தாலும் ஏலின் அனுமதிபெற்று அதை அடைவதையும் இரண்டாவது விவரிப்பு எடுத்துக் கூறுகிறது. இந்தப் புதிய அரண்மனையிலிருந்து பாகால் தமது எதிரிகளுக்கும், குறிப்பாகப் பாதாளத்தை ஆட்சி செய்யும் பெரும் பசியுடைய மோத்து கடவுளுக்கும் (சாவு) துணிகரமான சவால் விடுகிறார். இதன் விளைவான போராட்டங்கள் மூன்றாம் கதையில் விவரிக்கப்படுகின்றன. சாவு மற்றும் வாழ்வு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் இந்த இரு கடவுள்களுக்குமிடையே நடக்கும் போராட்டங்கள், அவை மனிதர்களைப் பாதிக்கும் முறையில் விவரிக்கப்படுகின்றன. மரித்து உயிர்பெறும் கடவுளாகப் பாகால், முதலில் மோத்துக்குப் பணிந்து, பின் அனாத்து, மற்ற தேவர்களின் பெரும் உதவியுடன் உயிர்பெற்று, தமது பதவியை மீண்டும் பெறுகிறார். இவ்வாறு நம்பிக்கையுள்ள ஆனால் நிலையற்ற வெற்றியோடு ''பாகால் சுழல்'' முடிகிறது. இக்கதைகள் பருவகாலச் சுழலை ஓரளவாவது பிரதிபலிப்பதாக இக்கால விளக்கவுரையாளர்கள் புரிந்துகொள்கின்றனர். ஆனால் இப்புராணம் மனிதவாழ்வின் பல ஐயப்பாடுகளை விரிக்க எதிரும் புதிருமான சக்திகளுக்கிடையே நிலவும் நெருக்கடி நிலையில் அளிக்கப்படும் சிக்கல்மிக்க உளநோக்கையும் அளிக்க வல்லது.

இவ்வாசகங்களுக்கும் எபிரேய விவிலியத்துக்குமிடையேயுள்ள பல தொடர்புகள், பழைய ஏற்பாட்டு ஆய்வுகளுக்கு இவ்வாசகங்களை மிக முக்கியமானதொன்றாக்குகின்றன. அதனால் எந்த விவிலியப் பாடப்புத்தகமும் விளக்கவுரைகளும் இவற்றை ஒதுக்குவதில்லை. அரமாயிக்கு, மோவாபிய, பெனிக்கிய மொழிகளோடு சேர்ந்து உகாரித்து மொழியும் எபிரேயமொழி சேர்ந்த வடகிழக்கு செமித்திய மொழியைச் சேர்ந்ததாகும். இலக்கணம், சொல்தொகுதி, கவிதை நடை, ஆகியவற்றில் இம்மொழிகள் நெருங்கிய தொடர்புடையன. பாகாலின் புராணக் கதையோடு பழைய ஏற்பாடு ஒத்திருக்கிறது. இஸ்ராயேலின் இறைவன் புயல் மேகங்களின் மேல் அமர்ந்து வருவதாகக் காட்டப்படுகிறார் (உப 32:26; சங் 18:10; 68:4.33; 104:3). இது இறை ஆலய அரண்மனையோடு தொடர்புகொண்டு இடியில் அவரது ஆற்றலைக் காட்டுவதாகச் (சங் 29; 68:28-35) சித்தரிக்கிறது. அவர் லெவியத்தான் என்ற கொடிய விலங்கை வெல்கிறார் (ஏச 27:1; சங் 74:13-14; அப 3:13-14). குழப்பமிக்க கடல் சக்திகளை வெல்கிறார் (சங் 29:3.10; 89:9-10; அப 3:8.15). சாவின் தணியாப் பசியை அழிக்கிறார் (ஏச 5:14; அப 2:5): அக்காத்து வீரக்காப்பியத்தில் வரும் ஞானமிக்க நடுவரான தானேல் எச 14:14.20; 28:3-இல் தோன்றுகிறார். மேலும் பல வாசகங்கள் பழைய ஏற்பாட்டுச் சட்டங்களோடும் வழிபாட்டுச் சடங்குகளோடும் தொடர்பு உடையனவாக இருக்கின்றன.

சீரியா, பாலஸ்தீனத்தில் பரவலாகப் பகிர்வு கொள்ளப்படும் பண்பாட்டைத்தவிர, இஸ்ராயேல் தோன்றிய சூழ்நிலையை உகாரித்து வாசகங்கள் பிரதிபலிக்கின்றன. ஆனால் அவை பழைய ஏற்பாட்டில் கொண்டிருக்கும் செல்வாக்கின் தன்மை மற்றும் அளவுபற்றி, பல்வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. ஒரு கருத்து கலப்புத்தன்மை கொண்டதாகும். இதன்படி, தான்தோன்றி இஸ்ராயேலர்கள் கானானியக் கலாச்சாரத்திலிருந்து தாங்கள் விரும்பியவற்றைச் சிறிதும் மாற்றாமல் அப்படியே தங்கள் சமயத்துக்குள் ஏற்றுக்கொண்டனர். மற்றொரு கருத்து தர்க்கவாதமுடையதாகும். இதன்படி, அவற்றின் கவர்ச்சியான கூறுகளை இஸ்ராயேலின் இறைவனுக்குச் சாற்றிக்கூறி, அவற்றின் பொருளை இஸ்ராயேலின் தனிச் சிறப்பான விசுவாசத்திற்கேற்ப மாற்றி அமைத்து, கானானியர்களின் போட்டிச் சமயத்தை வெறுமையாக்கும் பண்புகளை மட்டும் இஸ்ராயேலர்

ஏற்றுக்கொண்டனர். மூன்றாவது விளக்கப் படி, இஸ்ரா்யேலின் கலப்புத் தோற்றத்தின் ஒரு பகுதியான கானானியர் தங்களின் சம யத்தைப் புதியதாக வந்த யாவே சமயத்திற் கேற்றவாறு மாற்றி அமைத்துக்கொண்டனர். இக்கருத்துக்கள் ஒன்றை ஒன்று விலக்கி ஒதுக்குபவை அல்ல. ஆனால் உண்மையில் நடந்தது எந்த ஒரு கருத்தையும்விட, சிக்கல் மிக்கதாகும்.

உசா (UZZA - வலிமை)-ஆள்

1. பென்யாமின் இனத்தவர். கேராவின் (எகிமிலாம்) மகனும் ஏகூத்தின் வழித்தோன் றலுமாவார் (1 நாள் 8:7).

2. பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு எருசலேம் திரும்பிய ஆலய ஊழியர்களின் முன்னோர் ஆவார் (எஸ் 2:49; நெக 7:51).

உசா (UZZA) - இடம்.

யூதாவின் அரசர்களாகிய மனாசே, அமோன் ஆகியோர் அடக்கம் செய்யப்பட்ட அரண்மனைத்தோட்டம் (2 அர 21:18.26). ஏன் இப்பெயரால் இந்த இடம் அழைக்கப் பட்டது என்பது தர்க்கத்திற்குரியதாகும். இதற்கு இணையான விவரிப்பில் இப்பெயர் விடப்பட்டிருக்கிறது (2 நாள் 30:20.25).

உசியா (UZZIA பலம், வலிமை)

இவர் ஒரு அசித்தராவியர். ''முப்பதின்மர்'' எனப்படும் தாவீதின் வலிமைமிக்க வீரர்க ளுடன் நாளாகம ஆசிரியர் சேர்க்கும் 16 பேரில் ஒருவர் (1 நாள் 11:44). 2 சாமு 23:24-39-இல் வரும் பட்டியலில் இவர் பெயர் காணப்படவில்லை.

உசேன்-செயெரா (UZZEN-SHEERAH - செயெ ராவின் காது)

எப்பிராமினின் மகளான (அல்லது பேத்தி யான) செயெரா கட்டியெழுப்பிய மூன்று கிராமங்களுள் ஒன்று (1 நாள் 7:24). பேத்-கோரோனுக்குத் தென்மேற்கில் 5 கி.மீ. தொலைவில் இன்றுள்ள 'பெய்ட்சீரா'வே இந்தக் கிராமம் என்று சில அறிஞர்கள் கூறினாலும் இன்னும் உறுதியான கருத்து உருவாகவில்லை.

உடலைப் புண்படுத்துதல் (GASH)

இது, துக்கத்தை எடுத்துக்காட்டும் அடை யாளமாகவோ, புறஇனக் கடவுள்களின் பர வச வழிபாட்டிலோ, உடலைக் கீறிக் கொள் ளுதல், காயப்படுத்துதல், முதலியவையா கும் (எரே 41:5; 47:5; 48:37).

உடல் (Body)

விவிலியத்தில் உடல் என்பது மனிதன் தன் உலக வாழ்வின் போது கொண்டிருந்து, சாவில் அதைவிட்டுவிட்டு, உயிர்ப்பின் நாளில் மீண்டும் எடுத்துக்கொள்ளும் வெறும் எலும்பும் ஊனும் கலந்த கலவையா கும் என்ற பொதுவான கருத்திலிருந்து வேறுபட்டதாகும். உடலைப்பற்றிய இறை யியலில் பவுல் இதனைவிட மிக உயர்ந்த தகுதியினை உடலுக்குக் கோடிட்டு காட்டுகி றார். உடலானது பல்வேறு உறுப்புகளை ஒன்று சேர்ப்பதோடு மட்டுமல்லாமல் பாவி யென்னும் இயல்பான நிலை, கிறிஸ்துவிற் கென அபிடேகம் செய்யப்பட்ட நிலை, அவனுடைய மகிமையின் வாழ்வு போன்ற பல்வேறு சிறப்பு மிக்க நிலையில் மனி தனை அடையாளப்படுத்தியும் காட்டுகிறது.

1. ''உடலும் ஊனும்''

பழைய ஏற்பாட்டில் உடல் மற்றும் ஊன் ஆகிய இரண்டுமே ஒரே சொல்லால் குறிப்பி டப்பட்டன. புதிய ஏற்பாட்டுக் கிரேக்கத்தில் இரண்டும் வேறு படுத்திக் காட்டப்படுகின் றன. இந்த வேறுபாட்டை விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

அ. உடலின் மேன்மை:- எல்லா மொழிக ளிலும் உள்ளது போன்று உடலானது பெரும்பாலும் ஊன் என்னும் அதே உண் மையினையே குறிக்கின்றது. இவ்வாறு இயேசுவின் வாழ்வானது நமது உடலிலும் நமது ஊனிலும், வெளிப்படுத்தப்பட வேண் டும் (2 கொரி 4:10-11). இரண்டுமே முழும னிதனைக் குறிப்பிடுவதால் உடலுக்கும் ஊனுக்கும் செமித்தியர் ஒரே மதிப்பைக் கொடுத்தனர்.

பவுல் உடலின் மேன்மையை வலியுறுத்துகின்றார். புதிய ஏற்பாட்டுப் பிற ஆசிரியர்களினின்று முற்றிலும் மாறுபட்டவராய் (மத் 27:52.58-59; லூக் 17:37; அ.ப. 9:40), இறந்த உடலுக்கு உடல் என்னும் சொல்லைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறார். மனிதனுடைய மனிதச்சிறப்புகளில் ஒன்றான வாழ்வினைத் தோற்றுவிக்கின்ற ஆற்றலைப் பவுல் உடலுக்குரியதென ஒதுக்கியுள்ளார் (உரோ 1:24; 4:19; 4:19; 1 கொரி 7:4; 6:13-20). மனிதனின் நிலையாத, கடந்துபோகும் கூறுகளை அதாவது வெறும் மனிதத்தன்மையுடைய கூறுகளை, சிறப்பாக மனிதனின் பாவங்கள் பற்றிப் பேசும்போது பவுல் இக்கூறுகளை உடலுக்குச் சாற்றிக் கூறாமல் ஊனுக்கே சாற்றிக் கூறுகிறார். இவ்வாறு அவர் உடலின் பாவங்களைப்பற்றிய அட்டவணையைக் கொடுக்கவில்லை (1 கொரி 6:18-இல் உள்ள ''உடலுக்கெதிரான பாவம்'' என்பது முழுமனிதனுக்கு எதிரான பாவத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்). ஊனுடன் வேறுபடுத்தப்பட்ட நிலையில் உடலானது மனிதத்துவத்தின் வெளிப்பாடாக இருப்பதால் அது மனிதனால் மதிக்கப்படவேண்டும்.

ஆ. ஊனால் கட்டுப்படுத்தப்படும் உடல்:- பாவம் உறைகின்ற ஊனானது (உரோ 7:20) உடலின்மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்கிறது. அதனால் "பாவ ஊன்". இருப்பது போன்று (8:3) ''பாவ உடலும்'' (6:6) உள்ளது. பாவமானது உடலின்மீது ஆதிக்கம் செலுத்தக் கூடியதாக இருக்கிறது (6:16). அதன் விளைவாக உடலே மரணத்திற்கு இட்டுச்செல்கிறது (7:24). இவ்வாறு உடலானது தாழ்வான நிலைக்கு (பிலி 3:21), இழிவான நிலைக்குக் (1 கொரி 15:43) குறைக்கப்படுகிறது. முழுவதும் புனிதமற்ற இச்சைகளை நிறைவாகக் கொண்டதாய் (உரோ 6:12) உடலானது சிற்றின்ப செயல்களைச் செய்கிறது (8:13). பவுலின் இத்தகைய இறையியலில் உடலானது, ஊனை அடிமைத்தனத்திற்குத் தாழ்த்துகின்ற சட்டம், பாவம் மற்றும் மரணம் என்னும் மூன்று சக்திகளுக்கு, உட்பட்டதாக உள்ளது (7:5). இதன் ஒளியில் உடலானது படைத்தவரின் கரங்களினின்று வருகின்ற மனிதனை வெளிப்படுத்தாமல் பாவத்தினாலும் ஊனாலும் அடிமை படுத்தப்பட்ட மனிதனையே வெளிப்படுத்துகின்றது.

2. உடலும் ஆண்டவரும்.

அ. உடல் என்பது ஆண்டவருக்காக:- புனித பவுலின் திருமுகம் பெற்ற கொரிந்தியர்கள் திருமணமாகாதோரின் உடலுறவைப் பயங்கர விளைவுகளற்ற, முக்கியத்துவமற்ற செயல் என்று எண்ணும் படியாக சோதிக்கப்பட்டனர். பவுலின் பதில் ஆன்மா புனிதமானது என்று எடுத்துக்காட்டியோ, இத்தகைய நடத்தையினால் ஆபத்துக்குள்ளாகும், உயரிய வாழ்வைத் தவறான, வாழ்விலிருந்து வேறுபடுத்தியோ அமையவில்லை. ''உணவு வயிற்றுக்கென்றே உள்ளது; வயிறு உணவுக்கென்றே உள்ளது, என்று எண்ணுகிறீர்கள். ஆம், கடவுள் இரண்டையும் அழித்துவிடுவார். ஆனால் உடல் காமத்திற்கென்று இல்லை. ஆண்டவருக்கென்று இருக்கிறது. ஆண்டவரும் உடலுக்கே'', என்று அவர் எழுதுகிறார் (1 கொரி 6:13). நிலையற்றதும் (பிலி 3:19) இறையரசைப் பெறுவதற்குத் திறமையற்றதாகவும் உள்ள (1 கொரி 15:50) ஊனின் ஆதிக்கத்திற்குப்பட்ட வயிற்றுக்கு முரண்பட்ட நிலையில் உடலானது ஆண்டவரைப்போன்று மீண்டும் உயிர்த்தெழும் (1 கெரரி 6:14); ஏனெனில் உடலானது கிறிஸ்துவின் அங்கமாகவும் (6:15) தூய ஆவியின் ஆலயமாகவும் (6:19) உள்ளது. இத்தகைய காரணங்களுக்காக, மனிதன் தனது உடலின் மூலம் இறைவனுக்கு மகிமையளிக்கவேண்டும் (6:20). ஊன் மண்ணிற்கெனத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், உடலானது ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இதுவே அதனுடைய ஒப்பிட முடியாத மேன்மையின் ஊற்றாகும்.

ஆ. கிறிஸ்துவின் உடல்:- துல்லியமாகக் கூறவேண்டுமாயின் உடலின் மேன்மையானது உடல் கிறிஸ்துவால் மீட்கப்பட்டது என்னும் உண்மையிலிருந்தே வருகிறது. இயேசு ஏற்றுக் கொண்ட ''ஊனுடலானது'' (கொலோ 1:22) அவரைச் சட்டத்திற்குக்

கீழ்பட்டவராக்கியது (கலா 4:4). இயேசு பாவ ஊன் வடிவை ஏற்றுக் கொண்டதால் (உரோ 8:3) அவர் நமக்கெனச் சபிக்கப்பட்ட வரானார் (கலா 3:13). அவர் நமக்கெனப் பாவ உருவானார் (2 கொரி 5:21). இறுதியாக அவர் மரணத்திற்கு உட்பட்டவரானார். ஆனால் அவரது மரணமானது பாவத்திற் கான உறுதியான மற்றும் இறுதியான மரண மாக இருந்தது (உரோ 6:10). இவ்வாறு இயேசுவைச் சிலுவையிலறைந்த சக்திகள் அனைத்தும் தங்களது வல்லமையை இழக் கும்படியாக அவர் மரணம், ஊன் மற்றும் பாவம் ஆகியவற்றின்மீது வெற்றிகொண் டார் (1 கொரி 2:6.8; கொலோ 2:15). அவர் பாவத்தைத் தண்டித்து (உரோ 8:3), சட்டத் தின் சாபத்தை ஆசியாக மாற்றினார் (கலா 3:13-14; எபே 2:15). அவர் நம்மை அடிமைத் தனத்தினின்று விடுவித்ததோடு நில்லாமல் உண்மையான பொருளில் அவர் நம்மைத் தம்முள் ஒன்றிணைத்துக் கொண்டார். அவ ருடைய வாழ்வு மற்றும் மீட்புச் செயலில், துன்பம் ஆகியவற்றின் மிகப் பரந்த செய்தி கிறிஸ்துவின் உடலாகிய ஒரே உடல் மட் டுமே உள்ளது என்பதாகும்.

இ. கிறிஸ்துவனின் உடல்:- இக்காரணங்க ளினால் கிறிஸ்துவோடு ஒன்றுபட்ட ஒவ் வொரு விசுவாசியும் கிறிஸ்துவினுடைய உடலின் மூலம், ஒரு காலத்தில் தான் உட் பட்டிருந்த சட்டம், பாவம் மற்றும் மரணம் என்னும் சக்திகளை வெற்றி கொள்ளக்கூடிய வனாக இருக்கிறான். அவன் சட்டத்திற்கு இறந்தவனாகவும் (உரோ 7:4), மரணத்திற் கெனக் குறிக்கப்பட்ட ஊனுடலானது அவ னின்றும் நீக்கப்படுமாறு (கொலோ 2:11) அவனது பாவ உடலும் அழிக்கப்படுகிறது (உரோ 6:6). திருமுழுக்குப் பெற்றபோது கிறிஸ்தவன் சுருக்கமான முறையில் கிறிஸ்து வின் முழுமையான வாழ்விற்கு உட்படுத்தப் பட்டதால், கிறிஸ்தவன் தனது அன்றாட வாழ்வைக் கிறிஸ்துவினுடைய வாழ்வின் பாணியில் அமைக்கவேண்டும் (12:1). அவன் தனது உடலையே உயிருள்ள பலி யாக அளிக்க வேண்டும்.

உடலின் மேன்மையானது உலகில் உண ரப்படுவதில்லை. ஏனெனில் உலகத்துன்பம் மற்றும் பாவநிலையில் உள்ள உடலானது, அழிவிற்கு உட்படாத மகிமைமிக்க உடலாக வும் (பிலி 3:21), ஆன்மீக உடலாகவும் (1 கொரி 15:44) மாற்றப்படும். இவ்வாறு மனி தன் ''விண்ணைச்சார்ந்த ஆதாமின் சாயலை மீண்டும் ஏற்றுக்கொள்வான்'' (1 கொரி 15:49). அழியும் உடலினின்று விண்ணக ஆண்டவரின் உடலுக்கு மாறுதல் ஏற்படு வதை, கிறிஸ்துவின் இறுதி வருகை நாளில் உள்ளதுபோலக் ''கண்இமைக்கும் நேரத் தில்'' நமது முடிவினுடைய மற்றொரு நிலையாகிய மரணமெனும் துன்பம் நிறைந்த மாற்றத்திற்கும், நாம் தயாரிக்க வேண்டும் . எனவே ''இவ்வுடலை விட்டு ஆண்டவரோடு வாழ்வதை'' நாம் விரும்பிய வர்களாய் (2 கொரி 5:8) இறுதியாகவும் முடிவற்றவிதமாகவும் கிறிஸ்துவின் ஓர் உடலை உருவாக்குகின்ற நமது உடலின் உயிர்ப்பிற்கெனக் காத்திருக்க வேண்டும்.

உடன்படிக்கை (COVENANT)

தன்னுடைய ஒன்றிணைந்த வாழ்க்கைக்கு அனைத்து மக்களையும் நடத்திச் செல்ல இறைவன் விரும்புகிறார். மீட்பின் கோட் பாட்டிற்கு அடிப்படையாக உள்ள இக்கருத் தையே உடன்படிக்கை என்னும் தலைப்பு எடுத்துக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் அனைத்து சமய சிந்தனைகளிலும் இது ஆதிக்கம் செலுத்தினாலும், காலப்போக்கில் இது ஆழமாவதை நாம் காண்கிறோம். புதிய ஏற்பாட்டில் இது இணையற்ற முழுமையை அடைகிறது. ஏனெனில் அது முதல் இது இயேசுகிறிஸ்துவினுடைய முழு மறைபொ ருளைத் தனது உட்பொருளாகக்கொண்டுள் ளது.

I. பழைய ஏற்பாடு:-

இறைவனுடனான மனிதனின் உறவுக ளைப்பற்றி கவனம் செலுத்துவதற்கு முன், உடன்படிக்கையானது மனிதருடைய சமூக அனுபவத்தைச் சேர்ந்ததாகும். மனிதர்கள் தங்களுக்குள்ளேயே உடன்பாடுகளாலும்,

ஒப்பந்தங்களாலும், கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். குழுக்களுக்குள்ளேயும், ஒருவருக்கொருவர் துணைபுரிய விரும்பும் சமநிலையுள்ள தனி நபர்களுக்குள்ளும் உடன்படிக்கைகள் இருந்தன. இவ்வாறு அமைதியின் உடன்படிக்கைகள் (ஆதி 14:13; 21:22 தொ; 26;28; 31:43 தொ; 1 அர 5:26; 15:19) சகோதரர்களுக்குள் உடன்படிக்கைகள் (ஆமோ 1:9), நட்பின் உடன்பாடுகள் (1 சாமு 23:18), மற்றும் திருமணம் (மலா 2:14) போன்ற பலவகை உடன்படிக்கைகள் உள்ளன. வலிமையுடையோர் வலிமையற்றோருக்குப் பாதுகாப்பை வாக்களிப்பதாகவும், வலிமையற்றோர் வலிமையுள்ளோருக்கு பணிபுரிய ஒத்துழைப்பதாகவும் அமையும் சமநிலையற்றவர்களுக்கிடையே ஒப்பந்தங்கள் உண்டு. பண்டைய மேற்காசிய நாடுகள் அவ்வப்போது இம்முறைகளைச் செயல்படுத்தி வந்தன. விவிலிய வரலாறு இதற்குப் பல எடுத்துக்காட்டுகளை அளிக்கின்றது (நீதி 9:11-15; 1 சாமு 11:1; 2 சாமு 3:12 தொ). இவற்றில் கீழ்ப்பட்டவர் ஒரு உடன்படிக்கையை நாடலாம். ஆனால் வலிமைமிக்கவரோ தனது தேவைகளுக்கு ஏற்ப அதற்கு உடன்பட்டு நிபந்தனைகளை விதிக்கிறார் (எச 17:13-14). உடன்படிக்கையின் முடிவானது மரபினால் புனிதப்படுத்தப்பட்ட சடங்கினால் பெரும்பாலும் கொண்டாடப்பட்டது. ஈடுபட்ட குழுக்கள் தங்களுடைய உறுதிமொழியின் மூலமாகத் தங்களையே அதற்கு உட்படுத்துகின்றனர். ஒருவர் சில விலங்குகளை இரண்டாக வெட்டிய பின்னர் அனைத்து எதிர்கால மீறல்களின் மீது சாபங்களை அறிவித்துக் கொண்டே அத்துண்டுகளின் இடையே கடந்து செல்வர் (எரே 34:18). இறுதியாக அவர்கள் ஒரு நினைவுச் சின்னத்தை அமைப்பர். அதுமுதல் இவ்வுடன்படிக்கையின் சாட்சியாக இருக்குமாறு ஒரு மரம் நடப்படும் அல்லது ஒரு கல் அமைக்கப்படும் (ஆதி 21:33; 31:48 தொ). இத்தகைய அடிப்படையான அனுபவத்தின் மூலம் இஸ்ராயேலானது இறைவனுடனான தங்களுடைய உறவுகளை எடுத்துக் காட்டியது.

1. சீனாய் உடன்படிக்கை:-

உடன்படிக்கைக் கருத்தானது பழைய ஏற்பாட்டின் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. இதுவே அனைத்துச் சமய சிந்தனையின் தொடக்கமாகும். மீட்கப்பட்ட மக்கள் சீனாய் மலையில் யாவேயுடன் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். இதன் மூலமாக ஆண்டவரை வழிபடுவது அதனுடைய தேசிய சமயமாயிற்று. இந்த உடன் படிக்கையானது சரிசமமானவர்களுக்கு இடையிலான ஒப்பந்தமல்ல. இது சமநிலையற்றவர்களின் உடன்பாட்டிற்கு ஒத்திருப்பதாகும். இஸ்ராயேலுக்குத் தம்முடைய பற்றுறுதியை அளிக்க மேலாண்மையான சுதந்தரத்துடன் யாவே தீர்மானிக்கிறார். தமக்கேயுரிய நிபந்தனைகளையும் விதிக்கிறார். ஆனாலும் இந்த ஒப்பிடுதலை மிகைப்படுத்தக்கூடாது. ஏனெனில் சீனாய் உடன்படிக்கையானது இறைவனையே தொடக்க காரணமாகக் காட்டுவதனால் ஒரு தனிவகையானதாக உள்ளது. இது மீட்புத் திட்டத்தினுடைய ஓர் அத்தியாவசியக் கூறை நேரடியாகவே வெளிப்படுத்துகிறது.

அ) இறைவனின் திட்டத்தில் உடன்படிக்கை:- எரிகின்ற புதரின் காட்சி முதலே, யாவே மோசேக்குத் தமது பெயரையும் இஸ்ராயேலுக்கான தமது திட்டத்தையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்துகின்றார். எகிப்திலிருந்து இஸ்ராயேலை விடுவித்து கானான் நாட்டில் குடியமர்த்த அவர் விரும்புகிறார் (யாத் 3:7-10; 16:17). ஏனெனில் இஸ்ராயேல் ''அவரது மக்களாக'' இருக்கின்றனர் (3:10). அவர்களுடைய மூதாதையருக்கு வாக்களித்த நாட்டை அவர்களுக்கு அளிக்க அவர் விரும்புகிறார் (ஆதி 12:7; 13:15). இறைவனைப் பொறுத்தவரையில் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்து அதன்மேல் வாக்குறுதிகளைப் பொழிகிறார் என்பதை இது முன்சுட்டுகிறது. யாத்திரையானது ஒரேபு வெளிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கென அதன் பின்னர் வருகின்றது. தமது மக்களை ஆற்றலோடு விடுவிப்பதன் மூலம் தாமே தலைவர் என்றும், தமது சித்தத்தைப் பிறரில் செயல்படுத்த வல்லவர் என்றும்

இறைவன் காட்டுகிறார். இவ்வாறு மீட்கப்பட்ட மக்கள் இந்நிகழ்ச்சிக்குத் தங்களுடைய விசுவாசத்தினால் பதிலளிக்கின்றனர் (யாத் 14:31). இதைச் செயல்படுத்தியபின் இறைவன் தமக்கேயுரிய உடன்படிக்கையின் திட்டத்தை வெளிப்படுத்தலாம்: ''நீங்கள் நமது வாக்கைக்கேட்டு, நமது உடன்படிக்கையைக் கைக்கொண்டு அனுசரிப்பீர்களேயாகில் எல்லா மக்களிலும் நீங்களே நமது உடைமையாய் இருப்பீர்கள். ஏனென்றால் பூமியெல்லாம் நம்முடையது, அன்றியும் நீங்கள் நமக்கு அரசகுருத்துவத் திருக்கூட்டமும் பரிசுத்த மக்களுமாய் இருப்பீர்கள்'' (யாத் 19:5-6). இவ்வார்த்தைகள் இறை தேர்வினுடைய கைமாறற்ற பண்பை வலியுறுத்துகின்றன. இஸ்ராயேலின் சார்பாக எத்தகுதியும் இல்லாவிடினும் இறைவன் அவளைத் தேர்ந்தெடுத்தார் (உப 9:4 தொ). ஏனெனில் அவர் அவளை அன்பு செய்ததால் அவளது மூதாதையருக்கு உறுதிமொழியை நிலைநிறுத்த விரும்பினார் (உப 7:6 தொ). யூதரல்லாதோரின் நாடுகளினின்று அவளைப் பிரித்த பின்னர், தமக்கு மட்டுமென அவளை அவர் ஒதுக்கிவைத்தார். இஸ்ராயேலானது அவருடைய மக்களாக இருந்து தனது வழிபாட்டினால் அவருக்குப் பணிபுரிந்து அவருடைய அரசாக உருவாகும். இதற்குப் பிரதிபலனாக யாவே அவளுக்கு உதவிகளையும் பாதுகாப்பையும் உறுதியளிக்கிறார். யாத்திரையின் போது அவர் அவளை ஏற்கனவே ''கழுகுகளின் இறக்கைகள் மேல் சுமந்து தமக்குச் சொந்தமாக்கவில்லையா'' (யாத் 19:4). இப்போது எதிர்காலத்தை நோக்கிய நிலையில் அவளுக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை அவர் புதுப்பிக்கிறார். வாக்களிக்கப்பட்ட நாட்டின் மீதான வெற்றியை எளிதாக்குவதற்கான ஆண்டவரின் தூதர் அவர்களுக்கு முன் செல்வார். அங்கே இறைவன் அவளைத் தமது ஆசிகளால் நிரப்பி வாழ்வையும் அமைதியையும் அவளுக்கு உறுதியளிக்கிறார் (யாத் 23:20-31). இறைவனின் திட்டத்தில் மையமான தருணம் என்ற நிலையில் உடன்படிக்கை முழுவதும் வருங்கால வளர்ச்சியை இயக்கிவைக்கிறது. ஆயினும் இந்த இயக்கத்தின் தனிப்பட்ட விவரங்கள் தொடக்கத்திலேயே முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை.

ஆ) உடன்படிக்கையின் விதிமுறைகள்:- இஸ்ராயேலுக்குத் தமது உடன்படிக்கையை அளித்து, உறுதிமொழிகளை அளிக்கும் போது இஸ்ராயேல் பின்பற்ற வேண்டிய சில நிபந்தனைகளையும் இறைவன விதிக்கிறார். முதல் ஐந்து நூல்களில் காணப்படும் இந்த விவரிப்புகள் இந்த நிபந்தனைகளைப் பலவாறு ஒப்பந்தத்திற்கு ஏற்புடையவையாக எடுத்துக் கூறுகின்றன. இவை ஒப்பந்தத்தை விவரிக்கின்றன. சட்டத்தை உருவாக்குகின்றன. இவற்றில் முதலாவதானது ஆண்டவரை மட்டுமே வழிபடுவதிலும் சிலை வழிபாட்டைத்தடை செய்வதிலும் அக்கறை கொண்டுள்ளது (யாத் 20:3 தொ; உப 5:7 தொ). பிற நாடுகளுடனான அனைத்து உடன்பாடுகளையும் ஒப்பந்தங்களையும் விலக்குவதென்பது இந்த ஒப்பந்தத்தின் உடனடியான விளைவாகும் (யாத் 23:14; 34:12-16). இஸ்ராயேலின் முழுவாழ்வையும் நெருங்கிய விதிமுறை அமைப்பினால் பார்க்கின்ற அனைத்து இறை விருப்பங்களையும் இஸ்ராயேல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் அதனைத் தொடர்கிறது. ''மோசே, ஆண்டவர் தமக்குச் சொன்ன அனைத்தையும் அவர்களுக்குச் சொல்ல ஆண்டவர் சொன்னவையெல்லாம் செய்வோம் என்றனர்'' (யாத் 19:7-8). இது ஒரு ஆடம்பரமான பொறுப்பேற்கும் அர்ப்பணமாகும். இந்த அர்ப்பணத்திற்குக் காட்டும் மரியாதையானது இஸ்ராயேலினுடைய வரலாற்று ஊழை நிர்ணயிக்கும் நிபந்தனையாக இருக்கிறது. ஆண்டவரின் அனைத்து மக்களும் ஒரு முக்கிய கட்டத்தில் உள்ளனர். கீழ்ப்படிதலால் இறையாசிகள் அவர்களுக்கு உறுதிப்படுத்தப்படும். தங்களுடைய வார்த்தையினின்று அவர்கள் பிறழ்ந்தால், சாபங்களுக்குத் தங்களைத் தாங்களே உட்படுத்திக் கொள்வர் (யாத் 23:20-23; உப 28; லேவி 26).

இ) உடன்படிக்கையின் முடிவு:- யாத்திரையின் சிக்கலான வரலாறு, உடன்படிக்கைச்

சடங்கின் முடிவாக இரு மாறுபட்ட சடங்குகளைக் கொண்டுள்ளது. முதலாவதில், தாங்கள் தியானிக்கின்ற ஆண்டவரின் முன்னிலையில் மோசே, ஆரோன் மற்றும் இஸ்ராயேலின் மூப்பர்கள் புனித உணவை உண்கின்றனர் (யாத் 24:1 தொ). இரண்டாவதானது வட இஸ்ராயேலின் புனித இடங்களில் பாதுகாக்கப்பட்டுள்ள ஒரு சமய மரபினை மீண்டும் உருவாக்குவதாகத் தெரிகிறது. பன்னிரு கோத்திரங்களுக்கெனப் பன்னிரு புனிதத் தூண்களையும் பலிக்கென ஒரு பீடத்தையும் மோசே எழுப்புகிறார். ஆண்டவருக்கும் இஸ்ராயேலுக்குமிடையே உறுதிப்படுத்தப்பட்ட இணைப்பைக் குறிப்பிடுவதற்கென மோசே சில பலிகளை ஒப்புக் கொடுத்து இரத்தத்தின் ஒரு பகுதியை பீடத்தின்மேல் ஊற்றி, மற்றொரு பகுதியை மக்களின் மீது தெளிக்கிறார். பின்னர் உடன்படிக்கையின் நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கென மக்கள் அனைவரும் ஆடம்பரமாகத் தங்களைப் பிணைக்கின்றனர் (யாத் 24:3-8). இச்சடங்கில் உடன்படிக்கையில் இரத்தமானது முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒப்பந்தம் முடிக்கப்பட்ட பின்னர், இஸ்ராயேலின் தொடக்க ஒப்பந்தத்திற்கு நூற்றாண்டுகள்தோறும் சாட்சியுரைக்கும் முறையில், பல்வேறு பொருட்கள் அதன் நினைவை நிலைநிறுத்தும். ''சாட்சிப்பலகைகள்'' (அதாவது, சட்டம் பற்றியவை) வைக்கப்பட்டுள்ள சிறிய பெட்டகமாக உடன்படிக்கையின்பேழை ஆகும். அது உடன் படிக்கையின் நினைவுச் சின்னமாகவும் இஸ்ராயேலின் இறைவனுடைய பிரசன்னத்தின் அடையாளமாகவும் உள்ளது (யாத் 25:10-22; எண் 10:33-36). அது வைக்கப்பட்டிருந்த கூடாரமானது ஆண்டவருக்கும் அவருடைய மக்களுக்கும் இடையிலான சந்திப்பின் இடமாக இருந்தது. இதுவே வருங்காலத்தில் கட்டப்படவிருந்த ஆலயத்தின் முன் அடையாளமாகும். இறைவனால் தமக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டமக்களுடைய அதிகாரபூர்வ வணக்கத்தைக் கோத்திரங்களின் கூட்டமைப்பு ஆண்டவருக்கு அளிக்கின்ற மைய வழிபாட்டு இடங்களாக உடன்படிக்கைப் பேழையும், சந்திப்பின் கூடாரமும் விளங்கின. ஆனால் இவை மற்ற வழிபாட்டு இடங்களைப் பாதிக்கவில்லை. இதன் மூலமாக நாட்டினை ஏற்படுத்திய தொடக்க செயலானச் சீனாய் உடன்படிக்கையுடன் இஸ்ராயேலின் வழிபாடு நிலையாகப் பிணைக்கப்படுகிறது. சட்டத்தினுடைய வரையறைகளை அறிவிக்கின்ற உடன்படிக்கையின் காரணமாக முழுச்சட்டமும் பொருளுடையதாக இருப்பது போலவே, பிறரிடமிருந்து கடன்வாங்கப்பட்டவை போலக் காணப்பட்டாலும் இஸ்ராயேலின் வழிபாட்டிற்கு அதனுடைய தனிப்பட்ட சிறப்பை அளிப்பது இந்தப் பிணைப்பேயாகும்.

ஈ) சீனாய் உடன்படிக்கையின் பொருளும் வரையறைகளும்:- சீனாய் உடன்படிக்கையானது மீட்புத் திட்டத்தினுடைய ஓர் அத்யாவசியமான கூறை உறுதியான முறையில் வெளிப்படுத்தியது. தமது பணிக்கென அர்ப்பணிக்கப்பட்ட தமது சட்டத்தினால் ஆளப்படுகின்ற வழிபாட்டின் சமுதாயமாகவும், தமது வாக்குறுதிகளின் கருவூலமாகவும் அவர்களை அமைப்பதின் மூலம், மனிதரைத் தம்மிடம் கொண்டுவர இறைவன் விரும்புகிறார். புதிய ஏற்பாடு இந்த இறைத்திட்டத்தினை முழுமையாக நிறைவேற்றும். சீனாய் மலையில் இந்த நிறைவேற்றம் தொடங்கினாலும், பல நிலைகளில் இருபொருள்மயக்கமுள்ளதாகவும் முழுமையற்றதாகவும் உள்ளது. உடன்படிக்கையானது இஸ்ராயேலுக்கு அளிக்கப்பட்ட இறைவனின் இலவசக் கொடையாக இருந்தாலும், அதனுடைய ஒப்பந்த அமைப்பானது, மீட்புத்திட்டத்தை இஸ்ராயேலின் வரலாற்று முடிவுடன் பிணைப்பதாகத் தோன்றுகிறது. மீட்பை மனித பிரமாணிக்கத்திற்குரிய சம்பளமாகக் காட்டுகின்றதாகவும் தோன்றுகிறது. மேலும் ஒரே நாட்டை மட்டுமே கருத்தில் கொண்ட இதனுடைய வரையறைகள் பிற பகுதிகளில் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள யாவற்றையும் உள்ளடக்கும் இறைவனுடைய திட்டத்தின் பொதுமைப்பண்போடு சரியாகப் பொருந்தவில்லை. இறுதியாக இறை வாக்குறுதிகளின் (இஸ்ராயேலின் உலக மகிழ்ச்சி

என்ற) தற்காலிகக் குறிக்கோள், உடன்படிக்கையின் சமய நோக்கமாகிய இறையரசை இஸ்ராயேலில் ஏற்படுத்துவதும், இஸ்ராயேலின் மூலமாக உலகம் முழுவதும் அமைப்பதையும் மறைக்கின்ற அபாயத்தையும் கொண்டுள்ளது. இத்தகைய வ்ரையறைகள் இருந்தாலும், சீனாய் உடன்படிக்கையானது இஸ்ராயேலின் வாழ்வு முழுவதையும் வெளிப்பாட்டின் தொடர்ந்த வளர்ச்சியையும் ஆண்டு நடத்திச் செல்லும்.

2. இஸ்ராயேலின் வாழ்விலும் சிந்தனையிலும் உடன்படிக்கை:-

அ) உடன்படிக்கையின் புதுப்பித்தல்கள்:- இஸ்ராயேலின் வழிபாட்டில் உடன்படிக்கையானது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டது என்று உறுதியாகக் கூறுவது விவேகமுடைய கூற்றன்று. ஆயினும் உப ஆகமமானது, சடங்கு சாபங்களின் அறிக்கை (உப 27:2-26) மற்றும் சட்டத்தை ஆடம்பரமாக வாசித்தல் (உப 31:9-13.24-27; 32:45 தொ) ஆகியவற்றுடன் கூடிய இவ்வகையான புதுப்பித்தலைச் சுட்டக்கூடிய வழிபாட்டின் பகுதிகளைக் கொண்டுள்ளது. ஆனால் சட்டத்தை வாசித்தல் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே செய்யப்பட்டது (31:10). ஆனால் இந்தப் பழைய காலத்துப் பழக்கத்தை நிரூபிக்க முடியாது. வரலாற்றின் சில குறிப்பிட்ட முக்கிய திருப்பு முனைகளில் உடன்படிக்கையின் பயனுள்ள புதுப்பித்தலைத் தீர்மானிப்பதென்பது எளிதானதே. யோசுவா அதனைச் செக்கேமில் புதுப்பித்தார். மக்கள் ஆண்டவருடனான தங்களுடைய ஒப்பந்தத்தை மீண்டும் ஏற்றனர் (யோசு 8:30-35; 24:1-28). இஸ்ராயேலின் பெரியோர்களுடனான தாவீதின் ஒப்பந்தத்தினைத் (2 சாமு 5:3) தொடர்ந்து இறைவாக்குறுதி வெளிப்படுகிறது. சீனாய் உடன்படிக்கையானது விசுவாசத்துடன் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையின்கீழ் (சங் 8:31 தொ; 132:12; 2 சாமு 7:14) தாவீதுக்கும் அவரது சந்ததியினருக்கும் யாவே தமது உடன்படிக்கையை அளிக்கிறார் (சங் 89:4-5. 20-38; 2 சாமு 7:8-16; 23:5). ஆலய அபிடேகத்தின்போது சாலமோனின் மன்றாட்டும் ஆசியும் ஒரே நேரத்தில் தாவீதின் உடன்படிக்கையுடனும் இதனை நினைவுச்சின்னமாகக் கொண்டுள்ள சீனாய் உடன்படிக்கையுடனும் பிணைந்துள்ளது (1 அர 8:14-29.52-61). இதே புதுப்பித்தல்கள் யோவாசின் காலத்திலும் (2 அர 11:17), மற்றும் குறிப்பாக, உபாகம வழிபாட்டைப் பின்பற்றிய யோசியாவின் காலத்திலும் (2 அர 23:1 தொ; யாத் 24:3-8) காணப்படுகின்றன. எஸ்ராவினுடைய சட்டத்தின் ஆடம்பர வாசகமானது இத்தகைய சூழ்நிலையையே சுட்டுகிறது (நெக 18). இவ்வாறு உடன்படிக்கைக் கருத்து அனைத்துச் சமயச் சீர்திருத்தங்களுக்கும் அடிப்படையாகப்பணிபுரிகின்ற, இயக்கும் கருத்தாக உள்ளது.

ஆ) இறைவாக்கினரின் சிந்தனை:- இறைவாக்கினர்களின் செய்தியானது அடிக்கடி உடன்படிக்கையினைக் குறிப்பிடுகின்றது. இறைவன்பால் இஸ்ராயேல் காட்டிய பிரமாணிக்கமின்மையை அவர்கள் ஒருமிக்க கண்டனம் செய்தலுக்கும், பாவ மக்களை அச்சுறுத்துகின்ற பேராபத்துகளைப்பற்றிப் போதிப்பதற்கும் காரணமாக இருப்பது, இஸ்ராயேல் ஏற்றுக்கொண்ட சீனாய் உடன்படிக்கையும் அதனுடைய கோரிக்கைகள் மற்றும் சாபங்களுமேயாகும். ஆனால் தங்களுடைய காலத்தவருடைய எண்ணத்திற்கேற்ப உடன்படிக்கையின் கோட்பாட்டினை உயிருடன் நிலைநிறுத்த, பழைய மரபில் சித்தாந்த முறையில் கொண்டிருந்த, சில புதிய கூறுகளை இறைவாக்கினர்கள் வெளிக்கொணர்ந்தனர். மூலத்தில் உடன்படிக்கையானது ஆண்டவருக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் என்னும் சட்டமுறையிலான தோற்றத்தை முதன்மையாகக் கொண்டிருந்தது. இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான ஒப்பந்தம் என்னும் உறவுமுறைகளை விளக்குவதற்கான மற்ற ஒப்புமைகளுக்காக மனித அனுபவங்களை ஆராய்வதன் மூலம், இறைவாக்கினர்கள் இதற்கு உணர்ச்சி மிக்க தொனியளித்து உயிரூட்டினர். இஸ்ராயேல் மந்தையாகவும் யாவே மேய்ப்பராகவும் உள்ளனர். இஸ்ராயேல் திராட்சைக் கொடியாக

வும் யாவே அதனைப் பேணுபவராகவும் உள்ளனர். இஸ்ராயேல் மகனாகவும் யாவே தந்தையாகவும் உள்ளனர். இஸ்ராயேல் மண மகளாகவும் யாவே மணமகனாகவும் உள்ள னர். இவ்வுருவகங்கள் குறிப்பாகக் கடைசி யானது சீனாய் உடன்படிக்கையை அன்பின் சந்திப்பாகத் தோன்றச்செய்கிறது (எச 16:6-14). இறைவனின் கவனமிக்க இலவசமான அன்பு பதிலன்பைக் கோருகிறது. இப்பதி லன்பு கீழ்ப்படிதலாகச் செயல்படுகின்றது. இந்த ஆழப்படுத்தும் அனுபவத்தின் கனி களை உபஆகம ஆன்மீகம் ஒன்று சேர்த்தும் தருகின்றது. இது ஓயாமல் கோரிக்கைகளை யும் வாக்குறுதிகளையும் உடன்படிக்கை யின் அச்சுறுத்தல்களையும் நினைவுபடுத்து வதாக இருப்பின், இஸ்ராயேலின் அன்பிற் காகக்காத்திருக்கின்ற (உப 6:5; 10:12-13; 11:1) இறையன்பை (உப 4:37; 7:8; 10:15) வலியு றுத்துவதே சிறந்தது. இத்தகைய பின்னணி யில் இனிமேல் ''நீங்கள் என் மக்கள், நான் உங்கள் இறைவன்'' என்னும் உடன்படிக்கை யின் அடிப்படையான கூற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இ) புனித வரலாற்றின் தொகுப்பு:- இறை வாக்கினர்களின் போதனைக்கு இணையாக இஸ்ராயேலின் கடந்த காலம் பற்றிய புனித வரலாற்று ஆசிரியர்களின் சிந்தனையானது, உடன்படிக்கையின் கோட்பாட்டைத் தனது தொடக்கமாகக் கொண்டுள்ளது. ஏற்கனவே யாவே பாரம்பரிய ஆசிரியர், சீனாய் உடன்ப டிக்கையினை முதல் வாக்குறுதிகளின் பணிச் சட்டமாகிய ஆபிரகாமினால் முடித்து வைக் கப்பட்ட மிகப்பழமையான உடன்படிக்கை யோடு இணைத்துவிட்டார் (ஆதி 16). மோசே காலமுதல் எருசலேமின் அழிவு வரை நிகழ்ந்த வரலாற்றை (நீதி முதல் 2 அர வரை) மீண்டும் உபஆகமப்பாரம்பரிய ஆசிரியர்கள் அந்நிகழ்ச்சிகளில் சீனாய் உடன் படிக்கையின் செயல்பாட்டை வாசகர்கள் புரிந்து கொள்ளச் செய்வதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். அதாவது யாவே தமது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார். ஆனால் அவருடைய மக்களின் பிரமாணிக்கமின்மை அச்சுறுத்திய தண்ட னைகளை அவர்கள் மீது விதிக்குமாறு அவ ரைக் கட்டாயப்படுத்தியது. சமாரியாவின் மீதும் (2 அர 17:7-23) எருசலேமின் மீதுமான (2 அர 23:26-27) இருவித அழிவின் பொருள் இதுவே. நாடு கடத்தப்பட்ட காலத்தில் குருக்கள் பாரம்பரிய வரலாற்றாசிரியர் படைப்பு முதல் மோசே காலம் வரை இறைவனின் திட்டத்தை வரைய முயலும் போது இறை உடன்படிக்கையானது ஒரு வழிகாட்டும் ஆற்றலாகப் பணிபுரிகிறது. படைப்புத்திட்டத்தின் முதல் சோதனை மற் றும் பெரும் வெள்ளத்தின் பேரழிவிற்குப் பின்னர் நோவாவின் உடன்படிக்கையானது உலகளாவிய பரிமாணத்தை ஏற்கின்றது (ஆதி 9:1-17). இரண்டாவது தோல்வி மற் றும் பாபேலின் சிதறலுக்குப் பின்னர் ஆபிர காமின் உடன்படிக்கையானது இறைவனின் திட்டத்தைப் பிதாப்பிதாக்களின் பிள்ளைக ளுக்கு மட்டும் உரியதாக வரையறைசெய்கி றது (ஆதி 17:1-14). எகிப்தின் துன்பங்களுக் குப்பின்னர், சீனாய் உடன்படிக்கையானது இறை மக்களை உருவாக்கியதன் மூலம் எதிர்காலத்தைத் தயாரித்தது. இவ்வாறு இஸ் ராயேலானது, சீனாய் உடன்படிக்கையைப் பின்னோக்காகச் கட்டிக் காட்டி, தனது வர லாற்றின் பொருளைப் புரிந்து கொள்கிறது.

3. புதிய உடன்படிக்கையை நோக்கி:-

அ) பழைய உடன்படிக்கையின் அழிவு:- சீனாய் ஒப்பந்தத்தின் உட்கருத்துக்களை வலி யுறுத்துவதன் மூலம் இறைவாக்கினர்கள் உடன்பாட்டின் கோட்பாட்டை ஆழமாக்கு வதை அதிகமாகவே செய்தனர். எதிர்கா லத்தை நோக்கித் தம்மையே அவர்களோடு பிணைத்துக் கொண்ட மக்களுடைய நாட கத்தை அதனுடைய முழுமையில் அவர்கள் எடுத்துக் கூறினர். மனைவியின் விபச்சாரத்தி னால் திருமணம் தோல்வியடைவது போல (ஓசே 2:4; எச 16:15-43), இஸ்ராயேலுடைய பிரமாணிக்க மின்மையின் விளைவாக (எரே 22:9), பழைய ஒப்பந்தம் முறிந்துபோனது (31:32). இந்தமுறிவில் இறைவன் எவ்வித முன்முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் விளைவுகளை மட்டுமே இதனின்று வெளிக் கொணர்ந்தார். தனது பிரமாணிக்கமின்மைக்

காக இஸ்ராயேலானது தனது வரலாற்றில் உரிய தண்டனையைப்பெறும். அவளுடைய தேசிய துன்பங்களாகிய எருசலேமின் அழிவு அடிமைத்தனம் சிதறிப்போதல் ஆகியவற்றின் பொருள் இதுவே.

ஆ) புதிய உடன்படிக்கையின்வாக்குறுதி:- இவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நிலையில் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் திட்டமானது மாறாமலே உள்ளது (எரே 31:35 தொ; 33:20-21). எனவே இக்காலங்களின் இறுதியில் புதிய உடன்படிக்கை ஒன்று இருக்கும். இதை ஒருபுதிய மண ஒப்பந்தத்தின் கூறுகள் வழியாக ஒசேயா எடுத்துக் கூறுகிறார். இந்தப் புதிய மணஒப்பந்தம் மணமகளுக்கு அன்பு, நீதி, நேர்மை, இறையறிவு ஆகியவற்றைக் கொண்டு வரும்; மனிதனுக்கும் மற்ற படைப்புகளுக்கும் இடையே சமாதானத்தை மீண்டும் அமைக்கும் (ஒசே 2:20-24). மனித இதயம் மாற்றப்பட்டு, அதில் இறைவனின் சட்டம் பொறிக்கப்பட்டிருக்கும் என்று ஏரேமியா துல்லியமாகக் கூறுகிறார் (எரே 31:33-34; 32:37-41). சமாதானத்தின் உடன்படிக்கையாகிய முடிவில்லா உடன்படிக்கையை எசக்கியேல் அறிவிக்கிறார் (எச 36:26). இது சீனாய் உடன்படிக்கையையும் (எச 16:60) தாவீதின் உடன்படிக்கையையும் (34:23-24) புதுப்பித்து இதயங்களின் மாற்றத்தையும் இறை ஆவியின் கொடையையும் கொண்டு வரும் (36:26 தொ). இவ்வாறு ''நீங்கள் நம் மக்களாய் இருப்பீர்கள்; நாம் உங்களின் கடவுளாய் இருப்போம்'' (எரே 31:33; 32:38; எச 36:28; 37:27) என்று முன்னர் அறிவிக்கப்பட்ட செயல் திட்டம் நிறைவேறும்.

''ஆறுதல் செய்தியில்'', இந்த இறுதிக் கால உடன்படிக்கையானது ஆண்டவருக்கும் புதிய எருசலேமிற்கும் இடையிலான திருமணத்தின் தனிக்கூறுகளை மீண்டும் எடுத்துக்காட்டுகிறது (ஏச 54). இந்த உடன்படிக்கையானது நோவாவிற்கு உறுதியளிக்கப்பட்டதுபோன்று உறுதியானதாகவும் (54:9-10), தாவீதுக்கு வாக்களிக்கப்பட்ட அருட்கொடைகளால் அமைக்கப்பட்டதாகவும் (55:3) இருக்கும். இந்த உடன்படிக்கையை உருவாக்கியவர் ''மக்களின் உடன்படிக்கையென்றும் நாடுகளில் ஒளி என்றும்'' (42:6; 49:6 தொ) யாவேயால் ஏற்படுத்தப்பட்ட மறைபொருள்மிக்க ஊழியரேயாவார். இவ்வாறு, காட்சியானது மாட்சிமையோடு விரிவுபடுத்தப்பட்டது. மனித வரலாறு முழுவதன்மீதும் ஆதிக்கம் செலுத்துகின்ற உடன்படிக்கையின் இத்திட்டமானது காலத்தின் இறுதியில் தனது முடிவினைக் கண்டடையும். குலமூதாதையர், மோசே மற்றும் தாவீதின் உடன்படிக்கைகளில் முழுமையற்ற நிலையில் வெளிப்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையானது, யாவேயினுடைய ஊழியனுடைய தலையீட்டின் மூலமாக ஒரே நேரத்தில் உள்ளார்ந்ததாகவும் உலகளாவியதாகவும் இறுதியாக முழுமையான வடிவில் செயல்படுத்தப்படும். இஸ்ராயேலின் வரலாறானது அதன் முடிவை நோக்கிச் செல்லும் என்பது உறுதி. சீனாய் உடன்படிக்கையின் காரணமாகப் புனித உடன்படிக்கையின் பெயரை யூத அமைப்புகள் பெறும் (தானி 11:28 தொ). ஆனால் இவ்வரலாறானது உண்மையில் எதிர்காலத்தை நோக்கியும், புதிய உடன்படிக்கையை நோக்கியும், புதிய ஏற்பாட்டை நோக்கியும் அமைந்திருக்கும்.

II புதிய ஏற்பாடு:-

உடன்படிக்கையைக் குறிக்கும் ''பெரீத்'' என்ற எபிரேயச் சொல்லை ''தியாதேக்கே'' என்று மொழி பெயர்த்தபோது, எழுபது நூல் பொருள்பொதிந்த தேர்வுசெய்தது. இது கிறிஸ்தவச் சொற்றொகுதியில் பெரும் தாக்கம் விளைவித்தது. இச்சொல்லானது, தனது கிரேக்கச் சட்டமொழியில் தனது உடைமைகளை விருப்பம் போல் அளிக்கின்ற செயலை (உயில்) அல்லது ஒருவர் செயல்படுத்த விரும்பும் முறையை அறிவிக்கின்ற செயலைக் குறிப்பிடுகின்றது. இதில் சட்டரீதியான ஒப்பந்தத்தின் தன்மையைவிட, செயல்களின் போக்கைத் தீர்மானிக்கின்றவருடைய அதிகாரமே அழுத்தம் பெறுகிறது. இச்சொல்லை உபயோகிப்பதன்மூலம் கிரேக்க மொழிபெயர்ப்பாளர்கள் இறைவ

னுடைய யாவும் கடந்த தன்மையையும், இஸ்ராயேல் மக்கள் மற்றும் அவர்களுடைய சட்டத்தினுடைய தொடக்கத்தின்போது இறைவன் காட்டிய பரிவையும் வலியுறுத்து கின்றனர்.

1. இயேசுவால் புதிய உடன்படிக்கை அமைக்கப்படுதல்:-

''தியோதேக்கே'' என்ற சொல்லானது, இறுதி இராவுணவு பற்றிய நான்கு பகுதிகளி லும், தனிப்பட்ட முக்கியத்துவம் உள்ள கருத்தில் தோன்றுகிறது. அப்பத்தை எடுத்து ''இதை வாங்கி உண்ணுங்கள், இது என் உடல்'' என்று கூறிப் பகிர்ந்தளித்தபின், இயேசு திராட்சை இரசக் கிண்ணத்தை எடுத்து ஆசீர்வதித்து, சுற்றிலும் அனுப்பி வைத்தார். மிகக்குறுகிய வாய்பாடானது மாற்குவினால் பாதுகாக்கப்பட்டுள்ளது. ''உடன் படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இது'' (மாற் 14:24); ''பாவமன்னிப்புக்கென்று'' என்பதை மத்தேயு சேர்க்கிறார் (மத் 26:28). லூக்காவும் பவுலும் ''இக்கிண்ணம் என் இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை'' (லூக் 22:20; 1 கொரி 11:25) என்று கூறும்போது, லூக்கா மட்டும் ''உங்களுக்காகச் சிந்தப்படும்'' என்பதைச் சேர்த்துக் கொள்கிறார். கிண்ணத்தைப் பகிர்ந்துகொள்வது சடங்குச் செயலாகும். உரைக்கப்பட்ட சொற்கள், இயேசு செய்து முடிக்க உள்ள செயலான பலருடைய மீட்பிற்கெனச் சுதந்தரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அவரது மரணத்துடன் அச்சடங்குச் செயலைப் பிணைக்கின்றன.

இக்கடைசிக்கூற்றிலிருந்து இயேசு தம்மைத் துன்புறும் ஊழியனாகக் கருதுகிறார் என்பதும் (ஏச 53:10-12), தமது மரணத்தைப் பரிகாரப்பலியாகப் புரிந்துகொள்கிறார் (53: 10) என்பதும் தெளிவாகிறது. இவ்வாறாக, ''ஆறுதலின் செய்தி'' சுட்டிக் காட்டுகின்ற உடன்படிக்கையின் இணைப்பாளராக அவர் ஆகின்றார் (ஏச 42:6). ''உடன்படிக்கையின் இரத்தமானது'' சீனாய் உடன்படிக்கை இரத்தத்தினால் முடித்து வைக்கப்பட்டது என்பதையும் நினைவுறுத்துகிறது (யாத் 24:8). இறைவனுக்கும் மனிதருக்குமிடையே உறுதியான இணைப்பைச் செயல்முறையில் அடையவிருக்கின்ற இரத்தத்தினாலான புதிய பலியால் விலங்குகளின் பலிகள் அகற்றப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. எரேமியாவாலும் எசக்கியேலாலும் அறிவிக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் வாக்குறுதியானது இவ்வாறு நிறைவேற்றப்பட்டது. இயேசுவில் மனித இதயங்கள் மாற்றப்பட்டு, இறைவனின் ஆவி அளிக்கப்படும். ஒரே சமயத்தில் பாஸ்காப்பலியாகவும் உடன்படிக்கைப் பலியாகவும் பரிகாரப் பலியாகவும் உள்ள இயேசுவின் மரணமானது, மரணத்தைப் பல்வேறு வழிகளில் எடுத்துக் கூறிய பழைய ஏற்பாட்டின் உருவகங்களை, அவற்றினுடைய முழுநிறைவிற்கு நடத்திச் செல்லும். அதனைத் தமது நினைவாகச் செய்யச் சொல்லி இயேசுவால் கட்டளையிடப்பட்ட சடங்குச் செய்கையில் இச்செயல் இனிமேல் பிரசன்னப்படுத்தப்படுமாதலால், விசுவாசத்தினால் நிறைவேற்றப்படும் நற்கருணைப் பங்கேற்பின் காரணமாக, விசுவாசிகள் புதிய உடன்படிக்கையின் மறைபொருளுடன் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டு, அவற்றின் அருட்கொடைகளினின்று பயன் பெறுவர்.

2. புதிய உடன்படிக்கை பற்றிய கிறிஸ்தவ சிந்தனை:-

அ. புனித பவுல்:- கிறிஸ்தவ வழிபாட்டில் மையத்தில் இயேசுவாலேயே அமைக்கப்பட்ட நிலையில், உடன்படிக்கைக் கருத்தானது, வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத இடத்திலும், புதிய ஏற்பாடு முழுமைக்கும் பின்னணியாக உள்ளது. சீனாய் உடன்படிக்கையில் அளிக்கப்பட்டுள்ள சட்டத்தைக் கடைப்பிடிப்பதை அவசியமாகக் கொண்டுள்ள யூதருக்கு எதிரான தமது விவாதங்களில், சட்டம் உருவாவதற்கு முன்னரே ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியாகிய வேறொரு இறை ஒழுங்கு உரிய சரியான முறையில் அறிவிக்கப்பட்டு விட்டது எனப் பவுல் கூறுகின்றார். சட்டமானது இந்த உடன்பாட்டை அழிக்கமுடியாது. ஆனால், கிறிஸ்துவே வாக்குறுதியின் முழுநிறைவா

உள்ளார் (கலா 3:15-18). எனவே சட்டத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமாக இல்லாமல், அவரின் மீதான விசுவாசத்தின் மூலமே மீட்பு அடையப்படுகிறது. மீட்புப்பற்றி இந்த நோக்கு ஒரு உண்மையை வலியுறுத்துகிறது; பழைய உடன்படிக்கையானது, இறைவன் சுதந்தரமாக உருவாக்கிய வாக்குறுதியின் ஒழுங்கு முறையாகிய இலவசமான திட்டத்திற்குள் புகுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் உச்ச நிலையாகப் புதிய ஏற்பாடு உள்ளது. சீனாயில் அமைக்கப்பட்ட ஒழுங்கமைவு இறைவனிடமிருந்து வந்தது என்பதை எதிர்த்துப் பவுல் வாதாடவில்லை; புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கைகள் இஸ்ராயேலின் சலுகைகளைச் சேர்ந்தவையாகும் (உரோ 9:4). இவற்றிற்குப் பிறவினத்தார் அந்நியராக இருந்தனர் (எபே 2:12). இறைவன் இப்போது கிறிஸ்துவில் வெளிப்படுத்தியதுடன் இத்திட்டத்தை ஒப்பிடும்போது பழைய உடன்படிக்கையின் மீதான புதிய உடன்படிக்கையின் மேன்மை தெளிவாகத் தெரிகிறது (கலா 4:24 தொ; 2 கொரி 3:6 தொ). புதிய உடன்படிக்கையில் பாவங்கள் எடுத்தெறியப்படுகின்றன. (உரோ 11:27). இறைவன் மனிதரிடையில் தங்குகின்றார் (2 கொரி 6:16). அவர் மனிதருடைய இதயத்தை மாற்றி, தமது ஆவியை அதனுள் அமைக்கின்றார் (உரோ 3:5; 8:4-16). அது இவ்வாறு இனிமேலும் வார்த்தைகளின் உடன்படிக்கையாக இல்லாமல், இறைவனுடைய மக்களின் விடுதலையைத் தன்னுடன் கொண்டுவருகின்ற (கலா 14:24) ஆவியினுடையதாக உள்ளது (2 கொரி 3:6). கிறிஸ்துவின் இரத்தமானது மனித இனத்தில் ஒற்றுமையை மீண்டும் அமைத்ததினால் (எபே 2:12 தொ) அது இஸ்ராயேல் மக்களை அடைவது போல் பிற நாடுகளையும் அடைகிறது. இயேசுவில் நிறைவேறுவதாக அவர் கண்ட இறைவாக்கு வாக்குறுதிகளின் முன்னோக்குகளை மீண்டும் எடுத்தாண்டு உடன்படிக்கைக் கருத்தை முக்கியமானதாகக் கொண்டுள்ள மனித வரலாற்றின் பொதுத் தோற்றத்தைப் பவுல் விரிவுபடுத்துகின்றார்.

ஆ) எபிரேயருக்கான திருமுகம்:- இத்திருமுகமானது சற்றே மாறுபட்ட கோணத்தில் அதே கூறுகளைக்கொண்ட ஓர் இணையான தொகுப்பினை அமைக்கிறது. சிலுவையின் மூலம் குருவாகிய கிறிஸ்து விண்ணகப்புனித இடத்திற்குள் நுழைந்துள்ளார். அங்கு அவர் எந்நாளும் இறைவனின் முன்னிலையில் நமக்கெனப் பரிந்து பேசிக்கொண்டும், அவருடனான நமது ஒன்றிப்பைத் தொடங்கியவாறும் உள்ளார். எரேமியாவால் அறிவிக்கப்பட்ட இப்புதிய உடன்படிக்கையானது இவ்வாறு செயல்படுகிறது (எபி 8:8-12; எரே 31:31-34). அதனுடைய இணைப்பாளரின் உயர்வான தன்மையால் நிறைந்துள்ள உயர்ந்த உடன்படிக்கையாக உள்ளது (எபி 6:6; 12:24). முதலாவதைப்போல இரத்தத்தில் முத்திரையிடப்பட்ட உடன்படிக்கையாக உள்ளது (எபி 9:20; யாத் 24:8). ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தைத் தவிர வேறெந்த விலங்கினுடைய இரத்தமும் நமது மீட்பிற்கெனச் சிந்தப்படவில்லை (9:11-12). இப்புதிய திட்டமானது இதற்கு முற்பட்டதனால் தயாரிக்கப்பட்டது. ஆனால் இது பழையதை ஒன்றுமில்லாமையாக்கிவிட்டது. மறையப் போகின்ற ஒன்றுடன் தன்னையே இணைப்பதென்பது வீணே (6:13). உயில் எழுதியவருடைய மரணத்தோடு உயில் செயல்படத் தொடங்குவதுபோல், இயேசுவின் மரணமானது வாக்களிக்கப்பட்ட உரிமைப்பேற்றிற்கு நம்மை உரிமையாளராக்குகிறது (எபி 9:15 தொ). பழைய உடன்படிக்கையானது இறைவனுடனான மனிதனுடைய சந்திப்பை முழுமையற்ற விதமாகவே உறுதிப்படுத்துவதன் மூலம், நிழல்கள் மற்றும் உருவகங்களாக நிறைவற்றதாக உள்ளது. ஆனால் இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் புதிய உடன்படிக்கையானது நமது தலைமைக்குருவாகிய இயேசு இறைப்பிரசன்னத்தை எக்காலத்திற்கும் அணுகும் உரிமையை நமக்கு உறுதிப்படுத்துவதால் முழுமையானதாக உள்ளது (எபி 10:1-22). முடிவற்ற உடன்படிக்கையினுடைய இரத்தத்தினால், ஆடுகளின் உயர்ந்த மேய்ப்பராக உருவாகிய இயேசுகிறிஸ்து (13:20) பாவத்தை அழித்தல்,

இறைவனுடன் மனிதனை ஒன்றித்தல் ஆகிய விளைவுகளைப் பெற்றுத் தந்துள்ளார்.

இ) பிற வாசகங்கள் பழைய ஏற்பாட்டினை மேற்கோள்காட்ட வேண்டிய எத்தேவையும் இல்லாமல் உடன்படிக்கைக் கருத்தை நினைவிற்குக் கொண்டு வருகின்ற சொற்களில் கிறிஸ்துவினுடைய சிலுவையின் கனிகளைப் புதிய ஏற்பாட்டின் பிறநூல்கள் சுட்டிக்காட்டுகின்றன. சீனாய் மலையில் உள்ள இஸ்ராயேலைவிட உயர்ந்த நிலையில், நாம் ''அரச குருத்துவமாகவும் பரிசுத்த குலமாகவும்'' உள்ளோம் (1 பேதுரு 2:9; யாத் 19:5-6). ''எல்லாக் குலத்தையும் மொழியையும் இனத்தையும் நாட்டையும்'' ஒரு பகுதியாக் கொண்டுள்ள (திருவெளி 5:9-10) சமுதாயத்திற்கு இச்சலுகையானது விரிவாக்கப்படுகிறது. ஆனால் இவ்வுலகில் புதிய உடன்படிக்கையைச் செயல்படுத்துவதில் சில வரையறைகள் உண்டு. எனவே விண்ணக எருசலேமின் இறுதிக்கால முன்நோக்கில் உடன்படிக்கையைப்பற்றிச் சிந்திப்பதென்பது அவசியமானதாக உள்ளது. இத்தகைய மனிதருடனான இறைவனின் வாழ்வில் அவர்கள் அவருக்கு மக்களாயிருப்பர். கடவுள் தாமே அவர்களோடு இருப்பார் (21:3). செம்மறிக்கும் அவரது துணைவியாகிய திருச்சபைக்குமான திருமணத்தில் புதிய உடன்படிக்கையானது நிறைவு பெறுகிறது (21:2.9).

கோட்பாடு வளர்ச்சியின் முடிவில், மனிதருடனான இறைவனின் உறவுகளை வரையறுப்பதற்கு உதவிய பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரையிலான அனைத்து நோக்கங்களையும் உடன்படிக்கையின் கருத்தானது ஒன்றாக இணைக்கிறது. அதனுடைய உட்பொருளை எடுத்துக்காட்டவேண்டுமென்றால் மகன்தன்மை, அன்பு, ஒன்றிப்பு ஆகியவை பற்றி நாம் பேச வேண்டும். எல்லாவற்றிலும் மிகமுக்கியமாக இயேசு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திய செயலுக்கு நாம் திரும்பச் செல்ல வேண்டும். தம்முடைய உடல் மற்றும் சிந்தப்பட்ட தம்முடைய இரத்தம் ஆகிய தம்முடைய ஆவியின் மூலம் அவர் மனிதரைத் தமது உடலாகவே உருவாக்கினார். இறைவனின் இக்கொடையைப்பற்றி பழைய ஏற்பாடு இன்னும் அறிந்திருக்கவில்லை. ஆயினும் அங்குள்ள அனைத்தும் இறைவனுக்கும் மனிதருக்குமிடையிலான உடன்படிக்கையைப்பற்றி அக்கறைகொண்டிருந்ததால் பழைய ஏற்பாடு வரலாறும் அமைப்புகளும் அதன் பண்புகளை மங்கலாகக் கோடிட்டுக் காட்டின.

உடன்படிக்கையின் புத்தகம் (COVENANT, BOOK OF).

யாத் 27:7-இல் மோசே உடன்படிக்கையின் புத்தகத்திலிருந்து வாசித்ததாகக் கூறப்படுகிறது. அதாவது இது சீனாய் மலையடிவாரத்தில் மக்கள், இறைவன் உடன்படிக்கை செய்து கொண்ட சடங்கின் போது இப்புத்தகத்திலிருந்து மோசே வாசிக்கிறார். இந்தப் பெயர் யாத் 20:23-23:33 என்ற பகுதியில் அடங்கிய ஓர் தொகுப்பைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது. அநேகமாக இது இஸ்ராயேலின் வரலாறு முழுவதிலும் வளர்ச்சியடைந்த, யாவேக்கும் இஸ்ராயேல் மக்களுக்குமிடையே உள்ள உடன்படிக்கையின் எழுதப்பட்ட பகுதிகளைக் குறிக்கலாம் (2 அர 23:2-3.11; 2 நாள் 34:30-31).

உடன்படிக்கையின் பேழை (ARK OF THE COVENANT).

இது சாட்சியின் பேழை, யாவேயின் உடன்படிக்கைப் பேழை, யாவேயின் பேழை, இஸ்ராயேலின் இறைவனின் பேழை, என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இது தூக்கிச் செல்லக்கூடிய அளவில் அமைந்த ஒரு சிறிய பெட்டி ஆகும். ஆதி.50:26-இல் இது பற்றி யோசேப்பின் இறப்பிற்குப் பிறகு அவரை அடக்கம் செய்த பெட்டியைக் குறிப்பிடும் போது பேசப்படுகிறது.

யாத் 25:10-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போல நீளம் இரண்டரை முழமும் அகலம் ஒன்றரை முழமும், உயரம் ஒன்றரை முழ

மும் கொண்ட அப்பெட்டி சேத்தீம் மரத்தால் செய்யப்பட்டது. அதன் உள்ளும் புறமும் பசும் பொன்னால் மூடப்பட்டு, அதன் மேல் தங்க மூடி ஒன்று இருந்தது. நான்கு பொன்வளையங்கள் பெட்டகத்தின் நான்கு மூலைகளிலும் பொருத்தப்பட்டிருந்தன, அதனைத் தூக்கிச்செல்ல சேத்தீம் மரத்தாலான இரண்டு கைப்பிடிகள் இருந்தன. அவையும் தங்கத்தால் மூடப்பட்டு வளையங்களுக்குள் நுழைக்கப்பட்டிருந்தன. பேழையினுள் சாட்சிச் சட்டங்கள் இரண்டு வைக்கப்பட்டன.

அதன்மேல் பசும் பொன்னால் ஆன இரக்கத்தின் அரியணை ஒன்றும் இருந்தது. அதன் நீளம் இரண்டரை முழமும், அகலம் ஒன்றரை முழமுமாய் அமைந்திருந்தது. தங்கள் இறக்கைகளை உயர விரிக்கும் இரண்டு கெருபிம்கள் இரக்கத்தின் அரியணையையும் மூலத்தானத்தையும் மூடுபவையாக எதிர் எதிரே நிற்பவையாக வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு நிற்கும் இரு கெருபிம்களுக்கு நடுவில் இருந்து கடவுள் தன் கட்டளைகளையெல்லாம் இஸ்ராயேலுக்கு வெளிப்படுத்தினார் (யாத் 25:22). இவ்வாறு கூறப்படும் விளக்கம் பின்னர் வந்த குருத்துவ மரபின் விளக்கமாயினும், இது பேழை கட்டப்பட்ட பல நூற்றாண்டுகட்குப் பின்னர் எழுந்ததாயினும் ஏறக்குறைய சரியானதேயாகும்.

உடன்படிக்கையின் பேழைக்குள் இருந்த இரு சாட்சியச் சட்டங்களும் மோசேயின் காலத்தைச் சேர்ந்தவை (1 அர 8:9). எபி 9:4-இல் ஆசிரியர் வரலாறு அல்லாத ராபிகளின் மரபிலிருந்து இந்தப்பேழைக்குள் மன்னாவைக் கொண்ட ஒரு பாத்திரமும், ஆரோனின் கோலும் இருந்ததாக மீண்டும், மீண்டும் குறிப்பிடுகிறார்.

எபிரேயர்கள் பாலைவனத்தில் பயணம் செய்தபொழுது அனைத்து மக்களுக்கு முன் உடன்படிக்கையின் பேழை சுமந்துசெல்லப்பட்டது (எண் 10:33). ஒவ்வொரு போரின் போதும் முன்னால் சுமந்து சென்றனர். கானானியர்கள் இவர்களை வென்றபோது உடன்படிக்கையின் பேழை அவர்களிடம் இல்லை (எண் 14:44). இது யோர்தானின் நடுவே முதலில் சுமந்து செல்லப்பட்டது (யோசு 3:3); எரிக்கோ நகரைச் சுற்றி ஏழு நாள்கள் தூக்கிச் செல்லப்பட்டது (யோசு 6:11).

இறைத்திருவுளத்தைக் கேட்டு அறியும் இடமாகவும் இருந்தது (நீதி 20:27). இஸ்ராயேலர் கானான் நாட்டில் குடியேறிய பின்பு சிலோவில் இது நிலையாக வைக்கப்பட்டது (1 சாமு 3:3). பெலிஸ்தியருக்கு எதிராக நடந்த போரில் இது தூக்கிச் செல்லப்பட்டது. ஆனால் பெலிஸ்தியர்கள் இஸ்ராயேலரை வென்று பேழையையும் கவர்ந்து சென்றனர் (1 சாமு 4:10-11). ஆனால் பெலிஸ்தியர்கள் இதனை ஒரு எதிரிச் சின்னமாகக் கண்டனர். அசுதோத்து எனும் இடத்தில் பெலிஸ்தியரின் கடவுளான தாகோன் கோயிலில் வைக்கப்பட்டிருந்த போது, அக்கடவுளின் உருவம் பூமி நடுக்கத்தால் கீழே தள்ளப்பட்டது (1 சாமு 5:3). மேலும் பேழை கொண்டு செல்லப்பட்ட அசுதோத்து, காத்து, எக்கரோன் எனுமிடங்களில் தொற்று நோய் பரவ ஆரம்பித்தது (1 சாமு 5:6). எனவே உடன்படிக்கையின் பேழையை மாட்டு வண்டியில் ஏற்றி அதற்கு இருகாளைகளைப் பூட்டி அனுப்பி வைத்தனர். அது பேத்துசெமேசு எனுமிடத்தில் இஸ்ராயேலரை வந்தடைந்தது (1 சாமு 6:1). ஆனால் இங்கும் தொற்று நோய் பரவியதால் (1 சாமு 6:19). அது கிரிஸ்-எயரீமில் அபினதாபின் வீட்டில் வைக்கப்பட்டது. பெலிஸ்தியருடன் ஏற்கனவே போரில் தோல்வியுற்றது மட்டுமன்று, தொற்று நோயும் பரவியதால் உடன்படிக்கையின்பேழையின் மேல் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர். பின்னர் தாவீதுதான் அபினதாபின் வீட்டிலிருந்து எருசலேமில் இருந்த புதிய புனிதத்தலத்திற்குக் கொணர்கிறார். அதன் வழியில் சுமந்து வந்த ஒருவர் இறந்தார் (2 சாமு 6:2).

தாவீது உடன்படிக்கையின் பேழையில் ஒரு ஒற்றுமையின் சின்னத்தைக் கண்டார். பிரிந்து கிடந்த இஸ்ராயேலை அரசியல்

அடிப்படையில் இணைப்பதற்கு இது ஒரு அடையாளமாக அமையுமென்பதைக் கண்டதால் எபூசியரின் நகரமான எருசலேமை இஸ்ராயேலரின் தலைநகராக்கி புதிய வழிபாட்டு மையமாகவும் ஒற்றுமையின் மையமாகவும் ஏற்படுத்தினார். பேழை நகரைப் புனிதப்படுத்தியது.

உடன்படிக்கையின் பேழை அம்மோனியருக்கெதிரான போரில் சுமந்து செல்லபபட்டது (2 சாமு 11:11). சாலமோனின் ஆலயத்தில் இறுதியில் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது (1 அர 8:6). அதன்பிறகு வரலாற்று நூல்களில் இது பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. சங் 24:7-10 போன்றவற்றில் இது பவனியாக எடுத்துச் செல்லப்படுவது பற்றிச் சுட்டிக் காட்டப்படுகிறது. எதிர்காலத்தில் இதன்மறைவு பற்றிக் குறிப்பிடுகிறார் எரேமியா (எரே 3:16). கி.மு.587-இல் எருசலேம் ஆலயத்தின் அழிவின்போது பேழையும் அழிந்திருக்க வேண்டும். வரலாற்றுக்குப் புறம்பான ஒரு மரபு எரேமியா இதனை ஆலய அழிவினின்று பாதுகாத்தார் எனக் கூறுகிறது (2 மக்.2:5).

புதிய ஏற்பாட்டில் எபி 9:4; திருவெளி 11:19-இல் இது விண்ணக ஆலயத்தில் காட்சி தருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

உடன்படிக்கையின் பேழை யாவே இறைவனின் பிரசன்னத்தைக் குறிக்கும் அடையாளமாக விளங்கியது. அதுபற்றிய பாரம்பரியமும் அதன் அடையாளப் பொருளும் ஒருவிதத்தில் கலந்து போயின. இஸ்லாமியத்திற்கு முந்தைய அரேபிய இனங்கள் சுமந்து செல்லும் வழிபாட்டு இடங்களைக் கொண்டிருந்ததாக நவீன ஆய்வுகள் கூறுகின்றன. பேழை பற்றிய பாரம்பரியம் இதனோடு பொருந்துவதாக உள்ளது. இந்த நாடோடி இனத்தவர்களுக்கு வீடோ, நிலையான குடியிருப்போ, கோயிலோ இருந்ததில்லை. பேழை போன்ற அமைப்பு அவர்களோடு செல்லும் புனித இடமாகியது.

உடன்படிக்கையின் பேழைபற்றிய மிக விரிவான விளக்கமொன்றும் கூறப்படாதது அதன் அடையாளப் பொருளை மிக விரிவாக விளக்கத்தடையாக இருக்கிறது. எகிப்தியர்கள் சுமந்து சென்ற தூய படகு அவர்களது கடவுளான ரே விண்ணகங்களை நாள்தோறும் சுற்றி வந்ததைக் குறிக்கும் அடையாளமாக இருந்தது போன்று உடன்படிக்கைப் பேழையும் புரிந்து கொள்ளப்படலாம். கானானிய தூபமிடும் பீடங்கள் இது போன்ற சிறிய அளவிலான கோவில்களாகக் காணப்பட்டாலும் இந்தப் பேழையை ஒத்தவையாக இவை அமையா எனக் கருதுகின்றனர் சிலர்.

கெரூபிம்களின் மேல் அமர்ந்திருக்கும் ஆண்டவர் என்று கூறப்பட்டிருப்பதிலிருந்து (1 சாமு 4:4; 2 சாமு 6:2; சங் 80:2) உடன்படிக்கையின் பேழையே யாவேயின் அரியணை என்பதும் அதன்மேல் கெரூபிம்களின் மேல் ஆண்டவர் மனிதக் கண்களுக்குப் புலப்படாத முறையில் அமர்ந்துள்ளார் என்பதும் தெரிகிறது. கானானியத் தெய்வங்கள் விலங்குகளின் மேல் அமர்ந்துள்ளதாகக் காட்டப்படும். ஆனால் யாவேக்கு எந்தவடிவமும் இல்லையாததால் அவரின் கால்மணை மட்டுமே அடையாளமாக அவரைக் குறிப்பிட்டது. அசீரியக் கடவுள்களின் சிலைகள் தங்கள் அரியணை மேல் அமர்ந்துள்ள நிலையில் பவனியில் சுமந்து செல்லப்பட்டன.

இவ்வாறு உடன்படிக்கையின் பேழை என்பது யாவேயின் பிரசன்னத்தைக் குறிக்கும் அடையாளமாகவும், பாவப்பரிகாரம் நிகழ்த்துமிடமாகவும், இறைத்திருவுளம் அறிவிக்கப்படும் இடமாகவும் இருந்தது. யாவேயின் அரச மாண்பையும், அவரது தலைமைப் பண்பையும் குறிக்கும் வகையில் போர்களின்முன் கொண்டு செல்லப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக யாவே இஸ்ராயேலருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக இருந்தது. ஏனெனில் அவர்களைத் தமது மக்களாக அவரே தேர்ந்து கொண்டார். அவர்களுக்குத் தமது கட்டளைகளைத் தந்தார். அந்தக் கட்டளைகள், யாவே தமது செயலாலும் சொல்லாலும் தமது மக்களிடையே பிரசன்னமாய்

இருக்கிறார், செயலாற்றுகிறார், பரிபாலிக்கிறார் என்பதற்குப் பேழை அடையாளமாக விளங்கியது.

புதிய ஏற்பாடு, பேழை கிறிஸ்துவில் நிறைவு காண்பதாய்க் காட்டுகிறது. அவரே மக்களிடையே வாழும் இறைவனின் வார்த்தை (யோவா 1:14; கொலோ 2:9). விசுவாசிப்பவர்களுக்குள் அவர்களது மீட்புக்காகச் செயலாற்றுகிறார் (1 தெச 2:13). அவர்களின் வழிகாட்டியாக உள்ளார் (யோவா 8:12). உண்மையான பரிகாரமாகிறார் (உரோ 3:25; 1 யோவா 2:2; 4:10).

உடும்பு (GECKO)

விவிலியத்தில் இதன் பொருள் தெளிவாக இல்லையென்றாலும், லேவி 11:30-இன்படி இது ஓர் ஊரும் உயிரினமாகும். மேலும், இது ஒரு வகையான கீச்சிடும் குரலை எழுப்புவதால் இப்பெயர் அதற்குச் சூட்டப்பட்டிருக்கலாம். பாலஸ்தீன நாட்டில் இத்தகைய உயிரினங்கள் பல காணப்படுகின்றன. இது அசுத்த விலங்குகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகையால் இஸ்ராயேலர் இதை உண்ணக்கூடாது.

உடைகள்: (VESTMENTS)

இது பாகாலின் பக்தர்களின் தனிச்சிறப்புடைய உடைகளாகும் (2 அர 10:22). மேலும் இது குருக்கள் அணியும் ஆடையையும் குறிக்கும் (எஸ் 3:10).

உணவருந்தல்

மேற்காசிய நாடுகளில் உணவு உண்பது, உண்டு குடிப்பதை மட்டுமல்லாமல் மனிதன் மனிதனோடும், மனிதன் இறைவனோடும் கொண்டுள்ள உறவையும் குறித்தது. இவை மன மகிழ்ச்சிக்கும் வழிவகுத்தன (திருவுரை 10:19).

1. உணவு நேரம்:- வழக்கமாக மக்கள் காலையில் உணவு உண்ணமாட்டார்கள். இருப்பினும் வேலை செய்பவர்கள் சிறு ரொட்டித்துண்டு, அல்லது பேரீச்சம் பழம் இவற்றை உண்பார்கள். உயிர்த்த இயேசுவின் காட்சியில்தான், காலை உணவு குறிப்பிடப்படுகின்றது. இயேசு காலை உணவு உண்ண வரும்படி அப்போஸ்தலர்களை அழைத்தார் (யோவா 21:12). மற்ற இடங்களிலெல்லாம் அதிகாலையில் உணவு உண்பது கண்டிக்கப்படுகிறது (திருவுரை 10:16; ஏச 5:11; அ.ப.2:15). ராபிகளின் ஒழுங்குப்படி பொது மக்களுக்கு 10 மணியும் வயலில் வேலைசெய்பவர்களுக்கு 11 மணியும், கல்வி பயில்பவர்களுக்கு 12 மணியும் காலை உணவு நேரமாகும். பேதுருவுக்கு உச்சிவேளையில் பசி எடுத்தது (அ.ப.10:9-10). பழைய ஏற்பாட்டில் காலை உணவைக் குறிக்கத் தனிப்பட்ட சொல் இல்லை. இது எகிப்தில் பெரிய விருந்தாக இருந்தாலும், பாலஸ்தீனத்தில் பரவலாக வழக்கில் இல்லை (ஆதி 43:16). இது உண்பதற்கும், வேலையிலிருந்து ஓய்வு எடுப்பதற்கும் உரிய நேரமாகும். அறுவடையின் போது ரூத்தும் போவாசும் காடியில் தோய்த்த அப்பத்தையும், வறுத்த கோதுமையையும் உண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (ரூத் 2:14).

முக்கியமான உணவு, வேலை செய்யப் போதிய வெளிச்சம் இல்லாத மாலை நேரத்தில் இருந்தது (நீதி 19:16-21; லூக் 17:7-8; ரூத் 3:2-7). இவ்வாறே காகம் எலியாவுக்குக் காலையிலும் மாலையிலும் அப்பம் கொண்டு வந்தது (1 அர 17:6). ஒரு நாளைக்கு இரண்டு முறை உண்ணும் வழக்கம் பாலைவனக் காலத்திலிருந்து வருவதாகக் கருதப்படுகிறது (யாத் 16:12). இந்த உணவைக் குறிக்கவும் தனிப்பட்ட சொல் இல்லை. மாலை நேரத்தில் பெரிய விருந்துகள் உண்பது வழக்கமாக இருந்தது. 'மாலை நேரத்தில்' இரண்டு தூதர்கள் லோத்திடம் வந்தபோது லோத்து பெரிய விருந்து வைத்தார் (ஆதி 19:1-3). ஆனால் சில விதிவிலக்குகளையும் காணலாம். ஆபிரகாம் மூன்று மனிதர்களை உச்சி வேளையில் உபசரிக்கின்றார் (18:1-8). யோபு தன் மக்களுடன் உண்ட விருந்தும் உச்சி வேளையில் நடந்ததாகத் தான் கருதப்படுகின்றது (யோபு 1:13-14).

2. விருந்தினர்:- பொதுவாக உணவு உண்ணும் போது பெண்களும் ஆண்களோடு

உண்டனர். ரூத் போவாசோடும், சகவே லைக்காரர்களோடும் உண்டாள் (ரூத் 2:14). பெரிய விருந்துகளுக்கு ஆண்கள் மட்டுமே அழைக்கப்பட்டனர். அபிசலோம் ஆடுகள் மயிர் கத்தரிக்கும் விழாவுக்கு அரசனின் புதல்வர்களை மட்டுமே அழைத்தார் (2 சாமு 13:23). சீராக் நூல் பெண்களை விருந்துகளில் விலக்கக் கூறுகின்றது (சீரா 9:9). முதலில் விருந்து வைப்பவர் ஊழியர்களை அனுப்பி விழாவைப்பற்றி அறிவிப்பார். விருந்து நாளின் போது மீண்டும் ஊழியர்களை அனுப்பி எல்லாம் தயார் என்று அறிவிப்பார் (மத் 22:3-4; லூக் 14:16-17; எஸ்த 5:8; 6:14).

விருந்தினர் வந்தவுடன் 'அவர்களுக்குத் தனிப்பட்ட ஆடை கொடுக்கப்பட்டது (ஏச 61:3; மத் 22:11-12). அவர்கள் தலை பூக்க ளால் அலங்கரிக்கப்படும் (ஏச 61:3; ஞான 2:7-8). இவ்வாறு அலங்கரிக்கப்பட்டவர் களை விருந்து கொடுப்பவர் முத்தமிட்டு வரவேற்பார். அவர்களுடைய பாதங்கள் கழுவப்பட்டன (ஆதி 18:4; 24:32; 43:24; நீதி 19:21; 1 சாமு 25:41; லூக் 7:44). பின்னர் விருந்தினர் பாதங்களும் தலையும் எண் ணெய் பூசப்படும். ஆனால் மரியாள் இயேசு வின் பாதத்தை விலையுயர்ந்த பரிமளத்தை லத்தால் பூசினாள் (யோவா 12:3; மத் 26:7; மாற் 14:3; லூக் 7:38). இதன் பின்னர் அவர் கள் உணவருந்தச் சென்றனர்.

3. உணவருந்தும்போது பழக்க வழக்கங் கள்:-

அ) இருக்கை வசதி:- பழங்காலத்தில் எபிரேயர் தரையில் அமர்ந்து உணவருந்தி னர். ஆபிரகாம் மூன்று மனிதர்களுக்கு மரத்த டியில் உணவு பரிமாறினார் (ஆதி 18:8). பிற்காலத்தில், எபிரேயர்கள் கானானியர் வழக்கப்படி சிறு மேடைகளில் வைக்கப் பட்ட உணவை நாற்காலிகளில் அமர்ந்து உண்டனர். எனவே தாவீது, அரசனின் ''பந் தியில் அமரத்'' தவறக்கூடாது என்று கூறி னார் (1 சாமு 20:5). சொகுசிருக்கையில் சாய்ந்துகொண்டு உண்பது அநேகமாக பாலஸ்தீனத்திற்குப் பாபிலோனியாவிலி ருந்து வந்த வழக்கமாகும். இப்பழக்கம் ஆமோஸ் இறைவாக்கினரால் பொறுப்பற்ற ஆடம்பரம் என்று கண்டிக்கப்படுகிறது (ஆமோ 6:4). எஸ்தர் நூலில் இத்தகைய இருக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன (எஸ்த 1:6; 7:8).

புதிய ஏற்பாட்டில் அதே பழக்க வழக்கங் கள் இருந்தாலும், உரோமானிய கிரேக்க பழக்க வழக்கங்களும் சேர்க்கப்பட்டன. ஒரு சதுர மேசை அமைக்கப்பட்டது. அதன் மூன்று பக்கங்களில் தாழ்ந்த இருக்கைகளும், ஒரு பக்கம் ஊழியர்கள் வேலை செய்ய வசதியாக வெறுமனே இருந்தது. ஒரு பக்கத் தில் மூன்று பேர் உணவு அருந்தலாம். மேசைக்குச் செங்கோணத்தில் இருக்கையில் சாய்ந்து இடது முழங்கையை ஊன்றிக் கொண்டு வலக்கையால் உணவு அருந்துவர். இடக் கையால் உண்பது விருந்தினரை இழி வுபடுத்துவது போலாகும்.

சிறப்பு விருந்தினருக்கு முதலிடம் அளிக் கப்பட்டது (1 சாமு 20:25). சாமுவேல் சவுலுக்கும் அவர் ஊழியருக்கும் விருந்தில் முதலிடத்தை அளித்தார் (1 சாமு 9:22). மற்றவர்கள் அவர்கள் வயதுக்கும் முக்கியத் துவத்துக்கும் தக்கபடி அமர்ந்தனர் (ஆதி 43:33). அமர்ந்த பின் ஊழியர்கள் கொடுத்த பாத்திரத்தில் கைகழுவிக் கொண்டனர். இது கைகளைச் சுத்தப்படுத்துவதற்கு மட்டுமல் லாது, புனிதப்படுத்தும் ஒரு சடங்காகவும் கருதப்பட்டது (மாற் 7:3). எனவேதான் பரி சேயர்கள், இயேசுவின் சீடர்கள் கழுவாத கைகளோடு உண்பதாகக் குற்றம் சாட்டினர் (மத் 15:1-2; மாற் 7:2). பின்னர் விருந்து கொடுப்பவர் விருந்தின் மீது நன்றி கூறி னார். அப்பம் பலுகுதலின்போது இயேசு அப்பம், மீன் ஆகியவற்றின்மீது நன்றி கூறி னார் (மத் 15;36; மாற் 8:6-7). கடைசி இரவு உணவின் போது இயேசு அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து நன்றி கூறினார் (மத் 26:26-27; மாற் 14:22-23; லூக் 22:17-19; 1 கொரி 11:24; அ.ப.27:35).

ஆ) உணவு பரிமாற்றம்:- வழக்கமாக அக்குடும்பத்தின் பெண்கள் உணவு பரிமாறி

வர். பேதுருவின் மாமியார் இயேசுவுக்குப் பணிவிடை புரிந்தாள் (மத் 8:14-15; மாற் 1:30-31; லூக் 4:38-39). ஆனால் செல்வந்தர் கள் வீட்டில் ஆண் ஊழியர்கள் இருந்தனர். சேபா நாட்டு அரசி, சாலமோன் அரசனின் ஊழியர்களின் எண்ணிக்கையைக் கண்டு வியந்தாள் (1 அர 10:5; 2 நாள் 9:4). விருந்து இரண்டு பகுதிகளை உடையது. முதல் பகுதி யில் உணவு மட்டும் பரிமாறப்பட்டது. பின் பகுதியில் திராட்சை ரசம் கொடுக்கப்பட் டது. எனவேதான் கடைசி இரவு உணவில் திராட்சை ரசத்துக்குமுன் அப்பம் கொடுக்கப் பட்டது.

விவிலிய காலத்தில் உணவுக்கென்று தனிப்பாத்திரம் இல்லை. உணவு வைக்கப் பட்டிருந்த ஒரே தட்டில் உண்டனர் (பழ 26:15). இயேசுவும் ''என்னோடு பாத்திரத் தில் கையிடுகிறவனே'' என்று தம்மைக் காட்டிக் கொடுப்பவனை அடையாளம் காண்பிக்கிறார் (மாற் 14:20; மத் 26:23; லூக் 22:21). திராட்சை ரசம் அருந்த தனிக் கிண் ணங்கள் இருந்தன. சாலமோனின் அரண்ம னையில் தங்கத்தாலான கிண்ணங்கள் இருந் தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது (1 அர 10:21; 2 நாள் 9:20).

உணவிலேயே மிகவும் சிறந்த பகுதி சிறப்பு விருந்தினருக்குக் கொடுக்கப்பட் டது. சாமுவேல் சிறந்த கறித்துண்டு ஒன் றைச் சவுலுக்குக் கொடுத்தார் (1 சாமு 9:23-24). கொழுப்பு நிறைந்த பொருட்கள்தான் மக்களால் விரும்பி உண்ணப்பட்டது (ஏச 25:6). விருந்தாளி மிகவும் பேராசை கொள் ளாதவராகவும், கண்டதை எல்லாம் உண்ண வேண்டும் என்று எண்ணாதவராகவும் இருக்க வேண்டும். ''மனிதனைப் போல்'' உண்ணவேண்டும்; மரியாதை முன்னிட்டு, முந்தியே நிறுத்திவிட வேண்டும் (சீரா 31:12-18).

இ) பொழுது போக்கு:- முக்கியமான பொழுது போக்கு இசையும் பாட்டுமாகும். ஆமோஸ் இவ்வாறு பாடுகிறவர்களைக் கண்டிக்கிறார் (ஆமோ 6:5; ஏச 5:12). ஆனால் பிற்காலத்தில் விருந்துகளில் இசையும் பாட் டும் ஏற்றுக் கொள்ளப்பட்டன (சீரா 32:5-6). ஊதாரி மைந்தன் திரும்பி வந்த போது அவனுடைய தந்தை இசையும் நடனமும் கொண்ட விருந்து ஒன்று ஏற்பாடு செய்தார் (லூக் 15:25). குடிப்பாடல்களும் இருந்தன (ஞான 2:6-9).

நடனமும் முக்கிய பங்கு வகித்தது. ஏரோ தின் பிறந்த நாளின் போது ஏரோதியாளின் மகள் அவையினரின்முன் நடனம் ஆடினாள் (மாற் 6:21-22; மத் 14:6-7). இதில் பல புதிர்களும் இடம் பெற்றன. சிம்சோன் தன் திருமண நாளன்று ஒரு புதிர் போட, அதன் விடையைக் கண்டபின், விருந்தினர் எதிர்ப் புதிர் போட்டனர் (நீதி 14:12-18). விருந்துக ளில் மிதமிஞ்சி உண்ணுவதும் குடிப்பதும் கண்டனம் செய்யப்பட்டது (ஏச 5:12; திரு வுரை 10:17; உரோ 13:13; கலா 5:19-21; 1 பேதுரு 4:3).

4. விவிலிய உருவகத்தில் உணவு:-

அ) பழைய ஏற்பாட்டில்:- சிரிப்பும் மகிழ்ச்சியும் விருந்துடன் தொடர்பு கொண் டவை ஆதலால், ''கவலையற்ற மனமோ இடைவிடாத விருந்து போன்றது'' என்று பழமொழி நூல் கூறுகின்றது (பழ 15:15). ஆண்டவர் பெரியதொரு விருந்தை ஏற்பாடு செய்கிறார் என்ற உருவகம் முக்கியமானது. இவை ஆண்டவரின் ஆசிராகவோ, தண்டனை யாகவோ இருக்கலாம் (ஏச 25:6; 61:3; எரே 51:39).

ஆ) புதிய ஏற்பாட்டில்:- இயேசு விருந்துக ளைத் தம் உவமைகளில் பயன்படுத்தினார் (மத் 22:1-10; லூக் 14:16-24), மேலும் இறைய ரசின் வருகை விருந்தோடு தொடர்பு படுத் தப்படுகின்றது. கடைசி இரவு உணவின் போது ''இது முதல் என் தந்தையின் அரசில் புதிய இரசம் உங்களோடு பருகும் நாள்வரை இந்தத் திராட்சைப் பழ ரசத்தைக் குடிக்க மாட்டேன்'' என்றார் (மத் 26:29; மாற் 14:25; லூக் 22:18). அப்போஸ்தலர்கள் பன்னிருவ ரும் அவருடைய அரசில் ''உண்பார்கள், குடிப்பார்கள், பன்னிரு கோத்திரங்களுக்கும்

நடுவராக அரியணையில் வீற்றிருப்பார்கள்'' (லூக் 22:30; 14:15; திருவெளி 19:9). நற்செய்தி எல்லாருக்கும் பொதுவானது என்ற கருத்து விண்ணரசில் விருந்து என்ற கருத்தால் எடுத்துக்கூறப்படுகிறது. அவ்விருந்தில் ''கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து விண்ணரசில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடன் பந்தியில் அமர்வார்கள்'' (மத் 8:11; லூக் 13:29).

உணவு சமைப்பதும், உணவு சமைக்கும் பாத்திரங்களும் (COOKING AND COKKING OTENSILS)

உணவு விடுதிகளிலும் செல்வந்தர் வீடுகளிலும் தவிர மற்ற வீடுகளில் அவ்வீட்டுப் பெண்கள் உணவு சமைத்தார்கள். செல்வந்தர் வீடுகளில் சமைப்பதற்கு ஊழியர்களை வைத்திருந்தனர். அப்பம் பகலில் சுடப்பட்டது; ஆனால் மாலை உணவிற்காகத்தான் பெரும்பாலும் சமையல் செய்யப்பட்டது. இதுதான் முக்கியமான உணவு; பெரும்பாலும் ஏழைகளுக்கு இது ஒன்று தான் ஒரே உணவு. இது திராட்சைத் தோட்ட ஊழியர் உவமையை விளக்க முக்கிய கருத்தாகும் (மத் 21:1-16). ஒரு சாதாரண உழைப்பாளி தன்னுடைய குடும்பத்திற்கு மாலையில் உணவளிக்க அந்நாள் முழுவதும் வேலை செய்யவேண்டும்.

1. சமைப்பது:- சாதாரண வீடுகளில் முற்றத்தில் சமைக்கப்பட்டது; சீதோஷண நிலை மாறும்பொழுது உள்ளே செய்யப்பட்டது.

அ. தானியங்கள்:- விவிலியச் சமையல்களில் ரொட்டி மிக முக்கியமான உணவு. இதைச் செய்யப் பயன்படுத்தப்பட்டமிக முக்கியமான தானியங்கள் கோதுமையும் வாற் கோதுமையுமாகும் (எச 4:9). பணக்காரர்கள் கோதுமையையும், ஏழைகள் வாற் கோதுமையையும் பயன்படுத்தினர். ரொட்டியானது ஒலிவ எண்ணெயில் தொடப்பட்டு, கீரைகளுடனும் சுவையூட்டும் பொருள்களுடனும் சேர்த்து உண்ணப்பட்டது. கேக்குகள் தேனில் பூசப்பட்டு பலவித கொட்டைகளாலும், விதைகளாலும் தூவப்பட்டிருந்தன. நாடோடிகள் கொதித்த வெண்ணெயைப் பயன்படுத்தினர்.

தானியங்களையுண்ண இரண்டாவது வழி, அதைக் கூழாக்கி உண்பது. முதலில் கோதுமையை ஊறவைத்து, காயவைத்து அதை உடைத்துக் கஞ்சி செய்தனர். இது உப்பிலும், தேனிலும், ஒலிவ எண்ணெயிலும் சுவையூட்டப்பட்டது. பழ 27:22-இல் கோதுமையைச் சமைக்கும் இன்னொரு முறை கொடுக்கப்பட்டுள்ளது.

அறுவடை வயலில் கதிர்கள் நெருப்பின் மேல் சுடப்பட்டு, பதம் செய்யப்பட்டு உண்ணப்பட்டன (ரூத் 2:14). லேவியர் சட்டப்படி முதற் கனியில் ஒன்றாகத் தானியம் கூறப்படுகிறது (லேவி 2:14-16).

ஆ) காய்கறிகளும், பழங்களும்:- இவை ஏழையினுடைய உணவு. ஏனெனில் அவன் இறைச்சிக்கு ஆசைப்பட முடியாது. பலவகையான பயறுகளும் அவரை, மொச்சைகளும் மதிக்கப்பட்டன. ஏனெனில் அவை வருடம் முழுவதும் பயன்படுத்தப்பட்டன. ஏசா கதை (ஆதி 25:29-34) பயறுகளின் மகத்துவத்தை விளக்குகின்றது. இவை பெரும்பாலும் வெங்காயம், வெள்ளைப் பூண்டு ஆகியவற்றால் சுவையூட்டப்பட்டன.

இ) இறைச்சி:- எபிரேயர்கள் அதிகமான மாமிசத்தை உண்பவர்கள் அல்லர் இறைச்சி உண்பது செல்வந்தருக்கு அடையாளம். சாலமோனுடைய உணவுப் பட்டியலில் இது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது (1 அர 4:23). ஏழைக்கு, இறைச்சி ஓர் அபூர்வமான உணவு; திருவிழாக்கள், குடும்பக் கூட்டங்கள், விருந்துகள் ஆகியவற்றில் மட்டும் ஏழைகளால் இறைச்சி உண்ண முடியும். பலருக்கும் விருப்பமானது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆட்டு இறைச்சியே. செல்வந்தர்கள் கன்றின் இறைச்சியையும் சேர்த்துக் கொண்டனர். இறைச்சியைப் பாதுகாக்கும் முறைகள் தெரியாததால், விலங்குகளைக் கொன்ற அன்றே உண்டு முடித்துவிட வேண்டியிருந்தது.

இறைச்சி பலவகைகளில் சமைக்கப்பட்டது. வறுக்கப்பட்டது; தண்ணீரில் வேகவைக்கப்பட்டது; எண்ணெயில் சமைக்கப்பட்டது. இறைச்சி வறுக்கப்பட்ட பொழுது சாதாரணமாக முழு மிருகமும் வறுக்கப்பட்டது. மாமிசத்தை எலும்பிலிருந்து சுலபமாகப் பிரிப்பதற்கு ஏதுவாக மாமிசமானது நன்றாகச் சமைக்கப்பட்டது. வேகவைப்பது மிகவும் சாதாரணமாக சமைக்கும் விதம். இறைச்சி வதக்கும் விதம் மீக் 3:2-3-இல் கொடுக்கப்பட்டுள்ளது; இறைச்சி எலும்பிலிருந்து பிரிக்கப்பட்டு, எலும்புச்சோறு பிரித்தெடுக்கப்பட்டது. இங்கு பணக்காரர்கள் ஏழைகளை வதைக்கும் காட்டுமிராண்டிகள் என்பதை உருவக மொழியில் மீக்கா எடுத்துக்கூறுகிறார். இறைச்சிக் குழம்பு தனித்தட்டில் வழங்கப்பட்டது (நீதி 6:19). கோழி இறைச்சியும் மற்ற இறைச்சியைப் போலவே சமைக்கப்பட்டது. மீன் பொதுவாக நெருப்பின்மேல் போட்டுச் சுடப்பட்டது (யோவா 21:9). வேக வைக்கப்பட்ட வெட்டுக் கிளிகளையும் இவர்கள் உண்டார்கள் (லேவி 11:22; மத் 3:4; மாற் 1:6).

ஈ) சுவைப்படுத்துதல்:- உப்பு சேர்ப்பதன் மூலம் உணவிற்குச் சுவை ஊட்டப்பட்டது; சாதாரண மனிதனால் காய்கறிகள் உண்ணப்பட்டதால் உப்பு மிகவும் அவசியமாக இருந்தது (யோபு 6:6; மத் 5:13; கொலோ 4:6). சாதாரணமாகச் சுவைப்படுத்தும் பொருள்கள்: வெங்காயம், பூண்டு; இவைகள் இஸ்ராயேலருக்கும் பாலைவனத்தில் கிடைக்கவில்லை (எண் 11:5). பலசரக்குச் சாமான்கள் முழுவதுமாகவோ, அரைக்கப்பட்டோ பயன்படுத்தப்பட்டன. (உ-ம்) சோம்பு, கொத்தமல்லி, சீரகம், வெந்தயம், சமுத்திர பூண்டு, துளசி போன்ற கீரைகள் சேர்க்கப்பட்டன. எல்லாவிதக் கொட்டைகளும் சேர்க்கப்பட்டன. தேனானது பூர்விக மனிதனின் சர்க்கரையாகும்.

2. சமைக்கும் பாத்திரங்கள்:- எபிரேயர்கள் சமைக்கப் பலவகைப்பட்ட பாத்திரங்களைப் பயன்படுத்தினர். அகன்ற, ஆழமற்ற பாத்திரம் ஒன்று சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டது. பழைய இஸ்ராயேலர் காலத்தில் இதற்குக் கைப்பிடிகள் இருந்தன. சிறிய வாயுள்ள, இரண்டு கைப்பிடிகளைக் கொண்ட, உருண்டையான இன்னொரு பாத்திரமும் இருந்தது; இது தண்ணீர் காய்ச்சுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஒரு கைப்பிடியுள்ள மற்றொரு வகையான சமைக்கும் சட்டியும் இருந்தது. ஏசயா, எரேமியா காலங்களில் குயவர்கள் தங்களுடைய வியாபாரக் குறிகளைப் பயன்படுத்தினர். அவர்களுடைய பாத்திரங்கள் நம்முடைய பாத்திரங்கள் இருக்கும் அளவுதான் இருந்தன. செம்பினால் ஆன பாத்திரங்களும், தட்டுகளும் மிகவும் சிறந்தவை; ஆனால் அவை அதிக விலையானவை. சாலமோனின் கோவிலில் பலவகைப்பட்ட சமைக்கும் சாமான்கள் இருந்தன.

சமயல் பாத்திரங்கள்

அடுப்பானது கவிழ்த்து வைக்கப்பட்ட சட்டிபோல இருந்தது; இதற்கு அடி இல்லை; இது சாதாரணமாக ஒரு முழ அகலமுள்ளது. இந்த அடுப்புக்குள் நெருப்பு மூட்டப்பட்டது. இதில் ரொட்டியானது அடுப்பின் உட்பகுதியில் வைத்துச் சுடப்பட்டது. வெளிப்புறம் சமமாக இருந்திருந்தால், நன்றாகச் சூடுபடுத்தப்பட்டு வெளியிலும் ரொட்டி சுடப்பட்டது. பெரிய பெரிய நகரங்களில் ரொட்டி சுடும் பொதுவான இடங்கள் இருந்தன (எரே 37:21). இவ்விடத்திற்கு வீட்டுப் பெண்கள் ரொட்டி சுட மாவைக் கொண்டு சென்றார்கள்.

உணவுப்பொருட்கள் (FOOD)

உணவு, விவிலிய காலங்களில் வாழ்வின் தேவைகளில் ஒன்றாக இருந்தாலும் ([illegible] 39:26) எபிரேயர்களும், ஆதி கிறிஸ்தவர்களும் அவர்களுடைய இக்காலத்தலைமுறை

கள்போல், பலவகை உணவுப் பண்டங்களைக் கொண்டிருக்கவில்லை. தொடக்க காலங்களில் இயற்கை அழிவுகளும் அறுவடை தவறுவதும் பஞ்சத்திற்குக் காரணமாக இருந்தன. உணவுப் பொருட்கள் அதிகமுள்ள இடங்களிலிருந்து பற்றாக்குறையான இடங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்லும் வாணிக முறை வளர்ச்சியடையாததும் பஞ்சத்தின் கொடுமையை அதிகப்படுத்தியது. பஞ்சகாலத்தில் யாக்கோபும் அவருடைய பிள்ளைகளும் எகிப்திலிருந்து தானியம் பெற வேண்டியிருந்தது (ஆதி 42:1-2). இக்காரணங்களினால் உணவைச் சேகரித்தல், தயார்ப்படுத்துதல் என்பன மனித வாழ்வில் முக்கிய பகுதியாகச் செயல்பட்டன; இல்லையெனில் பட்டினியினால் இறக்க வேண்டியிருந்தது.

1. விவிலியத்தில் உணவு வகைகள்:- விவிலியம் எல்லா உணவுப் பண்டங்களையும் குறிப்பிடுகிறது என்று கூறமுடியாது. முக்கியமான வகைகள் பற்றி ஓரளவு துல்லியமான விவரங்களைக் குறிப்பிடுகிறது என்று கூறமுடியும்.

அ) இறைச்சி:- விவிலிய காலங்களில் இறைச்சி சாப்பாட்டினுடைய வழக்கமான பாகம் அல்ல. சீராக்கினுடைய உணவுப்பட்டியலில் இது காணப்படவில்லை. ஆனால் உப்பு, கோதுமை, தேன், திராட்சை ரசம் முதலியவை காணப்படுகின்றன (சீரா 39:26). குருக்கள் பாரம்பரியப்படி இறைச்சி உண்ண விரும்பாமை படைப்பிலிருந்தே வருவதாகத் தெரிகிறது. இறைவன் மனிதனைப் படைத்தபோது ''இதோ பூமியின்மீது விதை தரும் புற்பூண்டுகள் எல்லாவற்றையும் தத்தம் இனத்தின்படி தம் விதைகளைக் கொண்டிருக்கும் விதவிதமான மரங்களையும் உங்களுக்கு உணவாகத் தந்துள்ளோம்'' (ஆதி 1:29) என்று கூறினார். வெள்ளப்பெருக்குக்குப் பிறகுதான் ''நடமாடி உயிர் வாழும் அனைத்தும்'' அதாவது விலங்குகள் உணவாகத் தரப்பட்டன (9:3). குருக்கள் பாரம்பரிய ஆசிரியர், கட்ந்த பொற்காலத்தில் மனிதர், விலங்குகள், படைக்கப்பட்ட யாவும் ஒற்றுமையாய் இருந்தன என்று ஓர் உன்னதச் சித்திரம் வரைகிறார். இறைவன் அவருடைய படைப்புகளிடம் ஒன்றையொன்று கொல்ல உத்தரவு அளிக்கவில்லை. விலங்கு உணவை அவர் அனுமதித்தபோதும் இரத்தத்தை உணவாகக் கொள்வதைத் தடைசெய்கிறார். ''இறைச்சியை அதன் இரத்தத்தோடு உண்ணாதிருப்பீர்களாக'' (9:4). ''எந்த உடலிலுமுள்ள இரத்தத்தையும் குடிக்க வேண்டாம்'' (லேவி 17:11-14), ''இரத்தத்தை மட்டும் உண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இரு'' (உப 12.23).

மத காரணங்களைத் தவிர, இறைச்சியை நீக்குவதற்கு உதவிய முக்கிய காரணம், விவிலிய காலங்களில் வீட்டு மிருகங்கள் பற்றாக்குறையாக இருந்ததாகும். ஒருவன் காட்டு விலங்குகளை வேட்டையாடி இறைச்சியைப் பெறமுடியும். ஆனால் மற்றத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விலங்குகளைக் கொல்லுதல் பொருளாதார விவேகமுடையதன்று. அதன் பயனாக இறைச்சி பலி ஒப்புக்கொடுக்கும்போதுதான் உண்ணப்பட்டிருக்கிறது. இதற்கு விதிவிலக்கும் உண்டு. மதிப்புக்குரிய விருந்தாளிக்கு அளிக்கப்பட்ட உணவில் இறைச்சியும் உண்டு. ''ஆபிரகாம் மாட்டு மந்தைக்குத் தாமே ஓடிச்சென்று, ஒரு நல்ல இளங்கன்றுக் குட்டியைக் கொணர்ந்து வேலைக்காரனிடம் கொடுக்க இவன் அதனை விரைவில் சமைத்தான்'' (ஆதி 18:7). அதை மூன்று மனிதர்களுக்கு விருந்தாக அளித்தார். ''கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். விருந்து கொண்டாடுவோம்'' (லூக் 15:23). ''இதோ விருந்து ஏற்பாடு செய்துள்ளேன்; காளைகளும் கொழுத்த மிருகங்களும் அடித்து எல்லாம் ஏற்பாடாயிற்று'' (மத் 22:4) இவை இயேசுவின் உவமைகளில் வருகின்றன.

மேற்கூறப்பட்ட வரையறைகள் செல்வந்தர்களுக்கு இல்லை. ஒரு நாள் சாலமோனுடைய சாப்பாட்டிற்குச் செலவு, கலைமான்கள், சிறுமான்கள், கவரிமான்கள், கொழுத்த பறவைகள் முதலியவற்றைத் தவிர கொழுத்த பத்துமாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும், நூறு ஆடுகளுமாகும் (1 அர 4:23). இப்படி உண்ணும் செல்வந்தர்களை ஆமோஸ் கண்டனம் செய்கிறார் (ஆமோ 6:4).

நெருப்பில் வாட்டுதலும் வேக வைத்தலும் இறைச்சியைச் சமைக்கும் வழக்கமான முறைகளாக இருந்தது. பாஸ்குச் செம்மறி வாட்டப்பட்டது; அதை வேக வைக்கவில்லை (யாத் 12:8-9; 2 நாள் 35:13). வேகவைப்பது பற்றிய குறிப்புகளை 1 சாமு 2:15-இலும், எச 24:3-5-இல் வரும் தொடர் உருவத்திலும் காணலாம்.

பறவைகளின் இறைச்சியும் பயன்பட்டது. பாலைவனத்தில் இஸ்ராயேலர்களுக்குக் காடைகள் உணவாயின (யாத் 16:13). பறவைகளின் முட்டையும் உணவாயின (உப 22:6; ஏச 10:14; லூக் 11:12). மாடப்புறாக்கள், காட்டுப் புறாக்கள் ஆகியன குறிப்பிடப்பட்டிருக்கின்றன. காட்டுக் குருவிகளுடைய முட்டைகளைப் பழைய ஏற்பாடு நாட்களில் தின்றிருக்கின்றனர் (உப 22:6; ஏச 10:14). பாலஸ்தீன நாடு கடத்தலுக்கு முன்னால் கோழிக் குஞ்சைப் பற்றித் தெரியாமலிருந்தனர். எப்படியிருந்தாலும் பெட்டைக் கோழி முட்டையும் (லூக் 11:12) மீனின் உணவும் மிக அரிதாக இருந்தன. கலிலேய ஏரியில் கிடைத்த மீனையே உண்டனர். பாலைவனத்தில் எகிப்தில் உண்ட மீனுக்காக ஏங்கினர் (எண் 11:5). ஆனால் புதிய ஏற்பாட்டில் மீன் எல்லாருக்கும் பொதுவான உணவாக இருக்கிறது. ''தனியான இடத்தில்'' சீடர்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீனும் இருந்தன (மாற் 6:38 இணை; மத் 15:34). பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகிய நான்கு சீடர்களாவது மீன்பிடிப்போரராக இருந்தனர் (மத் 4:18; மாற் 1:16-19; லூக் 5:1-11).

ஆ) கனிகள்:- ஒலிவப் பழங்களும், திராட்சைப் பழங்களும் விவிலிய காலங்களில் அதிக முக்கியமாக இருந்தன. ஆனால் ஒலிவப் பழங்கள் எண்ணெய் எடுக்கவும், திராட்சைப் பழங்கள் இரசம் செய்யவும் பயன்பட்டன. பழமாக உண்ணப்பட்டவைகளில் அத்திப்பழம் அதிகம் பயன்பட்டது. கோடைகாலம் வருமுன் பழுத்த அத்திப்பழம், அதன் இனிய சுவைக்காக விரும்பி உண்ணப்பட்டது (எச 28:4; மீக் 7:1).

எகிப்தில் வாழ்ந்த இஸ்ராயேலரை, ஓசேயா ''முதல் அத்திப் பழங்களுக்கு'' ஒப்பிடுகிறார் (ஓசே 9:10). நாடு கடத்தப்பட்டவர்கள் ''முதன் முதலில் பழுத்த'' அத்திப் பழங்கள் போன்றவர்கள் என்றும், நாட்டிலே எஞ்சினோர் ''தின்ன முடியாத அளவுக்குக் கெட்ட'' அத்திப்பழங்கள் போன்றவர்கள் என்றும் எரேமியா அறிவிக்கிறார் (எரே 24:1-10). வற்றலான அத்திப்பழங்கள் பயணத்தில் உண்ணப்பட்டன (1 சாமு 25:18; 30:12; 1 நாள் 12:40; யூதி 10:5); கொப்பளங்களைக் குணமாக்கவும் பயன்பட்டன.

ஆப்பிளைக் குறிக்கும் எபிரேயச் சொல்லான ''தாப்புவா'' ஓர் ஆளுக்கும், இரண்டு நகரங்களுக்கும் பெயராக அமைந்துள்ளதால், பழைய ஏற்பாட்டுக் காலங்களில் ஆப்பிள் பழம் உணவாகப் பயன்பட்டது எனலாம். ஆனால் மேற்கோள்கள் சிலவே உள்ளன (யோவே 1:12; உ.ச.2:5; 7:8; 8:5). ஆனால் இதை அடையாளம் காட்டுவது கடினம். மாதுளை (எண் 13:23; 20:5; உப 8:8), பேரிந்து, காட்டு அத்திப்பழம் (ஆமோ 7:4) ஆகியவை விவிலியத்தில் குறிக்கப்படும் வேறு சில பழங்களாகும்.

இ) காய்கறிகள்:- பாலஸ்தீன வெப்ப நிலை பலவகையான காய்கறிகள் வளர்வதற்கு ஏற்றதல்ல. பாலைவனத்தில் ''வெள்ளரிக்காய், கொம்மட்டிக்காய், கீரை, வெங்காயம், வெள்ளைப்பூண்டு'' ஆகியவற்றிற்காக இஸ்ராயேலர் ஏங்கினர் (எண் 11:5). இவற்றில் வெள்ளரிக்காய், வேறு இரு இடங்களில் மட்டுந்தான் குறிக்கப்பட்டுள்ளது (ஏச 1:8; எரே 10:5). மற்றவை குறிக்கப்படவேயில்லை. சிறப்பான குறிப்புகள் இல்லையென்பதால் காய்கறிகள் பயிரிடப்படவில்லை என்று முடிவு கட்டிவிட முடியாது. வெங்காயம் பரவலாகப் பயிரிடப்பட்டது. மிக அதிகமாக அவரையும், பயறும் இருந்தன. இவற்றைக் குழம்புக்குள் போட்டு சூடாக்கினர். சாதாரண வகையில் உண்டனர்கள் அல்லது ரொட்டியுடன் சேர்த்து சாப்பிட்டார்கள். பன்றிகள் தின்னும் நெற்றுகள் கூட நெருக்கடிகாலத்தில் உணவாயின (லூக் 15:16).

ஈ) தானியங்கள்:- விவிலிய காலங்களில் தானிய உணவுகள் அதிக முக்கிய பகுதியாக அமைந்தன. பாலஸ்தீனத்திலும், சீரியாவிலும் பார்லி, கோதுமை அதிகமாகக் கிடைத்தன. அதிக முக்கியத்துவமாகவும் இருந்தன. கோதுமை, பார்லி ஆகியவற்றிலிருந்து ரொட்டி செய்யப்பட்டது. ஒவ்வொரு உணவிலும் இடம் பெற்றது. தேவையான நேரத்தில் கம்பும், தினையும் உணவுக்காகப் பயன்பட்டன (எச 4:9), ''நிலத்தின் மேல்பரப்பை நிரவியபின், சதகுப்பையை விதைத்துச் சீரகத்தைத் தெளிப்பானன்றோ? அதற்குரிய இடத்தில் கோதுமை, வாற்கோதுமை, துவரை, பயறு இவற்றை முறைப்படி விதைப்பானன்றோ?'' (ஏச 28:25). இவ்வகைத் தானியங்கள் வேறுவகையிலும் உண்டனர். ஒருவனுடைய கைகளாலே தீட்டி அதன் பருப்புகளைத் தின்றனர். ''புதுத் தானியத்தில் செய்யப்பட்ட சில அப்பங்களையும், இருபது வாற்கோதுமை ரொட்டிகளையும், ஒரு சாக்குப் புதுத் தானியத்தையும் இறை மனிதன் எலிசாவிடம் கொண்டு வந்தான்'' (2 அர 4:42-44). வறுத்த கோதுமை அறுவடை உணவின் ஒரு பகுதியாகும் (ரூத் 2:14). அதைச் சாலமோன் அரசன்கூட தின்றிருந்ததாகக் கூறப்படுகிறது (1 சாமு 25:18; 2 சாமு 17:28).

2. அன்றாட வாழ்வில் உணவின் முக்கியத்துவம்:- உணவு வாழ்வைப் பராமரிக்கிற சாதனம் மட்டுமல்ல; சமூக பொருளாதார வாழ்வில் பொதுவாகப் பரந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது.

அ) தோழமைப் பிணைப்பு:- பழைய ஏற்பாட்டுக் காலங்களில் ஏறக்குறைய ஒவ்வொரு உடன்படிக்கையும் பொதுவான உணவுடன் முத்திரை வைக்கப்பட்டுள்ளது. சேர்ந்து உண்ட உணவு இரண்டு பகுதி மக்களையும் ஒரே சொந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக உணரச் செய்தது. லாபானும் யாக்கோபும் ஒருவரை ஒருவர் சந்தேகித்தாலும், தங்கள் எல்லை உடன்படிக்கையை இரவு முழுவதும் நீடித்த உணவோடு முடித்தனர் (ஆதி 31:54). சமநிலையுடைய கட்சியினரிடையே, கிபயோனியர்கள், யோசுவாவை ஏமாற்றி, இஸ்ராயேலர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டனர் (யோசு 9:3-15). உண்மை தெரியவந்த போதும் உடன்படிக்கையை முறிக்க முடியவில்லை. ஏனெனில் உடன்படிக்கை உறவு அவ்வளவு வலிமை வாய்ந்ததாகும் (9:16-27). தாவீதுக்கும் மெபிபோசேத்துக்கும் இடையே உள்ள உறவு இத்தன்மையுடையதே (2 சாமு 9:7, 10-11). சிலருடன் உணவு உட்கொள்ள மறுத்தல் கோபத்தின் அல்லது தோழமை முறிவின் அடையாளமாகும் (1 சாமு 20:34).

தோழமைப்பிணைப்பின் அடையாளமான உணவின் முக்கியத்துவம் எபிரேய வார்த்தையில் உடன்படிக்கை என்று கூறப்பட்டுள்ளது. ''உப்பு உடன்படிக்கை'' என்ற சொல் நிரந்தர உடன்படிக்கையை உணர்த்தியது. ஏனெனில் ஒருவன் தன் தோழனோடு உப்பு உண்பது. அவனோடு கொண்டுள்ள பிரமாணிக்கப் பிணைப்பை உணர்த்தி நிற்கும் (எண் 18:19; 2 நாள் 13:5; எஸ் 4:14). ''உங்களுக்குள் உப்பு இருக்கட்டும்'' என்ற இயேசுவின் சொற்கள் (மாற் 9:50; கொலோ 4:16), சீடர்களுக்குள் இருக்கவேண்டிய பிரமாணிக்கத்தைக் குறிக்கின்றன.

ஆ) உணவுக் கொடைகள்:- உணவின் தன்மை தனிப்பட்ட சமூக உறவைக் குறிப்பிடுகிறது. ஆகவே உணவுக் கொடைகள் வெறும் சடங்கு அடையாளங்கள் அல்ல. கொடுப்பவரைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ள முடிகிறது. கொடைபெற்றவர் கொடுப்பவருக்குக் கடமைப்படுகிறார் (ஆதி 32:3-21; 43:1-11).

அரசியல் தலைவரைச் சமாதானப்படுத்தும்போதும் விருந்தளிக்கப்பட்டது (1 நாள் 12:38-40; 2 சாமு 16:1; 17:27-29).

தொடக்ககால இறைவாக்கினர்களுக்குக் கூட அவர்கள் செய்த சேவைக்குக் கூலியாகவோ, அவர்கள்பால் கொண்ட நல்லெண்ணத்தின் அடையாளமாகவோ, உணவுக் கொடைகள் அளிக்கப்பட்டன (1 சாமு 9:6-7; 1 அர 14:1-3; ஆமோ 7:12; மீக் 3;5).

3

(இ) வெளிநாட்டு வாணிபம்:- பாலஸ்தீ னத்தி ் உணவுப் பொருட்கள் கிடைப்பது நிலையில்லாமலிருந்த விவிலிய காலங்க ளில் வெளிநாட்டு வியாபாரத்தில் உணவுப் பொருட்கள் முக்கிய இடம் வகித்தன. தனி நபர்களுக்கு உணவுக் கொடை அளிக்கப்பட் டதுபோல், இஸ்ராயேலர்களுக்கும் அண்டை நாட்டவர்களுக்குமிடையேயுள்ள உறவு, ஒருவர் மற்றவர்க்களிக்கும் கொடைக ளால், மேம்பட்டது. இத்தகைய கொடைக ளுக்கு எதிராக ஓசேயா இஸ்ராயேல் மக்க ளைப் பார்த்துக் குறை கூறுகிறார்.

''எப்பிராயீம் வெறும் காற்றை உண்டு,
நாள் முழுவதும் கீழ்காற்றைத் துரத்தித் திரிகிறான்;
பொய்யும் வன் செயலும் அவனிடம் மிகுந்துவிட்டன,
அசீரியாவோடு உடன்படிக்கை செய்கி றான்;
எகிப்துக்கு எண்ணெய் கொடுத்தனுப்பு கிறான்'' (ஒரே 12:1).

அயல்நாட்டு உதவிக்கு மாற்றாக உணவுப் பொருள் எதாவது ஒருவடிவில் கொடுக்கப் பட்டது (1 அர 5:9-11). இதே வணிக முறை நாலரை நூற்றாண்டுகளுக்குப் பின்னும் கடைப்பிடிக்கப்பட்டது (எஸ் 3:7). இத்த கைய வியாபாரத்தால் தீர் நாடு பெரும் செல்வம் மிக்கதாகியது. ''யூதரும் இஸ்ரா யேலரும் உன்னுடன் வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டனர்; நல்ல கோதுமை, தைலங்கள், தேன், எண்ணெய், பிசின் முத லிய வாசனைப் பொருட்கள் ஆகியவற்றை உன் சந்தைகளுக்குக் கொண்டு வந்தார்கள்'' என்று எசக்கியேல் (எச 27:17) கூறுகிறார்.

ஈ) பஞ்சத்தின் அபாயம்:- விவிலிய காலத் தில் நிகழ்ந்த, யாரும் அறிந்த, பஞ்சங்கள் யோசேப்பு நிகழ்ச்சியிலும் (ஆதி 41:54; 43:13-15) எலியாவின் கதைகளிலும் (1 அச 17:1.7. 12; 18:2.5) விவரிக்கப்பட்டுள்ளன. மழை யின்மையே பஞ்சத்திற்கு முக்கிய காரண மாக இருந்தாலும் வேறு இயற்கை அழிவுக ளும் அதற்குக் காரணங்களாயின. ஆமோஸ், யாவேயால் அனுப்பப்பட்ட பேரழிவை உயிர்ச்சித்திரமாக விளக்குகிறார். 1) அறுவ டைக்கு இன்னும் மூன்று மாதம் இருக்கும் போதே உங்களுக்கு மழையையும் நிறுத்தி விட்டோம். 2) வெப்பக் காற்றாலும் பயிர் நோவாலும் உங்களை வதைத்தோம். 3) உங்கள் சோலைகளையும் திராட்சைத் தோட் டங்களையும் வெட்டுக் கிளியால் அழித் தோம். 4) எகிப்துக்கு அனுப்பிய கொள்ளை நோய் போன்ற கொள்ளை நோயை மனிதர் மேலும், விலங்குகள் மேலும் அனுப்பி னோம் (ஆமோ 4:6-19; உப 28:22; 1 அர 8:37). இவைகளுடன் கல்மழையையும் சேர்க்கலாம் (ஆகா 2:17). இது தானியப் பயிருக்கு மிகுந்த அழிவை ஏற்படுத்தக் கூடி யது. இத்தகைய பஞ்ச விளைவுகளிலிருந்து தப்பும் வழி நல்ல விளைச்சலுள்ள காலத் தில் உணவுப் பொருட்களைப் பெரும்அள வில் சேர்த்து வைப்பதாகும் (ஆதி 41:34-36; 47:24). இப்படிச் செய்யாவிட்டால், சாவு இல்லையென்றாலும், துன்பப்படுவது உறுதி. இத்தகைய துன்பத்தை எரே 14:1.4-6 விவரிக்கிறது. உணவுக்காக மக்கள் தங்கள் சொத்துக்களையெல்லாம் விற்பதில் வியப் பில்லை (புலம் 1:11).

3. சமய வாழ்வில் உணவின் முக்கியத்து வம்:- விவிலிய காலங்களில், சமயச் சார் பற்ற நிகழ்ச்சிக்கொத்த சமய நிகழ்ச்சியும் அமைந்திருந்தது. இது உணவு உற்பத்திக் கும், உண்ணுதலுக்கும் பொருந்தும்.

அ) உணவு இறைவனுடைய கொடை:- இறைவன் வாழ்வின் படைப்பாளராகவும் காப்பாற்றுகிறவராகவும் இருக்கிறதால், விவிலிய மனிதன் உணவைத் தெய்வீகக் கொடையாகக் கருதியது இயற்கையானதே. ''ஆண்டவராகிய இறைவன் ஒரு இன்பவ னத்தை வைத்து, மனிதனை அதிலே வைத் தார். பார்வைக்கு அழகிய, நாவிற்கு இனிய கனிகள் கொண்டுள்ள பலவித மரங்களை யும் மண்ணினின்று தோற்றச் செய்தார்'' (ஆதி 2:9). ஆனால் மனிதன் அவன் விருப் பத்திற்குச் செயல்படவிடப்படவில்லை. விவசாயம் செய்யும் முறையையும் இறை

வனே கற்றுக் கொடுக்கிறார் (ஏச 28:24-26). இவ்வாறு, ''இறைவனால் ஏற்பட்ட பயிர்த் தொழிலைக் கைவிடாதே'' என்று சீராக் தன் மகனுக்கு அறிவுரை கூறுகிறார் (சீரா 7:15). நாட்டை வெற்றி கொண்டபின் உணவுக் கொடை புதுப்பிக்கப்பட்டது. ''உன் கடவுளாகிய ஆண்டவர் நல்ல நிலத்திலே புகச் செய்வார். கோதுமை, வாற்கோதுமை, முந்திரிக் கொடிகளும், அத்திமரம், ஒலிவ மரம், மாதுளஞ் செடிகளும் அதிலே வளரும். அவ்விடத்தில் எண்ணெயும் தேனும் மிகுதியாக உண்டு. அது எக்காலமும் நிறைவாக நீ அப்பம் உண்ணத்தக்கதும், ஒன்றும் குறைவு வைக்காததுமான நாடு'' (உப 8:7-9; யோசு 24:13). மனிதனும் மிருகங்களும் ஒன்றுமே உருவாக்க முடியாது. ஆகவே சங்கீத ஆசிரியர் இறைவனைப் போற்றிக் கூறுகிறார். ''இவையெல்லாம் உம்மையே நம்பியிருக்கின்றன; தக்க காலத்தில் உணவளிப்பார் என்று எதிர்பார்க்கின்றன. நீர் கொடுக்க, அவை பெற்றுக் கொள்கின்றன; நீர் உமது கையைத் திறக்க அவை நலன்களால் நிறைவுறுகின்றன'' (சங் 104:27-28; 145:15-16). ஆயினும் இறைவனுடைய கொடைகள் தங்களுக்குரியதாக எண்ணக் கூடாது. இஸ்ராயேல் மக்கள் இறைவனைப் பரிசோதிக்கத் துணிந்தனர்; தங்கள் இச்சையின்படி உணவு கேட்டனர். அவரால் கொடுக்க முடியுமா என்று ஐயுற்றனர். அவர் சினம் கொண்டாலும், அவர்களுக்கு மன்னாவை மழைபோல் பொழிந்தார்; தூசி போல் ஏராளமான இறைச்சியைப் பொழிந்தார். கடல் மணல் போல் எண்ணற்ற பறவைகளை வரவழைத்தார். நன்றாக உண்டனர். ஆனால் அவர்களுள் வலிமைமிக்கவர்களை வதைத்தொழித்தார் (சங் 78:18-31).

உணவு மனிதர்களுக்குள்ளேயுள்ள பிணைப்பாய் இருப்பதால் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை எடுத்துக்கூறுவதிலும் உணவு இடம் பெறுவது இயல்பே. இவ்வாறு சீனாய் மலையில் மோசேயும் தலைவர்களும், ''இறைவனைக் கண்டனர்; உண்டனர், குடித்தனர்'' (யாத் 24:11). அதுபோல, பலிகளிலும் காணிக்கைகளில் முக்கிய செயல் உண்பதாகும். ஆலயம் இருக்குமட்டும், உணவுக் காணிக்கை ஒப்புக் கொடுக்கப்பட்டது. பக்தியுள்ள இஸ்ராயேலன் இறைவனுடைய கொடையில் ஒரு பகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுப்பதால், அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாக உணர்ந்தான். ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்ட முதற்கனிகள், பத்தில் ஒரு பங்கு போன்ற காணிக்கைகளின் பின்னணி இதுவே.

ஆ) இறுதிக்காலத்தில்: இறைவன் அவருடைய வேலையின் தொடக்கத்தில் ஒரு பலன்தரும் தோட்டத்தைப் படைத்ததால், வரவிருக்கும் காலத்தில் அவருடைய விசுவாசிகளுக்கு ஏராளமான உணவைக் கொடுப்பார் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. இறைவாக்கு நூல்கள் பல புதிய காலத்தின் பொருள் சார்ந்த ஆசிர்களின் விளக்கங்களைக் கொண்டுள்ளன. ''ஆதலால், இதோ, நாம் அவளை நயமாகக் கவர்ந்திழுத்துப் பாலைநிலத்துக்குக் கூட்டிப்போய் அவள் நெஞ்சோடு பேசுவோம். திராட்சைத் தோட்டங்களை அவளுக்குத் திரும்பக் கொடுப்போம். அந்நாளில் நாம் வானத்தின் வழியாய் மறுமொழி அளிப்போம். அது நிலத்தின் வழியாய் மறுமொழிதரும். நிலமானது கோதுமை, திராட்சை ரசம், எண்ணெய் ஆகியவற்றால் மறுமொழிதரும்'' (ஓசே 2:16-17. 23-24). இதைப் போன்று ஆமோஸ் இஸ்ராயேலின் மீண்டும் அமைக்கப்படும் காலத்தை விவரிக்கின்றார் (ஆமோ 9:14). யோவேல் பயன்படுத்தும் உருவகம் இன்னும் கவர்ச்சி மிக்கதாக உள்ளது (யோவே 3:18). சாக்கடலின் நீர் நல்ல நீராக ஆவதையும் அது ''பற்பல வகை மீன்களைக்'' கொண்டிருப்பதையும் அதன் கரைகளில் ''எல்லா வகையான பழ மரங்கள்'' வளருவதையும் எசக்கியேல் முன்னோக்குகிறார் (எச 47:6-12). பிற்காலத்து வெளிப்பாட்டு நூல்களும், உலகம் கடந்து போன பிற்பாடு வானகத்தில் நடக்கவிருக்கும் மெசியா விருந்தை விவரிக்கின்றன. புதிய ஏற்பாடு இந்த வரவிருக்கும் நிகழ்ச்சியைப் பற்றிய பல குறிப்புகளைத் தருகிறது.

இ) உணவின் மதிப்பு குறைதல்:- சமயக் காரியங்களிலும் சமயச் சார்பற்ற காரியங்களிலும் உணவு முக்கியத்துவம் பெற்றிருந்தாலும், அது மனித வாழ்வின் ஒரே ஆதரமாகவோ முடிவாகவோ ஒரு போதும் கருதப் பட்டதில்லை. ''மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, இறைவன் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்'' என்று உபாகமம் ஏற்கனவே படிப்பித்திருக்கிறது (உப 8:3; மத் 4:4; லூக் 4:4). உணவுப் பொருள்கள் இல்லாத போது, ''நான் ஆண்டவரில் அக்களிப்பேன், என் மீட்பரான கடவுளில் அகமகிழ்வேன்'' என்று அபக்கூக் பாடுகிறார் (அப 3:17-18).

உணவின் முடிவான முக்கியத்துவம் பற்றிய தெளிவான உட்கருத்து புதிய ஏற்பாட்டில் காணக்கிடக்கிறது. இயேசு தமது மலைப்பொழிவில், மக்கள் கூட்டத்தை நோக்கி ''உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலை மூட எதை உடுப்பது என்றோ கவலைப்பட வேண்டாம்... உணவைவிட உயிரும், உடையை விட உடலும் உயர்ந்தவையல்லவா? உங்களுக்கு இவையனைத்தும் தேவை என உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும்'' (மத் 6:25.32; லூக் 12:22.30) என்று போதித்தார். மற்றொரு சமயத்தில் இயேசு ''வானின்று இறங்கி வந்த உணவு நானே'' என்று கூறினார். இதை எவனாவது உண்டால், அவனுக்கு மீளவும் பசியே ஏற்படாது. மன்னா அடையாளமாக உணர்த்தும் சாதாரண உணவு இத்தகைய ஆற்றலைக் கொண்டிருப்பதில்லை (யோவா 6:31-59).

''பல்வேறு நூதனமான போதனைகளால் கவரப்படாதிருங்கள்! உள்ளங்களை அருளால் உறுதிப்படுத்துதலே சிறந்தது. உணவு பற்றிய முறைமைகள் இதற்கு உதவா, இவற்றைக் கடைப்பிடித்தவர்கள் பயனொன்றும் அடையவில்லை'' என்று எபிரேயருக்குத் திருமுகம் (எபி 13:9) எழுதிய ஆசிரியர் கூறும்போது, இயேசுவின் மேற் சொன்ன கருத்துக்களையே மனதில் கொண்டிருக்க வேண்டும். பவுல் தமது எதிரிகளின் கூற்றாகிய ''உணவு வயிற்றுக்கென்றே உளது; வயிறு உணவுக்கென்று உள்ளது'' என்று கூறி ''இறைவன் இரண்டையும் அழித்துவிடுவார்'' என்று முடிக்கும்போது, உணவு பற்றிய இறுதி மதிப்பீட்டைக் கூறுகிறார் (1 கொரி 6:13).

உண்ணாநோன்பு (FAST. FASTING)

நோன்பின் ஆரம்பம் அறநெறி, மதசார்பான ஒழுக்கமாகிறது. நோன்பு வழிபாட்டு உணவில் அர்ப்பணிக்கப்பட்ட தசையை அருட்சாதனமுறையில் உண்ணத் தயார் செய்தலாகும். விவிலிய இலக்கியத்தில் நோன்பின் தொடக்க நோக்கத்திற்குக் குறிப்புக் காணப்படவில்லை. ஆனால் விவிலியக் குறிப்புகளின் அடிப்படையில் இந்த வழக்கத்தை விவரிப்பதுவே மேலானதாம். ஏனென்றால், விவிலியத்தில் தொடக்கப்பழக்கத்தின்படி நோன்பு உணவு முழுவதையும் விலக்குவதைக் குறிக்கிறது. ஆழ்ந்த உணர்ச்சிகளையும் துக்கத்தையும் வெளிப்படுத்த உதவியது. இது துக்கம், சோகம், மனஸ்தாபம், பேரிடர் உருக்கமான மன்றாட்டு ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தப் பட்டுள்ளது. இது இயற்கையாக அமைந்த ஒரு பொது அல்லது தனிப்பட்ட வழக்கமாக இருக்கலாம். ஆனால், நாடு கடத்தலுக்குப் பின் குறிபபிட்ட காலங்களில் நோன்பு இருந்தன. இக்காலத்தில் தனிநபர் பக்தியின் பொருட்டு நோன்பிருத்தல் மக்கள் விரும்பிய வழக்கமாகியது. இயேசுவும், தொடக்க திருச்சபையும் நோன்புக்குரிய சட்டங்களை அளிக்காவிட்டாலும் மதசம்பந்தமான ஒழுக்கம் என்று கருதி மக்கள் கடைப்பிடித்தார்கள்.

1. சொல்லியல்:- இதைக்கூற விவிலியம் பல சொற்களையும் பதங்களையும் பயன்படுத்துகிறது.

அ) விவிலிய எபிரேயத்தில்:- எபிரேய வார்த்தை நோன்பை அடிக்கடி பெயர்ச் சொல்லில் குறிப்பிட்டிருக்கிறது. நோன்பு காக்குமாறு இஸ்ராயேல் மக்கள் அனைவரும் ஒன்று கூடி வந்தனர் (நெக 9:1). இது

வினைச்சொல்லிலிருந்து தோன்றியுள்ளது. நோன்பு காத்து அழுதீர் (2 சாமு 12:21.23); நோன்பு காத்துத் தம் அறைக்குள் சென்று தரையில் விழுந்து கிடந்தார்; வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் இணைந்து பயன்படுத்தப்பட்டுள்ளது (2 சாமு 12:16); இவை உணவை முழுவதும் தவிர்ப்பதைக் குறிக்கின்றன. நோன்பைக் குறிக்கும் பதங்களும் பயன்பட்டுள்ளன; ''அன்று முழுவதும் சாப்பிடாது இருந்தபடியால்'' (1 சாமு 28;20); ''அவரை எழுந்திருக்கச் சொல்லி எவ்வளவோ முயன்றும், அவர் மறுத்துவிட்டது மன்றி அவர்களோடு சாப்பிடவுமில்லை'' (2 சாமு 12:1) '' அவன் நமக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதால்'' (1 அர 21:29), ''ஏழாம் மாதம் பத்தாம் நாளிலே உங்கள் உடலை ஒறுத்து நோன்பிருக்கக் கடவீர்கள்'' (லேவி 16:29), நோன்பிருத்தலும் ஒருவன் தன்னையே துன்புறுத்திக்கொள்ளுதலும் ஒரு பொருள் பல சொல்லாகக் கருதப்பட்டன. ''கிழிந்த போர்வையோடும் அங்கியோடும் முழந்தாளிட்டு'' (எஸ் 9:5), அரமேயிக்கில் துணை வினைச்சொல்லில் பயன்படுகிறது, ''அரசன் உண்ணவில்லை',. வைப்பாட்டிகளையும் உள்ளே வரவிடவில்லை; அவனுக்கு உறக்கமும் பிடிக்கவில்லை'' (தானி 6:18).

ஆ) புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில்:- புதிய ஏற்பாடு வினைச்சொல்லில் நோன்பு பயன்பட்டுள்ளது. ''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும். அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள்'' (மத் 9:15; லூக் 5:33). இது மதப் பழக்கமாக இருக்கிறது. நோன்பு அதன்பெயர்ச் சொல் வடிவில் எப்பொழுதும் தூய்மையான ஒழுக்கத்தைக் குறிக்கிறது. பவுல் இரண்டு எடுத்துக்காட்டுகளில் வினைச்சொல்லாகப் பயன்படுத்துகிறார். ''கண்விழிப்பு, பட்டினி'' (2 கொரி 6:5), ''பன்முறை பட்டினி கிடந்தேன், கண் விழித்தேன்'' (2 கொரி 11:27). ''இவர்கள் விடாமல் இம்மூன்று நாட்களாக என்னுடன் இருக்கிறார்கள்'' (மத் 15:32; மாற் 8:3) ''பலநாள் ஒன்றும் உண்ணாமல் இருந்துவிட்டார்கள்'' (அ.ப. 27:21); ''சிலைகளுக்குப் படைத்தது, மிருக இரத்தம், மூச்சடைத்துச் செத்ததின் இறைச்சி இவற்றை உண்ணாமலிருப்பதோடு கெட்ட நடத்தையிலிருந்து விலகி நில்லுங்கள் (அ.ப. 15:29; 1 திமோ 4:3), ''தீமையானதெல்லாம் விட்டு விலகுங்கள்'' (1 தெச 5:22; 1 பேதுரு 2:11).

2. நாடுகடத்தலுக்கு முன் நோன்பு:- தொடக்ககாலங்களில் நோன்பு சந்தேகமில்லாமல் கடைப்பிடிக்கப்பட்டிருந்தாலும், நாடு கடத்தலுக்கு முன்னால் நோன்பு பற்றி அதிகக் குறிப்புகள் இல்லை. பல குறிப்புகள் பிற்கால இலக்கிய மூலங்களைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. தொடக்க காலங்களில் நோன்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பழக்கமாகக் கருதப்பட்டது. பிற்காலங்களில், நோன்பைப் பக்திக்கடுத்த ஒரு தகுதியுள்ள பழக்கமாக மக்கள் உறுதியாகக் கருதினர்.

அ) தனிப்பட்டவர்களின் நோன்பு:- நாடுகடத்தலுக்குமுன் நோன்பு பக்திக்கடுத்த ஒரு தகுதியுள்ள பழக்கமாகும் என்பது பற்றிய குறிப்பு இல்லை. தனிப்பட்டவர்கள் சில குறிப்பிட்ட காலங்களில் நோன்பிருந்தனர். ஒருவர் தன்னையே தாழ்த்திக் கொள்ள நோன்பிருந்தார். சாக்கு உடை அணிந்தார். பேரிடர்காலத்திலோ, துக்க காலத்திலோ இறைவனுடைய இரக்கத்தைப் பெற நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது. தாவீது தவறாகப் பதுசேபாவுடன் தகாத உடலுறவு கொண்டு பிறந்த குழந்தை நோய்வாய்ப்படுகிறது. தாவீது பிள்ளைக்காக ஆண்டவரிடம் மன்றாடி நோன்பு இருந்தார் (2 சாமு 12:16-23). குழந்தை இறந்தபிறகு நோன்பிருத்தல், மக்களின் பழக்கமாகத் தெரிகிறது. ஆகாபு தன் ஆடைகளைக் கிழித்துத் தன் உடலின் மேல் மயிராடையைப் போட்டுக் கொண்டு நோன்பு காத்த சாக்கின்மீது படுத்துறங்கினார் (1 அர 21:27). இவ்வாறு இறைவனுடைய இரக்கத்தைத் தேடினார்.

கனவுகளிலும், காட்சிகளிலும் கடவளிடமிருந்து செய்தி பெற்றுக்கொள்ளக்கூடிய முயற்சியின் தயாரிப்பாக நோன்பிருந்தனர். எ.கா. சவுல், இறைவனிடமிருந்து செய்தி

A

பெற "அன்று முழுவதும் சாப்பிடாது இருந்தபடியால், அவர் வலிமை குன்றி இருந்தார்" (1 சாமு 28:20). மோசே, எலியா போன்றவர்கள் தெய்வீக உறவைப் பெறுவதற்காக நோன்பிருந்தனர். "மோசே அவ்விடத்தில் நாற்பது பகலும் நாற்பது இரவுமாய் ஆண்டவரோடு தங்கி உண்ணாமலும் குடியாமலும் இருந்தார்" (யாத் 34:28; அர 19:8).

ஆ) பொது நோன்புகள்:- நாடுகடத்தலுக்குமுன் பொது நோன்பு பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் இப்பழக்கம் இருந்ததில்லை என்று கூறமுடியாது. பரிகார நாளில் கடைப்பிடிக்கப்பட்ட நோன்பு, நாடு கடத்தலுக்குமுன் கடைப்பிடிக்கப்பட்டதா என்று உறுதியாகக் கூற முடியாவிட்டாலும், நாடு கடத்தலுக்குப்பின் இப்பழக்கம் திடீரென்று குருக்கள் பாரம்பரியத்தால் ஏற்பட்டது என்று கூறமுடியாது. குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட தேவைகளுக்காக இயற்கையாகவே மக்கள் நோன்பிருந்தனர். எ.கா. சவுல், யோனத்தான் ஆகியோர் இறந்த போது கடைப்பிடிக்கப்பட்ட பொது நோன்பு (1 சாமு 31:13; 2 சாமு 1:12). போரின் முன்னும், போரில் தோல்வியடைந்த பின்னும், மக்கள் இறைவனுடைய இரக்கத்தை மன்றாட நோன்பிருந்தனர் (நீதி 20:26; 1 சாமு 14:24; 2 நாள் 20:3). நோன்பு பொது மக்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் மனத்துக்கத்தை எடுத்துக்காட்டும் அடையாளமாக இருந்தது (1 சாமு 7:6). "நீங்கள் ஒரு நோன்பைப் பறைசாற்றி, நாபோத்தைப் பெரியோர் நடுவில் அமரச் செய்யுங்கள்" (1 அர 21:9, 12). நாடு கடத்தலுக்கு முந்தைய பொதுநோன்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு; "நோன்பு நாளன்று ஆண்டவரின் கோயிலில் இருக்கும் மக்களும், தங்கள் பட்டணங்களிலிருந்து வருகிற யூதாவின் வீட்டார் அனைவரும் கேட்கும்படி, நீ என் வாய்மொழியாய்க் கேட்டெழுதிய ஓலைச் சுருளிலிருந்து ஆண்டவருடைய வார்த்தைகளைப் படித்துக்காட்டு" (எரே 36:6,9). நாடுகடத்தலுக்கு முன் நோன்புகள் ஆழ்ந்த உணர்ச்சிகளை எடுத்துக்காட்டுபவையாகவும் (1 சாமு 31:13) அல்லது அரசனால் அறிவிக்கப்பட்டதாகவும் இருக்கலாம் (1 நாள் 20:3). உணவைத் தவிர்ப்பதோடு, நோன்பில், துக்கத்தையோ மனவருத்தத்தையோ எடுத்துக்காட்டும் மற்ற செயல்களும் உள்ளடங்கியிருந்தன (நீதி 20:26; 1 சாமு 7:6; 2 சாமு 1:11).

3. நாடு கடத்தலுக்குப்பின் நோன்பு:- இக்காலத்தில்தான் குறிப்பிட்ட காலங்களில் பொதுநோன்புகள் கடைப்பிடிக்கப்பட்டன. பக்திக்காக நோன்பிருத்தல் மக்களிடையே பரவியது.

அ) பொது நோன்புகள்:- பிற்காலத்தில் இக்கட்டான மற்றும் துன்பமான நேரங்களில் இயற்கையாக நோன்பிருக்கும் பழக்கம் தொடர்ந்தது. சில நோன்புகள் குழுவின் தலைவரால் இறைவனது இரக்கத்தை வேண்ட அறிவிக்கப்பட்டன (எஸ்த 8:21-23; 1 மக் 3:47; 2 மக் 13:12). மனத்துக்கத்தை எடுத்துக்காட்ட நோன்பிருக்கலாம் (யோனா 3:4). இறைவனது இரக்கத்தைப் பெற நோன்பிருந்தனர். "அரசனின் கட்டளையைக் கேட்கவே எல்லா மாநிலங்களிலும் நகரங்களிலும் கிராமங்களிலுமிருந்து யூதர்கள் பெரும் துயருற்றனர். உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பினர்" (எஸ்த 4:3,16). யோவேல் இறைவாக்கினர் புத்தகத்தில் நோன்பைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. "உண்ணா நோன்புக்கெனக் காலத்தைக் குறிப்பிடுங்கள்" (யோவே 1:14); "இப்போதாவது நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள்" (2:12), "உண்ணா நோன்புக்கெனக் காலத்தைக் குறிப்பிடுங்கள்" (2:15). நோன்பிருக்கும் போது, உணவைத் தவிர்த்தலோடு, மக்கள் அழுது புலம்பினர்; சாக்கு உடை அணிந்தனர்; சாம்பலைப் பூசிக் கொண்டனர்.

இறைவாக்கினர் செக்கரியா நூலில் நான்கு வகையான நோன்புகள் குறிப்பிடப்படுகின்றன (செக் 8:19). இது ஆலயத்தை மையமாகக் கொண்டு ஒற்றுமையான, வழி பாட்டுச் சமூகமாக யூதர்கள் அமைக்கப்பட்டதன் விளைவாகும். எஸ்தர் நூலில், பூரிம் விழா

வுக்குமுன் மக்கள் நோன்பிருந்தனர் (எஸ்த 9:31).

பரிகார நாள் கொண்டாட்டம் நாடு கடத்த லுக்குப்பின் முக்கியத்துவம் பெற்றது. ''ஏ ழாம் மாதம் பத்தாம் நாளிலே உங்கள் உடலை ஒறுத்து நோன்பிருக்கக் கடவீர்கள்'' (லேவி 16:29.31; 23:27.29.32; எண் 29:7). அதே மாதம் இருபத்து நான்காம் நாளன்று கோணி ஆடை உடுத்தி, தங்கள் தலையின் மேல் புழுதியைத் தடவிக் கொண்டு, நோன்பு காக்குமாறு இஸ்ராயேல் மக்கள் அனைவரும் ஒன்று கூடிவந்தனர் (நேக 9:1). இங்கு நோன்பு மனத்துக்கத்தின் அடையாள மாக விளங்கியது.

ஆ) தனிநபர்களின் நோன்பு:- தனிப்பட்ட வர்களுடைய நோன்பு பிற்காலத்தில் இழ வுத்துன்பம், மனத்துக்கம், உருக்கமான வேண்டுதல் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் அடையாளமாக அமைந்தது (எஸ் 10:6; நெக 1:14; தானி 9:3). தனிப்பட்டவர்கள், இறைவ னிடமிருந்து செய்தி பெறத் தயாரிப்பாகவும் (தானி 10:3), பக்திக்கடுத்த செயலாகவும் (சங் 35:13; 69:10) நோன்பிருத்தல் வழக்கம். வாரத்தில் இரண்டாவது ஐந்தாவது நாட்க ளில் பக்தியுள்ளோர் நோன்பிருத்தல் வழக்க மாகும் (லூக் 18:12). நோன்பிருத்தலின் மதிப்பு தோபியா நூலில் குறிப்பிடப்படுகி றது (தோபி 12:8). பரிசேயர்கள், திருமு ழுக்கு யோவான் சீடர்கள் ஆகியோரிடையே நிலவிய நோன்பிருக்கும் பழக்கத்தைப் புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது (மத் 6:16; மாற் 2:18). கும்ரான் குழுவினரும் நோன்பி ருத்தலைச் சிறப்பாகக் கடைப்பிடித்தனர்.

இ) நோன்பிருத்தல் பற்றி இறைவாக்கினர் கள்:- இறைவாக்கினர்களுள், எரேமியா வையும், யோவேலையும் தவிர ஏசயாவும் (58:3-4), செக்கரியாவும் (7:5) நோன்பிருத்த லைப் பற்றிப் பேசுகின்றனர். அதில் இவர் கள் நோன்பிருத்தலைக் கண்டனம் செய்ய வில்லை. ஆனால் அப்பழக்கத்தில் காணப் பட்ட நேர்மையின்மையையும் போலித் தனத்தையும் வன்மையாகக் கண்டிக்கின்ற னர்.

4. புதிய ஏற்பாட்டில் நோன்பு:- புதிய ஏற்பாடு நோன்பு பற்றிய இயேசுவின் மனநி லையை எடுத்துக்காட்டுகிறது. அதில் தொடக்க காலக் கிறிஸ்தவர்களும், கிறிஸ்து வும், எவ்வாறு முதல் நூற்றாண்டு யூத சமயத்தின் பின்னணியில் நோன்பிருத்தலை ஒரு பக்திக்குரிய பழக்கமாக ஏற்றுக்கொண் டனர் என அறிகிறோம்.

அ) நோன்பு பற்றி இயேசுவின் போதனை:- அவரது இரு கூற்றுக்கள், இறை வாக்கினர்கள் வலியுறுத்தியதற்கு ஏற்ற வாறு, இயேசுவின் போதனை அமைந்திருந் தது என்று காட்டுகின்றன. மேலும், அவரது தூதுக்கும் இறையரசின் வருகைக்குமிடை யேயுள்ள நெருங்கிய தொடர்பு, சிறு சிறு பக்தி முயற்சிகள்பால் கவனம் செலுத்த நேரமில்லை என்று காட்டுகின்றன.

ஏச 58:3-4-இன் கருத்துக்கேற்ப, எந்தப் பக்தி முயற்சிகளையும்போல், நோன்பும் இறைவனுடைய மகிமைக்காகச் செய்யப் பட வேண்டும், பிறரிடம் பெருமை பெற அல்ல என்று இயேசு போதிக்கிறார். ''நீங் கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக் காரரைப் போல் முகவாட்டமாய் இருக்க வேண்டாம்'' (மத் 6:16-18; லூக் 18:9-14). இங்கு நோன்பைப்பற்றிக் குறைசொல்ல வில்லை. மாறாக வெளிப்படையாகச் செய் யப்படும் போலி அடையாளங்களைக் கட வுள் பார்க்கவில்லை. உள்ளத்தின் ஆழத் தைப் பார்க்கிறார் என்று உண்மையான நோன்பு இருக்க வேண்டிய விதத்தை எடுத் துக் கூறுகிறார். நோன்பு உண்மையான பக்தி யில்லாமல் பொருள் அற்றதாகும்.

இயேசுவின் இரண்டாவது போதனையில் நோன்பு வித்தியாசமான விதத்தில் விளக்கப் பட்டுள்ளது. ''மணமகன் அவர்களை விட் டுப் பிரியும் நாள் வரும்; அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள்'' (மத் 9:14-15; மாற் 2:18-20; லூக் 5:33-35). அவரிலும், அவரது செயல்களிலும் வந்துள்ள இறையர சில் மகிழ்ச்சிக்கும் நன்றியுரைக்குமே இடம் உண்டு. அவரது மரணத்துக்குப்பின் அவர் கள் நோன்பிருக்க வேண்டியிருக்கும்.

ஆனால் இயேசு ஆன்மீகச் சிக்கலான நேரத்தில் நோன்பை மேற்கொண்டர். இவை பரிகார நாளுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. இயேசு அலகையினால் சோதிக்கப்படுமாறு பாலைவனத்திற்கு ஆவியானவரால் அழைத்துச் செல்லப்பெற்றார். அங்கு நாற்பது பகலும் நாற்பது இரவும் நோன்பிருந்தபின் பசியுற்றார் (மத் 4:2; மாற் 1:13). ஆனால் நோன்பிருத்தல் பற்றிய அவரது போதனை இறைவாக்கினரின் பாரம்பரியத்துக்கும் அவரது இறுதிக்கால நோக்கிற்கும் ஏற்றவாறு அமைந்திருந்தது.

ஆ) தொடக்க காலத் திருச்சபையில் நோன்பு:- தொடக்க காலத் திருச்சபையில் பொது மன்றாட்டுக் காலங்களில், குறிப்பாகத் திருச்சபையில் பணியாளர்களை நியமிக்கும்போது நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது. ''ஒரு நாள் அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரின் வழிபடுகையில்'' (அ.ப. 13:2-3); ''நோன்பிருந்து செபம் செய்த பின்னர், அவர்கள் விசுவாசித்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தனர்''. (அ.ப.14:23). பவுலின் திருமுகங்கள் உணவில்லாதபோது பட்டினியிருப்பதைக் குறிக்கின்றன (2 கொரி 6:5; 11:27). ஆனால் பக்தி முயற்சியாக நோன்பிருத்தல் போற்றத்தக்க பழக்கமாகத் திருச்சபையில் கருதப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அப்போஸ்தலர்கள் காலத்துக்குப் பின்வந்த கிறிஸ்தவ இலக்கியங்கள் உயிர்ப்பு விழாவுக்குமுன்னும், ஞானஸ்நானத்திற்குமுன்னும் நோன்பிருத்தல் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டதைச் சுட்டுகின்றன. கிறிஸ்தவர்கள், யூதர்களைப் போல், வாரத்திற்கு இரு நாள் நோன்பிருக்க அறவுரை கூறப்பட்டதாகத் தெரிகிறது.

உண்ணி (FLEA)

சிறகற்ற ஒரு பூச்சி. இது தாவுவதில் ஆற்றல் மிக்கது. இப்பூச்சி பல வகைகளில் பாலஸ்தீனத்தில் காணப்படுகின்றது. தாவீது தனது முக்கியத்துவம் இல்லாத நிலைமையைச் சுட்டிக்காட்ட அடையாளமாக இதைப் பயன்படுத்துகிறார் (1 சாமு 24:14).

உண்மை (TRUTH)

இயல்பொருளோடு பொருந்தியுள்ள ஒரு சிந்தனை அல்லது சொல்லை இன்றைய மொழியானது உண்மை என்று அழைக்கின்றது. மெய்மை கொண்டுள்ள ஒன்று தன்னையே வெளிப்படுத்தும்போது, புத்திக்குத் தெளிவானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்கும்போது, அதுவே உண்மை என்று அழைக்கப்படும். இக்கண்டிப்பான அறிவுபூர்வமான கிரேக்க அணுகுமுறையானது, நம்மிடையில் சாதாரணமாகச் சொல்லப்படுவதாக உள்ளது. ஆனால், விவிலியமானது உண்மையை வேறுவிதமாகக் கருதியது. உண்மையைப்பற்றிய விவிலியக் கருத்தானது இறைவனுடனான சந்திப்பின் விளைவான சமய அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டது. ஆயினும் உண்மை பற்றிய இக்கருத்தானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்துள்ளது. விவிலிய உண்மையானது, முதன்மையாக, உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருப்பதாகும். ஆனால் புதிய ஏற்பாட்டில் உண்மையானது, கிறிஸ்து என்னும் ஆளைச்சுற்றி ஒருமுகப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டின் முழுமையாகும்.

I பழைய ஏற்பாடு:-

எபிரேயமொழியில் உண்மையைக் குறிக்கும் ''எமெத்'' என்ற சொல் ''ஆமன்'' என்ற சொல்லிலிருந்து அமைக்கப்படுகிறது; ''ஆமன்'' என்பதன் அடிப்படைப்பொருள் நம்பத்தகுந்ததாயும் உறுதியானதாகவும் நம்பிக்கைக்குத் தகுந்ததாயும் இருப்பதாகும். ஆகவே உண்மை என்பது நிலையானதும் நிரூபிக்கப்பட்டதும் நம்பிக்கைக்குரியதும் ஆன ஒன்றாகும். உண்மையான சமாதானம் (எரே 14:13) என்பது பாதுகாப்பான நீடித்த சமாதானமாகும். உண்மையான வழியானது (ஆதி 24:48) நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு உறுதியாக நடத்திச்செல்லும். ''உண்மையில்'' என்னும் சொல் சிலநேரங்களில் (ஏச 16:5) மாற்றமுடியாதது அல்லது இடைவிடாதது என்று பொருள்படும். உண்மையானது இறைவனுக்கோ மனிதனுக்கோ சாற்றிக் கூறப்படும்போது பெரும்பாலும் நம்பிக்

கைக்குத் தகுதியான தன்மை என்று பொருள் கூறப்படுவதுவே சாலச் சிறந்தது. ஏனெனில் ஒரு நபருடைய நம்பிக்கைக்குத் தகுதியான தன்மையே நமது நம்பிக்கையைத் தூண்டுகிறது.

1. இறைவனின் உண்மையானது அவருடைய மக்களின் சார்பாக அவரது வரலாற்றுத் தலையீட்டுடன் இணைக்கப்படுகிறது. யாவே நம்பிக்கைக்குரிய இறைவன் ஆவார் (உப 7:9; 32:4; சங் 3:6; ஏச 49:7). இந்த இயற்பண்பினுடைய முக்கியத்துவம் உடன்படிக்கை மற்றும் வாக்குறுதிகள் ஆகியவற்றின் சூழ்நிலையில் மட்டுமே தெளிவாகக் காணக்கிடக்கிறது. ''உம் கடவுளாகிய ஆண்டவர் வலிமையும் உண்மையும் பொருந்திய கடவுள் என்றும், தமக்கு அன்பு செய்து தம்முடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்குத் தமது உடன்படிக்கையையும் இரக்கத்தையும் காக்கிறவர்'' (உப 7:9). தாவீதின் உடன்படிக்கையைக் குறிக்கும் எண்பத்தொன்பதாவது சங்கீதம் முழுவதும் இறைவனுடைய நம்பிக்கைக்குத் தகுதியான தன்மையைப் புகழ்வதற்கெனவே அர்ப்பணிக்கப் பட்டுள்ளது. இந்நூலின் அடிப்படையான பொருள் சங் 132:11-இல் மிகவும் வெளிப்படையாக உள்ளது. (''ஆண்டவர் தாவீதுக்கு உண்மையை ஆணையிட்டுள்ளார்; அவர் அதனின்று விலக மாட்டார்''). உண்மை என்றழைக்கப்படும் ஆணையானது இங்கு, மீறத்தகாததெனத் தகுதி பெறுகிறது.

உண்மையானது, இறைவனுடைய அடிப்படையான உடன்படிக்கை மனப்பான்மை குறிப்பிடும் விதமாக அடிக்கடி பிரமாணிக்கத்துடன் இணைந்துள்ளது (சங் 88; 137:2). இது அருள்மிக்க உடன்படிக்கையாகும். இதில் இறைவன் ஒருபோதும் குறைவுபட்டதே இல்லை (யாத் 34:6-7; ஆதி 24; 2 சாமு 2:6; 15:20). பிற பகுதிகளில் பிரமாணிக்கமானது நீதியுடனோ (ஓசே 2:21-22; நெக 9:33; செக் 8:8) புனிதத்துடனோ சேர்ந்துள்ளது (சங் 71:22). இவற்றில் உடன்படிக்கையைப் பற்றிய துல்லியமான குறிப்பு எதுவுமில்லாமல், பொதுவான பொருள் மட்டுமே உள்ளது. பல சங்கீதங்களில் இறை உறுதியுடைமையானது பாதுகாப்பின் ஊற்றாகவும் இறை உதவியை நாடுகின்ற நீதிமானுக்கு அடைக்கலமாகவும் உள்ளது. ஆகவே இறை உதவியின் உறுதி மற்றும் நிலைத்த தன்மைக்குக் கவனத்தை ஈர்க்கிற (சங் 40:12; 43:2-3; 54:7; 61:8) அரண், கேடயம் மற்றும் கவசம் போன்ற உருவகங்கள் (சங் 90) பயன்பட்டுள்ளன.

உண்மையானது இறைவனின் வார்த்தை மற்றும் அவருடைய சட்டத்தின் சிறப்பியல்பாகவும் உள்ளது. இறைவாக்குறுதிகள் தாவீதினுடைய வீட்டின், நீடித்த நிலைக்கு உத்தரவாதமாக இருப்பதால் ''உமது வார்த்தையே உண்மை'' என்று தாவீது ஆண்டவரிடம் கூறுகின்றார் (2 சாமு 7:28). இறைச் சட்டத்தின் உண்மையைச் சங்கீதங்கள் போற்றுகின்றன (சங் 19:10;. 111:7-8; 119:86.138.142.151. 160). உண்மையானது இறைவார்த்தையில் அடிப்படையானதும் அத்யாவசியமானது மாகும். அதாவது இறைவனின் வார்த்தையானது திரும்பப் பெற முடியாதது மற்றும் என்றும் நிலைத்திருப்பது என்பதை சங் 119:160 சுட்டிக்காட்டுகிறது.

2. மனிதனுடைய உண்மை:- இங்கும் பிரமாணிக்கத்தின் அடிப்படையான மனப்பான்மையே (ஓசே 4:2) பிரச்சனையில் உள்ளது. உண்மையின் மனிதர்கள் (யாத் 18:21; நெக 7:2) நம்பிக்கையின் மனிதர்களாகவும் உள்ளனர். ஆனால் இரு வாசகங்களும் ''இறைவனுக்கு அஞ்சி'' என்பதைச் சேர்க்கின்றன. ஆகவே, அதன் மூலமாக இவ்வொழுக்க மதிப்பீட்டினைச் சமய மற்றும் யாவேயின் சூழ்நிலையில் எடுத்துக் கூறுகின்றது. சாதாரணமாக மனிதருக்குச் சாற்றிக் கூறப்படும்போது உண்மையானது அவர்கள் உடன்படிக்கைக்கும் இறைச்சட்டத்திற்கும் காட்டும் பிரமாணிக்கத்தை நேரடியாகச் சுட்டுகிறது. இவ்வாறு உண்மையாக நீதிமான்களின் முழு நன்னெறி நிலையை விவரிக்கிறது. எனவே, முழுமை (யோசு 24:14), பிளவுபடா இதயம் (2 அர 20:3), நல்லது மற்றும் நேர்மை (2 நாள் 31:20), நேர்மை மற்றும்

நீதி (ஏச 59:14; சங் 44:5), மற்றும் புனிதம் (செக் 8:3) ஆகியவற்றுடன் இணையமைப் புக் கொள்கிறது. உண்மை உள்ளவனாக நடத்தல் (2 நாள் 31:20; எச 18:9), ''உண்மை யுடன் நடத்தல்'' (1 அர 2:4; 3:6; 2 அர 30:3; ஏச 38:3) என்பது ஆண்டவரின் சட்டத் தைப் பிரமாணிக்கத்துடன் கடைப்பிடிப்பதா கும் (தோபி 3:5).

''கனிவுடனும் உண்மையுடனும் நடத்து வது'' (ஆதி 47:29; நீதி 2:14) எனத் தனிப் பட்ட மனித நடத்தை பற்றிக் கூறப்படுகி றது. இதற்குப்பொருள் நல்லெண்ணத்துட னும் பற்றுறுதியுடனும் நிலையான அன் போடும் செயல்படுவதாகும். மேலும், உண்மை என்பது நீதியுடன் சமத்துவத்தைச் செயல்படுத்துவதும் (பழ 29:14; எச 16:6; சங் 18:8; செக் 7:9) பேச்சில் முழுவதுமாக நேர்மையுள்ளவனாக இருப்பதும் ஆகும். ஆனால், இங்கும் நேரிய நாவானது ''என் றென்றும் நிலைத்திருக்கும்'' (பழ 12:19) என்னும் உண்மையின் அடிப்படையான பொருள் தோன்றுகின்றது.

3. வெளிப்படுத்தப்பட்ட உண்மை:-ஞான மற்றும் வெளிப்பாட்டுப் பாரம்பரியம் ஞானம் பற்றிய ஓரளவு புதிய பருமனை உண்மையின் கருத்திற்குச் சேர்க்கின்றது. அதாவது வெளிப்படுத்தப்பட்ட உண்மையா கும் இக்கருத்துக்கள் புதிய ஏற்பாட்டிலும் காணப்படும். சில சங்கீதங்கள் (25:5; 26:3; 86:11) ''இறைவனின் உண்மையில் நடத்தல்'' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின் றன. இது இங்கே பிரச்சினைக்குரிய உண்மை, ஒழுக்க முறைப் பணிச்சட்டம் மட்டுமன்று. கடைப்பிடிப்பதற்கென இறை வன் அறிவிக்கின்ற சட்டமே ஆகும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. இறைவனிடமி ருந்து வருகின்ற போதனையாகிய ''உண் மையான ஞானத்துடன் ஒரு பொருள் பிற சொல்லாகிறது. ''உண்மையை விலை கொடுத்தாயினும் வாங்கு; ஆனால் அதை விற்பனை செய்யாதே. அவ்வாறே ஞானத் தையும் நல்லுரையையும் உணர்வையும் விலைகொடுத்துப் பெறு'' (பழ 23:23; 8:7; 22:21; திருவுரை 12:10) ''சாகும் வரையிலும் உண்மைக்காகப் போராடு'' (சீரா 4:33 எழு பது நூல் வாசகம்).

உண்மையானது இறைவனுடைய திட்டத் தையும் சித்தத்தையம் குறிப்பிடுவதால் இரக சியமானதன் அல்லது மறைபொருளானதின் எல்லையை அணுகுகிறது (தோபி 12:12; ஞான 6:22). தீர்ப்பின் காலத்தில் நீதிமான்கள் ''உண்மையைப் புரிந்து கொள்வர்'' (ஞான 3:9). இந்நிலையானது அவருடைய உறுதி மொழிகள்பால் இறைவன் கொண்டுள்ள பிரமாணிக்கத்தை நேரடியாக அனுபவித்தல் அல்லது இறைவனின் ஆளையே காண்பது என்ற பொருளில் இல்லாமல், மனிதருக் கான இறைவனுடைய இரக்கமிகு திட்டத் தினை ஓரளவு புரிந்து கொள்வதில் அடங்கி யுள்ளது. தானியேலுடைய ''உண்மையின் நூலில்'' (தானி 10:21) இறைவனின் திட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறைவனின் உண்மையே வெளிப்படுத்தப்பட்ட அவரது திட்டம் (9:13), விண்ணகக்காட்சி அல்லது அதன் விளக்கம் (8:26; 10:1; 11:2), உண்மை யான விசுவாசம், இஸ்ராயேலின் சமயம் (8:12) ஆகும்.

யூத வெளிப்பாட்டு மற்றும் ஞானப் பாரம் பரியங்கள் ''உண்மை'' என்னும் சொல்லை இதே பொருளில் தொடர்ந்து பயன்படுத் தின. கும்ரான் சமுதாயத்திற்கு ''இறைவ னின் உண்மையைப் புரிந்து கொள்ளுதல்'' என்பது மறைபொருள்களைப் புரிந்து கொள்வதாகும். இந்த அறிவு, சட்டத்தைச் சரியான முறையில் விளக்குவதன் மூலமா கப் பெறப்படுகிறது. ''உண்மைக்கு மனம் திரும்புதல் என்பது மோசேயின் சட்டத்திற்கு மனந்திரும்புவதாகும்''. உண்மையானது ஒழுக்க உட்கருத்துகளைக் கொண்டு வெளிப் படுத்தப்பட்ட போதனையாகும். எனவே உண்மையானது எவ்விதமான தீமைக்கும் எதிரானதாகும். ''உண்மையின் மக்கள்'' ''உண்மையின் வழிகளைப்'' பின்தொடர்வர். கும்ரானைப் பொறுத்தவரை உண்மை என் பது உடன்படிக்கையின் பிள்ளைகளாக இருப்பதில் உள்ளடங்கியுள்ள சமயக் கருத்து களின் முழுமையாகும்.

II. புதிய ஏற்பாடு:-

1. விவிலிய உரிமைப்பேறு:- புதிய ஏற்பாட்டின் மற்றப் பகுதிகளைவிட, பவுலின் உண்மை பற்றிய கருத்து எழுபது நூல் பொருளை ஒத்திருக்கிறது. ஏனெனில் பவுல் உண்மையை நேர்மை என்ற பொருளிலும் (2 கொரி 7:14; 11:10; பிலி 1:18; 1 கொரி 5:8) அல்லது உண்மை உரைத்தல் (உரோ 9:1; 2 கொரி 12:6; எ பே 4:25; 1 திமோ 2:7) என்ற சொற்றொடரிலும் பயன்படுத்துகிறார். ''இறைவனின் உண்மை'' என்னும் வாய்பாடு அதாவது இறைவன் தம் வாக்குறுதிகளுக்குக் காட்டும் பிரமாணிக்கம் ஆழ்ந்த விவிலியத்தன்மையுடையது. (உரோ 3:7; 3:3; 15:8; 2 கொரி 1:18 தொ; நமது பிரமாணிக்கமுள்ள இறைவனுடைய வாக்குறுதிகள் கிறிஸ்துவில் தங்களது உடன்பாட்டைக் கொண்டுள்ளன). உண்மையானது அதே போன்று ஒழுக்க உண்மை, வாழ்வின் நேர்மை என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது அநீதிக்கு எதிராக உள்ளது (1 கொரி 13:6). இது நீதியுடன் ஒத்த பொருள் தரும் பிறசொல்லாகும் (எபே 5:9; 6:14). கிறிஸ்தவர்களிடையே காணப்படவேண்டுமெனப் பவுல் எதிர்பார்க்கின்ற குணவியல்பை இது குறிக்கிறது (கொலோ 1:6; 2 கொரி 13:8). பவுலைப் பொறுத்தவரையில், இறைவனின் தீர்ப்புக் கூட உண்மை மற்றும் நீதியின் முத்திரையைக் கொண்டிருக்கும் (உரோ 2:2).

இறைவனுடைய உண்மைக்கும் சிலைகளுடைய பொய்மைக்கும் இடையிலுள்ள முரண்பட்ட நிலையானது (உரோ 1:25; 1 தெச 1:9) புறவின சிலை வழிபாட்டிற்கு எதிரான யூதரின் வாதத்தினால் தூண்டப்பட்டதாகும் (எரே 10:14; 13:25; பாரூ 6:7; 47:50). ஏனெனில் உண்மையான இறைவன் உயிருள்ள நம்பத்தகுந்த இறைவனாவார். அவர் மக்களுக்குச் செவிமடுத்து அவர்களைக் காக்கின்றார்.

2. நற்செய்தியின் உண்மை:- கிறிஸ்தவ உண்மை பற்றிய கருத்து நற்செய்தியில் காணப்படுகிறது; வெளிப்படுத்தப்பட்ட உண்மை பற்றிய ஞான மற்றும் வெளிப்பாட்டுக் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றது. இறைவனுடைய முழுச் சித்தமும் எழுதப்பட்டுள்ள (உரோ 2:18) தங்களுடைய சட்டத்தில் இவ்வுண்மையின் வெளிப்படையான அமைப்பைக் கொண்டிருப்பதில் (2:20) யூதர்கள் பெருமை பாராட்டினார்கள். சட்டத்தின் உண்மை என்னும் யூதச் சொற்றொடருக்கு மாற்றாகப் பவுல் நற்செய்தியின் உண்மை (கலா 2:15,14) அல்லது உண்மையின் வார்த்தை (கொலோ 1:5; எபே 1:13; 2 திமோ 2:15) என்பனவற்றைப் பயன்படுத்துகிறார். உண்மையே அப்போஸ்தலரால் போதிக்கப்பட்ட இறைவனின் வார்த்தையாகும் (2 கொரி 4:2:5). இறைவனின் மறைபொருளைப் போலவே (உரோ 16:26; கொலோ 1:26; 4:3) இதுவும் வெளிப்பாட்டின் பொருளாகும் (2 கொரி 4:2).

அ) உண்மையும் விசுவாசமும்:- வார்த்தைக்குச் செவிமடுத்து (எபே 1:13; உரோ 1):4) உண்மையைப் பற்றிய அறிவினை அடைவதற்கு மனந்திருந்த வேண்டிய (2 திமோ 2:25) மனிதருக்கு நற்செய்தியின் செய்தியானது அளிக்கப்படுகிறது. விசுவாசமானது நற்செய்தியின் உண்மையை ஏற்பதாக இருக்கின்ற நிலையில் (2 தெச 2:13; தீத் 1:1; 2 தெச 2:12; கலா 5:7; உரோ 2:8), உண்மையின் மீதான அன்பும் (2 தெச 2:10) தேவைப்படுகின்றது. பிந்தைய வாசகங்களில் ''உண்மையின் அறிவை அடைவதென்பது'' (1 திமோ 2:4; 2 திமோ 3:7; எபி 10:26, நற்செய்திக்கு... செவிமடுப்பதையும், கிறிஸ்தவத்தைத் தழுவுவதையும் குறிக்கும் நிலையான வாக்காகுகிறது. ஏனெனில் உண்மையை (1 திமோ 4:3), கிறிஸ்தவ விசுவாசத்தை (தீத் 1:1) அறிந்தவர்களே விசுவாசிகள் ஆவர்.

ஆ) உண்மையும் கிறிஸ்தவ வாழ்வும்: திருமுழுக்கின் போது உண்மைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் தங்களுடைய ஆன்மாக்களைப் புனிதப்படுத்திய காரணத்தால் (1 பேதுரு 1:22) உண்மையின் வார்த்தையின் மூலம் புதிய வாழ்விற்குப் பொதுக் கிரு...

கங்கள் விசுவாசிகளை விவரிக்கின்றன. (யாக் 1:18; 1 பேதுரு 1:23). எனவே இவ்வுண்மையை ஒரு முறை ஏற்றுக்கொண்ட பின்னர், அவர்கள் அதனின்று விலகிச் செல்லக் கூடாது (யாக் 5:19). ஆனால் கிறிஸ்துவினுடைய இறுதி வருகையை நோக்கியவர்களாய் இப்போது கொண்டுள்ள உண்மையை அவர்கள் வலுப்படுத்த வேண்டும் (2 பேதுரு 1:12). வளர்ச்சிபெற்று மீட்படைய வார்த்தையின் மீது அவர்கள் என்றென்றும் ஆர்வமாக இருக்கவேண்டும் (1 பேதுரு 2:2). இவ்வாறு ஒரு கிறிஸ்தவன் புதிய மனிதனை அணிந்து உண்மை கோரும் புனிதத்தை அடைவதாகப் பவுல் மேலும் கூறுகிறார் (எபே 4:24).

இ) நலமிக்க போதனையும் தவறும்:- பொய்யான போதகர்களின் (1 திமோ 4:2) கதைகளுக்கு எதிராக (1 திமோ 1:4; 4:7; 2 திமோ 4:4; தீத் 1:14) நலமிகு கோட்பாடு என்னும் பொருள்படும்படியாக (1 திமோ 1:10; 4:6; 2 திமோ 4:3; தீத் 1:9; 2:1) உண்மை பற்றிய கருத்திற்குப் புதிய, திடீர் மாற்றம் அளிக்கின்றது மேய்ப்புப்பணி திருமுகங்களில் காணப்படும் முரண் சமய வாதிகளுக்கு எதிரான வாதம். இத்தகைய போதகர்கள் உண்மையை ஒதுக்கிவிட்டனர்; திரும்பிக் கொண்டனர் (தீத் 1:14; 1 திமோ 6:5; 2 திமோ 2:18; 4:4). இவர்கள் அதற்கு எதிராகவும் எழுந்து நிற்கின்றனர் (2 திமோ 3:8). ஆனால் உயிருள்ள இறைவனின் திருச்சபையானது உண்மைக்குத் தூணும், அடிப்படையுமாக உள்ளது'' (1 திமோ 3:15).

ஈ) உண்மைக்கும் கிறிஸ்துவிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. அப்போஸ்தலர் புலன்களுக்கு அப்பாற்பட்ட கோட்பாட்டைப் போதிக்காமல் கிறிஸ்து என்றும் ஆளையே போதிக்கின்றார் (2 கொரி 4:5; கலா 1:16; 1 கொரி 1:23; 2 கொரி 1:19; 11:4; எபே 4:20; பிலி 1:15). ஊனுடலில் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்து புறவினத்தாருக்கு அறிவிக்கப்பட்டு உலகம் முழுவதும் விசுவாசிக்கப்பட்டார் (1 திமோ 3:16). கிறிஸ்துவே உண்மை. அதற்குத் திருச்சபை காவலாளியாக உள்ளது. அவரே பக்தியின் மறைபொருள்; நற்செய்தி போதிக்கின்ற உண்மையாய கிறிஸ்து மெய்யியல் பொருளில் விண்ணரசு உயிராக இல்லாமல் நமக்கென இறந்து உயிர்த்த வரலாற்று இயேசுவாக உள்ளார். உண்மையானது இயேசுவில் உள்ளது (எபே 4:21).

3. புனித யோவான்:- யோவானின் இறையியலானது எல்லாவற்றிற்கும் மேலாக வெளிப்பாட்டின் இறையியலாக இருப்பதால் உண்மைக்கு முதன்மை அளிக்கிறது. யோவானின் உண்மையானது அடிக்கடி பிளோட்டோ அல்லது மெய்யியலைச் சேர்ந்த மீபௌதீக இரு பொருள்வாதமாக விளக்கப்படுகிறது. இவ்வாதத்தில் தன்னையே வெளிப்படுத்தும் தானாகவே என்றும் உள்ள இறையியல்பு உள்ளது. முந்தைய அமைப்புகளில் இன்றியமையாததுமாக இருந்திருக்கக்கூடிய வழக்கில், இறைவனை உண்மை என்று யோவான் ஒரு போதும் குறிப்பிட்டதில்லை. உண்மையில் வெளிப்படுத்தப்பட்ட உண்மை பற்றிய வெளிப்பாட்டு மற்றும் ஞான மரபினை யோவான் விரிவாக்குகிறார். இக்கருத்தைப் புதிய ஏற்பாட்டின் பிற பகுதிகளும் எடுத்துக் கூறுகின்றன. ஆயினும் உண்மையின் வெளிப்படுத்தப்பட்ட பண்பையும் அதன் உள்ளார்ந்த ஆற்றலையும் யோவான் மிகவும் வலியுறுத்துகிறார்.

அ) தந்தையின் வார்த்தையும், உண்மையாகிய கிறிஸ்துவும்:- யோவானைப் பொறுத்த மட்டில் உண்மையானது இறைவனுடைய உயிராக இல்லாமல் தந்தையின் வார்த்தையாக உள்ளது (யோவா 17:17; 1 யோவா 1:8-11; உண்மை நம்மிடம் இல்லை''; 1:10: ''அவருடைய வார்த்தை நம்முள் இல்லை''. கிறிஸ்து தந்தையிடமிருந்து கேட்ட வார்த்தையே உண்மையாகும் (யோவா 8:26. 40; 3:33). அதை அறிவிக்கவே அவர் வருகிறார் (8:40.45-46). அதற்குச் சான்று பகர வந்துள்ளார். (18:37; 5:33). உண்மையானது கிறிஸ்து நமக்கு அறிவிக்கின்ற வார்த்தையாகவும், அவரை விசுவசிக்க நம்மை நடத்திச் செல்ல வேண்டிய வார்த்தையாகவும் உள்

ளது (8:31-32.45-46). இங்கும், பழைய ஏற்பாட்டிலும் உள்ள வெளிப்பாட்டின் வேறுபாடானது தெளிவாக உள்ளது; ''திருச்சட்டம் மோசே வழியாக அளிக்கப்பெற்றது. ஆனால் அருளும் உண்மையும் இயேசு கிறிஸ்து வழியாக வந்தன'' (1:17). ஏனெனில் அவரோடும் அவரிலும், வெளிப்பாடானது முழுமையாகவும் இறுதியாகவும் உள்ளது. பேயானது பொய்களுக்கெல்லாம் தந்தையாக இருக்கும்போது (8:44) கிறிஸ்துவே உண்மையை அறிவிக்கிறார் (8:45). அவரே ''அருளும் உண்மையும் நிறைந்தவராய்'' உள்ளார் (1:14). உயர்ந்த கிறிஸ்துவப் புதுமுறையானது, தாம் இறைவன் என்ற அளவில் அல்லாமல், மாறாக ஊனுடல் எடுத்த வார்த்தை என்ற அளவில், தந்தையை நாம் அறியச் செய்வதின் வழியாக (1:18), கிறிஸ்துவே வெளிப்பாட்டின் முழுமையாக இருப்பதன் காரணமாக, அவரே உண்மை என்னும் செய்தியாகும் (14:6). தாமே உண்மை என்பதின் பொருளை இயேசு விளக்கும்போது மற்றும் இருதலைப்புகளைச் சேர்த்துக் கூறுகிறார். அவரே ''வழியும் உண்மையும் உயிரும்'' ஆவார். அவரே உண்மையாக இருக்கின்ற காரணத்தினால்தான் அவர் தந்தைக்கு இட்டுச்செல்லும் வழியாக இருக்கிறார். அவர் தந்தையினுடைய வார்த்தையையும் வெளிப்பாட்டையும் பெற்றுத் தருகிறார் (17:8; 14:17). இவ்வாறு இறைவாழ்வையும் பகிர்ந்தளிக்கிறார் (1:4;3:16;6:40.47.63;17:2; 1 யோவா 5:11தொ). எனவே உண்மை என்ற கிறிஸ்துவின் சிறப்புப் பெயரானது. கிறிஸ்துவை இறைமக்னென வெளிப்படுத்துகின்றது. ஏனெனில், அவர் வார்த்தையாகவும் தந்தையின் ஒரே மகனாகவும் இருக்கின்ற காரணத்தால் அவர் உண்மையாக உள்ளார்.

ஆ) உண்மையின் ஆவி:- உலகத்திற்கான தமது வெளிப்பாடு முடிவடைந்த உடனே (யோவா 12:50) உண்மையின் ஆவியாகிய துணையாளரின் வருகையைப் பற்றி இயேசு தமது சீடர்களுக்கு அறிவிக்கிறார் (14:17;15: 26;16:13). யோவானைப் பொறுத்தமட்டில் ஆவியின் அடிப்படைப் பணியானது கிறிஸ்துவிற்குச் சான்று பகர்வதும் (15:26; 1 யோவா 5:6), உண்மையின் முழுமைக்குச் சீடர்களை நடத்திச் செல்வதும் (16:13) கிறிஸ்து கூறிய அனைத்தையும் அவர்களுடைய நினைவிற்கு கொண்டுவருவது, அதாவது, அதனுடைய உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளச் செய்வதுமாகும் (14:26). துணையாளரின் பங்கானது மனிதரை கிறிஸ்துவின் உண்மையை விசுவாசத்தில் உணரச் செய்வதாய் இருப்பதால், ஆவியே ''உண்மை'' என்றும் அழைக்கப்படுகிறார் (1 யோவா 5:6). அவரே திருச்சபையின் சான்று பகர்பவராக இருந்து அதன் மூலம் நமது விசுவாசத்திற்கு எழுச்சி அளிக்கிறார்.

இ) உண்மையும் புனிதமும்:- விசுவாசியின் வாழ்வில் உண்மை கொண்டிருக்க வேண்டிய பங்கினை யோவான் வற்புறுத்தலோடு வலியுறுத்துகின்றார். விசுவாசி ''உண்மையைச் சார்ந்து இருக்க வேண்டும்'' (யோவா 18:3; 1 யோவா 3:19) என்று யோவான் கூறும்போது ஒரே முறையாக விசுவாசத்தினால் புதிய வாழ்விற்குள் நுழைவது போதுமானது என்ற பொருளில் கூறவில்லை (யாக் 1:18; 1 போதுரு 1:22-23). மாறாக ஒருவன் ஆவியால் பிறந்து உண்மைக்கேற்ப நடக்க வேண்டும் (2 யோவா 4). இவ்வாறு இயேசுவின் வார்த்தையில் தங்குபவன் மட்டுமே உண்மையைப் பற்றிய சரியான அறிவையும், இவ்வுண்மையின் விளைவாகப் பாவத்திலிருந்து உள்ளார்ந்த விடுதலையையும்அடைவான்(யோவா8:31-32). ஏனெனில் கிறிஸ்துவின் வார்த்தையைப் போன்று (யோவா 15:3) விசுவாசமானது தூய்மைப்படுத்தும் காரணமாகும் (அ.ப.1 5:9). விசுவாசமானது தீயவையின் மீது வெற்றியைக் கொண்டு வருகின்றது (1 யோவா 2:14). விசுவசிப்பவனின் உள்ளத்தில் வார்த்தையின் வித்து ஆற்றலோடு நிலைத்திருக்கும்போது அவன் பாவம் செய்ய இயலாது (1 யோவா 3:9). அவன் உண்மையில் புனிதப் படுத்தப்பட்டுள்ளான் (யோவா 17:17.19).

இவ்வாறு உண்மையில் அருள் வாழ்வினுடைய உட்கோட்பாட்டினை யோவான்

காண்கிறார். ''உண்மைக்கேற்ப நடத்தல்'' (3:21; 1 யோவா 1:6), ''உண்மையில் நடத்தல்'' (2 யோவா 4:3 யோவா 3-4) என்னும் பழைய விவிலியச் சொற்றொடர்களை அவர் மீண்டும் பயன்படுத்துகிறார். ''கிறிஸ்வின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல்'' (2 யோவா 6), ''ஒருவரது செயல்கள் உண்மையாலும் விசுவாசத்தினாலும் வழி நடத்தப்படுமாறு அனைத்தையும் அனுமதித்தல்'' என்று இச்சொற்றொடர்கள் பொருள் கொள்ளுமாறு அமைத்து அவற்றிற்குக் கிறிஸ்துவப் பொருளின் முழுமையை அளிக்கிறார். ஒருவரது சகோதரர்களை ''உண்மையில்'' அன்பு செய்வதென்பது (2 யோவா 1:3; யோவா 1) நம்முள் நிலைத்துள்ள உண்மையின் ஆற்றலால் அவர்களை அன்பு செய்வதாகும் (2 யோவா 1 தொ; 1 யோவா 3:18). ''ஆவியிலும் உண்மையிலும்'' தொழுவதென்பது (யோவா 4:23-24) உள்ளிருந்து வெளிப்படுகின்ற, ஆனால் வெளி வழிபாட்டைப் புறம்பாக்காத வழிபாடாகும். ஆவியினாலும், இயேசுவின் உண்மையினாலும் தூண்டப்பட்ட இவ்வழிபாடானது அவர் புத்துயிரளித்துள்ளவர்களில் உண்மையின் ஆவி செயல்படுத்துவதாகும். இறுதியாக இது விசுவாசிக்கு அப்போஸ்தலிக்க உட்கருத்தையும் கொண்டுள்ளது. அவர் உண்மையோடு ஒத்துழைத்து (3 யோவா 8) நற்செய்தியினுடைய உள்ளார்ந்த பரவசமடையச்செய்யும் சக்தியினுடைய பணிக்குத் திருச்சபையுடன் சேர்ந்து தம்மை ஈடுபடுத்த வேண்டும்.

எனவே, உண்மையைப் பற்றிய கிறிஸ்தவப் பொருளானது, மனதின் வல்லமையால் நாம் வெல்ல வேண்டிய மெய்ம்மையின் எல்லையற்ற பரப்பல்ல. மாறாக உண்மை என்பது கிறிஸ்துவில் தோன்றி, ஆவியால் கற்பிக்கப்பட்டு, விசுவாசத்தினால் ஏற்கப்பட வேண்டிய தந்தையைப் பற்றிய வெளிப்பாடாகும். அப்போதுதான் உண்மையானது நமது வாழ்வினை உருமாற்றி ''நாங்கள் எங்களது பணிகளில் உண்மையின் ஒளியை வெளிப்படுத்துகிறோம்'' என்னும் திருச்சபையின் மன்றாட்டை நிறைவேற்றும்.

உதடுகள் (LIPS)

தலைமகளின் இதழ்கள் செம்பட்டு நூல் இழைகளாக அவள் முகத்தை அழகு செய்கின்றன (உ.ச.4:3); அவை அமிழ்தம் பொழிகின்றன (4:11); மேலும், உதடுகள் அசையும் காட்சியைக் கண்டு, உதடுகளே சொற்கள் (யோபு 16:5) என்று கூறுபவரும் உண்டு. பேச்சுக்குக் கைகொடுப்பது நாவு; உதடுகளும் வாயுமோ, உள்ளத்தின் உணர்ச்சியெல்லாம் வெளிப்படுத்த மௌனமாகக் காத்திருக்கின்றன.

1. உதடும் உள்ளமும்:- நல்லவை, தீயவை என்று பாராது உள்ளத்திற்குப் பணிபுரிய உதடுகள் காத்திருக்கின்றன (பழ 10:32; 15:7; 24:2). உள்ளத்தின் பண்புகளை அவை வெளிப்படுத்துகின்றன. நற்பண்புகள் நிறைந்த மன்னனின் அருளை (சங் 45:3) வெளிப்படுத்தும் அதே உதடுகள், வேசியின் கள்ளக் கவர்ச்சியையும் அறிவிக்கின்றன (பழ 5:3; 7:21). அவை பொய்யாலும் மிரட்டலாலும் அவதூறாலும் பாவிகளின் தீச்செயல்களுக்கு உதவுகின்றன (பழ 4:24; 12:22; சங் 120:2; சீரா 51:2). மலர்ந்த முகத்தில் மறைந்திருக்கும் மிகக்கீழ்மையான வஞ்சனைகளை உதடுகள் மறைக்க வல்லன; ''தீய உள்ளத்தோடு, வஞ்சகம் பேசும் உதடுகள் சேருவது, மட்பாண்டத்தில் முலாம் பூசுவதை ஒக்கும்'' (பழ 26:23). இத்தகைய வஞ்சகம் மனிதன் இறைவனோடு கொள்ளும் உறவைக்கூடப் பாதிக்கும்: ''இம்மக்கள் உதட்டளவில் நம்மைப் போற்றுகின்றனர்; அவர்கள் உள்ளமோ நம்மைவிட்டுத் தொலைவில் உள்ளது'' (மத் 15:8 இணை; ஏச 29:13).

தீயவனின் வஞ்சகத்துக்கு எதிராக, நீதிமானின் உதடுகள் உண்மையானவை; நேர்மையானவை (சங் 17:1; பழ 10:18-21; 23:15தொ). அவ்வாறு பொய்யினின்று அவைகளைப் பாதுகாக்க (சங் 34:14; 4 பேதுரு 3:10), இறைவனே புத்தி புகட்ட முன்வர வேண்டும் (பழ 22:17தொ); கீழ்ப்படிதல், பற்றுறுதி (சங் 17:14; யோபு 23:12) என்னும் மனப்பாங்குகள்மூலம் அவை இறைவனின் உதடுகளோடு இணையவேண்டும்: ''ஆண்டவரே

என் வாய்க்குக் காவல் வைத்தருளும்; என் உதடுகளாகிய வாயிலைக் காத்துக் கொள் ளும்'' (சங் 141:3; சீரா 22:27தொ).

2. ''என் உதடுகளைத் திறந்திடுவீர், ஆண் டவரே'' என்று வேண்டுகிறார் சங்கீத ஆசிரிர யர். தன்பேச்சில் எளிமை விளங்க வேண்டு மெனில் அதற்காக இறைவனை இறைஞ்சு தல் அவசியம் என்பதை அவர் உணர்ந்திருக் கிறார். ஆனால் இறைவன் முன்னிலையில் தன் பாவ நிலையை ஏற்றுக் கொள்வதைத் தவிர, வேறொன்றும் செய்ய இயலா நிலை யில் மனிதன் உள்ளான். ''ஐயோ நான் அழிந்தேன்; ஏனெனில் அசுத்த உதடுகள் கொண்டவன் நான்; அசுத்த உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்கின்ற எனக்கு, சேனைகளின் ஆண்டவராகிய அரச ரின் தரிசனம் கிடைத்தது'' (ஏச 6:5). இறை வனை மகிமைப்படுத்தி, ஆர்ப்பரித்து (காண் சங் 63:4.6), அவன் புகழைப்பாட வேண்டி யதை (ஓசே 14:3) உணர்ந்திருக்கும் மனிதன், அதே சமயத்தில் தான் பிறப்பிலிருந்தே பாவி யென்பதையும் அறிந்திருக்கிறான். இறைவ னுக்கு மறுமொழி கூறும்வண்ணம் (யோபு 11:5), அவன் தன் பாவம் நீங்க, அவன் உதடுகள் தீயால் தூய்மை பெறவேண்டும் (ஏச 6:6). இறைவனின் நாள் வரும்போது அவர் தம் மக்களுக்குப் புதிய உள்ளத்தை அருளி (எச 36:26), ''தூய்மையான உதடுக ளையும் கொடுப்பார்'' (செப் 3:9). இன்று இயேசுவில் இந்நம்பிக்கை நிறைவேறியுள் ளது: ''அவர் வழியாக நாம் எப்போதும் கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியை ஒப்புக் கொடுக்க முடியும்: அவருடைய பெயரை அறிக்கைசெய்வதால் நம் உதடுகள் செலுத் தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலி'' (எபி 13:15). இக்காரணத்தினால், தனது செபங்கள் கேட்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடன், ''ஆண்டவரே, என் உதடுக ளைத் திறந்துவிடும்; என்வாய் உமது புகழை எடுத்துரைக்கும்'' என்று ஒவ்வொரு மனித னும் செபிக்கலாம் (சங் 51:17).

உப ஆகமம் (Deuteronomy)

காண்க: துணைச்சட்டநூல்.

உப்பு (SALT)

1. உப்பும் வறட்சி நிலமும்:- பாலஸ்தீனத் தைச் சார்ந்தோர் சாக்கடலையொட்டி வாழ்ந்து வந்தனர். தெற்கே உப்புப் பள்ளத் தாக்குவரை (2 சாமு 8:13; 2 அரச 14:7) நீண்டு இருந்த இந்த ஏரி, பழைய குறிப்பேடுகளில் (ஆதி 14:3; யோசு 3:16; 12:3..) ''உப்புக்கடல்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த உப்பு நிலங்கள் மனிதர் வாழாத பாலைநில மாக இருந்தன (எரே 17:6; சங் 107:34; யோபு 39:6). இவைகள் தண்டனைகளுக்கு உட்ப டுத்தப்பட்ட இடமாகவும், உப்பு தண்டனை யைக் குறிக்கும் பொருளாகவும் இருந்தது போல் தெரிகிறது. லோத்தினுடைய மனைவி உப்பாக மாற்றப்பட்டுத் தண்டிக் கப்பட்டாள் (ஆதி 19:26); மேலும் வெற்றி கொண்ட ஊரின் மீது அதன் தோல்வியைக் குறிக்கும் விதமாக உப்பை அதன்மீது வீசிய தாகப் படிக்கிறோம் (நீதி 9:45). தீயோருக்கு எதிராக இதே போன்ற எச்சரிக்கை விடப்பட் டிருக்கிறது (செப் 2:9); ''இந்த இடங்களில் இனி வளர்ச்சி இருக்காது'' (உப 29:22). இருந்தாலும் ஒருநாள் நீர் இதை மேற்கொள் ளும். சதுப்பு நிலங்களும், உப்பளங்களும் உப்பாயிருக்கும்போது (எச 47:11) கோயி லின் வலப்புறமிருந்து ஓடும் ஆறானது உப் புக்கடலைச் சுத்தமாக்கிவிடும் (47:8). அப் போது இந்த இடங்கள் உயிரினங்கள் நிரம் பிச் செழிப்புற்றதாயிருக்கும் (47:8தொ).

2. வழிபாட்டு முறைகளும் தூய்மைப்ப டுத்தும் முறைகளும்:- பழங்காலப் பலி முறைகளில், பலிக்கான காணிக்கைகள் உப் பிடப்பட்டதாக இருக்கவேண்டியிருந்தன (லேவி 2:13; எச 43:24). இது இறைவனுக்கு அளிக்கப்படும் உணவு சுவையுள்ளதாக இருக்க வேண்டும் என்பதாலா? (லேவி 21:6.8.17.22) அல்லது என்றும் நிலைத்திருப் பது கடவுளின் உடன்படிக்கை என்பதைச் சுட்டிக்காட்டும் ''உடன்படிக்கையின் உப் பை'' உறுதிப்படுத்தவா? (2:13) என்பது தெளிவாக இல்லை. ஆயினும், தூபத்தைப் போன்று (யாத் 30:35), உப்பையும் தூய்மை யைக் குறிக்கும் பொருளில் பயன்படுத்திய தாகக் கொள்ளலாம். எலிசா 'கெட்டுப்போ

ன' நீரை உப்பினால் நல்லதாக்கியதாகக் (2 அர 2:19-22) கூறப்படுவதும் இதையே விளக்குகிறது. மேலும் புதிதாகப் பிறந்துள்ள குழந்தையின் மேனியில் உப்பைத் தடவும் பழக்கத்தில் (எச 16:4) சாதாரணமான உடல் நலனைக் குறிப்பதைவிட, பேயோட்டும் சடங்கின் ஒரு மாதிரியாக இருப்பதைக் காணலாம். இவ்வகையாகத் தூய்மை பெறும் விதத்தினைப்பற்றி இயேசுவும் கூறுகிறார்: ''ஒவ்வொருவனும் நெருப்பினால் உப்பிடப்படுவர்'' (மாற் 9:49), ஏனெனில் நெருப்பு, சுட்டெரித்துச் சுத்தமாக்குகிறது (1 கொரி 3:13).

3. சுவையூட்டலும் கெடாமல் பாதுகாத்தலும்:- மனிதனுக்கு மிகவும் தேவையான பொருட்களில் உப்பும் ஒன்றாகும் (சீரா 39:26); எனவே 'அரண்மனையின் உப்பைத் தின்பது' (எஸ் 4:14), அரசனிடமிருந்து ஒருவன் சம்பளத்தைப் பெறுவதைக் குறிக்கும். உப்பு உணவுக்குச் சுவையூட்டுகிறது (யோபு 6:6); உணவு கெடாமல் பாதுகாக்கிறது (பாரூ 6:27). இந்தத் தன்மைகளால் இது ஒரு உடன்படிக்கையின் தொடர்ந்த நிபந்தனையை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்துள்ளது. 'உப்பு உடன்படிக்கை' என்பது (எண் 18:19) இறைவனுக்கும் தாவீதுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை (2 நாள் 13:5) போன்ற நிரந்தர உடன்படிக்கை ஆகும்.

இயேசுவின் வார்த்தைகளில் தெளிவாக நாம் தெரிந்து கொள்ள இயலாத சிலவற்றில் உப்பைப் பற்றிய உவமையும் ஒன்று. ''உப்பு சாரம் இழந்தால் அதில் எப்படி சாரம் ஏற்படுத்த முடியும்?'' (லூக் 14:34; மாற் 9:50). இது ஒருவகையில் அந்த உடன்படிக்கையின் உப்பைக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம். இதன்படி ஆண்டவரோடு செய்த உடன்படிக்கை ஒருமுறை முறிவுபடும் போது, திரும்பவும் சரிப்படுத்த முடியாது என்று பொருள்படலாம். புனித மத்தேயு தரும் பொருளின்படி, விசுவசிப்பவர் 'உலகின் உப்பாயிருக்க வேண்டும்' (5:13); அதாவது இறைவனோடு அவர் கொண்டிருக்கும் உடன்படிக்கையில் ஊன்றி நின்று, உலகத்தில் மனிதனுக்குச் சாரமாக இருக்கவேண்டும். இல்லாவிடில் அவர் எதற்குமே பயனற்றவராகிறார். இத்தகைய சீடர்கள் வெளியேற்றப்படுவார்கள் (லூக் 14:35). ''உப்பு நல்லதொன்று; உப்பைக் கொண்டுள்ளவர்களாக ஒருவரோடொருவர் சமாதானத்தில் நிலைத்திருங்கள்'' என்று மாற்கு (9:50) கூறுகிறார். இதற்குப்புனித பவுல் ''உங்கள் பேச்சு இனியதாகவும் சாரமுள்ளதாகவும் இருக்கட்டும். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் எவ்வாறு பதில் அளிக்க வேண்டுமென அறிந்து கொள்வீர்கள்'' என்று விளக்கம் அளிக்கிறார் (கொலோ 4:6).

உப்புக்கடல்

சாக்கடலைக் குறிக்க ஐந்நூலிலும் யோசுவா நூலிலும் பயன்படுத்தப்படும் பெயராகும் (ஆதி 14:3; எண் 34:3.12; உப 3:17; யோசு 3:16; 12:3; 15:2.5; 18:19). இக்கடலின் நீர் அதிக உப்புத்தன்மை கொண்டிருப்பதால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

உப்புநகர்

இது, பாலை நிலப்பகுதியில், நிபிசானுக்கும் என்கேதிக்கும் இடையிலுள்ள, யூதாவைச் சேர்ந்த ஒரு நகரமாகும் (யோசு 15:62). இது தமிழ் மொழி பெயர்ப்பில் ஈர்மெலாக்கு என்று அழைக்கப்படுகிறது. இரண்டாம் இரும்புக் காலத்தைச் சேர்ந்த கட்டடங்களின் சுவடுகளிலிருந்து, இந்நகர் கிர்பேத்து கும்ரான் ஊராகும் என்பர் அறிஞர்கள்.

உப்புப் பள்ளத்தாக்கு (VALLEY OF SALT)

இது சாக்கடலுக்கு அருகிலுள்ள பள்ளத்தாக்கு, இஸ்ராயேலர்கள் ஏதோமியர்களை வென்ற இடம். தாவீதின் ஆட்சிக் காலத்தில் ஏதோமை முதல் தடவையாகக் கைப்பற்றினார் (2 சாமு 8:13). வேறொரு சமயத்தில் அபிசாய் உப்புப் பள்ளத்தாக்கில் வெற்றி கண்டார். யோசபாத்து இறந்தபின் ஏதோமியர் சுதந்தரம் பெற்றிருந்தனர் (1 நாள் 18:12). இரண்டு நூற்றாண்டுகள் கழித்து அமசியா ஏதோமியர்களை முறியடித்தார்; ஏதோம் பகுதிகளைக் கைப்பற்றினார் (2 அரச 14:7).

உப்புப் பள்ளத்தாக்கு எங்குள்ளது என்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. பேயேர் செபாவுக்குக் கிழக்கில் உள்ள வாடி எல் மில்கா என்ற இடத்தின் பெயர் ஒத்து இருப்பதால், பலர் இதோடு சேர்த்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இஸ்ராயேலர்கள் வம்புக்குச் சண்டை இழுப்பவர்களாக இருந்திருப்பதால், பெரும்பாலும் ஏதோமியர்களின்• எல்லையில்தான் இருக்கவேண்டும் என்பது தெரிகிறது. பெரும்பாலும் சாக்கடலுக்குத் தெற்கில் உள்ள எஸ் செப்கா என்ற இடமாக இருக்கலாம்.

உமியுடன் அரைக்கப்பட்ட மாவு (MEAL)

இது தானியத்தை உமியோடு அரைத்து தயாரிக்கப்பட்ட மாவாகும். உமி நீக்கி அரைக்கப்பட்ட மாவும் பயன்படுத்தப்பட்டது. பொதுவாக உமியோடு அரைக்கப்படும் மாவு கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்டது. ஆனால் விதிவிலக்காகப் பார்லியிலிருந்து தயாரிக்கப்பட்ட மாவும் பயன்படுத்தப்பட்டது (எண் 5:15). பழங்காலத்தில் இஸ்ராயேலர் பார்லியை அதிகம் பயன்படுத்தினார்கள். பிற்காலத்தில்தான் அவர்கள் கோதுமையைப் பயன்படுத்தினார்கள். உமி இல்லாமல் அரைக்கப்பட்ட மாவைவிட, உமியுடன் அரைக்கப்பட்ட மாவே அதிகம் பயன்படுத்தப்பட்டது (1 அர 4:22). இது படைவீரர்கள் முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டது (2 சாமு 17:28; 1 நாள் 12:40). சரேப்தா ஊர் விதவை வைத்திருந்தது இவ்வகை மாவு தான் (1 அர 17:12). இவ்வகை மாவு பலிக்குப் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் கிதயோன் வான தூதருக்கு அளித்ததும் (நீதி 6:19), அன்னா சீலோவில் ஒப்புக் கொடுத்ததும் (1 சாமு 1:24) இவ்வகை மாவே. விபச்சாரத்தில் சந்தேகத்துக்குரிய பெண் ஒப்புக் கொடுக்க வேண்டிய பலியில் (எண் 5:15) இவ்வகை மாவுதான் பயன்படுத்தப்பட்டது. இது விடியற்காலையில் பெண்களால் அரைக்கப்பட்டது (பழ 3:15; யாத் 11:5; ஏச 47:2; மத் 24:41; லூக் 17:35). ஆண்கள் மாவரைப்பது என்பது கேவலமாகக் கருதப்பட்டது. ஆனால் எருசலேம் அழிக்கப்பட்டதால் ''இளைஞர்கள் எந்திரக் கல்லை இழுத்து வருந்தினர்'' (புல 5:13; நீதி 16:21). ஒரு நாளைக்குத் தேவையான மாவு மட்டுமே அரைக்கப்பட்டது (தி 18:6; மத் 13:33; லூக் 13:21). இது அரைக்கப்படும் போது மிகவும் இரைச்சலாக இருக்கும். இவ்வாறு இரைச்சல் இல்லாதது நகரின் அழிவின் அடையாளமாகும் (எரே 25:10; திருவெளி 18:22).

உமிழ்தல், துப்புதல் (SPIT)

பொதுவாக விவிலியத்தில் பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி உமிழும் அல்லது துப்பும் செய்கையானது கடுமையான நிராகரிப்பையும், புறக்கணிப்பையும் குறிக்கும் அடையாளச் செய்கையாகும் (எண் 12:14; உப 25:9). உலக வழக்கில் மனித உமிழ்நீர் பலவகை மந்திரசக்திகள் பெற்றது என்கின்ற மூடநம்பிக்கை பரவலாகக் காணப்படினும், லேவி 15:8-ஐத் தவிர வேறெங்கும் மனித உமிழ்நீர் தீட்டுடைத்து என்று காண்பதில்லை.

யூதர்களின் வழக்கப்படி மனித உமிழ்நீர் நோய்களினின்று நிவாரணம் தரவல்ல சக்தியுள்ளமையால் மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. இறைமகன் கிறிஸ்துவும் யூத மரபுப்படியே செவிடனையும் (மாற் 7:33), குருடனையும் (மாற் 8:23; யோவா 9:6) குணமாக்குங்கால் உமிழ்நீரை உபயோகப்படுத்தியதைக் காண்கிறோம்.

உம்மா (UMMA - *குழு, சமூகம்*)

ஆசேர் கோத்திரத்துக்குக் கிடைத்த ஒரு நகரம் (யோசு 19:3). 'ஆக்கோ' என்ற நகரையே தவறாக 'உம்மா' என்று குறிப்பிடுவதாகச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆக்கோ என்ற கானானியர் நகரின் பெயர் யோசுவாவின் பெயர்ப் பட்டியலில் காணப்படாதது குறிப்பிடத்தக்கதாகும் (19:24-31; காண்க நீதி 1:31).

உயர்வாயில் (UPPER GATE)

யூதாவின் அரண்களைப் பலப்படுத்தும் இடத்தில் ஒரு பகுதியாக அரசன் யோத்தாம்

4

கட்டிய வாயிலாகும். ஆலய வாயில்களில் ஒன்றாகும் (2 அர 15:35; 2 நாள் 27:3). இது வடக்கு நோக்கியிருந்தது (எச 9:2). இதுவும், பென்யாமீன் உயர்வாயிலும் (எரே 20:26) ஒன்றாக இருக்கலாம். பின்னது, ஆலயத்தில் வடபகுதியில் பழைய, புதிய முற்றங்களுக் கிடையில் இருந்தது.

2. நாள் 23:20-இல் உயர்வாயில், காவலர் வாயிலைக் குறிக்கலாம்.

உயிரினங்கள், உயிருள்ள படைப்புக்கள் (CREATURES, LIVING)

படைப்புப்பற்றிய யாவே பாரம்பரியத் தில்தான், மண்ணிலிருந்து உருவாக்கிய மனி தனின் உடலில் யாவே உயிரின் மூச்சை ஊதவே அவன் உயிருள்ளவன் என்று கூறப் பட்டுள்ளது (ஆதி 2:17); இதே போன்று விலங்குகளும் 'உயிருள்ளவையாயின' என் பது தெரிகின்றது (ஆதி 2:19-20; சங் 104:29-30). மற்ற இடங்களில் உயிரினங்கள் என்ற சொல் விலங்குகளையும் நீர்வாழ் படைப்புக் களையும் குறிக்கின்றது (ஆதி 1:20-21; 1:24. 30; 9:19.12.15-16; லேவி 11:10.46; எச 47:9).

எசக்கியேல் இறைவாக்கினர் தனது முதற் காட்சியில் நான்கு உயிருள்ள படைப்புக்க ளைக் கண்டார் (எச 1:5.13-15.19-20.22). இவை நான்கும் மனித உடலையும், மனித, சிங்க, எருது, கழுகு முகங்களையும் கொண் டிருந்தன. இதே போன்று அவரது இரண்டா வது காட்சியிலும் கண்டார் (எச 3:13).

இந்த மறைபொருள் மிக்க காட்சியின் பொருளை விளக்குவது கடினம். ஏனெனில் இவ்வடையாளங்களின் பொருள் மறைந்து போயிருக்கலாம். ஆயினும் ராபிகள் இந்த வித்தியாசமான காட்சியைத் தம் முறைப்படி விளக்குகின்றனர்: இப்பூமியையும், அவற் றில் உள்ள காடுகளின் தலைவனான சிங்கத் தின் மேலும், வீட்டு விலங்குகளில் வலிமை மிகுந்த காளையின் மேலும், ஆகாயத்தை ஆளும் கழுகின் மேலும், உலகை ஆண்டு நடத்தப் படைக்கப்பட்ட மனிதன் மேலும் இறைவனுக்குள்ள அதிகாரத்தைக் காட்டுகி றது. மேலும் இறைவனே இப்பிரபஞ்சம் முழுவதையும் ஆள்பவர். ஏனெனில் அவரே அனைத்திற்கும் ஊற்று என்பதே இந்த விநோதமான காட்சி உள்ளடக்கும் உண்மை யாகும்.

உயிரே இறைவன் திருமுன் கட்டுப்பட் டுள்ளது. இந்நிலை எல்லாம் வல்லவருக்கு அருகிலுள்ள விலங்குகளால் அடையாள மாக எடுத்துக்கூறப்படுகிறது. திருவெளி 4:7-8-இல் உயிருள்ள படைப்புக்கள் குறிக் கப்படுகின்றன. ஆனால் காளைக்குப் பதி லாக இளங்காளையும், நான்கு இறக்கைக ளுக்குப் பதிலாக ஆறு இறக்கைகளும் குறிக் கப்படுகின்றன. உயிருள்ள இறைவன் உயிர் வாழும் படைப்புகள் சூழ இருப்பதாகவே காட்டுவது, அவர் எல்லா உயிர்களையும் ஆள்பவர் மட்டுமன்று, அவற்றின் ஊற்றும் அவரே என்பதைக் காட்டுவதற்காகவுமே.

உயிர், வாழ்வு (LIFE)

I பழைய ஏற்பாடு:-

பழைய ஏற்பாட்டில் உயிரானது ஒரு வாழ் வைக் கொடுக்கும் சக்தியாகக் கருதப்பட் டது. உலகத்துடனும் மக்களுடனும் உறவை ஏற்படுத்திக் கொள்ள ஒரு பாதையாக அமைந்தது. இவை இல்லாது இருப்பது வாழ்வு குறைவுபட்டு மரணத்தை அணுகுவ தற்கு ஒப்பானது ஆகும். அசீரிய அரசர் இஸ்ராயேல் மக்களுக்கு வாக்குக் கொடுத்த போது வாழ்வின் எல்லா நன்மைத்தனத்தை யும் நல்கினார். ''உங்களில் ஒவ்வொருவரும் தம் சொந்தத் திராட்சைக் கொடியின் பழத் தையும், சொந்த அத்தி மரத்தின் பழத்தையும் உண்டு, தம் சொந்தக் கிணற்றின் நீரைக் குடிப்பீர்கள்: நீங்கள் மடியாமல் வாழ்வீர்கள்'' (2 அர 18:31 தொ). நாட்டை அடைந்து அதில் வாழ்வார்கள் என்று இஸ்ராயேலர்க ளுக்கு வாக்களிக்கப்பட்டது (உப 4:1; 16:20). ஏனெனில், ஒருவனுடைய நாடே ''வாழ் வோரின் நாடு'', ''வாழ்வின் நாடாகும். அதை உரிமையாக்கிக் கொள்வதன் மூலம் வாழ்வை அனுபவித்தார்கள் (உப 12:1; 30: 13; ஏச 38:11; 53:8; எச 32:23; சங் 52:7; 142:6; யோபு 28:13). 'அரசே வாழி' என்ற வாழ்த்து ரையானது வெறும் வாழ்த்து மட்டுமன்று (1

சாமு 10:24; 1 அர 1:25; 36:34; 39:2; 2 அர 11:12). இஸ்ராயேல், அரசர்களுக்கு எல்லாம் நன்றாய் அமையவும், யாவே அவர்களுக்கு வாழ்வை அளிக்குமாறும் ஆசித்தது (உப 6:24), மனிதன் நீண்ட வாழ்நாளை விரும்புவது நன்மைத்தனத்திற்கே ஆகும் (சங் 34:13). ஆண்டவர் உயிரையும், நிலையான அன்பையும் யோபுவுக்கு அருளினார் (யோபு 10:24). வாழ்வையும், சமாதானத்தையும் இஸ்ராயேலின் குருக்களுக்கு ஆண்டவர் அருளினார் (மலா 2:5). மனஅமைதி உடலுக்கு நலம் (உயிர்) (பழ 14:30). இரசத்தாலும் (சங் 9:9) வாழ்வு மகிழ்ச்சியுறுகிறது. ஆண்டவருக்கு அஞ்சுகின்றவர்களுக்குச் சொத்து, மதிப்பு, வாழ்வு ஆகியன சன்மானமாகக் கிடைக்கும். ஆண்டவர் வாழ்வைக் கொடுக்கும்போது அவனுக்கு மகிழ்ச்சி அளிக்கிறார். அவனை எதிரியின் கையினின்று விடுவிப்பார் (சங் 41:3). வாழ்வே எல்லா நலன்களுக்கும் அடிப்படையாக அமைகின்றது. அது இல்லாமல், மற்றவற்றால் பயனில்லை. செத்த சிங்கத்தைவிட உயிரோடு இருக்கிற நாய்மேலானது (திருவுரை 9:4). நிலைத்து நிற்கிற எந்த ஒரு நலனையும் தராத காரணத்தால் ஒருவன் வாழ்வை வெறுக்கலாம் (சங் 2:17); பேரிடர் காலத்தில் சாவை விரும்பலாம் (எரே 8:3). எனவேதான் மகிழ்ச்சியில்லாத வாழ்வு காற்றைப் போன்றது (யோபு 7:7).

மேலே கூறப்பட்ட கருத்துகளிலிருந்து இஸ்ராயேல் இனமானது சிலர் கூறுவது போல, மனிதனை உடலெடுத்த ஆவியாகக் கருதவில்லை; உயிர் பெற்ற உடலாகக் கருதியது என்பது தெளிவு. மாறாக, தூண்டப்பட்ட உடலாகக் கருதியது. அது வாழ்வின் முழுமையாகும். உடல். அதன் செயல் கூறுகளின் ஆற்றலாகும்; இன்பம் அனுபவிக்கக்கூடிய சக்தியாகும். உயிரளிக்கும் தண்ணீர் ஓடுகின்ற தண்ணீராகும் (ஆதி 26:19; லேவி 15:13; எண் 19:17; எரே 2:13) இறப்பு முழுமையானதாகும். அதற்குப்பின் வரும் எந்த ஆற்றல் மிக்க செயலையும் இஸ்ராயேலர் அறியார். இறந்தவர்கள் வாழ்வதில்லை (எச 26:14). எனவே வாழ்கின்றவர்கள்தான் இறைவனைப் புகழ முடியும் (ஏச 38:19). பழைய ஏற்பாட்டிலே மறுவாழ்வு என்பது பின்னால் எழுந்த ஒரு கருத்தாகும். அதுவும் உயிரை மீண்டும் பெறுதலாகவும் உடலின் உயிர்ப்பாகவும் புரிந்து கொண்டனர். எனவே தான் 'வாழ்கின்றவர்' என்ற அடைமொழியானது முதன்முதலாக இறைவனுக்குக் கொடுக்கபபட்டது (யோசு 3:10; 1 சாமு 17:26.36; 2 அரச 19:4.16; சங்.42:3; 84:3; ஏச 37:4.17; எரே 10:10; \ஓசே 2:1). இதுதான் உண்மையான இறைவனாகிய ஆண்டவரை மற்றத் தெய்வங்களிடையேயிருந்து வேறுபடுத்தியது. எனவேதான் இறைவனை உயிர் அளிக்கும் தெய்வமாகச் சித்தரிக்கின்றார்கள். இதை வாழ்வளிக்கும் மரத்தின் கனியும் எடுத்துரைக்கின்றது (ஆதி 2:9; 3:22.24). ஆதி 2:7-இல் கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கி அவன் முகத்தில் உயிர் மூச்சை ஊதவே மனிதன் உயிருள்ளவன் ஆனான். மயக்கத்திலிருந்து எழுகின்றபோது மீளவும் உயிர் கிடைத்தாற் போலாயிற்று (ஆதி 45:27). உயிர் என்பது ஆத்துமா அன்று; மாறாக, அது மனிதனை வெளிப்படுத்தும் தன்மையாகும். எலியா விதவையின் மகனை உயிர்ப்பித்தபோது அவனிடம் மீளவும் உயிர் வந்தது (1 அரச 17:22). எனவேதான் நீதிமான் தன்பற்றுறுதியினால் உயிர் வாழ்வான் (அப 2:4). நாம் யாவே உயிரைப் பாதுகாக்கிறார் என்று கூறுவதை, விவிலியம் உயிர் அளிக்கிறார் என்று கூறுகிறது. உயிர் அவர் கையிலிருப்பதால், அது அவரிடமிருந்து வரும் தொடர்ச்சியான கொடையாகும் (யோபு 12:10). ஆண்டவர் தாமே உயிர் அளிப்பவரும், அழிக்கின்றவரும் ஆவார் (உப 32:39). அவர் வாழ்வின் வழியைக் காட்டுகிறார் (சங் 16:11). ஆசிரால் உயிர் வழங்கப்படுகிறது (சங் 133:3). வாழ்வோரின் நூலில் எழுதப்பட்டவர்களே உயிர்வாழ்வர். ஏனெனில் அவரே வாழ்வின் ஊற்று. ஆண்டவர் யாரைக் காப்பாற்றுகின்றாரோ அவர்கள் அவருடைய ஒளியின் பாதையிலே உயிர் வாழ்கின்றனர். ஏனெனில் ஒளியானது உயிர் மற்றும் நன்மையின் கூறாகும். இருளானது இறப்பு மற்றும் தீயவையின் கூறாகும். அரசர்கள் ஆண்டவரிடம் நீடிய வாழ்வைக் கேட்பவராக அல்லது வாழ்வு கொடுத்ததற்கு நன்றி தெரிவிப்பவரா

சுத் தோன்றுகிறார்கள். 1 சாமு, 25:29-இல் ''என் தலைவரின் உயிர், உம் கடவுளாகிய ஆண்டவரின் பாதுகாப்பில் வாழ்வோரின் கட்டுகளில் இருக்கும்''.

ஆண்டவர் தாமே உயிருக்கும் சாவிற்கும் ஆண்டவராய் இருப்பதால் ஒருவரின் செயலுக்கேற்ப வாழ்வை அளிப்பார். எனவே இஸ்ராயேலானது நன்மைக்கும் தீமைக்கும், வாழ்விற்கும் சாவிற்கும், ஆசீருக்கும் சாபத்திற்குமிடையில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவரை மட்டுமே அன்பு செய்து அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து இஸ்ராயேல் வாழ்வைத் தேர்ந்தெடுக்கிறது (உப 30:15-20). இந்தக் கருத்தானது உபஆகமத்தில் பொதுவாக வருவதாகும் (உப 4:1; 6:24; 16:20; 30:6). மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுள் வாயினின்று வரும் சொல்லினாலும் உயிர் வாழ்கிறான் (உப 8:3). எனவே வாழ்வானது உடல், மனவளர்ச்சி மட்டுமல்ல மாறாக இறைவனின் திட்டம் மனிதனில் நிறைவேறுவதாகும்.

இந்தக் கருத்துகள் இறைவாக்கினர் நூல்களிலும் வருகின்றன. வாழ்வென்பது யாவேயைத் தேடுதலாகும் (ஆமோ 5:4.6). ஆண்டவருக்குச் செவி சாய்ப்பதன் வாயிலாகவும் (எச 55:3), அல்லது' நல்லவற்றைத் தேடி, தீயதை விலக்குதலாலும் (ஆமோ 5:14) அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதின் வாயிலாகவும் (எச 20:11.13.21) வாழலாம். எச 18:இலும் 33:1-20இலும் வாழ்வென்பது தீயவற்றை விலக்கி நல்லவற்றைத் தேர்ந்தெடுப்பதில்தான் அமைகிறது என்ற கருத்து தெளிவாக்கப்படுகிறது. எனவே வாழ்வானது தீமையை விலக்குபவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்று எசக்கியேல் தீர்மானிக்கவில்லை. மாறாக வாழ்வின் முழுமையானது நம்முடைய நற்செயல்களாலேயே எண்பிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

ஞான நூல்களில் வாழ்வானது ஞானத்தினுடையவும் நேர்மையினுடையவும் விளைவாகும் என்ற கருத்து தெளிவாக்கப்படுகிறது (பழ' 3:2.18.22; 4:4.10.22; 6:23; 8:35; 9:6; 10:11.16 தொ; 11:30; 12:28; 13:14; 14:27; 19:23; 21:22). நேர்மையும் ஞானமும் வாழ்வு தரும் மரமாகும். இந்த ஞானமானது இறைவனுக்கு அஞ்சி வாழ்வதன் விளைவே ஆகும். எனவே ஞானத்தின் கனிகள் நல்ல உடல் நலம், வெற்றி நற்பேறு முதலியவையாகும். இந்த வாழ்வைத் தீயவர்களுக்கு ஆண்டவர் அளிக்கமாட்டார் (யோபு 36:6). எனவேதான் கிளர்ச்சி செய்யும் இஸ்ராயேல் மக்கள் செயோலுக்கு உயிரோடு செல்வர் என்ற கருத்து நிலவியது (எண் 16:30). அங்கே அவர்கள் அழிவார்கள். எனவே வாழ்வின் முழுமையான நிறைவினை அவர்களால் அடைய முடிவதில்லை.

பழைய ஏற்பாட்டுநூல்கள் எத்தகைய மாற்றமுமின்றி முந்தையக் கருத்துக்களையே பிரதிபலித்தன. ஞான நூல்மட்டும், சாவுக்குப் பின் வரும் வாழ்வுபற்றித் தனிப்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்தது. வாழ்வு ஞானத்தின் கனியாகும் (சீரா 4:12). வாழ்வோர் மட்டுமே, இறைவனைப் போற்றுவர் (17:27 தொ). பிச்சையிடுதல் சாவிலிருந்து ஒருவனைக் காப்பாற்றுகிறது (தோபி 12:9). கடவுளே ஆக்குபவரும், அழிப்பவரும். கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வாயிலாகவும் (பாரூ 3:9) ஞானத்தின் வாயிலாகவும் (3:4) வாழ்வைக் காணமுடியும். மனித வாழ்வு பெற்றோரின் கொடையன்று, படைத்தவரின் கொடையாகும் (2 மக் 7:22 தொ).

II புதிய ஏற்பாடு:-

1. ஒத்தமை நற்செய்திகளில் பழைய ஏற்பாட்டுக் கருத்துகள் பிரதிபலிக்கின்றன. உப 8:3-ஆனது மாற் 4:4; லூக்.4:4-இல் கையாளப்பட்டுள்ளது. கட்டளைகளைக் கடைப்பிடிப்பதால் வாழ்வு பெறப்படுகிறது (மத் 19:16; மாற் 10:17.19; லூக் 10:28; 18:18-20). கிறிஸ்துவுக்காக யாவற்றையும் துறக்கும்போது வாழ்வு பெறப்படுகிறது (மத் 19:29; மாற் 10:30; லூக் 18:30). சொத்தினால் வாழ்வைப் பெற முடியாது (லூக் 12:15). கடவுள் வாழ்

வோரின் கடவுள், இறந்தோரின் கடவுள் அல்ல, என்ற கருத்தைக் கிறிஸ்து சதுசேயர்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றார் (மத் 22:32; மாற் 12:27). ஒத்தமை நற்செய்திகளில் நிறைவாழ்வானது இறப்பிற்குப் பின்பே பெறப்படுகிறது என்ற கருத்து இதில் தெளிவாக்கப்படுகிறது. இதில் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டைக் கடந்து செல்கிறது. புதிய ஏற்பாட்டில் பிற புத்தகங்களும் இதைத் தெளிவுபடுத்துகின்றன. பாவத்திலிருந்து திரும்புவது சாவிலிருந்து வாழ்வுக்குத் திரும்புவதைப் போன்றதாகும் (லூக் 15:24). வாழ்விற்குச் செல்லும் வழியானது குறுகலானது. அங்குச் சிலரே அதில் நுழைகின்றனர் (மத் 7:14).

அப்போஸ்தலப் பணி நூலும் பழைய ஏற்பாட்டை எதிரொலிக்கிறது (பழ 16:11; அ.ப. 2:20; 7:30). நற்செய்தியின் வார்த்தைகள் இந்த வாழ்வின் வார்த்தைகளாகும் (அ.ப.5:20). இயேசு ''வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவர்'' ஆவார் (3:15). முடிவில்லா வாழ்வானது இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கே நிறைவாக அளிக்கப்படுகிறது (அ.ப.13:48). ஆண்டவர் தாமே வாழ்வின் தலைவராய் இருக்கின்றார். எனவே நிறைவாழ்வானது அன்பினாலும், கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாலும் மட்டுமே பெற முடியும்.

2. பவுல்:- வாழ்வு பற்றிய பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களைப் பவுல் கையாளுகின்றார். கடவுளுடைய கட்டளைகள் வாழ்வு தருபவை ஆகும். முடிவில்லா வாழ்வானது நற்செயல் செய்வதில் உறுதி தளராமல் இருப்பவர்களுக்கே உரியது (உரோ 2:7). அது இறைவனின் கொடையாகும் (6:23). அது புனிதத்தின் விளைவாகும் (6:22). மேய்ப்புப்பணித் திருமுகங்களில் இந்தக் கருத்துகள் மிகுதியாக உள்ளன. வாழ்வு விசுவாசத்தினால் வருகிறது (1 தீமோ 1:16). நம்பிக்கையினால் உறுதிப்படுத்தப்படுகிறது (தீத் 1:2; 3:7). கிறிஸ்தவன் அதைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் (1 தீமோ 6:12). அதுவே உண்மையான வாழ்வு (6:19).

முடிவில்லா வாழ்வு பவுலின் கருத்துகளில் வரவிருக்கும் வாழ்வு மட்டுமே அன்று; மாறாக ஞானஸ்நானத்தினால் பெறும் நிறைவாழ்வாகும் (உரோ 6:4). கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்ப்போடும் கொண்ட இணைப்பால் தொடங்கப்பட்ட புது வாழ்வாகும். அது ஊனியல்பைப் பொறுத்தவரை இறந்த வாழ்வு ஆகும் (8:12). ஆனால் பாவத்திற்கு உயிர்த்து வாழ்தலாகும் (6:13), புனிதத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட வாழ்வு (5:18. 21); கிறிஸ்தவனில் செயலாற்றுகிறது (2 கொரி 4:11). கிறிஸ்தவன் இயேசுவின் இறப்பால் ஒப்புரவாகிறான். அவரது வாழ்வால் மீட்கப்படுகிறான் (8:11). ஆகவே பவுலின் நூல்களில், வாழ்வு இறுதிக்கால இயல்பொருளில் மட்டும் கருதப்படவில்லை.

புதிய வாழ்வானது ஆவிக்குரிய வாழ்வு ஆகும். கிறிஸ்துவினாலே அருளப்பட்ட ஆவியாகும். எனவே ஊனியல்பின் செயல்களை ஆவியால் அழிக்கும்போது கிறிஸ்தவன் உண்மையிலே வாழ்வான் (உரோ 8:13). கிறிஸ்து இயேசுவுக்குள் உயிர் தரும் ஆவியானவரின் சட்டத்தில் வாழ்வதாகும் (8:2). ஆவியின் இயல்பு, வாழ்வும் அமைதியும் ஆகும் (8:6). ஆவியானவர் ஏற்புடைமையின் வாயிலாக வாழ்வாவார் (8:10). எழுதிய சட்டம் விளைவிப்பது சாவு, ஆவியானவர் அளிப்பதோ வாழ்வு (2 கொரி 3:6). ஏனெனில் ஆவியானவரில்தான் நாம் புது வாழ்வைப் பெறமுடியும். அவரே அந்த வாழ்வை அளிக்கும் சக்தியாகும். இந்தப் புது வாழ்வானது நாம் இறைவனில் கிறிஸ்து வழியாக ஏற்படுத்திக் கொள்ளும் உறவைப் பொறுத்ததாகும். எனவே வாழ்வது கிறிஸ்துவிலே நாம் கொண்டுள்ள விசுவாசத்தினால் வாழும் வாழ்வாகும் (கலா 2:20). எனவே கிறிஸ்தவன் கடவுளுக்காகக் கிறிஸ்துவிலே வாழ்கின்றான் (உரோ 6:11; 1 கொரி 15:22; எபே 4:18; 2 திமோ 1:1; தீத் 2:12); கிறிஸ்துவுக்கென்றே வாழ்கிறான் (உரோ 14:8). அவனது வாழ்வு கிறிஸ்துவில் இறைவனுக்குள் மறைந்துள்ளது (கொலோ 3:3). அவனுக்குள் வாழ்வது கிறிஸ்துவே (பிலி 1:21). கிறிஸ்துவே அவனது வாழ்வு (கொலோ 3:4).

அவனது உடலில் இயேசுவின் வாழ்வு வெளிப்படுகிறது (2 கொரி 4:10 தொ). கிறிஸ்துவின் வாழ்வு என்ற கருத்து திருச்சபையில் ஒவ்வொரு நபரிலும் தொடர்கிறது; விரிவடைகிறது. இது பவுலுக்கு உரிய தொன்றாகும்.

இந்தப் புதிய வாழ்வானது ஞானஸ்நானம் என்னும் திருவருட்சாதனத்தால் நம் எல்லோருக்கும் நிறைவாக அளிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் இறப்பிலும், உயிர்ப்பிலும் பங்கு பெறுதலாகும். ஊனியல்பில் நாம் வாழும்போதுகூட பாவத்திற்கு விடுதலை பெற்றவர்களாய் வாழ முடியும். சாவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாய் வாழமுடியும்.

3. யோவான்:- மனிதருக்கு வாழ்வு அளிக்கக்கூடிய ஒளி கிறிஸ்துவிலே இருந்தது (யோவா 1:4). படைப்பிலும், மீட்பிலும் கிறிஸ்துவே வாழ்வு கொடுக்கும் ஒளியாக இருக்கிறார். கிறிஸ்துவே வழியும், ஒளியும், உயிருமாவார். அவர் வழியாகத்தான் நாம் தந்தையை அறியவும், அவரிடம் வந்தடையவும் முடியும் (14:6). கிறிஸ்துவே உயிர் கொடுக்கின்ற, அப்போஸ்தலர்கள் கண்ட, சான்று பகர்கின்ற வார்த்தை (1 யோவா 1:1-2). இந்த வாழ்வு பாவமன்னிப்பாகும் (5:16). இது உயிருள்ள தண்ணீர் (யோவா 4:19; 7:38). முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் கிறிஸ்துவிடம்தான் உள்ளன. (6:68). அவரில் விசுவாசம் கொள்வதாலும் (3:15.36; 20:31), கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாலும் (12:50) வாழ்வை அடைய முடியும். முடிவில்லா வாழ்வைப் பிறரன்புப் பணியால் வைத்துக் கொள்ளக்கூடும் (1 யோவா 3:14). முடிவில்லா வாழ்வு அடையத் தன் உயிரை இழந்துவிட ஆயத்தமாக இருக்க வேண்டும் (யோவா 12:25).

கிறிஸ்துவை வாழ்வு கொடுப்பவராக யோவான் வெளிப்படுத்துகின்றார். கிறிஸ்துவிலே விசுவாசம் கொண்டவர் முடிவில்லா வாழ்வைப் பெற்றவராகவும், சாவுக்கும், இச்சைகளுக்கும் இறந்தவராகவும் வாழ வேண்டும் (யோவா 5:24). கிறிஸ்துவிலே தான் நமக்கு வாழ்வு அளிக்கப்படுகின்றது. கிறிஸ்துவே வாழ்வளிக்கும் அப்பமாகும். கிறிஸ்துவின் தசையைத் தின்று இரத்தத்தைக் குடிப்பவர் வாழ்வைப் பெறுவர். இதன் வழியாகக் கிறிஸ்துவிலே நாம் ஒன்றித்து வாழ முடியும். சாவு முடிவன்று. உயிர்த்தெழுதலின்போதுதான் நாம் முடிவில்லா வாழ்வைப்பெற முடியும். கிறிஸ்துவே உயிர்ப்பும், உயிரும். அவரில் விசுவாசம் கொள்பவர்கள் இறப்பினும் வாழ்வார்கள் (11:25 தொ). கிறிஸ்து அளிக்கும் மீட்பு வாழ்வின் ஒளியாகும் (8:12). ஏனெனில் அவர் ஒருவரே ஆடுகள் உயிர் பெறும் பொருட்டும், அதை மிகுதியாகப் பெறும் பொருட்டுமே வந்தவர் (10:10). அவை என்றும் அழியா; ''எவனும் அவற்றை என் கையிலிருந்து கவர்ந்து கொள்வதில்லை'' (10:28). முடிவில்லா வாழ்வை, அதைக் கொண்டுள்ள கிறிஸ்துவை அனுப்பியதன் வாயிலாக, இறைவன் அளித்தார். அவரிலே பங்கு பெறுபவர் அனைவரும் அந்த வாழ்வைப் பெறுபவர் (1 யோவா 5:11 தொ) முடிவில்லா வாழ்வானது கிறிஸ்துவையும், அவரை அனுப்பியவரையும் அறிதலே ஆகும் (யோவா 17:3).

III இறையியல் தொகுப்பு:-

என்றும் வாழும் இறைவன் முடிவில்லா வானக வாழ்விற்கு நம்மை அழைக்கின்றார். வாழ்வின் அனைத்து நிலைகளைப்பற்றிய மதிப்பையும் இறைவனைப்பற்றிய கலப்பில்லாத, தூய கணிப்பையும் வேதாகமத்தில் தொடக்கமுதல் முடிவுவரை காணலாம். இறைவன் நிறைமனதோடு தரும் உன்னதக் கொடையாக வாழ்வைக் கருதும் மனிதன் நம்பிக்கையுடனும் தளரா முயற்சியுடனும் அதனைப் பின்தொடர்கிறான் என்பதை இதிலிருந்து அறியலாம். அக்கொடையில் இறைவனின் மறையுண்மையும் வள்ளன்மையும் வெளிப்படுகின்றன.

1. உயிருள்ள இறைவன்:-

''உயிருள்ள இறைவனை'' உதவிக்கு அழைப்பதோ (யோசு 3:10; சங் 42:3...),

தன்னை ''உயிருள்ள இறைவனின் ஊழியன்'' என்று அறிமுகப்படுத்திக் கொள்வதோ (தானி 6:21; 1 அர 18:10.15), ''உயிருள்ள இறைவன் மீது'' ஆணையிடுவதோ (நீதி 8:19; 1 சாமு 19:6...) இஸ்ராயேலின் இறைவன் வல்லமையுள்ள, செயலாற்றும் இறைவன் என்று வெறுமனே அறிவிப்பதன்று. ''உயிருள்ள இறைவன்'' அல்லது ''வாழும் கடவுள்'' என்பது இறைவன் விரும்பும் பல பெயர்களுள் ஒன்று (எண் 14:21; எரே 22:24; எச 5:11..). இறைவனை இவ்வாறு அழைப்பது ''சோர்ந்து போகாத, களைப்படையாத'' (ஏச 40:28) அவருடைய அன்புணர்ச்சியின் நிறைவையும் மனவெழுச்சியின் மிகுதியையும் வல்லமையையும் உயிர்த்துடிப்பையும் நினைவிற்குக் கொண்டு வருகிறது.

''உயிருள்ள இறைவன்'' என்னும் இத்தலைப்பு, ''முடிவில்லா மாமன்னர் இறைவன், அவரின் கோபத்தை எவரும் தாங்கவியலாது'' (எரே 10:10). ''அவரே மீட்பர், விடுதலை வழங்குபவர், என்றென்றும் நிலைத்திருப்பவர், மண்ணிலும் விந்தைகள் புரிபவர்'' (தானி 6:27) என்னும் அவரது குணவியல்புகளை நினைவுறுத்துகின்றது. வாழ்வுக்கு, வாழும் உயிர்களுக்கு, வேதாகமம் தரும் உயர்ந்த மதிப்புக்கு ''உயிருள்ள இறைவன்'' என்னும் இத்தலைப்பே ஒரு தகுந்த சான்று.

2. வாழ்வின் மதிப்பீடு:-

அ) வாழ்வு விலைமதிக்கமுடியாத ஒன்று:-

பாருலகைப் பரமன் படைக்கையில், படைப்பின் இறுதிக்கட்டத்தில்தான் அனைத்திற்கும் மகுடம் சூட்டினாற்போல் உயிரை உண்டாக்குகிறார். ஐந்தாம் நாளில், ''கடலின் பெருநாகங்களும், திரள் திரளாக நீரில் நீந்தி வாழும் உயிரினங்களும், இறக்கையுடைய எல்லாவிதப் பறவைகளும்'' (ஆதி 1:21) உண்டாக்கப்படுகின்றன. அதன் பின்னரே உலகில் வாழும் பிற உயிரினங்களைப் பூமி பிறப்பிக்கின்றது (1:24). இறுதியாக வாழும் உயிர்களிலேயே நிறைவையும் முழுமையையும் தாங்கிய மனிதனை இறைவன் தம் சாயலில் உண்டாக்குகிறார். மனித உயிரின் வளர்ச்சியையும் வாழ்வின் மலர்ச்சியையும் உறுதிசெய்யத் தமது ஆசீரையும் அருளையும் இறைவன் வழங்குகிறார் (1:22. 28). ஆகவே, உலகில் இடையறாது போரிடும் துன்பகாலமாக வாழ்நாள் தோன்றினாலும் (யோபு 7:1) மனிதன் தன் வாழ்வைக் காத்துக்கொள்ளத் தன் உடைமை முழுவதையும் இழக்கவும் ஆயத்தமாக இருக்கிறான் (யோபு 2:4). இவ்வுலகில் அனுபவிக்கும் துன்ப வேதனைகளின் காரணமாக வாழ்வை விட மரணமே அதிகம் விரும்பத்தக்கதாய்த் தோன்றுவது மனிதனின் உன்னத வாழ்வின் சீரழிந்த நிலையால்தான் (யோபு 7:15; யோனா 4:3). நிகழ்கால இவ்வாழ்வை நீண்ட நாள் அனுபவித்து (திருவுரை 7:17; 11:8..) ''வாழ்வோருடைய நாட்டில்'' வாழ்ந்து (சங் 27:19), ஆபிரகாமைப்போல் ''முதியவயதடைந்து நிறைந்த மகிழ்ச்சிமிக்க வாழ்நாட்களைக் கடந்து மடிவதே'' (ஆதி 25:8; யோபு 42:17) வாழ்வின் நோக்கமாகத் தோன்றுகிறது. தமக்கு மகிழ்ச்சிதரும் ஊற்றுகளாகவும் தம் வாழ்வை இவ்வுலகில் தொடர்ந்து நீடிக்கச் செய்யும் நிலைக்களன்களாகவும் (சங் 127:128) திகழும் மக்களைப் பெற்றுச் சந்ததியை விருத்தி செய்வதைப் பெற்றோர் பெரிதும் விழைகின்றனர் (ஆதி 15:1-6; 2 அர 4:12-17). எனவே, முதிய வயதினரும் அவர்தம் பிள்ளைகளும் அடங்கிய பெருங்கூட்டத்தைப் பொதுவிடங்களில் காண்பது இன்பம் தருகின்றது (செப் 8:4).

ஆ) வாழ்வு நிலையற்றது:-

மனிதனும் வாழும் பிற உயிர்களும் வாழ்வில் கொண்டிருக்கும் பிடிப்பு மிக மென்மையானதே. மரணம் அவர்களின் உயிர்த்தன்மையின் ஓர் இயல்பு நிகழ்ச்சியே. தமது இயல்புக்குக் கட்டுப்படாததும் தம்மால் தவிர்க்க முடியாததுமான மூச்சுக் காற்றைச் சார்ந்துள்ளன அவர்தம் உயிர்கள். உயிர்கள் சாவதே அவற்றின் இயல்பு. ''கொல்லவும் உயிர்ப்பிக்கவும் வல்லமை பொருந்திய இறைவனை'' (உப 32:39) உயிர்கள் தொடர்ந்து சார்ந்திருக்கின்றன (சங் 10428). அவை சுவாசிக்கும் மூச்சுக் காற்று இறைவன் தரும் கொடையே (ஏச 42:5). வாழ்வு குறுகி

யது (யோபு 14:1; சங் 37:36); மறையும் புகையைப் போன்றது (ஞான 2:2); நிழலைப் போன்றது (சங் 144:4); வெறுமையானது (சங் 38:6). தொடக்க காலத்தில் இருந்ததைவிட வாழ்நாட்கள் இன்னும் குறைந்து வருகின்றன (ஆதி 47:8). நூற்றிருபது, எண்பது, எழுபது ஆண்டுகள் என்று வாழும் வயது குறைந்து வருவது உண்மை (ஆதி 6:3; சீரா 18:9; சங் 90:10).

இ) வாழ்வு புனிதமானது:-

வாழும் உயிர்களனைத்தும் இறைவனிடமிருந்தே வருகின்றன என்பது உண்மையெனினும் மனிதனின் சுவாசிக்குந்திறம் இறைவனிடமிருந்து தனிப்பட்ட முறையில் வருகின்றது. ஏனெனில் ''மனிதனின் நாசிகளில் இறைவன் உயிர் மூச்சை ஊதினார்'' (ஆதி 2:7; ஞான 15:11). அந்த மூச்சுக்காற்றையே மரணத்தின்போது எடுத்துக்கொள்கின்றார் (யோபு 34:14; திருவுரை 12:7). எனவேதான், கொலை செய்வதைத் தடுப்பதன்மூலம் உயிர்களுக்குத் தம்முடைய தனிப்பட்ட பாதுகாப்பைத் தருகின்றார் (ஆதி 9:5; யாத் 20:13). காயின் போன்ற குற்றவாளிகள் கொல்லப்படுவதையும் கடவுள் விரும்பவில்லை (ஆதி 4:11-15). விலங்குகளின் ஊனை உண்ண மனிதனுக்குத் தடையில்லையெனினும் விலங்குகளின் உயிர்களும் ஒரு விதத்தில் புனிதமானதுதான். அதனால்தான் விலங்குகளின் குருதியைத் தசையினின்று பிரித்துவிட வேண்டும் என்கிறார் இறைவர். ஏனெனில், ''உடலின் உயிர் இரத்தத்தில் உள்ளது'' (லேவி 17:11). வாழும் உயிர்களுக்கு அடிப்படை இரத்தமே (ஆதி 9:4). மேலும், இரத்தப் பலியின் வழியாகத்தான் மனிதன் இறைவனுடன் உறவு செய்து கொள்கிறான்.

3. வாழ்வைப்பற்றிய உறுதிமொழிகள்:-

அ) வாழ்வின் தடைகள்:-

''எவனுடைய சாவிலும் இறைவன் மகிழ்வதில்லை'' (எச 18:32). ஏனெனில் ''சாவுக்காகவன்று, வாழ்வுக்காகவே'' இறைவன் மனிதனைப் படைத்தார் (ஞான 1:13; 2:23). மேலும் மனிதன் ஆண்டு அனுபவிக்கப் பூமியில் ஓர் இன்ப வனத்தை இறைவன் தந்தருளினார். அதிலிருந்த 'வாழ்வளிக்கும் மரத்தின் கனி' என்றென்றும் அவனை வாழ்வித்திருக்கும் (ஆதி 3:22). ஆனால், தன்னுடையவிருப்பு, வெறுப்பிற்கேற்ப வாழ்வைத் தானே தேட மனிதன் முயன்றதால் வாழ்வளிக்கும் மரத்தின் கனியை உண்ணத் தடைவிதித்தார். இதனால், மனிதனுக்கு வாழ்வளிக்கவே மறுத்துவிட்டார் என்பது பொருளன்று. தம்முடைய திருமகனின் மரணத்தால் மனிதர்களுக்கு வாழ்வளிக்குமுன்னமே ''வாழ்வின் வழிகளைத்'' தம் மக்களுக்கு அறிவுறுத்துகின்றார் (பழ 2:19; சங் 16:11; உப 30:15; எரே 21:8).

ஆ) வாழ்வின் நெறிமுறைகள்:-

இறைவனின் நீதிமுறைகளைப் பின்பற்றி, அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு வாழ்வதே வாழ்வின் நெறிமுறையாம். இதன்படி வாழ்வோர் இவைகளால் 'வாழ்வு' பெறுவர் (லேவி 18:5; உப 4:1; யாத் 15:26. ''அவர்களின் வாழ்நாட்கள் நிறைவுபடுத்தப்பெறும்'' (யாத் 23:26). இறைவனின் நீதிநெறிகளுக்குப் பணிந்து வாழ்வோருக்கு ''வாழ்நாளின் நீடிப்பும் நல்வாழ்வும் கண்களின் ஒளியும் சமாதானமும்'' கிடைக்கும் (பாரூ 3:14). ஏனெனில் இந்நெறிகள் நீதியின் வழிகள். ''நீதி வாழ்வுக்கு அழைத்துச் செல்லும்'' (பழ 11:19); ''நீதிமான் தன் விசுவாசத்தினால் வாழ்வான்'' (அப 2:4) ''விசுவாசியாதவனின் பெயரோ வாழ்வோரின் நூலிலிருந்து அகற்றப்படும்'' (சங் 69:29). இறைவன் உறுதியளித்த இன்பவாழ்வு இவ்வுலகிலேயே கிட்டும் எனவும், அவர்களுக்கு இறைவன் அளித்த நாட்டிலேதான் அது அடங்கியிருக்கிறது எனவும் வெகுகாலம் இஸ்ராலேயர்கள் நம்பியிருந்தனர். இறைவனுக்கு உண்மையிலேயே ஊழியம் செய்யும் இஸ்ராயேலர்க்கு இறைவன் நல்கும் நல்வாழ்வும் வாழ்நாளின் நீடிப்பும் எந்நாட்டினர்க்கும் எந்நாளும் கிடைக்காத இன்பப் பெரும்பேறாகும் (உப 28:1).

இ) உயிர்தரும் ஊற்று இறைவன்:-

இறைவன் உறுதியளித்த உன்னத வாழ்வை இவ்வுலகிலேயே வாழ்ந்தாலும்

மண்ணகப் பொருட்களால் அது மேன்மையு றுவதில்லை. மாறாக, ''உயிருள்ள நீர்சுரக் கும் ஊற்றும்'' (எரே 2:13; 17:13), ''உயிர்த ரும் ஊற்றும்'' (சங் 36:10; பழ 4:27) ஆனவ ரான இறைவனோடு இணைந்திருப்பதில் தான் அது மாண்புறுகிறது. ''வாழ்க்கையை விட அவருடைய அன்பு (அருள்) எவ்வ ளவோ மேலானது'' (சங் 63:4). அதனால் தான் இஸ்ராயேலரில் உயர்ந்த எண்ணம் கொண்டோர், 'எங்கே ஒருநாள் வாழ்வது வேறிடத்தில் ஆயிரம்நாள் வாழ்வதிலும் மேலானதோ' (சங் 84:11), அங்கே, இறைவ னின் அந்த ஆலயத்தில், இறைவனைப் போற்றித் தம் வாழ்நாட்கள் முழுவதும் செலவிட விழைகின்றனர். இறைவாக்கினர் களுக்கு வாழ்வு என்பது இறைவனைத் தேடு வதுதான் (ஆமோ 5:4; ஓசே 6:1).

ஈ) சாவுக்குப்பின் வாழ்வு:-

இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்த இஸ்ராயேல் மக்களினம் இன்ப வாழ்வுக்குப் பதில் சாவையே இம்மண்ணில் மிகுதியும் சந்திக்கின்றனர். எனினும் அதே சாவின் வழியாக இறைவர் நல்வாழ்வுக்கு அவர் களை இடையறாது அழைப்பதை உணர்கின் றனர். இருளின் பிடியில் சிக்கி உழலும் பாவி ''சாவதையன்று, தீய வழியை விட்டு மனந் திரும்பி வாழ்வதையே'' இறைவன் விரும்பு வதாக இறைவாக்கினர் எசக்கியேல் உரைக் கின்றார் (எச 33:11). 'உயிரற்ற சடலங்களின் தொகுப்பே இந்த இஸ்ராயேல் இனம்' என் பதை எசக்கியேல் நன்கு அறிவார். ஆயினும் அவர்களது உலர்ந்த எலும்புகளில், உயிர் தரும் ஆவியை இறைவன் ஊதினால் அவர் கள் மீண்டும் உயிர்பெறுவர் என்று அறிவிக் கின்றார் (எச 37:11-14). இறைமக்கள் அடி மைகளாக நாடுகடத்தப்பட்ட காலமுதல், ''ஆண்டவரின் ஊழியன் வாழ்வோர் உலகி னின்று எடுக்கப்பட்டார். தம் இனத்தாரின் அக்கிரமங்களுக்காக வதைக்கப்பட்டார்'' (ஏச 53:8), ''தம்மையே பாவத்திற்காகப் பலியாக்கினால் பெரியதொரு சந்ததியைக் கண்டு நீடுவாழ்வார்'' (53:10) என்று யாவே யின் ஊழியனை இரண்டாம் ஏசய விவரிக் கின்றார். 'பாவம்-சாவு' என்பவை அமைத்த அரணில் பழுது தோன்றிவிட்டது. ஒருவன் தனது பாவங்களின் நிமித்தம் இறந்தாலும் வாழ்வின் மேலான இன்னொரு பகுதியை இன்னும் எதிர்நோக்கலாம். தனது பாவங்க ளுக்காகவன்றியும் ஒருவர் இறக்கலாம். அச் சாவின் மூலம் வாழ்வையும் அடையலாம். கடவுளை நம்பி அவர் ஆணைக்குக் கட்டுண் டிருப்பவருக்கு மரணம் நேரிடும் என்ற இறைவாக்கினரின் கூற்றை மக்கபேயர் நூலில் வரும் அந்தியோக்கசின் கொடுமை கள் மெய்ப்பிக்கின்றன. அத்தகைய மரணம் இறைவனிடமிருந்து மனிதனைப் பிரிப்ப தில்லை. மாறாக, உயிர்ப்பின் மூலம் வாழ் வுக்கு அவனை இட்டுச் செல்லும் வழியே அது. அத்தகையவர்களுக்கு ''இறைவன் திரும்பவும் ஆவியையும் உயிரையும் கொடுப்பார். முடிவில்லா வாழ்வே அவர் கள் தாகந்தீர்க்கும் பானம்'' (2 மக் 7:23.36). ''இறந்து மண்ணில் உறங்கும் அவர்கள் இறுதிநாளில் உயிர்த்தெழுவர்-வானத்தில் தோன்றும் ஒளிபோன்றும் விண்மீன்களின் சுடர்போன்றும் ஒளிர்வர். அவர்களைத் துன் புறுத்தியவர்களோ முடிவில்லாத் துன்ப இரு ளில் ஆழ்ந்து போவார்கள்'' (தானி 12:2). நீதிமான்களின் வாழ்வு இத்தகைய மாற் றத்தை அடையும் என்ற நல்ல நம்பிக்கையை ஞான நூல் வெகுவாய் விரித்துரைக்கின்றது. ''பாவிகள் பிறந்தவுடனேயே இறந்துபடுவர்'' (ஞான 5:13). அவர்கள் வாழ்ந்தாலும் செத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ''நீதிமான்களின் ஆன்மாக்களோ கடவுளின் கையில் உள்ளன'' (3:11) அவர்கள் இறந்த தும் ''முடிவில்லா வாழ்வையும் மகிமை யின் மணிமுடியையும்'' பெற்றுக் கொள்வர் (5:15 தொ).

4. இயேசு கிறிஸ்து: அவரே வாழ்வு:-

இறைவன் அளித்த வாக்குறுதிகள் இறை மகன் வருகையினால் நிறைவு பெறுகின்றன.

அ) இயேசு தரும் வாழ்வின் போதனை:-

வாழ்வு விலைமதிக்கமுடியாத ஒன்று என் பதே இயேசுவின் எண்ணம். ''உண்ணும் உணவினும் மேன்மை வாய்ந்தது உயிர்''

(மத் 6:25). ''ஓய்வு நாளை அனுசரிப்பதினும் முக்கியமானது ஓர் உயிரைக் காப்பது'' (மாற் 3:4 இணை), ஏனெனில் ''அவர் வாழ்வோரின் கடவுளேயன்றி இறந்தோரின் 'கடவுள் அல்லர்'' (12:27 இணை). சாவின் நிழலைக் கூடக் காணவிரும்பாதவர்போல் விளங்கிய இயேசு அச்சாவினையும் ஒரு நோய் போன்றே எண்ணி முடிந்தபோதெல்லாம் அப்பிணியையும் குணமாக்கி உயிர் அருள்கின்றார். ''இயேசு அங்கேயே இருந்திருந்தால் லாசர் இறந்திருக்கமாட்டான்'' (யோவா 11:15.21). உயிரளிக்கும் இவ்வல்லமை பாவத்தின்மேல் இயேசு கொண்ட ஆற்றலையும், இறப்பும், முடிவுமில்லாப் புதுவாழ்வை அளிக்கும் சக்தியையும் சுட்டிக் காட்டுகின்றது (மத் 9:6; 19:29 இணை). 'வாழ்வு' என்று கூறப்பட வேண்டிய உண்மை வாழ்வு இதுவே (7:14; 18:8). இவ்வாழ்வுக்கு இட்டுச்செல்லும் வழி குறுகியது. இதனை அடைய செல்வத்தைத் துறக்க வேண்டும்; தேவையானால் உடலையும் இவ்வுலக வாழ்வையுமே பலியிட வேண்டும் (மத் 16: 25 தொ).

ஆ) கிறிஸ்துவில் வாழ்வு:-

ஆதிமுதல் 'வார்த்தையாய்' விளங்கும் கிறிஸ்துவுக்குள் நித்தியமும் உயிர் இருந்தது (யோவா 1:4). மனுவுருக்கொண்ட அவர் ''உயிரின் வார்த்தையானவர்'' (1 யோவா 1:1). அனைத்து உயிர்கள் மேலும் அதிகாரம் கொண்ட தலைவர் அவரே (யோவா 5:26). தமது தந்தை தம்மிடம் ஒப்படைத்த அனைவருக்கும் முடிவில்லா வாழ்வை (17:2) வழங்குகிறார்; அதுவும் மிகுதியாகத் தருகின்றார் (10:10). ''வழியும் உண்மையும் உயிரும் அவரே'' (14:6) ''உயிர்ப்பும் உயிரும்'' (11: 25), ''உயிரின் ஒளியும் அவரே'' (8:12). இயேசு தரும் உயிருள்ள நீர், அதைப் பருகுகிறவன் முடிவில்லா வாழ்வடைய அவனுள் பொங்கியெழும் ஊற்றாகும் (4:14). ''வாழ்வளிக்கும் வானக அப்பம்'' கிறிஸ்துவே. தந்தையால் அவர் வாழ்வது போல், அவரின் திருவுடலை உண்பவர் அவரால் வாழ்வர் (6:27-58). கிறிஸ்துவில் வாழ்வு நிலைக்க விசுவாசம் தேவை. ஏனெனில் ''உயிர்வாழ்க்கையில் அவரில் விசுவாசம் கொள்ளும் எவனும் ஒருபோதும் சாகான்'' (11:25). ''விசுவாசம் கொள்ளாதவனோ வாழ்வைக் காணமாட்டான்'' (3:36). ''தந்தையின் கட்டளை முடிவில்லா வாழ்வாகும்'' (12:47-50) என்றுணர்ந்து அவரின் ஆணைகளைக் கிறிஸ்து பின்பற்றுவதுபோல், கிறிஸ்துவில் விசுவாசத்தோடு வாழ்பவனும் அவரின் வார்த்தைகளை ஏற்று கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இ) உயிரின் தலைவர் கிறிஸ்து:-

மற்றவர்கள் எதைச் செய்ய வேண்டுமென்று கிறிஸ்து விரும்புகின்றாரோ, அதை அவர் முதலிலே செய்கிறார். தன் தந்தையின் மேல்வைத்த அன்பின் காரணமாகவும் மக்களின்மேல் கொண்டுள்ள அன்பின் காரணமாகவும், ஆயன் தன் ஆடுகளுக்காய்த் தன்னுயிரை அளிப்பதுபோல் தாமே மனமுவந்து தம்முயிரை கையளிக்கின்றார் (யோவா 10:11.15.17 தொ; 1 யோவா 3:16). இயேசு தம்முயிரைக் கொடுக்கின்றார்; ''மீண்டும் அதனைப் பெற்றுக் கொள்ள'' (யோவா 10:17 தொ), அதன் வழியாக, தம்மேல் விசுவாசம் கொள்பவர்க்கு வாழ்வை வழங்கும், ''உயிர்தரும் ஆவியாகப் பின் அவர் ஆகின்றார் (1 கொரி 15:45). மரித்து உயிர்த்த கிறிஸ்து ''வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவர்'' (அ.ப. 3:15). தயக்கம் ஏதுமின்றி இப்புதுவாழ்வைப் பற்றி எல்லா மக்களுக்கும் போதிப்பதே திருச்சபையின் தலையாய பணியாகும் (5:20). முதல் கிறிஸ்தவர்களின் வாழ்வின் தொடர் நிகழ்ச்சிகள் இதைத்தான் உணர்த்துகின்றன.

ஈ) கிறிஸ்துவில் வாழ்வது:-

சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து செல்லும் நிகழ்ச்சி கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் தொடர்கிறது (யோவா 5:24). ''கிறிஸ்துவின் மரணத்திற்குள் திருமுழுக்குப் பெற்று'' (உரோ 6:3) சாவிலிருந்து உயிர்த்த விசுவாசி கிறிஸ்துவுக்குள் கடவுளுக்காக வாழ்கிறான் (6:10). தன் அனுபவத்தின் வழியே தந்தையையும் தந்தை அனுப்பிய மைந்தனையும்

அவன் அறிகின்றான். இதுதான் நித்திய வாழ்வு என்றும் உணர்கிறான் (யோவா 17:3; 10:14). விசுவாசியின் ''உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது'' (கொலே 3:3); வாழும் இறைவனின் கோயில் அவன் தான் (2 கொரி 6:16) என்பதையும் அவன் உணர்கிறான். இவ்வாறு இறைவனின் தெய் வீக இயல்பிலும் இதுவரை அவர் அறியாதி ருந்த் புதுவாழ்விலும் (எபே 4:18; 2 பேதுரு 1:4) அவன் பங்கு பெறுகின்றான். கிறிஸ்து விடமிருந்து பெற்ற திரு ஆவி அவனுள் குடி கொண்டிருப்பதால் அவ்வாவியானவர் அவ னுடைய உள்ளுயிராய்த் திகழ்கின்றார் (உரோ 8:10). உடலின் விருப்பு, வெறுப்பு கள் இனிமேல் அவனைக் கட்டுப்படுத்தா. முடிவில்லா வாழ்வை அனுபவிக்க, யாதொரு அழிவுமின்றி அவன் சாவைக் கடந்து வாழ்வுக்குச் செல்வான் (8:11). இனி மேல் அவன் வாழ்வது, அவனுக்காகவன்று, ''அவனுக்காய் மரித்து உயிர்த்த கிறிஸ்துவுக் காகத்தான்'' (2 கொரி 5:15). அவனுக்கு இனி ''வாழ்வதென்பது கிறிஸ்துவே'' (பிலி 1:21).

உ) சாவை அழித்த வாழ்வு:-

கிறிஸ்தவன் இயேசுவின் வாழ்வு தன் உடலில் வெளிப்படும்படி கிறிஸ்துவின் பாடுகளைத் தாங்கி இவ்வுலகிலேயே அவரு டைய மரணத்தில் பங்குபெறுகிற அளவுக்கு கிறிஸ்துவின் வாழ்வைத் தன் உடலில்கூட வெளிப்படுத்துவான் (2 கொரி 4:10). சாவுக் குரியது வாழ்வில் ஆழ்ந்து கலந்துவிட வேண்டும் (2 கொரி 5:4). அழிவுக்குரியது அழியாமையை (சாகாமையை) அணிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவனுக்கும் இந்த மாற்றம் மரணத்திற்குப் பின்னர்தான் நிகழும். வாழ்வைத் தடுப்பதற்குப் பதில் அதனை என்றென்றும் இறைவனில் நிலைத் திருக்கச் செய்து வாழ்வுக்கு வெற்றியருள் வது மரணமே (15:54). திருவெளிப்பாட்டு நூல் இறந்த மறை சாட்சிகள் ஏற்கெனவே இறைவனோடு விண்ணகத்தில் இருப்பதை விவரிக்கிறது (திருவெளி 6:9). கிறிஸ்து வோடு ஐக்கியமாகிவிட மரணத்தை விழை கிறார் புனித பவுல் (பிலி 1:23). இயேசு வோடு வாழும் வாழ்வு அவரின் உயிர்ப்பி னால் விளைந்த பயனே (1 தெச 5:10). விசுவாசிகட்கு இறந்தவுடனே அவ்வாழ்வு கிட்டக்கூடும். அவ்வாழ்வை ஏற்ற ஒவ்வொ ருவரும் கடவுளைப்போல் இருப்பர், அவர் இருப்பதைப்போல் அவரைப் பார்ப்பர் (1 யோவா 3:2), முகமுகமாய்க் காண்பர் (1 கொரி 13:12). விண்ணக வாழ்வின் நிலைக்க ளனே இக்காட்சி தான்.

மண்ணினின்று இறுதிநாளில் எழும் உட லும் மகிமைபெற்று முடிவில்லா வாழ்வில் பங்குபெறுகையில்தான் வரவிருக்கும் விண் ணக வாழ்வு நிறைவுறுகின்றது. பின்னர், ''நம்முடைய உயிராகிய கிறிஸ்து'' (கொலோ 3:4), ''மனிதரிடையே உள்ள கட வுளின் இல்லமாம்'' விண்ணக எருசலேமில் (திருவெளி 21:3) தோன்றுவார். அங்கே வாழ்வு நீர் நிறைந்து ஆறு ஓடும், வாழ்வின் மரம் செழித்து வளரும் (22:1.14.19). அப் பொழுது சாவு என்பதே இருக்காது (21:4). அது ''நெருப்புக்கடலுள் வீசி எறியப்படும்'' (20:14). ''அனைத்திலும் அனைத்துமான இறைவனுக்கு'' எல்லாமும் ஆட்பட்டிருக் கும் (1 கொரி 15:28). அது ஒரு புதிய இன்பவனமாய் இருக்கும். அங்கே புனிதர் கள் இறைவனின் வாழ்வையே கிறிஸ்துவுக் குள் என்றென்றும் சுவைத்து மகிழ்வார்கள்.

உயிர்த்த இயேசு அளித்த காட்சிகள் (APPARITIONS OF CHRIST)

1. விவிலியத்தில் கண்டுள்ள காட்சிகள்

இறைவன் தன்னை வெளிப்படுத்தக் கையாண்ட பற்பல வழிகளில் காட்சிகளும் ஒன்று என்பதை மறைநூலில் காணலாம். சாதாரணமாகக் கண்களுக்குப் புலப்படாத (ஆவியுலக) ஆட்கள், காட்சிகள்மூலம் மக்க ளுக்குத் தம்மை வெளிப்படுத்துவதுபோல, பழைய ஏற்பாட்டில் இறைவன் நேரடியாகக் காட்சியளித்துத் தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகின்றார்; அல்லது, மறைமுக மாகத் தமது தூதுவர்கள் வழியாகத் தமது பிரசன்னத்தை உணர்த்துகின்றார். பழை . ஏற்பாட்டில் தேவதூதர்கள் தோன்றும் பி . காட்சிகளும், ஏனைக் கனவுக் காட்சிகளு. ஓரளவு இவ்வகையைச் சேர்ந்தவையேயா

கும். இயேசுவின் பிறப்பின்போதும் (மத் 1-2; லூக் 1:11,26; 2:9), உயிர்ப்பின்போதும் (மத் 28:2 தொ; மாற் 16:5; லூக் 24:4; யோவா 20:12), ஆண்டவரின் தூதன் அல்லது தேவதூதர்கள் காட்சியளிப்பதாகப் புதிய ஏற்பாடு குறிப்பிடுகின்றது. இதன்மூலம், கிறிஸ்துவினுடைய வாழ்க்கையின் உச்சக்கட்டங்களில் விண்ணகமே மண்ணகத்தில் இருந்தது என்பது உணர்த்தப்பட்டு காட்சிகள் பற்றி பழைய ஏற்பாடு கொண்டிருந்த கருத்தையும் போக்கையும் புதிய ஏற்பாடு இந்த அளவுக்குத்தான் ஏற்றுக் கொள்கிறது.

ஆனால் இறைவனின் மகிமை வெளிப்படும் இறைத் தோற்றங்களை எடுத்துக்கூறுவதைத் தவிர்ப்பதின் மூலம், புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டிலிருந்து முன்னேற்றமும் வளர்ச்சியும் காட்டுகிறது. ஏனெனில் இயேசு உருமாறிய காட்சி (மத் 17:1-9 இணை), அவர் கடல்மீது நடந்துவந்த காட்சி (14:22-27 இணை) ஆகியவற்றில் மறை உண்மை பொதிந்த இயேசுவின் விண்ணக இயல்புகள் தெளிவாக வெளிப்பட்டாலும், இவற்றை ''இறைத்தோற்றம்'' என்ற பெயரினால் அழைக்க இயலாது. உண்மையில், ''யாருமே கடவுளைக் கண்டதில்லை, தந்தையின் அணைப்பில் உள்ள ஒரே பேறானவர்தாம் அவரை வெளிப்படுத்தினார்'' (யோவா 1:18) என்று யோவான் கூறுவதில் புதிய ஏற்பாட்டில் நிகழ்ந்துள்ள பெரிய அடிப்படை மாற்றத்தைக் காணலாம். ஆனால் எப்படி இயேசு தம் தந்தையை வெளிப்படுத்துகிறார்? அவர் இருத்தலே வெளிப்பாடாகிறது. ''என்னைக் கண்டவன் தந்தையையேகண்டான்'' (14:9; காண் 12:45). அதாவது இறைவனே கிறிஸ்துவில் காட்சியளித்துள்ளார். ''நம் மீட்பராகிய இறைவன் நம்மீது கொண்ட பரிவும் நேசமும் வெளியானபோது'' (தீத் 3:4), மகத்தான ஒரு பெரும் மறை உண்மை இவ்விதம் வெளியாயிற்று(1 திமோ 3:16). இப்பொழுது நாம் காத்திருப்பதோ ''அவருடைய மகிமை தோன்றும்''(2: 13) இறுதி நாட்களை எதிர்பார்த்துத்தான். இவ்விறுதிக் காட்சி மின்னலைப்போல் தோன்றும் (லூக் 17:24). இக்காட்சியில் ஸ்தேவான் கண்டதுபோல இயேசு ''இறைவனின் வலப்பக்கம் நின்று'' (அ.ப.7:55) சாட்சியம் அளிப்பவராகத் தோன்றாது, ''வல்லமையுள்ள இறைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்து''(மத் 26:64 இணை) நடுத்தீர்ப்பாளராகக் காட்சியளிப்பார். கிறிஸ்துவாக வெளிப்பட்ட அவர், அந்நாளில் நம்மையும் ''அவரோடு மகிமையில் விளங்கச் செய்வார்'' (கொலோ 3:4). ''அவ்விறுதி வருகையில், தம் மீட்பை எதிர்நோக்கியிருப்பவர்களுக்கு'' (எபி 9:28), ''தம் மகிமையின் வாடாத வெற்றிவாகையைச் சூட்டுவார்'' (1 பேதுரு 5:4). ''அவர்வெளிப்படும்போது அவரைப் போலவே நாமும் இருப்போம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்'' (1 யோவா 3:2).

உயிர்த்த இயேசு அளித்த காட்சிகள், பழைய ஏற்பாடு கூறும் இறைத் தோற்றங்களுக்கும் உலக முடிவில் ஏற்படவிருக்கும் இறுதிவருகையின் காட்சிக்கும் இடைப்பட்டனவாக உள்ளன. ஏனெனில் அவை நசரேனாகிய இயேசுவின் முந்திய இறைநிலையைச் சிறிதளவு காட்டுவதோடு, அவருடைய மறுவருகையையும் முன்னுணர்த்துகின்றன.

2. கிறிஸ்து அளித்த வெவ்வேறு காட்சிகள்:-

இவற்றின் எண்ணிக்கையைக் குறித்து கி.பி. 55-ஆம் ஆண்டில் பவுல் தரும் அட்டவணை மிகப் பழமையானதாகும். இதற்கு முன் மரபுவழிச் செய்தியாக வந்த தகவலின் அடிப்படையில் எழுந்திருந்தது அவர் எண்ணிக்கை. இதையே ஏறக்குறைய கி.பி. 50-இல் கொரிந்து நகர மக்களுக்கும் அவர் அளிக்கின்றார் (1 கொரி 15:3 தொ). இப்பழைய விசுவாச அறிக்கையின்படி, கிறிஸ்து முதலில் கேபாவுக்கும் பின்னர் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சகோதரர்க்கும் தோன்றினார். பின்னர் யாக்கோபுக்கும், அடுத்து அப்போஸ்தலர் அனைவருக்கும் தோன்றினார். இறுதியாகப் பவுலுக்கும் தோன்றினார். ஆனால் நற்செய்திகள், சீமோனுக்கும் (லூக்

24:34), அதற்குப்பின் பதினொருவருக்கும் (மத் 28:16-20; மாற் 16:14-18; யோவா 2019-29) அவர்களோடு கூடியிருந்த பிறருக்கும் (லூக் 24:33-50 அளிக்கப்பட்ட இரு காட்சிகளைக் குறிப்பிடுகின்றன. ஆனால் அதே சமயத்தில் கிறிஸ்து தனி நபர்களுக்குத் தோன்றினதை நற்செய்திகள் குறிப்பிடுகின்றன: மரியாளுக்கும் பெண்களுக்கும் (யோவா 20:11-18; மத் 28:8-10; மாற் 6:9-11), எம்மாவுககுச் சென்று கொண்டிருந்த சீடர்களுக்கும் (லூக் 24:13-35; மாற் 16:12 தொ), பிறகு திபேரியாக் கடற்கரையில் எழுவருக்கும் தோன்றினார் (யோவா 21:1-23). கிறிஸ்து அளித்த அனைத்துக் காட்சிகளையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்: அப்போஸ்தலர் குழுவுக்கெனத் தனியாக அளிக்கப்பட்ட காட்சிகள்; பொதுவாகச் சீடர்களுக்கு அளிக்கப்பட்ட காட்சிகள். முதல் வகை திருச்சபையின் பொதுப்பணியைச் சார்ந்தவை; திருச்சபையின் அடித்தளமாகவுள்ள திருக்கட்டளைகளுக்கு இவை முதன்மை தருகின்றன. இரண்டாம் வகை தனிப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்பட்டவை. காட்சியளிப்பவர் யாரென இனங்கண்டு கொள்வதற்கு இவை முதன்மை தருகின்றன.

3. வெளிப்பாடுமன்று, வரலாறுமன்று:-

கிறிஸ்து அளித்த காட்சிகளை நற்செய்தியாளர்கள் வெளிப்பாட்டுக் காட்சிகளாக நமக்கு அளிப்பதில்லை; ஏனெனில், இக்காட்சிகளில் (வெளிப்பாட்டு இலக்கியத்தில் இருப்பதுபோல) காட்சியாளரின் மகிமை வலியுறுத்தப்படவில்லை; மறைபொருட்கள் வெளியாக்கப்படவில்லை; காட்சியமைப்புக்களில் வழக்கத்துக்கு மாறாக எந்த விதமான ஆடம்பரமும் இருப்பதில்லை; மாறாக இயேசு என்றும்போல, வழக்கமான முறையில் அவர்களோடு உலவுகிறார்; நற்செய்திப்பணிக்குத் திருக்கட்டளை தருகிறார். நடந்தவைகளை விவரிக்க நற்செய்தியாளர் பின்பற்றும் இத்தகைய புதிய முறை, அவர்கள் பெற்றது முற்றிலும் புதியதொரு அனுபவம் என்பதற்குச் சான்று பகர்கின்றது. மேலும் சாதாரணமாக விண்ணுலகுத்துக்குரியவைகளை விவரிப்பதில் ஆர்வம் காட்டும் வெளிப்பாட்டுச் சொல்முறையை இப்புதிய அனுபவம் மாற்றியமைக்கிறது.

மேலும், உயிர்த்த இயேசு அளித்த காட்சிகளைக் காலமுறைப்படி நெறிப்படுத்துவது நற்செய்தியாளரின் குறிக்கோள் அன்று. எனவே, இடம், காலம் என்பன ஒத்திருக்குமாறு, நற்செய்தியாளர் காட்சிகளை வரிசைப்படுத்த இயலாது. உயிர்த்த நாளன்று எருச்லேமில் அளித்த காட்சியையும் (லூக், யோவா), எட்டாம் நாளன்று அளித்த காட்சியையும் (யோவா), பிறகு கலிலேயாவிலும் (மத், யோவா.) பின்னர் மறுபடியும் விண்ணேற்றம் அடைந்த சமயத்தில் எருசலேமில் அளித்த காட்சிகளையம் (லூக்) ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படுத்திக்காட்டுவது, ஏற்றுக்கொள்ள இயலாத அளவுக்குச் செயற்கையாகத் தோன்றுகிறது. ஏனெனில் இம்முயற்சி சில முக்கியமான இலக்கிய மரபுகளை மறந்துவிடுகிறது. லூக் 24:49-இன்படி ஐம்பதாம் நாள் வரை எருசலேமில் சீடர்கள் தங்கியிருக்க வேண்டும் என்பதால் கலிலேயக் காட்சிகள் நிகழ்வதற்கு வாய்ப்பே இல்லாது போகின்றது. ஆனால் மத்தேயும் மாற்கும், இயேசு அவர்களைச் சந்திக்கக் கலிலேயாதான் குறிக்கப்பட்ட இடமாகும் என்று கூறுகின்றனர். எருசலேம், கலிலேயா- இவ்விரு இடங்களுக்கும் இடையேயுள்ள நிலவியல் வேறுபாட்டை நீக்குதல் என்பது இயலாத காரியம். மேலும் காட்சி கொடுக்கப்பட்ட தேதிகளை ஒட்டியும் இதேவிதமான முரண்பாடுகள் எழுகின்றன; விண்ணேற்பு உயிர்த்த நாளன்றே நிகழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றது லூக் 24; யோவா 20:2-ம் உயிர்த்த நாளன்றே இறைஆவி கொடுக்கப்பட்டதாகவும் (யோவ 21), பிறகு திபேரியாக்கடற்கரையில் இயேசு தோன்றியதாகவும் குறிப்பிடுகின்றது. இவற்றிற்கெல்லாம் மாறாக, அ.ப. 1:3 விண்ணேற்பு ``பல நாட்களுக்குப் பின் நடந்ததாகக் கூறுகின்றது. எருசலேமிலேயே ஒரு நாள் பொழுதுக்குள் உயிர்த்த காட்சி அனைத்தும் நிகழ்வதாக லூக்கா அமைக்கின்றார். யோவானோ, ஒரு வார காலவரைக்குள் இயேசு தோன்றுவ

தாக அமைக்கின்றார். எனவே இவர்கள் உயிர்த்த இயேசுவின் காட்சிகளை வரிசைப் படுத்திய முறை, அவரவரின் இலக்கியப் பாணிக்கேற்ப அமைத்துக் கொண்ட செய் கைமுறையாகும் என்பது தெளிவாகின்றது.

மேலும் உயிர்த்த காட்சிகளில் ஒரு புகைப் படத்துக்குரிய நுணுக்கங்களை எதிர்பார்ப் பது முறையன்று; எனவே காட்சியில் வரும் சில அம்சங்களை (கதவுகள் மூடியிருந்தன; உடலைத் தொடுதல்) அக்காட்சியின் முழு மையின் கண்ணோட்டத்தில் பார்க்க வேண் டுமே தவிர, அவைகளைத் தனியே எடுத்து பெரிதுபடுத்தக் கூடாது. உயிர்த்த இயேசு வின் ஒரு குறிப்பிட்ட இயல்பினை வெளிப் படுத்தவே இவை பயன்படுகின்றன.

4. இயேசுவே முன்வந்து காட்சிதருதல்; காட்சி பெறுபவர் கண்டுகொளல்; நற்செய் திப் பணிக்கு அனுப்பப்படல்:-

உயிர்த்த காட்சிகள் ஒவ்வொன்றிலும் இம் மூன்று அம்சங்களையும் காணலாம். நற் செய்தியாளரின் உள்நோக்கங்களை அறிந்து கொள்ள இவை மிகவும் உதவுகின்றன. (அ) மக்கள் சிறிதும் எதிர்பாராத வேளையில் இயேசு காட்சியளிப்பதாகவே (லூக் 24:34- ஐத்தவிர) நற்செய்தியாளர்கள் நமக்கு அறி விக்கின்றனர். இதன்மூலம், உயிர்த்த காட்சி கள், மக்கள் தங்களின் சொந்த நலனுக்காகப், புனைந்துரைத்த கட்டுக்கதைகளுமல்ல; தங் கள் விசுவாசத்தின் ஆரம்பகால ஆர்வத்தின் படைப்புமன்று, தங்கள் கட்டுக்கடங்காத கற்பனா சக்தியின் விளைவுமன்று என்பதை நற்செய்தியாளர்கள் எடுத்துக்காட்டுகின்ற னர். 1 கொரி 15 ''அவர்கள் தம்மைக் கண்டுகொள்ளும்படி கையளித்தார்'' என்று கூறுகிறது. இயேசு தாமாகவே முன்வந்து காட்சியளிக்கின்றார் என்ற கருத்து, இக்காட் சிகள் உண்மையிலேயே அவர்களுடைய ஆழமான சொந்த அனுபவம் என்பதை எடுத் துக் காட்டுகின்றது. ''இயேசுவை உயிர்த்தெ ழச் செய்து, அவர் தம்மைப் பிறருக்குக் காட்டுமாறு இறைவன் சித்தங்கொண்டார். இச்சந்திப்பின் விளைவே விசுவாசம்'' என்ற முதற் கிறிஸ்தவர்களின் போதனையோடு இக்கருத்து, ஒத்துப்போகிறது.

ஆ) காட்சிபெறுபவர் இயேசுவை அடை யாளம் கண்டுகொள்வது:-

இக்காட்சிகளின் இரண்டாம் அம்சமா கும். ''நசரேனாகிய இயேசு இவர்; இவரு டைய வாழ்வும் இறப்பும் நமக்குத்தெரிந்த தே'' என்று சீடர்கள் தங்களைச் சந்திக்கும் இயேசுவை அடையாளம் கண்டு கொள்கின் றனர். ''இறந்தவர் உயிருடன் உள்ளார்; இறை வாக்குகள் யாவும் அவரில் நிறைவே றியுள்ளன'' என்பதையும் உணர்கின்றனர். ஒருவகையில் வருங்காலத்தில் அவர்கள் பார்ப்பதற்குப் புதிதாக வேறொன்று மில்லை; ஏனெனில் அனைத்தையும் உயிர்த்த இயேசுவில் தாங்கள் கண்டுவிட் டதை அவர்கள் உணர்கின்றனர். அப்போஸ் தலர்கள் இயேசுவை அடையாளம் கண்டு கொள்வது படிப்படியாக நிகழ்கிறது; முத லில் இயேசுவை வழிப்போக்கனாகவோ (லூக் 24:15; யோவா 21:4 தொ), தோட்டக்கா ரனாகவோ (யோவா 20:15), அதாவது சாதா ரண மனிதனாகத்தான் சீடர்கள் காண்கின்ற னர்; பிறகுதான் ஆண்டவரைக் காண்பதாக உணர்கின்றனர். இவர்கள் இவ்வாறு இயேசு வைக் கண்டுகொள்வதற்கு யாருடைய வற்பு றுத்தலும் காரணமன்று; ஏனெனில், நற்செய் திகள் கூறுவது போல நம்பிக்கையின்மை என்பது அன்றைய மரபின் ஒரு கூறு ஆகும் (மத் 28:17; மாற் 16:11,13 தொ; லூக் 24:37,41; யோவா 20:25-29); இவர்களும் அவரை நம்ப மறுத்திருக்கலாம். இறுதியாக, சாதாரண மாக இயேசு பலர் கூடி இருக்கையில் தோன் றுவதால், அவரைக் கண்டவர்கள், தாங்கள் கண்டதையெல்லாம் தங்களுக்குள் ஒப்பிட் டுச் சரிபார்த்து உண்மையை ஐயமற உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்த அடிப்படை உண்மையை எழுத்தில் வடிக்க நற்செய்தியாளர் மேற்கொண்ட முயற்சிகளில், இரு அம்சங்களை ஒரே சம யத்தில் வலியுறுத்த விரும்புகின்றனர்; உயிர்த்த இயேசு இவ்வுலக வாழ்வின் வழக்

கமான விதிகளுக்குக் கட்டுப்பட்டவரல்லர்; பழைய ஏற்பாட்டில் இறைவன் நேரடியாகக் காட்சியளித்ததுபோல (ஆதி 18:2; எண் 12:5; யோசு 5:13; 1 நாள் 21:15; தொ; செக் 2:7; 3:5; தானி 8:15; 12:5..), இயேசுவும் தமது விருப்பப்படி தோன்றுகிறார்; மறைகின்றார். இருப்பினும் அவர் ஒரு பூதம் அல்லர்; எனவேதான் இயேசுவைத் தொட்டுணருதல் வலியுறுத்தப்படுகிறது. எனவே உயிர்த்த காட்சிகளைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால், இவ்விரு அம்சங்களையும் சேர்த்துப் பார்க்கவேண்டும். கிறிஸ்துவின் உடல் உண்மையான உடல்; ஆனால் பவுல் முரணணியில் கூறுவது போல இது ''ஆவிக்குரிய உடல்'' (1 கொரி 15:44-49). ஏனெனில் இவ்வுடல் ஆவியினால் உருமாற்றம் பெற்றது (காண் உரோ 1:4).

இ) இக்காட்சிகளின் மூன்றாவது பண்பினை, அங்குக் காணப்படும் உரையாடல்களிலிருந்து பெறுகிறோம்; உயிர்த்த இயேசுவை அடையாளம் கண்டுகொள்ளும்போது, விண்ணகத்திற்கே உரிய பேற்றினை இங்கேயே சீடர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இயேசுவின் வார்த்தைகள் அவர்கள் இன்னும் நிலவுலகத்தில்தான் இருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகின்றன. 'உலகு முடியும் மட்டும் நான் உங்களோடு இருப்பேன்' (மத் 28:20) என்ற இயேசுவின் உறுதிமொழி அவர்களுக்கு இந்தப் பொருளைத்தான் தருகிறது. தாம் ஆற்றிவந்த நற்செய்திப் பணியைத் தொடர்ந்து நடத்துமாறு இயேசு கூறுவதையும் கேட்கின்றனர் (28:9; மாற் 16:15-18; லூக் 24:48 தொ; யோவா 20:22 தொ; காண் மத் 28:10; யோவா 20:17). இயேசு தொடர்ந்து சீடர்களோடு இருப்பது இயக்கம் இல்லாத இருப்பன்று; மாறாகச் செயலூக்கமிக்க இருப்பாகும்; நற்செய்திப்பணியை நடத்திச் செல்லும் ஆக்கமிக்கதாகும்.

மேற்கூறிய மூன்று அம்சங்களும் ஒன்றோடொன்று இணைந்து இயங்க வேண்டும். உயிர்த்த கிறிஸ்து தாமே முன்வந்து நிகழ்காலத்தைத் தொடர்ந்து புதுப்பித்துக்கொண்டு வருகிறார்; நசரேத்தூர் இயேசுவில் இறந்த காலத்தின் இயல்புகளைக் காண்பதற்கும், எதிர்காலமாகிய திருச்சபையைக் கட்டியெழுப்பவும் கிறிஸ்து தம் சீடர்களை அழைக்கிறார்.

5. பவுலுக்கு இயேசு அளித்த காட்சி சில தனிப்பட்ட பண்புகளோடு விளங்குகின்றது (கலா 1:12-17; அ.ப.9:3-19 இணை). பிறர் பெற்ற காட்சிகளுக்கும் தாம் பெற்ற காட்சிக்கும் பவுல் எவ்வித வித்தியாசமும் பாராட்டுவதில்லை; மற்ற சீடர்களைப் போலத் தாமும் உயிர்த்த இயேசுவைக் கண்டதாகவே நம்புகிறார். ஆகவே தமாஸ்கு செல்லும் வழியில் இயேசு தம்மை ஆட்கொண்ட காட்சியை அதற்குப்பின் தாம் பெற்ற காட்சிகளிலிருந்து (அ.ப.16:9; 18:9; 23:11; 27:23) வேறுபடுத்திப் பேசுகின்றார். மேலும் பிறமனிதர்களின் இடையீட்டின் மூலமாக அல்லாது (கலா 1:1; காண் அ.ப.9:6; 22:15), இயேசுவே நேரடியாகப் (அ.ப.26:16 தொ) பவுலை நற்செய்தி அறிவிக்கும் பணிக்கு (கலா 1:16) அழைத்துக் கொண்டதாக இக்காட்சிக்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது. இக்காட்சியே அவரை ஓர் அப்போஸ்தலனாக்கியது; இருந்தும் அவரைப் பன்னிருவருள் ஒருவராக ஆக்கவில்லை (1 கொரி 9:1). பன்னிரு அப்போஸ்தலர்கள் உயிர்த்த கிறிஸ்துவின் உருவில் தங்களோடு வாழ்ந்த (காண் அ.ப.2:21 தொ) நசரேனாகிய இயேசுவை அடையாளம் கண்டுகொண்டு, அக்கிறிஸ்து கொடுத்த வார்த்தையின் அடிப்படையில் திருச்சபையைக் கட்டி எழுப்பலாயினர். பவுல், தன்னைப் பொறுத்தமட்டும் தான் துன்புறுத்திக் கொண்டுவந்த திருச்சபையின் வழியாகவே, இயேசுவைக் காண்கிறார். இதிலிருந்து இரு உண்மைகள் வெளியாகின்றன: பவுல் பெற்ற காட்சி திருச்சபையின் பிறப்பிற்குத் துணையாக அமையவில்லை; அடுத்து இக்காட்சியின் மையமாக, விளங்குவது உயிர்ப்புக்கு முந்திய இயேசு அல்லர்; மாறாக, ஏற்கெனவே எழுப்பப்பட்டிருந்த திருச்சபையாகும். இக்காரணங்களுக்காகவும், இக்காட்சியை லூக்கா விண்ணேற்புக்குப்பின் நிகழ்வதாகக் குறிப்பிடும் காரணத்தாலும், இக்காட்சி வெளிப்பாட்டு இலக்கிய நடையில்

விவரிக்கப்படுகின்றது. பவுலும் இந்நடையைத்தான் பின்பற்றுகிறார் (கலா 1:15). இக்காட்சியில் குறிக்கப்படும் ஒளி, குரல், மாட்சிமை ஆகியவை இக்காட்சியைப் பதினொரு அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட காட்சிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. இத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், பவுல், இக்காட்சியை முதல் நாற்பது நாட்களில் அருளப்பட்ட காட்சிகளோடு ஒத்த நிலையில் வைத்துப் பேசுகிறார்.

6. உயிர்ப்பும், அதைவிளக்கும் இலக்கிய நடையும்:-

பெற்ற பாஸ்கு அனுபவத்தை விவரிக்க நற்செய்தியாளர்கள் கையாளும் நடையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், நாம் இரண்டு வரையறைகளை மனத்தில் கொள்ளவேண்டும். ஒருபுறம் எல்லாவற்றிற்கும் மேலாக உயிர்ப்பு நிகழ்ச்சி, உலக இறுதியில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளின் வகையைச் சார்ந்ததாகும்; எனவே இயேசு உயிர்த்தெழுந்தார் என்றால், அவர் மீண்டு உலகவாழ்வைப் பெற்றார் என்று பொருளாகாது; மாறாக இனிமேல் சாவே இல்லா வாழ்வுக்குள் புகுந்தார் (உரோ 6:9) என்று அர்த்தமாகும். எனவே இந்நிகழ்ச்சியை விவரிப்பது என்பது முடியாத காரியம். ஏனென்றால் இது நம் அன்றாட வாழ்வின் அனுபவக் கூறுகளுக்கு அப்பாற்பட்டது. ஆதலால் நமது அன்றாட மொழிவழக்கில் இதனை விளக்குவதோ, வெளிப்படுத்துவதோ கடினமான செயல். மறுபுறம் இயேசுவின் உயிர்ப்பு அப்போஸ்தலர்களைப் பொறுத்த அளவில் ஓர் உண்மை அனுபவமாகும்; இது ஓர் வரலாற்று நிகழ்ச்சி; அத்துடன் இது வரலாற்று அறிவைச் சார்ந்தும் இருக்கிறது.

எனவே உயிர்த்த காட்சிகளைப் பற்றி இருவித கோடிக் கொள்கைகளைத் தவிர்க்க வேண்டும்; 1) இயேசுவின் உயிர்ப்பு புராணம் அன்று; எனினும் உயிர்த்தகாட்சிகளின் புராண இயல்புகளைக் களைந்துவிட்டு அதன் உட்பொருளை மட்டும் உணர்வதென்பது அர்த்தமற்றது. அவ்வாறு செய்வது இறந்த தலைவர்கள் தம் தொண்டரின் நினைவில் வாழ்வது போலத்தான், இயேசுவும் வாழ்கிறார் என்ற பொருள் தரும்; இது உயிர்ப்பின் உயர்வைக் குறைப்பதாகும். இத்தகைய கோடிக் கொள்கையைத் தவிர்ப்பதற்காகவும், உயிர்த்த காட்சிகள் அப்போஸ்தலர்களின் உள்மன உந்துதலின் விளைவே என்று வாதிப்போரை எதிர்ப்பதற்காகவும் மற்றொரு கோடிக் கொள்கையை மேற்கொள்ளக்கூடாது. எதுவும் உண்மையாக இருக்க வேண்டுமென்றால் புலன்களுக்குப் புலப்படக்கூடியதாயும், காலம். இடம் என்ற அளவைகளுக்கு உட்பட்டதாயும் இருக்கவேண்டும் என்று வரையறுப்பதும் தவறாகும். உயிர்பெற்ற லாசர் தன் உறவினரோடும் நண்பர்களோடும் மீண்டு கொண்ட உறவையும், உயிர்த்த கிறிஸ்து தம்சீடரோடு கொண்ட உறவையும் ஒப்பிட்டு, ஒரே நிலையில் வைப்பது தவறு. ஏனென்றால் இயேசுவின் உயிர்ப்பு தனிச் சிறப்புமிக்கதாகும். இறந்தபின் மீண்டு உயிர்பெற்றெழுந்த ஓர் உடலைப்பற்றி நமக்குள்ள கற்பனைக் கருத்துகளை, ஒருசில மாற்றங்களோடு இயேசுவின் உயிர்த்த உடலுக்குச் சாற்றிக் கூறுவது போதாது; இவ்வாறு ஒப்பிடுவதால், உட்பொருளை மறந்துவிட்டு, வெளித்தோற்றத்திற்கே அதிக முக்கியத்துவம் தரும் நிலை ஏற்படலாம்.

உண்மையில் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி அப்போஸ்தலர்கள் பெற்ற அனுபவம் வெறும் அகத்தன்மையுடையது அன்று. அவர்களின் உள்ளுணர்வுகளால் தோன்றிய உருவவெளிப்பாடும் அன்று. உயிர்த்த இயேசுவைக் காணும் அனுபவம் அவர்களுக்குப் பலமுறை கிடைத்தது; பலருக்கும் கிடைத்தது. அந்தக் கூட்டு அனுபவமே, அக்கால மொழி நடையில், இறுதிக்காலத்தில் அனைவரும் பெறவிருக்கும் உயிர்ப்புப்பற்றி அவர்கள் கொண்டிருந்த சமய நம்பிக்கையின் அடிப்படையில் அப்போஸ்தலர்களால் வழங்கப்பட்டது. உயிர்த்த கிறிஸ்துவுடன் கொள்ளும் தொடர்பினை, மற்ற மனிதருடன் கொள்ளும் தொடர்பைப் போன்றதாக நாம் எண்ணாமல் இருக்க வேண்டுமானால்,

நாம் முன்பு குறிப்பிட்ட உயிர்ப்பின் மூன்று அடிப்படைப் பண்புகளையும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். சீடர்கள் எதிர்பாராத இடங்களிலும் நேரங்களிலும் இயேசுவே முன்வந்து காட்சி தருகிறார். இதனால் தாம் ஆண்டவரைக் காண்பது கனவா, அல்லது கற்பனையா என்ற ஐயப்பாடு அவர்களைவிட்டு நீங்குகிறது. அடுத்து, அவரைக் காணும் போது, அவ்வனுபவத்தைத் தம் இறந்த கால அனுபவங்களோடு ஒப்பிட்டுத் தமக்கு இப்போது காட்சி தருபவர், முன்பு தம்மோடு வாழ்ந்தவர்தாம் என்று அவரை அடையாளம் கண்டு கொள்கின்றனர். மூன்றாவதாக, அவரது சொற்களில் எதிர்கால இறையரசை அமைக்க வேண்டுமென்ற கட்டளையை அவர்கள் கேட்கின்றனர். இம் மூன்று கூறுகளையும் நன்கு புரிந்து கொண்டால், உயிர்த்த இயேசு இன்று நம்முடன் இருக்கும் இரகசியத்தையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

7. காணாமலே விசுவாசிப்போர் பேறுபெற்றோர் (யோவா 20:29):-

எதிர்கால விசுவாசிகளின் மனநிலையை மனத்திற்கொண்டே, தோமையார் இயேசுவை நம்பமறுத்த நிகழ்ச்சியை யோவான் எடுத்துரைக்கிறார். உயிர்த்த இயேசுவை முதலில் கண்ட அப்போஸ்தலர்கள் இருந்த சூழ்நிலையும், பிற்காலத்திய விசுவாசிகளின் சூழ்நிலையும் வேறு வேறானவை. சொல்லப்போனால், அப்போஸ்தலர்களுக்கும் இக்காட்சியனுபவம் இன்றியமையாத் தேவையன்று என்று நற்செய்திகளே குறிப்பிடுகின்றன; உயிர்ப்பின் அறிவிப்பே அவர்களுக்குப் போதுமானது (மாற் 16:13). திருமறைநூல் கூறியதை எல்லாம் அவர்கள் புரிந்து கொண்டிருந்தால் அது இயேசுவின் உயிர்ப்பை விசுவாசிக்க, சீடர்களை இட்டுச் சென்றிருக்கும் (யோவ 20:9). ஒருவிதத்தில், முதிர்ச்சியடையாத அவர்களின் இளம் விசுவாசத்திற்கு வளர்ச்சிதரும் நோக்கத்தோடு தான் உயிர்த்த இயேசு தம்மைக் காட்டினார் என்று கூறுவதும் பொருந்தும்.

ஆனால், இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது உயிர்த்த இயேசுவின் காட்சிகள் இன்றியமையாதனவாயும், தனிச்சிறப்புமிக்க முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் தோன்றுகின்றன. இதையே, நாற்பது நாள் காட்சிகள் பற்றிக் கூறும் அப்போஸ்தலர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். நசரேத்தூர் இயேசுவுடன் வாழ்ந்த அப்போஸ்தலர்கள், மிக முக்கியத்துவம்வாய்ந்த வகையில் இயேசுவுக்குச் சான்றுகளாய் விளங்கும் பேறுபெற்றனர். திருச்சபையின் தோற்றத்திற்கும், கிறிஸ்தவ விசுவாசத்தின் தோற்றத்திற்கும் மறுக்க முடியாத வரலாற்றுச் சான்றுகளுடன் ஓர் உறுதியான அடித்தளத்தை எழுப்புவது மிக மிக அவசியம். இதன்மூலம் உயிர்த்த ஆண்டவரைச் சீடர்கள் கண்ட அனுபவம் ஓர் வரலாற்று உண்மை என்று உறுதியாகக் கூறலாம். இவ்வாறு அவர்கள் கூடி உண்ணும் போதும், நடக்கும் போதும், மீன் பிடிக்கும் போதும் இயேசுவைக் கண்டனர்; களிகூர்ந்தனர். உயிர்த்து உயிருடன் வாழும் கிறிஸ்துவுடன் திடீரெனத் தொடர்பு கொள்ளுகின்றனர். இயேசுவை அடையாளம் கண்டு கொண்டதன் மூலம் இறைவன் அவர்களுக்கு விசுவாசம் என்ற கொடையைக் கொடுத்தார். ஆதலால் விசுவாசம் என்பது, ஒரு வகையில், காண்பதன் விளைவாகத் தான் இருக்கிறது எனலாம்.

ஆனால் பிற்காலத்திய விசுவாசிகளின் நிலை, காட்சி காணும் பேறுபெற்ற சீடர்களின் நிலையிலிருந்து வேறானது. அவர்களைப் பொறுத்த அளவில், சீடர்கள் கண்டதை அவர்கள் காணவில்லை; ஆனால் சீடர்கள் கண்டார்கள் என்பதை அறிவர். கிறிஸ்துவின் திருவுடலாகிய திருச்சபையின் போதனையின் மூலம்தான் உயிர்த்த காட்சிகளின் உட்பொருளை விசுவாசிகள் தங்கள் காலத்தில் தெரிந்துகொள்ளுகின்றனர்.

அவரது உயிர்ப்பின் மூன்று பண்புக் கூறுகள், சிறிது மாற்றத்துடன் இன்னும் இருக்கின்றன. இறைவனே, மிகத் துல்லியமாக உயிர்த்த கிறிஸ்துவே, இன்னும் முன்வந்து நம்மைத் தொட்டுத் தூண்டுகிறார்; ஆனால் அவருடைய குரல் திருச்சபையின் அன்றாடப் போதனை மூலமாகத்தான் இன்று ஒலிக்

கிறது. நசரேத்தூர் இயேசு இன்றும் தம்மை நாம் அடையாளங் கண்டுகொள்ள அழைக்கிறார். ஆனால் முதல் காட்சிகளின் வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில்தான் நாம் அவரை அடையாளம் காணமுடியும். அவர் இன்னும் இறைஅரசை அமைக்க நமக்குக் கட்டளை தருகிறார். ஆனால் அப்போஸ்தலர்களின் மரபு வழியாகத்தான் அது நம்மை அடைகிறது. உயிர்த்த கிறிஸ்து இன்றும் நம்முடன் இருக்கிறார் (மத்.28:20); ஆனால் அவருடைய உடலாகிய திருச்சபையின் மூலம்தான் அவரது இருப்பு புலனாகிறது; அத்துடன் ''அப்பம் பிடுவதில்'' அவரை அடையாளம் கண்டுகொள்ள அவர் நமக்கு இன்னும் வாய்ப்பளிக்கிறார் (லூக் 24:35).

உயிர்ப்பு ((RESURRELTION)

மறைநூல் கூறும் உயிர்ப்பும், கிரேக்கர் விளம்பும் இறவாமையும் முரண்பட்டவை. கிரேக்கர்களின் கூற்றுப்படி, தன்னிலேயே அழிவற்ற தன்மையை உடைய மனிதனின் ஆன்மா, சாவுக்குப்பின் உடலின் பந்தபாசங்களை முற்றிலும் அறுத்துவிட்டு, சாவற்ற தன்மையோடு இணைந்துவிடுகின்றது. மறைநூல் சிந்தனைப்படி, முழுமனிதனும் (ஆவிஉடல் அத்தனையும்) அவனது தற்போதைய நிலையில் சாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவனாகிறான். இறக்கும்போது, அவன் ஆன்மா சேயோல் என்னும் பாதாளத்தில் சிறைப்படும். உடலோ மண்ணில் அழிவுறும். ஆனால் இந்நிலை என்றும் நீடிப்பதல்ல. இறைவனின் அருளால் உயிர் பெற்று அவன் மீண்டும் எழுவான். இது, அமர்ந்த ஒருவன் எழுந்து நிற்பது போலவும், உறங்கிய ஒருவன் விழிப்பது போலவும் இருக்கும். பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே உருவாகிய இவ்வெண்ணங்கள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் மையமாக மாறுகின்றன. ஏனெனில், ''மரித்தோரிடமிருந்து எழுந்த முதற்கனியாக'', கிறிஸ்து மீண்டும் வாழ்வுக்குத் திரும்பியிருக்கிறார்.

I பழைய ஏற்பாடு:-

1. வாழ்வின் ஆண்டவர்:-

குளிர்கால மதமதப்பிலிருந்து இளவேனிற்காலத்தில் இயற்கை புத்துயிர் பெறுவது நாம் அன்றாடம் காணும் காட்சி. இக்காட்சி, இறந்த உயிர்பெற்ற தங்களின் கடவுளின் வாழ்வைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டுவதாக ஆதிகாலத்து மேற்காசிய மக்கள் நினைத்தனர். எனவே இப்புராணத்திற்குத் தங்கள் இயற்கை வழிபாடுகளில் அவர்கள் மிகவும் முக்கியத்துவம் அளித்தனர். எகிப்து நாட்டு ஓசிரிசும், மெசெபொத்தாமியாவின் தம்மூசும், கானான் நாட்டுப் பாகாலும் (பிற்காலத்தில் பாகால் அதோனிசாக மாறுவார்) இவ்வகையைச் சேர்ந்த கடவுளராவர். வரலாற்றில் தொடக்கத்தில் வாழ்ந்து முடித்த இக்கடவுளரின் வாழ்க்கை வரலாறு இயற்கையின் மாறிவரும் பருவங்களில் திரும்பத் திரும்ப நிகழ்கிறது. மேலும் இறை வழிபாட்டு நிகழ்ச்சிகளாக நாடக உருப்பெற்று அரங்கேறும் போது, பருவ காலங்களுக்கே ஒரு புதுத் தெம்பு பிறப்பதாக அம்மக்கள் நம்பினர். உழவுத்தொழிலையே நம்பியிருந்த நாட்டுப்புற மக்களுக்குப் பருவகாலங்களின் மாற்றம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

தொடக்கத்திலிருந்தே, இத்தகைய புராண வழக்கினையும் அதனையொட்டிய வழிபாடுகளையும் பழைய ஏற்பாடு முற்றிலும் நிராகரித்தது. பழைய ஏற்பாட்டின்படி வாழ்வுக்கும் சாவுக்கும் கடவுள் ஒருவரே தலைவர். ''உயிரைப் பறிப்பவரும் அவரே; உயிர் கொடுப்பவரும் அவரே; பாதாளங்களுக்குக் கொண்டுபோய், அதனின்று மீண்டும் கொண்டுவருபவரும் அவரே'' (1 சாமு 2:6; உப 32:39). ஏனெனில் பாதாளத்தின் மீதும் ஆற்றலுடையவர் அவர் (ஆமோ 9:2; சங் 139:8). எனவே அவருடைய ஆவி, வார்த்தை இவற்றின் ஆற்றலினால்தான் இளவேனில் காலத்தில் இயற்கை புத்துயிர் பெற்றுப் பொலிவடைகின்றது (காண் ஆதி 1:11 தொ. 22.28; 8:22; சங் 104:29 தொ). மனிதரிடையே அவருடைய ஆற்றல் இன்னும் சிறந்து விளங்குகின்றது. பாதாளத்தினின்று அவர்களை மீட்டு (சங் 103:4), மீண்டும் வாழ்வளிப்பவர் யாவேதான் (சங் 41:3; 80:19). குறிப்பாக அவருடைய அன்பர்களின் ஆன்

மாக்களைப் பாதாளத்தில் அழிய அவர் விட்டுவிடுவதில்லை (சங் 16:10 தொ).

சாவிலிருந்து தற்காலிகமாகப் பெறும் பாதுகாப்பை இத்தொடர்கள் மிகைப்படுத்திக் கூறுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் எலியாவும் எலிசாவும் செய்த உயிர்ப்புப் புதுமைகள் (1 அர 17:17-23; 2 அர 4:33 தொ; 13:21), செத்தவரை யாவே உயிர்ப்பிக்க வல்லவர் என்பதையும், பாதாளங்களிலிருந்து அவர்களை மீட்க ஆற்றல் படைத்தவர் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. எனவே பாதாளங்களிலிருந்து, வாழ்வோர் உள்ள வானுலகுக்கு, ஆன்மாக்கள் கீழிலிருந்து மேலே செல்வது போன்ற காட்சி ஒன்றே மறைநூல் கூறும் மறுவாழ்வுக்கும், புராணங்கள் விளம்பும் இறந்த கடவுளரின் உயிர்ப்புக்கும் உள்ள ஒற்றுமை; இரண்டிற்கும் வேறு எந்த விதமான சம்பந்தமும் கிடையாது.

2. இறைமக்கள் பெறும் உயிர்ப்பு:-

தங்களுக்கு நல்ல காலம் வரும் என்று இஸ்ராயேல் மக்கள் பொதுவாகக் கொண்டிருந்த நம்பிக்கையின் அடையாளமாகத்தான் உயிர்ப்புப் பற்றித் தொடக்க கால விவிலியப் பகுதிகள் குறிப்பிடுகின்றன. திடீரென்று இறைவனின் தண்டனைக்குள்ளான இஸ்ராயேல், எதிர்பாரா விதமாகச் சாவு மேற்கொண்ட நோயாளிக்கும் (காண். ஏச 1:5 தொ) சாவுக்கு இரையான உடலுக்கும் ஒப்பிடப்படுகின்றது. ஆனால் இஸ்ராயேல் மனந்திரும்பினால், மீண்டும் வாழ்வுக்கும் யாவே அழைத்துச் செல்லமாட்டாரா, என்ன? ''வாருங்கள், திரும்பிப் போவோம் ஆண்டவரிடம்....இரண்டு நாட்களுக்குப்பின் நமக்கு அவர் புத்துயிர் ஊட்டுவார், மூன்றாம் நாள் அவர் நம்மை எழுப்பிவிடுவார்; அதன் பின் அவர் முன்னிலையில் நாம் வாழ்ந்திடுவோம்'' (ஓசே 6:1 தொ).

இது மக்கள் கொண்டிருந்த வெறும் விருப்பமே என்று கூறவியலாது. ஏனெனில், இது நிச்சயம் நடைபெறும் என்று இறைவாக்கினரின் உறுதிமொழிகள் வலியுறுத்துகின்றன. இஸ்ராயேல் மக்கள் பாபிலோனியாவிற்கு நாடு கடத்தப்பட்டு, தண்டனை அனுபவித்த பின்பு, மடிந்து உலர்ந்துபோன எலும்புகளுக்கு உயிர் அளிப்பது போல் (எச 37:1-14) இறைவன் தம் மக்களுக்கும் உயிரளித்து அவர்களை உயர்த்துவார். பிணத்தைப் போலப் புழுதியில் விழுந்து கிடந்தோரை விழிப்படையச் செய்வார் (ஏச 26:19). இவ்வாறு இறைவாக்கினர் உரைக்கும் உயிர்ப்பு வெறும் உருவகமே என்பதில் ஐயமில்லை; எனினும் பாதாளத்தின் (சேயோலின்) ஆதிக்கத்திலிருந்து உண்மையான விடுதலை கிடைப்பதை இது சுட்டிக்காட்டுகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை: ''சாவே, எங்கே உன் வாதைகள்? பாதாளமே, எங்கே உன் அழிவுச் சின்னங்கள்?'' (ஓசே 13:14). இவ்வாறு தம் மக்களின் நலனைக் கருதி, இறைவன் சாவின்மீது வெற்றிவாகை சூடுகின்றார்.

இறை ஊழியன் உயிர்துறந்து தீயோருடன் அடக்கம் செய்யப்பட்டார் (ஏச 53:8 தொ. 12); அதே போன்று, விசுவாசமுள்ள இஸ்ராயேலர் சிலர் தற்காலிகமாக தீயசக்திகளின் ஆதிக்கத்துக்குட்படலாம். ஆனால் காலம் வரும், அந்நாளில் அவ்வூழியனைப் போலவே, இவர்களுக்கும் வாழ்நாள் நீடிக்கப்படும்; அவர்களும் ஒளியைக்கண்டு வெற்றியில் பங்குகொள்வர் (ஏச 53:10 தொ). இதுவே வாக்களிக்கப்பட்ட உயிர்ப்பு என்னும் ஓவியத்தின் முதற்கோடுகள்; எனினும் அவை இன்னும் புரிபடாத புதிர்நிலையில் தான் இருந்தன. ஆனால் இந்த வாக்குறுதியின் காரணமாகத்தான் அடக்குமுறை அட்டூழியத்திற்கு ஆளான நீதிமான்கள், தங்கள் மீட்பர் எழுவதையும், தங்களுக்காகப் போராடுவதையும் காண்பார்கள் (காண் யோபு 19:25).

3. தனிப்பட்ட மனிதரின் உயிர்ப்பு:-

மக்கபேயர் காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியான நிலையில் உயிர்ப்புப் பற்றிய கருத்துகளில் மிகுந்த மாற்றம் ஏற்பட்டது. அந்தியோக்கஸ் யூதர்களைப் பெருந்துன்பத்திற்கு உள்ளாக்கினான். யூதர்களில் பலர் தங்கள்

மதத்திற்காக உயிர் துறந்தனர். இவ்வாறு தங்கள் விசுவாசத்திற்காக உயிர் துறந்தோரின் நிலை என்ன என்பது பெரும் பிரச்சனையானது. இறையரசிற்காகவும், உன்னதரின் பரிசுத்தக் கூட்டத்தாரின் இறுதி வெற்றிக்காகவும் ஒருவன் காத்திருக்க வேண்டும் என்று வெகு காலத்திற்கு முன்னமே இறைவாக்கினர் மொழிந்தது அடிப்படை உறுதியாயிற்று (தானி 7:13 தொ 27; காண் 2:44). ஆனால் இதற்கிடையில் தங்கள் மறைக்காக உயிர் துறந்த புனிதர்களின் கதி என்ன? இக்கேள்விக்கு ''இறந்துபோய் மண்ணில் உறங்குகிற பலருள் சிலர் முடிவில்லா வாழ்வு பெறுவதற்கும், சிலர் முடிவில்லா இழிவுக்கும் நிந்தைக்கும் ஆளாவதற்கும் எழுவர்'' (தானி 12:2) என்று தானியேலின் வெளிப்பாட்டு நூல் பதில் தருகிறது. ஆதலால் இதற்குப் பின், எசக்கியேலும் ஏசாயாவும் (26) குறிப்பிடும் உயிர்ப்பை, உருவகமாகக் கருதாது, உண்மையெனக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது. அதாவது, மரித்தவர்களைத் தம் அரசில் பங்கேற்கும் வண்ணம் இறைவன் அவர்களைப் பாதாளத்தினின்று எழுப்புவார். அவர்கள் புகவிருக்கும் புதிய வாழ்வு, இவ்வுலக வாழ்விலிருந்து மாறுபட்டதாய், முற்றிலும் வேற்றுருக்கொண்டதாய் இருக்கும் (தானி 12:3). இப்பேர்ப்பட்ட நம்பிக்கைதான் மறைசாட்சிகள் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தாங்கிக் கொள்ளத் துணை செய்தது. மனிதர் அவர்களின் உலக வாழ்வைப் பறித்தாலும், உயிரைப் படைத்த இறைவனோ அவர்களுக்கு அதை மறுபடியும் கொடுப்பார் (2 மக் 7:9.11.22; 14:46); ஆனால் தீயோர்க்கு உயிர்ப்பு என்பதே இருக்காது (2 மக் 7:14).

இந்நாளிலிருந்து உயிர்ப்புப்பற்றிய கொள்கை யூதமதத்தின் முக்கிய பொதுச் சொத்தாகிறது. பரம்பரையைக் கடுகளவும் பிசகாது அனுசரிக்க வேண்டும் என்று எண்ணி, இக்கொள்கையைச் சதுசேயர் கூட்டம் ஏற்க மறுத்தது (அ.ப. 23:8); ஏளனமாகக் கேள்விகள் கேட்டுப் பரிகாசம் செய்தது (மத் 22:23-28 இணை). ஆனால் பரிசேயர்களும், ஏனோக்கு புத்தகத்தை நமக்களித்த குழுவும் (ஆதிகாலத்து எஸ்ஸேனியா கூட்டத்தினர்?) உயிர்ப்பு உண்டென நம்பிவந்தனர். ஏனோக்கு புத்தகம் பருப்பொருளின் அடிப்படையில் உயிர்ப்பினை நோக்கினாலும், உயிர்ப்பைப் பற்றி மிகச்சிறந்த முறையில் விளக்கம் தருகிறது; பாதாளங்களிலிருந்து வாழ்வு பெறும் வண்ணம் மரித்தோரின் ஆன்மாக்கள் எழும்பும்போது, ''வரவிருக்கும் உலகிற்காக'' இறைவன் தயாரித்து வைத்திருக்கும் புதிய உலகில் அவர்கள் நுழைவார்கள். அதே பாணியில்தான் இயேசுவும், ''உயிர்த்தெழும்போது வானகத்தில் கடவுளின் தூதரைப் போல் இருப்பார்'' (மத் 23:30) என்று விளம்புகிறார்.

II புதிய ஏற்பாடு:-

1. இறந்தோரிடமிருந்து எழுந்த தலைப் பேறு:-

அ) முன்னுரை:- தமக்கு வாழ்வின் மீதும் சாவின் மீதும் இறைவன் அதிகாரம் கொடுத்துள்ளார் என்பதையும், உண்மையான உயிர்ப்பை ஆரம்பித்து வைப்பவர் தாமே என்பதையும் இயேசு நன்கு அறிந்திருந்தார். எனவே 'இறுதி நாளில் நீதிமான்கள் உயிர்த்தெழுவர்' என்று ஏற்றுக்கொண்டதோடு, தம் தந்தையிடமிருந்து தாம் பெற்ற ஆற்றலுக்குச் சான்றாகப் பிறரது வேண்டுதலுக்கிணங்கி, இறந்தோர் பலருக்கு உயிரளிக்கின்றார்: யாயீரின் மகள் (மாற் 5:21-42), நயீன் நகரத்து விதவையின் மகன் (லூக் 7:11-17), தம் நண்பன் லாசர் (யோவா 11). இவ்வுயிர்ப்புகள் யாவும், இறைவாக்கினர் செய்த அருங்குறிகளை நமக்கு நினைவூட்டுகின்றன; எனினும் இவை, முற்றிலும் மாறுபட்டதன்மையுள்ள அவருடைய சொந்த உயிர்ப்பை இலைமறைகாயாக எடுத்துரைக்கின்றன.

இவ்வாறு பலரை உயிர்ப்பித்தலன்றி, இவ்வுயிர்ப்பைப் பற்றிய தெளிவான கருத்துக்களை இயேசு அறிவிக்கின்றார்; மனுமகன் கொலையுண்டு, மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழ வேண்டும் (மாற் 8:31; 9:31; 10:34 இணை). இதுவே மத்தேயுவின் எண்ணப்படி ''யோனாவின் அடையாளமாகும்.'' ''மனுமகன் மூன்று பகலும் மூன்று

இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார்'' (மத் 12:40). இதுவே ஆலயம் சுட்டுகின்ற அருங்குறியுமாகும்: ''அவரது உடலாகிய ஆலயத்தையே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்'' (யோவா 2:19 தொ; காண் மத் 26:6 இணை). இவ்வாறு உயிர்ப்புப் பற்றி இயேசு கூறியவற்றைப் பன்னிருவர் கூடப் புரிந்து கொள்ளவில்லை (காண் மாற் 9:10). அவருடைய எதிரிகளுக்கு இது எள்ளளவும் விளங்கவில்லை என்பதால்தான், அவர்கள் காவலரை அமர்த்தி, கல்லறையைக் காவல் செய்தனர் (மத் 27:63 தொ).

ஆ) பாஸ்கா அனுபவம்:-

ஆதலால், உயிர்ப்புப் பற்றி விவிலியம் அறிவித்தது, முதன்முதலில் இயேசுவுக்குத் தான் பொருந்தும் என்பதைப் பன்னிருவர் உணரவில்லை (யோவா 20:9). எனவேதான் இயேசு இறந்து, அடக்கம் செய்யப்பட்ட போது, அவர்கள் நம்பிக்கை இழந்தனர் (காண் மத் 16:14; லூக் 24:21-24.37; யோவா 20:19). பாஸ்கா அனுபவம் ஒன்றே அவர்களின் விசுவாசத்திற்குப் புத்துயிர் அளிக்க வல்லதாயிருந்தது. வெற்றுக் கல்லறையைக் கண்டு, இயேசு உயிர்த்திருப்பார் என்று அவர்கள் நம்பவில்லை. ஏனென்றால் உடலை யாராவது வேற்றிடத்திற்கு மாற்றியிருக்கக்கூடும் என்று விளக்கம் கொடுக்கலாம் அல்லவா? (லூக் 24:11 தொ; யோவா 20:2). வெற்றுக் கல்லறையைக் கண்டு உடனே விசுவசித்தவர் யோவான் மட்டுமே (யோவா 20:8).

பின்பு இயேசு உயிர்த்து, காட்சிகள் அளிக்கலானார். இயேசு அளித்த காட்சிகளைப் பற்றி பவுல் கொடுக்கும் எண்ணிக்கைக்கும் (1 கொரி 15:5 தொ), நற்செய்தியாளர் கொடுக்கும் எண்ணிக்கைக்கும் வேறுபாடு உள்ளது. ஆனால் இங்குச் சரியாக எத்தனை முறை இயேசு தோன்றினார் என்பது அத்துணை முக்கியமன்று. இயேசு ''பல நாட்கள்'' தோன்றினார் என்று (அ.ப. 12:31) பொதுவாகவும், முக்கிய நிகழ்ச்சியான விண்ணேற்றம் வரை, இயேசு ''நாற்பது நாள் அளவாகத்'' (அ.ப. 1:3) தோன்றினார் என்று மற்றொரு இடத்தில் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. புலன்களுக்குப் புலனாகும் விதத்தில் இயேசு தோன்றினார் என்பதை இக்காட்சிகள் அடிக்கோடிட்டு விளக்குகின்றன; தோன்றுவது உண்மையாகவே நசரேத்தூர் இயேசு தான். அப்போஸ்தலர்கள் அவரைக் கண்ணாரப் பார்த்து, கைகளால் தொடுகின்றனர் (லூக் 24:29 தொ 41 தொ; யோவா 21:9-13; அ.ப. 10:41). அவர் ஒரு பூதமல்ல, மாறாகத் தம் சொந்த உடலோடு காட்சியளிக்கின்றார் (மத் 28:9; லூக் 24:37 தொ; யோவா 20:20.27 தொ). ஆனால் இவ்வுடல் சாதாரண உடலுக்குரிய நியதிகட்கு அப்பாற்பட்டதாய் விளங்குகின்றது (யோவா 20:19; காண் 20:17). இயேசுவும் தாம் இவ்வுலகில் பணிபுரிந்து வந்த காலத்தில் செய்துவந்த சில வழக்கமான செயல்களைத் திரும்பவும் செய்து, அவர்கள் தம்மைக் கண்டுகொள்ளச் செய்கின்றார் (லூக் 24:30 தொ; யோவா 21:6.12). எனினும் முன்பே யூதசமயத் திருக்காட்சியாளர் படம் பிடித்துக் காட்டிய மகிமையுடன்தான் இயேசு இப்பொழுது திகழ்கின்றார்.

இயேசுவின் பாடுகளையும் சாவையும் கண்ட பொதுமக்கள் அனைவரும் அவருடைய காட்சிகளைக் காணும் பேறு பெறவில்லை. ஏனெனில் குறிப்பிட்ட சில சாட்சிகளுக்கு மட்டுமே காட்சிதர இயேசு சித்தங் கொண்டார் (அ.ப. 2:32; 10:41;13:31). இறுதியாகப் பவுலுக்கும் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் தோன்றினார் (1 கொரி 15:8). இவ்வாறு இயேசுவுக்குச் சாட்சிகளாய்த் திகழ்ந்தவர்கள் அப்போஸ்தலராயினர். உலகம் அவரை ஏற்றுக் கொள்ள மறுத்தமையால், ''உலகிற்கு வெளிப்படுத்தாது'' (யோவா 14:22) இவர்களுக்கு மட்டும் தம்மைக் காட்டுகிறார். கல்லறையைக் காத்த காவலர் கூட, அஞ்சி நடுங்கி (மத் 28:4) கிறிஸ்துவைப் பார்க்க முடியாது போயினர். இயேசுவின் உயிர்ப்பை விளக்குவது இயலாத செயலாகும்; ஆனால் இயேசு உயிர்த்த காட்சியை விவரிப்பது அதைவிட அரிதாகின்றது. ''பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது; கண்ணைப் பறிக்கும்படியான ஒளி வீசியது;

ஆண்டவரின் தூதன் தோன்றினார்'' என்று வழக்கமாக மறைநூல் இவ்விதக் காட்சி களை விவரிக்கும் விதத்தில் மத்தேயு மட் டும் இக்காட்சியை வருணிக்கிறார். இயேசு வின் உயிர்ப்பு நம் அனுபவத்திற்கு அப்பாற் பட்டதொன்றாய் அமைவதால், பழைய ஏற் பாடு ஏதோ ஓரளவுதான் நமக்குக் கை கொடுத்து உதவ முடியும்; நாம் விவரிக்க முயலும் உண்மையோ ஏட்டில் வடிக்க இய லாததாய் உள்ளது.

இ) அப்போஸ்தலர் போதனை விளம்பும் உயிர்ப்பின் நற்செய்தி:-

இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ விசுவா சத்தின் அடிப்படை உண்மையாக விளங்குவ தால் (அ.ப. 2:22-35), பெந்தக்கோஸ்து நாள் முதல் அப்போஸ்தலரின் போதனையின் மையமாக அது உருவெடுக்கிறது. 'இயேசு சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப் பட்டார்; ஆனால் கடவுளோ இறந்தோரிடமி ருந்து அவரை உயிர்த்தெழச் செய்து, உல குக்கு அவர் மூலம் மீட்பு வழங்கியுள்ளார்' என்னும் உண்மைக்குத்தான் உயிர்ப்பின் நற் செய்தி முக்கியமாகச் சான்று பகர்கின்றது. யூதர்களுக்குப் பேதுரு ஆற்றிய அருளுரை (3:14 தொ), யூத சங்கத்தில் அவர் ஆற்றிய உரையின் சாரம் (4:10), எத்தியோப்பிய அமைச்சனுக்குப் பிலிப்பு கற்பித்த பாடம் (8:35), யூதர்களுக்கும் (13:33; 17:3), புறவினத் தாருக்கும் (17:31) பவுல் போதித்த போதனை, தலைமைச் சங்கத்தாரின் முன் அவர் இட்ட அறிக்கை (23:6) ஆகிய அனைத் துமே பாஸ்கா அனுபவத்தின் விளைவன்றி வேறல்ல.

மறைநூலில் உள்ளபடிதான் இது நடந்த து' (காண் 1 கொரி 15:3 தொ) என்பது இவ்வனுபவத்தின் முக்கியமானதொரு கருத் தாகும். இறைவனின் வலப்புறத்தில் மெசி யாவாக மகிமையில் உயர்த்தப்படுவார் என் றும் (அ.ப. 2:34; 13:32 -தொ), யாவேயின் ஊழியன் மகிமை பெறுவார் என்றும் (அ.ப. 4:30; பிலி 2:7 தொ) மனுமகன் இறைவனின் வலப்பக்கம் வீற்றிருப்பார் என்றும் (அ.ப. 7:56; காண் மத் 26:64 இணை) முன்பே இறைவாக்கினர் உரைத்த உறுதிமொழிகள் யாவற்றையும் இயேசுவின் உயிர்ப்பு நிறை வேற்றுகின்றது. அதேபோல, அன்றாட அனுபவத்திற்கு அப்பாற்பட்ட இந்நிகழ்ச்சி யின் கூறுகளைத் தனக்கே உரித்தான நடை யில் மறைநூல் சித்தரித்துக் காட்டத் தவற வில்லை; இயேசுவே பாதாளத்தில் அழிவு றாது, கடவுளால் மீட்கப்பட்ட புனிதர் (அ.ப. 2:25-32; 13:35 தொ; காண் சங் 16:8-11) அனைத்தையும் ஆண்டு நடத்த இறைவனிட மிருந்து அதிகாரம் பெற்ற புதிய ஆதாமும் அவரே (1 கொரி 15:27; எபி 1:15-13; காண் சங் 8); கட்டுவோரால் விலக்கப்பட்டு, மூலைக்கல்லாய் அமைந்தவரும் அவர் தாமே (அ.ப. 4:11; காண் சங் 118:22...). இவ்வாறு மகிமை அடைந்த கிறிஸ்து மறை நூல் முழுவதற்கும் விளக்கம் கொடுப்பவ ராய்த் தம்மையே வெளிப்படுத்தினார். இது ஒன்றும் அவருக்குப் புதிதல்ல; ஏனெனில் இப்பணி முன்பே அவரது கருத்தைக் கவர்ந் ததாய் இருந்தது (காண் லூக் 24:27 44 தொ).

ஈ) உயிர்ப்பின் உட்பொருளும் சிறப்புக் கூறுகளும்:-

அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்ப் புக்கும் மறைநூலுக்கும் இடையே ஓர் தொடர்பை ஏற்படுத்தியபின், அவ்வுயிர்ப்பு நிகழ்ச்சியைப்பற்றி இன்னும் விரிவாகவும் இறையியல் விளக்கம் அளித்தனர்: உயிர்ப்பு என்பது தந்தை மகனை மகிமைப்படுத்தும் நிகழ்ச்சியாகும் (அ.ப. 2:22 தொ; உரோ 8:11; காண் யோவா 17:1 தொ). மனுவுரு ஆன போது ஆரம்பிக்கப்பட்டு, சிலுவையில் முற் றுப்பெற்ற மீட்புப் பணிக்கு இவ்வுயிர்ப்பு முத்திரை இட்டது. சிலுவையின்மூலம், 'இ றைவனின் வல்லமை விளங்கும் இறைமக னாகவும்' (உரோ 1:4; காண் அ.ப. 13:33; எபி; 1:55; சங் 217), 'ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும்' (அ.ப. 2:36), 'தலைவராக வும் மீட்பராகவும்' (5:31), 'வாழ்வோருக் கும் இறந்தோருக்கும் நடுவராக ஆண்டவரா கவும்' (அ.ப. 10:42; உரோ 14:9; 2 திமோ 4:1) இயேசு நியமிக்கப்பட்டுள்ளார். தந்தை யிடம் சென்றுள்ள இந்நிலையில் (யோவா 20:17) அவர் மனிதனுக்கு வாக்களிக்கப்பட்ட

ஆவியை அனுப்ப வல்லவராய் இருக்கின்றார் (யோவா 20:22; அ.ப. 2:33). இச்செய்கையில்தான் அவருடைய மண்ணுலக வாழ்வின் முழுப்பொருளும் தலை சிறந்த முறையில் வெளிப்படுகிறது. இதில்தான் இறைவன் தம்மை முழுவதும், தம் அன்பையும் அருளையும் மனிதருக்கு வெளிப்படுத்தினார் (2 திமோ 1:10; தீத் 2:11; 3:4). இதிலும் இறைவன் தம்மை அப்படியே காட்டவில்லை; மாறாகச் சில அடையாளச் செயல்கள் மூலமாகவும் .(யோவா 1:11), திருவுருமாற்றம் போன்ற நிகழ்ச்சிகள் மூலமாகவும், இறைவனின் மாட்சி மறைவான முறையில் வெளிப்பட்டது (லூக் 9:32,35 இணை; காண் யோவா 1:14). இப்போது இயேசு தம் மகிமையில் வீற்றிருப்பதால், இறைவனின் மாட்சி திருச்சபையில் அருங்குறிகள் மூலமும் (அ.ப. 3௨6). விசுவாசிகள் மீது பொழியப்படும் ஆவியின் கொடைகள் மூலமும் (அ.ப. 2:38 தொ; 10:44 தொ) வெளிப்பட்டு வருகிறது.

''இறந்தோரிடமிருந்து பிறந்த தலைப்பேறான'' (அ.ப.26:23; கொலோ 1:18; திருவெளி 1:5) இயேசு, இவ்வாறு மீட்புப்பெற்ற உலகாகிய புதிய படைப்பில் முதல் ஆளாக நுழைந்தார் (காண் எசா 65:17). ''மகிமை பூண்ட ஆண்டவர்'' (1 கொரி 2:8; காண் யாக் 2:1; பிலி 2:11) என்ற முறையில், அவர் மீட்பையும் வழங்குகின்றார் (அ.ப. 3:6...). இறை ஆற்றலின் ஊற்றாக விளங்கும் அவர், நமக்கென்றே, தம்வழியில் ஒரு புனித சமுதாயத்தை (1 பேதுரு 2:9 தொ) உருவாக்குகிறார்.

2. உயிர்ப்பின் ஆற்றல்:-

'மீட்பு கிடைக்குமா, கிடைக்காதா?' என்று நம்மை நாமே கேட்கும் கேள்விக்கு இயேசுவின் உயிர்ப்பு தகுந்த பதிலாக அமைகின்றது. நம் விசுவாசத்தின் முதன்மையான பொருளாகவும், நம் நம்பிக்கைக்கு அடிப்படையாகவும் திசைகாட்டியாகவும் இயேசுவின் உயிர்ப்பு அமைகிறது. ''துஞ்சினோரின் முதற்கனியாக'' (1 கொரி 15:20) இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது உயிர்ப்பை இறுதி நாளோடு இணைத்துச் சிந்திக்க ஒரு வாய்ப்பளிக்கின்றது. மேலும் கிறிஸ்துவே ''உயிர்ப்பும் உயிருமாதலால், அவரில் விசுவாசங் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'' (யோவா 11:25). இயேசு அளிக்கும் இப்புதிய வாழ்வில் இவ்வுலகிலேயே பங்குபெறுவோம் என்ற நம்பிக்கையை இவ்வுண்மை அளிக்கின்றது. இப்புதிய வாழ்வைத் திருவருட்சாதனங்கள்மூலம் நமக்கு அவர் அளிக்கின்றார்.

அ) இறுதிநாளில் உயிர்ப்பு:-

உடலுக்கும் உயிர்ப்பு உண்டு என்ற யூதர்கள் நம்பிக்கைக்கு உத்தாரம் அளிக்கின்றார் இயேசு. மேலும், அவ்வுடல் புதிய வளம் பெற்றதாகவும் (லூக் 14:14), முற்றிலும் வேறுபட்டதாகவும் திகழும் (மத் 22:30 தொ, இணை) என்றும் பகர்கின்றார். இவ்வருணனை, உலகமுடிவு பற்றி நற்செய்திகள் வரையும் காட்சிகளைப் போல (மத் 24 இணை) சிறப்பாக அமையவில்லை என்பது உண்மை: ஆனால் அது நமக்கு முக்கியமன்று. இயேசுவின் உயிர்ப்பு நிகழும் வரை, இவ்வுண்மையின் முழுப்பொருளும் தெளிவாகவில்லை என்பதே, இங்குக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். பிற யூதர்களைப் போல இறுதிநாள் உயிர்ப்பில் தாங்களும் நம்பிக்கை கொண்டிருந்ததை முதல் கிறிஸ்தவர்கள் உணர்ந்திருந்தனர் (அ.ப. 23:6; 24:15; 26:6 தொ). இயேசுவின் உயிர்ப்பு இவர்களின் நம்பிக்கைக்குக் கட்புலனாகும் உண்மையான அடித்தளமாக மாறுகின்றது. இயேசு உயிர்த்தெழுந்த காரணத்தால், நாமும் உயிர்த்தெழுவோம். ''இறந்தோரிடமிருந்து கிறிஸ்து இயேசுவை உயிர்ப்பித்தவர் உங்களுள் குடிக்கொண்டுள்ள தமது ஆவியால் சாவுக்குரிய உங்கள் உடல்களை உயிர்பெறச் செய்வார் (உரோ 8:11; காண். 1 தெச 4:14; 1 கொரி 6:14; 15:12-22; 2 கொரி 4:14).

இக்கருத்து மனத்தில் படும்படியான வகையில் மத்தேயு நற்செய்தி இயேசுவின் உயிர்ப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இயேசு பாதாளங்களில் இறங்கி, வெற்றி

வாகை சூடியவராக மேலே எழும்புங்கால், விண்ணுலக மகிமைக்காகத் தவித்து நின்ற புனிதர்கள் அவரோடு திரண்டு புடைசூழ எழுகின்றனர் (மத் 27:52 தொ). அவர்கள் மீண்டும மண்ணுலக வாழ்வைப் பெற்றதாக மத்தேயு குறிப்பிடவில்லை; மாறாக, விநோதமான வகைகளில் அவர்கள் காட்சியளித்ததாகத்தான் குறிப்பிடுகின்றார். இவை இறுதி நாளில் நடக்கவிருப்பவைகளின் அடையாளச் சின்னங்களாகும்; அவ்வளவுதான். இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது, அவரால் இறந்தோர் பலர் மீண்டும் தங்கள் வாழ்வைப் பெற்றதும், இவ்வாறே எதிர்காலச் சின்னங்களாகத் திகழ்கின்றன.

புனித பவுல் இன்னும் விரிவாக இறுதி நாள் உயிர்ப்பை விவரிக்கின்றார்; அதிதூதரின் குரலொலி ஒலிக்கும்; புனிதர் கூடும் வண்ணம் எக்காளம் முழங்கும்; ஆண்டவர் மேகங்களின் மீது தோன்றுவார்; அவரை எதிர்கொள்ளப் புனிதர் புறப்படுவர் (1 தெச 4:15 தொ; 2 தெச 1:7 தொ; 1 கொரி 15:52). இத்தகைய காட்சியை யூத வெளிப்பாட்டு இலக்கியங்களிலும் காணலாம். இக்காட்சி மூலம் இவ்விலக்கியங்கள் கூறவிரும்பும் உண்மையே இங்கு நமக்கு முக்கியமாகும். கிரேக்கர்களின் கருத்துப்படி மனித ஆன்மா, உடல் எனும் சிறையிலிருந்து விடுபட்டு, சாகா நிலையை நோக்கித் தனியாகச் செல்கிறது. ஆனால் கிறிஸ்துவ நம்பிக்கையோ முழுமனிதனும் (உடலும் உள்ளமும்) மறுமலர்ச்சி பெறுவதை எதிர்பார்க்கின்றது. எப்படியெனில், ஒரு நொடியில் உடலானது முற்றிலும் புதிய வேற்றுருப் பெறும்; ஆவிக்குரிய வாழ்வைப் பெற்று, சாகாமையையும் அழியாமையையும் அணிந்துகொள்ளும் (1 கொரி 15:35-53). தீயவர்கள் உயிர்த்தெழுவார்களா? இக்கேள்விக்குப் புனித பவுல் பதில் அளிப்பதில்லை; இத்தகைய சிந்தனைகளுக்கு அவர் இடம் கொடுத்ததாகத் தெரியவில்லை. அவர் காணும் காட்சி, கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்தோர் அவர் மகிமையில் பங்கு பெறுதலைப் பற்றியதேயாகும் (காண் 1 கொரி 15:12..). இவ்வுடல் உயிர்ப்பு'க்காகக் கிறிஸ்தவன் தவிக்கும் (உரோ 5:23) தவிப்பின் நிலையை எடுத்தியம்ப, கிறிஸ்துவம், உயிர்ப்பை நினையாத நேரத்தில் திடீரென்று எந்த நிமிடத்திலும் நடக்கப்போகும் நிகழ்ச்சியாகப் படம் பிடித்துக் காண்பிக்கிறது (காண் 1 தெச 4:17). அந்நாளுக்காகக் காத்திருக்கும் கிறிஸ்தவர்களின் ஏக்கம் (காண் 2 கொரி 5:1-10) ஆண்டவர் வரும் நாளையும் தேதியையும் பற்றிய வதந்திகளுக்கு இடம் தருவதாக இருத்தல் கூடாது.

இறந்தோரின் உயிர்ப்பை விவரிக்க திருவெளிப்பாடு தீட்டும் ஓவியம் இன்னும் கவர்ச்சியாக உள்ளது (திருவெளி 20:11-15): இறந்தோர் அனைவரும் (தீயவரும் நல்லவரும்) தீர்ப்புப் பெறுவதற்காகச் சாவிலிருந்தும் பாதாளத்திலிருந்தும் வெளியேறுகின்றனர். தீயோர் ''இரண்டாம் சாவில்'' மூழ்கிப் போகின்றனர்; புனிதர்களோ முற்றிலும் புதிய உலகில், புதிய வாழ்வில் பங்குபெற நுழைகின்றனர். இதுவே பழைய இன்பவனம், புதிய விண்ணுலக எருசலேம் (திருவெளி 21-22). மனித அனுபவத்திற்கு அப்பாற்பட்ட அனுபவங்களை, இவ்வாறு அடையாளங்கள் மூலம்தான் விவரிக்க இயலும்! இறந்தோரின் உயிர்ப்பைப்பற்றி நான்காம் நற்செய்தி வருணிப்பதில்லை. எனினும் அதில் உயிர்ப்பு பற்றி இரு குறிப்புக்களைக் காண்கிறோம். இறை மனுமகனின் பணியைப்பற்றி விவரிக்குங்கால், மனுமகனின் குரலைக் கேட்டே இறந்தோர் உயிர்த்தெழுவர் (யோவா 5:28; 6:40; 44); நல்லோர் வாழ்வு பெறுவர், எஞ்சியோர் தண்டனைக்குள்ளாவர் (5:29).

ஆ) எதிர்பார்க்கப்படும் உயிர்ப்பாகும்:-

இறுதிநாளில் நடக்கவிருக்கும் உயிர்ப்புப் பற்றி யோவான் அதிகமாகப் பேசுவதில்லை என்பதைக் கண்டோம். காரணம்: இறுதி நாளில் நிறைவேறும் உயிர்ப்பில் மனிதன் இவ்வுலகிலேயே பங்குபெறுவதை அவர் உணருகிறார். இயேசுவின் அதிகாரத்தால் விசுவாசிகள் சாவினின்று விடுதலை பெறுவதை (காண் யோவா 11:25 தொ), லாசர் கல்லறையிலிருந்து வெளிவரும் நிகழ்ச்சி

தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. மேலும் மனுமகனுக்குரிய வாழ்வு செயலைப் பற்றிப் பேசுங்கால், இவ்வுண்மைக்குச் சான்று பகர்கின்றார்: ''நேரம் வருகிறது. ஏன் வந்தேவிட்டது. அப்பொழுது இறைவனுடைய மகனின் குரலை இறந்தோர் கேட்பர்; அதைக் கேட்டோர் வாழ்வு பெறுவர்'' (யோவா 5:25). இவ்வார்த்தைகள், ''சாவினின்று வாழ்வுக்குக் கடந்து வந்துள்ளோம் என்பதை அறிவோம்'' (1 யோவா 3:14) என்று யோவான் தமது முதல் திருமுகத்தில் எடுத்துக்கூறும் கிறிஸ்தவ அனுபவத்தை வலியுறுத்துகின்றன. இவ்வாழ்வைப் பெற்றவர் ஒருபோதும் சாவதில்லை (யோவா 6:50; 11:26; காண் உரோ 5:8 தொ). இந்த உறுதியின் காரணமாக, இறுதி உயிர்ப்பைப்பற்றிய எதிர்ப்பார்ப்பு பாதிக்கப்படுவதில்லை; மாறாக, கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்து நாம் புகுந்த வாழ்வுக்கு, இவ்வுறுதி புது உரு அளிக்கின்றது.

உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வில் பங்குபெறுதலே கிறிஸ்தவ வாழ்வு என்று, புனித பவுல் 'கிறிஸ்தவ வாழ்வின் பாஸ்கா' இயல்பினை முன்னரே சுட்டிக்காட்டியுள்ளார். திருமுழுக்கின்போது அவரோடு புதைக்கப்பட்டோம். இறந்தோரிடமிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த இறைவனின் (கொலோ 2:12; உரோ 6:4 தொ) ஆற்றல்மீது நாம் வைத்த விசுவாசத்தால், அவரோடு நாமும் உயிர்த்தெழுந்தோம். அவருடைய மகிமை நிறைந்த வாழ்வே, நாம் பெற்றுள்ள புதிய வாழ்வாகும் (எபே 2:5 தொ). ''தூங்குபவனே, விழித்துக்கொள்; இறந்தோரிடமிருந்து எழும்பு; கிறிஸ்து உன்மேல் ஒளிர்வார்' (5:14)'' என்று பவுல் கூறுகின்றார். கிறிஸ்தவ வாழ்விற்கே அடிப்படையாக அமைவது இந்நம்பிக்கைதான். கிறிஸ்துவில் புதுப்பிறப்பு பெற்ற புதிய மனிதனின் ஒழுக்க வாழ்விற்கு இந்நம்பிக்கை உயிரூட்டுகிறது; ''கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள். அங்கேதான் கிறிஸ்து இறைவனின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கின்றார்'' (கொலோ 3:1 தொ). இதுவும் கிறிஸ்துவின் நம்பிக்கைக்கு ஊற்றாக மாறுகின்றது. ஏனெனில், ''தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக'' உருமாற்றும் (உரோ 8:22 தொ; பிலி 3:10 தொ, 20 தொ) நாளை எதிர்நோக்கித் தவித்துக் கொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவன் இவ்வாழ்விலேயே, விண்ணக வாழ்வில் மறைபொருளாக மறைந்து கிடக்கும் உண்மைகளையே, அவனது இறுதி உயிர்ப்பு ஒளிக்குக் கொண்டுவரும் (கொலோ 3:4).

உரல்-உலக்கை (MORTAR)

பொருட்களை வைத்து (இட்டு) உலக்கையினால் இடித்து நொறுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட பாத்திரமே உரலாகும். குழியம்மி என்றும் அழைக்கின்றோம். இது தானியங்களின் உமியை அகற்றுவதற்கும், மாவாக இடிப்பதற்கும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், கீரைகளை இடித்துப் பிழிவதற்கும், நறுமணப் பொருட்கள் தயாரிப்பதிலும், சாயப் பொருட்கள் தயாரிப்பதிலும், மற்றும் பல பொருட்களைத் தயாரிக்கும் வேலைகளுக்கும் உரல் பயன்படுத்தப்பட்டது.

சில பாத்திரங்களின் விளிம்புப் பகுதியில் வெட்டப்பட்ட திறந்த வழியானது வடிகாலின் பணியைச் செய்தது. இத்தகைய பொருட்கள் சிறிய அளவிலான திரவப் பொருட்களைத் தயார் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மன்னாவைப் பொடியாக்குவதற்கும் உரல் பயன்படுத்தப்பட்டது. எந்திரக் கற்களைக் கொண்டும் மன்னாவை அரைத்தனர். பழமொழி நூலில் உரலும், உலக்கையும் உருவகங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன (பழ 27:22). நீதிபதி நூலில் நிலப்பிளவை விவரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. செப்பனியா நூலில் (1:1) ஓர் இடத்தின பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எரிமலைப்பாறைக் கற்களின் கடினமான தன்மையை முன்னிட்டு இந்தக் கற்களைக் கொண்டு உரல்களைச் செய்தனர். சுண்ணாம்



மெசிதோவில் கண்டெடுக்கப்பட்ட உரல் உலக்கைகள்

புக்கல் உரல்களும் செய்யப்பட்டன. உலக்கையின் அமைப்பு பொதுவாக நீண்ட உருளை வடிவமாகவோ சில சமயங்களில் கூர் உருளை வடிவமாகவோ இருந்தது. இதன் தலைப்பகுதி உரலின் குழிவான பகுதியில் சேருமாறு அமைக்கப்பட்டது. எரிமலைப்பாறை வகைக் கற்களைக் கொண்டும், சுண்ணாம்புக் கற்களைக் கொண்டும் இந்த உலக்கைகள் செய்யப்பட்டன.

உரிமை அடைந்தோரின் செபக்கூடம் (SYNOGOGUE OF THE FREEDMEN)

அராமேயிக் பேசுபவர்களைவிட, கிரேக்கம் பேசும் யூதர்களுக்காக நடத்தப்பட்ட எருசலேமின் செபக்கூடங்களில் ஒன்று. அராமேயிக் மொழி பேசுபவர்கள் பாலஸ்தீனிய யூதர்களாவர். அ.ப. 6:9-இல் மட்டும் புதிய ஏற்பாட்டில் இந்த செபக்கூடம் குறிப்பிடப்படுகிறது. சிரேனியர்கள், அலக்சாந்திரியர்கள், சிலிசியர்கள், ஆசியர்கள் ஆகிய இவர்களுடைய செபக்கூடம் என்று அதே பகுதி குறிப்பிடுகிறது. ஆனால் இது தனித்தனி ஐந்து குழுக்களைக் குறிக்கிறதா என்று உறுதியாகச் சொல்லமுடியாது. சிரேனியர்களும், அலக்சாந்தியர்களும் ஒரு வேளை ஒரே சபையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். சிலிசியா மற்றும் ஆசியாவிலிருந்து வந்தவர்கள் உரிமை அடைந்தவர்களாக இருக்கலாம். உரிமை அடைந்தவர்கள் முன்னாளைய உரோமைய கைதிகள், அல்லது அவர்களின் மக்களாவர். விடுதலையானவுடன் எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

உரோமைய வரலாற்று ஆசிரியர் தாசிட்டஸ், விடுதலையான யூதக் கைதிகள் அரசுக்குப், புதிய பிரச்சனையாக இருந்தார்கள் என்று கட்டிக்காட்டுகின்றார்.

இந்தக் கிரேக்கம் பேசும் மக்களிடம் விசுவாசத்தை எடுத்துரைப்பது அவசியம் என்று இளைய திருச்சபை நினைத்ததாகத் தெரிகிறது. ஸ்தோவான் இந்தப், பணிக்கு நியமிக்கப்பட்டார். அவரும் ஞானத்தோடும், ஆவியின் துணையோடும் அதைச் செய்தார் (அ.ப. 6:10). கிரேக்கம் பேசும் புதிய கிறிஸ்தவர்களிடம் பணிசெய்ய நியமிக்கப்பட்ட எழுவரில் இவரும் ஒருவர். இந்த ஏழுபேரும் உரிமை அடைந்தவர்களைப் போல மற்ற இடங்களிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களாக இருக்கலாம்.

உரிமைகள்/சட்டங்கள் (Rights/Laws)

சட்டங்கள் மற்றும் உரிமைகள், என்பவை இருதுருவங்களாகும். ஒன்று குழுத்தன்மையையும் மற்றது தனிநபர்த்தன்மையையும் குறிக்கும். ஒரே சமுதாயத்திற்குள் அனைத்து மனித உறவுகளையும் ஆளுகின்ற அமைப்பினைச் சட்டங்கள் குறிப்பிடுகின்றன. உரிமைகள் என்பவை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சில தீர்மானிக்கப்பட்ட சாத்தியக்கூறுகளை வாக்களிப்பதன் அங்கீகாரமாக உள்ளன. ஒவ்வொரு சமுதாயமும் தனக்கே உரிய சட்டங்களைக் கொண்டுள்ளது. இவை தனது உறுப்பினர்களின் தனிப்பட்ட உரிமைகளை வரையறைப்படுத்தி உறுதியளிக்கின்ற வழிமுறையால் வேறுபடுத்தப்படுகின்றன.

இஸ்ராயேல் சமுதாயமானது தனக்கேயுரிய சட்டநெறிகளைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், அதற்காகப் பெருமை கொண்டு, இறைவனிடமிருந்து பெற்ற மிக மதிப்புமிக்க கொடைகளுள் ஒன்றாக அதனைக் கருதவும் செய்தது (உப 4:6 தொ).

1. பழைய ஏற்பாடு:-

அ. அதிகாரத்தினால் கமத்தப்பட்ட சட்டங்கள்:- சட்டமானது, தீர்ப்பளிக்க அதிகாரமுடையவரால், அதாவது, அதிகாரத்தின் மீதான அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளரால் அறிவிக்கப்படும் முடிவாகும். பன்மையில் இச்சொல்லானது, உத்தரவுகள், கட்டளைகள், ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் ஆகியவற்றுடன் பெரும்பாலும் தொடர்புடைது. சட்டமொழி பல்வேறு அதிகார வடிவங்களைக் கவனமாய் வேறுபடுத்துகிறது. இச்சொற்றொகுதிகள், உடன்படிக்கையின் விளைவாக இஸ்ராயேல் முழுவதும் இறைசித்தத்தின் ஆட்சிக்கு உட்பட்ட காலம் முதல், இறைவனின் சட்டத்தை விவரிக்கப் பயன்பட்டன. செயல் முறையில் இறைவனால் தம் மக்களுக்கு அளிக்கப்பட்ட இச்சட்டமானது, இஸ்ராயேலின் சட்டநெறியை அமைத்தது. பரிசுத்த இறைவனுடைய சித்தத்தினை வெளிப்படுத்தியதன் காரணமாக, இது புனித நெறி என்றும் அழைக்கப்படலாம். ஆனால், எல்லா வகை வழிகளிலும், கண்டிப்பாக வழிபாட்டின் நிலையினைச் சார்ந்துள்ள புனித நிலைக்கு அப்பாற்சென்று வாழ்வு முழவதையும் கட்டுப்படுத்தியது.

ஆ. சட்டங்களும் நீதியும்:- இஸ்ராயேலின் சட்டநெறியில் உள்ள, எல்லாவற்றையும் உருவாக்கும், இறைசித்தத்தின் இந்தப் பிரசன்னமானது, பழங்கால மேற்காசியாவில் அசாதாரணமானதொன்றாகத் தோன்றவில்லை. ஆனால், மக்களின் பெருமையாகவும், உண்மையான இறைவனின் அடையாளத்தைக் கொண்டதாகவும் இருந்தது எனில், உலகை ஆண்டுவந்த எந்தப் பெரிய பேரரசுகளும், யாவேயிடமிருந்து இஸ்ராயேலர் பெற்றதைப்போன்ற சட்டநெறிகளைத் தங்களுடைய தெய்வங்களிடமிருந்து பெறவில்லை (உப 4:6 தொ). விவிலியம் முழுவதிலும், நீதி மற்றும் நேர்மையின் இணைப்பு, சட்டம் மற்றும் நீதிக்கு இடையிலான தொடர்பு என்பன மனசாட்சியினுடைய நிரந்தரக் கோரிக்கையின் அடையாளமாக உள்ளன. இதுவே, இறைவாக்கினர்களின் செய்தியாகும் (ஆமோ 5:7,24; 6:12,.... எச 5:7,16...; எரே 4:2; 9:23), இதுவே ஞானிகளின் போதனை (பழ 2:9). மற்றும் இது மெசியா பற்றிய நம்பிக்கையின் முக்கிய பண்புகளில் ஒன்றாகவும் உள்ளது (எச 1:27; 11:5; 28:17...). ஆனால், இக்கருத்தினை முதலில் வெளிப்படுத்தியவர் இறைவனே (சங் 19:10; 89:15; 119:7..). ''மண்ணகம் முழுவதற்கும் நடுவராய் இருப்பவர் நீதியளிக்க மாட்டாரா'' (ஆதி 18:25).

இ. ஏழைகளின் உரிமைகள்:- சட்டத்தற்கும் நீதிக்கும் இடையிலான தொடர்பானது முற்றிலும் இயல்பானதாக நமக்குத் தெரிகின்றது. நீதிக்குக் கவனம் செலுத்தாத சட்டநெறியானது எப்படிப்பட்டதாக இருக்கும்? சட்டத்திற்குத் துணை புரியாவிட்டால் நீதி என்னவாகும்? ஆனால், விவிலியத்திலுள்ள இந்த இணைப்பின் ஆற்றலும், தனித்தன்மையும், சட்டம் மற்றும் நீதியும் ஏற்றுக்கொண்ட செயல்முறையான மற்றும் ஆட்தன்மையுடைய அமைப்பிலிருந்து வருகின்றன. எவ்வளவு முழுமையானதாக இருப்பினும் நீதியானது, ஒரு விதியை மதிப்பதாக மட்டுமோ, வாய்ப்பின் சரிநிலையை உறுதிப்படுத்துவதாகவோ மற்றும் ஒவ்வொருவரையும் அவருடைய தகுதிக்கேற்ப நடத்துவதாகவோ மட்டும் இருப்பதில்லை. ஒவ்வொரு நபருடைய உண்மையான தேவைகளை, மனிதரிடையே தனது நிலையைக் கண்டடைய அவனுக்குத் தேவையான குறிப்பிட்ட கவனத்தின் முறையினை, இது கண்டடைய வேண்டும். உணவைவிட அத்தியாவசியமான இந்த அத்யாவசியத் தேவையானது சட்டத்தின் அடிப்படையாக உள்ளது. இந்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்காத வகையில் நீதியானது தனக்கே உண்மையானதாக இருப்பதிலலை. இதன் ஒளியில் காணும் போது, சட்டமானது, ஏழைகள், துன்புற

றோர் போன்ற தங்களது துன்பங்களினின்று விடுபட முடியாதவர்கள் மீது முதலில் கவனம் செலுத்துகின்றது (யாத் 23:6; ஏச 10:2; எரே 5:28; யோபு 36:6.17). துரதிருஷ்டத்திற்கு இடையில் குற்றவாளியான ஒவ்வொரு இஸ்ராயேலனும் துரதிருஷ்டமுடையோரின் உரிமைகளை அனுபவிக்கின்றான் (ஏச 40:27; 49:4).

2. புதிய ஏற்பாடு:-

புதிய ஏற்பாட்டின் பார்வையானது மாறுபட்டதாக உள்ளது. நீதியானது முக்கிய இடத்தைத் தொடர்ந்து வகித்தாலும், சட்டம் பற்றிய எண்ணமே மறைவதாகத் தெரிகிறது. இறைவனது மக்கள் இனியும், ஒரு நாட்டின் சமூக அமைப்புகளுடன் கூடிய அரசியல் மக்களாக இல்லாதது இதற்குக் காரணமாக இருக்கலாம். இறைவாக்கினரைப் போன்ற நடையையும், ஏழைகளின் மீது அக்கறையையும் கொண்டுள்ள யாக்கோபின் திருமுகம் கூட அவர்களுடைய உரிமைகளைக் குறிப்பிடவில்லை. ''நீதி, இரக்கம் மற்றும் நல்விசுவாசம்'' என்னும் மூன்று சொற்களில் சட்டத்தினுடைய வலுவான பொருளைக் கிறிஸ்து வரையறுக்கின்ற பகுதி மட்டுமே (மத் 23:23; மீக் 6:8) புதிய ஏற்பாட்டில் இதனைக் குறிக்கின்றது. சட்டத்தின் மீதான பழைய ஏற்பாட்டின் வலியுறுத்தலுக்கு இயேசு முழுவலிமையையும் அளிக்கிறார்; மற்றும் வார்த்தையானது புதிய ஏற்பாட்டை விட, பழைய ஏற்பாட்டிற்கே அதிக அளவில் உரியதாக உள்ளது என்பதை இது காட்டுகின்றது.

சமூக நீதியின் பிரச்சினைகள் இறைவாக்கினர்களின் காலத்தைவிட ஆதித்திருச்சபையில் அவ்வளவு கடுமையாக இல்லையென்பது இம்மறைவுக்குக் காரணமாகலாம். நடைமுறைச் செயல்பாட்டின் தொடக்கமாக உள்ள உள்ளார்ந்த மனநிலைக்கு அளிக்கப்பட்ட வளர்ச்சியோடுகூடிய முக்கியத்துவமும் இதற்குக் காரணமாகலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, சட்டம் பழைய ஏற்பாட்டைப் போன்று நீதியாகவும் ஆழ்ந்த ஆட்தன்மையுடையதாகவும், இருந்தாலும், அது நற்செய்தியால் மாற்றியமைக்கப்படுகிறது என்பதும் இதற்குக் காரணமாகலாம். உண்மையில் இதனுடைய பொன் விதியானது, ''உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' (மத் 7:12) என்பதாகும். இயேசுவே அளிக்கும் கட்டளையானது, ''நான் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்'' என்பதாகும் (யோவா 13:34). பழைய ஏற்பாட்டில் காட்டப்பட்ட ஒவ்வொரு நபருடைய உரிமைகளின் மீதான கவனத்தை அழிக்கவோ, குறைக்கவோ இங்கு ஒன்றுமில்லை. ஆனால், இங்கு ஒருவர் தம்மை மற்றொரு நபரில் காணுவதற்கு அழைப்பு, பகிர்ந்து கொள்ளுவதற்கு ஆவல், ஒன்றிப்புக்கு ஆவல், தம்மையே முழுவதும் பலியாக்கச் செய்யும் அளவுக்கு ஆவல் ஆகிய புதிய உந்துதல்கள் ஏற்படுகின்றன. இறுதியாகச் சட்டங்கள் அன்பை அடிப்படையாகக் கொண்டதாக மட்டுமே இருக்க முடியும்.

உரிமைச்சாசனம், உயில் (WILL)

புதிய ஏற்பாட்டில், ''தியதெக்கே'' என்ற கிரேக்கச் சொல், உடன்படிக்கை, உடன்பாடு, ஒப்பந்தம், உயில் என்று பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இச்சொல் காணப்படுவதில்லை. பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கையைக் குறிக்கும் ''பெரீத்'' என்ற சொல் எழுபது நூலில் 'தியாதெக்கே' என்று மொழிபெயர்க்கப்படுகிறது. அப்படிச்செய்யும்போது, சாசனம், உயில் என்ற பொருள் மறைந்து விடுகிறது. ஆனால் இரு காட்சியாளர்களுக்கிடையே உள்ள உடன்படிக்கையின் விளைவாக அல்லாமல் ஒருவனின் விருப்பத்தையே அறிவிக்கும் பொருளையும் தியாதெக்கே கொண்டுள்ளது. இதில், இறைவன் தமக்கும் தம்மக்களுக்குமிடையே உள்ள உறவின் நிபந்தனைகளைத் தீர்மானிப்பதாகச் சித்தரிக்கப்படுகிறார். இந்த நிபந்தனைகள் இயேசு கிறிஸ்துவின் நிபந்தனைகளில் இறுதியாக நிறைவேறுகின்றன.

ஒத்தமை நற்செய்திகளில், இயேசு உடன்படிக்கையின் இரத்தத்தைப்பற்றிப் பேசுகிறார் (மத் 26:28; மாற் 14:24; லூக் 22:20; 1 கொரி 11:25). தமது மரணத்தால் இயேசு இறைவனின் மீட்கும் சித்தத்தை நிறைவேற்றுகிறார். தம் மக்களுக்காக இறைவனது வாக்குறுதிகளையும் விருப்பத்தையும் குறிக்க சித்தம் அல்லது உடன்படிக்கை என்ற சொற்கள் பயன்பட்டுள்ளன (லூக் 1:72; உரோ 9:4; 11:27; எபே 8:6-13). எபிரேயர்களுக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் இச்சொல்லை விரும்பி, 17 தரம் பயன்படுத்துகிறார்.

விவிலியத்துக்குப் புறம்பான சூழ்நிலையில் ''தியாதெக்கே'' என்ற சொல் இறுதி உரிமைச் சாசனத்தை அல்லது இறுதி உயிலைக் குறிப்பதாக கலா 3:15; எபி 9:16-17 ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. சாதாரணமாய், உடன்படிக்கை, செய்தவன், அதை வெறுமையாக்க முடியாது. கலா 3:15-இல் வாரிக நியமிப்பது பற்றிக் குறிப்பிடப்படுகிறது. கிரேக்கச் சமூகங்களில், உயில் எழுதுபவர், விரும்பினால், மரணத்துக்கு முன் எப்போதும் நீக்கலாம் என்று கருதினர். எபி 9:16-17-இல் ''உரிமைச் சாசனம் எங்கே உள்ளதோ, அங்கே சாசனம் எழுதியவருடைய சாவு உறுதிப்படுத்தப்பட வேண்டும். சாவுக்குப் பின்னரே சாசனம் உறுதிபெறும்'' என்ற கூற்று, புதிய உடன்படிக்கை நிறைவு பெறுவதற்குக் கிறிஸ்துவின் மரணம் அவசியமாகும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

உரிமைச் சொத்து (INHERITANCE)

இது, உடைமைகள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றப்படுவதைக் குறிக்கும் சொல்லாகும். இது, வழிமரபோடு கூடிய மற்ற குடும்ப அல்லது சமூக அதிகாரங்களின் மாற்றத்திலிருந்து வேறுபடுத்தப்படுகிறது. பழங்கால மேற்காசியா முழுவதிலும் உடைமைகள் உரிமைச் சொத்தாகத் தந்தையிடமிருந்து மகனுக்கு மாறின.

இது உறுதியாக, நிலையாக உரிமையோடு சில பொருட்களை உடைமையாகக் கொண்டிருத்தல் இந்த உரிமைச் சொத்தாகும். இது ஒருவர் தம்மையும் தம் குடும்பத்தையும் மற்றவர்களின் இரக்கததிற்கு உட்பட்டவர்களாக ஆக்காமல், தங்களுடைய தனித்தன்மையை விரிவாக்கப்பயன்படும்படி, பொருட்களைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. செயல்முறையில், இது விவசாயம் மற்றும் ஆயர் கலாச்சாரத்தில், நிலங்களையும் ஆட்டு மந்தையையும் ஓரளவு கொண்டிருப்பதாகும். உரிமைச் சொத்தை அடைய மேற்கொள்ளும் முறைகள் கவருதல், கொடையாகப் பெறுதல், சட்டப்படி பங்கீடு செய்தல், மூதாதையரிடமிருந்து பெறுவது (1 அரச 21:3-4) என்று பலவிதமாகப், பல்வேறு நிலைகளில் மாறுபடும்.

1. தந்தையின் சொத்துக்களை உரிமையாக்கி கொள்ளல்:-

இறைவாக்கினர் எலியா இந்த உரிமையை உறுதியாக ஆதரித்துப் பேககிறார். ஆகாபு, நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை எடுத்துக் கொள்ளச் சட்டப்படி முயற்சி எடுத்த போது, நாபோத்து அதற்கு இணங்க மறுத்து, ''நான் என் முன்னோரது உடைமையை உமக்குக் கொடாதபடி ஆண்டவர் என்னைக் காப்பாராக'' என்று கூறிவிடுகிறார் (1 அர 21:13). ஆனால் தன் முன்னோரிடமிருந்து வரும் உரிமைச்சொத்தைத் தன் பிள்ளைகளுக்கு அளிக்கும் நாபோத்தின் உரிமை வஞ்சிக்கப்பட்டது. போலிக்குற்றம் சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார். இதை எலியா வன்மையாகக் கண்டிக்கிறார்.

இராக்கேலும் இலேயாவும் ''எங்கள் தந்தையின் குடும்பத்தில் எங்களுக்குப் பங்கும் உரிமைச் சொத்தும் உண்டோ?'' என்னும் முறையீடு செய்கின்றனர் (ஆதி 13:14,16). இந்த நிகழ்ச்சியுரை யாக்கோபின் மனைவியர் தங்கள் தந்தையிடமிருந்து சொத்தைப் பெற விரும்பியதை மட்டுமே காட்டுகிறது; அத்தகைய வழக்கு இருந்ததாகச் கட்டவில்லை.

உரிமைச் சொத்து ஒருவனது வாழ்வில் எவ்வளவு முக்கியம் உடையது என்றால், அதுவே அவனது வீடாகக் கருதப்படுகிறது

(மீக் 2:2). ''நல்லவனது சொத்து அவனுடைய மரபினரைச் சேரும். பாவி சேர்த்த செல்வமோ கடவுளுக்கு அஞ்சி நடப்போரை வந்தடையும்'' (பழ 13:22)

''போதகரே என் சகோதரன் என்னுடன் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ளுமாறு சொல்லும்'' (லூக் 12:13) என்ற வேண்டுகோள் தலைப்பேறாக இல்லாத சகோதரனின் கவலையைப் பிரதிபலிக்கலாம்.

2. உரிமைச் சொத்து பற்றிய சட்டங்கள்:- இது பற்றிய சட்டங்கள் விவிலியத்தில் சிலவே உள்ளன. ஆயினும் சமூகத்திலுள்ள சில வகுப்பினரின் சொத்துரிமைமட்டும் சிறப்பித்துக் காட்டப்படுகிறது. இதற்குரிய காரணங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை. இவர்களில், அடிமைப்பெண் அல்லது வைப்பாட்டியின் மகன், தலைப்பேற்றான், பெண் மக்கள், கைம்பெண்கள் ஆகியோர் அடங்குவர்.

2. அடிமைப்பெண்ணின் மகன்:- இந்த உரிமை ஒருவனது தாயின் நிலைமையால் அதிகம் பாதிக்கப்படவில்லை. அடிமைப் பெண் ஆகாரின் மகன், சாராவின் மகன் ஈசாக்கோடு உரிமைச் சொத்து அடைவதையும், தலைப்பேற்றானின் உரிமை பெறுவதையும் தடுக்க சாரா தனிப்பட்ட முயற்சி எடுக்க வேண்டியிருந்தது (ஆதி 21:10). பாபிலோனியச் சட்ட அமைப்பு, ஒரு வேலைக்காரி குழந்தைகளைப் பெற, அவர்களுடைய தந்தை அவர்களைத் தன் குழந்தைகளாக ஏற்றுக் கொண்டால், அவர்கள் மனைவியின் பிள்ளைகளோடு சொத்தைச் சமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் தந்தை, அவர்களைத் தன் குழந்தைகளாக ஏற்றுக் கொள்ளாவிடில் அவர்களுக்கு எந்த உரிமையுமில்லை. ஆனால் அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். வைப்பாட்டியின் மகனான அபிமெலக்கு, அவனுடைய தந்தையின் மனைவிகளின் பிள்ளைகளோடு சொத்துரிமை கொண்டாடியது குறிப்பிடத்தக்கதாகும் (நீதி 8:30-31). ''முதலாளியின் மகன் ஒழுக்கங்கெட்டவனாயிருந்தால் அறிவுள்ள வேலைக்காரன் அவனை அடக்கி ஆள்வான்'' (நிதி 17:2). முதன்மை பெறுவான். ''தலைவன் தன் சொத்திலிருந்து எதையாவது தன் ஊழியனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தால் அது விடுதலையாண்டுவரையில் அவ்வூழியனுக்குச் சொந்தமாய் இருக்கும்'' (எச 46:16-17) என்ற கூற்று கவனிக்கத்தக்கதாகும்.

ஆ. மூத்த மகன்:- தன் தந்தையின் சொத்துகளிலிருந்து மூத்தமகன், இரண்டு பங்கு பெறுவான். ரூபன் இஸ்ராயேலுக்கு மூத்தமகன்; ஆனால் ''அவரது தந்தையின் படுக்கையைத் தீட்டுப்படுத்தியதால்'' (ஆதி 49:4) அவருடைய பிறப்புரிமை யோசேப்பின் பிள்ளைகளுக்கு அளிக்கப்பட்டது (1 நாள் 5:1). ரூபனின் தீய நடத்தை அவர் மூத்தமகனின் பிறப்புரிமைபற்றிய சட்டத்தால் வரும் நன்மை அடைவதைத் தடுத்தது. யாக்கோப்பை ஈசாக் ஆசீர்வதித்த நிகழ்ச்சியுரை, மூத்தமகன் பிறப்புரிமை, சடங்குமுறை உணவோடு, ஒருசடங்காக அளிக்கப்பட்டதாகச் சுட்டுகிறது (ஆதி 21:4). ஆசீர் கூறப்பட்டபின் அதன் விளைவுகளைத் திரும்பப் பெற முடியாது (21:37). பொதுவாக இந்தப் பிறப்புரிமை மரபிற்கேற்ப சொத்துக்கள் பிரித்தளிக்கப்பட்டன.

இ. பெண் மக்கள்:- குலமுதியவர்களின் காலத்தில், ஆண்பிள்ளைகளின் உரிமை முதன்மையானதாகும். இது தந்தையின் பெயரையும் உடைமையையும் நீடிக்கச் செய்தது. சந்ததியின் வளர்ச்சியை உறுதிப்படுத்தியது. ஒருவருக்குப் பெண்மக்கள் மட்டுமே இருந்தால், இந்நிலை பற்றி எண் 27:1-11 என்ற பகுதி விரிவாக எடுத்துக் கூறுகிறது. அப்போது சொத்து பெண்மக்களுக்கே உரியது என்று மோசே கட்டளையிட்டார். ஒருவருக்குப் பிள்ளைகளே இல்லையென்றால், சொத்து அவருடைய சகோதரனுக்குப் போய்ச் சேரும். சகோதரனும் இல்லையென்றால் அவருடைய தந்தையின் சகோதரனுக்கு உரிமையாகும். அப்படி யாரும் இல்லையென்றால், அவருடைய அடுத்த உறவினனுக்கு உரியதாகும். இம்முறை நாடு முழுவ

தற்கும் சட்டமாகும். ஒரு கோத்திரத்திலிருந்து அடுத்த கோத்திரத்திற்குச் சொத்துக்கள் மாறுவதைத் தடுக்க, பெண்களை அடுத்த கோத்திரத்தில் திருமணம் செய்வது தடுக்கப்பட்டிருந்தது (எண் 36:6). நாடு கடத்தப்பட்ட பின் நிகழ்ச்சிகளின் விளைவாகவோ, இச் சட்டத்தின் விளைவாகவோ, யோபுவின் பெண் மக்கள் ஆண்பிள்ளைகளோடு சேர்ந்து சொத்தில் பங்கு பெற்றனர் என்று யோபு நூல் கூறுகிறது (யோபு 42:5).

ஈ. கைம்பெண்கள் நிலை:- இவர்கள் தங்கள் கணவர்களின் சொத்தில் பங்கு பெற்று, பாதுகாப்பு அடைவது பற்றி எந்தச் சட்டமும் இல்லை. மூப்படையுமுன் இறப்பது ஒரு பேரிடராகும்; பாவத்திற்குத் தண்டனையாகும்; அதன் விளைவுகளை உயிரோடிருக்கும் மனைவியும் அனுபவிக்க வேண்டும் என்று இதற்குக் காரணம் காட்டப்படுகிறது. ஆனால் சட்டத்திலும் மரபிலும் கைம்பெண்ணுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இல்லை. ''உடன் பிறந்தான் திருமணம்'' என்ற முறை கைம்பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்தது. ஒரு குடும்பத்தின் பெயரையும் சொத்தையும் பாதுகாக்க, கைம்பெண் மீண்டும் மணம் செய்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட திருமணங்கள் கைம்பெண்களுக்கு அவர்களது மரணம் வரைப் பாதுகாப்பளிக்கிறது (மத் 22:24-26).

உ. மற்றவர்கள்:- பொதுவாக மூத்த மகன் உரிமை வழக்கு கடைப்பிடிக்கப்பட்டாலும், அரசனுடைய உடைமைகளும் அரசபதவியும் மாறுவது தன்னியக்கமாகச் செயல்படவில்லை. அரியணைக்கு உரிய உரிமை அரசனுடைய மனைவியர் மூழுவாலும் ஆலோசகர்களாலும் தீர்மானிக்கப்பட்டது (1 அர 1:27-28). மீண்டும் அமைக்கப்பட்ட சமூகத்தில், ஓரிடத்தில் நிலையாக வாழும் அந்நியனுக்கும், அவனுக்குப் பிள்ளைகள் இருந்தால், அவர்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட்டது (எச 47:20). குருக்களுக்கு எந்தச் சொத்துரிமையும் இல்லை (44:28). கிளர்ச்சி செய்யும் மகனின் முடிவு பயங்கரமானதாகும். அவனுக்குச் சொத்துரிமை இல்லாதது மட்டுமன்று அவன் அழிக்கப்படவேண்டும் (உப 21:18-21).

மனித சமுதாயத்தில் நிலவிய இந்த அடிப்படையான அனுபவங்கள் அளிக்கும் செய்திகளின் அடிப்படையிலேயே, இறைவன் மனிதனுக்கு அளிக்கும் கொடையின் அடிப்படைக் கொள்கையைப் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் எடுத்துக் கூறுகின்றன.

II பழைய ஏற்பாடு:-

1. கருத்தின் தோற்றம்:- தொடக்கத்திலிருந்து உரிமைச்சொத்து பற்றிய கருத்து உடன்படிக்கை பற்றிய கருத்தோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருந்திருக்கிறது. இறைத்திட்டத்தில் முக்கூறான உறவினை இது விவரிக்கிறது. இஸ்ராயேல் யாவேயின் உரிமைச்சொத்து; வாக்களிக்கப்பட்ட நாடு இஸ்ராயேலின் உரிமைச்சொத்து. அதன்மூலம் அது யாவேயின் உரிமைச்சொத்தாகவும் உருவாகிறது.

அ. இஸ்ராயேல், கடவுளின் உரிமைச் சொத்து:- இந்த முக்கூறான உறவுகளிலும் மிகவும் அடிப்படையாக இருப்பது 'இஸ்ராயேல் இறைவனின் உரிமைச்சொத்து' (யாத் 34:9; 1 சாமு 10:1; 26:19; 2 சாமு 20:19; 21:3) என்பதே. இக்கூற்று இறைவனுக்கும் ''அவருக்கேயுரிய'' (யாத் 19:5) அவருடைய மக்களுக்கும் இடையில் உள்ள மிக நெருங்கிய உறவைச் சுட்டிக் காட்டுகிறது. ''நீங்கள் என் மக்களாயிருப்பீர்கள் நான் உங்கள் கடவுளாயிருப்போம்'' (எரே 24:7; எச 37:27), என்னும் உடன்படிக்கையின் வாய்பாடானது கிட்டத்தட்ட இதனையே குறிப்பிடுகின்றது. ஆனால், உரிமைச்சொத்து பற்றியகருத்து, தனிப்பட்ட விதத்தில் சொந்தமாக்கும் கருத்தையும் சேர்க்கிறது. இதன் விளைவாக, இஸ்ராயேல் சமயச் சார்பற்ற சூழலிலிருந்து (பிற மக்களின் சுழலிலிருந்து) புறம்பாக்கப்பட்டு, இறைவனுடைய உலகிற்குள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆ. வாக்களிக்கப்பட்ட நாடு, இஸ்ராயேலின் உரிமைச் சொத்து:- ஆதி.15-இல் தரப்பட்டுள்ள மூதாதையரின் உடன்படிக்கை

யைப் பற்றிய வாசகப்படி, இந்த இரண்டாவது உறவானது உடன்படிக்கை பற்றிய கருத்துடன் சரிநிகராக இணைந்துள்ளது என்பது தெளிவாகிறது. அதில், ஆபிரகாமிற்கான இறைவனின் வாக்குறுதியானது வாரிசாகிய ஈசாக்கு மற்றும் அவருடைய சந்ததி, உரிமைச் சொத்தாகிய கானான் நாடு என்னும் இரண்டு இலக்குகளைக் கொண்டுள்ளது. இயல்பாகவே, ஆபிரகாமின் வாரிசுகளும் இவ்வாக்குறுதியினை உரிமையாக்கிக் கொள்வர் (ஆதி 26:3; 35:12; யாத் 6:8). கானான், உரிமைச் சொத்தாக இன்னும் ஆபிரகாமுக்கு அளிக்கப்படாமல் அவருடைய வாரிசுகளுக்கே வாக்களிக்கப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். இந்த வாக்குறுதியும், அதனின்று வெளிப்படும் இஸ்ராயேலின் எதிர்பார்ப்பும் உரிமைச் சொத்து பற்றிய கருத்தைப் படிப்படியாக வளப்படுத்துகிறது. நிறைவேறாத, அளவுக்கு மீறிய, உலகியல் எதிர்பார்ப்புகளின் விளைவான ஏமாற்றங்கள், மனிதனுடைய இதயத்தைத் திருப்தியடையச் செய்யக்கூடிய உண்மையான ஒரே உரிமைச் சொத்தினை விரும்பக் கூடிய அளவிற்கு இஸ்ராயேலின் எதிர்பார்ப்பு நிலை உயர ஏதுவாகின்றன.

இ. வாக்களிக்கப்பட்ட நாடு, கடவுளின் உரிமைச் சொத்து:- முதல் இரண்டு உறவுகளினின்று இந்த மூன்றாவது உறவு வெளிப்படுகின்றது. இந்த வாய்பாடு இறைவனுக்கும் கானானுக்கும் இடையிலுள்ள இணைப்பை இயல்பானதாக வெளிப்படுத்துவதில்லை. இக்கருத்தைப் பொருத்தமட்டும், அவர்களுடைய பல்வேறு நாடுகள் பல்வேறு கடவுளர்களுக்கு உரியவை என்று கருதுகின்ற சூழ்ந்துள்ள பிற மக்களினின்று இஸ்ராயேல் வேறுபட்டதாக உள்ளது. உண்மையில் முழு உலகமும் இறைவனுக்கு உரியது (யாத் 19:5; உப 10:14). கானான் ஒரு சிறப்புப் பட்டத்தின் மூலம் அவருடைய உரிமைச் சொத்தாயிற்றெனில், அவர் அந்த நாட்டை இஸ்ராயேலுக்கு அளித்தலும் அதன் விளைவாக, தன்னுடைய உறைவிடத்தை அங்கே ஏற்படுத்த விரும்பியதுமே காரணமாகும் (யாத் 15:17). இது இஸ்ராயேலின் ஒவ்வொரு கோத்திரமும் உரிமைச் சொத்தில் தனக்குரிய பங்கைப் பெறுவதற்காகப் புனித பூமி பங்கீடு செய்யப்படுவதின் ஆழமானபொருளை அளிக்கின்றது (நீதி 13-21). ஒவ்வொரு பங்கும் இறைவனிடமிருந்து பெறப்படுகிறது. அதன் எல்லைகள் தொட்டறிய முடியாதவையாக உள்ளன (எண் 36). கட்டாயமாக விற்கப்பட்டால் ஜூபிலி ஆண்டானது சொத்துக்குரியவருக்கு ஒவ்வொரு சொத்தையும் திருப்பிப்பெற வாய்ப்பளிக்கிறது (லேவி 25:10); "நாடு நம்முடையதாகையாலும், நீங்களோ எம்மிடத்தில் அந்நியர்களும் இரவற் குடிகளுமாகையாலும், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்க வேண்டாம்" (லேவி 25:23). இஸ்ராயேல் தன்னுடைய நாட்டிலேயே இறைவனுடைய உழவனாக உள்ளது; இஸ்ராயேல் தனக்காக இல்லாமல் இறைவனுக்காகவே அதில் வாழவேண்டும்.

2. கருத்தின் வளர்ச்சி:-

இறுதிக்காலக் கட்டத்துடனான தொடர்பு மற்றும் ஆன்மிகப்படுத்துதல் என்னும் இரு கூறுகளைப் பழைய ஏற்பாட்டில் இக்கருத்தின் வளர்ச்சி கொண்டுள்ளது.

அ. இறுதிக்கால உரிமைச்சொத்து:- கானானை வெற்றிகொள்ளுதல் ஆதி.15-இல் வரும் உறுதிமொழியின் நிறைவேற்றமாகத் தோன்றலாம். எட்டாம் நூற்றாண்டில் தொடங்கி, இறைவனுடைய உரிமைச் சொத்தானது சிறிது சிறிதாக யூதரல்லாதோருடைய ஆதிக்கத்திற்கு உட்படுகிறது. இறைவன் தம்முடைய வாக்குறுதிகளினின்று பின்வாங்கவில்லை, இஸ்ராயேலின் பாவங்கள், வாக்குறுதிகளின் விளைவுகளைத் தற்காலிகமாக விட்டுக் கொடுக்கின்றார். இறுதிக்காலத்தில் மட்டுமே எஞ்சியுள்ள, இறைவனுடைய மக்கள் என்றென்றும் தங்களுடைய உரிமைச் சொத்தாக அந்நாட்டை உரிமையாக்கிக் கொண்டு, அதனில் நிறைவான மகிழ்ச்சியை அனுபவிப்பர் (உப 28:62-63; 30:5). உப ஆகமத்தில் உள்ள இப்படிப்பினையானது, நாடு கடத்தலின் போது (எச 45-48; எச 47:14-இல் ஆதி 15 சுட்டிக்காட்டப்படுதல்) கடத்தலுக்குப் பின்னும் (செக் 8:12; ஏச 60:21)

இறைவாக்கினரில் காணப்படுகின்றது. நீதிமான்கள் மட்டுமே உரிமைச் சொத்தினை இறுதியாக அனுபவிப்பவர்களாக இருப்பர் (சங் 37:9.11.18.22.34; 25:13; 61:6; 69:37).

இஸ்ராயேலின் நம்பிக்கை பற்றிய இம் மாற்றத்தில், இறைவனால் அபிடேகம் செய்யப்பட்ட அரசனுக்கு அளிக்கப்பட்ட சிறப்பிடத்தைப் பற்றிக் குறிப்பிட இடமுண்டு. ''உமக்கு மக்களினங்களை உரிமையாக்குவோம்; உலகின் கடைசி எல்லைவரை உமக்குச் சொந்தமாக்குவோம்'' (சங் 2:8) என்று ஆதிகால சங்கீத ஆசிரியர் ஒருவர் வாழ்கின்ற அரசனுக்கு வாக்குறுதி அளித்திருக்கலாம். ஆனால் நாடு கடத்தலுக்குப் பின்னர் அதனை மீண்டும் வாசிக்கும் போது, மெசியாவாகிய வருங்கால அரசரைப் பற்றியதாக இவ்வாக்குறுதி புரிந்து கொள்ளப்படுகிறது (சங் 2:2).

நாட்டின் உரிமைச்சொத்து, மக்களினங்களின் உரிமைச்சொத்து போன்ற இறுதிக்கால இயலானது, எப்பொழுதுமே உலக முன்னோக்கிலிருந்து விளைவதன்று. மரணத்திற்குப் பிற்பட்ட வெகுமதி பற்றிய கோட்பாடு ஒருவடிவம் எடுத்தபிற்பாடு, இந்த இறுதிக் கட்டமானது மெதுவாகச் செயல்படும். இறைவனால் நீதிமான்களுக்கு வாக்களிக்கப்பட்ட உரிமைச்சொத்தை உடைமையாக்கிக் கொள்வது (தானி 12:13; ஞான 3:14; 5:5), மரணத்திற்குப் பின்னர் வரவிருக்கும் உலகில் இருக்கும். ஆனாலும், இது உருமாறிய உரிமைச் சொத்தேயாகும்.

ஆ. ஆன்மீகப் படுத்தப்பட்ட உரிமைச் சொத்து:- உரிமைச் சொத்தை ஆன்மீகப்படுத்தலின் தொடக்கம் லேவியர்களின் நிலையாகும். உப.10:9-இன் விதிமுறைப்படி ''இறைவனே அவர்களது உரிமைச்சொத்தாக இருப்பதால், தங்களுடைய சகோதரருடன் உரிமைச்சொத்து இல்லாமலிருக்கும்.'' ஆரம்பத்தில், இவ்விதிமுறையானது உலகைச்சார்ந்த வழியில் புரிந்து கொள்ளப்பட்டது: ''லேவியரின் உரிமைச் சொத்தானது விசுவாசிகளுடைய காணிக்கைகளைக் கொண்டதாக இருந்தது'' (உப 18:1-2). ஆனால், அது படிப்படியாக ஒரு ஆழமானபொருளைக் கொண்டு மொத்தமாக எல்லா மக்களுக்கும் சாற்றிக் கூறப்பட்டது. யாவேயே அதனுடைய உரிமைச்சொத்து (எரே 10:16; யாவேயே என்னுடைய பங்கு') இந்த உறுதியானது, உலகைச்சார்ந்த உரிமைச்சொத்தாகிய கானான் நாடு இறைமக்களிடமிருந்து எடுக்கப்பட்ட காலம் முதல் (புல.3:24) தன் முழுப்பொருளையும் பெறுகிறது.

உரிமைச்சொத்து பற்றிய எண்ணத்தை முழுமையாக ஆன்மீகப்படுத்தலின் தொடக்கம் இதுவே. ''யாவேயே என்னுடைய பங்கு'' (சங் 16:5; 73:26) என்று சங்கீத ஆசிரியர்கள் கூறும்போது, தங்களது இதயத்திற்கு முழுத்திருப்தி அளிக்கின்ற முழு நன்மையையே அங்குக் குறிப்பிடுகின்றனர். முழுவதும் உள்ளார்ந்த இந்த உரிமைச்சொத்தானது எஞ்சியுள்ள விசுவாசிகளுக்கு மட்டுமே உரியது என்பது தெளிவாக உள்ளது. இது இனிமேலும், விசுவாசத்தோடு இருந்தமைக்காக அளிக்கப்படும் வெளிப்புற வெகுமதியாக இல்லாமல், விசுவாசத்தினால் விளைகின்ற மகிழ்ச்சியே ஆகும் (சங் 119). இந்தப் புதிய முன்னோக்கில் நாட்டை உரிமையாக்கிக் கொள்ளுதல் வரவிருக்கும் உலகில் அவன் பெறவிருக்கும் உரிமைச் சொத்தினை ஒருவிதத்தில் எதிர்பார்க்கிறது என்பது தெளிவு.

III. புதிய ஏற்பாடு:-

1. வாக்குறுதிகளின் உரிமையாளர்:-

அ. கிறிஸ்து ஒரே உரிமையாளர்:- பழைய ஏற்பாட்டில் வாக்குறுதியின் உரிமையாளர் என்பது முதலில் இறைமக்களுக்கு மட்டுமாகவும், பின்னர் எஞ்சிய விசுவாசிகளுக்குமென்றும் ஒதுக்கி வைக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில், முதலாவதாக, இவ்வாறு எஞ்சியவர் கிறிஸ்துவே என்பது தெளிவாகிறது. கிறிஸ்துவில் ஆபிரகாமின் சந்ததியினர் ஒரு முகப்படுத்தப்படுகின்றனர் (கலா 3:16). மகன் என்ற அளவில் உரிமைப்பேற்றின் உரிமையைப் பிறப்பினால் அவர் கொண்டுள்ளார் (மத் 21:38). வானதூதர்களுடைய

பெயரைவிட உயர்ந்த பெயராகிய (எபி 1:4), யாவேயின் பெயரையே (பிலி 2:9). அவர் உரிமையாகப் பெற்றதால், இறைவன் அவரை 'எல்லாவற்றிற்கும் உரிமையாளராக்கினார்'' (எபி 1:2).

ஆனாலும், இந்த உரிமைப்பேற்றினை உண்மையாகவே அடைவதற்கு, இயேசு தனது பாடுகளையும் இறப்பையும் ஏற்க வேண்டியிருந்தது (எபி 2:1-10; பிலி 2:7-11). தொன்மையான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்தது எதுவெனக் காட்டினார்; அது மனிதர் கண்டுணர்ந்த அடிமை நிலையாகும் (கலா 4:3. 8; 5:1; யோவா 8:34). இறைவன் அவர்களை உட்படுத்திய-அடைபட்டுக் காவலில் வைக்கப்பட்ட-நிலையாகும் (கலா 3:23; 4:1 தொ). இயேசு இத்தற்காலிக நிலையை முடித்ததால், நாம் அடிமைத்தன்மையினின்று வெளிப்பட்டு அவருடைய மக்களாக, அதன் மூலம் உரிமையாளர்களாக உள்ள நிலைக்குச் செல்ல முடிகிறது (கலா 4:5 தொ). அவரது மரணத்தின் விளைவாக நமக்கு வாக்களிக்கப்பட்ட முடிவில்லா உரிமைப் பேற்றினை நாம் இப்போது அடைய முடியும் (எபி 9:15).

ஆ. நம்பிக்கையாளர்கள், கிறிஸ்துவில் உரிமையாளர்கள்:- உண்மையில் இதுவே கிறிஸ்துவர்களின் இன்றைய நிலையாகும். ஆண்டவருடைய ஆவி அவர்களுக்கு உயிரளிப்பதால் அவர்கள் இறைவனுடைய சுவிகாரப் பிள்ளைகளாகவும், அதன்மூலம் இறைவனுடைய உரிமையாளர்களாகவும், கிறிஸ்துவின் உடன் உரிமையாளர்களாகவும் உள்ளனர் (உரோ 8:14-17). ஈசாக்கும், யாக்கோபுவும் கொண்டிருந்ததைப்போன்று (எபி 11:9), அவர்களும் மூதாதையருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியை உரிமையாகக் கொண்டிருக்கின்றனர் (எபி 6:12.17). ஏனெனில் அவர்களே ஆபிரகாமின் சந்ததியினர் ஆவர். ஊனுடலின்படி இஸ்ராயேலின் உறுப்பினராக இருப்பது போன்று, மோசேயின் சட்டத்திற்குக் கீழ்ப்படிதலானது உரிமைச்சொத்திற்குப் பயனற்றது. விசுவாசத்தினால் கிறிஸ்துவிற்குள் இணைந்திருப்பது மட்டுமே ஏற்கப்படக்கூடியதொன்றாகும் (உரோ 4:13-14). கிறிஸ்துவின் மறைபொருளில் ''புற இனத்தவரும் ஒரே உரிமைப்பேற்றுக்கு வாரிசுகள், வாக்குறுதியில் பங்கு உடையோர் ஆயினர்'' என்பதே இதன் விளைவாகும். (எபே 3:6; கலா 3:28-29). கிறிஸ்துவைச்சுற்றிப் புதிய மக்கள் அமைக்கப்படுகின்றனர். இவர்களே ஒரே உரிமையாளர் ஆவார். அருளின் மூலமாக (உரோ 4:16) உரிமைப்பேற்றின் உரிமை இம்மக்களுக்கு அளிக்கப்படுகிறது.

2. வாக்களிக்கப்பட்ட உரிமைச்சொத்து:- ''அர்ச்சிக்கப்பட்டவரோடு இறைவன் மனிதருக்கு அளிக்கின்ற'' (அ.ப.20:32) ஒளியிலுள்ள ''இறைமக்களிடையிலான உரிமைப்பேற்றின் மாட்சியானது'' (எபே 1:18) அதே நேரத்தில் அதனுடைய உண்மையான இயல்பையும் காட்டுகின்றது. கானான் நாடானது வாக்குறுதிகளுக்குப் போதிய தகுதியுள்ள இலக்காக இல்லை. விண்ணக நகரின் உருவமாக மட்டுமே அது இருந்தது (எபி 11:8 தொ). ''உலகின் தொடக்கத்திலிருந்தே'' (மத் 25:34) தந்தையானவர் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கெனத் தயாரித்த உரிமைச்சொத்தானது 'அருளே' ஆகும் (1 பேதுரு 3:7); இதுவே மீட்பு (எபி 1:14); இதுவே இறையரசு (மத் 25:34; 1 கொரி 6:9; 15:50; யாக் 2:5); இதுவே முடிவில்லா வாழ்வு (மத் 19:29; தீத் 3:7).

இச்சொற்றொடர்கள் உரிமைப் பேற்றினுடைய அறிவுக்கப்பாற்பட்ட யாவும் கடந்த சிறப்பியல்பினை வலியுறுத்துகின்றன. இது உடல் மற்றும் இரத்தத்தின் பிடிப்பிற்குள் இல்லாமல், கிறிஸ்துவின் சாயலில் உருமாற்றப்பட்ட ஒரு நபரைக் கோருகிறது (1 கொரி 15:49-50). ஓர் அரசு என்ற அளவில் இது அவருடைய உலகளாவிய அரசுரிமையில் பங்கு பெறுதலாகும் (மத் 5:4; 25:34; உரோ 4;13; ஆதி 15; சங் 2:8). முடிவில்லாத என்ற அளவில் வாழ்வும், உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் பங்கு பெறுவதும் (1 கொரி 15!45-50), அதன் மூலமாக இறைவனுடைய வாழ்விலேயே பங்கு பெறுவதுமா

கும். மரணத்திற்குப் பிறகு மகிமையில் கிறிஸ்துவோடுசேரும்போது நாம் இதனை அடைவோம். இப்பொழுது நாம், மகிமை யைப் பற்றிய நம்பிக்கையை மட்டுமே கொண்டுள்ளோம் (தீத் 3:7). மகிமையை முழுமையாக அடையக்கூடிய கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருக்கும் இவ்வேளை யில். நமக்கு அளிக்கப்பட்ட தூய ஆவியே இம்மகிமையினுடைய நமது அச்சாரமாக உள்ளார் (எபே 1:14).

உரியா (URIAH யாவே ஒளியாவார்)

1. தாவீது தனக்கென அமைத்த 'முப்பது பேர்' படையில் ஒருவர். கித்தியர் இனத் தைச் சேர்ந்தவர். இப்படையில் புறவினத் தார் பலரும் இருந்தனர். அவர்களில் உரியா வும் ஒருவர் (2 சாமு 23:39; 1 நாள் 11:41). இவர் யூதர்களைப் பின்பற்றுவதற்குமுன் இவரது பெயர் ஆரியாவாக இருந்திருக்க வேண்டும் என்றும், அதன் பிறகு உரியா என்று மாறியது என்றும் கூறுவர். இவரோடு 'முப்பதுபேர்' படையில் இருந்த எலியா மின் (2 சாமு 23:34) மகளான பதுசேபாவை மணந்தார். அப்படியாயின் இவள் அகித்தோ பலின் பேத்தியாவாள். தாவீது அவளோடு கூடியிருந்ததால் அவள் கருவுற்றாள். தாவீது எவ்வாறாகிலும் உரியாவைப் பதுசேபா வோடு இணைத்துவிட வேண்டும் என்று செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை ஏனெனில் அச்சமயத்தில் அம்மோனியர் மலைநகரான இரபாமேல் தாவீது முற்றுகை யைத் தொடங்கியிருந்தார். போருக்குச் செல் பவர்கள் எந்தவிதத் தீட்டும் படாதவர்களாக இருக்க வேண்டும் என்பது அன்று இருந்த வழக்கம் (காண்க 1 சாமு 21:4). அதனை அணுவும் பிசகாது கடைப்பிடித்ததுடன் தனது வார்த்தைகளாலும் பெட்டகத்தின் மீதும், தாவீதின் மீதும், படைத்தளபதி யோவாபின் மீதும் தனது பிரமாணிக்கத்தை வெளிப்படுத்துகிறார் உரியா. இறுதியில் தாவீது யோவாபிற்குக் கொடுத்தனுப்பிய கடிதத்தின்படி உரியா கடும் சண்டை நடக் கும் இடத்தில் நிறுத்தப்பட்டு இறக்கிறார். அதற்குப் பிறகு அவரது மனைவி தாவீதின் மனைவியாகின்றாள் (2 சாமு 11:1). இறை வாக்கினர் நாத்தான் இதனைச் சுட்டிகாட்டிய பிறகு தாவீது திருந்துகிறார் (2 சாமு 12:1-15). தாவீதுக்குப் பதுசேபா மூலமாகப் பிறந்த சாலமோன் வழியில்தான் இயேசு பிறந்ததாக மத்தேயு தனது தலைமுறை அட்டவணை யில் குறிப்பிடுகின்றார் (மத் 1:6).

2. எசய இறைவாக்கினருக்கு வெளிப்ப டுத்தப்பட்ட இறைவாக்குகளை வரைபல கையில் எழுதிவைத்ததற்குச் சாட்சிகளாக நியமிக்கப்பட்ட, இருவரில் ஒருவரான உரியா ஒரு குரு (எச 8:2). இச்சாட்சிச் செயல் அக்காலத்தில் யூதர்களிடம் நிலவிய 'இரு சாட்சிகள்' வழக்கத்திற்கு ஒத்ததாக அல்லது இவ்வாக்குகள் நிறைவேறும்பொழுது எசய உண்மையிலேயே இறைவனிடமிருந்து ஓர் அடையாளம் கொடுத்தார் என்பதற்குச் ஆதர வாகப் பயன்பட்டது (காண்க உப 18:22).

3. ஆகாசு மன்னன் காலத்தில் இருந்த தலைமைக்குரு. ஒருவேளை(2)-இல் வருபவ ராகவும் இருக்கலாம். ஆகாசு, அசீரிய மன்னன் திகிலாத்துபிலேசரைச் சந்திக்க தமாஸ்கு சென்ற போது அங்குக்கண்ட ஒரு பீட அமைப்பைத் தன் நாட்டில் அமைக்குமாறு உரியாவுக்குக் கட்டளையிட்டார். அவர் திரும்பிவரும்போது உரியாவும் அதனைச் செய்து முடித்திருந்தார் (2 சாமு 16:10-16). இதற்கு இணையான விவரிப்பில், 2 நாள் 28:22-24-இல், இக்கதை சேர்க்கப்பட வில்லை.

4. இவர் கிரியத்-எயாரீம் என்னும் ஊரில் வாழ்ந்த செமாயாவின் மகனான ஒரு இறை வாக்கினர் (எரே 26:20-23). எரேமியாவுக்கு அவரது ஆலய உரைக்குப்பின் வரவிருந்த அபாயத்தை உணர்த்துவதற்காக இவரது கதை ஒரு பிற்சேர்க்கையில் கூறப்படுகிறது (எரே 26:20-23). உரியா எகிப்துக்குத் தப்பிச் சென்றாலும் மன்னனின் ஆட்களால் இழுத்து வரப்பட்டு இரக்கமில்லாது கொல் லப்பட்டுப் பொதுக்கல்லறையில் எறியப் பட்டார் (26:21-23).

5. 'மெரெமோத்து' என்பவரின் தந்தை யான உரியா ஒரு குரு ஆவார். இவர்

காக்கோசின் வழிவந்தவர் (எஸ் 8:33; நெக 3:4.21). நெகமியா காலத்தில் எருசலேமின் சுவரைக் கட்டியவரில் ஒருவர்.

6. எஸ்ரா சட்ட ஒழுங்குகளைப் பொது வில் வாசித்தபோது அருகில் நின்றவர்களில் ஒருவர் (நெக 8:4). இவர் எப்பட்டமுமோ, முன்னோர் பட்டியலிலோ இல்லாமல் கூறப்படுகிறார். ஆகவே இவர் பொது நிலை யினராக இருக்க வேண்டும். இவர் (5)-இல் குறிப்பிடப்பட்டவராக இருக்கலாம்.

உரியேல் (URIEL இறைவன் ஒளியாவார்) -ஆள்.

1. தாவீதரசரின் காலத்தில் உடன்படிக் கைப் பேழையை ஓபேது ஏதோமின் வீட்டி லிருந்து எருசலேமுக்குக் கொண்டு வந்த போது அதனைக் கொண்டுவர உதவியவர்க ளில் ஒருவர். இவர் கெகாத்திய லேவிய குலத்தைச் சேர்ந்த தகாத்தின் மகனும் ஊசி யாவின் தந்தையுமாவார் (1 நாள் 6:24; 15:5).

2. இவர் கிபயா நாட்டைச் சேர்ந்தவர். இவரது மகள் மாக்கா மூலமாகப் பிறந்த அபியா யூதாவை மூன்று ஆண்டுகாலம் ஆட்சி புரிந்தார் (2 நாள் 13:2). மாக்கா, ஆசா என்ற மன்னனின் காலம்வரை அரசியாக யூதாவின் அரசவையில் வீற்றிருந்தாள் (1 அர 15:10.13; 2 நாள் 15:16).

உரியேல் (URIEL) - வானதூதர்

நான்கு தலைமை வானதூதர்களில் ஒருவர் உரியேல். (மற்றவர்கள் மிக்காயேல், காபிரி யேல், இரப்பாயேல்). இப்பெயரைப்பற்றி விவிலியத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. விவிலியத்திற்கு வெளியே ஏனோக்கு போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தூதர் நோவாவுக்குச் செய்தி கொண்டு சென்றவராகவும் உலகைக் கண்காணிப்பவ ராகவும் காட்சிகளில் வருபவராகவும் கூறப் படுகின்றார். விவிலிய அட்டவணையில் வராத இரண்டாம் எஸ்திராஸ் நூல் தீமைக ளைப்பற்றியும், கடவுளுடைய வழிகளைப் பற்றியும் எஸ்ரா கலக்கமுற்றிருந்த போது அவருக்குத் தெளிவுபடுத்துபவராகக் கூறப்ப டுகின்றார். யூதர்களிடம் நிலவி வந்த மிட் ராஸ்நூல்களில் உரியேல் ஒளியைக் கொண்டி ருப்பவராகவும், இஸ்ராயேலுக்கு ஒளியைக் கொண்டு வருபவராகவும் விளக்கப்பட்டுள் ளார்.

உருகாமா (RUHAMAH- இரக்கம் காட்டப்பட்ட)

ஓசேயாவின் மகளுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளப்பெயர் இது. மீட்பின் நாளிலே இஸ்ராயேலுக்குக் கொடுக்கப்படவேண்டிய புதுப்பெயராகும் இது. இதன் பொருள் 'அவள் இரக்கம் காட்டப்பட்டவள்' என்பதாம். இறைவன் கோப மனப்போக்கிலி ருந்து இரக்கம் உடையவராக மாறுவதை இது காட்டுகிறது (ஓசே 2:1.23).

உருமாற்றம் (TRANSFIGURATION)

இது இயேசுவின் வாழ்வில், மலைமீது மூன்று சீடர்களின் முன்னிலையில், அவரது தோற்றம் மாட்சிமை மிக்கதாக மாறிய நிகழ்ச்சியாகும் (மத் 17:1-9; மாற் 9:2-10; லூக் 9:28-36; 2 பேதுரு 1:16-21).

1. நிகழ்ச்சி:- இந்த மறைபொருள்மிக்க நிகழ்ச்சியில் மூன்று வியப்புக்கள் நிகழ்ந்தன;

(அ) இயேசு உருமாறினார் அல்லது அவரது முகமும் ஆடைகளும் அசாதாரணமான ஒளியினாலோ மகிமையினாலோ மாறின; (ஆ) நீண்ட காலத்திற்கு முன்பே இறந்து விட்ட எலியாவும் மோசேயும் தோன்றினர்; (இ) மேகத்திலிருந்து விண்ணகக் குரலொலி பேசியது.

இயேசு தம்முடன் பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானை மலைக்குக் கூட்டிச் சென்றார்; அங்கே இருப்பது நல்லது என்றும் இயேசுவிற்கும், மோசேக்கும், எலியாவுக்கும் மூன்று கூடாரங்கள் அமைக்கவேண்டும் என்றும் பேதுரு கூறினார்; சீடர்கள் மூவரும் அஞ்சி நடுங்கினர்; ''இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவி சாயுங்கள்'' என்று அவர்கள் மீது நிழலிட்ட மேகத்திலிருந்து குரலொலி கேட்டது; மனுமகன்

உயிர்க்கும்வரை இக்காட்சியைச் சீடர்கள் எவருக்கும் சொல்லக்கூடாது (மத்தேயு மற்றும் மாற்கு); தங்களது அனுபவத்தைப் பற்றி அவர்கள் எவரிடமும் கூறவில்லை (லூக்கா). இவற்றில் நற்செய்தி நூல்கள் ஒத்துப் போகின்றன.

மாற்குவில் காணப்படும் சலவைக்காரன் மற்றும் பேதுருவின் அறியாமை பற்றிய குறிப்புக்களை மத்தேயு விட்டு விடுகிறார். ஆனால் இயேசுவின் முகம் கதிரவனைப் போல் ஒளிவீசியது; ஒளிரும் மேகம்; ''இவரிடம் நான் பூரிப்படைகிறேன்'' என்னும் சொற்கள்; சீடர்கள் குப்புற விழுந்தது; அஞ்சாமல் எழச்சொல்லி இயேசு அவர்களைத் தொட்டது போன்ற குறிப்புக்களைச் சேர்க்கிறார். லூக்காவும் மாற்குவை விரிவுபடுத்துகிறார்; இயேசு செபித்துக் கொண்டிருக்கும் போது அவரது முகத்தோற்றம் மாறியது; மோசேயும் எலியாவும் எருசலேமில் நிறைவேறப் போகின்ற அவருடைய இறுதிப்பயணம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்; ''நான் தேர்ந்து கொண்டவர்''; மேகம் ஒன்று வந்து அவர்கள் மேல் நிழலிட்டது; சீடர்கள் தூக்க மயக்கமாயிருந்தாலும் விழித்தெழுந்து அவருடைய மாட்சியைக் கண்டனர் போன்ற விவரங்களைச் சேர்க்கிறார்.

2. காலம்:- இயேசுவே கிறிஸ்து என்று பேதுரு அறிவித்த பின்னர், தம்முடைய துன்பங்கள், மரணம் மற்றும் உயிர்ப்பு, தமது சீடர்களுக்குச் சிலுவையின் அவசியம், அரசின் வருகை (மாற்கு மற்றும் லூக்கா) அல்லது மனுமகனின் வருகை (மத்தேயு) ஆகியவற்றைப்பற்றி இயேசு முன்னறிவித்ததற்குச் சில நாட்களுக்குப் பின்னர், மாற்குவின்படி ஆறுநாட்கள், லூக்காவின்படி எட்டு நாட்கள், உருமாற்றம் நிகழ்கிறது. எருசலேம் நோக்கி இயேசு தமது இறுதிப் பயணத்தைத் தொடங்குவதற்குச் சற்று முன்னர், அவரது பணியின் காரணமான வடக்கு நோக்கிய பயணத்தின் தீர்மானமான காலம் இதுவேயாகும். உருமாற்றம் நிகழ்ந்தது பகலிலா அல்லது இரவிலா என்ற கேள்விக்கு, இரவு என்று லூக்கா சுட்டுவதாகத் தெரிகிறது (9:32).

3. இடம்:- மலையின் பெயர் குறிப்பிடப்படவில்லை. மத்தேயுவும் மாற்குவும் உயர்ந்ததெனக் குறிப்பிடுகின்றனர்; 2 பேதுரு 1:18, அது ''பரிசுத்த மலை'' என்கிறது. உருமாற்றத்திற்கு முன்னதாக நடந்த நிகழ்ச்சிகள் செசாரியா, பிலிப்புவிற்கு அருகில் நடைபெற்றன. உருமாற்றத்திற்குப் பின்னர், இயேசுவும் அவருடைய சீடர்களும் கலிலேயா வழியாகக் கடந்து செல்கின்றனர் (மாற் 9:30). இம்மலைக்குப் பெயரிடுவதென்றால், செசாரியா பிலிப்புவிற்கு வடக்கே எழுகின்ற மிக உயர்ந்த கெர்மோன் மலையின் தென்புறத்து மலையடிவாரக் குன்றுகளில் ஒன்றாகவே இருக்கூலாம். தாபோர் மலை தனக்குரிய ஆதரவாளர்களைக் கொண்டிருந்தாலும், இவ்விடம் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. எருசலேம் நகர சிரிலும், எரோனிமுசும் (நான்காம் நூற்றாண்டு), உருமாற்றத்திற்குத் தாபோர் மலையைக் குறிப்பிடுகின்றனர். ஆறாவது நூற்றாண்டு முதல், இடைவெளிவிட்டு, ஆலயங்கள் கட்டப்பட்டு, அந்நிகழ்ச்சியைச் சிறப்பிக்கத் திருயாத்திரைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சி நடந்த இடமாக மலையை அடையாளம் காட்டுவது ஏற்கக்கூடியதல்ல. ஏனெனில், இந்நிகழ்ச்சிக்கான ஒத்தமை நற்செய்திகளின் அமைப்பானது கெர்மோனுக்கு அருகில் உள்ளது; தாபோர் உயர்ந்ததல்ல; எபிரேயரின் நற்செய்தியும் (இரண்டாம் நூற்றாண்டு) மற்ற நூல்களும் தாபோர் மலையைச் சோதனையின் இடமாகக் குறிப்பிடுகின்றன; மேலும், தாபோரின் மேல்பகுதி முழுவதிலும் கவரெழுப்பப்பட்டிருந்தது.

4. பொருள்:- உருமாற்றமானது விரிவுரையாளர்களின் இன்பமாகவும், ஏமாற்றமாகவும் உள்ளது என்பர். (அ) இயேசுவின் இறைவனுடைய மகிமையானது ஒரு சம்பவத்திலேயே மையம் கொண்டிராமல், அவருடைய வாழ்வு, மரணம் மற்றும் உயிர்ப்பு முழுவதிலும் வெளிப்படுத்தப்படுவதால், நான்காவது நற்செய்தி உருமாற்றத்தினை விட்டு விடுகிறது (1:14; 2:11; 5:44; 7:18.39; 11:4.40; 12:16.23.28.41; 13:31; 17:1. 5.10.22.24; 21:19).

(ஆ) ஒத்தமை நற்செய்திகளுக்குப்பின், உருமாற்றம்பற்றிய காலத்தால் முந்திய குறிப்பினை 2 பேதுரு கொண்டுள்ளது. பேதுருவின் பெயரையும் அதிகாரத்தையும் பயன்படுத்திக் கிறிஸ்தவர்கள் சூழ்ச்சியாகப் புனைந்த கதைகளை நம்பவில்லை; தமது அன்பு மகனுக்குரிய இறைவனின் கொடையாகிய மதிப்பை மாட்சிமையில் விகவாசிக்கின்றனர்; கிறிஸ்துவின் வருகை பற்றிய இறைவாக்குகளை இது மிகவும் உறுதிப்படுத்துகிறது என்பனவற்றை நிரூபிக்க ஆசிரியர் இச்சம்பவத்தைக் கிறிஸ்துவினுடைய மகிமையின் கண்கூடாகக் கண்ட சாட்சியாக எடுத்துக் கூறுகிறார். இக்கதையின் விளக்கமானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை உறுதிப்படுத்துகிறது.

(இ) இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பேதுருவின் வெளிப்பாட்டு நூல் உருமாற்ற நிகழ்ச்சியைத் திரும்பக்கூறி, இன்பவனம் மற்றும் இரண்டாவது வருகை பற்றிய விரிவுரையாக விளக்குகின்றது.

(ஈ) திருச்சபையின் தந்தையர்கள் உருமாற்றத்தினை அடிக்கடி தொடர் உருவகமாக்கினர். கிழக்குத் திருச்சபையில் இச்சம்பவமானது, இவ்வுலகம் மற்றும் வரவிருக்கும் உலகினுடைய மாற்றத்தின் மறைபொருள் அடையாளமாகக் கூறப்பட்டது. எட்டாம் நூற்றாண்டிற்குள், இந்நாளின் (ஆகஸ்ட் 6) கொண்டாட்டமானது, உயிர்ப்பு விழா நாளைத் தவிர்த்து மற்ற எந்தப் புனித நாட்களுக்கும் இணையானதாயிற்று. மேற்குத் திருச்சபையில், பதினைந்தாம் நூற்றாண்டு வரை, பொதுவான கடைப்பிடிப்பாகக் கட்டளையிடப்படவில்லை.

(உ) நிகழ்ச்சியுரைகளின் கடுஞ்சிக்கல்களை எதிர்கொள்ளும் நவீனகால விரிவுரையாளர்கள் தங்களது விளக்கவுரையில் பெரிதும் மாறுபட்டுள்ளனர். பாரம்பரிய பாதுகாப்பாளர்கள் இந்தவிவரிப்பை வரலாற்றுப் பூர்வமானதாகவும், நம்பத்தக்கதாகவும் ஏற்றுக்கொள்கின்றனர். இதற்கு மாறாக உள்ளவர்கள் புறநிலைக் கூறுகளைப் பகுத்தறிவு வாத முறையில் நிராகரிக்கின்றனர். ஆதித்திருச்சபையின் இறையியல் நோக்கங்களைத் தெளிவுபடுத்துகின்ற அடையாளவியல் முறையில் விளக்க முயல்வர். மற்றவர்கள், பேதுருவுக்கு உயிர்த்த இயேசு அளித்த காட்சியின் கதை என்றும், இச்சம்பவம் இடமாற்றம் செய்யப்பட்டு விட்டதென்றும் கருதுகின்றனர். ஆனால் நற்செய்தி நிகழ்ச்சியுரையில் இந்நிகழ்ச்சியின் இடமே ஏற்கத்தக்கதாகும். ஏனெனில், இயேசுவுடையவும், அவருடைய சீடர்களுடையவும் உண்மையான தீர்மானமான அனுபவத்தைக் குறிப்பிடுவதாக இது இருக்கலாம். மத்தேயுவின் கருத்துப்படி, இயேசு இந்த அனுபவத்தை ''காட்சி'' (17:9) என்று அழைக்கிறார். காட்சி என்ற சொல் பல்வேறு பொருள்களைக் கொண்டிருந்தாலும் ஏற்பதற்குச் சிறந்ததாக உள்ளது. உண்மையான வரலாற்றுச் சூழ்நிலைகள் முழுத்திருப்தியளிக்கும் விதத்தில் கண்டுபிடிக்கவோ, விளக்கப்படவோ ஒருவேளை முடியாதுபோகலாம். பிற்காலக் கருத்துக்களுடன் கூடிய நற்செய்தி நிகழ்ச்சியுரைகள், உண்மைகளையும் அடையாளங்களையும் ஒன்றாக இணைக்கின்றன. ஆனாலும், நாம் இயேசுவிற்கும் சீடர்களுக்கும் ஏற்புடைய சிறப்புப் பொருளை வேறுபடுத்தலாம். அது, அவருடைய சீடர்களுக்கு, இயேசுவின் உண்மையான இயல்பையும் (ஒளியினால் அடையாளப் படுத்தப்பட்டது) மரணத்திற்குப் பிற்பட்ட அவரது வருங்கால மகிமை நிலையினையும், வெளிப்படுத்திய காட்சி நேரமாகும். இஸ்ராயேலின் சட்டத்திலும் இறைவாக்கிலும் குறிப்பிடத்தக்கவர்களான மோசே மற்றும் எலியாவைப்பற்றி அவர்கள் கண்ட காட்சி, இயேசுவிற்கும் அவருடைய பணிக்கும், சட்டமும் இறைவாக்குகளும் ஆதரவாக உள்ளதைக் குறிப்பிடுகின்றது. மேகமும் குரலும் ஓர் இடம் சார்ந்த இறைபிரசன்னத்தைக் குறிக்கும் அடையாளங்களாகும். சீடர்கள் இயேசுவுக்குச் செவிமடுப்பதற்காக, அவருடைய திருமுழுக்கு ஆசியை மீண்டும் கூறுகிறார். வரவிருக்கும் மரணம் மற்றும் உயிர்ப்பிற்குப் பின்னரே, தங்களுடைய காட்சியின் பொருளை அவர்கள் விளக்க முடியும். மரணத்தை எதிர்கொண்ட

நிலையில், பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பின் வழியாகத் தம்மைத் தேர்ந்தெடுத்த இறைவன் மற்றும் பெரிய ஆன்மீகத் தலைவர்களின் ஆதரவினைச் செபத்தில் கண்டடைந்த இயேசுவுக்கு லூக்கா ஆதி அழுத்தம் கொடுக்கிறது. இறைமகிமையாவது இத்தகைய உருமாறிய நேரத்தை ஒளிர்விக்கிறது; வரவிருக்கும் துன்பகரமான நாட்களுக்கு இயேசுவை உறுதிப்படுத்துகிறது.

5. மறையுண்மை:- அவரது துன்பத்தைக் காணவிருப்பவர்களையே இந்நிகழ்ச்சியைக் காணவும் இயேசு தேர்ந்தெடுக்கிறார்; பேதுரு (2 பேதுரு 1:16 தொ); யாக்கோபு மற்றும் யோவான் (மாற் 14:33 இணை; 5:37); இறைவனின் மலையில் மோசேயும் எலியாவும் கண்ட இறைமகிமைக் காட்சிகளை (சீனாயி-ஓரேபு: யாத் 19:9; 24:15-18; 1 அர 19:8-18) இந்நிகழ்ச்சி நினைவுபடுத்துகிறது. மேகம் மற்றும் நெருப்பின் நடுவிலிருந்து பேசிமட்டும் (உப 5:2-5) இறைவன் தம் பிரசன்னத்தை வெளிப்படுத்துவதில்லை. மோசே மற்றும் எலியா முன்னிலையில் இறைமகிமையால் உருமாற்றம் பெற்று, தம் சீடர்களுக்கு இயேசு தோன்றுகிறார்.

இந்த மகிமை, இறைபிரசன்னத்தின்முன் எழும் சமய அச்சத்தால் அவர்களை அச்சமுறச் செய்கிறது. ஆனால் பேதுருவிடம் சிந்தனையையும் எழுப்புகிறது. யாரை மெசியா என்று அறிக்கையிட்டாரோ அவரது மகிமை கண்டு மகிழ்ச்சி கொள்கிறார். மெசியா காலத்து இறை வாக்கினர்கள் முன்னறிவித்தது போல், இறைவன் தம்முடையவர்களோடு தங்க வருகிறார். ஆயினும் இந்த மகிமை இறுதிநாளைச் சேர்ந்ததன்று. ஒரு காலத்தில் மோசேயின் முகத்தை ஒளிர்வித்தது போல் (யாத் 34:29தொ.35), இந்த மகிமை இயேசுவின் ஆடைகளையும் முகத்தையும் ஒளிர்விக்கின்றது. மேகத்திலிருந்து குரல் அறிவித்தது போல், அன்பார்ந்த மகனான கிறிஸ்துவின் உண்மையானமகிமையாகும் (லூக் 9:32). அதே சமயம் இந்தக் குரல் இயேசு சீடர்களுக்கு அளித்த வெளிப்பாட்டை உறுதிப்படுத்துகிறது. இதைப்பற்றியே இயேசு மோசே எலியாவோடு உரையாடினார். அதாவது, எருசலேமில் நிறைவேறப்போகிற அவரது இறுதிப் பயணம் (லூக் 9:31), அவர் மகிமையில் நுழைவதற்கு அவசியமான (25:25 தொ) மரணத்தின் வழியாகக் கடந்து செல்லுதல் ஆகியவைபற்றி உரையாடினர். இறைவனின் தேர்ந்து கொண்டவரும் மகனுமான அவருக்குச் செவிசாய்க்கும்படி இறைவனது குரல் கட்டளையிடுகிறது (9:35).

புதிய சீனாயில் எதிரொலிக்கும் வார்த்தை, பழங்காலத்தில் கொடுக்கப்பட்ட சட்டத்திற்குப் பதிலாகப் புதியசட்டத்தை வெளிப்படுத்துகிறது. வார்த்தை பழைய ஏற்பாட்டிலிருந்து மூன்று இறைவாக்குகளை நினைவுக்குக் கொண்டுவருகிறது. முதலாவது மெசியாவையும் அவரது இறைமகன் தன்மையையும் பற்றியதாகும் (சங் 2:7); இரண்டாவது இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட அவருடைய ஊழியனைக் குறிக்கிறது (எச 42:1); மூன்றாவது புதிய மோசேயை அறிவிக்கிறது (உப 18:15; யோவா 1:17 தொ); ''உன் இறைவனாகிய யாவே...என்னைப்போல ஓர் இறைவாக்கினரை உனக்காக ஏற்படுத்துவார். நீ அவருக்குச் செவி கொடுப்பாயாக''. செவிகொடுப்பதின் விளைவு ஊன் ஆன வார்த்தைக்கும் செவிகொடுப்பதாகும். அவரிலே விசுவாசி இறைவனின் மகிமையைக் காண்கிறார்.

6. நிகழ்ச்சியின் நோக்கமும் விளைவும்:- உருமாற்றம் செசரிய-பிலிப்பியில் கூறப்பட்ட அறிக்கையை உறுதிப்படுத்துகிறது; இயேசு, தாமே துன்புறும் மற்றும் மகிமைமிக்க மனுமகன் என்றும், தமது மரணமும் உயிர்ப்பும் மறைநூலை நிறைவேற்றும் என்றும், தம்மைப் பற்றி வெளிப்படுத்தியதைத் திருநிலைப்படுத்துகிறது. அது இறைவனின் மகிமையையே கொண்டிருக்கும் அன்பார்ந்த மற்றும் யாவும் கடந்த மகனான இயேசுவின் ஆளை வெளிப்படுத்துகிறது. அது இயேசுவையும் அவரது வார்த்தையையும் புதிய சட்டமாகக் காட்டுகிறது. அது

பாஸ்கு நிகழ்ச்சியை எதிர்பார்க்கிறது. அதற்கு, முன் உருவம் அளிக்கிறது. பாஸ்கு நிகழ்ச்சி, சிலுவைப்பாதை வழியாக, கிறிஸ்துவை அவரது மகிமையிலும் மகனுக்குரிய மேன்மையிலும் நிறைவாக மலரச் செய்கிறது. கிறிஸ்துவின் மகிமை பற்றிய இந்த முன் அனுபவம் சிலுவை மறைபொருளில் பங்கு கொள்ள, சீடர்களுக்கு ஆதரவு அளிக்கும் நோக்கமும் கொண்டது.

திருமுழுக்கு வழியாகக் கிறிஸ்தவர்கள், உருமாற்றத்தால் முன்உருவம்பெற்ற உயிர்ப்பு மறைஉண்மையில் பங்கு பெறுகின்றனர். இறுதி வருகையில் முழுஉடல் உருமாற்றத்திற்காகக் காத்திருக்கும், போது (பிலி 3:21) ஆண்டவரின் செயலால், இவ்வுலகிலேயே எப்போதும் முழுமையாக உருமாற்றம் பெற (2 கொரி 3:18) அவர்கள் அழைக்கப்படுகின்றனர். உலகிலே கிறிஸ்துவின் துன்பங்களில் பங்குகொள்ளும்போது, உருமாற்றம் சீடர்களின் விசுவாசத்திற்கு ஆதரவு அளித்ததுபோல், ஆண்டவர் இயேசுவோடு கொள்ளும் ஒவ்வொரு உண்மையான சந்திப்பும் அவர்களது விசுவாசத்திற்கு ஆதரவு அளிக்கிறது.

உருவகம்/உருவகக் கதை (ALLEGORY)

பழம்பாரம்பரியத்தின் சொற்பொருளை விடுத்து, அதன் ஒவ்வொரு சொல்லுக்கும் புதிய, மறைந்திருக்கும் பொருளைக்காண்பது உருவக இலக்கியமாகும். பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் உருவகக்கதைகளை அதிகம் பயன்படுத்தவில்லை. இது, புதிய ஏற்பாட்டுக் காலத்தில், யூதர்களாலும், புறவினத்தினராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விளக்கமளிக்கும் முறையாகும்; புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் சிறிதளவே பயன்படுத்துகின்றனர் (மாற் 4:10-20; மத் 13:37-43; 1 கொரி 5:6-8; 9:8-10; 10:1-11; கலா 4:21-31). புதிய ஏற்பாட்டுக் காலத்தையடுத்து வந்த வேதசாட்சி யூஸ்தீன் கிளெமெண்து, ஆர்ஜின் போன்றோர் உருவகத்தை அதிகம் பயன்படுத்தினர்.

1. விவிலியத்தில் உருவகம் என்ற சொல்:- ''உருவகம்'' என்ற சொல் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு இடத்தில், கலா 4:24-இல் காணப்படுகிறது. இதில் பவுல் செயப்பாட்டு வினையைப் பயன்படுத்துகிறார். இந்தச் சொல்லும் அதன்பொருளும் கிரேக்கப் பின்னணியில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

2. விவிலியம் சேராத உருவக விளக்கங்கள்:-

உருவக விளக்கமுறை கிரேக்கக் கடவுள்கள் பற்றிய ஹோமெரின் கதைகளில் உள்ள மதத் தொடர்புடைய மதிப்பீடுகளை நிலைநிறுத்தச் சில கிரேக்கச் சிந்தனையாளர்களால் கடைப்பிடிக்கப்பட்ட முயற்சியின் விளைவாகும். அதே போல் அலக்சாந்திரியாவில் வாழ்ந்த யூதச் சிந்தனையாளர்கள், கிரேக்கச் சிந்தனையால் தூண்டப்பட்டனர். தங்கள் யூதப்பாரம்பரியத்தின் அதிகாரத்தை நிரூபிக்கவும் விளக்கவும் உருவக விளக்கமுறையைக் கடைப்பிடித்தனர்.

அ) கிரேக்கர்களிடையே உருவகமுறை:-

பல நூற்றாண்டுகளாகக் ஹோமெர், கெசியோத் ஆகியோரின் பாடல்கள் கிரேக்கர்களின் பக்திக்கு வழி வகுத்தது. இதில் யூதர்கள் தங்கள் வேத நூல்களுக்கு அளித்த மதிப்பை அவை பெற்றிருந்தன. உலக அமைப்பு, ஒழுங்கு பற்றி இந்நூல்கள் அளித்த புராண விளக்கங்களை, அறிவியல், தத்துவ வளர்ச்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே பழைய உலகத்தைப் பற்றிய கொள்கைகளுக்கும், உலகைப் பற்றிய புதிய கொள்கைகளுக்கும் இடையே ஒருவகையான முரண்பாடு ஏற்பட்டது. புராணக் கதைகளைப் பாதுகாக்க விரும்பிய பக்தர்கள் பாரம்பரியத்தைப் போற்றிப் பின்பற்றினர். புதிய சிந்தனையில் பழகிய, கிரேக்கர்களால் மதிக்கப்பட்ட அறிஞர்கள், அவற்றைக் கடவுள்களின் கபட, தீய செயல்கள் என்று வர்ணித்தனர். இந்த முரண்பாட்டை விளக்க உருவக முறை விளக்கங்கள் உதவின. இம்முறை பல்வேறு வகைப்பட்ட தெய்வங்களின் பெயர்களுக்கு அளிக்கப்பட்ட யுக்தியான விளக்கங்களில் தோற்றம் கொண்டது;

மேலும், பாரம்பரியத்தைப் பல்வேறு தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற முயன்றது. செயுஸ் என்ற பெயர் சென் என்ற சொல்லிலிருந்து வந்திருக்க வேண்டும். இச்சொல் உயிர் அளிக்கும் சக்தி என்ற பொருளில், படைக்கப்பட்ட பொருள்களை ஒழுங்குபடுத்தும் சக்தியைக் குறித்திருக்க வேண்டும். இது போலவே அரேஸ் என்ற பெயர் போரையும், கெபேஸ்து தீயையும் கிரோனோஸ் நீரோட்டத்தையும், ரேயா பூமியையும் உருவகமாக உணர்த்தின என்று விளக்கம் கூறப்பட்டது. தாலேஸ் (கி.மு. 640-546) என்ற தத்துவ அறிஞர் முதல் முறையாகப் புராணக் கதைகளுக்கு வாழ்க்கை நெறி, மற்றும் மறுவுலகைச் சார்ந்த விளக்கங்களைக் கொடுத்தார். ரெஜியும் நகர தேயாசெனெஸ் தமது காப்புரை நூலில் தொடர்ந்து உருவகக்கதை முறையை அதிகம் பயன்படுத்தி விளக்கங்கள் அளித்தார். இதே முறையில் முல்லுஸ் நகர கிராத்தெஸ் கோமெரின் முழு நூலையும் உருவக முறையில் விளக்கினார். கோமெர், கெசியோத் ஆகியோரின் நூல்களுக்கு உருவகக் கதை விளக்கமுறை சினிக், ஸ்டோயிக் தத்துவ மேதைகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கடவுள்களின் பெயரையும் செயல்களையும் விளக்குவதற்கு இதை ஒரு நிலையான முறையாக அமைத்துக் கொண்டனர். பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் தொடர் உருவக முறையை எதிர்த்த போதும், இம்முறை கிரேக்க உலகத்தைப் பெரிதும் பாதித்ததைப் பிலுதார்க் போன்றவர்களின் நூல்களிலிருந்து அறியலாம். தொடர் உருவக முறையில் ஒரு பாரம்பரியத்தைப் புரிந்துகொள்ளும் விதத்தை, கிரேக்க தத்துவமேதைகள் தொடங்கி வைத்தனர். ஆகையால் பழைய பாரம்பரியங்களில் மறைந்திருக்கும் வாழ்க்கை நெறி, தத்துவ உண்மைகளை ஆழமாக அறியும் முறைகள் அவர்களோடு தொடர்புடையனவாகக் காட்டப்படுகின்றன.

ஆ) கிரேக்க யூத மரபில் உருவகமுறை:- அலெக்சாந்திரியாவில் சிதறி வாழ்ந்த யூதர்கள் பொதுவாகக் கிரேக்க கலாச்சாரத்தாலும், சிந்தனைகளாலும் குறிப்பாக உருவக விளக்க முறையாலும் அதிகம் பாதிக்கப்பட்டனர். அதன் விளைவாகச் சில யூதர்கள் தங்களின் பாரம்பரியத்தைத் துறந்து, கிரேக்க உலகச் சிந்தனைப் போக்கைப் பின்பற்றினர். வேறு சிலர் தங்களைத் தாங்களே தனிமைப் படுத்தத் தொடங்கினர். காரணம், அவர்கள் தங்கள் மத மரபுகளுக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க விரும்பினர்; கிரேக்க உலகச் சிந்தனைப்போக்கோடு இணைந்து போக விரும்பவில்லை. கிரேக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டு, இரண்டுமுறைகளை இணைக்க முனைந்தவர்களின் முதல் பிரதிநிதியாகக் கிரேக்க யூதர் அரிஸ்தோபூலூஸ் கருதப்படலாம். இதைச் செய்ய இவர் உருவக விளக்க முறையைப் பயன்படுத்தினார். இவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இடையில் அலக்சாந்திரியாவில் வாழ்ந்தவர். பிலோவின் காலத்திற்குள் உருவக விளக்க முறையைப் பயன்படுத்தி, பழைய ஏற்பாட்டு நூல்களுக்கு விளக்கமளிப்பது ஒருநிலையான வடிவம் எடுத்துவிட்டது எனலாம்.

பிலோ ஒரு பக்தியுள்ள யூதன். விவிலியம் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளை உடையதாதலின் மதிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறினார். ஆனால் அவரின் உருவக விளக்கமுறை மறைநூல்களின் உண்மையான பொருளிலிருந்து வெகுதூரம் எடுத்துச் சென்றது. இவர் பழங்கால எபிரேய பாரம்பரியத்தை அண்டவியல் ஒழுக்கவியல், அறிவு ஆதார முறை இயல், உடலியல், உளவியல் ஆகியவைபற்றிய கிரேக்க உலகச் சிந்தனையோடு ஒன்றிணைக்க முனைந்தார்; ஓரளவு வெற்றியும் கண்டார். இரண்டு வேறுபட்ட உலக நோக்குகளை ஒன்று சேர்க்க முயன்றார். பாரம்பரியத்தையும், வெளிப்பாடுடைய விவிலியத்தைக் கொண்ட யூத மதத்தையும், கிரேக்க மரபின் அறிவியல், தத்துவங்களையும் ஒருங்கிணைக்க முயன்றார். இதன் மூலம் யூத மதத்தைப் புறவினத்தார் குறை கூறுவதிலிருந்து காக்க முயன்றார். தன் சகயூதர்களுக்கு, ஏற்கனவே மோசே கிரேக்கர்களின் புலமையை அறிந்திருந்தார் எனக் காட்ட விரும்

பினார். தொடர் உருவக விளக்கம் மூலம், தகுதியும் திறமையும் வாய்ந்த இந்த விளக்க வுரையாளர், மறைநூலின் புதிர்களிலிருந்த திரையை நீக்கி இறை வார்த்தைகளில் மறைந்துகிடக்கும் புனித மறை உண்மைக ளையும், அவற்றின் ஆழ்ந்த பொருளையும் வெளிக்கொணரவும் முனைந்தார்.

இ) பாலஸ்தீன யூத மரபு:-

பாலஸ்தீன யூதர்களிடையே விவிலி யத்தை விளக்கும் முறை பொதுவாக உரு வக விளக்க முறைவடிவம் எடுக்கவில்லை. மிஸ்னா, மோசேயின் சட்டங்களை ராபிக ளின் சட்ட முறையில் அணுகும் திறமையை விளக்கும் ஒப்பற்ற நூலாகும். இது தனிப் பட்ட சட்டங்களைத் தற்காலிகச் சூழ்நிலைக ளுக்குப் பொருந்துமாறு விளக்கிக் கூறியது. மோதியிம்மைச் சேர்ந்த எலெயாசாரும், அக் கிபாவும் ஒரு சில விவிலியப் பகுதிகளுக்கு உருவக விளக்கம் கொடுத்தனர். ஆனால் பாலஸ்தீன நாட்டு உருவக விளக்கமுறைக் கும் கிரேக்க முறைக்கும் இடையே வேறுபா டுகள் பல இருந்தன. பாலஸ்தீன யூதஉருவக விளக்கமுறை எளிதாகவும், விவிலிய வார்த் தைகளின் சொற்பொருளுக்கு நெருங்கிய விளக்கம் அளிப்பதாகவும் அமைந்திருந்தது.

சாக்கடல் சுருள்கள் இன்னும் ஒரு வகை யான விளக்கம் இருப்பதைத் தெளிவுபடுத்து கின்றன. இது குமரான் குழுவினரால் பயன் படுத்தப்பட்டது. இறைவாக்கினர் எரோ மியா யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பி வருவதை எடுத்துரைக்கும் பகுதியை, தானி யேல் விளக்கினார். அதிலிருந்து இம்முறை வளர்ச்சியடைந்தது. இவ்வகை விளக்கங்கள் இறைவாக்கு நிறைவு அடைவதைப்பற்றி அதிகம் பேசுகின்றன. எனவே இவற்றை நிறைவு விளக்கங்கள் எனக் கொண்டு, ராபிக ளின் சட்டவிளக்கங்களிலிருந்தும், அலக் சாந்திரியா யூதர்களின் உருவக விளக்கங்க ளிலிருந்தும் வேறுபடுத்தலாம். இவ்வாறு வேறுபடுத்துவதன் மூலம் கும்ரான் குழு உருவக விளக்க முறையைப் பயன்படுத்த வில்லை என்று பொருள் கொள்ளவேண்டிய தில்லை. மாறாக அவை தங்களுக்கென்று தனிப்பாணி வைத்து, அதை விரும்பிக் கடைப்பிடித்தனர்.

3. விவிலியத்தில் உருவக விளக்கமுறை:-

விவிலிய ஆசிரியர்களில் பவுல்மட்டுமே பழைய ஏற்பாட்டு நூல்களை விளக்குவ தற்கு உருவக விளக்கமுறையை ஏற்றுக் கொள்கிறார் (கலா 4:24). பழைய ஏற்பாட் டுப் பகுதிகளை விளக்க, புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் விரும்பிப் பயன்படுத்திய விளக்க முறை நிறைவு விளக்கமுறையா கும். இருந்த போதிலும் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கிறிஸ்துவின் உவமைகளை உருவக முறையில் விளக்கத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் (மாற் 4:10-12). இந்தப்போக்கை, மற்ற உவமைகளுக்கு விளக்கம் அளிக்கும் முறையிலும், இதற்காக அவர்களே அமைத்த உவமைகளை உருவக மாக்குவதிலும் காணலாம்.

அ) பவுலின் திருமுகங்கள்:-

தனது திருமுகங்களில், தனது வாதத்தின் வலிமையை வெளிக்கொணர பவுல் நான்கு இடங்களில் உருவகமுறையைப் பயன்படுத் தினார் (1 கொரி 5:6-8; 9:8-10; 10:1-11; கலா 4:21-31). கலாத்தியர்க்கு எழுதிய திருமுகத் தின் முக்கிய கருத்து, எல்லா மனிதர்களின் உரிமை வாழ்வையும், மத சுதந்தரத்தையும் அறிவிப்பதாகும். அவர் அதை விவரிக்கும் போது சிலகருத்துக்களை எடுத்துரைக்கின் றார். அப்போஸ்தலராகத் தாம் அழைக்கப் பட்டது கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே மட்டுமே, பிறர் அதிகாரத்தினால் அன்று என்கிறார். ஒரு தனி மனிதன் இறைவனை அணுகத் தடையாக இருக்கும் அதிகாரம், அமைப்புக்கள், பண்பாடு, சட்டங்கள் அனைத்தையும் ஒதுக்குகிறார். அத்தோடு உண்மையான சுதந்தரம் கிறிஸ்துவில் மட் டுமே அடைய முடியும் என்றுரைக்கிறார். உண்மையான சுதந்தரம் என்பது பயம், பாவம், கோபம், இறப்பு போன்றவற்றிலி ருந்து விடுதலை அளிக்கிறது. மனிதன் தன் னையே ஏற்புடையவனாக்கி இவற்றிலி ருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. ஆக லால், இறைவனின் இன்னருள் தேவைப்ப

டுகிறது. இறைவன், அவரது மகன் வழியாக மனிதனுக்கு ஏற்புடைமை என்னும் புதிய இயல்பை அடையும் வாய்ப்பை அளித்திருக்கிறார். கிறிஸ்துவின் வழியாக நம்மை மன்னிக்கும் இறைவனின் அன்பே நமது மீட்புக்கு ஒரே அடிப்படையாவதால், இறைவனின் முடிவில்லா இறையரசை அடையும் ஒரே வழி, விசுவாசமும், இறைவனின் அருட்கொடையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதுமாகும். இந்தப் போதகப் பகுதியையும் அடுத்து வரும் அறவுரைப்பகுதியையும் இணைக்க, பவுல் இரண்டு உடன்படிக்கைகள் பற்றிய உருவக விளக்கமுறையைப் பயன்படுத்துகிறார் (கலா 4:21-31). ஆபிரகாமுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். அவருள் ஆகார் என்பவள் சீனாய் மலையில் செய்யப்பட்ட உடன்படிக்கை, சட்டம், தற்போதைய எருசலேம் ஆகியவற்றைக் குறிக்கிறாள். அவள் ஒரு அடிமை. சாரா என்பவள் ஒரு சுதந்தரப் பெண்; விண்கை எருசலேமைக் குறிக்கிறாள். ஆகாரின் மகன் இசுமயேல் உடல் இயல்பு முறைப்படி பிறந்தவர். ஆனால் ஈசாக்கு வாக்குறுதியின் பயனாகப் பிறந்தவர். சாராவின் பொருள்பற்றிய உருவக விளக்கத்தை நிறைவு செய்யாததாலும், மலட்டுத்தன்மை, பலனில்லாமை பற்றிய பொருத்தமில்லாத ஒரு எடுத்துக்காட்டை ஏசயாவிலிருந்து கூறுவதாலும், பவுல் தம் மடலின் இப்பகுதியின் பொருளை மங்கச் செய்துவிட்டார் எனலாம்.

கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் (1 கொரி 5:6-8; 9:8-10; 10:1-11) இது போன்ற நோக்கங்களுக்காக, பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளை உருவக விளக்கமுறையில் பவுல் எடுத்துரைக்கிறார். கொரிந்திலிருந்த விரும்பத் தகாத புணர்ச்சிபற்றிய சூழ்நிலையைப் பற்றி எழுதுகின்றார். அப்போது வரவிருந்த பெந்தகோஸ்தே திருவிழாவால் தூண்டப்பட்டு (1 கொரி 16:8) புளிப்பு மாவு பற்றிய உருவகவிளக்கம் தருகிறார் (1 கொரி 5:6-8). புளிப்பு மாவு (பாவம்) மாவு முழுவதையும் (திருச்சபை) புளிப்புள்ளதாக்குவதால், பழைய புளிப்புமாவு முழுவதும் நீக்கப்படவேண்டும். அப்போது மாவு முழுவதும் புதிதாகவும் புளிப்பற்றதாகவும் (மனந்திரும்பியவர்களின் ஏற்புடைய வாழ்வு) திருவிழாவைக் (கிறிஸ்தவ வாழ்வு) கொண்டாடத் தகுதியுள்ளதாகவும் இருக்கும். நம்மில் இந்த மாற்றத்தை எதிர்பார்ப்பவரும், இந்தப்புதுப் பித்தலை நடக்கச் செய்பவரும் திருவிழாத் தொடங்கும்முன் பலியிடப்படும் செம்மறியானவரும் கிறிஸ்துவே. இந்த உருவக விளக்கத்தில் பவுல் உறுதிக்கூற்றுகளையும், அறவுரைகளையும் ஒன்றிணைத்துக் கூறுகிறார். இவ்வாறு திருச்சபையானது புளிப்பில்லா மாவு ஆயினும் அந்நிலையிலேயே நிலைத்திருக்கும்படி தூண்டப்படுகிறது. பவுல் தன்னைப் பற்றிக் கூறும் ஓரிடத்தில், புறவினத் திருச்சபைகளை ஏற்படுத்துவதற்காகத்தான் தனது உரிமைகளைத் துறந்ததை எடுத்துக் கூறும் போது, தனது சாதாரண முறைக்கு மாறாக ஒரு சில உரிமைகளைக் கைவிடக் கட்டாயப்படுத்தப்படுவதை உணர்கிறார் (1 கொரி 9). படைவீரன், திராட்சைத் தோட்டம் உழுபவன், போரடிப்பவன், குரு எல்லோரும் தாம் செய்யும் பணிக்குத் தக்க ஊழியம் கொடுக்கப்படுகின்றனர். போரடிக்கும் மாட்டின் உரிமைகளை உருவகமாக விளக்கித் தனது வாதத்திற்கு விவிலிய அதிகாரத்தை ஆதாரமாகப் பயன்படுத்துகிறார் (1 கொரி 9:8-9; உப 25:4).

கிறிஸ்தவத் திருமுழுக்கு, நற்கருணை வழிபாடு ஆகியவை பற்றிப் பேசும்போது, பவுல் பழைய ஏற்பாட்டு ஒப்புமைகளைப் பயன்படுத்தி, கிறிஸ்தவ வழிபாட்டுக்குப் புறவின வழிபாட்டோடு உள்ள தொடர்பை விளக்கிக்காட்டுகிறார் (1 கொரி 10:1-11). கிறிஸ்தவ அமைப்புகள், செங்கடலைக் கடத்தல், மேகத்தூண், மன்னாவை உண்ணுதல், பாறை நீரைப் பருகுதல் போன்ற பழைய ஏற்பாட்டு விவரிப்புகளில் முன் அடையாளமாகக் கூறப்பட்டுள்ளன. புறவின வழிபாடுகளின் திருவருள்சாதனத் தன்மையை மறுக்கவும், யூதச்சடங்குகளின் அடையாளப் பொருளை கருத்தில் கொள்ளவும் பவுல் விரும்பாததால், பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு உருவக விளக்கம் அளிக்கும் கட்டாயம் ஏற்பட்டது. ஆகவே

இஸ்ராயேல் ''மோசேயில்'' திருமுழுக்குப் பெற்றனர்; இயற்கை கடந்த பாறையிலிருந்து (கிறிஸ்து) வடிந்த நீரையும், இயற்கை கடந்த உணவையும் உட்கொண்டனர்.

பவுல் உருவக விளக்கமுறையைத் தத்துவ விளக்கங்களுக்காகப் பயன்படுத்தாததால், அவர் அலக்சாந்திரியா உருவக விளக்க ஆசிரியர்களைவிட, பாலஸ்தீன உருவக விளக்க ஆசிரியர்களை அதிகம் சார்ந்திருக்கிறார். மேலும் அவரின் உருவக விளக்கம் முக்கிய கருத்தை விளக்க அதிகமாகவும் பயன்படவில்லை; தற்செயலாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் அவரது இறையியல் நோக்கிற்கு நிறைவு விளக்கமுறை அடிப்படை போன்றது. பவுலைப் பொருத்தமட்டும் பழைய ஏற்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு உருவக விளக்கமுறை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உடையதன்று.

ஆ) ஒத்தமை நற்செய்திகளில்:-

ஒத்தமை நற்செய்தியாளர்களால் கொடுக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் உவமைகள் உருவக விளக்கத்திற்கு இடமளித்தாலும் ஒன்றே ஒன்று மட்டுமே அவ்வாறு விளக்கப்படுகிறது. அது விதைப்பவன் உவமையாகும் (மாற் 4:1-9). களைகளின் உவமையும் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அது கிறிஸ்துவின் உவமையாக இல்லாதிருக்கலாம். கிறிஸ்து, உவமைகளில் பேசுவதன் நோக்கத்தை விளக்குவதன் மூலம் உருவக விளக்கம் எடுத்துக்கூறப்படுகிறது. மறைந்திருக்கும் உட்பொருளை உவமைப் பொருளின் மறை உண்மைகளை அறிந்தவர்கள் மட்டுமே புரிந்துகொள்ள முடியுமாதலால் உவமைகளைப் புரிந்து கொள்ளும் தன்மை வளர்ச்சியடைந்த ஒளிபெற்ற குழுவினரையும், அக்குழுவிற்கு வெளியே உள்ளவர்களையும் பிரிக்க ஒரு சாதனமாகிறது (மாற் 4:10-12). இந்த முகவுரையோடு நற்செய்தி ஆசிரியர் உவமையின் ஒவ்வொரு பகுதிக்கும் உருவகச் சமன்பாடு அமைக்கிறார். உருவக விளக்கம் அளிக்கும்போது சமன்பாடுகளில் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. 'விதை' ''போதிக்கப்படும் வார்த்தை''யையும், கேட்கும் மக்களையும் குறிக்கிறது. 'மக்கள்' நிலத்தையும், செடியையும் குறிக்கின்றனர். மேலும் மூல உவமையின் நோக்கம் மாற்றப்பட்டுள்ளது. உருவகத்தின் பொருள், தீமைகள் தவிர்க்க முடியாதென்பதல்ல, மாறாகத் தீமையைக் கொடுக்கும் சக்திகளுக்கெதிராகக் காத்துக் கொள்ள ஒரு எச்சரிக்கையாக அமைகிறது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உருவக விளக்கமுறை மிகக் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும், அது இந்தக் காலத்தில் தான் தொடங்கியது; விரைவாக முக்கியத்துவம் பெற்று வந்தது. குறிப்பாக அலக்சாந்திரியாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்களிடையே முக்கியத்துவம் பெற்றது.

உருவம் (IMAGE)

இறைத் தந்தையை எவரும் இதுகாறும் கண்டதில்லை. ஒருவரும் அவரைக் காணவும் இயலாது (யோவா 1:18). எனினும் அவரே தம் படைப்பின் பல உருவங்களில் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இவற்றிற்கெல்லாம் மேலாக முக்கியமாகத் தம் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் தம்மை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். இயேசுவே பரம தந்தையின் அருமைச் சாயல்; நிறைவான உரு; உன்னத வெளிப்பாடு. கிறிஸ்து தோன்றும் முன்னர், கடவுள் தமது வெளிப்பாட்டின் மகிமையைப் பழைய ஏற்பாட்டிலேயே ஒளிர வைத்தார். எடுத்துக்காட்டாக, இறைஞானம் இறைமகிமையின் தூய ஒளியாகவும், இறை மாட்சியின் உருவாகவும் இறைப்பண்பை உணர்த்தியது (ஞான 7:25). அனைத்துப் படைப்பினையும் ஆண்டு அனுபவிக்கும் பேறுபெற்ற மனிதன் முடிவில்லா வாழ்வின் வரம் பெற்று இறையின் உயிருருவாகத் திகழ்ந்தான். மனிதன் பெற்ற இறை மாட்சியை உணர்த்த வேண்டி, இஸ்ராயேல் வழிபாட்டில் உருவ வணக்கம் கண்டிக்கப்பட்டது. இக்கண்டிப்பு மனிதனின் தலைமைப் பதவிக்கு நடைமுறையில் விழுப்பம் தராவிடினும், இறை மனிதனின் வருகைக்கு - அதாவது இறைத் தந்தையை

முழுமையாக வெளிப்படுத்த உருவான கிறிஸ்துவின் வருகைக்கு - ஒரு வகையில் அடிகோலியது.

1. உருவச் சிலை தடுப்பு:-

பத்துக் கற்பனையில் உருவச்சிலைக்குக் கண்டனம் (உப 27:14; யாத் 20:4; உப 4:9-28) யூத வரலாறு நெடுக வழக்கிலிருந்தாலும் சில காலங்களில் வழுவுற்றது கண்கூடு. இக்கண்டனத்தால் பொய்த் தெய்வங்களுக்குச் சிலை எழுப்பலாகாது என்ற கட்டளையை விளக்குவது எளிது. ஆனால் ஒரே இறைவன் யாவேக்குங்கூட உருவ வழிபாடு கூடாது என்ற தடையை விளக்குவது கடினம். விவிலிய ஆசிரியர்கள் யாவேயின் இயல்புகளை மனிதப் பேச்சு வழக்கு மொழியிலேயே விளக்கியுள்ளனர். ஆகலால் யாவேயை உருவங்களில் வெளிப்படுத்துவதைக் கண்டிப்பது அவர்களின் முதல் நோக்கமன்று; மாறாகச் சிலை ஒழிப்பால் மாயவித்தையைத் தம் மறையினின்று ஒழித்துக் காட்டுவதும், இறைவனது யாவும் கடந்த தன்மையைப் பாதுகாப்பதும் அவர்கள் நோக்கமாகும். இறைவன் தங்கக் கன்றுகளிலோ (யாத் 32;1 அர 12:26-33) மனிதனின் கைவேலைப்பாடான உருவங்களிலோ தமது மகிமையை வெளிப்படுத்துவதில்லை; மாறாகத் தமது படைப்பின் வேலைப்பாட்டில் எங்கும் ஒளிர வைக்கின்றார் (ஓசே 8:5 தொ; ஞான 13; உரோ 1:19-23). சிலை வணக்கத்தால் மனிதன் எழுப்பும் வேண்டுதலைக் கண்டு இறைவன் சமாதானம் அடைவதில்லை. ஆனால் தாமே விரும்பி இறை ஞானத்தால் மனித உள்ளத்தைத் தொட்டு, தம் இறைமகன் வழியாக மனிதனை ஈடேற்றுகிறார்.

2. இறையின் உரு-மனிதன்:-

அ) பழைய ஏற்பாடு:- 'இறைவனின் உருவம் மனிதன்' என்ற சொற்றொடர் யூத வரலாற்றுக்குச் சொந்தமன்று. பாபிலோனியாவிலும் எகிப்திலும் மனிதப் படைப்பினைப்பற்றி வழக்கிலிருந்த பாடல்களும் இதனைக் கையாள்கின்றன. ஆனால் இச் சொற்றொடரின் ஆழ்ந்த கருத்து சிறந்த முறையில் பழைய ஏற்பாட்டின் பொதுச் சூழ்நிலையிலிருந்து வெளிப்படுகிறது. மனிதன், மனித உருவத்தில் கற்பனை செய்யப்பட்ட ஒரு கடவுளின் உருவம் மட்டுமன்று; உருவம் செய்யத் தடைப்பட்டிருந்த அளவுக்கு யாவும் கடந்த இறைவனின் சாயலும் ஆவான். மனிதன் மட்டுமே இறையுரு என்று பெயர் சூடப்பேறு பெற்றவன். மேலும் இப்பெயர் அவனுடைய பெருமையைப் பறைசாற்றுகிறது (ஆதி 9:6).

மனிதன் இறைவனின் சாயலைத் தாங்கிய உரு என்பதற்கு ஆதி. 1:26-29 என்ற பகுதி பின்வரும் கருத்தினைக் கொண்டுள்ளது. முதற்கண் மனிதன் படைப்பினை ஆண்டு நடத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளதாலும் (ஆதி 1:26-29), இரண்டாவதாகத் தன்னைப் போன்று சாயல் படிந்த வேறு உயிர் உருவங்களைப் பெற்றெடுக்கும் வல்லமையாலும் மனிதன் இறையுரு ஆகிறான் (ஆதி 1:28 தொ; 5:1 தொ; லூக் 3:28). சாதாரணமாகப் பழைய ஏற்பாட்டில் மனிதனைப் போற்றும் பகுதிகள் பொதுவாக மனிதனுக்குரிய ஆளும் ஆற்றலையே பெரிதும் விவரிக்கின்றன (சங் 8; சீரா 17). அதே சமயம் நேரிடையாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடப்படும் இறைவன் உரு என்ற கருத்து விளக்கங்களாலும் பின்சேர்க்கைகளாலும் வளப்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, இது ''மாண்பும் பெருமையும்'' உள்ள நிலையாகும் என்றும் ''வானதூதரைவிடச் சிறிது தாழ்ந்தது'' என்றும் அடையாளம் காண்கிறது 8-ஆம் சங்கீதம். மனிதன் இறைவன் உருவில் உள்ளான் என்ற கூற்றில் யூத மறை வல்லுநர் புகுத்திய கருத்து வேறுபாட்டிற்கு இடங்கொடாத வண்ணம், ஞானநூல் (2:23) மனிதன் உண்மையிலேயே இறையுருவாக உள்ளான் என்று எடுத்துரைக்கிறது. மனிதன் இறைவனைப் போலச் சாவாமையைப் பெற்றுள்ளதாலும் இறைச்சாயலைக் கொண்டுள்ளான் என்பதையும் இப்பகுதி விளக்குகிறது.

அலக்சாந்திரியா நாட்டில் வளர்ந்த யூத மறை, மனிதன் படைப்பில் இருநிலையி

னைக் கண்டது: மண்ணைச் சார்ந்த மனிதன் மண்ணாலானவன் என்றும், ஆன்மீக மனிதன் இறையுருவில் தோன்றியவன் என்றும் கூறியது. இரு ஆதாம்களைப் பற்றிய இக் கொள்கையைப் புனித பவுல் மாற்றியமைத்து 'முதல் ஆதாம், கடைசி ஆதாம்' என்ற புதுக்கோட்பாட்டை வகுத்தார் (1 கொரி 15:45-47).

ஆ) புதிய ஏற்பாடு:- 'இறையுரு' என்ற சொற்றொடரை அடிக்கடி எடுத்தாளும் புதிய ஏற்பாடு (1 கொரி 11:7; யாக் 3:9), இதன் கருத்தினைப் பல்வேறு இடங்களில் வளப்படுத்திப் புதுமெருகுடன் காண்கிறது. எடுத்துக்காட்டாக, கிறிஸ்து கொடுத்த குறிக்கோள் - 'உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்' (மத் 5:48) என்ற கட்டளை, மனிதன் இறையுரு என்ற கொள்கையின் அவசியமான விளைவாகத் தோன்றுகிறது. இதே போன்று ''உடன் பிறந்தானைக் காண்பது இறைவனைக் காண்பதாகும்'' என்று இயேசு கிறிஸ்து மொழிந்ததாக அலக்சாந்திரியாவின் கிளமெந்து கூறுவது மனிதன் இறையுரு என்ற நம்பிக்கையிலேயே உருவானது. இந்த உறுதிப்பாடே பிறருக்கு மரியாதை செலுத்த நம்மைப் பணிக்கிறது (யாக் 3:9; ஆதி 9:6); பிறர் அன்புக்கு அடிப்படையாகிறது. புனித யோவான் கூறுவதுபோல, ''கண்ணால் கண்ட சகோதரனுக்கு அன்பு செய்யாதவன், தான் கண்டிராத கடவுளுக்கு அன்பு கூர இயலாது'' (1 யோவா 4:20). இவ்வாறு மனிதன் இறையுருவாயுள்ளான் என்று காணும் பொழுது, அவன் நிறைவற்ற உரு, பாவஞ்செறிந்த உரு என்று நாம் மனத்தில் இருத்த வேண்டும். மனிதனுடைய உருவை நிறைவாக்க வேண்டியனவற்றைப் பழைய ஏற்பாட்டில் தோன்றும் ஞானம் அறிவுறுத்தியுள்ளது. இவை அனைத்தும் கிறிஸ்துவால் எய்தப்பெறுகின்றன.

3. ஞானம், இறைமாட்சியின் எழிலுருவம்:-

மனிதன் கடவுளின் உருவானாலும் குறையுள்ள உருவாவான். ஆனால் ஞானம் இறைவனுடைய வேலைத்திறனின் கறைபடியாத கண்ணாடியாகும்; அவருடைய மேன்மையின் உருவுமாகும் (ஞான 7:26). ஆதியிலிருந்தே, பூவுலகு உண்டாகும் முன்னே ஞானம் இருந்தது (பழ 8:23). எனவே மனிதனது படைப்பினில் ஞானம் ஒத்துழைத்தது என்று நாம் முடிவு செய்யலாம். இதிலிருந்து அலக்சாந்திரியப் பகுதியின் யூதமறையில் விவாதித்த சில கருத்துக்கள் தெளிவாகின்றன. இவை பிலோவிலும் எதிரொலிக்கின்றன. பிலோவின் கருத்து பின்வருமாறு: வார்த்தை இறைவனின் உருவாகும்; படைக்குந் தொழிலுக்கு வார்த்தையினைக் கடவுள் கருவியாகப் பயன்படுத்தினார். மனிதப் படைப்பிற்கு வார்த்தை அடித்திட்டமான மூல உருவம், மாதிரிகை, மூலக்கோட்பாடு ஆவார். வார்த்தை மூத்த மகனாவார்; அத்தலைமகன் உருவிலே இறைவன் மனிதனை உருவாக்கினார்.

4. கிறிஸ்து இறைவனின் உரு:-

இறைவனின் உரு கிறிஸ்து என்ற கூற்றைப் பவுலினுடைய திருமுகங்களில் மட்டும் காணலாம். எனினும் அதில் பொதிந்துள்ள கருத்து யோவானுடைய நற்செய்தியிலும் விரவியுள்ளது. கிறிஸ்து தம்மை அனுப்பியவரோடு, தூதுவர் என்ற முறையில் மட்டும் உறவு கொள்ளவில்லை. தமது தந்தையை வெளிப்படுத்தும் ஒரே பேறானவர். கண்ணிற்குப் புலப்படாத இறைவனோடு (யோவா 2:18) கொண்ட பிணைப்பு (5:19; 7:16; 8:28 தொ; 12:49) தாம் ஆற்றவந்த பணியோடு முடிந்திடவில்லை. கிறிஸ்துவின் தூது இறைவாக்கினரின் பணியை விட எவ்வளவோ மேம்பட்டது. அவருடைய தூது வார்த்தையினுடையவும் இறைஞானத்தினுடையவும் தூதோடு ஒன்றிணைந்து போகிறது. கிறிஸ்து இறைமகத்துவத்தினைப் பிரதிபலிப்பவர் (17:5,24). அவரிடம் இறை சாயல் ஆழ்ந்து படிந்துள்ளது. தம்மைக் காண்பவர் தம் தந்தையைக் காண்கிறார் (14:9) என்பது கிறிஸ்துவின் மொழி. இம்மொழியில் வார்த்தை என்ற கருத்தில்லாவிட்டாலும் உருவம் என்ற கருத்து உள்ளடங்கியுள்ளது.

மனிதனைப் பற்றிய ஆதியாகமக் கருத்தைக் கையாள்வதோடு (1 கொரி 11:7) இரு ஆதாமைப்பற்றி-அதாவது ஆதி மனிதனின் இருபடைப்பினைப் பற்றி-யூதமறை ராபிகள் விவாதித்த கருத்துக்களையும், பிலோ கொடுத்த விளக்கங்களையும், புனித பவுல் ஆங்காங்கே பயன்படுத்துகிறார். இவற்றை முதற்கண் கிறிஸ்துவுக்கும் (1 கொரி 15:49), பின்னர்ப் புதிய மனிதனுக்கும் (கொலோ 3:10) பொருத்திக் காட்டுகிறார். இறுதியாக, நிறைவான இறையுருவான ஞானத்தின் ஒளியில் கிறிஸ்துவின் இறையுரு என்ற பட்டத்தைக் காண்கிறார் (2 கொரி 3:18-4:4). இவ்வாறு பல்வேறு கருத்துக்களைப் பயன்படுத்தி, கிறிஸ்துவின் மறையுண்மையைப் பவுல், ஓரளவு இன்னும் ஆழ்ந்துணர முயல்கிறார். உரோ 8:9-இல் கிறிஸ்து இறைவனின் மகன் என்ற முறையில் இறையுருவாக உள்ளார். கிறிஸ்து இறையுருவானதால், புது மனிதன் படைப்பில் தலைமை தாங்குகிறார் (கொலே 3:10). இவ்வாறு இறையுரு என்றகருத்திற்குப் பழங்கருத்துக்களையும் புதுக் கருத்துக்களையும் ஒன்றிணைத்தலின் விளைவாகப் பவுல் கொலோ 1:15-இல் கிறிஸ்துவுக்குச் சாற்றிக் கூறும் இறையுரு என்ற கருத்து வளப்பமும் சிக்கலும் மிக்கதாகும். கிறிஸ்து படைப்புக்கு முன்னே இறைவனின் மகனாகையால், மகனுக்கும் தந்தைக்குமிடையே ஒப்பற்ற ஒப்புமை மிளிர்கிறது. அது ஆன்மீகமானதும் நிறைவானதுமாகும். கண்ணால் காண முடியாத தந்தை கிறிஸ்துவில் கண்கண்ட இறைவனாகக் காட்சியளிக்கிறார். தமது படைப்புலக வேலைப்பாட்டினில் தமது அடிச்சுவட்டினைப் பதித்துள்ள இறைவனின் பரந்த மகத்துவமாக விளங்குபவர், கிறிஸ்து. என்றும்வாழும் இறைவனின் திருவுருவாக இறந்தோரினின்று முதன் முதல் உயிர்த்தவர், கிறிஸ்து. கிறிஸ்துவின் உருவொன்றே படைப்புலகினை ஒன்றாய் நிலை நாட்டுகிறது. கடவுள் வகுத்த திட்டத்தின் தொடக்கமும், வளர்ச்சியும், முடிவும், கிறிஸ்துவைச் சார்ந்தது. சுருங்கக்கூறின், கிறிஸ்து படைப்பின் மூலக்கோட்பாடும், புதிய படைப்பால் மீண்டு அமைக்கப்படுவதின் மூலக்கோட்பாடும் ஆவார்.

5. கிறிஸ்துவின் உருவில் மாற்றம் பெறுபவன் கிறிஸ்தவன்:-

கிறிஸ்துவின் நிறைவுற்ற இறையுரு, குறைவுற்றதும் பாவமிக்கத்துமான உருவுடைய மனிதனுக்குத் தேவை. கிறிஸ்து உருவில் அமைந்த பல கூறுகள் மனிதன் தன் மூல கதியைக் கண்டு செயல்படுத்த வேண்டிய ஆக்க சக்திகளாகின்றன. எனவே மண்ணக ஆதாமின் சாயலை ஏற்ற மனிதன் இப்பொழுது விண்ணக ஆதாமின் உருவைத் தரிக்க வேண்டும் (1 கொரி 15:49). ஆதாமிருவரும் இறைவனின் ஒரே திட்டத்தில் மறைமுகமாக இணைந்துள்ளனர் (உரோ 8:29; எபே 1:3-14). முதல் ஆதாம் முறித்ததைக் கடைசி ஆதாம் கூட்டி வைத்துள்ளது தெளிவு. கிறிஸ்து கொணர்ந்த இந்த ஆக்கசக்தி ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்கையிலும் இயங்குகின்றது. இவ்வாறு கிறிஸ்துவன் கிறிஸ்துவோடு இனி ஒன்றுபட்டவனாவான் (உரோ 6:3-6; கொலோ 3:10); எனவே இறைவனின் குழந்தையுமாவான் (1 யோவா 3:2). ஆண்டவரின் அருளாட்சியால், கிறிஸ்தவ மக்கள் நாடோறும் இறைமகன் எனும் அவர் உருவில் - சகோதரர் பலருள் தலைப்பேறானவரின் சாயலில் - மேன்மேலும் மாட்சிமை பெறுகின்றனர் (2 கொரி 3:18; உரோ 8:29). வளரும் இம்மாட்சிமையின் முடிவு உயிர்த்தெழுதலாகும். உயிர்த்தெழும் பொழுது கிறிஸ்துவன் விண்ணக ஆதாமின் உருவை நிரந்தரமாக அணிந்து கொள்கிறான் (1 கொரி 15:49). இதற்கு ஏற்ற வண்ணம் கிறிஸ்துவே ''தாழ்வுக்குரிய நம் உடலை, மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார்'' (பிலி 3:21).

உருபு (RUFUS - சிவப்புமயிருடைய)

1. நற்செய்தியாளர் மாற்கு தனது நற்செய்தியில் உரூபுவை சீரேனே ஊராராகிய சீமோனின் மகனும், அலக்சாந்தருக்குச் சகோதரனும் ஆவாரெனக் குறிப்பிடுகிறார் (மாற் 15:21). ஒத்தமைவு நற்செய்திகள் மூன்றும் சீமோனைக் குறிப்பிடும்போது மாற்கு மட்டும் அவரின் புதல்வர்களையும் குறிப்பிட்டிருக்கிறார். ஏனெனில் யாருக்குத் தன் நற்செய்தியை எழுதுகிறாரோ அவர்கள் சீமோனின்

குடும்பத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

2. உரோ 16:13-இல் புனித பவுல் ஆண்டவருக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட உரூபுவுக்கும் தன் தாயைப்போல இருக்கும் உரூபுவின் தாய்க்கும் வாழ்த்துத் தெரிவிக்கிறார்.

1,2-இல் குறிப்பிடப்பட்ட இரு நபர்களும் ஒரே ஆளாக இருக்க வாய்ப்புகள் உண்டு. ஆனால் உரோ 16-ஆம் அதிகாரம் எபேசு நகர் மக்களுக்கு எழுதிய தனிக்கடிதம் எனக் கூறும்போது வாய்ப்புகள் குறைகின்றன.

உரூமா (RUMAH - உயர்ந்த இடம், ஏற்றமான இடம்)

இது செபிதா என்ற பெண்மணியின் ஊராகும். இவளது தந்தை பெதாயா ஆவார். இவள் யோயாகிமின், தாயாவாள் (2 அர 23:36). யோசிபசு என்ற வரலாற்று ஆசிரியர் உரூமாவை, செபிதாவின் நகரமாக எடுத்துக் கொண்டார். அநேகமாக இது கலிலேயாவின் இரிம்மோனுக்கு அருகில், நசரேத்துக்கு வடக்கில் 10 கி.மீ தொலைவில் அமைந்துள்ள கிர்பெத்து-ரூமே என்ற நகரமாக இருக்கலாம். பத்தாம் உரோமைப் படைப்பகுதியைத் தாக்கிய இரு ஆற்றல் மிகுந்த கலிலேய வீரர்களின் ஊர் இதுவேயாகும். மேலும், சிலர் இதைச் செக்கேமுக்கு அருகிலுள்ள அரூமா என்ற நகரத்தோடு ஒற்றுமைப் படுத்துவார்.

உரோகலிம் (ROGELIM - வண்ணான்)

இது கீழக்குக் கிலயாது நாட்டில் ஒரு நகரம் ஆகும். அபிசலோமிடமிருந்து தப்பிய தாவீது, மகனாயிம் என்ற ஊருக்கு வந்த போது அவரை உபசரித்த பார்சில்லாய் என்பவரின் சொந்தவூராகும் (2 சாமு 17:27-29; 19:31). இது யாபோக்கு ஆற்றுக்கு வடக்கில் 25 கி.மீ தொலைவிலும், வடகிலயாத்தில் கலிலேயாக்கடலுக்குத் தென்கிழக்கில் 17 கி.மீ தொலைவிலும் மகனாயிமுக்குக் கிழக்கிலுள்ள மலைகளிலும் உள்ள தேல் பாரிசினாவாக இருக்கலாம்.

உரோகா (ROHGAH - கூப்பாடு கூச்சல்)

உரோகா என்பவர் ஆசேர் கோத்திரத்தில் தோன்றியவரும் செமேர் என்பவரின் மூத்த மைந்தனும் ஆவார் (1 நாள் 7:34).

உரோசு (ROSH - தலைவன்)

இவர் பென்யாமினின் ஏழாவது புதல்வராவார். எழுபதுநூல் இவரைப் பேலாவின் மகன் என்று குறிக்கின்றது. அப்படியானால் இவர் பென்யாமினின் பேரராவார். இவர் பிள்ளைகளின்றி இறந்திருக்கவேண்டும். ஏனெனில் இவரது பெயர் பென்யாமின் வழித் தோன்றல்கள் பட்டியலில் காணப்படவில்லை (எண் 26:38-41; 1 நாள் 7:6-12; 8:1-5)

உரோதா (RHODA)

யோவான், மாற்கு என்பவரின் தாயான மரியாளின் வீட்டில் இருந்த பணிப்பெண் உரோதா ஆவாள். இவள் இவ்வீட்டின் ஒரு உறுப்பினராக, அல்லது செபித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவராக இருக்கலாம். பேதுரு சிறையிலிருந்து விடுபட்டபின் கதவைத் தட்டிய உடனே அவரின் குரலை அடையாளம் கண்டு மகிழ்ந்து பிறருக்கும் அறிவித்த பெண்மணி இவளே (அ.ப. 12:13).

உரோதானிம் (RODANIM)

உரோதனிம் என்பவர் யாவானின் புதல்வராவார். இவரின் சகோதரர்கள் எலிசா, தார்சிசு, சித்திம் ஆகியோராவர் (1 நாள் 1:7).

உரோது (RHODES)

ஏகியன் கடலின் தென்கிழக்கே அமைந்துள்ள ஒரு தீவு நகரம் உரோது ஆகும். கிரேத்துத் தீவுக்கு அடுத்து மிகப்பெரியதீவு இதுதான். 16 கி.மீ. குறுக்களவுள்ள ஒரு கால்வாய் இதைச் சிறிய ஆசியாவிலிருந்து பிரிக்கிறது. இதன் நடுவில் மலைகளும் சுற்றிலும் இயற்கைத் துறைமுகங்களும் அமைந்துள்ளன. எனவே இது ஒரு சிறந்த வாணிகத் தலமாக மாறியது. அலக்சாந்திரியா, சைப்ரஸ் மற்றும் பல நாடுகளுடன் கடல்வழி வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. இங்குதான் உலகத்தின் ஏழு அதிசயங்களில்

ஒன்றான 105 அடி உயரமுள்ள உரோதுவின் கொலேகஸ் என்ற சூரியக் கடவுளின் மிகப் பெரிய சிலை இருந்தது. கி.மு. 227-இல் உண்டான ஒரு மிகப்பெரிய நிலநடுக்கத்தால் இது சேதமடைந்தது. மேலும் பனேசியு, போசிதானிய போன்ற தத்துவக் கலைஞர் களை உலகிற்குத் தந்துள்ளது. 1 மக் 15:23-இன்படி யூதர்களுடன் உரோமை செய்து கொண்ட உடன்படிக்கையையும் யூதப் பெரி யகுரு சீமோனின் அதிகாரத்தையும் உறுதிப் படுத்தி, பல இடங்களுக்கு உரோமை கடிதம் எழுதியது. அதில் உரோதும் ஒன்றாகும். யூலியு சீசர் இங்குள்ள பள்ளி ஒன்றில் கல்வி பயின்றார். கி.மு. 43-இல் இது உரோமானி யப்படையால் அழிக்கப்பட்டது. பவுல் மிலேத்து நகரத்திலிருந்து பயணம் மேற் கொண்டபோது 'உரோது' நகரத்தில் சிலகா லம் தங்கினார் (அ.ப. 21:1).

உரோதொக்கு (RHODOCUS)

இவர் யூதா மக்கபேயின் படையினைக் காட்டிக் கொடுத்தவர். யூதா வலுப்படுத்திய பேத்-சூர் கோட்டையின் இரகசியங்களைப் பகைவர்களுக்கு அறிவித்து விட்டார். பிறகு இவரைக் கண்டு பிடித்து, சிறையிலடைத்த னர் (2 மக் 13:21).

உரோமந்தி-ஏசேர் (ROMAMTI-EZER- உதவியில் மகிமைப்படுத்தப்பட்டேன். மிக உயர்ந்த பதவி).

இவர் தாவீதால் புனித இடத்தில் இசைக் கருவிகள் வாசிக்க நியமிக்கப்பட்ட இசைக் கலைஞர்களுள் ஒருவரும், ஏமானின் மக னும் ஆவார் (1 நாள் 25:4.31).

உரோமை (ROME) - நகர்

உரோமைநகரைத் தலைநகராகக் கொண்ட பேரரசு. இது புதிய ஏற்பாட்டின் உலகை வடிவமைப்பதில் ஒப்புயர்வற்ற இடம் வகிக்கிறது. இதற்குக் காரணம், மத்தி யதரைக்கடல் பகுதியின் மீதான அதனு டைய அரசியல் பொருளாதார வலிமை. அது மட்டுமின்றி நாட்டு எல்லைகளையும் கடந்து, பல கலாச்சாரங்களும் ஒன்றை ஒன்று பாதித்து உலகலாவிய பண்பாடு உரு வாவதைப் பேரரசு ஊக்கியதே ஆகும். இப் பேரரசு நற்செய்தியைப் பரப்புவதற்கு அக் கால உலகை மறைமுகமாகத் தயாரித்தது.

I தொடக்ககால உரோமையும் குடியரசும்:-

உரோமை நகரில் மக்கள் குடியேறியது பற்றிய சான்றுகள் கி.மு. எட்டாம் நூற்றாண் டின் இடைக்காலத்தினின்றே காணக்கிடக் கின்றன. இந்தக் குடியேற்றங்கள் அந்த நூற் றாண்டிலும் அடுத்த நூற்றாண்டுகளிலும் தொடர்ந்தன. அந்நகரானது கட்டப்படவி ருக்கும் ஏழு மலைகளின்மீதும் சமூக குழுக்க ளாக வளரலாயின (காபிதோலின், பால தின், குவிரினல், விமினல், எசிகுவிலின், கேலியான மற்றும் அவெந்தின் என்பன இம்மலைகள்). ஆறாம் நூற்றாண்டில் இந்தக் குடியேற்றங்கள் இத்தாலிய வாணிகத்தில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்ட நகரநாட்டாக ஒன்றிணைந்தன. ஆயினும், இன் னும் எத்ரூஸ்கர் ஆதிக்கத்தின் கீழேயே இருந்தன.

உரோமையில் முதன்மையானதாக உரு வாகி வந்த கலாச்சாரமானது பெனிக்கியர், எத்ரூஸ்கனியர் மற்றும் கிரேக்கரால் உரு வாக்கப்பட்ட கிழக்கத்திய கலாச்சாரமாகும். இத்தாலியில் எந்தப் பெனிக்கியக் குடியிருப் பும் ஏற்படுத்தப்படாவிடினும் வியாபாரத் தொடர்புகளால் பெனிக்கிய ஆதிக்கம் ஏற்ப டலாயிற்று. எட்டாம் நூற்றாண்டில் சிறிய ஆசியாவிலிருந்து வந்திருக்கக்கூடிய எத்ரூஸ் கனியர் உரோமைக்கு வடக்கிலுள்ள எத்ரூரி யாவில் குடியேறினர். உரோமை எத்ரூஸ்க னியரிடமிருந்து மற்ற நாகரிகக் கூறுகளுடன் கிரேக்க நெடுங்கணக்கைத் தழுவிய எழுத்து வடிவையும் பெற்றது. கிரேக்கக் குடியிருப்பு கள் எட்டாம் நூற்றாண்டிலிருந்து இத்தாலி யில் ஏற்படுத்தப்பட்டன. உரோமை நகரத்தி லிருந்து நாடுகடத்தப்பட்ட கடைசி அரசன் ஓர் எத்ரூஸ்கன் ஆவார். 509-இல் இவர் வெளியேற்றப்பட்டபின், முடியாட்சிக்குப் பதிலாகக் குடியாட்சி ஏற்படுத்தப்பட்டது என்பது பாரம்பரியமாகும். ஆறாம் நூற் றாண்டின் இறுதியில், மத்தியதரைக்கடல்

7

பகுதியிலும் பெனிக்கிய மற்றும் கிரேக்கக் குடியிருப்புகள் அடங்கிய பகுதியிலும் மற்றும் அவர்களுடைய கீழையத் தாயகங்களிலும் எத்ருஸ்கானியரின் ஆதிக்கம் வலுவிழக்கலாயிற்று. பெனிக்கிய எத்ருஸ்க மற்றும் கிரேக்கக் குடியிருப்புகளுக்கு இடையிலான இராணுவச் சண்டைகள் உரோமையின் உயர்விற்கு வழியமைத்தன; மேற்கு மத்தியதரைக் கடல் பகுதிகளை வெல்ல வாய்ப்பளித்தன. ஆனால், உரோமையின் வல்லமையானது ஐந்தாம் நூற்றாண்டுவரை நிலையானதாக இல்லை. மூன்றாம் நூற்றாண்டுவரை முந்தைய அரசர்களின்கீழ் தான் ஏற்படுத்திய சாதனைகளினின்று உரோமைக் கலாச்சாரமானது வீழ்ந்தது. நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடந்த கல்லியச் சூறையாடல்கள் கிட்டத்தட்ட உரோமையை அழித்துவிட்டன எனலாம்.

ஆனால் கி.மு. 264-க்குள் உரோமையானது இத்தாலிய தீபகற்பம் முழுவதையும் வென்றுவிட்டது. 201-க்குள் வடக்கு ஆப்பிரிக்காவில் பெனிக்கிய நகராகிய கார்த்தேசுடனான முதல் (264-241) மற்றும் இரண்டாம் போர்களின் மூலமாக (218-201) ஸ்பெயின் முதல் தால்மேதிய கடற்கரை வரையிலான மேற்கு மத்தியதரைக்கடல் சமவெளி முழுவதன்மேலும் உரிமையை அடைந்தது. உரோமை வெற்றியால் பின்தொடரவிருக்கும் அமைப்புகள் நான்காவது மற்றும் மூன்றாவது நூற்றாண்டுகளில் நிலைப்படுத்தப்பட்டன. அந்நாடுகளின் மக்களினங்கள் முழுதும் அழிக்கப்பட்டு விடவில்லை. அவர்களுடைய அரசியல் அமைப்புகள் உரிய இடத்திலேயே இருந்தன. ஆனால், அவை உரோமை ஆளுநர் ஆட்சியமைப்பினால் மாற்றியமைக்கப்படாவிடினும், உரோமையைச் சார்ந்து வாழும் மாநில உறவினை எடுத்துக் கொண்டன. கைப்பற்றப்பட்ட இடங்களில் உரோமைக் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டன (மக்கதோனியாவில் பிலிப்பி. அ.ப.16:12.21). கி.பி.212-இல் மத்தியதரைக்கடல் சமவெளிப்பகுதியில் உரிமை அடைந்தோர் அனைவராலும் அடையப்படும் வரையில் உரோமைக் குடியுரிமையானது மிகமிகத் தாராளமாக அளிக்கப்பட்டது.

கி.மு. 200-க்குப் பின்னர், ஒருவரோடொருவர் நீண்ட காலமாகப் போரில் ஈடுபட்டிருத்தல், பார்த்தியாவினால் இப்போது அச்சுறுத்தப்படுதல் முதலியவற்றினால் வலுவிழந்த கிழக்குக் கிரேக்க அரசுகளில் நிலையானது உரோமையைக் கிழக்கு நோக்கி ஈர்த்தது. கி.மு. 192 முதல் 188 வரை செலூக்கியப் பேரரசின் மூன்றாம் அந்தியோக்குவுடன் போரில் ஈடபட்டிருந்த உரோமையானது, மேற்கு சிறிய ஆசியாவின்மேல் ஆதிக்கத்தை வென்றது (அந்தியோக்குவின் மகனை அந்நேரத்தில் பிணைக்கைதியாகக் கொண்டு சென்றது 1 மக் 1:10). 167-இல் எகிப்திற்கு எதிரான நான்காம் அந்தியோக்குவின் படையெடுப்பை உரோமைப் படைகள் தடுத்ததால் அவர் எருசலேமிற்கு எதிராகத் திரும்பினார் (தானி 11:30). நான்காம் அந்தியோக்குவிற்கும் அவரது வாரிசுகளுக்கும் எதிரான போராட்டத்தில் யூதேயாவிற்கான உரோமையின் ஆதரவானது செலூக்கிய அரசாட்சியைக் கட்டுப்படுத்தியது. உரோமையை மிக வல்லமை மிக்க பங்காளராகக் கொண்ட ஓர் உடன்படிக்கை யூதா மக்கபேயுவுடன் நிறுவப்பட்டது (161; 1 மக் 8). பின்பு அது அவரது சகோதரர்கள் யோனத்தான் (144; 12:1-4.16; 14:16) மற்றும் சீமோன் (140; 12:24; 15:15-24) ஆகியோரால் புதுப்பிக்கப்பட்டது. கசமோனியருக்கு உரோமையர் அளித்த ஆதரவானது, அவர்களுடைய கிளர்ச்சியின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாகும் (14:38-40).

கி.மு. 133க்குள் உரோமையானது மேற்குச் சிறிய ஆசியா வரையிலுள்ள கிட்டத்தட்ட மத்தியத்தரைக்கடல் சமவெளி முழுவதையும் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தியது. இராணுவ அரசியல் விரிவாக்கத்தோடு உரோமையர் தாங்கள் வென்ற நாடுகளின் பண்பாட்டையும் குறிப்பாகக் கிரேக்கப் பண்பாட்டையும் தழுவி ஏற்றுக் கொண்டனர்.

கி.மு. 60-ஐ ஒட்டி, கிழக்கு மத்தியதரைக்கடல்பகுதியில் பாம்பே பெரும்வெற்றி வீரராகத் திகழ்ந்தார். கொள்ளையரின் ஆதிக்கத்

தின் கீழ் இருந்த தெற்குச் சிறிய ஆசியாவையும் மற்றும் போந்துவின் ஆளுநர் ஆறாவது மத்ரிதேத்-தை வென்றதன் மூலம் உள்நாடு மற்றும் வடசிறிய ஆசியாவையும் அவர் உரோமையின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். உரோமையின் பெருகும் பேரரசிற்குள் சீரியா மற்றும் பாலஸ்தீனத்தையும் உட்படுத்தி, செலூக்கிய முடியாட்சியை முடிவிற்குக் கொண்டு வந்தார். பாம்பே எருசலேமிற்கு அருகில் வந்தவுடன் இரு யூத முரண்பட்ட பிரிவுகளும் என்ன செய்வது என்பதில் ஒத்துப் போகாமலிருந்தன. ஆனால், அவருக்கு நகர வாயில்களைத் திறக்க விரும்பியோர் அவ்வாறே செய்தனர். பாம்பேயை எதிர்த்தவர்கள் ஆலய வளாகத்தில் மூன்று மாத . காலம் உரோமையரை எதிர்த்துப் போரிட்டனர். ஆலயத்தை வென்றபின்னர் பாம்பே புனித இடத்திற்குள் நுழைந்தார். யூதர்களின் பார்வையில் இது ஒரு பெரிய இறை நிந்தனை ஆகும். சாலமோனுடைய சங்கீதங்கள் எருசலேமின் மீதான உரோமை வெற்றியைக் குறித்த ஒரு யூதக் குழுவின் பதிலுரையாகும்.

உரோமை ஆதிக்கத்தின் கீழ்ப் பெருகி வந்த பரந்த பேரரசையோ, இத்தாலிக்கு அப்பாலும் மேற்கொண்ட வெற்றிகளால் கொண்டுவரப்பட்ட மாற்றங்களுடனான இத்தாலியையோ கட்டுப்படுத்துவதற்கு உரோமைக் குடியரசின் ஆட்சியானது போதுமானதாக இல்லை. கி.மு. இரண்டு மற்றும் முதல் நூற்றாண்டுகளில் நெருக்கடிநிலை வளர்ந்தது. இந்நிலைக்கு ஒரு பதில் உரோமையிலும், இத்தாலியிலும் பிற மதங்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியானது. இது பிற்காலத்தில் முக்கியம் பெறும். கி.மு 139-இல் யூதர்களும் சோதிடர்களும் உரோமையினின்று வெளியேற்றப்பட்டனர்.

II பேரரசர்களின் கீழ் உரோமை:-

உரோமை ஆட்சியில் பெரும்பாலும் இரத்தக் களரியான போராட்டங்கள் கி.மு. 133-இல் தொடங்கி, ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு நீடித்தது. கி.மு. 40-ஐ ஒட்டிய குழப்பங்கள் யூலியு சீசருடைய சர்வாதிகாரத்திற்கு வழிவகுத்தன. குடியரசை இது முடித்து வைத்தது. ஆனால், அரசாட்சி சீசருக்குப் பின்னரே ஓரளவு உறுதிப்பட்டது. கி.மு. 43-இல் அந்தோணி மற்றும் லெபிதுவுடன் சேர்ந்து சீசருடைய பேரனும் சுவிகார மகனுமான ஆக்டேவியன் (சாதாரணமாக அகுஸ்து என்ற பெயரில் அழைக்கப்படுவார்) அமைத்த மூவர்குழு குடியரசின் முடிவை முத்திரையிட்டது. அந்தோணிக்கும் ஆக்டேவியனுக்கும் இடையிலான போராட்டம் அக்ஸியும் என்ற இடத்தில் நடந்த போரில் தீர்மானிக்கப்பட்டது. அந்தோணி மற்றும் அவரது கூட்டாளியான எகிப்திய அழகி ஏழாவது கிளியோப்பத்திரா ஆகியோருடைய தற்கொலையுடன் அது முடிவுற்றது (கி.மு. 30). உரோமையில் ஏட்டளவில் குடியரசானது தொடர்ந்து இருந்தது. ஆனால் கி.மு. 27-இலிருந்து உரோமை உலகின் தலைவராக ஆக்டேவியன் திகழ்ந்தார்.

இத்தாலிக்கும் அதனுடைய மாகாணங்களுக்கும் ஆக்டேவியனின் ஆட்சிமுறை சமாதானத்தையும் திறமையான ஆட்சியையும் கொண்டு வந்ததும், அத்தகைய ஆட்சிமுறையை ஏற்றுக் கொள்வதற்குப் போதிய நீண்ட காலம் அவர் வாழ்ந்ததும் (கி.பி. 14 வரை) ஒரு மனிதன் ஆட்சியைப் புதிய உரோமை ஆட்சிமுறையாக நிலைப்படுத்த உதவின. அகுஸ்துவின் ஆட்சிக்காலத்தில் கலாச்சார வெளிப்பாடுகளின் வளர்ச்சியானது சமாதானம், பாதுகாப்பு, வளமை ஆகியவற்றின் விளைவான புதிய வாய்ப்புகளுக்குச் சான்றாக உள்ளது. இக்காலத்தில் வீர்கில், ஓரேசு, ஒவிது போன்ற புலவர்களும் லிவி போன்ற வரலாற்று ஆசிரியர்களும் சிறப்புப் பெற்றனர். பெரிய கட்டடத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. சிறிய கலை வடிவங்கள் தோன்றின. இலக்கியம், கலை மற்றும் கட்டடத்தின் மாதிரிகள் கிரேக்கத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அவற்றில் உரோமையரின் தனிச்சிறப்பு மிளிர்ந்தது. ஆனால், அகுஸ்து கால நன்மைகள் கலப்படமற்றவையாக இல்லை. பேரரசரின் மரணத்திற்கு முன்பே இலக்கியப் பாரம்பரியம் வீழ்ச்சியுற்றது. இதற்குக் காரணம், நாட்டின் பாதுகாப்

பிற்கும் வளர்ச்சிக்கும் தேவையெனக் கருதி ஏகாதிபத்திய ஆட்சிமுறையில் அதிக அக்கறைகாட்டியதேயாகும்.

குடியரசுக் கொள்கைகளும் அகுஸ்துவினுடைய ஆட்சியின்போது உரோமை ஆட்சியின் சிறப்புப்பண்பாகிய சர்வாதிகாரப் போக்கும் சேர்ந்து செயல்பட்டதால் அரியணைக்கான உரிமை மரபு கடினமானதாயிற்று. (யூலியு குடும்பத்திற்குள் சுவிகரிக்கப் பட்ட) அகுஸ்து மற்றும் அவரது மனைவி (கிளவுதியா) லிவியா ஆகியோரின் திருமணத்தினால் அமைக்கப்பட்ட மரபு கி.பி. 68 வரை ஆட்சியாளர்களை அளித்து வந்தது. ஏட்டளவில் ஆட்சியாளர் தனது வல்லமையை மக்களிடமிருந்து பெற்றார். எல்லாவற்றையும் படைகளே தீர்மானித்தன. இச் சூழ்நிலையில் குடும்ப சந்ததியுரிமையானது முழுமையாக ஏற்கப்பட முடியாததாக இருந்தது. அகுஸ்துவின் மகன் திபேரியு (14-37) எளிதில் ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஆனால், கிளாதியு (41-54) ஆட்சிப்பேரவையின் எதிர்ப்பிற்கு விரோதமாக உரோமை மெய்க் காவல் படையினரால் அரசனாக்கப்பட்டார். மேலும், மாகாணப் படைகள் நீரோவிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தன (54-68). நீரோவின் மரணத்திற்குப் பின்னர் போரிடும் படைகள் மூவரை அரியணையில் அமர்த்தி, அவர்களை நீக்கவும் செய்தன. பிளேவியர் என்னும் புதிய மரபு வெஸ்பாசியனில் தொடங்கி (69-79) அவரது மகன்கள் தீத்து (79-81) மற்றும் தொமித்தியன் (81-96) ஆகி. யோரில் தொடர்ந்தது. கி.பி. முதல் நூற்றாண்டில் உரோமையின் கொடுங்கோன்மை ஆட்சிமுறையாக உருவாகியது. ஆனால் அடுத்த நூற்றாண்டில் ஆட்சிப் பேரவை வல்லமை பெற்றது. முதல் நூற்றாண்டில் ஆளும் குடும்பங்கள் அரியணையினின்று நீக்கப்பட்டன. இவற்றின் விளைவாக, 2-ஆம் நூற்றாண்டில் கொடுங்கோன்மை ஆட்சிமுறை சிறிது மட்டுப்படுத்தப்பட்டது.

இரு நூற்றாண்டுகளிலும் முக்கியமான கூறு ''பாக்ஸ் உரோமான'' என்ற உரோமை அமைதியாகும். அதாவது அரசியல் ஒன்றிப்பினாலும் வலுவான படையினாலும் அடையப்பட்ட சமாதானமும் பாதுகாப்பும் ஆகும். ஆனால் பேரரசின் பணித்துறையானது வளர்ச்சியுற்றபோது அரசாங்கத்தில் மேற்கூறப்பட்ட நலன்கள் ஆற்றல்மிக்கதாக அமையவில்லை இந்த அமைதியின் சூழ்நிலையில் தான் போர் அல்லது கொள்ளையரின் அச்சமின்றி எல்லைகளைக் கடந்து தனது செய்தியைத் தடையின்றி கொண்டு செல்ல, பவுலால் முடிந்தது. உரோமை அமைதியோடு கலாச்சார ஒன்றிணைப்பும் ஏற்பட்டது. இதன் விளைவான பலவற்றில் ஒன்று இலத்தீன் மொழியானது மேற்கிலும் கிரேக்கம் கிழக்கிலும் முதன்மைபெற்றது. அரங்கக் காட்சிகள் முதலிய கேளிக்கை வகைகள், சமூக அமைப்புகள் உரோமை முறை அரசியலில் பங்கு பெறுதல் முதலியன உரோமையிலிருந்து மாகாணங்கள்வரை பரவின. கி.பி. முதல் மற்றும் அதைத் தொடர்ந்த நூற்றாண்டுகளில் ''கிரேக்க உரோமைக் கலாச்சாரம்'' பற்றித் தெளிவாகப் பேச முடியும்.

உரோமை அமைதியானது பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் திறன் வாய்ந்ததாக இல்லை. அது உண்மையில் எகிப்திலும், யூதேயாவிலும் குறைந்த அளவிலேயே செயல்பட்டது. உரோமை அரசியல் ஆதிக்கத்திற்கு எதிரான யூதர் சிலருடைய எதிர்ப்பானது, ஓரளவிற்குக் கிரேக்க உரோமைக் கலாச்சாரத்திற்குக்காட்டிய எதிர்ப்போடு சேர்ந்ததாகும். இராணுவ மற்றும் அரசியல் ஆதிக்கம், கலாச்சார ஆதிக்கம் முதலியன, மக்கபேயர் காலத்தில் இருந்ததைப்போன்று ஒன்றுபட்டுச் செயல்பட்டன. உரோமை அமைதியால் கீழ்மட்டத்திற்குப் பயன்ஏதுமில்லை. சமூக வேறுபாடுகள் வளர்ந்தன. செழிப்பின் வளர்ச்சி வாழ்வை உயர்த்த ஒன்றுமே செயல்படவில்லை.

III நகரம்:-

அகுஸ்துவின் ஆட்சியில் நகரில் எண்ணற்ற பகட்டான கட்டடங்கள் தோன்றின. முன்னெப்போதும் இல்லாத அளவிற்குப் பளிங்கு உபயோகிக்கப்பட்டது. பொது மன்ற இடம், நகரச் சுவர்களுக்கு வெளியே

வடமேற்கில் மார்சிய வளாகம் போன்ற இடங்களில் தோன்றிய புதிய கட்டடங்கள், பல தெய்வக்கோயில்கள் ஆகியவை இவற்றில் முக்கியமானவையாகும். தலை நகரில் பகட்டான கட்டடங்களைக்கட்டுவது பேரரசின் பொதுவான பாணியாக இருந்தது. இத்தகைய கட்டடங்களில் மிக முதன்மையானது பெரிய கேளிக்கைக் கூடமான கொலோசேயும் ஆகும். இது வெஸ்பாசியன் மற்றும் தீத்துவினுடைய ஆதரவில் கி.பி. 72-80-இல் கட்டப்பட்டது. கி.பி. முதல் நூற்றாண்டின் உரோமையானது தனது வளர்ச்சியின் உச்ச நிலையில் இருந்தது. பெரும்பாலும் பேரரசர்களால் கட்டப்பட்ட எண்ணற்ற பொதுக் கட்டடங்கள் நகரின் மையத்தில் இருந்தன. செல்வருடைய ஆடம்பர வீடுகள் பேரரசின் வளமையைப் பிரதிபலித்தாலும், பலமாடிக் குடியிருப்புகளில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஏழை மக்கள் வாழ்ந்து வந்தனர்.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டு முதல் ஒரு யூத சமுதாயமானது உரோமையில் இருந்து வந்தது. பாம்பேயினால் நகருக்குக் கொண்டுவரப்பட்டு கி.மு. 62-இல் விடுதலை செய்யப்பட்ட யூதக் கைதிகளால் அது அதிகமாகியது. அனேகமாக 49-க்கு முன்பே உரோமையில், ஒரு கிறிஸ்தவ சமுதாயம் இருந்தது (அ.ப. 18:2).

அ.ப.28:14-31-இல் பவுல் உரோமைக்குவருதல் மற்றும் யூதத் தலைவர்களிடம் சாட்சி அளித்தல் (28:14-31) மற்றும், ஒருவேளை, திருவெளிப்பாட்டு நூலில் காணப்படும் சில சுட்டிக் காட்டுதல்களையும் தவிர, உரோமையில் நிகழ்ந்ததாக எந்த நிகழ்ச்சியைப் பற்றியும் புதிய ஏற்பாடு குறிப்பிடவில்லை. ஆனால், அக்கால உலகின்மேல் உரோமை கொண்டிருந்த ஆதிக்கத்தின் விளைவாக அங்கும் இங்குமான உரோமை நகர் குறிக்கப்படுகிறது. புறவின உலகம் முழுவதற்கும் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற பேரார்வத்தின்படி (உரோ 1:14; 11:13) உரோமைக்குச் செல்வதென்பது பவுலின் பேராவலாகும் (அ.ப.19:21;23:11;1:15; 15:23. 28-29.32). உரோமையின் ஆற்றலையும், அது இறைவனுடைய மக்களைக் கொடுமைப்படுத்தியதையும் மனதில் கொண்டு உரோமையைக் குறிக்கப் ''பாபிலோன்'' என்பது உருவகமாகப் பயன்படுகிறது (1 பேதுரு 5:13; திருவெளி 14:8; 16:19; 17:5; 18). நற்செய்திக்கான வேத சாட்சிகளாகப் பேதுருவும் பவுலும் (2 திமோ 1:17) உரோமையில் மரித்தனர்.

IV கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தல்:-

தலைநகரின் கட்டுக்கடங்காத மக்கள் திரளில் புற வழிபாடுகள் ஏற்படுத்திய விளைவுகளோடு உரோமை கொண்ட அனுபவமும், கிறிஸ்தவர்கள் காட்டிய இரகசியத்தன்மையும் உரோமையர் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தக் காரணமாயின. கிறிஸ்தவர்களின் இரகசியத்தன்மை அவர்களைப் பற்றிய பலபொய்யான நம்பமுடியாத கதைகளைத் தோற்றுவித்தது. இவையும் கிறிஸ்தவர்கள் நாட்டின் தெய்வங்களுக்கும் பேரரசர்களுக்கும் பலியிடத் தொடர்ந்து மறுத்ததும் அவர்களை அதிகாரிகள் துன்புறுத்தத் தூண்டின. யூதரின் விநோதமான சமயமானது குறிப்பிட்ட நாடு மற்றும் மக்களுடைய பண்டைய சமயமாகக் கருதப்பட்டு, அதிகாரப்பூர்வமான பாதுகாப்பை நெடுங்காலமாகப் பெற்றிருந்தது. இத்தகைய சலுகையைக் கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கவில்லை.

கொடுமைப்படுத்துவது அதிகாரபூர்வமான நிலையான கொள்கையாகப் புதிய ஏற்பாடு காலத்திற்கு முன்னர்வரை தொடங்கவே இல்லை. கொடுமைப்படுத்தப்படுவது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படும் கருத்தாகும். ஆனால் இது உரோமையர் கொள்கை அன்று. இக்குறிப்புகள் அந்தந்த இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளையே பிரதிபலிக்கின்றன. (உதாரணமாக உரோமையினால் பொதுவாக ஆதரவளிக்கப்படாத அந்தந்த இடங்களில் நிகழ்ந்த செமித்தியருக்கெதிரான செயல்கள்). திருவெளிப்பாட்டு நூலானது உரோமை துன்புறுத்தலைப்பற்றிக் குறிப்பிடுகிறது. ஆனால் இந்நூலானது உண்மையான அனுபவங்களைப் பற்றிக் கூறுவதற்குப் பதிலாகப், புறவினப் பேரரசின் வல்ல

மையின் போக்கை அடிப்படையாகக் கொண்ட, வரவிருக்கும் நெருக்கடி நிலையை முன்னுரைப்பதாகத் தோன்றுகிறது. திருவெளிப்பாட்டு நூல் தொமித்தியன் பேரரசராக இருந்த பொழுது எழுதப்பட்டிருக்கலாம் (கி.பி. 81-96). அவரது ஆட்சியின் போது கிறிஸ்தவர்கள் பொதுவாகக் கொடுமைப்படுத்தப்பட்டதற்கு அதிகச் சான்றுகள் இல்லை எனலாம்.

கி.பி. 250-வரை கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்துவது பெரும்பாலும் அந்தந்த இடத்துக்குரியதாகவே இருந்தது. கிறிஸ்தவமானது சட்டத்திற்கு எதிரானதாக இருந்தாலும், சட்டமானது சாதாரண வழக்கமாகச் சுமத்தப்படவில்லையெனப் பிளினிக்கும் பேரரசர் திரேசனுக்கும் இடையிலான கடிதத் தொடர்பு காட்டுகிறது. 250-க்குப் பிறகு சமயத்துக்காகக் கொடுமைப் படுத்தப்படுவது பேரரசு முழுவதும் பரவியது. எல்லா கிறிஸ்தவர்களையும் பேரரசிலிருந்து தொலைத்துக்கட்டுவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. 306-இல் அரியணையின் ஒரு பகுதிக்குக் கான்ஸ்டன்டைன் உயர்ந்த பின்னர் (ஒரே பேரரசராக 323-இல்) கிறிஸ்தவர்கள் சகித்துக் கொள்ளப்படும் புதிய அனுபவம் கொண்டனர். உரோமை உலகில் ஆற்றலும் பெற்றனர்.

V உரோமையின் மரபுப் பண்பு:-

உரோமை தனக்குப்பின் வந்த மேற்கத்திய நாகரிகத்தின் வழியாக உயிருள்ளதாகத் தொடர்கிறது. தான் உரிமைப் பேறாகப் பெற்று மாற்றியமைத்ததும் தானே புதிதாகக் கிட்டத்தட்ட உலகின் எல்லாப் பகுதிகளிலும் இந்நிலை முதன்மையாக அமைத்ததுமான சமூகக் கலாச்சார அமைப்புகளை மேற்கத்திய கலாச்சாரத்தின் வழியாக உலகமனைத்திற்கும் அளித்துள்ளது.

கலை மற்றும் கட்டடப் பாணி முதலியவற்றில் தன்னுடைய படைப்புகளோடு கிரேக்க முறைகளையும் சேர்த்து மேற்கத்திய உலகிற்கு உரோமை அளித்துள்ளது. இதில் கிரேக்கமோ வேறெந்தக் கலாச்சாரமோ தனியாகச் செய்ய முடியாததை உரோமை செய்துள்ளது. எண்ணற்ற நவீன மொழிகளுக்கு அடிப்படையாக இருப்பது இலத்தீன் மொழியாகும். இது ஒன்றே உரோமைப் பேரரசின் சான்றாக உள்ளது. மற்றமொழிகளைவிட இலத்தீன்மொழி மேற்கத்தியத் திருச்சபையின் சிந்தனையை வெளிப்படுத்தும் ஒரே மொழியாக இருந்திருக்கிறது. உரோமை இலக்கியம் பெருமளவில் இன்றும் உள்ளது; வாசிக்கப்படுகிறது. மேற்கத்திய உலகின் இலக்கியவடிவங்களைப் பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாகச் சிசெரோவின் பேச்சுக்கள் இக்காலம்வரை மேற்கத்திய உலகின் உரைநடைப் பாணிகளைப் பெரிதும் பாதித்துள்ளன.

உரோமையினுடைய மெய்யியல் பாணிகளும், இயக்கங்களும், பேரரசினைத் தொடர்ந்த நூற்றாண்டுகளில், தங்களுடைய மரபுப் பண்பை விட்டுச் சென்றுள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாகக், கிறிஸ்தவத்தின் மூலமான ஸ்தோயிக் ஒழுக்கச் சிந்தனையின் தாக்கத்தையும், அகுஸ்தீனுடைய சிந்தனையில் காணப்படும் புதிய பிளேட்டோவின் தத்துவ அடிப்படையையும் எடுத்துக் கூறலாம்.

உரோமைக் குடியரசானது எழுதப்பட்ட சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குடிமக்கள், அரசாங்கம் மீற முடியாத உரிமைகளை மட்டுமின்றி நாட்டிற்கான கடமைகளையும் கொண்டுள்ளனர் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் நிறுவப்பட்டிருந்தது. இந்தக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் குடியரசு தோல்வி அடைந்தாலும், பேரரசு இவற்றிற்கு மாறாக இருந்தாலும் இக்கோட்பாடுகள் மேற்கத்திய உலகிற்கு அளிக்கப்பட்டன. இவற்றை அரசாங்கங்களிலும் திருச்சபையிலும் இன்றும் காணலாம். நாட்டிற்கும் நாட்டின் சமயத்திற்கும் இடையிலான அமைப்பு உறவானது, பேரரசையும் கடந்து கிறிஸ்தவ நாடுகளில் தொடர்ந்து செயல்படுகிறது.

உரோமைப் பேரரசு (ROMAN EMPIRE)

ஏறக்குறைய கி.மு.30-இலிருந்து கி.பி.5-ஆம் நூற்றாண்டுவரை மத்தியதரைக் கடல் நாடுகளையும் மேற்கு ஐரோப்பாவையும் அரசியல், இராணுவம், சமூகம், பொருளாதாரம் ஆகிய அனைத்து நிலைகளிலும் கட்டுப்படுத்தி முன்னோடியாகச் சென்றது உரோமைப் பேரரசு ஆகும். இத்தகைய உரோமைப் பேரரசின் உள்ளேதான் கிறிஸ்தவம் தோன்றி, வளர்ச்சிபெற்று முடிவில் உரோமைப் பேரரசின் அதிகாரப்பூர்வமான சமயமாகக் கி.பி.4-ஆம் நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1. விரிவு பெற்றதும், பல நாடுகளைக் கைப்பற்றியதும்:- உரோமைப் பேரரசு என்பது ஒரேநாளில் தோன்றியதல்ல. சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று ஒரு பேரரசாக உருவெடுக்க நீண்ட காலம் எடுத்தது. முதலில் அரசர்களின் கீழ், புகழ் பெற்றது. கி.மு. 508க்குப் பின்னர் ஒரு குடியாட்சி அமைப்புக் கொண்ட ஓர் அரசாக உருவெடுத்தது. தொடக்கத்தில் உரோமைக்குள்ளே பிளவுகளும் சண்டைகளும் நிறைந்திருந்தாலும் கி.மு.275-இலிருந்து இத்தாலி முழுமையையும் தன்னுள் கொண்ட உரோமை அரசு, மகா அலக்சாண்டருக்குப் பின் வந்தவர்களை எதிர்க்குமளவுக்கு ஒரு பேரரசாக உருவெடுத்தது. கி.மு.264-இல் வட ஆப்பிரிக்காவில் இருந்து வந்த கார்த்தேசியர்கள் மத்தியதரைக் கடல் வாணிபத்திற்குப் போட்டியாக வந்தனர். உரோமையர் அவர்களை எதிர்த்து, கடற்படையின் மூலம் கி.மு.241-இல் அவர்களை விரட்டி அடித்தனர். கி.மு.237-219-இல் கார்த்தேசியர்கள் ஸ்பெயினைக் கைப்பற்றினர். அவர்களின் இராணுவத் தளபதி கனிபால் இத்தாலியின் வடபகுதியில் நுழைந்து உரோமைப் படையைத் தோற்கடித்து கி.மு.203 வரை அங்கு இருந்தார். கி.மு.201-இலிருந்து கார்த்தேசியர்கள் ஒரு தனி அரசை உருவாக்கினர்.

உரோமை இந்தச் சமயத்தில் கீழைநாடுகளின் பிரச்சனையில் ஈடுபட்டு மக்கதோனியாவை உரோமையைச் சார்ந்திருக்கும் ஒரு மாநிலமாக மாற்றியது. கி.மு.148-இல் மக்கதோனியா உரோமையின் ஒரு பகுதியானது. கொரிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து அழிக்கப்பட்டது. கி.மு.189-இல் மூன்றாம் அந்தியோக்கு என்ற அரசனைச் சிறிய ஆசியாவில் தோற்கடித்தபின் அவர்கள் படைகளை மீண்டும் உரோமைக்குக் கொணர்ந்தனர். கி.மு. 133-இல் உரோமை ஆசியாவின் மீது நிலையான ஆட்சி செலுத்தும் சூழ்நிலைக்கு உட்படுத்தப்பட்டது. பெர்கமோன் அரசன் தன் அரசை உரோமையருக்கு உடைமையாக எழுதிவைத்தார். நான்காம் அந்தியோக்கு எகிப்து நோக்கிப் படையெடுக்க விழைந்தாலும், அது உரோமைத் தளபதியால் தடை செய்யப்பட்டது. சீரியாவோ, எகிப்தோ உரோமையின் அடியில் இருந்ததாகக் குறிப்பிடப்படவில்லை.

பழைய கால எளிமையான வாழ்வுமுறையையே பலர் விரும்பினாலும் கிரேக்கர்களின் பாதிப்பாலும் பல அந்நிய நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியது இருந்தாலும் கிரேக்க முறை பெரிதும் இங்கு நுழைந்தது. உள்நாட்டுக் குழப்பங்களும் அதிகமாயின. முக்கியமாக கி.மு.135-30-இல் வத்ப்புக் கலவரங்கள் அதிகமாயின. சிசிலியில் இரண்டு அடிமைப்போர்கள் நடந்தன (கி.மு.135-32; 103-101). மேலும் ஸ்பார்டகஸ் என்பவரால் இத்தாலியில் ஒரு போரும் (73-71) உள்நாட்டில் இருந்த பிளவுகளின் அடையாளமாக அமைந்தது. மாரியஸ் (107-100) என்பவனின் கொடுங்கோலாட்சிக்குப் பின், சுல்லா (88-79) என்பவனின் ஆட்சி நடைபெற்றது. சிசரோ (63) ஒரு மத்திய அரசை உருவாக்க முனைந்து தோல்வியுற்றார். அதன்பின் மூன்று அரசியல் நோக்குடைய பாம்பே, கிராசுஸ், சீசர் என்ற படைத் தளபதிகளின் கீழ் வந்தது உரோமை அரசு. கிராசுசின் இறப்புக்குப் பிறகு பாம்பேயை மேற் கொண்ட சீசர் ஆட்சிக்கு வந்தார். ஆனால் 44-இல் அவரும் கொல்லப்பட்டார். பின் அகுஸ்து சீசர் ஆட்சிக்கு வந்தார். இவரே உண்மையிலே உரோமைப் பேரரசை நிறுவியவர் எனலாம். இவ்வாறு உரோமைப் பேரரசு பரந்து விரிந்தது. எதிர்பாராத,

முன்னே திட்டமிடப்படாத ஒரு வளர்ச்சி எனலாம். சிசிலி, சார்டினியா, கோர்சியா என்பன 241-238-இல் உரோமையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 197-இல் ஸ்பெயினும், மக்கதோனியா (148), ஆப்பிரிக்கா (146) பின் பெர்காமும் இதில் சேர்ந்தன. கிழக்குச் சிறிய ஆசியாவில் சிலிசியாவும் உரோமையின் ஒரு பகுதியானது. 74-58-இல் சிரேனே, பித்தினியா போன்ற பகுதிகளை அந்தந்த அரசர்களின் விருப்பத்திற்கேற்பப் பெற்றுக் கொண்டனர். இது போலவே கிரேத்தா, சிரியா, சைப்ரஸ் மேலும் காலின் மற்றப் பகுதிகளையும் உரோமையுடன் இணைத்தனர்.

அகுஸ்து ஆட்சிக்கு வந்தபின் அந்தோனி மற்றும் கிளியோபப்த்திராவை வென்றதால் எகிப்தும் (31), அவரது இறப்புக்கு முன் இல்லிரிகும் (27) கலாத்தியா (25), ரேத்தியா, நாரிகும் (கி.மு.16), யூதேயா (கி.பி.6), பானோனியா ஆகிய அனைத்தும் உரோமையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. திபேரியுஸ் சீசரின் ஆட்சியில் கப்பதோக்கியா (17) மாநிலம், கிளவுதியுவின் காலத்தில் மௌரட்டானியா (42), பிரிட்டன் (43) மோயிசியா (44), திரேஸ் (46) ஆகியவை உரோமைக்குரியவையாகின. இவை அனைத்திலும் முன்னர் உரோமைப்படைகள் தங்கியிருந்தன அல்லது உரோமை ஆளுநர்களால் ஆட்சி செய்யப்பட்டன. பின்னர் ஒருசில பகுதிகளே உரோமையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. உரோமைப் பேரரசு, தன் ஆட்சியின் உச்சநிலையில் மத்திய தரைக்கடல் நாடுகள் அனைத்தையும் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டிருந்தது. தென்பிரிட்டனிலிருந்து மொராக்கோ வரையிலும், கிழக்கில் அரேபியா வரையிலும் வடக்கில் துருக்கி, ருமேனியா வரையிலும், மேற்கே டான்யூப், ரைன் வரையிலும் பேரரசு பரந்துவிரிந்து கிடந்தது. பிரிட்டன் பெரும் கோட்டைச் சுவர்களால் காக்கப்பட்டது. கிறிஸ்துவம் வளர்ந்த முதல் நூற்றாண்டில் 25-28 பெரும் படைப்பிரிவுகள் எப்பொழுதும் ஆயுதந்தாங்கியவர்களாய்ப் போருக்குத் தயாராக இருந்தனர். ஒவ்வொரு படைப்பிரிவும் ஆறாயிரம் போர் வீரர்களையும், படை அதிகாரிகளையும் கொண்டிருந்தது. இது மட்டுமன்றி அந்தந்த நாட்டு வீரர்களும் அதே எண்ணிக்கையில் ஒவ்வொரு படைப்பிரிவிலும் இருந்தனர்.

2.மக்கள் தொகையும், சமூக அமைப்பும்:-
பேரரசின் மக்கள் தொகைபற்றிய கணக்குப்பற்றி வேறுபட்ட கருத்துகள் உண்டு. பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மக்கள் எண்ணிக்கை 54,000,000 தான். இதில் 1,000,000 பேர் உரோமை நகரில் வாழ்ந்தனர். கி.மு.47-இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுக்கின்படி இத்தாலியில் குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரின் எண்ணிக்கை 6,000,000 என உரோமையில் உள்ள கணக்கெடுப்புச் சுருள் கூறுகிறது. பேரரசின் மொத்த எண்ணிக்கையில் 5,000,000-க்கு மேற்பட்ட யூதர்கள் இருந்திருக்க வேண்டும். இந்த எண்ணிக்கையுடன் யோசிபஸ் குறிப்பிடும் பரிசேயர்கள் 6,000, கிறிஸ்தவர்கள் 5,000 பேரின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம் (அ.ப.4:4)

சமூகம் ஒரு பிரமிடு அமைப்பில் இருந்தது. ''செனட்'' என்னும் ஆட்சிக்குழுவைச் சேர்ந்த 600 உறுப்பினர்களும் அவர்களின் குடும்பங்களும் 1600 என்ற எண்ணிக்கையில் இருந்தனர். பெரும்பான்மையான உரோமைக் குடிமக்கள் இந்த இரண்டு வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தனர். விடுவிக்கப்பட்டவர்களும் இருந்தனர். முன்னர் அடிமையாயிருந்து விடுவிக்கப்பட்டவர் எவரும் பொதுவாகக் குடிமக்கள் ஆவது இல்லை. மூன்றாவதாக அடிமைகள் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு என்ற பெரிய எண்ணிக்கையில் இருந்தனர்.

இந்தச் சமூக அமைப்பிற்கேற்ப நாட்டின் தலைவராகப் 'பேரரசரும்', அரசருக்கு ஆலோசனை கூறும் 'மன்றமும்' (இதுவே அரசாங்க அலுவலங்களின் தலைமை மன்றம்), உரோமையை நடத்திச் செல்லும் பொறுப்பதிகாரிகளும் மாநிலங்களை ஆள

மாநில ஆளுநர்களும் செயலாற்றினர். அரசாட்சிக் காலத்தில் சமூகத்தின் முதல் இரண்டு வகுப்பைச் சார்ந்தவர்கள் அரசாங்கப் பணியில் பங்கேற்க வேண்டும் என்பதற்காகவே பல அலுவலகங்களில் பொறுப்பேற்றுப் பணியாற்றினர்.

3. விவசாயம், தொழில், வாணிபம், செய்தித்தொடர்பு:-

பேரரசில் முக்கியமாக விளைந்தவை கோதுமை (எகிப்தில், அதிகம் விளைந்து உரோமைக்கு அனுப்பப்பட்டது), திராட்சை, ஒலிவா மற்றும் பிற காய்கறிகளாகும். நாணல் தாள்களும் எகிப்திலிருந்தே வந்தன. தங்கம், வெள்ளி, ஈயம், தகரம், தாமிரம், இரும்பு ஆகிய உலோகங்களை வெட்டி எடுக்கத் திறந்தவெளி மற்றும் மூடிய சுரங்கத் தொழில்கள் நடைபெற்றன. அதிகமான சுரங்கங்கள் அரசாங்கத்துக்குரியனவாக இருந்தன. அதில் அடிமைகள் வேலை செய்தனர். சலவைக் கற்கள் அதிகமாகக் கிரேக்கத்திலே தோண்டி எடுக்கப்பட்டன. மட்பாண்டங்கள், துணி உற்பத்தி, தோல்பொருட்கள், உலோகங்கள், கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி ஆகிய அனைத்துமே அடிமைகள், விடுதலை பெற்றவர்கள் ஆகியவர்களாலே அதிகம் நடைபெற்றன. அல்லது இவற்றை நடத்த வங்கிகள் கடன் உதவி செய்து அதன் மூலம் இத்தகைய உற்பத்திகள் வளர அரசு உதவியது. வேளாண்மை மற்றும் பிற உற்பத்திப் பொருட்கள் மிகச் சிறந்த உரோமைச் சாலைகள் வழியாக உள்நாட்டிலும், மத்தியதரைக் கடல் மற்றும் பிறகடல்களின் வழியாக வெளிநாடுகளிலும் விற்கப்பட்டன. வழிப்பறிக் கொள்ளையர்கள் நிலத்தில் தொந்தரவு கொடுத்து வந்தாலும், கடற் கொள்ளைக்காரர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டனர். அரசாங்கக் காவற் கப்பல்கள் அவர்களின் தொந்தரவு இல்லாமல் காத்து வந்தன. பேரரசின் தொடக்ககாலத்தில் 120 க்கும் மேற்பட்ட கப்பல்கள் பட்டு, நறுமணப் பொருட்கள், வைரம், தந்தம், முத்து, சீனப்பட்டு ஆகியவற்றைச் சுமந்து கொண்டு இந்தியா சென்றன. அரசாங்க அலுவலகச் செய்திகளைச் சுமந்து செல்ல ஒரு அமைப்பு இருந்தது. மற்றச் செய்திகளைச் சுமந்து செல்லத் தனியாட்கள் பயன்படுத்தப்பட்டனர்.

4. பணமும், வங்கிகளும்:- நாணயப் பரிமாற்றம் உரோமைப் பேரரசு முழுவதும் ஒரே முறையில் அமைந்திருந்தது. குடியரசின் காலத்தில் பணப் புழக்கத்தில் குழப்பம் ஏற்படாதிருக்கப் பணத்தின் மதிப்பை அவ்வப்பொழுது குறைப்பதின் மூலம் கட்டுப்படுத்தினர். பேரரசில் இரு நூற்றாண்டளவு வெள்ளி நாணயங்களே (தினாரி) அதிகம் புழக்கத்தில் இருந்தன. சண்டைகளின் காரணமாகவும், பணவீக்கத்தைக் குறைப்பதற்காகவும் 20%, 40% நாணயத்தின் எடை குறைந்தது.

பணப் பரிமாற்றத்திற்கு மட்டுமன்று தங்கள் அரசின் பெருமையைப் பறைசாற்றும் வழியாகவும் நாணயங்கள் பயன்பட்டன. இன்றைய தபால் தலைகள் போல அன்றைய நாணயங்களும் பேரரசரின் உருவம், அவரது குடும்பத்தின் உறுப்பினர், வாரிசு, அவரது பெருமை எனப் பல வகையில் பேரரசைப் பறைசாற்றுபவையாக இருந்தன.

தனியார் வங்கிகள் மூலமும், தனிக்கடன் அளிப்போர் மூலமும் வியாபாரத்திற்கும், பண முதலீட்டுக்கும் வழி செய்யப்பட்டன. 12% மட்டுமே வட்டி வாங்க வேண்டுமென்ற ஒரு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

5. வரிகளும், அரசாங்க நிதியும்:-

உரோமைப் பேரரசின் வரிகளுள் வணிக வரியும், வருவாய் வரிகளும், 5% அடிமைகளாயிருந்து விடுதலை பெறுவோரின் வரிகளும், உரோமைக் குடிமகனாவதற்குரிய வரிகளும் உள்ளடங்கும். தண்டங்கள், போரில் கிடைத்த பொருள்கள், அரசாங்கச் சுரங்கங்கள், சொத்துக்கள் இவற்றிலிருந்தும் வருமானம் கிடைத்தது. தனியார் சொத்து, நிலங்கள் இவற்றின்மீது இத்தாலிக்கு வெளியே உள்ளவர்கள்மீது கப்பம் என்ற வரிவசூலிக்கப்பட்டது. 'ஆயக்காரர்கள்' எனப்படும் வரிவசூலிக்கும் ஒரு அமைப்பே இருந்தது. இவர்கள் உரோமையின் சொத்தில் பங்குகொள்பவர்க

ளாக இருந்தனர். இதில் பல கையூட்டுகளும் மற்றும் தவறான கையீடுகளும் இருந்தன. உரோமைக் குடியரசில் வரிப்பணம் முழுவதும் செனட்.என்ற ஆட்சிக் குழுவின் அதிகாரத்தின்கீழ் இருந்த கருவூலங்களில் செலுத்தப்பட்டது. ஆனால் அரசர்களின் காலத்தில் இவை அதிகமாக அவருக்கும், அவரது வாரிசுகளுக்குமே போய்ச் சேர்ந்தன.

அகுஸ்து சீசரின் காலத்தில் கருவூலங்களின் வருமானம் 400,000,00 செஸ்டர்களாக இருந்தது. வெஸ்பாஸியன் காலத்தில் இது 2,500,000,000 ஆக அதிகரித்தது. இவ்வாறு அடிக்கடி வரிகள் உயர்த்தப்பட்டன.

6. சமூகச் சூழ்நிலைகள்:-

அன்றைய குடும்ப வாழ்வைப் பற்றிய பொதுவான கருத்து ஒன்றைக் கூறுவது என்பது இயலாதது. ஏனெனில் ஒருசில விமர்சக எழுத்தாளர்களைத் தவிர உரோமைக் குடிமக்களின் வாழ்வு பற்றிய ஏனைய விபரங்களைத் தெளிவாகத் தரக்கூடிய நூல்களோ, புள்ளி விபரங்களோ இல்லை. ஆனால் கி.மு.முதலாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களாலும், புதிய பணம் உரோமைக்குள் நுழைந்ததாலும் இவை பணக்காரக் குடும்பங்களை மட்டுமன்று மற்ற நிலையினரையும் பாதித்தது. உரோமைக் குடும்பங்களின் அளவு குறைந்தது. உரோமையில் இருந்த பெண்களின் வாழ்க்கை ஒழுக்கவியலாருக்குப் பெரும் துர்மாதிரிகையாக இருந்தது. அகுஸ்து சீசர் விவாகரத்தைக் குறைப்பதற்கும், விபச்சாரத்தைத் தடுப்பதற்கும், பெரிய குடும்பங்கள் உருவாவதற்கும் சட்டங்கள் இயற்றினார். இதனை அவருக்குப் பின்வந்தவர்களும் உறுதிப்படுத்தி வலியுறுத்தினர். அன்றைய பேரரசில் கருச்சிதைவு, குழந்தைகளைக் கைவிடல் முதலியன தடை செய்யப்படவில்லை. தொமிசியன், ஆண்கள் ஆண்களுடன் கொள்ளும் உடலுறவிற்கு 10,000 செஸ்டர்கள் தண்டனை விதித்தார்.

இவ்வளவு சட்டங்கள் இயற்றியும் ஒழுக்க வாழ்வில் எவ்வளவு தாழ்வுற்றிருந்தனர் என்பதைப் பவுல் கிறிஸ்தவர்களை உலகினின்று ஒதுங்கி வாழக் கூறுவதிலிருந்தே தெரிகிறது. அதற்காக எல்லாக் குடும்பங்களும் அப்படித் தான் இருந்தன என்று கூறுவதற்கில்லை. எனவே நல்ல ஒழுக்கம் நிறைந்த குடும்பங்களும் இருந்திருப்பது தெரிகிறது.

7. உரோமைச்சட்டம்:- பேரரசு மனிதர்களால் மட்டுமன்று, சட்டத்தாலும் ஆளப்பட்டது. குடியரசின் இறுதி நூற்றாண்டில் உரோமைச்சட்டம் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றது. அரசர் நாட்டின் மிக உயர்ந்த நீதிபதி என்ற முறையில் சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்கினார். சட்ட வல்லுநர்கள் ஆலோசனை மன்றத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் முடிவுகள் எடுத்தனர்.

நாடு, மக்கள், தனிச் சொத்துரிமை இவற்றைக் காப்பதற்காகமட்டுமன்று, இவற்றோடு தொடர்பு கொண்ட சமூகநிலைகளைக் கட்டுப்படுத்தும் ஒன்றாகவும் இருந்தது சட்டம். 'ஸ்தோயிக்குகள்' என்பவர்களால் சட்டத்தில் பெண்கள், அடிமைகள் இவர்களின் நிலைமை ஓரளவு உயர்ந்தது. அடிமைகள் தங்களது சொத்தை வைத்துத் தங்கள் உரிமையை விலையாகப் பெறலாம் எனும் நிலை இருந்தது. அவர்களைத் தவறாக நடத்தாதபடி அவர்களைப் பாதுகாக்கச் சட்டம் இருந்தது.

ஆனால் இன்றைய நடைமுறைபோல் ஒருவனைத் திருத்துவதற்கென்று தண்டனை கொடுக்கப்படவில்லை. ஒருவனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி செய்யப்பட வேண்டுமென்ற நோக்கில் தனிமனிதக் குற்றத்திற்குத் தண்டனையும், பொதுக் குற்றத்திற்கு மிகவும் மோசமான தண்டனைகளும் வழங்கப்பட்டன.

8. உரோமையும், கிறிஸ்தவமும்:-

உரோமையர்கள் கிறிஸ்தவத்தின் மீது கொண்டிருந்த நோக்கு என்னவென்பதை அவர்கள் மற்ற அந்நிய சமயங்களை எந்த முறையில் பார்த்தனர் என்பதிலிருந்து பிரித்துப் பார்த்தால் அதனை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. பிளினி, தாசித்து, சுவதெனியுஸ் ஆகியோர் கிறிஸ்து

வத்தை ஒரு மூட நம்பிக்கை என்றனர்; அதாவது அறிவு அதிகம்அற்ற கீழ்த்தர வகுப்பினரால் உருவாக்கப்பட்ட புதிய அந்நிய சமயம் என்ற கருத்தே அவர்கட்கு இருந்தது. எவ்வாறு யூதர்கள் சிலைவழிபாடு விபச்சாரத்துக்கு இட்டுச் செல்கிறதென்று நினைத்தனரோ, அதுபோலவே உரோமையரும் அந்நிய மூடநம்பிக்கைச் சமயங்களும் விபச்சாரங்களுக்கும் மனிதனை உண்ணும் பழக்கத்துக்கும் இட்டுச் செல்லும் என நம்பினர். 'பக்கனலியா' என்ற முறையை அழித்தது பற்றி ''லிவி'' என்பவரின் விவரிப்பிலிருந்து மற்றச் சமயங்கள்மீது உரோமையருக்கு இருந்த எண்ணமும், அத்தகைய மோசமான எண்ணமே கிறிஸ்தவத்தைப் பற்றியும் அவர்களிடம் இருந்திருக்கவேண்டுமெனவும் தெரிகிறது.

இவ்வாறு கிறிஸ்தவமும் ஒரு அந்நிய சமயமாக இருந்ததால் அதனை மூடநம்பிக்கை எனக் கருதினர். உரோமையரால் பெரும் குற்றவாளி எனத் தீர்ப்பிடப்பட்டவரை ஆண்டவராக ஏற்றுக் கொண்டவர்களின் சமயத்தை நிச்சயமாக அவர்கள் மூடநம்பிக்கை என்று கூறியதில் வியப்பில்லை; அதைப் பின்பற்றியவர்களின் ஒழுக்கத்தைக் குறைத்து மதிப்பிட்டதில் வியப்பொன்றுமில்லை.

கிறிஸ்தவத்தைப் பற்றிய முதல் அறிக்கை போன்சியு பிலாத்துவிடமிருந்து வ்ந்ததுதான். ஆனால் அது வெளிப்படுத்தப்படவில்லை. பிலாத்துவின் செயல்கள் என்ற நூல் ஒரு போலி நூலாகும். கிளாதியுவின் ஆட்சிக் காலத்தில் 'கிறெஸ்துஸ்' என்பவர் உரோமையில் யூதர்களிடையே பெரும் குழப்பம் விளைத்ததாகக் குறிப்புள்ளது. உரோமை அதிகாரிகள் கிறிஸ்தவர்களைப் பாதுகாத்தனர் அல்லது கண்டு கொள்ளாமல் இருந்ததாக அப்போஸ்தலர் பணி நூலில் காணப்படும் நிலை சரியானதாகும். பாலஸ்தீனத்தில் உரோமை ஆளுநர் இல்லாத போதுதான் இயேசுவின் சகோதரராகக் கருதப்பட்ட யாக்கோபு (கி.பி.62) கொல்லப்பட்டார். இருந்தாலும் கிறிஸ்தவர்கள் மேல் பலருக்கு ஓரளவு வெறுப்பு இருந்தது. நீரோவின் ஆட்சியில் உரோமையில் தீப்பிடித்த பிறகு கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் கிறிஸ்தவர்கட்கு எதிராக எச்சட்டமும் இயற்றப்பட்டதாகத் தெரியவில்லை. பிளினி, திரேசனுக்கு எழுதிய கடிதத்தில் கிறிஸ்தவத்தை மறைமுகமான தீய ஒழுக்கத்தின் இயக்கம் என்று குறிப்பிடுவதாகத் தெரிகிறது.

9. பேரரசு பற்றிக் கிறிஸ்தவர்களின் கருத்து:-

புதிய ஏற்பாட்டில் உரோமைப் பேரரசு பற்றிப் பல்வேறு கருத்துக்கள் வெளிப்படுகின்றன. இயேசுவின் எதிரிகள் அவர் வரிசெலுத்த வேண்டாமென்கிறார் என்று குற்றம் சாட்டினர் (லூக் 23:2). ஆனால் அவரிடம் நேரடியாகக் கேட்டபோது செசாருக்குரியதைச்' செசாருக்குச் செலுத்த வேண்டுமென்றார் இயேசு (மாற் 12:17 இணை). யோவான் நற்செய்திப்படி உரோமைப் பேரரசின் அதிகாரம் மேலிருந்து வந்ததாகக் குறிப்பிடுகிறார் (யோவா 19:11). பவுல் நீரோ ஆண்ட காலத்தில் எழுதிய கடிதங்களில் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிந்து, உண்மையுடனிருந்து வரிசெலுத்த வேண்டுமெனக் கூறுகிறார் (உரோ.13:1-7); இதே கருத்துக்கள் தீத் 3:1; 1 பேதுரு 2:13-17-இலும் காணப்படுகின்றன.

வெளிப்பாட்டு இலக்கியங்கள் பேரரசு உடனடியாக அழிக்கப்படும் என்று தங்களையே தெய்வங்களாக்கிக் கொண்ட மன்னர்களுக்கு எதிராக உரைக்கின்றன (2 தெச 2:7; திருவெளி). காப்புரையாளர் யுஸ்தினும் அவரது சீடர் தேசியனும் கெட்ட அரசு எனப் பேரரசைக் கண்டிக்கின்றனர்.

இவையெல்லாம் பேரரசின் மேல் அவர்கள் கொண்டிருந்த ஒருவகை வெறுப்பையே காட்டுகின்றன. இவை பல மாநிலங்களில் புரட்சியாக வெடித்தன என்பதையும் வரலாறு ஒத்துக்கொள்கிறது. சமயத்திற்காக வேதனைப்படுத்தப்பட்டாலும் அரசுக்கும் அதிகாரத்துக்கும் உண்மையுள்ளவர்களாக

வும் சில கிறிஸ்தவர்கள் இருந்தனர். அத்தெனகோரஸ் என்பவர் மாற்குஸ் அவுரேலியுஸ் என்பவரது ஆட்சி கடவுளால் தரப்பட்டது என்றும், மெலிட்டோ என்பவர் கிறிஸ்தவமும் உரோமைப் பேரரசுடன் ஒன்றாக வளர்ந்த ஒன்று என்றும், அதனைத் தீய மன்னர்களே துன்புறுத்தினர் என்றும், ஆகவே அது அதிகாரபூர்வமான சமயமாக மாற்றப்படவேண்டுமென்றும் கூறுகிறார். நான்காம் நூற்றாண்டில்தான் இந்நம்பிக்கை உண்மையானது. கிறிஸ்தவமும் உரோமையின் அதிகாரப் பூர்வமான அரசாங்க மதமானது.

உரோமையருக்குத் திருமுகம் (Letter to the Romans)

1. முன்னுரை:-

''உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்'' (மாற் 16:15) என்னும் இயேசுவின் வாக்கைச் சிரமேற்கொண்டு அதற்காகப் பல நற்செய்தித் தூதுரைப் பயணங்களை மேற்கொண்டார் பவுல். இப்பயணங்களில் உரோமைப் பேரரசில் சிறப்பான நகரங்களான எபேசு, கொரிந்து, பிலிப்பு, தெசலோனிக்கா ஆகியவற்றில் நற்செய்தியை அறிவித்து, திருச்சபையை நிறுவினார். பின் மற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது அங்கிருந்து தான் ஏற்படுத்திய அந்தத் திருச்சபையின் மக்களிடம் கடிதங்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தொடர்ந்து தன் அறிவுரையை வழங்கினார். அப்படிப்பட்ட கடிதங்களுள் ஒன்றுதான் உரோமைத் திருச்சபைக்கு எழுதப்பட்ட கடிதமாகும். இந்தக் கடிதத்தை ஏன், எங்கு யாருக்கு எழுதினார்? என்ன நடையைக் கையாண்டுள்ளார் என்பதையும் கீழே காண்போம்.

2. காலம், இடம்:-

காலம்:- புனித பவுல் தனது பணித்தளமான ஒரொன்டஸ்க்குத் திரும்பியவுடன் அவர் தனது மூன்றாவது நற்செய்தித் தூதுரைப் பயணத்தைத் தொடங்கினார். இப்பயணத்தில் அவர் மக்கதோனியா வழியாக எருசலேம் செல்ல விரும்பினார். ''பவுல் மக்கதோனியா, அக்காயா வழியாக எருசலேம் செல்ல விரும்பினார்'' (அ.ப.19:21). இதற்கு முன்தான் அவர் இந்தக்கடிதத்தை எழுதி இருக்க வேண்டும், ஏனெனில் அவர் உரோ.15:19-இல் ''எருசலேமில் தொடங்கி அதனை மையமாகக் கொண்டு இல்லிரிக்கம் நாடுவரை எங்கணும் சுற்றிக் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை முடித்துவிட்டேன்'' என்கிறார். இப்படி அவர் எருசலேம் சென்று எருசலேமின் தாய்த் திருச்சபைக்காகத் தான் திரட்டிய உதவியை (1 கொரி 16:1-4) அவர்களிடம் கொடுத்தபின் மேற்கத்திய பகுதியான உரோமைக்குச் செல்ல விரும்பினார். எனவே இதன் பின்னணியில் நோக்கும் போது இந்தக் கடிதத்தை அவர் உரோமைக்குச் செல்லுமுன் கி.பி.57-58-இல் கோடைக்காலத்தில் எழுதி இருக்க வேண்டும் (உரோ 15-10; அ.ப.19:21-21:19.

இடம்:- மூன்றாம் நற்செய்தித் தூதுரைப் பயணத்தின்போது அவர் மக்கதோனியா நாட்டின் தலைநகரான கொரிந்து நகருக்கு வந்து அங்கு மூன்று மாதம் தங்கினார். இங்குதான் அவர் உரோமையருக்குத் தனது கடிதத்தை எழுதினார் என ஏற்றுக் கொள்ளுகின்றனர் அறிஞர்கள்: மேலும் உரோ 16:1-இல் ''நம் சகோதரியாகிய பெபாவை அன்போடு ஏற்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்; இப்பெண்மணீ கெங்கிரேயாவில் இருக்கும் திருச்சபைக்குத் திருப்பணி புரிகிறவர்'' என்று பெபா என்ற பெண்மணியை அறிமுகம் செய்கிறார். இந்தக் கென்கிரேயா கொரிந்து நகரிலிருந்து சுமார் 7 மைல் தொலைவிலிருந்த துறைமுக நகரம். இங்கிருந்து அவர் எபேசுக்குக் கப்பலேறுகிறார் (அ.ப.18:18). மேலும் உரோ 16:21-23-இல் அவர் குறிப்பிடும் நபர்களும் குறிப்பாக, காயுசு என்பவரும் கொரிந்திய திருச்சபையைச் சார்ந்தவர்கள். எனவே அறிஞர்கள் இக்கடிதம் கொரிந்து நகரில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

3. சூழ்நிலையும் நோக்கமும்:-

எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் வரை நற்செய்தியை அறிவித்தபின் மேலை நாடுக

ளைச் சிறப்பாக ஸ்பெயின் நாட்டை அவர் மனம் நாடியது (உரோ 15:19). இந்தப் பய ணத்தின்போது தனது நீண்ட நாள் ஆசை யான உரோமைத் திருச்சபையைச் சந்திப் பதை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினார் (1:13; 15:22, 24). ஆனால் இதற்குமுன் அவர் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான பணி ஒன்று இருந்தது-தான் ஏற்படுத்திய காலாத் தியா, மக்கதோனியா, அக்காயா போன்ற இடங்களில் வாழ்ந்த புறவினத்திருச்சபையி டமிருந்து திரட்டிய நிதியை எருசலேமுக்குச் கொண்டு சேர்ப்பதாகும். இவ்வாறு கொரிந்து நகரிலிருந்து எருசலேமுக்குச் செல் லுமுன், இந்தக் கடிதத்தை எழுதுகிறார். அவர் எழுதிய மற்றக் கடிதங்கள் சூழ்நி லைக்கு ஏற்ப எழுதப்பட்டாலும், உரோமை யர் ஒரு விதிவிலக்காகவே நிற்கிறது. கொள் கைக் குழப்பம், பிரிவினை முதலியவை நிலவியபோது புனித பவுல் தன் கடிதங்கள் வாயிலாக அவற்றைத் தீர்த்து வைக்கவும், அவர்களோடு தொடர்பு கொள்ளவும் தன்னு டைய மற்றக் கடிதங்களை எழுதி இருந்தா லும், உரோமைத் திருச்சபைக்கு அத்தகைய தொரு சூழ்நிலையில் கடிதம் எழுதியதாகத் தெரியவில்லை.

கீழ்த்திசை நாடுகளில் தன் பணியை முடித்து விட்டதாக எண்ணி, ''புறவினத்தா ரின் அப்போஸ்தலர்'' (உரோ 11:13) என்று இங்குப் பெயர் பெற்றிருந்த பவுல், தன் னைத் தனிப்பட்ட முறையில் அறியாத உரோமைத் திருச்சபைக்குத் தன்னை அறிமு கப்படுத்திக் கொள்ளவும், அவர்களின் நல்ல லெண்ணத்தையும் நம்பிக்கையையும் தேடிக் கொள்ளவும் இக்கடிதத்தை எழுதினார்.

மேலும் அவர் உரோமைக்குச் செல்ல இருப்பதை அறிந்த அவரது பகைவர்கள், அவரைப் பற்றியும் அவரது போதனைக ளைப் பற்றியும் தவறான கருத்துகளைப் பரப்பி வந்தபோது, தான் உரோமையில் போதிக்க விரும்பிய நற்செய்தியின் சுருக்க மாகவும், தன்னுடைய கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்கவும் இக்கடி தத்தை எழுதினார்.

கீழ்த்திசை அப்போஸ்தலப் பணியின் உச் சக்கட்டம்தான் எருசலேம் திருச்சபைக்காகத் திரட்டிய நிதியை அவர்களிடம் சேர்ப்பதா கும். இந்த நிதி வறுமையில் இருப்பவர்க ளைத் தூக்கிவிட மட்டுமன்று, எருசலேம் திருச்சபைக்கும் புறவினத்தாருக்குமிடையே ஒற்றுமையை வளர்க்கவுமே, இப்பணி சிறப் பாக முடிய வேண்டும் என்று எண்ணினார். ஆனால் புனித பவுல் இதுவரை திருச்சட் டத்தை எதிர்த்த ஒரு பரிசேயனாகவே கருதப் பட்டு வந்தார். எனவே அவரைத் தீர்த்துக் கட்டவும் விரும்பினர். எனவே தன் பணி சிறக்க எண்ணிய அவர் விருப்பமே கடிதமா னது.

4. உரோமைத் திருச்சபையும் அதை நிறுவி யவரும்:-

கீழ்த்திசையில் புனித பவுல் பணிபுரிந்த போது திருச்சபையை உரோமைப் பேரரசின் முக்கிய நகரங்களில் (எபேசு, பிலிப்பு, கொரிந்து) நிறுவுவது அவர் வழக்கம். உரோ மையிலும் அவர் தூதுரைக்க விரும்பினா லும் அங்கே முன்பே திருச்சபை இருந்ததை அறிந்திருந்தார். எனவேதான், ''வேறொரு வர் இட்ட அடிப்படை மீது கட்டடம் எழுப்ப நான் விரும்பவில்லை'' (உரோ 15:20) என்கிறார். இதிலிருந்து அவர் புனித பேதுருதான் இதை நிறுவினார் என்று ஏற்றுக் கொண்டார் எனக் கூறமுடியாது. ஏனெனில் சுமார் கி.பி.49-இல் நடந்த எருசலேம் பொதுச் சங்கத்தைப் புனித பேதுரு தலைமை ஏற்று நடத்தி வைத்தார். இச்சங் கம் நடைபெறுவதற்குமுன் அவர் உரோமை நகருக்குச் சென்றதற்கு எந்த விதமான ஆதார மும் இல்லை. மேலும் கி.பி.49-இல் கிளா தியு பேரரசன் எல்லா யூதர்களையும் உரோ மையைவிட்டு வெளியேற ஆணையிட்ட தால் ஆக்கிலாவும், பிரிசிக்கில்லாவும் கொரிந்துக்குச் சென்றார்கள் என்பதை அப் போஸ்தலர் பணியில் காணலாம் (அ.ப.18:1-2). யூதருக்கும், யூதக் கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட குழப்பம் இதற்குக் கார ணமாக இருக்கலாம் என்று சுவத்தோனியுஸ் கருதுகிறார். எனவே கி.பி.49-ஆம் ஆண்டுக் குமுன்பாகவே உரோமையில் கிறிஸ்தவர்

கள் இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும் கி.பி.43-ஆம் ஆண்டில் மரணமடைந்த பாம்போனியா கிரேசினா என்பவரின் கல்லறைமேல் எழுதப்பட்டுள்ள சாசனமும் இதை உறுதிப்படுத்துகிறது.

தற்கால அறிஞர்கள் அவர்கள் யூதக் கிறிஸ்தவர்கள் என்று கருதுகிறார்கள்; பழைய ஏற்பாட்டிலிருந்து அதிக மேற்கோள்கள் கையாளப்படுவதாலும், ஆபிரகாமைப் பற்றிய பகுதிகள் எடுத்துரைக்கப்படுவதாலும் அவர்கள் யூதக் கிறிஸ்துவர்கள் என வாதிடுகின்றனர். மேலும் உரோமை ஒரு வணிக நகரமாக இருந்ததால் பலர் அங்கு வந்தனர் என்றும், அதில் கிறிஸ்தவர்களும் இருந்தார்கள் என்றும், எண்ணத் தோன்றுகிறது.

வேறுசிலர் உரோமைத் திருச்சபையில் புறவினத்தாரே அதிகம் இருந்தார்கள் என்று கருதுகின்றனர். ஏனெனில் புனித பவுல் புறவினத்தாருக்குக் கடிதம் எழுதியது போலத்தான் குறிப்பிடுகிறார். ''புறவினத்தாரைச் சார்ந்த நீங்களும் இறைவனின் அழைப்புப் பெற்று இயேசு கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்கிறீர்கள்'' (உரோ 1:5-7).

உரோமை நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் சமுதாய நிலையைப்பற்றிச் சிறப்பான சான்றுகள் ஏதும் இல்லை. எனினும் உரோ 16:3-15-இல் குறிப்பிடும் பெயர்கள் ஓரளவு அவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. அவை யூத இனத்தை அல்லது கிரேக்க இனத்தைச் சார்ந்த அடிமைகள் அல்லது அடிமைகளாய் இருந்து விடுவிக்கப்பட்டவர்களின் பெயர்கள்.

எனவே உரோமைத் திருச்சபை பேதுரு உரோமைக்குச் செல்வதற்கு முன்பே இருந்தது. அது ஒரு தனி மனிதனால் நிறுவப்படவில்லை என்பதும் தெளிவாகிறது.

5. நூலாசிரியர்.

புனித பவுல்தான் உரோமையருக்கு எழுதப்பட்ட கடிதத்தை எழுதினார் என்பது பழங்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது போலவே இன்றும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ''கிறிஸ்து இயேசுவின் ஊழியனும், அப்போஸ்தலனாக அழைக்கப்பெற்றவனுமாகிய பவுலாகிய யான் எழுதுவது'' (உரோ 1:1) என்று அவரே எழுதியுள்ளார்.

இருப்பினும் 16-ஆம் அதிகாரத்தில் காணப்படும் ''புகழுரைப் பகுதி பற்றிப் பல வினாக்கள் எழுப்பப்படுகின்றன. முதலில் இந்தப் புகழுரை வெவ்வேறு ஏடுகளில் வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளது. இரண்டாவதாக அதன் நடையும் வழிபாட்டில் பயன்படும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது. இதைத் தவிர இந்நடையை உரோமையருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் வேறு இடங்களில் காணமுடியவில்லை. மூன்றாவதாக இதில் குறிப்பிடப்பட்டு, புறவினத்தாரின் மீட்பைக் குறிக்கும் ''மறைபொருள்'' என்ற வார்த்தை பவுலால் எழுதப்பட்ட மற்ற கடிதங்களுக்குரிய சிறப்பு அம்சமே தவிர உரோமையருக்கு உரியதல்ல. இந்த மூன்று காரணங்களும், தனித்தனியாகவோ, சேர்ந்தோ சரியான விடையை அளிக்கவில்லை. இருப்பினும் 16-ஆம் அதிகாரத்தை அப்படியே நோக்குகின்றபோது இந்தப் ''புகழுரை'' பின்னால் சேர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து 16:1-23 புனித பவுலால் எழுதப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அது உரோமையருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் ஒருங்கிணைந்த பகுதியா என்ற வினா எழுகிறது.

உரோமையரின் முடிவுரை 15:33-இல் அமைகிறது. அவர் வாழ்த்துக் கூறுகையில் பல பெயர்களை, சுமார் 26, குறிப்பிடுகிறார். தானே அறியாத ஒரு திருச்சபையில் இத்தனை நபர்களை அவர் அவர்களின் பெயரோடு அறிந்திருத்தல் வியப்பை உண்டாக்குகிறது. இந்த வியப்பினால் ஒரு சிலர் இந்தக் கடிதம் எபேசிய திருச்சபைக்கு எழுதப்பட்டது என எண்ணுகின்றனர். புனித பவுல் ஆசியாவில் முதலில் மனம்திரும்பியவரான

எப்பைனத்து எபேசு நகருக்கு வந்திருக்க வேண்டும். மேலும் ஆக்கிலாவையும் பிரிசிக்கில்லாவையும் வாழ்த்துகிறார். இவ்விருவரும் உரோமைக்குத் திரும்பி இருக்க வாய்ப்பு இருந்தாலும், அவர்களைப்பற்றி இருக்கின்ற ஒரே குறிப்பு முந்தையதையே உறுதிப்படுத்துகிறது. இறுதியில் உரோ 16:17-20-இல் வரும் எச்சரிக்கைகள் உரோமையரின் மற்ற இடங்களில் காணப்படுபவைகளிலிருந்து வேறுபடுகின்றன. தனிப்பட்ட ஒரு திருச்சபைக்கு எழுதப்பட்டதுபோன்று உள்ளது.

வேறுசிலர் உரோ 16:3-20 மற்றொரு கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டு அதனுடன் இணைக்கப்பட்டது எனக் கருதுகின்றனர். இவர்கள் கருத்துப்படி, உரோமையர் அதனுடைய விசுவாச உண்மைகளின் செறிவின் காரணமாகப் புனித பவுலால் நிறுவப்பட்ட பல திருச்சபைகளுக்கு வெவ்வேறு தனிப்பட்ட கடிதங்களுடன் அனுப்பப்பட்டது. ஆக்கிலா, பிரிசிக்கில்லா முதலிய பெயர்கள் எபேசுக்கு அனுப்பப்பட்ட தனிப்பட்ட கடிதங்களைச் சுட்டுகின்றன. உரோமைப் பதிப்பு உரோ 1-15 அதிகாரங்களை மட்டுமே கொண்டிருந்தது என எண்ணுகின்றனர்.

மேலும் வில்லியம் பார்க்லே பவுல் 16-ஆம் அதிகாரம் கொண்ட கடிதத்தையே எழுதினார் என்றும், அதனுடைய கொள்கைச் செறிவின் காரணமாக 15-16 அதிகாரங்களை நீக்கிவிட்டு அதை ஒரு கடிதமாகத் தொகுத்து மற்றத் திருச்சபைகளுக்கு அனுப்பினர் என்றும், எனவே 15, 16 அதிகாரங்களைக் கொண்டு உரோமையிலும், அவை இல்லாமல் மற்ற இடங்களிலும் நிலவி வந்தது என்கிறார்.

6. வாசகம்:-

இக்கடிதத்தின் மூலப்படிவத்தைப் பற்றிப் பல பிரச்சனைகள் இருப்பினும், பல்வேறு கருத்துகள் நிலவினாலும், பின்வரும் கருத்துகளில் ஒற்றுமை காணப்படுகிறது. மார்சியன் என்பவர்தான் முதன் முதலில் உரோ 15:1-16:27-ஐ அந்தக் கடிதத்திலிருந்து பிரித்தார். இன்னும் சில ஏடுகளில் இப்பகுதி விடப்பட்டிருப்பது மார்சியன் இதைத் தவிர்த்ததாலும், கத்தோலிக்கத் திருச்சபையின் வாசகப் புத்தகங்களின் பாதிப்பினாலும் இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும் 16-ஆம் அதிகாரம் எபேசிய திருச்சபைக்கு எழுதப்பட்ட பகுதி என்றும், உரோமைத் திருச்சபைக்கு எழுதப்பட்ட பகுதி அல்ல என்றும் கருதப்படுகிறது. ஆனால் இதற்கு வெளிப்படையான ஆதாரங்கள் இல்லை.

7. இலக்கிய நடை:-

புனித பவுல் யூத குலத்தில் பரிசேய்ப் பரம்பரையில் (உரோ 11:1; பிலி 3:5) பிறந்தவர். கமாலியேல் என்ற ஆசிரியரிடம் தம் முன்னோரின் சட்டங்களை நுணுகிக் கற்றவர் (அ.ப.22:3). எல்லாவற்றிற்கும் உச்சகட்டமாக உயிர்த்த இயேசுவை நேரடியாகச் சந்தித்தவர் (அ.ப.9:1-6). இவரின் வாழ்க்கைப் பின்னணியில் அவரின் கடித நடையை புரிந்துகொள்ள முடிகிறது.

பவுல் இக்கடிதத்தில் பல நடைகளைக் கையாண்டு அதை ஒரு இலக்கியமாகவே உருவாக்கியுள்ளார். இதில் வழிபாடுகளில் பயன்படும் பகுதிகளைக் காணமுடிகிறது (உரோ 1:1-7; 16:25-27). மேலும் அவர் பாலஸ்தீனத்திற்கு வெளியே வாழ்ந்ததால் ''இன்ப துன்ப நடுநிலைக்கோட்பாடு'' (ஸ்தோயிக்கு) அவருக்குத் தெரிந்திருந்தது. எனவே அந்நடையையும் கையாள்கிறார். அதே வேளையில் அவர் ''வினாவிடை'' உத்தியையும் எடுத்தாள்கிறார் (2:1-25). இவர் பரிசேய பரம்பரையில் தோன்றியதால் பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்திருந்தார். எனவே அக்கால அறிஞர்களைப்போலப் பெரும்பாலும் எழுபது நூல் என்ற படிவத்திலிருந்து, தன் மனப்பாடத்திலிருந்து, கூறுகிறார். (3:1-20; 4:1-25; 9:6-11:10). இவர் ஒரு சில பாடல்களையும் எடுத்தாள்கிறார் (8:31-39). எல்லா யூதப் பெரியோர்களையும் போன்று அறிவுரைப் பகுதியையும் இதில் காணமுடிகிறது (12:1 தொ; 13:11-14). அறிஞர் தூத் என்வரின் கூற்றுப்படி, புனித பவுல்

ஒரு வசையாளர்போன்று தீமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார் (1:18-3:20). பெரிய தத்துவ மேதை போன்று இறை ஞானத்தையும் (11:33-36), உளவியல் அறிஞர் போன்று மனித அனுபவத்தையும் ஆராய்வதைக் காணலாம் (7:14-25). பெரிய கவிஞரின் நளினமான கற்பனையையும் காண முடிகிறது (8:18-25).

8. நூலின் திட்டம்:-

இதில் முக்கியமான பிரிவுகள் தெளிவாக இருந்தாலும், கோட்பாட்டுப் பகுதியைப் பற்றிச் சில வினாக்கள் எழுகின்றன. இது எத்தனை சிறிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும்? இரண்டா அல்லது மூன்றா? 5-ஆம் அதிகாரம் எந்தப் பகுதியோடு செல்ல வேண்டும்? வெவ்வேறு சூழ்நிலைகளில் உருவாக்கப்பட்டு ஏற்கனவே மக்களிடையே நிலவி வந்த பகுதிகளைப் புனித பவுல் உரோமையருக்கு எழுதியகடிதத்தில் புகுத்தி இருக்கிறாரா? (உ.ம்.3:10-18; 5:12-21; 9:1-11:36). எது எவ்வாறு இருப்பினும், இக்கடிதத்தில் கருத்துக்களின் கோவையை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இது இக்கால அறிவியல் முறையில் எழுதப்படவில்லை. கருத்துகள் அருகருகே அமைக்கப்பட்டுள்ளனவே அன்றித் தொடர்ச்சியாக, தொடர்புபடுத்தி எழுதப்படவில்லை. இந்தக் கடிதத்தை முழுவதும் இறைவன் தம்மையே மனித வரலாற்றில் முழுமையாய் வெளிப்படுத்தியதை மனதில் கொண்டு எழுதுகிறார்.

I முன்னுரை (1:1-15)

II கோட்பாடுப் பகுதி (1:16-11:36): இறைவனின் நற்செய்தி.

அ. விசுவாசத்தினால் ஏற்புடைமை (1:16-4:25)

1. மீட்பின் நற்செய்தி (1:16-17)

2. இறைவனின் சினம் மனித இனத்தின் மேல் மூண்டெழுகிறது (1:18-3:20).

3. இறைவனின் நீதி இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டு விசுவாசத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது (3:21-30).

4. பழைய ஏற்பாட்டிலிருந்து ஆபிரகாமின் எடுத்துக்காட்டு (4:1-25)

ஆ. இறைவனின் அன்பு ஏற்புடையவனுக்கு மீட்பை உறுதியளிக்கிறது (5:1-11:36)

1. கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவனின் மீட்பு (5:1-11).

2. புதிய கிறிஸ்துவ வாழ்வு அளிக்கின்ற மூவகை மீட்பு (5:12-7:25)

3. கிறிஸ்து வாழ்வு ஆவிக்குரிய வாழ்வு (8:1-39)

4. மீட்பின் திட்டம் இறைவனின் வாக்குறுதிகளை மறுக்கவில்லை எனப் பழைய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது (9:1-11-36).

III அறிவுரைப் பகுதி (12:1-15:13): புது வாழ்வு.

1. ஆவியில் வழிபாடு (12:1-13:14)

2. வலுக்குறைந்தவர்பால் அன்பு (14:1-15:13)

IV முடிவுரை (15:14-33)

V பெபாவுக்குப் பரிந்துரைக்கடிதம் (16:1-23)

VI புகழுரைப் பாடல் (16:25-27).

9. இறையியல் கருத்துகளும், முக்கியத்துவமும்:-

புனித பவுல் தன் அனுபவ முதிர்ச்சியாலும், பட்டறிவாலும் இதை எழுதியதால், தான் மற்றக் கடிதங்களில் எழுதி விளக்காமல் விட்டதும், எழுதாமலே விட்டதுமான கருத்துக்களை, ஆழமான இறையியல் சிந்தனையோடு இத்திருமுகத்தில் தொகுத்துத் தருகிறார். இத்திருமுகத்தில் காணப்படாத புதிய ஏற்பாட்டு இறையியல் கருத்துக்களே இல்லையெனலாம். இக்கடிதத்தில், தேர்வு, விசுவாசம், சட்டம், வாழ்வு, ஏற்புடைமை, மீட்பு, பாவம் ஆவி முதலிய இறையியல் தலைப்புகள் விளக்கப்படுகின்றன. எந்த ஒரு

கடிதத்திலும் இல்லாமல், இக்கடிதத்தில் மட்டுமே கிறிஸ்துவ மீட்பின் முழுப்பொருளையும் விளக்கி, மனிதனின் இயலாமையையும், இறைவனது மீட்புப் பணியின் முழுமையையும் விளக்குகிறார்.

எல்லாப் புதிய ஏற்பாட்டு நூல்களையும் விட, இறையியலை அதிகம் பாதித்த நூல் ஒன்று இருக்குமெனில் அது உரோமையர் தான். சில அறிஞர்கள் இதைப் ''பவுலின் நற்செய்தி'' என்றே அழைப்பர். இக்கடிதம் புதிய ஏற்பாட்டு நூல்களிலும் சிறப்பாகப் பேதுருவின் முதல் கடிதம், எபிரேயருக்கு எழுதிய கடிதம், யாக்கோபு எழுதிய கடிதம், ஆகியவற்றிலும் தன் செல்வாக்கை ஏற்படுத்தி இருக்கிறது. கிளமெண்து, இஞ்ஞாசியார், போலிகார்ப்பு, யுஸ்தீன் முதலியோரும் இதைக் கருத்தூன்றிப் படித்துப் பயன்படுத்தியுள்ளனர். திருச்சபையின் தந்தையர்கள், சிறப்பாக ஒரிஜன், கிறிஸ்ஸோஸ் தோம், அம்புரோசியர், தாமசீன் யோவான், அக்வினாஸ் தோமையார் போன்றோரும் இதற்கு விளக்கம் எழுதியுள்ளனர். சீர்திருத்தக் காலங்களிலும் இக்கடிதம் பெரிதும்தன் செல்வாக்கை ஏற்படுத்தி இருக்கிறது. சீர்திருத்தத் தலைவர்களான மார்டின் லூத்தர், கால்வின், மெலங்தோன், முதலியோர் இதற்கு விளக்கவுரைகள் எழுதியுள்ளனர். நவீன கால அறிஞர்களான கார்ல் பார்த், நைக்ரன், புரூனர் முதலியோர் சிந்தனைகளையம் இது பெருமளவில் பாதித்திருக்கிறது. இவ்வாறு, இப்படி, இக்கடிதம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

10. முடிவுரை:-
புனித பவுல் எழுதிய திருமுகங்களிலெல்லாம் மிகவும் பெரியது இது. அது மட்டுமன்றி இதன் அமைப்பையும் நடையையும் நோக்குகின்ற போது, இது அரிய கருத்துக்களையும் ஆழ்ந்த இறையியலையும் தன்னுள் கொண்டு ஒரு இறையியல் கருவூலமாகவே திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

உரோமையில் புதிய ஏற்பாட்டுக்காலத் -திருச்சபை (CHURCH AT ROME)

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த உரோமைத் திருச்சபையைப் பற்றி அறிய மிகச் சில குறிப்புகளே உள்ளன. அவையாவன:-

அ) அக்காலத்திய எழுத்தாளர்களின் குறிப்புகள்.

ஆ) உரோமைத் திருச்சபைக்கு எழுதப்பட்ட கிறிஸ்தவ இலக்கியங்கள்

இ) புதிய ஏற்பாட்டில் உள்ள சில குறிப்புகள்.

ஈ) புதை பொருள் ஆராய்ச்சியிலிருந்து கிடைத்த குறிப்புகள்

1. தொடக்கம்:- உரோமைத் திருச்சபை எப்போது நிறுவப்பட்டது எனச் சொல்ல இயலாது. அ.ப.2:10-இன் படி உரோமையிலிருந்து வந்திருந்த யூதர், யூத மதத்தைத் தழுவியவர், பேதுருவின் முதல் உரையைக் கேட்டனர். இவர்கள் இந்நற்செய்தியைத் தம் மக்களுக்கு அளித்திருக்க வேண்டும். மேலும் பார்னபா கிறிஸ்தவ மதத்தை உரோமைக்கு அளித்திருக்க வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர் கி.பி.42-இல் பேதுரு அவர்களுக்கு நற்செய்தியை அளித்தார் எனக்கூறுகின்றனர். இவையாவும் முழுவதும் நம்பத்தகுந்த கூற்றுக்கள் அல்ல. சுயேடோனியுஸ் யூத மக்களிடையே குழப்பம் நிலவியதாகக் குறிப்பிடுகிறார். இது நற்செய்தி போதிக்கப்பட்டதால் ஏற்பட்டதாக இருக்கலாம். எனவே கிளாதியு பேரரசர் யூதர்களை உரோமையிலிருந்து நாடு கடத்தினார். ஆக்கிலாவும், பிரிசிக்கில்லாவும் இவ்வாறு உரோமையிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களாவர் (அ.ப.18:2). பவுல் இவர்களை மனந்திருப்பியதாக ஒரு செய்தியும் இல்லை; ஆகவே இவர்கள் ஏற்கெனவே உரோமையிலேயே கிறிஸ்தவர்களாக மாறியிருக்க வேண்டும். எனவே கி.பி.50-க்கு முன்பே கிறிஸ்தவம் உரோமைக்கு வந்திருக்க வேண்டும் என்று நம்ப இடமிருக்கிறது. மற்ற இடங்களில் நடந்ததுபோல், உரோமையிலும் முதல் கிறிஸ்தவர்கள் யூதச் சமூகத்திலிருந்து மனந்திரும்பியவர்களாவர்.

2. பண்பு:- கி.பி.53-58க்கு இடையில் எழுதப்பட்ட உரோமையர் திருமுகம் உரோமைத் திருச்சபையைப் பற்றித் தெளிவாகக் கூறவில்லை. பவுல் அதுவரை உரோம் சென்றதில்லை. மற்றவர்கள் கூறியதிலிருந்தே அவர் அவர்களைப் பற்றி அறிந்து கொண்டார். அவர் தமது மடல் புறவினத்தார் நிறைந்துள்ள திருச்சபைக்குச் செல்கிறது என்பதை அறிந்திருந்தார் (உரோ 1:13). கிறிஸ்தவர்கள், யூதர்களைத் தூற்ற வேண்டாமெனவும் கேட்டுக் கொள்கிறார். தமது திருமுகத்தை யூதர்களும் படிப்பாரென அவர் அறிந்திருந்தார் (2:1-3, 20). எனவே ஆபிரகாம் நமது தந்தை எனப் பேசுகிறார் (4:1). மேலும் அம்புரோசியாஸ்டர் அப்போஸ்தலர் காலத்திலே யூதர் உரோமையில் வாழ்ந்தனர் என்கிறார். இவர்கள் புதுமைகளைப் பார்க்காமல், அப்போஸ்தலர்களைச் சந்திக்காமல் அவர்களுடைய பாணியில் கிறிஸ்துவை நம்பினர்.

3. இலக்கிய மூலங்கள்:- நவீன அறிஞர்கள், பிலிப்பியர், கொலோசேயர், பிலமோன், எபேசியர் ஆகிய மடல்கள் உரோமையிலிருந்து எழுதப்பட்டவை என்பதை ஏற்பதில்லை. இவை செசாரியாவிலோ, எபேசிலோ எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பர். கொலோசேயர், பிலமோன் மடல்கள் பவுலுடன் இருப்பவர்களைப் பற்றிக் கூறுகிறது. யூதக் கிறிஸ்தவர்கள் பவுலுக்கு ஆதரவு அளிக்கவில்லையெனக் கொலோ 4:11 கூறுகிறது. மேலும் உரோமை அதிகாரிகளில் சிலர் கிறிஸ்தவர்களாயிருந்தனர் எனவும் இம்மடல்கள் குறிப்பிடுகின்றன (பிலி 4:22). 2 திமோ 1:15-18-இன்படி உரோமையிலே விலங்கிடப்பட்டிருந்த பவுலை ஒனேசிப்போரு காண வந்தபோது மக்கள் அவர் எங்கேயிருக்கிறார் எனக் காட்டவில்லை. மேலும் 2 தீமோ 4:9-17-இன்படி பவுலின் நெருங்கிய நண்பர்கள் பலர் அவரைக் கைவிட்டு அகன்றனர். தசிதுஸ், சூடோனியுஸ் போன்றோர் நீரோ பேரரசர் காலத்தில் நிகழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எதிரான வேதக் கொடுமைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். 64-இல் தொடங்கிய இந்த வேதக்கொடுமைகளின்போதுதான் பேதுருவும் பவுலும் சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டவர் என்று பாரம்பரியம் கூறுகிறது. மாற்கு தனது நற்செய்தியை உரோமையில் எழுதியதாகக் கருதப்படுகிறது. இதிலே திருச்சபையின் துன்பங்களைப் பற்றியும், துன்ப வழியையும், சிலுவை வழியையும் பற்றியும் அவர் வலியுறுத்துகிறார். இவை மாற்குக்குமட்டும் உரியவையன்று. ஆயினும் உரோமைத் திருச்சபை அனுபவித்த துன்பச் சூழ்நிலையில் பொருள் பொதிந்தன. மாற்கு நற்செய்தி, மத்தேயு, லூக்கா நற்செய்திகளுக்கு மூலமானபடியால் இந்த நற்செய்தியானது உரோமைத் திருச்சபையின் தலைசிறந்த கொடையாகும்.

பேரரசர் தொமிசியன் (81-90) தனது ஆட்சிக் காலத்தின் இறுதியிலே பல உரோமைப் பிரபுக் குடும்பத்தினருக்கு நாடுகடத்தல், கொலைத் தீர்ப்பு போன்றவை வழங்கினார். கொலை செய்யப்பட்ட பிலாவியுஸ் கிளெமென்ஸ், நாடு கடத்தப்பட்ட தொமிட்தில்லா ஆகியோர் கிறிஸ்தவரென எண்ணப்படுகின்றனர். தொமிட்தில்லா, பிரிசில்லா ஆகியோரின் நிலவறைக் கல்லறை உரோமையின் முதல் கிறிஸ்தவக் கல்லறைகளாகும். உரோமைத் திருச்சபையின் பெயரால் முதலாம் கிளமெண்து கொரிந்தியருக்கு எழுதிய மடல் உரோமையில் துன்பச் சூழல்களைக் குறிப்பிடுகிறது. மேலும் எபிரேய மடலானது இந்தக் காலத்தில் எழுதப்பட்டு மற்றத் திருச்சபைகளுக்குப் போதிக்கும் அதிகாரத்தை அது ஏற்கவேண்டுமெனக் கூறுவதாகத் தெரிகிறது. அவ்வாறு உரோமைத் திருச்சபை செயல்பட்டதாகத் தெரிகிறது. எனவே, இக்காலத்திலேதான் உரோமைத் திருச்சபை தன் தலைமைப் பொறுப்பைப் பெற்றுவிட்டது என்பது உறுதி. இது கொரிந்து திருச்சபையின் உள்விவகாரத்தில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்தியது. மேலும் அந்தியோக்கிய இஞ்ஞாசியார் உரோமைத் திருச்சபைக்கு மதிப்புத் தருவதுடன், அதன் முதன்மை நிலையைப் பற்றியும் பேசுகிறார். முதலாம் பேதுரு மடல் உரோமிலிருந்தே எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இம்மடல்கள் எல்லாம் கிரேக்க மொழியில் எழுதப்பட்டவையாகும். ஏனெனில்

திருச்சபையின் தொடக்ககால உரோமைக் கிறிஸ்தவர்கள் கிரேக்க மொழி பேசுபவர்களாவார். இலத்தின் மொழி பேசும் கிறிஸ்தவம் உரோமையில் தோன்றவில்லை; வட ஆப்பிரிக்காவில் தோன்றியது.

உலகப் பூதங்கள், மூலப்பொருட்கள் (ELEMENT ELEMENTAL SPIRIT)

கிரேக்க மொழியில் இச்சொல்லுக்கு மூன்று பொருட்கள் உள்ளன.

1. இவ்வுலகின் மூலக்கூறுகளைக் குறிப்பதற்கு இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, நிலம், நெருப்பு, நீர், காற்று ஆகியவை நான்கு மூலக்கூறுகள் என்று அழைக்கப்படுகின்றன (ஞான 7:17; 19:18). 2 பேதுரு 3:10-12-இல் ஐம்பெரும் பூதங்கள் அழிக்கப்படும் என்று கூறும் போது, இப்பொருளிலேயே கூறப்பட்டுள்ளது.

2. இச்சொல் உலகின் மூலக் கூறுகளுக்குப் பின்னால் இருக்கும் ஆவிகளையும், அதாவது உலகப் பூதங்களையும் குறிப்பதற்குப் பயன்பட்டது. இந்த உலகப் பூதங்கள் வாழ்வின் அடிப்படையாகவும் இவ்வுலகை ஆள்பவையாகவும் கருதப்பட்டதால், மனிதர்கள் அவைகளை வழிபட ஆரம்பித்தனர். யூத வெளிப்பாட்டு இலக்கியங்களும் இத்தகைய கருத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கலா 4:3.9; கொலோ 2:8.20 முதலியவற்றிலும் இப்பொருளிலேயே இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்க ஞானமும், யூதப் பழக்க வழக்கங்களும் பாரசீகப் புராணங்களும் இணைந்த ஒரு மதக் கலப்பைத்தான் கலாத்தியருக்கு எழுதிய திருமுகமும், கொலோசேயருக்கு எழுதிய திருமுகமும் தாக்குகின்றன. 'இயல்பாகவே கடவுள் அல்லாதவற்றை' வணங்குவது (கலா 4:8) விக்கிரக ஆராதனையாகும் என்று கூறுகின்றன. கலாத்தியருக்கு எழுதிய திருமுகம், யூதச் சட்டத்தையும், உலகப்பூதங்களையும் (கலா 4:3.5) வான தூதர்களையும் தொடர்புபடுத்துகிறது (கலா 3:19). கொலோசேயருக்கு எழுதிய திருமுகம், உலகப்பூதங்களையும் வானதூதர் வழிபாட்டையும் தொடர்புபடுத்துகிறது (கோலோ 2:16.20).

இங்கு ''மனிதனின் கட்டளைகளுக்கும் படிப்பினைகளுக்கும்'' (கொலோ 2:22-23) ஏற்ப சுயவளர்ச்சிகளுக்கும் ''கடவுளிடமிருந்து வரும் வளர்ச்சிக்கும்'' (2:19) இடையே முரண்பாடு உள்ளது; கிறிஸ்து அளிக்கும் விடுதலைக்கும், உலகப் பூதங்களுக்கு அடிமையாக இருப்பதற்கும் (கலா 4:9) இடையே போர் நடப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இரு திருமுகங்களிலும், மனிதனை மையமாகக் கொண்ட வாழ்வும், இறைவனை மையமாகக் கொண்ட வாழ்வும் முரண்படுத்தப்படுகின்றன.

3. விண்மீன்களையும், விண்வெளியிலுள்ள கோள்களையும் குறிப்பதற்கும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. இவைகள் ஆவிகளைக் கொண்டிருப்பதாகவும் அவை மனிதனின் வாழ்வையும் முடிவையும் பாதிப்பதாகவும் பலர் கருதினர் (கலா 2:10; கொலோ 2:16). இது, ஆதிக்கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட ஒரு கலப்புமதக் கூறைக் குறிக்கிறது.

உலகம் (WORLD)

I. பழைய ஏற்பாடு

பொதுவாக உலகம், விண்ணும் மண்ணும் (ஆதி.1:1) என்ற சொற்களால் குறிக்கப்படுகின்றது. தேபேல் என்ற சொல் எபிரேய மண்ணுலகை மட்டும் (எரே 51:15) குறிக்கும். கிரேக்க காலத்து இலக்கியங்கள் (ஞான 11:17; 2 மக் 7:9.23) உலகைக் குறிக்க 'காஸ்மோஸ்' என்ற கிரேக்கச் சொல்லைக் கையாளுகின்றன. இச்சொல் வியத்தில் உள்ள உட்கருத்தையும், பொருட் செறிவையும் கொண்டது. உலகம் தன்னை இயக்கும் பல நியதிகளைக் கொண்டது. கவினுறு வனப்பும், என்றும் நிலைத்திருக்கும் தன்மையும் உடையது. சீராகச் சுழன்று வரும் இயக்கங்களை உள்ளடக்கியது. இத்தகைய இயல்புகளைக் கண்ணுற்ற கிரேக்க நாட்டு மக்கள் உலகம் தனக்கென ஒரு மரபு அல்லது வரம்பை உள்ளடக்கியது என்று அறிந்து

கொண்டனர். இந்த வரம்பிற்குள் மனிதர்களும் தெய்வங்களும் அடங்கியுள்ளனர் என்றும் கண்டறிந்தனர். மேலும், உலகமும் மிக அரிதாக வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. இயல்வன யாவும் இறையுருவே என்னும் கோட்பாடு மக்களின் அன்றாட வாழ்க்கையின் அடிப்படையாகக் கருதப்பட்டது. இதிலிருந்து, விவிலியக் கண்ணோட்டம் முழுவதும் மாறுபட்டது. உலகை இயக்கும் சக்திகளும், படைப்புக் கோட்பாடுகளும் இறைவனின் படைப்புக்களே, அவரது ஆதிக்கத்திற்குட்பட்டவையே. இறைவனின் படைப்புகள் என்ற முறையில் மீட்பின் திட்டத்தில் பங்குபெறுவதால் அவை சிறப்பு வாய்ந்தனவாகவும், பொருள் உள்ளனவாகவும் விளங்குகின்றன. உலகம், இவ்வாறு ஒரு வரையறைக்குள் இருப்பதால் தனக்குரிய இலக்கை நோக்கிச் செல்கின்றது.

1. உலகத்தின் தொடக்கம்:-

விவிலியம் நமக்கு எடுத்துக்காட்டும் உலகத்தோற்றம், மெசபொத்தாமியா, எகிப்து, கானான் ஆகிய நாடுகளின் புராணக் கதைகளிலிருந்து மாறுபட்டது. மிகைப்படுத்தாமல், பொருள்படக்கூறுவது. மிகத் தெளிவு கொண்டது. கற்பனைக் கதைகளைத் தழுவியமையாதது. காலங்களுக்கு முந்தைய புராண வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அமையாதது. மாறாகக் காலத்தையே தோற்றுவிக்கின்றது. இறைவனுக்கும் உலகுக்கும் உள்ள ஆழ்ந்த வேறுபாடு 'படைத்தல்' (ஆதி 1:1) என்ற சொல்லால் நன்கு புலப்படுகின்றது. ஆதியாகமக் கூற்றுக்களும் பிறவும் (சங் 8:104; பழ 8:22-31; யோபு 38தொ) இறைவனின் ஆக்கத் திறனையும் படைப்புச் செயலையும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இதனால் பல அரிய உண்மைகள் வலியுறுத்தப்படுகின்றன; உலகுக்கும் இறைவனுக்கும் உள்ள பெரும் வேற்றுமை, ஆற்றல் மிகு (சங் 33:6-9) சொல்லால் வினையாக்குந் திறன் கொண்ட இறைவனுக்கு உலகு அடிபணிந்துள்ள நிலை, இறைவன் இயற்கை நியதிகளை ஆண்டு நடத்துபவர் (ஆதி 8:22), மனிதனை மையமாகக் கொண்ட மீட்பின் திட்டத்தில், தமது பராமரிப்பால் உலகத்தை இணைப்பவர் என்பவை இத்தகைய உண்மைகளாகும்.

இந்தப் புனித அண்டவியல், அறிவியல் நோக்குக்கும் தத்துவ ஆய்வுகளுக்கும் புறம்பானது; உலகை மனிதனோடு உறவுபடுத்துகின்றது; மனிதன் உலகின் மீது ஆதிக்கம் செலுத்தித் (ஆதி 1:28) தனது அறிவுத் திறமையால் தான் கொண்டுள்ள குறிக்கோளை நோக்கி உலகை ஈடுபடுத்துகின்றான்.

2. உலகம் உணர்த்தும் உட்பொருள்:-

மனிதனிடம் உள்ள மறையுணர்விற்கு உலகம் இரு வகைகளில் பொருள் தருகின்றது.

அ) இறைவனிடமிருந்து தோன்றியதால், உலகம் அவரது இணையில்லா நன்மைத்தனத்தைப் பிரதிப்பலிக்கும் கருவியாகத் துலங்குகின்றது. தமது பேரறிவினால் இறைவன் உலகை ஒருமைப்பாட்டுடனும் கவினுறவும் ஆக்கியுள்ளார் (பழ 8:22-31; யோபு 28:25தொ). இறைவனது, தெய்வீகமும் வல்லமையும் (ஞான 13:25தொ) இவ்வுலகப் படைப்பில் எதிரொலித்துப் பார்ப்பவர்களைப் பரவசமடையச் செய்து வியப்பில் ஆழ்த்துகின்றன (சங் 8; 19:1-7; 104).

ஆ) ஆனால் பாவச் சேற்றில் வாழும் மனிதனுக்கு இவ்வுலகம் அவனது இழிநிலையை உறுதிப்படுத்தும் சாதனமாக விளங்குகின்றது. இறைவனின் கடுஞ்சினத்தைக் காட்டும் (ஆதி 3:17 தொ) கருவியாக அமைகின்றது. மனிதனின் நலனுக்காகவே, அனைத்தையும் படைத்த இறைவன், அவற்றையே மனிதனைத் தண்டிக்கவும் கையாளுகின்றார். விவிலியத்தில் நாம் காணும் பெருந்துன்பங்களான வெள்ளப்பெருக்கு, எகிப்தில் நேர்ந்த பெருங்கொள்ளை நோய், விசுவாசங் குன்றிய இஸ்ராயேல் மீது இட்ட சாபங்கள் (உப 28:15-46) இவை எல்லாம் எவ்வாறு உலகம் மனிதனுக்கு எதிராக இறைவனால் ஏவப்படுகின்றன என்பதைத் தெளிவாக்குகின்றன.

இ) மீட்பின் வரலாற்றில், இவ்விதம் இரு விதங்களில் உலகம் செயல்படுகின்றது.

இதன் வழியாகத் தனக்குரிய தனிச் சிறப்பையும் சமய உட்பொருளையும் பெறுகின்றது. மேலும், உலகில் உள்ள படைப்பனைத்தும் இருமுகப் போக்குக் கொண்டு விளங்குவதையும் நாம் காணலாம். ஞான நூல் இதை நன்கு எடுத்துக் கூறுகிறது (ஞான 11:5-14). தண்ணீர் ஒன்றாயினும் அது எகிப்தியருக்கு இறப்பையும், இஸ்ராயேல் மக்களுக்கு மீட்பையும் அளிக்கின்றது. எனினும் இதே வழக்கில் பிற படைப்புக்களைப் பற்றி நாம் விளக்கிக் கூற முடியாது. ஏனெனில் நீதிமான்களும் பாவிகளும் ஒரே முடிவில் தோழமை கொண்டுள்ளார்கள். எனினும் உலகிற்கும் மனிதனுக்குமிடையே ஒருவித வெளிப்படையான மறைபொருள்மிக்க உறவு உண்டு. உலகம் என்று சொல்லும் பொழுது, பொதுவாக நமது புலன்களுக்குப் படுகின்ற இயற்கை நியதி, காலவரையறை, ஒருவித ஒழுங்கு இவற்றைத்தான் நாம் குறிப்பிடுகின்றோம். ஆனால் உலகம், இவற்றையும்விட மற்றுமொரு பொருட்செறிவும் உடையது. இச்சிறப்புப் பொருள்கொண்ட வரலாறு, மனிதன் தோன்றுமுன்னரே, தொடங்கியது அல்லது வழக்கில் இருந்தது, என்றாலும் அவனில்தான் ஒரு முடிவும் பெற இருக்கின்றது (ஆதி 1:1-2:4). இச்சிறப்பு வரலாறு மனித வரலாற்றுடன் இணைந்து சென்று இறுதியில் மனித வரலாற்றுடன் முழுமை பெறும்.

3. இறுதி இலக்கை நோக்கிச் செல்லும் உலகு:-

மனிதனைத் தோற்றுவித்து, மனித சமுதாயத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள உலகம் மனிதனால் மேலும் வளர்ச்சிபெற்று, நலம் கொழித்து முழுமைபெற வேண்டிய நிலையில் உள்ளது (ஆதி 2:7; 3:19). எனவே தனது உழைப்பால் இவ்வுலகை வளப்படுத்துவதும் அதைத் தன் ஆதிக்கத்திற்குள் கொணருவதும் மனிதனின் முதற் கடமையாகும் (1:28). இதன் வழியாக, மனிதன் தன் வல்லமையை உலகில் நிலைநிறுத்துகின்றான். மானிட நல்வாழ்வுக்கென இவ்வுலகைச் சீர்ப்படுத்தி வளப்படுத்தும் வேளையில் பாவியான மனிதன் தன் பாவத்தில் இவ்வுலகை ஈடுபடுத்தும்போது அவனது உழைப்பால் ஏற்படும் பயன் என்ன? ஆகவேதான், இறைவாக்கினர்களில் இறுதிக்காலவியல் மனிதனது ஆட்சியில் உலகம் என்னவாகுகிறது என்பதைப்பற்றி அதிகம் அக்கறை கொள்வதில்லை. உலகம் நோக்கிச் செல்லும் முடிவிலேயே அக்கறை கொள்கிறது. இந்த முடிவும் இருமுகப்போக்குடையதாகும்.

அ) மனிதனுக்குரிய இறுதித் தீர்ப்பு இவ்வுலகுக்கும் உண்டு:- உலகும் அதனைச் சார்ந்த மூலப்பொருட்களும் இத்தீர்ப்பில் பங்கு பெறும். இச்சமயத்தில் உலகில் இப்பொழுது நிலவும் ஒழுங்கும் கட்டுப்பாடும் திடீரெனக் குலைந்து பெருங்கொந்தளிப்பு போன்ற நிலை உருவாகும் (எரே 4:23-36). 'நிலவுலகம் இரண்டாக் கிழிபடும்' (எச 24:19 தொ); ஒளி மங்கும்; விண்மீன் கூட்டம் (எச 13:10; யோவே 2:10; 4:15) உலகத்தின் பேரழிவையும் மனித சமுதாயத்தின் பாவ நிலையையும் நன்கு பிரதிபலிக்கும்.

ஆ) இறுதித் தீர்ப்புக்குப் பின், இறைவனது திருவருள் மனிதனுக்கு மீட்பளிப்பது போல், உலகிற்குப் புத்துயிரும் மறுமலர்ச்சியும் நல்கும். இப்புதுமை மிகு மறுமலர்ச்சி மறைநூலில் புதுப்படைப்பு என்று குறிக்கப்படுகின்றது. புதிய வானத்தையும் புதிய பூமியையும் (எச 65:17, 66:22) இறைவன் படைக்கவிருக்கின்றார். மறைநூலில் புதுமை பெற்ற உலகம் விவரிக்கப்படும் விதம், ஆதியிலே நம் முன்னோர் வசித்த இன்பவனத்தை மிகவும் ஒத்துள்ளது.

இ) இன்றைய உலகும் நாளைய உலகும்:- நாம் வாழும் இன்றைய உலகு, புத்துயிர் பெற்று, இறுதியில் புது உலகாக மலரவிருக்கின்றது. இதே இலக்கை நோக்கித்தான் மனித வரலாறும் செல்வதாகப் புதிய ஏற்பாட்டுக் காலத்து யூதக் கருத்துக்கள் தெரிவிக்கின்றன. இதே கருத்தை முன் வந்து இறைவாக்கினர் பலரும் எடுத்தியம்பியுள்ளனர். அலகையின் பொறாமையால் சாவும் பாவமும் ஆட்சி செலுத்தும் இடம்தான் இன்று நாம் வாழும் உலகு (ஞான 2:24). நாளைய

உலகோ, இறைவன் தமது அரசை நிலை நாட்ட வரும் வேளையில் அமையவிருப் பது. அப்பொழுது, இவ்வுலக அமைப்புகள னைத்தும் மனித சமுதாயத்துடன் இணைந்து, மாசு நீக்கப்பட்டு, ஆதி நாளில் கொண்டிருந்த பொலிவுடன் விளங்கும். விண்ணக அமைப்புகளைப்போல் இவை மறுஉருவடைந்து மாட்சியுடன் திகழும்.

II. புதிய ஏற்பாடு

பல இடங்களில் புதிய ஏற்பாட்டிலே 'காஸ்மோஸ்' என்ற கிரேக்கச் சொல் காணக் கிடக்கின்றது. இச்சொல்லின் பொருள் பழைய ஏற்பாடு கொடுக்கும் பொருட்செறி வைப் பெரிதும் ஒத்துள்ளது.

1. உலகின் இருமுக நோக்கு:-

அ) இறைவன், தமது வார்த்தையானவர் வழியாக (யோவா 1:3.10; எபி 1:2; கொலோ 1:16) படைத்த உலக (அ.ப.17:24) அடிப்ப டையில் மிகச் சிறந்த படைப்பாகத் திகழ் வது உண்மையே. இவ்வாறு சிறப்புடன் மிளிர்வதால் உலகு இறைவனுக்கு நற்சாட்சி யாகவும் அமைகின்றது (உரோ 1:19). இருப் பினும் வரம்பு கடந்த வகையில் உலகை நாம் மதிப்பிடலாகாது. காரணம் யாதெனில் படைப்பில் அனைத்தையும் விடச் சிறந்து விளங்குபவன் மனிதன் ஒருவனே. ''உல கையே ஒருவன் தனதாக்கினும் தன் ஆன் மாவை இழப்பானென்றால் அதனால் அவ னுக்கு வரும் நலன் என்ன?'' (மத்.16:20) என்ற சொற்களும் இக்கருத்தையே எதிரொ லிக்கின்றன.

ஆ) மனிதனது பாவ நிலையில் இவ்வுல கும் பெரும் பங்கு கொண்டுள்ளது. அத னால் அலகையின் வல்லமைக்கு அடிமை யாய் உள்ளது. வரலாற்றின் தொடக்கத்திலே உலகம் பாவத்தில் அமிழ்ந்தது. இப்பாவச் சூழலிலே சாவின் ஆதிக்கமும் இணைந்தது (உரோ 5:12). இதனால் உலகம் இறைவனின் தண்டனைத் தீர்ப்பிற்கு ஆளாகியுள்ளது (3:19). ஆற்றல்மிகு தீய சக்திகளுடன் கொண்ட தொடர்புதான் உலகின், தீர்ப்புக்கு வழிவகுக்கின்றது. இறைவனின் திருவுளத் திற்கும், கிறிஸ்துவுக்கும் எதிராகச் செயலாற் றும் மனிதர்களிடையே இவ்வுலகு மிக வெளிப்படையாகக் காணப்படுகின்றது (யோவா 3:18 தொ; 7:7; 15:18 தொ; 17:9, 14..). இம்மனிதர்கள் வாழும் உலகின் மன்ன னாக அலகை அரசோச்சுகின்றான் (12:31; 14:30; 16:11). இந்த யுகத்தின் கடவுளாகவும் இருப்பது அலகையே (2 கொரி 4:4). படைத் தவரின் திருவுளத்திற்கேற்ப உலகின் தலைவ னாய் நிறுவப்பட்ட ஆதாம் அலகையின் கரங்களில் தன்னை முழுவதும் அளித்துவிட் டான். அன்று முதல் உலகு அலகையின் வலையில் சிக்கித் தவிக்கின்றது (1 யோவா 5:19). அலகையின் வல்லமையிலும் பெரு மையிலும் அவனைச் சார்ந்தோரும் பங்கு பெறுகின்றனர் (லூக் 4:6).

இ) தீய ஆவிகளின் ஆதிக்கத்தால் இவ்வு லகு இருளில் மூழ்கியுள்ளது (எபே 6:12). மனிதனைத் தன் வயப்படுத்தித் தனது அடி மைகளாக்கிவிடுகின்றது (கலா 4:3.9; கொலோ 2:8.10). இறைவன் அருளும் மீட் பின் நற்செய்தியையும் நற்கொடைகளையும் உணரும் சக்தி உலகுக்கு இல்லை (1 கொரி 2:12). எதிர்க் கிறிஸ்துவின் ஆவி எவ்வாறு உலகில் செயல்படுகின்றதோ அதைப் போன்றே, இவ்வுலகும் கடவுளின் ஆவிக்கு முற்றிலும் மாறுபட்டது (1யோவா 4:13). இவ்வுலகின் ஞானம் மனிதனின் அறிவுத் திறனைச் சார்ந்தது. எனவே அது இறைவனி டமிருந்து விலகியுள்ளது. இவ்வுலகின் ஞானத்தை இறைவன் மடைமை எனக் கரு துகின்றார் (1 கொரி 1:20). உலகும் நமக்கு ஒருவகைச் சமாதானம் நல்குகின்றது. இச்ச மாதானம் நம்மிடம் செல்வங்கள் கொழிக்கச் செய்வதிலும் போலிப் பாதுகாப்பு அளிப்ப திலும் தான் அடங்கியுள்ளது. இது இறைம கன் மட்டும் அளிக்கக்கூடிய உண்மைச் சமா தானத்தின் ஒருவகை நிழல்மட்டுமே (யோவா 4:27). இந்த நிலையற்ற சமாதானம் நம்மைச் சாவுக்கு இட்டுச் சென்று மீளாத் துயரில் (2 கொரி 7:10) ஆழ்த்திவிடும்.

இவ்வாறு உலகின் பாவ நிலை வெளிப்ப டுத்தப்படுகிறது (யோவா 1:29). வெறுப்பும்

நம்பிக்கையின்மையுமே உருவான இப்பாவ நிலை உலகின் தொடக்க நாளிலிருந்து இன்றும் வலிமையுடன் விளங்கி, விண்ணரசில் நுழைய விழைவோருக்குப் பெருந்தடையாக உள்ளது. இடறல் நிமித்தம் உலகிற்கு மிகவும் கேடு உள்ளது (மத் 18:7). இதனாற்றான் உலகம் மனிதனுக்கு உறுதியானதும் நிலையானதுமான பயன்தர இயலவில்லை. ஏனென்றால், அதன் அமைப்பு கடந்து செல்லும் நிலையில்லா இயல்புள்ளது (1 கொரி 7:31). உலகின் ஊனியல் இச்சிப்பும் இத்தகையதே (1 யோவா 2:16). நாம் இவ்வுலகைச் சார்ந்தவர் என்பதால் நமது கதியும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

2. கிறிஸ்துவும் உலகமும்:-

தமது ஒரே அன்பு மகனை உலகுக்கெனப் பணயம் வைக்குமளவிற்குக் கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார் (யோவா 3:16). இப்பேரன்புப் பெருக்கிலிருந்து உலக வரலாற்றிலே பெரும் மாறுதல் உருவாகின்றது. இப்புதிய வரலாற்றில் ஒன்றையொன்று நிறைவு செய்யும் இரு சிறப்பு அம்சங்கள் உண்டு. முதலாவதாக அலகையின் ஆதிக்கத்திலிருந்து இவ்வுலகுமீது இயேசு வெற்றி கொள்ளுதல், இரண்டாவதாக இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்ட புதிய உலகம் அவரில் தொடங்குதல்.

அ) இயேசு உலகை வென்றவர்:- அவரது வெற்றியை யோவானின் நற்செய்தி தெளிவாக எடுத்துரைக்கின்றது. இயேசு இவ்வுலகிலே வாழ்ந்தவர். அவர் வழியாக யாவும் படைக்கப்பட்டன. உலகமோ அவரை அறிந்துகொள்ளவில்லை (யோவா 1:10). இக்கூற்றுகள் இயேசுவின் இவ்வுலக வாழ்க்கையின் சுருக்கமாகும். இயேசு இவ்வுலகைச் சார்ந்தவரல்லர் (8:23; 17:14). அவ்வாறே அவரது அரசும் இவ்வுலகைச் சார்ந்ததன்று (18:36). அவரது அதிகாரம் இறைவனிடமிருந்தே வருகிறது (மத் 28:18); இவ்வுலக மன்னர்களிடமிருந்தல்ல (லூக் 4:5-8). அலகை அவர்மீது எவ்வித ஆதிக்கமும் கொள்வதில்லை (யோவா 14:30). எனவேதான் உலகம் அவரை வெறுக்கின்றது (15நு 18). சிறப்பாக அவர் உலகின் ஒளியாக விளங்குவதாலும் (9:15) அதற்கு உயிர் அளிப்பதாலும் (6:33) உலகத்தை மீட்க வருவதாலும் (12:47) இவ்வெறுப்பு மிகவும் மேலோங்கியிருப்பதை நற்செய்தி நன்கு காட்டுகின்றது. இவ்வெறுப்பு இறுதியிலே இயேசுவின் சாவிற்கும் காரணமாய் விளங்குகின்றது (1 கொரி 2:7 தொ..) உலகின் மீட்புக்கு இயேசு உயிர்விடும் அதே நேரத்தில் இந்நிலை மாற்றமடைகின்றது. உலகின் மீது தீர்ப்பிடப்படுகின்றது. அத்துடன் உலகின் மன்னனும் தீர்ப்பைப் பெற்று வீழ்ச்சியடைகின்றான் (12:31). இதுவே கிறிஸ்துவின் வெற்றி, தீய உலகின் மீது கொண்ட வெற்றி (16:33). தமது தந்தையின் மறைபொருள்மிக்க திருவுளத்தை மிக்க பேரன்பால் ஏற்ற இயேசு (14:30) உலகை விட்டுப் பிரிந்து செல்கின்றார் (16:28); தந்தையிடம் திரும்புகின்றார்; அவருடன் மாட்சியுடன் வலப்பக்கத்தில் அமர்ந்து (17:1,5) அங்கிருந்து எப்பொழுதும் உலகின் வரலாற்றை வழிநடத்துகின்றார் (அ.ப.5:9).

ஆ) புதுவாழ்வு பெற்றுப் பொலிவடைந்த உலகம்:- தமது வாழ்வு, பாடுகள், இறப்பு உயிர்ப்பால் இயேசு தாம் உலகிற்கு ஆற்ற வந்த திருப்பணியை நிறைவேற்றினார். தமது மரணத்தால் உலகின் பாவங்களை ஒழித்தார் (யோவா 1:29). தம் தசையையே உலகம் வாழ்வு பெறக் கையளித்தார் (6:51). அலகையின் அடிமையாக இருந்த உலகம் அவனது அடிமைத் தளையிலிருந்து மீட்கப்பட்டது. இயேசுவின் குருதியாம் வெள்ளப் பெருக்கிலே கழுவப்பட்டது ''இந்த வெள்ளப் பெருக்கிலே விண், மண், கடல் யாவும் மாசு நீங்கின'' (பாடுகளின் காலத் திருப்பாட்டு), எல்லாவற்றையும் படைத்த அவரே (கொலோ 1:16) தமது உயிர்ப்பால் புதுப்படைப்பின் தலைவராக நிலைபெறுகிறார். இறைவன் அனைத்தையும் அவருக்கு அடிபணியச் செய்கிறார் (எபே 1:20 தொ). அவ்விதம் பிளவுபட்ட படைப்பெல்லாம் அவரில் ஒப்புரவடைந்து, ஒன்றுபட்டு (கொலோ 1:20) இப்புதுவுலகில் ஒளியும் வாழ்வும் பெற்று மிளிர்கின்றன. இயேசுவில் விசுவாசம் கொண்ட அனைவருக்கும் இவ்வொளியும் வாழ்வும் உண்டு.

எனினும், உலகு தான் பெறவேண்டிய இலட்சியத்தை இன்னும் முழுமையாகப் பெறவில்லை. மீட்பின் திருப்பணி, துன்ப மிக்க உலகில் இன்னும் தொடர்ந்து நடை பெறும். இயேசு மாட்சியுடன் மீண்டும் வரும் இறுதி வெளிப்பாட்டு நாட்களிலே, அவர் உலகு மீது கொண்ட வெற்றி நிறைவு பெறும். அன்றுதான் படைப்புகளனைத்தை யும் இறைவன்முன் இயேசு சமர்ப்பிப்பார் (1 கொரி 15:25-28). அந்நாள் வரும்வரை, இவ்வுலகம் பேறுகாலத் துயர்போல் பெரும் அவதியுறும் (உரோ 8:19). முழுப்பருவம் அடைந்து முதிர்ச்சி பெற்ற புது மனிதன் தோன்றும் நாளையும் (எபே 4:13) பழைய உலகம் விடுபட்டுப் புது உலகம் தோன்றும் பொழுதையும் பேராவலுடன் எதிர்நோக்கி யிருக்கும்.

3. கிறிஸ்தவனும் உலகும்:- தாம் உலகில் வாழ்ந்த போது இயேசு எவ்வாறு விளங்கி னாரோ, அவ்வாறே கிறிஸ்தவர்களும் உல கில் இக்கட்டான நிலையில் உள்ளனர். அவர்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள் அல் லர் (யோவா 15:19; 17:17). இருப்பினும் இவ்வுலகில் அவர்கள் வாழுகின்றனர் (11: 11). உலகிலிருந்து அவர்கள் விடுபட வேண் டுமென்று இயேசுவும் அவர்களுக்காகச் செபிக்கவில்லை. மாறாகத் தீமையிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுகின் றார் (17:15). தீமை நிறைந்த உலகை அவர் கள் சாராதவர்கள் என்பதால் இவ்வுலகை மீட்பது அவர்களது தலையான பணியாகத் துலங்குகின்றது (1 கொரி 5:10).

அ) உலகைச் சாரா நிலை:- கிறிஸ்தவன், உலகுடன் நட்புக் கொள்ளாது பிரிந்திருந்து, உலகால் மாசுபடாமல் தன்னையே பாது காக்க வேண்டும் (யாக் 1:27). உலகின் மீது அன்பு கொள்ளலாகாது (1 யோவா 2:15). உலகுடன் நட்புக் கொள்ளுதல் கடவுளின் பகைவனாவதாகும் (யாக் 4:4). இந்தக் கூடா நட்பால் ஒருவன் மிக இழிவான கைவிடப் பட்ட நிலைக்கு ஆளாகின்றான் (2 திமோ 4:10). இவ்வுலகம் காட்டும் மாதிரியைக் கிறிஸ்தவன் பின்பற்றாது (உரோ 12:2) இவ் வுலகிற்குரிய ஊனியல்பு இச்சிப்பை உதறித் தள்ளுகின்றான் (1 யோவா 2:16). சுருங்கக் கூறின், அவன் உலகுக்கு அறையுண்டவனா யும், உலகம் அவனுக்கு அறையுண்டதாக வும் இருக்கும் (கலா 6:14). உலகில் இருந்தா லும் அதிலிருந்து விடுபட்டவன் போல் வாழ்வான் (1 கொரி 7:29 தொ). உலகப் பொருட்களைப் பயன்படுத்துவதைப் புறம் பாக்காத இந்த ஆழ்ந்த துறப்புநிலை பிறர் அன்பின் தேவைகளுக்கு ஏற்றவாறு (1 யோவா 3:17) ஒத்திருக்கும். இத்தகையதே கிறிஸ்தவனிடம் எதிர்பார்க்கப்படும் புனி தம்.

ஆ) உலகில் கிறிஸ்துவுக்குச் சாட்சி:- பாவத் தளையில் சிக்குண்ட உலகிலே, கிறிஸ்தவனுக்கே உரிய சிறப்புப் பணியும் உண்டு. கிறிஸ்து உண்மைக்குச் சான்றுபகர வந்தார் (யோவா 18:37). அவ்வாறே, கிறிஸ் தவனும் உலகிற்கு அனுப்பப்படுகின்றான் (17:18). உண்மைக்குச் சான்று பகர்வதே அவனது சிறப்புப் பணி (1 யோவா 4:17). உலகம் மதிப்பிடும் மரபுகளுக்கு முற்றிலும் மாறுபட்டது கிறிஸ்தவ வாழ்வு. கிறிஸ்து வும் தமது வாழ்விலே நன்கு இதைச் சுட்டி யுள்ளார் (யாவே 7:3 தொ; 14:22; காண் மத் 4:5 தொ). கிறிஸ்தவ வாழ்வு இறைவனைப் பற்றிய உண்மையான அறிவை மனிதர்க ளுக்கு வெளிப்படுத்தும் (யோவா 17:21,23). இவ்வாறு இறைவனின் வார்த்தையானவரு டன் கிறிஸ்தவனும் சான்று பகர்கின்றான். உலகெல்லாம் சென்று கிறிஸ்துவின் வார்த் தையைப் போதிக்கும் பணியையும் அவரிட மிருந்து பெறுகின்றான் (மாற் 14:9; 16:15). இந்த நற்செய்தி பரப்பும் பணியினால் சுடர் விடும் விண்மீன்கள் போல் ஒளிர்கின்றான் (பிலி 2:15).

கிறிஸ்துவைப் பகைத்தது போல் உலகம் இவர்களையும் பகைக்கும் (யோவா 15:18). தனது பாவத் தொடர்பிலிருந்து விடுபட் டோரை மீண்டும் தன் வலையில் சேர்க்க உலகம் முயலும் (2 பேதுரு 2:19 தொ). இந்தத் தவிர்க்க முடியாத போராட்டத்தின் இறுதியிலே நமக்கு வெற்றி கொணரவிருக்

கும் வலிமைமிகு கருவியாய் விளங்குவது நமது விசுவாசமே (1 யோவா 5:4 தொ). நமது உயிருள்ள விசுவாசம் உலகைக் கண்டனம் செய்யும் (எபி 11:7; யோவா 15:22). உலகம் தன்னைத் துன்புறுத்தினாலும் (யோவா 3:13; மத் 10:14 இணை), அதைக் கண்டு கிறிஸ்தவன் சோர்வடையலாகாது. மாறாகத் தேற்றுபவராகிய தூய ஆவியின் அமைதி அவனைத் திடப்படுத்தும். இவ்வுலகின் மன்னன் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்று விட்டான் என்று விசுவசிப்பவனின் உள்ளத்தில் தூய ஆவியானவர் சான்று பகர்கின்றார். உலகம் இயேசுவை விசுவாசிக்காததால் பாவ நிலையில் உள்ளது. இயேசு தந்தையிடமிருந்து வந்தவர், அவருடன் வாழ்பவர் என்பதையும் உலகம் ஏற்க மறுக்கின்றது (16:8-11). உலகம் தேற்றுபவரைக் காண்பதில்லை, அறிவதுமில்லை (14:17). இவ்வாறு சாட்சி பகர்வதின் விளைவாக உலகோடு மீட்கமுடியாதபடி பிணைக்கப்படாதவர்கள் மீட்கப்பட்டு புது உலகில் கிறிஸ்துவின் தலைமையில் மகிமையடைவர்.

இ) இறுதிக் காலத்தை எதிர்நோக்கியிருத்தல்:- உலகில் மனிதன் வாழும் வரையில், கிறிஸ்தவர்களுக்கும் உலகுக்குமிடையே உள்ள பிணக்கு மறையாது. இறுதித் தீர்ப்பு நாள் வரும்வரையில் விண்ணரசின் மக்களும், தீயோனின் அடிமைகளும் கோதுமைப் பயிரும் களையும் போல் உலகில் சேர்ந்தே வாழ்வர் (மத் 13:38 தொ). எனினும் இப்பொழுதிருந்தே ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் ஒரு தீர்ப்பு நடைபெறத் தொடங்குகிறது (யோவா 3:18-21). அந்நாளில் இறைவன் தந்த தீர்ப்பு பலர் அறியப்பறைசாற்றப்படும் (1 கொரி 6:2). அந்நாளிலே, நாம் வாழும் உலகு, இறைவாக்கினர் முன்னறிவித்ததுபோல் மறைந்து விடும். புதுவாழ்வு பெற்ற மனித இனம் புதிய உலகிலே மாறா இன்பத்தில் திளைக்கும் (திருவெளி 21).

உலகெங்கும் சுற்றி வரும் தூதர் (PATROL)

செக் 1:10-11-இல் இச்சொற்றொடர் பயன்பட்டுள்ளது. குதிரை வீரர்கள் உலகைச் சுற்றி வருவதையும், இறைவனது தூதரிடம் அறிக்கையிடுவதையும், நான்கு தேர்களின் குதிரைகள் உலகைச் சுற்றிவரப் பொறுமை இழந்து துடிப்பதையும் (செக் 6:7) இறைவாக்கினர் காட்சியில் காண்கின்றார். இக்காட்சி யுத்தத்திற்குரிய காவல் உலா ஆகும்.

உலர்ந்த திராட்சை (RAISINS)

ஒருவனுக்குத் தேவையான பொருட்களில் (பயணத்திற்கோ வேறு எந்த வழிச் செலவுக்கோ) உலர்ந்த திராட்சையும் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது (1 சாமு 25:18; 30:12; 2 சாமு 16:1; 1 நாள் 12:40). இந்த உலர்ந்த திராட்சையை, திராட்சைக் குலைகளை எண்ணெயில் முக்கிப் பின்னர் அதை எடுத்து வெயிலில் காயவைத்துத் தயார் செய்தனர்.

திராட்சை அடை உலர்ந்த திராட்சையை அழுத்தித் தயாரிக்கப்பட்ட உணவாகும். இது எளிதில் கெட்டுப் போகாதாகையால், பயணத்திற்கும், போர்க்கால உணவிற்கும் உகந்ததாகக் கருதப்பட்டது (2 சாமு 6:19; 16:1; 1 சாமு 25:18; 30:12; 1 நாள் 12:40). இது சாதாரண உணவாகவும் பயன்பட்டது. விழாக்கால உணவிலும் புறவின, பாலினவளர்ச்சித் தேவதைகளின் வழிபாட்டிலும் பயன்பட்டது (2 சாமு 2:5; ஒசே 3:1; எரே 7:18; 44:19).

உலூகித்து (LUHITH-அட்டையால் செய்யப்பட்ட)

மோவாயின் நகரங்களில் ஒன்றான உலூகித்து கொரணயிமோடு தொடர்புடையது. இது சாக்கடலின் தென் எல்லையில் உள்ள ஒரு குன்றாக இருக்க வேண்டும். சோவாருக்குச் செல்லும் வழியில் இது அமைந்திருக்கிறது (ஏச 15:5; எரே 48:5). அரேயோப்பொலிக்கும் (ஆர்) சோவாருக்கும் இடையிலுள்ள நகரான உலயேத்தாவாக இருக்கலாம் என்று யூசேபியுவும் எரோனிமுவும் கருதுகின்றனர்.

உலூக்கியு (LUCIUS-காலையில் பிறந்த)

1. இவர் ஓர் உரோமைத் தூதுவர் ஆவார். செலூக்கியர்களை எதிர்த்துப் போரிட்ட

யூதத் தலைமைக் குருவான சீமோனை ஆத ரிக்கும்படி உலூக்கிய எகிப்திய அரசராகிய ஏழாவது தோலமிக்கும், கீழை நாடுகளின் ஆட்சியாளர்களுக்கும் மடல் எழுதுகிறார் (1 மக் 15:16-21). இவரது முழுப்பெர் தரப்பட வில்லையாதலால் இவர் யாரென அடையா ளம் காட்ட முடியாததாக இருக்கிறது. இந் தத் தூதுவர் கினேயு அல்லது உலூக்கிய கல்பூர்னியு பீசோ (கி.மு. 139) ஆகவோ, உலூக்கியு செசிலியு மெத்தெல்லு (கி.மு. 142) ஆகவோ இருக்கலாம் என்று அடையாளம் காட்ட முயற்சிகள் நடந்துள் ளன.

2. சீரேனே ஊர் உலூக்கியு ஒரு இறைவாக் கினரும் அந்தியோக்கியத் திருச்சபையின் போதகரும் ஆவார் (அ.ப. 13:1). அந்தியோக் கியாவிலுள்ள கிரேக்கர்களுக்கு வார்த்தை யைப் போதித்த யூதப் போதகர்களில் உலூக் கியு ஒருவராக இருந்திருக்கலாம் (11:20-21).

3. உலூக்கியு ஒரு சாதாரணக் கிறிஸ்தவரா கவும் இருக்கலாம். பிறப்பால் இவர் யூதரெ னவும் கொரிந்திலிருந்து வாழ்த்துக்கள் அனுப்பியதாக உரோமையருக்கு எழுதிய மடலில் காண்கிறோம் (உரோ 16:21). இவர் கொலோ 4:14-இல் வரும் புறவினரான லூக் காகவும் இருக்கலாம். மேலும் பவுலின் தோழனான லூக்காவே இவர் என்றும், ஆகவே மூன்றாம் நற்செய்திக்கும் அப் போஸ்தலர் பணிக்கும் ஆசிரியர் ஆவார் என்றும், ஒரு கருத்து உண்டு. இரண்டிலும் மூன்றிலும் குறிக்கப்படுவர்கள் ஒருவராக இருக்கும் வாய்ப்பு உண்டு.

உலூசு (LUZ - பக்க்த்தில் திருப்பு, தஞ்சம் புகு)

1. பெத்தேல் (ஆதி 28:19; 35:6) எனப் பின்னர் யாக்கோபினால் பெயரிடப்பட்ட கானானேய நகரத்தின் முந்தைய பெயரே உலூசு. பென்யாமின் நாட்டு எல்லையைக் கூறும்பொழுது 'பெத்தேல்' என்னும் உலூசு என்றும் குறிப்பிடப்படுகிறது (யோசு 18:13; நீதி 1:23).

யோசு 16:2 ''பெத்தேலிலிருந்து உலூசு நோக்கிச் சென்று'' என்று கூறுவதிலிருந்து இவைகளிரண்டும் வெவ்வேறு நகரங்கள் போலத் தோன்றினாலும் பெத்தேல் உலூசு எனும் ஒரு நகரையே குறிப்பதாகக் கொள்ள லாம்.

2. இஸ்ராயேலர் பெத்தேலைப் பிடித்த போது, அதனின்று விடுபட்டுச் சென்று ஒருவன் கித்திய நாட்டில் கட்டிய நகரமே உலூசுவாக இருக்க வேண்டும் (நீதி 1:26). இது சீரியாவிலோ லெபனோனிலோ அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் இத்தி யப் பேரரசு முன்னர் இவைகளிரண்டையும் உள்ளடக்கியிருந்தது.

உலூது, உலூதியும், உலூதியர் (LUD, LUDIM)

இவர்கள் சிறிய ஆசியாவைச் சேர்ந்த மக்கள் எனக் கொள்ளலாம். சிறிய ஆசியா வில் (இலீதியா) ஒரு காலத்தில் வாழ்ந்ததால் இவர்களை இலிதியர் என்று கூறவும் வாய்ப் புண்டு. உலூதியர் காமின் வழிவந்தவர்களெ னவும் (ஆதி 10:13; 1 நாள் 1:11); உலூதியர் சேமின் வழிவந்தவர்களெனவும் (ஆதி 10:22; 1 நாள் 1:17) பழைய ஏற்பாடு கூறுகின்றது. இவர்களைச் சிறிய ஆசியாவோடும் (எச 66:19) ஆப்பிரிக்க மக்களோடும் (ஏரே 46:9; எச 30:5; 27:10) இணைத்துப் பேசுதல் சந்தே கத்துக்கு இடமாயிருக்கிறது. இவர்கள் தீருக் கும் (எச 27:10) எகிப்துக்கும் (எச 30:5; எரே 46:9) கூலிப்படையாகப் பணிபுரிந்தனர். வில் அம்பு எய்வதில் பெயர்போனவர்கள் (ஏச 66:19; எரே 46:9).

உலோது (LOD)

இது, சாரோன் சமவெளியில் தெற்கெல் லைக்கருகில், யோப்பாவிலிருந்து தென்கி ழக்கே 18 கி.மீ தொலைவில் வாடி ஏல்-கபீர் அருகில் பென்யாமின் நகரம். பென்யாமின் வழித்தோன்றல்களில் ஒருவரான ஏல்பால் இந்நகரத்தைத் தோற்றுவித்தார் (1 நாள் 8:12). உலோது, காதிது, ஓனோ நகரங்கள் பாபி லோனிய அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்த 720க்கு மேற்பட்டவர்க்கு மூதாதையர் நகரமாகியது என்பது பழைய ஏற்பாட்டு நூல்குறிப்பு ஆகும் (எஸ் 2:33; நெக 7:37; 11:35).

எகிப்திலிருந்து பாபிலோன் செல்லும் நெடுஞ்சாலை இதன் வழியே சென்றதால் இதனை உரிமை கொண்டாடிப் பலர் போரிட்டனர். இலிதா என்ற பெயரில் இந்நகர் சமாரியாவின் ஒரு மாவட்டத்தின் தலைநகராகத் திகழ்ந்தது யோனத்தான் மக்கபேயின் வேண்டுகோளுக்கு இணங்கித் தெமேத்திரியு நிக்கத்தோர் கி.மு. 145-இல் இதை யூதேயாவுக்கு அளித்தார் (1 மக் 10:30.38; 11:28.34.37). உரோமையரின்கீழ் இந்நகர் பலவாறு துன்புற்றது. கி.பி. 66-இல் கல்லுஸ் என்பவர் மக்கள் எருசலேமில் கூடாரவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்பொழுது இந்நகரத்தை எரித்து விட்டார். ஆனால் கி.பி. 68-இல் வெஸ்பாசியன் இதனை மீண்டும் நிர்மாணித்தார்.

ஆதிக் கிறிஸ்தவ சமூகம் ஒன்று இங்கு வாழ்ந்தது (அ.ப. 9:32). இங்கு பேதுரு ஐனேயா எனும் திமிர்வாதக் காரனைக் குணப்படுத்தியதால் (அ.ப. 9:33-35) கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. அருகிலிருந்த யோப்பா நகரத்தினர் இதனைக் கேள்விப்பட்டு தபீத்தாவைக் குணப்படுத்தப் பேதுருவை அழைத்தனர் (9:38).

கிறிஸ்தவம் இந்நகரத்தில் நன்கு வளர்ச்சி பெற்று 4-ஆம் நூற்றாண்டில் ஓர் ஆயர் இங்கு இருக்குமளவுக்குத் தழைத்தோங்கியது. சிலுவைப் போர்க்காலத்தில், வேதசாட்சியான புனித ஜார்ஜின் பெயரைக் கொண்டு விளங்கியது இந்நகரம்; இவரது பெயரால் எழுப்பப்பெற்ற கோவிலின் சிதைவுகளை இன்றும் இங்குக் காணலாம்.

உலேத்தான் (LOTAN - சுற்றிப் போர்த்தப்பட்ட)

உலேத்தான் சேயிரின் புதல்வர்களில் முதல்வர் (ஆதி 36:20). ஏதோம் நாட்டிலிருந்த கோரியரின் தலைவராவார் (ஆதி 36:22; 1 நாள் 1:39). இவர்கள் ஏதோமியர் வருகைக்கு முன் சேயிரில் வாழ்ந்து வந்தனர் (ஆதி 36:29).

உலோய் (LOIS - மிகவும் விரும்பத்தக்க, மகிழ்ச்சி உண்டாக்குகிற)

இவள் யூனிக்காவின் தாயும் திமோத்தேயுவின் பாட்டியும் ஆவாள். இவள் கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசத்துக்காகப் பாராட்டப் பெறுகிறாள். பவுல் திமோத்தேயுவுக்கு அறிவுரை வழங்கும்பொழுது திமொத்தேயு இந்த விசுவாசிகளின் குடும்பத்தால் இறை வாழ்வில் உறுதிப்படுத்தப்பட்டதாகவும், அதே விசுவாசத்தை நினைவுக்குக் கொணர்ந்து, அதில் நிலைத்து நிற்கும் படியாகவும் கூறுகிறார் (2 திமோ 1:5).

உலைக்களம் (CRUCIBLE)

இந்தப் பாத்திரம் வெள்ளியைத் தூய்மையாக்கப் பயன்பட்டது. ஒருவனைச் சோதித்தறியும் சூழ்நிலையில், இது பழ 17:3; 27:21-இல் குறிப்பிடப்படுகிறது. ''வெள்ளியை உலைக்களமும் பொன்னைப் புடக்குகையும் சோதித்துப் பார்க்கும், உள்ளத்தைச் சோதிப்பவர் ஆண்டவர்''.

உல்லா (ULLA)

ஆசேர் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தலைவர் (1ம் நாள் 7:39). இப்பெயரைச் சூவா (9:32) என்றும், சூவால் என்றும் (7:36), ஆமால் என்றும் (9:35), ஆரா என்றும் (7:38) அழைக்கவேண்டும் என்று பலவாறு அறிஞர்கள் கூறுவர்.

உவமை (PARABLE)

ஆதித்திருச்சபையின் காலத்திலிருந்தே தனது போதனையை விளக்குவதற்காக இயேசுவால் கூறப்பட்ட கதையானது உவமை என்று அழைக்கப்பட்டது. ''பராபோலே'' என்ற கிரேக்கச் சொல் ஒப்பிடுதலை அடிப்படைக் கருத்தாகக் கொண்டுள்ளது. ஒப்புமையில் பேசவும் அறிவுரை வழங்கவும் மேற்காசிய மக்கள் பெரிதும் விரும்பினர்; புதிர்களையும் பயன்படுத்தினர்.

பழைய ஏற்பாடானது, குறிப்பாக, ஞான நூல்கள் (பழ 10:26; 12:4; நீதி 14:14) நற்செய்தியின் உவமைக்கும் நம்மைத் தயாரிக்கிறது. இந்த இலக்கிய வடிவில் இரு கூறுகள் அடிப்படையாக உள்ளன. அவற்றில் ஒன்று,

ஒப்புமையாகும். இது மேற்காசிய செயல் முறை மனப்போக்கிற்கு ஒத்தது. மற்றது புதிரான முறையில் எடுத்துக் கூறுவதாகும். இவை ஆர்வத்தைத் தூண்டவும், ஆராய்வதற்குத் தூண்டுதலளிக்கவும், முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டவும், அளிக்கப்பட்ட போதனையின் யாவும் கடந்த தன்மையைக் காணவும் ஏதுவானவை. இவ்விரு கூறுகளைச் சமயநோக்கில் பார்க்கும்போது உவமைகளின் சரியான விளக்கத்தை உணரலாம்.

I ஒப்பிடுதலைப் பயன்படுத்தல்

1. செயல்முறையின் விரிவு:- அதனுடைய வரலாற்றில் தொடக்கமுதலே இஸ்ராயேல், புலன் சார்ந்த பிரதிபலிப்பை அனுமதிக்காத யாவும் கடந்த இறைவனைப் பற்றிய செயல்முறையாகப் பேசுகின்ற சவாலை எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது (யாத் 20:4). எனவே அவர்கள் உலக உண்மைகள் முதற்கொண்டு இறைவாழ்வைப் பற்றித் தொடர்ந்து விவரிக்க வேண்டியவர்களாயிருந்தனர். இறைவாழ்வைப் பற்றிய பழைய வாசகங்களின் இறைவனுக்கு மனிதப்பண்புகளைச் சாற்றிக் கூறுதல் எண்ணற்ற தடவைகள் காணப்படுகின்றன. இவை யாவும் தோற்றவடிவில் உண்மையான உவமைகளைக் கொண்டிருக்கும் மறைமுகமான ஒப்புமைகளாகும் (ஆதி 2:7-8. 19.21). பிற்காலத்தில் இவை அரிதானவையாக இருந்தாலும் ஒப்பிடுவதற்கான அக்கறையானது அதிக வலுவுள்ளதாக இருக்கும் (எச 1:26 தொ). மனிதனுடைய வாழ்வே அதனுடைய ஒழுக்கம் மற்றும் சமய நிலைகளில் இத்தகைய அமைப்புகளைத் தேவையானதாகக் கொண்டிருந்தது. இறைவாக்கினர்கள் தங்களுடைய வசைகளிலும் (ஆமோ 4:1; ஓசே 4:16; ஏச 5:18) இறைவாக்குறுதிகளை வெளிப்படுத்தவும் (ஓசே 2:20-21; ஏச 11:6-9; எரே 31:21;...), இவற்றை மிகுதியாகப் பயன்படுத்தினர். அதே நேரத்தில் அவர்கள் அடையாளச் செயல்களில் நாட்ட முடையவராய் இருந்தனர்; அதாவது அவர்களின் போதனையை நடித்துக்காட்டினர் (ஏச 20:2: எரே 19:10; எச 4-5). வரலாற்று நூல்களிலும் சில மெய்யான உவமைகளும் காணப்படுகின்றன (நீதி 9:9-15; 2 சாமு 12:1-4; 14:5 தொ). ஞானிகளின் கூற்றுகளில் அவை ஏராளமாகக் காணப்படுகின்றன (பழ 10:26; 12:14; .....). பிற்கால யூதத்துவத்தில் இம்முறை விரிவடைந்தது. யூத ராபிகளிடையே இது உண்மையான போதகமுறையாக மாறியது. அமைக்கப்பட்ட உருவம் அல்லது கடந்தகால வரலாறான ''இது எதனைப் போன்றது'' என்று தொடங்கும் எப்போதனைக்கும் துணையாக அமைந்தது. ''இதனை எதற்கு ஒப்பிடுவேன்'' (மாற் 4:30; லூக் 13:18), ''விண்ணரக இதைப் போன்றது'' (மத் 13:24.31) போன்று தமது போதனையின் கருத்துகளை ஒப்பிடுவதன் மூலம் வெளிப்படுத்துவதில் கவனமுடையவராய் இருப்பதனால், இயேசு இவ்வியக்கத்தில் பங்கெடுக்கிறார்.

2. உவமைகளின் சமய உட்பொருள்:- புனித வரலாற்றின் பொருள் பற்றிய தங்களுடைய போதனையை விளக்குவதற்கு அன்றாட வாழ்வின் செயல்முறை உண்மைகளைப் பயன்படுத்துதல் மூலம் இறைவாக்கினர்கள் அவற்றினின்று கருத்துக்களை உருவாக்குகின்றனர். ஆயர், திருமணம், திராட்சைக்கொடி போன்றவை நற்செய்தி உவமைகளில் காணப்படுகின்றன. ஒழுக்க வாழ்வில் உறுதியான மனப்பான்மைக்கோ (பழ 4:18-19; 6:6-11; 15:4) சற்று தீர்மானமான சமூகச் சூழ்நிலைக்கோ (நீதி 9:6-15) உரிய மிகத்துல்லியமான சுட்டிக் காட்டல்கள் அவற்றில் காணப்பட்டாலும், இலவசமானதும் நன்மை நிறைந்ததுமான இறைஅன்பும், அதற்குப் பதிலளிக்க மக்கள் காட்டிய விருப்பமின்மையும் இச்சித்திரங்களின் மூலப்பொருளாக அமைகின்றன (ஏச 5:1-7; ஓசே 2; எச 16). நற்செய்தி நூல்களில் இவ்வமைப்பானது, இயேசுவின் உருவில் இறையரசானது இறுதியாக நிறைவேறுவதில் மையம் கொண்டுள்ளது. எனவே, முக்கிய இறையரசைப் பற்றிய உவமைகளடங்கிய முக்கியத் தொகுப்பு (குறிப்பாக மத் 13:1-50 இணை; 20:1-16; 21:33-22:14 இணை; 24:45-25:30) சிறப்பிடம் பெறுகிறது.

3. உவமையும் உருவகமும்:- சில சமயங்களில் ஒப்பிடுதல் முழுக்கதையைத் தழுவிய பொதுப் பாடத்தை எடுத்துக் கூறுவதோடல்லாமல் எல்லா விவரங்களுக்கும் குறிப்பிட்ட பொருளை அளிக்க வல்லது. இதைப் புரிந்து கொள்ளச் சிறப்பான விளக்கம் தேவைப்படும். அப்போது உவமையானது உருவகமாகிறது. இத்தகைய பகுதிகள் பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் காணப்படுகின்றன (எச 17). நான்காவது நற்செய்தியில் இத்தகைய முறையைக் காண்கிறோம் (யோவா 10:1-16; 15:1-6). உண்மையில் உவமைகள் சில உருவகப்பண்புகளை அடிக்கடி தம்முள் கொண்டுள்ளன. நற்செய்தியாளர்களும் விளக்கம் அளிக்கும் முறையால் இச்சிறப்பியல்பை வலியுறுத்துகின்றனர். இவ்வாறு லூக்கா நல்ல சமாரியன் பற்றிய உவமையைக் குறிப்பிடும்போது இயேசுவைப்பற்றிச் சிந்திக்கத் தூண்டும் சொற்களில் கூறுகின்றார் (லூக் 10:33.35).

II சிந்தனை வெளிப்பாட்டு முறையில் கூறுப்படுதல்

1. பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள்:- ஞானிகளின் புதிர்களைவிடப் (1 அர 10:1-3; சீரா 39:3) பிற்கால நூல்கள் விரும்பி மறைபொருள் மிக்க விதத்தில் எடுத்துக்கூறும் முறை சில நற்செய்தி உவமைகளின் புதிரான பண்பை விளக்கப் பெரிதும் பயன்படுகிறது. எசக்கியேலில் எதிர்காலம் பற்றிய இறைவாக்கு அறிவிப்பானது சிறிது சிறிதாக வெளிப்பாட்டுக் கூற்றாக மாறுகிறது. அதாவது தேவைப்படுகின்ற உருவகங்களின் வரிசையில் வெளிப்பாட்டின் பொருளைப் பல உருவகங்களில் வேண்டுமென்றே எடுத்துக் கூறுகின்றன. இவ்வுருவகங்களைப் புரிந்து கொள்ள விளக்கம் தேவைப்படுகிறது. ''வானதூதர்-விளக்கவுரையாளரின்'' பிரசன்னமானது பொதுவாக இச்செய்தியின் ஆழத்தையும் கடினத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு, புதிர் என்றும் உவமை என்றும் அழைக்கப்படும் எச 17:3-10-இல் வரும் கழுகு பற்றிய உருவகமானது, பின்னர் இறைவாக்கினரால் விளக்கப்படுகிறது (17: 12-21). செக்கரியாவின்காட்சிகள்வானதூதர்-விரிவுரையாளரையும் கொண்டுள்ளன (செக் 1:9; 4:5-6). தானியேலின் பெரிய வெளிப்பாட்டுக் காட்சிகளும் இத்தகையனவே. இவற்றில் காட்சியாளர் புரிந்து கொள்ளாதவராகவே எப்போதும் கருதப்படுகிறார் (தானி 7:15-16; 8:15-16; 9:22).

2. நற்செய்தி நூல்களில்:- அரசு மற்றும் இயேசுவின் ஆள் பற்றிய மறைபொருளே புதியதாக இருப்பதால் தமக்குச் செவிமடுப்போரின் அறிந்து கொள்ளும் தன்மைக்கேற்றவாறு இயேசுவே தம்மைப் படிப்படியாக வெளிப்படுத்துகிறார். இதன் காரணமாகவே இயேசு தமது பொது வாழ்வின் முதல் பகுதியில் ''மெசியா இரகசியத்தைத்'' (மாற் 1:34.44; 3:12; 5:43...) தமக்கேயுரிய காரணங்களுக்காக வலியுறுத்துகிறார். இதை மாற்கு வலுவாக எடுத்துக்காட்டுகிறார். மேலும் இதன் காரணமாகவே தமது போதனையின் கருத்தை அளிக்கின்ற அதே நேரத்தில் சிந்திக்கத்தூண்டி, முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு விளக்கவுரை தேவையாக உள்ள உவமைகளில் பேசுவதை அவர் விரும்புகின்றார் (மத் 13:10-33.35.36.51). அரசன் விருந்து, திராட்சைக்கொடி, ஆயன், விதைத்தல் போன்ற சில முதல்தரமான தலைப்புகள் அவருக்குச் செவிமடுப்போரைச் சரியான பாதையில் வழிகாட்டுகின்றன. ஆனால் அளிக்கப்பட்ட போதனையில் ஆழம் அவர்களிடமிருந்து நழுவி விடுகிறது. இவ்வாறு உவமைகள் விழிப்பாய் இருக்கக் கோருகின்றன. அதே சமயம் அதனை முழு அளவில் நுட்பமாக ஆராய இயலாத அல்லது விரும்பாதவர்களுக்கு மறைபொருளின் ஆழத்தினை மறைக்கின்ற திரையாகவும் உள்ளன. கிறிஸ்துவினுடைய செய்தியின் உட்பொருளை ஏற்க மறுத்த பல யூதர்களின் கடின இதயத்தால் தாக்கப்பட்ட நிலையில் இயேசு தன்னுடைய சீடர்களுக்கு ஏசயாவிலிருந்து எடுத்துக்காட்டு அளித்து (மாற் 4:10 தொ; மத் 13:10-15) பதிலளிப்பதைக் காட்டும் போது நற்செய்தியாளர்கள் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றனர். காட்சிகள் வேரூன்றி இவ்வுவமைகளோடு எல்லோருக்கும் புரியக்கூடிய ஒழுக்கப்படிப்பினைகளை

நோக்கமாகக் கொண்ட தெளிவான உவமைகளும் உள்ளன (லூக் 8:1 6 தொ; 10:30-37; 11:5-8).

III. உவமைகளின் விளக்கம்:-

இயேசு போதித்த விவிலிய மற்றும் மேற்காசியச் சூழ்நிலையையும், வளர்ச்சியுள்ள முறையில் போதனை அளிக்கும் அவரது நோக்கத்தையும் மனதில் கொண்டால் உவமைகளை விளக்குவது எளிதாகிறது. அவற்றினுடைய பொருளானது அன்றாட வாழ்வில் எளிய உண்மைகளும், மற்றும் எல்லாவற்றிற்கும் மேலான புனித வரலாற்றின் சிறந்த நிகழ்ச்சிகளுமாகும். எளிதில் கண்டுபிடிக்கக்கூடிய அவற்றின் முதல்தரமான தலைப்புகள் இயேசு அவற்றைப் பயன்படுத்தியபோது அவற்றினுடைய பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் ஏற்கனவே பொருள் அளிக்கப்பட்டிருந்தன. போதனை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு சுதந்தரமாக அமைக்கப்பட்ட இந்த விவரிப்புகளில் காணப்படும் நிகழ்தற்கரியன எவரையும் வியப்பில் ஆழ்த்த வேண்டியதில்லை. முரண்பட்ட அல்லது சார்பான விவாதத்தினை விவரிப்பதற்கென (லூக் 16:1-8; 18:1-5) அளிக்கப்படுகின்ற சில குறிப்பிட்ட கதாபாத்திரங்களின் மனப்பான்மையில், வாசிப்பவர் மனம் புண்படக்கூடாது. எவ்விதத்திலாவது பெரும்பாலான உவமைகளில் நாம் முதலில் இறைமைத் தன்மைக்கூறையும், மிகக் குறிப்பாகக் கிறிஸ்து மையத்தன்மைக் கூறையும் வெளிக் கொணர வேண்டும். உருவகத்தின் தன்மை எத்தகையதாயினும் நமது மனதில் தோன்றும் மையக் கதாபாத்திரம் விண்ணகத்தந்தை ஆவார் (மத் 21:28; லூக் 15:11). தமது வரலாற்றுப் பணியும் (மத் 13:3.24.31-இன் விதைப்பவன்) அல்லது அவரது வருங்கால மாட்சியிலும் (மத் 24:43-இன் திருடன்; மத் 25:14-இன் தலைவன்; மத் 25:11-இன் மணமகன்) கிறிஸ்துவே மையக் கதாபாத்திரம் ஆவார். இருகதாபாத்திரங்கள் இருக்கும்போது அவர்கள் தந்தையும் மகனும் ஆவர்.(மத் 20:1-16; 21:33.37;22:2). இது எந்த அளவிற்கு உண்மையெனில் தமது மகனையே அனுப்பியதன் மூலம் மனிதரால் கண்டறியப்பட்ட தந்தையின் அன்பே இயேசுவால் கொண்டுவரப்பட்ட மாபெரும் வெளிப்பாடாகும். உலகிற்குரிய இறைவனுடைய திட்டத்தின்மீது புதிய அரசு அளிக்கின்ற முழுமையான நிறைவைக் காட்டுவதே உவமைகளின் பணி ஆகும்.

உள்ளார்ந்த மனிதன் (INNER, INWARD MAN)

இதன் பொருளைப் பவுலின் இறையில் ஆளுமையைப் பற்றி அவர் கூறும் கருத்துகளில் காணலாம் (உரோ 7:22-23). இவரின் இந்தக் கருத்தில் மனிதன் மூன்று கூறுகளால் ஆனவன். அ) உள்ளார்ந்த மனம்: இங்குதான் திருச்சட்டம் குடிகொண்டுள்ளது (7:23). இதை இவர் பகுத்தறிவுக்கு ஒப்புமைப்படுத்துகிறார். ஆ) உறுப்புகள் அதாவது ''வலுவற்ற என் இயல்புகள்'' (உரோ 7:18). இதிலேதான் இச்சைகளும் நாட்டங்களும் குடிகொண்டுள்ளன. இவை தங்கள் நாட்டத்திற்குத் தடையாக உள்ள சட்டங்களை ஏற்பதில்லை. இ) மூன்றாவது ''நான்'' என்ற உணர்வு. இது அறிவு, உடலின் நாட்டம் ஆகிய இரண்டையுமே அறிந்திருக்கிறது. ஒவ்வொரு ஆளிலும் இந்த உள்மனமும் ஊன் இயல்பும் ஒன்றை ஒன்று எதிர்ப்பவை என்கிறார். இதுவே மனிதனது இடர்ப்பாடான நிலையாகும்.

ஆண்டவர் அல்லது தூய ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவனின் உள்மனதில் குடிகொண்டுள்ளார் என்று பவுல் கூறுகின்றார் (2 கொரி 3:17-18; எபே 3:16). இதன் மூலம் ஊனியல்பைக் கட்டுப்படுத்தத் தேவையான அருளை நமக்குத் தருகிறார் ஆண்டவர்.

உழைப்பு (LABOUR)

உடல் அல்லது மூளைக்குத் தரப்படும் வேலையே உழைப்பு. மண்ணை ஆள்வதற்கும் தனிப்பட்டோருடையவும் சமூகத்தினுடையவும் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தேவையான உடலுழைப்பை வழக்கமாகக் குறித்தது. பாபிலோனிலிருந்து திரும்பி வந்தபின் ஒவ்வொரு யூதனும் தன் சொந்த வேலையை விட்டு, எருசலேம் நகர மதிலைக்கட்டி எழுப்ப வேண்டுமென நெக

மியா கட்டளையிட்டார் (நெக 5:13). உழைப்பு எனும் சொல் அதற்கு இணையான 'உற்பத்தி' அல்லது செல்வம் எனும் பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது (ஏச 45:14; சங் 128:2). புதிய ஏற்பாட்டில் உழைப்பு இறைவனது திட்டத்தை நிறைவேற்றும் உழைப்பைக் குறிக்கிறது (1 கொரி 15:58; 2 கொரி 5:5). புதிய ஏற்பாட்டில் இது வேலையாட்களின் உடலுழைப்பையும், அதைவிடச் சரியாகக் கூறவேண்டுமெனில் ஏற்புடைமைக்கான செயல்களையும் குறிக்கின்றது.

எல்லா உழைப்பையும் நான்கு வகையாகப் பிரிக்கலாம். 1) தாமே உழைத்துச் சுதந்தரமாக வேலை செய்தல் (உ-ம்) விவசாயம், ஆடுமேய்த்தல், 2) தொழிலாளர்களின் வேலை, 3) அன்றாடக் கூலி வேலை 4) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அடிமையின் வேலை.

கடவுள் படைக்கும் பொழுது வேலை செய்தார் (உழைத்தார்) (ஆதி1); தொடர்ந்து வேலை செய்கிறார் (சங் 103:24; ஏச 28:29). படைப்பில் மனிதனுக்கு வேலைசெய்யும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது (ஆதி 2:15). பாவம்தான் உழைப்பை மனிதனுக்குத் தந்தது என்பதல்ல; உழைப்பின் பலனைக் குறைத்ததோடன்றி அதனைப் பிரச்சனைகட்குரியதாக்கியது (ஆதி 3:19). உழைப்புக்குப் பால்வேறு பாடில்லை. அண்டைய மேற்காசிய நாடுகளில் பெண்கள் மிருகங்கள்போல் வேலைப் பளுவைச் சுமந்தனர். இயேசுவும் உழைத்தார் (யோவா 5:17). பவுல் தாமும் வேலை செய்தார்; கிறிஸ்தவர்களையும் வேலை செய்யத் தூண்டினார் (அ.ப. 18:3; 1 தெச 4:11; 2 தெச 3:10). எல்லா அப்போஸ்தலர்களும் அழைக்கப்படுவதற்குமுன் சிறந்த உழைப்பாளர்கள்.

கிரேக்க, உரோமைய உலகத்தில்போலல்லாமல் எபிரேயர்கள் உடலுழைப்பை உயர்வாகக் கருதினர். மனித உழைப்பு தனக்கென்று ஒரு பெருமையுடையது. உழைப்பினால் மனிதன் சிந்தும் வியர்வையும், வருத்தமும் கூடப் பெருமைக்குரியது (பழ 10:6). மனைவி செய்யும் கடின உழைப்பும் (பழ 31:15), தொழிலாளியின் உழைப்பும் (பழ 22:29) புகழப்படுகிறது. சோம்பேறி எறும்புகளிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளட்டும் (பழ 6:6). உடன்படிக்கையின் கட்டளைகளில் ஓய்வுநாள் கடைப்பிடிப்பைப்போன்று ஆறுநாள் வேலை செய்ய வேண்டுமென்பதும் ஒரு கடமையாகும் (யாத் 20:9-11). சோம்பேறித்தனம் என்பது உண்மையிலேயே ஒரு சாபக்கேடு (திருவுரை 10:18). உழைப்பு எப்போதும் ஆசீர்வதிக்கப்பட்டது (யாத் 34:21; சங் 126:1; பழ 10:4; 21:5; திருவுரை 5:11; சீராக் 10:30). உண்மையான உழைப்பாளிக்கு இறைவன் வெகுமதி அளிக்கிறார் (ஆதி 26:2; 39:5; சங் 106:36-37; திருவுரை 2:24).

உழைப்பாளிகளைக் காப்பதற்குச் சட்டம் உண்டு (லேவி 19:13; உப 24:14). அவர்கள் அடிமையோ உரிமைக் குடிமக்களோ யாராக இருப்பினும், தலைவர்கள் இரக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும் (எபே 6:9; பிலமோன்); வேலைக்காரன் கூலிக்கு உரியவனே (லூக் 10:). யாக்கோபு ஒரு மனைவிக்காகக் கடுமையாக உழைத்தார் (ஆதி 31:40-41). உழைப்பாளிகளை மேற்பார்வையிடுவோர் பலர் இருந்தனர் (ரூத் 2:5; 1 சாமு 11:5; மத் 20:1; 1 கொரி 3:9). சுதந்தரத் தொழிலாளிகள் தங்களுக்கெனச் சங்கம் அமைத்துக் கொண்டனர்.

எகிப்தில் வற்புறுத்தி வேலை வாங்குதல் இருந்தது. சாலமோனும் அவரது புதலர்வர்களும் அம்முறையைப் பின்பற்றினர் (1 அர 11:28). இத்தகைய முறையில் வேலைவாங்குவது கூடாது எனச் சாமுவேல் காலத்திலே எதிர்த்துக் கூறப்பட்டது (1 சாமு 8:11-17). ஆயினும் ஆசா யூதாவில் இப்பழக்கத்தைத் தொடர்ந்தார் (1 அர 15:22). சாலை அமைப்பது, நினைவுக் கூடங்கள் கட்டுவது ஆகியவற்றில் குடிமக்களின் உழைப்பை அரசு பெறலாம். ஆனால் அது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே. இது உரோமையர்களாலும் பயன்படுத்தப்பட்டது (மத் 5:4).

உறக்கம் (SLEEP)

மனித வாழ்வில் இன்றியமையாத ஆனால் மறைபொருளான கூறாகிய உறக்கமானது இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளது. அவை மனிதனுக்குப் புத்துயிரளிக்கின்ற இளைப்பாறுதலும், இரவின் இருளுக்குள் மூழ்கிவிடுதலும் ஆகும். வாழ்வின் ஊற்றாகவும் மரணத்தின் சாயலாகவும் இருக்கின்ற காரணத்தால் அது வேறுபட்ட உருவகமான பொருள்களைக் கொண்டுள்ளது.

I. மனிதனின் ஒய்வு:- மனிதனுடைய வாழ்வின் மீது படைத்தவரால் சுமத்தப்பட்ட நியமத்தின் விளைவாக இரவு மற்றும் பகல், எழுதல் மற்றும் இளைப்பாறுதல் என்னும் மாறிவரும் முறைமைக்கு மனிதன் உட்பட்டுள்ளான்.

1. தன்னம்பிக்கை மற்றும் கையளித்தலின் அடையாளம்:- உழைப்பவனுக்கு ஓய்வை அளிக்கின்ற உறக்கத்தின் இனிமையைப் பாராட்டுவதும் (திருவுரை 5:11) செல்வம், நோய் அல்லது தீய மனசாட்சி போன்றவையால் உறக்கமில்லாமைக்கு உட்படுத்துபவர்களுக்காகப் புலம்புவதும் (சங் 32:4; சீரா 31:1-2) பொருத்தமானதே. நீதிக்கும் உறக்கத்திற்கும் இடையிலான பிணைப்பைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாததாகும். இரவில் விழித்திருக்கும் போது சட்டத்தைப் பற்றிச் சிந்திக்கிறவனும் (சங் 1:2; பழ 6:22) ஞானத்தைத் தனது இதயத்தில் பதியச் செய்கிறவனுமாகிய (பழ 3:24) நீதிமான் ''படுக்கைக்குச் சென்றவுடன் அமைதியாக உறங்குகிறான்'' (சங் 3:5; 4:8). இறைவனின் பாதுகாப்பின் மீது அவன் நம்பிக்கை கொண்டுள்ளான். ஏனெனில் மனிதனின் சாயலாக அமைக்கப்பட்ட சிலைகளும் உறங்கலாம் (1 அர 18:2). ஆனால் இஸ்ராயேலின் காவலராகிய இறைவன் ''உறங்குவதும் இல்லை அயர்வதுமில்லை'' (சங் 121:4). அவர் தமது பிள்ளைகளின் நன்மைக்கென இடைவிடாமல் உழைக்கிறார் (சங் 127:2; மாற் 4:27). புயல் அடித்த போதும் இயேசு ''பயப்படவில்லை'' (மாற் 4:40); யோவா 14:27; 1 திமோ 1:7). அவரது உறக்கம் அவர் இறைவனில் கொண்டிருந்த் நம்பிக்கையின் நிறைவிற்கு அடையாளமாகும் (மாற் 4:48). இச்சிந்தனைப் போக்கில் எல்லா மனித இனங்களுக்கும் அறிமுகமான உருவகத்தில் வேலைகளாலும் நீண்ட காலம் நிரம்பிய வாழ்விற்குப் பின்னர் உறக்கத்தினுடைய இளைப்பாறுதலில் நுழைவதாக மரணம் கருதப்படுகிறது. மனிதன் தனது மூதாதையருடன் உறங்குகிறான் (ஆதி 47:30; 2 சாமு 7:12). எனவே கல்லறையானது இறந்தோர் ஓய்வெடுக்கின்ற ''உறங்கும் அறைகளைச்'' சுட்டிக்காட்டுகிறது. உயிர்ப்பிலான நம்பிக்கையுடன் ''இயேசுவில் துயில்கின்ற'' (1 தெச 4:14) கிறிஸ்தவன், தான் உயிர்த்தெழுந்து வாழ்விற்குத் திரும்புகின்ற நாளைப்பற்றிய நம்பிக்கையுடன் கூடிய கனவுடன் இரவு காலத் துயிலுக்குச் செல்கிறான் (தானி 12:13).

2. இறைவனுடைய சந்திப்பின் நேரம்:- ஒருவேளை உறங்கும் மனிதன் இனியும் சுய உணர்வு இல்லாமலும் இருக்கின்ற காரணத்தினால் உறக்கத்தின் நேரமானது இறைவனது வருகைக்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது. இதற்குரிய காரணங்களை நிர்ணயிப்பது கடினம். இவ்வாறு தமது சித்தத்திற்கு ஏற்றவாறு செயலாற்ற, தான் தனிமையாக இருப்பதை அறிகின்ற ஆதாமின்மீது அவருக்கென ஒரு பெண்ணை உருவாக்குவதற்கென, இறைவன் ஒருவித பரவசமான ஆழ்ந்த உறக்கத்தை உண்டாக்குகிறார் (ஆதி 2:2). கலக்கமுற்றிருக்கும் ஆபிரகாமுடனான தமது உடன்படிக்கையை முத்திரையிடவும் அவர் மீது உறக்கத்தை உண்டாக்குகிறார் (ஆதி 15:2.12). பின்னர்க் காரிருளில் இறை நெருப்பு வெளிப்படுகின்றது (15:17). இறைவன் தாம் தேர்ந்து கொண்டவர்களுக்குக் கனவில் தமது மறைபொருளான பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார். தமது பிரசன்னத்தை யாக்கோபுவிற்கும் (ஆதி 28:11-19), தமது மறைபொருளான திட்டங்களை இரு யோசேப்புகளுக்கும் (ஆதி 37:5 தொ.9; மத் 1:20-25; 2:13-14.19-23) வெளிப்படுத்துகிறார். இத்தகைய வெளிப்பாடானது அதனால் பயன்பெறுபவர்களை இறைவாக்கினர் போல் ஆக்குகிறது (எண் 12:6; உப 13:2;

1 சாமு 28:6). வெளிப்பாட்டு நூல்கள் இதை விரும்பிப் பயன்படுத்துகின்றன *(தானி 2:4)*. இறுதிக்காலத்தின் அடையாளமாக இது வாக்களிக்கப்படவில்லையா? *(யோவா 3:1; அ.ப. 2:17-18)*. ''கருவுற்றவளின் கனவுகளுடன்'' *(சீரா 34:1-8)* குழப்பப்படாமலிருப்பதற்கு இது முழுமுனைப்புடன் சோதிக்கப்பட வேண்டும் *(எரே 23:25-26; 29:8)*

II. *மனிதனின் மீதான காரிருள்:-* இறைவனின் படைப்பான இரவே இடர் எச்சரிக்கை மற்றும் தீயசக்திகளின் நேரமாகவும் உள்ளது. உறக்கத்தில் கொடிய இரவு விலங்குகள் தோன்றலாம். அது குற்றமுள்ள இருயத்தைச் சுட்டலாம்.

தனது இதயத்தில் பெரும் திட்டங்களைக் கொண்டிருப்பவன் தனது கண்களுக்கு ஓய்வளிப்பதில்லை *(சங் 132:3 தொ; பழ 6:4)*. இதற்கு மாறாகப் படுக்கையிலிருந்து எழாத சோம்பேறி வறுமைக்கு உட்பட்டு இருக்கிறான் *(பழ 6:60-11; 20:13; 26:14)*. இன்னும் அதிகப் பயங்கரமானவை பொறுப்பற்ற செயல்களுக்கு நடத்திச் செல்கின்ற குடியினால் விளையும் உறக்கமும் *(ஆதி 9:21-24; 19:31-38)* அல்லது பெண்களின் அன்பால் விளையும் உறக்கமும் ஆகும். இவ்வாறு சாம்சனின் வலிமையானது தெலீலாவிடம் சரணடைந்தது *(நீதி 16:31-21)*.

உறக்கமானது குற்றமுள்ள மனநிலையைச் கட்டக்கூடியது என்பதால் தவறின் விளைவைவிடப் பெரியதாக இருக்கக்கூடும். யோனாவின் உறக்கம் இத்தகையதே *(யோனா 1:5)*. இறைவாக்கினர் எலியா சூரைச் செடியின் அடியில் படுத்துறங்கச் செல்வது நம்பிக்கையிழந்ததின் விளைவாகும் *(1 அர 19:4-8)*. அப்போது மனிதன் பாவத்திற்குக் கைவிடப் பட்டுவிட்டான் என்பதை உறக்கம் எடுத்துக் காட்டுகிறது. யாவேயின் சினத்தின் கிண்ணத்தை வெறுமையாக்கியபின், அவன் குடிமயக்கநிலையில் தள்ளாடுகிறான் *(எரே 25:16; எச 51:17)*. இயேசு கெதுசமனியில் செபிக்கும்போது சீடர்களை ஆழ்த்துகின்ற உறக்கமானது *(மாற் 14:34.37:40 இணை)* நெருங்கிவரும் நேரத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை மற்றும் இயேசுவிடமிருந்து தங்களைத் தாங்களே பிரித்துக் கொள்கிறோம் என்பதை அறியவில்லை என்பதைக் குறிப்பிடுகிறது. இதன் காரணமாக மீட்புப்பணியில் தாம் முற்றிலும் தனிமைப் பட்டவராக இருக்க வேண்டும் என்பதை இயேசு உணர்கிறார். இவ்வாறு பாவத்தில் தங்களைப் புதைத்துக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு இயேசு உறக்கத்தை அனுமதிக்கிறார்.

III. *பாவம் மற்றும் மரணத்தின் உறக்கத்திலிருந்து எழுதல்:-* மேலும் உறக்கமானது பாவம் நடத்திச் செல்கின்ற மரண நிலையினைக் குறிப்பிடுகிறது. அதிலிருந்து எழுவதென்பது மனம்மாறி வாழ்விற்குத் திரும்புவதன் அடையாளமாகும்.

1. ''விழித்திரு'':- இயேசு தம்முடைய உறங்கும் சீடர்களை நோக்கி ''விழித்திருங்கள்'' என்று கூறுகிறார். இறைவன் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டதால், இறைவனைச் சார்ந்திருப்பதற்கு இஸ்ராயேல் மக்களில் ஒருவனும் விழித்திருக்கப்போவதில்லை என்பதை இயேசுவுக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே இறைவாக்கினர் தெளிவுபடுத்திவிட்டனர் *(எச 64:6)*. ஆனால், இறை அருளானது எழும் நேரத்தை விரைவு படுத்தவுள்ளது; ''விழித்தெழு! எருசலேமே எழுந்திரு'' *(எச 51:17-52:1)*. இது உணர்ச்சியற்ற நிலையிருந்து எழும் நேரமாகும். சினத்தின் கிண்ணமானது அடிவரை வெறுமையாக்கப்பட்டுள்ளது. இறைவனே தமது மக்களை அவர்களின் திகைப்பினின்று விடுவிப்பார். புனித நகரின் இவ்வெழுதலானது மெய்யான உயிர்த்தெழுதலாகும். புழுதியில் வாழ்வோர் அவர்களாகவே விழித்தெழுவர் *(எச 26:19)*. தானியேலின் வெளிப்பாட்டில் இவ்வுருவகமானது உண்மையாகும்: ''மண்ணில் உறங்குகிற பலர் விழித்தெழுவர்'' *(தானி 12:2)*. ஆகவே நீதிமான் மரணத்தில்

உறங்குவதற்கு அஞ்சக்கூடாது (சங் 13:14). ஏனெனில் இறைவனே மரணத்திற்குத் தலைவனாய் இருக்கிறார். இயேசுவை எழுப்புவதின் மூலம் அவர் இதனைக் காட்டுவார்.

ஆனாலும் இவ்வுயிர்ப்பிற்குத் தயாரிக்க முதலில் உண்மையான மனமாற்றத்தின் மூலம் இதயத்தைத் தட்டியெழுப்புவது அவசியம். உன்னத சங்கீதத்தில் உறங்குதல் மற்றும் துயிலெழுதல் என்னும் உருவகங்களின் மூலம் சித்தரிக்கப்படுவது இம்மனமாற்றத்தின் உரையாடலே. பிரமாணிக்கமற்ற மணமகளின் விழிதெழுதலானது திடீரென்று இருக்கக்கூடாது. ''அன்புடையாளை எழுப்பாதீர், தானே விழிக்கும்வரை தீட்டியெழுப்பாதீர்'' (உ.ச. 2:7; 3:5; 8:4). பாலைவனத்திற்குக் கடத்திச்செல்லப்பட்ட மணமகளின் இதயத்தை இந்த நல்லின்பமானது படிப்படியாக வெற்றி கொள்ளும். ''நான் உறங்குகிறேன், ஆனால் என் நெஞ்சமோ விழித்திருக்கிறது'' (சங் 5:2) என்று அவள் கூறும்படிக்கு, இறைவன் அவளிடம் பேசியுள்ளார் (ஓசே 2:16; ஏச 40:2). அன்பானது இன்னும் மிக்க வலிமையுள்ளதாக இல்லை. ஆயினும், விழித்தெழுந்தபின்னர், மணமகள் பயனற்ற பொருட்களால் தன்னையே தொல்லைப்படுத்திக்கொள்கிறாள். வந்துள்ள மணமகனைத் திரும்பச் செல்வதற்கும் அனுமதிக்கிறாள். அவள் விழித்திருப்பது அவளுக்கு நல்லது. ஆனால் அவளது விழித்திருத்தல் இறைவனின் நேரத்தைத் துரிதப்படுத்த முடியாது (ஏச 26:9). மணமகனே இறுதியாக மணமகளைத் தட்டியெழுப்புவார் (உ.ச. 8:5). மனமாற்றம் என்பது இறைவனின் செயலாகவே உள்ளது.

2. அவர்களின் உறக்கத்திலிருந்து எழுப்பப்படுதல்:- உறங்குவதற்கெனச் சுதந்தரமாகச் சென்ற கல்லறையினின்று எழுவதற்கு முன்னர், இயேசு, மரணத்தின் மீதும் அதன் சாயலாகிய உறக்கத்தின் மீதும் தமது ஆதிக்கத்தை அடையாளங்களால் வெளிப்படுத்துகின்றார். புயலின்போது தமது உறக்கத்தினால் தொல்லைப்படுத்தப்படுவதற்குத் தமது சீடர்களை அவர் அனுமதிக்கிறார் (மாற் 4:37-41). ''ஆண்டவரே எழுந்திருங்கள்'' (சங் 44:24; 78:65; ஏச 51:9) என்னும் சங்கீத ஆசிரியர்களின் துணிவான செபத்தை அவர்கள் மீண்டும் உரைக்க வேண்டுமென அவர் விரும்பியது போன்று இது அமைந்துள்ளது. உண்மையில் மரணத்தின் மீது கொண்டிருந்தது போல் அவர் கடலின்மீது அச்சம் கொண்டிருக்கவில்லை. தங்களது உறக்கத்தினின்று எழுமாறு கட்டளையிடுவதன் மூலம் அவர் யாயீரின் மகளையும் (மத் 9:24), தமது நண்பன் லாசரையும் (யோவா 11;11) எழுப்புகிறார். இவ்வாறு தமது உயிர்ப்பை முன்னடையாளங்களால் உணர்த்தினார். இவ்வுயிர்ப்பில் திருமுழுக்குப் பெற்றோர் மறைபொருளான விதத்தில் ஒன்றுபடுகின்றனர். ''தூங்குபவனே எழுந்திரு, இறந்தோரினின்று எழுந்துநில். கிறிஸ்து உன்மேல் ஒளிர்ந்தெழுவார்'' (எபே 5:14). விசுவாசி இனி ஒரு போதும் இரவில் வாழ்பவர் அல்லர்''. அவன் இனித் தூங்குவதில்லை'' (1 தெச 5:6-7) ஏனெனில் பாவத்துடனும் இரவின் தீமைகளுடனும் நிறைவேற்ற வேண்டியது எதுவும் இனி அவரிடம் இல்லை. உறங்காமல் அவர் தமது தலைவனின் வருகையை எதிர்பார்த்து விழித்திருக்கிறார் (மாற் 13:36). மணமகன் வருவது தாமதமாகும்போது, அவர் விவேகமுள்ள கன்னியரைப்போல உறங்கச் சென்றாலும், தமது விளக்கை எண்ணெய் நிரம்பியதாகக் கொண்டுள்ளார் (மத் 25:1-13). அப்போது உன்னத சங்கீதத்தினுடைய மணமகளின் ''நான் உறங்குகிறேன். ஆனால் என் நெஞ்சம் விழித்திருக்கிறது'' என்ற வாக்கானது புதிய பொருளைப் பெறுகிறது. ஏனெனில் அந்நாளானது ஏற்கனவே இரவின் ஆழத்தில் ஒளி வீசுகின்றது.

உறவினர் (Cousin - தாய் தந்தையரின் சகோதரி சகோதரர்களின் பிள்ளைகள்)

'உன் மாமா மகன்', ''உன் தந்தையின் சகோதரன் மகன்'' என்ற சொற்றொடர்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. இவர்கள் உறவினர் எனப்பட்டனர். பொருட்கள் விற்பதிலும் வாங்குவதிலும், சிறப்பாகத் திருமணத்திலும் ஓர் உறவினனுக்குச் சில கடமைக

ளும், உரிமைகளுமுண்டு. எரேமியாவின் உறவினர் கனமேல் அனாத்தோத்திலிருந்து சிறு நிலத்தை வாங்கும்படி எரேமியாவைக் கேட்டுக் கொண்டார் (எரே 32:7-9.12). உறவினர்களுக்கிடையே, சிறப்பாக முதல்கால் உறவினர்களுக்கிடையே திருமணமானது சாதாரணமாக நடைபெற்றது (ஆதி 24:15; 28:2; 2 9:10.19; 36:3). தங்கள் சொத்து தங்கள் கோத்திரத்திலேயே இருக்க விரும்பி செலொபகாத்தின் புதல்விகள் தங்கள் தந்தையின் சகோதரனின் புதல்வர்களையே மணந்து கொண்டார்கள் (எண் 36:11). எலயாசாரின் புதல்விகள், தங்கள் உறவினர்களான கீசின் புதல்வர்களை மணந்தார்கள் (1 நாள் 23:21-22). தகாத புணர்ச்சி பற்றிய சட்டம், ஒரு மனிதனுக்கு நெருங்கிய உறவுள்ள பெண்களைப் பட்டியல்படுத்தினாலும் மேற்கூறப்பட்ட உறவுமுறையை விட்டுவிடுகிறது (லேவி 18:6-18).

இயேசுவின் சகோதரர் சகோதரிகளைப் பற்றிக் குறிக்கும் புதிய ஏற்பாட்டு வாசகங்களில், இயேசுவின் உறவினர் என்று கொள்வது சாலச் சிறந்தது (மத் 13:55 இணை; மாற் 6:3; யோவா 2:12; 7:5; 1 கொரி 9:4; 15:7). உண்மைக்கும் ஒத்ததாகும். காண்க: ஆண்டவரின் சகோதரர்கள்.

உறுதி பூசுதல் (CONFIRMATION)

இந்தச்சடங்கின்தொடக்கம்அ.ப.8:16-17-இல் காணப்பட வேண்டும். சமாரியர்கள் பிலிப்புவிடம் திருமுழுக்குப் பெற்றிருந்தனர். அப்போஸ்தலர்களான பேதுருவும் யோவானும் கைகள் விரிக்கவே அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். யோவானின் ஞானஸ்நானம் மட்டுமே வாங்கியிருந்த சிலர் மீது பவுல் கைகளை விரிக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் (அ.ப. 19:1-7). புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானத்தின் போதே தூய ஆவியைப் பெறுவதை நாம் காண்கிறோம் (அ.ப. 2:38). கைகளை விரித்தல் கிறிஸ்தவத் திருமுழுக்கின் ஒரு அங்கமாகத் தோன்றவில்லை.

இந்தத் திருவருட்சாதனத்தின் தொடக்கம் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. கீழ்ச் சொல்லப்படுவது பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. நற்செய்தி சமாரியாவில் அறிவிக்கப்பட்டபோதுதான் முதன்முதலாக அது புறவினத்தாரிடையே பரவுகிறது. அப்போஸ்தலர்களின் ஆடம்பரத்தலையீடு, ஆண்டவரின் கட்டளையை (அ.ப.. 1:8) நிறைவேற்றுவதில் ஒரு முக்கியக் கட்டம் வந்துவிட்டது என்பதைக் காட்டுகிறது. புதிய விசுவாசிகள் அப்போஸ்தலிகத் திருச்சபையிலே முழு அங்கத்தினர் ஆகின்றனர். அதுபோலவே எபேசில் நடந்த நிகழ்ச்சியும் ''சீடர்கள்'' இப்போது திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கிறிஸ்தவர்களாயினர் என்பதை வலியுறுத்துகிறது. இந்தப் பொருளில் இவ்விரு நிகழ்ச்சிகளும் உறுதிபூசுதலுக்கு முன்னோடியாகக் கருதப்படலாம்.

பொதுவாக வெவ்வேறு வயதில் இது அளிக்கப்பட்டது; (கிறிஸ்தவ விசுவாசத்தில் அடிப்படை உண்மைகளில் போதகம் முடிந்தபின்) திருச்சபையில் முழு அங்கத்தினராவதைக் குறிக்கும் சடங்காக மாறியது. கத்தோலிக்கத் திருச்சபையின் வழக்கில் உறுதி பூசுதல் ஆயரால் வழங்கப்படுகிறது. அதில் எண்ணெய் பூசும் சடங்கும் அடங்கும். 1971-இலிருந்து திருப்பலியிலேயே இச்சடங்கு கொண்டாடப்படுகிறது. பொதுவாக, வயது வந்தவருக்குத் திருமுழுக்கு அளிக்கும் அல்லது திருச்சபையின் மற்றொரு பிரிவிலிருந்து ஒருவரைத் திருச்சபையில் ஏற்கும்போது குருவால் உறுதிபூசுதல் வழங்கப்படுகிறது.

உறுப்பினர்கள் (MEMBERS)

இச்சொல் புதிய ஏற்பாட்டில் மட்டுமே முக்கியத்துவம் உடைய சொல். இது உடலையும், உறுப்புகளையும் குறிப்பதோடு மட்டுமல்லாமல் (மத் 5:29; உரோ 6:13; 7:23; 12:4; 1 கொரி 12:12; யாக் 3:6; 4:1), திருச்சபையின் உறுப்பினர்களையும் குறிக்கின்றது (உரோ 12:5; 1 கொரி 12:27; எபே 4:25; 5:36). இந்த இரண்டு கருத்துகளும் முரண்பாடுகள் உள்ளவை அல்ல; ஏனெனில் திருச்சபை இயேசுவின் உடலென்று கருதப்படுகிறது. 1

கொரி 6:15-இல் ''நம் உடல்கள்'' இயேசுவின் உடலின் அங்கத்தினர்களாகக் கருதப்படுகிறது.

உற்றுக்கேள் (LISTEN)

இறைவாக்கு மனிதனுக்கு அறிவிக்கப்படுதலே விவிலிய வெளிப்பாடாகும். மையமாகும். கிரேக்கப் புதிர்ச் சமயங்களும், கீழ்த்திசை மெய் அறிவு மதங்களும், இறைவனுக்கும், மனிதனுக்குமுள்ள தொடர்பைக் காட்சி வழியாக விளக்குகின்றன. ஆனால் விவிலியத்தில், ''கேட்பதால்தான் விசுவாசம் உண்டாகிறது'' (உரோ 10:17).

1. மனிதன் இறைவனுக்குச் செவிசாய்க்க வேண்டும்:-

அ) ''கேளுங்கள்'' என்று இறைவாக்கினர் இறைவனின் அதிகாரத்துடன் போதிக்கின்றனர். (ஆமோ 3:1; எரே 7:2). ''கவனித்துக் கேள்'' என்று தன் அனுபவ முதிர்ச்சியிலிருந்தும், திருச்சட்டத்தைப் பற்றித் தான் அறிந்ததிலிருந்தும் ஞானி அறிவுரை வழங்குகின்றார் (பழ 1:8). இறைவனின் திருஉள்ளத்தை உணர்ந்தறிய, ''இஸ்ராயேலே, உற்றுக்கேள்'' என்று பக்தியுள்ள இஸ்ராயேலன் தினமும் சொல்லிக் கொள்கிறான் (உப 6:4; மாற் 12:29). ''கேளுங்கள்'' என்று இயேசுவும் போதிக்கலானார் (மாற் 4:3.9 இணை).

உண்மை என்பதை எபிரேயர் புரிந்து கொண்டதிலிருந்து, ''கேள்'', ''இறைவனின் வார்த்தையை ஏற்றுக் கொள்'', என்ற சொற்கள் காதால் கேட்பதை மட்டும் குறிப்பனவல்ல; மனத்தால் ஏற்றுக் கொள்ளுதல் (அ.ப. 16:4), கேட்டபடி நடத்தல் அதாவது கீழ்ப்படிதல் (மத் 7:24 தொ) என்றும் பொருள்படும். இறைவார்த்தையைக் கேட்பவர் பணிந்து விசுவாசிக்கக் கடமைப்பட்டுள்ளார் (உரோ 1:5; 10:14 தொ).

ஆ) ஆனால் மனிதன் ''இறைவாக்குக்குச் செவிசாய்க்க மறுக்கிறான்'' (உப 18:16. 19). இதுவே அவனது அழிவிற்குக் காரணமுமாகும். மனிதன் இறைவனின் அழைப்பிற்குச் செவிடனாகின்றான். இதுவே அவனது விருத்தசேதன மில்லாத உள்ளத்திற்கும் செவிக்கும் காரணமாகும் (எரே 6:19; 9:25; அ.ப. 7:51). யூத மக்கள் கடவுளின் வார்த்தைக்குச் செவிசாய்க்க மறுப்பதைக் கிறிஸ்துவும் கண்டிக்கிறார்; ''நான் சொல்வதைக் கேட்க உங்களால் முடியவில்லை. இறைவனால் பிறந்தவன் அவருடைய சொல்லுக்குச் செவிமடுக்கிறான். நீங்களோ இறைவனால் பிறக்கவில்லை. ஆதலால் செவிமடுப்பதில்லை'' (யோவா 8:43.47).

''ஆண்டவர் என் காதுகளைத் திறந்தார்'' (ஏச 50:5; 1 சாமு 9:15; யோபு 36:10). தமது அடியார்களின் காதுகளை, இறைவனால் தான் திறக்க முடியும். ''என் காதுகளைத் திறந்தருளும்; அதனால் நான் கீழ்ப்படிவேனாக'' (சங் 40:7 தொ). மீட்பின் காலத்தில் ''செவிடர் கேட்பர்'' அவர்கள் இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பர் என்பதைக் கிறிஸ்துவின் புதுமைகள் உறுதிப்படுத்துகின்றன (ஏச 29:18; 35:5; 42:18 தொ; 43:8; மத் 11:5). மேகத்திலிருந்து எழுந்த குரலொலி ''இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவிசாயங்கள்'' என்றது (மத் 17:5 இணை). மரியாள் இறைவனின் வார்த்தையை ''உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து வந்தாள்'' (லூக் 2:19.51). ''கடவுளின் வார்த்தையைக் கேட்டுக் கடைப்பிடிப்பவர்கள் அதிலும் பேறுபெற்றவர்கள்''. (லூக் 11:28) என்று தாயின் மகத்துவத்தை இயேசு வெளிப்படுத்தி அவளைப் பேறுடையவளாக்கினார்.

2. மனிதனுக்கு இறைவன் செவிசாய்க்கின்றார்:-

தனது குரலுக்குச் செவிசாய்க்குமாறு மனிதன் இறைவனை வேண்டுகிறான். தான் கேட்பதை இறைவன் அருளவேண்டும் என்பதே அவனது ஏக்கம். நீதியற்றோர் செபங்களையும், பாவம் புரிவோர் செபங்களையும் இறைவன் கேட்பதில்லை (ஏச 1:15; மீக் 3:4; யோவா 9:31). ஆனால், ஏழைகள், விதவைகள், அனாதைகள், தாழ்ச்சியுள்ளோர், சிறையில் துன்புறுவோர் ஆகிய இவர்களின் குர

லுக்கே இறைவன் செவி சாய்க்கின்றார் *(யாத் 22:22-26; சங் 10:17; 102:21; யாக் 5:4)*. நீதிமான்களுக்கும், தம்மீது பற்றுள்ளோருக்கும் தம் திருவுளப்படி நடப்பவர்களுக்கும், *(சங் 34:16.18; யோவா 9:31; 1 பேதுரு 3:12)*. தமது திருவுளத்திற்கு ஏற்ப மன்றாடுபவர்களுக்கும் *(11 யோவா 5:14 தொ)* இறைவன் செவிசாய்க்கிறார். தமது திருமகன் இயேசுவுக்கு எப்போதும் செவிசாய்ப்பதால்தான் இறைவன் நமக்குச் செவிசாய்க்கின்றார் *(யோவா 11:14 தொ)*. ஏனெனில் இயேசு மூலமாகவே, கிறிஸ்தவர்களின் செபம் எப்போதும் பரிந்துரைக்கப்படுகின்றது; இறைவனை நோக்கி எழுகின்றது.

உன்னத (SONG OF SONG)

காண்க: பேரின்பப் பாடல்

உன்னதர் (MOST HIGH)

''உயர்த்தப்பட்டவர்'' என்ற பொருளுடைய எலியோன் என்ற எபிரேயச் சொல்லின் வழக்கமான மொழி பெயர்ப்பாகும். எலியோன் என்பது கடவுள்களின் வானகத் நந்தையான ஏவின் மேற்குச் செமத்தியப் பெயராகும். இதை இஸ்ராயேல் எடுத்து, யாவே விசுவாசத்திற்கேற்ப நயப்படுத்துகின்றனர். மிகப் பழைய எபிரேயப் பாடல்களில் இப்பெயர் வருகிறது *(எண் 24:16; உபா 32:8; 2 சாமு 22:14; சங் 18:13; 21:7; 46:4; 47:2; 91:2;...)*. புதிய ஏற்பாட்டில் அ.ப.7:48-இல் வருகிறது. உன்னதராகிய இறைவன் (ஏல் எலியோன்) என்ற வடிவில் சில இடங்களில் காணப்படுகிறது *(ஆதி 14:18-20,22; மாற் 5:7)*.

உன்னி (UNNI யாவே பதில் கூறினார்)

1. தாவீது உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்குக் கொண்டு வந்த போது பாடகர் குழுவில் இடம் பெற்றிருந்த ஒரு லேவியர் *(1 நாள் 15:18-20)*.

2. ஏசுவா தலைமைக் குருவாயிருந்த போது திருப்பணி வேலையில் அவருக்கு உதவியவர்களில் உன்னியும் அவரது சகோதரர் பக்புக்கியாவும் அடங்குவர். இவர்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய லேவியர்கள் (நெக 12:19). எழுபது நூல் இப்பெயரை விட்டுவிடுகிறது.

ஊ

ஊக்கால் (UCAL)

பழமொழிகள் ஆகமத்தில் வரும் பழமொழிகளின் ஒரு தொகுப்பிற்குக் கொடுத்துள்ள தலைப்பில் வரும் ஒரு பெயர் (பழ 30:1). ஆகுர் தனது சிந்தனைகளை வெளிப்படுத்திய அவருடைய இரு சீடர்கள் அல்லது சமகாலத்தவருள் ஒருவர். கிரேக்க மொழி பெயர்ப்பிலும் வுல்கத்தா மொழி பெயர்ப்பிலும் இப்பெயர் கொடுக்கப்படவில்லை. கத்தோலிக்கத் தமிழ் மொழி பெயர்ப்பிலும் இப்பெயர் இல்லை. இங்கு எபிரேய வாசகம் தெளிவாக இல்லை. 30:4-இல் வரும் ''நீதான் எல்லாவற்றையும் அறிந்தவனாயிற்றே'' என்ற கூற்று, ஊக்கால் ஒரு ஆளின் பெயராக இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஊசா (UZZAH - பலம், வலிமை)

1. அபினதாபின் மகன். அபினதாபின் வீட்டில் உடன்படிக்கைப் பேழை இருபது ஆண்டுகள்தங்கியிருந்தது.தாவீதுகிரியத்து-எயாரிமிலிருந்த அபினதாபின் வீட்டிலிருந்து உடன்படிக்கைப் பேழையை வண்டியில் எருசலேமுக்குக் கொண்டுவந்தபோது வண்டியை ஓட்டி வந்தவர்களில் ஒருவர் ஆவார். மாடுகள் இடறியதால் பேழை சாய்வது போல் தள்ளாடியது. அதனைப் பிடிப்பதற்காகக் கைநீட்டிய ஊசா திடீரென்று மரித்தார். இறைப் பேழையின் புனிதத்தன்மையைக் கெடுத்து விட்டதற்காக இறைவன் அவரைக் கொன்று விட்டதாக மக்கள் நம்பினர் (1 நாள் 13:7-10; 15:13; 2 சாமு 6:1-7). இவருக்கு ஏற்பட்ட முடிவைக் கண்ட தாவீது பீதியடைந்து பேழையைத் தன்வீட்டருகில் கொண்டு செல்ல அஞ்சி ஓபேது-ஏதோமின் வீட்டிலேயே மூன்று மாதங்கள் வைத்துவிட்டார். ஊசா இறந்த இடத்திற்கு ''ஊசாவின் வீழ்ச்சி'' என்று பொருள்படும் ''பேரேசு-ஊசா'' என்ற பெயர் வழங்கப்பட்டது.

2. லேவியக் குடும்பத்தைச் சேர்ந்த மெராரீயின் வழி வந்தவர். இவரது தந்தையின் பெயர் சிமயி. இவருக்குச் சிமயா என்றொரு மகனும் உண்டு (1 நாள் 6:29-30).

ஊசாய் (UZAI - யாவே கேட்டருளினார்)

நெகமியா எருசலேம் சுவரைக் கட்டியெழுப்பிய போது சிறைமுற்றத்தில் நின்று கொண்டிருந்த கோபுரத்தின் வளைவிற்கு எதிரே இருந்த பாகத்தைக் கட்டியெழுப்பிய பாலாவின் தந்தை ஆவார் (நெக 3:25).

ஊசால் (UZAL - அலைந்து திரிபவர்) - ஆள்

யொக்தானின் ஒரு மகனும் சேமின் வழித்தோன்றலுமாவார் (ஆதி 10:27; 1 நாள் 1:21). இவரது சந்ததியினர் ஆசாலைச் (ஏமெனின் தலைநகரான இக்கால சானா) சுற்றி வாழ்ந்த அராபிய இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

ஊசால் (UZAL - அலைந்து திரிபவர்) - இடம்

ஊசால் என்ற பெயரில் சீரியாவில் ஒரு நகரம் இருந்தது. இது அவுசால் என்ற பெயரின் திரிபாகும். இன்று ஏமெனின் தலைநகராக உள்ள சானாவின் பழைய பெயரே ஊசால் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் கிளாசேர் என்பவர் தமது ஆய்வின் முடிவில் சானாவின் பழைய பெயர் மாறி அதற்குச் சானா என்ற பெயர் ''அழகுள்ள'' என்ற பொருளில் அபிசினியர்களால் சூட்டப்பட்டது என்றும், ஊசால் என்பது மெதினாவின் அருகில் இருந்த அசல்லா என்ற நகரமே என்றும், அசீரிய மன்னன் அசூர்பானிப்பால் அரேபியாமீது படையெடுத்து வந்தபோது இங்கும் வந்தார் என்றும், கருதுகின்றார். இதன்படி இன்று அசல்லா நகரமே ஊசாலாவாக இருந்திருக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு எச 27:19 ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது. சில வாசகங்களின்படி ஊசால் திராட்சை ரசத்திற்குப் பெயர் பெற்றதாகத் தெரிகிறது.

ஊசி (UZZI - யாவே என் வலிமை) - ஆள்

1. ஆரோன் வழிவந்த எலயாசர் குடும்பத்தில் பிறந்த ஒரு குரு. புக்கியின் மகன்

செராக்கியாவின் தந்தை (1 நாள் 6:5-6. 51). எஸ்ராவின் மூதாதையர் (எஸ் 7:4).

2. இசக்கார் கோத்திரத்தைச் சேர்ந்த தோலாவின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:2-3).

3. நாடு கடத்தலுக்குப்பின் எருசலேம் திரும்பிய குடும்பங்களில் பென்யாமின் குடும்பத்தில் இவரது பெயரும் இடம் பெற்றுள்ளது (1 நாள் 7:7). பெலாவின் புதல்வர்களில் ஒருவர்.

4. பாபிலோனின் நாடு கடத்தலிலிருந்து திரும்பி எருசலேமில் தங்கள் சொந்த உடைமையில் முதலாவதாகக் குடியேறிய பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவரான ஏலாவின் தந்தை (1 நாள் 9:8).

5. பினியின் புதல்வர்களில் ஒருவரும் ஆசாப்பின் வழித் தோன்றலுமாவார். நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் லேவியர்களின் மேற்பார்வையாளராக இருந்தார் (நெக 11:22). மீக்காவின் மகனான மத்தனியாவின் கொள்ளுப்பேரன். ஆகவே மிகவும் பிற்காலத்தியவர் (11:17).

6. நாடு கடத்தலுக்குப்பின் யோயாக்கிம் தலைமைக் குருவாக இருந்தபோது எதாயாவின் குரு வம்சத்தில் தலைவராக இருந்தவர் (நெக 12:19).

7. லேவியரின் தனி நபரையோ ஒரு குழுவையோ சிறப்பாக எருசலேம் நகர்ச் சுவர்கள் புனிதப்படுத்தப்பட்ட போது அவ்வூர்வலத்தில் கலந்து கொண்ட பாடகர் குழுவையோ குறிக்கும் (நெக 12:41)

ஊசி (NEEDLE)

பொருட்களைத் தோலினாலோ நூலினாலோ தைக்கப்பயன்படும் ஒரு கருவி. மேற்காசிய நாடுகளில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்தபோது பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஊசியிலிருந்து தற்போது பயன்படுத்துகின்ற ஊசி வரைக்கும் கண்டெடுத்தார்கள். பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஊசிகள் கி.மு.60-ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் எலும்பினால் செய்யப்பட்டிருந்தன. இவ்வூசிகள் அடிமுதல் நுனிவரை தட்டையாகவும், நுனியில் கூர்மையாகவும், மேல்பகுதியில் ஒரு துவாரத்துடனும் இருந்தன. கி.மு. 40-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எலும்பினால் செய்யப்பட்ட, இருபுறமும் மழுங்கின ஊசிகள் மெகிதோ என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகள் துணிகள் தைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் நாம் எலும்பினால் செய்யப்பட்ட ஊசிகளைப் பார்ப்பது கிடையாது. மாறாக வெண்கலத்தால் செய்யப்பட்ட ஊசியைப் பார்க்கின்றோம். அவைகள் இப்போது செய்யப்படும் ஊசிகளைப் போன்று மேல்புறம் சிறிது தட்டையாகவும், துவாரத்தோடும் இருக்கும். கீழ்ப்புறம் சற்றுக் கூர்மையாக இருக்கும். சில ஊசிகள் துணிகளில் சிக்கிக் கொள்ளாமலிருக்க, தலையில் சிறிது வளையமாகவும் பின் போகப்போகச் சற்று வளைந்தும் காணப்படுகின்றன. அவைகளின் கனமும் தற்போதுள்ள ஊசியின் கனத்தில் இருக்கின்றது. ''தேல் ஏன்-நாஸ்பே'' என்ற இடத்தில் துணி தைக்கின்ற சிறிய ஊசி முதல் தடித்த ஊசிவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவைகள் சுமார் 1½ அங்குலம் முதல் 5½ அங்குலம் வரை இருக்கும்.

புதிய ஏற்பாட்டுக் காலங்களில் வெண்கல ஊசியோடு, எலும்பினால் செய்யப்பட்ட ஊசியும் குறிப்பாகத் தந்தங்களால் செய்யப்பட்ட ஊசியும் காணப்படுகின்றன. இயேசு ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் பணக்காரர்கள் இறையரசில் நுழைவது என்று கூறுகின்றார். சில பிற்காலக் கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் ஒட்டகத்திற்குப் பதிலாக, கயிறு என்ற சொல்லைப் பயன்படுத்தி, இயேசுவின் கூற்றின் கடுமையைக் குறைக்க முயன்றுள்ளன. பிற்கால விவிலிய அறிஞர்கள், ''ஊசியின் காது'' என்றதொரு வாயி

லில் எவ்வாறு ஒட்டகம் கடினப்பட்டு நுழை கின்றதோ அப்படித்தான் பணக்காரர்கள் நிலையும் என்று விளக்கம் தருகின்றார்கள். இரண்டும் அவ்வளவு பொருத்தமாக இல்லை.

ஊசியா (UZZIAH - யாவே என் வலிமை ஆவார்)

1. யூதாவின் ஒன்பதாவது அரசன் (கி.மு. 783-743); இவர் அமசியாவின் மகனும் வாரி சுமாவார். ஊசியா என்பது அவரது அரசப் பெயராகும். இது 2 அரச 15உ13.30.32.34-இலும் 2 நாள் 26:1-27:2-முழுவதிலும் பயன் படுத்தப்படுகிறது. இவரது சொந்தப் பெயர் ''யாவே உதவி செய்தார்'' என்று பொருள் படும் அசரியா ஆகும். இதையே அரசராகம ஆசிரியர் விரும்பிப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது (2 அரச 14:21; 15:1.6-8.17.23.27). இருபெயர்களில் எபிரேய எழுத்துக்கள் ஒரு மெய்யெழுத்திலேயே வேறுபடுகின்றன. அவற்றின் வேர்ச்சொல்லின்பொருள்கள் ஒன்றையொன்று உணர்த்த வல்லன. இந்தப் பெயர் வேறுபாட்டுக்கு, இவர் அனுபவித்த தொழுநோயில் விளக்கம் காணமுயலலாம். இந்நோய் கண்டபின் இவர் தன் அரச அலுவலைச் செய்ய முடியவில்லை. ஆகவே தனி வாழ்க்கைக்குப் பின் வாங்கினார். இவருக் குப்பதிலாக இவர் மகன் யோத்தாம் ஆட்சி செய்தார். இவரது அரசப் பெயருக்குப் பதிலாக இவரது சொந்தப் பெயரைப் பயன்படுத்தும் முயற்சியை வாசகச் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவர் ஆட்சிக்கு வந்தபொழுது 16 வயதினர். இவர் 52 வருடங்கள் ஆண்டதாகச் சொல்லப்படுகிறது. எருசலேமைச் சேர்ந்த எக்கோலியாதான் இவருடைய தாய் (2 அரச 15:2; 2 நாள் 26:3). இவருடைய தந்தையை நிராகரித்துக் கொன்ற ''யூதாவின் மக்கள் அனைவராலும்'' இவர் அரசனாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது (2 அரச 14:21; 15:2; 2 நாள் 26:1; காண்க 2 அரச 11:17).

இவர் 52 ஆண்டுகள் ஆட்சி செய்தார் என்பது இவர் இவருடைய தந்தை அமசியாவோடும் (15 ஆண்டுகள்) மகன் யோத்தாமோடும் (10 ஆண்டுகள்) கூட்டாட்சி செய்ததையும் உள்ளடக்கலாம். இந்த 52 ஆண்டு சரியான கணிப்பாக இல்லாதிருக்கலாம். அசீரியாவின் மூன்றாம் திகிலாத்துபிலேசரின் வரலாறு, கி.மு.842-க்குப்பின் இவர் காட்சியிலிருந்து மறைந்துவிட்டார் எனச்சுட்டுகிறது. ஆகவே இவர் 42 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கலாம்.

இவருடைய நீண்ட ஆட்சியில் சிலவற்றைத்தான் அரசர்கள் நூல் ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளார்கள். ஆனால், நாளாகம ஆசிரியர், இவருடைய வீரச் செயல்களின் பட்டியலைப் பாதுகாத்திருக்கின்றார். இவை இவருடைய ஆட்சியில் யூதாவின் வலிமையையும் செல்வாக்கையும் விவரிக்கின்றன. இவை இறையியல் கண்ணோட்டத்தில் கொடுக்கப் பட்டிருந்தாலும், நம்பக்கூடியவை. இவர் தன்னுடைய தாத்தா யோவாசைப்போன்று (2 நாள் 24:2), செக்கரியா என்ற ஆசானை வைத்திருந்தார் (2 நாள் 26:5). இதனால் ஊசியா வலிமையானார்; வலிமையுடன் அகந்தையும் வந்தது; இதனால் யாவேக்குப் பிடிக்காத அரசரானார். இதன் விளைவாக இவர் தொழுநோயாளி ஆனார்.

இவர் மேற்கில் பெலிஸ்தியருடன் போரிட்டு வென்றதாக நாளாகமம் கூறுகின்றது (2 நாள் 26:6). காத்து, யபினே, அசுதோது ஆகியவற்றின் சுவர்களை இடித்து அழித்தார். பெலிஸ்தியாவைக் கடந்து செல்லும் வணிகச்சாலைகளைக் கண்காணிக்கப் பாதுகாக்கப் பட்ட நிலையங்களைக் கட்டினார். அரேபியாவிலிருந்து செல்லும் வணிகச் சாலைகளைக் கண்காணிக்க அரேபியர்கள் தங்கியிருந்த பெத்திராவையும் வென்றார் (2 நாள் 26:7-8). இவர்தான் அநேகமாக ஏலாத்தைக் கட்டினார் (2 அர 14:22; 2 நாள் 26:2). இவர் போர்களில் வெற்றிகரமாக இருந்ததால், இவருடைய புகழானது எகிப்திய எல்லைகளையும் அடைந்தது (2 நாள் 26:8). இவர் ஆட்சியில் விவசாயமும், கால் நடைகளும் செழிப்புடன் இருந்தன. கால் நடைகளுக்குப் பெரிய தண்ணீர்த் தொட்டி

களைக் கல்லில் வெட்டிவைத்தார். இவர் விவசாயத்தில் அதிக ஆர்வம் உடையவராக இருந்ததாகத் தெரிகின்றது. பொதுவாக இவர் ஆட்சியில் நாடு முழுவதும் செழுமை யுடன் இருந்தது.

இவர் படையையும் பெருக்கி, வீரர்களுக் குத் தேவையான படைக்கருவிகளைச் செய் வித்தார் (2 நாள் 26:11-14), படையின் எண் ணிக்கை நம்பத்தகுந்தவையல்ல.

ஏறக்குறைய கி.மு. 750-இல் இவருக்குத் தொழுநோய் கண்டது (1 நாள் 5:17). நாளா கம ஆசிரியன் கூற்றுப்படி ஊசியாவுக்கு வியாதி வர ஒரு பெரிய பாவம்தான் காரண மாக இருக்க வேண்டும். இவர் 'ஆலயத்தில் நுழைந்து தூபப்பீடத்தின் மேல் தூபம் காட் டத் துணிந்ததுதான், 'இவன்செய்த பெரிய பாவம்' என்று நாளாகம ஆசிரியர்கருதுகின் றார் (2 நாள் 26:16-20). அரசராகமம் இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. இந்நோயின் விளைவாக இவரால் அரச காரியங்களை நிறைவேற்ற முடியவில்லை. இவர் ஒருதனி வீட்டில் தங்கியிருந்தார் (2 அரச 15:5; 2 நாள் 26:11). இது ஒரு தொற்று வியாதி என்று கருதப்பட்டதால் இவர் தள்ளி வைக்கப்படவில்லை; ஆனால் இந்த வியாதி யின் துன்பத்தினால் இவர் தன்னுடைய அரசாங்க அலுவல்களிலிருந்து ஓய்வு தரப் பட்டார் (2 அரச 15:5). இவர் 742-இல் இறக்கும் வரை இவருடைய மகன் யோத் தாம் பிரதிநிதியாக இருந்தார்.

இவர் தன்னுடைய மூதாதையரோடு அடக்கம் செய்யப்பட்டார் (2 நாள் 26:23; 2 அரச 15:7). 1931-இல் ஒலிவ மலையில் ஒரு செதுக்கப்பட்ட கற்பலகை கண்டு பிடிக் கப்பட்டது. இது மக்கபேயர் காலத்திற்குப் பிந்தியதாகத் தெரிகிறது. அதில் ''இங்கு யூதாவின் அரசரான ஊசியாவின் எலும்புகள் உள்ளன. திறக்காதே'' என்ற குறிப்பு இருந் தது.

பிற்காலத்தலைமுறைகளின் நினைவில் இவரது ஆட்சியின் மகிமையைச் சாலமோ னின் மகிமை மட்டுமே மிஞ்சியது என்று கருதினர். இக்காலத்தில் யூதாவின் ஆற்றல் உச்சநிலையை அடைந்தது எனலாம்.

2. லேவியர் கோத்திரத்தைச் சேர்ந்த கெகாத்தியர் குடும்பத்தைச் சேர்ந்தவர். சவு லின் தந்தையும் உரியேலின் மகனுமாவார் (1 நாள் 6:24).

3. யோனத்தானின் தந்தை. இவர் தாவீதின் சொத்துக்களுக்குக் கண்காணிப்பாளராய் இருந்த பன்னிருவருள் ஒருவர். நாட்டிலும், நகரங்களிலும், ஊர்களிலும் இருந்த கருவூ லங்களை மேற்பார்வையிடுதல் இவருடைய வேலையாக இருந்தது (1 நாள் 27:25).

4. எஸ்ரா காலத்தில் வாழ்ந்த ஒரு குரு. புறஇனப்பெண்களை மணந்தவருள் ஒருவர் (எஸ் 10:21).

5. பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு எருசலேமில் வாழத்திரும்பி வந்த யூதா இனத்தைச் சேர்ந்த அத்தாயாவின் தந்தை (நெக 11:4).

6. சிமியோன் இனத்தைச் சேர்ந்தவர். மீக்காவின் மகன். பெத்தூலியா நகரின் நடு வர் (யூதித் 6:15).

ஊசியேல் (UZZIEL ''எல் (கடவுள்) என் வலிமையாயிருக்கிறார்'')

1. லேவியருடைய பேரன்; கெகாத்தினு டைய நான்கு புதல்வருள் ஒருவர். மோசேயி னுடையவும், ஆரோனுடையவும் மூதாதை யான அம்ராமின் சகோதரர்; கோராக்கின் மூதாதையரான இசாரின் சகோதரர் (யாத் 6:18.22; எண் 3:19; 1 நாள் 6:2.18; 23:12). இவர் மிசாவேல் ஏல்சாபான், சித்திரி ஆகி யோரின் தந்தையாவார் (யாத் 6:22). நாதாபு, அபிகு ஆகியோர் யாவே முன் புனிதமற்ற தீயைக் காண்பித்ததற்காகக் கொல்லப்பட்ட பின் அவர்களின் உடல்களை இம்மூவரும் தான் கூடாரத்திற்கு வெளியே தூக்கிச் சென்ற னர் (லேவி 10:4-5). ஊசியேல் லேவியர் குடும்பங்களில் ஒரு துணைப்பிரிவை ஏற்ப டுத்தினார் (யாத் 6:22; லேவி 10:4; எண் 3:19; 1 நாள் 6:18; 15:10; 23:20; 24:24). லேவியர்

குடும்பங்களின் இந்தத் துணைப்பிரிவினர் இரண்டு இடங்களில் ஊசியேலியர் என்று அழைக்கப்படுகிறார்கள் (எண் 3:27.29.31; 1 நாள் 26:23). தாவீது உடன்படிக்கையின் பெட்டகத்தைச் சீயோனுக்கு மாற்றியபோது அதைக் கொண்டு வந்த லேவியர்களுள் இவர்களும் இருந்தனர் (1 நாள் 15:10). ஆலயத்தில் ஆரம்பப்பணிகளைச் செய்தவர் களில் இவர்களும் இருந்தனர். (1 நாள் 23:12.20; 24:24).

2. அநேகமாக எசக்கியாவின் ஆட்சிக் காலத்தில் அமலேக்கியருக்கு எதிராகச் சேயிர் மலையில் தங்கள் நாட்டை விரிவுபடுத்துவ தற்காகச் சிமியோனியர்கள் நடத்திய வெற்றி கரமான போரில் இருந்த தலைவர்களுள் இவரும் ஒருவர். ஈசியின் ஐந்து புதல்வர்க ளுள் ஒருவர் (1 நாள் 4:41-43).

3. அடிமைத்தளையிலிருந்து நாடு திரும்பிய பொழுது வந்த பெலாவின் ஐந்து புதல்வர் களுள் ஒருவர். ஒரு பென்யாமின் குடும்பத் தின் தலைவர்களுள் ஒருவர் (1 நாள் 7:7).

4. அடிமைத்தளையிலிருந்து நாடு திரும் பிய பாடகர் குடும்பங்களில் ஏமானின் புதல் வர்களுள் ஒருவர் (1 நாள் 25:4). 1 நாள் 25:18-இல் இவர் ஆசரேல் என்று அழைக்கப் படுகின்றார்.

5. எதுத்தூனின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர் (2 நாள் 29:14). இவர் அரசன் எசக்கியாவின் சீர்திருத்தக் காலத்தில் ஆல யப்பணியை மீண்டும் அமைக்க உழைத்தவர்.

6. கார்கயாவின் மகன்; பொற்கொல்லர் சங்கத்தில் ஓர் அங்கத்தினர். எருசலேமின் ஆலய மதிலைக் கட்ட நெகமியாவுக்கு இவர் உதவி செய்தார் (நெக 3:8).

ஊசு (UZ - செழிப்பான) - ஆள்

1. ஆராமின் மகனும் சேமின் பேரனுமா வார் (ஆதி 10:23). 1 நாள் 1:17-இல் இவர் சேமின் மகன் என்று குறிக்கப்படுகிறார்.

2. மில்க்காவுக்கும் ஆபிரகாமின் சகோதரர் நாகோருக்கும் பிறந்த மகன் (ஆதி 22:21).

3. கோரியர் தலைவர் தீசானின் மகன் அல்லது வழித்தோன்றலாவார் (ஆதி 36:28; 1 நாள் 1:42). இப்பெயர் ஓர் இனத்தை அல்லது ஒரு சமூகக் குழுவைக் குறிக்கலாம்.

ஊசு (UZ - செழிப்பான) - இடம்

யோபுவின் நாடு (யோபு 1:1). இது எங்கு இருந்தது என்று துல்லியமாகக் கூறமுடி யாது. அறிஞர்களின் கருத்துப்படி, சாக்க டலுக்குத் தெற்கிலுள்ள பாலைவனத்தில், ஒருவேளை ஏதோமுக்கு அருகில் (புல 4:21; காண் ஏரே 25:20; இது பெலிஸ்தியப் பகுதி யோடு ஊசைத் தொடர்புபடுத்துவதாகத் தெரிகிறது) அல்லது வடக்கில் யோபுவின் மூன்று நண்பர்களின் ஊர்களின் பகுதியில் (யோபு 2:11) இருந்திருக்க வேண்டும். மற்ற வர்கள், யோசிபசையும், கிறிஸ்தவ, முஸ் லீம் பாரம்பரியங்களையும் பின்பற்றி, தமஸ் குவுக்குத் தெற்கில் கவ்ரானில் ஒருவேளை ஆராமின் புதல்வன் குடியேறிய பகுதியில் இருந்ததாகக் கருதுவர் (ஆதி 10:23). இப் பகுதி பாலைவனத்தில் இருந்தாலும் (யோபு 1:15.17.19) பயிர் செய்யக்கூடிய பகுதிகளை யும் (1:14), பெரும் நகர்களையும் (29:7) கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

ஊட்டம் (NOURISHMENT)

மற்ற உயிரினங்களைப் போலவே உயிர் வாழ்வதற்கு மனிதன் தனக்கு ஊட்டமளிக் கக் கடமைப்பட்டுள்ளான். சடப்பொருள் களைச் சார்ந்திருக்கும் இந்நிலை அவனது நிலையற்ற தன்மைக்கு அத்யாவசியமான அடையாளமாக உள்ளது. ஆனால் அதே சமயம், நிலைத்திருப்பவராகிய இறைவ னால் ஊட்டமளிக்கும்படியான வேண்டு கோளாகவும் இது உள்ளது. ஆண்டவருடை யதும் அவருடைய தந்தையின் சித்தத்தைப் போன்றதுமாக (யோவா 4:34) அவனது உண்மையான ஊட்டம் ஆண்டவரிடமிருந்து வருவதாகிய தந்தையினுடைய சித்தமே என்று மனிதனுக்குக் கற்பிக்கப் படைப்பு மற்றும் கீழ்ப்படிதல், உடன்படிக்கை மற்

றும் விசுவாசம், நற்செய்தி மற்றும் பிறர்சிநேகம் என்னும் மூன்று மட்டங்களில் விவிலியமானது ஊட்டம் என்ற அடையாளத்தின் மூலம் இறைவனை விவரிக்கிறது.

1. இறைவன் தமது படைப்புகளுக்கு ஊட்டமளிக்கிறார்:-

''மண்ணுலகெங்கும் விதைதரும் செடிகள், பழமரங்கள் அனைத்தையும் உங்களுக்கு நாம் கொடுத்துள்ளோம். இவை உங்களுக்கு உணவாகட்டும். அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நாம் உணவாகக் கொடுத்தோம்'' (ஆதி 1:29-30) மனிதனைப்படைத்து எல்லாப் படைப்புகளுக்கும் தலைவனாக அவனை அமைத்தபின் உலகின் மற்றெல்லா விலங்குகளுக்கும் அளிப்பதுபோல இறைவன் மனிதனுக்கு உணவளிக்கிறார். இத்தகைய உலக அமைதியின் பொற்காலத்தில் எவ்விலங்கும் மற்றொன்றினுடைய ஊனைத் தின்பதில்லை. ஆனால் வெள்ளத்திற்குப் பிறகு எல்லா விலங்குகளையும் இறைவன் மனிதனுடைய உணவாகும்படி அவனது கைகளில் அளித்தபோதும் அதே மொழியைப் பயன்படுத்துகிறார் ''பசும்புற்பூண்டுகளை உங்களுக்குத்தந்ததுபோல அவையெல்லாவற்றையும் உங்களுக்குத்தந்தோம்'' *(9:2-3)*. இம்மொழியில் அது இல்லாமல் உயிர்வாழ இயலாத இயற்கையுடன் தொடர்புடைய மனிதனின் சார்பு நிலையும் அவனது தன்னாட்சித்தன்மையும் ஒரே சமயத்தில் தோன்றுகின்றன. விலங்கானது தான் காண்கின்ற தாவரத்தினின்றோ பின்தொடர்கின்ற வேட்டைப் பொருளின்றோ தனது உணவை அடைகின்றது. மனிதன், தான் பயிர்செய்கின்ற பழங்களினின்றும் தாவரங்களினின்றும் தான் மேய்க்கின்ற தனக்குச் சொந்தமான விலங்குகளினின்றும் தனக்கு உணவை அமைத்துக் கொள்கிறான். அவன் தனது பயிரின் விளைச்சலினின்றும் தனது உழைப்பினின்றும் *(3:9)* தனது கரங்களின் வேலையினின்றும் *(உப 14:29)* உணவை உண்கிறான்.

எல்லா வேலைகளிலும் இருப்பது போன்று மனித ஊட்டத்தின் இந்தச் செயல்முறையான பண்பு சில ஆபத்துகளைக் கொண்டுள்ளது. ஒன்று மிகுதியாக உண்ணுதல்; பெருந்தீனி மற்றும் குடிபோதை போன்ற சில குறிப்பிட்ட விபரீதங்களையும் அவற்றின் விளைவுகளையும் கொண்டுள்ளது. இவை இவற்றிற்குத் தன்னையே உட்படுத்தும் மனிதனுக்கும் தீமையாக அமைகின்றன *(பழ 23:20-21; சீரா 31:12:31; 37:27-31)*. மற்றது சொகுசான வாழ்க்கையும் *(ஆமோ 6:4)*. ஏழைகளைச் சுரண்டுவதும் ஆகும் *(பழ 11:26)*. இவை எல்லா ஊட்டமும் இறைவனின் கொடையே என்பதை மறந்து விடுகின்றன. உண்பதும் குடிப்பதும் பணியில் திருப்தியடைவதும் மனித மகிழ்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன என்றும் *(திருவுரை 2:24; 3:13)* ''பகையுடனான கொழுத்த கன்றுக்குட்டியைவிட அன்புடன் கூடிய வெறுங்கீரை உயர்ந்தது'' *(பழ 15:17;17:1)* என்றும் ஞான இலக்கியப் பாரம்பரியம் சமநிலையைக் கடைப்பிடித்தது. இதற்குக் காரணம் இப்பாரம்பரியம், ஐயப்பாடும் மன உளைச்சலும் தருகிற திருவுரையாளரும் கூட, ''அனைத்தும் இறைவனின் கரத்திலிருந்தே வருகின்றன'' *(சஙதிரு 2:24)* என்பதை ஒருபோதும் மறக்காமலிருந்ததே ஆகும்.

இவ்வாறு இறைவனின் கரங்களால் உணவளிக்கப்படுகிறோம் என்னும் உயிருள்ள மனித உணர்வை நிலைநிறுத்தப் பலிகளும் காணிக்கைகளும் ஒருபுறமும், விலக்கப்பட்ட உணவுப் பொருட்கள் மறுபுறமும் முக்கிய பங்கு வகித்தன. ஒருவன் விலங்கைப் பலியிடவும் அறுவடையின் முதல் தானியங்களையும் விளைச்சலின் மிச் சிறந்த பழங்களையும் காணிக்கையாகப் புனித இடத்திற்குள் கொண்டு சென்றபின், நல்ல உணவும் விழா உணவும் கொண்டாடப்பட்டன *(உப 16:1-17)*. ''புனித மக்களுக்குப் புனித உணவு'' *(உப 14:2)* என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட அசுத்த விலங்குகளின் மீதான தடையானது *(லேவி 11)* ஊட்டமளித்தல் போன்ற மனித வாழ்விற்கு முக்கியமான ஒரு குறிப்பிட்ட பகுதியில் இறைவனின் மேலாண்மைச் சித்தத்திற்குக் காட்ட வேண்டிய மதிப்பை எடுத்துக்காட்டியது.

2. இறைவன் தமது வார்த்தையால் தமது மக்களுக்கு ஊட்டமளிக்கிறார்:-

உடன்படிக்கையின் மூலமாகத் தமது மக்களின் வாழ்க்கைக்கு இறைவன் பொறுப்பேற்கிறார். விண்ணிலிருந்து இறங்கிய மன்னாவும் (யாத் 16:4). இறைவனால் நேரடியாக அளிக்கப்பட்டதாகும் (16:5). அதில் மனிதச் செயல்களுக்கும் கணிப்புகளுக்கும் எப்பங்குமில்லை. இந்த மன்னாவானது புதிய நிலையின் அடையாளமாகும். ஆனால் இந்நிலையானது விசுவாசத்தை வலியுறுத்துகிறது. மன்னாவானது உடலுக்கும் விசுவாசத்திற்கும் ஊட்டமளிக்கவும், ஆண்டவரது வாயினின்று வருகின்ற வார்த்தையிலிருந்தும் (உப 8:3; ஞான 6:26; மத் 4:4) அவரது சித்தத்திலிருந்தும் மற்றும் வாக்குறுதிகளிலிருந்தும் அவர்கள் வாழ்வதையும் நீடித்திருப்பதையும் எதிர்பார்க்கவேண்டும் என்று போதிக்கவும் அளிக்கப்படுகிறது. பாலைவனப் பயணத்தின் புதுமைகளில் தனிப்பட்ட விதமாக வெளிப்படும் இந்த இறை வழிகாட்டுதல் பாலஸ்தீனத்தில் குடியேறுவதுடன் ஒரு முடிவுக்கு வந்துவிடுவதில்லை. மிகுதியானதும், இலவசக் கொடைகளின் நாடுமாகிய வாக்களிக்கப்பட்ட நாடானது, அனைத்தும் இறைவனிடமிருந்தே வருகின்றன என்பதை ஒவ்வொருநாளும் இஸ்ராயேலுக்கு நினைவுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும் (உப 8:8 தொ)

இறைவனது வார்த்தை மகிழ்ச்சி தருகின்றது (எரே 15:16). அவரது கட்டளைகள் தேனினும் இனியவை (சங் 19:10 தொ). இனிமேல் பல்வகையான பழங்களை உண்பதன்று, ஆண்டவருடைய வார்த்தையை உண்பதே முக்கியமானதாகும் (ஞான 16:26). இறைவாக்கினர் எசக்கியேலும் (எச 2:5; 3:3), அப்போஸ்தலரான யோவானும் (திருவெளி 10:8), தங்கள் செய்தியை அளிக்குமுன் இறைவார்த்தையை உண்ண வேண்டும். இது அவர்கள் விழுங்க வேண்டிய சுருளால் அடையாளமாக உணர்த்தப்படுகிறது. புதிய உடன்படிக்கையில், கிறிஸ்தவர்கள் இறைவனுடைய வாக்குகளை உண்பர் (எபி 5:12 தொ; 1 கொரி 3 தொ; 1 பேதுரு 2:2); கிறிஸ்துவாகிய ஆன்மீக உணவை உண்பர்; அந்த ஆன்மீகப் பாறையிலிருந்து பானம் பருகுவர் (1 கொரி 10:3 தொ).

3. இறைவன் தமது பிள்ளைகளின் ஊட்டம்:-

இறைவனின் பிள்ளையாக இருக்கின்ற காரணத்தால் மனிதன் ஒரே சமயத்தில் இவ்வுலகின் எல்லா உணவுவகைகளையும் விட்டுவிடவும் அவையனைத்தையும் உபயோகிக்கவும் முடியும். ''கொன்று சாப்பிடு'' என வானத்திலிருந்து ஒரு குரல் பேதுருவிடம் கூறியது (அ.ப. 10:3). கிறிஸ்துவன் இனிமேல் சுத்த விலங்குகளுக்கும் அசுத்த விலங்குகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்திருப்பதில்லை. அவன் இனிமேலும் இவ்வுலகப் பொருட்களுக்கு அடிமைப்பட்டவனாக இருப்பதில்லை. அவன் மகனுக்குரிய சுவிகாரத்தைக் கொண்டுள்ளான் (கலா 4:3-4). உலகில் உள்ள அனைத்தும் அவனுக்குரியவையே (1 கொரி 3:22). கிறிஸ்து இறைவனுக்கு உரியவராய் இருப்பதுபோலத் தானும் கிறிஸ்துவிற்கு உரியவன் என்பதை நினைவில் கொண்டிருத்தல் (3:23) என்னும் நிபந்தனையின் கீழ், சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுப் பொருட்களும் அவனுக்குரியவையே (8:4;10:26). இப்போது அவன் எதை உண்டாலும் குடித்தாலும் அனைத்தும் அவனுக்கு நன்றிகூறுதலுக்கு ஊற்றாகும் (10:30 தொ; 1 திமோ 4:3 தொ).

இறைவன் மட்டுமே தமக்குப் போதும் என்றும் மற்றும் தமது உணவானது தமது தந்தையின் சித்தமே என்றும் காட்டுவதற்காகக் (யோவா 4:34) கிறிஸ்து நாற்பது பகலும் நாற்பது இரவும் நோன்பிருந்தார் (மத் 4:1-4). அவர் உணவை இழிவானதாக்க் கருதினார் என்று பொருளல்ல. அவர் தமது சீடர்களுடன் உண்கிறார் (யோவா 4:31). அவருக்கு அளிக்கப்பட்ட அழைப்பை ஏற்று நமது உணவில் பங்குகொள்கிறார் (மத் 11:19). அளிக்கப்பட்ட அனைத்தையும் ஏற்றுக் கொள்ளுமாறு அவர் தமது சீடர்களுக்குப் பரிந்துரைக்கிறார் (லூக் 10:8). மக்கள் பசியினால் துன்பப்படாமலிருக்க அவர் அப்பத்

தைப் பலுகச் செய்கிறார் (மத் 15:32). இப்புது மையின் மூலம், வானத்துப் பறவைகளைக் காக்கின்ற தந்தையானவர் (மத் 6:26) தமது பிள்ளைகள் மீது இன்னும் அதிக அளவு அக்கறை உள்ளவராக இருக்கிறார் என்று கிறிஸ்து காட்டுகிறார். ஆனால் இவை அனைத்திற்கும் மேலாக, தாமே ''வானின்று இறங்கி வந்து உலகிற்கு உயிர் அளிக்கின்ற கடவுள் தரும் உணவு'' என்று கற்பிக்க அவர் விரும்புகிறார் (யோவா 6:32 தொ). அதே போன்று மலைப்பொழிவிலும் உணவைப் பற்றிக் கவலைப்படாமல் (மத் 6:23) முதவில் இறையரசை நாடுமாறு வலியுறுத்து கின்றார் (மத் 6:33). அவ்வாறே அழிந்து போகும் உணவிற்கு அப்பாற்பட்ட ஒன்றை நாடுமாறு அவர் நம்மை அழைக்கிறார் (யோவா 6:27; உரோ 14:17). தாம் உள்ள நிலையிலேயே தமது ஊடலிலும் இரத்தத்தி லும், தம்மையே நமக்கு உணவாக முன் வைக்கின்றார் (யோவா 6:56). கிறிஸ்துவின் உடலாக மாறும் உலக அப்பமாகிய நற் கருணை எல்லாச் சூழ்நிலைகளிலும் இயேசு கிறிஸ்துவுடன் சேர்ந்து அவரது சொற்கள், செயல்கள் மற்றும் வாழ்வினால் தனக்கே ஊட்டமளிக்கின்ற திறமை மிக்க இறைவ னின் பிள்ளையாக அமையுமாறு மனிதனை மாற்றுகிறது.

ஊதாரியின் உவமை (PRODIGAL SON)

இறைவனுடைய அன்பையும் மன்னிக் கும் மனப்பான்மையையும் இந்த உவமை விளக்குகிறது. இது படித்தவர் முதல் பாமரர் வரை அனைவருக்கும் தெரிந்தது. இந்த உவமையிலே பிரிந்த மகனை வரவேற்கும் தந்தை இறைவனாவார். மூத்த மகன், பொறு மையோடு நல்லது செய்து இறையரசை அடையும் பக்தனைக் குறிக்கிறார். ஆனால் உவமையில் சுய நேர்மையுள்ள பரிசேயரைச் சுட்டுகிறார். இளையவன் இறைவனை விட்டு விலகி வாழும் மனிதனைக் குறிக்கி றார். தந்தை மகன் கேட்ட சொத்துக்களைக் கொடுப்பது, இறைவன் மனித சுதந்தரத்தை மதிக்கிறார் என உணர்த்துகிறது. மேலும் இது அவர் நம்மேல் கொண்டிருக்கிற உண்மை அன்பையும் வெளிப்படுத்துகிறது. இந்த உவமையிலே வரும் தொலைநாடு மனிதன் தானாகவே இறைவனைவிட்டுப் பிரிந்து நிற்கும் தூரத்தைக் குறிக்கிறது. சொத்தை அவர் வீணாக்கியதுபோல் மனிதர் கள் இவ்வுலக இன்பத்திலே திளைத்து வான கக் கொடைகளை மறக்கிறார்கள். இவ்வுல கக் கவர்ச்சி மறையும்போது மனிதர்கள் இறைவன்பால் திரும்புகின்றனர். ஆனால் வானகத் தந்தை தவறியவர் மனம் திரும்பி வரும்போது இருகரம் விரித்து வரவேற் கிறார். மேலும் இந்த உவமை இயேசு ஏன் பாவிகளை வரவேற்கிறார் எனக் கேட்ட பரிசேயர்களுக்கு எதிராக ''நான் பாவிக ளைத் தேடியே வந்தேன்'' என்பதை உணர்த் தப் பயன்படுகிறது.

மேலும் இது மனந்திரும்புதலைப்பற்றி இயேசு கூறிய உயிரோட்டமான, நாடகம் போல் அமைந்த மிகச் சிறந்த உவமையா கும். தவறிய மகன் தனது வாழ்வை மாற்றி அமைக்க விழைகிறான். அன்பைப் புதுப் பிக்க விரும்புகிறான் என்பது அவனது நேர் மையான பாவ அறிக்கையிலும் (11:18) தந்தையிடம் திரும்பி வருதலிலும் புலப்படு கிறது.

ஊத்தாய் (UTHAI யாவே மேலாண்மையுடை யவராய்த் தம்மைக் காட்டியுள்ளார்)

1. யூதாவின் மகனான பேரேசின் வழி வந்த அம்மியூத்தின் மகன். பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து முதலில் திரும்பிய வர்களில் ஒருவர் (1 நாள் 9:4). இவர் நெகு 11:4-இல் அத்தாயா என்று குறிக்கப்படு கிறார்.

2. எஸ்ராவுடன் பாபிலோனியாவிலிருந்து திரும்பி வந்தவர்களில் பிகுவாயின் மகனோ வழிவந்தவரோ ஆவார் (எஸ்ரா 8:14).

ஊப்பாசு (UPHAZ)

தங்கம் கிடைக்கக்கூடிய இடமாகக் குறிக் கப்படுகிறது (எரே 10:9; தானி 10:5). இதைத் தவிர இந்த இடத்தைப் பற்றி வேறொன்றும் அறிவதற்கில்லை. ஊப்பாசு என்பது தங்கத் திற்குச் சிறப்புப் பெற்ற ஓப்பீர் என்ற பெயர்

(1 அர 9:28; 22:48; யோபு 22:24) தவறாக எழுதப்பட்டதாகும் என்பது பலரது கருத்தாகும்.

ஊரி (URI நெருப்பான, உரியா என்ற பெயரின் சுருக்கமாக இருக்கலாம்)

1. யூதா நாட்டைச் சேர்ந்தவர். உடன்படிக்கைப் பெட்டகத்தைக் கட்டியவர்களுள் ஒருவரும் மேற்பார்வையாளருமான பெசலேலின் தந்தையுமாவர் *(யாத் 31:2; 35:30; 38:22; 1 நாள் 2:20; 2 நாள் 1:5).*

2. சாலமோன் ஆட்சிக்காலத்தில், கிலயாத்து மாவட்ட அதிகாரியான கெபேரின் தந்தை *(1 அர 4:19).*

3. மீண்டும் கட்டப்பட்ட ஆலயத்தில் வாயிற் காவலர்களில் ஒருவர் (எஸ் 10:24). இவர் புறவினப் பெண்ணை மணம் செய்திருந்தார்.

ஊரீம் தும்மீம் (URIM AND THUMMIM இறையருட் குறிப்புச் சின்னங்கள்)

இது ஒரு குறிப்பிட்ட பிரச்சனையைப் பொறுத்தவரையில் இறைவனுடைய சித்தம் என்னவென்பதைத் தெரிந்து கொள்ளுவதற்குப் பயன்பட்ட இறைமொழிச் சாதனமாகும். இந்த உறவாடும் முறையில் மனிதன் இறைவன் முன்னால் நன்கு தயாரிக்கப்பட்ட சுருக்கமான கேள்வியைத் தொடுத்து அதற்காக மிகச்சுருக்கமாக ''ஆம்'' அல்லது "இல்லை" என்ற பாணியிலே பதிலை எதிர் பார்த்திருப்பான். நேர்முகக் கேள்வி பதில் தொடர்புக்கான தெளிவான எடுத்துக்காட்டுகள் 1 சாமு 23:9-12; 30-7-8-இல் உள்ளன. முதல் நிகழ்ச்சியிலே தாவீது அபியத்தார் என்ற குருவை ஏபோதைக் கொண்டுவரச் சொல்கிறார். இங்கு ஊரீம்-தும்மீமுக்குப் பதிலாக ஏபோது பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இரண்டும் ஒன்று தான். ஏபோதைக் கொண்டு வந்த பிறகு நேர்முகமாகவே இரண்டு கேள்விகளைத் தாவீது ஆண்டவர் முன் சமர்ப்பித்தார். ''உம் ஊழியன் கேள்விப்பட்டது போல், சவுல் வருவாரா?'' மேலும் ''கெயீலா மனிதர்கள் என்னையும் என்னுடன் இருக்கிற மனிதர்களையும் சவுல் கையில் ஒப்படைப்பார்களா?" இரண்டு கேள்விகளுக்கும் இறைவனால், ஆம் என்று பதிலளிக்கப்பட்டது. ''அவன் வருவான்'' ''அவர்கள் உன்னை ஒப்படைப்பார்கள்'' என்று பதிலளித்தார். இரண்டாவது நிகழ்ச்சியில் ஏபோது கொண்டு வரப் பட்டது. மீண்டும் தாவீது இறைவனை வேண்டினார். ''அந்தக் கள்ளர்களைப் பின் தொடர வேண்டுமா?'' மேலும் ''நான் அவர்களைப் பிடிப்பேனா?'' இறைவன் ''ஐயமின்றி நீ அவர்களைப் பிடித்து, கொள்ளைப் பொருட்களைத் திருப்பிக் கொள்வாய்'' என்று பதிலளித்தார்.

கேட்ட கேள்விகளுக்கு எதிர்மறையான பதிலை அளிக்கும் வெளிப்படையான எடுத்துக்காட்டுகள் கிடையாது. ஆனால் இரண்டு காரியங்களில் இறைவன் பதில் அளிக்க மறுத்துவிடுகிறார். இது ''இல்லை'' என்று பதில் அளிப்பதற்குச் சமமாகும். 1 சாமு 14:36-37-இல் மீண்டும் சவுல் ''நாம் இரவில் பெலிஸ்தியரைப் பின் தொடர்ந்து போகலாமா? அவர்களை இஸ்ராயேல் கையில் வீடுவீரா'' என்று சவுல் ஆண்டவரிடம் கேட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவர் அன்று அவருக்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. மற்றொரு நிகழ்ச்சி 28:6-இல் தரப்பட்டுள்ளது. பெலிஸ்தியர்களின் பெரும் படை ஒன்று சூனேம் என்ற இடத்தில் கூடிச் சவுலைப் பயமுறுத்தியது. ஆகவே அவர் நடுங்கிக் கொண்டு, ஆண்டவர் உற்சாகப்படுத்தும் பதில் அளிப்பார் என்ற நம்பிக்கையில் சவுல் ஆண்டவரிடம் ஆலோசனை கேட்டார். ஆனால் ஆண்டவர் கனவு வழியாகவோ குருக்கள் மூலமாகவோ இறைவாக்கினர் வழியாகவோ அவருக்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. எண் 27:21-இன்படி எலயாசர் என்ற குருவிடம் யோசுவா தன்னுடைய கேள்வியைக் கேட்கும்படி கட்டளையிடப்பட்டிருந்தார். அவர் ''யோசுவாவுக்காக எலயாசர் ஆண்டவர் முன்னிலையில் ஊரீம் வழங்கும் தீர்ப்பை நாடுவார். யோசுவாவும் அவருடன் இருக்கும் இஸ்ராயேல் மக்கள் அனைவருமான

கூட்டமைப்பு முழுவதும் எலயாசாரின் வார்த்தையின்படி வெளியே செல்லவும் உள்ளேவரவும் வேண்டும்''. போர் சம்பந்தமான நுணுக்கங்களைப் பற்றிய கேள்விகளுக்கு எதிர்மறையான பதில்கள் கிடைத்ததாகத் தெரிகின்றது.

வேறு இடங்களில் இந்தச் சாதனம் பயன்படுத்தப்பட்டதற்கான குறிப்புக்கள் உள்ளன (1 சாமு 14:18.41). முதலாவது விசாரணை, காணாமல் போன ஆளைப்பற்றியதாகும். இரண்டாவது குற்றத்தைக் கண்டுபிடிப்பதாகும். யோனத்தான் காணாமல் போய்விட்டதாகச் சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது அவருடைய மகன் எங்கே இருக்கின்றான் என்பதைப் பற்றி விசாரிப்பதற்காக அகியா என்ற குருவிடம் ''கடவுளுடைய பேழையைக் கொண்டுவாரும்'' என்று கட்டளையிட்டார். ''கடவுளுடைய பேழை'' அல்லது உடன்படிக்கைப் பேழை (நீதி 20:27) என்பது ஏபோது அல்லது ஊரீம்-தும்மீமைக் குறிக்கும் வேறு பெயராகும். இது 1 அர 2:26-இலிருந்து தெளிவாகுகிறது. இரண்டாவது நிகழ்ச்சியில், மக்களை மாலைவரையிலும் உணவு அருந்த வேண்டாம் என்று சவுல் தடுத்திருந்ததை மீறியவரைக் கண்டுபிடிக்க முயற்சித்தார். அப்போது சவுல் ''இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரே, இன்று உம் அடியானுக்கு நீர் மறுமொழி சொல்லாதிருப்பது ஏன்? அடையாளம் கொடும். இந்தப் பாவம் என் மேலாவது என் மகன் மேலாவது இருந்தால் அதை விளங்கச் செய்யும்; அல்லது அந்தப் பாவம் ஊர் மக்கள் மேல் இருந்தால் அவர்களைத் தூயவராக்கும்'' என்றார். யோனத்தான் மீதும் சவுல்மீதும் சீட்டு விழுந்தது. வீரர்களோ தப்பினர் (1 சாமு 14:41)

கடவுளுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் ''ஆண்டவரிடம் ஆலோசனை கேட்டல்'' போன்ற முன்சொற்களோடு எடுத்துச் சொல்லப்பட்டன என்பதற்கான ஏராளமான உதாரணங்கள் உள்ளன. ஏபோது, உடன்படிக்கைப் பேழை, ஊரீம்-தும்மீம் ஆகியவை குறிக்கப்படாவிட்டாலும் அவைகளையும் இறைமொழி அறிதல் வகையிலே சேர்த்துக் கொள்ளலாம் (நீதி 1:1-2; 20:23; 1 சாமு 10:22-23; 23:2-3; 2 சாமு 2:1; 5:19.23-24).

இந்த வகையான இறைமொழி அறிதல் நிகழ்ச்சியில் குருதான் பணியாளர். ஏபோது உள்ள எந்த இடத்திலும் இந்த நிகழ்ச்சி நடத்தப்படும். யாத் 28:30; லேவி 8:8-இன்படி தலைமைக் குரு ஊரீம் தும்மீமைத் தன்னுடைய உடலில் சுமந்து சென்றார். உப 33:8-இன் படி லேவியர் குலத்தில் உள்ள எல்லாக் குருக்களும் இந்தச் செயலைச் செய்வதற்குத் தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். நாட்டைச் சார்ந்த முக்கிய முடிவு எடுக்கவேண்டிய சூழ்நிலையில் மக்களின் தலைவர்களும் அரசர்களும் தலைமைக் குருவிடம் சென்றார்கள். யோசுவாவும் (எண் 27:21) சவுலும், தாவீதும், இந்த முறையைப் பின்பற்றினார்கள். ஆனால் ஊரீம்-தும்மீம் தனி மனிதனுடைய நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டனவா என்பது தெரியவில்லை. சிறிய கூட்டத்தின் தலைவனாக இருந்த து தாவீது குருக்களிடம் ஆலோசனை கேட்டார் (1 சாமு 23:10-13). தாண் என்ற கோத்திரத்தின் ஐந்து பிரதிநிதிகள், ஏபோது கொண்டிருந்த மிக்காவிற்கு ஊழியம் செய்த லேவியனிடம் ''நாங்கள் செல்லும் பயணம் வெற்றிகரமாக இருக்குமா என்பதை நாங்கள் அறியுமாறு கடவுளிடம் கேள்'' என்று கேட்டனர். அதற்குக் குரு ''ஆண்டவர் கண்ணோக்கிக் காப்பார்'' என்றார் (நீதி 18:5-6).

தாவீது காலத்திற்குப் பிறகு ஊரீம் தும்மீம் குறிப்பிடப்படவில்லை: எஸ் 2:63; நெக 7:65-ம் அவ்வளவு தெளிவாக இல்லை. எஸ்ரா புதிய சூழ்நிலையில் இந்த ஊரீம் தும்மீமைப் பயன்படுத்துமாறு வலியுறுத்துகிறாரா? அல்லது ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு அதை மீண்டும் பழக்கத்தில் கொண்டு வர விரும்புகிறாரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. யோசிபஸ் தனக்குமுன் இருநூறு ஆண்டுகள் ''இறைமொழி கேட்டல்'' என்ற வழக்கு நடைமுறையில் இல்லை என்று கூறுகிறார். ஆனால் இக்கூற்

றுக்குப் போதிய ஆதாரம் இல்லை எனலாம். ஒரு சில நிபுணர்களுடைய கருத்துப்படி, புதிய தொடர்பு சாதனமாக இறைவாக்கு ரைத்தல் வந்ததால், ஊரீம்-தும்மீம் வேலை யற்றதாக உணரப்பட்டது. ஆகவே சாலமோ னுடைய காலத்திருந்து இது நூல்களில் குறிப் பிடப்படவில்லை. அதே நேரத்தில் ''என் மக்கள் மரக்கட்டையிடம் குறி கேட்கின்ற னர். அவர்களது கோல் மறைமொழிகள் கூறுகின்றது'' என்று ஒசே 4:12-இல் கூறப் பட்டிருப்பதும், பாபிலோனிய அரசன் தெர பீம்களிடம் ஆலோசனை கேட்டான் என்ற எசக்கியேலின் குறிப்பும் (எச 21:21) ''தெர பீம்கள் வீணானதையே கூறுகின்றன'' என்ற செக்கரியாவின் கூற்றும் (செக் 10:2) இந்த இறைமொழி கேட்கும் சாதனங்கள் நாடு கடத்தப்படுவதற்கு முன் வரை பயன்படுத் தப்பட்டன என்று சுட்டுகின்றன.

ஊரீம் தும்மீம் ஆகியவற்றின் சரியான பொருள் என்னவென்று தெரியவில்லை. அவைகள் ஒரு பொருள் இரு சொற்கள் என்ற முறையில் ஐந்து முறை குறிப்பிடப் பட்டுள்ளன (யாத் 28:30; லேவி 8:8 எஸ் 2:63; நெக 7:65; எண் 33:8). இவற்றிற்கு அளிக்கப்படும் சொல்லிலக்கணம் நிறைவு டையதாக இல்லை. எழுபது நூலும் வுல்காத்தா வும் அளிக்கும் விளக்கமும் உதவியதாக அமையவில்லை. இது எந்தப் பொருட் களால் செய்யப்பட்டது, அதனுடைய வடி வம் என்ன, அதன் மேல் எழுதப்பட்ட அடையாளம் என்ன என்றெல்லாம் தெளி வாகத் தெரியவில்லை. தலைமைக்குரு தன் மார்பில் ஏபோதை அணிந்திருந்தார். அதன் மேல் சதுரப்பை போன்ற மார்புப்பட்டை சேர்க்கப்பட்டிருந்தது. அதனுள் ஊரீம் தும் மீம் வைக்கப்பட்டிருந்தது. ஆகவே ஏபோ தும், ஊரீம் தும்மீமும் ஒருபொருள் பன் மொழியாகக் கருதப்பட்டன. ஊரீம் தும்மீம் சிறு பொருட்களாகும், தாயக்கட்டை போன் றவை. இவை உலோகத்தாலோ, விலையு யர்ந்த கற்களாலோ செய்யப்பட்டவை. அவற்றின்மேல் சில அடையாளங்கள் இடப் பட்டிருந்தன. இந்த அடையாளங்கள் ஒரு வார்த்தையாக அல்லது அடையாளமாகச் சுருக்கப்பட்டிருக்கலாம்.

சிக்கலான காரியங்களில் இறைமொழி சாதனம் பல முறை பயன்படுத்தப்பட்டது. ஏனெனில் ஒரு தெளிவான முடிவை அவர் கள் கண்டுபிடிக்க முயற்சித்தனர். குருக்கள் ஊரீம் தும்மீமைப் பயன்படுத்தும்போது எந்த நுணுக்கத்தைப் பின்பற்றினார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. இவைகள் பையில் வைக்கப்பட்டிருந்தமையால், தேவையான போது இவைகள் குலுக்கி எடுக்கப்பட்டோ, தாயக்கட்டைகளை உருட் டுவதுபோல உருட்டிப் போடப்பட்டோ நன்மை தீமைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஊருணிவாயில், ஊற்று வாயில் (FOUNTAIN GATE)

நெகமியாவால் மீட்கப்பட்ட எருசலே மின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு நகரவாயில் (நெக 2:14; 3:15; 12:37). இரு மதில்களுக்கு இடையே உள்ள வாயிலும் (2 அர 25:4; எரே 39:4; 52:7) இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

ஊர் (UR - ஒளி, அனற்பிழம்பு) - ஆள்

தாவீது தனக்கென அமைத்த 'முப்பது பேர்' என்றழைக்கப்பட்ட ஆற்றல்மிக்க வீரர் களில் ஒருவரான எலிப்பால் என்பவரின் தந்தை (1 நாள் 11:35); 2 சாமு 23:34-இல் வரும் எலிபெலேத்து (எலீப்பால்) என்பவ னின் தந்தையின் பெயர் அகஸ்பாயு என்று குறிக்கப்படுகிறது. இது ஊர் என்ற பெயர் பழுதுபட்டுள்ளது என்று சுட்டுகிறது.

ஊர் (UR - ஒளி, அனற்பிழம்பு) - இடம்

மெசபொத்தாமியாவில் முந்தைய அரச மரபு ஆட்சிக்காலத்தில் (கி.மு. 3000-2350) செழிப்புற்று விளங்கிய ஒரு நகரமாகும். இது பிற்காலத்தில் நகர ஆட்சி நாடாகத் திகழ்ந்தது. சுமேரைக் கட்டுப்படுத்தியது தனக்கே உரிய ஆளுநர்களையும்,. கோவில் களையும், தேவர்கள் குழுவையும் கொண்டி ருந்தது. பாக்தாதுக்கும் பாரசீக வளைகுடா வுக்கும் மத்தியில், யூப்பிரதிசு நதிக்கு மேற் கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால தேவ் ஏல்-முகையராக அடையாளம் காட் டப்படுகிறது. இந்நகரக் கண்டுபிடிப்பு

களில், விவிலியத்தில் குறிக்கப்படும் பாபேல் கோபுரத்துக்கு (ஆதி 11:8) மாதிரிகையான மூன்றடுக்கு சிகுராத்துக் கோபுரம் ஒன்றாகும்.

ஊர் நகர் மூவாயிரம் ஆண்டுக்கால வரலாற்றைக் கொண்டுள்ளது. அதன் உச்சகட்டம் புதிய சுமேரிய மூன்றாவது அரசமரபாகும் (கி.மு. 2113-2006). இக்காலத்தில் இறை அதிகாரம் பெற்ற வல்லாளர்கள் ஆட்சி செய்தனர். மையப்படுத்தப்பட்ட ஆட்சியும், மிகவும் விரிவான ஆட்சிமுறையும் இந்த அரசமரபுக்கு உதவின. ஊரின் செல்வாக்கு சுற்றியுள்ள பகுதிகளில் பரவியிருந்தது, அதன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் மாநிலங்களாகவும், மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு படைத்தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டன. பெரும் களஞ்சியங்கள் கட்டப்பட்டன. உலோக, பஞ்சுத் தொழில்கள் சிறப்புற்றிருந்தன. இங்கு நடந்த அகழ்வாய்வுகள் ஆயிரக்கணக்கான ஆப்பு எழுத்து ஏடுகளைக் கண்டுபிடித்துள்ளன. இவ்வேடுகள் நகரில் நிலவிய சட்டம், ஆட்சிமுறை, வணிகம் பற்றியவையாகும்.

இந்த அரசமரபை ஊர்-நம்மு என்பவர் தொடங்கி வைத்தார். இவரது மகன் கல்கி, ''ஊர்-நம்மு'' என்ற சட்டத்தொகுப்பைத் தோற்றுவித்தார் என்று கருதப்படுகிறது. இச்சட்டத்தில் கடுமையான வரிகள் விதிக்காமலும், செல்வந்தர்கள் ஏழைகளைச் சுரண்டாமல் பாதுகாத்தும், அளவைகளை நிர்ணயித்தும், நாட்டில் நீதியை நிலவச் செய்ய வேண்டும் என்று அரசனுக்குக் கற்பிக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் காணப்படுவது போல், இச்சட்டங்கள் காரண காரிய முறையிலும், நிபந்தனைவடிவிலும் உள்ளன. தண்டனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஊர், ஆபிரகாமின் தந்தை தேராகுவின் ஊராக விவிலியத்தில் குறிக்கப்படுகிறது (ஆதி 11:28). இங்கிருந்துதான் ஆபிரகாம் மெசபொத்தாமியாவுக்கும், கானானுக்கும் புறப்பட்டார் (11:31; 15;7). இந்நகர் விவிலியத்தில் ''கல்தேயர் நகரமான ஊர்'' என்று எப்போதும் குறிக்கப்படுகிறது. ஆனால் கி.மு. 1000 வரைக்கும் கல்தேயர்கள் பாபிலோன் பகுதியில் நுழையவேயில்லை.

ஊர்பான் (URBANUS நகரைச் சேர்ந்த, வணக்க இணக்கமுள்ள)

இவருக்குப் பவுல் வாழ்த்து அனுப்பினார் (உரோ 16:9). இவர் உரோ 16:3-இல் பிரிசிக்கில்லா, ஆக்கிலா ஆகியோருடன் சேர்ந்தும், 16:21-இல் திமோத்தேயுவோடும் சேர்ந்தும் ''உடன் உழைப்பாளர்'' என்று அழைக்கப்படுகிறார். இது இவர் சிறப்புமிக்க குழுவைச் சேர்ந்தவர் என்று காட்டுகிறது.

உரோமை அரச வீட்டு ஏடுகளில் குறிக்கப்படும் உரோமை அடிமைகளிடையே சாதாரணமாய்க் காணப்படுவதாகும் இப்பெயர். ஒருவேளை ஊர்பான், சீசரின் வீட்டைச் சேர்ந்த ஓர் அங்கத்தினராக இருக்கலாம் (காண் பிலி 4:22).

ஊர்-மாற்கஸ் (UR-MARKUS)

நற்செய்திகள் தோன்றியது பற்றிய சில கருதுகோள்கள் மாற்கு நற்செய்தியின் மூல வடிவம் இருந்ததாகக் கூறும். அதன் பெயராகும் இது.

ஊர்வன (CRAWLING THINGS)

ஊர்வன என்ற சொல் உப 32:24-இல் நச்சுப் பாம்புகளைக் குறிக்கின்றது (எரே 8:17); மீக் 7:17-இல் பொதுவாகப் புழுக்களைக் குறிக்கிறது. இவை புறவினத்தாருடைய கீழ்த்தரமான வாழ்க்கைக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்படுகின்றன; அப 1:14-இல் மீன்களைத் தவிர்த்த நீர் வாழ் உயிரினங்களைக் குறிக்கின்றது.

இச்சொல், ஆதி 9:3-இல் நடமாடி உயிர் வாழும் விலங்குகள் யாவற்றையும் ஆதி 1:20; சங் 104:25-இல் நீர்வாழ் படைப்புகளையும் குறிக்கின்றது. இதன் சாதாரணப் பொருள் ஊர்ந்து செல்பவைகளாகும். இவை காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள், பறவைகள், மீன்கள் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றன. பொது

வாக, இச்சொல் பெரும் எண்ணிக்கையில் காணப்படும் சிறிய நான்குகால் பிராணி களையும் ஊர்வனவற்றையும் பூச்சிகளையும் குறிக்கும்.

ஊலாம் (ULAM முதல்வன், தலைவன்)

1. மனாசேயின் கோத்திரத்தைச் சேர்ந்த மாக்கிரின் வழித்தோன்றல் (1 நாள் 7:16-17).

2. எசேக்கு என்பவரின் தலைமகன். சவு லின் சந்ததியினர். பென்யாமின் கோத்திரத் தின் வேல் வீரர்களின் தலைவர் (1 நாள் 8:39-40; 2 நாள் 14:8).

ஊலாய் (ULAI சுத்த நீர், கால்வாய்)

ஏலாம் மாநிலத்தில், பாராசீகத் தலைநகர மான பழங்காலச் சூசாவுக்கு அருகில் மூன்று ஆறுகள் ஓடின; தென் மேற்கில் கெர்காவும், கிழக்கில் அப்திஸ்புல்லும் ஓடிக் காருனில் பாய்ந்தன. ஊலாய் என்பது ஓர் அகன்ற செயற்கைக் கால்வாயாகும். இது கெர்கா வையும் அப்தில்புல்லையும் இணைத்து, சூசாவுக்கு அருகில் வடக்கில் அல்லது வட கிழக்கில் ஓடியது.

இதனைத் தானியேல் நூல் ஆறு என்று பொருள்கொண்டு இதன் கரையில் அவர் வெள்ளாட்டுக்கடாவும், செம்மறிக்கடாவும் பற்றிய காட்சியைக் கண்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது (தானி 8:2.16). ஒரு சிலர் தானி யேல் நூலில் இதனை ஊலாய் வாயில் என்று பொருள் கொண்டனர். ஒரு வேளை இவர் களால் குறிப்பிடப்படும் வாயில் ஊலாய்க் கால்வாயை நோக்கி இருந்திருக்கலாம் (தானி 8:2.16). இக்கால்வாய் நீர் 'அசூர் பானிப்பால்' என்னும் அரசன் 'ஏலாம்' நாட் டின்மீது படையெடுத்து வென்றபோது சிவப்பாக மாறியதாக மரபு.

பழங்கால ஆசிரியர்களால் இது எயுலா யேயுஸ் என்றழைக்கப்படுகிறது.

ஊவேல் (UEL இறைவன் திருவுளம்)

எஸ்ராவின் காலத்தில் வாழ்ந்தவர்களில் புறவினப் பெண்களை மனைவியாகக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் (எஸ் 10:34).

ஊளையிடும் உயிரினங்கள் (HOWLING CREA-TURES)

வழக்கமாக வீடுகளில் காணப்படாத காட்டு உயிரினங்களாகும் (ஏசா 13:21). இது, புதிய தமிழ் மொழி பெயர்ப்பில் ஊளை யிடும் குள்ளநரிகள் என்று குறிப்பிடப்படு கிறது. இது கழுகு, ஆந்தை, கழுதைப்புலி ஆகியவற்றையும் குறிக்கக்கூடும் என்று சிலர் கூறுவர். இவையாவும் ஓரிடத்தின் அவலநிலையை எடுத்துக்காட்டுகின்றன.

ஊழியக்காரி/வேலைக்காரி

இச்சொல் ஊழியம் செய்யும் வகுப்பைச் சேர்ந்த இளம், திருமணமாகாத பெண் ணைக் குறிக்கிறது.

அடிமைத் தொழில், ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒரு பழக்கமாக இருந்ததால், பல வீடுகளில் பெண் அடிமைகள் இருந்தனர். இத்தகைய பெண்கள் நல்ல முறையில் கவ னிக்கப்பட்டு, நடத்தப்பட வேண்டுமென்று சட்டமும் இருந்தது (லேவி 25:6; உப 15:12; யோபு 31:13). அவர்கள் இறைவன் ஆசீரில் பங்குபெற்று அவரின் பாதுகாப்பைப் பெறு கின்றனர் (உப 5:14; 12:12; எஸ் 2:65).

முதல் மனைவி மலடியாக இருக்கும் போது, இத்தகைய பெண்கள் வைப்பாட்டி களாகவோ மாற்று மனைவிகளாகவோ ஆயி னர் (ஆதி 30:3; 31:33). தாவீதின் முன்பாக அபிகாயிலும் (1 சாமு 25:24; 2 சாமு 14:15), பதுசேபாவும் (1 அரச 1:13.17) ரூத்தும் (ரூத் 3:9) தாழ்ச்சியின் அடையாளமாக அடியாள் வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளனர். பக்தி நிறைந்த பெண்கள் தங்களை ''ஆண்ட வனின் அடிமை'' என்று அழைப்பதுண்டு (1 சாமு 1:11; லூக் 1:38.48; சங் 86:16; 116:16; அ.ப. 2:18).

ஊழியம், பணி (Service)

''ஊழியம்'' என்ற சொல் வேதாகமத்தில் எதிர்மாறாகப் பொருள் கொண்டுள்ளது. ஒரு பக்தன் இறைவனுக்குப் புரியும் பணி விடையையும், ஓர் அடிமை தனது தலைவ னுக்குச் செய்யும் பணியையும் குறிப்பதற்கு

'ஒரே சொல்லே' உபயோகப்படுத்தப்படுகிறது. மனிதன் எந்த அளவு இறைவனுக்குப் பணிபுரிகின்றானோ அந்த அளவு மீட்பு அல்லது விடுதலை பெறுகிறான் என்பதை மீட்பின் வரலாற்றில் காண்கிறோம். இறைவனுக்குப் பணிபுரிவது உண்மையில் ஆட்சி புரிவதாகும்.

1. ஊழியமும், அடிமைத்தனமும்:- மனித உறவுகளைப் பற்றி வேதாகமத்தில் பேசப்படும்போதுகூட, வேறுபட்ட சூழ்நிலைகளில் இச்சொல் கையாளப்படுகிறது. புறவினத்தாரிடையே, அடிமைகள், மிருகத்திற்கும், உயிரற்ற பொருட்களுக்கும் சமமாகக் கருதப்பட்டனர். அத்தகைய அடிமையின் பணியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதும் இச்சொல்லேயாகும். அதே சமயம் ஒரு வேலையாள், திருச்சட்டப்படி, தான் பணிபுரியும் குடும்பத்தின் உறுப்பினன். உண்மையான வேலையாள் நம்பிக்கைக்கும், வாரிசுக்கும் உரியவன் (ஆதி 24:2; 15:3). ஊழியத்தைக் குறிக்கும் சொற்கள் இருவகைப் பொருளையும் உணர்த்தவல்லன. இன்னும் சில சொற்கள் மதிப்பிற்காகச் செய்யப்படும் பணிகளைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, அரசர்களுக்கு உயர் அதிகாரிகள் மதிப்பிற்காகச் செய்யும் பணியையும் அதிகாரப் பூர்வமான கடமைகளைச் செய்வதையும் குறிக்க ஒரே சொல்லே பயன்படுகிறது.

2. சமயப் பணியும், கீழ்ப்படிதலும் (பழைய ஏற்பாடு):- இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். அம்மக்களுக்குத் தங்கள் கடவுளுக்குப் பணிபுரிவதே பெருமையாகும். அதனால் அவர்களுக்குப் பல கடமைகளும் உண்டு. ''யாவே'' க்குப் பொறாத தனிக்குணம் உண்டு. ''தன்னைத் தவிர வேறு யாரையும் தம் மக்கள் வழிபட அனுமதிக்கமாட்டார்'' (உப 6:15). கிறிஸ்துவும் இதை மேற்கோளாகக் காட்டுகிறார். ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரைமட்டும் ஆராதிப்பாயாக'' (மத் 4:10; உப 6:13). இந்த விசுவாசம் நடத்தையிலும் வழிபாட்டிலும் காண்பிக்கப்பட வேண்டும். உப ஆகமம் இறைவனுக்குப் பணிபுரிதலின் பொருளை விளக்கக் காண்கிறோம். ''நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே பின்பற்றி அவருக்கு அஞ்சுகிறவர்களுமாய் அவருடைய கட்டளைகளை அனுசரிக்கிறவர்களுமாய், அவருடைய வார்த்தைக்குச் செவி கொடுக்கிறவர்களுமாய், அவருக்கு மட்டுமே ஊழியம் செய்து, அவரோடு ஒன்றித்திருக்கக் கடவீர்கள்'' (உப 15).

அ) வழிபாட்டு ஊழியம்:- இறைவனுக்குக் காணிக்கை செலுத்துதல், பலியிடுதல், அயராது ஆலயத்தைப் பேணுதல் முதலியன இறைவனுக்குப் பணி செய்தலாகும். இதன்படி குருக்களும், லேவியரும் 'யாவேக்கு ஊழியம் புரிபவர்கள்' (எண் 18:13; 1 சாமு 2:11.18; 3:1; எரே 33:21 தொ). இறைவன் உறையும் இடத்தைப் பாதுகாப்பதும், அவருக்குப் பணிவிடை செய்வதும், இறைகூற்றுகளுக்குத் தகுந்த விளக்கம் கொடுப்பதும் குருவின் பணிகளாகும் (நீதி 17:56). பலி செலுத்தவரும் பக்தனும் ''யாவே'' க்குப் பணி புரியவே'' வருகிறான். மேலும், இச்சொல் வழக்கமாக இறைவனுக்குச் செய்யப்படும் ஆராதனை, வணக்கம் இவற்றையும் குறிக்கிறது.

ஆ) கீழ்ப்படிதல்:- 'யாவே' விரும்பும் பணி, சடங்குமுறை வழிபாட்டோடு நின்றுவிடுவதில்லை. இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலின் மூலம் வாழ்வை முழுவதும் தழுவி நிற்கிறது. இதையே இறைவாக்கினரும், உபாகமும் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. ''பலிகளைக் காட்டிலும் கீழ்ப்படிதலே மேலானது'' (1 சாமு 15:22; உப 5:29 தொ). ''நாம் விரும்புவது பலியையன்று, அன்பையே நாம் விரும்புகிறோம்; தகனப்பலிகள் நமக்கு வேண்டியதில்லை, கடவுளை அறியும் அறிவே நாம் விரும்புகிறோம்'' (ஓசே 6:6; எரே 7). இவ்வாசகங்கள் கீழ்ப்படிதலின் அவசியத்தையும், மேன்மையையும் எடுத்து இயம்புகின்றன.

3. மனிதப் பணி வழி இறை பணி (புதிய ஏற்பாடு):-

தம்மை வழிபடும் மக்கள், படைப்புகளை வழிபடலாகாது; இறைவன் பணி அன்போடு இணைந்திருக்க வேண்டுமென்று, கிறிஸ்து (மத் 4:10; 9:13) திருச்சட்டம், இறைவாக்கினர் இவைகளிலிருந்து எடுத்து இயம்புகின்றார். இறைபணி, அதை உந்தும் அன்பின் காரணமாக முழுமையாக இருக்க வேண்டும். இப்பணியைத் தடை செய்து போட்டியாக இருக்கக்கூடிய எதிராளியான செல்வத்தையும் இயேசு குறிப்பிடுகிறார். செல்வத்திற்குப் பணிவிடை செய்வது மனிதனை அந்தனாக்குகிறது (லூக் 16:9) என்று கூறுகின்றார். ''சிலை வழிபாட்டுக்கு ஒப்பானது பொருளாசை'' (எபே 5:5) என்று புனித பவுலும், இயேசுவைப் பின்பற்றிக் கூறுகின்றார். ''எவனும் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்யமுடியாது; கடவுளுக்கும் செல்வத்திற்கும் நீங்கள் ஊழியம் செய்ய முடியாது'' (மத் 6:24 இணை). ஏனெனில் ஒருவனை வெறுத்து மற்றவனுக்கு அன்பு செய்வான். எனவேதான், ஒருவன் கடவுளின் பணியாளனாக, கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பினால் செல்வப்பற்றை விட்டுவிட வேண்டியது அவசியமாகும் (மத் 19:21 இணை)

அ) இயேசுவின் பணி:- இறுதியாக, இறைவனின் அன்பார்ந்த மகன் இயேசு, பணிபுரிய வருகின்றார். இறைவனால் அனுப்பப்பட்டவர் அவர். பழைய ஏற்பாட்டின் இறை பணியாளருடைய பணியின் நிறைவும், முழுமையும் ஆகிறார். ''தம் தந்தையின் இல்லத்தில் இருக்க வேண்டும்'' (லூக் 2:49) என்று தமது 12 வயதிலேயே வற்புறுத்தினார். அவரது வாழ்வு முழுவதும் ''தந்தையின் திருவுள்ளத்தை நிறைவேற்ற வேண்டும்'' என்று மாற்றமுடியாத தந்தையின் திருச்சித்தத்திற்கு அமைந்த வாழ்வாகக் காணப்படுகிறது (மத் 16:21; லூக் 24:26). ஆனால் தட்ட முடியாத இப்பணியே, சிலுவைச் சாவுக்கு அவரை இட்டுச் செல்கிறது. இதனால் ''நான் தந்தைக்கு அன்பு செய்கிறேன் என்பதையும், அவர் எனக்குக் கட்டளையிட்டபடி நடக்கிறேன் என்பதையும் உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்'' (யோவா 14:30). ஆனால் கிறிஸ்து அன்பினால் இப்பணியை மேற்கொள்கிறார். அதுவே இதற்கு உயர்வையும், மதிப்பையும் கொடுக்கிறது.

இறைவனுக்குப் பணிய மனிதன் மறுத்தான், மறுக்கிறான். அதற்குப் பரிகாரம் செய்து மனிதனை மீட்கவும் இறைவனுக்கு எப்படிப் பணிபுரிய வேண்டும் என்று எடுத்துக்காட்டவும் இயேசு விழைகிறார். தங்கள் குருவும் ஆண்டவருமாகிய இயேசு எவ்விதம் பணிபுரிந்தாரோ, அதுபோலவே அவரது சீடர்களின் வாழ்வும் மனிதருக்குப் பணிபுரிவதில் கழிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார். ''மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்'' (மாற் 10:45). ''நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன்.....ஊழியன் தலைவனுக்கு மேற்பட்டவன் அல்லன்'' (யோவா 13:16). ''நானோ உங்கள் நடுவே பணிவிடை புரிபவனைப்போல் இருக்கின்றேன்'' (லூக் 22:27).

ஆ) கிறிஸ்தவப் பணியின் மேன்மை:- கிறிஸ்துவின் பணியாளர்கள், முதலில் இறைவார்த்தையின் பணியாளர்கள் ஆவார்கள் (அ.ப. 6:4; லூக் 1:2). இறைவார்த்தையைப் போதித்து, அதனால் ஒரு புனிதப் பணியை நிறைவேற்றுகின்றனர் (உரோ 15:16; கொலோ 1:23; பிலி 2:22). ''உண்மையுடனும், தாழ்ச்சியுடனும்'' தேவையானால் ''கண்ணீருடனும், பல இன்னல்கள் மத்தியிலும் இப்பணிபுரிய வேண்டும்'' (அ.ப. 20:19). துணைத்தொண்டராக, இறைமக்களின் சமூகத்திற்குப் பணிபுரிவோர் (அ.ப. 6:1-4) எவ்விதம் ஆண்டவருக்குத் தகுந்த முறையில் பணிபுரிய வேண்டுமென்று புனித பவுல் கூறுகின்றார் (உரோ 12:7.9-13). மேலும் எல்லாக் கிறிஸ்தவர்களும், திருமுழுக்கினால், பாவம் மற்றும் சட்டம் ஆகியவற்றிற்கு ஊழியம் செய்யும் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு, நீதிக்கும், கிறிஸ்துவுக்கும் பணி செய்யும் சுதந்தரத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர் (யோவா 8:31-36; உரோ 6-7; 1

கொரி 7:12; எபே 6:6). அவர்கள் அடிமை யாக அல்லாமல், உரிமை மக்களாக இறைத் தந்தைக்குப் பணிபுரிகின்றனர் (கலா 4:7). ஏனெனில் ஆவியானவருக்குரிய புதிய நெறி யில் அவருக்கு ஊழியம் புரிகின்றனர் (உரோ 7:6) ஊழியர் நிலையிலிருந்து, கிறிஸ்துவின் நண்பர்களாக அவர்களை மாற்றிய அருள் (யோவா 15:4), தாராள மனதுடனும், விசு வாசத்துடனும் இறைவனுக்குப் பணிபுரியும் ஆற்றலை அளிக்கிறது. அதனால் அவரது மகிழ்ச்சியில் பங்கு பெறுவதற்கு உதவி பெறுகின்றனர் (மத் 25:14-23; யோவா 15:10-11).

ஊழ் (DESTINY)

1. ஒரு புறவினக் கடவுளின் பெயரான மெனீ என்பதன் பொருளாகும்.

2. ஒருவரது ஊழ், குறிக்கப்பட்ட முடிவு, விதி ஆகும். பண்டைய எபிரேயரிடையே தனிப்பட்ட ஒருவனது விதி என்பது குலம், இனம், நாடு ஆகியவை போன்ற குழுவின் விதியோடு இணைக்கப்பட்டிருந்தது. மர ணத்திற்குப் பின் வரும் வாழ்வைப்பற்றித் தெளிவான கருத்து எதுவும் அவர்களிட மில்லை. எனவே, ஒருவன் தனது விதி யினைத் தான் சார்ந்து இருக்கும் சமூகத்துடன் நல்லுறவு கொள்வதிலும், அதனுடைய விருப்பங்களையும் விதியையும் வளர்ப்பதி லும் நிறைவேற்றினான். இது அக்குழுவின் இறைவனுடன் சரியான உறவும், கீழ்ப்படித லும் கொண்டிருப்பதையும் உள்ளடக்கியது. ஆகவே உடன்படிக்கையைக் கடைப்பிடித்த லும் இறைச்சட்டத்திற்குக் கீழ்ப்படிதலும் பழைய ஏற்பாட்டில் வலியுறுத்தப்பட்டன (யாத் 19:5; உப 4:1-8; 5:28-33; சங் 24:10).

இஸ்ராயேலின் ஊழ் அல்லது விதியானது இறைவனின் மக்களாக இருப்பது, அவரது வல்லமைமிக்க செயல்களைக் கூறுவது (சங் 96:3; 106:8; 145:4. 11-12), மற்றும் நாடுக ளுக்கு ஆசீர்வாதமாக இருப்பது (ஆதி 12:2; செக் 8:23; ஏச 43:21) ஆகும். நாடு கடத்தப் பட்ட காலத்திலிருந்து, ஒவ்வொருவனு டைய விதிக்கும் அவனவனேதான் பொறுப்பா வான் என்பது வலியுறுத்தப்பட்டது (எச 18). ஆனால், யூதர்களோ தங்களது எதிர்காலத் தைப்பற்றி ஆபிரகாமின் சந்ததிக்கென அளிக் கப்பட்ட உத்தரவாதத்தையே விடாப்பிடியா கக் கொண்டிருந்தனர் (லூக் 3:8; யோவா 8:33.39).

பழைய, புதிய ஏற்பாட்டிற்கு இடைப் பட்ட காலத்தில், தனிநபரின் உயிர்ப்புப் பற்றிய கருத்தும் அடங்கிய, விரிவான இறு திக்கால இயல் வளர்ந்தது. நன்மை, தீமை களின் அடிப்படையில் ஒருவனது விதி அவ னது நற்செயல்களின்படி தீர்மானிக்கப்பட் டது. புதிய ஏற்பாட்டில் ஒருவனது விதியா னது இயேசு கிறிஸ்துவுடன் கொண்டுள்ள உறவு, அவரது போதனைகளுக்கு ஏற்றவாறு நடத்தல் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது (அ.ப. 16:31; 1 யோவா 2:3; 3:21-24).

ஊற்று, சுனை (Fountain, Spring)

இது, மலைப்பகுதிகளில் அல்லது பள்ளத் தாக்குகளில் நீர் தோன்றி வடியும் இடமாகும். பாலஸ்தீனத்திலுள்ள சுண்ணாம்புப் பாறை கள் இத்தகைய ஊற்றுகள் வடிவெடுப்பதற்கு ஏற்றவையாக இருந்தன. ஊற்றைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன.

நீர் பழங்கால மேற்காசியாவில் முக்கிய மான பங்கேற்றுள்ளது. நீர் வாழ்வுக்கே மூல மாகக் கருதப்பட்டது (திருவுரை 12:6). ஊற் றுகள் பல குடியிருப்புகளுக்குக் காரணமா யின. ஆகவே அந்தந்த ஊற்றின் பெயரே, குடியிருப்புகளுக்கும் பெயராயிற்று. (எ-கா) ஏன்-தோர், ஏன்-கன்னீன், ஏன்-கேதி, ஏன்-ரோகேல், எருசலேம், மெகிதோ, காசோர், கிபயோன் போன்ற நகரங்களில், இயற்கை யான ஊற்றுகளிலிருந்து நீரை நகரங்களுக் குக் கொண்டுவர, விரிவான கட்டமைப்பு கள் இருந்தன. ஒரு நகரம் முற்றுகையிடப் பட்டிருக்கும் போது, இத்தகைய நீர் கொண்டு வரும் அமைப்புகள் அந்நியர் தாக்குதலி லிருந்து பாதுகாக்கப்படவேண்டியது மிக முக்கியமாகும் (2 அர 20:20; சீரா 40:17).

பழைய ஏற்பாட்டில் சிறப்புப்பெற்ற ஊற்று களுக்குக் காண்க: ஆதி 24:16; நீதி 7:1; 2

அர 2:21. பழங்கால இஸ்ராயேலர்களுக்குக் கானான்நாடு ''ஆறு, ஏரி, ஊற்றுகள் மிகுந்த நாடு. அதிலுள்ள பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலும் பல ஊற்றுகள் புறப்படும்'' நாடாகும் (உப 8:7). எடுத்துக்காட்டான வருங்காலம் பற்றிய இறுதிக்காலக் காட்சியில் உயிரளிக்கும் ஊற்றுகள் கூறப்படுகின்றன (ஏச 35:7; 49:10; யோவே 8:18; சங் 114:8). இறைவனுடைய கொடைகளில் நீரூற்றும் குறிக்கப்படுகின்றது (சங் 84:6; 10:10).

ஊற்று உருவகமாகவும் பயன்பட்டுள்ளது. ஊற்றுகள் நீரை மட்டும் கொடுக்கும் இடமன்று. இறைமகிமைத் தோற்றம் காணும் இடமுமாகும் (ஆதி 16:7; 24:42). வாழ்வும் இளைப்பாறுதலும் அளிக்க ஆண்டவருக்குள்ள ஆற்றலை ஊற்று அடையாளமாக உணர்த்தவல்லது. ஆண்டவரே இஸ்ராயேலின் ஊற்று (சங் 68:26); உயிரின் மூலம் (சங் 36:9; எச 2:13). இறைவனுக்குக் காட்டும் அச்சம் வாழ்வின் ஊற்றாகும் (பழ 14:27). ஞானியின் போதனை வாழ்வின் ஊற்றாக விவரிக்கப்படுகிறது (பழ 13:14). வழிகாட்டுதலுக்கும் (ஏச 35:7; 49:10), பாலினச் செயலுக்கும் (பழ 5:16) முடிவற்ற ஆற்றலுக்கும் (ஏச 58:11; யோவா 4:14; திருவெளி 7:17) பாவத்திலிருந்து தூய்மைபெறுவதற்கும் (செக் 13:1) ஊற்று அடையாளமாகப் பயன்பட்டுள்ளது. தீமை செய்யும் நீதிமான் கெட்டுப்போன நீரூற்றைப் போலாவான் (பழ 25:26). தண்டிக்கப்பட்ட தீயோரும் (சங் 107:33; ஓசே 13:15), பயனற்றதைச் செய்வோரும் (2 பேதுரு 2:17) வறண்ட ஊற்றுக்கு ஒப்பாவார்.

விவிலியக் கிராமங்களில் இன்றும் நீரளிக்கும் ஊற்றுகளுக்கு எடுத்துக்காட்டு: பெத்திலேகேமுக்குத் தெற்கிலுள்ள சாலோனின் குளத்திலுள்ள ஊற்று, எரிகோவில் தேல்-ஏல்-சுல்தானிலுள்ள ஊற்று, நசரேத்தூரிலுள்ள கன்னியின் ஊற்று, போன்றனவாகும். வெப்ப நீரூற்றுகள் கலிலேயாக் கடலுக்கு அருகிலும், சாக்கடலுக்குக் கிழக்கிலும் அமைந்துள்ளன. இவற்றிலுள்ள வெளிறிய மஞ்சள் நிறமுடைய சூடான நீரானது வாத நோய்களையெல்லாம் குணமாக்க வல்லது (ஆதி 36:24) என்று கருதப்பட்டது.

ஊனியல்பு (CARNAL)

இது, உலகத்தைச் சார்ந்தவற்றை (2 கொரி 10:4) அல்லது கீழான, சீரழிந்த இயல்பின் ஆதிக்கத்திலுள்ள மனித இயல்பைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டிலே இது, பாலினப் பண்பை உணர்த்துவதாகவும் தெரிகிறது (லேவி 19:20; 18:20). 'இச்சைக்குரிய ஊனியல்பு நாட்டமுள்ள' என்ற பொருளும் இதற்குப் பொருந்தும் (உரோ 8:6).

ஊன் அல்லது தசை (FLESH)

I. பழைய ஏற்பாடு:-

இதன் எபிரேய் வார்த்தைக்கு மனித உடலில் தோலை அடுத்துள்ள பகுதி அதாவது மாமிசம் அல்லது இறைச்சி எனப்பொருள். மனித உடலிலும் மிருக உடலிலும் உள்ள மிருதுவான தசையை இது குறிக்கும். இத்தசை மண்ணிலிருந்து உருவானது எனக் கருதினர் (ஆதி 2:7; 7:22). இறந்த பின்னும் அது மண்ணோடு ம்டியும்வரை தசை அல்லது ஊன் என்றே கூறப்பட்டது (திருவுரை 12:7). தசை உணவாகவும் உட்கொள்ளப்பட்டது (ஆதி 9:4; 40:19; 2 அர 9:36).

உடலைக் குறிக்கப் பொதுவாக எபிரேயர் தசை என்ற இச்சொல்லைப் பயன்படுத்தினர் (எண் 19:7; 1 அர 21:27). உடல் ஆன்மாவின் வெளித்தோற்றமாதலால் இரண்டும் சில செயல்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன. ''என் உள்ளமும் உடலும் உயிருள்ள இறைவனைப் பாடுகிறது'' (சங் 84:2-3; சங் 63:1-2).

சில இயற்கையான உறவுகளை விளக்க இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டது. ஆதாம் ஏவாளைப் பற்றிக் கூறியது (ஆதி 2:23; 25:14; நீதி 9:2; 2 சாமு 5:1). இது போலப் பலவகையான உறவுகளைக் குறிக்க இது பயன்படுத்தப்பட்டது.

பல இடங்களில் மாமிசம் என்பது மனித பலவீனத்தையும் குறிக்கும். மனிதன் தசையுடல் கொண்டவன். எனவே அழிவுக்குரிய

வன் (ஆதி 6:3; யோபு 34:15). சங் 78:39-இல் மனிதன் பலவீனமுள்ளவன் ஆதலால் கடவுள் அவன்மேல் கருணை கொண்டு பாவத்தை மன்னிக்கிறார் எனக் கூறப்பட்டுள்ளது. 2 நாள் 32:8-இல் அரசனின் தசைக் கரம் கடவுளின் கரத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது. கடவுளின் கரம் எல்லாம் வல்லது (யோபு 10:4; சங் 56:4; எரே 17:5). எச 31:3-இல் தசையும் ஆவியும் ஒப்பிடப்பட்டுள்ளன. தசை-பலவீனமானது, ஆவி வலுவுள்ளது. பழைய ஏற்பாட்டின்படி தசைவலுவற்றது. ஆனால் பாவமானது அன்று. சங் 77:39-இல் புதிய ஏற்பாட்டுக் கருத்து காணப்படுகிறது. ''கல்லான இதயத்தை எடுத்து விட்டுக் கனிவான இதயத்தைத் தருவார் இறைவன்'' என வாக்களிக்கப்பட்டது. இதனால் மக்கள் இறைவனுக்குக் கீழ்ப்படிவர் (எச 11:19-20; 36:26-27).

II. புதிய ஏற்பாடு:-

தசை என்பது எலும்பை மூடியுள்ள பகுதி. இதற்குப் பல உருவகப் பொருள்கள் உள்ளன.

1. எபிரேயமரபுப்படி தசை அல்லது ஊன் என்பது இரத்த உறவைக் குறிக்கப் பயன்பட்டது (ஆதி 2:23; உரோ 1:3; 9:3; 11:4).

2. இறைவனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மனிதன் வலுவற்றவன் என்பதைக் குறிக்க இது பயன்படுத்தப்பட்டது (மத் 24:22; மாற் 13:20; 1 பேதுரு 1:24; யோவா 1:14). பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப் பட்டது போலவே புதிய ஏற்பாட்டிலும் வெகுவாக இச்சொல் ஆகுபெயராக மனிதனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. மனிதனை உடலற்ற ஆவியிலிருந்து வேற்றுமைப்படுத்த எலும்பு, தசை என்ற சொற்கள் பயன்பட்டன. லூக் 24:36-43-இல் உயிர்த்த ஆண்டவர் ''நீங்கள் காணும் எலும்பும் தசையும் ஆவிக்குக் கிடையா'' என்கிறார்.

4. தசையும் இரத்தமும் என்பது கூட இரத்த உறவைக் குறிக்க ஆகுபெயராகப் பயன்பட்டது (தந்தை மகன் உறவு). ஆனால் இது பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் சீரா 14:18; 17:31-இல் இதைப் போன்றதொரு தொடர் காணப்படுகிறது. ஆனால் இந்தத் தசையும் இரத்தமும் என்ற வழக்கு புதிய ஏற்பாட்டில்தான் பயன்படத்தப்பட்டுள்ளது (மத் 16:17). பவுல்தான் இவ்வழக்கை முதன் முதலில் பயன்படுத்தியிருக்கிறார் (கலா 1:16; எபே 6:12; 1 கொரி 15:50; எபி 2:14).

இறுதி இராவுணவின் போது ''இது என் தசையும் இரத்தமும்'' என்று இயேசு கூறி அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் சீடர்களுக்கு அளித்தபோது அது அவர்களுக்கும் இயேசுவுக்கும் ஏற்படுகின்ற உறவைக் குறிக்கிறது (யோவா 6:53). இதுவே விசுவாசத்தால் ஏற்பட்ட அன்பு உறவிற்கு அடிப்படையாயிற்று. சாதாரணமாக இருந்த இவ்வழக்கத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார் இயேசு. இதன் இறையியல் கண்ணோட்டமும் மாறியது. உடலும் இரத்தமும் என்பது நமது ஆண்டவரின் உடலும் இரத்தமுமாகிய நற்கருணையை நமக்கு நினைவூட்டுகிறது.

5. பவுல் இச்சொல்லுக்கு ஒரு தனிச்சிறப்பான விளக்கம் அளிக்கிறார் (உரோ 7:7-25). பவுலின் ஆய்வுப்படி ஒவ்வொரு உள்ளார்ந்த மனிதனுக்கும் மூன்று கூறுகள் உள்ளன. ஒன்று பகுத்தறிவு: இது கடவுளின் சட்டத்தின் இருப்பிடம்; மற்றது ஊன்; இதிலிருந்துதான் சீர் கேட்டிற்கான ஆசை எழுகிறது. மூன்றாவது கூறு தன் ஆளுமை: இது சட்டத்தையோ, சீர்கேட்டையோ தேர்ந்தெடுத்து நம்மை இட்டுச் செல்கிறது. நமது சித்தத்தைக் கட்டுப்படுத்துகிறது. மேலும், சீர்கேடான ஆசை எழும் இடமாகும். ஊன் என்ற கருத்தை கலா் 5:16-24-இல் பவுல் விரித்துரைக்கிறார். பவுலின் கருத்துக்கள் பழைய ஏற்பாட்டில் 'தசை' யின் சில கருத்துக்களோடு மட்டுமே ஒத்திருக்கின்றன. பவுலின் கருத்துக்கள் பிலேவின் கருத்தோடு ஒத்துள்ளன. இவரின் கருத்துப்படி ஊன் அறியாமையின் இருப்பிடமாகும். எப்பிகுரியுஸ் என்ற

மற்றொரு ஞானியின் கருத்துப்படி தசை என்பது தீய இச்சைகளையும் பாவ நாட்டங்களையும் குறிக்கும். இதற்குப் பின்னால் எழுந்த மற்ற பல தத்துவங்களும் தசை என்பதை ஓர். தாழ்ந்த நோக்குடனேயே பார்த்தன. பவுல் வாழ்ந்த காலத்தில் பாவம், பாவத்திலிருந்து விடுதலை என்ற கருத்துக்கள் எங்கும் பரவியிருந்தன.

6. இது ஒரு மங்கல வழக்காக மாறி ஆண் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்வதைக் குறித்தது (ஆதி 17:11.14.23-25; உரோ 2:28; எபே 2:11; கொலோ 2:13).

III. இறையியல் சிந்தனை:-

சில மக்களுடைய நோக்கத்தில் மனிதனுடைய ஊனுடல் ஒருவிதத் தாழ்ந்த நிலையினையும் தீமையையும் கூடக். குறிப்பிடுவதாக உள்ளது. இச்சிந்தனையானது விவிலியத்தின்மீது மறைமுகமாகவே சார்ந்துள்ளது. உண்மையில் மறைநூல் ஊனுடலை அதன் தன்மையாலே தீயதொன்றாக எப்போதுமே கருதியதில்லை; அதனுடைய தீர்ப்புக்கள் மனித இயல்பைப் பற்றிய மெய்யில் ஊக்கத்தினாலில்லாமல், இறைவெளிப்பாட்டின் ஒளியின்மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது. ஊனுடலானது இறைவனால் படைக்கப்பட்டது. இறைமகனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இறை ஆவியால் உருமாற்றம் பெற்றுள்ளது. ''ஊனுடலின் உயிர்ப்பை நான் விசுவாசிக்கிறேன்'' என்று கிறிஸ்தவனால் கூற முடிகின்றது. ஏவுதல் பெற்ற நூல்களில் முதலிலிருந்து இறுதிவரை, ஊனுடலானது மனிதனுடைய படைக்கப்பட்ட தன்மையையே குறிப்பிடுகின்றது. ஆனால் இது தீய இயல்பினைக் குறிப்பிடவில்லை என்று உறுதியாகக் கூறலாம். ஊனுடலானது பாவி என்ற அளவில் மனிதனது நிலையைக் குறிக்கிறது. இத்தகைய கருத்து வளர்ச்சியின் முடிவில் ஊனுடல் என்னும் சொல்லானது, இரு பொருள் நிலையை மறைத்து விடுகின்றது; அதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

1. இறைவனின் முன்னிலையில் படைப்பு:-

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும், மனிதன் என்பவன் பருப்பொருள் (ஊன் அல்லது உடல்) மற்றும் அதற்கு உயிரளிக்கின்ற உருப்பொருள் (உடல் அல்லது ஆன்மா) ஆகிய இரு மாறுபட்ட தனிப்பொருள்களால் உருவானவன் என்று அறிந்து கொள்ளப்படவில்லை. அவன் தான் இருத்தலின் ஒருமைப்பாட்டை உணர்கிறான். அவன் ஊனுடலானவன் என்று கூறுவதானது, மனிதனது வெளிப்புற, உலகைச் சார்ந்த, உடல் சார்ந்த நோக்கின் படியும், அவனது உலகியல் நிலையில் தனிச்சிறப்புடன் அமைக்கின்ற ஊனுடலால் தன்னையே வெளிப்படுத்த அவனை அனுமதிக்கின்ற நிலையின்படியும் அவனைப் போற்றிப் பேசுவதாகும்.

அ) ஊனுடலின் ம்திப்பு:- ஒரு நெசவாளன் (யோபு 10:11; சங் 139:13 தொ) அல்லது குயவன் (ஆதி 2:7; எரே 1:5; யோபு 10:8-9) வடிவமைப்பது போன்று இறைவனால் அமைக்கப்பட்ட ஊனுடலானது ஊன் என்ற பெயரில் பாராட்டுக்குரியதே .(திருவுரை 11:5; 2 மக் 7:22-23). ஊனும் இரத்தமும் என்பது (சீரா 14:18; மத் 16:17), எலும்பு மற்றும் ஊன் (ஆதி 2:23; லூக் 24:39), இதயம் மற்றும் ஊன் (சங் 84:3; 73:26) போன்ற நமது உடல்சார்ந்த கூற்றைக் குறித்தாலும் அல்லது நோயிலும் (சங் 38:4; கலா 4:14), துன்பத்திலும் (2 கொரி 12:7), அல்லது இன்னல்களிலும் (1 கொரி 7:28) முழுமையான உடலைக் குறித்தாலும் அதைப்பற்றி வெறுப்பையோ புறக்கணிப்பையோ காட்டக்கூடிய குறிப்பு ஒன்றும் காணப்படவில்லை; மாறாக ஊனுடலானது எப்போதுமே வெறுக்கப்பட முடியாது (எபே 5:28-29). இறைவன் இஸ்ராயேலின் கடினமான கல்போன்ற இதயத்தை ஆர்வமுள்ள, அன்பான 'உணர்ச்சியுள்ள இதயத்தினால்' (எச 36:26) மாற்றியமைப்பார் என்று எசக்கியேல் அறிவிக்கும்போது ஊனுடலின் புகழுரையானது உச்சநிலையை அடைகிறது.

ஆ) உடலான மனிதன்:- மேலும் அதிக அடிப்படையான தகுதி ஒன்றும் அங்குள்

ளது; ஊனுடலானது மனிதனை அவனு டைய புலனீடான முழுமையிலும் குறிப்பிட முடியும். ஆன்மா என்னும் சொல்லை உப யோகிப்பது போன்றே, செமித்திய இனத்த வர், உயிரியக்கமுள்ள அனைத்துப் படைப்பு (ஆதி 6:17; சங் 136:25; சீரா 40:8), மனித இனம் (ஏச 40:5-6; லூக் 3:6; யோவே 3:1; அ.ப. 2:17; மாற் 13:20; யோவா 17:2) ஆகியவற்றைக் குறிப்பிடும் ''எல்லா ஊனைப்பற்றியும்'' பேசுகின்றனர். இதே சொல்லின் மூலம், அவர்கள் மனிதனின் உள்ளியல்பையும் குறிப்பிட முடியும்; இவ் வாறாக, ஆதாம் இறைவன் தன்னிடம் கொண்டு வந்த பெண்ணில் மற்றொரு ஆளைக் காண்கிறான்; ஆனால், தன்னுடைய தைப் போன்ற ஒரு ஆன்மாவை அவள் கொண்டிருப்பதாக அவன் கூறவில்லை; ''இவள் என் எலும்புகளின் எலும்பும் தசையின் தசையுமாய் இருக்கிறாள்'' (ஆதி 2:23; சீரா 36:24) என்று வியப்புடன் கூறுகின்றான். இந்த இறுதிச் சொற்கள் எல்லா உறவிற்கும் பரவக்கூடிய ஆழமான தோழமை பற்றிய உணர்வையும் (ஆதி 29:14; 37:27; உரோ 9:3), மேலும் குறிப்பாக வாழ்க்கைத் துணைவர் கள் உருவாக்குகின்ற 'ஒரே உடல்' (ஆதி 2:24; மத் 19:5; 1 கொரி 6:1; எபே 5:31) எனப்படும் புதிய உயிரையும் வெளிப்படுத்து கின்றன. அதே சொல்லானது அந்நபரைப் பற்றியும் (திருவுரை 4:5; 5:5; 2 கொரி 7:5) அவனது உளவியல் அமைப்பைச் சார்ந்த செயல்களையும், தவறான கருத்தினாலில் லாமல், உடல் சார்ந்த நிலையினைச் சந் தேகத்திற்கிடமின்றிக் குறிக்கின்றது. ஊனுடலா னது துன்புறுகிறது (யோபு 14:22); அஞ்சு கிறது (சங் 119:119); ஆசைகளால் அலைக்கழிக் கப்படுகிறது (சங் 63:2); அல்லது மகிழ்ச்சிக் குரலெழுப்புகிறது (சங் 84:3); ஞானிகளின் படிப்பினைகளால் அது வாழ்கிறது (பழ 4:22); அது விருப்பமும் கொண்டிருக்கிறது (யோவா 1:13).

இ) உலக நிலைமை:- இறுதியாகப் புலனீ டான மனிதனை அவனுடைய ஊனுடலால் குறிப்பிடுவதென்பது அவனது உலகத் தோற் றத்தை வெளிப்படுத்துவதாகும். இச்சொல் லானது இறைவன் மற்றும் ஆவியானவரில் விண்ணக உலகிற்கு மாற்றான நிலையில் பயன்படுத்தப்படும்போது, இத்தகைய பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது.

1. படைக்கப்பட்டது:- இறைவனுக்குப் புறம்பே, வானதூதர் முதற்கொண்டு, அனைத்தும் ஊனாகும் (எச 10:12); இந்தக் கூற்றில் திருச்சபையின் பல தந்தையர்களை விட அதிகக் கடினமான நிலையை யூதா திருமுகத்தில் (7) காணவில்லை; வானதூதர் களின் ஊன் நம்முடையதிலிருந்து வேறுபட் டது என்று குறிப்பிடுவதோடு அவர் நிறை வடைகிறார். அதனால் குலமுதியவர்கள் (உரோ 9:5), நமது தந்தை ஆபிரகாம் (உரோ 4:1) அல்லது உலகத் தலைவர்கள் (கொலோ 3:22; எபே 6:5), ஆகியவர்களைப் பற்றிப் பேசும் போது ''ஊனுடலின் படி'' என்று இணைத்துக் கூறுவது ஒரு போதும் தவறா காது. அவ்வாறே, 'ஊனுடலில்' வாழ்வது என்பது (2 கொரி 10:3; கலா 2:20; பிலி 1:22 தொ; யாக் 4:1-2) உலகில் வாழ்வதாகும். காணப்படுவதாகும் (கொலோ 2:1), புலனீ டாக இருப்பதாகும் (2:5). அது உலகில் வாழ்வதையே சாதாரணமாகக் குறிப்பிடும். உலகில் இயேசு வாழ்ந்த காலத்தைக் குறிப்பிடும்போது (1 யோவா 4:2; எபி 5:7), அவர் ஊனும் இரத்தமும் பெற்றுக் கொண்டார் என்று கூறப்படுகிறது (எபி 2:14).

2. வரையறையும் இயலாமையும்:- சாதாரண மாக ஊனைப்பற்றிப் பேசுவதென்பது ஒரு படைப்பின் உறுதியின்மையைப் பற்றிப் பேசுவதாகும். ''மனிதர் அனைவரும் புல் லுக்குச் சமம்...ஆனால், ஆண்டவரின் வார்த் தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்'' (ஏசா 40:6-7). வானகம் சார்ந்தவற்றிற்குப் பூமியைச் சார்ந்தவை இருப்பது போன்று ஆவிக்கு ஊன் உள்ளது; இவ்வாறாக, ''ஊனி யல்பின்படி தாவீதின் வழி வந்த இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியினால் ஆற்றல்மிக்க இறைமகனாக ஏற்படுத்தப்பட்டார்'' (உரோ 1:3-4; 1 திமோ 3:16). படைப்பு என்கிற நிலையில், தானாகவே இறையரசில் நுழைய மனிதனால் முடியவில்லை. ''ஊனுட

லால் பிறப்பது ஊனுடலே, ஆவியால் பிறப்பதோ ஆவி'' (யோவ 3:6; 1 கொரி 15:50). தசையும் இரத்தமும் என்ற அளவில் மனிதன் இனி ஒருபோதும், தானாகவே இறை உண்மைகளை அறிய முடியாது (மத் 16:17; கலா 1:16; எபே 6:12). அவற்றைத் தனது அறிவினால் மதிப்பிட அவன் வரம்பு மீறும்போது ''மனிதர் மதிப்பின்படி தன்னை ஞானியாகக்'' (1 கொரி 1:26) காட்டிக் கொள்கிறான். எனவே, உண்மையில், ''உயிர் அளிப்பது ஆவியே, ஊனுடல் ஒன்றுக்கும் உதவாது'' (யோவா 6:63); எடுத்துக் காட்டு நற்கருணைச் சடங்கின் பின்னணியில் மீட்பரைக் காணுதல்.

இத்தகைய உலக நிலையையே இறை மகன் ஏற்றுக் கொள்ள விரும்பினார். யோவான் கூறுவது போல, மனித வரையறைகளோடு இந்த உலகின் உண்மையான மனிதனாக ''வாக்கு மனுவுருவானார்'' (யோவா 1:14); அம்மனிதரில் விசுவாசிகள் மீட்பரையும், இறைமகனையும் காண்கின்றனர் (1 யோவா 4:2; 2 யோவா 7), முடிவில்லா வாழ்வை அடைய அவரது உடலையும் இரத்தத்தையும் உண்பதற்கு விருப்பமுள்ளவர்களாகுகின்றனர் (யோவா 6:53-58).

ஈ) ஊனுடலின் உலகம்:- இவ்வாறு, 'மண்ணுக்குச் (ஆதி 3:19; திருவுரை 12:7) சமமான ஊனுடலின் மூலம் மனிதன் இம்மைக்குரிய உலகைச் சார்ந்தவனாகிறான். இறைவன் அவனுக்கு அளித்த மூச்சின் மூலம் அவன் விண்ணக உலகுடன் உறவு கொள்கிறான். இரு உலகங்களுக்கும் உரிமையாக உள்ள இந்த எண்ணமானது, ஆவிகளின் உலகிற்கும் ஊனுடலின் உலகிற்கும் வேறுபாடு ஏற்படுத்த யூத ஆசிரியர்களைத் தூண்டியது. எபி. 12:9-இல் ஆவிகளின் தந்தையையும் ஊனுடலின்படியான தந்தையர்களையும் வேறுபடுத்துவது போல, விவிலியத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பாளருடைய கருத்துப்படி ''எல்லா ஊனுடல்களுக்கும் உயிரளிக்கின்ற ஆவிகளின் இறைவன்''. ''ஆவிகளுக்கும் எல்லா ஊனுடல்களுக்கும் இறைவன்'' ஆகிறார் (எண் 16:22; 27:16). ஆனால் அண்ட இரு பொருள்வாதம் மனிதன் தனக்குள் ஆவி மற்றும் ஊனுடல் ஆகியவற்றின் இரு உலகங்களையும் இரண்டு உட்பொருட்களாக இணைக்கின்ற மனிதவியல் இருமைக்கோட்பாட்டோடு குழப்பப்படக்கூடாது. விதிவிலக்காக அமைந்துள்ள இருவாசகங்களுக்கும் சரியான விளக்கம் கண்டுபிடிப்பது மிக அவசியமாக உள்ளது. உரோ 7:25-இல் பவுல் கிரேக்க சிந்தனையில் உள்ளது போன்று, தன்னையே கட்டுப்படுத்தக்கூடிய செயல்திறனைக் காரணமாகக் காட்டவில்லை; ஊனுடலில் உள்ளார்ந்த பாவத்தின் சீர்குலைவிற்கு முன்னால் ஆற்றலற்று நிற்கின்ற பார்வையாளனைக் காரணம் காட்டுகிறார். மத் 26:41-இல் உள்ள ஊக்கமுள்ள ஆவியானது மனிதனின் ஒரு பாகமாக இல்லாமல், இறைவனால் அருளப்பட்ட கொடையாக உள்ளது (சங் 51:14). மனிதன் என்னும் ''கலப்பு'' முழுமையின் கூறுகளில் ஒன்றாக உடல் எங்குமே இருந்ததில்லை. 2,3-ஆம் நூற்றாண்டுகளில் இராபிகளின் சிந்தனையின் தொடக்கத்தில் மாத்திரமே, யூத உலகில் மனிதவியல் இருமைக்கோட்பாடு தழுவப்பட்டது.

2. கடவுளின் முன்னால் பாவி:-

ஆயினும், ஒழுக்கவியல் இருமைக்கோட்பாடு என்ற மற்றொன்று உண்டு. அது தோற்றுவிக்கப்பட்ட சூழ்நிலையின்படி, இந்நிலையானது கவனமாய் வேற்றுமைப் படுத்தப்பட வேண்டும். சில கிரேக்கருக்கு, உடலானது ஆன்மாவின் சிறையாக இருப்பதால், ஒருவன் தவறான சூழ்நிலையினின்று தப்பிப்பதுபோல அதனின்று தப்பிக்க முயல வேண்டும். பிற்காலத்தில் எபிக்கூரியன் பிரச்சினையின் விளைவாக, தீயதாகவும், ஆவியைத் தரம் தாழ்த்துவதாகவும் கருதப்பட்ட பாலுணர்ச்சியோடு ஒன்றாகக் கருதப்பட்டு, ஊனுடலானது சிற்றின்பத்தின் இருப்பிடமாகியது. யூதா எதிர்த்துப் போராடிய ஒழுக்கவரம்பற்ற ஞானவாதம் இத்தகைய எபிக்கூரியன் கோட்பாடுகளை ஓரளவு பிரதிபலிக்கலாம் (யூதா 4:7). இயற்கையிலேயே தீயதாக உள்ள ஊனுடலானது வெல்லப்படவேண்டும். பிற்கால யூத மற்றும் புதிய ஏற்பாட்டு

ஆசிரியர்கள், அவர்கள் அளவில் இத்தகைய போராட்டத்தைப்பற்றிப் போதிக்கிறார் களெனில் அவர்கள் அதனை முற்றிலும் மாறு பட்ட கோணத்தில் செய்கிறார்கள். அதாவது மனிதன் தனது நம்பிக்கையைக் கொண் டுள்ள படைக்கப்பட்ட நிலையான ஊனுட லானது, தீமையின் ஆவி ஆட்சி புரிகின்ற உலகினைத் தனிச்சிறப்பாகக் குறிப்பதில் முடிகிறது.

ஆ) ஊனுடலில் பாவ நம்பிக்கை:- இறை வன் மட்டுமே நம்முடைய ஆதரவாக இருக்க வேண்டுமென ஏசயா போதிக்கின் றார்: ''எகிப்தியர்களுடைய குதிரைகள் வெறும் தசைப் பிண்டங்கள், ஆவியல்ல'' (ஏச 31:3). எரேமியா இருவித நம்பிக்கை களையும் வேறுபடுத்துகிறார். ''மனிதனை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன்; மனித பல வீனத்தையே அவன் தன் வலிமையாய்க் கொள்கிறான்; தன் இதயத்தை ஆண்டவரிட மிருந்து அகற்றுகிறான்'' என்கிறார். (எரே 17:5 தொ). பவுலும் இக்கருத்தையே பின்பற்று கிறார்; ''எந்த மனிதனும் இறைவன்முன் பெருமை பாராட்டாமலிருக்கட்டும்'' (1 கொரி 1:29). விருத்த சேதன சலுகையினைத் தங்களது பெருமையாகக் கொண்டிருந்த யூத ருக்கு (உரோ 2:25-29; கலா 6:12 தொ) முற்றிலும் மாறுபட்டவராகப் பவுல் கிறிஸ்து வைத்தவிர வேறு எவரிலும் பெருமை பாராட்ட விரும்பவில்லை (பிலி 3:3-4). அதன் விளைவாக, ஊனுடலில் வாழ்ந்தா லும் அதில் பெருமையடித்துக் கொள்ளாமல் இருக்கும்படி (2 கொரி 11:18) அவர் ஊனி யல்பின்படி நடப்பதே இல்லை (2 கொரி 10:2-3). இவ்வாறு நடப்பதன் மூலம், தனது விருப்பத்திலோ (2 கொரி 1:17), கிறிஸ்து வைப் பற்றிய தனது அறிவிலோ (5:16) ஒருவன் உடலியல்பு உள்ளவன் என்று அழைக்கப்படத் தகுதியற்றவனாகிறான் (1 கொரி 3:1.3; 2 கொரி 1:12). தவறு செய்த யூதர்களை இயேசு கண்டித்ததுபோல (யோவா 8:15), ஊனியல்பின்படி இயேசு வைத் தீர்ப்பிடுவதும் இயலக்கூடியதே: அவர்களது கண்கள் ஊனமாய் இருந்தபடி யால் (யோபு 10:4), தோற்றத்தைக் கொண்டு தீர்ப்பிட்டு (யோவா 7:24) அவர்கள், தங்களு டைய நிலையற்ற படைப்பு நிலைமையைப் பாவ நிலைக்கு மாற்றினார்கள். யோவானும் உலகைப் பாவமானது என்று விவரிக்கிறார். உடல் இச்சையைக் கண்டனம் செய்கிறார் (1 யோவா 2:16). இந்நிலையானது ஊனுட லுக்கு எதிரான குற்றச்சாட்டாக இல்லாமல், அதனைப் பாவமுடையதாக்கிய மனித விருப்பத்திற்கு எதிரானதாக உள்ளது. ஒவ் வொன்றும் தனது ஆதிக்கத்தின் கீழ் ஒரு உலகைக் கொண்டு, மனிதனுடைய இதயத் தைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளவிரும் பும் நல்லது, தீயது என இருவகையாக ஆவிகளை வேறுபடுத்தலாம். (கும்ரானில் உள்ளது போல) இது நன்மையின் ஆவி தீமையை வெற்றி கொள்ள இயலாத நிலை யில், இப்போராட்டம் நீடித்திருக்கும் என்ப தான இயல்பான இருமைக் கோட்பாட்டை எடுத்துக் கூறுவதன்று.

ஆ) பாவமிக்க உடலும் தூய்மையின் ஆவி யும்:- ஊன் மற்றும் ஆவி என்னும் இரு சொற்களைப் பயன்படுத்திப் பவுல் இப் போராட்டத்தையும் வெற்றியையும் முறைப் படுத்துகிறார். ஊனுடலுக்கும் ஆவிக்கும் இடையில் உள்ள வேறுபாடானது, கிரேக்கர் கள் ஆன்மாவிற்கும் உடலுக்கும், சுத்தத்திற் கும் அசுத்தத்திற்கும் இடையே ஏற்படுத்து கின்ற நிலைமைக்குத் தோற்றத்தில் மட் டுமே தொடர்புடையதாக உள்ளது. வானுக் கும் பூமிக்கும் இடையிலுள்ள செமித்திய எதிர்ப்பிலிருந்து இது தோன்றியிருந்தாலும், கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்பட்ட தூய ஆவி மற்றும் நமது ஊனுடல் நம்மைக் கொண்டு வந்து சேர்த்திருக்கும் பாவம் ஆகிய இரண்டு அனுபவங்களால் இது மாற்றப்பட்டுள்ளது.

1. ஊனுடலுக்கும் ஆவிக்கும் இடையி லான போராட்டம்:- இப்போராட்டத்தை விவரிக்கும் இலக்கிய எதிர்நிலை இரு கட் டங்களில் வளர்கின்றது. இவற்றைக் கலாத்தி யருக்கும் உரோமையருக்கும் எழுதப்பட்ட திருமுகங்களில் காண்கின்றோம்.

விசுவாசிகள் ஊனியல்பின்படியான ஆகார் மூலமாக இல்லாமல், ஆவியின்படி சாராள் மூலமாகப் பிறந்த ஆபிரகாமின் பிள்ளைகள் என்று பவுல் தெரிவிக்கிறார் (கலா 4:21-31). சட்டமும் விசுவாசமும் வருணிக்கின்ற மீட்பினுடைய வரலாற்றின் இரு மாறுபட்ட காலங்களாகப் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் குறிப்பிடப்பட்டுள்ளன. விசுவாசி பங்கு கொள்ளுகிற இரு உலகங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடு இதனின்றே வருகின்றது. ஊனுடலானது, பலுகிப்பெருகுமாறு சட்டம் உருவாக்கிய பாவத்தின் மிச்சமாகத் தோன்றுகிறது. ஆவியின் கொடையால் நிறைவேற்றப்பட்டதும், சட்டத்தின் நோக்கத்தில் நல்லவையாக உள்ளதுமான அனைத்தின் உருவமாக ஆவி உள்ளது. இவ்விரு வல்லமைகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடானது கிறிஸ்தவனுடைய இதயத்திலேயே விட்டுக்கொடுக்காததாக உள்ளது (கலா 5:17); அவன் ஊனியல்பின்படி வாழ முடியும்; ஆனால் ஆவியின்படி வாழ வேண்டும்; தூய ஆவியினால் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலையைத் தவறான வழியில் செலுத்திவிடக்கூடிய தொடர்ச்சியான அபாயமானது இதனின்றே வருகின்றது.

உரோமையருக்கான திருமுகத்தின் ஏழாவது மற்றும் எட்டாவது அதிகாரங்களில், வாழ்வு மற்றும் சாவு ஆகியவற்றின் இரு ஆதாரங்களும் எவ்வாறு செயல்படுகின்றன என்று பவுல் காட்டுகின்றார். கிறிஸ்துவின் மூலம் மனிதன் பாவத்தை அகற்றியிருந்தாலும், மனிதனில் ஒன்றன்பின் ஒன்றாகத் தங்கியுள்ள இவ்விரு வல்லமைகளும் (உரோ 7:17-20; 8:9 தொ) விசுவாசியில் இருவகை வாழ்க்கை முறைகளை ஏற்படுத்துகின்றன (8:4-17). ஊனியல்பின்படி வாழக்கூடிய வாய்ப்பானது, பாவம் நமக்குள்ளே விட்டுச் செல்கின்ற சுவடாகும். முன்னர்த் தங்கியிருந்த ஊனுடலின் மூலம் பாவம் இதனைச் செய்கின்றது.

2. ஊனுடலின் ஆதிக்கம்:- வாழ்க்கையின் கோட்பாடாக ஏற்கும்போது, ஊனுடலானது மனிதனுடைய நடத்தையைக் கட்டளையிடுகிறது. பாவத்தினுடைய வல்லமையினின்று அதனுடைய தனிச்சிறப்புரிமைகளையும் ஆசைகளையும், உரிமைச் சொத்தாகப் பெற்று, உண்மையான தன்னாட்சி பெறுகிறது. 'பாவத்தின் சட்டத்திற்குக்' கீழ்ப்படிபவர்களை அது அடிமையாக்குகின்றது (உரோ 7:25). அதிகாரத்துடன் (கொலோ 2:23) அது பின்னர், தன் ஆசைகளையும் (உரோ 8:5 தொ) இச்சைகளையும் (உரோ 13:14; கலா 3:3; 5:13-16) வெளிப்படுத்துகின்றது. அது தீய செயல்களையும் முன் கொண்டு வருகிறது (கலா 5:19) ஊனியல்பின்படி வாழ்வானது இவ்வாறு இருக்கும் பட்சத்தில் (உரோ 7:4), புரிந்து கொள்வதும் கூட ஊனியல்புள்ளதாக மாறுகிறது (கொலோ 2:18; 1 கொரி 3:3). இது உடலுக்கும், அது தன்னிலே எப்பக்கமும் சேராததாயினும், பொருந்தும். ஊனுடலின் கட்டளைக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது 'பாவத்திற்குட்பட்ட உடல்' என்றும் பெயரைப் (கொலோ 2;11) பெறுகிறது. இது ''பாவ உடலோடு'' (உரோ 6:6) ஒன்றாக்கப்படுகிறது. இது உண்மையில் பாவத்தின் ஊனால் வடிவமைக்கப்படுகிறது (8:3).

3. கிறிஸ்துவின் வெற்றி:- ஊனுடலை ஏற்று (கொலோ 1:22), பாவமாக மாறிய (2 கொரி 5:21) கிறிஸ்துவால் பாவம் வெற்றி கொள்ளப்பட்டது. பாவத்தின் கீழ் உழன்ற ஒரு நிலையை அவர் தம்மீதே ஏற்று அதே ஊனுடலில் பாவத்திற்கெதிரான தண்டனைத் தீர்ப்பை அளித்தார் (உரோ 8:3), அதுமுதல், கிறிஸ்தவன் தனது ஊனுடலை கிறிஸ்துவில், சிலுவையிலறைகிறான் (கலா 5:24). அவன் மேற்கொண்டுள்ள போரானது திடீர் அழிவுடன் முடிவதில்லை (6:8). அவன் படைக்கப்பட்ட உண்மையான நிலையை உணர்ந்து, தனது நம்பிக்கையை ஊனுடலின்மீதோ, தனது பலவீனத்திலோ வைக்காமல், வாழ்வளிக்கும் ஊற்றாகிய மீட்பருடைய இறப்பின் வல்லமைமீது வைக்கிற அளவுக்கு அவனுக்கு வெற்றி உறுதிப் படுத்தப்படுகிறது.

எ

எசுகக்கேல் (JEHEZKEL - இறைவன் வலிமை அளிப்பாராக)

ஓர் இனப்பெயர் முதல்வர். ஆரோனின் வழிவந்த ஒரு குரு. தாவீது காலத்தில் குருக்களின் 20-ஆவது பிரிவின் தலைவர் (1 நாள் 24:16).

எகர்-சகதூத்தா (JEGAR-SAHADUTHA - சாட்சி மேடை)

லாபானுக்கும் யாக்கோபுவுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையை நினைவுகூற உருவாக்கிய கற்குவியலுக்கு லாபான் இட்ட அரமேயப் பெயராகும் (ஆதி 31:47). எபிரேயப் பெயரான கலயேத்தைப் போன்று இதுவும் ஓர் இடத்தின் பெயருக்கு அடிப்படையாக அமைந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை.

எகல்லலேல் (JEHALLELEL - இறைவன் ஒளிர்வாராக)

1. இனப்பெயர் முதல்வர்; யூதாவின் வழித்தோன்றல் (1 நாள் 4:16).

2. மெராரி குலத்தைச் சார்ந்த ஒரு லேவியன். அசரியாவின் (18) தந்தை (2 நாள் 29:12).

எகிசிக்கியா (JEHIZKIAH - யாவே வலிமை அளிப்பாராக)

அரசன் பெக்கா காலத்தில் எப்பிராயிம் மக்கள் தலைவனும் சல்லூம் என்பவரின் மகனுமாவார் (2 நாள் 28:12).

எகிதியா (JEHDEIAH - யாவே மகிழ்வாராக)

1. தாவீதின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த லேவியருள் ஒருவர். சூபாயேலின் வழித்தோன்றல் (1 நாள் 24:20).

2. மேரோனோத்தியரான இவர் தாவீதின் கழுதைகளைக் கண்காணித்து வந்தார் (1 நாள் 27:30).

எகிப்தியன் (EGYPTIAN)

அ.ப.21:38-இல் பவுல் தவறாக ஒரு எகிப்தியனாகத் தொடர்புபடுத்தப்படுகின்றார். இந்த வாசகம் இரண்டு கேள்விகளை எழுப்புகிறது: (அ) அவன் யார்? (ஆ) எகிப்தியனாக அறிமுகப்படுத்துவதில் லூக்கா ஆசிரியரின் உட்கருத்து என்ன?

முதல் கேள்விக்கு நற்செய்தியாளர் லூக்கா கூறும் பதில் மொழி:- 1. அவன் கிரேக்க மொழியில் பேசாததால் அவன் ஒரு நாகரீகமற்ற கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவன். 2. அசீரியர்களின் தலைவனாக இருந்து நாலாயிரம் கொள்ளைக் கூட்டத்தாரைப் பாலைவனத்திற்கு அழைத்துச் சென்று குழப்பத்தை உருவாக்கியவன். 'கொள்ளைக்காரர்கள்' என்பது ஒரு சமயப் புரட்சியினை மறைமுகமாக உள்ளடக்கியிருக்கிறது. மேலும் பாலைவனத்தில்தான் மெசியா தோன்றுவார் என்ற கருத்து நிலவியது. பவுல் ஒரு சமயச் சர்ச்சையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் இதை லூக்கா தெளிவுபடுத்தவில்லை.

பெயர் சொல்லப்படாத, ஓர் எகிப்தியனைப்பற்றி யோசிபஸ் என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். வரலாற்று ஆசிரியர் குறிப்பிடும் கிளர்ச்சியில் கொள்ளைக் கூட்டத்தார் அனைவரும் வாள் ஏந்தியவர்களாக எருசலேம் தெருக்களில் ஓடிச்சென்று மிருகத்தனத்துடன் பார்ப்பவர்களையெல்லாம் கொன்று குவித்தவர்களாக விவரிக்கப்படுகின்றனர். ஆனால் பாலைவனத்தோடு தொடர்புடையவர்களாகக் காட்டப்படவில்லை. அதே நிகழ்ச்சியில் எருசலேம் நகரையே சேதப்படுத்திய இரக்கமற்ற கொடியவர்களைப் பற்றி, மற்றொரு குழுவினரைப்பற்றி, குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் இறை அருளால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக நடித்து மக்களனைவரையும் கடவுள் விடுதலை தரும் அடையாளங்களைக் காட்டுவார் என்று ஏமாற்றி, பாலைவனத்திற்குக் கடத்திச் சென்றனர். ஆனால் பெலிக்சு என்ற உரோமை ஆளுநர் ஒரு புரட்சியை முன்கூட்டியே எதிர்பார்த்ததால் காலாட்

படை, குதிரைப்படை வீரர்களை அனுப்பி அவர்களில் அதிகமான பேரை அழித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

யோசிபாசின் கருத்துப்படி எகிப்தியன் என்பவன் ஒரு போலி இறைவாக்கினனாக விவரிக்கப்படுகின்றான். அவன், எருசலேம் நுழைந்துவிடலாம் என்ற நம்பிக்கையில், முப்பதாயிரம் மக்களைப் பாலைவனத்திலிருந்து ஒலிவ மலைக்குக் கடத்திச் சென்று, அவர்களைத் தனக்குப் பணிந்து நடக்கச் செய்கின்றான். மீண்டும் பெலிக்சு உரோமைப் படைவீரர்களுடன் சேர்ந்து மக்களின் உதவியினால் எகிப்தியர்களை ஓடச் செய்தார்.

இதே நிகழ்ச்சியை மூன்றாவது முறையாக யோசிபஸ் விளக்கும்பொழுது எதிரிகளைக் கொள்ளைக்காரர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் விவரிக்கின்றார். இதில் வாள் ஏந்திய வீரர்கள் அருங்குறிகள் நிகழ்த்தப் போவதாக மக்களைக் கட்டாயப்படுத்திப் பாலைவனத்திற்கு நடத்திச் சென்றனர். பெலிக்சு அவர்களை மீட்டு வந்து தண்டித்தார். பழங்கால நிகழ்ச்சிகளில் எகிப்திலிருந்து ஒரு மனிதன் எருசலேமிற்கு வந்து மக்களை அவனுடன் ஒலிவமலைக்கு வருமாறு கட்டாயப்படுத்தினான் என்றும், அங்கு அவன் மக்களுக்கு எவ்வாறு எருசலேம் மதில் சுவர் வீழ்ச்சியுறும் என்பதைக் காட்டுவதாக உறுதி செய்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. உடனே பெலிக்சு குதிரைப் படை வீரர்களோடு சென்று அவர்களில் 400 பேரைக் கொன்று குவித்தார். ஆனால் எகிப்தியன் மட்டும் தப்பித்துச் சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று விவரிப்புக்களும் அ.ப.21:38-இல் கூறப்பட்டிருக்கும் எகிப்தியனும் ஒரே ஆளையோ ஒத்த நிகழ்ச்சியையோ குறிக்கிறது. எல்லா நிகழ்ச்சிகளும் எகிப்தியன் தப்பித்துச் சென்றதாகக் கூறியிருக்கிறது.

யோசிபஸ் கொடுத்திருக்கும் நிகழ்ச்சியமைப்பின்படி எகிப்தியன் ஒரு யூதனாக அல்லது மதம்மாறியவனாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் எவ்வாறு யூதனல்லாத ஒருவன் யூதக்கிளர்ச்சியை உருவாக்க முடியும்? மேலும் உரோமையர்களைத் தூக்கியெறியும் நோக்குடன் கடவுளின் கருவியாகிய இறைவாக்கினராக நடித்த எகிப்தியனைப் பற்றி யோசிபஸ் தருகின்ற விளக்கம், அந்த எகிப்தியன் யூதனாக இருந்தால்தான் பொருத்தமானதாக இருக்கும். ஆனால் ''நான் ஒரு யூதன்'' என்ற பவுலின் பதில் எகிப்தியன் யூதனல்ல என்று சுட்டுகிறது. விவிலிய விவரிப்புப்படி எகிப்தியன் 4000 பேர்களைக் கொண்டிருந்தான் என்பது யோசிபசின் எண்ணிக்கையைவிட நம்பத்தகுந்ததாக உள்ளது.

நற்செய்தியாளர் லூக்கா 'எகிப்தியன்' ஒருவனை இந்நிகழ்ச்சியில் புகுத்தியிருப்பதின் மூலம் (அ) உயர்தரக் கிரேக்க மொழி பேசும் பவுல் ஒரு நாகரீகமுடைய உரோமைக் குடிமகன் என்றும், (ஆ) உரோமை அதிகாரத்தின் பிரதிநிதி பவுலை எகிப்தியரோடு அடையாளப்படுத்தியது, அக்குற்றச்சாட்டைக் கைவிட்டு, பவுல் உரோமை அரசின்பால் கொண்ட பிரமாணிக்கத்தை எண்பிக்கவும், (இ) பவுல் நகரத்து மனிதன் என்ற முறையில் போலி இறைவாக்கினர்கள் மத் 24:24-26-இல் கூறப்பட்டிருக்கும் போலிக் கிறிஸ்துவோடு குழப்பப்படாமலிருக்கவும், (ஈ) பவுல் எபிரேய மொழியில் மக்களுக்குப் போதித்தவரும் (அ.ப.21:40) இறைவனின் திருவுளத்தை அறிய நம் தந்தையர்களின் இறைவனால் ஏற்படுத்தப்பட்டவருமாகிய (22:14) உண்மையான யூதர் என்றும், உரோமைப் பேரரசில் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சமயமாகிய யூதத்துவத்தின் உரிமைகளையும் சலுகைகளையும் பெற உரிமை உடையவர் என்றும் காட்டுகிறார்.

எகிப்து (EGYPT)

இந்நாடு வடகிழக்கு ஆப்பிரிக்காவில் ஒரு பகுதியாகும். நைல் நதியால் செழுமைப்படுத்தப்படுவது. பழங்காலத்தில் மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து நைல் நதியின் நான்காவது நீர்வீழ்ச்சிவரை பரவியிருந்தது. பண்டைய உலகின் தொன்மையான மற்றும் மாபெரும் நாகரிகங்களில் ஒன்றும் ஆகும்.

I. பெயர்:-

எகிப்து என்ற சொல்லானது முதன் முதலாக ஓமரின் 'ஒடிசி'யில் குறிப்பிடப்பட்டுள்ள 'அய்கிப்டோஸ்' என்ற கிரேக்கச் சொல்லினின்று தோன்றியிருக்கலாம். இச்சொல் ''பித்தாவினுடைய ஆவியின் வீடு'' என்ற பொருள்கொண்ட எகிப்தியச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இச்சொல் முதலில் கீழ் (வட) எகிப்தைக்குறித்தது. பின் முழுநாட்டையும் குறித்தது (ஓசே 9:6; ஏச 19:13). நைல் நதியின் பள்ளத்தாக்கிற்கு இருபுறமும் உள்ள பாலைப் பகுதி சிவப்புநிலம் என்று அழைக்கப்பட்டது. இதற்கு மாறாகப் பள்ளத்தாக்கின் மண் கருமையாக இருந்ததால் பள்ளத்தாக்கு ''கருப்புநிலம்'' என்று எகிப்தியரால் அழைக்கப்பட்டது. மேல் (தென்) மற்றும் கீழ் (வட)எகிப்துப் பகுதிகளை ஒன்று சேர்த்துத் தங்கள் நாட்டை அவர்கள் ''இரு நிலங்கள்'' என்றும், ''அன்புக்குரிய நிலம்'' என்றும் அழைத்தனர். எகிப்தியரல்லாதவர் பயன்படுத்திய பொதுப்பெயரை ''மிசுராயிம்'' என்ற எபிரேயச்சொல் கி.மு. 14-ஆம் நூற்றாண்டிலிருந்தது பிரதிபலிக்கிறது. வட, தென் எகிப்துக்களை இணைத்து இரட்டை வடிவமாகும் இச்சொல் என்ற கருத்து மொழியியலுக்கு ஒத்ததாக இல்லை. பொதுவாக எபிரேயப் பெயர் எகிப்து முழுவதையும் குறித்தாலும் ஏச 11:11-இல் அது வட எகிப்தை மட்டுமே குறிக்கிறது. அங்கு அது பத்திரோக அல்லது தென் எகிப்திலிருந்து வேறுபடுத்தப்படுகிறது.

II. புவியியல்:-

பண்டைய எகிப்து வடக்கே மத்திய தரைக்கடலாலும் மேற்கே லிபியா பாலைவனத்தினாலும் தெற்கே சினேயில் உள்ள நைல் நதியின் முதல் நீர்வீழ்ச்சியாலும் (புதிய அரசு காலத்தில் (1500) மேரோயேவிற்கு அருகிலுள்ள நான்காவது நீர்வீழ்ச்சி வரை), கிழக்கே அராபிய பாலைவனம் மற்றும் எகித்தினுடைய ஓடையாகிய ''வாடி ஏல்-ஆரிஸ்'' ஆலும் சூழப்பட்டிருந்தது (எண் 34:5). ''மிக்தோல் முதல் சினே வரை'' என்னும் விவிலிய விவரிப்பு (எச 29:10; 30:6), வடகிழக்குப் பகுதி தொடங்கி நீர்வீழ்ச்சிவரையுள்ள எகிப்து முழுவதையும் குறிப்பிடுகிறது.

மிலேத்துவைச் சார்ந்த எகாத்தே ஆறாவது நூற்றாண்டில் கூறியது போல எகிப்து நாடானது நைல் நதியின் கொடையாகும். மேலும் உண்மையில் நாட்டினுடைய இயற்கைத் தோற்றங்கள் . மட்டுமின்றி அதனுடைய வாழ்வும் நைல் நதியால் வரையறுக்கப்பட்டது. வெள்ளை நைல், நீல நைல் மற்றும் அத்திபாராநதிகள் மற்றும் பிற உபநதிகள் (இவையோ எகிப்தினுடைய எல்லைகளைக் கடந்தவை) ஆகியவை ஒன்று சேர்தலின் மூலம் உருவாக்கப்பட்ட நைல் நதியானது வடதிசை நோக்கி ஏறக்குறைய 3060 கி.மீ (1900 மைல்) தூரம் கார்தோமிலிருந்து மத்தியதரைக்கடல் வரை பாய்கிறது. சனவரியின் பிற்பகுதியில் நதியினுடைய நீர் அளவு மிகக்குறைவாக இருக்கும். எத்தியோப்பிய மலைப்பகுதிகளில் பெய்யும் பருவமழையால் பெருக்கெடுத்து சூலை-செப்டம்பர் மாதங்களில் எட்டுமடங்காகப் பெருகும். இப்பருவத்தாலான வெள்ளப்பெருக்கானது நைல் பள்ளத்தாக்கு முழுவதும் செழுமையான வண்டலைப்படியச் செய்கிறது. நிலங்களைப் பயிர் செய்ய உதவுகிறது. இது இல்லாவிடில் இயல்பாகவே மழையற்ற இப்பகுதி (அலக்சாந்திரியாவில் வருடத்திற்கு 20 செ.மீ., கெய்ரோவில் 3 செ.மீ., பிற பகுதிகளில் கணிப்பதற்கும் அரிதானது) பாலை நிலமாகவே இருக்கும் (ஏச 19:5-8).

நவீன கெய்ரோவிற்கு வடபகுதியில் 250 கி.மீ (150 மைல்) அகலமும் 160 கி.மீ. (100 மைல்) நீளமும் கொண்ட வண்டல் படிவிடம் அமையும் வண்ணம் நைல் நதி பிரிகிறது (பண்டைக் காலத்தில் கிட்டத்தட்ட பன்னிரண்டு கிளைகளைக் கொண்டிருக்கக் கூடும்). இருபது மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட இப்பகுதியானது கீழ் (வட) எகிப்து என்று அழைக்கப்பட்டு அதன் தலைநகரான மெம்பிசுவரை, தெற்கே பரவியிருந்தது. (தென்) எகிப்தானது மெம்பிசின் தென்

பகுதிலிருந்து அஸ்வான் வரையிலான நைல் பள்ளத்தாக்கின் 965 கி.மீ (600 மைல்) நீண்ட சமவெளியைக் கொண்டிருந்தது. 1 கி.மீட்டரிலிருந்து கிட்டதட்ட 20 கி.மீ (12 மைல்) வரை அகலமுடையதாக உள்ள இப்பகுதியானது அரசமரபுக் காலத்திற்குமுன் இருபத்திரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அமர்னா காலம் தவிர்த்து, தென் எகிப்தினுடைய தலைநகரானது ''திபிசுவில்'' இருந்தது (நர்கூ 3:8; எரே 46:25). அபிதோசின் தெற்கில் நைல்நதி மேற்குத் திசையில் ''பகுரு-யூசுப்'' (யோசேப்பின் நதி) ஆகப் பிரிகிறது. இது பாயும் பள்ளப்பகுதி வழியாக வடக்கு நோக்கி ஓடி, கரூண் ஏரிக்குள் பாய்கிறது.

நைல் பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியில், நவீன எகிப்துவின் நான்கில் மூன்று பகுதிகளை உள்ளடக்கிய (675000 சதுர கி.மீ = 260000 சதுரமைல்) மேற்கு அல்லது லிபியப் பாலைவனம் அமைந்துள்ளது. இது பெரியதும் வறண்டதுமான பகுதியாகும். பாறைகளாலும் மணலாலும் மூடி மறைக்கப்பட்ட இந்தச் சுண்ணாம்புப் பீடபூமியில் இங்கு மங்குமாகப் பல ஒயசீசுகள் (பாலைவனச் சோலைகள்) உண்டு. இவை கொப்பளிக்கின்ற நீருற்றுகளால் குடியிருக்கத்தக்கதாக அமைக்கப்பட்ட இயற்கையான பள்ளப்பகுதிகளாகும். இணை இணையாக அமைந்துள்ள 60 மீட்டரை (200 அடி) விட உயரமான மணற் குன்றுகளைக் கொண்டுள்ளது. பெரிய மணற்கடல். இது வடகிழக்கிலுள்ள ''சிவா'' ஒயசீசிலிருந்து தென்மேற்கிலுள்ள ''கிப்ரெல் கெபிர்'' மலைத்தொடர் வரை பரவியுள்ளது. கிழக்கில் நைல் நதிக்கும் செங்கடலுக்கும் இடைப்பட்ட பகுதி கிழக்கு அல்லது அராபியப் பாலைவனமாகும். இது கரடுமுரடான எரியும் தன்மையுடைய மலைகளைக் கொண்டது; கனிப்பொருள் வளமிக்கது. இங்குள்ள பல மலைமுகடுகள் 1525 மீட்டருக்கும் (5000 அடி) உயரமானவை. இவற்றிலிருந்து வழிந்தோடும் நீர் பல வாடிகளையும் (காட்டாறுகளை) பரந்த பள்ளத்தாக்குகளையும் உருவாக்கியுள்ளது. இவை இப்பகுதியில் பயணம் செய்வதற்குத் தடையாக உள்ளன.

III. வரலாறு:-

எகிப்திய வரலாறானது பல்வேறு வரலாற்றுக் காலக் கட்டங்களுக்கு ஏற்ப முப்பத்தொரு அரச மரபுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் எகிப்திய குரு மனேதோ (கி.மு.270)-வின் நூலை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவரது நூல் மெனெசால் எகிப்து ஒன்றுபடுவதற்கும் (3200) பெரிய அலக்சாந்தருடைய வெற்றிக்கும் (332) இடையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றது. இருபத்து ஆறாவது அரசுக்கு முற்பட்ட (663), குறிப்பாக மூன்றாவது ஆயிரம் ஆண்டு மற்றும் அதற்கும் முற்பட்ட, நிகழ்ச்சிகளின் துல்லியமான காலக் கட்டத்தைத் தீர்மானிப்பது கடினமாக உள்ளது.

எகிப்தில் மனிதர் வாழ்ந்ததைப்பற்றி 8000 ஆண்டிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம வாழ்வின் வளர்ச்சி, விவசாயம், கட்டடம் கட்டுதல் மற்றும் கலைகளின் முன்னேற்றமானது வரலாற்றுக்கு முற்பட்ட அல்லது அரச மரபுகளுக்கு முற்பட்ட அடுத்த ஐந்தாயிரம் ஆண்டுகளைச் சிறப்பிக்கிறது. ஒன்றன்பின் ஒன்றாக வந்த காலக்கட்டங்கள் தாசியன்-பதரியான், அம்நாசியான் (அல்லது 1 நெகதா), கெர்செயன் (2 நெகதா) மற்றும் செமாய்னேன் (3 நெகதா) என்று அடையாளம் காட்டப்படுகின்றன. இறுதிக் காலக்கட்டத்திற்குள் (நான்காயிரம் ஆண்டின் பிற்பகுதி) சுமேருடன் குறிப்பிடத்தக்க கலாச்சாரத் தொடர்புகள் ஏற்பட்டன. எண்ணற்ற உள்நாட்டுப் பகுதிகள் ஒன்று சேர்ந்து தென் மற்றும் வட எகிப்துகளை உருவாக்கின.

ஆற்றின் கழிமுகப்பகுதியைத் தென்புறப் படைகள் வென்று தென் எகிப்தைச்சேர்ந்த அரச குடும்பத்தின்கீழ் இரண்டு எகிப்துகளும் ஒன்று சேர்க்கப்படுதலோடு எகிப்திய வரலாறு தொடங்குகிறது. ஒருவேளை, கூட்டணி சேர்தல், வெற்றி கொள்ளுதல் போன்றவை படிப்படியாகவே நடந்திருக்க வேண்டும். மேனி (ஒருவேளை நார்மாராக இருக்கலாம்) என்பவர் இரண்டு அரசுகளின் மீதும்

இரட்டை அரசுரிமையை ஏற்படுத்தி மெம்பி சில் மையத் தலைநகரை அமைத்து இருபகு திகளையும் இணைத்ததாகப் பாரம்பரியம் கருதுகிறது. இந்த அரச மரபுகளின் தொடக்க காலத்தில் அபிதோசிற்கு அருகிலுள்ள தீசைச் சேர்ந்த இரண்டு தென் மரபுகள் எகிப்தை ஆண்டன (3200-2700). இவை வலிமை மிக்க மத்திய அரசை ஏற்படுத்தின. இக்காலத்தில் பல பொறிநுட்ப முன்னேற் றங்களும் செயல்படுத்தப்பட்டன.

மூன்றாவது அரசமரபுக் காலத்தில், பழைய அரசு அல்லது பிரமீடு காலம் (2700-2150) எனப்படும் புதிய காலக் கட்டத்தில் எகிப்து நுழைந்தது. சார்கோனுடைய அக் காது நாட்டுடன் போட்டியிடக்கூடிய அள வுக்குக் கலாச்சாரம் மற்றும் செல்வச் செழிப் பிலும் எகிப்து முன்னேறியது. இது எகிப் திய வரலாற்றின் பொற்காலமாகும். வரலாற் றிலேயே முதலாவதாகக் கல்லிலிருந்து வெட்டப்பட்ட நினைவுச் சின்னமாகிய சுக் காராவில் உள்ள பெரிய படி பிரமீடைத் தனது கட்டடக் கலைஞர் (மற்றும் ஞானி, மருத்துவர்) இமோதெபியின் முயற்சியால் பார்வேன் சோசெர் என்பவர் கட்டியெழுப்பி னார். நான்காவது அரசமரபின்கீழ் எகிப்தினு டைய கட்டடக்கலையின் சாதனைகள் அவற் றின் உச்சியை அடைந்தன. கிசேயிலுள்ள கூபு (கெயோப்)வின் பெரிய பிரமீடு, மற் றும் காப்பிரே (அருகிலுள்ள சூரரிமா உரு வச்சிலை மற்றும் பள்ளத்தாக்கு ஆலயம் ஆகியவற்றையும் உருவாக்கிய செப்ரென்), மென்காரே (மிசேரினுஸ்) ஆகிய இடங்க ளில் உள்ளவையும் கட்டப்பட்டன. அடுத்த இரண்டு அரச மரபுக் காலங்கள் முழுவதும் பிரமீடு கட்டும் பணி தொடர்ந்தது. ஆனால் இச்செயல்கள் பொருளாதாரம் மற்றும் அர சாங்க ஆட்சி முறையைப் பெரிதும் பாதித் தன. இதன் விளைவாக, ஐந்தாவது அரசமர புக் காலத்தில் அரசியலாட்சியைப் பன்முகப் படுத்தும் போக்கு தொடங்கியது. ஆறாவது அரசமரபின் வணிகம் மற்றும் ஆய்வு சார்ந்த முயற்சிகளும் (தென் பாலஸ்தீன ''மணலில் உறைவோருக்கு'' எதிரான போர்ப்படையெ முச்சிகளும்-2325) தங்களுக்கே உரிய பாதிப்பை ஏற்படுத்தின. 2-ஆம் பேபி-யின் தொண்ணூற்றொன்பது ஆண்டு கால ஆட்சி யின் இறுதியில் நாடானது சீர்கெட்டுப் போயிற்று. உள்நாட்டுப் போருக்குத் தயாராக இருந்தது.

அதற்குப்பின் எகிப்து முதலாவது இடைப் பட்ட காலம் எனப்படும் (2180-2040) இருண்ட காலத்திற்குள் நுழைந்தது. ஏழா வது மற்றும் எட்டாவது அரசமரபுகள் (சில அறிஞர்கள் இவற்றைப் பழைய அரசு மறைந்து கொண்டிருந்த காலக்கட்டத்திற் குள் உட்படுத்துவர்) புத்துயிர் பெற்றெழுந்த உள்நாட்டு அரசுகளின்மீது பெயரளவி லேயே ஆதிக்கம் செலுத்தினர். இருபதாண் டுகளுக்குச் சற்று மேலான காலத்திற்குள் பதினைந்து அரசர்கள் அரியணை ஏறினர். பஞ்சமும் சமூகப்புரட்சிகளும் பெருமள வில் பரவின. ஆசியாவைச் சேர்ந்தவர்கள் (கிழக்குத் திசையினர்) ஆற்று முகத்துவாரப் பகுதியில் ஊடுருவிப்பரவினர். 2160-ஆம் ஆண்டையொட்டி, பேயுமிற்கு அருகிலுள்ள ஏராக்லெயோபொலிவில் முதலாம் மெரிப்ரே கேத்தியின் கீழ், ஒரு புதிய அரச மரபு ஏற்பட்டது. எராக்லெயோபொலியைச் சேர்ந்த ஒன்பதாவது பத்தாவது அரசமரபுகள் முகத்துவாரம் பகுதியில் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றன. ஒன்பதா வது அரசமரபின் இறுதிக் கட்டத்தில் (2133) திபிசில் (தியோஸ்பெலி) மற்றொரு அரச மரபு எழுந்தது. வடபகுதியின் மீது அதிகாரம் செலுத்த அது ஏராக்லெயோபொலிவுடன் போட்டியிட்டு 2040-இல் தென் மற்றும் வட எகிப்துகளை ஒன்றுபடுத்துவதில் வெற்றி யும் கண்டது.

பதினோறாவது அரசமரபின் பிற்கால அர சர்களால் இவர்கள் வாதி அம்மாத்-தில் கரங்கங்களைத் திறந்தனர், புன்த்தோடு வாணிபத்தைத் தொடங்கினர்; மற்றும் நுபியா-வை மீண்டும் வெல்ல முயன்றனர். அமைக்கப்பட்ட அடித்தளத்தின்மேல், பன் னிரண்டாவது அரசமரபு மத்திய அரசு என்ற ழைக்கப்பட்ட (2000-1786) புதிய பொற் காலத்தை நிறுவியது. அதனை நிறுவின முத

லாம் அமெனெமெம்கெத் வலிமையான திறமைமிக்க தலைமைப் பொறுப்பை உறுதிப் படுத்தப் படிப்படியாக முயன்றார். அவர் தலைநகரைத் திபிசிலிருந்து மெம்பிசிற்குத் தெற்கே 40 கி.மீ (25 மைல்) தொலைவிலுள்ள இக்-தாவிக்கு மாற்றினார். மாவட்ட அமைப்பை மாற்றியமைத்து, அரச வாரிசுரிமையை உறுதிப்படுத்த, கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்தினார். அரசமரபைச் சேர்ந்த பாரவோன்கள், ஆசியத் தாக்குதல்களுக்கு எதிராகக் கிழக்கு ஆற்று முகத்துவாரத்தில் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்தி, மோயேரிஸ் ஏரியில் நீர்த்தேக்கத்தைக் கட்டியதன் மூலம் பேயூம் பகுதியை முன்னேற்றினர். மூன்றாவது செசோஸ்த்ரிஸ், இரண்டாம் நீர்வீழ்ச்சிவரை நுபியாவைக் கீழ்ப்படுத்துவதை நிறைவேற்றி, செக்கேம்வரை பாலஸ்தீனத்தின் மேல் படையெடுத்தார். கிரேத்தாவுடன் வாணிபம் தொடரப்பட்டது. பிப்லோஸ் (கெபல்) கத்ன, மற்றும் உகாரித்து ஆகிய இடங்களில் எகிப்தியத் தாக்கம் காணப்படுகிறது. இக்காலத்தில் இலக்கியமும் வளர்ச்சியுற்றது. அமெனெம்கெத்தின் அறிவுரைகள், சினுகேயின் கதை மற்றும் நெப்பரித் தீர்க்கதரிசனம் ஆகியவை இதற்குச் சான்றாக உள்ளன. நான்காம் அமெனெம்கெத் மற்றும் செபெக்னோப்ரு அரசியினுடைய குறுகியகால ஆட்சியுடன் இந்த அரச மரபு முடிவுபெற்றது. பெரும்பாலான அறிஞர்கள் ஆபிரகாம் எகிப்திற்குச் சென்றது இக்காலத்தில்தான் என்பர் (ஆதி 12:10-20).

மீண்டும் ஒருமுறை மத்திய அரசானது வலுவிழந்த நிலையில் பதின்மூன்றாவது (தேபன்) அரசமரபு தோன்றியது. இதற்குப் போட்டியாக ஆற்றுக்கழிமுகப்பகுதியின் மேற்கிலுள்ள கோயிஸ் என்னுமிடத்தில் பதினான்காம் அரசமரபு தோன்றியது. நாடுமுழுவதும் கிளர்ச்சிகள் தோன்றின. நாடானது இரண்டாவது இருண்ட காலத்திற்குள் புகுந்தது. இதை இரண்டாவது இடைப்பட்ட காலம் என்றழைப்பர் வரலாற்று வல்லுநர்கள் (1786-1550). இரண்டாவது மத்திய வெண்கலக்காலத்தைச் சேர்ந்த எமோரிய இயக்கங்களும் அந்நியர்களும் ஒன்றன்பின் ஒன்றாகக் கிழக்குக் கழிமுகப்பகுதியில் புகுந்தனர். இவர்கள் 15-ஆவது 16-ஆவது அரசமரபுகளை அமைத்தனர் (1720;1674). கைக்சோஸ் எனப்பட்ட இந்த அந்நியர்கள் அவரிசில் உள்ள தங்களுடைய தலைநகரினின்று எகிப்து முழுவதும் தங்களுடைய ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர். பதினாறாம் நூற்றாண்டின் மத்தியில் பதினேழாவது அரசினுடைய (வலுவிழந்த பதின்மூன்றாவது அரசினுடைய வாரிசு) ஒரு தேபன் அரசராகிய காமோஸ் என்பவர் நுபிய கூலிப்படை வீரர்களின் துணையுடன் கைக்சோஸ்களைத் தாக்குவதற்காக வடக்கு நோக்கிப் பயணமானார். இவருடைய சகோதரன் அக்மோஸ் கைக்சோஸ்களைத் தோற்கடித்தார். இவர் தென்மேற்குப் பாலஸ்தீனத்தின்மீது படையெடுத்தார்.

கைக்சோஸ்களை வெளியேற்றுதலுடன் ஒருவேளை இவர்களை நாட்டின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொண்டிருக்கலாம். எகிப்து தனது பரப்பளவை விரிவுபடுத்தியது. ஆதிக்கத்தை வலுப்படுத்தியது. இக்காலம் புதிய அரசு அல்லது பேரரசு என்றழைக்கப்படும். பதினெட்டாவது அரசினைத் தோற்றுவித்தவர் என்று அறிஞர்பலரால் கருதப்படும் அக்மோஸ் எகிப்தை மீண்டும் ஒன்றுபடுத்தி நிலைப்படுத்தினார். அவரது மகனாகிய முதலாம் அமெனொதெப்பு தென் எல்லையினை மூன்றாவது நீர்வீழ்ச்சிவரை விரிவுபடுத்தினார். அவரது வாரிசாகிய முதலாம் துத்மோசு யூப்பிரத்திசுப் பகுதியை நோக்கி முன்னேறுவதற்குமுன் நான்காவது நீர்வீழ்ச்சிக்குச் சற்றுத் தென்புறமாக உள்ள கூசு பகுதியை வென்றார். இவர் குறுகிய காலத்திற்கே ஆட்சி செய்து இறந்தார். இளைய மூன்றாம் துத்மோசிற்குத் துணை ஆட்சியாளராக நியமிக்கப்பட்ட இரண்டாம் துத்மோசின் மனைவியாகிய கத்செப்சுத்து என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினார். இவள் ஒரு ஆற்றல்மிக்க தலைவி. அவள் எண்ணற்ற கோவில்களை மீண்டும் புதுப்பித்தாள். அவளுடைய முன்னோர்களின் திட்டங்களை நிறைவு செய்தாள், மற்றும் அமைதியான வாணிபத்தில் ஈடுபட்டாள். அவளுடைய

ஆட்சியின் இருபத்து இரண்டாம் ஆண்டில் அரியணையைக் கைப்பற்றிய மூன்றாவது துத்மோசு, உடனடியாக நாடுகளை வென்று விரிவுபடுத்தும் பணியில் ஈடுபடலானார். இந்த வெற்றியானது, ஓரோன்தெசில் காதேசுக்கு எதிரான ஆறு போர்களையும் சீரியா மற்றும் பாலஸ்தீனத்தில் பதினேழு போர்களையும் கொண்டதாகும். எகிப்திய பாரவோன்களில் தலைசிறந்தவராக ஒரு சிலரால் இவர் கருதப்படுகிறார். அவரது வாரிசாகிய இரண்டாம் அமெனெதெப்பு ஓரோன்தெசில் எழுந்த சீரிய கிளர்ச்சியை அடக்கினார். மித்தானிய இளவரசியை மணந்ததன் மூலம் நான்காம் துத்மோசு, இத்தியருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். திபிசிலும் நுபியாவிலும் மூன்றாம் அமெனெதெப்பு பல கட்டடங்களையெழுப்பினார். அவரது ஆட்சியின் ஆறாவது ஆண்டில் சூரியக் கடவுளாகிய அதேனுக்குச் சார்பாக வலிமை மிக்க ஆமோனின் குருத்துவத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த நான்காம் அமெனெதெப்பு தனது பெயரை அகெனதென் என்று மாற்றிக்கொண்டு, நவீன தேல் ஏல்-அமர்னாவிற்கு அருகில் அகெததென் என்னும் புதிய தலைநகரை ஏற்படுத்தினார். ஆனால், அமர்னா ஏடுகள் அவர் புதிய சடங்கு முறைகளிலும் தனிப்பட்ட முயற்சிகளிலும் மூழ்கிவிட்டதன் காரணமாக அரசாட்சியின் பொறுப்புகளை உதறிவிட்டார் எனக் குறிப்பிடுகின்றன. அகெனதெனுடைய இரண்டு மருமகன்களாகிய ஸ்மென்க்கரே மற்றும் துதன்கமென் ஆகியோருடைய குறுகிய ஆட்சிக் காலத்தில் அமோனிய குருத்துவம் மீண்டும் அதிகாரத்தைப் பெற்றது. வாரிசு உரிமையில் குழப்பம் ஏற்பட்டது. அது முதலில் அதேன் குருவாகிய ஆயிற்கும் படைத்தலைவனும் அந்நியனுமான கோரேம்பிற்கும் அளிக்கப்பட்டது. பின்னவர் சீரிய-பாலஸ்தீனத்தில் எழுந்த கிளர்ச்சியை அடக்கினார்.

கோரேம்பிற்குப் பின்னர் பத்தொன்பதாம் அரசைத் தொடங்கிய அவருடைய அமைச்சராகிய வயதான பெராமெசு (முதலாம் இராம்சேசு) பதவிக்கு வந்தார். முதலாம் சேத்தி பாலஸ்தீனத்தில் போரிட்டு அபிருவைத் தோற்கடித்தார். இத்தியருடன் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். தனது அறுபத்தியேழு ஆண்டுகால ஆட்சியில் இரண்டாம் இராம்சேசு, நுபியர், இலிபியர், சீரியர், மற்றும் இத்தியர் ஆகியோருடன் போரிட்டார். ஓரோன்தெசில் உள்ள காதேசில் அவர் மயிரிழையில் சூழ்ச்சியினின்று தப்பி இத்தியரைத் தோற்கடித்தார். மேலும் பதினாறு ஆண்டுகாலப் போராட்டங்களுக்குப் பின்னர் இத்திய அரசனான கத்துசிலிசின் மகளைத் திருமணம் செய்து இராம்சேசு உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். கழிமுகப்பகுதியில் அபுசிம்பெல் மற்றும் கர்னாக்கில் உள்ள கோவில்கள் மற்றும் இராமாசேசில் (அநேகமாக விவிலிய இராம்சேசு யாத் 1:11) உள்ள அரண்மனை போன்ற எண்ணற்ற நினைவுச் சின்னங்களையும் மற்றும் கட்டடங்களையும் எழுப்பினார். இஸ்ராயேலினுடைய தொன்மையான விவிலியத்திற்கு அப்பாற்பட்ட குறிப்புகளைக் கொண்டுள்ள இஸ்ராயேலின் கல்தூணில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவரது பதின்மூன்றாவது மகனும் வாரிசுமாகிய மெர்னெப்தா பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்தார். பின்னர் இலிபியர் மற்றும் மத்திய தரைக்கடல் மக்கள் ஆகியோர் அடங்கிய கூட்டமைப்புகளின் தாக்குதலை விலக்கினார். யாத்திரைக்குப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காலம் குறித்தால், முதலாம் சேத்தி இஸ்ராயேலரைக் கொடுமைப்படுத்திய பாரவோனாகயிருக்க வேண்டும். இரண்டாம் இராமசேசு யாத்திரைக்காலத்தின் பாரவோனாவார்.

பத்தொன்பதாம் அரசமரபின் இறுதிக் காலத்தில் குறுகிய காலத்திற்குத் தொடர்ந்து அரசக் குழப்பம் ஏற்பட்டது. சேத்னகாத்து இதைத்தடுத்து நிறுத்தி இருபதாம் அரசமரபை ஏற்படுத்தினார். அரச பாரவோன்களில் இறுதியானவரும் அவருடைய மகனுமாகிய மூன்றாம் இராம்சேசு கடல் மக்களுடைய தாக்குதலை விலக்கி, பாலஸ்தீனக் கரையை நோக்கி அதனைத் திருப்பிவிட்டார். மூன்றாம் இராம்சேசினுடைய ஆட்சியின்

இறுதிக்காலத்திற்குள் எகிப்திய ஆட்சியானது படிப்படியாக வீழ்ச்சியுறத் தொடங்கியது. வயதான அரசனுடைய மரணத்திற்குச் சிறிது காலம் முன்னர், அரச அந்தப்புரத்திற்குள்ளேயே கண்டுபிடிக்கப்பட்ட கொலை முயற்சி இதனைக் கோடிட்டுக் காட்டுகிறது. பத்தாண்டுகளுக்குள், ஆசியாவிலுள்ள எகிப்தியப் பேரரசினுடைய சுவடுகள் சிதறுண்டு போயின. நான்கு முதல் பதினொன்றாவது வரையிலான பாரவோன் இராம்சேசுகளின் கீழ்ப் புதிய அரசினுடைய எஞ்சிய ஆண்டுகள் அதிகார ஊழல், கடுமையான பணவீக்கம், தொழிலாளர் போராட்டங்கள் மற்றும் அரச கல்லறைகளைப் பெருவாரியாகக் கொள்ளையடித்தல் ஆகியவற்றால் சிறப்புப் பெற்றன. பதினொன்றாம் இராம்சேசு பெயரளவிற்கே அரசனாக இருந்தார். அரச பட்டத்திற்கு உரிமை கொண்டாடிய அமோனியக் குருவாகிய கெரிகோர் மற்றும் நுபியாவின் ஆளுநராகிய பின்காசி ஆகியோரின் ஆதிக்கத்தில் நாடு நலிவுற்றது.

மீண்டும் ஒரு முறை தென் மற்றும் வட எகிப்து என்றும், எண்ணற்ற சிறிய அளவிலான சிற்றரசுகள் என்றும் துண்டுபடுத்தப்பட்ட நாடானது போட்டி அரசுகளால் ஆளப்பட்டு வந்தது. அறிஞர் சிலர் இருபத்து ஒன்று முதல் இருபத்து ஐந்தாவது அரசு மரபு வரையிலான காலத்தை (1085-664) மூன்றாவது இடைப்பட்ட காலம் என்று அழைக்கின்றனர். திபிசிலிருந்து தென் எகிப்தை இறையாட்சி நாடாக ஆமோனின் தலைமைக் குருக்களான கெரியோரின் சந்ததியினர் ஆண்டு வந்தனர். அதே வேளையில் தானிசிலிருந்து ஆண்டு வந்த இருபத்து ஒன்றாவது அரசமரபை நசுபனேப்தெத்து (ஸ்மென்தெஸ்) நிறுவினார். இரு நாடுகளுமே நிலையான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்ற முடியவில்லை. எகிப்தின் பெருமை பெரிதும் வீழ்ச்சியுற்றிருந்தது என்பதைப் பிரதிபலிப்பதுபோல எகிப்திய வெனாமுனுடைய தீய நிகழ்ச்சி இடையூறுகளால் உள்ளத்தை உருக்கும் விதத்தில் பிரதிபலிக்கிறது. தாவீதினுடைய முன்னேற்றங்களினின்று தப்பி ஓடிய ஏதோமிய காதாதுக்கு இந்த அரசுதான் தஞ்சம் அளித்தது (1 அர 11:15-22). சாலமோன் திருமண உறவு ஏற்படுத்திக்கொண்டதும் இவர்களுடனே (3:1;9:16). தானித்து அரசைத் தொடர்ந்து கிழக்கு ஆற்றுக் கழிமுகத் துவாரத்திலுள்ள புபஸ்தியினின்று ஆண்டு வந்த பையும் மற்றும் கழிமுகப்பகுதியைச் சேர்ந்த ஆற்றல் மிக்க இலிபியரின் வாரிசுகள் ஆட்சி புரிந்தனர். இருபத்து இரண்டாவது அரசைத் (945-730) தோற்றுவித்த முதலாம் செசொங்கு எகிப்தை நிலைப்படுத்தி, தன்னுடைய மகனைத் திபிசின் தலைமைக்குருவாக ஏற்படுத்தினார். இஸ்ராயேல் பேரரசின் பிளவிற்குப் பிறகு, அவர் பாலஸ்தீனத்தின்மீது படையெடுத்து யூதாவையும் இஸ்ராயேலையும் கீழ்ப்படுத்தினார் (1 அர 14:25-26; 2 நாள் 12:2-9) செசொங்குக்குப்பின் வந்த முதலாம் ஒசோர்கோன் யூதாவிற்கு எதிராகப்போரிடுமாறு தன்னுடைய எத்தியோப்பிய படைத்தளபதியான சேராவை அனுப்பினார். ஆனால் அவரோ யூதாவின் அரசனாகிய ஆசாவினால் அடியோடு விரட்டப்பட்டார் (14:9-15). எகிப்திய ஒற்றுமையானது நிலையற்றது என மீண்டும் நிரூபிக்கப்பட்டது; உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு வெள்ளத்தினால் அழிக்கப்பட்ட நாடானது மீண்டும் ஒருமுறை போட்டி அரச மரபுகளின் பாதிப்புக்குள்ளாகியது. இருபத்து மூன்றாவதாகிய மற்றொரு இலிபிய அரசு (817-739) திபிசில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. (மனேதோ அவர்களைத் தானிசில் சுட்டிக் காட்டுகிறார்). எண்ணற்ற உள்நாட்டு அரசுகள் (ஆளுகின்ற அரசர்களின் பிள்ளைகளையும் சேர்த்து) அதிகாரத்திற்காகப் போட்டியிட்டுக்கொண்டிருந்த வேளையில் இக்காலத்தின் இறுதியில் மேலுமிரண்டு அதிகாரபூர்வ அரசுகள் எழுந்தன. இருபத்து நான்காவது அரசானது மேற்கு ஆற்றுக் கழிமுகப்பகுதியிலுள்ள சாயிசிலிருந்து குறுகியகாலத்திற்கு அரசாண்டது (730-715). அதனைத் தோற்றுவித்தவராகிய தப்னெகெத்து பெரும்பாலான மத்திய எகிப்து நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தப் பதினாறு உள்நாட்டு ஆட்சியாளர்களைச் சேர்த்துக் கொண்டார். இது புதிய அரசின் இறுதிக்காலத்தில் நான்காம்

நீர்வீழ்ச்சியின் அருகே நபத்தாவில் அமைக்கப்பட்ட நுபிய அரசின் தலைவராகிய பியாங்கியின் சினத்தைத் தூண்டியது. இருபத்து ஐந்தாவது அரசிற்குத் (730-656) தலைமை தாங்கிய பியாங்கு மெம்பிசைக் கைப்பற்றி அதனுடைய வடகூட்டணியை விரட்டியடித்துத் திபிசில் அமோனின் இறைபக்தையாகத் (கடவுளின் மனைவியாக) தனது மகளை நியமித்தார். அவரது சகோதரராகிய சாபாக்கா, மீண்டும் எகிப்தை வென்று, விடாப்பிடியாகத் தொல்லை கொடுத்த சயித் பெகென்ரெனெப்பை நீக்கினார். சாபாக்கா அசீரிய அரசன் இரண்டாம் சார்கோனோடு வெளிப்படையாக நட்புறவு கொண்டிருந்தாலும், அசீரிய முன்னேற்றத்தை எதிர்க்க சீரியர்கள் மற்றும் பாலஸ்தீனியர்களைத் தூண்டி வந்தார், இளைய பாரவோனாகிய சபத்தாக்கா 701-ஆம் ஆண்டில் சனகெரிபிற்கு எதிராக, யூதாவின் எசக்கியாவிற்குத் துணைபுரிய அனுபவமற்ற தளபதி தகர்காவை அனுப்பினார் (2 அர 19:9; எச 37:9). பிற்காலத்தில் பாரவோனாக இருந்த தகர்காவை அசீரிய எசார்கத்தோன் தோற்கடித்து 671-இல் மெம்பிசைக் கைப்பற்றி உள்நாட்டு ஆளுநர்களை ஏற்படுத்தினார். தகர்கா உடனடியாக நகரைத் திரும்ப அடைந்தாலும் அசூர்பானிபால் அவரை வெளியேற்றிவிட்டு சாயிசில் நெக்கோவை ஆளுநராக ஏற்படுத்தினார். எகிப்திய பாரவோன் தெனெதாமோன் மெம்பிசை மீண்டும் கைப்பற்ற விரும்பியபோது அசூர்பானிப்பால் திபிசை அழித்து எகிப்தின்மீதான எத்தியோப்பிய ஆட்சியை முடிவிற்குக்கொண்டு வந்தார் (663).

அசூர்பானிபால் பாபிலோனியா, எலாம் மற்றும் அரேபியாக் கிளர்ச்சிகளை அடக்குவதில் ஈடுபட்டிருந்தபோது, பாரவோன் முதலாம் சாம்திக்கு எகிப்து மீதான அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றினார். அவருடைய இருபத்து ஆறாவது அரசானது (663-525), எகிப்திய மறுமலர்ச்சி அல்லது மீட்சி எனப்படுகின்ற வளமும் கலையார்வ நாட்டமும் மிக்கதொரு காலத்தைத் தோற்றுவித்தது. நினிவேயின் வீழ்ச்சிக்குப் பின்னர், தன்னுடைய அசீரியத் தோழர்களுக்கு உதவ சாம்திக்கு எடுத்த முயற்சி மெகிதோப் போரினால் சிறிது காலத்திற்குத் தடுக்கப்பட்டது. இந்தப்போரில் யூதாவின் அரசரான யோசியா கொல்லப்பட்டார் (2 அர 23:29). மூன்று மாதங்களுக்குப் பின்னர், யூதாவின் அரசராயிருந்த யோவகாசை நீக்கிவிட்டு எகிப்தியருக்கு மிகவும் சாதகமாக இருந்தவராகக் கருதப்பட்ட அவருடைய மூத்த சகோதரராகிய யோயாக்கிமை நெக்கோ அரசனாக்கினார் (23:33-34). நெக்கோவின் படைகள் 605-ஆம் ஆண்டில் கர்கெமிசு என்னுமிடத்தில் பாபிலோனியரால் வலுவாகத் தோற்கடிக்கப்பட்டன. சிரியா, பாலஸ்தீனம் ஆகியவற்றின் மீதான அதிகாரத்தை எகிப்து இழந்தது. ஆயினும் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், தங்களது தாய் நாட்டின் மீதான நெபுக்கதுனேசாருடைய படையெடுப்பைத் தடுக்க எகிப்தியரால் முடிந்தது. 569-இல் கோப்பிரா பாபிலோனியாவிற்கு எதிராகச் செதேக்கியாவைத் தூண்டிவிட்டார் (எரே 37:5; எச 17:15). இதன் விளைவாக நெபுக்கதுனேசார் எருசலேமை அழித்து மூன்றாண்டுகளுக்குப்பின் அதன் மக்கள் திரளை நாடுகடத்தினார். இரண்டாம் அக்மோசு கிரேக்க நாட்டுடன் கலாச்சார மற்றும் அரசியல் உறவுகளை வளரச் செய்தார். 539-இல் பாரசீகர் பாபிலோனை வென்றபொழுது எகிப்தின் மீதான அதிகாரத்தை அடைவதற்கு சைரசு போர் தொடுத்தார். 525-ஆம் ஆண்டு பெலுசியம் என்னுமிடத்தில் மூன்றாம் சாம்திக்கு என்னும் எகிப்திய அரசனை (அநேகமாக பாரவோன் அக்மோசினுடைய கூலிப்படை கிரேக்கத் தளபதிகளின் துணையுடன்) கம்பிசேசு தோற்கடித்தார்.

இருபத்து ஏழாவது அரசமரபாக (525-404) மனேத்தோவினால் குறிப்பிடப்படுகின்ற அக்கமேனியர்கள் எகிப்தின்மீது உறுதியாக ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். முதலாம் தாரியுசு எகிப்திய சமயத்திற்கு உரிய மரியாதை அளித்து, நைல் நதிக்கும் செங்கடலுக்கும் இடையே கால்வாயை முடித்து அல்லது மீண்டும் அமைத்ததன் மூலம் வாணிபத்தை முன்னேற்றினார். ஆனாலும் 484-இல் அவரு

டைய மரணத்திற்குப்பின் 490-ஆம் ஆண்டில் மாரத்தானில் பாரசீகத்தின் மீதான கிரேக்க வெற்றியினால் தூண்டப்பட்டவர்களாய் எகிப்தியர்கள் கிளர்ச்சி செய்தனர். ஆனால் முதலாம் செர்சீசால் அடக்கப்பட்டனர். இவர் எகிப்தை மிகக்கடுமையாக ஆண்டார். 460-இல் எழுந்த மற்றொரு கிளர்ச்சியை முதலாம் அந்தாக்செர்சேசு அடக்கி ஒழித்தார்.

410-ஆம் ஆண்டில் அக்கமேனியர்களுக்கு எதிராக, சாயிஸைச் சார்ந்த அமிர்தேயுவினால் தொடங்கப்பட்ட போராட்டமானது எகிப்தின் சுதந்தரத்தை மீட்டளித்தது. இருபத்து எட்டாவது அரசினுடைய ஒரே பாரவோனாகிய அமிர்தேயுவைத் தொடர்ந்து (404-398) பாரசீகத்திற்கு எதிராக ஸ்பார்த்தர் மற்றும் ஏதேன்சியருடன் இணைந்து, நதிமுகத்துவாரத்திலுள்ள மெந்தெசிலிருந்து இருபத்து ஒன்பதாவது அரசமரபினர் (398-378) ஆண்டனர். தாயக எகிப்திய வரிசையில் இறுதியானதான முப்பதாவது அரசமரபு (378-341) நாட்டில் வலுவற்ற ஒற்றுமையை மீண்டும் அமைத்தது. பெரும் கட்டடச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் மெந்தேசிய மாவட்டங்களின் கிளர்ச்சியுடன் இணைந்த கிரேக்கக் கூலிப் படையின் பொருளாதாரச் சுமை பாரசீகர்களின் அந்நியப் படையெடுப்புக்கு எகிப்தை உட்படதாக்கியது. பாரசீகத்தின் மூன்றாம் அர்தக்செர்சீஸ்ஒக்கு என்பவர் 343-இல் ஆற்றுக் கழிமுகப்பகுதியைச் சூறையாடினார். பாரவோன் இரண்டாம் நகதொரெபெ தனது இறுதி ஆண்டுகளைத் தென் எகிப்தில் அமைதியாகச் செலவழித்தார்.

மனேதோவைப் பின்பற்றி யுசேபியு குறிப்பிடும் முப்பத்து ஒன்றாவது அரச மரபான (341-330) எகிப்தின்மீதான இரண்டாம் பாரசீக ஆதிக்கமானது, 332-இல் மகா அலக்சாந்தருடைய முற்றுகைக்குப்பின்னர் மாக்கதோனியரின் ஆளுகைக்கு இடங்கொடுத்தது. மீட்பர் என்று புகழப்படுபவரும், பாரவோன் என்று போற்றப்பட்டவருமாகிய அலக்சாந்தர் மெம்பிசில் எகிப்திய தெய்வங்களைப் போற்றினார். சிவாவில் அமோனின் தீர்க்கதரிசனத்தை ஆலோசித்தார். அவர் வடகிழக்குக் கழிமுகப்பகுதியில் ஏற்படுத்திய அலக்சாந்திரியா நகர் எகிப்திய மற்றும் கிரேக்கக் கலாச்சாரங்களின் ஒன்றிப்பின் அடையாளமாகத் திகழ்ந்தது. அலக்சாந்தரின் மரணத்திற்குப்பிறகு பிலிப்பு அர்ரிதேயு மற்றும் நான்காம் அலக்சாந்தர் ஆகியோரின்கீழ் தோலமி முதலாம் சோத்தர் ஆளுநராக எகிப்தை ஆண்டார். 305-இல் தியோதோக்கிகளுக்கு இடையில் ஏற்பட்ட அலக்சாந்தருடைய பேரரசின் பிரிவுகளில் தோலமிய அரசமரபைத் தோலமி நிறுவினார். எகிப்திய மாகாண அமைப்பானது பாதுகாக்கப்பட்டு, அலக்சாந்திரியா, நாவுக்ராதிசு மற்றும் தோலமேயிசு போன்றவை கிரேக்க நகர அமைப்புகளைப்போன்று சுய அரசுகளாக அங்கீகரிக்கப்பட்டன. மூன்றாம் தோலமி யூர்கெதெஸ், அந்தியோக்கிய அரசுடன் கொண்டிருந்த நீண்ட சச்சரவைத் துரிதப்படுத்தும் விதமாக சீரியா மற்றும் பாலஸ்தீனத்திலுள்ள செலூக்கிய நாட்டைக்கைப்பற்றினார். உள்நாட்டுப் போராட்டங்கள் மற்றும் திறமையற்ற தீர்ப்பு ஆகியவற்றால் தங்களுடைய ஆட்சி சிதறுண்ட நிலையில் பிற்கால தோலமியர்கள் உரோமை உதவியை நாடினர். தனது சகோதரர்கள் பதின்மூன்றாம் மற்றும் பதினான்காவது தோலமிகளுடனும் தனது மகன் பதினைந்தாம் தோலமியுடனும் இந்த அரசின் இறுதிநபரான-அரசியாக ஆட்சிபுரிந்த ஏழாம் கிளியோபாத்திரா எகிப்திய ஆட்சியுரிமையைக் காப்பதற்கு மிகவும் முயற்சித்தாள். யூலியு சீசர் மற்றும் மாற்கு அந்தோனியுடன் அவள் அரசியல் மற்றும் தனிப்பட்ட முறையில் உறவு கொண்டிருந்தாலும், உரோமைப் பேரரசின் முன்னேற்றத்தைத் திசை திருப்புவதில் தோல்வியுற்றாள். கி.மு.30-இல் ஆக்டேவியன் அலக்சாந்திரியாவைக் கைப்பற்றியபோது உரோமை ஆட்சியை ஏற்காது, தற்கொலையில் அந்தோனியைப் பின்பற்றினாள். கி.பி. 395-இல் பைசர்ன்டைன் பேரரசிற்குள் ஒன்று சேர்க்கப்படும் வரை உரோமை மாகாணமாகவே எகிப்து தொடர்ந்து இருந்தது. 641-இல் முகலாய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

IV சமயம்:-

எகிப்திய சமயம் சிக்கல்மிக்கது. பல்லாயிரக்கணக்கான தெய்வங்களைக் கொண்டது. இவர்கள் சில சமயங்களில் ஒத்திருப்பதாய்த் தோன்றினாலும், எப்போதும் வேறுபட்டவர்கள். இவர்களுடைய அலுவல்கள் ஒன்றுபட்டும் முரண்பட்டும் அமைந்திருந்தன. இவர்களைப் பற்றிய இதிகாசங்கள் வெவ்வேறுபட்டவையாகவும் முரண்பட்டவையாகவும் கூட இருந்தன. இவையாவும், நாட்டையும் அதனுடைய மக்களையும் பிரதிபலிக்கின்றன. எகிப்திய சமயமானது, நைல் நதியால் ஒன்றுபடுத்தப்பட்டாலும், எளிதில் எண்ணற்ற தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாகத் துண்டிக்கப்படக்கூடிய பரந்த நாட்டிற்குப் பொருந்தியது போன்று, உண்மையாகவே பலவகைப்பட்டதாகவும் கலப்புத் தன்மையுடையதாகவும் இருந்தது. இதனுடைய வரலாறானது மூவாயிரம் ஆண்டு கால வட்டச்சுழற்சி முறையில் அரசியல் பிளவையும் ஒன்றிப்பையும் கண்டுள்ளது.

அறிஞர் சிலர் இவை பண்டைய இன மூடநம்பிக்கைகளிலிருந்து தோன்றியதாகக் குறிப்பிட்டாலும், பெரும்பாலான எகிப்திய தெய்வங்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலுடன் தொடர்பு கொண்டவைகளாகவும் ஒரு தனிப்பட்ட இடத்தின் புரவலர்களாகவும் பாதுகாவலர்களாகவும் முதலில் தோன்றினர் (உ.ம்.:- மெம்பிசில் பித்தா மற்றும் செக்மென்த்து; எலியோபோலிசில் அத்தும்; கிரோக்கோதிலோபோலிசில் செபக்கும்). ஒருசிலர் அண்டவியலின் ஒருபகுதியாக வளர்ச்சியுற்றனர். இவர்களுக்கு அண்டம் சார்ந்த பணிகள் அளிக்கப்பட்டன (உ.ம்.:- ஆகாயத்தின் தேவதையாகிய நுத்; உலகின் கடவுளாகிய கெப்; வான்வெளியின் கடவுளாகிய சூ). மற்றவர்கள் தனிப்பட்ட பொறுப்புகளின் காரணமாக முதன்மை பெற்றனர் (உ.ம்.:- குழந்தை பிறப்பின் தேவதையாகிய மெசுகெந்து; உண்மை, நீதி, மெய்மையின் தேவதையாகிய மாகத்து; நற்பேறு அல்லது ஊழ் ஆகியவற்றின் ஆள் வடிவாகிய சாமி). தனிப்பட்ட இடத்திற்குரிய தெய்வங்கள் அவ்விடத்தின் அரசியல் செல்வாக்கிற்கு ஏற்பத் தங்களது செல்வாக்கினைப் பெறுவர் அல்லது இழப்பர். இதற்கு எடுத்துக்காட்டாகப் பன்னிரண்டாம் அரசினுடைய புரவலராக உருவாகிப் புதிய அரசின்கீழ், தெய்வங்களின் அரசன் என்று போற்றப்பட்ட திபிசினுடைய அமோனைக் கூறலாம். மக்கள் புதிய இடத்திற்குச் சென்றபோது பழைய உறைவிடத்தின் தெய்வங்களை வணங்குவதையே அவர்கள் பெரும்பாலும் தொடர்ந்தனர். ஆகவே அந்தந்த இடத்துக்குரிய பல்வேறு தோற்றங்கள் தெய்வங்களில் வழிபடப்படலாம். இவ்வாறு கழிமுகப்பகுதியிலும் கொப்தொசிலும் மின் என்ற தேவதையும், சாயிக, மற்றும் எஸ்னாவில் நீத் என்ற தேவதையும் வழிபடப்பட்டன. தெய்வங்கள் புதிய வடிவங்களை அடையலாம் அல்லது பல்வேறு குணங்களை ஏற்கலாம் (உ.ம்.:- தொடக்கத்தில் முகத்துவாரத்திலிருந்து வந்த இழவு வினைக்குரிய கடவுளாகிய தோத், பின்னர் எர்மோபோலிசில் நிலாக் கடவுள், ஞானத்தின் கடவுள், மந்திரத்தின் ஆண்டவர், எழுத்தின் படைப்பாளி மற்றும் புனித சட்டங்களின் ஆசிரியர் ஆனது). மற்றவர்கள் அடையாளம் குறிப்பிடப்பட்டனர் அல்லது இணைக்கப்பட்டனர் (உ.ம்.:- கோருகம் ரேயும் பின்னர் ரே கராக்தே ஆயினர்; ஆதோரும் ஐசிசும் ஆமோனும் ரேயும்; ஆமொன், மின் மற்றும் கினும்). தெய்வங்கள் புராணங்களில் இறைக் குடும்பங்களாக இணைக்கப்பட்டன (உ.ம்.:- அமோன், முத் மற்றும் அவர்களது மகனும் நிலாக்கடவுளாகிய கொன்க; கினும், சதிஸ் மற்றும் மகளாகிய அனுகிசு). அனேகமாக அவர்களுடைய குணவியல்புகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் பெரும்பாலும் தெய்வங்கள் விலங்குகளின் வடிவில் சித்தரிக்கப்பட்டன (உ.ம்.:- வல்லூறுவாக கோருசு; ஆட்டுக்கடாவாக மென்தெசும் ஆமோனும்; நரியாக அனுபிஸ்). பிற்காலத்தில் பலர் மனித உடலைக் கொண்டிருந்தாலும் விலங்கின் தலையைத் தொடர்ந்து கொண்டிருந்தனர் (உ.ம்.:- சிங்கமாக செக்மெத்து; பூனையாக பாஸ்து).

இத்தகைய பலதரப்பட்ட தெய்வங்கள் மற்றும் தேவதைகளைச் சுற்றிச் சிக்கல்மிக்க புராண விளக்கங்கள் வளர்ச்சிபெற்றன. இத்

தகைய புராணக்கதைகள் பல்வேறு போட்டி போடும் குருத்துவ அமைப்புகளின் படைப்புகளாக இருந்ததோடு அக்காலத்தில் நிலவிய சமூக அமைப்புகளை விளக்கவும் பயன்பட்டன; மேலும் அவை தோன்றிய புவியியல் மற்றும் அரச மரபுச் சூழ்நிலைகளையும் விளக்குகின்றன. புனித இடங்களில் குருக்கள் நிறைவேற்றுகின்ற அனுதினச் சடங்குகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. இச்சடங்குகள் இயற்கையின் முறைகளை மீண்டும் செயல்படுத்தின. குருக்கள் எழுந்து குளித்து உடைதரித்து இறை உருவங்களுக்கு உணவளித்தனர். படைப்புப்பற்றி பல்வேறு வடிவங்கள் முதன்மைபெற்றன. தென் எகிப்திலுள்ள எர் மோபோலிசில் தோன்றிய கதை காலத்தால் முந்தியதாகும். இதன்படி ஒகதோது என்ற எட்டுக் கடவுள்கள் குழப்பமிக்க நீரினின்று (நூன்) தோன்றினர்; இவர்கள் உலகைப் படைத்து நைல்நதி ஓட்டத்தையும் அனுதினமும் சூரியன் உதிப்பதையும் கட்டுப்படுத்தினர். எலியோபொலிசின் (ஓன்) இறையியல் படி, அவ்விடத்தின் கடவுளாகிய அத்தும் முதலில் தன்னைப் படைத்துக்கொண்டு, பின்னர், கயஇன்பம் மூலம் சூ (காற்று) மற்றும் தெப்னுத்து (ஈரம்) ஆகியவற்றிற்குப் பிறப்பளித்தார். அவர்கள் தங்களுடைய பங்கிற்குப் படைத்த கெப் (பூமி) மற்றும் நுத் (ஆகாயம்) ஆகியோர் ஐசிசு, ஓசிரிசு, செத் மற்றும் நெப்திக ஆகியோரைப் படைத்தனர். மெம்பிசில் ப்தா என்பவர் படைப்பவராகக் கருதப்பட்டார். இவரது இறைத்தோற்றமே எலியோபொலிசின் என்னேயாது (ஒன்பது) ஆகும். இறுதியாகத் திபிசைச் சேர்ந்த குருக்கள், ஆமோனை, முக்கிய கடவுளாக்கும் பொருட்டு, காலத்தால் முந்திய அண்டவெளிப்பாடாகச் சித்தரித்தனர்.

தொன்மையான அரச காலங்களினின்றே அரசர் இறைத்தன்மையுடையவராகவும் இயற்கை நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய அல்லது தூண்டக்கூடிய தெய்வக்கூறுடையவராகவும், இவ்வாறு சூரியக் கடவுள் ஒருசின் கண்கூடாகக் காணக்கூடிய உருவமாகவும் கருதப்பட்டார். பிற்காலத்தில் அவர் தெய்வங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான இடையீட்டாளராக மட்டுமே கருதப்பட்டார். இதன்படி தெய்வங்களின் தந்தையாகிய ரேயின் மகன் அல்லது காலங்களின் எலியோபொலிசின் படைப்புக் கடவுளாகிய அத்துமின் மகன் என்றும் அழைக்கப்பட்டார். இவ்வாறு அரசன் மூலமாக மட்டுமே இறை சலுகைகள் சாதாரண மக்களுக்குக் கிடைக்கக் கூடுமாதலால், அவரது நல்வாழ்வானது முக்கியத்துவம் மிக்கதாயிற்று. மரணத்திற்குப் பின்னர் அரசர் ஓசிரிசாக ஆக்கப்பட்டு மறுஉலகில் வாழ்வதற்கென உயிர்ப்பிக்கப்பட்டவர் என்று நம்பப்பட்டார்.

மறுவாழ்வு பற்றிய எகிப்திய நம்பிக்கையானது பிரம்மாண்டமான பிரமீடுகள் மற்றும் பிற நினைவுச்சின்னங்கள், பதனப்படுத்தப்பட்ட சடலங்கள், இழவுவினைக் கோலங்கள், விரிவான இறுதிச்சடங்குகளை விவரிக்கின்ற ஏடுகள் ஆகியவற்றில் கோடிட்டுக் காட்டப்படுகின்றது. பல மேல்வகுப்பு எகிப்தியர்கள் இனிமையான உலக வாழ்வை அனுபவித்ததன் காரணமாக மரணத்திலும் அதே போன்ற இன்பங்களுக்குத் தெய்வங்கள் தங்களை அனுமதிக்குமென நம்பினர். இறந்தோருக்கு எதிர்கால வாழ்வில் இன்பநலனை உறுதிப்படுத்துவதற்கென உணவு, பானம் மற்றும் தனிப்பட்ட உடைமைகள் (அல்லது அவற்றின் மந்திர அடையாளங்கள்) அவர்களுடைய உடலோடு வைக்கப்பட்டன. உடலானது பதனப் படுத்தப்பட்டு நுரையீரல், ஈரல்குலை, வயிறு மற்றும் குடல்கள் (மத்திய அரசிற்குப் பின் மூளையும்) ஆகியவை நீக்கப்பட்டு தனிப்பட்ட சாடிகளில் பாதுகாக்கப்பட்டன. உடலானது உரிய முறையில் பாதுகாக்கப்பட்டால் ஆன்மாவும் உரிய முறையில் பாதுகாக்கப்படும் என்பதே அவர்களின் நம்பிக்கை. ஆன்மாவானது பறவையின் உருவை ஏற்கும் என்று கூறப்பட்டது. (பெரும்பாலும் இறந்தோரின் தலையுடன் கூடிய வல்லூறுவாக). மறுவாழ்வில், பிறப்பு முதலே அவனுடைய இரட்டையாக இருந்த, யாவும் கடந்த ஆவியானது மனித

னைப் பாதுகாத்து வந்தது. ஆன்மாவினுடைய மறுபிறப்பை இயலச் செய்யக்கூடிய ''வாயைத் திறத்தல்'' போன்றவற்றை உள்ளடக்கிய விரிவான இறுதிச் சடங்குகள், ஓசிரிஸ் மற்றும் தோத்தினுடைய தீர்ப்பிற்கெனக் கீழுலகிற்குச் செல்வதற்கு இறந்தோருக்குத் துணை புரிந்து, அதன் மூலமாக முடிவற்ற பேரின்ப வாழ்வில் ஓசிரிசுடன் எழுவதற்குத் துணையாகின. பத்தொன்பதாவது அரச மரபின் (பதின்மூன்றாம் நூற்றாண்டு) காலத்தில், கீழ் உலகிற்குச் செல்வதிலுள்ள கடுமைகளில் கவனம் செலுத்தப்பட்டது. அதன் விளைவாக இழவுச்சடங்குகளைக் கடுமையாக அனுசரிப்பது வலியுறுத்தப்பட்டது. இது, வளர்ந்து கொண்டு வந்த சமூக, அரசியல் சீர்கேட்டையும் பூமியில் மனித வாழ்வின் தரத்தின் தாழ்வையும் பிரதிபலிக்கலாம். கீழ் வகுப்பினர் மறுவாழ்வு பற்றிய செல்வரின் நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்வதாக ஒருபோதும் தோன்றவில்லை. அவர்கள் இறுதிச்சடங்குகளைச் செய்யமுடிந்தாலும் அவர்களுடைய உலக அடிமைநிலையின் தொடர்ச்சியைத்தவிர உயர்வானதெதுவும் அவர்களுக்கு வாக்களிக்கப்படவில்லை.

அமர்னா காலத்தில் அக்கெனதேனால் உயர்த்தப்பட்ட அத்தேன் வழிபாடு இறையொருமைக் கோட்பாட்டுப் புரட்சியாக அறிஞர்சிலரால் அடையாளம் காட்டப்படுகிறது. வாழ்வில் உயர் ஆற்றலெனச் சூரியன் கருதப்பட்டது. இது எகிப்திய வழிபாட்டில் ஏற்கனவே இருந்த பல கூறுகளை ஏற்றுக்கொண்டது. இவற்றிலிருந்து கருத்தியலான உலகளாவிய இறைவன் தோன்றினார். இவர் எகிப்தியருக்கும் மற்றவர்களுக்கும் தந்தையாவார். ஆகவே பேரரசின் எல்லாக் குடிமக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவரானார். அத்தேன் மட்டுமே வழிபாட்டிற்குத் தகுதியுடைய ஒரே கடவுளாகக் கருதப்பட்டாலும் அக்கெனதேன் தன்னையே இறைவனுடைய ஒரே இடையீட்டாளராகவும் அவருக்குச் சமமானவராகவும் அறிவித்தார். மோசேயின் யாவே கோட்பாட்டை இச்சமயம் எவ்விதத்திலும் பாதித்ததாக நிரூபிக்க முடியாது.

V. மரபுரிமை:-

அதனுடைய வரலாற்றின் தொடக்க காலக் கட்டங்களிலிருந்தே எகிப்திய கலாச்சாரமானது, குறிப்பாக எகிப்தியப் பேரரசின் காலங்களில், அயல்நாட்டு நாகரீகங்களைப் பாதித்தது. தொழில்துறை, கலை மற்றும் அறிவு நாட்டம் முதலியவற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்திருந்தது. எகிப்தியரின் சாதனைகளில் பெரும்பகுதி இன்றும் நீடித்துள்ளது. கலை மற்றும் கட்டடக்கலையின் எடுத்துக்காட்டுக்களான நினைவுச்சின்ன அமைப்புகளாக சக்காரா மற்றும் கிசேவில் உள்ள பிரமீடுகள், பெண்முகச்சிங்க உருவச் சிலை மற்றும் கர்னாக்கு, இலக்சோர், மெதினத்துகபு, அபுசிம்பெல் ஆகிய இடங்களிலுள்ள விரிவான பெரும் கோவில்கள் ஆகியவற்றில் இந்தத் தாக்கம் மிகவும் தெளிவாக உள்ளது. பல்வேறு தெய்வங்களின் சிலைகள் மற்றும் உருவங்கள் மற்றும் மறுவாழ்வு பற்றிய எகிப்திய நம்பிக்கைகளின் கடுஞ்சிக் கல்கள் மற்றும் மரணம் பற்றிய பழக்கங்கள் முதலியவற்றைக் குறித்துக் காட்டுகின்ற சுவர்ச் சித்திரங்கள் மற்றும் புடைப்பகழ்வுச் சித்திரங்கள் முதலியவற்றைக் கொண்டுள்ள சமயக் கலையானது அபரிமிதமாக உள்ளது. இளைய துதான்கமேனுடைய கல்லறைப் பொருட்களாகிய தட்டுமுட்டுச் சாமான்கள், நகைகள் மற்றும் சொந்தப் பொருட்கள் முதலியன, அரச வாழ்வின் மாட்சியைச் சுட்டிக் காட்டுகின்றன. நினைவுச்சின்ன கட்டடக் கலை, குறிப்பாக இரண்டாம் இராம்சேசினுடைய சிற்பக்கலை, எகிப்திய ஆட்சியாளர்களின் பெருமை, கலை மற்றும் பொறியியல் திறமைக்குச் சான்று பகர்கிறது.

பல்வேறு வகையான பரந்த எகிப்திய இலக்கியப் படைப்புக்கள் கிடைத்துள்ளன. இவை எகிப்திய அறிவுத்திறன், படைப்புத் திறன் ஆகியவற்றுக்குச் சான்று பகர்வதோடல்லாமல், அவர்களது வரலாறு மற்றும் கலாச்சாரம்பற்றிய உள்நோக்கும் அளிக்கின்றன. கர்னாக்குக் கோவிலின் சுவர்களில் உள்ள மூன்றாம் துத்மோசினுடைய அரச நாளேடுகள், மற்றும் அதிகாரபூர்வமான நாணல் எழுத்துச் சுவடிகள் புதிய அரசுக்கும்

பிற்காலத்திற்கும் வரலாற்றுக் குறிப்புக்களை அளிப்பது போன்று வெற்றித்தூண் மற்றும் பிற எழுத்துப் பொறிப்புகள், பழைய மற்றும் இடைக்கால அரசுகளின் வரலாற்றுக் குறிப்புகளை அளிக்கின்றன. சட்டப் பகுதிகள் பல்வேறு, அரச ஆணைகள் மற்றும் அத்துசிலிசின்கீழ் இத்தியருடனான இரண்டாம் இராம்சேசின் உடன்பாடு பற்றிய எகிப்திய வாசகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. கற்பனைக் கதைகளாக சினுகேயின் கதைகள், கப்பல் உடைந்த மாலுமி மற்றும் இருசகோதரர்கள் போன்றவை காணப்படுகின்றன. எண்ணற்ற சமய நூல்களாக எலியோபோலிஸ், மெம்பிசு மற்றும் திபிசுனுடைய அண்டக் கோட்பாடுகள், சாவு பற்றிய நூல்கள் (பழைய அரசின் பிரமீடு வாசகங்கள், மத்திய அரசின் சவப்பெட்டக வாசகங்கள் மற்றும் இறந்தோரின் நூல்), சடங்குகள், மந்திரங்கள், மற்றும் பதினேழாவது அல்லது பதினெட்டாவது நூற்றாண்டு வசைக்கூற்று வாசகங்கள் போன்ற எண்ணற்றவை எகிப்திய இலக்கியத்திற்குச் சான்று கூறுகின்றன. ஆமோன், தோத்து, ஓசிரிசு, நைல் நதி மற்றும் அரசர்களாகிய மூன்றாம் செகோஸ்த்திசு, மூன்றாம் துத்தோசு, இரண்டாம் இராம்சேசு மற்றும் மெர்னெப்தா ஆகியோரைப் பற்றிய பாடல்கள் மற்றும் வேண்டுதல்கள், பல்வேறு தொழிலாளர்களின் தனிப்பாடல்கள், மற்றும் நினைவு விருந்துகளில் பாடப்படுபவை ஆகியவை கவிதைகளுக்குச் சான்றுகளாக உள்ளன. ஞான இலக்கியங்கள் மிகுந்திருந்திருக்கின்றன. அவற்றில் பழமொழிகள், கட்டளைகள், நாட்டின் விவகாரங்களில் பொறுப்புடையவர்களுக்கான போதனைகள், வசைப்பாக்கள் மற்றும் நம்பிக்கையற்ற துன்பியலான உரையாடல்கள் ஆகியவை உள்ளடங்கும். இந்நூல்களின் நகல்களும், கடிதத்தொடர்பிற்கான மாதிரியாக எண்ணப்பட்ட வாசகங்களும், மற்றும் பின்பற்றத்தக்க பகுதிகளின் நகல்களும் எகிப்திய எழுத்தர் அமைப்புக்குச் சான்று பகர்கின்றன.

அறிவியல் துறையில் எகிப்தியரின் முன்னேற்றங்களில் குறிப்பிடத்தக்கது வான இயல் குறிப்புகளாகும். இவை 365, இருபத்து நான்கு மணி நேர நாட்காட்டியை (ஐந்து இடையிணைக்கப்பட்ட நாட்களுடன் கூடிய பன்னிரண்டு முப்பது நாள் மாதங்கள்) நிர்ணயித்துக் கொள்ள உதவின. இந்த நாட்காட்டியோடு ஒப்பிட்டு, நைல் நதியின் வருடாந்தர வெள்ளப்பெருக்கினைக் கணிப்பதன் மூலம், அவர்கள் 1460 ஆண்டுகள் கொண்ட ''சோத்திக்கு'' வட்டத்தை நிர்ணயித்தனர். இது அரசர்கள், அட்டவணைகள் மற்றும் பிற வரலாற்றுக்குறிப்புகளுடன் ஒன்று சேர்ந்து காலவரையறை ஆய்வுகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது. எகிப்திய கணித முறையானது தொடக்க கட்டத்திலேயே இருந்தாலும் பெரும்பாலான செயல்முறைத் தேவைகளுக்கும் போதியதாக இருந்தது. மேலும் இதைத் திறமையான மற்றும் துல்லியமான முறையில் பயன்படுத்திப் பெரும் பிரமீடுகளை அவர்கள் கட்ட முடிந்தது. எளிய பதின்கூறு இலக்கங்களும், பின்னங்கள் பற்றிய தொடக்கநிலை அமைப்பும், பெருக்கல், வகுத்தல் பற்றிய எளிதில் கையாள முடியாத முறைகளும் பயன்பட்டன. மருத்துவப் பகுதிகள் உடலுறுப்புகளின் இடமும் அலுவல்களும், மற்றும் குருதியோட்டம் சார்ந்த அமைப்புப் பற்றிய அறிவையும், நோய்களின் தன்மையை அறிதல், அவற்றை மருந்து, அறுவைச் சிகிச்சை, மந்திரம் ஆகியவற்றால் குணப்படுத்துதல் பற்றிய திறமையையும் சுட்டிக்காட்டுகின்றன.

VI விவிலியத்தில் எகிப்து:-

1. புனித வரலாற்றில் எகிப்தின் பங்கு:- இஸ்ராயேலானது தொடர்பு கொண்டிருந்த அயல்நாடுகளில், எகிப்தைவிட அதிக அளவில் இவ்வுலக வல்லமையின் இருபொருள் மயக்க நிலையைக் காட்டுகிற நாடு வேறு இல்லை. செழிப்புமிக்க இப்பகுதியானது வறுமைக்குப்பட்ட மூதாதையர் (ஆதி 12:10. 42 தொ), நாடு கடத்தப்பட்டோர், (1 அர 11:40; எரே 26:21), தோற்கடிக்கப்பட்ட இஸ்ராயேலர், (எரே 42-43), ஓடுகின்ற நிலையில் இயேசு (மத் 2:13) ஆகியோருக்குத் தெய்வீக அடைக்கலமாக அமைந்தது. ஆனால் அதே காரணத்திற்காக அது குறிக்கோள் அற்ற மக்களுக்கு எளிதான சோதனைகளையும்

அளித்தது (யாத் 14:12; எண் 11:5;.....). தனது வலிமையால் பெருமை மிக்க பேரரசு என்ற அளவில் அது முன்னர் எபிரேயரைக் கொடுமைப்படுத்தியது (யாத் 1-13). ஆயினும் இதற்கு அப்பாற்பட்ட நிலையில், இஸ்ராயேல் இவ்வுலகச் சிறப்புகளை அடைய முயலும்போது இஸ்ராயேல் தன்னைப் பின்பற்றும் பெருமை எகிப்துக்கு உண்டு. தாவீதும் (2 சாமு 20:23-26) அவரைவிட அதிகமாக சாலமோனும் (1 அர 4:1-6) தங்கள் அரசை அமைப்பதிலும், அரசை ஆட்சி செய்யும் முறையிலும் எகிப்து முறையைப் பின்பற்றினர். நெருக்கடியான காலங்களில் சமாரியாவும் (எச 7:11), எருசலேமும் (2 அர 17:4; 18:24; ஏச 30:1-5; எரே 2:18...; எச 29:7) எகிப்தின் உதவியை நாடின. கலாச்சாரத்தின் உறைவிடம் என்ற நிலையில் மோசேயின் கல்விக்கு அது உதவி புரிந்தது (அ.ப.7:22). இறை ஏவுதல் பெற்ற ஞானிகள் சிலநேரங்களில் எகிப்தின் இலக்கியத்தைப் பயன்படுத்திக் கொண்டனர் (குறிப்பாகப் பழ 22:17-23:11). ஆனால் மற்றொரு புறத்தே இஸ்ராயேலரை அவர்களுடைய இறைவனிடமிருந்து விலக்குகின்ற விபரீத, கெடுக்கும் ஆற்றலை உடைய (எரே 44:8;.....) சிலை வழிபாடு மற்றும் மந்திரிகத்தின் நாடாகவும் அது இருந்தது (ஞான 15:14-19). ஆகவே இறைவாக்கினர்கள் எகிப்தைக் கண்டனம் செய்கின்றனர் (எச 30:13.17; எரே 44).

2. இறைவனுக்கு முன்னர் எகிப்து:- எனவே யாத்திரைக்காலத்தில் இஸ்ராயேலை எகிப்து விடுவிக்க வேண்டும் என்பதற்காகவும் (யாத் 5-15; ஞான 16:19), அரசர் காலத்தில் இஸ்ராயேலுக்கு உதவியளிப்பதாக அளித்த வெறுமையான வாக்குறுதிகளுக்காகவும், இந்த அகந்தைமிக்க வல்லமையைத் தண்டிக்கவும் (ஏச 30:1-7; 31:1-3; எரே 46; எச 29:32) தனது ஞானிகளால் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்ட இந்தப் புறவின நாட்டை இழிவுபடுத்தவும் (ஏச 19:1-15) எகிப்திற்கு எதிராக இறைவனுடைய தீர்ப்பு இருந்தது என்பது வியப்பிற்குரியதன்று. இத்தலைப்புகளில் இறைவனின் சினத்தின் விளைவான அழிவிற்கு ஒதுக்கி வைக்கப்பட்ட மனிதச் சமூகங்களுக்கு அடையாளமாக எகிப்து உள்ளது (திருவெளி 11:8)

வரவேற்பின் நாடாக இருந்ததால் எகிப்து யாவேயின் சபையிலிருந்து எக்காலத்திற்கும் விலக்கப்படவில்லை. (உப 23:8 தொ). அதைத் தண்டித்த பின்னரும் அதைப் பொறுத்த மட்டும் இறைவன் கட்டுப்பாட்டோடு செயல்படுகிறார். எகிப்தியர் அவரது படைப்புகளாகவே உள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களைத் தீமையினின்று விலக்க அவர் விரும்புகிறார் (ஞான 11:15-12:2). இதன் காரணமாகவே, இறுதியில் எகிப்தை மனமாற்றி அதைத் தம்முடைய மக்களுடன் ஒன்று சேர்க்க இறைவன் திட்டமிடுகிறார். இதனால் அவள் அவருக்குப் பணிசெய்யக் கற்றுக் கொள்வாள் (ஏச 19:16-25; சங் 86:4-7). தனது பாவங்களால் தண்டிக்கப்பட்டாலும் மற்ற நாடுகளைப் போன்று அவளும் மீட்பில் பங்கு பெறுவாள்.

எகிப்து ஓடை (BROOK OF EGYPT)

கானான் நாட்டு எல்லையில் தென்மேற்காக ஓடும் ஓடை (எண் 34:5; 1 அர 8:65; 2 அர 24:7; 2 நாள் 7:8; ஏச 27:12; எச 47:19; 48:28). யூதா இனத்திற்குரிய பகுதியின் எல்லையாகும் (யோசு 15:4,47). ''கமாத்தின் நுழைவாயிலுடன்'' இவ்வோடை இணைத்துக் கூறப்படுகிறது (ஏச 27:12-ஐத் தவிர). இங்கு யூப்பிரத்திக வடஎல்லையாகும். எகிப்து ஓடை வாடி ஏல்-அரிசுடன் அடையாளம் காட்டப்படுகிறது. இவ்வோடை சீனாய் தீப கற்பத்தின் நடுவில் தோன்றி காசாவுக்கும், பெலுசியுமுக்கும் நடுவில் ஓடி மத்தியதரைக் கடலில் பாய்கிறது. இதன் அரபுப் பெயர் முகத்துவாரத்தில் உள்ள ஏல்-அரிஸ் என்ற ஊரின் பெயரால் வந்தது. மழைக் காலத்தில் இவ்வோடை பொங்கி நிறைந்து ஓடும். பல சிற்றோடைகள் தங்கள் நீரை இதில் வடிக்கின்றன. வெயில் காலத்தில் இது வறண்டு கிடக்கும். மற்றப் பகுதிகளில் இஸ்ராயேலின் தென்எல்லை ''எகிப்து நதி'' (ஆதி 15:18; காண் யூதி 1:9) அல்லது

சீகோர் (யோசு 13:3; 1 நாள் 13:5) அல்லது அராபாவின் ஓடை (ஆமோ 6:14) எனக் கூறப்படுகிறது. இவைகளில் எல்லாமே, அல்லது ஒரு சில 'வாடி ஏல் அரிஸ்' என்ற ஓடையைக் குறிக்கலாம். அசீரிய நாட்டு முதலாம் சார்கோனின் குறிப்பேடுகளும் சனகெரிப்பின் குறிப்பேடுகளும் பலமுறை இவ்வோடையைப் பற்றிப் பேசுகின்றன. இவ்வோடையை நைல்நதியோடு குழப்பி விடக் கூடாது.

எகிப்து நதி (EGYPT, RIVER OF)

ஆண்டவர் ஆபிரகாமின் சந்ததியாருக்குத் தருவோம் என்று வாக்குறுதி கூறிய நாட்டின் தெற்கு எல்லையாகும் (ஆதி 15:8). இங்கு ''மாநதி'' என்ற வார்த்தை வருவதால் நைல் நதியைக் குறிப்பிடுகின்றது என்று சொல்லப் படுகிறது. இச்சொல் யூதித்து நூலிலும் பயன் படுத்தப்படுகின்றது (யூதி 1:9).

எகியா (JEHIAH - ஆண்டவர் வாழ்கிறார்)

கடவுளின் திருப்பேழை தாவீது அரசனால் எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்ட போது, லேவியரான இவர் பேழையின் வாயிற் காவலனாக நியமிக்கப்பட்டார் (1 நாள் 15:24).

எகியேலி (JEHIELI)

எகியேல் (3)-இன் வழித்தோன்றல்களைக் குறிக்கும் இனப்பெயர் (1 நாள் 26:21-22).

எகியேல் (JEHIEL - இறைவன் வாழ்வளிப்பாராக)

1. எருசலேமில் திருப்பேழையின் முன் பணிபுரிந்த இசைக் கலைஞர்களில் ஒருவர் (1 நாள் 15:18.20; 16:5).

2. ககிமோனின் மகன். தாவீது அரசனின் புதல்வர்களைக் கவனித்து வந்தவர் (1 நாள் 27:32).

3. கெரிசோனிய குலத்தைச் சேர்ந்த லேவியர். இலாதான் புதல்வர்களின் தலைவர் (1 நாள் 23:8). இவர் தாவீது அரசனின் காலத்தில் ஆலயக் கருவூலக் கண்காணிப்பாளராக இருந்தார் (1 நாள் 29:8). இவர் எகியேலி என்னும் குருத்துவக் குடும்பத்தை நிறுவியவர் (1 நாள் 26:21-22).

4. யூதாவின் அரசன் யோசபாத்தின் புதல்வர்களில் ஒருவர் (2 நாள் 21:2).

5. தாவீதின் முக்கிய பாடகராகிய ஏமானின் வழித்தோன்றல். எசக்கியா அரசனின் சீர்திருத்தங்களில் அவருக்கு உதவி செய்த லேவியர்களில் ஒருவர் (2 நாள் 29:14). பிறகு ஆலயக் கண்காணிப்பாளராக இருந்தார் (2 நாள் 31:13).

6. எசக்கியாவின் சீர்திருத்தக் காலத்தில் ஆலயத்தில் மேற்பார்வையாளராக இருந்தார் (2 நாள் 31:13). இவரே (5)-இல் குறிக்கப் பட்டவராக இருக்கலாம்.

7. அரசன் யோசியாவின் சீர்திருத்தங்களின் போது, ஆலய மேற்பார்வையாளராக இருந்தவர் (2 நாள் 35:8). பாஸ்கு விழாவில் உதவி செய்தவர்.

8. பாபிலோனிலிருந்து எஸ்ராவோடு திரும்பிய அகதி ஒருவரின் தந்தை (எஸ் 8:9). ஒபதியா (10)-வின் தந்தை.

9. ஏலாமின் வழித்தோன்றலும் செக்கனியாவின் தந்தையுமாவார். இவர் எஸ்ராவின் திருமணச் சீர்திருத்தத்தில் முக்கிய பங்கெடுத்தார் (எஸ் 10:2). ஒரு வேளை அந்நிய மனைவிகளை விலக்கிவிடத் தூண்டப்பட்டவர்களுள் ஒருவரான எகியேலும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம் (10:26).

10. அந்நிய மனைவிகளை விலக்கிவிட எஸ்ராவால் தூண்டப்பட்டவர்களில் ஒரு குரு (எஸ் 10:21). கரிமின் வழித்தோன்றல்.

11. அந்நிய மனைவியை விலக்கிவிட்டவர்களில் ஒருவர் (எஸ் 10:26). ஒருவேளை (9)-இல் வரும் ஆளும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

எகிலா (EGLAH - கன்றுபோடாத இளம் பசு)

தாவீதின் மனைவியருள் ஒருத்தி, இதிரயமின் தாய் (2 சாமு 3:5; 1 நாள் 3:3)

எகிலாத்து-செலிசியா (EGLATH-SHELISHIYAH - மூன்றாவது எகிலாத்து)

மோவாபு நாட்டில் உள்ள ஓர் இடம். மோவாப்பிற்கு எதிராக உரைக்கப்பட்ட இறைவாக்குகளில் இவ்விடத்தைப்பற்றிய குறிப்பு உள்ளது (ஏச 15:5; எரே 48:34). இவ்விடத்தைப் பற்றிய குறிப்பு இன்றும் தெரியவில்லை. சோவார் மற்றும் கொரோனயிமுக்கு இணையாக எகிலாத்து செலிசியா வருவதால் சில விளக்கவுரையாளர்கள் ''மூன்று வயது கன்று போடாத இளம் பசு'' என்ற பொருளுடைய பட்டப்பெயராகக் கருதுகின்றனர். இவ்விரு நகரங்களின் அழகையும் பலத்தையும் அடையாளமாக உணர்த்துவதாகக் கருதுகின்றனர். வேறு சிலர் அறியப்படாத ஓர் இடமாகக் கருதுகின்றனர். இன்னும் சிலர், ஒரேபெயருடைய மூன்று இடங்கள் இருந்ததாக ஏற்று, இதை ''மூன்றாவது எகிலாத்து'' என்று விளக்குகின்றனர்.

எகிலாயிம் (EGLAIM - குளம், குட்டை)

மோவாபின் எல்லையோரத்தில் உள்ள ஒரு நகரம். மோவாபுக்கு எதிரான இறைவாக்குகளில் குறிக்கப்படுகிறது (ஏச 15:8). இதன் இடத்தை அடையாளம் காட்டமுடியாது. வரலாற்று ஆசிரியர் யூசேபியு, ஏரா போலீசுக்கு (விவிலிய ரப்பாத், இக்கால அம்மான்) தெற்கில் 13 கி.மீ. தூரத்தில் உள்ள அகால்லீம் என்ற நகரைக் குறிப்பிடுகிறார். இவ்விடத்தில் உழவர்கள் குவித்த கற்குவியலான ருச்சும் ஏல்-எலிமே இன்றும் இருக்கிறது. இதுதான் எகிலாயிம் என்று அறிஞர்சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் இன்னும் தெற்கில் 7 கி.மீ தொலைவிலுள்ள கிர்பெத்து - யெல்சூல்தான் எகிலாயிம் என்று கருதுகின்றனர்.

எகிலாம் (HEGLAM - அவர்களை நாடுகடத்திக் கொண்டு சென்றான்)

எகூதின் மகனும், உசா, அகியூது ஆகியோரின் தந்தையுமாவார். கெராவின் மற்றொரு பெயர் (1 நாள் 8:7).

எகிலோன் (EGLON - இளம் எருது) - ஆள்

அம்மோனியர் மற்றும் அமலேக்கியரோடு சேர்ந்து இஸ்ராயேலரைத் தோற்கடித்த மோவாபு நாட்டு உடல்பெருத்த அரசன். யோர்தான் ஆற்றுக்கு மேற்குப் பகுதியில் எரிகோவைச் சுற்றியிருந்த பகுதிகளைக் கைப்பற்றி 18 ஆண்டுகள் கொடுமைப் படுத்தி வந்தார் (நீதி 3:12-14). இவர் நீதிபதிகள் நூலில் வரும் இரண்டாம் விடுதலை வீரரான ஏகூது என்பவரால் சூழ்ச்சியாகக் கொல்லப் பட்டார். ஏகூது கப்பம் கட்ட வந்தார். எகிலோனுக்குத் தனிப்பட்ட முறையில் செய்தி வைத்திருப்பதாகப் பாவனை செய்து, இந்தப் பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஏகூது, தனது இருபக்கமும் கருக்குள்ள வாளை உடல்பெருத்த எகிலோன் வயிற்றில் பாய்ச்சினார் (3:12-25).

எகிலோன் (EGLON - இளம் எருது) - இடம்

எகிலோன் கானானியர்களின் அரச நகரமாக இருந்தது. எகிலோன், அமோரியர்களுடன் தற்காலிகமாக இணைந்து கொண்டு, அதோனி-சதேக்கு தலைமையில் கிபயோனியர்களின் கூட்டணிக்கு எதிராக எழுந்தனர் (யோசு 10:1 தொ). கிபயோனியர்களுடன் கொண்ட உடன்பாட்டால், யோசுவா கில்காலில் தங்கியிருந்தபோது அவர்களுக்கு உதவுவதற்கு ஒத்துக் கொண்டார். அசேக்காவிற்கு அருகில் நடந்த கடும் போரில் அதோனி-சதேக்கின் கூட்டணி முறியடிக்கப்பட்டது. தலைவர்கள் எகிலோன், அரசர் தெபீரும் உள்பட, மாக்கேதாவிற்கு அருகிலிருந்த குகையில் ஒளிந்து கொண்டனர். அங்கிருந்து அவர்கள் யோசுவாவைச் சேர்ந்தவர்களால் வெளிக்கொண்டு வரப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய உடல்களைச் சூரியன் மறையும் மட்டும் மரத்தில் தொங்கவிட்டுப் பின்பு உடல்களை வெட்டிக் குகைக்குள் புதைத்து முத்திரை குத்தினார்கள். இவ்வெற்றிக்குப் பிறகு இஸ்ராயேலர்கள் மலநாடுகள் அனைத்தின் மேலும் வெற்றி பெற்றனர் (யோசு 10:28 தொ). எகிலோனிலிருந்த அனைத்து உயிர் இனங்களையும் அழித்தார்கள் (யோசு 10:35). தொல்பொருள் ஆராய்ச்சிகள் இலாக்கீசு நகரம் அழிந்த 13-ஆம் நூற்றாண்டிலேயே எகிலோன் நகரமும் அழிந்தது என்று சொல்லுகின்றன. இதற்குப் பிறகு இலக்கீசு மாவட்டமாக, யூதாவின் ஒரு பகுதியாயிற்று (15:39).

எகினேசியன் சாலை (EGNATIAN WAY)

இது ஓர் உரோமைப் பெருஞ்சாலையாகும். இது அதிரியாக் கடலையும் இரேக்கக் கடலையும் இணைக்கும் உரோமைப் பேரரசின் கிழக்கு-மேற்குச் சாலையாகும். இது உரோமையிலிருந்து சிறிய ஆசியாவுக்குச் செல்வதற்கு வழிவகுத்தது. இது கிரீஸ் வெல்லப்பட்ட பின், கி.மு. 146-இல் கட்டப்பட்டது. திராக்கியமிலிருந்து தொடங்கிக் கிரீஸ் வழியாகச் சலோனிக்காவில் முடிந்தது. உரோமை வணிகர்களும் படைகளும் ஆப்பியன் சாலை வழியாகச் சென்று தென் கிழக்குத் துறைமுகமான பிரின்டிசியாவை அடைவர். அங்கிருந்து கப்பல் வழியாக அதிரியாக் கடலைக் கடந்து செல்வர். திராக்கியம் அல்லது அப்போலோனியா துறைமுகங்களை அடைந்து, எகினேசியன் சாலை வழியாகத் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து கிரீஸ் கடற்கரையிலுள்ள பிலிப்பை துறைமுகத்தை அடைவர்.

பவுல் தமது இரண்டாம் வேதபோதகப் பயணத்தில் இவ்வழியாகத்தான் மேற்கு நோக்கிப் பயணம் செய்து பிலிப்பை, தெசலோனிக்கா, மற்றும் பெரோயா ஆகிய மூன்று இடங்களில் திருச்சபைகளை நிறுவினார் (அ.ப. 169-17:4).

எகுதி (JEHUDI - யூதன்)

நெத்னியாவின் மகன். இவர் ஓர் இளவரசன். இவர் எரேமியாவின் இறைவாக்குச் (ஓலைச்) சுருளைக் கொண்டுவரும்படி பாரூக்கை அழைத்துவர அனுப்பப்பட்ட ஓர் அரசவை அதிகாரி (எரே 36:14). பிறகு இவரே அச்சுருளை அரசனுக்கு வாசித்துக் காட்ட, அவர் ஒவ்வொரு பகுதியாக வெட்டி எரித்தார் (36:21-23). இப்பெயரின் இணை வடிவம், இவர் அந்நிய இனத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று சுட்டுகிறது.

எகுதியா (JEHUDIJAH - யூதப் பெண்)

இச்சொல் ஓர் ஆளின் பெயரல்ல. இச்சொல் சுட்டிடைச் சொல்லுடன் வருவதால் ''யூதா நாடடுப் பெண்'' என்று பொருள் கொள்ளப்படுகின்றது. மேலும் மெரேத்தின் மனைவி (எகிப்திய நாட்டுப் பெண்)யைப் பிரித்துக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது (1 நாள் 4:18).

எகுது (JEHUD - புகழ்ச்சி)

தாண் கோத்திரத்துப் புதல்வர்களுக்குக் கிடைத்த நகரங்களில் ஒன்றாகும். தற்பொழுது யாப்பாவுக்குத் தென்கிழக்கில் 13 கி.மீ. தொலைவில் உள்ள இக்கால ஏல்-யகுதியே ஆக இருக்கலாம் (யோசு 19:45). எழுபது நூல் இதை ''யாசுர்'' என்று கொண்டுள்ளது. ஆகவே யாப்பாவுக்குத் தென் கிழக்கில் 6 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால ''யாசுர்'' ஆக எகுதை அடையாளம் காட்டுவர்.

எகுத்தியேல் (JEKUTHIEL - இறைவன் வலிமை அளிப்பாராக)

மெரேத்தின் வழியாக யூதாவின் வழித்தோன்றல். சானோவாகின் தந்தை (1 நாள் 4:18)

எகுபத்தானா (ECBATANA - ஒன்று சேரும் இடம், சேர்க்கும் இடம்)

இப்போது கமாதான் என்றழைக்கப்படும் எல்லெண்ட் என்ற மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஒரு நகரம்.

எரோதோதசின்படி, இந்நகரம் மேதியருடைய அரசன் தெயோசஸ் என்பவரால் நிறுவப்பட்டது. மேதியர்களின் தலைநகரமாகும். ஆனால் யூதி 1:1-4-இன்படி மேதியருடைய அரசன் ஆர்பகசாது என்பவரால் கட்டப்பட்டது. இதற்கு வரலாற்று அடிப்படை அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆறாம் நூற்றாண்டின் மத்தியில் பெரிய சைரஸ் அரசர் எகுபத்தான்னைக் கைப்பற்றினார். அதன்பிறகு இந்நகரம் அக்கமோனிய அரசர்களுக்குக் கோடை உறைவிடமாக மாறியது. முதலாம் தாரியுஸ் ஆட்சிக் காலத்தில் எருசலேம் ஆலயத்தைப் புதுப்பிப்பது பற்றி சைரஸ் அரசர் பிறப்பித்த கட்டளையின் ஒரு படிவம் இங்குக் கண்டுபிடிக்கப் பட்டது (எஸ் 6:2).

இது வியத்தகு அழகுள்ள நகரம். இந்நகரத்தின் கட்டடக்கலை நுணுக்கங்களைக்

கிரேக்க நூலாசிரியர்கள் புகழ்ந்துள்ளனர். மகா அலக்சாந்தரால் இந்நகரம் அழிவுக்குட் பட்ட போதிலும், இதன் அழகு பொலி வுற்று விளங்கியது. பார்த்தியரின் ஆட்சிக் காலத்தில் இது மீண்டும் கோடை உறைவிட மாக மாறியது. சாசனியர்களுடைய காலத் தில் இதன் முக்கியத்துவம் குறைந்த போதி லும் தற்போதுள்ள நகரம் முகமதியர்களின் ஈரான் வெற்றிக்குப் பிறகு கட்டப்பட்டது. எனவே முகமதிய நூலாசிரியர்களால் இந்நக ரம் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது. 1220-இல் மங்கோலியர்களால் தாக்குண்டு மீண் டும் தாமெர்லேன் என்பவர்களால் தாக்கப் பட்டது. ஆனால் இவற்றின் அழிவிலிருந்து தப்பியது எனலாம். எகுபத்தான் தற்போது ஈரானிலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

எகுபத்தான்-கமதான் நகரத்தில் முழுமை யான அளவுக்கு இதுவரை தொல்பொருள் ஆராய்ச்சி செய்யப்படவில்லை. ஏனென் றால் தற்போதுள்ள கட்டடங்கள் பழைய கட்டடங்களின் மேல் கட்டப்பட்டவை. ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றால் கட்ட டங்களை இடித்தாக வேண்டும். என்றாலும் அவ்வப்பொழுது கண்டுபிடிக்கப்படும் வெள்ளி, தங்கப் பொருள்கள் மற்றும் பழங் காலப் பாரசீகக் கல்வெட்டுகள், மகா தாரியு சின் மூதாதையர் அரியாரம்னெயையும் அவர் மகன் ஆர்சமெசையும் குறிப்பிடுகின் றன. இவை தொல்பொருள் ஆராய்ச்சிக்கான முக்கியமான இடம் இது என்பதைச் சித்தரிக் கின்றன.

கமதானில் காணப்படும் எஸ்தர் மற்றும் மோர்தெக்காய் இவர்களின் பாழடைந்த கல் லறை சாசனிய ஆட்சியாளர் யாஸ்தெகர்டின் மனைவியினுடைய கல்லறையாக இருக்க லாம் (கி.பி. 339-420/421).

எகுப்பா (JEHUBBAH - யாவே (ஒருவனை ஆபத்திலிருந்து) மறைத்து வைத்தார்)

ஆசேரின் வழிவந்தவர்களில் ஒருவர். ஆசேரின் இனத்தில் பெரியாவின் வழித் தோன்றலும் சேமேரின் ஒரு மகனுமாவார் (1 நாள் 7:34).

எகுவேல் (JEHUEL)

எசக்கியாவின் சீர்திருத்தத்தில் உதவிய ஒரு லேவியர் (2 நாள் 29:14). இவரும் எகியேலி (3)யும் ஒருவராக இருக்கலாம்.

காண்க. எகியேலி (3)

எகூக்கல் (JEHUCAL - யாவே ஆற்றலுள்ள)

செலமியாவின் மகன். இவர் செதேக்கியா வின் அவையில் உள்ளவர். தனக்காக மன்றா டுமாறு எரேமியாவிடம் கேட்க செதேக்கியா வால் அனுப்பப்பட்டவர்களில் ஒருவர் (எரே 37:3).

எரே 38:1-இல் இவர் யூகால் என்றழைக் கப்படுகிறார்.

எகோவா (JEHOVAH)

இறைவனின் பெயர். கி.பி. 1520-இல் பெத்ருஸ் கலாத்தினுஸ் என்பவரால் உரு வாக்கப்பட்ட ஒரு செயற்கைப் பெயர். இஸ் ராயேல் மக்கள் நாடுகடத்தப்பட்ட பிறகு 'யாவே' என்ற புனிதமான பெயரை அவர் கள் பயன்படுத்தத் தயங்கினர். ஏனெனில் அப்பெயரின் புனிதம் கெட்டுவிடும் என்று அவர்கள் நினைத்தார்கள். இப்பெயருக்குப் பதிலான ''அதோனாய்'' என்ற பெயர் பயன் படுத்தப்பட்டது. யாவேயைக் குறிக்கும் YHWH என்ற நான்கு மெய்யெழுத்துக்களா லும், அதேனாய் என்ற சொல்லில் வரும் உயிரெழுத்துக்களாலும் எகோவா என்ற சொல் உருவானது.

எகோவா-ஈரே (JEHOVA-JIREH - யாவே கொடுப்பார்)

ஈசாக்குக்குப் பதிலாக ஆட்டைத் தகனப் பலியாக ஒப்புக் கொடுத்த இடத்திற்கு ஆபிர காம் இப்பெயரைச் சூட்டினார். ''கடவுள் கொடுப்பார்'' என்ற பொருளுடைய சொல் லாகும். ஆதி 22:14-இல் காணப்படும் இதற்கு மற்றொரு பொருள் ''கடவுள் காண் பார்'' என்பதாகும். ஆனால், இங்குக் கடவு ளின் பராமரிப்பே வலியுறுத்தப்பட்டிருப்ப தால் ''கடவுள் கொடுப்பார்'' என்பதே சரி யான பொருளாகும்.

இந்த இடம் எங்கிருந்தது என்று தெரிய வில்லை. சாலமோன் கட்டிய கோவிலிருந்த இடமே இவ்விடம் என்று மரபு ஒன்று கூறுகிறது. செக்கேமிலுள்ள மோரேயின் ஓக்கு மரம் இருந்த இடத்திலிருந்த புனித இடம் தான் இது என்று அறிஞர்சிலர் கருதுகி றார்கள்.

எகோவா-சாலோம் (JEHOVA SHALOM -யாவே சமாதானம் ஆவார், நலம் நல்கும் யாவே)

ஒபிராவில் கிதயோனால் கட்டப்பட்ட பலிபீடத்தின் பெயர் (நீதி 6:24).

எகோவா-நீசி (JEHOVA-NISSI - யாவே என் சம்மட்டியாவார், கொடியாவார்)

யாவே என்னை உயர்த்தினார், யாவே என் கொடியாவார் (யாத் 17:15). இரபிதிமில் அமலேக்கியரை வென்றதன் நினைவாக மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்குக் 'கடவுள் என்னை உயர்த்தினார்' என்று பெய ரிட்டார். இஸ்ராயேலர்களின் படைக்கு இறைவனே முன் செல்பவர் என்று அவர்கள் கருதினார்கள் (நீதி 7:20; சங் 20:7).

எக்கபுசேல் (JEKABZEEL - இறைவன் சேகரிக் கிறார்)

எதோமியர் எல்லையிலுள்ள யூதாவைச் சேர்ந்த ஒரு நகரம் (நெக 11;25). கபிசேலின் மற்றொரு பெயர்.

காண்க. கபிசேல்

எக்கமயாம் (JEKAMEAM - உறவினன் நிறுவு வானாக)

கெபிரோனின் நான்காவது மகன். ஒரு லேவியர் குடும்பத் தலைவர் (1 நாள் 23:19; 24:23).

எக்கமியா (JEKAMIAH - யாவே உயர்த்துவா ராக)

1. யூதா இனத்தைச் சேர்ந்த சல்லூமின் மகன். எரகுமேலின் வழித் தோன்றல் (1 நாள் 2:41).

2. அரசன் எக்கொனியா (யோயாக்கின்) வின் புதல்வர்களில் ஒருவர் அல்லது சந்ததி யினர் (1 நாள் 3:18).

எக்கரோன் (EKRON - வெறுமையான இடம்)

பெலிஸ்தியர்களுடைய ஐந்து நகரங்களில் வடகோடியிலுள்ள ஒரு நகரம் (யோசு 13:3). இது முதலில் தாணுக்குக் குறிக்கப்பட்டா லும் (19:43), பின்பு யூதாவுக்குரியதாகக் கரு தப்பட்டது (13:3; 15:11).

ஒரு காலத்தில் யூதா இந்நகரைக் கைப்பற் றியிருந்தாலும் (நீதி 1:18) விரைவில் பெலிஸ்தியர் இதை மீண்டும் கைப்பற்றி, மலைப்பகுதியுள்ள இஸ்ராயேலரைக் கட் டுப்படுத்த இதற்கு மூல கானானிய நகர-அரசு அமைப்புக் கொடுத்துப் பலப்படுத்தி னர். பெலிஸ்தியர் உடன்படிக்கைப் பெட்ட கத்தைக் கைப்பற்றியபோது, காலப்போக் கில் அதை எக்கரோனுக்குக் கொண்டு வந்த னர் (1 சாமு 5:10). பெட்டகம் அவர்களி டையே இருந்தபோது விளைந்த தீமைக ளால் தூண்டப்பட்டு அதைப் பேத்து-செமேசில் இஸ்ராயேலரிடம் ஒப்படைத்த னர். சாமுவேல் காலத்தில் இப்பகுதியின் மேல் இஸ்ராயேலர் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டினர் (7:14). ஆனால் தாவீது கோலியாத்தை எலாத்துப் பள்ளத்தாக்கில் தோற்கடித்தபின், பெலிஸ்தியரால் எக்கரோ னுக்குப் பின்வாங்க முடிந்தது (17:52).

இஸ்ராயேல் இரண்டு அரசாகப் பிளவு பட்ட (கி.மு.918) சிறிது காலத்தில் எகிப்திய பாரவோன் முதலாம் சோக்கு எக்கரோனைக் கைப்பற்றினார் (1 அர 14:25). சிறிது காலத் திற்குப்பின் இஸ்ராயேலின் அரசனும் ஆகாபு வின் மகனுமான அகசியா (853) நோய் வாய்ப்பட்டிருந்தபோது இஸ்ராயேலின் இறைவனிடம் தஞ்சமடைவதற்குப் பதி லாக, எக்கரோனின் தெய்வமான பாகால் செபூவை ஆலோசித்தார் (2 அர 1:2). இது எலியாவின் தலையீட்டைத் தூண்டியது (1:3-16). பாகாலின் வழிபாட்டின் ஒரு வடிவம் எக்கரோனின் சமயமாக இருந்தது இஸ்ரா யேலை அதிகம் பாதித்ததாகத் தெரிகிறது.

எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அமோஸ் பெலிஸ்தியரின் ஐந்து நகரங்களோடு எக்கரோனையும் கண்டனம் செய்து, வரவிருக்கும் அழிவைப்பற்றி எச்சரிக்கிறார் (ஆமோ 1:8). இந்நகரம் பல ஆண்டுகளாக ஏற்கெனவே அசீரியர்களின் தாக்குதலை உணர்ந்திருந்தாலும், 712-இல் 2-ஆம் சார்க்கோனுக்கு வீழ்ந்தது. எக்கரோனின் அரசன் பாடி அசீரியர்களுக்குப் பிரமாணிக்கமாக இருந்ததாலும், அதிகாரவர்க்கத்தினர் யூதாவின் அரசன் எசக்கியாவுக்கு ஆதரவு அளித்து, கிளர்ச்சி செய்ய வழிதேடினார். 701-இல் சனகெரிபு பாலஸ்தீனத்தை முற்றுகையிட்டார். எக்கரோனைத் தனிமைப்படுத்தி, அசீரியர்கள் அளித்த உதவியை நிறுத்தினார். நகரைக் கைப்பற்றி, பாடியை மீண்டும் அரசனாக நியமித்து, கிளர்ச்சியாளர்களை நாடு கடத்தினார்.

பிறகு வந்த அசீரிய அரசர்களுக்கு எக்கரோன் கப்பம்கட்டி, தொழிலாளர்களையும் அளித்தாலும், அதன் அழிவை எபிரேய இறைவாக்கினர்கள் முன்னறிவித்தனர் (செப் 2:4; செக் 9:5-9; காண்க எரே 25:20). பாபிலோனியர்கள் காலத்தில் அதன் நிலையைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அடுத்து, இந்நகரம் பற்றிய குறிப்பு, யோனாத்தான் மக்கபேயர், தெமேத்திரியசைத் தோற்கடித்து, அசுதோதை வென்றதற்காக அலக்சாந்தர் பாலாஸ் அவருக்கு இந்நகரைக் கொடையாகக் கொடுத்தார் என்பதாகும் (கி.மு.147; 1 மக் 10:89).

கி.பி.4-ஆம் நூற்றாண்டில் அங்கு ஒரு யூதக் குழு இருந்திருக்கிறது. சிலுவைப் போரின்போதும் (1100) முதலாம் பால்டுவின்னின் படையெடுப்பின்போதும் இந்நகரம் குறிக்கப்படுகிறது.

இந்த இடம் எங்கிருந்தது என்பது பற்றித் தொல்பொருள் ஆய்வாளர்களிடையே கருத்தொருமை இல்லை. அசுதோதுக்கு வடகிழக்கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள, பழங்காலப் பெயரைப் பாதுகாத்துள்ள ஆக்கீர் என்ற சிற்றூராக இருக்கலாம் என்று முதலில் கருதப்பட்டது. சமீபத்தில் அறிஞர்பலர் இந்நகர் கிர்பெத்து ஏல்-முக்கென்னா (தேல்மிக்னே) எனக் கருதுகின்றனர். இவ்விடம் கடற்கரைச் சமவெளியின் கிழக்கு ஓரத்தில் 31 கி.மீ. உள்நாட்டில் உள்ளது. இவ்விடத்தில் நடந்த தொல்பொருள் ஆய்வுகள் இரும்புக் காலத்தைச் சேர்ந்த பெலிஸ்தியர்களின் பல பொருள்களைக் காட்டின. மேலும் யுசேபியு குறிக்கும் ஒரு பெரிய நகரையும் இந்த ஆய்வு காட்டியது. வேறுசிலர் அசுதோதுக்கு வடகிழக்கில் 18 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால கத்ராவை அடையாளம் காட்டுவர். இவர்கள் கிர்பெத்து ஏல்-முக்கென்னாவை ஏல் தெக்கே இருந்த இடமாக அடையாளம் காட்டுவர் (யோசு 19:44).

எக்கொனியா (JECONIAH யாவே நிறுவுவார்)

யூதாவைச் சேர்ந்த யோயாக்கினின் மற்றொரு பெயர் (மத் 1:11-12).

எக்கோலியா (JECOLIAH - யாவேயால் கூடும்)

யூதாவின் அரசன் அமாசியாவின் மனைவியும், அரசன் அசரியாவின் தாயும் ஆவார் (2 அர 15:2; 2 நாள் 26:3).

எசக்கியா (HEZEKIAH - யாவே என் வலிமையாவார்)

1. எசக்கியா என்பவர் கி.மு. 715 முதல் 687 வரை யூதாவின் பதினான்காவது அரசராக விளங்கினார். இவர் ஆகாசின் மகனும் வாரிசும் ஆவார்.

இவர் தனது 25-ஆம் வயதில் அரியணை ஏறினார். 29 ஆண்டுகள் ஆட்சி செய்தார் (2 அர 18:2; 2 நாள் 29:1). செக்காரியாவின் மகளாகிய அபி இவரது தாயாவாள். இவரது ஆட்சிக் காலத்தின் பதினான்காம் ஆண்டில் சனகெரிபு யூதாவின் அரண்சூழ்ந்த நகர்களை முற்றுகையிட்டுப் பிடித்தார் (2 அர 18:13). கி.மு. 689-இல் திரிகாக்கா அரசராகிய பொழுது இவரது ஆட்சிக் காலம் முடிவுற்றது (19:9).

எசக்கியா ஒரு சிறந்த அரசராகப் பிற்கால மக்களால் கருதப்பட்டார் (2 அர 18:5; 23:25).

யூதா நாட்டு வரலாற்றில் மிகவும் பிரச்சனை யான சூழ்நிலையில் இவர் அரசபதவியை ஏற்றார். ஆராம் ஏற்கெனவே திகிலாத்து பிலேசருக்கு வீழ்ச்சியுற்றது. அதே கதி யூதா வுக்கும் காத்திருந்தது சீரிய எப்பிராயம் போரினாலும், ஆகாசின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பெலிஸ்தியர்கள், ஏதோமியர்க ளின் தாக்குதல்களினாலும், யூதாவின் வலிமை குறைய ஆரம்பித்தது. அசீரியா விற்கு அவர்கள் செலுத்த வேண்டிய கப்பம் பெரிய சுமையாக இருந்து வந்தது. மேலும் ஆகாசின் காலத்தில் சமயத்துறையிலும் ஏரா ளமான குழப்பங்கள் ஏற்பட்டன. எனவே அரசியல் சமய மறுமலர்ச்சிதான் யூதாவின் உடனடித் தேவையாக இருந்தது. ஆகாசின் காலத்திலே ஒரு சமய மறுமலர்ச்சிக் குழு யூதாவில் இருந்து வந்தது. அக்காலத்தில் தான் ஆமோஸ், ஓசே போன்ற இறைவாக்கி னர்கள் உரைத்த இறைவாக்குகள் வடநாட்டு அரசின் அழிவின் மூலம் நிறைவேறின. எசக்கியாவைப் பொறுத்தவரையில் அரசிய லில் அதிக ஈடுபாடு காட்டியதுபோல் தோன் றினாலும் அவரிலே சமயம் சார்ந்த ஆர்வத் தையும், நாட்டு உணர்வினையும் பிரித்துப் பார்க்க இயலாது.

இந்தச் சமயச் சீர்திருத்தத்தில் ஏசயாவின் செல்வாக்கும் பாகமும் குறிக்கப்பட வேண் டியனவாகும். எசக்கியா சிலைவழிபாட்டிற் காக அமைக்கப்பட்டிருந்த மேடுகளையும் சிலைகளையும் உடைத்தார். வழிபாட்டுக் கென .அமைக்கப்பட்டிருந்த சோலைகளை யும் அழித்தார். மேலும் மோசேயால் செய்து வைக்கப்பட்டது என்று சொல்லி, தூப வழி பாடு நடத்தப்பட்டு வந்த பித்தளைப் பாம் பையும் உடைத்தெறிந்தார் (2 அர 18:4). இத்தகைய செயல்களுக்கு மக்களின் முழு மையான ஆதரவு கிடைக்கவில்லை. 2 நாள் 29-31-இல் எசக்கியாவின் சமய மறுமலர்ச்சி பற்றி நீண்ட உரை தரப்பட்டிருக்கின்றது. ஆலயமானது தூய்மைப்படுத்தப்பட்டு அர்ச் சிக்கப்பட்டது. ஆலய வழிபாடுகள் புதுப் பிக்கப்பட்டன (2 நாள் 29). இதைத் தொடர்ந்து பாஸ்காத் திருவிழா கொண்டா டப்பட்டது. வடநாட்டு அரசினைச் சேர்ந்த மக்களும் இவ்விழாவில் பங்கு கொண்டனர் (2 நாள் 30). மேலும் மனாசே, எப்பிராயிம் நாடுகளிலும் உள்ள சிலைவழிபாடுகள் அழித்து நொறுக்கபபட்டன (2 நாள் 31:1). 2 நாள் 31-இல் முழுவதிலும் எசக்கியாவால் நடத்தப்பட்ட சமய மறுமலர்ச்சி பற்றிதான் கூறப்பட்டுள்ளது.

இந்த மறுமலர்ச்சி இயக்கமானது வட நாட்டு அரசிற்கும் சென்றது. எப்பிராயிம், மனாசே, ஆசேர், செபுலோன் நாடுகளில் மக்கள் சிலர் இவர்களின் சொல்லைக் கேட்டு நடந்தனர் (2 நாள் 30:10-11). ஆனால் பலர் எசக்கியாவால் அனுப்பப்பட்ட தூது வர்களின் சொற்களுக்குப் பணியவில்லை. ஏனென்றால் எசக்கியா எருசலேமை யாவே வழிபாட்டின் மையத்தளமாக மாற்ற முயற்சி எடுத்தபோது அசீரியர்கள் பெத்தே லில் யாவேயை வழிபட உத்தரவு அளித்தார் கள்.

யூதாவை அரசியல் துறையைப் பொறுத்த வரையில் வலிமைமிக்க நாடாக, சிறந்த நாடாக மாற்ற வேண்டும் என்பது எசக்கியா வின் மற்றொரு குறிக்கோளாகும். இவர் முதல் சில ஆண்டுகள் அசீரியவை எதிர்த்து எந்தவிதமான கிளர்ச்சியையும் செய்ததாகத் தோன்றவில்லை.

இந்த ஆண்டுகளில் எதிர்காலத்தை முன் னோக்கி எருசலேமின் படைவலிமையைப் பெருக்கினார். குறிப்பாகக் கீகோன் நீரூற் றின் தண்ணீரை நகருக்குள் கொண்டுவருவ தற்காகப் பாறையைக் குடைந்து வாய்க்கால் அமைத்தார் (2 அர 20:20; 2 நாள் 32:30). அசீரியாவின் அரசர் சார்கோன் இறந்தபின் சனகெரிபு பதவியேற்ற பொழுது ஒரு புதிய சூழ்நிலை அசீரியாவில் உருவாகியது. இந் தக் காலத்தில் பாபிலோனிய அரசன் மெரொ தாக்கு பலாதான் எசக்கியாவுக்குத் தூது அனுப்பினார். அசீரியர்களுக்கு விடாப்பிடி யான எதிர்ப்பு அளித்தார் (2 அர 20:12-15; ஏச 39:1-4). இக்காலத்தில்தான் எத்தியோப் பிய அரசரான திரிகாக்கா அசீரியாவை எதிர்த்துத் தனது படையை திரட்டினார் (2

அர 19:9). இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு எசக்கியா பாபிலோனியா, எகிப்து போன்ற நாட்டு அரசர்களுடன் சேர்ந்து கொண்டு அசீரியாவை எதிர்த்தார் (2 அர 18:7). மேலும் பெலிஸ்தியர்களைக் காசா வரை துரத்திச் சென்று, காவலர் காவல் புரியும் கோபுரங்கள், அரண் சூழ்ந்த நகர்கள் அவர்களுடைய எல்லைகள், அனைத்தையும் அழித்தார் (2 அர 18:18). அசீரிய எதிர்ப்பு இயக்கத்தை ஏசயா எதிர்த்ததாகத் தெரிகிறது. சனகெரிபு கிழக்குப் பகுதியில் தன் காரியங்களைச் சரிப்படுத்தியபின் மேற்கு நோக்கித் திரும்பினார். பின் எசக்கியா ஆண்ட, பதினான்காம் ஆண்டில் அசீரிய அரசன் சனகெரிபு யூதாவிலிருந்த அரண்சூழ்ந்த நகர்கள் அனைத்தையும் முற்றுகையிட்டுப் பிடித்தார் (2 அர 18:13). இந்நகர்களில் இலாக்கீசு, தெபீர் போன்றவைகளும் உள்ளடங்கும். உடனே எசக்கியா சனகெரிபுக்கு அடி பணிந்து அவர் எவ்வளவு தொகை வரியாகச் செலுத்தச் சொன்னாலும் செலுத்துவதாகக் கூறி அவனுக்குச் செய்தி அனுப்பினார். ஏனென்றால் மற்றும் உள்ள நகர்களை அசீரிய மன்னன் முற்றுகையிட்டு விடாதபடி இருக்க இம்முயற்சியைக் கையாண்டார். அசீரிய மன்னர் முந்நூறு தாலந்து வெள்ளியும், முப்பது தாலந்து பொன்னும் செலுத்தக் கட்டளை இட்டார் (2 அர 18:15). அரசனின் கட்டளைப்படி கருவூலங்களிலும் ஆலயத்திலுமிருந்து அனைத்துச் செல்வங்களையும் எடுத்துச் சென்று அரசனுக்கு அளித்தார். இந்த நிகழ்ச்சி யூதாவின் செல்வச் செழிப்பைப் படம் பிடித்துக் காட்டுகின்றது (2 நாள் 32:27-29).

இரண்டாம் அர 18:17-19:37 ஏராளமான பிரச்சனைகளை எழுப்புகின்றது. சனகெரிபு இலாக்கீசை முற்றுகையிட்ட பொழுது, அதைக் கைப்பற்றுவது கடினமாக இருந்த காரணத்தால் தனது படையின் ஒரு பகுதியை இரபிசகேயின் தலைமையில் எசக்கியாவின் படைகளை முறியபடிப்பதற்காக அனுப்பியிருந்திருக்கலாம். ஆனால் இலாக்கீசு நகரானது முற்றுகையிடப்பட்டதேயொழியக் கைப்பற்றப்படவில்லை. சிறிது காலம் கழித்து இரபிசகே திரும்பி வந்து இலிபுனாவோடு போரிட்டுக் கொண்டிருந்த எத்தியோப்பிய அரசன் எகிப்தியப் படையோடு தனக்கு எதிராகப் படை திரட்டி வருகிறான் என்ற செய்தியை அசீரிய மன்னன் கேட்டவுடன் இலிபுனாவோடு போரிடுவது தடைசெய்யப்பட்டது. திடீரென்று அசீரியா திரும்பினார். ஆனால் கி.மு. 689-இல்தான் திரிகாக்கா எகிப்து நாட்டின் அரசனாக வந்தான். இந்தப் படையெடுப்பு ஏன் திடீரென்று நிறுத்தப்பட்டது என்பதற்கு எக்காரணமும் சனகெரிபின் ஏடுகளிலும் தரப்படவில்லை.

எனவே கிடைக்கக்கூடிய ஆதாரங்களை வைத்துக்கொண்டு ஒரு வரலாற்றைப் படைப்பது என்பது முடியாத செயலாகும்.

ஒருவேளை 2 அர 18:17-19:37, அசீரியர்களுக்கு எதிராக எசக்கியா செய்த கிளர்ச்சியை விவரிக்கலாம். இதன்விளைவாக, எருசலேம் மீண்டும் முற்றுகையிடப்பட்டது. ஆனால் ஏசயா, எருசலேம் வீழாது என்று உறுதி அளித்திருந்தார் (ஏச 14:24-27; 17:12-14; 31:4-9; காண்க 2 அர 19:29-34). ஆனால் அசீரியர்கள் திடீரென்று திரும்பிச் சென்றனர். இதற்குப் படையில் ஏற்பட்ட கொள்ளை நோயோ (2 அர 19:35), சனகெரிபு அவனது நாட்டிலிருப்பது தேவைப்பட்டதோ (19:7) காரணமாக இருக்கலாம்.

இக்காலத்தில்தான் எசக்கியா நோயுற்றார். அவரது மன்றாட்டுக்குப் பதிலாக 15 ஆண்டு வாழ்வு அளிக்கப்பட்டது. இதுபற்றி இவர் யாவேயைப் போற்றும் பாடல் ஏச 38:10-20-இல் காணப்படுகிறது. 687-இல் எசக்கியா மரித்தபோது அசீரியர்களுக்கு எதிரான நீண்ட கால எதிர்ப்பு முடிவுக்கு வந்தது. அவரது மகன் மனாசே சமாதானம் செய்து கொண்டார்.

2. யூதா அரச குடும்பத்தைச் சேர்ந்த நேரியாவின் மகன் (1 நாள் 3:23).

3. பாபிலோனிய நாடு கடத்தலிலிருந்து நெகமியாவுடன் திரும்பிய ஒரு குடும்பத்

தின் தலைவர் (எஸ் 2:16; நெக 7:21). இவரது பாபிலோனியப் பெயர் ஆத்தேர் ஆகும். புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டவர்களில் இரு பெயர்களும் காணப்படுகின்றன (நெக 10:17).

4. இறைவாக்கினர் செப்பனியாவின் முன்னோரில் ஒருவர் (செப் 1:1).

எசக்கியேல் (EZEKIEL - இறைவன் வலிமைப்படுத்துவாராக)

இவர் மூன்றாவது பெரிய இறைவாக்கு நூலில் உள்ளவைகளை உரைத்த நாடு கடத்தப்பட்ட காலத்திய இறைவாக்கினர் ஆவார். சாதோக்கிய இனக் குருவாகிய பூசியின் மகனாகிய இவர், கி.மு.598-இல் நெபுக்கதுனேசாரிடம் யோயாக்கின் அரசன் சரணடைந்த பிறகு நாடு கடத்தப்பட்டு, பாபிலோனுக்கும் நிப்பூருக்கும் இடையில் கேபார் நதியருகில் தேல்-அபீபு என்னுமிடத்தில் உள்ள தன்னுடைய வீட்டிலேயே வாழ்ந்தார் (எசே 3:15). 503-இல் இறைவாக்கின் அழைப்பைப் பெற்ற இவர் (1:2-3) தன்னுடன் சிறைப்பட்டோருக்குக் குறைந்த பட்சம் இருபத்து மூன்று வருடங்கள் சேவை புரிந்தார். அவருடைய இறுதியான காலம் குறிப்பிடப்பட்ட இறைவாக்கானது 571-ஐச் சேர்ந்தது (29:17). அவரது இறைவாக்குகள் எண்ணற்ற காட்சிகள், மௌனமான பரவசநிலை மற்றும் அடையாளச் செயல்கள் ஆகியவை நிறைந்தவை. அவரது மனைவியின் மரணமே எருசலேமினுடைய வீழ்ச்சிக்கு ஒரு இறைக் கூற்றாக ஆகிறது (24:15-27).

எசக்கியேல் திருநூல் (BOOK OF EZEKIEL)

1. முன்னுரை:- எசக்கியேல் இறைவாக்கினரின் வாழ்நாளிலேயே ஒரு பெரிய சகாப்தம் முடிந்தது; மற்றொன்று தோன்றியது. இவர்தான் யூதா அழியும் என்று கூறியவர். ஆனால் இவரே ஒரு புதிய அடிப்படை ஒழுங்கு ஏற்படக் காரணமாக இருந்ததால் யூதத்துவத்தின் தந்தை என்றழைக்கப்படுகின்றார். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இறைவாக்கினர் எசக்கியேலின் காலம், இடம் போன்றவற்றைப் பற்றி அறிஞர்கள் பல ஐயங்களை எழுப்புகின்றனர்.

2. எசக்கியேலின் பெயரும் வாழ்க்கை வரலாறும்:- எசக்கியேல் என்னும் சொல் ''ஆண்டவர் வல்லமையுள்ளவர்'' அல்லது ''இறைவன் பலப்படுத்துகிறார்'' எனப் பொருள்படும். எசக்கியேல் சாதோக்கின் வழி வந்த குரு குலத்தைச் சார்ந்த பூசி என்பவரின் மகனாவார். இவர் எருசலேமுக்கு மிக அருகிலேயே வாழ்ந்திருக்க வேண்டும். இவரும் மற்ற நகரத் தலைவர்களோடு கி.மு. 597-இல் நெபுக்கதுனேசரால் நாடுகடத்தப்பட்டதால், இவர் சமுதாயத்தில் நல்ல நிலைமையில் இருந்திருக்க வேண்டும். பாபிலோனின் தெற்கில் நிப்பூருக்கு அருகில் ஓடுகின்ற கெபார் நதியின் கரையில் அமைந்திருந்த, நாடு கடத்தப்பட்டவர்களின் முக்கிய குடியிருப்பாகிய தேல்-அபீபு என்ற இடத்தில் தன் சொந்த வீட்டில் வாழ்ந்தார். இவர் திருமணமானவர். ஆனால் கி.மு. 588-இல் சனவரியில் நடந்த எருசலேம் நகர முற்றுகையின் போது அவரது மனைவி இறந்துவிட்டாள். இவர் கி.மு. 593-இல் சூன் மாதத்தில், இறைவாக்குரைக்க இறைவனால் அழைக்கப்பட்டார். ஆனால் அவருடைய பிறப்பு, இறப்பைப் பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் இவர் யோசியாவின் சீர்திருத்தங்களையும், அதன் பின் வந்த சிலைவழிபாட்டுச் சீர்கேடுகளையும் பார்த்திருப்பார். இவர் நாடு கடத்தப்பட்ட இடத்தில்தான் இறந்திருக்க வேண்டும்.

எசக்கியேல் விவிலியத்தில் வரும் முரண்பாடுகள் கொண்ட குணச்சிறப்புடையவர்களுள் ஒருவர் ஆவார். இறைவாக்குப் பணிக்கு அவர் அழைக்கப்பட்டபோது அவர் போதிக்க வேண்டிய செய்திகள் அடங்கிய சுருளை ''உண்டு'', ''செரிமானம் செய்து''. பின் போதிக்க வேண்டும் (எச 2). இறைவனது கரம் அவர்மேல் இருந்தது (1:3; 3:14-22; 8:1; 33:32; 37:1; 40:1). இறைவனது ஆவி அவரை ஆட்கொண்டது (2:2; 3:12; 14:24; 8:3; 11:1; 37:1). இவ்வாறு அவர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதால் அது அவரது ஆள்தன்மையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. இவர் மிகவும் பிடிவாத குணமும் மனவலிமையும் கொண்டவர். நேர்மையும் நம்பிக்கையும் கடுமையும்

கண்டிப்பும் கொண்ட எசக்கியேல் வலிமை, கட்டுப்பாடு முதலியவற்றின் உருவமாவார்.

இத்தகைய அவரின் தனிச்சிறப்புகளே அவரைப் பல்வேறு வகையில் அவருக்கு எதிராகவே விமர்சிக்கக் காரணமாயின. பழைய ஏற்பாட்டில் ஒருவருமே இவரைப் போல் பலவகைகளில், அந்தமுறையில் விமர்சிக்கப்பட்டதில்லை. இவருக்குப் பல விதமான உளநோய்கள் இருந்ததாக அறிஞர்கள் கருதுகின்றனர். ஓர் ஆசிரியர் ''விவிலியத்திலேயே எசக்கியேல்தான் முதல் கோட்பாட்டு வெறியர்'' என்கிறார். எச 9:8; 11:13; 30:30-32 ஆகிய பகுதிகளை மனதில் கொண்டு ஆராய்ந்தால் இத்தகையதொரு கருத்தைக் கூறமுடியாது. மற்றொருவர் எல்லாக் காலத்திலும் தோன்றிய மிகப்பெரிய ஆன்மீக வழிகாட்டிகளுள் ஒருவராக எசக்கியேலைக் குறிப்பிடுகிறார். எனவே எசக்கியேல் வழக்கத்திற்கு மாறாகச் செயல்பட்டார் என்று கூறலாமே தவிர உளநோய் கொண்டவர் எனக்கூறமுடியாது.

எசக்கியேலில் இரண்டு ஆன்மாக்கள் செயல்பட்டதாகத் தோன்றுகிறது: அவர் ஒரு குருவும் இறைவாக்கினரும்; கவிஞரும் இறையியல் வல்லுநரும்; சமயத்தை ஒரு அமைப்பாக வளர்த்தவரும் ஒழுக்கநெறிகளைப் போதித்த போதகரும்; அழிவை அறிவிப்பவரும், மீட்பின் தூதரும்; சிந்தனை மிக்கவரும் காட்சி காண்பவரும்; கண்டிப்பானவரும் இரக்கமிக்கவரும் ஆவார் என்று இப்படிக் கூறிக்கொண்டே போகலாம். எனவே பெரும்பாலான அறிஞர்கள் இப்படிப்பட்ட ஓர் ஆளுமையைக் கண்டு வியக்கின்றனர். மலைத்துப் போகின்றனர். மேலும் யூதா அழிந்து கொண்டிருந்த நிலையில் எரேமியாவைப் போன்ற உணர்ச்சி மிக்கவர்களை அழைத்த இறைவன் எசக்கியேலைப் போன்ற கண்டிப்புள்ளவர்களையும் அழைக்கின்றார்.

3. வரலாற்றுப் பின்னணியும், சமயப் பின்னணியும்:-

அ. வரலாற்றுப் பின்னணி:- எசக்கியேல் கி.மு. 609-இல் யோசியாவின் இறப்புக்கும், கி.மு. 587-இல் எருசலேமின் அழிவிற்கும் இடைப்பட்ட காலத்தில் இறைவாக்குரைத்தவர். இவ்வேளையில் அசீரியப் பேரரசுக்குப் பதிலாகப் பாபிலோன் ஒரு வல்லரசாகத் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது. அசீரியாவின் சிற்றரசுகளாக இருந்த நாடுகள் ஒவ்வொன்றாகச் சுதந்தர நாடாக அறிவித்தன. கி.மு. 622-இல் யோசியா பல சமய சமூகச் சீர்திருத்தங்களைச் செய்தார். இவ்வேளையில் யூதா எகிப்தின் கீழ் இருந்தது. கி.மு. 606-இல் நெபுக்கதுனேசார் யூப்பிரத்திசு ஆற்றைக் கடந்து, எகிப்தின் பாரவோன் நெக்கோவை கார்கேமிஸ் என்னும் இடத்தில் தோற்கடித்து, பாலஸ்தீனத்தையும் வென்று, தன் அரசோடு சேர்த்துக் கொண்டார். சில ஆண்டுகளுக்குப் பின் யூதா நாட்டினர் மீண்டும் கலகம் செய்ததால் மீண்டும் பாபிலோனிய மன்னன் அவர்கள் மேல் படையெடுத்தார். இம்முறை 597-இல் யோயாக்கினைச் சிறைப் பிடித்து நாடுகடத்தினார். ஆலயத்தைக் கொள்ளையிட்டு அதன் புனித பண்டங்களையும் பாபிலோனுக்குக் கொண்டு சென்றார். மேலும் ஆயிரக்கணக்கான தலைவர்களையும், தொழில் வல்லுநர்களையும் நாடுகடத்தினார். பின் யோயாக்கீனின் மாமாவான மத்தனியாவை, செதேக்கியா என்று பெயர் மாற்றம்செய்து ஆளுநராக நியமித்தார். யூதா எகிப்தியரோடு சேர்ந்து மீண்டும் சதி செய்வதாக நெபுக்கதுனேசார் அறிந்து மீண்டும் பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்தார். இம்முறை விளைவுகள் இன்னும் மோசமாயிருந்தன. செதேக்கியாவைக் குருடாக்கிப் பாபிலோனுக்குக் கைதியாகக் கொண்டு சென்றார்.

ஆ. சமயப்பின்னணி:- சமயப் பின்னணி ஒரு நூற்றாண்டுக்கு முன் எவ்வாறு இருந்ததோ இப்போதும் அவ்வாறே இருந்தது. நல்லவரான எசக்கியாவுக்குப் பின் மனாசேயும் ஆமோனும், யோசியாவுக்குப் பிறகு எகோயாக்கினும், செதேக்கியாவும் வந்தனர். கானானிய வழிபாட்டு முறைகளும் வழக்கில் இருந்தன. எனவே அப்போதிருந்த நிலையை எசக்கியேல் மிகைப்படுத்திக் கூறவில்லை.

4. எங்கே, யாருக்குப் போதித்தார்?:-

எசக்கியேல் எங்கே யாருக்குப் போதித்தார் என்பதைப்பற்றித் தீர்க்கமுடியாத பல பிரச்சனைகள் எழுந்துள்ளன? இதைப்பற்றிக் கருத்துவேறுபாடுகளும் நிலவுகின்றன. பாரம்பரியத்தில் கி.மு. 597-இல் எசக்கியேல் தான் நாடு கடத்தப்பட்டு இறைவாக்குரைக்க அழைப்புப் பெற்ற பாபிலோனில்தான், தன் ஆயுள் முழுவதும், நாடு கடத்தப்பட்டவரிடையே பணியாற்றினார். இதைத்தான் எச 1:1-ஐ நாம் வாசிக்கிறபோது உணர்கிறோம்.

இக்கருத்தைப்பற்றி முதன் முதலில் தோரே என்பவர் ஐயம் தெரிவித்து, இந்நூல் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒருவரின் படைப்பு என்றும், அவர் மனாசே ஆட்சிக் காலத்திய வடஅரசனின் சூழ்நிலையை இந்நூலுக்குக் கொடுத்தார் என்றும் கூறினார். ஏனெனில் எசக்கியேல் கண்டனம் செய்யும் சிலைவழிபாட்டு முறைகள் மனாசேயின் காலத்தில்தான் நாடு முழுவதும் இருந்தன. யோசியாவின் சீர்திருத்தக் காலத்திற்குப்பின் இது பொருந்தவில்லை. பின்னால் வந்த பதிப்பாசிரியர் ஒருவர், நாளாக இறையியல் பாரம்பரிய அடிப்படையில் எசக்கியேலின் பணியைப் பாபிலோனில் அமைத்தார். இவர் சில தேதிகளையும் இன்னும் சில பகுதிகளையும் மாற்றி இது ஓர் இறைவாக்கினரால் கூறப்பட்டதுபோல அமைத்தார் என்றும் கூறுகிறார். ஸ்மித் என்ற விவிலிய அறிஞரின் கூற்றுப்படி, எசக்கியேல் வட அரசில் பணியாற்றினார். கி.மு. 734-இல் நாடு கடத்தப்பட்டு, மீண்டும் தாயகம் திரும்பி வடஅரசில் போதித்தார். ஆனால் வேறுசிலர் பாலஸ்தீனத்தில் போதித்தார் அதை ஒரு சீடர் அணுவளவும் பிசகாமல் நாடுகடத்தப்பட்ட போது பதிப்பித்தார் என்று கூறினர்.

வேறுசிலரது ஆராய்ச்சியின்படி கி.மு. 597-இல் அல்லது கி.மு. 587-இல் எசக்கியேல் நாடு கடத்தப்படுமுன் பாலஸ்தீனத்தில் தூதுரைத்தார். இன்னும் சிலர் அவர் பாபிலோனில் மட்டுமே பணிபுரிந்தார் என்பர். இன்னும்வேறு சிலர் அவர் இரண்டு இடங்களிலும் பணிபுரிந்தார் என்றும் கூறுகின்றனர்.

வேறு சிலர், எசக்கியேல் இரண்டு இடங்களிலும் பணிபுரிந்தாலும், பெரும்பாலான ஆண்டுகள், கி.மு. 587-இல் எருசலேம் அழியும் வரை பாலஸ்தீனத்தில்தான் பணிபுரிந்தார் எனக் கருதுகின்றனர். பாபிலோனில் தான் எசக்கியேல் பணிபுரிந்தார் என்னும் பாரம்பரிய கருத்திற்கு மாறாக, அவர் பாலஸ்தீனத்தில்தான் தன் பணியைத் தொடங்கியதாகக் கூறும் ராபிகளின் பாரம்பரியம் ஒன்றையும் சுட்டிக்காட்டுவர். நூலில் இறைவாக்குகளின் அமைப்பை உற்று நோக்கும்போது எருசலேமிலும் (அதி 8) கெபார் நதிக்கரையிலும் (1:1) இரண்டு பெரிய காட்சிகள் நடைபெறுகின்றன. எச 4-24-இல் அச்சுறுத்தல்களும் எச 33-37-இல் வாக்குறுதிகளும் வருகின்றன. அழிவை அறிவிக்கவும் (2:3-10), மேய்ப்புப்பணிக்காகவும் இரண்டு அழைப்பைப் பெறுகின்றார். கலகம் செய்யும் இஸ்ராயேல் மக்களுக்கும் (2:3-4), நாடு கடத்தப்பட்டவருக்கும் (3:2) செய்தியை எடுத்துச் செல்ல ஆணைபெறுகிறார். இரண்டு இடங்களில் பணிபுரிந்தார் என்பதற்கு ஆதாரமாக 2:3; 3:4.15; 8:1-4; 12:3; 14:7-12; 24:5-26 போன்ற பகுதிகளை அறிஞர்கள் சுட்டிக்காட்டுவர்.

நூலின் முற்பகுதியில் காணப்படும் பகுதிகள் பாலஸ்தீனத்தில் அவர் பணியாற்றியதாக அறிவிப்பதுபோலத் தோன்றுகிறது. அவர் அங்கு இல்லாமலிருந்தால் சிறப்பாகப் பயனளிக்கும் முறையில் போதித்திருக்க முடியாது. பல நூறு மைல்களுக்கப்பால் வாழ்ந்திருந்தால் எருசலேமில் நடந்தவற்றை அப்படியே அறிந்திருக்க முடியாது. கி.மு. 587-586-க்கு முற்பட்ட மக்களுக்குச் செய்து காட்டும்படி இறைவன் கூறுகின்ற ''செயல் போதனைகள்'' அவர்கள் முன் செய்யப்பட்டாலொழியப் பயனளிக்காது. மேலும் 24:15-26-இல் எசக்கியேலின் மனைவி இறந்ததால், ''அவர்கள் தங்கள் கண்களின் இன்பமாகிய'' ஆலயத்தை இழப்பர் என்று உணர்த்துவதற்காக ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களுக்கு எழுதப்பட்டால் பயனேதும் இல்லை. மேலும், ஆலயம் அழிந்த ''அந்நாளிலேயே'' நகரும் அழிந்தது என்று ஒரு

நாடோடி செய்தி கொண்டு வருவது, எசக்கியேல் எருசலேமுக்கு அருகில் வாழ்ந்ததாகத் தான் பொருள்படுகிறது. நாடுகடத்தப்பட்டுத் துன்புறும் மக்கள் முன்நிற்க, ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களை நோக்கிக் கண்டன மொழிகளைக் கூறுவது உளவியல்படி நிகழமுடியாத ஒன்று. இக்காரணங்களைக் கொண்டு பாலஸ்தீனத்தில்தான் அவர் பணிபுரிந்தார் என்று வலியுறுத்துகின்றனர்.

பாபிலோனில்தான் தூதுரைத்தார் என்போரின் கருத்துப்படி எசக்கியேல் எருசலேமுக்குச் சென்றதாகக் கூறப்படும் பயணங்கள், அப்படியே உண்மையில் நிகழ்ந்தவை அன்று. ஆவி அவரை அங்குப் பரவசத்தில் இட்டுச் சென்றது. அழிவுக்குத் தீர்ப்பிட்ட நகரை அவர் ஊனக் கண்களினால் காணாமல் காட்சியில் கண்டார். தொலையுணர்வு, தொலைவிடக்காட்சி ஆகியவைகளுக்கு இணையான அவரது அசாதாரண சக்திகளை இறைவன் பயன்படுத்திக்கொண்டார். மேலும் அழிவு பற்றிய செய்தி பாபிலோனில் பேசப்பட்டாலும், நடித்துக்காட்டப் பட்டாலும், பாலஸ்தீனத்திலுள்ளவர்களுக்குப் பாபிலோனிலிருந்து எருசலேமுக்குச் செல்லும் பயணிகளால் எடுத்துச் செல்லப் பட்டது. மேலும் பாபிலோனுக்கு எதிராக இறைவாக்குகள் இல்லாமை குறிப்பிடத்தக்கதாகும். சிந்தனைப் போக்கில் பாபிலோனியப் பாதிப்பை நாம் ஒதுக்க முடியாது. எனவே எதையும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

எங்குப் பணிபுரிந்தார் என்பது தெளிவாக இல்லாததால், யாரைப்பார்த்துப் போதிக்கிறார் என்பதும் தெளிவாக இல்லை. இஸ்ராயேல் மக்களுக்குப் பொதுவாகப் பேசுவது போல் இருக்கிறது. இவர்கள் கலகக்காரர்கள்; இவர்கள் யாவேமீது விசுவாசம் கொண்டவர்கள்; ஆனால் நிகழ்ச்சிகள் கற்பிக்கும் பாடங்களைப் புரிந்து கொள்ளத்தவறியவர்கள்; தங்களிடையே வாழ்ந்து, உடனடியாக வரும் நற்காலத்தை எடுத்துக்கூறும் இறைவாக்கினர்களை நம்பத் தயாராக இருந்தவர்கள் (எரே 29:15; 6:ச 13:3.6.9). எருசலேமைப் பார்த்துப் பேசும்போது ஏசயா தன் நூலின் 52:1.7-9; 54:1 ஆகிய பகுதிகளில் கையாண்ட யுக்திகளையே எசக்கியேலும் பயன்படுத்துகிறார். நாடுகடத்தப்பட்டோரிடம் பேசும் போது முன்னிலையிலும், எருசலேமிலுள்ளோரிடம் பேசும்போது படர்க்கையிலும் பேசுகிறார் (5:1-17; 11:17-20; 14:12-23).

5. நூலின் ஒற்றுமை, உண்மைத்தன்மை, தோன்றிய வரலாறு:-

இந்நூலின் தீர்க்கமுடியாத சிக்கலை விளக்க இரண்டு பாரம்பரியக் கூற்றுகள் உண்டு. ''தால்மூது'' என்ற நூலின் படி, ராபிகள் தங்கள் வேதநூல் பட்டியலைத் தயாரித்தபோது இந்நூலைச் சேர்த்துக் கொள்ளத் தயங்கினர். ''அனானியா பென் எசக்கியா'' என்ற ராபி போதிய உணவும், விளக்கெரிக்க 300 சாடி எண்ணெயும் எடுத்துக் கொண்டு ஒரு தனியறையில் தன்னை அடைத்துக் கொண்டார். இந்நூலிலுள்ள முரண்பாடுகளையும் பொருந்தாமையையும் நுணுகி ஆராய்ந்து விளக்கம் தந்த பின்னரே இந்நூல் பட்டியலில் இடம் பெற்றது. அப்படியும் சில பிரச்சனைகள் தீரவில்லை. ''இவற்றை மெசியா காலத்திற்கு முன் தயாரிப்பாக எல்லா உண்மைகளையும் தெரியப் படுத்தும்போது எலியா தீர்த்துவைப்பார்'' என்று தால்மூது கூறுகிறது.

புனித எரோணிமு எசக்கியேலின் திருநூலுக்குத் தொடக்கவுரை எழுதும்போது மற்றொரு பாரம்பரியத்தைக் குறிப்பிடுகிறார். அதன்படி குருக்கள் தங்கள் பணியைத் தொடங்கும் வரை, அதாவது 30 வயதுவரை ஒருவரும் இந்நூலின் ஆரம்பத்தையும் இறுதிப்பகுதியையும் வாசிக்கக் கூடாது. இப்பகுதிகளில் காணப்படும் ''நிறையளவு இறை அனுபவத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய நிறைமுதிர்ச்சி'' பெற்றிருக்க வேண்டுமென்பதே இதற்குக் காரணம்.

இக்கால அறிஞர்கள் எழுப்புகின்ற வினாக்கள் பழங்காலத்திலிருந்தே இந்நூலைப் பற்றி எழுப்பப்பட்டு வந்திருக்கின்

றன. யோசிபஸ் எசக்கியேல் இரண்டு நூல்களை விட்டுச் சென்றதாகக் குறிப்பிடுகிறார். ''பெருஞ்சபை எசக்கியேல், 12 சிறிய இறைவாக்கினர்கள், தானியேல், எஸ்தர்'' ஆகியவற்றை எழுதியதாக ''தால்மூது'' கூறுகிறது. சூன்ஸ் என்பவர் (1832) முதன் முதலில் இந்நூலின் உண்மைத் தன்மையைப் பற்றியும், சிட்சிக் என்பவர் (1847) இந்நூலின் ஒற்றுமையைப் பற்றியும் ஐயங்களை எழுப்பினர். இருப்பினும் டேவிட்சன் என்பவர் இந்நூற்றாண்டில், எசக்கியேலின் நூல் மற்ற இறைவாக்கு நூல்களைவிட எளிமையாக உள்ளது என்றும், இந்நூல் இறைவாக்கினரின் கடைசிக் காலத்தில் எழுதப்பட்டது என்றும், துண்டு துண்டாகத் தரப்பட்ட ஏசயாவின் நூலைப்போலல்லாது முழுமையாகத் தரப்பட்டது என்றும் கருதுகிறார்.

நூலின் ஒற்றுமையைப் பலர் பல கோணங்களிலிருந்து ஆராய்கின்றனர். முதலில் நாம் பல இரட்டிப்பு விவரிப்புகளைக் காண்கிறோம். அவை 3:16-21 = 33:1-9; 13:11 = 13:12; 13:16-21 = 33:1-9; 18:21-25 = 33:10-20. இந்த இரட்டிப்பு விவரிப்புகளில் ஒன்று தன்மையிலும் மற்றொன்று படர்க்கையிலும் இருப்பதை ஒருவர் கண்டார். மற்றொருவர் கவிதை எழுதும் ஆற்றல் பெற்ற ஆசிரியர், சலிப்புத் தட்டும் உரைநடைப் பகுதிகளை எழுதி இருக்க முடியாது என்று கூறி, 1200 வசனங்களில் 170 வசனங்களை மட்டும் உண்மையானவை என்று கூறினார். இர்வின் என்பவர், 250 வசனங்களை மட்டும் உண்மையானவை; மற்றவை இக்கவிதைகளை விளக்க எழுதப்பட்டவை என்றார். இவ்வாறு, பல கருத்துக்கள் நிலவினாலும், பெரும்பாலான அறிஞர்கள் இந்நூலில் பல இலக்கிய நடைகள் இருப்பதால் இன்னுமொரு ஆசிரியரும் இதை எழுதி இருக்க வாய்ப்பிருக்கிறது என முடிவு செய்கின்றனர். எனவே இதைப் பதிப்பித்தவர், பாலஸ்தீனத்திலும், பாபிலோனிலும் பணிபுரிந்த எசக்கியேலின் நூலையும், இன்னுமொரு இறைவாக்கினரின் நூலையும் ஒன்று சேர்த்துப் பதிப்பித்தார் என்றும், இரண்டாவது இறைவாக்கினரிடமிருந்துதான், அரியணைத்தேர், எச 40-48 பகுதிகள் வருகின்றன என்றும் முடிவு செய்கின்றனர்; ஏனெனில் அரியணைத்தேர் பகுதியில் நேரடித்தன்மை இல்லை. மேலும் ஒரு கட்டுப்பாடில்லாமல் மனம்போன போக்கில் கலந்து எழுதப்பட்டுள்ளது.

எசக்கியேலின் நூல் உருவான வரலாற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம். எசேக்கியேல் முதலில் எருசலேமிலும், பின் தான் சிறைவைக்கப்பட்ட எருசலேமின் வடக்கிலிருந்த ஒரு குக்கிராமத்திலும் போதித்தார். அவற்றைச் சிறு குழுவினருக்கோ பெருங் கூட்டங்களுக்கோ எடுத்துரைத்தார். இவற்றில் சிலவற்றை அவரே எழுதினார். எசக்கியேல் நாடுகடத்தப்பட்டபோது அவரோடு இச்சுருளையும் கொண்டு போயினார். இத்துணுக்குகள் தொகுக்கப்பட்டபோது சில இடங்களில் வரிசை முறை பிறழ்ந்துள்ளது. வெவ்வேறு காலத்தைச் சார்ந்தவை ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்புகளுக்கு எசக்கியேல் ஓரளவு காரணமாக இருந்திருக்கலாம். மூன்றாவது கட்டமாக இறைவாக்கினரின் பணிக்கு இணையான ஒழுங்குடன் நூல் வடிவெடுத்தது. மேற்கண்ட நூலோடு தங்கள் வாக்குகளையும் சேர்த்து எசக்கியேலின் சீடர்கள் பதிப்பித்தனர். அதின் இறுதிப்பதிப்புதான் நமக்குக் கிடைத்திருக்கும் எசக்கியேலின் திருநூல்.

6. இலக்கிய நடை:-

இந்நூலில், புலமைமிக்க கவிதைகள், மந்தமான உரைநடை, காட்சிகள், விவாதங்கள், இறைவாக்குப் போதகங்கள், அடையாளச் செயல்கள், விரிவான தொடர் உருவகங்கள், உவமைகள் போன்ற பல இலக்கிய உத்திகள் கையாளப்படுகின்றன.

அ. அடையாளச் செயல்கள்:- ஏசயா, எரேமியா போன்ற மற்ற இறைவாக்கினர்களிடம் காணப்பட்டாலும், இவை எசக்கியேல் திருநூலில் இறைவாக்குச் செய்தியோடு தொடர்பு கொண்டிருப்பதும், அதிக அளவில் இருப்பதும், இதன் சிறப்பாகும். சிலரது கருத்துப்படி அடையாளச் செயல்கள் அப்படியே செய்ய முடியாதவை. இருதடி

கள், எசக்கியேலின் மனைவி இறந்தபோது அவர் துக்கம் கொண்டாடாமை போன்றவற்றைத் தவிர மற்றவை ஒரு போதும் செய்யப் படவில்லை. அவை நாடகப் பாணியில் எழுதப்பட்ட நிகழ்ச்சியுரைகள், அவை இலக்கியயுக்திகளாகும்.

ஆ. காட்சிகள்:- பரவச நிலை அனுபவங்களாக இருக்கலாம். ஆனால் இவை இறை அனுபவங்கள் என்பது மட்டும் உறுதி. இவ்வனுபவத்தால் தூண்டப்பெற்று அறிவு சார்ந்த முறையில் அமைக்கப்பட்ட அடையாளங்களே இவை. இவற்றையும் இலக்கிய யுக்தி என்று ஒதுக்குவாரும் உண்டு.

இ. உருவகங்கள்:- எசக்கியேல் இறைவாக்கினரால் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அவரின் கற்பனையும், விரிவான உருவகங்களும் வறட்சியான நடையில் கூறப்படுகின்றன (*15:1-8.16; 17; 19:1-19; 27:4-11; 29:3-7*).

ஈ. உரைநடைப் பகுதிகள்:- இந்நூலில் மிகுதியாக இருப்பினும், மிகவும் மந்தமான நடையில் உள்ளன.

7. வாசகம்:-

மசோராட்டிக் வாசகம் பல இடங்களில் பழுதடைந்துள்ளதால், திருத்தங்களை நாம் யூகித்துதான் செய்ய வேண்டியுள்ளது. போக்னெர் என்னும் விவிலிய அறிஞர் மசோராட்டிக் வாசகம், அமைதியான நடையில் எழுதப்பட்டுள்ள எழுபது நூல் கிரேக்க வாசகத்தைவிடச் சிறந்ததல்ல என்றும், பின்னது மற்ற வாசகங்களைவிட உயர்வானது என்றும் கருதுகிறார். வேறு சிலர் எபிரேய வாசகம்தான் சிறந்தது எனக்கருதுவர். தூர்னே என்பவரின் கருத்துப்படி, எழுபது நூல் வாசகம் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்கிறது. ஏனெனில் மொழிபெயர்ப்பாளர், தேவையற்றது எனத்தான் கருதிய பகுதிகளையும், திரும்பக் கூறப்பட்ட பகுதிகளையும் விட்டுவிட்டு எழுதியிருக்கலாம். மேலும் இன்று பலர், எழுபது நூலில் அதி *1-27; 40-48* என்ற பகுதி ஒரு மொழிபெயர்ப்பாளராலும் அதி *28-39* என்ற பகுதி மற்றொரு மொழிபெயர்ப்பாளராலும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என ஏற்றுக் கொள்கின்றனர். இன்னும் சிலர் அதி *40-48* மூன்றாவது மொழிப்பெயர்ப்பாளரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனவும் எண்ணுகின்றனர்.

8. இறையியல்:-

எசக்கியேல் இறைவனைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணம்தாம் அவருடைய இறையியல், ஆன்மீகக் கருத்துகளுக்கு அடிப்படையாக அமைந்தது. இதில் எசக்கியேலை மிஞ்சியவர் வெகுசிலரே. மேலும் எசக்கியேல் ஆலயத்திலும் அதன் வழிபாட்டிலும் இறை அனுபவத்தைக் கண்டு அதற்கு அருட்சாதனப் பொருட்கள் அளிப்பதால் அவரது ஆன்மீகம் தரத்தில் குறைந்தது; அவர் இறைவாக்கினர்களுடைய சமய நோக்கின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை என்பவரும் உள்ர். அடிக்கடி அவர் யாவேயின் பெயரை அழைப்பதால், அவர் எப்போதும் இறைவனைப் பற்றியே பேசிய ஒரு வெறியர் என்றும், மனிதனது அன்றாட வாழ்வை மறந்துவிட்டவர் என்றும் குற்றம் சாட்டுபவர் உள்ர். புனிதம் இறைவனின் முக்கியப் பண்பாக இருந்தாலும், இந்தப் பண்புதான் அவரை மனிதனை நெருங்கி வந்து அவனோடு உடன்படிக்கை செய்து கொள்ளச் செய்தது. ''இறைவன் தம் பெயரை'' எண்பிக்கவே செயலாற்றுகிறார். பாவங்களுக்கு எதிராகச் சினங்கொள்வது இறைவனின் குணங்களுள் ஒன்று. இதைத்தான் ''இறைவனின் எரிச்சல் அல்லது பொறாமை'' (*5:12; 16:42*) என்று எசக்கியேல் குறிப்பிடுகின்றார். இச்சினம் மனிதனின் நம்பிக்கையற்ற தனத்திற்கு எதிராக இறைவனின் சீற்றமாகும், நேர்மையானதாகும்.

இறைவனின் பரிசுத்தத் தன்மை அவருக்கும் மக்களுக்குமிடையே உறவை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக அவர்கள் பரிசுத்தப் பெயரைக் கூவியழைப்பார்கள். ''அவரது பெயர்'' அவர்கள் மேல் இருப்பதால் அவர்களை முழுவதும் தம் உடைமையாகக் கொண்டிருக்கும் பொறாமை ஏற்படுகிறது.

தமது பரிசுத்தத்தன்மையின் பொருட்டுத் தமது மக்களைப் பிறர் இகழ விட்டுவிட முடியாது. ஏனெனில் அவர்கள் அவரது பெயரால் அழைக்கப்படுவதால் அவர் அவர்களுடைய இரத்த உறவுக்காரர் ஆகிறார். யாவே தாமே ஈடுபட்டுள்ளார் என்பதை ''நாமே யாவே என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள்'' என்ற கூற்று எடுத்துக்காட்டுகிறது. மீட்பு, மீண்டும் அமைக்கப்படுதல் ஆகியவை மக்களின் மனத்துயரத்தின் விளைவாக வரவில்லை. நீதிபதிகள் நூலில் காணப்படுவதுபோன்ற பாவம்-தண்டனை-மனத்துயரம்-மீட்பு என்ற தொடர் மறைந்து; பாவம்-தண்டனை-மீட்பு-மனத்துயரம் என மாறிவிட்டது. யாவே தம் மக்களை அவர்களின் மனத்துயரத்திற்காக மீட்கவில்லை: மாறாக, அவர்களோடு உடன்படிக்கை செய்து கொள்ளச்செய்த, ''அவர் பெயரின்'' பொருட்டே மீட்டார். அப்போது அவர்கள் அவரை அறிந்து, தங்களது நன்றிகெட்ட தனத்திற்கு வெட்கப்பட்டு அவரிடம் திரும்புவர் (36:31-32; 16:60.62).

இறைவனிடம் ஒவ்வொரு தனி நபரும் கொள்ள வேண்டிய பொறுப்புடைமையை எடுத்துக் கூறுவது இந்நூலின் சிறப்பாகும். இக்கருத்து எரே 31:29-இல் வலியுறுத்தப்பட்டாலும், எல்லா இறைவாக்கினரையும்விட எசக்கியேல்தான் இறைவன் கலகம் செய்யும் இஸ்ராயேலைத் தண்டிப்பதில் அநீதியாக நடக்கவில்லையென்றும், பரிகம், தண்டனையும் ஒவ்வொரு தனிநபரையும் பொருத்தது என்றும் தெளிவாகக் கூறியவர். முதலில் இறைவன் இனம், நாடு என்ற குழுத்தன்மையில் உறவு கொண்டார். ஆக்கான் என்ற ஒருவரின் குற்றத்துக்காக அவரின் குடும்பமே அழிக்கப்பட்டது (யோசு 7). தனிநபர் குழுவோடு ஒன்றாக எண்ணப்பட்டதுமின்றி, ஒரு தலைமுறை அடுத்த தலைமுறையோடு ஒன்றாக எண்ணப்பட்டது (யாத் 20:5). நாடுகடத்தப்பட்ட போது இப்பிரச்சனை மிகவும் முக்கியத்துவம் பெற்றது. ''தந்தையர் திராட்சைக் காய் தின்ன, பிள்ளைகளுக்குப் பல் கூசிற்றாம்'' (எச 18:2) என்ற பழமொழியை எடுத்துக்கூறி மக்கள் தங்கள் மனக்கசப்பை வெளிப்படுத்தினர். இப்போக்கை மறுத்து நான்கு இடங்களில் (3:17-21; 14:12-23; 18:1-22; 33:1-20) எசக்கியேல் எதிர்வழக்காடுகின்றார். இறைவன் மக்களைத் தனிநபராகவே நடத்துகின்றார். தனி நபரே தன் வாழ்க்கைக்குப் பொறுப்பு. ஒருவனது குற்றத்திற்காக மற்றொருவனை ஒரு குடும்பத்திற்குள்ளேயே தண்டிப்பதில்லை, என்று உறுதியாய்க் கூறுகிறார் (18:4; 18:18).

9. நூலின் திட்டமும் அமைப்பும்:

I. இறைவாக்குரைக்க அழைப்பு (1:1-3:27)

அ. தலைப்பு (1:1-3)

ஆ. அரியணைத்தேர் காட்சி (1:4-28)

இ. அழைப்பும் ஐந்து ஆணைகளும் (2:1-3;27)

II. எருசலேம் முற்றுகைக்கு முன்: தீர்ப்பு, அழிவு பற்றிய இறைவாக்குகள் (4:1-24:27).

அ. தீர்ப்பைப் பற்றி அடையாளச் செயல்கள் (4:1-5:17)

ஆ. தீர்ப்புக்கூறும் இறைவாக்குகள் (6:1-7;27)

இ. ஆலயத்தில் சிலைவழிபாடு: ஆலயத்தைவிட்டு யாவே வெளியேறுதல் (8:1-11:25)

ஈ. நாடு, எருசலேம், அதன் தலைவர்கள், குருக்கள், இறைவாக்கினர்கள் ஆகியோருக்கு எதிராக இறைவாக்குகள் (12:1-24:27).

III. பிற நாடுகளுக்கு எதிராகத் தீர்ப்பு (25:1-32:32)

அ) இஸ்ராயேலின் அண்டை நாடுகளுக்கு எதிராக (25:1-17)

ஆ) தீர் நகருக்கு எதிராக (26:1-28:26)

இ) எகிப்துக்கு எதிராக (29:1-32:32)

IV. இஸ்ராயேல் அமைக்கப்படுவதின் நிபந்தனையும் முறையும் (33:1-37:28).

அ. இறைவாக்குப் பொறுப்பு (33:1-33)

ஆ. இஸ்ராயேலின் ஆயரும் அவரது மந்தையும் *(34:1-31)*.

இ. ஏதோம் எக்காலத்திற்கும பாலையாகும் *(35:1-15)*.

ஈ. இஸ்ராயேலே பலுகு, பெருகு *(36:1-38)*.

உ. உலர்ந்த எலும்புகள் உயிர்பெறுதல் *(37:1-14)*.

ஊ. ஒரே அரசும் அதன் வெற்றி வீரர் தாவீதும் *(37:15-28)*.

V. எல்லா எதிர்ச்சக்திகள்மீதும் இஸ்ராயேல் வெற்றி பெறுதல் *(38:1-39:29)*.

அ. கோகுக்கு எதிராக இறைவாக்கு *(38:1-39:8)*.

ஆ. தீமை நன்மையாக மாறுதல் *(39:9-20)*.

இ. இஸ்ராயேல் யாவேயை அறியும் *(39:21-29)*.

VI. மீண்டும் அமைக்கப்பட இஸ்ராயேல் பற்றிய காட்சி *(40:1-48:35)*

அ. புதிய ஆலயம் பற்றிய காட்சி *(40:1-43:27)*.

ஆ. புதிய வழிபாடு *(44:1-46:24)*.

இ. புதிய நகரமும், புதிய நாடும் *(47:1-48:35)*.

10. முடிவுரை:-

எசக்கியேலின் பணி, சுமார் கி.மு. 570-உடன் முடிந்தாலும், அவரது செல்வாக்கு வெகுகாலத்திற்கு நீடித்தது. நாடுகடத்தலுக்கு முன் நிலவிய, அதன்பின் வந்த இறைவாக்குகளையும் இணைக்கும் பாலமாக அவர் அமைகிறார். அவருக்குப்பின் வந்த இறைவாக்கினர்கள் அவரது மனப்போக்கையும் செயல்முறையையும் தாராளமாக எடுத்துக் கையாண்டிருக்கின்றனர். இறையியல் கூறுகளை இறைவாக்கு முடிவுகால இயலோடு இணைத்து வெளிப்பாட்டு இலக்கியங்கள் தோன்றுவதற்குக் காரணமானவர் எசக்கியேல் என்று கூறலாம் *(7:5-12; 20:33-34; 34:25-31)*. இவ்விலக்கிய வரலாற்றில் எசக்கியேல் முன்னோடியாவார். ஆகவே யூத வெளிப்பாட்டு அல்லது காட்சி இலக்கியத்தின் தந்தை என்றழைக்கப்படுகிறார்.

எசக்கியேல் போதகம், பாரம்பரியத்தைப் பரவலாகப் பாதித்தது. ஆனால் இப்பாதிப்பு மறைமுகமானதே. நற்செய்தி நூல்கள் இந்நூலை எடுத்துக்காட்டவோ சுட்டிக்காட்டவோ இல்லை. ஆயினும் இறைவனது மகிமை மற்றும் ஆலயம் பற்றிய எசக்கியேலின் கருத்துக்கள் யோவான் நற்செய்தியின் கிறிஸ்து இயலை ஓரளவு பாதித்தன. புதிய ஏற்பாட்டிலுள்ள பிறநூல்கள் எசக்கியேலைப் பயன்படுத்தாமையை ஈடுகட்டும் விதத்தில், இந்நூலின் காட்சி உருவக முறைக்காக, இந்நூலைத் திருவெளிப்பாட்டுத் திருநூல் ஆசிரியர், அதிகமாகப் பயன்படுத்துகிறார். இதன் வழியாகத் தொடக்க காலக் கிறிஸ்தவ ஓவியத்தை இந்நூல் பெரிதும் பாதித்தது எனலாம்.

எசபெயாபு (JESHEBEAB - *தந்தை நிலைத்திருப்பாராக, தந்தையின் இருப்பிடம்)*

ஆரோன் குலத்திலிருந்து வந்த ஒரு குரு அல்லது குருகுலக் குடும்பம். தாவீது காலத்தில் குருக்களில் 14-ஆவது பிரிவின் தலைவர் *(1 நாள் 24:13)*.

எசரேலா (JESHARELAH - *நேரானவை)*

தாவீதின் காலத்தில் ஆசாபின் மகன்களில் ஒருவர். லேவியர் பாடகர்களில் 7-ஆவது பிரிவின் தலைவர் *(1 நாள் 25:14)*. *25:2*-இல் இவர் ஆசரேலா என்றழைக்கப்படுகிறார்.

எசனியா (JEZANIAH - *யாவே செவிமடுக்கிறார்)*

எருசலேம் பாபிலோனியர்களுக்கு வீழ்ச்சியுற்றபின், பாபிலோனிய நாடுகடத்தலுக்குப் பின் மிசுப்பா என்னுமிடத்தில் கெதலியாவுடன் தங்கியிருந்த யூதபடையின் ஒரு தலைவர் *(எரே 40:8)*. மிசுப்பா பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களிலும் முதல்

இலாக்கீசு ஏடுகளிலும் (கி.மு. 6-ஆம் நூற்றாண்டு) இவரது பெயர் காணப்படுகிறது. 2 அர 25:23-இல் இவரது பெயர் யாசானியா என்று இருக்கிறது. இவரும் அசரியாவும் (16) ஒருவராக இருக்கலாம் (எரே 43:2).

எசாயா (JESHAIAH - யாவேயின் மீட்பு அல்லது விடுதலை)

1. பாபிலோனிய அடிமைத் தனத்திற்குப் பின்பு சாலமோனின் வழித்தோன்றலில் ஒருவர் (1 நாள் 3:21). கனனியாவின் மகனும் செருபாபேலின் பேரனும் ஆவார்.

2. எதுத்தூனின் புதல்வர் (1 நாள் 25:3.15). தாவீது காலத்தில் லேவியர் பாடகர்களில் 8-ஆவது பிரிவின் தலைவர்.

3. செபுவேலின் தலைமையில் ஆலயக் கருவூலத்தை மேற்பார்வையிட்ட லேவியர்களுள் ஒருவர். இரகபியாவின் மகன் (1 நாள் 26:25).

4. பாபிலோனிய அடிமைத் தனத்தினின்று எஸ்ராவுடன் எருசலேமிற்குத் திரும்பி வந்த எலாமித்தியர்களுள் ஒருவர். அத்தாலியாவின் மகன் (எஸ் 8:7).

5. ஒரு மெராரிய லேவியர் (எஸ் 8:19) ஆலயத்தில் பணிசெய்ய எஸ்ராவோடு திரும்பியவர்.

6. அடிமைத்தனத்துக்குப்பின் எருசலேமில் வாழ்ந்த ஒரு பென்யாமின் மூதாதையர் (நெக 11:7). ஈத்தியேலின்(1) தந்தையும் சல்லுவின் முன்னோருமாவார். இப்பெயர் இணைப்பட்டியல் 1 நாள் 9:7-8-இல் குறிப்பிடப்படவில்லை.

எசானா (JESHANAH - பழைய (நகர்))

அபியா, எரொபயாமுடன் போர் தொடுத்து இந்நகரையும் அதற்கடுத்த ஊர்களையும் கைப்பற்றிக் கொண்டார் (2 நாள் 13:19). இந்நகரம் யூதா, இஸ்ராயேல் எல்லையில் இருக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது. ஒருவேளை 1 சாமு 7:12-இல் வரும் சேனுக்குப் பதிலாக இப்பெயரை வாசிக்க வேண்டும்.

பிற்காலத்தில் அந்திகோனசின் தளபதி பாப்பூசின் தலைமையகமாக இருந்தது. இதைப் பெரிய ஏரோது கைப்பற்றினார். எருசலேமுக்கு வடக்கில் 10:5 கி.மீ தொலைவிலும் இப்னேக்கு வடக்கில் 5 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்கால்ப் பூர்ச் ஏல்-இசானே இந்த இடமாக இருந்திருக்கலாம்.

எசிசாய் (JESHISHAI - மதிப்பிற்குரிய, முதிய)

காது இனத்தைச் சேர்ந்தவர். யகிதோவின் புதல்வனும் மிக்காயேலின் தந்தையுமாவார் (1 நாள் 4:36).

எசிபாய் (EZBAI - ஒளிவிடுகிறது)

'முப்பதின்மர்' என்று அழைக்கப்படும் தாவீதின் பலம் பொருந்திய படைவீரர்களில் ஒருவரான நாகராயியின் தந்தை (1 நாள் 11:37). ஆனால் 2 சாமு 23:35-இல் எசிபாயின் புதல்வன் நாகராய் அர்பியிலிருந்து வந்த பாகராய் என்று அழைக்கப்படுகின்றான். 'எசிபாயின் புதல்வன்' (1 நாள் 11:37) 'அர்பியர்' என்பதின் திரிபாக (2 சாமு 23:35) இருப்பதுபோலத் தெரிகிறது. மேலும் நாகராயி அர்பியிலிருந்து வந்தவர் என்பதுதான் இந்த அட்டவணையிலுள்ள மூலப்பெயர் என்றும் தெரிகிறது.

எசிபோன் (EZBON - ஒளிமயமான)

1. காதுவின் நான்காம் மகன் (ஆதி 46:16). எண் 26:16-இல் ''ஓசினி'' என்று அழைக்கப்படுகிறார்.

2. பெலாவின் புதல்வர்களில் ஒருவர்; பென்யாமினின் குடும்பத்தவர் (1 நாள் 7:7). ஆனால் 1 நாள் 7:6-11 அநேகமாகச் செபுலோன் தலைமுறைப் பட்டியலாக இருக்கலாம். பென்யாமின் கோத்திரத்துக்குத் தவறாக மாற்றித் தரப்பட்டுள்ளது.

எசிமியேல் (JESIMIEL - இறைவன் நிறுவுவாராக)

அரசன் எசக்கியா காலத்தில் சிமியோன் இனத்தின் தலைவர் (1 நாள் 4:36).

எசிமோன் (JESHIMON - *பாலைநிலம்*)

பாலைவனத்தைக் குறிக்கும் எபிரேயப் பொதுச்சொல் (*உப 32:10; சங் 106:14*). இரண்டு பகுதிகளைக் குறிக்கும்போது இடப் பெயராகவும் பயன்படுகிறது.

1. சிப்பு அருகிலுள்ள பயனற்றநிலம் (*1 சாமு 23:19.24; 26:1.3*). மாவோனுக்கும் கெக்கிலா குன்றுக்கும் வடக்கிலுள்ளது. யூதாவின் மலைகளுக்குக் கிழக்கு எல்லையாகும். கெபிரோனுக்குத் தெற்கிலும் கிழக்கிலும் சாக்கடலின் ,வடமேற்குக்கரை வரையும் அமைந்துள்ளது. இது அகதிகளும் துறவிகளும் நாடிச் சென்ற பகுதியாகும்.

2. சாக்கடலுக்கு வடக்கிலும் யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கிலும் பிசுகாமலை அடிவாரத்திலும் உள்ள உப்புப் பாலைவனமாகும் (*எண் 21:20; 23:28*).

எசியேல் (JEZIEL - இறைவன் ஒன்றுகூட்டுகிறார், *இறைவன் தெளிக்கிறார்*)

அசிமாவேத்தின் புதல்வரான எசியேல், தாவீது சிக்கிலாகு என்னுமிடத்தில் இருந்த போது அவரது படையுடன் சேர்ந்து கொண்ட இவர் பென்யாமின் குலத்தவர் (*1 நாள் 12:3*).

எசியோன்-கெபேர் (EZION-GEBER - வலியவனின் *முதுகெலும்பு*)

அக்காபா வளைகுடா ஆரம்பிக்கும் பகுதியிலுள்ள மிக முக்கியமான துறைமுகமும், வார்ப்படத் தொழிற்சாலை நகரமும் எல்லைப்புற நகரமும் ஆகும். இஸ்ராயேலர்கள் தங்கள் பயணத்தின்பொழுது மோவாபு சமவெளிக்குச் செல்லுகின்ற வழியில் தங்கியிருந்த ஓர் இடமும் ஆகும் (*எண் 33:35-36; உப 2:8*). இது ஒரு துறைமுகமாக இருப்பதால் இங்கிருந்து கப்பல்கள் ஒப்பீருக்குச் சென்று பொன், வெள்ளி, தந்தம், நறுமணப் பொருள்கள், மரங்கள் போன்றவற்றை ஏற்றி வந்தன (*1 அர 9:26-28; 10:11.22*). இக்குறிப்புகளைத் தவிர புதைபொருள் ஆராய்ச்சிகளிலிருந்து இந்நகரத்தைப் பற்றிய பல்வேறு குறிப்புக்கள் நமக்குத் தெரிய வருகின்றன.

1. இடம்:-

விவிலியம் தரும் சான்றுகளிலிருந்து எசியோன்கெபேர் வாடி ஏல்-அராபாவில் உள்ள துறைமுகமாகும் என்பதும் செங்கடல் பகுதியில் அதாவது அக்காபா வளைகுடாப் பகுதியிலுள்ள நகரமாகும் என்பதும் தெளிவு. பிரிட்ஸ் பிராங்க் என்பவரின் ஆராய்ச்சியின் மூலம் தற்காலத்தைய அக்கபா நகரத்திற்கு மேற்கு வடமேற்கிலிருந்து 3 கி.மீ. மைல் தொலைவிலுள்ள தேல் ஏல்-கெலெய்பே என்ற இடத்தில்தான் எசியோன்-கெபேர் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இக்கருத்தை நெல்சன் க்ளுயெக என்பவர் ஏற்றுக் கொண்டு உறுதி செய்கின்றார்.

நெல்சன் என்பவர் செய்த ஆராய்ச்சியின் படி ஒன்றன் மேல் ஒன்றாக நான்கு நகரங்கள் கட்டப்பட்டதாகவும் அந்நகரங்கள் நெருப்பினால் அழிக்கப்பட்டன என்றும் கூறுகின்றார். இந்நகரம் மன்னன் சாலமோனால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது அவரது கருத்து. ஏனெனில் சாலமோன் மெகிதோவிலும் பாலஸ்தீனத்தில் மற்ற இடங்களிலும் கட்டிய கட்டடங்களோடும் இவ்விடத்திலுள்ள கட்டடங்கள் ஒத்திருக்கின்றன. மேலும் இரண்டு தனிப்பட்ட நகரங்கள் இருந்ததற்கு எந்தவிதமான ஆதாரங்களும் காணப்படாததால் எசியோன் கெபேர், ஏலாத்து என்ற இரண்டு பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கப் •பயன்படுத்தப்பட்ட பெயர்களாகும் என்றும் கூறுகின்றார். ஓர் இடத்திற்கு ஏற்பட்ட இத்தகைய பெயர் மாற்றம் மன்னன் யோசபாத்தின் (*876-851*) ஆட்சிக் காலத்திற்கும் அமசியாவின் (*796-767*) காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். நான்கு நகரங்களும் நெருப்பினால் அழிக்கப்பட்டன. இது இந்த இடம் கைப்பற்றப்பட்டு மீண்டும் கைப்பற்றப்பட்டதற்குச் சான்றுகள் ஆகும். இவற்றில் சில விவிலியத்தில் குறிக்கப்படுகின்றன.

2. வரலாறு:-

மோசேயின் தலைமையில் இஸ்ராயேல் மக்கள் எசியோன்கெபேர், ஏலாத்து என்ற

பகுதியைக் கடக்கும்பொழுது அங்கு மண் குடிசைகள்தான் காணப்பட்டன. இஸ்ரா யேல் மக்களை நேரடியாக ஏதோமைக் கடந்து செல்ல அனுமதிக்காததால், வாடி ஏல்-அராபாவிலிருந்து அக்காபா வளை குடாவிற்குச் சென்று, பின் ஏதோமின் தெற்கு, கிழக்கு எல்லைப் புறங்களைக் கடந்து சென் றனர் (உப 2:8). தாவீது அரசனால் இப்பகுதி கள் முழுவதும் கைப்பற்றப்பட்டு, மன்னன் சாலமோனால் எசியோன்-கெபேர் என்ற நகர் கட்டப்ப்ட்டுப் பெரிய வார்ப்படத் தொழில் நகரமாகவும், வியாபாரத் தளமாக வும் மாற்றப்படும்வரை ஏதோமியர்களால் இப்பகுதிகள் எந்தவிதமான முன்னேற்றத் தையும் காணவில்லை. சாலமோன் காலத் தில் முக்கியத்துவம் பெற்ற இப்பகுதிகளில், செம்பு, இரும்பு போன்ற உலோகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அரேபியாவிலுள்ள ஒப்பீருக்கும் இந்நகருக் கும் கப்பல் போக்குவரத்து நடைபெற்றது (1 அர 9:26-28). சேபா நாட்டின் அரசி எருசலேமிற்குச் செல்லும்பொழுது இந்தத் துறைமுகத்தில்தான் வந்து இறங்கினாள் என் பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை (1 அர 10:1-13).

எபிரேயர்களின் அரசாட்சியில் பிளவு ஏற் பட்டபின், யூதாவின் ஆட்சிப்பகுதியாக எசி யோன் கெபேர் மாறுகிறது. கி.மு. 925-இல் சீசாக்கு என்பவர் பாலஸ்தீனத்தின்மேல் படையெடுத்துச் செல்லும்பொழுது இந்நகர் முதன் முதலாக அழிக்கப்படுகின்றது. இந் நகர் இருந்த இடத்திலேயே அரண்சூழ இரண் டாவது நகரம் கட்டியெழுப்பப்பட்டது. பின் சிறந்த தொழில் மையமாக இந்நகர் வளர ஆரம்பித்தது. மன்னன் யோசபாத்து என்ப வர் ஒப்பீரிலிருந்து பொன் திரட்டி வரத் தார்சிசு கப்பல் படையைக் கட்டினான். அவர் அகசியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்குத் தண்டனையாக அக்கப் பல்கள் வளைகுடாவிலேயே உடைந்து போயின. அவரது முயற்சி தோல்வியடைந்து விட்டதால் இம்முயற்சியினைக் கைவிட்டு விட்டார் (1 அர 22:47-49).

இந்நகரின் பிற்கால வரலாற்றுக்குக் காண்க: ஏலாத்து.

எசிராவியர் (EZRAHITE)

செராகின் வழித்தோன்றல்களான செரா கிய இனத்தின் மற்றொரு பெயர் (1 நாள் 2:6). இந்த இனத்தில் ஏத்தான், ஏமான் ஆகியோர் புகழ்பெற்ற ஞானிகளும் புலவர் களுமாவார் (1 அர 4:3; சங் 88:1; 89:1).

எசிரி (EZRI - என் உதவி)

கெலூபின் மகன்; தாவீதின் காலத்தில் அரச நிலங்களின் விவசாயத்திற்கும், விவசா யிகளுக்கும் தலைவராய் இருந்தார் (1 நாள் 27:26).

எசுக்கோல் (ESHCOL - (திராட்சைக்) கொத்து) - ஆள்

1. கெதர்லாகோமேரின் தோல்வியில் ஆபி ரகாமோடு உடன்படிக்கை செய்திருந்த எமோரியர்களான ஆனேர், மமிரே ஆகியோ ரின் சகோதரன். இவர் கெபிரோனுக்கு அரு கில் வாழ்ந்தார் (ஆதி 14:13-24).

எசுக்கோல் (ESHCOL - (திராட்சைக்) கொத்து) - இடம்

கெபிரோனுக்கு அருகே உள்ள பள்ளத் தாக்கு. இங்கிருந்துதான் இஸ்ராயேல் ஒற்றர் கள் ''ஒரு கொடி முந்திரிச் செடியில் ஒரு கிளையும் அக்கிளையோடு ஒரு குலையை யும் அறுத்து அதை இருவர் ஒரு தண்டில் கட்டி எடுத்து வந்தனர்''. ஏனெனில் அது அவ்வளவு பெரியதாக இருந்தது. பெரிய குலையின் காரணமாக இப்பெயர் பெற்றது (எண் 13:23-24; உப 1:24). எண் 13:22-இன்படி இப்பள்ளத்தாக்கு கெபிரோனுக்கு அருகில் இருந்தது. இப்பெயர் ஒருவேளை, அப்ராமோடு உடன்படிக்கை செய்து கொண் டிருந்த எசுக்கோலோடு தொடர்புடையதாக இருக்கலாம். இப்பெயர், திராட்சைத் தோட் டம் நிறைந்த ஒரு வாடியின் தொடக்கத்தில் கெபிரோனுக்கு வடக்கில் 3 கி.மீ. தொலை விலுள்ள புர்ச்-கஸ்கே என்ற இக்காலப் பெய ரில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

எசுதிரலோன் (ESDRAELON)

மெகிதோன் பள்ளத்தாக்கையும் உள்ளடக்கிய இசிரியேல் பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியைக் குறிக்கும் இசிரியேல் என்ற எபிரேய வார்த்தையிலிருந்து வந்த கிரேக்கப் பெயராகும் எசுதிரலோன் என்பது (காண்க யூதி 1:8; 7:3). இது மெகிதோ சமவெளி என்றும் (செக் 12:11) பெரிய சமவெளி என்றும் (1 மக் 12:49) அழைக்கப்படுகிறது.

எசுதிராவின் நூல்கள் (BOOKS OF ESDRAS)

விவிலியத் திருமுறையில் ஏற்கப்படாத முதலிரண்டு நூல்கள்

I. முதலாம் எசுதிரா

''கிரேக்க எஸ்ரா'' என்று சில நேரங்களில் அழைக்கப்படும் இந்நூலானது எழுபது நூலில் முதலாம் எசுதிரா என்றும், வுல்கத்தாவில் மூன்றாம் எசுதிரா என்றும் அழைக்கப்பட்டது. இது வுல்கத்தாவால் முதலில் ஒரு போலி நூலாகக் கருதப்பட்டது. திரிதெந்தின் பொதுச்சங்கம் முதல் (கி.பி. 1545-1563), வுல்கத்தா பதிப்புகள் இந்நூலைப் புதிய ஏற்பாட்டைத் தொடர்ந்து வரும் பின் இணைப்பிற்கு ஒதுக்கின பல கத்தோலிக்கப் பதிப்புகளில் இது காணப்படுவதில்லை.

இந்நூலானது சற்றே மாறுபட்ட அமைப்பினதாயினும், யோசியா அரசனின் சீர்திருத்தத்தின் காலம் முதல் (2 நாள் 35) சட்டமானது எஸ்ராவினால் மக்கள் முன் வாசிக்கப்படுவது வரையிலான காலத்தினைத் தழுவியதாய் (நெக 8:1-12), 2 நாள் 35-36; எஸ் மற்றும் நெக 7:73-8:12 ஆகியவற்றுள் காணப்படும் விவரிப்புகளுக்கு இணையான தொகுப்பாகும். முதலாம் தாரியுசின் சபையில் மூன்று யூதப் பணியாட்களுக்கு இடையே ஒவ்வொருவரும் எண்ணுவதில் எது வலிமையுள்ளது என்னும் போட்டியைப்பற்றிய பாரசீகக் கதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கதையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது (1 எசதி 3:4). பெண்ணின் வலிமை ஒப்பிட முடியாததாயினும், உண்மையானது அனைத்திற்கும் மேலானது என்று விடையளித்து வெற்றி பெற்ற செருபாபேல் அதற்குப் பரிசாக எருசலேமிற்குத் திரும்பச் சென்று ஆலயத்தை மீண்டும் கட்டக்கூடிய அதிகாரத்தைப் பெறுகிறார்.

1 எசுதிரா நூலானது அநேகமாய் மக்கபேயர் காலத்தில் தோன்றியிருந்தாலும் (கி.மு. 150-100) அதனுடைய காலம், பிறப்பிடம், ஆசிரியர் பற்றித் துல்லியமாக எதுவும் அறியப்படவில்லை. இப்பகுதியானது எழுபது நூலில் இரண்டாம் எசுதிரா (எஸ்ரா-நெகமியா) வைவிட மூலத்தின் சரளமான கிரேக்க மொழிபெயர்ப்பையே குறிப்பிடுகிறது. இக்காலத்திற்கு முதன்மை ஆதாரமாக யோசிபஸ் இப்பதிப்பையே தேர்ந்தெடுத்தார்.

II. இரண்டாம் எசுதிரா:-

எஸ்ரா திருவெளிப்பாடு என்றும் அழைக்கப்படும் 2 எசுதிரா, கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போலி வரலாற்று நூலாகும். இது இந்நூல் எழுபது நூலில் ஏற்றுக் கொள்ளப்படாமையை விளக்கியது. புதிய ஏற்பாட்டில் பின்இணைக்கப்பட்ட பகுதியில் நான்காம் எஸ்திரா என்று எரோணிமு இதனை வுல்கத்தாப் பதிப்பில் சேர்த்தார். உரோமைக் கத்தோலிக்க மரபில் இது இரண்டாம் சட்டத்தின் (உபாகம்) அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை.

மற்ற ஏற்கப்படாத போலிநூல்களைப் போலன்றி 2 எசுதிரா்வானது ஒரு திருவெளிப்பாட்டு நூலாகும். இது ஒரு கலப்புத் தொகுப்பாகும். இதன் முக்கியப் பகுதியானது (3-14) கி.பி.முதல் நூற்றாண்டில் ஒரு பாலஸ்தீன யூதனால் எழுதப்பட்டதாக நம்பப்படுகின்றது. இந்நூலானது முதலில் எபிரேய மொழியில் உருவாக்கப்பட்டதாக எண்ணப்பட்டாலும் இது பிற்பாடு கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு (அதனுடைய ஒரு சில பகுதிகளே இன்றும் நிலைத்துள்ளன). இலத்தீனிலிருந்தும் கிரேக்க மொழியிலிருந்தும் பிற மொழி பெயர்ப்புகளிலிருந்தும் முதன்மையாக அறியப்படுகிறது.

முதலிரண்டு அதிகாரங்கள் யூத மக்களைக் கண்டிப்பதற்கென அழைக்கப்பட்ட இறை வாக்கினரென எஸ்ராவைக் காட்டுகின்ற பிற் கால இணைப்பாகும். இவை கிழக்கித்திய பதிப்புகளில் இல்லாமலும் அடிக்கடி 5 எசு திரா அல்லது 2 எசுதிரா என்றும் குறிப்பிடப் படுபவை ஆகும். இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் யூதக் கிறிஸ்தவத் தலைவர் ஒருவ ரால் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. இந் நூலின் மையப்பகுதி (3-14 அதிகாரங்கள்) எஸ்ராவினுடைய ஏழு காட்சிகளைக் கொண்டுள்ளது: 1. சீமோனுடைய வரை முறையற்ற துன்பங்களைப் பற்றிய எஸ்ராவின் கேள்விகளும், இறைவனுடைய வழிகள் மனித உயிர்களால் புரிந்து கொள்ளப்பட முடியாதவை என்றும், வருகின்ற காலமா னது மீட்பைக் கொண்டுவரும் என்றும் உரி யேல் வானதூதரின் பதில்களும் (3:1-5:19); 2. இஸ்ராயேலை நோக்கிய இறை நேர்மை யின்மை பற்றிய எஸ்ராவின் அக்கறையும் காலத்தின் நிறைவைப்பற்றிய அவரது கேள் விகளும், மற்றும் உரியேலின் உறுதிமொழி யும், மற்றும் இறுதிக்காலங்கள் பற்றிய அடையாளங்களும்; 3. படைப்பின் நோக் கங்கள் பற்றிய விவாதம், மற்றும் இறுதிக் காலங்களின் வாக்குறுதிகள் (6:35-9:25); 4. துயருற்றுப்புலம்பும் பெண் (எருசலேம்) விண்ணக நகராக மாற்றப்படுதல் (9:26-10:59); 5. தானியேலுடைய நான்காவது அரசின் சொற்களால் (தானி 7) விவரிக்கப் பட்ட பன்னிரண்டு இறக்கைகளும் மூன்று தலைகளும் உடைய கழுகு (உரோமை) மெசியாவினால் மேற்கொள்ளப்படுதல் (11:1-12:51); 6. தாக்குகின்ற மக்கள் திரளை அழிக்கவிருக்கின்ற (13) கடலிலிருந்து எழும் மனிதன் (மெசியா, தானி 7-இல் உள்ள மனுமகன்); 7. எஸ்ரா புனித இறை வாக்குகளை மீட்டல் (14) என்பவையாகும். பிந்தைய காட்சியில் முன்னர்த் தீயால் அழிக் கப்பட்ட புனித நூல்களை மீண்டும் எழுது மாறும் எரியும் புதரினின்று எஸ்ரா அறிவு றுத்தப்படுகிறார்; நாற்பது இரவும் பகலும் இவர் இறைவனின் திருச்சட்டத்தை ஐந்து மறைநூல் அறிஞர்களுக்கு அறிவிக்க அவர் சொல்லச் சொல்ல அவர்கள் அவற்றைத் தொண்ணூற்று நான்கு நூல்களில் எழுதுகின் றனர் (14:44-இல் 904 நூல்கள் என்று வுல்கத் தாவில் உள்ள வாசகம் தவறானதாகும்). இவற்றில் இறுதி 70 நூல்கள் ஞானிகளி டையே முறையாக அறிமுகம் செய்யப்பட்ட வர்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட வேண் டுமென்றும் மற்ற 24 திருமறை நூல்கள் (சாமுவேல், அரசர், நாள், எஸ்ரா, நெக மியா) பொது மக்களுக்கு அளிக்கப்படலா மென்றும் மிக உன்னதர் கட்டளையிடுகி றார். இத்தகைய அடிப்படையைக் கொண்டு திருச்சபையின் சில தந்தையர்கள் எஸ்ரா பழைய ஏற்பாட்டு நூல்களைத் தொகுத்த மைத்ததாகக் கூறுவர். இக்கருத்தானது பதி னெட்டாம் நூற்றாண்டுவரை யூத மற்றும் கிறிஸ்தவ அறிஞர்களால் ஏற்கப்பட்டு வந் தது. ஆனாலும் இக்கருத்தானது நம்பத்தகாத தாக மட்டுமின்றி வாசகத்தின் மையக்கருத் தையும் கைநழுவ விட்டுவிடுகிறது. இறுதிப் பகுதியாகிய 15-16 அதிகாரங்கள் (சில நேரங் களில் 6 எசுதிரா என்று அழைக்கப்படுவது) மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் அனேகமாக ஒரு கிறிஸ்தவ ஆசிரியரால் சேர்க்கப்பட்ட இறைவாக்குக் கருத்துக்களின் தொகுப்பாகும்.

எசுதிரி (ESDRIS)

யூதா மக்கபேயருக்கு எதிராக நடந்த போரில் கோர்கியாவின் படைப்பிரிவில் இருந்த ஒரு படைத் தலைவர் (2 மக் 12:36).

எசுத்தமோ (ESHTEMOH)-இடம்

எசுத்தமோவாவின் மற்றொரு பெயராகும் (யோசு 15:50). காண்க. எசுத்தமோவா.

எசுத்தமோவா (ESHTEMOA - கேட்கும் நிலையம்)-ஆள்

1. இசிபாவின் புதல்வன்; காலேபின் வழித்தோன்றல் (1 நாள் 4:17).

2. யூதா இனத்தைச் சேர்ந்த ஒரு மாக்காவியர். நகாமின் சகோதரி; ஒதியாவின் புதல்வர் (1 நாள் 4:19).

எசுத்தமோவா (ESHTEMDA - கேட்கும் நிலையம்)-இடம்

யூதாவின் நகரங்களில் ஒன்று. லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. 'அடைக்கல நகர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது (யோசு 21:14; 1 நாள் 6:57). பிறகு மலைப்பகுதியான கோசேனோடு இணைக்கப்பட்டது (யோசு 15:50). கெபிரோனுக்குத் தெற்கில் 14 கி.மீ. தொலைவிலுள்ள எஸ் செமூவாக இருக்கலாம். யுசேபியசின் கூற்றுப்படி, இப்பெயருடைய ஒரு யூத நகரம் கி.பி.4 - ஆம் நூற்றாண்டில் இருந்தது. இதன் மற்றொரு பெயர் எசுத்தமோ ஆகும் (யோசு 15:50).

1 சாமு 30:28-இன் படி அமலேக்கியர்களிடமிருந்து சிக்கிலாகைக் கைப்பற்றியதில் கிடைத்த கொள்ளைப் பொருட்களைத் தாவீது பரிசுகளாக அனுப்பி வைத்த நகரங்களில் இதுவும் ஒன்று. சவுலிடமிருந்து தாவீதும் அவர் ஆரவாளர்களும் தப்பி இங்கு வந்தபோது அவர்கள் தாவீதுக்கும் அவர் படைவீரர்களுக்கும் செய்த சேவைக்காக இப்படிப் பரிசுகளை அனுப்பிவைத்தார்.

எசுத்தாவோலியர் (ESHTAOLITE)

எசுத்தாவோலின் மக்கள். இவர்கள் காலேபின் மகன் சோபாலின் வழித் தோன்றல்களில் குறிக்கப்படுகின்றனர் (1 நாள் 2:53).

எசுத்தாவோல் (ESHTAOL அப்பால், தொலைவில்)

'தாண்' கோத்திரத்தாருக்கு முதலில் கிடைத்த நகரம் (யோசு 19:41). பிறகு யூதாவின் மாவட்டமான சோரா-அசக்காவோடு இணைக்கப்பட்டது (15:33). இந்தப் பகுதி அர்த்துப்புக்கு வடக்கே உள்ள எசுவா எனலாம். இவ்விடம் சோராவுக்குக் கிழக்கில் 2.5 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கு மேற்கில் 21 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

எசுத்தாவோலைச் சோராவுக்கு அடுத்து வைக்கும் பழக்கம் நீதிபதிகள் காலத்திலும் தொடர்ந்தது (நீதி 13:25; 16:31; 18:2.8.11; காண்க 1 நாள் 2:53). சோராவுக்கும் எசுத்தாவோலுக்கும் இடையில்தான் சிம்சோன் இறைவனின் ஆவியானவருக்குப் பணிந்தார். அங்கேதான் அவர் புதைக்கப்பட்டார். ''தாண்'' கோத்திரத்தார் வடக்கில் குடிபெயர்ந்து இலாயிசைப் பிடிக்க அதிரடித்தாக்குதலில் இறங்கப் பயன்படுத்திய முக்கியமான மையங்கள்தாம் சோராவும் எசுத்தாவோலும் (நீதி 18).

எசுத்தோன் (ESHTON - பலமனைவியரையுடைய, பெண் தன்மையுடைய)

யூதாவின் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு குலம் அல்லது ஒரு குடும்பம். யூதாவைச் சார்ந்த மெகிரின் மகன். ஒரு காலேபியராக இருக்கலாம். இரக்காவின் மக்களில் ஒருவராக எண்ணப்படுகிறார் (1 நாள் 4:11-12). இவர்கள், ஒருவேளை இடம்விட்டு இடம் செல்லும் உலோகக் கொல்லர்கள் குழுவாக இருக்கலாம்.

எசுபாகால் (ESHBAAL - பாகாலின் மனிதன்)

சவுல் அரசனின் புதல்வர்களுள் ஒருவரான இசிபோசத்தின் மூலப் பெயராகும். இதன் மற்றொருவடிவம் இசுபாகால் ஆகும் காண்க. இசிபோசத்து, இசுபாகால்.

எசுபான் (ESHBAN - அறிவுள்ள மனிதன்)

இவர் தீசோனின் இரண்டாவது மகன். கோரியர் துணை இனத்தின் முன்னோரும் தலைவரும் ஆவார் (ஆதி 36:26; 1 நாள் 1:41).

எசுரூன் (JESURUN - நேர்மை)

இஸ்ராயேலின் மற்றொரு பெயர். பாடல்களில் மட்டும் காணப்படுகிறது. எசுரூன் என்பது அதன் நேர்மை என்று வேர்ப் பொருளை அழுத்திக்கூறும் குறுகிய அல்லது அன்பைக்காட்டும் வடிவமாகக் கருதப்படுகிறது. இச்சொல் மோசேயின் பாடல் (உப 32:15; கி.மு. 10-ஆம் நூற்றாண்டு). மோசேயின் ஆசீர் (35:5.26; கி.மு.11-ஆம் நூற்றாண்டு) ஆகிய மிகப் பழங்காலப் பாடல்களில் வருகிறது. இஸ்ராயேலின் மீட்பு மீண்டும் அமைக்கப்படுதல் பற்றி ஏச 44:2-இலும் வருகிறது.

எசுலி (ESLI)

இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (லூக் 3:25).

எசேர் (JEZER - உதவி, நோக்கம்)

நப்தலியின் மூன்றாவது மகனான இவர் (ஆதி 46:24; 1 நாள் 7:13) எசேரிய வம்சத்தின் தலைவராவார் (எண் 26:49).

எசொகாயா (JESHOHAIAH - யாவே தாழ்த்துகிறார், யாவே வணங்குகிறார்)

சிமியோன் இனத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் (1 நாள் 4:36).

எஸ்ஸேனியர் (ESSENES)

இவர்கள் மக்கபேயர் கிளர்ச்சிக் காலத்திலிருந்து (கி.மு. 2-ஆம் நூற்றாண்டு) உரோமையர் எருசலேமை அழித்ததுவரை (கி.பி. 70) பாலஸ்தீனத்தில் வளர்ச்சி பெற்றிருந்த ஒரு முக்கிய யூதப்பிரிவினராவர். அலக்சாந்திரியாவின் பிலோ, பிளேவியு, யோசிபஸ், பெரிய பிலினி மற்றும் இப்போலிடஸ் ஆகியோரின் நூல்களில் முதலில் சான்று பகரப்பட்டு, எஸ்ஸேனியரின் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும், சாக்கடல் சுருள்களை உருவாக்கிய சமுகப் பிரிவுக் குழுவின் ஆவணங்களால் இப்பிரிவு அறியப்படுகிறது.

I. வரலாறு:-

எஸ்ஸேனியர்கள், யோனத்தான் மக்கபேயுவின் காலத்தவராக முதன் முதலில் குறிப்பிடப்படுகின்றனர் (கி.மு.150). வளரும் கிரேக்க ஆதிக்கத்தை எதிர்க்கின்ற ஆர்வமிக்க சமயகுழுவாகிய அசிதேயர் (பக்தியுள்ளவர்கள்) குழுவிலிருந்து தோன்றியிருக்கலாம். எஸ்ஸேனியர்கள் பொதுவாகப் பாலஸ்தீன யூதரிடையே தோன்றியிருக்கக் கூடும் என்று நம்பப்படுகின்றனர். ஆனால் இவர்கள் நாடு கடத்தப்பட்ட பின்னர் பாபிலோனியாவிலே தங்கியிருந்து, இறைவனால் உருவாக்கப்பட்ட பேரழிவு மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கெனத் தமஸ்கு ஆவணத்தினுடைய கோட்பாடுகளுக்கேற்பத் தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொண்ட யூதரிடையிலான கடும் பழைமைவாதிகள் ஆவார் என்று அறிஞர் சிலர் இப்போது கருதுகின்றனர். இவை எப்படியிருந்தாலும் மக்கபேயரின் புரட்சியைத் தொடர்ந்து பரிசேயர் மற்றும் சதுசேயருடன் சேர்ந்து ஒரு பெரிய இறையாட்சிக் குழுவாக எருசலேம் அரசியலில் அவர்கள் முக்கிய இடம் வகித்தனர் (கி.மு.104). ஆனால் சடோக்கியரல்லாத கசுமோனிய குருத்துவத்திற்கும், அப்போது நிலவிய அரசியல் உடன்பாட்டிற்கும், அவர்கள் மிகவும் எதிர்ப்புக் காட்டினர்.

இதன் விளைவாக அவர்கள் முதலில் எருசலேமிலும், மற்ற பாலஸ்தீனிய நகரங்கள் மற்றும் கிராமங்களிலும் உள்ள ஒதுக்கப்பட்ட இடங்களுக்கும், பின்னர் சாக்கடலின் வட மேற்குப் பகுதியிலுள்ள பாலைச்சமவெளியின் கூடியேற்றப் பகுதிகளுக்குள்ளும், பின்வாங்கினர். இக்காலத்தில் கும்ரான் சமூகமானது அமைக்கப்பட்டது. இது எஸ்ஸேனிய இயக்கத்தின் தலைமை நிலையமாக உருவாயிற்றென அறிஞர் பலர் நம்பினர். கி.மு.31-இல் ஒரு நில நடுக்கமானது கும்ரானை அழித்தபோது, பெரிய ஏரோதுவினுடைய ஆதரவின்கீழ் எருசலேமின் வட மேற்கு முனையில் எஸ்ஸேனியர்கள் இடம் மாறியிருக்கலாம். சீயோன் மலையிலுள்ள எருசலேமின் எஞ்சிய எஸ்ஸேனியக் குடியிருப்புகளுடன் கழிவறைகள், சடங்கு குளியலறைகள் மற்றும் எஸ்ஸேனிய வாசல் ஆகியவை அடங்கிய இந்தப் பகுதியே, இக்காலத்தைச் சேர்ந்த, எஸ்ஸேனியருடைய குடியிருப்பு என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். ஏரோதுவின் மரணத்திற்குப் பின்னர் அவர்கள் கும்ரானுக்கே திருப்பினர். முதல் யூதப் புரட்சியின் போது (கி.பி.68) உரோமையர் அவ்விடத்தைக் கைப்பற்றும் வரை அவர்கள் அங்கேயே தங்கியிருந்தனர். கி.பி. 70-இல் எருசலேமின் அழிவிற்குப் பின்னர், சிதறுண்ட தனிக்குழுக்கள் நிலைபெற்றிருந்தாலும், எஸ்ஸேனிய இயக்கத்திற்குச் சுவடுகள் இல்லை. சிலர் இங்குமங்குமாகச் சிதறிப் போயிருக்கலாம், மற்றவர்கள் பிற யூதப் பிரிவுகளிலும் கிறிஸ்தவ திருச்சபையிலும் ஒன்றித்துப் போயிருக்கலாம்.

II நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்:-

எஸ்ஸேனிய ஆதரவாளர்கள் குறைந்த எண்ணிக்கையிலே இருந்தாலும் (நான்காயிரம் பேர்), பண்டைய ஆதாரங்கள், பல்வேறுபட்ட, சில சமயங்களில், முரண்பட்ட நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்குச் சான்று பகர்கின்றன. இந்நிலையானது கும்ரான் சமூகத்தை எஸ்ஸேனியரின் ஒரு பிரிவாக மட்டுமே நோக்குமாறு சில அறிஞர்களைத் தூண்டினாலும், இது எஸ்ஸேனியரைச் சார்ந்ததுதானா என மற்றவர்கள் வினா எழுப்புகின்றனர். இத்தகைய வேறுபாடுகள் உண்மையில் எஸ்ஸேனியக் குடியேற்றங்களுக்கு இடையிலான வேறுபாடுகளையும் சமூக வளர்ச்சியின் மாறுபட்ட வரலாற்றுக் கட்டங்களின் நிலையையும் அல்லது சாதாரண வரலாற்றாசிரியரின் சார்பு நிலையையும் பிரதிபலிப்பனவாய் இருக்கக்கூடும்.

அடிப்படையில் உண்மையான இஸ்ராயேலின் விசுவாசமுள்ள எஞ்சியோராகவும், இறைவனுடைய இறுதிக்காலச் சமுதாயத்தின் மையமாகவும் எஸ்ஸேனியர் தங்களைக் கருதினர். ஐந்நூல் விதிமுறைகளை உறுதியாகக் கடைபிடிக்கத் தீர்மானித்துள்ள ஒரு தனிமையான சமூகத்தை உருவாக்குவதன்மூலம் பிணைப்புகளை வலிமைப்படுத்தவும், இறைவனின் உடனடி வருகைக்கு ஆயத்தப்படுத்தவும், பொதுவான உணவு, படிப்பு, குளியல் போன்றவற்றையும் உள்ளடக்கிய சமூக வாழ்க்கை முறை வலியுறுத்தப்பட்டது. அனைத்து உடைமைகளும் பொதுவாக வைக்கப்பட்டு, தனிநபர்களின் தேவைக்கேற்ப உடைமைகளும், உதவிகளும், அளிக்கப்பட்டன. பிற எஸ்ஸேனிய சமுதாயத்தினின்று வருகிறவர்களுக்கு விருந்தோம்பலை உறுதிப்படுத்த நிதி சேமித்து வைக்கப்பட்டது. எஞ்சியவரின் புனிதத்துவத்தைப் பாதுகாப்பதற்காகவும், சமூக சகோதரத்துவத்தை நிலைநிறுத்துவதற்காகவும், ஒழுங்குமுறை கடினமாக்கப்பட்டு சமுதாய விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பது அவசியமாக்கப்பட்டது. மேலும் துறவு மனப்பான்மையினாலோ வழிபாட்டுத் தூய்மையின் மீதான அக்கறையினாலோ இல்லாமல், இறுதிக்கால நம்பிக்கைகளுக்குப் பெரிதும் உரிய விதத்தில் சில எஸ்ஸேனியர் மணமாகாமையைக் கடைப்பிடித்தனர்.

எருசலேம் ஆலயத்தினுடைய இழி நிலையினின்று தங்களை விலக்கிக் கொண்டாலும், ஒரு குறிப்பிட்ட கால அளவிற்காவது எஸ்ஸேனியர் ஆலயத்திற்குக் காணிக்கைகளை அளித்தனர். ஆனாலும் தீட்டுப்படாமலிருப்பதற்கெனத் தமக்குரிய இடத்தினின்றே அவர்கள் பலிகளைக் காணிக்கையாக அளித்தனர். எருசலேமிலும் கும்ரானிலும் உள்ள வழிபாட்டுக் குளங்களின் சிதைவுகள் சான்று பகர்வது போலத் தூய்மை பற்றிய லேவியரின் சட்டங்களுக்கு அதிமுக்கிய கவனம் செலுத்தப்பட்டு நாடோறும் உடலலம்பல் போன்ற செயல்கள் கடைப்பிடிக்கப்பட்டன. சூரியோதயத்தின்போது வேண்டுதல்கள் செலுத்தப்பட்டன. உணவிற்கு முன்னும் பின்னும் செபங்கள் சொல்லப்பட்டன. இறுதிக்கால விளக்கத்தின்மீது அக்கறை கொண்டு தினசரி இறைவாக்கு வாசித்துத் தியானிக்கப்பட்டது. குறிப்பாகச், செபக் கூடத்தில் இறைவாக்குகளை வாசித்து அவற்றை விவாதிப்பதில் ஓய்வு நாளானது கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டது. ஓய்வு நாளின் புனிதத்தைக் காப்பதற்காக எஸ்ஸேனியர் அதற்கு முந்தைய நாளிலேயே உணவைத் தயாரித்து வைத்தனர். இருபத்து நான்கு மணி நேரங்களில் எந்த விதமான உடல் ஓய்விற்கான வாய்ப்பும் தங்களுக்கு மறுக்கப்படும் அளவிற்கு ஒரு சிலர் தங்களது உடல் சார்ந்த செயல்களை முறைப்படுத்தினர்.

எஸ்ஸேனிய இயக்கத்திற்குத் தங்கள் பற்றுறுதியை அளித்து அதில் அங்கத்தினராயிருப்பதற்குரிய நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க உறுதி எடுத்தனர். தொடக்க நிலையினரின் தகுதிகளைத் தேர்ந்தறியவும் குழுவின் தூய்மையைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு. நீண்ட பயிற்சி அளிக்கப்பட்டது. யோசிபசின் கூற்றுப்படி புதியவர்கள் அச்சமுதாயத்தின் எல்லைகளுக்கு வெளியே கடுமையான சூழ்நிலையில் ஐந்து ஆண்டுகளுக்குப் பயிற்சி பெற்றனர். சமூகத்தினுடைய

உணவுக்கட்டுப்பாடு வழிபாடு மற்றும் ஒழுக்க விதிமுறைகள் ஆகிய அனைத்தை யும் நிறைவேற்றத் தகுதியுள்ளவர்கள் எனத் தங்களை நிரூபித்தபின் முழு உறுப்பினர்க ளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பொது உண வில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். ஆயி னும் முழு உறுப்பினர்களிடையிலும் குருக்க ளும் பெரியோர்களும், உயர் அதிகாரமும் உரிமைகளும் கொண்ட படிமரபு அமைப்பு இருந்து வந்தது.

III. கிறிஸ்துவுடனான உறவு:-

புதிய ஏற்பாடு எஸ்ஸேனியரைப்பற்றி எவ்விதக் குறிப்பையும் கொண்டிராவிட்டா லும் எஸ்ஸேனியரின் போதனைகளுக்கும் ஆதிக் கிறிஸ்தவர்களின் நம்பிக்கைகளுக்கு மிடையே ஒப்புமைகளை அறிஞர்கள் வெளிக் கொணர்ந்தனர். சிறிது காலம் எருசலேமிலி ருந்த சில கிறிஸ்தவர்கள் எஸ்ஸேனியரு டைய வாழ்க்கை முறையினை ஒத்திருந்த ஒரு விதமான பொதுவுடைமையினைப் பின் பற்றினர் (அ.ப. 4:32 தொ). பல கிறிஸ்தவர் கள் எஸ்ஸேனியரைப் போல் விருந்தோம் பலை மிக உயர்வாக மதித்தனர் (மத் 10:11-13:7:7). மேலும், எஸ்ஸேனியரைப் போன்று தம்மைப் பின்பற்றுகிறவர்களும் இறைவனு டைய அரசில் பங்கு பெறுவோருடன் கொண்டுள்ள உறவுகளைக் குடும்ப உறவு களை விட மேலாக மதிக்க வேண்டும் என்று இயேசு கோருகின்றார் (13:46-50).

ஆயினும் எஸ்ஸேனிய மற்றும் கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையில் முக்கிய ஏற்றத்தாழ் வுகள் காணப்பட்டன. பெரும்பான்மை யான கிறிஸ்தவ சமுதாயங்கள் விரைவி லேயே விரும்பி ஏற்றுக் கொண்ட பொதுவு டைமையை விட்டுவிட்டுத் தனியுடை மையை மீண்டும் அறிமுகப்படுத்தின. மேலும் பழைய ஏற்பாட்டின் சடங்கு நெறி கள் கிறிஸ்துவினுடைய வருகையால் மேற் கொள்ளப்பட்டுவிட்டன என்று இயேசுவும் பவுலும் கருதினர். இதயத்தின் உள்ளார்ந்த தூய்மையானது சடங்கு முறையைவிட மிக முக்கியமானது. சட்டங்களையும் விதிமுறை களையும் உன்னிப்பாகக் கடைப்பிடிப்ப தென்பது கிறிஸ்துவின் மரணத்தினால் கொண்டு வரப்பட்ட பரிகாரத்தினின்று தரம் குறைந்ததாகும்.

எஸ்ஸேனிய இயக்கத்துடன் இயேசுவை இணைக்கின்ற முயற்சிகள் பெருமளவில் கைவிடப்பட்டுவிட்டன. புதிய ஏற்பாட்டின் எந்த ஆளும் அவர்களோடு உறவுகொண்டி ருக்கக் கூடுமாயின், நேர்மையின் கடுமை யான போதகராகிய திருமுழுக்கு யோவான் மட்டுமாகவே இருக்கும்.

எஸ்தர் (ESTHER விண்மீன், மங்கை)

எஸ்தர் நூலின் முக்கிய பாத்திரமாவாள். இவளது எபிரேயப் பெயர், மிருதுச்செடி என்ற பொருளுடைய அதசா என்பதாகும் (எஸ்.2:7). பெற்றோர் அற்ற இவள், அவ ளது சிற்றப்பன் மோர்தெக்காயால் வளர்க் கப்பட்டாள். இவள் ஏலாமின் முந்நாளை யத் தலைநகரான சூசாவில் வாழ்ந்து வந் தாள். இந்நகரம் பாரசீகர்களால் கைப்பற்றப் பட்டிருந்தது. அகசுவேரு ஆட்சிக்காலத்தில் நாடுகடத்தப்பட்ட நிலையில் பின்தங்கி விட்ட யூதர்களில் ஒருத்தி.

அரசி வஸ்தி அரசருக்குமுன் வரக்கூடாது என்று ஒதுக்கப்பட்டபின் பல மங்கையர்களி லிருந்து அவள் இடத்தில் அரசியாக இருக் கத் தேர்ந்தெடுக்கப்பட்டாள் எஸ்தர். இந்தப் பதவியில் பாரசீகப் பேரரசில் எல்லா யூதர்க ளையும் அழிக்க ஆமான் செய்த சூழ்ச்சியை முறியடிப்பதில் தன்னுயிரையும் பணயம் வைக்கத் தயங்காதவள். அவளது முயற்சி யால் ஆமான் அழிந்தான். யூதர்கள் காப்பாற் றப்பட்டனர்.

எஸ்தர் நூல் (BOOK OF ESTHER)

1. முன்னுரை:-

இந்நூல் ஒரு பெண்ணைக் கதைத்தலைவி யாகக் கொண்ட ஒரு பழைய ஏற்பாட்டுப் புதினமாகும். பலவிதங்களில் தனித்தன்மை கொண்ட நூல். அனாதை அரசியாகிறாள்; நாடு கடத்தப்பட்டவன் அமைச்சனாகிறான். சதிகாரன் பழிவாங்கப் பெறுகிறான்- இவ்வாறு பல எழுச்சிகளையும், வீழ்ச்சிக ளையும் கொண்டதாகும் இந்நூல்.

2. பெயர்:-

எஸ்தர் என்பது கதைத் தலைவியின் பாரசீகப் பெயராகும். அதற்கு ''விண்மீன்'' என்று பொருள் கூறலாம். ஆனால் எஸ்தரின் எபிரேயப் பெயர் ''அதசா'' என்பதாகும். இதற்குப் பொருள் மிருதுச் செடி என்பதாகும். இது ஒரு மணமிக்க மலர்ச்செடியாகும். இது அவளது இயற்பெயராக இருக்கலாம். அல்லது கொடுக்கப்பட்ட ஒரு பட்டமாக இருக்கலாம். பின்னது உண்மையானால் அதசா என்ற சொல் அக்கேடியன் மொழியில் ''திருமணப் பெண்'' என்று பொருள்படும். இப்பட்டம் இசிதார் தேவதைக்குக் கொடுக்கப்பட்டதாகும்.

3. வாசகம்:-

இந்நூல் எபிரேயம், கிரேக்கம் ஆகிய இரு மொழிகளிலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. எல்லா எபிரேயப் பிரதிகளும் முரணில்லாத ஒரே நிலையானவையாகும். எழுபது நூல் வாசகம், லூசியன் வாசகம் என இரு கிரேக்க வடிவங்கள் உண்டு. இவை எபிரேய வாசகத்தைச் சுதந்தரமாக மொழி பெயர்த்துள்ளன. எபிரேய, கிரேக்க வாசகங்கள் வேறுபடுகின்றன. எபிரேய வாசகம் குறுகியது. கிரேக்க வாசகம் எபிரேய வாசகத்தைவிட மூன்றில் ஒரு மடங்கு கூடுதலானது. கூடுதல் பகுதிகளில் சில முக்கியமானவை. இவற்றை எழுபது நூல் பிற்சேர்க்கையாகவும், லூசியன் வாசகம் வெவ்வேறு இடங்களிலும் வரிசைப்படுத்தியுள்ளன. எழுபது நூல் வாசகம் பொதுவாக மரபுவாசகமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்நூலை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்து வுல்கத்தா வாசகத்தை அமைத்த போது, புனித எரோனிமு கிரேக்க வாசகத்திலுள்ள கூடுதலான பகுதிகளை, நூலின் பிற்சேர்க்கையாக அமைத்தார். இப்பகுதிகளின் இறையூக்கத் தன்மைபற்றி எரோனிமு ஐயம் எழுப்பியுள்ளார். வுல்கத்தா வாசகத்தை எபிரேய வாசகத்தோடு ஒப்பிடுகையில், சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன, சில பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன என்பது தெரியவருகிறது. இது நமக்குக் கிடைத்திருக்கும் எபிரேய வாசகத்திலிருந்து சிறிது வேறுபட்ட வாசகத்திலிருந்து எரோனிமு மொழி பெயர்த்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. எஸ்த *10:3*- வரை எபிரேயத்திலிருந்து மொழி பெயர்த்தபின், எரோனிமு கிரேக்க வாசகத்தில் ஒரு பகுதியைக் கண்டிருக்க வேண்டும். அதை மொழி பெயர்த்துத் தமது வாசகத்தின் முடிவில் *10:4-11:1*-இல் சேர்த்திருக்க வேண்டும். எபிரேய வாசகத்தை நிறைவு செய்யும் மற்றப் பகுதிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் கிரேக்கத்திலிருந்து மேலும் சில பகுதிகளை மொழிபெயர்த்து *11:2-16:24*-இல் பிற்சேர்க்கையாய் அமைத்தார். இவ்வாறு கிரேக்கத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பகுதிகளே *(10:4-16:24)* கத்தோலிக்கர்களால் துணைத் திருமுறைப் பகுதியென்றும், பிரிவினைச் சகோதரர்களால் திருமுறை சேராத பகுதியென்றும் அழைக்கப்பட்டது. இப்பகுதிகளைக் கிரேக்கத்தில் கண்ட வரிசையிலேயே வுல்கத்தா வாசகம் கொண்டுள்ளது. ஆனால் *10:4 10:4-11:1* என்ற பகுதி இப்போதுள்ள இடத்தில் கதையைக் கோவையாக்கவில்லை. இது முடிவில் வரவேண்டும். பிற்சேர்க்கைகள் எங்கிருந்து வந்தன என்பது பற்றியோ, இவை மூலநூலைச் சேர்ந்தவை தான், தற்செயலான திட்டத்துடனே ஒதுக்கப்பட்டன என்பது பற்றியோ, பெரும்பாலான கத்தோலிக்க அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதுபோல், இவை மூலநூலோடு சேர்ந்த இறையூக்கம் பெற்ற பகுதிகளே என்பது பற்றியோ அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

கிரேக்க வாசகத்தில் கூடுதலாக உள்ள பகுதிகளுக்கும், எபிரேய வாசகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? இவை மொழி பெயர்ப்பன்று. கிரேக்கத்திலேயே நேரடியாக எழுதப்பட்டு, ஒரு முந்தைய எபிரேய வாசகத்தோடு சேர்க்கப்பட்டதாகக் கருதப் பல காரணங்கள் உள்ளன. 1) இப்பகுதிகளைக் கொண்ட எபிரேய, அரமெயிக் மூலம் பற்றி எத்தடயமும் இதுவரை கிடைக்கவில்லை. 2) இப்பகுதிகள் பல பழைய ஏற்பாட்டுப் பதில்களைக் கொண்டிருந்தாலும், இவை

ஒரு செமித்திய மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை என்பதற்கு ஓர் அடையாளமும் இல்லை. 3) இப்பகுதிகள் அனைத்தையும் ஒருவரே எழுதவில்லை. ஒரு சில இடைச்செருகல்களாக இருக்கக்கூடும் என்பர் சிலர். ஆனால் இப்பகுதிகளின் கிரேக்க நடையை ஒப்பிட்டுத் தெளிவு பெறப் போதிய சான்றுகள் இல்லை. 4) இப்பகுதிகளில் வரும் சில குறிப்புகள் எபிரேயப் பகுதியில் வரும் விவரிப்புகளோடு ஒத்துப் போகவில்லை (2:15-18-ஐ 14:5 ஓடும், 3:1-ஐ 16:10 ஓடும், 3:5 ஐ 12:6 ஓடும், 6:3 ஐ 12:5-3 ஓடும் ஒப்பிடுக). 5) சில பகுதிகள் இரட்டிப்பு வாசகங்களாக உள்ளன (2:5-6-ஐ 11:2-4-ஓடும், 2:2-4 ஓடும், 2:2-3-ஐ 12:1-3 ஓடும் ஒப்பிடுக).

எபிரேய வாசகத்தில் சமய போதகத்தைச் சுட்டக் கூடிய பகுதியேதுமில்லை எனலாம். இதை ஈடு செய்யம் பொருட்டே, அதாவது சில சமயக் கருத்தையாவது புகுத்த அல்லது அவற்றை வெளிப்படையாக்க, கிரேக்கப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்நூலின் திட்டம் பற்றிக் கூறும்போது எப்படி இரு பகுதிகளையும் மாற்றி அமைத்து, கதையைக் கோவையாக அமைக்கலாம் என்று சுட்டிக் காட்டுவோம்.

4. திருமுறைப் பட்டியலில் எஸ்தர் நூல்:-

யூத கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் இந்நூலைத் தங்கள் திருமுறைப் பட்டியலில் ஏற்றுக் கொள்ளத் தயங்கியுள்ளன. ஏனெனில் இதன் எபிரேய வாசகத்தில் சமய போதகம் தெளிவாகவும், வெளிப்படையாகவும் இல்லை. இதை ஈடுசெய்யும் பொருட்டுத்தான் யூத விளக்கங்கள் இறைவனது நோக்கம் பற்றிய குறிப்புகளையும், எஸ்தர், மோர்தெக்காயின் மன்றாட்டுக்களையும் சேர்க்க முயன்றுள்ளன. மேலும் முழுவதும் சமயச் சார்பற்ற யூத விழாவின் போது வாசிக்கப் பட்டது. கும்ரான் குகைக் கண்டுபிடிப்புகளில் இந்நூலின் ஒரு துணுக்குக்கூட இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கி.பி. 90-ஐ ஒட்டி யாம்னியாவில் நடந்த யூதக் கூட்டத்தில் இந்நூல் ஏற்றுக் கொள்ளப்படுவது தர்க்கத்திற்குரியதாகவே இருந்தது. கி.பி. 2-ஆவது நூற்றாண்டில்தான் யூதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதிய ஏற்பாடு இந்நூலிலிருந்து எந்த எடுத்துக்காட்டையும் கூறவில்லை. ஆதித் திருச்சபை பழைய ஏற்பாட்டை அதன் கிரேக்க வடிவிலேயே ஏற்றுக் கொண்டது. ஆகவே எஸ்தர் நூலை அதன் நீண்டவடிவிலேயே திருச்சபை ஏற்றுக் கொண்டது. ஆனாலும் இதன் இறையூக்கத்தன்மை பற்றி ஐயம் இருந்து கொண்டேயிருந்தது. குறிப்பாகப் புனித அத்தனேசியஸ் இந்நூல் திருமுறைப்பட்டியலில் சேர்ந்ததாகக் கருதவில்லை. ஆனால் போதகத்திற்கு ஏதுவான நூலாக வாசிப்பதற்குரியது என்று கருதினார். காலத்தால் முந்தைய சில பட்டியல்கள் இந்நூலை விட்டுவிடுகின்றன. புனித எரோனிமு எபிரேயப் பகுதிகளைமட்டும் ஏற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. கிரேக்கப் பகுதிகளைப் பிரிவினைச் சகோதரர்கள் திருமுறையைச் சேராத பகுதிகளாகக் கருதுகின்றனர். எபிரேய, கிரேக்கப் பகுதிகள் சேர்ந்த முழுநூலையும், அதன் மரபு வடிவில் திரிதெந்தின் பொதுச்சங்கம் இறையூக்கம் பெற்றதாக ஏற்றுக் கொண்டது.

5. நூல் தோன்றிய காலம்:-

இதுபற்றி உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. இக்காலக் கணிப்புக்கு நூலையே தழுவியிருக்க வேண்டியிருக்கிறது. இக்கதை பாரசீகப் பேரரசின் தலை நகரான சூசாவில் அகசுவேரு காலத்தில் நடந்ததாக உள்ளது. இது உண்மையென்றால் இந்நூல் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியிருக்கவேண்டும். நூலில் வரும் நாட்குறிப்புக்கள் நம்பத் தகுந்தவையென்றால் இந்நூல் கி.மு.114-115க்கு முன் தோன்றியிருக்க முடியாது. ஏனெனில் ''தோலமி, கிளியோப்பத்திரா என்பவர்களுடைய ஆட்சியின் நான்காம் ஆண்டிலே தன்னைக் குரு என்றும் லேவியர்குலத்தினர் என்றும் சொல்லிக் கொண்ட தொசித்தேயுவும் அவர் புதல்வரான தோலமியும் பூரிம் என்னும் இக்கடிதத்தைக் கொண்டுவந்தனர். தோலமியின் மகனான இலிசிமாக்கு எருசலேமில் அதை மொழிபெயர்த்ததாக அவர் சொன்னார்''

(11:1). எகிப்திய வரலாற்றில் பதினான்கு தோலமிகளும் ஐந்து கிளியோபத்திராக்க ளும் உள்ளனர். இவர்களில் எந்தச் சோடியை இக்கூற்று குறிக்கிறது என்று கூறுவது கடினம். நவீன ஆய்வாளர்களின் கருத்துப்படி, இங்கே குறிக்கப்படுபவன் எட்டாம் தோலமியாக *(116-107)* இருக்கலாம்.

கி.மு. *180*-ஐ ஒட்டி எழுதப்பட்ட சீராக் நூல் இந்நூலை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் அது தனது மூதாதையர் போற்றுரையில் எஸ்தர், மோர்தெக்காய், ஆகிய பெயர்களைக் கொண்டிருக்கவில்லை. இது இந்நூல் *180*-க்கு முன் தோன்றியிருக்க முடியாது என்றுசுட்டுகிறது. கி.மு. *160*-ஐ ஒட்டி எழுதப்பட்ட *2* மக் *15:36*-இல் பூரிம் விழாவைப் பற்றிய காலத்தால் முந்திய குறிப்பு உள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இது எஸ்தர் நூலை மக்கபேயர் ஆசிரியர் அறிந்திருப்பார் என்று உறுதியாகக் கூறவில்லை. எஸ்தர் நூலில் காணப்படும் தீவிரமான நாட்டுப்பற்று, மக்கபேயர் காலத்தில் நிலவியநாட்டுப் பற்றுணர்வோடும், புறவினத்தார்பால் யூதர்கள் காட்டிய கடுமையான போக்கோடும் ஒத்துப்போகிறது. நூல் பழிவாங்கும் போக்கையும் அதேசமயம் வெற்றிப் பெருமிதத்தையும் காட்டுகிறது. யூதர்கள் ஒரு துன்பமிக்க காலத்தில் வாழ்ந்து தங்கள் நாடு மீண்டும் தன்னாட்சி பெறுவதையும் சுட்டிச் செல்கிறது. ஆகவே மக்கபேயர் காலத்திற்குப் பின்வந்த இடுக்கண் நிலை இந்நூலுக்குப் பொருத்தமாக உள்ளது. பாரசீக காலத்தின் இறுதி இந்நூலுக்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை.

மேலும் நூலின் வரலாற்றுப் பண்பும் அதன் இலக்கிய வடிவமும் இந்நூல் பிற்காலத்தில்தான் தோன்றியது என்று சுட்டுகின்றன. இந்நூல் யூத திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாகப் பிற்காலத்தில்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், இதன் எந்தத் துணுக்கும் கும்ரான் குகைகளில் கண்டுபிடிக்கப்படாமையும் இந்நூல் பிற்காலத்தில்தான் தோன்றியது என்று காட்டுகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்நூல் கி.மு. *2*-ஆம் நூற்றாண்டில் தோன்றியது எனத்துணிந்து கூறலாம். இதன் கிரேக்க மொழிபெயர்ப்பும் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இக்கதை தோன்றிய காலத்தைக் கணிக்கச் சான்றுகள் இல்லை எனலாம்.

6. எவ்வாறு தோன்றியது?:-

இந்நூல், இப்போதிருக்கும் வடிவில், எப்படி உருவெடுத்தது என்பது பற்றி யூகம் செய்யலாமே தவிர உறுதியாகக் கூறமுடியாது. மூலத்தில் ஒரு கதையிருந்தது. அதன் தோற்றம் பற்றிய ஒன்றையும் உறுதியாக அறிவதற்கில்லை. அது பழையது. அதிக நாட்டுப்பற்றும், இனப்பற்றும் கொண்டது. இக்கதை யூதர்களின் பேராபத்தையும், அதை அவர்கள் வெற்றி கொண்டதையும் முழுவதும் சமயச் சார்பற்ற முறையில் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது *(1:1-9:19)*. இஃதோடு பிற்காலத்தில் வேறுதன்மையுடைய ஒருபகுதி சேர்க்கப்பட்டது *(9:20* தொ*)*. இது யூதர்கள் கடைப்பிடித்த பூரிம் விழாவை வெளிப்பட விளக்கியது. இந்த எபிரேய வடிவம் கிரேக்க மொழி பெயர்ப்பாளர்களால் எடுத்துப் பயன்படுத்தப்பட்டு, நீண்ட பிற் சேர்க்கைகளுடன் மறுபதிப்புச் செய்யப்பட்டது. அதன் விளைவாக, இந்நூல் இறைவன் தம் மக்கள் மேல்காட்டும் பராமரிப்பு பற்றிய ஆழ்ந்த விசுவாச அறிக்கையாக வடிவெடுத்தது. மன்றாட்டு, நோன்பின் ஆற்றலை எடுத்துக் காட்டியது. இவ்வாறு ஒரு பழைய, சமயச் சார்பற்ற கதை, இறைபக்தி மிக்க, இறையூக்கம் பெற்ற இலக்கியமாக மாறியது.

7. வரலாறா? மிட்ராசா?:-

இந்நூல் வெறும் கட்டுக்கதை என்பதிலிருந்து உண்மையான வரலாறு என்பது வரை பலவகையான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. சில விவரங்களில் துல்லியத்தைக் கவனிப்பதோடு நிறைவு அடைபவர்கள் இந்நூல் ஒரு வரலாறு ஆகும் என்பர். இத்தகைய விவரங்கள்: கோட்டைக்கும் நகருக்குமுள்ள வேறுபாடு *(3:15; 8:14; 9:6-11)*; அரசன் தங்கும் இடத்திற்கும் அந்தப்புரத்திற்கும்

இடையேயுள்ள வேறுபாடு (2:13-14); அரசனது திடீரென்று உணர்ச்சிவசப்படும், சிற்றின்பப்பண்பு (1:11-12; 2:1,12; 3:10; 6:1-10; 7:8-10; 8:7-12; 9:11-14). இவற்றிற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. பாரசீகர் அல்லாத ஆமானின் சகிப்புத்தன்மையற்ற தன்மை (3:1); ஏழு அமைச்சர்கள் கொண்ட ஆலோசனை சபை போன்ற பாரசீகரின் ஆட்சிமுறைகள் (1:13-21); அரசனின் மாற்றமுடியாத கட்டளை (1:9; 8:8); அரசனது அதிகாரத்தின் கீழிருந்த செய்தி அனுப்பும் மிகச்சிறந்த அமைப்பு (3:13; 8:10); அரசனது மாளிகையிலிருந்து துக்க ஆடைகள் புறம்பாக்கப்படுதல் (4:2); இவையெல்லாம் துல்லியமாக இருக்கலாம். ஆனால் வரலாற்று நூலைப் போலவே கற்பனை விவரிப்பும், உண்மையான பண்புகளை எடுத்துக் கூறலாம்.

நூலில் பல முரண்பாடுகளும் நம்ப முடியாதவைகளும் உள்ளன. வஸ்தியோ எஸ்தரோ அகசுவேருவின் அரசியாக இருக்கவில்லை; அமெஸ்ட்ரீஸ்தான அரசியாக இருந்தாள் என்று பாரசீக ஏடுகளிலிருந்து அறிகிறோம். பாரசீக அரசவையில் தங்கி, தனது மக்களைக் காத்த ஒரு யூத அரசியையோ, பாரசீக அரசவையில் உயர்பதவிக்கு வந்த பக்தியுள்ள யூதனான மோர்தெக்காயைப் பற்றியோ விவிலியத்திலோ (சீரா 44-49) அதற்குப் புறம்போ வேறு ஒரு சான்றுமில்லை. கி.மு. 597-இல் நெபுக்கதுனேசாரால் நாடுகடத்தப்பட்ட மோர்தெக்காய் அகசுவேரு காலத்தில் (486-465) பிரதம அமைச்சராக இருக்க இன்னும் தகுதி யுள்ளவராக இருக்கிறார். அவருக்கு அப்போது 100 வயதாவது இருக்கும். பாரசீகர்கள் பிறமக்களைச் சகிப்புத்தன்மையோடும் தயவோடும் நடத்தினர் என்று விவிலியத்திலிருந்தே அறிகிறோம். இதற்கு யூதர்களைக் கொலை செய்யும் திட்டம் முரணானதாக உள்ளது. வஸ்தியைப் பதவி நீக்கம் செய்ய அமைச்சர்களின் ஆலோசனை கேட்கும் அரசன் (1:13-21) முன் ஆலோசனையில்லாமல் தனது மக்களையே கொல்ல அனுமதிக்கிறான். அரசன் அனுமதியோடு அவனது மக்களையே திட்டமிட்டுக் கொல்வதும், அதுவும் இருநாளில் 73000 கொலைகள் செய்வதும் நம்பத் தகுந்ததாயில்லை. கொலை செய்யக் கட்டளையிட்ட பின் காலம் தாழ்த்துவது பொருளற்றதும் உண்மைத் தன்மையற்றதுமாக இருக்கிறது (3:13தொ; 8:12). இவையெல்லாம் உண்மையில் நடந்தன என்பதற்கு விவிலியத்துக்குப் புறம்பான ஏடுகளில் சுவடுகள் காணப்பட வேண்டும். அப்படிக் காணப்படவில்லை.

அரசன் தன் அரசியின் பூர்வாங்கத்தை அறியாதிருப்பானா? யூதனான மோர்தெக்காய் தன் சகோதரனின் மகள் எஸ்தரின்மேல் அவ்வளவு அக்கறை காட்டும்போது அவள் ஒரு யூதப் பெண் என்பதை மறைக்க முடியுமா? மோர்தெக்காய் அரண்மனை வாசலுக்கு வந்துபோவது விவேகமா? மேலும் நிகழ்ச்சிகளைக் கால வரிசைப்படுத்த நூல் முயற்சிசெய்யவில்லை. இப்படியே கூறிக் கொண்டு போகலாம். இவையாவும் இந்நூல் ஒரு வரலாற்று நூல் அல்ல என்று சுட்டுகின்றன; வரலாற்று நூல் எழுதுவது ஆசிரியரது நோக்கமும் அன்று என்று காட்டுகின்றன. ஒரு குறிப்பிட்ட ஒழுக்க மன நிலையை வாசகர்களில் உண்டாக்க ஆசிரியர் விரும்புவதாகத் தெரிகிறது. அக்கதா மிட்ராசு என்றழைக்கப்படும் இறையூக்கம் பெற்ற இலக்கிய வடிவில் இத்தகைய முரண்பாடுகளை எதிர்பார்க்கலாம். முன்பு கூறப்பட்டவையாவும் இந்நூல் வரலாற்றுப் பின்னணியில் தோன்றிய கதையாகும் என்று காட்டவல்லன. இது வெறும் கதைதான் என்று சுட்டக் கூடிய வேறு சில கூறுகளும் உள்ளன. மோர்தெக்காயைக் கொலை செய்ய அனுமதிகேட்டு இரவில்தான் ஆமான் அரசனை அணுகினானா? (6:4). அவன் அரசனுக்குக் கட்டுவதாகக் கூறும் 10,000 தாலந்து வெள்ளி கட்டமுடியாத ஒரு பெரும் தொகையாகும் (3:9). எதிர்பாராத முறையில் அரசன் தனக்குச் சாதகமாக இருப்பதைக் கண்டபின்னும், மிகவும் கொடுமையான நெருக்கடி நிலையில் உள்ள எஸ்தர் தனது வேண்டுகோளைத் தள்ளிப் போடுவாளா? (5-7) பேரரசின் எல்லா அதிகாரிகளுக்கும் ஆறுமாதத்திற்கு விருந்தளிக்கப்படு

கிறது. அரசனது அந்தப்புரத்துப் பெண்கள் ஓராண்டுக்குத் தயாரிக்கப்படுகின்றனர். மோர்தெக்காயைக் கொல்ல மிக உயர்ந்த ஒரு கழுமரம் தயாரிக்கப்படுகிறது. இந்த விவரங்கள் எல்லாம் கதைக்கு வண்ணம் அளிக்கப் பெரிதும் பயன்படலாம்.

ஒப்பிட்டு வேறுபடுத்தும் கூறுகளைக் கவனத்தில் வைத்துக்கதை அமைக்கப்படுகிறது. சதி என்னும் கருத்து முதலில் ஆமான், மோர்தெக்காய் ஆகிய இரு பாத்திரங்களுக்கு வரையறை செய்யப்பட்டாலும், பின்பு பாரசீகர், யூதர் ஆகிய இரு இனத்தவரிடையே நிலவும் பகையாக விரிவாக்கப்படுகிறது. சவுல் அகாக்கை 1சாமு 15-இல் வெற்றி கொள்வதுபோல் பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவனும் சவுவின் குடும்பத்தைச் சேர்ந்தவ்னுமான மோர்தெக்காய் (2:5) அகாக்கின் இனத்தைச் சேர்ந்த ஆமானை .(3:1) வெற்றி கொள்கிறார். இருவருக்கும் இடையே எதிர்ப்பு, தந்திரம், மிக்க உக்கிரமாகப் பணயம் வைக்கும் மனப்பான்மை, ஆகியவை நிலவுகின்றன. வஸ்தி வெடுவெடுப்பானவள்; பழி வாங்கப் பட்ட புற இனத்தைச் சேர்ந்தவள்; இதற்கு மாறாக, எஸ்தர் அமைதியானவள், உயர்த்தப்பட்டவள்; அவள் இடத்தை இவள் எடுத்துக்கொள்கிறாள். யூதர்கள், பொதுவாகத் தங்கள் எதிரிகளின் நிலையைத் தலைகீழாக மாற்றுகின்றனர். அகசுவேரு விசித்திரமானவனாகத் தோன்றுகின்றார்; இரு சாராராலும் எளிதில் எடுப்பார் கைப்பாவையாகக் கையாளப் படுகிறார்.

செயல்கள் கையாளப் பட்டிருக்கும்முறை அனுபவ அறிவோடு நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்று காட்டுகின்றன. தோற்றத்திற்குப் பொருந்தக் காட்டப்படுகின்றன. ஆழமான சூழ்ச்சிகள், வெற்றியைப் படிப்படியாக எடுத்துக்கூறி, எதிர்பார்ப்பு நிலையை உச்சநிலைக்கு இட்டுச் செல்கிறார் ஆசிரியர். மோர்தெக்காய்க்கு ஆமான் நிச்சயித்திருந்த நாளின் முன் இரவிலேயே அவர் அழிவதிலும் உள்ள முரண் அணி கவனிக்கத்தக்கது. ஊதாரி மகன் கதை சொல்லப்படும்வரை எஸ்தர் கதையை ஒத்த ஒரு கதையைச் சொல்ல வேறொருவர் இஸ்ராயேலில் தோன்றவில்லை எனலாம். நிகழ்ச்சிகளில் வேகமும் இல்லை. இனிய விவரிப்புகள் இடையிடையே புகுத்தப்பட்டுள்ளன. நாடகம் கலைப்பண்போடு முனைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இவை இந்நூலை ஒரு வரலாற்றுப் புதினம் என்று அழைக்கப் பலரைத் தூண்டியுள்ளது.

நன்னடத்தைக்குப் பிரமாணிக்கமாயிருந்த தற்காகச் சிறைப்பட்டு, விடுவிக்கப்பட்டு பாரவோன் அரசில் அமைச்சனாகி, யாக்கோபின் மக்களையும் எகிப்தியரையும் பாது காத்த யோசேப்பு, முற்றுகையிடப்பட்டுப் பேராபத்திலிருந்த தன் மக்களைமீட்ட யூதித்து, தானியேல் (3:6), எஸ்ரா, நெகமியா போன்ற எடுத்துக்காட்டான யூதர்கள் தங்கள் மக்களின் நன்மைக்காக அந்நிய அரசர்களின் தயவைப் பெற்று, பதவியில் உயர்ந்த கதைகள் ஆகிய வரலாற்றுக் கருவிலிருந்து எஸ்தர் நூல் வளர்ந்திருக்கலாம். எஸ்தர் பெயருக்கும் பாபிலோனியத் தேவதையின் இசிதார் என்ற பெயருக்கும், மோர்தெக்காய் என்ற பெயருக்கும் மார்தக்கு என்ற கடவுளின் பெயருக்கும் இடையே உள்ள ஒற்றுமையில் ஏதாவது பொருள் உண்டா? எஸ்தர்நூலின் சூழ்நிலைக்கொத்த நிலையைத் திருமுறைப் பட்டியலைச் சேராத மூன்றாம் மக்கபேயர் நூலில் காண்கின்றோம். இவையும், இவையொத்த சிந்தனைப்போக்கும், எஸ்தர்நூலே தனது போதகத் தன்மையை அதாவது அக்கதா மிட்ராசுத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது என்று சுட்டுகின்றன.

இவையெல்லாம் ஆசிரியர் முதன்மையாக அக்கறை செலுத்துவது வரலாறு எழுதுவதில் அல்ல; சமூக விசுவாசவளர்ச்சிக்கு ஏதுவான ஒரு போதகக் கதையை எழுதுவதிலேதான் என்று காட்டுகின்றன. ஆசிரியர் வாசகர்களின் விசுவாசத்தை வளர்க்கவும், அவர்களை உற்சாகப்படுத்தவும் எழுதுகிறார். இதற்காக, இஸ்ராயேல் வரலாற்றில் வேறு எங்கும் குறிக்கப்படாத ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கூறுகிறார். இது சிதறிக்

கிடந்த யூதர்களுக்கு எதிரான ஒரு பயங்கரத் திட்டமாகும். அது ஒரு பெண்ணின் இடையீட்டால் தோல்வியடைகிறது. இந்த நிகழ்ச்சியை எடுத்துச் சுதந்தரமாகவும் நாடகப் பாணியிலும் விவரித்து ஒரு போதக நூலை அமைக்கிறார் ஆசிரியர்.

8. பூரிம் விழா:-

எஸ்தர் *3:7* இல் ''பூர்'' என்ற சொல்லுக்குச் ''சீட்டுப் போடுதல்'' என்று பொருள் கொடுக்கப்படுகிறது. அதன் பன்மைச் சொல்லாகிய ''பூரிம்'' விழாக் கொண்டாடப்பட்ட இரு நாட்களைக் குறிக்கிறது. விழா நிறுவப்படுதல் *9:20-32*-இல் விவரிக்கப்படுகிறது, எஸ்தர் நூல் ஒரு வரலாற்று நூலாகக் கருதப்படவில்லை என்றால், இவ்விழா யூதர்கள் ஒரு நெருக்கடியிலிருந்து தப்பியதை நினைவுகூறுவதாகக் கதை உண்மையிலேயே விளக்க முடியாது. ஆனால் இவ்விழா இருந்தது என்பது உண்மை. இதற்கு வரலாற்று ஆசிரியர் யோசிபஸ் சான்று கூகிறார். எஸ்தர் நூலில் வரும் நிகழ்ச்சிகளைப் பூரிம் விழாவோடு இணைத்துக் கூறுவதோடு நூல் முடிகிறது. இக்குறிப்பைப் பற்றி என்ன கூறலாம்?

பூரிம் விழாவுக்கும், இந்நூலுக்கும் இடையேயுள்ள தொடர்புபற்றியும், இவ்விழாத் தோன்றிய வரலாறு பற்றியும் பல கருத்துக்கள் உள்ளன. மேலும், தெளிவான சான்றுகள் கிடைக்கும்வரை, இவைவெறும் கருதுகோள்களாகவே இருக்கவேண்டும். பின்வரும் விளக்கம் ஓர் அறிவுசாா்ந்த கருதுகோள்களாகத் தோன்றுகிறது. பாபிலோனில் தோன்றிய ஒரு வசந்த கால விழாவை யூதர்கள் எடுத்து, ஆதார் மாதத்தில் (பெப்ரவரி-மார்ச்) சமயச் சார்பற்ற சூழ்நிலையில், கொண்டாடினர். இது சில நாடுகளில் இப்போது தபசுக்காலத்திற்கு முன்கொண்டாடப்படும் ''கார்னிவால்'' என்ற கேளிக்கைக் கொண்டாட்டத்தை ஒத்ததாகும் எனலாம். இந்த விழா நாட்களில் எஸ்தர் நூல் அதன் எபிரேய வடிவில் யூதர்களின் வெற்றிக்கு ஒத்ததாகவும் வாசிக்கப்பட்டது. காலப் போக்கில் இவ்விழா எஸ்தர் நூலில் விவரிக்கப்பட்டிருப்பதுபோல், பாரசீகத்தில் யூதர்கள் அடைந்த விடுதலையைக் கொண்டாடும் விழாவாகவும், நூல் அந்நாட்களுக்குரிய ''விழாக்கதையாகவும்'', *2 மக் 15:36*-இல் வருவதுபோல் மோர்தெக்காயின் நாளாகவும் கருதப்பட்டது. ஆகவே விழாவையும் கொண்டாட்டத்தையும் எண்பித்து விளக்கும் பொருட்டு *6:20-32*-என்ற சிக்கல் மிக்க பிற்சேர்க்கை நூலில் சேர்க்கப்பட்டது. இப்பிற்சேர்க்கையை முன்னிட்டுச் சீட்டுப்போடுதல் பற்றிய குறிப்பு *3:7*-இல் சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

9. பழிவாங்கும் ஒழுக்கமுறை:-

இந்நூலைப் பாராட்ட நம்மில் பலருக்கு முடியாமல் போகலாம். ஏனெனில் பகைவர்பால் காட்டும் வெறுப்பு அளவுக்கு மிஞ்சிப் போகிறது எனலாம். *9*-ஆம் அதிகாரத்தில், யூதர்கள் தங்கள் எதிரிகளைப் பழிக்குப் பழி வாங்குதல் விவரிக்கப்படுகிறது. இது நமக்கு அதிர்ச்சியளிக்கலாம். யூதர்களுக்கு எதிரான சட்டத்தை நீக்குவது, ஆமான் தண்டிக்கப்பட வேண்டும் என்பது *8:11*-இல் வருவது போல் தங்கள் எதிரிகளிடமிருந்து யூதர்களின் தங்களை வலிமையோடு பாதுகாத்துக் கொள்வது ஆகியவற்றை நாம் புரிந்து கொள்ளலாம்; ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் யூதர்கள் தாங்களே முன்முயற்சி செய்து, எதிரிகளைத் தாக்கி, பாகுபாடு இன்றிக் கொலை செய்வதும் *(9:5)*, இன்னும் கொலை செய்யப் புதிய வாய்ப்பைத் தேடுவதாக எஸ்தர் சித்தரிக்கப்படுவதும் கிறிஸ்துவப் பாரம்பரிய ஒழுக்க முறையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இந்த வேறுபாடு இருக்க வேண்டிய முறையிலேயே இருக்கிறது. ஆனால் எஸ்தர் நூலில் வரும் பழிவாங்கும் ஒழுக்க முறையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நூலில் விவரிக்கப்படும் யூதர்களின் நடத்தையைக் கிறிஸ்துவ ஒழுக்க மரபோடு ஒத்துப்போகச் செய்வது வீண்முயற்சியாகும். அப்படி ஒத்திருந்தால் அது நமக்கு வியப்பளிக்க வேண்டும். இறைவனின் பொறுமை, மேலும் மேலும் தூய்மையான ஒழுக்கக் குறிக்கோள் நெறியைப் படிப்படி

யாக அவர் வெளிப்படுத்துல், மனிதர்கள் இருக்கும் நிலையிலேயே அவர்களை ஏற்று, வளமற்ற அடிப்படையாகத் தோன்றுகின்ற வற்றின் மேல் தமது திட்டத்தை அமைக்க அவர் காட்டும் இணக்கம் ஆகியவற்றிற்குப் பழைய ஏற்பாட்டில் ஏராளமான சான்றுகள் உள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றிலும், இதுவே அவரது வழிமுறை யாக அமைந்துள்ளது. இதில் நாம் குறை காணுவதற்கு எதுவுமில்லை. அவரது செய் தியை எழுதிவைக்க, அவர் தேர்ந்து கொண்ட மக்களும் அவர்களது காலத்து வரையறைகளுக்கு உட்பட்டே செயல்பட்ட னர். நாமும் நமது காலத்து வரையறைக ளுக்கு உட்பட்டே செயல்படுகிறோம் என் பதை நினைவில் கொள்ளவேண்டும். எஸ் தர்நூல் தனது காலத்தில் நிலவிய வாதத்திற் குட்படாத மேல்வரிச் சட்டங்களையே ஏற் றுக் கொள்கிறது. இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டு, சலுகை பெற்ற கருவிகள் என்ற அளவில் தங்களின் உயர் நிலை பற்றிய கருத்து யூதச் சிந்தனையாளர்களிடையே ஆதிக்கம் செலுத்தியது. அதன் விளைவாகத் தங்களது முக்கியத்துவம் பற்றித் தனிச் சிறப் பான நோக்கம் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் பகைவர்களைப் பழிவாங்க விரும்பி யது, எப்போதும் தங்களுடைய காரியங்க ளுக்காக மட்டுமன்று, இறைவனது புகழை எண்பிக்கவும் ஆகும். இதுவே அவர்களது தலையாய குறிக்கோளாகும். யூதர்கள் இறை வனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர் களுக்கு எதிராகக்காட்டப்படும் எதிர்ப்பும், பகைமையும், ஒருவகையில், இறைவனுக் கும் அவர் உலகில் செயலாற்றும் முறைக் கும் காட்டும் எதிர்ப்பும் பகைமையுமாகும். இறுதியாக இந்தப் பழிவாங்கும் விருப்பத் தில் உண்மையான நீதியுணர்வும், பாவமும் அதற்கு இறைவன் அளிக்கும் பதிலும் பற் றிய கூரிய உணர்வு உள்ளது. இந்நிலை, தீமையின்பால் மந்தமான, முதுகெலும்பில் லாத அசட்டைத் தனத்தைவிட எவ்வளவோ மேலானது; விரும்பத்தக்கதுமாகும். இக் கருத்துக்கள் மிகைப்படுத்தப்படலாம்; அல் லது குறுகிய நோக்கில் விவரிக்கப்படலாம். ஆனால் அடிப்படை மதிப்பீடு இல்லாதவை அன்று.

10. திட்டம்:-

பிற்சேர்க்கைகள் எபிரேய வாசகத்தோடு கொண்டுள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டுத லோடு இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள் ளது. இது கதையை ஒரு கோவையாகக் கொண்டுச் செல்ல உதவுகிறது.

1. முன்னுரை: (11:2-2:6).
2. வஸ்தியின் வீழ்ச்சியும், எஸ்தரின் எழுச்சி யும் (1:1-2:23).
3. யூதர்களை அழிக்க ஆமானின் சூழ்ச்சி (3:1-15; 13:1-7).
4. மோர்தொக்காயும் எஸ்தரும் இறைவனி டம் மன்றாடுதல் (4:1-16;13:8-14:19).
5. இறைவிடுதலை தயாரிக்கப்படுகிறது (15:1-19; 5:1-16).
6. விதிகள் மாற்றப்படுகின்றன (6:1-8:12;16:1-24; 8:13-9:19).
7. பூரிம் விழா (9:20-10:3).
8. முடிவுரை (10:4-11:1).

11. சமயப் பொருளும் மதிப்பீடும்:-

நூலின் எபிரேய வாசகம் 4:14-இல் வரும் மறைமுகமான குறிப்பைத்தவிர இறைவ னது பெயரைக் கொண்டிருக்கவில்லை. ஏன், இறைவனைப் பற்றியோ அவரது செயல்களைப் பற்றியோ எந்தக் குறிப்பும் இல்லை. எபிரேயவாசகத்தில் இப்படி இருப் பது மிக விநோதமாக உள்ளது. இதற்கு ஒரு விளக்கம் தேவைப்படுகிறது.

ஆசிரியர் மனித காரியங்களில் இறைவ னது இயக்கத்தை மறுக்கவில்லை. அவரது மறைமுகமான செயலாற்றலை எடுத்துக் கூறுகிறார். அதாவது மனித காரியங்களில் இறைவன் தமது மக்களை நம்பிச் செயலாற் றவிட்டு, அதன் வழியாக அவர் செயலாற்றி நடத்துகிறார். சிதறிக்கிடந்த யூதர்கள் தாங் கள் எதிர்கொண்ட பொறுப்புகளை ஏற்கத் தயங்கவில்லை. இவர்கள் அந்நிய அரசுக் கும் தங்கள் மக்களுக்கும் பிரமாணிக்கமாய் இருக்கவேண்டும். அரசின் நன்மையையும் அதேசமயம் தங்கள் சகயூதர்களின் நன்மை

யையும் தேடவேண்டும். இரண்டுக்கும் இடையில் போராட்டம் ஏற்படும்போது, இரண்டுக்கும் பிரமாணிக்கமாய் இருப்பவர்கள்தான், ஏற்படும் இடையூறுகளை வெல்கின்றனர் என்று ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். தனிநபரின் விதி நாட்டின் விதியோடும் மக்களின் விதியோடும் பின்னப்பட்டிருக்கிறது. யூத இனம் தொடர்ந்து இருப்பது, தனிப்பட்ட யூதர்கள் தங்கள் சக யூதர்களின் நன்மைக்காகத் தங்களையே அர்ப்பணிப்பதைப் பொறுத்ததாகும். இதற்காகச் சில சமயங்களில் தீவிரச் செயல்களையும் செய்ய வேண்டியிருக்கும். கதையில் யூத மக்களின் நன்மைக்கும் அந்நிய அரசின் நன்மைக்கும் நெருக்கடி ஏற்படுகிறது. யூதக் கதாபாத்திரங்கள் யூதர்களின் நன்மையைத் தேர்ந்தெடுப்பது, முரணான விதத்தில் பாரசீக அரசுக்கும் நன்மையாக அமைகிறது. யூதர்களின் எதிரியான ஆமானின் சூழ்ச்சியைவென்று எஸ்தரும், மோர்தெக்காயும் பாரசீகப் பேரரசின் நன்மைக்காகப் பாடுபடுகின்றனர். இதில் சகயூதர்களின் நன்மையைத் தேடுவது உடன்படிக்கை இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதற்குச்சமமாகும் என்றும், ஒரு நல்ல யூதனாக இருந்து, அதன் விளைவாக ஒரு நல்ல பாரசீகக் குடிமகனாக இருப்பது யாவேயின் பெயரை வெறுமனே கூப்பிடுவதைவிட மேலானது என்றும் ஆசிரியர் மறைமுகமாகப் படிப்பிக்கிறார். இப்போதகம் யூத சமயச் சிந்தனைக்குப் புறம்பானதன்று; உள்ளடங்கியதே. யூத விசுவாசத்தால் ஒளியூட்டப்படுகிறது.

ஆனால் பிற்கால வாசகர்கள், குறிப்பாகக் கிரேக்க மொழிபெயர்ப்பாளர்கள், இந்நூலை அதன் சமயச் சார்பற்ற வடிவில் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இக்குறையை நீக்கி, இந்நூல் பரிசுத்தமானது என்று ஏற்றுக் கொள்வதற்கு வேண்டி இறைவனைப் பற்றிய குறிப்புகளையும் மன்றாட்டுக்களையும் கொண்ட பகுதிகளைச் சேர்த்தனர். இவை யாவும் வெறும் மொழிபெயர்ப்புகள் அன்று. வேறொரு வாசகத்திலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டவையாகும். இவற்றில் சில சமயக் கூறுகளை அறிமுகம் செய்யவோ அவற்றை வெளிப்படையாக எடுத்துக்காட்டவோ சேர்க்கப்பட்டவையாகும்.

இந்நூலின் சமய மதிப்பீடு, எஸ்தர், மோர்தெக்காய் ஆகியோரின் பழிவாங்கும் நடத்தையை அடிப்படையாகக் கொண்டதன்று, கிரேக்க வாசகம் எபிரேய வாசகத்தின் தன்மையையே மாற்றி விடுகிறது எனலாம். இது சில இடங்களில் எபிரேயத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதை விரிவாக்குகிறது. இவ்வாறு *2:20*-இல் ''இறைவனுக்கு அஞ்சித் தனது கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி'' மோர்தெக்காய் எஸ்தரை எச்சரிக்கிறார். *6:1*-இல் ''அரசரிடமிருந்து தூக்கத்தை ஆண்டவர் விரட்டிவிட்டார்'' என்று கூறப்படுகிறது. பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்ட பகுதிகள் *(11:2-16:24)* கதைக்குப் புதிய கோணத்தை அளிக்கின்றன. தொடக்கத்தில் மோர்தெக்காயின் கனவும், முடிவில் அதுபற்றிய விளக்கமும் முழுக்கதையும் இறைவனால் கட்டுப்படுத்தப்படும் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று தெளிவாகக் காட்டுகின்றன *(11:10-12; 10:4,9-13)*. மோர்தெக்காயின் மன்றாட்டு, படைப்பவராகிய இறைவன் யாவற்றையும் ஆள்கிறார் என்று ஏற்று, அவருக்குச் சிறப்பான பணி உரியதாகும் என்று ஆர்வத்தோடு போதிக்கிறது. அந்த இறைவனே குலமுதியவர்களை வழிநடத்தினார். யாத்திரையில் தம்மையே வெளிப்படுத்தினார். அவரே இஸ்ராயேலைத் தமக்கே உரிய உரிமைச் சொத்தாகவும் பாகமாகவும் தெரிந்து கொண்டார். தமது மகிமைக்காகவே தமது இரக்கத்தினால் இஸ்ராயேலை மீட்பார். இவையாவும் பழைய ஏற்பாட்டில் சாதாரணமாய்க் காணப்படும் போதகமாகும்; இவ்விதமே எஸ்தரின் மன்றாட்டும் அமைந்திருக்கிறது. அவள் துக்க ஆடை அணிதலும், உண்ணாநோன்பிருத்தலும் குறிக்கப்படுகின்றன. ஆனால் எபிரேய வாசகத்தில் அவள் செபிப்பதாகச் சுட்டிக் காட்டப்படவில்லை என்பர் சிலர். ஆனால் மேற்கூறப்பட்ட செயல்கள் அவள் இறைவனிடம் திரும்புதலின் ஒரு பகுதியாகும். கடந்த காலத்தில் இறைவன் இஸ்ராயேலை அடிக்கடி மீட்டது போல், இப்போதும் அவர்

ஒருவராலேயே அவர்களை மீட்க முடியும். மக்களின் பதிதத்திற்காக இறைவன் அவர்களைத் தண்டித்தார். ஆனால் அவர்கள் அவருடைய மக்கள். அவரது மகிமையின் கருவியாக அவர்களைத் தேர்ந்து கொண்டார். அவர்கள் முழுவதும் அழிவதை அனுமதியார். யூதர்களின் பகைவர்கள் வெற்றிபெற்றால் அது ''கடவுள் அல்லாதவை'' பெற்ற வெற்றிபோலாகும். அதற்கு இடந்தந்து, தமது உரிமையான மகிமையை இறைவன் துறக்க மாட்டார். அவரது மக்களை மீட்டு, அவரே ''கடவுள்களின் அரசன்'' என்று தெளிவாகக்காட்ட அவரது தன்மையே கோருகிறது. இவ்வாறு, இறைவன் தமது மக்களை அழிவிலிருந்து பாதுகாப்பதில் காட்டும் பராமரிப்பே அந்நூலின் தலையாய சமயச் செய்தியாகும். இந்த ஆறுதல் அளிக்கும் செய்தியை நாடகப் பாணியில் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

எஸ்தர் நூலின் பிற்சேர்க்கை (Additions to ESTHER)

107 வாக்குகள் அடங்கிய 6 பக்கங்கள் கொண்ட பகுதி, எபிரேய மொழியில் எழுதப்பட்ட எஸ்தர் நூலில் காணப்படவில்லை. ஆனால் எழுபதுநூல் வாசகத்தில் வெவ்வேறு இடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இவற்றைச் சேர்த்து எஸ்தர் நூலின் பிற்சேர்க்கை என்று கூறுவர். இந்த இடைச்செருகல்கள் கி.மு. 100-இல் வாழ்ந்த ஓர் எகிப்திய யூதரால் செய்யப்பட்டதாக இருக்கலாம். இவரது நோக்கம், ஒருதலை நோக்கும், சமயச் சார்பற்ற தன்மையுமுடைய எஸ்தர் நூலுக்குச் சமயநோக்கு அளிப்பதாக இருக்கலாம். இப்பிற்சேர்க்கையில் இறைவன் அடிக்கடி குறிக்கப்படுகிறார். மன்றாட்டு முக்கியபாகம் வகிக்கிறது. இறைவன் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்தார் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இக்கருத்து, புறஇனத்தாரை வெறுக்கும் போக்கால் பங்கப்படுகிறது.

எழுபது நூல், இவற்றை நூலின் வெவ்வேறு இடங்களில் செருகியது. இவற்றையெல்லாம் எரேனிமு ஒன்று சேர்த்து நூலின் முடிவில் அமைத்தார். இவைதான் 10:4-16:24 என்ற பகுதியாகும். ஆனால் இவற்றைப் பொருத்தமாக அமைக்கவில்லை. இவற்றைச் சரியான முறையில் வரிசைப்படுத்தினால் பின்வருமாறு அமையும்.

1. 11:2-12:6 : யூதர்கள் விடுதலை பெறுவர் என்று முன்னறிவிக்கும் மோர்தெக்காயின் கனவும்; அரசன் அகசுவேருக்கு எதிரான சூழ்ச்சியை அவர் கண்டுபிடித்தலும்.
2. 13:1-7 : யூதர்களைக் கொலை செய்ய அனுதிக்கும் அகசுவேருவின் சட்டம்.
3. 13:8-14:19 : மோர்தெக்காய் மற்றும் எஸ்தரின் மன்றாட்டுக்கள்.
4. 15:1-16 : எஸ்தர் அரசன் முன் வருதல்
5. 16:1-24 : ஆமானைத் தண்டித்து யூதர்களுக்கு உதவி செய்யும், அரசனின் இரண்டாம் சட்டம்.
6. 10:4-11:1 : மோர்தெக்காயின் கனவுக்கு விளக்கமும், எஸ்தர் நூல் உண்மைத் தன்மையுடையது என்று அவர் அறிவித்தலும்.

(1) எஸ்தர் 1:1-க்கு முன்னும், (2) 3:13-க்குப் பின்னும், (3)(4) 4:17-க்குப் பின்னும் (5) 8:12-க்குப் பின்னும், (6) 10:3-க்குப் பின்னும் அமைந்திருந்தால் பொருத்தமுடையதாக இருக்கும்.

இவற்றில் வரலாற்று மதிப்பீடு அதிகமில்லை. நூலின் முன் பகுதியோடு சில முரண்பாடுகளைக் கொண்டுள்ளது.

இவற்றைப் பிரிவினைக் கிறிஸ்தவ சபைகள் திருமுறை நூல் பட்டியலுக்குப் புறம்பானதாகக் கருதுவர். ஆனால் கத்தோலிக்கத் திருச்சபை, இப்பிற் சேர்க்கைகளையும் உள்ளிட்ட கிரேக்க வாசகத்தையே திருமுறை நூல் பட்டியலில் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்கிறது.

எஸ்ரா (EZRA - யாவே உதவுகிறார்)

1. செருபாபேலோடு பாபிலோனியாவிலிருந்து எருசலேமுக்கு வந்த குருக்களில் ஒருவர் (நெக 12:1; நெக 10:2-இல் அசரியா).

இவர் மெசுல்லாம் வீட்டைச் சேர்ந்தவர் யோயாகிம் பெரிய குருவாக இருந்தபோது குருவாக இருந்தவர் (12:12-13).

2. நெகமியா காலத்தில் வாழ்ந்த ஒரு குரு (நெக 12:33). ஒருவேளை 12:1-இல் குறிக்கப்படும் எஸ்ராவின் பேரனாக இருக்கலாம். சாதோக்கின் இன வழியாக வந்த, ஆரோனின் மகன் பினகாசின் வழித்தோன்றல் (எஸ் 7:1-5).

3. எஸ்ரா, நெகமியா, நாளாகமங்களில் உள்ள அவருடைய சொந்த வரலாற்றுக் குறிப்புகளின் ஆசிரியர் என நம்பப்பட்டவர் (எஸ் 7-10; நெக 8-10). இந்தக் குறிப்பேடுகளின்படி, எஸ் 7:1-5-இல் கொடுக்கப்பட்ட தலைமுறை அட்டவணையில் வரும் எஸ்ரா பாபிலோனியாவைச் சேர்ந்த அடிமைத்தனத்திற்குட்பட்டவர்களின் கூட்டத்தாரை கி.மு. 458-இல் எருசலேமுக்கு வழிநடத்தியவர். இவர் மோசே சட்டத்தில் வல்லவரான குருவும் சட்ட வல்லுநரும் ஆவார். பாரசீக அரசன் பணியில் உயர்ந்த இடம் வகித்திருக்க வேண்டும். அரமேய அரச சட்டம் பெரிய அதிகாரம் இவருக்குக் கொடுத்தது (7:27-28). அதற்காக இவரும் ஆண்டவருக்கு நன்றி சொன்னார். 7:7-இன்படி அரசன் முதலாம் அர்த்தாசெருசு லோன்சிமானுசின் ஆட்சியின் 7-ஆவது ஆண்டு பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் தன் பயணத்தைத் தொடங்கினார். அவரோடு குருக்கள் லேவியர்கள், பாடகர்கள், வாயில் காப்போர்கள், ஆலய ஊழியர்கள் உடன் சென்றனர். இவரிடமிருந்து இறைவனுடைய சட்டப்படி எருசலேமையும் யூதாவையும்பற்றி விவரம் அறிய வேண்டும் என்று அரசனும் அவரது ஏழு ஆலோசகர்களும் கட்டளையிட்டிருந்தனர் (7:14). யூதர்களின் ஆதரவைப் பெறுவது பாரசீக அரசனுக்கும், பேரரசின் நிலைப்புக்கும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் எகிப்தின் வெல்லப்பட்டபகுதி எப்போதும் நம்பிக்கைக்குரியதாக அமையவில்லை. இக்காரணத்திற்காக, அரசன் எஸ்ராவுக்குப் பல சலுகைகளும் உரிமைகளும் கொடுத்தான் (7:15-25). கட்டளை பெற்ற எஸ்ரா, பயணத்திற்குத் தயார் செய்து, பாதுகாப்பான பயணத்திற்கு இறைவனுடைய உதவியைத் தேட நோன்பிருந்தபின் முதலாம் அர்த்தாசெருசு ஏழாம் ஆண்டு (458) முதல் மாதம் 12-ஆம் தேதி பயணம் தொடங்கினார். எஸ்ராவோடு அடிமைத்தனத்துக்குப் பிறகு திரும்பி வந்தவர்களின் பட்டியல் ஒன்றும் அவர் கொண்டு வந்திருந்த கோயில் பாத்திரங்களின் பட்டியல் ஒன்றும் எஸ்ரா 8-ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புறச்சமயத்தைச் சார்ந்த பெண்களோடு யூதர்கள் செய்து கொள்ளும் திருமணங்களை எருசலேம் மக்கள் சகித்துக் கொண்டதால் எஸ்ரா அருவருப்படைந்தார் (எஸ் 9). எருசலேமுக்கு வந்த 4 மாதங்களுக்குப்பின் தனது சீர்திருத்தத்தைத் தொடங்கினார். சபையோர் மனம் வருந்தினர். அந்தத் திருமணங்கள் கலைக்கப்பட்டதாகக் கட்டளையிடப்பட்டது. கலப்புத் திருமணங்கள் கணக்கெடுக்கப்பட்டன (எஸ் 10). சட்டப்புத்தகம் வாசிக்கப்பட்டது (நெக 7:73-8:12). கூடாரத் திருவிழா கொண்டாடப்பட்டது (8:13-9:37). சட்டப்புத்தகம் வாசிக்கப்பட்டதற்கு அடையாளமாகத் தலைவர்கள் கையெழுத்துப்போட்டார்கள் (9:38-10,39). கலப்புத் திருமணத்தை எதிர்க்கவும், ஓய்வுநாள், ஓய்வு ஆண்டைக் கடைப்பிடிக்கவும், 'கோயில் வரி' கட்டவும், மரம், பலிப்பொருட்கள், காணிக்கைப் பொருட்களைக் கோயிலுக்குத் தரவும் தாங்களே உறுதி மொழி எடுத்தார்கள்.

விவிலியத்திலிருந்து 'எஸ்ரா'வைப் பற்றி நமக்குத் தெரிந்ததெல்லாம் இவ்வளவுதான்; அவர் சட்டவல்லுநர். குரு என்று அழைக்கப்பட்டபோதிலும், பாபிலோனியாவிலிருந்து இறைவனின் சட்டத்தைக் கையில் எடுத்து வந்தவர் என்று சொல்லப்பட்டபோதிலும், யூதமதத்தைப் புதுப்பித்த 'இரண்டாவது மோசே' என்று கருதப்படுவதற்கான காரணத்தை விளக்குவது கடினம். அவருடைய சுயசரிதையின் பெரும்பகுதியை, அவர்தான் வரலாற்று ஆள் என்று எண்ணிக்கொண்டு 'நாள்' ஆகம ஆசிரியர், அவர் இறந்து நீண்ட காலத்திற்குப் பிறகு எழுதினார். ஒரு யூதப்

பாரம்பரியம் இவரை இறைவாக்கினர் மலாக்கியோடு ஒன்றுபடுத்திக் கூறுகிறது. யூத இலக்கிய ஏடுகள் எல்லாம் இவரால் தான் மீண்டும் அமைக்கப்பட்டன என்று சொல்லப்படுகிறது. மேலும் உண்மையில் ''மோசே இவருக்கு முந்தியிராவிட்டால் எஸ்ரா ஐந்நூலைப் பெற்றிருப்பார்'' என்றும் கூறுகிறது. நாள் ஆகம ஆசிரியர் இவரைச் சட்டவல்லுநர்களின் சங்கத்தைத் தோற்று வித்தவராகக் கருதுகிறார்.

எஸ்ரா (EZRAH - யாவே உதவி செய்கிறார்)

யூதா இனத்தைச் சேர்ந்தவர், காலேபின் வழித் தோன்றல்களில் குறிக்கப்படுகிறார் (1 நாள் 4:17).

எஸ்ரா, நெகமியா நூல்கள் (Books of EZRA and NEHEMIAH)

1. நாளாகமங்களும், எஸ்ரா, நெகமியா நூல்களும் சேர்ந்து ஒரே தொகுப்பாகும். ஒரே இறையியல் அமைப்மையும் கொண்டவை. எஸ்ரா, நெகமியா நூல்கள் நாளாகமங்களின் தொடர்ச்சியாகும்; நாளாகமங்களைப்போல் எஸ்ரா, நெகமியா நூல்கள் மூலத்தில் ஒரே நூலாக இருந்தன. எழுபது நூல்தான் நாளாகமங்களைப்போல் இவற்றையும் இரு வேறு நூல்களாகப் பிரித்தது. எதன் அடிப்படையில் இவ்வாறு பிரிக்கப் பட்டன என்று கூற முடியாது. இப்போது இரு வேறு நூல்களாகக் கருதப்பட்டாலும் இரண்டிற்கும் சேர்ந்து அறிமுகம் வழங்குகிறோம். ஏனெனில் இரண்டு நூல்களும் ஒரே காலத்தைப் பற்றியும் ஒரே தலைப்பைப் பற்றியும் விவரிக்கின்றன என்று கூறலாம். பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூதர்களின் சமூக, சமய வரலாற்றை விவரிக்கிறது. திரும்பிய யூத சமூகம் ஆலயத்தை எழுப்பி உடன்படிக்கையைப் புதுப்பித்துத் தங்களையே தூய்மைப் படுத்திய மறுமலர்ச்சியைப் பற்றி இரு நூல்களும் கூறுகின்றன.

2. பெயர்:-

முதல் நூலுக்குக் குருவும், மறைநூல் வல்லுநருமான எஸ்ராவின் பெயர் கொடுக்கப்படுகிறது. எஸ்ரா என்ற சொல்லுக்கு 'உதவி' என்று பொருள் அளிக்கலாம். இரண்டாவது நூலுக்கு 'நெகமியா' என்ற பெயர் வழங்குகிறது. இச்சொல்லுக்கு ''யாவே ஆறுதல் அளிக்கிறார்'' என்று பொருள் அளிக்கலாம். ''வுல்காத்தா பதிப்பும், சில கத்தோலிக்க மொழி பெயர்ப்புகளும் இந் நூல்களை முதலாம் எஸ்ரா, இரண்டாம் எஸ்ரா என்று முறையே அழைத்தன. அண்மையில் செய்யப்பட்ட கத்தோலிக்கத் தமிழ்ப் பதிப்பு இவற்றை எஸ்ரா, நெகமியா ஆகமங்கள்' என்று அழைக்கிறது.

போலி எஸ்ரா நூல், எஸ்ராவின் காட்சி போன்ற போலி நூல்கள் இப்பெயர் பற்றிய பிரச்சனையை மேலும் சிக்கலாக்க வல்லன. அதை நாம் கவனிக்க வேண்டியதில்லை.

3. ஆசிரியரும் காலமும்:-

பெரும்பாலான ஆய்வாளர்கள் நாளாகம ஆசிரியர்தான் இவ்விரு நூல்களையும் எழுதினார் என்று ஏற்றுக் கொள்வர். இவ்வாசிரியர் எஸ்ராதான் என்றும் சிலர் கூறுவர். ஒருவேளை எஸ்ராவின் சீடருள் ஒருவர் இந்நூல்களை நாம் கொண்டிருக்கும் வடிவில் தொகுத்திருக்கக்கூடும். எப்போது இந் நூல்கள் எழுதப்பட்டன என்பது பற்றி அவ்வளவு இலகுவாய் முடிவு செய்ய அறிஞரால் இயலவில்லை. ஒரு சிலர் 300-க்கு முந்தியது என்பர். வேறுசிலர் 400-300-க்கு இடைப் பட்ட காலத்தில் தோன்றியிருக்கும் என்பர்.

4. மூலங்கள்:-

ஆசிரியர் இந்நூலை எழுதியபோது பின் வரும் மூலங்கள் அவருக்குக் கிடைத்தன எனலாம்.

அ. எஸ்ராவின் வாழ்க்கைக் குறிப்பு (எஸ் 7:1-10:44; நெக7:73-9:37).

ஆ. நெகமியாவின் வாழ்க்கைக் குறிப்பு (நெக 1:1-7:72; 11:1-2; 12:27-43; 13:4-31).

இவை இரண்டும் இந்நூல்களின் முதன்மையான மூலங்களாகும்.

இ. அரமேயிக்கு ஏடுகள்:- 1) எருசலேமின் சுவர்கள் கட்டுவது பற்றி பாரசீக மன்னன் முதலாம் அர்த்தாசெருசுவிடம் இரகூம் செய்த முறையீடும் மன்னரது பதிலும் (எஸ் 4:7-23). 2) எருசலேமில் ஆலயம் கட்டுவது பற்றிப் பாரசீக மன்னன் முதலாம் தாரியுவுக்குத் தத்தனாய் எழுதிய மடலும் (5:7-17) மன்னன் பதிலும் (6:3-12). ஆலயம் அர்ப்பணிக்கப்படுதல் (6:13-18). 3) எருசலேமில் ஆலய வழிபாட்டைத் திருத்தியமைக்க எஸ்ராவுக்கு அர்ததாசெருசு விடுத்த ஆணை (7:12-26).

ஈ. எபிரேய மொழியிலுள்ள அதிகாரபூர்வமான ஏடுகள்:-

1) கி.மு. 538-இல் யூதர்களுக்கு விடுதலை அளித்துச் சைரஸ் அளித்த ஆணை (1:2-4). இது அர்த்தாசெருசு தத்தனாயிக்கு எழுதிய மடலில் காணப்படும் அரமேயிக்கு வடிவத்திலிருந்து வேறுபடுகிறது (6:3-5). 2) பாபிலோனியாவிலிருந்து திரும்பிய முதல் குழுவின் பட்டியல் (எஸ் 2:1-70; நெக 7:6-72). 3) எஸ்ராவோடு திரும்பியவர்களின் பட்டியல் (எஸ் 8:1-14). 4) புற இன மனைவியரை நீக்கிவிட வாக்குறுதி அளித்தவர்களின் பட்டியல் (10:18-44). 5)எருசலேமின் சுவர்களைப் பழுது பார்க்க உதவி செய்தவர் பட்டியல் (நெக 3:1-32). 6) உடன்படிக்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களின் பட்டியல் (10:1-28). உடன்படிக்கையின் விவரங்கள் (10:29-40). 7) நெகமியா காலத்தில் எருசலேமிலும் அதைச் சுற்றிலும் வாழ்ந்தவர்களின் பட்டியல் (11:3-36). 8. குருக்கள் லேவியர் பட்டியல் (12:1-26)

அரமேயிக்கு மூலங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இவை ஆலயமும் சுவர்களும் கட்டப்பட்டபோது எழுந்த சமாரியர்களின் எதிர்ப்பை விவரிக்கின்றன. இவற்றோடு பாரசீக அதிகார பூர்வமான ஏடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன (எஸ் 4:9-22; 5:7-17; 6:2-12). சில பகுதிகளுக்கு எபிரேய மூலமும் இருந்திருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது.

இம்மூலங்களை இந்நூலின் ஆசிரியர் பயன்படுத்தும் விதம் கவனிக்கத் தக்கதாகும். எஸ் 8:36,-க்குப்பின் வரவேண்டிய பகுதியை (சட்டத்தை வாசித்தல், கூடார விழா, பாவ அறிக்கையிடுதல்) நெகமியா நூலின் திட்டத்திற்குள் புகுத்துகிறார் (நெக 7:73-9:37). விவரிப்பு படர்க்கையாக இருக்கும்போதும், வாசகத்தைத் திருத்தியமைக்கும் போதும் தவிர, இவர் சாதாரணமாக வலுவந்தமாக நுழையமாட்டார். ஒரு வேளை இவர் முன்னுரையை அமைத்திருக்கலாம் (எஸ் 7:1-11). விவிலிய ஓசையுடைய அர்த்தாசெருசுவின் கட்டளையை இவர் எழுதினரா என்பது பற்றி உறுதியாகக் கூற முடியாது.

பலவாறு நாட்குறிப்பிட்ட ஏடுகளை இந்நூல் கொண்டிருப்பதை மனதில் கொண்டால், நெகமியாவின் வாழ்க்கைக் குறிப்பு அதிகமாகப் பதிப்பு மாற்றம் செய்யப்படவில்லை எனலாம். இதைச் சிறப்பிக்கும் ஆழ்ந்த உணர்ச்சி அழுத்தம் இது பொய்யுடையது என்ற ஐயத்தை எதிர்க்கிறது. இந்நூலாசியரின் கைவண்ணம் 12:33-36.41-42-இல் தெரிகின்றதென்றால், அது இவ்வாசகம் பிற பகுதியோடு மாறி நிற்பதால்தான்.

கவர் கட்டுவதற்கு எதிர்ப்பு (எஸ் 4:6-23) தெளிவாக ஆலயம் கட்டியபின் வந்ததாகும். குறிக்கப்படும் அரசர்களின் பெயர்கள் இதைப் போதியமட்டும் தெளிவாக்குகின்றன. எஸ் 4:23க்கும் 5:1க்கும் இடையே உள்ள இணைப்பு அமைப்பில் குறைபாடு இருக்கிறதாகத் தோன்றுகிறது. 4:22 என்ற வரி பதிப்பாசிரியருடையதாகும்.

எபிரேய மூலம் இருந்ததென்றால் அதை இந்நூலாசிரியர் தனது விவரிப்பில் சேர்த்துக் கொண்டார் என்று கூறுவது மேல். எஸ் 3:2-8; 4:1-3க்குச் சரியான விதம் விளக்கம் கூறுவதற்கு எப்போதும் சிறிது கடினமாகவே இருக்கும். செசிபசாருக்குப் பதிலாகச் செருபாபேல் குறிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சமாரியர்களின் எரிச்சலும் தொந்தரவும் காலத்திற்கு முந்தியே கூறப்படுகிறது. சான்று:- 3:8-ஐ 4:2 ஒடும்; 4:1-3-ஐ, 5:3 ஒடும் ஒப்பிடுக. ஆகவே கடினமாகக்

கண்டிக்கப்பட்ட (ஆகா 1:14-15) திரும்பி வந்தோரின் இயங்காத் தன்மையை மன்னிப்பது ஆசிரியரது எண்ணமாய் இருக்கக் கூடுமா?

5. காலவரைப் பிரச்சனை:-

அ. எஸ்ராவின் செயல்கள் நெகமியாவின் செயல்களுக்கு முந்தியவையா, பிந்தியவையா, ஒத்த காலத்தவையா என்பதுதான் பிரச்சனை. அர்த்தாசெருகவின் ஆட்சிக் காலத்தின் அடிப்படையில் காலம் கணிக்கப் படுகிறது. ஆகவே இப்பாரசீக மன்னனைக் கொண்டு இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இப்பெயர் கொண்ட மூன்று அரசர்கள் உள்ளனர். முதலாம் அர்த்தாசெருசு (கி.மு. 465-424), இரண்டாம் அர்த்தாசெருசு (404-358) மூன்றாம் அர்த்தாசெருசு (359-338). மூன்றாம் அர்த்தாசெருசு முப்பத்திரண்டு ஆண்டுகள் ஆளவில்லை (நெக 5:140); ஆகவே இவரை நமது ஆய்விலிருந்து விட்டு விடலாம்.

இந்நூல் ஆசிரியர், வெறுமனே, அர்த்தா செருசு என்று குறிப்பிடுகிறார். முதலாம் மன்னனையா, அல்லது இரண்டாம் மன்னனையா, என்று சொல்ல முடியாது. நெகமியாவின் செயல்கள் அர்த்தாசெருசுவின் ஆட்சியின் 20-32-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்தவை என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இக்கருத்து எலஃபென்டைன் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட புல்தாள் ஏட்டை அடிப்படையாகக் கொண்டது. அதே ஏட்டின்படி கி.மு. 408-இல் எருசலேமில் யோகனான் தலைமைக் குருவாக இருக்கிறார். எலியாசீபு பெரிய குருவாக இருந்த காலத்தில் நெகமியா எருசலேமுக்கு வருகிறார் (நெக 3:1). நெகமியா 12-இன் படி யோகனான் எலியாசீபுக்குப்பின் வந்தவராவார். இதன்படி முதலாம் அர்த்தாசெருசுவின் ஆட்சிக் காலத்தில் அதாவது 445 ஆம் ஆண்டில் நெகமியா முதல் தடவை யூதாவுக்கு வந்திருக்க வேண்டும். அதே ஏடு 408-ஆம் ஆண்டின் சினுபல்லித்து மக்களின் ஆதிக்கச் செயல்களுக்குச் சான்று கூறுகிறது. இந்தச் சினுபல்லித்து நெகமியாவில் (2:10-13:28) குறிக்கப்படும் சம்பல்லாத்தாயிருக்கக் கூடும். சினுபல்லித்து 108-ஆம் ஆண்டில் ஏற்கனவே முதியவராகி அவரது மக்கள் ஆட்சி செய்துகொண்டிருந்ததால், நெகமியா தனது செயல்களை முதலாம் அர்த்த[illegible]செருசின் ஆட்சியில் தொடங்கியிருக்க வேண்டு[illegible]. நூலில் குறிக்கப்படும் அரசன் இரண்டாம் அர்த்தாசெருசு என்பவர்தாம் என்று கூறும் வாதம், இரண்டாம் எலியாசீபுவையும் இரண்டாம் சம்பல்லாத்தையும் கருது கோளாகக் கொள்கிறது. ஆனால் இதற்கு ஓர் அடிப்படையுமில்லை. நெகமியா 445-ஆம் ஆண்டில் தனது செயல்களைத் தொடங்கினார் என்று உறுதியாகக் கொள்ளலாம். ஆனால் எஸ்ராவின் காலத்தை இவ்வாறு உறுதியாகக் கூறமுடியாது. இதற்கு மூன்று கருது கோள்கள் உண்டு.

ஆ. எஸ்ரா நெகமியாவுக்கு முந்தியவர்:-

எஸ்ரா 458-இல் செயல்படத் தொடங்கினார். எஸ் 7:7-இன் படி அர்த்தாசெருசின் ஆட்சியில் 7-ஆவது ஆண்டில் எஸ்ரா எருசலேமுக்கு வந்தார். சரியான காலவரை என்று பொதுவாகக் கருதப்படும் மறையில் நிகழ்ச்சியுரைகளை ஏற்றுக் கொண்டால், நெகமியாவின் செயல்களைக் கணிக்க அடிப்படையாகவுள்ள அர்த்தாசெருசின் ஆட்சியில்தான் எஸ்ராவும் செயல்பட்டார். இதன்படி 458/57-இல் அவர் செயல்பட்டார். இதன்படி எஸ்ரா நெகமியாவுக்கு முந்தியவராவார். இந்நிலைக்குச் சார்பாகப் பல காரணங்களைக் காட்டுவார். முதலாம் அர்த்தாசெருசின் முதல் வருடங்களில் எஸ்ரா தனது குழுவோடு எருசலேமுக்கு வந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது (எஸ் 4:12). கி.மு. 519-இல் தாரியு எகிப்தியச் சட்டத்தைத் தொகுக்கக் கட்டளையிட்டதுபோல் முதலாம் அர்த்தா செருசு மோசேயின் சட்டத்தைத் தொகுக்கும் பொறுப்பை எஸ்ராவிடம் ஒப்படைத்திருக்கலாம். அதிகார பூர்வமாகச் சட்டம் வாசிக்கப்படுவது ஏழாவது ஆண்டில் நடைபெற்றிருக்கலாம், அவ்வருடம் ஓய்வு ஆண்டாகவும் இருந்திருப்பதாகத் தெரிகிறது. செயல் அனுபவம் அதிகமில்லாத இறையியல் வல்லுந

ரான எஸ்ராவின் செயல்கள் அவ்வளவு வெற்றி பெறவில்லை. ஆகையால் செயல் அனுபவம் மிக்க ஆளுநன் நெகமியா, எஸ்ரா வுக்குப்பின் செயல்படுகிறார். இந்நிலைக்கு மாறாக முக்கியமான வாதம் ஒன்று உள்ளது. கி.மு. 458-ஐ ஒட்டிப் பாரசீகப் பேரரசு முழுவதும் குழுப்பத்தில் ஆழ்ந்து இருந்தது. எஸ்ராவின் தூதைப் போன்று அமைதியான தூதுக்கு இடமுமில்லை; வாய்ப்புமில்லை.

இ. நெகேமியாவுக்குப்பின் 398-ஐ ஒட்டி எஸ்ரா செயல்படுகிறார்:-

இந்நிலைக்கு இலக்கிய வரலாற்று ஆய்வு கள் ஆதரவளிப்பதாகத் தெரிகிறது. இதன் படி இந்நூலாசிரியர் காலவரையறைப்படி, தனது விவரிப்பைக் கொடுக்கவில்லை. இதற்கு மாறாக, ஆலயம் கட்டப்படுதல் போன்ற காலத்தால் முந்தைய தாரியு கால நிகழ்ச்சிகளை (515) எஸ்ரா தோன்றுதற்கு முன்னும் (எஸ் 6:1-3) பின் சைரஸ், செருசு, அர்த்தாசெருசு ஆகியோரின் காலத்தில் பிந் தைய நிகழ்ச்சியை, முன்னதாகவேயும் கொடுக்கிறார். இப்படிக் கால இடமாற்றம் எஸ்ராவின் வாழ்வு பற்றிய பகுதியிலும் நிகழ்ந்திருக்கலாம். இந்நிலைப்படி எஸ்ரா வும் நெகமியாவும் செயல்களை 398/97-ஐ ஒட்டிச் செய்து முடித்தார் எனலாம். எஸ்ரா செய்ததும் நெகமியா செய்ததும் மிகத் தொடர்புடையன. ஆகவே அவற்றை வேறு பட்டவைகளாகக் கருதுவது அவ்வளவு நன் றன்று.

இவ்விரண்டு நிலைகளுக்கும் அறிஞருள் ஆதரவாளர் உண்டு. ஏதாவது ஒரு நிலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், எஸ்ரா நெகமியா வரிசையை எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் இரண்டாவது நிலைக்கு இரண்டு அர்த்தாசெருசுகள் வேண் டியிருந்தது. இவற்றைத் தவிர்த்து, இடை யிட்ட கருதுகோளை விரும்புகிறோம்.

ஈ. எஸ்ரா, நெகமியா ஓரளவு ஒத்த காலத்த வர்கள்:-

நெகமியாவின் இரு தூதுக்கிடையில் எஸ் ராவின் தூது அமைகிறது. தனது தூதின் முதற் பகுதியின் முடிவில் சமய வழிபாட் டுக் காரியங்களில் நிலவிய அமைதியற்ற நிலையைக் குருவல்லாத ஒருவரால் சமா ளிக்க முடியாது என்பதை நெகமியா ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இது சட்ட வல் லுநரான எஸ்ராவின் தூதைத் தூண்டுகிறது. இதன்படி எஸ்ரா 'விண்ணக இறைவனின் திருச்சட்ட நூலில் வல்லுநர்' (எஸ் 7:12) என்ற பட்டத்தோடு எருசலேமுக்கு அனுப் பப்படுகிறார். அறிஞர் சிலரது கருத்துப்படி நெகமியாவோடு எஸ்ராவும் உண்மையான நிலையை அறிய எருசலேமுக்குப் பயணமா னார். அங்குநிலவிய அவல நிலையை அறிந்த பின் அவர் பாபிலோனுக்குத் திரும்பி வந்து வேண்டிய அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு, புதியதோர் நாடு திரும்பும் குழு வினரோடு எருசலேமுக்கு வந்தார். இக்கருது கோளுக்கு ஏற்றபடி எஸ் 7:7-இல் இரு திருத்தம் அவசியமாகிறது. ஏழாம் ஆண்டு என்பதற்குப் பதிலாக இருபத்தேழாம் ஆண்டு என்று வாசிக்க வேண்டும். 27-ஆம் ஆண்டைத் தேர்ந்து கொண்டால் சட்டம் பகிரங்கமாக வாசிக்கப்படும்போது நெகமி யாவோடு எஸ்ரா இருப்பதையும், சட்டநூல் வல்லுநரின் செயல் ஆளுநரின் செயலோடு இணைக்கப்பட்டால் எளிதில் அறிக்கை ஏன் இடம் பெயர்ந்தது என்பதையும் எளிதாக விவரிக்க முடியும் (நெக 7:37-8:9). இதன்படி எஸ்ராவும் நெகமியாவும் ஒருவரை ஒருவர் சார்ந்து செயல்பட்டனர்.

எஸ்ரா, நெகமியா ஆகியோருடைய சீர் திருத்தங்களைப் பற்றிய காலவரையறை பற் றிய பிரச்சனைக்குக் கருத்தொருமித்த விடை காண்பது எளிதன்று. ஆயினும் இருவரும் ஒரே காலத்தில் உழைத்தனர் என்ற மூன்றா வது நிலை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு மிக நெருங்கியிருப்பதாகத் தெரிகிறது.

இதன்படி நிகழ்ச்சிகளின் வரிசை பின்வரு மாறு நிகழ்ந்திருக்கலாம்.

உ. நிகழ்ச்சிகளின் வரிசை:-

கி.மு. 538-520 இடையில் நாடு திரும்பு வோரின் பல குழுக்கள் எருசலேமை

அடைந்தன. முதற் குழுவிற்குச் செசிபசார் தலைமை தாங்கினார். இவர் தகனப் பலி பீடத்தை அமைத்தார். ஆலயத்திற்கு அடித் தளம் அமைத்தார் (எஸ் 1:1;3:13).

520-515 இடையில் ஆகாய், செக்கரியா ஆகிய இறைவாக்கினரால் உற்சாகப்படுத்தப் பட்டு (எஸ் 5:1; ஆகா 1:2; செக் 2:5-17) ஆலயத்தைத் திரும்பக் கட்டுதல் செருபாபே லால் முடிக்கப்படுகிறது. ஆலயம் திரு நிலைப்படுத்தப்படுகிறது. பாஸ்கு விழா என்ற விடுதலை விழாக் கொண்டாடப்படுகி றது (எஸ் 5:1-6:22).

515-445 இடையில் செருசு(486-465), அர்த் தாசெருசு (464-424) ஆகியோரின் ஆட்சியில் சமாரியர்கள் சுவர் எழுப்பப்படுவதை எதிர்த்து, நிறுத்தி வைக்கின்றனர் (எஸ் 4:6-23).

அர்த்தாசெருசின் 20-ஆம் ஆண்டில் (445) நெகமியா தனது முதல் தூதைத் தொடங்குகி றார். சுவர்கள் மீண்டும் கட்டப்படுகின்றன. அமைதியாக ஒன்றித்து வாழ ஒழுங்கு செய் யப்படுகிறது. கட்டட வேலை முடிகிறது; சுவர்கள் அர்ப்பணிக்கப்படுகின்றன (நெக 1:1-4:17; 6:1-7:73; 11:1-20.25; 12:27-32.37-43).

அர்த்தாசெருசின் 27-ஆம் ஆண்டில் (438) எஸ்ரா யூத சமூகத்தின் ஆன்மீகத் தலைமை யைத் திருத்தியமைக்கிறார் (எஸ் 7:1-8:36). சட்டத்தை விளக்குகிறார் (நெக 7:73-8:12). கூடார விழாவிற்குத் தலைமை தாங்குகிறார் (எஸ் 8:13-18). கலப்பு மணத்தை ஒழித்துக் கட்டத் தீர்மானிக்கிறார் (நெக 9:1-2).

அர்த்தாசெருசின் 32-ஆம் ஆண்டில் (438) 12 ஆண்டுகள் ஆண்டபின் நெகமியா சூசா வுக்குத் திரும்பினார் (நெக 5:14). அர்த்தா செருசின் மரணத்துக்கு முன் (424) நெகமியா யூதாவுக்கு இரண்டாம் முறையாகத் தூது வருகிறார். இக்காலத்தில் எஸ்ராவைப் பின் பற்றி, சமூகத்தின் சட்ட, வழிபாட்டுப் பாரம் பரியங்களைக் காக்கும் பொருட்டு ஆளுந ரான நெகமியா, தவறுகளுக்கு எதிராகச் செயல்படுகிறார் (நெக 13:4-13). இந்நிலை யில்தான் தலைவர்களிடமும் லேவியர்களிட மும், குருக்களிடமும் அவர்களின் அங்கீகா ரத்தைப் பெறும்பொருட்டு உடன்படிக்கை யைப் புதுப்பிக்கும் ஏட்டைச் சமர்ப்பிக்கி றார் (நெக 10).

மேற்கூறப்பட்டவை ஒரு கருதுகோளே. இதைவிட மேலான கருதுகோள் கொடுக்கப் பட்டால் ஏற்றுக்கொள்ளத் தயங்கவேண்டிய தில்லை. நெகமியா-எஸ்ரா என்ற வரி சையை ஏற்றுக் கொண்டால், இரண்டாம் அர்த்தாசெருசின் 7-ஆம் ஆண்டில் (398) எஸ்ரா யூதாவுக்கு வந்தார் என்று ஏற்று அவரது பணிக்குச் சிறப்பளிக்கலாம்.

6. நூலின் திட்டம்:-

அ. எஸ்ரா ஆகமம்:-

நாளாகமங்கள் விட்ட இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றை இந்நூல் தொடர்கிறது.

I. இரண்டாம் ஆலயம் (எஸ் 1:1-6:22)

அ) சைரசும் நாடு திரும்புதலும் (1:1-11).

ஆ) செருபாபேலும் திரும்பியோரின் பட்டி யலும் (2:1-70).

இ) ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டுதல் (3:1-13).

ஈ) ஆலய வேலை தடைப்படுதல் - சமாரியர் கள் (4:1-24).

உ) ஆலய வேலை தொடர்கிறது; ஆலயம் திருநிலைப்படுத்தப்படுதலும், பாஸ்கு விழாவும் (5:1-6:22).

II. எஸ்ராவின் வருகையும் சட்டமும் (எஸ் 7:1-10:44; நெக 8-9)

அ) எஸ்ரா எருசலேமுக்கு வருதலும் அவ ரது குருகுல சட்டச் செயல்களும் (7:1-8:31).

ஆ) எஸ்ராவின் மன்றாட்டும், எருசலேமின் நிலையும் (8:32-10:44).

ஆ. நெகமியா ஆகமம்:-

III. எருசலேம் நகர் மீண்டும் கட்டப்படுதல் (நெக 1:1-7:72)

அ) சூசாவில் நெகமியா (1:1-2:11).

1) எருசலேமின் இழி நிலையும், நெகமி

யாவின் மன்றாட்டும் (1:1-10).

2) நெகமியாவும் மன்னன் அர்த்தாசெருசும் (2:1-8).

3) யூதாவில் நெகமியா (2:9-11).

ஆ) எருசலேம் நகர் கட்டப்படுதல் (2:12-3:32).

1) இரவில் சுவரைச் சுற்றிப் பார்த்தல் (2:12-15).

2) பொது மக்கள் ஆதரவு (2:16-20).

3) நகர் கட்டப்படுதல் (3:1-32).

இ) வெற்றிகள் (4:1-7:5).

1) போரோடு கூடிய விடா முயற்சி (4:1-23).

2) சமூக நிதிச் சீர்திருத்தம்(5:1-19).

3) முதல் தூது முடிவடைதல் (6:1-7:72.)

IV எஸ்ராவின் சட்ட அறிக்கை (8:1; 9:38)

V நெகமியாவின் இறுதிப்பணி (10:1-13:30)

அ) இஸ்ராயேலின் உடன்படிக்கை (10:1-39).

ஆ) மக்களின் கணக்கு (11:1-12:26).

இ) சுவரைப் பகிரங்கமாக அர்ப்பணித்தல் (12:27-13:11).

ஈ. விசுவாசத்தின் பாதுகாவலான நெகமியா (13:15-30).

8. வரலாற்று மதிப்பீடு:-

நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூதர்கள் வரலாற்றுக்கு இவ்விரு நூல்கள்தான் சாட்சியாக அமைந்துள்ளன. இது ஒன்றே இந்நூல்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும். ஆனால் இவை நம்பத்தக்கவைதாமா, எந்த அளவுக்கு நம்பத்தகுந்தவை என்ற கேள்விகள் எழும்.

ஒரு சிலர் இந்நூல்கள் வரலாற்று உண்மைத் தன்மையுடையன என்று ஏற்றுக் கொள்ள மறுப்பர். மற்றவர்கள் இந்நூல்கள் நம்பத்தகுந்தவை என்று ஏற்றுக் கொள்வர். நாளாகமங்களில் காணப்படுவதுபோல் இந்நூல்களின் ஆசிரியரும் இறையியல் நோக்கோடு வரலாற்றைப் பார்க்கிறார். இதன் விளைவாக அர்த்தாசெருசு எஸ்ராவுக்கு அளித்த ஆணைக்கு ஆசிரியர் யூதத் தொனியை அளிக்கிறார். அதில் மோசேயின் சட்டம் இறைவனது ''ஞானம்'' என்று குறிப்பிடப்படுகிறது (எஸ் 8:25). சைரஸ் 538-இல் அளித்த கட்டளை பற்றி இருவாசகங்கள் உள்ளன (எஸ் 1:2-4; 6:3-5). இது ஆசிரியர் தனது மூலங்களைத் திருத்தி எழுதினார் என்பதற்குச் சான்றாகும்.

இந்நூல்களில் வருபவை கால வரையறையைக் கொண்டிருக்கவில்லை. சான்றாக:- எஸ் 4:7-23-இல் வரும் பிற்கால நிகழ்ச்சியை எஸ் 5:1-6:22-இல் வரும்முன் நிகழ்ச்சியோடு ஒட்டுப் போடுகிறார். எஸ்ரா, நெகமியா ஆகியோரின் பணிகளின் வரிசையும் மற்றொரு சான்றாகும். இது பற்றி முன்பே கூறியுள்ளோம். இன்னும் பல பிரச்சனைகள் உண்டு. இவை விளக்கவுரையாளர்களுக்கு ஒரு பெரும் தொந்தரவாக இருந்து கொண்டேயிருக்கும். இருப்பினும் இந்நூல்களின் அடிப்படையை நம்பத் தகுதி இருக்கிறது என்று ஏற்றுக் கொள்வர் இக்கால அறிஞர்கள்.

இந்நூல்களின் மூலங்கள் உறுதியாக நம்பத்தகுந்தவை; அவற்றை அவர் பயன்படுத்தும் விதம் அவற்றின் தன்மையைப் பாதிக்கவில்லை. மேலும் மேற்காசியா வரலாறு பற்றிய அவரது வெளிப்படையான அல்லது மறைமுகமான குறிப்புகள் மேலான எண்ணத்தை உண்டாக்குகின்றன. எருசலேம் சமூகத்திற்குச் சார்பாகப் பாரசீக அரசவை காட்டிய நட்புச் செயல்கள் தங்களுக்குக்கீழ் உள்ள மாநிலங்களிடம் அவர்கள் வழக்கமாகக் காட்டிய போக்கோடு ஒத்துப் போகிறது. இந்நூலில் காணப்படும் விவரங்கள் சரியாக உள்ளன. பாரசீக நாட்டின் ஆட்சித்துறை அமைப்பு சரியாகக் கொடுக்கப்படுகிறது. ஆளுநர்களுக்குள்ளே உறவும், ஆளுநர்களுக்கும் பேரரசனாருக்கும் இடையேயுள்ள உறவும் சரியான குறிப்புகளுடன் கொடுக்கப்படுகிறது (எஸ் 4:7-23; 5:3-17; 6:1-13). சமாரியர்களது எதிர்ப்பு, யூதேயாவுக்கு எதிராக வட அரசினர் கொண்டிருந்த ஆழ்ந்து பதிந்து போன வெறுப்போடு ஒத்துப்போகிறது. நக

ரையும் ஆலயத்தையும் திரும்ப அமைத்தல், கடந்தகால இறைவாக்குகளோடும் நிகழ் கால இறைவாக்குகளோடும் ஒத்துப் போகிறது (ஆகா 1-2; செக் 1-8; மலா 1:6-10; 2:1-24). இவையாவும் இந்நூல்கள் வரலாற்று அடிப்படையைக் கொண்டவை, நம்பத்தகுந்தவை என்று காட்டவல்லன. மேலும் பகுப்பாராய்ச்சி இந்நூலின் பெரும் பகுதி ஒத்த கால ஏடுகளைக் கொண்டிருப்பதாகக் காட்டுகிறது. இதனால் முன் ஏற்றுக்கொள்ளப்பட்டதை விட இப்போது இந்நூல்களின் வரலாற்று மதிப்பீடு உயர்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூதர்கள் எருசலேமில் குடியேறிய வரலாறு பற்றி எஸ்ரா 1-6 என்ற ஒரே மூலம்தான் வரலாற்றுக்குக் கிடைத்துள்ளது.

நெகமியா ஆகமம் திடீரென்று முடிகிறது. ஒருவேளை இதை அடுத்த வேறு ஒரு நூல் இருந்திருக்கலாம். அது நமக்குக் கிடைத்திலது.

9. இறையியல் போதகம்:-

ஆலயமும் நகரும் யூத சமூகமும் திரும்ப அமைக்கப்படுதலில் இறைவனின் மீட்கும் சித்தம் மீண்டும் செயல்படுவதாகத் தோன்றுகிறது. வாக்குறுதி, உடன்படிக்கை, பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்குப்பின் கிறிஸ்துவை நோக்கிச்செல்லும் மீட்புத் திட்டத்தில் இது புதியதொரு படியாகும்; இப்படி இந்நூல் சில சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.

யூத சமூகத்தின் சமயக் கூறு தெளிவாகத் தனித்து நிற்கிறது. தாவீதின் இவ்வுலக அரசை மீண்டும் நிறுவுவதில் மெசியாவாகிய அரசனின் வருகை, யாவே எல்லோர் மேலும் கொள்ளும் ஆட்சியை நிறுவுதல் போன்றவற்றை நாம் எதிர்பார்த்திருக்கலாம் (ஆகா 2:4-9; செக் 6:10-17; ஏச 60:62). இந்த மாயை நிலை அகற்றப்பட வேண்டியகாலம் வந்துவிட்டது. தாவீது குலத்தவரான செருபாபேலோ (எஸ் 3:21), தாவீது குலத்தைச் சேராதவரான நெகமியாவோ, அரசமரபை மீண்டும் நிறுவமாட்டார்கள். நகரையும், மக்களையும் திரும்ப அமைத்தலுக்குத் தங்களையே அர்ப்பணித்த இவ்விரு யாவேயின் பக்தர்களும் பாரசீக அதிகாரத்திற்கும் முழுமையான பற்றுறுதி காட்டினர். பாரசீகர்கள் சிலவற்றில் தாராளத்தன்மையைக் காட்டினாலும் (எஸ்1:7-10; 6:4-5:8; 7:13-26; நெக 2:49) தங்கள் ஆட்சி முறையில் (எஸ் 4:6-23; 5:3.5), சிறப்பாக வரிகளைப் பொருத்தமட்டில் (நெக 5:4-15) சிறிது கடினமாகவே இருந்தனர். அரசியல் சுயாட்சி எதிர்பார்க்கக் கூடியதன்று. ஆகவே நாடு திரும்பியவர்கள் ஆலயத்தை மையமாகக் கொண்டு வாழத் தொடங்குகின்றனர். மோசேயின் சட்டத்தை யூதா நாட்டின் சட்டமாகப் பாபிலோன் அரசு ஏற்றுக் கொண்டது. யூதர்கள் சட்டத்தைத் தியானித்தனர். அதைக் கடைப்பிடிப்பதைப் பேறாகக் கருதினர். அரசியல் சுதந்தரத்தைத் திரும்பப் பெறுவதைவிட யாவே வழிபாட்டில் சிறந்து விளங்குவதில் யூத சமூகம் கவனம் செலுத்தியது.

இது பிறர் தொடர்பற்று தனித்து நிற்கும் போக்கை ஏற்படுத்தியது. திரும்ப அமைத்தலின் விளைவான யூதத்துவம் சட்ட மனப்பான்மை கொண்டு விளங்கியது. இது பாதுகாக்கும் எல்லைக் கோடாகவும் அதே சமயம் பிற இனத்தவரிடமிருந்து பிரித்து வைக்கும் சுவராகவும் அமைந்தது. யாவருக்கும் இறையரசுக்கு இட்டுச் செல்லும் கதவைத் திறந்து விடுவதற்குப்பதிலாகச் சிலருக்கு மட்டுமே அப்படிச் செய்வதாகத் தோன்றலாம். ஆயினும் இந்நிலை பிற்காலத்தில் வந்த கசிதீமியர்களின் எதிர்ப்புகளையும் மக்கபேயர்களின் கிளர்ச்சிகளையும் விளக்க ஏதுவாகுகிறது.

நாளாகம ஆசிரியருக்குப் பிரியமான கருத்துக்கள் இங்கே காணப்படுகின்றன. அவை தாவீது அரசமரபுக்குக் காட்டும் ஆதரவு. இது யூதா, பென்யாமின் இனத்தவர்களைச் சார்ந்தவர்களைக் குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது (எஸ் 1:5; 4:1; நெக 11:4). வழிபாட்டுச் சடங்குகள் குருக்களின் பாகம், லேவியர்களின் அலுவல் போன்ற தாவீதின் நிறுவனங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் (நெக 12:44-47) ஆகியவைகளும் இதைக் காட்டுகின்றன.

இந்நூல்களின் சமயப் பொருள், அவை அளிக்கும் செய்தியைவிட, அவை அளிக்கும் வரலாற்றில் அடங்கியுள்ளது.- இவ்விரு நூல்களும் எருசலேமிலும், பாலஸ்தீனத்திலும் யூத சமூகத்தைத் திரும்ப அமைப்பதில் எடுக்கப்பட்ட செயல் முறைப்படிகளை எடுத்துக் கூறுகின்றன. இஸ்ராயேல் யாவேயின் மக்களாவர் என்ற உறுதியையும் அவர் எல்லா இனத்தவராலும் அறியப்படுவதற்காக இஸ்ராயேல் மக்கள் பிழைத்துத் தொடர்ந்து வாழ்வர் என்ற வாக்குறுதிகளையும் அடிப்படையாகக் கொண்ட விசுவாசத்தில் இச்செயல்கள் நடைபெறுகின்றன. இந்தச் சமூகந்தான் யூதத்துவத்தின் தொடக்கமாகும். இந்த யூதத்துவம் இஸ்ராயேலின் இலக்கியங்களைப் பாதுகாத்துத் தானும் இலக்கியங்களை உண்டாக்கியது. அமைதி நிறைந்த இக்காலம் பழைய ஏற்பாட்டு விவிலியத்தின் தொட்டில் என்பர். பெரும் வரலாற்றுக் கேடுகளுக்குப் பிறகு, இஸ்ராயேல் தனது பெரும் பொருட்குவியலும் சலுகையும் இறைவனது சட்டம்தான் என்பதை உணர்ந்தது. ஆனால் இக்காலத்தில் சட்டம், கட்டுப்படுத்தும், கொடுமைப்படுத்தும், தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இதிலே இன்னும் இறைவனின் அருள், இஸ்ராயேலின் தேர்வு ஆகியவற்றில் கொண்டிருந்த விசுவாசம் நிறைந்து இருந்தது. இச்சமூகம்தான் இஸ்ராயேலின் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட சமய அரசியல் சமூகத்தைப் படைத்தது. இச்சமூகத்திலிருந்துதான் புதிய ஏற்பாடும் கிறிஸ்துவமும் தோன்றின.

நாடு திரும்பி வந்த யூதர்களுக்கு ஒரு ஏமாற்றம் காத்திருந்தது. உப-ஏசயா அளித்திருந்த வாக்குறுதி, அதாவது மெசியா வருகை பற்றிய வாக்குறுதி, செயல்படுவதாகத் தெரியவில்லை. ஆகையால் அது தூர வருங் காலத்திற்குரியதொன்று என்று புதிய விளக்கம் கொடுக்க வேண்டியிருந்தது. நாடு திரும்பியவர்களுக்கு இதைப் புரிந்துகொள்வது கடினமாயிருந்தது. அறிய முடியாத இறைத் திட்டத்தில் மெசியா பற்றிய வாக்குறுதி செயல்பட இன்னும் காலம் நிறைவு பெறவில்லை. இன்னும் 500 ஆண்டுகள் செல்ல வேண்டியிருந்தது. அப்போது, எதிர்பார்த்த அரசர் வருவார். எல்லார் மேலும் அவர் செலுத்தும் அரசு வரும். ஆனால் அவ்வரசு மக்கள் எதிர்பார்த்த விதத்தில் வருமா?

10. முடிவுரை:-

இவ்விரு நூல்களோடு இஸ்ராயேல் வரலாற்றின் நாளாகம பாரம்பரியத்தின் திரை விழுகிறது. இதற்குப் பின் யூதர்களுக்கு என்ன நேர்ந்தது? தோபியா, எஸ்தர் போன்ற ஆகமங்களையும் தானியேலின் சில பகுதிகளையும் வாசித்தால் யூதர்களின் வரலாற்றைச் சிறிது யூகிக்கலாம். கி.மு. 175-ஐ ஒட்டிய வரலாற்றை மக்கபேயர் ஆகமங்கள் விவரிக்கின்றன.

இந்த 'இருட் காலத்தில்' ஒரு குறிப்பிடத் தக்க விளைவு ஏற்பட்டது. பாலஸ்தீனத்திற்கு வெளியே 'சிதறிக்கிடந்த' யூதர்கள் முக்கியத்துவம் பெற்றனர். எஸ்ரா, நெகமியா ஆகமங்களில் தெளிவாகத் தெரிவது போல், எல்லா யூதர்களும் பாபிலோனிலிருந்து திரும்பவில்லை. பலர் அங்கேயே தங்கிவிட்டனர். பிற நாடுகளில் சிதறிக் கிடந்த குழுக்கள் அலக்சாந்திரியா, அந்தியோக்கியா, உரோமை ஆகிய இடங்களில் சிறப்புப் பெற்று வாழ்ந்தனர். சமய காரியங்களில் இவர்கள் பிற மதத்தினரிடமிருந்து பிரிந்து வாழ்ந்தது இவர்களைக் குறியிட்டுக் காட்டியது. பிறரிடமிருந்து வேறுபடுத்தியது. இது பிறர் இவர்களைக் கொடுமைப் படுத்தக் காரணமும் ஆயிற்று. இதுவே இவர்கள் பலமும் பலவீனமும் ஆயிற்று. இதற்காகப் போற்றப்பட்டனர். அதே சமயம் பிற மக்கள் இவர்களை வெறுத்து ஒதுக்கினர்.

எஞ்சியோர் (REMNANT)

1. பழைய ஏற்பாடு:-

''வானத்திலுள்ள எண்ணற்ற விண்மீன்களைப்போன்ற'' ஒரு சந்ததியை இறைவன் ஆபிரகாமுக்கு வாக்களித்திருந்தாலும் (ஆதி. 15:5), ''சிங்கத்தின் வாயிலிருந்து இடையன் தன் ஆட்டின் இரண்டு கால்களையோ, காதின் ஒரு பகுதியையோ பிடுங்கி எடுப்பது போல் இஸ்ராயேல் மக்கள் விடுவிக்கப்படு

வார்கள்'' என்று ஆமோஸ் வழியாக அவர் இஸ்ராயேலை எச்சரிக்கிறார் (ஆமோ 3:12). ''எல்லா மனிதரும் மீட்புப் பெற வேண்டுமென'' இறைவன் விரும்புகிறார் (1 திமோ 2:4). பெரும் வேதனைக் காலத்தில் ''தேர்ந்து கொண்டவர்களின் பொருட்டு அந் நாட்கள் குறைக்கப்படாவிட்டால், எவ்வுயிரும் தப்பித்துக்கொள்ளாது'' என்று அவர் அறிவிக்கிறார் (மத் 24:22). தீர்ப்பின்போது காப்பாற்றப்படும் இந்த எஞ்சியோர் பற்றிய நம்பிக்கை விவிலியக் கருத்தில் முக்கிய கூறாகும். இந்தக் கருத்து, போர்கள் மற்றும் அவற்றின் விளைவாகிய படுகொலைகளுடன் தொடர்புடையதாக உள்ளன. அடிக்கடி செயற்படுத்தப்பட்ட, முறியடிக்கப்பட்டவர்களை முழுவதும் அழித்தல் (அசீரிய ஆவணங்கள், மேசாவின் கல்தூண்) இஸ்ராயேலுக்கு உயிர் பிழைத்தல் பிரச்சனையை உருவாக்கி, அதன் விளைவாக இறைவாக்குறுதிகளின் உறுதிப்பாடு பற்றிய பிரச்சனையையும் ஏற்படுத்தியது.

சூழ்நிலைக்கேற்ப, இச்சொல், பேரழிவால் முழுவதும் அழிக்கப்படுவதை விவரிக்க வல்லது (''எஞ்சினோர் சிலரே திரும்பி வருவர்'' ஏச 10:22; ''யாரும் மீதியாய் விடப்படமாட்டார்கள்'' எரே 11:23). அல்லது இது எஞ்சியோர் பிழைத்து வாழ்தலில் எழுகின்ற நம்பிக்கையை எழுப்ப முடியும் (எரே 40:11). இக்கருத்து ஒன்பதாம் நூற்றாண்டின் துன்பங்களுடன் தோன்றினாலும் (1 அர 19:15-18), இது சீரா 44:17-இல் எஞ்சிய உருவமாக விவரிக்கப்பட்ட நோவா (ஆதி 6:5 தொ. 17-18), மற்றும் மக்களின் பெரும் பகுதியை அழிக்கக் காரணமாக இருந்த இஸ்ராயேலின் பாலைவனத் தண்டனைகள் (யாத் 32:28; எண் 17:14; 21:6; 25:9) ஆகியவை அடங்கிய முன் வரலாற்றைக் கொண்டதாகும்.

1. நாடு கடத்தப்படுவதற்கு முன் :- ஆமோசின் கருத்துப்படி முந்தைய துன்பங்கள் நாட்டினை இக்காலத்தில் எஞ்சி வாழ்வோருக்குக் குறைத்ததுபோல (ஆமோ 5:15) இறுதிக்காலத் தீர்ப்பின் நோக்கில் காணப்படுகின்ற எதிர்காலத் தண்டனைகள் இஸ்ராயேலை வெறும் சிலராகக் குறைத்துவிடும் (3:12; 5:3). சல்லடையில் தானியத்தைச் சலிப்பது போன்று இறைவன் பாவிகளை அழிவிற்குள் விழச்செய்துவிட்டு நீதிமான்களைத் தக்க வைத்துக் கொள்வார் (9:8 தொ).

ஏசயாவின் கருத்துப்படி, எஞ்சியோர் யாவேயின் தூய்மையில் பங்கு பெறுவர் (ஏச 4:3; 6:3). இறைப்பற்றற்றவர்களுக்கு அவர் அழிக்கும் தீயாக உள்ளார். ஆனால் மற்றவர்களுக்கு ஒளிமிக்க (10:17), தூய்மைப்படுத்தும் (1:25-28) சுடராக உள்ளார். யாவேயின் கைவேலையாகிய (4:14) இந்த எஞ்சியோர், விசுவாசத்தின் மூலம், இறைவன்மீது மட்டுமே சார்ந்து நின்று (10:20) தண்டனையினின்று தப்பிப்பர் (7:9; 29:16). இறைவாக்கினரின் சீடர்களில் இது ஏற்கனவே கருவாக உள்ளது (8:16.18). ஏழைகளால் அது அமைக்கப்பட்டிருப்பதுபோலத் தோன்றுகிறது (14:32). ஆனால் இது வேறொரு காலத்தில் மற்றொரு இறைவாக்கில் தெளிவாக உறுதிப்படுத்தப்படும் (செப் 3:12-13). எஞ்சியோர் அனைவரும் ஒன்று சேரக்கூடிய யாவேயின் துணையாளராகிய மெசியா (10:21 - எல்லாம் வல்ல இறைவன் - மெசியா 9:5) அவர்களுடைய தலைவராகவும் முதன்மையான மகிமையாகவும் இருப்பார் (4:2). மேலும் எஞ்சியோரும் மெசியாவும் ஒரே விதச் சொற்களால் விவரிக்கப்பட்டிருப்பதால், அவர் அவர்களின் அறிகுறியாக இருப்பர் (6:13 மற்றும் 11:1; 11:2 மற்றும் 28:5 தொ).

ஏசயாவின் காலத்தவராகிய மீக்காவுடன், எஞ்சியோர் என்பது வலிமையான இனமாக (மீக் 4:7) உருவாகியுள்ள, மெசியா காலத்தில் தூய்மைப்படுத்தப்பட்ட மக்களைக் குறிப்பிடுகின்ற கலைச்சொல்லாக ஏற்கனவே பயன்படுகிறது. பிற இனத்தாரைப் பொறுத்தவரை, அவர்கள் எஞ்சியோர்பால் காட்டும் போக்கிற்கேற்ப அவர்களுக்கு அழிவு அல்லது ஆசியின் ஊற்றாக இருப்பார்கள் (5:6 தொ). இவ்வாறு இது ஆபிரகாமுக்கும் அவரது சந்ததியினருக்கும் அளிக்கப்பட்ட பங்கின் வாரிசாக உருவாகிறது (ஆதி 12:3).

2. நாடு கடத்தலில் திருப்பு முனை:- எஞ்சியோரின் கோட்பாட்டிற்கு எரேமியா தீர்மானமான ஆழம் அளிக்கிறார். அவருடைய முன்னோர்களைப் போன்று அவரும், நாடு கடத்தப்படுதலினின்று தப்பி, புனித நாட்டிலேயே தங்கியுள்ள யூதரின் சிறு குழுவிற்கு இப்பெயரை அளிக்கின்றார் (எரே 4:11; 42:15; 44:12; ஆமோ 5:15; ஏச 37:4; செப் 2:7; எரே 6:9; 15:9). மெசியா நம்பிக்கையைத் தாங்கியுள்ள வாரிசுகள் நாடு கடத்தப்பட்டவர்களே (24:1-10). அவர்கள் எஞ்சியோர் என்று அழைக்கப்படுவதில்லை; அதோடு, ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகின்றனர். தனது உரையில் எரேமியா பழைய நடைமுறைகளுக்கு விசுவாசமுள்ளவராக இருக்கிறார். ஆனாலும் நாடு கடத்தப்பட்டவர்களுக்கென ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள மாட்சிமிக்க எதிர்காலம் பற்றிப் பேசும் போது இச்சொல்லானது இயல்பாகவே மீண்டும் தோன்றுகிறது (23:3; 31:7). எனவே எஞ்சியோரின் நிலையானது யூத இனமாகிய இக்காலச் சமுதாயத்தினின்று பிரிக்கப்படுகிறது.

எசக்கியேல் இக்கருத்தை மேலும் ஆழப்படுத்துகிறார். அவரது காலத்திற்கு முன்னர் இறைவாக்கினர்கள், நீதியுள்ள ஆன்மாக்களின் எஞ்சியோராக நாட்டைக் குறைக்கின்ற இறுதிக்காலத் தண்டனையினின்று, உடனடித் துன்பங்களை வேறுபடுத்தியதாகத் தெரியவில்லை. 587-இன் பேரழிவிற்குப் பின்னர் அதில் அழிந்தவரைவிட, தப்பித்தவர்கள் அதிக முன்னேற்றத்தை அடையவில்லை என்பதை எசக்கியேல் ஏற்க வேண்டியதாயிற்று (எச 6:8-9; 12:15-16; 14:21 தொ). எனவே நீதிமான்கள் மட்டுமே இத்தகைய துன்பங்களினின்று காப்பாற்றப்படுவர் என்று முன்கூட்டியே அவர் அறிவித்துவிட்டார் (9:4 தொ). அவர் எதிர்பார்த்த இறுதிக்காலத் தண்டனையானது இன்னமும் வர வேண்டியதாகும் (20:35-38; 34:17). அது மட்டுமே நம்பிக்கையற்றோரையும் புனித எஞ்சியோரையும் உறுதியாகப்பிரிக்கும் (28:38; 34:20).

3. எஞ்சியோரின் மூன்று பிரிவுகள் :- எஞ்சியோர் என்ற சொல்லின் இரு தெளிவான பொருளைப் பின்வருமாறு கூறலாம். ஒன்று எண்ணிக்கையில் குறைந்த எவ்வித அழிவிலும் நிலைத்திருக்கக்கூடிய குழு. இது வரலாறு பூர்வமாக எஞ்சியோர் குழு ஆகும் (ஆமோ 5:15; ஏச 37:4; எரே 6:9; எச 9:8). மற்றது இறுதி நாட்களில் மீட்பின் பலனை அடையக் கூடியவர்களின் சமுதாயம். இது இறுதிக்கால எஞ்சியோர் குழு ஆகும் (மீக் 5:6 தொ; செப் 3:12; ஏச 4:4; 10:22; 28:5; எரே 23:3; 31:7). பிந்தையது மட்டுமே புனிதமானது.. முதல் குழுவானது நிராகரிக்கப்படுவதற்கென்றே ஒதுக்கிவைக்கப்பட்டதாகும்.

நாடுகடத்தப்பட்ட காலம்முதல் மூன்றாவது கருத்துத் தோன்றியது. அது வாக்குறுதிகளின் உண்மையான வாரிசாகவும், காப்பாளராகவும் அவற்றைக் கொண்டிருப்பவர்களுமான மக்களிடையேயிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட சமயக் குழுவினரைக் குறிப்பதாகும். பழைய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் அவர்களுக்கு எஞ்சியோர் என்ற பெயர் அளிக்கப்படாவிட்டாலும் விசுவாசமுள்ள எஞ்சியோர் என்று அவர்கள் அழைக்கப்படலாம். இப்பெயரானது புதிய ஏற்பாட்டிலும் (உரோ 11:5), ஒரு சில விவிலியத்தைச் சேராத நூல்களிலும் (தமஸ்கு ஆவணம் 1:4; 2:11) அளிக்கப்படுகின்றது. அதே அடிப்படைக்கருத்து இங்கும் செயல்படுகிறது. ஆனால் பருப்பொருள் நிலையிலிருந்து அது ஆன்மீக நிலைக்கு உயர்த்தப்படுகின்றது. விசுவாசமுள்ள எஞ்சியோர் என்பவர் இறைவனின் முன் சமய வாழ்வை நடத்துகின்ற சிறு பான்மையினராவர்.

விசுவாசமுள்ள எஞ்சியோர் ''யாவேயின் ஊழியராகிய இஸ்ராயேல்'', ''இஸ்ராயேலின் வழியாய் நாம் மாட்சியுறுவோம்'' (ஏச 49:3) என்றழைக்கப்படுகின்றனர். இஸ்ராயேல் முழுவதையும் பாதிக்கக்கூடிய ஒரு பணியானது எஞ்சியோருக்கு அளிக்கப்பட்டுள்ளது (49:5). இச்சமய, பொறுக்கியெடுத்த குழுவிலிருந்து அதனுடைய ஊழை

ஆட்தன்மைக்கு, உடலெடுத்த ஒரு தனிப் பட்ட நபர் எழுகின்றார். அவரே ஊழியன். எஞ்சியோருக்கு அளிக்கப்பட்டுள்ள பணியை அவரே, அவர் மட்டுமே, தமது மீட்பளிக்கும் மரணத்தினால் நிறைவேற்று வார் (52:13-53:12). ஆனால் இத்தனிப்பட்ட நபரில் தொடங்கி, எதிர்மறையான இயக்கம் ஒன்றும் ஏற்படுகிறது. இதன் விளைவாக மெசியாவாக மட்டுமாகக் குறைக்கப்பட்ட எஞ்சியோருக்குள் இஸ்ராயேல் மட்டுமின்றி புறவினத்தார் அனைவரும் ஒன்று சேர்க்கப்ப டுவர் (49:6; 53:11).

4. நாடு கடத்தலுக்குப் பின்னர்:- சீயோ னுக்குத் திரும்பிய நாடு கடத்தப்பட்டோரின் சிறு சமுதாயத்தினர் எஞ்சியோர் என்று உரிமை கொண்டாடுகின்றனர் (ஆகா 1:12; 2:2; செப் 8:6). மேலும் தாங்களே புனித எஞ்சியோர், மற்றும் இறுதிக்கால வாக்குறு திகள் (ஓசே 2:23-24; எச 34:26-27) தங்களுக் குச் சாதகமாக நிறைவேறும் (செப் 8:11-12) என்று நம்புமாறு சில இறைவாக்குகள் அவர் களை அனுமதித்தன. ஆனால் மீண்டும் அமைத்தல், மீட்சியானது முற்றுப்பெறாத மற்றும் அடையாளப்பொருளில் மட்டுமே மெசியாத்தன்மையுடையது என்றும், நாடு கடத்தலுக்குப் பின்னர் வந்து வரலாற்றுப் பூர்வமான எஞ்சியோர் மேலும் தூய்மைப் படுத்தப்படவேண்டியுள்ளனர் (செப் 13:8-9; 14:2) என்றும் காட்டுகிறது. விசுவாச எஞ்சி யோர் பற்றிய கருத்தானது மேலும் மேலும் தெளிவாகிறது. இறைவனின் மக்கள் ''யாவேயின் எளியோராக்கப்படுகின்றனர்'' (எச 49:13; சங் 18:28; 149:4; 1 மக் 1:52-53). சங் 73:1 இஸ்ராயேலை இதயத்தில் தூய்மையா னவர்களாக்குகிறது. நாடு கடத்தலுக்குப் பிற் பட்ட இறைவாக்கு வாசகங்கள் இக்காலத்தி லும் இறுதிக்கால எஞ்சியோரைப்பற்றி அறி விக்கின்றன (எச 65:8-12; ஒப 17; யோவே 3:5). ஆனால் அவை புறவினத்தாரையும் இக்குழுவில் அறிமுகப்படுத்துகின்றன (எச 66:19; செப் 9:7).

II. புதிய ஏற்பாடு:-

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட இறைவனின் மக்கள் பகுதி ''விசுவாசமுள்ள எஞ்சியோர்'' என்ற பெய ரால் இன்னும் குறிப்பிடப்படுகின்றது (உரோ 11:5). விசுவாசமுள்ள எஞ்சியோர் மட்டுமே உண்மையான இஸ்ராயேல் என்ற மையக்கருத்தானது புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளுக்கு அடிப்படையாக உள்ளது (மத் 3:9.12; 22:14; லூக் 12:32; யோவா 1:11-12; 1:47; உரோ 2:28; 1 கொரி 10:18; கலா 6:16). ஒவ்வொரு பகுதியிலும் தன்னாட்சி உரிமை யுடைய வாழ்வை அது இனி கொண்டிருக்க வில்லை. இவற்றில் திருச்சபையே எஞ்சி யோராகும்.

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் இறை அருள்பாலிப்பின் இறையியலை விரி வாக்கும் பவுல் (உரோ 9:11) இறைவனின் திட்டத்தில் இம்மையக்கருத்திற்கு ஆழ்ந்த பொருளை அளிக்கிறார். கிறிஸ்துவில் விசு வாசம் கொண்ட எஞ்சியோரின் காரணமாக இஸ்ராயேலின் பிரமாணிக்கமின்மை இறை வாக்குறுதிகளை வெறுமையாக்கி விட வில்லை. மேலும் இறை உறுதியானது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது (உரோ 11:1-7). மற்றொரு புறம், வாக்குறுதிகளின் ஒரே வாரிசான எஞ்சியோரின் வாழ்வானது, மொத்த மக்களினத்தின் பெருமளவிலான தேர்விற்குள்ளும், தனிநபர்களுடைய தேர் வின் முழுமையான இலவசத்தன்மையை வெளிப்படுத்துகிறது (9:6-18; 25-29). மீண் டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குள் மெசியாவெனும் ஆளாகக் குறைக்கப்பட்ட சிறுபான்மையினரின் தேர்வானது எல்லா இஸ்ராயேலருக்கு மட்டுமின்றிப் (11:26) புற வினத்தாரின் (11:25) மீட்புக்காகவும் நிறுவப் பட்டுள்ளது. தோற்றத்திற்கு முரண்படுகின்ற இறைநீதியின் கோரிக்கைகள் இவ்வாறாகச் சமரசப்படுத்தப்படுகின்றன. ஒரு புறம் பாவத்திற்கான தண்டனையும், மறு புறம் மனிதருடைய பாவங்கள் சீரழிக்க முடியாத, ஆனால் எக்காலத்திலும் இலவசமான வெகு மதியாக உள்ள, வாக்குறுதிகள்பால் பிரமா ணிக்கம் உள்ளது.

எடுத்துக்காட்டு/முன் மாதிரிகை (EXA-MPLE)

வார்த்தை அறிவொளி அளித்தால் எடுத்துக்காட்டானது ஈர்க்கிறது. எனவே, நல்ல கல்வியாளர் என்ற நிலையில் இறைவன் எடுத்துக்காட்டுகளையும் பழகுவதற்கு மாதிரிகளையும் மனிதன் பின்பற்ற அளிக்கின்றார்.

I. பழைய ஏற்பாடு:-

1. இறைவனின் வழிகளும் மனித எடுத்துக்காட்டுகளும்:- மனிதருடைய வலிமையின்மைக்கு ஏற்ப இறைவன் தம்மை மாற்றியமைத்துக் கொள்கிறார். இம்மனிதர்கள் உருவாக்கப்பட வேண்டிய பிள்ளைகளாகவும் திருத்தியமைக்கப் பட வேண்டிய பாவிகளாகவும் உள்ளனர். தம்முடைய சாயலாக அவர்களைப் படைத்தவர், தம்மையே பின்பற்றவேண்டியவராக அவர்களுக்கு அளிப்பதென்பது இன்னும் இயலாததாகவே உள்ளது (ஆதி 1:26-27). ஏனெனில் மாதிரிகை யாவும் கடந்த தன்மையுடையதாதலால், அதை அவர்களால் அணுகமுடியாது. இறைவனைப் போன்று இருக்க விழைவது பாவியின் செயலாகும் (3:5). நீதிமானுடைய ஒரே கவனமானது படைத்தவருடன் இணைந்து நடப்பதன்மூலம் அவரது அழைப்பிற்குப் பதிலளிப்பதாகும்; அதாவது அவரது பிரசன்னத்தினால் கோரப்படுகின்ற நிறைவான, நேர்மையான வாழ்வு வாழ்வதாகும் (17:1; 5:22; 6:9). அதே போன்று ''நான் தூய்மையாய் இருப்பது போன்று நீங்களும் தூய்மையாய் இருங்கள்'' என்னும் இறைக்கட்டளையில் இருவித மாறுபட்ட புனிதத்துவத்தைக் கொண்டுள்ளோம். இறைவனுடைய மறைபொருளின் விஞ்சிய நிறையானது இறைவனுக்குரியது; மற்றும் வழிபாட்டினாலும், தம் மக்களிடையே மும்முறை தூயவராக உள்ளவரின் பிரசன்னத்திற்குரியது; கோரப்படுகின்ற தூய்மையானது மனிதனுக்குரியது (லேவி 19:2; யாத் 29:45). எனவே இது இறைவனைப் பின்பற்றுவதற்கான ஓர் அழைப்பல்ல. ஆயினும் தாமே நடக்க விழைகின்ற வழிகளில் மனிதனும் நடக்க வேண்டுமென இறைவன் விரும்புவதை இறைவாக்கினர்களின் போதகம் எடுத்துக் கூறுகிறது (எரே 9:23; மீக் 6:8).

தங்களுடைய தந்தையரை நோக்கித் தங்களுக்குத் தேவையான எடுத்துக்காட்டுகளை மக்கள் கண்டடைவர். கனிகளைக் கொண்டு மரத்தை அறிவது போன்று, தாங்கள் பின்பற்ற வேண்டியது என்ன, விலக்க வேண்டியது என்ன என்பதைத் தங்களுடைய நடத்தையிலேயே அவர்கள் காண்பர். ஒரு புறம் ஆபிரகாமின் நம்பிக்கையும் (ஆதி 15:6; 22:12-16), மற்றொரு புறம் ஆதாம் மற்றும் ஏவாளின் சந்தேகம் மற்றும் கீழ்ப்படியாமையும் உள்ளன (ஆதி 3:4-6). இதுபோன்ற பல பாத்திரங்கள் வரலாற்றில் உள்ளன. இவற்றில் முன்மாதிரிகை அறிவொளி நிறைந்ததாக உள்ளது. ஞானிகள் தங்களுடைய சீடர்களுக்கு இவற்றை மாதிரிகையாக எடுத்துக்காட்டுகின்றனர் (சீரா 44:16-49; 1 மக் 2:50-60). எலயசாரைப் போன்ற பெரியோர்கள், மக்கள்பால், சிறப்பாக இளைஞர்பால் தங்களுடைய பொறுப்பை உணர வேண்டும்; வேதசாட்சி மரணத்தை அடையவேண்டியிருந்தாலும் உயர்வான ஒரு முன்மாதிரிகையை அவர்கள் ஏற்படுத்த வேண்டும் (2 மக் 6:24-31).

2. இறைவனையும் அவரது புனிதத்தையும் பின்பற்றுதல்:- ''தேவர்களில் அவருக்கு ஒப்பானவர் எவருமில்லையென்றாலும் அவரது செயல்களுக்கு நிகரானவை எவையும் இல்லை என்றால்'' (சங் 86:8) நாம் கடவுளை எவ்வாறு பின்பற்ற முடியும்? இருப்பினும் மனிதன் சிறப்பாகக் கடவுளுடைய சாயலாகப் படைக்கப்பட்டதால் (ஆதி 1:27), உயிருள்ளவைகளில் அவரைப் போல் இருக்கிறான். ஆகையால் அவருடைய செயல்களிலும் அவரைப் பின்பற்றி நடக்க வேண்டும். வழிபாட்டின் மூலம் அவரைப்போல் இருக்க விரும்புகிறான். ஏனெனில், பொதுவான நம்பிக்கையின்படி ஆராதனை புரிவோன் ஆராதனையை ஏற்றுக் கொள்பவர்போல் ஆகின்றான். வீணான சிலைகளை வழிபட்டு மனிதன் வீண் ஆகிறான் (சங் 113:16;2 அர 17:15.16; எரே 2:5).

கடவுளை வழிபடுவதால் தூய்மை அடைகிறான். இந்த வழிபாடு வானுலக வழிபாட்டைப் பின்பற்றியிருக்க வேண்டும் (யாத் 24:40; 26:30). மேலும் மனிதன் சிறப்பாகத் தன்னுடைய வாழ்வில் அவரைப்போல இருக்கவேண்டும்.

''நாம், உங்கள் கடவுளாகிய ஆண்டவர், பரிசுத்தராயிருப்பதால், நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' (லேவி 19:2). ஆகையால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் யாவேயாகிய இறைவனைப்பின்பற்ற வேண்டும் (உப 13:4). அவரே காட்டியிருக்கிற அன்பு வழியிலும் விசுவாசப்பாதையிலும் அவரைப்பின்பற்றி நடக்கவேண்டும். நீதியோடு நிறைவுள்ள அன்பை, கடவுளைப் பின்பற்றித் தேட வேண்டும் (உப 15:12-15; எரே 9:24; மீக் 6:8). அவர்கள் ஓய்வு நாளை அனுசரிப்பதிலும் படைத்தவரைப் பின்பற்றி, அதைக் கொண்டாடிப் புனிதப் படுத்தவேண்டும் (யாத் 20:11); பின்பற்றுவதற்காக எடுத்துரைக்கப்பட்ட ஒரு சில நீதிமான்களைத் தவிர (சீரா 44-50), இஸ்ராயேல் மக்கள் உண்மையில் சட்டத்தில் கூறப்பட்டவைகளுக்கும் இறைவாக்கினரது அழைப்பிற்கும் விசுவாசத்துடன் நடந்துகொண்டார்கள் என்று நாம் கூறமுடியுமா? எடுத்துக்காட்டுகள் இருந்தன; வெகு அண்மையில் இருந்தன (உப 30:14). ஆனால் அவர்கள் இதயங்கள் உட்புறத்தில் மாற்றமடைந்து, உண்மையான மகன் தன் தந்தையின் இதயத்தைப் பின்பற்றும் இதயமாக மாறத் தேவையிருந்தது.

II. புதிய ஏற்பாடு:-

1. மனித எடுத்துக் காட்டுகளினின்று இறைமாதிரி வரை:- புதிய ஏற்பாடு இன்னமும் கடந்த காலத்தை மனதிற்கு நினைவூட்டுகிறது. கொலைகாரக் காயினையோ (1 யோவா 3:12), பாலைவனக் கீழ்ப்படியாத் தலைமுறையினையோ (எபி 4:11) ஒருவன் பின்பற்றக் கூடாது. ஆனால் இறைவாக்கினர்களின் பொறுமையையும் (யாக் 5:10) இறைவனுடைய சாட்சியாளார்களின் திரளினுடைய விடாமுயற்சியையும் (எபி 12:1) முன்மாதிரியாக ஏற்க வேண்டும். மேலும், விசுவாசிகள் இத்தகைய சாட்சிகளைத் தங்களுடைய கண் முன்பே கொண்டிருந்தனர் (6:12). அவர்களது தலைவர்களுடைய விசுவாசத்தையும் (13:7) பவுலைப் போன்ற முன்மாதிரிகளின் நடத்தையையும், அவர்கள் பின்பற்றட்டும் (பிலி 3:17). அப்போஸ்தலர் தன்னைப் பின்பற்றுபவர்களாகும்படி விசுவாசிகளை அடிக்கடி வலியுறுத்துகிறார் (1 கொரி 4:16; கலா 4:12). சிறப்பாக, அவர்களுக்கு முன்மாதிரிகை அளிக்கத் தான் செய்தது போலவே அவர்களையும் பணிபுரிய அழைக்கின்றார் (2 தெச 3:7-9). அவர்களது குழுக்கள், அவர்களது முறையில், முன்மாதிரிகை ஆகும்படி (1 தெச 1:7; 2:14) தான் இருந்தவாறே, பெரியவர்களும் முன்மாதிரிகளாக இருக்கட்டும் (1 திமோ 4:12; தீத் 2:6; 1 பேதுரு 5:3).

ஆனால், விசுவாசிகளுக்கு இயேசு கிறிஸ்து மட்டுமே நிறைவான முன் மாதிரியாக உள்ளார். மற்றவர்களெல்லாம் அதன் பிரதிபலிப்புகள் மாத்திரமே. பவுலும்கூட, கிறிஸ்துவைப் பின்பற்றுபவராய் இருப்பதால்தான், அவரும் பின்பற்றப்பட வேண்டியவர் ஆகிறார் (1 தெச 1:6; 1 கொரி 11:1). இதுவே அடிப்படையான புதுமையாகும். மனிதனான இறை மகனாகிய இயேசுவினால் மனிதன் தன் ஆண்டவரைப் பின்பற்றக் கூடியவனாகி (1 தெச 6), அதன் மூலம் இறைவனையே பின்பற்றக்கூடியவனாகிறான் என்பதே அடிப்படையான புதுமையாகும் (எபே 5:1). உண்மையில், நம்பிக்கையும் பிரமாணிக்கமுமாகிய நிறைவான விசுவாசத்திற்கு ஆதாரமாகவும் முன் மாதிரியாகவும் இருப்பவர் இயேசுவே (எபி 12:2). தம்மில் விசுவாசங்கொள்ளும் எவருக்கும், இறைவனுடைய பிள்ளையாகும் மற்றும் அவரது வாழ்வினின்று வாழும் வரத்தினை அளிக்கின்றார் (யோவா 1:12; கலா 2:20). அது முதல், மனிதன் ஆண்டவருடைய முன்மாதிரியைப் பின்பற்றித் தன்னுடைய வாழ்வையே அளிக்குமாறு, அவரை அமைத்த தாழ்ச்சியான அன்பின் வழியில், அவரைப் பின்தொடரலாம் (யோவா 13:15; எபே 5:2;

எடுத்துக்காட்டு/முன் மாதிரிகை (தொடர்ச்சி)

1 பேதுரு 2:21; 1 யோவா 2:16; 3:16). இயேசுவைப் போன்றே அவனும் தனது சகோதரரை அன்பு செய்யலாம் (யோவா 13:34; 15:12).

ஆனால் தந்தை தம்மை அன்பு செய்தது போல இயேசு அவர்களை அன்பு செய்தார் (யோவா 15:9). இயேசுவைப் பின்பற்றுவ தென்பது தந்தையையே பின்பற்றுவதாகும் (உரோ 8:29). தந்தையின் நிறைவான சாயலா கிய (கொலோ 1:15) கிறிஸ்துவின் உண்மை யான சாயலாக உருவாவதற்காக நமது அழைப்பிற்குப் பதிலளிப்பதென்பது (உரோ 8:29) படைத்தவரின் சாயலில் நம்மையே புதுப்பிப்பதாகும் (3:10; ஆதி 1:26-27; இந்த ஒப்பீடானது இப்பகுதியின் ஆழமான, இது வரை மறைவாயிருந்த பொருளை வெளிப்ப டுத்துகிறது). நமது விண்ணகத் தந்தை தூயவ ராக இருப்பதைப்போன்று நாமும் தூயவ ராக உருவாக வேண்டும் (1 பேதுரு 1:15-16; லேவி 19:2-ஐச் சுட்டிக் காட்டி, அதற்குப் புதிய பொருளை அளிக்கின்றார்). இதைச் செய்வதன் மூலம் கிறிஸ்துவினுடைய கட்ட ளையையே நாம் நிறைவேற்றுகிறோம். ஏனெனில், நிறைவான நன்மைத்தனமும் (மத் 5:48) இரக்கமிக்க அன்புமாகிய (லூக் 6:36; எபே 4:32) தந்தையை நாம் பின்பற்ற வேண்டுமென அவர் விரும்புகிறார். இதை நாம் செய்தால், ஒரு நாள் அவர் வரும் போது, நாம் பின்பற்றிய அவரைப்போன்றே நாமும் இருப்போம். ஏனெனில் அவர் உண் மையாகவே உள்ளவாறு அவரை நாம் காண் போம் (1 யோவா 3:2).

2. கிறிஸ்துவையும் அவரது அன்பையும் பின்பற்றுதல்:-

இயேசு இந்தக் கட்டளையைக் கூறுவ தோடு நிறைவுகொள்ளவில்லை: ''உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப் பதுபோல் நீங்களும் நிறைவுள்ளவராயிருங் கள்'' (மத் 5:42). இறைவனின் பிரதிபலிப் பைக் காணக்கூடிய காட்சியாகக் காட்ட அவர் வந்தார். ''அவர் கட்புலனாகாக் கடவு ளின் சாயல்'' (கொலோ 1:15). அந்தப் புலன்களால் உணர முடியாத இறைவனை அவர் அறிவிக்கின்றார் (மத் 11:27). ''மகன் தாமாகவே ஒன்றும் செய்ய முடியாது. தந்தை செய்யக் காண்கிறதையே செய்வார்'' (யோவா 5:19). ''நான் என் தந்தையிடம் பார்த்ததைச் செய்கிறேன்'' (8:38). தந்தை அவருக்கு அருளிய செயல்களைச் செய்து முடிக்கிறார் (5:36). மகனைக் காண்பவர் தந்தையைக் காண்கிறார் (14:9). ஆகையால் தந்தையைப் பின் பற்றி நடத்தல் மகனைப் பின்பற்றுதல் ஆகும். இது வானுலக மாதிரி யைப் பின்பற்றி, அதன் நிழலைத் தங்களி டம் திரும்ப உண்டாக்குவதில் நின்றுவிட வில்லை (எபி 8:5). இத்தகைய இறைவனின் மகத்தான தேர்ந்தெடுத்த அழைப்பிற்குப் பதில் கண்டிப்பாயிருக்க வேண்டும். ''அவ ருடைய மகனின் சாயலுக்கேற்றபடி உரு வைத் தாங்கும்படி அழைத்திருக்கிறார்'' (உரோ 8:29). இயேசு செய்த அவர் செயல்க ளிலும், உயிர் அளிக்கின்ற அவர் அன்பிலும் சீடர் பங்குபெறுகின்றனர். தம்மை முழுவ தும் அர்ப்பணமாக அளிக்கும் அவரது அன்பு தான் அவர் விட்டுச்சென்ற மிகச் சிறந்த முன்மாதிரியாகும் (யோவா 13:15.34). ஆண் டவர் தம் ஆவியைக் கொடுத்தால் நாம் அவரைப்பின்பற்றமுடியும். இவ்வாறு அவ ரது பாடுகளின் அடிச்சுவடுகளை நாம் பின் பற்றவும் (13:36; 1 பேதுரு 2:21). மேலும் அவர் செய்த செயல்களை நிறைவேற்றவும், இன்னும் பெரிய செயல்களைச் செய்யவும், ஆற்றல் ஏற்படும் (யோவா 14:22).

3.கிறிஸ்தவனின் முன் மாதிரிகை:-

சீடர்கள் செயல்கள், திரும்பவும் மற்றவர் கள் பின்பற்றும் நற்செயல்கள் ஆகின்றன (மத் 4:14). இந்தச் செயல்களினால் வீண் சுற்பெருமை உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், மகன் தந் தையிடமிருந்து பெற்ற அன்பைத்தான் விசு வசிப்போர் காட்ட விரும்புகின்றனர் (யோவா 17:26). இவ்வாறு தந்தையின் அன் பிற்கும் பரிசேயர்களின் மனநோக்குக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டமுடியும் (மத் 6:1-18; 23:5; யோவா 12:43). இயேசு தந்தை யின் மகிமையைத் தேடினார். அவரைப் பின்பற்றி விசுவசிப்போர் கடவுளின் மகி

மையைத் தேடுகின்றனர் (யோவா 8:50). விசுவசிப்பவர் இயேசுவின் மூலம் கண்டறிந்த தந்தையின் அன்பைத்தான் அறிவிக்க விரும்புகின்றார் (17:26). ''நான் கிறிஸ்து வைப்போல் நடக்கிறவாறே நீங்களும் நடங்கள்'' (1 கொரி 11:1) என்பது விநோதமானதும், பவுலால் அடிக்கடி கூறப்படுவதும், நிறைவேற்றப்பட வேண்டியதுமான செயலாகும். இதைத்தான் தெசலோனியர் செய்தனர் (1 தெச 1:6). அவர்கள் மறுபடி ''மக்கதோனியாவிற்கும் அக்காயாவிற்கும் முன்மாதிரியாக விளங்குகின்றனர்'' (1 தெச 1:7). பவுல் அவர்களது முன்மாதிரியாகவும் தன்னை முழுவதும் இந்த வழியாகத் தந்தார். இது எவ்வாறு முடிந்ததென்றால் ''அவர் அவர்களைப்போல் ஆனார்'' (கலா 4:12). ''எல்லார்க்கும் எல்லாம் ஆனேன்'' (1 கொரி 9:19-22). ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்துவின் பாடுகளுக்கு ஒப்ப அவர் வாழ்வு இருந்தது (பிலி 3:7). அப்போஸ்தலரைப் பின்பற்றுதல் கிறிஸ்துவைப் பின்பற்றுதலாகும். இறுதியாகக் கடைசித் தீர்வு நாளில் நாம் எவ்வாறு இருப்போம் என்பதை வெளியிடுவதற்காக ''நாம் கடவுளது சாயலைப் போல் இருப்போம்''. ஏனெனில் கடவுளது மக்களின் சிறப்பை நாம் கொண்டுள்ளோம் (1 யோவா 3:2) என்று கூறப்படுகிறது.

எட்டிக்காய் (WORM WOOD)

இது ஒரு கசப்புமிக்க சிறுசெடியாகும் (உப 29:18; எரே 9:15; ஆமோ 6:12). இச்செடி பொதுவாகக் கசப்பிற்கும், துயரத்திற்கும் உருவகமாய்ப் பயன்படுகின்றது. வேசியின் சொற்கள் தேன் போல் இனிமையாக இருப்பினும் அவளின் சேர்க்கையின் முடிவு கசப்பான அனுபவங்களை விளைவிக்கும் (பழ 5:4). கடவுளின் தண்டனை பெற்றவருக்கு இச்செடி உணவாகும் என்று கூறப்படுகிறது (எரே 3:15; 19; ஆமோ 5:7). இச்செடியின் பெயர் கொண்ட விண்மீன் ஒன்று வானிலிருந்து நீர்நிலை ஒன்றில் விழுந்து அந்நீர் நிலை முழுவதையும் கசப்பாக்குகிறது. அதை அருந்திய பலர் மடிகின்றனர் என்று திருவெளிப்பாடு கூறுகிறது (திருவெளி 8:10-11).

எண்கள் (NUMBERS)

மறைநூலின் எண்கள் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணும்போது அவை முறையாக வழங்கப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைச் சரி பார்ப்பது அவசியம். முற்காலத்தில் எண்கள் எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தமையால் அப்பகுதியானது மாற்றப்பட்டோ, பழுதாக்கப்பட்டோ இருக்கக் கூடும். இவ்வாறு 2 சாமு 24-13-இல் சில வாசகங்கள் ஏழு என்று குறிப்பிடுகின்ற நேரத்தில் அதற்கு இணையாகவுள்ள வாசகமான 1 நாள் 21:12 மூன்று என்று குறிப்பிடுகின்றது. வாசகம் உறுதிப்படுத்தப்பட்டபின் கேள்விக்குரிய எண்ணானது ஆசிரியரின் கருத்தின்படி, அதனுடைய துல்லியக் கணக்கியல் மதிப்பின்படியா, தோராயமாகவா அல்லது அதனுடைய அடையாளப் பொருளின்படி புரிந்து கொள்ளப்பட வேண்டுமா என்று கேட்க வேண்டியது அவசியமாகும். உண்மையில் நமது கலாச்சாரம் ஏற்கின்ற முறையில் பண்டைய செமிட்டிக் கலாச்சாரங்கள் கணக்கியல் நுல்லிய அளவின் மீது சிறிதளவே அக்கறை கொண்டிருந்தன என்பது உறுதியாகும். ... சமயர் எண்களினுடைய வழக்கமான மற்றும் அடையாளப் பயன்பாட்டை அவை அதிகரித்தன.

I. வழக்கமான மதிப்பீடுகளும் பொருள்களும்:-

1. முழு எண்கள் அல்லது தோராயமானவைகளிலிருந்து விவிலியத்தில் வழக்கமான பயன்பாட்டுக்கு எளிதில் செல்லலாம். ஆனால் அதனைச் சொற்பொருளின் அப்படியே புரிந்து கொள்வதென்பது முடியாததாக இருக்கும். இரண்டு என்னும் எண் 'சில' (எண். 9:22), இரட்டையான, அளவற்ற (எரே 16:18; ஏச 40:2; 61:7; செப் 9:12; திருவெளி 18:6) என்றெல்லாம் பொருள் கொடுக்கலாம். மூன்று (3) என்கிற எண்ணானது π (பை) என்னும் எண்ணினுடைய தோராய மதிப்பாகும் (1 அர 7:33). மேலும் ஒரு சைகை (1 அர 17:21) அல்லது வார்த்தையை (எரே 7:4) மும்முறை நிறைவேற்றுதலைக் குறிக்கவல்லது. இது அழுத்தத்தையும் வலியுறுத்தலையும் ''உச்சநிலையில் உச்சத்தையும்''

(ஏச 6:3) சுட்டிக்காட்டுகிறது. நான்கு (4) என்கிற எண் நான்கு காற்றுகள் (எசே 37:9; ஏச 11:2), இன்ப வனத்தின் நான்கு நதிகள் (ஆதி 2:10) போன்ற புவியியல் பரப்பின் முழுமையினைச் சுட்டிக்காட்டுகின்றது (முன்னால், பின்னால், வலம், மற்றும் இடம்). ஐந்து (5) என்கிற எண் சில சடங்கு நெறிகளின் தொடக்கத்தில் (எண் 7:17.23.29) இருந்திருக்கக்கூடிய நினைவிலிருத்தக்கூடிய மதிப்பைக் கொண்டுள்ளது (ஒரு கரத்தின் விரல்கள்). ஆனால் இது ஆதி 43:34 (பென் யாமின் பங்கானது 5 மடங்கு உயரியது), லூக் 12:6 (2 காசுக்கு 5 குருவிகள்; ஆனால் மத் 10:29-இல் 1 காசுக்கு 2 குருவிகள்), 1 கொரி 14:19 (பரவசப்பேச்சில் 10000 சொற்கள் பேசுவதை விட மற்றவர்களுக்குக் கற்பிக்கக் கூடிய 5 சொற்கள் பேசுதல்) ஆகியவற்றில் தோராயமானதாகவே உள்ளது. ஏழு (7) என்கிற எண் பெரும் எண்ணிக்கையைச் சுட்டுகிறது. காயின் 7 முறை பழிதீர்க்கப்படுவார் (ஆதி 7:15). நீதிமான் ஒரு நாளைக்கு 7 முறை விழுகிறார் (பழ 24:16). 7 முறை மன்னிக்க வேண்டுமெனப் பேதுரு விரும்புகிறார் (மத் 18:26), மற்றும் மதலேனாளிடமிருந்து இயேசு 7 பேய்களை வெளியேற்றுகிறார் (மாற் 16:9). ஆனால் இந்த எண்ணானது உச்ச உயர்நிலையையும் கொண்டுள்ளது. லாமெக் 77 முறை பழிதீர்க்கப்படுவார் (ஆதி 4:24). மற்றது பேதுரு 77 முறை அல்லது 70 முறை 7 முறை மன்னிக்க வேண்டும் (மத் 18:22). பத்து (10) என்கிற எண்ணானது நினைவிருத்தக்கூடிய பொருளைக் கொண்டுள்ளது (10 விரல்கள்); ஆதலின் 10 கட்டளைகள் (யாத் 34:28; உப 4:13), எகிப்தின் 10 கொள்ளை நோய்கள் (யாத் 7:14-12:29) ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது. இதனின்று குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கை என்னும் கருத்து வெளிப்படுகிறது: லாபான் யாக்கோபுவின் சம்பளத்தை 10 முறை மாற்றினார் (ஆதி 31:7), மற்றும் யோபு தனது நண்பர்களால் 10 முறை வசைமாரி பொழியப்பட்டார் (யோபு 19:3). பன்னிரண்டு (12) என்கிற எண் ஓர் ஆண்டில் வரும் சந்திரனுடைய பருவங்களைக் குறிக்கும் எண்ணாகும். அது முழு வருடாந்தர வட்டத்தைச் சுட்டுகிறது. சாலமோனுடைய 12 மாவட்டங்கள் ஒவ்வொரு மாதமும், அரண்மனையில் உணவுப்பொருள் சேகரித்து அனுப்புவதை உறுதிப்படுத்துகின்றன (1 அர 4:7 -5:5). இஸ்ராயேலினுடைய 12 கோத்திரங்களின் எண் ஆண்டின் 12 மாதங்களின் பொது புனிதத்தலத்தில் நடக்கும் கலாச்சாரச் சடங்குடன் தொடர்பு கொண்டுள்ளதாக ஊகிக்கப்படுகின்றது. நாற்பது (40) என்ற எண் ஒரு தலைமுறைக் காலத்தை வழக்கமாகக் குறிக்கின்றது: பாலைவனத்தில் 40 ஆண்டுகள் வாழ்தல் (எண் 14:34); இஸ்ராயேலில் ஒவ்வொரு நீதிபதியாலும் நிறைவேற்றப்பட்ட மீட்பிற்குப் பிற்பட்ட 40 ஆண்டுகால அமைதி (நீதி 3:11.30; 5:31); தாவீதின் 40 ஆண்டுகால அரசாட்சி (2 சாமு 5:4) இவ்வாறாகக் குறிப்பிட்ட கால அளவு அறியப்படாத நீண்டகாலம் பற்றிய கருத்து வெளிப்படுகிறது: வெள்ளத்திற்கு 40 இரவும் 40 பகலும் (ஆதி 7:4), சீனாய் மலைமீது மோசே தங்கியிருந்த காலம் (யாத் 24:18). ஆனால் எலியாவினுடைய 40 நாள் பயணமும் (1 அர 19:8), கிறிஸ்துவினுடைய நோன்பும் (மாற் 1:13) பாலைவனத்திலிருந்த இஸ்ராயேலரின் 40 ஆண்டுகளையே மீண்டும் அடையாளமுறையில் சுட்டுகின்றன. இதே போன்ற பயன்பாட்டு முறைகள் 60 மற்றும் 80 (உ.ச. 6:8), 100 (லேவி 26:8; திருவுரை 6:3; மத் 19:29-இன் 100 மடங்கு) ஆகியவற்றிற்கு அளிக்க வேண்டும். ஆயினும் எண் 11:16.24-இல் வரும் 70 முதியோர் என்பது ஏழு என்ற எண்ணின் வழக்கமான பயன்பாட்டையே குறிக்கின்றது (லூக் 10:1). அதே நேரத்தில் எழுபதினுடைய சில பயன்பாடுகள் (10 முறை 7) வாரம் மற்றும் ஓய்வு நாளின் (எரே 25:11; 2 நாள் 36:21; தானி 9:21) அடையாளவியலோடு தொடர்பு கொண்டுள்ளன. ஆயிரம் (1000) என்ற எண் குறிப்பிடத்தக்க பெரும் அளவினை மனத்திற்குக் கொண்டு வருகிறது: 1000 சந்ததிகளுக்கு இறைவன் இரக்கமுடையவராக இருக்கிறார் (யாத் 20:6; எரே 32:18). அவருக்கு 1000 வருடங்கள் 1 நாள் போன்றது (சங் 89:4). அவரது பணியில் ஒருநாள் இருப்பது மற்ற வற்றைவிட 1000 மடங்கு மதிப்பு மிக்கது

(சங் 83:10). ஆனால் அதே எண் கோத்திரங்களின் உட் பிரிவுகளையும் குறிப்பிட உதவுகிறது; ஆயிரமானது நூறு, ஐம்பது மற்றும் பத்து (யாத் 18:2) என மேலும் வழக்கமாகப் பிரிக்கப்படுகிறது. மேலும் 10,000 என்பது நம்பமுடியாத எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றது (லேவி 26:8). எந்நிலையிலும், இத்தகைய பெரிய எண்கள் ஆதி 24:60 அல்லது 1 சாமு 18:7 ஆகியவற்றில் தெளிவாக வெளிப்படுகின்றதுபோல், உயர்வு நவிற்சி அணிகளாகும்.

2. ஒரு எண்ணிற்குப்பின் அதற்கு அடுத்த எண்ணைக் குறிப்பிடுவது அழுத்த முக்கியத்துவம் அளிக்கும் முறையாகும். ''ஒன்றைக் கடவுள் மொழிந்தார். திரும்பத்திரும்ப (இருமுறை) நான் அதைக்கேட்டிருக்கிறேன்'' (சங் 61:11). கீழ்க்கண்டவையும் காணப்படுகின்றன: 1+2 (எரே 3:14; யோபு 40:5), 2+3 (ஓசே 6:2; யோபு 33:29; சீரா 23:16), 3+4 (ஆமோ 1-2; பழ 30:15-33; சீரா 26:5), 4+5 (எச 17:6), 5+6 (2 அர 13:19), 6+7 (பழ 6:16; யோபு 5:19), 7+8 (மீக் 5:4; திருவுரை 11:2); 9+10 (சீரா 25:7). இம்முறையானது பெரும்பாலும் எண்ணிக்கை அடிப்படை கொண்ட வாக்கு வடிவில் ஞான ஆசிரியர்களின் நூல்களில் அடிக்கடி காணப்படுகிறது.

II. அடையாளப் பொருள்கள்:-

பண்டை மேற்காசிய நாடுகள் எண்களின் அடையாளவியலை உயர்வாக மதித்தன. கணிதமானது ஓரளவு வளர்ச்சியுற்றிருந்த மெசபொத்தாமியாவில், சில புனித எண்கள் தெய்வங்களுக்குச் சாற்றிக் கூறப்பட்டன. பித்தகோரஸ் கணிப்புப்படி 1 மற்றும் 2 ஆண்பாலாகவும், 3 மற்றும் 4 பெண்பாலாகவும், 5 ஆனது கன்னித்தன்மையுடையதாகவும் கருதப்பட்டன. இக்கணிப்புகள் சில நேரங்களில் யூத நூல்களிலும் திருச்சபைத் தந்தையின் நூல்களிலும் காணப்படுகின்றன. ஆனால் இக்கருத்து விவிலியத்துக்குப்புறம்பானது. அதில் எந்த எண்ணுமே புனிதமாகக் கருதப்படுவதில்லை. மற்றொரு புறம் சில பொதுவான வழக்கிலிருந்தோ, கற்றுப்புற நாகரீகங்களின் பிற்காலத் தூண்டுதல்களினாலோ சில குறிப்பிட்ட அடையாள வழக்கிலும் வடிவ இயலிலும் இவை பெரும் எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

1. அடையாளப் பயன்பாடு:- அண்ட முழுமையினைக் குறிப்பிடுகின்ற எண்ணாகிய நான்கு (எசே 1:5..; திருவெளி 4:6 ஆகியவற்றில் நான்கு உயிருள்ள மிருகங்களுக்குப் பின்னணியாகவும் உள்ளது), முழுமைப் பண்புடைய அனைத்தையும் உணர்த்துகின்றது. எச 14:21-இல் 4 ஆக்கினைகள்; லூக் 6:20தொ-இல் 4 பேறுகள் (மத் 5:1-10-இல் 8 பேறுகள்).

எண் ஏழு பாரம்பரியமாக ஒரு முழுத் தொடரைக் குறிப்பிட்டு வருகிறது: இரத்தத்துடனான 7 தெளிப்புகள் (லேவி 4:6.17; 8:11; 14:7; எண் 19:4; 2 அர 5:10); 7 விலங்குகளைச் சுட்டெரித்தல் (எண் 28:11; எச 45:23; யோபு 42:8; 2 நாள் 29:21). அது எவ்விதத் தடையுமின்றிச் சில புனிதத்தன்மையுடைய பொருட்களுடன் சேர்த்துக் கூறப்படுகிறது: தோபி 12:15-இன் 7 வானதூதர்கள்; செப் 3:9-இல் உள்ள பாறையின் மீதான 7 கண்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இது வாரத்தினுடைய நாட்களின் எண்ணிக்கையும், சிறப்புமிக்க புனித நாளாக ஓய்வு நாளைச் சிறப்பிப்பதுமாகும் (ஆதி 2:2). அதன் பின்னர், தானி 9:2.24-இன் வெளிப்பாட்டுக் கருத்துவருகிறது. அதில் எந்த உண்மையான காலவரையறைக்கும் உட்படாமல் 70 வாரங்கள் (7 முறை 7 ஆண்டு அடங்கிய 10 ஜூபிலிகள்) மீட்புநாளுக்கு இட்டுச் செல்கின்றன. 3+4 என்று பிரிக்கப்படக்கூடிய முழுமையின் எண் என்ற பெயரில் 7-ஆனது இறைவாக்குக் காட்சிகளிலும் (ஏச 30:26; செக் 4:2), குறிப்பாக வெளிப்பாட்டுக் காட்சிகளிலும் (திருவெளி 1:12.16; 3:1; 4:5; 5:1.16; 8:2; 10:3; 15:1; 17:9) காணப்படுகிறது. ஆனால் அதனுடைய பாதியாகிய 3½-உம் குறிப்பிடப்பட்டுள்ளது (தானி 7:25; 8:14; 9:27; 12:8.11-12; திருவெளி 11:2-3.9 தொ; 12:6.4; 13:5). எதிர்மாறான நிலையில் ஆறானது (6) (7-1) முழுமையற்ற நிலையின் மாதிரிகையாக உள்ளது (திருவெளி 13:18; 666).

12 கோத்திரங்களின் எண்ணாக இருக்கும் வரையில், 12-ஆனது முழுமை எண்ணாகும். இறைவனின் மக்களை அடையாள முறையில் குறிக்கின்றது. அதன் பின்னர்ப் புதிய இஸ்ராயேலின் 12 கோத்திரங்களின்மீது ஆட்சி செலுத்தவிருக்கின்ற, இயேசுவின் 12 அப்போஸ்தலர்களுக்கு இது பயன்படுத்தப்படுகிறது (மத் 19:28). அதே போன்று திருவெளிப்பாட்டின் புதிய எருசலேமானது 12 கோத்திரங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட 12 வாயில்களையும் (திருவெளி 21:12), 12 அப்போஸ்தலர்களின் பெயர்களைக் கொண்ட 12 அடிக்கற்களையும் (21:14) கொண்டுள்ளது. இதே முறையில் இஸ்ராயேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் 12 ஆயிரம் பேர் என்ற நிலையில் காப்பாற்றப்பட்ட மக்களின் மொத்த எண்ணிக்கையானது 144000 ஆகும் (திருவெளி 7:4-8). ஆனால் பெண் சூடியிருந்த (புதிய மனித இனத்தின் மற்றொரு அடையாளம்) முடியிலிருந்த 12 விண்மீன்கள் 12 விண்மீன்குழுக்களின் அமைப்புகளைச் சுட்டிக் காட்டலாம் (12:1).

2. வடிவ இயல்:- வடிவியலானது பண்டைக் காலத்தவரால் போற்றப்பட்ட ஒரு முறையினைக் குறிப்பிடுகின்றது. அதன்படி ஒரு பெயரில் உள்ள எழுத்துக்களின் எண் மதிப்பு ஓர் ஆளையோ பொருளையோ குறிப்பதாகக் கருதப்பட்டது. விவிலியமானது இத்தகைய சில உதாரணங்களைக் கொண்டுள்ளது.

ஆபிரகாம் திரட்டிக் கொண்டு சென்ற சிறுபடையின் 318 என்ற எண் (ஆதி 14:14), ஆபிரகாமினுடைய ஊழியனாகிய எலயேசரின் பெயர் குறிக்கும் எண்ணாக இருக்கலாம். இயேசுவின் தலைமுறைப்பட்டியில் அடங்கியுள்ள 3 x 14 சந்ததிகளிலும் தாவீது என்ற பெயரின் வடிவ இயலைக்காண முயற்சிகள் நடந்துள்ளன (மத் 1). இது ஏழு என்ற எண்ணின் அடையாளப் பயன்பாட்டின் மேல் அமைக்கப்பட்ட கருத்தாகும். இதன்படி இயேசு ''மும்மடங்கான தாவீது'' (அதாவது மிகச் சிறந்த தாவீது மெசியா) ஆவார். ட்ரிப்பீட்டினுடைய அடிப்படையானது விவாதத்திற்குரியதாயினும், திருவெளி13:18-இல் உள்ள விலங்கினுடைய எண் (666) இத்தகைய தொன்றாகும். இது புனித இரேனயு ஏற்கனவே உரோமைப் பேரரசைக் குறிக்கின்ற பெயரைக் குறிப்பதாகக் கூறியுள்ளார். இக்காலத்தில் நீரோ செசாரினுடைய எபிரேயப் பெயரை அடிப்படையாகக் கொண்டதாகப் பெருமளவில் கருதப்படுகிறது. இவை எவ்வாறாயினும் ஆறினுடைய அடையாளவியலானது இந்த மறைபொருளான பெயரின் மேல் சுமத்தப்பட்டுள்ளது.

III. முடிவுரை:- சில குறிப்பிட்ட விவிலிய எண்கள் அடையாள மதிப்பு மற்றும் வடிவியல் என்னும் இருவித முறைகளிலும் விளக்கப்படவேண்டும். ஆனால், பெரும்பாலும் இதற்கான விடைநூல் நம்மிடமிருந்து தவறிப்போய்விட்டது. அதை மீள அடைவது வெகு கடினமாகும். இவ்வாறு வெள்ளத்திற்கு முற்பட்ட மூதாதையரின் கதைக் காலங்கள் (இது மெசபொத்தாமியா கதைகளில் வரும் ஆட்களோடு ஒப்பிடத்தக்கது) ஒரு பொருளைக் கொண்டிருக்கலாம். ஆனால் இது ஏனோக்கின் கதையில் தவிர மற்றவற்றில் காணப்படவில்லை. சூரிய ஆண்டின் முழுமை எண்ணாகிய 365 ஆண்டுகள் வாழ்ந்தவர் ஏனோக்கு. அந்த வரிசையில் இவர் ஒரு நீதிமான். இஸ்ராயேலரின் முன்னோர்களின் காலங்கள் எண் 1:46-இல் எண்ணப்படுபவர்களின் கூட்டுத்தொகை, யோவா 5:5-இல் வரும் 38 ஆண்டுகள், யோவா 21:11-இல் வரும் 153 பெரிய மீன்கள் ஆகியவற்றிற்கு இவ்வாறே விளக்கம் கூறலாம்.

இது எப்படியிருப்பினும் மறைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களை அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது உறுதியாக உள்ளது. அவற்றினுடைய சிறப்பினை உணர்வதற்கு நிகழ்ச்சியுரையாளரின் கருத்து எப்போதும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அவர்கள் துல்லியமான குறிப்பிட்ட எண்களைக் கொடுக்கிறார்களா, அல்லது தோராயமாகக் கூறுகிறார்களா? பின்னதில் உயர்வுநவிற்சியாக மிகைப்படுத்திக் கூறுகிறார்களா அல்லது கணிதவியலான

அடையாளப் பொருளில் கூறுகிறார்களா? வரலாற்று நூல்களில் போரிடுவோர் அல்லது சிறைப்பட்டோரின் எண்ணிக்கையானது பெரும்பாலும் மிகைப்படுத்தப்பட்டதாகவே உள்ளது (யாத் 12:38). ஆனால் இது ஓர் இலக்கிய மரபாகும். இதை ஏறக்குறைய வழக்கமான கணித நோக்கத்திற்கப்பால், இந்த ஒளியில் வரலாற்று ஆசிரியர் கூறுவதைப் புரிந்து கொள்ளவேண்டும். இதே முறையில், அடையாளவியலானது தலையிட்டால், அடையாளங்களின் - பொருளுக்கே ஆசிரியர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

ஒவ்வொரு பகுதியிலும் என்ன கூறப்படுகிறது என்று கவனிப்பது அவசியம். அப்படிச் செய்தால் சமன்படுத்தப்படாத அடையாள விளக்கம் அளிப்பதையும் மாறுபாட்டுக்கு இடந் தருகின்றவற்றை உறுதியாகக் கூறுவதையும், இறுதியாகச் சில வாசகக் கருத்துக்களை வெறுமையாக்குவதையும் தவிர்க்கலாம். எண்களுடைய மதிப்போடு சேர்ந்து எண்கள் முற்றிலும் வேறுபட்ட அமைப்பைக் கூறுகின்றன. இதைப் பெரும்பாலும் இன்றைய வாசகர்கள் புரிந்து கொள்வதில்லை.

எண்ணற்ற (MYRIAD)

''மிரியட்'' என்ற சொல்லை நேரடியாக மொழிபெயர்த்தால் ''பத்தாயிரம்'' என்பது பொருள். சில நோக்களில் ''எண்ணிக்கையில் அடங்காதது'' என்றும் பொருள்படும். விவிலியத்தில் குறிப்பாக யூதாநூலிலும் திருவெளிப்பாட்டிலும் ''எண்ணற்ற'' எண்ணிக்கை கோடானுகோடி, ஆயிரமாயிரம் (யூதா 14; திருவெளி 5:11) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் மற்றவைகளில் ''இருபதுகோடி'' (திருவெளி 9:16) ''ஐம்பதினாயிரம்'' (அ.ப. 19:19), ''எத்தனையோ ஆயிரம்'' (திருவெளி 21:20) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எண்ணிக்கைநூல் (BOOK OF NUMBERS)

1. பெயர்:- ஐந்நூலின் நான்காம் பகுதியாகிய இந்நூல் எபிரேயத்தில், ''பாலைவனத்தில்'' என்று பொருள் படும் தொடக்க வார்த்தையைத் தலைப்பாகக் கொண்டுள்ளது. இத்தலைப்பு, இஸ்ராயேல் 40 ஆண்டுகளாகப் பாலைவனத்தில் அலைந்து திரிந்த பெரும்யாத்திரையை நினைவுக்குக் கொண்டு வருகிறது. சீனாய் மலை அடிவார வாழ்க்கையிலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையும் வரையுள்ள இஸ்ராயேலரது வரலாற்றை இந்நூல் விவரிக்கிறது. இக்காலத்தில் இறைவன் தம்மக்களைக் கடுமையாகச் சோதித்து அவர்களின் உரிமை நாட்டில் நுழைய அவர்களைத் தயாரித்தார். இந்நூல் இஸ்ராயேலின் மீட்புக் காவியத்தில் ஓர் இடைக்கால நூலாகும். எகிப்திலிருந்து அடைந்த விடுதலையையும் கானானில் குடியேறியதையும் இணைக்கும் நூலாகும். இவ்விதத்தில் இது இந்நூலில் ஒரு சிறப்பிடம் பெறுகிறது.

எழுபது நூல், இந்நூலைக் ''கணித்தல்'' அல்லது ''எண்ணுதல்'' என்ற பொருளுடைய பெயரால் அழைக்கிறது. பல நிகழ்ச்சிகளில் பல பொருட்கள் எண்ணப்படுகின்றன. பயணத்தின்போது பகைவர்களது எதிர்ப்பு எப்போதும் இருந்து கொண்டே இருந்தது. ஆகையால் போரிடக்கூடிய படைவீரர்களின் எண்ணிக்கையும் ஒருவகையான படை அமைப்பும் தேவையாயிற்று (எண் 1:1-54). எனவே இறைமக்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது. மேலும் பலிப்பொருள்கள், போரின் கொள்ளைப் பொருள்கள், சுத்திகரத்துக்குரிய நாட்கள், லேவியருடைய நகரப் பகுதிகளைப் பிரித்துக் கொடுத்தல், ஆகியவை பற்றிய எண்ணிக்கையை வரையறுப்பதில் இந்நூல் அக்கறை காட்டுகிறது. தமிழில் இந்நூலை எண்ணிக்கைநூல் என்றழைக்கிறோம்.

2. மூலங்களும் தோற்றங்களும்:- இந்நூல் பல பாரம்பரியங்களின் தொகுப்பாகும். தற்கால முறைப்படி, எண்ணாகமத்தை ஒரு நூலாகக் கருத முடியாது. இஸ்ராயேல் வரலாற்றின் பல்வேறு காலங்களிலிருந்து எடுக்கப்பட்ட செய்திகளைக் கொண்ட தொகுப்பாகும். ஏறத்தாழ 1000 ஆண்டுகள் காலத்

தைச் சேர்ந்த வரலாற்று, சட்ட, வழிபாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்ட தொகுப் பென்று நாம் கூறவேண்டும்.

எண்ணாகமப் பகுப்பாராய்ச்சி யாவே, எலோகிம், குருக்கள் ஆகிய பாரம்பரியங் கள் இந்நூலில் காணப்படுவதாகக் காட்டுகி றது. இந்நூலில் காணப்படும் யாவே, எலோ கிம் பாரம்பரியங்களை வெவ்வேறாகப் பிரிக்கமுடியாது. கி.மு. 721-இல் சமாரியா அழிக்கப்பட்ட பின், இவ்விரு பாரம்பரியங் களும் இணைக்கப்பட்டு எழுத்து வடிவம் எடுத்திருக்கலாம். ஆனால் இந்நூலில் சிறப் பிடம் பெறுவது குருக்கள் பாரம்பரியமா கும். இப்பாரம்பரியம் தனது பண்பையும் முத்திரையையும் மனப்போக்கையும் இந் நூலுக்கு அளிக்கிறது. இந்நூலின் பெரும் பகுதி இப்பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். இது தான் இந்நூலுக்கு இறுதி வடிவத்தையும் போக்கையும் அளித்திருக்க வேண்டும் என் பது இப்போது பொதுவாக ஏற்றுக்கொள் ளப்படும். இப்பாரம்பரியத்தைச் சேர்ந்த ஆசிரியர்தான் யாவே, எலோகிம் பாரம்பரி யப்பகுதிகளை இணைத்துப் பதிப்பித்திருக்க வேண்டும்.

ஊகத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பாரம்பரியங்களுக்கும் உரிய இந்நூல் பகுதி களைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

யாவே பாரம்பரியம்: 10:29-32; 11; 13-14; 16; 20-21; 22-24; 25; 1-5; 32.
எலோகிம் பாரம்பரியம்: 10; 11; 12; 13-14; 16; 20-21; 22-24; 25:1-5; 32;
குருக்கள் பாரம்பரியம்: 1-10; 13-14; 15; 16; 17-19; 20; 25:6-31: 54; 32; 33-36.

3. ஆசிரியரும் காலமும்:- ஐந்நூலின் மற்ற நூல்களைப் போல் இந்நூலையும் மோசே தான் எழுதினார் என்று யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் கூறுகின்றன. இதை, ஐந் நூல் ஆசிரியர் பற்றிய கட்டுரையில் கூறிய கருத்துக்களின்படி எடுத்துக் கொள்ள வேண் டும். மோசே மனப்போக்குப்படி எழுதப் பட்ட நூல் இது என்றும், ஆகையால் மோசே யின் அதிகாரம் பெற்றது என்றும், சில பகுதிகளை மோசேயே எழுதியதாகவும் கூற லாம்.

மேலும், இந்நூலில் காணப்படும் சிக்கல் மிக்க, பல பாரம்பரியங்களின் தொகுப்புத் தன்மையையும், ஆசிரியர் பற்றிய நவீன கருத்தையும் மனத்தில் கொண்டால், இந் நூலுக்கு மோசே (என்ற) ஒருவர்தான் ஆசிரியர் என்று கூற முடியாது. இதைவிட, இஸ்ரா யேல் தனது கடந்த காலத்தைப் போற்றிக் காத்து வந்த ஞாபகத்தின் விவரிப்பாகும் இந்நூல். மதிப்பும் அச்சமும் தரும் மீட்பு நிகழ்ச்சிகளைத் துய்த்த ஒருமுகம் நினைவு கூர்ந்த பாரம்பரியங்களின் விவரிப்பாகும். வரலாற்றுப் பகுதிகள் அந்த அனுபவத்தின் உயிருள்ள ஞாபகத்தைக் காத்துத் தருகின் றன. இஸ்ராயேல் சமூகம், கவனத்தோடு திட்டம் செய்து அமைக்கப்பட்டு, ஒரு சமயச் சமூகமாக, இறைவன் வழிகாட்ட, அவரது ஆதரவின் கீழ் வரலாற்றில் இயங்குவதாக இந்நூல் வரைந்துகாட்டுகிறது. இவ்வனுப வம் இறையூக்கம் பெற்ற சிக்கல் மிக்க அமைப்பை எடுத்துக்காட்டுகிறது.

இந்நூலின் இறுதி வடிவம், இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்த காலத் தைச் சேர்ந்ததாகும்.

4. திட்டம்:- கலப்புத் தொகுப்பான இந் நூலில் கருத்து ஒருமைப்பாடு இல்லை; திட் டம் இல்லை. சமூகம் சார்ந்த சட்டங்களும் ஒழுங்குகளும் அடிக்கடி இடையே புகுந்து வரலாற்று நிகழ்ச்சியுரைப் போக்கைத் தடை செய்கின்றன. ஆகையால் இந்நூலுக்குத் தெளிவான ஒருமைப்பாடுடைய திட்டம் அளிப்பது கடினமாகும். எனவே, பின்வரும் திட்டம் தோராயமாகத்தான் இருக்கமுடியும். இஸ்ராயேலர் தங்கியிருந்த நிலப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு முப்பெரும் பகுதிகளாக இந்நூலைப் பிரிக்க லாம். அத்திட்டம் பொதுவாக இப்போது ஏற்றுக் கொள்ளப்படும்.

1. சீனாயில் இறுதி நாட்கள் (1:1-10:10)

2. சீனாயிலிருந்து மோவாபுக்குப் பயணம் (10:11-22:1)
3. மோவாபு சமவெளியில் நடந்தவை (22:2-36:13)

5. சிறப்புக் கருத்துக்கள்:-

5.1) மக்கள்:- சீனாய் மலை அடிவாரத்தில் இஸ்ராயேலர் மக்கள் ஓராண்டு தங்கினர். இது அவர்கள் ஒரு சமய, அரசியல் அமைப்புப் பெற உதவிய மிக முக்கியமான காலமாகும். ஆனால் வேறுபாடு உடைய பலரையும், நிலையான உறுதியான ஒற்றுமையுடைய அமைப்பாக்கத் தவறிவிட்டனர் என்றே கூற வேண்டும். பாலைவனப் பயணத்தின்போது ஏற்படும் பல கிளர்ச்சிகள் இதற்குச் சான்று பகருகின்றன. இந்தக் கிளர்ச்சிகளும், பலவந்தமும் மிகுதியாக, மக்களின் ஒரு பகுதி மோசேயின் தலைமையை எதிர்க்கும் அளவுக்குப் போயிற்று. இவையாவும் சீனாயில் மக்கள் யாவேயுடன் செய்து கொண்ட உடன்படிக்கை, கட்டாயத்தாலோ பலவந்தத்தாலோ செய்து கொண்டது அன்று என்று காட்டின. ''ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம்'' என்று மக்கள் கூறிய போது (யாத் 24:7) அவர்கள் விரும்பித் தன்னுரிமையுடன் இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொண்டனர். கட்டாயத்தாலோ, பயத்தாலோ அன்று. ''ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம்'' என்ற கூற்றை யாத்திரையாகமத்தில் பல தடவை காண்கிறோம். ஆனால் எண்ணிக்கை நூலுக்கு வரும் போது, இத்தகைய மனப்பான்மையை நாம் காண்பதில்லை. மாறாக, ''முணுமுணுத்தனர், முறையிட்டனர்'' போன்ற வாக்குகள் அடிக்கடி மலிந்துகிடக்கின்றன. ஆகையால் இந்நூலைக் கிளர்ச்சியின் நூல் என்றோ, சோதனையின் நூல் என்றோ அழைப்பது சாலப் பொருந்தும். இந்நூல் முழுவதும் உள்ளார்ந்த நெருக்கடி நிலை மிகுந்து காணப்படுகிறது. வெறும் நிகழ்ச்சிகளை மட்டும் கொண்டிருக்கவில்லை. இது ஒன்றே, இந்நூலில் வரும் வரலாற்றுப் பாரம்பரியத்தின் உண்மைத் தன்மைக்கு ஆற்றல் மிக்க சான்றாக அமைகிறது.

5.2) பெட்டகம்:- சீனாய் மலையடிவாரத்தில் ஏறத்தாழ ஓராண்டு தங்கியபின் இஸ்ராயேலர் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். பாளையங்களை அமைக்கவும், நீக்கவும் நிலையான ஒரே வகையான செயல்முறை கடைப்பிடிக்கப்பட்டது. இது மக்களிடையே குழப்பம் ஏற்படுவதைத் தவிர்த்தது. திருத்தலத்தையும் அதைச் சார்ந்த பொருட்களையும் தூக்கிச் செல்லும் பணி லேவியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது (எண் 3:4.9) இஸ்ராயேலர் பயணம் செய்தபோது உடன்படிக்கைப் பெட்டகத்திற்கு மிகுந்த சிறப்பு அளிக்கப்பட்டது. பெட்டகம் தூக்கப்படும்போது, மோசே ''ஆண்டவரே எழுந்தருளும் உம் பகைவர் சிதறுண்டு போகவும், உம்மைப் பழிக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப் போகவும் கடவார்களாக'' என்பார். அது இறக்கப்படும்போதோ ''நீர் இஸ்ராயேலர் என்னும் பெரும்படையிடம் திரும்புவீராக'' என்பார் (எண் 10:35-36). சீனாய் மலையடிவாரத்தில் தங்கியிருந்த காலத்திலிருந்த உடன்படிக்கைப் பெட்டகத்துடன் யாவேயின் பிரசன்னம் கொண்டிருந்த தொடர்பை ஆழ்ந்த நம்பிக்கையுடன் இஸ்ராயேலர் ஏற்றுக் கொண்டனர். ஆகையால் இறைவனுடைய பாதுகாப்பைப் பெறுவதற்கு, எல்லாச் செயல்களும் பெட்டகத்தைச் சுற்றி உருவெடுத்தன.

5.3). சீனாயிலிருந்து காதேசுவரை:- பயணத்தின்போது வரிசை ஒழுங்குமுறை சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. எத்திரோவின் மகன் கோபாவு வழிகாட்டினார். ஆனால் சிறிது இடுக்கண் ஏற்பட்டாலும் அதிருப்தியாளர் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டத் தவறவில்லை. அவர்கள் துய்த்த முதல் நெருக்கடி நிலை உணவும், குடிநீரும் இல்லாமையாகும். மக்களிடையே குழப்பமும் கிளர்ச்சியும் எவ்வளவு இருந்ததென்றால், ஆரோனும் மிரியாமும்கூட மோசேயை எதிர்க்கத் தலைப்பட்டனர் (12:1-16). யாவே மீண்டும் மீண்டும் தலையிட்டு மக்களை நெருக்கடி நிலையிலிருந்து காப்பாற்றுகிறார். கிளர்ச்சி செய்பவர்களைத் தண்டிக்கிறார். மோசேயும் மக்களும் சென்ற பாதை,

பாரான்பாலையில் சீயோன் மேட்டுநிலத்திற்கும் அக்காபாவின் வடக்கிலுள்ள எசியோங் கெபேர் கடற்கரை மலைகளுக்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்கு வழியாகச் சென்றது. அரபா ஓடையை ஒட்டிய உயர் முகடுகள் வழியாகச் சென்று நெகேபுப் பகுதியிலுள்ள காதேசுக்கு வந்து சேர்ந்தனர்.

5.4) காதேசில்:- பாரானில் இஸ்ராயேலர் நீண்டகாலம் தங்கியதாகவும், காதேசில் சிறிது காலமே தங்கியதாகவும் குருக்கள் பாரம்பரியம் கூறுகிறது. ஆனால் இஸ்ராயேலர் காதேசில் பல நாட்கள் தங்கியதாக உபாகம ஆசிரியர் கூறுகிறார் (உப 1:46). காதேசிலிருந்து புறப்பட்டு யாரேத்து என்னும் ஓடையைக் கடக்கும்வரை (2:14) 38 ஆண்டுகள் எடுத்ததாகக் கூறுகிறார். யாவே, எலோகிம் பாரம்பரியங்களும் இஸ்ராயேலர் காதேசில் பல ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறுகின்றன. பாரான் பாலைவனப் பகுதியும் காதேசைச் சுற்றிய பாலைவனப் பகுதியும் ஒரே நிலப்பகுதியையே குறிக்கின்றன என்று ஏற்றுக்கொண்டால் மேற்கூறப்பட்டவை ஒத்துப் போவதைக் காணலாம்.

காதேசிலிருந்து, கானான் நாட்டைத் தெற்கிலிருந்து கைப்பற்ற மோசே விரும்பினார். இதற்காகக் கானான் நாட்டையும் அதன் மக்களையும் மேற்பார்வையிட்டு மதிப்பீடு செய்ய ஒற்றர்களை மோசே அனுப்பினார். இவர்கள் சென்று கானான் நாடு முழுவதையும் பார்வையிட்டதாகத் தெரிகிறது. ஒரு பாரம்பரியப்படி இவர்கள் வடக்கில் உள்ள கம்மாத்தின் நுழைவாயில்வரை (எண் 13:22) சென்றதாகத் தெரிகிறது. இவ்வொற்றர்களில் பலர் திரும்பி வந்து கானானியர்களைப்பற்றிய பயங்கரக் கதைகள் கூறினர். இக்கதைகள் இஸ்ராயேலரிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. கானானியர்களை வெற்றிகொண்டு அவர்கள் நாட்டைக் கைப்பற்றுவது முடியாத காரியம் என்று எண்ணினர். யோசுவாவும் காலேபும் கானான் நாட்டின் உண்மை நிலையை எடுத்துக் கூறினர். மற்ற ஒற்றர்கள் இதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். மக்களும் பொய் சொல்பவர்கள் சார்பாகவே இருந்தனர். இந்நிலையில் மக்களுக்குள் கிளர்ச்சியெழுந்தது. மக்கள் அனைவரும் மோசேக்கு எதிராக இரவு முழுவதும் கூச்சலிட்டுக் கிளர்ச்சி செய்தனர். ''நமக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கே திரும்பிப் போகலாம்'' என்று ஒருவருக்கொருவர் கூறினர் (எண் 14:1-4). இறைவன் சினந்து அவர்களை அழிக்க விரும்புவதாகக் கூறுகிறார். மோசே வேண்டுதலால் அமைதியடைந்து, குற்றம் செய்தவர்கள் யாவரும் வாக்கு அளிக்கப்பட்ட நாட்டில் நுழைய மாட்டார்கள் என்று இறைவன் தண்டிக்கிறார். ஆண்டவருக்கு மக்கள் அளித்த இந்த அவமதிப்பான நடத்தைக்கு ஈடு செய்ய அவர்கள் நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் அலைந்து திரியவேண்டும் (எண் 14:32-35). ''நாற்பது ஆண்டுகள்'' என்பது ஒரு தலைமுறைக் காலத்தைக் குறிக்கச் செமித்தியர் பயன்படுத்தும் ஒரு முழுமையான எண்ணாகும். ஆகையால் நமது கணிப்புப்படி இருபத்தைந்து ஆண்டுகள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் கிளர்ச்சியாளர்கள் மனநிறைவடையவில்லை. அவர்களாகவே கானானியர்களையும் அமலேக்கியர்களையும் தாக்க முற்பட்டனர். ஆனால் ஓர்மா என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டனர் (எண் 14:40-45). இதன்பின் ஒரு புதிய பணிவுள்ள தலைமுறை உருவாகி வளரும்வரை காதேசைச் சுற்றியுள்ள பகுதியில் தங்க மோசே முடிவெடுத்திருக்க வேண்டும்.

காதேசைச் சுற்றிப் பல புகழ்பெற்ற நீரூற்றுக்கள் இருந்தன என்று நமக்குத் தெரிய வருகிறது. இவை பெரும் மக்கள் கூட்டத்திற்குப் போதியன. ஓர் அளவு பயிர் செய்யவும் உதவின. காதேசு வழியாகப் பல வழிகள் எல்லாப் பக்கங்களிலும் சென்றன. இது பயணத்திற்கும் வணிகத்திற்கும் பெரிதும் பயன்பட்டது. இவ்விடத்தில் தங்கி இஸ்ராயேல் ஓரளவு நிலையான வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டும். இக்காலத்தில் கோராகின் கட்சி, தாத்தான், அபிராம் தீர்ப்பிடப்படுதல் என்பன சிறப்புமிக்கனவாகும்.

5.5) கோராகின் கட்சிப் பிளவு:- கோராகும் அவனைச் சார்ந்தவர்களும் மோசே, ஆரோன் ஆகியோரின் அதிகாரத்துக்கும் பதவிக்கும் எதிராக எழுந்து கிளர்ச்சி செய்தனர். இவர்கள் செய்த கிளர்ச்சி ஒரு சமயக் கிளர்ச்சியாகும். குருக்கள் பாரம்பரியம் இதை விவரிக்கிறது. கோராகும் அவனைச் சார்ந்தவர்களும் நடத்திய இச்சமயக் கிளர்ச்சி எண் *16:3. 11. 16-24*-இல் விவரிக்கப்படுகிறது.

கோராகு லேவியர் இனத்தைச் சார்ந்தவன். அவனும் இன்னும் *250* எதிர்ப்பாளரும் சேர்ந்து கிளர்ச்சி செய்தனர். மோசேயும் ஆரோனும் மட்டும் இதுவரை செய்துவந்த குருத்துவ வேலைக்கு மாறாக எதிர்த்தெழுந்தனர். அதற்கு உரிமை கொண்டாடினர். இக்கிளர்ச்சி, சந்திப்பின் கூடாரத்தில் கூடிய மக்கள் சபைமுன், கடும் தேர்வு முறையால் தீர்க்கப்படுகிறது. ஆரோனும் கிளர்ச்சியாளர் ஒவ்வொருவரும் தனது சொந்தத் தூபக்கலத்தில் தூபம் எழுப்பிய நிலையில் சந்திப்பின் கூடாரத்தின் முன் ஆண்டவரின் தீர்ப்புக்காகக் காத்து நிற்க வேண்டும். அப்படியே செய்தனர். ஆண்டவரிடமிருந்து தீ வந்து கிளர்ச்சியாளர்களைச் சுட்டெரித்தது. அவர்களுடைய தூபக் கலசங்கள் தகடாக அடிக்கப்பட்டு, பீடத்திற்கு உறையாயிற்று. இந்த உறை, ஆண்டவரது பீடத்தைக் குருக்கள் மட்டும் அணுகலாம் என்று இஸ்ராயேலர்களுக்கு நினைவுபடுத்தும்.

5.6) தாத்தான், அபிராம் கிளர்ச்சி:- இதுவும் மோசே, ஆரோனின் அதிகாரத்துக்கு எதிரான தனிக்கிளர்ச்சியாகும். முன்னதோடு பின்னிப்பிணைக்கப்பட்டு ஒரே நிகழ்ச்சியுரையாகத் தரப்படுகிறது. இது காதேசில் நடந்த அரசியல் கிளர்ச்சியாகும். யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் இதை விவரிக்கின்றன. இது எண். *16:12-15. 25-34*-இல் விவரிக்கப்படுகிறது.

தாத்தானும் அபிராமும் லேவியர் குலத்தைச் சாராத பொது நிலையினர். மோசே தனக்கே எல்லா அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டதாகக் குற்றம் சாட்டிக் கலகம் செய்தனர். இதோடு பாலையில் கடின வாழ்வின் விளைவான முணு முணுப்பும், எகிப்தில் அனுபவித்த கடந்தகாலச் சுகங்களின் ஏக்கமும் சேர்ந்தன. அவர்கள் தங்களுடைய நடத்தையை விளக்குமாறு மோசே கூப்பிட்டனுப்பியபோது, இருவரும் வரமறுத்துவிட்டனர். ஆகையால் மோசே அவர்கள் தங்கியிருந்த இடம் சென்று கிளர்ச்சியாளர்களிடமிருந்து மக்களைப் பிரிந்திருக்கக் கட்டளையிட்டுத் தனது உரிமையை மெய்ப்பிக்கும்படி யாவேயை வேண்டினார். பூமி பிளந்து இருவரையும் அவர்கள் குடும்பத்தாரையும் அவர்கள் சொத்துக்களோடு விழுங்கிற்று. பழங்காலச் செமித்தியரின் குற்றத்தில் பொதுப்பொறுப்புக் கொள்கைப்படி இவ்விருவரின் பாவத்தால், அவர்களுடைய குடும்பங்களும் உடைமைகளும் கறை பிடித்தவையாயின. இந்நிகழ்ச்சி இஸ்ராயேலரிடையே ஓர் எச்சரிக்கையாகவும் படிப்பினையாகவும் நினைவுகூறப்பட்டது *(எண் 26:9-11; உப 11:6; சங் 105:17; சீரா 45:18-19).*

இவ்விரு நிகழ்ச்சிகளுக்குப் பின்னும் மக்களின் முணுமுணுப்புத் தீரவில்லை. இறைவனது சினம் அவர்களைக் கொள்ளை நோயால் அழிக்க முனைந்தபோது, மோசே தலையிட்டு மன்றாடி அதை நீக்குகிறார்.

5.7) ஆரோனின் குருத்துவம் மீண்டும் நிறுவப்படுகிறது:- ஒவ்வொரு குலத்தவரையும் குறிக்க ஒரு கோல், சந்திப்பின் கூடாரத்துக்குள் வைக்கப்பட்டது. அவற்றில் லேவியர் குலத்தைக் குறித்த ஆரோனுடைய கோல் மட்டும் தளிர்த்துப் பூத்திருந்தது. அதையும் பெட்டகத்துக்குள் வைக்கும்படி இறைவன் கட்டளையிட்டார். இந்நிகழ்ச்சியின் வழியாக ஆரோனின் குருத்துவம் மக்கள் முன் நிறுவப்பட்டு உறுதி செய்யப்பட்டது *(எண் 17).*

இதன்பின் எண்ணிக்கை நூல் *18;19*-ஆம் அதிகாரங்களில் பல சட்டங்களைக் கொண்டுள்ளது.

5.8) மோசேயின் தவறு:- காதேசில் மோசேயின் உடன் பிறந்தாள் மிரியம் இறந்

தாள். தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் முணுமுணுத்தனர். யாவே மக்களுக்குப் பாறையிலிருந்து நீர் கொடுக்குமாறு மோசேக்குக் கட்டளையிடுகிறார். அவ்வி தமே நீர் வருகிறது. இது மெரிபா நீர் என்றழைக்கப்பட்டது. இதில் இறைக்கட்ட ளையைச் செயல்படுத்தும்போது மோசே இருமுறை பாறையை அடித்தார். இதில் மக்களது முற்றிய நாட்பட்ட நோயாகிய அதிருப்தியின் விளைவாக மோசே இறைவ னது பொறுமையை ஐயுறத் தொடங்கினதா கத் தெரிகிறது. இதற்காக வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு மக்களை இட்டுச் செல்ல மாட் டார் என்று மோசேயை இறைவன் தண்டிக்கி றார் (எண் 20). இத்தண்டனை பெறுவதற்கு மோசே ஏதாவது செய்திருக்க வேண்டும் என்பர். ஆனால் இது என்ன தவறு என்று உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. சில விளக்க ஆசிரியர்கள், மோசே ஒழுக்கக்குறை வாக நடந்திருக்கவேண்டும். அதற்காக இப் படித் தண்டிக்கப்பட்டார்; பிற்காலப் பதிப் பாசிரியர்கள் வேண்டுமென்றே இந்நிகழ்ச் சியை மறைத்துவிட்டுத் தண்டனையை மட் டும் கொடுக்கின்றனர் என்பர். இவ்வகை விளக்கத்திற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரிய வில்லை. வேறு பலர் எண்ணிக்கை நூல் வாசகத்திலேயே விடை காண முயலுகின்ற னர். இவர்கள் கூறுவது, மக்களின் தாகமும் முறையிடுதலும், யாவேயின் இறையாற்ற லுக்கு மேலும் சான்று கூறுவதற்கும், அருஞ் செயலால் நீரளித்து இயற்கையின் மேல் யாவே கொண்டுள்ள ஆட்சியை எடுத்துக் காட்டவும் ஒரு வாய்ப்பாகும். இச்சூழ்நிலை யில் கடவுளின் கட்டளைக்குப் பணிவதற் குப் பதிலாக, மோசே மக்களை அவர்களின் முறையிடுதலுக்காகக் கடிந்து கொள்ளுகி றார். ஆகையால் இது ஒரு தேவையற்ற குறுக்கீடாகும். இது இறை நோக்கத்தைத் திரித்துக் காட்டுகிறது. ஆகையால் மோசே தண்டனை பெறுகிறார் என்பர். வேறு சிலர் சங்கீதக் கருத்தைப்பின்பற்றி மோசே சினங் கொண்டு கொடும் சொற்களைப் பயன்படுத் தினார் என்பர் (சங் 105:33). உபாகமக் கருத் துப்படி (உப 1:37) இஸ்ராயேலர் கானானி யர்களை எதிர்த்துப் போராடவில்லை. இதற்கு மோசே இசைந்திருக்க வேண்டும். அதற்காகத் தண்டிக்கப்படுகிறார் என்பர். இவ்வாறு பலவாறு விளக்கம் அளிக்கலாம். ஆனால் இவ்வளவு பெரிய தண்டனைக்குக் காரணமான மோசேயின் தவறுபற்றி ஒன்றை யும் உறுதியாகக் கூற முடியாது.

5.9) காதேசிலிருந்துமோவாபுநாடுவரை:- எண் 20:21-இல் புதியதொரு பகுதி தொடங் குகிறது. சுற்றி வளைத்துச் சென்று, யோர் தான் நதிக்குக் கிழக்கேயுள்ள பகுதியை அடைந்து அங்கிருந்து பாலஸ்தீனத்தைக் கிழக்கிலிருந்து தாக்க முடிவு எடுக்கிறார் மோசே. காதேசிலிருந்து ஏதோம் நாட்டின் அரச பாதை வழியாக அந்நாட்டைக் கடந்து செல்ல அனுமதி கேட்டு ஏதோமிய அரசனுக் குத் தூது விடுகிறார் மோசே. அவன் அனுமதி தர மறுத்ததோடு இஸ்ராயேலர்களுக்கு எதிராகப் போர் வீரர்களை அனுப்பினான். ஆகையால் மோசே ஏதோம் நாட்டைச் சுற்றி மக்களை இட்டுச் சென்றார். இதன்பின் இஸ் ராயேலரின் பாதையை வரையறை செய்வது கடினமாகும். காதேசின் வடக்கிலும், சாக்க டலிலிருந்து ஒரு நாள் பயண தூரத்திலுள்ளது மான ஜெபெல் மதுராகு எனப்படும் ஓர் மலையை அடைந்தனர். இங்கு எகிப்திலி ருந்து புறப்பட்ட 40-ஆம் ஆண்டில் ஆரோன் இறந்தார் (எண் 20:22-28). பின் அரபா வழி யாக வடக்கே சென்று, பூனோன் சுரங்கங்க ளையும் ஓபோத்தின் ஊற்றுகளையும் கடந்து, சாக்கடலுக்குத் தெற்கிலுள்ள பள் ளத்தாக்கை அடைந்தனர். இது தெற்கிலுள்ள ஏதோமுக்கும் வடக்கிலுள்ள மோவாபுக்கும் இடையேயுள்ள இயற்கை எல்லையாகிய யாரேத்து ஓடைக்கு மக்களைக் கொண்டு வந்து சேர்த்தது. மோவாபு நாட்டாரோடு போராடுவதைத் தடுக்க, மோசே மக்களைக் கிழக்கில் இட்டுச் சென்று வடக்காகத் திரும்பி, எமோரிய மன்னன் சீகோனது நாட் டிற்கு அழைத்து வந்தார். இவ்வரசன் தனது நாடு வழியாக இஸ்ராயேலர் அதைக் கடந்து செல்ல இசைவுதர மறுத்தான். இஸ்ராயேலர் அவனோடு போர்செய்து வென்று, எமோரி யர் நகரங்களையும், தலைநகரான செசிபோ னையும் அழித்தனர் (21:21-26). இஸ்ராயே

லர் திருப்பயண முன்னேற்றத்தில் இன்னு மொரு தடை இருந்தது. இஸ்ராயேலர் போர் செய்து பாசான் அரசனான ஓகுவை வென்று அவனது நாட்டைக் கைப்பற்றினர் (21:33-35). இவ்வெற்றியால், யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள ஆர்னோனுக்கும் பாசானுக் கும் இடையிட்ட பகுதி இஸ்ராயேலர் ஆட் சியின் கீழ் வந்தது. இவ்வாறு இஸ்ராயேலர் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள மோவாபு சமவெளியில் எரிகோவைச் சுற்றிப் பாளை யம் இறங்கித் தங்கினர். பாலஸ்தீனத்தைத் தாக்க முன்னேற்பாடு செய்தனர்.

எண் 35:48-இல் எகிப்திலிருந்து புறப் பட்ட எபிரேயர்கள் தங்கியதாகப் பல இடங் களில் பெயர்கள் கொடுக்கப்படுகின்றன. சில இடங்களை நாம் அடையாள உறுதி செய்யலாம். மற்றப்படி இப்பட்டியல் பய னுள்ள விவரம் ஒன்றையும் தரவில்லை. இப்பட்டியலில் காணப்படும் பல பெயர்கள் பழைய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப் படவில்லை. இன்றும் அறியப்படாதவை களாகவே இருக்கின்றன.

5.10) கொள்ளிவாய்ப் பாம்பும் வெண் கலப் பாம்பும்:- சீனாயிலிருந்து மோவாபு நாட்டிற்கு இஸ்ராயேலர் செய்த திருப்பய ணத்தில் மற்றொரு நிகழ்ச்சி சிறப்புடையதா கும். அது கொள்ளிவாய்ப் பாம்புகளால் இஸ்ராயேலர் துன்புற்றதாகும் (எண் 21:4-9). தங்கள் உறவினனான மோவாபு அரசனோடு போரைத் தடுக்கும் நோக்கத்தோடு மோவாபு நாட்டைச் சுற்றிச் சென்றபோது மக்கள் பொறுமையிழந்து முணுமுணுத்த னர். இதைக் கண்ட இறைவன் கொள்ளி வாய்ப் பாம்புகளை அனுப்பி அவர்களைத் துன்புறுத்தினர். மக்கள் மோசேயிடம் மன் றாட, மோசே இறைவனிடம் மன்றாடினார். இறைவன் கட்டளைப்படி மோசே ஒரு வெண்கலப்பாம்பைச் செய்து ஒரு கோலின் மேல் கட்டித்தூக்கி வைத்தார். உண்மையான பாம்புகளால் கடிபட்டவர்கள் இந்த வெண் கலப்பாம்பைப் பார்த்தால் குணமடைந்தனர். இப்பாம்புகள் ''எரியும்'' என்று பொருள் படும் ''செரபிம்'' என்ற பெயரால் அழைக்கப் படுகின்றன. அவை பகட்டான சிவப்பு நிறத்தைக் கொண்டிருந்ததாலோ, அவை கடித்தபோது எரியும் உணர்ச்சியை உண்டு பண்ணியதாலோ இப்பெயர் பெற்றிருக்க லாம். இக்காலத்தில் பெயினாங் என்றழைக் கப்படும் பூனோனில், பழங்காலத்தில் செம் புச் சுரங்கங்களும், வார்ப்படத் தொழிற் சாலைகளும் இருந்தன. இது வெண்கலப் பாம்பு நிகழ்ச்சி இவ்விடத்தை ஒட்டி நடந்தி ருக்கலாம் என்று எண்ண இடம் தருகிறது. வெண்கலப்பாம்பு செய்து கோவில் நாட்டு தல் உண்மைப்பாம்புகளை அடக்குவதாக வும் அவற்றைத் துன்பமற்றவைகளாகச் செய் வதாகவும் தோன்றுகிறது. பாம்புகளின்மேல் கொண்ட அடையாள வெற்றி, இந்தப் பாம்பு களின் வாதையையே மக்களிடமிருந்து நீக்கு வதாகக் காட்டப்படுகிறது. கானானியரின் வழிபாட்டில் வெண்கலப்பாம்பு இடம் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. காதேசு தேவதை வழிபாட்டில், பாம்பு உயிரின் அடையாளமாகும். கெசேர் என்னுமிடத்தில் நடந்த புதை பொருள் ஆராய்ச்சியில், வெண் கலப்பாம்புகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எசக்கியாவின் ஆட்சியில்கூட மோசே செய்த தாகக் கருதப்பட்ட பித்தளைப் பாம்புக்கு இஸ்ராயேலர் தூபக் காணிக்கை செலுத்திய தாக அறிகிறோம் (2 அர 18-4).

யோவா 3:14-இன்படி இப்பாம்பு, கிறிஸ்து சிலுவையில் அளிக்கும் மீட்புக்கு இறைவாக்கு அடையாளமாகும். இரண்டி லும் உயர்த்தப்பட்ட அடையாளம் அதில் விசுவாசித்து நம்புவோருக்கு உயிர் அளிக்கி றது.

5.11) மோவாபுநாட்டில் பிலயம் கதை:- இஸ்ராயேலர், தங்கள் பயணத்தின்போது ஏதோம், மோவாபு, அம்மோன் ஆகிய நாடு களில் புகவில்லை. இவர்கள் ஒருவகையில் இஸ்ராயேலருக்கு உறவினரானதால், இவர் களோடு போராடுவதை இஸ்ராயேலர் தடுக்க முயன்றனர். எமோரியர்மேல் இஸ்ரா யேலர் கொண்ட வெற்றி மோவாபு அரச னான பாலாக்கை அஞ்சச் செய்தது. ஆனால் உடனே அவன் இஸ்ராயேலரோடு போர்

புரியவில்லை. இஸ்ராயேலருக்குச் சார்பாக இயற்கைக்கு மேலானதொரு ஆற்றல் செயல் படுவதாக உணர்ந்தான். ஆகையால் அவர்க ளைச் சாபங்களாலும் மந்திரத்தாலும் கட்டுப் படுத்தி அடக்க முயலுகிறான். அம்மோன் நாட்டைச் சேர்ந்தவனும் பெயோரின் புதல் வனும், குறி சொல்லுவதில் வல்லவனும் ஆன பிலயாமை, இஸ்ராயேலர் பாளையத் தின்மேல், அழிக்கும் ஆற்றல்மிக்க சாபங்க ளைச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டான். ஆனால் யாவேதான் இஸ்ராயேலரைச் சபிப் பதைத் தடுக்கிறார் என்று பிலயாம் உணர்ந்து மோவாபுக்குப் போக மறுத்து விடுகிறார். பிலயாமுக்கு இரண்டாவது தூது அனுப்பி வருந்தி அழைத்ததால் பிலயாம் மோவாபுக் குச் செல்லுகிறார். பாலாக்கு இஸ்ராயேல ரைச் சபிக்கும்படி பிலயாமைக் கேட்டுக் கொண்டாலும் பிலயாம் வாயினின்று ஆசீர் அளிக்கும் இறைவாக்கே வருகிறது. பிலயா மைப், பாலாக்கு பாகால் மேடுகளுக்கு அழைத்துச் சென்று இஸ்ராயேலரைச் சபிக்க வேண்டுகிறான். மாறாகப் பிலயாம் இஸ்ரா யேலரின் இறைத் தேர்தலையும் அவர்களின் பெரும் எண்ணிக்கையையும் நீதியையும் போற்றுகிறார். பின் பாலாக்கு பிலயாமைப் பிசுகா என்ற இடத்திற்கு அழைத்துச் சென் றான். இஸ்ராயேலருக்கு அளித்த ஆசீரைத் திரும்ப எடுத்துவிடுமாறு மன்றாடுகிறான். பிலயாம் அப்படிச் செய்ய மறுத்து விடுகி றார். ''கடவுள் (இஸ்ராயேலை) எகிப்திலி ருந்து புறப்படச்செய்தார். அவரது வலி மையோ காண்டா மிருகத்தின் வலிமை போன்றது'' (எண் 23:22). இது இஸ்ராயேல ருடைய ஆசீரின் அடிப்படையாகும். யாக் கோபுக்கு எந்த மந்திரமும் வேலை செய் யாது. இஸ்ராயேலுக்கு எதிராக எந்தச் சாப மும் செல்லாது. இஸ்ராலேயர் சிலைவழி பாட்டை ஏற்க மறுப்பதும் ஓர் இறைவனா கிய யாவேயில் கொண்டுள்ள விசுவாசமும் பிறர் அவர்களை வெற்றி கொள்ள முடியாத வாறு செய்கிறது. அவர்கள் தனது இரையை அமைதியோடு உண்ணும் சிங்கம் போன்ற வர்கள். இக்கூற்றால் நிறைவு அடையாத பாலாக்கு பிலயாமைப் பெகோர் மலை உச்சிக்கு அழைத்துச் சென்று இஸ்ராயேல ரைச் சபிக்குமாறு வேண்டினான். ஆவி, பிலயாமை மேற்கொண்டு, இஸ்ராயேலரை ஆசீர்வதிக்கும்படி செய்தது.. இவ்வாறு இஸ் ராயேலைச் சபிக்கப் பிலயாம் செய்த முயற்சி கள் தோலவியுற்று ஆசீராய் மாறின. இதைக் கண்ட பாலாக்கின் நம்பிக்கையெல்லாம் அழிந்தது. பல முயற்சிகளோ, புதிய இடமோ, ஏற்கனவே செய்த சடங்கோ எது வும் யாவே தம் மக்கள்பால் கொண்டுள்ள பாதுகாப்பைக் கெடுக்க முடியவில்லை. பிலயாமை அவரது நாட்டிற்கு அனுப்பிவிட் டான். பாலாக்கு கோராத பிலயாமின் நான் காவது இறைவாக்கு, சினம் கொண்ட பாலாக்கு மன்னனுக்குச் செய்தியாக அமை கிறது. இதிலே பிலயாமின் இறைவாக்கு உச்சநிலை அடைகிறது. இது யாக்கோபின் குலத்தில் உதிக்கும் விண்மீனையும், இஸ்ரா யேலின் எதிரிகளை அழிக்கும் அரசனையும் முன்னறிவிக்கிறது. இஸ்ராயேலர் மோவா பைத் தாக்கி அதை வெற்றி கொள்வதையும் முன்னறிவிக்கிறது (24:17). இவ்விறைவாக் கில் ஒரு பகுதி தாவீது மன்னனில் நிறைவு பெறுகிறது. இஸ்ராயேலின், உறுதிமொழி பெற்ற மன்னனாகத் தாவீது, சுற்றியுள்ள பகைவர் நாட்டையெல்லாம் வென்று தனது அரசின் கீழ்க்கொண்டு வந்தார் (2 சாமு 2:13-4). இவ்விறைவாக்கு முழுமையாக நிறைவேறுவதற்கு இரண்டாம் தாவீதாகிய கிறிஸ்துவின் வருகைவரை காத்திருக்க வேண்டும். அவர் அஞ்ஞான உலகப் பேரரசு களின் அழிவின்மேல் புதியதோர் என்றும் நிலைக்கும் அரசை அமைப்பார் (உப 2:44; 7:14-27). சிலர் இவ்விறைவாக்கு கிறிஸ்து வைக் காணவந்த ஞானிகளின் வரலாற்று அடையாளத்தைச் சுட்டுகிறது என்பர் (மத் 2:1-12). ஆகையால் எண் 23-24-இல் வரும் இறைவாக்குகள் தாவீதின் காலத்தை அதா வது கி.மு. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந் தவை என்று சிலர் கூறுவது சரியன்று. இந்நிகழ்ச்சியில் காணப்படும் இலக்கண மும் நடையும் பிற்காலத்தைச் சார்ந்ததாகத் தெரியவில்லை. ஆகையால் அறிஞர் பலர் இந்நிகழ்ச்சியுரை கி.மு. 13 அல்லது 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர்.

இந்நிகழ்ச்சியுரையில் சிறப்புப் பெறுவது பிலயாமின் கழுதை பேசிய நிகழ்ச்சியாகும் (எண் 22:22-35). இது பொது மக்கள் பாணியில் நாட்டுக் கழுதையாகத் தரப்படுகிறது. கழுதை பேசுவது போன்றவை கழுதையின் விநோதநடத்தையைக் கண்டு திகைத்த பிலயாமின் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளை, நாடகப் பாணியில் எடுத்துக் கூறப் பயன்படுகின்றன. இக்கதை இறைவன் இயற்கையின் மேல்கொண்ட ஆதிக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. இயற்கை உயிருள்ளதோ உயிரற்றதோ, எப்படியாயினும், அவ்வியற்கையின் மேல் இறைவன் முழு ஆதிக்கம் கொண்டுள்ளார். தமது சொல் ஆற்றல்மிக்க விதத்தில் வெளிப்பட இயற்கையின் எந்த வடிவத்தையும் பயன்படுத்த வல்லவர்; அவர் பயன்படுத்துவார். இந்நிகழ்ச்சியில் துன்புறுத்தப்பட்ட சுமை சுமக்கும் விலங்கின் வழியாகப் பேசுகிறார். பிற மதத்தைச் சேர்ந்த குறிசொல்பவர் வழியாகத் தமது ஆற்றல் மிக்க சொல்லை வெளிப்படுத்துகிறார். தன்னில் விசுவாசம் கொள்ளாதவனையும் தனது இறைவாக்குரைப்பவனாகத் தற்காலிகமாக இறைவன் பயன்படுத்த முடியும், அவனும் அவருக்குப் பணிசெய்வான். அவன் சொலக்கூடும் (எண் 23:12; 24:13) சாபமோ ஆசீரோ, அவைபற்றிப் பேசப்பட்ட சொல்லின் உள்ளார்ந்த ஆற்றல் தவறாது நிறைவேறியே ஆகும் என்ற பழைய ஏற்பாட்டுக் கருத்து இக்கதையில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இந்நிகழ்ச்சியுரை இறைவாக்குரைக்கும் ஆவி இஸ்ராயேலுக்குப் புறம்பேயும் செயல்பட்டது என்பதைக் காட்டுகிறது. பிற மதத்தினரிடையேயும் யாவேயின் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட இஸ்ராயேலரின் ஆற்றல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இஸ்ராயேலரோ பலவீனமானவர்கள். ஆயினும் அவர்களிடையே மறைபொருளான அறிவுக்கும் எட்டாத இறையாற்றல் செயல்பட்டு, அவர்களைக் கட்டாயப் படுத்தி, இறைவன் உறுதியளித்த நாட்டைக் கைப்பற்றி உடைமையாக்க அவர்களை இட்டுச் சென்றது. யாவே அவர்கள்முன் சென்று வழி நடத்தினார். இவ்வுண்மையைச் சுற்றியுள்ள நாடுகள் உணரத்தலைப்பட்டன.

இந்நிகழ்ச்சியுரையில் யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் இணைந்து இருக்கின்றன. அதன் விளைவாகச் சில முரண்பாடுகளும் உண்டு.

எண் 31:8-16; யோசு 13:22-இல் பிலயாம் வேறொரு கோணத்தில் காட்டப்படுகிறார். இங்கு அவர் இஸ்ராயேலரை யாவேயிடம் பிரமாணிக்கமின்மைக்கு இட்டுச் செல்லும் கருவியாகக் காட்டப்படுகிறார். அதனால் கொல்லப்படுகிறார். புதிய ஏற்பாட்டில் பிலயாம் ஒரு போலி வழிகாட்டியாக ஆதாயத்துக்காகத் தவறு செய்பவராகக் கருதப்படுகிறார் (2 பேதுரு 2:15; யூதா 11; திருவெளி 2:14). யூத ராபிகள் பிலயாமை இழிவாகவும் ஏளனமாகவும் கருதினர்.

5.12) பினகாசு:- தனது இறைவாக்குக் காட்சியில் பிலயாம் இஸ்ராயேலின் பலத்தின் உண்மையான ஊற்று என்ன என்று அறிந்துணர்ந்தார். அவர்கள் யாவேயிடம் கொண்டுள்ள விசுவாச அடிப்படையைத் தாக்கினால் ஒழிய அவர்களுக்கு யாரும் எதுவும் எவ்விதத் தீமையும் செய்யமுடியாது. ஆகையால் யாவேயிடம் கொண்ட விசுவாசத்தில் பிரமாணிக்கம் இழக்கும்படி இஸ்ராயேலைப் பாகால்பேயோர் வழிபாட்டுக்கு இழுக்கும்படி மேவாபு இனத்தவர்க்குப் பிலயாம் அறிவுரை கூறினார் (எண் 31:16). இதில் இவர்கள் வெற்றியும் கொண்டனர். இஸ்ராயேலர் பாகால்பேயோரை வணங்கினர். இவ்வழிபாட்டில் வழங்கப்படும் குடியில் மதியிழந்தனர். மோவாபு பெண்களோடு வேசித்தனம் செய்தனர். யாவேக்குப் பிரமாணிக்கமுள்ள இஸ்ராயேலர், மற்றவர்களின் நடத்தையைக் கண்டு சினந்தெழுந்து, அவர்களைக் கொன்று அழித்தனர். இப்படிப் பிரமாணிக்கமுள்ள இஸ்ராயேலர்களில் ஆரோனின் பேரனான பினகாக தான் காட்டிய ஆர்வத்தால் சிறந்து விளங்கினார் (எண் 25:6-9). இதற்குப் பரிசாக அவர் குருத்துவப் பணி பெறுகிறார். இப்படிப்பட்ட நிகழ்ச்சி மீண்டும் நடவாதிருக்கும் பொருட்டு, இறைவன் கட்டளைப்படி மதியான் நாட்டின்மேல் போர்

தொடுத்து இரக்கம் சிறிதும் இன்றி அவர்களை இஸ்ராயேலர் வெட்டி வீழ்த்தினர். அதில் பிலயாமும் இறந்தார் (எண் 31).

5.13) மோசேயின் இறுதி நாட்கள்:- மக்கள் கணக்கு எடுக்கப்படுகிறது. கானான் நாட்டைத் தாக்க வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்நிலையில் தன் வாழ்வின் இறுதி நெருங்கி வருவதை உணருகிறார் மோசே. இறைவன் மோசேயை அபாரீம் என்னும் மலைக்கு இட்டுச் சென்று அவருக்குக் கானான் நாட்டைக் காட்டுகிறார். தனக்கு வரவிருக்கும் முடிவை முன்னுணர்ந்து தன்மக்கள் இஸ்ராயேலர் வருங்காலத்தில் கொண்டிருக்க வேண்டிய சமய, அரசியல் அமைப்புகளில் மோசே கவனம் செலுத்துகிறார். இதை உபாகமத்தில் காணலாம்.

நெருங்கிவரும் முடிவை உணர்ந்த மோசே தனக்குப்பின் மக்களுக்குத் தலைமை தாங்கி, உறுதிமொழியளிக்கப்பட்ட நாட்டிற்கு இட்டுச்செல்ல ஒரு தலைவரை நியமிக்கிறார். யாவேயின் கட்டளைப்படி யோசுவாவின் மேல் தம் கைகளை விரித்து, தம் பதவியையும் அதிகாரத்தையும் யோசுவாவுக்கு அளித்து, அவரைத் தலைவராக்குகிறார். பின், வழிபாடு பற்றியும் போரில் கிடைக்கும் கொள்ளைப் பொருளைப்பற்றியும் சட்டங்கள் அளிக்கப்படுகின்றன. பின் மோசே யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள நாட்டைச் சில கோத்திரங்களுக்குள் பகிர்ந்தளிக்கிறார். பின் கானான் நாட்டைக் கைப்பற்றும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகளையும், கைப்பற்றிய பின் நாட்டைப் பகிர்ந்து கொள்வது பற்றியும் திட்டம் செய்கிறார். இந்நிலையில் எண்ணாகமம் முடிகிறது. இந்த அரசியல் சட்ட அமைப்புகளில் மோசே கவனம் செலுத்துகிறார். இதை உபாகமத்தில் காணலாம்.

6. வரலாற்று மதிப்பீடு:- பலவகைச் செய்திகளையுடைய இந்நூலின் வரலாற்று மதிப்பீடு என்ன? இதில் கவனம் செலுத்தும்போது, இருநிலைக் கோடிக் கருத்துக்களை நாம் தவிர்க்க வேண்டும். முதலாவது பழம் பாரம்பரியங்கள் அடங்கிய இத்தொகுப்பு நிகழ்ச்சிகளை அவை நடந்தவாறே துல்லியமாய் விவரிப்பதாக எந்த உரிமையும் கொண்டாடவில்லை. ஆகையால், சீனாய் மலையிலிருந்து கானான் நாட்டைச் சேரும்வரை இடையிட்ட காலத்தில் நடந்தவற்றைத் துல்லியமாய் அறிய விரும்புகிறவர்கள் தவறான நோக்கோடு இந்நூலை அணுகுகிறார்கள் எனலாம். இஃது ஓர் ஆவண ஏடன்று. இத்தகைய வரலாற்றை இஸ்ராயேலரால் எழுத முடியாது. அப்படிக் கூடுமாயினும், அத்தகைய இலக்கியத்தால் அவர்களுக்குப் பயன் இல்லை. அதில் ஆர்வமும் இல்லை; அக்கறையுமில்லை. அவர்களுக்கு வேண்டியது வரலாறு பற்றிய உட்பொருளாகும். இயற்கை கடந்த ஒரு நோக்கத்திற்காகச் செயல்மிக்க இறைவனின் இடையீடுகளை வெளிப்படுத்துவது இந்த உட்பொருளாகும். ''மீட்பு'' என்ற சொல் இதை நன்கு விவரிக்கிறது. இறைவன் ஏற்கனவே வரலாற்றில் செயல் ஆற்றியுள்ளார். இப்போது இங்குச் செயல் ஆற்றிக் கொண்டுள்ளரர். இனியும் வருங்காலத்தில் அவருக்கே தெரிந்த, அவருக்கே உரிய காலத்தில் உறுதியாக, இறுதியாகச் செயல் ஆற்றுவார். இக்காரணத்திற்காகத்தான் வரலாறு சிறப்புடையது என்று இஸ்ராயேலர் ஏற்றுக்கொள்வர். இஸ்ராயேலுக்குத் தனது தோற்றம், வளர்ச்சி, பாதுகாப்பு, ஒரு சாதாரண இயற்கையான நிகழ்ச்சியன்று; அது தகுதியில்லாத தனக்கு, இறைவன் அளித்த அன்புக் கொடையாகும். ஒரு சமய, இறை வரலாறு ஆகும்.

இதற்கு மாறாக, இறைவனது செய்தி மட்டும்தான் முக்கியம்; வரலாற்று நிகழ்ச்சிகள் தேவையற்றவை; தமக்குப் பொருந்தாதவை என்று இஸ்ராயேலர் கருதினர் என்று நாம் எண்ணினால் அது நம் தவறாகும்; இந்நூல் ஆசிரியர்களின் நோக்கைப் பொய்ப்பிப்பதாகும். இவ்வாசிரியர்களின் இறையியல் நோக்கு, விவிலியப் பாரம்பரியங்களின் பின் நிற்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் அடங்கிய உறுதியான அடிப்படைகளை ஒதுக்குவதில்லை; திரித்துக்கூறுவதில்லை. மனிதனது

வரலாற்றில் புகுந்துதான் இறைவன் மனி தனை மீட்டுள்ளார். காலம், இடம் ஆகிய மேடையில்தான் இஸ்ராயேலும் கிறிஸ்தவ னும் இறைவனைச் சந்திக்கின்றனர். ஆகவே வரலாற்று அடிப்படைகளை விவிலிய ஆசி ரியர்கள் புறக்கணிக்கமுடியாது;

வரலாறு, தொல்பொருள் பற்றிய ஆய்வு கள், எண்ணாகமத்தில் காணப்படும் இஸ்ரா யேலின் பாரம்பரியத்தின் அடிப்படை வர லாற்றுத் தன்மைக்குச் சான்று கூறுகின்றன. அதற்குரிய மதிப்பையும் மரியாதையையும் உயர்த்தியுள்ளன.

7. சமய மதிப்பீடு:- முன்பகுதியில் கூறியது போல் எண்ணாகமம், விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளின் இறையியல் உட்கருத்தில் முதலில் தனது கவனத்தையும் ஆர்வத்தை யும் செலுத்துகிறது. நிகழ்ச்சியுரைகள் தனிப் பட்ட குழுவினர்மீது கவனத்தை ஒருங்கு குவியச் செய்கிறது. இச்சமூகம், இறைவன் தன்னிடையே வாழுகிறார் என்கிற பெரு மையுடையதாகும். அவர்கள் பல தடவை இறைவனுக்குப் பிரமாணிக்கமில்லாது போகலாம். ஆயினும் அவர்கள் மையமும் ஊற்றும் எப்போதும் அவரே. அவர்களி டையே இறைவனது புனித இடம் அமைக் கப்பட்டது. இறைவனது பிரசன்னத்தால் கூடாரம் புனிதமாக்கப்பட்டது. மக்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது இறைவன் அவர்கள்மீது தனிப்பட்ட கவலை எடுத்துக்கொள்கிறார். அதே வேளையில் புனிதச் சட்டத்தில் வெளிப் படுத்தப்பட்ட தம் விருப்பத்திற்கு அவர்கள் முழுவதும் பணிய வேண்டும் என்று கோரு கிறார். தம் மக்களைப் பாதுகாக்கிறார்; சோதிக்கிறார். அவர்கள் அவருடைய மக் கள்; அவர் அவர்களின் இறைவன்.

குருக்கள் பாரம்பரியத்தால் போற்றப் பட்டு வந்த பல வழிபாட்டு ஒழுங்குகள் எண்ணிக்கைநூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை கானான் நாட்டில் நிலையாகக் குடியேறிய பிற்காலத் தைச் சேர்ந்தனவாகும்; மாறிய புதிய வாழ்க்கை நிலைக்குரியவையாகும். பய ணம் செய்யும் நாடோடி மக்களிடையே துல்லியமான மறை நாட்குறிப்பையும் விரி வான பலித்திட்டத்தையும் எதிர்பார்க்க முடி யாது. பல நூற்றாண்டுகளுக்குமுன் நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய பலித்திட்டத்தினுள் இவ்வளவு சட்டப்பகுதிகள் ஏன் புகுத்தப் பட்டன என்று நாம் வியக்கலாம். இச்சட்டங் கள் மோசேக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் சேர்க்கப்பட்டவையாயினும், அவை நிலையாகக் குடியேறிய சமய சமூக நிலையை எடுத்துக்காட்டினாலும், அவை மோசே வழியாக இஸ்ராயேலுக்கு அளிக்கப் பட்ட சட்டத்தின் வளர்ச்சியாகும், விரிவா கும் என்று காட்ட இதை விட மேலான கருவியைக் கையாள முடியாது. இவ்வாறு விவிலிய ஆசிரியர் மோசேக்கு மிகப் பிந்தி அறிக்கையிடப்பட்ட சட்டத்திற்கு மோசே யின் அதிகாரத்தையும் அதன் வழியாக இறை வனது அதிகாரத்தையும் அளிக்கிறார். மோசேயின் சட்டம் இஸ்ராயேலின் வர லாறு முழுவதிலும் அதன் உண்மைத் தன் மைக்கு முத்திரையிடுகிறது.

8. முடிவுரை:- ஆதியாகமம் இறைவனு டைய வல்லமையையும் (ஆதி 17:1), யாத் திரை ஆகமம் அவருடைய அருளையும் (34:6), லேவியர் ஆகமம் அவருடைய பரிசுத் தத்தையும் (19:2) விளக்க, எண்ணிக்கைநூல் அவருடைய சினத்தையும், சீற்றத்தையும் வெளிப்படுத்துகிறது. என் 11 முதல் 25 மட்டுமுள்ள 15 அதிகாரங்களிலும் அடிக்கடி காணப்படும் சொல் ''இறைவன் சினம் கொண்டார்'' என்பதே. இஸ்ராயேலர் அடி மைத்தனத்தினின்று விடுவிக்கப் பட்டனர். நாணல் கடலைப் பிளந்து நடந்தனர். வானத் தின் மன்னாவை உண்டனர். பாறையிலி ருந்து வந்த நீரைக் குடித்தனர். மேகத்தால் வழி நடத்தப்பட்டனர். பலர் எகிப்திலிருந்து புறப்பட்டனர். ஆனால் அவர்களில் இரண்டு பேர் மட்டுமே கானான் நாட்டைச் சேர்ந்த னர். மற்றவர் விசுவாசமின்மையாலும், கீழ்ப்படியாமையாலும் இறைவனுக்கு எதி ராக முணுமுணுத்தனர். இறைவனையே சோதித்தனர் (எண் 14:22). முறையிடுதல்

(11:1), இச்சை *(11:4.10.31-35)*, அகந்தை *(12:1-15)*, விசுவாசமின்மை *(14:1-2)*, ஓய்வு நாள் மீறுதல் *(15:32-36)*, கலகம் *(16:1-35)*, கட்சிப்பிளவு *(16:41-49)*, நம்பிக்கையின்மை *(20:2-13)*, ஆத்திரம் *(21:4-6)*, தகாத உறவு *(25:1-9)* ஆகிய முறைகளில் இறைவனைச் சோதித்தனர். அவருக்குச் சினமூட்டினர். ஆகவே பாலையிலேயே இறந்து போயினர் *(எபி 3:17-19)*. அவர்களில் ஒருவனும் அவர்களுடைய முன்னோருக்கு ஆணையிட்டு உறுதி மொழி வழங்கிய நாட்டைக் காணவில்லை *(எண் 14:23)*. இறுதிவரை அவர்கள் நிலை நிற்கவில்லை. உலகமாகிய பாலையின் வழியாய் நிலையான கானானுக்குப் பயணம் செய்யும் நாம் எச்சரிக்கையடையவே, விழிப்படையவே நமது வழியைச் சீர்ப்படுத்தவே, இறைவனுக்கு எப்போதும் பிரமாணிக்கமாய் இருக்கவே, இவை எழுதப்பட்டிருக்கின்றன *(எபி 3:12-13; 1 கொரி 10:6-11)*. இறுதி வரை நிலைத்து நிற்பவனே மீட்புப் பெறுவான் *(மத் 10:22)*

எண்ணெய் (OIL)

1. இறைவனின் கொடையாக் எண்ணெய்:-

இறைவன் கைம்மாறு எதுவும் கருதாமல் தமது மக்களை ஒலிவ மரங்கள் நிறைந்த நாட்டில் *(உப 6:11; 8:8)* சமுதாயமாக ஏற்படுத்தியபோது, அவர்களுக்குக் கோதுமை, திராட்சை ரசம் ஆகியவற்றுடன் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றான எண்ணெயையும் மிகுதியாக அளித்தார் *(உப 11:14)*. இது ஓர் இறையாசீராகத் தோன்றுகின்றது *(உப 7:13 தொ; எரே 31:12)*. இது இல்லா வறுமை பிரமாணிக்கமின்மைக்கான தண்டனையாகும் *(மீக் 6:15; அப 3:17)*. இதன் மிகுதி மீட்பின் அடையாளமும் *(யோவே 2:19)*, இறுதிக்கால மகிழ்ச்சியின் அறிகுறியுமாகும் *(ஒசே 2:24)*. மேலும் எண்ணெய் என்பது தேவையான காலங்களில் ஒதுக்கப்படமுடியாததான உணவு மட்டுமல்ல *(1 அர 17:14 தொ;2 அர 4:1-7)*. உடலை மணம் வீசச்செய்கின்ற *(ஆமோ 6:6; எஸ்த 2:12)*, உடலுறுப்புகளுக்கு வலிமையூட்டுகின்ற *(எச 16:9)*, காயங்களைக் குணமாக்குகின்ற *(ஏச 1:6; லூக் 10:34)* தைலமுமாகும். இறுதியாக விளக்குகளில் உள்ள எண்ணெய் ஒளி அளிக்கின்ற பொருளாகும் *(யாத் 27:20 தொ; மத் 25:3-8)*.

உலகின் இனவிருத்தியானது பாகாலிடமிருந்து வந்தது எனக்கருதி, பாகாலை வழிபடுவதற்கு இந்த எண்ணெய் பயன்படக்கூடாது. மக்களின் மீட்பானது இறைவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் மீதான நம்பிக்கையினை மட்டுமே சார்ந்ததல்ல என்பது போன்று புறவின வல்லமைகளுடன் உடன்பாடு செய்வதற்கும் இது பயன்படக்கூடாது *(ஒசே 2:7; 12:2)*. உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருப்பதற்குச் சிறந்த எண்ணெயைக் குருக்களுக்கென ஒதுக்கி வைப்பதோ *(எண் 18:12)*, சடங்கிற்கு ஏற்பச் சிறிது எண்ணெயைப் பலிப்பொருட்களுடன் கலப்பதோ *(லேவி 2:1; எண் 15:4; 28:29)* தாராள பானப்பலியாக ஊற்றுவதோ போதாது. மனிதன் நீதி மற்றும் அன்பின் வழியில் இறைவனோடு இணைந்து நடந்தால் மட்டுமே, இத்தகைய கடைப்பிடிப்புகள் இறைவனுக்கு ஏற்புடையவையாயிருக்கும் *(மீக் 6:7 தொ)*.

2. எண்ணெயின் அடையாளம்:-

எண்ணெயானது இறையாசீரின் அடையாளமாக இருந்தால், வளமையான ஒலிவ மரமானது, இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட நீதிமானையும் *(சங் 52:10; 126:3; சீரா 50:10)*, சட்டத்தில் நீதி மற்றும் மகிழ்ச்சியின் பாதையினை வெளிப்படுத்துகின்ற இறை ஞானத்தினையும் *(சீரா 24:14.19-23)* குறிப்பிடும் அடையாளமாய் உள்ளது. விளக்குத் தண்டிலுள்ள ஏழு விளக்குகளுக்கு எண்ணெய் அளிக்கின்ற இரு ஒலிவ மரங்களும் *(செப் 4:11.14)*, இரு எண்ணெயின் மகன்களையும் மக்களுக்குப் புது ஒளி அளித்து மீட்பின் பாதையில் அவர்களை நடத்திச் செல்லும் பணியினைக்கொண்ட அரசன் மற்றும் தலைமைக்குரு என்னும் இறைவனால் அபிடேகம் செய்யப்பட்ட இருவரையும் குறிப்பிடுகின்றன.

மேலும் எண்ணெயை அதன் மேன்மை மற்றும் நழுவுகிற பண்பின் அடிப்படையில் ஒப்பிடும்போது (பழ 5:3; சங் 109:18; பழ 27:16) அதிலே சுகத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்ற மணமிக்க தைலத்தையும், அன்பு (உ.ச.1:3), நட்பு (பழ 27:9), சகோதர ஒன்றிப்பின் மகிழ்ச்சி (சங் 133:2) ஆகியவற்றின் அழகிய அடையாளத்தினையும் காணலாம். முகத்தை ஒளிவீசச்செய்வதால் எண்ணெயானது மகிழ்ச்சியின் அடையாளமாகவும் உள்ளது (சங் 104:15). ஒருவரது தலையில் எண்ணெய் ஊற்றுவதென்பது (சங் 23:5; 92:11; லூக் 7:46; மத் 26:7) அவருக்கு மகிழ்ச்சியும் இன்பமும் கிடைக்க வாழ்த்துவதும், நட்பு மற்றும் மரியாதையின் அடையாளத்தினை அளிப்பதுமாகும்.

அரசரை அபிடேகம் செய்யப்பயன்படும் எண்ணெய் மற்றெல்லாவற்றையும்விட மகிழ்ச்சியின் எண்ணெய் என்னும் பெயரில் அழைக்கப்படத் தகுதியுள்ளது (சங் 45:8). இறைத் தேர்வின் வெளி அடையாளமாக உள்ள இது, தேர்ந்து கொள்ளப்பட்டவரை உரிமையாக்கிக்கொள்ள ஆவியின் வருகையோடு இணைந்து உள்ளது (ஏச 10:1-6; 16:13). கிறிஸ்தவ திருவருட்சாதனங்களில் உள்ள, குறிப்பாக யாக்கோபின் திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (யாக் 5:14; மாற் 6:13) நோயிற்பூசுதலில், எண்ணெயின் அடிப்படை அடையாளம் பற்றிய தொடக்க நிலையில் அபிடேகத்திற்கும் ஆவிக்கும் இடையிலுள்ள இந்தத் தொடர்பு காணப்படுகின்றது. இயேசுவை மிகச்சிறந்த முறையில் தனிப்பட்ட அபிடேகம் செய்யப்பட்டவராகவும் இறைமகனாகவும் உருவாக்கிய அதே தூய ஆவியின் பல்வேறு கொடைகளைக் கிறிஸ்தவனுக்குத் தூய தைலங்கள் அளிக்கின்றன. (கிறிஸ்துவின் இறைத்தன்மையினைப் போதிக்க எபி 1:9 கிறிஸ்துவிற்கு சங் 45:8-ஐ பயன்படுத்துகிறது).

எண்ணெய்ச் சிமிழ் (VIAL)

இது சாமுவேல் சவுலை அபிடேகம் செய்த போது அந்த எண்ணெய் வைக்கப்பட்டிருந்த கிண்ணமாகும் (1 சாமு 10:1). ஏகூ அபிடேகம் செய்யப்பட்டபோது இதே எபிரேயச் சொல் எண்ணெய்க்கிண்ணம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (2 அர 9:1.3). இது எபிரேயர் பரிமளப் பொருட்களை வைக்கப் பயன்படுத்திய சிறிய சாடியைக் குறிக்கும்.

எண்பித்தல், மெய்ப்பித்தல் (VINDICATE)

ஒருவன் தன்னுடைய செயலை நேர்மையுடன் செய்துள்ளான் என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூற, கிரேக்க எபிரேய மொழிகளிலிருந்து பயன்பட்ட பல்வேறு சொற்களின் மொழிபெயர்ப்பு.

எதாயா (JEDAIAH — யாவே அறிவார், யாவே சலுகை காட்டினார்)

1. சிமியோன் குலத் தலைவரில் ஒருவரும் சிமிரியின் மகனுமாவார் (1 நாள் 4:37).

2. நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின் எருசலேமில் குடியேறிய ஒரு குரு (1 நாள் 9:10).

3. ஆரோனின் வழித்தோன்றல். தாவீதின் காலத்தில் குருக்களின் இரண்டாம் பிரிவின் இன முதல்வர் (1 நாள் 24:7).

4. ''எதாயாவின் புதல்வர்கள்'' ஏசுவா வழிவந்த குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பாபிலோனிலிருந்து திரும்பியவர்களின் பட்டியலில் இப்பெயரும் காணப்படுகிறது (1 நாள் 9:10; எஸ் 2:36; காண்க: நெக 7:39). இப்பட்டியலுக்குக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் தனி நபர்களும் குடும்பங்களும் இக்குரு குலத்தைச் சேர்ந்தவர்களேயாவர். முதலில் திரும்பியவர்களுள் இந்தப் பிரிவைச் சேர்ந்த 973 பேர் இருந்தனர் (எஸ் 2:36; நெக 7:39; காண்க: 12:19.21).

5. நெகமியாவின் தலைமையில் எருசலேம் மதிலைப் பழுது பார்க்க உதவியவர்களில் ஒருவர். கருமாபுவின் மகன் (நெக 3:10).

6. நாடு கடத்தப்பட்ட பிறகு, எருசலேமில் வாழ்ந்து வந்த ஒரு குரு. யோயாரிப்பின் மகன் (நெக 11:10). இவர் (2)-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம். யோயாரிப்பின் கூட்டாளியாக இருக்கலாம்.

7. பாபிலோனிலிருந்து செருபாபேல் தலைமையில் திரும்பி வந்த குருக்கள்,

லேவியர்களில் ஒரு தலைவர். இவர் இப் பெயரைக் கொண்ட ஒரு குருகுலத்தைச் சார்ந்தவர் (நெக 12:6.19).

8. செருபாபேலோடு திரும்பிய மற்றொரு லேவியர் தலைவர் (நெக 12:7).

9. நாடு கடத்தலிலிருந்து திரும்பியவருள் ஒருவர். இவரிடமிருந்து, பெரிய குரு யோசு வாவுக்கு நினைவுச்சின்னமாக மணிமுடி அமைக்கப் பொன், வெள்ளி பெற இறை வாக்கினர் செக்கரியா கட்டளையிடப்பட் டார் (செக் 6:10.14).

எதிரி, பகைவன் (ENEMY, ADVERSARY)

மற்றவனை விரும்பாது, வெறுத்து, அவ னுக்குத் தீங்கு செய்ய எண்ணுபவனே எதிரி. இது நாட்டிற்கும், படைக்கும் பொருந்தும்.

பழைய ஏற்பாட்டில் பொதுவாக, எதிரி என்ற சொல் இஸ்ராயேலுக்கு எதிராக உள்ள நாட்டு மக்களைக் குறிக்கும் (யோசு 24:11). அதோடு ஒருவருடைய தனிப்பட்ட எதிரிக ளையும், குறிப்பாகச் சங்கீதங்களில் (3:7) குறிக்கும் (யாத் 23:4; நீதி 16:23; 1 சாமு 18:29; எஸ்த 7:6). இதைப்போல புதிய ஏற்பாட்டில் 'எதிரி' என்பது தனிப்பட்ட எதிரிகளையே பெரும்பாலும் குறிக்கும் போது (மத் 13:25; கலா 4:16) அந்நிய மக்களையும் குறிப்பாகக் குறிக்கிறது (லூக் 1:71; 19:43; 21:20).

பழைய ஏற்பாட்டில் இறைவன் ஒரு எதிரி யாகப் பேசப்படுகிறார். அவர் இஸ்ராயேல ரின் எதிரிகளுக்கு ஒரு எதிரியாவார் (யாத் 23:22; நீதி 5:31; 2 நாள் 20:29; சங் 60:1). இந்தக் கருத்து தொடக்ககால நாட்டுப் பாரம் பரியத்தின் அடிப்படையாகும். இதன் படி இறைவன் தம் மக்களின் நலனுக்காகப் போராடும் போர் வீரராகச் சித்தரிக்கப்படுகி றார். இவ்வாறு எகிப்திலிருந்து மக்களை மீட்டு, பாலைவனத்தில் வழிநடத்தி அவர்க ளிடையே கடவுள் போர் வீரராக இருந்து மக்கள் நலனைக் காத்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குக் கொண்டு வந்தார். இந்தக் கருத்து பாரம்பரியத்தில் மட்டுமல்ல, இறை வாக்கினர்களிலும் வெளிப்படுத்தப்படுகி றது (ஆமோ 2:9-10; மீக் 6:4-5). இறைவன் மக்கள் தம்மைக் கைவிட்டதால் அவர்களை எதிரிகளிடம் தீர்ப்புக்கு விட்டுவிட்டார் என் றும் இறைவாக்கினர் கூறியுள்ளார் (நீதி 2:14; 2 நாள் 25:8; எரே 12:7; ஓசே 5:15; 6:1; லூக் 19:41-44). இறைவனை அவரது தீர்ப்பில் இஸ்ராயேலின் எதிரி என்று அழைக்க முடிந் தது (எச 1:24; 2:5). இருந்தாலும் இஸ்ராயே லின் எதிரி என்ற அளவிலும் அவர் அவர்கள் மேல் கொண்ட அன்பே ஆதிக்கம் வாய்ந்தது என்று இறைவாக்கினர் வலியுறுத்தினர் (எச 54:7-8; எரே 30:14; 81:2-3; ஓசே 2:14). யோபு தாம் கடவுளின் எதிரியாக இருப்பதாக உணர்ந்தார் (13:24; 19:11; 33:10; 40:1).

மனிதன் தெய்வீகக் கட்டளைகளைக் கடைப்பிடிக்காது இருக்கும்போது இறைவ னின் எதிரியாகி அவரை வெறுக்கிறான் (யாத் 20:5; உப 5:8-10; 7:9-10). பவுல் பாவிகள் இறைவனின் எதிரிகளாவர் என்று கூறுகிறார் (உரோ 5:8; பிலி 3:18). மேலும் புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் உல கிற்கு நண்பராக இருப்பவன் இறைவனுக்கு எதிரியாக உள்ளான் என்று சொல்லப்பட் டுள்ளது (யாக் 4;4). அலகையே ஒப்புறவற்ற எதிரியாகும் (மத் 13:39; லூக் 10:19; அ.ப. 13:10). கிறிஸ்துவின் ஆட்சிக்குப் பணியும் இறுதி எதிரி சாவாகும் (1 கொரி 15:26; எபி 10:13).

மலைப்பொழிவில் வரும் பகைவருக்கு வெறுப்பு, பகைவருக்கு அன்பு செய்தல் போன்றவை பழைய ஏற்பாட்டு ஒழுக்கத்திற் கும், புதிய ஏற்பாட்டு ஒழுக்கத்திற்கும் உள்ள வேறுபாடு என்று தவறாக விளக்கப் பட்டு உள்ளது (மத் 5:43-44). பழைய ஏற் பாட்டில் பகைவனுக்கு அன்பு செய் என்ற உறுதியான கட்டளை இல்லை; பகைவ னுக்கு வெறுப்புக்காட்டு என்றும் எவ்விதக் கட்டளையும் இல்லை. நாட்டுப் பகைவர்க ளுக்கும் மக்களைக் கொடுமைப்படுத்துபவர் களுக்கும் வெறுப்பு, நாகூம், ஒபதியா எஸ் தர் போன்ற பழைய ஏற்பாட்டு நூல்களிலும் (காண்க: சங் 137:7-9; எச 47; 49:22-26) புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலிலும் பரவிக்கிடக்கிறது. இம்மாதிரி எண்ணத்

திற்கு இறைவனின் எல்லையற்ற பரந்ததன்மையின் கீழ் உள்ள நல்ல எண்ணமே ரூத், ஏச 19:19-25; 40:55; யோனா போன்றவற்றில் காணப்படுகின்றது (காண்: 1 அர 20:31; 2 அர 5:20-23). இஸ்ராயேலின் மூலம் உலகில் உள்ள மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே ஆதியாகமத்தின் தொடக்கத்தில் காணப்படும் தேர்ந்தெடுத்தல் என்னும் விவிலியக் கோட்பாட்டின் மையக் கருத்தாகும் (ஆதி 2:1-3; எரே 4:1-2). எரேமியா பாபிலோனியாவில் நாடு கடத்தப்பட்டு இருப்பவர்களுக்கு எழுதிய கடிதத்தில் எதிரிகளின் நலனுக்காகவும் சமாதானத்திற்காகவும் செபிக்கக் கேட்டுக் கொண்டார் (எரே 29:7).

புதிய ஏற்பாட்டில்தான் பகைவர்களை அன்பு செய்ய வேண்டும் என்று உறுதியாகக் கட்டளை இடப்படுகிறது (மத் 5:43-44). ஆயினும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒழுக்க முறையில் இக்கட்டளையை எடுத்துக் கூறினால், அதற்குப் பழைய ஏற்பாடு விவரங்களைக் கொடுக்கிறது. யாத் 23:4-5 என்ற பகுதி எவ்வாறு ஒரு மனிதன் எதிரியோடு இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. தீமைக்கு நன்மை செய்வதே நீதியுடைமை என்று சவுல் விளக்குகிறார் (1 சாமு 24:17-19). யோபு தன் எதிரியின் அழிவைக் கண்டு என்றும் மகிழ்ச்சியடைந்தது கிடையாது (யோபு 31:29). பழமொழி ஆகமம் யே ாபுவின் உரிமைக்கோரிக்கையை ஒரு கட்டளையாக எடுத்துச் சொல்கிறது. உன் எதிரி விழும்போது மகிழ்ச்சியடையாதே (பழ 24:17). பவுல் பகைவருக்கு அன்பு என்பதன் பொருளைக் கூறுவதற்குப் பழ 25:21-22-ஐ மேற்கோளாகக் கூறுகிறார் (உரோ 12:14-21): ''உனது எதிரி பசியாய் இருந்தால் அவனுக்கு உணவு கொடு; தாகமாயிருந்தால் குடிக்கக் கொடு; இதைச் செய்வதால் அவனது தலையில் எரிதழலை வைக்கிறாய்''.

எதிர்க் கிறிஸ்து (ANTI - CHRIST)

இவன் கிறிஸ்துவின் பேய்த்தன்மையுடைய எதிரியாவான். இச்சொல் 1 யோவா 2:18.22; 4:3; 2 யோவா 7-இல் காணப்படுகிறது. ஆனால் இக்கருத்து விவிலியத்தின் மற்றப் பகுதிகளிலும் காணப்படுகிறது.

1. பழைய ஏற்பாடு: - இப்பெயரின் மூலக்கருத்து பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. நீதி 19:22; 20:13-இல் வரும் இழி மனிதர்கள் சில மொழிபெயர்ப்புகளில் ''பேலியாலின் மக்கள்'' என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் மிகக் கொடியவர்கள், எல்லா ஒழுக்க மரபுகளையும் மீறியவர்கள். தானியேலின் ஒரு காட்சியில், பத்துக் கொம்புகளையுடைய நான்காம் விலங்கு, அதன் அரசு எடுக்கப்பட்டு ''மனுமகனைப் போன்ற ஒருவருக்கு'' அளிக்கப்படும் வரை, ''புனிதர்களுக்கு எதிராகப் போர் புரிந்தது'' (தானி 7:7-8.13.21-22). இது மிகவும் கொடிய அழிவு சக்தியாகிய உரோமைப் பேரரசைக் குறிக்கலாம். பழைய ஏற்பாடு, எல்லாத் தீமையையும் ஒருங்கே கொண்டு சாத்தானுக்குப் பணிசெய்து மெசியாவுக்கு எதிராகத் திகழ்ந்த ஒரு நபரைப் பற்றிக் கருத்துச் செலுத்தவில்லை.

2. புதிய ஏற்பாடு:- இயேசுதான் கிறிஸ்து என்பதை மறுப்பவர்களுக்கு இப்பெயரை யோவான் கொடுக்கிறார். 1 யோவா 2:18-இல் கிறிஸ்தவச் செயல்களுக்கு எதிரானவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாகக் கொண்டு உருவெடுக்கும் ஆளைக் குறிக்க இப்பெயரை ஒருமையிலும், கிறிஸ்துவின் செயலை ஏற்கெனவே எதிர்ப்பவர்களை, அதாவது விசுவாசிகளின் தோழமையைக் கைவிட்டு விட்டவர்களைக் குறிக்க இப்பெயரைப் பன்மையிலும் யோவான் பயன்படுத்துகிறார். கிறிஸ்து மனிதனானதை மறுக்கும் முந்தைய விசுவாசிகளின் பதிதத்தை எதிர்த்துப் போராடும் போது, இப்பெயர் 1 யோவா 2:22-இல் பயன்பட்டுள்ளது.

1 யோவா 4:1-6;. 2 யோவா 7-இல் ஆசிரியர் வார்த்தை மனுவுருவானார் என்பதை மறுப்பவர்களை எதிர்த்து உரைக்கிறார். மனிதனான இயேசுவையும் இறைவார்த்தையையும் வேறுபடுத்துபவனே எதிர்க்கிறிஸ்து ஆவான். யோவானுக்கு, எதிர்க் கிறிஸ்து என்பவன் இறைவனை எதிர்க்கும் ஆற்றல்

அன்று; அவன் கிறிஸ்துவில் கொண்டிருக்கும் அடிப்படை விசுவாச அறிக்கையை மாற்றுபவனே.

கிறிஸ்து மீண்டும் வருமுன் அக்கிரமமே உருவான இந்த மனிதன் வெளிப்பட வேண்டும் (2 தெச 2:3) என்று பவுல் விசுவசிக்கிறார். தெசலோனிக்கேயருக்கு, வெளிப்பாட்டு இலக்கிய நடையில் எழுதும் பவுல் இரண்டாம் வருகைக்குமுன் இந்த அக்கிரமி தன் தீக்குறியான ஆற்றலை வெளிப்படுத்துவான். இவ்வாறு இரண்டாம் வருகை உடனடியானதன்று என்று எடுத்துக் கூறுகிறார்.

இந்த அக்கிரமியை விவரிக்கும்போது பவுல் தானி 11-இல் காணப்படும் மொழியைப் பயன்படுத்துகிறார். இதன்படி, இந்த எதிர்க் கிறிஸ்து ''தெய்வம் எனப்படுவது (சூண் தானி 11:36) வழிபாடு பெறுவது, அனைத்திற்கும் மேலாகத் தன்னையே உயர்த்திக் கொள்வான். கடவுளுடைய ஆலயத்தில் அமர்ந்து (காண்க: தானி 11:31) தன்னைக் கடவுளெனக் காட்டிக் கொள்ளும் அளவுக்குத் துணிவான்'' (2 தெச 2:4; காண்க: தானி 11:32; ஏச 14:13-14; எச 28:2 தொ). இந்த அக்கிரமிக்கும் இறை மக்களுக்கு எதிராகப் போர் செய்யும் வரலாற்று ஆளுக்கும் இடையே ஒரு தெளிவான தொடர்பைப் பவுல் காண்கிறார்; (தானி 11-இல் சுட்டிக் காட்டப்படும்) நான்காம் அந்தியோக்கு எப்பிபான் இந்த ஆளாக இருக்கலாம். ஆனால் கடந்த காலத்தைச் சேர்ந்தவராக அல்லர், வருங்காலத்தில் வரும் எதிர்க் கிறிஸ்துவாக இந்த ஆள் அழுத்தம் பெறுகிறார்.

அக்கிரமி, அவனைப் பின்பற்றி, அவனது கடவுள் பற்றற்ற சித்தாந்தத்தைப் பற்றிக் கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் பிரதிநிதியாக விளங்குகிறான். கிறிஸ்து விசுவாசிகளோடு எப்போதும் ஒன்றித்திருப்பதுபோல், கடந்த, நிகழ், எதிர் காலத்தையும் சேர்ந்த கடவுள் பற்றற்ற எல்லா வடிவங்களின் உருவமான எதிர்க் கிறிஸ்து தன் சீடர்களின் வழியாகச் செயல்படுகிறான். அவனுக்கு இப்போது தடையாயிருப்பது நீக்கப்பட்டபின், அக்கிரமி வெளிப்படுவான். எல்லா வகையான போலி அருங்குறிகளையும் அற்புதங்களையும் வல்லமை மிக்க செயல்களையும் செய்து காட்டுவான். பின்பு கிறிஸ்துவைச் சந்திப்பான். அவா, கடவுள் பற்றற்ற தன்மையின் எல்லாத் தோற்றங்களையும் முடிவாக அழித்தொழிப்பார்.

திருவெளிப்பாட்டு ஆசிரியர் 13:11-10-இல் வரும் ''கடலிலிருந்து வெளிவந்த விலங்கில்'' இறைத்தன்மைக்கு உரிமைகோரும் உலகம் சார்ந்த அதிகாரத்தையுடையவனைக் காண்கிறார். இவனே எதிர்க் கிறிஸ்து. இதில் தானி 7-இன் நடையை நினைவு படுத்துகிறார். இந்த விலங்கு இறைவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் மனுக்குலத்தை அடையாளமாக உணர்த்துகிறது.

ஆனால் விவிலியம், இவன்தான் எதிர்க் கிறிஸ்து என்று காட்டும்முறையில் பெயரையோ வரலாற்று விவரங்களையோ கொடுக்கவில்லை. இப்படி அடையாளம் காட்டப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இது ஒரு வீண் முயற்சியாகும். தீமையின் ஒட்டுமொத்தப் பொது உருவமே எதிர்க் கிறிஸ்து என்பவன் என்பதோடு மன நிறைவடைவது மேல்.

எதிர் பார்த்திரு, காத்திரு (WAIT)

எபிரேயம், கிரேக்கம் ஆகிய இரு மொழிகளிலும் எதிர்பார்த்திரு, காத்திரு என்பனவற்றைக் குறிக்கப் பல சொற்கள் உள்ளன. பழைய ஏற்பாட்டில் ஒரு யூதன் எல்லாவற்றுக்கும் மேலாகக் கடவுளுக்குத்தான் காத்திருக்கின்றான். இதில் யூதன் கடவுள் வரும் வரை ஆழ்ந்த எதிர்பார்ப்போடும் நிறைவான நம்பிக்கையோடும் பொறுமையாகக் காத்திருக்கிறான் (சங் 25:3.5.21; 27:14; 39:7; ஏச 26:8; 33:2; 49;23; 51:5; 60:9). ஆண்டவருக்காகக் காத்திருப்பது நம்பிக்கையை அவர் மேல் வைப்பதாகும் (எரே 14:22; சங் 39:7; 130:5; ஏச 8:17). காத்திருப்பது மட்டும் போதாது அவரது வழியில் கடைசிவரை நிலைத்திருந்து (சங் 37:34) ''அன்பையும் நீதியையும் கடைப்பிடிக்க'' வேண்டும்

(ஓசே 12:6). இறைவன் அவன் ''அவமான மடைய' விட மாட்டார் (ஏச 49:23). கடவுள் அவன் வலிமையைப் புதுப்பித்து (ஏச 40: 31), உதவி செய்வார் (பழ 20:22). கடவுள் கனிந்து அவன் குரலைக் கேட்பார் (சங் 37:9). அவருடைய மீட்பில் அகமகிழ்ந்து அக்களிப்பார்கள் (ஏச 25:9; ஆதி 49:18). இறுதியில் ஆண்டவர்தாமே இஸ்ராயேல் பலனளிக்கக் காத்துக் கொண்டிருப்பார் (ஏச 5:2.7).

புதிய ஏற்பாட்டில் எதிர்பார்த்திருத்தல், காத்திருத்தல் ஆகியவை பெற்றுக் கொள்ளு தல் என்ற பொருளையும் உள்ளடக்கியுள் ளது (உரோ 16:2). காத்திருப்பவர் பெற்றுக் கொள்ளுதலை எதிர்பார்க்கிறார். புதிய ஏற் பாட்டில் காத்திருத்தல் மீட்போடு தொடர்பு படுத்தப்படுகிறது. ஆனால் இதற்கு விதி விலக்கு உள்ளது (அ.ப. 17:16; 1 கொரி 11:33; யாக் 5:7). நாம் இறைமக்களாக்கப்படும் நாளை நோக்கிக் காத்திருக்கிறோம். (உரோ 8:23).

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மீட்ப ராக விண்ணிலிருந்து வருவதை எதிர்பார்த்தி ருக்கிறோம் (பிலி 3:20). நோவாவின் காலத் தில் இறைவன் பொறுமையோடு காத்திருந் தார் என்று கூறப்படுகிறது (1 பேதுரு 3:20).

எதிர்லெபனோன் (ANTI-LEBANON - கீழ் லெபனோன்)

லெபனோனுக்கு இணையாகவும் அதற் குக் கிழக்கிலும் உள்ள மலைத்தொடர். பூர்வீ கக் காலத்தில் ஒருவேளை இம்மலைத் தொடரிலுள்ள சிகரங்களைக் குறிக்கப் பல பெயர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இது (சீரிய) காதேசிலிருந்து தாண் வரை யுள்ள மலைத்தொடராகும். இதன் மிக உயர்ந்த சிகரம் கெர்மோன்மலை ஆகும். மற்ற அமானா, செனீர் என்ற சிகரங்களும் குறிக்கப்பெறுகின்றன (உ.ச. 4:4). எபிரே யம், அராபியம், மற்றெந்தப் பூர்வீக மொழி களிலும் இதற்குப் பொதுவான பெயர் ஒன் றும் வழங்கப் படவில்லை. சில சமயங்க ளில் யாபேல் ஏல் - சார்க் பயன்படுத்தப்படு கிறது.

எதியேல் (JEDIAEL - இறைவனுக்குத் தெரிந்த, இறைவனால் அறியப்பட்ட)

1. ஓர் இனப்பெயர் முதல்வர். 1 நாள் 7:6.10-11-இன்படி இவர் பென்யாமின் குலத் தைச் சேர்ந்தவர். ஆனால் தொடக்கத்தில் இத்தலைமுறை அட்டவணை செபுலோ னைப் பற்றியதாக இருந்திருக்கலாம்.

2. தாவீதின் வலிமை மிகுந்த படைவீரர்க ளில் ஒருவர். சிமிரியின் புதல்வர்களில் ஒரு வர் (1 நாள் 11:45).

3. தாவீது பெலிஸ்தியரோடு சேர்ந்து கொண்டு சவுலுக்கு எதிராகப் போரிட்ட போது சிக்கிலாகில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட மனாசேயின் படைத் தலைவர்க ளில் ஒருவர் (1 நாள் 12:20).

4. தாவீது அரசனின் காலத்தில் பெட்டகத் திற்கு வாயிற்காவலராக இருந்த இவர் கோராகியர் குலத்தைச் சேர்ந்தவர். மெசெ லெமியாவின் இரண்டாம் மகன் (1 நாள் 26:2).

எதிரை (EDREI - கோட்டை)

1. பாசான் நாட்டு அரசன் ஓக்கின் உறைவி டம்தான் இந்நகரம் (உப 1:14; யோசு 12:4; 13:12). இந்நகரம் பாசான் நாட்டுத் தெற்கு எல்லையின் கரையோரத்தில் பாலைவனத் திற்கு அருகில் அமைந்திருந்தது. கிழக்கிலி ருந்தும், தெற்கிலிருந்தும் வரும் எதிரியைத் தாக்குவதற்காக அரசன் இவ்விடத்திலிருந்து கொண்டு கவனித்துக் கொண்டிருப்பான். மோசேயும், இஸ்ராயேலர்களும் பாலை வனத்திலிருந்து பாசானைக் கைப்பற்றி ஓக்கை எதிரைக்கு முன்னுள்ள சமவெளியில் முறிய டித்தார்கள் (எண் 21:33). இந்நகரமும் இதைச் சுற்றியிருந்த மாவட்டமும் மனாசே இனத் தின் மாக்கீர் குலத்தவர்களுக்கு ஒதுக்கப்பட் டிருந்தது (யோசு 13:31). இதன் பெயருடன், இடமும் தற்பொழுது உள்ள யார்முக் ஆற் றிற்கு அருகில் உள்ள 'டெர்ரா' வின் பெய ரால் வழங்கப்படுகிறது. இங்கிருந்து தமஸ்கு நகர் 96 கி.மீ. தொலைவிலும் கலி லேயாக் கடல் 48 கி.மீ. தொலைவிலுமுள்

ளன. இதில் பல சிதைவுகளும் எழுத்துக்களும், ஒரு பழங்கால பூமிக்கடியிலுள்ள சிதைவும் உள்ளன.

2. நப்தலி நாட்டில் உள்ள நகரங்களில் ஒன்று (யோசு 19:37). இதை இப்போது அடையாளம் காட்டமுடியாது. இது துத்-மோசின் பட்டியலில் 91ஆவதாக வரும் தாராவாக இருக்கலாம்.

எதினா (EDNA - இன்பம், மணமகள் விலை, திருமணப்பரிசு)

தோபித்தின் உறவினனான இரகுவேலின் மனைவி. தோபியாவின் மணப்பெண்ணான சாராளின் தாய் (தோபி 7:12.14 தொ; 8:11-12). வுல்கத்தா மற்றும் பழைய வாசகங்கள் இவளது பெயரை அன்னா என்று குறிப்பிடுகின்றன. இவள் தன் மருமகனுக்குக் கூறிய பிரியா விடைவாழ்த்துரை எப்போதும் நினைவு கூறத்தக்கது (10:12).

எதினார்க்கேயர் (ETHNARCH - மக்களை ஆளுபவன்)

'மக்களை ஆள்பவர்' என்ற பொருளைச் சுட்டும் ஒரு சிறப்புப் பெயர். ஆளுநர்களுக்கு அடிக்கடி சூட்டப்பெற்ற ஒரு பட்டம். பல நூற்றாண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வந்த இந்தச் சொல், தெளிவற்ற நிலையும், மாற்றமும் இணைந்து நிலையற்ற மாறுபடக் கூடிய சொல்லாக மாறியதால், காலத்திற்குக் காலம் தன் பொருளை மாற்றிக் கொண்டது.

''எதினார்க்'' முடியாட்சி செய்யும் அரசன், வேறொரு பெரிய அரசனைச் சார்ந்து நிற்கும்போது அவனுக்கு வழங்கப்பட்ட அரச சிறப்புப் பெயர். இப்பதவி 'நான்கில் ஒரு பகுதிக்குத் தலைவன்' பதவியைவிட உயர்ந்தது. ஆனால் அரசனைவிடத் தாழ்ந்த பட்டம். சீமோன் மக்கபேயர் படைத்தலைவராகவும் எதினார்க்காகவும் (அதிகாரியாகவும்) அழைக்கப்படுகிறார் (1 மக் 14:47). இரண்டாம் இரிக்கானு பொன் முடி மறுக்கப்பட்ட போதிலும் 'எதினார்க்காகவும், பெரிய குருவாகவும்'' இருந்தார். ஏரோதின் புதல்வன் அர்க்கெலா அரச பதவிக்குத் தகுதியற்றவன் ஆனதால் 'எத்தினார்க்' என்று அழைக்கப்பட்டான்: பிற்காலத்தில் வந்த ஓரிசென் பாலஸ்தீனத்தின் தலைமை அதிகாரியை 'எதினார்க்' என்று வர்ணித்துவிட்டு 'அப்பதவிக்கும்' அரச பதவிக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை என்று சேர்த்து எழுதுகின்றார்.

உரோமைப் பேரரசில் உள்ள நாடுகளில் சொந்த மண்ணிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்களை வைத்து ஒவ்வொரு பிரிவையும் ஆண்டார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் இந்தப் 'பதவி' பயன்படுத்தப்பட்டிருக்கலாம். உரோமைய அதிகாரத்திற்குட்பட்ட யூதேயாவின் சுற்றுப் புறங்களிலும் எகிப்தில் அலக்சாந்திரியா போன்ற யூதர்கள் வாழ்ந்த இடங்களில் உள்ள யூதர்களை நடத்தினபோது இம்மாதிரிச் சூழ்நிலை இருந்தது. இந்தக் காலக் கட்டத்தில் யூத ஆட்சியாளர்களுக்கு 'எதினார்க்' என்ற சிறப்புப் பெயரை வழங்கியிருக்கலாம். யோசிபஸ் இதைப்பற்றிக் குறிப்பிட்டு எழுதுகின்றார். அலக்சாந்திரியாவின் பிலோ 'எதினார்க்'கைப் பயன்படுத்தவில்லை. மாறாகக் ''கெனார்க்'' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். 'அலபார்க்' என்ற வேறொரு சொல்லும் அலக்சாந்திரியாவின் யூதர்களின் தலைவருக்குப் பயன்படுத்தப்பட்டது. இச்சொல் குறிக்கும் பொருளும் சொல்லிலக்கணமும் தெரியவில்லை.

'எதினார்க்' என்ற சொல் புதிய ஏற்பாட்டில் ஒரே ஓர் இடத்தில் தான் குறிக்கப்படுகிறது. ''நான் தமஸ்கு நகரத்தில் இருந்த பொழுது அரேத்தா அரசன் கீழ் இந்த ஆளுநன் (எதினார்க்) என்னைச் சிறைபிடிக்க விரும்பினான்'' (2 கொரி 11:32). விளக்கவுரை எழுதுபவர்கள் தமஸ்கு நகரைத்தன் அதிகாரத்துக்குள் வைத்திருந்த நபத்தேயாவின் அரசன் அரேத்தாவின் பதிலாளி இந்த 'எதினார்க்கா?' அல்லது உரோமைய அதிகாரத்திற்குட்பட்டு எருசலேமிலுள்ள 'யூத எதினார்க்குகளைப்போல' தமஸ்குவிலுள்ள நபத்தேய 'எதினார்க்கா'? என்பது பற்றி வேறுபடுகின்றனர்.

எதினான் (ETHNAN - கொடை)

அசூர், ஏலா ஆகியோரின் இளைய மகன்; யூதா இனத்தில் ஒருவர் (1 நாள் 4:7). அறிஞர்கள் சிலர், இப்பெயர் யூதாவின் செப்பேலாவிலுள்ள இதினானைச் சேர்ந்த ஒரு சமூகக் குழுவைக் குறிக்கலாம் என்று கருதுகின்றனர்.

எதினி (ETHNI - கொடை)

லேவிய பாடகர்களின் தலைமுறை அட்டவணையில் வரும் ஆசாபுவின் முன்னோர். கெரிசோமியப் பிரிவைச் சேர்ந்த லேவியர். செராகின் மகன். மல்க்கியாவின் தந்தை (1 நாள் 6:4). இந்த அட்டவணை பாபிலோனிய அடிமைத் தனத்துக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தது. இது பெரும்பாலும் கற்பனையான அட்டவணை. தாவீது காலத்திற்குத் திரும்பிச் சென்று லேவிய வம்சாவழியைக் கண்டு பிடிக்கச் செய்த முயற்சியாகும். 1 நாள் 6:21-இல் ''எதினி'' இருக்கவேண்டிய இடத்தில் எயத்திராய் என்று இருப்பதற்குக் காரணம் எழுதினவனின் பிழையாக இருக்கலாம்.

எதீதா (JEDIDAH - யாவேயின் அன்பர்)

யூதாவின் அரசன் யோசியாவின் தாயும், போசுக்காத்தைச் சேர்ந்த ஆதாயாவின் மகளும் ஆவாள் (2 அர 22:1).

எதீதியா (JEDIDIAH - யாவேயின் அன்பர்)

சாலமோன் மேல் இறைவன் கொண்டிருந்த அன்பைக் காட்டுவதற்காக நாத்தான் இறைவாக்கினர் சாலமோனுக்கு இட்ட பெயர் (2 சாமு 12:25). அறிஞர்கள் சிலர், இப்பெயர் அரசனது அரியணைப் பெயராக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

எதுத்தூன் (JEDUTHUN - புகழ்)

1. தாவீதின் காலத்தில் இருந்த லேவியர் குலத்தைச் சேர்ந்த ஒரு பாடகர். ஆசாபு, ஏமான் என்பவர்களோடு இவர் சேர்க்கப்பட்டுள்ளார் (1 நாள் 25:1; 2 நாள் 5:12). மற்றொரு இடத்தில் இவ்விருவரோடு ஏத்தான் என்பவரும் சேர்க்கப்பட்டுள்ளார் (1 நாள் 15:17). இதிலிருந்து, ஏத்தான் என்பதும் எதுத்தூன் என்பதும் ஒரே ஆளையே குறிக்கின்றன என்று தெரிகிறது. அப்படியாயின், எதுத்தூன் மெராரி என்ற லேவியக் குடும்பத்தைச் சேர்ந்தவராவார் (1 நாள் 6:44). ஒருவேளை எதுத்தூன் என்ற பெயர் சங்கீதத் தொனியிலிருந்து வந்திருக்கலாம் (சங் 39; 62; 77). இது மூலத்தில் ''ஏத்தாளின் கரங்களில் இருந்து'' என்று இருந்திருக்கலாம்.

எதுத்தூன் இறைவாக்குரைத்ததாகக் கூறப்படுகிறார் (1 நாள் 25:1,3). ''அரசனின் காட்சியாளர்'' என்றும் அழைக்கப்படுகிறார் (2 நாள் 35:15). எதுத்தூனிலிருந்து தோன்றிய குழு முதலில் இறைவாக்கினர் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். இரண்டாவது ஆலயம் உருவான பிறகு அவர்கள் பாடகர்களாக மாறி இருக்கலாம். 1 நாள் 16:38.42-இல் எதுத்தூன் வாயிற் காப்பாளர்களின் தந்தை என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். ஒருவேளை 16:42-ஆம் வசனத்தில் ''எதுத்தூன் புதல்வர்கள்'' என்பதற்கும் ''வாயிற்காவலராக நியமித்தார்'' என்பதற்கும் இடையில் உள்ள சில சொற்கள் விடுபட்டிருக்கலாம்.

2. கோரகிய லேவியர், ஓபேது-ஏதோமின் தந்தை. இவரது சந்ததியினர் பெட்டகத்திற்கு வாயிற்காவலர்களாகப் பணிபுரிந்தனர் (1 நாள் 16:38.42; காண்க 26:1-4.8).

3. ஒரு சங்கீதத் தொனியாகும். ''எதுத்தூனின் படி'' என்பது சங் 39; 62; 72 ஆகியவற்றின் தலைப்பாகும்.

எத்த-காசின் (ETH-KAZIN - இளவரசன் நேரம்)

செபுலோன் எல்லையில் உள்ள ஒரு நகர் (யோசு 19:13). இது இருந்த இடம் தெரியவில்லை. ஆனால் விவிலியக் குறிப்புகளின் படி காத்-கேப்பெரின் அருகில் இருக்க வேண்டும். ஒருவேளை நாசரேத்துக்கு வடக்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள கெப்ருகென்னாவாக இருக்கலாம். கத்தோலிக்கப் பாரம்பரியம், இவ்விடத்தை இயேசு நீரைத் திராட்சைரசமாக்கிய கானாவாக அடையாளம் காண்கிறது (யோவா 2:1 தொ).

எத்தியோப்பிய அண்ணகன் (ETHIOPIAN EUNUCH)

எத்தியோப்பியாவின் அண்ணகன், எத்தியோப்பியாவின் அரசியாகிய கந்தாக்கே என்பவளின் அமைச்சர். அவர் நற்செய்தியாளர் பிலிப்புவினால் கிறிஸ்தவ மறைக்கு மனமாற்றப்பட்டவர் (அ.ப. 8:27-40). இந்நிகழ்ச்சியைப் பொருத்தவரையில், யார் அந்த எத்தியோப்பியாவின் அண்ணகன்? அப்போஸ்தலர் பணியில் இந்நிகழ்ச்சியின் சிறப்புக்கூறு அல்லது முக்கியத்துவம் என்ன? என்ற இரண்டு கேள்விகள் எழுகின்றன.

'எத்தியோப்பியா' புவியியல் சார்ந்த சொல் என்ற முறையில் பரந்த வரலாற்றைக் கொண்டுள்ளது. இச்சொல் எகிப்திற்குத் தெற்கே உள்ள ஆப்பிரிக்கா, அரேபியா, இந்தியா போன்ற இடங்களைக் குறிக்கப் பயன்பட்டது. சில சமயங்களில் மத்திய தரைக் கடலுக்கு அப்பால் தெற்கிலும், கிழக்கிலும் வசித்து வந்த மக்களைக் குறிக்கப் பயன்பட்டது. வெகுதொலைவிலுள்ள மக்களைக் குறிக்கப் பயன்பட்டது (ஆமோ 9:7). 'எரிந்த முகம்' அல்லது 'கருத்த முகம்' என்ற பொருளை இச்சொல் கொண்டிருப்பதால் கறுப்பு நிறத்தைக் கொண்டிருந்த மக்களை அழைக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

பிற்கால விவிலிய வரலாற்றில் இச்சொல் எகிப்திற்குத் தெற்கிலுள்ள நிலப்பகுதிகளைக் குறிக்கப்பயன்பட்டது. நைலும் அஸ்டபோராகும் (இன்றைய தக்காசி) ஒன்று கூடும் பகுதியிலுள்ள, சிறப்பாக, மேரோ ஆட்சிப் பகுதியைக் குறித்தது. வளமை நிறைந்த இப்பகுதியில் தங்கம், இரும்பு, செம்பு, உயர்ந்த கற்கள், கருங்காலி மரங்கள், பேரீச்ச மரங்கள், நறுமணப் பொருள்கள், தந்தங்கள் போன்றவை கிடைத்தன. இந்தப் பகுதி அரசியல், பொருளாதாரச் செயல்பாடுகளுக்குப் பெயர்போன இடமாகும்; எகிப்தியர்கள், அராபியர்கள், கிரேக்கர்கள், யூதர்கள் போன்றவர்களோடு முக்கியமான தொடர்பு வைத்துக் கொண்ட இடமாகும்.

எத்தியோப்பிய அரசர்கள் நபத்தாவில் இருக்கும் பொழுதும், அதன்பின் மேரோவில் இருக்கும் பொழுதும் கல்வெட்டுக்களில் எழுதுவதற்கு ஆப்புவடிவ எழுத்துக்களைப் பயன்படுத்தினர். கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து, கிறிஸ்தவ சமய காலத்தின் மூன்றாம் நூற்றாண்டுவரை அவர்கள் மொழியும் எழுத்து வடிவமும் பொதுவாக மேரோட்டிக் என்று அழைக்கப்பட்டன. இரண்டாம் தோலமி காலத்திலிருந்து அரசாட்சியானது கிரேக்கப் பண்பாட்டில் வளர ஆரம்பித்து. கி.மு. 665-இலிருந்து கிரேக்கர்கள் இங்கு வரஆரம்பித்தனர். அரசியின் மன்றத்தில் இருக்கும் உயர்ந்த அதிகாரி கிரேக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் ஏசாயாவின் நூலை வாசிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் பணியில், கொடுக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி இரண்டு காரியங்களை வலியுறுத்துகின்றது; அந்த மனிதன் ஓர் எத்தியோப்பியன். அவன் ஓர் அண்ணகன். அவரது பெயர் தரப்படவில்லை. ஆனால் அவர் ஒரு யூதரா அல்லது புறவினத்தாரா, மனம் மாறியவரா அல்லது இறைவனுக்கு அஞ்சுபவரா என்பது தெரியவில்லை.

எத்தியோப்பிய அண்ணகன் பிறப்பிலிருந்தே ஒரு யூதனா அல்லது மனம் மாறியதால் யூதனா என்பது கேள்விக்குறி. அண்ணகன் பிறப்பிலிருந்தே யூதனாக இருக்கமுடியாது. ஆனால் பெரும்பாலும் மனம்மாறிய புறவினத்தாராக இருக்கலாம். எத்தியோப்பிய அண்ணகன் இறைவனுக்குப் பயப்படக் கூடிய வகையினைச் சேர்ந்தவர். அப்போஸ்தலர் பணியில் முதன் முதல் மனம்மாறிய புறவினத்தார் கொர்னேலியு என்று குறிப்பிட்டிருப்பதால் இந்த அண்ணகன் ஒரு யூதனாக இருந்திருக்க வேண்டும் என்று கூற இயலாது. அப்போஸ்தலர் பணியில் கூறப்பட்டிருக்கும் இந்நிகழ்ச்சியில் எத்தியோப்பிய அண்ணகனை இருளிலிருந்து ஒளிக்கு வருகின்றவராகவும், இயற்கையிலே இறைவன் இல்லாத நிலையிலிருந்து இறைமக்களாகும், நிலையைக் குறித்துக்காட்டுகின்றவ

ராகவும், நற்செய்தியாளர் லூக்கா இங்குக் காட்டுகின்றார். இவ்வாறு புறவினத்தாரிடையே நற்செய்தி பரவுவதற்கு மேடை அமைக்கப்படுகிறது (காண் 10:1-48). இந் நிகழ்ச்சியுரை வெகுதொலைவில் உள்ளவர்களும், யூதவழக்கின் கடுமையான கோட்பாடுகளுக்கு ஏற்புடையவர் அல்லாதவர்களும், நற்செய்தியை ஏற்று அதற்குப் பதில் அளிக்கக்கூடும் என்று காட்டுகிறது. சங். 68:3-இல் கூறப்பட்டிருக்கும் 'எத்தியோப்பிய மக்கள் கடவுளை நோக்கித் தம் கைகளை உயர்த்துவார்களாக' என்ற வேண்டுதல் நிறைவேறுவதைத் திருச்சபை காண்கிறது.

எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு (விவிலியத்தின்)

எத்தியோப்பிய நாடு என்று இங்குக் குறிப்பிடப்படுவது, தற்போது சூடான் நாடு என்று அழைக்கப்படுகிறது. அ.ப. 8:26-39-இல் எத்தியோப்பிய அண்ணகன், பிலிப்புவால் திருமுழுக்குப் பெறுவதைப் பார்க்கின்றோம். ஆனால் இந்த எத்தியோப்பியா நாட்டில் எப்போது, எவ்வாறு கிறிஸ்துவம் பரவியது என்பதற்குச் சரியான வரலாறில்லை. கிறிஸ்துவ மதத்தைப் பற்றி முதல் தகவல் கிடைப்பது கி.பி. 4-ஆம் நூற்றாண்டில்தான். புருமென்சியுசு என்பவர், அக்சும் என்ற இடத்தின் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரைத் திருநிலைப்படுத்தியவர் அலக்சாந்திரிய நகர் சமய மூதாளர் அத்தனாசியுசு என்பவர். எனவே இந்தக் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்திலிருந்து, விவிலியத்தை மக்களுக்காக, அம்மக்களின் மொழியில், மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இம்மொழி பெயர்ப்பை யார் முன்னின்று செய்தனர்? என்பதற்கான சரியான தகவல் இல்லை. அபிசினியர் என்பவர்களின் பாரம்பரியக் கருத்துப்படி, இந்த எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு ஒன்பது சீரிய முனிவர்களால் செய்யப்பட்டது என்பர். இந்த ஒன்பது சீரிய முனிவர்கள், இயேசு, ஒரே இயல்பு மட்டும்தான் கொண்டு வாழ்ந்தார் என்ற தப்பறையான கொள்கையைப் பின்பற்றியவர்கள். இந்த ஒரே இயல்புக் கொள்கை கி.பி. 451-ஆம் ஆண்டு, கால்சிடன் நகரில் நடந்த பொதுச் சங்கத்தால் கண்டனம் செய்யப்பட்டது. இவ்வாறு கண்டனம் பெற்ற ஒரே இயல்புக் கொள்கையைப் பின்பற்றிய 9 முனிவர்களும் சீரியா நாட்டிலிருந்து எகிப்திற்குத் தப்பி ஓடி வந்தனர். அங்குதான் எத்தியோப்பிய மொழியில் விவிலியத்தை மொழி பெயர்த்தனர் என்பது அபிசீனியர் பாரம்பரியக் கூற்று. ஆனால், இந்நாட்டில் ஆயராக விளங்கிய புருமென்சியுசும் இந்த மொழி பெயர்ப்பில் ஆர்வம் காட்டியிருக்க வேண்டும். ஆனால் அதற்கான வரலாற்றுப் பூர்வமான சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை.

16A

இம்மொழி அராபிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. தற்போது நமக்குக் கிடைக்கும் பழஞ்சுவடிகள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இரண்டு, புதிய ஏற்பாட்டுப் பழஞ் சுவடிகள் மட்டும் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எல்லாம் எழுபதுநூல் என்ற கிரேக்க மொழி பெயர்ப்பிலிருந்து, மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. 1 அரசர் நூலில் வத்திக்கான் பழஞ்சுவடித் தொகுப்பின் கிரேக்க மொழியை, இந்த எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு அப்படியே பின்பற்றியிருப்பது நன்கு தெரிகிறது.

புதிய ஏற்பாட்டில் கிரேக்க மொழியைச் சொல்லுக்குச் சொல் பின்பற்றி மொழி பெயர்த்துள்ளனர். ஒருசிலவிடங்களில், தங்களுக்கு நன்கு விளங்காதபோதோ என்னவோ, அப்பகுதிகளின் கருத்துச் சுருக்கத்தை மட்டும் தருகின்றனர்.

இந்த மொழிபெயர்ப்பு எழுபதுநூல் பட்டியலில் காணப்படும் நூல்களோடு யூபிலிகள் நூல், 1 ஏனோக்கு, 4 எசுதிரா, 4 பாரூக் மற்றும் யூசேபின் பட்டியல் ஆகியவற்றின் எத்தியோப்பிய கையெழுத்துச் சுவடிகளையும் கொண்டுள்ளது.

எத்தியோப்பியா (ETHIOPIA)

விவிலியம் மற்றும் பிற பண்டைய வழக்குகளிலும் எகிப்திற்குத் தெற்கில் கருமை நிறத் தோலுடைய மக்களின் நிலப்பரப்பே எத்தியோப்பியா ஆகும்.

1. பெயர்:-

''எரிந்த முகம்'' (எரே 13:23) என்ற கிரேக்கச் சொல்லால் பாரம்பரியமாக விளக்கப்பட்டு வரும் இந்த நவீனச் சொல்லானது இந்தப் பொதுவான நிலப்பரப்பைக் குறிக்கின்ற கிரேக்கச் சொல்லினின்றே வருகிறது ''எகிப்து'' என்ற பெயரும் பெறப்படுகின்ற ''பித்தாவின் இல்லம்'' என்னும் எகிப்தியச் சொல்லினின்றும் இப்பெயர் உருவாகியிருக்கக்கூடிய வாய்ப்பும் உண்டு. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எத்தியோப்பியாவும் கூசும் ஒரு இடத்தைக் குறிக்கின்றன. எழுபது நூல் எத்தியோப்பியா என்ற பெயரையே பயன்படுத்துகிறது.

2. புவியியல்:-

பண்டைக்காலம் முழுவதும் எத்தியோப்பியாவானது ஓரளவு துல்லியமற்ற நிலையில் எகிப்திற்குத் தெற்கிலுள்ள நிலப்பரப்பு முழுவதையும் குறிப்பதாகக் கருதப்பட்டது. குறிப்பாக, மனித இனத்தில் அறியக்கூடிய மிகத்தொலையில் உள்ள நாடாகும் எத்தியோப்பியா என்றும் அதில் அரேபியாவும் இந்தியாவும்கூட உள்ளடங்கும் என்றும் கிரேக்கர்கள் கருதினர். எகிப்திய நூல்களில் இச்சொல்லானது நைல் நதியினுடைய இரண்டாவது மற்றும் மூன்றாவது நீர்வீழ்ச்சிகளுக்கு இடையிலுள்ள சிறு நிலப்பரப்பை அல்லது மிகப்பொதுவாக முதல் மற்றும் ஆறாவது நீர்வீழ்ச்சிகளுக்கு இடைப்பட்ட நுபியாவின் பகுதியைக் (இன்றைய வடக்குச் சூடான்) குறிப்பிடுகின்றது. விவிலியக் குறிப்புகள் பெருமளவிற்கு இந்தக் குறுகிய விவரிப்பையே கருத்தில் கொண்டுள்ளன. எத்தியோப்பியாவின் (கூசு) ஆறுகள் எனப்படுபவை (ஏச 18:1; செப் 33:10) நைல் மற்றும் அத்பரா நதிகளுடைய நீலம் மற்றும் வெள்ளைக் கிளை நதிகளைக் குறிப்பிடக்கூடும். பண்டைக்காலத்தில் ஒருபோதும் எத்தியோப்பியாவானது இன்றைய எத்தியோப்பியப் பரப்பாக (அபிசீனியா) அடையாளம் காட்டப்படவில்லை.

3. வரலாறு:-

தொல்பொருள் சான்றுகள் குறிப்பிடுவதன்படி, பண்டைய எத்தியோப்பியாவில் கற்காலத்திலும் எகிப்திய அரசமரபுகளுக்கு முற்பட்ட காலத்திலும் (கி.மு. 8000-3000) நாகரிகம் வளமுற்றிருந்தது. அளவற்ற தாது மூலப்பொருட்கள் நான்காம் அரசிலேயே (2613) எகிப்தியச் சூறையாடலைத் தூண்டின. பின்னர், வியாபாரத் தூதுகள் ஆறாம் அரசின் பாரவோன்களாகிய மெரேன்ரே மற்றும் இரண்டாம் பெபி (2200) மற்றும் இலகாசினுடைய குதேயா (2100) ஆகியோரால் அனுப்பப்பட்டன.

எகிப்தில் மத்திய அரசு அமைக்கப்பட்டவுடன் (2000) எகிப்தியப் பாரவோன்கள் நுபியாவின் வடபகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர். மூன்றாம் செசோசித்திரி (1878-1843) இரண்டாம் நீர்வீழ்ச்சியின் வட பகுதியை இணைத்தார். பல்வேறு கோட்டைகள் மற்றும் வியாபாரத்தலங்களின் துணையோடு மேலும் ஒரு நூற்றாண்டிற்கு எகிப்து அப்பகுதியின் மேல் ஆதிக்கம் செலுத்தியது. கைக்சோசு ஆட்சியாளர்கள் தொடர்ந்து எத்தியோப்பியாவைக் கைப்பற்றியிருந்தமையால் இரண்டாம் எகிப்திய இடைக்காலத்தினால் சிறிதளவும் அமைதி அளிக்க முடியவில்லை. கைக்சோசை வெளியேற்றுவதற்கான நுபியருடைய உதவிக்குப் பிரதிபலனாகப் பதினெட்டாம் அரசினுடைய பாரவோன்கள் நுபியாவை மீண்டும் கைப்பற்றி (1500) நான்காம் நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள நபத்தாவரை தெற்கே தங்களுடைய ஆதிக்கத்தை விரிவடையச் செய்தனர். அடுத்த ஐந்நூறு ஆண்டுகளுக்கு எத்தியோப்பியாவிலுள்ள அரசனின் மகன் எனப்படும் ஓர் ஆளுநரால் எத்தியோப்பியா ஆட்சிசெய்யப்பட்டது. பதினெட்டு மற்றும் இருபதாம் அரசுகளின் கீழ், பரந்த நீர்வசதி, புதிய நகரங்களை உருவாக்குதல், அபுசிம்பெல் உள்ளிட்ட எண்ணற்ற கோவில்களைக் கட்டுதல் போன்றவற்றால் ஊக்குவிக்கப்பட்டு, நாடானது அமைதியையும் செழிப்பையும் அனுபவித்து வந்தது.

இலஞ்சம், திறமையற்ற ஆட்சி ஆகியவற்றால் இருபதாம் அரசு மூழ்கடிக்கப்பட்ட

பின்னர் ஆளுநர் எரிகோர் ஆட்சிப்பொறுப்பை ஏற்று இருபத்தியோராவது அரசை உருவாக்கினார் (1065-945). எதிர்நோக்கியிருந்த மூன்றாவது இடைப்பட்ட காலத்தில் சாலமோனுடைய மரணத்தைத் தொடர்ந்து எருசலேமைத் தாக்குவதற்கென இலிபிய பாரவோன் முதலாம் செசாங்குக்கு (2 நாள் 12:2-3) எத்தியோப்பியக் கூலிப்படையினர் துணை புரிந்தனர். நபத்தாவிலிருந்து ஆட்சி புரிந்து வந்த கசித்தா 740-இல் தென்எகிப்தை வென்று இருபத்து ஐந்தாவது (எத்தியோப்பிய) அரசை ஏற்படுத்தியது வரை நடந்த மற்ற நிகழ்ச்சிகளைப்பற்றிச் சிறிதளவே அறியப்படுகிறது. அவரது மகன் பியான்சி எகிப்தின் மற்றப் பகுதிகளை வென்றார். அவருக்குப் பின்வந்த அவரது சகோதரன் சபாகா தலைநகரைத் திபிசுக்கு மாற்றியமைத்து, எத்தியோப்பியாவிற்கும் எகிப்திற்கும் அரசனாக ஆட்சி புரிந்தார். அசிரிய சனகெரிபுவிற்கு எதிராக யூதாவின் எசக்கியாவிற்குத் துணைபுரிந்த தாராக்கா (2 அர 19:9; ஏச 37:9) 670-இல் ஏசர்கதோன் எகிப்தின் மீது படை எடுத்தபோது தோற்கடிக்கப்பட்டார். அவரது உடன்பிறந்தார் மகனாகிய தனெதமோன் மெம்பிசுவை மீண்டும் கைப்பற்ற முயற்சித்த போது அசூர்பானிப்பால் திபிசுவை அழித்து எகிப்தின் மீதான எத்தியோப்பிய ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பதிலடி கொடுத்தார்.

எத்தியோப்பிய ஆட்சியானது தனெதமோனுக்குப் பின் வந்தவர்களின் கீழ் நபத்தாவைத் தலைநகராகக் கொண்டு தொடர்ந்தது. எகிப்தின்மீது எத்தியோப்பிய ஆதிக்கம் மீண்டும் உருவாவதைத் தடுக்க 590-இல் பாரவோன் இரண்டாம் சாம்திக்கினால் நகரானது தரைமட்டமாக்கப்பட்டது. இவ்வாறு தலைநகரானது ஐந்து மற்றும் ஆறாவது நீர்வீழ்ச்சிகளுக்கு இடையிலுள்ள மெரோவிற்கு மாற்றப்பட்டது. 522-இல் கேம்பிசேயின்கீழ், பாரசீகர்கள் புதிய தலைநகரை முற்றுகையிட்டு வென்றாலும் (எஸ்த 1:1; 8:9) பைசாண்டின் காலத் தொடக்கம்வரை மெரோய்திக் ஆட்சி தொடர்ந்தது. கி.பி. 350-இல் அக்சுமினுடைய அரசனாகிய எசானாவினால் நகரானது கைப்பற்றப்பட்டு அப்பகுதி அபிசீனிய ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

4. விவிலிய முன்னோக்கு:-

இனத்தோற்ற முன்னோர்களின் தலைமுறைப்படி, புவியியல் மற்றும் இனவியல் பகிர்வுகளைக் காட்டுகின்ற நாடுகளின் அட்டவணையில், எத்தியோப்பியாவானது காமின் மகனாகிய கூசினால் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 10:6) எகிப்து, புத்து, கானான் ஆகியோர், இவருடைய சகோதரர்கள்; மற்றும் சாபா, கெவிலா, சபத்தா, இராகாமா, சம்தேக்கா ஆகியோர் இவரதுமக்கள் (10:7). இஸ்ராயேலர் பொதுவாகத் தங்கள் இனத்தவர்களுக்குள்ளேயே மணம் செய்து கொள்ள விரும்பினாலும் சிலர் காம் இன எத்தியோப்பியரை மணம் புரிந்தனர் (உ.ம். மோசே; எண் 12:1).

நாட்டினுடைய வணிகச் செயல்முறை பற்றியும் (ஏச 4:5:14), அரசியல் மற்றும் இராணுவ ஈடுபாடு பற்றியும் (எச 30:5-9; நாகூ 3:9; எச 38:5) அறிந்தவர்களாய், இஸ்ராயேல் இறைவாக்கினர்கள், பாவம் நிறைந்த அரசுக்கு எடுத்துக்காட்டாக எத்தியோப்பியாவைக் காட்டினர் (ஆமோ 9:7). எத்தியோப்பியாவானது உலக அரசுகளுக்கு வீழ்ச்சியடைவதோடு மட்டுமின்றி (ஏச 20:3-5) இறைவனுடைய சினத்தையும் அது அனுபவிக்கும் (செப் 2:12). எகிப்து மற்றும் சேபாவுடன் எத்தியோப்பியாவும் நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலின் மீட்புக்கு ஈடாகக் கொடுக்கப்படும் (ஏச 43:3).

எத்தேத் (JETHETH)

ஏசாவின் வழித்தோன்றல். ஓர் ஏதோமிய இனத்தின் தலைவரும் இனப்பெயர் மூதாதையருமாவார் (ஆதி 36:40; 1 நாள் 1:51).

எத்தேர் (ETHER - வாசனைப் பொருள்)

1. இலிபுனா மாரேசா மாவட்டத்தில் செப்பேலாவில் உள்ள யூதாவின் நகர் (யோசு 15:42). எலுத்தரோபோலி என்ற பெயித்-இப்ரினுக்கு வடமேற்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத்து ஏல்-ஆத்தேரோடு இதை அடையாளம் காட்டலாம்.

2. சிமியோன் கோத்திரத்தின் நகர்களில் ஒன்று (யோசு 19:7; யோசு. 15:32-இல் வரும் அயின்-ரிம்போனுக்கும் பிறகு சேர்க்கப்பட வேண்டிய தொன்றாகும்). இதற்கு இணை யான பகுதியான 1 நாள் 4:32-இல் ''தொக் கேன்'' என்றுள்ளது. 1 சாமு 30:30-இல் வரும் அத்தாக்கு என்பது எத்தேருக்குப் பதிலான பிழையான வாசகமாக இருக்கலாம். பேயேர்-செபாவுக்கு வடக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத்து அத்தீர் எத்தேராக இருந்திருக்கலாம்.

எத்தேர் *(JETHER - ஏராளம்)*

1. கிதயோனின் மூத்தமகன் (நீதி 8:20). இவருடைய தந்தை, சோபா, சல்முன்னா ஆகிய மிதியானியர்களைக் கொன்று பழி தீர்க்கக் கட்டளையிட்டார். இவர் சிறுபிள் ளையாய் இருந்ததால் அஞ்சி, அப்படிச் செய்யவில்லை. கிதயோனே அவர்களைக் கொன்று பழி தீர்த்தார். இதனால் ஒரு சிறுவ னால் கொல்லப்படும் இழிவிலிருந்து கைதி கள் தப்பினர் (8:21).

2. இவர் ஓர் இசுமயேலர் (1 நாள் 2:17). அமசாவின் தந்தை, முன்னோர். தாவீதுக்கு எதிராக அபிசலோம் கிளர்ச்சி செய்த போது, அபிசலோம் அமசாவைப் படைத்தலைவர் ஆக்கினார் (1 அர 2:5.32). 2 சாமு 17:25-இல் இவர் இதிரா என்றழைக்கப்படுகிறார்.

3. எரகுமேலின் வழிவந்தவர். யாதாவின் மகன். பிள்ளைகளின்றி இறந்தவர் (1 நாள் 2:32).

4. யூதாவின் இனத்தைச் சேர்ந்த ஓர் எஸ்ரா வின் மகன் (1 நாள் 4:17).

5. ஆசேர் இனத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 7:38). ஒருவேளை 7:37-இல் வருகிற சோப் பாகின் மகன் இதிரானாக இருக்கலாம்.

எத்துபாகால் *(ETHBAAL - பாகாலின் ஆள்)*

சிதோனியரின் அரசன். இவருடைய மகள் ஈசபேல் இஸ்ராயேல் அரசன் ஆகாபை மணந்து கொண்டாள் (1 அர 16:31). அசித் தார்த்தியின் குருவான இவர் முதலாம் கிரா மின் வழித் தோன்றல்களில் கடைசியான பேலெசைக் கொன்று ஆட்சியைப் பிடித் தார். இவர் பெனிக்கியர்களின் வியாபாரத் தைத் தொடர்ந்து விரிவுபடுத்தி இலிபியா வில் அவுசா என்ற குடியிருப்பைத் தோற்று வித்தார். இவர் ஆட்சியில் ஓரண்டு முழுவ தும் பஞ்சம் நிலவியது (1 அர 17).

எத்தூர் *(JETUR)*

இசுமயேலின் மகன் (ஆதி 25:15; 1 நாள் 1:31). இத்துரேயர்களின் இனப்பெயர் மூதா தையர். இவரது சந்ததியினர், யோர்தானுக் குக் கிழக்கில் வாழ்ந்த இஸ்ராயேலர்க ளோடு போர் புரிந்தனர் (1 நாள் 5:19).

எந்திரம், எந்திரக் கல் *(MILL, MILLSTONE)*

தானியங்களை மாவாக அரைக்க உபயோ கிக்கப்படும் இரண்டு கற்களைக் கொண்ட கருவி. இருவகைக் கை எந்திரங்கள் உண்டு. ஒன்று கிட்டத்தட்ட செங்கோண வடிவை யும் சிறிதளவு குழிவானதாகவும் ஒரு முனை மற்றொரு முனையைவிடச் சிறிதளவு பரும னாகவும் உள்ளது. மெகிதோவில் கண்டெ டுக்கப்பட்ட கருவி இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். இது முப்பது அங்குலம் நீளம் உடையதாகும். புதைபொருள் ஆராய்ச்சி யாளர்கள் இக்கல்லினைச் சேண எந்திரம் என்று குறிப்பிடுகின்றனர். மேல் அல்லது அரைக்கும் கல்லானது ஒரு புறம் தட்டையான தாகவும் மறுபுறம் நீள் வட்டமானதாகவும் உள்ளது. இதனுடைய நீளமானது கீழ்க்கல் லினுடைய அகலத்திற்குச் சமமாகச் சிறிய தாக உள்ளது. அதனுடைய அகலமானது கையால் எளிதில் பிடிக்குமளவிற்குப் போது மானதாக இருந்தது. அரைப்பதானது தானி யங்கள் நிரப்பப்பட்ட பெரிய கல்லின் மேலுள்ள சிறிய கல்லினை முன்னும் பின் னும் தள்ளுவதன் மூலம் செய்யப்பட்டது. அனேகமாக இப்படிப்பட்ட சிறிய கல்லில் ஒரே நேரத்தில் பெருமளவு தானியம் அரைக் கப்பட முடியாது. ஆனால் கிரேக்கக் காலம் வரை உபயோகத்தில் இருந்த ஒரே எந்திரம் இது மட்டுமே.

இரண்டாவது வகையான கை எந்திரமானது இரண்டு உருண்டைக் கற்களைக் கொண்டுள்ளது. கீழ்க் கல்லானது மேற்பரப்பில் குவிந்ததாக உள்ளது. மேல் கல்லானது கீழ்க்கல்லின்மேல் நெருக்கமாகப் பொருந்துமாறு குழிவானதாகவும் உள்ளது. இவ்வித எந்திரத்தின் சில எடுத்துக்காட்டுகள், தானியத்தைப் பொழிவதற்கென, மேற்கல்லின் மையத்தில் ஒரு துளையைக் கொண்டுள்ளன. கிரேக்கக் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் இத்தகைய எந்திரமானது சாதாரணமாயிற்று. இதனுடைய பல்வேறு வேறுபாடுகள் இன்றும் அடிக்கடி காணப்படுகின்றன. இத்தகைய இரண்டு வித எந்திரங்களினுடைய கற்களும் சாதாரணமாக, கடினமான மற்றும் நுண்துளைகளையுடைய கருமையான தீக்கல்லினால் ஆனவை. இவ்வாறு அவை பல்வேறு வெட்டு முனைகளுடைய கடின மேற்பரப்பை அடிக்கடி அளிக்கின்றன.

இத்தகைய இருவித எந்திரங்களும் வீடுகளில், வீட்டுப் பெண்களால் இயக்கப்பட்டன. இதுவே அவர்களது அன்றாட இடைக்கால வேலையாகும். இதற்காக அவர்கள் அதி காலையில் எழுவர். ஊழியக்காரிகளோ, அடிமைகளோ உள்ள வீட்டில் அரைக்கும் தொழிலானது சந்தேகத்திற்கிடமின்றி அவர்கள்மேல் விழும் (யாத் 11:5; ஏச 47:2). அவ்வாறே சிறைப்பிடிக்கப்பட்டோர் மீதும் எந்திரத்தை இயக்கும் பணி சுமத்தப்பட்டது (நீதி 16:21; எரே 52:11).

சக்கரம் போன்ற வடிவுடைய பளுவான ஒரு கல்லானது, பெரிய, பளுவான, வட்டமான கீழ்க் கல்லின்மேல் விலங்கினால் இயக்கப்பட்ட பெரிய சமுதாய எந்திரமும் பண்டைக்காலங்களில் இருந்தன (புல 5:12; மத் 18:16; மாற் 9:42).

கை எந்திரமானது முற்றிலும் அவசியமானதாக இருந்ததால், எந்திரத்தையே முழுமையாக, அல்லது மேல் எந்திரக்கல்லை மட்டும் கடனுக்குப் பிணையமாக எடுத்துக்கொள்வதைச் சட்டம் தடை செய்தது. ஏனெனில் அன்றாட உணவிற்கு அடிப்படையான உரொட்டியைச் செய்வதற்கு உதவுகின்ற மாவைத் தயாரிக்க அவசியமான கருவியை அது குடும்பத்திற்கு இழப்பாக்குகின்றது.

அபிமெலக்குவினுடைய மரணத்தில் நிகழ்ந்ததைப்போன்று மேல் எந்திரக்கல்லானது செயல்மிக்க ஆயுதமாக இருந்தது (நீதி 9:53). பாலஸ்தீன நகரங்களிலும் கிராமங்களிலும் அதிகாலையில் அரைத்தலின் சப்தமானது பொதுவானது என்பதில் சந்தேகமேயில்லை. அது இனி எப்போதுமே கேட்கப்படாத காலமானது முழுமையான பாழ்நிலையின் அடையாளமாக இருந்தது (எரே 25:10; திருவெளி 18:22).

எபசு (EBEZ)

எபசு இசக்கார் பகுதியில் உள்ள ஒரு நகரம் (யோசு 19:20). இது அமைந்திருந்த இடம் தெரியவில்லை. எழுபது நூலில் ''ஓய்வெடுக்கும் இடம்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ஒருவேளை தவறாக வந்துவிட்ட சொல்லாக இருக்கலாம்.

எபரோன் (EPHRON - ' கலைமான், மான் கன்று போன்று) - ஆள்

சோகாரின் புதல்வன். கெபிரோனில் வாழ்ந்த கித்தியனான இவரிடமிருந்துதான் ஆபிரகாம் மமிரேக்குக் கிழக்கில் உள்ள மக்கபேலாக் குகையை நானூறு செக்கேல் வெள்ளி நாணயத்திற்கு வாங்கினார் (ஆதி 23:8-17; 25:9; 49:29-30; 50:13).

எபரோன் (EPHRON - கலைமான், மான் குட்டிகள் போன்று) - இடம்

1. எபரோன் மலை யூதாவின் வட எல்லையில் கிரியத்து எயாரிம் அருகில் உள்ளது (யோசு 15:9). யோசு 18:15-இல் பென்யாமின் கோத்திரத்தாரின் தென் எல்லை குறிக்கப்படும் இடத்தில் அறிஞர் பலர் ''எபரோனுக்கு'' என்று இடை நுழைத்து மூலப் பாடத்திலுள்ள தவறைத் திருத்துகிறார்கள். ஏனென்றால் பென்யாமின் கோத்திரத்தாரின் தெற்கு எல்லை முடியும்போது யூதாவின் வடக்கு எல்லை ஆரம்பமாகிறது. பெத்திலகேமுக்கு

மேற்கில் மலைச்சிகரங்கள்தாம் எபரோன் என்று சொல்லப்பட்ட போதிலும், இந்த மாவட்டத்தைச் சரியாகக் கணித்துக் கூற முடியாது. இம்மலை மோசா (இக்காலக் கலோனியே) அருகிலுள்ள ஏல்-காஸ்டெல் ஆக இருக்கலாம்.

2. முதலாம் எரொபயாமிடமிருந்து யூதா அரசன் அபியா கைப்பற்றின பெத்திலகேமுக்கு அருகிலுள்ள நகர் (2 நாள் 13:19). பென்யாமின் கோத்திரத்தாருக்குச் சொந்தமான ஓபிராவும் இதுவும் ஒன்றாக இருக்கலாம் (யோசு 18:23). எபரோன்-ஓபிரா பகுதி, பெத்தேலுக்கு வடகிழக்கில் 6.5 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கு வட-வடகிழக்கில் 21 கி.மீ. தொலைவிலும் உள்ள எத்-தையிபே ஆக இருக்கலாம் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். சில சமயம் இது எப்பிராயிம் என்றழைக்கப்படுகிறது (2 சாமு 13:23).

3. மக்கபேயர் காலத்தில் கார்னாயிமுக்கும் பேத்து-சானுக்குமிடையே பலமாகப் பாதுகாக்கப்பட்ட நகர். இந்நகர் இஸ்ராயேல் மக்களோடு யூதாசின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முயன்றது. ஆனால் யூதாக நகரைத் தாக்கி அதைக் கைப்பற்றினார். ஆடவர்கள் அத்தனைபேரையும் கொன்று குவித்து அந்நகரைச் சூறையாடினார் (1 மக் 5:46-52; 2 மக் 12:27-29). இந்நகர், ஒருவேளை யோர்தானுக்குக் கிழக்கில் பேத்துசானுக்கு எதிரிலும், கலிலேயக் கடலுக்குத் தென் கிழக்கில் 20 கி.மீ. தொலைவிலும் இருந்திருக்கலாம்.

எபனேசர் (EBENEZER - உதவியின் கல்)

1. இப்பாறை 'அபேக்கு' என்ற இடத்திற்கு அருகில் உள்ளது. இவ்விடத்தில் இஸ்ராயேலர்கள் பெலிஸ்தியருடன் இரண்டு முறை போர் தொடுத்தனர். இரண்டாம் போரில் உடன்படிக்கைப் பெட்டியைப் பெலிஸ்தியர் கைப்பற்றினர் (1 சாமு 4:1-11; 5:1). இவ்விடம் யாப்பாவுக்கு வடகிழக்கிலுள்ள மச்தெல் யாபாவாக இருக்கலாம்.

2. 1 சாமு 7:12 மற்றொரு பாறையைக் குறிப்பிடுகின்றது. இக்கல் மிகப்பாவுக்கும் எசானா மலைக்குமிடையில் பெலிஸ்தியர் மேல் கொண்ட வெற்றிக்கு அடையாளமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடம் மிகப்பாவுக்கு வடக்கிலும் இப்னேக்கு வடக்கில் 5 கி.மீ. தொலைவிலுமுள்ள பர்ச் ஏல்-இஸ்னா அருகில் இருந்திருக்க வேண்டும்.

எபியசாபு (EBIASAPH - தந்தை பெருகிவிட்டார்)

கெகாத்தின் வழிவந்த ஒரு லேவியர். அசீரின் அல்லது கோரேயின் தந்தையாகக் கூறப்படுகிறார் (1 நாளா 6:23.37; 9:19). யாத் 6:24-இல் இவர் அபியசாபு என்று அழைக்கப்படுகிறார்.

காண்க. அபியசாபு.

எபியோனியர் (EBIONITES)

கி.பி. 2-4 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்திருந்த யூத-கிறிஸ்தவத் துறவியர் குழுவாகும். இது பிற்காலத்தில் பதிதக் குழுவாகத் தீர்ப்பிடப்பட்டது. இவர்களைப் பற்றிய குறிப்புகளை எபியோனியர் நற்செய்தி என்ற நூலிலிருந்தும் எப்பிபானியஸ் எடுத்துக் கூறும் பகுதிகளிலிருந்தும் அறிகிறோம்.

இக்குழுவைத் தோற்றுவித்த தலைவரான எபியோன் என்பவரிலிருந்து பெயர் பெறுவதாக அறிஞர் சிலர் கருதுவர்; ஆனால் ''எபியோன்'' என்ற சொல்லுக்கு ஏழ்மை என்று பொருள் கொடுக்கலாம். ஒருவேளை குழுவினரின் வறுமைநிலையிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம். கி.பி.70-இல் முதல் யூதக் கிளர்ச்சியின்போது எருசலேம் அழிக்கப்பட்டபின் அகதிகளானவர்கள். இப்பெயர் முதலில் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்பட்டாலும், இக்குழுவினர்களுக்கு மட்டும் குறிப்பிட்ட பொருளுடையதாகத் தோன்றுகிறது. இவர்கள் ஏழைகளைப் பற்றியும், உலக உடைமைகளின் தீமையைப் பற்றியுமான இயேசுவின் போதனையைத் தங்களுடையதாக்கிக் கொண்டனர்.

இறையியலில், இவர்கள் கிறிஸ்துவத்திலிருந்து வேறுபட்டனர். அவர்களது கிறிஸ்து இயலில் தோன்றிய ''வறுமைக்காகவும்'' மோசேயின் சட்டத்திற்குக் காட்டிய கடுமையான அழுத்தத்திற்காகவும் சில திருச்சபைத் தந்தையரின் நகைப்பைப் பெற்றனர். இவர்கள் கன்னிப் பிறப்பையும், மனித அவதாரத்தையும் நிராகரித்தனர். இவர்கள் இயேசுவை ஒரு சாதாரண மனிதனாகவும் திருமுழுக்கின் போது தூய ஆவியால் சக்திபெற்றவராகவும் கருதினர். விசுவாசத்தால் மட்டுமே மீட்பு என்ற கருத்தை மறுத்தனர். இவர்கள் பவுவின் திருமுகங்களையும், ஐந்நூலில் மோசேக்குப்பின் சேர்க்கப்பட்ட சில பகுதிகளையும் நிராகரித்தனர். இவர்கள் புலால் உணவை உண்பதில்லை. பலிகளையும் ஏற்றுக்கொள்வதில்லை.

எபியோனியர்களின் நற்செய்தி (GOSPEL OF THE EBIONITES)

இந்நூல் கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு நூலாகும். இந்நூலிலிருந்து எப்பிபானியஸ் என்ற ஆதித்திருச்சபை எழுத்தாளர் சில பகுதிகளை எடுத்துக் கூறுகிறார். இந்நூல், எபிரேயர்களின் நற்செய்தி நூலாகவும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போலி நற்செய்தியாகும். உண்மையில் மத்தேயு எழுதிய நற்செய்தியின் யூத, அறிவியல் வாதச் சுருக்கமாகும். திருமுழுக்கு யோவானைப் பற்றிய விவரிப்போடு தொடங்குகிறது. சீடர்களின் அழைப்பும், இயேசுவின் திருமுழுக்கு, இறுதி இரவுணவு, பாடுகள், உயிர்ப்பு ஆகியவைகளையும் கொண்டிருக்கிறது. மோசேயின் சட்டத்தை இயேசு அகற்றவில்லை. ஆனால், அதில் ஒவ்வாத பகுதிகளைக் குறிப்பாக மோசேயின் பலிகளை அகற்றினார் என்று கூறுகிறது. எபியோனியர்கள் புலால் உணவை உண்பதில்லை. எனவே, அவர்களது நற்செய்தியில் புலால் உணவு கண்டிக்கப்படுகிறது. இயேசுவின் தெய்வீகப் பிறப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பலிகளும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவையனைத்தையும் எப்பிபானியாசின் குறிப்புகளிலிருந்து நாம் அறிகிறோம்.

இவர்களுக்கும் சாக்கடல் சுருள்களைச் செய்த கும்ரான் குழுவினருக்கும் இடையே துறவு வாழ்க்கை முறையில் ஒற்றுமையிருந்தாலும், இறையியல் வேறுபாடுகளும், காலப்பிரிவும், யூத எஸ்ஸேனியர்களும், கிறிஸ்தவ எபியோனியர்களும் ஒரே குழுவையே குறிக்கின்றனர் என்ற கருத்தைப் புறம்பாக்குகிறது.

எபிரேயச் சமய வரலாறு (HISTORY OF HEBREW RELIGION)

பழங்கால உலகிலே இது ஒரு தனியிடம் வகிக்கிறது. இது இஸ்ராயேலர் தோன்றிய காலத்தோடு அதாவது கி.மு.13-ஆம் நூற்றாண்டில் உருவானது. இது கிறிஸ்தவ மதம் தோன்றுவதற்கு முன் இருந்த நாம் அறிந்த யூத மதம் தோன்றுவதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. இதில் காலப் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இவை அனைத்திலும் இஸ்ராயேலரின் விசுவாசத்தின் தன்மை மாறவில்லை எனலாம். பரிணாமக் கொள்கைப்படி வளரவில்லை. அதன் வரலாறு முழுவதும் அதன் அடிப்படையான, தனிச் சிறப்பான பண்புகளை எப்போதும் கொண்டிருந்தது.

I. குல மூதாதையரின் சமயம்:-

மோசேயின் காலத்தில்தான் இச்சமயம் முறையாக ஏற்பட்டதெனினும், அதற்கு வித்திட்டவர்கள் அவர்களின் குல மூதாதையர்களாவர். இவர்கள் கி.மு.2000-இன் முன் பகுதியில் பாலஸ்தீனத்தில் வந்து குடியேறிய நாடோடி மக்கள். ஆதியாகமத்திலிருந்தும், வேதாகமத்திற்குப் புறம்பான சுவடிகளிலிருந்தும் இம்மதம் மற்றப் புறவினத்தாரின் மதங்களைவிட வேறுபட்டது என்பதை அறிய முடிகிறது. இவர்களின் இறைவன் இவர்கள் குல இறைவன் சொந்த இறைவன் எனக் கருதினர் (ஆதி 15:1; 31:53; 31:42; 19:24). ஆபிரகாமின் இறைவன், யாக்கோபின் பயபக்தி, யாக்கோபின் வல்லவர் என்றெல்லாம் இறைவன் அழைக்கப்பட்டார். நிலத்தையும், நிலத்தின் பயனையும் அவர்கள் இறைவனிடமிருந்தே பெற்றுக் கொண்டதாகக் கருதினர். இத்தகைய இறைவனுக்கு

இவர்கள் நடத்திய வழிபாட்டினை அந்தந் தக் குலத் தலைவர் அதாவது குடும்பத் தலைவர்தான் முன்னின்று நடத்துவார்.

ஏல் சத்தாய் (எல்லாம் வல்லவர்) (ஆதி 17:1; யாத் 6:3), ஏல் எலியோன் (ஆதி 14:18), ஏல் ஒலாம் (ஆதி 21:33), ஏல் ரோய் (ஆதி 16:13) ஆகியவை அவர்கள் வழிபட்ட கடவுளின் பெயர்கள். இந்த இறைவனே அவர்களின் குடும்பத்தினர் எதிர்காலத்தை நிச்சயிப்பவர் எனக் கருதினர். இவர்கள் எகிப்திற்கு வந்தபின்தான் இறைவனை யாவே என்றழைத்தனர் (யாத் 6:3). இவர்களின்' மதம், உடன்படிக்கையால் இறைவனுக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட நெருங்கிய உறவையே குறிக்கிறது. இது அவர்களின் விசுவாசத்தால் தூண்டப்பட்டது. இவர்களின் பாரம்பரியத்திலும் பழக்கவழக்கத்திலும் மெசபொத்தாமியாவின் பண்புகள் சில காணப்படுகின்றன. இது அவர்களின் மூதாதையரிடமிருந்து பெற்றது.

II. பயிற்சிக்காலம்:-

1. இவர்களின் மதம் முறையாக யாத்திராகமத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில், அதாவது மோசேயின் காலத்தில்தான் ஏற்பட்டது. அவர்களைச் சுற்றி வாழ்ந்து வந்த மற்ற இனத்தவரின் சில பழக்கங்களும் இதில் கலக்கப்பட்டுள்ளன. இந்தச் சமயத்தைப் பற்றி நாம் ஐந்நூலில் இருந்து அறிகிறோம். இந்த மதம் ஏதோ ஒரு கடவுள் என்று அவர்கள் மனதில் எழுந்த எண்ணத்தால் தொடங்கவில்லை. மாறாகத் தங்கள் வாழ்விலே கடவுள் ஆற்றிய அரிய பெருஞ்செயல்களை உணர்ந்தவர்களாய் அவர்கள் விசுவாசத்தினால் எழுந்ததுதான் இச்சமயம்.

2. உடன்படிக்கைச் சமூகம்:-

நிகழ்ச்சிகளின் விவரங்கள் எவ்வகையாயினும், எகிப்தில் அடிமைகளாக இருந்த ஓர் எபிரேயக் குழுவினர், யாவே ஆகிய "புதிய" இறைவனின் கட்டளைக்கேற்ப, மோசேயால் விடுதலைக்கு இட்டுச் செல்லப்பட்டனர். அப்போது நிகழ்ந்தவை எவ்வளவு வியப்புக்குரியவை என்றால் அவை ஒரு போதும் மறக்கப்படவில்லை. இவ்விடுதலை, யாவே அம்மக்கள் தகுதி பெறாமலே அவர்களை விடுதலைக்கு அழைத்து, அவர்களுக்குச் சலுகை காட்டினார். அம்மக்கள் சீனாய் மலைக்குச் சென்றனர். அங்கு, யாவேயின் மக்களாக இருப்பதாக அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். இவ்வாறு ஒரு புதிய சமூகம் உருவாயிற்று. யாவே தங்களுக்குக் காட்டிய சலுகைகளை ஏற்கெனவே அனுபவித்ததற்கு உடன்படிக்கை பதில் அளிப்பதை அடிப்படையாகக் கொண்டது. யாவேயால் தேர்ந்தெடுக்கப்படுதல், மற்றும் அவரோடு உடன்படிக்கை செய்துகொள்ளல் ஆகியவை பற்றிய விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் இஸ்ராயேலின் சமயம்.

இஸ்ராயேலரின் உடன்படிக்கை அக்காலத்தில் பேரரசர்களுக்கும். சிற்றரசர்களுக்கும் இடையே இருந்த சமரச உடன்படிக்கை போல இருந்தது. இந்த அமைப்பு பின்வருமாறு. முதலில் மன்னர் சிற்றரசனைப் பார்த்துத் தாம் அவனுக்குச் செய்த நன்மைகளைக் கூறி அவன் தனக்கு நன்றிசெலுத்தக் கடமைப் பட்டவன் என உணர்த்துவான். பின் சிற்றரசன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் கூறப்படும். மன்னரின் பகை அரசனோடு, இவனும் பகையாக இருக்க வேண்டும். மன்னருக்காகப் படை ஒன்று இருக்கவேண்டும். அதோடு மன்னர்மேல் உறுதியான நம்பிக்கை இருக்கவேண்டும் (நீதி 5:13-823; 21:8-12). வருடந்தோறும் மன்னரைக் கப்பத்தோடு சந்திக்க வேண்டும் (உப 26:5-10; 1 சாமு 1:21). மன்னனின் மற்றச் சிற்றரசர்களோடு சமாதானமாக இருக்க வேண்டும் (உப 17:8-13). இத்தகைய ஒழுங்குகள் அடங்கிய ஓர் ஏடு ஆலயத்தின் கதவில் பதிக்கப்பட்டு, காலந்தோறும் பொதுமக்களுக்கு வாசிக்கப்படும் (உப 10:5; 31:9-13). அவர்களின் தேவர்கள் சார்பாகச் சாபங்களோ, ஆசீர்களோ அதில் இணைக்கப்பட்டிருக்கும் (உப 28). இதே அமைப்பு இஸ்ராயேலருக்கும் இறைவனுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையிலும் காணப்படுகி

றது. எனவேதான் உடன்படிக்கையின் கட்டளைகளை மீறுவதைப் பெரிய குற்றமாகக் கருதினர். இறைவனை அவர்கள் அரசராகவே கொண்டனர் (எண் 10:35-36; யாத் 15:18; எண் 23:21; நீதி 8:22; சங் 67:24; எண் 24:9; ஆதி 12:3).

3. தொடக்க கால இஸ்ராயேலின் இறைவன்:-

இஸ்ராயேலர் இறைவனை யாவே என்று குறிப்பிட்டனர். இதற்கு இருக்கின்றவற்றுக்கெல்லாம் காரணம் அவரே என்பது பொருள். (யாத் 3:14). முதலில் இதைமட்டுமே குறித்த இச்சொல் பின் கடவுளின் பெயராகவே கூறப்பட்டது. மோசேக்கு முன் இப்பெயர் வழங்கப்படவில்லை. எனவே மோசேக்குப் பின்தான் இந்த மதம் ஆரம்பிக்கப்பட்டது எனலாம். இவர்கள் 'யாவே' இறைவனை மட்டுமே வணங்க வேண்டும். இறைவன் வல்லவரும் எரிச்சல் உள்ளவரும் எனக் கூறப்பட்டுள்ளது (யாத் 20:5; 20:3; 22:20), அதாவது, மற்றத் தேவர்களை வழிபடுவது இறைவனுக்குப் பிடிக்காது என்பதே அதன் கருத்து. மற்ற இனத்தவரின் தேவர்கள் போல் இங்குத் தேவதைகள் இல்லை. எனவேதான் எபிரேய சமயத்திற்குப் புராணங்கள் இல்லை.

மற்ற இனத்தவரின் தேவர்கள்போல் யாவே இறைவனுக்கு உருவம் கிடையாது. மனிதப் பண்புகள் அவருக்குச் சாற்றிக் கூறப்பட்டாலும் எந்த விண்ணுலகப் பொருட்களோடும் அவர் இணைத்துப் பேசப்படவில்லை. அதாவது, மற்றச் சமயம்போலக் கடவுள் விண்மீன்களோடு ஒப்பிடப்படவில்லை (யாத் 20:24). இறைவனே நிலத்தில் செழுமையைப் பொங்கச் செய்தாலும் மற்ற இனத்தார் போல அவரைச் செழுமைத் தேவதையாக இவர்கள் வழிபடவில்லை. மற்ற இனத்தவர்கள் செய்வதுபோல் இறைவனைச் சில சடங்குகளால் தங்கள் விருப்பம் போல் கையாண்டு ஆட்டி வைக்க முடியாது. இறைவனை அவர்கள் நம்பி உண்மையுள்ளவர்களாக, அல்லது கட்டளையை மீறிப் பாவம் புரிந்தவர்களாகத்தான் வாழமுடியும். இஸ்ராயேலரின் மதத்தில் மாய வித்தைகளுக்கும் பில்லி சூனியங்களுக்கும் இடமில்லை (யாத் 20:7; 20:18; 1 சா 28:9).

உடன்படிக்கையின் கூடாரமே அவர்களின் வழிபாடுகளின் மையமாக இருந்தது. பின் பாலஸ்தீனத்தில் குடியேறியதும் ஆங்காங்கே பல திருத்தலங்களில் இறைவனை வழிபட்டனர். நீதிபதிகளின் காலத்தில் அங்கங்கே சில குலங்களில் சில நீதிபதிகள் இருந்தனர். இவர்களே இஸ்ராயேலரை எதிர்த்த பகைவரை முறியடித்தனர். இவர்கள் தேவ உந்துதலினால் தான் இந்தப் பொறுப்பை ஏற்றனர். இஸ்ராயேலரின் விசுவாசத்தைக் காப்பதும் இவர்களின் பொறுப்பு (நீதி 3:10; 11:29; 8:22-23; 9:7-15).

இவ்வாறு இஸ்ராயேலர் 12 கோத்திரங்களாகச் சுமார் 200 ஆண்டுகள் வாழ்ந்தனர். இவ்வாறு கோத்திரங்களாக இறைவனை வழிபட்ட இவர்கள் சிலோவில் ஒன்றுகூடினர். திருவிழா நாட்களில் அங்கு ஒன்றாகக் கூடி உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டனர் (1 சாமு 1:8; 3:3; 2 சாமு 6:17; 7:6-7).லேவியர்கள் மட்டுமே வழிபாட்டுச் சடங்குகளை நிறைவேற்ற உரிமை பெற்றிருந்தனர். மோசேயே அந்த லேவியர் குலத்தில் தோன்றியவர் (நீதி 17:7-13; 18:30; 1 சாமு 1:1; 1 நாள் 6:28).

மற்றச் சமயங்களைப் போலவே இங்கும் பலவகையான பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன (லேவி 1:7; எரே 7:21-23; ஆமோஸ் 5:21-27). புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்து இஸ்ராயேலரின் பலிகளில் பல கானானியப் பழக்கங்களை ஒத்துள்ளன என்பது தெரிகிறது. அறுவடைக் கால விழா போன்றவற்றுக்குப் புதிய கருத்தை இஸ்ராயேலர் அளித்தனர். பாஸ்கா விழா இவர்கள் மட்டுமே கொண்டாடக்கூடிய ஒன்றாகிறது. இஸ்ராயேலர் கொண்டாடிய இந்த விழாக்கள் இறைவன் செய்த அருஞ்செயல்களை நினைவூட்டுவதாக அமைந்திருந்தன (யாத் 23:14-17; 34:18-24; நதி 21:19; 1 சாமு 1:3-21; உப 31:9-13).

இஸ்ராயேலருக்கு உடன்படிக்கையே முக்கியமாதலால் அந்த உடன்படிக்கையின் சட்டங்கள் பெரிதும் மதிக்கப்பட்டன (யாத் 21-23; 34). சில கடினமான பிரச்சனைகளைக் குருக்கள் தீர்த்து வைத்தனர் (உப 17:8 13; எண் 5:11-13; நீதி 10:1-5; 12:8-15).

III. அரசாட்சிக் காலம்:-

பத்தாம் நூற்றாண்டிலே அவர்களிடையே அரசர் ஆட்சி ஏற்பட்டபோது அது அவர்களின் சமய வழக்கத்திலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியது. தாவீதின் காலத்தில் எருசலேம் மையமாக்கப்பட்டது (2 சாமு 5:6-10). அவர்களின் கோத்திரங்களின் அதிகாரம் மாறி 12 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது (1 அரச 4:7-19). இது அரசன் நினைத்தவாறு மக்கள் மாற வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. சாலமோன் காலத்தில் பல இனத்தவரோடும் தொடர்பு கொண்டு பல இனப் புதல்வியரைத் திருமணம் செய்து கொண்டதால் அந்நாட்டு வழிபாடுகளும் எருசலேமுக்குள் புகுந்தன (1 அரச 7:13-14). அதுவரை பழக்கத்தில் இல்லாதபல அடையாளங்கள் எருசலேம் தேவாலயத்தில் கானானியக் கலைஞர்கள் கட்டியபோது புகுத்தப்பட்டன. நாட்டுக்காகக் கட்டாய உழைப்பு, கொத்தடிமை, ஏழைகளைத் துன்புறுத்தல் போன்ற இஸ்ராயேலரின் உடன்படிக்கைக்கு ஒவ்வாத சில பழக்கங்கள் அவர்களிடையே புகுந்தன (1 அரச 5:13-18).

எருசலேமுக்கு உடன்படிக்கையின் பேழையைக் கொணர்ந்து, அபியத்தாரைக் குருவாக நியமனம் செய்து, அதை வழிபாட்டு மையமாகத் தாவீது ஏற்படுத்தினார் (2 சாமு 6; 20:25; 1 சாமு 14:3; 22:20). மற்ற நாட்டைப்போல அல்லாமல், அரசருக்கும் இஸ்ராயேலரில் வழிபாட்டில் பங்கு உண்டு (1 அரச 8). தாவீதின் தலைமுறையே என்றென்றும் அரசாளும் என இறைவன் வாக்களித்தார் (2 சாமு 7:8-17; 23:1-17; 1 அரச 11:13-32). எனவே அரசனை அவர்களின் மூதாதையரின் விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டனர். சங்கீத நூல்கள் போன்ற பல நூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டன. இக்காலத்தில் எழுதப்பட்ட சில நூல்கள் சாலமோன், தாவீது மற்றும் பல நிகழ்ச்சிகளைப் பற்றி அறிய உதவுகின்றன (2 சாமு 9-20; 1 அரச 1-2).

சாலமோனுக்குப்பின் இஸ்ராயேல்நாடு வட நாடு (இஸ்ராயேல் என அழைக்கப்பட்டது) தென்னாடு (யூதா என அழைக்கப்பட்டது) எனப்பிரிந்தபின் சமயத்துறையிலும் பல்வேறு நிலைகளில் பல்வேறான மாற்றங்கள் தோன்றின. யூதாவில் மட்டும் தாவீதின் பரம்பரையே தொடர்ந்து அரசாண்டு வந்தது. கானான் நாட்டில் நுழைந்ததுமுதல் அவர்களின் பல பழக்கங்கள் இஸ்ராயேலரின் வாழ்விலும் ஏற்பட்டன. இதிலே பாகாலை வழிபடவும் அவர்களின் பாவினப்பெருக்க வழிபாட்டைத் தொடரவும் இஸ்ராயேலருக்கு அடிக்கடி சோதனை எழுந்தது. அவர்கள் நாட்டின் (யூதா) இறையியல் அடிப்படையில் இறைவர் தங்களைத் தேர்ந்தெடுத்தார் என நம்பினர் (சங் 2; 71; 89; 110; 132). ஒவ்வொரு அரசரும் கடவுளின் மகன் எனப்பட்டனர். அந்த இறைவனே அவனை அவன் பகைவரிடமிருந்து காப்பாற்றினார் என்றும் கருதினர் (சங் 2:7; 72:1-4; 12-14; 88:1-4; 19-37; 2 சாமு 7:12-16; சங் 2:10-11). தாவீதின் பரம்பரையில் வந்ததாலும் எருசலேமிலே தேவாலயம் இருந்ததாலும் யூதா மக்கள் பல தேவத்துரோகச் சோதனைகளுக்கு இடம் தரவில்லை எனலாம். அந்த நாட்டுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு இறைவனின் வாக்குறுதியைச் சார்ந்ததே. அந்த நாடு வீழ்ச்சியடையும் என்றால் யாவே இறைவன் தம் உடன்படிக்கையை அந்த நாட்டோடு முறித்துக் கொள்வார் என்பதே இதன் பொருள். மதம் என்பது நாட்டின் நலத்தைக்காக்க உதவும் எனக் கருதப்பட்டது. இதனால் சில சடங்குகளும், புறவினத்தாரின் சில பழக்கங்களும் புகுந்தன. நம்பிக்கையிலும் வாக்குறுதியில் நிலைத்தும் அவர்களின் வாழ்க்கை சென்றது. ஓர் அரசர் சரியில்லை என்றால் எதிர்காலத்தில் ஓர் அரசர் நம்மை விடுவிப்பார் என்ற எண்ணம் எழத் தொடங்கியது. இதன் மூலமே மெசியாவைப் பற்றிய ஓர் எதிர்பார்ப்பு அவர்களிடையே எழுந்தது.

வட நாட்டிலே (இஸ்ராயேல்) பல அரச மரபுகள் மாறி மாறி ஆண்டு வந்தன. இறை வாக்கினரால் அல்லது மக்கள் கூட்டத்தால் அரசன் நியமிக்கப்பட்டார் (1 அர 11:26-40; 12:20; 2 அர 9:1-13). முதலாம் எரொபயாம் பெத்தேல், தாண் ஆகிய இரண்டு இடங்க ளில் திருத்தலங்களை ஏற்படுத்தி வழிபாட்டு மையமாக்கினார். இது தன் நாட்டவர் எருச லேம் செல்வதைத் தடுப்பதற்காகச் செய்த வழியாகும் (1 அர 12:26-33; ஆமோ 7:10-13). பலமதக் கோட்பாடுகளை இணைத்த கலப்பு மத வழிபாட்டு முறை அவர்களி டையே பரவியது. ஆனால் அவர்கள் செய்த உடன்படிக்கையின்படி இறைவனை (யாவே) மட்டுமே வழிபட வேண்டும். ஆனால் அவர்கள் தங்கள் விருப்பம் போல் மற்றத் தேவர்களையும் வழிபட்டுப் பாவம் செய்தனர் (1 அர 8:6-7).

ஒரு சில சடங்குகளால் கடவுளைச் சரிக் கட்டிவிட முடியும் என எண்ணி உடன்படிக் கையின் சட்டங்களைச் சிறிது சிறிதாக மறக் கத் தொடங்கினர். சமுதாய வாழ்கையிலும் வடக்கு நாட்டிலே (இஸ்ராயேல்) ஏற்றத் தாழ்வுகள் மிகுந்து ஏழைகள் நசுக்கப்பட்ட னர் (ஆமோஸ்). ஒழுக்கக்கேடும், சீர்கேடும் அநீதியும் எங்கும் தலைவிரித்தாடியது. ஆனால், தென்னாட்டிலே (யூதா) இத்தகைய புறவினத்தாரின் பழக்கங்கள் அதிகப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. வட அரசில் நிலவி வந்த அநீதிகளை எதிர்த்து இறைவாக் கினர்கள் குரல் எழுப்பினர்.

IV. கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து எருச லேம் வீழ்ச்சி வரை:-

எட்டாம் நூற்றாண்டிலிருந்து சிறந்த இறைவாக்கினர்கள் தோன்றினர். இவர்கள் மக்களின் மந்தபுத்தியையும் பாவ வாழ்க்கை யையும் கண்டித்தனர். இஸ்ராயேலரின் வாழ்க்கையிலே சவுலின் காலத்திலிருந்தே இறைவாக்கினர்கள் ஒரு தனிப்பட்ட சிறப் புப் பணியை ஆற்றியிருக்கிறார்கள் (1 சாமு 10:5-6. 10-13; 2 சாமு 7:1-17; 12:1-15; 24). அரசர்கள் தவறுகள் செய்தபோது அரசனைக் கண்டிக்கவும் அவர்கள் தயங்கவில்லை (1 அர 11:26-40). அவர்களுக்கு அதனால் ஏற் பட்ட கொடுமைத் துன்பங்களையும் அவர் கள் தாங்கிக் கொண்டனர் (1 அர 18:4).

ஆமோஸ் இறைவாக்கினர் சமுதாயத்தில் உள்ள அநீதிகளையும், ஓசே இறைவாக்கினர் இஸ்ராயேலரின் தேவத்துரோகச் செயல்க ளையும் கண்டித்து இறைவாக்குரைத்தனர். கடவுள் அவர்களுக்கு ஆற்றிய அருஞ்செயல் களை நினைவூட்டி அவர்களின் பாவங்க ளைச் சுட்டிக் காட்டினர் (ஆமோ 2:9-12; 13:1-2; ஓசே 11:1-4; 13:4-6). உடன்படிக்கை, கடவுளுக்கும் இஸ்ராயேலருக்கும் இடையே நடந்த திருமணம் என ஓசே குறிப்பிடுகிறார் (2:2-13). எனவே, இஸ்ரா யேலர் வேறு தேவர்களை வழிபட்டால் அது கணவனுக்குத் துரோகம் செய்துவிட்டு வேறொரு ஆணோடு வாழ்வதற்குச் சமம் என அவர்களின் பாவத்தைச் சுட்டிக்காட்டி னர். இருவருமே மக்களை மனம்திரும்பு மாறு வேண்டினர். இவர்களுக்கு முன் இருந்த இறைவாக்கினர்கள்போல் புரட்சி யால் தீய அரசைக் கவிழ்க்க மக்களை இவர் கள் தூண்டவில்லை. மாறாக மக்களின் பாவத்தைச் சுட்டிக்காட்டி இஸ்ராயேலரின் எதிரிகள் வழியாகவே இறைவன் தீயோ ரைத் தண்டிப்பார் என நம்பினார்கள். கட வுள் மீண்டும் இஸ்ராயேலரோடு உடன் படிக்கை செய்து கொள்வார் என்ற நம்பிக்கை யையும் இந்த இறைவாக்குகள் தந்தன (ஓசே 2:14-23).

வடநாடு அழிக்கப்பட்டபின் தென்னாட் டிலே (யூத) ஏசயாவும், மீக்காவும் இறை வாக்குரைத்தனர். இவர்களும் ஆமோஸ், ஓசே போல மக்களின் பாவங்களைச் சுட்டிக் காட்டினர். அவர்களின் சீர்கேடும், சிலை வழிபாடும் உடன்படிக்கையின் சட்டங்க ளுக்கு விரோதமானவை என எச்சரித்தனர். வெளிச் சடங்குகளையும், குருக்களின் முறை கேட்டையும் இவர்கள் கண்டித்தனர் (ஏச 1:10-20; மீக் 3:5-12; 3:12; ஏச 5:1-7; 6:11-12). தாவீதின் அரியணை நித்தியத்திற்கும் இருக் கும் என்ற இறைவனின் வாக்குறுதியை ஏசயாவின் இறைவாக்குகள் நினைவூட்டு

கின்றன. ஆகாசு பகைவரைக் கண்டு பயந்த போது இந்த வாக்குறுதியை நினைவூட்டி அவனைத் திடப்படுத்துகிறார் (ஏச 7:1-9.10-17; 14:32; 18:1-6; 20). யூதா தன் பாவத்திற்காக, தாவீதுக்கு அளித்த வாக்குறுதியின் பொருட்டு முற்றிலும் அழிக்கப்படாது; மாறாகத் தன்பாவத்திற்காக அது தண்டிக்கப்படும் (ஏச 10:24-27.28-34).

ஆகாசு அசீரியாவுக்கு அடி பணிந்ததால், பல அசீரியத் தேவர்களை மக்கள் வழிபட வேண்டியதாயிற்று (2 அர 16:5-20). எனவே, எசக்கியா அதை அந்நாட்டினின்று நீக்க வேண்டியதாயிற்று. எல்லாவிதமான புறவினத்தாரின் வழிபாடுகளும் ஒழிக்கப்பட்டன (மீக் 3:12; எரே 26:16-19; 2 அர 18:1-7; 2 நாள் 33:1.10-12; 2 அர 17:25-28). இவருக்குப் பின் வந்த மனாசே காலத்தில் மீண்டும் சிலைவழிபாடு தொடர்ந்தது (2 அர 21:1-16). இவருக்குப்பின் வந்த யோசியா மீண்டும் சிலை வழிபாட்டை ஒழித்தார். செப்பனியா, எரேமியா ஆகிய இறைவாக்கினர்கள் இவரை ஆதரித்தனர். மக்களின் பாவ வாழ்க்கையை அவர்கள் கண்டித்தனர் (2 நாள் 34:3; 2 அர 22:3; 23:3). இவர்காலத்தில் தான் உபாகமத்தின் சில பகுதிகள் தேவாலயத்திலே கண்டெடுக்கப்பட்டன. உபாகமப் போதனைகளின்படி நாட்டின் நலமும் நம்பிக்கையும் உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதிலேயே இருக்கிறது. சிலைவழிபாடும், சீர்கேடும் நாட்டை அழிவுக்கே இட்டுச் செல்லும் (2 அர 23:4-14.21-25). நாட்டின் மற்றப் பகுதிகளில் இருந்த சிறு சிறு திருத்தலங்களையெல்லாம் அழித்து எருசலேமே வழிபாட்டின் மையமானது. யோசியா நீதிமானாய் இருந்ததால் சமுதாயத்தின் பல சீர்கேடுகள் சரிசெய்யப்பட்டன (எரே 22:15-16). யோசியா இறந்த சில ஆண்டுகளுக்குள் எருசலேம் கடுமையான சோதனைக்குள்ளானது.

யோசியாவின் இறப்புக்குப் பின் புறவினத்தாரின் வழிபாடுகள் உள்ளேபுகுந்தன. இறைவனின் ஆலயமும், தாவீதுக்கு இறைவன் அளித்த வாக்குறுதியுமே அவர்களைக் காக்கும் என இறுமாந்திருந்தனர். பகைவர் தங்களைத் தாக்கிய போது இறைவனிடமிருந்து புதுமைகளை எதிர்பார்த்தனர் (எரே 7:4; 26:8-11; 21:2). யூதா வீழ்ச்சியுற்றபோது இறைவன் ஏன் தம் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. அவரைவிடச் சக்தியான கடவுள் வேறு உண்டோ என ஐயமுறத் தொடங்கினர் (எரே 31:29; புல 5:7; எச 18:2.25.29). இஸ்ராயேலரின் இந்த இருண்ட காலங்களில் எரேமியா, எசக்கியேல், அபகூக் போன்றவர்களின் இறைவாக்குகளே அவர்களுக்குத் தெம்பூட்டின. அவர்கள் வாழ்ந்த சீர்கேடான வாழ்விற்குத் தண்டனையாகவே இத்துன்பங்கள் வந்தன என அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்த இறைவாக்குகள் அவர்களைப் பக்குவப்படுத்தின (எரே 7:1-15; 21:12-22:30; 4:5-8.11-16; 5:10-17.27-28). இஸ்ராயேலர் பெருமையாக நம்பியிருந்த தேவாலயமும் அரசரவையும் அழிக்கப்பட்டது, அவர்களின் பாவத்தினால்தான் என எசக்கியேலும் வலியுறுத்தினார் (எச.8-11). ஆனால் இந்தத் துன்பம் அவர்களின் விசுவாசத்தை அழித்துவிடக்கூடாது. மாறாக மனம் திரும்பினால் நல்வழி பிறக்கும் என இறைவாக்கினர்கள் வலியுறுத்தினர் (எரே 4:4.14; எச 18:31). முற்காலத்தில் எகிப்திலிருந்து மீட்டதுபோல், இன்றும் மனம் மாறினால் அவர்களைப் பாபிலோனிய அடிமைத் தனத்தினின்று இறைவன் மீட்பார் (எரே 24; எச 20:33-37). எரேமியா உரைத்த புதிய உடன்படிக்கையும் (எரே 31:31-39) எசக்கியேல் உரைத்த இறந்தோரின் உயிர்ப்பும் (எச 37) இஸ்ராயேலரின் மனதில் தங்கள் எதிர் காலத்தைப் பற்றிய நம்பிக்கையைத் தூண்டின.

V நாடு கடத்தப்பட்டபோதும் பிற்பாடும்:-

பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப்பின் இஸ்ராயேலரின் விசுவாசம் புதியதொரு அமைப்பைப் பெற்றது. இஸ்ராயேல் வீழ்ந்தது யாவேயின் பலவீனத்தையே குறிக்கிறது எனச் சிலர் எண்ணி, பாபிலோனியத் தேவர்களை வழிபட எண்ணினர். சிலர் தங்கள் குறுகிய கண்ணோட்டத்தை விடுத்துச் சில மாற்றங்களை மேற்கொண்டனர். இரண்

டாம் ஏசயா இச்சமயத்தில் அதாவது பாபி லோன் வீழ்ந்து சைரஸ் மன்னரானபோது, ஒரு புது நம்பிக்கையூட்டினார். இறைவன் இஸ்ராயேலரை இதோ மன்னித்து மீண்டும் ஏற்றுக்கொள்ளப் போகிறார் என நம்பிக்கை யூட்டினார் (ஏச 40:1-11; 50:1; 54; 42:18-43:7; 43:8-44:5; 48). இறைவனாகிய ஆண்டவரே வரலாற்றில் இஸ்ராயேலரின் வாழ்விலே உறுதுணையாக இருக்கின்றார். தம் திட் டத்தை நிறைவேற்ற மற்றவர்களையும் கருவி களாகப் பயன்படுத்துகிறார் என்ற எண் ணம் வளர்ந்தது (ஏச 40-48; 44:24-45:8). துன்புறும் ஊழியன் என்பதற்கு ஒரு தனி விளக்கம் கூறப்பட்டது. இறைவனுடைய ஊழியனின் துன்பத்தாலும் இடர்களினாலும் இவ்வுலகத்திற்கு உண்மையின் ஒளியைக் கொண்டுவர இறைவன் திட்டமிட்டார் (ஏச 53:10). சைரஸ் காலத்தில் இஸ்ராயேலர் விடுவிக்கப்பட்டனர். மிகுந்த துன்பத்தோடு தேவாலயம் மீண்டும் எழுப்பப்பட்டது.

பாபிலோனிய அடிமைத் தனத்திற்குப்பின் இஸ்ராயேல் சமூகத்தை ஒரு நாடு என்ற ழைக்காமல் ஒரு திருச்சபை எனலாம். தாங் கள் இறைவனால் மீட்கப்பட்ட ஒரு புதிய சமுதாயம் எனக்கருதினர். எஸ்ராவின் காலத் திலிருந்துதான் யூதமதம் என இது அழைக் கப்பட்டது எனலாம் (நெக 8-10). யூதர்க ளைச் சுற்றியிருந்த புறவினத்தாரின் பழக்கங் களிலிருந்து அவர்களைக் காக்க வேண்டும் என்பதற்காக, யூதச் சட்டத்தின் கீழ் அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டார்கள் (எஸ் 9-10; நெக 13:15-31). இதிலிருந்துதான் யூதர்கள் புறவினத்தாரையும் சமாரியர்களையும் வெறுத்து ஒதுக்கத் தொடங்கினார்கள். புதி தாக யூத மதத்திற்கு வருகின்றவர் வரவேற் கப்பட்டனர் (ஏச 56:6-8; 66:18-21; செக் 8:20-23; லேவி 19:34; 24:22). இத்தகைய, மற்றவரை வெறுக்கும் எண்ணம் யோனா ஆகமத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணம் ஆதித்திருச்சபை பரவிய காலத்தில் கூட எழுந்தது (எ.கா. விருத்தசேதனத்தைப் பற்றிய பிரச்சனை). இவர்கள் ஒரே கட வுளை விசுவாசித்தனர். கடவுள் வல்லமை மிக்கவர் எனக்கருதினர்.

எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கை அவர்களின் வாழ்விலே எப்போதுமே இருந்து வந்தது; மெசியாவை எதிர்நோக்கி யிருந்தனர். இறுதிநாளில் இறைவன் மகிமை யான ஓர் அரசை நிறுவுவார் என எண்ணினர். பின் உயிர்த்தெழுதலில் இவர்களுக்கு நம் பிக்கை ஏழ ஆரம்பித்தது (ஏச 26:19; தானி 12:2; மாற் 12:18-27; அ.ப. 23:6-10). யூத மதத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று சட் டத்தைக் கடைப்பிடிப்பது. சட்டத்தை மீறிய தாலேதான் தீமை உண்டானது எனக்கூறப் பட்டதால் சட்டத்தைப்பின்பற்ற முனைந்த னர் (நெக 8-10). எருசலேமைத் தவிர மற்ற ஊர்களில் செபக்கூடங்கள் எழுந்தன. யூதர் கள் பழைய ஏற்பாட்டிலே தனியாகத் திரு மறைத் தொகுப்பை ஏற்படுத்தினர். எஸ்ரா காலத்திலிருந்து ஐந்நூலே அதிகாரபூர்வ சட்ட நூலானது. இறைவாக்கினர்களின் நூல் களும் மற்ற சில நூல்களும் இதில் சேர்க்கப் பட்டன. சட்டத்தைப் படிப்பதே சிறந்ததா கக் கருதப்பட்டது (சங் 1; 19:7-14; 119). இதை ஆராய்வதற்கும் முன்னேற்றுவதற்கும் ராபிகள், மற்றும் சட்டவல்லுநர்கள் தோன்றி னர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நாம் இத்தகைய ஒரு நிலையையே காண்கிறோம். இந்த விசுவாசமும் சட்டமும் கிறிஸ்துவிலே தான் நிறைவுற்றது எனப் புதிய ஏற்பாடு நமக்கு அறிவுறுத்துகிறது.

எபிரேய மக்கள் (HEBREW PEOPLE)

எபிரேயர் என்ற பெயரின் மூலப் பொரு ளானது தெளிவாக இல்லை. ஆதியாகமத் தில் தங்களது தாய்நாடாக இல்லாத நாட்டில் மனிதர்கள் அந்நியர்களாக அலைந்து திரிவ தையே இது எப்போதும் குறிப்பிடுகிறது. ஆபிரகாம் (ஆதி 14:13), யோசேப்பு (39:14; 41:12), யாக்கோபு மற்றும் அவரது பிள்ளை கள் (40:15; 43:32) ஆகியோர் இதற்கான எடுத்துக்காட்டாவர். அவர்களுடைய இனப் பெயர் முன்னோராகிய ஏபேர், ஆபிரகா முக்கு முன்னரே வாழ்ந்தமையால் (ஆதி 10:25; 11:14) இச்சொல்லானது செமித்திய மக்களில் பெரும் பகுதியினரைக் குறிக்கப் பயன்படலாம். எபிரேயர் என்ற சொல் இஸ் ராயேல் மக்களையும் அவர்களது முன்னோ

7

ரையும் குறிக்க அந்நியராலும் (உம்.எகிப்திய ரால், ஆதி 39:14.17; யாத் 1:16-19; பெலிஸ்தியரால், 1 சாமு 4:6.9) அல்லது இஸ்ராயேலரல்லாதோருடன் பேசும்போது இஸ்ராயேலராலும் (ஆதி 40:15; யோனா 1:19) பயன்படுத்தப்படும்போது இது இன அல்லது அரசியல் பெயராக வருகிறது (ஆதி 43:32; யாத் 2:11. 13).

யாத்திரையில் யாக்கோபினுடைய எபிரேய சந்ததியினர் (யாத் 1:15; 2:6...) தங்களுடைய இனம், பிறப்பு, மற்றும் சமயம் ஆகியவற்றினால் எகிப்தியரிடமிருந்து பிரிக்கப்பட்டனர் (யாவோ, ''எபிரேயரின் கடவுள்'', 7:16; 9:1). ஆனால் அதே முறையில் கானானில் வாழ்ந்து வந்த செமித்திய மக்களாகிய எபிரேயர்கள் அவர்களைக் கொடுமைப்படுத்திய பெலிஸ்தியர்களிடமிருந்து வேறுபட்டனர் (1 சாமு 4:6; 13:3.19; 14:29; 29:3; எண் 24:24). ஆனால் அவர்கள் அனைவரும் இஸ்ராயேலரா என்பது உறுதிப்படுத்தப் படவில்லை (1 சாமு 14:21). எபிரேய அடிமைகள் பற்றிய உபாகமச் சட்டமானது (உப 15:12-13; எரே 34:14) இஸ்ராயேலரைச் சகோதரர்களாக விவரிக்கிறது. ஆனால் இதைப் பரந்த பொருளில் எடுத்துக் கொள்ளலாம் (ஆதி 24:27). இவ்வாறு அடிமைத்தனம் வரை இச்சொல்லானது மக்களுடைய பொதுப் பெயராகவோ, சமயப்பொருளுடைய பெயராகவோ பயன்பட்டதாகத் தெரியவில்லை.

நாடுகளின் அட்டவணைப்படி எபிரேயர்கள், எண்ணற்ற மக்களின் மூதாதையரும் சேமின் சந்ததியைச் சேர்ந்தவருமாகிய ஏபேர் என்னும் குலத்தோற்ற மூதாதையரின் வழி வந்தவர்கள் ஆவர் (ஆதி 10:21-31; 11:14-26; 1 நாள் 1:17-27). இவ்வாறு இச்சொல்லானது ஆபிரகாமினுடைய சந்ததியினரை மட்டுமின்றி நாகோர் (அரமேயர்) மற்றும் லோத்து (மோவாபியர் மற்றும் அம்மோனியா) ஆகியோருடைய சந்ததியினரையும் உள்ளடக்கிக் குறிப்பதாகத் தெரிகிறது. ''எதிர்ப் பக்கம், அப்பாற்பட்ட பகுதி'' என்னும் பொருளுடைய நாட்டு ''ஏபர்'' என்ற எபிரேயச்சொல்லின் தழுவலான சொல்லானது கானான் வந்த மக்களால் யூப்பிரத்திசு நதிக்கு அப்பாற்பட்ட பகுதியினின்று வந்த மக்களுக்குச் சாற்றிக் கூறப்பட்டதால் இச்சொல்லை ஆபிரகாமுக்கும் அவரது குடும்பத்திற்கும் மட்டுமே உரிமைப்படுத்துவது மரபுமுறை விளக்கமாகும். இச்சொல்லின் ''வேர்'' எல்லையைக் கடந்தவனைச் சுட்டிக்காட்டுகிறது. இது, வெண்கல காலச் சமூகத்தின் எல்லையில் வாழ்ந்து வந்த, கருத்து வேறுபட்ட, மற்றும் வாக்குரிமையற்ற மக்களை உள்ளடக்கிய, இனத்தால் வேறுபட்ட சமூக அமைப்பாகிய அபிருவுடன் எபிரேயர்களை அடையாளப்படுத்துவதற்குச் சார்பாக இருப்பதாகத் தெரிகிறது. ஆபிரகாமும் அவரது குடும்பத்தினரும் இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டிருக்கலாம் (ஆதி 14: 13). அபிருவினுடைய கொள்ளைக்கார நிலை 1 சாமு 14:21-இல் எபிரேயருக்கும் இஸ்ராயேலருக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை விளக்கக்கூடும்.

பிற்கால வாசகங்களில் இது வேறுபட்டதாக உள்ளது. யோனா 1:9-இல் புறவினக் கப்பல் மாலுமிகளுக்கு யோனா தான் ''எபிரேயன், விண்ணகக் கடவுளின் அடியான்'' என்று கூறுகிறார். 2 மக் 7:31; 11:13; 15:37 ஆகியவற்றில் எபிரேயன் என்ற சொல்லானது புனித நாட்டில் குடியேறிய யூதரைக் குறிக்கின்றது. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் சமயத் தொனி இல்லாமல் இல்லை; ஆனால் தேசியப் பொருள் பெறுகிறது.

புதிய ஏற்பாட்டில் ''எபிரேயன்'' என்ற சொல், பாலஸ்தீனத்திலும் பிறநாடுகளிலும் இருந்த யூதர்களைக்குறிப்பிடுகின்றது (அ.ப. 6:1; பிலி 3:5). ''எபிரேயன், எபிரேயரின் மகன்'' (பிலி 3:4; 2 கொரி 11:22) என்று பவுல் தம்மை அழைக்கும்போது தமது குடும்பத்தினுடைய பாலஸ்தீனத் தோற்றம் மற்றும் எபிரேய மொழி ஆகியவற்றை வலியுறுத்துகின்றார். இதே வரைமுறையானது யூதக் கிறிஸ்தவர்களுக்கு, கிரேக்கர்களிடமிருந்து எபிரேயரைப் பிரித்துக் காட்டுகிறது (அ.ப. 6:1). ஆனால் இவ்விரு நிகழ்ச்சிகளி

லும் இச்சொல்லானது நேரடியான சமயப் பண்பைக் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே ஆபிரகாமின் ஆன்மீகச் சந்ததியைக் குறிப்பிடுவதற்கெனக் கிறிஸ்தவச் சொற்றொகுதிக்குள் இது இடம் பெறவில்லை.

எபிரேய மொழி (HEBREW LANGUAGE)

இது எபிரேய மக்களின் மொழி மற்றும் பழைய ஏற்பாட்டினுடைய முதன்மையான மொழியாகும். வடமேற்கு செமித்திய மொழியும், கானானியப் பிரிவுமொழியுமான இதுகானானிய மொழி என்றும் (எச 19:18) யூதாவுக்குரியது (யூதாவின் மொழி 2 அர 18:26.28; நெக 13:24; ஏச 36:11.13) என்றும் பழைய ஏற்பாட்டில் அழைக்கப்படுகிறது. ''எபிரேயம்'' என்னும் இந்தப் பெயருக்குரிய சான்று முதலில் சீராக்கு நூலின் முன்னுரையில் குறிப்பிடப்படுகிறது. புதிய ஏற்பாட்டில், கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் பேசப்பட்ட பாலஸ்தீன அரமாயிக்கு பிரிவுமொழியை இது குறிப்பிடுகிறது (உ.ம். யோவா 5:2; 19:13.17.20; அ.ப. 21:40; திருவெளி 9:11).

கி.மு. இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளின் தொடக்கத்தில் கானானியமொழியினின்று ஒரு தனிப்பட்ட பிரிவு மொழியாக விவிலிய எபிரேயம் வளர்ச்சியடைந்தது. அரமேயர்களிடமிருந்து எபிரேயர் தோன்றியதாகக் கூறும் விவிலியப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு (உப 26:5) புதிதாக வந்த இவர்கள் பாலஸ்தீனத்தில் இவர்களுக்குமுன் வாழ்ந்த கானானியர்களின் மொழியையும் அக்காலத்தில் ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. பழைய ஏற்பாட்டு ஏடுகளால் விவிலிய எபிரேயமொழி முதன்மையாகப் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் அது பிற பல ஏடுகளிலிருந்தும் அறியப்படுகிறது. சான்றாகப் பதினொன்றாம் நூற்றாண்டின் 'இஸ்பெத் சார்தா' பொறிப்பு, பத்தாம் நூற்றாண்டின் பிற்காலக் கெசேர் நாட்காட்டி, மற்றும் சிலோவாம் பொறிப்பு (கி.மு.705), சமாரிய நாட்டுப் பண்டத்துணுக்குகள், இலாக்கீசு கடிதங்கள், (587), முத்திரைகள், மற்றும் நாணயங்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். அதன் இன்றைய வடிவில் பழைய ஏற்பாடானது இஸ்ரயேலின் முடியாட்சியின்போது நிலைப்படுத்தப்பட்ட மொழியின் ஒரு நிலையைக் குறிப்பிடுவதாக நம்பப்படுகிறது. ஆயினும் கி.மு.12-ஆம் நூற்றாண்டிலிருந்து 2-ஆவது நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த பொருள்களைக் கொண்டுள்ளது. அதில் பழங்காலப் பாடல் அமைப்புகளையும் பிற்காலப்படைப்புகளையும் காணலாம். அதன் நடையும் சொற்றொகுதியும் அரமேய, பாரசீக, கிரேக்கப் பாதிப்பைச் சுட்டுகின்றன. விளக்கக் குறிப்புகள் பயன்பட்டிருப்பது விவிலிய எபிரேய மொழி உயிருள்ள மொழியென்ற அளவில் அதன் புவியியல் மற்றும் காலவரை வேறுபாடுகளைச் சுட்டுகிறது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பிற்பட்ட காலத்தில் எபிரேய மொழிக்குப் பதிலாக அரமேயிக்கு மொழி மக்களின் பேச்சுமொழியாகியது (நெக 8:8; 13:24). ஆனால் எபிரேய மொழி இலக்கிய மற்றும் வழிபாட்டு மொழியாகத் தொடர்ந்து இருந்தது. இதற்குச் சீராக்கு நூலும், சாக்கடல் ஏடுகளும் சான்று பகர்கின்றன. கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் உரோமைக்கு எதிரான வெற்றிகரமான கிளர்ச்சிகளைத் தொடர்ந்து எபிரேயமானது வழக்கிலிருந்து வீழ்ந்துவிட்டதாகத் தெரிகிறது.

எபிரேயமானது இருபத்து இரண்டு மெய்யெழுத்துகளையுடைய அகர வரிசை மொழியாகும். இவற்றில் சில நிறுத்தங்களாகவும், ஒலிகளாகவும் வருகின்றன. வலப்புறத்திலிருந்து இடப்புறமாக எழுதப்பட்ட நிலையில் இதன் தொடக்கக் கட்டங்களில் பெரும்பாலும் வட்டமாகவும், மூடியும் உள்ள பெனிக்கிய எழுத்துமுறையை இது தழுவியிருந்தது. இத்தகைய பழமையான எபிரேய எழுதுமுறையானது பாரசீக காலத்தில் நவீன அச்செழுத்துகளிலிருந்து நன்கு அறிமுகமாகியுள்ள சதுரவடிவத் திறந்த அரமாயிக் எழுத்துக்களால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பதினான்கு உயிரெழுத்துகளின் ஒலிகள் வேறுபடுத்தப்பட்டிருந்தாலும், பழைய வாசகங்க

ளில் எதுவுமே எழுதப்படவில்லை. மாறாக, உச்சரிப்பானது வாய்மொழியால் அளிக்கப் பட்டது. கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் தொடங்கி இறுதியான உயிரெழுத்துக்க ளைச் சுட்டிக்காட்டுவதற்கெனச் சில குறிப் பிட்ட மெய்யெழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டன. நாடுகடத்தப்பட்ட பிற்காலத்தில் மேலும் சில உயிரொலிகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்கப்பட்டன; அவை மேல முத்தம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டவும் உபயோகிக்கப்பட்டன. கி.பி. ஒன்பது பத் தாம் நூற்றாண்டுகளில் திபேரியப் பள்ளியின் ராபிகளான மசோரெத்தியர்கள் வாசகங் களை வாசிப்பதற்கு வரி மற்றும், புள்ளிகள் அடங்கிய அமைப்பை உருவாக்கினர். இவ் வாறு பண்டைய உயிரெழுத்து அமைப் பினை இயன்ற அளவிற்குத் துல்லியமாக அமைத்தனர். அழுத்தத்தையும் நிறுத்தத்தை யும் சுட்டிக்காட்டுவதற்கென மற்ற அடையா ளங்கள் உருவாக்கப்பட்டன. மேலும் எபி ரேய எழுத்துகளுக்கு அவற்றினுடைய வரி சைக்கிரமப்படி எண் மதிப்புகள் அளிக்கப் பட்டன. இது எபிரேயப் புலமையின் பல் வேறு கட்டங்களில் பெயர்கள் மற்றும் வாக்கு களுக்கு அடையாள விளக்கங்கள் அளிக்கத் தூண்டுதலாயிற்று.

விவிலிய எபிரேயத்திற்கும் மற்றச் செமித் திய மொழிகளுக்குமிடையே எண்ணற்ற ஒரு மைப்பாடுகள் திகழ்கின்றன; குறிப்பாக இவற்றில் முக்கியமானது வினைச்சொல் மற் றும் பெயர்ச்சொல்லின் மூன்று மெய்யெ முத்து வேர் ஆகும். இவை பால், எண், காலம் அல்லது தொடர்பு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கென முன்னிணைப்புகள் அல்லது உயிரெழுத்து ஓசை, உருமாற்றம் ஆகியவற்றால் மாற்றியமைக்கப்படலாம். மெய்யெழுத்துக்களுடன் தொடங்குகின்ற அசைகள் திறந்தவையாக (உயிரெழுத்துடன் முடிவதாக), அல்லது மூடியவையாகவும் (மெய்யெழுத்துடன் முடிவதாக) இருக்கக் கூடும். அவை இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்தவாறு தொடங்குவதில்லை. ஆனால் அவ்வாறு முடியலாம். எபிரேய வினைச் சொற்கள், பெயர்ச்சொற்கள், மற்றும் பெய ருரிச் சொற்கள் பால் (ஆண், மற்றும் பெண்) மற்றும் எண்ணிக்கை (ஒருமை, பன்மை, மற்றும் இரண்டும் சேர்ந்த இரட்டை) ஆகிய வற்றைச் சுட்டிக்காட்டுகின்றன. வினைச் சொற்கள் நபரையும் சுட்டிக்காட்டுகின்றன (பேசுகின்றவர், யாரிடம் பேசப்படுகின்றது யாரைப் பற்றிப் பேசப்படுகின்றது). ஏழு வினைச்சொல் அடிப்படைகள் செயலின் பல்வேறு தோற்றங்களை வெளிப்படுத்து கின்றது. பெயர்ச் சொற்கள் பெயர்ச்சொல் லாக அல்லது வினைச்சொல்லினின்று தோன்றலாம். பொதுவாக ஆண் பால் வடி வம்தான் அடிப்படையானது. அதிலிருந்து பெண்பால் வடிவம், பன்மை அல்லது இரட்டை வடிவம் தோன்றும். தொல் இலக் கியத்தில் காணப்படும் சுவடிகளைத் தவிர, விவிலிய எபிரேயத்தில் வேற்றுமை விகுதி கள் (உம். எழுவாய், ஆறாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை) காணப்படுவ தில்லை. பெயருரிச்சொற்கள், பால் மற்றும் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மாறுபடும். பெயர் முன்னிடைச்சொல் தனியாகவோ மற்றச் சொற்களின் முன்னிணைப்பாகவோ வரலாம். சொற்றொடரியலானது வினைச் சொல், எழுவாய், செயப்படுபொருள், வினைஉரிச்சொல் அல்லது பெயர் முன்னி டைச்சொற்றொடர் என்ற வரிசையில் அமை யும். வளைந்து கொடுக்கும் கவிதை நடைக்கு அப்பாற்பட்டு இந்த வரிசை முறை யிலிருந்து விலகுதல்கள் அழுத்தம் அளிக்கப் பயன்பட்டிருக்கலாம். தெளிவற்ற அமைப்பு களும், சொற்றொகுதிகளும் மற்றச் செமித் திய மொழிகளோடு குறிப்பாக உகாரித்து மற்றும் பெனிக்கிய மொழிகளுடன் ஒப்பி டப்படுதல் மூலம் தெளிவுபடுத்தப்படலாம்.

எபிரேயத்தின் பிற்கால வடிவங்கள், கல் வித்துறை சார்ந்த மொழியென நயப்படுத்தப் பட்ட, கிரேக்க மற்றும் உரோமைக் காலங்க ளில், பேச்சுவழக்கிலுள்ள பாலஸ்தீனிய எபி ரேயத்தினின்று பிறந்த மிஸ்னா (ராபிகளின்) எபிரோயத்தையும் கொண்டுள்ளன. ராபிக ளின் கல்விக்கூடங்களில் போதக மொழியா கும் மிஸ்னா மற்றும் பிற தன்னாயித்திக்கு இலக்கியங்களில் பாதுகாக்கப்பட்டிருக்கி

றது. மத்திய காலங்களில், பல்வேறு நிலைகளுடன் தொல் எபிரேயத்தைப் பின்பற்றி இலக்கியங்கள் அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதன் வெற்றி பல்வேறு வகைப்பட்டதாகும். கி.பி. பத்து-பதினைந்து நூற்றாண்டுகளில் குறிப்பாக இபேரிய தீபகற்பத்திலுள்ள யூதரிடையே நேர்த்தியான கவிதை மற்றும் மெய்யியல் அறிவியல் இலக்கியங்கள் படைக்க மத்திய கால எபிரேயம் பயன்பட்டது. இம்மாதிரி மொழியானது சொற்றொகுதியிலும் வாக்கிய அமைப்பிலும் அரபியமொழியால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நவீன (இஸ்ரேலிய) எபிரேயமொழி பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டு சீயோன் யூத இயக்கத்தவர்களால் வளர்ச்சியுற்றது. இது தொடக்கத்தில் விவிலிய மற்றும் பிற்கால எபிரேய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாய் இருந்தது. மேற்குப் பொறிநுட்பச்சமூகத்தில் அதிகம் பாதிக்கப்பட்டு உயிருள்ள மொழியாக விளங்குகிறது. இது விவிலியத்தினுடைய முதல் தரமான எபிரேயத்திலிருந்து பரந்த அளவில் வேறுபடுகிறது.

எபிரேயருக்குத் திருமுகம் (LETTER TO THE HEBRENS)

1. முன்னுரை:-

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் பல ஐயங்களுக்கு விடை காண முடியாத ஒரு புதிர்க் கடிதமாகவே இருக்கிறது. முதவில் இது ஒரு கடிதமா? அல்லது இறையியலை விளக்கும் நூலா? என்பதும், இதில் வருகின்ற எபிரேயர் யார் என்பதும் இன்னும் தெளிவாக இல்லை. இதை எழுதியது யார் என்பதும் இன்னும் பிரச்சனைக்குரியதாகவே இருக்கிறது. இவ்வாறு சர்ச்சைக்குரிய இக்கடிதத்தைக் கூர்ந்து நோக்குவது நலம்.

2. ஆசிரியர்:-

எழுதியது யார் என்றே தெரியாத எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் போன்ற ஒரு கடிதத்தின் ஆசிரியரைப் பற்றி ஆராய்கின்ற போது, அக்கடிதத்தின் உள்ளார்ந்த சான்றுகளையும், வெளியார்ந்த சான்றுகளையும் மனதில் கொண்டுதான் ஒரு முடிவெடுக்க வேண்டும்.

உள்ளார்ந்த சான்றுகளை நோக்கும்போது எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திற்கும் புதிய ஏற்பாட்டுக் காலத்திய நூல்களுக்கும் ஒற்றுமையும், அதே சமயத்தில் வேற்றுமையும் இருப்பதைக் காண்கிறோம். எபிரேயரில் பயன்படுத்தப்படும் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் ஒத்தமைவு நற்செய்தியில் இருப்பது போலவும், அதற்குத் தரப்படும் இறையியல் விளக்கங்கள் யோவான் நற்செய்தியில் உள்ளவை போலவும் இருக்கின்றன. இரண்டிலும் (எபிரேயர், யோவான்) காணப்படும் கிறிஸ்துவியல் வேறெங்கும் காணப்படவில்லை. எபிரேயரும், யோவான் நற்செய்தியும் மாட்சியடைந்த ஆண்டவரை வலியுறுத்துகின்றனவேயொழிய, பவுலையும், ஒத்தமை நற்செய்திகளைப் போன்றும் ஆண்டவரின் உயிர்த்தெழுதலை வலியுறுத்தவில்லை. ஆகவே எபிரேயருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் ஆசிரியர், ஒத்தமைவு நற்செய்திகளின் கருத்தோட்டத்தையும், யோவான் நற்செய்தியின் கருத்தோட்டத்தையும், அறிந்தவராக இருக்க வேண்டும். எபிரேயரும் பேதுருவின் முதல் திருமுகமும் பாவமன்னிப்பளிக்கும் (எபி 9:28; 1.பேதுரு 2:24) இரத்தம் சிந்திய (எபி 12:24; 1 பேதுரு 1:2) கிறிஸ்துவின் பலியைப் (எபி 7:27; 9:26; 1 பேதுரு 3:18) பற்றிப் பேசுகின்றன. இரண்டுமே (எபிரேயர், பேதுரு) குருத்துவத்தைப் பற்றிப் பேசினாலும், பேதுருவின், முதல் திருமுகம் இறைமக்களின் பொதுக்குருத்துவத்தையும், எபிரேயர் கிறிஸ்துவின் குருத்துவத்தையும் குறிக்கின்றன.

எபிரேயருக்கும், பவுலால் எழுதப்பட்ட மற்றக் கடிதங்களுக்கும் உள்ள ஒற்றுமையையும், வேற்றுமையையும் காண்பது நன்று. புனித பவுல் விரும்பும் சில சொற்கள் இங்கு விடப்பட்டிருப்பதும், அவர் பயன்படுத்தாத சொற்கள் சேர்க்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. முன்னோக்கிச் செல்லும் வேகத்தையும் அடிக்கடி எதிர்மறைக் கருத்துக்க

ளைப் புகுத்துவதையும், ஒரு கருத்திலிருந்து இன்னொரு கருத்திற்குத் தாவுவதையும் போன்ற பவுலின் நடையை இங்குக் காண முடியவில்லை. ஓர் இன்னிசையை அமைப் பதைப்போன்ற கவனத்தையும் திறமையை யும், அமைதியான தெள்ளிய நடையையும் காண்கிறோம். இது ஒரு புறமிருக்க, பவுல் தான் இதை எழுதினார் என்போர், சிக்கல் கள் எழுந்தபோது, பவுல் தம்முடைய கருத் துக்களை ஓர் எழுத்தரிடம் கொடுத்து எழுதச் சொன்னார் என்று கூறினர். ஆனால், இன்று பெரும்பாலான விவிலிய அறிஞர்கள், பவுல் அவரின் போதனைகளையும், பாரம்ப ரியத்தையம் நன்கு அறிந்தவரிடம் தம் எண் ணத்தைக் கூறி எழுதச் சொன்னார் என்பதை ஏற்றுக் கொண்டாலும், அவருக்கும் எழுத்த ருக்குமிடையே மிகவும் தூர ஒத்துழைப்பு தான் இருந்திருக்க முடியும் எனக் கருதுகின்ற னர்.

திருமறைப்பட்டியல் நூல்களுக்கு அப் பால், அலக்சாந்திரியாவில் வாழ்ந்த பிலோ என்ற யூதருக்கும் எபிரேயத் திருமுகத்திற்கும் ஒற்றுமை காணப்படுகிறது. உதாரணமாக, மண்ணுலகம், விண்ணுலகம், மண்ணக விண் ணக சந்நிதி முதலியன. இரண்டுமே, மெல்க் கிசதேக்கின் சாயலான, இறைசந்நிதியில் நுழைந்து மக்களுக்காக மன்றாடுபவரான ஒரு தலைமைக் குருவைப்பற்றிப் பேசுகின் றன. ஆகவே, எபிரேயத் திருமுகத்தின் ஆசிரி யர் இந்தக் கருத்துகளையெல்லாம் கிறிஸ்தவ மயமாக்கி அதற்குப் புதிய பொருளைக் கொடுத்தாலும், அவர்தாம் அறிந்த இறையி யலையே அலக்சாந்திரியாவில் வாழ்ந்த யூதர் களுக்கே உரிய நடையில் தருகின்றார்.

3. இதைப் பவுல்தான் எழுதினாரா?

இக்கடிதத்தில் ஆசிரியர் தம்முடைய பெய ரைக் குறிப்பிடவில்லை. திருமறைப்பட்டி யல் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பது வர லாற்றுக் கூறோடு கூடிய கோட்பாட்டு உண் மையாகும். ஆனால் ஆசிரியர் யார் என்பது வரலாற்றைச் சார்ந்தது. கோட்பாட்டு உண் மையைச் சார்ந்ததன்று. இவ்விரண்டிற்கு மிடையே ஏற்பட்ட குழப்பத்தினால்தான் பல பிரச்சினைகள் எழுந்தன.

மேலைநாடுகளில் உரோமை நகரக் கிள மெண்தும் (கி.பி. 96) எரிமாசும் (கி.பி. 140) அலக்சாந்திரியாவில் வாழ்ந்த பன்தேனுஸ் (கி.பி. 180) முதலியோரும் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தைப் பயன்படுத்தினார் கள். அலக்சாந்திரியாவைச் சார்ந்த கிள மெண்து, பவுல் இத்திருமுகத்தை எபிரேய ருக்கு எபிரேய மொழியில் எழுதினாரென் றும், லூக்கா அதைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தார் என்றும் கூறுவதாக யுசே பியு கூறுகிறார். ஓரிசன் எபிரேயரில் உள்ள கருத்துக்கள் பவுலுடையவையாக இருந்தா லும், எழுதியது அவர் அல்லர் என்கிறார். ஆனால் மூன்றாம் நூற்றாண்டில் எபிரேயர் திருமுகம் கீழ்த்திசை நாடுகளில் பவுலின் கடிதத் தொகுப்பில் சேர்க்கப்பட்டது.

ஆனால் மேலைநாடுகளில் எபிரேயர் திரு முகம் சுமார் கி.பி. 96-140-இல் பயன்படுத் தப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டாலும், அதைப் பவுல்தான் எழுதினார் என்று ஏற்றுக் கொண் டதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. மேலும் சுமார் கி.பி. 150-350-இல் இதன் மதிப்பு குறைந்து விட்டது. தெர்த்துல்லியன் இதைப் பர்னபா எழுதினார் என்று குறிப் பிட்டாலும், அதை அவர் திருமறைத் தொகுப்பில் ஏற்றுக்கொண்டதாகத் தெரிய வில்லை. முராத்தோரியின் ஏடுகளிலும் சிப் ரியன், இரனேயு முதலியோரின் நூல்களி லும் இது குறிப்பிடப்படவில்லை. கிப்போ லித்தஸ் இது திருமுறைத் தொகுப்பைச் சார்ந்ததா இல்லையா எனக் கூறாமல் இதை மிகவும் போற்றிவந்திருக்கிறார். ஆனால், இதைப் பவுல் எழுதவில்லை என்பதை அடித்துச் சொன்னார். ஆனால், படிப்படியா கக் கீழைநாடுகளில் நிலவிய ஒருமனப்பட்ட கருத்தினால் மேலை நாடுகளும் பவுல்தான் எழுதினார் என ஏற்றுக் கொள்ளத் தொடங் கின. ஆனால் சோனோ என்பவரும் அம்ரோ சியாரும் 13 திருமுகங்களே பவுலால் எழுதப் பட்டன எனக் குறிப்பிடுகின்றனர். புனித அகுஸ்தீன் இந்நூல் பவுலால் எழுதப்பட் டதா என்ற ஐயங்களை அறிந்திருந்தாலும் இதைத் திருமறைத் தொகுப்பில் சேர்த்துக் கொண்டார். கிப்போவில் (393) நடந்த

சங்கத்திலும், கார்த்தேசில் (397) நடந்த மூன்றாம் சங்கத்திலும் இது பவுலின் 13 திருமுகங்களோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

பின்னால் நடையைக் கொண்டு ஆராயும் முறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியினால் பல புதிய திருப்பங்கள் தோன்றின. எராஸ்முஸ் என்பவரும், கயெத்தான் என்பவரும் இதைப் பவுல்தான் எழுதினார் என்பதை மறுத்தனர். கயெத்தான் திருமறைத் தொகுப்பிலிருந்தே அதை நீக்கினார். இவருக்குப் பின்னால் வந்த லூத்தர், கால்வின், மெலங்தோன், போசா போன்றோரும் இதே கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.

மேலே குறிப்பிடப்பட்ட கருத்துகளிலிருந்து முற்காலத்திலிருந்தே அதைப் பவுல்தான் எழுதினார் என்பதை ஏற்றுக் கொள்வதற்கு முன்பே இது இறை ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட ஓர் நூல் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது தெளிவாகிறது. சுமார் 2-ஆம் நூற்றாண்டில் திருச்சபை தனிப்பட்ட நூல்களைத் திருமறைத் தொகுப்பில் சேர்க்கவோ, நீக்கவோ உரிய கோட்பாடுகளை முடிவு செய்தபோது, இறை ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட நூல்கள், அப்போஸ்தலர் ஒருவராலும் அது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று விதித்தது. இந்தச் சூழ்நிலையில் கீழை நாடுகள் எபி 13:22-25-இன் அடிப்படையில் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டதாக முடிவு செய்து, அதைப் பவுல்தான் எழுதினார் என்று உறுதிகூறின. ஓரிசன், பவுல் இதை எழுதவில்லை என்பதைத் தெளிவாக ஏற்றுக்கொண்டாலும், அவருக்கு இதை எழுதியவரோடு தூரத்துத் தொடர்பு இருக்கமுடியும் என்பதையும் மறுக்கவில்லை. நாளடைவில் மேலை நாட்டினர் இது ஆவியின் ஏவுதலால்தான் எழுதப்பட்டதா என்ற ஐயத்தை எழுப்பினர். இதே போன்ற குழப்பம் சங்க ஏடுகள் விவரிப்பதிலும் ஏற்பட்டது. திரிதெந்தின் சங்கம் எபிரேயர் திருமுகத்தை இறுதியாகக் கொண்ட 14 கடிதங்களைப் பவுல் எழுதியதாக ஒரு பட்டியலை வெளியிட்டது. ஆனால், இச்சங்கத்தின் நடவடிக்கைகளை நாம் புரட்டுகிற போது, சில ஆயர்கள், எபிரேயர் திருமுகத்தைப் பவுல் எழுதவில்லை என்பதைக் கூறச் சங்க ஏடுகளில் மாற்றம் செய்ய விரும்பிய போது வேறு பலர் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. எனவே சங்கம் அது திருமறைத் தொகுப்பில் சேர்ப்பதைப்பற்றியே கவலை கொண்டதாகத் தெரிகிறது.

மேலும் 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாப்புவின் விவிலியக் குழு இது திருமறைத் தொகுப்பைச் சேர்ந்தது என்பதை விசுவாச உண்மையாகவும் இதைப் பவுல்தான் எழுதினார் என்பதை ஆராய்ச்சிக்கு உரியதாகவும் கூறி முடிவு செய்தது. எனவே இத்தகைய வாதங்களுக்குப் பிறகு, பவுலின் கருத்துகளை இதில் தெளிவாகக் காணமுடிந்தாலும், இத்திருமுகம் இன்னொருவரால்தான் அமைத்து எழுதப்பட்டது என்று உறுதியாகக் கூறமுடியும்.

இதன்பின் பவுல் எழுதவில்லையென்றால் யார்தான் இதை எழுதியது என்ற வினாவை எழுப்பினால் பர்னபா, லூக்கா, உரோமையின் கிளமெண்து, பிரிஸ்கா, சில்வானுஸ், அப்பொல்லோ எனப் பலருடைய பெயர்கள் கூறப்படுகின்றன. ஆனால், யார்தான் எழுதியது என்பது இன்னும் தெளிவாகவில்லை. கற்றறிந்த, விவிலியத்தையும், யூத அப்போஸ்தலப் பாரம்பரியத்தையும் நன்கு அறிந்திருந்த, அலக்சாந்திரியாவின் கலைகளைக் கற்றறிந்த, எழுதுவதில் திறமைபெற்றிருந்த ஒரு ஆதிக் கிறிஸ்துவர் என்றுமட்டும் கூறமுடியும். ஆகவே ''யார் எழுதியது என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும்'' என்று ஓரிசன் கூறுவதை ஏற்றுக் கொண்டாலும் எரோணிமூவோடு சேர்ந்து, ''யார் எழுதினாலென்ன? அவரும் திருச்சபையின் ஓர் அங்கத்தினர்'' என்று கூறலாம்.

4. யாருக்கு, ஏன் எழுதப்பட்டது?

''எபிரேயருக்கு'' என்ற தலைப்புப் பற்றிப் பன்தேனுசும், அலக்சாந்திரியா கிளமண்தும், தெர்த்துல்லியனும் சுமார் 200 ஆண்டு முதலே அறிந்திருந்தனர். மோசேயின் சட்டத்தினால் வந்த மீட்புக்கும், கிறிஸ்துவின்

மீட்புக்கும் இடையே உள்ள வேறுபாடு அடிக்கடி இதில் பேசப்படுவதன் அடிப்படையில் இது யூதக் கிறிஸ்துவர்களுக்குத் தான் எழுதப்பட்டது என்று நெடுங்காலமாகக் கூறிவந்தனர். ஒருவேளை இதன் அடிப்படையில் கூட, தலைப்பு எழுதப்பட்டது என்று எண்ண வாய்ப்பிருக்கிறது. ஆனால், இதனுடைய ஆசிரியரே யாருக்கு எழுதப்பட்டது என்று குறிப்பிடவில்லை. அந்தக் குழு ஒரு பெரிய சபையல்ல. ஆனால் ஒரு சிறிய குழுவாகத்தான் இருக்கமுடியும் (எபி 13:23). இந்தக் குழு எருசலேம் சபையாக இருக்க முடியாது. ஏனெனில் இந்தச் சபையே பலருக்கு உதவி செய்ததாகவும், இன்னும் தொடர்ந்து செய்து வருவதாகவும் குறிப்புகள் உள்ளன (எபி 6:10). இது எந்தச் சபைக்குத்தான் எழுதப்பட்டது என்று உறுதியாகக் கூறமுடியாத நிலையிலே பல கருத்துகள் குறிப்பிடப்படுகின்றன.

இந்தக் கடிதத்தைப் பெற்றவர்கள் யூத மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மனம் மாறியவர்கள் என்பர் ஒரு சாரார். ஏனெனில் பழைய ஏற்பாட்டிலிருந்து ஏராளமான மேற்கோள்கள் காட்டப்படுவதால், அவையெல்லாம் புறவினத்தாருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும், இப்படி மனம் மாறியவர்கள் திரும்பவும் யூதமதத்திற்கே செல்லாமல் இருக்கத்தான் இதை எழுதினார் என்றும் வாதாடுகின்றனர். ஆனால், இது அறுதியான வாதமாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. யூதமதத்திலிருந்து மனம் மாறியவர் இருந்தாலும், புறவினக் கிறிஸ்தவர்களுக்கும் புரியும்படி பழைய ஏற்பாட்டைப் பவுல் மேற்கோள்காட்டினார் என்பதற்கே உரோமையருக்கு எழுதிய திருமுகமும் சான்று பகர்கின்றது. இந்நூலின் ஆசிரியர் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் ஒப்பிடுவது காப்புரைத் தன்மையுடையது அன்று; மாறாக, எதிர்மறையில் அவருக்குள்ள விருப்பத்தினாலாகும் விளைவாகும். மேலும் மதத்தை விட்டு விலகுவதைப் பற்றிப் பேசும் எபி 3:6-4:13; 6:4-8; 10:26-31; 12:16-17 ஆகிய நான்கு பகுதிகளும் முழுமையான கைவிட்டுவிடுதலைப் பேசுகின்றனவேயொழிய, திரும்பிச் செல்லும் அவர்கள் எண்ணத்தைக் குறிப்பிடவில்லை.

சிலர் பாலஸ்தீன யூதமதத்திற்கே திரும்ப விரும்பிய முந்தைய எஸ்ஸேனியர்களுக்கோ, இன்னும் கிறிஸ்தவராக மனம் மாறாத எஸ்ஸேனியர்களுக்கோ, ஆசிரியர் இதை எழுதினார் என்று கருதுகின்றனர். ஆனால், இதை அப்படியே ஏற்றுக் கொண்டாலும் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இக்கடிதம் எப்படி இம்மொழியைப் பற்றியும், கலாச்சாரத்தைப் பற்றியும் ஏதுமே அறியாத அவர்களின் உள்ளங்களைத் தொடமுடியும் என்ற ஐயம் எழாமலில்லை.

மற்றொரு சாரர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய யூதக் குருக்களுக்குப் பிரச்சனை எழுந்ததாகவும், எனவே அவர்கள் திரும்ப யூத மதத்தைத் தழுவ எண்ணியபோது ஆசிரியர் இதை எழுதினார் எனவும் கருதுகின்றனர். இக்கருத்தும் கேட்பதற்கு இனிமையாக இருந்தாலும் புகழ்பெற்ற யூதமதத்தைச் சார்ந்த குருக்கள், கிரேக்கமொழியில் எழுதப்பட்ட கிரேக்கக் கலாச்சாரத்திலிருந்தும் மதம் மாறிய ஒருவரால் எழுதப்பட்ட இக்கடிதத்தை எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்பது பெரிய கேள்விக்குறிதான்.

ஆனால் அநேக அறிஞர்கள் இன்று உரோமைக்குத்தான் இக்கடிதம் எழுதப்பட்டது என எண்ணுகின்றனர். 1) இக்கடிதத்தைப் பற்றிய குறிப்புகள் முந்தைக் காலத்தில் முதன் முதலில் உரோமையைச் சார்ந்த கிளமெண்து, எரிமா இவர்களின் நூல்களில்தான் காணப்படுகின்றன. 2) எபி 13:24-இல் குறிப்பிடப்படும் ''இத்தாலி நாட்டுச் சகோதரர்கள்'' அந்நாட்டிலுள்ளவர்களுக்குத்தான் வாழ்த்து அனுப்புகிறார்கள். 3) உரோமைக் கிறிஸ்தவ சமூகம் தாராளத் தன்மைக்குப் பெயர் பெற்றிருந்தது (6:10). இக்கருத்தை வலியுறுத்தும் அறிஞர்கள் ஒரு புறவினச் சமூகத்தையே குறிப்பிடுகின்றனர். மேலும் யூதக் கிறிஸ்தவர்கள் யூதமதத்திற்குத் திரும்ப விரும்பினர் என்பதைவிட, புறவினத்தாரிடையே பல

யூதக் கிறிஸ்துவர்கள் இருந்ததாகவும், புற வினத்தாரின் தொடர்பால் அவர்களின் வழி பாட்டைப் பின்பற்ற நினைத்ததாகவும், அந் நிலையில் அவர்களுக்கு எழுதப்பட்டதாக வும் இருக்கலாம். பல கருத்துகள் நிலவி னும், இக்கடிதம் எழுதப்பட்டவர்கள் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறிச் சிதறிக் கிடந்த ஒரு யூதச் சமூகத்தினர் என்பதும், அப்படிப்பட்ட உரோமையிலிருந்த ஒரு சமூ கத்தினருக்குத்தான் எழுதப்பட்டிருக்கலாம் என்பதும் அறிஞர்பலரின் கருத்தாகும்.

5. காலமும் இடமும்:-

எங்கிருந்து இக்கடிதம் எழுதப்பட்டது என்பதைக் காணமுடியவில்லை. எபிரேயர் திருமுகம் சுமார் 96-இல் உரோமைக் கிளெமெண்தால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் எபிரேயரைப் பற்றித் தெரிந்து அது இன்னொருவரால் தம் நூலில் பயன்படுத்தப் பட வேண்டுமெனில் கால அவகாசம் தேவை. இந்தக் கடிதம் உரோமைச் சமூகத் திற்கு எழுதப்பட்டிருப்பின் கால அவகாசம் குறைவாகவும், வேறு சமூகத்திற்கு எழுதப் பட்டிருப்பின் அதிகமாகவும் இருக்க வேண் டும். எபி 8:13 மற்றும் 9:9-இல் ஆலய வழிபாடு இன்னும் தொடர்ந்து நடைபெறு வது போலத் தோன்றுவதால், இக்கடிதம் ஏரோதால் கட்டப்பட்ட ஆலயம், கி.பி. 70-இல் உரோமையரால் அழிக்கப்படுமுன் எழுதப்பட்டது என்பர் சிலர். ஆனால், இதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனெ னில், ஆசிரியர் ஆலயத்தையும், அதன் வழி பாட்டுச் சடங்கு முறைகளையும் ஓர் அடை யாளமாகவே கையாண்டுள்ளார். உள் ளார்ந்த சான்று என்று தேடினால், எபி 2:3-இல் இதன் ஆசிரியரும் எழுதப்பட்ட சமூகத்தினரும் இரண்டாவது சந்ததிக் கிறிஸ் துவர் என்பது காணப்படுகிறது. இதை எடுத் துக் கொண்டு வாதிட்டால் இக்கடிதம் கி.பி. 65-இல் நடந்த நீரோவின் வேத கலாபனைக் குப் பல்லாண்டுகள் கழித்து எழுதப்பட்டி ருக்கலாம் என்று எபி 10:32 சுட்டுகிறது. பெரும்பாலான விவிலிய அறிஞர்கள் கி.பி. 80-90-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப் பட்டிருக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள். ஆனால் சிலர் இது கி.பி. 70-க்குச் சற்றுமுன் எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகின்ற னர்.

எபி 13:24 ''இத்தாலிய நாட்டுச் சகோதரர் கள்'' என்று குறிப்பிடப்படுவதிலிருந்து சிலர் இது உரோமையில் எழுதப்பட்டது என்பர். ஆனால் ''இத்தாலிய நாட்டுச் சகோ தரர்கள்'' என்பது இத்தாலிய நாட்டைச் சார்ந்த அவர்கள் ஆசிரியர் இக்கடிதத்தை எழுதும்போது அவருடன் இருந்தார்கள் என் பதைக் குறிக்குமேயொழிய, இது உரோமை யில் தான் எழுதப்பட்டது என்பதை எந்த வகையிலும் உறுதியாகக் கூறவில்லை.

6. இலக்கிய அமைப்பு:-

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் ஒரு கடிதம் என்பதை விட மறையுரை என்று சிலர் கூறுகின்றனர். இது ஒரு இறையியல் கட்டுரையாக எழுதப்பட்டுக் கடிதத்தின் வடி வம் கொடுப்பதற்காக 13:22-24 என்ற பகுதி இணைக்கப்பட்டது என்பர் வேறுசிலர். இது ஒரு மறையுரைதான் என்று வாதிடுவோர், ஆசிரியரே எபி 8:1-இல் ''நான் சொன்னவற் றில்'' என்றுதான் குறிப்பிடுகிறாரேயொழிய, ''நான் எழுதியவற்றில்'' என்று குறிப்பிட வில்லை என வாதிடுகின்றனர். எழுது பவர் பெயர், யாருக்கு எழுதப்பட்டது வாழ்த்து இவையெல்லாம் ஆரம்பத்தில் இல்லாததால் இது ஓர் இறையியல் கட்டு ரையே என்கின்றனர் மற்றும் வேறுசிலர்.

இரண்டு கருத்துகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. மற்ற வேறு சில கடிதங்களிலும் அதனுடைய ஆசிரியர் தம் முடைய கடிதத்தைச் ''சொல்வோம்'' (காண் உரோ 3:5; 6:19) என்று குறிப்பிடுகிறார். மேலும் ஆசிரியர் பெயர், யாருக்கு எழுதப் பட்டது, வாழ்த்து இவையெல்லாம் இல் லாத கடிதங்களையும் கிரேக்கக் கலாச்சாரத் தில் சமீப காலத்தில் அறிஞர்கள் கண்டுபிடித் துள்ளனர். செமித்திய மேற்காசியாவில் தோன்றிய இந்தக் குறிப்புகளெல்லாம் இல் லாத ஒரு கடித மரபும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. ஆகவே முகவுரைக் குறிப்புகள்

இல்லாத காரணத்தால் எபிரேயர் திருமுகம் ஒரு கடிதம் அல்ல என்று கூற முடியாது. இவற்றையெல்லாம் ஒன்றாக நோக்கினால் எபி 13:22-24, இக்கடிதத்தின் மற்றப் பகுதி கள் முழுவதுமாக எழுதி முடிக்கப்பட்டபின் சேர்க்கப்பட்டதென்றும், அதைக் கடிதத்தின் ஆசிரியரோ இன்னொரு நபரோ சேர்த்திருக் கலாம் என்றும் கருதலாம். எனினும் எபி 13:22-24-இன் ஆசிரியர் இதை ஒரு கடிதமா கக் கருதியதால்தான் இப்படி எழுதினார் எனத் திண்ணமாகக் கூற இயலும். ஆகவே, இதில் மறையுரை நடை இருப்பினும், இது மறையுரை அல்ல. மிகவும் கவனத்தோடு, இலக்கிய நயத்தோடு கடித மரபினைப் பின் பற்றிப் பெரும் முயற்சியுடன் எழுதப்பட்ட தொன்றாகும்.

7. நூலின் திட்ட அமைப்பு:-

I முன்னுரை (1:1-4)

II கிறிஸ்து வானதூதரிலும் மேலானவர் (1:5-2:18).

1) மீட்பரின் அரியணையேற்றம் (1:5-14)
2) நிலைத்து நிற்க அறிவுரை (2:1-4)
3) தாழ்ச்சியின் வழியாக உயர்த்தப்பெற் றார் (2:5-18)

III இயேசு நம்பிக்கைக்குரிய இரக்கமுள்ள தலைமைக் குரு (3:1--5:10)

1) நம்பிக்கைக்குரிய மகன் மோசேயை விட மேன்மை வாய்ந்தவர் (3:1-6)
2) இஸ்ராயேலின் பிரமாணிக்கமற்றதனம் தரும் படிப்பினை (3:7-4:13)
3) இயேசு இரக்கமுள்ள தலைமைக்குரு

IV இயேசுவின் நித்திய குருத்துவமும், நிரந்தர பலியும் (5:11-19:39)

1) ஆன்மீக மறுமலர்ச்சிக்கு அறிவுரை (5:11-6:20)
2) மெல்க்கிசதேக்கின் முறைப்படி கிறிஸ் துவின் குருத்துவம் (7:1-28)

அ) மெல்க்கிசதேக்கும் லேவிய குருத்துவ மும் (7:1-10)

ஆ) லேவிய குருத்துவம் தேவையற்றது (7:11-28)

3. நிரந்தரப்பலி (8:1-9:28)

அ) பழைய உடன்படிக்கை, கூடாரம், வழிபாடு (8:1-9:10).

1) இயேசுவின் விண்ணகக் குருத்துவம் (8:1-6)
2) புதிய, பழைய உடன்படிக்கைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் (8:7-13)
3) பழையஉடன்படிக்கைக்கூடாரம்(9:1-5)
4) பழைய உடன்படிக்கையின் வழிபாடு (9:6-10).

ஆ) இயேசுவின் பலி (9:11-28)

1) விண்ணகச் சந்நிதானத்தில் நடை பெறும் பலி (9:11-14)
2) புதிய உடன்படிக்கையின் பலி (9:15-22).
3) குறைவற்ற முழுமையான பலி (10:1-39)
4) நிலைத்திருக்கச் செய்யும் இயேசுவின் பலி (10:1-39)

அ) பல பலிகளும், ஒரே நிறைவான பலியும் (10:1-18)

ஆ) உறுதி, நீதி, நினைவு (10:19-39)

V முன்மாதிரி, பணிவு, கீழ்ப்படியாமை (11:1-12:29)

1) முன்னோரின் விசுவாசம் (11:1-40)
2) இறைவன் தன் மக்களை நடத்தும் முறை (12:1-13)
3) கீழ்ப்படியாமைக்குத்தண்டனை(12:14-29).

VI இறுதி அறிவுரை, ஆசியுரை, வாழ்த்து (13:1-25).

8. இறையியல்:-

இக்கடித்தின் ஆசிரியர் புனித பவுலைப் போன்றே ''மகத்துவமிக்கவரது அரியணை யின் வலப்புறத்திலே வானகத்தில் அமர்ந் துள்ள'' (8:1) கிறிஸ்துவை மையமாகக் கொள்கிறார். ஆனால் இயேசுவை இவர் குருவாகக் காட்டுகிறார். கிறிஸ்து எக்கால மும் இருந்த மகனும் தலைமைக் குருவுமா வார் (எபி 1:1 தொ; 7:1-10:18; 13:8-14). இவர்

கிறிஸ்துவின் மனிதத் தன்மையை வலியுறுத்துகிறார். ஏனெனில் அவருடைய மனிதத் தன்மையின் வழியாகத்தான் அவர் தம்மையே மக்களோடு ஒன்றுபடுத்திக் கொண்டு ஒரு பரிந்து பேசுபவரானார் (2:11-18; 3:15; 5:1-5). அவருடைய மீட்பளிக்கும் இறப்பு ஒரு பலியின் சக்தியைக் கொண்டுள்ளது (6:4; 9:26; 10:2; 12:26). இத்திருமுகம் உடன்படிக்கையை வலியுறுத்திக் கூறுவது இதன் தனித்தன்மையாகும். மேலும், ஆசிரியர் இயேசுவின் இறப்பு மீட்பளிப்பதாகக் கொண்டாலும், இம்மீட்பு, உயிர்ப்பில்தான் உறுதியாக்கப் படுகிறது என்று கூறும் பவுலைப் போலல்லாது, அவர் விண்ணகத்தில் நுழைந்ததினால்தான் உறுதியாக்கப்படுகிறது என்கிறார். மேலும் இதில் இறைமக்கள், பழைய ஏற்பாட்டைப் போன்று மீட்பை நோக்கிப் பயணம் செய்கிறார்கள் என்ற கருத்தும் பரவிக் கிடப்பதைக் காண்கிறோம்.

9. முடிவுரை:-

எபிரேயர், பல கருத்துக்களைத் தன்னுள் கொண்டு எழுதப்பட்ட, உயர்ந்த இலக்கிய நயம் கொண்ட கடிதமாகும். தன் மானிட வேதனையின் இறுதியில் விண்ணகத்திற்கு உயர்த்தப் பெற்ற இயேசுவின் நித்திய பலியினால் மீட்பு மனுக்குலத்திற்கு வழங்கப்பட்டது என்பதைத் திண்ணமாக வலியுறுத்துகிறது.

எபிரேயர் (HEBREW) - பெயர்

கேபேர் அல்லது ஏபேர் முன்னோர்களின் பெயர். மக்களுடைய பெயர்களிலிருந்து உருவாக்கப்பட்ட பெயராக இருக்கலாம். இச்சொல்லிற்குச் சரியான சொல் இலக்கணம் தர முடியாது. இஸ்ராயேலர்களைக் குறிக்கும் இச்சொல் புறவினத்தாரால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது (ஆதி 39:14; யாத் 1:16). இந்தச் சொல்லை எபிரேயர்களே தங்கள் பெயராக வைத்துக் கொண்டனர் (யாத் 1:19). அப்போது 'எபிரேயன்' இஸ்ராயேலர்' இவ்விரண்டு சொற்களும் இடம் மாறக் கூடியவை. இஸ்ராயேலர்களுக்கும், எபிரேயர்களுக்கும் உறவு இருந்தாலும் மற்றப் பகுதிகளில், எபிரேயர்கள் கானான் நாட்டில் உள்ள ஒரு தனி இனமாகக் கருதப்படுகிறார்கள். எண் 24:23-இல் எபிரேயர்கள் அசூரைப் போன்ற ஒரு முக்கிய நாடாகத் தோன்றுகிறது.

ஆதி 10:21-இல் சொல்லப்பட்டிருக்கும் தலைமுறை அட்டவணையின்படி எபிரேயர்களின் மூதாதையர் ஏபேர் என்றழைக்கப்படுகிறார். அவரிடமிருந்து மக்கள் பலர் தோன்றியதாகத் தெரிகிறது. அவர் வழி வந்தவர்களில் ஆபிரகாம், லோத்து, நாகோர் போன்றவர்கள் முக்கியமானவர்கள். பழைய ஏற்பாட்டின்படி ஆபிரகாம் எபிரேயர்களுக்கும், லோத் மோவாபியர்களுக்கும் சுமோரியர்களுக்கும், நாகோர் அரமேயர்களுக்கும் குல மூதாதையர்கள் ஆவர். மாரி ஏடுகளில் நாகோர் ஒரு நகரத்தின் பெயராக அமைகின்றது. இந்தத் தலைமுறைப் பட்டியல்கள் ஓர் இலக்கிய அமைப்பாகத் தெரிகிறது. அவற்றில் காணப்படும் நபர்கள் பழங்காலத்து இனக்குழுக்களையோ, நகர்களையோ, நாடுகளையோ பிரதிபலிக்கலாம். கெபிரோனை மையமாகக் கொண்ட ஆமோரியர்களின் கூட்டாளி என்று கூறப்படுகிறது. ஆபிரகாம் ஆதி 14-இன் படி ஓர் எபிரேயர். ஆதியாகமப் பரம்பரியப்படி ஆபிரகாம் மெசபொத்தாமியாவிலுள்ள ஊர் என்ற இடத்திலிருந்து குடியேறியவர். இது முந்தைய காலக் குடியேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

எபிரேய மொழி, கானானிய, எமோரிய மொழிகளின் கலவையில் பிறந்த கிளை மொழியாகும். செமித்திய மொழியைச் சேராதவைகளும் எபிரேய மொழி வளர்ச்சியில் செல்வாக்குக் கொண்டிருந்திருக்கின்றன.

எபிரேயர்களின்படி நற்செய்தி (GOSPEL ACCORDING TO HEBREWS)

திருமறைப்பட்டியலைச் சேராத, கிரேக்க மொழியில் எழுதப்பட்ட நற்செய்தி கி.பி. முதல் நூற்றாண்டின் முடிவில் அல்லது 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எகிப்திலுள்ள யூதக் கிறிஸ்தவர்களிடையே தோன்றியிருக்க வேண்டும். இது, மத்தேயு நற்செய்தி

அளவுக்கு நீண்டதாக இருந்திருந்தாலும், பிறர் எடுத்துக்கூறும் துணுக்குகளில்தான் நமக்குத் தெரிய வருகிறது. இந்நூலை அலக் சாந்திரியாவைச் சேர்ந்த கிளமெண்து, ஒரி சன், சிரில் போன்றவர்கள் எடுத்துக் கூறுகின் றனர். யுசேபியு, பப்பியஸ் போன்றவர்கள் இந்நூலுக்குச் சான்று பகர்கின்றனர். இந் நூலின் அரமேயிக் மூலத்திலிருந்து கிரேக்கத் திலும் இலத்தீனிலும் மொழி பெயர்த்திருப்ப தாக எரோமிமு கூறுகிறார். ஆனால், ஒரு வேளை இவர் எடுத்துக்காட்டும் பகுதிகள் ஓரிசனிலிருந்து கடன் வாங்கப்பட்டவை களாக இருக்கலாம். மேலும், இவர் எபியோ னியர் நற்செய்தி, நசரேயர்களின் நற்செய்தி ஆகியவற்றோடு இதைக் குழப்பிவிட்ட தாகத் தெரிகிறது.

ஒரு காலத்தில் அறிஞர்களால், இந்நூல் மத்தேயு நற்செய்திக்கு முன்னோடியாகக் கரு தப்பட்டது. ஆனால், இது பிற்காலத்தைச் சேர்ந்தது என்று இப்போது ஏற்றுக்கொள்ளப் படும். எந்த அளவுக்கு இது மத்தேயுவைத் தழுவியது என்பது சர்ச்சைக்குரியது. திரு முறைப்பட்டியல் நூல்களில் காணப்படாத இயேசுவின் கூற்றுகளோடு, இயேசுவின் முந்தைய வாழ்வு, வாழ்வு பற்றிய கலப்புமத புராண விவரிப்புகளும் உள்ளன. இயேசு வின் சகோதரராகக் கருதப்படும் யாக்கோ புக்கு, மற்ற எல்லா அப்போஸ்தலர்களை யும்விட முக்கியத்துவம் கொடுக்கப்படு கிறது. பவுலுக்கு எதிரான போக்கையும் கொண்டுள்ளது.

எபிரோன் (EBRON)

ஆசேருக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட பகுதியில் உள்ள நகரம் எபிரோன் ஆகும் (யோசு 19:28). மொசரடிக் ஏடுகளில் யோசு 21:30; 1 நாள் 6:74-இல் வரும் அபிதோனுக் குப் பதிலாக எபிரோன் என்று தவறாகக் குறிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

எபிலால் (EPHLAL தீர்ப்பு)

எரகுமேலின் குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 2:37). யூதாவைச் சேர்ந்தவர். சாபத்தின் மகனும் ஓபேத்தின் தந்தையுமாவார்.

எபெரெக்கியா (JEBERECHIAH யாவே ஆசீர் வதிக்கிறார்)

இவர் அரசன் செக்கரியாவின் (17) தந்தை (ஏச 8:2). இவர் அரசன் ஆகாசின்முன் ஏசயா அடையாள இறைவாக்குரைத்ததற்குச் சாட்சியாவார். ஒருவேளை இவர் ஆகாசின் மாமனாராகவும், எசக்கியாவின் பாட்டனாக வும் இருக்கலாம் (காண்க 2 நாள் 29:1)

எபேசியருக்குத் - திருமுகம் (LETTER TO THE EPHESIANS)

1. முன்னுரை:- எபேசியருக்கு எழுதப் பட்ட திருமுகம் சிறைக்கூட மடல்களில் (கொலோசேயர், பிலமோன், பிலிப்பியர், எபேசியர்) ஒன்றாகும். இது தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். கடித வடிவில் நமக்குக் கிடைத்துள்ள இப்படிவம் உண்மையி லேயே ஒரு மறையுரையாக இருக்கலாம். இதை ஒரு ஒன்றிப்புத் திருமுகம் என்றுகூட அழைக்கலாம். அத்தகைய உயர்ந்த கருத்து களைக் கூறுகிறது. மனிதப் பிளவுகளையும், வேறுபாடுகளையும் அகற்றி, சமத்துவ வாழ் வுக்கு வழிகாட்டும் ஒரு மடலாகவே இது திகழ்கிறது.

2. நூல் தோன்றிய காலமும், இடமும்:- ''எபேசியர்'' எழுதப்பட்ட காலத்தைக் கணித்தல், அதனுடைய ஆசிரியரை முடிவு செய்வதைப் பொறுத்து அமைகிறது. புனித பவுல்தான் இதை எழுதினார் எனக் கொண் டால் இது சுமார் கி.பி. 63-இல் எழுதப்பட் டிருக்க வேண்டும். புனித பவுலை இதன் ஆசிரியராக ஏற்றுக் கொள்ளாவிடில், இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் முதல் பத் தாண்டுகளில் எழுதப்பட்டிருக்கலாம். எப் படி இருப்பினும் இது கொலோசேயருக்குப் பின் எழுதப்பட்டது என உறுதியாகக் கூறமுடியும். கொலோசேயர், எபேசியர் இரண் டிலும் காணப்படும் ''83'' சொற்கள் அவை களுக்கிடையே சிறப்பான தொடர்பு இருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்குகின்றன.

''எபேசியர்'' எழுதப்பட்ட இடத்தை நோக்குங்கால், ஆசிரியர் ஒரு கைதி என்பது தெளிவாக உள்ளது (எபே 3:1; 4:1; 6:20).

ஆனால், பவுல் தான் ஏற்படுத்திய எல்லாத் திருச்சபையிலும் சில நாட்கள் சிறையிலிருந்தார். இக்கடிதம் பவுலின் மற்றக் கடிதங்களுக்குப்பின் எழுதப்பட்டிருந்தால், அவர் இரண்டாண்டுகள் கைதியாயிருந்த செசாரியாவில் (அ.ப. 23:33) எழுதப்பட்டிருக்கும், அல்லது உரோமையில் எழுதப்பட்டிருக்கலாம்.

3. ஆசிரியரும் உண்மைத் தன்மையும்:- முற்காலத்திலிருந்தே பவுல்தான் இதை எழுதினார் என்று ஏற்றுக் கொள்ளட்பட்டது. எபேசியருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலேயே பின் வரும் பகுதிகள் அது பவுலால் எழுதப்பட்டது எனச் சான்று பகர்கின்றன. ''இயேசுவின் அப்போஸ்தலனான பவுல் யான் எழுதுவது'' (எபே 1:1) ''இயேசுவின் கைதியாகிய நான்'' (எபே 4:1). இதனுடைய ஆசிரியர் குறிப்பிடுகின்ற அனுபவங்கள் பவுலின் அனுபவங்களை ஒத்திருக்கின்றன (3:1-4; 3:7-13; 6:19-22). திருச்சபையின் தந்தையர்களான உரோமையின் கிளமெண்து, அந்தியோக்கியா இஞ்ஞாசியார், எரிமாக, போலிகார்ப்பு ஆகியோர் இதனை அறிந்திருந்தனர். இத்திருமுகத்தின் முதலும் முடிவும் புனித பவுலின் பாணியிலேயே அமைந்துள்ளன (காண். பிலிப் 1:1; 4:23). முதற்பகுதி கொள்கைக்கும், பிற்பகுதி அறநெறிக்கும் இடமளிக்கின்றன (எபே 1:3; காண்.கொலோ 1:2; கலாகு 3:4).

பவுலால் எழுதப்பட்டவைகளின் தொகுப்பிலும் எபேசியர் இடம் பெறுகிறது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் மத்தியில் மார்சியன் என்பவர் இதை ''இலவோதிக்கேயருக்கு'' எழுதப்பட்டது என்று கூறினாலும் அதைப் பவுல் எழுதியதாகவே ஏற்றுக் கொள்கிறார். கி.பி.-2-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரேனியுசும், அலக்சாந்திரியா கிளமெண்தும் இக்கடிதத்தைப் பவுலினுடையது என்றே ஏற்றுக் கொண்டனர். முராத்தோரியன் ஏடுகளும் இதைப் பவுலினுடையது என்றே கூறுகின்றன. இவ்வாறு கி.பி. 18-ஆம் நூற்றாண்டு இறுதிவரை இதனுடைய ஆசிரியர் பவுல்தான் என்பதைப் பற்றி ஐயப்பாடு ஏழவே இல்லை. பவுல்தான் இதை எழுதினார் என்று 18-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை திருச்சபையும் பாரம்பரியமும் ஏற்றுக் கொண்டாலும், 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அறிஞர்கள் இதை எழுதியது பவுல் தானா? என்ற வினாவை எழுப்பினர். அறிஞர்கள் பலர் (அ) மொழி, நடை இவற்றில் காணப்படும் வேறுபாட்டின் அடிப்படையிலும், (ஆ) எபேசிய திருமுகத்திற்கும் மற்றத் திருமுகங்களுக்கும் சிறப்பாகக் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திற்கும் இடையே உள்ள தொடர்பின் அடிப்படையிலும் (இ) கோட்பாடுகளின் அடிப்படையிலும் இத் திருமுகம் புனித பவுலால் எழுதப்படவில்லை என்ற முடிவுக்கு வருகின்றனர்.

அ) மொழி, நடை வேறுபாடு:- எபேசிய திருமுகத்தின் சொல்லமைப்பை நோக்கின், புதிய ஏற்பாட்டிலேயே இல்லாத 42 சொற்கள் இக்கடிதத்தில் காணப்படுகின்றன. இவ்வாறே மற்ற பவுலின் சம அளவுள்ள திருமுகங்களின் சொல் விகிதத்தை ஒப்பிடும்போது கலாத்தியரில் 33 சொற்களும், பிலிப்பியரில் 41 சொற்களும், கொலோசேயரில் 38 சொற்களும் உள்ளன. மேலும், புனித பவுலின் மற்றக் கடிதங்களிலேயே இல்லாத 36 சொற்கள் இதில் இருக்கின்றன. இவ்வாறு எபேசியருக்கே உரிய இந்தச் சொற்கள், திருச்சபையை மணமகளாக விளக்கும் பகுதியிலும் (எபே 5:25-33), கிறிஸ்துவ மறையின் கேடயத்தை விளக்கும் பகுதியிலும் (6:13-17) செறிந்துள்ளன.

நடை வேறுபாடும் குறிப்பிடத்தக்கது. இங்கு எளிமை இல்லாமல், பல சொற்கள் கனத்த கம்பீர நடையோடு தோன்றுகின்றன. பெயர்ச் சொற்கள் அடுத்தடுத்து அடுக்கி வருகின்றன (எபே 1:11; 19; 2:14-14). சொற்றொடர்களும் நீண்டு காணப்படுகின்றன (1:3-14; 1:15-23; 2:1-10; 3:1-6; 4:11-16).

ஆகவே, சொற்களின் விகிதாச்சாரத்தையும் அவை பயன்படுத்தப்பட்டுள்ள முறையையும் நடையையும் கொண்டு இது பவுலால் எழுதப்பட்டிருக்க முடியாது எனச் சிலர் கணிக்கின்றனர்.

ஆ) கடிதங்களுக்கிடையே உள்ள தொடர்பு:- எபேசியருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலுள்ள 155 வசனங்களுள் மூன்றிலொரு பகுதி கருத்திலும், அமைப்பிலும் கொலோசேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தை ஒத்திருக்கின்றன. இத்திருமுகத்தில் திக்கிக்கு என்பவரைப் பற்றிக் குறிப்பிடும் பகுதி (எபே 6:21-22) கொலோசேயரில் (4:7-8) அப்படியே ஒத்துப் போகிறது. இம்மடலில் காணப்படும் சொற்றொடர்கள் மற்றக் கடிதங்களோடு 85 விழுக்காடுக்கு மேல் கருத்திலும் அமைப்பிலும் ஒத்திருக்கின்றன.

எபே 1:16 - கலா 4:4,5; எபே 1:16 - பிலிப் 1:3; எபே 2:1 - உரோ 7:9; எபே 2:8 - உரோ 3:23; எபே 2:20 - 1 கொரி 12:28; எபே 3:10 - 1 கொரி 15:9; எபே 4:5 - 2 கொரி 8:6; எபே 4:10 - 2 கொரி 12:2; எபே 4:31 - 1 தெச 4:17; எபே 5:24 - கலா 3:28;

எனவே திறமையும், சிந்தனைத் திறனும் கொண்ட பவுல் இப்படி அப்படியே எழுதியிருக்க முடியாது. மேலும் இத்திருமுகத்தின் ஆசிரியர்; புனித பவுல் மற்றக் கடிதங்களில் பயன்படுத்திய அதே சொற்களைக் கையாண்டாலும் அதற்குத் தம்முடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு பொருள் தருகின்றார். உதாரணமாக, ''மறைபொருள்'' என்ற சொல் கொலோ 1:26; 2:2; 4:3; ஆகியவற்றில் திருச்சபையில் மறைந்துள்ள கிறிஸ்துவையும், எபே 1:9; 3:4 ஆகியவற்றில் யூதரும் புறவினத்தாரும் ஒன்றுபட வேண்டும் என்னும் இறைத்திட்டத்தின் வெளிப்பாட்டையும் குறிக்கிறது.

இ) கோட்பாட்டில் வேறுபாடு:- 1) எபேசியரில் உயிர்த்த மாட்சியடைந்த கிறிஸ்து வலியுறுத்தப்படுகிறார் (காண்.எபே 2:13-16). ஆனால், மற்றக் கடிதங்களில் பிரபலமாக இருக்கும் அவரின் இரண்டாவது வருகையைக் குறித்து எந்தக் குறிப்பும் இல்லை. ''உரிமைப்பேற்றின் அச்சாரம்'' (1:14) ''மீட்பின் நாள்'' (4:30) இவைகளைக் குறித்து சிறு குறிப்பே உள்ளது. இங்கே காட்டப்படும் திருச்சபை அவரது இரண்டாம் வருகைக்குக் காத்திருக்கும் திருச்சபை போலல்லாது வரலாற்றில் வளருகின்ற, முன்னேறுகின்ற திருச்சபையாகக் காட்சியளிக்கிறது.

2) இதில் திருச்சபை பவுலின் மற்றக் கடிதங்களில் இருப்பதைவிட எல்லோரையும் உள்ளடக்கும் பொதுத் தன்மையுடையதாக இருக்கிறது. உரோ 12:5; 1 கொரி 12:12-27-இல் கிறிஸ்துவின் உடல் தலத்திருச்சபையைக் குறிக்கிறது. ஆனால், எபேசியரில் கிறிஸ்துவின் உடல் கிறிஸ்துவையே தலையாகக் கொண்ட உலகளாவிய பொதுத் திருச்சபையைக் குறிக்கிறது.

3) எபே 5:21-33-இல் திருமணக் கொள்கை 1 கொரி 7-இல் உள்ளதைவிடத் தெளிவாகவும் முழுமையானதாகவும் உள்ளது. 1 கொரி 7-இல் பவுல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றியே மிகவும் அக்கறை கொள்கிறார்.

ஆகவே, மேலே கூறப்பட்ட வாதங்கள் தனித்தனியாக இல்லாவிடினும். ஒன்றாகச் சேர்ந்து இதனுடைய ஆசிரியர் பவுல் இல்லை என மெய்ப்பிப்பதாக விவிலிய அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். மற்றும் வேறுசிலர் இவ்வாதங்கள், இதன் ஆசிரியர் பவுல் இல்லை என்பதை மெய்ப்பிக்கப் போதுமானவையாக இல்லை என வாதிடுகின்றனர்.

கோட்பாடுகளிலும் கொள்கைகளிலும் உள்ள வேறுபாடுகள் சிந்தனையின் முதிர்ச்சியால் ஏற்பட்டிருக்கலாம். இந்தக் கருத்து வளர்ச்சியை, சிந்தனை வளர்ச்சியைக் கண்டுபிடிப்பவர்கள் விவிலிய அறிஞர்கள். ஆனால் அனைவரும் இதை ஏற்றுக் கொள்வதில்லையே! மேலும் அறிஞரான பவுல் தன் அனுபவத்தினால் திரும்பவும் தான் மற்றக் கடிதங்களில் எழுதியவைகளைச் சிந்தித்து, மாற்றியமைத்து எழுத எந்தத் தடையுமில்லை. எனவே, பிற்காலத்தில் வந்த மற்றொருவர் இதை எழுதினார் என எண்ணத் தேவையில்லை.

ஒரு மடலைத் தானாகவே எழுதலாம், அல்லது ஓர் எழுத்தரைக் கொண்டு அவருக்குச் சொல்லி எழுதுவிக்கலாம் அல்லது அவரிடம் முக்கியமான கருத்துக்களைச் சொல்லி அவரையே எழுதச் செய்யலாம். இம்முறையில் எதைப்பயன்படுத்தினாலும் எழுத்தர் ஆசிரியனாகிவிட முடியாது. எனவே, பவுல் மூன்றாவது முறையைப் பின்பற்றி இருந்தாலும் அவரே இக்கடிதத்தின் ஆசிரியராவார்.

எது எப்படி இருப்பினும், எபேசியர் புனித பவுலின் வளர்ச்சியடைந்த முதிர்ச்சியான இறையியலையும் சிந்தனைகளையும் உள்ளடக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை.

4. யாருக்கு எழுதப்பட்டது?:- எபேசு சிறிய ஆசியாவின் மேற்குக் கரையில் அமைந்த ஒரு துறைமுக நகரம். இது உரோமை மாகாணத்தின் ஆசியத் தலைநகரமாகவும் விளங்கியது. தம்முடைய இரண்டாவது தூதுரைப் பயணத்தின்போது புனித பவுல் இங்கே தங்கினார் (அ.ப. 18:19-21). மூன்றாவது தூதுரைப் பயணத்தின்போது இதைத் தம்முடைய பணித்தளமாகக் கொண்டு. மூன்றாண்டுகள் பணி புரிந்தார் (19:1-20:1). ஏறக்குறைய இரண்டரை இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட அந்நகரில், துறைமுக நகரமானதால், வாணிபத்திற்காக உலகின் பல பகுதிகளிலிருந்தும் பலர் வந்து தங்கினர். இங்கு அடிமைகள் பலர் இருந்தனர் (1 திமோ 6:1.17). உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றான தயான் தேவதையின் ஆலயம் இங்குதான் இருந்தது. அன்றைய எபேசில் இரு ஆலயங்களும், ஒரு பெரிய நூலகமும், அகன்ற அங்காடியும், பெரிய மன்றமும், ஐம்பதினாயிரம் பேரை அடக்கக்கூடிய அரங்கமும் இருந்தனவாகப் புதைபொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தத் திருமுகத்தின் தலைப்பிலும், அதன் ஆரம்பத்திலும் ''எபேசியருக்கு'', ''எபேசுக்கு'' என்று முறையே குறிக்கப்பட்டிருந்தாலும், ஒரு சில ஏடுகளில் தலைப்பிலுள்ள ''எபேசியருக்கு'' என்ற சொல் இல்லை. உதாரணமாகப் பவுலின் கடிதங்களில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படும் ''செஸ்டர் பெயாத்தி பப்பிரஸில்'' இவ்வார்த்தை காணப்படவில்லை. வத்திக்கானஸ், சைனாய்ட்டிகுஸ் ஏடுகளிலும் இச்சொல் பின்னால் கையெழுத்துக்களால் சேர்க்கப்பட்டுள்ளது. புனித பேசில், எரோனிமு, ஒரிசன் ஆகியோர் இத்தலைப்பு இல்லாத பிரதிகளை அறிந்திருந்தனர். எனவே, வாசகத்தை நாம் ஆராய்கிறபோது மூலப்பிரதியில் இவ்வார்த்தை இல்லை என்ற முடிவுக்கே நாம் வரவேண்டி இருக்கிறது. மேலும், மார்சியோன் கொலோ 4:16-இல் ''இக்கடிதத்தை நீங்கள் வாசிக்கக் கேட்டபின் இலவோதிக்கேயா திருச்சபையிலும் வாசிக்கச் செய்யுங்கள்'' என்னும் வாக்கியத்தின். அடிப்படையில், இத்திருமுகம் இலவோதிக்கேயருக்கு எழுதப்பட்டது என்று கூறுகிறார்.

பெனுவா என்னும் விவிலிய அறிஞர் கூற்றுப்படி இக்கடிதம் எல்லாத் திருச்சபைக்காகவும் எழுதப்பட்ட ஒரு சுற்றறிக்கையாக இருக்கலாம். இதை எடுத்துச் செல்பவர், எந்தத் திருச்சபையில் படிக்கப்படுகிறதோ அதன் பெயரைச் சேர்த்துப் படிக்கத் தலைப்பு எழுதுமிடம் காலியாக விடப்பட்டிருக்கலாம். எனவே, எல்லா இடங்களுக்கும் சுற்றி வந்தபின் எபேசில் ''எபேசியருக்கு'' என்று சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால், இதற்கு ஏற்றபடி கிரேக்க இலக்கியத்தில் எடுத்துக்காட்டுகள் இல்லை.

மேலும் இக்கடிதத்தில் திக்கிக்கு என்பவர் மட்டுமே தனிப்பட்ட முறையில் குறிப்பிடப்படுகின்றார் (6:21). இது கொலே 4:7 -இல், ''அன்புள்ள சகோதரர் திக்கிக்குக்கு'' என்பது போலவே இருக்கிறது. ஏறக்குறைய பவுல் எபேசில் மூன்றாண்டுகள் தங்கினாலும் இக்கடிதத்தில் ஒரு தனி ஈடுபாட்டுத் தொடர்பு இல்லாததும், இன்னும் நண்பர்கள் பலரை அவர் குறிப்பிடாததும் வியப்பாக இருக்கிறது. இதன் ஆசிரியர் யாருக்கு எழுதுகிறாரோ அவர்களைச் சரியாகத் தெரிந்திருக்கவில்லை என்பதற்கும், அவர்களும்

இவருடைய போதனையைச் சரியாகத் தெரிந்திருக்கவில்லை என்பதற்கும் ஆதாரங்கள் உள (1:15; 3:1; 4:21). ''அப்போஸ்தலர், இறைவாக்கினர் இவர்களை அடிக்கல்லாகவும், கிறிஸ்துவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாயிருக்கிறீர்கள்'' (2:20) என்று இதன் ஆசிரியர் எழுதுவதிலிருந்து, இந்தத் திருச்சபையை நிறுவாத ஒருவர் எழுதுவதுபோல் இருக்கிறது. ஆனால், பவுல் எப்போதுமே தம்மையே தாம் நிறுவிய திருச்சபையோடு ஐக்கியப்படுத்திக் கொள்ளும் வழக்கமுடையவர்.

எனவே, தலைப்பே சில மூலப்பிரதிகளில் இல்லாததாலும், எந்தத் தனிப்பட்ட நபர்களும் வாழ்த்தைப் பெறாததாலும், எந்தவிதமான தனிப்பட்ட பிரச்சனையும் எபேசில் எழாததாலும், எபேசை மையமாகக் கொண்ட பல சபைகளுக்குப் பொதுவாக இத்திருமுகம் எழுதப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

5. சூழ்நிலையும் நோக்கமும்:- எபேசியருக்கு எழுதிய திருமுகம் மற்றெல்லாவற்றையும் விட, மறைக்கோட்பாடுகளை அதிகம் கொண்டுள்ளது. ஆனால், என்ன சூழ்நிலையில் இது எழுதப்பட்டது என்பதைப்பற்றிய குறிப்பு ஏதுமே இங்கு இல்லை. கொலோசேயருக்கும் இதற்கும் உள்ள தொடர்பை நோக்கும் போது, கொலோசேயருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் சூழ்நிலைபோல, ஞான உணர்வுக் கொள்கையே இக்கடிதம் எழுதப்படுவதற்கும் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், இம்முறை அதை எதிர்ப்பதோடு நில்லாமல் அதற்குச் சரியான விளக்கமும் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கலாம். அதே வேளையில் இந்த ஞான உணர்வுக் கொள்கைக்கு எதிராக எழதப்பட்ட விளக்கங்களைப் பவுலின், மற்றக் கடிதங்களில் காண முடியவில்லை. எனவே, இது எந்தவிதமான தனிப்பட்ட பிரச்சனையையும் சமாளிக்க எழுதப்பட்டதாகத் தெரியவில்லை.

6. இலக்கிய, மொழி, நடை அமைப்பு:- மற்ற நூல்களைப் போலவே, இக்கடிதத்தின் இலக்கிய அமைப்பை மொழி, நடை ஆகியவை முடிவுசெய்கின்றன. மொழியையும் நடையையும் நாம் நோக்கும்போது இதில் செமித்தியப் பின்னணியும், ஆசிய எண்ண அலைகளும் வெளிப்படுகின்றன. இவருடைய நடை பெரும்பாலும் வழிபாட்டைத் தழுவிவருகிறது. ஆனால், சில சமயங்களில் ஆசிரியர் நீண்ட சொற்றொடர்களை அமைத்தும், பல பெயர்ச் சொற்களை அடுக்கியும் எழுதுகிறார். இக்கடிதத்தின் ஆசிரியர், ஏற்கனவே வழக்கிலிருந்த கிறிஸ்தவ பாடல்களையும், செபங்களையும், மறைக்கல்விக் கருத்துக்களையும் கொண்டு இதை எழுதி இருக்கலாம். மேலும் இவருடைய நடையிலிருந்து, இவர் இந்தப் பாடல்களையும், செபங்களையும் நன்கு அறிந்து தெளிந்திருந்தார் என்பது வெளியாகிறது. மேலும் இவர் ''இணையமைப்புக்களையும்'', உள்ளடக்குதல், தூண்டு சொற்கள் முதலியவற்றையும் ஒரு தெளிந்த புலவரைப் போலப் பயன்படுத்தியுள்ளார். இவையெல்லாவற்றையும் சேர்த்தாலும் அவை ஒரு கடித அமைப்பை வெளிப்படுத்தவில்லை.

7. நூலின் திட்டமும் அமைப்பும்:-
அ) முன்னுரை:- வாழ்த்துக்கள் (1:1-2)

ஆ) கொள்கைப் பகுதி:- யூதரும் புறவினத்தாரும் இணைந்த புதிய சகோதர வாழ்வின் தலைவராகக் கிறிஸ்துவை ஏற்படுத்திய இறைவனின் மீட்புத்திட்டம் (1:3-3:21).

1. இறைப் புகழ் (1:3-14)
2. யூதரும் புறவினத்தாரும் இணைந்த புதிய சகோதரத்துவம் (1:15-2:2)
3. பனித பவுல் தூதுவர் (3:1-13).
4. செபமும் புகழுரையும் (3:14-21).

இ) அறிவுரைப்பகுதி:- கிறிஸ்தவ வாழ்வு (4:1-6:20).

1. பொதுவான கோட்பாடுகள் (4:1-5:20).
   - கிறிஸ்தவ ஒற்றுமை (4:1-16)
   - ஆன்மீக மறுமலர்ச்சிக் கோட்பாடு (4:17-5:20).

2. கிறிஸ்தவக் குடும்ப வாழ்க்கை ஒழுக்கம் (5:21-6:9).
3. கிறிஸ்தவப் போராட்டம் (6:10-17).

ஈ) முடிவுரை:- (6:18-24)

8. இறையியல்:- எபேசியருக்கு எழுதப்பட்ட திருமுகம், மற்றக் கடிதங்களிலுள்ள கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் தனக்கென்று சில தனித்தன்மை வாய்ந்த இறையியல் கருத்துக்களைத் திரித்துவம் அல்லது மூவொரு இறைவன் அடிப்படையில் விளக்குகிறது. தந்தையாகிய கடவுள் மனித இனத்தின்மேல் கொண்ட அன்பை, கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தினார். அந்த அன்பு ஆவியிலே நமக்கு உரிமையாக்கப்பட்டது. ஆசிரியரின் கிறிஸ்துவியல் மாட்சியடைந்த எங்கும் நிறைந்த ஆண்டவரைக் காட்டுகிறது. இந்தக் கருத்து, இக்கடிதம் முழுவதும் அவரது எண்ணத்தில் இழையோடுவதைக் காணலாம். திருமுழுக்காலும், விசுவாச வாழ்க்கையாலும் இவ்வுலகிலேயே ஒருவன் கிறிஸ்துவின் அரசில் பங்கு கொள்கிறான். இந்தக் கிறிஸ்துவின் அரசு, உடல்-தலை தொடர்பு, மூலைக்கல்-ஆலயம், கணவன்-மனைவி உறவு போன்ற உயிரோட்டமுள்ள உருவகங்களால் விளக்கப்படுகின்றது.

இறுதிக்கால இயல் மிகவும் குறிப்பிடத்தகுந்த முறையில் அமைந்துள்ளது. கிறிஸ்துவின் அரசு இன்று இங்கேயே இருந்தாலும் அது இன்னும் செயலாக்கம் பெறவேண்டிய நிலையிலேயே உள்ளது. இதில் உள்ள இறுதிக்கால இயல் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தோடும் யோவானோடும் ஒத்துப்போகிறது. இன்று நாம் உள்ள நிலை, ஆவியில் கிறிஸ்துவழியாக இறைவனின் அன்புக்கு நாம் காட்டும் பதிலன்பு ஆகும். இதில்தான் கிறிஸ்தவ ஒழுக்கம் ஊற்றெடுக்கிறது. இறுதியாக இது ஒற்றுமையின் கடிதம் என்று குறிப்பிட்டாலும் அது மிகையாகாது. கிறிஸ்துவே புதிய ஆதாம் ஆவார். படைப்பு முழுவதையும் தம்மிலே ஒன்றிணைத்து, மனித ஒன்றிப்பின் தனிச்சிறப்பான மூலமாக இருக்கிறார். இந்த ஒன்றிப்பு மனித முயற்சியின் விளைவன்று. கிறிஸ்து என்னும் மறைபொருள் ஆவியில் மேலும் மேலும் ஆழ்ந்து புகுவதால் வருவதாகும்.

9. முடிவுரை:- மொழி, மதம், இனம், முதலிய பிரிவினைச் சுவர்களால் பிளவுபட்டிருக்கும் இன்றைய சமுதாயத்தில் அச்சுவர்களையெல்லாம் தகர்த்தெறிந்து ஒன்றுபட்ட உண்மையான சகோதரத்துவம் மலர எல்லாக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் சுவைபட இந்நூல் தருகிறது என்பதில் ஐயமில்லை.

எபேசு (EPHEUS - விரும்பத்தக்க)

எபேசு என்பது மேற்கு சிறிய ஆசியாவிலுள்ள கெய்ஸ்டர் என்ற ஆற்று முகத்துவாரத்தில் உள்ள நகரம். கி.மு. 1100-இல் அயோனியர்கள் இவ்விடத்தை ஆக்கிரமித்தனர். இந்நகரம் பெர்காமின் அரசரின் கையிலிருந்து கி.மு. 133-இல் உரோமையர்களின் ஆட்சி அதிகாரத்திற்குள் வந்தது. இது ஆசியா மாகாணத்தின் தலைநகராகும். இது பணபலமிக்க செல்வச் செழிப்புள்ள நகரம். ஆசியாவின் துறைமுக நகரமும், வியாபாரத் தலமுமாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இதன் மக்கள் தொகை 250,000 ஆகும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் திரேசியன் அரசன் லிசிமாக்குஸ் இந்நகரை மீண்டும் பெரிதாகக் கட்டியெழுப்பியபோது கெய்ஸ்டர் ஆற்றால் அடித்து வரப்பட்ட வண்டல்மண் நகரின் மேற்குப் பகுதியை நிரப்பிவிட்டது. ஆகையால் நகரம் 3 கி.மீ. மேற்காக நகர்த்தப்பட்டது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில்கூட இந்நகரின் துறைமுகம் மேற்குப் பகுதிநோக்கி நகர்ந்தது. தற்காலத்திலும் எபேசு நகருக்கும் கடலுக்கும் இடையே உள்ள தூரம் 1 கி.மீ. ஆகும்.

அயோனியர்கள் வந்து எபேசில் குடியேறுவதற்கு முன்பே அங்கு அர்தெமிஸ் என்ற கிரேக்கப் பெண் தெய்வ வழிபாடு நடைபெற்றது. அர்தெமிசுக்கு எழுப்பப்பட்ட முதல் கோவில் கெரிஸ்ப்ரோன் என்ற சிற்பியால் கட்டப்பட்டது என்று ஸ்த்ராபோ கூறுகின்றார். அர்தெமிசுக்கு எழுப்பப்பட்ட

கோவிலை 1890-இல் கண்டு பிடித்தனர். உரோமையர்களின் ஆட்சிக் காலத்தில் எழுப் பப்பட்ட பொதுக் கட்டடங்களெல்லாம் அழியாமல் இருந்தன. இந்தக் கோவிலின் அடிப்படை மேடையானது 240 அடி அகல மும் 420 அடி நீளமும் கொண்டிருந்தது. கோவிலானது 160 அடி அகலமும் 240 அடி நீளமும் கொண்டிருந்தது. அதனுடைய தூண் கள் 55 அடி உயரமுடையதாக இருந்தன. பழைய காலத்தில் ஏழு உலக அதிசயங்களில் இதுவும் ஒன்றாகும். பார்வையாளர் இருக் கைகளைக் கொண்ட மைதானம், 24000 இருக்கைகளைக் கொண்ட மிகப் பெரிய அரங்கம், வியாபாரத்தலம், செராபிஸ் கோவில் செல்சசின் நூலகம் போன்றவை மற்றும் உள்ள கட்டடங்களாகும். அர்கேடி யன் தெருவால் துறைமுகமும் அரங்கமும் இணைக்கப்பட்டிருந்தன. பண்டைக்காலத் தில் எபேசு நகரம் அர்தெமிசின் கோவிலுக் கும் வழிபாட்டுக்கும் மட்டுமன்று மந்திர வாதிகளுக்கும் பெயர் பெற்ற இடமாகும் (அ.ப. 19:19). பவுல் தமது இரண்டாவது பயணத்தில் கொரிந்திலிருந்து எருசலேமிற் குச் செல்கின்ற வழியில் முதன் முறையாக எபேசில் நற்செய்தியைப் பரப்புகின்றார் (அ.ப.18:18 தொ). அங்கு, அவர் செபக்கூடத் தில் போதித்துவிட்டுக் கொஞ்ச காலம் அந் நகரில் தங்கியிருந்தார். பவுல் எபேசை விட் டுச் சென்றபின் அப்பொல்லோ கிறிஸ்துவத் தில் முழுமையாகப் பயிற்சி பெற்றிராவிட் டாலும் கிறிஸ்தவத்தைப் பற்றி எபேசில் போதித்தார். பின் ஆக்கிலாவும், பிரிசிக்கிலா வும் இறைவனின் அருள் நெறியை அப் பொல்லோவுக்குக் கற்பித்ததால் அவர் கொரிந்திற்குச் செல்கிறார் (அ.ப.18:24 தொ). மீண்டும் பவுல் தமது மூன்றாவது பயணத் தில் எபேசு நகரை அடைந்து அங்கு அவர் செபக்கூடத்தில் போதிக்கும்பொழுது, அவ ரது போதனைக்கு எதிர்ப்பு அதிகம் இருந்த தால் அவ்விடத்தை விட்டு அகன்று திரன் னுஸ் என்பவரின் கல்விக் கூடத்தில் நாள் தோறும் போதித்து வந்தார் (அ.ப.19:1 தொ).

எபேசு நகரில் திருமுழுக்கு யோவானின் சீடர்கள் சிலரைக் கண்டார். மேலும் அந்நக ரில் வெள்ளியினால் தியானா தேவதையின் கோயிலைப் போன்ற சிறிய படிவங்களைச் செய்யும் தெமேத்திரியுஸ் என்னும் பொற் கொல்லனால் குழப்பம் உருவாக்கப்பட் டது. இதனால் பவுல் அந்நகரைவிட்டுச் செல்கிறார். இதன்பின் பவுல் எபேசிற்குச் சென்றதாகக் குறிப்புக்களில்லை. பவுல் தமது மூன்றாவது பயணத்தின் இறுதியில் மிலேத்தில் பிரியாவிடை உரை நிகழ்த்தும் பொழுது எபேசு நகர மூப்பர்களை வர வழைத்தார் (அ.ப.20:17). எபேசில் கொடிய விலங்குகளோடு போராடியதாகப் பவுல் கூறுவதை அவர் தமது எதிர்ப்பாளர்களை எதிர்த்துப் போராடியதற்கு உருவகமாக எடுத்துக் கொள்ள வேண்டும் (1 கொரி 15:32). கொரிந்தியருக்கு எழுதிய முதல் திரு முகம் இங்குதான் எழுதப்பட்டது (15:32; 16:18). கலாத்தியருக்கு எழுதிய திருமுகமும் இங்கு எழுதப்பட்டிருக்கலாம். திருவெளிப் பாட்டின் தொடக்கத்தில் கூறப்பட்டிருக்கும் ஆசியாவின் ஏழு சபைகளில் எபேசு சபை யும் ஒன்றாகும் (திருவெளி 2:1 தொ). இந்தச் சபையானது அது கொண்டிருந்த மரபுக் கோட்பாடுகளுக்காகவும், விசுவாசத்தைப் பேணிக்காத்ததற்காகவும் புகழப்பட்டது; ஆனால் எபேசு சபையின் அன்புச் செயல் களெல்லாம் அவர்களுக்குள்ளே முடங்கி விட்டதற்காக எச்சரிக்கை செய்யப்பட்டது; அதாவது கண்டிக்கப்பட்டது.

எபூசு (JEBUS)

தாவீது எருசலேமைக் கைப்பற்றுவதற்கு முன் எருசலேமை ஆண்ட கானானிய குலத் தின் பெயர் எபூசியர்கள் என்பதாகும் (யோசு 18:16,28). இது ஓர் இனத்தை அல்லது நாட் டைக் குறிக்கும் பெயராகும். நீதி 19:10-11-இல் ''எருசலேம் என்னும் மறுபெயர் கொண்டிருந்த எபூசு'' என்று அழைக்கப்பட் டது. ஏனெனில் எபூசியர் அங்கே வாழ்ந்து வந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. இதி லிருந்து, எபூசு என்பது எருசலேமின் பழைய பெயர் அல்ல. மாறாக, எபூசு என்பது அங்கு வாழ்ந்த இனத்தினரின் பெயரிலிருந்து உரு வானது என்பது தெளிவாகிறது. எருசலேம் என்ற பெயர் எபிரேயர்கள் பாலஸ்தீன் நாட்

டிற்கு வருவதற்கு முன்பே இருந்தது என்பதை அறியாத பிற்கால விவிலிய ஆசிரியர்கள் அந்நகருக்கு எபூசு என்று பெயர் சூட்டியிருக்கலாம். பெயர் பிற இனத்தோற்ற முடையது. யோசு.18:28-இல் ''எபூசியர்களின் நகரம்'' என்று மொழி பெயர்க்கப்பட வேண்டும். பெயரின் சொல்லிலக்கணம் தெரியவில்லை.

ஆதி.10:16-இல் கானானிடமிருந்து தோன்றிய மற்ற வம்சங்களோடு எமோரியர்களைப் போன்று எபூசியரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆகவே, யோசிப்பசு எபூசியரைக் கானானியர்களோடு சேர்த்துக் கூறுகிறார். ஆதி 15:21-இல் எமோரியர், கானானியர், கிருகாசியர் ஆகியோருடன் எபூசியரும் சேர்க்கப்பட்டுள்ளனர். யோசுவாவுக்கு எதிராக ஒன்று சேர்ந்து வந்த எமோரிய அரசர்களில் அதோனிசதேக்கு என்ற எருசலேமின் அரசரும் (எபூசியர்) ஒருவர் (யோசு 10:5). எபூசியர்கள் கானானியர்களோடு இணைக்கப்பட்டிருப்பது அவர்கள் வாழ்ந்த நில அமைப்பின் காரணமாகத்தான். ஏனெனில் எமோரியர்களும் அவர்களது உறவினர்களும் பாலஸ்தீன நாட்டின் மலைப்பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். அவர்களைச் சுற்றி மத்திய தரைக்கடல் பகுதியிலும் யோர்தான் பள்ளத்தாக்கிலும் கானானியர்கள் வாழ்ந்து வந்தனர் (எண் 13:29).

கானான் நாடு பிரித்துக் கொடுக்கப்பட்ட போது எபூசியர்கள் வாழ்ந்த நகரமான எருசலேம் பென்யாமின் குலத்தாருக்குக் கொடுக்கப்பட்டது (யோசு 18:28). யூதாவுக்கும் பென்யாமின் குலத்தாருக்கும் இடையே உள்ள எல்லை இன்னோம் பள்ளத்தாக்கு வழியே போய், எபூசியர் நாட்டிற்குத் தெற்கே சென்று எருசலேம் நகரை அடைந்தது (யோசு 15:8; 18:16). எருசலேமில் குடியிருந்த எபூசியரை யூதா புதல்வர் அழித்தொழிக்க முடியாது போயிற்று. ஆகையால், எபூசியர் யூதா புதல்வரோடு வாழ்ந்து வந்தனர் (யோசு 15:63). இங்கு எருசலேம் யூதா குலத்தாரோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் யூதா நாட்டிற்கு எருசலேம் தலைநகராகும் என்பதை இது குறிக்கலாம். நீதிபதிகள் காலத்தில் எருசலேம், எபிரேயர்களின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிருந்தது. ஆதலால்தான் எப்பிராயிம் மலை லேவியன் ஒருவன் பெத்லகேமுக்குச் செல்லும் வழியில் 'புறவினத்தாரின் நகரான' எருசலேமில் தங்க மறுத்தான் (நீதி 19:10-12).

தாவீது தமது தலைநகரை அமைக்க விரும்பியபோது, இஸ்ராயேலுக்கோ யூதாவுக்கோ சேராத ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார். தாவீது சீயோன் அரணைக் கைப்பற்றிய போது எபூசியர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்றது (2 சாமு 5:6-7; 1 நாள் 11:4-6). தாவீது எருசலேமைத் தமது தலைநகராக ஏற்படுத்தி விட்டு, எபூசியரான அரவுனா அல்லது ஓரினான் என்பவரிடமிருந்து மலைமேல் அமைந்த களம் ஒன்றை வாங்கினார். இந்த இடத்தில் உடன்படிக்கைப் பேழையை நிலையாக வைப்பதற்கு ஓர் ஆலயம் கட்டத் திட்டமிட்டிருந்தார் (2 சாமு 24:18-25; 1 நாள் 21:15.18:28). இது இன்னும் எபூசியர் எருசலேமில் இருந்தனர் என்பதைச் சுட்டுகிறது. பின்பு சாலமோன் ஆட்சியில் இவர்கள் கப்பம் கட்டினர் (1 அரச 9:20.20-21).

எப்பசு-தம்மிம் (EPHES-DAMMIM இரத்த எல்லை)

பெலிஸ்தியர் மறுபடியும் போருக்குப் படைகளைத் திரட்டிக் கொண்டு யூதாவினுடைய சோக்கோவுக்கும் அசக்காவுக்கும் நடுவில் பாசறை அமைத்த இடம். தாவீது பெலிஸ்திய வீரன் கோலியாத்தைக் கொன்றதும் நிறைவுற்ற போர் இது (1 சாமு 17:1). இதற்கு மற்றொரு பெயர் பசி-தம்மிம் ஆகும் (1 நாள் 11:13). இரண்டும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

''இரத்த எல்லை'' என்ற பொருளுடைய எப்பசு-தம்மிம் என்ற பெயர் அவ்விடத்திலுள்ள சிவப்பு மண்ணிலிருந்து வந்திருக்கலாம். இவ்விடத்திற்கு, சோக்கோவுக்கு வடகிழக்கில் 6.5 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத் தமூனை அடையாளம் காட்டுவர்.

எப்பத்தா (EPHPHATHA - திறக்கப்பட்டு)

செவிடனுக்குக் குணமளித்தபோது, இயேசு சொன்னதாகச் சொல்லப்படும் அராமேய சொல்லின் எழுத்துப் பெயர்ப்பு. இந்தச் சொல்லை ''திறக்கப்படு'' என்று மாற்கு மொழி பெயர்க்கின்றார். தொடர்ந்து அவன் காதுகள் ''திறக்கப்பட்டன'', நாவின் கட்டு 'அவிழ்ந்தது' என்று கூறுகின்றார் (மாற் 7:34-35).

இயேசு பயன்படுத்திய உண்மையான சொற்களைப் பாதுகாப்பதில் மாற்கு அக்கறை காட்டியதாகத் தெரிகிறது. இச்சொல் எந்த மந்திரவாய்பாட்டையும் உணர்த்தவில்லை.

எப்பப்பிரா (EPAPHRAS - கவர்ச்சியான, அழகான)

பவுலின் அன்புள்ள உடன் ஊழியரும், கிறிஸ்துவின் விசுவாசமுள்ள பணியாளரும் ஆவர்; கோலோசையில் வாழ்ந்தவர் (கொலோ 4:12). பவுல் சார்பில் அவர்களிடையே (கொலோசேயரிடையே) பணி செய்தவர். தேவ ஆவியினால் கொலோசேயர்களிடம் உண்டான அன்பைப் பற்றி பவுலிடம் எடுத்துச் சொன்னவர் இவ்ரே.

இவருடைய சொந்த ஊர் கொலோசை (கொலே 4:12) நகரம். இவர் வழியாகவே ஆண்டவருடைய நற்செய்தியை அந்த மக்கள் அறிந்து கொண்டனர் (1:7). அங்குள்ள திருச்சபையை நிறுவியவராக இருக்கலாம். எப்பப்பிரா, எப்பப்பிராதித்து என்ற பெயரின் சுருக்கமானாலும், இவரையும் எப்பப்பிராதித்தையும் (பிலி 2:25; 4:18) ஒன்று என்று குழப்பக் கூடாது. எப்பப்பிராதித்து பிலிப்பை நகரத்தைச் சார்ந்தவர்.

எப்பப்பிரா கொலோசையிலும், அதற்கு அருகில் உள்ள இலவோதிக்கயாவிலும், எராப்பொலியிலும் நற்செய்தியை அறிவித்தவர் (கொலோ 4:12-13). கொலோசைய மக்கள் மேலும், இலவோதிக்கயா, ஏராப்பொலி மக்கள் மேலும் அவர் காட்டிய ஆர்வத்தைப் பவுல் பாராட்டுகிறார். பவுலின் முதல் உரோமைச் சிறைவாசத்தின்போது எப்பப்பிரா அவரைப் பார்க்கச் சென்று, கோலோசையில் அக்கால நிலையையும் விசுவாசிகள் கிறிஸ்துவில் கொண்டிருந்த விசுவாசத்தையும் ஒருவர்க்கொருவர் காட்டிய அன்பையும் பற்றிப்பவுலுக்கு எடுத்துக் கூறினார் (1:4-8). பில 23-இல் எப்பப்பிரா பவுலின் உடன் கைதியாகக் குறிக்கப்படுகிறார். ஆனால், இந்தச் சிறைவாசம் பற்றி வேறுசெய்தி கிடைக்கவில்லை. அவர் மற்ற இடங்களில் இருந்த போதும், அவர் கொலோசையர்பால் காட்டிய ஆர்வம் குறையவில்லை. ஏனெனில் இரு சமயங்களில் அப்போஸ்தலர் வழியாக அவர்களுக்கு வாழ்த்து அனுப்புகிறார் (கொலோ 4:12; பில 23). இவரது பிரமாணிக்கமும், ஆற்றலும் மிக்க பணிக்காக ஆழ்ந்த நன்றியுணர்வோடு பவுல் இவரை ''அன்புள்ள உடன் ஊழியர்'' என்றும் ''கிறிஸ்துவின் விசுவாசமுள்ள பணியாளர்'' என்றும் (1:7) பாராட்டுகிறார்.

எப்பப்பிராதித்து (EPAPHRODITUS - கவர்ச்சியான, அழகான)

பவுலின் நண்பரும் உடன் ஊழியருமாவார். பவுல் சிறையில் இருக்கும்பொழுது அவரது தேவைகளில் அவருக்குத்துணை செய்யும்படி பிலிப்பியர்களால் அனுப்பப்பட்டவர் (பிலி 2:25). பிலிப்பை நகரத்தைச் சார்ந்தவர். பிலிப்பை நகரத் திருச்சபைக்குத் தலைவராக இருந்து பணிபுரிந்தவர். பவுல் சிறையில் நோயுற்றிருந்தபொழுது பிலிப்பை நகர மக்களின் நன்கொடைகளையும் வாங்கிக் கொண்டு, அவரோடு தங்கி, உதவி புரிய அங்குச் சென்றார். அவர் பணி செய்துவரும்போது அவரும் நோய் வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்தார் (2:30). பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் இந்த எப்பப்பிராதித்தை ''ஆண்டவர் பெயரால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுங்கள்; மதிப்புக் கொடுங்கள்'' என்று எழுதுகிறார்.

எப்பப்பிராதித்தின் சுருக்கமான பெயரே எப்பப்பிரா என்றாலும் இருவரும் வேறு வேறு மனிதர்கள். பில 23; கொலோ 4:12-இலும் சொல்லப்பட்ட எப்பப்பிராவும்,

பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் உள்ள எப்பப்பிராதித்தும் வேறுபட்டவர்கள். எப்பப்பிரா கொலோசைய, இலவோதிக்கயா, எராப்பொலி ஆகிய சபைகளில் பணி செய்தவர். எப்பப்பிராதித்து பிலிப்பியர்களிடம் பணி செய்தவர். இருவரும் நிச்சயமாக ஒருவராக இருந்திருக்க முடியாது.

எப்பிக்கூரர் (EPICUREANS)

எப்பிக்கூரஸ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட தத்துவ இயல் பள்ளியிலே பயின்று எப்பிக்கூரசைப் பின்பற்றும் ஆதரவாளர்கள். எப்பிக்கூரஸ் கி.பி: 341-இல் சாமோஸ் தீவில் ஏதன்சிய பெற்றோர்களுக்குப் பிறந்தவர். கி.மு. 270-இல் ஏத்தன்சிலேயே இறந்தார். கி.மு. 322-இல் குறிப்பிட்ட கால இராணுவப் பயிற்சியை ஏதன்சில் முடித்த பிறகு, அவரும் அவருடைய குடும்பமும் சாமோஸ் தீவைவிட்டு நாடு கடத்தப்பட்டுக் கொலோபோனில் அகதிகளாக ஏழ்மையில் அடிபட வேண்டியிருந்தது. இங்கேதான் வாழ்வின் துன்பங்களில் வாடிக்கொண்டிருந்தபோதிலும் அவருடைய தத்துவத்தை உருவாக்கினார். முக்கியமாக, கடவுளர் பயம், மனிதன் துன்பம், சாவு போன்றவைகளின் பயங்களிலிருந்து மீண்டு மகிழ்ச்சிக்குச் செல்லும் வழியாக அவருடைய கொள்கையை வகுத்துக் கொண்டார். கி.மு. 310-இல் மித்திலேனேயில் அவருடைய முதல் பள்ளியைத் திறந்தார். ஆனால் சிறிது காலத்திற்குள்ளாகவே மார்மோரா கடல் கரையிலே 'லாம்சாக்குஸ்' என்ற இடத்திற்கு மாற்றிவிட்டார். அங்கேதான் சாகும்வரை அவரோடிருந்த பல சீடர்களைக் கவர்ந்திழுக்க முடிந்தது. கி.மு. 306-இல் அவருடைய நண்பர்களும் ஆதரவாளர்களும் சேர்ந்து அவருக்குத் தோட்டத்தோடு சேர்ந்த ஒரு வீட்டை ஏதன்சு நகரிலே வாங்கினார்கள். இந்தத் தோட்டம் தான் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றின சீடர்கள் கூடும் மையமாக விளங்கியது. அவர்களுக்கு நட்பின் புகலிடமாக விளங்கியது. அவருடையபோதனை கிரேக்க உலகம் முழுவதிலும் அதற்கு மேலும் பரவியது. உண்மையில் உரோமானிய லுக்ரெசியஸ் (கி.மு. 99-55) என்ற கவிஞனின் பாடல்களில் அவருடைய தத்துவம் நன்றாக விளக்கப்படுகிறது.

எப்பிக்கூரசின் தத்துவம் ஒழுக்கவியல் பாடமாகும். அறிவுவாத முறை இயல் சிறுபிள்ளைத்தனமாக அமைந்திருக்கிறது. அதாவது புலன் உணர்வுகளின் ஆழத்தைப் பொறுத்து அமைந்திருக்கிறது. அரசியல் கொள்கை பற்றிய ஆர்வம் அவரிடம் இல்லை. அவருடைய அணுக்களைப் பற்றிய கோட்பாடு 'கடவுளர்களின் செயலே தேவையற்ற ஒரு உலகத்தை' விளக்கிக் காட்டுவதாக மட்டும் அமைந்திருக்கிறது. ஏனென்றால் கடவுள்கள், தேவதைகள், பூதங்கள், வழிபாடு, பலி கொடுத்தல், மறைபொருளைத் தேடுதல், அசரீரி, மாய மந்திரம், நட்சத்திர பலன், வரப்போகும் வாழ்வைப் பற்றிய அச்சங்கள், நம்பிக்கைகள், சுருக்கமாக மதத் தொடர்புடைய எதுவுமே அவருடைய மெய்விளக்கக் கோட்பாட்டு முறையிலே இடம் பெறவில்லை. மதமே பெரிய பகைவன், நேர்மைக்குக்கேடான செயல்களைத் தோற்றுவிப்பதும் தேவையற்ற பயங்களை உருவாக்குவதுமாகும்.

எப்பிக்கூரசின் கருத்துப்படி வாழ்வின் குறிக்கோள் மகிழ்ச்சி அல்லது பேரின்பம். அதை அடைய முதலில் கடவுள்கள் பற்றிய பயத்தைக் கைவிடவேண்டும். இவ்வுலகப் பொருள்களின் இயற்கைத்தன்மையைப் புலன்களால் உணர்ந்த மனிதனிடம் இந்தப் பயம் அறவே நீங்கிவிடுகிறது. இந்த உணர்ந்தறிவே பேரின்பம் ஆகும். லுக்ரெசியசின் பெரும் காவியம் மனிதர்களுக்கு அவர் கொண்டுவரும் கோட்பாட்டின் ஆழமும் அருமையும் என்ன என்பதை எடுத்துக்காட்டுகிறது. தெமாக்ரிட்டசின் ஒரு நூற்றாண்டுக்கு முந்தை கோட்பாட்டிலிருந்துதான் தன் 'அணுக்கள் பற்றிய கோட்பாட்டை'' உருவாக்கினார். ஆனால் ஒரு விதமான இயல் உயிர்வாதத்தோடு இணைத்துத் தன் பாணியில் உருவாக்கினார். அணுக்கள் முடிவில்லாத சுற்றோட்டத்தைத் தன்னுள் கொண்டிருக்கின்றன. இதுதான், தாவரங்கள், மிருகங்கள், மற்றும் மனிதர்களுக்குப் பல தோற்ற

உருவங்களை அளித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கு எந்த ஒரு தெய்வீக உதவியும் தேவையில்லை. எதிர்காலம் எந்த வகையிலும் தீர்மானிக்கப்படவில்லை. எந்த வகையிலும் மனிதர்கள் தங்கள் சக்திக்கு மேல் எந்தச் சக்திக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும் பொம்மைகள் அல்லர். உடலைப்போல ஆன்மாவும் அணுக்களால் ஆன ஒன்று. பேரின்பத்தைத் தரும் வாக்குறுதி கொடுப்பதாக இருந்தாலும் சரி, தண்டனைகளைச் சொல்லிப் பயமுறுத்துவதாக இருந்தாலும் சரி வாழ்வின் கோட்பாடுகள் அனைத்தும் பொருளற்றவைகள். புனித பவுல் இறந்தோரின் உயிர்ப்பைப் பற்றி ஏதன்சில் பேசின போது, எப்பிக்கூரசின் ஆதரவாளர்கள் அவரைக் கேலி செய்திருப்பார்கள். ''நாளை இது பற்றிப் பேசும்'' என்று உரைத்தவர்கள் எப்பிக்கூரசின் ஆதரவாளர்களாக இருக்க முடியாது (அ.ப. 17:32).

எப்பிக்கூரஸ் குறிப்பிடும் மகிழ்ச்சி, முறையில் இன்பங்களை மிகுதியாக நுகர்வதால் அல்ல. அவரும் அவருடைய ஆதரவாளர்களும் திருமணத்தை ஒதுக்கி வாழ்ந்தார்கள். இறைச்சி, மது இரண்டையும் தொடவில்லை. உடல் உறவினால் நன்மையை விட, தீமைதான் அதிகமாக இருக்கிறது என்று கருதினர். நட்புதான் பெரிய மகிழ்ச்சி. அதாவது 'கிறிஸ்தவ அன்பும்' எப்பிக்கூரசின் கோட்பாடு கூறும் நட்பும் ஏறக்குறைய ஒன்றுதான்.

எப்பிக்கூரசின் மெய்யியில் கோட்பாடு இயலுக்கு வரலாறு கிடையாது. அவருடைய போதனைகள் எந்த ஏற்றத்தாழ்வும் இல்லாமல் கூட்டிக் குறைக்கப்பட முடியாத கோட்பாடாகப் பல நூற்றாண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

எப்பிராத்தா (EPHRATHAH - பலனுள்ள) - ஆள்

எப்பிராத்தா காலேபின் இரண்டாம் மனைவி; கூர், அசூர் ' ஆகியோரின் தாய் (1 நாள் 2:19.24.50; 4:4). பெத்திலகேமுக்கு எப்பிராத்தா மறுபெயராக விளங்குவதால் இத்திருமணம் கலேபியர் வடப்பக்கம் சென்றதன் நினைவைப் பாதுகாத்து அமைந்துள்ளது.

எப்பிராத்தா (EPHRATHAH - பலனுள்ள) - இடம்

1. யூதா நாட்டு நகரம் பெத்திலகேமும் எப்பிராத்தாவும் ஒன்று என்று கருதப்படுகிறது. இருப்பினும் தாவீதின் குடும்பத்தாரை எப்பிராத்தாவைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடுவதால் இரண்டு நகரங்களும் ஒன்றல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. இது முற்காலக் குடியிருப்பாகும். எப்பிராத்தா பிற்காலத்தில் பெத்திலேகேமோடு ஒன்றாக இணைந்துவிட்டது. முற்பிதாக்களின் காலத்தில் அது தனி நகரமாகத்தான் இருந்தது. ஏனென்றால், இராக்கேல் அங்குதான் வழியில் இறந்தாள் (ஆதி 35:19). ஒரே ஓர் இடத்தில் ''பெத்திலகேம்-எப்பிராத்தா'' என்று இரு பெயர்களும் இணைந்த கூட்டுக் கலவையாகக் காணப்படுகின்றன (மீக் 5:2). அருகிலுள்ள முகமதிய கல்லறைக்கூடம், பெத்திலகேமுக்குச் செல்லும் வழியிலுள்ள இராக்கேலின் கல்லறையைப் பற்றிய பாரம்பரியத்தைக் காத்து நிற்கிறது. பென்யாமின் பகுதியில் செலிசாவுக்கு அருகிலுள்ள இராக்கேலின் கல்லறை பற்றிய குறிப்பு (1 சாமு 10:2), எப்பிராத்தா எருசலேமுக்கு வடக்கில் ராமாவுக்கு அருகில் (காண்க.எரே 31:15) உண்மையில் இருக்க வேண்டும் என்று சுட்டுகிறது.

2. பாலஸ்தீனத்தில் உள்ள மாவட்டம், பழைய எப்பிராயிம் கோத்திரத்தாரின் குடியிருப்பாகத்தான் தோன்றுகிறது (சங் 132:6).

எப்பிராத்தியர் (EPHRATHITE)

எப்பிராத்தா நகரைச் சேர்ந்த ஓர் ஆள். ஓர் இனப்பெயர் (ரூத் 1.2; 1 சாமு 17:12).

எப்பிராத்து (EPHRATH)

காலேபின் இரண்டாம் மனைவி. கூர், அசூர்-ஆகியோரின் தாய் (1 நாள் 2:19). இவளது மற்றொரு பெயர் எப்பிராத்தா என்பதாகும் (1 நாள் 2:24; 4:4).

எப்பிராயீமிர் (EPHRAIMITE)

எப்பிராயீம் கோத்திரத்தைச் சார்ந்தவர் (நீதி 12:5; 1 சாமு 1:1; 1 அர. 11:26).

எப்பிராயீம் (EPHRAIM - பலனுள்ளதாக இரு, பலுகிப் பெருகு) - ஆள்

எப்பிராயீம் என்பவர் யோசேப்பின் இரண்டாவது மகன். அதே பெயருடைய குடும்பப் பெயர் மூதாதையர். பிற்காலத்தில் இப்பெயர் இஸ்ராயேலைக் குறித்தது (ஆதி 41:52; 46:20). யாக்கோபு தலைப்பிள்ளைக்கு உரித்தான ஆசீரை எப்பிராயீமுக்கு அளித்து அவரை அவரது சகோதரன் மனாசேயுடன் சேர்த்துச் சுவிகாரம் செய்து கொள்கிறார் (ஆதி 48:17-20). இப்பெயர் இஸ்ராயேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தின் பெயராக இருக்கிறது. அந்தக் கோத்திரம் யாக்கோபின் ஆசீரில் குறிப்பிடப்படவில்லை (ஆதி 49). ஆனால் மோசேயால் யோசேப்பு ஆசீர்வதிக்கப்படும்பொழுது மனாசேயுடன், எப்பிராயீமின் பெயரும் சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளது (உப 33:17). யோசேப்பின் குடும்பத்தில் எப்பிராயீமும், மனாசேயும் உள்ளடங்குவர். முதன் முதலில் எப்பிராயீம் ஓர் இடத்தின் பெயராக இருந்தது. பின் இஸ்ராயேலர் அவ்விடத்தில் குடியேறியவர்கள், அப்பெயரைத் தங்களுடையதாக்கிக் கொண்டனர் என்றும் இருக்கலாம். அப்படியாயின் யாக்கோபின் கதையானது எப்பிராயீமின் முதன்மையையும், யோசேப்பின் குல இடப் பிரிவினையையும் காட்ட, கற்பனை மிகுந்த விளக்கமாக இருக்கலாம். எண்ணாகமத்தில் கணக்கெடுப்புப்படி எப்பிரா்யிமின் புதல்வர்களாக 40,500 பேரும் (1:33), 32,500 பேர் என்றும் (26:37) கூறப்பட்டுள்ளது. எப்பிராயீமின் வம்சங்கள் பற்றி எண் 26:35-27-இலும் 1 நாள் 7:20-27-இலும் கூறப்பட்டுள்ளது.

பெத்தேல், நாரான், கெசேர், செக்கேம், ஆசா, பேத்துசான், தானாக், மெகிதோ, தோர் போன்றவை எபிராயீமின் நகரங்கள் அல்லது ஊர்களாகும் (1 நாள் 7:28). யோசு 16:4-10-இல் எப்பிராயீமின் எல்லைப்பகுதிகளாகக் கூறப்பட்டிருப்பவை 1 நாள் 7:28-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதிகளை விடச் சிறிய பகுதியையே குறிக்கிறது. எப்பிராயீம் வடபுறத்தில் மனாசேயைப் பாதிக்கும் விதத்தில் தனது எல்லைப்பகுதியை விரிவுபடுத்தியது. பழைய வரலாற்று நூல்களில் எப்பிராயீம் இஸ்ராயேல் கோத்திரங்களிலே மிகப் பெரிய, வலிமைமிக்க கோத்திரமாகத் தோன்றுகிறது. மேலும் எல்லைப்பகுதிகளைப் பெருக்க வேண்டும் என்று மனாசேயும், எப்பிராயீமும் மறைமுகமாக ஆவல் காட்டியதால் அவர்கள் தங்கள் சகோதரர்களாகிய இஸ்ராயேலர்களின் நிலங்களை அபகரிக்காமல், கானானியப் பகுதிகளையும், குடியேற்றப்படாத பகுதிகளையும் அவர்கள் பகுதியாக உரிமையாக்கிக் கொள்ளலாம் என்று யோசுவா நூலில் கூறப்பட்டுள்ளது (யோசு 17:14-18).

நீதிபதிகளின் காலத்தில் எப்பிராயீமுக்கும், மற்றக் கோத்திரங்களுக்குமிடையில் வழக்குகள் குறிக்கப்படுகின்றன. கிதயோனின் தலைமையில் மனாசேயோடும் (நீதி 7:24-8:3) இபிதா தலைமையில் கிலயாத்தோடும் (நீதி 12:1-6) வழக்குகள் எழுந்தன. பின்னது இரத்தக் களரியாக மாறிற்று. இப்போரில் எப்பிராயீமியர் தோற்கடிக்கப்படுகின்றனர். முதலாம் எரொபயாம் எப்பிராயீமைச் சேர்ந்தவர். அரசின் பிளவு, எப்பிராயீமின் மிகப்பெரிய நகரமாகிய செக்கேமில் நிறைவேற்றப்பட்டது.

வடநாட்டு அரசு முழுவதும் இறைவாக்கினர்களால், சிறப்பாக ஏசயா, எரேமியா, எசக்கியேல், ஓசேயா போன்றவர்களால், எப்பிராயீம் என்ற பெயர் சிறப்புப்பெயராகப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதின் மூலம் எப்பிராயீமின் முக்கியத்துவம் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது. எப்பிராயீமின் மொழியானது தனித்தன்மைமிக்க பேச்சு வழக்கைச் சார்ந்த கூறுகளைக் கொண்டிருந்தது என்பதை 'ஷிபோலெத்' (நீதி 12:6) என்ற கதை எடுத்துக்காட்டுகிறது.

யோசுவா, நீதிபதிகள், சாமுவேல், அரசர்கள் நூல்களில் இடம்பெறும் எப்பிராயீமின் மலைநாடு என்பது வடக்கே செக்கேமிலி

ருந்து தெற்கே பெத்தேல்வரை செல்லும் மத்திய மலைத்தொடரைக் குறிக்கிறது. எருசலேமிலுள்ள எப்பிராயிம் வாயில் என்பது எருசலேம் மதில்சுவரின் வடக்கில் உள்ள வாயிலாகும். எப்பிராயிமை நோக்கி இருப்பதால் அவ்வாறு அழைக்கப்படுகின்றது (2 அரச 14:13; 2 நாள் 25:23; நெக 8:16; 12:39).

எப்பிராயிம் (EPHRAIM - பலுகிப் பெருகு) - இடம்

பாகால்-காசோருக்கு அருகிலுள்ள ஒரு நகரம். இது அபிசலோம் தன் தங்கை தாமாரைக் கற்பழித்த ஒன்றுவிட்ட சகோதரன் அம்னோனைக் கொல்லத் திட்டம் தீட்டிய இடமாகும் (2 சாமு 13:23). 2 நாள் 13:19-இல் குறிக்கப்படும் எபரோனும் யோசு 18:23; 1 சாமு 13:17-இல் குறிக்கப்படும் ஒபிராவும், இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் செல்வாக்கைக் கண்டு அஞ்சிய யூதத் தலைவர்கள் அவரைக் கொலை செய்ய முடிவு செய்ததால், ஒருவேளை இங்குதான் இயேசு தன் சீடர்களுடன் தங்கியிருந்திருக்கக்கூடும் (யோவா 11:54). இந்த இடம் எருசலேமுக்கு வட-வடகிழக்கில் 21 கி.மீ. தொலைவிலுள்ள எத்-தையிபேயாக அடையாளம் காட்டப்படுகிறது.

எப்பிராயிம் காடு (FOREST OF EPHRAIM)

யோர்தானுக்குக் கிழக்குப் புறத்தில் பரவிக்கிடக்கும் மரங்களடர்ந்த எப்பிராயிமின் காட்டில்தான் அபிசலோம் கலகம் செய்த போது யோவாபின் தலைமையில் அனுப்பப்பட்ட படை அபிசலோமைத் தோற்கடித்தது. மரத்தின் கிளைகளில் தலைமுடி சிக்கிக் கொள்ள யோவாபு அபிசலோமை ஈட்டியால் குத்திக் கொன்றது இதே காட்டில்தான் (2 சாமு 8:6-17). தன் மகனுக்குத் தப்பியோடிய தாவீது அரசன், போருக்குமுன் மகனாயிமில் தஞ்சம் புகுந்திருந்ததால் (17:27) இக்காடு யாபோக்கு ஆற்றுக்கு அருகில் இருந்திருக்க வேண்டும்.

கானான் நாட்டை வெற்றி கொண்ட போது எப்பிராயிம் இனம் யோர்தான் நதிக்கு மேற்காகத் தன் சொத்துடைமைப் பகுதியைப் பெற்றது (யோசு 16:1-10). அதிக இடம் பெற ஆர்வம் கொண்டு (காண்க 17:14-18) எப்பிராயிமியரில் சிலர் ஆற்றைக் கடந்து கிலயாத்தில் குடியேறி அங்கு வாழ்ந்திருக்க வேண்டும் (நீதி 12:4). மற்றொரு கருத்துப்படி, எப்பிராயிமுக்கு யோர்தானுக்குக் கிழக்கில் நிலம் பங்கீடு செய்யப்பட்டிருக்கலாம் . இவர்களை இப்தா தோற்கடித்த பின் (12:2-6) இதைக் கிலயாத்திடம் இழந்தனர்.

எப்பிராயிம் வாயில் (EPHRAIM GATE)

எருசலேம் பழைய மதிற்சுவரின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஒரு வாயிலாகும். இங்கிருந்து செக்கேம் மற்றும் தமஸ்குவுக்குச் சாலை தொடங்கியது. யூதாவின் அரசன் அமசியா காலத்தில்.(கி.மு. 800) எப்பிராயிம் வாயில் மூலைவாயிலுக்குக் கிழக்கில் நானூறு முழ நீளம் தள்ளி இருந்தது (2 அர 14:13; 2 நாள் 25:23). நெகமியாவால் இரண்டாம் முறைகட்டப்பட்ட மதிற்சுவரிலும், தொடர்ந்து இந்த வாயிலுக்கு அதே ''எப்பிராயிம் வாயில்'' என்று நெகமியாவால் பெயர் சூட்டப்பட்டது (நெக 12:39). இங்கே நாடுகடத்தப்பட்டுத்திரும்பியவர்கள் கூடார விழாவைக் கொண்டாடினர் (8:6). திரும்பக் கட்டப்பட்ட எருசலேமின் சுவர்கள் அர்ப்பணிக்கப்பட்டபோது லேவியர்களின் இரண்டாவது குழு இங்கிருந்துதான் காவலர் வாயிலை நோக்கிச் சென்றது (12:39).

இந்த வாயில், மீன் வாயில், கென்னாத் அல்லது தோட்டா வாயில், நடுவாயில் (எரே 39:12) என்று பலவாறு அடையாளம் காட்டப்படுகிறது.

எப்பிராயிம் மலைநாடு (HILL COUNTRY OF EPHRAIM)

எப்பிராயிம் பகுதியில், யோர்தானுக்கு மேற்கேயுள்ள மத்திய மலைத் தொடருக்கு மேற்குப் பகுதியாகும் (யோசு 17:15). ஒருவேளை, சமாரிய மலைகளுக்கு மற்றொரு பெயராக இருக்கலாம் (எரே 31:5-6). திராட்சைத் தோட்டங்களுக்கும், ஒலிவ, அத்தி

மரங்கள் பயிரிடுவதற்கும் ஏற்ற செழிப்பான பகுதியாகும். இப்பகுதியில்தான் தெபோர இஸ்ராயேலுக்கு நீதி வழங்கினாள் (நீதி 4:5); சாமுவேலின் தந்தை, எல்கானா குடியிருந் தார் (1 சாமு 1:1).

எப்பிரேமி சீரி கையெடுத்துச்சுவடி (EPHRAERMI-SYRI CODEX)

இக்கையெழுத்துச் சுவடி கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தைச் சார்ந்ததா கும். இச்சுவடி சற்று விநோதமானது. இச் சுவடியில் முதலில், கிரேக்க மொழியில் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் எழுதப் பட்டிருந்தன. பிரதி பழைய ஏற்பாடு, எழு பது நூல் என்ற கிரேக்க விவிலியப் பிரதி. இங்குக் காணப்படும் கிரேக்க எழுத்துநடை, ஆரம்பத்தில் எழுதப்பட்ட முறையாகும். இதனைப் பன்னிருபாக எழுத்துமுறை என் பர். இம்முறைப்படி, எழுத்துக்கள் எல்லாம் பெரிய எழுத்துகளில் எழுதப்படும். சொல் லுக்குச் சொல் இடைவெளி கொடுக்கமாட் டார்கள். இந்த எழுத்து முறையுடன் எழுதப் பட்டிருந்த, இந்த விவிலியக் கைப்பிரதி அழிக்கப்பட்டுப் பிறகு அதன்மேல் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட, வேறொரு புத்தகத்தைப் படிவம் செய்தார் கள். அப்புத்தகம் எப்பிரேம் சீருஸ் என்பவர் எழுதியதன் கிரேக்க மொழிபெயர்ப்பாகும். இவ்வாறு பழைய விவிலியத்தின்மேல் புதி யது எழுதப்பட்டிருந்தாலும், பழைய எழுத்து சரியாக அழிக்கப்பட முடியாமல் பழைய விவிலிய வசனங்கள் நன்றாக வாசிக்கக் கூடிய வகையில் அமைந்திருக்கின் றன. இச்சுவடித் தொகுப்பில் முதலில் விவி லியத்தின் எல்லாப் புத்தகங்களும் இடம் பெற்றிருந்தன. ஆனால், தற்போது நமக்குக் கிடைத்திருக்கும் தாள்களில், யோபு, பழ மொழி, திருவுரை, ஞானம், சீராக், உன்னத சங்கீதம் என்ற புத்தகங்களின் ஒரு சில பகுதிகளே இடம் பெற்றிருக்கின்றன. புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தில் தெசலோனிக்கேய ருக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகம், யோவான் எழுதிய இரண்டாம் திருமுகம் இவைகளைத் தவிர, மற்ற எல்லாப் புத்தகங் களிலிருந்தும் ஒருசில பகுதிகள் இடம் பெற் றிருக்கின்றன. மூலத்தொகுப்பில் முழு விவி லியமும் அடங்கியிருந்தாலும், இப்போது உள்ளவை சில பகுதிகளே. இத்தொகுப்பில் 209 தாள்கள் அடங்கியுள்ளன. பழைய ஏற் பாடு எழுதப்பட்ட 64 தாள்களும் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட 145 தாள்களும் இதில் அடங்கும். இச்சுவடி முதலில் கீழைய நாட் டில் இருந்து வந்தது. அதனை ஜான் லாஸ் கார் என்பவர் பிளாரன்ஸ் நகருக்குக் கொண்டு வந்தார். அப்போது பிளாரன்ஸ் நகரில் லொரேன்ஸோதி மெதிசி ஆட்சி செய்து வந்தார். அவர் முயற்சியால் அவர் குடும்பத் தைச் சேர்ந்த கத்தரின் தி மெதிசி என்ற இளவரசியின் கையில் சென்று இந்தச் சுவடி சேர்ந்தது. இவள் இரண்டாம் கென்றி அர சனை மணந்துகொண்டபோது, தன்னுடன் இச்சுவடியையும் பிரான்சு நாட்டிற்குக் கொண்டு வந்தாள். அதனால் இச்சுவடி பிரான்சு நாட்டில் அரண்மனை நூலகத்தில் சுாக்கப்பட்டு வந்தது. தற்போது பாரிஸ் நகரில் உள்ள தேசிய நூலகத்தில் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

எப்புன்னே (JEPHUNNEH - அவர் (இறை வன்) திரும்புவாராக)

1. காலேபின் தந்தை (எண் 13:6; 14:6.30.38; 26:65; 32:12; 34:19; உப 1:36; 14:6.13-14; 15:13; 21:12; 1 நாள் 6:56). யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். சில இடங்களில் கெனிசியர் என்று அழைக்கப்படுகிறார் (யோசு 14:6,14; எண் 32:12; காண்க. 1 நாள் 4:15).

2. ஆசேரின் கோத்திரத்தில் உள்ள எத்தே ரின் மகன் (1 நாள் 7:38).

எப்பைனத்து (EPAENETUS புகழ்ச்சிக்குரிய)

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் பவுலிடமிருந்து வாழ்த்துப் பெறும் கிறிஸ்த வர்களுள் ஒருவர் (உரோ 16:6). ''என் அன் புக்குரியவர்'' என்றழைக்கப்படும் இவர் ஆசியா மாகாணத்தில் பவுலின் முதல் கனி யாவார். இவர் எபேசைச் சார்ந்தவராக இருக் கலாம். ஒருவேளை இவர் பிரிசிக்கா வீட் டைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம். ஆனால், பவுல் உரோமையருக்குத் தன்

திருமுகத்தை எழுதியபோது, இவர் இன்னும் எபேசிலேயே தங்கியிருந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் சிலர் நம்புகின்றனர்.

உரோ 16:6-இல் சிலவாசகங்களில் அக்காயா வருகிறது. இது 1 கொரி 16:15-இலிருந்து இங்குப் புகுந்த தவறாக இருக்கலாம்.

எமிமா (JEMIMAH சின்னப் புறா)

யோபுவிற்குச் செல்வச் சிறப்புக்களை ஆண்டவர் மீண்டும் தரும்பொழுது பிறந்த மூன்று மகள்களில் முதலாமவள் (யோபு 42:14).

எமுயேல் (JEMUEL இறைவனது நாள்)

சிமியோனின் மூத்த புதல்வன் (ஆதி 46:10; யாத் 6:15). எண் 26:12; 1 நாள் 4:24;-இல் இவர் நெமுயேல் என்றழைக்கப்படுகிறார்.

எமெக்-கெசீசு (EMEK-KEZIZ - துண்டிக்கப்பட்ட பள்ளத்தாக்கு)

பென்யாமினுக்குக் கிடைத்த பகுதிகளில் இதுவும் ஒன்று. யோர்தான் சமவெளியில் எரிகோவுக்கும் பேத்து-கொகிலாவுக்கும் அருகில் அமைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது (யோசு 18:21). ஆனால் சரியான இடம் யாருக்கும் தெரியவில்லை.

எமோரியர் (AMORITES - மேற்குத் திசையினர்)

ஒரு மேற்குச் செமித்திய மக்கள். அவர்கள் பாதுகாப்புத் தேவதையின் பெயரிலிருந்து இப்பெயர் பெற்றனர். அக்காதிய இலக்கியத்தில் இப்பெயர் அவர்கள் தோன்றியதாகக் கருதப்படும் நிலப்பரப்பையும் குறித்தது. தொடக்கத்தில் மேற்கு மெசபொத்தாமிய பாலைவனத்தையும் பிற்காலத்தில் சீரியா, பாலஸ்தீனத்தையும் குறித்தது.

கி.மு. மூன்றாம் ஆயிரமாண்டின் பிற்காலத்தில் எமோரியர்கள் பல்மைராப் பகுதியில் ஒரு நாடோடி இனமாகக் குறிக்கப்படுகின்றனர். சுமேரியர்கள் இவர்களைக் காட்டுமிராண்டிகளாகக் கருதியதாகத் தெரிகிறது. 23-21-நூற்றாண்டுகளில் இவர்களில் பெரும்பகுதியினர் வளமிக்க பிறை வடிவப்பகுதியில் புகுந்தனர். இக்காலத்தில்தான் பாபிலோனியாவின் ஊரின் மூன்றாம் அரச மரபு அழிந்தபின், இவர்கள் அங்குப் பெருங்கூட்டமாகப் புகுந்து நிலையாகக் குடியேறினர். பாபிலோனியா இவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பாபிலோனின் முதல் அரச மரபில் புகழ்பெற்ற அரசன் கமுராபீ ஆவார் (1792-1750). இவர் எமோரிய நகர நாடுகளின் கூட்டணிக்குத் தலைமை தாங்கினார். இக்கால எமோரியப் பண்பாடு பற்றி 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட அக்காதிய வாசக ஏடுகள், இக்காலத் தேல்-கரீரியில் இருந்ததாகக் கருதப்படும் யூப்பிரத்திசின் மேற்குக் கரையிலுள்ள மாரியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. 14-ஆம் நூற்றாண்டு எகிப்திய ஏடுகளும், ஆப்பு எழுத்து வாசகங்களும் வடக்கில் சீதோன் தமஸ்குவில் இருந்து அர்வாவரை பரவியிருந்த சீரியாவில் உள்ள எமோரிய அரசைக் குறிக்கின்றன. அமர்னா ஏடுகள் பல எமோரிய நகர அரசுகளைக் குறிக்கின்றன. இவை கபீரு படைகளுடன் தொடர்பு கொண்டதாகவும் குறிக்கின்றன. எமோரியர் என்ற பெயர் ஒரு நிலப்பரப்பைக் குறிக்கும் பெயராக ஏழாவது நூற்றாண்டுவரை காணப்பட்டாலும் ஓர் அரசியல் சக்தியாக, 1000-ஐ ஒட்டி அரமேயர் ஆதிக்கம் சீரிய மெசபொத்தாமியாவில் பரவியதோடு முடிந்துவிட்டது எனலாம்.

விவிலியத்தில், இஸ்ராயேலருக்குமுன் கானானில் வாழ்ந்த இனங்களில் எமோரியரும் ஓர் இனமாவர். நாடுகளின் பட்டியலில் (ஆதி 10:16) எமோரியர், கானானின் புதல்வர்களும் காமின் வழித்தோன்றல்களுமான கானானியரோடு பாகுபடுத்தப்படுகின்றனர். ஆபிரகாமின் பயணங்கள் இவர்களது குடிபெயர்தலோடு தொடர்பு படுத்தப்படுகிறது. பாலஸ்தீனத்தில், இஸ்ராயேலருக்கு முன் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தவர்களைப் பொதுவாக இப்பெயர் குறிக்கிறது (ஆதி 15:16; யோசு 24:15; நீதி 6:10; 1 அர 21:26; ஆமோ 2:9-10). குறுகிய பொருளில் கானான் மலைப் பகுதியில் வாழ்ந்தவர்களைக் குறித்தது (எண் 13:29; உபா 1:7). விவிலியத்தில்

நடு வெண்கலக் காலத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த இன, சமூக அரசியல் கலப்பு இனத்தைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு வாசகத்தில் ''உன் தந்தை எமோரின்'' என்ற வாசகம் எமோரியருக்கும், இஸ்ராயேலருக்கும் இடையேயுள்ள உறவைச் சுட்டுகிறது (எச 16:3.45). இஸ்ராயேலர் பாலஸ்தீனத்தை வென்ற போது, எமோரியர், கானானியர் ஆகிய இருவரையும் பிரித்துக் காட்டுவது முடியாத காரியமாகும். ஒரு பொருளை உணர்த்தும் இருசொற்களாகப் பயன்படுகின்றன (காண்க. ஆதி 10:16). யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள எமோரிய நகர அரசுகளின் அரசர்களாகிய கெசிபோனின் அரசனான சீகோனையும், பாசானின் அரசனான ஓகையும், இஸ்ராயேலர் தொடக்கத்தில் வென்று அழித்தது பொருள் பொதிந்த நிகழ்ச்சிகளாகும் (எண் 21:21-35; உப 2:24-3:11; 4:47; யோசு 2:10; 9:10; சங் 135:11; 136:17-22). பின்பு யோசுவா யோர்தானுக்கு மேற்கில் ஆயி என்ற இடத்தில் எமோரியர்களை எதிர்கொண்டு அவர்களை வென்றார் (யோசு 7:7). மேலும், எருசலேம், கெபிரோன், யரிமூத்து, இலாக்கீசு மற்றும் எகிலோன் ஆகிய நகரங்களின் கூட்டணியைக் கிபயோனிலும் (10:1-27), யாபீனுக்கு ஆதரவு அளித்த வட எமோரியர்களைக் காசோரிலும் (11:1-14) வென்றார். எமோரியர்களின் ஒரு சிறு பகுதியினர் இஸ்ராயேலரோடு சுமூகமாக வாழ்ந்ததால் தப்பினர் (1 சாமு 7:4; 2 சாமு 21:2; எஸ் 9:1). ஆனால், சாலமோன் அவர்களைக் கட்டாய உழைப்புக்கு உட்படுத்தினார் (1 அர 9:20-21; 1 நாள் 8:7-8).

மற்றத் தேவதைகளோடு இவர்கள் தொடர்பு கொண்டிருந்ததால் இஸ்ராயேல் பாரம்பரியம் எமோரியர்களைத் தீயவர்களாக விவரிக்கிறது (ஆதி 15:16; யோசு 6:10; 1 அர 21:26; 2 அர 21:22; லேவி18:28; 20:22-23; யோசு 24:15).

எம்மாவு (EMMAUS சூடான கிணறு, சூடான ஊற்று)

யூதேயாவிலுள்ள நகரம் இது. சிலுவை மரணத்திற்குப்பின்பு இயேசு உயிர்த்து இவ்வூருக்குச் சென்று கொண்டிருந்த இரண்டு வழிப்போக்கர்களோடு நடந்து அவர்களுக்குக் காட்சியளித்தார். விவிலியத்தில் இந்நகரத்தின் பெயர் ஒருமுறை மட்டுமே (லூக் 24:13) சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு உயிர்த்த பின்பு கிளயோப்பாவிற்கும் அவருடைய நண்பருக்கும் வழியில் துணைவனாய்ச் சென்று-எம்மாவு நகரம்வரை சென்று-அன்று அவர்களோடு தங்கலானார் (லூக் 24:13 தொ).

எம்மாவு நகரம் இதுதான் என்பதை உறுதிப்படுத்துவற்கு ஒரே ஆதாரம் என்னவென்றால் எருசலேமிலிருந்து ஏழுகல் தொலைவில் எம்மாவு இருக்கிறது என்று லூக்கா நற்செய்தியாளர் சொல்லுவதுதான். அந்த நகரம் எங்கு இருந்தது என்பது பற்றி ஒரு தெளிவான கருத்தும் இல்லை. பல இடங்கள் அடையாளம் காட்டப்படுகின்றன.

அ) கொலோனியா:- எருசலேமிலிருந்து மேற்கில் யோப்பாவிற்குச் செல்லும் பாதையில் 5.6 கி.மீ. தொலைவில் உள்ளது. லூக்கா சொல்லுகின்ற தூரத்தில் இது பாதி அளவுதான். இங்கு வெர்பேசியன் 800 முதிய உரோமை வீரர்களைக் குடியேற்றினான். இந்த இடம் அநேகமாக யோசு 18:26-இல் சொல்லப்படுகின்ற மோசாவாக இருக்கலாம்.

ஆ) ஏல்-குபேய்பே:- எருசலேமின் மேற்கில் 7 கல் (11 கி.மீ) தொலைவில் உள்ளது. ஒரு பழைய மரபானது இவ்விடத்தில் காஸ்டெல்லும்-எம்மாவு என்ற உரோமையர் கோட்டையாக இருந்ததாகக் கூறுகிறது. இதைக் கி.பி. 1099-இல் சிலுவை வீரர்கள் கண்டுபிடித்தனர். இதுதான் புதிய ஏற்பாட்டு எம்மாவு என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். புனித கிளயோப்பாவுக்கு ஆலயம் கட்டப்பட்ட போது, இந்தக் கோட்டை அழிக்கப்பட்டது.

இ) அம்வாஸ்:- எருசலேமிற்கு மேற்கில் யோப்பா செல்லும் பாதையில் 31 கி.மீ. தொலைவில் அய்யலோன் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது. யூதா மக்கபேயர்களின்

எம்மாவுவோடு (1 மக் 3:40.57) ஒன்றாக்கப் படுகிறது. யூலியு ஆப்பிரிக்கானுஸ் என்பவரால் கட்டப்பட்டு, 3-ஆம் நூற்றாண்டிற்குப் பின் புதிய ஏற்பாட்டு நிக்கோபொலி என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இதைப் புதிய ஏற்பாட்டு எம்மாவு என்று ஏற்றுக் கொண்டு இவ்விடத்தில் சிலுவை வீரர்கள் ஓர் ஆலயம் கட்டினர். இதை எல்லாரும் புதிய ஏற்பாட்டு எம்மாவு என்று ஏற்றுக் கொண்டார்கள். மறுப்பதற்கு உரிய ஒரே ஆதாரம் எருசலேமிலிருந்து 31 கி.மீ. தொலைவு என்பதுதான்.

எயத்திராய் (JEATHERAI)

கெரிசோமிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர் (1 நாள் 6:21). 6:41-இல் இவர் எதினீ என்று அழைக்கப்படுகிறார். ஒரு வேளை இதுவே சரியானதாக இருக்கலாம். எழுத்தர்கள் இதைத் தவறாக எயத்திராய் என்று எழுதியிருக்கலாம்.

எயாரிம் (JEARIM காடுகளின் மலை)

யூதாவின் வடக்கு எல்லையில் அமைந்துள்ள மலை (யோசு 15:10). இந்த முகட்டில், எருசலேமுக்குக் கிழக்கில் 14.5 கி.மீ. தொலைவில், இக்காலக் கேஸ்லாவான கெசாலோன் அமைந்திருக்கிறது. அநேகமாக, எருசலேமுக்கு வடக்கே 14.5 கி.மீ. தொலைவில் இருக்கும் சாரிஸ் என்ற கிராமம் அமைந்துள்ள சேயீர் மலையே இம்மலையாக இருக்கலாம் என்று கருதுகின்றனர் அறிஞர் சிலர்.

எயியேல் (JEIEL இறைவன் குணப்படுத்தினார் அல்லது பாதுகாத்தார்)

1. ரூபன் கோத்திரத்துத் தலைவர்களில் ஒருவர் (1 நாள் 5:7).

2. கிபயோனில் வாழ்ந்து வந்த மக்களின் மற்றும் அரசன் சவுலின் முன்னோருமாவார் (1 நாள் 9:35; 8:29).

3. தாவீதின் வலிமை வாய்ந்த படைவீரர்களுள் ஒருவர் (1 நாள் 11:14). அரோ யேரியரான கோத்தாமின் மகன். இவர் மேற்சொல்லப்பட்டவராகவே இருக்கலாம்.

4. வாயில் காப்பவராகவும், ஆலயப் பாடகராகவும் இருந்த ஒரு லேவியர். பேழை எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்டபோது வீணை வாசித்தவருள் ஒருவர் (1 நாள் 15:18.21; 16:51). 1 நாள் 15:24-இல் இவர் எகியா என்று அழைக்கப்படுகிறார். 16:5-இல் இப்பெயர் யாக்சீயேலா என்று வாசிக்கப்படுவது நன்று (காண்க. 15:18.20).

5. ஆசாப்பின் குலத்தில் உதித்த ஒரு லேவியர் (2 நாள் 20:14). யகசியேலின் முன்னோர். இவர் அரசன் யோசபாத்துக்கு வெற்றியை முன்னறிவித்தார். இவர் (4)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

6. அரசன் ஊசியின் செயலர். இவர் 2 நாள் 26:11-இல் வரும் படைவீரர் அட்டவணையைத் தயார் செய்தவர்.

7. யோசியாவின் காலத்தில் லேவியர் குலத்தலைவர். கடந்தேகும் விழவுக்குக் (பாஸ்கு) காணிக்கை அளித்தவர் (2 நாள் 35:9).

8. எஸ்ராவின் வற்புறுத்தலுக்கு இணங்கப் புறவின மனைவியை விலக்கிய ஒரு யூதர். நெபோவின் மகன் (எஸ் 10:43).

எயுசு (JEUZ உற்சாகப்படுத்தபபட்ட)

சாரயிமின் மகன். ஒரு பென்யாமின் குடும்பத் தலைவர் (1 நாள் 8:10).

எயூசு (JEUSH இறைவன்) விடுவிக்க வருவாராக)

1. ஒகலிபாமா வழியாக எசாவுக்குப் பிறந்த புதல்வர்களில் ஒருவர் (ஆதி 36:5.14). இவரும் இவருடைய சகோதரர்களும் ஏதோமிய குலங்களுக்குத் தலைவர்களானார்கள் (ஆதி 36:18; 1 நாள் 1:35).

2. பிலிகானின் மகன். பென்யாமின் இனத்தைச் சேர்ந்த வலிமை மிக்க வீரர் (1 நாள் 7:10).

3. ஏசேக்கின் இரண்டாம் மகன். பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர் சவுலின் வழிவந்தவராகத் தோன்றுகிறது (1 நாள் 8:34).

4. ஒரு கெர்சோமிய லேவியர். சிமயியின் புதல்வர் (1 நாள் 23:10-11). இவருக்குச் சில புதல்வர்கள் மட்டுமே இருந்ததால், இவரது குடும்பம் பெரியாவின் குடும்பத்தோடு சேர்த்து ஒரே குடும்பமாய்க் கணிக்கப்பட்டது (20:11).

5. அரசன் இரகபெயாம், மகலாத்து ஆகியோரின் மகன் (1 நாள் 11:19).

எயுவேல் (JEUEL இறைவன் மீட்டுவிட்டார், குணமாக்கி விட்டார்)

1. நாடுகடத்தலிலிருந்து திரும்பிவந்து செலேமில் குடியேறிய யூதா இனத்தைச் சேர்ந்த செராகின் வீட்டுத் தலைவர் (1 நாள் 9:6).

2. எலிசாபானின் புதல்வர்களில் ஒரு லேவியர். எசக்கியா ஆலயத்தைப் புதுப்பித்த போது ஆலயத்தைச் சுத்தம் செய்த 14 பேர்களில் ஒருவர் (2 நாள் 29:13). எயியேல் (4)-இல் குறிக்கப்படுபவர் இவராக இருக்கலாம்.

3. அதோனிக்காமின் புதல்வர். எஸ்ராவுடன் எருசலேமுக்குத் திரும்பியவர்களுள் ஒருவர் (எஸ் 8:13).

எவோதியா (EUODIA செழிப்பான பயணம்)

பிலிப்பிய திருச்சபையில் ஒரு கிறிஸ்தவப் பெண். இத்திருச்சபையில் தொடக்கத்திலிருந்தே பெண்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர் (.ப. 16:12-15). பிலி 4:2-இல் இவளையும், சிந்திக்காவையும், வேற்றுமைகளைத் தவிர்த்து ஆண்டவருக்குள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று புனித பவுல் அறிவுரை கூறுகின்றார். அவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காகச் சண்டையடித்துக் கொண்டார்களா, கொள்கை அடிப்படையில் ஏற்பட்ட பிளவுகளினால் பிறந்த பூசலா என்பது பற்றி நாம் தெரிந்துகொள்ள வழி இல்லை. இப்பெண்களுக்கு உதவி செய்ய அழைப்புப் பெறுபவர் ''தோள் கொடுத்து உழைத்த உண்மையான தோழர்'' (4:3) எப்பப்பிராதித்துவாக இருக்கலாம் (2:25).

எரகுமேல் (JERAMMEEL இறைவன் இரக்கம் கொள்வாராக)

1. தாமார் வழியாக வந்த யூதாவின் வழித் தோன்றல். கெசிரோனின் முதல்மகன். (1 நாள் 25:9.25-27). காலேபின் சகோதரன் (25: 42). இவர் எரகுமேலின் இனப்பெயர்த் தலைவராவார். இவர்கள் யூதாவின் தென் எல்லையில் தாவீது சிக்கிலாகில் ஆக்கீசின் பணியில் இருந்தபோது, இவர்களது பகுதியைக் கொள்ளையடித்தார் (1 சாமு 27:10). பிற்காலத்தில், இங்கு வாழ்ந்த யூதா பெரியவர்களுக்குக் கொள்ளைப் பொருளின் ஒரு பகுதியைத் தாவீது அளித்தார் (30:29). 1 நாள் 2:4 கால்வழி உறவுமுறையைவிடத் தத்து உறவு முறையையே குறிக்கிறது என்றும், இது எரகுமேலியர்களின் சமூக வரலாற்றைப் பிரதிபலிக்கிறது என்றும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

2. ஒரு மெராரிய லேவியர், ஒரு கீசுடைய (3) மகன் (கீசு சவுலின் தந்தை அல்லர்) (1 நாள் 24:29).

3. யோயாக்கிம் அரசரின் ஓர் அதிகாரி; இறைவாக்கினரான எரேமியாவின் சமகாலத்தவர். எரேமியாவையும் பாரூக்கையும் பிடிக்க அனுப்பப்பட்டவர்களில் ஒருவர். ''அரசனுடைய மகன்'' என்ற பட்டம், இவரது அரச குலப்பிறப்பினை உணர்த்தலாம் (எரே 36:26).

4. யூதாவின் தெற்குப் பகுதியில் வாழ்ந்ததாகக் கூறப்படும் ஒரு செமித்திய இனம். சவுலுக்குத் தப்பி, தாவீது நாடோடியாகச் சிக்கிலாகில் தங்கியிருந்தபோது இவர்களோடு தொடர்பு கொண்டார் (1 சாமு 27:10; 30:29). அடிமைக் காலத்திற்குப் பிறகுதான் எரகுமேலியர் யூதாவைச் சேர்ந்த ஓர் எபிரேய இனமாகக் குறிக்கப்படுகின்றனர் (1 நாள் 2:9.25-27.33.42).

எரத்து (ERASTUS அன்பு செய்யப்பட்டவர்)

உரோ 16:23-இல் உரோமையிலுள்ள சகோதரக் கிறிஸ்துவர்களுக்கு வாழ்த்துக் கூறும் கொரிந்து நகரப் பொருளாளர் எரத்து. இந்த

மாதிரி ஊழியர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் பொதுவாக அடிமைகள் அல்லது அடிமைக் குடியிலிருந்து வந்தோர் ஆவர். கொரிந்தில் கி.பி. 50-100 காலத்திய இலத்தீன் மொழி பொறிக்கப்பட்ட எழுத்துத் தகடு கண்டெடுக்கப்பட்டது. அந்தப் பெயர்களில் எரத்து உரோமானிய ஆட்சியில் மேற்காப்பாளராகவும், தமது சொந்தச் செலவில் ஒரு தெருவைப் பாவியவராகவும் குறிக்கப்படுகிறார். அ.ப. 19:22-இல் பவுலின் துணைவரும் எபேசிலிருந்து மக்கதோனியாவுக்குத் திமோத்தேயுடன் உடன் சென்றவருமான ஓர் எரத்து குறிக்கப்படுகிறார். 2 திமோ 4:20-இல் கொரிந்துவில் தங்கிவிட்ட ஓர் எரத்துவுக்குப் பவுல் வாழ்த்துக் கூறுகிறார். எரத்து என்ற பெயர் பலராலும் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டாலும், மேல் கூறப்பட்ட யாவரும் ஓர் ஆளையே குறிக்கலாம்.

எராகு (JERAH நிலா)

யொக்கிதானின் புதல்வர். சேமின் வழித்தோன்றல் (ஆதி 10:26; 1 நாள் 1:20). இப்பெயர் அரபு நாட்டில் உள்ள ஓர் இடமாக இருக்கலாம். இவ்விடம் கசா-மாவேத்துக்கு அடுத்தபடியாக இருப்பதாகக் குறிப்பிடப்படுவதால் மக்ரா கடற்கரையில் அமைந்திருக்க வேண்டும். இங்கு எராக்கோன்கோம் என்ற நகரம் தோலமியால் குறிப்பிடப்படுகின்றது.

எராப்பொலி (HIERAPOLIS - புனித நகரம்)

எராப்பொலி என்பது சிறிய ஆசியாவிற்குத் தென்மேற்கில் உள்ள நகரமாகும். இந்நகர் லீக்கஸ் பள்ளத்தாக்கில் இப்பெயருடைய நதியை நோக்கி உள்ள நகராகும். கிரேக்கப் பண்பாடுகளைக் கொண்ட மிக முக்கியமான உரோமை நகரங்களில் இதுவும் ஒன்றாகும். அனாத்தோலிய தேவர்களுக்கு வழிபாட்டு மையமாக இருந்த இவ்விடம் காலப் போக்கில் சிறந்த வியாபாரத் தலமாகவும் மாறியது. செலூக்கிய மன்னர்களின் அரசாட்சியின் கீழ் இருந்த இந்நகர் கி.மு. 133-க்குப் பின் உரோமையர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. உரோமையர்களின் கீழ் இந்நகர் இருந்த பொழுது, சிறந்த, செழிப்பான நகராக விளங்கியது. சில நேரங்களில் பூகம்பத்தால் இந்நகர் பாதிக்கப்பட்டது.

இந்நகரிலுள்ள பாறைகளிலிருந்து வெளிப்படும் வெப்ப நீருற்றுகளிலிருந்து வழிந்தோடும் சூடான தண்ணீர் மருந்துப் பொருளாக விளங்கியது. இந்நகர் இருந்த இடத்தில் இரண்டு அரங்கங்களும், குளியலறைகளும் காணப்படுகின்றன. மெய்யியலார் எப்பிக்தேத்தஸ் என்பவரும், ஆதி கிறிஸ்தவ எழுத்தாளர் பப்பியஸ் என்பவரும் இவ்விடத்தில் தோன்றியவர்களாவர்.

பிற இன சமயங்களின் வழிபாட்டு மையமாகத் திகழ்ந்த இவ்விடம் கி.பி. முதல் நூற்றாண்டில் ஒரு கிறிஸ்தவ மையமாக மாறியது ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும். பவுலோடு சிறைப்பட்டிருந்த எப்பாப்பிரா இந்நகரில் பணிபுரிந்தார் (கொலோ 4:12-13). யுஸ்தினியன் இந்நகரை ஒரு மறைமாவட்ட மையமாக்கினார். இதன் ஆயர்கள் பைசான்டைன் பட்டியலில் காணப்படுகின்றனர்.

இது கோலோசைக்கு வடமேற்கில் 19 கி.மீ. தொலைவிலும் இலவோதிக்கயாவுக்கு வடக்கில் 10 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்காலப் பாமுக்காலே என்ற இடமாக இருக்கலாம்.

எரிகோ (JERICHO நறுமணம், நிலா நகர்)

1. எரிகோ யோர்தான் பள்ளத்தாக்கில் தென் கடைசியில் சாக்கடலுக்கு வடமேற்கில் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மிகப்பெரிய, முக்கியமான நகரமாகும். இது பனைமர நகரம் என்றும் அழைக்கப்பட்டது (உப 34:3; நீதி 1:16; 3:13; 2 நாள் 28:15). விவிலியத்தில் வரும் எரிகோ உணர்வுகளை எழுப்பும், பொருள்பொதிந்த வரலாற்றை யுடையது. எரிகோ, சமவெளி என்று குறிப்பிடப்படும் செழிப்பான சமவெளியில் (யோசு 4:13; 2 அரச 25:5; 34:3), யோர்தான் ஆற்றுக் கருகில் மோவாபுக்கு நேர்மேற்கில் (எண் 22:1; யோசு 13:22). பென்யாமினின் கிழக்குக் குன்றுக்கருகில் (யோசு 2:16,22), எப்பிராயிமையும் பென்யாமினையும் பிரிக்கும் எல்

லையில் (16:1-2) அமைந்துள்ளது. இது எருச லேமிலிருந்து கிழக்கு வடகிழக்கில் 28 கி.மீ. தொலைவிலும் யோர்தானுக்கு மேற்கில் 11 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இன்பமான சூழ்நிலைகள் கொண்டது. பழங்கால ஆசிரியர்கள் அதன் பனைமரங்களையும் பழ மரங்களையும் போற்றியுள்ளனர். அதனால் சிலர் இப்பெயருக்கு ''நறுமணமிக்க இடம்'' என்றும், வேறுசிலர் அங்கு நடந்த சந்திர வழிபாட்டைச் சுட்டும் விதத்தில் ''சந்திர நகர்'' என்றும் பொருள் கொடுப்பர்.

2. விவிலியக் குறிப்புகள்:-

கிழக்கு மேற்காகச் செல்லும் முக்கிய வணிகப் பாதையில் இது அமைந்திருந்தமை இந்நகரை வணிகத்திற்கு முக்கிய நகரமாக்கியது. போர் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்திருந்தது. ஆகவே, யோர்தானைக் கடந்ததும் இதைக் கைப்பற்றுவது இஸ்ராயேலருக்கு அவசியமாயிற்று.

இந்நகரைக் கடக்குமுன் யோசுவா இரு ஒற்றர்களை வேவுபார்க்க அனுப்பினார். அந்நகரில் இருந்த இராகாப் என்ற வேசி அவர்கள் இருவரையும் ஒளித்துவைத்துப் பாதுகாப்பளித்தாள் (யோசு 2). அவர்கள் திரும்பி வந்து எரிகோ நாட்டு மக்கள் அனைவரும் இஸ்ராயேலர்களுக்கு அஞ்சிச் சாகிறார்கள் என்று யோசுவாவிடம் கூறினர். இஸ்ராயேலர் கூட்டம் கூட்டமாயும் அணி அணியாயும் எரிகோ சமவெளியிலும் நாட்டுப்புறங்களிலும் நடந்து சென்றனர் (4:13). அவர்கள் நாளைக்கு ஒருமுறை வீதம் ஆறுநாட்கள் நகரைச் சுற்றி வந்தனர். ஏழாம் நாளில் எழுமுறை நகரைச் சுற்றிவந்து, ஆரவாரமாய் ஆர்ப்பரித்துக் கூவ, எக்காளங்கள் முழங்க, நகரின் சுவர்கள் கடகடவென்று இடிந்து விழுந்தன. இஸ்ராயேலர் இராகாபையும் அவளுடைய குடும்பத்தையும் தவிர மற்றெல்லாரையும் கொன்று குவித்தனர். அப்பொழுது யோசுவா எரிகோ நகரைச் சாபமிட்டு ''எரிகோ என்னும் இந்நகரை மீண்டும் கட்டும் மனிதன் சபிக்கப்பட்டவன்'' என்று கடுமொழி கூறினார் (யோசு 6).

எரிகோவும் அதைச் சுற்றிய பகுதிகளும் பென்யாமினுக்குப் பங்கிட்டளிக்கப்பட்டது (18:12.21). பென்யாமினுக்கும் யோசேப்புக்கும் கிடைத்த பகுதிகளின் எல்லையில் இருந்தது (6:1.7; 18:120). நீதிபதிகள் காலத்தில் மோவாபிய எகிலோன் எரிகோவைக் கைப்பற்றி, இஸ்ராயேலரைக் கொடுமைப் படுத்தினார் (நீதி 3:13). பிற்காலத்தில் அது அம்மோனியர் ஆட்சியின் கீழ் இருந்தது. அதன் அரசன் காஹூன் இஸ்ராயேலரோடு நட்புறவு கொண்டிருந்தார். அதனால், அவரது தந்தை இறந்தபோது அவருக்கு ஆறுதல் கூறத் தாவீது தூதுவர்களை அனுப்பினார். ஆனால், கானான் அவர்களது தாடியை மழித்து அவமானப்படுத்தினார். ஆதலால், அவர்களது தாடி வளரும்வரை அவர்கள் அங்கேயே தங்க வேண்டியிருந்தது (2 சாமு 10:1-5; 1 நாள் 19:1-5).

ஆகாபு ஆட்சிக் காலத்தில் (கி.மு. 9-ஆம் நூற்றாண்டு) பெத்தேலைச் சேர்ந்த கீயேல் இந்நகரை மீண்டும் கட்ட, அதற்கு அடிக்கல் நாட்டும்போது தன்முதல் மகனையும், அதன் வாயில்களை அமைக்கும்போது தன் கடைசி மகனையும் பலியிட்டான் (1 அர 16:34). இவ்வாறு யோசுவாவின் சாபம் நிறைவேறியது (யோசு 6:26). இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு இந்நகர் இறைவாக்கினர் குழுவினரை, எலிசா சந்தித்தபோது, எலிசா, தன் குரு எலியா விரைவில் தன்னிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார் என்று அறிகிறார் (2 அரச 2:4-5). இங்குதான் எலிசா எலியாவின் வாரிசாக ஏற்றுக்கொள்ளப்பட்டு (2:15-18), தன் முதல் அருஞ்செயலைச் செய்தார் (2:19-22). சீரியா-எப்பிராயிம் போரின் போது (கி.மு. 734) எப்பிராயிம் தலைவர்கள் யூத அகதிகளுக்கு இங்குதான் ஒய்வளித்தனர் (2 நாள் 28:15). யூதாவின் கடைசி அரசன் செதேக்கியா நெபுக்கதுனேசாரிடமிருந்து தப்பியோடியபோது, இங்குதான் பாபிலோனியர்களால் பிடிபட்டார் (2 அரச 25:5-6; எரே 39:5-6; 52:8-9). இஸ்ராயேலர், பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின், எரிகோவில் மீண்டும் குடியேறினர் (எஸ் 2:34). இவர்கள், எருசலேம்

மீண்டும் கட்டப்பட்ட போது உதவி செய்தனர் (நெகே 3:2). பாக்கீது அரசன் எரிகோவின் கோட்டை மதில்களையும் கதவுகளையும் பலப்படுத்தினார் (1 மக் 9:50). இங்குதான் சீமோன் கொல்லப்பட்டார் என்று தோலமி கூறுகின்றார் (16:11 தொ).

ஒத்தமை நற்செய்திகள், இந்நகரோடு தொடர்புடைய மூன்று நிகழ்ச்சியுரைகளைத் தருகின்றன. திமேயுவின் மகன் பார்த்திமேயு என்ற குருடர் இங்கு, பார்வை பெற்றார் (மத் 20:29-34; மாற்கு 10:46-52; லூக் 18:35-43). லூக்காமட்டும் ஆயக்காரர்களின் தலைவன் சக்கேயுவைப் பற்றிக் கூறுகிறார் (லூக் 19:1-10). எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் பாதையில் நல்ல சமாரியன் உவமை அமைகிறது. இப்போதும் இப்பாதையில் திருடர்கள் நடமாடிக் கொண்டுள்ளனர்.

3. தொல்பொருள் ஆய்வு:-

தேல் எஸ்-சுல்தான் என்றபகுதியில் பரவலாக அகழ்வாய்வுகள் நடந்துள்ளன. இவற்றில் யோசுவா படையெடுத்தபோது இருந்திருக்கக்கூடிய இந்நகரின் சுவர்கள், சான்றுகளில் கவனம் செலுத்தப்பட்டது. எரிகோவில் கி.மு. 9000 முதல் மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. 8000-6000 ஆண்டைச் சார்ந்த ஒரு கற்றவர் உலகத்தில் எரிகோ மிகப்பழைய நகரங்களில் ஒன்று என்ற பாரம்பரியத்தை வலியுறுத்துகிறது. இந்நகரில் மக்கள் வாழ்ந்த மற்றக் காலங்கள் 4000-ஐயும் 3200-2800-ஐயும் 2100-1900 ஐயும், 1900-1500-ஐயும் சேர்ந்தாகத் தெரிகிறது.

ஆய்வுகளின்படி, அதிகக் கனமில்லாத வெளிச்சுவரும், செங்கற்களால் கட்டப்பட்ட பாதுகாப்பு உட்சுவரும் அடங்கிய இரட்டைச் சுவர்தான் இஸ்ராயேலர்முன் விழுந்த சுவராகும் என்பர் சிலர். வேறுசிலர் இச்சுவர் யோசுவா காலத்திற்கு முந்தியதாகும் என்பர். யோசுவா காலத்தில் அழிந்துபோன நகரத்துக்குரிய சான்றுகள் இன்மை, யோசுவா, இந்நகரை வென்ற நிகழ்ச்சியை ஒரு புதிராகவே வைத்துள்ளது. அவர்கால நகர் அரித்துப்போய்விட்டது, அல்லது மற்ற சக்திகள் அதன் சுவடுகளை அழித்துவிட்டன, அல்லது அக்காலநகர் மற்றொரு குன்றின்மேல் (தேல்) அமைந்திருக்கவேண்டும் என்பன மற்ற விளக்கங்களாகும்.

கி.மு. 8-ஆம் நூற்றாண்டுவரை எரிகோ குடியேற்றப்படாமலிருந்ததாகத் தெரிகிறது. சுவரற்ற குடியேற்றம் பற்றிய தடயங்கள் 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாபிலோனியர் படையெடுப்புக்குப் பின் இவ்விடம் கைவிடப்பட்டது. 2-ஆம் நூற்றாண்டில் பழைய ஏற்பாட்டு நகருக்குத் தெற்கில் 1.5 கி.மீ. தொலைவிலுள்ள வாடி-கெல்ட் என்ற ஓடையின் இருகரைகளிலும் அமைந்துள்ள தூலூல் அபூ எல்-அலயீக் என்ற இடத்தில் மீண்டும் குடியேற்றம் நடந்தது. கசமோனிய அரசர்கள் தங்கள் குளிர்கால உறைவிடமாக இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தனர். பெரிய ஏரோது இந்தப் ''புதிய ஏற்பாட்டு எரிகோவையும்'' அதன் அரண்களையும் மிகப் பகட்டாகப் புதுப்பித்தார். இங்குப் பூங்காக்களையும், விருந்தினர் விடுதிகளையும், உரோமையர் பாணிக் குளியலகத்தையும், பொதுக்கட்டடங்களையும் அமைத்தார். இந்நகர் கி.பி. 68-இல் வெசுபேசியன் படையெடுப்பில் தப்பியது. பார்-கோக்பா காலத்திலும் (கி.பி. 132-135) பேர்டோ யாத்திரீகர் காலத்திலும் (333) இந்நகரில் மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

சிறிது காலத்திற்குப் பின் இந்நகரமும் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாகக் கிழக்கில் 1.5 கி.மீ. தொலைவிலுள்ள இடத்தில் ஒரு பைசான்டைன் நகரம் எழுந்தது. இவ்விடத்தில்தான் இக்கால எரிகோ அமைந்துள்ளது.

எரித்தல், எரிதல் (BURNING)

எரித்தல் என்பது விவிலியத்தில் பல இடங்களில் வருகின்றது. இது உண்மையிலேயே பொருட்களை எரித்தலைக் குறிக்கலாம். உவமையாகக் கோபம், மோகம் வேதனை, வலி என்ற உணர்வுகளைக் குறிப்பிடுவதற்கும் இச்சொல் பயன்படுத்தப்பட்டி

ருக்கின்றது. எரியும் பொருட்கள் என்று விவிலியத்தில் குறிப்பிடப்படுவன: எரியும் முட்புதர் (யாத் 3:2), பீடத்தின் நெருப்பு (லேவி 6:9), விளக்கு (லேவி 24:2; லூக் 12:35; யோவா 5:35), மலை (உப 5:23), தூபம் (1 அர 9:25; எரே 1:17), நாணல் (யோபு 41:20), கரி (ஏசா 6:6; உரோ 12:20), நிலக்கீல் (ஏச 34:9), மணல் (ஏச 35:7), புகையும் திரி (ஏச 42:3), தீப்பந்தம் (ஏச 62:1), எரிகின்ற ஆள் (தானி 3:6.11.15-16), நகரம் (திருவெளி 18:18) என்பன ஆகும்.

உவமையாகக் கூறப்படுவன: யாவேயின் கோபம் (யோசு 7:26; சங் 69:24), வேதனை (யோபு 30:30; சங் 38:7), மோகம் (ஏச 57:5) முதலியன.

எரிபாய் (JERIBAI யாவே வழக்குரைக்கிறார்)

எல்னாமின் புதல்வர்களுள் ஒருவர். தாவீதின் வலிமை வாய்ந்த படை வீரர்களில் ஒருவர் (1 நாள் 11:46; 2 சாமு 23).

எரிபொருள் (FUEL)

பழங்காலத்தில் இஸ்ராயேலர்கள் எரிப்பதற்குப் பல்வேறு வகையான பொருட்களைப் பயன்படுத்தினார்கள். மரங்கள், முந்திரிக்கொடிகள், முட்செடிகள், கோரைப் புல், சாணம், கரி, உமி, வைக்கோல், புதர், புல், செத்தை ஆகிய பொருட்களை எரிப்பதற்குப் பயன்படுத்தினார்கள். மரங்கள், கேதுரு, மருத மரக்கட்டைகளிலிருந்து (ஏச 44:14-16) சுள்ளிவரை (1 அர 17:12) வேறுபடலாம். முட்செடிகள் சாதாரண எரிபொருளாகப் பயன்பட்டன. கட்டைக்கரியின் பயனை எபிரேயர் நன்கு அறிந்திருந்தனர் (எரே 36: 22). கட்டைக்கரி குவித்து வைக்கப்பட்டதாகத் தெரிகிறது (யோவா 21:9). வைக்கோலும் புல்லும் அதிக வெப்பத்தை அளித்து விரைந்து எரிந்து விடும். ஆனால், சாணமானது மெதுவாக எரிந்து குறைந்த வெப்பத்தையும் மிகுதியான புகையையும் தரும்.

எரிமசு (HERMES தேவதை)

கிரேக்கக் கடவுள் செயுசின் புதல்வர், அப்பொல்லோவின் ஒன்றுவிட்ட உடன் சகோதரன். இவர் ஏமாற்றுபவர்கள், திருடர்களுக்குத் தலைவர். நேர்மையாகவோ, நேர்மையில்லாத வழியிலோ அதிர்ஷ்டத்தைக் கொணரும் தெய்வம். அதனால்தான் திருடர்களுக்கும், கள்ள வியாபாரிகளுக்கும் காப்பாளராக இருக்கிறது இத்தெய்வம். இவர்தான் கடவுளுக்கெல்லாம் தூதுவர். எனவே, தூதரின் கோலை அதாவது மந்திரக் கோலைக் கையில் வைத்திருப்பார். மேலும் இவர்தான் பேச்சாற்றலின் கடவுள். எப்பொழுதாவது தான் இத்தெய்வத்திற்குப் பொது வழிபாடு நடைபெறும். ஆனால் பிள்ளைப் பேற்றைத் தரும் தெய்வமாகக் குடும்பங்களில் பரவலாக வணங்கப்படும் தெய்வம். தூணில் படைப்பாற்றல் சின்னமாக மார்போடு கூடிய குறிவடிவத்தில் வழிபடப்பட்டார். வீட்டுக் கதவுகளில் இச்சின்னம் பதிக்கப்பட்டிருக்கும். பழைமை வாய்ந்த நம்பிக்கையில் இது நடைபெறலாம். இன்னொரு நோக்கும் இருக்கிறது. இவர் பாதாளத்திற்கு இறந்தவர்களை வழிநடத்துகிறவர். மெர்குரி கிரகத்தோடு ஒப்பிடப்படுகின்றார். கிரேக்க ஹெலன் காலத்திய கலப்புச் சமயத்தில் எகிப்தியக் கடவுள் தோத்தோடு ஒன்றாகக் கருதப்படுகின்றார். பேரின்பத்தை அடையும் வழியை வெளிப்படுத்துகிறவர்.

இலிசித்திராவில் மூடப்பக்தியுள்ள மக்கள் அப்போஸ்தலர்களைக் கடவுள்களாகக் கருதினார்கள் ''பவுல் முக்கிய பேச்சாளராயிருந்ததால், அவரை எரிமசு (மெர்குரி) என்றும், பர்னபாவை யூப்பித்தர் என்றும் அழைத்தனர்'' (அ.ப. 14:12). எரிமசு என்றால் பேச்சாளரின் தெய்வம், தெய்வீகத்தூதர் என்று அவர்கள் நினைத்தார்கள்.

எரிமசு (HERMES - ஆள்)

பவுல் வாழ்த்துத் தெரிவிக்கிற ஒரு நபர் (உரோ 16:14). அவரைப் பற்றி அதற்கு மேல் ஒன்றும் தெரியவில்லை.

எரிமா (HERMAS)

உரோமையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர். இவருக்குப் பவுல் வாழ்த்துக் கூறுகிறார் (உரோ 16:14).

எரிமாவின் ஆயர் (SHEPHERED OF HERMAS)

இந்நூல் உரோமை இறைவாக்கினர் எரிமா என்பவரால் எழுதப்பட்ட வெளிப் பாட்டு நூலாகும். எரிமா என்பவர், உரோ மையருக்கு எழுதிய திருமுகம்.16:14-இல் குறிப்பிடப்பட்டுள்ள எரிமா என்ற நபரோடு ஒன்றுபடுத்தப்படுகிறார் அல்லது தொடர்பு படுத்தப்படுகின்றார். கி.பி. 140-இல் எரிமா வின் சகோதரர் பத்திநாதர் உரோமையின் ஆயராக இருந்த பொழுது இந்நூல் எழுதப் பட்டது என்று உரோமைத் திருச்சபையினு டைய முராத்தோரியின் பட்டியல் கூறுகின் றது. இந்நூலில் தரப்பட்டிருக்கும் முதல் நான்கு காட்சிகள் இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்தவையாகும். இதில் வரும் இரண்டாவது காட்சியில் கிள மெண்து என்பவர் இந்நூலினை மற்றச் சமூ கங்களுக்கு அனுப்புகின்ற பொறுப்பாளரா கக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலானது மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கிறது:- 1) ஐந்து காட்சிகள். 2) பன்னிரண்டு கட்டளைகள் அல்லது ஆணை கள்.3) பத்து உவமைகள்.

முதல் நான்கு காட்சிகளில் வெளிப்படுத் துபவராக உரோதா என்ற பெயருடைய பெண் காட்டப்படுகின்றாள். இவளை எரிமா என்பவர் தன் அடிமையாக இருந்த பொழுது தனக்குப் பணிப்பெண்ணாக இருந் ததாகக் கூறுகின்றார். இப்பெண்ணை வய தான பெண் என்ற நிலையிலிருந்து இளம் பெண்ணாகவும், அழகிய பெண்ணாகவும், மாற்றம் அடைந்ததாகக் காட்டுவது திருச் சபையின் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றத் தைப் பிரதிபலிக்கும் அடையாளமாகும். ஐந்தாவது காட்சியில் மன்னிக்கும் தூதன் என்ற பெயரைக் கொண்ட ஒரு ஆயன் வெளிப்படுத்துபவராக விளங்குகின்றார்.

ஆண்டவரின் இரண்டாம் வருகையும், திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் மனம் மாறுவதற்காக இரண்டாவது முறை கிடைக் கப்பெற்ற வாய்ப்பையும் வெளிப்படுத்து வதுதான் இந்த வெளிப்பாட்டு இலக்கியத்தின் மையக்கருத்தாகும். விசுவாசத்தை மறுத லித்த பெரிய தவறைச் செய்தவர்களைக் கூட மன்னிப்பதற்கு மன்னிக்கும் ஆயன் தயாராக இருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் திருமுழுக்குப் பெற்றபின் மிகப் பெரிய தவறு செய்ததால் திருச்சபையை விட்டு வெளியேற்றப்பட்ட கிறிஸ்தவர்களை மீண் டும் திருச்சபையோடு உறவுகொள்வதை ஏற் றுக்கொள்ளு: மறுத்த ஒரு கடினமான திருச் சபையின் மனநிலையில் ஏற்பட்ட மாற் றத்தை எரிமாவின் போதனை நமக்கு உணர்த்துகின்றது (பெி 6:4-8; 10:26-29; 12:16-17).

மூன்றாவது காட்சியில் திருச்சபையானது ஒரு கோபுரமாக உருவகப்படுத்தப்பட்டுள் ளது. இவ்வாறு திருச்சபையைக் குறிக்கும் அடையாளமாக விளங்கும் கோபுரத்தைக் கிறிஸ்தவப் புண்ணியங்களாகிய விசுவாசம், தன்னடக்கம், தாழ்ச்சி, அறிவு, மதிப்பு, மாசற்ற தன்மை, அன்பு போன்றவைகள் தாங்கிக் கொண்டிருப்பதாக அடையாள மொழியில் கூறப்பட்டுள்ளது. எரிமாவின் கண்ணோட்டத்தின்படி இரு மனத் தன்மை தான் பாவத்திற்கு ஆணிவேராகும். இதிலி ருந்துதான் வெளிவேடம், பொறாமை, நேர் மையற்ற தன்மை, பெருமை, காமம், போன்ற தீமைகள் உருவெடுக்கின்றன. இவர் பணக்காரர்களைக் கடுமையாகச் சாடு கின்றார். இவர் தரும் அறநெறி ஒழுக்கம் சார்ந்த போதனைகள் அனைத்தும் யூத, கிரேக்க அறநெறிப் போதனைகளில் காணப் படுகின்றன. இருப்பினும் இவர் அப்போதனை களைக் கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் தருகின்றார். இவரது அறநெறிப்போதனை கள் அனைத்தும் பன்னிரண்டு குலத்தந்தை யர்களின் அறநெறிப் போதனைகளுக்கு இணையாக இருக்கின்றன.

மனிதனுள் இரண்டுவகையான ஆவிகள் இருந்து செயல்படுகின்றன என்ற அவரது கொள்கையினை விளக்குவதில் தனி ஆர்வம் காட்டினார். இயேசுவின் மனிதத் தன்மை யைப் பொறுத்த வரையில் ''சுவிகாரக்'' கொள்கையினரின் கருத்துக்களைப் பிரதி

பலிக்கின்றார். இறைவனின் மகனைத் தூய ஆவியோடு ஒன்றுபடுத்துகின்றார். இதுவே அவரது கிறிஸ்து இயல் ஆகும்.

எரிமாவின் கருத்துக்களும், அவர்தரும் உருவகங்களும் புறவினத்தாரால் எழுதப் பட்ட நூல்களில் காணப்படும் கருத்துக்களுக் கும் உருவகங்களுக்கும் இணையாக விளங்கு கின்றன என்பது சில மதிப்பீட்டாளர் களின் கருத்து. இவரது நூலில் ஆங்காங்கே பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளையும் தந் துள்ளார். திருமறைக்குப் புறம்பான சில நூல்களைப் பற்றி நன்கு அறிந்திருக்கின்றார். இவரது வெளிப்பாட்டு நடைக்கு இணை யான கருத்துக்கள் இரண்டாவது எசுதிரா ஆகமத்தில் காணப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டைப் பொறுத்தவரையில் மத்தேயு, மாற்கைப் பற்றி அறிந்திருப்பவர் போல் தோன்றுகிறது. ஆனால் லூக்கா, யோவான் நற்செய்தியைப் பற்றி அதிகமான அளவிற்கு அறிந்திருக்கமாட்டார். பவுலின் திருமுகங்கள், எபிரேயர் திருமுகம், முதல் பேதுரு, திருவெளிப்பாடு போன்ற நூல் களில் காணப்படும் சில கருத்துக்களை அங் கங்கே தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

நிச்சேய தந்தையர்களுக்கு எதிரானவர் களால் இந்நூல் மிகவும் உயர்ந்ததாகக் கருதப் பட்டது. திருமுழுக்குப் பெறுவதற்காகத் தயாரிப்பு நிலையில் இருப்பவர்களுக்கு அற நெறிப் போதனைகள் கொடுக்க இந்நூல் பயன்படுத்தப்பட்டது.

எரிமோகேன் (HERMOGENES)

''பிகெல்லு, எரிமோகேன் உட்பட்ட ஆசி யாவிலுள்ள அனைவரும்'' பவுலைக் கைவிட்டனர் என்று குறிப்பிடப்படுபவர்க ளில் இவரும் ஒருவர் (2 திமோ 1:15). கைவிட்டது இறையியல் காரணங்களுக்காக இருக்கலாம் அல்லது உரோமையில் பவு லின் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள வேண் டும் என்பதும் காரணமாக இருக்கலாம். ''பவுலின் பணிகளில்'' (2:1.4.11-14) எரிமா எரிமோகேன் செப்புக் கொல்லனாகவும், தேமாவோடு ''நேர்மையின்மை நிறைந்தவ னாக''வும் வர்ணிக்கப்படுகின்றார்.

எரிமோத்து (JERIMOTH வீங்கிய, பருத்த)

1. பெலாவின் மகன், பென்யாமின் கோத் திரத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 7:7). ஆனால் இத்தலைமுறை செபுலோன் தலைமுறையா கக் கருதப்படுகின்றது.

2. சிக்கிலாகில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட ஒரு பென்யாமின் படைவீரர் (1 நாள் 12:5).

3. ஒரு மெராரிய லேவியன். மூசியின் மகன் (1 நாள் 24:30): 23:23-இல் வரும் எரெமோத்தும் (3) இவரும் ஒருவரே.

4. ஏமானின் புதல்வர்களில் ஒருவனான ஒரு லேவியப் பாடகர் (1 நாள் 25:4). 24:22-இல் குறிப்பிடுகின்ற எரெமோத்து (4) இவரே.

5. தாவீதின் மகன்; ரொபோவாமின் மனைவி. மகாலத்தின் தந்தை (2 நாள் 11:18).

6. எசேக்கியா காலத்தில் கோவில் நேர்ச் சைப் பொருட்களைக் கண்காணித்தவர்க ளுள் ஒருவர் (2 நாள் 31:13).

எரியா (JEJAH யாவே காண்பாராக)

கெபிரோனியர்களின் தலைவர் (1 நாள் 26:31). மற்ற இடங்களில் இவர் எரீயா என்றழைக்கப்படுகிறார்.

எரீயா (JERIAH யாவே பார்ப்பாராக)

ஒரு லேவியர் குடும்பத் தலைவர். கெபி ரோனின் மூத்த மகன். கொகத்தின் வழித் தோன்றல் (1 நாள் 28;19; 24:23). தாவீது காலத்தில் கெபிரோனியர்களுக்குத் தலை வர். 26:31-இல் இவர் எரியா என்றழைக்கப் படுகிறார்.

எரியும் முட்புதர் (BURNING BUSH)

கோரேபு என்னும் மலையருகில் மோசே எரியும் முட்புதரில் இறைவன் பிரசன்னத்தை உணர்ந்ததை இது குறிக்கிறது (யாத் 3:2-4).

புதர் என்ற வார்த்தை இங்கும் உப 33:16-இலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன் உண்மையான செடிவகையைக் கண்டுபிடிக்க அறிஞர்கள் முயன்றனர். ஆனால் முடியவில்லை. எனினும் இது ஒரு வகைக் கூர்மையான முட்களையுடைய புதர் எனலாம். இது சூரிய ஒளியைப் பிரதிபலிக்க வல்ல ஒளிவிடும் ஒருவகைப்புதர் என்று சிலர் கருதுகின்றனர். சீனாய் மலையில் உள்ள புனித கத்தரீனம்மாள் துறவு மடத்தின் துறவிகள் இங்குச் சீரியாவில் மட்டுமே காணப்படும் ஒருவகைப்புதர்ச் செடியை வளர்த்து வருகின்றனர். இதுதான் மோசே பார்த்த புதர்வகை என்றும் கூறுகின்றனர். ஆனால், இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. யாருமே அறியாத ஒருவகைப் புதர்ச்செடி தான் இங்கு இருந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

யாத் 3:2 இல் ஆண்டவரின் தூதர் எரியும் புதரில் மோசேக்குத் தோன்றியதாகவும், 3:4-இல் யாவேயோடு மோசே நேரடியாகப் பேசியதாகவும் நாம் வாசிக்கிறோம். இறைவனே அங்குத் தோன்றினர் என்பதை மறைத்துக் கூறத் தூதர் தோன்றினார் என்று எழுதியிருக்கக்கூடும். எது எவ்வாறு இருப்பினும் அங்கே மோசே இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்தார்.

இங்கு நாம் செமித்திய மொழியின் இரு அம்சங்களை நோக்க வேண்டும்.

அ) இவர்கள் நாடகப்பாணியையும் சித்திர மொழியையும் ஆன்மீக மற்றும் மனத்தைச் சார்ந்த சில அனுபவங்களையும் எடுத்துக் கூறப் பயன்படுத்தினர்.

ஆ) புதுமைகளும் விநோதமான சில நிகழ்ச்சிகளும் வாழ்வில் ஒத்துக்கொள்ளப் பட்ட சில உண்மைகள். இதற்கெதிரான பகுத்தறிவு வாதம் எதுவும் எழவில்லை. இவை அறிவு சார்ந்த விளக்கங்களுக்குட்பட்டவையன்று. எனவே நவீன காலத்தில் ஆராய்ச்சி நடத்துபவர்கள் இத்தகைய செமித்தியப் பழக்கங்களை மனதில் கொண்டு நடந்து கொள்ள வேண்டும். இவற்றிற்கு இயற்கை சார்ந்த விளக்கங்கள் கூற முயல்வது இவற்றின் ஆன்மீக மதிப்பை அழித்துவிடும்.

எரியேல் (ERIEL இறைவன் காண்பாராக)

தோலாவின் புதல்வர்களில் ஒருவர் அல்லது வழித்தோன்றல். இசக்கார் இனத்தில் ஒரு குடும்பத் தலைவர் (1 நாள் 7:2).

எரியோத்து (JERIOTH கூடாரங்கள்)

கெசிரோனின் மகனான காலேபின் மனைவியருள் ஒருவர் (1 நாள் 2:18). மேசரோடிக் வாசகம் தெளிவாக இல்லை. எரியோத்து அசுபாவின் மற்றொரு பெயராக இருக்க வேண்டும், அல்லது அசுபா என்பவள் எரியோத்து என்ற மற்றொரு மனிதருக்கு மனைவியாக இருந்திருக்க வேண்டும்.

எருசலேம் (JERUSALEM அமைதியின், நிறைவின் நகரம்)

எருசலேம் இஸ்ராயேலின் ஒன்றுபட்ட அரசிற்கும். யூதாவிற்கும் தலைநகராக உள்ள தாவீதின் நகரம்; யூதர், கிறிஸ்தவர் மற்றும் இஸ்லாமியரின் புனித நகரம். ஆனால் கிறிஸ்தவ நோக்கில், இறைத்திட்டத்தில் இதனுடைய பாகம் பழமையுடையதாகும். இப்போது இதற்குப் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட ஆழ்ந்த பொருள் மட்டுமே நிலைத்துள்ளது.

1. புவியியல்:-

பாலஸ்தீனத்தின் மத்திய மலைத்தொடரை ஒட்டியும், மத்தியதரைக்கடலினின்று 58 கி.மீ. கிழக்கிலும், சாக்கடலின் வட முனையினின்று 26 கி.மீ. மேற்கிலும் எருசலேம் அமைந்துள்ளது. செக்கேமிலிருந்து கெபிரோனுக்குச் செல்கின்ற பழைய வடக்கு-தெற்கான சாலைக்குச் சற்றுக் கிழக்கிலும் எரிகோவிலிருந்தான கிழக்கு-மேற்கான சாலையின் முடிவிலிருந்தும், மற்றும் மேற்காக மத்தியதரைப் பகுதியினின்று பல்வேறு முனைகளுக்கு மேற்காக நடத்திச் செல்பவைகளினின்றும் 13 கி.மீ. தொலைவிலும், எருசலேம் அமைந்துள்ளது. நகரானது, பென்யாமினுடைய மலைப்பகுதியின் மேட்

டுச் சமவெளிக்கு ஒத்த மட்டத்தில், கடல் மட்டத்திலிருந்து சுமார் 640-770 மீ (1500-2100 அடி) உயரத்தில் அமைந்துள்ளது.

இப்பழமையான நகரம் கிழக்கே, ஒலிவ மலையினின்று அதனைப் பிரிக்கின்ற கித்ரோன் பள்ளத்தாக்கையும், மேற்கிலும் தெற்கிலும் இன்னோம் பள்ளத்தாக்கையும் எல்லையாகக் கொண்டுள்ளது. நகரின் வடக்கு எல்லைகள் மத்திய மலைத்தொடருடன் இணைந்துள்ளதால், அதற்குத் திட்டவட்டமான விவரிப்பு அளிக்கமுடியாது. இத்தன்மை, புறத்திலிருந்து வரும் தாக்குதலுக்கு எளியதாக்குகிறது. இந்நகரானது, தீரோபேயன் என்னும் மத்திய வடக்கு தெற்குப் பள்ளத்தாக்கினால் இரண்டு முக்கிய மலை முகடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளத்தாக்கு நகரின் தென்கிழக்கு மூலையில் இன்னோம் மற்றும் கித்ரோன் பள்ளத்தாக்குகளை இணைத்து ''வாடி ஏன்-நார்'' என்னும் ஓடையாக அமைந்துள்ளது. தீரோபேயன் மற்றும் கித்ரோன் பள்ளத்தாக்குகளுக்கு இடையிலான கிழக்கு மலை முகடு, வடக்கில் மோரீயா மலை அல்லது ஆலய மலையையும், தெற்கில் ஒடுக்கமான சரிவான ஒப்போலையும் கொண்டுள்ளது. இன்னோம் மற்றும் தீரோபேயன் பள்ளத்தாக்குகளுக்கு இடையிலுள்ள பெரிய மேற்கு மலை முகடு தீரோபேயனின் ஒரு கிளையாகிய கிழக்கு-மேற்குக் குறுக்குப் பள்ளத்தாக்கினால் மேலும் பிரிக்கப்படலாம்.

நவீன கிறிஸ்துவப் பகுதிக்கு ஒத்த வடக்கிலுள்ள காரேப் மலையானது, பழைய நகரின் மிக உயர்ந்த பகுதியாக இருந்தது. அதன் கீழான பகுதிதான், சீயோன் மலை என்று இப்போது தவறாக அழைக்கப்படுகிறது.

நகரின் முக்கிய தண்ணீர் வசதியானது, தாவீதினுடைய மூல நகரின் வடமுனைக்கு வெளியே கித்ரோன் பள்ளத்தாக்கில் அமைக்கப்பட்டிருந்த கன்னியின் நீரூற்று எனப்படும் கீகோன் நீர்ச்சுனையாகும். நகரினுடைய வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் சுனையின். நீர் நகருக்கு எப்போதும் கிடைக்கு மாறு சுரங்க வழிகள் அல்லது குடைந்த வழிகள் அமைக்கப்பட்டன. அதனுடைய தொடர்ச்சியற்ற நீரோட்டமானது கால்வாய்களையும், சேர்த்து வைக்கும் குளங்களையும் கட்டுவதை அவசியப்படுத்தியது. இன்னோம் மற்றும் கித்ரோன் பள்ளத்தாக்குகள் சேருமிடத்திலிருந்து 210 மீ (690 அடி) தெற்கே அமைந்துள்ள ஏன்ரோகேலானது (அநேகமாக நவீன, பிர்-அய்யூப்) சுற்றுச் சுவர்களுக்கு உட்பட்ட நகருக்குக் குறைந்த அளவிலேயே அணுகக் கூடியதாய் இருந்ததால் நீர் அளிக்கும் முக்கிய மூலமாக அமையவில்லை எனலாம்.

2. வரலாறு:-

குடியேற்றம் பற்றிய கற்கால மற்றும் இடைக்கற்காலத்திய தொன்மையான சுவடுகள் இரப்பாயிம் பள்ளத்தாக்கை நோக்கி அமைந்துள்ள இன்னோம் பள்ளத்தாக்கின் மேற்கு மலைமுகட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உண்மையான எருசலேமானது முதலில் செம்புக் காலத்தில் (கி.மு. நான்காவது ஆயிரமாண்டின் இறுதியில்) ஒப்பேல் மலைமுகட்டில் குடியேற்றம் செய்யப்பட்டது. பின்னர் மூன்றாவது ஆயிரமாண்டில் சுவரெழுப்பப்படாத கிராமம் தோன்றியது. எபிலா பலகைகளின் (2400) முன்பதிப்புகளில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள 'சலிம்' இதுவாக இருக்கலாம்.

மேற்கு முகட்டையும் ஒப்பேலின் கிழக்குச் சரிவுகளையும் சூழ்ந்துள்ள மதில்சுவருடைய நகரின் எஞ்சிய இடிபாடுகள் இடைப்பட்ட வெண்கலக் காலத்தினைக் குறிக்கின்ற (2100-1555) பத்தொன்பதாம் நூற்றாண்டு எகிப்திய வசை நூல்களில் அவ்சாமென் அல்லது ரூஷாலிமம் என்று அழைக்கப்படும் இப்பகுதி மெல்க்கீசேதேக்கு அரசனாக இருந்த சாலேமாக இருக்கலாம் (ஆதி 14:18).

பிந்தைய வெண்கலக் காலத்தில் (1550-1200), இந்நகரானது கானானியரின் (எபூசியர்) ஆதிக்கத்தின் கீழ் வந்தது (ஆதி 10:16). பதினான்காம் நூற்றாண்டின் அமர்னா கடிதங்களில், எருசலேமின் எமோரிய அரசனா

கிய அப்து-கெபா, கபீருவின் செயலைப்பற்றியும் முறையிடுகிறார். அவரே மற்றப் பாலஸ்தீன நகரங்களைச் சூறையாடுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறார். மக்களின் கலப்பினத்தன்மை எச 16:3.45-ஐ நினைவுபடுத்துகிறது. பென்யாமினுக்கு ஒதுக்கப்பட்ட நிலப் பரப்பில் சேர்க்கப்பட்டிருந்தாலும் (யோசு 18:16,28) (எபூசு எனப்பட்ட) நகரானது முன்னேறும் இஸ்ராயேலரை எதிர்த்து நின்று (10:1 தொ), கூட்டமைப்பின் காலம் முழுவதும் எபூசியரின் ஆதிக்கத்திலேயே இருந்தது (15:63; நீதி 1:21; 3:5; 1:8). ஏறத்தாழ 1300-ஐ ஒட்டிக் கிழக்குச் சரிவுகளில் கற்கள் பாவப்பட்டன (2 சாமு 5:9; 1 நாள் 11:9).

கெபிரோனில் தன்னுடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில், இஸ்ராயேலுக்கும் யூதாவிற்கும் அரசனாக அறிவிக்கப்பட்டபின், தன்னுடைய இரட்டை அரசுரிமையைச் செயல்படுத்தப் பொதுவான இடமாக, தாவீது எருசலேமை நாடினார். மதில் சூழ்ந்த நகருக்குக் கீகோன் நீர்ச்சுனையினின்று தண்ணீர் செல்லும் செங்குத்தான கரங்கக் கால்வாய் வழியாகத் தமது தளபதி யோவாபை அனுப்பாமல் கால்வாயினின்று நீர் செலுத்தும் பகுதிக்குச் செல்கின்ற கரங்கவழியை வெட்டி விடுவதன் மூலம், தாவீது இதனை நிறைவேற்றுகின்றார் (2 சாமு 5:6-8; 1 நாள் 11:4-6). வியாபார நோக்கிலும், இராணுவ நோக்கிலும் முதன்மையான இடமாக இல்லாத, ''சீயோனின் கோட்டையானது'', தாவீதின் தலைநகருக்கு ஒரு ஞானமுள்ள அரசியல் தேர்வாக விளங்கியது. யூதாவிற்கும் பென்யாமினுக்கும் இடையில் இதுவரை வெற்றி கொள்ளப்படாத பகுதியின் மத்தியில் அமைந்து, ''தாவீதின் நகரானது'', அரசனின் சமய மையமாகியது. மேலும் தாவீது அநேகமாக நகரின் வட பகுதியிலுள்ள மோரீய மலையில், அரவுனாவின் புனித சூட்டடிப்புக் களத்திற்குக் கூடாரத்தையும், உடன்படிக்கைப் பேழையையும் மாற்றி அமைத்தார் (2 சாமு 6:1-15; 24:18-25; 1 நாள் 22:1; 2 நாள் 3:1). தாவீது, மில்லோவையும் நகர மதில்சுவரையும் பழுது பார்த்துச் சீரமைத்து (2 சாமு 5:9), அரண் சூழ்ந்த நகருக்குள் ஓர் அரண்மனையும் கட்டினார் (5:11). ஒப்பேலுடன் தொடர்பு கொண்ட நிலையில், அவருடைய அரச கல்லறை எங்கு அமைக்கப்பட்டுள்ளது என்பது இன்னும் உறுதியற்றதாகவே உள்ளது (1 அர 2:10; நெக 3:16).

சாலமோனுடைய பிரம்மாண்டமான கட்டடப்பணியானது, எருசலேமிற்குள்ளும் விரிவான புதிப்பித்தல்களைக் கொண்டிருந்தது. அவற்றில் மிக முக்கியமானது மோரியா மலையில் கட்டப்பட்ட யாவேயின் ஆலயமாகும். இது பெனிக்கிய செல்வாக்கைக் கொண்ட பல்வேறு அறைகளைக் கொண்ட ஒரு விரிவான கட்டடமாகும் (1 அர 6-8; 2 நாள் 2-4).

இதில் அரண்மனையும், ஆட்சி அமைப்புக் கட்டடத் தொகுப்பில், ''லெபனோனின் வனம்'' என்ற மாளிகையும் (1 அர 7:2-5), ''தூண் மண்டபமும் (7:6), அரியணை மன்றமும் (7:7), குடியிருப்புகளும் (7:8), மற்றும் பிற அமைப்புகளும் (7:9-12), உள்ளடங்கும். சாலமோன், நகர மதில்சுவரை மீண்டும் பெரிதாகக் கட்டினார் (3:1). இவ்வாறு, நகரின் பரப்பளவு 4-5-இலிருந்து 13 கெக்டேராக (11-இலிருந்து 32 ஏக்கராக) விரிவாகிறது. அதனுடைய மக்கள்தொகையும் இரண்டாயிரத்திலிருந்து ஆறாயிரமாக உயர்ந்தது. ஆனால், குடியேறுதலானது தென்மேற்கு மலைவரை (மேல் நகர்) பரவியதா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. இப்போதைய கலப்புத்தன்மையுடைய நகரில் புறவினத்தாரின் வளர்ச்சிக்கான தடயங்கள் காணப்படுகின்றன. ஒலிவமலையின் தென்பகுதியில் இஸ்ராயேலரல்லாதோரின் தெய்வங்களுக்கான கோவில்கள் இடம் பெற்றன (11:7).

இரட்டை முடியாட்சியினின்று வட கோத்திரங்கள் விலகிய சிறிது காலத்திற்குப் பின், எகிப்தினுடைய பாவோன் சீசாக்கு, எருசலேமைச் சூறையாடினான் (14:25). ஆயினும், நகரானது யூதாவின் வழிபாட்டு மையமாகத் தொடர்ந்து வளர்ச்சியுற்றது (ஆலயத்தில் சேகரிக்கப்பட்ட பெரும் செல்வத்தின்

சான்று 15:18). ஆலயத்தைப் பழுது பார்க்கும் யோவாசு அரசனுடைய செயலைத் தவிர்த்து (அர 12:4-16), ஒன்பதாவது மற்றும் எட்டாவது நூற்றாண்டுகளில் கட்டடப்பணியானது, யூதாவைச் சுற்றியுள்ளோரின் தாக்குதல்களுக்கும், மிரட்டல்களுக்கும் பதிலளிக்கும் விதமாக (2 அர 12:17; 16:5), நகரின் மதில் சுவர்களையும் மற்றப் பாதுகாப்பு அமைப்புகளையும் அதிகரித்தலிலும், உருவாக்குவதிலும் வரையறை செய்யப்பட்டிருந்தது (15: 35; 2 நாள் 26:9,15; 27:3). கோவிலைப் பழுது பார்த்துத், தூய்மைப்படுத்தியதுடன் (2 நாள் 29:3-19), நகர மதில் சுவர்களை வலிமைப் படுத்தி, வாசல்களாலும் கோபுரங்களாலும் அதனைப் பாதுகாப்பதன்மூலம் வடக்கு அரசின் அசீரியத் தோல்விக்கு (32:5; ஏச 22:10), எசக்கியா(715-687) பதிலளிக்கின்றார். இவற்றில் மிக முக்கியமானது கீகோன் சுனையைச் சுற்றிப் பாதுகாப்பு செய்து, அதனுடைய நீரைச் சிலோவாம் சுரங்க வழியின் மூலம் வாய்க்காலில் அனுப்பி, நீர் வரவை முறைப் படுத்தியதாகும் (2 அர 20:20; 2 நாள் 32:2-4; ஏச 22:9; சீரா 48:17). எசக்கியா கைதியாக்கப் பட்டாலும், சனகெரிபின் முற்றுகையினின்று நகரம்தப்பியது (2 அர 8:13 தொ; 19:35-36; ஏச 37:36-37). மதில் சுவர்கள் தீரோபேயேன் பள்ளத்தாக்குவரை மட்டுமே பரவியிருந்தது. இக்காலத்திற்குள் நகரானது மேற்கிலுள்ள மலைவரைபரவியிருந்ததைத் தொல்பொருள் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (2 அர 22:14; 2 நாள் 34:22). இது 60 கெக்டேர் (150 ஏக்கர்) நிலத்துடன், இருபத்து நான்காயிரம் மக்களையும் கொண்டிருந்தது. ஏழாவது நூற்றாண்டில், மனாசே, ஒப்பேலில் மூல நகருக்கு வெளிச்சுவர் ஒன்றை எழுப்பினார் (2 நாள் 33:14). யோசியாவின் சமய சீர்திருத்தங்கள் புறவினத்தாரின் கோவில்களை அழிப்பதையும் (34:3-4), தேவாலயத்தைச் செப்பனிடுவதையும் (2 அரச 22:3 தொ; 2 நாள் 34:8 தொ) கொண்டிருந்தன. அதன் பின்னர், விரைவிலேயே எருசலேம், புதிய பாபிலோனியப் பேரரசின் வல்லமையை உணர ஆரம்பித்தது. 597-இல் யோயாக்கினும், ஏழை மக்களைத் தவிர்த்து மற்ற அனைவரும் பாபிலோனுக்குக் கைதிகளாக எடுத்துச் செல்லப்பட்டனர் (2 அர 24:10-16; 2 நாள் 36:10; எச 40;1). 588-இல் முதலாம் நெபுக்கதுனேசார் நகரை முற்றுகையிட்டார் (2 அர 25:1-2; எரே 39:1; 52:4-5; எச 24:1-2). இரண்டு ஆண்டுக்குள்ளாகப் பஞ்சத்தினாலும் உள்நாட்டுக் குழப்பத்தினாலும் அலைக்கழிக்கப்பட்டு எருசலேம் (2 அர 25:3-4; எரே 52:6) பாபிலோனியரிடம் விழுந்தது. அவர்கள் ஆலயத்தை அழித்து, நகரை எரித்து (2 அர 25:9-10.13-17; எரே 52:13-14,17 தொ) எஞ்சியிருந்த மக்களை நாடு கடத்தினர் (2 அர 25:11-12.21; எரே 52:28-30).

நாடு கடத்தலுக்குப் பின்னர், எருசலேமானது உருவத்திலும், மேன்மையிலும் பெருமளவு குறைந்துவிட்டது. நாடு கடத்தப்பட்ட யூதர்களில் குறைந்த எண்ணிக்கையினரே திரும்பி வந்தனர். நாட்டிலே தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டோர் மற்றும் நாட்டு மக்களுடன் சேர்ந்து, மக்கள் தொகை மொத்தம் இரண்டாயிரமாக இருந்தது. ஆயினும், ஆலயத்தைப் புதுப்பிக்கும் முயற்சிகள் உடனே தொடங்கின. உள்ளூர் எதிர்ப்பு இருந்தாலும் பணியானது ஏறத்தாழ 516-க்குள் முடிவடைந்தது (எஸ் 3:1-4:6; 4:24-6:22). ஆயினும், ஐந்தாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை, நகரின் கோட்டை கொத்தளங்களை நெகமியா செப்பனிடவில்லை. இப்போது அது ஒப்பேல் மலைமுகட்டின் கிழக்குப் பகுதிக்கு உட்பட்ட இடிந்த மண்மேடாக இருந்தது (நெக 2:11-17; 3:1-32; 12:31-43).

தோலாமியர் மற்றும் செலூக்கிய ஆட்சியின் கீழ் (மூன்றாவது மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம்) எருசலேமானது பெருமளவில் கிரேக்க ஆதிக்கத்திற்கு உட்பட்டது. ஆலயத்தைக் கொள்ளையிட்டுப் பாழாக்கி (1 மக் 1:21-23; 2 மக் 5:15-21) அங்கு சேயசிற்கு ஒரு பீடத்தையும் எழுப்பிய (1 மக் 1:54; 2 மக் 5:6:2) நான்காவது அந்தியோக்கு எப்பிபானின்கீழ் குறிப்பாகக் கிரேக்க ஆதிக்கம் உணரப்பட்டது. விளையாட்டரங்கைக் கட்டியெழுப்பி (1 மக் 1:14; 2 மக் 4:9-12), விளையாட்டுப் போட்டிகளை

வளர்த்ததல் மூலம் (4:17) கிரேக்க ஆதிக்கத்தை மேலும் வளரச் செய்தார். யூதரில் அவருடைய ஆதரவாளர்கள் ''தாவீதின் நகரிலோ,'' அதன் வடபுறத்திலோ ஒரு கோட்டையைக் கட்டினர் (1 மக் 1:33; 14:36). மக்கபேயரின் புரட்சியானது இத்தகைய அவதூறுகளை முடிவுக்குக் கொண்டு வந்தது. 164-ல் யூதா மக்கபேயு ஆலயத்தை மீண்டும் எழுப்பினார் (4:36-59; 2 மக் 10:1-8). சீமோனுடையவையாகக் கருதப்பட்ட (14: 37), மேற்கு மலைமுகடு முழுவதையும் சூழ்ந்துள்ள கட்டடங்கள் மற்றும் பாதுகாப்பு அரண்களின் எஞ்சிய சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை இக்காலத்திற்குரியவையாகக் காலம் குறிக்கப்படுகின்றன.

கி.மு. 63-இல் ஆலயத்தின் சுவர்களை உடைத்து, போம்பே எருசலேமை உரோமைக்காக வென்றார். 40-ஆம் ஆண்டில் பார்த்தியரின் துணையுடன் அந்நிகோனஸ், நகரைக் கைப்பற்றினாலும், 37-இல் பெரிய ஏரோது அதனை மீண்டும் வென்றார். யூதேயாவின் அரசன் என்ற முறையில் (37:4) கசமோனிய சுவர்களை வலிமைப்படுத்தி, நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது சுவர்களை எழுப்பிப், பரந்த கட்டடத் திட்டத்தை நடத்தினார். சுவர்கள் இருந்த இடம் பற்றிய தர்க்கம் இன்றுமுள்ளது. மேற்கு முகட்டில் கோபுரங்களையும் (பிற்காலத்தில் ஆளுநர்களின் தலைமையகம்) கொண்ட பிரம்மாண்டமான அரண்மனை ஒன்றை அவர் கட்டினார். ஆலயத்தின் வடமேற்குத் திசையில் அந்தோனியா கோட்டையாக, கசமோனியா கோட்டையை மீண்டும் கட்டியெழுப்பினார். அவருடைய மிக முக்கிய திட்டமானது ஆலயத்தைத் திரும்பக் கட்டி, அதனுடைய சுற்றுப்புற இடங்களை விரிவுபடுத்தியதாகும். அரங்கம், சந்தை அல்லது பொது முனை, நீர் நிலைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள், மற்றும் கோவில் பகுதியையும் மேல் நகரையும் இணைக்கின்ற மூடப்பட்ட நடைபாதை அல்லது பாலம் என்பன மற்றப் புதுமுயற்சிகளாகும். இயேசுவின் வாழ்வு (உ.ம்: கோவிலில் காணிக்கையாக்குதல், லூக் 2:22-29; ஆண்டு திருயாத்திரை, 2:41-50; சாத்தானால் சோதிக்கப்படுதல், மத் 4:5; லூக் 4:9; பாடுகள் மற்றும் உயிர்ப்பு, மத் 21-28) மற்றும் பணியின் பல்வேறு நிகழ்ச்சிகள் (யோவான் 2:12-25; 5:1-18;7:1 தொ) எரோதுவின் எருசலேமிலேயே நடைபெற்றன. பவுல் கைது செய்யப்பட்டுத் தலைமைச்சங்கத்தின் முன் நிறுத்தப்பட்டதும் (அ.ப. 21:27-23:10), திருச்சபையில் புறவினத்தாரின் பங்கு பற்றிய சங்கமும் (15:1 தொ; கலா 2:1-10) இங்குதான் நிகழ்ந்தது. இக்கால நிகழ்ச்சிகளை நினைவுகூறும் விதமாகப் பல பாரம்பரியமான இடங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் எருசலேமின் மக்கள் தொகையானது இருபது மற்றும் ஐம்பதாயிரத்திற்கு இடைப்பட்டதாக இருக்குமென்று கணிக்கப்படுகிறது.

கொடுமையான, உணர்ச்சியற்ற உரோமை ஆட்சியில் வெறுப்புற்றவர்களாய் கி.பி. 66-இல் எருசலேமின் யூதர்கள் கிளர்ச்சி செய்த பொழுது, கிறிஸ்தவ மக்கள் ஓடிவிட்டனர். 68-இல் வெசுபேசியன் முற்றுகையை ஆரம்பித்துப் பேரரசனாக அறிவிக்கப்பட்டவுடன் பின்வாங்கிக் கொண்டான். அவனுடைய மகன் தீத்துவின்கீழ் நான்கு படைப்பிரிவுகள் நகரைச் சூழ்ந்துகொண்டு, 70-இல் அதனைக் கைப்பற்றி ஆலயத்தை எரித்து, மக்களைக் கொன்றும் அடிமைப்படுத்தியும், அரண்மனைக் கோபுரங்களைத் தவிர்த்து. மற்ற அனைத்தையும் தரைமட்டமாக்கினர். 135-ஆம் ஆண்டில் பார் கோக்பாவின் கிளர்ச்சிக்குப் பதிலடியாக எருசலேமின் மண்மேட்டிற்குக் கீழே உள்ள பகுதியை உழுது, யூதர்கள் யாவரும் தடை செய்யப்பட்ட ஏலியா காபித்தோலினா என்னும் முழுவதும் உரோமைத் தன்மையையுடைய நகரை மேற்கு மலை முகட்டில் கட்டினார். நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் பேரரசர் நகரைக் கிறிஸ்தவ மையமாக ஏற்படுத்தினார். அவருடைய தாய் எலேனா பல பாரம்பரியமான இடங்களில் திருத்தலங்களை அமைத்தார்.

3. மாதிரி நகர்:-

இஸ்ராயேலுடைய சமயத்தின் மையமாகவும், ஆண்டவருடைய அபிடேகம் செய்யப்பட்ட (தாவீதின் வழியாக) அரசனின் அரியணையாகவும், ஆலயம் மற்றும் வழிபாட்டுக் கூடாரத்தினுடைய பிரசன்னத்தின் மூலம் இறைவனின் மண்ணுலக உறைவிடமாகவும் (சங் 48:1-3; ஏசா 2:3) உண்மையான எருசலேமானது, காலப்போக்கில் இறைவனுடைய மக்களையும் அரசையும் அடையாளமாகக் குறித்து வந்தது (ஏச 2:2-3; 40:4; லூக் 21:24).

தங்களுடைய விரக்தியில், நாடு கடத்தப்பட்டோர் புதிதாகக் கட்டப்பட்ட எருசலேமைக்காண எதிர்நோக்கியிருந்தனர் (எச 36: 28). இக்காட்சியானது, இறையரசிற்கு மாதிரியான தலைநகராக மாற்றியமைக்கப்பட்ட நகரையும் (செ 40-48; ''ஆண்டவர் அங்குள்ளார்'' எனப்பட 48:35; மலா 4:1), காலத்தின் இறுதியில் நிறைவடைய உள்ள புதுப் படைப்பின் அடிப்படையையும் (திருவெளி 21:1-22:5) சுட்டிக்காட்டுவதாக அமைந்தது.

4. இறையியல் சிந்தனை:-

I பழைய ஏற்பாடு

1) அழைப்பு:-

அ) ''உர்சாலிம்'' என்னும் கானானிய நகரானது (சாலேம் என்னும் கடவுளின் அடித்தளம்), கி.மு. 14-ஆம் நூற்றாண்டு அக்காதியஆவணங்களிலிருந்து(தேல்-எல்-அமர்னா கடிதங்கள்) அறியப்படுகிறது. விவிலிய மரமானது ஆபிரகாமின் காலத்தவராகிய மெல்க்கிசேதேக்கின் நகரை இதில் அடையாளம் காண்கிறது. (ஆதி 14:18 தொ), ஆபிரகாம் தனது பலியை அளித்த மோரியா மலையுடன் இந்த இடத்தை அடையாளம் காண்கிறது (2 நாள் 3:1). நீதிபதிகளின் காலத்தில், வெற்றியை நோக்கிய தங்களது முதல் முயற்சியில் இஸ்ராயேலர்கள் தோல்வியடைந்தமையால் (நீதி 1:21), எருசலேமானது யூதரல்லாதோரின் நகராகவே இருந்தது (19:11-12). தாவீது தமது நகர் அரணைத் ''தாவீதின் நகரம்'' (5:9) என்று அழைத்து, அதனை வலிமைப்படுத்தித், தமது அரசினுடைய அரசியல் தலைநகராக்கினார். உடன் படிக்கைப் பேழையை அங்குக் கொண்டு வந்ததன்மூலம் (2 சாமு 6), இதற்குமுன் சீலோ-வில் இருந்த, பன்னிரு கோத்திரக் கூட்டு அமைப்புகளின் வழிபாட்டுத் தலத்தை அங்கே உருவாக்கினார். நாத்தானுடைய இறைவாக்கு, இறைவன் இவ்வுறைவிடத்தை ஏற்றுக் கொள்வார் என்னும் நம்பிக்கையைத் தூண்டியது (2 சாமு 7). அவ்விடத்தில் ஆலயத்தைக் கட்டியெழுப்பி, ஆடம்பரமாக அர்ப்பணம் செய்ததன் மூலம், சாலமோன் தம்முடைய தந்தையின் பணியை நிறைவு செய்தார் (1 அரச 6-8). இவ்வாறாக, நகரின் சமயத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டது.

ஆ) புனித நாட்டில் எருசலேமானது தனிச் சிறப்பான, இடத்தை வகிக்கிறது. தாவீதின் அரசமரபில் தனிப்பட்ட உடைமை என்ற நிலையில் இது கோத்திரங்களுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அரசியல் தலைநகர் என்ற அளவில் இறைமக்களுடைய தேசிய ஒற்றுமையை இது குறிப்பிடுகின்றது. சமயத் தலைநகர் என்ற அளவில், யாவே தமது உறைவிடமாகத் தேர்ந்தெடுத்த சீயோன் மலையிலேயே தங்கியிருப்பதால், அது இஸ்ராயேலின் ஆன்மீக மையமாக உள்ளது (சங் 78:68-69; 132:13-18). எனவே அதற்கு இரட்டிப்புப் பொருள் உண்டு; அது ஒரு புனித நகரமாகும். இஸ்ராயேலின் விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் அதற்கு முதன்மையான பங்கு உண்டு.

2) நாடகம்:-

இப்பொருளின் காரணமாக, அரசாட்சிக் காலத்தில் இறைமக்களுடைய அனைத்து அமைப்புகளையும் குலுக்கிய நாடகத்திற்குள் எருசலேம் கொண்டுவரப்பட்டது. அது இறைவனின் உதவியையும், சினத்தையும் மாற்றி மாற்றி அனுபவிக்கிறது.

அ) சாலமோனுடைய காலத்தில் அடைந்த உயர்ந்த நிலைக்குப் பின்னர், அவருடைய மரணத்தைப் பின்தொடர்ந்து பிளவின் விளைவுகளை எருசலேம் உடனே

அனுபவிக்கத் தொடங்கியது. அரசராகமமானது இதில் அரசனுடைய பிரமாணிக்கமின்மைக்கான இறை தண்டனையைக் காண்கிறது (1 அர 11). யூதாவுடன் இணைந்த நிலையில், இந்நகரானது சுருங்கிய அரசிற்குத் தொடர்ந்து தலைநகராக இருந்து, ஆலயத்தையும் கொண்டிருந்தது. ஆனால், எரொபயாமினால் இஸ்ராயேலில் அமைக்கப்பட்ட புனித இடங்கள் அதனுடன் போட்டியிட்டன (12:26-33). விரைவிலேயே, சமாரியாவின் தோற்றமானது (16:24) எதிரான தலைநகரை உருவாக்கியது. தாவீதினால் நிறைவேற்றப்பட்ட அரசியல் பங்கு மற்றும் சமயப்பங்கு ஆகியவற்றின் இணைப்பானது இவ்வாறாகத் தகர்த்தெறியப்பட்டது.

இவை எல்லாவற்றிற்குப் பின்னும் முக்கியமாக விசுவாசமிக்க யூதர்களின் பார்வையில், எருசலேமின் சிறப்பானது தொடர்ந்து நிலைத்துள்ளது. சமாரியாவின் வீழ்ச்சிக்குப் பிறகு, நம்பிக்கையானது எருசலேமை நோக்கித் திரும்புகின்றது. வடக்குக் கோத்திரங்களை அதோடு ஒன்று சேர்க்க எசக்கியா முயல்கிறார். முதல் சமயச் சீர்திருத்தம் செயல்படுத்தப்படுகிறது (2 அர 18:1-4; 2 நாள் 29-31). அவரது ஆட்சியின் கீழ், சனகெரிபின் முற்றுகைக் காலத்தில் நகரானது அசாதரணமான மீட்பை அனுபவித்தது (2 அர 18;13-19:36). அதனுடைய நினைவானது, புனித நகருக்கு மகிமை அளிக்கும் முறையில் அவர்கள் மனங்களில் பதிப்பிக்கப்பட்டு என்றும் நிலைத்திருக்கும் (சங் 47:5-9). ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர், இந்தப் புனித இடத்தைச் சுற்றி இஸ்ராயேல் இனத்தவரை ஒன்று கூட்ட யோசியா முயற்சித்தார். வழிபாடு மையப்படுத்தப்பட்டது (2 அர 22:1-23:25). தாவீதினுடைய தேசியப்பணியைக் காப்பாற்றும் இறுதி முயற்சி இதுவே.

ஆ) ஆனால் நிகழ்ந்தது என்ன:- ''ஆண்டவருடைய கோபம் இன்னும் தணியவில்லை'' ''நாம் தேர்ந்து கொண்ட எருசலேம் நகரையும், நமது பெயர் இங்கு விளங்கும் என்று 'நாம் கூறிய ஆலயத்தையும் உதறித் தள்ளுவோம்'' என்று அவர் கூறுகிறார் (2 அர 23: 26-27). தற்காலிகச் சீர்திருத்தங்களுக்குப் பிறகும், எருசலேம் நகரானது தனது இறைவனுக்குப் பிரமாணிக்கமற்றதாக இருந்தது. அதுவே அதனுடைய முடிவைத் தீர்மானிக்கிறது. அது, சிலைவழிபாட்டிற்குத் தங்களை அளிக்கின்ற தனது அரசர்களில் பிரமாணிக்கமற்றதாக இருந்தது (2 அர 16:2 தொ; 21:3-9). அது இறைவாக்கினர்களைக் கொடுமைப்படுத்துகிறது (2 நாள் 24:21; எரே 36-38). இறைவாக்குப் போதனைகளை இழிவுபடுத்தி (எரே 20), சிலைவழிபாடு ஆலயத்தில் அமைவதற்கு அனுமதிக்கின்ற (2 அர 21:4-5.7: எச 8) தன்னுடைய குருத்துவத்திலும் அது விசுவாசமற்றதாக உள்ளது. யூதரல்லாதோருடன் கொண்ட உறவுகளால் ஈர்க்கப்பட்டு இறைவனுடைய சட்டத்திற்கு முக்கியத்துவம் தராத அதன் மக்களிலும் அது பிரமாணிக்கமற்றதாக இருந்தது (ஏச 1:16-17; எரே 7:8). ''நீதி நிறைந்திருந்த சீயோன், எப்படித்தான் வேசியாயினளோ?'' (ஏச 1:21). உண்மையான மனமாற்றம் இல்லாவிடின், இறைவனின் கோபம் அதன் மீது திரும்பும்; புனிதமான எஞ்சியோருக்கு மட்டுமே ஏசயா மீட்பைக் காண்கிறார் (ஏச 4:2-3); சீலோவுக்குச் செய்தது போலவே அதனுடைய கோயிலுக்கும் எரேமியா வாக்களிக்கிறார் (எரே 7:14); ஆண்டவர் அதனைக் கைவிடத் தீர்மானம் செய்தபடியால் (எச 10:18 தொ), எசக்கியேல், நகரினுடைய விசுவாசமற்ற செயல்கள் அனைத்தையும் சுருக்கி எடுத்துக்கூறி, அதனுடைய உடனடித் தண்டனையை அறிவிக்கிறார் (எச 1:1-12;23; 24:1-14).

இ) நெபுக்கதுனேசாரின் தாக்குதலினால் விளைந்த அதனுடைய இறுதி அழிவை இத்தகைய மிரட்டல் இறைக்கூற்றுகள் தெளிவுபடுத்துகின்றன. ''நிறைவேற்றப்பட உள்ளது இறைவனின் தண்டனையே'' (எச 9:1-10:7). ஒருமுறை இவ்விளைவு அளிக்கப்பட்ட பின்னர், ''சீயோன் மகள்'' நீண்டு நிலைத்திருக்கும் தனது குற்றத்தை ஏற்க வேண்டியவளாக இருக்கிறாள் (புல 1-2), அவருடைய உரிமைச்சொத்தாகிய எருசலேமின்மீது, புறவினத்தார் செய்த அதே தீமை

யைப் புறவினத்தார் படவேண்டுமென அவளுடைய பிள்ளைகள் இறைவனிடம் கெஞ்சுகின்றனர் (சங் 78). இந்நாடகத்தின் முடிவில், அதுமுதல் தோன்றுகின்ற பிரச்சனையானது எதிர்காலத்தைப்பற்றியதாக உள்ளது.

3) புதிய எருசலேமை நோக்கி:-

அ) நாடகத்தை நடத்தி வைத்து அதனுடைய முடிவை அறிவித்த அளவுக்கு இணையாக, இறைவாக்கினர்கள் மற்றொரு எருசலேமை நோக்கித் தங்களுடைய சிந்தனையைத் திருப்புகின்றனர். அதனுடைய துன்பத்திற்குப்பின்னர் மற்றும் ஒருமுறை அது ''நீதியின் நகரமெனவும், பிரமாணிக்கமுள்ள பட்டணமாகவும்'' உருவாகுவதை ஏசயா காண்கிறார் (ஏச 1:26-27). மீண்டும் அமைக்கப்பட்ட இஸ்ராயேலின் மக்கள் சீயோனில் வழிபடத் திரும்பி வரவிருக்கும் நாளினை எரேமியா மனதால் உணர்கிறார் (எரே 31:6.12). பேரின்ப நாட்டின் மையமாகவும் (எச 47:1-48:29), பன்னிரு கோத்திரங்களுக்கும் பரந்து திறந்திருப்பதாகவும் (48:30-35), ''யாவே அங்குள்ளார்'' என்பதைத் தனது பெயராகக் கொண்டதாகவும் (48:35), அதனுடைய ஆலயத்தைச்சுற்றி மீண்டும் கட்டப்பட்டுள்ள வருங்கால நகரைப்பற்றி எசக்கியேல் துல்லியமாக விவரிக்கிறார் (எச 40-46). அடிமைத்தனத்தின்போது, வருங்காலம் பற்றிய இக்கருத்துக்கள் பகட்டான வாக்குறுதிகளாக வளர்ச்சியடைந்தன: இறை சினத்தின் கிண்ணமாகக் காலி செய்யப்பட்டபின் எருசலேம் தனது விழாக்கால ஆடைகளை மீண்டும் கண்டடையும் (எச 51:17-52:2). மீண்டும் யாவேயின் துணைவியாகப் (54:4-10), பகட்டழகுடன் உருவாக்கப்பட்ட அவள் (54:11-12), தன்னுடைய பிள்ளைகள் வியக்கத்தக்க அளவில் பல்கிப்பெருகுவதைக் காண்கிறாள் (54:1 தொ; 49:14-26).

ஆ) சைரசின் ஆணையினால் விளைந்த மீட்சியும் (எஸ் 1-3), ஆலயத்தை மீண்டும் கட்டுவதும் (5-6), இறைவாக்குகளின் நிறைவேற்றத்தை, அண்மையில் அமைத்துள்ளதாகத் தோன்றச் செய்தன. அக்கால இறைவாக்கினர்கள் உலகின் சமய மையமாக உருவாக அழைக்கப்பட்ட நகரின் மாட்சியையும், அதனுடைய ஆலயத்தைப் பற்றியும் அறிவிக்கின்றனர் (ஆகா 2:6-9; ஏச 60:62). உண்மையில் இத்தோற்றமானது விரைவில் சில சாதாரண உண்மைகளை வெளிப்படுத்தி, மீண்டும் அடையப் பெற்ற இன்பவனத்தின் சாயலுடன் கலந்ததாக உருவாகிறது (ஏச 65:16). எல்லையற்ற மகிழ்ச்சியுடன் சீயோன், புதிய மக்களுக்குப் பிறப்பளிக்கப்போகின்றது (66:6-14). இவை இப்படியிருந்தாலும், செயல்முறையான சூழ்நிலை ஒளிமங்கியதாக உள்ளது; நகரானது துன்பங்களில் தன்னுடைய பங்கினைத் தொடர்ந்து அனுபவிக்கிறது. சுவர்கள் நீண்ட காலத்திற்குச் சிதைந்தவையாகவே உள்ளன (சங் 51:20; 102:14-18). அவற்றை மீண்டும் கட்டியெழுப்ப நெகமியாவின் வலிமை தேவைப்படுகிறது (நெக 1-12). அதனுடைய மீட்சியாளர்களுடைய செயல்பாட்டின்கீழ், அந்நிய செல்வாக்குகளினின்று இயன்ற அளவு பிரிக்கப்பட்ட நிலையில், அது ''தோராவின் கோட்டையாக'' உருவாகிறது (நெக 13). ஆனால், அதுமுதல், சிறிய மாநிலத்தின் தலைநகரான இது, எவ்வித அரசியலின் முக்கியத்துவமும் அற்றதாக மாறுகிறது.

இ) தனது சமய அளவில் எருசலேம் இப்போது தன்னுடைய முக்கிய பணியை நிறைவேற்றுகிறது. எல்லாத் திசைகளினின்றும் யூதர்கள் அதனை நோக்கி வருகின்றனர். (தானி 6:11). மக்கள் அங்குத் திருயாத்திரையாகச் சென்று (சங் 122), அங்கே தங்கியிருப்பதில் அகமகிழ்கின்றனர் (சங் 84). கோயிலில் அழகிய வழிபாடுகள் அமைக்கப்பட்ட காலம் இதுவே (சீரா 50:1-21). யாவே அங்கு தங்கியிருப்பதைச் சங்கீதங்கள் சிறப்பிக்கின்றன (சங் 46:48). எல்லா நாடுகளுக்கும் தாயாக, விளங்குமாறு எருசலேம் அழைக்கப்படுகிறது (சங் 87). அதன் பெயரின் பொருளை மனதில் கொண்டு ''சமாதானத்தை'' விரும்புகின்றனர் (சங் 122:6-9). இறைவனைப் புகழ ஒருவரையொருவர் அழைக்கின்றனர் (சங் 147:12 தொ). இறுதியான இறைவாக்கு வாசகங்கள் இறுதிக்காலத் தண்டனையின் அரங்கமாகவும் (யோவே 4:9-17)

எல்லா மனித இனத்திற்கும் அளிக்கப்படும் மகிழ்ச்சி விழாவின் அரங்கமாகவும் அதனைக் காண்கின்றனர் (ஏச 25:6 தொ). அவர்கள் அதனை இறுதி மீட்பாகவும், உருவ மாற்றமாகவும் காண்கின்றனர் (செக் 12:14). இறைவன் அதற்கென ஒதுக்கி வைத்துள்ள மகிழ்ச்சியை முன்கூட்டியே கவிதைச் சொற்களால் விவரிப்பதன் மூலம் (தோபி 13), அவர்கள் ஒருவரையொருவர் நம்பிக்கை கொள்ள அழைக்கின்றனர் (பாரு 4:39-5:9). ஆனால் அதனைத் தீட்டுப்படுத்தவுள்ள அந்தியோக்கு அரசனுக்குக்கீழ், அது இன்னமும் துன்பத்தைச் சந்திக்கும் (1 மக் 1:36-40), ஆனால், அவ்வளவு ஒளியற்ற நிலையில் உள்ள இந்த வரலாற்று உண்மைக்கு முரண்பட்ட நிலையில், யூத வெளிப்பாட்டு இலக்கியங்கள் வருங்கால நகரைப்பற்றிய விசித்திரம் மிக்க உருவத்தை அளிக்கும். அவர்களுக்கு இனிமேல் விண்ணக எருசலேமே நிலைபெற்று விளங்கும். அதன் நிறைவற்ற பதிப்பே தாவீதின் நகரமாகும். இறுதிக் காலங்களில் இந்த எருசலேமானது இறைவனால் வெளிப்படுத்தப்பட்டு, மண்ணுலகிற்கு இறங்கி வரும். வருங்கால அமைப்பின் விஞ்சிய நிலையை, தனது பொருள் மிக்க உருவத்தை ஏற்கனவே கொண்டுள்ள வரலாற்று அனுபவத்துடன் ஒப்பிடுவதை விட, வேறெந்த உயர்ந்த வகையில் எடுத்துக் கூற முடியும்?

II. புதிய ஏற்பாடு:-

1) மண்ணுலக எருசலேமும் மீட்பின் நிறைவும்:-

மாற்கு முதல் யோவான் வரை, எருசலேமானது நற்செய்தி நூல்கள் வளர்கின்ற இடத்தைக் கொண்டுள்ளது. ஆனால் லூக்கா நற்செய்தியில் மட்டுமே, நற்செய்திக்கும் அப்போஸ்தலர் பணிக்கும் இடையிலான கீலாக அமைந்து அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

அ) மாற்குவின் நற்செய்திப்படி திருமுழுக்கு யோவானின் போதனையின் எதிரொலியானது எருசலேம் வரை சென்றடைகிறது (மாற் 1:5). ஆனால், இயேசுவால் அறிவிக்கப்பட்ட அரசினுடைய நற்செய்தியானது கலிலேயாவில் தொடங்கி, முதலில் அங்கேயே வரையறுக்கப்பட்டுள்ளது (1:28,39). கலிலேய நகரங்களின் விசுவாசமின்மையைச் சந்தித்துவிட்டு (6:1-6; 8:11 தொ; 9:30), தமது பாடுகளைப்பற்றி மும்முறை அறிவித்த பின்னரே, இயேசு எருசலேமை நோக்கித் திரும்புகிறார். தமது பலியை முழுமைப் படுத்தவே அவர் அங்கு செல்கிறார் (10:32 தொ). அதுமுதல், நாடகம் அரங்கேறுகிறது: இறைவாக்குகளில் குறிப்பிட்டபடியே, அவர் வெற்றிகரமாக நகருக்குள் நுழைகிறார் (11:1-11); ஆலயத்தைத் தூய்மைப்படுத்துவதன்மூலம் இறைவாக்கினராகச் செயல்படுகிறார் (11:15-19). வெற்றி அதிகம் நீடிக்கவில்லை. ஏனெனில் யூத அதிகாரிகளின் எதிர்ப்பை எதிர்கொள்கிறார் (11:27-12:40). அதனாலேயே, தன்னை எதிர்கொள்கின்ற மரணத்தின் பின்னணியில் (12:6-9), நகரின் தண்டனை மற்றும் அதனுடைய ஆலயம் தீட்டுப்படுதலையும் (13:14-20), காலங் கடந்த சமய நிலவரத்தின் முடிவு மற்றும் இறுதி நிறைவேற்றத்தின் முன்விளைவு (13:24-27) ஆகியவை பற்றியும் முன்னுரைக்கின்றார். உண்மையில் மக்களால் நிராகரிக்கப்பட்டு (15:6-15) அவர்களுடைய தலைவர்களால் தண்டிக்கப்பட்டு (14:53-64), இயேசு நகருக்கு வெளியே சிலுவையில் அறையப்படுகிறார் (15:20 தொ). அவர் இறக்கும்போது, பழமையான புனித இடமானது தனது புனித இயல்பை இழந்துவிட்டது என்பதைக் குறிப்பிடும் வண்ணம், ஆலயத்திரையானது கிழிந்தது (15:33-38). இங்கு எருசலேம் பெரிய மறுதலிப்பின் இடமாக உள்ளது.

ஆ) இந்தத் திட்டத்திற்குள் மத்தேயு பல தனிக்கூறுகளைச் சேர்க்கின்றார். வரவிருக்கும் நாடகமானது இயேசுவின் குழந்தைப் பருவத்திற்கும் பொருந்தக்காட்டப்படுகிறது. யூதரல்லாதோர் விண்மீனால் வழிநடத்தப்பட்டு (எண் 24:17) மெசியாவை ஆராதிக்க பெத்லகேமிற்கு வந்தாலும் (மத் 2:1-2 தொ), தங்களுடைய இறைவாக்குகள் அறிவித்த ஒருவரை இயேசுவில் காண மறைநூல் அறிஞர்கள் அறியாது போயினர் (2:4 தொ). ஏரோது அரசன் ஏற்கனவே அவரது மரணத்

திற்காகச் சதித் திட்டம் தீட்டுகிறான் (2:16 தொ). பின்னர், எருசலேமின் மக்களின் கலக்கம் (2:3), விசுவாசச் செயலுக்கு நடத்திச் செல்வதில்லை. பெத்திலேகம் மற்றும் நாசரேத்தின் நலனுக்காக, தலைநகரானது முடிசூட்டப்படாமல் உள்ளது. தாவீதின் மகனாகிய இயேசு, தமது முன்னோரின் நகராகிய எருசலேமின் பெயரைக் கொண்டிராமல், நாசரேத்தின் பெயரையே கொண்டிருப்பார் (2:23). அவரது பொதுப்பணியின் காலத்தில், அவருடைய மோசமான விரோதிகள் எருசலேமிலிருந்தே வந்தனர் (15:1), ஆதலால் தான், இறை பிரதிநிதிகளை மரணத்திற்கு உட்படுத்தும் இந்நகரை எதிர்நோக்கியுள்ள துன்பங்களைப்பற்றி இயேசு புலம்புகிறார் (23:37 தொ). அதன் விளைவாக, உயிர்த்த இயேசு தனது அப்போஸ்தலர்களை எல்லா நாடுகளுக்கும் அனுப்புவது போன்ற இறுதிக்காட்சிகள் கலிலேயாவில் நிகழ்கின்றன.

இ) இத்தகைய மரபுசார்ந்த திட்ட அமைப்புக்குள் எருசலேமை நோக்கி இயேசு செய்த பல பயணங்களின்மீது மையம் கொண்டுள்ள மிகச் சிக்கலான வரலாற்றுக் கருத்துக்களை யோவான் அறிமுகப்படுத்துகிறார். நாடகத்தின் பெரும் பகுதி அங்கே அரங்கேறுகிறது. அவருடைய மக்களின் அவநம்பிக்கை (யோவ 2:13-25), விசுவாசிப்பதில் அவர்களுடைய சிறந்த ஆசிரியர்கள் எதிர்கொண்ட இடையூறு (3:1-12), இயேசு அங்கே நிறைவேற்றிய புதுமைகள், மற்றும் அவர் சந்திக்கவேண்டிய முரண்பாடுகள் (5:7-10) ஆகியவற்றைப்பற்றி யோவான் ஆழமாக விவரிக்கிறார். அவருடைய இறுதிப் புதுமையானது, அவரது மீட்புப்பணிக்கான இறுதிச் சான்று போன்று, எருசலேமின் வாயில்களருகே நிகழ்கிறது; ஆனால், அவர்கள் தனக்கெதிராகச் சதித்திட்டம் தீட்டுகிறார்கள் என்று அறிந்தவுடனே, இயேசு அங்கிருந்து விலகிச் சென்றுவிடுகிறார் (11:1-54). தனது ''நேரத்தை'' நிறைவேற்றுவதற்கு மட்டுமே அவர் திரும்புகிறார் (12:27; 17:1). மாற்குவில் உள்ளதைவிட அதிக அளவில் பெரும் மறுதலிப்பானது இங்கே அழுத்திக் கூறப்படுகிறது.

ஈ) நற்செய்தி விவரிப்புடன் கிறிஸ்தவ தொடக்கத்தின் திட்ட அமைப்பை இணைப்பதன் மூலம், எருசலேமில் மையம் கொண்டுள்ள இப்புனித நாடகத்தின் மற்றொரு உண்மையை லூக்கா குறித்துக்காட்டுகிறார். இயேசுவின் வாழ்வில், அனைத்துமே எருசலேமை நோக்கிச் செயல்படுகின்றன. பாலன் இயேசு அங்கே காணிக்கையாக அளிக்கப்படுகிறார். அவரை எவ்வாறு கண்டுணர வேண்டுமென அங்கிருந்த விசுவாசமிக்க ஆன்மாக்கள் அறிந்திருந்தன (லூக் 2:22-38). பன்னிரண்டு வயதில் அவர் அங்கே சென்று, மறைநூல் வல்லுநர்களின் நடுவில் தமது ஞானத்தை வெளிப்படுத்துகின்றார் (2:41-50). இவை அனைத்தும் அவரது வெளிப்பாடு மற்றும் வரவிருக்கும் பலி ஆகியவற்றின் திரையிடப்பட்ட அறிவிப்புகளாகும். அவரது வாழ்வின் இறுதியாக எருசலேம் இருப்பதால் ''இறைவாக்கினர் எருசலேமிற்கு வெளியே மடிவது முறையாகாது'' (13:33). இயேசு தமது பிரிவை நிறைவேற்ற வேண்டிய நகர் வரையிலான அவரது பயணத்தை லூக்கா மிகச் சிறந்தமுறையில் அமைக்கின்றார் (9:31; 9:51; 13:22; 17:11; 18:31; 19:11). அவரது பணிக்கு எதிரான, உறுதியான மறுதலிப்பிற்கு முன்னர், மத்தேயு மற்றும் மாற்குவைவிடத் துல்லியமான சொற்களால் அவர் அதனுடைய வீழ்ச்சியை அறிவிக்கின்றார் (19:41-44; 21;20-24). ஆனால், ''யூதரல்லாதோரின் காலம்'' எனப்படும் இடைப்பட்ட காலத்தின் சூழ்நிலை, இந்நிகழ்ச்சியை இறுதி நிறைவினின்று தெளிவாகப் பிரித்துக்காட்டப்படுகிறது (21: 24-28).

உண்மையில், இயேசுவின் வாழ்க்கையானது எருசலேமில் அவருடைய பலி, தோற்றங்கள் மற்றும் விண்ணேற்றத்துடன் முடிகிறதென்றால் (24:36-53; அ.ப. 1:4-13), அப்போஸ்தலிக்க சான்று பற்றிய வரலாறு அங்கிருந்தே தொடங்குகின்றது. எருசலேமில் அவர்கள் ஆவியைப் பெறுகின்றனர் (அ.ப. 2). அந்நேரம் முதல் நற்செய்தியை எருசலேமிலிருந்து யூதேயா, சமாரிய மற்றும் உலகின் கடை எல்லைவரை கொண்டு செல்லும் தூா ㄱ அவர்கள் கொண்டுள்ளனர் (1:8; லூக் 24:4‚-48). உண்மையில் அவர்கள் நற்செய்தியை முதலில் நகரில் அறிவித்து, கிறிஸ்தவ சமூகத்தை அங்கே உருவாக்குகின்றனர்

(அ.ப. 2-7). இயேசுவின் மரணத்திற்குக் காரணமாக இருந்த எதிர்ப்பை அங்கே தலைமைச்சங்கத்தார் அவர்களுக்கெதிராக மீண்டும் புதுப்பிக்கின்றனர் (4:1-31; 5:17-41). தூய ஆவியை இஸ்ராயேல் எதிர்த்ததற்காகவும், இயேசுவை நிராகரித்ததற்காகவும் தண்டனையாக, மனிதரின் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தின் அழிவைப்பற்றி, ஸ்தேவானின் வாய்மொழி மூலமாக, இறைவன் அறிவிக்கின்றார் (7:44-53). இச்சொற்களால் கிளர்ந்தெழுந்த கொடுங்கிளர்ச்சியின் விளைவாக, கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒரு பகுதியானது, சிதறிப்பரவுகிறது (8:1). அதே சமயத்தில், முரண்பட்ட விளைவாகச் சமாரியாவிலும் (8:2-40), செசாரியாவிலும் (10), யூதரல்லாதோர் முதன்முறையாகத் திருச்சபைக்குள் அழைக்கப்பட்ட அந்தியோக்கியா வரையிலும் (11:19-26) நற்செய்தி புதிதாகப் பரவுகிறது. அதே முறையில், முதல் வேதசாட்சியின் மரணமானது, இறைவனின் கரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவியாக உருவாகவுள்ள, துன்புறுத்திய சவுலில் மனமாற்றத்தை உண்டாக்குகிறது (7:58-8:1 தொ; 9:1-30). அதுமுதல், இறைபணியாளராகச் செயல்பட, சவுல் எருசலேமை விட்டுச் செல்கிறார் (9:30; 11:25-26). தாம் சிறைப்படுத்தப்பட்ட பின்னர், பேதுருவும் அதனை விட்டுச் செல்கிறார் (12:17). நற்செய்தியின் மையமாக விளங்கிய தன் இடத்தை எருசலேமே இழக்கிறது. இயேசு அதைப் பற்றி முன்னறிவித்த முடிவை நோக்கிச் செல்கிறது. ஆனால் நற்செய்தி, ''உலகின் கடை எல்லைவரை'' சென்றடைகிறது.

2) மண்ணக எருசலேமிலிருந்து விண்ணக எருசலேம் நோக்கி:-

அ) பழைய எருசலேமானது, விண்ணகத்தில் ஊன்றப்பட்டுள்ள புதிய எருசலேமினால் அகற்றப்பட்டுள்ளது என்று முதல் முதலில் வலியுறுத்தியவர், தமஸ்கு செல்லும் பாதையில் மனமாற்றப்பட்ட ''தேர்ந்தெடுக்கப்பட்ட கருவியாகிய'' பவுல்தான் (அ.ப. 9). அதனுடைய தோற்றத்திற்கு வழியளிக்குமாறு அழைக்கப்பட்ட மண்ணுலக எருசலேமினால் துன்புறுத்தப்பட்டதும், நமது தாயாகவும், இறை வாக்குறுதிகளின் வாரிசாகவும் உள்ள ஆன்மீக எருசலேமை, அவர் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் விவரிக்கிறார் (கலா 4:24-31).

ஆ) எபிரேயருக்கான திருமுகம் இதே உருவகத்தைக் கொண்டுள்ளது. உயிருள்ள இறைவனின் நகராகவும் (எபி 12:21) திருமுழுக்கினால் கிறிஸ்தவர்கள் நெருங்கிச் சென்றடைந்த இடமாகவும் உள்ள இந்த விண்ணக எருசலேமானது, மனிதக் கைகளால் உருவாக்கப்படாமல், கிறிஸ்து பணியினுடைய இறுதியாகிய ஆலயம் உள்ள இறைவனின் இல்லமாகும் (9:24; 9:11-12). இந்த ஆலயமே மாதிரியாகும். கீழுலகில் உள்ள கோயிலானது இதன் பிரதியாகவும், நிழலாகவும், மறு படைப்பாகவும், உருவகமாகவும் இருந்தது (8:5; 10:1). இந்த ஆலயத்தின் யாவும் கடந்த நிலையை யூதவெளிப்பாட்டு நூல்கள் வண்ணப்பகட்டுடன் விவரித்தன.

இ) யோவானின் திருவெளிப்பாட்டு நூலில், திருச்சபையின் இறுதி நிறைவைப் பற்றிய தியானத்தில் புதிய எருசலேமை விவரிக்கிறார். அது செம்மறியின் மணமகளாகும் (திருவெளி 21:1-22:5), ஒளிவீசும் அதிசயம், மற்றும் கனவுகளின் நகரம் ஆகும். புதிய எருசலேமைப்பற்றி விவரிக்கின்ற எசக்கியேல் மற்றும் ஏசயா ஆகியோரின் இறைவாக்குப் பகுதிகள் இங்கு எடுத்துக் காட்டப்பட்டு மண்ணுலக நகரானது, பார்வையிலிருந்து மறையும் வண்ணம் மறுவிளக்கம் பெறுகிறது. ஆனால், மண்ணுலகத் திருச்சபையானது ஏற்கனவே அதனுடைய மறைபொருளில் பங்கேற்றிருப்பதால், அதனுடைய சாயலை ஏற்கனவே தாங்கியுள்ளது. இந்தப் புனித நகரையே புறவினத்தார் துன்பங்களால் நசுக்குகின்றனர் (11:2). புதிய ஏற்பாட்டின் இறுதியில், இஸ்ராயேலின் தலைநகரும், ஆண்டவரின் பழமையான இவ்வுலக உறைவிடமுமான, இந்நகர் ஒரு போதும் உருவத்தின் மதிப்பைக் கொண்டிருக்கவில்லை. இயேசுவால் அறிவிக்கப்பட்ட புதிய துயர நிகழ்ச்சி நிறைவேறும் அதே நேரத்தில் அது தற்காலிகமாகத் தன்னிடம் கொண்டிருந்த வாக்குறுதிகள், மற்றொரு எருசலேமிற்குக் கடந்து செல்கின்றன. இந்த எருசலேமானது இப்போது இருந்தாலும், அதே சமயம் மீட்கப்பட்டவர்கள்

அனைவரினுடைய உறுதிப்படுத்தப்பட்ட தந்தை நாடாகிய, அதனுடைய இறுதி நிறைவை நோக்கிச் செல்கிறது.

எருசலேம் ஆலயம் (JERUSALEM TEMPLE)

எல்லாச் சமயங்களிலும் ஆலயம் என்பது, மனிதர்களுடைய வழிபாட்டினைப் பெறவும் தனது உதவிகளிலும் வாழ்விலும் அவர்களைப் பங்குபெறச் செய்யவும் தெய்வம் தன்னையே பிரசன்னப்படுத்துகிற புனித இடமாகக் கருதப்படுகிறது. அதனுடைய சாதாரண உறைவிடமானது சந்தேகத்திற்கிடமின்றி இவ்வுலகிற்கு உரியதல்ல. ஆனாலும் ஆலயத்தின் மூலமாக மனிதன் தெய்வங்களின் உலகோடு தொடர்பு கொள்வதற்காக ஆலயம் அதனுடைய ஒருவகையில் ஒன்றாக்கப்படுகிறது. இந்த அடிப்படைச் சமயஅளவியல் பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. அதில் எருசலேம் ஆலயமானது மனிதரிடையே இறைவனின் பிரசன்னத்தின் அடையாளமாக விளங்குகின்றது. பழைய ஏற்பாட்டில் இது தற்காலிக அடையாளமாகவே உள்ளது. இதற்குப் பதிலாகப் புதிய ஏற்பாட்டில் மற்றொரு வகையாகிய கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை என்னும் அடையாளத்தினால் மாற்றீடு செய்யப்படும்.

I. பழைய ஏற்பாடு:-

1. எருசலேம் ஆலயம்:-

அ) இஸ்ராயேலின் தொன்மையான புனித இடம்:- பிதாப்பிதாக்களின் காலத்திய எபிரேயர்கள் ஓர் ஆலயத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் பெத்தேல் (இறைவனின் இல்லம் ஆதி 12:8; 28:17-18), பேயேர்செபா (ஆதி 26:25; 45:1), செக்கேம் (ஆதி 33:18) முதலிய புனித இடங்களைக் கொண்டிருந்தனர். இவ்விடங்களில் ''ஆண்டவரது திருப்பெயரைத் தொழுதனர்''. யாத்திரையின் சீனாய் இறைஆற்றல் காட்சியினால் அபிடேகம் செய்யப்பட்ட இதே மாதிரியான மற்றொரு இடமாகும் (யாத் 3:19-20). ஆனால் அதற்குப்பின் வந்த காலத்தில் பாலைவனத்தினிடையே மக்களை நடத்திச் சென்ற இறைவன் என்றும் அவர்களோடு இருக்குமாறு, உடன் கொண்டு செல்லக் கூடிய புனித இடத்தை அவர்கள் தங்களிடம் கொண்டிருந்தனர். யாத் 26-27 ஆனது கருத்தியலான விவரிப்பு அளிப்பதும் வருங்கால ஆலயத்தினால் ஓரளவு தூண்டப்பட்டதுமான திருஉறைவிடம், இறைவனை மக்கள் சந்திக்கும் இடமாக இருந்தது (எண் 1:1; 7:89...). உடன்படிக்கைப் பேழையை மூடியுள்ள இரக்கத்தின் ஆசனத்தின் மேல் கெருபிம்களின் நடுவில் இறைவன் உறைகின்றார். அங்கே அவர் இறைகூற்றுகளை அளிப்பதால் திருஉறைவிடத்திற்குச் ''சாட்சியப் பேழை'' என்ற பெயர் அளிக்கப்பட்டது (யாத் 25:22; 26:33). அங்கு அவரது பிரசன்னமானது ஒரே சமயத்தில் பலர்சார்ந்ததாகவும் மறைவானதுமாக இருந்தது. மேகத்திற்குப் பின்னால் (யாத் 33:7-11; 40:36) அவருடைய ஒளிமிக்க மாட்சியானது தம்மையே மறைத்துள்ளது (எண் 14:10; 16:19). இவ்வாறு இஸ்ராயேல கூட்டமைப்பின் மொத்தத்திற்கும் சீனாய் உடன்படிக்கையின் நினைவானது ஒரு மையப் புனித இடத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. கானானில் கூட்டமைப்புச் சமுதாயம் நிறுவப்பட்ட பின்னர், கோத்திரங்களுக்கான பொதுவான புனித இடமானது கில்கால், செக்கேம் (நீதி 8:30-35; 24:1-28) சீலோ (1 சாமு 1-4) ஆகிய இடங்களில் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டது. கல்லால் கட்டப்பட்ட கோயில்களால் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்ற கானானியரின் வழிபாட்டுத் தலங்களினின்று அதனைத் துல்லியமாக வேறுபடுத்தக்கூடிய தொன்மையான சிறப்பியல்பினைத் தொடக்கத்திலிருந்தே அது பாதுகாத்து வந்தது. சீனாயின் கடவுள் கானானினுடைய புறவினத்தாரின் கலாச்சாரத்தோடு கலப்பதில்லை.

ஆ) தாவீதினுடைய திட்டம்:- கூட்டமைப்பின் இந்தப் புனித இடத்தைத்தான் பெலிஸ்தியரின் கைகளினின்று உடன்படிக்கைப் பேழையை விடுவித்த பின்னர் தாவீது எருசலேமில் அமைத்தார் (2 சாமு 6). அவர் அச்சமயத்தில் வென்ற அரசியல் தலைநகரானது யாவேயின் மக்களின் சமய மையமாகவும் இருக்கும். பின்னர் இஸ்ராயேலின் சிறப்பியல்பினை விட்டுவிடாமல் அக்கால அரச அமைப்புகளைப் போன்று தமது முடியாட்சியையும் அமைக்க அவர் செயல்படத் தொடங்கியதுபோல வழிபாட்டின் பாரம்பரிய இடத்தையும் நவீனமாக்க எண்ணுகி

றார். தமக்கென ஒரு மாளிகையைக் கட்டிய பின்னர் யாவேக்கும் ஒரு கோயிலைக் கட்ட அவர் எண்ணுகிறார் (2 சாமு 7:1-4). இறைவன் அதற்கு எதிரானவராக உள்ளார். யாவேக்கென ஒரு வீட்டைக் (கோயிலை) கட்டப்போவது தாவீது அல்லர்; ஆனால் அவருக்கென யாவேயே ஒரு வீட்டைக் (சந்ததி) கட்டுவார் (2 சாமு 7:5-7). இந்த இறைபணிச் செயல் இரு வழிகளில் விளக்கம்பெறுகிறது. உடன்படிக்கையின் மக்களுக்குக் கருத்தியலான புனித இடமானது பாலைவனத்தில் தங்கியிருந்ததை வெளிப்படையாக நினைவிற்குக் கொணர்கின்றது கடந்த கால இறைஉறைவிடமே (2 சாமு 7:6-7). மேலும் ஒரே இறைவனின் உண்மையான திருவழிபாடானது, இறைமையின் மீது சிறிது பிடிப்பு உள்ளதாகப் பொய்யாகக் காட்டுபவையும் (உதாரணமாக பாபிலோனிய சிக்குராட்கள் ஆதி 11:1-9), சிலை வழிபாட்டு, மாந்திரீக, ஒழுக்கக்கேடான பயிற்சிமுறைகளால் அவசங்கைப்படுத்தப் பட்டவையுமான கோயில்களைக் கொண்டுள்ள புறஇனத்தோரின் வழிபாட்டு முறைகளின் அடிமைத்தனமான நகலில் திருப்தியடைவதில்லை.

இ) சாலமோனால் நிறைவேறுதல்:- ஆயினும் சாலமோனுடைய ஆட்சிக்காலத்தில் எவ்வித இறைவாக்கு எதிர்ப்பும் வெளிப்படாத நிலையில் தாவீதினுடைய திட்டம் நிறைவேற்றப்படுகிறது (1 அர 5:15-7:51). சீனாய் மரபிற்குப் பிரமாணிக்கமற்றதாக இல்லாத முறையில் கானானிய கலாச்சாரக் கூறுகளை ஏற்று யாவேயின் சமயம் போதிய வலிமையுடையதாக இருந்தது. மேலும் இம்மரபானது ஆலயத்தில் வலிமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கைப் பேழை ஆலயத்தின் மையமாகும் (8:1-9). எருசலேமின் புனித இடமானது கோத்திரங்களுக்கான மைய வழிபாட்டின் தொன்மையான இடமாகத் தொடர்ந்து அமைந்துள்ளது என்ற பாரம்பரியம் ஆலயத்தில் வலுவாக வலியுறுத்தப்படுகிறது. மேலும் மேகத்தின் (கோயிலின்) நடுவே தமது மாட்சியை வெளிப்படுத்துவதன்மூலம் (8:10-13) தமது பெயரைத் தங்கச் செய்கிற (7:16-21) உறைவிடமாக இந்த ஆலயத்தைத் தாம் ஏற்றுக்கொள்வதை இறைவன் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். உண்மையில் அவர் தமது பிரசன்னத்தினுடைய இந்தப் புலன் சார்ந்த அடையாளத்திற்கு உட்பட்டவர் அல்லர். வானங்களே அவரை உள்ளடக்கிக் கொண்டிருக்க முடியாவிடின், மண்ணக வீடானது அதனினும் குறைந்த ஆற்றலுடையதாகவே இருக்கும் (6:27). ஆனால் உறுதியான முறையில் தமது மக்கள் தம்மைச் சந்திக்க அனுமதிக்கும் வண்ணம் ''நம்முடைய பெயர் இவ்விடத்தில் விளங்கும்'' என்று கூறுகின்ற அவர் இந்த உறைவிடத்தைத் தேர்ந்து கொண்டார் (8:29).

ஈ) இறைவனுடைய மக்களின் நடுவில் ஆலயத்தின் பங்கு:- அதுமுதல் மற்றப் புனித இடங்களைப் புறக்கணிக்காவிடினும் எருசலேம் ஆலயமானது ஆண்டவருடைய வழிபாட்டின் மையமாக இருக்கும். ''இறைவனின் முகத்தைக் காண்பதற்காக'' (சங் 42:3) மக்கள் நாடுகளினின்றும் அங்கு வருவர். விசுவாசிகள் அதன்பால் உருக்கமான அன்பைக் கொண்டிருப்பர் (சங் 84:121). இறைவனின் உறைவிடம் விண்ணகத்தில் உள்ளதென்பதை மனிதர் சந்தேகத்திற்கிடமின்றி அறிந்துள்ளனர் (சங் 2:4; 103:19; 115:3). ஆனால் ஆலயமானது அவர் இங்குப் பிரசன்னப்படுத்துகின்ற அவரது விண்ணக அரண்மனையின் (யாத் 25:40) பிரதிபலிப்பாக உள்ளது. இவ்வாறு, வழிபாடானது அதிகாரப் பூர்வ தன்மை கொண்டுள்ளது. அங்கு அரசர்களும் மக்களும் தேசிய இறைவனுக்குப் பணிசெய்கின்றனர்.

2. கல்லினாலான ஆலயத்திலிருந்து ஆன்மீக ஆலயம் நோக்கி:-

அ) அடையாளம் என்ற நிலையில் ஆலயத்தின் பொருள் தெளிவின்மை:-

அரசாட்சிக் காலத்தில் இஸ்ராயேலின் வழிபாட்டில் முக்கிய பங்கை வகித்தாலும், ஆலயமானது அடையாளம் என்னும் நிலையில் சிறிது பொருள் தெளிவின்மையைக் கொண்டுள்ளது. மேற்போக்கான சமய உணர்வுடைய மக்களுக்கு அங்கு வெளிப்படையாகச் செயல்படுத்தப்பட்ட சடங்குகள் வெறும் சடங்குகளாகவே இருந்தன. மேலும், ஆலயத்தின்பால் காட்டிய பற்றுதல்

குருட்டு நம்பிக்கையாகும் அபாயமும் இருந்தது. ஆலயத்திற்குச் செல்கின்றவர்கள் சட்டத்தைப் பின்பற்றாவிடினும், எவ்விதத்திலாவது அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இறைவன் அதனைத் தமக்கே உரித்தாக்கியிருப்பது போன்று, மனிதர்கள் ''இது ஆண்டவரின் ஆலயம்! இது ஆண்டவரின் ஆலயம்'' என்று கூறுகின்றனர் (எரே 7:4). இத்தகைய தவறுதல்கள் ஆலயம் பற்றிய இறைவாக்கினர்களின் எச்சரிக்கை மனப்பான்மையை விளக்குகின்றன. இந்த இடத்தில்தான் தமது தொடக்கக் காட்சியில் ஆண்டவர் ஏசயாவிற்குத் தம்மையே வெளிப்படுத்துகின்றார் என்பது உறுதி (ஏச 6). இவ்விடமானது இறைபக்தியற்ற சனகெரிபால் அழிக்கப்படமுடியாது என்றும் அதே இறைவாக்கினர் கூறுகின்றனர் (ஏச 37:16-20. 33 தொ). புறஇனத்தாரிடமிருந்து புகுத்தப்பட்ட சிலைவழிபாட்டுப் பழக்கங்களை உள்ளடக்கிய (எச 8:7-18) அங்கே நிறைவேற்றப்படுகின்ற வழிபாட்டின் மேற்போக்கான தன்மையினைப் பழிப்பதில் ஏசயா, எரேமியா மற்றும் எசக்கியேல் ஆகியோர் போட்டியிடுகின்றனர் (ஏச 1:11-17; எரே 6:20; 7:9 தொ). இறுதியாக, நாட்டின் பாவத்திற்குத் தண்டனையாக, இந்த உறைவிடத்தை ஆண்டவர் கைவிடக் கூடும் என்பதையும் முன்னோக்குகின்றனர் (மீக் 3:12; எரே 7:12-15; எச 9-10). ஆண்டவர் தமது பிரசன்னத்தைச் சிலகாலம் உட்படுத்தியிருந்த பொருள் சார்ந்த அடையாளத்தைவிட இஸ்ராயேலின் வழிபாட்டின் உண்மைத் தன்மை மிகவும் முக்கியமானதாகும்.

ஆ) முதலாவதினின்று இரண்டாவது ஆலயம் வரை:- உண்மையில் எருசலேம் ஆலயமானது தேசிய ஊழின் மாறுபடுநிலைகளில் பங்கு பெறுகின்றது. எசக்கியா (2 அர 18:4; 2 நாள் 29:31) மற்றும் ஆலயத்தின் சாதகத்திற்கேற்பப் புனித இடத்தின் ஒருமைத்தன்மையைக் கொணர்ந்த யோசியா (2 அர 23:4-27) ஆகியோரின்கீழ், சமயச்சீர்திருத்த முயற்சிகள் முதலில் அதன் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தின. ஆனால் இறைவாக்கு அச்சுறுத்தல்கள் நிறைவேற்றப்பட்டன (25:8-17). ஆண்டவரின் மாட்சியானது அவருடைய தெய்வீகத்தன்மை இழந்த உறைவிடத்தைக் கைவிட்டது (எச 10:4.18). ஆலயத்தின் அடையாளம் இதோடு முடிந்து விட்டதா? அப்படியல்ல. ஏனெனில் இறைவாக்கினர்களின் இறுதிக்கால இறைக்கூற்றுகள் வருங்காலம் பற்றிய தங்களின் விவரிப்புகளில் அதற்கு முக்கிய இடத்தை அளித்திருக்கின்றன. உண்மையான இறைவனை வழிபடுவதில் ஒன்றிணைந்த எல்லா மனித இனங்களின் வருங்கால சமய மையமாக ஏசயா அதனைக் காண்கிறார் (எச 2:1-4). தேசிய மீட்சியின் காலத்தில் அது மீண்டும் உருவாக்கப்படுவதை எசக்கியேல் விரிவாக முன்கண்டுவிட்டார் (எச 40-48). இவ்வாறு அடிமைத்தனத்தின் முடிவில் மீண்டும் சொந்த நாட்டிற்குத் திரும்பிவந்த யூதர்கள் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் முதலில் கவனம் செலுத்தினர். இதை ஆகாய், செக்கரியா போன்ற இறைவாக்கினர்கள் ஊக்குவித்தனர் (எஸ் 3:6) இறைவாக்குள் மீண்டும் ஒரு முறை அதனுடைய வரவிருக்கும் மாட்சியைப்பற்றிப் பாடுகின்றன (ஆகா 2:1-9; ஏச 60:7-11). முன்பிருந்ததைப் போலவே இரண்டாம் ஆலயத்திலும் வழிபாடு மீண்டும் தொடங்கியது. யூதர் மதத்தின் மையமாக ஆலயம் விளங்கியது. அதனுடைய தொடக்கத்தில் இருந்ததுபோன்ற இறையாட்சியமைப்புகளையே இப்போதும் கொண்டிருந்தது. அது மீண்டும், மக்களிடையே இறைபிரசன்னத்தின் அடையாளமாக விளங்கியது. அங்கு மக்கள் திருயாத்திரை செல்கின்றனர். அங்கு நடக்கும் சடங்குகளின் மகத்துவத்தைச் சீராக்கின் மகன் ஆர்வமிக்க தொனிகளால் கொண்டாடுகின்றார் (சீரா 50:5-21). இவ்வாறாக அந்தியோக்கு அரசன் அதனைப் பங்கப் படுத்தி அவ்விடத்தில் புறவினத்தாரின் புனித இடத்தை அமைத்தபோது அதனைப் பாதுகாக்க யூதர்கள் பொங்கி எழுந்தனர். அவர்களுடைய புனிதப்போரின் முதல் நோக்கமானது, பாரம்பரிய வழிபாட்டை மீண்டும் தொடங்க அதனைப் புனிதப்படுத்துவதாகும் (1 மக் 4:36-43). சில ஆண்டுகளுக்குப் பின்னர், பெரிய ஏரோது ஆடம்பரமாக அதனை மீண்டும் கட்டுவார். ஆனால் இந்த வெளிஆடம்பரத்தைவிட அதனுடைய சடங்குகளில் தடையற்ற முறையில் வெளிக்காட்டிய உண்மையான பக்தியே மிகவும் முக்கியமானதாகும்.

இ) ஆன்மீக ஆலயத்தை நோக்கி:- கல்லால் கட்டப்பட்ட ஆலயத்தின் மீது பற்றுறுதி கொண்டிருந்தாலும், இறைவாக்குக் காலத்தின் முடிவிற்குப்பின்னர், புதியதொரு சிந்தனையானது ஏற்கப்படலாயிற்று. ஆலயத்திற்கு எதிரான எரேமியாவின் அச்சுறுத்தல்கள் (எரே 7) கட்டடத்தின் அழிவு, மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக அடிமைத்தன அனுபவம் போன்றவை, துணைச்சட்டப் பாரம்பரிய ஆசிரியராலும் எரேமியாவாலும் போதிக்கப்பட்ட (உப 6:4 தொ; எரே 31:31) ''இதயச்சமயத்தின்'' தேவைகளுக்கு ஏற்பட்ட உயர்ந்த ஆன்மீக வழிபாட்டின் தேவையைத் தெளிவுபடுத்த உதவிபுரிந்தன. அடிமைப்படுத்தப்பட்ட நாட்டில் இறைவன் எங்கெங்கு ஆட்சிசெலுத்துகிறாரோ, மற்றும் சிறப்பாக எங்கெங்கு ஆராதிக்கப்படுகிறாரோ (எச 11:16), அங்கெல்லாம் அவர் பிரசன்னமாகியுள்ளார் என்பது தெளிவாக அறியப்பட்டது. அவருடைய மாட்சியானது பாபிலோனில் எசக்கியேலுக்கு வெளிப்படுத்தப்படவில்லையா? (எச 1). இவ்வாறு அடிமைத்தனத்தின் இறுதியில் இறைவனால் கோரப்பட்ட எளிய மற்றும் மனம் வருந்திய இதயங்களின் (ஏச 66:2) ஆன்மீக வழிபாடானது புலன் சார்ந்த அடையாளங்களிலிருந்து பிரிக்கப்பட்ட இறைவனின் ஆன்மீக பிரசன்னத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படுகிறது என்று கருதுவதுபோல் யூதர்கள் கல்லால் ஆன ஆலயத்திற்குப் பெரிதும் பற்றுறுதி காட்டுவதற்கு எதிராகச் சில இறைவாக்கினர்கள் அவர்களை எச்சரிக்கின்றனர். (ஏச 66:1-2). ஆண்டவர் வானகத்தில் தங்கியிருந்து அவரது விசுவாசிகள் எவ்விடத்திலிருந்து செபித்தாலும் அவற்றிற்குச் செவிமடுக்கிறார் (தோபி 3:16). கிறிஸ்துவினுடைய வருகைக்குச் சிறிதுகாலம் முன்பு எஸ்ஸேனியர்கள் ஆலய வழிபாட்டிலிருந்து முறித்துக்கொண்டனர். இவர்கள் ஆலயம் உரிமையற்ற குருத்துவத்தால் பாழ்படுத்தப்பட்டு விட்டது என்றும் இறைவனுக்கு ஏற்ற வழிபாட்டினை அளிக்கக்கூடிய ஆன்மீக ஆலயம் தாங்களே என்றும் கருதினர். மனிதனின் கரங்களால் அமைக்கப்படாத, இறைவன் உறைகின்ற விண்ணக ஆலயத்தைப்பற்றிப் போலி வெளிப்பாட்டு நூல்கள் விவரிக்கும் காலம் இதுவே. வரவிருக்கும் உலகில் இறைவனின் உறைவிடமாக இருப்பதற்கென, காலத்தின் இறுதியில் பூவுலகில் தோன்றவிருக்கும் விண்ணக ஆலயத்தின் முழுமையற்ற சாயலாகவே இவ்வுலக ஆலயம் உள்ளது (ஞான 9:8)

II. புதிய ஏற்பாட்டுக் காலத்து எருசலேம் ஆலயம்:-

புதிய ஏற்பாட்டுக் காலத்து யூதர்களுக்கு ஒரே ஓர் ஆலயம் இருந்தது. அது எருசலேமிலிருந்த ஆலயமாகும். இஸ்ராயேல் மக்களின் கதியாகத் திகழ்ந்தது இவ்வாலயமே. மக்களது சமய சமூக வாழ்வும் இவ்வாலயத்தை மையமாக வைத்துதான் நிகழ்ந்தது. மாமன்னன் சாலமோன் முதல் ஆலயத்தைக் கட்டினார். அவ்வாலயம் எருசலேமின் வீழ்ச்சியோடு அழிந்தது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்தபின் யூதர்கள் செருபாபேல் என்பவரது தலைமையின்கீழ் ஏறக்குறைய கி.மு. 539-இல் மீண்டும் ஆலயத்தை எழுப்பத் தொடங்கினர். சுற்றி வாழ்ந்த புற இனத்தவர் எதிர்ப்புத் தெரிவித்ததால், பாதியோடு நிறுத்தி வைக்கப்பட்டு, கி.மு. 515-இல் கட்டி முடிக்கப்பட்டு திருநிலைப்படுத்தப்பட்டது. இவ்வாலயம் சிறியதாகும். இவ்வாலயம் கி.மு. 167-இல் அந்தியோக்கு எப்பிபானால் தீட்டுப்படுத்தப்பட்டு, கி.மு. 165-இல் யூதா மக்கபேயரால் மீண்டும் திருநிலைப்படுத்தப்பட்டது. இவ்வாலயம் கி.மு. 19-வரை இருந்தது.

கி.மு. 19-இல் பெரிய ஏரோது மாபெரும் ஆலயம் ஒன்றைக் கட்டத் தொடங்கினார். இச்செயல் இவரது பக்தியின் விளைவன்று; அரசியல் தந்திரத்தின் விளைவாகும். மக்கள் அவர்மீது கொண்டிருந்த வெறுப்பை நீக்குவதற்காக இவ்வாலயத்தை எழுப்பினார். ஆலயத் திட்டம் பகட்டான தொன்றாகும். திருப்பயணிகள் வியக்கும்படி ஒரு நினைவுச் சின்னமாக ஆலயத்தை அமைக்க விரும்பினார் ஏரோது. பத்தாயிரம் ஆட்கள் வேலை செய்தனர். பரிசுத்த இடங்களில் வேலை செய்வதற்கென ஆயிரம் குருக்கள் கொத்தர் வேலைப் பயிற்சி பெற்றிருந்தனர். ஆலயத்தின் முக்கிய பகுதி பத்து ஆண்டுகளில் முடிந்தது. கி.மு. 9-இல் ஏரோது, தான் அரசு

ஏற்ற ஆண்டுவிழா நாளில் திருத்தியமைக்கப் பட்ட ஆலயத்தின் அபிடேகம் நடைபெறச் செய்தார். ஆனால், ஆலயத்தின் அழகு செய் யும் வேலை பல ஆண்டுகளாக நடந்தது. இயேசுவின் காலத்தில் ஆலய வேலை ஏற்க னவே நாற்பத்தாறு வருடங்களாக நடை பெற்றிருந்ததாகப் பரிசேயர் கூறுவதை நற் செய்தியில் வாசிக்கிறோம் (யோவா 2:20). உள்ளும் புறமும் எழிலுற ஆலயம் அமைந் திருந்தது; எல்லோரின் கவனத்தையும் ஈர்த் தது. கி.பி. 64-இல் ஆலயம் கட்டி முடிக்கப் பட்டது. ஆறு ஆண்டுகள் கழித்து உரோமை யரால் அழிக்கப்பட்டது.



எருசலேம் ஆலயத்தைப் பற்றிய விவரங் கள் யோசிப்பசின் நூலிலிருந்தும், யூதர்களின் ''தால்முட்'' பாரம்பரியத்திலிருந்தும் நமக் குக் கிடைக்கின்றன. இவ்வாலயத்தின் அமைப்பை நன்கு புரிந்துகொள்ளுவதற்கு நமது நாட்டிலுள்ள இந்துக் கோவில்களை மனதில் கொள்வது பயனளிக்கும். இந்துக் கோவில்களில் காணப்படும் பிரகாரங்கள், மண்டபங்கள், கருவறை ஆகியவைகளை மனதில் கொண்டு எருசலேம் ஆலயத்தைக் காணுதல் நல்லது.

ஆலயமும் அதைச் சார்ந்த இடமும் 2,350 அடி சுற்றளவுள்ள இடத்தை உள்ளடக்கி யன. இவ்விடத்தைச் சுற்றி அகன்ற சுவர்க ளும் மண்டபங்களும் எழுப்பப்பட்டிருந் தன. வெளிச்சுவரை அடுத்த உள்ளிடம் ''புற இனத்தார் முற்றம்'' எனப் பெயர் கொண் டது. இம் முற்றத்திற்குள் வெளியிலிருந்து நுழையப் பெரும் கதவுகளைக் கொண்ட எட்டு வாயில்கள் இருந்தன. தெற்கில் இரண் டும் (25-26 எண்கள் வரை படத்தில் காணப் படும் எண்களைக் குறிக்கின்றன) மேற்கில் நான்கும் (21-24) வடக்கில் ஒன்றும் (20) கிழக்கில் ஒன்றுமாக (19) எட்டு வாயில்கள் அமைந்திருந்தன. குருத்து ஞாயிறு அன்று ஆண்டவர் கிழக்கு வாயிலின் வழியாக ஆல யத்திற்குள் நுழைந்திருக்கலாம் (மத் 21:12; மாற் 11:11; லூக் 19:45). தெற்கு வாயில்கள் இரண்டும் நிலவறை வழிகளாகும். இவை புற இனத்தவரை முற்றத்திற்கு இட்டுச் சென் றன. இப்புற இனத்தவர் முற்றம் மிகப் பெரியதாகும். வெளிச்சுவரோடு சேர்ந்த மண்டபங்களைக் கொண்டது. வடக்கில் அமைந்த அரச மண்டபம் மூன்று தூண் வரிசைகளைக் கொண்டிருந்தது. தெற்கிலும் மேற்கிலும் இருந்த மண்டபங்களும், கிழக் கில் அமைந்த சாலமோன் மண்டபமும் (யோவா 10:23; அ.ப. 3:11; 5:12) இரண்டு தூண் வரிசைகளைக் கொண்டிருந்தன. புற இனத்தவர் முற்றத்திற்கு யாரும் செல்ல லாம். சுமை தூக்குபவர் கூட இம்முற்றத் தைக் குறுக்கு வழியாகப் பயன்படுத்துவ துண்டு. இங்குதான் மறைநூல் அறிஞர்கள் போதித்தனர்; நாணயம் மாற்றுவோர் தங்கள் கடைகளை வைத்திருந்தனர்; புறாக்களும் பலிக்கு வேண்டிய விலங்குகளும் விற்கப் பட்டன. இது ஒரு சந்தைக் கடையைப் போல் தோன்றியிருக்க வேண்டும் (மத் 21:12-13) புற இனத்தவரது முற்றத்தை அடுத்து நான்கு புறமும் கைப்பிடி மேடை ஒன்று (18) இருந்தது. இதைத் தால். "யூதர் அல்லா

தார் புகக்கூடாது. எச்சரிக்கை அறிவிப்புப் பலகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மீறி உடபுகுபவர்கள் மரண தண்டனைக் குள்ளா வார்கள் என இவ்வெச்சரிக்கை அறிவித்தது (அ.ப. 21:28).

புற இனத்தவர் முற்றத்திலிருந்து உட்புக வடக்கில் நான்கும் (10, 11, 12, 17); தெற்கில் நான்கும் (7, 8, 9, 16) கிழக்கில் ஒன்றுமாக (15) ஒன்பது வாயில்கள் இருந்தன. கிழக்கு வாயில் ஒப்பனை மிக்கதாயிருந்தது; ஆத லால் ''அழகு வாயில்'' அல்லது ''அலங்கார வாயில்'' என்று அழைக்கப்பட்டது (அ.ப. 3:2). புற இனத்தவரது முற்றத்தை அடுத்து ஐந்துபடி உயரத்தில் அமைந்திருந்த உள்முற் றம் பெண்களுக்குரியது. இதைச் சுற்றிப் பல அறைகள் இருந்தன. இங்குதான் காணிக் கைப் பெட்டிகள் இருந்தன (14), (மாற் 12:41 தொ; லூக் 24:1). ஆலயக் கருவூலமும் இங்கு இருந்தது (யோவா 8:20). இம்முற்றத்துக்கு அப்பால் பெண்கள் உட்செல்ல முடியாது. இங்கிருந்து பதினைந்து படிகள் ஏறினால் இஸ்ராயேலரது முற்றம் எனப்பட்ட ஆண்க ளுக்குரிய முற்றத்தை (13) அடையலாம். இது 280 x 20 ச.அடி பரப்புடையது; வடக் கில் மூன்று வாயில்களையும் (10, 11, 12) தெற்கில் மூன்று வாயில்களையும் (7, 8, 9) கொண்டது. கிழக்கு வாயில் அலக்சாந்திரி யாவைச் சார்ந்த பெருஞ்செல்வர் நிக்கனோ ரின் கொடைப் பொருளால் கட்டப்பட்ட தால், நிக்கனோர் வாயில் (6) என்றழைக்கப் பட்டது. தூப வழிபாட்டுச் சமயத்தில் மக் கள் இங்குதான் குழுமியிருப்பர் (லூக் 1:10). பரிசேயன் செபித்த இடமும் (லூக் 18:11), அப்போஸ்தலர்கள் வழக்கமாய்ச் செபித்த இடமும் (லூக் 24:53) இதுவாகத்தான் இருக்க வேண்டும். புனித பவுல் இங்குதான் தமது நேர்த்திக் கடனைச் செய்திருக்கக் கூடும் (அ.ப. 21:26).

அடுத்த உள்முற்றம் குருக்களது முற்ற மாகும் (5). இதுவரை நாம் விவரித்த இடங்கள் யாவும் ஆலயத்தைச் சார்ந்த இடங்கள். குருக் கள் முற்றத்துக்கு அடுத்த பகுதியே ஆலயம் என்றழைக்கப்பட்டது. குருக்கள் முற்றம் ஆலயத்தைச் சுற்றியிருந்தது. இங்குத் தகன பலி கொடுக்கும்பீடம் (4) இருந்தது. இப் பீடம், நிக்கனோர் வாயில், அலங்கார வாயில் ஆகியவையோடு ஒரே வரிசையில் இருந் தது. ஆதலால் பலியிலிருந்து எழும் புகையை அலங்கார வாயிலிலிருந்தும் பார்க் கலாம். பெண்கள் முற்றம், இஸ்ராயேல் முற்றம், குருக்கள் முற்றம் ஆகியவை திறந்த முற்றங்களாகும்.

உண்மையான ஆலயம் சாலமோன் கட் டிய விதத்திலேயே கட்டப்பட்டிருந்தது. குருக்கள் முற்றத்தின் கிழக்குப் பக்கத்தி லிருந்து பன்னிரண்டு படிகள் ஏறினால் ஆலய முகமண்டபத்தை (3) அடையலாம். இது 150 x 150 ச. அடி பரப்புக் கொண்டது. இதற் குள் நுழைய 60 அடி அகலம் 30 அடி உயரம் கொண்ட வாயில் இருந்தது. முக மண்டபத் திலிருந்து 30 அடி அகலம் 15 அடி உயர முடைய வாயில் வழியாகத் தூயகத்திற்குள் (2) நுழையலாம். இத்தூயகம் 60 அடி நீளமும் 30 அடி அகலமும் 30 அடி உயரமும் உடை யது. இவ்விடத்தின் அலங்காரம் பற்றிய செய்தி ஏதும் நமக்குக் கிடைத்திலது. தூயகத் தில் தூபப் பீடமும், ''அப்பம் காட்டும் மேசையும்'', ஏழுகிளை விளக்குத் தண்டும் இருந்தன. மக்கள் கூட்டமாகவோ, குழுவின ராகவோ இங்குத் தொழுவதற்குச் செல்ல வில்லை. இஸ்ராயேலரின் அரசனாகிய இறைவன் இங்குக் கொலுவீற்றிருந்தார்; இங்கிருந்து தமது பிரமாணிக்கமுள்ள மக்க ளின் காணிக்கைகளையும் பலியையும் ஏற்று அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்தினார்.

தூயகத்தை அடுத்துத் திருத்தூயகம் (1). இது 30 x 30 x 30 அடி கொண்ட ஓர் அறை. முற்காலத்தில் உடன்படிக்கைப் பெட்டகத் தைக் கொண்டிருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இது காலியான அறையாக இருந் தது. தூயகத்திலிருந்து இந்தத் திருத்தூயகம் ஒரு திண்ணிய திரையால் பிரிக்கப்பட்டிருந் தது. இயேசு மரித்த போது கிழிந்த திரை இதுதான் (லூக் 23:45). இவ்விடத்தில் எப் போதும் இருள் மண்டியிருக்கும். ஆண்டிற்கு ஒருமுறை ''பரிகார நாளில்'' பெரிய குரு பலிப்பொருளின் இரத்தம் தாங்கித் தூபப் பீடத்திலிருந்த தூபத்தோடு இவ்விடத்திற் குள் நுழைந்து, இரத்தத்தைத் தெளித்து விட்டு வருவார். பிறர் இவ்வறைக்குள் புகுந்

தறியார். ஆலயத்தைச் சுற்றிலும் சிறிதும் பெரிதுமாகப் பல அறைகள் இருந்தன. ஆலயம் வெள்ளைச் சுண்ணாம்புக் கல்லால் கட்டப்பட்டிருந்தது. தங்கத்தகடு பொதியப் பட்டிருந்தது. ஆலயத்தைச் சார்ந்த இடங்களில் பொன்முலாம் பூசப்பட்ட கோபுரங்கள் இருந்தன. அவற்றின் காட்சி பார்ப்பதற்கு உண்மையிலே கவர்ச்சியுடையதாய் இருந்திருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட ஆலய அமைப்பின் விளக்கத்திலிருந்து, வழிபட வந்த மக்கள், ஆலயத்தின் புறத்தே நின்று வழிபாட்டுச் சடங்குகளில் பங்கு கொண்டனர் என்பதும் விளங்கும். அவர்கள் கொண்ட பங்கும் மிகச்சிறியதே. ஆலயத்துக்குள் என்ன நடக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. எக்காளத் தொனி கேட்டு விசுவாசிகள் தெண்டனிட்டு வணங்குவர்; தங்களுக்குரிய செபப் பகுதிகளைச் சொல்லுவர். ஆண்டுக்கு மூன்று முறையாவது ஆலயத்துக்கு வயது வந்த ஒவ்வொரு யூதனும் திருப்பயணம் செல்ல வேண்டும் என்று சட்டம் கூறியது (உப 16:16). ஆனால் கிறிஸ்துவின் காலத்தில் இச்சட்டம் அவ்வளவாகக் கடைப்பிடிக்கப் படவில்லை. ஆண்டுக்கு ஒருமுறைதான் பாஸ்கு காலத்தில் திருப்பயணமாக ஆலயத்துக்குச் சென்றனர். அப்போதும் ஆலயச் சடங்குகளில் நேரடியாகப் பங்கு கொள்ளவில்லை. ஆயினும் ஆலயத்தைப் பற்றிய எண்ணம் யூதன் எவனுக்கும் உண்மையான மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்தது. ஆலயப் பணிக்குரிய வரியை மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் செலுத்தினர். இதை ஒரு பெரும் கடமையாகவும் கருதினர். பாலஸ்தீன யூதர்கள் மட்டுமின்றிச் ''சிதறிக் கிடந்த யூதர்களும்'' இவ்வரியைச் செலுத்தினர். இவ்வரியைத் திரட்டித் தூதுவர் மூலம் எருசலேமுக்கு அனுப்பினர். யூதர்களது இவ் வழக்கத்தை உரோமைப் பேரரசு மரியாதையுடன் அனுமதித்தது.

நற்செய்தியில் ஆலயம் பல தடவைகள் நமது கண்முன் கொணரப்படுகிறது. திருமுழுக்கு யோவான் பிறப்பைப் பற்றிய செய்தி செக்கரியா ஆலயத்தில் தூபப்பலி செலுத்தும்போது வருகிறது (லூக் 1:8 தொ). இயேசு, தாம் பிறந்த நாற்பதாம் நாள், ஆலயத்தில் யூத முறைப்படி பிதாவுக்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறார் (லூக் 2:22 தொ). பன்னிரண்டு வயதில் காணாமற் போய் ஆலயத்தில் காணப்பட்டார் (லூக் 2:41 தொ). அப்போது இயேசு தமது தாயிடம் ''என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டதாக வாசிக்கிறோம். மூலக்கூற்றைத் ''தந்தையின் காரியங்கள்'' என்று மொழி பெயர்ப்பதைவிட, மேல் தரப்பட்டது போல் ''தந்தையின் இல்லம்'' அதாவது ''ஆலயம்'' என்று மொழி பெயர்ப்பது சிறந்தது என்று பல விவிலிய அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நிகழ்ச்சி ஆலய வெளி மண்டபங்கள் ஒன்றிலோ, ஆலயப் பள்ளியிலோ நிகழ்ந்திருக்க வேண்டும். இம்மண்டபங்களில்தான் இயேசு பிற் காலத்தில் மக்களுக்குப் போதித்திருக்க வேண்டும் (மத் 21:23; 26:55; மாற் 11:27; 12:35; 14:49; லூக் 20:1; 22:53; யோவா 7:14-28; 8:20-59; 10:23). இயேசு ஆலயத்துக்கு மிகுந்த மரியாதை காட்டினார். ஆலயத்தைக் கடவுள் வீடு என்றும் (மத் 12:4; லூக் 6:4), தமது தந்தையின் இல்லம் என்றும் (யோவா 2:16; லூக் 2:49), செபவீடு என்றும் (மத் 21:13; மாற் 11:17; லூக் 19:46) அழைக்கிறார். ஆலயத்தில் இருக்கும் இறைவன் தூயவராதலால் ஆலயமும் தூய்மை மிக்கது. ஆலயம் தன்னுள் உள்ள பொருள்களைத் தூய்மையாக்குகிறது (மத் 23:16-21). சாதாரண யூதன் மேற்கொண்ட திருப்பயணங்களையும் ஆலயக் கடமைகளையும், இயேசுவும் மேற்கொண்டிருக்க வேண்டும். அவர் ஆலயத்துக்குரிய வரி செலுத்துகிறார் (மத் 17:24-27). ஆலயத்தைச் சுத்தி செய்கிறார் (மத் 21:12 தொ; மாற் 11:15-17; லூக் 19:45 தொ; யோவா 2:14-17).

இயேசுவைப் போல் ஆதிக் கிறிஸ்தவர்களும் ஆலய வழிபாட்டில் பங்கு கொண்டனர் (அ.ப. 2:46; 3:1; 22:17). அவரைப் போலவே அப்போஸ்தலர்களும் ஆலயத்தில் போதித்தனர் (அ.ப. 5:20,25,42). பவுல் கூட எருசலேமில் இருந்த போதெல்லாம்

ஆலய வழிபாட்டில் பங்கு கொண்டார் (அ.ப. 21:26; 24:6; 12.18; 26:21).

III புதிய ஏற்பாடு

1. இயேசு கிறிஸ்து புதிய ஆலயம்:-

அ) இயேசுவும் பழைய ஆலயமும்:- இறைவாக்கினர்களைப் போன்று இயேசுவும் பழைய ஆலயத்திற்கு ஆழ்ந்த மரியாதையை அளிக்கின்றார். மரியாளினால் அவர் அங்குக் காணிக்கையாக்கப்படுகிறார் (லூக் 2:22-29). தம்முடைய தந்தையைச் சந்திக்கும் இடம் என்ற அளவில் அவர் அங்கே விழாக் கொண்டாட்டங்களுக்குச் செல்கிறார் (லூக் 2:41-50; யோவா 2:14). வழிபாட்டுச் சடங்குகளை இழிவுபடுத்துகின்ற விதிமுறைகளை அவர் கண்டிக்கின்ற நிலையிலும் அதனுடைய வழிபாட்டு முறைமைகளை அவர் ஏற்கிறார் (மத் 5:23-24; 12:3-7; 23:16-22). ஆலயமானது அவருக்கு இறைவனின் இல்லமாகவும் செபவீடாகவும் தனது தந்தையின் வீடாகவும் உள்ளது. அது வியாபாரத்தலமாக மாறும்போது அவர் கோபம் கொள்கிறார். இவ்வாறு ஒரு இறைவாக்குச் செயலாக அதனைத் தூய்மைப்படுத்துவதற்கென அவர் வியாபாரிகளை விரட்டியடிக்கிறார் (மத் 21: 12-17; யோவா 2:16 தொ; ஏச 56:7; எரே 7:11). ஆனாலும், கல்லின்மேல் கல் நிற்காது என்று அச்சுறுத்தல் மிக்க கட்டடத்தின் அழிவைப்பற்றி அவர் அறிவிக்கிறார் (மத் 23:38-39; 24:2). அவரை விசாரிக்கின்றபொழுதும் அவர் மனிதரால் கட்டப்பட்ட இந்த ஆலயத்தினை இடித்துவிட்டு மூன்று நாட்களில், மனிதக் கரங்களால் கட்டப்படாத ஆலயத்தைக் கட்டி முடிப்பேன் என்று கூறியதாகக் குற்றம் சாட்டப்பட்டார் (மாற் 14:58). அவர் சிலுவையில் துன்புறும்போதும் பழியுரையாக அதே குற்றச்சாட்டு மீண்டும் எடுத்துக் கூறப்படுகிறது (மத் 27:39-40). ஆனால் இங்கு அது எதிர்காலம் மட்டுமே விளக்கக் கூடிய பொருளுடைய, மறைவான பொருட்சொல்லாகவே உள்ளது. இதற்கிடையில் அவருடைய இறுதிமூச்சை விடும் தருணத்தில் புனித இடத்தின் திரை கிழிதலானது பழமையான புனித இடமானது தனது புனிதப்பண்பை இழந்துவிட்டதையே காட்டுகிறது. யூத ஆலயமானது இறைபிரசன்னத்தின் அடையாளமாகத் தனது பணியை நிறைவேற்றுவதை இழந்துவிடுகின்றது.

ஆ) புனித ஆலயம்:- உண்மையில் இப்பணியானது அதன் பின்னர், இயேசுவின் உடலாகிய மற்றொரு அடையாளத்தினால் நிரப்பப்படுகிறது. யோவானின் நற்செய்தியானது, புனித இடத்தை அழித்து விட்டு, மூன்று நாட்களில் மீண்டும் கட்டுவது பற்றிய சொற்களை ஆலயத்தைத் தூய்மைப்படுத்தும் சூழ்நிலையில் கூறுகிறது (யோவா 2:19). ஆனால் ''அவர் குறிப்பிட்டதோ அவரது உடலாகிய ஆலயத்தையே'' என்றும் அவரது உயிர்ப்பிற்குப்பின் அவருடைய சீடர்கள் அவரைப் புரிந்து கொண்டனர் என்றும் யோவான் உடனே சேர்த்துக் கூறுகிறார் (யோவா 2:21-22). இதுவே மனிதரின் கரங்களால் கட்டப்படாத புதிய மற்றும் உண்மையான ஆலயமாகும். முற்காலங்களில் இஸ்ராயேலின் திருஉறை ஆசாரக் கூடத்தில் அவர் அமைத்தது போலவே, அவர் மனிதரிடையில் அவரது உறைவிடத்தை, இறைவார்த்தை அமைக்கின்ற ஆலயமாக இது உள்ளது (1:14). ஆனால் கல்லாலான ஆலயமானது பயனற்றுப்போகும் நிலையை அடைய, இயேசுவே மரித்து மீண்டும் உயிர்த்தெழ வேண்டியது அவசியமாகிறது. அவரது உடலாகிய ஆலயம் அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்படும் என்பதே அவரது தந்தையின் சித்தமாகும் (10:17-18; 17;14). அவரது உயிர்ப்பிற்குப் பின்னர், பூவுலகில் இறைபிரசன்னத்தின் அடையாளமாக உள்ள இவ்வுடலானது புதிய, மறுஉருவை அடையும். அது நற்கருணை வழிபாட்டில் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் பிரசன்னப்படுத்தப்படும். அப்போது பழைய ஆலயம் மறைந்துவிடும். 70-இல் நிகழும் எருசலேமின் அழிவானது, அதனுடைய அலுவல் முடிந்துவிட்டது என்பதை உறுதியான முறையில் எடுத்துக்காட்டும்.

2. திருச்சபை ஆன்மீக ஆலயம்:-

அ) கிறிஸ்தவர்களும் யூத ஆலயமும்:- ஐம்பதாம்நாள் விழா நிகழ்ச்சிக்குப்பின்

வரும் இடை மாறுபாட்டுக் காலத்தில் அப்போஸ்தலர்களும் வார்த்தையில் நம்பிக்கையுடைய விசுவாசிகளும் எருசலேம் ஆலயத்திற்குச் செல்வதைத் தொடர்ந்தனர் (அ.ப. 2:46; 3:1-11; 21:26). உண்மையில் யூத தலைவர்களும் மக்களும் நற்செய்தியை உறுதியாக ஒதுக்காத வரையில், வழிபாட்டின் பழைய இடமானது, இயேசுவால் தொடங்கப்பட்ட புதிய வழிபாட்டோடு கொண்ட எல்லாத் தொடர்புகளையும் இழந்துவிடவில்லை. இத்தகைய நிலையில் மனமாறிய யூதமக்கள் முழு உலகின் மனமாற்றத்தில் பங்குபெற முடிந்தது; ஆயினும் முறிவின் அடையாளங்களும் காணப்படுகின்றன. ஆன்மீக வழிபாட்டிற்காகத் தமது காப்புரையில் ஸ்தேவான் மனிதனின் கரத்தினால் செய்யப்பட்ட ஆலயத்தின் வீழ்ச்சியை முன்னுரையாக்கினார் (அ.ப. 7:48 தொ). இச்சொற்கள் இறைநிந்தனையாகக் கருதப்பட்டு அவரை மரணத்திற்கு இட்டுச் செல்கின்றன. பல ஆண்டுகளுக்குப் பின்னர் எருசலேமின் சிதைவானது யூதமதத்தின் கடினத்தன்மையை விரைவு படுத்தும். ஆலயம் அழிக்கப்படும். கிறிஸ்தவர்களை வெளியேற்றும் செயல் இயேசுவின் திருச்பையுடனான அதன் பிளவை முழுமைப்படுத்தும்.

ஆ) ஆன்மீக ஆலயம்:- ஆனால் இதற்கு முன்னதாகவே கிறிஸ்தவர்கள் தாங்களே புதிய ஆலயமாக, கிறிஸ்துவினுடைய உடலின் தொடர்ச்சியாக அமைந்திருப்பதை உணர்ந்து கொள்வர். பவுலின் வெளிப்படையான போதனை இதுவே. 'அடித்தளமாகவும் மூலைக்கல்லாகவும் உள்ள கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டுள்ள இறைவனின் ஆலயம் திருச்சபையே' (1 கொரி 3:10-17; 2 கொரி 6:16 தொ; எபே 2:20 தொ). இந்த ஒளிமயமான ஆலயத்தில் ஒன்றுபட்ட ஒரே ஆவியில் எவ்வித வேறுபாடுமின்றி யூதரும் யூதரல்லாதவரும், தந்தையை அணுகுவர் (எச 2:14-19).

கிறிஸ்துவின் உடலின் உறுப்புகள் என்ற அளவில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறைவனுடைய ஆலயமாவான் (1 கொரி 6:15; 12:27). அவனது உடல் பரிசுத்த ஆவியின் ஆலயமாகும் (1 கொரி 6:19; உரோ 8:11). இரண்டு கூற்றுகளும் ஒன்றோடொன்று இணைக்கப்படுகின்றன. இறைத்தன்மையானது உடல் சார்ந்த முறையில் தங்கியுள்ள இயேசுவின் உயிர்த்த உடலானது (கொலோ 2:9), இறைவனின் நிறைவான ஆலயமாகும். இந்த உடலின் கிறிஸ்தவ அங்கத்தினர்கள் அவருடன் சேர்ந்து, ஆன்மீக ஆலயத்தை உருவாக்குகின்றனர். அதன் வளர்ச்சிக்காக அவர்கள் விசுவாசத்திலும் அன்பிலும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும் (எபே 4:1-16). இவ்வாறு மனிதரால் நிராகரிக்கப்பட்ட ஆனால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உயிருள்ள பாறையாகக் கிறிஸ்து உள்ளார். தம்மிலேயே உயிருள்ள கற்களாக உள்ள விசுவாசிகள், அவரோடு சேர்ந்து ஆன்மீகக் கட்டடத்தை, புனித குருத்துவத்தை, ஆன்மீகப்பலிகள் அளிக்கும் நோக்கத்திற்காக அமைக்கின்றனர் (1 பேதுரு 2:4-5; உரோ 12:1). மனிதரின் கரங்களால் செய்யப்படாத தீர்மானமான ஆலயம் இங்கே உள்ளது. இதுவே திருச்சபை, கிறிஸ்துவின் உடல், இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே சந்திப்பு நிகழுமிடம். பூமியில் இறை பிரசன்னத்தினுடைய அடையாளம். பழைய புனித இடமானது சுட்டிக்காட்டும், ஆனால் முழுமையற்ற தற்காலிகமாக மற்றும் இறுதியில் தள்ளிவைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் ஆலயத்தின் சாயல் மட்டுமே.

3. விண்ணக ஆலயம்:-

அ) எபிரேயருக்கான திருமுகம்:- ஆனால் புதிய ஏற்பாடானது பழைய ஆலயத்தின் அடையாளத்தை மற்றொரு திசையில் பயன்படுத்துகிறது. யூதமதமானது ஆலயம் சார்ந்த சொற்களால் விவரிப்பதில் வெளிப்பாட்டு நூல்கள் மகிழ்ச்சியடைகின்ற உறைவிடமாகிய, இறைவனின் விண்ணக இல்லத்தினுடைய மனிதப் பிரதிபலிப்பினை, ஆலயத்தை, ஏற்கனவே கண்டிருந்தது. எபிரேயருக்கான திருமுகமானது இந்தப் பணிச்சட்டத்திற்குள்ளேயே குருவாகிய கிறிஸ்து தம் மரணத்தினாலும் உயிர்ப்பினாலும் விண்ணேற்றத்தினாலும் நிறைவேற்றிய பலியை

விவரிக்கிறது. அவர் தமது உலக வாழ்வின் முடிவில், உருவக வழிபாட்டில் இருப்பது போல், விலங்குகளின் இரத்தப்பலிகளாலன்றி, தமது இரத்தத்தினாலேயே விண்ணகக் கூடாரத்தில் நுழைந்தார் (எபி 9:11-14.24). இறைவனின் பிரசன்னத்தை அணுக நமக்கு உரிமை அளிக்கும்படி ஒரு முன்னோடியாக அவர் அங்கு உள்ளே நுழைந்தார் (4:16; 10:19-20). இத்தகைய தனித்துவமிக்க குருவுடன் ஒன்றுபட்டு, நமது விசுவாசத்தினால் நுழைவுரிமை பெற்று விட்ட நாம், இறைவன் தங்கியுள்ள திருத்தூயகத்தில் இறை பிரசன்னத்தை அனுபவிக்க முடியும் (6:9-20).

ஆ) யோவானின் திருவெளிப்பாடு:- திருவெளிப்பாட்டில், திருச்சபையாகிய மண்ணுலக ஆலயத்தின்மீது விண்ணக ஆலயத்தின் சாயல் ஆதிக்கம் செலுத்துகின்றது. பூவுலகில் விசுவாசிகள் இறைவனுக்கு வழிபாடு செலுத்துகின்ற ஓர் ஆலயம் உண்டு. திருச்சபைக்கு எதிராகத் தமது சினத்தை வெளியிடுகின்ற கொடுமைகளின் சாயலாக உள்ள புறவினத்தார் அந்த ஆலயத்தின் வெளிப்புற மண்டபங்களில் நிறைந்திருப்பர் (திருவெளி 11:1-2). ஆனால் பலியிடப்பட்ட செம்மறியானது அரியணையேற்றப்பட்டு செபம் மற்றும் புகழ்ச்சியின் வழிபாடு கொண்டாடப் படுகின்ற ஆலயமானது விண்ணகத்திலும் ஒன்று உள்ளது (5:6-14; 7:15). காலத்தின் இறுதியில், இந்த இரட்டைநிலையானது மறைந்துவிடும். உண்மையில் விண்ணக எருசலேமானது முடிவில்லாத திருமணத்திற்கென அலங்கரிக்கப்பட்ட செம்மறியின் மணமகளைப் போலப் பூமிக்கு இறங்கி வரும் போது, உலகில் ஆலயத்திற்குத் தேவை இனி இராது, இறைவனும் செம்மறியுமே அதன் ஆலயமாக இருப்பர். அப்போது விசுவாசிகள் எவ்வித அடையாளத்தின் தேவையுமின்றி இறைவனை அடைவர். அல்லது அவரது வாழ்வில் முழுமையாகப் பங்கு பெறும் பொருட்டு அவரை நேருக்கு நேராகக் காண்பர். இரு உடன்படிக்கைகளும் வளர்ச்சியோடு வெளிப்படுத்தியதன் உயர்ந்த மற்றும் உண்மையான நிறைவேற்றம் இதுவே

எருசலேம் சங்கம் (COUNCIL OF JERUSALEM)

அப்போஸ்தலர் பணியில், பக்தியுள்ள கொர்னேலியு குடும்பம் கிறிஸ்தவத்தைத் தழுவுகிறது (அ.ப.10) அந்தியோக்கியாவில் ஒரு சில புறஇனத்தார் நற்செய்தியை ஏற்கின்றனர். (11:19-26). அப்போதே கொஞ்சம் கருத்து வேறுபாடு எழுகிறது. ஆனால் சைப்ரஸ் தீவிலும் மத்திய ஆசியாவிலும் ஏராளமான புறவினத்தார் கிறிஸ்தவத்தை ஏற்ற போது திருச்சபையே எளிதாய்ப் பெரும்பாலும் புறவினத்தார் சபையாய் மாறிவிடுமோ என்ற நிலை தோன்றியபோது (அ.ப.13-14) விவாதம் முற்றியது. எனவே, புறஇனத்தாரைத் திருச்சபையில் ஏற்றுக் கொள்வதற்கு வேண்டிய நிபந்தனைகளை வரையறுக்க எருசலேமில் தலைவர்கள் கூடினர். இக்கூட்டமே எருசலேம் சங்கம் எனப்படும்.

இச்சங்கம் பற்றிப் புதிய ஏற்பாட்டில் இரு விவரிப்புக்கள் உள்ளன. அப்போஸ்தலர் பணி (அ.ப.15:1-29), கலாத்தியருக்கு எழுதிய திருமடல் 2:1-10 ஆகிய இவற்றிடையே வேறுபாடுகள் உள்ளன. பவுல் மனந்திரும்பி எருசலேமுக்கு இரண்டாம் முறையும் (கலா) மூன்றாம் முறையும் (அ.ப.) சென்றபோது சங்கம் நடக்கிறது. போக வேண்டுமென்று இறைவன் வெளிப்படுத்தியதால் அவர் அங்குப் போகிறார் (கலா). அந்தியோக்கிய சபை அவரையும் பிறரையும் அனுப்பிவைப்பதால் அவர் அங்குப்போகிறார் (அ.ப.). எருசலேம் தலைவர்களோடு சரிசமமாய்ப் பவுல் காரியங்களைக் கவனிக்கிறார். புற இனத்தாரின் அப்போஸ்தலர் தாம் என்பதைப் பிறர் ஏற்றுக் கொள்ள வைக்கிறார் (கலா). எருசலேம் தலைவர்களும் சபையும் அனைத்துத் திருச்சபை மேல் அதிகாரம் செலுத்துவதாகத் தோன்றுகிறது (அ.ப.). எருசலேமில் உள்ள ஏழைக் கிறிஸ்துவர்களுக்கு உதவ, பவுல் ஆர்வமுடன் முன்வருகிறார் (கலா). அ.ப. இல் இது பற்றிக் குறிப்பெதுவும் இல்லை. எருசலேம் போதித்த நற்செய்தியோடு புதிதாய் ஒன்றும் சேர்க்கவில்லை (கலா); எருச

லேம் தலைவர்களும் சபையும் புறஇனக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்புகின் றனர். இதில் ''சிலைகளால் தீட்டுப்பட்ட தைத் தொடாமலும், கெட்ட நடத்தையை விலக்கவும், மூச்சடைத்துச் செத்ததின் இறைச்சி, மிருக இரத்தம் இவற்றை உண் ணாமலும் இருக்கக்'' கேட்டுக் கொள்கின்ற னர் (அ.ப.15:29).

இந்த வேறுபாடுகளைத் தீர்க்க அ.ப.11:27-30-இன் உதவியுடன் பலவிளக்கங்கள் தரப் பட்டுள்ளன. ஆனால் இவற்றில் எதுவும் திருப்தி அளிப்பதாய் இல்லை. மேலே கூறிய இரு குறிப்புரைகளும் ஒரே சங்கத்தை விவரிப்பதுபோல் உள்ளன. இரண்டிலும் புறஇனத்தாரின் இடமும் விருத்தசேதனத் தின் தேவையும் பற்றிப் பேசப்படுகின்றன. அந்தியோக்கியாவிலும் எருசலேமிலும் இப் பிரச்சனை எழுகிறது. இதற்கு ஒரு முடிவு காணப் பவுல், பர்னாபா, மற்றும் பிறர் எருச லேம் செல்கின்றனர். பவுலினுடைய கட்சி வெற்றிபெறுகிறது. அதாவது விருத்தசேத னம் பிறஇனக் கிறிஸ்தவர்கட்குத் தேவை இல்லை என முடிவெடுக்கப்படுகிறது. பவுல் தம் தனி அப்போஸ்தலத்துவத்தை எண்பிக்கக் கலாத்தியருக்குத் திருமடல் எழுதுகிறார்; எனவே சில காரியங்கள் இங்கு அழுத்தம் பெறுகின்றன. ஆனால் பொது வாய் ஒற்றுமை உள்ளது.

வேறுபாடுகளில் இரண்டு குறிப்பிடத்தக் கவை: 1) அ.ப.-யில் எருசலேம் தலைவர் கள் உயர் அதிகாரம் செலுத்துவதுபோல் உள்ளது. பவுலோ சம, தனி அதிகாரம் கோருகிறார் (கலா). எனினும் தம் நற்செய் திக்கு மற்ற அப்போஸ்தலரின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்றுதானே அவர் எருச லேம் சென்றார். திருச்சபையின் ஒற்று மையை அனைவரும் விரும்பினர். திருப் பணியில் பவுல் சமநிலை பெறுகிறார். 2) தம் நற்செய்திக்குப் புதிதாய் எதுவும் மற்றத் தலைவர்கள் சேர்க்கவில்லை என்ற கூற் றுக்கு மாறாக அப்போஸ்தலர்களின் ஆணை (அ.ப.15:28-29) உள்ளது. இச் சங்கத்தின் முடி வானது எருசலேம் தலைவர்களின் பிறசேர்க் கையா என அறியோம். எனினும் புற இனத் தார் விருத்தசேதனம் செய்யத்தேவை யில்லை என்பதே முக்கியமும் அடிப்படை யுமாகும். மற்ற லேவியச் சடங்காசாரங்களில் ஒரு சிலவற்றை, மீட்புக்கு அவசியம் என் றல்ல, மாறாக அனைவரும் நட்புறவுடன் வாழஉதவும் ஒரு வழியாகப் பவுலே ஏற்றுக் கொண்டிருக்கலாம். சிலைவழிபாட்டையும் கெட்ட நடத்தையையும் பவுல் ஏற்கனவே எதிர்க்கிறார். மற்ற இரண்டு ஆசாரங்களை யும் சமரசத்துக்காக அச்சமயம் அவர் ஏற்றுக் கொண்டிருக்கலாம். பின்பு யூதக்கிறிஸ்தவர் களின் வலுக்கட்டாயத்தைப் பார்த்து அவர் இந்த உணவு ஒழுங்குகளைப் புறக்கணித்தி ருக்கலாம். இதனால்தான்போலும் 1 கொரி 8-10-இல் இவ்வாணையைப் பற்றி எந்தக் குறிப்பும் காணோம்.

நுணுக்கங்களைத் தவிர்த்துப் பார்த்தால் எருசலேம் தலைவர்கள் பெருமனம் வைத் துப் பவுலுக்கு ஆதரவு அளித்தனர். அடிப் படையில் விருத்தசேதனம் மீட்புக்குத் தேவை யில்லை என ஏற்றுக் கொண்டார். ஆகவே பவுலினுடைய வெற்றி பெரிது என்றே கூற லாம்.

எருது, காளை (OX)

1. பாரம் இழுப்பவை:-

இவை வண்டி இழுக்கவும் (எண் 7:3; 2 சாமு 6:6), உழவுசெய்யவும் (உப 22:10; 1 சாமு 11:5; 1 அர 19:19; யோபு 1:14) போரடிக்கவும் (உப 25:4) பயன்பட்டன. ஓய்வு நாளில் இவையும் இளைப்பாற வேண்டும் (யாத் 2312). இவற்றின் தலை யீற்று ஆண்டவருக்குச் சொந்தமாகும் (யாத் 34:19; லேவி 27:26). இவை பொதுவாகப் புல்லைத் தின்றன (எண் 22:4; யோபு 6:5). எனினும் வரண்ட காலத்தில் வைக்கோ லைத் தின்றன. (எச 11:7) இவற்றின் சாணம் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது (எச 4:15). எருதுகள் பற்றிய விதிமுறைகள் (யாத் 21:28-22:15) என்ற பகுதியில் காணப்படுகின் றன.

2. உணவாகப் பயன்படும் எருதுகள்:-

எருது உண்ணத்தக்க விலங்கானாலும்

(உபா 14:4) பொதுவாக எபிரேய மக்கள் தங்களுடைய உணவில் அதைச் சேர்த்துக் கொள்ளவில்லை. சிலகுறிப்பிட்ட சிறப்பு விழாக்களின்போது மாட்டை அடித்தனர் (1 சாமு 14:31-34; 1 அர 1:19; பழ 15:17; ஏச 22:13; மத் 22:4). அரசர்களும் பிரபுக்களும் மாட்டு இறைச்சியை அடிக்கடி உண்டிருக்க லாம் (1 அர 4:23; நெக 5:18; ஆமோ 6:4).

3. பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டவை:-

எருதைப் பலியாக ஒப்புக் கொடுக்கும் வழக்கம் மேற்காசிய மக்களிடையே வழங்கி வந்தது (அ.ப.14:13). எபிரேய மக்களி டையே இத்தகைய வழக்கமானது பண் டைய காலந்தொட்டே இருந்து வந்தது (யோத் 2:24; லேவி 3:1; 9:4; 22:23; எண் 7:88).

4. உடைமை:-

ஒரு கழுதையைக் கொண்டிருப்பதுபோல ஓர் எருதையாவது கொண்டிருப்பது வாழ்க் கைக்கு மிக அவசியமானதாகும் (யோபு 24:3). அதற்கு மாறாகப் பெருஞ் செல்வந்தர் களும் வசதிபடைத்தவர்களும் ஆடு, மாடு களை மந்தையாக வைத்திருந்தனர். அது அவர்களின் சமூக, பொருளாதார நிலைக்கு அடையாளமாகும் (ஆதி 12:16; 32:5; 2 சாமு 12:2; யோபு 1:3; திருவுரை 2:7). இவைக ளைப் பகைவர்கள் எடுத்துச் சென்றனர் (1 சாமு 15:9; 27:8; யோபு 1:14-15; எரே 5:17; 49:32).

5. அழகும் அடையாளமும்:-

சாலமோன் ஆலயத்தில் இருந்த கடல் தொட்டி பன்னிரு எருதுகளின் மேல் வைக் கப்பட்டிருந்தது (1 அர 7:25). சட்டங்களில் காளைகள் பொறிக்கப்பட்டிருந்தன (1 அர 7:29), மேற்காசியாவில் எருதுகளும் பிற விலங்குகளும் தெய்வங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டன. எருது அதனுடைய வலி மைக்கும் காளை பாலின வளமைக்கும் அடையாளமாக இருந்தது. எசக்கியேலின் காட்சியில் காணப்பட்ட கெரூபுகள் கொண் டிருந்த நான்கு முகங்களில் ஒன்று எருது அமைப்பைக் கொண்டிருந்தது (எசே 1:5-10). இதனால் பாதிக்கப்பட்டுத் திருவெளிப் பாட்டில் இறைவனின் அரியணையைச் சுற்றி நின்ற உயிரினங்களில் ஒன்று எருதின் முகத் தைக் கொண்டிருந்தது. (திருவெளி 4:6-11).

எருபாகால் (JERUBAAL - பாகால் போராடட் டும் அல்லது பெருகட்டும்)

கிதயோன், தன் தந்தை ஒபிராவில் கட்டியி ருந்த பாகாலின் பீடத்தை உடைத்தெறிந்த தால் அவருக்கு எருபாகால் என்ற பெயர் அளிக்கப்பட்டது (நீதி 6:32). அன்றிலிருந்து இது கிதயோனின் மற்றொரு பெயராக விளங்கியது (7:1; 8:35). அல்லது கிதயோன் என்ற பெய ருக்குப் பதிலாகப் பயன்படுத்தப் பட்டது (8:29; 9:1-2.5.16.19.24.28.57; 1 சாமு 12:11). இது வெவ்வேறு மூலங்களைச் சுட்டு கிறது.

இப்பெயரின் மங்கள வடிவம் ''வெட்கம் போராடட்டும் அல்லது பெருகட்டும்'' என்ற பொருளுடைய எருபாசத்து 2 சாமு 11:21-இல் வருகிறது.

எருபாசத்து (JERUBBESHETH - வெட்கம் போராடட்டும், வெட்கம் பெருகுகின்றது)

எருபாகால் என்ற பெயருக்குப் பதிலான பெயராகும்; மூலப் பெயரிலுள்ள பாகால் என்பதை அழிக்க, அதற்குப் பதிலாக வெட் கம் என்ற சொல்லைப் பயன்படுத்தி அமைக் கப்பட்ட சொல்லாகும் (2 சாமு 11:21)

எருவேல் (JERUEL - இறைவனால் நிறுவப் பட்டது)

தெக்கோவாவிற்கும் ஏன்கேதிக்கும் இடைப்பட்ட பாலைவனமாகும் (2 நாள் 20:16). சீசு ஏற்றத்தில் அமைந்திருக்கிறது. இங்குதான் யோசபாத்து அம்மோனிய, மோவாபிய, மற்றும் மெயூனியக் கூட்டணி யைத் தோற்கடித்தார்.

எருசா (JERUSHA - உடைமை)

யூதா அரசன் யோத்தாமின் தாயும் சாதோக் கின் மகளும் ஆவார் (2 அர 15:33; 27:1). 27:1 -இல் இப்பெயர் எருசாக்கு என்ற வடிவில் காணப்படுகிறது.

எரெமோத்து (JEREMOTH - வீங்கிய, பருத்த)

1. பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர், பெக்கரின் மகன் (1 நாள் 7:8). ஆனால் தலைமுறைப்படி செபுலோனைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

2. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஏல்பாலின் மகன் (1 நாள் 8:14). 8:27 -இல் வரும் எரொகாமும் இவரும் ஒருவராக இருக்கலாம்.

3. ஒரு மெராரிய லேவியர் - மூசியின் மகன் (1 நாள் 23:23). 24:30 -இல் இவர் எரிமோத்து (4) என்றழைக்கப்படுகிறார்.

4. தாவீது காலத்தில் லேவியர் பாடகர்களில் 15-ஆவது பிரிவின் தலைவர். ஏமானுக்குப் பிறந்த லேவியர்களுள் ஒருவர் (1 நாள். 25:22). இவரும் எரிமோத்தும் (5) ஒருவராக இருக்கலாம்.

5. நப்தலி இனத்தின் தலைவர்களில் ஒருவர். ஆசிரியேலின் (2) மகன் (1 நாள் 27:19).

6. எஸ்ராவின் காலத்தில் புறவின மனைவியை விலக்கிய மற்றொரு யூதன், சட்டுவின் மகன் (எஸ் 10:27).

7. எஸ்ராவின் காலத்தில் புறவின மனைவியை விலக்கிய ஒருவர். ஏலாமின் மகன் (எஸ் 10:26).

8. எஸ்ராவின் காலத்தில் புறவின மனைவியை விலக்கிய மூன்றாவது யூதன். பானீயின் மகன் (எஸ் 10:29).

எரேக்கு (ERECH - மிக நலமுள்ள)

சுமேரின் முக்கியமான பெரிய நகரங்களில் ஒன்று. பாக்தாத்திற்குத் தெற்கே 256 கிலோ மீட்டர்களுக்கு அப்பாலும் யூப்பிரத்திசின் கிழக்குக் கரையில் ஊரிலிருந்து 65 கி.மீ. தொலைவிலுமுள்ள இக்கால வார்கா என்ற நகரமாக அடையாளம் காட்டப்படுகிறது. ஆதி. 10:10 -இல் சீனார் நாட்டிலுள்ள நிம்ரோத்து அரசைச் சார்ந்த ஒரு நகரமாக, நாடுகளின் பட்டியலில் குறிப்பிடப்படுகிறது. எஸ் 4:9-10 -இன்படி எரேக்கின் மனிதர்களும் மற்றவர்களும் ஒசினப்பர் (அநேகமாக அசூர்பானிப்பால்) என்பவனால் சமாரியாவின் நகரங்களிலும் நதியின் அக்கரையிலுள்ள மற்ற நாடுகளிலும் குடியேற்றப்பட்டனர்.

கி.மு.4000-ஐ ஒட்டி, ''உபாய்து'' மக்களால் குல்லாப்பு என்ற கிராமம் முதலில் நிர்மாணிக்கப்பட்டது. பிற்காலத்தில், குல்லாப்பு எரேக்கு என்று அழைக்கப்பட்ட நகரின் ஒரு பகுதியாகியது. கி.மு.3000 ஆண்டுகள் தொடக்கத்தில் வாழ்ந்த மெஸ்க்கியக்கசேர் எரேக்கை நிர்மாணித்துக் கட்டி அந்நகரின் முதல் அரச மரபையும் நிறுவினார். குல்லாப்பு கிராமம் எரேக்கு நகரோடு இணைக்கப்பட்டது. அவரைத் தொடர்ந்து என்மெர்கர், லுகல் பாண்டா, கில்காமெஸ் போன்ற அரசர்கள் ஆண்டார்கள். பிற்காலத்தில் எரேக்கை ஆண்ட முக்கிய ஆட்சியாளர்களான லுகாஸ்லா கெஸி, உத்துகெகல், சின்காஸித் (கி.மு.1800) ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பல கட்டடங்களை எழுப்பி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினார்கள். கமுராபி காலத்திலிருந்து எரேக்கு பாபிலோனியாவின் ஒரு பகுதியாகப் பார்த்தியர் ஆட்சியின் வீழ்ச்சிவரை இருந்தது. எரேக்கு இந்த வீழ்ச்சியின்போது அப்படியே கைவிடப்பட்டது.

எரேக்கில் ஆன் தான் முக்கிய தெய்வம். இது சுமேரிய கடவுள்கள் கூட்டத்தின் அரசனாகத் தொடக்க காலத்தில் இருந்தது. இருந்தபோதிலும் இனான்னாதான் எரேக்கின் விருப்ப தேவதையாக விளங்கினாள். இவள் ஒரு காதல் தேவதை. இவளிடமிருந்து பல நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். இறையியலாரின் கருத்துப்படி இவள் சுமேரின் வளத்தையும் மக்கள் பெருக்கத்தையும் உறுதிப்படுத்த அரசன் துமுசியை மணந்தாள். எனவேதான் பிறகு வந்த சுமேரிய அரசர்கள் பலர் 'துமுசி' பெயரை அடையாள முறையில் சூட்டிக் கொண்டார்கள்.

கி.பி.1912-13, 1928-39 மேலும் 1954-59 வருடங்களில் ஜெர்மானிய புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் எரேக்கு ஆராய்ச்சியை மேற்கொண்டார்கள். அதன் விளைவாக 10 கி.மீ. சுற்றளவுள்ள நகர மதிற்கவர்களையும் இரண்டு சிகுராத்துக்களையும், 3-4 ஆயிரம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த பல கோயில் களையும் கண்டுபிடித்தார்கள். பல நூற்றுக் கணக்கான செதுக்கப்பட்ட உருவப்படங்கள் கிடைத்தன; பல முத்திரைகளையும், முத் திரை பதித்த அடையாளங்களையும் கண் டார்கள். ''துமுஸி இனான்னா'' உருவம் பதித்த ஒரு வெண்கலச் சிலை கிடைத்தது; பெண்தலையைப் போல உருவம் கொண்ட கற்சிலை கிடைத்தது. மிகவும் பிற்காலத் தைச் சேர்ந்த செலூக்கிய கல்வெட்டுச் சுவடி கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் பாபி லோனிய வானியலைப் பற்றிய வாசகங்கள் காணப்பட்டன.

எரேது (JERED - வழித் தோன்றல், ரோஸ்)

மெரேத்துக்கு அவரது யூத மனைவி வழி யாகப் பிறந்த மகன். கெதோரின் தந்தை (1 நாள் 4:18).

எரேமாய் (JEREMAI)

காசூமின் புதல்வர்களில் ஒருவர். புறவின மனைவியை விலக்கிவிடுமாறு எஸ்ராவால் வற்புறுத்தப்பட்டவர்களில் ஒருவர் (எஸ் 10: 33).

எரேமியா (JEREMIAH - யாவே உயர்த்து கிறார், நிறுவுகிறார்)

1. யோசியா அரசனின் மனைவியும் அர சன் யோவகாசு மற்றும் அரசன் செதேக்கியா வின் தாயுமான கமுத்தாளின் தந்தை (2 அர 23:31; 24:18; எரே 52:1). இலிபுனாவில் வாழ்ந்தவர்.

2. ஒரு மனாசேயின் இனத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் (1 நாள் 5:24).

3. சிக்கிலாகில் தாவீதுடன் இணைந்து கொண்ட வலிமை வாய்ந்த வீரர்களுள் ஒரு வர். பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 12:4).

4. சிக்கிலாகில் தாவீதுடன் இணைந்து கொண்ட காது இனத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளின் பெயர் (1 நாள் 12:10,13).

5. நெகமியா உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு குரு (நெக 10:2).

6. செருபாபேலுடன் அடிமைத்தனத்தி னின்று திரும்பி வந்த குருக்களில் ஒருவர் (நெக 12:1). இப்பெயர் ஒரு குலத்திற்குத் தலைவராகவும் விளங்குகின்றது (12:12).

7. நெகமியா காலத்தில் எருசலேம் மதிலை அர்ப்பணம் செய்தபோது அங்கி ருந்த ஒரு குரு (நெக 12:34). இவர் (5)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

8. அனத்தோத்திலிருந்து வந்த ஓர் இறை வாக்கினர். அவரது பணி, எரேமியா நூலில் கூறப்பட்டிருக்கிறது. இலிக்கியா என்ற குரு வின் மகன் (எரே 1:1). யோசியாவின் 13-ஆம் ஆண்டில் (627) இறைவாக்குரைக்க இவருக்கு அழைப்பு வந்தது. இது இவர் யோசியா ஆட்சியில் தொடக்கத்திலோ அவ ருக்கு முந்திய மனாசேயின் ஆட்சியிலோ இவர் பிறந்திருக்கலாம் என்று சுட்டுகிறது. யூதாவின் இறுதி ஐந்து அரசர்கள் காலத்தில் இவரது பணி 40 ஆண்டுகளுக்கு நீடித்தது. 587-இல் எருசலேம் பாபிலோனியர்களுக்கு வீழ்ச்சியுற்றபோது, மக்களில் எளியவர்க ளோடு யூதாவில் தங்க இவர் அனுமதிக்கப் பட்டார். ஆனால் பாபிலோனிய ஆளுநன் கெதாலியா கொலை செய்யப்பட்டபின் இவர் எகிப்துக்கு ஓடிப்போகுமாறு கட்டா யப்படுத்தப்பட்டார் காண்க. ஏரேமியா நூல்.

9. கபசினியாவின் மகனும் யாசானியா வின் தந்தையுமாவர். இறைவாக்கினர் எரே மியாவின் சம காலத்தில் வாழ்ந்தவர் (எரே 35:3). இவர் ஓர் இரக்காப்பியர்.

எரேமியாவின் நூல் (BOOKS OF JEREMIAH)

1. எரேமியாவின் காலம்:-

எரேமியா பழங்கால மேற்காசியாவின் மிகவும் குழப்பங்கள் நிறைந்த காலத்தில் வாழ்ந்தார். ஒரு பேரரசின் வீழ்ச்சியையும்,

அதைவிடப் பெரிய பேரரசின் எழுச்சியை யும் கண்டவர். இந்தக் குழப்பங்களின் மத்தி யில் சிற்றரசான யூதா சிக்கித் தவித்தது. அச்சமயத்தில் யூதா திறமையற்ற அரசர்க ளால் ஆளப்பட்டதால் வரலாற்றில் பெரிய சக்தியான அந்தப் பேரரசை எதிர்க்கும் முயற் சியிலேயே அழிந்து போனது.

அ. மேற்காசியா:-

அசூனசிர்பால் (கி.மு. 884-860), மூன்றாம் சால்மனேசர் (859-825) இவர்களின் வெற்றி ததும்பும் படையெடுப்புகளுக்குப்பின், அசீ ரியா ஏறத்தாழ 200 ஆண்டு ஆட்சி செலுத்தி யது. அசீரியப் பேரரசு எல்லாத் துறைகளி லும் தன் உச்சக்கட்டத்திலிருந்தது எஸ்ஸர்கத் தோன் (681-670) மன்னன் காலத்தில்தான். இப்படிப்பட்ட பேரரசின் பெருமையை அசூர்பானிபால் (669-633) தன் ஆட்சியில் காப்பாற்றி வந்தாலும் அவருடைய இறுதி யில் பேரரசு அழியும் அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தன. சுமார் 633-இல் அசூர்பானி பால் இறந்ததும் வரலாற்றிலிருந்தே இப் பேரரசு மறைய ஆரம்பித்தது.

இவ்வேளையில் சித்தியர்கள் மேற்காசி யாவைத் தாக்கினர். இந்தத் தாக்குதல் புதிய இடங்களைப் பிடிப்பதற்கன்று. மாறாகப் புதிதாகக் குடியேறிய பகுதிகளை மிகவும் கொடுமையான முறையில் கொள்ளையிட வேயாகும். இவ்வேளையில் பாபிலோன் எழுச்சியுற ஆரம்பித்தது. எனவே பாபிலோ னில் அப்போது முடியரசனாய் இருந்த நபோபோலசார் (626-605) அசீரியாவுக்கு எதி ராகக் கிளர்ச்சி செய்தார். அசீரியாவின் ஆதிக் கத்திலிருந்து பாபிலோனை விடுவித்து சுதந் தர நாடாக்கியபின், மேதிய நாட்டின் அரசன் சியாக்சாரஸ் என்பவனின் உதவியோடு அசீ ரியாவுக்கு எதிராகப் படையெடுத்தார். அசூர் நகரத்தைக் கி.மு. 614-இலும் தலைநக ரான நினிவே நகரத்தை 612-இலும் கைப்பற் றினார். அப்போது அசீரியாவின் கடைசி அரசனாய் இரண்டாம் அசூர்-உபால்லித் காரானில் தஞ்சம் புகுந்து கொண்டு, எகிப் தின் பார்வோன் நெக்கோவின் உதவியுடன் நபோபோலசாரை மூன்றாண்டுகள் வரை எதிர்த்தார். 609-இல் நபோபோலசார் காரா னைக் கைப்பற்றி தாம் 605-இல் இறக்கும் வரை தம் பேரரசை விரிவாக்கினார். இவ் வேளையில் நபோபோலசாரின் மகனும், அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்தவருமா கிய நெபுக்கதுனேசார் எகிப்தியப் படைக ளைக் கார்கெமிஸ் என்னும் இடத்தில் தோற் கடித்தார். இவ்வெற்றி பாபிலோனை அக் கால அரசியலில் ஒரு பெரிய வல்லரசாக மாற்றியது. இயல்பிலேயே போரில் வல்லவ ரான நெபுக்கதுனேசார் (605-561) பெரும்பா லான ஆண்டுகளைத் தம் பேரரசுக்கு வெளி யில் போரிடுவதிலேயே கழித்தார். எகிப்து மட்டுமே பாபிலோனை எதிர்த்ததால் 601-இல் இருபடைகளும் சந்தித்தன. இறுதியாக 568-இல் பாபிலோனியப்படைகள் வெற்றி கண்டன.

ஆ யூதா: சமயப்பின்னணி:-

மனாசேயின் (687-642) நீண்ட ஆட்சிக் காலத்தில் யூதா அசீரியாவுக்குக் கப்பம் கட் டும் சிற்றரசாகவே இருந்தது. இதன் விளை வாக மெசபொத்தாமியாவின் இசிதார் வழி பாடும், சிசு பலியும், மத அடிப்படை விபச்சாரமும் பெருகின. இதே நிலை யோசி யாவின் (640-609) காலத்திலும் இருந்தது. ஆனால் 622-621-இல் ஆலயத்தில் சட்டப்புத் தகம் கண்டுபிடிக்கப்பட்டபின், யோசியா தம் அரசில் மட்டுமல்லாமல் 721-இல் அசீரி யப் பேரரசின் ஒரு பகுதியாயிருந்த வட இஸ்ராயேல் நாட்டிலும் பல சீர்திருத்தங்க ளைச் செய்தார். அரசியல் அமைப்பும், யாவேயின் உடன்படிக்கைக்கு மக்கள் நம் பிக்கைக்குரியவர்களாய் இருந்ததும் சாதக மாக இருந்தன.

பெரிய ஆடம்பரமான சிறப்பான விழா வில் மோசேயின் உடன்படிக்கை புதுப்பிக் கப்பட்டது. எருசலேமை மட்டுமே வழி பாட்டின் தனியொரு தலைமை இடமாக வைத்துக் கொண்டு சிலைவழிபாடு நடந்த மேட்டு நிலங்களெல்லாம் அழிக்கப்பட் டன. 609-இல் யோசியா மெகிதோவில் இறந்தபோது, இப்பெருமைமிக்க அரசாட்சி முடிவுற்றது. அரசன் நெக்கோவைக் காரா

னில் அசூர்-உபால்லித்தோடு சேராமல் தடுக்க யோசியா முயற்சித்தார். அம்முயற்சியில் உயிர் துறந்தார். இவ்வேளையில் பாபிலோனுக்கு சீரியா மற்றும் பாலஸ்தீனத்தின் மேல் அதிகாரம் இல்லாததால் நெக்கோவின் மேலாண்மையின் கீழ்ப் பாலஸ்தீனம் சிற்றரசாக விளங்கியது. நெக்கோ யோவகாசைப் பதவியிலிருந்து இறக்கி எகிப்துக்குக் கைதியாக அனுப்பிவிட்டு யோயாக்கிமை (609-598) பதவியிலமர்த்தினார். யோயாக்கிமின் காலத்தில் யோசியா ஒழித்த அத்தனையும் தளிர்த்தன. மேலும் யூதா எகிப்தின் ஆட்சியில் அடிமையாக இருந்தது. எனவே பாபிலோனை எதிர்ப்பதே அரசனின் தலையாய பிரச்சனையாக இருந்ததால், 597-இல் எருசலேம் அழிந்தது. யூதர்கள் முதன்முறை நாடு கடத்தப்பட்டனர். அவருடைய மகனான யோயாக்கின் நெபுக்கதுனேசாரால் நாடு கடத்தப்பட்டார். அவருக்குப்பின் அவருடைய மாமன் செதேக்கியா (597-587) ஆட்சிக்கு வந்தார்.

செதேக்கியாவுக்கு ஆட்சிமுறை சரியாகத் தெரியாததால், இரண்டு குழுக்களின் ஆலோசனைகளிடையே தடுமாறினார். ஒரு சாரர், பாபிலோனை எதிர்க்க எந்த அரசும் இல்லாததால், பாபிலோனுக்குச் சரணடையக் கூறினர். மற்றொரு குழுவினர், எகிப்தோடு சேர்ந்து நெபுக்கதுனேசாரை எதிர்க்கும்படித் தூண்டினர். இவர்களே இறுதியில் வெற்றியும் பெற்றனர். இதன் அடிப்படையில் செதேக்கியா பாபிலோனை எதிர்த்ததால், நெபுக்கதுனேசார் எருசலேமைக் கைப்பற்றி 587-இல் மீண்டும் யூதர்களை இரண்டாம் முறையாகப் பாபிலோனுக்கு நாடு கடத்தினார். செதேக்கியாவின் கண்களைக் குருடாக்கிப் பாபிலோனுக்குக் கைதியாகக் கூட்டிச் சென்றார். இவ்வாறு யூதா பாபிலோனியப் பேரரசின் ஒரு பகுதியாயிற்று. பின்பு நெபுக்கதுனேசார் கெதாலியாவைப் புதிய பகுதியின் ஆளுநராகச் சுபாவில் ஆட்சியிலமர்த்தினார். ஆனால் இரண்டு மாதங்களுக்குப்பின் அம்மோனிய அரசனின் தூண்டுதலால் கெதாலியா கொலை செய்யப்பட்டார். எனவே நெபுக்கதுனேசாரின் கடுங்கோபாக்கினைக்குப் பயந்து பல யூதேய நாட்டினர் எரேமியாவை அழைத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போயினர்.

இ. சமூகப் பின்னணி:- மக்களின் ஒழுக்கம் ஏசயாவின் காலத்தைவிட எரேமியாவின் காலத்தில் சீர்குலைந்திருந்தது. நீதி நிலைகுலைந்து போனது (எரே 5:1). விபச்சாரமும், எளியோரையும் அநாதைகளையும் நசுக்கி வதைத்தலும் அன்றாட நடைமுறையாயிற்று (எரே 25:26-28). இதை எரேமியா மிகமிக வன்மையாகக் கண்டனம் செய்தார். இவற்றிற்குச் சமூகத்தில் செல்வாக்கு உடையவர்களே காரணம் என்று பொங்கியெழுகிறார் எரேமியா (5:4-5.31)

2. பெயரும், வாழ்வும்:-

''எரேமியா'' என்ற பெயர், ''யாவே நிறுவுகிறார்'' அல்லது ''யாவே உயர்த்துகிறார்'' எனப் பொருள் கொள்ளலாம்.

இறைவாக்கினர் எரேமியா எருசலேமுக்கு வடகிழக்கில் மூன்று மைல் தூரத்திலுள்ள அனத்தோத்து என்ற குக்கிராமத்தில் கி.மு. 646-இல் அரசன் மனாசேயின் ஆட்சி முடிவில் பிறந்தார் எனலாம். இவர் குருக்கள் குலத்தைச் சேர்ந்தவர். பல நூற்றாண்டுகளுக்கு முன் சிலோவில் பெரிய குருவாயிருந்த ஏலியின் மரபைச் சார்ந்த அபியாத்தார் என்பவரை மாமன்னன் சாலமோன் அனத்தோத்துக்குத் துரத்தினான். ஒருவேளை இவ்வாறு துரத்தப்பட்ட அபியாத்தாரின் வழியாக எரேமியா ஏலியின் வழித்தோன்றலாகக் கூட இருக்கலாம். இவருடைய இளமைப்பருவம் பற்றி நமக்குவேறு செய்தி ஏதும் கிடைக்கவில்லை.

இத்தகைய குழப்பமான அரசியல், சமய, சமூகப் பின்னணியில்தான் இறைவன் எரேமியாவை யூதாவுக்கு இறைவாக்கினராகச் செல்ல அழைத்தார். அவருடைய பணி சுமார் 40 ஆண்டுகள் நீடித்தது (காண்.எரே. 1:1-3). உண்மையில் யூதாவின் கடைசி ஆண்டுகளிலே இறை ஊழியர்களின் ஆலோசனை பெருமளவில் தேவைப்பட்டது. எனவே எரேமியா மட்டுமல்லாது செப்பனியா,

அபக்கூக்கு, நாகூம், எசக்கியேல் போன்ற இறைவாக்கினர்கள் இறைவனின் வார்த்தையை எடுத்துரைத்தனர். இவ்வாறு பல இறைத் தூதுவர்கள் வந்தாலும் இறைவார்த்தையை நேருக்கு நேர், யாராயிருந்தாலும் எடுத்துரைப்பதில் எரேமியாவுக்கு நிகர் அவரே.

எரேமியாவின் பணியின் முதல் பகுதி 627-626-இல் அவர் இறைவாக்கினராக இறைவாக்குரைக்க அழைக்கப்பட்டது முதல் 609-இல் யோசியாவின் இறப்புவரை நீடித்தது. இச்சமயத்தில் இவர் உரைத்த இறைவாக்குகள் 1-6 அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. யோசியா மிகவும் இளயவயதினராக இருந்தபடியால் மனாசேயின் அட்டூழியங்களை அழிக்க முடியவில்லை. மேலும் 622-இல் ஆலயத்தில் திருச்சட்டநூல் கண்டுபிடிக்கப்பட்டபோது அவர் அனாதோத்திலேயே இருந்திருக்க வேண்டும். சட்ட அடிப்படையில் யோசியா சீர்திருத்தங்களைச் செய்ததால் அவரைப் பாராட்டியிருப்பார். இச்சமயத்தில் இறைவனுக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையே உள்ள உடன்படிக்கையைக் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவு போல விளக்குகிறார். இஸ்ராயேல் மக்கள் வழிதவறிச் சென்றால் வடக்கிலிருந்து இறைவனுடைய தண்டனையாக அரசர்கள் படையெடுத்து அழித்தொழிப்பார்கள் என்றும் இறைவாக்குரைத்தார்.

யோயாக்கிம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து எரேமியாவின் பணியிலே புதிய திருப்பம் ஏற்படுகிறது. யோசியாவின் சீர்திருத்தங்களெல்லாம் சீர்கேடான நிலைக்கு உள்ளாகி, சிலைவழிபாடு தழைத்தது. அரசியல் அளவிலே எகிப்தியக் கட்சி ஆட்சியை ஆட்டிப் படைத்தது. இவ்வேளையில் எரேமியா மீண்டும் சிலைவழிபாட்டையும், உடன்படிக்கையின் மேலெழுந்த வாரியான எண்ணத்தையும் வன்மையாகக் கண்டிக்கத் தொடங்கினார். பாபிலோன் எகிப்தை வெற்றி கண்டவுடனே (605) வடக்கிலிருந்து இஸ்ராயேல் மக்கள் மீது படையெடுக்கப் போகிற எதிரி யார் என்று ஓரளவு தெரிந்து கொண்டார். ஆலயத்திற்குச் சென்று இறைவாக்குரைக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்ததால் யூதாவுக்கும், எருசலேமுக்கும் எதிரான இறைவாக்குகளைப் பாரூக்கு என்பவரிடம் கூற அதை அவர் ஓர் ஏட்டுச்சுருளில் எழுதி ஆலயத்தில் வாசித்தார். இதனால் கோபமடைந்த யோயாக்கிம், ஏட்டுச் சுருளை அழித்துவிட்டு அவரையும் தொலைக்கத் தேடினார். ஆனால் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டு மீண்டும் அதைப் புதிய ஏட்டுச் சுருளில் எழுதினார் (எரே 35). இதனால் மனமுடைந்த எரேமியா இறைவனிலும், தம் பணியிலும் நம்பிகைஇழந்தார். இதைத்தான் பாடலாக ''எரேமியாவின் அறிக்கை''யில் காண்கிறோம்.

எரேமியாவின் பணியின் மூன்றாவது பகுதி 597-இல் எருசலேமின் முதல் அழிவு தொடங்கி 587-க்குப் பிறகு எகிப்தில் அவரின் (எரேமியா) இறப்புவரை நீடித்தது. 597-இல் நாடுகடத்தப்பட்ட யோயாக்கின் நாடு திரும்புவான் என மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் எரேமியாவோ இதற்கு எதிராகவே இறைவாக்குரைத்தார் (எரே 22: 20-30). 594-593-இல் இவர் எருசலேமின் போலி இறைவாக்கினர்களுக்கெதிராக வெகுண்டெழுந்து பாபிலோனும் அழிவுறும் என்று இறைவாக்குரைத்தார் (51:59-64; 29:10 தொ). இவ்வேளையில் திறமையற்ற செதேக்கியா அரசியல் கட்சிகளுக்கிடையே சிக்கித் தவித்தாலும், எரேமியாவின்மீது அவருக்கு நன்மதிப்பு இருந்தபடியால் அவரைச் சதிகாரர்களின் கைகளிலிருந்து தப்புவித்தார். அவர் அனாத்தோத்துக்குத் திரும்பிச் செல்ல விரும்பியபோது பாபிலோனியருடன் சேர்ந்து கொள்ளப்போவதாகவும், தம் போதனையால் மக்களிடையே குழப்பம் விளைவிப்பதாகவும் குற்றம்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார் (37:11-38:28). 587-இல் எருசலேம் மீண்டும் பாபிலோனியரால் அழிக்கப்படும்வரை அங்கேயே இருந்தார். பின் அவர் கெதாலியா யூதாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு உதவினார். ஆனால் கெதாலியா கொலை செய்யப்பட்டபின்

நெபுக்கதுனேசாரின் கொடுமைகளுக்கு அஞ்சி, எரேமியாவையும் அழைத்துக் கொண்டு யூதர்கள் பலர் எகிப்துக்கு ஓடிப் போயினர். அவர் அங்கேயே சிறிது காலத்திற்குப்பின் இறந்துவிட்டதாகப் பாரம்பரியம் கூறுகிறது.

4. நூல்:-

அ) ஆசிரியரும் உண்மைத் தன்மையும்:- இந்நூலின் எப்பகுதியை யார் எழுதியது என்பது ஒரு தீராத பிரச்சினையாகவே இருந்து வருகிறது. கி.பி. 1901-இல் தூகன் என்பவர் எரேமியாவால் எழுதப்பட்ட பகுதியை இப்போது இருக்கும் நூலின் ஐந்திலொரு பகுதியாகச் சுருக்கினார். ஆனால் பின்னர் வந்த விவிலிய அறிஞர் சிலர், இவருடைய கருத்தை ஒதுக்கிவிட்டு, இந்நூலில் பல இடைச்செருகல்கள் இருந்தாலும் பெரும்பாலானவை எரேமியாவுக்குரியவை எனக் கருதுகின்றனர். இந்நூலைப் பற்றி மோவின்கல் என்பவர் வெளியிட்ட ஆராய்ச்சியில் மூன்று வகையான ''மூலங்களைக்'' கண்டார். அவை (1) கவிதை இறைவாக்குகள் (2) சரிதைச் செய்திகள் (3) உபாகம பாரம்பரியக் கூற்றுகள் என்பன.

கவிதை இறைவாக்குகள் எரேமியாவுடையவை என்பதில் ஐயமேதுமில்லை (எரே 1-25; 30-31; 46-51). ஆனால் மோவின்கலும், அவரைச் சார்ந்தவர்களும் இவை பின்னர்ச் சேர்க்கப்பட்டவை என இப்பகுதிகளை ஒதுக்கிவிட்டாலும், இக்கவிதைகளை நாம் கூர்ந்து ஆழ்ந்து படிக்கும் போது பல எரேமியாவுடையவை என்பதும், இன்னும் எஞ்சியுள்ளவற்றில் எரேமியாவின் சிந்தனைக் கரு இருப்பதையும் உணரமுடியும். ஆனால் பாபிலோனைப் பற்றி இறைவாக்கு (50-51) நாடுகடத்தப்பட்டபின் எழுதப்பட்டவையாகும். உரைநடையிலுள்ள சரிதைச் செய்திகள் (26-45) பாரூக்கால் எழுதப்பட்டது எனக் கருதப்படுகிறது. எரேமியாவின் நண்பரும் செயலருமாகிய பாரூக்கு தம் தலைவர்மீது கொண்ட மரியாதையினாலும் நம்பிக்கையினாலும், அவரின் செய்திகளையெல்லாம் தொகுத்து அவற்றின் வரலாற்றுப் பின்னணியில் அமைத்தார். அஃதோடு நில்லாமல் எருசலேமின் முற்றுகையின் போது (588-587) அவருடைய பாடுகளையெல்லாம் தொகுத்தெழுதினார். இப்பகுதிகளைப்பற்றியும் எவ்வித ஐயமும் இல்லை. இவை யூதாவின் வரலாற்றை அறிந்து கொள்ள மிகவும் பயன்படுகின்றன.

''உபாகமப் பாரம்பரிய அறிவுரைகள்'' பற்றிப் பல பிரச்சனைகள் எழுகின்றன. இவை பெரும்பாலும் ''ஆண்டவருடைய வாக்கு எரேமியாவுக்கு அருளப்பட்டது'' என்ற சலிப்புத்தரும் ஒரே வகையான பல்லவியைக் கொண்டு ஆரம்பிக்கின்றன. அவை: ஆலயத்தின் உரை (7:1-8:3); உடன்படிக்கையை மீறியதற்குத் தண்டனை (11:1-14); இறைவாக்கினரின் வாழ்க்கை நாட்டுக்கு ஓர் அடையாளம் (16:1-13); ஓய்வுநாள் கடைப்பிடிப்பு (17:19-27); குயவனும் களிமண்ணும் (18:1-12); உடைந்த சட்டியும் பசிகூருக்குச் சாபமும் (19:1-20:6); வாழ்வின் வழியும் சாவின் வழியும் (21:1-10); சமூக நீதி (22:1-5); நாடு கடத்தல் பற்றிய எச்சரிக்கை (25:1-14); எதிர்ப்பா? சரணடைவதா? (34-35) ஆகிய இப்பகுதிகளை உபாகமப் பாரம்பரிய நடையில் நாடு கடத்தப்பட்டபின் எழுதப்பட்ட எரேமியாவின் இறைவாக்குகள் என்று வகைப்படுத்தினார். மோவின்கல் 1914-இல் இதே கருத்தை ஏற்றுக் கொண்டாலும் உடனே அதனை மறுத்துப் ''பாரம்பரியம்'' என்று ஒன்று இருந்ததாகவும் அதில் எரேமியாவின் உண்மையான இறைவாக்குகள், உபாகமப் பாரம்பரிய நடைக்கு ஏற்ப மாற்றம் செய்யப்பட்டுக் கொடுக்கப்பட்டன என்றும் கூறினார். அதாவது கவிதை இறைவாக்குப் பகுதிகளோடு ''வாய்மொழிப் பாரம்பரியம் இருந்தது என்றும், அதுதான் இந்த உபாகமப் பாரம்பரிய அறிவுரைப் பகுதிக்கு அடிப்படை என்றும் கருதினார். ஆனால், ஏன் எரேமியாவின் பகுதிகள் மட்டும் மாற்றப்படவேண்டும்? என்ற வினா எழுகிறது. இப்பகுதிகளுக்கும், உபாகமத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று கூறும் வேளையில், இரண்டிற்கும் இடையே வேறுபாடுகளும் உண்டு என்பதை மறுக்க முடியாது.

அப்படியிருக்க எரேமியாவுக்குரிய பகுதிகள் அவைகளுக்கென்று தனியொரு நடையைப் பின்பற்றுகின்றன என்று கூறுவதே பொருந்தும். எனவே, இந்த அறிவுரைகள் எரேமியாவின் பகுதிகளை உண்மையாகவே கொண்டுள்ளன; இவை உபாகமத்தின் போக்கில் மாற்றிக் கூறப்படவில்லை என்று கருதுவதே சிறப்பானதாகும். இப்பகுதிகளில் காணப்படும் எரேமியாவின் கருத்துக்களுக்கும், கவிதைப் பகுதிகளில் காணப்படும் கருத்துக்களுக்கும் உண்மையில் வேறுபாடுகள் இல்லை. ஆனால் இலக்கிய நடையில்தான் வேறுபாடு உள்ளது. ஒன்று உரைநடையிலும், மற்றொன்று கவிதை வடிவிலும் உள்ளன.

ஆ. நூல் தோன்றிய வரலாறு:- எரேமியாவின் இறைவாக்குகளெல்லாம் எவ்வாறு ஒன்றாகச் சேர்க்கப்பட்டு நூல் வடிவம் கொடுக்கப்பட்டன என்பது எளிதாகக் கண்டு பிடிக்க முடியாத ஒன்றாகும். இந்நூலை அப்படியே வாசிக்கிற போது பல இரட்டிப்பு நிகழ்ச்சியுரைகளைக் காண்கிறோம்.

6:12-15 = 8:10-12; 10:12-16 = 51:15-19;
16:14-15 = 23:7-8; 17:3-4 = 15:13-14;
23:19-20 = 30:23-24; 30:10-11 = 46:27-28:
49:19-21 = 50:44-46; நிகழ்ச்சிகளும் அவை நடந்த காலவரிசைப்படி தொகுக்கப்படவில்லை. அதி.21-இல் செதேக்கியாவின் ஆட்சியில் நடந்த முற்றுகை (கி.மு.588-857) குறிப்பிடப்படுகிறது. ஆனால் அதி 25-இல் செதேக்கியாவுக்கு முந்தைய அரசனான யோயாக்கிமின் ஆட்சி பற்றிய விவரிப்பு தரப்படுகிறது. கருத்து அடிப்படையிலும் சரியாகத் தொகுக்கப்படவில்லை. இவற்றை மூன்று தொகுப்பாகப் பிரிப்பர் ஆய்வாளர் சிலர். முதல் தொகுப்பு 605-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. இக்கருத்தின்படி இத்தொகுப்பில் அதி 1-17வரை வரிசைப்படி அமைந்துள்ளது. அடுத்து அடையாளச் செயல்களும் (அதி 18-20), அதன் பிறகு இறைவாக்கினரையும் குருக்களையும் பற்றிய பகுதியும் (அதி 21-23) சேர்க்கப்பட்டன. இவற்றினிடையில் ''அறிக்கை'' இடைச்செருகல்களாக அமைக்கப்பட்டன. இரண்டாவது தொகுப்பில் (அதி 26-35) பாரூக் எரேமியாவின் கருத்துக்களைச் சுருக்கி எழுதியுள்ளார். இதிலும் சிறிய பகுதிகளான, போலித்தீர்க்கதரிசிகளிடம் எரேமியாவின் மோதல் (அதி 26-29); இஸ்ராயேலின் மீட்பு (அதி 30-31), செதேக்கியா காலத்து இறைவாக்குகள் (அதி 32-33), மற்றக் கருத்துகள் (அதி 34-35) ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. மூன்றாவது தொகுப்பு (அதி 36-35) பாரூக்கினால் எழுதப்பட்ட எரேமியாவின் சரிதையாகும். இறுதியாக அதி 46-51-இல் குறிப்பிடப்படும் நாடுகளுக்கு எதிராகக் கூறப்பட்ட இறைவாக்குகள் இரண்டு இடங்களில் எரே 25:13-க்குப் பிறகும், 45-ஆம் அதிகாரத்திற்குப் பிறகும் கூறப்பட்டுள்ளன. எனவே இப்போது உள்ள எரேமியாவின் திருநூல் நாடுகடத்தப்பட்டதன் இறுதியில் அல்லது உடனே அது உருவாக்கப்பட்டது எனலாம்.

இ. கிரேக்க வாசகம்:- விவிலிய அறிஞர் கே. கிராப்பின் (1852) கணக்குப்படி எழுபது நூல் கிரேக்க வாசகம் மசோரெட்டிக் எபிரேய வாசகத்தைவிட எட்டிலொரு பகுதி குறைவாக உள்ளது. பல சமயங்களில் சொற்களோ, சிறிய வாக்கியங்களோ இல்லாமல் போனாலும், சில சமயங்களில் சில பகுதிகளே இல்லாமலிருக்கின்றன. மேலும் கிரேக்க வாசகம் ''நாடுகளுக்கெதிரான'' பகுதிகளை 25-ஆம் அதிகாரத்திற்குப்பின் தருகிறது. கிரேக்க வாசகம் எபிரேய வாசகத்தின் சுருக்கமா? அல்லது எபிரேய வாசகம் கிரேக்க வாசகத்தின் வளர்ச்சியா? எது காலத்தால் முந்தியது? ஆகிய வினாக்களுக்கு விடையளித்தல் எளிதன்று.

5. இலக்கிய நடை:-

இஸ்ராயேலின் இறைவாக்கினர்களுள் ஒருவரான எரேமியாவின் நடையும் இலக்கிய வடிவங்களும் அவர் ஒரு பெரியகவிஞர் என்பதைப் பறை சாற்றுகின்றன. அவரின் நடை மக்களின் கவனத்தைக் கவர்ந்திழுக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. நேரடித் தன்மை மிக்க நாடகப் பாணியிலமைந்த வசனங்கள் நூல் முழுவதும் உள்ளன. இவர் இதைக்

கலைக்காக அல்ல, மாறாகத் தம் தூதுரைக் கும் பணியால் உந்தப்பட்டு எழுதினார். இந்நூலில் பல இலக்கிய வடிவங்கள் உண்டு:- சந்தம் பொருந்திய இறைவாக்கு கள், தன்மை ஒருமையில் வரும் அறிக்கை கள், படர்க்கையில் உரைநடையாக வர்ணிக் கப்படும் வாழ்க்கை வரலாறு, அரச நாளேடு போன்ற வரலாறு முதலியன.

6. நூலின் அமைப்பு:-

I. தலைப்பு (1:1-3)

II. யூதாவுக்கும் எருசலேமுக்கும் எதிரான இறைவாக்குகள் (1:4-25:3)

அ. எரேமியாவின் அழைப்பு (1:4-19)

ஆ. யோசியாவின் ஆட்சிக்காலத்தில் தொடக்ககால இறைவாக்குகள் (2:1-6:30).

இ. யோயாக்கின் ஆட்சிக் காலத்தில் எரே மியாவின் பணி (7:1-20:18)

1. உண்மையான வழிபாடு (7:1-10:25)
2. முறிந்துபோன உடன்படிக்கை (11:1-13:27)
3. குற்றங்களும் தண்டனையும் (14:1-17:27)
4. இறைவாக்கினர் வாழ்வின் அடை யாளப் பொருள் (18:1-20:18)

ஈ. செதேக்கியா ஆட்சிக் காலத்தில் எரேமி யாவின் பணி (21:1-24:10)

உ. பாபிலோன் - யாவேயின் சாட்டை (25:1-13)

ஊ. புற இனத்தார்மேல் தீர்ப்பு (25:14-38)

III. நல்வாழ்வு பற்றிய இறைவாக்குகள்: இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப் பெறுதல் (26:1-35:19).

அ. எரேமியா கொடுமைப்படுத்தப்படு தல் (26:1-24)

ஆ. போலித் தீர்க்கதரிசிகளோடு போராட் டம் (27:1-29:32)

இ. ஆறுதல் மொழிகள்: இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்பெறுதல் (30:1-31:40)

1. வட இஸ்ராயேல் மீண்டும் அமைக் கப்பெறுதல் (30:1-32:2).
2. பின் சேர்க்கப்பட்ட துணுக்குகள் (31: 23-40)

ஈ. யூதா மீண்டும் நிலைநாட்டப்படுதல் (32:1-33:26)

1. மீண்டும் நிலைநாட்டப்படுதல் பற்றி வாக்குறுதி (32:1-44)
2. எருசலேமுக்கும் யூதாவுக்கும் மற்று மொரு வாக்குறுதி (33:1-26).

உ. மீட்பின் நிபந்தனைகள் (34:1-35:19)

IV. எரேமியாவின் துன்ப வரலாறு (36:1-45:5)

அ. கி.மு. 605-604-இல் எழுதப்பட்ட திரு நூல் (36:1-32)

ஆ. செதேக்கியாவும் இறைவாக்கினரும் (37:1-38:28)

இ. எருசலேமின் வீழ்ச்சி (38:28-39:18)

ஈ. மிசுபாவில் நிகழ்ந்தவை (40:1-41:18)

உ. எகிப்தில் குடியேறுதல் (42:1-44:30).

ஊ. பாருக்குக்குச் சொல்லப்பட்ட ஆறு தல் (45:1-5).

V. நாடுகளுக்கெதிரான இறைவாக்குகள் (46:1-51:64)

VI. வரலாற்றுப் பிற்சேர்க்கை: எருசலே மின் வீழ்ச்சி (52:1-34).

7. நூலின் இறையியல்:-

எரேமியாவின் இறையியல் அனுபவரீதி யானது. யாவேதான் ஒரே இறைவனென்றும் அவர்தான் வரலாற்று நாயகன் என்றும் பறை சாற்றுகிறார். யாவே எல்லாவற்றையும் படைத்து, உலகையும் அதிலுள்ள அனைத் தையும் ஆள்கிறார் (27:5; 5:22; 8:7). இவரைத் தவிர வேறு கடவுள் இல்லை. விக்கிரகங்கள் பயனற்றவை (2:5). யாவே ஒருவரே வாழ் வின் ஊற்றாகிய இறைவன் (2:13). இவர்

விண்ணுலகில் இருந்தாலும் எப்போதும் எல்லா மனிதருக்கு அருகிலும் உள்ளார் (23:23). அவர் ஒருவரே மனித எண்ணங்களை அறிகிறார் (11:20; 17:10). குயவன் களிமண்ணின் உருவத்தை நிர்ணயிப்பது போல இவர்தான் (18:1-12) இஸ்ராயேல் மற்றும் புறவினத்தாரின் நாடுகளின் முடிவை நிர்ணயிக்கிறார். யூதா பாவம் செய்த போது அதனைத் தண்டித்தார் (25:15 தொ). இப்படிப்பட்ட இறைவன் இஸ்ராயேல் மக்களைப் பிரித்தெடுத்துத் தம் சொந்த உடைமையாக்கிக் கொண்டார். இஸ்ராயேல் மக்களோடு ஒரு தனிப்பட்ட உடன்படிக்கையால் பிணைத்துக்கொண்டார் (7:23; 11:4; 24:7; 31:33). எனவே, இஸ்ராயேல் மக்கள் இறைவனின் இந்த அன்புக்கும் நம்பிக்கைக்கு முரியவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் இஸ்ராயேல் மக்கள் இறைவனின் அன்பைப் புறக்கணித்து வழிதவறிப்பாவம் செய்த போது இறைவன் வேதனைப்படுகிறார் (2:5-31 தொ). இருப்பினும் மனந்திரும்ப அன்போடு அழைப்பு விடுக்கிறார் (29:12 தொ).

எரேமியாவின் போதனைகளில், தனிமனிதன் இறைவனோடு கொள்ளும் உறவே மேலோங்கி நிற்கிறது. கடவுள் கொள்ளும் புதிய உடன்படிக்கையில் ஒவ்வொருவனுடனும் இறைவன் தனிப்பட்ட உறவு கொள்கிறார் (31:33-34). உண்மையான மதம் இந்தத் தனிப்பட்ட உறவில்தான் இருக்கிறது (7:22). ஆனால், பாவம் செய்வது மனிதனை இறை வார்த்தையைக் கேட்கவிடாமல் செய்கிறது. ஆனால், மனிதனை மீட்க ஆண்டவர் கொள்ளும் புதிய உடன்படிக்கை மோசே செய்த உடன்படிக்கை போலன்று, மனித இதயங்களில் எழுதப்படும். புதிய இதயம் அருளப்படும். இதனால் மக்கள் இறைவனின் குரலைக் கேட்பர்.

எரேமியாவின் மடல் (LETTER OF JEREMIAH)

இது பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட யூதாவின் மக்களுக்கு (காண்க எரே 29) கி.மு. 597-இல் எரேமியா எழுதியதாக அமைந்திருக்கிறது. இது ஓரிசன் மற்றும் கிரேக்கத் திருச்சபைத் தந்தையர்களால் திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்பட்டதாகக் கருதப்பட்டுப் பெரும்பாலான எழுபது நூல் பிரதிகளில் புலம்பல் நூலுக்குப்பின் தனிப்பட்ட நூலாக வருகிறது. வுல்கத்தாவிலும் சில கிரேக்க, சிரியாக் பிரதிகளிலும் துணைத் திருமுறை நூல்களில் ஒன்றான பாரூக்கு நூலின் ஆறாவது அதிகாரமாக வருகிறது. கத்தோலிக்கத் திருச்சபை இதைத் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த பகுதியாக ஏற்றுக் கொண்டு பாரூக்கு நூலின் 6-ஆவது அதிகாரமாகக் கொண்டுள்ளது. பிரிவினைச் சகோதரர்கள் இதைத் திருமுறைப்பட்டியலைச் சேராத பகுதியாகக் கருதுவர்.

எரேமியா நூலின் 10:11-இன் அரமேயிக்கு வாசகத்தை அடிப்படையாகக் கொண்ட மறையுரையாகத் தெரிகிறது. நாடுகடத்தப்பட்டவர்கள், பாபிலோனில் தங்கள் அயலாரின் சிலைவழிபாட்டைத் தவிர்க்க வேண்டும் என்று கோருகிறது. இது எச 44:9-20; எரே 10:1-16 மற்றும், மனிதர் படைத்த புறஇனச்சிலைகளின் ஆற்றலற்ற தன்மையை எள்ளிநகையாடும் பகுதிகளை நினைவுபடுத்துகிறது. எரேமியா எழுதிய மடல் என்ற தலைப்பிற்குப்பிறகு, நாடுகடத்தலுக்குரிய காரணத்தையும் அதன் தன்மையையும் முன்னுரை எடுத்துரைக்கிறது. அதை அடுத்து 9 அடிகள் புறஇன வழிபாட்டின் மடமையையும் பயனின்மையையும் பழித்துரைக்கும் முறையில் அமைந்துள்ளன. ஒவ்வோரடியும் 'அவை கடவுள்கள் அல்ல. ஆகவே அவற்றிற்கு அஞ்சவேண்டா' என்ற பல்லவியோடு முடிகிறது.

இலக்கிய, வரலாற்று அடிப்படையில் பெரும்பாலான அறிஞர்கள், இப்பகுதி கிரேக்கர்காலத்தில் குறிப்பாக கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதாகக் கருதுவர். சிலர் இது யோவான் இரிக்கானு காலத்தில் (2-ஆம் நூற்றாண்டின் இறுதி) அல்லது கி.மு. முதல் நூற்றாண்டில் (காண்க 2 மக் 2:2) எழுதப்பட்டதாகக் கருதுவர். அறிஞருள் பலர் இது அலக்சாந்திரியாவில் எழுதப்பட்டதாக நெடுங்காலமாகக்கருதி

வந்தனர். சிலர் மெசபொத்தாமியா அல்லது பாலஸ்தீனத்தில் எழுதப்பட்டதாகக் கருதுவர்.

அண்மைக்கால ஆய்வு, மடலில் காணப்படும் எபிரேயப் பண்புகள், மொழி பெயர்ப்பைச் சுட்டும் மற்ற மரபுகளைக்காட்டி, இம்மடல் எபிரேயத்தில் எழுதப்பட்டது என்று கூறுகிறது. வேறு சிலர், இது கிரேக்க மொழியிலோ அரமேயிக்கு மொழியிலோ எழுதப்பட்டது என்று கூறுவர். நமக்குக் கிடைத்துள்ள காலத்தால் முந்திய வாசகப்பகுதி கிரேக்க மொழியில் உள்ளது. கும்ரான் குகை 7-இல் இம்மடலின் ஒரு துணுக்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது. காண்க. பாரூக்கு நூல்.

எரோகாம் (JEROHAM அவர் இரக்கம் கொள்வாராக)

1. எப்பிராயிம் இனத்தவர். எல்கானாவின் தந்தை. சாமுவேலின் தாத்தா (1 சாமு 1:1). 1 நாள் 6:27-34-இன்படி இவர் ஒரு லேவியர்.

2. பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:27). 8:14-இல் குறிப்பிடப்படும் எரேமோத்தாக இருக்கலாம் அல்லது (3)-இல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவராக இருக்கலாம்.

3. பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பின் எருசலேமில் வாழ்ந்த பென்யாமின் குலத்தைச் சேர்ந்த புனயாவின் தந்தை அல்லது முன்னோர் (1 நாள் 9:8). இதற்கு இணையான பட்டியலில் நெக 11:7-இல் இப்பெயர் இடம் பெறவில்லை.

4. அடிமைத்தனத்திற்குப்பின் எருசலேமில் வாழ்ந்த ஒரு குரு (1 நாள் 9:12). அதாயாவின் தந்தை (நெக 11:12).

5. கெதோரைச் சேர்ந்த ஒரு பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். சிக்கிலாக்கில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட இருவரின் முன்னோர் (1 நாள் 12:7). ஒருவேளை (3)-இல் குறிக்கப்படுவராக இருக்கலாம்.

6. தாவீது காலத்தில் தாண் குலத்தின் தலைமை அதிகாரியாக இருந்த ஆசரேல் (3)-இன் தந்தை அல்லது முன்னோர் (1 நாள் 27:22).

7. அசரியா (13)-இன் தந்தை அல்லது முன்னோர் (2 நாள் 23:1). அசாரியா, அத்தாலியாவுக்கு எதிரான கிளர்ச்சியில் பங்கெடுத்தவர்.

எரொபயாம் (JEROBOAM - மக்கள் பெருகுவார்களாக)

1. முதலாம் எரொபயாம்:- வட அரசாகிய இஸ்ராயேலின் முதல் அரசர். கி.மு. 923 முதல் 901 வரை ஆட்சி செய்தார். எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவர். செரேதா ஊரிலிருந்து வந்தவர். நெபாத்து-செரூயா ஆகியோரின் மகன் (1 அர 11:26).

இளைஞனாக இருந்தபோது, சாலமோனுக்கு எதிராக ஒரு வெற்றியடையாத பயனற்ற கிளர்ச்சி செய்தார் (காண்க 12:24). அரசனது கட்டடவேலைகளைக் கவனிக்கும் அதிகாரியாக இருந்தார். இவரை ஆற்றல் வாய்ந்தவனும், அறிவாளியும், கரும வீரனுமாகக் கண்ட அரசன், யோசேப்பின் இனத்தவரின் காரியங்களைக் கவனிப்பவராக நியமித்தார் (11:27-28). இத்தகைய கட்டாய வேலை செய்தல் நெடுங்காலமாக இஸ்ராயேலுக்கு எரிச்சலை ஊட்டி வந்தது (காண் உப 26:6-7). இந்த அதிருப்தியை வெளிப்படையான கிளர்ச்சியாக்க இறைவாக்கினர் அகியா ஊக்குவித்தார் (11:29-39). ஏனெனில் சாலமோன் யாவேயை விட்டுவிலகிப் பிற இனத்தவர்களுக்குப்பணி செய்யத் தொடங்கினார். ஆகவே அகியா எரொபயாமுக்கு அரச பதவியை வாக்களித்தார் (காண் 1 சாமு 10:1; 16:1; 2 அர 8:13). இதையறிந்த சாலமோன் எரொபயாமைக் கொல்ல முயன்றார். ஆனால், எரொபயாம் தப்பித்து எகிப்துக்கு ஓடி, சாலமோன் இறக்கும்வரை சீசாக்குப் பாரவோனின் பாதுகாப்பில் இருந்தார் (1 அர 11:40).

இரகபெயாம், அரசனாகப் பதவி ஏற்கச் செக்கேமுக்குச் சென்றுள்ளார் என்று கேள்விப்பட்ட எரொபயாம் எகிப்திலிருந்து திரும்பி வந்தார் (12:1-2). வட இனத்தவர்

தங்கள் வரிச்சுமையைச் சிறிது குறைக்கும் படிக் கேட்டுக் கொண்டபோது இரகபெயாம் மடத்தனமாக நடந்து கொண்டதால், அவர்கள் இரகபெயாமையும் தாவீது மரபு ஆட்சியையும் நிராகரித்துவிட்டு (12:3-16,19), அவருக்குப் பதிலாக, எரொபயாமைத் தங்கள் அரசனாக ஏற்படுத்தினர் (12:20). சாலமோனால் விதிக்கப்பட்ட அநியாய வரிகளும் கட்டாய வேலையும்தான் கிளர்ச்சிக்குக் காரணங்களாகத் தரப்பட்டுள்ளன (1 அர 12:4, 10-19). கடவுளின் மனிதராகிய செமாயா உரைத்த இறைவாக்கைப் பற்றிய உரையானது வடநாட்டில் தோன்றியதாகும் (12:21-24).

எரொபயாம் செக்கேமைத் தமது தலைநகராக்கினார். அதையும், யோர்தானுக்கு அப்பால் உள்ள பெனுவேலையும் பலப்படுத்தினார் (12:25). பிறகு எளிதில் பாதுகாக்கக் கூடிய திரிசாவுக்குத் தம் தலைநகரை மாற்றினார் (14:17). இவரது ஆட்சிக்காலம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அதிகம் காணப்படவில்லை. இருப்பினும் இவர் தம் ஆட்சிக் காலம் முழுவதும் யூதாவோடு போரிட்டார் (13:3-20; 14:19,30; 15:6-7; 1 நாள் 12:5); இரகபெயாம் மகன் அபியா (அபியாம்) விடம் ஒருதரம் தோல்வியுற்றார் (1 அர 13); கர்னாக்கின் வாசகப்படி இஸ்ராயேல் சீசாக்கால் கொள்ளையடிக்கப்பட்டுப் பாழ்படுத்தப்பட்டது என்று அறிகிறோம்.

மக்கள் எருசலேமுக்குத் தொடர்ந்து வழிபடச் சென்றால், தமது அதிகாரம் வலுவிழந்து விடும் என்று அஞ்சி, பொன்னால் இரு கன்றுக் குட்டிகளைச் செய்து பெத்தேலிலும், தாணிலும் அவற்றை மக்கள் வழிபடச் செய்தார் (12:26-30). மேடுகளில் புனித இடங்களை அமைத்தார். லேவியர் அல்லாதோரைக் குருக்களாக நியமித்தார் (12:31; 2 நாள் 11:14-15). சில சமயங்களில் அவரே பலிகளை நிறைவேற்றினார் (1 அர 12:32-33). வழிபாட்டு நாளேட்டையும் மாற்றியமைத்தார். ஏழாம் மாதமாகிய திசிரியின் 15-ஆம் நாள் தொடங்கும் கூடார விழாவை, எட்டாவது மாதமாகிய பூலுக்கு மாற்றினார். இந்தச் சமய மாற்றங்கள் சமயப் பற்றுடையவர்களுக்குக் கோபமூட்டின. இவையெல்லாம் ''எரொபயாமின் பாவங்களின்'' அடையாளமாயின. இப்பாதையில் வருங்காலத்தில் இஸ்ராயேலின் அரசர்கள் நடப்பார்கள் (உ.ம். 15:30.34; 16:26.31). காலப்போக்கில் இவை இஸ்ராயேலின் பதிதத்திற்கும் வீழ்ச்சிக்கும் இட்டுச் செல்லும் (2 அர 17:21-23). மீண்டும் மீண்டும் எச்சரிக்கப்பட்டும் இந்தப் பதிதப்போக்கில் எரொபயாம் நிலைத்து நின்றார். யூதாவைச் சேர்ந்த பெயர் தெரியாத ஓர் இறைவாக்கினர், வரவிருக்கும் அழிவைப்பற்றி முன்னறிவித்ததோ (1 அர 13:1-10) இறைவாக்கினர் அகியாவின் கூற்றுக்களோ, அவரது மகனது இறப்போகூட (14:1-18) அவரை மனம் வருந்தச் செய்யவில்லை (13:33). அவரது இந்தப் பிடிமுரண்டான பதிதப்போக்கும் மனம் வருந்தாமையும் அவரது அரச மரபின் பாவமாயிற்று. அதன் முழு அழிவுக்கு இட்டுச் சென்றது.

2. இரண்டாம் எரொபயாம்:- யோவாசின் மகனும் அவருக்குப் பின் அரசனாகப் பதவி யேற்றவருமாவார். வட அரசாகிய இஸ்ராயேலின் 10-ஆவது அரசன் (786-746). ஏகூது அரச மரபின் நான்காவது அரசர். இவரது ஆட்சியில் வட அரசு அதன் செல்வச் செழிப்பில் அரச அதிகாரத்திலும் உச்சநிலை அடைந்தது. இப்போது அசீரியத்தாக்குதல்களால் தமஸ்கு அரசு பலவீனமுற்றிருந்தது. அசீரியா உள்நாட்டுப் போர்களில் ஈடுபட்டிருந்தது. இவற்றைப் பயன்படுத்தி எரொபயாம், அமித்தாயின் மகன் யோனா இறைவாக்குரைத்தபடி, ''கெமாத்து முதல் அராபாக் கடல் வரை'' (அதாவது சாக்கடலின் தெற்குக் கரைவரை) இஸ்ராயேலின் எல்லையை விரிவாக்கினார் (2 அர 14:25; காண்க ஆமோ 6:13-14). இவர் [illegible]ஸ்கு, கமாத்து மேல் தம் அதிகாரத்தை விரிவாக்கினார். தாவீது ஆட்சிக் காலத்தில் யூதாவுக்குச் சொந்தமான பகுதியையெல்லாம் மீண்டும் வென்று சேர்த்துக் கொண்டார் (14:28). இவ்வாறு சீரியாவின் பிடியிலிருந்து நாட்டை விடுவித்து, மக்களின் விடுதலை வீரனாகவும்

(13:8) மக்களைப் பாதுகாக்க இறைவன் எழுப்பிய மீட்பராகவும் (14:27) ஆனார்.

இருப்பினும், எரொபயாமின் ஆட்சிக் காலத்திய செல்வச் செழிப்பு செல்வந்தர் களுக்கே சாதகமாக இருந்தது. இவர்கள் நீதி மான்களையும், எளியோரையும் கொடு மைப்படுத்தினர். பாலின ஒழுக்கக்கேடு மிருந்தது (ஆமோ 2:6-7), கலப்புச் சமயப் போக்கும் சிலைவழிபாடும் நிலவியிருந்தது (6:26). மக்கள் சுகபோகத்தில் கருத்தாய் இருந்தனர் (6:4-6). சமூக அநீதியென்ற இந்த நோய் நாட்டின் அழிவிற்கு இட்டுச் சென்றது (காண்க 2 அர 14:27). எரொபயாம் இறந்த சிறிது காலத்திற்குள் வட அரசு அதன் பதிதத் திலேயே அழிந்தொழிந்தது (கி.மு. 732; 2 அர 17:6-23).

எரோதோத்தசு (HERODOTUS)

இவர் கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த (484-424) கிரேக்க வரலாற்று ஆசிரியர். 'வர லாற்றின் தந்தை' என்று சிசுரோவால் அழைக்கப்பட்டார்.

1. வாழ்க்கை:- இவருடைய நூலிலிருந்து மறைமுகமாக அறிவதைத் தவிர, இவரைப் பற்றி அதிகம் தெரியாது. சுயிதாஸ் என்பவர் லிக்சிஸ், திரியே என்பதை இவரது பெற் றோர்களின் பெயர்களாக நமக்குத் தருகின் றார். கி.மு. 484-இல் கலிகார்னாசுஸ் என்ற இடத்தில் இவர் பிறந்தார். கி.மு. 454-க்குப் பின் ஏதன்சில் இவர் வசித்த பொழுது பெரிக்கிலிஸ் மற்றும் சோப்போகிலிஸ் ஆகி யோருடன் தொடர்பு ஏற்பட்டிருக்க வேண் டும். பின்னர் இவர் 'தூரி' நகரத்திற்குச் சென்றார். இவர் இறந்தபின் தூரி நகர்ச் சந்தை இருந்த இடத்தில் அடக்கம் செய்யப் பட்டார் என்று சுயிதாஸ் கூறுகின்றார். இவர் பெல்லாவில் இறந்ததாகவும் மற்றொரு மரபு கூறுகின்றது. அவர் எப்பொழுது, எங்கு இறந்தார் என்பதைப்பற்றித் தெளிவா கக்கூற நம்மால் இயலவில்லை யென்றா லும், அநேகமாகக் கி.மு. 424-இல்தான் அவர் இறந்திருக்கவேண்டும் என்று கருதப் படுகின்றது. இவர் தமது பிற்கால வாழ்க்கைச் சமயத்தில் ஆசியா, எகிப்து நாட்டுப் பகுதி களில் பிரயாணம் செய்து தமது சிறந்த வரலாற்றை எழுதி இவ்வுலகிற்குத் தந்தார்.

2. பயணங்கள்:- இவர் தமது சுற்றுப் பயணத்தின்மூலம் சேகரித்த குறிப்புக் களைக் கொண்டுதான் வரலாற்றைப் படைத் தார். இவர் சுற்றுப்பயணம் செய்த காலக் கணிப்பைப் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவர் தமது பயணத்தில் யூக்சின், பாபிலோனியா, பெனிக்கியா, எகிப்து, சீரேனே போன்ற இடங்களுக்குச் சென்றிருக்க வேண்டும்.

3. இவரது நூல்:- இவர் படைத்த வரலாற் றில் கிரேக்கர்களுக்கும், கீழை நாட்டினருக் கும் இடையே உள்ள உறவு, தொடர்பு பற்றிக் கூறுகின்றார். லிதியா அரசனான கிரோச்சின் எழுச்சி முதல் (560) பாரசீகப் போர்களின் முடிவுவரை (478) இவர் எழுது கிறார். இவரது வரலாற்று நூல் ஒன்பது நூல்களைக் கொண்டிருக்கிறது. முதல் மூன்று நூல்களும் சைரஸ் கம்பிசெஸ், தரி யுஸ் போன்றவர்களின் ஆட்சியைப் பற்றி யும், இவர்களுக்குப்பின் ஆட்சிக்கு வந்த பாரசீகர்களைப் பற்றியும் விவாதிக்கின்றன. அடுத்த மூன்று நூல்கள் தாரியுசின் ஆட்சி யைப் பற்றியும் சித்தியாவில் பாரசீகர்களுக் கும், அயோனியாவில் கிரேக்கர்களுக்கும் ஏற்பட்ட தோல்விகளைப் பற்றியும் கூறுகின் றன. மற்றும் உள்ள மூன்று நூல்கள் செர்சி சின் ஆட்சியைப் பற்றியும், கிரேக்க நாட் டால் பாரசீகம் அடைந்த தோல்வியைப் பற்றியும் கூறுகின்றன.

இவர் தாம் எழுதிய வரலாற்றினைத் தாம் நேரிடையாகக் கண்கூடாகப் பார்த்தவை களைக் கொண்டும், மரபுகளில் காணப்பட்ட உண்மைகளைக் கொண்டும், புதை பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த குறிப்புக்களை வைத்தும், இன்னும் பல நூல்களை வைத் தும் படைத்துள்ளார். அதில் ஒருவகை வீர காவிய மணம் வீசும்.

எரோனிமு (HIERONYMUS)

1. ஐந்தாம் அந்தியோக்கு ஆட்சியின் போது பாலஸ்தீனத்திலுள்ள மாவட்ட ஆளு

நர்களில் ஒருவர். இவரும் இவருடைய சக ஆளுநர்களான திமோத்தேயு, அப்பொல் லோனியு, தெமோபோன் ஆகியோரும் ''தங்களுடைய மக்களை அமைதியாகச் சமா தானத்தோடு வாழ விடமாட்டார்கள்''. ஆகவே யூதர்களைப் பகைத்துக் கொண்ட னர் (2 மக் 12:2).

2. அறிஞரும் துறவியுமான யுசேபியஸ் எரோனிமு (கி.மு. 342-420). அவர் செய்த வுல்கத்தா விவிலிய மொழிபெயர்ப்பால் புகழ்பெற்றவர். வுல்கத்தா மொழிபெயர்ப்பு இவரோடு சாதாரணமாய்த் தொடர்புபடுத் தப்பட்டாலும், இவர் மட்டும்தான் ஒரே ஒரு மொழிப் பெயர்ப்பாளர் அல்லர். பல பழைய இலத்தீன் மொழிப்பெயர்ப்புகளை அகற்றி இலத்தீனில் ஒரு மேலளவையான விவிலியத்தை அமைக்கும்படி பாப்பு, தாம சூசால் நியமிக்கப்பட்டவர். இவர் கிரேக்க கையெழுத்துச் சுவடிகளை அடிப்படையா கக் கொண்டு நற்செய்திகளைத் திருத்தி அமைத்தார். எபிரேயத் திருமுறைப் பட்டி யல் நூல்களுக்கும் தோபித்து, யூதித் ஆகிய வற்றிற்கும் எபிரேய மூலங்களைப் பயன் படுத்தினார். வுல்கத்தாவிலுள்ள சில நூல்கள், குறிப்பாக இணைத்துணைத் திருமுறைப்பட் டியல் நூல்கள் உட்பட்ட நூல்கள் எரோனிமு வால் மொழிபெயர்க்கப்படவில்லை. அவை பழைய இலத்தின் வாசகங்களி லிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

எலசா (ELASA)

இவ்விடத்தில் யூதா மக்கபேயு கி.மு. 161-இல் கொல்லப்பட்டார் (1 மக் 9:5) இவ்விடம் மேல், கீழ் பேத்-கொரோனுக்கு இடையிலும் ஏல்-பிரேயிலிருந்து 15 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்காலக் கிர்பெத்து இலாசாவாக இருக்கலாம்.

எலதாது (ELDAD - இறைவன் அன்பு செய் தார்)

பாலைவனக் கூடாரத்தில் இறைவாக்கு ரைத்த ஓர் இஸ்ராயேலர். எலதாது, மேதாது ஆகியோர் ஆண்டவருடைய ஆவியால் சிறப்பாக ஆட்கொள்ளப்பட்டவர்கள். ஆண் டவருடைய கட்டளைப்படி மோசே 70 பேரைத் தேர்ந்தெடுத்துத் தமது பணிக்கு உதவியாக வைத்துக் கொண்டார். இவர்கள் ஒரு காலத்திற்கு இறைவாக்குரைத்தனர் (எண் 11:24-25). எலதாது மேதாது 70 பேர்க ளில் ஒருவராக இல்லாவிட்டாலும், மேலும் பாளையத்திலேயே தங்கியிருந்தாலும் இறைவாக்குரைத்தனர் (11:26). இதைக் கண்ட யோசுவா அவர்கள் இருவரையும் கண்டிக்கச் சொன்னார். அதற்கு மோசே (மக்கள்) எல்லாருமே இறைவாக்கினராக ஆண்டவர் அவர்கள் மேல் தம்முடைய ஆவியைத் தந்தால் நலமாயிருக்கும் என்றார் (11:27-30).

எலயாசர் (ELEAZAR - இறைவன் உதவினார்)

1. ஆரோன்-எலிசெபா ஆகியோரின் மூன் றாம் மகன் (யாத் 6:23; காண்க. எண் 3:2; 26:60). இவர் பூத்தியேலின் புதல்வியருள் ஒருவரை மணந்து பினகாசுக்குத் தந்தையா னார் (யாத் 6:25; 1 நாள் 6:4). இவரது தந்தை, மற்ற மூன்று சகோதரர்களோடு சேர்ந்து குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டா (யாத் 28:1). அவரது மூத்த சகோதரர்கள் நதாபு மற்றும் அபிகு பிள்ளைகளின்றித் திடீரென்று இறந்துபோக, இவர் முக்கியத்து வம் பெற்றார் (லேவி 10:1-2). இப்போது ஆரோனின் மூத்த மகன் என்ற அளவில் லேவியரின் தலைவரானார் (எண் 3:32). ஆரோனுக்கு அடுத்த பெரிய குருவாக மோசேயால் நியமிக்கப்பட்டார் (20:25-28; காண்க உப 10:6). ஆரோனின் இடத்தில், மோசேயின் உதவியாளர் ஆனார் (எண் 26: 1.3.63; 27:2.21). கணக்கெடுப்பில் பங்கெடுத் தார் (26:1.63). மோசேயோடு இவரும் செலோபகாத்தின் புதல்விகளுக்குச் சொத்து அளிக்கும்படி கட்டளையிடப்பட்டார் (27:2). இதை இவர், யோசுவாவோடு சேர்ந்து, நாட்டை வென்றபின், நிறைவேற்றி னார் (யோசு 17:4) கோராகும் அவனோடு சேர்ந்த கிளர்ச்சியாளர்களின் தூபக் கலசங்க ளைத் தட்டையான தகடுகளாக்கிப் பலிபீடத் தில் பதிக்கக் கட்டளைபெற்றார் (எண் 16:37-40). யோர்தானுக்குக் கிழக்கில் ருபனியர் களுக்கு உடைமை அளிப்பதில் மோசேக்கு

உதவினார் (32:2,8). யோசுவாவோடு சேர்ந்து இவரும் யோர்தானுக்கு மேற்கில் உள்ள நாட்டைப் பிற இனத்தவர்களுக்குப் பகிர்ந்த ளித்தார் (யோசு 14:1; 19:51; காண்க எண் 34:17). லேவியர்களுக்கு நகரங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் பகிர்ந்தளித்தார் (யோசு 21:1).

இவருடைய சிறப்புமிக்க பணிக்காலத் தின் முடிவில், இவர் கிபயாவில் அடக்கம் செய்யப்பட்டார். இந்நகரம் எப்பிராயிம் மலைநாட்டிலுள்ள, அவரது மகன் பினகா சுக்குச் சொந்தமான ஒரு நகரமாகும். இவரது வழித்தோன்றல்களில், தாவீது அரசனுக்குப் பணி செய்த சாதோக்கு என்ற குருவும் (1 நாள் 6:12; 24:6) நாடுகடத்தப்பட்டுத் திரும் பிய காலத்திய மறைநூல் அறிஞர் எஸ்ராவும் (எஸ் 7:5) அடங்குவர். தாவீது காலத்தில் எலயாசர் வழிவந்த குருக்கள் 16 பிரிவினரும் அவரது இளையசகோதரன் இத்தாமாரின் வழிவந்தவர்கள் 8 பிரிவினருமே இருந்தனர் (1 நாள் 24:1-4).

2. அபினதாபின் மகன். பெலிஸ்தியர் பேத்து-செமேசில் உடன்படிக்கைப் பேழையை இஸ்ராயேலரிடம் திரும்பத் தந்த பின் கிரியத்து-எயாரிம் மக்கள் பேத்து செமேசிலிருந்து எடுத்துப்போய்க் காபாவிலே அபினதாபு வீட்டில் நிறுவினர். ஆண்டவரு டைய பேழையைக் காத்துக் கொள்ளும்படி அபிடேகம் செய்யப்பட்டவர் எலயாசர் (1 சாமு 7:1).

3. தோதாவின் மகன். தாவீதுக்கு உதவின ஆற்றல்மிக்க மூவருள் ஒருவர் (2 சாமு 23:9-10; 1 நாள் 11:12-14). பெலிஸ்தியர் பலரைக் கொன்ற பெருமையுண்டு இவ ருக்கு. ஒருவேளை 1 நாள் 27:4 இவரது பெயர் புகுத்தப்பட வேண்டியிருக்கலாம்.

4. மெராரியின் குடும்பத்தைச் சார்ந்த மகுவி யின் புதல்வர் (1 நாள் 23:21-22; 24:28). இவர் ஒரு லேவியர். ஆண்பிள்ளை இன்றி இறந்தார். இவர் புதல்விகள், தங்கள் சிற்றப் பன் புதல்வர்களை மணந்தனர் (காண்க 36:6-12).

5. பினகாசின் (3) மகனான எலயாசர் ஒரு குரு. நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் எஸ்ராவின் தலைமையில் இயங்கினார். ஆலயச் சொத்துக்களை எஸ்ரா திரும்பக் கொண்டு வந்தபோது இவரும், ஒவ்வொரு பொருளையும் நிறுத்து, அவற்றின் எண்ணிக் கையையும் எடையையும் குறித்து வைத்தார் (எஸ் 8:33).

6. பரோசின் புதல்வர்களில் ஒருவர். புற மதப் பெண்களைத் திருமணம் செய்வதைத் தடைசெய்த எஸ்ராவோடு இணைந்து கொண்டு அந்நிய மனைவிகளையும் அவர்க ளுடைய குழந்தைகளையும் தள்ளிவைத்த வர்களின் பட்டியலில் ஒருவர் (எஸ் 10:25).

7. எருசலேம் மதில்களின் அர்ப்பண விழாக் கொண்டாடிய போது கூடிப் பாடிக் கொண்டிருந்த இன்னிசைக் கலைஞன்ன லேவியர் (நெக 12:42). ஒருவேளை (5)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

8. மத்தத்தியாவின் நான்காவது புதல்வர். அவரான் என்று அழைக்கப்பட்டார். யூதா மக்கபேயரின் சகோதரன் (1 மக் 2:5; காண்க 2 மக் 8:23). பேத்து செக்காரியாவில் யூதா நடத்திவந்த படைக்கும் சீரியர்களின் படைக்கு மிடையே நடந்த மோதலில் ஐந்தாம் அந்தி யோக்கு யூபாத்தோர் அரசனைச் சுமந்து வந்தது போலத் தோன்றிய யானையைப் படைக்குள் புகுந்து ஓடிக் கொன்றார். அவ ரும் அந்த யானையாலேயே மிதிபட்டு வீர மரணம் எய்தினார் (1 மக் 6:43-46).

9. யாசோனின் தந்தை (1 மக் 8:17). நான்காம் அந்தியோக்கு எப்பிபான் செய்த கலாபனையில் உயிர் ஈந்த வேத சாட்சியான எலயாசர் மறைநூல் அறிஞர்களுள் முதன்மை யானவர்களில் ஒருவர் (2 மக் 6:18:31).

10. மரியாளின் கணவர் யோசேப்பின், ஆகவே இயேசுவின், முன்னோர்களுள் ஒரு வர் (மத் 1:15).

எலயாசா (ELEASAH - இறைவன் செய்தார்)

1. யூதா கோத்திரத்தின் எரகுமேல் குலத் தைச் சார்ந்த ஒரு குடும்பம் (அல்லது) ஓர் ஆள் (1 நாள் 2:39-40).

2. சவுல், யோனத்தான் ஆகியோரின் வழித் தோன்றிய பென்யாமின் கோத்திரத்தைச் சா்ந்த ஓா் உறுப்பினா் (1 நாள் 8:37). 1 நாள் 9:43-இல் இவா் இரப்பாயாவின் மகன் எனக் கூறப்படுகிறாா்.

எலயாதா (ELEADAH - இறைவன் அணி செய்தாா்)

எப்பிராயிமின் குலத்தில் தோன்றிய ஒரு குடும்பம் (1 நகள் 7:20). எண் 26:35-37 குறிப்பிடுகின்ற இதற்கு இணையான தலைமுறை அட்டவணையில் இப்பெயா் குறிக்கப்படவில்லை.

எலயாது (ELEAD இறைவன் சாட்சி அளித்தாா்)

எப்பிராயிமின் புதல்வா்களுள் ஒருவா். ஒரு கொள்ளைத் தாக்குதலில் காத்து நாட்டைச் சோ்ந்தவா்களால் கொல்லப்பட்டாா் (1 நாள் 7:21-22).

எலயாலே (ELEALEH - இறைவன் ஏறிவிட்டாா்)

யோா்தானுக்கு அப்பால் உள்ள ஒரு நகரம். ரூபன் கோத்திரத்தால் மீண்டும் கட்டப்பட்டது (எண் 32:3,37). பின் மோவாபியா்களின் ஆதிக்கத்தில் இருந்தது (ஏச 15:4; 16:9; எரே 48:34). இன்று இந்நகரம் கெசிபோனுக்கு வடக்கு-வடகிழக்கில் 3 கி.மீ தொலைவில் உள்ள ஏல்-ஆல் நகரத்தோடு அடையாளம் காட்டப்படுகின்றது. யூசேபியு, கி.பி.4-ஆம் நூற்றாண்டில், இதை ஒரு முக்கியமான நகரமாகக் கருதியதாகத் தெரிகிறது.

எலா (ELA)

இவா் சாலமோனின் ஆட்சிக் காலத்தில் பென்யாமின் பகுதிகளுக்குக் கண்காணிப்பாளராக இருந்த சிமயியின் தந்தையாவாா் (1 அர 4:18).

எலாசா (ELASAH - இறைவன் உண்டாக்கினாா், செய்தாா்)

1. குரு பசிகூரின் கடைசி மகன். பறவின மனைவியைக் கொண்டிருந்தவா்களுள் ஒருவா் (எஸ் 10:22). புறவினமனைவியை அனுப்பிவிட வாக்களித்தவா்.

2. சாப்பானின் மகன். நெபுக்கதுனேசாரிடம் சென்ற செதேக்கியாவின் இரு தூதா்களில் ஒருவா். இவா்கள் வழியாகப் பாபிலோனில் நாடு கடத்தப்பட்டவா்களுக்கு எரேமியா தம் மடலை அனுப்பினாா் (எரே 29:3).

எலி (MOUSE)

இது கொறிக்கின்ற விலங்கினமாகும். இது சுண்டெலி, எலி ஆகிய அனைத்தையும் அடக்கிய ஒரு பொதுப்பெயா் என்றே எண்ணத் தோன்றுகிறது. திரிஸ்ட்ராம் என்பவா் 19-ஆம் நூற்றாண்டு பாலஸ்தீன் நாட்டை ஆராய்ந்ததில் இதே இனத்துள் அடங்குகின்ற 23 வகையான எலிகளைக் கண்டுபிடித்துள்ளதாகக் கூறியுள்ளாா். லேவி 11:29-இல் தூய்மையற்ற ஒரு விலங்கினமாகக் குறிக்கப்படுகிறது.

ஏச 66:17-இல் இருந்து எலி மனிதன் உண்ணக் கூடிய ஒரு விலங்கினம் என்று நாம் அறிகின்றோம். மெய்மோனிடன் தமது குறிப்பில் வயல் எலிகளை அா்ரானியா்கள் பலியிட்டதாகக் குறிப்பிடுகிறாா்.

இவ்வெலிகள் தொத்து நோய்கள் பரவுவதற்குக் காரணமாக இருந்து வந்திருக்கின்றன (1 சாமு 5:6.9.11-12; 6:3-4) என்ற கூற்று ஆராய வேண்டியுள்ளது.

எலிகூ (ELIHU - அவன் என் இறைவன் ஆவாா்)

1. எப்பிராயிமைச் சோ்ந்தவா். தோகுவின் மகன். சாமுவேலின் கொள்ளுத்தாத்தா (1 சாமு 1:1). 1 நாள் 6:34-இல் 'எலியேல்' என்றும் 1 நாள் 6:27-இல் எலியாபு என்றும் அழைக்கப்படுகிறாா்.

2. மனாசேயில் ஆயிரவா்க்குத் தலைவா்களுள் ஒருவா். சிக்லாகு என்னுமிடத்தில் சவுலைக் கைவிட்டுவிட்டுத் தாவீது பக்கம் சோ்ந்தவா்களுள் ஒருவா் (1 நாள் 12:20).

3. கோராகு குலத்தைச் சேர்ந்த ஆலய வாயிற்காப்போன் ஓபேது-ஏதோமின் வழி வந்தவர் (1 நாள் 26:7).

4. தாவீதின் சகோதரர்களில் ஒருவர் (1 நாள் 27:18). இசக்கார் இனத்தின் முக்கிய அதிகாரி. ஆனால் அப்பெயர் 'எழுபது நூலைப்' பொறுத்தவரை எலியா என்று வாசிக்கப்பட வேண்டும் (1 சாமு 16:6; 17:13.23; 1 நாள் 2:13; 2 நாள் 11:18).

5. பூசியர் பரக்கேலின் மகன். இராமின் குடும்பத்தைச் சேர்ந்தவர் (யோபு 32:2). ஒருவேளை நாகோரின் மகன் பூசியின் வழித் தோன்றலாகவும், அதனால் ஆபிரகாமின் உறவினனாகவும், இருக்கவேண்டும் (ஆதி 22:20-21). மூன்று நண்பர்கள் யோபுவை அமைதிப்படுத்தத் தவறிப்போய் வாதிடுவதை நிறுத்தியபோது, யோபுவிடம் பேசுகின்ற இளைஞன் (யோபு 32:2,4-6; 34:1; 35:1; 36:1) எலிகூவின் உரைகள் புத்தகத்தின் பிற்சேர்க்கையாக இருக்கலாம். இராம் குடும்பத்தினர் பூசியர் அழைக்கப்படுவதால் (காண். ஆதி 22:21; எரே 25:33; ரூத் 4:19; 1 நாள் 2:9-10). யோபு மற்றும் அவருடைய மூன்று நண்பர்களின் பகுதியிலிருந்தே இவரும் வந்திருக்கவேண்டும். ஆயினும் எபிரேயர்களோடு நெருங்கிய தொடர்புடையவராக இருக்கவேண்டும். யோபு 32-37 அதிகாரங்களை இடையில் புகுத்தியவர் இவருக்கு அளிக்கும் செயல் வாதத்தை இறையியல் நிலைக்கு உயர்த்துவதாக அமைகிறது என்பதை அடையாளமிட்டுக்காட்டுகிறது. இவர் யோபுவைப் பாவமுடைமை, (34:7-8), அகந்தை (34:37), மேலெழுந்தவாரியான இறையியல் (35:15) ஆகிய அவருடைய மனித வரையறைகளுக்காகக் கடிந்து கொள்கிறார். இதற்கு மாறாகத் துணிவுடன் இறைவனது மகிமையை அறிக்கையிடுகிறார் (36:27-37:22) இறைவனே இறுதியில் நீதியுள்ளவர் (34:10 தொ; 37:23-24). அவர் தமது மேலாண்மையுடைய ஞானத்தில் துன்பத்தை ஒரு சோதனையாகப் பயன்படுத்தலாம் (36:5-15). இப்போது பெரும்பாலான அறிஞர்கள், எலிகூவின் உரையைப் பிற்கால இடைச் செருகலாக ஏற்றுக்கொண்டாலும், அது நாடகப பாணியில் இறைவன் புயல் காற்றில் தம்மை வெளிப்படுத்தவும் பிரச்சனைக்குத் தீர்வு காணவும் ஒரு தயாரிப்பாகவும், இடை நிலையாகவும் பயன்படுகிறது.

எலிக்கா (ELIKA - இறைவனால் நிராகரிக்கப்பட்ட)

கரோது ஊரைச் சார்ந்த இவர் பெயர், 'முப்பதின்மர்' என்று அழைக்கப்படும் தாவீதின் வலிமை வாய்ந்த படைவீரர்கள் அட்டவணையில் காணப்படுகிறது (2 சாமு 23:25). 2 நாள் 11:27-இல் வரும் இணையான அட்டவணையில் இவனுடைய பெயர் விடுபட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எலிசபாத்து (ELISHAPHAT - இறைவன் தீர்ப்பிட்டார்)

அத்தாலியாவுக்கு எதிராக யோவாசுக்கு அரசை மீட்டுத்தர முயன்ற யோயதா குருவுக்கு உதவின ஐந்து யூதாவின் படைத்தலைவர்களில் ஒருவர் (2 நாள் 23:1).

எலிசபெத்து (ELIZABETH - இறைவன் என் உறுதியாவார் அல்லது இறைவன் என் நற்பேறு)

அபியா வகுப்பைச் சார்ந்த குரு செக்கரியாவின் மனைவி. பாரம்பரியப்படி இருவரும் எருசலேமுக்கு மேற்கே 7 கி.மீ. தொலைவில் யூதாவின் மலை நாட்டிலுள்ள அயின் கெரேமில் வாழ்ந்தனர். திருமுழுக்கு யோவானின் தாய் (லூக் 1:5-60).

எலிசபெத்து என்ற பெயரைத் தாங்கிய ஆரோனின் மனைவி (யாத் 6:23-எலிசெபா) குருகுல வழித்தோன்றல் ஆவாள். யூத சட்டங்கள், வழக்கங்களின்படி குருக்கள் திருமணம் செய்யும்போது அவளும் குருகுல குடும்பத்தைச் சார்ந்தவளாக இருக்கத் தேவையில்லை. எனினும் செக்கரியா மணந்த எலிசபெத்தும் குருகுல குடும்பத்தைச் சார்ந்திருந்ததால் அவர்களுடைய திருமணம் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும். மரபுத் தூய்மையோடு "ஆண்டவருடைய கற்பனைகள் முறைமை

களின்படி குறைகூற இடமில்லாமல் கடவுள் முன்னிலையில் நீதிமான்களாய் நடந்து வந்த வர்கள்'' (லூக் 1:6) என்று லூக்கா விவரிக்கின்றார். பழைய ஏற்பாட்டுக் காலத்திய பக்தி நடத்தை அவர்களில் குடி கொண்டிருந்தது.

ஆனால் ஒரு குறை இருந்தது. பழங்காலத்தில் சாரா, அன்னா போன்று எலிசபெத்து மலடியாக இருந்தாள். ஒரு யூதப் பெண்ணுக்குப் பிள்ளை பெறுவது பெரிய வரமாகும். இறைவனுடைய வல்லசெயலால் 'மலடி' என்ற கறையைப் போக்கி அந்தக் கிழட்டு வயதில் மெசியாவின் வருகைக்காக வழிகளைச் செம்மைப்படுத்துபவர்-பெரிய வாக்குறுதிகளின் குழந்தை ஆனவரை அவள் தன் குழந்தையாகப் பெற்ற நிகழ்ச்சியைத் தகுதியான வார்த்தைகளில் அருமையாகவும் அழகாகவும் லூக்கா எழுதி வைத்திருக்கிறார்.

இயேசுவின் தாய் மரியாளுக்கு நெருங்கிய உறவினளாக எலிசபெத்து லூக்காவால் அழைக்கப்படுகிறாள் (1:36). அவர்களுடைய உறவு எத்தகையது என்று துல்லியமாக அறிய இந்தக் குறிப்பு அவ்வளவு உதவவில்லை. மரியாள் குருகுல வகுப்பில் வந்தவளாக இப்பகுதி அறிவிப்பது சாத்தியமாகின்றது.

சில பழைய வாசகங்களில், இரனெயு, ஓரிசன் ஆகியவர்களின் நூல்களில், மரியாளின் பாடல் லூக்காவின் மூலப்படிவத்தில் மரியாளுக்குப் பதிலாக எலிசபெத்து-பாடியதாகச் சான்று உள்ளது. 1 சாமு 2:1-10-இல் உள்ள அன்னா பாடலைப் போல இந்தப் பாடல் சில காரியங்களில் மரியாளுக்குப் பொருந்துவதை விட எலிசபெத்துக்குப் பொருத்தமாக இருக்கிறது.

எலிசா (ELISHA - இறைவன் மீட்பாவார்)

எலிசா என்பவர் கி.மு.9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வடநாட்டு அரசைச் சேர்ந்த இறைவாக்கினர். இவர் இறைவாக்கினர் எலியாவின் வழித்தோன்றலும் சீடருமாவார். இரண்டாம் அரசராகமம் முதல் பதின்மூன்று அதிகாரத்தில் இவரைப் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

1. இவரது அழைப்பும், பணிக்காலமும்:- இவர் ஆபேல்-மெகோலாவிலிருந்த சாபாத்தின் மகனாவார். இவர் ஏரைப் பூட்டி நிலத்தை உழுது கொண்டிருந்த பொழுது எலியாவால் அழைக்கப்படுகின்றார் (1. அர 19:19). இவர் எலியாவோடு செல்வதற்கு முன்னால் நண்பர்களுக்கு அளித்த பிரியாவிடை விருந்தே இவரைச் செல்வந்தர் என்று காட்டுகிறது. எலியாவின் வழித்தோன்றலாக எலிசா அர்ச்சிக்கப்பட வேண்டும் என்று இறைவன் கொடுத்த கட்டளையில் தான் இவரது பெயர் முதன் முதலாகக் காணப்படுகிறது (1 அர 19:19-21). இச்செயல் இறைவாக்கு கூறும் வல்லமை எலிசாவுக்கு மாற்றப் பட்டதைப் பிரதிபலிக்கின்றது. மேலும் எலியா நெருப்பு மயமான தேரினால் வானகத்திற்கு எடுத்துச் செல்லப்படும் பொழுது அவர் எலிசாவுக்கு விட்டுச் சென்ற போர்வை அவரது ஆவியையும் இறைவாக்குப் பணியையும் எலிசாவுக்கு விட்டுச் சென்றதைக் குறிக்கிறது (2 அர 2:13-15).

ஆகாபு அரசனின் இறுதி ஆட்சிக் காலத்தில் இறைவாக்கினர் எலிசாவின் பணி தொடங்கியிருக்கலாம் (1 அர 19:1-17) அல்லது யோராமின் ஆட்சிக்காலத்தின் முதல் வருடங்களில் தொடங்கியிருக்கலாம் (2 அர 2:15). அவரது பணிக்காலம் தோராயமாகக் கி.மு. 850-க்கும் 800-க்கும் இடைப்பட்ட காலமாகும். அவரது பணியையும், இறைவாக்குச் செயலையும் தொகுத்துத் தந்துள்ள இறைவாக்கு மரபில் அற்புதமான கதைகள், அருங்குறி நிகழ்ச்சி விளக்கங்கள் ஆகியன கலந்துள்ளன.

2. அவர் ஆற்றிய புதுமைகள்:- எலியா விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் எலிசா தனது முதல் புதுமையாக ஆண்டவர் பெயரைக் கூறி எலியாவின் போர்வையைக் கொண்டு யோர்தான் ஆற்றின் நீரினை அடிக்க, தண்ணீர் முழுவதும் இரண்டு பிரி

வாகப் பிளவுபடுகின்றது (2 அர 2:13-14). இல்கால், பெத்தேல், எரிகோ போன்ற நகரங்களின் இறைவாக்கினர்களின் புதல்வர்கள் எலிசாவை அவர்களது தலைவராகவும் எலியாவின் வழித்தோன்றலாகவும் ஏற்றுக் கொண்டனர் (2:15).

பொதுவாகப் புதுமைகளைப் பற்றிய நிகழ்ச்சியுரைகள் இறைவாக்கினர்கள் குழுக்களோடு தொடர்புடையவையாகவும் அவர்களது பணிக்குச் சான்றாகவும் விளங்குகின்றன. ஆழ்ந்த மதிப்பச்சத்தையும் பக்திமிக்க வியப்பையும் காட்டுகின்றன. இறைவாக்கினர் எலிசா மிக மோசமானதாக விளங்கிய நகரத்து நீரில் உப்பைக் கொட்டி அதனை என்றும் பயன்படக்கூடிய நீராக மாற்றுகின்றார் (2 அர 2:19-22). இறைவாக்கினர் ஒருவர் மனைவியின் கணவன் இறந்தபின் அவருடைய கடன்காரன் அவரது இரண்டு பிள்ளைகளைத் தனக்கு அடிமைகள்ளாக எடுத்துக் கொள்ளவிரும்புகிறான். இதை அவர் எலிசாவிடம் முறையிட்டு உதவி கேட்க, அவள் வாழ்வு பெறும் பொருட்டுத் தேவைக்கு அதிகமான எண்ணெய் பெருகக் கூடிய அருங்குறியை ஆற்றுகிறார் (4:1-7). தன்னை நல்லமுறையில் கவனித்துக் கொண்ட சூனேமியப் பெண்ணுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று வாக்களிக்கிறார். மீண்டும் சில காலங்கள் கழித்து இறந்த அந்த மகனை உயிர் பெறச் செய்கிறார் (2 அர 4:8-37; 1 அர 17:8-24). பஞ்சகாலத்தில் இறைவாக்கினர்களின் பிள்ளைகளுக்கு இறைவாக்கினர்களின் ஊழியர்கள் நஞ்சு நிறைந்த குமட்டிக் காய்களை அதன் நச்சுத் தன்மையை அறியாமல் பறித்து வந்து உணவாகச் சமைத்துக் கொடுத்தனர். அதனை உண்ணும் பொழுது சாகவைக்கக் கூடிய நச்சுத் தன்மை அதிலிருப்பதை உணர்ந்தனர். எலிசா ஒரு பிடி மாவை அந்தக் கறியோடு கலந்துவிட நஞ்சுத்தன்மை மறைந்து விடுகின்றது (2 அர 4:38-41). மற்றொரு முறை இவர் நூறு பேருக்கு இருபது வாற்கோதுமை ரொட்டித் துண்டுகளையும், புதுத்தானியத்தில் செய்த சில அப்பங்களையும் பகிர்ந்தளித்து அவர்கள் வயிறார உண்ணுமாறு செய்தார் (2 அர 4:42-44). தொழுநோயால் துன்புற்ற சீரியாப் படையின் தளபதி நாகமானைக் குணப்படுத்தினார். ஆனால் அவர் நன்றியுடன் கொடுத்த அன்பளிப்பைப் பெற மறுத்துவிட்டார் (2 அர 5:1-19). ஒருமுறை காட்டிற்கு மரம் வெட்டச் சென்ற இறைவாக்கினரின் பிள்ளைகளில் ஒருவன் இரவல் வாங்கி வந்த கோடரி கழன்று நீரில் விழுந்துவிட்டது. அக்கோடரியை மிதக்கச் செய்கிறார். இறைவாக்கினர் எலிசா (6:1-7) தன்னைப் பிடிக்க வந்த சீரியாப் படைவீரர்களைக் குருடாக்கி அவர்களைச் சமாரியா நகருக்கு அழைத்துச் சென்று அவர்களது கண்களைத் திறந்து விடுகின்றார். பின் அரசன் எலிசாவின் வியத்தகு செயல் கண்டு, பிடிக்கப்பட்ட சீரியாச் சிறைக்கைதிகளுக்கு நல்ல விருந்தளித்து அவர்களை அனுப்பிவிடுகின்றான் (6:8-23). இறைவாக்கினரின் இறப்பு கூட வல்ல செயல்களைத் தடை செய்ய இயலவில்லை. ஏனென்றால் எலிசாவின் கல்லறையின் மேல் போடப்பட்ட இறந்தவரின் உடல் அவரது எலும்புகளின் மேல் பட்டவுடன் உயிர்பெற்றது (2 அர 13:20-21).

மேல்கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் இறைவாக்கினர், மனிதனைவிடச் சிறிது மேலானவராகத் தோன்றுகிறார். இறைவாக்கினர் சமுதாயத்தின் உறுப்பினர்களில் உயர்ந்தவராக விளங்குகின்றனர். இறைவாக்கினரின் பிள்ளைகள் எலிசாவைப் பற்றிய நினைவுகளைப் பாதுகாத்து வந்தனர். ஆனால் அவற்றை வைத்துக்கொண்டு அவரது வாழ்க்கையில் கற்பனை நயத்தை ஏற்றி மிகைப் படுத்திக் கூறியிருக்கின்றனர். இறைவாக்கினரின் புகழை மிகைப்படுத்திக் கூறவேண்டும் என்பதுதான் நிகழ்ச்சி அமைப்பாளரின் குறிக்கோளாகும். புதுமைகள் பற்றிய கதை அமைப்பிலிருந்து எழுகின்ற வரலாற்று உண்மை என்னவென்றால் எலிசா, இறைவாக்கினர்கள் சமுதாயத்தின் அன்பு செய்யப்பட்ட தலைவராவார். இவரது மனிதத் தன்மை, பக்தி, உதவிபுரியும் ஆர்வம் ஆகிய அனைத்தும் இறைவாக்கினர்கள் சமுதாயத்தில் என்றும் நிலைத்திருந்தது.

3. வரலாற்று நிகழ்ச்சிகளில் இவரது ஈடு பாடு:- அருங்குறிகள் அல்லது புதுமைகள் பற்றிய கதைகளில் எலிசா என்ற வரலாற்று மனிதனைப் பார்ப்பது கடினம். ஆனால், கதைகளுக்கும் வரலாற்று நிகழ்ச்சியுரைக ளுக்கும், இடைப்பட்ட இலக்கியப்பகுதிகள் எலிசாவை வரலாற்று மனிதனாகக் காட்டுவ தில் முயற்சி எடுத்துள்ளன. இவற்றில் சில கதைக் கூறுகளைக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாகத் தொழுநோயாளன் நாக மானைக் குணப்படுத்துல் (2 அர 5:1-9); சீரியாப் படைவீரர்களைப் பிடித்தல் போன் றவைகளைக் கூறலாம். மற்றவற்றில் இஸ்ரா யேலின் படை மோவாபியருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த போதும் (3:4-27) சீரியாப் படைவீரர்கள் சமாரியாவை முற்றுகையிட்ட போதும் அவர் நிகழ்த்திய உரையில் வரலாற் றுக் கூறுகள் மேலோங்கி இருக்கின்றன.

வரலாற்றில் எலிசா அவரது தலைவரின் (எலியா) பணியினைத் (1 அர 19:15-18) தொடர்ந்து நிறைவேற்றுபவராகக் காட்டப் படுகின்றார். சீரிய நாட்டுக் காசயேல் மற் றும் இஸ்ராயேலின் ஏகூ ஆகியோரின் கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய்கிறார் (2 அர 8:7-15; 9-10). இவற்றிலிருந்து, வரலாற்றிற் குத் திசை அமைப்பது தமது கடமையாகும் என்பதை இவர் நன்குணர்ந்திருந்தார் என் பது தெளிவாகிறது. ஏகூவின் புரட்சிக்குப் பிறகு அரசவையோடு நல்லுறவு கொண்டி ருந்தார்; அரசன் யோவாஸ் இவரை நன் மதிப்போடு நடத்தினான். இவையனைத்தும், இவரது இறப்பு நிகழ்ச்சியில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன (13:14-19). அதில் அர சன் ''என் தந்தாய்! என் தந்தாய்! இஸ்ராயே லின் தேரே! அத்தேரின் பாகனே!'' என்று கூறி அழுகிறார். இவரது சீடர்கள் எலிசா விற்கு முக்கியத்துவம் அளித்ததுபோல் நவீன ஆய்வு அளிக்கவில்லை என்பதற்காக இஸ்ராயேல் வரலாற்றில் அவரது ஆதிக்கம் பற்றிக் கேள்வி எழுப்பமுடியாது. இறைவ னது சித்தத்தை அறிவித்து நாட்டின் போக்கை உருவாக்கும் உரிமையைக் கோரிய இறைவாக்கு மனப்பான்மையை அதன் தொடக்க காலத்தில் எலிசா பிரதி பலிக்கிறார்.

எலிசாபான் (ELIZAPHAN - இறைவன் பாது காப்பாக வைத்தார்)

1. கெகாத்தைச் சார்ந்த லேவியர். மோசே, ஆரோன் ஆகியோரின் சிற்றப்பனான ஊசி யேலின் (1) இரண்டாம் புதல்வர் (யாத் 6:22). பாலைவனத்தில் கெகாத்திய கோத்தி ரத்தாரின் தலைவர் (எண் 3:30). மோசேயின் கட்டளைப்படி எலிசாபானும் அவனுடைய சகோதரன் மீசாவேலும் நாதாபு, அபிகு ஆகி யவர்களின் சடலங்களைப் பரிசுத்த இடத்தி லிருந்து நீக்கினார்கள் (லேவி 10:4). இவரிட மிருந்து ஒரு குடும்ப மரபு தோன்றுகிறது. இவரது வழித்தோன்றல்களில் சிலர் பேழை எருசலேமுக்குத் திரும்பியபோது கடைப் பிடிக்கப்பட்ட விழாக்களில் பங்கெடுக்க அழைக்கப்பட்டனர் (1 நாள் 15:8). மற்றவர் எசக்கியா ஆட்சிக் காலத்தில் ஆலயம் தூய் மைப்படுத்தப்படுதலில் பங்கெடுத்தனர் (2 நாள் 29:13).

2. செபுலோன் கோத்திரத்தில் பரினாக்கு டைய புதல்வர். கானான் நாட்டைப் பங்கிட் டுக் கொடுத்தவர்களில் எலயாசார், யோசு வாவோடு இவரும் ஒருவர் (எண் 34:25).

எலிசாமா (ELISHAMA - இறைவன் செவி சாய்த்தார்)

1. பாலைவனத்தில் கணக்கெடுப்பின் போது அம்மியூதின் புதல்வனான எலிசாமா எப்பிராயிம் கோத்திரத்தாருக்குத் தலைவ னாக விளங்கினார். யோசுவாவின் தாத்தா ஆவார். தமது இனத்தின் பெயரால் காணிக்கை செலுத்தினார் (எண் 1:10; 2:18; 7:48,53; 10:22; 1 நாள் 7:26). இந்தப் பெயர் மிகப் பழமை வாய்ந்ததாக இருந்தாலும் அது வரும் பட்டியல்கள் பாபிலோனிய அடி மைத்தனத்துக்குப் பிறகு தோன்றியதாகும்.

2. தாவீதின் புதல்வர்களில், பெயர் தெரி யாத் தாய்க்கு எருசலேமில் பிறந்தவர் (2 சாமு 5:16; 1 நாள் 3:6,8; 14:7). 1 நாள் 3:6-இல் வரும் எலிசாமா எழுதும்போது ஏற்பட்ட

பிழையாக இருக்கலாம். அது ''ஏலிசூவா' என்று வாசிக்கப்பட வேண்டும் (2 சாமு 5:15).

3. யூதாவின் அரச குலத்தில் பிறந்தவர். கெதாலியாவை வெட்டிக் கொன்ற இசுமயே லின் தாத்தாவும் ஆவார் (2 அர 25:25; எரே 41:1).

4. யூதா கோத்திரத்தைச் சேர்ந்த, எரகு மேலியரான சேசானின் வழித்தோன்றல் எக்கமியாவின் மகன் (1 நாள் 2:41).

5. தாவீதின் மற்றொரு மகன் (1 நாள் 3:6). இது ஏலிசூவா (காண் 2 சாமு 5:15) என்ற பெயரை எழுத்தர்கள் தவறாக எழுதியதன் விளைவாக இருக்கலாம்.

6. மக்களுக்குச் சட்டத்தைப் போதிக்க, அரசன் எயோசபாத்தால் மக்களிடையே அனுப்பப்பட்ட இரு குருக்களில் ஒருவர் (2 நாள் 17:8).

7. அரசன் யோயாக்கிமின் அரசவையில் செயலாளர் (எரே 36:12, 20-21).

எலிசெபா (ELISHEBA - இறைவன் நற்பேறு அல்லது நிறைவு ஆவார்)

அம்மினதாபின் மகளும், நாக்சோனின் தங்கையும், ஆரோனின் மனைவியும் ஆவாள். ஆரோனுக்கு நான்கு புதல்வர்களைப் பெற்றாள். எழுபது நூல் இப்பெயரைத் தவறாக எலிசபெத்து என்று எழுத்துப் பெயர்ப்பு செய்கிறது.

எலிசூவா (ELISHUA - இறைவன் மீட்பாவார்)

எருசலேமில் பிறந்த தாவீதின் புதல்வர்களில் ஒருவர் (2 சாமு 5:15; 1 நாள் 14:15). 1 நாள் 3:6-இல் எலிசாமா என்று அழைக்கப்படுகிறார். இது பின்னால் வரும் வரியிலிருந்து வந்த எழுத்துப்பிழை போலத் தோன்றுகிறது.

எலிசூர் (ELIZUR - இறைவன் பாறையாக இருக்கிறார்)

செதேயூருடைய புதல்வனான (எண் 10:18) எலிசூர் ரூபன் கோத்திரத்தின் குடும்பத் தலைவராய் விளங்கினார் (எண் 2:10). பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்களைக் கணக்கெடுப்பதிலும் (1:5) மற்ற அலுவல்களைக் கவனிப்பதிலும் மோசேக்குத் தோள் கொடுத்து உதவிய 12 கோத்திரங்களின் குடும்பத் தலைவர்களுள் ஒருவர். தம் இனத்தின் பெயரால் ஒரு காணிக்கை செலுத்தினார் (7:30:35).

எலிதாகா (ELDAAH - இறைவன் அழைத்தார்)

ஆபிரகாம்-கெத்தூரா வழிவந்த பேரன்களில் ஒருவரும் மிதியானின் 5-ஆவது புதல்வருமாவார் (ஆதி 25:4; 1 நாள் 1:33).

எலிதாது (ELIDAD - இறைவன் அன்பு செய்தார்)

இவர் பென்யாமின் கோத்திரத்திலே கிசிலோனின் புதல்வர் ஆவார். எலயாசார், யோசுவா ஆகியவர்களின் நேரடிப்பார்வையில், கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க ஆண்டவரால் நியமிக்கப்பட்டவர்களுள் (எண் 34:21) ஒருவர். இந்த வரிசையிலே வருகின்ற எலிதாதும் மற்றப் பெயர்களும் கானான் நாட்டில் தொடங்கும் புதிய வாழ்வுக்கு இஸ்ராயேல் ஆண்டவரைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற கருத்தை நமக்குக் கொடுக்கின்றன.

எலிப்பாசு (ELIPHAZ - இறைவன் வெற்றி பெற்றால் அல்லது இறைவன் நயமான தங்கமாவார்)

1. ஏசாவின் முதல் மனைவியான கித்திய நாட்டு ஆதாவுக்குப் பிறந்த முதல் புதல்வன். கோரிய நாட்டுத் திமினாவை வைப்பாட்டியாக வைத்திருந்தவர் (ஆதி 36:4.10-11,15; 1 நாள் 1:35-36). ஆகவே ஏதோமின் பல குலத் தலைவர்களுக்கு முன்னோராக விளங்குகின்றார் (ஆதி 36:15).

2. யோபுவின் மூன்று நண்பர்களில் முதன்மையானவரும், முதியவரும் ஆவார் (யோபு 2:11; 4:1; 15:1; 22:1; 42:7,9). அறிவுக்கூர்மையானவராக இருந்தபோதிலும், மீட்பின்

ஒழுக்கக் கண்ணோட்டத்தை மட்டும் கடைப்பிடிக்கும் கொள்கையாளராக உரையாடல் முழுவதும் எலிப்பாசு காண்பிக்கப் படுகின்றார். அவரது செழிப்பை அனுபவிக்கும் பொருட்டு ''எல்லாம் வல்லவரின் திருத்தத்தைப் புறக்கணிக்கா'' திருக்கும்படி முதலில் யோபுவுக்கு எலிப்பாசு அறிவுரை கூறுகின்றார் (5:17). பிறகு ''நீரோ கடவுளைப் பற்றிய அச்சத்தைத் தவிர்க்கிறீர்'' (5:4) என்று இறைவனுக்கு எதிராகப் பேசுவதாகும் குற்றம் சாட்டினார். கடைசியாய் எண்ணிக்கையற்ற பாவங்களால் குற்றம் சாட்டி, மனமாற்றம் அடையமாட்டாயா என்ற வேண்டுகோளோடு முடிக்கிறார். இது அவரது வினைப்பயன் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும்.

எலிப்பாசு ஒரு தேமானியன் என்று அடிக்கடி அழைக்கப்படுவதால் தேமான் ஞானத்துக்குப் பேர்போன ஏதோம் மாவட்டத்தையும் (எரே 49:7) அதே சமயத்தில் தேமான் எலிப்பாசின் (1) மூத்தமகன் என்பதையும் குறிக்கிறது. இரண்டாவது எலிப்பாசு முதலாவது எலிப்பாசிலிருந்து வந்திருக்கலாம்.

எலிப்பால் (ELIPHAL - இறைவன் தீர்ப்பிட்டார்)

'முப்பதின்மர்' என்று அழைக்கப்படும் தாவீதின் வலிமை வாய்ந்த படைவீரர்களில் ஒருவரான ஊரின் மகன் (1 நாள் 11:35). ஆனால் 2 சாமு 23:34-இல் மக்காவின் மகனான அகசுபாய்க்குப் பிறந்த எலிப்பெலத்து என்று அழைக்கப்படுகிறார். இதையே நாள் ஆகம ஆசிரியர், ''ஊரின் மகன் எலிப்பால்; மெகராத்தியரான கேப்பேர்'' (1 நாள் 11:35-36) என்று குறிப்பிடுகின்றார். 'மெகராத்தியர்' என்ற வார்த்தை அறியப்படாததாக இருப்பதால், மாக்காவின் தவறான வாசகமாகவும் 'அகசுபாய்' நாள் ஆகம ஆசிரியரால் 'ஊர் கேப்போ' என்று வாசிக்கப்பட்டது என்றும் ஏற்றுக் கொள்வது மேலானதாகத் தெரிகிறது.

எலிபான்டைன் தீவு புல்தாள் ஏடுகள் (ELEPHANTINE PAPYRI)

நைல் நதியில், அஸ்வானுக்கு (விவிலிய சியேனே) எதிரிலுள்ள எலிபான்டைன் தீவின் முதல் நீர் வீழ்ச்சிக்கருகில் கண்டெடுக்கப்பட்ட, அரமேயிக் மொழியில் எழுதப்பட்ட புல்தாள் ஏடுகளாகும். நூபியன் யானைத் தந்தம் இங்கு வியாபாரம் செய்யப்பட்டதால் இந்தத் தீவு இப்பெயர் பெற்றிருக்கலாம். பெயர், எகிப்திய இயேபேவ் என்ற இடத்தில் பாரசீகர்கள் காலத்தில் (கி.மு. 6-ஆம் நூற்றாண்டு) ஒரு யூதக் குடியிருப்பு இருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. இயேபேவ் பழைய அரசின் தெற்குக் கோடியிலுள்ள முக்கிய வியாபாரமையமாகும்.

இந்தப் புல்தாள் ஏடுகள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இவற்றின் முதல் தொகுப்பு வியாபாரிகளிடமிருந்து கி.பி. 1893-இல் வாங்கப்பட்டாலும் 1953-க்குப் பிறகு படிப்படியாக வாங்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது. இவை சட்டம், வியாபாரம், கவிகாரம் செய்தல் போன்ற காரியங்களைப் பற்றிச் சான்று கூறுகின்றன. கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் யூதாவில் சமூக நிலை வீழ்ச்சியுற்ற போது சில யூதர்கள் எகிப்துக்குக் குடியேறியிருக்க வேண்டும் (எரே 43-44). எது எப்படியிருந்தாலும் அகதிகள் கி.மு. 525 வரை ஓரளவு அமைதியாக வாழ்ந்ததாகத் தெரிகிறது. 525-இல் 2-ஆம் கம்பிசேஸ் எகிப்தை வென்று பாரசீக ஆதிக்கத்தை நிறுவினார். அவர் யூதர்களை எகிப்தியத் தாக்குதலிலிருந்து பாதுகாக்க, இக்குடியிருப்பைக் கோட்டையாக மாற்றியமைத்திருக்க வேண்டும். இங்கு, எபிரேயர்கள் ''யாகு' (யாவேயின் சுருக்கம்) என்ற இறைவனுக்கு ஓர் ஆலயம் கட்டியிருந்தனர். இந்த ஏடுகள் அவர்களின் வழிபாட்டு முறையைத் தெரிவிக்கின்றன. 410-ஐ ஒட்டி யூத ஆலயம் எகிப்தியரால் அழிக்கப்பட்டது. பாரசீக ஆதிக்கம் குறைந்தபோது, 399-இல் படை அங்கிருந்து அகன்றிருக்க வேண்டும். ஆயினும் இப்பகுதியில் பல நூற்றாண்டுகளாக யூதர்கள் தொடர்ந்து வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

எலிபான்டைன் தீவு புல்தாள் ஏடுகளில் பல சட்டங்களைப் பற்றியதாகும். அங்குப்

பல வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. வழக்கின்போது, கடவுள் பெயரால் சத்தியம் செய்ய ஒருவன் மறுத்தால் அவன் வழக்கில் தோல்வியுற்றவனாகக் கருதப்படு வான். வீட்டு விற்பனை, கடன் வாங்குதல், திருமண ஒப்பந்தம், கடன் கொடுத்தவரின் உரிமைகள், அடிமைகள் விடுதலை, சுவிகா ரம் செய்தல் இவற்றைப் பற்றிய சட்ட ஒழுங்குகள் இப்புல்தாள்களில் காணப்படு கின்றன.

எலிபான்டைன் தீவு புல்தாள்களில் பல கடிதங்களும் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமானது யூதேயாவின் ஆளுநரான பகோவாவுக்கு எழுதப்பட்ட கடிதமாகும். இக்கடிதத்தில் எகிப்தியக் கடவுள் ''குனும்''-இன் குருக்களின் தூண்டுதலால் பாரசீகத் தலைவனின் உதவியுடன் கி.மு. 410-ஆம் ஆண்டில் அழிக்கப்பட்ட யாகுவின் ஆல யத்தை மீண்டும் கட்டியெழுப்ப உதவுமாறு ஆளுநரை அவர்கள் வேண்டியிருந்தனர். இக் கடிதம் சம்பல்லாத்தைப் பற்றியும் தலை மைக்குரு யோகானானைப் பற்றியும் கூறு கிறது (நெக 12:22; 13:28). இக்கடிதத்திற்கு ஆளுநரிடமிருந்து நேரடிப் பதில் ஏதும் இல் லையெனினும், பகோவாவின் சார்பிலும், சம்பல்லாதின் மகன் தெலாயாவின் சார்பி லும் பொதுநிலை அறிக்கை ஒன்று காணப் படுகிறது. அதில் ஆலயத்தைக் கட்டியெழுப் பவும், மீண்டும் வழிபாட்டை ஆரம்பிக்கவும் அவர்கள் ஊக்குவித்திருந்தனர். ஆலயம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது என்றும், பாரசீகர்களின் ஆட்சி மேல் எகிப்தில் அதிக நாட்கள் நீடித்தது என்றும் சில ஏடுகள் கூறுகின்றன. நெபேரிட்தெஸ் அரியணை ஏறியது பற்றி (கி.மு. 399) ஒரு கடிதம் கூறுகிறது. எனவே கி.மு. 399-இல் எபிரேயர் களின் குடியிருப்பு அங்கு இருந்தது என்பது தெளிவாகிறது. எலிபான்டைன் தீவிலிருந்து இந்த அரசன்தான் யூதர்களை வெளியேற்றி இருக்க வேண்டும்.

இங்கு யூதர்களின் மதம் மதக்கலப்புப் போக்கையுடையது. ஆலயப் பொருளாளரி டம் யாகு என்ற கடவுளுக்கும், எசேம்-பெத்தேல், அனாத்-பெத்தேல் போன்ற தெய் வங்களுக்கும் பணம் இருந்தது. கடவுளைக் குறிப்பதற்குப் பெத்தேல் என்ற சொல் பயன் படுத்தப்பட்டது. அனாத்-பெத்தேல் என்ற தேவதை அனாத் யாகு என்றும் அழைக்கப் பட்டாள். கடிதங்கள் சிலவற்றின் வாழ்த்துக் களில் 'கடவுளர்கள்' என்று காணப்படுகிறது.

புளியாத அப்பத் திருவிழாவை இத்தீவி லுள்ள யூதர்கள் கொண்டாட வேண்டு மென்று கி.மு. 419-இல் இரண்டாம் தாரியுஸ் என்பவர் ஆணைபிறப்பித்தார். ''ஆயத்த நாள்'', ஓய்வு நாள் பற்றியும் குறிப்புக் காணப்படுகிறது. பாஸ்கு என்ற கடந்தேகும் விழா குறிக்கப்பட்டதா என்பது ஐயப்பா டுடையது.

எஸ்ராவின் வருகையையும், சமாரியர் களின் பிரிவையும் பற்றிய காலத்தைக் கணிப் பதற்கு எலிபான்டைன் புல்தாள்கள் பெரி தும் உதவுகின்றன. எஸ்ரா நூலின் அரமேயிக் பகுதிகளின், குறிப்பாக அதி.4-இல் காணப் படும் கடிதங்களின் உண்மைத் தன்மைக்கு இப்புல்தாள்கள் சான்று பகரலாம்.

எலிப்பெலகு (ELIPHELEHU - இறைவன் அவனை ஆய்ந்தறிந்தார்)

யாழ் மீட்டி வந்த தலைவர்களுள் ஒருவரா கத் தாவீதால் உயர்த்தப்பட்ட லேவியர் (1 நாள் 15:18,21). இணையான பட்டியல் 2 நாள் 16:5-இல் கொடுக்கப்பட்டிருக்கும் வரி சையில் இடம் பெறாதது, இது பிற்சேர்க்கை என்பதைக் குறிக்கிறது.

எலிப்பெலத்து (ELIPHELET - இறைவன் விடுதலையாக உள்ளார்)

1. தாவீதின் புதல்வர். எருசலேமில் பிறந்த வர். இவரது தாயின் பெயர் தெரியவில்லை (2 சாமு 5:16; 1 நாள் 3:6,8; 14:5,7). 1 நாள் 3:14-இல் இப்பெயர் திரும்பத் திரும்ப வரு வது, எழுதும்போது ஏற்பட்டபிழையாக இருக்க வேண்டும்.

2. மாக்காவின் மகனான அகசுபாயின் மகன். தாவீதின் வலிமை வாய்ந்த படை

வீரர்களுள் ஒருவர் (2 சாமு 23:34). இதற்கு இணையான பட்டியல் 1 நாள் 11:35-இல் வரும் எலிப்பாலும் இவனும் ஒருவரே என்று கருதப்படுகிறது.

3. சவுல், யோனத்தான் இவர்களின் வழித் தோன்றல்; பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்தவர் எசேக்கின் மூன்றாம் மகன் (1 நாள் 8:39).

4. எஸ்ராவோடு அடிமைத்தனத்திலிருந்து மீண்டும் திரும்பி வந்தவர்களுள் ஒருவர் (எஸ் 8:13);

5. தன் புறவின மனைவியைத் தள்ளிவிட்டவர்களுள் ஒருவர். காசூமின் வழித்தோன்றல் (எஸ் 10:33).

எலிமா (ELYMAS - சூனியக்காரன்)

எலிமா என்ற சொல் அரமேயத்திலிருந்து எடுக்கப்பட்டது எலிமா என்பதற்கு மந்திரவாதி என்று பொருள் (அ.ப. 13:8). பவுலும், பார்னபாவும் சைப்பிரசிலுள்ள பாப்போசில் மந்திரவாதியும் போலித் தீர்க்கதரிசியுமான ஒரு யூதனைக் கண்டனர் (அ.ப. 13:6-7). அவன் பெயர் பார்-ஏசு ஆகும். அவன் செருகியு பவுலோசின் பரிவாரத்தில் ஒருவனாவான்.

செருகியு பவுலோஸ் என்ற ஆளுநன் இறைவனின் வார்த்தையைக் கேட்க ஆவலாய்ப் பவுலையும், பார்னபாவையும் அழைத்தபோது, எலிமா அவர்களை எதிர்த்து, ஆளுநன் விசுவசிப்பதைத் தடுக்க முயற்சி செய்தான் (13:7-8). ஆனால் ஆண்டவரின் ஆவியால் தூண்டப் பெற்று பவுல் அவனைக் கடிந்து பேசி, ஒளியைக் காண முடியாமல் அவனது பார்வையை மங்கச் செய்துவிட்டார் (13:9-11). இதைக்கண்ட ஆளுநன் விசுவசித்தார் (13:12).

அவனது கிரேக்கப்பெயர் அவனது மந்திரவாதித் தொழிலோடு சொல்லிலக்கணமாகத் தொடர்புடையது (13:8) என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். இது அதிமோஸ் என்ற சைப்ரஸ் மந்திரவாதியோடு தொடர்புடையதாக இருக்கலாம். எது எவ்வாறு இருந்தாலும், இப்பெயர் பார்-ஏசு என்ற எபிரேயப் பெயரின் மொழி பெயர்ப்பன்று.

எலிமாயி (ELYMAIS)

பாரசீகத்திற்கும் பாபிலோனியாவுக்கும் இடையிலுள்ள பகுதியிலுள்ள ஒரு மாகாணம். 1 மக் 6:1-இன் படி எலிமாயி என்பது பாரசீகத்தில் அமைந்துள்ள ஒரு நகரம். இந்நகரம் பாரசீக நாட்டில் பேர்போனதும், பொன், வெள்ளி மிகுந்து காணப்படும் இடமுமாகும். அங்குச் செல்வம் நிறைந்த கோயிலும், கிரீசில் முதல் முதல் அரசு செலுத்தின மக்கதோனிய மன்னான பிலிப்பின் மகன் அலக்சாந்தர் அங்கே விட்டுப்போன பொன் திரைகளும், கலசங்களும், கேடயங்களும் இருந்தன. அதனால் அந்தியோக்கு அரசன் அதைக் கொள்ளையடிக்க முயன்றான். அதை அறிந்த மக்கள் அவனை விரட்டியடித்தனர் (1 மக் 6:1-4).

தோபி 2:10-இன்படி எலிமாயி ஒரு நகரமென்றோ மாகாணமென்றோ குறித்துச் சொல்லுவதற்கில்லை. சில வாசகங்களில் ஏலாம் நகரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது (தானி 8:2). ஆனால் பின்னால் வந்த வாசகங்களில் எலிமியா என்பதையே பார்க்கின்றோம். ஆதலால் ஏலாம் நகரமும், எலிமாயி நகரமும் ஒன்றையே குறிப்பதாக இருக்கலாம். பல்வேறு அறிஞர்கள் இந்த நகரின் அமைப்புப் பற்றிச் சொல்லுகிறார்கள். சூசிஸ் என்ற இடத்திற்கு வடகிழக்கில் உள்ள மலைப்பகுதி என்றும், பின்னால் பாபிலோனியாவிற்கும் பாரசீகத்திற்கும் இடையில் அமைந்துள்ள முக்கியமான சூசா நகரத்தைப் போன்றது என்றும் ஸ்த்ரோபோ கூறுகிறார். எரோதோத்தசு இந்நகரம் பாரசீகப் பேரரசில் 8-ஆவது மாகாணமாக அமைந்துள்ளது என்றும் தோலமி என்பவர் சுசியான்னாவில் ஓரத்தில் அமைந்துள்ளது என்றும் கூறுகிறார்கள். சூசாவுக்கு அருகிலும் பாரசீகத்தை நோக்கியும் உள்ள அசீரியா பகுதிதான் இது என்று ஸ்டீபன் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பல்வேறு வேறுபாடுகள் இருந்தாலும் அவை சிறிதளவாக இருப்பதாலும், எலிமாயி, ஏலாம், சுசியான்னா ஆகிய நகரங்கள் ஏறத்தாழ ஒன்றே என்று கூறலாம்.

எலிமெலக்கு (ELIMELECH - இறைவன் அரசராவார்)

நீதிபதிகள் காலத்தில் இஸ்ராயேல் நாட்டில் ஏற்பட்ட கொடிய வஞ்சத்திலிருந்து தப்பிக்கத் தன் மனைவி நகோமியோடும் இரு புதல்வர்களோடும் மோவாபு நாட்டிற்குக் குடியேறிய பெத்திலகேம் நகர மனிதர். அவரும் அவர் புதல்வர்களும் இறந்த பிறகு நகோமியும் மருமகள் ரூத்தும் பெத்திலகேமுக்கு திரும்பி வந்துவிட்டனர். பெத்திலகேமிலேதான் உறவினனான செல்வந்தன் போவாசு என்பவரை ரூத் . மணந்து கொண்டார் (ரூத் 1:2-3; 2:1,3; 4:3,9).

எலியா (EIJAH - யாவே இறைவன் ஆவார், என் இறைவன் யாவே)

1. எலியா - இறைவாக்கினர்: காண்க.

2. பென்யாமின் வழித்தோன்றல். எரோகாமின் புதல்வர். எருசலேமில் வாழ்ந்தவர். ஒரு குலத் தலைவராய் விளங்கினார் (1 நாள் 8:27-28).

3. எஸ்ரா காலத்தில் அடிமைத்தனத்துக்குப் பிறகு திரும்பி வந்தவர்களில் ஒரு குரு. அவர் தந்தை பெயர் காரிம். இவர் தம் புறவின மனைவியைத் தள்ளிவிட ஒத்துக் கொண்டவர் (எஸ் 10:21).

4. எஸ்ரா காலத்தில் புறவின மனைவியைத் தள்ளிவிட்ட ஏலாமின் மக்களில் ஒருவர் (எஸ் 10:26).

5. யூதித்தின் முன்னோர்களில் ஒருவரும் அகிதூபின் தந்தையுமாவார் (யூதி 8:1). அவருடைய பெயர் சில வேளைகளில் எலிகூ (1 சாமு 1:1) என்று தரப்படுகிறது. ஏனென்றால் கிரேக்கச் சொல் இருபொருள் மயக்கமுடையது. அது ''எலியா'', (2 அர 1:3) ''எலிகூ'' (1 சாமு 1:1) என்று இரு பெயர்களையும் குறிக்க வல்லது.

எலியா (ELIJAH யாவே என் கடவுள்) - இறைவாக்கினர்

I பழைய ஏற்பாடு:-

எலியா என்பவர் ஆகாபு, அகசியா ஆகியோர் இஸ்ராயேலை ஆண்டகாலத்தில் வாழ்ந்த இறைவாக்கினர். பழைய ஏற்பாட்டில் இன்னும் மூன்று பேர் இந்தப் பெயரைக் கொண்டிருக்கின்றனர். 1 அர 17-19; 21; 2 அர 1:1-2:18 ஆகிய பகுதிகளில் எலியாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. தற்காலத்திய மதிப்பீட்டாய்வாளர்கள் இறைவாக்கினர் எலியாவின் வாழ்க்கை வரலாற்றிலிருந்துதான் இப்பகுதிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கருதுகின்றனர். கிலெயாத்திலுள்ள திசுபே ஊரைச் சேர்ந்தவர் என்பதைத் தவிர வேறொரு குறிப்புமின்றி எலியா மிகவும் திடீரென்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது 1 அர 17:1-இல் மேலே கூறப்பட்ட கருத்தை வலியுறுத்துகிறது. நெல்சன் க்ளுயேக் என்பவர் யாபேசு என்பதுதான் திசுபே என்று திரிந்து வந்திருக்கிறது என்று கருதுகின்றார். பொதுவாக மற்ற இறைவாக்கினர்களுக்குக் கொடுப்பது போல், இறைவாக்கினர் எலியாவின் தோற்றம் பற்றியும், அவரது முற்கால வாழ்க்கை பற்றியுமான கருத்துக்களை ஏன் தொகுப்பாளர் தவிர்த்திருக்கிறார் என்ற கேள்வி எழுப்பலாம். எலியா பற்றிய கதைகள் தனித்தனிப் பகுதிகளாக இருந்திருக்கலாம். ஏலியாவைப் பற்றிய குறிப்புக்கள் ஐந்து பகுதிகளில் தரப்பட்டுள்ளன.

1. 1 அர 17:1-18;16-இறைவாக்கினர் எலியா மூன்றாண்டுகளுக்கு நீடிக்கப் போகும் பஞ்சத்தைப் பற்றி ஆகாபுக்கு அறிவிக்கின்றார் (17:1). அவர் யோர்தானுக்கு எதிரேயுள்ள கெரித்து ஓடைக்கருகில் தம்மை மறைத்துக் கொண்டார். அங்கே காகங்கள் அவருக்கு உணவளித்தன (17:2-8). பின் அவர் பெனிக்கியாவிலுள்ள சாரபாத்து என்ற ஊருக்குச் செல்கிறார். அங்கே அவர் ஒரு விதவையின் வீட்டில் அப்பத்தையும் எண்ணெயையும் பல்கிப் பெருகச் செய்கிறார் (17:9-24). மூன்றாண்டுகளுக்குப்பின் எலியா ஆகாபுவின் பணியாளர் ஒபதியா மூலம் ஆகாபுவை எதிர்கொள்கிறார் (18:1-

17). பின் பாகால் கடவுள் மழையைப் பொழிய வைப்பார் என்று சவால் விட்டு, அதைச் செயலில் அனைவருக்கும் காட்ட பாகால் கடவுளின் இறைவாக்கினர்களைத் தன்னிடம் கர்மேல் மலைக்கு அழைத்துவர ஆகாபிடம் சவால் விடுகின்றார். இந்தச் சோதனை முறை கர்மேல் மலையில் நடை பெறுகிறது. பாகாலின் இறைவாக்கினர்கள் பலிபீடத்தைச் சுற்றிச் சடங்கு நடனமாடி யும், உரக்கக் கத்தியும் பாகாலைச் செவி கொடுக்க அழைக்கின்றனர். ஆனால் அவர் கள் மன்றாட்டு கேட்கப்படவில்லை. எலியா உண்மை இறைவனாகிய யாவே யிடம் மன்றாட வானத்திலிருந்து வந்த தீ பலிப்பொருட்களை எரித்தது. அதைத் தொடர்ந்து மழையும் பெய்தது (18:8-46).

2. 1 அர 19:1-21-இல் இறைவாக்கினர் எலியா ஈசபேலின் சதித்திட்டத்தைக் கண்டு அந்நகரை விட்டு வெளியேறுகிறார். அவர் ஒரேபு மலைக்குச் செல்கிறார். அங்கே இறை வன் நிலநடுக்கம், காற்று மற்றும் மின்னல் ஆகியவற்றில் தோன்றவில்லை. தென்றலின் மெல்லிரைச்சலை உண்டாக்கி அவருக்குக் காட்சியளிக்கிறார். காட்சியளித்த இறைவன் தமஸ்குவின் அரசராகக் கசயேலையும், இஸ் ராயேலின் அரசராக ஏகூவையும், அவரது (எலியாவின்) வழித்தோன்றலாக எலிசாவை யும் அபிடேகம் செய்யுமாறு கட்டளை இடு கின்றார் (19:1-18). எலியா ஏர் பூட்டி உழுது கொண்டிருந்த எலிசாவை அழைத்துத் தம் மைப் பின் தொடருமாறு செய்கிறார்.

3. 1 அர 21:1-29-நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை ஆகாப்பிற்குப் பெற்றுத் தர வேண்டுமென்ற நோக்குடன் ஈசபேல் என்ப வள் நாபோத்தைக் கொலை செய்ததால் வரப்போகும் ஆகாபின் குலத்தின் அழி வைப்பற்றி எலியா எடுத்துரைக்கின்றார்.

4. 2 அர 1.-அகசியா அரசன் சுகமில்லாமல் இருந்த பொழுது சுகம் பெற வேண்டி எக்கரோனின் தெய்வமாகிய பாகால் செபூவி டம் மன்றாடியதால் அவர் இறக்கப்போவ தாய் எலியா அச்சுறுத்துகிறார். இதே நிகழ்ச் சியில் தம்மைப் பிடிக்க வரும் ஐம்பது போர் வீரர்களைக் கொண்ட இரு பிரிவினரை நெருப்பு வந்து விழுங்கட்டும் என்று வேண்டுகிறார் (2 அர 1).

5. 2 அர 2:1-18:- எலியாவும், எலிசாவும் சென்று கொண்டிருந்தபொழுது வானத்தி லிருந்து குதிரைகள் பூட்டப்பட்ட நெருப்பு மயமான தேர் வந்து எலியாவை எடுத்துச் செல்ல, அவர் தமது போர்வையையும், இறைவாக்கு உரைக்கும் வரத்தையும் விட் டுச் செல்கின்றார். எலியாவின் போர்வை யைக் கொண்டு எலிசா யோர்தான் நதியின் நீரை அடிக்க, நீர் இரண்டாகப் பிரிந்ததி லிருந்து எலியா தனது ஆவியைக் கொடை யாகக் கொடுத்தது உண்மையெனக் கொள்ளப்பட்டது (2 அர 2:1-18).

6. எலியாவைப் பற்றி மேலே கூறப்பட் டுள்ள நிகழ்ச்சிகளெல்லாம் இறைவாக்கினர் கள் குழுக்களின் பாரம்பரியத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும் என்று ஆய்வாளர் கள் பொதுவாக ஏற்றுக் கொள்கின்றனர் (1 அர 19:18)- இவையனைத்துமே எலியா வாழ்ந்த இடத்தையும், ஆகாபின் மனைவி யாகிய ஈசபேலின் வழியாகத் தீர்நாட்டுப் பாகால் தெய்வ வழிபாடு நுழைந்ததையும் அதை அவர் தனியாக எதிர்த்ததையும் பற் றிய கதையாகும். இறைவாக்கினர் எலியா, எலிசா போன்றவர்களால் நிகழ்த்தப்பட்டதா கக் கூறப்படும் அரும் பெரும் செயல்களால் பாகால் தெய்வ வழிபாடு ஒழிக்கப்பட வில்லை. மாறாக, சதியாலும் கொலையா லும் அரச மரபு அழிக்கப்பட்ட பின்புதான் பாகால் தெய்வ வழிபாடும் அழிந்தது. ஆனால் யாவே இறைவன் ஒரேபு மலையில் எலியாவிற்குத் தோன்றி மற்றும் ஏகூவை அபிடேகம் செய்ய அழைப்பு விடுத்ததன் பேரில் அவர்கள் அபிடேகம் பண்ணப்பட்டு அரச பொறுப்பை ஏற்றதால் அந்நிய வழி பாட்டைக் கொண்டு செயல்பட்ட அரசாட்சி கவிழ்க்கப்பட்டது என்று இறைவாக்கு மரபு கூறுகிறது. எலியாவிற்குச் சாற்றிக் கூறப்பட்ட இந்த இறைவாக்கு மரபு எலிசாவினால் படைக்கப்பட்டதாக இருக்கலாம்.

7. தமது பெயர் குறிப்பிடுகின்ற ''யாவே என் இறைவன்'' என்பதைத் தமது வாழ்வில் உணர்ந்தவராய் எலியாகூ ''எனக்கு முன்னரே யாவே வாழ்கின்றார்'' என்று தயாராக எழுதுகின்றார். தீயைப்போன்ற இறைவாக்கினராக உயிருள்ள இறைவனின் உடன்படிக்கையை அவர் மீண்டும் ஏற்படுத்துவார். ஏனெனில் கடவுள் கட்டளைமேல் ஆர்வம் கொண்டிருந்ததால் விண்ணில் சேர்க்கப்பட்டார் (1 மக் 2:58) ''நெருப்புச்சுவாலையில் நெருப்புக் குதிரைகள் பூட்டின வண்டியில் அவர் எடுத்துக் கொள்ளப்பட்டார்'' (சீரா 48:9)

அ) பாலைவனத்திற்குத் திரும்புதல்:- எலியா ஓடிச் செல்ல வேண்டிய பாலைவனமானது அவருடைய இறைவனுடைய அக்கறையை அவருக்கு வெளிப்படுத்துகின்றது. அவர் எலியாவை கோரேபு மலைவரை போக அனுமதிக்கிறார் (1 அர 17:2 தொ; 19:4-8). மோசே ஆண்டவரைப் ''பின்னாலிருந்து'' பார்த்த அதே இடத்தில் இறைவன் தன்னை அவருக்கு வெளிப்படுத்துகின்றார் (19:9-14; யாத் 33:21.23). மோசேயைப் போன்று யாவேயுடன் கொண்ட சந்திப்பின் மூலம் திசுபியரும் மக்களுக்கான தூய்மையின் ஊற்றாக உருவாகிறார் (1 அர 19:15-18).

ஆ) இறைவன் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் பாதுகாவலன்:- ''சேனைகளின் கடவுளாகிய யாவேமாட்டு மிகுந்த ஆர்வம் கொண்டவனாய் இருக்கிறேன்'' (19:10) அந்நாளின் ஆள்வோரை எதிர்கொள்வதற்கு இத்தகைய முழு ஆளையும் ஆட்கொள்ளும் ஆர்வம் மிகவும் தேவைப்பட்டது. போரின் வெற்றிகள், புதிய தலைநகரின் மாட்சி, மற்றும் நகரங்களின் செழிப்பு ஆகியவற்றால் மதிமயக்கம் கொண்டவர்களாய் அவர்கள் அகந்தைமிக்க தன்னிறைவு மற்றும் நாட்டின் உயர்வு என்னும் சூழ்நிலையில் மூழ்கியிருந்தனர் (16:23-34). ''தந்தத்தால் கட்டிய வீடாகிய'' (22:39) அரச மாளிகையில் ஆகாபினுடைய யூதரல்லாத மனைவியாக ஈசபேல் இறைநிந்தனையான திட்டங்களைப் பற்றியே சிந்திக்கின்றாள். சிலை வழிபாட்டைப் பரப்புகின்ற பொறுப்புடைய சிலநூறு போலித் தீர்க்கதரிசிகளை அவள் பாகாலின் ஆலயத்தில் வைத்திருக்கவில்லையா? கர்மேல் மலையில் யாவேயின் ஆண்டவருடைய வியப்புமிக்க தலையீட்டின் மூலம் எலியா தமது எதிரிகளின் சவாலை ஏற்று அவர்களைத் தோல்வியுறச் செய்கிறார் (18). இவ்வாறு இறைவனின் உரிமைகள் இடர் நிலையில் உள்ள ஒவ்வொரு நேரத்திலும் இடிபோன்ற வன் சொற்களுடன் எலியா போராட்டத்தில் அங்கு நுழைகிறார் (2 அர 1). அவர் உண்மையான வழிபாட்டுக்கு மட்டுமில்லாமல் நீதிக்காகவும் எளியோரின் ஆதரவுக்காகவும் போராடினார். சமாதானத்தை விரும்பும் நாபோத்தைக் கொன்ற ஆகாபிற்கு எதிராக எலியா எந்த அளவிற்கு இடித்துரைத்தாரெனில் அச்சமுற்ற அரசன் மனந்திரும்புதலில் அச்செயல் முடிவடைகிறது (1 அர 21). இத்தகையவர் இறைவாக்குகளில் இதுபோன்ற அமைப்புகளால் எப்போதும் வருணிக்கப்படுவதற்குத் தகுதியுடையவரே. ''நெருப்பைப்போல் எலியா எழுந்தார். பந்தம் போல் அவருடைய வார்த்தை பற்றி எரிந்தது'' (சீரா 48:1).

இ) புறவினத்தாரிடையே இறைவன் சாட்சி:- 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பல இஸ்ராயேலரைப் பொறுத்த மட்டில் இறைவனின் கொடைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமே உரியவைகளாக் கருதப்பட்டன. ஆனால் எலியாவை அனுப்பிய இறைவனுக்கோ மீட்புப்பணியானது உடன்படிக்கையின் எல்லைகளுக்கும் அப்பால் செல்கிறது. ஒரு புறவினத்தார் பஞ்சத்திலிருந்து காப்பாற்றப்படுகிறார் (1 அர 17:10-16) அவருடைய மகன் மரணத்தினின்று விடுவிக்கப்படுகிறான் (17:17-24).

எலியா இறைவாக்கினர் யாவேயின் உண்மையான இறைத்தன்மையை வலியுறுத்திப் பிற தெய்வ வழிபாடுகளை அகற்றுகிறவராகத் தோன்றுகிறார். கானானிய கடவுளுக்கே உரித்தான ஒன்றாக ஏற்றிக் கூறப்படும் இயற்கைக்கு மேல் உள்ள அதிகாரத்தை யாவே இறைவனுக்கு மட்டுமே உரியதொன்றாக

அவர் நிரூபித்துக் காட்டுகின்றார். எபிரேயப் பாரம்பரிய அறநெறி ஒழுக்கத்தை வலியுறுத்து கின்றார். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அவர் அநேக முறை சுட்டிக் காட்டப்படுவதிலிருந்து அவரது மகத்துவத் தைப் புரிந்துகொள்ள முடிகின்றது. மூல இறைவாக்குக் கதை மோசேயின் இறை அனுபவக் கூறுகளை இவரது இறையனுபவ மாகவும் ஏற்றிக் கூறுகிறது. ஏனென்றால் இருவருக்குமே இறைவன் தோன்றிய இட மும், வெளிப்பட்ட விதமும் ஒரே மாதிரியான தாகக் காட்டப்படுகின்றன. எலியா மீண் டும் வருவார் என்பது பிற்காலத்தில் எழுந்த நம்பிக்கையாகும். மலாக்கி ஆகமம் 3:23 எழுதப்பட்ட காலத்தில் இந்த நம்பிக்கை காணப்பட்டது. யாவேயின் நாளுக்கு முன் னால் எலியா வருவார் என்ற நம்பிக்கை நற்செய்திகளிலும் பல இடங்களில் காணப் படுகின்றன (மத் 11:14; 17:10; மாற் 9:11).

II புதிய ஏற்பாடு:-

1. திருமுழுக்கு யோவானும் எலியாவும்:- இந்த இறுதிக்கால எதிர்பார்ப்பானது (மாற் 1:35-36) மறைபொருள் மிக்கவிதத்தில் திரு முழுக்கு யோவானில் நிறைவேறுகிறது (மத் 17:10-13). ஏனெனில் யோவான் எலியா அல்லர் (யோவா 1:21;25). மேலும் அவரு டைய போதனையானது பிள்ளைகளின் உள் ளங்களைத் தந்தையாரிடம் திரும்பக் கொண்டு வந்தாலும் இறைவனின் சினத் தைத் தணிப்பவர் அவரல்லர்.

2. இயேசுவும் எலியாவும்:- பாலைவனத் தில் அவர் கடைப்பிடித்த தவமுயற்சிகளைப் பொறுத்தமட்டும் திருமுழுக்கு யோவான் எலியாவைப் பின்பற்றுகிறார் (மத் 3:4; 2 அர 1:8). ஆனால் அவரின் முக்கிய பண்புகளை நிறைவேற்றுபவர் இயேசுவே. நாசரேத்து நிகழ்ச்சியிலிருந்து எலியாவின் பணியைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் அவர் தமது உலக ளாவிய பணியை விவரிக்கிறார் (லூக் 4:25-26). சாரபாத்து புதுமையானது, உருவக வடிவில் நயீம் புதுமையுடன் இணைக்கப் படுகின்றது (லூக் 7:11-16; 1 அர 17:17-24). பழிவாங்கும் நெருப்பை எலியா வானி லிருந்து இறங்கச் செய்கிறார் (2 அர 1:9.14; லூக் 12:49). பாலைவனத்தில் எலியாவிற்கு நிகழ்ந்ததுபோல ஒலிவ மலையில் வான தூதர் ஒருவர் இயேசுவிற்கு ஆறுதலளித்துத் தேற்றுகிறார் (லூக் 22:43; 1 அர 19:5.7). ஆனால் எலியாவைப் போன்று அவர் மர ணத்தைக் கேட்கவில்லை. ''தனது ஆவியா னது எலிசாவின் மீது தங்கிய நிலையில் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட எலியா (2 அர 2:1-15). ''தனது தந்தை வாக்களித்ததை'' தனது சீடர்களுக்கு அனுப்ப விருக்கிற கிறிஸ்துவினுடைய விண்ணேற் பிற்கு (லூக் 24:51; 9:51) முன்னுதாரணமாக உள்ளார்.

3. விசுவாசியும் எலியாவும்:- ''நம்மைப் போன்ற ஒரு மனிதனான'' எலியாவின் வேண்டுதலை நீதிமானுடைய செபங்க ளுக்கு மாதிரியாக யாக்கோபு எடுத்துக் கூறு கிறார் (யாக் 5:16 தொ). ''தென்றலின் மெல் லிசையில்'' (1 அர 19:12) முன்னர் யாவே யுடன் ஏற்பட்டது போன்று உருமாற்றத்தின் போது இயேசுவுடனான இறைவாக்கினரின் உரையாடலானது (மத் 17:1-8) ஆண்டவர் எல்லா விசுவாசிகளையும் அழைக்கின்ற நெருக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கிறிஸ்தவ மரபில் அமைந்துள்ளது.

எலியாக்கிம் (ELIAKIM - இறைவன் எழுப்பு கிறார்)

1. இலிக்கியாவின் மகன் எலியாக்கிம் ஆவார். அரசன் எசக்கியாவின் அரண்மனை மேலதிகாரி (2 அர 18:18.26.37). இந்தப் பதவி (அரண்மனை மேற்பார்வையாளன்) அரச னுக்கு அடுத்த பதவியாகச் சாலமோன் காலத்திலிருந்தே முக்கியத்துவம் பெற்ற பதவி ஆகும் (1 அர 4:2-6). ''செபினாவை நீக்கிவிட்டு எலியாக்கிமை அவன் பதவிக்கு உயர்த்துவோம்'' என்று ஏசயா இறைவாக்கு உரைத்தார் (ஏச 22:15-25). அது அப்படியே நடந்ததை 2 அர 18:18-இல் வாசிக்கின்றோம். எலியாக்கிமின் அதிகாரம் இந்த இறைவாக் கில் விவரிக்கப்பட்டபடி விண்ணரசில் நுழைவதை நிர்ணயிப்பதில் இயேசுவின்

பாகத்தை விவரிப்பதில் நினைவு கூறப்படுகிறது (திருவெளி 1:18; 3:7).

2. பார்வோன் நெக்கோ, யோசியாவின் மூத்த மகனைப் பதவி நீக்கம் செய்து எகிப்துக்கு நாடு கடத்திய பின், இரண்டாம் மகனான எலியாக்கிமை ஏற்படுத்தி அவரது பெயரை யோயாக்கிம் என்று மாற்றினார் (2 அர 23:34; 2 நாள் 36:4). இப்பெயர் மாற்றத்தில் புதிய பெயருக்கு முக்கியத்துவம் வாய்ந்த உட்பொருள் ஒன்றுமில்லை. (''கடவுள் உயர்த்துகிறார்'' என்பதற்குப் பதிலாக ''யாவே உயர்த்துகிறார்'' என்று வந்திருக்கிறது). ஒரு புதிய பெயர் அவ்வளவுதான். பார்வோன் யோயாக்கிமை மறுபதிப்பு செய்தான். 'யாவே அவன் பக்கம் இருக்கிறார்' என்று பொருள்படும் புதிய பெயர் பார்வோனின் தந்திரமான தயாரிப்பு.

3. செருபாபேலால் திரும்பக் கட்டப்பட்ட எருசலேம் மதிலின் அர்ப்பண விழாவின் போது பங்கெடுத்த ஒரு குரு (நெக 12:41).

4. பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு வரும் இயேசுவின் தலைமுறை அட்டவணையில் அபியூதின் மகன் எலியாக்கிம் குறிக்கப்படுகிறார் (மத் 1:13).

5. லூக்கா தரும் இயேசுவின் தலைமுறை அட்டவணையின்படி எலியாக்கிம் தாவீது மகன் நாத்தானின் வழிவந்த மெலயாவின் மகன் (லூக் 3:30).

எலியாசாபு (ELIASAPH - இறைவன் அதிகரித்துள்ளார்)

1. இலாயேலின் புதல்வன். பாலைவனத்தில் கெரிசோனிய மக்கள் தலைவன் (எண் 3:24). கெரிசோனிய மக்கள் ஆண்டவரின் பேழையைக் காவல் புரிவதுடன் கூடாரத்தினுள்ளே மற்ற அலுவல்களையும் செய்துவந்தார்கள்.

2. காது கோத்திரத்தின் தலைவன் தெகுவேலின் அல்லது இரகு வேலின் புதல்வன் (எண் 1:14; 2:14; 7:42. 47; 10:20). பாலைவனத்தின் இஸ்ராயேல் கணக்கெடுப்பதிலும், பிற அலுவல்களிலும் மோசேக்குத் தோள் கொடுத்துத் துணைபுரிந்த 12 கோத்திரங்களின் தலைவர்களுள் ஒருவர்.

எலியாசிபு (ELIASHIB - இறைவன் சீர்படுத்தினார்)

1. எலியோனாயின் மகனும் செருபாபேலின் வழித்தோன்றலுமாவார் (1 நாள் 3:24).

2. தாவீது காலத்தில் பதினோராவது பிரிவில் ஒரு குரு (1 நாள் 24:12).

3. பாபிலோனிய அடிமைத்தனத்துக்குப் பிறகு புறவின மனைவியரை ஒதுக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்ட பாடகர்களில் ஒருவர் (எஸ் 10:27).

4. சத்தூவின் மக்களில் ஒருவர் (எஸ் 10:27). புறவின மனைவியை ஒதுக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டவர்களில் ஒருவர்.

5. பானியின் மக்களில் ஒருவர் (எஸ் 10:36). இவரும் புறவின மனைவியை ஒதுக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டவர்.

6. நெகமியா காலத்திய பெரிய குரு (எஸ் 10:6; நெக 3:1. 20-21). யோயாக்கிமின் மகனும் ஏசுவாவின் பேரனும் ஆவார் (நெக 12:10). எலியாசிபு மற்ற உடன்குருக்களை மந்தை வாயிலைக்கட்ட வழிநடத்தினார் (3:1). நெகமியாவின் எதிராளியும் அம்மோனியனுமான தோபியாசு எலியாசிபுக்கு நெருங்கிய உறவினன். ஆதலால், கடவுள் ஆலயத்தின் ஓர் அறையைத் தோபியாசுக்குத் தங்குமிடமாகக் கொடுத்ததால் எலியாசிபு தீங்கு இழைத்திருந்தார் (13:4.7). எலியாசிபு பெரிய குருதான் என்பதில் சில வேளைகளில் சந்தேகங்கள் எழுகின்றன (3:1). ஆனால் அதற்குப் போதுமான காரணமில்லை. யோயாதா, யோகனான் (எஸ் 10:6) இயோர் எலியாசிப்பின் புதல்வர்கள் ஆவர் (12:10-11). அவரது (யோயாதா வழிவந்த) பேரன்களில் ஒருவன் சாம்பலாத்து ஒரு கோரியரின் மகளைத் திருமணம் செய்தான். இது, ஆலயத்திலிருந்து அவனைப் புறமபாக்குவதற்கு

நெகமியாவுக்குப் போதிய காரணமாயிற்று (நெக 13:28).

எலியாதா (ELIADA - இறைவன் அறிகிறார்)

1. தாவீதின் புதல்வர்களில் ஒருவர். எருசலேமில் பிறந்தவர் (2 சாமு 5:16; 1 நாள் 3:8). இதற்கு இணையான பட்டியலில் பேலியாதா என்று அழைக்கப்படுகிறார் (1 நாள் 14:6).

2. சாலமோனின் எதிரியான இரசோனின் தந்தை (1 அர 11:23).

3. யோசபாத்தின் ஆட்சியின்போது கேடயம் தாங்கிய வில்வீரர் இரண்டு இலட்சம் பேருக்குத் தளபதியாக விளங்கினார் (2 நாள் 17:17). பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர்.

எலியாத்தா (ELIHTHA - இறைவன் வந்துவிட்டார்)

ஏமானின் புதல்வர்களுள் ஒருவர். தாவீது காலத்தில் ஆலய இசைக்கலைஞர் (1 நாள் 25:4). சீட்டுப் போட்டு, பாடகர்களில் 20-ஆவது பிரிவை நடத்த நியமிக்கப்பட்டவர் (25:7). ஒருவேளை இது ஆளைக்குறிக்கும் பெயராக இருக்காது. இசைக்கலைஞர்களின் பெயர் வரிசையில் சேர்ந்துவிட்ட செபத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். அப்படியென்றால் ''ஏலி அட்டா'' அதாவது ''நீரே என் கடவுள்'' என்று வாசிக்கவேண்டும்.

எலியாபு (ELIAB - இறைவன் தந்தையாவார்)

1. செபுலோன் கோத்திரத்தின் தலைவனான கோலோனுடைய புதல்வர்களில் ஒருவர். மோசேயின் காலக்கட்டத்தில் கணக்கெடுப்பதிலும் காணிக்கை கொடுப்பதிலும் தம் கோத்திரத்தாருக்குப் பிரதிநிதியாக விளங்கினார் (எண் 1:9; 2:7; 7:24.29; 10:16).

2. ரூபனின் குலத்தைச் சேர்ந்த பல்லூவின் மகனும் கோராகின் கிளர்ச்சியின்போது மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் நின்ற தாத்தான், அபிராம் என்பவர்களின் தந்தையுமாவார் (எண் 16:1,12;26:8-9; உப 11:6).

3. இவர் பெத்திலகேமைச் சார்ந்த ஈசாயின் தலைமகன் ஆவார். அவருடைய உயரத்தாலும் தோற்றத்தாலும் மயங்கிப்போய், அரசனாகத் தகுதியுடையவர் இவரே என்று முதலில் தீர்மானித்த சாமுவேல் பிறகு இறைவனுடைய க்கட்டளைப்படி இவரை ஒதுக்கி விட்டுத் தாவீதைத் தேர்ந்தெடுத்தார் (1 சாமு 16:6-7, 12-13; 1 நாள் 2:13). ஏலா பள்ளத்தாக்கில் பெலிஸ்தியரோடு சவுல் போரிட்டுக் கொண்டிருந்தபோது சவுலின் படையில் இருந்தார் எலியாபு. கோலியாத்து இஸ்ராயேலரை இழிவுபடுத்தியபோது, உணவுப் பொருட்களைப் பாசறைக்குக் கொண்டுவந்திருந்த தம் கடைசித் தம்பி தாவீது, கோலியாத்தைக் கொல்பவனுக்குச் சவுல் அறிவித்திருக்கும் வெகுமதியைப் பற்றி விவரமாய் விசாரித்துக் கொண்டிருந்தபோது, தாவீதின் மேல் பயங்கர கோபமுற்றார் எலியாபு (1 சாமு 17:13-28). எலியாபுவின் புதல்வி அபிகாயில் தாவீதின் மகன் எரொமோத்தை மணந்து மகலாத்தைப் பெற்றெடுத்தார். மகலாத்து இரகபெயாமை மணந்து கொண்டாள் (2 நாள் 11:18).

4. ஒரு லேவியர். இறைவாக்கினர் சாமுவேல் முன்னோர்களில் ஒருவரும் கெகாத்தின் புதல்வர்களில் ஒருவரும் ஆவார் (1 நாள் 6:27). இதற்கு இணையான தலைமுறைப் பட்டியலில் எலிகூ (1 சாமு 1:1) 'எலியேல்' (1 நாள் 6:34) என்று அழைக்கப் படுகின்றார்.

5. நாடு கடத்தப்பட்டுச் சிக்கிலாகில் தாவீது இருந்தபோது அவருடைய படையில் சேர்ந்து கொண்ட காது குடும்பத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற வீரர்களில் மூன்றாவது வருபவர் (1 நாள் 12:8-9). பிற்காலத்தில் தாவீது படையின் ஒரு தலைவன் ஆனார் (12:8).

6. தாவீதின் காலத்தில் யாழ் மீட்டும் லேவிய இசைக்கலைஞர் (1 நாள் 15:8,20; 16:5).

எலியாம் (ELIAM - இறைவன் உறவினர் ஆனார்)

கித்தியன் உரியாவின் மனைவி பதுசேபாவின் தந்தை (2 சாமு 11:3). அம்மியேல் (என் உறவினர் இறைவன் ஆவார்) என்று 1 நாள் 3:5-இல் அழைக்கப்படுகிறார். இரு பெயர்களும் ஒன்றைத்தான் குறிக்கின்றன.

2. கீலோவைச் சேர்ந்த அகித்தோபலின் மகன். ''முப்பதின்மர்'' என்று அழைக்கப்படும் தாவீதின் பலம் வாய்ந்த படைவீரர்களுள் ஒருவர் (2 சாமு 23:34). 2 நாள் 11:36-இல் அவரது பெயர் பெலோனியனான அகியா என்று துண்டிக்கப்பட்ட வடிவில் தோன்றுகிறது.

எலியாவா (ELIAHBA - இறைவன் மறைக்கிறார்)

இவர் சாலபோன். ''முப்பது பேர்'' என்று அழைக்கப்படும் தாவீதின் பலம் வாய்ந்த படைவீரர்களுள் ஒருவர் (2 சாமு 23:32; 1 நாள் 11:33).

எலியாவின் வெளிப்பாடு (APOCALYPSE OF ELIJAH)

1. சுருக்கமான முழு யூத வெளிப்பாட்டு நூலாகும். கர்மேல் மலையில் எலியாவுக்கு மிக்காயேல் வெளிப்படுத்திய இரகசியங்களை மித்ராசிக் மற்றும் வெளிப்பாட்டு நடையில் எடுத்துக்கூறுகிறது. இது கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இந்நூலின் முடிவு யோவானின் திருவெளிப்பாட்டினை ஒத்தே இருக்கிறது. மெசியாவுக்கும் எதிர் மெசியாவுக்கும் இடையேயான இறுதிப் போருடன் பாவத்தின் இக்காலம் முற்றுப் பெறுகிறது. மெசியா, செழிப்பான நாற்பதாண்டு அரசாட்சியை நிலைநாட்டுகிறார். கோது, மாகோது ஆகியோர் எருசலேமுக்கு எதிராகப் போர் புரிகின்றனர். ஆனால் அழிக்கப்படுகின்றனர். பின்னர், பொது உயிர்ப்பு நிகழ்கிறது. இறுதித்தீர்ப்பு வழங்கப்படுகிறது. இறைவனின் நேர்மைமிக்க புதிய அரசு நிறுவப்படுகிறது. தீயோர் அவியா நெருப்புக்குத் தண்டிக்கப்படுகின்றனர். நல்லோர் இறைவனின் எருசலேமும் புதிய ஏதேன் தோட்டமும் கலந்த இன்ப நிலையில் இறைவனோடு வாழ்கின்றனர். உரோமை, பாரசீகம் பற்றிய குறிப்புகளைக் கொண்டு அறிஞர்கள் இந்நூல் கி.பி. 261-இல் அல்லது அதற்குச் சிறிது முன் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர். இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று கூறவும் இடமிருக்கிறது. இந்நூலின் பிற்கால அரமேயிக் வாசகம் இருக்கிறது.

2. முன்னறிவிப்புகளாக வெளிப்பாட்டுக் கருத்துக்களையும் வரலாற்று விவரிப்புகளையும் எடுத்துக்கூறும் வாக்குகளின் தொகுப்பாகிய போலி நூலாகும். இது அலக்சாந்திரியா யூதர்களால் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாக நம்பப்பட்டாலும், இது கோப்டிக் வாசகத்தில் மட்டுமே இருக்கிறது. இவ்வாசகம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. முழுவதும் கிறிஸ்தவ விளக்கத் தன்மையுடையது.

3. கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆகையால், பவுலுக்குப்பிந்திய இலத்தீனில் எழுதப்பட்ட பெயர் தெரியாத நூல் இது. 1 கொரி 2:9-இல் வரும் பவுலின் எடுத்துக்காட்டுதலுக்கு (காண் சா 64:4) மூலமாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது மேலே (2)-இல் குறிக்கப்பட்டதன்று.

எலியூது (ELIUD - இறைவன் என் புகழ் ஆவார்)

இயேசுவின் முன்னோர்களில் ஒருவர் (மத் 1:14-15; காண்க லூக் 3:23 தொ)

எலியேசர் (ELIEZER - என் இறைவன் எனக்கு உதவி ஆவார்)

1. எலியேசர் ஆபிரகாமின் ஊழியன். ஆபிரகாமின் மகனுக்குப் பதிலாக வாரிசாக வந்திருக்கக்கூடியவன் (ஆதி 15:2). இவர் தமஸ்கு ஊரைச் சேர்ந்தவர் என்றும் பொதுவாகக் கூறப்படும். எபிரேய வாசகம் கடினமாக இருக்கிறது. பழுதுபட்டதாகவும் இருக்கலாம். இவர் ஆதி 24:2-இல் வரும் ''வயது முதிர்ந்த'' ஊழியனாக இருக்கலாம். அறு

பது ஆண்டுகளுக்கப் பிறகு ஈசாக்கிற்கு மெச பொத்தாமியாவில் ஆபிரகாமின் உறவின ருள் பெண் தேட அனுப்பப்பட்டவர் (ஆதி 24:2 தொ).

2. மோசே சிப்போரா ஆகியோரின் இரண் டாவது மகன் (யாத் 18:4; 1 நாள் 23:15.17; 26:25). ஆண்டவர் மோசேயைப் பார்வோனிட மிருந்து காத்ததால், இப்பெயர் கொடுக்கப் பட்டது. எலியேசருக்கு இரகபியா என்ற ஒரே மகன் இருந்தான் (1 நாள் 23:17).

3. செபுலோன் கோத்திரத்தாரில் ஒருவர். இப்பெயர் ஓர் ஆளையோ குடும்பத்தையோ குறிக்கலாம். தவறாகப் பென்யாமின் கோத் திரத்தின் அட்டவணையில் தரப்பட்டிருக்கி றது (1 நாள் 7:8). இதன்படி இவர் பெக்கரின் புதல்வர்களில் ஒருவர். பென்யாமின் பேரன்.

4. இறைவனின் திருப்பேழை எருசலே முக்குக் கொண்டு வரப்பட்டபோது, திருப் பேழைக்கு முன் எக்காளம் ஊதிக்கொண்டு வந்த குருக்களில் ஒருவர் (1 நாள் 15:24).

5. தாவீது காலத்தில் ரூபன் கோத்திரத் தாரின் குலத்தலைவர். சிகிரியின் மகன் (1 நாள் 27:16).

6. யோசபாத்தின் காலத்திய ஓர் இறை வாக்கினர். மரேசாவைச் சேர்ந்த தோதவாகு வின் மகன். வட இஸ்ராயேல் அரசன் அகாசி யவோடு யோசபாத் செய்து கொண்ட உடன் படிக்கைக்கு எதிராக இவர் உரைத்த இறை வாக்கு எசியோன்-கெபேரில் கப்பல் கட்டும் செயல்களை முடிவுக்குக் கொண்டுவந்தது (2 நாள் 20:35-37).

7. எஸ்ரா காலத்திய மக்கள் தலைவர்க ளுள் ஒருவர். சுாசிப்பியாவின் மக்களுள் எருசலேம் ஆலயத்தில் பணி செய்யப் பணி யாளர்களைக் கண்டுபிடிக்க எஸ்ராவால் கட்டளையிடப்பட்டவர் (எஸ் 18:16-17).

8. தன் புறவின மனைவியைத் தள்ளிவிட ஒப்புக்கொண்ட ஒரு குரு (எஸ் 10:18).

9. தன் புறவின மனைவியைத் தள்ளிவிட ஒப்புக்கொண்ட ஒரு லேவியர் புதல்வர்க ளில் ஒருவன் (எஸ் 10:23).

10. தம் புறவின மனைவியைத் தள்ளி விட்ட கரீமின் மக்களில் ஒருவர் (எஸ் 10:31)

11. லூக்காவில் இயேசுவின் தலைமுறை அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒரு பெயர் (லூக் 3:29).

எலியேல் (ELIEL - ஏல் என் இறைவன் ஆவார்)

1. யோர்தானின் கிழக்குப்பக்கம் வாழ்ந்த மனாசே கோத்திரத்தாரின் ஒரு குடும்பத் தலைவர் எலியேல் (1 நாள் 5:24). இதற்கு இணையான பட்டியலில், எண் 26:28-34; யோசு 17:2 தொ-இல் இப்பெயர் வர வில்லை.

2. கெகத்தியருள் ஒருவரும், லேவிய கோவில் பாடகர்களில் ஒருவருமாவார். தோவாகின் மகனும், எரொகாமின் தந்தையு மாவார் (1 நாள் 6:34). இந்த எலியேல் 1 நாள் 6:27 குறிப்பிடும் எலியாபு (4) அல்லது 1 சாமு 1:1 குறிப்பிடம் எலீகூ (1) ஆக இருக்கலாம்.

3. பென்யாமின் கோத்திரத்தாரின் இரு குடும்பத்தலைவர்கள். ஒருவன் சிமயியின் மகன். மற்றவன் சாசாக்கின் மகன் (1 நாள் 8:20,22). இதற்கு இணையான பட்டியல்க ளான ஆதி 46:21; எண் 26:38-41-இல் இப்பெயர் காணப்படவில்லை.

4. தாவீதின் படையில் உள்ள இரண்டு வல்ல வீரர்கள் (1 நாள் 11:46,47).

5. பாலையில் தாவீதினுடைய படையில் சேர்ந்து கொண்ட காது குடும்பத்தைச் சேர்ந் தவர்களில் ஒருவன் (1 நாள் 12:11). இவன் தாவீதின் வல்ல வீரர்களில் ஒருவராக இருக்க லாம். (4)-இல் குறிப்பிடப்படும் இருவரில் ஒருவராக இருக்கலாம்.

6. ஆண்டவருடைய பேழை எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டபோது உதவியவர்களுள் ஒருவர்; லேவியர். எபிரோனின் மகன் (1 நாள் 15:9,11).

7. எசக்கியா அரசன் ஆண்ட காலத்தில் இவர் ஆலயக்காணிக்கையையும் பத்தில் ஒரு பகுதியையும் மேற்பார்க்க நியமிக்கப்பட்டவர் (2 நாள் 31:13). ஒரு லேவியர்.

எலியேனாய் (ELIENAI - என்கண்கள் யாவேயை நோக்கியுள்ளன)

பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்த சிமயியின் வழித்தோன்றல் (1 நாள் 8:20).

எலியோயேனாய் (ELIEHOENAI - என் கண்கள் யாவேயை நோக்கி உள்ளன)

1. கோராகின் குடும்பத்தைச் சேர்ந்த மெசலேமியாவின் ஏழாவது மகன். இவர் லேவியர் குடும்பத்தைச் சர்ந்த வாயிற் காப்போன் (1 நாள் 26:3).

2. செராகியாவின் மகன். இவர் எஸ்ராவோடு எருசலேமுக்குத் திரும்பிய ஒரு குடும்பத் தலைவர் (எஸ் 8:4).

எலியோரேபு (ELIHOREP - இலையுதிர் கால இறைவன்)

சீசாவின் புதல்வர். சாலமோன் அவையில் உயர் அதிகாரிகளுள் ஒருவர். இவரும் இவர் தம்பி அகியாவும் அரச செயலர்களாக இருந்தனர் (1 அர 4:3).

எலியோனாய் (ELIOENAI - என் கண்கள் யாவேயை நோக்கியுள்ளன)

1. அடிமைத்தனத்துக்குப் பிறகு வந்த தாவீதின் வழித்தோன்றல் (1 நாள் 3:23-24) நெயரியாவின் மூத்தமகன் சாலமோன் வழித்தோன்றல் பட்டியலில் குறிக்கப்படுகிறார்.

2. இவர் சிமியோன் குலத்தலைவராக விளங்கினார் (1 நாள் 4:36).

3. செபுலோன் குல ந தலைவர்கள் வரிசையில் வரவேண்டியவர். பென்யாமின் குலத் தலைவர்கள் வரிசையில் குறிப்பிடப்படுகிறார் (1 நாள் 7:8). பெக்கரின் புதல்வர்களில் ஒருவர்.

4. தன் புறவின மனைவியை விலக்கி விட்ட ஒரு குரு. பசிகூரின் புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:22).

5. தம் புறவின மனைவியை விலக்கி விட்ட சத்தூவின் மக்களில் ஒருவர் (எஸ் 10:27).

6. பாபிலோனிய அடிமைத்தனத்துக்குப் பிறகு வந்த குரு (நெக 12:40). மீண்டும் கட்டப்பட்ட எருசலேம் சுவர்களின் அர்ப்பணத்தில் பங்கு பெற்றவர்.

எலியோன் (ELYON - மிக உன்னத இறைவன்)

அனைத்திற்கும் மேலான இறைவனைக் குறிப்பதற்குக் கானானியர்கள் பயன்படுத்திய சொல் இது (ஆதி 14:18-24). இஸ்ராயேலர்களுக்கு முந்திய எருசலேமின் இறைவனோடு (ஏல்) தொடர்புபடுத்தப்பட்ட பழங்கால இறை பெயர். உன்னதக் கடவுளின் குருவாய் இருந்த மெல்க்கிசதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தார். 'உன்னதக் கடவுள் வாழ்த்தப் பெறுவாராக' என்று கூறினார். உன்னதக் கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தவர். எலியோனையும், யாவேயையும் ஆபிரகாம் ஒன்றாகக் கருதுகிறார்.

காண்க: ஏல் எலியோன்.

எலீசா (ELISHAH - இறைவன் மீட்கிறார்) - ஆள்

நாடுகளின் அட்டவணையில் யாப்பேத்து வழித்தோன்றல்களில் வரும் பெயர்களில் ஒன்று. யாப்பேத்தின் மகனான யாவானின் மகன் (ஆதி 10:4; 1 நாள் 1:7).

எலீசா (ELISHAH - இறைவன் மீட்கிறார்) - இடம்

இது எகிப்துக்கும் சீதோனுக்கும் இடைப்பட்ட கடற்கரைப் பகுதியாகும். இது சித்திரச் சணல் நூலாடை, நீலத் துணி ஆகியவற்

றைத் தீருக்கு ஏற்றுமதி செய்ததாகக் கூறப் படுகிறது (எசே. 27:7).

எலீசா, ஆப்பு வடிவ ஏடுகளில் (உ.ம். அமர்னா ஏடுகள்) காணப்படும் அலாசியா வாக இருக்கலாம். இது சைப்ரசின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

எலுசாய் (ELUSAI - இறைவன் என் பலம்)

பென்யாமின் குலத்தவரான சவுலின் குடும்பத்தைச் சார்ந்தவர்களில் ஒருவர். சவு லின் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவ ரும் (எலுசாய் உட்பட) ஆற்றல் மிக்கவரும் திறமைமிக்க படை வீரருமாவார். மேலும் அவர்கள் வில் வீரராயும், இரு கையாலும் கவணையும் அம்பையும் கையாள்வதில் திறமை படைத்தவராயும் இருந்தனர்.

சவுலின் உறவினனான எலுசாய், தாவீ தோடு சிக்கிலாகில் சேர்ந்து கொண்டார் (1 நாள் 12:5).

எலும்புகள் (BONES)

உடல் அமைப்பு பற்றிய குறிப்புகள் விவி லியத்தில் அதிகமில்லை. ஆயினும் எலும் புக்கூடு பற்றிய குறிப்புகள் அடிக்கடி காணப் படுகின்றன. ''வலிமையுள்ள'' என்ற பொரு ளுடைய எபிரேயச் சொல்லின் வேரிலிருந்து எலும்பைக் குறிக்கும் எபிரேயச் சொல் வரு கிறது. இது எலும்பின் உறுதியையும் கடினத் தன்மையையும் குறிக்கிறது. எலும்பும் தலை யும் என்ற சொல்லைச் சொல்லும்போது அது மனிதனின் முழுமையைக் குறிக்கும். இது எலும்புகள் உணர்ச்சிகளின் இருப்பிடம் என்றும் பொருள்கொள்ளப்படுவதை விளக் கலாம் (யோபு 4:14; 20:11; எரே 20:9). எலும்பு என்ற இச்சொல் பரந்தபொருளில் மனித ஆளுமையை அல்லது குணங்களைக் குறிக்கப்பயன்பட்டது (பழ 17:22; 25:15).

படைப்பு நிகழ்ச்சியுரையில் ''விலா எலும்பு'' என்று மொழி பெயர்க்கப்படும் சொல் (ஆதி 2:21) மற்ற இடங்களில் மரப் பலகையையும் (1 அர 6:15-16) கூரவின் மடிப்பு களையும் (6:34) பக்கம் என்ற பொருளையும் (2 சாமு 16:13) குறிக்கிறது.

மரணத்திற்குப்பின் எலும்புகளைச் சேக ரித்து நல்லடக்கம் செய்யும் பழக்கமும் இருந்தது (1 சாமு 31:13).

எலும்புக்கலம் (OSSUARIES)

சுண்ணாம்புக் கல்லால் செய்யப்பட்ட இவ்வகைப் பெட்டிகள் இறந்தவரின் உடல் அழிந்தாலும் மீதமுள்ள எலும்புகளைப் பத் திரப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சொல் விவிலியத்திலே காணப்பட வில்லை யென்றாலும் இப்பொருள் விவிலிய காலத் திலே பயன்படுத்தப்பட்டது.

எருசலேமிலுள்ள அருங்காட்சியகத்தில் களிமண்ணால் வீடு போன்ற அமைப்பினால் செய்யப்பட்ட பெட்டிகள் உள்ளன. செவ் வக வடிவம் அதில் பொதுவானவை. இவை எருசலேமிலுள்ள குகைகளிலும் கல்லறைக ளிலும் காணக்கிடக்கின்றன. இதனுடைய அமைப்புகளின் பல்வேறு வடிவங்களில் உரோமையர்கள் காலத்திலிருந்து பாலஸ்தீ னத்தில் கிடைத்துள்ளன. இவை 20 முதல் 30 அங்குலம் நீளமும், 12 முதல் 20 அங்குலம் அகலமும், 10 முதல் 12 அங்குலம் உயரமும் கொண்டவை. இப்பெட்டிகளில் எபிரேயம், கிரேக்கம், அரேமேயிக்கு ஆகிய மொழிக ளில் சொற்களும் பெயர்களும் காணப்படு கின்றன. இவை இறந்தோரின் எலும்புகள் எவ்வாறு கவனமாய்ப் பாதுகாக்கப்பட்டன என்பதற்குச் சான்று கூறுகின்றன:

எலூத்தரு (ELEUTHERUS - சுதந்தரமான)

லெபனோன் மலை அடிவாரத்திலிருந்து புறப்பட்டுச் சீரியா நாட்டில் பாய்ந்து கட லில் கலக்கின்ற ஆறு. யோனத்தானின் வீரச் செயல்களைப் பேசும்போது ஒரு முக்கிய எல்லைக்கோடாகச் சுட்டிக்காட்டப்படுகி றது (1 மக் 11:7; 12:30). ஒருவேளை இது இன்றைய நெகிர் ஏல்-கெபிராக இருக்கலாம்.

எலூல் (ELUL - கொடி முந்திரி)

எபிரேய காலக்கணிப்பின்படி எலூல் என் பது வருடத்தின் ஆறாம் மாதம் (ஆகஸ்ட்- செப்டம்பர், ஆவணி). இம்மாதத்தின் 25- ஆம் நாள் எருசலேம் மதில்கள் மீண்டும்

கட்டிமுடிக்கப்பட்டன (நெக 6:15). பின்பு, கி.மு. 140-ஐ ஒட்டிப் பெரிய குரு சீமோனின் செயல்களை யூதர்கள் பதிவு செய்தனர். இந்த ஏடு எலூல் மாதம், 18-ஆம் தேதியைக் குறிக்கிறது (1 மக் 14:27).

எலோகிம் (ELOHIM)

கடவுளைக் குறிக்கக்கூடிய ஒரு பொதுச் சொல். பழைய ஏற்பாட்டில் மாட்சிமையில் விளங்கக் கூடிய இறைவன் அல்லது தெய்வத்தைக் குறிப்பதற்கு இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது பன்மையில் (நாமே) இருப்பதால் பல கடவுளர் கொள்கையைப் பிரதிபலிப்பதுபோல் இருக்கும் (நீதி 9:13).

மற்றக் கடவுளரைக் காட்டிலும் யாவே தான் உயர்ந்த இறைவன் (யாத் 18:11; 12:12; 20:3; உப 10:7; 1 சாமு 4:8; 2 சாமு 7:23; சங் 6:8). எலோகிம் என்ற சொல்லானது இறைவனின் முழுமைத்தன்மையை உள்ளடக்குகிறது. பன்மையில் ஒருமைத் தன்மையைக் காட்டுகிறது. எலோகிம் என்ற சொல் ஏல் என்ற மூலச் சொல்லோடு தொடர்புடையதாக இருக்கிறது.

'ஏல்' என்ற சொல் பொதுவாக முடிவில்லாத தன்மையுடைய இறைவனைக் குறிக்கக்கூடியது. இந்தச் சொல்லை ஒவ்வொரு தனிப்பட்ட செயலுக்கு, செயலைச் செய்கின்ற சக்தியுடைய கடவுளுக்கு முன்பாகச் சேர்த்துச் சொல்லும் பொழுது அந்தத் தனிப்பட்ட தெய்வ சக்தியைக் குறிப்பதாக உள்ளது. ஒவ்வொரு மரபிலும் தனித்தனி பெயர் கொண்டு வணங்கி வந்திருக்கிறார்கள். எலியா ''என்னுடைய 'ஏல்' யாவே'' என்று குறிப்பிடுகின்றார்.

இஸ்ராயேல் மக்களுக்கு யாவே என்பது பல தெய்வங்களில் ஒன்று அன்று. மாறாக யாவே தான் முழுமுதற் கடவுள். இயற்கையின் கடவுளும், வரலாற்றின் காரணமுமாக மனிதனை வழிநடத்துகிறவர். பழைய ஏற்பாட்டின் கருத்துப்படி மற்ற எல்லாத் தெய்வங்களுக்கும் இருக்கிற அனைத்து சக்தியும் யாவேக்கு உண்டு. 'யாவே தான் எலோகிம்' என்ற உறுதிப்பாடு இருந்தது. அவரே இறைவன் என்ற நிலை வலியுறுத்தப்பட்டது. அவரைத் தவிர வேறு இறைவன் இல்லை.

படைத்தவர் தம்முடைய படைப்பின் மேலும், வரலாற்றின் மேலும் அதிகாரமுள்ளவராக இருக்கின்றார் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. படைப்பின் வரலாற்றில் மூன்று பிரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

1. படைப்பு முதல் நோவா காலம் வரையிலும் 'எலோகிம்' தான் இறைவன். அவரைத் தவிர வேறுயாரும் கடவுள் இல்லை. (எலோகிம் என்று தனிப்பெயர் யாவேக்குச் சூட்டினார்).

2. நோவா முதல் ஆபிரகாம் காலம் வரையிலும் 'யாவே எலோகிம்' என்றழைத்தனர் (ஆண்டவராகிய இறைவன்).

3. ஆபிரகாம் முதல் மோசே காலம் வரையிலும், ''யாவேதான் எலோகிம்'' என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. (அவரே அனைத்துக் காலத்திற்கும் இறைவனாக இருக்கின்றார் என்று சொல்லப்பட்டது.

எலோகியர் (ELOHIST)

ஐந்நூலின் எலோகிம் பாரம்பரியத்தின் ஆசிரியர் 'எலோகியர்' என்று அழைக்கப்படுகின்றனர். இந்தப் பாரம்பரியம் வடக்கு அரசாட்சியோடு சம்பந்தப்பட்டது. ஐந்நூலை விவரிக்கின்ற முதன்மையான மூலங்களுள் இதுவும் ஒன்று. எபிரேய மொழியில் இறைவனைக் குறிக்கின்ற எலோகிம் பொதுப் பெயரிலிருந்து இது எடுக்கப்பட்டிருக்கிறது. எலோகியர் மரபினர் கடவுளை 'எலோகிம்' என்று குறிப்பிட்டனர்.

எலோயி, எலோயி லாம சபக்தானி (ELOI, ELOI LAMA SABACHTHANI)

காண்க. ஏலி ஏலி லாமா சபக்தானி.

எலோவா (ELOAH)

இறைவனைக் குறிக்க யோபு நூலில் சிறப்பாகப் பயன்படும் சொல். சிலர் எலோவா

என்பது எலோகிம் என்ற சொல்லின் ஒருமை விளிச் சொல்லாகும் என்று கூறுவர். இந்தச் சொல் நாற்பத்து இரண்டு முறை யோபு நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோபு புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டது தவிர மற்ற எல்லாப் புத்தகங்களிலும் ஏறத்தாழ எலோகிம் (சங் 50:22-23) என்ற பொருளோடு அல்லது யாவே (சங் 139:19; 114:7) என்ற பொருளோடு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற நூல்களில் 15 முறையே இச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (உப 32:15.17; சங் 18:31; பழ 30:5; ஏச 44:8; அப 1:11)

எல்கனான் (ELHANAN - இறைவன் கருணையுள்ளவர்)

1. எல்கனான் யாயிரின் மகன் கோபில் ஒரு பெலிஸ்திய அசுரனை வெட்டி வீழ்த்தியவர் (2 சாமு 21:19;1 நாள் 20:5). எல்கனானுடைய வெற்றிச் செயலுக்கு இரு வேறுபட்ட விளக்கங்கள் காணக்கிடக்கின்றன. ''எல்கனான் பெத்திலகேம் ஊரைச் சேர்ந்த யாரே-ஓரகீமின் மகன். எல்கனான், கோலியாத்தை வெட்டி வீழ்த்தியவர் என்று 2 சாமு 21:19 என்ற பகுதி தெரிவிக்கிறது. ஆனால் 1 நாள் 20:5 பகுதி ''யாயீரின் மகன் எல்கனான், கோலியாத்தின் சகோதரன் இலகுமியை வெட்டிக் கொன்றவர்'' என்று கூறுகிறது.

யாரே-ஓரகிம் என்ற பெயர் யாயிர் என்ற பெயரின் சிதைந்த வடிவோடு அடுத்தவரியில் வரும் ஓரகிம் என்ற சொல்லைத் தவறாக எடுத்துச் சேர்த்து அமைக்கப்பட்ட சொல்லாகும் என்று பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது மூல மொழியிலிருந்து நகல் எடுத்தபோது யாயிருடன் ஓரகிம் சேர்க்கப்பட்டதால் ஏற்பட்ட தவறாகும். 2 சாமு 21:19 மேற்கூறப்பட்ட திருத்தத்தோடு மூலமொழியை அப்படியே தருகையிலே 1 நாள் 20:5 ஒத்தமை திருத்தத்தைத் தன்னுள் கொண்டிருக்கிறது. தாவீது கொன்ற பிலிஸ்திய் வீரனைப் பெயர் தெரியாதவன் என்றும், பிற்காலப் பதிப்பாசிரியர் எல்கனான் கொன்ற அசுரனின் பெயரான கோலியாத்தை 1 சாமு 17:21:9-இல் புகுத்தினார் என்றும் அறிஞர் பலர் நம்புகின்றனர். ப்ழைய விரிவுரையாளர்கள் 1 நாள் 20:5 பகுதி கூறுவதுதான் மூலப்பகுதி என்று வாதிடுவர்.

2. தாவீதின் ஆற்றல் மிக்க முப்பது படைவீரர்களில் ஒருவனும் பெத்திலகேமைச் சார்ந்த தோதாவின் மகனுமாவார் (2 சாமு 23:24; 1 நாள் 11:26) அறிஞர் சிலர் கூறுவது போல், (1)-இல் வருபவரே இவர் என்றால் இவர் யாயிர் இனத்தைச் சேர்ந்தவராவார்.

எல்கானா (ELKANAH - இறைவன் படைத்தார், உடைமையாக்கிக் கொண்டார்)

1. சாமுவேலின் தந்தை. எரோகாமின் மகன்.எப்பிராயிம் மலைப்பகுதியில் சிராமத்தாயிம் சோபிமில் வாழ்ந்தவர் (1 சாமு 1:1,4,6,19,21,23; 2:11,20; 1 நாள் 6:27, 54). இவருக்குப் பென்னின்னா, அன்னா என்று இருமனைவியர் இருந்தனர். பென்னின்னா இவருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள். அன்னா மலடியாக இருந்தாள். ஆனால் இவருக்குப் பிரியமானவள். இறுதியில் அவளும் ஒரு மகனைப் பெற்றாள். எல்கானா அவளோடு சிலோவுக்குச் சென்று அவர்களது பிள்ளை சாமுவேலை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தனர்.

முதல் சாமுவேல்நூல் எல்கானா எப்பிராயிம் கோத்திரத்தார் என்று கூறுகிறது. ஆனால் 1 நாள் ஆகமம் அவரையும் சாமுவேலையும் கெகாத்து லேவியன் வழிவந்தவர் என்று குறிப்பிடுகிறது. நாள் ஆகம ஆசிரியர் 1 நாள் 6-ஆம் அதிகாரத்தில் அதிகமாகக் காணப்படும் எல்கானா என்ற பெயர்களால் குழம்பிப்போய் நேர்மையான முறையில் இத்தவறைச் செய்திருக்கலாம். ஆனால் பெரும்பாலும் அவருடைய சொந்த நோக்கத்திற்காக அறிந்தே இந்த மாற்றத்தைச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

2-4. மூன்று லேவியர்களுடைய பெயர் (1 நாள் 6:22-23.25-27.35-36). யாத் 6:24 என்ற பகுதி ஆசிர், எல்கானா, எபியசாபு ஆகியோரைச் சகோதரர்களாகவும் கோராகின் புதல்வர்களாகவும் குறிப்பிடுகிறது. ஆனால்

1 நாள் 6:22-23 அவர்களைத் தந்தை, மகன், பேரன் என்ற உறவு முறையில் குறிப்பிடுகிறது.

5. லேவியர்களுடைய பெயர் அட்டவணையில் காணப்படும் ஒரு பெயர் (1 நாள் 9:16). மெராரி வழிவந்த லேவியர் பெரக்கியாவின் தாத்தா.

6. சிக்கிலாது என்னுமிடத்தில் தாவீது இருந்த போது சவுலைக் கைவிட்டுவிட்டுத் தாவீது பக்கம் சேர்ந்துகொண்ட பென்யாமின் குலத்தைச் சார்ந்த படைவீரன் (1 நாள் 12:6). கோராகியர் என்ற சிறப்புப் பெயரால் எல்கானவை அழைத்திருப்பது லேவியர் குடும்பத்திலிருந்து வந்தவர் என்று சுட்டிக் காட்டுவதைவிட, கோராகு நகரத்திலிருந்து வந்தவர் என்பதைத்தான் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருக்க வேண்டும் (1 நாள் 2:43). 1 சாமு 23-ஓடு ஒப்பிடும்போது 1 நாள் 12-ஆம் அதிகாரம் முழுவதும் பெரிய கற்பனையில் மிகைப்படுத்தப்படுவதாகவும் இருப்பதால் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க முடியும் என்பது இயலாது.

7. ஆகாசின் ஆட்சியில் அரசனுக்கு அடுத்த நிலையில் இருந்த ஓர் அதிகாரி. நாட்டையே உலுக்கிய ஒரு கொலையில் இவர் கொன்று போடப்பட்டதாக நாளாகம நூல் கூறுகிறது (2 நாள் 28:7). இஸ்ராயேலும் சீரியாவும் சேர்ந்து யூதாவின் அரசன் ஆகாசைத் தோற்கடித்தபின் இவர் எப்பிராயிமைச் சேர்ந்த சிக்ரீயால் கொல்லப்பட்டார்.

8. ஆண்டவருடைய பேழையைக் காத்து வந்த லேவிய வாயிற்காப்போன் (1 நாள் 15:23). இவரும் 5-இல் குறிக்கப்பட்டவரும் ஒருவராக இருக்கலாம்.

எல்கியா (ELKIAH)

யூதித்தின் முன்னோர். அன்னியாவின் புதல்வன். ஓசியேலின் தந்தை (யூதி 8:1).

எல்கோசு (ELKOSH - இறைவன் என் அம்பாவார்)

இறைவாக்கினர் நாகூம் என்பவரின் ஊர். இந்த இடம் எங்கிருந்தது என்று உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. இது பற்றிப் பல்வேறு பாரம்பரியங்கள் உண்டு. இறைவாக்கினர் நாகூம் பிறந்து வாழ்ந்து மரித்த இடம் இக்கால மோசூலில் (பழங்கால நினிவேயின் சிதைவுகளுக்கு அருகில்) இருந்து வடக்கில் 80 கி.மீ. தொலைவிலுள்ள ''அல்-காஸ்'' என்று இடைக்காலக் கிழக்கு மரபு எடுத்துரைக்கிறது. பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்னதாக இந்த மரபின்படி எந்தக் குறிப்பும் இல்லை. அதோடு நாகூம் நூலின் அகச்சான்றுகளும் இதற்கு ஆதரவாக இல்லை.

நாகூமைப் பற்றி எரோனிமு கொடுக்கின்ற விவிலிய விளக்க அறிமுகத்தில் அவர் கலிலேயாவிலுள்ள கில்கேசி என்ற ஊருக்குச் சென்றதாகக் குறிப்பிடுகின்றார். அக்கால மரபுகள் கில்கேசிதான் நாகூமின் சொந்த ஊர் என்று குறிப்பிடுவதாகக் கூறுகிறார். நாகூமின் ஊர் கப்பர்நாகூமாக இருக்கலாம் என்று பிற்கால கலிலேய மரபு எடுத்துச் சொல்லுகிறது. ஆனால் நாகூம் நூல் தோன்றுவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே, கலிலேயா அசீரியர்களுக்கு வீழ்ச்சியுற்றது. ஆகவே கலிலேயாவில் இடம் தேடுவதற்கும் ஆதாரம் இல்லை. இன்னும் சில மரபுகள் எல்கோசு என்பது சிமியோனியப் பகுதியில் அதாவது தென் யூதாவில் இருந்ததாகக் கூறுகின்றன. மேலும் போலி-எப்பிபானியு என்பவர் எல்கோசு என்னுமிடம் சீரியன் பெக்காபாஞ்ருக்கு அருகில் உள்ளது என்கிறார். அது இப்பொழுது பெயிட்-இப்பரின் என்றழைக்கப்படுகிறது. இவற்றில் எல்லாம் சரியான இடத்தைத் தெளிவாக அறியாவிட்டாலும் கால, சூழ்நிலை அமைப்புகள் ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது.

எல்நாத்தான் (ELNATHAN இறைவன் கொடுத்தார்)

1. எல்நாத்தான் எருசலேமைச் சேர்ந்தவர். ஆகிபோரின் மகன் (எரே 36:12). எல்நாத்தானுக்கு நெகுசித்த என்ற மகள் ஒருத்தி உண்டு. இவர் யோயாக்கீமின் மனைவியும் யோயாக்கினின் தாயுமாவாள் (2 அர 24:8). எரேமியாலின் அருள் யோயாக்கிமுக்கு

வாசித்துக்காட்டப்பட்டபோது அதை அவன் எரிப்பதைத் தடைசெய்ய முயற்சித்தவர்களுள் எல்நாத்தானும் ஒருவர் (எரே 36:12).

எகிப்துக்கு ஒடிப்போன இறைவாக்கினர் உரியாவைப் பிடித்து வந்து தன்முன் வெட்டிக் கொல்ல யோயாக்கிமால் அனுப்பப்பட்டவர்களில் எல்நாத்தானும் ஒருவர் (எரே 26:22-23).

2. மோசேரெட்டி வாசகம் எஸ் 8:16-இல் ஞானியான எல்நாத்தானைக் குறிப்பிடுகிறது. இவர் அகதிகளோடு எருசலேமுக்குத் திரும்பியவர்.

எல்மாதம் (ELMADAM)

இயேசுவின் மூதாதையர்களில் ஒருவர். இவர் ஏர் என்பவரின் மகனாவார். எல்மாதமுக்குக் கோசாம் என்ற மகன் ஒருவர் உண்டு (லூக் 3:28).

எல்லாசர் (ELLASAR - ஒக்)

இது ஆதி 14-இல் வரும் ஆபிரகாமின் மரபில் ஒரு நாடு என்றும், அதன் அரசன் அரியோக்கு என்றும் குறிப்பிடப்படுகிறது. இதன்படி இது மெசபொத்தாமியாவின் ஒரு நகரமாகும். அதன் அரசன் அரியோக்கு கெதர்லா-கோமோரின் கூட்டாளிகளில் ஒருவர் ஆவார் (ஆதி 14:1.9). ஆனால் வரலாற்றுப் பூர்வமாக எல்லாசருக்கும், அரியோக்குக்கும், ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில், அரசனோடு அல்லது ஒரு நாட்டோடு அடையாளம் காண முடியவில்லை. தென் பாபிலோனிய லார்சா நாட்டையும் அதன் அரசரான வாரத்-சின்னையும் அடையாளம் காட்டுவது கைவிடப்பட்டுவிட்டது.

ஆய்வாளர் சிலர், அரசனை மாரியின் சிம்ரீ-லீமின் சிற்றரசனான அரீவாக்கோடும் நகரத்தை யூப்பிரத்திசில் கார்கேமிசுக்கும் ஆரானுக்கும் இடையிலுள்ளதாகவும் அடையாளம் காட்டுகின்றனர்.

எல்லாம் வல்லவர் (ALMIGHTY)

இது பழைய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. சிறப்பாக யோபு ஆகமத்தில் இது அதிகமாகக் காணப்படுகிறது.

முதலில் இச்சொல் ஏல் சத்தாய் அதாவது மலைகளின் இறைவன் என்பதையே குறித்தது. இந்த மலைகளின் அல்லது குன்றுகளின் இறைவனைத்தான் பிதாபிதாக்களின் காலத்தில் வழிபட்டுவந்தனர் (ஆதி 7:1; 28:3; 35:1; 43:14; 48:3; 49:25). மோசே காலத்திலிருந்து தான் இறைவன் யாவே என்ற பெயரில் வழிபடப்பட்டார் என்று நாம் யாத் 6:2-3-இல் வாசிக்கிறோம்.

காலப்போக்கில் ஏல் சத்தாய் என்ற பெயர் யாவே என்ற பெயரின் பொருளில் மறுவிளக்கம் பெற்றது (ரூத் 1:20-21; சங் 68:14; 90:1; எச 1:24; 10:5). யோபு நூலில் மட்டும் தான் இறைவனின் வல்லமையையும் மாட்சிமையையும் வலியுறுத்த இது பயன்படுகிறது.

புதிய ஏற்பாட்டில், ''எல்லாம் வல்லவர்'' என்ற சொல் 2 கொரி 6:18-இல் வரும். எடுத்துக்காட்டைத்தவிர பெரும்பாலும் திருவெளிப்பாட்டு நூலில் காணப்படுகிறது (திருவெளி 1:8; 4:8; 21:22).

எல்லைக்குறி (LAND MARK)

மேற்கத்திய நாடுகளில் அன்று நிலங்கள், சிற்றரசுகள், நாடுகள் இவற்றின் எல்லைகளைக் குறிக்கக் கற்கள் ஊன்றப்பட்டன (ஆதி 31:51-52). மெசபொத்தாமியா, எகிப்து ஆகிய நாடுகளில் இக்கற்களில் ஏராளமாக எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருந்தன. பாலஸ்தீனத்தில் ஒரு சில சொற்களாவது பொறிக்கப்பட்டிருந்தன. எனவே இத்தகைய எல்லையைக் குறித்துக்காட்டும் கற்களை நீக்குவது பெருங்குற்றமாகும். பாபிலோனிய, கிரேக்க, உரோமைச சட்டங்களில் குறிகல்லை நீக்குவது பெருங்குற்றமெனத் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. உபஆகமம் எல்லைக்குறிகற்களை நீக்கக் கூடாது என இருமுறை வலியுறுத்திக் கூறுகிறது (உப 19:14; 27:17). இக்குற்றம் பழைய மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் மாற்றிவைக்கும் குற்றமாகக் கருதப்பட்டது (பழ 22:28;

23:10; யோபு 24:2). கும்ரான் குழுவின் பிழை செய்வோர் எல்லைக்குறிகற்களை நீக்குவோர் எனக் கூறப்பட்டனர்.

எல்னாம் (ELNAAM - இறைவன் இன்பமானவர்)

தாவீதின் வல்ல வீரர்கள் எரிபாய், யோசவியா ஆகியோரின் தந்தை (1 நாள் 11:46). எழுபது நூல், எல்னாம் ஒரு வீரர் என்று குறிப்பிடுகிறது.

எவில் மெரோதாக்கு (EVIL - MERODACH - மார்தாக்கின் மனிதன்)

பாபிலோனிய அரசன் (கி.பி. 562-560). நெபுக்கதுனேசாரின் புதல்வன். பாபிலோனிய நாட்குறிப்பு ஏடுகளில் இவர் ஆண்ட இருவருட ஆட்சியைப் பற்றி எதுவும் குறிப்பிடாததால் இந்த அரசனின் ஆட்சிக்காலத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. அரசாட்சியைக் கைப்பற்ற ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பத்தில் அவருடைய மைத்துனன் அவருக்குப் பிறகு ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றினார். அவர் பெயர் நெரிகிலிசார். 'நபோனிதஸ்' அவருடைய முன்னோர்களான நெபுக்கதுனேசாரையும், நெரிகிலிசாரையும் குறிப்பிடும் போது ஈவில்-மெரோதாக்கைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் விட்டுவிடுகிறார்.

நாடுகடத்தப்பட்ட, யூதாவின் அரசன் யோயாக்கினைச் சிறையிலிருந்து, இவர் விடுவித்துப், பாபிலோனில் அவரை மதிப்போடு நடத்தியதாகக் கூறப்படுகிறது (2 அர 25:27-30; எரே 52:31-34) இதற்குப் பாபிலோனிய ஏடுகளும் சான்று கூறுகின்றன.

எவோதியசின் மறையுரை (HOMILY OF EVODIUS)

கன்னியின் விண்ணேற்பினைப் பற்றி, கோப்டிக் மொழியில் எழுதப்பட்ட ஒரு போலி நூலாகும். அந்தியோக்கின் ஆயரான எவோதியு, உரோமைத் திருச்சபையில் பேதுருவின் வாரிசாகினார் என்றும், இவர் 72 சீடர்களில் ஒருவர் என்றும், எவோதியு, மரியாளின் இறப்பு, விண்ணேற்புக்கு நேரடிச் சாட்சியம் ஆவார் என்றும் இந்நூல் கூறுகிறது.

எழுதப்பட்ட நூல்கள் (WRITING)

1. எழுத்துத் துறையில் வரும் செலவு:-

பாபிலோனியா, எகிப்து ஆகிய நாடுகளிலே எழுதத் தேவையான மூலப் பொருட்கள் மிகவும் விலை உயர்ந்தவை; பருமனானவை. எழுதும் முறையோ மிகவும் சிக்கலானது. எனவே வெகு சிலரே இப்பணியில் முனைந்தனர். எழுத்துப் பணி பொதுவாக எழுத்தர்களால் வளர்க்கப்பட்டது. எழுதும் முறை நெபோ, தொவுத்து போன்ற தெய்வங்களின் கண்டுபிடிப்பு என அந்நாடுகள் கருதின. எழுத்துப்பணியில் பல நுணுக்கங்களை அறிந்து கொள்வது உலக விதி நிர்ணயிக்கப்படும் மறைபொருள் மிக்க பகுதியில் நுழைவது போலாகும். அசீரியா நாட்டின் சில மன்னர்கள் தாம் இத்துறையில் நுழைந்த தன் பயனாகத் தங்களுக்குப்பேறும் புகழும் பெற்றனர். சிறுவர் நமது காலத்தில் கூட, இளம் வயதிலே எழுதக் கற்றுக் கொள்ளும் போது புதியதோர் உலகில் நுழைகின்றனர். சிறந்த எழுத்தாளர்களாக இருப்பின் அவர்களுக்கு நல்ல எதிர்காலமும் வாழ்வில் முன்னேறும் வாய்ப்பும் இருப்பதைக் காண்கின்றோம்.

அன்று பாலஸ்தீன நாட்டிலே, சீனாய், பெனிக்கியாப் பகுதிகளிலே மனிதனின் அறிவுத் திறமையால் எழுத்துத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டது. அதிலே இஸ்ராயேல் நாடும் தனது வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே எல்லாரும் எளிதில் எழுதக் கூடிய ஒரு எழுத்து முறையைக் கண்டது. இதனால்தான் பழம் கலாச்சாரம் கொண்ட நாடுகளான எகிப்து, மெசபொத்தாமியா ஆகிய நாடுகளையும் விட முன்னணியில் நிற்கும் தகுதி பெற்று விளங்கியது.

தாவீதின் காலத்திற்கு முன்பே கிதயோன் நாட்களில் சுக்கோத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் தம் ஊரின் மூப்பர்களின் பெயர்களை எழுதும் நிலையில் இருந்தான் (நீதி 8:14). பண்டை நாட்களிலிருந்தே, பரவலாக

இல்லாவிடினும், இஸ்ராயேலில் எழுத்துப் பணி ஓரளவு பரவி இருந்தது. அதன் சமயத்தில் இது அவசியமான ஏதுவாக இருந்தது. சாமுவேல் தமது காலத்தில் தமது அரச சட்டத்தை மக்களுக்கு வெளிப்படுத்தி அதை எழுதி வைத்தார் *(1 சாமு 10:25)*. யோசுவா செக்கேமில் செய்த உடன்படிக்கையை இவ்வாறே எழுதி வைத்தார் *(யோசு 24:26)*. இதைப் போலவே சீனாய்மலையில் கொடுக்கப்பட்ட நீதிச் சட்டங்களும் மோசேயால் எழுதிவைக்கப்பட்டன *(யாத் 24:4)*. அமலேக்குமீது கொண்ட வெற்றியும் என்றும் அனைவரின் நினைவிலும் நிற்கும்படி எழுதி வைக்கப்பட்டது *(17:14)*. சாமுவேல் காலத்திற்கு முன்னரே எழுத்து வடிவம் பெற்ற இவற்றில் கால, இட முரண்பாடுகள் எதுவுமில்லை.

2. எழுத்தின் மதிப்பு:-

இயேசுவின் சிலுவைமீது வைக்கப்பட்டிருந்த அறிக்கையைக் கண்ட தலைமைக் குருக்கள், பிலாத்துவிடம் முறையிட அதற்கு அவர் ''நான் எழுதியது எழுதியதுதான்'' *(யோவா 19:22)* என்று உறுதியுடன் கூறுகின்றார். அவரது இச்செயலிலே உரோமையர், யூதர், ஏன் நற்செய்தியாளருமே, ஒரு உண்மையை உணர்த்துகின்றனர். அதாவது எழுத்து வடிவம் பெற்ற எதையும் சுலபமாக மாற்ற இயலாது என்பதே. இப்பண்பு ஒருவரின் சொல்லுக்கு மிகவும் சிறப்பிடம் அளிக்கின்றது. இதே அடிப்படையில்தான் இறைவனின் திருவாக்கும் மாறாது, என்றும் நிலைக்குத் தன்மை கொண்டுள்ளது *(சங் 119:89)*. திருவாக்கைத் திருத்தி அமைப்பவருக்குப் பெருந்துன்பம் விளைகின்றது *(திருவெளி 22:18....)*. இவ்வாக்கைப் பயனற்றதாக்க எண்ணி அழிக்க முயலுபவன் தன்னையே அறிவிலியாக்கிக் கொள்கின்றான் *(எரே 36:23)*.

''கசப்பான தண்ணீர்'' குடிக்கும் சடங்கு *(எண் 5:23)* மற்றச் சோதனை முறைகளோடு ஒப்பிடும்போது பெரிய முன்னேற்றமானதாயிருந்தாலும், அடிப்படையிலே அக்கால மக்களின் மனத்தை நன்கு பிரதிபலிக்கின்றது. இதைப்போன்றே ஆண்டவரின் கட்டளைகளை என்றும் நினைவில் கொள்ளும்படியாக வாயிற்படிகளிலும் கதவின் நிலைகளிலும் எழுதுவது *(உப 6:9; 11:20)*, அரசன் அரியணை ஏறும்போது அவருக்குக் கொடுக்கப்படும் சட்ட நூலின்மேலும் *(17:18)*, பெரியகுருவின் நெற்றிப்பட்டத்தின்மேலும் *(யாத் 39:30)* இறைவார்த்தைகளை எழுதுவது ஆகிய இவையனைத்தும் கடவுளின் திருவாக்கு இஸ்ராயேல்மேல் கொண்டுள்ள மேலாண்மையையும் யாவேயின் திருவுளத்தின் மாற்ற முடியாத தன்மையையும் மிகத் தூய்மையான முறையில் எடுத்துக் காட்டுகின்றன.

இறைவன் தமக்கு மொழிந்த திருவாக்குகளைச் செவ்வனே எழுதிவைப்பது இறைவாக்கினரின் பணியெனக் கருதப்பட்டது. எதிர்காலத்தைக் கணித்துக்கூறும் எழுத்து வடிவம் பெற்ற சொல் மாற்றம் அடைய முடியாதது, உயரிய மதிப்புடையது என்று கீழ்த்திசை மக்கள் கொள்கின்றனர். கடவுளிடமிருந்து இறைவாக்கைப் பெறுகின்றோம் என்று இறைவாக்கினர் உணர்ந்திருப்பினும், அதை எழுதிக் காப்பதும் அவரது ஆணையால்தான் என்று உறுதியுடன் கூறுகின்றார் *(ஏச 8:1; எரே 36:1-4; அப 2:2; திருவெளி 14:13; 19:9)*. இதனால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட வாக்கின்படி நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது *(ஏச 8:16)*, இறைவன்தான் இவற்றை அறிவித்தார் *(41:26)* என்பது தெளிவாகின்றது.

3. புனித நூல்கள்:-

கடவுளின் செயல் திட்டத்தை எடுத்துக்காட்டும் ஏடாகவும் அவரது வாக்குறுதிகளையும் கட்டளைகளையும் தெரிவுபடுத்துவனவாயுமிருப்பதால், இறைவனின் வார்த்தையை அதிகாரபூர்வமாக எழுதுவது திருப்பணிகளில் ஒன்றாகும். அவை புனித நூல்களாகும். திருநூல்கள் என்ற இச்சொல் பழைய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை. ஆனால் திருச்சட்டங்கள் எழுதப்பெற்ற கற்பலகைகள் *(யாத் 24:12)* கடவுளது கைகளால் எழுதப்பட்டவை *(31:18)* யாதலால் புனித

மும் மேன்மையும் கொண்டவை என்று எண்ணப்பட்டன.

புதிய ஏற்பாடு சில சமயங்களில் திருநூல்கள் என்று ராபிகளின் சொல்லைக் கையாளுகின்றது (உரோ 1:2; காண் ''மறைநூல்கள்'' - 2 திமோ 3:15). எனினும் பொதுவாக மறைநூல்கள் அல்லது மறைநூல் என்று குறிப்பிட்ட ஒரு வாசகத்தைக் குறிக்கவோ (மாற் 12:10; லூக் 4:21) பழைய ஏற்பாடு முழுவதையும் சுட்டிக்காட்டவோ-இச்சொல்லைக் கையாளுகின்றது (யோவா 2:22; 10:35; அ.ப. 8:32; கலா 3:22). மறைநூலில் பல இடங்களில் ''இவ்வாறு எழுதப்பட்டுள்ளது'' என்ற வாசகம் காணக்கிடக்கின்றது. இது கடவுளைத் தான் குறிக்கின்றது; அவரது புனிதத் தன்மை, அனைத்தையும் கூர்ந்து நோக்கும் தன்மை, நெறி பிறழாத அவரது வாக்குறுதி இவை அனைத்தையும் காட்டுகின்றது.

4. மறைநூல் நிறைவேறல்:-

''என்னைப் பற்றி எழுதப்பட்டனவெலாம் நிறைவேற வேண்டும்'' (லூக் 24:44); மறைநூல்களில் உள்ளன நிறைவேற வேண்டும் (காண் மத் 26:54); கடவுளின் வாக்கு வீணாவதில்லை (எச 6:10); அவரது மறைநூல் ஒழிந்து போவதில்லை (யோவா 10:35) என்ற இவை போன்ற உண்மைகள் மறைநூலில் உள்ளன. ஒரு சமயத்தில் இயேசு மணல் மீது விரலால் எழுதிக்கொண்டிருந்ததாக (யோவா 8:6) நற்செய்தி கூறுகின்றது. இயேசு எந்த நூலும் எழுதிவைத்துச் செல்லவில்லை; ஆனால் மறைநூலின் மேன்மையையும் தனிச்சிறப்பையும் நன்கு எடுத்துரைத்துள்ளார். அவரது கூற்றுப்படித் திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தோ புள்ளியோ ஒழிந்து போகாது (மத் 5:18); அனைத்தும் நிலைத்திருக்கும் என்றும் உறுதியுடன் மொழிந்துள்ளார்.

திருச்சட்டம் நிறைவேறுவதுதான் அது நிலைத்திருக்கும் என்று கூறுவதன் பொருளாகும். திருமறை நூலிலே இறைவனின் திருவாக்கு என்றும் உயிரூட்டும் வலிமையுடன் பிரசன்னமாயிருக்கின்றது. அதே வேளையில், சில ஒழிந்து மறைந்து போகக் கூடிய அம்சங்களும் இன்னும் இருக்கலாம். உயிரளிக்கும் ஆவியானவர் ஒருவர் உள்ளார். சாவு விளைவிக்கக் கூடிய சட்டத்தின் எழுத்தும் உண்டு (2 கொரி 3:6). மறைநூலின் எழுத்தைப் படிக்குந்தோறும், நம்மில் உள்ள திரையாம் இருளைப் போக்கி, மறைநூல் எழுத்தில் பொதிந்துள்ள ஆவியானவரை நாம் கண்டுணர இயேசு வகை செய்கின்றார் (3:14). மறைநூலில் கிறிஸ்துவைக் காண்கின்றவன், முடிவிலா வாழ்வைப் பெறுகின்றான் (யோவா 5:39). ஆனால் இயேசு வார்த்தைகளில் விசுவாசங்கொள்ள மறுப்பவர்கள் மோசேயை விசுவசிப்பதாக எண்ணினால், மோசேயையும் அவர்கள் விசுவசிப்பதில்லை. ஏனென்றால் மோசே கிறிஸ்துவைப் பற்றித்தான் எழுதினார் (5:45....).

5. இதயத்தில் எழுதியுள்ள திருச்சட்டம்:-

புதிய உடன்படிக்கையானது மறைநூலின் வெறும் எழுத்துக்களில் அடங்கியதல்ல. ஆனால் ஆவியானவரால் ஒவ்வொருவனின் இதயத்திலும் எழுதப்பட்டுள்ளது (எரே 1:33). இவ்வாறு ஆவியால் இதயத்தில் எழுதப்பட்ட சட்டப்படி அவர்கள் நடப்பார்கள் (எச 36:27; ஏச 54:13; யோவா 6:45). இருப்பினும் புதிய ஏற்பாடு வேறு பிற நூல்களைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. இவற்றிலும் அதே இறைவனின் அதிகாரத்தைக் கண்டு, இவற்றையும் திருச்சபை திருமறை நூல் தொகுப்பில் சேர்த்துள்ளது (காண் 2 பேதுரு 3:16). இறைவனின் அதே வார்த்தையும், அதே ஆவியானவரும் இம்மறை நூலில் உள்ளனர் (காண் லூக் 1:2). சிறப்பாக, இம்மறைநூல்கள் இஸ்ராயேலின் மறைநூல் மரபில் உள்ளன. அவற்றின் பொருட்செறிவையும் உட் கருத்தையும் நமக்கு நன்கு விளக்குகின்றன. எனவே பழைய ஏற்பாடு இல்லையேல், புதிய ஏற்பாட்டு வாசகங்கள் நமக்குப் புரியவொன்னாதவையாயிருக்கும். அதைப் போன்றே, புதிய ஏற்பாடன்றிப் பழைய ஏற்பாடு வெறும் பழங்கதைகளாயும் உயிரற்ற எழுத்தாயும் பயனற்ற வாக்குறுதிகள் கொண்டதாயும் விளங்கும்.

புதிய உடன்படிக்கையில் இன்னும் பல நூல்கள் உண்டு. காலச் சூழ்நிலை அவற்றை ஒழித்து விடவில்லை. வருங்கால மக்கள் மனத்திலே இயேசுவின் மறையுண்மையை நிலைநிறுத்த இவை இன்றியமையாதவை. சிறிது சிறிதாக அலசிப்பார்த்து ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்க்க வேண்டிய நூலல்ல திருமறைநூல். அவையனைத்தும் ஒரே தொகுப்பாக ஒருமைப்பாட்டுடன் ஒரே மறைபொருளைச் சுட்டிக் காட்டுபவையாகக் கொளல் வேண்டும். அம்மறை பொருள் தான், கிறிஸ்துவே, ஆல்பாவும் ஓமேகாவும், தொடக்கமும் முடிவும் என்பதாம்.

எழுதுகோல் (PEN)

எழுதுகோல் விவிலியத்தில் எழுதுவதற்குப் பயன்படும் பல கருவிகளைக் குறிக்கின்றது. இது இரும்பு எழுத்தாணியையும் (யோபு 19:24; எரே 17:1) 38 முனை நன்கு தேய்க்கப்பட்டிருக்கும் தூரிகையையும் பிளவுப்பட்ட கூரிய முனையையுடைய கருவியையும் (3 யோவா 13), உருக்கிய கன்றுக்குட்டி செய்யப் பயன்பட்ட கருவியையும் (யாத் 32:4), மரத்தில் குறியிட உதவும் ஆணியையும் (ஏச 44:13), வைரத்துண்டு முனையுடன் கூடிய ஆணியையும் (யோபு 19:24) குறிக்கலாம்.

எழுத்தர், மறைநூல் அறிஞர், சட்டவல்லுநர் (SCRIBE)

இவர்கள் நாடு கடத்தலுக்குப்பின் திருச்சட்டத்தை விளக்குவதையும் போதிப்பதையும் தங்கள் தொழிலாகக் கொண்டவர்கள்.

1. வார்த்தையின் பொருள்:- எரே 36:26-இல் நிலப்பத்திரம் போன்ற அரசாங்க ஆவணங்களைக் (எரெ 32:12-15) கவனிப்பவரையும் அரசனுடைய அரண்மனையில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தவரையும் (2 அர 18:18; எரே 36:12) குறிக்கும். 2 அர 22:3-இல் எழுத்தராகிய சாப்பான் பொருளாதார அமைச்சராகவும், பின் எசக்கியாவின் ஆட்சிக்காலத்தில் செபினா என்னும் மறைநூல் எழுத்தர் அரச செயலராக இருந்ததாகவும் கருதப்படுகிறது (ஏச 36:3; 22:15 தொ). இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் நாடு கடத்தப்படுமுன் இச்சொல் ஒரு சாதாரண உலக அலுவலைக் குறித்தது.

எழுதும் கலையில் வளர்ச்சி பெற்றிருந்த மற்றொரு வகுப்பினரும் இருந்தனர். இவர்கள் குருகுலத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் மறைநூல் வல்லுநர் ஆனார்கள். பழங்கால எழுத்தர்கள் பெயர்களைமட்டும் வழங்கினார்கள். ஆனால் பிற்காலத்தில் வந்தவர்கள் திருச்சட்டத்தை விளக்குபவர்களாகவும் இருந்தனர்.

2. தோற்றம்:-
இவர்கள் சட்டத்தை விளக்குபவர்களாக நாடுகடத்தப்பட்ட சூழ்நிலையில் உருவாயினர். அப்போதுதான் திருச்சட்டம் யூத வாழ்க்கையின் மையமாக அமைந்தது. எனவே நாடுகடத்தப்பட்ட யூதர்கள் அதை ஆராய்வதில் ஆர்வம் காட்டினர். இவர்கள் வெறும் சட்டத்தை அறிந்தவர்களாக மட்டும் கருதப்படவில்லை. இவர்கள் பழமொழி ஆகமம், சங்கத்திருவுரை ஆகமம், தானியேல் ஆகியவற்றில் கூறப்படும் ''அறிஞர்களாகவும்'' ''நீதிமானாகவும்'' விளங்கினர் (தானி 11:33: 35; 12:3; திருவுரை 38:24 தொ). இந்த மறைநூல் அறிஞர் வகுப்பினர்தான் யூதத்திருமுறை நூல்களை வரையறுத்தனர். இவர்கள் யூதமறையின் இலக்கியங்களைச் சேகரிப்பதிலும் அவைகளுக்கு விளக்கம் கூறுவதிலும் ஈடுபட்டிருந்தனர். மேலும் இவர்கள் பிரதி எடுப்பவர்களாகவும் மறைநூலில் கலப்படம் ஏற்படா வண்ணம் பாதுகாப்பவர்களாகவும் விளங்கினர்.

யூதர்கள் நாடு திரும்பியபின் எஸ்ராவின் காலத்தில்தான் இந்த எழுத்தர்கள் போதகர்களாகவும் விளக்கவுரையாளர்களாகவும் ஆனார்கள். எஸ்ராவும் ஒரு சிறந்த சட்ட வல்லுநர் (எஸ் 7:6.11-12; நெக 8:1.4.9.13; 12:26.36).

3. பரிசேயரும் மறைநூல் அறிஞரும்:-
குருகுலத்தில் தோன்றிய எஸ்ராவைப் போலவே (எஸ் 7:12), யூதர்கள் நாடு திரும்பிய பின் வந்த சட்டவல்லுநர்கள் குருகுலமரபிலி

ருந்து வந்தவர்கள் (நெக 8:7; 2 நாள் 34:13). இவர்கள் தங்களை ஒரு குலமாக அமைத்துக் கொண்டனர் (1 நாள் 2:55) செலூக்கியர்கள் தங்கள் கிரேக்க நாகரிகத்தைப் பரப்ப முயன்ற போது, இந்தச் சட்டவல்லுநர் குழு தான் மக்கபேயர்களின் புரட்சியில் (1 மக் 7:11-17) உச்சநிலை அடைந்த எதிர்க்கும் கட்சிக்கு முதுகுத் தண்டாய் அமைந்தது. இவர்கள் கசிதீம் அதாவது ''சட்டத்திற்குப் பிரமாணிக்கமாய் நடப்பவர்கள்'' என்று அழைக்கப்பட்டனர்.

கிரேக்க காலத்தொடக்கத்தில்தான் பொது மக்களிடையேயிருந்து தோன்றிய சட்டவல்லுநர்கள் தங்களைத் தலைவர்களாகக் கொண்ட மக்கள் கட்சியை ஆரம்பித்தனர். இவர்கள் பரிசேயர்கள் என்று அழைக்கப்பட்டனர். நற்செய்தியிலும், அப்போஸ்தலர் பணியிலும் சட்டவல்லுநர்கள் என்று பல முறை குறிப்பிடப்படுகின்றனர் (மத் 13:52; 9:3; மாற் 9:11.14). இந்தக் குறிப்புகள் இவர்கள் சமுதாயத்தில் ஒரு முக்கிய இடம் வகித்ததைக் காட்டுகின்றன. இவர்கள் பாலஸ்தீனமெங்கும் தங்கள் தொழிலைச் செய்தனர். மற்ற இடங்களில் சட்டவல்லுநர்கள், பரிசேயர்களுடன் இணைத்தே கூறப்படுகின்றனர். மாற்கு சட்ட வல்லுநர்களைத் தலைமைக் குருக்களுடனும் மூப்பர்களுடனும் தொடர்புடையவர்களாகக் கூறுவது அப்போஸ்தலர் பணியோடு ஒத்துப்போகின்றது (மாற் 8:31; 10:33; 11:18; 14:1; 15:31; காண்க. மத் 2:4; 21:15; லூக் 22:66; 23:10; அ.ப. 4:5; 6:12). இதிலிருந்து இந்த மூன்று வகுப்புகளிலும் மூப்பர்கள்தாம் மிகவும் குறைந்த முக்கியத்தும் வாய்ந்தவர்கள் என்று தெரிகிறது. எஞ்சி இருக்கின்ற இரண்டு வகுப்பினரில் (குருக்கள், சட்டவல்லுநர்கள்) தலைமைக் குருக்கள்தாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்.

4. தலைமைச் சங்கத்தில் சட்டவல்லுநர்கள்:-

தலைமைச் சங்கம் வரிசைப்படி, தலைமைக் குருக்கள், சட்டவல்லுநர்கள், மூப்பர்கள் ஆகியோர்களை அங்கத்தினர்களாகக் கொண்டிருந்தது. தலைமைக் குருக்கள்தான் பெரிய குரு; பழைய பெரிய குரு மற்றும் குருமரபினர் இவர்களைக் கொண்ட குரு குலத்தின் தலைவராவார். எனவே சட்டவல்லுநர்கள் தலைமைச் சங்கத்தில் மதிப்பு பெற்றிருந்த மற்றொரு வகுப்பினராவர். பெரிய குருவுக்கும் அவரது குடும்பத்துக்கும் அடுத்தபடியாக யூத ஆட்சிமுறையில் சிறப்புப் பெற்றிருந்தவர்கள் சட்டவல்லுநர்கள் ஆவார்கள்.

தலைமைக்குருக்கள் பெரும்பாலும் சதுசேயர்களின் கட்சியைச் சேர்ந்தவராக இருந்திருக்க வேண்டும். இந்தத் தலைமைச் சங்க சட்ட வல்லுநர்கள் பெரும்பாலும் பரிசேயர்கள் கட்சியைப் பின்பற்றினாலும், சதுசேய சட்டவல்லுநர்களும் இருந்தனர். பரிசேய சட்ட வல்லுநர்கள் தலைமைச் சங்கத்தில் இருந்தார்கள் என்பதை மட்டும் உறுதியாகக் கூற இயலும். கமாலியேல் (அ.ப. 5:34 தொ) பரிசேயரும் சட்ட வல்லுநரும் ஆவார்.

5. சட்டவல்லுநரும் இயேசுவும்:-

மாற் 7:5-இல் வரும் ''பரிசேயரும் மறைநூல் அறிஞரும்'' என்ற சொற்றொடர் மத்தேயுவில் வரும் ''மறைநூல் அறிஞரும் பரிசேயரும்'' என்ற வழக்கமாக வரும் சொற்றொடர் போல அல்ல; மாற்கு நற்செய்தியில், ''பரிசேயரும் எருசலேமிலிருந்து வந்த மறைநூல் அறிஞரும்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக அது பயன்படுத்தப்படுகிறது. இயேசுவைக் கேள்வி கேட்டவர்கள் சட்டத்தைப்பற்றித் தர்க்கம் செய்வதால் அவர்கள் எருசலேமைச் சார்ந்த அதிகாரப்பூர்வமான மறைநூல் அறிஞராகத்தான் இருக்க வேண்டும். மறைநூல் அறிஞரும் பரிசேயரும் என்ற சொற்றொடர் மத்தேயு நற்செய்தியில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் சொல்லாக இருந்தாலும், லூக் 6:7; 11:53-இல் அது அவ்வாறு இருக்க முடியாது. மறைநூல் அறிஞருக்கு, பரிசேயருக்கு மேலாக முதன்மை அளிக்கப்படுகிறது. மத் 23-இல் பரிசேயரின் வெளிவேடத்தைப்பற்றி இயேசு கண்டிக்கும் போது மறைநூல் அறிஞரும் பரிசேயரும் என்று கூறுவதால் அது மூலவா

சகமாக இருக்கலாம் என்று கூறலாம். ஆனால் மற்றும் லூக்கா நற்செய்திகளில் (மாற் 12:38; லூக் 20:45; 11:46), இயேசு மறைநூல் அறிஞரின் வெளிவேடத்தை மட்டுமே கண்டிக்கிறார். மறைநூல் அறிஞரின் முக்கியப்பணி திருச்சட்டங்களைப் போதிப்பதும் அவற்றை விளக்குவதும் ஆகும். அவர்களுடைய வாழ்க்கையல்ல. மாறாக அவர்களின் அதிகாரம் மத் 23:2-3-இல் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நற்செய்தியிலும் இறைவனைப்பற்றிய ஞானமுள்ள மறைநூல் அறிஞர்கள் காணப்படுகின்றனர் (மத் 8:19 - லூக் 9:57). இவர்களின் உழைப்பால்தான் பழைய ஏற்பாட்டு நூல்கள் பாதுகாக்கப்பட்டன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எழுத்தர்களின் பிழைதிருத்தம் (EMENDATIONS OF THE SERIBER)

மசோரோடிக் வாசகத்தில் திருத்தப்பட்ட 18 சொற்கள் எழுத்தர்களின் பிழைதிருத்தம் என வழங்கப்படுகிறது. இறைவனை மனிதனாக வர்ணிக்கும் சொற்களைத் தவிர்க்க இவ்வாறு திருத்தப்பட்டன.

எழுத்துப்பட்டயம் (INSCRIPTION)

இது கடினமான தலத்தில் எழுதப்பட்ட விளக்க வாசகம் அல்லது பொறிப்பாகும். பொதுவாக இது மக்களுக்கு அறிக்கையாக அமைந்தது. இத்தகைய பட்டயம் பெரிய குருவின் தலைப்பாகையில் பொருத்தப்பட்டிருந்தது. இது அவரை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர் என்று அறிவித்தது (யாத் 39:30; 29:36). புதிய ஏற்பாட்டில் இது நாணயத்தில் காணப்பட்ட எழுத்துக்களைக் குறித்தது (மத் 22:20).

இவற்றில் மிக முக்கியமானது இயேசுவுக்கு எதிரான குற்றம் எழுதப்பட்டு அவருடைய சிலுவையில் வைக்கப்பட்ட பட்டயமாகும் (லூக் 23:28; மத் 27:37). யோவானின் படி இப்பட்டயம் எபிரேய, கிரேக்க, இலத்தீன் மொழிகளில் எழுதப்பட்டிருந்தது (யோவா 19:19-20).

எழுபது நூல் (SEPTUAGINT)

கிறிஸ்தவ காலத்திற்கு முந்தைய யூதர்களின் பழைய ஏற்பாட்டு, கிரேக்க மொழி பெயர்ப்பாகும். இந்த மொழிபெயர்ப்புத் தோன்றிய வரலாற்றைக் கூறுவதாகக் கருதப்படும் அரித்தேயாவின் போலியான கடிதத்திலிருந்து இப்பெயர் வருகின்றது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த யூத அறிஞரான அரித்தேயா பின்வரும் செய்திகளைக் கூறுகின்றார்: இரண்டாம் தோலமி பிலதெல்பு, தாம் அலக்சாந்திரியாவில் நிறுவிய நூலகம் யூதர்களின் புனித நூல்களின் கிரேக்க மொழி பெயர்ப்பைக் கொண்டிருக்க விரும்பினார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொரு யூதக் கோத்திரத்திலிருந்தும் 6 பேராக 72 பேர் எருசலேமிலிருந்து மொழி பெயர்ப்பைச் செய்ய அனுப்பப்பட்டனர். ஆனால், இக்கதை பின்னால் கற்பனையோடு விரிவாக்கப்பட்டது. இந்த 72 பேரும் தனித்தனி அறைகளில் பாரேஸ் தீவில் வைக்கப்பட்டனர். ஒவ்வொருவரும் 72 நாட்களில் மொழி பெயர்ப்பை முடித்தனர். ஆனால் அவை எல்லாம் ஒன்றாய் இருந்தன. இக்கதையில் வரலாற்றுக்கு வேண்டியவை மொழி பெயர்ப்பு நடந்த இடமும், காலமும் மட்டுமே. இம்மொழி பெயர்ப்பு அலக்சாந்திரியாவில் இருந்த யூத மக்களுக்காகச் செய்யப்பட்டது என்பதில் ஐயமில்லை. இவ்வேலை கி.மு. 250-க்கு முன் செய்யப்பட்டிருக்க இயலாது. மொழி நடையானது இது அலக்சாந்திரியாவில் செய்யப்பட்டது என்பதற்குச் சான்று பகர்கின்றது. இது ஒரு தனிப்பட்ட படிவம் என்று அறிஞர்கள் கூறினாலும், இதை உறுதிப்படுத்த முடியாது. வழிபாட்டுத் தேவையும் ஒருவகையில் இந்த மொழி பெயர்ப்புக்குத் தூண்டுகாரணமாக இருந்திருக்கலாம். கி.மு. 130-இல் சீராக்கு நூலுக்கு எழுதப்பட்ட முன்னுரை ''சட்டம், இறைவாக்கினர், பிறநூல்கள்'' அடங்கிய கிரேக்க மொழி பெயர்ப்பு இருந்ததைச் சுட்டுகிறது. இது யூதத் திருமுறையை மூன்று பகுதிகளாகப் பிரிப்பதோடு ஒத்துப் போகிறது. இது எழுபது நூல் முடிக்கப்பட்ட காலத்தை ஒரு வேளை குறிக்கலாம்.

அண்மைக்கால விவிலிய அறிஞர்களில் சிலர் இந்திக் கிரேக்க மொழிபெயர்ப்பு ஓர் ஒன்றிய படைப்பு அல்ல என்றும், ஒரே சமயத்தில் செய்யப்படவில்லையென்றும் கருதுகின்றனர். இது வேறுபட்டபுத்தகங்களின் பல வேறு மொழிபெயர்ப்புகளையும் பல வேறுபட்ட ஆட்களால் செய்யப்பட்டவைகளையும் கொண்டுள்ளது என்றும் இவையல்லாது பாதுகாக்கப்படாத மொழிபெயர்ப்புகள் இருந்திருக்கலாம் என்றும் நம்புகின்றனர். ஆனால் கிரேக்க மொழிபெயர்ப்பு ஒரு மொழிபெயர்ப்பாளரின் வேலையில்லை என்பது தெளிவாகிறது. இத்தொகுப்பில் பல மொழிபெயர்ப்பாளர்களின் வேலைப்பாட்டைக் காணமுடிகிறது. ஒரே ஆளின் இயக்கத்தில் இம்மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது என்பதற்கும் சான்றுகள் இல்லை. அநேகமாக யூதர்களால் மிகவும் புனிதமாகக் கருதப்பட்ட ஐந்நூல் வழிபாட்டுத் தேவைகளுக்காக முதலில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். மற்றப் புத்தகங்களில் சிலவாயினும் மொழிபெயர்ப்பாகும். இந்தக் கிரேக்க மொழி பெயர்ப்பு பாதுகாக்கப்படாத அல்லது எபிரேயமூலத்தில் காணப்படாத சில நூல்களையும் கொண்டுள்ளது.

இந்தக் கிரேக்க மொழிபெயர்ப்பின் தரம் ஒரே சீராக இல்லை. இது ஏ. வக்காரி என்பவரால் ஆராய்ச்சி செய்யப்பட்டது. அவரது கருத்துப்படி மூலத்தோடு எழுபது நூலை ஒப்பிடும்போது உன்னத சங்கீதம், சங்கத்திருவுரை ஆகமம் ஆகியவை முழுவதும் மூலத்தை அடியொற்றியதாகவும், சங்கீதம், இறைவாக்கினர்கள் (தானியேலைத் தவிர) சொற்பொருள் சார்ந்ததாகவும், ஐந்நூலும், வரலாற்று நூல்களும் உண்மையுள்ளவையாகவும் யோபு, பழமொழி, தானியேல், எஸ்தர் ஆகியவை சுதந்தரமாக அல்லது பொழிப்புரைத் தன்மையோடு செய்யப்பட்டதாகவும் உள்ளன. கிரேக்க மொழிமரபின்படி, யோபு, பழமொழி ஆகியவை மிகவும் நன்றாகவும், ஐந்நூல், யோகவா, ஏசயா ஆகியவை இடைத்தரமாகவும் மற்றவை குறைந்ததரமாகவும் உள்ளன. எபிரேய வாசகத்தைப் புரிந்துகொள்வதில் ஐந்நூல் மிகவும் சிறந்ததாகவும், ஏசயா மற்றும் சிறிய இறைவாக்கினர்கள், யோபு, பழமொழி ஆகியவை தாழ்ந்த தரமாகவும் மற்றவை நடுத்தரமாகவும் கருதப்படுகின்றன. இந்த ஆராய்ச்சியின்படி இம்மொழிபெயர்ப்பு, சிறிதளவு எபிரேயமும், கிரேக்க மொழி அமைப்பில் பயிற்சி பெறாதவர்களாலும் செய்யப்பட்டதாகத் தோன்றுகிறது.

எழுபதுநூல் மொழிபெயர்ப்பு மட்டுமல்லாது, பழைய ஏற்பாடு பற்றிய முதல் விளக்கமும் ஆகும். மொழிபெயர்ப்பாளர்கள் ஐந்நூலின் குருக்கள் பாரம்பரிய உலகிலும், நாளாகமப் பாரம்பரிய உலகிலும் வாழ்ந்தவர்கள். அவர்கள் ஓரளவிற்குக் கிரேக்க கருத்துக்களால் பாதிக்கப்பட்டனர். எனவே இஸ்ராயேலின் தொடக்க இலக்கியங்களில் காணப்படும் மனிதப் பண்புக் கொள்கை இறைவனுக்குச் சாற்றிக் கூறுதல் அல்லது பொருட்களுக்கு மனித உணர்ச்சிகளை ஏற்றிக் கூறுவது ஆகியவை கைவிடப்படுகின்றன. (இவ்வாறு ''கை'' ஆற்றலாகவும் ''பாறை'' உதவியாகவும் மாறுகிறது). அந்தக்காலத்தில் உச்சரிக்கப்படாத யாவே என்ற இறைபெயர் 'ஆண்டவர்' என்ற சொல்லால் மொழி பெயர்க்கப்படுகிறது. இது யாவேக்குப் பதிலாகப் பயன்பட்ட அதோனாயி என்ற எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இதே சொல் கிரேக்கப் பண்பாட்டில் அரசனுக்குரிய பெயரும் ஆகும். அன்பைக் குறிக்கும் எபிரேயச் சொல் ''கெசது'' இரக்கத்தைக் குறிக்கும் ''எலெயோஸ்'' என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இதேபோன்று பல மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

மொழிபெயர்ப்பாளர்கள் பயன்படுத்தியது நாம் வைத்திருக்கும் எபிரேய மசோரோடிக்கு வாசகம் அன்று. மேலும் இவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் எல்லாம் தவறான மொழிபெயர்ப்பாலோ, எழுத்தர் பிழையாலோ எழுந்தவையும் அல்ல. கிரேக்க மொழிபெயர்ப்போடு உள்ள எபிரேயப் படிவம் கும்ரான் கையெழுத்துப் படி

வங்களில் காணப் படுவதிலிருந்து இந்த வேறுபாடு தெளிவாகின்றது.

கி.பி. முதலாம் நூற்றாண்டுவரை எழுபது நூல் சிதறுண்டுபோன யூதர்களிடையே அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. இது இரேக்க விவிலியம். ஆதலால் கிறிஸ்தவர்கள் கிரேக்கப் பகுதிகளை மனந்திரும்பிய போது, இதை ஏற்றுக் கொண்டு பயன்படுத்தினர். எனவே அது திருச்சபையின் விவிலியம் ஆயிற்று. புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்படும் 250 பழைய ஏற்பாட்டு வசனங்களுள் 300 எழுபது நூலிலிருந்து எடுக்கப்பட்டன. புதிய ஏற்பாடு எழுபது நூல் விளக்கத்தை எப்போதும் பின்பற்றாவிடினும் இறையியல் சொற்கள் எபிரேயத்திலிருந்து கிரேக்க மொழி மூலமாக வருகின்றன.

எழுபது நூலின் அதிகாரபூர்வத்தன்மை திருச்சபையின் கிரேக்க, இலத்தீன் தந்தையர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. போலி-அரித்தேயாவின் கதையின் அடிப்படையில் இதுவும் இறை ஏவுதல் பெற்றது என்று கருதினர். இக்கருத்தை மதிப்பீடு செய்ய, விவிலிய விளக்கமுறைகள் என்ற தலைப்பைக் காண்க.

கிறிஸ்தவர்கள் எழுபதுநூலை ஏற்றுக் கொண்டதால், யூதர்கள் அதை நிராகரித்தனர். எழுபதுநூல் எழுதப்பட்ட போது பூமியை மூன்று நாள் இருள் மூடியிருந்தது என்று சில ராபிகள் கூறினர். இன்னும் சிலர் அந்த நாள் யூதர்களுக்குப் பொற் கன்றுக் குட்டியின் நாள்போல் துயரமான நாளாகும் என்றனர். ஆனால், கிரேக்க நகரங்களில் வாழ்ந்த யூதர்களுக்குக் கிரேக்க வாசகம் தேவைப்பட்டது. ஆகவே யூதக்கண்காணிப்பில் பிற கிரேக்க மொழி பெயர்ப்புகள் செய்யப்பட்டன. இப்படிச் செய்யப் பட்ட மொழி பெயர்ப்புகளில், ஆக்சிலா, சிம்மாக்கு, தியோதோசியன் ஆகியோருடைய மொழி பெயர்ப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. இவை பற்றிக் கிரேக்க மொழி பெயர்ப்புகள் என்ற தலைப்பில் காண்க.

எழுபது நூலின் பதிப்புகள்:-
முதல் மூன்று நூற்றாண்டுகளில் எழுபது நூல் அதிகம் பயன்படுத்தப்பட்டதால் பல படிவங்கள் எடுக்கப்பட்டன. அதன் விளைவாகப் பழுதுபட்டது. பழங்கால மூலத்தின் படி, அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கெசிக்கியுவும் அந்தியோக்கியா லூசியனும் கி.பி. 300-ஐ ஒட்டிப் பதிப்பித்தனர். இதன் பகுதிகள் அதிகம் கிடைக்கவில்லை. முதன்மையான பதிப்பு ஓரிசனால் பாலஸ்தீனத்தில் செசாரியாவில் செய்யப்பட்டது (கி.பி. 254). இது எழுபது நூல் வாசக வரலாற்றுக்கு முக்கியமானதாகும். ஆறுவரிசைப் பதிப்பு என்று அழைக்கப்பட்டது. எபிரேய பாடத்தையும் மற்ற மொழி பெயர்ப்புகளையும் இணையான வரிசைகளில் கீழ்க்கண்டவாறு அமைத்தார்.

1. எபிரேய வாசகம்
2. எபிரேயம்: கிரேக்க எழுத்துகளில்
3. ஆக்கிலா வாசகம்
4. சிம்மாக்கு வாசகம்.
5. எழுபது நூல் வாசகம்
6. தியதோசியோன் வாசகம்.

இம்மாதிரி மொழிப்பெயர்ப்பை ஓரிசன் செய்தபோது, யூதர்களோடு கிறிஸ்தவர்கள் வாதிட்ட போது பயன்படவேண்டும் என்ற ஆர்வத்தாலும், எபிரேய வாசகத்தில் காணப்படாத நூல்களிலிருந்தும் வேறுபட்ட வாசகங்களிலிருந்தும் எடுத்துக் காட்டுக் கூறும் போது எழும் மலைப்புகளைத் தவிர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தாலும், செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இதன் மிகவும் பழங்காலக் கையெழுத்துப் படிவங்கள் கும்ரானில் இருந்து கிடைத்துள்ள சில பகுதிகளாகும். கிரேக்க மொழி பெயர்ப்பு முதன் முதலில் அல்காலா அச்சகத்தில் அச்சிடப்பட்டது. பின் அல்டைன் பதிப்பு வெளியானது முழுவதும் திறனாய்வு கொண்ட பதிப்பு இல்லை.

எழுவர் (THE SEVEN)

எருசலேமில் அப்போஸ்தலருக்குப் ''பந்தியில் பணிவிடை'' செய்ய உதவுவதற்காகப் பன்னிருவர் திருநிலைப்படுத்திய குழுவினைக் குறிக்கும் சொல் (அ.ப.6:1; 21:8).

இன்று திருத்தொண்டர்பட்டத்தை இத னோடு இணைத்துவிட்டனர். பந்தியில் கிரேக்க விதவைகள் புறக்கணிக்கப்படுவதா கப் பேச்சுக் கிளம்பியதும், இவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் கிரேக்கப் பெயர்களையே கொண்டிருந்த னர். ஒருவேளை கிரேக்கப் பண்பாட்டில் மூழ்கியிருந்த யூதர்களாகவும் இருக்கலாம். பழமைவாதிகளான சில யூதர்களின் பிரச்ச னைகளைத் தீர்க்கவும் இவர்கள் நியமிக்கப் பட்டிருக்கலாம்.

ஏழு என்பது, முழுமையின் அடையாள மாகக் கொள்ளப்பட்ட அக்காலக் கட்டத் தில், லூக்காவின் நூல்களில், மற்றநற்செய்தி யாளர்களின் நூல்களில் காணப்படுவதை விட, அதிக அளவில் காணப்படுகிறது.

பன்னிரண்டு என்பது இஸ்ராயேல் குலத் தின் இனங்களைக் குறிப்பது போல எழுபது என்பது அக்கால இஸ்ராயேல் கணக்குப்படி உலகில் இருந்த எழுபது நாடுகளைக் குறித் தது (ஆதி 10:32; லூக் 9:1; 10:1)

எளிமை (SIMPLICITY)

எளிமை என்பது குழந்தையின் இயல்பு. அது பல பண்புகளைக் கொண்டது. குழந் தைக்குப் பட்டறிவு கிடையாது. கால மறிந்து, இடமறிந்து நடக்கத் தெரியாது; உள் ளத்தில் வஞ்சம் கிடையாது; சொல்லிலே நஞ்சு கிடையாது; நோக்கிலே கபடு கிடை யாது; செயலிலே அநீதி கிடையாது; குழந் தையைப் போல் கள்ளமில்லா நடத்தையும் பணிவும் கொண்டவரை எளியோர் எனப் போற்றுகின்றோம். எளிமை என்பது போலித்தன்மைக்கும் முரண்பாடு நிறைந்த வாழ்விற்கும் எதிரானது.

1. எளிமையும் ஞானமும்:-

எளிமை என்பது அறியாமையன்று; அறி யாமை ஒரு குறைபாடு. எனெனில் சிற்றறிவு டையோர் அறியாமையை உரிமையாகக் கொள்கின்றனர் (பழ 14:18). அறியாமை நம்மைத் துன்பத்திற்குள்ளாக்கிவிடும். அஞ்சு வது அஞ்சாமை பேதைமை. நுண்ணறிவு இல்லாதவன் தீமையைக் கண்டு அஞ்சி ஒளியாமல் அழிவிற்கு உள்ளாகிறான் (22:3). கபடமற்றவன் எப்பொருளிலும் மெய்ப் பொருள் காணாமல் யார் சொல்லையும் நம்பிவிடுகிறான் (14:15). மேலும் கபடமற்ற வன் அறியாமையால் வஞ்சகர் விரித்த வலையிலே வீழ்ந்துவிடுகிறான்; அவர்கள் வஞ்சக மொழிக்கு இரையாகி விடுகிறான் (பழ 7:7; 9:16; உரோ 16:8). இறுதியில் இந்த மடைமை அவன் உயிர்குடிக்கும் நஞ்சாக மாறிவிடுகின்றது (பழ 1:32). எனவே தீமையை வெறுப்பதில் குழந்தையாகவும் அறிவுத் திறனில் முதிர்ந்தவராகவும் நாம் இருக்க வேண்டும் (1 கொரி 14:20). அழி விற்கு இட்டுச் செல்லும் அறியாமையி லிருந்து ஞானம் நம்மை மீட்கிறது. ஞானம் வழங்கும் பழமொழி சிறுவருக்கு அறிவுக் கூர்மையையும் இளைஞருக்கு அறிவாற்ற லையும் அளிக்கிறது (பழ 1:4). எனவேதான் ஞானத்தைத் தேட வேண்டும். சிறுபிள்ளைத் தனத்தை விட்டு விட வேண்டும் (1:22); சிந்தித்து, நல்லுணர்வுடன், அறிவுக் கூர்மை பெற வேண்டும் (8:5; 9:4தொ). எளிய உள்ளத்துடன் நாம் இறைவாக்கை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்போது ஞானம் நம் மைச் சான்றோராக்கும் (சங் 19:7); அறி யாமை என்னும் இருள் நிறைந்த உள்ளத் திற்கு இறைமொழி என்னும் ஒளி அறிவூட்டு கிறது சங் 119:130). இறைவாக்கை எளிய உள்ளத்துடன் ஏற்றுக் கொள்ளாததால் ஏவாள் பாம்பின் சூழ்ச்சியினால் வீழ்ச்சிய டைந்தாள் (2 கொரி 11:3). தங்களுடைய அறிவுத்திறனில் மட்டும் நம்பிக்கை வைத்து இறைவாக்கைப் புறக்கணிப்போரிடம் இறைமக்களுக்குரிய எளிமைப் பண்பைக் காண முடியாது (மத் 11:25). எனவே இறை யரசை நாம் குழந்தை உள்ளத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் (மாற் 10:15; 1 பேதுரு 2:2). இந்த விசுவாசமே இறைமக்களுக்குரிய எளிமையின் முதற் பண்பு. எளிமை என்பது பேதைமையன்று. நேர்மையும் மாசின்மை யும் எளிமையின் இருகண்களெனக் கொள்ள லாம் (பிலி 2:15). இறைவனில் நம்பிக்கை

வைத்து நேர்மையுடனும் நீதியுடனும் வாழ்ந்து காட்டிய யோபு எளிமைக்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றார் (யோபு 1:8; 2:3).

2. எளிமையும் நேரிய வாழ்வும்:-

இறைவனைத் தேடுவோர் எளிய உள்ளத்துடனும் நேர்மனத்தோடும் அவரை நாட வேண்டும் (ஞான 1:1). இருமனத்தோராய் இருத்தல் கூடாது (சங் 119:113; யாக் 4:8). எளிய மனத்துடனும் இதய நேர்மையுடனும் இறைவனின் கட்டளைகளைக் கடைப் பிடிக்க வேண்டும் (1 அர 9:4; சீரா 1:28 தொ). சாவிற்கும் அஞ்சாது தாராள சிந்தையுடன் வாழ வேண்டும் (1 நாள் 29:17; 1 மக் 2:27 - 60). இறைவனிடத்தில் உறுதியான நிலையான நம்பிக்கை வைக்கவேண்டும் (யாக் 1:8). சொல்லிலும் செயலிலும் நெறிபிறழாத நேர்மையைக் காக்க வேண்டும் (பழ 10:9; 28:6; சீரா 2:12; 5:9).

கபடமற்ற இதயத்துடன் இறைவனின் கொடைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (அ.ப. 2:46). தனக்குள்ளதை ஒளித்து வைக்காது வள்ளன்மையுடன் மற்றவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் (உரோ 12:8). உண்மைக்குக் கீழ்ப்படிந்து சகோதரர்களிடம் கள்ளமற்ற அன்பு காட்ட வேண்டும் (1 பேதுரு 1:22). இறைவனுக்கு அஞ்சி வஞ்சமற்ற உள்ளத்துடன் தங்கள் பணியை ஆற்ற வேண்டும் (கொலோ 3:22 தொ; எபே 6:5 தொ). நேர்கொண்ட பார்வை நம் வாழ்வையே சுடர்விடும் தீபமாய் மாற்றுகின்றது (மத் 6:22; லூக் 11:34). பாம்புகளைப் போல் விவேகம் உள்ளவராயும் புறாக்களைப் போல் கபடமற்றவராயும் (மத் 10:16) இருப்பதுவே எளிமையின் இலக்கணம்.

எறும்பு (ANT)

இது பூச்சி வகையைச் சேர்ந்ததாகும். எறும்புகள் ஒரு குடும்பமாகச் சேர்ந்து வாழ்வன. இவை ஆண், பெண் வேலைக்கார எறும்புகள் என ஒரு சமூகமாக வாழ்கின்றன. 20,000 முதல் 500,000 வரையான எறும்புகளுக்கு ஓர் இராணி எறும்பு இருந்து வழி நடத்தும். இவற்றின் வளைகள் மண்ணுக்கடியில் பாலஸ்தீனத்தின் வெப்பத்தைத் தடுக்கும் வண்ணம் பல அறைகளாக அமைந்துள்ளன. இந்த அறைகள் உணவு, குழந்தை வளர்ப்பு எனப் பலவகையில் பயன்படுகின்றன. எறும்பைப் பற்றி இரண்டே இடங்களில் தான் விவிலியத்தில் பேசப்படுகின்றது (பழ 6:6; 30:25). இவை இரண்டிலும் அவற்றின் ஞானம், முன்னறிவு, சுறுசுறுப்பு ஆகியவை பேசப்படுகின்றன. இவை மழைக் காலத்திற்குத் தேவையான உணவைக் கோடை காலத்திலே முன்னெச்சரிக்கையாகச் சேகரித்து வைக்கின்றன. இந்த விவரிப்பு அறுவடை எறும்பு என்ற ஒருவகையைக் குறிப்பதாக உள்ளது. இவை சாகுபடி செய்யும் களம், தானியக் களஞ்சியங்களுக்கருகே வசிக்கின்றன. விதைத்த நெல் முளைவிடு முன் அல்லது தானியக் களஞ்சியங்களிலிருந்து, தானியங்களைச் சேகரிக்கின்றன. இவை வெயில் நாட்களில் நனைந்த தானியங்களை வெளியில் எடுத்து வந்து உலர்த்துகின்றன.

எனாயம்(ENAIM)

இது யூதாவின் செப்பேலாவில் உள்ளது. திமினாவுக்கும் அதுல்லாமுக்கும் இடைப்பட்ட பகுதியாகும் (ஆதி 38:14, 21). ஒருவேளை, இதுவும் எனாம் என்ற இடமும் ஒன்றாக இருக்கலாம் (யோசு 15:34). இங்குதான் விதவையான திமினா தன் மாமனாருக்காகக் காத்திருந்தாள். அவர், இவள் ஆலயவேசி என்று எண்ணி, விபச்சாரம் செய்தார். சரியான இடத்தை இன்னும் அறிய முடியவில்லை.

என்லில்(ENLIL)

நிப்பூர் என்ற இடத்தில் வழிபடப்பட்ட, வான மண்டலம், காற்று ஆகியவற்றின் சுமேரியக் கடவுள். பின்பு பாபிலோனியக் கடவுளான மார்துக்கோடு அடையாளம் காட்டுகின்றனர். காண்க. பேல்.

தான் விதவையான திமினா தன் மாமனாருக்காகக் காத்திருந்தாள். அவர், இவள் ஆலய வேசி என்று எண்ணி, விபச்சாரம் செய்தார். சரியான இடத்தை இன்னும் அறிய முடியவில்லை.

என்லில்(ENLIL)

நிப்பூர் என்ற இடத்தில் வழிபடப்பட்ட, வான மண்டலம், காற்று ஆகியவற்றின் சுமேரியக் கடவுள். பின்பு பாபிலோனியக் கடவுளான மார்துக்கோடு அடையாளம் காட்டுகின்றனர். காண்க. பேல்.

ஏ

ஏகாய் (HEGAI - அரச அந்தப்புர அண்ணகன்)

பாரசீக அரசனது அந்தப்புரத்தைக் கவனித்துக்கொண்ட அண்ணகன். எஸ்தர், அகசுவேருசைச் சந்திக்கத் தன்னையே தயாரித்துக் கொண்டிருந்த காலத்தில், அவளது நம்பிக்கையைப் பெற்றவர் (எஸ்த 2:3.8.15).

ஏகி (EHI)

பென்யாமின் புதல்வர்களுள் ஒருவர் (ஆதி 46:21). உரோசோடு குறிக்கப்படுகிறார். 'அகிராம்' என்ற சொல்லுக்குப் பதிலாகத் தவறாக வந்த சொல்லாகவும் இருக்கலாம். பின்வரும் பெயரோடு சேர்த்துப் பென்யாமினின் புதல்வர்களுள் ஒருவராக எண் 26:38-இல் குறிக்கப்படும் அகிராமாக இருக்கலாம். அல்லது 1 நாள் 8:1-இல் வரும் அகராகு - ஆக இருக்கலாம்.

ஏகூ (JEHU அவர் யாவே ஆவார்)

1. ஓர் இறைவாக்கினர். கனானியின் மகன். இஸ்ராயேலின் அரசன் பாசாவுக்கு (900 - 877) எதிராக ஆண்டவரது தீர்ப்பை அறிவித்தவர் (1 அர 16:1.7.122). இராமோத்து - கிலயாதில் சீரியர்களுக்கு எதிராக நடந்த தாக்குதலில் இஸ்ராயேலின் கொடிய அரசன் ஆகாபோடு சேர்ந்ததற்காக யூதாவின் அரசன் யோசபாத்தைக் கண்டனம் செய்த இறைவாக்கினருக்கும் இதே பெயர் கொடுக்கப்படுகிறது (2 நாள் 19:2). அதன் விளைவாக, யோசபாத்து, யூதாவை ஆண்டவரின் வழியில் நடத்தினார். 2 நாள் 20:34-இன்படி யோசபாத்தின் செயல்களை ஏகூ தனது நாளேட்டில் எழுதிவைத்தார். அவை இஸ்ராயேல் அரசர்களின் நூலில் இடம் பெற்றுள்ளன.

2. ஓமிரி அரசமரபின் கடைசி அரசனான யோராமைக் கொன்று இரத்தக் களரியில் ஆட்சிக்கு வந்த இஸ்ராயேலின் பத்தாவது அரசர் (841 - 814 கி.மு.). இவர் யோசபாத்தின் மகனும் நிமிசியின் பேரனுமாவார் (அர 9:2,14). ஆனால் ஏகூ நிமிசியின் மகன் (அல்லது) வழித்தோன்றல் என்றும் குறிக்கப்படுகிறார் (1 அர 19:16; 2 அர 9:20; 2 நாள் 22:7).

ஏகூ முதலில் ஆகாபின் சொந்த மெய்க்காப்பாளர்களில் ஒருவர் (2 அர 9:25). இஸ்ராயேலரான நாபோத்தும் அவரது புதல்வர்களும் கொலை செய்யப்பட்டதற்குச் சாட்சியாக இருந்தவர். நாபோத்தின் திராட்சைத் தோட்டத்திற்கு ஆகாபு உரிமை கொண்டாடி எடுத்துக் கொண்டபோது ஏகூ ஆகாபோடு சமாரியாவிலிருந்து இஸ்ராயேலுக்குச் சென்றார். அங்கே திராட்சைத் தோட்டத்தில் இறைவாக்கினர் எலியாவுக்கும் ஆகாபுக்குமிடையே நடந்த நாடகப் பாணி சந்திப்பைக் கண்டார். ஆகாப்பின் இந்தக் கொடுமைகளுக்காகவும், அவரது மற்றத் தீய செயலுக்காகவும், அவனது வீட்டுக்கு எதிராக ஆண்டவரின் தீர்ப்பை இறைவாக்கினர் அறிவிக்கக் கேட்டார் (9:26; காண்க 1 அர 21:17 - 19.28 - 29). மிகுந்த ஆர்வத்தோடு ஆகாபும் அவனுடைய சீதோனிய மனைவி ஈசபேலும் தீரியன் பாகால் மற்றும் அசேராவையும் இஸ்ராயேலில் புகுத்தினர். அவற்றின் வழிபாட்டை ஊக்குவித்தனர். இறைவனது தீர்ப்பை எலியா அறிவிக்கக் கேட்டு ஆகாபு மனம் வருந்தினார். அதன் விளைவாக இறைத் தீர்ப்பு (9:21) செயல்படுவது அடுத்த தலைமுறைக்குத் தள்ளிவைக்கப்பட்டது (9:27 - 29). இராமோத்து - கிலயாத்தில் ஆகாபு கொல்லப்பட்டு அவரது இரத்தத்தை நாய்கள் நக்கியதைக் கண்டபோது ஏகூ எலியாவின் சொற்களை நினைவு கூர்ந்தார் (22:38; காண்.21:24).

14 ஆண்டுகளுக்குப் பிறகு இறைவனது தீர்ப்பு ஆகாபின் வீட்டின் மேல் செயல்படுவதற்குரிய காலம் நிறைவுற்றது. அதில் ஏகூ இறைவன் தேர்ந்தெடுத்த கருவியானார். இது கோரேபு மலையில் இறைவாக்கினர் எலியாவுக்கு முதலில் அறிவிக்கப்பட்டது (19:16 - 17). ஆனால் தைலம் பூசுதல் எலிசாவின் காலத்தில்தான் நடந்தது. சீரியாவோடு நடந்த போரில் கிடைத்த காயங்களுக்கு

ஆகாபின் மகனும், இஸ்ராயேலின் அரசனுமான யோராம் மருத்துவம் செய்து கொண்டிருந்தபோது, அவரைப் பார்க்க யூதாவின் அரசன் அகசியா இஸ்ராயேலுக்குச் சென்றார். இப்போது இஸ்ராயேலின் படைகள் இராமோத்து - கிலயாத்தில் ஏகூவின் தலைமையில் தங்கியிருந்தன. எலிசா இறைவாக்கினர் புதல்வர்களில் ஒருவரை எண்ணெய்க் குடுவையோடு அங்கு அனுப்பினர். அவரும் ஏகூவை இஸ்ராயேலின் அரசனாக, அபிடேகம் செய்தார் (2 அர 9:1 - 10).

இந்த அபிடேகத்திற்குப்பின், ஏகூ தன் கூடாரத்திலிருந்து வெளிவந்தபோது இறைவாக்கினரின் நோக்கத்தைத் தன் உடன் படைத் தலைவர்களுக்குச் சொல்லத் தயங்கினார். ஆனால் இரகசியத்தை மறைத்துவைக்க முடியவில்லை. படைத்தலைவர்கள் வேகமாக ஓர் அரியணை செய்து, அதில் ஏகூவை அமரவைத்து, எக்காளம் ஊதி, அவரை அரசராக அறிவித்தனர் (9:13). உடனே ஏகூ தேரில் ஏறி, இஸ்ராயேலுக்குச் சென்றார். ஏனெனில் அங்குதான் அரசன் யோராம் இருந்ததை அறிந்திருந்தார். அவர்கள் நகரை அணுகியபோது கோபுரக் காவலன் அவர்களைக் கண்டு அரசனுக்கு அறிவிக்க அவன் அவர்களது நோக்கத்தை அறிந்துவர ஆள் அனுப்பினார். அவனைப் பின்போகச் சொல்லி, ஏகூவும் அவரது ஆட்களும் முன்னேறினர். நடந்ததைக் காவலன் அரசனுக்கு அறிவிக்க, அரசன் மீண்டும் ஓர் ஆளை அனுப்பினார். அவனுக்கும் அதே கதி கிடைத்தது. ஏகூதான் வருகிறான் என்று அறிந்து, அகசியாவும் யோராமும் தேரில் ஏறி, நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தில் அவரைச் சந்தித்தனர். ஏகூவின் துரோக நோக்கத்தை அறிந்த யோராம் தப்பியோட முயற்சித்தார். அப்போது ஏகூ அம்பு எய்து யோராமின் இதயத்தை ஊடுருவச் செய்ய, யோராம் தேரிலிருந்து விழுந்து மடிந்தார் (9:24-25). அகசியாவும் தப்பியோடியபோது, ஏகூவின் வீரர்கள் அவரை விரட்டிச் சென்று கொன்று போட்டனர் (9:27; காண்க 2 நாள் 22:9).

ஏகூ இஸ்ராயேல் நகருக்குள் நுழைந்தபோது ஈசபேல் ஏகூவைத் ''தன் தலைவனைக் கொன்ற சிமிரி'' என்று இகழ்ச்சியாக அழைத்து எதிர் கொண்டாள் (9:27; காண்க. 1 அர 16:9.20). அவளைக் கீழே தள்ளிவிட அவளது அறையிலிருந்த அண்ணகர்களுக்கு ஏகூ கட்டளையிட அவள் விழுந்து அவளது இரத்தம் சுவரை நனைத்தது. மேலும் குதிரைகளின் கால்களால் அவள் மிதிக்கப்பட்டாள் (2 அர 9:33). அவளது ஊழியர் அவளை அடக்கம் செய்ய வந்து பார்த்தபோது அவளது தலையும் கால்களும் கைகளில் பாதியும் மட்டும் அங்குக் கிடக்கக் கண்டனர். நாய்கள் அவளது ஊனைத் தின்றுவிட்டிருந்தன. இவ்வாறு. எலியாவின் இறைவாக்கு நிறைவேறிற்று (9:36 - 37). பிறகு ஏகூ துணிந்து ஆகாபின் அரச குடும்பத்தைச் சேர்ந்த எல்லா ஆண்களையும் கொன்று, இஸ்ராயேலின் மேல் தன் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தினார் (10:1 - 7). அவ்வாறே ஆகாபோடு தொடர்புடைய பெரியோர்களையும், நண்பர்களையும், குருக்களையும் கொன்று போட்டார்.

''ஆண்டவர்பால் ஆர்வத்தைச்'' செயல்படுத்த அவரது தந்திரமும் இரத்தக்களரியும் பயன்பட்டன (10:16). பாகாலுக்குப் பணி செய்வதுபோல் பாவனை செய்து பாகாலுக்கு ஒரு பெரிய மகத்தான பலி ஒப்புக்கொடுக்க பாகாலின் இறைவாக்கினர்களையும் வழிபடுவோரையும் ஒன்று கூட்டினார் (10:19). புனிதத்தலத்தைச் சுற்றியிருக்க எண்பது வீரர்களை நியமித்து, உள்ளிலிருந்த அனைவரையும் கொன்று தீர்த்தார். மேலும் பாகாலின் சிலையைப் புனிதத் தலத்துக்கு வெளியே கொண்டு சென்று உடைத்தெறிந்தார். பாகாலின் கோவிலை இடித்து அதை ஒதுங்கும் இடமாக்கினார். இவ்வாறு ஏகூ இஸ்ராயேலில் பாகாலின் வழிபாட்டை அழித்தார் (10:28).

2 அரசர்கள் நூலில் வரும் வரலாற்று ஏடு ஏகூவின் கிளர்ச்சியையே முதன்மையாக விவரிக்கிறது. அவர் உடன்படிக்கைச் சட்டத்திற்கு எப்போதும் பிரமாணிக்கமாய் இல்லாவிடினும், ஆகாபின் வீட்டின் மேல் இறைவ

னது தீர்ப்பை நிறைவேற்றினார். அவனது அரசமரபு இஸ்ராயேல்மேல் நான்கு தலைமுறைகளுக்கு ஆட்சி செய்தது (871 - 752). இது வடஅரசின்மேல் ஆட்சி செய்த மற்ற எந்த அரச மரபுகளையும்விட நீண்டதாகும். ஆனால் சீரிய நாட்டு அரசன் கசயேலின் தொடர்ந்த தாக்குதலினால் இஸ்ராயேலும் யூதாவும் நலிவுறுவதை நேரடியாகக் கண்டார். 842-இல் அசீரிய அரசன் மூன்றாம் சால்மனேசர் இஸ்ராயேல்மேல் தன் அதிகாரத்தை நிறுவினான். புகழ்பெற்ற கறுப்புக்கல் தூண், ஏகூவும் சில இஸ்ராயேலர்களோடு அசீரிய அரசன்முன் கப்பம் கட்டுவதாகச் சித்தரிக்கிறது. கல்வெட்டுக்கள் ''ஓமிரியின் மகன் ஏகூ'' கப்பம் கட்டியதைக் குறித்து வைத்திருக்கின்றன. நாளாகம ஆசிரியர் ஏகூவின் ஆட்சியைப் பற்றிச் சுருக்கமாகவே எழுதுகிறார். ஏனெனில், அவர் இஸ்ராயேல் மேல் அல்லாது, யூதாவின் மேல் மட்டும் தான் ஆர்வம் காட்டுகிறார் (காண்க.2 நாள் 22:7 - 9).

3. யூதாவைச் சேர்ந்த எரகுமேலின் குடும்பம், ஓபேத்தின் மகனும் அசரியா (5)வின் தந்தையுமாவார் (1 நாள் 2:38).

4. சிமியோன் இனத்தவர். யோசிபியாவின் மகன். யூதாவின் அரசன் எசக்கியாவின் காலத்தில் இவர் ஒரு குடும்பத்தின் தலைவர் (1 நாள் 4:35).

5. பென்யாமின் இனத்தவர். அனாத்தோத்து ஊரைச் சேர்ந்தவர். சவுலின் உறவினர். சிக்கிலாக்கில் தாவீதின் படையில் சேர்ந்து கொண்டவரில் ஒருவர் (நாள் 12:3).

ஏகூது (EHUD ஒற்றுமை)

1. கெராவின் புதல்வனும், பென்யாமினின் கொள்ளுப் பேரனுமாகிய இடக்கைப் பழக்கமுள்ள ஒரு வீரர். 18 ஆண்டுகளாக மோவாபியர்களின் ஆதிக்கத்திலிருந்த தன் நாட்டு மக்களுக்கு, எகிலோன் நாட்டு அரசனை நம்பிக்கைத் துரோகமாகக் கொன்று, விடுதலையளித்தார். இவ்வாறு இரண்டு தலைமுறைகளுக்கு அமைதியளித்தார் (நீதி 3:12 - 4:1).

ஒரு காலத்தில் இஸ்ராயேல் மோவாபு அரசன் எகிலோனுக்கு அடிமைப்பட்ட நாடாக இருந்தது. கப்பம் கட்டச்சென்ற ஏகூது, இறைவனிடமிருந்து அரசனுக்கு இரகசியச் செய்தி கொண்டுவந்திருப்பதாகப் பாசாங்கு செய்தார். எத்தகைய சந்தேகமும் அற்ற அரசன், தனது மெய்க்காவல்களை வெளியே அனுப்பிவிட்டு, இறைச் செய்தியைப்பெற எழுந்தபோது, இடக்கையனான ஏகூது வலப் பக்கத்திலிருந்த கத்தியை எடுத்து அரசனது வயிற்றில் குத்தி நம்பிக்கைத் துரோகமாகக் கொன்றார் (நீதி 3:15 -23).

பின் ஏகூது செயீராவுக்குத் தப்பியோடி, ஒரு படை திரட்டி வந்து யோர்தானின் ஆற்றுத்துறைகளைக் கைப்பற்றி, மற்ற இஸ்ராயேலரோடு சேர்ந்து, தங்களைக் கொடுமைப்படுத்திய மோவாபியரைக் கொன்று தீர்த்தார். இவ்வாறு இஸ்ராயேலர்களுக்கு ஏகூது விடுதலை அளித்தாலும் அவர் நீதிபதிகளில் ஒருவராகத் தனிப்பட்ட முறையில் குறிப்பிடப்படவில்லை. இதற்கு இவர் எகிலோனோடு நம்பிக்கைத் துரோகமாக நடந்து கொண்டது காரணமாக இருக்கலாம். எரே 11-இல் இஸ்ராயேல் தீவிர வீரர்களுள் இவரைச் சேர்க்கவில்லை. ஆனால் இந்நிகழ்ச்சியுரையின் உபாகமப் பாரம்பரிய முன்னுரையும் முடிவுரையும் (நீதி 3:12-15. 28-30; 4:1) இவரை இறைவனால் ஏவப்பட்ட விடுதலை வீரராகக் காட்டுகின்றன.

2. பிலிகானின் மகனும் பென்யாமினின் கொள்ளுப் பேரனுமாவார் (1 நாள் 7:10) அல்லது செபுலோனின் கொள்ளுப் பேரனுமாவார். மூலத்தில் இந்தத் தலைமுறை அட்டவணை செபுலோனின் தலைமுறை அட்டவணையாக இருந்திருக்கலாம். செபுலோனுக்குப் பதிலாகப் பென்யாமின் என்று (1 நாள். 7:6) தவறாகக் குறிக்கப்பட்டுவிட்டதால், ஏகூதின் சகோதரன் பென்யாமினையும் சேர்த்துப் பென்யாமின் இனத்தைச் சேர்ந்த பெயர்கள் புகுத்தப்பட்டுள்ளன (பென்யாமினின் தலைமுறைப் பட்டியல் 1 நாள். 8-இல் கொடுக்கப்பட்டுள்ளது).

ஏக்கேர் (EKER வேர், சந்ததி)

பாபிலோனிய அடிமைத்தனத்துக்குப் பின்னால் உள்ள எரகுமேல் என்ற குலத்தைச் சேர்ந்த இராமின் மூன்றாம் மகனாவார் (1 நாள் 2:27).

ஏங்கக்கோரே/ஏன்-கக்கோரே (EN-HAKKO-RE - கௌதாரி ஊற்று, மன்றாடுகிறவன் ஊற்று)

இலகியிலுள்ள ஒரு நீரூற்று. அதிலிருந்து சிம்சோன் நீர் குடித்தார். சிம்சோன் மிகுந்த தாகத்தினால் ஆண்டவரை நோக்கி மன்றாடினார். எனவே, ஆண்டவர் புதுமையாக அவருக்குக் கழுதைத் தாடையின் கடைப்பல்லைத் திறந்து, அதிலிருந்து தாகத்திற்கு நீர் கொடுத்தார். சிம்சோனும் அந்த நீரைக் குடித்துப் புத்துயிர் பெற்றார் (நீதி 15:19).

ஏங்கதா/ஏன் கதா (EN-HADDAH - ஊற்று)

இசக்காரில் உள்ள ஒரு நகரம் (யோசு 19:21). அநேகமாகத் தாபோர் மலையின் கிழக்கில் 10 கி.மீ. தொலைவில் இக்கால ஏல்கதேதே என்ற இடத்தில் அமைந்திருந்தது எனலாம்.

ஏங்கன்னிம்/ஏன்-கன்னிம் (EN-GANNIM - தோட்டங்களின் ஊற்று)

1. அதுல்லாம் அருகிலுள்ள யூதா பகுதியிலுள்ள ஒரு நகரம் (யோசு 19:21). இது இருந்த இடம் இக்காலக் கிர்பெத்து உம்மா சீனா-ஆக இருக்கலாம் என்று கூறப்பட்டாலும் பேத்து-செமேசுக்குத் தெற்கில் 3 கி.மீ. தொலைவிலும் பெயிட் செமாலுக்கு அருகிலுமுள்ள ஊற்றாகிய அயின்பத்தீர் பொருத்தமான இடமாக இருக்கலாம்.

2. இசக்காரின் பகுதியில் (யோசு 19:21) கெரிசோமியர்களுக்கு லேவியர் நகரமாக அளிக்கப்பட்டது (21:29). எசுதிரலோன் சமவெளியின் தெற்கிலுள்ள இஸ்ராயேலிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலச் செனின் என்பர். ஒரு வேளை கிர்பெத்து -பெயிட் - சான் அருகிலுள்ளது என்றும் அடையாளம் காட்டுவர். எருசலேமிலிருந்தும் சமாரியாவிலிருந்தும் வரக்கூடிய முக்கிய சாலை இந்த இடத்தில்தான் சமவெளியில் நுழைகிறது. அநேகமாக ஏங்கன்னிம் என்ற பெயர் ஏன்-ஓனாம் என்ற மூலப்பெயருக்குப் பதிலாகப் பயன்பட்டுள்ளது என்று சிலர் கருதுவர். 1 நாள் 6:73-இல் இவ்விடம் ஆனேம் என்று அழைக்கப்படுகிறது.

ஏங்காசோர்/ஏன்-காசோர் (EN-HAZOR -ஆசோரின் ஊற்று)

நப்தலி இனத்திற்குரிய பகுதியில் உள்ள நன்கு பாதுகாக்கப்பட்ட நகர்களில் ஒன்று (யோசு 19:37). கலிலேயாவின் வடக்கு மலைப்பகுதியில் உள்ள கத்சூருக்கு அருகில் உள்ள கிர்பெத்து-கசிரே என்ற இடத்தோடு அடையாளம் காட்டப்படுகிறது.

ஏங்கேதி/ஏன்-கேதி (EN-GEDI கன்றுக் குட்டி ஊற்று)

சாக்கடலின் மேற்குப் பகுதியின் மத்தியிலுள்ள ஒரு முக்கியமான பாலைவனச் சோலை. எருசலேமிற்குத் தென்கிழக்கில் 56 கி.மீ. தொலைவில் உள்ளது. 300 அல்லது 400 அடி உயரமுள்ள பாறையின் மீது அமைந்துள்ள ஊற்றிலிருந்து தனது நீரைப் பெற்றது. அங்குத் தென்னை, கமுகு, திராட்சை போன்ற மரம் கொடி வகைகள் வளர்வதற்கு உரிய சூழ்நிலை அமைந்திருந்தது (உ.ச. 1:14; சீரா 24:14). இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்படுவது பற்றிய எசக்கியேலின் காட்சியில் எங்கேதியிலிருந்து ஏன் எகிலாயிம் வரை மீனவர் சாக்கடலில் மீன்பிடிப்பர் என்று கூறப்பட்டுள்ளது (எச 47:10).

ஏங்கேதியின் பழங்கால இடம் தேல் எச்-யூருமில் உள்ள ஊற்றுக்குத் தென்கிழக்கில் அலீன் சிடியின் இக்காலக் குடியிருப்பின் அருகில் உள்ளது.

ஏங்கேதியில் எமோரியர்கள் குடியேறியிருந்தனர். அவர்களை ஆபிரகாம் காலத்தில் கெதொர்லாகோமேரும் அவரது கூட்டணியினரும் அடிமைப்படுத்தினர் (ஆதி 14:7; இங்குக் கசீசோன்-தாமர்தான் ஏங்கேதி). பிற்காலத்தில், யூதாவின் பாலைவன மாவட்டத்தில் இவ்வூர் சேர்க்கப்பட்டது (யோசு 15:62).

சவுலிடமிருந்து தப்பியோடிய தாவீது, சவுல் தொடர்ந்து விரட்டுவதிலிருந்து இங்கு தான் பாதுகாப்புத் தேடினார் (1 சாமு 23:29). இவ்வூரின் அருகிலுள்ள ஒரு குகையில்தான் தாவீது சவுலின் ஆடையின் ஒரு துண்டைச் சவுலுக்குத் தெரியாமல் வெட்டி, அவர் உயிருக்கு ஆபத்து இழைக்காமல் விட்ட நிகழ்ச்சி நடந்தது (24:1-5).

பிற்காலத்தில் மோவாபியர், அம்மோனியர் மெகூனிமியர் ஒன்று சேர்ந்த படை ஏங்கேதியில் (உண்மையில் கசசோன்-தாமார் அருகில்) சாக்கடலைக் கடந்தபின் கூடியது (2 நாள் 20:2). சீசு ஏற்றத்தில் யூதாவின் படையை எதிர்கொள்ள வாய்ப்புக் கிடைக்குமுன்னே அவர் ஒருவரை ஒருவர் அழித்துக்கொண்டனர் (20:23).

ஏசக்கு (ESEK அவதூறு, போர்ராட்டம்)

ஈசாக்கின் வேலைக்காரர்கள் வெட்டிய கிணறு. கெராரின் மேய்ப்பர் இந்தக் கிணறு தங்களுடையது என்று சொல்லி ஈசாக்கின் மேய்ப்பர்களோடு சச்சரவு பண்ணியதால் ஈசாக்கு அதைக் கைவிட்டார். இதிலிருந்து இப்பெயர் தோன்றியது (ஆதி 26:20).

இது எங்கு இருந்தது என்று கூற முடியாது. ஆனால் கெராருக்கும் பேத்து செபாவுக்கும் இடையில், அநேகமாய் வாடி எஸ்-செரியாவில் இருந்ததாக நம்பப்படுகிறது.

ஏசயா (ISAIAH - யாவே மீட்பாயிருக்கிறார்)

காண்க. ஏசயாவின் திருநூல்(முதலாம்): பெயரும் வாழ்வும், வரலாற்றுப் பின்னணி.

ஏசயாவின் திருநூல் (முதல்) - தூயவரின் தூதர் (BOOK OF ISAIAH)

1. முன்னுரை:-

பிற்கால இறைவாக்கினரின் நூல்கள் என்று எபிரேய விவிலியம் அழைக்கும் தொகுப்பில், ஏசயா திருநூல் முதலாவதாகும். இது பெரிய அல்லது நெடுநூல் இறைவாக்கினரின் நூல்களில், முதலாவதாகும். இந்நூல், இறைவாக்கினரின் மீட்புத் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கொண்ட உன்னதமான இறைவாக்குச் செயல்களைக் கொண்டுள்ளது. இதில், ஆழ்ந்த சமய போதனையைக் காணலாம். அஃதோடு பழைய ஏற்பாட்டிலேயே இதில்தான் மிகவும் சிறந்த நயமிக்க எபிரேய இலக்கிய நடையையும் நாம் கண்டு களிக்கலாம்.

2. எத்தனை நூல்கள்?

இந்நூல் சற்றுச் சிக்கலானது. இதில் எத்தனை நூல்கள் உள்ளன? எத்தனை ஆசிரியர்கள் இந்நூலை எழுதினர்? எக்காலத்தில் இந்நூல்கள் எழுதப்பட்டன என்ற இவை போன்ற பல கேள்விகள் எழ இடமுண்டு. கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை இறைவாக்கினர் ஏசயாதான் இந்நூல் முழுமைக்கும் ஆசிரியர் என்று எவ்விதத் தயக்கமுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.கி.பி. 19,20-ஆம் நூற்றாண்டுகளில் இந்நூல் பற்றிப் பல ஆய்வுகள் நடந்தன. அவற்றின் விளைவாக, இப்போது, ஆய்வாளர்கள், இந்நூலை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கின்றனர். முதல் 35 அதிகாரங்கள் அடங்கிய பகுதிக்கு, ஆமோசின் மகனும் இறைவாக்கினருமான ஏசயா ஆசிரியராவார் என்பர். இப்பகுதி யூதாவின் அரசர்களான ஊசியா காலம் தொடங்கி எசக்கியாவின் காலம் வரை, இடையிட்ட காலத்தில் அறிவிக்கப்பட்டதாகக் கருதப்படும். இப்பகுதியை அடுத்து வரும் நான்கு அதிகாரங்கள், எசக்கியாவின் காலத்து வரலாற்றை விளக்குகின்றன. இப்பகுதியை எழுதியது யார் என்பது பற்றி உறுதியாகக் கூற முடியாது. இதை ஏசயாவின் சீடர்கள் எழுதிப் பிற்சேர்க்கையாகத் தொகுத்தனர் என்று கூறுவது பொருந்தும். ஏசயா திருநூலின் முதல் முப்பத்தொன்பது அதிகாரங்கள் அடங்கிய இப்பகுதி ''முதலாம் ஏசயா'' என்று இப்பொழுது அழைக்கப்பெறுகின்றது.

அடுத்து வரும் அதி 40-55 அடங்கிய பகுதியில், ஏசயா பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. ஆயினும் இப்பகுதிக்கும் ஏசயாவின் பெயர் சூட்டுவது வழக்கமாகும். இதில், கி.மு. 587-இல் பாபிலோனுக்கு நாடு கடத்தல் பற்றிய முன்னறிவிப்பு இல்லை.

மாறாக நாடு கடத்தப்படுதல் ஏற்கனவே நிகழ்ந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பகுதிக் கருப்பொருள், ஏசயா திருநூலின் முதல் பகுதியிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்று எப்போதும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. இப்பகுதிக்குப் பெயர் தெரியாத ஓர் இறைவாக்கினர் ஆசிரியராக இருந்திருக்கலாம். இப்பகுதியை உபஏசயா அல்லது இரண்டாம் ஏசயா திருநூல் என்று ஆய்வாளர்கள் அழைப்பர்.

இறுதியாக வரும் அதி 56-66 அடங்கிய பகுதி, கி.மு. 587-இல் இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டுத் தங்கள் நாடு திரும்பிய பின் நிலவிய கால நிலையை விவரிக்கிறது. இப்பகுதியில் உள்ள இறைவாக்குளில் நெருங்கிய ஒருமைப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. இப்பகுதி மூன்றாம் ஏசயா திருநூல் என்றழைக்கப்படும்.

நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் மூன்றாம் ஏசயா திருநூல் எப்போது எழுதப்பட்டது என்று துல்லியமாகக் கூறுவது கடினம். ஆயினும், பின் வரும் விளக்கம் நம்பக்கூடியதாக உள்ளது. இறைவாக்கினர் ஏசயா கி.மு. 740-690-க்கு இடையிட்ட காலத்தில் போதித்தார். அவருடைய செய்தியை அவருடைய சீடர்கள் பாடல் வடிவம் கொண்ட இறைவாக்குகளாகத் தொகுத்தனர் (ஏச 8:16). ஏசயாவுக்குப் பின்னும் அவருடைய சீடர்கள் அவரது பாணியில் தொடர்ந்து போதித்தனர். அவர்கள் தாங்களே எழுதிய இறைவாக்குகளை ஏசயாவின் மூலப்பகுதியோடு (அதி 1 - 39) சேர்த்துத் தொகுத்தனர். இந்தச் சீடர்கள் குழுவைத்தான். ''ஏசயா குழு'' என்று ஆய்வாளர்கள் அழைப்பர். இக்குழு எருசலேமின் அழிவுக்குப் பின்னும் யூதாவின் மக்கள் நாடு கடத்தப்பட்ட நிலையிலும் தொடர்ந்து செயலாற்றியது.

நாடு கடத்தப்பட்ட காலத்தில் கவிஞரும் இறைவாக்கினருமான பெயர் அறியப்படாத ஒருவர் தோன்றுகிறார். இவர் தனக்கே உரிய முறையில் தனித்தன்மையுடையவர். இவர் அழகிய நயமிக்க பாடல்களில் ஏசயாவின் தூதைத் தொடர்ந்துரைக்கிறார். நாடு கடத்தப்பட்ட நிலைமைக்கும், அழிவிலிருந்து திரும்பி வந்த நிலைமைக்கும் (கி.மு. 537) ஏற்றவாறு இறைவனது திருவுள்ளத்தை எடுத்துரைக்கிறார். இவரை உப-ஏசயா அல்லது இரண்டாம் ஏசயா என்றழைக்கிறோம். அதி. 40 - 55 ஆகிய பகுதி இவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இரண்டாம் ஏசயாவை அடுத்து இலக்கியச் சிறப்புடைய மற்றொரு இறைவாக்கினரோ, பல இறைவாக்கினர்களோ ஏசயாவின் தூதைத் தொடர்ந்துரைத்ததாகத் தெரிகிறது. இவர்களின் பெயர்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஆய்வாளர்கள் இப்பகுதியின் ஆசிரியர்களை ''மூன்றாம் ஏசயா என்ற ஒரே தொகைச் சொல்லால் குறிப்பிடுவர். ''மூன்றாம் ஏசயா'' எருசலேமும் அதன் ஆலயமும் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட பின் தூதுரைத்தார். அக்கால வரலாற்றுச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இறைவாக்குகளை எழுதினார். இஸ்ராயேலின் புதிய நிலையில் தெளிவாக அறியப்பட்ட இறைச் செய்தியின் பண்புகளை மிகவும் வலியுறுத்தினார்.

அறிஞர்கள் ஒரு சிலர் எருசலேம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட காலத்தில், 2-ஆம் ஏசயாவை எழுதியவரே, 3-ஆம் ஏசயாவையும் எழுதியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். ஆயினும் பழைய ஏற்பாட்டு விவிலிய நூல்கள், நாம் கொண்டிருக்கும் வடிவில் கி.மு. 400 - 200-க்கு இடையிட்ட காலத்தில்தான் இறுதிவடிவம் பெற்று எழுந்தன என்று பொதுவாகக் கூறலாம். எனவே இக்காலத்தில்தான் ஏசயாவின் இறைவாக்கு அவருடைய சீடர்களின் தொடர்வாக்குகள், பிற்காலக் காட்சியுரைகள் (அதி 24-27; 34:35) ஆகிய இவையனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரே நூலாக உருவாயின என்று கருதுவதே பொருத்தமானதாகும். இந்நிலையில், ஒரு வேளை ஏசயாவின் குழுவினர் மறைந்து விட்டிருக்கலாம். உண்மையிலேயே இறைவாக்குச் செயல் கி.பி. 400-க்குப்பின் மறைந்து விட்டதாகத் தெரிகிறது. மீண்டும் திருமுழுக்கு யோவானில்தான் தொடர்கிறது.

நாம் கொண்டிருக்கும் வடிவில் ஏசயா திருநூலைச் சீராக்குத் திருநூல் ஆசிரியர் (கி.மு. 190) அறிந்திருப்பதாகத் தெரிகிறது (சீரா48:23-25). புதிய ஏற்பாடு ஆசிரியர்கள் இந்நூலில் எல்லாப் பகுதிகளையும் ''ஏசயாவின் திருநூல்'' என்றே குறிப்பிடுகின்றனர்.

ஏசயா திருநூல் தோன்றியது பற்றி மேற் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும் அறிஞர்கள் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆயினும் யூத, கத்தோலிக்க, பிரிவினைச் சபைகளைச் சார்ந்த சிலர் மூன்று பகுதிகளையும் ஒரே ஆசிரியர்தான் எழுதினார் என்று கூறுவர். 1908-இல் பாப்புவின், விவிலியக்குழு, போதிய ஆதாரமின்றி அவசர முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை விடுத்தது. மேற்கூறப்பட்டவை இந்த எச்சரிக்கைக்கு எதிரானவை அல்ல. அதற்குப் பின் நடந்துள்ள பல இலக்கிய, தொல்பொருள், புதைபொருள் ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு ஏசயா திருநூலைப் பலபேர் வெவ்வேறுபட்ட காலத்தில் எழுதியுள்ளனர் என்று அறிஞர்கள் கருதத் தொடங்கினர். இப்போது போதிய சான்றுகளையுடைய இக்கருதுகோளைப் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர். இப் பிரச்சனைபற்றி (2-ஆம், 3-ஆம் ஏசயா பகுதிகளுக்கு வழங்கப்படும் அறிமுகத்தில்) மேலும் சிறிது விளக்கங்களைக் காணலாம்.

3. பெயரும் வாழ்வும்:-

ஏசயா ''ஏசாயாகு'' என்ற எபிரேயப் பெயரின் தமிழாக்கமாகும். இப்பெயருக்கு ''யாவேயின் மீட்பு'' அல்லது ''யாவே மீட்பாயிருக்கிறார்'' என்று பொருள் கொள்ளலாம். இப்பெயர் யூதர்களிடையே அசாதாரணப் பெயரன்று; விவிலியத்தில் பிற இடங்களில் காணப்படுகிறது (1 நாள் 3:21; 7:3; 12:6; 23:20; 24:21-2; எஸ் 10:31).

இறைவாக்கினர் ஏசயாவைப்பற்றிச் சிறிதளவே நமக்குத்தெரியவந்துள்ளது. அதுவும் ஏச 1 - 39-இல் இவர் தம்மைப் பற்றிக் கூறுவதிலிருந்தே அறிகிறோம். இவர் கி.மு. 4 765-ஐ ஒட்டி எருசலேமில் பிறந்திருக்க வேண்டும். இவர் யூதா நாட்டைச் சேர்ந்தவர் என்றும், இவருடைய தந்தையின் பெயர் ஆமோஸ் என்றும் அறிகின்றோம். இவருடைய தந்தை வேறு. இறைவாக்கினர் ஆமோஸ் வேறு. அரசன் ஊசியாவின் தந்தையின் சகோதரரான அமாசியாதான் இறைவாக்கினர் ஏசயாவின் தந்தையான ஆமோஸ் என்று யூதப் பாரம்பரியம் கருதுகிறது. இக்கூற்று எவ்வளவு உண்மையானது என்று கூறுவதற்கில்லை.

ஊசியா (கி.மு. 783-42), யோத்தாம் (742-35), ஆகாசு (735-15), எசக்கியா (715-687) ஆகிய நான்கு யூத அரசர்களின் காலத்தில் ஏசயா இறைவாக்குரைத்துள்ளார். ஏச 6:1-இன்படி ஊசியா இறந்த ஆண்டில் இறைவாக்குரைக்கும் அழைப்புப் பெற்றார். அப்போது இவர் பக்தியில் சிறந்த இளைஞராக இருந்திருக்க வேண்டும். எபிரேயர்கள் தங்களது பெயர்களின் பொருள்பற்றி அதிகக் கவனம் செலுத்தினர். இந்த வருங்கால இறைவாக்கினர் தனது பெயரின் அடையாளப் பொருள் பற்றி அடிக்கடி சிந்தித்திருக்க வேண்டும். யூதாவில் நிலவிய ஒழுக்கச் சீர்கேட்டை அனுபவத்தால் அறிந்திருந்தார். அதற்கு ஒரே மாற்று யாவேயின் மீட்புத் தலையீடாகும் என்பதையும் உணர்ந்திருந்தார். வட அரசாகிய இஸ்ராயேலில் இறைவாக்கினர்கள் ஆமோஸ், ஓசேயா வழியாகச் செய்ததுபோல், யூதாவில் நிலவிய ஊழல்களை எதிர்த்து அறைகூவல் விடும் ஒரு பெரிய இறைவாக்கினரை யாவே தோன்றச் செய்யமாட்டாரா என்று ஏசயா ஏங்கியிருக்கக் கூடும். இத்தகைய மனநிலையுடைய ஏசயா இறைவன் அழைத்தவுடன் தூதுரைக்க ஆவலோடு முன்வந்ததை நாம் புரிந்து கொள்ள முடியும். வழிபாட்டுச் சூழ்நிலையில் ஏசயா தனது பணிக்கு அழைக்கப்படுகிறார். ஆலயத்தில் அரியணைமீது அமர்ந்து யாவே முழுவதும் ஆட்கொள்ளும் முறையில் காட்சி அளிக்கிறார். ஏசயாவைச் சுத்தி செய்கிறார்; அழைக்கிறார். தொடக்கக் காட்சியின் வடிவமும் பொருளும் ஏசயாவை ஆட்கொள்ளுகிறது. அது இவரது வருங்கால வாழ்வையும் போதகத்தையும் அதிகமாகப்

பாதிக்கிறது. மோசே (யாத் 3:11பின்), எரேமியா (எரே 1:6-8) ஆகியவர்களோடு ஒப்பிடும்போது ஏசயா தன் பணியை விரும்பி ஏற்றார். அவர் துணிவுள்ளவர், சுயமாகச் செயல்படுபவர் - என அறிகின்றோம். இத் தொடக்கக் காட்சிக்கு முன்னும் இவர் இறைவாக்கு உரைத்திருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். இவர் திருமணமானவர். தனது மனைவியை இறைவாக்கினள் என்று குறிப்பிடுகிறார் (ஏச 8:3). இவருடைய இரு புதல்வர்களின் பெயர்கள் அடையாளப் பொருளுள்ளவை; இறைவாக்கு நோக்குடையவை. முதல் மகனது பெயர் ''மகளே-சலால்-காஸ்-பாஸ்'' (கொள்ளை-துரிதம்-தீவிரம்; 8:3). ''செயார் யாசுபு'' (எஞ்சியது திரும்பும் - 7:3; 10:20). இரண்டாவது மகனது பெயர்) ''மகோர்-சலால்-காஸ்-பாஸ்'' (கொள்ளை-துரிதம்-தீவிரம்; 8:3). இப்பெயர்களை ஏசயா தன் இறைவாக்குப் பணியில் அடையாளங்களாகப் பயன்படுத்துகிறார்.

இவர் செல்வாக்கு மிகுந்த உயர் குடியில் பிறந்தவர் 'என்று கூறுவர். இதற்குச் சான்றாக, இவருடைய உயரிய, எபிரேய மொழி நடை, கவி நயம், அரசியல் அறிவு, அரசவைக்கு எளிதாகச் சென்று வருவதற்குரிய உரிமைகள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுவர். இதற்கு மாறாக வேறு சிலர் இவர் உயர் குடிப்பிறப்பும், உயர்ந்த மனப்பண்பும், இவர் ஆற்றிய பணியின் மேன்மையுமே இவரை உயர் குடி மகனாக்கின என்று வாதாடுவர்.

ஏசயா இஸ்ராயேலின் ஆற்றல் மிக்க கவிஞர்களில் ஒருவராவார். சிந்தனை உயர்விலும், கற்பனை வளத்திலும், கூர்ந்து நோக்கும் ஆற்றலிலும், உயிரோட்டமாக விவரிப்பதிலும், ஆழ்ந்த மன உணர்விலும் அக நேர்மையிலும் சிறந்த கவியாக விளங்குகிறார். இவர் உயரிய இலக்கிய நடையில், தமது இறைவாக்குகளைத் தந்துள்ளார். இவரது நடை தெளிவானது; நேரடியானது; மொழி சுருக்கமானது; மேன்மை மிக்கது. ஏசயா ஆழ்ந்த சமயப்பற்றுடையவர்; ஆலயத்தோடும் குருக்களோடும் நெருங்கிய தொடர்புடையவர் (6:1). ஆனால் குருக்கள் குலத்தைச் சேர்ந்தவர் அல்லர்.

ஏசயா அரசியல் வல்லுநர்; புனிதருமாவார். ''பழைய ஏற்பாட்டின் தாமஸ்மூர்'' என்றே அழைக்கலாம். அரசியலிலும் அரசர்களிடமும் செல்வாக்குடையவர். அரசியல் பணிகளில் ஆலோசனை அளித்து வந்தார் (3:1-17; 7:1-25; 8:1-8; 10:24-27; 14:24-32; 20:1-6; 30:1-18; 31:1-9; 39:1-8). அரச அவையில் சலுகை பெற்றவர். ஆனாலும் அரசவையைச் சேர்ந்தவர் அல்லர். அரசர்களை எதிர்த்து இறைவனின் உரிமைக்காகப் போராடியவர்.

நகர வாசியானாலும், ஏசயா கிராம வாழ்வையும் அறிந்திருந்தார் என்பதற்கு விலங்குகள் திரும்பி வருதல் (1:3), திராட்சை, வெள்ளரித் தோட்டக் காவல் குடிசைகளில் தனித்த வாழ்வு (1:8), திராட்சை பயிரிட வேண்டிய முறை (5:1-7), நில விளைச்சலின் கணக்கு (5:10), பயிரைச் சேதப்படுத்தும் புயல் முதலியவை பற்றிய அவருடைய குறிப்புகள் தக்க சான்றுகளாகும்.

ஏசயா ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் இறைவாக்குப் பணி புரிந்தார். இக்காலத்தில் வட அரசின்மேல் இறைவாக்கினர் ஆமோஸ் முன்னறிவித்த பேரழிவு சமாரியாவின் வீழ்ச்சியில் (கி.மு. 722-21) நிறைவேறியது. வட அரசில், ஆமோஸ் பெத்தேலில் தனது கண்டனங்களை அறிவித்தார். ஓசேயா இறைவனது அன்பை எடுத்துக் காட்டித்தூதுரைத்தார். அப்போது ஏசயா இளைஞராக இருந்திருக்க வேண்டும். இடுக்கண் மிக்க ஒரு காலக் கட்டத்தில் ஏசயா இறைவாக்குரைத்தார். இஸ்ராயேல், யூதா ஆகியவற்றின் வீழ்ச்சியையும் நாட்டின் பாவங்களுக்கு உரிய தண்டனையையும் அறிவிப்பது அவரது பணியாகும். அவர் அதைத் துணிவோடும் ஆற்றலோடும் செய்தார். இவரது சமகாலத்தவரான யூதாவைச் சேர்ந்த மீக்கா என்ற மற்றொரு இறைவாக்கினர் எருசலேமில் தனது செய்தியை மக்களுக்கு அறிவித்து வந்தார். ஆயினும், ஏசயாவும்

மீக்காவும் எப்போதாவது சந்தித்தனரா என்பதற்குரிய ஒரு சான்றுமில்லை.

இஸ்ராயேலின் இறைவாக்கினருள் ஏசயா மிகப் பெரியவர் என்றால் அது மிகையாகாது. அவர் சமயத் துறையில் தனித்தன்மையுடையவர் மட்டுமல்லர்; தன்னைப் பின்பற்றுமாறு சீடர்களைத் தூண்டுவதில் ஆற்றல் மிக்கவர். இப்படி ஏசயாவைப் பின்பற்றிய சீடர்கள் ''ஏசயாவின் குழு'' என்றழைக்கப் பட்டனர். இவர்கள் ஏசயாவின் வாக்குகளை ஒன்று சேர்த்துப் பாதுகாத்தனர். முதலாம் ஏசயாவை முடிக்கும் அதி 36-39 அடங்கிய உரைநடைப்பகுதி இக்குழுவினரின் படைப் பாகும். இவர்கள் தங்களது குருவின் மூல நூலோடு அவரது பாணியில் தாங்களே படைத்த சில பகுதிகளையும் சேர்த்துப் பதிப்பித்தனர். பாபிலோனுக்கு எதிரான இறைவாக்குகள் (அதி 13-14), அதி 24-27-இல் வரும் காட்சி, அதி 33-35-இல் வரும் பாடல் ஆகியவை இப்படிச்சேர்க்கப்பட்டவைதாம். இக்குழுவினர் ஏசயாவின் பணியைத் தொடர்ந்து நடத்தினர். அவருடைய கருத்துக்களைப் பின்பற்றி அவரது பெயரால் கி.மு. 5-ஆம் நூற்றாண்டு வரை இறைவாக்குரைத்தனர். இது ஒன்றே ஏசயாவின் உயர்வைக் கணிக்கப் போதிய சான்றாகும். ஏசயாவின் இலக்கியத் தனித்திறமை அவருக்கே உரிய ஓர் இறைவாக்கு வடிவத்தைக் கொடுத்திருக்க வேண்டும். இக்குழுவினர், ஏசயாவின் இறைவாக்கு வடிவினைப் பின்பற்றித் தொடர்ந்து போதித்தனர்; இவ்வடிவினிலேயே இறைவாக்குகளைத் தொடர்ந்து எழுதினர். இதனால் இந்நூலின் பல பகுதிகள் தன்மையால் மிகவும் வேறுபட்டிருப்பினும், வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டிருப்பினும் ஏசயாவின் பெயரையே தாங்கி நிற்கின்றன.

2 நாள் 26:22-இன் படி ஏசயா ஊசியா ஆட்சி பற்றிய ஒரு வரலாறு எழுதியதாகத் தெரிகிறது. ஆனால் இந்நூல் பற்றி ஒன்றும் அறிவதற்கு ஏற்ற சான்றுகள் இல்லை. மேலும் சில நூல்களையும் இவர் எழுதியதாகக் கூறுவர்.

ஏசயா எப்போது, எப்படி இறந்தார் என்று உறுதியாகக் கூறமுடியாது. பிற்கால யூதப் பாரம்பரியம், இவர், தீய அரசன் மனாசே ஆட்சிக் காலத்தில் (687-42) மரப்பொந்தில் வைத்து இரம்பத்தால் அறுக்கப்பட்டு மறைசாட்சியாக இறந்தார் என்று கூறுகிறது. இக்கூற்றை உறுதிசெய்யப்போதிய சான்றுகள் இல்லை. மனாசே அப்படிச் செய்தால், வியப்பதற்கும் ஒன்றுமில்லை. திருச்சபையின் புனிதர் நாளேட்டில் ஏசயாவின் விழா சூலைத் திங்கள் ஆறாம் நாள் கொண்டாடப் படுகிறது. அவருக்குரியது மறைசாட்சித் திருப்பலியாகும்.

கிறிஸ்துவ கலைப்படைப்புகளை விவரிக்கும் நூல் ஏசயாவின் ஆகமத்திலிருந்து பல காட்சிகளைத் தருகிறது. சான்றாகச் செராபிம்களின் காட்சி (6:1-10), எசக்கிய மன்னனுக்கு அவர் செய்த அருஞ்செயல் (அரசனைக் குணமாக்கி அவனுக்காகச் சூரிய நிழலைத் திரும்பப் போகச் செய்தது 30:1-8), அவருடைய மறைசாட்சி மரணம் ஆகியவையாகும். உரோமையிலுள்ள பிரிசிக்கில்லாவின் சுரங்கக் கல்லறையில் காணப்படும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவர் ஓவியம் மடியில் ஒரு குழந்தையைக் கொண்டு அமர்ந்திருக்கும் ஒரு மாதின் அருகில் ஒரு மனிதன் எழுத்துச் சுருளைக் கையில் கொண்டு நிற்பதாகச் சித்தரிக்கிறது. இவ்வோவியம் ''கன்னி கருத்தரித்து ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்; அவன் இம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான்'' (7:14) என்று இறைவாக்குரைக்கும் ஏசயாவைக் குறிக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

4. வரலாற்றுப் பின்னணி:-

ஏசயா என்ற மனிதரையும் அவரது இறைவாக்குச் செய்திகளையும் புரிந்து கொள்ள அவரது காலத்திய வரலாற்று, அரசியல், சமூக, சமயச் சூழ்நிலைகளை நன்கு நாம் அறிய வேண்டும். ஏசயா தனது செய்தியை முதன்மையாகத் தனது காலத்தவர்களுக்கே, கி.மு. 8-ஆம் நூற்றாண்டைச சேர்ந்த இலக்கியத்திலும் காட்சிப்படைப்பிலும் கொடுத்தா

லும், அவர் எக்காலத்திலும் மாறாத இறை உண்மைகளை நமக்கெல்லாம் அளிக்கின்றார்.

எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, வட அரசாகிய இஸ்ராயேலும் தென்னரசாகிய யூதாவும் தங்களது முன்னைப் பகைமையையும் போட்டிகளையும் போராட்டங்களையும் மறந்துவிட்டு, ஒற்றுமையாய் அமைதியாய் வாழத் தொடங்கினர். இது இரு நாட்டவரது பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. அண்டை நாடுகளில் நிலவிய அரசியல் நிலையும் இரு நாடுகளின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தது. தெற்கில் எகிப்து நாடு மந்த நிலையில் இருந்தது. அசீரியா நாட்டில் குழப்பம் மிகுந்திருந்தது. அதனால் பாலஸ்தீன நாடுகளின் மீது கவனத்தைச் செலுத்த அசீரியாவுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை, இச்சூழ்நிலை இஸ்ராயேல், யூதா ஆகிய நாடுகள் வளர்ச்சியுறுவதற்குக் கால வாய்ப்பினை அளித்தது. இரண்டாம் எரொபயாமின் (கி.மு. 797-762) நீண்ட பலம் வாய்ந்த ஆட்சியின்கீழ், இஸ்ராயேல் நாட்டின் பரப்பளவு விரிந்தது. அயல் நாடுகள் செலுத்திய கப்பத்தால் நாடு இதுவரை கண்டிராத வளமுற்று விளங்கியது. இதை நாம் ஆமோஸ், ஓசேயா, மீக்கா போன்ற இறைவாக்கினர்களின் கூற்றுக்களிலிருந்தும், தொல் பொருள் ஆய்வுகளிலிருந்தும் அறிகிறோம். இந்த வளம் எரொபயாமின் மரணத்திற்குப் பின்னும் நீடித்தது.

அதே காலத்தில் யூதாவும் செழிப்புற்றது. ஊசியாவின் ஆட்சியின்கீழ் (கி.மு. 783-742) யூதா மேற்கில் பெலிஸ்தியரை வென்றது (2 நாள் 26:1-15); கிழக்கில் அம்மோனியர்களையும் அராபியர்களையும் வென்று, கப்பம் கட்டச் செய்தது. ஊசியா என்ற வேந்தன் அக்காபா வளைகுடா வரை அமைந்த நாடுகளை வென்று அரசோச்சினார். உழவுத் தொழில் வளர்ந்தது. உலோகத் தொழில் சிறப்புற்றது. இராணுவம் சீர்திருத்தப்பெற்று நாட்டின் பாதுகாப்பு நன்கு வலுவடைந்தது. எருசலேமின் பாதுகாப்பு மிகுதியானது (2 நாள் 21:1-9). கலாச்சாரமும் வளர்ந்தது. இக்காலத்தைப் பற்றி ''அவர்கள் நாடு பொன் வெள்ளியால் நிறைந்துள்ளது. அவர்களுடைய கருவூலத்திற்கு அளவு இல்லை. அவர்களது நாட்டில் குதிரைப் படையும் மிகுதி, அவர்களின் தேர்ப்படைகள் எண்ணிறந்தவை'' என்று ஏசயா (2:7-8) கூறுகிறார்.

எரொபயாம், ஊசியா ஆகியோரின் ஆட்சியின் முடிவில், அசீரிய அரசியலில் உறுதியான மாற்றம் ஏற்பட்டது. மூன்றாம் திகிலாத்துபிலேசர் (கி.மு. 745-727) அசீரிய மன்னன் ஆனார். இவரை விவிலியம் ''புல்'' என்றழைக்கிறது. உள் நாட்டுக் குழப்பங்கள் தீர்ந்தன. இவர் தலைமையில் அசீரியா மீண்டும் போர்க்கோலம் பூண்டு வெற்றிப் பாதையில் முன்னேறியது. அசீரியாவிலிருந்து வரும் பேராபத்தின் நிழல் அண்டை நாடுகள் முழுவதும் பரவியது. கண்டிப்பு மிக்க திகிலாத்து பிலேசர் தனது சேனையை மேற்கு நோக்கிச் செலுத்தி சீரியாவைக் கைப்பற்றினார். அடுத்து சீரியா-பாலஸ்தீன சிறு நாடுகளைக் கைப்பற்ற முடிவு செய்தார். அவரை எதிர்த்த நாடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. வென்ற பகுதிகளைத் தனது பேரரசின் ஒரு பகுதியாக்கிக் கொண்டார். போரில் சிறைப்பிடித்த மக்களைத் தன் அரசின் வட பகுதிகளுக்கு நாடு கடத்தித் தன் அரசின் பிற பகுதிகளிலிருந்த மக்களைக் கைப்பற்றிய நாட்டிற்குள் குடியேற்றினார்.

இரண்டாம் எரொபயாமின் ஆட்சிக்குப் பின் இஸ்ராயேலில் அரசியல் குழப்பங்களும் கொலைகளும் மிகுந்தன. புதிய அரச பரம்பரைகள் தோன்றின. எரொபயாமின் மகன் செக்கரியா (746-45) பதவிக்கு வந்த ஆறு மாதத்திற்குள் சல்லூம் என்பவனால் கொல்லப்பட்டார். உரிமையின்றி அரசைக் கைப்பற்றிய சல்லூமை மெனகேம் என்பவர் கொன்று அரசைக் கைப்பற்றினார். 2-ஆம் எரொபயாமின் காலத்தில் இஸ்ராயேலில் நிலவிய செழிப்பும் அமைதியும் மெனகேமின் (கி.மு. 745-738) காலத்தில் முடிவுக்கு வந்தன. சீரியாவுக்குக் கப்பம் கட்ட வேண்டியிருந்தது. மக்கள் கப்பச் சுமையால் துன்

புற்றனர். அசீரியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் எழுந்தன. மெனகேமின் மகனான பெக்காகியா கி.மு. 738-37-இல் கொலையுண்டார். அசீரியருக்கு எதிரான குழுவின் தலைவரான பெக்கா (737-32) அரசரானார். தமஸ்குவைத் தலைநகராகக் கொண்ட அரமேயா நாட்டோடு கூட்டுச் சேர்ந்து அசீரிய எதிர்ப்பாளர்கள் கிளர்ச்சி செய்தனர். அந்தக் கூட்டணியில் யூதாவும் சேரக் கட்டாயப்படுத்தப் பட்டது. ஆனால் ஊசியாவின் மகனான யோத்தாம் (கி.மு. 742-735) அதில் சேர மறுத்து விட்டார்.

இந்நிலையில் யோத்தாமின் மகனான ஆகாசு (735-15) யூதாவின் அரசரானார். இவர் பயந்த சுபாவ முடையவர். இவரும் அசீரியர்களுக்கு எதிரான அரமேய இஸ்ராயேல் கூட்டணியில் சேர மறுத்து விட்டார். ஆகவே, அவர்கள் இவரை எல்லாப் பக்கங்களிலும் தாக்கினர். தெற்கிலிருந்து எதோமியரும் (2 அர 16:6; 2 நாள் 28:17), மேற்கிலிருந்து பெலிஸ்தியரும் (2 நாள் 28:18) தாக்கினர். அசீரிய எதிர்ப்புக் கூட்டணியில் சேரமறுத்ததால் தமஸ்குவின் அரசனான இரசீனும் இஸ்ராயேலிலிருந்து இராமலியாவின் மகனான பெக்காவும் வடக்கிலிருந்து தாக்கினர் (எச 7:1-12; 2 அர 16:5-6). ஆகாசை நீக்கிவிட்டுப் புதிய அரச பரம்பரையைத் தொடங்கி வைப்பதாக அச்சுறுத்தியதோடு (எச 7:6), எருசலேமை நோக்கிப் படையெடுத்தனர்; இவ்வாறு நாடு மட்டுமன்று, தாவீதின் அரச மரபும் ஆபத்திலிருந்தது. இந்நிலையில் ''ஆகாசு உள்ளமும், அவன் நாட்டினரின் உள்ளங்களும் காட்டு மரங்கள் காற்றில் அலைக்கழிக்கப்படுவது போல் அலைக்கழிக்கப்பட்டன'' (7:2) என்று ஏசயா விவரிக்கிறார். இப்போரைத்தான் சீரிய - எப்பிராமியப் போர் என்று விவிலிய ஆய்வாளர் குறிப்பிடுவர் (எச 7:1 தொ; 2 அர 16:15 தொ; 2 நாள் 28:5-15).

இந்நிலையில், ஆகாசுக்கு அசீரியர்களின் உதவியை நாடுவது ஒன்றுதான் எஞ்சியிருந்தது. மனித ஆற்றலை நம்பாது இறைவனை மட்டுமே நம்பும்படியும் அவர் மீட்பு அளிப்பார் என்றும், ஏசயா ஆகாசிடம் மன்றாடினார். மறைபொருள் மிக்க இம்மானுவேலின் பிறப்பை முன்னறிவித்தார். இம்மானுவேலின் நூல் எனப்படும் அதி 6-12-இல் காணப்படும் இறைவாக்குகளில் பெரும்பாலானவை இக்காலத்தைச் சேர்ந்ததாகும். இறைவாக்கினரது ஆலோசனையையும் எச்சரிக்கைகளையும் புறக்கணித்துத் திகிலாத்து-பிலேசருடைய உதவியை ஆகாசு நாடினார். அவருக்குப் பெரும் கப்பமும் கட்டினார். இது யூதாவுக்கு அசீரியர்களுடைய பாதுகாப்பை அளித்தது. ஆனால், இஸ்ராயேலின் அழிவை விரைவுபடுத்தியது. கி.மு. 734-இல் திகிலாத்து-பிலேசர் பெலிஸ்தியாவை வென்று எகிப்திலிருந்து உதவி வராமல் தடுத்தார். இஸ்ராயேலின் கலிலேயா, நப்தலியைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று, இஸ்ராயேலைச் சமாரியாவைச் சுற்றிய சிறு நாடாக மாற்றினார்; பலரைக் கைது செய்து அசீரியாவுக்கு இட்டுச் சென்றார்; பிற இனத்தவரை இப் பகுதியில் குடியேற்றினார்; கி.மு. 732-இல் தமஸ்குவைக் கைப்பற்றினார். இரசீனைக் கொன்றார் மக்களை நாடு கடத்தினார். இவ்வாறு வென்ற பகுதிகளை அசீரியாவின் நான்காவது மாகாணமாக்கினார் (2 அர 16:9; ஏச 17).

யூதாவின் இடுக்கண்மிக்க வரலாற்றில் ஏசயா செய்த முயற்சி தோல்வி அடைந்தது. இது அவரது இறைவாக்குப் பணியின் முதல் கட்டத்தின் முடிவாகும். இதற்குப்பின் பொது வாழ்விலிருந்து, அவர் பின்வாங்கினார். வரலாற்று நிகழ்ச்சிகள் தனது போதகத்தை மெய்ப்பிக்கும் வரை, தமது இறைவாக்குகளை ஏட்டில் எழுதி முத்திரையிட்டுப் பாதுகாக்க வேண்டும் என்று தமக்கு நம்பிக்கையான சீடர்களிடம் ஒப்படைக்கிறார்.

அசீரியர்களின் உதவி யூதாவுக்குத் தற்காலிகமான பாதுகாப்பை அளித்தது. ஆனால், நாடு சுதந்தரத்தை இழந்தது. திகிலாத்தின் கல்வெட்டுகளில் ஒன்று அசீரியாவுக்குக் கப்பம் கட்டும் அரசர்களில் ஆகாசும், ஒருவர் என்று காட்டுகிறது (2 அர 16:8). இந்த

நிலையை எடுத்துக்காட்ட அசீரியர்கள் மரபுகள் எருசலேமில் புகுத்தப்பட்டன. அசீரியர்களின் வழிபாட்டு முறைகள் யூதாவில் நுழைக்கப்பட்டன. இதனால் நாட்டில் கலப்பு சமய முறைகள் தோன்றின. (2 அர 16:2-4). இவ்வாறு ஏசயா எச்சரித்தவையெல்லாம் நிறைவேறின.

இஸ்ராயேலில் பெக்காவைக் கொன்று ஓசியா என்பவர் (கி.மு. 734-24) அசீரியர்களுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசரானார். கி.மு. 728-27-இல் திகிலாத்து இறந்தார். 5-ஆம் சால்மனேசர் அசீரிய நாட்டு மன்னன் ஆனார். திகிலாத்தின் மரணத்திற்குப்பின் இஸ்ராயேலில் அசீரியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி எழுந்தது. ஓசியா கப்பம் கட்டுவதை நிறுத்தினார். இதைக் கண்டு, 5-ஆம் சால்மனேசர் சமாரியாவை முற்றுகையிட்டார். இது மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடந்தது (724-21). முற்றுகை நடந்து கொண்டிருக்கும்போது சால்மனேசர் இறந்தார். 2-ஆம் சார்கோன் அசீரிய நாட்டு மன்னன் ஆனார். இவரது ஆட்சியின் தொடக்கத்தில் சமாரியா வீழ்ந்தது. இஸ்ராயேல் முழுவதும் அழிக்கப்பட்டது. இந்த வெற்றியைக் கற்களில் பொறித்து வைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டார். இஸ்ராயேல் மக்கள் வட மெசபொத்தாமியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். இவர்கள் தங்களுடைய தனித்தன்மையை இழந்தனர். நாட்டில் எஞ்சிய மக்கள் புதிதாகக் குடியேறிய மக்களோடு கலந்து போயினர்.

ஏற்கனவே, பலவீனமான யாவே வழிபாட்டோடு பிற புறமதப் பழக்க வழக்கங்களை ஏற்றுப் புதுச் சமயங்களுக்கு அடிபணிந்தனர். இவ்வாறு சமாரியர் என்ற புதிய இனம் தோன்றியது. அரசன் ஓசியா அசீரியர்களால் கைது செய்யப்பட்டார். இவரது முடிவு பற்றி விவிலியம் எதையும் கூறவில்லை. இவ்வாறு இஸ்ராயேல் நாடும், அரச மரபும் வரலாற்றிலிருந்தே மறைந்து போயிற்று. சமாரியாவின் வீழ்ச்சிக்கு முன்னும் பின்னும்தான் ஏச ஆதி 28-32-இல் அடங்கிய இறைவாக்குகளில் பெரும்பாலானவைகளை ஏசயா கூறியிருக்க வேண்டும். இக்காலத்தில்தான், பிற நாடுகளுக்கு எதிரான இறைவாக்குகளை (14:24-23:18) ஏசயா அறிவித்திருக்க வேண்டும்.

யூதாவில், ஆகாசு கி.மு. 715-இல் இறந்தார். அவரது மகன் எசக்கியா (715-687) பதவிக்கு வந்தார். இவர் பக்தி மிக்கவர். தாவீதுக்குப் பின் இறைவன்முன் நேர்மையோடு நடந்தவர். சமாரியாவில் எஞ்சியிருந்த இஸ்ராயேலர்களை யூதாவோடும், எருசலேமிலுள்ள ஆலய வழிபாட்டோடும் ஒன்றுபடுத்த முயன்றார். இந்த முயற்சியில் வெற்றியடையவில்லை. இரு நாடுகளும் இணைந்த ஒரே அரசைப்பற்றிய இவரது கனவைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது. நாட்டு இணைப்பு முடியாதபோது சமய ஒற்றுமையிலும், சீர்திருத்தத்திலும் கவனம் செலுத்தினார்.

இக்காலத்தில், ஏசயா தனது மறைந்த வாழ்விலிருந்து வெளிவந்து பொதுவாழ்வில் மீண்டும் கலந்து கொள்கிறார். எசக்கியாவுக்கு ஆலோசகராகத் திகழ்கிறார். அசீரியர்களின் ஆட்சியால் அவதியுற்ற எசக்கியா தன்னாட்சிபெற முயன்றார். ஆனால் அசீரியாவோடு நேரடியாக மோதலைத் தவிர்த்தார். ஏனெனில், தனது மக்களின் அழிவை இவர் விரும்பவில்லை. இவரது ஆட்சியின் தொடக்க காலம் அமைதியாகச் சென்றது. இப்போது எகிப்தில் புதிய அரச மரபு தோன்றி வலுப்பெற்றுக் கொண்டிருந்தது. எகிப்திலிருந்து உதவி கிடைக்கும் நிலையில் பாலஸ்தீன நாடுகள் அசீரியாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து எழுந்தன. யூதாவிலும், அசீரியாவுக்கு எதிராக எகிப்தின் உதவியை நாடும் அரசியல் சூழ்நிலைகளும் சூழ்ச்சிகளும் தலைதூக்கின. இக்காலத்தில் ஏசயா தனது கொள்கைக் கேற்ப, போர்க் கூட்டணியில் நம்பிக்கை வைக்காது, இறைவனில் நம்பிக்கை வைக்குமாறு யூதாவின் ஆட்சியாளரை வேண்டினார். கி.மு.71-இல் அசீரியச் சேனை மற்றப் பாலஸ்தீன நாடுகளை அழித்த போது யூதா தப்பியதாகத் தெரிகிறது.

இந்நிலையில் அசீரியாவுக்கு எதிரான பாபிலோனில் கிளர்ச்சி எழுந்தது. மெரோதாக்கு-பலதான் என்பவனின் தலைமையின் கீழ், பாபிலோன் சிறிதுகாலத்திற்குப்பின் சுதந்தரம் பெற்றது. இவர் எசக்கியாவுக்குத் தூது அனுப்பினார் (ஏச 39). அசீரியா தன் முழு பலத்தோடு பாபிலோனைத் தாக்க முயன்றது. இந்நிலையில் 2-ஆம் சார்கோன் இறந்தார். அசீரியாவில் குழப்பம் ஏற்பட்டது. பாலஸ்தீனத்தில் அசீரியர்களுக்கு எதிர்ப்புப் பரவியது. இதை எகிப்து தூண்டியது; படை உதவி அளிப்பதாக வாக்களித்தது. இந்தக் கூட்டணிகளுக்கு எதிராக ஏசயா எச்சரித்தார். சிறப்பாக ''மனிதன் அதன்மேல் ஊன்றிநின்றால், அவனது கையைப் பொத்துக் காயமாக்கும்; முறிந்த நாணலை ஒத்த எகிப்தை நம்பக் கூடாது'' என்று எச்சரிக்கை விடுத்தார். வரவிருக்கும் சமய அரசியல் தீங்குகளையும், இக்கூட்டணிகளின் பயனின்மையையும் எடுத்துக் கூறினார். இம்முறை ஏசயா வெற்றி பெறவில்லை, அசீரிய எதிர்ப்புக் கூட்டணியில் எசக்கியா மடத்தனமாகச் சேர்ந்து அதற்குத் தலைமை தாங்கினார் (ஏச 36). அசீரியாவுக்குக் கப்பம் கட்ட மறுத்து, எசக்கியா முற்றுகைக்குத் தயாரானார் (2 நாள் 32). சார்கோனுக்குப் பின்வந்த அசீரியா மன்னன் சனகெரிப்பு (கி.மு. 705-681) கிளர்ச்சியை ஊக்குவித்த எகிப்தைத் தோற்கடித்தார்; கிளர்ச்சியை நசுக்கினார்; அசீரியாவை எதிர்த்த பாலஸ்தீன நாடுகளைப் பாழ்படுத்தி அழித்தார்; யூதாவையும் முற்றுகையிட்டார். ''கூண்டில் அடைபட்ட பறவை போல்'' எசக்கியாவை அடைத்து விட்டதாகப் பெருமை பாராட்டினார். ஆனால் எசக்கியா சரணடைய மறுத்துவிட்டார். எருசலேமைக் காக்க உறுதி பூண்டார். இந்நிலையில் இறைவாக்கினர் ஏசயா அரசனுக்கு ஆறுதலும், உற்சாகமும் அளிக்கிறார்; இறைவனது உதவியையும் வாக்குறுதியையும் வழங்குகிறார். இக்காலத்திய இறைவாக்குகள் நம்பிக்கை மிக்கவையாக உள்ளன. இவற்றில், பரிசுத்த நகரைச் சனகெரிபு கைப்பற்ற, யாவே விட மாட்டார் என்ற மாற்ற முடியாத மன உறுதி மிளிருகிறது. தமதுபெயர் விளங்கும் நகரை யாவே காப்பாற்றுவார் என்று மக்களுக்கு எடுத்துக் கூறி, யாவேயில் விசுவாசமும், நம்பிக்கையும் வைக்க மக்களை ஏசயா தூண்டினார். ஏசயா முன்னுரைத்தது போலவே, அசீரிய சேனையில் ஒரு கொள்ளை நோய் உண்டாக, அசீரியர்கள் முற்றுகையை விடுத்துப் பின்வாங்கினர். எருசலேம் காப்பாற்றப்பட்டது.

அரசர்கள் நூல்களில் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளில் இரு செயல்கள் தெளிவாக உள்ளன. எசக்கியா அசீரியாவுக்குப் பெரும் கப்பம் கட்டினார் (2 அர 18:13 - 16). சனகெரிபின் படைகள் பெரும் அழிவடைந்து பின்வாங்கின. முற்றுகையை விட்டுவிட்டு அசீரியாவுக்குச் செல்ல வேண்டியிருந்தது (2 அர 19:32-37; ஏச 37:35-38). ஏசயா 36-39-இல் கூறப்பட்ட இரு செயல்களும் ஒரே படையெடுப்பில் நிகழ்ந்தவையா வெவ்வேறு படையெடுப்புகளைச் சேர்ந்தவையா என்பது வாதத்திற்குரிய வரலாற்றுப் பிரச்சினையாகும். ''இருபடையெடுப்புக் கருது கோள்'' ஏனையவற்றை விட வரலாற்றுச் சான்றுகளுக்கு நிறைவு அளிப்பதாக உள்ளது. இதை ஏற்றுக் கொள்வதே மேல். ஏச 28:7-33:24-இல் வரும் இறைவாக்குகள் இக்காலத்தைச் சேர்ந்தவையாகும்.

கி.மு. 700-இல் முதலாம் ஏசயா காலம் முடிவுக்கு வருகிறது. இதற்குப் பின் ஏசயாவின் பணிபற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. எருசலேம் விடுதலை ஏசயாவின் விசுவாசத்தை மெய்ப்பித்தது. இவ்வாறு நாற்பது ஆண்டு காலமாக, சோதனை மிக்க, சிக்கல்கள் மிகுந்த சூழ்நிலையில் ஏசயா தனது பணியை நிறைவேற்றினார். அவர் பெற்ற காட்சி அவரது விசுவாசத்தை உறுதிப் படுத்தியது. அவரது பணியை ஒழுங்குபடுத்தியது. அவருக்கு வழிகாட்டியது.

5. சமய, சமூகப் பின்னணி:-

கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இஸ்ராயேலும், யூதாவும் வாணிபம், தொழில், விவசாயம், பொருளாதாரம் ஆகியவற்றில் பெரும் வளர்ச்சி பெற்றிருந்தன; பொருட்செல்வத்தில் உயர்ந்திருந்தன

நாள் 26). அதற்கு நேர்மாறாக அருட்செல்வத்தில் மிகவும் வீழ்ச்சியுற்றிருந்தன. புதிய பணக்கார இனம் தோன்றியது. இவர்களுக்கு உண்மையான யாவேயின் சமயம் ஓர் இடைஞ்சலாக இருந்தது. ஆகவே பொதுவாகத் தலைவர்களும் மக்களும் யாவே சமயத்தின் உண்மைப் போதகத்தைப் புறக்கணித்தனர். இந்நிலையை 2 அர 15:17; 2 நாள் 26-28 ஆகிய பகுதிகள் எடுத்துக் கூறுகின்றன. இந்த அவல நிலையை வட அரசில் ஆமோஸ், ஓசேயா ஆகிய இறைவாக்கினர்களும், யூதாவில் ஏசயா, மீக்கா போன்றவர்களும் கண்டனம் செய்து மக்களுக்கு உண்மையான சமயத்தைப் போதித்தனர்.

சமூக அரங்கில் ஏழைகள் ஒடுக்கப்பட்டனர்; சுரண்டப்பட்டனர். பணக்காரர் ஏழைகளை ஏமாற்றிப் பொருள் சேர்த்தனர். ஏழைகளும், விதவைகளும் வஞ்சிக்கப்பட்டனர். இவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. பெண்கள் செல்வ மயக்கத்தில் அலைந்தனர் (ஏச 3:16-24). மக்கள் குடிவெறியில் மிதந்தனர் (22:13). உல்லாச நாட்டம், பேராசை, எளியோரைத் துன்புறுத்துதல் போன்ற தீய பண்புகள் மலிந்து காணப்பட்டன (1:4-8; 3:1; 5:8). நீதிபதிகள் ஊழல் மிகுந்து நேர்மையில் தவறினர். எளியோர்களுக்கு எதிராகவும் செல்வர்களுக்குச் சாதகமாகவும் தீர்ப்பு அளித்தனர். பொய்க் குற்றம் சாற்றி எளியோர்களின் நிலங்களையும் உடைமைகளையும், செல்வர்கள் கவர்வதற்கு உதவினர். இந்த அநீதிகளிலிருந்து எளியோர்களுக்கு விடுதலையே இல்லை. நீதிபதிகளிடமும், தலைவர்களிடமும் குருக்களிடமும்கூட ஊழலும் கைக்கூலி முறையும், அநீதியும் வஞ்சகமும் தலைவிரித்தாடத்தொடங்கின. சமய வாழ்வில் கானானியரது வழிபாட்டு முறைகள் புகுத்தப்பட்டன. ''புனித'' இடங்களும் மேட்டுப் பகுதிகளும் மிகுந்தன. யாவேயை வழிபட்ட இடத்தில் பாகாலை வழிபடத் தொடங்கினர் (2 அர 18:4; ஏச 16:9-10). சடங்கு விபச்சாரம், நரபலி, போன்ற அருவருக்கத்தக்க சடங்குகளால் யாவேயின் வழிபாடு மாசு படுத்தப்பட்டது. அந்நிய தேவதைகளின் வழிபாடு வளரத் தொடங்கியது. சமயவாழ்வும் ஒழுக்க வாழ்வும் வேறுபடுத்தப்பட்டன. சமூக நீதி, உள்ளார்ந்த சமயம் போன்ற சீனாய் உடன்படிக்கையின் கடமைகளுக்குக் கவனம் செலுத்தாமல் வெறும் புறச்சடங்குகளைச் செய்தே யாவேயின் ஆதரவையும், பாதுகாப்பையும் பெறலாம் என்று மக்களும் தலைவர்களும் எண்ணத் தொடங்கினர்.

செல்வர்கள் ஆலயத்திலும், புனித இடங்களிலும் விரிவான, பகட்டான சமயச் சடங்குகளை நடத்தினர். இந்தப் பகட்டான், நெஞ்சநேர்மையற்ற ஆலய வழிபாடுகளால் தங்களது சமய, சமூகப் பாவங்களை மூடி மறைக்க முயன்றனர். ஆனால், உண்மையான கடவுள் பற்று இல்லை (1:10-17). வாயால் இறைவனைப் புகழ்ந்தனர். ஆனால் அவர்களது உள்ளமோ அவரிடமிருந்து வெகு தூரம் அகன்றிருந்தது (29:13). குருக்களும், வழிபாட்டு இறைவாக்கினர்களும் உண்மையான சமயத்தைப் போற்றிப் பாதுகாக்கத் தவறினர். தீமைகளைக் கண்டனம் செய்யாமல் அவற்றிற்கு இணங்கி விட்டனர். மாந்தரின் ஒழுக்க வாழ்வில் அக்கறை கொள்ளவில்லை. அவர்களே அநீதியான தீர்ப்பளித்தனர். பணம் கொடுப்பதற் கேற்ப இறைவாக்குகளைக் கூறினர். இவர்களது வழிபாட்டை நிராகரித்து இறைவன் தமது மக்களைக் குற்றம் சாட்டுவதில் ஏசயா திருநூல் உச்ச நிலையை அடைகிறது. அவர்கள் வழிபாடு வெறுமையானது. உண்மையான வழிபாட்டை அகற்றவில்லை. அநீதிக்குப் பாதுகாப்பு அளிக்கும் உயிரற்ற, நுணுக்கமான புறச்சடங்கு முறைகள் அகற்றப்படும் என்றும், இறைவனது கட்டளைகளை மீறுவது தண்டனை பெறாமல் போகாது என்றும், இறைவாக்கினர் பறைசாற்றுகிறார். யாவேயை நம்பாது பிற நாடுகளையும் அவர்களது படைபலத்தையும் நம்பி அவர்களோடு உடன்படிக்கை செய்தனர். இந்தப் பயனற்ற போர்க் கூட்டணிகளை எதிர்த்து ஏசயா போராடினார் (14:24-19:25). ஏசயா கூறும் திராட்சைக் கொடியின் உவமை (5:1-7) மேற்கூறப்பட்ட தீமைகளையெல்லாம் நன்கு சித்தரிக்கின்றது. இத்தீமைகளை

எதிர்த்துப் பெரும்பாலும் தனியாகவே போராடினார். இப்போராட்டத்தைத் துணிவோடு உயிர்த்துடிப்பான முறையிலே செய்தார். எசக்கியா செய்த சமய சீர்திருத்தத்திற்கு இவர்தான் பெரும்பாலும் பொறுப்பாளி என்று கூறலாம்.

6. இலக்கிய வரலாறும் பண்புகளும்:-

ஏச 1-39-இல் அடங்கிய முதலாம் ஏசயா என்ற இலக்கியப்பகுதி, இன்றைய நூலாக உருவெடுத்த வரலாறு நீண்டதும் சிக்கல் மிக்கதுமாகும். மற்ற இறைவாக்கினர்களைப் போலவே, ஏசயா போதிக்கவே அனுப்பப் பெற்றார்; எழுதுவதற்கு அன்று. தாம் கூறியவை உண்மையானவை என்று மெய்ப்பிக்கவே அவற்றை எழுதிப் பாதுகாக்குமாறு தனது சீடர்களுக்குக் கட்டளையிட்டார் என்று நாம் வாசிக்கிறோம் *(8:16-17; 30:8)*. அவற்றில் சில இறைவாக்குகளையாவது பலரும் அறியும் பொருட்டு எழுதிப் பாதுகாத்தனர்.

இந்நூலிலே காணப்படும் யாவும், இறைவாக்கினர் ஏசயாவிடமிருந்துதான் தோன்றின என்று எந்த நவீன அறிஞரும் வாதிடமாட்டார். எவ்வெப் பகுதிகளை இறைவாக்கினர் எழுதினார் என்று அறுதியிட்டுக் கூறுவதிலும் ஆய்வாளர்களிடையே ஒற்றுமையில்லை. சில பகுதிகளையாவது ஏசயா எழுதினார்; அவற்றைப் பாதுகாக்கக் கட்டளையிட்டார் என்றுதான் நாம் உறுதியாகக் கூறலாம் *(ஏச 8:16; 30:8)*. அதேபோது அவர் எழுதியதாகக் கூறப்படும் சில பகுதிகள், பிற்காலத்தைச் சேர்ந்தவை என்பதும் உறுதி. இந்நூலில் காணப்படும் பல பகுதிகள் கால வரையறைப்படியோ காரண காரிய அடிப்படையிலோ ஒழுங்கு படுத்தப் படவில்லை. வெவ்வேறு காலங்களிலும் வேறுபட்ட பொருள்கள் பற்றியும் கூறப்பட்டவை, அடுத்தடுத்துக் காணப்படுகின்றன. இதன் விளைவாக, இவற்றை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கோ, சூழ்நிலைகளுக்கோ ஏற்றவாறு விளக்குவது கடினம். சில இடங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இறைவாக்குகள் சேர்த்துத் தரப்படுகின்றன. ஆனால் இவை அறிவிற்கு ஒத்த முறையில் தொகுக்கப்படவில்லை. இந்நூலை இறுதியாகத் தொகுத்த ஆசிரியர் தெளிவான பகுதிகளுக்கிடையில் இருக்க வேண்டிய இணைப்புப் பகுதிகளை விட்டு விட்டதாகத் தெரிகிறது. ஏசயாவின் உண்மையான இறைவாக்குகளோடு மற்றவர்கள் அமைத்த வாக்குகளை அடுத்தடுத்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. இது ஆய்வாளர்களது சிரமத்தை மேலும் அதிகமாக்குகிறது. ஆகையால், இந்நூலின் கட்டமைப்பில் ஒழுங்கு இருப்பதாகக் காட்ட இயலாது.

இந்தப் பின்னணியில் இந்நூலின் தோற்ற வரலாற்றை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்.

முதலாம் கட்டம்:- ஏசயாவிடமிருந்து வந்ததாகக் கருதப்படும் இரு தொகுப்புக்கள்: அவை சீரியா - எப்பிராமியப் போரையொட்டிய விவரிப்புகள் *(6:1-9:6)*. அவரது பிற்காலச் செயல்கள் பற்றிய தொகுப்புகள் *(அதி 28-31)*.

இரண்டாம் கட்டம்:- இது ஏசயாவின் சீடர்களது வேலைப்பாடாகும். முற்கூறிய இரு பகுதிகளையும் காப்பாற்றினர். அவற்றோடு தங்களது குருவின் மற்ற இறைவாக்குகளையும் தொகுத்தனர். *அதி 1-5; 9:7-11; 9:13-23* - இப்படிப்பட்டவை. இவை ஏசயாவோடு நெருங்கிய தொடர்புடையவை, உண்மையானவை. இவை *அதி 6:1-9; 6*-இல் காணப்படும் மீட்புச் செய்தியை விவரிக்கின்றன.

மூன்றாம் கட்டம்:- நூல் பெரிதாக வளர்கிறது. ஏற்கெனவே இருந்த சிறு சிறு தொகுப்புகள் உருவெடுக்கின்றன. *2:2-4; 4:2-6; 11:10-16* ஆகியவை நூலில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. *அதி.12* சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. பிறரால் கூறப்பட்ட வாக்குகள் ஏற்கெனவே தொகுக்கப்பட்டவைகளோடு ஒத்திருப்பதால் இந்நூலோடு சேர்க்கப்படுகின்றன. அடுத்த பகுதியின் மையம் *அதி.28-31* சேர்க்கப்படுகின்றன. இத்தோடு *29:17-24;*

30:18-26; 32:2-8; 33:34 ஆகிய பகுதிகள் சேர்க்கப்படுகின்றன. இறுதியாக அதி.24-27-இல் காணப்படும் காட்சிகள் சேர்க்கப்படுகின்றன. பின்பு, அரசர்கள் நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட ஏசயாவின் வாழ்க்கைக் குறிப்புகள் சேர்க்கப்படுகின்றன (36-39). இவ்வாறு இந்நூலின் தோற்ற வரலாறு நிறைவு பெறுகிறது.

இந்நூல் சமய வழிபாட்டில், சிறப்பாகச் செபக்கூட வழிபாட்டில், பெரிதும் பயன்பட்டது. இப்பழக்கம் பிற்காலத் தலைமுறைகளின் உயிர்நிலையான பிரச்சனைகளை வெளிக்கொணர்ந்து அவற்றிற்குரிய பதிலைக் காணவும் மக்களுக்கு உதவியது. இவ்விதம், பிற பழைய ஏற்பாட்டு நூல்களைப் போல் இந்நூலும் யூதமக்களிடையே உயிருள்ள நூலாகத் திகழ்ந்தது. இதன் விளைவாக வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த பிற்சேர்க்கைகள் அதிகமாயின. மக்கள் இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர். இந்நூலைப் போற்றிப் பாதுகாத்தனர். இந்நூலின் வளர்ச்சியில் பிற்காலப் பதிப்பாசிரியர்களின் பாகம் பெரிதாகும்; முக்கியமானதுமாகும். இந்நூலின் தொகுத்தல், பதிப்பித்தல் ஆகியவை எப்போது முடிவடைந்தன என்று துல்லியமாகக் கூற முடியாது. இது கி.மு. 400-க்குமுன் முடிவடைந்திருக்க முடியாது. ஏனெனில் அதி 24-27 இவ்வாண்டை ஒட்டியதாகும் என்று கருதப்படுகிறது. இந்நூல் நாம் கொண்டிருக்கும் வடிவில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டிற்குமுன் வழக்கிற்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் அப்போதுதான் இந்நூலின் கிரேக்க மொழி பெயர்ப்பாகிய "எழுபது நூல்" தோன்றியது.

இந்நூலில் காணப்படும் மொழி நடையும், நயமும் இறைவாக்கினரின் உயர்குடிப் பிறப்பையும் புலமையையும் எடுத்துக் காட்டுகின்றன. அவரது சுடர்வீசும் நடை, வனப்புமிக்க உருவகங்கள், கவிநயம் ஆகியவற்றின் காரணமாகவே விவிலியத்திலேயே இந்நூல் தலை சிறந்த நூலாகத் திகழ்கின்றது எனலாம். ஆசிரியர் தெளிவாக, நேரடியான, சுருக்கமான பொருள் பொதிந்த, மேன்மைமிக்க இனிய நடையிலே எழுதியுள்ளார். நகர மற்றும் கிராம வாழ்விலிருந்து, இவர் எடுத்துப் பயன்படுத்தும் உருவகங்கள் உயிர்ச்சித்திரமானவை; எளிதில் மறக்க முடியாதவை. இப்பண்பில் இவருக்குப் பின் வந்த எந்த விவிலிய ஆசிரியரும் இவரை விஞ்ச முடியவில்லை.

இந்நூலின் பெரும் பகுதி எண்ணிக்கையில் வேறுபட்ட அடிகளை உடைய பாடல்களால் ஆனவை. இப்பாடல்கள் பழமொழி அமைப்புடைய சிறு பாடல்களாக இருக்கலாம் (29:9-10), அல்லது பல அடிகளைக் கொண்ட மிக நீண்ட பாடலாகவும் இருக்கலாம் (9:7-10:4). இப்பாடல்கள் இறைவாக்குச் செய்தியைச் சுருக்கமாகக் கொண்டுள்ளன. இப்பாடல்களின் வடிவங்கள் பல வகைப்பட்டன. உணர்ச்சி மிக்க பாடல்கள், துதிப்பாடல்கள் (11:1-9), தொடர் உருவகம் (5:1-7), உவமை (28:23-29), கண்டனங்கள், வசைப்பாக்கள் (14:1-23), சங்கீதம் (12:1-6) ஆகியவை இவ்வடிவங்களில் சில. இந்நூலில் காணப்படும் பொருள்கள் பல்வேறுபட்டவை. சமய வாழ்வு (19:1-5), சமூக வாழ்வு (13:1-6), சுயசரிதை (6:1-13), அச்சுறுத்தல்கள், எச்சரிக்கைகள் (28:1-22), வாக்குறுதிகள், உறுதி மொழிகள் (35:1-10), செபம், நன்றியுரை போற்றுரைகள், வழிபாடு ஆகியவை இந்நூலில் காணப்படும் பொருள்களில் சில. இந்நூல் ஏசயா, அவருடைய சீடர்கள், பிற்கால இறைவாக்கினர்கள் ஆகியோர் உரைக்கும் உன்னதமான செய்திகளைக் கவர்ச்சியான, உயிர்ச்சித்திரமான, கற்பனை வளம்மிக்க நடையில் பற்பல வடிவங்களில் பாதுகாத்து நிற்கிறது. இந்நூலில் ஓரளவு உரை நடையுண்டு (அதி 36-39). இவ்வாறு இந்நூல் பல வகைப்பட்ட இலக்கிய வடிவங்களைக் கொண்ட சமய இலக்கியத் தொகுப்பாகும். இந்நூலை "ஒரு சிறு நூல் நிலையம்" என்றே ஓர் அறிஞர் அழைக்கிறார்.

அறிவுரை எங்கே முடிகிறது? அடுத்தது, எங்கே தொடங்குகிறது? என்று வேறுபடுத்த இயலாத முறையில் இந்நூல் அமைந்துள்

ளது. இந்நூலில் காணப்படும் இறைவாக்குகள் காலவரையறைப்படி தொகுக்கப்படவில்லை. ஒவ்வொரு இறைவாக்கும் எந்த வரலாற்றுச் சூழ்நிலையில் கூறப்பட்டது என்று கூறுவது கடினம்.

இறைவனது புனிதம், பாவத்தின் கொடுமை ஆகியவை பற்றி மற்ற இறைவாக்கினர்களைப்போலவே ஏசயாவும் கூறியுள்ளார். ஆனால் அவைபற்றி ஆழ்ந்த உணர்வு கொண்டிருந்தார். மற்ற இறைவாக்கினர்களைப்போலவே கண்டனங்களை இணக்கமான சொற்களில் கூறினார். எரேமியா, எசக்கியேல் போன்ற இறைவாக்கினர்கள் நூல்களில் காணப்படும் கடுமையான சொற்றொகுதிளை இந்நூலில் அரிதாகத்தான் காண முடியும். தனது காலத்து இறைவாக்கினர்களான ஆமோஸ், ஓசேயா, மீக்கா ஆகியோரைப் போன்று ஆளுநர்களை அவர்களது சமூகப் பாவங்களுக்காகக் கண்டனம் செய்கிறார். ஆனால் அவர்களைவிடச் சூழ்நிலையின் குழப்பமிக்க சிக்கல்கள், நிலையான அரசாங்கத்தின் அவசியம் ஆகியவை பற்றி ஆழ்ந்த உணர்வு கொண்டிருந்தார். அவரது ''புதிய காலம்'' பாலையில் அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கையன்று; மாறாக அது ஒழுங்குமிக்க சமூக வாழ்வாகும். அதில் அதிக அமைதியும் நீதியும் மற்ற நற்பண்புகளும் சிறந்து திகழும். அப்புதிய காலம், அவரது காலத்தையும் நாட்டையும் கடந்து சென்று இறைவனது பொதுத் திட்டத்திற்கு ஏற்ற எடுத்துக் காட்டான அமைப்பாகும்.

7. வாசகம்:-

நாம் கொண்டிருக்கும் ஏசயா திருநூல் வாசகம் ''மாசரோட்டிக்'' எபிரேய வாசகத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவ்வாசகம் கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். கி.பி.1947-இல், கும்ரான் குகைகளில் கண்டெடுக்கப்பட்ட சுருள்களில் ஏசயாவின் நூல் முழுவதும் காணப்படுகிறது. இச்சுருள்கள் கி.மு.100-ஐச் சார்ந்த ஏடுகள். ஏசயா நூலைப் பொருத்தமட்டும் இச்சுருள்தான் காலத்தால் முந்திய ஏட்டுச் சான்றாகும். இச்சுருளில் காணப்படும் ஏசயா திருநூல் மாசரோட்டிக் வாசகத்தின் துல்லியமான தன்மையை எடுத்துக் காட்டுகிறது. இவ்வாசகம் பொதுவாக நல்ல நிலையிலேயே காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் எல்லா ஏடுகளும் அங்கும் இங்குமாக ஓரளவு வேறுபடுகின்றன. இவற்றை ஆராயுங்கால் இந்நூல் பற்றிப் பல பாரம்பரியங்கள் இருந்திருக்கக் கூடும் என்று எண்ண இடமிருக்கிறது. எபிரேய மொழியின் தொன்மை, நாம் கொண்டிருக்கும் வரம்பிற்கு உட்பட்ட அறிவு, 400 ஆண்டு கால மொழி வளர்ச்சி, எபிரேயப் பாடலின் தன்மை ஆகியவற்றின் விளைவாக மொழி பெயர்ப்புகள் சில சமயம் தெளிவில்லாமல் இருக்கின்றன. அதி. 1-35 என்ற பகுதியில் இறைவாக்குகள் கால வரையறையுடன் கொடுக்கப்படவில்லை. ஆகவே நூலின் அமைப்பிலும் இறைவாக்குகள் பற்றிய காலக் கணிப்பிலும் வேறுபாடுகள் உள்ளன.

எபிரேய விவிலியத்தின் காலத்தால் முந்திய மொழி பெயர்ப்பு கி.மு.3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க மொழிபெயர்ப்பாகும். இதை ''எழுபதுநூல்'' என்றழைக்கிறோம். ஏசயா நூலைப் பொருத்த மட்டும் இந்தக் கிரேக்க மொழி பெயர்ப்பு எபிரேய வாசகத்தை அடியொற்றி அமையவில்லை. இது பொழிப்புரையாக அமைந்துள்ளது. பிற்கால இறையியல் கருத்துக்களும் இம்மொழி பெயர்ப்பைப் பாதித்துள்ளன.

இக்கால மொழி பெயர்ப்புகள் மாசரோட்டிக் வாசகத்தை அடிப்படையாகக் கொண்டவை. இதில் சில மாற்றங்கள் ஏற்படுத்த கும்ரான் ஏடுகள் பெரிதும் உதவியுள்ளன.

8. நூலின் திட்டம்:-

I. சீரியா எப்பிராயிம் போருக்கு முற்பட்ட இறைவாக்குகள் (1:1-5:30).

அ) மக்களுக்கு எதிராக (1:1-31).

ஆ) எருசலேம், யூதா பற்றிய இறைவாக்குகள் (2:1-4:6).

இ) ஆண்டவரின் திராட்சைத் தோட்டம் (5:1-30).

II. இம்மானுவேலைப் பற்றிய நூல் (6:1-12:6).

அ. தொடக்கக் காட்சி: ஏசயாவின் அழைப்பு (6:1-13).

ஆ. இம்மானுவேல் (7:1-25).

இ. ஏசயாவின் பிள்ளைகளும் சீடர்களும் (8:1-22).

ஈ. அமைதியின் அரசர் (9:1-7).

உ. வட அரசின் வீழ்ச்சியும், அசீரியாவும் (9:7-10:34).

ஊ. இம்மானுவேலின் அரசும் பொற்கால மும் (11:1-9).

எ. சிதறிப்போன இஸ்ராயேலர் ஒன்று கூடுதல் (11:10-16).

ஏ. இறைவனின் புதிய மக்கள் பாடும் இரு பாடல்கள் (12:1-6).

III. பிற இனத்தார்க்கு எதிரான இறைவாக்குகள் (13:1-23:18).

IV. ஏசயாவின் வெளிப்பாட்டுக் காட்சிகள் (24:1-27:13).

அ. உலகம் பாழ்படுத்தப்படுதல் (24:1-23).

ஆ. நன்றிப் பாடல்கள் (25:1-12).

இ. மீட்புப் பற்றிய இறைவாக்குகள் (26:1-27:1)

ஈ. யாவேயின் புதிய திராட்சைத் தோட்டம்: யாக்கோபுக்கு மன்னிப்பு (27:2-9).

உ. பல இறைவாக்குகள் (27:10-13).

V. யாவே ஒருவரே யூதாவின் மீட்பர் (28:1-33:24).

அ. சமாரியாவுக்கும் எச்சரிக்கை (28:1-29).

ஆ. எருசலேமின்மேல் தீர்ப்பு, மீட்புக் காட்சிகள் (29:1-24).

இ. எகிப்து, அசீரியாமேல் தீர்ப்பு (30:1-31:9).

ஈ. பலவகை இறைவாக்குகள் (32:1-33:24).

VI. சீயோனின் உரிமையை மெய்ப்பிக்கிறார் யாவே (34:1-35:10).

VII. வரலாற்றுப் பிற்சேர்க்கை (30:1-39:8).

அ. சனகெரிபின் படையெடுப்பும், மரணமும் (36:1-37:38).

ஆ. எசக்கியாவின் நோயும் குணம் பெறுதலும் (38:1-20).

இ. பாபிலோனியத் தூது (39:1-8).

9. சிறப்புக் கருத்துக்கள்:-

9-அ. இறைவன்:-

இறைவன் ஒருவரே, அவர் யாவே. இஸ்ராயேலின் இறைவன் ஆண்டவராவார். சுற்றியுள்ள மக்களும், இறைவனது சட்டத்திற்கு மாறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களும் வணங்கும் சிலைகள் கடவுள்கள் அல்ல. அவை மனிதனது படைப்புகள் (ஏச 2:8; 17:8; 31:7). ''இருத்தல்'' இல்லாதவை, கடவுள்கள் அல்ல; இச்சொற்றொடர்களை ஏசயா விரும்பிப் பயன்படுத்துகிறார். இஸ்ராயேலிலும் யூதாவிலும் நிலவிய சிலைவழிபாடு இறைவனுக்கு அருவருப்பைத் தருவதாகும். இது இறைவனது தண்டனையை உறுதியாகக் கொண்டு வரும் (1:29 தொ; 17:10 தொ).

9-ஆ. இறைவனது பரிசுத்தம்:-

ஏசயாவுக்கு வெளிப்படுத்தப்பட்ட இறைவனது உயர் சிறப்பான பண்பு, இறைவனது பரிசுத்தமாகும். ஏசயாவுக்கு அளிக்கப்பட்ட தொடக்கக் காட்சியில் ''செராபிம்கள்'' ''சேனைகளின் ஆண்டவர்-பரிசுத்தர்! பரிசுத்தர்!'' என்று இறைவனைப் போற்றினர் (6:3). ''இறைவன் பரிசுத்தர்'' என்ற கருத்து ஏசயாவை ஆட்கொண்டது; இக்கருத்து நூல் முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறது. நூல் முழுவதும் இறைவாக்கினர் யாவேயை ''இஸ்ராயேலின் பரிசுத்தர்'' என்ற குறிப்பிடுகிறார். பரிசுத்தம் என்ற சொல் இறைவன், படைக்கப்பட்ட அனைத்திற்கும் அப்பாற்பட்டவர் என்று உணர்த்துகிறது. அவர் அவற்றின்மேல் ஆட்சி செய்கிறார். அவருடைய மகிமைச் சிறப்பையும், யாரும் எதுவும் அணுக முடியாத அவரது இயல்பையும் பரிசுத்தர் என்ற சொல் உணர்த்துகிறது. இப்பரிசுத்தம் அவருடைய ஒழுக்க நிறைவாகும். எந்த ஒழுக்கக் குறைவும் அவருக்குப் புறம்பானது. தமது மக்களிடம் அவர் எந்த ஒழுக்கச் சீர்கேட்டையும் குறையையும்

பொறுத்துக் கொள்ளாதவர். அவர்களது பாவங்களைக் கடுமையாகத் தண்டிக்கத் தயங்காதவர். எனினும் அவர்களை மனந் திரும்பி வருமாறு அழைக்கிறார் (1:16-20). மனம் திரும்பியவர்களைக் கருணையோடு ஏற்றுக் கொள்வார். யாவும் கடந்த இவ் விறைவன் தாம் தேர்ந்து கொண்ட மக்களின் சார்பாக வரலாற்றில் செயல்படும் இறைவ னாவார். அவர் பரிசுத்த மயமாயினும் பலவீன மிக்க மனிதன்பால் அவர் இரக்கம் காட்டி, அவனைத் தேடி அரவணைக்கும் இறைவ னைப் பற்றிய மறைபொருளைப் ''பரி சுத்தரை'' என்ற பெயர் எடுத்துக் கூறுகிறது. இதற்கேற்ப ''இஸ்ராயேலின் பரிசுத்தரை'' முதல் முறை காட்சியில் கண்டபோது, ஏசயா தனது பாவநிலையையும் தான் சேர்ந்து வாழும் மக்களின் பாவ நிலையை யும் உடனடியாக உணர்கிறார். ''ஐயோ நான் அழிந்தேன்; ஏனெனில் அசுத்த உதடுகளைக் கொண்டவன். நான் அசுத்த உதடுகளைக் கொண்ட மக்கள் நடுவில் வாழ்கிறவன்'' (6:5). இறைவன் பரிசுத்த வடிவானவன்; தமது மக்களிடமிருந்தும், தமது பரிசுத்தத் திற்கு நிகரான ஒழுக்கமிக்க பரிசுத்தத்தையே கோருகிறார்.

9. இ. இறைவனும் படைப்பும்:-

இறைவன் மேன்மை அவரது படைப்பில் காணப்படுகிறது. உலகமுழுவதும் அவரது மகிமையால் நிறைந்துள்ளது (6:3). அது அவரது மேன்மையின் புறத் தோற்றமாகும். யாவே அமைதியாக அரியணையில் வீற்றி ருந்து படைப்பை ஆளுகிறார். ஆனால் அவ ரது அமைதி செயலற்ற நிலையினை உடைய தல்ல; அது செயல்மிக்க அமைதியாகும்; ஆற்றல் அமைதியாகும்; ஏனெனில் ஏசயா வுக்கும் மற்ற இறைவாக்கினர்களுக்கும் வர லாற்றின் ஒரே ஆண்டவர் யாவேதான். மனி தக் காரியங்களில் அவர் ஆற்றலோடு செய லாற்றுகிறார். ஆகையால் வரலாற்று அரசி யல் நிகழ்ச்சிகளில், தமது கரம் செயலாற்று வதை மனிதன் கண்டுணர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் (5:12). இக்கருத்து ஏசயா வுக்குத் தனிப்பட்ட விதத்தில் விருப்பமா னது (5:12; 10:12-23; 14:24-27; 21:11; 28:21-22).

இறைவன் வரலாற்றில் செயல்படுவதை யாவேயின் திட்டம் அல்லது பணி என்று ஏசயா அழைக்கிறார். இதில் இஸ்ராயே லோடு இறைவன் கொண்டுள்ள உறவைத் தனிப்பட்ட முறையில் இறைவாக்கினர் மன தில் கொண்டுள்ளார் என்பது இயற்கையே. ஆனால் அவரது கொள்கை இஸ்ராயேலுக்கு மட்டும் உரியதல்ல; சில இடங்களில், அதைப் பிற இன நாடுகளுக்குச் சிறப்பான முறையில் சாற்றிக் கூறுகிறார். இறைவனது திட்டம் காலம் முழுவதையும் உள் அடக்கிய ஒன்றாகும். தமது திட்டத்தை நிறைவேற்ற இறைவன் பல சாதனங்களைப் பயன்படுத்து கிறார் (28:23 - 29). மனித அகந்தையை அழிப்பதும் (2:9 - 11தொ; 5:15), நிகழ்ச்சிக ளின் வழியாக மனிதனது கதியின் உண்மை யான ஆண்டவர் தாமே என்று நிரூபிப்பதும், தமது மக்களையும் பிற இனத்தவரையும் அவர்களுடைய பாவங்களுக்காகத் தண் டித்து அதன் விளைவாகச் சுத்திசெய்யப் பட்ட எஞ்சியோரிலிருந்து நிறைவுடைய மக்களை தயாரிப்பதும் இறைவனது குறிக் கோளாகும் (10:15 தொ). மனிதக் காரியங்க ளில் இறைவன் பல விதங்களில் தலையிடுகி றார். அவரது இடையீட்டை ஏசயா ஆண்ட வரது நாள் என்றழைக்கிறார் (2:12; 17:20). ஆமோசைப்போல் ஏசயாவும் இந்நாளைத் தண்டனையின் நாளாகக் கருதினார். அது பெரும் புயலாகவோ நிலநடுக்கமாகவோ, எதிரிகளின் படையெடுப்பாகவோ உரு வெடுக்கலாம். அப்போது மக்கள் தாங்கள் தொழுது வந்த ஆற்றலற்ற சிலைகள் தங்க ளைக் காக்க முடியாது என்பதை உணர்வர். அவற்றை ''அகழ் எலிகளுக்கும் வௌவால் களுக்கும், வீசி எறிந்து விடுவர்'' (2:20). பாவத்தைப் பொறாத இறைவன் பரிசுத் தத்தை இந்நிகழ்ச்சிகள் மெய்ப்பிக்கும் (5:16).

இறைவன் தமது மக்களையும், அவர்க ளது அயலாரையும் அவர்கள் பாவங்களுக் காகத் தீர்ப்பிடும்போது அத்தீர்ப்பு உலகம்

முழுவதையும் இயற்கையனைத்தையும் படைப்பு முழுவதையும் இறைவனது கடும் சீற்றத்திற்கு ஆளாக்கும்; சுத்தி செய்யப்பட்ட மனிதர் அடங்கிய உலகம் தோன்றும்போது படைப்பும் விடுதலை அடையும்.

9. ஈ. யாவேயும் இஸ்ராயேலும்:-

ஏசயா முதன்மையாகத் தனது மக்களுக்கே தூதுரைத்தார். ஆகவே அவர் இறைவனோடு இஸ்ராயேல் கொண்ட உறவுக்கு முதன்மை யான இடம் அளிப்பது இயல்பே. பிற மக்களோடு இறைவன் கொண்ட உறவு பற்றித் தற்செயலாகத்தான் குறிப்பிடுகிறார். அதுவும் இஸ்ராயேலரோடு இறைவன் கொண்ட உறவு பற்றிய கொள்கையிலிருந்து தான் வருகிறது.

வட, தென் அரசைச்சேர்ந்த தேர்ந்தெடுக் கப்பட்ட மக்களாகிய இஸ்ராயேலர், இறை வனாகிய யாவேயோடு கொண்ட உறவு, சீனாய் மலையில் மோசேயோடும் இஸ்ரா யேலரோடும் செய்து கொள்ளப்பட்டுப் பிற் காலத்தில் மோவாயிலும், செக்கேமிலும், புதுப்பித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன் படிக்கையால் ஒழுங்கு செய்யப்பட்டதாகும்.

இந்த உடன்படிக்கையை ஏசயாவும் அவர் காலத்தவரும் நன்கு அறிந்திருந்தனர். இது, அதன் கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்க ளுக்குச் செழிப்பையும் அதைப் புறக்கணிப்ப வர்களுக்குத் தண்டனையும் உறுதிப்படுத்தி யது. அதன் ஒளியில் இறைவாக்கினர்கள் இறைவனது சித்தத்தை மக்களுக்கு எடுத்துக் கூறினர். தங்கள் காலத்திய ஒழுக்க நிலையை எடுத்துக் கூறி அதை மதிப்பீடு செய்து, தீர்ப்பிட்டனர்.

இறைவனுக்கு அருவருப்பைத் தரக்கூடிய சிலை வழிபாடுகளால் (1:3தொ; 1:29; 2:8 - 18) இந்த உடன்படிக்கை மீறப்படுவதை ஏசயா கண்டார். தனது மக்களின் சமூக அநீதிகளைப் பார்த்தார். செல்வந்தர்கள் பணப்பைத்தியம் பிடித்துப் பாதுகாப்பற்ற விதவைகளையும், அநாதைகளையும் வாட்டி வருத்தினர். நீதிபதிகள் ஊழல் பேர் வழிகளாகத்திகழ்ந்தனர் (1:23). இவற்றை யெல்லாம் கண்டனம் செய்வதில் இறை வாக்கினர் சிறிதும் தயங்கவில்லை; வசை மாரி பொழிந்தார். யூதாவின் அகந்தையை யும், சுகபோகப் போக்கையும், மரத்துப் போன சமூக அநீதிகளையும் கண்டனம் செய்து, ஒளிவு மறைவு இன்றிப் பேசுவதில் பழைய ஏற்பாடு முழுவதிலுமே ஏசயாவை மிஞ்சியவர் எவருமில்லை எனலாம். ஊதி யத்திற்காக இறைவாக்குரைத்தலைத் தொழி லாகக் கொண்டவர்களை இவர் விட்டு வைக்கவில்லை. அவர்கள் தங்கள் காட்சியி லேயே மதிமயங்கிப் போயினர். அவர்கள் இறைவனது மீட்பளிக்கும் செய்தியை மக்க ளுக்கு எடுத்துக்கூறவில்லை.

சில இடங்களில் இறைவனோடு ஒருவர் கொள்ள வேண்டிய உறவை விட சமூக நீதியை ஏசயா அதிகமாக வலியுறுத்துவதாக ஓர் உணர்வு ஏற்படலாம். ஆனால் தனது அயலாரோடு ஒருவர் கொள்ள வேண்டிய உறவு போன்ற அடிப்படைக் காரியங்களைப் புறக்கணிக்கும் எந்தச் சமயமும் உறுதியற்ற அடிப்படையின் மேல் கட்டப்பட்டதாகும். இறைத் தந்தையோடு நாம் கொள்ள வேண் டிய உறவையும், ஆவியிலும் உண்மையி லும் இறைவனை வழிபடுவதுபற்றியும் பேசும் புனித யோவான்கூட ''நம் அய லாரை நடத்தும் விதத்தால்தான் நாம் தீர்ப்பி டப்படுவோம்'' எனப் போதிக்கிறார் (1யோவா 4:20).

இறைவனது சட்டத்தைப் புறக்கணித்தால், அதற்குரிய தண்டனையிலிருந்து தப்பமுடி யாது என ஏசயா மக்களுக்கு எடுத்துரைக்கி றார். அக்காலக் கருத்துக்களுக்கேற்ப இத் தண்டனை தற்காலிகத் தண்டனையாகத் தோற்றமளிக்கலாம். அது அசீரியாவிலிருந்து வரும் படையெடுப்பாக இருக்கலாம். இந் நாட்டைத் தம் மக்களுக்கு எதிராக இறை வன் தேர்ந்தெடுக்கலாம். ''கோபத்தில் நாம் எடுக்கும் கோல் அது. ஆத்திரத்தில் நாம் எடுக்கும் தடி அந்நாடு'' (10:5). அசீரியா வைப் பயன்படுத்தித் தம் மக்களை இறை

வன் தண்டிக்கிறார் என்ற கருத்து ஏசயாவில் அடிக்கடி காணப்படுகிறது.

அசீரியாவின் தாக்குதல் இஸ்ராயேல் யாவேயிடம் கொண்ட விசுவாசத்திற்குப் பெரும் சோதனையாக அமைந்தது. முற்காலத்தில் பலம் வாய்ந்த எகிப்திலிருந்து தம் மக்களை விடுவித்து அவர்களை இறைவன் வழிநடத்தினார். யாவே அசீரியக் கடவுள்களை விட இஸ்ராயேலரின் இறைவன் பலம் வாய்ந்தவர் என்று நிரூபிக்க வெறும் படைபலத்தை ஒட்டிய சோதனையா இத்தாக்குதல்? ஐயமறப் பல இஸ்ராயேலர்கள் இம்முறையிலேயே சிந்தித்தனர். ஆனால் ஏசயாவைப்போன்ற ஆன்மீகத்தலைவர்கள் வேகமாக மாறிக் கொண்டிருக்கும் வரலாற்றுச் சூழ்நிலையில் வேறுபட்ட விளக்கம் அளித்தனர். இழிவும், தோல்வியும், அழிவும் பற்றுறுதியுமில்லாத மக்கள்மேல் வரும் இறைவனது தீர்ப்பாகும். அவை உயர்ந்த ஆற்றல் உடைய அசீரிய கடவுள்களுக்குமுன் சரண் அடைவதன்று. இறை அருள்பரிபாலிப்பில் அசீரியா தன் பாகத்தை நிறைவேற்றியபின் அதுவும் மற்றொரு நாட்டுக்குச் சரணடையும். இறைவாக்கினரின் இவ்வருள்வாக்கு பாலஸ்தீனத்தில் மட்டும்தான் கேட்கப்பட்டது. அங்குதான் இறைவன் தமது நோக்கத்திற்கேற்ப அவற்றைப் பயன்படுத்துகிறார் என்றும் அறிக்கையிடப்பட்டது. ஒரு விதத்தில் வரலாற்றுப் பெருமையற்ற நாடுகளான இஸ்ராயேலும், யூதாவும் எழுச்சி கொண்ட அசீரியப் படைபலத்தின்முன் சிறியவையாயினும், இவைதான் இறைவாக்கினரின் கூற்றுகளில் உலக வரலாற்றின் மையமாகத் திகழ்கின்றன. அசீரியாபோன்ற மற்றவையெல்லாம் இறைவனுடைய கருவிகளேயாகும்.

உடன்படிக்கையைப் பிரமாணிக்கமாகப் பின்பற்றாத போக்கே சமாரியாவின் அழிவுக்குக் காரணமாகும். சீர்திருத்தம் இல்லையெனில் யூதாவும் அதே முடிவைத்தான் எதிர்நோக்க வேண்டும். இஸ்ராயேலின் இறைவன் பரிசுத்தர்! நிறைவானவர்! அவருடைய மக்களே, ஏன்? யூதாவே கூட, இடைஞ்சலாக மாறினாலும், வரலாற்றில் இறைவனது திட்டம் உறுதியாக நிறைவேறியே தீரும். அவர்கள் துக்கப்பட வேண்டும்; தங்கள் வழிமுறைகளை மாற்ற வேண்டும்; நேர்மையோடும் நீதியோடும் உடன்படிக்கையைப் பற்றுறுதியோடும் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையேல், அழிவையே கூலியாகப் பெறுவர். மக்கள் அவரிடம் விசுவாசம் கொள்ள வேண்டும். அவரது பரிசுத்த சித்தத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர்களது வாழ்வின் எல்லாக் கூறுகளும், இறைவனை நோக்கியே செயல்பட வேண்டும். இத்தகைய விசுவாசமின்றி உறுதியாக நிலைநிற்க முடியாது.

9. உ. எஞ்சியோர் குழு:-

இறைவன் பரிசுத்தமும் நீதியும் உள்ளவர். ஆகவே, அவர் தமது மக்களின் பாவங்களைத் தண்டிக்கிறார். இது ஏசயாவினுடைய போதகத்தின் ஒரு பகுதியாகும். அதன் மறுபகுதியோ, எஞ்சியோர்பால் அவரது இரக்கமும் பற்றுறுதியும் செயல்படுவதைக் காட்டுகிறது. பிற்பகுதி, முற்பகுதிக்கு ஈடுகட்டும் விதத்தில் அமைந்துள்ளது.

எஞ்சியோர் பற்றிய போதகம் ஏசயாவுக்கு அளிக்கப்பட்ட தொடக்கக்காட்சியிலேயே காணப்படுகிறது. பாழ்பட்ட யூதா ''தேவதாரு மரமோ, கருவாளி மரமோ, வெட்டி வீழ்த்தப்பட்டபின், அதில் அடித் துண்டு எஞ்சியிருப்பது போலவே, அதுவும் இருக்கும்..... அந்த அடித்துண்டு பரிசுத்த வித்தாகும்'' (6:13). ''எஞ்சியோர்'' பற்றிய கருத்துக்கள் நூலின் மற்றப் பகுதிகளிலும் காணப்படுகின்றன (1:9.24.28; 4:2தொ 10:9-21; 28:5தொ; 37:3தொ).

இறைவனது தீர்ப்பு எனும் நெருப்பு சுத்தி செய்ய, மக்களின் ஒரு சிறு பகுதி, வாக்குறுதிகளுக்குப் பற்றுறுதியான - மக்களாக எழுச்சியுறுவர். யாவே, சீனாய் உடன்படிக்கையில் விளங்கும் வாக்குறுதிகளுக்கு எப்போதும் பற்றுதியானவர். அவ்வுடன்படிக்கை எஞ்சியோரைக் காப்பாற்ற அவரைக் கட்டாயப்படுத்துகிறது. இந்த எஞ்சியோர், தங்க

ளின் தகுதியால் அன்றி, இறைவனுடைய தேர்வால் உண்மையான இஸ்ராயேலர் ஆவார். ''எஞ்சியோர்'' சுத்தி செய்யப்பட்ட புதிய நாடாக அமைவர். இச்செய்தி இறைவனது கட்டளையால் ஏசயா தன் முதல் மகனுக்கு அளித்த 'எஞ்சியோர் திரும்புவர்' என்ற பொருளுள்ள செயார் - யாசூபு என்ற பெயரில் உள்ளடங்கியுள்ளது. இவர் ஏசயா இறைவாக்குரைக்கும் அலுவலுக்கு அழைக்கப்பட்ட சிறிது காலத்திற்குப் பின் பிறந்தவர் (7:3; 10:21தொ).

எஞ்சியோர் பரிசுத்தமாய் இருப்பர். இறைவனது பரிசுத்தம் மக்களைப் புனிதமாக்கும் (4:2தொ). இவர்கள் இறைவனுக்குப் பற்றுறுதியாக இருப்பர். தீர்ப்பு எனும் நெருப்பில் சுத்தி செய்யப்பட்ட எஞ்சியோர் தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு உரிமையுடைய மரபாவார். இறைவன் அளித்த தண்டனை மனம் திருந்துவதையும், உள்ளம் தூய்மை அடைவதையும், தலையாய நோக்கமாகக் கொண்டது. இறைவன் யூதாவையோ, எருசலேமையோ, அழிக்க விரும்பவில்லை. சுத்தி செய்வதும், தீயோர் அழிந்தபின் எஞ்சியிருக்கும் பரிசுத்த மானவர்கள் வழியாகத் தமது திட்டத்தை வெற்றிகரமாகச் செயல் பெறச் செய்வதும், தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதுமே இறைவனது குறிக்கோளாகும்.

''எஞ்சியோர்'' பற்றிய கருத்து ஏசயாவில் மைய இடத்தை வகிக்கிறது. எஞ்சியோர் பற்றிய போதனையின் அடிப்படையில் இறைவன் வரலாற்றைக் கட்டுப்படுத்துகிறார் என்று ஏசயா உறுதியாக விசுவசித்தார். இந்த விசுவாசம், வருங்காலம் பற்றி அவர் கொண்டிருந்த விசவாசத்தில் வேரூன்றிய, அசைக்கமுடியாத, ஆழ்ந்த மனஉறுதியாகும். இந்த எஞ்சியோர் ''யூதா'' தான் என்று அடையாளம் காட்டும் தவற்றை, அவர் செய்யவில்லை. ஏனெனில், அவர் யூதாவை நன்கு அறிவார்.

தனது காலத்தைக் கடந்து, எஞ்சியோர் பற்றிய தனது காட்சியை விவரிக்கிறார் ஏசயா. தூரத்திலுள்ள மெசியா காலத்தை முன்னோக்கிப் பார்க்கிறார். அக்காலத்தைத் திருத்தி அமைக்கப்பட்ட தாவீதின் அரச மரபாகவும், மீண்டும் அமைக்கப்பட்ட இன்ப வனமாகவும் காட்சிவரைகிறார். எத்தகைய உருவங்களைப் பயன்படுத்தினாலும் இறைவன் தமது நோக்கத்திற்காகவே, எஞ்சியோரைக் காப்பாற்றுவார் என்ற உறுதியான விசுவாசத்திலிருந்து ஏசயாவின் வாக்குகள் வந்தன என்பது உண்மை.

எஞ்சியோரைப் பற்றிய இறையியல் 2-ஆம் 3-ஆம் ஏசயா நூல்களில் வளர்ந்து மெருகேறும். அங்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பியவர்களையே ''எஞ்சியோர்'' என்று கருதுகின்றார். ஏச 11:11 இக்காலத்தைச் சேர்ந்ததாகும். ஏசயாவின் அலுவலைத் தொடர்ந்து நடத்திய அவரது சீடர் குழாம், தங்களையே யாவேயின் எஞ்சியோர் குழுவாகக் கருதியிருக்கலாம். அந்த மனப்போக்கில், யாவேயில் ஏசயா கொண்டிருந்த விசுவாசத்தை உயிருள்ள விதத்தில் காப்பாற்றுகின்றனர்.

9. ஊ. மெசியா-புதிய காலம்:-

மெசியா என்ற கருத்தை, யூதா தனது இதயத்தைக் கடினமாக்கிக் கொள்ளுதல், அதன் விளைவாகத் தண்டனை பெறுதல், ''எஞ்சியோர்'' பரிசுத்தமான நிலையினை மீண்டும் எய்துதல் ஆகியவை அடங்கிய விரிவான சூழ்நிலையில், அறிய முயல வேண்டும். இதயத்தைக் கடினமாக்குதல், அதனால் தண்டனை பெறுதல் அடங்கிய காலத்திற்குப்பின், புதிய காலம் தோன்றும். அசீரியாவின் அகந்தை தண்டிக்கப்பட்ட பின், பொற்காலம் தொடங்கும். ஆகவே, ஏசயாவின் வாக்கின்படி, மெசியா, வருங்காலத்தைச் சேர்ந்தவராவார்; ஆனால் வெகு தொலைவில் உள்ள வருங்காலத்தைச் சேர்ந்தவர் என்பது அவசியமன்று; ஏனெனில், அசீரியா தனது காலத்திலேயே அழிவதை ஏசயா எதிர்பார்க்கலாம். ஆயினும், மெசியா காலம், வருங்காலத்தைச் சேர்ந்ததாகும். தாழ்த்தப்பட்ட தாவீது மரபிலிருந்து, மெசியா தோன்றுவார் என்பது (9:1-7) 11:1-9-இலிருந்து தெளிவாகிறது. அசீரியா அழிக்

கப்படுதல், யூதா இறைவனிடம் திரும்புதல் ஆகியவைகளுக்கு முன்னமேயே இவர் குறிக்கும் காலம், ஏற்கனவே தொடங்கியுள் ளது என்று நம்புவது ஏசயாவின் பொது நோக்குக்கு முழுவதும் மாறானதாகும். இக் காரணத்திற்காக, இம்மானுவேலை, மெசியா-ஆளாக ஏசயா கருதினால், இம்மானு வேலை ஆகாசின் மகனாகவோ, சீரியா-எப்பிராயிம் போரைச் சேர்ந்த எவரையும் ஏசயா அடையாளம் கண்டுள்ளார் என்றோ ஏற்றுக் கொள்வது கடினமாகும்.

மெசியாவையும் அவர் அரசையும் இரு மேன்மைமிக்க பகுதிகளில் *(1-7; 11:1-9;* மேலும் பார்க்க *16:1-5; 32:1*தொ; *7:14*தொ) ஏசயா விவரிக்கிறார். மெசியா தாவீதின் மரபில் தோன்றுவார். ''தாவீது அரசை அவர் ஆளுவார்''. அவருக்கு ''வியத்தகு ஆலோச னையாளர்-வல்லமையுள்ள இறைவன்-முடிவில்லாத தந்தை-அமைதியின் மன்னன்'' என்ற நான்கு அடையாளப் பெயர்கள் சூட்டப்படுகின்றன. இவை, மெசியாவை யும் அவரது அரசையும் விவரிக்கின்றன. அவர் ஆண்டவரது ஆவியால் தனிப்பட்ட விதத்தில் நிரப்பப்படுவார். அதனால், அப் போது தொடங்கப்படும் புதிய காலத்தில் அவரது ஆட்சி இறைவனது திட்டத்திற்கு ஏற்றதாயிருக்கும். இப்பெயர்களும் பண்புக ளும் மெசியாவுக்குக் கொடுக்கப்பட்டா லும், மெசியாவை, ஓர் இறை ஆளாக ஏசயா கருதினார் என்று கூற முடியாது. அவரது காலம், மக்களின் மொழி, நடை அடங்கிய சூழ்நிலையில், மெசியா இறை ஆள் ஆவார் என்ற முடிவு முறையானதன்று.

மெசியா இறைவனது பிரதிநிதியாக இருந்து, அவரது சித்தத்திற்கு ஏற்ப ஆளு வார். தாவீது மரபைச் சேர்ந்த இவரது அரசு, அமைதியும் நீதியும் நிறைந்ததாயிருக்கும். இறை அரசைப் பரப்புவார் *(2:1-5; 7:10-17; 9:1-7; 11:1-9; 28:16-17)*. ஏசயா காலத்தில், தாவீது அரியணையில் அமர்ந்திருந்த அரசர்க ளின் பிரமாணிக்கமற்ற, நிலையற்ற அரசு அகற்றப்படும். பொதுவாக, எபிரேய இறை
25 வாக்கினர் கருத்துப்படி, ''புதிய எடுத்துக் காட்டான காலம்'' யாவேயின் படைப்பா கும். யாவேயே உண்மையான அரசர்! யாவேயின் பிரநிதியாகவே, மெசியா சித்த ரிக்கப்படுகிறார். மெசியாவைக் குறிக்கா மலே இந்தப் புதிய காலத்தைப்பற்றிப் பேச லாம் *(எரே 31; ஏச 40-48; தானி 7)*. ஏச *9-11*-இல் குறிக்கப்படும் மெசியாவின் மகி மைமிக்க பண்புகள் இன்றியே வருங்கால அரசைப்பற்றி இடையில் எண்ணியிருக்க லாம் *(32:1*தொ*)*.

மெசியாவின் வருகையை விட, புதிய மகிமைமிக்க காலமே ஏசயாபோதனை யின் மையக்கருத்தாகும். புதிய காலத்தில் உலகெங்கும் அமைதியும் நீதியும் நிலவும் *(1:25-28; 2:2-4)*. இந்த நம்பிக்கை யூத தத்து வத்திற்கு மையக்கருத்தாகும். இது பற்றிய குறிப்புகளை, நாடு கடத்தலுக்குப்பின் தோன்றிய ஏசயாவின் நூலின் இணைந்த பகுதிகளில்காண்கின்றோம் *(11:10-12:6; 14:1-6)*. இந்த ஆசிர்பெற்ற வருங்காலம் பற்றிய கருத்து புதிய ஏற்பாட்டுக் காலம்வரை, யூதர் களின் நம்பிக்கையை வளர்த்து வந்துள்ளது. இன்றும் யூதர்களால் போற்றப்படுகின்றது.

அரச மெசியாவில் இஸ்ராயேல் வைத்த நம்பிக்கை காலப் போக்கில் ஒரு நிலையான வடிவம் கொண்டது. இந்த விசுவாசம் இறை வன் தமது ஒரே பேறான மகனை அனுப்பிய போது நிறைவேறியது என்றும், அவர் உல கம் முழுவதிலும் தமது அமைதியின், நீதி யின் அரசை நிறுவினார் என்றும், நமது விசுவாச அறிக்கை கூறுகின்றது. மெசியா வைப் பற்றிக் கூறிய இறைவாக்கினர்களுள் ஏசயா மிகப் பெரியவர்.

9. எ. எருசலேம்:-

சீயோன் தனிச்சலுகை பெற்றது. அங்கி ருந்து யாவே ஆட்சி செய்தார் என்ற நம் பிக்கை, ஏசயாவுக்கும் முக்கியமானதாகும். ஆனால், இறைவன் தம் மக்கள்பால் கொண்ட திட்டத்தில், பரிசுத்த நகரம் கொண்டிருந்த இடத்தை வெளிப்படுத்து வது, ஏசயாவின் அலுவலாக அமைந்தது. இறைவனது அரசில், எருசலேம் தனிச்சிறப்

பான மேன்மை கொண்டிருக்க வேண்டியிருந்தது. ஏனெனில், அது யாவேயின் பரிசுத்த நகராயிருந்தது. அது பற்றுறுதியற்றிருந்தாலும், அவரால் அன்பு செய்யப்பட்டது. உலகின் ஆன்மீக மையமாகக் கருதப்பட்டது. உயிருள்ள இறைவன் தாம் தங்கி உறையும் இடமாகவும் தம்மை வெளிப்படுத்தும் இடமாகவும், அதைத் தேர்ந்தெடுத்தார். இக்கருத்து மீண்டும் மீண்டும் இந்நூலில் வருகின்றது. அசீரியச் சேனையிடமிருந்து, யாவே எருசலேமைக் காப்பாற்றுவார் (10:32தொ; 31:5; 33-35). எருசலேம் முதலில் சுத்தி செய்யப்படும். பின்பு அதன் மூல பரிசுத்த நிலையில் நிறுவப்படும் (1:27). இறைவனது சட்டத்தை அறிய, மக்கள் எருசலேமில் கூடுவர் (2:2-5). மெசியாவின் காலத்தில் இறைவனது ஆசிர்பெற, மனிதர்கள் இந்நகரை நோக்கி வருவர்.

கி.மு. 701-இல் சனகெரிபு படையெடுத்த போதும், தனது தொடக்கப்பணிக்காலத்திலும் எருசலேம் அழியக்கூடுமென்று ஏசயா கருதியிருக்கலாம் (5:14-17). ஆனால், எருசலேமை யாவேயால் பாதுகாக்கக் கூடுமா என்று கி.மு.701-இல் அசீரியர்கள் சவால் விட்ட பின்புதான், எருசலேமின் பாதுகாப்புப்பற்றி ஏசயா இறைவாக்குரைத்தார் (37:21-29). கி.மு.701-இல் நடந்த நிகழ்ச்சிகள் (37:36தொ) ஏசயாவின் இறைவாக்குகள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தின. அப்போது ஆலயத்தையும் பரிசுத்த நகரையும் யாவே காப்பாற்றினார். இதிலிருந்து, எந்த வழியிலும் எக்காலத்திலும் நகரையும் ஆலயத்தையும் அழிய விட மாட்டார் யாவே என்ற கருத்து, யூத மக்களிடையே ஒரு விசுவாச சத்தியமாக மாறியது. எந்த அளவுக்கென்றால், யோயாக்கிமின் ஆட்சிக்காலத்தில் எருசலேம் அழியப் போகிறதென்று, எரேமியா போதித்த போது, அது அவரின் உயிருக்கே ஆபத்தாக அமைந்தது (எரே 126). பிற்காலத்தில் தோன்றிய இந்த விசுவாசம், மக்கள் மனந்திரும்பி யாவேயிடம் திரும்பி வருகின்ற மீட்பில் ஏசயா கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசத்தைத் திரித்து விட்டது போல் தோன்றியது.

எருசலேமும் தாமும் அழிந்து போவோம் என்ற சூழ்நிலையில் அவை பற்றிய இறைவாக்கினரின் மகிமை மிக்க காட்சி மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். எருசலேம் மீட்க முடியாத அழிவை நோக்கிச் செல்லலாம். ஆனால், அதன்உய்வு, போர்-தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

மக்கள் எருசலேமின் வருங்காலத்தைத் தவறாக விளக்கினர். ஆனால், உண்மையான இறைவாக்கினர், ஒரே இறைவனைப் பற்றிய அறிவுக்கு, எல்லா மக்களையும் இட்டுச் செல்வதுதான், எருசலேமின் உண்மையான அழைப்பாகும் என்பதை அறிவர். இது நடக்கும்போது எல்லோரும் ஒற்றுமையாய் அமைதியுடன் வாழ்வார்கள்.

புதிய காலத்தில் பரிசுத்த நகரின் ஆன்மீக மேன்மை பற்றிய ஏசயாவின் போதகத்தை, அவரது சீடர்கள் போற்றிக்காத்து விரிவாக்கினர் (25:6-9; 26:1தொ; 35:4தொ). பிற்காலத்தில் இக்கருத்தை இறைவாக்கினர்கள் பயன்படுத்தினர்; இக்கருத்து வானிலிருந்து வரும் புதிய எருசலேம் பற்றிய யோவானது காட்சியில் நிறைவு பெறுகிறது (திருவெளி 21:2).

9. ஏ. விசுவாசம்:-

இறைவன் வலிமை மிக்கவர்; உறுதியானவர்; பற்றுறுதியானவர்; தமது வாக்குறுதிகளுக்கு எப்போதும் பிரமாணிக்கமுள்ளவர். இத்தகைய இறைவனோடு இஸ்ராயேல் உடன்படிக்கை வாயிலாகப் பிணைக்கப்பட்டிருந்தது. அரசர்களும் மக்களும் யாவேயிடம் கொண்டுள்ள உறுதியான விசுவாசமே, அவர்கள் இறைவனது அழைத்தலுக்கு அளிக்கும் சாணிக்கையாகும். காலம் எவ்வளவு இருண்டதாக இருந்தாலும், அவர்கள் யாவேயிடம் உறுதியான விசுவாசம் கொள்ள வேண்டும். இந்த விசுவாசம், வெறும் கருத்தளவிலான ஒப்புதல் மட்டுமன்று; செயல்முறையான மனஉறுதியாகும். யாவே மட்டுமே, முக்கியமானவர்; பொருட்படுத்த வேண்டியவர். விசுவாசத்தினால், ஒருவன் இறைவனது உறுதியில் பங்கு பெறுகிறான். ஒருவன் இறைவனை மட்டுமே சார்ந்து

இருக்கவேண்டும் *(8:13; 28:16; 30:15)*. அப் போது அவன் அசைவுறாத விதத்தில் நிலை பெறுவான் *(7:9)*.

இந்த விசுவாசத்தை ஏசயா மீண்டும் மீண் டும் வலியுறுத்துகிறார். மனிதனை நம்பும் போர்க்கூட்டணிகளையும் அந்நியர் சேனை கள் பற்றிய அச்சத்தையும், விசுவாசி நிராக ரிக்க வேண்டும். இத்தகைய விசுவாசத்தை ஆக்காசிடமிருந்து ஏசயா எதிர்பார்த்தார். ஆனால், வீணாயிற்று.

இத்தகைய விசுவாசத்திற்கு ஏசயாவே மேலான எடுத்துக்காட்டாவார். எல்லாம் இழந்த நிலையிலும், சீரிய-எப்பிராமியர் போரின் போது, அரசனும் மக்களும் ஒன்று சேர்ந்து தமது போதனையை நிராகரித்த நிலையிலுமே, ''ஆண்டவருக்காக நான் காத் திருப்பேன். அவரை நான் நம்பியிருக்கி றேன்'' *(8:17)* என்று அவரால் கூறமுடிந்தது. மனிதன் இறைவனது அருளை நிராகரித்தா லும், அவரது திட்டம் உறுதியாக நிறை வேறும் என்று ஏசயா நம்பினார். சனகெரிபு எருசலேமை முற்றுகையிட்ட இக்கட்டான காலத்திலும் கூட, இறைவனில் வைக்கும் நம்பிக்கை ஒன்றே, எருசலேமுக்கு விடு தலை அளிப்பதாகும் என்று ஆணித்தரமாக மொழிந்தார். ''கூண்டில் அடைக்கப்பட்ட பறவைபோல்'' இருந்த எசக்கியாவின் விசு வாசத்தைப் போற்றிக் காத்தனர். இத்தகைய விசுவாசம், நமது காலத்திற்கும் மிக அவசிய மாகிறது.

10. ஏசயாவும் விவிலியத்தின் பிற நூல்க ளும்:-

விவிலியத்தில், ஏசயா திருநூல் கொண்டி ருக்கும் செல்வாக்கு மிகப்பெரியது; பரந் தது. இவ்வொப்பியல் பற்றி நீண்டதோர் கட்டுரையே வரையலாம். இங்கு அதனைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுவோம்:

உபாகமம், ஆமோஸ், ஓசேயா, மீக்கா போன்ற நூல்களில் காணப்படும் கருத்துக் களை, சிறப்பாக இறையொருமைக் கோட் பாடு, சமூக அநீதி போன்ற கருத்துக்களை முதலாம் ஏசயா எதிரொலிக்கிறது. முதலாம் ஏசயாவில் தென்படும் கருத்துக்கள்- செப்பானியா, நாகூம், அபக்கூக்கு, எரே மியா, எசக்கியேல், யோவேல், ஒபதியா, மலாக்கி போன்ற இறைவாக்கு நூல்களிலும், சங்கீதங்களிலும் காணப்படுகின்றன. சிறப் பாக ஏசயாவில் உள்ள ''எஞ்சியோர்'', சமூக நீதி, வரலாற்று விளக்கம், நீதித்தீர்ப்பு முத லிய கருத்துக்கள் மேற்குறிப்பிட்ட நூல்களில் சிறப்பிடம் பெறுகின்றன; வளர்ச்சியுறுகின் றன. இதனை விவிலியப் பதிப்புகளில் காணப்படும், இணைக்குறிப்பேடுகளின் துணை கொண்டு படித்துப் பயன்பெறலாம்.

புதிய ஏற்பாடு, ஏசயா நூலில் திகழும் பற்பல வாசகங்களைப் பல இடங்களில் கையாளுகிறது. புனித மத்தேயு எழுதிய நற்செய்தி, ஏசயாவின் கூற்றுக்களை அப்ப டியே எடுத்துக்கூறுவதில், அதிக ஆர்வம் காட்டுகிறது *(மத் 1:22-23; 4:15-16; 11:5; 13:14-15; 15:8-9; 21:33-46; 24:31)*. இவை யெல்லாம் அவருடைய போதகத்திற்குச் சிறப் புத் தருவனவாகும். மற்ற நற்செய்திகளும் அப்போஸ்தலப் பணியும் உரோமையர், முத லாம் கொரிந்தியர், முதலாம் தெசலோனி யர், எபேசியர், எபிரேயர் போன்ற திரு முகங்களும், திருவெளிப்பாட்டு நூலும் முத லாம் ஏசயாவைப் பல இடங்களில் அடி யொற்றிச் செல்கின்றன. சில இடங்களில் வாசகங்களை அப்படியே எடுத்தாள்கின் றன. இவற்றிற்குரிய ஒப்பியலை இணைக் குறிப்பேடுகளிலிருந்து அறியலாம். இந்த ஒப்பியல் முதலாம் ஏசயா, புதிய ஏற்பாட் டில் கொண்டிருந்த செல்வாக்கை நமக்கு நன்கு எடுத்துக் காட்டும்.

ஏசயாவின் செல்வாக்கு, நமது வழிபாட்டி லும் புகுந்துள்ளது. நற்கருணைப்பலியில் ''பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்று, இறைவனைப்போற்றும் போதெல்லாம், ஏச யாவின் தொடக்கக்காட்சி திருச்சபையின் வழிபாட்டில் கொண்டிருக்கும் செல்வாக் கையும், சிறப்பிடத்தையும் நாம் உணர்கி றோம். இக்காட்சியில், காட்சியும், அச்சம் நிறைந்த மரியாதையும், ஆராதனையும்,

பாடலும் மனத்துக்கமும், பாவ அறிக்கையும் மன்னிப்பும், தூய்மையும், இறை வார்த்தையைக் கேட்டலும், அதற்குப் பணிதலும் வெளிப்பாடும் அதற்குரிய பதிலும் உள்ளடங்கியுள்ளன. இக்காட்சி கிறிஸ்துவ அனுபவத்தின் ஒரு மாதிரிகையாகும். இறைவனது காட்சி, பாவ அறிக்கை, மன்னிப்புப் பெறுதல், பணிக்கு ஆணை பெறுதல் ஆகியவை அடங்கிய இந்த மாதிரிகை அனுபவம் கால வளர்ச்சியில், பல புனிதர்களின் வாழ்வில் நிகழ்ந்திருப்பதைக் காண்கின்றோம். இறைவனைக் காணும் போது நமது பாவ மன நிலைமையை உணர்கிறோம். இறைவனால் தூய்மை பெறும்போது அவரது பணிக்கு ஆயத்தமாகிறோம்.

11. இக்காலத்தில்:-

ஏசயாவின் நோக்கில், மனிதன் இறை உதவி பெறாது தனது சொந்த அறிவின்மேல் நம்பிக்கை கொண்டுள்ளான் (ஏச 5:21); தனது வெற்றிகளிலும் படைப்புகளிலும் பெருமை கொள்கிறான் (2:7). அகந்தை எனும் தலையான பாவம் பல தலைகளைக் கொண்ட பாம்புபோல், பலவடிவம் எடுக்கிறது. இறைவனிலும் அவரது செயல்களிலும், விசுவாசமின்மையும் சமயப் பற்றின்மையும் மக்களிடையே பரவிக் கிடக்கின்றன (5:19). ஒழுக்க வாழ்வில் இருளும் குழப்பமும் மிகுந்துள்ளன. மக்கள் நன்மைக்கும், தீமைக்கும் வேறுபாடு காணமுடியாத பரிதாப நிலையில் உள்ளனர் (5:20); மூடப் பழக்க வழக்கங்களும் சிலைவழிபாடும் மிகுந்து விட்டன. குறிசொல்பவர்களையும், சோதிடர்களையும் மக்கள் ஆர்வத்தோடு நாடுகின்றனர். கம்பங்களுக்கு முன்னும், கற்களுக்கு முன்னும் தலைவணங்குகின்றனர் (2:6-8). உடல் இச்சைகளை நிறைவுபடுத்துவதில் கருத்தாய் இருக்கின்றனர். உலகில் இறைவன் என்ன செய்கிறார் என்று புரியாது, நாள் முழுவதும் குடித்துப் போக்குகின்றனர் (5:11-12). பகட்டும் சிற்றின்பப் போக்குமுடைய பெண்டிர் உடல்பருத்துப் பகட்டான ஆடை உடுத்தி அணிகலன்களால் ஒப்பனை செய்து, கள்ளவிழி கொண்டு நோக்கி, சுகபோகத்தையும் இன்பத்தையும் தேடி அலைகின்றனர் (3:16-4:1). இவ்வாறு பல வடிவம் எடுக்க வல்ல அகந்தை அழிவுக்கே இட்டுச்செல்கிறது என்று ஏசயா எச்சரிக்கை விடுக்கிறார். அதே தொனியில் மக்களிடையே நிலவிய சமூக அநீதியையும் கண்டனம் செய்கிறார். இதையே ஏச 5:1-7-இல் வரும் உவமை எடுத்துக்கூறுகிறது.

மேற்கூறப்பட்டவை ஏசயா தனது காலத்தைப்பற்றிக் கூறினாலும் இக்காலத்துக்கும் முற்றிலும் ஏற்றவையே. ஏன்? மனிதனது அகந்தை பற்றிய அவரது கண்டனம் எக்காலத்திற்குமே பொருந்தும். ஏச 10-ஆம் அதிகாரத்தில் வரும் பாடல், வரலாறு பற்றிய ஏசயாவின் விளக்கமாக அமைந்துள்ளது. வரலாற்று நிகழ்ச்சிகள் எவ்வளவு முரண்பாடாகத் தோன்றினாலும், உலகிற்கு முதலும் முடிவுமாக இருக்கும் இறைவனுக்கே அவை என்றும் கட்டுப்பட்டவை. மனிதக் காரியங்களில் அவரே முழு மேலாண்மை கொண்டவர். தமது குறிக்கோளை நிறைவேற்ற அவர் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தித் தமது திட்டத்தை நிறைவேற்றுகிறார். தங்கள் சுயபலத்தை நம்பித் தங்களை அரசர்களுக்கு அரசர் என்று அழைத்து (10:8), தங்களையே வழிபட்டுக் கொள்பவர்களையும், அவர்களது திட்டத்தையும்கூடப் பயன்படுத்தித் தமது தீர்ப்பையும் இரக்கத்தையும் செயல்படுத்துகிறார். ஏனெனில் அவரே உண்மையான அரசர்களுக்கு அரசர், காலங்கள் யாவும் அவருடையன; ஆட்சியும் மாட்சியும் அவருக்கேஉரியன. இந்த உண்மையான அறிவும் அனுபவமும் அமைதிமிக்க நம்பிக்கைக்கும், உறுதியான விசுவாசத்திற்கும் இட்டுச் செல்லும். இதையே ஏசயா தமது கால மக்களுக்கும் எடுத்துக் கூறுகிறார். இக்காலத்துக்கும் பொருந்தும் வண்ணம் எடுத்தியம்புகிறார்.

ஏசயாவின் திருநூல்(இரண்டாம்) - ஆறுதலின் நூல்(ISAIAH-II)

1. வரலாற்றுப் பின்னணி:-

மேற்காசிய வரலாற்றில், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில், பாபிலோனியாவைத் தலைநகராகக் கொண்டு நெபுக்கதுனேசார் ஒரு

பேரரசை அமைத்தார். பல நாடுகளை வென்று தனது பேரரசோடு சேர்த்துக் கொண்டார். அப்படிப்பட்ட நாடுகளில் யூதாவும் ஒன்றாகும். கி.மு. 587-இல் எருசலேம் அழிந்தது. அதன் மக்களில் பலரைக் கைதியாக்கி நெபுக்கதுனேசார் தன் நாட்டிற்குக் கூட்டிச் சென்றார். சீரோடும் சிறப்போடும் ஆண்டு, அம்மன்னன் கி.மு. 565-இல் இறந்தார். பாபிலோனியப் பேரரசின் உயிர்த்துடிப்பு அவரோடு முடிவுக்கு வந்தது எனலாம். அவருக்குப் பின் மன்னர்களாக வந்த எவில்-மெரோதாக்கு, நெரிக்லிஸ்ஸார், லாபசி-மார்தாக்கு, நாபோனித்து, பல்தாஸ்ஸார் ஆகியோர் அப்பேரரசைக் கட்டி ஆளும் ஆற்றல் அற்றவர்கள். இவர்களின் விவேகமற்ற ஆட்சியில் நாடு நாளுக்குநாள் தானாகவே சிதைந்து போய்க்கொண்டிருந்தது. பேரரசு அழிவை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருந்தது.

நெபுக்கதுனேசார் இறந்த சிறிது காலத்திற்குள் பாபிலோனுக்குச் சில நூறு மைல்களுக்கு அப்பாலிருந்த பாரசீகத்தில் புதியதோர் அரசர் தோன்றினார். சைரஸ் என்பவர் கி.மு. 559-இல் பாரசீகத்திற்கு அரசரானார். இவர் கி.மு. 549-இல் மேதியாவை வென்று தன் அரசோடு சேர்த்துக்கொண்டார். இதைக் கண்டு, அப்போது பாபிலோனை ஆண்ட நாபோனித்து என்ற மன்னன், அதிகக் கவலைப்படவில்லை. ஆனால் கி.மு. 546-இல் சைரஸ் இலிடியாவை வென்றபோது, பாபிலோனியப் பேரரசு அச்சம் கொண்டது.

ஒரு பேரரசு அழிந்து கொண்டிருந்த நேரத்தில் மற்றொரு பேரரசு தோன்றிக் கொண்டிருந்தது. வரலாற்றிலேயே திருப்பமான இத்தகைய சூழ்நிலையில், பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலரின் சமூகமும் சமயமும் சிதைந்துபோகும் நிலையில் இருந்தது. மக்கள் தங்கள் தாயகம் திரும்பும் நம்பிக்கையிழந்தனர். தங்கள் இறைவனின் ஆற்றலில் கொண்டிருந்த நம்பிக்கையும் குன்றிப் போயினர். இத்தகைய மக்களிடையே புதியதோர் இறைவாக்கினர் தோன்றினார். இவர் மன்னன் சைரசை இறைவனின் ஊழியனாகக் கண்டார். இவர் பாபிலோனியாவை அழித்து, இஸ்ராயேலரைப் பாலஸ்தீனத்துக்கு அனுப்புவார்; அதன் விளைவாகப் பழம்பெரும் இறைவாக்குகள் நிறைவேற உதவும் கருவியாவார் என்று இந்த இறைவாக்கினர் எதிர்பார்த்தார். இவரது முன்னறிவிப்புக்கள் விரைவில் நிறைவேற இருந்தன.

சைரசு தனது படையெடுப்பில் வெற்றி மேல் வெற்றி பெற்றார். கி.மு. 539-இல் பாபிலோனியாவைக் கைப்பற்றினார். இஸ்ராயேலர் பாலஸ்தீனத்திற்குத் திரும்பிச் செல்லச் சட்டம் இயற்றினார். இந்நிகழ்ச்சியில் எரேமியா, எசக்கியேல் போன்ற இறைவாக்கினர்களது வாக்குகள் நிறைவேறின.

2. யார் எழுதியது?

2. அ) கி.பி. 18-ஆம் நூற்றாண்டுவரை, அறுபத்தாறு அதிகாரங்கள் கொண்ட ஏசயா திருநூல் முழுவதையும் கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எருசலேமில் வாழ்ந்த இறைவாக்கினர் ஏசயாதான் எழுதினார் என்று மக்கள் பொதுவாக நம்பினர். ஆனால் அதி. 40-55 என்ற பகுதியில் வரும் செய்திகளை, எருசலேமில் வாழ்ந்த தனதுகாலத்து மக்களுக்கன்று; 150 ஆண்டுகளுக்குப்பின் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட மக்களுக்கே, இறைவாக்கினர் அறிவித்தார் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. கி.மு. 705-இல் ஆட்சி செய்த எசக்கியாவுக்கு அளித்த எச்சரிக்கையில் (ஏச 39:5) பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுதலை முன்னறிவிக்க வல்ல இறைவாக்கினர், 150 ஆண்டுகளுக்குப் பின் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட மக்களை முன்னிலைப்படுத்திப் பேசமுடியும் என்று கருதப்பட்டது. இக்கருத்துக்கு ஆதரவாகச் சீராக்குத் திருநூலிலிருந்து சான்று காட்டப்பட்டது. 'மிகுந்த அறிவினால் இறுதிக் காலங்களைக் கண்டார்: சீயோவில் துக்கமுற்றவர்களைத் தேற்றினார்: இறுதிக் காலம் வரையிலும் வரப்போகிறவைகளையும், நிகழ்வதற்கு முந்தியே காரியங்களையும் வெளிப்படுத்தினார்' (சீரா 48:27).

ஏசயா திருநூல் முழுவதற்கும் ஏசயாதான் ஆசிரியர் என்ற பாரம்பரியக்கருத்தில் இபன் எஸ்ரா (கி.பி. 1167) போன்றவர்கள் ஐயுறத் தொடங்கினர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அறிஞர் பலர் இக்கருத்தை வன்மையாக எதிர்த்தனர். திறனாய்வு வளர்ந்தது. பல ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன. இவற்றின் கருத்துப்படி ஏச 40-55-என்ற பகுதியை எருசலேமில் வாழ்ந்த ஏசயாவைத் தவிர்த்த வேறொருவர் எழுதியிருக்க வேண்டும். இவர், எருசலேம் ஏசயாவுக்கு 150 ஆண்டுகளுக்குப்பின், நாடு கடத்தப்பட்ட காலத்தின் இறுதியில் பாபிலோனில் வாழ்ந்தவர்; ஏசயாவின் சீடர்களுள் ஒருவர். அவரைப் போல் முதல்தரமான இறைவாக்கினர். இவரது பெயர் நமக்குத் தெரியவில்லை. ஆகவே ஆய்வாளர்கள் இவரை உப-ஏசயா, இரண்டாம் ஏசயா அல்லது பாபிலோன் ஏசயா என்றழைத்தனர். இந்த நவீனக் கருத்துக்கு ஆதரவாக வரலாறு, இலக்கியம், கொள்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பல காரணங்களைச் சுட்டிக் காட்டினர். அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

2. ஆ) ஏசயாவின் பெயர் இப்பகுதியில் சுட்டிக் காட்டப்படவில்லை. மேலும் இப்பகுதியின் வரலாற்றுப் பின்னணி முதலாம் ஏசயா வாழ்ந்த கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சுட்டவில்லை; மாறாக, அவருக்கு 150 ஆண்டுகளுக்குப் பின்வந்த காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. எனெனில் 1) எசக்கியா காலத்தில் எருசலேமில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இப்பகுதி ஒன்றும் கூறவில்லை. 2) ஆசிரியர் எருசலேம் மக்களை முன்னிலைப்படுத்திப் பேசவில்லை; மாறாக, பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களைப் பார்த்துப் பேசுகிறார் (40:3-5; 41:17-20; 43:14; 48:20). 3) முதலாம் ஏசயா அசீரியப் பேரரசையும், தனிச் சுதந்தர அரசுகளாக யூதாவையும் இஸ்ராயேலையும் பற்றிக் கவலை கொள்கிறார். இரண்டாம் ஏசயா காலத்தில் யூதா வீழ்ந்து விட்டது; எருசலேம் அழிந்துவிட்டது. யூதாவின் மக்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு விட்டனர். இவை வருங்கால நிகழ்ச்சிகளாக அன்று; கடந்த கால நிகழ்ச்சிகளாகவே விவரிக்கப்படுகின்றன (40:1-2; 46:6; 48:20). இப்போது பாபிலோன் ஒரு நேசக் கூட்டாளியன்று (2 அர 20:12-13). ஏனெனில் அது எருசலேமை அழித்து யூதாவை நாடு கடத்தியது. இந்நூலில் மக்கள் எருசலேம் திரும்ப அமைக்கப்படுவதை எதிர்நோக்கியிருக்கின்றனர். ஆசிரியர் நாடு கடத்தல் முடிவு பெறுவதையும் மக்கள் எருசலேமுக்குத் திரும்புவதையும் பற்றி அக்கறை கொள்கிறார் (44:26-28; 49:14-23). 4) யூதாவுக்கு விடுதலை அளிக்கும் பாரசீக மன்னன் சைரசு வரலாற்று வானில் ஏற்கெனவே விடிவெள்ளியாக உதயமாகி விட்டார். தனது வெற்றிப் படையெடுப்பைத் தொடங்கி விட்டார் (44:28; 45:1). இவை நிகழ்கால நிகழ்ச்சிகளாகவும், பாபிலோனின் வீழ்ச்சி விரைவில் நிகழவிருப்பதாகவும் குறிக்கப்படுகின்றன. 5) பிற இனநாடுகள் இஸ்ராயேல் மேல் படையெடுத்துக் கொடுமைப்படுத்துபவர்களாகச் சித்தரிக்கப்படவில்லை; மாறாக, இஸ்ராயேலுக்கு உதவி செய்பவர்களாகவும், அதன் வழியாக ஆசீர் பெறுபவர்களாகவுமே காட்சி அளிக்கின்றனர் (45:4-2). 6) எருசலேம் அழிவு பற்றிய முந்தைய இறைவாக்குகள் நிறைவேறி விட்டன (ஏச 1:21-31; எரே 7:1-15; எச 22:24). இப்போது நம்பிக்கை அளிக்கும் புதிய இறைவாக்குகளுக்காக இஸ்ராயேல் காத்திருந்தது (ஏச 41:4 21-23; 43:11-13). மகிமைமிக்க புதியதோர் எதிர்காலத்தை எதிர்நோக்கியுள்ளது (40:1-11:43). 7) முதலாம் ஏசயாவின் போக்குக்கு மாறாக இரண்டாம் ஏசயா தாவீது மரபை ஒருமுறைதான் குறிப்பிடுகிறது. அதன் மகிமை அரச குடும்பத்திற்கு மட்டுமன்று, எல்லா இஸ்ராயேலருக்கும் உரியதாகும் (55:3-5). மேற்கூறப்பட்டவைகளிலிருந்து, 2-ஆம் ஏசயா கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இஸ்ராயேலின் வரலாற்றையே சுட்டிக் காட்டுகிறது என்பது தெளிவு.

2. இ) இரண்டு பகுதிகளின் இலக்கியப் பண்புகள் வேறுபடுகின்றன. முதலாம் ஏசயாவின் நடை கருக்கமானது; செறிவு மிக்கது; வலியுறுத்தும் தன்மையுடையது; வேகமுள்ளது; பொறிதெறிக்கும் தன்மையுடை

யது; வெள்ளம் போன்றது; கடுமையானது; கட்டுப்பாடுடையது. இரண்டாம் ஏசயாவின் நடையோ விரிவானது; மீண்டும் மீண்டும் கூறும் மிகையானது; கம்பீரமுடையது; அமைதியானது; சிறந்த சொல்நயமிக்கது; சரளமானது; உணர்ச்சி மிக்கது; திடீரென்று பாடலாக வெடிக்கும் தன்மையுடையது. முதலாம் ஏசயாவின் தொனி அச்சுறுத்தல் களையும், கண்டனங்களையும் கொண்டது. இதற்கு மாறாக இரண்டாம் ஏசயா ஆறுத லையும் நம்பிக்கையையும் அளிக்க வல்லது. முதலாம் ஏசயாவில் சுய வாழ்க்கைக் குறிப்பு கள் பல உண்டு. 2-ஆம் ஏசயாவில் ஆசிரிய ரைப்பற்றிய குறிப்புகள் எதுவுமே காணப் படவில்லை. ஆசிரியர் தனது அடையாளத் தையே மறைத்து விடுகிறார். யோவான் நற்செய்தி ''ஒத்தமை நற்செய்தி'' களிலி ருந்து நடையில் வேறுபடுவது போல், 2-ஆம் ஏசயா முதலாம் ஏசயாவிலிருந்து வேறுபடுகிறது எனலாம்.

2. ஈ) கொள்கை விளக்கத்திலும் இருபகுதி களும் வேறுபடுகின்றன. முதலாம் ஏசயா வில் மறைமுகமாக எடுத்துக் கூறப்படும் இறையொருமைக் கோட்பாடு, 2-ஆம் ஏச யாவில் தெளிவாகவும் நிறைவாகவும் எடுத் துக் கூறப்படுகிறது. இறைவன் உலகைப் படைத்தவர், வரலாற்றை ஆள்பவர், இஸ்ரா யேலின் மீட்பர்-போன்ற கருத்துக்கள் மிக விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன. போலிக் கடவுள்களின் ஒன்றும் இயலாமையும், அவற்றின் ஒன்றுமின்மையை மெய்ப்பிக் கும் வாதமாக எடுத்துக் கூறப்படுகிறது. அதே சமயத்தில் இறைவனது அளவிட முடி யாத ஞானமும், அருள்பாலிப்பும் வலியுறுத் தப்படுகின்றன. யாவற்றையும் உள்ளடக்கும் சமயக் கருத்து விவிலியத்திலேயே முதல் முறையாகத் தெளிவாக எடுத்துரைக்கப்படு கிறது. பிற இனத்தவரும் மனந்திரும்புவர் என்ற கருத்து குறிப்பிடத் தக்கதாகும். முத லாம் ஏசயாவில் காணப்படும் மெசியா கோட்பாட்டிலிருந்து 2-ஆம் ஏசயாவில் வரும் ஊழியன் பற்றிய விவரிப்பு குறிப்பி டத்தக்கமுறையில் வேறுபடுகிறது.

முதலாம் ஏசயாவில், இஸ்ராயேலர் ஓர ளவு செல்வமிக்கவர்களாகவும், மிஞ்சிய சுய நிறைவுடையவர்களாகவும், அதிக உலோகா யுதப் போக்குள்ளவர்களாகவும் தோன்று கின்றனர். ஆகவே, அவர்களைப் பார்த்து இறைவாக்கினர் அச்சுறுத்தல்களையும் கண் டனங்களையும் அறிவிக்கிறார். அதற்கேற்ப அவரது நடையும் கடுமையாக உள்ளது. இவை இஸ்ராயேலர் பெறவிருந்த துன்பங்க ளைச் சுத்தி செய்யும் சாதனங்களாயின. ஆனால் 2-ஆம் ஏசயா காலத்து இஸ்ராயேல ரின் நிலையோ வேறுபட்டது. அவர்கள் அனுபவித்த துன்பங்களால் திகைத்துப் போய் நம்பிக்கையிழந்தவர்கள்; வறுமை யில் உழன்றவர்கள்; அவர்கள் மேலும் தண் டிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர்(40:2; 42:18-25). மாறாக அது ஊக்குவிக்கப்பட வேண்டியதின் அவசியத்தை 2-ஆம் ஏசயா உணர்ந்தார். இறைவன் தாம் ஒரு காலத்தில் உலகைப் படைத்ததுபோல், இப்போதுபுதி யதோர் உலகை மீண்டும் படைக்கப்போகி றார் என்று இறைவாக்கினர் அறிவிக்கிறார்(40:25-28; 42:5; 43:1). இனித்தாவீது அவர்க ளது அரசனாக இருக்கமாட்டார்; இறை வனே அவர்களது அரசனாக இருப்பார்.

முதலாம் ஏசயா பிறநாடுகளை, இஸ்ரா யேலைத் தவறுக்கு இட்டுச் செல்லும் சோத னைகளாகவும் (20:5), இறைவனது கோபத் தின் கருவிகளாகவும் (10:5) சித்தரிக்கிறது. இதற்கு மாறாக 2-ஆம் ஏசயா பிறநாடுகளை, இஸ்ராயேலை மீட்கும் கருவிகளாக விவரிக் கிறது (அதி. 45). பிற நாட்டினர் இஸ்ராயே லுக்கு உதவி செய்யவும், அதனிடமிருந்து ஆசீர் பெறவும் ஒன்று கூட்டப்படுகின்றனர் (41:1; 43:2-6; 45:1; 49:6). இவர்கள் இஸ்ரா யேலுக்கு அளிக்கப்படும் மீட்பில் பங்கு கொள்ள அழைக்கப்படுகின்றனர்.

மேற்கூறப்பட்ட வேறுபாடுகளைக் கருத் தில்கொண்டு, இரண்டு பகுதிகளையும் வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதினார்கள் என்று இக்கால அறிஞர்கள் கூறுவர். ஆனால் 2-ஆம் ஏசயா முதலாம் ஏசயாவின் பாரம்பரி யத்திலேயே உலவுகிறார்; ஏசயாவின் குழு

வைச் சேர்ந்தவரும் அதன் முக்கியமான அங்கத்தினரும் ஆவார்.

2. உ) பாப்புவின் விவிலியக் குழு அளித்த எச்சரிக்கை:-

ஏச 40-55 என்ற பகுதியை இறைவாக்கினர் ஏசயா எழுதவில்லை; மற்றொரு இறைவாக்கினர் பிற்காலத்தில் எழுதினார் என்ற கருத்துக்கு எதிராக, கி.பி. 1908-இல் பாப்புவின் விவிலியக்குழு கத்தோலிக்க ஆய்வாளர்களை எச்சரித்தது. ஏனெனில், இந்த நவீனக் கருத்து பாரம்பரியக் கருத்துக்கு எதிராக அமைந்தது; இறைவாக்குரைக்கும் இறை ஏவுதலை வரையறை செய்வதாகத் தோன்றியது.மேலும் பாரம்பரியக்கருத்தைக் கைவிட அப்போது கூறப்பட்ட காரணங்கள் போதிய பலம் பொருந்தியவையாகத் தோன்றவில்லை.

''நவீனத் தவறு'' என்ற கொள்கை இறைவாக்குரைத்தலை மறுத்தல் போன்ற சூழ்நிலையில் இந்த எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது. இந்த எச்சரிக்கைக்கு விளக்கம் அளிக்கும்போது, பின் வருபவற்றை நாம் மனதில் கொள்ள வேண்டும். கொள்கைப் பிரச்சனைக்கும் இலக்கிய ஆய்வுப் பிரச்சனைக்கும் உரியவற்றை வேறுபடுத்த வேண்டும். எச்சரிக்கை, கொள்கை அடிப்படையில் வெளியிடப்பட்டது; இலக்கிய அடிப்படையில் அன்று. கொள்கை அடிப்படைமாறவில்லை; அப்படியே இருக்கிறது. ஆனால், இலக்கியப் பிரச்சனை அடிப்படையன்று. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலவிய பிரச்சனைக்கு இந்த எச்சரிக்கை பதில் அளிக்கிறது. இது இலக்கிய ஆய்வைத் தடை செய்யவில்லை. பிரச்சனைகளைத் தெளிவு படுத்துகிறது, ஆய்வு வளர்ச்சிக்கு இடமளிக்கிறது.

இந்த எச்சரிக்கைக்குப்பின், 2-ஆம் ஏசயா மற்றொரு இறைவாக்கினரால் எழுதப்பட்டது என்பதற்கு ஆதரவாகப் பல ஆய்வுக் கட்டுரைகளைக் கத்தோலிக்க அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். இவைபற்றிப் பாப்புவின் விவிலியக்குழு எதையும் கூறவில்லை. இலக்கியப் பிரச்சனைபற்றி இக்குழு எதையும் உறுதியாகக் கூறும்வரை, ஏச 40-55 என்ற பகுதியை, கி.மு. 6-ஆம் நூற்றாண்டில், பாபிலோனில் வாழ்ந்த ஓர் இறைவாக்கினர் எழுதினார் என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோம்.

3. ஆசிரியர்:-

ஏச 40-55 என்ற பகுதிக்கு ஆசிரியரான இரண்டாம் ஏசயா அல்லது பாபிலோன் ஏசயா என்பவரைப் பற்றிய தெளிவான குறிப்புகள் எங்குமே கிடைக்கவில்லை. எல்லா இறைவாக்கினர்களிலும் இவர்தாம் தம்மை முழுவதுமே மறைத்துக் கொள்பவர். உன்னதமான இலக்கியத்தைத் தந்துள்ளார்; ஆனால் அதை இவர்தான் எழுதினார் என்பதையே நாம் நிரூபிக்க வேண்டியுள்ளது. ஆசிரியரைப் பற்றி அறிவதற்காக நாம் இந்நூலைத் துருவி ஆராய்ந்தால், நமது கையைவிட்டு அவர் நழுவிப் போய் விடுவார். பாலையில் ஓடி மறைந்து போகும் நீரைப்பாடும் அவர், அந்நீரைபோன்று தனது பெயரைக் கூடக் குறிப்பிடாது மறைத்து விடுகிறார். ''அவர் வளர வேண்டும்; நானோ குறையவேண்டும்'' (யோவா 3:30) என்ற திருமுழுக்கு அருளப்பரது கூற்று பாபிலோன் ஏசயாவுக்கு மிகப் பொருந்தும். அவர் ''பாலைவனத்தில் உண்டாகும் கூக்குரல்'' (யோவா 1:23; ஏச 40:3). தனது பாடல்களுக்குப் பின்னணிக் காட்சிகளை அமைக்கும்போது, இறைவன் உரையாடல்களைக் கேட்பவரில் ஒருவராகவும் (40:1-5), பாரசீக மன்னன் சைரசுக்குப்பணி செய்பவர்களில் ஒருவராகவும் (44:28), பழைய ஏற்பாட்டிலேயே மிக உன்னத வெளிப்பாட்டைப் பெறுபவர்களில் ஒருவராகவும் (அதி 53) கலந்து மறைந்து போகிறார். பாலையில் ஓடும் நீர்போல் அவர் மறைந்து போனாலும், அந்நீரால் பனைமரங்களும் திராட்சையும் வளர்வதுபோல் அவரது இலக்கியம் இறையியல் வளப்பம் நிறைந்தது; மிகுந்த சிறப்புடையது.

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள உறவுபற்றி மிகச் சிறப்பாக அவர்

பாடியிருந்தாலும், நூலில் காணப்படும் சில அகச்சான்றுகளைக் கொண்டு அவரது ஆள் தன்மையை ஊகமாகவே உணரவேண்டி யிருக்கிறது.

இரண்டாம் ஏசயா சிந்தனை மிக்கவர்; ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் ஆழ்ந்து அனு பவித்தவர்; அவற்றில் அக்கறை கொள்பவர். ஒரு நிகழ்ச்சியின் சிக்கல்மிக்க நிறை உண் மையில் ஈடுபட்டு அமிழ்ந்து போவார். மேல் எழுந்த வாரியாக எதையும் நோக்க மாட்டார். ஒவ்வொரு நிகழ்ச்சியின் பொருள், விளைவு, ஆகியவற்றில் ஆழ்ந்து ஈடு படுவார். எருசலேம் ஏசயாவின் சுறுசுறுப்பான அறிவும், எரேமியாவின் சிந்தனை மிக்க உணர்ச்சித் தன்மையும், நாகூமின் உணர்ச்சி மிக்க நன்னம்பிக்கையும், செப்பானியாவின் பாவஉணர்வும் 2-ஆம் ஏசயாவில் ஒருங்கி ணைகின்றன.

2-ஆம் ஏசயாவின் மனம் பரந்தது; சொற் கள் கவிதை இலயத்தோடு ஓடும். அவரது சிந்தனை மீட்பு வரலாறு முழுவதும் எளி தாய் உலவும்; அதோடு ஒன்றிப்போகும். ஆசிரியர் ஆபிரகாமைச் சுட்டிக் காட்டுவார் (52:1-2). செங்கடலைக் கடப்பதில் பங்கு கொள்வார். சீனாய்ப் பாலைவனத்தில் இஸ்ரா யேல் பயிற்சி பெற்ற காலத்தை மீண்டும் வாழ்ந்து காட்டுவார். தாவீதோடு செய்த உடன்படிக்கை, எருசலேமின் பொருள் ஆகி யவை பற்றி அக்கறை கொள்வார்(49:14-21; 55:3-5) அவருக்கு வரலாறு என்பது ஏட்டில் எழுதப்பட்டுச் சுருட்டி வைக்கப்படுவதன்று; எப்போதும் தொடர்ந்து நிகழ்வதாகும்.

2-ஆம் ஏசயா ஒரு பெரிய இறைவாக்கினர் மட்டுமன்று; ஒரு மிகச் சிறந்த கவிஞரும் ஆவார். அவரது சிந்தனை ஆழ்ந்த அறிவுடை யது. உணர்ச்சிகள் எழுச்சி மிக்கவை; ஆற் றல் உள்ளவை. அவர் உருக்கமான உணர்ச்சி மிக்க பாடல் பாடுவதில் வல்லவர். படைப்பு, வரலாறு, மீட்பு ஆகியவற்றில் இறைவனது செயல்களைத் தியானிக்கும் போது, போற்றுரைப் பாடல்களில் திளைப் பார்; உணர்ச்சிப் பெருக்கோடு பாடினாலும் தன்னைப் பற்றி ஒரு குறிப்பும் தரமாட்டார். நூலில் வரும் ''நாம்'' என்ற சொல், பெரும் பாலும் இறைவனையே குறிக்கும். இறை வன் இந்த இறைவாக்கினர் வாயிலாகப் பேசுகிறார். தன்னை மறைத்து இறைவனது மகிமைக்காகப் பணிபுரிகிறவர் இந்த இறை வாக்கினர்.

4. யாருக்கு? எப்போது? எதற்காக?:-

எசக்கியேலைப் போல் 2-ஆம் ஏசயாவும் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட இஸ்ரா யேலரிடையே கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கவேண்டும். ஏனெனில் அவர் நேரில் கண்டவர்போல் பாபிலோனை விவ ரிக்கிறார். பாரசீக மன்னன் ஏற்கனவே படை யெடுக்கத் தொடங்கி விட்டார் (40,1:45). அவர் இலிதியாவின் மேல் கொண்ட வெற் றிக்கும் (கி.மு. 546) பாபிலோனின் வீழ்ச்சிக் கும் (கி.மு. 539) இடையிட்ட காலமே 2-ஆம் ஏசயா பணிசெய்த காலமாகும். அதா வது நாடு கடத்தலின் இறுதிக் கட்டமாகும்.

இறைவாக்கினர் நாடு கடத்தப்பட்டு பாபி லோனில் வாழ்ந்த இஸ்ராயேலரைப் பார்த் துப் பேசுகிறார். இவர்கள் எருசலேமுக்குத் திரும்பும் நம்பிக்கையற்றவர்கள். பலர் இறைவனில் நம்பிக்கையிழந்த நிலையில் இருந்தனர். சிலர் பாபிலோனின் சிலைவழி பாட்டில் ஈடுபட்டு நெறி தவறிப் போயினர். இவர்களுக்கு இறைவாக்கினர் ஆறுதல் அளிக்கிறார்; உற்சாகப்படுத்துகிறார்; நம்பிக் கையைத் தூண்டுகிறார். யாவேயின் வழி பாட்டில் மக்களை வேரூன்றச் செய்கிறார்; ஒருவேளை ஓய்வுநாள் வழிபாட்டுக்குச் செபக்கூடத்தில் கூடிய மக்களைப் பார்த்து இறைவாக்கினர் இவ்வாக்குகளை அறிவித் திருக்க வேண்டும். உற்சாகமற்ற இவர்க ளைப் பார்த்துப் பின்வரும் உண்மைகளை மீண்டும் மீண்டும் கூறி இவர்களை உற்சாகப் படுத்துகிறார். இறைவன் எல்லாம் வல்ல வர், என்றும் உள்ளவர், அவரோடு ஒப்பிடும் போது மற்றவையெல்லாம் ஒன்றுமில்லாத வையாகும். உலகையெல்லாம் படைத்த இறைவனுக்கு இஸ்ராயேலை மீட்பது எளிதே. கடந்த காலத்தில் யாவே மட்டுமே

வருங்காலத்தைப் பற்றி முன்னறிவித்துள்ளார். அதனால் இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்படுதல் பற்றிய அவரது வாக்குகளை உறுதியாக நம்பலாம். பாபிலோனின் கடவுளர்கள் ஒன்றுமில்லாதவர்கள், ஒன்றும் இயலாதவர்கள். யாவே ஒருவரே உண்மையான இறைவன். தம்மை உலகிற்கெல்லாம் அறிவிக்கும் தூதை இஸ்ராயேலுக்கு அளித்துள்ளார். ஊழியன் துன்பத்தைப் பகரமாக அதாவது பதிலாகத் துய்ப்பதைப் பயன்படுத்தி இஸ்ராயேலை மீட்பார். உலகம் முழுவதையும் மீட்பார்.

5. இலக்கியச் சிறப்புக்கள்:-

2-ஆம் ஏசயா தன்னைப்பற்றி ஒன்றும் கூறாதிருக்கலாம். ஆனால், அவரது கவித்தன்மை இலக்கிய உலகில் நிலைத்து நிற்கும் சிறப்புடையதாகும். இந்நூலில் வரும் அருமையான உணர்ச்சிப் பாடல்கள் நமக்கு எழுச்சியூட்ட வல்லன. மகிழ்ச்சி மிக்க துதிப் பாடல்கள் நமது மனதை இறைவன்பால் எழுப்பவல்லன. இரங்கல் பாடல்கள் நமது உள்ளத்தை உருக்க வல்லன. கடுமையான வசை மொழிகள் நம்மை எச்சரிக்க வல்லன. அவர் சந்தத்தைப் பயன்படுத்தும் முறையும், எபிரேய இலக்கணத்தின்மேல் அவர் கொண்டிருக்கும் ஆட்சியும் அவர் ஒரு சிறந்த கவிஞர் என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

இந்நூலில் வரும் பாடல்கள் கவனமாய்த் தயாரிக்கப்பட்டவை; சிந்தனைச் செறிவு மிக்கவை; கம்பீரமுடையவை. ஆயினும், இவை வாசிப்பதற்காக எழுதப்பட்டவையன்று; அறிவிக்கப்பட்டு, கேட்டுணர உருவாக்கப்பட்டவையாகும். மீண்டும் மீண்டும் கூறுதலும், அறை கூவல்களும் அடிக்கடி காணப்படும். சொல்லின் பொருளுக்கு ஏற்ப, தொனி இணைந்து நிற்கும். கேள்விகள் எழுப்பப்பட்டுப் பதில்கள் கூறப்படும். நீண்ட உரையாடல்கள் உள்ளன. இத்தகைய பண்புகளைக் கொண்டு, எபிரேய இலக்கியத்தின் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது இந்நூல். இந்நூல் பேசப்பட்ட சொற்களின் தூண்டும் ஆற்றலையும், எழுதப்பட்ட சொற்களின் ஒழுங்கு செய்யப்பட்ட சந்த அமைப்பையும் ஒருங்கிணைத்து விளங்குகிறது.

கருத்துக்களில் இணைவுத் தன்மையும் இலக்கிய நயமிக்க சமன்பாடும் இந்நூலில் சிறப்பாகக் காணப்படும். ஒரு முக்கிய கருத்தைப் பல வசனங்களுக்கு நீட்டுவார். ஆனால் அதில் இலக்கிய நயமிக்க ஒழுங்கு செய்யப்பட்ட வளர்ச்சியிருக்கும் (40:6-8; 41:17-20; 51:9-52:12). ''இதோ'' என்ற சொல் அடிக்கடி வருகின்ற நாடகப் பாணியும் பல இடங்களில் காணப்படுகிறது (ஆதி 41).

நூல் ஆழ்ந்த சமய நோக்குடையது. அதற்கேற்பப் பல இலக்கிய அமைப்புகளையும், பல்வேறுபட்ட இலக்கியச் சுவைகளையும் இறைவாக்கினர் பயன்படுத்துகிறார். எபிரேய மொழியின் நடை, தொனி, இலக்கிய அமைப்பு ஆகியவற்றின் மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்றாக இந்நூல் விளங்குகிறது.

6. வாசகம்:-

மாசரோட்டிக் எபிரேய வாசகம் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளது. எழுபது நூல் கிரேக்க வாசகம் தரத்தில் உயர்ந்ததாகத் தெரியவில்லை. எபிரேய வாசகத்தில் பழுதுப்பட்ட பகுதிகளைத் திருத்த உதவும் நிலையில் எழுபது நூல் வாசகம் இல்லை. சாக்கடல் கும்ரான் ஏடுகள் எபிரேய வாசகத்தோடு ஒத்துப் போகிறது. ''வுல்கத்தா'' இலத்தீன் வாசகம் மெசியா கருத்தை முனைப்பாகக் கொண்டுள்ளது.

7. நூலின் திட்ட அமைப்பு:-

இந்நூலின் திட்ட அமைப்பு பற்றிப் பல வாதங்கள் எழுந்துள்ளன. இந்நூல் ஏறக்குறைய ஐம்பது சிறு பகுதிகளைக் கொண்டது. இவை மூலத்தில் தனித்தனியாக இருந்தன; பிற்காலத்தில்தான் ஒன்றாக இணைக்கப்பட்டன என்று சிலர் கூறுவர். இந்நூல் நீண்ட பகுதிகளின் தொகுப்பாகும். இவற்றில் கருத்து வளர்ச்சி உள்ளது என்று உரைப்பர் வேறு சிலர். இந்நூலில் பல சிறு பகுதிகள்

உள்ளன என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் இவை தொடர்பற்றவையல்ல. இவை கலைப் பண்போடு ஒரே தொகுப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

இந்நூலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல்பகுதி *(40:1-11)* முன்னுரையாகும். இரண்டாம் பகுதி *(40:12-48:22)* பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களைப் பற்றியதாகும். சைரசின் வெற்றிகளைப் பின்னணியாகக் கொண்டது *(44:24-48:12)*. மூன்றாம் பகுதி *(49-55)* சீயோன் மீண்டும் அமைக்கப்படுதலைப் பற்றியதாகும். இதில் சைரசோ, பாபிலோனோ குறிக்கப்படவில்லை. இப் பகுதி கி.மு. 539-க்கு உடனடியாக முந்திய காலத்தைப் பற்றியதாகும்.

ஆறுதலின் நூல்(ஏச 40-55)

I. முன்னுரை *(40:1-11)*

II. மீட்பராகிய யாவேக்குப் பாடல்: பாபிலோனில் இஸ்ராயேலர் *(40:12-48:22)*

1. *40:12-31:* படைப்பவராகிய இறைவனின் மகிமை.
2. *41:1-29:* நீதியின் வீரரான சைரசு.
3. *42:1-4:* துன்புறும் ஊழியன் பற்றிய முதல்பாடல்.
4. *42:5-9:* நீதியின் வெற்றி.
5. *42:10-17:* மீட்பின் புதிய பாடல்.
6. *42:18-25:* மற்றொருபாடல்: மக்களைக் குருடாக்கல்.
7. *43:1-44:23:* இஸ்ராயேலின் விடுதலைபற்றிய இறைவாக்குகள்.
8. *44:24-45:26:* யாவேயின் அபிடேகம் பெற்ற சைரசு.
9. *46:1-13:* பாபிலோனின் போலிக்கடவுளர்களும் யாவேயின் மகிமையும்.
10. *47:1-15:* பாபிலோன்மேல் வசைமொழிப் புலம்பல்.
11. *48:1-22:* முதல் பகுதியின் முடிவுரை.

III சீயோன் மீண்டும் அமைக்கப்பெறுதல்: புதிய எருசலேமைப் பற்றிய பாடல் *(49:1-55:13)*

1. *49:1-26* இஸ்ராயேலின் விடுதலை.
2. *50:1-11:* இருளில் இஸ்ராயேல்.
3. *51:1-52:12:* யாவேயில் நம்பிக்கை கொள்ளும் படி அறிவுரை.
4. *52:13-53:12:* துன்புறும் ஊழியன் பற்றிய 4-ஆம் பாடல்.
5. *54:1-17;* புதிய சீயோன்.
6. *55:1-13:* முடிவுரை.

8. சிறப்புக் கருத்துக்கள்:-

8. அ. படைப்பவரும் மீட்பவருமான இறைவன்:-

உலக வரலாற்று அரங்கில் இறையரசு வருகையைப் பாடி அறிவிக்க 2-ஆம் ஏசயா ஆணை பெறுகிறார். அதை நிறைவேற்றும்போது இறைவனது படைப்புச் செயலையும் வரலாற்றுச் செயல்களையும் எடுத்துக்கூறி இறைவனைப் பற்றிய அரியதோர் காட்சியை வரைகிறார். உலகைப்படைத்த இறைவனே, கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகளில் செயலாற்றியுள்ளார்; நிகழ்காலத்திலும் தொடர்ந்து செயலாற்றுகிறார் *(45:12-13)*. இரண்டிலும் ஒரே குறிக்கோள் செயல்படுகிறது. மக்கள் வாழ்வதற்காக உலகைப் படைத்த இறைவன் இப்போது அவர்களுக்காகத் தாம் கொண்டிருக்கும் திட்டத்தை இறைவாக்கினர் வழியாக வெளிப்படுத்துகிறார் *(45:18-19)*. இறைவனது படைப்புச் செயலை எடுத்துக் கூறுவதன்வழியாக, இறைவாக்கினர், நிகழ்காலத்தில் இறைவன் செயலாற்றுவதை வலியுறுத்துகிறார். படைப்பவரும் மீட்பவருமான இறைவனது செயலை ஓர் உன்னதப்பாடல் போற்றிப் புகழ்கிறது. ''ஆண்டவர் புயமே விழித்தெழு! விழித்தெழு! ஆற்றலை அணிந்துகொள்! பண்டை நாட்களில் கிளம்பியது போல் விழித்தெழு'' *(51:9)*. விடுதலைக்கு ஏங்கும் இந்த உணர்ச்சிக் கூக்குரல், இறைவன் தமது பண்டைக் கால ஆற்றல் மிக்க செயல்களைப் படைப்பிலும் வரலாற்றிலும் மீண்டும் செய்ய வேண்டும் என்று அவரைத் தூண்டுகிறது.

பாபிலோனியத் தேவர்களின் படைப்புக் கடவுள்கள், வாழ்வின் தொடக்கச் செயலுக்கும், தொடர்ந்து வரும் வாழ்க்கைச் சுழலுக்கும் பொறுப்பானவர்கள் என்று கருதப்பட்டனர். ''வெறும் காற்றும் வியர்த்தமுமானவர்கள்'' *(41:29)*. யாவேயே எல்லா உலகங்க

ளையும் கடந்தவர். 2-ஆம் ஏசயாவின் படைப்பு இறையியலைப் பரந்த மீட்புச் சூழ்நிலையில் நாம் புரிந்து கொள்ள முயல வேண்டும். இறையாற்றல், உலகின் தோற்றம் பற்றிய கருத்தியலில் இறைவாக்கினர் அக்கறை கொள்ளவில்லை. மாறாக அவரது பாடல்கள் மீட்பராம் இறைவனைப் பறைசாற்றுகின்றன. இந்த இறைவன் தமது மக்களை மீட்கவும் அவர்களை மகிழ்விக்கவும் அவர்களிடையே பிரசன்னமாய் உள்ளார்.

மக்களது வாழ்வு மூலக்குழப்பநிலைக்கு இழிந்து போயிற்று; ஆகவே மீட்பு புதிய படைப்பாக அமையவேண்டும். ஆனால் அவர்கள் இறைவனின் ஆற்றலில் விசுவாசம் கொள்ள வேண்டும். யாவேதாம் எல்லாப் பொருட்களையும் படைத்த இறைவன் என்று இறைவாக்கினர் உறுதி அளிக்கிறார். (41:4; 46:4; 48:12) இறைவனே ''முதலும் முடிவுமானவர்'' (44:6). அவரே வாக்குறுதி அளிக்கிறார்; அவரே நிறைவேற்றுகிறார்.

படைப்பைக் குறிக்கும் ''பாரா'' என்ற முன்றயான சொல்லைப் பதினாறு முறை இறைவாக்கினர் பயன்படுத்துகிறார். இறைவனது படைப்புச் செயல் அவரது ஆற்றலின் வெளிப்பாடாக அன்று; அவரது பரிவு, அக்கறையின் வெளிப்பாடாக எடுத்துக் கூறப்படுகிறது. இறைவன் குழப்பத்தின் ஆட்சியைத் தமது சொல்லால் அடக்கித் தமது மக்களுக்கு இன்பமிக்க நாட்டைத் தயாரிக்கிறார் (51:6-16). ''கடல் நீரை உள்ளங்கையால் அளந்தவர் யார்? வானத்தின் நீள அகலங்களைக் கணித்தவர் யார்?'' (40:12). இந்த விவரிப்பு யாவேயை, அக்கறையின்றித் தமது ஆற்றலைச் சிதறடிக்கும் கடவுளாகக் காட்டவில்லை. மாறாக இறைவன் ஓவியனுடைய மென்மையான கவனத்தோடு செயலாற்றுபவர் என்று காட்டுகிறது. படைப்பு பாராட்டை எழுப்பும் செயலன்று; வியத்தகு அன்பை விரும்பிக்கோரும் முயற்சியாகும்.

இறைவன், எந்த உதவியாளரும் ஆலோசகரும் இல்லாமல், கடல், வானம், பூமி, மலைகள் யாவற்றையும் படைத்தார் (40:12-14). அவர்முன் பெரும் காடுகளும் ஒன்றுமில்லாதவை. லெபனோனின் காடுகளும், அதன் விலங்குகளும் அவருக்குத் தகுதியான பலிசெலுத்தப் போதுமானவையன்று (40:15-17). அவர் மனிதன் சிந்திக்கக்கூடிய எதற்கும், அவனது கை செய்யும் எதற்கும் முற்றிலும் மாறானவர். உலகங்களுக்கெல்லாம் மிக உயர்ந்தவர். உலகில் அவரது ஆற்றல் வெளிப்படுகிறது. அவரே வரலாற்றை ஆளுகிறார். மனிதர்களையும் நாடுகளையும் நடத்துகிறார் (40:18-24). தாம் படைத்த கோடிக்கணக்கான விண்மீன்களை அறிந்து கட்டுப்படுத்த வல்ல அவர், நாடு கடத்தப்பட்ட தமது மக்களின் அவல நிலையை அறியாமலோ அவர்களுக்கு உதவிசெய்ய ஆற்றல் இல்லாமலோ இல்லை (40:25-26). எல்லாக் காலங்களுக்கும் அவர் ஆண்டவர். ஆற்றலிலும் ஞானத்திலும் வரையற்றவர். தமக்காகப் பொறுமையோடு காத்திருப்பவர்களைப் புதுப்பிக்கும், பலப்படுத்தும் வற்றாத ஊற்றாவார் (40:27-31).

தொடக்கத்தில் குழப்பத்தை அடக்கி வெற்றி கொண்டு உலகைப் படைத்த இறைவனே, எகிப்திலிருந்து புறப்பட்ட யாத்திரையில் இஸ்ராயேலரைப் படைத்தார் (51:9-11). அந்த யாத்திரையில் பெருஞ்செயல்களைச் செய்தார்; செங்கடலை வெற்றி கொண்டார். ''தேர்களையும் குதிரைகளையும் படைகளையும் வீரர்களையும்'' அழித்தார். அந்த யாத்திரையை நாடுகடத்தப்பட்டவர்கள் நினைவுகூர வேண்டிய அவசியமிருக்காது, ஏனெனில் அதைவிட மகிமையான புதிய யாத்திரையை இறைவன் நிறைவேற்றப் போகிறார். அது, நாடு கடத்தப்பட்டவர்கள் பாபிலோனிலிருந்து விடுதலையடைந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு மகிமையோடு திரும்புதலாகும்.

இறைவனின் மீட்புச் செயலை, இஸ்ராயேலின் சமூக வாழ்விலிருந்து எடுக்கப்பட்ட உருவங்களால், இறைவாக்கினர் எடுத்துரைக்கிறார். ஒருவன் அடிமையாக விற்கப்பட்டால் அவனைத் திரும்ப வாங்கி விடுதலை அளிப்பது அவனுடைய நெருங்கிய

உறவினனுடைய கடமையாகும். அப்போது அடிமையானவனுக்கு உறவினன் மீட்பனாகிறான். இம்முறையைப் பின்பற்றி, இறைவன் நாடுகடத்தப்பட்ட இஸ்ராயேலை எவ்வளவு அன்பு செய்தார் என்றால், அவர்களை மீட்க எந்த விலையையும் கொடுக்க அவர் தயாராக இருக்கிறார். ''உன் இறைவனாகிய ஆண்டவர் நாமே. உன்னுடைய இஸ்ராயேலின் பரிசுத்தராகிய நாமே உன் மீட்பர், உன்னுடைய மீட்புக்கு ஈடாக எகிப்தையும் எத்தியோப்பியாவையும் சாபாவையும் கையளிக்கிறோம். நமது கண்ணுக்கு நீ விலையேறப் பெற்றவன், மதிப்புக்குரியவன்; உன்மேல் மிகுந்த அன்பு கொண்டோம்; ஆதலால்தான் உனக்காக மக்களைக் கையளிப்போம். உன் உயிருக்காக மக்களை மாற்றிக்கொள்வோம். அஞ்சாதே, ஏனெனில் நாம் உன்னோடிருக்கிறோம்'' *(43:3-4)*.

இவ்வாறு பேசும் மீட்பராகிய இறைவன் தம்மை இஸ்ராயேலின் பரிசுத்தர்'' *(43:3)* என்று அழைக்கிறார். இப்பெயரை 2-ஆம் ஏசயா பதினோரு முறைகள் பயன்படுத்துகிறார்; தன் குருவாகிய முதலாம் ஏசயாவின் போதகமான இறைவனது பரிசுத்தம் பற்றிய போதகத்தை விரிவு படுத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டு, மனிதரிலிருந்து வேறுபட்டு, மறைபொருள் மிக்க இறைவன், தமது மாட்சிமையில் அஞ்சத்தக்கவர். ஆயினும் இஸ்ராயேலோடு உடன்படிக்கை செய்து கொண்டார். மக்களின் பரிசுத்தம் இறைவனது பரிசுத்தத்திலிருந்து வருவதாகும். ''இஸ்ராயேலின் பரிசுத்தரே உன் மீட்பர்'' *(41:14; 43:3)* அவர் தம் மக்களை விடுவித்துச் சுதந்தரம் அளிக்கிறார். அவர்களுக்குப் பரிசுத்த வழியைப் போதித்து வழிநடத்துகிறார் *(48:17)*.

8. ஆ. யாவே உலகம் முழுமைக்கும் இறைவன்:-

படைப்பவரும் மீட்பவரும், இஸ்ராயேலின் பரிசுத்தமானவரும் வரவிருக்கும் ஆண்டவருமான யாவேயே ''உலகுக்கெல்லாம் இறைவனாவார்'' *(54:5)*. அவரது குறிக்கோளை எய்துவதற்கு எல்லாம் வல்லவர். அவரது மேலாண்மையிலிருந்து எதுவும் ஒதுக்கப்படுவதில்லை. அவருக்குப் போட்டியாக யாருமில்லை. முழுப்படைப்பும் வரலாறும் அவருக்குக் கட்டுப்பட்டவை. ''நாமே ஆண்டவர், வேறு எவருமில்லை. ஒளியை உருவாக்குகிறவரும், இருளைப் படைக்கிறவரும், வாழ்வை வழங்குகிறவரும், தாழ்வைத் தருகின்றவரும் நாமே. இவற்றையெல்லாம் செய்கிற நாமே ஆண்டவர்'' *(45:7)*. பிறஇறைவாக்கு நூல்களில் பொதுவாகக் கூறப்பட்ட இறையொருமைக் கோட்பாடு, இந்நூலில், தெளிவாக, வெளிப்படையாக எடுத்துக்கூறப்படுகிறது.

சிலைகளைச் செய்வதையும் வழிபடுவதையும் நையாண்டி செய்யும் பலபகுதிகள் இந்நூலில் காணப்படுகின்றன. பாபிலோனிய அந்நிய வழிபாட்டுச் சடங்குகளாலும் சிலைகளாலும் ஈர்க்கப்பட்டு அவற்றில் தங்களையே இழந்துவிடும் ஆபத்தில் நாடுகடத்தப்பட்டவர்களில் சிலர் இருந்திருக்கலாம். அந்த ஆபத்துக்கு எதிராக இறைவாக்கினர் போராடுகிறார். சிலை செய்து களைத்துச் சோர்ந்து போகும் கொல்லனது செயலை வசையாடுகிறார் *(44:12)*. மரத்தின் ஒருபகுதியிலிருந்து ''விறகு எடுக்கிறான். அப்பஞ் கடவும் அதையே பயன்படுத்துகிறான். அதிலும் மீதியாய் இருப்பதைக் கொண்டுதான் தெய்வத்தை உருவாக்கி வணங்குகிறான். உளியால் ஒரு சிலை செதுக்கி அதன்முன் தெண்டனிடுகிறான்'' *(44:15)*. மனிதன் கற்பனையையும் கலையையும் பயன்படுத்தி, ஒப்புவமையில்லா இறைவனின் உண்மைச் சாயலைச் செய்யமுடியும் என்பது எவ்வளவு நகைப்புக்குரியது *(40:18-20; 46:5-7)*. தங்களை வழிபடுவோரைக் காப்பாற்ற முடியாத இச்சிலைகளை, சைரசு படையெடுத்து வந்தபோது, பாதுகாப்பான இடத்திற்குத் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது. இப்போலிக் கடவுள்கள் ஒரு சுமையாக மாறினர். உண்மையான இறைவன் சுமக்கப்படுபவர் அல்லர்; தமது மக்களைத் ''தூக்கிச் செல்பவர்,'' ''விடுவிப்பவர்'' ஆவார் *(46:1-4)*. ''நாமே படைத்தோம், நாமே உங்களைத்

தாங்கினோம், நாமே தூக்கிப் போவோம், உங்களை விடுவிப்போம்''.

இறைவனின் மகிமையும் மீட்பும் இஸ்ரா யேலுக்கு மட்டும் உரியதன்று. படைப்பு எல்லாவற்றுக்கும் உரியதாகும். ''அப்போது ஆண்டவரின் மகிமை (மீட்புப் பிரசன்னம்) வெளிப்படுத்தப்படும்; மனிதர் அனைவரும் ஒருங்கே அதைக் காண்பர்'' (40:5). இக்கூற் றில், எபிரேய வாசகம் ''மனிதர் அனைவ ரும்'' என்பதற்குப் பதிலாக ''ஊன் அனைத் தும்'' என்பதைப் பயன்படுத்துகிறது. ஊன் பலவீனத்தையும், பாவநிலையையும் இறை வனுக்கு எதிராகக் கொள்ளும் பகைமையை யும் குறிக்கும். நாடு கடத்தலின்போதும் அதற்கு முன்னும் இஸ்ராயேல் இத்தகைய நிலையில்தான் இருந்தது. அதனால் அவர்க ளது கெடுமதியே அவர்களைக் ''குழப்பத் தில்'' ஆழ்த்தியது. ''ஊனுக்கும்'' ''குழப்பத் திற்கும்'' அதிக ஒற்றுமையுண்டு. இஸ்ரா யேலை மீட்க இறைவன் புதியதோர் இன்ப வனத்தைப் படைக்க வேண்டும். ஆகையால் பிறநாடுகளிலிருந்து இஸ்ராயேல் சிறிதும் வேறுபடவில்லை. இஸ்ராயேல் மீட்கப் படக் கூடுமானால், பாபிலோனியரும் பார சீகரும் மற்றவர்களும் மீட்கப்படலாம்.

தொடக்கத்தில் இறைவன் கோருவதெல் லாம் விசுவாசம், அவருடைய மீட்கும் ஆற்ற லுக்குத் திறந்தமனது, ''குழப்பம்'' வெற்றி கொள்ளப்பட்டுப் புதிய படைப்பாகும் என்ற நம்பிக்கை, எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறும் என்ற நம்பிக்கை ஆகியவை தான். நாடுகள் இந்த நிபந்தனைகளை நிறை வேற்ற முடியும். ஏனெனில், இந்த ஆன்ம பக்குவம், வருத்தம், மனத்துக்கம் ஆகியவற் றிலிருந்து தோன்றுவதாகும். இந்நூலின் சில பகுதிகளில் இறைவன் பிறநாடுகளுக்கு எதி ராக அதிகச் சீற்றம் கொள்வதாகத் தோன்றுகி றார். ஆனால் இறைவன் தம்மக்களைவிட மற்ற மக்களை அதிகக் கொடுமையாக நடத் தியதில்லை. இறைவனது அன்பின் மிகுதிக் கேற்ப, தாம் அன்பு செய்தவர்களுக்காகத் திட்டமிட்ட பெரும் குறிக்கோளை அடைவ தில் உறுதிபூண்டுள்ளார் (43:1-44:5).

துன்புறும் ஊழியன்பற்றிய பாடல்களில் தான், இறைவன் யாவற்றையும் அன்பு செய் வது தெளிவாக எடுத்துக்கூறப்படுகிறது. இறைவனின் ஊழியனாகிய இஸ்ராயேல் ''மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்'' (42:1). ''உலகத்தின் எல்லை வரையில் நமது மீட்பு எட்டும்படி பிற இனத்தார்க்கு ஒளி யாக உன்னை ஏற்படுத்தினோம்'' (49:6).

8. இ. வரலாற்றின் ஆண்டவர்:-

பிற இன மக்களும் அவர்களது கடவுள்க ளும் இறைவனது நீதிமன்றத்தின்முன் அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்குச் சவால் விடப்படுகிறது. ''உங்கள் வாழ்க்கை இப்போது சொல்லுங்கள்.....உங்களுக்குச் சார்பான சான்றுகளை எடுத்துக்காட்டுங்கள்'' (41:21). அவர்களில் யார் வரலாற்று நிகழ்ச்சி களை முன்னறிவித்தனர்? அவர்கள் காலத்து நிகழ்ச்சிகளின் பொருளை இப்போது அவர் களால் விளக்க முடியுமா? அவர்களுக்கு ஒன்றும் தெரியாது; வரலாற்றுப் போக்கில் செல்வாக்குச் செலுத்த அவர்கள் ஆற்றல் அற்றவர்கள்; ஆனால் உண்மையான இறை வனே வரலாற்றின் ஆண்டவராவார். நிகழ்ச் சிகளை முன்னறிவிக்கிறார். தமது இறை வாக்கினர் வழியாக அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறார். ''தமது வலிமை மிக்க ஆற்றலால் அவை நிறைவேறச் செய்கிறார்'' (41:21-29). இறைவனைப் பற்றி 2-ஆம் ஏசயா தரும் காட்சி மிக விரிவானதாகும். இறைவாக்கினர் ''தொடக்கத்தையும் முடி வையும்'' அறிவிக்கிறார். அவர் தொடக்கத் திற்கும் முடிவுக்கும் இடைப்பட்ட கால வரலாற்றின் இறைவாக்கினர் ஆவார். அவர் இறைவனது செயல்களாகிய படைப்பு, வர லாறு, வெளிப்பாடு, மீட்பு ஆகியவற்றை, ஒன்றோடொன்று தொடர்புடைய முழுமை யாகப் பார்க்கிறார். அவற்றை ஒரு பெரிய நாடகத்தின் வரிசைக்கிரமமாய் வரும் காட்சி களாகக் காண்கிறார். அவர் தொடக்கம் முடிவு ஆகியவற்றின் ஆண்டவருடைய இறைவாக்கினர் ஆவார். ''முதலும் நாமே, முடிவும் நாமே, நம்மையன்றி வேறு இறை வன் இல்லை'' (44:6). இறுதியில் அவரை மாட்சிமைமிக்க, உன்னதமிக்க படைப்பவ

ராகவும் மீட்பவராகவும் எல்லாப் படைப்புகளும் ஏற்றுக் கொள்ளும் (45:22-23). ஏனெனில் யாவும் அவரிடமிருந்தே வந்தன. அவராலேயே உண்டாயின. அவருக்காகவே இருக்கின்றன. அவருக்கே என்றென்றும் மகிமை உண்டாகுக'' (உரோ 11:36).

8. ஈ. மெசியா:-

இறைவன் இஸ்ராயேலைப் பயிற்றுவிப்பதில் தண்டனையை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்; கடந்த காலத்தில் அசீரியாவையும் பாபிலோனையும், தமது கசையாகவும் தடியாகவும் பயன்படுத்தியுள்ளார். இப்போது இஸ்ராயேலுக்கு ஒரு மீட்பரைத் தோற்றுவிக்கிறார். இந்த மீட்பின் வீரர் முதலில் மறைமுகமாக விவரிக்கப்படுகிறார் (ஏச 41:2-3:25). பிறகு இவர் சைரசுதான் என்று தெளிவாகக் குறிக்கப்படுகிறார் (44:28-45:13). சைரசு இலிதியாவை வெற்றிகொள்கிறார். பாபிலோனின் பாதுகாப்புகள் சரிகின்றன. சைரசின் வெற்றி பாபிலோனுக்கு அறிவிக்கப்படுகிறது. அங்கு வாழ்ந்த மேல்குலத்தோரும் அர்ச்சகர்களும் தனித்துக்கூடி நகரைப் பாதுகாப்பதைப்பற்றி ஆலோசனை செய்து திட்டமிடுகின்றனர். ஆனால் நகரில் வாழாத அரசனாலும் சுகபோகத்தைத்தேடும் ஆளுநர்களாலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. நகரின் நிலை நம்பிக்கையற்று மிகவும் நலிந்து போய்விட்டது.

ஆனால் நாடு கடத்தப்பட்டு, பாபிலோனில் குடியிருந்த இஸ்ராயேலர்களுக்கு மேற்கூறப்பட்ட வரலாற்றுத் திருப்பச் செய்தி புதிய யுகத்தின் தொடக்கமாகும். யூதக் குடியிருப்புகளில் இளைஞர்கள் வீட்டுக்கு வீடு ஓடி, சைரசின் வெற்றிபற்றிய செய்தியை அறிவிக்கின்றனர். முதியவர்கள் அதுபற்றி வாதிக்கின்றனர். தாவீது மரபைச் சேர்ந்த செருபாபேலும் அர்ச்சகர்களின் குடும்பத்தைச்சேர்ந்த யோசுவாவும் பாலஸ்தீனத்திற்குத் திரும்புவது பற்றித் திட்டம் தீட்டுகின்றனர் (எஸ் 1-3). 2-ஆம் ஏசயாவோ, தனித்து அமர்ந்து மாபெரும் பாடல் ஒன்றை உருவாக்குகிறார். அதை அடுத்த ஓய்வுநாள் வழிபாட்டுக் கூட்டத்தில் அறிவிக்கிறார். அவர் மகிழ்ச்சிமிக்க செய்தியைத் தூதுரைப்பவர் ஆவார். மெசியாவின் மகிமை ஒளி வீசத் தொடங்கியது (40:9). இறைவன் தமது விண்ணக அவையைக் கூட்டி, இஸ்ராயேல் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குத் திரும்புதலாகிய புதிய யாத்திரையைத் தீர்ப்பிடுவதை இறைவாக்கினர் பரவச இன்ப நிலையில் கேட்கிறார். ''மனிதர் அனைவரும் ஆண்டவரின் மகிமையை ஒருங்கே காண்பர்'' (40:1-5). இறைவாக்கு நிறைவேறுதலை அறிவிக்க இறைவாக்கினர் ஆணைபெறுகின்றார் - (40:9). அவர் தன் அடையாளத்தை மறைத்து, எருசலேமையே இந்த நற்செய்தியை அறிவிக்கச் செய்கிறார்.

இறையரசு அண்மையில் உள்ளது. 2-ஆம் ஏசயா தாவீது மரபை ஒதுக்கி விட்டு, யாவே மட்டும் அரசாற்றல் உடையவர் என்று அறிவிக்கிறார். ஒரு காலத்தில் தாவீதுக்கும் அவரது மரபுக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள், இப்போது இஸ்ராயேலர் யாவருக்கும் உரிய உரிமைச் சொத்தாக மாறுகின்றன. தாவீது அரசமரபு நெறி தவறியது; தவறுகள் செய்தது; பழிப்புக்குரியதாகியது. ஆகவே அந்த மரபை இறைவாக்கினர் வேண்டுமென்றே புறக்கணிக்கிறார். யாவேயே ''இஸ்ராயேலின் மாமன்னர், அதன் மீட்பர்'' ஆவார் (44:6). அவரது மகிமையால் உலகெங்கும் களிப்புறும் (41:24 தொ; 42:10-16).

ஒழுங்கையும் அமைதியையும் சமூக நீதியையும் மீண்டும் நிறுவ இறைவன் சைரசை உறுதிப்படுத்துவார். அவரோ யாவேயின் மெசியா; அவரது அபிடேகம் பெற்றவர் (45:1); அவரது மேய்ப்பன் (44:29); இறைவனால தூண்டி இயக்கப்படுபவர். பாபிலோனியர், அசீரியர்களைப் போல் சைரச வெற்றி வெறி கொண்டு அலையவில்லை. தான் வென்றவர்களைக் கொடுமைப்படுத்தவில்லை; கொள்ளையிடவில்லை: நாடு கடத்தவில்லை. மாறாகக் கைதிகளை விடுவித்தார். அந்தந்த இடத்து மக்களின் சமயங்களுக்கு மதிப்பளித்தார். ஒரே உலகப் பேரரசை அமைக்க மட்டுமே அதிகாரத்தை விரும்பினார். இவர் நாடு கடத்தப்பட்ட

இஸ்ராயேலை விடுவிப்பார் (45:13). எருச வேமை உலக மையமாக மீண்டும் அமைக்க வும், அதன் ஆலயத்தை மீண்டும் கட்டி யெழுப்பவும் ஆணையிடுவார் (41:2-4; 25-29; 44:28-45:6).

இறைவனது வாக்குறுதிகள் ஒவ்வொன் றும் நிறைவேறும் நிலையில் உள்ளது. அவ ரது தர்மம் நிலை நாட்டப்பெறும் (42:6). இவரது நீதி தளிர்க்கும் (45:8)

8. உ. புதிய யாத்திரை அல்லது விடுத லைப் பயணம்:-

விடுதலை அளிப்பவரான சைரசின் வெற்றி, இஸ்ராயேல் பாலஸ்தீனத்திற்குத் திரும்புவதின் முன்னோடியாகும். இஸ்ரா யேல் விடுவிக்கப்பட்டு, யாவேயால் நடத் தப்பட்டு, சீரியாப் பாலையின் ஊடே, மிகக் குறுகிய காலத்தில், பவனியாய்ப் பயணம் செய்து எருசலேம் திரும்பும் (40:3 தொ). அப்பயணம் மெதுவான மாட்சிமை மிக்க ஊர்வலமாக அமையும். அதை யாவேயே தலைமை தாங்கி நடத்துவார் (52:11-12). இப்பயணத்தை எளிதாக்கப் பாலைவனமே மாற்றி அமைக்கப்படும் (40:3-5; 41:17-19; 43:19-2). யாவே அரசராக எருசலேமுக்குள் செல்வார் (51:7). பிறநாட்டு மக்கள் எல்லாம் இதைப் பார்த்து மனந்திரும்புவர்; தேர்ந் தெடுக்கப்பட்ட மக்களோடு உறவு செய்து கொள்வர் (44:5).

பாபிலோனிலிருந்து பாலஸ்தீனத்துக்குத் திரும்புதலை ஒரு புதிய யாத்திரையாகவும், இறைவனது மற்றுமொரு உறுதியான தலை யீடாகவும் 2-ஆம் ஏசயா காண்கிறார். மோசேயின் காலம் தனது காலத்தில் மீண் டும் நிகழ்வதாகக் காண்கிறார். ஆனால் தன்னை ஒரு மோசேயாகக் கற்பனை செய்ய வில்லை. இறைவனே "ஆயனைப் போல் தமது மந்தையை மேய்ப்பார், ஆட்டுக் குட்டி களைத் தம் கையால் கூட்டிச் சேர்ப்பார்; அவற்றை அன்போடு எடுத்து அரவணைப் பார்; சினையாடுகளை இளைப்பாறும் இடத்திற்குக் கூட்டிச் செல்வார்" (40:11). இறைவாக்கினர் யாத்திரைக் கருத்தை மீண் டும் மீண்டும் நினைவு கூர்கிறார். இறைவன் பாதையைத் திறந்து விடும் வரை, பலமிக்க பாபிலோன் இறைமக்களின் பாதையை மறைக்கும், மற்றொரு செங்கடலாகும். பாலஸ்தீனத்திலிருந்து பாபிலோனைப் பிரிக்கும் அராபியப் பாலைவனம், சீனாய்ப் பாலைவனத்தின் ஒரு நீடிப்பே ஆகும். மோசே பாறையிலிருந்து நீர் கொடுத்தார். இறைவனோ வறண்ட நிலத்தையே நீரூற் றாக மாற்றுவார் (41:18). இது புதுயுகத்தின் நிறைவாழ்வையும் அதன் வெளிப்பாட்டை யும் அடையாளமாக அறிவிக்கிறது. மன் றாட்டு மிக்க தியானத்தாலும் அப்போஸ்த லப்பணியாலும் 2-ஆம் ஏசயா முதல் யாத்தி ரையின் உள்ளத்துடிப்பை வெளிப்படுத்தித் தன் சமகாலமக்களின் இதயத்தில் பதிய வைக்கிறார்.

நாடு கடத்தலிலிருந்து திரும்புதல் பாவ மன்னிப்பின், மீட்பின் அடையாளமாகும். இஸ்ராயேலின் உறவினரான யாவே தமது மக்களை மீட்பார் (48:53-25; 48:6-11). மீண் டும் கட்டியெழுப்பப்பட்ட தலைநகரிலிருந் தும் ஆலயத்திலிருந்தும் (44:26-28; 49:16) யாவே நாட்டை ஆள்வார் (52:7). இஸ்ராயே லர் பல்கிப் பெருகுவர் (46:19-20; 54:1). சமாதான உடன்படிக்கையிலும் (54:10), யாவேயைப் பற்றிய உண்மையான அறிவி லும் (54:13; 51:7; 48:17) நீண்ட காலம் வாழ்வர் (51:6-7). மற்ற நாடுகள் எல்லாம் இஸ்ராயேலுக்குப் பணிசெய்யும் (45:15; 49: 22-23).

8. ஊ. இறைவார்த்தையின் ஆற்றல்:-

மற்றெந்த இறைவாக்கினர்களையும்விட 2-ஆம் ஏசயா இறைவார்த்தையின் ஆற்ற லைப் பெரிது படுத்துகிறார். இறை வார்த்தை வெல்ல முடியாத ஆற்றல் மிக்கது. இறைவனின் முந்தைய வார்த்தைகள் அல் லது வாக்குறுதிகள் ஏட்டில் வரும் வெறும் வார்த்தைகள் அன்று. மாறாக அவை செயல் களாகும். படைப்பு இறைவனது வார்த்தை யிலிருந்தே தோன்றுகிறது. படைப்பு இறை வனது இரகசியத் திட்டத்திலிருந்தும் ஆழ்ந்த அன்பு மிகுதியிலிருந்தும் தோன்றுகிறது.

ஏனெனில் வார்த்தை, மனதிலிருந்தும் இதயத்திலிருந்தும் தோன்றுகிறது.

வார்த்தை விசுவாசத்தை உள்ளடக்குகிறது. இறைவன் தமது இறைவாக்கினர் வழியாகக் கூறியவை நிறைவேற வேண்டும். ஆனால் அவற்றை நிறைவாக அனுபவிக்க இஸ்ராயேல் சிறிது காலத்திற்குக் காத்திருக்க வேண்டும். ஆனால் அவை நிறைவேறும் போது புதுப்படைப்பு மிகப் பெரியதாய் இருக்கும். அதைக் கண்டு எல்லாரும் வியப்பெய்துவர் *(43:9 தொ; 48:3-11)*. இறை வார்த்தை உண்மையான அறிவை அளிக்கிறது. ஆனால் அது இறைவனைப் பற்றிய நிறைசெய்தியை ஒருபோதும் அளிக்க முடியாது. ஆகவே,இறைவன் செயலாற்றுபவர் மட்டும் அல்லர்; மனிதக் கணிப்புகளுக்கு அப்பால் செல்பவர் என்ற உறுதியில் மனிதன் விசுவாசத்தால் அவருக்குப் பதில் அளிக்கிறான். இறைவார்த்தையில் விசுவாசம் கொள்வது, இந்நூலின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். அதன் பல பாடல்கள் இக்கருத்தில் உச்சநிலையை அடைகின்றன. ''ஆண்டவர்தாமே திருவாய் மலர்ந்தார்... நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்'' *(40:1-8)*.

இறைவார்த்தை ஆற்றல் மிக்கது; மழையையும் பனியையும் போன்றது. மழை நீர் நடுவானில் தொங்கிக் கொண்டிருப்பதில்லை. அது பூமியில் விழுந்து தரையைச் சோர நனைத்துச் செழிப்பாக்கி அதில் முளை இளம்பி விளையும்படி செய்து விதைப்பவனுக்கு விதையும் உண்பவனுக்கு உணவும் தருகிறது. அவ்வாறே இறைவார்த்தையும் செயல்படுகிறது. இரண்டும் உலக வடிவம் பூண்டு மனிதனை அடைகின்றன. மழை புல்லாகவும் அறுவடையாகவும் மரங்களாகவும் மனிதனை அடைகிறது. இறை வார்த்தை மனிதக் குறியீடுகளின் நிறைவிசையோடு மனிதனை அடைகிறது. இறைவன் விரும்பியதைச் செய்கிறது. எதற்காக அதை அனுப்பினாரோ அதை நிறைவேற்றுகிறது *(55:10-11)*.

8. எ. இறைவனது மக்கள்:-

நாடுகடத்தப்பட்ட காலத்தில்தான் இஸ்ராயேல் தனது அழைப்பைத் தியானித்து உணர்ந்தது எனலாம். தன் கடந்தகால வரலாற்றின் வழியாகத் தனது அழைப்பை உணர்கிறது. இந்த வரலாற்றில் மூன்று கட்டங்களைச் சிறப்பித்துக்கூறுகிறார் 2-ஆம் ஏசயா. அவை ஆபிரகாம் *(41:8-9; 51:2)*, இங்குமங்குமாகக் குறிக்கப்படும் யாத்திரை, தாவீது *(55:3)* ஆகியவையாகும். இந்த வரலாற்றைப் புதிய இஸ்ராயேல் தனது மரபுரிமையாகப் பெற்றது. இந்த மரபுரிமையில் ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோரின் சலுகைகளும் தூதும் மீண்டும் வாழ்கின்றன; எல்லோருக்கும் உரியனவாகக் காட்டப்படுகின்றன.

நித்திய இறைவன் படைப்பிலும், வரலாற்றிலும் தாம் ஆற்றும் செயல்களில் தமது மக்களோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளார். அவர், ''இஸ்ராயேலின் பரிசுத்தர்'' ஆவார். இந்த உடன்படிக்கை உறவு ஆபிரகாமை இறைவன் தேர்ந்தெடுத்து அழைத்ததில் தொடங்குகிறது. இஸ்ராயேல் தனது தகுதியால் இறைவனது அன்பைப் பெற்றது என்று கூறமுடியாது. ஆபிரகாமின் வாழ்விலிருந்து 2-ஆம் ஏசயா காலத்து இஸ்ராயேலர், ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் *(51:2)*. நாடுகடத்தப்பட்டவர்கள் எண்ணிக்கையில் சிலராயினும் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஏனெனில் ஆபிரகாம் வயது சென்றவரும் குழந்தையில்லாதவருமாய் இருந்தாலும், இறைவனது ஆசீரால், பல இனங்களுக்குத் தந்தையானார். அவர்களும் அதே ஆசீரில் பங்கு பெறுகின்றனர். ஏனெனில், இஸ்ராயேலர் அனைவரும் ஆபிரகாம் என்ற பாறையிலிருந்து, செதுக்கி எடுக்கப்பட்ட கற்களாவர் *(51:1)*. இந்த உறவு ஒருமைப்பாட்டால், இஸ்ராயேலர், ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு மரபு உரிமையாளர் ஆவர். இறைவனின் ஊழியனும் அன்பனுமான ஆபிரகாமின் வழித்தோன்றல்களான இஸ்ராயேலுக்கு ''உன்னைத் தேர்ந்து கொண்டோம்; உன்னைத் தள்ளி விடவில்லை'' *(41:9)* என்ற

வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. நாடு கடத்தப்பட்டதால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்னும் தகுதியை அவர்கள் இழந்து விடவில்லை. இறைவனான கணவன் தம் மனைவியாகிய இஸ்ராயேலுக்கு விவாகரத்துக் கொடுக்கவில்லை (50:1-2). ''குறுகிய காலந்தான்'' இஸ்ராயேல் கைவிடப்பட்டது. திருமண உறவு மீண்டும் அமைக்கப்படும்; புதுப்பிக்கப்படும். இந்த உறவு பெருவெள்ளத்திற்குப்பின் நோவாவோடு செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு உடன்படிக்கைபோல், நிலையானதாகும்; முறிக்க முடியாததாகும் (54:4-10). ''மலைகள் நிலைபெயரலாம்; குன்றுகள் அசைந்து போகலாம்; ஆனால் உன் மீது நாம் கொண்ட அன்பு நிலைபெயராதிருக்கும்; நமது சமாதானத்தின் உடன்படிக்கை அசையாதிருக்கும் என்கிறார் உன்மேல் இரக்கம் கொள்ளும் ஆண்டவர்'' (54:10).

சீனாய் உடன்படிக்கையை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், இறைவாக்கினர் தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியைக் (2 சாமு. 7:1-29) குறிப்பிடுகிறார். தாவீதின் அரசமரபு என்றும் நிலைத்திருக்கும் என்று தாவீதோடு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை இஸ்ராயேலின் வாழ்விலும் வரலாற்றிலும் நிறைவேறும் (ஏச 55:3; லூக் 1:32-33). இந்த உடன்படிக்கை உறவு நூல் முழுவதும் காணப்படுகிறது. தொடக்க வார்த்தைகளிலேயே அறிவிக்கப்படுகிறது. ''ஆறுதல் கொடுங்கள், நம் மக்களைத் தேற்றுங்கள், என்கிறார் உங்கள் இறைவன்'' (40:1), இந்நூலின் ஆறுதல் செய்தி, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரால் அன்பு செய்யப்பட்டு, அவரோடு ஒன்றிக்கப்பட்ட மக்களைப் பார்த்துக் கூறப்படுகிறது. இந்த உடன்படிக்கை அன்பு, நூலின் பல் இடங்களில் வரும் வாக்குறுதிகளிலும், உறுதி மொழிகளிலும், எடுத்துக்கூறப்படுகிறது. பிற இனத்தவரின் கடவுளர்கள் அவற்றை வழிபடுவோரால் தூக்கிச் செல்லப்படவேண்டும். ஆனால் யாவே தமது மக்களைத் ''தாய் வயிற்றிலிருந்து. தலைநரைக்கும் வரை'' தூக்கிச் சென்றுள்ளார் (46:3-4). அவர்கள் நீரையும் நெருப்பையும் கடந்து செல்லும் போதும் பாபிலோனின் வீழ்ச்சியின் விளைவான குழப்பங்களையும் ஆபத்துக்களையும் கடந்து செல்லும்போதும் அவர்களை இறைவன் எப்போதும் காப்பாற்றுவார் (43:2). இறைவனது இந்த அன்பு, இரக்கத்திற்கு இஸ்ராயேல் தகுதிபெறவில்லை. ஏனெனில், இஸ்ராயேல் குருடனும், செவிடனுமானது. மோசே இறைவாக்கினர்கள் வழியாக அளிக்கப்பட்ட தனிச்சிறப்பான வெளிப்பாட்டின் உட்பொருளைப் புரிந்து கொள்ளவில்லை (42:18-12). கடந்த காலத்தில் இஸ்ராயேல் பலதவறுகள் செய்திருந்தாலும், இறைவன் தம் மக்கள்மேல் இரக்கம் கொள்வார். ஏனெனில் எவ்வளவு ஆழமான மனித அன்பையும் விட இறைவனது அன்பு பலமானது. ''பெற்றவள் தன் பிள்ளையையே மறந்து விட்டாலும், நாம் உன்னை ஒரு போதும் மறக்க மாட்டோம். இதோ, நம் கைகளில் உன்னைப் பொறித்துள்ளோம்'' (49:15-16).

இறைவனது இந்த வலிமைமிக்க அன்பு செயலில் காட்டப்படவிருக்கிறது. அவரது அபிடேகம் பெற்ற சைரசு வழியாகக் கைதிகள் விடுதலை பெறுவர். சிதறிக்கிடக்கும் நாடு கடத்தப்பட்டவர்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் சீயோனுக்குத் திரும்புவர் (43:5-7). ''அரசர்கள் இஸ்ராயேலின் வளர்ப்புத் தந்தையர்களாகவும், அரசிகள் செவிலித்தாயாகவும் இருப்பார்''. அந்நிய நாட்டினர் இஸ்ராயேலின் பயணத்தை விரைவுபடுத்துவர்; வணக்கம் செலுத்துவர் (49:22-23). இஸ்ராயேலர் பெரும் எண்ணிக்கையில் திரும்புவதால் தாயாகிய சீயோன் தனது கூடாரத்தை அகலப்படுத்த வேண்டியிருக்கும். நாடு கடத்தப்பட்டபோது, தன் கணவரால் கைவிடப்பட்டுப் பிள்ளைகளையும் இழந்த அவள், முன்கொண்டிருந்ததைவிட, பலபிள்ளைகளைக் கொண்டிருப்பாள் (54:1-5). இந்த விடுதலைச் செயலில் இறைவனின் மகிமை எல்லா நாடுகளுக்கும் வெளிப்படுத்தப்படும். இஸ்ராயேலின் பழங்கால எதிரிகளும் வந்து வணக்கம் செலுத்துவர். தங்கள் சிலை வழிபாட்டைக் கைவிட்டு ஆண்டவரை

ஏற்றுக் கொள்வர். ஏனெனில் ''உன்னிடத தில் மட்டுமே இறைவன் இருக்கிறார்; உன் னிடத்திலன்றி வேறெங்கும் இறைவன் இல் லை'' *(45:14)*. மீட்பராகிய இறைவனின் செயலும் மீட்கப்பட்ட பரிசுத்த மக்களின் பிரசன்னமும் புற இன மக்களை மனந்திருப் பப் போதியனவாக இருக்கும்.

இப்படிப்பட்ட இறைமக்களாகிய இஸ்ரா யேலுக்கு இரு வகை தூதுப் பணிகள் உண்டு. ஒன்று சாட்சியாக இருத்தல்; மற்றொன்று நடுவராக இருத்தல். வரலாற்றில் இஸ்ரா யேல் இறையொருமைக் கோட்பாட்டுக்குச் சாட்சியாக இருத்தல் தெளிவாக எடுத்துக் கூறப்படுகிறது *(40:18-25; 43:11; 44:7; 45:5-6. 18-22; 46:5-9)*. இறையொருமைக் கோட் பாடு ஒரு விசுவாச அறிக்கையாக மாறுகிறது *(44:6; 54:5)*. யாவேயின் படைப்புச் செயலுக் கும் மீட்புச் செயலுக்கும் உள்ள உறவை 2-ஆம் ஏசயா தெளிவாய் எடுத்துக் கூறுகி றார். உலகப்படைப்பும் இஸ்ராயேலின் ஊழும் ஒருங்கிணைந்து எடுத்துக்கூறப்படு கின்றன *(42:5-64; 44:2-28; 45:12-13; 51:9-10)*. யாவே தமது திட்டத்தை முன்னறிவித்த லுக்கு இஸ்ராயேல் சாட்சியாக உள்ளது *(43:10 தொ)*. யாவே தமது மக்களைத் திரும்ப அமைக்கப்போகும் செயலுக்கும் இஸ்ராயேல் சாட்சியாக உள்ளது. அப்படி அமைக்கப்படுவதன் எதிர் விளைவுகள் பிற இனத்தவரின் மனந்திரும்புதலின் தொடக்க மாக அமையும் *(40:5; 42:10; 45:14; 52:10; 54:5)*.

இந்த மனந்திரும்புதலும் மீட்பும் இஸ்ரா யேலின் வழியாகவும் இஸ்ராயேலின் ஆதிக் கத்திலும் நிகழும் *(45:22-24; 44:5)*. உடன் படிக்கை எல்லா மனிதருக்கும் பயனளிக்கும். இதற்குப் பொறுப்பாகும் பெருமையுள்ள வர்கள் - ''எஞ்சியோர்'' *(41:14; 46:3)*, ''யாவேயின் எளியோர்'' *(49:13)*, யாவே யின் ஊழியர்கள் *(44:1; 54:17)*, யாவேயில் நம்பிக்கை வைப்பவர்கள் *(40:31)*.

8. ஏ. யாவேயின் துன்புறும் ஊழியன்:- காண்க. ஆண்டவரின் ஊழியர்

ஏசயாவின் திருநூல் (மூன்றாம்) - புதிய வானம் புதிய பூமி (ISAIAH-III)

1. தனித்தொகுப்பு:-

முதலாம் இரண்டாம் ஏசயாப் பகுதிக ளுக்கு அளித்த அறிமுகங்களில் ஏசயா திரு நூலை, அறிஞர்கள் மூன்று பகுதிகளாகப் பிரித்து அவற்றை முதலாம் ஏசயா *(அதி 1-39)*, இரண்டாம் ஏசயா *(அதி 40-55)*, மூன்றாம் ஏசயா *(அதி 56-66)* என்று அழைத் தனர் என்று கூறுவோம். இந்தப் பிரிவு ஆராய்ச்சியை ''தாம்'' என்ற அறிஞர் தொடங்கி வைத்தார்.

அறிஞர் சிலர் இரண்டாம் மூன்றாம் ஏச யாப் பகுதிகளை வேறுபடுத்தவில்லை. ஒரே தொகுப்பாகவே கருதினர். ஏனெனில் இரு பகுதிகளுக்கும் இடையில் மீட்பு அனைவ ருக்கும் உரியது, நாடு கடத்தப்பட்டவர் தாயகம் திரும்புதல், எருசலேம் ஆலயம் கட்டப்படுதல், சுத்தி செய்யப்படுதலின் அவ சியம், நம்பிக்கை நிறைவேறுதல் போன்ற கருத்துக்கள் பொதுவாய் உள்ளன. ஆகவே இரு பகுதிகளையும் ஒரே ஆசிரியர் எழுதி னார் என்றும் கூறுவர். இவர் இரண்டாம் ஏசயா என்றும், நூலை நாடு கடத்தப்பட்ட காலத்தில் பாபிலோனில் வாழ்ந்தபோது எழுதினார் என்றும், அவரே தாயகம் திரும் பியபின் யூதாவில் மூன்றாம் ஏசயாவை எழு தினார் என்றும் விவிலிய அறிஞர் பலர் கருதினர்.

இரண்டாம், மூன்றாம் ஏசயா பகுதிகளுக் கிடையில் ஒற்றுமை இருப்பது போல் முக்கி யமான வேறுபாடுகளும் உண்டு. 2-ஆம் ஏசயாவுக்குப் பாபிலோன் பின்னணியாக அமைகிறது. ஆனால் 3-ஆம் ஏசயாவுக்கு எருசலேம் பின்னணியாக அமைகிறது. இரண்டு பகுதிகளிலும் காணப்படும் தொனி வேறுபடுகிறது.

ஆறுதலுக்குப் பதிலாக அச்சுறுத்தலும், நம்பிக்கைக்குப் பதிலாக அதைரியமும், சுத்தி செய்தலுக்குப் பதிலாகத் தண்டனை யும், வியக்கத் தக்கவைகளுக்குப் பதிலாக இறுதித் தீர்ப்பும் மூன்றாம் ஏசயாவில் முக்கி

யத்துவம் பெறுகின்றன. இதில் பாரசீக மன்னன் சைரசும் நாடு கடத்தப்படுதலும் சுட்டிக் காட்டப்படவில்லை. உள்நாட்டுத் தலைவர்களே குறிக்கப்படுகின்றனர். நாடு கடத்தப்பட்டவர்கள் ஏற்கனவே தாயகம் திரும்பி விட்டதாகவும் ஆலயம் கட்டி முடித்து விட்டதாகவும் தெரிகிறது. ஒழுக்க சமய நிலைகள் ஆகாய், செக்கரியா ஆகியோரின் நூல்களில் காணப்படுவதற்கு இணையாயுள்ளன. ஆலயம் ஓய்வுநாள், சட்டம், சடங்கு, வழிபாடு முதலியவற்றைப் பற்றி நன்கு தெரிந்தவர் போலப் பேசுகிறார் இப்பகுதியின் ஆசிரியர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, இப்பகுதி ஒரு தனித் தொகுப்பாக இருக்கவேண்டும் என்றும், பிற்காலப் பதிப்பாசிரியர்கள், இதை ஏசயாவின் நூலோடு சேர்த்துப் பதிப்பித்திருக்க வேண்டும் என்றும், இப்போது அறிஞர்கள் கருதுகின்றனர்.

2. காலம்:-

ஆலயம் பற்றிய குறிப்புகள் (56:7; 60:7) ஆலயம் கட்டி முடிக்கப்பட்ட கி.மு. 516-க்குப் பின் இந்நூல் தோன்றியிருக்க வேண்டும் எனச் சுட்டுகின்றன. ஆகவே இந்நூல் ஆகாய், செக்கரியா ஆகியோரின் இறைவாக்குப் பணிக்குப்பின் தோன்றியிருக்க வேண்டும். ஆனால், எருசலேமின் சுவர்களை கி.மு. 444-இல் நெகமியா கட்டி முடித்தார். ஆகவே மூன்றாம் ஏசயா நெகமியாவுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும் (58:12; 60:10). மேலும் மூன்றாம் ஏசயா கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் முடிவிலும் 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் யூதாவில் நிலவிய மக்கள் நிலை பற்றிய பல முக்கிய விவரங்களைக் கொடுக்கிறது. நூலின் செய்தி பாலஸ்தீனத்து மக்களைப் பார்த்துக் கூறப்படுகிறது. யூத சமயத்திற்கும் சமூகத்திற்கும் வெளியிலிருந்து ஆபத்து வரவில்லை. ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு ''தங்களுடைய எண்ணங்களையே பின்பற்றிக் கொண்டு, தீயவழியில் நடக்கும் விசுவாசமற்றவர்களின் (65:2) பிரமாணிக்கமின்மையிலிருந்தே ஆபத்து வந்தது. இவர்களை இப்பகுதி வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

3. ஆசிரியர்(கள்):-

மூன்றாம் ஏசயா பகுதிக்குப் பலர் ஆசிரியர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது இப்போது பெரும்பாலான ஆய்வாளர்களது கருத்தாகும். இந்த ஆசிரியர்கள் இரண்டாம் ஏசயாவின் பாரம்பரியத்தில் வந்த சீடர்களுடைய குழுவைச் சேர்ந்தவர்கள். நூலின் நடை சிந்தனைப் போக்கு, வரலாற்றுச் சூழ்நிலை ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகள் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. இந்த ஆசிரியர்களைப் பொதுவாக 3-ஆம் ஏசயா என்றழைப்பது இப்போதுள்ள மரபாகும்.

3-ஆம் ஏசயாவில் வரும் வாக்குகள் 2-ஆம் ஏசயாவையும் எசக்கியேலையும் தழுவி எழுதப்பட்டுள்ளன. எசக்கியேலிடமிருந்து எருசலேம், ஆலயம் ஆகியவற்றின் புனிதம் பற்றிய அக்கறையை மூன்றாம் ஏசயா குறிப்பிடுகின்றார். உண்ணா நோன்பு, ஓய்வுநாள் ஆகியவற்றை வலியுறுத்துகிறார். பிற இன மக்கள்மேல் அக்கறை, இதயம் சார்ந்த சமயம், எருசலேமின் மகிமை போன்ற கருத்துக்களை இரண்டாம் ஏசயாவைப் பின்பற்றி உரைக்கிறார். இந்த இரண்டு பெரிய இறைவாக்கினர்களிடமிருந்து, சுத்தி செய்யப்பட்ட எருசலேம் இஸ்ராயேலுக்கு அளிக்கப்படும் பெரும் கொடையாகும், சிலைவழிபாட்டு எதிர்ப்புப் போன்ற கருத்துக்களை எடுத்துக் கையாளுகிறார். சிலை வழிபாட்டைக் கண்டனம் செய்யும் கடைசி இறைவாக்கினர் 3-ஆம் ஏசயா ஆவார்.

நாடு திரும்பிய யூத மக்களுக்கு 3-ஆம் ஏசயா வழி காட்டியாகத் திகழ்கிறார். பரிசுத்த நாட்டில் மக்கள் மீண்டும் குடியேறிய காட்சிகளை விவரிக்கிறார். யாவேயின் எளியோரான விசுவாசிகளை ஆதரித்து விசுவாசமற்றவர்களைக் கண்டனம் செய்து அவர்களை மனந்திரும்ப அழைக்கிறார்.

4. இலக்கிய நடை:-

3-ஆம் ஏசயா 2-ஆம் ஏசயாவிலிருந்து சொற்றொகுதியிலும் நடையிலும் வேறுபடுகிறது. இது இப்பகுதி ஒரு தனித்தொகுப்பா

கும் என்று சுட்டிக்காட்டுகிறது. இப்பகுதியில் 2-ஆம் ஏசயா நேரடியாகப் பேசவில்லை. மாறாக, அவரின் கூற்றுகளிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டிப் புதிய நிலைக்கேற்ப விளக்கம் அளிக்கின்றார் ஆசிரியர். இது இதுவரை விவிலியப் பாரம்பரியத்தில் காணப்படாத புதிய மரபாகும் (57:14ஐ 40:3- ஓடும்; 60:13ஐ 4:1- ஓடும்; 60:16ஐ 49:22- ஓடும் ஒப்பிடுக)

5. நூலின் திட்ட அமைப்பு:-

இந்நூல் பல அறிவுரைகளையும் எச்சரிக்கைகளையும் கொண்டு திகழ்கிறது.

1) நாடு கடத்தலுக்குப் பின்காலத்து அறிவுரை: தோரா அல்லது சட்டம் (56:1-8).

2) நாடு கடத்தலுக்கு முன்காலத்து அறிவுரை (56:9-57:13).

3) நாடு கடத்தலுக்குப் பின்காலத்துப் பாடல்கள் (57:14-59:21).

4) தாயகம் திரும்புதல்பற்றிய பாடல்கள் (60:1-62:12).

5) தனித்து நின்று வெல்லும் வீரராகிய இறைவன் (63:1-6).

6) மன்றாட்டுத் திருப்பாசுரம் (63:7-64:12)

7) இறுதித் தீர்ப்பு (65:1-66:24)

6. சிறப்புக் கருத்துக்கள்:

6. அ. பற்றுறுதியுடையவர்களும், நெறி தவறியவர்களும்:-

3-ஆம் ஏசயா நூல் தோன்றிய காலத்தில், யூத சமூகத்தின் நிலை கோதுமையும் களைகளும் நிரம்பிய நிலத்துக்கு ஒப்பாய் இருந்தது. ஆகவேதான், ஆறுதல்களும் தீர்ப்புகளும் இந்நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. இக்கால யூதர்களைப் பிரமாணிக்கமுள்ளவர்கள், விசுவாசமற்றவர்கள் என்று இருவகையாகப் பிரிக்கலாம். ''தங்களுடைய எண்ணங்களையே பின்பற்றிக் கொண்டு தீயவழியில் நடக்கும் விசுவாசமற்றவர்கள்'' (65:2) ஒரு புறம்; ''யாவேயின் வாக்கைக் கேட்டு அஞ்சும்'' (66:5) பக்தியுள்ள விசுவாசிகள், மறுபுறம், விசுவாசமற்றவர்கள் நாடு கடத்தலிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர். அவர்களுடைய சிலைவழிபாட்டையும், ஒழுக்கக் கேடுகளையும் நூலின் இறைவாக்கினர் வன்மையாகக் கண்டிக்கிறார். குறிப்பாக, ஆன்மீகத்தலைவர்களாகத் திகழ்ந்த தீர்க்கதரிசிகளையும், அர்ச்சகர்களையும் அவர்களுடைய சீர்கெட்ட வாழ்க்கைமுறைக்காகச் சாடுகின்றார்; அவர்கள் குருட்டுக் காவலர்கள், ஊமைநாய்கள், சோம்பேறிகள், போதுமென்ற மனமில்லாத பேராசை பிடித்தவர்கள், மந்தையைக் கவனிக்காது தங்களையே கவனித்துக் கொள்ளும் மேய்ப்பர்கள், குடிவெறியர்கள், சீர்கேடான வாழ்க்கையுடையவர்கள் என்று இந்நூல் அவர்களைத் தாக்குகின்றது. மக்கள் சிலை வழிபாட்டிலும் வேசித்தனத்திலும் ஈடுபட்டனர். பாலின வழிபாட்டில் பங்கெடுத்தனர். சிறுகுழந்தைகளைப் பலியிட்டனர். அந்நியக் கடவுள்களின் தலங்களுக்குத் தூது விடுத்தனர். உண்மையான விசுவாசத்தைப் பார்த்துக் கேலி செய்தனர் (57:3-13). இந்நிலையில் இறைவன் அவர்களிடமிருந்து விலகியவர்போல் விளங்கியதொன்றும் வியப்பதற்கில்லை. ''உங்கள் அக்கிரமங்கள்தான் உங்களுக்கும் ஆண்டவருக்கும் இடையே பிரிவினையை, ஏற்படுத்தின. உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதபடி உடங்களிடமிருந்து அவரது முகத்தை மறைத்தன'' (59:2). அவிசுவாசிகளைப் பார்த்துக் கொலை, பொய், அநீதி, நேர்மையின்மை, தீய திட்டங்கள் ஆகிய குற்றங்கள் சாட்டப்படுகின்றன (59:3-7). இத்தகைய தீமைகளை எதிர்க்க எந்த மனிதனாலும் முடியாது. ஆகையால் இறைவனே தலையிடுவார். பெரிய வீரனைப்போல் ''மார்க்கவசமாய் நீதியையும், தலைச்சீராவாய் மீட்பையும்... பழிதீர்க்கும் சினத்தையும் உடையவராகவும் ஆத்திரத்தை மேலாடையாகவும்'' (59:17) அணிந்து போராடுவார் (1 தெச 5:8; எபே 6:10-17). யூதாவிலும், உலக முழுவதிலும் தம் எதிரிகளின் செயல்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார். அவர்களைத் தீர்ப்பிட ''ஆவியால் உந்தித்தள்ளப்பட்ட காட்டாற்று வெள்ளம்போல் வருவார்'' (எச 59:18-19).

அவிசுவாசிகள் மேல் தீர்ப்பிடவரும் இறைவன் ''சீயோனுக்கும் யாக்கோபின்

வீட்டாருள் தீமையை விலக்கித் திரும்புகிறவர்களுக்கும் மீட்பராய் வருவார்'' (59:20). அவர்களுக்கும் சமூக ஒழுக்க, சமய நிலைகளிலே மனத்தளர்ச்சியடைந்தவர்களுக்கும் ஆறுதல் அளிக்கப்படுகிறது. அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்; நம்பிக்கை உறுதியளிக்கப்படுகிறது. இந்தப் பகுதியைக் கிறிஸ்தவர்கள் நன்கு அறிவர். ''ஆண்டவரின் ஆவி என்மேலே, ஏனெனில், ஆண்டவர் என்னை அபிசேகம் செய்துள்ளார், எளியோர்க்கு நற்செய்தி அறிவித்து, உள்ளம் நொந்தவர்களைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியும், கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தியும் அறிவிக்கவும், ஆண்டவர் தம் அருளைத் தரும் ஆண்டையும், நம் இறைவன் பழிவாங்கும் நாளைத் தெரிவிக்கவும், அழுகிறவர்கள் அனைவர்க்கும் ஆறுதல் அளிக்கவும், சீயோனில் அழுகிறவர்களை மகிழ்விக்கவும், சாம்பலுக்குப் பதிலாய் மணிமுடியையும், அழுகைக்குப் பதிலாக மகிழ்ச்சியின் தைலத்தையும், நைந்த உள்ளத்திற்குப் பதிலாகப் புகழ் எனும் போர்வையைத் தரவும், ஆண்டவர் என்னை அனுப்பியுள்ளார் (61:1-3). இதுவே இறைவாக்கினரது தூது. இதை அவர் நன்குணர்ந்திருந்தார். நாடு கடத்தலுக்குப்பின் வந்த துன்பமிக்க சூழ்நிலையில் அவதியுற்ற விசுவாசிகளுக்கு மீட்பளிக்கும் ஆண்டவரது நாளின் வருகையை முன்னறிவித்து, அவர்களுக்குப் புதுப்பலமும், நம்பிக்கையும் அளிப்பது அவரது தூதாகும்; அதே நாள் அவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களுக்கும் தீயவர்களுக்கும் தீர்ப்பின் நாளாக இருக்கும். இப்பகுதியில் முதல் இரு வசனங்களை இயேசு தமது பணியின் தொடக்கத்தில், நசரேத்தூர் செபக்கூடத்தில் வாசித்து, அதன் விளக்கவுரையாக ''நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று'' (லூக் 4:21) என்று கூறினார். இயேசு நிறைவேற்ற வந்த பணியை 3-ஆம் ஏசயாவின் வாக்கு முழுமையாக விவரிக்கிறது எனலாம்.

6. ஆ. சமய முறைகளைக் கடைப்பிடித்தல்:-

ஆலயம், உண்ணா நோன்பு, ஓய்வுநாள், செபம் ஆகியவை பற்றிய 3-ஆம் ஏசயாவின் போதகம் முக்கியம் வாய்ந்ததாகும். நாடு கடத்தலுக்குப் பின்வந்த இறைவாக்கினர்கள், ஆலயமும் அதன் பலி வழிபாடும் இறைவனால் நிறுவப்பட்டவை என்று நம்பினர். ஆகாயும் செக்கரியாவும் ஆலயம் கட்டுவதைத் தொடங்கி வைத்து உற்சாகப்படுத்தினர். யூதச் சமூகத்தின் செழிப்பும் யாவே திரும்பி வருதலும் ஆலயம் மீண்டும் கட்டுவதோடு தொடர்புடையது என்று ஆகாய் வலியுறுத்தினார். மலாக்கியா ஆலயவழிபாடு சரியான முறையில் செய்யப்படுவதிலும், அதன் தூய்மைக்கும் ஆர்வம் காட்டினார். இவ்வாறு ஆலயமும் அதன் வழிபாடும் வழியுறுத்தப்படுவதற்கு எதிராக 3-ஆம் ஏசயா அறைகூவல் விடுப்பதாகத் தெரிகிறது. ''வானம் நம்முடைய அரியணை, பூமி நம்முடைய கால் மனை; அப்படியிருக்க, நீங்கள் நமக்கெனக் கட்டும் கோயில் எங்கே? நாம் வீற்றிருக்கும் இந்த இடந்தான் யாது? இவற்றையெல்லாம் நமது கையே படைத்தது; இவையனைத்தும் நம்மால் உண்டாக்கப்பட்டவை'', என்கிறார் யாவே(ஏச 66:1-2). யாவற்றையும் படைத்து, உலகத்தையே நிரப்பும் இறைவனை ஓர் இடத்தில் தங்க வைக்கவோ, மனிதர் கட்டிய கட்டடங்களில் தங்க வைக்கவோ முடியாது. இறைவனுக்கு வேண்டியது நல்ல இதயம் ஒன்றே. தனது தகுதியின்மையை உணர்ந்து இறைவனது வார்த்தைக்காக, அச்சத்தோடும் எதிர்பார்ப்போடும் காத்திருக்கும் எளியவன்ரையே யாவே கண்ணோக்குகிறார் (66:22). ''காலம் கடந்திருப்பவரும் மேன்மை தங்கிய உன்னதரும், பரிசுத்தர் என்னும் பெயரினருமானவர்'' என்று கூறுகிறார். 'உயர்ந்ததும் பரிசுத்தமுமான இடமே நமது உறைவிடம். ஆனால் பாவத்திற்காக வருந்திடும் தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தினரோடும் நாம் குடி கொண்டிருக்கிறோம்'' (57:15). 2-ஆம் ஏசயாவின் சீடர்களுக்கு ஆலயம் மீண்டும் கட்டப்படுவதற்கு முக்கியத்துவம் அளிப்பது தவறாகத் தோன்றியிருக்கவேண்டும். ஆலயத்தை அன்று; அதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி வலியுறுத்துவதையும்; பலிகளை அன்று, அவற்றைக் கீழ்ப்படிதலுக்கு மாற்றுப்பொரு

ளாக ஆக்குவதையும்; ஊழல் மிக்க காணிக்கைகளை ஒப்புக் கொடுப்பதையும் 3-ஆம் ஏசயா கண்டனம் செய்கிறார் (66:3-4).

இதே மனப்போக்கு உண்ணா நோன்பு பற்றிய கூற்றுகளிலும் பளிச்சிடுகிறது. நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமின் வீழ்ச்சியை நினைவுகூரும் விதத்தில் நான்கு உண்ணா நோன்புகளை இறைவன் கண்ணோக்கவில்லை என்று உணர்ந்து அவற்றை ஏன் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்கின்றனர். அவர்களது ஒழுக்கம் கெட்ட நடத்தையாலும் பிறருடைய தேவைகளுக்கு மனம் இரங்காமல் அவர்கள் காட்டிய மரத்துப்போன புறக்கணிப்பாலும் அவர்களுடைய உண்ணாநோன்புகள் செயலற்றவையாகி விட்டன என்று இறைவாக்கினர் பதில் அளிக்கிறார். அவர்கள் உண்ணா நோன்பைத் தூய்மையற்றதாக்குகின்றனர். ஏனெனில் அந்நாட்களில் அவர்கள் தங்கள் விருப்பத்தையே தேடுகின்றார்கள்; கூலியாட்களை வாட்டி வதைக்கின்றனர்; சண்டை சச்சரவு செய்கின்றனர். பிறருக்கு அநீதி செய்கின்றனர். ''நாணலைப் போலத் தலை குனிவதும், கோணி ஆடைகளை உடுத்துவதும், சாம்பலில் உட்கார்வதும்'' ஆகிய வெளிச் சடங்குகளால் பயனே இல்லை (58:2-5). இறைவன் விரும்பும் மேலான உண்ணா நோன்பு: ''அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்துவிடு; அழுத்தியிருக்கும் நுகத்தடிகளை இறக்கு; ஒடுக்கப்பட்டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய்; சுமையானதையெல்லாம் உடைத்தெறி: பசித்திருப்பவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு; ஏழைகளுக்கும் உன் வீட்டில் தங்குவதற்கு இடம் கொடு; ஆடையில்லாதவனைக் கண்டால் அவனைப் போர்த்து; உன் இனத்தவனை அவமதிக்காதே........; உன் நடுவிலிருந்து நுகத்தடியைத் தள்ளிவிட்டு உன் அயலார்க்கு எதிராகக் கையோங்காமல், அடாத தொன்றையும் சொல்லாமல் இருந்தால், பசித்திருப்பவனுக்கு உன் உணவைப் பகிர்ந்து கொடுத்துத் துன்புற்றவன் விருப்பத்தை நிறைவு செய்தால்...'' (58:6-7.10). இத்தகைய மேலான நோன்பு பலன்மிக்க கைம்மாறைக் கொண்டு வரும். ''அப்போது உன் ஒளி காலைக் கதிரவன் போல் தோன்றும். விரைவில் உனக்கு நலம் கிடைக்கும். ஆண்டவருடைய மகிமை உன்னைப்பின் தொடரும்; அப்போது ஆண்டவரைக் கூவியழைப்பாய்; அப்போது அவரும் உன் மன்றாட்டைக் கேட்டருள்வார்; அவரை நோக்கிக் கூக்குரலிடுவாய்; அவரும் இதோ இருக்கிறோம் என்பார்... உன் வெளிச்சம் இருள்நடுவில் உதயமாகும்; பட்டப்பகல் போல் இருக்கும்; ஆண்டவர் உன்னை என்றும் வழிநடத்துவார்; பாலைநிலத்தில் உன் உள்ளம் நிறைவு பெறச் செய்வார்; உன் எலும்புகளை உறுதிப் படுத்துவார்; நீர்வளமிக்க தோட்டம் போலும், வற்றா நீரூற்றுப்போலும் உன்னை விளங்கச் செய்வார். தலைமுறை தலைமுறையாகக் கிடந்த அடிப்படைகளை நீ கட்டி எழுப்புவாய்; மதிற்சுவர் உடைப்புகளைக் கட்டுகிறவன் என்றும், மக்கள் குடியேறும்படி தெருக்களை அமைக்கிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்'' (58:8-9.10-12). சமூக நேர்மையையும் அன்பிரக்கத்தையும் கோரும்போது இறைவாக்கினர் புறச்சடங்குகளைக் கடைப்பிடிப்பதைக் கொள்கை அளவில் நிராகரிக்கவில்லை. நேர்மை, உதவி செய்தல், நீதி, அன்பு, இரக்கம், அடங்கிய உண்மையான நோன்புகளிலிருந்து அறவே விலக்கப்பட்ட சடங்கு நோன்புகள் இறைவனுக்கு ஏற்புடையதன்று என்றே இறைவாக்கினர் வலியுறுத்துகிறார்.

நாடு கடத்தலுக்குப்பின், உண்ணா நோன்போடு, ஓய்வு நாள் அனுசரிப்பும் முக்கியத்துவம் பெற்றது; பெரிதும் வலியுறுத்தப் பெற்றது. ஓய்வு நாள் இறைவனது நாளாகும், வியாபாரம், இன்பம் தேடல், வீண் பேச்சுக்கள் முதலியவற்றால் அதன் புனிதத்தன்மை கெடக்கூடாது. மாறாக அதை மகிழ்ச்சியோடும், மகிமையோடும் ஏற்றுப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு வேளை நாடு கடத்தப்பட்ட காலத்தில்தான் செபக்கூடமும் அதன் வழிபாட்டுமுறையும் தோன்றின என்று கூறலாம். ஓய்வுநாள் ஆண்டவரில் பேரின்பம் அடைய வாய்ப்பு அளித்தது (58:13-14). யூதர்கள் மட்டுமன்று, மதம்மாறி

ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பவர்களும் ''எல்லா மக்களினங்களுக்கும் உரிய செப வீட்டில்'' மகிழ்ச்சி எய்துவர் (56:1-8). ஓய்வு நாள் கடைப்பிடிப்பு நாடு கடத்தப்பட்ட காலத்தில், உண்மையான இஸ்ராயேலின் அடையாளமாயிற்று. அதனால் அதன் முக்கியத்துவம் சிறப்புடையதாகும். ஏனெனில் குறித்த காலங்களைப் பரிசுத்தமாய்க் கடைப்பிடிப்பவர்கள்தான் இறைவனுக்கு எப்போதும் பற்றுறுதியுடையவர்களாயும், எப்போதும் அவரது வழிகளில் நடக்கக்கூடியவர்களாயும் இருக்க முடியும்.

இந்த இறைவாக்கு நூலில் செபம் செய்யும் பழக்கம் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. அன்பின் சூழ்நிலையில் செபம் ஆற்றலுள்ளதாகிறது (58:9). மக்களின் செபங்களுக்குப் பதில் கிடைக்கவில்லையென்றால், அது இறைவனது செவி மந்தமாகி விட்டதால் அன்று; மாறாக ''உங்கள் பாவங்களே அவர் செவி சாய்க்காதபடி உங்களிடமிருந்து முகத்தை மறைத்தன'' (59:2). மக்கள் மன்றாட ஆயத்தமாய் இருப்பதைவிட, இறைவன் அதற்குச் செவிமடுக்க ஆயத்தமாய் உள்ளார்; அவரைத் தேடாதவர்களும் கண்டு கொள்ளுமாறு காத்து நிற்கிறார் (65:1-2). 3-ஆம் ஏசயாவின் பாவ அறிக்கை, மனத்துக்கம் மன்றாட்டு போற்றுரை ஆகியவை அடங்கிய செபங்களையும், வழிபாட்டு வடிவிலுள்ள பல பாடல்களையும் காணலாம். இவற்றில் ஒன்று கிறிஸ்துவத் திருச்சபையின் நற்கருணைச் செபத்திற்கு ஒத்த நன்றியுரைப் பாடலாகும். இதில் இறைவன் தமது மக்களது வரலாற்றில் செய்த மீட்புச் செயல்கள் ஆடம்பரமாய் நினைவுகூரப்படுகின்றன. ''அவர்களுடைய துன்பங்களைக் குறித்து அவர் கலங்கினார்; அவருடைய திருமுன் இருக்கும் தூதர் அவர்களைக் காத்தார்; தம் அன்பினாலும் இரக்கத்தினாலும் அவர்களை அவரே மீட்டார்'' (63:9). இறைவனை ''நீரே, எங்கள் தந்தை'' என்றழைக்கும் இந்த உன்னத செபம் கடந்த காலத்தில் மீட்பராகத் தம்மை வெளிப்படுத்திய இறைவன் இப்போது புதிதாகத் தம்மையே மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று உருக்கமாக வேண்டுவதில் உச்சநிலை அடைகிறது (63:7-6 4:12).

தாழ்ச்சி, மனத்துக்கம், கீழ்ப்படிதல், அன்பு, வழிபாட்டுணர்வு, செபம் ஆகியவற்றை இந்நூல் வலியுறுத்துவதைப், புற அனுசரிப்புக்கு முரணானதாகக் காட்டுவது தவறாகும். பிற அகக்கூறுகளிடையே வேறுபாட்டை விவிலியம் ஏற்றுக் கொள்வதில்லை. விவிலியப் பொருளில் ''இதயம்'' என்பது உள்ளார்ந்த வாழ்வை மட்டும் குறிப்பதில்லை; இறைவனோடு உறவு கொள்ளும் முழு மனதையும் குறிக்கிறது. இறைவாக்கினர் வழிபாட்டைக் குறை கூறினாலும் அவர்கள் அதோடு தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் ''தூய்மையான ஆன்மீக'' சமயத்தை மட்டும் பரிந்துரைக்க வில்லை. ஆலயம், பலி, உண்ணா நோன்புகள், ஓய்வு நாள் அனுசரிப்பு ஆகியவை யாவும் முக்கியமானவையுமாகும். இறைவன் பால் கொண்டிருக்கும் பக்தியையும், பற்றுறுதியையும் எடுத்துக்காட்ட அவை அவசியமானவையுமாகும். அவை இறைவனது அருளின் வடிகால்களாக நிறுவப்பட்டவையாகும். ஆனால் இரண்டாம் ஏசயாவின் சீடராகிய மூன்றாம் ஏசயா அவருக்கு முன்வந்த பெரிய இறைவாக்கினர்களைப் பின்பற்றிப் பக்தியோடும் தாழ்ச்சியோடும் இறைவன்முன் வாழ்வதற்கும், மனிதர்களுக்கு நீதியும் பிரமாணிக்கமிக்க அன்பும் காட்டுவதற்கும் முதன்மையளிக்கிறார்.

6. இ. புதிய எருசலேம்:-

3-ஆம் ஏசயா மீட்பின் நாளை, உரிமையை மெய்ப்பிக்கும் நாளின் வருகையை அறிவிக்க ஆவியால் ஆற்றல் அளிக்கப்பட்டு இறைவனால் தான் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறுகிறார் (61:1-2). மீட்புப் பற்றிய வாக்குறுதி நிறைவேறும்வரை போதிப்பையும் செபிப்பதையும் தான் நிறுத்தப் போவதில்லை என்று உறுதிகொள்கிறார் (62:1). இறைவனின் சாமக்காவலர்களான இறைவாக்கினர்கள் யாவேயின் நாளின் வருகைக்காக இடைவிடாது செபிக்கவேண்டும் (62:6-7). இறைவன் வரவேண்டும் என்றும், அவர்

தம் மகிமையை எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்றும் மன்றாடும் ஒரு செபத்தில் அவர்களின் உருக்கமிக்க ஆவல் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது. ''வானத்தைக் கிழித்து நீர் இறங்கி வர மாட்டீரோ, புற இனத்தார் உம் திருமுன் நடுங்கவும் வர மாட்டீரோ'' (66:1-2).

இறைவன் தம்மை வெளிப்படுத்துவதும், தமது மகிமையைத் தோன்றச் செய்வதும் எருசலேமின்மேல் சூரியன் எழுவதுபோல் இருக்கும். ''உன் ஒளி வந்துவிட்டது. ஆண்டவரின் மகிமை உன்மேல் உதித்துவிட்டது''. சுற்றியுள்ள மக்கள் காரிருளில் மூழ்கிக் கிடப்பர். ஆனால் இறைவனது ஒளி சீயோன் மேல் வீசும். சீயோன் எழுந்து அவ்வொளியைப் பிரதிபலிக்கக் கட்டளை பெறுகிறது (60:1-2). அந்நாளில் சீயோனில் சூரியனுக்கோ சந்திரனுக்கோ தேவையிராது. ஏனெனில் ஆண்டவரே தம் மக்களுக்கு என்றென்றைக்கும் ஒளியாக இருப்பார் (60:19). இறைவனது இந்த மகிமைமிக்க நிலையான வெளிப்பாடு எருசலேமை மாற்றியமைக்கும். எல்லாவற்றையும் புதுப்பிக்கும், சமூகத்தின் புற, அகவாழ்வு சீர் திருத்தப்பெறும். சாலமோன் கட்டிய எருசலேமின் மகிமையையும் கடந்து சென்று, புதிய எருசலேமின் சுவர்கள் ''மீட்பு'' எனவும், அதன் வாயில்கள் ''போற்றி'' எனவும் அழைக்கப்பெறும். கடந்த கால வன்செயல்கள் அழிந்து, நிலையான பாதுகாப்பும் அமைதியும் நிலவும் (60:17-18). நகருக்குப் புதிய பெயர் கொடுக்கப்படும். அதற்கேற்றவாறு சமூகத்தின் தன்மை மாற்றியமைக்கப்படும். மக்கள் ''பரிசுத்த மக்கள் - ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள்'' என்றழைக்கப்படுவர் (62:2-12).

நாடு கடத்தப்பட்டவர்கள் சிதறிப்போன இடங்களிலிருந்து, பரிசுத்த நகருக்குத் திரும்பி வருவர். சிதறிப்போன தன் குழந்தைகள் வெகு தொலைவிலிருந்து திரும்பி வந்து தன்னிடம் கூடும்போது, தாயாகிய சீயோன் அக்களிப்பாள்; அவளது உள்ளம் வியப்பினாலும் மகிழ்ச்சியாலும் பூரிப்படையும் (60:4-5). பிறநாட்டினர் அவளது மக்கள் வெற்றியோடு திரும்புவதை விரைவுபடுத்துவர் (66:18-20). அவளது மகிமையைப் பற்றிக்கேள்விப்பட்டபோது, பிற இன மக்களும் அரசர்களும் பரிசுத்த நகரை நோக்கி வரிசையாக வருவர் (60.3). அப்படி வரும்போது தங்கள் நாட்டுச் செல்வங்களைக் கொண்டுவருவர் (60:5). அவர்களின் வருகைக்காக நகரின் வாயில்கள் எப்போதும் திறந்திருக்கும். புதிய எருசலேமின் மக்களுக்குப் பிற இனத்தவர் பணிபுரிவர். அதன் மக்கள் உலகின் அர்ச்சகர்களாக இருப்பர். அவர்கள் இறைவனது வார்த்தையை எடுத்துரைப்பர்; மனுக்குலத்திற்காக மன்றாடுவர் (60:6-14; 61:5-6). சீயோனின் சமூகம் புதிய அமைப்பைப் பெறும். ஆண்டவரின் வருகைக்காக இயற்கையே மாற்றி அமைக்கப்படும். ''இதோ! புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைக்கிறோம்'' (65:17). இதன் பொருள் இந்த உலகம் முழுவதும் அழிக்கப்பட்டுப் புதிய உலகம் படைக்கப்படும் என்பதன்று; இந்த உலகம் முழுவதும் புதியதாய் மாற்றியமைக்கப்படும் என்பதாகும்.

ஆயினும் இந்நூலில் காணப்படும் வருங்காலம் பற்றிய சித்திரத்தில் இருளும் ஒளியும் கலந்துள்ளன. ஆண்டவரின் அருள் தரும் ஆண்டே பழிவாங்கும் நாளாகவும் இருக்கும் (61:2). மீட்பவரும் பழிவாங்குபவருமான யாவே ஏதோமிலிருந்து வருகிறார். இறைவனுக்கு எதிரான உலகை ஏதோம் அடையாளமாகக் குறிக்கிறது. அவரது தோற்றம் அச்சம் தருவதாய் அமைந்துள்ளது. திராட்சைப் பழங்களை மிதிப்பவர்களைப் போல் அவருடைய ஆடை, அவரது பகைவர்களது செந்நீரால் சிவந்திருக்கும். ஆண்டவரின் நாள் உலகம் அனைத்திற்கும் தீர்ப்பு நாளாகும்; அவரது நாள் பரிசுத்த சீற்றம் வெளிப்படும் நாளாகும்; எல்லாப்பாவங்கள் மேலும் எத்துணையுமின்றி வெற்றிகொள்ளும் நாளாகும் (63:1-6). நூலின் இறுதி வாக்கியத்தில் தீர்ப்புப்பற்றிய மற்றுமொரு பயங்கர விவரிப்பு உள்ளது. எருசலேமுக்குத் தெற்கிலுள்ள இன்னோம் பள்ளத்தாககு நகரின் கழிவுக் கிடங்காகும். அங்கு அரிப்புழு பிணங்களைத் தின்று கொண்டேயிருக்கும்;

நெருப்பும் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும்; வெறுப்பை உண்டாக்கும் இடமாகும். இறுதித் தீர்ப்பின் தண்டனைக்கு இது ஓர் அடையாளமாயிற்று (66:24; மாற் 9:43-48).

இந்நூலில் வரும் புதிய எருசலேம் பற்றிய காட்சி சில அடிப்படைக் கேள்விகளை எழுப்புகிறது. இந்த விவரிப்புகளை அப்படியே எடுத்துக் கொள்ளவேண்டுமா? அல்லது உருவகமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா? புதிய எருசலேம் பருப்பொருளால் ஆனதா அல்லது ஆன்மீகமானதா? அவை இவ்வுலகில் நிறுவப்படுவதா அல்லது வானகத்தைச் சேர்ந்ததா? இந்நூலின் ஆசிரியர் (கள்) இந்த வேறுபாடுகளைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் எண்ணத்தில் கொள்ளாத வேறுபாடுகளை அவர்கள்மேல் நாம் சுமத்தக்கூடாது. இந்த விவரிப்புக்களை உள்ளபடியாகவும், உருவகமாகவும் எடுத்துக்கொள்ளலாம். புதிய எருசலேம் பருப்பொருளால் ஆனதும், ஆன்மீகமானதுமாகும். புதிய அமைப்பு பூமியில் நிறுவப்படவேண்டும். ஆனால் இந்தப் பூமி இறைவனது பிரசன்னத்தால் மாற்றியமைக்கப்பட்டதாக இருக்கும். இந்த உலகை வருங்கால உலகிலிருந்து நாம் வேறுபடுத்துவதை மனதில் கொண்டு, இறைவாக்குக் காட்சி பிற்காலத்திற்கே பொருந்தியது என்று கருதுவது பிரச்சனைக்குத் தீர்வு காண்பதாகாது. இறைவனது சித்தம் நிறைவேறும் இறைவனது நகரைப் பூமியில் நாம் எதிர்பார்க்கலாமா? இந்த நம்பிக்கைதான் எல்லாச் சமூக நல முயற்சிகளிலும், விடுதலை, நீதி, நேர்மையான அரசு ஆகியவற்றிற்காகச் செய்யப்படும் தியாகங்களிலும் உந்து காரணமாக அமைந்துள்ளது. பூமியில் இறையரசின் வருகையை நாம் நம்ப வேண்டும்; அதற்காக மன்றாட வேண்டும்; உழைக்க வேண்டும்.

மாறாக, புதிய எருசலேம் வரலாறு கடந்த உண்மைக்கும், என்றென்றும் நிலைத்திருக்கும் சமூகத்திற்கும், இந்த உலகின் முடிவுக்கு அப்பாற்பட்ட புதிய யுகத்திற்கும், ஓர் அடையாளமாகும். மனிதக் கண்கள் கண்டிராத சில உண்மைகள் புதிய எருசலேம் பற்றிய காட்சியில் ஆவியால் வெளிப்படுத்தப்படுகின்றன. புதிய எருசலேமின் இறைவன் பிரசன்னமாயிருக்கிறார்; தம்மையே வெளிப்படுத்துகிறார். அவரது மகிமை எல்லாவற்றையும் மாற்றி அமைக்கிறது. இங்கு மனிதர்கள் மிக உன்னதமான காணிக்கைகளைச் சமர்ப்பித்து இறைவனை வழிபடுகின்றனர். அம்மக்களின் இதயங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அந்நகருக்குள் தீமைக்கு இடமே இல்லை. அதன் மக்கள் சமூகம் பொதுத் தன்மையுடையது, கத்தோலிக்கப் பண்புடையது. எல்லா இன மக்களும் இறைவனது மகிமையால் ஈர்க்கப்பட்டு எப்போதும் திறந்திருக்கும் அதன் வாயில்களுக்குள் நுழைகின்றனர். அது அழகும், மகிழ்ச்சியும் அன்பும் மிளிரும் இடமாக இருக்கும். ''ஆண்டவரின் கையில் நீ மகிமையின் மணிமுடியாக இருப்பாய்...மணவாளன் தன் மணவாட்டியைக் குறித்து மகிழ்வது போல் உன் இறைவன் உன்னைக் குறித்து மகிழ்ச்சியடைவார்'' (63:3.5). அது நிலையானதாக இருக்கும். ''நாம் படைக்கும் புதிய வானமும் புதிய பூமியும் நம்முன் நிலைபெயராதிருக்கப் போவதுபோல் உங்கள் சந்ததியும் பெயரும் நிலைபெயராதிருக்கும் என்கிறார் ஆண்டவர்'' (66:22).

7. இக்காலத்திற்கு:- இறைவாக்கினரது உண்மையான நோன்பைப் பற்றிய போதகம் நமது கவனத்தைக் கவர வேண்டும். புதிய பூமி, புதிய வானம் பற்றிய விவரிப்பு, அவற்றின் நிறைபொருளில், திருச்சபையின் குறிக்கோள்களாகும். அதை நோக்கி நாம் ஆர்வத்தோடு இயங்க வேண்டும்; செயலாற்ற வேண்டும்.

ஏசயாவின் விண்ணேற்பு (ASCENSION OF ISAIAH)

இது கத்தோலிக்கத் திருமறையால் ஏற்றுக் கொள்ளப்படாத புதிய ஏற்பாட்டுக் காலத்தைச் சார்ந்த போலி நூலாகும். இது 1. ஏசயாவின் வேதசாட்சி மரணம், 2. எசக்கியாவின் ஏற்பாடு, மற்றும் 3. ஏசயாவின் திருக்காட்சி என்ற மூன்று மூல நூல்களால் ஆனது.

1. ஏசயாவின் வேதசாட்சி மரணம்:- 2 அரச 21:1-ஆவது வசனத்தினைக் குறிப்பாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட யூத மிட்ராசு கதையாகும். இதன்படி ஏசயா மனாசே மன்னனுக்கு எதிராகத் தீர்க்க தரிசனம் சொல்கிறார். இதனால் கடுங்கோபமுற்ற மன்னனால் ஏசயா இரம்பத்தால் இரண்டாக அறுக்கப்பட்டு இறந்தார். இப்புத்தகம் யூதத் தோற்றமுடையது. கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் எபிரேயத்திலோ அரமேயிக்கிலோ எழுதப்பட்டுக் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

2. எசக்கியாவின் ஏற்பாடு:- இது ஒரு கிறிஸ்தவ வெளிப்பாட்டு நூலாகும். இந்தப் பகுதி கி.பி. 6-ஆம் ஆண்டில் எழுதப்பட்டிருக்கலாம். இதில் கிறிஸ்து ஏழாவது விண்ணகத்திலிருந்து வருகை, மனித அவதாரம், இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலர்கள், இயேசுவின் போதகம், பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்றவற்றைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் பலவும், இவ்வுலகில் சாத்தான் தன்மையுடைய பெலமியரின் கொடுமை மிக்க ஆட்சி, ஆண்டவரின் இறுதி வெற்றி ஆகியவையும் காணப்படுகின்றன. ஏசயா இறைவாக்கினர் எசக்கியாவிற்குத் தனது தீர்க்கதரிசனங்களைக் கூறுவதாக அமைந்திருப்பதால் எசக்கியாவின் ஏற்பாடு என்ற பெயர் வந்திருக்கலாம்.

3. ஏசயாவின் திருக்காட்சி:- ஏசயா இக்காட்சியில் ஏழாம் வானகத்திற்குச் செல்வதாகக் கூறப்படுகிறது. அது கடவுளின் இருப்பிடம். இங்கு நல்லவர்கள் அனைவரும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு விண்ணகத்திலும் ஆண்டவரது மகிமை போற்றப்படுவதைக் காண்கிறார். கடவுள் இயேசுவை பூமிக்கு அனுப்பி மக்களை மீட்கச் செய்வது கூறப்படுகிறது. இயேசுவின் புதுமைகள், துன்பங்கள், சாவு, உயிர்ப்பு போன்றவற்றை ஏசயா எசக்கியாவுக்கு அழகாக எடுத்துக் கூறுகின்றார். பின்னர் இயேசு இவ்வுலகில் அவரது அரசைப்பரப்பத் தமது பன்னிரு சீடர்களுக்குக் கட்டளை கொடுக்கிறதாகக் கூறப்படுகிறது. தனது சாட்சியை நிலைநிறுத்த ஏசயா காட்டிய உறுதிக்காக ஆண்டவரைக் காணும் பேறுபெற்றார்.

இந்தப் புத்தகம் முழுமையான வடிவில் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். இப்போது எத்தியோப்பிய மொழிபெயர்ப்பில் மட்டும் தான் பாதுகாக்கப்பட்டுள்ளது. நூலில் அறிவியல் வாத தோசேத்திய சுவடுகள் காணப்படுகின்றன.

ஏசர்கதோன் *(ESARHADDON - அசூர் ஒரு சகோதரனைக் கொடுத்தார்)*

அசீரியப் பாபிலோனிய (681-699 கி.மு.) வின் அரசன்; சனகெரிபின் புதல்வன்; அசூர் பானிப்பாலின் தந்தை.

இவருடைய தந்தை சனகெரிபு கொலை செய்யப்பட்டபோது ஏசர்கதோன் ஆட்சியைப்பிடிக்கப் போராட வேண்டி வந்தது. சனகெரிபு என்ன சூழலில் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றி நமக்குத் தெரிந்தவை வெகுசொற்பம். அந்தக் குறிப்புகளின் வழியாக ஒரு முடிவுக்கு வருவது கடினம். இவர் முடிசூட்டும் முன்பே இளவரசனாக நியமிக்கப்பட்டிருந்தாலும் சனகெரிபுக்குப் பின் அரசன் இவன்தான் என்பதை இவரது சகோதரர்களும் மேலதிகாரிகளும் ஆணை இட்டிருந்தாலும் சனகெரிபு கொலை செய்யப்பட்ட போது, இவர் மறைந்திருந்ததாகக் கூறுகிறார். ஆனால் கனிகல்பட்டில் நடந்த போரில் அவருடைய சகோதரர்களைத் தோற்கடித்து அர்பேலா, அசூர், நினிவே போன்றவைகளையும் கைப்பற்றி உள்நாட்டுப் போரை உடனே ஒரு முடிவுக்குக் கொண்டுவர அவருக்குப் போதுமான அளவு உதவி கிட்டியது. ஏசர்கதோன் பாபிலோனிய ஆதரவாளனாக இருந்ததால் பாபிலோனியாவிலிருந்து எந்த எதிர்ப்பையும் அவர் எதிர்கொள்ளவில்லை. ஏலாம், அந்தக் காலக்கட்டத்தில் எந்த ஒரு கலகத்துக்கும் துணைபுரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மெரோதாக்கு-பாலதானின் ஒரு புதல்வனை பித்யாக்கினுக்கு ஆளுநனாக நியமித்தார். அவனும் தன் அரசனுக்குப் பிரமாணிக்கமாக நடந்து கொண்டான். ஏசர்கதோனின் போர்த்தந்தி

ரம் எகிப்தை அடிமைப்படுத்திக் கொள்வதிலே கருத்தாய் இருந்தது. ஏனெனில் எகிப்து பாலஸ்தீனத்தையும், சீரியாவையும் அடிக்கடி கலகம் செய்யத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தது. சீதோன், குந்திக்கு எதிராக ஆற்றலோடு செயல்பட்டு (677), அரேபியர்களை முழுமையான தூது முறைகளால் செயலளவில் கட்டுப்படுத்தி (676), எகிப்தைத் தாக்குமுன் தயாரிப்பாகச் செய்தார் (675). ஏசர்கதோன் எகிப்துக்குச் செல்லும் வழியாகக் காரான் சென்றார். அங்கே 'சின்' என்ற நிலவு-கடவுளிடமிருந்து உற்சாகப்படுத்து அடையாளத்தைப் பெற்றார். முதலில் தோல்வியைக் காண்பதுபோல் தோன்றினாலும் தொடர்ந்து போராடி வெற்றிபெற்றார். மெம்பிசை வெகுவிரைவில் கைப்பற்றினார். அசீரியர்களின் ஆதிக்கம் கிளர்ச்சிகளால் ஆபத்துக்குள்ளாவதுபோல் தோன்றவே ஏசர்கதோனுக்கு 669-இல் புதிய போரைத் தொடங்குவது அவசியமாகப்பட்டது. இருப்பினும் எகிப்துக்குப் போகும் வழியில் நோய்வாய்ப்பட்டு இறந்தார். வடக்கிலும், மேற்கிலும் முக்கிய எல்லைகளில் சிமிரியர்கள் மற்றும் மேதியர்களின் ஊடுருவல் தாக்குதல்களை முறியடிப்பதில் அவரது இராணுவமும், அரசியல் தந்திரச் செயலும் சாதகமாக அமைந்தன. 679-இல் சிமிரியர்கள் தோல்வியைத் தழுவினார்கள். 673-இல் மேதியர்கள்மேல் கடுமையான முறையில் தந்திரத்தோடு போர் தொடுத்தார். மேதியர்களுக்கு எதிரான நோக்கத்தோடு சித்தியர்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு அந்நாட்டு அரசனுக்குத் தன் மகளை மணமுடித்துக் கொடுத்து, அந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். காலாக்கில் சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட மேதியர்களைப் பற்றிய உடன்படிக்கைச் சுவடிகள் பகைவர்களிடமிருந்து ஆபத்துக்கள் நெருங்கியபோது ஏசர்கதோன் செய்த அறிவுக் கூர்மையான செயலை வெளிப்படுத்துகின்றன. இதேபோல அவருக்குப் பிறகு தன் மகன் ஆட்சிக்கு வருவதற்குச் செய்த வழிமுறைகளும் அவருக்குச் சாதகமாக அமைந்தன. அவருடைய சகோதரன் சமாகம்-உக்கின் பாபிலோனிய அரசனாக நியமிக்கப்பட்டபோது, அவனுக்கு அடுத்துவரும் அரசனுக்குரிய தகுதியைத் தன் மகன் அசூர்பானிபால் பெற அதிகாரப்பொறுப்புக் கொடுத்துத் தயார் செய்துவிட்டுச் சென்றார். 672-இல் நாட்டு மேலதிகாரிகள் அசூர்பானிபாலை அடுத்த அரசனாக ஏற்று ஆணையிடச் செய்தார். இதனால் எந்த ஒரு பெரிய இடைஞ்சலுமின்றி அவனும் அரசனானான்.

பாபிலோனியாவைப் புதுப்பிப்பதிலும் தெற்கில் பல நகரங்களை நிர்மாணிப்பதிலும் அவர் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். தன் தலைநகர் நினிவேயை அழகுபடுத்துவதில் அசீரிய அரசர்களிலேயே அவ்வளவாக அக்கறை காட்டாதவர் இவர்தான்.

ஏசல்மரம் (TAMARISK - இறகு போன்ற கிளைகளையுடைய நெய்தல் நிலச் செடி வகை)

இறகு போன்ற இலையமைப்பையுடைய ஒரு தனிப்பட்ட மரவகையாகும். ஆபிரகாம் பேயேர் செபாவில் (ஆதி 21:33) ஏசல் மரத்தை நட்டார். சவுல் கிபயாவில் ஒரு ஏசல் தோப்பில் தங்கினார் (1 சாமு 22:6). அவருடைய எலும்புகள் கலாத்தில் இருந்த யாபேசு கிலாயதுக்குக் (1 சாமு 31:13) கொண்டுவரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. இதற்கு இணையான விவரிப்பாகிய 1 நாள் 10:12-இல் கருவாலி மரம் குறிப்பிடப்படுகின்றது. ஏசல் என்ற சொல் மேற்கூறப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒரு புனித மரத்தையோ தோப்பையோ குறிக்கலாம்.

ஏசா (ESAU மயிர் நிறைந்த, சிவந்த)

ஈசாக்கு-இரெபேக்கா ஆகியோரின் முதல் புதல்வன்; யாக்கோபின் மூத்த சகோதரன் (ஆதி 25:24-26; 27:1.32.42; 1 நாள் 1:34). ஏதோமின் வம்சத்தாரின் பாரம்பரிய முன்னோர் (ஆதி 36; மலா 1:2-3).

1. சொல்லாக்க விளக்கம்:- இந்தக் குல முதியவரோடு இரண்டு சொல்லாக்க விளக்கங்கள் தொடர்புபட்டிருக்கின்றன. 'மயிர்செறிந்தவன்' என்ற கருத்து இவரோடு தொடர்பு படுத்தப்படுகிறது. ''மயிர்செறிந்த தோலுடை

யவனாக இருந்ததால் அவனுக்கு 'ஏசா' என்று பெயரிட்டார்கள் (ஆதி 25:25; 27:11.21-23). இருப்பினும் இரு சொற்களிலும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. ஏதோமைக் குறிக்கும் சேயீர் என்ற பெயருக்குத்தான் இந்தப் பொதுமுறை சொல்விலக்கணம் பொருத்தமாக இருக்கும். இதை ஏசாவிற்குத் தொடர்புபடுத்துவது இரண்டாந்தரமாகத் தான் இருக்கிறது. இவரது பெயர் பிங்கல (சிவந்த) நிறத்தோடு தொடர்புபடுத்தப்படு கிறது (ஆதி 25:25). 25:30-இல் இவர் யாக் கோபிடமிருந்து ''செந்நிற'' உணவை விரும் பினார். ஆகவே ஏதோம் என்று அழைக்கப் பட்டார்.

2. ஏசாவின் பிறப்பு:- ஈசாக்கின் உருக்க மான வேண்டுதலுக்குப் பதிலாக, அவரது மலடியான மனைவி ரெபேக்காவுக்கு இரு குழந்தைகளைக் கொடுத்தார் ஆண்டவர். ரெபேக்கா கருவுற்றிருந்த போது ''அவளுக் குள் சண்டை போட்டுக் கொண்டிருந்த'' இரு குழுந்தைகளைப் பெற்றெடுத்தாள். சிவப்பாகவும் மயிர்செறிந்தவனாகவும் இருந்த முதலாமவன் ஏசா என்று பெயரிடப் பட்டான். இரண்டாமவன் தன் சகோதரன் குதிங்காலைப் பற்றிக் கொண்டு வெளிவந்த வன், யாக்கோபு என்று பெயரிடப்பட்டான்.

இஸ்ராயேலர்களுக்கும் ஏதோமியர்களுக்கு முள்ள (உபா 2:4) இனத் தொடர்பை வர்ணித்துக் குலத்தோன்றல் காரண காரியத் தோடு விளக்கும் கோட்பாடு இந்தப் பிறப்பு வரலாற்றிலே பதிக்கப்பெற்ற முன்னறி விப்பு ஆகும் (ஆதி 25:23). ஏசா முதலாவதா கப் பிறந்தவனாக இருந்தபோதிலும் யாக் கோபுதான் அவனுக்குத் தலைவனாக இருப் பான் என்ற இறைமுன்னறிவிப்பு (25:25) யாக்கோபு-ஏசா பாரம்பரியத்தில் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது (காண்க ஏரோ 49:8; ஒபா 6; உரோ 9:10-13).

3. ஏசாவின் பிறப்புரிமை:- யாக்கோபு; அலைந்துதிரியும் இடையனாயும் ஏசா திறமை மிக்க வேட்டைக்காரனாகவும் மாறினர். அவன் வேட்டையாடிக் கொணர்வதை ஈசாக்கு விரும்பி உண்டார். வெற்றியின்றித் திரும்பிவந்தபோது சிறிது கஞ்சிக்கும் ரொட் டிக்கும் யாக்கோபிடம் தலைப்பேற்றான் பிறப்புரிமையைப்பேரம்பேசி முன்யோச னையின்றி விற்று விடுகிறார் (காண்க. எபி. 12:16).

4. திருமணம்:- நாற்பது வயதில், ஏசா, அந்நாட்டின் மக்களைச் சார்ந்த யூதித்து, பாசமத்து என்ற இரு பெண்களை மணந்தார் (26:34). இருவரும் ஏசாவின் பெற்றோரை ஏற்கெனவே மனம் நோகச் செய்திருந்தனர் (26:35). இது அவர்கள் ஆபிரகாமின் வழி வராததைக் குறிக்கலாம். பிறகு ஈசாக்கு தனது புதல்வர்கள் கானானியப் பெண்களை மணப் பதை விரும்பவில்லை என்பதை அறிந்து ஏசா, எகிப்திய ஆகார் வழியாக ஆபிரகாமுக் குப் பிறந்த இசுமயேலின் புதல்வியான மக லாத்தைத் தடையையும் எதிர்த்துத் திரும ணம் செய்து கொண்டார் (28:6-9; இவள் 36:3-இல் பாசமத்து என்றழைக்கப்படுகி றார்). 36:1-2-இன்படி கித்திய இனத்தைச் சேர்ந்த ஆதாவையும், கீவிய இனத்தைச் சேர்ந்த ஒகலிபாமாவையும் மணந்து கொண் டார்.

5. ஆசீரை இழந்தது:- ஏசா மூன்றாம் முறையும், யாக்கோபின் தந்திரத்தால், தலைப்பேற்றானுக்குரிய தந்தையின் ஆசீரை யும் இழந்தார். தந்தையின் மரணத்தருவா யில் ஆசீரைப் பெற நல்ல உணவை எடுத்துக் கொண்டு சென்றபோது, ஏசா ஆசீருக்குப் பதிலாகச் சாபத்தை வாங்கிக் கட்டிக் கொண் டார். பாலஸ்தீன வளமைமிக்க நிலத்தில் அவருக்குப் பங்கு கிடைக்கவில்லை. வேட் டையாடியும் சகோதரனுக்குப் பணிவிடை செய்தும் வாழ வேண்டி வந்தது (27:39-40).

கி.மு. 10,9-ஆம் நூற்றாண்டில் இஸ்ராயே லரோடு ஏதோமியரின் உறவு மேற்கூறப்பட் டதற்கு இணையாக அமைந்துள்ளது. ஏதோ மியர்களைத் தாவீது வெற்றி கொண்டார் (2 சாமு 8:12-14; 1 நாள் 18:13; காண்க. எண் 24:18). பிறகு ஏதோமியர் யோராமின் ஆட்சி வரை யூதாவுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்

கள் (2 அர 8:20-22; 2 நாள் 21:8-10). இந்த ஏமாற்று வேலையின் விளைவாக ஏசா யாக்கோபை வெறுத்தார், அவனைக் கொல்லவும் உறுதி பூண்டார். ஆனால் ரெபேக்கா சரியான சந்தர்ப்பத்தில் தலையிட்டு அதை முறியடித்தாள் (ஆதி 27:41-45).

6. ஒப்புரவாதல்:- 20 வருடங்களுக்குப் பிறகு யாக்கோபு பாலஸ்தீனத்துக்குத் திரும்பி வந்தபோது ஏசாவோடு சுமூகமான உறவு வைத்துக் கொள்ளவும், தன் அண்ணனின் கோபத்திற்கு எதிராகத் தன்னைக் காத்துக் கொள்ளவும் கவனமான ஏற்பாடு செய்திருந்தார் (32:3-21; 33:1-3). ஆனால் யாக்கோபின் ஏற்பாடுகள் தேவையற்றுப் போய்விட்டன. ஏசா தன் சகோதரனை எந்தத் தீங்கான எண்ணமுமின்றி ஏற்றுக் கொண்டார் (33:4-16). ஏசா மன்னிப்பை வழங்கினான். ஈசாக்கு இறந்தபோது இருவரும் சேர்ந்து அவரை அடக்கம் செய்தனர் (35:29).

இவரது ஆட்தன்மையை மதிப்பீடு செய்யும்போது, இளைஞனாக இருக்கும்போது காட்டிய இவரது குறுகிய நோக்குடைய சுயநலத்தை, இந்த ஒப்புரவில் சிறப்புப் பெறும் இவரது தாராள குணத்தோடும் மன்னிப்போடும் சமன் செய்யவேண்டும். முந்தைய நிகழ்ச்சியில் யாக்கோபு தந்திரத்தால் சொத்துடைமை பெற்றார். இங்கு ஏசா பெருந்தன்மையோடு மன்னிப்பு எனும் விலைமதிப்பில்லாத கொடையை வழங்குகிறார்.

7. விளக்கம்:-

அ) பழைய ஏற்பாடு: ஆதி. 25:23-இல் ரெபேக்காவுக்கு அளிக்கப்பட்ட ஆண்டவரின் செய்திக்குப் பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களில் மலாக்கி ஒருவர் மட்டும் விளக்கம் அளிக்கிறார். இந்தச் செய்தி, இஸ்ராயேல், ஏதோம் ஆகியோரின் பிற்கால வரலாற்றில் நிறைவேறியதாக அவர் காண்கிறார் (மலா 1:2-3). இறைவனது சினத்திற்கு ஏதோம் தொடர்ந்து பலியாவதை மலாக்கி முன்னோக்குகிறார். இது நபத்தேயர் படையெடுப்பில் ஒருவேளை செயல்பட்டிருக்கலாம் (1:3-4).

ஆ) புதிய ஏற்பாடு:- இறைவன் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலையில் ரெபேக்காவுக்கு இறைவன் அளித்த முன்னறிவிப்பையும், மலாக்கியின் விளக்கத்தையும், அப்போஸ்தலர் பவுல் எடுத்துக் கூறுகிறார் (உரோ 9:12-13). பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களுக்கு மாறாகப் பவுல், இஸ்ராயேலின் மூத்த மகனுக்கு எதிரான இறைவனது சினம், அவரது செயல்களுக்கு முன்பே, விண்ணிலேயே தோன்றியதாக நோக்குகிறார். இதை ஏசாவை நித்திய அழிவுக்கு இறைவன் முன்பே திட்டம் செய்து விட்டார் என்று பொருள் கொள்வார்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியர் ஏசாவுக்குக் ''காமுகன்'' ''உலகப் பற்றுள்ளவன்'' என்று பட்டம் சூட்டுகிறார். இதற்குச் சான்றாக, ''ஒருவேளை உணவுக்கு ஈடாகத் தன் தலைப்பேற்றுரிமையை விற்றுவிட்டதை'' எடுத்துக் கூறுகிறார் (எபி 12:16). தன் தந்தையின் மனதை மாற்ற வாய்ப்பில்லாமல் போகவே, அதாவது, ஆசீர் வழங்கப்படுமுன் செய்த மடமைக்கு மனம் வருந்த வாய்ப்பில்லாததால் அவரது ஆசீரைப் பெற ஏசா தவறிவிட்டார் என்று முடிவு செய்கிறார் (12:17). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஏசா உரோமைக்கு ஓர் அடையாளமானார். அவரது பாவமுள்ள தன்மை உரோமையோடு தொடர்பு படுத்தப்பட்டது.

ஏசான் (ESHAN ஆதரவு)

கெபிரோன் மலைப்பகுதியிலுள்ள யூதாவின் ஒரு கிராமம் (யோசு 15:52). இந்த இடத்தைச் சரியாகக் கணித்து 'இதுதான்' என்று கூறமுடியாது. எழுபது நூல் ''சோமா'' என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு துமேயின் (தூமா) மேற்கில் கெபிரோனுக்குத் தென் மேற்கில் 16 கி.மீ. அப்பால் உள்ள கிர்பெத் சாமாதான் ஏசான் ஆக இருக்கலாம்.

ஏசுவா (JESHUA - யாவே மீட்பாவார்) - ஆள்

1. தாவீதின் காலத்தைச் சேர்ந்த ஆரோன் குருக்களின் ஒன்பதாவது பிரிவின் தலைவராவார் (1 நாள் 24:11). இவரது வழித்தோன்றல்

கள் பாபிலோனின் நாடு கடத்தலிலிருந்து திரும்பியவர்களுள் இருந்திருக்கலாம் (எஸ் 2:36; காண்க. நெக 7:39).

2. எசக்கியாவின் ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு குருவிற்கும் சேரவேண்டிய தொகையைப்பிரித்துக் கொடுப்பதில் உதவிய ஒரு லேவியர் (கி.மு. 715-687; 2 நாள் 3:15).

3. பாபிலோனியா அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த லேவியர் குடும்பத்தின் பெயர் கொண்ட மூதாதையர் (எஸ் 2:2; நெக 7:7). இவர் பகாத்து - மோவாப்பின் புதல்வர்களில் ஒருவராக எண்ணப்படுகிறார் (எஸ் 2:6;நெக 7:1-1).

4. பாபிலோனிய அடிமைத்தனையிலிருந்து செருபாபேலோடு எருசலேமிற்குத் திரும்பி வந்த லேவியர்கள் குழுவின் தலைவர் (எஸ் 2:40; காண்க. நெக 7:43; 12:8-24). ஆலயம் மீண்டும் கட்டப்படுவதில் உதவி செய்தவர்களில் ஒருவர் (எஸ் 3:9). சட்டத்தை விளக்கிக்காட்டுவதில் (நெக 8:7) உதவியவர். வழிபாட்டுக்குத் தலைமைதாங்கினார் (9:4-5; 12:8). நெக 24-இல் இவர் கதிமியேலின் மகன் என்று அழைக்கப்படுகிறார். ஆனால் எந்த விதத்தில் உறவு என்பது தெளிவாக இல்லை (காண்க. எஸ் 2:40; நெக 7:43; 10;9).

5. இவர் கி.மு. 560 முதல் 490 வரை உள்ள காலத்தில் பெரிய குரு. கி.மு. 586-இல் பாபிலோனியாவிற்கு அடிமைகளாக யூதர்களோடு அழைத்துச் செல்லப்பட்ட யோசாதாக்கு என்பவரின் புதல்வர் (1 நாள் 6:15). இவர் ஆளுநர் செருபாபேல், இறைவாக்கினர் ஆகாய், செக்கரியா போன்றவர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். இவரது மகன் யோயாக்கிம், நெகமியாவின் சமகாலத்தவர் (நெக 12:26).

எருசலேமில் செருபாபேல் ஆளுநராக இருந்தபோது சமயத்தின் தலைவராக அதாவது பெரிய தலைமைக்குருவாக ஏசூவா எருசலேமில் பொறுப்பேற்றிருந்தார் என்று ஆகாய், எஸ்ரா போன்றவர்களின் நூல்கள் கூறுகின்றன. இருவருக்குமிடையே உள்ள உறவைச் செக்கரியாவின் காட்சிகளில் ஒன்று விவரிக்கிறது (செக் 4:11-14). அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களாகக் கூறப்படும் குறிப்பில் செருபாபேலுக்கு அடுத்து ஏசூவாவின் பெயர் தரப்பட்டுள்ளது (எஸ் 2:2; நெக 7:7; 12:1.10.26). இவர் எருசலேம் ஆலயத்தைக் கட்டுவதற்கான பொறுப்பைச் செருபாபேலுடன் இணைந்து தாமும் ஏற்றுக் கொள்கின்றார் (ஆக 1:1.12.14; 2:2.4; காண்க. எஸ் 5:1; சீரா 49:11-12).

பொதுவாக இறைவாக்கினர் செக்கரியா கண்ட காட்சிகளின் மையப்பொருளாக இருப்பவர் ஏசூவாதான். ஒருகாட்சியில் விண்ணக அவையிலுள்ள ஆண்டவரின் தூதர்முன் தலைமைக்குரு நிற்கின்றார். அங்கு அவருடைய அழுக்குப்படிந்த ஆடை அகற்றப்பட்டு, புதிய ஆடை உடுத்தப்படுகின்றது. பின் தலைமைக்குரு என்ற முறையில் ஆண்டவரின் இல்லத்தை ஆளுவதற்கான அதிகாரம் அளிக்கப்படுகின்றது (செக் 3). மேலும் அடிமைத்தனையிலிருந்து திரும்பி வந்த மக்களிடையே ஆலயப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் எப்படியிருக்கவேண்டும் என்று சந்தேகம் எழுந்த சூழ்நிலையில் ஆண்டவரின் இல்லத்தை ஆளும் அதிகாரமானது தலைமைக்குருவிற்கு ஆண்டவரால் அருளப்படுகின்றது என்பதை வெளிக்காட்டுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியாக இந்தக்காட்சி தோன்றுகின்றது.

குருக்கள் புதல்வர்களிலே புறவினப் பெண்களை மணந்து கொண்டவர்களில், பெரிய குருவாகிய ஏசூவாவின் புதல்வர்கள் சிலரும் உள்ளடங்குவர் (எஸ் 10:18).

6. எஸ்ராவோடு எருசலேமுக்குத் திரும்பிய லேவியர் யோசபாதின் தந்தை (எஸ் 8:33). இவர் (4)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

7. எருசலேம் சுவரில் ஒரு பகுதியைப் பழுதுபார்த்த ஏசேரின் தந்தை (நெக 3:19).

8. நூனின் மகனான யோசுவா பெயரின் மற்றொரு வடிவம் (நெக 8:17).

9. அசனியாவின் மகன். புதிப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஒரு லேவியர் (நெக 10:9). இவர் (4)-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

ஏசூவா (JESHVA - யாவே மீட்பாவார்) இடம்

நாடு கடத்தலிலிருந்து திரும்பிய யூதர்கள் குடியேறிய, தென் யூதாவிலுள்ள ஒரு நகர் (நெக 11:26). இது சேமாவாக இருக்கலாம் (யோசு 15:26) என்று கருதப்படுகிறது. இது பெயேர் - செபாவுக்கு வடகிழக்கில் 19 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலத் தேல் எஸ்-சாவியாக இருக்கலாம்.

ஏசேக்கு (ESHEK கொடுமைப்படுத்துபவன்)

சவுலின் மகன் யோனத்தான் வழியாக வந்த பென்யாமின் வம்சத்தின் ஓர் ஆள் அல்லது ஒரு குடும்பம் (1 நாள் 8:34). இருப்பினும் இந்த வாக்கியம் தவறான சூழ்நிலையில் இருக்கலாம் (1 நாள் 9:35-44).

ஏசேம் (EZEM - எலும்பு)

யூதாவின் நெகேபில் உள்ள சிமியோன் குடும்பத்தாரின் நகர் (யோசு 15:29; 19:3; 1 நாள் 4:29). இது இருந்த இடத்தைக் குறிப்பிட்டுக் காட்ட முடியாது. ஆயினும் பெயேர்-செபாவுக்குத் தென்கிழக்கில் 36 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால உம் ஏல்-அஸாம்-ஆக இருக்கலாம்.

ஏசேல் (EZEL - புறப்பட்டுப் போதல்)

யோனத்தான் தாவீதை மூன்றாம் நாளில் வந்து அமர்ந்திருக்கச் சொன்ன கல் (1 சாமு 20:19). இங்கு இருவரும் பிரியாவிடை செய்து கொண்டனர்.

ஏசேர் (EZER - உதவி)

1. செயிரின் ஆறாவது புதல்வர்; ஏதோம் நாட்டிலிருந்த கோரியர் தலைவர்களில் ஒருவர் (ஆதி 36:21; 27:30; 1 நாள் 1:38-42).

2. யூதா குலத்தவர், கூசாவின் தந்தை (1 நாள் 4:4).

3. காத்தைக் கொள்ளையடித்ததற்காக, அதன் மக்களால் கொலை செய்யப்பட்டவர். எப்பிராயிமின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:21).

4. காது இனத்தைச் சேர்ந்த அனுபவமிக்க போர் வீரர். பாலைவனத்தில் தாவீது தலைமறைவாக இருந்தபோது அவரோடு சேர்ந்து கொண்டவர்களில் ஒருவர் (2 நாள் 12:9).

5. நெகமியாவின் தலைமையின்கீழ் எருசலேம் மதில்களைப் பழுது பார்த்த லேவியர். ஏசூவாவின் மகன். மிசுப்பாவின் ஆளுநன் (நெக 3:19).

6. எருசலேமில் மீண்டும் கட்டப்பட்ட மதில் சுவர் அர்ப்பண விழாவிலே பங்கு கொண்ட ஒரு குரு (நெக 12:42).

ஏசேர் (JESHER - நேர்மையான, இறைவன் நீதியுள்ளவராகத் தம்மை காட்டுகிறார்)

யூதா கோத்திரத்தில் காலேபு-அசூபாவின் மகனும் கெசிரோனின் பேரனுமாவார் (1 நாள் 2:18).

ஏட்டுச்சுருள் (SCROLL)

புல்தாளால் அல்லது தோலினால் செய்யப்பட்ட நூல் ஏட்டுச்சுருள் (ஏச 34:4; லூக் 4:17).

ஏதாம் (ETAM - வேட்டைப் பறவைகள் உள்ள இடம்)

1. 'ஏதாம்' சிமியோனுக்குப் பங்கீடு செய்து கொடுக்கப்பட்ட ஓர் ஊர் (1 நாள் 4:32). ஒருவேளை யோசு 15:32-இல் உள்ள அயின்-ரிம்மோனுக்கு முன் வைக்கப்பட வேண்டும். நெகேபு மாவட்டத்தைச் சேர்ந்த

பெயோர்செபாவில் இருந்திருக்கலாம் (காண்க. யோசு 19:7). இந்தப் பகுதி அறியப் படாத பகுதியாக இருக்கிறது.

2. பெத்திலகேமின் மலைநாட்டிலுள்ள யூதாவின் நகரம் (யோசு 15:59 'எழுபது நூல்' பெத்திலகேமைச் சுற்றியுள்ள பதினொன்று நகர்களோடு தெக்கோவா, பெயோர், ஏதாம், கெரேம் மற்ற நகரங்களையும் அந்த வரிசையில் இணைக்கிறது காண்க. 1 நாள் 4:3). அர்த்தாகக்கு அருகில் பெத்திலகேமின் தென்மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத்-ஏல்கோக் ஏதாமாக இருந்திருக்க லாம் என்று கருதப்படுகிறது. இதன் சுற்று வட்டாரத்தில் உள்ள அயின் அயித்தான் என்ற நீரூற்று உள்ளது. கிரேக்க-உரோமையர் காலத்துக் கால்வாய்கள் வழி யாகச் ''சாலமோன் குளங்களுக்கு'' நீர் வழங்கியது. இந்தக் கால்வாய்கள் பெரிய ஏரோதால் கட்டப்பட்டுப் போந்தியுபிலாத் துவால் பழுதுபார்க்கப்பட்டது.

அரசு பிளவுபட்டு, வட அரசாகிய இஸ்ரா யேல் தோன்றியபின், இரகபெயாம் ஏதா மைச் சுற்றி மதில் எழுப்பினார் (2 நாள் 11:6). இஸ்ராயேலிலிருந்து தென் அரசைப் பாது காத்துக் கொள்வதற்காகவும், தென்கிழக்கிலி ருந்து வரும் ஆபத்துக்களைத் தடுப்பதற்காக வும் இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம்.

சாலமோன் விடியற்காலையில் தன்தேரில் 14 கி.மீ. பயணம் செய்து இக்கிராமத்தில் தனித்திருக்க விரும்பியதாக யோசிபஸ் கூறு கிறார். போந்தியு பிலாத்து ஆளுநன் புனிதப் பணத்தை எடுத்து 36 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் கட்டியதாக யோசிபஸ் எழுதுகி றார்.

தால்முதின் பல பகுதிகள், தரைமட்டத்தி லிருந்து 100 அடி உயரத்திலுள்ள கோவி லுக்கு ஏதாம் நீரூற்றிலிருந்து கால்வாய் வழி யாகத் தண்ணீர் பெறப்பட்டதைக் குறிப்பிடு கின்றன. இன்று அயின்-அயித்தானிலிருந்து பெத்திலகேம் குழாய்கள் வழியாக நீரைப் பெறுகின்றது.

ஏதாம் பாறை (ROCK OF ETAM)

பெலிஸ்தியர்களுடைய விளைச்சல்களை எரித்த பிறகு சிம்சோன் புகலிடம் தேடிய ஒரு குகை. கோபமுற்ற பெலிஸ்தியர்களி டம் சிம்சோனை ஒப்படைக்க யூதாவின் மக்கள் அங்கிருந்துதான் அவரைப் பிடித்துக் கொடுத்தார்கள் (நீதி 15:8,11-13). சோராவுக் குக் கிழக்கு தென்கிழக்கில் 4 கி.மீ. அப் பால் உள்ள ஆராக் இஸ்மயினாக இது இருக்கலாம். குகையின் முன்னாலுள்ள ஒரு மேடையிலிருந்து செப்பேலா மலையின் எழில் தோற்றத்தைக் காணலாம்.

ஏது (ED - சாட்சி)

ஏது என்பது பலிபீடத்திற்குக் கொடுக்கப் பட்ட பெயர் ஆகும் (யோசு 22:34). யோர்தா னுக்கு அப்பால் குடியேறிய ரூபன் புதல்வ ரும், காது புதல்வரும் தாங்கள் கட்டிய பீடத்திற்கு, தாங்கள் இறைவனது மகத்துவத் தையும் பிரமாணிக்கத்தையும் அனுபவித்த தற்கு அடையாளமாக ''எங்கள் சாட்சி'' என்று பெயர் வைத்தனர். இச்சொல் மாச ரோடிக் ஏடுகளில் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் சிரியக்கின் வாச அடிப்படையிலும் பொரு ளைப் பொறுத்தும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தை அடையாளம்காட்ட இயல வில்லை.

ஏதென்ஸ் (ATHENS - அத்தெனா தேவதை யின் மக்கள்)

இன்றைய கிரேக்கத்தின் தலைநகரும், அன்றைய அத்திகா மாவட்டத்தின் முக்கிய நகரமும் ஆகும். ஏதினா எனப்படும் பெண் தெய்வத்தின் பெயரால் இந்நகரின் பெயர் வந்திருக்கலாம். ஏதென்ஸ் நகர் சென்ற பவுல், அங்குள்ள செபக் கூட்டத்திலும், சந்தையிலும், அரயோப்பாகுவிலும் பேசியி ருந்தாலும் இங்கு எத்திருச்சபையையும் நிறு வவில்லை (அ.ப.17:16-34).

புதிய கற்கால மட்பாண்டங்கள் இங் குள்ள அக்ரோபோலிசில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதால் பின்னைய கற்காலத்திலேயே இங்கு மக்கள் குடியேறி உள்ளனர் என்பது தெரிய வருகிறது (கி.மு. 3000-க்கு முன்பு).

கி.மு.1600-ஐ ஒட்டி இங்கு அக்ரோபோலீஸ் ஒரு மிகப்பெரிய அரண் சூழ்ந்த கோட்டை ஆகியது. இன்றும் சுவர்கள் காணப்படுகின் றன. பல கல்லறைகளிலிருந்து எடுக்கப் பட்ட மட்பாண்டங்களில் முந்தைய காலத்து வண்ண வரைபடங்களிலிருந்து வேறுபட் டவை இங்கு இருப்பதைக் காண்கிறோம்.

சோலோன், என்பவரும் அவருக்குப்பின் பிசிஸ்திரதுசும் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இங்குச் சட்டம், ஒழுங்கைத் தந்து மக்க ளாட்சி அமைப்பை உருவாக்க முனைந்தார் கள் என்பதைப் பார்க்கிறோம். நகரத்தின் மையப் பகுதியான 'அகோரா' கொலோ னஸ் அகோராயுஸ் என்ற குன்றின் அருகே அமைக்கப்பட்டது. இப்பகுதிகளில் மிகப் பழமையான பொதுக்கட்டடங்களின் அடிப் படைகளும் வழிபாட்டுத் தலங்களின் அடிப் படைகளும் காணப்பட்டன. புலூதெரி யோன் எனப்படும் ஆலோசனைக்குழு மன் றம் 'சோலொன்'' காலத்தில் இருந்ததை விடப் பிற்காலத்தில் 500 நபர்களை அதிகம் கொண்ட ஒரு அமைப்பாகியது.

பாரசீகர்கள் உட்புகுந்து விடுவார்கள் என்ற பயத்தில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏதென்ஸ் மிக வலிமையுள்ள சுவர்களால் சூழப்பட்டது. இதனைச் சீர்செய் தவர் ''தெமிஸ்டோகிலிஸ்'' என்பவராவார். கி.மு. 480-479-இல் ஏதென்ஸ் பாரசீகர்களால் ஓரளவு அழிக்கப்பட்டபோது, பழைய பார் தெனோன், புரொபிலேயா ஆகியவை அக் ரோபோலிசில் அமைக்கப்பட்டுவிட்டன. பாரசீகர்கள் துரத்தப்பட்டபின் பெரிக்லிஸ் (459-29) என்பவரால் பார்தெனோன், புரொ பைலா, எரெக்தெயியோன் ஆகியவை எழுப்பப்பட்டன.

பெரிக்லிசின் காலம் அரசியலிலும் கலாச் சாரத்திலும் பொற்காலமாகும். பெரிக்லிசின் காலத்தில்தான் கெபாஸ்தசின் ஆலயமும் அரேசின் ஆலயமும் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இதே நூற்றாண்டில்தான் 'அகோ ராவிலும்'' பல முக்கிய கட்டடங்கள் எழுப் பப்பட்டன. பெயிதியாசும் அவரது மாண வர்களும் நகரத்தைச் சிலைகளாலும் மற்றும் பல கலைப் பொருட்களாலும் நிறைத்து அழகுபடுத்தினர். ஏதென்ஸ் தனது மகிமை யில் பெயர் பெற்று விளங்கியதை அரிஸ் தோபானஸ் என்பவர் ''ஓ ஏதென்ஸே நீ அனைவரும் வியந்து பொறாமைப்படுமள வுக்கு மிகச் சிறப்பாக அமைந்துள்ளாய்'' என்கிறார்.

பெலொபோனேசியப் போர் விளைவு ஏதென்சுக்கு எதிராக அமைந்தது (431-404). ஸ்பார்தாவின் கை ஓங்கியிருந்தது. நான்காம் நூற்றாண்டில் ஏதென்சின் நிதி அமைச்சராய் இருந்த இலிகூர்கஸ் என்பவர் (338-326) திபிலோன் எனும் வாயிலையும் மிகப் பெரிய விளையாட்டரங்கத்தையும், தியோ னிசியஸ் அரங்கத்தையும் கட்டி, பினிக்ஸ் குன்றில் உள்ள பெரிய அரங்கையும் விரிவு படுத்தினார்.

மக்கதோனியாவைச் சேர்ந்த பிலிப்புக்கு ஏதென்ஸ் ஆதரவு அளித்தது. ஆனால் அதன் ஆதரவு தளர்ந்தபோது கடுமையாகத் தண்டிக் கப்பட்டது. பிலிப்புவின் மகன் பெரிய அலக்சாந்தரின் மரணத்துக்குப்பின் (323) ஏதென்சும் அதன் கலாச்சாரமும் முதன்மை பெற்றன.

சீரியா நாட்டின் அரசரான அந்தியோக்கு எப்பிபான் என்பவர் ஒலிம்பிய செயூஸ் கட வுளுக்கு மிகப்பெரிய ஆலயத்தை எழுப்பி னார். இந்த நூற்றாண்டின் இரண்டாம் பகுதி யில் கட்டடங்கள் எழுப்பப்பட்டன.

உரோமைத் தளபதி சுல்லா காலத்தில் கி.மு. 86-இல் பல தனியார் கட்டடங்கள் இடிக்கப்பட்டன. உரோமையர் இந்நகரைத் தாக்கிப் பாழாக்கினாலும், அதன் மகிமை மிக்க கடந்த காலத்தை முன்னிட்டு ஒரு சுதந்தர நகரமாகப் பாவித்தனர். கி.பி. 14-இல் அகுஸ்து சீசெர் பல புதிய கட்டடங் களை எழுப்பினார். அக்ரோபோலிசில் அகுஸ்துவுக்கு ஒரு கோவில் எழுப்பப்பட் டது. அகோராவின் மையத்தில் இசை மைய மொன்று ஒதேயும் என்ற பெயரில் விப்சானி

யுஸ் அக்ரிப்பா என்பவரால் எழுப்பப் பட்டது. அரேசின் ஆலயம் இதற்கருகில் கொண்டுவரப்பட்டது.

பழைய சந்தைக்கூடம் (அகோரா) அகுஸ் துவின் காலத்தில் கட்டடங்களால் நிரம்பி யது. இதன் வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட சிதைவுகள் அதிரியானின் நூலகமாகக் கரு தப்படுகிறது (கி.பி. 117-38). இதற்குப்பின் வந்த அரசரும் ஒலிம்பியன் செயூசின் ஆல யத்தை நன்கு சிறப்புறச் செய்தார்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஏதென்சு, ஞானம், கட்டடக்கலை, ஆகியவற்றிற்கு மையமாகத் திகழ்ந்தது. பொருளாதாரத்தில் கொரிந்தும், அறிவில் அலக்சாந்திரியாவும், ஏதென்சைவிட வளர்ச்சியடைந்தாலும், இந் நகர் பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்தது.

கி.பி. 143, 159-களில் ஏதென்சை அடைந்து அதனைக் கண்டு, ''பௌசானியஸ்'' என்ற புவியியலார் தரும் குறிப்பு இன்றுள்ள நினைவுச் சின்னங்களை அடையாளம் காணப் பேருதவியாக உள்ளது. ஒருசில பிந்தைய உரோமையக் கட்டடங்களைத் தவிர ''பௌசானியஸ்'' குறிப்பிடும் ஏதென் சுக்கும், கி.பி. 1-ஆம் நூற்றாண்டில் பவுல் சந்தித்த ஏதென்சுக்கும் அதிக வேறுபாடு இருந்திருக்க முடியாதென்றே தோன்றுகி றது. இவ்வாறு ஏதென்சு அன்றைய கிரேக்க உரோம உலகில் தலைசிறந்த பண்பாட்டு, கலைமையமாக அமைந்திருந்தது என்பதில் வியப்பில்லை.

விவிலியக் குறிப்புக்கள்:-

தனது தோழர்கள் சிலாஸ், திமோத்தேயு வுக்கு முன்பே தற்செயலாக இந்நகர் வந்து சேர்ந்த பவுல், அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலத்தில் பொதுவிடங்க ளில், பொதுமக்களோடும், செபக்கூடத்தில் யூதர்களோடும் ஒவ்வொரு நாளும் வாதாடி வந்தார் (அ.ப.17:16-17). அவர் சாலையில் நடந்து சென்ற போது ''நாம் அறியாத தெய்வத்துக்கு'' உரிய பீடத்தைப் பார்த்தி ருக்க வேண்டும் (17:23). ஸ்தோயிக்கியரும் எப்பிக்கூரியரும் விடுத்த அழைப்பை ஏற்று, அவர்களிடம் பேசினார். ஆனால் அவர்களி டம் அதிகம் தர்க்கம் ஏற்படுத்தவில்லை (17:32-34). விரைவில், ஒருவேளை, 3 அல் லது 4 வாரங்களுக்குப்பின், பவுல் இந்நகரை விட்டுக் கொரிந்துக்குச் சென்றார் (18:1). ஏதென்சில் ஒரு திருச்சபையை நிறுவ வில்லை. அவரது வேதபோதகப் பயணங்க ளிலும், திட்டங்களிலும் இந்நகர் முக்கிய இடம் வகிக்கவில்லை.

புதிய ஏற்பாட்டில் பவுல் ஏதென்சில் தங்கி யதாக ஒரே ஒருதரம் குறிப்பிடப்படுகிறது. 1 தெச 3:1-இன்படி, தான் புதியதாக மனந் திரும்பிய தனது பிரமாணிக்கமுள்ள தோழ ரான திமோத்தோயுவைத் தெசலோனிக்கே யர்களிடம் அனுப்பிவிட்டுத், தனியாக இந் நகரில் தங்கினார். இப்பகுதி நற்செய்தியின் பால் ஐயப்பாடு உடையவர்களுக்கும் அதை நகைப்பவர்களுக்கும் கிறிஸ்துவை அறி விக்க முயன்றபோது, அங்கிருந்த கிறிஸ்த வர்களின்பால் அவர் கொண்டிருந்த பற்றைக் காட்டுகிறது.

ஏதேர் (EDER - உதவியாளர்) - ஆள்

1. எருசலேமில் வாழ்ந்த, பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:15).

2. தாவீது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த மெராரியின் பேரனும், மூசியின் இரண்டாம் மகனுமாவார். ஒரு லேவியர் (1 நாள் 23:21-23; 24:30).

ஏதேர்க் கோபுரம் (TOWER OF EDER - மந்தைக் கோபுரம்) - இடம்

1. பெத்திலகேமுக்கும் கெபிரோனுக்கும் இடைப்பட்ட இடம். இவ்விடத்தில் ராக் கேல் இறந்தவுடன் யாக்கோபு தங்கியிருந் தார் (ஆதி 35:21). இது ஒரு காவல் கோபுர மாக இருக்கலாம். இது சியார் ஏல் கனாமுக்குக் கிழக்கிலுள்ள சிற்றூராக இருக் கலாம் அல்லது செனிசேத் ஏர்-ரேவாத் அரு கிலுள்ள இடமாயிருக்கலாம் என்று கருதப் படுகிறது. இச்சொல் இயல் பொருளில் மீகா 4:8-இல் சீயோன் மலையைக் குறிப்பதற்கும்

பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இங்கு மந்தைக் கோபுரம் என 'மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இது ஒரு காவல் கோபுரம் போல், உருவகமாக இறைமக்களின் செயல் களை நோக்குகிறது.

2. யூதாவின் செப்பேலாவில், பெயேர்-செபாவின் நெகேபு மாநிலத்திலுள்ள சிற்றூ ராகும் (யோசு 15:21). காசாவுக்குத் தெற்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் ஏல்-அதார் ஆகவோ, கிழக்கில் தொலைவிலுள்ள ஒரு நகரமாகவோ இருக்கலாம் (எழுபது நூல் இதை ஆராத் என்றழைக்கிறது. இது சரியாக இருக்கலாம்).

ஏதேன் (EDEN - இன்பம்) - ஆள்

அரசர் எசக்கியா காலத்தில் உள்ள ஒரு லேவியர். யோவாகின் மகன். ஆலயத்தைத் தூய்மைப்படுத்தியவர்களுள் இவரும் ஒரு வர் (2 நாள் 29:12). 2 நாள் 31:15 குறிப்பிடு கின்ற ஏதேன் முன்குறிப்பிட்ட அதே ஆளைத்தான் குறிப்பிடுகின்றதா என்பது தெளிவாக இல்லை. இவர் ''ஆண்டவருக் குச் செலுத்தப்பட்ட காணிக்கைகளையும், பரிசுத்தப் பொருட்களையும் பங்கீடு'' செய் யும் வேலையைச் செய்தவர்களுள் ஒருவர்.

ஏதேன் (GARDEN OF EDEN - இன்பவனம்) - இடம்

I. ஏதேன் என்பது யாவேயினால் உருவாக் கப்பட்ட செழிப்பான மரங்கள் அடர்ந்த தோட்டம். இதில்தான் ஆதாமும் ஏவாளும் முதன் முதலில் வாழ்ந்து வந்தனர்.

1. வார்த்தையின் தோற்றம்:- 'ஏதேன்' என்ற வார்த்தையின் மூலத்தை எபிரேய மொழியிலிருந்து குறிப்பாக அறிய இயல வில்லை. பாலைவனம் என்ற பொருள்தரும் 'எதினூ' என்ற சுமேரிய அக்காதிய வார்த்தை யோடு இச்சொல்தொடர்புடையதாக இருக் கலாம். 'மகிழ்ச்சிப்படுத்த' என்று பொருள் தரும் எபிரேயச் சொல்லில் இருந்து எழுபது நூல் இச்சொல்லைப்பெற்று, 'ஏதேன் தோட் டம்' என்பதை இன்பவனம் என்று மொழி பெயர்த்தது.

2. பயன்படுத்தப்பட்ட முறை:- 'ஏதேன்' என்ற சொல் ஒருமையில் 13 முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மூன்று இடங்க ளில் (ஆதி 2:8.10; 4:16) தோட்டம் இருக்கும் இடத்தைக் குறித்துக்காட்டப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இறைவாக்கினர் நூல்களில் இத னுடைய பொருள் சிறிது மாறுபடுகிறது. ஏச 51:3-இல் 'ஏதேன்' என்பது யாவேயின் சோலைக்கு இணையாகக் கூறப்படுகிறது. ஏச 28:13-இல் 'ஏதேன்' என்பது இறைவ னின் சோலைக்கு எதிர்மாறானதாகக் கூறப் பட்டுள்ளது (எச 31:9.16.18; 36:35; யோவே 2:3).

3. இருந்த இடம்:- ஆதி 2:10-14 என்ற பகுதி இவ்வதிகாரத்தின் மற்றப்பகுதிகளிலி ருந்து வேறுபட்ட பழைய மரபிலிருந்து தோன்றிய பகுதியாகும் என்பது விவிலிய அறிஞர்களின் கருத்தாகும். இப்பகுதியில் இன்பவனத்திலிருந்து நதி ஒன்று உருவாகி அது நான்கு ஆறுகளாகப் பிரிந்து உலகெங் கும் சென்றடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆறுகளில் மூன்றாவதும், நான்காவது மான ஆறுகள் எல்லோரும் அறிந்தவையா கும். மூன்றாவது ஆறான இதக்கேல் என்ற 'திகிரிசு' அசீரியாவின் கிழக்குப் பகுதிகளில் பாய்ந்தது. 'ஐபிராத்து' என்ற 'யூப்பிரத்திசு' என்பது நான்காவது ஆறாகும். இதக்கேல் மீண்டும் பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு தரம் மட்டும் வருகிறது (தானி 10:4).

முதல் இரண்டு ஆறுகளைப் பற்றி முரண் பாடுகள் அதிகம் காணப்படுவதால் அறிஞர் களால் தீர்க்கமான முடிவுக்கு வரஇயல வில்லை. பிசோன் என்ற முதல் ஆறு பொன், குங்கிலியம், கோமேதகக் கல், போன்ற விலையுயர்ந்த பொருள்கள் கிடைக்கும் செழிப்பான பூமியாகிய கெவிலா நாட்டைச் சுற்றி ஓடுகின்றது. பிசோன் பழைய ஏற்பாட் டில் ஒரே ஒருதரம் தான் காணப்படுகிறது (ஆதி 10:28) கவிலா என்பது தென்மேற்கு அரேபியாவைக் குறிப்பது போல் தோன்றுகி றது. மேலும் இசம்யேலிய அராபியர்களின் கிழக்கு எல்லைப்புறம் போன்றும் தோன்று கிறது (ஆதி 25:18). கெவிலா என்பது

'மணல்' என்று பொருள்படுவதால் சிலர் இதனை மணல் நிலத்துடன் தொடர்புபடுத்துகின்றனர்.

கீகோன் என்ற ஆறு கூசு நாடு முழுவதும் பாய்கிறது. இச்சொல் எதிலிருந்து தோன்றியது என்பது தெரியவில்லை. பழைய ஏற்பாட்டில் இதனை மற்றெந்த இடத்திலும் ஓர் ஆறாகக் குறிப்பிடவில்லையென்றாலும் கிழக்கு எருசலேமிலுள்ள ஓர் நீருற்றாகத் தோன்றுகிறது. யூத கிறிஸ்தவ மரபுகள் கீகோனை நைல் நதியோடு தொடர்புபடுத்துகின்றன (காண். எரே 2:18). சில இடங்களைத் தவிர (ஆதி 10:8) கூசு என்பது எத்தியோப்பியாவைக் குறிக்கின்றது.

இந்த ஆதாரங்களை வைத்துப் பார்க்கும் போது இந்த இடத்தின் பூகோள அமைப்பினை நிர்ணயிப்பது ஊகத்தின் அடிப்படையில்தான் அடங்கியிருக்கிறது என்பது தெளிவு. இன்பவனத்தில் தோன்றிய இரண்டு ஆறுகளைப் பாபிலோனியக் கால்வாய்களுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் விவிலியம் தரும் பூமி அமைப்பானது, தற்காலத்தைய அறிவியல் தரும் பூகோள அமைப்போடு தொடர்பு இல்லாததுபோல் தோன்றுகிறது. இந்த இரு ஆறுகளும் ஒரே மூலத்தோற்றத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது உறுதி.

பூமி முழுவதையும் சூழ்ந்துள்ள நான்கு உலக ஆறுகள் பற்றிய பழைய மரபினை இவ்விளக்கம் பிரதிபலிக்கின்றது என்று ஒரு கோட்பாடு கூறுகின்றது. பிசோன் என்பது சிந்து நதியாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. இந்நதி அரேபியாவைச் சூழ்ந்து நைல்வழியாக ஓடுகிறதாகக் கருதப்பட்டது. நைல்நதி, யூப்பிரத்திக நதியோடு சேர்ந்து பாரசீக வளைகுடாவைக் கடந்து எத்தியோப்பியாப் பகுதிகளில் பாய்கிறது. இந்த ஆறுகள் பாயும் பகுதிகளில் ஆப்பிரிக்காவும், அரேபியாவும் உள்ளடங்கும் என்பது பொதுவான கருத்து. இது ஆப்பிரிக்காவும் இந்தியாவும் இணைக்கப்பட்டிருந்தன என்பதைச் சுட்டுகிறது.

4. இறையியல் உட்கருத்து:- தொடக்க காலத்தில் 'பேரின்ப இடம்' பற்றிய கருத்து பல சமயங்களில் வளர்ச்சியடைந்திருந்தாலும் மேற்காசிய நாடுகளில் இக்கருத்து இங்கு மங்குமாகத்தான் காணப்படுகிறது. சுமேரியாவின் தில்மூனின் நாடு என்பதும், பாபிலோனியாவின் 'கிரினியின் கேதுரு காடு' மற்றும் ''சிதூரி தோட்டம்'' என்பதும் இன்பவனத்திற்கு மறைமுகமானவையாகும்.

ஆதி ஆகமம் இரண்டாம் அதிகாரத்தின் ஆசிரியர் ஒரு புராணத்திலிருந்து எழுந்த மொழியின் அடிப்படையில் ஏதேன் தோட்டத்தை விவரித்திருக்கின்றார். இருப்பினும் ஆசிரியர் தனித்தன்மையைக் காட்ட, புராணக் கதையை மாற்றித் தந்திருக்கின்றார். மனிதன் படைக்கப்பட்ட பின்தான் தோட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் முதலிலே யாவே அங்கு வாழ்ந்தார் என்ற புராணக் கருத்து மறுக்கப்படுகின்றது. மனிதன் அந்தத் தோட்டத்தின் இன்பங்களை அனுபவிப்பதற்கு மட்டுமல்ல அங்கே உழைப்பதற்காகவும் அனுப்பப்படுகிறான். ஏதேன் தோட்டம் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் முறிவுபடாத உறவிற்கு அடையாளமாக இருப்பதால் மனிதனது கீழ்ப்படியாமையால் அங்கிருந்து அவன் துரத்தப்படுகின்றான்.

II. ஒருவேளை கார்கெமிசு அருகில் யூப்பிரத்திக ஆற்றின் மேல்பகுதி கரையிலுள்ள தெலசாரில் உள்ள ஒரு நகரமாக இருக்கலாம் (2 அர 19:12). ''ஏதேன் மக்கள்'' அசீரியர்களால் கைப்பற்றப்பட்டவர்களில் அடங்குவர். தீரோடு வியாபாரம் செய்த மற்ற நகரங்களோடு ஏதேனும் குறிக்கப்படுகிறது (எச 27:23). ஆமோ 1:15-இல் பேத்து-ஏதேன் என்று பெயர் வருகிறது.

ஏதோம் (EDOM - சிவப்பு நிலப்பகுதி)

இஸ்ராயேலின் கிழக்கு தெற்குப் பகுதிகள் ஏதோம் ஆகும். இந்நாட்டு மக்களைப் பற்றிய எழுத்துப் பதிவேடுகளும், நினைவுச் சின்னங்களும் அழிந்ததால் இந்நாட்டிற்கு அண்டை நாட்டார்களும், இவர்களது எதிரி

களுமான இஸ்ராயேலர், எகிப்தியர், அசீரியர்கள், பாபிலோனியர்கள் ஆகியவர்கள் நூல்களிலிருந்தும், தொல்பொருள் ஆராய்ச்சி மூலமும் இவர்களைப் பற்றி அறியமுடிகின்றது. ஏதோம் நாட்டைப் பற்றியும், அதன் மக்களைப்பற்றியும் விவிலியத்தில் அடிக்கடி சொல்லப்படுகிறது.

1. நில அமைப்பு: ஏதோமின் நில அமைப்பை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அ) ஏதோம் கோட்டை:-

இக்கோட்டை வடக்கிலிருந்து தெற்காக 70 மைல்களும் வடக்கிலிருந்து மேற்காக 15 மைல்களும் கொண்ட ஒழுங்கற்ற நாற்கரமாகும். வடக்கு எல்லை, மலைகளுக்கு இடையே ஓடும் செரேது என்ற ஓடையாகும். இது ஏதோமை மோவாப்பிலிருந்து பிரித்தது. கிழக்கு எல்லை தமஸ்குவிலிருந்து மெக்கா வரைக்கும் உள்ள இக்கால இரயில்வே தண்டவாளங்களிலிருந்து ஒரு சில மைல்களுக்குப் பாலைவனப்பகுதியை எதிர்கொண்டது. தெற்கு எல்லை இஸ்மே என்ற பள்ளத்தாக்கை மேல் இருந்து கீழ் நோக்கிய நெகேபு-எஸ்-ஸ்தாரின் பகுதிகளைக் கொண்டிருந்தது. மேற்கில் அராபாவை நோக்கியுள்ள கிழக்கு மலைத்தொடர்கள் ஆகும். இவ்வெல்லைப் பகுதிதான் ஏதோம் என்ற பெயர் பெற்றது. அராபாவின் கிழக்குச் சரிவில் உள்ள மரங்களடர்ந்த பகுதிக்குச் சேயீர் என்ற பெயர் குறிப்பாகக் கொடுக்கப்பட்டாலும் விவிலியத்தில் ''ஏதோம்'' ''சேயீர்'' என்ற இரண்டு பெயரும் ஒன்றுக்குப்பதிலாக மற்றது பயன்படுத்தப்பட்டது. ஏதோமின் எல்லைகள் யாவும் முக்கியமாகக் கிழக்கு எல்லைகள் மலைக்கோட்டைகளே ஆகும்.

ஆ) அடுத்துள்ள பிரதேசங்கள்:-

அராபாவும் நெகேபெஸ்தாரின் தெற்குப் பகுதியும் அக்காபா வளைகுடாவும் இவற்றில் உள்ளடங்கும். இப்பகுதிகள் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சனை தீர்க்கப்படவில்லை. ஆனால் ஏதோம் கோட்டைகளுக்கு அருகில் இருப்பதால் ஏதோமியர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. சீரியா, மெசபொத்தாமியா நாடுகள், எகிப்து, அரபு நாடுகளுடன் வாணிபம் செய்வதற்கு முக்கியமான சாலைகள் இங்கு உள்ளன. அராபா நாடு செம்பு, இரும்பு, சுரங்கங்களைப் பெற்றிருப்பதால் ஏதோமியர் வேலைசெய்து அவர்களது செல்வத்தைப் பெருக்க உதவின. இச்சுரங்கப்பகுதிகள் எபிரேயர்களின் அதிகாரத்தில் இருந்தபொழுது இச்செல்வத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்.

இ) நதிக்கரைப் பிரதேசங்கள்:-

அராபாவின் மேற்குப்பகுதிவரை இப்பிரதேசம் நீண்டிருந்தது. ஏதோமியர்களின் ஆளுகைக்கு இப்பகுதி உட்படவில்லை. நாடோடிக் கூட்டத்தினர் இப்பகுதியைப் பெற்றிருந்தனர். இவர்கள் ஏதோமியருடன் உடன்படிக்கை செய்திருந்தனர். கெனிசியா, அமலேக்கியர் போன்ற இருவரும் ஏதோம் இனத்தைச் சார்ந்தவர்களாக எண்ணப்படுகின்றார்கள் (ஆதி 36:11-12). மோசே ஏதோம் அரசனுக்கு அந்நாட்டு வழியாகக் கடந்து செல்ல வேண்டுமென்று கடிதம் எழுதினார் (எண் 20:16). ஆனால் அவ்வரசன் பாதை தர மறுத்துவிட்டான். ஆகவே இஸ்ராயேலர்கள் ஏதோம் நாட்டு மலைப்பிரதேசங்களைத் தவிர்த்து அடுத்துள்ள பிரதேசங்கள், நதிக்கரைப் பிரதேசங்கள் வழியாகவும் கடந்து சென்றார்கள்.

2. மக்கள்:-

ஆதியாகமத்தில் வருகின்ற விவிலிய விளக்கங்களும் இறைவாக்கினர்களின் புத்தககங்களில் வருகின்ற மறைமுகமான குறிப்புகளும் இஸ்ராயேலர்களுக்கும், ஏதோமியர்களுக்கும் இன ஒருமைப்பாடு இருப்பதை வலியுறுத்துகின்றன. ஆகவே, ஒருவேளை ஏதோமியர் ஆராமிலிருந்து வந்தவர்களாக இருக்கலாம். இருந்தபோதிலும் இவர்கள் கானானியர் (ஆதி 26:34, இங்கு 'கித்தியர்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது). இஸ்மயேலர் (ஆதி 29:9), ஆதிவாசி ஹோரியர் ஆகியோருடன் திருமணம் செய்து கொண்டதாகத் தெரிகிறது. ஆகவே இது உப

2:12-க்கு முரண்பாடாக இருப்பதால் இவர்கள் கலப்பினமாக இருக்கலாம்.

ஏதோமியர் விவசாயம் செய்த போதிலும் அவர்களது முக்கிய வருவாய் வியாபாரத்திலிருந்து கிடைத்தது. மலைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட செம்பு, பொன் போன்றவைகளை எகிப்து, சீரியா, பாபிலோனியா, மற்றும் வியாபாரக் கூட்டத்தினரிடம் பண்டமாற்று செய்து கொண்டனர். ஏதோமியர் அடுத்த நாட்டினரைப் போலவே எபிரேயத் திரிபு மொழியைப் பேசியிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. இவர்கள் பல தெய்வங்களையும் மதித்தனர். அவர்களுள் கோக அல்லது கோசான், மேலும் கதாது ஏதோம் சிலராவர். இவர்களது அரக அரசாட்சி முறையுடையது (ஆதி 36:31-39).

3. வரலாறு:-

ஏதோமில் கி.மு. 23-ஆம் நூற்றாண்டிலிருந்து 20-ஆம் நூற்றாண்டு வரை நாகரீகம் பரவி இருந்தது. அதற்குப் பிறகு 13-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் இங்குக் குடியேறி வாழவில்லை. இதற்குக் கெதெர்லா-கோமேரும் அவரைச் சார்ந்த் அரசர்களும் படையெடுத்ததே காரணமாய் இருக்கலாம் (ஆதி 14). விவிலியத்தில் கூறப்படுகின்ற ஏதோமியர் 13-ஆம் நூற்றாண்டில் வந்து ஓர் அரசரின் தலைமையில் யாத்திராகம காலத்தில் நாட்டை நிறுவினர். ஏதோம். சேயீர் நகரங்கள் மெர்னப்தா (1225-1215) மூன்றாம் இராம்செஸ் (1198-1167) ஆகிய பார்வோன்களால் அவர்களுக்கு அடிமைப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றன.

ஏதோமுக்கும் இஸ்ராயேலுக்கும் நீதிபதிகளின் காலத்தில் எவ்விதத் தொடர்பும் இல்லை. சவுல் அரசன் ஏதோமியர்களைத் தோற்கடித்ததாகச் சொல்லப்படுகின்றது (1 சாமு 14:47). தாவீது நாடு முழுவதும் படையெடுத்து வென்றார். தாவீதின் படைத்தலைவர் யோவாபு இதுமேயாவிலிருந்த ஆண் மக்களையெல்லாம் கொன்று குவித்தார் (2 சாமு 8:13-14; 1 அர 11:15-17). சாலமோன் ஆட்சிக் காலத்தில் நாட்டின் செழிப்பிற்கு இவ்வெற்றி முக்கிய காரணமாய் இருந்தது. இதனால் அரேபிய நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டனர். ஏதோம் நாட்டுச் சுரங்கங்களைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டனர். கதாதின் கொரில்லாப் போர் முறை சாலமோனுக்குப் பெரும் இடையூறாக இருந்தது (1 அர 11:14-22).

இஸ்ராயேல் பிளவுபட்டதால் யூதா நாட்டின் பலம் குன்றியது. ஏதோம் யூதாவின் ஆட்சியிலேயே இருந்ததாகத் தெரியவில்லை. கி.மு. 935-இல் சீசாக்கு என்பவனால் சூறையாடப்பட்ட நகரங்களில் ஏதோமின் பெரும்பகுதியும் அடங்கும். இதனால் ஏதோம் யூதாவின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்று தெரிகின்றது. யோசபாத்து காலத்தில் ஏதோமில் அரசன் இல்லை. ஆகவே சில காலத்திற்கு ஆளுநரால் ஆளப்பட்டிருக்க வேண்டும். பிறகு அந்நாட்டிலிருந்தே ஒருவர் அரசனாக நியமிக்கப்பட்டார் (2 அர 3). இந்நியமனம் அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை. ஏனென்றால் ஏதோம், யூதாவின் அடுத்த அரசன் யோராமின் காலத்தில் கிளர்ச்சி செய்தது (2 அர 8:20-22). ஏதோம் 50 அல்லது 60 வருடங்களுக்கு மறுமுறை யூதா தாக்கும் வரை சுதந்தரமாய் இருந்தது. அமசியா (14:7) ஏதோமின் நடுப் பகுதியினை முற்றுகையிட்டார். தொடர்ந்து அசாரியா எலாத்து நகரை முற்றுகையிட்டு யூதாவுடன் இணைத்துக் கொண்டார் (14:22). 735-இல் மீண்டும் ஒரு முறை ஆராம், இஸ்ராயேல் இவற்றுடன் கொண்ட உடன்பாட்டால் ஆகாசிடமிருந்து சுதந்தரம் பெற்றது (16:6). இவ்வுடன்பாடு அசீரியர்கள் யூதாவிற்கு அடைக்கலம் அளித்தபோது உடைபட்டது. 732-ஆம் ஆண்டில் ஏதோம் அரசன் காஸ்மாலாக்கு திகிலாத்து பிலேசருக்குத் தமஸ்குவில் கப்பம் செலுத்துகிறார். அடுத்த நூறாண்டுகளுக்கு ஏதோம் அசீரிய நாட்டுக்குக் கீழ்ப்பட்டதாக இருந்தது. 711-ஆம் ஆண்டிலும் 701-ஆம் ஆண்டிலும் அடுத்துள்ள நாடுகளுடன் சேர்ந்து கொண்டது. அடிக்கடி போர் மூண்டதாலும், நாடுகளுக்குக் கப்பம் செலுத்தியதாலும் 13-8-ஆம் நூற்றாண்டுகளில் இருந்த செல்வாக்கும் செழிப்பும்

அடுத்த இருநூறு ஆண்டுகளில் குறைந்தது. ஏதோம் நாட்டினர் அமைதியாகப் பாபிலோனிய அரசுக்குத் தங்களைக் கையளித்தார்கள் (கி.மு.604). 586-இல் நெபுக்கதுனேசார் எருசலேம் நகரை முற்றுகையிட்டபோது ஏதோமியர் அவருடன் சேர்ந்து கொண்டு தங்களது பழைய எதிரிகளை அழித்தனர் (சங் 137:7; புல 4:21-22; ஒப 10-16). யூதாவின் பெரும் பகுதியினர் பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டு, எஞ்சியோர் கெதலியாவின் கொலைக்குப் பிறகு தப்பியோடியபோது ஏதோமியர் வடக்குப் பக்கமாகச் சென்று தெற்கு யூதேயாவில் நுழைந்து கெபிரோனைத் தங்கள் தலைநகராகக் கொண்டனர். இது நாடு கடத்தலுக்குப்பின் தோன்றிய இதுமேயா ஆகும். பாரசீகர்கள் காலத்தில் நபதேயர்கள் ஏதோமியர்களின் எல்லைக்குள் புகுந்து ''பெத்திரா''வைத் தலைநகராகக் கொண்டனர். பெரும்பாலான ஏதோமியர்கள் இதுமேயாவிற்குக் குடியேறினர்; மீத முள்ளோர் நபத்தேயரோடு ஒன்றிப்போயினர்.

மக்கபேயர்களுடைய புரட்சி வரைக்கும் இதுமேயர்களுடைய வரலாறு தெரியவில்லை. யூதா மக்கபேயர் இதுமேயர்களை 164-இல் அக்கிரபத்தேன் என்னுமிடத்தில் தோற்கடித்தார் (1 மக் 5:1-5). கி.மு.120-ஐ ஒட்டி, யோவான் இர்க்கானு இதுமேயா முழுவதையும் கைப்பற்றி அதன் மக்களைக் கட்டாயமாக யூதமதத்திற்குள் சேர்த்துக் கொண்டார். அதன் விளைவாக இதுமேயா நாட்டு ஆண்டிபாத்தர் கி.மு.63-இல் ஆளுநராக வந்தார். இவருடைய மகன் ஏரோது கி.மு.37-இல் பாலஸ்தீன அரசர்களின் கடைசி அரசமரபை நிறுவினார். இவர்கள் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இவ்வரசை ஆண்டார்கள். 600 ஆண்டுகளுக்குமுன் எருசலேமின் வீழ்ச்சியைக் கண்டு மகிழ்வுற்ற ஏதோமியர், உரோமையருக்கு எதிரான கடைசிப் போராட்டத்தில் (கி.பி.68-73) எருசலேமின் தீவிரமிக்க பாதுகாப்பாளர்களாகத் திகழ்ந்தனர்.

4. விவிலியத்தில் ஏதோம் :-

யாக்கோபு இஸ்ராயேல் நாட்டுடன் ஒப்பிடப்படுவதுபோல் ஏசா ஏதோம் நாட்டுடன் ஒப்பிடப்படுகின்றார் (ஆதி 36:1). ஏதோம் என்ற பெயர் ஏசாவின் சிவப்பு நிறத்தாலே விளக்கப்படுகிறது (ஆதி 25:30). இஸ்ராயேலின் தெற்கு எல்லையான காலாக்கு ஏதோமின் எல்லையான சேயிரை நோக்கியுள்ளது (யோசு 11:17; 12:7). யாக்கோபு மென்மையான உடலைப் பெற்றிருந்ததாகவும் (ஆதி 27:11) ஏசா உரோமமுள்ள உடலைப் பெற்றிருந்ததாகவும் விவரிக்கப்படுகின்றனர். ஈசாக்கு ஏசாவுக்குக் கொடுக்கும் ஆசிர், ஏதோம் சிறிது காலத்திற்கு யூதாவுக்கு அடிமைப்பட்டபின் சுதந்தரமாக இருக்கும் என்ற வரலாற்று உண்மையை, முன்பே நிழலிட்டுக் காட்டுகின்றது (27:39-40).

அரசர்கள் காலத்தில் யூதாவுக்கும் ஏதோமுக்கும் தொடர்ந்து பகையாக இருந்ததால் யூதா நாட்டு இறைவாக்கினர்கள் அனைவரும் ஏதோம்மேல் விரோதம் கொண்டிருந்தனர். ஆமோஸ் இறைவாக்கினர் ஏதோம் அடிமைகள் பற்றியும், அவர்கள் போரின் கொடூரம் பற்றியும் கண்டனம் செய்கிறார். மோவாபியர் ஒரு தரம் ஏதோம் அரசனின் எலும்புகளைச் சுட்டுச் சாம்பலாக்கியதைப் பற்றியும் பேசுகின்றார் (ஆமோ 1:6.9.11; 2:1). ஒபதியா நூல் முழுவதும் ஏதோம் நாட்டின் அழிவை முன்னறிவிக்கிறது. இதே போன்று மற்றப் பகுதிகளிலும் குறிப்புகள் காணக்கிடக்கின்றன (சங் 137:7; ஏச 11:14; 34:5-17; எரே 49:7-22; எச 35; மலா 1:2-4). செப்பனியாவும், செக்கரியாவும் அழிவுறக் கூடிய நாடுகளில் ஒன்றாக ஏதோமைச் சேர்க்கவில்லை. உபஆகமச்சட்டம் ஏதோமியரை ஆண்டவருடைய சபையில் சேர்ப்பதில் கடுமையைக் காட்டுகிறது (உப 23:8). யோபு நூல் ஆசிரியர், நாட்டுப் பற்றைக் கடந்து, தனது நூலின் தலைவனையும், மற்றப் பாத்திரங்களையும் யூதாவைச் சேர்ந்தவர்களாக ஆக்கவில்லை, மாறாக ஏதோமியராக ஆக்குகிறார்.

ஏத்தாம் (ETHAM - கடல் நோக்கிய)

கக்கோத்தை விட்டுக் கிளம்பியபின் இஸ்ராயேலர்கள் தங்கிச் செல்லப் பாளையம் இறங்கிய முதல் இடம். யாத் 13:20; எண்

33:6-8 ஆகிய இரு பகுதிகளுமே அதை ''பாலை நிலத்தின் ஓரமாய் உள்ள ஏத்தாமிலே'' என்று குறிப்பிடுகின்றன. சூர் பாலை வனத்தின் ஒரு பகுதிக்கும் இதே பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது (எண் 33:8). எகிப்தின் கிழக்கு எல்லையில் உள்ள எகிப்தியக் கோட்டை இந்தப் பகுதியாக இருக்கலாம். இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்துக்குள் தப்பிச் சென்றுவிட நம்பிய வாடி துமிலாத்துக் கரையிலுள்ள திமிசா ஏரிக்கு வடக்கில் இதன் இருப்பிடம் குறிப்பிடப்படுகிறது. இதன் எல்லை மதிற்கவர்களால் வழிதடைப்பட்டதால் பாகால்-செபோனுக்கு முன்னால் உள்ள கடலுக்கும் மிகிதோலுக்கும் இடையிலுள்ள பியகிரோத்திற்குமுன் திரும்பிவந்து பாசறை அமைக்க வேண்டி வந்தது.

ஏத்தானிம் (ETHANIM - என்றும் ஓடும் ஓடைகள்)

எபிரேயத்தின் ஏழாம் மாதத்திற்குப் பாபிலோனிய அடிமைத்தனத்துக்கும் முற்காலத்தைச் சார்ந்த பெயர் (செப்டெம்பர் - அக்டோபர்; புரட்டாசி). இது கானானிய கலாச்சாரத்திலிருந்து பிறந்த பெயராகும். வறட்சியின் கடைசிக் காலக்கட்டமாக இது இருப்பதாலும், இந்த மாதத்தில் நிலையான ஓடைகளில் மட்டும் இன்னும் நீர் ஓடியதாலும் இப்பெயர் பெற்றது. பிற்காலத்தில் இந்த மாதம் ''திசுரி'' என்று அழைக்கப்படுகிறது.

இம்மாதத்தின் 10-ஆம் நாள் பரிகார நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டது; 15-23-ஆம் நாட்களில் கூடார விழாக் கொண்டாடப்பட்டது. 1 அரச.8:2-4-இன்படி இந்த ஏத்தானிம் மாதத்தில்தான் குருக்கள் உடன்படிக்கைப் பேழையை எருசலேமிலுள்ள ஆலயத்துக்குள் எடுத்துச் சென்றனர்.

ஏத்தான் (ETHAN - நித்திய, நிலையான)

1. எசிராவியர் என்று அழைக்கப்படும் அறிவிற் சிறந்த ஞானி. சாலமோன் காலத்தியவராக இருக்கலாம் (1 அர 4:31). இவரோடு சாலமோன் ஒப்பிடப்படுகிறார். இவர் ஒருவேளை சங்.89-ஐ எழுதியிருக்கலாம்.

2. தாமார் வழியாக யூதாவின் புதல்வனான செராகின் புதல்வன், அசரியவின் தந்தை (1 நாள் 2:6.8). இவருடைய சகோதரர்களான ஏமான் மற்றும் கல்கோல் ஆகியோர் 1 அரச. 4:31-இல் குறிக்கப்பட்ட ஞானிகளானால், இவர் (1)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

3. ஒரு லேவியர். சிம்மாவின் மகனும் அதாயாவின் தந்தையுமாவார். கெரிசோமைச் சார்ந்த ஆசாபின் முன்னோர் (1 நாள் 6:41). ஒருவேளை இவர் யோவாகு-(1) ஆக இருக்கலாம்.

4. லேவியர் மெராரியின் பிரிவைச் சேர்ந்த கீசியின் (1 நாள் 6:44) அல்லது கீசாயியாவின் (15:17) மகனாவார். எருசலேமுக்கு உடன்படிக்கைப் பேழை கொண்டுவரப்பட்ட விழாவில் பாடகர்களுக்கும் இசைக் கலைஞர்களுக்கும் தலைமை தாங்க ஏமான் மற்றும் ஆசாபு ஆகியவர்களோடு நியமிக்கப்பட்டவர் (15:17.19). இவன் ஒருவேளை எதுத்தூன்-(1) ஆக இருக்கலாம்.

எந்தோர்/ஏன் - தோர் (ENDOR - தோரின் ஊற்று)

கானானியரின் கட்டுப்பாட்டிலிருந்து கைப்பற்ற இஸ்ராயேலர் கடினப்பட்ட நகரங்களில் இதுவும் ஒன்று (யோசு 17:12-13). இங்குதான், கில்போவா மலைக்கு வடக்கில் பெலிஸ்தியர்களோடு உடனடியாக வரவிருந்த போர் பற்றிச் சவுல் குறிகாரியிடம் ஆலோசனை கேட்டார் (1 சாமு 28:7). சங் 83:9-10-இன்படி ஏந்தோரில்தான் சீசெரா, யாபீன் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால் நீதி 4-5 இப்பெயரைக் குறிக்காததால் அறிஞர் சிலர் கில்போவா மலை அடிவாரத்திலுள்ள ஏங் கரோத்து ஆகத் திருத்தியுள்ளனர் (நீதி 7:1).

இது தாபோர் மலைக்குத் தெற்கில் 6 கி.மீ. தொலைவில் சிறிய கொர்மோனின் (நெபி தர்கீ) வடசரிவில் அமைந்துள்ளது. இது இக்கால ஏந்தோர் என்ற கிராமப் பெயரில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் உண்மை

யான இடம் கிர்பெத் எஸ் --சப்சாபேயாக இருக்கலாம்.

ஏபால் (EBAL - வெறுமையான) - ஆள்

1. கோரிய சேயிரின் வழித்தோன்றல்.

சோபாலின் மூன்றாவது புதல்வர் (ஆதி 36:23; 1 நாள் 1:40).

2. சேமை மூதாதையராகக் கொண்ட யோக்திதானின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 1:22). இதற்கிணையான பகுதியில் (ஆதி 10:28) இவரது பெயர் ஓபால் என்பதாகும்.

ஏபால் - மலை (EBAL - MOUNT)

கெரிசிம் மலைக்கு நேர் எதிரில் வடக்கில் அமைந்துள்ள ஒரு மலை. இருமலைகளுக்கும் இடையில் கிழக்கு மேற்காக ஒரு கணவாய் அமைந்துள்ளது. அதன் கிழக்கு வாயிலில் செக்கேம் நகர் உள்ளது. இருமலைகளுக்கிடையிலுள்ள பள்ளத்தாக்கில் இக்கால நபுலூஸ் உள்ளது. இதன் தற்போதைய பெயர் எபோல் எஸ்லாமியோ ஆகும்.

மோசேயின் காலத்திற்குப் பிறகு எபிரேயர்கள் கானான் நாட்டில் நுழைந்தபின் தாங்கள் யாவேயுடன் கொண்ட உடன்படிக்கையை உறுதி செய்யவேண்டியிருந்தது. இந்நிகழ்ச்சியில் கெரிசிம் மலையின் மேல் ஆசீரையும், ஏபால் மலையின் மேல் சாபத்தையும் இஸ்ராயேல் கூற வேண்டியிருந்தது (உப 11:29). மேற்சொன்ன சான்றிலிருந்து, பாரம்பரியமாக வழங்கி வந்தபோதிலும், மலையே சாபமிடப்பட்டதா என்பது தெளிவாக இல்லை. உப ஆகமம் 27:13-இல் இருந்து ஆண்டவருடைய கட்டளைகளை மீறியவர்களுக்குச் சாபங்கூற ரூபன், காது, ஆசேர், செபுலோன், தாண், நப்தலி ஆகிய கோத்திரக்காரர்கள் ஏறி நின்றார்கள் என்பது தெரிய வருகின்றது. உபஆகமம் 27:4 பகுதியிலிருந்து இம்மலையின் புனிதத்துவம் தெரிய வருகின்றது. ''நான் உங்களுக்கு இட்ட கட்டளைகளைப் பொறித்த கற்களை ஏபா::ல் மலையில் நாட்ட வேண்டும்'' என்று பாரம்பரியம் கூறுவதிலிருந்து புனிதத்துவம் விளங்குகின்றது. யோசுவா ஆகமம் 8:30.33-இன்படி ஆயி நகரை வென்றபின் ஏபால் மலையின் மேல் யோசுவா பலிபீடம் எழுப்பினார் என்றும், மேலும் இவருடைய தலைமையில் மக்கள் உடன்படிக்கைக்குரிய சடங்குகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிய வருகின்றது. அப்போது கூட்டத்தில் பாதிப் பேர் ஏபால் மலையின் முன்பகுதியிலும் மறு பாதிப் பேர் கெரிசிம் மலையின் முன்பகுதியிலும் அமர்ந்திருக்க உடன்படிக்கைக் கூடாரம் இரு சாராருக்கும் நடுவில் அமைந்தது.

ஏபேது (EBED - ஊழியன்)

1. ஒபேது காகால் என்பவனுடைய தந்தை. இவர் அபிமெலேக்கிற்கு எதிராகச் செக்கேமில் கிளர்ச்சியை நடத்தினார் (நீதி.9: 26-35).

2. எஸ்ராவுடன் பாலஸ்தீன நாட்டிற்குத் திரும்பிய 50 பேரில் ஒருவர் (எஸ் 8:6). யோனாத்தானின் மகன்.

ஏபேது - மெலக்கு (EBED - MELECH - அரசனின் ஊழியன்)

செதேக்கியா அவையிலிருந்த எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்த அண்ணகர். இவர் ஏரேமியாவைப் பாழுங்கிணற்றிலிருந்து காப்பாற்றியவர் (ஏரே 38:7-13). ஏரே 39:15-18-இல் ஏபேது-மெலக்கைப் பற்றிக் கூற படுகின்ற இறைவாக்குகள் சில சமயங்களில் பிற்சேர்க்கையாகக் கருதப்படுகின்றன. அதிலே அவர் எரேமியாவுக்குச் செய்த நற்செயலுக்குச் சன்மானமாக, அரசின் அழிவிலிருந்து 'காப்பாற்றப்படுவார் என்று எரேமியா வாக்குறுதி அளிக்கிறார். 'ஏபேது' (அடிமை) என்ற இந்த வார்த்தை அக்காதியர்களின் வழக்கிலிருந்து முதன்முறையாகத் தாவீது காலத்தில் கையாளப்பட்டதாகத் தெரிகின்றது. மேலும் ஏதோமிலும் அம்மோனிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

ஏபேர் (EBER - ஊழியன்)

1. எபிரேயர்கள் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்த குலப்பெயர் முதியவர்கள்.

சேமின்பேரனும் செலாகின் மகனுமாவர் (ஆதி 10:21; 24:25; 11:14-17; எண் 24:25; 1 நாள் 1:18-19.25). இயேசுவின் மூதாதையர்களில் ஒருவர் (லூக் 3:35). யாவே பாரம்பரியம் ஏபேரை செமித்தியர்களுக்கு முன்னோராகக் கருதுகின்றது (ஆதி 10:21); மாறாகக் குருக்கள் பாரம்பரியம் எபிரேயர்களுக்கு மட்டும் முன்னோராகக் கருதுகின்றது (ஆதி 11:4-26). நாள் ஆகமம் இவ்விரண்டு பாரம்பரியங்களையும் இணைத்துப் பேசுகின்றது (1 நாள் 1:17-27). எண் 24:24-இல் 'ஏபேர்' பெயர்ச்சொல்லாக வாசிக்கப்பட முடியாது. மாறாக ''அப்பாலுள்ள பகுதிகள்'' என்ற பொருளைக் கொடுக்கும் ஒரு சொல்லாக மட்டும் வாசிக்க வேண்டும். இப்பகுதிகள் யூப்பிரத்திசுக்கு அப்பால் உள்ளவையாகும். எபிரேய மொழியிலும் 'ஏபேர்' என்ற சொல்லாலேயே குறிக்கப்படுகின்றது.

2. காது குலத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 5:13).

3. பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:12).

4. பென்யாமின் சாசாக்கின் இரண்டாம் புதல்வர் குலத்தைச் சேர்ந்த மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:22).

5. பாபிலோனிய அடிமைத் தனத்துக்குப் பிறகு (நெக 12:20) யோயாக்கிமின் பணிக் காலத்தில் ஒரு குருவும், அமோக்கு வீட்டாரின் தலைவருமாவார்.

ஏபோது (EPHOD) - ஆள்

யோர்தானுக்கு மேற்குப்புறத்திலுள்ள கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிடுதலை மேற்பார்க்க நியமிக்கப்பட்டவர்களிலே ஒருவர். மனாசேயின் கோத்திரத்திலே கன்னியேலின் தந்தை (எண் 34:23).

ஏபோது (EPHOD) - ஆடை, பொருள்

பழைய ஏற்பாட்டுச் சொல்லாகிய இதன் சொல்லாக்கமும் பொருளும் தெளிவாக இல்லை. ஆனால் ஒரு பொருள் மட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

குருக்கள் அணியக்கூடிய ஒருவகையான சணல்நூல் ஆடை (1 சாமு 22:18). சிறுவன் சாமுவேலும் சணல் ஆடை உடுத்தியிருந்தான் என்று 1 சாமு 2:18-இல் குறிப்பிடுகிறது. திருப்பேழை எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டபோது அதற்குமுன் ஆடிக் கொண்டு வந்த தாவீது உடுத்தியிருந்த (2 சாமு 6:14) 'ஏபோது' சணல் ஆடை அல்லது இளநீல ஆடை போன்ற சொற்கள் 'நிர்வாணத்தை மறைக்கின்ற' என்ற பொருளையும் கொடுப்பதாகத் தெரிகிறது. சாமுவேலும், தாவீதும் இந்த இடுப்பை மறைக்கின்ற சிறிய ஆடையை அணிந்து கொண்டிருந்தார்கள் என்று குறிப்பிடப்படுகிறது. குருக்கள் பாரம்பரியம் பெரிய குரு அணிந்து கொள்ளும் ஏபோதைப் பற்றி எடுத்துரைக்கின்றது (யாத் 28:28-29; 35:27; 39). பொன் நூல், இளநீலம், இருமுறை சாயம் தோய்த்த இரத்த நிறம் கொண்ட நூல்கள், மெல்லிய சணல் நூல் முதலியவற்றால் நெய்யப்படும் விலைமதிப்புமிக்க, இருபுயங்களிலிருந்து தொங்கும் அங்கியாகும். இறைத் திருவுளத்தைக் கணிக்க உதவும் ஊரிம், தும்மீம் என்ற குறிசொல்லும் தாயக்கட்டைகளைக் கொண்ட வழிபாட்டுக்குரிய ஆடை. கைப் பகுதியற்ற இருக்கமாகப்பொருந்தக்கூடிய 'ஏபோது' என்ற இந்த ஆடை குருக்கள் அணிவதா, சிலைகளுக்குப் போடுவதா என்பதிலும் சிறு சந்தேகம் இருப்பது போலத் தெரிகிறது.

பொருள் தெளிவாக இல்லாத பல பகுதிகள் காணக்கிடக்கின்றன. நீதி 8:27-இல் கிதயோன் ஓர் ஏபோதைச் செய்து தன் ஊராகிய ஓபிராவில் வைத்ததாகவும், அதுவே இஸ்ராயேலரின் சிலைவழிபாட்டுக்குக் காரணமாக அமைந்ததென்றும் குறிப்பிடப்படுகிறது. இது யாவேயைக் குறித்துக்காட்டும் தங்க உருவமாக இருக்கலாம். குறிசொல்லும் தாயக்கட்டைகளைப் போட்டுக் கொள்ளக் கூடிய பைகளை உடைய தேவதையின் உருவ ஆடையாகவும் இது இருக்கலாம். ஏச 30:20 ''தங்க மூலாம் பூசிய சிலைகளையும்'' என்று குறிப்பிடும் இடத்தில் உருவங்களின் மேற்கவசத்தை விவரிக்கும்போது ஏபோ

தைப், பெண் தன்மையுள்ள சொல்லாக வர்ணிக்கின்றது. 2 அர 23:7 என்ற பகுதி ''சிலைசோலைக்கு'' வரும் பெண்கள் செய்த ஆடையைப் பற்றி விவரிக்கிறது. ஆனால் இந்தப் பகுதியில் 'ஏபோது' என்னும் சொல் பற்றிக் குறிப்பு ஒன்றுமில்லை. ஆனால் சிலர் பேழைக்கும் 'ஏபோது'க்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கின்றனர். இவ்வாறு 1 சாமு 14:1-இல் எபிரேய 'ஆண்டவருடைய பேழை'யை எழுபது நூலில் 'ஏபோது' என்று வாசிக்கின்றோம். இதிலிருந்து பேழையும் 'ஏபோதும்' நெருங்கிய தொடர்புடையன என்றும் பல பேழைகள் இருந்திருக்கலாம் என்றும், சிறிய விதத்தில் அமைக்கப்பட்ட கோயிலைக் குறிக்கும் பேழைக்கு மறு பெயர் 'ஏபோது' என்றும் எண்ணும் முடிவுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. இவ்வாறு 'ஏபோது' என்றால் ஒரு சிறிய கோவில் என்று எண்ணப்பட்டது.

ஆனால் இது 'ஏபோது' என்பது ஓர் ஆடை என்று பொருள் கொடுக்காத பகுதிகளை விளக்கலாம். 'ஏபோது', தெரபிம்களுக்கு இடையே உள்ள உறவு தெளிவாகத் தெரியா விட்டாலும் அவையிரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பது தெளிவு (நீதி 17:5; 18:14. 17-18.20; ஓசே 3:4). மேலும் இறைத்திருவுளத்தை அறிந்து குறிசொல்வதற்குப் பயன்படுத்தப்படும் கட்டைகளை வைத்துக் கொள்ளப்பயன்படுத்துவதால் 'ஏபோது' இறைவாக்கைத் தெரிந்து கொள்ளப் பயன்படுத்தப்படும் கருவியாக இருப்பதும் தெளிவாகும். 1 சாமு 14:3. 18-19; 23:9; 1 அர 2:26 இதைத் தெளிவாக்குகின்றன. ஏனெனில் ஏபோது தூக்கிச் செல்லப்பட்டு ஆலோசனை பெறப் பயன்படுத்தப்பட்டது.

விவிலியப் பேழை குறிசொல்லும் கருவியாகக் கருதப்படாததால், பேழையையும் ஏபோதையும் ஒன்றாக்கவோ ஒப்பிடவோ முடியாது. 'ஏபோது' சுற்றுப் புறங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடியது என்றும் ஆடையைக் குறிப்பதாகவும் கிதயோனில் இருந்தது போலச் சில சமயங்களில் விலை உயர்ந்த பொருட்களாகவும், சில நேரங்களில் புனித இடத்தில் அமைக்கப்பட்டதாகவும், சுமந்து செல்ல முடியாத அளவுக்குப் பெரிதாகவும் (நீதி 17:5; 18:14...; 1 சாமு 19:13), சில சமயங்களில் போர்ப் பாசறைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் இப்பகுதிகள் நமக்குக் காட்டுகின்றன. ஏபோது போர்ப் பாசறைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும், குறிசொல்லும் போதும், குரு அணியக்கூடியது என்று சந்தேகமறக் குறிப்பிடப்படுகிறது. சிலுவைகள் பலவகையில் ஆலயத்தின் சுவர்களில் பொருத்தக்கூடிய வகையில் பெரியதாகவும், சில சமயம் உடலில் சுமந்து செல்லக்கூடிய சிறிய வகையிலும் இருப்பதுபோல 'ஏபோது' பல வகைப்பட்ட கன உருவங்களில் இருந்திருக்கலாம்.

ஏப்பா (EPHAH - இருள்) - ஆள்

1. மிதியானின் புதல்வர்களில் மூத்த மகனும், ஆபிரகாம் - கெத்தூராவின் பேரனும் ஆவார் (ஆதி 25:4; 1 நாள் 1:3). ஓர் அரபிய இனத்தின் குலப்பெயர் முதியவர். மிதியான் இனம், ஆண்டவரின் புகழ்பாடிக் கொண்டு எருசலேமுக்குப் பொன்னும், தூபமும் கொண்டுவருவதாக இறைவாக்கினர் காண்கிறார் (ஏச 60:16).

2. காலேபின் வைப்பாட்டி. ஒரு குலப் பெயர் (1 நாள் 2:46).

3. யூதா இனத்தைச் சேர்ந்த யகுதாயின் புதல்வர்களில் ஒருவர் (2 நாள் 2:47).

ஏப்பா (EPHAH) - பொருள்

மாவு போன்ற பொருள்களை அளக்கும் ஒரு அளவை. கோமேரில் பத்தில் ஒரு பங்கு (எச 45:11; காண்க. நீதி 6:19; ரூத் 2:17; ஏச 5:10).

ஏப்பாய் (EPHAI - பறவை பறத்தல்)

நெத்தோபா ஊரைச் சேர்ந்தவர். எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு கெதலியாவுடன் சேர்ந்து கொண்ட யூதப்படைத் தலைவர்களில் இவருடைய புதல்வர்களும் அடங்குவர் (எரே 40:8). நெத்தானியாவின் மகனான இசுமயேல் இந்தக் கூட்டம் முழுவதையும்

கொன்று அழித்தான் (41:1-3). இதற்கு இணையான பகுதியில் (2 அர 25 : 23) ''ஏப்பாயின் புதல்வர்கள்'' என்ற சொற்றொடர் விடப்பட்டுள்ளது. அதனால் தங்குமேத்தை ஒரு நெத்தோபாத்தியராக்குகிறது.

ஏப்பேர் (EPHER - இளம் கலை மான்)

1. மிதியாவின் இரண்டாவது மகனும், ஆபிரகாம் - கெத்தூராவின் பேரனுமாவர் (ஆதி 25:4; 1 நாள் 1:33). ஒரு தென் அராபிய இனத்தின் குலப்பெயர் முதியவர்.

2. யோர்தானின் கிழக்குப் புறத்திலே வாழ்ந்த மனாசே இனப்பகுதியின் ஒரு குடும்பம். ''ஆற்றல்மிக்கவரும் ஆண்மையுடையவரும்'' அடங்கிய பட்டியலில் முதலாவதாகக் குறிக்கப்படும் பெயர் (1 நாள் 5:24; காண்க. எண் 26:32).

ஏமாம் (HEMAM)

ஏமாம் குலத்தலைவனான உலோத்தானின் இரண்டாவது புதல்வர் ஆவார். ஏதோமில் ஒரு கோரிய துணை வம்சத்தின் முன்னோர். 1 நாள் 1:38-இல் கோமாம் என்று இப்பெயர் தரப்பட்டிருக்கிறது.

ஏமான் (HEMAN - பிரமாணிக்கமுள்ள)

1. ஞானமிக்கவர். கல்கோல், தர்தாவைப் போல் இவரும் மாகோலின் புதல்வர் (1 அர 4:31). சாலமோன் தன் ஞானத்தில் இவரையும் மிஞ்சியவர். 1 நாள்.?:6-இல் செராசின் புதல்வன் என்று அழைக்கப்படுகின்றார். இதை நாள் ஆகம ஆசிரியர் ''எசுராவியர்'' என்பதிலிருந்து எடுத்துக் கையாண்டிருக்கலாம் (சங்.88). ஏமானுக்கு, ஏதோமியர் கானானிய முன்மரபுகள் கூறப்படுகின்றன. இவர் ஒருவேளை (2)-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

2. கெகாத்திய கோத்திரத்தில் யோவேலின் மகன்; சாமுவேலின் பேரன், தாவீது, சாலமோன் ஆட்சியில் கோயில் பாடகர் தலைவர்களுள் ஒருவர் (1 நாள் 6:33-47; 15:17-19; 16:41; 2 நாள் 5:12). அரசனது திருக்காட்சியாளர் என்று அழைக்கப்படுகிறார் (1 நாள் 25:5). இன்னிசைக் கருவிகளை ஒலித்து இறைவாக்குரைத்தவர்களில் ஒருவர் (25:1). ஏமானின் குழு வழிபாட்டு இறைவாக்கினர் குழுவாக முன்பு இருந்தது (காண்க எரே 35:4); பிறகு இசைக்குழுவாக மாறியதாக இருக்கலாம்., சாலமோன் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டதில் இவர் பங்கெடுத்திருக்கிறார் (2 நாள் 5:12).

3. ஏசாவின் வழிவந்த கோரியர் வம்சத்தைச் சார்ந்தவர் (ஆதி 36:22). 1 நாள் 1:39-இல் கோமாம் என்றழைக்கப்படுகிறார்.

ஏமியர் (EMIM - பயங்கர)

யோர்தானுக்குக் கிழக்கில் சமவெளியில் வசித்து வந்த பயங்கரமான தோற்றத்தையுடைய அசுர மக்கள். இவர்கள் சாவே - கிரியாத்தாயிமில் வாழ்ந்து வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர் (ஆதி 14:5). ஆனால் மற்ற இடங்களில் இரப்பாயிம் என்றழைக்கப்படுகின்றனர். மோவாபியர்கள் அவர்களை ஏமியர் என்று அழைத்தனர். இவர்கள் தான் மோவாபின் முந்தைய குடிமக்கள். மோவாபியர் இவர்களை விரட்டியடித்தனர் (உப 2:10-11). இவர்கள் மிக்க வலிமையும் நெடிய உருவமும் உடையவர்கள். இவர்கள் அரக்கர்களான அனாக்கிமியர்களைப் போன்றவர்கள் என்றும் எண்ணப்பட்டார்கள். ஆதி 14:5-இன்படி சாக்கடலுக்குக் கிழக்கிலுள்ள சமவெளியான சாவே - கிரியாத்தாயிமில் கெதர்லா - கோமோரால் இவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

ஏய்ப்பு/ஏமாற்றம் (DECEPTION/DISAPPOINTMENT)

விவிலியமானது ஏய்ப்பும் ஏமாற்றமும் இருப்பதை அறிந்திருப்பதோடு மட்டுமில்லாமல், அவற்றைப் பற்றியும் விவரிக்கிறது. கிரேக்கரும் வாழ்வின் ஒரு பகுதியாக உள்ள தோல்விகளையும் ஏமாற்றங்களையும் உணர்ந்தவர்களாய் இருந்தனர். மனிதனுடைய செயல்களின் இத்தகைய கூறுகளைப் பற்றி அவர்கள் அடிக்கடி விவரித்தாலும் மதிப்பான முறையில் அதனை ஏற்றுக் கொள்ளுதல் என்ற எண்ணத்துடன் அவர்கள் அத

னைக் கிட்டதட்ட ஒளிவு மறைவாகவும் சிறப்பாகவும் செய்கின்றனர். ஆனாலும், விவிலியமானது இந்தப் போக்கைச் சிறிதளவே காட்டுகின்றது. உண்மையில், யோபுவினுடைய குற்றச்சாட்டுகளும், சங்கத்திருவுரை ஆகமத்தினுடைய வசைச்சொற்களும் கேட்கச் செய்வதில் பேரின்பம் அடைவதாகத் தோன்றுகிறது. இது கிரேக்கருடைய கட்டுப்பாடு மற்றும் எபிரேயருடைய உணர்ச்சி ஆகியவற்றிற்கு இடையிலுள்ள மனநிலை மற்றும் கலாச்சாரத்தினுடைய வேறுபாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். எல்லாவற்றிற்கும் மேலாக இது சமய மனப்பான்மையில் உள்ள வேறுபாடாகும். அதனுடைய விசுவாசத்தின் காரணமாக, இஸ்ராயேலானது, படைப்பின் மதிப்பையும் மற்றும் அதன் நிலைமையையும் பற்றிய கூர்மையான உணர்வைக் கொண்டிருந்தது. தோல்வியுணர்வு துன்பத்திற்குரியதொன்றானாலும், அதை இஸ்ராயேல் துறப்பமைவுடனும் இறுதிவெற்றி பற்றிய உறுதியுடனும். ஏற்றுக் கொண்டது.

1. வெட்கம், பொய் மற்றும் வீண் தன்மை:- ஏய்ப்பு மற்றும் ஏமாற்றம் பற்றிய எண்ணத்திற்கான எபிரேயச் சொற்றொடர்ப் பகுதியில் பொருளின் இருவித நிலைகளின் மீது குறிப்பாக அழுத்தம் வலியுறுத்தப்படுகிறது: ஏமாற்றுகின்ற புறப்பொருளின் வீண் தன்மை அல்லது பயனின்மை மற்றும் ஏமாற்றப்பட்டவரில் ஏற்படும் குழப்பம்.

அ. பயனற்ற பொருட்களின் பொய்மை நிலை:- எபிரேயர், நிலைத்து நிற்பதற்கான ஆழமான தேவையையும், முரண்பாடான மற்றும் மாயத் தோற்றங்களின் பயங்கரத்தையும் அனுபவிக்கின்றனர். பொய்பேசுதல் கண்டிக்கப்படும்போது, வாய்மை தவறுதல் பற்றிய எண்ணத்தைவிட அதனுடைய அடிப்படை ஒன்றுமில்லாமையே அதிகமாகக் கண்டிக்கப்படுகின்றது. ஏமாற்றுகின்ற பொருட்கள், ஒன்றுமின்மையை உருவாக்குகின்ற பொருட்கள், ''பேலியாலின் மக்கள்'' (உப 13:13) ஆகியவற்றை விவரிக்கச் சாதாரணச் சொற்களாகப் பொய், வீண், வீணானவை, ஒன்றுமின்மை ஆகியவை பயன்படுகின்றன. காற்று, தூசி, மற்றும் ஒன்றுமின்மை என்பன அடிக்கடி காணப்படும் உருவகங்களாகும்.

ஆ. குழப்பமடைந்திருத்தலின் வெட்கம்:- எல்லா வாழ்வும் மற்றவர்களின் பார்வையின் கீழ் வாழ்கின்ற இவ்வுலகில், ஏய்ப்பானது தவிர்க்கமுடியாமல் தனது பலியாளை வெட்கத்தினால் போர்த்துகிறது. பயன் தராத ஒன்றின்மேல் தனது நம்பிக்கையை வைத்த ஒருவன், அனைவரின் முன்னிலையில் தான் குழப்பம் அடைந்திருப்பதை உணர்கிறான். தனக்கு ஒப்பானவர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற மனிதனுடைய இறுமாப்பிற்கு இது பயங்கரச் சோதனையாகும். ஏய்ப்பினை விவரிக்கப் பரவலாகப்பயன்படுகின்ற சொற்கள் வெட்கம் மற்றும் குழப்பத்தைக் குறிப்பவையாகும். இந்த அவசியமான நுட்ப வேறுபாடானது நமது கவனத்தினின்று எளிதில் தப்பிவிட நாம் விட்டுவிடுகிறோம். ஆகவே, பவுலின் கூற்றை ''நம்பிக்கையே, பொய்க்காது'' என்று மொழிபெயர்க்கிறோம் (உரோ 5:5). இதற்கு ''நம்பிக்கையோ குழப்பத்திற்கு இட்டுச்செல்லாது'' என்பது மேலான மொழிபெயர்ப்பாகும். இங்கு இக்கூற்று, நற்செய்தி மற்றும் சிலுவையை அறிவிப்பதில் அப்போஸ்தலர் கொள்ளும் பெருமையை விளக்குகிறது.

2. எல்லாமே ஏமாற்றுதல்:-

தாங்கள் மனிதருடைய நம்பிக்கைக்கு உரியவர்கள் என்றும் அவர்களது முடிவை உறுதிப்படுத்தக்கூடியவர்கள் என்றும் உரிமை கொள்வதால் இரு வகையானவர்கள் சிறப்பான முறையில் ஏமாற்றுகின்றனர். அவர்கள் பேராற்றல் மிக்க அரசும் போலித்தெய்வங்களும் அதாவது எகிப்தும் சிலைகளும் ஆவார். பகட்டான வெளிப்புறத்தின்கீழ், ''செயலிழந்த இராகாபு'' எனப்படும் எகிப்து உண்மையில் ''வீண்முயற்சியாகவும் பயனற்றதாகவும்'' உள்ளது (ஏசா 30:7). அதனுடைய ஆற்றல்மிக்க குதிரைகள் வெறும் சதைப் பிண்டங்களாகவும், எகிப்தின் ஒரு மனிதனாக மட்டுமாகவும் உள்ள

னர் (ஏச 31:1 தொ; எரே 2:37). இக்குதிரைகளும் போர்வீரர்களும் உண்மையான உயிர்களாக இருந்தாலும், போலித் தெய்வங்கள் ஒன்றுமில்லாதவையாகவும், அவற்றினுடைய சிலைகள் பொய்யாகவும், ஆற்றலற்றவையாகவும் உள்ளன. இதன் காரணமாகவே, அவற்றினுடைய ஊழியர்களும் படைப்பாளர்களும் வெட்கி நாணவேண்டியவர்களாக உள்ளனர் (எரே 2:28; ஏசா 44:9 தொ).

ஆனால் திருவுரையாளர் இதற்கும் அப்பால் சென்று, இந்த ஏமாற்று உணர்வைப் பொதுவான ஒன்றாக அமைக்கிறார். ''சூரியன் முகத்தே எல்லாம் வீணிலும் வீண், எல்லாமே வீண்'' என்று திரும்பத் திரும்பக் கூறுகிறார் (திருவுரை 1:2.14). வாழ்க்கையே ஓர் ஏமாற்றம் என்பதை எவ்வளவு உணர்கிறார் என்றால், இந்த உறுதியை எல்லாக் கொடைகளையும் கொண்டு இருந்த சாலமோன் அரசனுக்கே அவர் சாற்றிக் கூறுகிறார். ஆனாலும், உலகப் பொருட்களை அவர் இகழவில்லை. ஆனால், அதற்கு எதிர்மாறான நிலையில் அவற்றிலிருந்து பெருமளவிற்கு எதிர்பார்க்கிறார். இதுவே அவருடைய அடிப்படையான கசப்பான மனப்போக்கிற்குக் காரணமாகிறது. இதுவே ஒரு விடையையும் காண்கிறது; அது கெட்டதையும், நல்லதையும் கற்றுக் கொள்வதாகும் (7:13-14).

3. இறைவன் ஏமாற்றுவதில்லை:-

மனிதன் தன்னுடைய அயலாருக்கு ஏய்ப்பின் ஊற்றாய் இருப்பதுடன் (எரே 17:5; சங் 118:8) இறைவன் ஏமாற்றத்தின் ஊற்றாகவும் இருக்கிறான். அவர் அன்போடு பேணி வளர்த்த திராட்சைக் கொடியானது, புளிப்பான திராட்சைப் பழங்களையே விளைவித்தது (ஏச 5:4). ''ஒரு மனிதன் தன்னுள் என்ன கொண்டுள்ளான்'' என்பதைக் கூறக்கூடிய இயேசு (யோவா 2:25), இந்த ஏய்ப்பினை அனுபவித்தார். தமது அயலாரால் புறக்கணிக்கப்பட்டு (மாற் 6:3-4), எந்த அளவு அவர் அவர்களை அடைய முயன்றாரோ, அந்த அளவிற்கு மனிதர்கள் தங்களுடைய இதயங்களை மூடிக்கொள்வதையும் அவர் கண்டார் (மத் 23:37-38; யோவா 12:37-40). அவர் தம்மையே அவர்களுக்கு அளித்துக் கொண்டிருக்கும்போதே தமது சீடர்கள் தம்மைக் கைவிடுவதை அவர் கண்டார் (மாற் 4:50).

சில நேரங்களில் இறைவனே ஏமாற்றுபவராகத் தோன்றுகிறார். தங்களுடைய முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன என்றும், இறைவன் தங்களுடைய வழிகளிலேயே தங்களை விட்டுவிட்டார் என்றும் எண்ணுகின்ற சோதனையை மிக விசுவாசமுள்ள ஊழியர்கள் நன்கு அறிவர். தனது தந்தையரைவிடத் தான் எவ்விதத்திலும் உயர்ந்தவன் அல்லன் என்பதைக் கண்டடைந்தபிறகு எலியா இறக்க விரும்புகிறார் (1 அர 19:4). இறைவனின் நம்பத்தகுந்த தன்மையைப் பற்றி ஐயம் எழுப்பவும் தூண்டப்படுகிறார்; ''நீர் எனக்கு நீரற்று ஏமாற்றும் ஓடைபோல் ஆகிவிட்டீரோ!'' (எரே 15:18 ஆனது எரே 2:13; ஏச 58:1-ஒடு ஒப்பிட்டு வேறுபடுத்த வேண்டும்). இறைவனால் கைவிடப்படும் நிலையானது எவ்வளவு தூரம் செல்லக்கூடியது என்பதை, இயேசுவே அனுபவித்தார் (மாற் 15:34).

இறைவன் மட்டுமே ஏமாற்றுபவரல்லர் என்று கூறுவதென்பது, எல்லாத் தோற்றங்களுக்கும் அப்பால் செல்லும் ஒரு படியாகும். இது விசுவாசத்தின் அனுபவமாகும். இது பெரும்பாலும் இருளில் வாழப்பெற்று, கசப்பாக உணரப்பட்ட ஏமாற்றங்களின் விலையால் பெறப்படுகிறது. தந்தையின் கரங்களில் தனது ஆவியைக் கையளித்து (லூக் 23:46) அதனால் மறைவானவராகவும், கவலையற்றவராகவும் தோன்றுகிறவருடைய இறைவனிடம் தன் விசுவாசத்தை வெளிப்படுத்திய இயேசு கிறிஸ்துவால் கொண்டுவரப்பட்ட மீட்புடன் இணையாவிடில், இந்த அடிப்படையான உறுதியானது அனுபவிக்கப்பட முடியாது. இவ்விசுவாசத்தினால் உறுதுணை அளிக்கப்பட்டு, இறைவன் விசுவாசமுள்ளவராக உள்ள காரணத்தால், நாம் இனிமேலும், எதனாலும் ஏமாற்றப்பட

முடியாது (உரோ 8:31-39). எல்லா ஏமாற்றங்களுக்கும் எதிரான உறுதிப்பாடான இந்தப் பிரமாணிகத்தின் அச்சாரம் அவருடைய மகனின் கொடையாகும். அவரில் அழைக்கப்பட்டு அவர் வரும்வரை பாதுகாக்கப்படுகிறோம் (1 கொரி 1:9; 1 தெச 5:23-24).

ஏரான் (ERAN - விழிப்புள்ள இன்பம்)

சுத்தலாக்கின் புதல்வனும் எப்பிராயிமின் பேரனும் ஏரானிய வம்சத்தலைவனும் ஆவார் (எண் 26:36). 1 நாள் 7:21-இல் குறிப்பிடப்படும் எப்பிராயிமின் தலைமுறை அட்டவணையில் எண் 26:36 ஏரான் கொண்டிருக்கும் இடத்தை எலயாதா பிடித்துக்கொண்டிருக்கிறார். இது எழுபது நூல் மற்றும் சில வாசகங்களுக்கு ஆதரவு அளிக்கிறது.

ஏரானியர் (ERANITES)

ஏரானின் வழித்தோன்றல்கள் (எண் 26:36).

ஏரி (ERI - விழிப்புள்ள)

காதின் ஐந்தாவது புதல்வர் ஏர் (ஆதி 46:16). இவரது சந்ததியினர் ஏரியர் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் பாலைவனத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் குறிக்கப்படுகின்றனர் (எண் 26:16).

ஏரியர் (ERITES)

ஏரியின் வழித்தோன்றல்கள் (எண் 26:26). எழுபது நூலில் அதித்தியர் என்றழைக்கப்படுகின்றனர்.

ஏரோது (HEROD)

உரோமைப் பேரரசிற்காகப் பாலஸ்தீனத்தை ஆண்ட (கி.மு. 37-கி.பி. 70) இதுமேயக் குடும்பம். இந்த அரசமரபானது இதுமேயாவின் ஆளுநராக அலக்சாந்தர் யன்னாயுவினால் நியமிக்கப்பட்ட முதலாம் அந்திப்பாத்தரால் கி.மு. முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்டது. இரண்டாம் அந்திப்பாத்தர் கசமோனிய இரண்டாம் இரிக்கானைத் தந்திரமாகக் கையாண்டதன்மூலம் படிப்படியாக அதிகாரஆற்றல் பெற்று உரோமைத் தலைமையின் ஆதரவையும் அடைந்தார். கி.மு. 47-இல் யூலியு சீசர் இவரை யூதாவின் கருவூல அதிகாரியாக அதாவது ஆளுநராக நியமித்தார். கி.மு. 125-இல் இவர்களை யோவான் இரிக்கானு வென்று இதுமேய மக்கள் எல்லாரையும் விருத்த சேதனத்தை ஏற்று யூதமதத்தைத் தழுவுமாறு கட்டாயப்படுத்தினார். ஆனால் இக்குடும்பம் பெயரளவில்தான் யூத மதத்தைச்சார்ந்ததாக இருந்தது.

1. பெரிய ஏரோது (கி.மு. 73-கி.பி. 4):- இரண்டாம் அந்திப்பாத்தரின் இரண்டாம் மகனாகிய இவர் கி.மு. 47-ஆம் ஆண்டில் இருபத்து ஐந்தாம் வயதில் கலிலேயாவின் ஆளுநராகத் தனது தந்தையால் நியமிக்கப்பட்டார். இவர் தொல்லை கொடுத்து வந்த கொள்ளையரை விரைவிலேயே சிறைப்படுத்தித் தூக்கிலிட்டார். இச்செயலானது உரோமையர் மற்றும் கலிலேய யூதருடைய ஆரம்பப் பாராட்டுக்களைப் பெற்றுத்தந்தது. ஆனால் இச்செயல் யூதத்தலைமைச் சங்கத்தின் சினத்தை எழுப்பியது. கசமோனிய அந்திகோனுவின் படையெடுப்பை முறியடித்தார். அந்திப்பாத்தரின் படுகொலையைத் தொடர்ந்து உரோமை ஆட்சியாளர் மூவரில் ஒருவராகிய மாற்கு அந்தோணி ஏரோதையும் அவரது மூத்த சகோதரர் பாசேலையும் யூதேயாவின் ஆளுநர்களாக நியமித்தார். 40-ஆம் ஆண்டில் எருசலேமானது பார்த்திய சக்திகளால் முற்றுகையிடப்பட்டு அந்திகோனு அரசனாக்கப்பட்டார். பார்த்தியரின் காவலில் பாசேல் தற்கொலை செய்து கொண்டார். ஏரோது உரோமைக்குத் தப்பிச் சென்று அங்கு யூதேயாவின் அரசனென அறிவிக்கப்பட்டார். 38-இல் பார்த்தியர்கள் உரோமைப்படைகளால் வெளியேற்றப்பட்டனர். ஒரு வருடம் கழித்து அந்திகோனுவை வென்றதன் மூலம் ஏரோது அரியணையைக் கைப்பற்றினார்.

ஏரோதுவின் ஆட்சி, அடிப்படையில், அமைதியானதாக இருந்தது. யூத மக்களிடையே ஆதரவை உறுதிப்படுத்துவதிலும்

உரோமைத் தலைவர்களுடன் நல்லுறவைக் கொண்டிருத்தலிலும் அவர் தனது இராணுவ வலிமையையும் அரசியல் துணிவையும் வெளிப்படுத்தினார். அவரது புரவலராகிய அந்தோணியின் மரணத்திற்குப்பின், அகுஸ்துவின் (ஆக்டேவியன்) ஆதரவைப் பெறுவதில் வெற்றிபெற்றார். அந்தோணி மற்றும் அகுஸ்துவின் உதவியுடன் வடக்கிலும் தெற்கிலும் யூதேயாவின் எல்லைகளை ஏரோது விரிவுபடுத்தினார். மேலும் கிரேக்கக் கலாச்சாரத்தின் வளர்ச்சி மற்றும் நாட்டின் வரலாற்றில் ஈடிணையற்ற கட்டடத்திட்டம் போன்றவற்றினால் அவரது ஆட்சியானது மேன்மை மிக்க ஒன்றாக இருந்தது. அவர் பிரம்மாண்டமான பல கோட்டைகளைக் கட்டியெழுப்பினார். சமாரியா, எருசலேம் மற்றும் எரிகோ போன்ற நகரங்களை மீண்டும் கட்டிச் சிறப்பான முறையில் அலங்கரித்தார். அகுஸ்துவினுடைய மாட்சிமைக்காகச் செசாரியா என்று அவரால் பெயர் மாற்றப்பட்ட சித்ராத்தோவினுடைய கோபுரமானது பாலஸ்தீனத்தில் உரோமைத் தலைநகராக ஆயிற்று. உண்மையான கிரேக்க நாகரிகத்தில் அவர் அரங்கங்களையும் விளையாட்டு மைதானங்களையும் கட்டி விளையாட்டுப் போட்டிகளுக்கும் ஆதரவளித்தார். இவையாவும் யூதர்களுக்கு வெறுப்பூட்டின. ஆயினும் அவருடைய மிகப் பெரிய சிறப்பான கட்டடப்பணி கி.மு. 20-இல் தொடங்கிய எருசலேமிலுள்ள ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பியதாகும்.

முற்றிலும் முரண்பட்ட நிலையில் ஏரோதுவினுடைய குடும்பவாழ்வு குழப்பம் மிக்கதாய் இருந்தது. இது அவரது இயல்பான கொடூரம் மற்றும் நிலையின்மையை வெளிப்படுத்துகிறது. கசமோனிய இரண்டாம் இரிக்கானுடைய பேத்தியாகிய மரியம்னே மற்றும் தலைமைக்குரு சீமோனுடைய மகளாகிய மற்றொரு மரியம்னே உட்படப்பத்து மனைவியரை (பலரை அரசியல் காரணங்களுக்காக) அவர் மணம் புரிந்தார். ஏரோதுவின் சகோதரி சலோமி மற்றும் கசமோனிய மரியம்னேயின் தாயாகிய அலக்சாந்திரா ஆகியோரால் பெருமளவில் தூண்டப்பட்டு அரண்மனைச் சூழ்ச்சிகள் பெருகின. அவற்றின் விளைவாக இரண்டாம் இரிக்கானு, மரியம்னே அவளது சகோதரனும் தலைமைக் குருவுமான அரித்தோபுல் மற்றும் ஏரோதினுடைய மூன்று மகன்கள் ஆகியோர் உட்படப்பலபேர் கொலை செய்யப்பட்டனர் தூக்கிலிடப்பட்டனர். படுகொலைகளால் சிக்கலுடையதாக்கப்பட்ட, ஏரோதுவினுடைய மாறுபடும் போக்கால் ஏரோது தனக்குப்பின் வரும் வாரிசைப்பற்றிய தனது தேர்வில் எண்ணற்ற மாறுதல்களைச் செய்யவேண்டியது அவசியமாயிற்று. விவாதத்திற்குட்பட்டதாயினும் ஏரோதுவினுடைய இறுதிஉயிலின் ஆறாவது வடிவானது அர்க்கெலாவை யூதேயாவிற்கும் சமாரியாவிற்கும் அரசனாக அறிவித்தது. தனது மகன் அந்திப்பாவைத் தூக்கிலிட்டு, (வெற்றியடையாநிலையில்) வெளியளவில் ஏரோதுவினுடைய மரணத்தின்போது தேசிய அளவில் துக்க காலத்தை உறுதிப்படுத்துவதற்கென எரிகோவிலுள்ள பந்தயச் சதுக்கத்தில் பல முன்னணி யூதர்களைக் கொலை புரியுமாறு தனது சகோதரி சலோமிக்கும் அவளது கணவர் அலக்சாகக்கும் கட்டளையிட்ட சிறிது காலத்திற்குப் பின்னர் கி.மு. 4-இல் ஏரோது நாடிகளின் இறுக்கத்தினால் மரணம் அடைந்தார்.

ஏரோதினுடைய ஆட்சிக்காலத்தின் இறுதியிலேயே இயேசு பிறந்தார் (மத் 2:1). இப்பிறப்பானது தனது அதிகாரத்துக்கு ஓர் அச்சுறுத்துதலாக ஏரோது நோக்கியதாக மத்தேயு குறிப்பிடுகிறார் (2:3). இயேசுவை அழிப்பதை மட்டும் நாடாமல் (2:13) பெத்லகேமிலுள்ள இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்லுமாறு கட்டளையிட்டார் (2:16):இதைப்பற்றிய வேறு சான்றுகள் இல்லையாயினும் இச்செயல் ஏரோதுவினுடைய கொடூரத்தன்மைக்கு ஓர் அடையாளமாகும்.

2. ஏரோது அந்திப்பாஸ் (கி.மு. 21-கி.பி.39):- இவர் பெரிய ஏரோது, அவரது சமாரிய மனைவியாகிய மால்தேசு ஆகியோரின் மகன். இயேசுவின் காலத்தில் கலிலே

யாவிற்கும் பெரேயாவிற்கும் ஆளுநராக இருந்தார். ஏரோது என்னும் அரச சிறப்புப் பெயரைத் தனக்கு அளித்த பேரரசரைச் சிறப்பிப்பதற்கெனத் திபேரியாவை அவர் தலைநகராக நிறுவினார். புதிய ஏற்பாடு இப்பெயராலேயே அவரைக் குறிக்கிறது. தன் சகோதரன் இரண்டாம் ஏரோதின் (புதிய ஏற்பாட்டில் பிலிப்பு) மனைவி ஏரோதியாள்மீது இச்சை கொண்ட இவர், தனது முதல் மனைவியும் நபத்தேய அரசன் நான்காம் அரேத்தாவின் மகளுமானவளை விலக்கிவிட்டு, ஏரோதியாளைத் திருமணம் செய்து கொண்டார். இச்செயல் யூதரைப் புண்படுத்தியது. இதற்காக அந்திப்பாவை வெளிப்படையாகக் கண்டித்த திருமுழுக்கு யோவான் சிறையிலடைக்கப்பட்டார் (மத் 14:3-5). அதன் பின்னர் ஏரோதியாளின் மகன் சலோமிக்குப் பரிசாக யோவானின் தலையை அளிக்குமாறு ஏரோது சூழ்ச்சிக்குட்படுத்தப்பட்டார் (14;6-11)

இயேசுவைத் தொல்லைமிக்க திருமுழுக்கு யோவானின் வாரிசாக நோக்கிய அந்திப்பா (மத் 14:1-2) அவருக்கெதிராக ஒரு சூழ்ச்சியைக் கருதியிருக்கக்கூடும் (லூக் 13:31-33). பிற்காலத்தில் போந்தியு பிலாத்து, கலிலேயன் என்ற அளவில் தீர்ப்பிடுவதற்கென இயேசுவை அந்திப்பாவிடம் அனுப்பினாலும், ஆளுநர் தண்டனைக்கென அவரைப் பிலாத்துவிடமே திருப்பியனுப்பி விடுகிறார் (23:7-12).

கி.பி. 36-இல் தனது மகளை அவமானப் படுத்தியதற்குப் பதிலடியாக அரேத்தா அரசன் எல்லைப்புறச் சிக்கலில் அந்திப்பாவின் படைகளைத் தோற்கடித்தான். திபேரியு உரோமைப் படைகளை அனுப்பி வைத்தாலும் பேரரசரின் மரணத்திற்குப் பின்னர் அம்முயற்சி கைவிடப்பட்டது. அவரைத் தொடர்ந்து வந்த கலிகுலா பெரிய ஏரோதுவின் மற்றொரு மகனாகிய பிலிப்புவின் நிலப்பரப்பின்மீது (லூக் 3:1) ஏரோதியாவின் சகோதரன் முதலாம் அகிரிப்பாவை அரசனாக ஏற்படுத்தினான். பொறாமை கொண்ட ஏரோதியாள் உரோமையினின்று அதே போன்ற சலுகையை நாடுமாறு அந்திப்பாவைத் தூண்டினாள். ஆனால் அகிரிப்பாவோ ஏரோது பார்த்தியருடன் தொடர்பு கொண்டிருப்பதாக அவன்மீது குற்றஞ்சுமத்தினார். இதற்காக ஏரோதியாளுடன் சேர்ந்து அந்திப்பா காலில் உள்ள இலியோனிற்கு நாடு கடத்தப்பட்டார்.

3. முதலாம் ஏரோது அகிரிப்பா (கி.மு. 10-கி.பி. 44):- அரித்தோபுலின் மகன், பெரிய ஏரோது மற்றும் கஸ்மோனிய மரியம்னே ஆகியோரின் பேரன். ஏரோதியாளின் சகோதரன் மற்றும் ஏரோது அந்திப்பாவினுடைய சகோதரனின் மகன். தனது தந்தையின் படுகொலைக்குப் பிறகு உரோமைக்கு அனுப்பப்பட்ட அவன் பேரரசரின் அவையில் உயர்த்தப்பட்டு திபேரியுவின் மகன் துருசினுடைய நண்பனானான். இளைஞனாக வீண் விரையம் செய்து வாழ்ந்த இவர் வறுமையில் பாலஸ்தீனத்திற்கு ஓடிய பின்னர் தனது புரவலராகிய அந்திப்பாவின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டார். கி.பி. 36-இல் உரோமைக்குத் திரும்பியபின்னர் காயு கலிகுலாவின் நட்பைப் பெற்றாலும், பேரரசைப் பற்றிய விவேகமில்லாப் பழியுரையின் நிமித்தம் சிறைப்படுத்தப்பட்டார். திபேரியுவின் மரண்த்திற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னர் அவரது வாரிசாகிய கலிகுலா ஏரோது பிலிப்புவின் பகுதிமீது அரசனாக அகிரிப்பாவை அறிவித்தார். அந்திப்பாவினுடைய நாடு கடத்தலில் பங்கெடுத்து, கலிலேய மண்டலம்மீது அகிரிப்பா செல்வாக்குப் பெற்றார். எருசலேம் ஆலயத்தில் அரச சிலையை நிறுவுவதைத் தவிர்க்குமாறு கலிகுலாவைத் தூண்டுவதற்கென உரோமைக்குச் சென்ற போது, பேரரசர் படுகொலை செய்யப்பட்டார். கிளாதியுவின் வாரிசுரிமையை உறுதிப்படுத்த மூப்பர் குழுவிடம் அவர் மன்றாடினார். இதற்காகப் புதிய பேரரசர் அவருக்கு யூதேயாவையும் சமாரியாவையும் அளித்தார். கி.பி. 41-44-இல் அகிரிப்பா அரசனாக ஆண்ட நிலப்பரப்பானது பெரிய ஏரோதுவினுடைய நிலப்பரப்பிற்கு இணையாக இருந்தது.

மேலீடான அளவிலாவது, யூதச்சட்டத்திற்கு மரியாதை அளித்ததன் மூலமும், கிறிஸ்தவ திருச்சபையைத் துன்புறுத்தியதன் மூலமாகவும், முதலாம் அகிரிப்பா யூதமக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றார். செபதேயுவின் மகன் யக்கோபுவைக் கொலை செய்து (அ.ப.12:2; ஏரோது), பேதுருவைச் சிறைப்படுத்தினார் (12:3-5). அவரது குடிமக்கள் அவரைக் கடவுளாக மகிமைப்படுத்திய சிறிது காலத்திற்குள்ளாகவே கி.பி. 44-இல் அவர் திடீரென்று இறந்தார் (12:20-23).

4. இரண்டாம் அகிரிப்பா (கி.பி. 27-100):- முதலாம் அகிரிப்பாவின் மகன். உரோமை அரசவையில் வளர்ந்த அவர், தனது தந்தையினுடைய மரணத்தின்போது பதினேழு வயதுடையவராக இருந்ததால், அவருடைய ஆட்சிப்பகுதிகளை ஆள்வதற்கு மிகச் சிறியவர் என்றுகருதப்பட்டு, அப்பகுதிகள் ஆளுநர் பொறுப்பின்கீழ் விடப்பட்டன. கி.பி. 50-இல் அவர் அவருடைய மாமா ஏரோதிற்குப்பின் காலகியின் (இன்றைய லெபனோன்) அரசரானார். இப்பகுதிக்கு ஈடாக 53-இல் பேரரசர் கிளாதியு எரோது பிலிப்பினுடைய அகன்ற நிலப்பரப்பையும் (பத்தானேயா, திராகோனிது, கலானித்து) இலிசானியாவால் ஆளப்பட்டு வந்த அபிலெனே பகுதியையும் மாற்றிக்கொடுத்தார். 54-இல் தான் அரியணை ஏறிய சிறிது காலத்திற்குள் திபேரியு, தரிகெயா, யூலியா மற்றும் அபிலா உள்ளிட்ட பல நகரங்களை நீரோ இந்த அகிரிப்பாவுக்கு அளித்தார்.

தனது சகோதரி பெரினிக்காவுடன் தகாப் புணர்ச்சி உறவிற்காக யூதரிடையே அகிரிப்பாவுக்கு அவ்வளவு மரியாதையில்லை. குருத்துவத்தின்மீது ஆதிக்கத்தைச் செயல்படுத்தினார். இச்சமய அதிகாரத்தினால் பவுலின் காப்புரையைக் கேட்குமாறு, இவரைப் பெஸ்து கேட்டுக்கொண்டார் (அ.ப.25:13-26:32; அகிரிப்பா). எருசலேமிலுள்ள கசமோனியருடைய அரண்மனையை அகிரிப்பா விரிவுபடுத்தினார். செசரியாவில் கட்டடத் திட்டங்களையும் மேற்கொண்டார். 66-இல் முதல் யூதப்புரட்சி வெடித்தபோது, அவர் வெஸ்பாசியனுடைய பக்கம் சேர்ந்து கொண்டார். 70-இல் எருசலேம் மீதான வெற்றிக்குப்பின்னர் தீத்துவுடன் சேர்ந்து உரோமைக்குச் சென்று அங்கே குற்றவியல் நடுவராக நியமிக்கப்பட்டார். ஆட்சிபுரிந்த ஏரோதுகளில் கடைசியானவராகிய இவர் 100-ஆம் ஆண்டில் இறந்தார்.

ஏர் (ER - விழிப்புள்ள காவலாளி)

1. யூதாவுக்கும் கானானிய சூவா அல்லது பது-சூவா-வுக்கும் (காண்க. 1 நாள் 2:3) பிறந்த மூத்த புதல்வன். இவர் தாமாருக்கு மணமுடிக்கப்பட்டிருந்தும் குழந்தைப்பேறு இல்லாமல் இறந்துவிட்டார். ஏனென்றால் ஆண்டவர் முன்னிலையில் கொடியவனாய் இருந்ததால் ஆண்டவர் அவனைச் சாகடித்தார் (ஆதி 38:3-7; 1 நாள் 2:3).

2. ஏர் இலேக்காவின் தந்தையும் செலாகின் புதல்வர்களில் ஒருவரும் யூதாவின் பேரனுமாவார் (1 நாள் 4:21).

3. லூக்கா தரும் இயேசுவின் தலைமுறை அட்டவணையில் எல்மாதாமின் தந்தையாவார் (லூக் 3:28).

ஏலம் (HELEM - சுகம், நலம்)

ஆசேர் குலத்திலே தோன்றிய ஒரு குடும்பம் (1 நாள் 7:35). 7:32-இல் இவர் கோத்தாம் என்றழைக்கப்படுகிறார்.

ஏலா (ELAH - ஒருவகையான பெரிய மரம், ஓக் அல்லது தெரெபின்த் மரத்தைக் குறிக்கலாம்).

1. ஏசாவின் வழித்தோன்றல். ஏதோம் நாட்டுத் தலைவனாக இருக்கலாம் (ஆதி 36:41; 1 நாள் 1:52). இக்குறிப்பு ஓர் ஆளைக் குறித்துக்காட்டுகிறது என்பதைக் காட்டிலும் ஓர் இடத்தையே அதிகமாகக் குறித்துக்காட்டுகிறது. அக்காபா வளைகுடாவிலுள்ள எலாத்து என்ற ஏதோமியத் துறைமுகமாக இருக்கலாம்.

2. இஸ்ராயேல் நாட்டு அரசர் (கி.மு. 886-885) பாசா என்பவரின் மகன் (1 அர

16:6.8.13-14). யூதாவின் அரசர் ஆசாவோடு சமகாலத்தவர். இரு ஆண்டுகளுக்குக் குறைவாகவே ஆட்சி செய்தார். தன் தந்தை பாசாவின் ப்ாவ வழிகளைப் பின்பற்றினார் (16:2-4.10-11). குடிபோதையில் இருந்தபோது, அரச தேர்ப்படைத் தலைவனான சிமிரி என்பவனால் கொல்லப்பட்டார் (16:9-10). இதன் விளைவாக ஓமிரியின் அரச மரபு ஆட்சிக்கு வந்தது.

3. வட அரசனான இஸ்ராயேல் நாட்டின் கடைசி அரசனான, ஓசியாவின் தந்தை (2 அர 15:30; 17:1; 18:1.9).

4. காலேபின் இரண்டாம் மகனும் எப்புன்னேயின் பேரனும், கெனாசின் தந்தையுமாவர் (1 நாள் 4:15). ஆளைக் குறிப்பதைவிட ஓர் இடத்தையே அதிகமாகக் குறித்துக் காட்டுகின்றது.

5. அடிமைத் தனத்துக்குப் பின்னால் எருசலேமில் வாழ்ந்த பென்யாமின் குடும்பத்தைச் சேர்ந்த ஊசியின் மகன் (1 நாள் 9:8; இதற்கு இணையான நெக 11-இல் பெயர் காணப்படவில்லை).

ஏலாத்து (ELATH - வளர்த்தியான மரங்கள் அடர்ந்த சோலை)

ஏலாத்து என்பது அக்காபா என்ற வளைகுடாவின் முனையில் அமைந்திருக்கும் ஒரு நகரமாகும். அராபியாவிலிருந்து கப்பல் ஏறும் இடமாகும். இந்நகர் எசியோன்-கெபேருக்கு அடுத்து இருப்பதாகப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏலாத்து என்ற நகர் இருந்த இடத்தைத் தோண்டி ஆய்வு செய்த நெல்சன் க்ளுயெக் என்பவர் இவ்விடத்தில் இரு நகரங்கள் இருந்ததற்கான எந்தவிதமான தடயங்களையும் காணவில்லை. எனவே எசியோன்-கெபேர் என்ற பகுதி பிற்காலத்தில் ஏலாத்து என்ற பெயரில் அழைக்கப்பட்டது என்று முடிவு செய்தார். ஏலாத்து என்ற பெயர் ஏதோமியர் குலத்தில் தோன்றியதாக இருக்க வேண்டும். ஏனென்றால் ஆதி 36:41-இல் ஏலா என்பவர் ஏதோமின் தலைவர்களில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இஸ்ராயேலர் பாலைவனத்தில் அலைந்து திரிந்த போது, இங்குதான் வடக்கு நோக்கித் திரும்பி ஏதோமின்மேல் படையெடுத்தனர் (உப 2:8). உப்புப் பள்ளத்தாக்கில் ஏதோமியரை வென்றபோது தாவீது இந்நகரைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது (2 சாமு 8:13-14). பிற்காலத்தில் சாலமோன் இத்துறை முகத்தில் ஒரு கப்பற்படையைக் கட்டினார் (1 அர 9:26-27; 2 நாள் 8:17-18).

யோசபாத்தின் மகன் யோராமின் பதவிக் காலத்தில் நடந்த கிளர்ச்சியில் எசியோன்-கெபேர்-ஏலாத் என்ற நகரத்தை ஏதோமியர் திரும்பப் பெற்றனர் (2 அர 8:20-22). பின் அறுபது ஆண்டுகள் கழித்து யூதாவின் அரசன் ஊசியா இந்நகரை மீண்டும் கைப்பற்றி மீண்டும் கட்டியெழுப்பினான் (14:22). வலிமையில்லாத ஆகாசு காலம் வரை இது யூதாவின் ஆட்சிக்குள் இருந்தது. ஆகாசின் காலத்தில் இந்நகர் மீண்டும் ஏதோமியர் உடைமையாயிற்று (16:6; கி.மு. 735). இதற்குப்பின் இந்நகர் ஏதோமியர் கைகளில் இருந்த பொழுதும் அதனுடைய முக்கியத்துவம் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் நபத்தேயர்கள் இந்நகரைக் கைப்பற்றி, சற்றுக் கிழக்கே அயிலா என்ற புதிய நகரைக் கட்டியெழுப்பினர். அராபிய நகரமாகிய தற்காலத்தைய அக்காபா இவ்விடத்திற்கு அருகில் கட்டப்பட்டது.

ஏலா பள்ளத்தாக்கு (VALLEY OF ELAH - தெரேபின்த் பள்ளத்தாக்கு)

இப்பள்ளத்தாக்கின் மேற்பகுதியில் அசக்காவுக்கு அருகில் தங்கியிருந்த பெலிஸ்தியர்களோடு போரிடுமுன், சவுலும் இஸ்ராயேல் மக்களும் இப்பள்ளத்தாக்கின் கிழக்குப்பகுதியில் ஒருமலைமேல் தங்கியிருந்தனர். இப்போரில் தாவீது பெலிஸ்திய வீரன் கோலியாத்தைக் கொன்று இஸ்ராயேலுக்கு வெற்றி அளித்தார் (1 சாமு 17:2-3.19; 21:9). இது யூதாவின் மலைப்பகுதிகளுக்கு வாயிலாக அமைந்திருந்தது. இந்த வாயில் அசக்கா (தேல் எஸ்-சக்கரியே) கோட்டையால் பாது

காக்கப்பட்டது. இதற்கும் சோக்கோவுக்கும் இடையில் பெலிஸ்தியர் பாளையம் அமைத்திருந்தனர். இது செப்பேலாவிலுள்ள செழிப்பான பள்ளத்தாக்காகும். இது பெத்திலகேமுக்கு மேற்கு தென்மேற்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள வாடி எஸ்-சான்த்தோடு அடையாளம் காட்டப்படுகிறது.

ஏலாம் (ELAM - மேட்டு நிலம், இறைவன் நாடு) - ஆள்

1. சேமின் முதல் மகன் (ஆதி 10:22; 1 நாள் 1:17). எலாமிதியரின் குலப் பெயர் குல மூதாதையர்.

2. எருசலேமில் வாழ்ந்த பென்யாமின் குலத்தைச் சேர்ந்த சாசாக்கின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8:24-25; எஸ் 8:7).

3. தாவீது ஆட்சிக் காலத்து வாயிற் காவலராகவும் இருந்த லேவியர் (1 நாள் 26:3).

4. செருபாபேலோடு நாடு திரும்பிய ஒரு குடும்பத் தலைவர் (எஸ் 2:7; நெக 7:12). எஸ் 2:31 மற்றொரு ஏலாமின் குடும்பம் பற்றிப் பேசுகின்றது. ஆனால் இரண்டு குடும்பமும் 1254 என்ற ஒரே எண்ணிக்கையில் இருப்பதால் இரண்டு குடும்பமும் ஒரே குடும்பமாக இருக்கலாம். இக்குடும்பத்தைச் சேர்ந்த அத்தாலியாவின் மகன் எசாயாவும் எஸ்ராவுடன் திரும்பி வந்தார் (எஸ் 8:7). இக்குடும்பத்தைச் சேர்ந்த மற்றொருவர் செக்கனியா புறவினத்தாரைத் திருமணம் செய்தவர்களுக்கு எதிராகச் செயல்பட வேண்டும் என்று எஸ்ராவை தூண்டினார் (10:2). இக்குடும்பத்தின் 6 பேர் புறவின மனைவியரை ஒதுக்கிவிட்டனர் (10:26). எஸ்ராவுடன் செய்த உடன்படிக்கையில் ஏலாமும் கையொப்பமிட்டதாகச் சொல்லப்படுகிறது (நெக 10:14).

5. நாடுகடத்தப்பட்டதிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிய ஒரு குடும்பத்தின் தலைவர். இதில் அநேகர் இருந்தனர் (எஸ் 2:31; நெக 7:34). இதில் 1254 பேர் இருந்தாலும் இவர் ''மற்றொரு ஏலாம்'' என்று குறிக்கப்படுகிறார். 4-இல் வருபவரிடமிருந்து வேறுபடுத்தப்படுகிறார்.

6. புதிப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு குடும்பத் தலைவர் (நெக 10:14).

7. நெகமியாவின் காலத்தில் எருசலேம் மதிலை அர்ப்பணம் செய்ததில் பங்கு பெற்ற ஒரு குரு (நெக 12:42).

ஏலாம் (ELAM) - நாடு

குசிஸ்தான் சமவெளியையும், அருகிலுள்ள சக்ரோ மலைகளையும் உள்ளடக்கிய தென்மேற்கு ஈரானிலுள்ள ஒரு நாடு. தனது வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் இந்நாடானது வடகிழக்கிலும், வடமேற்கிலும் உள்ள பகுதியையும் கொண்டிருந்தது. ஏலாம் நாடு, இயற்கையான வியாபார வழிகள், மற்றும் வளமான மரம் மற்றும் உலோக மூலப்பொருட்களால் வணிகமுறையில் வலிமைப்படுத்தப்பட்டிருந்தாலும் பல்வகைப்பட்ட திணை நிலமானது அரசியல் ஒன்றிப்பினை இடையூறுக்குள்ளாக்குகிறது. இவ்வாறு இது நகர அரசுகளைக் கொண்ட தளர்வான கூட்டமைப்பாகப் பொதுவாகச் செயல்பட்டது.

1. வரலாறு:-

ஏலாமின் நகரமயமாக்கலானது கி.மு. நான்காயிரம் ஆண்டின் பிற்பகுதியிலேயே நிகழ்ந்திருக்கிறது. மூன்றாயிரம் ஆண்டின் பெரும்பகுதி முழுவதும் கீழ் மெசபொத்தாமியாவுடனான கலாச்சாரத் தொடர்புகள் உயர்ந்த நிலையில் இருந்தன. இக்காலமானது ஏலாமியருக்கும் அவர்களது சுமேரிய அயலாருக்குமிடையே அடிக்கடி சண்டைகளைக் கண்டது. 2700-ஆம் ஆண்டு சுமேரிய அரசராகிய கீசு ஏலாம் மீது படையெடுத்துக் கொள்ளையடித்ததாகக்கூறப்படுகிறது. 2500-இல் தொடக்ககாலப் பாபிலோனிய அரசின் மேல் ஏலாம் படை எடுத்தது. கீசின் என்னாதும் என்பவர் ஏலாமை அடக்கி 2400-இல் சூசாவிலுள்ள அதனுடைய தலைநகரை

அழித்தார். அக்காதின் சார்கோனுக்குக் கீழ்ப்படுவதற்கு முன்னர் (2300) ஏலாம் தன்னுடைய சுதந்தரத்தை மீண்டும் உறுதிப்படுத்தியது. அவருக்குப் பின்வந்த நரம்-சின்-அவான் என்னும் ஏலாமிய அரசுடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தினாலும், இருவருமே 2100-இல் ஏற்பட்ட குசியன் படையெடுப்பில் வீழ்ச்சியுற்றனர். ஏலாமானது இலகாசு மற்றும் ஊரினுடைய மூன்றாம் அரசுக்கு உட்பட்டதாக இருந்தது.

ஊர் அரசினுடைய வீழ்ச்சியுடன் சிமாசு அரசைத் தலைமையாகக் கொண்ட ஏலாமியக் கூட்டணியானது 2030-இல் ஊரை அழித்து அதனுடைய அரசன் இப்பி-சினை அன்சானிற்கு நாடு கடத்தியது. அதனுடைய இசிபி-இர்ராவினால் ஊரிலிருந்து வெகு விரைவிலேயே வெளியேற்றப்பட்டாலும் ஏலாமியக் கூட்டமைப்பின் ஆளுநர்கள் லார்சாவின் அரியணையில் ஏலாமிய ஆட்சியாளர்களை அமர்த்துமளவிற்குப் (1800-இல் வரத்-சின், ரிம்-சின்) பாபிலோனிய அரசியலில் தலையிடுவதற்குப் போதிய வல்லமையைக் கொண்டிருந்தனர். ஏலாமிய தூதர்கள் பற்றிய சான்றுகள் சீரியாவிலும் பாலஸ்தீனத்திலும் காணப்படுகின்றன. அவர்களது கூலிப்படையினர் மெசபொத்தாமியப் படைகளில் சாதாரணமாக இருந்தனர். கெதர்லா கோமோருடைய செயல்கள் (ஆதி 14:1-17) இக்காலத்திற்குரியவையாக இருக்கலாம். ஏலாமிய விரிவை வலிமைமிக்க கமுராபி (1792-1750) கட்டுப்படுத்தினார். காசிதிய முற்றுகையாளர்களுக்கு 1595-இல் வீழ்ச்சியுறும் வரை, ஏலாமானது பாபிலோனிய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. 1330-இல் காசிதிய இரண்டாம் குரிகல்சு முற்றுகையிடப்பட்டபோது, பாபிலோனிய மாகாணமாக ஒன்று சேர்க்கப்பட்ட வரையில், ஏலாமானது வெளிப்படையாகவே எண்ணற்ற நகர அரசுகளாகக் கலைக்கப்பட்டிருந்தாலும், அக்கால இருண்டகாலத்தைப்பற்றிச் சிறிதளவே அறியப்பட்டுள்ளது. உம்பன்-நுமேனாவின்கீழ் (1285-1266) ஏலாமானது ஒன்றுபட்ட நாடாகப் புதுப்பிக்கப்பட்டது. சுத்ருக்-நகுந்தே பாபிலோனியாவை முற்றுகையிட்டுக் கமுராபியின் சட்டநெறிகள் பொறிக்கப்பட்ட கல்தூணைக் கைப்பற்றினார். திகிரிசு நதிக்குக் கிழக்கிலுள்ள மெசபொத்தாமியாவின் பெரும்பகுதி முழுவதும் ஏலாமிய ஆதிக்கத்தை சிலாக்-இன்சுசிநக் பரப்பினார். 1130-இல் நெபுக்கதுனேசார் சூசாவைத் தரைமட்டமாக்கித் தனது பாபிலோனிய அரசுடன் ஏலாமைச் சேர்த்தவுடன், அதன் சுதந்தரமானது திடீரென முடிவுக்கு வந்தது. ஏலாமினுடைய அடுத்த மூன்று நூற்றாண்டுகள் தெளிவற்ற நிலையில் உள்ளன.

இதற்குப் பின் வந்த ஏலாமிய வரலாறு, மேதியர், பாரசீகர் மற்றும் பல்வேறு சுதந்தர இனத்தவரின் தாக்குதலால் பாதிக்கப்பட்டது. அசீரியாவிற்கு எதிராகப் பாபிலோனியாவுடன் இணைந்ததன் மூலம், நாடானது பெருமைப்படத்தக்க அளவில் அரசியல் முக்கியத்துவம் பெற்றது. இரண்டாம் மெரோதாக்கு பலதானுக்கான இராணுவ உதவி, பாபிலோனியருக்குப் புகலிடம், மற்றும் பிறவடிவிலான பகைச்செயல்கள் போன்றவற்றிற்கு இரண்டாம் சார்கோன், சனகெரிபு மற்றும் அசூர்பானிப்பால் ஆகியோர் பதிலடிகொடுத்தனர். அசூர்பானிப்பால் இறுதியாக சூசாவை அழித்து ஏலாமின் கடைசி அரசனாகிய உம்பன்கல்தாசை (640) வெளியே விரட்டினார். பல முக்கிய குடிமக்கள் அசீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டுப் பின்பு சமாரியாவில் குடியமர்த்தப்பட்டனர் (எஸ் 4:9).

அன்சானைச் சூழ்ந்துள்ள பகுதியானது, 680-இல் பாரசீகர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது. 612-இல் நினிவேயின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, ஏலாமின் மற்றப் பகுதிகள் மேதியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தன (586-இல் பாபிலோன்மீதான மேதிய-ஏலாமிய தாக்குதல்; ஏச 22:2). இது பிற்பாடு இரண்டாம் சைரசிற்குக் கீழ்ப்பட்ட பாரசீகத்திற்கு மாற்றப்பட்டு (550-ஆம் ஆண்டு; எரே 49:35-37), பாரசீகப் பேரரசின் மூன்றாவது மாகாணமாக ஆயிற்று. தனது ஆட்சியின் தொடக்கத்திலேயே ஒரு கிளர்ச்சியை அடக்கியதன்

மூலம் முதலாம் தாரியஸ் சூசாவில் தனது உறைவிடத்தை ஏற்படுத்தினார் (எஸ்த 1:1-2). கிரேக்கக் காலங்களில் இப்பகுதியானது எலிமாயிசின் ஓரளவு தன்னாட்சி உரிமையுடைய பார்த்திய அரசாக இருந்து வந்தது (1 மக் 6:1).

2. மரபுரிமை:-

தொடக்கக் காலம் முதல் ஏலாமானது கீழ்மெசபொத்தாமியாவின் நகரங்களுடன் கலாச்சார முறையில் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. இது சேமினுடைய சந்ததியினருடன் கொண்ட இணைப்பை விளக்கலாம் (ஆதி 10:22). அநேகமாய்ப் பண்டைய சுமேரிய எழுத்து முறையினால் தூண்டப்பட்ட நிலையில், ஏலாமின் ஓவிய வடிவ எழுத்து முறையானது, அக்காதின் சார்கோனின் ஆட்சியைத் தொடர்ந்து, அக்காதிய ஆப்பு வடிவ எழுத்து முறையால் மாற்றியமைக்கப்பட்டது. ஏலாமைச் சேர்ந்த இலக்கியங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உயர்வான கலை நுணுக்கச் செயல்பாடுகள், பதின்மூன்றாம் நூற்றாண்டுக் காலத்திய வெண்கல உருவங்களில் கிடைத்துள்ளன. அகழ்வாராய்ச்சிகள் குறிப்பிட்ட அளவிலேயே இருப்பினும் ஏலாமிய கட்டடக் கலையானது, குறிப்பாக அதனுடைய கோயில்கள் மற்றும் கோயில் கோபுரங்கள், மெசபொத்தாமியாவினுடையதற்கு ஒத்ததாகத் தோன்றுகின்றன

சமய இதிகாசங்கள் அல்லது சடங்கு வாசகங்கள் கிடைக்காவிடினும், எழுத்துப் பொறிப்புகளும், நீள் உருளை முத்திரைகளும் ஏலாமிய சமயம் பற்றிய அடிப்படைச் செய்திகளை அளிக்கின்றன. உம்பன் தலைமைக் கடவுளாக இருந்தாலும் அவருடைய துணைவராகிய கிரிரிசா (சூசாவில் பினிக்கிர் என அழைக்கப்படும்) தெய்வங்களின் குழுவினருக்குத் தலைவராக இருந்தார். சூரியக் கடவுளாகிய நகுந்தே மற்றும் எண்ணற்ற உள்நாட்டுப்புரவலர்கள் ஆகியோர் மற்ற முக்கியக் கடவுளர் ஆவர். இவர்களில் மிகவும் புகழ் பெற்றவர் இன்சூசிநக் (சூசாவின் ஆண்டவர்) ஆவார். அரச கல்லறைகளிலிருந்த அடக்கஞ்சார்ந்த கொடைகள் மறுவாழ்வு பற்றிய நம்பிக்கையை எடுத்துக்காட்டுகின்றன.

மெசபொத்தாமியாவில் முதன்மையான அதிகாரப் போராட்டங்களில் சிக்கிய நிலையில், இஸ்ராயேலின் வரலாற்றில் ஏலாமியர் முக்கிய பங்கு எதையும் வகிக்கவில்லை. இஸ்ராயேல் மக்களில் ஒரு பகுதியினர் ஏலாமுக்கு நாடு கடத்தப்பட்டனர் (ஏச 11:11). புதிய ஏற்பாடு காலங்களிலும் யூதக் குடியேற்றங்கள் அங்குத் தொடர்ந்தன (அ.ப. 2:9). திறமைமிக்க தங்களுடைய வில்லாளர்களுக்காகப் புகழ்பெற்றது ஏலாம் (ஏச 22:6; எரே 25:25). மற்ற நாடுகளைக் கொடூரமாக இரக்கமற்ற முறையில் ஏலாமியர் நடத்தினர் (எச 32:24-25). ஏலாமினுடைய நற்பேறுகள் மற்றும் தண்டனை, மீட்சி பற்றிய இறைவனுடைய இறைத் திட்டத்திற்கு உட்பட்டவையாகக் காட்டப்படுகின்றன (எரே 49:38-39).

ஏலி (Eli - யாவே உயர்த்தப்பட்டார்)

சீலோவிலுள்ள, காலத்தால் முந்திய, இஸ்ராயேலின் புனித இடத்தின் பெரிய குருவும், இறுதியான சிறிய நடுவர்களில் ஒருவருமாவார். சிறிய நடுவராக 40 ஆண்டுகள் பணிபுரிந்தார் (1 சாமு 4:18; கி.மு. 1119-1079). இது இவரைச் சிம்சனோடு சமகாலத்தவராக் கலாம். பழைய ஏற்பாட்டில் ஏலியின் மூதாதையர்கள் கொடுக்கப்படாவிட்டாலும் இவர் ஆரோனின் கடைசிமகன் இத்தாமாரின் வழித்தோன்றலாக இருக்கலாம் (காண்க. 1 நாள் 24:3). மற்றொரு பாரம்பரியம் இவரை எலயாசரோடு தொடர்புபடுத்துகிறது (காண்க. யாத் 6:23,25). மூலத்தில் ஏலியின் குடும்பம் சீலோவிலுள்ள தொன்மையான குருத்துவத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

இந்த முதியகுரு ஆலயக் கதவு நிலைக்கு அருகில் அமர்ந்து, ஒரு மகவை வேண்டி அன்னா செய்த மன்றாட்டுக்குச் சாட்சியாக முதலில் தோன்றுகிறார் (1 சாமு 1:9-18). பிறகு குழந்தையான சாமுவேல் ஆண்டவ

ரது பணியில் அர்ப்பணிக்கப்பட, ஏலியிடம் கொண்டுவரப்படுகிறார் (1:24-28; காண்க.2: 19-20). தனது புதல்வர்களான கொபினியும் பினகாசும் குருத்துவத் தொழிலைத் தவறாகப் பயன்படுத்துதலைக் கட்டுப்படுத்த முடியாதவராய் (2:12-17.22-25; 4:1) ஏலி தனது குடும்பத்தின் பயங்கர, கொடிய முடிவைப் பற்றி ஒரு பெயர் தெரியாத இறைவாக்கினர் வழியாக எச்சரிக்கப்படுகிறார் (2:27-36). பாதிக் குருடான குரு, தனது முடிவை உறுதிப்படுத்தும் இறைவெளிப்பாட்டைப் பெற சாமுவேலுக்கு உதவிசெய்கிறார் (3:1-18). இறைவாக்கின் நிறைவேறுதலாக, ஏலியின் இரு புதல்வர்களும் எபனேசரில் பெலிஸ்தியர் இஸ்ராயேலரைத் தோற்கடித்த போது மரித்தனர் (9:11.17). ஆனால் அதே போரில் உடன்படிக்கைப் பேழை கைப்பற்றப்பட்டது பற்றிய செய்திதான், இந்த ஆற்றலற்ற, ஆனால் பக்திமிக்க, குருவின் மரணத்திற்குக் காரணமாயிற்று (4:18; காண். 4:13).

1 சாமு 2:31-33-இல் முன்னறிவிக்கப்பட்ட, ஏலியின் வழித்தோன்றல்களின் முடிவு நோபில் ஏலியின் குடும்பக் குருக்களைச் சவுல் கொன்று அழித்ததில் நிறைவேறுகிறது (22:19). இந்தப் படுகொலையிலிருந்து தப்பிய ஒரே ஆளான அபியத்தார் (22:20) பிற்காலத்தில் சாதோக்கோடுசேர்ந்து தாவீதின் பெரிய குருவானார் (2 சாமு 20:15). இவர் அதோனியாவுக்கு அளித்த ஆதரவுக்காக, சாலமோன் இவரைப் பதவி நீக்கம் செய்தார் (1 அர 2:27; காண்க. 1:7).

ஏலி (HELI)

இயேசுவின் தலைமுறை பற்றிய லூக்காவின் பட்டியலில் வருபவர். யோசேப்புவின் தந்தை (லூக் 3:23).

ஏலி, ஏலி, லாம சபக்தானி (ELI, ELI, LAMA SABACHTHANI - என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்?)

இது எபிரேய வடிவத்தின் கிரேக்க அசை ஒலி பெயர்ப்பாகும். சிலுவையில் இயேசு எழுப்பிய கூக்குரலாகும். இயேசு இறக்கு முன் சிலுவையில் கூறிய நான்காம் வாக்காகும் (மத் 27:46). மாற் 15:34-இல் வரும் எலோயி அரமேயிக் வடிவத்தைப் பிரதிபலிக்கிறது. வாசகங்களில் பலத்த வேறுபாடுகள் உண்டு. மூன்று மணிநேர இருட்டிற்குப் பிறகு, மீட்பர் ''என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று கூறினார். இதில் சங்கீத ஆசிரியர் ஆழ்ந்த துன்பத்தை எதிரொலிக்கிறார் (சங் 22:1). விளக்கவுரையாளர்கள் சிலர், பரிகாரத்தை வற்புறுத்தி இறைவனுக்கு மனித பாவத்திற்காகச் செலுத்த வேண்டிய விலைகண்டு அச்சமுற்று, இயேசு இவ்வார்த்தைகளைக் கூறியதாக விளக்குவர். வேறுசிலர், அவரது சொற்கள் முழுச் சங்கீதத்தையும் நினைவுபடுத்துகிறது என்றும், இச்சங்கீதம் இறைவனைப் போற்றுவதோடு முடிகிறது என்றும், இது இயேசு தம் தந்தையிடம் கொண்ட விசுவாசத்தை இழந்துவிடவில்லை என்றும் விளக்குவர்.

''என் கடவுளே'' என்பதற்குரிய ஏலி என்ற எபிரேயச் சொல்லுக்கும் எலியாவுக்கும் உள்ள ஒற்றுமை, இயேசு எலியாவை அழைப்பதாகக் கூட்டத்தில் சிலர் கூறத்தூண்டியது. எலியா என்ற எபிரேய இறைவாக்கினர் இறக்காமல், விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்றும், அவர் ஆபத்திலும் துன்பத்திலும் இருப்பவர்களைப் பாதுகாப்பதாகவும் நம்பப்பட்டது.

இயேசு இயற்கையாகவே எபிரேய மொழியில் பேசியிருப்பாரா? அராமேய மொழியில் பேசியிருப்பாரா? எது அவருடைய சொந்தத் தாய்மொழி? என்ற கேள்விகளுக்குத் திட்டவட்டமான பதில்கள் இல்லை. அதுபற்றிப் பலவெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. விவிலியத்தின் வாசகங்கள் ''அராமேயம் அல்லது ஓர் எபிரேய-அரமேயிக் கலப்பு மொழி'' வடிவத்திற்கு ஆதரவு அளிக்கின்றன.

ஏலிம் (ELIM - பெரிய, வலிமையான மரம்)

இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்த பிறகு தங்கிய நான்காவது இடம். மேலும் நல்ல குடிதண்ணீரை அவர்கள் கண்ட முதல்

இடம். பன்னிரண்டு நீரூற்றுக்களும் எழுபது பனை மரங்களும் இருந்ததாகக் குறிப்பிடப் படுகிறது (யாத் 15:27; 16:1; எண் 33:9-10).

காய்கறித் தோட்டங்களும், பனை மரங்களும் அதிகமாக நீரும் காணப்படுகிற வாடி கருண்தேல் என்ற இடம்தான் ஏலிம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. சூயசிலிருந்து 100 கி.மீ. தொலைவில் இருக்கிறது இந்த இடம். சீனாய் மலையிலிருந்து எகிப்து செல்லும் பயணிகள் பொதுவாக இங்குத் தங்கிவிட்டுச் செல்வது வழக்கம். சீனாய் மலையை அரேபியாவில் குறிக்கும் ஆராய்ச்சியாளர் சிலர் அக்காபா வளைகுடாவில் ஏலாத்துக்கு அருகில் ஏலிம் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். மேலும் ஏலிம் என்ற பெயருக்குக் 'கடவுள்கள்' என்று தவறாகப் பொருள் கொடுத்து, அது பனைமரங்களுக்கும் நீரூற்றுக்களுக்கும் அருகில் சிலை வழிபாடு செய்யக்கூடிய இடத்தைக் குறிக்கலாம் என்றும் கூறுகிறார்கள்.

ஏலோத்து (ELOTH)

ஏலாத்தின் மறுபெயர். காண்க. ஏலாத்து.

ஏலோன் (ELON - ஒக் மரம் அல்லது தெரெபின்த் மரம்)

1. ஏசாவை மணந்த பாசமத்து (ஆதி 26:34) அல்லது ஆதா (36:2)வின் தந்தை. ஒரு கித்தியர்.

2. செபுலோனின் இரண்டாம் மகன் (ஆதி 46:14), ஏலோனியர்களில் குலமுதுபெரும் தந்தை (எண் 26:26).

3. பத்து ஆண்டுகள் இஸ்ராயேலுக்குச் சிறிய நடுவராக விளங்கியவர் செபுலோன் இனத்தைச் சேர்ந்தவர் (நீதி 12:11). இது அய்யலோன் என்ற ஊர்ப் பெயரின் காரணமான விளக்கமாக இருக்கலாம் (12:12). இரண்டு பெயர்களும் எபிரேயத்தில் ஒரே எழுத்துக்களில் எழுதப்படுகின்றன. அய்யலோனில் அவர் தங்கியிருந்து இறைவாக்கு அருளிய ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டுவதாகத் தெரிகிறது (4:5; 6:11; 9:6).

4. தாண் பகுதியில் அய்யலோனுக்கும் திமினாவுக்கும் இடையிலுள்ள ஓர் ஊர் (யோசு 19:43). இது பெயிட்-மக்சீர் அல்லது கிர்பெத் வாடி அலீன் மேற்கில், தெயிர் அபானுக்கும் அயின் செம்சுக்கும் இடையிலுள்ள அலெயினாக இருக்கலாம். அறிஞர் சிலர் இதுவும் ஏலோன்-பேத்து-கனானும் ஒன்றே என்று கருதுகின்றனர் (1 அர 4:9).

ஏலோனியர் (ELONITE)

ஏலோன்-(2)இன் சந்ததியினர் (எண் 26:26).

ஏலோன்-பேத்து-கானான் (ELON-BETH-HANAN - ஏலோன் வீட்டு ஒக்)

சாலமோனின் அரசியலமைப்பில் இரண்டாவது மாவட்டமான தாணில் உள்ள ஒரு கிராமம். இது அரச மாளிகைக்கு உணவுப் பொருட்கள் அனுப்ப வேண்டும் (1 அர 4:9). இது ஏலோன் 'யோசு 19:43) ஆக இருக்கலாம். பின்பகுதி பேத்து-கனான் இந்தக் கிராமத்தை அருகிலுள்ள அய்யலோனிலிருந்து வேறுபடுத்துகிறது. ஒருவேளை பெயிட் மக்சீர் அல்லது தேல் கோப்பாவுக்கு மேற்கிலும் யாலோ (அய்யலோன்)க்குத் தென்மேற்கிலும் உள்ள இக்கால அலேயினாக இருக்கலாம்.

ஏல். (EL - இறைவன்)

செமித்திய மொழியில் 'கடவுளைக்' குறிக்கும் அடிப்படைச் சொல்லாகும். ஆற்றல் அல்லது ஈடு இணையற்ற என்ற அடிப்படையின் பொருளில் இவ்வார்த்தை எழுதப்பட்டிருக்கலாம். பழங்காலத்தில் உள்ள மூலங்களில் இயற்கைக்கு அப்பாற்பட்ட எச்சக்தியையும் குறிக்கலாம். ஆகவே உயர்ந்த கடவுளான 'ஏல்' கடவுளுக்குச் சாற்றிக் கூறப்பட்டது. இக்கடவுளே எல்லாக் கடவுள்களுக்கும் தந்தையான கடவுள்; விண்ணகத்தில் உள்ள கடவுள்; காற்றுக்கும் புயலுக்கும் உரிய கடவுள்.

ஏல் எலியோன் (EL-ELYON - மிக உன்னதரான இறைவன்)

இறைவனின் பெயர்களில் ஒன்று. மிக உன்னதமானவர், மிக உயர்த்தப்பட்டவர்

என்று பொருள்படும். இஸ்ராயேலர்களுக்கு முன் எருசலேமில் வழிபடப்பட்ட கானானிய படைப்புக் கடவுளிடமிருந்து இப்பெயர் வந்ததாகக் கருதப்படும் (காண். ஆதி 14:18.20). இது யாவேக்குரிய இடுபெயராக (அல்லது அடைமொழியாக) மாற்றிப் பயன்படுத்தப்பட்டது (14:22; சங் 7:17; 91:9). காலத்தால் முந்திய விவிலியப் பாடல்களிலும் (உம். எண் 24:16; உப 32:8) பிற்காலத்தைச் சேர்ந்த பழைமைப்படுத்தும் பாடல்களிலும் (உம். சங் 78:35; தானி 7:18.22.25.27) காணப்படுகிறது.

ஏல்-எலோகே-இஸ்ராயேல் (EL-ELOHE-I-SRAEL)

இறைவன் இஸ்ராயேலின் இறைவன் (ஆதி 33:20) அல்லது இஸ்ராயேலின் இறைவன் எல்லாம் வல்லவர் என்று பொருள்படும்.

கானானுக்குப் பாதுகாப்போடு திரும்பிய பின் யாக்கோபு செக்கேம் அருகில் கட்டியெழுப்பிய பீடத்தின் பெயராகும் (ஆதி 33:20). பெனியேலில் இறைவனை நேரில் கண்ட அனுபவத்தோடு (32:24-32) இப்பீடத்தை யாக்கோபு தொடர்புபடுத்தினார். அவருக்கு இஸ்ராயேல் என்ற புதுப்பெயர் அளித்த இறைவனின் வல்லமையில் கொண்ட விசுவாசத்தை எடுத்துரைக்கக் கட்டப்பட்ட பீடமாகும்.

ஏல் சதாய் (EL-SHADDAI - எல்லாம் வல்ல இறைவன்)

இப்பெயர் எல்லாம் வல்ல இறைவன் என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இப்பெயருக்கு (அண்ட) மலையின் இறைவன் என்றும் பொருள் கொடுக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். குருக்கள் பாரம்பரியப்படி ''ஏல்சதாய்'' குல தெய்வமாக வணங்கப்பட்டு வந்தது. ஏல் என்ற வார்த்தை பொதுவாக இறைவனைக் குறிக்கிறது. அது இங்கு ஒரு தனிப்பட்ட செயலின் இறைவனோடு இணைக்கப்பட்டுச் சொல்லப்படுகிறது. ஆபிரகாமின் இறைவன் (ஆதி 31:53) என்று மரபு சொல்லுகிறது. ஈசாக்கின் உறவினன் (ஆதி 31:42) சேனைகளின் ஆண்டவர், இஸ்ராயேலின் வல்லவர் (ஏச 1:24) என்றும் சொல்லப்படுகிறது.

இப்பெயரைத் ''தந்தையர்களின் இறைவன்'' என்று குலமுதியவர்கள் புரிந்து கொண்டனர். இது பிற்காலத்தில் ''யாவே'' என்ற பெயரோடு ஒன்றாக்கப்பட்டது (யாத். 6:2-3). ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து கொண்டபோது, ஆபிரகாமுக்கும் (ஆதி 17:1) பிற்பாடு பெத்தேலில் யாக்கோபுக்கும் (35:11; 48:3) இப்பெயரில்தான் தம்மை இறைவன் வெளிப்படுத்தினார். ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் ஆசீர்களிலும் இப்பெயர் வருகிறது (28:3; 43:14). தொடக்க கால எபிரேயப் பாடல்களிலும் (ஆதி 49:25; எண் 24:4.16; காண்க. சங் 68:14) இது காணப்படுகிறது. இவை 11-ஆம் நூற்றாண்டு நடுவர் காலத்தைச் சேர்ந்தவை (காண்க. ரூத் 1:20-21). அரசாட்சிக் காலத்தில் இப்பெயர் அவ்வளவு அதிகமாகப் பயன்படவில்லை. பின் 6-ஆம் நூற்றாண்டில்தான் சிறிது பயன்படுகிறது (உ.ம். ஏச 13:6; யோவே 1:15).

இறைவனைக் குல தெய்வமாகவும், குடும்பத் தலைவராகவுமே அவர்கள் பார்த்தனர். இறைவன் தமது சக்தியை இயற்கையில் வெளிப்படுத்தாமல், குடும்பத்தைக் காப்பதற்கும், சமூக வாழ்க்கையை உயர்த்துவதற்கும், புனித வாழ்வுக்கு வழிநடத்துவதற்குமே அதை வெளிப்படுத்தினார். இதைத்தான் யாத்திராகமத்தில் காண்கிறோம்.

குலதெய்வ வழிபாட்டிற்குப்பின்பு சதாய் என்பதற்கு 'யாவே' என்று பொருள் கொண்டனர் (ரூத் 1:20-21; சங் 68:14; எச 1:24; 10:5). இச்சொல் பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம், யாத்திராகமத்தைத் தவிர 35 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் 29 முறை யோபு புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்பும் புதிய ஏற்பாட்டில் கூறுவதுபோல, சதாய் என்பது கடவுள், எல்லாம் வல்லவர், மாட்சிமையில் உள்ளவர் எனப் பொருள்படும்.

சதாய் என்ற பெயர் அம்மிசதாய் (சதாய் என் உறவினர், எண் 1:12). சூரிசதாய் (சதாய் என் பாறை, 1:6) என்ற ஆட்களின் பெயரில் இறைக்கூறாகப் பயன்படுகிறது.

ஏல்சபாது (ELZABAD - இறைவன் கொடுத்தார்)

1. சிக்கிலாகில் தாவீதோடு சேர்ந்து கொண்ட காது இனத்தைச் சேர்ந்த வீரர்களில் ஒன்பதாவது வருபவர். ஆற்றல் மிக்க, திறமைமிக்க பேரர் வீரர். ஈட்டியும் கேடயமும் தாங்குபவர். மான் போல ஓடக் கூடியவர் (1 நாள் 12:8.12).

2. தாவீது காலத்தில் கோராகைச் சேர்ந்த வாயிற் காவலர். செமாயாவின் புதல்வர் (1 நாள் 26:7).

ஏல் சபான் (ELZAPHAN)

எலிசாபான் என்ற பெயரின் சுருக்கம். ஊசியேலின் புதல்வர்களில் ஒருவர் (யாத் 6:22).

காண்க. எலிசாபான்-(1)

ஏல்தெக்கே (ELTEKEH - சந்திக்கும் இடம், இறையச்சம்)

எக்கரோனுக்கும் கிபத்தோனுக்கும் இடையில் (யோசு 19:44) கெகாத்திய லேவியர்களுக்கு (21:23) ஒதுக்கப்பட்ட தாணைச் சேர்ந்த நகரமாகும். பின்பு இது சிம்சோனின் மனைவியின் ஊரான திமினாவோடு பெலிஸ்தியரால் கைப்பற்றப்பட்டது. கி.மு. 701-இல் எகிப்திய-எத்தியோப்பியப் படைக்கும் சனகெரிபின் படைக்கும் எல்தெக்கே என்ற இடத்தில் நடந்த கடும் போரில், சனகெரிபு வெற்றி அடைந்து, எல்தெக்கேயையும் திமினாவையும் முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். எக்கரோனில் கிளர்ச்சி செய்தவர்களைக் கொன்றார். யூதாவின் மீது படையெடுத்தார்.

கிர்பெத்து ஏல்-முக்கென்னாவை எக்கரோன் என்று அடையாளம் காட்டினால் எக்கரோனுக்கு வடக்கிலும் திமினாவுக்கு மேற்கிலும் இருந்த ஏல்தெக்கேயை அடையாளம் காட்டுவது உறுதியாக இல்லை. தேல் எஸ்-சாலேப் இவ்விடமாக இருந்திருக்கலாம்.

ஏல்தெக்கோன் (ELTEKON - இறைவனால் நிறுவப்பட்டது)

யூதா நாட்டிலுள்ள பேத்சூர் மாவட்டத்தில் ஒரு மலைப்பகுதியில் ஏல்தெக்கோன் என்ற ஊர் அமைந்துள்ளது (யோசு 15:59). பெத்லகேமிற்கு மேற்கில் 6.5 கி.மீ. தொலைவிலும் கவுசானுக்குத் தெற்கில் 3 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள கிர்பெத் எத்-தேயிர் என்ற ஊரோடு இது அடையாளம் காட்டப்படுகிறது.

ஏல்தோலாது (ELTOLAD - இறைவனே நீர் பெற்றெடுத்தீர், இறைவனின் உறவினன்)

யூதாவிற்குத் தெற்கில் சிமியோனுக்குத் திருவுளச் சீட்டின் மூலம் கிடைத்த ஒரு நகரம் (யோசு 15:30; 19:4) 1 நாள் 4:29-இல் இது தோலாது என்றழைக்கப்படுகிறது. இந்நகரம் யூதாவின் தென் பகுதியில் ஏசேம், கோர்மா ஆகிய நகரங்களுக்கு அருகில் உள்ளது. இது பெண்கள் பிள்ளைகள் வேண்டிக் கூடுகின்ற ஒரு திருத்தலமாகும் என்று பெயர் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அந்த இடம் இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. பேயோர்-செபாவுக்குத் தென்கிழக்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் எர்கா சக்ரவாக இருக்கலாம்.

காண்க: தோலாது.

ஏல்-பாரான் (EL-PARAN பாரான் மரம்)

பாரான் சமவெளி. இந்தச் சமவெளியில் தான் பதினான்காம் நூற்றாண்டில் கெதர்லாகோமேர் என்பவர் தன்னைச் சேர்ந்த அரசர்களுடன் வந்து சேயிர் என்ற மலைகளில் வாழ்ந்து வந்த கோரியர்களை முறியடித்தார். அவரும் அவர் கூட்டணியும் பாலஸ்தீனத்தில் அடைந்த தெற்குக்கோடி எல்லையாகும். இந்தப் படையெடுப்பில்தான் லோத்து கைதியாக்கப்பட்டார்.

பாரான் பாலைவனத்தின் ஓரத்தில் அக்காப வளைகுடா முனைக்கு அருகில் அதற்கு இடம் குறிக்க வேண்டும். இது ஏலாத்து-ஏசியோன் கெபேரின் முந்திய காலப் பெயராக இருக்கலாம்.

ஏல்பாலேத்து (ELPELET)

எலிப்பெலத்தின் மற்றொரு பெயர். எருசலேமில், பெயர் தெரியாத தாய்க்குப் பிறந்த தாவீதின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 14:5). 1 நாள் 3:6-இல் இவருக்கு எலிப்பெலத்து என்று மற்றொரு பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது எழுத்தர்களின் பிழையாக இருக்கக்கூடும் என்று அறிஞர் சிலர் கருதினாலும், இப்பெயர் 2 சாமு 5:14-16-இல் வரும் மரபுமுறைக் கொடியை விரிவாக்க வேண்டுமென்றே எடுக்கப்பட்ட முயற்சியின் விளைவாக இருக்கலாம்.

காண்க. எலிப்பெலத்து.

ஏல்பால் (ELPAAL - இறைவன் செய்தார் அல்லது படைத்தார்)

பென்யாமின் இனத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத் தலைவர் (1 நாள் 8:11-12.18) கூசிமின் வழியாகச் சாரயிமின் மகனாவார்.

ஏல்-பெத்தேல் (EL-BETHEL பெத்தேலின் இறைவன்)

யாக்கோபு பெத்தேலில் கட்டியெழுப்பிய பீடத்திற்கு அளித்த பெயராகும் (ஆதி 35:7). ஒருவேளை ''பெத்தேலின் இறைவன்'' என்று பொருள்படலாம். அதாவது அவர் தம் சகோதரன் ஏசாவிடமிருந்து தப்பியோடிய போது அவருக்குத் தோன்றிய யாவே ஆவார் (28:10-22). ஒருவேளை இது இறைவனது பெயராக இருக்கலாம்.

ஏல்பெரீத்து (EL-BERITH - உடன்படிக்கையின் இறைவன்)

செக்கேமில் வழிபடப்பட்ட ஒரு கானானியத் தெய்வம் (நீத 9:46).

ஏவா (EVE உயிர் அளிக்கும்)

முதல் பெண். ஆதாமின் மனைவி. மனுக்குலத்தின் தாயாகக் கருதப்படுவாள்.

1. சொல் விளக்கம்:- இப்பெயரின் தோற்றம் சர்ச்சைக்குரியது. ஆதி 3:20-இச்சொல்லை 'வாழ்தல்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து வந்ததாகத் தொடர்புபடுத்துகிறது. இதன்படி, ஏவா காயின், ஆபேல், சேத்து என்ற மூன்று பேரைப் பெற்றெடுத்தாள். ஆகவே வாழ்வோரின் தாய் என்றழைக்கப்பட்டாள். ராபிகள் பாரம்பரியம் இப்பெயரை அரமேயிக் 'பாம்பு' என்ற சொல்லோடு தொடர்புபடுத்துகிறது. இக்கருத்து இன்றைய நவீன காலத்தில் அறிவியல் சொல்லிலக்கணமாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொது ஆதரவு பெறவில்லை.

2. ஆதி ஆகமம் விவரிப்பதிலிருந்து:- ஆதி 3:20-இல் வரும் குறிப்பு அதனுடைய இப்பொழுதைய இடத்தில் சரியான பொருத்தம் இல்லை. கதையின் திருத்தப்பட்ட பல விதமான மூலப்பாடத்திலிருந்து இந்த வாக்கியம் தோன்றுகிறது என்பது பொதுவாகக் கருதப்படுகிறது. 'பெண்' என்ற பொதுப் பெயரான படிவத்துக்குப் பொதுவாக இது ஒத்ததாகும். 2:23-இல் வரும் 'மனிதன்' என்ற சொல்லோடு சொல்லாடல் தொடர்புடையது.

ஆதி 1:27-இன்படி மனிதகுலம் ஆண், பெண், என்ற 'பால்' பிரிவில் படைக்கப்பட்டது. ஆதி 2:18-இன்படி ஆண்தான் முதலில் படைக்கப்பட்டான். வெறும் மிருகங்களின் துணையோடு வாழ்ந்திருந்த மனிதனின் தனிமையை உணர்ந்த இறைவன் அவனுடைய விலா எலும்பிலிருந்து பெண்ணைப் படைத்தார். அந்தப் பெண் பாம்பால் ஏமாற்றப்பட்டு விலக்கப்பட்ட கனியைத் தின்று, தன் கணவனையும் உண்ண வைத்தாள். அதற்கு அவள் பெற்ற தண்டனை துன்பப்பட்டுப் பிள்ளை பெறுவதும், மனிதனுக்கு அடங்கி நடப்பதுமாகும். ஏவா, காயின், ஆபேல், சேத்து முதலாக மற்றக் குழந்தைகளையும் வரிசையாகப் பெற்றெடுத்தாள் (ஆதி 4:1-2. 25-26; 5:1-5). இங்கு எடுத்தாளப்பட்டிருக்கும் காரண காரிய இயல் பண்புக் கூறுகளால் இக்கருப்பொருளின் தொன்மைக்காலம் சுட்

டப்படுகிறது. பெண் விலா எலும்பிலிருந்து வந்தவள் (2:21). மனிதனும் அவன் மனைவியும் ஒருடலாக (2:24-25), பிள்ளைப்பிறப்பின்போது ஏற்படும் வேதனை சாபமாகும் (3:16 தொ). இவை காரண காரியமாகப் பின்னப்பட்டிருக்கின்றன.

3. புதிய ஏற்பாடு:- ஏவா புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை குறிப்பிடப்படுகிறாள். 1 தீமோ 2:11-15-இன் புதிய ஏற்பாட்டு ஆசிரியர் கோவிலில் பெண்கள் அடக்கத்தோடும் அமைதியோடும் இருக்க வேண்டும் என்று வாதிடுகின்றார். பெண்ணின் பலவீன நிலையைச் சரியென்று காட்டவும், படைப்பின் ஒழுங்கை நிலைநிறுத்தவும் ஆதி ஆகமக் கதையைக் குறிப்பாகக் காட்டுகின்றார். ராபிகளின் விளக்கவுரைகளைத்தான் பெரும்பாலும் இவ்விரிவுரை சார்ந்திருக்கிறது. புனித பவுல் ஒருவன் எவ்வளவு சுலபமாகத் தவறான வழிக்குச் செல்லலாம் என்பதைப்படம் பிடித்துக் காட்ட 2 கொரி 11:3-இல் ஏவாளைப் பயன்படுத்துகிறார். இதில் பவுல், தவறான கோட்பாடுகள், போலி மீட்பர்கள் ஆகியவற்றிற்கு எதிராகக் கொரிந்தியர்களை எச்சரிக்கிறார்.

இந்த இருபகுதிகளும் ஏவாளுக்குப் பாதகமாக அமைந்தாலும், உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகம் ஓரளவு சமன்செய்கிறது. அதில் ஆதாம் மனுக்குலத்தில் பாவத்தையும் இறப்பையும் புகுத்தியதாக ஐயமின்றிக் குற்றம் சாட்டப்படுகிறார் (உரோ 5:12-19). ஆதி 2:24-ஐ எடுத்துக் கூறும் எபே 5:31 கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவை, வீழ்ச்சிக்குமுன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உள்ள உறவோடு" ஒப்பிடுவதாக அறிஞர் சிலர் கருதுகின்றனர். திருச்சபையின் தந்தையரும் கத்தோலிக்கத் திருச்சபையும் மரியாளை இரண்டாம் ஏவா என்று சித்தரிக்கின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

ஏவி (EVI விருப்பம்)

மோசேயின் தலைமையில் இஸ்ராயேல் மக்களால் போரில் கொல்லப்பட்ட ஐந்து மிதியா நாட்டு அரசர்களில் ஒருவர் (எண் 31:8; யோசு 13:21). மிதியா நாட்டவரின் கவர்ச்சியில் மயங்கிப் பாவத்தில் விழுந்து இறைவனுக்குத் துரோகம் செய்ததின் பின்னணியில் இப்போர் உண்டானது என்று எண் 31-ஆம் அதிகாரம் கூறுகிறது. ஆனால் யோசு 13-ஆம் அதிகாரத்தின்படி சீகோனின் அரசர்கள் என்று அழைக்கப்பட்ட ஐந்து மிதியா நாட்டுத் தலைவர்களும் எமோரிய அரசன் சீகோனை மோசே தோற்கடித்த அதே போரில் தோல்வியைத் தழுவினார்கள்.

ஏழு, ஏழாவது, எழுபது (SEVEN, SEVENTH, SEVENTY)

பல்வேறு செமித்திய மக்களிடையிலும் மற்ற மக்களினத்தாரிலும் ஏழு என்ற எண்ணானது புனிதமானதாகக் கருதப்பட்டது.

எகிப்தில் நான்கு என்ற எண் புனித எண்ணாகக் கருதப்பட்டது. அதை அடுத்து ஏழு என்ற எண் படிப்படியாக விருப்பத்துக்குரிய புனித எண்ணாயிற்று. இறந்த மனிதனைக் கீழுலகில் ஏழு பசுக்களும் ஒரு காளையும் சந்தித்தன. ஏழு தெய்வங்களும் ஏழு பாம்புகளும் அவனுக்குச் செவிமடுத்தன. ஐசிசு கழிமுகத் துவாரத்திற்கு ஏழு தேள்களுடன் இணைந்து சென்றாள். புதிதாய்ப் பிறந்தவரின் விதியானது ஏழு பேர்களால் கூறப்பட்டது. மாந்திரீகத்திலும், மருத்துவத்திலும் ஏழானது ஆற்றல் மிக்க எண்ணாக இருந்தது. மந்திர உச்சரிப்பில் ஏழு தெய்வங்கள் அழைக்கப்படுகின்றன. புனித எண்ணெய்களும், தைலங்களும் ஏழாகும். மாத்திரை அளவின் சரியான எண் ஏழு. சில குறிப்பிட்ட குணமாக்குதல்களில் ஏழு கற்கள் உபயோகிக்கப்பட்டன. ஏழின் மடங்குகளாகிய பதினான்கு, இருபத்தியொன்று, நாற்பத்து இரண்டு, எழுபது, எழுபத்தியேழு முதலியனவும் முக்கியமானவையாகும்.

மெசபொத்தாமியாவில் ஏழானது ஆதி காலத்தினின்றே புனிதமானதாக இருந்தாலும் அதனுடைய புனித இயல்பின் தோற்றமானது பிரச்சனைக்குரியதாகும். நிலாவின் நிலைகளைக் கவனிப்பதானது மாதத்தினுடைய வாரமுறைப் பிரிவுகளுக்கு வழிகோ

வியது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆயினும் சந்திரனை அடிப்படையாகக் கொண்ட மாதம் முழு எண்ணிக்கையான நாட்களைக் கொண்டிருப்பதில்லை. ஆகவே மாதமும் ஏழு நாட்கள் கொண்ட வாரக் கணிப்பும் ஒத்துப் போகவில்லை. ஆப்பு வடிவ ஏடுகளில் ஏழு நாள் காலம் பற்றிய தொன்மையான குறிப்பு கி.மு. இருபத்து மூன்றாம் நூற்றாண்டிலிருந்து காணப்படுகிறது. இது மாதத்தின் பிரிவுகளைப் பற்றியதாக இல்லாமல், ஏழு நாள் சமயக் கொண்டாட்டங்களையும் அதனுடைய நடைமுறைகளையும் குறிப்பிடுவதாக உள்ளது. மெசபொத்தாமியாவில் ஏழு நாள் வாரமானது சடங்குகளில் தோன்றியதாகவும் சமூக வாழ்வில் காலத்தைக் கணக்கிடுதலின் அடிப்படையாக இருந்த சந்திர மாதத்தைச் சார்ந்திருக்கவில்லை என்றும் தெரிகிறது. ஏழுநாள் வாரமானது சுமேரிய-அக்காதிய இறையியல் மற்றும் அண்டவியவிலிருந்து தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஏழு கோள்களும் ஐயமின்றி எண்ணினுடைய புனிதத்துவத்தின் ஒரு கூறாகும். இப்பிரச்சனை சிக்கல் மிக்கதாகும். ஆகவே அதை விவாதிக்காது, மெசபொத்தாமிய சமயத்தில் ஏழு முக்கிய அங்கம் வகித்தது என்று கூறுவதோடு நிறுத்திக்கொள்வது மேல்.

பழைய ஏற்பாட்டிலும் ஏழு முக்கிய அங்கம் வகிக்கிறது. அதன் முக்கிய கூறுகளை மட்டும் இங்குச் சுட்டிக்காட்டுவோம். அதனுடைய அடையாள உபயோகமானது பரந்த அளவினதாய் இருப்பதன் காரணமாக, சாதாரணக் குறிப்பிட்ட எண்ணாக எப்போது அது எண்ணப்பட்டது என்பதைக் கூறுவது மிகக் கடினமாகும். மெசபொத்தாமியாவில் இருந்ததைப் போன்று, சில முக்கிய விழாக்களுக்கும், சடங்குமுறைமைகளுக்கும் ஏழு நாட்களே காலமாக இருந்தன. பாஸ்காவும், கூடாரத் திருவிழாவும் ஏழு நாள் கொண்டாடப்பட்டன. புத்தாண்டு, பரிகார நாள், கூடாரத் திருவிழா முதலியன ஏழாம் மாதத்திலேயே நடைபெறுகின்றன. வாரங்களின் விழாவும் (உப 16:9) ஜுபிலியும் (லேவி 25:8-10) ஏழின் தற்பெருக்கத்தையே சார்ந்திருந்தன. சடங்குகளின் ஒவ்வொரு தன்மையிலும் ஏழு பரவியுள்ளது. ஏழு நாட்கள் என்பது குருக்களைத் திருநிலைப்படுத்துவதற்கும் பீடங்களை அபிடேகம் செய்வதற்குமான காலமாகும் (யாத் 29:35-37). பெரும்பாலும் பலிக்கான பொருட்கள் ஏழு (ஆதி 7:2; 8:20; 21:28-30; எண் 28:11; 1 நாள் 15:26; யோபு 42:8); பீடங்களின் எண்ணிக்கை ஏழு (எண் 23:1-2.4.14.29; 2 நாள் 29:21); பலியின் இரத்தம் ஏழு முறை தெளிக்கப்பட்டது (லேவி 4:6.17; 14:7; 16:14; எண் 19:4); அபிடேகம் செய்யும் எண்ணெயும் அவ்வாறே (லேவி 8:11).

ஆலயத்தினுடைய உடைமைகளும் பெரும்பாலும் ஏழுகளிலேயே இருந்தன (1 அர 7:17; எச 40;22, 26; பழ 9:1). உடன்படிக்கைப் பேழையைத் தவிர்த்து ஏழு கிளைகளுடைய விளக்குத்தண்டானது (யாத் 25:31-37; 1 அர 7:49; செக் 3:2.11) ஆலயத்தில் மிகப் புனிதமான பொருளாக இருந்தது. உறுதிமொழியானது ஏழுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. முறிந்துபோன உடன்படிக்கைக்கு ஏழு உயிர்ப்பலிகள் பரிகாரமாக அளிக்கப்பட்டன (2 சாமு 21:1.9). சிம்சோனுடைய மயிர்க்கற்றைகள் நாசரேய வாக்குடன் தொடர்பு கொண்டவையாக இருக்கலாம் (நீதி 16:13.19). ஏழானது பழிவாங்குதலிலும் தண்டனையிலும் முக்கியமானதொன்றாக இருந்தது (ஆதி 4:24; யாத் 7:25; லேவி 26:18; பழ 6:31; தானி 4:16.23.25). வானதூதருடனான தொடர்பில் ஏழானது முக்கிய இடத்தை வகிக்கிறது (எச 9:2; செக் 4:10; திருவெளி 15:1.6-8). தீய ஆவிகளும் நோய்களும் கூட ஏழடுக்காகவே வந்தன (லூக் 8:2; 11:26). ஏழுகளின் தொகுப்பினால் யோசுவா எரிகோவைத் தரைமட்டமாக்குவது (யோசு 6:4.8.13) யோர்தானில் ஏழு குளியல்களால் நாகமான் குணமாவது (2 அர 5:10) ஆகியவற்றில் காணப்படுவதுபோல் ஏழானது மந்திரத்திலும் ஆற்றல் மிக்கதாய் இருந்தது. ஆயினும் சிம்சோனைக் கட்டுப்படுத்த ஏழு புதிய உலராத நரம்புக் கயிறுகளால் முடியவில்லை (நீதி 16:7). அசல் எண்ணாகிய ஏழு

முக்கியமானதாக இருந்தாலும் இல்லாவிடினும் உயிர்ப்பிக்கப்பட்ட குழந்தையின் தும்மல்கள் (2 அர 4:25) நல்ல சகுனமாகும். மக்களினுடைய பொருத்தமான எண்ணானது ஏழாகும் (ரூத் 4:15; யோபு 1:2; 2 மக் 7;. அ.ப. 19:14). ஏழு நாள் மற்றும் ஏழாண்டுக் காலங்கள் எண்ணற்ற மாறுபட்ட சூழ்நிலைகளில் குறிப்பிடப்படுகின்றன. பஞ்சமும் வளமையும் ஏழாண்டு வரிசையில் வந்தன (ஆதி 41; 2 அர 8:1). காத்திருப்பதற்கான பொதுவான காலமானது ஏழு நாட்களாகும் (ஆதி 7:3-4.10; 8:10.12; 1 சாமு 10:8; 11:3; எச 3:16-17). திருமண விழாக்கள் ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டன (நீதி 14:12.17; தோபி 11:19). முக்கிய சமயத் தீட்டுகள் ஏழு நாட்களுக்கு நீடித்தன (லேவி 15:19.28; எண் 19:11.14.16). உப 7:1-இல் ஏழு என்பது ''பல'' என்பதற்கு ஒத்த சொல்லாக உபயோகிக்கப்படுகிறது. பெரும்பாலான நேரங்களில் குறிப்பிடத்தக்க ஒரு பெரிய எண்ணிற்கான முழுமையான எண்ணாக இது தோன்றுகிறது (ஆதி 31:23; யோபு 1:2; சங் 12:6; பழ 26:16.25; ஏச 4:1; 11:15; 30:26; எரே 15:9; மத் 12:45; லூக் 11:26; அ.ப. 20:6; 21:4; 28:14). ஏசாவின் முன்னிலையில் யாக்கோபு ஏழு முறை தரைமட்டும் குனிந்து வணங்கியதைக் குறிப்பிட்ட எண்ணாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை (ஆதி 33:3). அமர்ணா கடிதங்களிலும், ஓர் உகாரித்து கடிதத்திலும் தஞ்சம் கேட்போர் ஏழு முறை மற்றும் ஏழுமுறை தாங்கள் தரை மட்டும் தலைகுனிந்து வணங்குதலைப் பற்றிக் கூறுகின்றனர். இஸ்ராயேலின் பகைவர்கள் தப்பியோடுகின்ற ''ஏழு வழிகளானது'' (உப 28:7,25) பண்டைய சுமேரிய ஏழு திசை முறையை மீண்டும் சுட்டுவதாக இருக்கலாம். இது பின்னர் நான்கு திசை முறையால் மேற்கொள்ளப்பட்டது.

ஏழாண்டு துன்ப காலமானது இறைத் தலையீட்டினால் இடையிலேயே தடுக்கப்படுகின்றது (தானி 7:25; 9:27; 12:7; லூக் 4:25 யாக் 5:17; திருவெளி 11:2). ஏழின் மடங்குகள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. நல்லவற்றைக் குறிக்க ஏழானது இரட்டிக்கப்படுகிறது (ஆதி 46:22; லேவி 12:5; எண் 29:13; 1 அர 8:65; தோபி 8:19). ஆபிரகாமிற்கும் கிறிஸ்துவிற்கும் இடையிலான காலத்தை மூன்று பதினான்கு தலைமுறைகளாகப் பிரிப்பது உண்மையிலேயே செயற்கையானதென்பது தெளிவு (மத் 1:17). எழுபது என்பது பெரும்பாலும் ஒரு தோராயமான எண்ணிக்கையாகும் (ஆதி 46:27; யாத் 1:5; 15:27; 24:19; எண் 11:16.24; 2 சாமு 24:15; 2 அர 10:1; சங் 89:10; ஏச 23:15; எரே 25:11; 29:10; எச 8:11; தானி 9:2; 24:4; செக் 1:12; 7:5; லூக் 10:1). எகிப்தியர்கள் இஸ்ராயேலுக்காக எழுபது நாட்கள் துக்கம் கடைப்பிடித்தனர் (ஆதி 50:3). உகாரித்திய புராணக்கதையிலுள்ள பாகாலுக்கான இழவு வினைக்கேற்ற காணிக்கைகள் எழுபது விலங்குகளாகும். உகாரித்துத் தெய்வங்கள் அனைவரும் மொத்தமாக ''அசேராவின் எழுபது பிள்ளைகள்'' என்று குறிப்பிடப்படுகின்றனர். இலாமேக்கினுடைய எழுபத்தேழு மடங்கு பழி வாங்குதலும் (ஆதி 4:24), இயேசு கற்பித்த எழுபது மடங்கு ஏழு மன்னிப்பும் (மத் 18:22) எல்லையற்ற எண்ணை உருவகமாகக் குறிக்கின்றன. பாகாலுக்கு என்றுமே முழந்தாளிடாத ஏழாயிரம் பேர் (1 அர 19:18; உரோ 11:14) எண்ணற்ற சமயப்பகைவர்களின் ஒரு சிறு பகுதியையே குறிப்பிடுகிறது. திருவெளி 11:12-இல் எண்ணிக்கையானது பத்திலொரு பங்கையே வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. மோவாபிய கல்லில், மேசாவின் தெய்வங்கட்குப் பலியிடப்பட்ட நேபோவின் மொத்த இஸ்ராயேல் மக்கள் தொகையும் குறிப்பிடப்படுகிறது.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உள்ள எண்ணற்ற வெளிப்படையான ஏழன்தொகுதிகளைத் தவிர்த்து, ஏழாக எண்ணக்கூடிய பல மறைவான செயல்களும் உள்ளன. உ.ம். மனிதனிலான ஆண்டவருடைய ஆவியின் ஏழு குணங்கள் (ஏச 11:2); சாலமோனுடைய செபத்தின் ஏழு வேண்டுதல்கள் (1 அர 8:29-53); ஆண்டவருடைய செபத்தின் ஏழு வேண்டுதல்கள் (மத் 7:9-13); மத் 13-இன் ஏழு உவமைகள்; மத் 23-இன் ஏழு சாபங்கள்; சிலுவையில் இயேசுவின்

ஏழு வாக்குகள் உயிர்ப்பிற்குப் பின்னர் ஏழு சீடர்களுக்குத் தோன்றுதல் (யோவா 21:2); ஏழு வேதனைகளும் (உரோ 8:25) கொடைகளும் (உரோ 12:6-8); விண்ணக ஞானத்தின் ஏழு குணங்கள் (யாக் 3:17); விசுவாசத்தை நிறைவாக்குகின்ற ஏழு நற்பண்புகள் (2 பேதுரு 1:5-8). திருவெளிப்பாட்டு நூலானது ஏழன் தொகுதிகளை வெளிப்படையாகவும் (திருவெளி 4:20; 3:1;4:5;5:1-6; 8:2; 10:3-4; 12:3; 13:1; 15:1; 17:7) மறைமுகமாகவும் (5:12; 6:15; 7:12; 19:18; 21:18) குறிப்பிடுகிறது.

விவிலியத்திலுள்ள ஏழினுடைய எண்ணற்ற அடையாள உபயோகங்கள் பொதுவாக எதைக் கொண்டுள்ளன என்று கூறுவது மிகக் கடினமாகும். ஏழானது நிறைவினை, முழுமையினை, முடிவினைக் குறிப்பிடுகிறது என்பதே எளிதான, எல்லாவற்றையும் உள்ளடக்கும் பொது விளக்கமாகும்.

ஏழு சபைகளின் தூதர்கள் (ANGELS OF THE SEVEN CHURCHES)

விளக்கவுரையாளர்கள் இதற்குப் பல்வேறான விளக்கங்களைத் தருகிறார்கள். அவை பின்வருமாறு:-

1. ஆசிய நாட்டுத் திருச்சபைகள் யோவானிடம் அனுப்பிய தூதர்கள் (திருவெளி 1:4).

2. ஆசிய நாட்டுத் திருச்சபைகளின் ஆயர்கள்

3. அத்திருச்சபைகளின் காவல்தூதர்கள் (உப 32:8; தானி 10:13; 12:1; சீரா 17:17; மத் 18:10; அ.ப. 12:15)

4. அவர்களின் விண்ணுலகத் தோற்றங்கள் (பாரசீக மதத்தினர் கருத்துப் போன்றது).

5. திருச்சபைகளின் ஞான மையக் குழுவினர் அல்லது ஒழுக்க முதிர்ச்சிபெற்ற முக்கிய அங்கத்தினர்கள் (1 கொரி 2:6)

6. ஆண்டவர் தம் வலக்கரத்தில் ஏந்திக் கொள்ளப்பட்டிருப்பவர்கள் (திருவெளி 1:16). திருவெளி 1-2-இல் செய்தி பெறுபவர்கள் கிறிஸ்துவின் உண்மையான திருச்சபை ஆவர். இவர்களை விளக்குத் தண்டுகளிலிருந்தும், தளத்திருச்சபை முழுக்குழுவிலிருந்தும் வேறுபடுத்த வேண்டும்.

ஏழு சபைகள் (SEVEN CHURCHES)

ஏழு சபைகள் ஆசியாவிலிருக்கும் உரோமை மாவட்டத்திலுள்ள நகரங்களில் உள்ள திருச்சபைகளாகும். இவை ஒன்று சேர்ந்து திருவெளி 1:4.11.20-இலும் தனித்தனியாக 2-3-ஆம் அதிகாரங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இந் நகரங்கள் அஞ்சல் நீதித்துறை மாவட்டங்களுக்குத் தலைநகராக இருந்ததால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று ஒரு கருத்து உண்டு. இது கூடார மனையிலுள்ள ஏழு கிளை விளக்குத் தண்டைக் குறிப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது (திருவெளி 1:1 1,20; யாத் 25:31 தொ).

ஏழு வார்த்தைகள் (SEVEN WORDS FROM THE CRORS)

இந்த ஏழு வார்த்தைகளும் சிலுவையில் அறையுண்டிருந்த நேரத்தில் இயேசுவால் சொல்லப்பட்ட வார்த்தைகளாகத் திருமுறை நற்செய்தியாளர்களால் கொடுக்கப்படுபவையாகும். ஏழு என்ற எண்ணிக்கை தற்செயலாக உருவானது. எந்த நற்செய்தியாளரும் மூன்று வார்த்தைகளுக்கு மேல் கொடுக்கவில்லை. ஏழு வார்த்தைகளின் பாரம்பரிய வரிசை பின்வருமாறு:-

1. தந்தையே இவர்களை மன்னிக்கவும்; இவர் செய்வது இன்னதென்பது அறியாது செய்கிறார்கள் (லூக் 23:34). இவ்வார்த்தை பல கையெழுத்துப் படிகளில் காணப்படவில்லை. இக்கூற்றை இயேசுவைச் சிலுவையில் அறையமுன்னோ, தரையில் கிடத்தி அவரது கைகளை ஆணியால் அடிக்கும் போதோ சொல்லியிருக்கலாம் (அ.ப. 7:60)

2. ''உண்மையாக உனக்குச் சொல்கிறேன். இன்று நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்'' (லூக் 23:43). இவ்வார்த்தை ''அரசரி

மையோடு வரும்போது என்னை நினைவு கூறும்'' என்று சொன்ன நல்ல கள்வனைப் பார்த்து இயேசு சொன்னது. மத்தேயுவும் மாற்கும் இரு கள்வரை அறைந்தனர் என்று மட்டும் எழுதியிருக்கிறார்கள்.

சிலர் ''இயேசு இவ்வார்த்தையைச் சொன்னதன்மூலம் உடலை விட்டுப் பிரிந்த ஆவியின் அழியாத் தன்மையைப் போதித்திருக்கிறார்'' என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

3.. ''அம்மா இதோ உன் மகன்...இதோ உன் தாய்'' (யோவா 19:26-27). இது இயேசுவால் தான் அன்பு செய்த தாயிடமும் சீடரிடமும் சொல்லப்பட்டது. நான்காவது நற்செய்தியில் மரியாள் என்ற பெயர் சொல்லப்படவில்லை. ''அன்பு செய்த சீடர்'' என்பது இங்குத் தெளிவற்ற நிலையில் உள்ளது. இந்த இடத்தில் இவர் இயேசுவின் தாயை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார். ஆனால் அ.ப. 1:14-இன்படி பார்த்தால், அவள் எருசலேமில் உள்ள எல்லாச் சீடர்களோடும் இருக்கிறாள்.

4. ''என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்'' (மத் 27:46; மாற் 15:34). இவ்வார்த்தை சங் 22:1-இன் மேற்கோள் ஆகும். இந்தச் சங்கீதத்தின் பல வரிகள் சிலுவைப் பாடுகளை நினைவூட்டுவனவாக உள்ளன. இது முழுதும் பாவமறியா ஒரு நல்ல மனிதன் படும் துன்பத்தை விவரிக்கிறது. இது இயேசு இறக்குமுன் அவரது உள்ளத்தில் இருந்திருக்கலாம். இருப்பினும் இது அவரது தனிமைத் துன்பத்தைக் குறைக்கவில்லை.

5. ''தாகமாயிருக்கிறேன்'' (யோவா 19:28). இவ்வார்த்தையைச் சொன்னவுடன் பாத்திரத்திலிருந்த காடியில் கடற்காளானைத் தோய்த்து ஈசோப்பில் பொருத்தி வாயில் வைத்தனர். அதை அவர் சுவைத்தார். ஆனால் இது லூக் 22:18-க்கு எதிரிடையாக உள்ளது. அங்கே ''கடவுளின் அரசு வரும் வரை திராட்சைப் பழரசத்தைக் குடிக்க மாட்டேன்'' என்றார்.

6. ''எல்லாம் நிறைவேறிற்று'' (யோவா 19:30).

7. ''தந்தையே, என் ஆவியை உமது கையில் ஒப்படைக்கிறேன்'' (லூக் 23:46). இந்தச் செபம் சங் 31:5-ஐ அடிப்படையாகக் கொண்டுள்ளது. யூதர்களால் மாலை நேரத்தில் சொல்லப்பட்டது. சங் 31 முழுவதும் துன்பத்திலும் இறப்பிலும் கடவுள்மேல் கொண்ட நம்பிக்கையை வெளிக்காட்டுகிறது.

ஏழைகள் (POOR)

நம்முடைய பண்டைக்கால உயர்தர இலக்கியங்களில் அடிக்கடி மறக்கப்பட்டு விட்டாலும் ஏழைகள் விவிலியத்தில் பெரும்பங்கு வகிக்கின்றனர். அக்காலப் புலனீடான எபிரேயச் சொற்றொகுதி ஏழ்மை, சிக்கனம், எளிமை, நிறைவடையாப் பிச்சைக்காரன் தரங்குறைந்த மற்றும் துயருறும் மனிதன் போன்ற பரிதாபகரமான சொற்களைக் கொண்டுள்ளது. விவிலியம் எடுத்து உரைக்கின்ற ஏழ்மையானது பொருளாதார மற்றும் சமூக நிலைமையாக மட்டுமில்லாமல் அக நிலையாகவும் ஆன்மீக மனப்பான்மையாகவும் இருக்கக்கூடும். பழைய ஏற்பாடு ஆன்மீகச் செல்வங்களை வெளிப்படுத்தும்போது, புதிய ஏற்பாடு உண்மையான ஏழைகளையே இறைவனுடைய அரசின் பேறு பெற்ற வாரிசுகளாகக் காண்கிறது.

I பழைய ஏற்பாடு:-

1. ஏழ்மையின் அவதூறு:-

ஏழ்மையினை ஆன்மீகக் குறிக்கோளாகத் தன்னிச்சையாகவே கருதுவதற்குப் பதிலாக, இஸ்ராயேல் சுமக்க வேண்டிய துர்ப்பேறாகவும் வெறுக்கத்தக்க நிலையாகவும் அதனைக் கண்டது. பொருட்செல்வங்களை இறைவனுக்குக் காட்டும் பிரமாணிக்கத்தின் பிரதிபலனாகக் கருதிய இறைகைம்மாறு பற்றிய நீண்டகாலமாக நிலவிய குறையுடைய கருத்தின்படி, ஏழ்மையை மதிப்பிடுவதன் விளைவே இது (சங் 1:3; 113:1.3).

நேர்மையுடைய ஏழைகள் இருப்பதை ஞானிகள் அறிந்திருந்தனர் (பழ 19:1.22; 28:6;

திருவுஜர 4:13). ஆனால் பெரும்பாலும் துயரமிக்க நிலையானது சோம்பல் (பழ 6:6-11; 10:4-5) அல்லது ஒழுங்கின்மையின் (13:18; 21:17) விளைவே என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆகவே வறுமைக்கு இட்டுச் செல்லும் சோம்பேறித்தனத்தைக் கடுமையாகக் கண்டிக்கின்றனர் (பழ 6:6-11; 10:4-5; 20:4.13; 21:15). இதைத்தவிர மீண்டும் இது பாவத்திற்கான சந்தர்ப்பமாக உருவாகலாம். எடுத்துக்காட்டான நிலை ''ஏழ்மையுமில்லை செல்வமுமில்லை'' (பழ 30:8-9; தோபி 5:18 தொ) என்னும் மகிழ்ச்சியான இடைநிலையாகத் தோன்றுகிறது.

2. ஏழைகளுக்குரிய கவனம்:-

மற்றொரு உண்மை தெளிவாகவும் உறுதியாகவும் கூறப்படுகிறது. யோபுவினால் விவரிக்கப்படுகின்ற பயங்கரமாகத் துன்பப்படும் நாட்டுப்புறக் கடைநிலை மக்களைப் போல (யோபு 24:2-12) ஏழைகளில் பலர் உண்மையில் விதி அல்லது மனிதனுடைய அநீதிகளின் பலியாக உள்ளனர். இத்தகைய உரிமையிழந்தோர், இறைவாக்கினர்களில் தங்களுடைய பெயருள்ள பாதுகாவலர்களைக் கண்டுகொண்டனர். இஸ்ராயேலின் குற்றங்களைப் பற்றி வெட்கி நாணும் ஆமோசைப் பின்பற்றி (ஆமோ 2:6 தொ; 4:1; 5:11), யாவேயின் தூதர்கள் நாட்டை மாசுபடுத்துகின்ற வன்முறை மற்றும் நெடுஞ்சாலைக் கொள்ளை (எச 22:29), வியாபாரத்தின் வெட்கமற்ற முறைகேடுகள் (ஆமோ 8:5-6; ஓசே 12:8), நிலத்தைக் கவர்தல் (மீக் 2:2; ஏச 5:8), சிறியவர்களை அடிமைப்படுத்தல் (எரே 31:8-22; நெக 5:1-13), அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துதல் மற்றும் நீதியையே நெறிகோணச் செய்தல் (ஆமோ 5:7; ஏச 10:1-2; எரே 22:13-17) ஆகியவற்றை இடைவிடாமல் பழிக்கின்றனர். துயருடையோர் மற்றும் ஏழைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது மெசியாவின் குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கும் (ஏச 11:4; சங் 72:2 தொ 12 தொ).

இவை அனைத்திலும் இறைவாக்கினர்கள், சட்டத்திற்கு உடன்பாடு உள்ளவர்களே (யாத் 20:15 தொ; 22:21-26; 23:6). தேவையுள்ளோரின் துன்பங்களைத் தணிப்பதற்குப் பிறர் சிநேக மனப்பான்மைகளையும் சமூக நடவடிக்கைகளையும், குறிப்பாக உப ஆகமமானது கட்டளையிடுகிறது (உப 15:1-15; 24:10-15; 26:12). வல்லமை மிக்க பாதுகாவலராக ஆண்டவரைக் கொண்டுள்ள (பழ 22:22-23; 23:10-11) ஏழைகளின் புனித உரிமைகளை எடுத்துக்கூற ஞானிகள் தவறியதில்லை (பழ 14:21; 17:5; 19:17). பிச்சையளித்தல் என்பது உண்மையான விவிலிய பக்தியின் முக்கியமான கூறாகும் என்பது யாவரும் அறிந்ததே (தோபி 4:7-11; சீரா 3:30-4:6).

3. யாவேயின் எளியோரின் மன்றாட்டும் மனப்பான்மையும்:-

இறைவனின் செவிகள் மட்டும் எட்டுகின்ற ''ஏழைகளின் கூக்குரலானது'' (யோபு 34:28) பெரும்பாலும் சங்கீதங்கள் முழுவதிலும் எதிரொலிக்கின்றது. நாம் அங்குத் தேவையுள்ளோரின் இறைஞ்சுதலை மட்டும் கேட்கவில்லை என்பது உண்மையே. துன்புறுத்தப்பட்டோர் துர்ப்பேறுடையோர் மற்றும் துயருறுவோர் ஆகியோரின் செபத்தையும் கேட்கிறோம். இவர்கள் அனைவரும் ஏழைகளைச் சேர்ந்தவர்களே. அவர்களின் பொது மனப்பான்மையைச் சங்கீதங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன (சங் 9-10; 21; 24; 68). அவர்கள் சூழ்நிலையானது மாற்றியமைக்கப்படும்போது நல்ல வருங்காலம் பற்றிய தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்த ஆழமாகத் தூண்டப்படுகின்றனர் (53:7 தொ; 68:23-30). ''எளிய'' எரேமியா தனது நிலைமையை ஆண்டவரிடம் ஒப்படைத்தது போல (எரே 20:12-13) அவர்கள் தாங்கள் சார்ந்து நிற்கும் யாவேயிடமிருந்து தங்களது மீட்பை எதிர்நோக்குகின்றனர். இறைவனற்ற (சங் 9:14-19), செருக்குவாய்ந்த (சங் 17:28) கபடுள்ளவர்கள் (20:26). இறைப்பற்றற்றவர்கள்போன்ற அவர்களுடைய பகைவர்கள் இறைவனுடைய பகைவர்களாகவும் உள்ளனர். அவர்களது துயரமானது இறையன்பிற்குரிய பட்டயமாகும் (சங் 10:14).

சங்கீதங்களின் ஏழைமனிதர் யாவேயின் நண்பனாகவும் ஊழியனாகவும் தோன்றுகிறார் (86:1-2). அவரில் நம்பிக்கையுடன் புகவிடம் கொண்டு அவருக்கு அஞ்சி அவரைத் தேடி நாடுகிறார் (34:5-11) இங்கு ஏழையைக் குறிக்கப்பயன்படும் ''அனாவ்'' என்ற எபிரேயச்சொல் பொருள் சார்ந்த வறுமையை மட்டும் குறிக்கவில்லை. சாந்தமிக்க மனிதன் சோதனைகளில் அமைதியானவர், தாழ்ச்சியுள்ளவர் என்ற பொருளையும் உணர்த்த வல்லது (சங் 10:18; 18:27; 37:11; ஏச 26:5 தொ). அவர்களுடைய அடிப்படை மனப்பான்மை தாழ்ச்சியாகும். இக்கருத்தோடு சில பழைய ஏற்பாட்டு வாசகங்கள் நீதி (செப் 2:3) இறையச்சம் (பழ 15:33; 22:4), விசுவாசம் அல்லது பற்றுறுதி (சீரா 45:4; எண் 12:3) ஆகிய கருத்துக்களையும் இணைக்கின்றன.

துன்புறுவோர் இதேபோன்ற உணர்வுகளுடன் மன்றாடுகிறபோது யாவேயின் ஏழைகள் என்றும் பெயரைப் பெறும் தகுதியை உண்மையாகவே அடைகின்றனர் (சங் 74:19; 149:4-5). அவர்களே அவருடைய இரக்கமிக்க அன்பிற்குரியவர்கள் (ஏச 49:13; 66:2). எளிய தாழ்ச்சியுள்ள மக்கள் (செப் 3:12-13) மற்றும் ''ஏழைகளின் திருச்சபை'' ஆகியவற்றின் முதற்கனிகள் ஆவர். மெசியா இவர்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்ப்பார்.

II புதிய ஏற்பாடு:-

1. ஏழைகளின் மெசியா:-

ஏழைகளைப் பற்றிய நற்பேறுகளைப்பற்றித் தமது தொடக்கவுரையின் முதலிலிருந்தே (மத் 5:3; லூக் 6:20), தாம் போதிக்கின்ற அரசினுடைய சலுகைக்குரிய வாரிசுகள் என்று ஏழைகள் கருதப்பட வேண்டுமென இயேசு விரும்புகிறார் (யாக் 2:5). ஆண்டவருடைய தாழ்ச்சியுள்ள அடியாளாக மரியாள் பாடியது போன்று (லூக் 1:46-55) முன்குறிப்பிட்ட வாக்குறுதிகள் நிறைவேறக் கூடிய காலம் இப்போது வந்துள்ளது. ''எளியோர் உண்பர், நிறைவு பெறுவர்'' (சங் 22:26); அவர்கள் அனைவரும் இறைவனுடைய பந்தியில் ஒன்று சேர்க்கப்படுகின்றனர் (லூக் 14:21). இவ்வாறு அவர்களுக்கு நற்செய்தியைக் கொண்டு வருவதற்கென எண்ணெயால் அபிசேகம் செய்யப்பட்ட எளியோரின் மெசியாவென இயேசு தோன்றுகிறார் (ஏச 61:1 = லூக் 4:18; மத் 11:5).

மேலும் எளியோரின் மெசியாவே ஓர் ஏழை மனிதராக உள்ளார். பெத்லகேம் (லூக் 2:7), நாசரேத்து (மத் 13:55), பொது வாழ்வு (8:20), சிலுவை (27:35) போன்றவை முற்றிலும் வறிய நிலைமைவரை ஏற்றுக் கொண்டது இயேசுவின் ஏழ்மையின் பல்வேறு வடிவங்களாகும். அவர் ''சாந்தமும் மனத்தாழ்ச்சியும்'' உள்ளவராக இருப்பதால் (மத் 11:29), அவரிடம் வர, சுமை சுமந்து சோர்ந்திருப்பவர் அனைவரையும் அவர் வரவேற்க முடியும். குருத்துக்களை ஆட்டித் தம்மை வரவேற்றவர்களிடையே எருசலேமிற்குள் அவர் வெற்றிகரமாய் நுழைந்த போதும்கூட, செப் 9:9-இல் பறைசாற்றப்பட்ட எளிமையான அரசராகவே அவர் உள்ளார் (மத் 21:5). சிறப்பாகத் தமது பாடுகளில் அவர் துன்பங்களை ஏற்றுக்கொண்டு ஆண்டவருடைய யாவேயின் ஏழைகள் யாவரின் செபத்தையும் தொடர்ந்து மேற்கொள்கிறார் (சங். 22; மத் 27:35.43.46)

2. ஆன்மீக ஏழ்மை:-

பழைய ஏற்பாட்டில் ஏழ்மையை ஆன்மீக மனப்பான்மையாகக் கருதிய சமயக் குழுவினர் ஏற்கனவே இருந்திருந்தால், அதே முறையில் ஏழ்மையானது இயேசுவின் சீடர்களாலும் கருதப்படுவது சாதாரணமானதே. மத்தேயுவால் வலியுறுத்தப்பட்ட கருத்து இதுவே. ''எளிய மனத்தோர் பேறுபெற்றவர்'' (மத் 5:3), அதாவது ''ஆன்மீக ஏழ்மையைக் கொண்டிருப்பவர்கள்'' தம்மைப் பின்பற்றுவோர் இவ்வுலக உடைமைகளைக் கொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், உண்மையான செல்வங்களை விரும்பி அவற்றைப் பெறுவதற்கான தகுதியை அடைவதற்கு இவ்வுலக உடைமைகள்பால் பற்றற்றவர்களாக இருக்க வேண்டுமென இயேசு விரும்புகிறார் (மத் 6:24.33; 13:22;

திருவெளி 2:9; 3:17). பொருளாதாரச் செழிப்பின் காலத்தில் ஒருவர் தமது ஆன்மீக வறுமைபற்றிய பொய்த்தோற்றம் காணும் பேராபத்து உள்ளது (அ.ப. 3:17). இவை எவ்வாறாயினும் உலகத்தை உண்மையிலேயே பயன்படுத்தாததுபோல் அதைப் பயன்படுத்துவது மேல். ஏனெனில் ''இவ்வுலகத்தின் அமைப்பு கடந்து செல்கிறது'' (1 கொரி 7:31). இயேசுவின் சீடராக இருக்க வேண்டும் என்றால், ஒருவர் உலகப் பொருட்கள் யாவற்றையும் துறக்க இணங்கவேண்டும் (லூக் 14:26.33). தனக்கேயுரிய நீதியின் மீது நம்பிக்கை கொண்டு பரிசேயன் காட்டிய பொய்வடிவமான சுயநிறைவைக் கொண்டிருப்பதைவிட உவமையிலுள்ள ஆயக்காரனுடைய தாழ்ச்சியில் அவர்கள் பங்கேற்கின்றனர் (லூக் 18:9-14). தங்களுடைய தேவை மற்றும் வலிமையற்ற நிலையில் அவர்கள் சிறுபிள்ளைகளை ஒத்துள்ளனர். இத்தகையவர்களைப் போன்றே அவர்கள் இறையரசையும் கொண்டுள்ளனர் (லூக் 18:15 தொ; மத் 19:13-24).

3. செயலளவிலான ஏழ்மை:-

எளிய மனத்தை நற்செய்தி வலியுறுத்துவது செயலளவிலான ஏழ்மையின் சமய மதிப்பீட்டை நாம் மறக்க வழிகோலக் கூடாது. ஏனெனில் அதுவே உள்ளார்ந்த துறத்தலின் அடையாளமும் சாதனமும் ஆகும். இறைவனில் மகனுக்குரிய நம்பிக்கை, இயேசுவைப் பின்பற்றுவதற்கான விருப்பம், அயலார் மீதான ஈகை ஆகியவற்றால் தூண்டப்படும்போது உலகப் பொருட்களைப் பொறுத்தமட்டில் நல்லதாகும். இறைவனுடைய கொடையினைத் தடையின்றி ஏற்பதற்கும், அவரது அரசில் பணி புரிவதற்காக முழுமையாக அர்ப்பணிப்பதற்கும் அது வழிகோலுகிறது. புதிய ஏற்பாடு ஆசிரியர்களில், குறிப்பாக லூக்கா, உலக ஏழ்மைக்கான உந்து காரணங்களை எடுத்துக் கூறுகிறார் (லூக் 12:32 தொ).

அ) விருப்பமாக ஏற்றுக் கொள்ளும் ஏழ்மை:-

செல்வத்தினுடைய ஆபத்துகளுக்கு எதிராக இயேசு தம்முடைய அனைத்துச் சீடர்களையும் எச்சரிக்கிறாரெனில் (மத் 6:19 தொ; லூக் 8:14), அவரை நெருங்கிப் பின்பற்ற விரும்பிகிறவர்களை, குறிப்பாக அப்போஸ்தலர்களை, செயலளவிலான ஏழ்மையைத் தழுவுமாறு கேட்கிறார் (லூக் 12:33; மத் 19:21.27). ''இஸ்ராயேல் வீட்டினுடைய'' இறை பணியாளர்கள் தங்களுடன் ''பொன் வெள்ளி செப்புக்காசு'' எதையும் தங்களுடன் எடுத்துச்செல்லக்கூடாது (மத் 10:9; அ.ப. 3:6). இத்தகைய கட்டளையை அப்படியே செயல்படுத்துவதென்பது எப்போதுமே இயலக்கூடியதன்று. ஆனால் பாலஸ்தீனத்தில் பரவலாக நிலவிய விருந்தோம்பலைக் கொண்டு இதை ஓரளவு விளக்கலாம். ஆனால் கிரேக்க - உரோமையர் உலகில் இதை அப்படியே செயல்படுத்த முடியாது. ஆகவே போதகம் மாற்றம்; பிறர் சிநேகப் பணிக்கெனப் பவுல் ஒரு வரவு செலவுப்பட்டியலைக் கொண்டிருப்பார் (2 கொரி 8:20; 11:8-9; அ.ப. 21:24; 28:30). ஆனாலும் எவ்வித ஊதியமுமின்றி அப்போஸ்தலர் தொடர்ந்து நற்செய்தியைப் போதிக்கிறார் (1 கொரி 9:18; மத் 10:8). தேவையிலும் வாழ்வதற்கு அவரால் முடிகிறது (பிலி 4:11-12). எருசலேமில் அப்போஸ்தலர்களைச் சுற்றி ஒன்று சேர்ந்த முதல் கிறிஸ்தவர்களின் சமுதாயமும் அவர்களுடைய ஏழ்மையைப் பின்பற்றப் பெரு முயற்சி எடுத்தது. ''ஒருவனும் தன் உடைமை மீது உரிமை பாராட்டவில்லை'' (அ.ப. 4:32; 2:44-45) எனப்படும் அப்போஸ்தலிக்க வாழ்வின்பால் நாட்ட உணர்வினைத் திருச்சபையானது என்றுமே பாதுகாத்து வந்துள்ளது.

ஆ) ஏழ்மையைப் பொறுமையாக ஏற்றுக் கொள்ளல் :- விரும்பி ஏழ்மையானவர்களைப்போல் சூழ்நிலைகள் அல்லது மறைக்கப்படும் துன்பங்களின் காரணமாகச் செயலளவிலான ஏழ்மையை ஏற்றுக் கொள்பவர்கள் தங்களுடைய தேவையிலும் தாராளமாக இருந்தாலோ (மாற் 12:41-44), மற்றும் ''மேலானவையும் நிலையுள்ளவையுமான செல்வங்களை எதிர்நோக்கியவாறு'' (எபி 10:34) தங்களது நிலையை விரும்பி ஏற்றுக் கொண்டாலோ, இறை அரசில் அவர்கள்

பேறுபெற்றவர்களாக இருப்பர். இவ்வுலகில் ஏழைகளாக இருந்தாலும், சோதனைகளில் அவர்கள் பிரமாணிக்கமாய் இருப்பதால், அவர்கள் உண்மையில் இப்போதிருந்தே செல்வந்தர்களாக இருக்கின்றனர். வருங் கால வாழ்வில் இறைவன் அவர்களுக் கெனத் தயாரித்துள்ள வியக்கத்தக்க வெகு மதிகளை லூக்கா சுட்டிக்காட்டுகிறார் (லூக் 6:20-21). ஏழை இலாசரைப்போன்று அவருடன் சேர்ந்து முடிவற்ற ஆறுதலை அவர்கள் கண்டடைவர் (16:19-25).

இ) ஏழைகள்பால் கிறிஸ்துவப் பணி:- துன்பகரமான சூழ்நிலைகள் மனிதத்தன்மை யற்ற நிலையில் எவ்விதத்திலும் குறைந்த வையல்ல. இறைவாக்கினர்கள் கொண்டி ருந்த, சமூக நீதிக்கான அதே கோரிக்கை களை நற்செய்தியும் கொண்டுள்ளது (மத் 23:23; யாக 5:4). ஆனால் இங்குச் செல்வர்கள் ஏழைகள்பால் ஒரு அவசரப்பணியைக் கொண்டுள்ளனர். இறைவனின் எடுத்துக் காட்டைப்பின்பற்றி அவர்கள் ஏழைகளை ஏற்றுக்கொண்டு (லூக் 14:13.21) ''அநீத செல் வத்தினால்'' நண்பர்களைச் சேர்த்துக் கொண்டால் (16:9), அவர்கள் தங்களுடைய முடிவற்ற மகிழ்ச்சியில் ஏழைகளுடன் ஒன் றித்திருப்பர். மேலும் இயேசுவினுடைய மகிமை மிக்க மறுவருகைக்காகக் காத்திருக் கும் வேளையில் ஏழைகளுக்கு உதவும் போது உண்மையில் அவருக்கே உதவுவதன் காரணமாக (மத் 25:34-46; 26:11), இக்கால முதல் ஏழைகளுக்கு நாம் செய்யும் பணி இயேசுவின்பால் நாம் கொண்டிருக்கும் அன் பிற்கு எடுத்துக் காட்டாகும். ''ஒருவன் தன் சகோதரன் வறுமையுற்றிருப்பதைக் கண்டு மனமிரங்காவிடில் அவனுள் கடவுளன்பு நிலைத்திருக்கிறதென்று எவ்வாறு சொல்ல முடியும்?'' (1 யோவா 3:17).

இறைவாக்கினர் முதல் இயேசு வரை விவிலியமானது ஏழைகளின் துன்பங்கள் மீது அக்கறைகொண்டு அவற்றின் பொருளை நமக்கு வெளிப்படுத்தியுள்ளது. நம்பிக்கையுள்ள விசுவாசத்திலும் பொறு மையான தாழ்ச்சியிலும் இறைவனின் கொடைக்குத் திறந்த நிலையில் உள்ள ஆன் மீக மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட ஏழ்மை உள்ளது. இந்த ஆன்ம ஏழ்மைக்கு அப்பாற் பட்ட நிலையில் சலுகைபெற வழியாக உண்மையான ஏழ்மையானது உள்ளது. ஆனால் இதனுடைய கோட்பாடு மற்றும் நோக்கமானது ''நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பரந்த வள்ளன்மையின்'' மறைபொருளில் ஒன்று படுத்துவதாகும். ''அவர் செல்வமிக்கவராய் இருந்தும், அவரு டைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி உங்களுக்காக ஏழையானார்'' (2 கொரி 8:9).

ஏளனஞ்செய்பவன், இகழ்பவன் (SCO-FFER)

ஞானத்தின் வழியை அவமதிக்கின்ற வனை விவரிப்பதற்காகப் பழமொழி ஆக மத்தில் உள்ள ஏராளமான இணைச் சொற்க ளில் இதுவும் ஒன்று. பழைய ஏற்பாட்டில் ஏளனம் செய்பவன் பேதையர்களிலும் முட் டாள்களிலும் (பழ 1:22); தீயவர்களிலும் (9:7) ஒருவனாக எண்ணப்பட்டுள்ளான். மேலும் மோசமானவர்களிலும் (9:7) ஞானத் திற்கு எதிராக இருப்பவனாகவும் (13:1; 14:6; 15:12) மகிழ்ச்சியாக இருப்பதற்கு மாறானவ னாகவும் (சங் 1:1) கருதப்பட்டுள்ளான். பெரும்பாலான நேரங்களில் அவன் உடல் அளவில் தண்டிக்கப்படுவதாகத் தோன்றினா லும் (பழ 19:25.29; 21:11; 22:10), இது அவனுடைய வளர்ச்சிக்கு உதவுவதில்லை. ஏனெனில் அவன் தன்னைத் திருத்துபவர் களை அவமதிப்பான் (9:7), வெறுப்பான் (9:8), அவர்களுக்குச் செவி மடுக்க மாட் டான் (13:1). ஞானவழிகளையும் நேர்மைவழி களையும் கேலி செய்வதற்காகவே கேலி செய்வான் (1:22). அவன் சண்டை, சச்சரவு, பழிச்சொல் ஆகியவற்றுக்குக் காரணமாய் இருப்பான் (22:10).

அவனுடைய நடத்தை மிகத் தெளிவாக பழ 21:24-இல் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அங்கு அவன் அகந்தையுள்ள கோபக்கார னாக விவரிக்கப்பட்டுள்ளான். இவன் வீணாக ஞானத்தைத் தேடுகின்றான் (14:6; 15:12). இவன் தன்பாவத்தில் மடமையால்

மனிதருக்கு வெறுப்பைத் தருகின்றான் (24:9). இப்படியாகக் கடவுளின் ஏளனத்தைப் பெறுகின்றான் (3:34). ஏச 29:20-இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிலிகளின் தலை விதியில் இவன் பங்கு கொள்வான். அதே வேளையில் ஏழைகளும் சாந்தமுள்ளவர்களும் ஆண்டவரில் மகிழ்வார்கள் (பழ 3:34).

''பழித்துரை'' என்ற சொல் பகைவனைக் கேலிக் கூத்தடிப்பதைப் பற்றி விவரிக்கின்றது (சங் 79:4; 89:51; 102:8). பழித்துரை செய்யப்படுதல் வீழ்ச்சியையும் துன்புறுத்தலையும் காட்டுகின்றது. சங்கீத ஆசிரியர் தன்னுடைய துன்பங்களையும், பகைவர்களின் (சங் 102:8) அல்லது அவருடைய நண்பர்களின் பழித்துரையாக (நெக 6:13) விவரிக்கின்றார். சங் 44:13; 79:4 போன்றவை இஸ்ராயேல் அண்டை நாடுகளின் கேலிக்கு ஆளாகிவிட்டதாக எண்ணிக் கூக்குரலிடுகின்றன. நெக 4:4; சங் 79:12 போன்றவை பகைவர்களுடைய பழிச்சொற்கள் அவர்களுடைய தலைமீதே விழும்படி யாவேயிடம் வேண்டுகின்றன. ஏனெனில் உண்மையில் யாவேயைத்தான் அவர்கள் பழித்துரைக்கின்றனர் (சங் 79:12). பகைவனின் நிந்தனை, அழிந்த இஸ்ராயேலுக்கு எதிராகவும், கடவுளுக்கு எதிராகவும், ''உங்கள் கடவுள் எங்கே'' (சங் 42:10) என்று எழுதப்பட்டது. செப் 2:8 ஆண்டவரைப் பழித்துரைத்தவர்கள் அடையும் சன்மானத்தை முன்னோக்குகிறது. மேலும் பழித்துரை ஒரு பொருள் பல சொல்லாக இறைத்தீர்ப்பினால் ஏற்படும் முழுமையான அழிவினை விவரிக்கும் போது பயன்பட்டுள்ளது (எரே 24:9; 42:18; 44:8; 12:49;13; எச 3:15).

ஏற்றப்பாடல்கள் (SONGS OF ASCENTS)

இது சங் 120-134 வரை உள்ள சங்கீதங்களுக்கு அளிக்கப்படும் தலைப்பு. இந்தத் தலைப்பின் பொருளை விளக்குவது கடினம். ஒரு வேளை, புத்தாண்டின் ஊர்வலத்தில் ஆலயத்தை நோக்கி ஊர்வலம் போகும் போது பாடப்படும் பாடல்களாக இருக்கலாம். அல்லது எருசலேமை நோக்கிச் செல்லும் திருப்பயணிகளால் பாடப்பட்டிருக்கலாம்.

இத்தொகுப்பு படிக்கீதம் என்றும் அழைக்கப்படும். இப்படிகள் இரண்டாம் ஆலயத்தில் பெண்கள் முற்றத்திலிருந்து ஆண்கள் முற்றத்திற்கு இட்டுச் செல்லும் படிகளாகும். யூதப்பாரம்பரியப்படி இப்படிகளில் லேவியர் இச்சங்கீதங்களைப் பாடினர்.

ஏற்றம் இறக்கம் (ASCENTS, DESCENTS)

ஏறுதல், இறங்குதல் என்ற செயல் பொதுவாக மேலோ கீழோ செல்கின்ற சாலையை வைத்தோ, ஒருவன் செல்லும் திசையைப் பார்த்தோ கூறப்படும் சொல். குறிப்பாக மலைக் கணவாய்களைக் குறிக்கும். தாவீது எருசலேமை விட்டு ஒலிவமலைமேல் ஏறிச் சென்றார் (2 சாமு 15:30). இயேசுவும் அதே மலையில் இருந்து கீழிறங்கி நகரை நெருங்கினார் (லூக் 19:37). எருசலேம் மதிலில் உள்ள படிக்கட்டு (நெ 12:37), நகரிலுள்ள ஆயுதக் கிடங்குக்குச் செல்லும் வழி (நெக 3:19), அரசர்களின் கல்லறைக்குச் செல்லும் பாதை (2 நாள் 32:33) ஆகியவை ஏற்றத்தைக் குறிக்கும்.

பாலஸ்தீனில் இஸ்ராயேலிடமிருந்த முக்கியமான பகுதி யோர்தானுக்கு மேற்கே உள்ள கரடு முரடான மலைப்பகுதியாக இருந்தது. இங்குச் செல்லும் கணவாய்ப் பாதைகள், புவியியல், பொருளாதார, இராணுவ அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்தன. அவைகள் மலைகளை நோக்கிச் செல்வதால் ஏற்றம் என அழைக்கப்பட்டன. மலைப்பகுதிகளுக்கு மேற்கே அப்படிப்பட்ட 2 பாதைகள் உள்ளன. ஒன்று பேத்து-கோரோன் ஏற்றம். இங்குதான் யோசுவா எமோரிய அரசர்களின் கூட்டணியைத் துரத்திச் சென்று தோற்கடித்தார் (யேசு 10:10-11). மற்றொன்று சமாரியாவில் உள்ள கூர் என்னும் இடத்திற்குப் போகும் வழி. இங்குதான் ஏகூ அகசியாவைக் கொன்றார் (2 அர 9:27). இம்மலைப்பகுதிகளுக்குக் கிழக்கிலுள்ள யோர்தானின் பிளவுப்பள்ளத்தாக்கில் சிறிய பிளவுகளின் வழியாகத்தான் பயணம்

செய்ய முடியும். இவற்றில் யூதா மலைத் தொடருக்குச் செல்லும் 3 செங்குத்தான பாதைக்கு ''ஏற்றம்'' எனப் பெயருண்டு. சாக்கடலில் இருந்து 25 கி.மீ தொலைவில் தெற்கே உள்ள வாடி அராபாவில் தொடங்கி வடமேற்குத் திசையில் அகிரபிம் ஏற்றம் அமைந்திருந்தது (எண் 34:4; யோசு 13:3; நீதி 1:36). ஏங்கேதியிலிருந்து வடகிழக்குப் பகுதியில் 11கி.மீ. தூரத்தில் சாக்கடலை ஒட்டி சீஸ் என்ற குன்றிற்குச் செல்லும் ஏற்றம் உண்டு (2 நாள் 20:16). வடக்கே அதுமிமிற்குச் செல்லும் ஏற்றம் உண்டு. எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் ஏற்றம் யூதாயாவின் வட பகுதியில் உள்ளது (யோசு 15:7; 18:17). யோம்தான் பள்ளத்தாக்கின் கிழக்கிலுள்ள உலூகித்துக்கு ஏறிப்போகும் வழி (ஏச 15:5; எரே 48:5), கோரோனயிமுக்கு இறங்கிப் போகும் வழி (எரே 48:5), கிலயாத்தில் உள்ள கெரசுக்கு ஏறிச் செல்லும் வழி (நீதி 8:13), யோசுவா வெற்றி பெற்ற ஆயி என்ற இடத்திற்கு அருகே உள்ள செபாரிமுக்குச் செல்லும் வழி (யோசு 7:5) ஆகியவை பெயர் பெற்ற சில ஏற்ற, இறக்கங்களாகும்.

ஏற்புடைமை (JUSTIFICATION)

பொதுவாக ஒருவர் தம்முடைய செயலானது எதிராளியின் செயல்மீது வெற்றியடையச்செய்து தமது செயலின் நீதியைப் பிறரறியச்செய்யும்போது ஏற்புடையவராகிறார். நீதி அவைக்குமுன் இது நிகழ வேண்டும் என்பதோ, எதிராளியானவன் பகைவனாக இருக்க வேண்டும் என்பதோ அவசியமில்லை. நீதியின் எல்லை, சட்டம் அல்லது பழக்கவழக்கம் ஆகியவற்றினுடைய எல்லையையும் கடந்து செல்லுகிறது. ஒவ்வொரு மனித உறவு முறையும் தனக்கேயுரிய நீதியையும் விதிமுறையையும் கொண்டுள்ளது. அந்தச் சிறப்பான நீதியையும் விதியையும் ஒருவர் மதிக்கும்போது, தான் தொடர்புகொள்ளும் ஒவ்வொருவரையும் அவருக்குரிய துல்லியமான முறையில் நடத்துகின்றார். இந்நிலையானது புறக்காரியங்கள், சமூக நிலை மற்றும் நிறைவேற்றிய செயல்கள் ஆகியவற்றால் மட்டுமின்றி, ஒவ்வொருவருடைய ஆழ்ந்த தகுதி, அவருடைய திறமைகள் மற்றும் தேவைகள் ஆகியவற்றாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. ஒவ்வொருவருக்கும் பொருந்திய முறையில் நடத்தும்போது ஒரு நபர் நீதியுள்ளவராக உள்ளார். ஒருவர் தமது நடத்தையிலே குற்றமின்மையைவிட அதன் ஒழுங்குமுறையை விளக்கிக்கூறும்போது அவர் விசாரணையில் அல்லது வழக்கு வாதத்தில் நேர்மையுள்ளவராகிறார்; ஏற்புடையவராகிறார். இம்முறையில் அவர் தமது நேர்மையைப் பிறரறியச் செய்கிறார்.

I இறைவன் முன்னிலையில் ஏற்புடையவனாக்கப்படுதல்:-

இறைவன் முன்னிலையில் ஏற்புடையவனாகத் தோன்றுதல் மற்றும் அவருக்கெதிராக ஒருவன் வெற்றிபெற விரும்புதல் என்பது சிந்தித்துப் பார்க்க முடியாததாகத் தோன்றலாம். இத்தகைய செயலில் ஈடுபடத்துணிவதைவிட, தொடக்கத்திலிருந்தே அழிவிற்குரிய விளைவைக் கொண்ட செயல்முறைகளை இறைவனே தொடங்குவார் என்பது ஒருவரைப் பேரச்சம் கொள்ளச் செய்கிறது. ''நீதி விசாரணைக்கு அடியேன் என்னை அழைக்காதேயும். ஏனெனில் வாழ்வோருள் எவனும் உமது திருமுன் நீதிமான் என்று சொல்வதற்கில்லை'' (சங் 143:2). ஏனெனில் ''யான் செய்த பாவங்களை நினைவு கூர்வீராகில் உமக்குமுன் யார் நிற்க முடியும்?'' (சங் 130:3). ஞானமிக்க முறையானது தனது பாவங்களை அறிக்கையிட்டு, இறைவன் தமது நீதியை வெளிப்படுத்துமாறு அமைதியாக அனுமதிப்பதாகும்; ''உமது நியாய வாக்கினில் உம் நேர்மை துலங்குகின்றது'' (சங் 51:4).

இறைவனின் பார்வையில் மனிதன் என்றுமே ஏற்புடையவனாவதில்லை என்பது விநோதமானதன்று. ஆனால் அவன் இத்தகைய எண்ணத்தைக் கொண்டிருப்பதும் விவிலியம் இதனைப் பகுத்தறிவுக்கு மாறானது என்று கருதாததுமே இதில் வியப்புக்குரியதாகும் என்றும், இறைவன் முன்னிலையில் மனிதன் நீதிமானாகத் தோன்ற முடியாது என்றும் (யோபு 9:2) இருவரும்

சேர்ந்து வழக்காடவும் அவருக்குப் பதில் சொல்லவும் இறைவன் மனிதர் அல்லர் என்றும் (9:32), யோபு அறிந்திருந்தார். ஆனாலும் ''தம்முடைய உரிமையைப்பற்றி அறிந்தவராய், தம்முடைய வழக்கை எடுத்துரைப்பதை'' விட்டுவிடமுடியவில்லை. இறைவன் நீதியுள்ளவராய் இருப்பதால், இறைவன் ஒரு நீதிமானைத் தமது எதிரியாக எதிர்கொள்ளும், யோபு தனது வழக்கை வெற்றி பெறச் செய்யக் கூடியதான (23:7), எதிரெதிர் சந்திப்பினில் அஞ்சக்கூடியது எதுவும் யோபுவிற்கு இல்லை. உண்மையில் இறைவனே யோபுவை மௌனமாக்கி அவரை மடமை மற்றும் நிலையற்ற தன்மை என்னும் குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தினாலும் (38:2; 40:4) அவர் தவறுசெய்தவர் என்று ஒருபோதும் கூறவில்லை. யோபு இறைவனே தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளாமல், ஆபிரகாமின் விசுவாசத்தில் ஒரு செயலைக் கண்டு பிடிக்கிறார். அதில் ஆபிரகாம் தன்னிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட அனைத்திற்கும் சரியாக ஒத்திருக்கிறார் (ஆதி 15:6).

எனவே பழைய ஏற்பாடானது இறைவனின் முன்னிலையில் அடைய இயலாத ஒன்றாகவும், மனிதன் படைக்கப்பட்டதற்குரிய ஒரு நிலையாகவும், ஏற்புடைமையை எடுத்துக் கூறுகிறது. இறைவன் நீதி உள்ளவர். அதாவது அவர் ஒருபோதும் தவறுசெய்வதில்லை. மற்றும் எவரும் அவருடன் விவாதிக்க முடியாது (ஏச 29:16; எரே 12:1). ஆனால் மனிதரையும் அவர் உருவாக்கிய மண்ணையும் அவர்கள் படைக்கப்பட்டதன் நோக்கமான ஒன்றிப்பையும் அறிந்திருந்தால், அவர்கள் அவர் முன்னிலையில் நேர்மையுள்ளவர்களாய் இருக்கும் வாய்ப்பை அவர்களுக்கு மறுக்கவில்லை. அப்படித்தான் அவர்கள் இருக்க வேண்டும்.

II. இயேசு கிறிஸ்துவில் ஏற்புடையவராதல்:-

1. சட்டத்தின் ஆற்றலற்றதன்மை:

பரிசேயனாகிய பவுல் வளர்ந்த யூதச் சட்டமுறையானது பழைய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்தை உண்மையில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அதனை நோக்கியாவது சார்ந்திருக்க வேண்டுமென நம்பியது. அதாவது சட்டமானது இறைவனுடைய சித்தத்தின் வெளிப்பாடாகும்; அதை மனிதன் அடையமுடியும் என்று நம்பியது (உப 3:11 - உண்மையில் மனிதனுடைய அறிவுத் திறமையால் அதைப் புரிந்துகொள்ளவும் எளிதில் அறிந்து கொள்ளவும் முடியும்). இதன் விளைவாக இறைவன் முன்னிலையில் வருவதற்கும், ஏற்புடையவனாவதற்கும், சட்டத்தைக் கடைப்பிடிப்பது மட்டும் மனிதனுக்குப் போதுமானதாகும். இறைவனை அவருக்குரிய தகுதியான முறையில், நீதிக்கேற்ப மனிதன் நடத்த முடியும் என்று எண்ணியதில் பரிசேயருடைய தவறு அடங்கியிருக்கவில்லை. தனது ஆற்றல்களினாலேயே தான் இதனை அடையக்கூடும் என்று நம்பியதிலும் மற்றும் இறைவன் மனிதரிடம் எதிர்பார்ப்பதும், இறைவனை அடைவதுமான மனநிலையைத் தன்னிலேயே காண விரும்பியதிலும் பரிசேயருடைய தவறு அடங்கியுள்ளது. ''இறைவன்முன் பாராட்டப்படும் உரிமையை'' (உரோ 3:27) விரும்பும் இதயத்தின் இந்த நெறிகோணுதல், உடன்படிக்கையை விளக்குவதில் உள்ள அடிப்படைத் தவறிலிருந்து வருகின்றது. இந்தத் தவறான விளக்கமானது வாக்குறுதிகளினின்று சட்டத்தைப் பிரிக்கின்றது. இறைவன் முன்னிலையில் ஏற்புடையவராக்கப்படுதலின் ஒரு சாதனத்தை அது சட்டத்தில் காண்கிறது. சட்டத்திற்குப் பிரமாணிக்கமாய் இருப்பதே இறைவனுடைய செயலாகவும், அவரது வார்த்தையின் நிறைவேறுதலாகவும் மட்டுமே இருக்க முடியும் என்பதை மறந்து விடுகிறது.

2. இயேசுகிறிஸ்து:-

இப்போது இயேசு கிறிஸ்து உண்மையிலேயே நீதிமானாக இருந்தார் (அ.ப.3:14). இறைவனின் பார்வையில், இறைவன் விரும்பியவாறு, தந்தையே இறுதியாகப் பூரிப்படைய திருப்தியடையக்கூடிய ஊழியனாக அவர் தோன்றினார் (ஏச 42:1; மத் 3:17). ''எல்லா நீதியையும் நிறைவேற்றுவது'' (மத் 3:15) எப்படி என்பதை அவர் இறுதிவரை

அறிந்திருந்தார். இறைவன் மகிமைப்படுத் தப்படுவதற்கென அவர் இறந்தார் (யோவா 17:1.4). அதாவது எல்லாப் பலிகளுக்கும் தகுதியுடையவரும், எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்யப்படக்கூடியவருமாய் (யோவா 14:30), இறைவன் தமது எல்லாமகி மையிலும் மேன்மையிலும் உலகிற்கு முன் பாகத் தோன்றுவார். ஒதுக்கப்பட்டவராக இயேசு தோன்றித் தமது மரணத்தில் (ஏச 53:4; மத் 27:43-46), இயேசு உண்மையி லேயே ஏற்புடையவரானார். அவரை உயிர்ப் பித்து, தூய ஆவியை முழுமையாக அடைந் தவராக அவரை உருவாக்கியதன் மூலம் (1 திமோ 3:16), இறைவன் அவர் செய்து முடித்த பணியை ஏற்று அங்கீகரித்தார் (யோவா 16:10).

3. அருள்:-

ஆனால் இயேசுவினுடைய உயிர்ப்பின் நோக்கம் ''நம்மிடையே ஏற்புடைமையா கும்'' (உரோ 4:25). சட்டமானது நிறை வேற்ற முடியாமல் உறுதியாக விலக்கிவிட் டதை, இறைவனின் அருளானது கிறிஸ்து வின் மீட்பில் நமக்கு அளித்துள்ளது (உரோ 3:23-24). ஏற்புடைமையாகிய இந்தக் கொடை வெறும் பாசாங்கு நடிப்பன்று; இறைவனைப் பொருத்த மட்டும் சலுகை கொடுக்கும் அருள்பாலிப்பன்று. இந்தக் கொடையின் விளைவாக, கிறிஸ்துவின் முழுமையான ஏற்புடைமையின் பொருட்டு, நாம் கிறிஸ்துவோடு கொண்டி ருக்கும் தொடர்பின் காரணமாக, நாம் ஏற்பு டைமை அடைந்தவர்களாய்க் கருதப்பட அவர் விருப்பமாய் இருக்கின்றார். மன்னித் தல் மற்றும் விடுவித்தல் எனும் ஒரு எளிய தீர்ப்பைப் பவுல் சுட்டிக்காட்ட விரும்பிய போது, ஏற்புடைமையோடு தொடர்புடைய சொல்லையே அவர் பயன்படுத்தவில்லை. ஏனெனில் அது தெளிவான சட்ட உரி மையை அங்கீகரிப்பதையும், ஒருவருடைய நிலையின் செயல் முறையை உறுதிப்படுத்து வதையும் உணர்த்தலாம். பவுல், நம்மை ஏற்புடையவராக்கும் இறைவனுடைய செயலை அவரது நீதிக்குச் சாற்றிக் கூற வில்லை. அவருடைய தூய இரக்கத்திற்கே சாற்றிக் கூறுகிறார். இறைவன், கிறிஸ்துவில் ''அவர் அருள் மிக்கவராகவும்,இயேசுவில் விசுவாசம் கொள்பவன் தமக்கு ஏற்புடைய வனாகும் படியும், தமது நீதியைக் காட்ட விரும்பினார்'' (உரோ 3:26) என்பதே உண் மையாகும்.

4. இறைவனின் பிள்ளைகள்:-

இறைவன் முதன் முதலாக ''நமது பாவங் களுக்காகக் கையளிக்கப்பட்டு'' (உரோ 4:25), தனது கீழ்ப்படிதல் மற்றும் நேர்மை யின் மூலமாகப் பலருக்கு ஏற்புடைய நிலை யினையும் நீதியையும் பெற்றுத்தந்த (உரோ 5:16-19) தமது மகனுக்குத் தமது நீதியை வெளிப்படுத்துகிறார். நமது ஏற்புடைமை யைப் பெற்றுத்தரும் வல்லமையை இறை வன் இயேசுகிறிஸ்துவிற்கு அளித்தார் என்ற உண்மையானது, இறைவன் தமது மகன் பால் கொண்ட மதிப்பின் காரணமாக, நம்மை நேர்மையுடையவர்களைப்போல நடத்த இணங்கினார் என்ற பொருள் கொடுக்கவில்லை. அவர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் சரியான மனநிலையைக் கொண்டிருக்கவும், அவருக்குரிய விதத்தில் அவரை நடத்தவும் மற்றும் அவருக்குரிய நீதியை உரிய விதத்தில் அவருக்குச் செயல் முறையில் அளிக்கவும், கிறிஸ்து நம்மால் கூடுமானதாக ஆக்குகிறார். கருக்கமாக உண் மையிலேயே அவர் முன்னிலையில் ஏற்பு டையவராக்குகிறார் என்பதே பொருளா கும். தாம் உரிமைகொண்டுள்ள மாட்சிமை மற்றும் மகிமையை விட்டுக் கொடாமல், இவ்வாறு இறைவன் தமக்கே நேர்மையுள்ள வராக உள்ளார். அவரை நோக்கி நேரிய விதத்தில் அமைக்கப்படவும், தங்களுடைய தந்தையாக அவரை நடத்தவும், அதாவது அவருடைய உண்மையான பிள்ளைகளாக வும் இருக்குமாறு (உரோ 8:14-17; யோவா 3:1-2) அவர்களுடைய உள்மனதுவரை ஊடு ருவிச் செல்கின்ற தமது அருளினால் மட்டும் அனுமதிக்கின்ற தமது படைப்புகளிடமும் அவர் நேரியவராக உள்ளார்.

III விசுவாசத்தினால் ஏற்புடையவராதல்:-

இறைவன் நம்மை ஏற்புடையவராகச் செய்கின்ற மறுபிறப்பானது எந்தவித யாந்தி

ரீக மாற்றமல்ல. நம்மோடும் நமது மகிமை யோடும் உள்ள நம்முடைய பிடிப்புகளி னின்று நம்மை விடுவிப்பதன் மூலமும் (யேவோ 7:18) விசுவாசத்தில் நம்மைக் கிறிஸ்துவோடு இணைப்பதன் மூலமும் (உரோ 3:22தொ), நமது இயக்கங்களிலும் இது உண்மையாகவே நம்முள் நிகழ்கிறது. இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் கொள்வ தென்பது உண்மையில் தந்தை அனுப்பிய அவரை அறிதலாகும். இந்த விசுவாசத்தி னால், ஒவ்வொருவரும் அவருடைய வார்த் தைகளை அன்புடன் போற்றி வளர்க்கின்ற னர்; அவரது அரசிற்காக அனைத்தையும் இழக்கத் தயாராக உள்ளனர்; கிறிஸ்துவை அடைவதற்காக அனைத்தினுடைய இழப் பையும் ஏற்கின்றனர்; விசுவாசத்தை அடிப்ப டையாகக் கொண்டு இறைவனிடமிருந்து வருகின்ற நீதியைப் பெறுவதற்காகச் சட்டத் தினின்று வருகின்ற ஒருவருக்குரிய நீதியை யும் தியாகம் செய்கின்றனர் (பிலி 3:8-9). இயேசுகிறிஸ்துவில் விசுவாசங்கொள்பவர் ''இறைவன் நமக்கெனக் கொண்டுள்ள அன்பை அறிந்தவராய்'', ''அன்பே கடவுள்'' என்று பறைசாற்றுகின்றார் (1 அரு 4:16). கிறிஸ்துவினுடைய மறைபொருளின் மையத்தை விசுவாசி அடைந்து விட்டார். அவர் நேர்மையானவர் ஏற்புடையவர் ஆகி றார்.

ஏனா (HENA - தொந்தரை செய்யும்)

2 அர 18:34; 19:13; ஏச 37:17-இல் குறிப்பி டப்படுகின்ற ஒரு நகர். இது இருந்த இடம் தெரியவில்லை. 1 அர 18:13-36-இல் அசீரிய அரசன் சனகெரிபோடு தொடர்புபடுத்தப் படுகிறது. கி.மு. 838-இல் இவர் எருசலே முக்கு எதிராக முற்றுகையிட்டார். இலாக்கீ சிலிருந்த தன் தலைமையகத்திலிருந்து, தூது வர்களை எசக்கியாவிடம் அனுப்பி, அசீரியா வுக்கு எதிரான கொள்கையை விட்டுவிடும் படித் தூண்டினார். அசீரியத் தூதுவர்கள் எசக் கியா வெற்றி பெறமுடியாது என்றும், மற்ற அரசர்களும் இதேபோல் செய்தார்கள் ஆனால் வெற்றிகிட்டவில்லை என்றும் எடுத்துக் கூறினார்கள். இதற்கு எடுத்துக்காட் டாக மற்ற நாடுகளின் வீழ்ச்சியைக் குறிப்பி டும்போது 'ஏனா' இந்நகர்களில் ஒன்று என்று குறிப்பிடப்படுகிறது.

இது இருந்ததாகப் பல இடங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவற்றில் ஒன்று யூப்பி ரத்திசின் கரையிலுள்ள இக்கால ''ஆனா'' வாகும். மற்றது பாரசீக வளைகுடாவின் பகுதியிலுள்ளது.

ஏனாம் (ENAM - ஊற்றுள்ள இடம்)

யூதாவில் உள்ள சோரா-அசக்காவின் செப் பேலா மாவட்டத்திலுள்ள ஒரு கிராமம். அநேகமாக இது எனாயிமாக இருக்கலாம் (யோசு 15:34).

ஏனான் (ENAN - சிறியஊற்று)

நப்தலி கோத்திரத்தில் அகிராவின் தந்தை (எண் 1:15; 2:29; 7:78.83; 10:27). இப்பெயர் கசர்-ஏனான் என்ற பெயரில் பாதுகாக்கப்பட் டிருக்கிறது.

ஏனெகிலயிம்/ஏன்-எகிலயிம் (EN-EGLAIM -இருகன்றுக் குட்டிகளின் ஊற்று)

சாக்கடலின் கரையில் அமைந்துள்ள ஓர் இடம். இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப் படுவது பற்றிய எசக்கியேலின் காட்சிப்படி, திருக்கோயிலின் நீரூற்றிலிருந்து புறப்படு கின்ற ஆற்றில் செம்படவர் மீன்பிடிப்பார் கள். அவர்கள் ஏங்கேதி ஊர் தொடங்கி இந்த ஏனெகிலயிம் ஊர் வரையிலும் மீன் வலை களை உலர்த்துவார்கள் (எச 47:10).

இந்த இடம் எங்குள்ளது என்று உறுதியா கக் கூறமுடியாது. அயின் கச்லா (பேத் கோக்லா) இவ்விடமாக இருக்கலாம் என்று சிலர் கூறினாலும், கிர்பெத் கும்ரானுக்குத் தெற்கில் 2 கி.மீ. தொலைவிலுள்ள அயின் பெசுகா பொருத்தமான இடமாக இருக்க லாம்.

ஏனோக்கு (ENOCH - அர்ப்பணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட) - ஆள்

1. காயினின் மகன். ஏனோக்கிற்கு ஈராது என்னும் புதல்வன் ஒருவன் உண்டு (ஆதி 4:17.18).

2. மகலலேலின் வாரிசான யாரேது என்ப வரின் மகன் *(ஆதி 5:17-24)*. ஏனோக்கு *65* ஆண்டுகள் வாழ்ந்தபின் மெத்துசலாவைப் பெற்றார் *(5:21)*. அதற்குப்பின் *300* ஆண்டு கள் இறைவனுக்கு உகந்த விதமாய் வாழ்ந்து புதல்வர் புதல்வியரைப் பெற்றார் *(5:22.24; 6:9; 17:1)*. அவருடைய மொத்த வாழ்நாட் கள் *365* ஆண்டுகள் *(1 நாள் 1:3; லூக் 3:37)*. ஏனோக்கு விண் எடுக்கப்படுதல் பிற்காலத் திய பல கதைகள் தோன்றச் செய்தது *(ஞான 4:10; யூதா 14)*. காண்க. ஏனோக்கின் நூல்.

ஏனோக்கு (ENOCH - அர்ப்பணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட) - இடம்

இது, காயின் மூத்த மகன் பெயரால் கட்டிய நகரம் *(ஆதி 14:17)*.

ஏனோக்கின் நூல் (BOOK OF ENOCH)

கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்கப் படாத ஒரு நூலாகும். இந்நூல் எபிரேயத் திலோ, அராமாயிக்கிலோ எழுதப்பட்டது. ஆதி.5:18-24-ஐ அடிப்படையாகக் கொண் டது. இது 108 அதிகாரங்களைக் கொண்டது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இந்நூல் கிரேக் கம், எத்தியோப்பியா, இலத்தின் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. யூதர்கள், மற்றும் கிறிஸ்தவர்கள் இந்நூலைப் பற்றி அறிந்திருந்தனர். கத்தோலிக்கத் திரு மறையினரால் ஏற்றுக் கொள்ளப்படாத பல நூல்கள் ஏனோக்கின் நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும். இந்நூல் கி.மு. முதலாம் நூற்றாண்டில் தோன்றியிருக் கலாம் எனக் கருதப்படுகிறது. ஏனோக்கின் நூல் பொதுவாக ஒரு வெளிப்பாடாகக் கரு தப்படுகிறது. இந்நூலின் ஒரு சிறுபகுதியே வெளிப்பாடாகும். இப்புத்தகத்தை 7 பகுதிக ளாகப் பிரிக்கலாம்.

1. முன்னுரை:- (1 முதல் 5 வரையிலான அதிகாரங்கள்)

இதில் இப்புத்தகத்தின் மையக்கருத்து கூறப்படுகிறது. தீயோர் தண்டிக்கப்படுவர், நல்லோர் ஆசிர்வதிக்கப்படுவர் என்பதே இக்கருத்து. உலகத்தின் முடிவு முன்னுரைக் கப்படுகிறது.

2. புத்தகம் 1:- வானதூதர்களும், பிரபஞ்ச மும்:- (6-36 அதிகாரங்கள்)

இதில் வீழ்த்தப்பட்ட வானதூதர்களைப் பற்றியும், அவற்றின் தீய, நாச வேலைக ளைப் பற்றியும் காண்கிறோம். ஏனோக்கு, சபிக்கப்பட்ட இந்த வானதூதர்களுக்காக மன்றாடுகிறார். ஆனால் அவர்களின் முடி வில்லாத தண்டனை அவருக்குக் காட்டப் படுகிறது.

3. புத்தகம் 2:- உவமைகள்: (37-71 அதிகா ரங்கள்)

தீயோரின் தண்டனையும் நல்லோரின் வெற்றியும் உவமைகளில் கூறப்படுகின்றன. ஏனோக்கு ஒரு தெய்வப்பிறவியாகக் காட்சி யளிக்கிறார். இதில் மூன்று உவமைகள் கூறப்படுகின்றன.

4. புத்தகம் 3:- வானக விளக்குள்:- (72-82 அதிகாரங்கள்)

இதில் ஏனோக்கைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் வருடங்களைப் பற்றியும் அவற்றின் கணக்கீடு பற்றியும் செய்திகள் உள்ளன. எழுத்தியல், கணிதம், வானவியல் போன்றவற்றின் தந்தையென ஏனோக்கு போற்றப்படுகிறார்.

5. புத்தகம் 4:- கனவுக் காட்சிகள்:- (83-90 அதிகாரங்கள்)

இரண்டு காட்சிகள் விவரிக்கப்படுகின் றன. முதல்காட்சி தண்டனையின் பெரு வெள்ளத்தைப் பற்றியும், தவறிய வானதூதர் களைப் பற்றியும் கூறுகிறது. இரண்டாம் காட்சி ஆதாமிலிருந்து ஏனோக்குவரை நடந்த நிகழ்ச்சிகளைக் கூறுகிறது. இதில் கற்பனையாகக் குறிப்பு உருவகம் பயன் படுத்தப்படுகிறது. உதாரணமாக, எருதுகள் முன்னோர்களுக்கும், ஆடுகள் இஸ்ராயேல் மக்களுக்கும் உருவகப்படுத்தப்படுகின்றன.

6. புத்தகம் 5:- ஒழுக்க அறிவுரைகள்:-(91-105 அதிகாரங்கள்)

ஏனோக்கு, தீயோரின் தண்டனையையும், நல்லோரின் வாழ்வையும் முன்னுரைக்கின் றார். இதில் 10 வாரங்களில் நிகழ்ந்த வெளிப்

பாடு வர்ணிக்கப்படுகிறது. இதில் படிப்படியாக தீமை எப்படி ஒழிக்கப்படுகின்றது என விளக்கப்படுகிறது.

7. முடிவுரை:- (106-108 அதிகாரங்கள்)

முடிவுரையிலும் இறுதித் தீர்ப்பின் தன்மைகள் கூறப்படுகின்றன. இந்நூல் ஒரு சிக்கலான நூலாகும். இதில் காணப்படும் கருத்துக்களும், அவை கையாளப்பட்டுள்ள விதமும் ஒழுங்காக அமையவில்லை. இந்நூலின் செல்வாக்கு பழைய, புதிய ஏற்பாட்டு நூல்களில் காணப்படுகிறது. இந்நூலில் காணப்படும் பலகருத்துக்கள் புதிய ஏற்பாட்டு நூல்களில் காணப்படுகின்றன. திருச்சபையின் தந்தையரும் இதைப் பயன்படுத்தியுள்ளனர். இதன் செல்வாக்கு நெடுங்காலத்திற்கு நீடித்தது.

ஏனோசு (ENOSH - மனுக்குலம், மனிதன்)

சேத்தின் மூத்த மகன். ஆதாமின் பேரன். கேனாவின் தந்தை (ஆதி 4:26; 5:6-11; 1 நாள் 1:1; லூக் 3:38). ஏனோசின் மொத்த வாழ்நாட்கள் 905 ஆண்டுகள்.

ஏனோசு காலத்தில்தான் 'யாவே வழிபாடு' அதாவது ஆண்டவரின் திருப்பெயரைச் சொல்லி வழிபடும் முறை தொடங்கப்பட்டது என்று யாவே பாரம்பரியம் எடுத்துரைக்கிறது (ஆதி 4:26).

ஏன் (EN - ஊற்று)

ஊற்றைக் குறிக்கும் எபிரேயச் சொல். ஊற்றுக்கருகில் உள்ள இடங்களின் பெயர்களுக்குமுன் இச்சொல் சேர்க்கப்படுகிறது.

உ.ம். ஏன் சேமசு, ஏன்-தப்புவாகு.

ஏன் சேமசு (EN-SHEMESH - சூரியன் ஊற்று)

யூதாவின் வட எல்லையிலும் (யோசு 15:7), பென்யாமின் தென் எல்லையிலுமாய் (18:7) அமைந்துள்ள ஓர் ஊற்றாகும். எருசலேமுக்குக் கிழக்கே 4 கி.மீ. தொலைவிலும் பெத்தானியாவுக்குக் கிழக்கிலும் அயின் ஏல்-கோத் என்ற இடம் இதற்கு அடையாளம் காட்டப்படுகிறது. எருசலேமையும் யோர்தான் பள்ளத்தாக்கையும் இணைக்கும் பாதையில் உள்ள கடைசி நீரூற்றாகும். கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பாரம்பரியப்படி, அப்போஸ்தவர்கள் இந்நீரூற்றில் நீர் அருந்தினர். அப்போதிலிருந்து இது ''அப்போஸ்தலர்களின் நீரூற்று'' என்றழைக்கப்படுகிறது.

ஏன் தப்புவாகு (EN-TAPPUAH - தப்புவா ஊற்று)

மனாசேயின் தென் எல்லையில் தப்புவாகு அருகில் அமைந்துள்ள ஒரு நீரூற்று (யோசு 17:7). தப்புவாகு என்ற ஊர் அநேகமாக எப்பிராயிம் புதல்வரின் கைவசமாய் இருந்தது எனலாம் (17:8). நீரூற்றால் பயனடைந்த இடம் மனாசேக்குச் சொந்தமாயிருந்தது. அவர்களைப் பாதுகாத்த பெரிய ஊர் எப்பிராயீமுக்குச் சொந்தமாய் இருந்ததாகத் தெரிகிறது. இந்த இடம் செக்கேமுக்குத் தெற்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள யாசூப் நீரூற்றாக இருக்கலாம்.

ஏன் - மிசுபாத்து (EN-MISHPHAI - தீர்ப்பின் ஊற்று)

நெகேபில் உள்ள ஒரு பாலைவனச் சோலை. ஒரு வழிபாட்டு இடமாகவும் இருக்கலாம். இங்குக் கெதர்லாகேமோரும் அவரது கூட்டணி அரசர்களும் அமலேக்கியர்களைத் தோற்கடித்தனர் (ஆதி 14:7). இது பிற்காலத்தில் காதேசு அல்லது காதேசு-பார்னேயா என்றழைக்கப்பட்டது. காண்க: காதேசு

ஏன்-ரிம்மோன் (EN-RIMMON - (மாதுளை ஊற்று)

சிமியோன் கோத்திரத்திற்குக் கிடைத்த நகரங்களில் ஒன்று (யோசு 19:7; 1 நாள் 4:32). பின்பு யூதாவிலுள்ள கோர்மாவின் நெகேபு மாவட்டத்தில் சேர்க்கப்பட்டது (யோசு 15:32).

நாடு கடத்தலிலிருந்து திரும்பியவர்கள் ஏன்-ரிம்மோனில் மீண்டும் குடியேறினர் (நெக 11:29). இவ்விடம் பேயேர்-செபவுக்கு

வடகிழக்கில் 14 கி.மீ. தொலைவில் பெயிட்-இப்ரின் நோக்கிச் செல்லும் சாலையில் உள்ள கிர்பெத் உம்மா-ஏர்ரமாமின் என்று அடையாளம் காட்டுவர். எழுபது நூல் வாசகத்தைப் பின்பற்றி யோசு 15:32; 1 நாள் 4:32-இல் வரும் அயினும் ரிம்மோனும் சேர்த்து அயின்-ரிம்மோன் அதாவது ஏன்-ரிம்மோன் என்று வாசிக்கப்படவேண்டும். கிறிஸ்துவக் காலத்தில் ஏன்-ரிம்மோன் ஒரு பெரிய கிராமமாக விளங்கியது என்று யுசேபியு கூறுகிறார்.

ஏன் ரோகேல் (EN-ROGEL - வண்ணான் ஊற்று)

எருசலேமிற்கு அருகில் கிதரோன் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு நீர் ஊற்று. யூதாவுக்கும் பென்யாமின் பகுதிகளுக்கும் எல்லையாக அமைந்திருந்தது (யோசு 15:7). தாவீது தனது மகன் அபிசலோமுக்குப் பயந்து ஓடிந்திரிந்த போது, கிளர்ச்சி செய்யும் தன் மகனது திட்டத்தைப் பற்றி முக்கியமான செய்தியை இங்குதான் பெற்றார் (2 சாமு 17:17). தாவீதின் இரண்டாம் மகன் அதோனியா, இந்த ஊற்று அருகிலுள்ள சோகெலத்து என்ற பாம்பின் கல்லின் அருகில் இரகசியமாக முடிசூட்டிக்கொள்ள முயற்சித்தார் (1 அர 1:19).

கிதரோன், இன்னோம் பள்ளத்தாக்குகள் சந்திக்கும் இடத்தில், ஆலயப் பாதைக்குச் சிறிது கீழேயும், கிகோன் ஊற்றுக்கு மிகவும் தாழ்ந்த இடத்திலும் அமைந்துள்ளது இந்த ஊற்று. எருசலேமுக்கு நிலையாக நீர் தந்தது. இந்த ஊற்று 37 மீட்டர் ஆழமுடையது. ஒருவேளை நெக 2:13-இல் வரும் நரியின் கிணறு அல்லது பறவை நாகம் என்ற நீரூற்று ஏன் ரோகேலையே குறிக்கலாம். இதன் இக்காலப் பெயர் பீர் அய்யூப் (யோபின் ஊற்று) என்பதாகும். ஏனெனில் அராபியர் பாரம்பரியப்படி யோபு, தனது நோய்களினின்று இங்குதான் குணமானார். யூதப் பாரம்பரியம் இதை யோவாபின் ஊற்று என்றழைக்கிறது. ஏனெனில் அதோனியா இங்கு அழைத்தவர்களுள் தாவீதின் படைத் தலைவன் யோவாபும் இருந்தார்.

ஐ

ஐசீஸ் (ISIS)

ஓர் எகிப்தியத் தேவதை. ஒசிரிசினுடைய மனைவியும், கோருசினுடைய தாயும் ஆவார். முற்கால எகிப்து நாட்டில், வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே, இத்தேவதையை மேலான தாய்த்தேவதையாகவும், மண்ணின் படைப்புச் சக்தியின் உருவமாகவும் வழிபட்டு வந்தனர். இவளிடம் பெரும் மாய சக்திகள் இருந்ததாகவும், குழந்தைகளின் பாதுகாவலாகவும் கருதப்பட்டாள். தொடக்கத்தில் தெற்கு எகிப்து நாட்டில் இருந்த பென்னிதுஸ் என்பவர்கள் மட்டுமே வழிபட்டு வந்த தேவதையாக ஐசீஸ் இருந்த போதிலும், விரைவில் பலர் வழிபடும் தேவதையாகப் புகழ்பெற்று விளங்கினாள். பல செமித்திய, கிரேக்க, உரோமைத் தேவதைகளோடு ஐசீஸ் ஒன்றுபடுத்தப்பட்டதால் முற்கால உலகம் முழுவதிலும் அவள் வழிபாடு பரவியது. இவள் வழிபாடு உரோமையர்கள் மத்தியில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை நிலவியது.

ஐசோரோ (AESORA)

கோபா மற்றும் சாலேம் பள்ளத்தாக்குடன் சேர்ந்த ஒரு நகரம் (யூதி 4:47); யோசு 11:1-10; நீதி 4:2.17-இல் வரும் காசோரும் இந்நகரமும் ஒன்றே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். நப்தலியில், கலிலேயாக் கடலுக்கு வடக்கேயுள்ள இன்றையத் தேல்-ஏல்-கேதா அன்றையக் காசோர் நகரமாகும்.

ஐந்நூல் அல்லது தோரா (PENTATEUCH OR THORAH)

1. பெயர்:-

விவிலியத்தின் முதல் ஐந்து நூற்கள் அடங்கிய தொகுப்பை யூதர்கள் ''தோரா'' என்றழைத்தனர். 'தோரா' என்ற சொல்லுக்குக் கோட்பாடு, போதகம், கல்வி புகட்டுதல், வழி, சட்டம் என்பன போன்ற பல பொருள் உண்டு. ஆனால் சட்டம் என்ற பொருளே வழக்கில் நிலைபெற்றது. ''மோசேயின் சட்டம்'' என்றும் இத்தொகுப்பு அழைக்கப்பட்டது. இத்தொகுப்பின் பெரும்பகுதி சட்டங்களாகும். மேலும் எப்பொருள் பற்றியும் இறைவன் வெளிப்படுத்தும் விருப்பமே அப்பொருளுக்குரிய சட்டமாகும். மனிதனை மீட்க வேண்டும் என்ற இறைவன் யாவேயின் விருப்பத்தை அல்லது வழியைத் ''தோரா'' வெளிப்படுத்துவதால் இந்நூல் ஒரு சட்டமாகும். எந்தப் பொருளில் எடுத்துக் கொண்டாலும் இது யூதர்களின் சட்ட அமைப்பாகும். அவர்களின் உரிமைப் பத்திரமாகும். இஸ்ராயேலின் வாழ்க்கை மையமாகும். யூத மக்களின் சமய, சமூக வாழ்க்கையை வகுத்து, ஒழுங்குமுறை செய்யும் அடிப்படைச் சட்டமாகும். இத்தொகுப்புக்குத் ''தோரா'' என்ற பெயர் அளிக்கப்பட்டிருந்ததற்குக் காலத்தால் முந்திய சான்று சீராக் ஆகமத்தின் முன்னுரையில் காணக்கிடக்கிறது. இது பற்றிய மேலும் சில குறிப்புகள் எஸ் 6:18; 10:13; நெக 8:2; 13:1; 2 நாள் 25:4; 30:15; 35:12-இல் காணப்படுகின்றன. கிறிஸ்தவ சகாப்தம் தொடங்கியபோது, இச்சொல் ஏற்கெனவே வழக்கில் இருந்தது (மத் 5:17; மாற் 12:16; லூக் 2:22; 10:26; யோவா 1:17; உரோ 2:12). எபிரேய மொழி பேசிய யூதர்கள் விவிலியத்தின் இம்முதல் தொகுப்புக்குச் 'சட்டத்தின் ஐந்தில் ஐந்து பாகம்'' என்ற மற்றொரு பெயரும் கொடுத்தனர். இதிலிருந்து ''தோரா'' ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டதற்குப் பின்வரும் காரணம் காட்டலாம். பழங்காலத்தில் நாணற்புல்லால் (பாப்பிரஸ்) செய்யப்பட்ட தாளில் எழுதினர். அல்லது தோலினால் செய்யப்பட்ட தாளில் எழுதினர். இவ்வாறு எழுதப்பட்டவை சுருள் சுருளாக இருக்கும். தோரா முழுவதும் ஒரே நீண்ட சுருளில் எழுதப்பட்டிருந்ததால் அது மிகப் பெரிதாக இருந்திருக்கும். அன்றாடப் பழக்கத்திற்கு மிகப் பெரியதாக இருப்பது இடைஞ்சலாக இருந்திருக்கும். ஆகையால் ஒரே சுருள் ஏறக்குறைய சமமான ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டு ஐந்து உறைக் கூடுகளில் வைத்துக் காப்பாற்றப்பட்டது. காலப்போக்கில் இப்பிரிவே வழக்கில் நிலைத்துவிட்டது எனலாம். ''சட்

டத்தின் ஐந்தில் ஐந்து பாகம்'' என்ற எபிரேயப் பெயரைக் கருத்தில் கொண்டு, கிரேக்க மொழி பேசிய யூதர்கள் ''ஐந்து பகுதியுள்ள நூல்'' என்று பொருள்படும் ''பெண்டாடெயுக்கோஸ்'' என்று இத்தொகுப்பை அழைத்தனர். ''பெண்டா'' = ஐந்து; ''டெயுக்கோஸ்'' =கருவி, கலம், தாழி. பெண்டாடெயுக்கோஸ் என்பது முதலில் எழுத்துச் சுருளை வைத்திருந்த தாழியைக் குறித்தது; இந்தக் கிரேக்கச்சொல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே வழக்கில் இருந்துள்ளது. தோரா ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டது அதற்கு முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும். திருநூலின் கிரேக்க மொழிபெயர்ப்பான எழுபது நூல் தோராவை ஐந்து பாகமாகக் கொண்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பு கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பே வழக்கில் இருந்திருக்க வேண்டும். பெண்டாடெயுக்கோஸ் என்பது இலத்தீன் மொழியில் ''பெண்டடெயுக்குஸ்'' என்று எழுத்துப் பெயர்ப்பாயிற்று. இதைக் கருத்தில் கொண்டு, இத்தொகுப்பை ''ஐந்நூல்'' என்றழைக்கலாம். இக்கட்டுரைத் தொடரில் இத்தொகுப்பைத் தோரா என்றும், ஐந்நூல் என்றும் அழைப்போம். இரண்டும் ஒரே தொகுப்பைக் குறிக்கவல்லன.

2. ஐந்து பாகங்களின் பெயர்கள்:-

ஒரே நூலாகிய தோரா, பிரிக்கப்பட்டு ஐந்து உறைக்கூடுகளில் அல்லது தாழிகளில் வைக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில் ஒவ்வொரு பகுதியும் ஒரு நூலாகக் கருதப்பட, ஐந்நூல்கள் கொண்ட ஒரு தொகுப்பாகத் தோரா கருதப்பட்டது. ஒவ்வொரு பாகத்திற்கும் தனிப்பெயர் அளிக்கப்பட்டது. எபிரேய மரபில் ஒருநூலுக்கு அது தொடங்கும் முதல் வார்த்தையைப் பெயராகக் கொடுப்பதுண்டு. அதைப் பின்பற்றி. இவ்வைந்து நூலுக்கும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மாறாகக் கிரேக்கப்படிவமான எழுபதுநூல் நூலின் பொருளடக்கத்தைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பகுதிக்கும் பெயர் கொடுக்கிறது.

இவ்வாறு முதல் நூல், எபிரேயத்தில் 'தொடக்கத்தில்' என்ற பொருள்படும் ''பெரேசித்'' என்ற சொல்லோடு தொடங்குகிறது. ஆகையால் எபிரேயத்தில் அச்சொல்லையே முதல் நூல் தன்பெயராகக் கொண்டுள்ளது. மாறாக, முதல்நூல் உலகம் உண்டாக்கப்பெற்ற வரலாற்றோடு தொடங்கி, உலகமும் அதன் பொருட்களும் தோன்றிய வரலாற்றைக் கூறுவதால் ''தொடக்கம்'' என்று பொருள்படும் ''கெனேசிஸ்'' என்று இந்நூலை அழைத்தது எழுபதுநூல். நாம் தமிழில் ''ஆதியாகமம்'' என்றும் ''தொடக்கநூல்'' என்றும் அழைக்கிறோம்.

இரண்டாவது நூல் எபிரேயத்தில் ''இவைதான் பெயர்கள்'' என்ற பொருள் உள்ள பெயரைக் கொண்டுள்ளது. எழுபது நூல் இந்நூலை ''வெளிப்போதல்'' என்றழைத்தது. ஏனெனில் இந்நூல் எகிப்திலிருந்து இஸ்ராயேல் கானான் நாட்டுக்குப் புறப்பட்ட வரலாற்றைத் தருகிறது. இதனை நாம் ''யாத்திரை ஆகமம்'' அல்லது ''விடுதலைப் பயணநூல்'' என்றழைக்கிறோம். மூன்றாவது நூல் எபிரேயத்தில் ''அவர் அழைத்தார்'' என்ற பொருளுள்ள பெயரைக் கொண்டுள்ளது. இந்நூல் லேவிகுலக் குருக்களுக்குரிய சட்டத்தைக் கொண்டுள்ளது. ஆகையால், எழுபது நூல் இதனை ''லேவியர் சட்டம்'' என்றழைத்தது; நாம் ''லேவியர் ஆகமம்'' அல்லது ''வழிபாட்டு நூல்'' என்றழைக்கிறோம். நான்காவது நூல் எபிரேயத்தில் ''அவர் பேசினார்'' என்று பொருள்படும் பெயராலும், ''பாலைவனத்தில்'' என்று பொருள்படும் பெயராலும் அழைக்கப்பட்டது. இந்நூலின் முதல் நான்கு அதிகாரங்கள் கணக்கெடுப்பைப் பற்றிக் கூறுகின்றன. ஆகையால் எழுபதுநூல் இதை ''எண்ணுதல்'' அல்லது கணக்கெடுப்பு என்றழைத்தது. நாம் எண்ணாகமம் அல்லது ''எண்ணிக்கைநூல்'' என்றழைக்கிறோம். ஐந்தாவது நூல், எபிரேயத்தில், ''இவை (மோசே பேசிய) சொற்கள்'' என்று பொருள்படும் பெயரால் அழைக்கப்பட்டது. இந்நூலின் பெரும்பகுதி சட்டங்களால் ஆனதாகும். ஆகையால் எழுபது நூல் இதை ''இரண்டாம் சட்டம்''என்றழைத்தது. நாம் இதை ''உபாகமம்'' அல்லது ''துணை

அல்லது இரண்டாம் சட்டநூல்'' என்றழைக் கிறோம்.

தோரா, யூத வேத இலக்கியங்களில் உண்மையில் ஒரே நூலாக விளங்கியது. இது இஸ்ராயேலின் வரலாற்றின் முக்கியத்துவமிக்க சீனாய் உடன்படிக்கை நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு விளங்குகிறது. இவ்வுடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்ட இச்சட்டங்கள் மோசேயால் அளிக்கப்பட்டனவாகக் கருதப்பட்டன. வரலாற்று நிகழ்ச்சிகளும் சட்டங்களும் அடங்கிய இத் தொகுப்புக்கு இவ்வுடன்படிக்கை ஒருமைப் பாட்டை அளிக்கிறது; பொருள் அளிக்கிறது. வரலாற்று நிகழ்ச்சியுரைகள் இச்சட்டத் தொகுப்பிற்குப் பணிச்சட்டமாக அமைகின்றன.

3. பிரச்சனை:-

தோரா என்ற இந்நூலை யார் எழுதியது? இந்நூல் எப்படித் தோன்றியது? இக்காலத்தில் வெளிவரும் நூல்களுக்கு இக்கேள்விகள் பெரும்பாலும் எழுவதில்லை. நூற்பெயரையும், முன்னுரை முதலியவற்றையும் பார்த்தால், நூல் தோன்றிய வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் விவிலிய நூல்களில் இச்செய்திகள் காணப்படுவதில்லை. ஆகையால் நம்மால் முடிந்த மட்டும் நூலையே ஆராய்ந்து இச்செய்திகளைச் சேர்க்க வேண்டும். இந்த முறை பொதுவாக இலக்கியப் பகுப்பாராய்ச்சி என்றழைக்கப்படும். இது நூலின் மூல வாசகங்களைக் கவனத்தோடு பகுத்து ஆராய்ச்சி செய்து கருதுகோள் அமைத்தலாகும்.

கிறிஸ்துவ சகாப்தத் தொடக்கத்திலிருந்து, திருச்சபையில் தோராவாகிய இவ்விலக்கியத் தொகுப்பின் பெரும் பகுதிக்கு மோசே ஆசிரியர் என்று கூறப்பட்டது. இது பற்றி, இயேசுவோ அப்போஸ்தலர்களோ எவ்வினாவும் எழுப்பவில்லை (யோவா 1:45; 5:45-47; உரோ 10:5). நமக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பழைய பாரம்பரியங்களும் மோசேதான் ஐந்நூல் முழுவதையும் எழுதினார் என்று வெளிப்படையாகக் கூறியதில்லை. ஐந்நூலே மோசே எழுதினார் என்ற சொற்றொடரைப் பயன்படுத்திய போதும், இது குறிப்பிட்ட பகுதிகளையே குறிக்கிறது. இந்நூலுக்கு மோசேதான் ஆசிரியர் என்பதைக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை யூதர்களோ, கிறிஸ்தவர்களோ ஐயுற்றதாகத் தெரியவில்லை. அதன்பின் பல ஐயப்பாடுகள் எழுந்தன. இவற்றிற்கு இந்நூலின் பொருளடக்கமும் இலக்கிய நடையும் இடம் அளிப்பதாகத் தெரிகிறது. இந்நூலைப் பலர் எழுதியிருக்கக்கூடும் என்பதைக் காட்டுவதாகத் தெரிகிறது.

இந்நூலை நாம் முதலில் வாசிக்கும்போது நமது பட்டறிவு என்ன? சில சமயங்களில் இந்நூலின் வாசகங்கள் மந்தமாயுள்ளன. அயர்ச்சி தருகின்றன, சோர்வு கொடுக்கின்றன. பொருளற்றவையாகத் தோன்றுகின்றன. உலகப்படைப்பு பற்றி இரு விவரிப்புகள் உள (ஆதி 1:2-2:4; 2:4-24). முதல் அதிகாரத்தில் மனிதன் இறுதியில் படைக்கப்படுகிறான். இரண்டாவது அதிகாரத்தில் மனிதன் முதலில் படைக்கப்படுகிறான். ஆதாமின் சந்ததியினர் மரபுமுறை இருமுறை தரப்படுகிறது (ஆதி 4:25-26; 5:1-31). பெருவெள்ளம் பற்றி இரு விவரிப்பைக் காணலாம் (ஆதி 6:5-9:18). ஆகார் இருமுறை வெளியனுப்பப்படுகிறாள் (ஆதி 16:6; 21:14). மோசேயை யாவே இருமுறை அழைக்கிறார் (யாத் 3-4). மன்வா பொழியும் அருஞ்செயல் இருமுறை விவரிக்கப்படுகிறது (யாத் 16; எண் 11). குலமுதியவரின் மனைவி இருமுறை அந்நிய அரசனால் அவனது மாதர் பகுதிக்குள் அழைத்துச் செல்லப்படுகிறாள் (ஆதி 12:15; 20:2). பத்துக் கற்பனைகளின் விவரிப்பு இருமுறை வருகிறது (யாத் 20; உப 5).

மோசேயின் மாமன் ஓர் இடத்தில் இரகுவேல் என்றும் (யாத் 2:18). மற்றோர் இடத்தில் இத்திரோ என்றும் (யா 3:1, 18:1) அழைக்கப்படுகிறார். இறைவனது பெயர் ''யாவே'' யாத் 3:14-இல்தான் வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் ஏற்கெனவே ஆதி 2:4-இலும், ஆதி 4:26-இலும் காணப்படுகி

றது. விளைபொருட்கள், விலங்குகள் சில வாரங்களுக்குள் பல தடவை அழிந்து போவ தாகப் பத்து வாதை நிகழ்ச்சியுரையில் காட் டப்படுகிறது. இது அறிவுக்கு ஒத்ததாகத் தெரியவில்லை. நிகழ்ச்சியுரைகள் தொடா் பின்றிக் காணப்படுகின்றன. சான்றுகள் பெருவெள்ளம் பற்றிய விவரிப்பு; யாத் 4:19; யாத் 2:23-ஐ அடுத்து வரவேண்டும்; யாத் 19:25-ஐயும் அடுத்த வரியையும் பார்க்க. கோராகுவின் கலகக்கதையிலிருந்து தாத் தான், அபிரோன் கலகக் கதையை முழுவ தும் அகற்றிவிடலாம் (எண் 16); இப்படிப் பலவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

சில இடங்களில் இறைவன், கடவுள் எனப்படும் பொதுப்பெயரில் ''எலோகிம்'' என்றும், சில இடங்களில் ''ஆண்டவர்'' எனப்பொருள்படும் ''யாவே'' என்ற பெயரி லும் மற்ற இடங்களில் ஆண்டவராகிய கட வுள் என்றும் அழைக்கப்படுகிறார். யாத் திரை ஆகம மலை சீனாய் என்றும் கோரேபு என்றும் அழைக்கப்படுகிறது. சில சமயம் எழுதும் பாணி உயிருள்ளதாகவும், அழகாக வும், சொற்பொழிவு போலவும், மனிதப் பண்புமிக்கதாயும், உளது; மற்ற இடங்களில் வறட்சியாகவும், மாறுதலற்றதாகவும், சலிப் பைத் தருகிறதாகவும், திட்டம் செய்ததாக வும் இருக்கிறது. ஐந்நூலில் பலவகை இலக் கிய அமைப்புகளைக் காணலாம்.

இவைபோன்றவை விவிலிய ஆராய்ச்சி யாளர்களைச் சிந்திக்கச் செய்தன. பல வினாக்களும் ஐயங்களும் எழுந்தன. ஆய்வா ளர்கள் தோராவின் வாசகங்களைப் பகுத்து ஆராய்ந்து பல கருதுகோள்களை வெளியிட் டனர். விளக்கங்களையும் தந்துள்ளனர். இவற்றைச் சிறிது நாம் அறிந்திருப்பது நன்று.

4. ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சி:-

ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சி-திறன் ஆய்வு- கடந்த இருநூறு ஆண்டுகளாக நடந்துவருகி றது. கி.பி 1678-இல் ரிச்சர்டு சீமோன் என்ற குரு பழைய ஏற்பாடு பற்றி ஒரு திறனாய்வு நூலை வெளியிட்டார். கத்தோலிக்கர்களும் பிரிவினைச் சகோதரர்களும் இந்நூலைக் கண்டனம் செய்து, வாசிக்கப்படக்கூடாத நூலாக ஆக்கினர். ஆயினும் அவர்செய்த தொடக்க முயற்சிக்காக, அவர் விவிலியத் திறன் ஆய்வின் தந்தையென அழைக்கப்படு கிறார். பிரான்சு நாட்டைச் சேர்ந்த மருத்துவ ரும் கத்தோலிக்கருமான ஜான் ஆஸ்ட்ருக் என்பவர் ஆதியாகமம் பற்றி ஓர் இலக்கியப் பகுப்பாராய்ச்சி நூலை 1753-இல் எழுதினார். ஆதியாகமத்திற்கு இருமூலங்கள் இருந்திருக்க வேண்டும் என்று இவர் கருதினார். இறை வனுக்கு யாவே என்ற பெயரைப் பயன்படுத் தும் பகுதிகளைப் பிரித்து யாவே பாரம்பரி யம் என்றார். ''எலோகிம்'' என்ற பெயரை இறைவனுக்குச் சாற்றிக்கூறும் பகுதிகளை எலோகிம் பாரம்பரியம் என்றார். இவை ஏற்கனவே இருந்தவை; இவற்றை ஒன்று சேர்த்து மோசே ஆதியாகமத்தை எழுதினார் என்றார். இது ஏடுகளை அடிப்படையாகக் கொண்ட கருதுகோளின் தொடக்கமாகும். இந்நூலைக் கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள் ளவில்லை; ஆதரிக்கவில்லை. ஏய்க்கார்னும் (1780), இல்கென்னும் (1798) எலோயிம் பாரம்பரிய ஏடுகளில் கவனம் செலுத்தினர். இதில் மூன்று மூலங்கள் இருப்பதாகக் கண் டனர். இதில் ஒன்று, பிற்காலத்தில், குருக் கள் பாரம்பரியம் என்றழைக்கப்பட்டது. கெடெஸ் (1792), வாட்டர் (1802) போன்ற வர்கள் நிகழ்ச்சியுரைகளில் காணப்படும் ஏறுமாறான தன்மையால் ஈர்க்கப்பட்டனர். இவர்கள் ஏடுகளை அடிப்படையாகக் கொண்ட கருதுகோளை நிராகரித்துவிட்டு, துணுக்கு ஏடு கருதுகோளை மேல் எனக் கருதினர். இதன்படி பல தொடர்பற்ற பகுதி கள் வெறுமனே சேர்த்துத் தொகுக்கப்பட்டு ஒரு நூலாக வெளியிடப்பட்டன. இவால்டு என்பவர் (1831). ''ஐந்நூலுக்கு ஓர் அடிப் படை ஏட்டு மூலம் இருந்தது; அதோடு பிற மூலங்களிலிருந்தும் பல பகுதிகள் சேர்க்கப் பட்டன'' எனக் கருதினார்.

கெப்பெல்டு (1853) ஏடுகள் கருதுகோ ளைப் புதுப்பித்தார். ஆதியாகமத்தில் இரு எலோகிம் பாரம்பரியங்களும் (எலோகிம், குருக்கள் பாரம்பரியங்கள்) ஒரு யாவே

பாரம்பரியமும் இருப்பதாக அவருக்கு முந்திய ஆராய்ச்சியாளர்களைவிடத் தெளிவாகக் காட்ட முயன்றார். குருக்கள் பாரம்பரியத்தை மிகப் பழையதாகவும், அடிப்படையானதாகவும் கருதினார். அவருக்குப்பிறகு ரீம் (1854) என்பவர் உபாகமப் பாரம்பரியத்தைப் பிரித்துக் காட்டினார். இம்முயற்சிகள் தோராவில் நான்கு பாரம்பரியங்கள் இருப்பதாகக் காட்ட முயன்றன; நான்கு பாரம்பரியக் கருதுகோளுக்கு உறுதியாக அடிகோலின. இக்கருதுகோளை உறுதிசெய்வதும் விவரங்களைத் திருத்தி அமைப்பதும் ஆகிய வேலைகள் இன்னும் நிறைவுபெறாதிருந்தன.

ரேயுஸ் (1833), கிராப் (1866), கோஸ்டர்ஸ் (1868), குயெனென் (1870), வெல்காசன் (1878) ஆகியோரின் அயரா உழைப்பால் ஒரு கருதுகோள் உருவெடுத்தது. இதன்படி, ஐந்நூல் நான்கு பாரம்பரியங்களின் கலவையாகும்; இவ்வேடுகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் தோன்றியவை. இவ்வேடுகள் தோன்றிய காலத்தைக் குறிப்பாக வரையறுப்பது, இக்கருதுகோளுக்கு வேண்டிய பணித்திட்டத்தை அளித்தது. இக்கொள்கைப்படி முதலில் ''யாவே ஏடு'' ''எலோகிம் ஏடு'' என இரு பாரம்பரிய ஏடுகள் இருந்தன. யாவே ஏடு, கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் யூதேயாவில் எழுத்து வடிவம் எடுத்தது. சிறிது காலத்திற்குப்பின் வடஅரசாகிய இஸ்ராயேலில் எலோகிம் ஏடு எழுதப்பட்டது (சாலமோன் ஆட்சிக்குப் பின், யூதர்களின் அரசு இரண்டாகப் பிரிந்தது. சாலமோனின் புதல்வர்கள் ஆண்ட தென்பகுதி யூதா என்றழைக்கப்பட்டது. பிரிந்து சென்ற வடபகுதி இஸ்ராயேல் என்றழைக்கப்பட்டது). வட அரசாகிய இஸ்ராயேலின் வீழ்ச்சிக்குப்பின் இவ்விரு பாரம்பரிய ஏடுகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன. யோசியா காலத்துக்குப்பின் உபாகம ஏடு சேர்க்கப்பட்டது. உபாகம ஏடு, யோசியாவின் காலத்தில் (கி.மு. 622) ஆலயத்தில் கண்டுபிடித்த நூல்தான் என்று இவ்வாராய்ச்சியாளர்களால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது. இதனோடு ஒத்துப் பார்த்து மற்ற ஏடுகள் காலவரையறை செய்யப்பட்டன. யாவே, எலோகிம் ஏடுகள் பல வழிபாட்டு இடங்களை ஏற்றுக்கொள்ளுகின்றன. இதற்கு எதிராக உபாகமம் போராடுகிறது. ஆகவே யாவே, எலோகிம் ஏடுகள் உபாகம ஏட்டிற்கு முந்தியனவாக இருக்க வேண்டும். யூதர்கள் வெல்லப்பட்டு அடிமையாக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டபின் ஏற்கெனவே இருந்த தொகுப்போடு குருக்களின் பாரம்பரியம் சேர்க்கப்பட்டது. இப்பாரம்பரியம் ஒரே ஒரு புனிதத்தலத்தை ஏற்றுக் கொள்கிறது. ஆகவே இது உபாகம ஏடுகளுக்கு மிகப் பிந்தியதாகும். இதில் நிகழ்ச்சியுரைப் பகுதிகள் சிலவே. பெரும்பகுதி சடங்கு விவரிப்புகளையே கொண்டுள்ளது. இது ஏற்கனவே இருந்த தொகுப்புகளைக் கட்டிப் பிணைக்க உதவுகிறது.

இந்த ஒப்புமை சார்ந்த காலவரையறை, மற்ற ஒப்புமைச் சான்றுகளாலும் உறுதிசெய்யப்பட்டது. இவை இப்பாரம்பரியங்கள் எழுத்து வடிவமெடுத்த காலத்தை ஓர் அளவு உறுதியாக வரைமுறை செய்ய உதவின. இதன்படி யாவே ஏடு கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் தென் அரசாகிய யூதாவில் தோன்றியது. எலோகிம் ஏடு கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் வடஅரசாகிய இஸ்ராயேலில் தோன்றியது. உபாகம ஏடு கி.மு. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு யூத ஆசிரியரால் எழுதப்பட்டதாகும். குருக்கள் பாரம்பரியம், நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் கி.மு.5-ஆம் நூற்றாண்டில் எருசலேம் குருக்களால் தொகுக்கப்பட்டதாகும். இந்நூல் தொகுப்பில் காணப்படுவதாகக் கருதப்படும் சமய, சமூக, சட்டக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு கால வரையறை செய்தனர். இக்கருதுகோளுக்காக வெல்காசன் என்ற அறிஞர் பெரிதும் பாடுபட்டார். இலக்கியத்திறனாய்வு இயலைப் பரப்பப் பெரிதும் பாடுபட்டார். ஆனால் வரலாறு, மெய்யியல் பற்றி அவர் முன்னர்க் கொண்டிருந்த அவரது முன்கருத்துக்கள் அவரது நூல்களின் கருத்துக்களை ஓரளவு பழுதாக்கின. இஸ்ராயேலின் அரசர் காலத்திற்கு முன்னிருந்த அவர்களின் வரலாற்றைத் திரும்பத்

திருத்தி அமைக்க முடியுமா என்பது பற்றி ஐயம் தெரிவித்தார். யாத்திரை, அலைந்து திரிதல், வெற்றி ஆகியவை பற்றிச் சில வரலாற்று விவரங்கள் தெரியலாம். இவற்றை வைத்துக்கொண்டு, இஸ்ராயேலரின் வரலாற்றை ஒன்றித்த, தொடர்ந்த, வரலாறாகத் திருத்தி அமைத்தல் முடியாததாகும் என்றார். யாத்திரைக்கு முந்தியவை யாவும் வெறும் கட்டுக் கதையும் கற்பனையுமாகும் என்றார். எனவே இஸ்ராயேலரின் வரலாற்றைச் சரியான சூழ்நிலையில் அமைக்க இவர்களுக்குப் போதிய சான்று கிடைக்கவில்லையாதலால், சமயவளர்ச்சி பற்றிய பரிணாமக் கொள்கையைப் பயன்படுத்தி, பழைய ஏற்பாட்டு இலக்கியத்தை ஆராயத் தலைப்பட்டனர். இந்த முறையில் இறைவனது இடையீட்டுக்கு இடமேயில்லை. ஆகவே மற்ற மக்களிடமிருந்து வேறுபட்ட விதத்தில் இஸ்ராயேலிடையே சமயம் வளர்ந்திருக்கக் கூடும் என்பதற்கு வழியில்லை. வெல்காசனுடைய இந்த ஒருதலைச் சார்பான போக்கால், அவருடைய கொள்கை ஆழ்ந்த உட்கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், பிறர் இக்கொள்கையை ஐயத்தோடு நோக்க இடமளித்தது; இதைப் பலர் எதிர்க்கவும் செய்தனர். ஆயினும் அவரது நான்கு பாரம்பரியக் கருதுகோளைச் சில மாற்றங்களுடன் அறிஞர் பலர் ஏற்றுக் கொண்டனர். அவரது மற்ற முடிவுகள் அவ்வளவாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த ஏடுகள் பற்றிய கருதுகோள் அவரது பெயரால் அழைக்கப்படுவதும் உண்டு.

1906-இல் பாப்புவின் விவிலியக்குழு விடுத்த அறிக்கை இந்த ஏடுகள் பற்றிய கருதுகோளைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி கத்தோலிக்கர்களைக் கேட்டுக் கொண்டது. பொருள் அடக்க அளவில், ஐந்நூல் முழுமைக்கும் மோசேதான் ஆசிரியர் என்று கருதவேண்டும் என்று கேட்டுக் கொண்டது. மோசேக்கு முன்னர், வாய்மொழிப் பாரம்பரியங்களும், எழுத்துப் பாரம்பரியங்களும் இருந்திருக்கலாம் என்றும், மோசேக்குப்பின் பல திருத்தங்களும், பிற்சேர்க்கைகளும் நடந்திருக்கலாம் என்றும், இவ்வறிக்கை ஏற்றுக் கொண்டது, 1948-இல் கர்தினால் சுகார்டுக்கு எழுதிய திருமுகத்தில் இக்குழு ஐந்நூலுக்குப் பல மூலங்கள் இருந்திருக்கவேண்டும் என்பதையும், மோசேயின் சட்டம், வரலாற்று நிகழ்ச்சியுரைகள் படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பதையும், இவ்வளர்ச்சிக்குப் பிற்காலத்திய சமூக சமயநிலைகள் காரணம் என்பதையும் ஏற்றுக் கொண்டது.

இந்த ஏடுகளின் கொள்கை, அதன் மூல வடிவத்தில் மீண்டும் தர்க்கத்துக்குரியதாகியது. இக்கொள்கையை வரையறுக்க எடுத்த முயற்சிகள் யாவும் அது முடியாத காரியம் என்று காட்டின. அஃதோடு இலக்கியப் பிரச்சனை வரலாற்றுப் பிரச்சனையாக மாறியது. இந்நூல் எப்போது இறுதிவடிவம் எடுத்தது என்பதைவிட எந்த வாய்மொழிப் பாரம்பரியம் அல்லது எழுத்துமூலம் நூலின் பகுதிக்குப் பின்னணியாக உள்ளது என்பது சிறப்புப் பெற்றது; உடனடிப் பிரச்சனையாக மாறியது. இப்பிரச்சனையை அணுகும் புதுமுறை முழுவதும் இலக்கியம் சார்ந்ததாகவும் இல்லை; செயற்கையானதாகவுமில்லை; உண்மை நிகழ்ச்சிகளுக்கும் வாழ்க்கைச் சூழ்நிலைக்கும் நெருங்கியதாக மாறியது. ஆய்வாளர்களுக்கு இந்நூலின் மூலங்கள் மிகப்பழையனவாகத் தோன்றத் தொடங்கியுள்ளன. புதைபொருள் ஆராய்ச்சியும் தொல் பொருள் ஆராய்ச்சியும், இந்நூல் தோன்றியதாக இதுவரை கூறப்பட்ட காலத்திற்கு முன்பே இந்நூல் இருந்திருக்க வேண்டும் என்று காட்டுகின்றன. வெல்காசன் போன்றவர்களின் ஐயப்போக்கிற்கு இடமே இல்லை என்றும் காட்டின. அவை, ஐந்நூலின் பல நிகழ்ச்சியுரைப் பகுதிகள் எழுதப்பட்டது எனக்கூறப்படும் சூழ்நிலைக்கு வேறுபட்டதும், காலத்தால் முந்தியதுமான சூழ்நிலையில் நடந்திருக்கக்கூடும் என்று காட்டுகின்றன.

ஐந்நூல் ஆராய்ச்சி பிற்காலத்தில் மூன்று திசைகளில் வளர்ந்தது. முதலாவது, ஆழ்ந்த இலக்கியப் பகுப்பாராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இந்நூல், வரலாற்றின்

ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஓர் ஆசிரியரால் ஒன்றுமின்மையிலிருந்து எழுதப்பட்டது அல்ல. ஒவ்வொரு பாரம்பரிய ஏடும் ஒரு கலப்பு இலக்கியமாகும். அவற்றின் அடிப் படையான மூலங்களைப் பிரித்தெடுக்க முயற் சிகள் செய்யப்பட்டன. பிரச்சனைகள் தெளி வாயின. அதேபோழ்து இப்பிரச்சனைகளை மற்றையக் கோணங்களிலிருந்தும் ஆராய வேண்டும் என்பதும் தெளிவாயிற்று.

இரண்டாவது திசை, வடிவம் பற்றிய திறனாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. இது ஐந்நூலை ஒரு முழு நூலாகக் கருத்தில் கொண்டு ஆராயவில்லை, மாறாக, அதில் காணப்படும் கதைகள், பாடங்கள் போன்ற தனிப்பட்ட சிறு பகுதி களை ஆராய்ந்து, இப்பகுதிகள் தோன்றவும், இலக்கியவடிவம் எடுக்கவும் அடிப்படை யான பழம் இஸ்ராயேலின் வாழ்க்கை நிலையை வரையறை செய்ய முயன்றது. இம்முறை, ஐந்நூலின் பெரும் பகுதிகள் மிகப் பழையன என்று காட்டியது. இஸ்ரா யேலின் இறையியல் பற்றிப் பல விளக்கங் கள் அளித்துள்ளது. ஐந்நூல் பற்றிய எந்தக் கருதுகோளையும் ஏற்றுக்கொள்ளுமுன் இன் னும் ஆழ்ந்த ஆய்வு இன்றியமையாதது என்று காட்டியது. இக்காலத்தில் இவ்வடி வம் பற்றிய திறன் ஆய்வுமுறையை ஏறக் குறைய எல்லா விவிலிய அறிஞர்களும் ஓர் அளவு பயன்படுத்துகின்றனர். இவ்விதம் ஐந்நூலை ஆராய்தல், ஏடுகள் கருதுகோ ளுக்கு மாறானது அல்லவென்றாலும் இதன் முடிவுகள் ஏடுகள் கருதுகோளைப் பாதித் தன.

ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சியின் மூன்றாவது திசை, ஏடுகள் கருதுகோளையே அடியோடு மாற்றியமைத்தது எனலாம், ஏன் அதை நிராகரித்தது என்றுகூடச் சொல்லலாம். இம் முறை சுவீடனைச் சேர்ந்த உப்சாலா குழுவி னரால் புகுத்தப்பட்டது. இக்குழுவினரும், சிறப்பாக இவர்களுள் என்னெல் என்பவ ரும், யூதர்கள் நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வரும் வரை இஸ்ராயேலில் பரந்த அளவில் எழுத்து இலக்கியம் அமைக்கும் தொழில் இருந்தது என்பதை மறுத்தனர். நாடு கடத் தப்படுமுன் இஸ்ராயேலில் ஐந்நூலின் பொருள்கள் வாய் மொழிப் பாரம்பரியமாக வழிவழியாக ஒப்படைக்கப்பட்டன என்ற னர். வாய்மொழிப் பாரம்பரியத்தையும் அதன் உண்மைத் தன்மையையும் இக்குழு வலியுறுத்தியது. ஐந்நூல் எழுத்து வடிவம் எடுத்த பின்னும் வாய்மொழிப் பாரம்பரியம் தொடர்ந்து அதைப் பாதித்தது. இந்நூலில் காணப்படும் பொருள்களில் பெரும் பகுதி பழமைமிக்கதாகும். இப்பழமைக்கு உயர் மதிப்புக் கொடுத்தது, வரவேற்கப்படவேண் டிய ஒரு திருப்பமாகும். வெல்காசின் குழு தனது முதிராத முடிவுகளால், இந்நூலின் பெரும்பகுதிகள் தோன்றிய காலத்தை மிக வும் பின்தள்ளிப் போட்டது. இதற்கு ஒரு திருத்தம் வேண்டியிருந்தது. உப்சாலாக்குழு, வாய்மொழிப் பாரம்பரியத்தையும் அதன் உண்மைத் தன்மையையும் வலியுறுத்திய தோடு, பழமைக்குரிய மரியாதையையும் மதிப்பையும் அளித்தது.

இந்நூலின் பாரம்பரியங்கள், பொருள் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, இறுதி வடிவம் ஆகியவற்றைப் பற்றி எதையும் உறுதி யிட்டுக் கூறத் தயங்குவர் இக்கால அறிஞர் கள். ஆனால் குறிப்பிட்ட அம்சங்கள் பற்றி உறுதியான முடிவுகள் கூறலாம். இந்நூலில் இரட்டிப்பு உரைகள், இணை வடிவங்கள் இருப்பது நிலைநாட்டப்பட்டதொன்றா கும். இறையியல் சிந்தனை கருத்துக் குவி யல்களை ஒருங்கிணைக்கின்றது; அவற் றைப் பிணைத்துக் காட்டுகின்றன. மேலும் நடைப்போக்கு, சொற்றொகுதி ஆகியவை பற்றியும் தெளிவாகக் கூறலாம், இவை இஸ்ராயேலில் வளர்ச்சியடைந்த தனிப்பா ரம்பரியங்கள் இருப்பதைச் சுட்டுகின்றன. இப்பாரம்பரியங்களைப் பகுத்து யாவே, எலோகிம், உபாகமம், குருக்கள் பாரம்பரி யங்கள் என்று வசதியான முறையில் அழைக் கலாம். (இப்பாரம்பரியங்கள் விவிலிய இலக்கிய உலகில் முறையே J or Y,E,D,P ஆகிய எழுத்துக்களால் சுருக்கமாகக் குறிக்கப்படும்). இவற்றை ஒப்பிட்டுப் பார்த்து இத்தனிப்பாரம்பரியங்கள் எப்

போது இறுதிவடிவம் எடுத்தன என்று ஒரு வாறு பொருத்தமான காலவரையறையை நிலைநாட்டலாம்.

5. கத்தோலிக்கக் கருத்து:-

ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சியைக் கத்தோலிக்கர்கள் தான் தொடங்கினர். ஆனால் இவ்வாராய்ச்சி கத்தோலிக்கர்களிடையே பெரும்பாலும் ஐயத்தையும் எதிர்ப்பையுமே எழுப்பியது. இலக்கியத் திறனாய்வையும் வரலாற்றுத் திறனாய்வையும் வேறுபடுத்த ஆய்வாளர்கள் தவறியதே இவ்வெதிர்ப்புகளுக்குக் காரணம். 19-ஆம் நூற்றாண்டு அறிவியல், மெய்யியல், இவ்விவிலியத் திறனாய்வை வெகுவாய்ப் பழுதுபடச் செய்துவிட்டன எனலாம். 19-ஆம் நூற்றாண்டு முடிவில், லாக்ரான்ஜ் போன்ற கத்தோலிக்க அறிஞர்கள் விவிலியத்திறன் ஆய்வில் அறிவியல் சார்ந்த முறையில் செல்லக்கூடிய கருத்துக்களைப் பிரித்தெடுக்க முயன்றனர். ஆனால் ''நவீன தப்பறைக் கொள்கை'' கத்தோலிக்க ஆராய்ச்சியைப் பாதித்தது; தடைசெய்தது. இச்சூழ்நிலையில் பாப்புவின் விவிலியக் குழு விடுத்த எச்சரிக்கையை முன்பே கூறினோம், இரு பெரும் போர்களுக்கிடையில் விவிலிய ஆராய்ச்சி சிறிது சிறிதாக வளர்ந்தது; வெல்காசினுடைய கொள்கையில் மிகைப்படுத்தப்பட்ட முடிவுகள் திருத்தப்பட்டன. 1943-இல் பாப்பு விடுத்த திருமுகம் கத்தோலிக்க விவிலிய ஆராய்ச்சிக்கு எல்லாவிதத்திலும் வாயிலைத் திறந்துவிட்டது எனலாம். ஆனால் ஓர் எச்சரிக்கையையும் விடுத்தது. விவிலிய ஆராய்ச்சியில் இலக்கிய வடிவம் பற்றிய திறனாய்வு முறையைப் பயன்படுத்துவது, ''இறைவனது புனிதத் தன்மைக்கும் உண்மைத் தன்மைக்கும்'' எவ்விதத்திலும் முரணாக இருக்கக்கூடாது. 1948 இல் கர்தினால் சுகார்டுக்கு பாப்புவின் குழு எழுதிய திருமுகத்தில் விவிலிய ஆராய்ச்சிக்கு மேலும் உற்சாகம் அளிக்கப்பட்டது. இவ்வாராய்ச்சிபற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுவதாவது:

''இறைவன் திருநூலில் மக்களது வழக்கப்படி மக்கள் வழியாகப் பேசினார். எனவே, திருநூலின் இறைவன் நமக்கு அளிக்க விரும்புவது என்னவென்பதை இன்னும் நன்கு உணரும்படி திரு ஆசிரியர்கள் உண்மையிலேயே கூற நினைத்ததின் பொருளையும் அவர்கள் சொற்கள் வழியே இறைவன் அளிக்க விரும்பியது என்ன என்பதையும் திருநூல் பொருள் உரையாளர் உன்னிப்பாக ஆராய வேண்டும்''.

''திரு எழுத்தாளர்களின் நோக்கத்தை ஆய்ந்தறிய மற்றவையோடு இலக்கிய அமைப்புகளையும் கவனிக்கவேண்டும். ஏனெனில் இலக்கிய உண்மையானது, வரலாறு, இறைவாக்கு, கவிதை இன்னும் பல் வேறு இலக்கிய அமைப்புகளில் வெவ்வேறு விதமாய் வெளியிடப்பட்டு விளக்கப்படுகிறது. இன்னும், தன் காலத்திற்கும் பண்பாட்டு நிலைமைக்கும் ஏற்ற வண்ணம் அக்கால வழக்கத்திலிருந்த இலக்கிய அமைப்புக்களை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் பயன்படுத்தியதின் பொருள் என்ன என்பதைப் பொருள் உரையாளர் காண [illegible] வேண்டும். திரு ஆசிரியர் கூற விரும்பியதின் உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ள, அவர் காலத்தில் வழக்கிலிருந்த - உணரும், பேசும் எடுத்துக் கூறும் - இயல்பான முறைகளையும் அக்கால மக்கள் தம் அன்றாட வாழ்வில் ஒருவரோடொருவர் பழகும் போது பயன்படுத்திய முறைகளையும் ஆராய்ந்தறிதல் அவசியம்.''

''எந்த ஆவியானவரால் திருநூல் எழுதப்பெற்றதோ, அதே ஆவியானவரின் துணைகொண்டு, அதை நாம் படிக்கவும் அதற்குப் பொருள்விளக்கம் செய்யவும் வேண்டும். ஆகவே, திருநூலின் பொருளைச் சரிவரக் கண்டுணர்வதற்கு, அதில் பொதிந்து கிடக்கும் உண்மைகளையும், திருநூல் முழுவதின் ஒன்றிப்பையும் கூர்ந்து நோக்கவேண்டும். முழுத்திருச்சபையின் உயிருள்ள மரபும், விசுவாச உண்மைகளுக்கிடையே உள்ள ஒற்றுமைக் கோப்பும் கவனிக்கப்பெறவேண்டும். இவ்விதிகளைப் பின்பற்றித் திருநூலின் பொருளை நன்குணரவும் விளக்கவும் உழைப்பது, திருநூல் வல்லுநர்களின் கட

மையாகும். இத்தகைய ஆராய்ச்சியின் வழியே திருச்சபையின் நூலை விளக்கிப் பொருள்கூறும் வழிகளைப் பற்றிய இவை யாவும் இறுதியாகத் திருச்சபையின் தீர்ப்புக்கு உட்பட்டனவாகும். இறைவனின் வார்த்தையைக் காத்து விளக்கிப் பொருள் கூறும் இறைக்கட்டளையையும் இறைவனின் அலுவலையும் திருச்சபைதான் நிறைவேற்றுகிறது.''

''இறைவனின் உண்மையும், புனிதத்தன்மையும் திருநூலில் பழுதின்றி இருக்க, காலங்கடந்த ஞானத்தின் வியப்பிற்குரிய இரக்கச் செயல்கள் திருநூலில் காட்டப்பட்டுள்ளன. இது சொல்லற்கரிய இறைவனின் இரக்கத்தைக் காட்டுகிறது. அவர் நம்மேல் கொண்ட பராமரிப்பை நமக்குப் புலப்படுத்துகிறது. அவர் நம்மீது அக்கறைகொண்டு தம் மொழியை எத்துணை அளவு நமக்கேற்ப மாற்றிக்கொண்டார் என்பதையும் நமக்கு உணர்த்துகிறது. காலங்கடந்த தந்தையின் வார்த்தையானவர் தொடக்கத்தில் பலவீனம் நிறைந்த மனித உடலை ஏற்றபோது எவ்வாறு மனிதனைப் போல் இருந்தாரோ அவ்வாறே மனிதனின் மொழியில் வெளியிடப்பட்ட இறைவனின் சொற்களும் மனித மொழியை ஒத்தே இருக்கின்றன'' (இறை வெளிப்பாடு எண் 12:13).

6. எப்படித் தோன்றின?

யாவே பாரம்பரியம், எலோகிம் பாரம்பரியம், உபாகமப் பாரம்பரியம், குருக்கள் பாரம்பரியம் ஆகியவற்றை அவற்றின் இறுதி வடிவத்தில்தான் நாம் அறிவோம். ஆனால் இவை முதலில் எப்படித் தோன்றின? மேற்கூறப்பட்டவைகளைக் கருத்தில் கொண்டு, ஐந்நூல் எப்படித் தோன்றின என்பது பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக்கூற விழைகிறோம். ஐந்நூல் தோன்றிய வரலாற்றில் ஏழுபடிகளை நாம் வேறுபடுத்திக் கூறலாம்.

6.அ. முதல்படி: ஆபிரகாமிலிருந்து மோசே வரை:-

அலைந்து திரியும் ஆயர் வாழ்க்கையைக் கொண்ட கலாச்சாரம் எழுத்து வடிவ இலக்கியத்திற்கு எளிதில் ஆக்கமளிப்பதில்லை. சமயபோதகமும் குடும்ப வரலாறும் தந்தையிடமிருந்து மகனுக்கு வாய்மொழிப் பாரம்பரியமாக வந்தது. இறைவன் ஆபிரகாமுக்கு ஒரே இறைத்தன்மைக் கொள்கையைக் கற்பித்தார். ஆனால் ஆபிரகாமின் முன்னோர்கள் கொண்டிருந்த பாரம்பரியங்கள் பற்றிய நினைவு அவரிடமிருந்து ஒழிந்திடவில்லை. அவர்களின் செமித்தியப் பண்பாட்டுப் பின்னணிகொண்ட பல நாட்டுப் பாடல்களும் பழங்கதைகளும் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் உண்மை இறைவனின் சேவையில் பயன்படுத்தப்பட்டன.

குல முதியவர்களின் குடும்பங்கள் குலமாகவும் இனங்களாகவும் வளர்ந்தபோது, அவரவர்களுக்குரிய பாரம்பரியங்களின் தொகுப்பும் வளர்ந்தன. ஒவ்வொரு குலத்தவரும், இனத்தவரும் தங்களது மூதாதையர் செய்தவற்றைத் தொகுத்து அருஞ்சொத்தாக ஞாபகத்தில் வைத்துக் காத்து வந்தனர் (ஆதி 38).

6.ஆ. இரண்டாம் படி: யாத்திரைக் காலம்: உடன்படிக்கையும் போர் வெற்றிகளும்:-

இஸ்ராயேலர் மக்கள், எகிப்தில் கொடுந்துயர் அனுபவித்தபின், சீனாய் மலைக்கு வந்தனர். அங்கே அவர்களுக்கு ஓர் உன்னதமான அனுபவம் காத்திருந்தது. மோசே இஸ்ராயேலை அதன் இறைவன் யாவேயோடு உடன்படிக்கையால் பிணைத்தார். இறைவன் அவர்களுக்காக ஆற்றிய அருஞ்செயல்களின் பதிவேடுகளை இஸ்ராயேலின் முன்வைத்தார். அவற்றோடு அவர்களுடைய கடமைகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தையும் அளித்தார். அப்போதுதான் ஐந்நூல் ஒரு நூலாக உருவெடுக்கத் தொடங்கியது எனலாம் (யாத் 24:4; 34:27; 17:14). எண் 33-ஆம் அதிகாரம் இஸ்ராயேல் செய்த யாத்திரையின் வழித்துறைப் படிகளைப் பதிவு செய்கிறது. ஆயினும் நாம் கொண்டிருக்கும் வடிவில், ஐந்நூலின் எப்பகுதிகள் மோசேயால் எழுதப்பட்டன என்பது பற்றி எதையும் தெளிவாகக் கூறமுடியாது. குலப் பாரம்பரியங்களில் சில மோசே காலத்திற்கு முன்பே

எழுத்து வடிவம் எடுத்திருக்கலாம். அல்லது நிலையான வாய்மொழிப் பாரம்பரிய உருவம் எடுத்திருக்கலாம். பத்துக் கற்பனைகளும் உடன்படிக்கைச் சட்டத்தின் பெரும்பகுதியும் மோசேயின் காலத்திய இஸ்ராயேலைப் பிரதிபலிக்கின்றன. இவை மோசேயிடமிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம். பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட சட்டங்களும் மோசே மனப் போக்குப்படி உருப்பெற்றன. ஆகவே அவை அவரது அதிகாரம் பெற்றவையாகக் காட்டப்பட்டன.

வாக்களிக்கப்பட்ட நாட்டை உடைமையாக்கிக் கொண்டபின் ஒவ்வொரு இனத்தவரும் தாம் விரும்பிய வழியே சென்றனர்; சிறிது சிறிதாகக் குடியேறி, நிலையாக்த் தங்கி வாழத் தொடங்கினர்; பயிர்த் தொழில் செய்து வாழும் சமூகமாக மாறினர். அரசியல் அமைப்பு இன்னும் தளர்ச்சியுள்ளதாகவே இருந்தது. இஸ்ராயேலின் பல குலத்தவரும் சமய, இன மரபுகளாகிய பொதுப் பிணைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டனர். இதைத் தவிர, நெருக்கமான பிணைப்பு எதுவும் அவர்களிடையே இல்லை. அவ்வப்போது சீனாய்மலை உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ள ஒன்று கூடினர். செக்கேம், சீலோ போன்ற புனித இடங்களில் (தங்களது இறைவனாகிய) யாவேயிடம் தாங்கள் கொண்டிருந்த பற்றுறுதியை மீண்டும் புதுப்பித்து உறுதிப்படுத்தினர். தங்களது புனித வரலாற்றைப் பொது மக்களுக்கு எடுத்துக்கூறி நினைவுகூர்ந்தனர் (யோசு 24).

இப்படிப்பட்ட பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளின்போதுதான் பாரம்பரிய வரலாற்று நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்ப வரும் நிகழ்ச்சியுரைகளாகவும், கதைத் தொகுப்புக்களாகவும் உருவெடுத்திருக்கவேண்டும். பல தலைப்புகளை மையமாக வைத்து இவை தொகுக்கப்பெற்றன. சில சமயம், குல முதியவர்களின் தீரச் செயல்களைச் சுற்றி இக்கதைகள் ஒன்று சேர்க்கப்பட்டன. சிலசமயம் இஸ்ராயேல் தனது வரலாற்று நினைவில் வைத்துப் போற்றிய செக்கேம், பெத்தேல், மமிரே, பேயேர்-செபா, காதேசு போன்ற இடங்களை மையமாகக் கொண்டு இத்தொகுப்புக்ள் எழுந்தன. மற்றத் தொகுப்புகள் உடன்படிக்கைப் பெட்டகத்தையோ, ஆரோனது குருத்துவத்தையோ மையமாக வைத்து வடிவெடுத்தன. வரலாற்று நிகழ்ச்சியுரைகளைத் திட்டம் செய்து எழுதும் வேலை நீதிபதிகளின் காலத்தில் செயல்பட்டதாகத் தெரிகிறது.

காலம் செல்லச்செல்ல, பழைய அடிப்படைக் கொள்கைகளைப் புதிய கலாச்சாரத்திற்கும், புதிய சமூக நிலைக்கும் ஏற்றவாறு பொருத்திக்கூறவேண்டிய தேவை ஏற்பட்டது. ஆகையால் சட்டத்தைப் புதுமுறையில் எடுத்துக்கூற வேண்டியிருந்தது. அதையும் புதுச்சூழ்நிலையோடு பொருத்திக் கூற வேண்டியிருந்தது. இப்பணி, மக்கள் தொழுவதற்குக் கூடும் புனித இடங்களில் நிகழ்ந்தது. பிரச்சனைகள் எழுப்பப்பட்டு விடைகள் காணப்பட்டன. அதன் விளைவாகப் புதுச்சட்டங்களும் புது விளக்கங்களும் எழுந்தன. அதனால் மோசேயின் சட்டத்தொகுப்பு பெருகியது. ஒவ்வொரு சட்டமும் மோசேயிடமிருந்து வந்ததாகவும் அவரது அதிகாரம் பெற்றதாகவும் காட்டப்பெற்றது. ஏனெனில் உடன்படிக்கையின் மாபெரும் நடுவரான மோசேயின் அதிகாரம் பெற்றிருந்தால் ஒழிய எந்தச் சட்டத்திற்கும் மதிப்பு இல்லை; மக்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுமில்லை.

6.இ. மூன்றாம் படி: யாவே பாரம்பரியம்:-

எதிரிகளின் தொடர்ந்த அச்சுறுத்தலைத் தடுக்க அரசபரம்பரை நிறுவப்பட்டது. யாவே, சவுலை இஸ்ராயேலின் முதல் மன்னனாகத் தேர்ந்தெடுத்தார். சவுலுக்குப் பின் ஏறக்குறைய கி.மு. 1000-இல் தாவீது அரசரானார். இந்நிகழ்ச்சி உடன்படிக்கைக்குப் புதியதோர் உருவம் கொடுத்தது. அரசனே உடன்படிக்கையின் நடுவரானார். தாவீது பல மாற்றங்கள் செய்தார். எருசலேம் தலைநகரமானது. அங்கு உடன்படிக்கைப் பேழை வைக்கப்பெற்றது. சாலமோன் ஆலயத்தைக் கட்டினார். இது நாட்டின் பொதுப் புனித

இடமாகியது; இஸ்ராயேலின் பிற புனித இடங்களை மங்கச் செய்தது. புனித அரச பரம்பரையை மையமாகக் கொண்டு சலுகை பெற்ற அதிகாரிகள், குழுவினர் தோன்றினர். எழுத்தர்கள் அரச ஆயப்பதிவேடுகளை வைத்துக் காக்கத் தொடங்கினர். தங்களது ஆண்டுக் குறிப்பேடுகளில் அரசன் செய்த சிறப்பு நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தனர். கானான் தேசத்தாருடைய வழிபாட்டுமுறைகள் இஸ்ராயேலின் இன்றவனது சேவைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டன. நீதிபதிகள் மோசேயின் சட்டப்படி நீதி வழங்கினர். இறைவாக்குரைஞர்கள், உடன்படிக்கையின் இறைவனிடம் அரசர்கள் கொண்டிருந்த கடமைகளை அவர்களுக்கு எடுத்துக்கூறி நினைவுபடுத்தினர்.

இவையாவும் ஐந்நூலின் பாரம்பரியப் பொருள் அடக்கத்தையும், அவை பிற்கால மக்களுக்குக் கையளிக்கப்பட்ட விதத்தையும், பெரிதும் பாதித்தன. அரசவை அறிவியலும், கலாச்சாரச் சூழ்நிலையும், புனித இலக்கிய எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் ஆதரவு காட்டின. இந்நிலையில் யாவே பாரம்பரியம் உருவெடுக்கத்தலைப்பட்டது எனலாம்.

சாலமோனின் ஆட்சியில், ஏறத்தாழ கி.மு. 970-931 இடையிட்ட காலத்தில் யாவே பாரம்பரியத்தின் அடிப்படைப் பண்புகள் திட்டமிட்ட உருவம் எடுத்தன. இலக்கிய வேலைக்கு ஏற்ற சூழ்நிலையில் யாவே பாரம்பரிய வரலாறு எழுத்து வடிவம் பூண்டது. ஒருவர் எழுதினாரோ, பலர் எழுதினார்களோ என்பது பற்றி ஒன்றும் கூறமுடியாது. எழுத்து வடிவம் எடுத்தபின்னும் இப்பாரம்பரியத்தின் வாய்மொழிப் பாரம்பரியம் தொடர்ந்து வழக்கில் இருந்து வந்தது. இது பிற்காலத்தில் யாவே பாரம்பரியத்தின் வரலாற்றை மாற்றியமைக்கும் அளவுக்குப் பாதித்தது எனலாம்.

ஐந்நூலில் நாம் தெளிவாகக் கண்டு அறியக்கூடிய முதல் பாரம்பரியம் இந்த யாவே பாரம்பரியமாகும். படைப்பு முதல் இறைவனை ''யாவே'' என்ற, அவரது சொந்தப் பெயரால் அழைக்கிறது ஐந்நூல். இப்பெயர் யாத் 3:15-இல் தான் வெளியிடப்பட்டாலும், ஆதியாகமத்திலேயே கால மயக்கமாக இச்சொல் பயன்படுத்தப்படுதலிலிருந்து, இப்பாரம்பரியம் ''யாவே பாரம்பரியம்'' என்றழைக்கப்படுகிறது. இப் பாரம்பரியத்தை இஸ்ராயேல் மக்களின் பெரும் வீரகாப்பியம் என்றழைப்பர். தாவீது, சாலமோன் ஆகியோர் காலத்தில் யூத இனத்தவரை இறைவன் மகிமைமிக்க மேன்மைக்கு உயர்த்திய உணர்வால் உந்தப்பட்டு மனிதனோடு இறைவன் கொண்ட உறவை மனஉறுதியுடன் எடுத்துக் கூறுகிறது. தாவீதின் அரசமரபுக் கொள்கைக்கு இறைவன் ஒப்புதல் அளித்ததால் இதில் அரசியல் ஆர்வத்தையும் நாட்டுப்பற்றையும் ஓரளவு காணலாம்.

யாவே பாரம்பரியம், ஐந்நூலில் நிகழ்ச்சியுரைகளை ஓர் இணைப்பாகத் தொகுத்துத் தருகிறது. இத்தொகுப்புகள், அவற்றின் இலக்கியப் பண்புகளையும், கொள்கைத் தலைப்புகளையும் திட்டவட்டமாகக் காட்டுகின்றன. சிறப்பான சொற்றொகுதிகள், காட்சிகளைப் பல வண்ணத்தோடு எடுத்துக் கூறும் போது பிரதிபலிக்கும் உயிருள்ள, தெளிவான, கவர்ச்சியுள்ள நடையழகு, சிறப்பான உரையாடல்கள், மனித நிலைகளை உணரும் ஆற்றல் மிக்க உளவியல் நோக்கு முதலியவை இப்பாரம்பரியத்தின் இலக்கியச் சிறப்புகளில் சிலவாகும். மனிதர்களையும், அவர்களுடைய பண்புகளையும், ஒழுக்கநெறிகளையும் சித்தரிப்பதில் அக்கறை காட்டுகிறது இப்பாரம்பரியம். கதைகள், உரையாடல்கள், உருவகங்கள், சித்திரங்கள் வழியாக ஆழ்ந்த சமயக் கருத்துக்களை எடுத்துக்கூறுகின்றது. இப்பாரம்பரிய இலக்கிய வடிவங்கள் ஐந்நூலில் கருத்தாழம் மிக்கவையாகத் திகழ்கின்றன.

இப்பாரம்பரியத்தில் ஆழ்ந்த இறையியல் உள்நோக்கு உள்ளது. மனிதப் பண்புகள் இறைவனுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. கடவுள் மனிதனை உருவாக்குகிறார். அவன் முகத்தில் உயிர்மூச்சை ஊதுகிறார்; தோட்டம் அமைக்கிறார்; மனிதனோடு பேசுகி

றார்; தோட்டத்தில் 'நடந்து போகிறார்; ஆடை செய்து தருகிறார்; காணிக்கைகளை விருப்புடன் ஏற்றுக் கொள்கிறார்; சினம் கொள்கிறார்; வருந்துகிறார்; இரக்கம் கொள் கிறார்; அன்பு காட்டுகிறார். ஆயினும் இவற் றில் இறைத்தன்மைபற்றிய ஆழ்ந்த கருத்துக் களைக் காணலாம். தன் சொந்த ஆவல்கள், நம்பிக்கைகளோடுகூடிய தனித்திருக்கும் மனிதன் விவரிக்கப்படவில்லை. மாறாக, இறைவனோடு தொடர்புடைய அவரிட மிருந்து அவர்பற்றிய உண்மைகளைப் பெறும் மனிதனைக் காண்கிறோம். இறைவனது செயல் மற்றத் தேவர்களின் செயல்களிலி ருந்து வேறுபட்டது. தேர்ந்தெடுத்தல், வாக் குறுதி, உடன்படிக்கை ஆகியவை அடங்கிய ஓர் இறைத்திட்டத்தைக் காண்கிறோம். இதில் இறைவனது முன்முயற்சி முந்திக் கொள்வது, வலியுறுத்தப்படுகிறது. இம் முயற்சி யாத்திரையின் வலிமைமிக்க மீட்புச் செயல்களில் வெளிப்படுகிறது. இறைவன் தம்மையே வெளிப்படுத்துகிறார். இவ் வெளிப்பாடே இறைவனின் தீர்ப்பாகிறது. அதுவே மீட்புமாகிறது.

இப்பாரம்பரியம், காரியங்கள் தொடங்கி யது எவ்வாறு என்ற கேள்விகளில் உற்சாகம் காட்டுகிறது. சான்று துன்பங்களின் ஊற்று, தீமையின் தொடக்கம், மனிதனது பாவநாட் டம், மக்களினங்களின் மொழிகள் ஆகியவற் றின் தோற்றம், நாகரிகத்திற்கும் ஒழுக்கத்திற் குமிடையே உள்ள தொடர்பு முதலியன. இவற்றில், மனிதனுடைய மிக உடனடிச் சிக்கல்களுக்கு ஆழ்ந்த பதிலைக் காணலாம். இஸ்ராயேலின் வரலாற்றில் இறைவன் நுழைந்துள்ளார். இம்மக்கள்பால் தமது அன்பு கனிந்த அக்கறையைக் காட்டியுள்ளார். இவையாவும் இறைவெளிப்பாட்டு ஒளியில் விவரிக்கப்படுகின்றன. இவற்றில், இறைவ னது செயலும், அதன் மறைபொருளும், வியப்பும் மலருகின்றன; சிறப்புப் பெறுகின் றன.

இப்பாரம்பரியம் வரலாற்றைப் பரந்த நோக்கோடு எளிய விரைவான முறையில் விறுவிறுப்போடு எடுத்துக்கூறுவது குறிப்பி டத்தக்கதொன்றாகும். ஆயினும் அதன் சிறப் பான நோக்கம் மீட்புவரலாறு ஆகும். தேர்ந் தெடுக்கப்பட்ட மக்களுக்காக இறைவன் ஒரு திட்டம் வகுத்துள்ளார் என்பது, வரலாற் றின் தொடக்கத்திலிருந்து சுட்டிக்காட்டப் படுகிறது. இப்பாரம்பரியங்கள் எழுத்துவடி வம் எடுத்தகாலத்தில் இருந்த தனிப்பட்ட குறைகளை எடுத்துக் கூறுவதற்கும், கண்டிப் பதற்கும் ஏற்ற காரியங்கள் சொல்லப்படு கின்றன. பாவங்கள் பரவலாக இருந்தாலும், தோல்வியின்போது வெற்றியை எதிர்நோக் கும் நன்னம்பிக்கையும் எடுத்துக் கூறப்படுகி றது (ஆதி 3:15; 4:7). மெசியாவைப் பற்றிய இறைவாக்குகளில் பெரும்பாலானவை இப் பாரம்பரியததில் காணப்படுகின்றன. இளைய மகன் சலுகைபெறும் கருத்து தெளி வாகக் கூறப்படுகிறது. இசுமயேலைவிட ஈசாக்கும், ஏசாவைவிட யாக்கோபும், யோசேப்பின் கதையில் மற்றச்சகோதரர்களை விட யூதாவும், உயரிய எகிப்தியர்களைவிட இஸ்ராயேலர்களும் தேர்ந்தெடுக்கப்படுகின் றனர்.

இப்பாரம்பரியத்தில் பெரும்பாலும் சட் டத்தொகுப்பே இல்லை எனலாம். இப்பா ரம்பரியம் தெற்கு அரசாகிய யூதாவில் கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகப் பொதுவாகக் காலவரையறை செய்யப்படுகி றது. இக்காலவரையறை நூலின் பொருட்க ளைப் பொறுக்கியெடுத்தல், ஒழுங்குபடுத்து தல், திருத்திப் புதுப்பித்தல் ஆகியவை நிரந்தர மாக நடந்த காலத்தையே குறிப்பதாக எடுத் துக் கொள்ளவேண்டும். முந்திய அல்லது பிந்திய பதிப்புவேலைகளை இக்காலவரை யறை ஒதுக்கிவிடுவதில்லை.

6.ஈ. நான்காவது படி: எலோகிம் பாரம் பரியம்:-

சாலமோனுக்குப்பின் கி.மு. 922-இல் இஸ்ராயேலர்களின் அரசு இரண்டாகப்பிரிந் தது. வடபகுதி இஸ்ராயேல் என்றும், தென் பகுதி யூதா என்றும் அழைக்கப்பட்டன. வட அரசில் வாழ்ந்த இறைவாக்குரைஞர்கள் மோசேயின் பாரம்பரியத்தைக் காத்துவந்த னர். எலியாவால் தூண்டப்பட்டு வட அரசு

சீர்திருத்தம் அடைந்தது. இச்சீர்திருத்தம், இஸ்ராயேலின் வரலாற்றை எலோகிம் பாரம்பரியம் திருத்தி அமைப்பதற்குப் பின்னணியாக இருந்திருக்கவேண்டும். இப்பாரம்பரியத்தில் இறைவாக்குரைஞரின் பணி தெளிவாகக் காணப்படுகிறது. இறைவாக்குரைஞரே இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே நிற்கும் சரியான நடுவராவர். அவர், மனிதனுக்காகப் பரிந்துரைப்பவராக, மனிதனது கவலைகளையும் வேண்டுகோள்களையும் இறைவன் முன் கொண்டு வருவார் (ஆதி 20:7-17; யாத் 15:20; எண் 11; 12:6). இறைவாக்குரைஞரைப்பற்றி இப்பாரம்பரியம் அழுத்தந்திருத்தமாகக் கூறுவது, இப்பாரம்பரியம் முழுவதும் இறைவாக்குரைஞர்களது வேலைப்பாடாக இருக்கலாம் என்ற கருத்திற்கு ஆதரவு தருகிறது.

இறைவன் ''எலோகிம்'' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகிறார். இதிலிருந்து இப்பாரம்பரியம் தன் பெயரைப் பெறுகிறது. சீனாய்மலைக்குக் கோரேபு என்ற பெயரையும் கானானியர்களுக்கு எமோரியர்கள் என்ற பெயரையும் பயன்படுத்துவதிலிருந்து இப்பாரம்பரியத்தை எளிதில் அடையாளங் கண்டுகொள்ளலாம்.

யாவே பாரம்பரியத்தின் நோக்கத்தைவிட இப்பாரம்பரியத்தின் நோக்கம் மிகவும் வரையறை செய்யப்பட்டதாகும்; குறுகியதாகும். இப்பாரம்பரியத்தில் தொடக்க வரலாறு இல்லை. இது ஆபிரகாமின் வரலாற்றோடு தொடங்குகிறது. இதில், இறைவாக்குரைஞர் என்ற பெயர் ஆபிரகாமுக்குக் கால மயக்கமாக ஏற்றிக் கூறப்படுகிறது (ஆதி 20:7). இறைவனது மிக உயர்ந்த மேன்மை பற்றி எலியா கொண்டிருந்த ஆர்வத்தாலும், இறைவனுக்கு உருவம் செய்வதைத்தடுக்கும் விருப்பத்தாலும் உந்தப்பட்டு இறைவனுக்கு மனிதப் பண்புகளைச் சாற்றிக்கூறுவது இப்பாரம்பரியத்தில் கவனமாய்த் தவிர்க்கப்படுகிறது. யாவே பாரம்பரியதில் காணப்படுவதுபோல், இப்பாரம்பரியம் இறைவனை உயிர்ச் சித்திரத்தன்மையோடு விவரிப்பதில்லை. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள தூரம் மிகக் கவனத்துடன் காக்கப்படுகிறது. ''ஒரு மனிதனும் நம்மைக் கண்டபின் உயிரோடிருக்க முடியாது'' (யாத் 33:20). மனிதன் இறைவனோடு நேரடியாகத் தொடர்பு கொள்வதில்லை. பொதுவாக, மேகங்களிலிருந்தும், கனவிலும், தீயின் நடுவிலிருந்தும் வான தூதர்களின் வழியாகவும் இறைவன் மனிதனோடு உறவாடுகிறார். அருஞ்செயல்களில் வியத்தகும் கருத்து அழுத்தமாக உணர்த்தப்படுகிறது. கனவுகளுக்கும், இறைவாக்குகளுக்கும் பெரும் உட்கருத்து அளிக்கப்படுகிறது. இறைவனது வழிகாட்டுதலும், அவரது அருஞ்செயல்களும், மக்களுக்காக அவர் வகுத்துள்ள திட்டமும் இப்பாரம்பரியம் முழுவதும் வெளிப்படையாக வலியுறுத்தப் படுகின்றன (ஆதி 15:6; 20:11; 21:17).

வட அரசில் புறமதத்தினர்களின் பழக்க வழக்கங்களுக்கு எதிராகச் சிறப்பாகக் கானானியர்களின் பழக்கவழக்கங்களுக்கு எதிராக, எலியா போராடினார். இப்புரட்சிகரமான மனப்போக்கு இப்பாரம்பரியத்தில் பிரதிபலிக்கின்றது. அயலார் தேவதைகளை நீக்கிவிடுமாறு யாக்கோபு கட்டளையிட்டதாக இப்பாரம்பரியம் கூறுகிறது (ஆதி 35:2). இறைவனுக்கு ஏற்காத, பொதுமக்களின் சமய பழக்க வழக்கங்களையும் கண்டித்து எதிர்க்கிறது. இப்பாரம்பரியத்தில் பாவம் பற்றிய ஆழ்ந்த உணர்வு காணப் படுகிறது. இப்பாரம்பரியம் விரும்பும் ஒழுக்க வாழ்வு மிகக் கண்டிப்பானதாகும் (ஆதி 20; 26:16-11).

யாத்திரைக்காலமும், வாக்களிக்கப்பட்ட நாட்டை வென்று கைப்பற்றிய காலமும், இப்பாரம்பரியத்தில் உன்னதக் காலங்களாகும். இஸ்ராயேலரோடு இறைவன் செய்து கொண்ட சீனாய்மலை உடன்படிக்கை இப்பாரம்பரியத்தின் உச்ச நிலையாகும். உடன்படிக்கைக்காரர்களுக்குள் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற நிலை கொண்ட உடன் படிக்கைத் தன்மையில் உருவாக்கப்பட்டு, இவ்வுடன் படிக்கையும், அதன் கட்டுப்பாடுகளும் மாற்ற முடியாத விதத்தில் இஸ்ராயேலின் வாழ்வை நிர்ணயிக்கும் சமய நிகழ்ச்சியாகத்

திட்டவட்டமாக அறிவிக்கப்படுகின்றன. சுற்றியிருந்த புறமதக் கலாச்சாரம் இஸ்ராயேலைப் பாதிப்பதற்கு எதிராகப் பாலைவன வாழ்வு உன்னதமானதாகவும், விரும்பத்தக்கதாகவும் காட்டப்படுகின்றது. இப்பாரம்பரியம் வடவரசின் புனித இடங்களை மையமாகக் கொண்டு விளங்குகிறது; அரசியலில் ஆர்வம் இல்லை. வரலாற்றைக் குறுகிய நோக்கத்தோடு இப்பாரம்பரியம் காண்கிறது. யாவே பாரம்பரியத்தைப் போன்று இது பரந்த போக்குடையதன்று.

இப்பாரம்பரியத்தின் இலக்கிய நடையில், யாவே பாரம்பரியத்தில் காணப்படுவது போன்று, அவ்வளவு அணிநயமும் ஆற்றொழுக்கும் இல்லை. ஆனால் அதனினும் நல்ல சிறப்பான நடை உள்ளது. இதில் மிடுக்கும் உண்டு. யாவே பாரம்பரியத்தைவிட எலோகிம் பாரம்பரியத்தில் போதிக்கும் தன்மையும் காப்புரைத் தன்மையும் உண்டு. இதில் மனிதர்கள்பால் அல்லாது நிகழ்ச்சிகள்பால் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் சட்டத்தொகுப்புகள் உண்டு (யாத் 20:1-17; 20:22-23:33). கி.மு.950-850-க்கு இடையிட்ட காலத்தில் இப்பாரம்பரியம் இறுதியான வடிவில் பதிப்பிக்கப்பட்டிருக்கவேண்டும்.

6.உ. ஐந்தாவதுபடி: யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் இணைதல்:-

கி.மு. 721-இல் அசீரியர்களிடம் சமாரியா வீழ்ந்தது. அத்தோடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அகதிகள் தென் அரசாகிய யூதாவிற்குச் சென்றனர். அவர்களோடு எலோகிம் பாரம்பரியமும் யூதாவிற்குள் கொண்டுவரப்பட்டது. யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் ஒன்றையொன்று பாதிக்கத் தொடங்கின. யூதாவைச் சேர்ந்த எசக்கியா ஆண்ட காலத்தில் (கி.மு. 716-687) இரு பாரம்பரியங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டன. இது எருசலேம் புனித இடத்தில் நடைபெற்ற யாவேயின் வழிபாட்டுக்கு எல்லா இஸ்ராயேலரையும் கொண்டுவர எசக்கியா செய்த முயற்சியின் விளைவாக இருக்கலாம். ஆனால் இந்தக் கலத்தல் யாவே பாரம்பரியத்திற்குச் சாதகமாகச் செய்யப்பட்டது. அதன் விளைவாக எலோகிம் பாரம்பரியம் சிறிது பழுதுபட்டது. இப்போது ஒரு துணைப் பாரம்பரியமாகத் தோன்றுகிறது. இருபாரம்பரியங்களும் மிக நெருங்கியவிதத்தில் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. அவற்றை வெவ்வேறாகப் பிரிக்க முயல்வது இரு பாரம்பரிய வாசகங்களையும் பழுதுபடச் செய்கிறது. இக் கலத்தலில் சில இடங்களில், குருக்கள் பாரம்பரியக் கருத்துக்களும் காணப்படுகின்றன.

6.ஊ. ஆறாவது படி: உபாகமப் பாரம்பரியம்:-

யூதர்களின் சட்டமாகிய தோராவிற்கு, யாவே, எலோகிம் பாரம்பரியங்கள் வரலாற்றுப் பின்னணி அளிக்கின்றன. உபாகமம் முழுவதும் சட்டம் இல்லையென்றாலும், அதன் பெரும்பகுதி சட்டங்களையே கொண்டுள்ளது. இப்பாரம்பரியத்தின் சுவடுகள் ஐந்நூலின் மற்ற நான்கு நூல்களிலும் காணப்படுகின்றன. ஆயினும் ஐந்தாவது நூலாகிய உபாகமத்தில்தான் இப்பாரம்பரியம் மிகுந்து காணப்படுகிறது. இந்நூலின் மையமாக உள்ள சட்டத்தொகுப்பு (உப 12:2-26:15) இந்நூலுக்கும் இப்பாரம்பரியத்திற்கும் பெயரை அளிக்கிறது. இப்பாரம்பரியத்தை ஓரளவு எளிதாக வேறுபடுத்திக் காலவரம்பிட்டு விடலாம்.

இப்பாரம்பரியத்திற்கு நீண்ட முன்வரலாறு இருந்திருப்பதாகத் தெரிகிறது. அதன் சட்டம், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் உட்கரு வடவரசில் தோன்றியிருக்க வேண்டும். இதில் காணப்படும் அழுத்தம் எலோகிம் பாரம்பரியத்தில் காணப்படுவதற்கு ஒத்ததாக இருக்கிறது. வடவரசைச் சேர்ந்த குருக்கள், லேவியர்கள் ஆகியோர் ஏற்கனவேயிருந்த சட்டங்களைத் தொகுத்தனர். அதன் விளைவு உபாகம நூலின் சட்டத் தொகுப்பாகும். இத்தொகுப்பை மோசேயின் அறிவுரைப் பகுதிக்குள் புகுத்தி, அதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணி அளித்தனர். கி.மு. 721-இல் அசீரியர்களின் வெற்றிக்குப்பின், அகதிகளால் தென் அரசுக்குக் கொண்டுவரப்பட்டு, இந்தச் சட்டங்களும்,

பழக்கவழக்கங்களும் சிறிது சிறிதாக வரைய றுக்கப்பெற்று ஒழுங்கு செய்யப்பெற்றன. எசக்கியா ஆண்ட காலத்தில் இப்பாரம்பரியம் முதல்முதலாக நூல் வடிவம் எடுத்திருக் கலாம். இந்த இரண்டாவது சட்டத்தின் ''நகல்'' ஒன்று ஆலயத்தில் வைக்கப்பட்டது கி.மு. 7-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் யோசியா ஆலயத்தைச் செப்பனிட்டபோது கண்டுபிடிக்கப்பட்ட நூல் இதுவாக இருக்க வேண்டும். இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட நூலுக்கும் (2 அர 22:8-10) உபாகமப் பாரம்பரியத்திற்கும் பெரும் ஒற்றுமையுண்டு. கண்டுபிடிக்கப்பட்ட நூல் கி.மு. 621-ஆம் ஆண்டுச் சீர்திருத்தத்திற்கு வழி கோலியது என்று சிலர் கூறுவர். உபாகமச் சீர்திருத்தமும் யோசியாவின் சீர்திருத்தமும் ஏறத்தாழ ஒரே விதமாய் அமைந்துள்ளன. இந்நூல் உப 5-முதல் 29-வரையுள்ள அதிகாரங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இவற்றை உள்ளடக்கும் மோசேயின் அறிவுரையும்கூட இக்காலத்தின் மனப்போக்கையே காட்டுகிறது.

பிற்காலத்தில் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட போது இன்னும் பல செய்திகள் இப்பாரம்பரியத்தோடு சேர்க்கப்பட்டன. இந்த முழுத்தொகுப்பும் ஒருவேளை நாடு கடத்தப்பட்ட காலத்தில் இறுதி வடிவம் எடுத்திருக்கவேண்டும். எக்காலத்தில் உபாகமப் பாரம்பரியம் யாவே, எலோகிம் பாரம்பரியங்களோடு இணைக்கப்பட்டது என்று கூற அறிஞர்களால் முடியவில்லை. மோசே சட்டத்திற்குக் குருக்கள் பாரம்பரியம் எழுத்து வடிவம் கொடுக்குமுன் இது நிகழ்ந்திருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள்வர்.

இப்பாரம்பரியத்தின் நடை அதற்கே உரிய, செறிந்த சொல்திறன் வாய்ந்ததாகும். உபாகமம் முழுவதும் மூன்று சொல்வன்மை மிக்க மறைப்பொழிவாக அமைகிறது. நடையில் சொற்பொழிவுத் தன்மையும் உபதேசத் தன்மையும், ஒழுக்கமுறைப் பண்பும், சட்டத்தன்மையும் செவிமடுப்போரைத் தூண்டும் தன்மையும் காணப்படுகின்றன. 'தேர்ந்தெடுத்தல்' ,''நல்நாடு'' ''முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும்'', ''அவரது பெயர் குடியிருக்கச் செய்'', ''வலியகரத்தாலும் ஓங்கிய புயத்தாலும்'', ''நீ'' ''நீங்கள்'', ''இப்போது'', ''இன்று'' முதலிய சொற்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. இப்பாரம்பரியம் இறைவனை எலோகிம் என்றும், சீனாய்மலையைக் கோரேபு என்றும் அழைக்கிறது.

இப்பாரம்பரியம் இறுதிவடிவம் எடுத்த காலத்தில் இஸ்ராயேல் சமயத்துக்கு ஏற்பட்ட இடுக்கண்மிக்க காலத்தைச் சுட்டுகிறது இந்நூலின் நடை. அப்பேர்ப்பட்ட காலங்களில் ஒன்று இஸ்ராயேலின் வீழ்ச்சிக்குப்பின் வந்த காலமாகும். யூதாவுக்கு அசீரியர்களின் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தது. மேலும் யூதா அரசர்கள் யாவேயின் சமயத்துக்கு இடர்களை விளைவித்துக் கொண்டிருந்தனர். இச்சூழ்நிலையில் யோசியாவின் சீர்திருத்தம் வருகிறது. உடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. சமயத் தூய்மையைக் காக்கவேண்டும்; சமய இடுக்கண்களைக் களையவேண்டும்; வழிபாட்டை மையப்படுத்தவேண்டும். இவற்றில் இச்சீர்திருத்தம் எலோகிம் பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறது. உபாகமப் பாரம்பரியம், உடன்படிக்கையை இறைவன் இஸ்ராயேலை அன்போடு தேர்ந்தெடுத்தலாகவும், சட்டத்தை இத்தேர்வுக்கு இஸ்ராயேல் அளிக்கும் பிரமாணிக்கமிக்க பதிவாகவும் கருதுகிறது. இவை இப்பாரம்பரியத்தின் அடிப்படை இறையியல் கருத்துக்களாகும். யாவேயின் உடன்படிக்கைச் சட்டத்திற்குப் பிரமாணிக்கமான பதில் அளிப்பதிலும், எருசலேமின் ஒரே புனித இடத்தில் இறைவனுக்கு அளிக்கப்படும் தூய வழிபாட்டிற்குத் திரும்பி வருவதிலும்தான் மீட்பு அடைய முடியும். இந்தப் பிரமாணிக்கமிக்க பதிலை ஒவ்வொருவனும், சொந்தமாக, சுதந்தரமாக அளிக்கவேண்டும். ஒவ்வொரு தலைமுறையிலும் ஒவ்வொருவனும் இப்பதிலை அளிக்க வேண்டும் (உப 26:5-11). இந்த உடனடித் தேவை, இந்த அழுத்தம், ''நீ'', ''இன்று'', ''இப்போது'', என்று அடிக்கடி சுட்டிக்காட்டுவதில் வெளிப்படுகின்றது இந்தக் குறிக்கோளையும் அதைச் செயல்படுத்துவதையும்

பொறுத்தது இறைவனின் இறுதித் தீர்ப்பு (உப 23). எருசலேமைத் தவிர்த்த பிற புனித இடங்கள், சிறப்பாக வட அரசைச் சேர்ந்த புனித இடங்கள் விலக்கி ஒதுக்கப்படுகின்றன. அதன் விளைவாகக் குலமுதியவர்கள் அவ்வளவு சிறப்பிடம் பெறுவதில்லை.

6.எ. ஏழாவதுபடி: குருக்கள் பாரம்பரியம்:-

எருசலேம் குருக்கள் இப்பாரம்பரியத்தை எழுதியதாகக் கூறப்படுவது இப்பெயருக்குக் காரணமாகிறது. சாலமோனின் காலத்திலிருந்து சாதோக்கின் மக்கள் எருசலேமிலுள்ள ஆலயத்தில் பணிபுரிந்து வந்தனர். இவர்களுடைய மனப்பாங்கும் நோக்கும் வடஅரசைச் சார்ந்த குருக்கள், லேவியர் ஆகியோர்களுடையவையிலிருந்து வேறுபட்டவை. இவர்கள் தங்களுடைய பாரம்பரியத்தைக் கடைப்பிடித்தனர். அதன் விளைவு ''தூய்மையின் சட்டமாகும்'' (லேவி 17-26). இந்தச் சட்டத் தொகுப்பில் பழங்காலத்துச் சட்டப்பாரம்பரியமும், எருசலேமின் ஆலயப்பணியாளர்களின் பழக்க வழக்கச் சட்டங்களும் அடங்கியிருக்கின்றன. இந்தச் சட்டத் தொகுப்பில் உள்ள கருத்துக்களில் பெரும் பகுதி காலத்தால் மிகப்பழமையானது. அதன் போக்கு சாதோக்கின் மக்களின் மனப்போக்கை எடுத்துக் காட்டுகிறது.

கி.மு. 586-இல் யூதேயா வீழ்ச்சியுற்றதும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் சமய சமூகத் தேவைகள் மாறின. நாடு கடத்தப்பட்ட யூதர்கள் தங்கள் கடமைகள் பற்றி, குருக்களால் கற்பிக்கப்பட ஒன்று கூடினர். பரிசுத்த வரலாறு அவர்களுக்கு மீண்டும் எடுத்துச் சொல்லப்பட்டது. குருக்கள் யாவே பாரம்பரியத்தைப் பின்பற்றி அதை மேலும் செம்மைப்படுத்தி, தங்கள் மனப்போக்குக்கு ஒத்த விதத்தில், தாங்கள் விரும்பியவற்றை எடுத்துக்கூறினர். இஸ்ராயேலின் வரலாற்றுக்குப் புதியதோர் பணித் திட்டம் அமைத்தனர். கடந்த காலத்தை அன்பு உடன்படிக்கையின் தொடர்கதையாக எடுத்துக் கூறினர். அதில் ஆரோனுக்குச் சிறப்பிடம் தரப்பட்டது. ஆரோனின் வழித் தோன்றல்களான குருக்களைத் தலைவர்களாக மக்கள் ஏற்றுக் கொண்டனர். இஸ்ராயேல் மீளவும் இறையாட்சி கொண்டு விளங்கியது. இவர்கள் தம் குருக்களின் வழியாகத் தம் மக்களை ஆட்சி செய்தார். வழிபடுதல் இஸ்ராயேலர் வாழ்வின் மையமாக விளங்கியது.

கி.மு. 538-இல் சைரஸ் யூதர்களை எருசலேமுக்குத் திரும்பிப் போக அனுமதித்தபின் புதிதாகச் சீர்திருத்தப்பட்ட சமூகத்தில் குருக்கள் சிறப்பிடம் பெற்றனர். குருக்களின் நூல்களோடு, பணிகள், தூய்மை (பெறல்) பற்றிய புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டன. எருசலேம் புனித ஆலயம், பலி, திருநாட்கள், ஆரோனின் குமாரர்கள், அவர்களுடைய அலுவல்கள் ஆகியவை பற்றிய ஒழுங்குகளில் இப்பாரம்பரியம் ஆர்வம் காட்டுகிறது. பிற்காலத்தில் இன்னும் பலவிதிகள் சேர்க்கப்பட்டன. விரைவில் இக்குருக்கள் பாரம்பரியம், யாவே, எலோகிம், உபாகமப் பாரம்பரியங்களோடு ஒன்றியது. இவற்றோடு சேர்ந்து புதிதாக மீளவும் அமைக்கப்பட்ட நாட்டின் அடிப்படையாகி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மற்றப் பாரம்பரியங்களைப் போல் இப்பாரம்பரியமும் நீண்ட முன்வரலாற்றைக் கொண்டது. இதில் மிகப் பழமைமிக்க கருத்துக்களைக் காணலாம். ஆனால் நாடு கடத்தப்பட்ட காலத்தில் தான் ஒரு தனிப்பட்ட நூலாக இப்பாரம்பரியம் இறுதிவடிவம் எடுத்திருக்கவேண்டும்.

தென்னரசான யூதாவில் இது தோன்றினாலும், இலக்கியத் தன்மையில் யாவே பாரம்பரியத்திற்கு மாறான தன்மையுடையது. நடை மெய்யியல் போன்றது, ஆள் தன்மையற்றது, கவையற்றது, வறட்சியுடையது. வாக்கியங்கள் குறுகியவை, பொருள் செறிந்தவை, நடையில் கடுகடுப்பும், ஆய்வில் புலமையும் உள்ளவை. வாய்பாட்டுத் தன்மையும், மீண்டும் மீண்டும் கூறும் தன்மையும் கொண்டவை. ஆனால் இவற்றில் கலைத் தன்மையில்லை, உருவக வண்மையில்லை. மாறாக இவற்றில் நிழல் தன்மை மிளிர்கிறது. கருத்துத் துல்லியமாக இருக்க முயலுகிறது; கலைச் சொற்கள் பயன்படு

கின்றன, இப்பாரம்பரியம், மரபு வரிசைகளிலும் காலவரையறை செய்வதிலும், வழிபாட்டுச் சடங்குகளிலும் விருப்பமுடன் அக்கறை செலுத்துவதாகத் தெரிகிறது; கணக்கிடுதலிலும் மரபு முறைகளிலும் புகுந்து திளைக்கிறது.

இப்பாரம்பரியம் முழுவதும் கொள்கைகள் நிறைந்து கிடக்கின்றன. திட்டவட்டமான இறையியல் சிந்தனைப்போக்கு தெளிவாகக் காணப்படுகிறது. இப்பாரம்பரியத்தில் வரலாறு முழுவதும் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பாகமும் இறைவன் மனிதனோடு செய்து கொண்ட உடன்படிக்கையில் சிறப்பிக்கப்பெறுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் தம்மையே வெளிப்படுத்தியதைச் சுட்டிக்காட்டுகிறது. இஸ்ராயேல், இறைவனின் புதிய படைப்பாகும்.

எலோகிம் பாரம்பரியத்தை விட, குருக்கள் பாரம்பரியம் இறைவனுக்கு மனிதப்பண்புகளைப் பொறுத்திக்கூறுவதைத் தவிர்க்க மிகக் கவனமாய் இருக்கிறது, இதில் எலோகிம் பாரம்பரியத்தையும் மிஞ்சுகிறது எனலாம். இறைவனுக்கும் மனிதனுக்கும், இறைவனுக்கு ஒதுக்கப்பட்ட பொருள்களுக்கும் உலகப் பொருள்களுக்கும், தூய்மைக்கும் தூய்மையின்மைக்கும், இடையேயுள்ள வேறுபாடு அழுத்திக்கூறப்படுகிறது. இறைவனது தூய்மையும் பரிசுத்தமும் சிறப்பிக்கப்படுகின்றன. இறைவன் முழுவதும் தூய்மையானவர். வெகுதூரத்தில் உள்ளவர். மனிதன் அவரை அணுக முடியாது. ஆயினும் அவரைப்போல் இருக்கவேண்டும். இப்பாரம்பரியத்தின் தொலைநோக்கு வான்வீட்டை மையமாகக் கொண்டது. இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவைமேல் கவனம் செலுத்துகிறது.

நாடு கடத்தப்பட்ட காலத்தில் இஸ்ராயேலின் விசுவாசம் பல இடர்களுக்கு உள்ளாயிற்று. இது, குருக்கள் பாரம்பரியத்திற்குப் பின்னணியாயிற்று. யாவே தூய்மையாக இருப்பது போல் இஸ்ராயேலும் தூய்மையாய் இருக்கவேண்டும். அதாவது மனிதனால் படைக்கப்பட்ட ஒழுக்கவாழ்வு, சமய வழிபாடு ஆகியவற்றிலிருந்து இஸ்ராயேல் பிரிந்து, தனித்திருந்து, அவற்றால் கறைபடாமல் இருக்கவேண்டும். இப்போக்கு, சட்ட ஒழுக்கங்கள் பற்றியும், சட்டத் தூய்மை பற்றியும் காட்டும் அக்கறையில் தெளிவாகிறது. நாடு கடத்தல் முடிந்தபின், திரும்பி வந்து எருசலேம் ஆலயத்தில் இறைவனை வழிபடுவதை இஸ்ராயேல் ஒரு குறிக்கோளாக எதிர்நோக்கவேண்டும். இதைப் படிப்பிப்பதற்கு, குருக்கள் பாரம்பரியம் ஆழ்ந்த வழிபாட்டு அடிப்படையில் இஸ்ராயேலின் வரலாற்றை எடுத்துக்கூறுகிறது. எல்லா நிகழ்ச்சியுரைகளிலும் கொடுக்கப்படும் துல்லியமான காலவரையறை இப்பாரம்பரியத்தின் ஆண்டுக் குறிப்பேட்டில் வழிபாட்டுப் பொருளுடையது. விழாக்கள், பிற்காலத்தில் இஸ்ராயேலரிடையே கொண்டாடப்பட்ட விதத்தில் அவற்றின் வழிபாட்டுச் சடங்குப் பொருளை விளக்குவதற்காக யாத்திராகம வரலாற்றுச் சூழ்நிலையில், விவரிக்கப்படுகின்றன. யாத்திரையும், பாலைவனம் வழியாகக் கூடாரங்களோடு செய்யப்பட்ட பயணமும் ஒரு மாபெரும் புனித வழிபாட்டு ஊர்வலமாகக் காட்டப்படுகின்றன. சீனாய் மலையில் காணப்படும் இறையாற்றல், இறைவெளிப்பாட்டில் உச்சநிலை அடைகிறது. வரலாற்றின் ஒவ்வொரு பகுதியிலும் மனிதன் இறைவனுக்கு அளித்த பலிவழிபாட்டின் படிப்படியான வளர்ச்சியை, குருக்கள் பாரம்பரியம் எடுத்துக்காட்டுகிறது. எகிப்திலிருந்து விடுதலையடைந்த இஸ்ராயேலை ஒருவழிபாட்டு மக்களினமாக மாற்றுகிறது. இங்கு இறைவனது புதிய படைப்பாக, ஒரு புனித மக்களினமாக மாறுவதையே நம்பிக்கையூட்டும் ஒரு குறிக்கோளாக இப்பாரம்பரியம் பாபிலோனியாவிற்கு நாடுகடத்தப்பட்டுத் துணையற்றுக் கைவிடப்பட்ட இஸ்ராயேலுக்கு அளிக்கிறது.

யாத்திரையாகமத்தின் பிற்பகுதியும், லேவியர் ஆகமம் முழுவதும், எண்ணாகமத்தின் பெரும் பகுதியும் குருக்கள் பாரம்பரி

யத்தைச் சேர்ந்தவையாகும். இப்பாரம்பரியத்தில் இங்குமங்குமாக வரும் நிகழ்ச்சியுரைப் பகுதிகளும் ஆதியாகம நிகழ்ச்சியுரைப் பகுதிகளும் சட்டத்தையும் வழிபாட்டுச் சடங்குகளையும் பெரும்பகுதியாகக் கொண்ட இப்பாரம்பரியத்திற்குப் பணிச்சட்டமாக அமைகின்றன. நிகழ்ச்சியுரைப் பகுதிகளிலும் சட்டமும் வழிபாட்டுக் கருத்தும் காணப்படுகின்றன.

ஐந்நூலை அமைப்பதில் இறுதியான பங்கு, குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். ஒருவேளை, எஸ்ராவின் கால்த்தில் ஐந்நூல் ஒரு தொகுப்பாக, ஒன்றித்த ஒரு தனிநூல் தொகுதியாக உருவெடுத்திருக்கலாம். இது பிற்கால யூதர்களின் அடிப்படைச் சட்டமாக அல்லது தோராவாக ஆகிறது. இதில் மோசேயின் மரபுரிமை உடைமை முழுவதும் அடங்கியுள்ளது. இது தோற்றத்திலும் உள்ளடக்கத்திலும், போக்கிலும் பெரும்பாலும் மோசேயைச் சார்ந்ததாகும். இஸ்ராயேல் மக்களின் நாட்டு வரலாற்றைக் கொண்டுள்ளது. நாடு கடத்தப்பட்டபின் யூதர்கள் மோசேயின் சட்டத்தை இறைவனது பெருங்கொடையாகக் கருதினர். அதைப் பிரமாணிக்கமாய் மனிதன் கடைப்பிடித்தபோது உண்மையான மகிழ்ச்சிக்கு அவன் வழிநடத்தப் பெறுகிறான் எனக் கருதினர். ஐந்நூலை புலமைமிக்க ராபிகள் சூழ்ந்து படித்தனர். அதற்கு விளக்கவுரை அளித்தனர். இவ்வாறு இஸ்ராயேலின் மறைவாழ்வுக்கு மையமாகத் திகழ்ந்தது தோரா.

7. ஐந்நூலும் மோசேயும்:-

ஐந்நூலில் காணப்படும் நான்கு பாரம்பரியங்களும், கி.மு. 6-ஆம் நூற்றாண்டுவரையுள்ள காலத்தில் வெவ்வேறு காலங்களில் திட்டவட்ட இறுதிவடிவம் எடுத்தன எனலாம். ஆகையால் இப்பாரம்பரியங்களில் காலத்தால் முந்தியதுகூட மோசேக்கு மிகப் பிந்தியதாகும். மோசே கி.மு. 13-ஆம் அல்லது 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ஆயினும் மோசேதான் ஐந்நூலை எழுதினார் என்று யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் கூறிவந்துள்ளன. இது ஒரு புறம்; மறுபுறம் இலக்கிய வரலாற்று ஆய்வுத்திறனின் உறுதியான முடிவுகள் உள்ளன. இவற்றுள் எது உண்மை? பிரச்சனை எளிதானதன்று. சிக்கல் மிக்கது. இந்த இரண்டில் எந்த ஒன்றையும் மறுத்துப் பிரச்சனைக்கு விடை காண முடியாது. நான்கு பாரம்பரியங்கள் தோன்றிய விதம், இஸ்ராயேலும் ஆதிக்கிறிஸ்துவர்களும் புரிந்து கொண்ட ஆசிரியத்தன்மைபற்றிய கருத்து ஆகியவற்றை, மிக நுணுக்கமாய் அணுகி விடை காண வேண்டும்.

இப்பிரச்சனைக்கு விடைகாண, ஆசிரியத்தன்மைபற்றிய பழம் முன்னோர்கள் கொண்டிருந்த கருத்துக்கும், நம்மிடையே நிலவும் கருத்துக்கும் உள்ள வேறுபாட்டை உணர வேண்டும். ஒரு நூலுக்கு யார் ஆசிரியர் என்பதுபற்றி நாம் கருதுவது குறுகிய பொருளுடையது. ஆனால் பழம் முன்னோர்கள் இவ்வாறு கருதவில்லை. அவர்கள் கருத்து மிகப்பரந்த மனப்போக்கு உடையதாகத் தெரிகிறது. விவிலியத்தில் ஐந்து வகையான ஆசிரியர்களைக் காண்கிறோம்.

முதலாவது:- ஒருவர் தமது சொந்த உழைப்பாலும் தமது கைப்படவும் ஒரு நூலை எழுதியிருந்தால் அந்நூலுக்கு அவர் ஆசிரியராவார். லூக்கா எழுதிய நற்செய்தி இவ்வகையைச் சேர்ந்தது.

இரண்டாவது:- ஒருவர் சொல்லச் சொல்ல மற்றொருவர் அப்படியே எழுதினால் நூல் வாசகத்தை வழங்கியவர் இந்நூலுக்கு ஆசிரியராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். இது சாதாரணமாய் வழக்கில் இருந்ததாகும். இவ்வகையைப் புனித பவுலின் திருமுகங்களில் காணலாம். மேற்கூறப்பட்ட இரண்டுவகை ஆசிரியத்தன்மையும் நவீன காலக் கருத்தோடு ஒத்துப்போகக்கூடியவை.

மூன்றாவது:- ஒருவர் கருத்தை அளித்தார், மற்றொருவர் அதை நூலாக எழுதினார். புனித யாக்கோப்புவின் திருமுகம் இவ்வகையைச் சார்ந்தது என்பர் அறிஞர். காரணம் யாக்கோபு அரமேயிக்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட கலிலேயாவைச்

சார்ந்த நாட்டுப்புறத்தவர். அவரது திருமுகம் குறையற்ற, உயரிய கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது.

நான்காவது:- குருவின் சீடரால் எழுதப் பட்ட நூலுக்குக் குருவே ஆசிரியராகக் கரு தப்படுவார். இந்நூல் எழுதப்படுவதற்குக் குருவின் கருத்துக்களும் மனப்போக்கும் சொற்களும் அடிப்படையாகும். இப்படிப் பட்ட நூல்கள் குரு இறந்த பின்னும் எழுதப் படலாம். ஏசயா, எரேமியா நூல்களின் பகுதி கள் இவ்வகையைச் சார்ந்தனவாகும். புனித யோவான் எழுதிய நற்செய்தியில் சிலபகுதி களும், புனித மத்தேயு எழுதிய நற்செய்தி யும், புனித பேதுருவின் இரண்டாம் திருமுக மும் இவ்வகையைச் சேர்ந்ததாக இருக்க லாம் என்பர் அறிஞர்.

ஐந்தாவது:- ஆசிரியர் பற்றிய பரந்து விரிந்த கருத்தாகும்; அதாவது ஒருவர் சிறந் துவிளங்கிய இலக்கியப் பாரம்பரியத்தில் எழுதப்பட்ட எந்த ஒரு நூலுக்கும், அவரே ஆசிரியராகக் கருதப்பட்டார். மோசே திருச் சட்டம் அளித்தவர். ஆகையால் திருச்சட்ட நூலாகிய தோரா முழுமைக்கும் அவரே ஆசிரியராக அழைக்கப்பட்டார். அவர் இறந்து, பல நூற்றாண்டுகளுக்குப்பின்தான் இத்தொகுப்பு இறுதிவடிவம் எடுத்தாலும், தோராவுக்கு மோசேயேதான் ஆசிரியர். சங்கீ தங்களுக்குத் தாவீது ஆசிரியர் என்பதும் ஞானாகம இலக்கியங்களுக்குச் சாலமோன் ஆசிரியர் என்பதும் இவ்வகையைச் சேர்ந்த தேயாகும். நவீன காலத்தில் இவர்களை ஆசிரியர் என்று கூறமாட்டோம், புரவலர் என்போம். கடைசி இருவகை ஆசிரியத்தன் மையிலும் புனைபெயர் புகுகிறது. இவற் றைப் பழைய முன்னோர்களின் கருத்துப்படி நோக்கவேண்டும்.

யாவே, எலோகிம், உபாகம, குருக்கள் ஆகிய நான்கு பாரம்பரியங்களின் பொருள டக்கம், அவற்றைப் புதுப்பித்த அல்லது அவற்றிற்கு இறுதிவடிவம் அளித்த பிற்கால ஆசிரியர்களால் படைக்கப்பட்டது அன்று என்று, ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம். இவர்களுக்கு முன்னமேயிருந்த வாய் மொழி, எழுத்துப் பாரம்பரியங்களைப் பெரு மளவில் பயன்படுத்தி எழுதப்பெற்றதாகும். அண்மைக்கால அறிவியலாய்வு இம்மக்களி டையே நிலவிய வாய்மொழிப் பாரம்பரியத் தின் உண்மைத் தன்மையை அழுத்தந்திருத்த மாகக் கூறுகிறது. இவ்வாராய்ச்சி உப்சாலாக் குழுவினரின் பணியாகும். தொல்பொருள், புதைபொருள் பற்றிய ஆராய்ச்சிகள், இப் பாரம்பரியங்களின் வரலாற்றுப் பொருள் கள், சட்டப்பொருள்கள் ஆகியவை, கையெ ழுத்து வடிவம் எடுத்த காலத்தைவிட மிக முந்திய காலத்தைச் சார்ந்தவை என்று காட்டி யுள்ளன. பிற்கால ஆசிரியர்களும், பதிப்பா சிரியர்களும் கடந்த பழைய வரலாற்றுக்குத் தங்கள் காலச் சூழ்நிலைக்கேற்ப விளக்கிக் கூறுவதிலும், பழைய சட்டத்தையும் சூழ் நிலைக்கேற்ப மாற்றியமைப்பதிலும் கவனம் செலுத்தினர். ஐந்நூலில் கண்டுள்ளபடி மூதா தையர்களின் வரலாறும், எகிப்திலும், பாலைவனத்திலும் வாழ்ந்த எபிரேயர்களின் வரலாறும், அக்காலத்தில் சமூக அரசியல் வரலாற்று நிலைகளாக இருந்ததாக மற்ற அறிவியல் கூறுகளிலிருந்து தெரியவருகின்ற வற்றோடு, குறிப்பிடத்தக்க அளவில் ஒத்துள் ளன. பிற்காலத்தில் வாழ்ந்த எந்த ஆசிரிய ரும் இவ்வரலாற்றைத் தாமாகக் கண்டுபிடித் திருக்கமுடியாது. மேலும் பொருள் அளவில் பரந்த வரலாற்றுத் தன்மையுடைய யாவே. எலோகிம் பாரம்பரியங்கள் இரண்டிற்கும் பொதுவான, காலத்தால் முந்திய ஒரு பாரம் பரியம் இருந்திருக்கவேண்டும் என்பது அறி யக்கிடக்கிறது. இதையே சட்டத் தொகுப் பிற்கும் பொருத்திக் கூறலாம். முறைப்படுத் திக் கூறுவதில் வேறுபாடு இருந்தாலும், எல்லாச் சட்டங்களும் ஒரே சமய உறுதிப் பாட்டிலிருந்து வரும் சட்டக் கொள்கை யைச் சார்ந்தவையாய் இருக்கின்றன. அவை சமய வழிபாட்டையும், சமய வாழ்வையும் ஒழுங்குபடுத்தின. அவை எல்லாம் தங்க ளின் தோற்றத்தையும் தாங்கள் இருப்பதற்கு ரிய காரணத்தையும் விளக்க, சீனாய்மலை நிகழ்ச்சியையே ஒருமுகமாய்ச் சுட்டிக்காட்டு கின்றன.

இவை கடந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட் காலவரையறையில் நிகழ்ந்த சில அசாதா ரண நிகழ்ச்சிகளின் உண்மையை உய்த்தறிய உதவுகின்றன. இந்நிகழ்ச்சிகள், இஸ்ராயேல் தன்னோடு கொண்டிருந்த கருத்துக்களை யும், அது இறைவனோடு கொண்டிருந்த உறவையும் அடிப்படையிலேயே பாதித் திருக்கவேண்டும்.

இந்நிகழ்ச்சிகளுக்குப் பொருள் அளித்துத் திசை காட்டக்கூடிய ஆற்றல் மிக்க ஒரு மதத்தலைவர் இருந்திருக்கவேண்டும் என்று உய்த்துணரலாம். யாத்திரையின் போதும் பாலையில் அலைந்து திரிந்த போதும் இஸ் ராயேலின் வரலாற்றில் இப்படிப்பட்ட தலைவராகத் திகழ்கிறார் மோசே. அவர் தலைமை தாங்கி ஆதிக்கம் செலுத்துகிறார்; நாட்டையும் மக்களையும் திட்டமிட்டு அமைக்கிறார். இஸ்ராயேலின் சமயத் தலை வராக விளங்குகிறார். அதற்குச் சட்டம் அளிப்பவர்களில் தலைமையானவர். முந் தைய பாரம்பரியங்கள் அவரை நோக்கி இயங்குகின்றன. இவையும், அவரது தலை மையின்கீழ் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் நினை வும் சேர்ந்து ஒரு பெரும் நாட்டுக் காவிய மாக உருவெடுக்கின்றன.

மோசேயில் தோன்றிய மறை, மக்களின் விசுவாசத்தையும் அவர்களின் நடைமுறை யையும் பாதித்து அவர்கள் மேல்நீடித்த நிலையான முத்திரையிட்டது. மோசேயின் சட்டம் நாட்டிற்கு மேல்வரிச்சட்டமாக நிலைத்தது. மாறிய நிலைகளுக்கு வேண்டிய திருத்தங்களும், மோசேயின் மனப்போக்கை விளக்குவனவாக எடுத்துக் கூறப்பட்டன. ஆகையால் அவரது அதிகாரத்தைப் பெற்ற தாகக் கருதப்பட்டன. மோசேயும் அவரைச் சேர்ந்தவர்களும் ஓரளவு இலக்கியம் அமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்று விவிலியம் சான்று கூறுகிறது. இதை நாம் எளிதில் மறுத்துவிடமுடியாது. இலக்கி யப் படைப்பு, அதன் மூலங்களைப்போல் அவ்வளவு சிறப்புடையது அன்று. ஐந்நூ லில் காணப்படும் பாரம்பரியங்கள், மோசே யைத் தலைமையாகவும், ஊற்றாகவும் கொண்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள் வது, மிக முக்கியமாகும். இலக்கிய, அல் லது வரலாற்றுத் திறனாய்வுகள் எவ்வளவு முயன்றும் இந்த அடிப்படையுண்மையை மறுக்க முடியவில்லை.

மோசே 13-ஆம் அல்லது 12-ஆம் நூற் றாண்டைச் சார்ந்தவர். நாமும் அவரை அறிந்து கொள்ளக்கூடும். ஐந்நூலில் விவரிக் கப்படும் அவரது பொறுப்புள்ள மேற் பார்வை அவர் காலத்தில் விடுதலை அடைந்த எபிரேயர்களின் ஒற்றுமையான கூட்டுச் செயல்களுக்கும், பிற்காலத்தில் பாரம்பரியங்களின் ஒரே சீரான வளர்ச்சிக் கும் பொருள் அளிக்கிறது. அவரின்றி அல் லது அவரைப் போன்ற ஒருவரில்லாமல் இந்நிகழ்ச்சிகளுக்குப் போதிய விளக்கம் அளிக்கமுடியாது. ஆகையால் மோசே ஐந்நூ லின் மையமாக இருப்பவர். பழங்காலத்தில் பொதுவாக ஏற்றுக்கொண்டதுபோல், அவர் ஐந்நூலுக்கு ஆசிரியர் என்று அழைக்கப்படு வது சரியே.

பழங்காலத்தில் பொதுவாக ஏற்றுக்கொள் ளப்பட்ட இக்கருத்தைப் பற்றி, லாக்ராஞ் என்ற அறிஞர் 1897-இலிருந்து பகுப்பா ராய்ச்சி செய்து வந்துள்ளார். ஆசிரியத் தன் மைபற்றிய கருத்தைச் சிதைவுறாது காக்கும் படி இக்காலம் முனைப்பான கருத்தைக் கொண்டுள்ளது. ஆகையால் பொருள் களைத் தொடர்ந்த, பரந்த நீண்ட காலத்தில் நடந்த பதிப்பு வேலையை, சிறப்பாக இறை யூக்கம் பெற்ற நூலைப் பொருத்தமட்டும், ஏற்றுக் கொள்ள இக்காலத்தவர் தயங்குவர். சிந்தையிலும், எழுதப்பட்ட வார்த்தையி லும் ஒற்றுமையைக் கடைப்பிடித்த மிகப் பழைய மேற்காசிய மக்கள், இத்தகைய நுண்ணிய கருத்தைக் கொண்டிருக்கவில்லை. பழம் மேற்காசிய மக்கள் குழுவாகச் சிந்தித் தனர்.

ஆகையால் பிற்காலத்தில் நடந்த திருத்தங் களையும் வளர்ச்சியையும் மூல வரலாற்று அல்லது இலக்கிய ஆசிரியரே செய்தார் என்று கூறத்தயங்கவில்லை. இவர்களைப்

பொறுத்தளவில் நூலுக்கு இறுதி எழுத்து வடிவம் கொடுத்தவரை விட, முதலில் நூலைத் தொடங்கி வைத்து அதன் போக்கை வரையறை செய்தவரே ஆசிரியராகத் தோன்றினார். பதிப்பு வேலைகளும் பிற்சேர்க்கைகளும் பிற்காலத்திலும் நடைபெற்றனவாகத் தெரிகிறது. மேலும், ''இறைவன் மோசேக்குக் கூறியது'' என்ற வாய்பாடு, தற்செயலாக, அபூர்வமாக, அதுவும் குறிப்பிட்ட வாசகங்களோடு பொருந்திக்கூறப்படுகிறது. இம்முறை சட்டத்தின் மாறும் தோற்றத்தை அதன் நித்தியத் தன்மையோடு இசைந்ததாக, ஒற்றுமையுள்ளதாகச் செய்யப்படும் இலக்கிய உத்தியாகும். இந்த நித்தியத் தன்மை நேரடியாகவோ, முதல் சட்டத்தை அளிப்பவரான மோசே வழியாகவோ பேசும், இறைவனின் அதிகாரமாகும். ஆகையால் இந்த வாய்பாடு சட்டத்தின் நிலையான கருப்பொருளை வலியுறுத்துகிறது. சட்டம் ''எல்லாக் காலத்துக்கும்'' செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.

ஐந்நூலுக்கு மோசே ஆசிரியராவர் என்ற யூத, கிறிஸ்துவப் பாரம்பரியக் கருத்துக்கு எதிராக எழுந்த மறுப்புகளுக்கு, மேலும் பதில் அளிக்க லாக்ராஞ் முயன்றார். மோசேயின் வரலாற்றுப் பங்கை, அவரது இலக்கியப் பங்கிலிருந்து வேறுபடுத்திப் பதில் அளிக்க முயன்றார். இவற்றுள் வரலாற்றுப் பங்கு சிறப்பிடம் பெறுகிறது. ஆகவே மோசே தோராவின் ஆசிரியர். ஏனெனில் இஸ்ராயேலுக்கு விடுதலை அளிப்பவர் அவர்தாம். அவரே சட்டம் அளிப்பவர். இஸ்ராயேல் வரலாற்றின் மையமும் மோசே தான். இவ்வரலாற்றைத் தோரா எடுத்துக் கூறுகிறது. ஆகையால் மோசே இன்றி இஸ்ராயேலின் வரலாறு இல்லை. இவ்வரலாறு இல்லையென்றால் தோராவும் இல்லை. இப்பொருளில் தோரா முழுமைக்கும் மோசே வரலாற்று ஆசிரியர் ஆவார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டால் தோரா ஒரு தனிப்பட்ட இலக்கிய வகையைச் சேர்ந்ததென்பது தெரியும். இது இஸ்ராயேலில் கடந்த கால வரலாற்றை நினைவுபடுத்திப் புதிய திட்டம் வகுத்து எழுதப்பட்டதாகும். தோரா முழுவதின் கருத்துத் தொடர்பு இந்நூலை ஒன்றாகச் சேர்த்திணைக்கிறது. ஆசிரியத் தன்மை பற்றிய விவிலியக் கருத்துப்படி, மோசே ஐந்நூலுக்கு ஆசிரியர் என்பதும் இந்நூலுக்கு ஒருமைப்பாட்டை அளிக்கிறது. இதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

8. நிகழ்ச்சியுரைப் பகுதிகளும், வரலாறும்:-

ஐந்நூலும் அதன் பாரம்பரியங்களும் தோன்றியவிதத்தைப் பார்த்தோம். அவற்றிற்கு மோசே ஆசிரியர் என்பது எவ்வளவிற்குப் பொருந்தும் என்றும் பார்த்தோம், நவீன காலத்திய வரலாற்று ஏடுகளையும் நுணுக்கமான வரம்புகளையும், இப்பாரம்பரியங்களில் எதிர்பார்ப்பது அறிவுக்கு ஒத்ததாகாது என்பதை மேற்சொன்னவை தெளிவாகக் காட்டும். இப்பாரம்பரியங்கள் உயிரற்ற வெறும் எழுத்துப் படிவங்கள் அன்று. அவை ஒரு மக்களினத்தின் உயிர்த்துடிப்புகளாகும். அம்மக்களிடையே ஒற்றுமையைப் பேணி வளர்க்க வல்லதாகும்; அவர்களின் விசுவாசத்திற்கு வலிமை அளிக்கவல்லதாகும். அப்பாரம்பரியங்களில் இக்கால வரலாற்றுத் துல்லியம் இல்லை என்பதால் அவற்றை நாம் நம்ப மறுப்பது அறிவுக்கு ஒத்தது ஆகாது.

தோரா ஒரு வரலாற்று நூலா? வரலாற்று நூல் பற்றிய இக்காலக் கருத்தை மனதில் கொண்டால், தோரா ஒரு வரலாற்று நூல் இல்லை. அதாவது வரலாற்றுக்காக எழுதப்பட்ட நூல் அன்று.

வரலாற்று நூல் என்று கூறும் போது நாம் புரிந்து கொள்வது என்ன? நூல் எக்காலத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ளதோ, அக்காலத்தைப்பற்றிய மூல ஏடுகள், நினைவுச் சின்னங்கள். கல்வெட்டுகள், நேரடிச் சாட்சிகள் முதலியவற்றை ஆய்வு செய்து எழுதப்பட்டது வரலாற்று நூலாகும். கிடைத்த சான்றுகளும் அவற்றின் உண்மைத்தன்மையும் நம்பத்தகுதியுடைமையும் சோதிக்கப்பட்ட

பின், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மேலும் கடந்த கால நிகழ்ச்சிகளை, அவை நடந்தபடியே விவரங்களோடு சேர்த்து ஒழுங்குபடுத்தி எழுதுவது வரலாற்று நூல் ஆகும். வரலாற்று நூல் பற்றிக் கிரேக்க, மேல்நாட்டு கருத்துக்களும் இவை போன்ற வையே.

ஆனால், இம்முயற்சிகளும், தூய கலப் பில்லாத வரலாற்றை மட்டும் தருவதில்லை. ஏனெனில் வரலாற்று ஆசிரியன் தனது சொந்த விளக்கங்களோடுதான் தனது நூலை எழுதுகிறான். ஆகையால்தான் ஒரே நிகழ்ச்சி யைப் பற்றி அல்லது ஒரே காலத்தைப் பற்றிப் பல நூல்கள் எழுகின்றன. எந்த மனிதனும் எக்காரியத்தையும் தனக்கே உரிய கருத்தோடும், கோணத்திலும் பார்க்கிறான். தூய கலப்பில்லா நிகழ்ச்சிகளை மட்டும் கூறும் வரலாறு என்பது கற்பனையாகும்.

வரலாறு பற்றிய இக்காலக் கருத்துக் களை மனதில் கொண்டு, தோராவை நோக் குவோம். இக்காலக் கருத்துப்படி தோரா வரலாற்று நூல் அன்று; அதாவது கடந்த நிகழ்ச்சிகளை நடந்தவாறு மட்டும் எழுதிய பதிவேடு அன்று. இவ்வாறு சொல்வதா னால், தோரா கடந்த நிகழ்ச்சிகளைக்கூறும் பதிவேடுகளைக் கொண்டிருக்கவில்லை என்று நாம் கூறவில்லை. தோரா வெறுமனே செய்தி சொல்வதற்காக மட்டும் நிகழ்ச்சி களை எடுத்துக்கூறவில்லை என்று கூற விரும்புகிறோம். வெறும்வரலாற்று நோக்கத் தைத் தவிர்த்த, சமய, இறையியல் நோக்கத் திற்காக இந்நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

நிகழ்ச்சிகளுக்கு மட்டும் சிறப்பிடம் அளித்து, பதிவு செய்தல் உலகியல் வரலாற் றின் நோக்கமாகும். இத்தகைய வரலாற்றில் தோராவுக்கு அக்கறையில்லை. ஆனால் நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய உட்பொருளை எடுத்துக் கூறுவதில் பெரிதும் அக்கறை காட்டுகிறது. உலகியல் வரலாற்று ஆசிரிய னும் தனது சொந்த விளக்கங்களைப் புகுத்தி நிகழ்ச்சிகளுக்குஉட்பொருள் அளிக்க முயலு கிறான் என்று முன்பு கூறினோம். உலகியல் வரலாற்று ஆசிரியன் நிகழ்ச்சிகளுக்கு உலகி யல் சார்ந்த பொருள் அளிக்கிறான். இதற்கு மாறாக, தோரா நிகழ்ச்சிகளுக்கு இறையியல் பொருள் அளிக்கிறது. உலகியல் வரலாற்று ஆசிரியன் வரலாற்றில் மனிதக் கரத்தை மட்டும் பார்க்கிறான். இந்நோக்கைக் கடந்து, விவிலிய ஆசிரியர், வரலாற்றில் இறைவனது ஆற்றல்மிக்க கரத்தைக் காண்கி றார். எனவே இவர் நிகழ்ச்சிகளைப் பார்க் கும் நோக்கம் வேறுபட்டது. இந்த நோக்க மும் முந்தியதைப்போல நேர்மையானது, முறையானது. இரண்டிலும் ஆசிரியர் தமது அறிவுத்திறனைப் பயன்படுத்தி உருவாக்கிய நூலை அவரது சொந்தச் சரக்காகவும், கற்ப னையாகவும் கருதுதல் நன்றன்று. புத்தி, ஒன்றுமின்மையில் வேலை செய்வதில்லை. பொருள் பெறவும் அல்லது ஒரு தனிப்பட்ட கோணத்தில் நோக்கப்பட ஒரு நிகழ்ச்சி வேண்டும். அந்நிகழ்ச்சியும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்க வேண்டும். ஒரு புதிய நோக்கு உண்மைக்கு அளிக்கப்படும் ஒரு புதிய மதிப்பீடாகும். திருநூல் ஆசிரியர்கள் தங்களுக்குரிய கோணத்தில் நிகழ்ச்சிகளை நோக்க இறைவ னிடமிருந்து சிறப்பான அருள் ஒளி பெறு கின்றனர்; இறையூக்கம் பெறுகின்றனர். இவை அவர்கள் கூறும் உண்மைக்கு உத்திர வாதம் அளிக்கின்றன; உறுதியும் உயர்வும் அளிக்கின்றன.

பஞ்சம் போன்ற ஒரு பெருங்கேடு நிகழ் கின்றது என்று வைத்துக் கொள்வோம். உலகியல் வரலாற்று ஆசிரியன் இந்நிகழ்ச்சி களைக் குறிப்பான். அதற்குரிய காரணத்தை ஆராய்வான். இதற்குப் பருவமழை தவறி யது அல்லது தவறான பொருளாதாரத் திட் டம் என்று காரணம் காட்டுவான். ஆனால் சமய வரலாற்று ஆசிரியன் இக்கேட்டைக் குறிப்பான். அதற்கு மக்கள் பாவத்தின் விளைவு எனறும் இறைவனின் செயல் என வும் பொருள் கூறுவான். ஆனால் இவ்விரு நோக்குகளில் அல்லது மதிப்பீடுகளில் முரண்பாடு இல்லை. உலகியல் வரலாற்று ஆசிரியன் கடவுள் இருப்பதையோ அவர் உலககாரியங்களில் தலையிடுவதையோ

மறுப்பதில்லை. உலகியல் வரலாற்று ஆசிரியன் என்ற அளவில் அவனுக்கு இவற்றில் அக்கறையில்லை. அவன் இம்மாதிரிக் காரியங்களில் தலையிடுவதுமில்லை. தன்னுடைய வரலாற்று ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டு, அவன் மனிதப்புலனுக்கும், புத்திக்கும், புலப்படக்கூடியவற்றைக் குறிப்பிடுகிறான். அதேபோல் சமய வரலாற்று ஆசிரியன் தனது எல்லைக்குள் உலவுகிறான். கடவுள் வரலாற்றில் தலையிட்டுச் செயல்படுவதால், மனிதன் செயல்படவேண்டாம் என்று இறையியல் வல்லுநர் கூறுவதில்லை.

ஆகவே நாம் இதுவரை கூறியவற்றிலிருந்து பின்வருவது தெளிவாகும். தோரா வரலாற்று நோக்கோடும், வரலாற்றுக்காகவும், வரலாற்றில் அக்கறை கொள்ளவில்லை. ஆனால் வரலாற்றில் அக்கறை கொண்டிருந்தது. அந்த வரலாறு சமய, இறையியல் வரலாறு ஆகும். அது, மனித வரலாற்றிலும் இறைவன் தலையிட்டுச் செயல்படுவதைச் சிறப்பித்துக் கூறும் வரலாறு ஆகும். வரலாறு பற்றிய மற்றெந்த நோக்குக் கூறினையும்போல் இந்த நோக்கும் நேர்மையானது, முறையானது, இவற்றை மனதில் கொண்டு பொதுவாக விவிலியம் முழுவதையுமே, சிறப்பாகப் பழைய ஏற்பாட்டையும் தோராவையும் நாம் வாசிக்க வேண்டும். இனித் தோராவிற்கு வருவோம்.

தோராவிற்கு ஒருமைப்பாடு அளிக்கும் பணியை வரலாற்று நிகழ்ச்சியுரைப் பகுதிகள் திட்டமிட்டுச் செய்கின்றன. இப்பகுதிகள் படிப்பவரைப் படைப்பு முதல் மனுக்குலத்தின் தொடக்க வரலாறு, மூதாதையரின் வரலாறு, சீனாய் உடன்படிக்கை, பாலை வனத்தில் அலைந்து திரிதல் முதலியவற்றின் வழியாக யோர்தானுக்கு அப்பாற்பட்ட நாட்டுக்கு இட்டுச் செல்லுகின்றன. மோசேயின் இறப்பு, மோவாபு நாட்டில் அவர் அடக்கம் செய்யப்படுதல் ஆகியவற்றோடு பழைய ஏற்பாட்டின் ஒரு பிரிவான இந்தத் தோரா முடிகிறது. இத்தோராவின் பெரும்பகுதி சட்டங்களாகும். இவை மோசேக்கு அளிக்கப்பட்ட இறைவெளிப்பாட்டின் சிறப்பாக விவரிக்கப்படுகின்றன. இந்த அளவில்தான் தோரா நிகழ்ச்சியுரைப் பகுதிக்குள் புகுத்தப் பெறுகின்றது.

ஆதியாகமத்தின் முதல் பதினொன்று அதிகாரங்களைத் தனியாக நாம் கவனிக்கவேண்டும். அவை சாதாரணமான மக்களுக்கு ஏற்ற பாணியில், மனித இனத்தின் தொடக்கம் பற்றிக் கூறுகின்றன. சூதுவாது அறியாத கபடமற்ற மக்களின் மனப்போக்கிற்கேற்ப எளிய, ஓவியப்பாணியில், மீட்புத் திட்டத்தின் அடிப்படை உண்மைகளை எடுத்துக் கூறுகின்றன. இந்த உண்மைகள் ஆதியாகமம் பற்றிய தலைப்பின்கீழ்க் கூறப்படும். இவை இறையியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட உண்மைகளாகும். இவற்றிற்குத் திருநூல் அதிகாரத்தோடு உறுதியளிக்கிறது. இவை உண்மை நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை. இந்நிகழ்ச்சிகளின் உறுதி அவற்றின் உண்மைத் தன்மையையும் குறிப்பாக உணர்த்துகிறது. இவற்றால்தான் ஆதியாகமத்தின் முதல் அதிகாரம் வரலாற்றுப்பகுதி என்று கூறப்படுகிறது.

குலமுதியவர்களின் வரலாறு, முதலாவதாக ஒரு குடும்ப வரலாறு ஆகும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகிய மூதாதையர் பற்றிய அரும்பொதுச் சொத்தாகக் கவனமாய்க் காப்பாற்றப்பட்டு வந்த நினைவுகளை இந்த வரலாறு சேர்த்துத் தொகுத்துத் தருகின்றது. இது சாதாரண மக்களுக்கு ஏற்ற பாணியில் அமைக்கப்பட்ட வரலாறு ஆகும். இவ்வரலாறு தனிப்பட்டோரின் வாழ்க்கை பற்றிய செய்தித் துணுக்குகளின் மீதும், மேலும் உணர்ச்சிகளைத் தூண்டும் நிகழ்ச்சிகளைப் படிப்படியாய் விவரிப்பதிலும் அக்கறை காட்டுவதாகத் தெரிகிறது. இவ்வரலாறு சமய நோக்கத்தோடு எழுதப்பட்டதாகும். அதாவது வரலாற்றில் திருப்பம் ஏற்படுத்தும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இறைவனது தலையிடல் சிறப்புப் பெறுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இறைவனது பரிபாலிக்கும் அருட்கரம் காணப்படுகிறது. வரலாற்றில் இப்போக்கு இறையியல்படி சரியானது. ஆனால் இப்

போக்கு இரண்டாம் தரக் காரணங்களின் பாகத்தைப் புறக்கணிக்கிறது. மேலும் சமயக் கொள்கையை எண்பிப்பதற்காகவே பல நிகழ்ச்சிகள் உட்புகுத்தப்படுகின்றன; விரிவாக்கப்படுகின்றன; ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இச்சமயக் கொள்கைகள் பற்றிப் பின்பு காண்போம். சமயக் கொள்கைக்காகவே இடம் பெற்றாலும் நிகழ்ச்சியுரைகள் வரலாற்றுத் தன்மையுடையதுவுமாகும். அவை எடுத்துக்கூறும் விதம் அவைகளுக்கே உரியதாக இருக்கலாம்.

ஆனால் அவ்வுரைகள் உண்மை நிகழ்ச்சிகளையே கூறுகின்றன. இஸ்ராயேலின் குலமுதியவர்களின் தோற்றம், குடியேற்றம், அவர்களது நிலநூல் பின்னிலைகள், இனமரபுப்பின்னிலைகள் ஆகியவை பற்றி அவ்வுரைகள் பிரமாணிக்கமாய் வருகின்றன. இந்நிகழ்ச்சியுரைகளை ஐயத்தோடும் நம்பிக்கையின்றியும் நோக்குதல் அறிவியல் சார்ந்த ஒரு பாணியாக இருந்து வந்தது. இத்தகைய போக்கைக் கைவிட் வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேற்காசியப் பகுதிகள் பற்றிய வரலாற்று ஆசிரியர்களும், தொல்பொருள் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும் அண்மைக் காலத்தில் அளித்துள்ள தகவல்களும், விளக்கங்களும் சேர்ந்து மேற்படி நிகழ்ச்சியுரைகள் உண்மையானவை, நம்பிக்கைக்குரியவை என்று நாம் ஏற்றுக்கொள்ளத் தூண்டுகின்றன. ஏன், கட்டாயப்படுத்துகின்றன.

யாத்திரை ஆகமத்திலும், எண்ணாகமத்திலும் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளும், உபாகமத்தில் தொடர்ந்து கூறப்படும் நிகழ்ச்சிகளும் மிகவும் பிற்காலத்தில் நடந்தவற்றைக் கூறுகின்றன. அவை மோசேயின் பிறப்புடன் தொடர்கின்றன. அவரது இறப்போடு முடிகின்றன. இவற்றில் எகிப்திலிருந்து புறப்பட்ட யாத்திரை, சீனாயில் தங்கியது, காதேசுக்குப் பயணம், மோவாபு சமவெளியில் குடியேறி நிலைத்திருந்தும் யோர்தானைக்கடக்கத் தயாராக இருத்தல் ஆகியவை அடங்கும். நிகழ்ச்சிகள் யாவும் உண்மையென்றும் மோசே உண்மையிலேயே ஒரு வரலாற்று ஆள் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஒழிய, இஸ்ராயேலின் பின்வரலாற்றுக்கும் இஸ்ராயேல் யாவேக்குக் காட்டிய பிரமாணிக்கத்திற்கும், சட்டத்தின் பால் கொண்ட ஆழ்ந்த பற்றுக்கும் போதிய விளக்கம் காண முடியாது என்று கூறலாம். அதே சமயம் இந்நினைவுத் தொகுப்புகள் மக்களின் வாழ்க்கை அமைப்புக்கு அளிக்கும் சிறப்பிடமும் சடங்கு வழிபாட்டில் அவை எழுப்பும் எதிரொலிகளும் இந்நிகழ்ச்சியுரைப் பகுதிகளுக்கு வீரப்பெருங்காப்பியத் தன்மையை அளிக்கின்றன. நிகழ்ச்சியுரைப் பகுதிகளுக்கு இத்தொகுப்புகள் வழிபாட்டுச் சடங்கு நிகழ்ச்சியின் பண்புகளை அளிக்கின்றன. இதை நாம் ஆழ்ந்து உணரவேண்டும். எனவே இஸ்ராயேல் ஏற்கனவே ஓர் இனமாக இருந்து, உலக வரலாற்று மேடையில் தோன்றுகிறது. இந்த உண்மை பாரவோன் மெனப்தாவின் கல்லறைக் கல்வெட்டுகளில் மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. மற்றப்படி மிகப் பழஞ்சான்றுகளில் இவ்வினம் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் பிற நூல்களும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் ''கைக்சோஸ்'' என்ற ஒருவகைச் செமித்தியர்கள் எகிப்தின்மேல் படையெடுத்தது பற்றியும், நைல்நதி கழிமுகப்பகுதியில் எகிப்தியரின் ஆட்சி பற்றியும், யோர்தான் பகுதியில் நிலவிய அரசியல் நிலை பற்றியும் கூறுகின்றவற்றோடு, விவிலியம் கூறுகின்றவை பரவலான ஒற்றுமை கொண்டுள்ளன.

பொது வரலாற்று நிகழ்ச்சிகளோடு, விவிலியம் தரும் விவரங்களை வரிசைப்படுத்துவது இன்றைய வரலாற்று ஆசிரியனது கடமையாகும். விவிலியக் குறிப்புகள் பற்றாக் குறையானவை. விவிலியத்துக்குப் புறம்பான வரலாற்றுக் காலவரையறையில் உறுதிப்பாடின்மை தெரிகிறது. இவ்வரையறைகளை மனதில் கொண்டு மதி நுட்பமுள்ள அடக்கத்துடன், ஆபிரகாம் கானாவில் தங்கிய காலத்தை ஏறக்குறைய கி.மு. 1850 என்று கூறலாம்.

எகிப்தில் யோசேப்பும் அவர் தம் சகோதரர்களும் வாழ்ந்த காலத்தை கி.மு. 1700

என்று குறிக்கலாம். யாத்திரையாகம நிகழ்ச்சிகளின் காலம் தர்க்கத்திற்குரியதாகும். எகிப்தில் 18-ஆவது அரச மரபினர் ஆண்ட காலமாகிய கி.மு. 15-ஆம் நூற்றாண்டில் யாத்திரை ஆகம நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம் என்ற கருத்து, முன்பு பரவலாய் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போது சிலர்தாம் இக்கருத்துக்கு ஆதரவு தருவர். மற்றொரு கருதுகோள் 19-ஆவது அரச மரபின் கீழ் கி.மு.13-ஆம் நூற்றாண்டில் யாத்திரை ஆகம நிகழ்ச்சிகள் நடந்திருக்கவேண்டும் என்பதாகும். இக்கருத்து முன்னதைவிட, வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு ஒத்துள்ளதாகத் தெரிகிறது. அதாவது, 19-ஆவது மரபு பாரவோன்கள் ஆற்றின் கழிமுகப் பகுதிகளில் வாழ்ந்து, மாபெரும் கட்டடம் கட்டும் வேலைகள் இரண்டாம் இரமேசஸ் ஆட்சியின் இறுதியில் சீரியா, பாலஸ்தீனப் பகுதிகளின் மேல் எகிப்து கொண்டிருந்த பிடி தளர்தல் ஆகியவையோடு இக்கருதுகோள் ஒத்துப்போகிறது. மேலும் யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் ஏதோமியர், மோவாபியர் அரசுகள் பற்றிய தொல்பொருள் ஆராய்ச்சிச் சான்றுகளோடும், இஸ்ராயேல் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிய காலத்துக்கு ஒத்த இரும்புக் காலத்தின் தொடக்கத்தில் நகரங்கள் சிலவற்றில் காணப்படும் கலாச்சார மாற்றங்களோடும் இரண்டாவது கொள்கை ஒத்துப் போகிறது. மேற்கூறியதை அடிப்படையாகக் கொண்டு இஸ்ராயேல் எகிப்தில் கொடுமையுற்ற காலத்திற்கு இரண்டாம் இரமேசசின் காலத்தையும் (கி.மு. 1290-1224), யாத்திரை நிகழ்ச்சிகளுக்கு மெனப்தாவின் காலத்தையும் (1224-1214) குறிக்கலாம். இன்னும் கொடுமையின் தொடக்கத்திற்குச் சேத்தின் ஆட்சிக்காலத்தையும் (கி.மு. 1310-1290), யாத்திரை நிகழ்ச்சிகளுக்கு இரண்டாம் இரமேசசின் நீண்ட ஆட்சியின் பின் பகுதியையும் குறிப்பிடுவது மேல் எனக் கருதுவோரும் உள்ளனர்.

9. நிகழ்ச்சியுரைப்பகுதியும் சட்டப்பகுதியும்:-

யூத விவிலியத்தின் ஐந்நூல் தோரா அல்லது சட்டம் என்றழைக்கப்பட்டது. உண்மையில் ஐந்நூல் யூத இனத்தின் ஒழுக்க, சமூக, சமய வாழ்வை வகைப்படுத்தி, வழிகாட்டும் சட்டங்களின் முழுத் தொகுப்பையும் கொண்டுள்ளது. ஐந்நூலில் காணப்படும் சட்டத்திற்கும் வரலாற்றுக்கும் இடையேயுள்ள உறவு சிறப்புமிக்கதாகும். சட்டம் பற்றிய இஸ்ராயேலின் இறையியல், வரலாறு பற்றிய யூத இறையியலால் வரையறுக்கப்படுகின்றது. அயல் இனத்தாரிடையே காணப்படுவது போல், தனித்து இயங்கும் சட்டத் தொகுப்பையோ சடங்கு முறைத் தொகுப்பையோ இஸ்ராயேல் கொண்டிருக்கவில்லை. அதன் சட்டங்கள் யாவும் மீட்பு வரலாற்றில் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது, அவ்வாறே எடுத்துக்கூறப்பட்டது. இஸ்ராயேலைக் கட்டுப்படுத்திய சட்டத் தொகுப்பு இறைவன் வரலாற்றில் இடையிட்டதற்கு அவர்கள் அளிக்கும் பதிலாகக் காட்டப்பெற்றது. இந்த இடையீடு மீண்டும் மீண்டும் நடந்ததால், சட்டத்தின் கட்டளைகள் இந்த வரலாற்றுப் பணித்திட்டத்தினுள் வைக்கப்பட்டு, ஆற்றல்மிக்க தன்மையோடு விளங்கின; மக்கள் வாழ்வின் ஒரு பகுதியாயின. ஐந்நூல் நிகழ்ச்சியுரைப்பகுதி சிறிதாக இருந்தாலும், கிளைக்கதை கூறும் தன்மையைக் கொண்டிருந்தாலும், அப்பகுதி, இஸ்ராயேல் இறைவனோடு கொண்டிருந்த உறவு பற்றிய கருத்திற்கு அடிப்படையாக அமைகிறது. இறைவன் தம் மக்களை இறையாட்சி மக்களாகத் தேர்ந்தெடுத்த நிகழ்ச்சியை ஐந்நூலில் வரலாற்றுப் பகுதி வருணிக்கிறது; அதன் சட்டப்பகுதி அந்த மக்களின் உரிமைப்பத்திரமாகும்.

இவ்வைந்து நூல்களின் கருக்கமான பகுப்பாராய்ச்சி, சட்டத்திற்கும் வரலாற்றுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைத் தெளிவாக எடுத்துக்காட்டும். அதன் விளைவாக ஐந்நூலில் காணப்படும் அடிப்படை ஒற்றுமையையும் கண்டுணரலாம். படைப்பு முதல் மீட்பு வரலாற்றுக்கு முன்னுரையான நாடகம் வரை அடங்கிய மனுக்குலத் தொடக்கம் பற்றிய பகுதி (ஆதி 1-11), ஐந்நூல் முழுத் தொகுப்புக்கும் முன்னுரையாக அமைகிறது. தனிப்பட்ட குல முதியவர்களின் கதை

யில் (ஆதி 12-50), ஒரு மக்களினத்தைத் தேர்ந்தெடுக்க இறைவன் செய்த முன்னேற்பாடு தெளிவாகத் தெரிகிறது. கொடுமைப் படுத்தப்பட்ட எபிரேயரை எகிப்திலிருந்து விடுவிக்கும் முயற்சியில் இறைவன் முந்திக் கொள்வது (யாத் 1-18), சீனாய்மலையில் உடன்படிக்கை பறைசாற்றப்படுதலில் உச்ச நிலை அடைகிறது. அதன் விளைவாக இறைவனின் புதிய மக்களுக்குப் புதிய கடமை ஏற்படுகிறது (யாத் 19-23). இதை மக்கள் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளுகின்றனர் (யாத் 24). யாத்திரை ஆகமத்தின் மீதிப்பகுதியிலும் லேவியர் ஆகமத்திலும் மக்களின் சமய வாழ்வுக்கு வழிவகுக்கும் சட்டங்கள் இடம் பெறுகின்றன. இவற்றில் புனித இடத்தையும், அதன் பணிக்குரிய இடங்களையும் கட்டுதல், குருக்களைத் திருநிலைப்படுத்துதல் ஆகியவை பற்றிய கட்டளைகள் முதலில் வருகின்றன (யாத் 25-31). மக்கள் உடன்படிக்கையை முறிப்பதும் சட்டப்பலகைகள் புதுப்பிக்கப்படுதலும் பற்றிய நிகழ்ச்சியுரை (யாத் 32-34) இடையில் வருகிறது. புனித இடத்தை அமைப்பதும், அணி செய்தலும் இந்நூலின் முடிவுரையாக அமைகிறது (யாத் 3:40).

மூன்றாம் நூலாகிய லேவியர் ஆகமத்தில், பலி (லேவி 1-7), சட்டத்தூய்மை (11-5), சட்டப்புனிதம் (17-26), நேர்ச்சிகள், தசமபாகம் (27) ஆகியவை பற்றிய ஒழுங்குகள் காணப்படுகின்றன. இந்நூலில் இரண்டு நிகழ்ச்சியுரைப் பகுதிகள் உண்டு. ஒன்று, ஆரோனும் அவர் மக்களும் திருநிலைப் படுத்தப்படுதல் பற்றியது (8-10). மற்றது பரிகார நாளைப்பற்றியது (16). நான்காம் நூல் மக்கள் கணக்கெடுப்போடு தொடங்குகிறது. பின் பன்னிரண்டு கோத்திரங்களையும் வரிசைப்படுத்துவது பற்றிய கட்டளைகளையும் மற்றச் சட்டங்களையும் குறிப்பிடுகிறது (எண் 1:1-10:10). நூலின் மீதியுள்ள பகுதியில், சீனாய்மலையிலிருந்து மோவாபு நாட்டுக்குச் செய்த பயணம் (எண் 10:11-22:1), அந்நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள், சமய வழிபாடு பற்றிய ஒழுங்குகள் முதலியன கலந்து வருகின்றன (எண் 22:2-36); இறுதியான ஐந்தாவது நூலில் மோவாபு நாட்டில் மோசேயைச் சந்திக்கிறோம். அவர் கடந்த கால நிகழ்ச்சிகளைத் திரும்பிப் பார்க்கிறார் (உப 1:1-4:43). உடன்படிக்கையை மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறார் (4:44-11). இது உபாகமச் சட்டப்பகுதிக்கு (12-26) மறையுரையால் ஆன முன்னுரையாக அமைகிறது. இச்சட்டங்களின் வலிமை, சாபங்கள், ஆசிகள் ஆகியவை தொடர் கோவையில் விளக்கப்படுகின்றன (27-30). மோசே யோசுவாவுக்கு அளிக்கும் ஆணை (31), அவரது வெற்றிப் பாடல் (32), பன்னிரண்டு கோத்திரங்களையும் அவர் ஆசிர்வதித்தல் (33), அவரது இறப்பு, அடக்கம் (34) ஆகியவற்றின் விவரிப்போடு இந்நூல் முடிகிறது. ஐந்நூலும் முடிகிறது.

உண்மையில் ஐந்நூல் ஒரு சட்ட நூலாகும். இதில் வரும் நிகழ்ச்சியுரைப் பகுதிகள் சட்டத்திற்கு ஒரு பணிச்சட்டமாகத் திகழ்கின்றன. இச்சட்டத் தொகுப்பின் சிறப்பு அதன் சமயப் பண்பாகும். இது மனதை ஈர்க்கவல்லது. மிகப் பழைமையான மேற்காசியப் பகுதிகளில் காணப்படும் பிறமக்களின் சட்டங்களிலும் இத்தன்மையுண்டு. ஆனால் உலகியல் போக்கைவிட இறைத்தன்மை எங்கும் பரவி விளங்கும் இஸ்ராயேலின் சட்டத் தொகுப்பைப் போன்ற வேறு ஒன்றும் இல்லை. இஸ்ராயேலின் இறைவனே சட்டத்தை அளிக்கிறார். மனிதன் இறைவன்பால் கொண்டிருக்க வேண்டிய கடமையை இச்சட்டம் விளக்குகிறது. சட்டத்தின் ஒவ்வொரு கட்டளையிலும் சமய நோக்குத் தொக்கி நிற்கிறது. பத்துக்கற்பனை அடங்கிய ஒழுங்குச் சட்டங்களும், சமய ஒழுங்குகளும் ஒரேதொகுப்பில் பின்னிப்பிணைந்து கிடப்பதும், முழுவதும் யாவேயுடன் செய்த உடன்படிக்கைத் தொடர்பு கொண்டிருப்பதும் இங்குக் கண்டு கொள்ள வேண்டிய சிறப்புகளாகும். ஆகையால் உடன் படிக்கையின் போது பாலைவனத்தில் நடந்தவை பற்றிய நிகழ்ச்சியுரைகளோடு இச்சட்டங்கள் பறைசாற்றப்படுதலும் இணைக்கப்பெற்றுள்ளது.

இச்சட்டத் தொகுப்பின் அடிப்படைக் கருப்பொருள்கள், மோசே காலத்தைச் சேர்ந் தவையென்று ஏற்கனவே கூறியுள்ளோம். சட்டங்கள் செயல்படுத்தப்படவேண்டும். ஆகவே காலம் இடம் ஆகியவற்றின் மாறும் சூழ்நிலைக்கேற்பச் சட்டங்கள் மாற்றிய மைக்கப்படவேண்டும். இதனால்தான் ஐந் தாவது நூலின் மிகப்பழங்காலத்துக் கருத்துக் கள் பிற் காலத்தில் எழுந்த பிரச்சனைகளைப் பிரதிபலிக்கும் கருத்துக்களோடும் வாய்பா டுகளோடும் அடுத்தடுத்துக் காணப்படுகின் றன. இதோடு பிறஇனக்கலாச்சாரங்களாலும் இஸ்ராயேல் மிகுதியும் பாதிக்கப்பட்டது எனலாம். உடன்படிக்கை உபாகமச் சட்டத் தின் சிலபகுதிகளுக்கும், மெசபொத்தாமி யாச் சட்டம், அசீரியாச் சட்டத்தொகுப்பு, இத்தியர் சட்டத்தில் சில பகுதிகள் ஆகியவற் றுக்கும் இடையே வியத்தகு ஒற்றுமை காணப்படுகிறது. இந்த ஒற்றுமை நேரடியா கக்கடன் வாங்கியதால் வந்த விளைவு என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. புறஇனத்தாரின் சட்டம் இஸ்ராயேலின் சட் டத்தை ஓரளவு பாதித்தது எனலாம். மேலும் பழங்காலத்தில் மேற்காசிய மக்கள் ஓரளவு பொதுவான சட்டம் ஒன்றைக் கொண்டிருந் திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. தவிர, யாத்திரைக்குப் பின், கானானியர்க ளின் பழக்க வழக்கங்கள் இஸ்ராயேலின் சட்ட அமைப்பையும் வழிபாட்டுச் சடங்கு முறையையும் பெரிதும் பாதித்தன.

சீனாய்மலையில் அளிக்கப்பட்ட பத்துக் கற்பனைப் பலகை உடன்படிக்கையின் அடிப்படையான சட்டமாகும். இச்சட்டம் ஒழுக்கத்தைச் சார்ந்தது; சமயத்தையும் சார்ந் தது. இதுபற்றி வாசக வேறுபாடுகளுடன் கூடிய இரு வாசகங்கள் உள்ளன; யாத் 20:2-17; உப 5:6-18. இந்த இரண்டு வாசகங்க ளுக்கும் காலத்தால் முந்தியதும் ஆனால் சுருக்கமானதுமான வாசகம் ஒன்று இருந்தி ருக்கவேண்டும் என ஊகிக்க இடமிருக்கிறது.

எலோகிம் பாரம்பரியத்தை அடிப்படை யாகக் கொண்ட உடன்படிக்கைச் சட்டம், யாத் 20:22-23:14, ஆயர்களும் உழவர்களும் அடங்கிய சமூகத்தின் சட்டமாகும். ஆகை யால் இச்சட்டம் இஸ்ராயேல் ஒரு நாடாக உருவெடுத்து வேளாண்மையை வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கிய காலத்திற்குப் பொருந்தியதாகும். காலத்தால் முந்தியதும் உடன்படிக்கைச் சட்டத்தோடு தொடர்புடையதுமான மெசபொத்தாமியா வின் சட்டத்தோடு இந்த உடன்படிக்கைச் சட்டத்தை ஒப்பிடும் போது, இச்சட்டத்தில் சிக்கல்கள் இல்லை எனலாம். இது ஓரளவு விரிவு அடைந்த வடிவத்தில் நமக்குக் கிடைத்துள்ளது. இக்கருத்துக்கு, சுமை சுமக் கும் விலங்குகள், வேளாண்மைத்தொழில், திராட்சை வளர்ப்பு, வீடமைப்பு ஆகியவை பற்றிச் சட்டம் காட்டும் அக்கறை ஆதரவு தருகிறது. இவ்வாறு இச்சட்டம்இஸ்ராயே லின் நாடோடி வாழ்வுக்காலம் பாதிமுடிந்து விட்டது என்பதைக் காட்டுகிறது. மேலும், நிபந்தனையற்ற கட்டளைகளாகவும், நிபந்த னையுடைய கட்டளைகளாகவும் சட்டங் களை இருவகையாகக் கூறும் முறை, இச்சட் டம் ஒரு கலப்பு என்று காட்டுகிறது. நாம் கொண்டிருக்கும் வடிவில் இச்சட்டம் நீதிபதி களின் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம்.

யாவே பாரம்பரியத்தின்படி உடன்படிக் கையைப் புதுப்பிக்கும் சட்டம் யாத் 34:14-26 ஆகும். இப்பகுதி சில சமயம் ''இரண்டாம் பத்துக்கற்பனை'' அல்லது ''சடங்குப் பத் துக் கற்பனை'' என்றழைக்கப்படுகிறது. இது அதிகாரத் தொனியில் அளிக்கப்படும் சமயக் கட்டளைகளைக் கொண்டது. இப் பகுதி உடன்படிக்கைச் சட்டக் காலத்தைச் சார்ந்ததாகும். ஆனால் இப்பகுதி உபாகமப் பாரம்பரியத்தால் பாதிக்கப்பட்டு, சிறிதளவு திருத்தம் பெற்றதுமாகும்.

லேவியர் ஆகமம், அதன் இறுதி வடிவில், நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப்பின்தான் தோன்றியிருக்கவேண்டும். ஆனால் அதில் மிகப்பழங்காலத்துக் கருத்துக்கள் காணப்படு கின்றன. உணவு பற்றிய ஒழுங்குகள் (லேவி 11) சட்டத்தூய்மையை விவரிக்கும் பகுதி (13-15) ஆகியவை ஆதியிலிருந்தே

வந்திருக்கலாம்; இவ்வாறு பரிகார நாள் சடங்கு (16) மிகப்பழைய சுத்திகரிப்பு செய்யும் சடங்கை உள்ளடக்கியுள்ளது. மேலும் இங்குப் பாவம் பற்றிய மிக வளர்ச்சியடைந்த கருத்தும் சேர்த்துக் கூறப்படுகிறது. லேவி 17-26 என்ற பகுதி பொதுவாகப் ''புனிதத்தின் சட்டம்'' என்றழைக்கப்படும். இப்பகுதி அரசர்கள் ஆட்சியின் இறுதிக்காலத்தில் தொகுக்கப்பட்டிருக்கலாம். உப 12-26 இதே காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். இதிலுள்ள பழங்காலக் கருத்துக்கள் ஒழுங்குமுறை இல்லாமல் தற்செயலாகத் தொகுக்கப்பட்டன போலத் தெரிகிறது. எனினும் இப்பகுதியில் உள்ள கருத்துக்கள் சமய சமூகப் பழக்க வழக்கங்களின் வளர்ச்சிக்கு ஒரு சாட்சியாக உள்ளன. சான்று: புனித இடம் ஒரே இடமாக இருப்பது பற்றிய ஒழுங்குகளும், பீடம், தசமபாக வரி, அடிமைகள் ஆகியவை பற்றிய ஒழுங்குகளுமாகும். கட்டளைகளில் காணப்படும் கோரிக்கையும் போதகமும், சமய நோக்கும் இந்த ஒழுங்குகளில் மாற்றம் அடைந்துள்ளன.

10. ஐந்நூலின் இறையியல்:-

யாவே, எலோகிம், உபாகமம், குருக்கள் ஆகிய நான்கு பாரம்பரியங்களின் இலக்கியப் பகுப்பாராய்ச்சி, பழைய ஏற்பாட்டுக் காலத்தில்-இறைவெளிப்பாடு படிப்படியாக வளர்ச்சியும், செழிப்பும் உற்ற உள் அமைப்பை எடுத்துக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டின் சமயம் வரலாற்றைச் சா...த சமயமாகும். அதாவது, குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட சூழ்நிலையில், குறிப்பிட்ட தனி நபர்களுக்கு அளிக்கப்பட்ட இறைவெளிப்பாட்டையும், மனித வரலாற்றின் குறிப்பிட்டகாலங்களில் இறைவன் தலையிட்டதையும் அடிப்படையாகக் கொண்டசமயமாகும். வரலாற்றுடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பால் இஸ்ராயேலின் இறையியல் எப்போதும் உயிருள்ளதாக விளங்கியது; புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்த இறையியல் மாற்றியமைக்கக்கூடியதாகவும் இருந்தது. புதிய சூழ்நிலைகள் வழியாக இறைவன் தொடர்ந்து தம் மக்களை இறுதிக் கால முடிவு நோக்கித் தொடர்ந்து வழிநடத்திச் செல்லுகிறார். ஐந்நூலில் வைத்துக் காப்பாற்றப்பட்டுள்ள நான்கு பாரம்பரியங்களின் இறையியல்களும், இஸ்ராயேலின் திரு ஆசிரியர்களின் நீண்ட பட்டியலும் சேர்ந்து பழைய ஏற்பாட்டில் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே நிகழ்ந்த உயிருள்ள உரையாடலுக்குச் சாட்சி கூறுகின்றன.

ஐந்நூல் உலகோடு இறைவன் கொண்ட தொடர்பின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூலே யூத சமயத்தின் அடிப்படையாகத் திகழ்கிறது. இந்நூலே ஒப்புயர்வற்ற அளவுகோல் நூலாக மாறியது. இஸ்ராயேலின் சட்டம் மாறியது. இந்த ஐந்நூலில் இஸ்ராயேல் தனது ஊழின் பொருளைக் கண்டது. உலகம், வாழ்வு ஆகியவற்றின் பொருள் என்ன என்பது பற்றியும், துன்பம், சாவு, முக்தி முதலியபிரச்சனைகள் பற்றியும் ஒவ்வொரு மனிதனுள்ளும் எழும் கேள்விகளுக்கும், ஒரே கடவுளாகிய யாவே எப்படி இஸ்ராயேலின் இறைவன் ஆனார், உலகிலுள்ள மக்கள் எல்லாரிலும் இஸ்ராயேல் மட்டும் எப்படி இந்த இறைவனின் மக்களாயினர் என்பன போன்ற தன்னைப் பற்றிய கேள்விகளுக்கும் இஸ்ராயேல் ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்களில் விடை கண்டது. மற்ற எல்லா மக்களையும் விட, இஸ்ராயேல் இறைவனது சலுகையை அதிகமாகப் பெற்றிருந்தது. இம்மக்கள் மகிமைமிக்கதொரு கடந்த காலத்தைக் கொண்டிருந்ததாகப் பெருமைப்படமுடியாது. ஏனெனில் அவ்விதம் பெருமைப்பட இம்மக்கள் ஒன்றும் செய்து விடவில்லை. அவர்களின் கடந்தகால இழிவான, தாழ்ந்த நிலையைத் தெளிவாக நினைவுகூறும் வகையில் அமைந்துள்ளன அவர்களின் பழைய விசுவாச அறிக்கைகள். இஸ்ராயேலரின் முன்னோர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தவர்கள் (உப 16:21) அதற்குமுன் இம்முன்னோர்கள் நாடோடியாகத் திரிந்த ஆராமிய இனத்தைச் சார்ந்தவர்கள் (உப 26:5). குலமுதியவர்களின் காலமும் மனிதப் பெருமைக்கு வித்திடுவதாக இல்லை. தன்னையே நம்பிய மனிதன், வீழ்ச்சியுற்று, இறைவனிடமிருந்து தூரவிலகிச்

சென்றான். (ஆதி 3-11). இருப்பினும், தொடக்கத்திலிருந்து இஸ்ராயேல், இறை வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கை எப்போதும் தனக்கிருப்பதாக எப்போதும் உணர்ந்திருந்தது.

10. அ. வாக்குறுதி:-

ஐந்நூலை இறைவாக்குறுதிகளின் நூல் எனலாம். இறைவனது அருளிலிருந்து வழுவிய முதல் வீழ்ச்சிக்குப்பின், ஆதாம் ஏவாளுக்கு, ஏன், மனுக்குலமுழுவதற்குமே முடிவான வெற்றியை அளிப்பதாக இறைவன் வாக்களிக்கிறார் (ஆதி 3:15). இது மூல முதல் நற்செய்தியாகும். வரவிருக்கும் மீட்பு பற்றிய முதல் நற்செய்தியாகும். பெருவெள்ள அழிவிற்குப்பின் நோவாவுக்கும், அவர் வழியாகப் படைப்பு முழுமைக்கும், புதியதோர் அமைப்பை இறைவன் வாக்களிக்கிறார் (ஆதி 9:8-17). ஆபிரகாமுக்கும், மீண்டும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும், இறைவன் அளிக்கும் வாக்குறுதியில் அவர் தரும் வாக்குறுதியின் தன்மை தெளிவாகிறது. இவ்வாக்குறுதி அவர்கள் வழிமரபினைப் பாதிக்கவல்லது. இவ்வாக்குறுதி ஒரே நாட்டையும் ஒரே மக்களினத்தையும் உடைய எதிர்கால அமைப்பை நோக்கி இயங்குகிறது. இவ்வாக்குறுதி (12:1-3) ஆதியாகமத்தின் மீந்துள்ள பகுதி நெடுகிலும் தோன்றும் ஒவ்வொரு தலைமுறையோடும் புதுப்பிக்கப்படுகிறது. இவ்வாக்குறுதி மக்களை ஒன்றாக இணைக்கிறது; தனிப்பட்ட வரலாறுகளுக்கு ஒன்றிப்பும் இணைப்பும் அளிக்கிறது. குல முதியவர்கள் வாழ்ந்ததும், வாக்குறுதி செய்யப்பட்டதுமான நாட்டை இஸ்ராயேல் கைப்பற்றி அதில் வாழவேண்டும். இவ்வாறு நிகழ்வது வாக்குறுதியின் உடனடிக் குறிக்கோளாகும். ஆனால் வாக்குறுதியின் உட்கருத்து ஆழமானது; அதன் பின்விளைவு பரந்தது. அதாவது, இந்த வாக்குறுதி வழியாக இஸ்ராயேலுக்கும் அதன் மூதாதையர்களின் இறைவனாகிய யாவேக்கும் இடையே ஓர் உறவு நிறுவப்படுகிறது. இந்த உறவு தனிச்சிறப்புள்ள சலுகையுடையது; உண்மையிலேயே தனித்தன்மை உடையது. உடன்படிக்கை நிகழும் காலங்களில் இவ்வாக்குறுதி மக்களுக்கு நினைவுபடுத்தப்படுகிறது (யாத் 32:11-14; உப 4:32-40; யோசு 24:1-28).

10. ஆ. தேர்ந்தெடுத்தல்:-

வாக்குறுதி தேர்ந்தெடுத்தலுக்காகவும் தேர்ந்தெடுத்தலை விளக்கவும் கொடுக்கப்படுகிறது. இங்கு நாம் குறிக்கும் தேர்ந்தெடுத்தல் திருநூலின் மிக ஆழ்ந்த சமயக் கருத்துக்களுள் ஒன்றாகும். இறைவன் ஒரு மக்களினத்தைத் தம் மக்களாகத் தேர்ந்தெடுக்கின்றார். ஆபிரகாமை யாவே அழைத்ததிலேயே இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்தல் முன்னறிகுறியாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இறைவனைப் பொறுத்தமட்டில் தேர்ந்தெடுத்தல் தலைமையுரிமையடைய சுதந்தரத்துடன் தேர்ந்தெடுத்தலாகும். மனிதனைப் பொறுத்தமட்டும் இவ்வாறு தேர்ந்தெடுத்தல் பலரில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பெறுதலாகும். ''உள்ளபடி நீ உன் கடவுளாகிய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட குடியாய் இருக்கிறாய். மண்ணிலுள்ள எல்லா மக்களிலும் உன்னைக் கடவுளாகிய ஆண்டவர் தம் சொந்த மக்களாகத் தேர்ந்து கொண்டார்'' (உப 7:6). இத்தேர்ந்தெடுத்தலைக் குறிக்கும் ''பாஹார்'' என்ற கலைச்சொல் பிற்காலத்தில் தோன்றியதானாலும், இறைவனது தொடக்கச் செயலை எடுத்துக்கூறும் முந்திய வாசகங்களிலே இக்கருத்து அடங்கியுள்ளது. இறைவன் இஸ்ராயேலைச் சுதந்தரமாகத் தேர்ந்தெடுத்தல் குல முதியவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் நிறைவும் முடிவுமாகும்.

தேர்ந்தெடுத்தல், குல முதியவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இன்றியமையாத விதத்தில் பின்தொடர்கிறது. வெளிப்படையாக எக்காரணமும் இன்றி, ஆபிரகாம் இறைத் திட்டத்தின் ஒரு கருவியாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆபிரகாமின் வரலாறு முழுமையும் நிபந்தனையற்ற முறையில் இறைவன் முந்திச் செயல்படுவதோடு தொடங்குகிறது (ஆதி 12:1-2). வாக்குறுதியின் பின்வந்த உரிமையாளர்களான ஈசாக்கு, யாக்கோபு

ஆகியோரைத் தேர்ந்தெடுத்தலுக்கு எந்த இயற்கையான காரணமும் இல்லை. அவர்க ளிடம் எவ்விதத் தகுதியும் இல்லாமல் இருந் தும் இறைவனால் வெறுமனே தேர்ந்தெடுக் கப்படுகின்றனர். ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்களில் இறைத்திட்டம் நிறைவேறு தலில் நேரடியாகப் பங்கு பெற விரும்பாத வர்களை நயமாக, மெல்ல மெல்ல மெது வாக ஒதுக்கி அந்த இறைத்திட்டம் செயல் படுவது வெளியாகிறது. இது மரபு வரிசைப் பட்டியலில் மிகச் சிறப்பாகத் தெரிகிறது. இதில் பின்வந்த மரபினர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டாலும், இறுதியில் இறைவ னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின்மேல் தான் கவனம் செலுத்தப்படுகிறது. தாமே சுதந்தரமாகத் தேர்ந்தெடுத்தலால், படைப்பின் தொடக்கத்திலிருந்து அன்போடு திட்டம் செய்து, மனிதனது தான்தோன்றித்தனத்தை யும் பாராது, தொடர்ந்து செயல்பட்டு யாவே ஒரு மக்களினத்தை அமைத்து அதைத் தமதாக்கிக் கொள்கிறார்.

மக்களுக்கு இந்தத் தேர்ந்தெடுத்தல் மீண் டும் மீண்டும் நினைவுபடுத்தப்படுகிறது (உப 7:6) இந்தத் தேர்ந்தெடுத்தல் இறைவன் யாவேயின் அன்புச் செயலாகும் (4:37). ஆனால் இத்தேர்ந்தெடுத்தலை வெறும் சலு கையாகவோ, இறைவனது தனிப் பற்றாகவோ எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்தத் தேர்ந்தெடுத்தல் இஸ்ராயேலின்மேல் பொறுப்பையும் கடமையையும் சுமத்து கிறது. இஸ்ராயேல் யாவேயை மட்டும் தனது ஒரே கடவுளாக ஏற்கவேண்டும் (4:39) அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் (4:40; 7:9தொ; 10:16 தொ).

10. இ. உடன்படிக்கை:-

ஐந்நூலில் தேர்ந்தெடுத்தலை உடன் படிக்கை எப்போதும் பின்தொடர்கிறது. அதை உறுதிப்படுத்துகிறது. தேர்ந்தெடுக்கப் பட்டதின் விளைவான உறவை உடன் படிக்கை விளக்குகிறது. அதன் உண்மைத் தன்மைக்கும் சட்டப்படி செல்லக்கூடிய தன் மைக்கும் உறுதிப்பாடு அளிக்கிறது. பழங்கா லத்து மேற்காசிய மக்களிடையே உடன் படிக்கைகள் சமூக அமைப்பின் சாதாரண உறுப்பாகும். உடன்படிக்கைகளில் பங்கு கொள்பவர்களிடையே விளையும் உறவை உடன்படிக்கை விளக்கியது; வரையறை செய்தது. சான்றாகத் தாவீதுக்கும் யோனத்தா னுக்குமிடையே நிலவியது, அன்பு உடன் படிக்கையாகும் (1 சாமு 23:18). ஆபிரகாமுக் கும் அபிமெலக்குக்குமிடையே இருந்தது, சமாதான உடன்படிக்கையாகும் (ஆதி 21:22-33). இவையிரண்டும் சம நிலையானவர்க ளுக்கிடையே நிலவிய உடன்படிக்கையா கும் உயர்ந்தவருக்கும் தாழ்ந்தவர்க்கு மிடையே உள்ள உடன்படிக்கைச் சான்றுகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இத்தியர் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவ் விலக்கியங்களில் இத்தியப் பேரரசனுக்கும், சுற்றியிருந்த சிற்றரசர்களுக்குமிடையே தனிப்பட்ட மேலரசுரிமை உடன்படிக்கை கள் இருந்திருப்பதாகத் தெரிகிறது. இவ்வி லக்கியங்கள் பழைய ஏற்பாட்டு உடன் படிக்கை வடிவத்தை நன்றாகப் புரிந்து கொள் உதவுகின்றன என்று அறிஞர் கருது கின்றனர்.

ஐந்நூலை வாக்குறுதிகளின் நூல் என்றது போல் அதை உடன்படிக்கைகளின் நூல் என்றும் அழைக்கலாம். இவ்வுடன்படிக்கை கள் சமநிலையானவர்களுக்கிடையே ஏற்பட் டவை அன்று. ஏனெனில் இறைவனுக்கு உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் தேவை யில்லை. இறைவன் உயர்நிலையில் உள் ளார். மனிதன் தாழ்ந்த நிலையில் உள்ளவன். இருவருக்குமிடையே ஏற்படும் உடன்படிக் கைகள் தேர்ந்தெடுத்தலைப் போல் இறை வன் முந்திச் செயல்படுவதை இன்றியமை யாத விதத்தில் கொண்டுள்ளன. விவிலியத் தில் காணப்படும் எல்லாப் பாரம்பரியங்க ளும் உடன்படிக்கைகளைப் பற்றிக் கூறுகின் றன. ஆனால் குருக்கள் பாரம்பரியம் தான் வரலாற்றைத் திட்டமிட்டு நான்கு பாகமா கப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஓர் உடன் படிக்கையால் சிறப்பிக்கிறது. முதல் உடன் படிக்கை ஆதாமோடு செய்யப்பட்டதாகும். அது குறிப்பாகச் சுட்டிக்காட்டப்படுகிறது (ஆதி 1:26-2:4). நோவாவோடு செய்யப்பட்

டது இரண்டாம் உடன்படிக்கை (9:8-17). இது நிபந்தனையற்றது. மூன்றாம் உடன் படிக்கை ஆபிரகாமோடு செய்யப்பட்டதாகும் (ஆதி 17). இதுவும் நிபந்தனையற்றதாகும். நான்காவது உடன்படிக்கை சீனாய்மலை யில் இறைவன் மோசே வழியாகத் தம் மக்களனைவரோடும் செய்து கொண்டதா கும் யாத் (19:3-6). முந்திய உடன்படிக்கை யாவும் நான்காவது உடன்படிக்கைக்காகவே செய்யப்பட்டன. மற்ற உடன்படிக்கைகளின் இலக்கிய அமைப்புக்கும் சடங்குமுறைக ளுக்கும் சீனாய்மலை உடன்படிக்கை எடுத் துக் காட்டாக விளங்குகிறது. சீனாய்மலை உடன்படிக்கை ஐந்நூலுக்கு மட்டுமன்று, பழைய ஏற்பாடு முழுமைக்குமே உச்சநிலை யானதாகும். இவற்றில் தொடக்கச் செயல் இறைவனைச் சார்ந்தது. ஆனால் உடன்படிக் கைகளின் விளைவை இறைவன் ஏற்றுக் கொள்ளுகிறார். மேலும், ஒரு விதத்தில், தாம் அளிக்கும் வாக்குறுதிகளின் காரணமாக இவ்வுடன்படிக்கைகளுக்குத் தம்மையே இறைவன் கட்டுப்படுத்துகிறார். ஆனால் அதற்குப் பதிலாகத் தம் மக்களிடமிருந்து பிரமாணிக்கத்தைக் கோருகிறார். இஸ்ரா யேல் பிரமாணிக்கம் தவறினால், இவ்வாறு தவறுவது பாவமாகும். இதனால் அன்பு ஏற்படுத்திய பிணைப்பு முறிந்து விடுகிறது.

உயர்ந்தோர்-தாழ்ந்தோர் செய்யும் உடன் படிக்கையில் தாழ்ந்தோர் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு மாறாக நடந்தால் உயர்ந் தோர் இனி அவ்வுடன்படிக்கைக்குக் கட்டுப் பட்டவரல்லர். இதற்கு அடையாளமாக உடன்படிக்கைச் சாசனத்தை அழித்துவிட லாம் (யாத் 32:15-19). ஆனால் சீனாய் மலை யில் நிகழ்ந்த இறைவனது உடன்படிக்கை யில் இஸ்ராயேலின் தவறான போக்கு யாவேயின் கோபக்கனலை எழுப்பியது. அவர்கள் பாவத்திற்கு மனம் வருந்தித் திரும்பி வரும்வரை அவர்களுக்குத் தண் டனை அளிக்கப்பட்டது. ஆனால் யாவே தாம் இஸ்ராயேலரோடு செய்த உடன்படிக் கையை ஒரேயடியாக முறித்துவிடவில்லை. ஏனெனில் அவர் அருள் நோக்கும் தயையும் பொறுமையும் மிக்கவர். அவரது உடன் படிக்கை என்றும் நிலைத்திருப்பது. அவர் மன்னிக்கும் பெருந்தன்மையுடையவர். மக் களுக்கு எப்போதும் நன்மையே செய்பவர். ஆகையால் உடன்படிக்கைக்கு மாறாகப் பாவம் செய்தபின் மக்கள் இந்நல்ல யாவே யிடம் மன்னிப்பு வேண்டுவர். மன்னிப்பும் பெற்றனர் (யாத் 34:6தொ; எண் 14:19; எரே 3:12).

ஒவ்வோர் ஆண்டும் கூடார விழாவின் போது உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. இவ்வாறு இஸ்ராயேலின் வாழ்வில் உடன் படிக்கை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று உணர்த்தப்பட்டது.

10. ஈ. சட்டம்:-

இஸ்ராயேலர் இறைவன்பால் கொண்டி ருக்க வேண்டிய பிரமாணிக்கத்தை இறை வனே விளக்குகிறார். அவர் அளிக்கும் சட் டத்தால் இதை விளக்குகிறார். அவர் அளிக் கும் சட்டம் இறைமக்களுக்கு அவர்களின் கடமைகளை எடுத்துக் கூறுகிறது. அச்சட் டம், இறைவன் விரும்புகிறவாறு மக்களின் வாழ்வையும், இறைவனோடு அவர்கள் கொள்ள வேண்டிய உறவையும் ஒழுங்கு படுத்துகிறது. உடன்படிக்கையை ஆதரித்து வலிமை அளிப்பதால், சட்டம் வாக்குறுதி கள் நிறைவு எய்துவதற்கு வழிகோலுகிறது. சட்டம் உடன்படிக்கையோடு சிறப்பான உற வுடையது; உடன்படிக்கை நிறுவும் சடங் கில் சட்டம் முழுமைக்குரிய பாகமாகும். முதல் உடன்படிக்கையில் ஓய்வு நாள் சட் டம் அளிக்கப்பட்டது. பெருவெள்ளத்துக் குப்பின் வந்த உடன்படிக்கையில் இரத்தம் சிந்துவது தடுக்கப்பட்டது. ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையில் விருத்தசேதனம் சுமத்தப்பட்டது. சீனாய்மலை உடன்படிக் கையில் பத்துக் கற்பனைகள் கொடுக்கப்பட் டன. இஸ்ராயேலின் வரலாற்றில் வெவ் வேறு காலத்தில் வெவ்வேறு சூழ்நிலைக்கு ஏற்பச் சட்டங்கள் முறைப்படுத்திக் கூறப்பட் டாலும், இவை சீனாய்மலை உடன்படிக்கை யின் விளைவாகவும், இறைவனின் ஆட் சியை விளக்குவதாகவும் கருதப்பட்டன. ஆகையால் இந்தக் கட்டுப்பாட்டுக் கோரிக்

கைச் சட்டங்கள் எப்போதும் சீனாய் உடன்படிக்கையோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டன. ஐந்நூல் இறைவன் தந்த நிலைத்து நீடிக்கும் சட்டநூலாகும். இந்நூல் இஸ்ராயேல் தவறும்போது இஸ்ராயேலுக்கு எதிராக எப்போதும் இருக்கும் சாட்சியுமாகும் (உப 31:26 பின்).

இங்கே நாம் சட்டம் என்று கூறும்போது, இக்காலப்பொருளில் அச்சொல்லை எடுத்துக்கொள்ளக்கூடாது. மாறாக எபிரேயர் கருத்தை மனதில் கொள்ளவேண்டும். சட்டத்திற்குச் சாதாரணமாய் நாம் அளிக்கும் பொருளில் பத்துக்கற்பனைகள் சட்டமன்று. ஆனால் அவை சட்டங்களுக்கு அடிப்படையாகும். உடன்படிக்கையின் மூலக்கோரிக்கை, யாவே வெளிப்படுத்திய தம்முடைய சித்தமாகும், விருப்பமாகும். யாவே ஒழுக்க அமைப்புக்குக் காவலர் மட்டுமன்று, அதன் மூலமும் ஆவார். அதற்கு விளக்கம் அளிப்பவரும் அவரே. உடன்படிக்கைச் சமுதாயத்தில் இறைவன் சித்தம் மிக உயர்ந்த அதிகாரமுடையதாகும். இந்த அதிகாரத்திற்கு மற்ற எந்த மனித அதிகாரமும் பணிந்திருக்கவேண்டும். உடன்படிக்கைக் கோரிக்கைகளில் வெளியிடப்படும் ஒழுக்க அமைப்பைச் சார்ந்த யாவேயின் சித்தம், இஸ்ராயேலின் வாழ்க்கை முறையைத் தனிச்சிறப்புடன் நிறுவுகிறது. அவ்வாழ்விற்கு ஆசிகளையும் சாபங்களையும் வழங்குகிறது யாவேயின் சித்தம்.

10. உ. ஐந்நூல்:-

ஐந்நூல் சற்று வேறுபட்ட, தனிச்சிறப்புடன் அழுத்திக் கூறப்படும் இறையியல் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் முழுநூலும் ஒருமைப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்த ஒருமைப்பாடு, பிற்காலத்தில் இத்தொகுப்பு இறைஊக்கம் பெற்ற நூலாகக்கருதப்படுவது சரியென்று எண்பிக்கிறது. மேற்கூறிய வாக்குறுதி, தேர்ந்தெடுத்தல், உடன்படிக்கை, சட்டம் ஆகிய கருத்துக்கள் இந்நூலைச் கட்டிப் பிணைத்து, இதற்கு உள்ளார்ந்த ஒற்றுமை அளிக்கின்றன. இக்கருத்துக்கள் பழைய ஏற்பாட்டுப் பிற நூல்களிலும் தொடர்ந்து காணப்படுகின்றன. இந்நூலில் காணப்படும் ஒருமைப்பாடு மேலான மற்றொன்றுக்காகச் செயல்படுகிறது. இஸ்ராயேலைத் தேர்ந்தெடுப்பதை மட்டும் இறைச்செயலின் இறுதி நோக்கமாகக் கருதுவதற்கு இறைவனைப்பற்றிய இஸ்ராயேலின் கருத்து இடம் தரவில்லை. ஐந்நூல், ஒரு கதையின் முடிவன்று. ஐந்நூல் வாக்குறுதியைப் பற்றிக் கூறுகிறது. அவ்வாக்குறுதி நிறைவேறுதலைப்பற்றிக் கூறவில்லை. வாக்குறுதி அளிக்கப்பட்ட நாட்டினுள் நுழையுமுன்பே ஐந்நூல் முடிவுறுகிறது. குலமுதியவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் பெருமளவிற்கு இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. பாலைவனத்தில் சுற்றித்திரிந்த மக்கள், வாக்கு அளிக்கப்பட்ட நாட்டை வென்று உடைமையாக ஆக்கிக் கொள்வதை வாக்குறுதியின் நோக்கமாகக் கருதினர் என்பது உறுதி. ஆனால் நாட்டைக் கைப்பற்றியமுறை வேறுவிதமாய் இருந்தது. ஐந்நூல் தன்னிலே முடிவுரை பெற்ற நூலன்று. வாக்குறுதி செய்யப்பட்ட வருங்காலத்தில் நம்பிக்கையுள்ள நூலாகும். ஐந்நூல் வருங்காலத்தை எதிர்நோக்கி நிற்கிறது. கானான் நாடு கைப்பற்றப்பட்ட போது இவ்வாக்குறுதி நிறைவேறியது போல் தோன்றியது (யோசு 23:14). ஆனால் மக்களின் பாவங்கள் குறுக்கிட்டு வாக்குறுதி நிறைவேறுதலைக் கெடுத்தன. யோசுவா ஆகமம் ஐந்நூலுக்கு இலக்கிய மரபு முடிவன்று; வாக்குறுதி நம்பிக்கையின் நிறைவுமன்று. உண்மையில், பின்வரலாறு, இஸ்ராயேலின் காலத்தில் இந்நம்பிக்கை ஒரு போதும் முழுவதும் நிறைவேறவில்லை என்று காட்டுகிறது. வாக்குறுதி, பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களுக்கும், ஆறுதல அளிக்கும் வாக்குறுதியாக இருந்தது. எனவே ஐந்நூல் எப்போதும் எதிர்காலத்தை நோக்கி இயங்கும் சிறந்த நூலாகவே இருந்தது.

11. ஐந்நூலும், புதிய ஏற்பாடும்:-

கிறிஸ்து வரும் வரை இருப்பதும் எதிர்நோக்கியே இருந்தது ஐந்நூல். அவரை நோக்கித் தெளிவற்ற முறையில் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. இவ்வாறு எதிர்

நோக்கி இயங்கும் திறந்த தன்மை, ''அழிப்ப தற்கன்று நிறைவேற்றுவதற்கே வந்தேன்'' என்று இயேசுகிறிஸ்து கூற அனுமதித்தது (மத் 5:17). கிறிஸ்துதாம் நீண்ட மீட்பு வர லாற்றுக்கு அதற்குரிய முழுப்பொருளையும் அளிக்கிறார்.

இப்போதகத்தை கலா 3:15-29-இல் கண்டு ணரலாம். பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை கள் எல்லாம் கிறிஸ்துவின் புதிய உடன்படிக் கைக்கு ஒத்திகையாகும். இப்புதிய உடன் படிக்கையில் கிறிஸ்துவர்கள், ஆபிரகாமுக்கு விசுவாச சந்ததியினராக, கிறிஸ்துவில் பங்கா ளர்களாக ஆக்கப்படுகின்றனர். சட்டத்தின் முக்கிய பணி, வாக்குறுதிகள் சேதமுறாது அவைகளை முழுமையாகக் காத்தலாகும். ஆகையால் சட்டம், குழந்தையைப் பள் ளிக்கு இட்டுச் செல்லும் தாதியைப் போன்ற தாகும்; சட்டம், வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றும் கிறிஸ்துவிடம் இட்டுச் செல் கிறது.

கிறிஸ்துவன் இனி இத்தாதியின் பாதுகாப் பில் இல்லை. அவன் சட்டத்தை அனுசரிக் கக் கட்டுப்பட்டவனல்லன். ஆனால் சட்டத் தின் ஒழுக்க, சமயபோதகத்திலிருந்து விடு பட்டவனும் அல்லன். ஏனெனில் கிறிஸ்து சட்டத்தை அழிக்க வரவில்லை; நிறைவேற் றவே வந்துள்ளார் (மத் 5:17). புதிய ஏற் பாடு, பழைய ஏற்பாட்டின் செய்தியை நீக்கி அப்புறப்படுத்தவில்லை, மாறாக அச்செய் தியை முன்னோக்கி எடுத்துச் செல்லுகிறது; அதை நிறைவு செய்கிறது. குல முதியவர் கள், மோசே காலங்களிலும் பாலைவனத்தி லும் நடந்த பெரும் நிகழ்ச்சிகளிலும், விழாக் களிலும், சடங்குகளிலும் (ஈசாக்கின பலி, செங்கடலைக் கடத்தல், பாஸ்கு முதலியன) திருச்சபை புதிய சட்டத்தின் பெரும் உண் மைகளைக் (கிறிஸ்துவின் பலி, திரு முழுக்கு, கிறிஸ்துவப் பாஸ்கு) காண்கிறது. இது மட்டுமன்று, ஐந்நூல் நிகழ்ச்சியுரைக ளும் கட்டளைகளும் இஸ்ராயேலரிடம் இருந்து கோரும் சமயம் சார்ந்த பதிலுக்கும், நமது கிறிஸ்துவ விசுவாசம் கோரும் பதிலுக் கும் அடிப்படையில் வேறுபாடு இல்லை.

புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு கிறிஸ்துவ னுக்கும் ஒரு செய்தியுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்துவனும் இறைவனை நோக்கிச் செல் லும்போது இஸ்ராயேலின் பாதையையே பின்பற்றுகிறான். இறைவழியினின்று வழு வுகிறான்; சோதிக்கப் பெறுகின்றான் சுத்தி செய்யப்பட்டு எழுகிறான்; இறைவனை நோக்கிச் செல்லுகிறான்.

ஐம்பதாம் நாள் விழா (PENTECOST)

''கடந்து செல்லுதல்'' எனப்பொருள் படும் பாஸ்கா விழாவிற்குப்பின் ஐம்பதாம் நாளில் கொண்டாடப்பட்ட இவ்விழா கிரேக்க மொழியில் ''பெந்தகோஸ்தே'' என அழைக் கப்பட்டது. இவ்விழாவின் பொருள் நாள டைவில் விரிவுற்று வளர்ந்தது. முதலில் அது வேளாண்மை சார்ந்த விழாவாகத் தோன்றி யது; பின்னர் இஸ்ராயேல் மக்களின் வரலாற் றில் அவர்களோடு யாவே செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவுகூரும் விழாவா கியது. இறுதியாக அது தூய ஆவியாரைக் கொடையாகப் பெற்று, இம்மண்ணுலகில் புதிய உடன்படிக்கையின் தொடக்க விழா வானது.

1. பழைய ஏற்பாடும், யூத மறையும்:

இஸ்ராயேல் மக்களின் பெருவிழாக்கள் மூன்று. அவை, ''கடந்து செல்லுதல் விழா,'' ''கூடாரத் திருவிழா,'' ''ஐம்பதாம் நாள் விழா'' என்பன. இவ்விழாக்களின்போது யாவே தமது திருப்பெயருக்கெனத் தேர்ந்து கொண்ட இடத்தில் இஸ்ராயேலர் தம்முன் வரப்பணித்திருந்தார் (உப 16:16).

1. தொடக்கத்தில் ஐம்பதாம் நாள் விழா அறுவடை விழாவாக இருந்தது. அன்று மகிழ்வுடன் இறைவனுக்கு நன்றி செலுத்தி னர் (யாத் 23:16; எண் 28:26; லேவி 23:16 தொ). இந்நாளில் விளைநிலங்களின் முதற் பலன் பலியாக அளிக்கப்பெறல் வேண்டும் (யாத் 34:22-இல் இவ்விழா வாரங்களின் திருவிழா எனக்குறிப்பிடப்படுகிறது. ''கடந்து செல்லுதல் விழாவிற்கு'' ஏழு வாரங்க ளுக்குப்பின் வரும் இவ்விழாவின் போது புதுப்பலன்களில் முதல்கதிர்க்கட்டு காணிக் கையாக அளிக்கப்பட்டது. லேவி 23:15).

2. பின்னர் இவ்விழா ஆண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டது. எகிப்து நாட்டினின்று வெளியேறிய நாளின் நினைவாகக் ''கடந்து செல்லுதல் விழா'' கொண்டாடப்பட்டதெனின், வெளியேறிய பின் ஐம்பதாம் நாள் ஏற்பட்ட உடன்படிக்கையை நினைவு கூர்ந்தது இந்த விழா (யாத் 19:1-16). இதே விழா கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் உடன்படிக்கையை நினைவுகூரும் ஆண்டு விழாவாகியது. யூதராபிகள் வழிவந்த நூல்களிலிருந்தும், கும்ரான் ஏடுகளில் இருந்தும் இவ்விழாவானது கிறிஸ்தவ காலத் தொடக்கத்தில் இந்நோக்குடன் கொண்டாடப்பட்டு வந்தது எனத் தெரிய வருகின்றது.

II. கிறிஸ்தவ ஐம்பதாம் நாள்:-

1. இறைமாட்சித் தோற்றம் பழைய ஏற்பாட்டில் காணப்படும் இறைமாட்சித் தோற்றத்தின் வழியில், புதிய ஏற்பாட்டில் பெருங் காற்று, தீ எனும் வெளி அடையாளங்களோடு தூய ஆவியானவர் கொடை அளிக்கப்பெற்றது. கிறிஸ்தவ ஐம்பதாம் நாள் விழாவின் உட்பொருளை உணர்த்துமாறு அருங்குறிகள் தோன்றின. அப்போஸ்தலர்கள் இறைவனின் அற்புதங்களைப் புகழுமாறு ''அயல் மொழிகளில்'' பேசினது முதல் அருங்குறியாகும் (அ.ப. 2:3). இவ்வாறு பேசுதல் ''அருட்கொடை செப முறையில்'' ஒன்றாகும். இச்செபமுறை முதல் கிறிஸ்தவக் குழுக்களில் வழக்கிலிருந்தது. தன்னிலேயே விளங்காததொன்றாயினும் (1 கொரி 14:1-25) ''அயல் மொழிகளில்'' பேசினது அன்று அங்குக் குழுமியிருந்த அனைத்து நாட்டினராலும் புரிந்து கொள்ளப்பட்டது (அ.ப. 2:5-11). இந்த இரண்டாம் அருங்குறி திருச்சபையானது மனித குலம் அனைத்தையும் தன்னுள் ஏற்கும் பொது இயல்புடையது என்பதன் அடையாளம்.

2. இந்நிகழ்ச்சியின் உட்பொருள்:-

அ) இறுதிக் காலத்தில் பொழியப்படும் ஆவியார்:-

இறைவாக்கினர் யோவேலை மேற்கோள் காட்டுவதிலிருந்து இறைவனின் வாக்குறுதிகள் ''ஐம்பதாம் நாள்'' அன்று நிறைவேறின என்று பேதுரு சுட்டிக் காட்டுகின்றார். காலம் நிறைவுறும் போது ஆவியானவர் அனைவருக்கும் அளிக்கப்பெறுவார் (எச 36:27). தூய ஆவியாரில் திருமுழுக்காட்டுபவர் மக்கள் நடுவில் எழுந்திருப்பதை முன்னோடியரான யோவான் அறிவித்தார் (மாற் 1:8). உயிர்த்தெழுந்த இயேசு ''இன்னும் சில நாட்களில் தூய ஆவியாரில் திருமுழுக்காட்டப்பெறுவீர்கள்'' என்று அந்த வாக்குறுதிகளை உறுதிப்படுத்தினார் (அ.ப. 1:5).

ஆ) கிறிஸ்துவின் கடத்தலின் உச்சநிலை:-

இயேசு இறந்து, எழுந்து, இறைத்தந்தையின் வலப்பக்கத்தில் உயர்த்தப் பட்டு அப்போஸ்தலிக்கக் குழுமத்தின்மீது தூய ஆவியாரை அனுப்பியதில் தமது மீட்பின் பணியை முற்றுப் பெறச் செய்தார் என்பது ஆதித்திருச்சபையின் போதனையாகும் (அ.ப. 2:23-33). கிறிஸ்துவின் உயிர்தெழலின் நிறைவே ஐம்பதாம் நாள் விழாவாகும்.

இ) மெசியாவைத் தலைவராகக் கொண்ட திருக்கூட்டத்தை ஒன்று சேர்த்தல்:-

முன் காலத்தில் சிதறுண்டவர்கள் மீண்டும் சீயோன் மலைமீது ஒன்று சேர்க்கப்படுவர்; இவ்வாறு யாவேயைச் சுற்றி இஸ்ராயேலின் சபை ஒன்று சேர்க்கப்படும் என இறைவாக்கினர் போதித்தனர். யூதர்களுக்கும், யூத மறையைத் தழுவவிரும்பிய புறவினத்தாருக்கும் இடையேயுள்ள ஆன்மீக ஒன்றிப்பை எருசலேம் நகரில் உண்மையாக்கியது ஐம்பதாம் நாள். அப்போஸ்தலர்களின் போதனைக்குச் செவிசாய்த்து, அவர்களது படிப்பினையைக் கேட்டு, நட்புடன் உறவாடி, அப்பம் பிட்டல் எனும திருவிருந்தில் பங்கு கொண்டனர் (அ.ப 2:42 தொ)

ஈ) மக்கள் குலம் அனைத்தையும் ஏற்கும் பொதுக்குலம்:-

இம்மண்ணுலகின் இறுதி எல்லைவரை சாட்சிகளாக இருப்பதற்கே ஆவியார் ஆதித் திருச்சபையின் உறுப்பினருக்கு அளிக்கப் பெற்றார் (அ.ப. 1:8). மெசியாவைத் தலைவராகக் கொண்ட இக்குழுமம் மக்கள் குலம் அனைத்தையும் ஏற்கும் தன்மைத்து என்ற உண்மையை வலியுறுத்துமாறு அமைந்ததே ''அயல்மொழிப்பேச்சைக்'' கேட்டுணரும் அற்புதம் (அ.ப. 2.5 11). யூதரல்லாத புறச் சமயத்தினர்மீதும் ஆவியானவர் பொழியப்

பட்டபோது இதே உண்மைதான் வெளிப் படுத்தப்பட்டது (10:44 தொ). பாபேலில் தொடங்கிய பிளவு இங்கு அதற்கு நேர்மா றான ஒன்றிப்பாக, முடிவாக அமைகின்றது (ஆதி 11:1-9).

உ) மறைபரப்புப்பணிக்காகப் புறப்படல்:-

மக்கள் குலத்தின் நடுவிலிருந்து மெசியா வைத் தலைவராகக் கொண்ட குழுமத்தைக் கூட்டுவித்த அதே நாள் மறைபரப்புப் பணி யின் தொடக்க நாளும் ஆகும். ''தூய ஆவி யார் உங்கள் மேல் வரும்போது அவரது வல்லமையைப் பெற்று..... மண்ணுலகின் இறுதி எல்லைவரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாக இருப்பீர்கள்'' என்று (அ.ப. 1:8) இயேசு கட்டளையிட்ட திருப்பணியின் முதற்கட்டம் ''பேதுரு பதினொருவரோடு எழுந்து நின்று'' ஆற்றிய திரு உரையாகும்.

இயேசு யோர்தானில் திருமுழுக்குப் பெற்ற போது இறைமாட்சித் தோற்றம் ஒன்று நிகழ்ந்தது. தூய ஆவியாரில் ஏற்பட்ட ஐம்ப தாம் நாள் திருமுழுக்கை இந்த அருட்தோற் றத்திற்கு ஒப்பிடுகின்றனர் திருச்சபைத் தந் தையர். ஐம்பதாம் நாள் விழாவின்போது திருச்சபைக்குப் புதிய திருச்சட்டம் வழங்கப் பட்டது (காண். எரே 31:33; எச 36:27). புதிய படைப்புத் தோன்றியது (ஆதி 1:2). அ.ப. 2-ஆம் அதிகாரத்தில் இவை வெளிப்படை யாகக் கூறப்படாவிடினும், இவை உண்மை யானவை என்பது மனித உள்ளத்தில் தூய ஆவியார் ஆற்றும் செயலிலிருந்தும், இச்செய லின் விளைவான மறுபடைப்பிலிருந்தும் தெரியவருகின்றது.

3. ஐம்பதாம் நாள் விழா மீட்பின் மறை பொருள்:

இறைமாட்சித் தோற்றத்தின் வெளி அடை யாளங்கள் என்றும் நிலைத்திருப்பவை யன்று, மறைந்துவிட்டன. ஆனால் திருச் சபைக்குக் கொடுக்கப்பட்ட கொடை மறை யாது, என்றும் நிலைத்திருப்பது. தனது தலைவராம் ஆண்டவரை எதிர்கொள்ளச் செல்லும் திருப்பயணத்தையும், தன்னை விசுவாசத்திலும், அன்பிலும் ஏற்று, புனிதப் படுத்தித் தனது திருமறைபரப்பும் பணிக்கு அனுப்பும் தூய ஆவியாரை இடையறாது பெற்றுக் கொள்ளும் காலத்தையும் தொடங்கி வைக்கின்றது ஐம்பதாம் நாள் விழா. ''தூய ஆவியாரின் நற்செய்தி'' எனப் படும் அப்போஸ்தலர் பணிநூல் நிலை பெற் றிருக்கும் தலைசிறந்த இந்த அருட்கொ டையை வெளிப்படுத்துகின்றது. இவ்வருட் கொடையின் உண்மை திருச்சபையை இலக்கை நோக்கிச் செல்லும் செயலிலும், தூதுரைப் பணியிலும் (அ.ப. 4:8; 13:2; 15:28; 16;6), இவ்வருட்கொடையின் வெளிப்படை யான புறக்கூறுகளிலும் (4:31; 10:44 தொ), இருந்து தெளிவாகின்றது. ''காலத்தின் நிறைவு'' எத்தகையது என்பதைத் தூய ஆவியாரின் கொடை தீர்மானிக்கின்றது. அதாவது இயேசு கிறிஸ்துவின் விண்ணேற்றத்தில் தொடங்கும் இக்காலம் அவர் மீண்டும் வரும்போது நிறைவுறும்.

ஐனேயா (AENEAS - புகழத்தக்க)

இலிதா நகரைச் சேர்ந்த கிறிஸ்தவர். எட்டு ஆண்டுகளாக இருந்த திமிர்வாத நோயிலி ருந்த இவரைப் புனித பேதுரு குணமாக்கி னார் (அ.ப. 9:32-35). இப்பெயர், கோமேர், துசிதைதஸ், செனோபோன், பிந்தார் மற்றும் யோசிப்பஸ் ஆகியோரின் நூல்களில் வருகிறது.

ஐனோன் (AENON - இரட்டை நீரூற்று)

இது தண்ணீர் நிரம்பிய இடம். கிறிஸ்து வின் பணித் தொடக்க காலத்தில் இங்குதான் திருமுழுக்குயோவான் திருமுழுக்குக் கொடுத்து வந்தார் (யோவா 3:23). இந்த இடத்தை அடையாளம் காண எடுக்கப்பட் டுள்ள முயற்சிகள் எதுவும், ஒன்றும் மன நிறைவு தருவதாய் இல்லை. இது சலீமிற்கு அருகில் இருந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் யோவா 3:22-இல் 'யூதேயா'' வருவ தால் ஐனோன் யோர்தானுக்கு அப்பாலுள்ள பெரயாவில் குறிக்கப்படும் பாரம்பரியம் உறுதிப்படுகின்றது. இவ்விடம், யுசேபிய சின் கூற்றுப்படி பேத்-சானுக்குத் தெற்கே 12 கி.மீ. தொலைவில், ஒருவேளை இக்கால உனிம்-ஏல்-அம்தானுக்கு அருகில் இருந்தி ருக்கலாம்.

ஒ

ஒகலிபா (OHOLIBAH - *என் கூடாரம் அவளில் உள்ளது*)

எசே.23-இல் வரும் உருவகத்தில் எருசலேமைக் குறிக்கும் பெயர். இரு சகோதரிகளில் இளையவளான, ஒகலிபா, தனது விபச்சார, காம வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தினாள் (23:11-12). ஆகவே யாவே, அவளுடைய காதலர்களையே அவளுக்கு எதிராக எழுப்புவார். அவர்கள் அவளுடைய ஆடைகளை உரித்துப்பங்கப்படுத்துவர். அவளுடைய புதல்வர்களையும் புதல்விகளையும் கொன்று போடுவர். அவளுடைய முறைகேடான வாழ்கையின் விளைவுகளை அனுபவிப்பாள். அதனால் யாவேயே உண்மையான இறைவன் என்று கண்டறிவாள் (23:22-35.46-49).

ஒகலிபாமா (OHOLIBAMAH - *உயர் நிலத்தின் கூடாரம்*)

1. ஈவியர் சிபயோனின் மகனான ஆனாக்கின் மகள். இவளை ஏசா மணந்து கொண்டார். இவள் மூன்று புதல்வர்களைப் பெற்றாள் (ஆதி 36:2.5.14.18.25). இவளுடைய பெயரானது மற்ற ஏசாவின் மனைவிகள் அட்டவணையில் கொடுக்கப்படவில்லை (ஆதி 26:34; 28:9).

2. இவன் ஏதோம் குலத்தின் ஒரு தலைவன் (ஆதி 36:41; 1 நாள் 1:52).

ஒகலியாபு (OHOLIAB - *தந்தையின் கூடாரம்*)

இவர் தாண் கோத்திரத்தில் உதித்த அகிசமாக்கின் புதல்வர். இவர் பெசலேலோடு உடன்படிக்கைக் கூடாரம், சாட்சியப் பெட்டகம் போன்றவற்றைச் செய்தார் (யாத் 31:6; 35:34; 36:1-2; 38:23). இவர்களுக்கு வேண்டிய ஞானமும் அறிவும் இறை ஆவியினாலே வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஒக்கிரான் (OCHRAN - *தொந்தரவு, துன்புறுதல்*)

பாலைவனத்தில் ஆசேர் கோத்திரத்தின் தலைவனாயிருந்த பகியேலின் தந்தை (எண் 1:13; 2:27; 7:72.77; 10:26).

ஒக்கினா (OCINA)

இது தீர் நகருக்குத் தெற்கில் உள்ள கடற்கரைப் பகுதி (யூதி 2:28). இது இருந்த இடம் தெரியவில்லை. பெயர் ஒற்றுமையையும் பொது இட அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு இது இக்கால அக்கோவாக இருக்கலாம் என்று அறிஞர்சிலர் கருதுகின்றனர்.

ஒசினப்பார் (OSNAPPAR)

இந்த அசீரிய அரசன் அந்நிய நாட்டு மக்களை அழைத்து வந்து சமாரியாவில் குடியேறச் செய்தார் (எஸ் 4:10). இவர், அசூர்பானிப்பாலாக இருக்கலாமென வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இவர் குடியேற்றிய மக்களில் எலாமியர்களும், சூசாவின் மக்களும் இருந்தனர். இந்நகர்கள் இவரால் 640-இல் அழிக்கப்பட்டன.

ஒசினி (OZNI - *என் காது*)

வனாந்திரத்தில் மோசே இரண்டாம் முறையாக மக்கள் கணக்கு எடுத்தபோது அதில் இவர் பெயர் வருகிறது. இவர் காதின் கோத்திரத்தில் தோன்றியவர். மேலும் இவர் ஒசினி வம்சத்தின் குலத்தலைவராவார் (எண் 26:16). ஆதி. 46:16-இல் வரும் இணைப்பட்டியலில் இவர் எசிபோன் என்று அழைக்கப்படுகிறார்.

ஒசிரிசு (OSIRIS)

இது எகிப்தியத் தெய்வங்களின் கூட்டத்தில் முதன்மையானவற்றுள் ஒன்று. இது தாவரங்களின் கடவுளும், மறுஉயிர் கொடுக்கும் தெய்வமுமாகும். மேலும் இறந்தவர்களின் தெய்வமாகக் கருதப்படுகிறது. கிரேக்க-உரோமையர் காலத்திலே ஆபிஸ் என்ற பெயருடன் இணைக்கப்பட்டு, செராபிஸ் என்ற பெயரோடு இத்தெய்வம் மிக முக்கிய [illegible] விளங்கியது.

இத்தெய்வம் ஐசிசின் சகோதரனும் கணவனுமாவார்; கோருசின் தந்தை. மனுக்குலத்திற்குக் கலாச்சாரக் கலைகளைக் கற்றுக் கொடுத்தவராகப் பாரம்பரியத்தால் கருதப் பட்டார்.

ஒட்டக மயிராடை - (CAMEL'S HAIR)

திருமுழுக்கு யோவானின் மேலாடை ஒட்டகமயிரால் செய்யப்பட்டிருந்தது. சில சமயங்களில் ஒட்டகத்தின் மயிரால் செய்யப்பட்ட கடினமான மேற்போர்வையைப் பாலஸ்தீனத்தில் வாழும் பெடுயீனியர் இன்றும் அணிகின்றனர். இப்படிப்பட்ட ஆடை திருமுழுக்கு யோவானின் தவவாழ்க்கைக்கும் செய்திக்கும் பொருத்தமானதாகும். யோவானின் ஆடைக்கும் அரசர் மாளிகையில் அணியப்பட்ட மெல்லிய ஆடைக்கும் உள்ள முரண்பாட்டை இயேசு எடுத்துக் கூறுகிறார் (மத் 11:8).

மயிரினால் செய்யப்பட்ட போர்வை இறைவாக்குப்பணிக்கு ஓர் அடையாளம் (செக் 13:4). யோவானின் மாதிரியான எலியா இதுபோன்ற மயிர் மேலாடையை அணிந்திருந்தார் (2 அர 1:8). அனேகமாக இது ஒட்டகத்தின் மயிரால் செய்யப்பட்டதாக இருந்திருக்கலாம்; இது எலியாவின் முடியைப்பற்றிய விவரிப்பு என்று சிலர் கருதுகின்றனர்.

ஒட்டக முள் (CAMEL'S THORN)

மன்னாவைப் போன்ற ஒருவிதப் பொருளைக் கொடுக்கும் குட்டையான முள் நிறைந்த செடி. இதனுடைய வேர் வாசனைப் பொருள்களைச் செய்யப்பயன்படுத்தப்பட்டது என்று பிளினி கூறுகிறார். இந்த வார்த்தை சீரா 24:15-இல் வருகின்றது; இலத்தீன் இந்த வார்த்தையைப் ''பால்சம்'' என்று மொழிபெயர்க்கிறது. வாசனைச்செடியைப் போன்று ஞானம் இஸ்ராயேலை நறுமணத்தால் ஆசிர்வதித்துள்ளது என்று இப்பகுதி கூறுகிறது.

ஒட்டகம் (CAMEL)

3000 ஆண்டுகளுக்கு மேலாக ஒட்டகமானது பயணத்திற்காகவும் பொதிசுமக்கும் மிருகமாகவும் பயன்படுத்தப்பட்டது.

1. பெயர்:- ஒட்டகம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள சொற்கள் ஆதி 12:16; மத் 3:4; 19:24; 23:25; மாற் 1:6; 28:25; லூக் 18:25; ஏச 60:6; எரே 2:28-இல் காணப்படுகின்றன.

2. இனங்கள்:- விவிலியக் குறிப்புகள் ஏறக்குறைய எல்லாம் அரேபிய ஒட்டகத்தைத்தான் குறிக்கின்றன. இது ஒற்றைத் திமில் கொண்டது. இதில் இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. பொதிசுமக்கும், மெதுவாகச் செல்லும் ஒட்டகம் (ஆதி 37:25); வேகமாகச் செல்லும் ஒட்டகம் (1 சாமு 30:17). மத்திய ஆசியாவைச் சேர்ந்த பக்திரியன் ஒட்டகத்தைப் பற்றி ஏச 21:7; தோபி 9:2; யூதி 2:17-இல் சொல்லப்பட்டுள்ளது. இந்தவகை இரண்டு திமில்கள் கொண்டவை. இந்த ஒட்டகம் நீளமான முடியைக் கொண்டது; ஒற்றைத் திமில் அரேபிய ஒட்டகம் மிக வேகமாகச் செல்லக் கூடியது.

3. பழக்கப்பட்ட காலம்:- ஆதி ஆகமக் குறிப்புகளின்படி இஸ்ராயேலரின் குலமுதியவர்கள் காலத்திலேயே (கி.மு. 2000) ஒட்டகமானது பயன்படுத்தப்பட்டது. ஆனால் விவிலியத்துக்குப் புறம்பான குறிப்புக்கள் ஒட்டகம் பிற்காலத்தில்தான் பழக்கப்படுத்தப்பட்டது என்று காட்டுகின்றன. தோலமி காலம்வரை எகிப்தியச் சித்திரம், இலக்கியம் ஆகியவை ஒட்டகத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அசீரியர்களின் குறிப்புகள்படி ஒட்டகமானது முதன் முதலில் முதலாம் திகிலாத்துபிலேசர் காலத்தில் வீட்டுவிலங்காகப் பழக்கப்பட்டது (கி.மு. 1100). கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் சில பிரயாணத்திற்குப் பயன்படுத்தப்பட்டன என்று தெரிகிறது. பெருமளவில் ஒட்டகப் பிரயாணம் செய்தது கி.மு. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை தோன்றவில்லை (நீதி 6:5) என்று தெரிகின்றது. ஆனால் ஆதி 24-இல் உள்ளதுபோல் இதற்கு முன்பு தனி ஆட்களும் குடும்பங்களும் ஒட்டகங்களைப் பயன்படுத்தியிருக்கலாம். குலமுதியவர்கள் காலத்தில் ஒட்டகம்

வருவது கால மயக்கக் குறிப்பாகும் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

4. பழைய ஏற்பாட்டில் ஒட்டகங்களை வைத்திருந்தவர்கள்:-

அ. எபிரேய குலமுதியவர்கள்:- ஆபிரகாம் எகிப்தில் ஒட்டகங்களை வைத்திருந்தார் (ஆதி 12:16). கானானிலிருந்து தன்னுடைய ஊழியனைப் பதான்-ஆராமுக்கு 10 ஒட்டகங்களுடன் அனுப்பினர் (24:10). யாக்கோபு பதான் ஆராமில் ஒட்டகங்களை வைத்திருந்தார் (30:43). ஒட்டகத்தில் அவர் கானானுக்குப் பயணம் செய்தார் (31:17). ஏசாவுக்கு ஒட்டகங்களைப் பரிசாக அனுப்பினார் (32:15).

ஆ. அரேபியர்களும் மற்ற நாடோடிகளும்:- யோசேப்பை வாங்கிய இசுமயேலர்கள் ஒட்டகங்களில் சென்றனர் (ஆதி 37:25). மிதியானியர்கள் இஸ்ராயேலரைக் கொள்ளை அடித்தபோது நிறைய ஒட்டகங்களைப் பயன்படுத்தினர் (நீதி 6:5). ஓர் இறைவாக்கினர் தனது மெசியாக்காலத்துச் செய்தியில் சீயோனுக்குக் காணிக்கைகளைச் சுமந்து கொண்டு ஒட்டகங்கள் வருவதைக் காண்கின்றார் (ஏச 60:6). அமலேக்கியர்கள் சவுல் மன்னன் காலத்தில் ஒட்டகங்களைப் பயன்படுத்தினர் (1 சாமு 15:3). தாவீது காலத்திலும் கூட (1 சாமு 27:8; 30:17) ரூபன் குலத்தவர் எதிரிகளிடமிருந்து 30000 ஒட்டகங்களைக் கைப்பற்றினர் (1 நாள் 5:21). மற்றத் தெற்குப் பாலஸ்தீனக் கோத்திரத்தாரும் ஒட்டகங்களைப் பயன்படுத்தினர் (1 சாமு 27:8-9; 2 நாள் 14:15). சேபாவின் அரசி சாலமோனுக்குத் தன்னுடைய நன்கொடைகளை ஒட்டகத்தின் மேல் கொண்டு வந்தாள் (1 சாமு 10:2). கேதார் கசோர் ஒட்டகங்களைப் பயன்படுத்தினர் (எரே 49:29.32). அம்மோனின் தலைநகரான அரபா ஒட்டகமேய்ச்சல் நிலமாகும் என்று எசக்கியேல் முன்னோக்கினார் (எச 25:5). யோபு 3000 ஒட்டகங்களைக் கொண்டிருந்தார் (யோபு 1:3; 42:12).

இ. இஸ்ராயேலர்கள்:- கெபிரோனிலிருந்த தாவீதிற்கு இஸ்ராயேலர்கள் ஒட்டகங்களில் கொடைகள் கொண்டுவந்தனர் (1 நாள் 12:40). தாவீதிடம் ஒட்டகங்கள் இருந்தன (1 நாள் 27:30). யூதா நாட்டவர் ஒட்டகங்களின்மேல் எகிப்திற்குப் பரிசுகளைக் கொண்டு சென்றார்கள் (ஏச 30:6). நாடுதிரும்பியவர்கள் ஒட்டகங்களின் மேல் வந்தார்கள் (ஏச 6:20; எஸ் 2:67; நெக 7:69). மேதியா நாட்டு இஸ்ராயேல் அடிமைகள் ஒட்டகங்களில் பயணம் செய்தனர் (தோபி 9:2)..

ஈ. மற்றவர்கள்:- சீரியா நாட்டு அரசனான பென்-அதாது 40 ஒட்டகங்களுடன் பரிசுகளை எலிசாவிற்கு அனுப்பி வைத்தான் (2 அர 8:9). ஒரு காட்சியில் (ஏச 21:7) ஒட்டகங்களில் வந்த ஏலாமியர்களும் மேதியர்களும் பாபிலோனைத் தாக்குவதாகக் காண்கின்றார் ஏசயா. அசீரியா படை ஒட்டகங்களைப் பயன்படுத்தியது (யூதி 2:17). முடிவுக் காலங்களில் இஸ்ராயேலின் எதிரிகள் ஒட்டகங்களைப் பயன்படுத்துவார்கள் (செக் 14:15).

5. புதிய ஏற்பாட்டில்:- திருமுழுக்கு யோவான் ஒட்டக மயிராடையை அணிந்திருந்தார் (மத் 3:4; மாற் 1:6). மூன்று நற்செய்திகளும் (மத் 19:24; மாற் 10:25; லூக் 18:25) ''பணக்காரன் விண்ணரசில் நுழைவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது'' என்று கூறுகின்றன. பாலஸ்தீனத்தில் யாவரும் அறிந்த மிகப் பெரிய விலங்கு ஒட்டகமாகும். ஊசியின் காது மிகச் சிறிய துவாரத்தைக் கொண்டது. ஆகவே இக்கூற்று மிகையுரையாகும். ஆகவே நினைவில் வைக்கத் தகுந்த கருத்தாகும். உடனடியான முன் கூறப்பட்ட பொது உண்மையை வலியுறுத்துகிறது (மத் 19:23இ). இத்தகைய கூற்று தால்மூதிலும் காணப்படுகின்றது. இது போன்று மற்றொரு மிகையுரையில் ''கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறீர்கள்'' என்று (மத் 23:24) இயேசு பரிசேயர்களைக் கண்டனம் செய்கிறார். இங்குப் பரிசேயர்களின் மதிப்பீடுகள் கண்டனம் பெறுகின்றன. மூன்று ஞானிகள் எதன் மேல் ஏறிவந்தனர் என்று நற்செய்தி சொல்லவில்லை (மத் 2:1). ஆனால் அவர்கள் ஒட்டகத்தின் மேல் வந்ததாகப் பாரம்பரியமும் கூறுகின்றது.

6. ஒட்டகத்தின் பயன்கள்:-

அ) பயணம் செய்ய:- கானானிலிருந்து பாதான்-ஆராமுக்கு எலியேசர் சென்று ரபேக்காளுடன் திரும்பி வந்தது (ஆதி 24), பாதான் - ஆராமிலிருந்து கானானுக்கு யாக்கோபின் குடும்பம் வந்தது (ஆதி 31:17), இரபேல் இராகியுவிலிருந்து எகுபத்தானாவுக்குச் சென்றது (தோபி 9:2) போன்ற அமைதியான ஒட்டகப்பயணங்கள் விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ளன. போரிலும் ஒட்டகம் பயன்படுத்தப்பட்டது (நீதி 6:5; 7:12; 8:21.26; 1 சாமு 30:17; ஏச 21:7). ஒட்டகத்தைப் பயன்படுத்தி ஒருநாளில் 90 முதல் 110 கி.மீ பயணம் செய்யலாம்.

ஆ) பொதிசுமக்க:- அமைதியான காலத்தில் வியாபாரப்பொருட்களைச் சுமந்து செல்ல (யோபு 6:18-19; ஏச 21:13) குறிப்பாக வாசனைப் பொருட்களையும் (ஆதி 37:25) பரிசுப் பொருட்களையும் (ஆதி 24:53; 1 அர 10:2; 2 அர 8:9; 1 நாள் 12:40; ஏச 30:6; 60:6) சுமந்து செல்லவும் ஒட்டகங்கள் பயன்பட்டன. போர்க்காலத்தில் படைக்கு வேண்டிய பொருட்களை ஒட்டகங்கள் சுமந்து படைக்குப்பின் சென்றன (ஆதி 2:17; செக் 14:15). சமதளத்தில் ஓர் ஒட்டகம் 450 முதல் 550 பவுண்டு எடையைத் தூக்கிச் செல்லக் கூடும்.

இ) கம்பளி ஆடையாக ஒட்டகமயிர் பயன்பட்டது.

ஈ) உணவாக:- மோசேயின் சட்டம் ஒட்டகத்தை உண்ணுவதைத் தடைசெய்தது (லேவி 4:4; உப 14:7). இது அராபியர்களால் உண்ணப்பட்டது. இவர்கள் ஒட்டகப் பாலையும் பருகினர். யாக்கோபு பால் கறக்கும் ஒட்டகங்களை ஏசாவிற்குக் கொடுத்ததில் இக்கருத்து சுட்டிக்காட்டப்படலாம் (ஆதி 32:15).

உ) உருவகமாக:- இஸ்ராயேல் பிற தெய்வங்களை வழிபட்டது ''இங்கும் அங்கும் விரைந்தோடும் பெண் ஒட்டகத்திற்கு'' ஒப்பிடப்பட்டுள்ளது (எரே 2:23). பரிசேயர் ஒதுக்கிய முக்கியமானதை ஒட்டகம் உருவகமாக உணர்த்துகிறது (மத் 12:24).

ஒட்டவைத்தல் (GRAFT)

இவ்வினைச்சொல் உரோ 1:17-24-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உயர்வகைச் செடியிலிருந்து பறிக்கப்பட்ட கிளையை மற்றொரு சாதாரண வகைச் செடியோடு பொருத்தி வைத்தல் ஒட்டு முறையாகும். பவுல் இவ்வுருவகத்தைப் பயன்படுத்தி எவ்வாறு புறவின விசுவாசிகள் விசுவாச மற்ற இஸ்ராயேலர்களுடன் ஒட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டியுள்ளார். ஆனால் புதிய கிளை பலனளிக்க வில்லையென்றால் அது வெட்டப்படலாம் என்று எச்சரிக்கிறார்.

ஓதமேரா (ODOMERA)

பெடுயீனர் இனத் தலைவர். ஒரு சமயம், யோனத்தான் மக்கபேயர் இவரையும் இவரைச் சார்ந்தவர்களையும் தாக்கி அழித்தார் (1 மக் 9:66).

ஒதினி (OTHNI - சிங்கம்)

செமாயாவின் மூத்த மகன். தாவீது காலத்தில் ஆலய வாயில் காவலராக இருந்த லேவியர் (1 நாள் 26:7).

ஒதினியேல் (OTHNIEL - சிங்கம்)

1. கெனாசின் மகன். காலேபின் உறவினன் (யோசு 15:17). இஸ்ராயேலர்களை மீட்க இறைவனால் அனுப்பப்பட்ட முதல் நீதிபதி (நீதி 3:7-11). இவர் தெபீர் நகரை எதிரியிடமிருந்து பிடித்தமையால் காலேபு தன் மகள் அகிசாவை இவருக்கு மணமுடித்து வைத்தார் (யோசு 15:15-19; நீதி 1:11-15). பிறகு மெசபொத்தாமிய அரசன் கூசான்-ரிசத்தாயீமுக்கு 8 ஆண்டுகள் அடிமையாயிருந்த இஸ்ராயேல் மக்களை மீட்டார் (நீதி 3:11).

இஸ்ராயேலர் ஆண்டவர் திருமுன் பாவம் புரிந்தனர். தங்கள் இறைவனை மறந்து போய்ப் பாகாலையும், அசித்தோரேத்தையும் வழிபட்டனர். இவர்களைக் கண்டிக்க இறைவன் மெசபொத்தாமியாவின் அரச

னான கூசா-ரிசாத்தாயீமிடம் அவர்களைக் கையளித்தார். அவர்கள் மனந்திருந்தி இறைவனிடம் மன்றாட இறைவன் ஒதினியேலை அவர்களை மீட்க அனுப்பினார். இவர் யூதா நாட்டைச் சார்ந்தவர். மற்ற நீதிபதிகள் இஸ்ராயேலைச் சேர்ந்தவர்கள். ஆண்டவரின் ஆவி ஒதினியேல்மீது இருந்ததால் எதிரிகளைத் தோற்கடித்து இஸ்ராயேலரை மீட்டார்.

2. தாவீது அரசன் காலத்தில் போர்ப்படையின் ஒரு பிரிவாகும் (1 நாள் 27:15). ஒருவேளை (1)-இல் கூறப்பட்ட ஒதினியேலின் மரபுக் கிளையாக இருக்கலாம்

ஒத்தமை நற்செய்திகள் (SYNOPTIC GOSPELS)

முதல் மூன்று நற்செய்திகளை யோவான் எழுதிய நற்செய்தியோடு ஒப்பிடும்போது இவை அதிலிருந்து பொருளடக்கத்திலும், திட்ட அமைப்பிலும், இலக்கியத் தன்மையிலும் பெரிதும் வேறுபடுகின்றன. ஆனால் ஒன்றோடொன்றாய் இவற்றை ஒப்பிடும்போது இவற்றிற்கிடையே, வியத்தகு ஒற்றுமையும் மிகுந்த வேறுபாடுகளும் தோன்றுகின்றன. ஆகவே இம்மூன்று நற்செய்திகளையும் மூன்று இணைப் பத்திகளில் பதிப்பித்தனர். இப்பதிப்புகள் இம்மூன்றையும் ஒப்பிட்டுப் பார்க்க ஏதுவாயின. ஒற்றுமையைக் காட்டுவதோடு வேற்றுமையையும் திரிபையும் எடுத்துக் காட்டின. சில சமயங்களில் இம்மூன்று நற்செய்திகளும் இயேசுவின் வாழ்வின் அதே நிகழ்ச்சிகளை அதே வரிசைக்கிரமத்தில் அதே வார்த்தைகளால் அல்லது ஒத்த வார்த்தைகளால் விவரிக்கின்றன. சில இடங்களில் பெரும் வேறுபாடு காணக்கிடக்கிறது. மற்ற இடங்களில் ஓரளவு சிறிய வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன. ஆயினும் தெரிந்து கொள்ளப்பட்ட நிகழ்ச்சி, முறைவைப்பு, விளக்குதற்குப் பயன்படுத்தப்படும் சொற்கள் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. ஆகவே இம்மூன்று நற்செய்திகளில் ஒற்றுமையோடு கூடிய வேற்றுமையும், வேற்றுமையோடு கூடிய ஒற்றுமையும் உண்டு. இத்தன்மையை ஒத்தமை நற்செய்தித்தன்மை என்றும், இம்மூன்று நற்செய்திகளையும் ஒத்தமை நற்செய்திகள் என்றும் இவற்றின் ஆசிரியர்களை ஒத்தமை நற்செய்தியாளர்கள் என்றும் அழைக்கிறோம்.

இந்த ஒத்தமை நற்செய்தித் தன்மையை விளக்க ஓர் எடுத்துக் காட்டைக் காண்போம்.

நோன்பு பற்றிய விவாதம்:-

மத் 9:14-15	மாற் 2:18-20	லூக் 5:33-35
அப்பொழுது யோவானுடைய சீடர்கள் அவரிடம் (இயேசுவிடம்) வந்து	ஒரு நாள் யோவானுடைய சீடரும் பரிசேயரும் நோன்பு இருந்தனர்.	
நாங்களும் பரிசேயரும் அடிக்கடி நோன்பிருக்க	அப்பொழுது சிலர் அவரிடம் வந்து ''யோவானுடைய சீடரும், பரிசேயருடைய சீடரும் நோன்பிருக்க	அவர்களோ, ''யோவானின் சீடர் அடிக்கடி நோன்பு இருந்து செபம் செய்கின்றனர். பரிசேர்களின் சீடரும் அவ்வாறே செய்கின்றனர்.''
''உம்முடைய சீடர்கள் என் நோன்பு இருப்பதில்லை'' என்றார்கள்.	''உம்முடைய சீடர் ஏன் நோன்பு இருப்பதில்லை'' என்றனர்.	''உம்முடைய சீடரோ உண்பதும் குடிப்பதுமாக இருக்கின்றனரே என்று அவரிடம் சொன்னார்கள்''

இயேசு அவர்களை நோக்கி ''மணமகன் தங்களோடு இருக்குமளவும் அவன் தோழர்கள் துக்கம் கொண்டாடலாமா?''	*இயேசு அவர்களை நோக்கி; ''மணமகன் தங்களோடு இருக்குமளவும், அவன் தோழர்கள் நோன்பு இருக்கலாமா? மணமகனுடன் இருக்குமளவும் அவர்கள் நோன்பு இருக்க முடியாது''.*	*அதற்கு இயேசு ''மணமகன் தன் தோழர்களோடு இருக்குமளவும் அவர்கள் நோன்பு இருக்கச் செய்யக்கூடுமா?''*
''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும் அப்பொழுது அவர்கள் நோன்பிருப்பார்கள்'' என்றார்.	*''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும். அப்போது அவர்கள் நோன்பு இருப்பார்கள் '' என்றார்.*	*''மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும் அப்பொழுது அவர்கள் நோன்பிருப்பார்கள்'' என்றார்.*

இவ்வாறு ஒற்றுமையும் வேற்றுமையும் கொண்ட மூன்று நற்செய்திகள் எவ்விதம் தோன்றின என்ற பிரச்சனை எழுகிறது. இப்பிரச்சனையைத்தான் ''ஒத்தமை நற்செய்திப் பிரச்சனை'' என்று கறுவர். இப்பிரச்சனை 18-ஆம் நூற்றாண்டுக்கு முன் எழவில்லை. 18-ஆம் நூற்றாண்டிலிருந்தே இப்பிரச்சனை ஆய்வாளர்களது கவனத்தை ஈர்த்தது. பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. ஆயினும் இப்பிரச்சனைக்கு யாவராலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதும், மன நிறைவு அளிக்கக்கூடியதுமான விடை இதுவரை காணப்படவில்லை. அப்படிப்பட்ட விடை கிடைக்கக்கூடுமா என்றுகூட ஐயுறுவர் ஆய்வாளர் சிலர். இக் கட்டுரையில் மூன்று நற்செய்திகளிலும் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைத் தந்து இந்த ஒத்தமை நற்செய்திப் பிரச்சனையைச் சிறிது விளக்குவோம். பின் இப்பிரச்சனைக்கு விடையாகத் தரப்பட்டுள்ள பலஉத்தேசக் கொள்கைகளின் கருத்தைத் தொகுத்துத் தருவோம். இவற்றில் எதுவும் இப்பிரச்சனைக்கு முழு விடையாக அமையவில்லை. ஒவ்வொன்றிலும் ஓரளவு உண்மையுள்ளது; ஒவ்வொன்றும் நற்செய்தித் திறனாய்வுக்கு உதவியுள்ளது. நற்செய்தியை நன்கு அறியப் பெரிதும் உதவியுள்ளது. இவையாவும் உத்தேசக் கொள்கைகளேயன்றி முழுவிடைகள் அல்ல. முற்றிலும் மனநிறைவுதரும் விடை அளிப்பது எளிதன்று.

2. ஒத்தமை நற்செய்தித் தன்மை:-

இப்பிரச்சனையை நன்கு அறிய விரும்பினால், இம்மூன்று நற்செய்திகளில் காணப்படும் பொருளடக்கத்தையும், அவற்றின் வரிசைக்கிரமத்தையும், சொற்றொகுதிகளையும் விரிவாக ஆராய வேண்டும்.

இவ்வொத்தமை நற்செய்திக் கருத்தைப் பற்றிய தர்க்கத்தை எளிதாக்கச் சில கலைச் சொற்களை ஆய்வாளர்கள் பயன்படுத்துவர். அவற்றை அறிந்திருத்தல் நலம். பொதுவாக மூன்று நற்செய்திகளும் இயேசுவின் அதே வார்த்தைகளையும், செயல்களையும் கொடுக்கின்றன. அவரது வாழ்வின் அருஞ் செயல்கள், உவமைகள், தர்க்கங்கள், முக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவை பற்றிய விவரிப்புகள் ஒரே மாதிரி இருக்கின்றன. மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவருக்கும் பொதுவான பகுதிகள் ''மூவடிவப் பாரம்பரியம்'' என்றும் யாராவது இருவருக்கு மட்டுமே பொதுவான பகுதிகள் ''இருவடிவப் பாரம்பரியம்'' என்றும் அவரவர்க்கு உரிய தனிப்பட்ட பகுதிகள் ''தனிப் பாரம்பரியம்'' என்றும் அழைக்கப்படும். ஒரே நற்செய்தியில் ஒரு நிகழ்ச்சி இருமுறை வந்தால் அது ''இரட்டிப்பு நிகழ்ச்சியுரை'' எனப்படும்.

3. பொருளடக்கம்:-

மாற்கில் ஏறக்குறைய 677 வசனங்களும் மத்தேயுவில் ஏறக்குறைய 1070 வசனங்க

ளும், லூக்காவில் ஏறக்குறைய 1150 வசனங்களும் உள்ளன. மத்தேயு, மாற்கின் 600 வசனங்களைக் கொண்டுள்ளது. லூக்கா மாற்கின் 350 வசனங்களைக் கொண்டுள்ளது. இவ்வசனங்கள் பெரும்பாலும் மத்தேயு-லூக்கா நற்செய்திகளில் ஒரே மாதிரியானவை. மேலும் மத்தேயு-லூக்காவுக்கிடையில் 230 வசனங்கள் பொதுவானவை. இவை இயேசுவின் போதகத்தை வாக்குகளாகவும் உவமைகளாகவும் தருகின்றன. சில இடங்களில் நிகழ்ச்சியுரைப் பகுதியும் இடையிடும் (மத் 4:1-11-உம் இணைப் பகுதிகளும், மத் 8:6-13-உம் இணைப்பகுதிகளும்)-இவை பெரும்பாலும் போதகத்திற்கு வரலாற்றுப் பின்னணியைக் கொடுக்கும். மூவருக்கும் பொதுவான பகுதி மாற்கைச் சார்ந்த ஏறக்குறைய 360 வசனங்களாகும். மாற்கிற்கு மட்டும் உரிய பகுதி 70 வசனங்களாகும். மத்தேயுவுக்கு மட்டும் உரிய பகுதி 330 வசனங்களாகும். 520-540 வசனங்கள் லூக்காவுக்கே உரியவை. மத்தேயு, லூக்கா, ஆகியவர்களுக்குரிய தனிப் பாரம்பரியங்கள் பெரும்பாலும் இயேசுவின் இளமைப் பருவத்தையும், உயிர்த்தபின் நடந்த நிகழ்ச்சிகளையும் பற்றியவை.

இதுவரை கூறியவற்றைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தலாம்:-

மொத்த வசனங்கள்:
மத் 1070; மாற்கு 677; லூக் 1150.

தனிப்பாரம்பரியம்:-
மத்-330; மாற்-70; லூக்-520-540.

இருவடிவப் பாரம்பரியம்:-
170-180 (மத்-மாற்); 170-180 (மாற்-மத்); 230 (லூக்-மத்); 230 (மத்-லூக்); 50 (மாற்-லூக்); 50(லூக்-மாற்).

மூவடிவப் பாரம்பரியம்:-
மத்-350-370; மாற்கு-350-370; லூக்-350-370

இம்மூன்று நற்செய்திகளின் பொதுத்திட்டம் ஒத்திருக்கிறது. அதனைக் கீழ்வரும் அட்டவணை விளக்கும்:-

அ. தயாரிப்பு:- மாற் 1:1-13; மத் 3:1-4:11; லூக் 3:1-4:13.

ஆ. கலிலேயாவில் பணி:- மாற் 1:14-9:50; மத் 4:12-18:35; லூக் 4:14-9:50.

இ. எருசலேமில் (அல்லது) யூதேயாவில் பணி:- மாற் 10:1-56; மத் 19:1-20:34; லூக் 9:51-18:43;

ஈ. பாடுகளும், உயிர்ப்பும்:- மாற் 11-16; மத் 21-28; லூக் 19-24

இத்திட்ட ஒற்றுமையோடு, இயேசுவின் வாழ்வின் சில முக்கிய நிகழ்ச்சிகளாகிய இயேசுவின் திருமுழுக்கு, எதிரிகளோடு தர்க்கம் செய்தல், அப்பங்களைப் பெருகச் செய்தல், பேதுருவின் விசுவாச அறிக்கை, பாடுகளை முன்னறிவித்தல், எருசலேமின் இறுதி நாட்கள், கைது செய்யப்படுதல், தீர்ப்பிடப்படுதல், மீட்பரின் இறப்பு ஆகியவை சிறந்த முறையில் ஒத்துள்ளன. பொருளடக்கத்தில் ஒற்றுமையிருந்தாலும், வேற்றுமைகளும் உண்டு. சில நிகழ்ச்சிகளை இருவர் மட்டும் தருவர். மற்றவை அவரவர்க்குரியனவாகும். ஒரே நிகழ்ச்சியை இருவர் தந்தாலும் விவரிக்கும் முறை பெரும்பாலும் வேறுபட்டிருக்கும். சான்றாக, இயேசுவின் இளமைப் பருவத்தைப் பற்றி மாற்கு ஒன்றும் தரவில்லை. அதை விவரிக்கும் மத்தேயுவும் லூக்காவும் மிகவும் வேறுபடுகின்றனர். இயேசுவின் மூதாதையர் பட்டியலிலும் இதே தன்மை காணப்படுகின்றது (மத் 1:1-17; லூக் 3:23-38). இயேசுவின் மூன்று சோதனைகள் மத்தேயு லூக்காவில் காணப்பட்டாலும் அவை விவரிக்கப்படும் வரிசை முறை வேறுபட்டதாகும். உயிர்ப்பைப் பற்றிய வரலாறும் ஒரே தன்மையுடையதன்று. மத்தேயு தரும் இரட்டிப்பு நிகழ்ச்சிகளை லூக்கா பெரும்பாலும் தவிர்க்கிறார்.

ஆனால் தாமாகவே சில இரட்டிப்பு நிகழ்ச்சிகளைத் தருகிறார். மற்ற இரு நற்செய்திகளில் வரும் புற இனத்தவர்க்குக் கடினமான பகுதிகளையும், தேவையற்ற பகுதிகளையும் லூக்கா விட்டு விடுகிறார். மாற்கு நிகழ்ச்சிகளை ஒரு தனித்த சூழ்நிலையில் விவரித்திருக்க, அவற்றையே லூக்கா மற்றொரு சூழ்நிலையில் விவரிப்பார்.

(மாற் 1:16-20 = லூக் 5:1-11;
மாற் 3:22-30 = லூக் 11:14-23; 12:10;
மாற் 4:30-32 = லூக் 13:18 தொ;
மாற் 6:1-6 = லூக் 4:16-30;
மாற் 8:11-13 = லூக் 11:29-32;
மாற் 9:42 தொ = லூக் 17:1 தொ;
மாற் 9:49 தொ = லூக் 14:34 தொ;
மாற் 10:11 தொ = லூக் 16:18;
மாற் 10:31 = லூக் 13:30;
மாற் 10:35-45 = லூக் 22:24-27;
மாற் 12:28-34 = லூக் 10:25-26;
மாற் 13:15 தொ = லூக் 17:31;
மாற் 13:21-23 = லூக் 17:23;
மாற் 13:33-37 = லூக் 12:35-40;
மாற் 14:27-31 = லூக் 22:31-34).

இயேசுவின் வாக்குகளிலும் மிகுந்த வேற்றுமையுள்ளது. சான்றாக, ஆண்டவர் கற்பித்த செபம் (மத் 6:19-13; லூக் 11:2-4), நற்கருணை நிறுவன நிகழ்ச்சியுரை (மத் 26:26-28; மாற் 14:22-24; லூக் 22:19-20) ஆகியவற்றைக் கூறலாம், மேலும் மலைப் பொழிவு மாற்கில் காணப்படவில்லை. மறைவாக வளரும் விதையின் உவமை மாற்கில் மட்டும்தான் காணப்படுகிறது. களைகள், மறைந்து கிடக்கும் புதையல், விலைமிக்க முத்து, புளிக்காரம், வலை, நேர்மையற்ற ஊழியக்காரன் ஆகிய உவமைகள் மத்தேயுவில் மட்டும் காணப்படுகின்றன. ஊதாரிப் பிள்ளை, நல்ல ஆயன், பரிசேயன் - ஆயக்காரன், பணக்காரன் - லாசர் ஆகிய உவமைகள் லூக்காவில் மட்டும் காணப்படுகின்றன. பாடுகள் உயிர்ப்பின் வரலாறு மூன்று நற்செய்திகளிலும் ஒரே மாதிரி தோன்றினாலும் சிறப்பான வேறுபாடுகள் உண்டு..

4. நிகழ்ச்சிகளின் வரிசைக்கிரமம் அல்லது அமைப்பு:-

வெளிப்படை வாழ்வின் அட்டவணையில் இம்மூன்று நற்செய்திகளுக்குமிடையேயுள்ள ஒற்றுமையை எடுத்துக் கூறினோம். இயேசுவின் வாழ்வு, செயல் ஆகியவை பற்றிய அமைப்பிலும் ஒற்றுமையுள்ளது. அவை வருமாறு: திருமுழுக்குயோவானின் தோற்றம், இயேசு திருமுழுக்குப் பெறுதல், பாலைவனத்தில் சோதிக்கப்படல், கலிலேயப்பணி, எருசலேமை நோக்கிப் பயணம், பாடுகள், இறப்பு, உயிர்ப்பு. ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையோ, அவரது ஆட்தன்மையையோ வரைய முயலவில்லை. அவர்கள் விரும்பியதெல்லாம், இயேசுவின் வார்த்தைகள், செயல்கள் ஆகியவற்றைத் தொகுத்துத் தருவதே. அவை அவரது சூழ்நிலையை எவ்விதம் பாதித்தன என்று சாதாரண நடையில் தருவதே. ஆகவே இவற்றில் தனித் தனிப் பகுதிகளும், முழுமை பெற்ற அறிவுரைகளும் உண்டு. ஒரு பகுதியோடு மற்றொரு பகுதி காலத்தாலோ இடத்தாலோ தொடர்பு கொண்டிராது. சில சமயங்களில் ஒரு தன்மையுள்ள பொருட்கள் தொகுத்துத் தரப்படும். சான்றாக உவமைகளைக் கூறலாம்.

மத்தேயு 14-ஆம் அதிகாரம் முதல் 28-ஆம் அதிகாரம் முடிய அடங்கிய பகுதி மாற்கு 6:14 முதல் 16:8 முடிய அடங்கிய பகுதியோடு இணைந்துள்ளது. அதேபோல் மாற்கிற்கும் லூக்காவிற்கும் இடையில் அடிப்படையான வரிசைக்கிரமத்தைக் காணலாம். மத்தேயுவைவிட லூக்கா தனது சொந்தச் சொற்களை உட்புகுத்தினாலும், மாற்கின் திட்டத்திலிருந்து சாதாரணமாகப் பிறழ்வது இல்லை. பல இடங்களில் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக அதே வரிசையில் மூன்று நற்செய்திகளிலும் கொடுக்கப்படுகின்றன. சான்றாக, கப்பர்நகூமில் வாதக்காரனைக் குணப்படுத்துதல், லேவியை அழைத்தல், நோன்பு பற்றிய தர்க்கம் (மத் 9:1-17; மாற் 4:35-5:20; லூக் 8:22-39); புயலை அடக்குதல், கெரசேனர் நாட்டின் பேய் பிடித்தவன் (மத்: 23-24; மாற் 4:35- 5:20; லூக் 5:17-39); பேதுருவின் விசுவாச அறிக்கை, பாடுகள்பற்றிய முதல் அறிவிப்பு, வலிப்புக்காரனைக் குணமாக்குதல், பாடுகள் பற்றிய இரண்டாம் அறிவிப்பு (மத் 16:3-17:23; மாற் 8:27-9:32; லூக் 9:18-45) ஆகியவற்றைக் கூறலாம்.

இவ்வொற்றுமைகளோடு பல வேற்றுமைகளும் உண்டு. ஒருவர் பலவற்றை ஒரே

இடத்தில் தொகுத்துத் தருவார். மற்றவர் அவற்றைப் பல இடங்களில் பிரித்துக் கூறுவர். சான்றாக, மலைப் பொழிவு மத்தேயுவில் தொடர்ந்து தரப்படுகிறது (மத் 5-7). லூக்காவில் அது பல இடங்களில் சிதறிக் கிடக்கிறது. மாற்கில் காணப்படவேயில்லை. உவமைப்பகுதி மூவருக்கும் ஒவ்வொருவரிலும் வேறுபடும். மத் 4-11-இல் வரும் திருப்பணியின் வரிசைக்கிரமம் மாற்கிலிருந்து தெளிவாக வேறுபடுகிறது. லூக்கா, மாற்கில் காணப்படும் 6:45-8:26 என்ற பகுதியை விட்டு விடுகிறார். அதற்குப் பதிலாக மாற்கைச் சாராத இரு பகுதிகளை உட்புகுத்துகிறார் (6:20-8:3; 9:51-18:14). இயேசு கப்பர்நகூமில் முதல் முறையாகப் போதித்தபின் அப்போஸ்தலர்களின் அழைப்பு நடந்தது என்று லூக்கா கூறுகிறார் (5:1-11). ஆனால் மாற்கு முன்னதாகக் கூறுகிறார் (1:16-20). நசரேத்தூரார் இயேசுவை ஏற்க மறுத்ததை மாற்கு கலிலேயப் பணியின் முடிவிலும் (6:1-6), லூக்கா அதன் தொடக்கத்திலும் (4:16-30) கூறுகின்றனர். மாற்கு 1:21-6:13-இலும் லூக்கா 4:31-9:6-இலும் திட்டம், மத்தேயு 4:23-13:58இல் காணப்படும் திட்டத்திலிருந்து வேறுபட்டதாகவுளது. மாற்கு, லூக்காவில் எந்த அடிப்படையில் நிகழ்ச்சிகள் வரிசைக்கிரமம் செய்யப்படுகின்றன என்று கூறுவது கடினம்.

மத்தேயு லூக்காவுக்குப் பொதுவான, ஆனால் மாற்கைச் சாராத 235 வசனங்களிலும், ஒற்றுமையோடு கூடிய வேற்றுமைகள் உள. பொருளைப் பொறுத்த மட்டும் ஒற்றுமையும், வரிசைப்படுத்தும் விதத்தில் வேற்றுமையும் உண்டு. அவை தொகுக்கப்படும் விதமும் வேறுபட்டது. இயேசுவின் வாக்குகள், மத்தேயுவில், ஐந்து பெரும் அறிவுரைகளாகத் தொகுக்கப்படுகின்றன. லூக்காவில் இவற்றின் பெரும் பகுதி எருசலேம் பயணத்தில் காணப்படுகின்றன. பல அதிகாரங்களில் பரவிக்கிடக்கின்றன. ஒரே நிகழ்ச்சியை விவரிக்கும் போதும் கூட வரிசையை மாற்றிக் கூறுவர் (மத் 4:1-11; லூக் 4:1-13).

5. சொல் தொகுதியும், சொல்லும் முறையும்:-

இம்மூன்று நற்செய்திகளையும் ஒப்பிடுங்கால், பல இடங்களில் சொற்றொகுதிகளிலும், விவரிக்கும் விதத்திலும் நெருங்கிய ஒற்றுமையுள்ளது (மத் 4:18 = மாற் 1:16; மத் 9:6 = மாற் 2:10 = லூக் 5:25; மத் 3:7-10 = லூக் 3:7-9). ஆயினும் இவ்வொற்றுமைகள் ஓர் ஒழுங்கு முறைபற்றி அமைந்தனவாகத் தெரியவில்லை. சில இடங்களில் அரிதாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் ஒற்றுமையுள்ளது.

நற்செய்தியாளர்கள் அதே வாக்குகளைக் கூறினாலும், வேற்றுமைகள் பல உள. சான்று: பெரும் பேறுகளின் வேறுபட்ட வடிவங்கள் (மத் 5:3-4.6.11-12 = லூக் 6:20.23), ஆண்டவர் கற்பித்த செபம் (மத் 6:9-13 = லூக் 11:2-4). நாம் நற்செய்தியாளர்களிடையே ஒற்றுமை எதிர்பார்க்கும் இடங்களில் பல வேற்றுமைகளைக் காண்கிறோம் (மத் 6:9-13; லூக் 11:2; லூக் 11:2; மத் 26:26 தொ; மாற் 14:22 தொ; லூக் 22:19 தொ). சில இடங்களில் ஒற்றுமையிருப்பதாகத் தோன்றினாலும், சொற்றொகுதியிலும் கருத்துகளின் அமைப்பிலும் ஒவ்வொரு நற்செய்தியாளரும் தம் போக்கிலேயே செல்லுவர் (மாற் 4:9 - லூக் 8:14; மத் 22:25 - மாற் 12:20; மத் 28:7-லூக் 24:6). சில நிகழ்ச்சிகள் ஒரே நிலையான அமைப்பைக் கொண்டிருந்தாலும் வர்த்தைகளில் வேறுபாடு உண்டு. அதாவது அதே வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டாலும் அவை வேறுபட்ட பொருளிலும் வேறுபட்ட சூழ்நிலைகளிலும் வேறுபட்ட நோக்கத்துடனும் பயன்படுத்தப்படுகின்றன. (மத் 15:27 = மாற் 7:28; மாற் 4:19 = லூக் 8:14; மத் 22:25 = மாற் 12:20; மத் 9:19 = மாற் 5;24; மத் 10:27 = லூக் 12:3; மத் 27:50 = மாற் 15:37; மத் 13:55 = மாற் 6:5).

6. பழைய ஏற்பாட்டு வாசகங்களின் ஒற்றுமை:-

ஒத்தமை நற்செய்திகளில் காணப்படும் பழைய ஏற்பாட்டு வாசகங்கள் பெரும்பா

லும் மோசரோட்டிக்கு வாசகத்தை அல்லது 'எழுபது நூல்' வாசகத்தை, அமைப்பில் சார்ந்திருக்கவில்லை. ஆனால் இவ்வாசகங்களில் நெருங்கிய ஒற்றுமையுளது (மத் 3:3 = மாற் 1:3 = லூக் 3:4; மத் 11:10 = மாற்கு 1:2 = லூக் 7:27). இவ்விதம் அதிகாரப்பூர்வமான நூல்களைச் சாராது தரப்படும் பழைய ஏற்பாட்டு வாசகங்கள் ஆதிக் கிறிஸ்தவர்கள் தொகுத்த பழைய ஏற்பாட்டு வாசகங்கள் அடங்கிய ஒரு தொகுப்பைச் சுட்டுகின்றன.

இம்மூன்று நூல்களிடையே காணப்படும் ஒற்றுமைவேற்றுமைகளை அறிய, மத்தேயு லூக்காவை விரிவாக ஒப்பிடுதல் நன்று. அது இருவரும் பயன்படுத்தும் வெவ்வேறு முறைகளையும் இருவருக்கும் இடையேயுள்ள தொடர்பின் சிக்கல்களையும் வெளிப்படுத்தும்.

இந்த ஒத்தமைப் பிரச்சனையைப் பின்வருமாறு கூறலாம். இம்மூன்று நற்செய்திகளிலும் ஒற்றுமை உண்டு. இஃது இவை ஒன்றையொன்று சார்ந்தவை என்று காட்டுகிறது. ஆனால் வேறுபாடுகளும் உண்டு. இஃது இவை ஒன்றையொன்று சாராதவை என்று காட்டவல்லது. இந்த ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குவது எப்படி? இப்பிரச்சனைக்கு ஆய்வாளர் கண்ட, காண முயன்ற, விடைகளை இனித் தொகுத்துத் தருவோம்.

7. அ. வாய்மொழிப் பாரம்பரிய உத்தேசக் கொள்கை:-

இதன்படி, நற்செய்திகள் எழுத்து வடிவம் எடுக்கு முன்பே, அப்போஸ்தலப் பணிக்கு ஏற்ப, அப்போஸ்தலப் போதகம், ஏறக்குறைய நிலையான, ஒரே வடிவமுடைய அமைப்பில் அரமேயிக்கிலும் கிரேக்கத்திலும் அளிக்கப்பட்டது. பெரும்பாலும் ஒரே விதமாகப் போதிக்கப்பட்டது. ஆனால் திருச்சபை பல இடங்களிலும் பரவியபோது இப்போதகம் இடங்களுக்கு ஏற்றவாறு சிறிது மாற்றியும் போதிக்கப்பட்டது. இப்படியாக ஒரே வாய்மொழிப் பாரம்பரியம் சிறிது மாறியும் சிறிது மாறாமலும் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த வேறுபட்ட வடிவங்கள், காலப்போக்கில் எழுத்து வடிவில் மூன்று நற்செய்திகளாகத் தோன்றின. பாலஸ்தீனத்தில் வழக்கில் இருந்த வாய்மொழிப் பாரம்பரியத்தை மத்தேயு எழுதினார். மாற்கு உரோமையில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை எழுதினார். லூக்கா அந்தியோக்கியாவில், அல்லது பவுல் நிறுவிய சபைகளில் வழக்கிலிருந்த வாய்மொழிப் பாரம்பரியத்தை எழுதினார். ஆகவே ஒவ்வொரு நற்செய்தியாளரும் ஒரே வாய்மொழிப் பாரம்பரியத்தை இடங்களுக்கு ஏற்ப வெவ்வேறு முறையில் பயன்படுத்தினர். ஆகவே ஒற்றுமை வேற்றுமைகளுடைய நற்செய்திகள் தோன்றின.

மதிப்பீடு:- நற்செய்தி ஆய்வாளர்கள் நற்செய்திகளின் தோற்றத்தில் வாய் மொழிப் பாரம்பரியத்தின் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் ஒரே மனதாய் ஏற்றுக்கொள்வர். நற்செய்திகள் எழுத்து வடிவம் எடுக்குமுன் வாய்மொழிப் பாரம்பரியம் இருந்தது. அது ஒத்தமை நற்செய்திகள் எழுதுவதற்குத் துணையாய் இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இவ்வுத்தேசக் கொள்கை ஒத்தமை நற்செய்திப் பிரச்சனைக்கு முழுவிடை அளிக்கக் கூடியதல்ல. வாய்மொழிப் பாரம்பரியம், இந்நற்செய்திகளுக்கு இடையேயுள்ள வேற்றுமைகளையும், ஒவ்வொரு நற்செய்திக்கும் உரிய சிறப்பு நிகழ்ச்சிகளையும் விளக்கப் பயன்படலாம். ஆனால் இவற்றிடையே காணப்படும் ஒற்றுமையை விளக்கக் கூடியதல்ல. பொருளடக்கத்திலும், வரிசைக் கிரமத்திலும், சொல் தொகுதியிலும் காணப்படும் நுண்ணிய ஒற்றுமைகளை இவ்வுத்தேசக் கொள்கை விளக்கவில்லை. இவ்வொற்றுமைகள் வாய்மொழிப் பாரம்பரியம் மட்டுமன்று, இலக்கிய ஏடுகளும் நற்செய்திகள் எழுதப்படுவதற்குத் துணையாய் இருந்தன என்று சுட்டுகின்றன. மேலும் நற்செய்தியைப் பலரும் எழுத முயன்றனர் என்ற லூக்காவின் கூற்றை (1:1-4) நாம் புறக்கணிக்க முடியாது. இக்கொள்கை மிகச் சிக்கலான பிரச்சனைக்கு மிக எளிய விடையாக

அமைகிறது. ஆகையால் இக்கொள்கையை அப்படியே ஏற்றுக்கொண்டால் நற்செய்தியாளர்கள் உண்மையான ஆசிரியர்கள் அல்லர், நற்செய்தியின் வாய்மொழிப் பாரம்பரியத்தை வெறுமனே எழுதி வைத்த எழுத்தர்கள் என்று கருத வேண்டியிருக்கும்.

7. ஆ. உத்தேசக் கொள்கை:- இலக்கியத் துண்டுகளிலிருந்தே நற்செய்திகள் தோன்றின:- இதன்படி இயேசுவைப் பற்றிய நிகழ்ச்சியுரைகள், அறிவுரைகள், பாடுகள் பற்றிச் சில சிறு சிறு நினைவேடுகளிலிருந்து ஒத்தமை நற்செய்திகள் தோன்றின என்பர். ஒவ்வொரு நற்செய்தியாளரும் தம் நற்செய்தியில் இவற்றைத் தம் விருப்பம்போலப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

மதிப்பீடு:- இவ்வுத்தேசக் கொள்கை மூன்று நற்செய்திகளுக்கிடையே காணப்படும் விரிவான, நுணுக்கமான ஒற்றுமைகளை விளக்கப்பயன்படவில்லை. ஆகையால் ஒத்தமை நற்செய்திப் பிரச்சனைக்கு ஒரு விடையாக அமையவில்லை.

7.இ. ஒன்றை ஒன்று தழுவிய இலக்கியச் சார்புடைமை உத்தேசக் கொள்கை:-

இதன்படி முதலில் எழுதப்பட்ட நற்செய்தியை இரண்டாவதாக எழுதியவர் பயன்படுத்தினார். மூன்றாவதாக எழுதியவர் முதல் இரண்டையும் பயன்படுத்தினார். இவ்விதம் நற்செய்திகள் ஒன்றையொன்று சார்ந்தவை. இச்சார்புடைமை இந்நூல்களுக்கிடையேயுள்ள ஒற்றுமையை விளக்கும். இலக்கிய ஏடுகளைப் பயன்படுத்தியதோடு வாய்மொழிப் பாரம்பரியத்தையும் பயன்படுத்தினர். இது அவற்றிடையே காணப்படும் வேற்றுமைகளை விவரிக்கும் என்பர். இச்சார்புடைமை உத்தேசக் கொள்கை பல வடிவம் எடுத்துள்ளது. இரண்டு மட்டும் சிறிது ஆராய்ச்சிக்குரியன. அவை: 1) மத்தேயு → மாற்கு → லூக்கா → 2) மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் மாற்கு மூலம்.

1) மத்தேயு → மாற்கு → லூக்கா:- சிறிய ஆசியாவைச் சார்ந்த பிரிசியாவிலுள்ள எராப்பொலிநகர் ஆயரான பாப்பியஸ், ''மத்தேயு இயேசுவின் வாக்குகளை எபிரேய மொழியில் தொகுத்தார். அதை ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த மட்டும் மொழி பெயர்த்துக் கொண்டனர்'' என்று கூறியுள்ளார். இவர் கூற்றின்படி ஓர் அரமேயிக்கு நற்செய்தி இருந்திருக்க வேண்டும். அது கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கவேண்டும். அதை மூன்று ஒத்தமை நற்செய்தியாளரும் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று கருதினர் பலர். மத்தேயு → மாற்கு → லூக்கா → என்றவரிசையில் மூன்று நற்செய்திகளும் தொடர்புடையன என்று அறிஞர்கள் எண்ணுகின்றனர். முதலாவது எழுதப்பட்டது அரமேயிக்கு மத்தேயுவாகும். இந்நூல், கிரேக்கத்தில் முழுமையாக அல்லது பகுதிகளாக மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். கிரேக்க மத்தேயு, அரமேயிக்கு மத்தேயுவின் நெருங்கிய மொழிபெயர்ப்பாகும். மாற்கு மேற்கூறிய மொழிபெயர்ப்புகளையும் பேதுருவின் உரோமைப் போதகத்தையும், வாய்மொழிப் பாரம்பரியத்தையும் பயன்படுத்தித் தமது நூலை எழுதினார் எனலாம். லூக்கா மேற்கூறிய மொழிபெயர்ப்புகளையும் மாற்கையும் பயன்படுத்தி, இதுவரை சேர்க்கப்படாத மூலங்களையும் சேர்த்து எழுதினார் எனலாம். கிரேக்க மத்தேயுவும் லூக்காவும் சில காரியங்களில் ஒத்திருக்கும்போது அவற்றிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்க ஒருவர் (மத்தேயு) அரமேயிக்கு மத்தேயுவையும், மற்றவர் (லூக்கா) அதன் மொழி பெயர்ப்பையும் பயன்படுத்தினார் என்று கூறலாம். கிரேக்க மத்தேயு வேறுபல மூலங்களைச் சார்ந்திருந்தாலும், அரமேயிக்கு மத்தேயுவை மிகத் தழுவிய நூல் என்று கூறலாம்.

மதிப்பீடு:- மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய இவ்வரிசை சமீப காலம்வரை பல கத்தோலிக்க விளக்கவுரையாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது பாரம்பரியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்செய்திப்பட்டியல் வரிசையை அடிப்படையாகக் கொண்டது. இப்போது கத்தோலிக்க அறிஞர் சிலர் இக் கொள்கையைச் சிறிது மாற்றிக் கூறுவர்.

மத்தேயு, மாற்கு, லூக்கா என்ற இவ்வரிசையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று 1911-ஆம் ஆண்டில் பாப்புவின் விவிலியக் குழு கட்டளையிட்டது. ஆகையால் கத்தோலிக்க அறிஞர் பலர் இதை ஆதரித்தனர். ஆனால் இப்போது திறனாய்வாளருக்கு நேரிய சுதந்தரம் அளிக்கப்பட்டிருக்கிறது. நேரிய சுதந்தரத்தோடு ஆராயும் அறிஞர்கள் இக்கொள்கையின் குறைபாடுகளை நன்கு அறிவர்.

பாப்பியசின் கூற்றை அப்படியே எடுத்துக் கொண்டால், அவர் நாம் கொண்டிருக்கும் கிரேக்க மத்தேயுவைக் குறிக்கவில்லை. அரமேயிக்கு மத்தேயுவைக் குறிக்கின்றார். நாம் கொண்டிருக்கும் மத்தேயு காலத்தால் முந்தியது என்று கூற விரும்புவோர், கிரேக்க மத்தேயு பாப்பியன் குறிக்கும் அரமேயிக்கு மத்தேயுவோடு தொடர்புடையது என்ற எண்ணம் உடையவர்கள். இத்தொடர்பு ஒரு யூகமேயன்றி இதனை நிரூபிக்க முடியாது.

2) மத்தேயு, லூக்கா எழுதிய நற்செய்திகளுக்கு மாற்கின் நற்செய்தி ஒரு மூலமாகும்:-
இக்கூற்றை அறிஞர் துணிந்த முடிபாக ஏற்றுக் கொள்வர்; ஆயினும் பலமாகத் தர்க்கிப்பர்.

லூக்கா மாற்கைத் தழுவி எழுதுகிறார் என்பதை யாவரும் ஏற்றுக் கொண்டாலும் அச்சார்பின் அளவு மற்றும் தன்மை ஆகியவை பற்றித் தர்க்கம் உண்டு. லூக்காவில் காணப்படும் ''மாற்கின் பகுதிகளைப்'' பற்றித் (லூக் 4:31-6:19; 8:4-9:50; 13:15-21:38) தர்க்கத்திற்கு இடமேயில்லை. ஆனால் லூக்காவில் காணப்படும் ''இரட்டிப்புக் கூற்றுக்கள்'' நமது கவனத்துக்குரியன. இவ்விரட்டிப்புக் கூற்றுக்கள் மாற்கைச் சார்ந்து எழுதும்போது ஒருதரமும், லூக்காவுக்கே உரிய பகுதியில் மற்றொரு தரமும் வருகின்றன (லூக் 8:16 = 11:33; 8:17 = 12:2; 11:43 = 12:38; 9:5 = 10:10; 9:23 = 14:27; 9:24 = 17:33; 9:26 = 12:9; 9:50 = 11:23).

இது மாற்கிற்கு இணையான மற்றொரு மூலம் இருந்திருக்கக்கூடும் என்று காட்டுகிறது. சில இடங்களில் மாற்கில் காணப்படும் விவரிப்புகளை மத்தேயுவும் லூக்காவும் விட்டு விடுகின்றனர். ஆகையால் லூக்கா மாற்கைச் சாதாரணமாய்ச் சார்ந்து எழுதுகிறார் என்று எளிதில் கூறிவிட முடியாது. அது போதிய விளக்கமும் அல்ல. லூக்கா நாம் கொண்டிருக்கும் மாற்கையும் அரமேயிக்கு மத்தேயுவின் கிரேக்க மொழி பெயர்ப்பையும் பயன்படுத்தியிருக்கக்கூடும். ஆனால் இவற்றை அப்படியே பயன்படுத்தாது தமது தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தியிருக்க வேண்டும்.

மத்தேயு மாற்கைச் சார்ந்து எழுதுகிறார் என்று பொதுவாகக் கூறப்பட்டாலும் இக் கூற்று வன்மையான தர்க்கத்திற்குரியது. மத்தேயுதான், காலத்தால் மற்ற நற்செய்திகளுக்கு முந்தியது என்ற கொள்கை விவிலியத் திறனாய்வில் முழுவதும் கைவிடப்படவில்லை. மூவடிவப்பாரம்பரிய நிகழ்ச்சியுரைகளில் சார்புடைமை தெரிகிறது. ஆனால் லூக்காவைப்போல மத்தேயுவிலும் இரட்டிப்புக் கூற்றுப் பிரச்சனை உண்டு. மாற்கைச் சார்ந்து எழுதும்போது ஒரு தரமும், மத்தேயுவுக்கே உரிய பகுதியில் ஒருதரமும் வருகின்றன (மத் 5:29 தொ = 18:8 தொ; 5:31 தொ = 19:9; 10:38 தொ; 17:20 = 21:21). இரண்டிற்கும் உள்ள ஒற்றுமையைச் சார்புடைமைக் கொள்கை நன்கு விளக்கவில்லை என்பர் அறிஞர். மத்தேயு-மாற்குவிற்குப் பொதுவான ஒரு மூலம் இருந்திருக்க வேண்டும் என்பர்.

மத்தேயு-லூக்கா ஒருவரை ஒருவர் சார்ந்து எழுதியதாகத் தெரியவில்லை. இருவரும் தனித்தன்மையுடையவர்களாகத் தோன்றுகின்றனர். மாற்கைச் சார்ந்து எழுதாதபோது, தங்களது கருத்துக்களைத் திட்டம் செய்வதிலும், சொல்லும் விதத்திலும் பெரிதும் வேறுபடுவர். மாற்கு மத்தேயுவின் சுருக்கம் என்பர் சிலர். இது உண்மையாயின் அதில் ஏன் பல காரியங்கள் சேர்க்கப்பட்டுள்ளன? மத்தேயுவைவிட மாற்கில் நிகழ்ச்சியுரைகள் உயிர்ச் சித்திரத்தன்மை கொண்டு மிளிர்கின்

றன. இவை மாற்கு காலத்தால் முந்தியது என்று காட்டுகின்றன.

மதிப்பீடு:- மாற்கு காலத்தால் மத்தேயு - லூக்காவை முந்தியது என்று அறிஞர் ஏற்றுக் கொள்வர். இவ்வுத்தேசக் கொள்கை பல பிரச்சனைகளுக்குச் சிறந்த விடையாகவும் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த உதவும் அடிப்படையாகவும் அமைகிறது. ஆனால் மத்தேயு - லூக்கா மாற்கை எவ்விதத்தில் எந்த அளவுக்குச் சார்ந்துள்ளன என்பது விளக்கப்படவில்லை.

லூக்கா மாற்கைச் சார்ந்து எழுதியுள்ளார் என ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் மத்தேயு மாற்கைச் சார்ந்து எழுதுகிறார் என்ற கூற்றை எச்சரிக்கையுடன்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

7.ஈ. ஏடுகள் பற்றிய உத்தேசக் கொள்கைகள்:-

1. ஒரே ஏட்டு மூலக் கொள்கை:- மூவடிவப் பாரம்பரியத்திற்கு அடிப்படையாக ஒரே ஏட்டுமூலம் இருந்திருக்க வேண்டும். இது ஓர் அரமேயிக்கு நற்செய்தியாக இருந்திருக்க வேண்டும். இது பலதரம் திருத்தியமைக்கப்பட்டிருக்கலாம். மூவரும் இதைப் பயன்படுத்தியிருக்கலாம். அல்லது இதன் கிரேக்க மொழிபெயர்ப்பையோ, பலதரம் திருத்தப்பட்ட நூலையோ பயன்படுத்தியிருக்கலாம்.

மதிப்பீடு:- இக்கொள்கை 18-ஆம் நூற்றாண்டின் முடிவில் தோன்றியது. இக்கொள்கை முதலில் எளிதாகத் தோன்றினாலும் பின் சிக்கல் மிக்கதாக மாறியது. இக்கொள்கை உண்மையானால் மூன்று நற்செய்திகளிடையே, இப்போது இருப்பதை விட அதிகமாகப் பொருளிலும், திட்ட அமைப்பிலும், மொழியிலும் ஒற்றுமை இருக்க வேண்டும். மேலும் இக்கொள்கை இவற்றில் காணப்படும் வேறுபாடுகளை விளக்குவதில்லை. இக்கொள்கையை ஒருவரும் இப்போது ஏற்றுக்கொள்ளார். ஆனால் இதனால் ஒரு நன்மை உண்டு. அதாவது நாம் கொண்டிருக்கும் நற்செய்திகள் ஓர் இலக்கிய வடிவ வரலாற்றின் முடியாகும் என்று அறிஞர் உணரத் தொடங்கினர். உணர்ந்து ஏற்றுக் கொண்டனர்.

2) இரு ஏட்டு மூலக் கொள்கை:- இக்கொள்கை பல வடிவம் எடுத்துள்ளது. அறிஞர் பலர் இக்கொள்கையை ஏதாவது ஒரு வடிவத்தில் ஏற்றுக் கொள்வர். இதன் படி முதல் மூன்று ஒத்தமை நற்செய்திகள் காணாமற்போய்விட்ட இரு ஏட்டு மூலங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டன.

அ) நிகழ்ச்சியுரைப் பகுதிகளுக்கு அடிப்படையாக ''மூல மாற்கு'' என்ற நூல் இருந்திருக்கவேண்டும். இதற்குச் சான்றாக மாற்கில் காணப்படும் நிகழ்ச்சியுரைகளெல்லாம் சிறு மாறுதல்களுடன் மத்தேயுவிலும் காணப்படுவதை எடுத்துக் காட்டுவர். நுணுக்கமான விவரங்கள், உயிர்ச்சித்திர விவரிப்புகள், எளிமை, செயற்கைத் திட்டமின்மை ஆகிய குணங்கள் மாற்கில் காணப்படுகின்றன, மாறாக மத்தேயு-லூக்கா மாற்கைத் திருத்தி அமைத்துத் திட்டத்துடனும், இலக்கிய நயத்துடனும் எழுத முயன்றதாகத் தெரிகிறது. ஆகவே மத்தேயுவும் லூக்காவும் நாம் கொண்டிருக்கும் மாற்கையோ, மூல மாற்கையோ மூன்று நற்செய்திகளுக்கும் பொதுவான நிகழ்ச்சியுரைகளில் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

ஆ) இரண்டாவது மூலம்:- மத்தேயுவும் லூக்காவும் ஒருவரை ஒருவர் சாராது எழுதினாலும் மாற்கைச் சாராத பகுதிகளில் இருவருக்குமிடையே ஒற்றுமையுள்ளது. மேலும் இயேசுவின் வாக்குகள், அறிவுரைகள், மத்தேயுவிலும், லூக்காவிலும் சிறப்பாகக் காணப்படுகின்றன. இதற்கு அடிப்படையாக இருவருக்கும் பொதுவான ஒரு மூலம் இருந்திருக்க வேண்டும். இதைக் "Q" என்று அழைப்பர். (மூலம் என்று பொருள்படும் Quelle என்ற செர்மன் வார்த்தையின் முதல் எழுத்தால் இவ்வாறு அழைக்கப்பட்டது). இது ஒரு நற்செய்தி வடிவமுடைய நூல் அன்று. இது இயேசுவின் வாக்குகளையும்

அறிவுரைகளையும் கொண்டதாகும். சில நிகழ்ச்சியுரைகளும் சேர்ந்திருக்கலாம். இதைத்தான் ஆயர் பாப்பியஸ் அரமேயிக்கு மத்தேயு என்று கூறியிருக்கலாம். வாய் மொழிப் பாரம்பரியங்களையும் மூல மாற்கை யும் பயன்படுத்தி மாற்கு தமது நூலை எழுதியிருக்கவேண்டும். நாம் கொண்டிருக் கும் மத்தேயுவும் லூக்காவும் மாற்கிலிருந் தும் இயேசுவின் வாக்குகள் அடங்கிய இரண்டாவது மூலத்திலிருந்தும் தோன்றியி ருக்கவேண்டும். ஆனால் தங்களது நோக்கத் திற்கும் வாசகர்களின் தேவைக்கும் ஏற்ப இம்மூலங்களை மாற்றி அமைத்திருக்க வேண்டும். மேற்கூறிய இரு மூலங்களும் காலப்போக்கில் வழக்கொழிந்து மறைந்து போயின. இவ்விரண்டையும் தவிரத் தங்க ளுக்கே உரிய பகுதிகளுக்கு மத்தேயுவும் லூக்காவும் பிற மூலங்களைப் பயன்படுத்தி யிருக்கலாம். இவை வாய்மொழிப் பாரம் பரியங்களா, அல்லது எழுத்துப் பாரம்பரியங் களா என்று முடிவு செய்ய முடியாததொன் றாகும்.

மதிப்பீடு:- இக்கொள்கையில் சிக்கனமும் எளிமையுமுள்ளது. இக்கொள்கை ஒத்தமை நற்செய்திப் பிரச்சனையில் எழும் கேள்வி கள் யாவற்றிற்கும் விடையளிக்க வில்லை யாயினும் இப்பிரச்சனை பற்றிய ஆராய்ச்சி யில் ஒரு சிறப்புமிக்க கட்டமாகத் திகழ்கிறது.

இரண்டாவது மூலத்தின் தன்மை பற்றி அறிஞர்களிடையே ஒருமைப்பாடு இல்லை. சிலர் இது ஒரு நற்செய்தி அல்ல, வாக்குக ளின் தொகுப்பு என்பர். இது எழுத்து மூலமா அல்லது வாய்மொழிப் பாரம்பரி யமா? இது பல வடிவங்களுடையதா? இதில் நிகழ்ச்சியுரைகளுக்கு இடம் உண்டா? இவ்வாக்குகள் எந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டன? பொருள் தலைப்புப் படியா? காலவரைப்படியா, இடத்தைச் சார்ந் ததா? என்பன போன்ற கேள்விகளுக்கு மன நிறைவளிக்கும் பதில் ஒன்றும் கிடைக்க வில்லை. இம்மூலத்தின் தன்மையை அறி யப்பலரும் பலவாறு முயன்றுள்ளனர். ஒரு வரும் போதிய அளவு வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. வாக்குகளுக்கு ஒரு மூலம் அவசியமானால், மாற்கைச் சாராத, மத்தேயு - லூக்காவுக்குப் பொதுவான நிகழ்ச்சியுரைக ளுக்கு ஒரு மூலம் அவசியமில்லையா? என்ற கேள்விக்கு விடையளிக்கவில்லை இக்கொள்கை.

இக்கொள்கையில் பெரும் குறையொன்று ளது. இக்கொள்கை நற்செய்திகளின் தோற் றத்தை ஓர் எழுத்துவடிவ வரலாறாகக் கொண்டதாகத் தெரிகிறது. இக்கொள்கை யில் வாய்மொழிப் பாரம்பரியத்திற்கு இடமே இல்லை.

இக்கொள்கையைக் கத்தோலிக்கர் அல் லாத அறிஞர் பலர் ஏற்றுக்கொள்வர். வக் னோனோ போன்ற அறிஞர்கள் பல மாற்றங் களுடன் இக்கொள்கையை ஏற்றுக் கொள் வர்.

3) பல ஏட்டு மூலக் கொள்கை:-

இக்கொள்கை வாய்மொழிப் பாரம்பரி யங்களும் ஏடுகளும் கலந்த பல மூலங்களை ஏற்றுக்கொள்ளும். இதன்படி இயேசுவின் வார்த்தைகளும், செயல்களும் அடங்கிய ஒரே நூல் மட்டும் தோன்றவில்லை. பல தொகுப்புகள் பல வடிவங்களில் தோன்றின. இவை பல கிறிஸ்தவச் சமூகங்களால் பயன் படுத்தப்பட்டன. மேலும் இவை வேத போதகர்களுக்கும் உபதேசிமார்களுக்கும் ஞாபகமூட்டும் சாதனமாக விளங்கின. இவர்கள் தங்களின் நோக்கத்திற்கு ஏற்பவும் தங்களுக்குச் செவிமடுப்போரின் தேவைக்கு ஏற்பவும் இவ்வேடுகளிலிருந்து எடுத்து விளக்குவர். சிறு தொகுப்புகள் காலப்போக் கில் பெரும் தொகுப்புகளாக மாறின, இத் தொகுப்புகளைப் பிற்காலத்தில் ஒத்தமை நற்செய்தியாளர் சேர்த்துத் தங்கள் நூல்களை எழுதினர். இவ்வாறு சரித்திரச் சூழ்நிலையா லும் வேதபோதகத் தேவையாலும் நற்செய் திகள் முழு வடிவம் எடுத்தன.

மதிப்பீடு:- இது உண்மைக்கு மிக நெருங் கியதாகும். இக்கொள்கை, தொடர்ச்சியான வாய்மொழிப் பாரம்பரியத்தையும், நாம்

கொண்டிருக்கும் வடிவில் நற்செய்திகள் வடிவெடுக்கும்வரை அவற்றை இவ்வாய்மொழியில் பாரம்பரியம் பாதித்தல் செய்து வந்ததையும் ஏற்றுக்கொள்ளுகிறது. எனினும் இக்கொள்கையில் துல்லியம் இருப்பதாகத் தெரியவில்லை. சிக்கல் மிக்கதும் ஆகும். ஆனால் வாய்மொழிப் பாரம்பரியங்களுக்கும், ஏட்டு மூலங்களுக்கும் இக்கொள்கை இடமளிக்கிறது. இக்கொள்கையைச் செர்போ, லியோன் துயூர் போன்ற கத்தோலிக்க அறிஞர் பல மாற்றங்களுடன் ஏற்றுக் கொள்வர்.

மேற்கூறிய பல உத்தேசக் கொள்கைகளிலிருந்து ஒத்தமைப் பிரச்சனைக்கு மனநிறைவு அளிக்கக்கூடிய விடை காணுதல் எளிதான செயல் அன்று என்பது தெளிவு. ஒவ்வொரு கொள்யைிலும் பல தவறுகள் உண்டு; ஆயினும் இப்பிரச்சனை ஆராய்ச்சிக்கு ஏதாவது ஒரு வகையில் பயன் அளித்துள்ளது. பல உண்மைத் தெளிவுகளை அளித்துள்ளது. இப்பிரச்சனையின் ஏதாவது ஒரு கோணத்தைச் சிறப்பித்துக் காட்டி அதற்கு விடை காண முயன்றுள்ளது.

இப்பிரச்சனைக்கு விடைகாண முயலும் போது கீழ்க்கண்டவைகளை மனதிற் கொள்ள வேண்டும். 1) வாய்மொழிப் பாரம்பரியத்திற்கு அதிமுக்கியஇடம் அளிக்க வேண்டும். ஆயினும் வாய்மொழிப் பாரம்பரியம் மட்டுமே விடையளிக்க வல்லது அன்று. அதனால் மட்டும் நற்செய்திகளில் காணப்படும் ஒற்றுமையை விளக்க முடியாது. 2) மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் மாற்கு மூலமாகும். இதை அறிஞர் பலர் ஏற்றுக்கொள்வர். மத்தேயுவும் லூக்காவும் மாற்கோடு இலக்கியச் சார்பு கொண்டுள்ளன. கிரேக்க மொழியில் மாற்கு காலத்தில் முந்தியதாகும். 3) நாம் கொண்டிருக்கும் மத்தேயு நேரடியாகக் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும். அது ஒரு மொழி பெயர்ப்பன்று. 4) Q போன்ற மூலங்கள் வெறும்
யூகங்களே. 5) வாய் மொழிப்பாரம்பரியத்திற்கு இடமளிக்காத வெறும் ஏட்டு மூலம் சார்ந்த விடைகள் ஒவ்வாதனவாகும்.

8. இவற்றைக் கருத்தில் கொண்டு வக்னானோ, செர்போ, லியோன் துயூர், கரிங்டன் போன்றவர்களைப் பின்பற்றிப் பின்வரும் விடையளிக்க முயலுகிறோம். நற்செய்திகளின் தோற்றத் தொடக்கத்தில் பாலஸ்தீன் மூல அப்போஸ்தலப் போதகம் இருந்தது. இது பெரும்பாலும் வாய்மொழிப் பாரம்பரியமாகும். இதை அப்போஸ்தலர்களே நிர்ணயித்தனர். இது ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் பேசிய அரமேயிக்கு மொழியில் இருந்தது. பாலஸ்தீனத்திலும் எருசலேமிலும் கிரேக்க மொழி பேசிய யூதர்கள் இருந்ததால், இவ்வாய்மொழிப் பாரம்பரியம் கிரேக்க மொழியிலும் உருவெடுத்தது. இவ்வாய்மொழிப் பாரம்பரியத்தின் சில பகுதிகள் தொகுத்து எழுதப்பட்டன (லூக் 1:1).

சில, தொகுப்புகள் நீண்டனவாயும், சில சிறியனவாயும் இருந்திருக்க வேண்டும். வாய்மொழிப் பாரம்பரியத்தைப்போல, எழுதப்பட்ட இத்தொகுப்புகளும் அரமேயிக்கிலும் கிரேக்க மொழியிலும் உருவெடுத்தன. சில பகுதிகள் எழுதப்பட்டதால், வாய்மொழிப் பாரம்பரியம் மறைந்து போகவில்லை. அது தொடர்ந்து வளர்கிறது. தொடர்ந்து, எழுதப்பட்ட பகுதிகளைப் பாதித்தல் செய்கிறது. நற்செய்திகள் இறுதிவடிவெடுக்கும் வரை வாய்மொழிப் பாரம்பரியம் நற்செய்தி நூல் வளர்ச்சியைப் பாதித்தல் செய்கிறது. ஆண்டவரது போதகத்தைக் கொண்ட பல தொகுப்புகளும் ஆங்காங்குள்ள கிறிஸ்துவ சமூகங்களின் தேவைகளுக்கேற்ப வெவ்வேறு வடிவெடுக்கின்றன. பாலஸ்தீனத்திலுள்ள ஏட்டுத் தொகுப்புகளையும், அப்போஸ்தலிக்கப் போதகத்தையும் சேர்த்து அரமேயிக்கில் நற்செய்தி நூல் ஒன்று எழுதப்படுகிறது. இதுதான் அரமேயிக்கு மத்தேயு அல்லது மூலமத்தேயுவாக இருக்கலாம். இந்நூல் கிரேக்க மொழியில் பலரால் மொழிபெயர்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட கிரேக்க மொழி பெயர்ப்புகள் இருந்திருக்கலாம். இந்தக் கிரேக்க மொழி பெயர்ப்புகளை எல்லா நற்செய்தியாளரும் அறிந்திருந்ததாகத் தெரிகிறது. இம் மொழி பெயர்ப்புகளுக்குள்ளும் பரந்த வேறுபாடு

இருந்திருக்க வேண்டும். இவை கிறிஸ்துவச் சமூகங்களுக்குள் இருந்த உயிருள்ள பாரம்பரியத்தால் திருத்தப் பெற்றிருக்க வேண்டும். மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த அரமேயிக்கு மத்தேயுவின் கிரேக்க மொழிபெயர்ப்புகளைத்தவிர வேறுபல மூலங்களும் இருந்திருக்கவேண்டும். மத்தேயுவும் லூக்காவும் தங்களுக்குரிய செய்திகளை, வாக்குகளை ஒரு தனிப்பட்ட மூலத்திலிருந்து, எடுத்தாண்டதாகத் தெரிகிறது. இம்மூலம் எத்தன்மையுடையது? திட்ட வட்டமாக ஒன்றும் கூறுவதற்கில்லை. இம்மூலம் இயேசுவின் வாக்குகளையும், உவமைகளையும் கொண்டிருந்திருக்கலாம். (இது Q என்ற மூலமாக இருந்திருக்கலாம்). இது முதலில் அரமேயிக்கில் தோன்றிப் பின் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். ஒருவேளை, இவ்வாக்குகள், உவமைகள் ஆகியவற்றின் தொகுப்பு அரமேயிக்கில் வாய்மொழிப் பாரம்பரியமாக இருந்திருக்கலாம். கிரேக்க மொழி பேசிய கிறிஸ்துவர்களின் நன்மைக்காகக் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். இதுவும், வெவ்வேறு சமூகங்களின் தேவைக்கு ஏற்பத் திருத்தி அமைக்கப்பட்டு வெவ்வேறு வடிவங்கள் எடுத்திருக்க வேண்டும்.

இன்னும் நாம் கொண்டிருக்கும் வடிவில் நற்செய்திகள் வடிவெடுக்கவில்லை. மத்தேயுவின் பல மொழிபெயர்ப்புகளில் சில வாய்மொழிப் பாரம்பரியங்களாலும், கிறிஸ்துவச் சமூகங்களாலும், பிற மூலங்களாலும் திருத்தப்பெற்று மாற்றி அமைக்கப் பெற்றுத் தனிச்சிறப்பு வாய்ந்த பாரம்பரியங்களாகத் திகழ்கின்றன. இவற்றில் மூன்று நாம் கொண்டிருக்கும் வடிவில் நற்செய்திகளாகத் தோன்றுகின்றன.

முதலாவதாகத் தோன்றியது மத்தேயுவின் நற்செய்திநூல் அன்று. மாற்கினுடையது தான் நாம் கொண்டிருக்கும் நற்செய்தி வடிவங்களில் முதலாவதாகத் தோன்றியது. இதை விவிலிய அறிஞர் யாவரும் ஏற்றுக் கொள்வர். மாற்கு ஓர் அப்போஸ்தலரோ நேரடிச் சாட்சியோ அல்லர். ஆகையால் அரமேயிக்கு மத்தேயுவின் கிரேக்க மொழி பெயர்ப்புகளில் ஒன்றையோ பலவற்றையோ பயன்படுத்தித் தமது நூலை எழுதியிருக்க வேண்டும். இந்நற்செய்தி விரிவான விவரிப்புகளையும் உயிர்ச் சித்திரத்தன்மையையும் நேரடிச் சாட்சித் தன்மையையும் கொண்டது. மாற்கு பேதுருவின் சீடராக இருந்ததாகப் பாரம்பரியம் கூறுகிறது. பேதுருவோடு கொண்ட இத்தொடர்பு மேற்கூறிய பண்புகள் இந்நற்செய்தியில் இருப்பதற்குக் காரணமாகலாம்.

மத்தேயுவும் லூக்காவும் ஒருவரை ஒருவர் சாராது எழுதியதாகத் தெரிகிறது. ஆகையால் யாருடைய நூல் முதலில் தோன்றியது என்று கூறுதல் கடினம். இப்பிரச்சனை முக்கியம் வாய்ந்ததும் அன்று.

மத்தேயுவால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் அரமேயிக்கு மத்தேயுவை முக்கிய அடிப்படையாகக் கொண்டு நாம் கொண்டிருக்கும் கிரேக்க மத்தேயு தோன்றியிருக்க வேண்டும். நற்செய்திகளுக்குள் உள்ள தொடர்பை ஆராயுங்கால் கிரேக்க மத்தேயு மாற்கையும் சார்ந்து எழுதப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. மேலும் முன்பு கூறியதுபோல் லூக்காவுக்கும் மத்தேயுவுக்கும் பொதுவான ஒரு மூலம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மத்தேயுவுக்கே உரிய நிகழ்ச்சிகளுக்கு அவர் ஒரு தனிப்பட்ட மூலத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

லூக்கா மாற்கைத் தமது முக்கிய மூலமாகப் பயன்படுத்தியிருக்கிறார். இதுபற்றி இப்போது அறிஞர் ஐயுறார். மாற்கின் வரிசைக் கிரமத்தை லூக்கா தெளிவாகப் பினபற்றுகிறார். ஆனால் இதில் தமது ஆசிரியர் சுதந்தரத்தைக் கைவிட்டு விடவில்லை. ஆகையால் சுதந்தரத்துடன் நிகழ்ச்சியுரைகளையும், அறிவுரைகளையும் மொழிநடையையும் பயன்படுத்துகிறார். இது லூக்கா, மாற்கு ஆகியோருக்கிடையேயுள்ள வேறுபாடுகளை விளக்க வல்லது. ஒருவேளை அரமேயிக்கு மத்தேயுவின் கிரேக்க மொழி பெயர்ப்புகளில் ஒன்றையும், அதில் காணப்பட்ட வரிசைக்கிரமத்

தையும் லூக்கா பின்பற்றியிருக்கலாம். மத்தேயுவோடு சேர்ந்து மற்றொரு மூலத்தையும் பயன்படுத்தியிருக்கலாம். தமக்கே உரிய மற்ற மூலங்களையும் பயன்படுத்தியிருக்கலாம். மேற்கூறியவற்றைக் கீழ்வரும் படம் விளக்குகின்றது.



ஒத்தமை நற்செய்திகள் தொடர்புத்திட்டம்

மேற்கூறிய நமது விடை முற்றிலும் மனநிறைவு அளிக்கவல்லதன்று. ஆனால் உண்மைக்கு மிக நெருங்கியதாகும். நற்செய்தி வடிவங்களில் தோற்ற வரலாற்றின் நெடுகிலும் வாய்மொழிப் பாரம்பரியத்திற்கு முக்கியம் அளிக்கப்படுகிறது. அதாவது நற்செய்தித் தோற்றத் தொடக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் அது எழுதப்படுமுன்னும் இறுதி வடிவம் எடுக்குமுன்னும், வாய்மொழிப் பாரம்பரியத்திற்குரிய இடம் அளிக்கப்படுகிறது.

இக்கொள்கைப்படி நற்செய்திகளுக்கிடையே ஏட்டு இலக்கியத் தொடர்பு இருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி இருந்ததென்றாலும் ஒரு மூலம் மட்டுமன்று. பல மூலங்கள் இருந்திருக்க வேண்டும். அப்போது நற்செய்திகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் விளக்கம் பெறுகின்றன. நாம் அளித்திருக்கும் விடை நற்செய்திகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கப் போதுமானது. அதிலே நற்செய்திகள் பற்றிய இலக்கியத் திறன் ஆய்வும் பாரம்பரியமும் இடம் பெறுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக நற்செய்தியாளர்கள் சுதந்தரமுடைய ஆசிரியர்கள்; அவர்கள் தங்களது நோக்கத்திற்கு ஏற்பவும் தங்களது வாசகங்களின் தேவைக்கு ஏற்பவும் தமது நூல்களை எழுதினர் என்பதை மறந்துவிடக்கூடாது. இவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு நற்செய்திகளையும் ஆழ்ந்து படித்தால், அவற்றிடையுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் நன்கு விளங்கும். ஒவ்வொன்றின் மேன்மையும் தனிச்சிறப்பும் தெளிவாகத் தோன்றும்.

9. முடிவுரை:- முன்பு கூறியதுபோல் ஒத்தமை நற்செய்திப் பிரச்சனைக்கு முற்றிலும் மனநிறைவு அளிக்கும் விடை காணுதல் கடினமானதாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்தோன்றிய நற்செய்திகள் எவ்விதம் தோன்றின என்று தெளிவாகக் காண்பது அரிதாகும். ஒருவேளை இப்பிரச்சனை தீர்க்க முடியாததாகப் போகலாம். இப்பிரச்சனை அறிஞர்களுக்கு ஒரு சவாலாக இருந்து கொண்டிருக்கிறது; இருந்து கொண்டேயிருக்கலாம். ஆனால் இப்பிரச்சனையைத் தீர்க்க அறிஞர் பலர் தங்களையே அர்ப்பணித்திருக்கின்றனர்; அர்ப்பணித்துக் கொண்டே இருப்பர் என்பதும் உறுதி.

ஒபதியா (OBADIAH - யாவேயின் ஊழியன்)

1. இவர் ஆகாபு மன்னனின் அரண்மனைத் தலைமை மேற்பார்வையாளர். தெய்வபயம் கொண்டவர். ஈசபேலின் கொடுமைக் காலத்தில் யாவேயின் 100 இறைவாக்கினர்களை மறைத்துவைத்து உணவளித்தவர் (1 அர 18:3-16).

2. இவர் தாவீது மன்னனின் வழியில் ஆர்னானின் மகனான கனனியாவின் புதல்வர்களில் ஒருவர். செருபாபேலின் வழித்தோன்றல் (1 நாள் 3:2).

3. இசக்கார் குலத்தின் ஒரு தலைவர். இவர் தந்தையின் பெயர் இசுரகியா *(1 நாள் 7:3).*

4. பென்யாமின் குலத்தினரான இவர் ஆசேலின் ஐந்தாம் மகனாவார். சவுலின் வழித்தோன்றல் *(1 நாள் 8:38; 9:44).*

5. அடிமைத்தனத்திலிருந்து முதலில் எருச லேமுக்குத் திரும்பி வந்த லேவியருள் ஒரு வர். செமாயாவின் மகன் *(1 நாள் 9:16).* இவர் நெகமியா நூலில் சம்மூவானின் மக னான அபுதா என அழைக்கப்படுகிறார் *(நெக 11:17).*

6. காது குலத் தலைவர்களில் ஒருவரான இவர் சிக்கிலாகில் தாவீது மன்னனின் படை யில் சேர்ந்து அதிகாரியானார்*(1 நாள் 12:9).*

7. தாவீது மன்னனின் இறுதி நாட்களிலே செபுலோனின் தலைவர்களுள் ஒருவர். இசு மயாவின் தந்தை *(1 நாள் 27:19).*

8. யோசபாது மன்னன் யூதா நகர்களில் ஆண்டவரின் திருச்சட்ட நூலைப் போதிக்க அனுப்பிய மூப்பர்களில் (இளவரசர்களில்) ஒருவர் *(2 நாள் 17:7-9).*

9. யூதாவின் அரசன் யோசியாவின் காலத் திலே நடந்த ஆலயச் செப்பனிடும் பணி களை மேற்பார்வை பார்த்த லேவியர். மெராரியின் குலத்தைச் சேர்ந்தவர் *(2 நாள் 34:12).*

10. பாபிலோனிலிருந்து திரும்பிய யோவாபின் வழித்தோன்றல். எகியேலின் *(10)*-இன் மகன் *(எஸ் 8:9).*

11. எஸ்ராவோடு அடிமைத்தனத்திலி ருந்து திரும்பி வந்த குருக்களில் ஒருவர். இவர் நெகமியாவின்கீழ் இறைவனுக்கும் மக்களுக்குமிடையேயான புதிய உடன்படிக் கையில் கையெழுத்திட்டார் *(நெக 10:5).*

12. பெரிய குரு யோயாக்கிம் காலத்திலே வாயில் காவலரான இவர் வாயில்களையும், அவற்றின் அருகே இருந்த கருவூலங்களை யும் காவல் காத்தார் *(நெக 12:25).*

13. ஒபதியா நூலில் தொகுக்கப்பட்டிருக் கும் காட்சிகளுக்குரிய இறைவாக்கினர். இவருக்கு எந்த மரபு வரிசையும் கொடுக்கப் படவில்லை. நூலின் எந்த உள்ளார்ந்த சுட் டிக்காட்டல்களும், பழைய ஏற்பாட்டில் இப் பெயரையுடைய எந்த நபரோடும் அடையா ளம் காட்ட ஆதரவு தரவில்லை. இராபிக ளின் பாரம்பரியங்களில் ஒன்று *(1)*-இல் கூறப்பட்ட அரசன் ஆகாபின் அரண்மனை யில் தலைமை அதிகாரியாக்குகிறது *(1 அர 8:3-16).* தொடக்க கால ஒரு கிறிஸ்தவ எழுத்தாளர் இவரை ஆகாபின் மகன் அகசி யாவின் அதிகாரியாக்குகிறார். காண்க. ஒப தியா *(1).*

ஒபதியா திருநூல் (BOOK OF OBADIAH)

1. பெயரும் வாழ்வும்:- ஒபதியா என்ற சொல்லுக்கு ''யாவேயின் அடிமை'' என்று பொருள் கூறலாம். இவரைப் பற்றி அதிக மாக ஒன்றும் கூறுவதற்கில்லை. நூலிலி ருந்து, இவர் ஆலயத்தைச் சேர்ந்த இறை வாக்கினராகவோ, ஆலய இறைவாக்கு இலக்கியப் பாரம்பரியத்தில் எழுதியவரா கவோ இருக்க வேண்டும். இறைவாக்கினர் நாகூமைப் போல், இவர் தீவிர நாட்டுப்பற் றுடையவர். ஏதோமுக்கு எதிராக மிகுந்த சீற்றமுடையவர்.

1. நூலும் காலமும்:- இந்நூல் பழைய ஏற்பாட்டிலேயே மிகச் சிறிய நூலாகும். ஆகவே இறைவாக்கினர் நூல்கள் பற்றிய ஆய்வில் இந்நூலை அறிஞர் அதிகம் சிந்திப் பதில்லை. ஆயினும் எதிர்கால நம்பிக்கை என்னும் கருத்து வளர்ச்சியில் இந்நூல் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இதில் இறு திக்கால இறையியலும் அமைந்துள்ளது.

இந்நூலை இரு பகுதிகளாகப் *(வச 1-15; 16-21)* பிரிக்கலாம். ஏதோமுக்கு எதிராக ஏற்கனவே இருந்த இறைவாக்குகளைத் தொகுத்துத் திருத்தி அமைத்து ஒபதியா முற்பகுதியை எழுதினார் எனலாம் *(ஆமோ 1:11-12; ஏச 34:1-17; 63:1-6; எரே 49:7-22;*

எச 25:12-17; 35:1-15). அதன்பின், இரண்டாம் பகுதியில் தனது சொந்த வாக்குகளைத் தொகுத்து எழுதி, இரண்டையும் இணைத்தார் எனலாம்.

இந்நூல் தோன்றிய காலம் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. சிலர் இந்நூல் கி.மு.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர்; வேறுசிலர் கி.மு. 312-ஐ ஒட்டியது என்பர். கி.மு. 587/86-இல் எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின்னும் ஏதோமை நபத்தேய அராபியர்கள் கைப்பற்றிய ஆண்டுக்கும் (கி.மு. 312) இடைப்பட்ட காலத்தில் இந்த இறைவாக்கு கூறப்பட்டிருக்கலாம். ஏனெனில் எருசலேமின் வீழ்ச்சியின்போது ஏதோமித்தர் செய்த துரோகச் செயல்கள் ஆசிரியரது எண்ணத்தில் பசுமையாக இருக்கின்றன. இதற்குத் தண்டனையாக இறைத்தீர்ப்பாக, அராபியப் படையெடுப்பையும் அதன்பின் வந்த துன்பங்களையும் இறைவாக்கினர் விளக்குகின்றார்.

இந்நூலைத் தழுவி, இறைவாக்கினர் யோவேல் தனது இறைவாக்கைக் கூறுவதாகத் தெரிகிறது (வச 15-ஐ யோவே 1:15; 4:4.7. 14 ஒடும், வச 17-ஐ யோவே 3:5; 4:17-ஒடும் ஒப்பிடுக).

3. வரலாற்றுப் பின்னணி:- ஏதோம் நாடும் மக்களும்:- ஏதோம் நாட்டையும் அதில் வ்ாழ்ந்த ஏதோமித்தரையும் நோக்கி இந்த இறைவாக்கு கூறப்படுகிறது. ஆகவே ஏதோம் நாட்டையும் ஏதோமித்தரையும் பற்றிச் சிறிது அறிந்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். கி.மு. 23-20 நூற்றாண்டுகளில் ஏதோம் பகுதியில் ஒரு சிறந்த கலாச்சாரம் வளர்ந்திருந்தது. கி.மு. 19-ஆம் நூற்றாண்டில் நாடோடி இனத்தவர் இப்பகுதியைக் கைப்பற்றி அங்கு நிலவிய கலாச்சாரத்தை அழித்தனர். இக்காலம், ஆபிரகாம், அரசர்கள்கூட்டணிக்கு எதிராகப் போரிட்ட கதை நடந்த காலத்தைச் சேர்ந்ததாகும். இந்த நாடோடி இனத்தவர், இப்பகுதியை ஆறு நூற்றாண்டுகளுக்கு ஆட்சி செய்தனர். கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் ஏதோமித்தர் அரபா வாடிக்குக் (ஓடை) கிழக்கே குடியேறினர். இவர்கள் செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆதியாகமக் குறிப்புப்படி இவர்கள் யாக்கோபின் சகோதரனான ஏசாவின் சந்ததியாவார். ஆகவே இஸ்ராலேயர்களுக்கு உறவினர். ஆயினும் இரு இனத்தவரிடையே எப்போதும் பகைமையும் போராட்டமும் இருந்து கொண்டே இருந்தன.

ஏதோம், தன் எல்லையாக, வடக்கில் சாக்கடலையும், கிழக்கே அரேபியா பாலைவனத்தையும் தெற்கில் அக்காபா வளைகுடாவையும் மேற்கில் அரபா வாடி (ஓடை) யையும் கொண்டிருந்தது. வடக்குத் தெற்கில் எழுபதுமைல் நீளமும் கிழக்கு மேற்கில் பதினைந்து மைல் அகலமும் கொண்டது. இப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 5000 அடி உயரத்திலுள்ள பீட பூமியாகும். நாட்டைச் சமமில்லாத இருபகுதிகளாகப் பிரிக்கலாம். வடக்கிலுள்ள சிறியதொரு பகுதி போஸ்ரா என்றும் தெற்கிலுள்ள உயர்ந்த பெரிய பகுதி சேலா என்றும் அழைக்கப்பட்டன. தெற்குப் பகுதியில் பழங்காலக் கோட்டைகள் உண்டு. விவிலியத்தில், ஏதோம், அதனுள் உள்ளமுக்கிய மலைத்தொடரின் பெயரால் செயீர் மலை என்றழைக்கப்படும் (எச 35:1-9); ஏதோமித்தரின் மூதாதையரின் பெயரால் ஏசாவின் மலை என்றும் குறிக்கப்படும் (வச 9). ஏதோம் என்ற சொல் ''சிவப்புப்பகுதி'' என்று பொருள்படும்; அங்குள்ள பாறைகள், மண் ஆகியவற்றின் நிறத்தைக் குறித்தது. இப்பகுதி மணலும் க்ல்லும் நிறைந்த பரப்புடையது பெரும் செங்குத்தான பாறைகளையும், ஆழமான பயங்கரக் குகைகளையும் கொண்டது. இவையாவும் அச்சமிக்க சூழ்நிலையை எழுப்பக்கூடும். இத்தகைய நிலத்தில் வேளாண்மை செய்து வாழ்வு நடத்த முடியாது. ஆகவே பெனிசியர்களைப்போல், ஏதோமித்தரும் வியாபாரத்தில் தங்கள் செல்வத்தைத் தேடினர். செங்கடல் துறைமுகமான எசியோன்-கெபேர் தெற்கில் இருந்தது. அரேபியா, ஆப்பிரிக்காவின் பொருட்களைச் சுமந்து கொண்டு ஒட்டகங்கள் ''அரசனது பெருவழி'' வழியாகச் சென்றன (எண் 20:17). இவ்வழி ஏதோமின் இடையில்

தெற்கு வடக்காகச் சென்றது. வியாபாரம் இவர்களைக் கிழக்கு நாடுகளோடு தொடர்பு கொள்ளச் செய்தது. இத்தொடர்பால் இவர்கள் ஞானத்திற்கும் அறிவுக்கும் புகழ்பெற்றவர்கள் என்ற சிறப்பினைப் பெற்றனர் (வச 9; எரே 49:7).

இஸ்ராயேல் வரலாறு முழுவதும், ஏசாவுக்கும் யாக்கோபுவுக்கும் இடையேயும், அவர்களுடைய சந்ததியினர்களிடையேயும் கசப்பான பகைமை நீடித்தது. யாத்திரைக்குப் பின் ஏதோமின் வழியாக எபிரேயரை நடத்திச் செல்ல மோசே அனுமதி கேட்டபோது, அதன் அரசன் இழிவான முறையில் மறுத்துவிட்டான் (எண் 20:14-21). சவுல் ஏதோமித்தரோடு போரிட்டார். தாவீது இவர்களை வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்தினார். சாலமோனுக்கும் அவருக்குப் பின் வந்த யூதாவின் அரசர்களுக்கும் ஏதோமித்தர் அடிமையாய் இருந்தனர். சாலமோன் தனது புகழ்பெற்ற செம்புச் சுரங்கங்களை அக்காபா வளைகுடாவில் நிறுவினார். அங்கிருந்து தனது கடல் வணிகத்தை நடத்தினார். இஸ்ராயேலுக்கும் யூதாவுக்கும் பிளவு ஏற்பட்டபின், யூதாவின் அரசன் யோராம் காலத்தில் ஏதோமித்தர் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். பலமுறை கிளர்ச்சி செய்து படிப்படியாக வெற்றி பெற்றனர். அதன்பிறகும் ஏதோமுக்கும் யூதாவுக்குமிடையே உறவு இழுபறியாகவே இருந்தது. யூதாவின் அரசர்களான அமாசியா, ஊசியா ஆகியோர் ஏதோமித்தரை மீண்டும் வென்று அடிமையாக்கினர். அமாசியா சேலாவைக் (பெட்ரா) கைப்பற்றினார். ஊசியா, ஏலாத்தைக்கைப் பற்றி யூதாவின் ஆட்சியை விரிவுபடுத்தினார். ஆனால், ஆகாசின் காலத்தில் ஏதோமித்தர் மீண்டும் சுதந்தரம் பெற்றனர்.

கி.மு. 604-க்குப்பின் ஏதோம் அசீரியர்களுக்கும் பாபிலோனியர்களுக்கும் கப்பம் கட்டும் நாடாயிற்று. பிற்காலத்தில் பாபிலோனியர் யூதாவை வென்றபோது ஏதோம் பாபிலோனியர்களோடு சேர்ந்து கொண்டு, யூதாவுக்கு எதிராகப் பழம் பகையைத் தீர்த்துக்கொள்ள முயன்றது. கி.மு. 587-இல் நெபுக்கதுனேசார் எருசலேமை முற்றுகையிட்டபோது, பரிசுத்த நகரை அழிக்கும்படி பாபிலோனியரை ஏதோம் தூண்டியது. இதை ஒரு சங்கீத ஆசிரியர் மிகுந்த கசப்போடு நினைவு கூர்கிறார்; ''தகர்த்தெறியுங்கள், அடியோடு தகர்த்தெறியுங்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள் (சங் 136:7). யூதாவின் மக்கள் நாடு கடத்தப்பட்டபோது, ஏதோமித்தர் இறை மக்களது வேதனைமிக்க துன்பநிலை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர்; யூதாவைச் சூறையாடினர்; பொருட்களைக் கொள்ளையடித்தனர்; தப்பி ஓடியவர்களைக் காட்டிக் கொடுத்து எதிரியிடம் ஒப்படைத்தனர் (வச 10-14). தங்கள் தலை நகரைக் கெபிரோனுக்கு மாற்றினர். கொடுமை மிக்க இந்தச் சகோதரத் துரோகத்தை (ஏனெனில் ஏசாவும் யாக்கோபும் சகோதரர்கள்) நாட்டுப் பற்றுடைய யூதர்கள் மனதார வெறுத்தனர்; ஒரு போதும் மறக்கவில்லை.

யூதர்கள் நாடு கடத்தப்பட்ட காலத்திலும், அதற்குப் பின்பும், ஏதோமித்தர் பிறரால் பல முறை கொள்ளை அடிக்கப்பட்டனர். தென் கிழக்கிலுள்ள பாலையைச் சேர்ந்த நபத்தேய அராபியர்கள் ஏதோமின் மேல் அடிக்கடி படையெடுத்தனர். இப்படையெடுப்புக்கு அஞ்சி, ஏதோமின் அகதிகள் யூதாவின் தென் பகுதியில் குடியேறினர். இப்பகுதி பிற்காலத்தில் இதுமேயா என்றழைக்கப்பட்டது (வச 7). அவர்கள், இங்குப் பெட்ரா என்ற இடத்தில் தங்கள் தலை நகரை நிறுவினர். இவ்விடம் ஏதோமித்தரின் மிகப் பழைய குடியிருப்பாகும்: ஒரு வேளை, சேலாவாக இருக்கலாம். பெட்ரா என்றால் பாறை என்று பொருள் (வச 3). இது இப்போது யோர்தான் நாட்டில் உள்ளது. இன்றும் இதைப் பல சுற்றுலாவாசிகள் பார்க்கச் செல்கின்றனர்.

பாபிலோனிலிருந்து யூதர்கள் தாயகம் திரும்பிய பின்னும் இரு இனத்தவரிடையே உறவு மேம்படவில்லை. இதை ஒபதியா நூல் சுட்டிக் காட்டுகிறது. இந்நூலில் காணப்படும் ஏதோமுக்கு எதிரான பழிப்புரை, யூதாவின் அரசர்கள் காலத்தில் ஏதோமுக்கு

எதிராகக் கூறப்பட்ட இறைவாக்குகளை எதிரொலிக்கிறது. ஏற்கெனவேயுள்ள ஏதோமின் பாவநிலை, யூதாவுக்குச் செய்த சகோதரத் துரோகத்தால் மேலும் மோசமாயிற்று என்று ஒபதியா கூறுகிறார் (வச. 10). இதில், இருநாடுகளையும் அவற்றின் இனப்பெயர் காட்டும் மிகப் பழைய பாரம்பரியத்தையும் இறைவாக்கினர் எதிரொலிக்கின்றனர் (ஆதி 36:1). இக்கதைகளில் வரும் பல செய்திகள் இரு இனத்தவரின் பிற்கால வரலாற்றை எதிரொலிக்கின்றன. சிவப்பு என்று பொருள்படும் ஏதோம் என்ற பெயர், அதே என்ற பெயர் கொண்ட மலைகளின் நிறத்தாலோ, ஏசாவின் சிவப்பு உடல் நிறத்தாலோ, ஏசா தனது பிறப்புரிமையை விற்று வாங்கிய கூழ் உணவின் நிறத்தாலோ விளக்கப்படுகிறது (ஆதி 25:25.30) பகால்-காதுமலை யூதாவின் தென் எல்லையைக் குறித்தது. இது ஏதோமின் மலையாகிய செயீர்மலைக்கு எதிராக இருந்தது (யோசு 11:17; 12:7). இதன்படி, யாக்கோபு மழுமழுப்பானவனாகவும் (பகால்-காது), ஏசா ரோமக்சுட்டு உள்ளவனாகவும் (செயீர்) விவரிக்கப்படுகின்றனர் (ஆதி 27:11). இஸ்ராயேல் சமூகத்தில் ஏதோமித்தரைச் சேர்த்துக் கொள்வதற்கு உபாகமச் சட்டம் இணக்கம் காட்டுகிறது (உபா 23:8). யோபு திருநூலின் ஆசிரியர், யூதர்களை அன்று ஏதோமித்தரையே தன் கதாநாயகனாகவும், பிற நடிகர்களாகவும் ஆக்குகிறார்.

4. நூலின் திட்டம்:-

வச. 1 தலைப்பும் முன்னுரையும்

I. வச. 2-15; ஏதோமுக்கு எதிரான இறைவாக்கு.
   - வச. 2-4; ஏதோமின் மேல் தீர்ப்பு
   - வச. 5:9; ஏதோமின் அழிவு.
   - வச. 10-15; அழிவுக்குக் காரணம்.

II. வச. 16-18; இஸ்ராயேல் பழிவாங்குவான்.
   - வச. 19:21; இறைவனின் புதிய அரசு; புதிய இஸ்ராயேல்.

6. சிறப்புக் கருத்துக்கள்:-

33A முறைமைக் கைம்மாறு நியதி இச்சிறு நூலின் முக்கிய இறையியல் கருத்து இறைவனுடைய நேர்மை மிக்க தீர்ப்பாகும். தீயவர்களோ, தீய நாடுகளோ செய்யும் தீமைகளை இறைவன் கவனிக்காமல் விடுவதில்லை; புறக்கணிப்பதில்லை. அவரவர்களுக்கு உரிய தண்டனையை முறைமைக் கைம்மாறாக அளிக்கிறார்.

முதலில் அகந்தைமேல் இறைவனது தீர்ப்பை இறைவாக்கினர் அறிவிக்கிறார். ஏதோமுக்கு எதிராகப் போரிடப் பிற இனத்தவரைத் தூண்ட இறைவன் மனிதத் தூதுவனை அனுப்புவதைப் பற்றி இறைவாக்கினர் கேள்விப்படுகிறார். இந்தப் போர்க் கூட்டணி அமைப்பில், வரலாற்றின் ஆண்டவர் செயலாற்றுவதை ஒபதியா தெளிவாகக் காண்கிறார். பாவம் மலிந்த ஏதோமை இறைவன் சிறுமைப்படுத்தப் போகிறார்; நிந்தைப்படுத்தப் போகிறார். ஆனால் ஏதோம் இறுமாப்போடு எதிர்த்து நிற்கிறது. தனது மலைப்பாங்கான அரணை யாரும் அணுக முடியாது; கோட்டைகள் மிகப் பாதுகாப்பானவை. உயர்ந்த செங்குத்தான பாறைகள் சூழ்ந்த தன் தலை நகரத்தை யாரும் எளிதில் வெல்ல முடியாது என்று ஏதோம் செருக்குக் கொண்டிருக்கலாம். கழுகுகள் கூடு கட்டும் உயரத்தில் ஏசா வாழ்வது உண்மையே. ஆயினும் ''கழுகைப்போல் உயரப்பறந்தாலும் விண்மீன்கள் நடுவில் அவன் தனது வீட்டை அமைத்தாலும் '' இறைவன் அவனைக் கீழே வீழ்த்துவார் (ஒப 1-4). மற்றப் புதிய எபிரேய இறைவாக்கினர்களோடு சேர்ந்து ஒபதியாவும் மனிதர்களின் அகந்தை; சுய நிறைவு ஆகியவற்றின் மேல் இறைவனது தீர்ப்பை அறிவிக்கிறார். ''அகங்காரம் முன்னும், அழிவு பின்னும் வருமுன்னே, மனம் செருக்குறும்'' (பழ 16:18). இது மக்களிடையே நிலவிய ஒரு பழமொழியாக இருக்கலாம். இதை இயேசு அடிக்கடி மேற்கோள் காட்டுகின்றார்: ''தன்னையே உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்''. பகலுக்குப் பின் இரவு வருவதுபோல், ஒழுக்க அமைப்பில், அகந்தைக்குப் பிறகு அழிவும் இழிவும் வருவது உறுதி. ஏனெனில், ''செருக்குற்றவர்களை இறைவன்

எதிர்க்கிறார்; தாழ்ச்சியுள்ளவர்களுக்கோ அருளை அளிக்கிறார்'' (1 பேதுரு 5:5).

இந்நூலில் அடுத்து வரும் முக்கியமான இறைவாக்கில் ''முறைமைக் கைம்மாறு நியதியை'' இறைவாக்கினர் கூறுகிறார். ''நீ செய்தது போலவே உனக்கும் செய்யப்படும்; நீ செய்த வினைகள் உன்மேல் விழும்'' (வச 15). ஏதோம் செய்தவை வச 10-14-இல் விவரிக்கப்படுகின்றன. இனி ஏதோம் அனுபவிக்க இருப்பவைகளை வச 5-9-இல் இறைவாக்கினர் எடுத்துரைக்கின்றார். ஏதோமித்தர் எருசலேமின் வீழ்ச்சியின்போது செய்தவை, உரிய காலத்தில், அவர்களுக்குத் திரும்ப விளைகின்றன. இரவில் திருடும் கொள்ளைக்காரர்கள் எல்லாவற்றையும் திருடுவதில்லை. திராட்சைப் பழங்களைப் பறிக்கிறவர்கள் பழங்களில் சிலவற்றையாவது விட்டுச் செல்வர். ஆனால், ஏதோமின் அழிவு முழுமையாக இருக்கும். அது ஏற்கெனவே தொடங்கி விட்டது. ஏசா தன் சகோதரன் யாக்கோபுவைக் கொள்ளையடித்து அவன் நாட்டின் ஒரு பகுதியைத் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டான். அதுபோல், ஏதோமும் தன் நாட்டை இழப்பது நீதியே; இதை அவனது நண்பனும் கூட்டாளியுமான நபத்தேய அராபியரே செய்வர். ஏதோமித்தரின் ஞானிகளும் வீரர்களும் அப்படியே அழிக்கப்படுவர்.

''நீ செய்தது போலவே உனக்கும் செய்யப்படும்'' என்ற கொள்கைக்கு எடுத்துக்காட்டாகப் பல நிகழ்ச்சிகளை விவிலியத்தில் காணலாம். ரூத் தன் மாமியாள் நகோமிக்குப் பேரன்பு காட்டினாள்; பிற்காலத்தில் பெத்லகேமில் போவாசிடமிருந்து பேரன்பு பெற்றாள் (ரூத் 2:8-13). யாக்கோபு தன் தந்தை ஈசாக்கை ஏமாற்றினார்; ஆனால் தன் பிள்ளைகளாலேயே ஏமாற்றப்பட்டார் (ஆதி 27;1-29; 27:29-36). ஆமான், மோர்தெக்காயைக் கொல்லக் கழுமரம் தயாரித்தான்; அதிலேயே அவன் கழுவேற்றப்பட்டான் (எஸ்த 7:9-10). நன்மையோ தீமையோ, நாம் எந்த அளவில் பிறருக்கு அளக்கிறோமோ அதே அளவில் தான் நமக்கும் அளக்கப்படும். நாம் பிறரை எந்த முறையில் நடத்துகிறோமோ அதே முறையில்தான், அவர்கள் நம்மை நடத்துவர். இந்தக் கொள்கை நாடுகளுக்கும் தனிப்பட்டோருக்கும் பொருந்துவதாகும். இதில் ஒரு முக்கிய மாற்றம் உண்டு. எந்த உழவனும் விதைத்தவுடன் அறுவடை செய்வதில்லை. ஏதோமித்தர் செய்த வெறுக்கத்தக்க செயல்களின் பயன், உடனே அவர்கள் மேல் விழவில்லை. வரலாற்றில் இறைவனது தீர்ப்பு நெடுங்காலத்திற்குப் பிறகு தான் வெளிப்படுகின்றது.

ஆண்டவரது நாள், ஏதோமித்தர் மேல் மட்டுமன்று, எல்லாப் பிற நாடுகள் மேலும் வரும் - இறைவனது தீர்ப்பு ஆகியவை பற்றிய விவரிப்போடு இந்நூல் முடிகிறது. பாபிலோனியர் வாயிலாக யூதா ஏற்கெனவே இறைவனது தீர்ப்பை அனுபவித்து விட்டது. பிற நாடுகளும் ஆண்டவரது சீற்றமாகிய துன்பக் கிண்ணத்தை விரைவில் பருகுவர். அந்தத் தீர்ப்பிலிருந்து தப்பிய யூதர்களாகிய எஞ்சியோர் சீயோன் மலையில் அச்சமின்றி வாழ்வார்கள்; தங்களைக் கொள்ளையடித்தவர்களைக் கொள்ளையடிப்பார்கள். பரிசுத்த நாட்டின் இழந்து போன பகுதிகளைத் திரும்பவும் கைப்பற்றுவர். தீ வைக்கோலை எரிப்பதுபோல் யூதாவும் இஸ்ராயேலும் சேர்ந்து ஏதோமை அழிக்கும்; மீட்பர்களால் நடத்தப்பட்டு இஸ்ராயேல் ஏதோமை வெற்றி கொள்ளும். இறைவனது அரசு நிறுவப்படும் (வச 15-21). இந்தக் கருத்தைப் புனித பவுலும் கையாளுகின்றார். ஆண்டவரது நாளில் உலக அமைப்பு முழுவதும் மாற்றி அமைக்கப்படும்; காரியங்கள் தலைகீழாக மாற்றப்படும்; சரி செய்யப்படும். இந்த யுகத்தில் கொடுமை செய்வோர் வரும் யுகத்தில் தண்டிக்கப்பெறுவர். இப்போது கொடுமைப்படுத்தப்படுவோர் அமைதியும் பாதுகாப்பும் பெறுவர் (2 தெச 1:5-10).

ஒபதியாவின் செய்தி, நமது காலத்தில் நிலவும் மிகுதியான உணர்ச்சிப் போக்குக்

கும், தனிநபரைப் போற்றும் கொள்கைக் கும் ஒரு திருத்தமாக அமைந்துள்ளது. அயல் நாடுகளைப் பற்றிப் பேசும்போது, இறை வாக்கினர் நாகூமைப் போல், ஒபதியாவும் ஆண்டவரது அன்பைவிட அவரது கடுமை யையும், இறைவனது அருள்மிக்க இரக்கத் தையும் மீட்பையும்விட அவரது கோபத்தை யும் பழிவாங்குதலையுமே வெளிப்படுத்துகி றார். இறைவனது அன்பு பற்றிப் பொதுவாக நாம் கொண்டிருக்கும் கருத்துக்கள் உருத் திரிந்து நம்மிடையே உள்ளன. இவை இறைவ னது கோரிக்கை, தீர்ப்பு ஆகியவற்றைப் புறக்கணிக்கின்றன. இவற்றைத் திருத்த ஒப தியாவின் செய்தி அவசியமாகின்றது.

மேலும் மனிதர்களோடு தனிநபர் என்ற அளவிலேயே இறைவன் உறவு கொள்கிறார் என்ற எண்ணப்போக்கு இக்காலத்தில் நிலவு கிறது. இதைச் சரி செய்யும் முறையில் ஒபதியாவின் செய்தி அமைந்திருக்கிறது. ஏனெனில் அது சமூகம், இனம் நாடுகள் பற்றியதாகும். மறைமுகமாகவே இறைவன் வரலாற்றில் செயலாற்றுகிறார். ஒரு நாடு, அது எவ்வளவு பலமுள்ளதாயினும், பாது காப்புடையதாயினும், இறைவனது தீர்ப்பி லிருந்து தப்ப முடியாது. பிறநாடுகளைக் கருவியாகக் கொண்டே, இறைவன் முறை மைக் கைம்மாறு நியதியைச் செயல்படுத்து கிறார். நாம் இன்று ஒபதியாவின் செய்தியை இவ்வாறு எடுத்துக் கூறலாம். ஆனால் ஒப தியா இவ்வாறு கருத்தியலாக, ஆள் தன்மை யற்ற முறையில் சிந்திக்கவில்லை. அவர் நாடுகளின் வீழ்ச்சியிலும் எழுச்சியிலும் உயி ருள்ள இறைவனது கரத்தைக் கண்டார். வரலாற்றில் செயலாற்றும் ''எல்லா உலகங் களின் நீதிபதியின்'' நோக்கம், தூய்மைப் படுத்தப்பட்ட எஞ்சியோரை விடுவிப்பது மட்டு மன்று, எல்லா நாடுகளின் மேலும் தமது அரசை நிறுவுவதும் ஆகும். ''அரசாட்சி ஆண்டவருக்கே உரித்தாகும்'' (வச 21).

ஒபிரா (OPHRAH - இளம் கலைமான்) - ஆள்

இவர் மெயொனத்தாயின் மகன். இவர் கெனாசு, ஒதினியேல் மூலமாக யூதா வழித் தோன்றலானார் (1 நாள் 4:14).

ஒபிரா (OPHRAH - இளம் கலைமான்) இடம்

1. பென்யாமினுக்குக் கொடுக்கப்பட்ட நகர்களில் இதுவும் ஒன்று. லெபனோனிலி ருந்து மிகிமாசுக்கோ எரிகோவுக்கோ போகும் பாதையில் உள்ளது (யோசு 18:23; 1 சாமு 13:17). இந்த நகர் எருசலேமுக்கு வடமேற்கில் உள்ள மலைநாட்டில் உள்ளது.

2 நாள் 13:19-இல் வரும் எபரோனும், 2 சாமு 13:23; யோவா 11:54-இல் வரும் எப்பி ராயிமும், 1 மக் 11:34-இல் வரும் அபேய்ர மாவும் இவ்வூராக இருக்கலாம். பெத்தே லைப்போல இதுவும் தொடக்கத்திலேயே கானானியர்களிடம் இழந்து போகப்பட்டி ருக்க வேண்டும். இதைப்பிறகு எப்பிராயிமியர் கள் கைப்பற்றித் தங்களுடையதாக உரிமை கொண்டாடியிருக்க வேண்டும் (காண்க. நீதி 4:5; 1 அர 12:29). பெத்தேலுக்கு வடகிழக் கில் 6.5 கி.மீ. தொலைவிலுள்ள நவீன எத்-தையீபே இவ்வூராக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

2. மனாசே வம்சத்தில் அபியேசர் குலத்திற் குக் கொடுக்கப்பட்ட இந்நகர் கிதியோனின் சொந்த ஊர் (நீதி 6:11; 9:5). இது இஸ்ரா யேல் மக்கள் குடியேறுமுன்னே ஒரு திருத்தல மாக இருந்திருக்க வேண்டும். கிதயோன் இவ்விடத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டி னார். அதில் ''ஆண்டவர் சமாதானம்'' என்று பொறித்து வைத்தார் (6:24). இது நீதிபதிகள் நூல் எழுதப்பட்டபோதும் இருந் தது. கிதயோன் இங்கே ஒரு எபோதையும் கட்டினார் (8:27). இதை இஸ்ராயேலர் வழி பட ஆரம்பித்தனர். அவருடைய மைந்தர்க ளில் ஒருவன் தவிர மற்ற யாவரும் அதே ஊரில் அபிமெலக்கால் கொல்லப்பட்டனர் (9:5). இவ்விடம் மோரே, தாபோர், இசிரி யேல் பள்ளத்தாக்கு ஆகியவை சுற்றியுள்ள, ஒருவேளை இக்கால அப்லூயேவில் இருந்தி ருக்கலாம்.

ஒபினி (OPHNI)

இது பென்யாமினுக்குக் கொடுக்கப்பட்ட நகர் (யோசு 8:24). இந்த இடம் எங்குள்ளது

என்று தெரியாவிட்டாலும் இது கெபாவுக்கு அருகில் இருப்பதாகக் கொடுக்கப்பட்டிருப்பதால் வடக்கு மத்திய மாகாணத்தில் ஒபினி இருந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது. இந்த இடம் பெத்தேலுக்கு வடவடமேற்கில் 5 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கு வடக்கில் 21 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்கால இப்னாவோடு அடையாளம் காட்டப்படுகிறது. மேலும் இது எருசலேம்-செக்கேம் நெடுஞ்சாலையும் சாரோன் சமவெளியிலிருந்து பெத்தேலுக்குச் செல்லும் பாதையும் சந்திக்கிற இடத்துக்கருகில் உள்ளது.

யோசிப்பஸ் இதைக் கோப்னா என்றழைக்கிறார். யூதேய மாகாணத்தின் தலைநகரமாகவும், முக்கியத்துவத்தில் எருசலேமுக்கு மட்டும் அடுத்ததாகவும் இருந்ததாக அவர் கூறுகிறார்.

ஒப்படைக்கப்பட்ட பொருள் (DEPOSIT)

ஒருபொருளை மற்றவர் கண்காணிப்பதற்காகத் தருவது. இது பத்திரப்படுத்துவதற்காகவோ (ஏச 10:28) கடனுக்கு அடகுப் பொருளாகவோ தரப்படுவது. ஒப்படைக்கப்பட்ட பொருளைப் பற்றிய விதிமுறைகள் பழைய ஏற்பாட்டில் தரப்பட்டுள்ளன (யாத் 22:7-13). ஒப்படைக்கப்பட்ட பொருளுக்கேற்ப இவை பாகுபடுத்தப்படுகின்றன. இவை பணமாகவோ பொருளாகவோ விலங்குகளாகவோ இருக்கலாம். ஒப்படைக்கப்பட்ட பொருள்களில் ஆணை, பாவக்காணிக்கை ஆகியவை உள்ளடங்குகின்றன (லேவி 6:2-4). ஒப்படைக்கப்பட்ட பொருள் கருவூலத்தில் சேர்த்து வைக்கப்படலாம் (2 மக் 3:10-15). நற்செய்தி சீடர்களிடம் சிறப்பான முறையில் ஒப்படைக்கப்பட்டதாகும் (1 திமோ 6:20; 2 திமோ 1:12.24)

ஒப்பனைப் பூச்சுக்கள் (COSMETICS)

விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ள அலங்காரப் பூச்சுக்கள் எண்ணெயையும், வாசனைப் பொருட்களையும் கண்மையையும் கொண்டிருந்தன.

1. எண்ணெய், வாசனைத் தைலம்:- விவிலியத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட அலங்காரப் பூச்சு எண்ணெய் ஆகும். இது பெரும்பாலும் வாசனைப்படுத்தப்பட்டிருக்கும். மேற்காசியாவின் வறண்ட வெப்பமான காலநிலையில் தோலும் முடியும் உலர்ந்து காய்ந்து போகாமலிருக்க எண்ணெயும் உடல் நாற்றத்தைக் குறைக்க வாசனைப் பொருட்களும் பயன்படுத்தப்பட்டன.

2. கண்மை:- கண்களைச் சுற்றி அழகுக்காகப் பூசப்படும் கருப்பு நிறமான ஒரு பசை. இஸ்ராயேலில் கெட்ட நடத்தையுள்ள பெண்கள் தான் இதைப் பயன்படுத்தினர்.

3. மருதோன்றி:- இது இன்றும் மேற்காசியாவில் கைகளுக்கும், கால்களுக்கும், நகங்களுக்கும், முடிக்கும் சிவந்த மஞ்சள் நிறம் அளிக்கும் பொருளாகவும் வாசனைப் பொருளாகவும் பூசப்படுகிறது. இது ஒரு ஒப்பனைப் பூச்சு என்று விவிலியத்தில் தனியாகச் சொல்லப்படவில்லை. உ.ச. 1:14; 9:13 வாசனை மிகுந்த மருதோன்றி மலர்களைப் பற்றிச் சொல்கின்றது. வாசனைப்பொருள் தயாரிக்க இச்செடியும் பயன்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தலைக்குப் பூசப்படும் ஒரு சாயம் என்று 7:5-இல் உள்ளதாகச் சிலர் சொல்கின்றார்கள். இது ஆச்சரியத்திற்குரியது.

4. ஒப்பனைப் பூச்சுத் தட்டுகள்:- ஏறக்குறைய கி.மு. 800-600 வரை சுண்ணாம்புக் கல்லால் செய்யப்பட்ட இந்தப் பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இவை 4 அங்குலம் விட்டமும் தட்டையான அடிப்பாகமும் ஒரு சிறிய வட்டமான குழியும், இதைச் சுற்றி அலங்கரிக்கப்பட்ட தட்டையான பரந்த ஓரமும் பெற்றிருந்தன. இவை முகத்திற்கு வண்ணங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டன.

5. எகிப்து, பாபிலோனியாவில் இருந்த அழகுப் பூச்சுக்கள்:- முகப்பூச்சானது எகிப்திலும் பாபிலோனியாவிலும் பயன்படுத்தப்பட்டது. எகிப்தியக் கல்லறைகள் நிறைய அழகுப் பூச்சுச் சாதனங்களைக் காட்டுகின்றன; எண்ணெய்ச் சாடிகள், கண்மைக் குச்சிகள், உலோகக் கைப்பிடியுள்ள கண்ணாடிகள்.

6. யூதர்கள் அழகுப் பூச்சுகள்:- முகம் (இதழில்) பூசும் செவ்வண்ணப்பசை, வாசனைச் சுண்ணப் பொடி, முடி சாயம் ஆகியவை யூதர்களால் பயன்படுத்தப்பட்டன. ஆனால் விவிலியத்தில் குறிப்பிடப்படவில்லை. ஓய்வு நாளில் முகத்தில் பூசும் செவ்வண்ணப்பசை பயன்படுத்துவதை மிஷ்னா தடுத்தது. பாஸ்கா திருவிழாவிற்கு முன்னால் மாவினால் செய்யப்பட்ட சுண்ணத்தை வீட்டிலிருந்து எடுத்துவிட வேண்டும். மாமன்னன் ஏரோது முடிக்குச் சாயம் போட்டான் என்று சொல்லப்படுகிறது.

ஒப்பீர் (OPHIR - குன்று) - ஆள்

நாடுகளின் பட்டியலின்படி சேமின் சந்ததியில் அருபகசாது, செலாகு, ஏபேர், யொக்கிதான் மரபு வழியில் வந்தவர். யொக்கிதானின் மகன். செவிலாவின் சகோதரர். ஒப்பீர் பகுதியின் இனப்பெயர் முதியவராக இருக்கலாம் (ஆதி 10:29; 1 நாள் 1:23).

ஒப்பீர் (OPHIR - குன்று) - இடம்

இந்த இடமானது தங்க உற்பத்திக்கும் ஆலமுக் வாசனை மரங்களுக்கும் பெயர் போனது. தாவீது ஆலயத்திற்காக விட்டுச் சென்ற மூவாயிரம் தாலந்துப் பசும்பொன் இங்கிருந்து கிடைத்ததாகக் கூறப்படுகிறது (1 நாள் 29:4). சாலமோனின் கடற்படை ஒப்பீருக்குப் போய் அங்கிருந்து நானூற்று ஐம்பது தாலந்துப் பொன்னை ஏற்றிச் சாலமோனிடம் கொண்டு வந்தது (2 நாள் 8:18). மேலும் பொன்னும், வாசனை மரங்களும், இரத்தினங்களும் இங்கிருந்து கொணரப்பட்டன (2 நாள் 9:10). யோசபாத்து அரசன் பொன் திரட்ட ஒப்பீருக்குப் போகக் கப்பல் கட்டினார். ஆனால் அவைகள் எசியோன் கெபேரில் உடைந்து போயின (1 அர 22:48). மேலும் தேல் காசிலேயில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனம் இந்நகரைப் பற்றிக் கூறுகிறது. ஒப்பீர் நாட்டுத் தங்கத்தை விவிலிய ஆசிரியர்கள் பாடல்களிலும், இறைவாக்குப் பகுதியிலும் புகழ்ந்துள்ளனர் (யோபு 22:24; 28:16; சங் 45:9; ஏச 13:12).

இந்த ஒப்பீர் இருந்ததாக இந்தியா, ஆப்பிரிக்கா, அராபியா போன்ற பல நாடுகள் அடையாளம் காட்டப்படுகின்றன. ஆனால் கருத்தொற்றுமையில்லை 1 அர 10:22; 2 நாள் 9:21-இல் குறிக்கப்படும் பொருட்கள், ஒப்பீர் ஆப்பிரிக்காவில் இருந்திருக்கலாம் என்ற கருத்துக்கு ஆதரவாயுள்ளன.

ஒப்புரவு (RECONCILIATION)

I. பிரிந்த இருவர் ஒன்று கூடுவது. விவிலியத்திலே இந்தக் கருத்து பல இடங்களில் வந்தாலும், மனிதன் இறைவனோடு ஒப்புரவு கொள்வதே முக்கியமான செயல். மனிதன் இறைவனை விட்டுப் பிரிந்து சென்றான். ஆனால் கடவுள் மகனையும் உலகிற்கு அனுப்பினார். இறைவனோடு நாம் கொள்ளும் ஒப்புரவு நம்மை நம்மோடும் நம் சகோதரரோடும் உலகோடும் ஒப்புரவு கொள்ளத் தூண்டுகிறது.

1. பழைய ஏற்பாடு:- பழைய ஏற்பாட்டிலே பாவமானது உடன்படிக்கைக் கடமைகளை மீறுவதாகும். இது குறியைத் தவறவிடுதல், சரியான பாதையை விட்டு விலகுதல், எனப் பலவாறு பேசப்படுகிறது. சில சமயம் மனிதன் இறைவனுக்கு எதிராகவும் எழுகிறான். எனவே தெரியாமல் செய்யும் பாவத்திற்குப் பரிகாரமாகப் பலிகளும் (லேவி 4:1-5; 16:17-1) அகந்தையினால் செய்யும் பாவத்திற்குக் கொலைத் தண்டனையும் (எண் 15:30-31) நடத்தப்படவேண்டும். ஆனால் மனிதனுடைய பாவத்திற்காக அவன் மனம் வருந்த வேண்டியது கடமை (சங் 51:செ 18).

2. புதிய ஏற்பாடு: புதிய ஏற்பாட்டிலே பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை கதல்லலோவாகும். மனிதன் இறைவன் உறவு புதுப்பிக்கப்படுகிறது. கடவுள் மனிதனோடு ஒப்புரவு கொள்ள விரும்பினாலும் மனிதன் அவரை விட்டு விலகியே செல்கிறான். நம்பிக்கையற்றவனாய்க் கடவுள் இல்லாதவனாய் இருக்கிறான் (எபே 2:12). மேலும் பாவம் மனிதனை இறைவனிடமிருந்து பிரிக்கிறது. எனவே ஒப்புரவு பாவத்திற்குப் பரிகாரம் செய்வதால் ஏற்படுகிறது. இறைவனோடு ஒப்புரவு கொள்வதே முதன்

மையானது. அதன் பிறகுதான் சகோதரரோடும் (மத் 5:24; 1 கொரி 7:11) யூதர், புறவினத்தாருடனும் (உரோ 11:7-32; எபே 2:3) ஒப்புரவு கொள்வது அவசியம்.

நான்கு பத்திகள் ஆராயப்பட வேண்டியவை.

அ. உரோ 5:8-11:- இங்கே பிரிவு நிலையானது பகைமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (உரோ 11:28; கொலோ 1:21). ஆனால் இறையன்பு இந்நிலையை மாற்றிச் சமாதானத்தை ஏற்படுத்துகிறது (உரோ 5:8). பாவத்தினால் செயலிழந்த மனிதன் இறைஇரக்கத்தை உணர வேண்டும். பாவத்தை வெறுக்கும் இறைவன், பாவிகளை வெறுப்பதில்லை (உரோ 5:6-8). இறையன்பின் தோற்றமே கிறிஸ்துவும் அவரது பலியுமாகும். இப்பலியானது மனிதனுடைய பாவக்கறைகளைப் போக்கவல்லது. ஒப்புரவு உண்டாக்க வல்லது.

ஆ. கொலோ 1:20-22:- இங்கே ஒப்புரவு விண்ணிலும் மண்ணிலும் உள்ள யாவற்றுக்கும் அளிக்கப்படுகிறது. மாசு மறு, குறைபாடு இன்றிப் பரிசுத்தராய் ஆக்குகிறது (1:22). கிறிஸ்துவின் இறப்பே இதற்குக் காரணம்.

2 கொரி 5:14-21:- கிறிஸ்துவுக்குள் ஒருவன் வாழ்ந்தால் அவன் புதியதொரு படைப்பாகிறான். அவர் நமக்காகப் பாவ உருவெடுத்து அதன் விளைவாகச் சாவையும் ஏற்றார். இது மனிதனுக்குப் புதிய வாய்ப்பை அளித்தது. இந்த ஒப்புரவுப் பணி சீடர்களால் தொடரப்படுகிறது.

ஈ. எபே 2:12-17:- கிறிஸ்து யூத இனத்தாரையும் புறவினத்தாரையும் ஒன்றாய் இணைத்தார். சிலுவையினால் பகையை ஒழித்து, இவ்விரு இனத்தாரையும் ஒப்புரவாக்கினார்.

II பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே இறைவன் மனிதருக்குத் தமது மன்னிப்பு வழங்க ஒய்ந்ததில்லை; இவ்வாறு மக்களைத் தம்மோடு ஒப்புரவு செய்துகொள்வதை முன் குறிப்பாக உணர்த்தலானார்; அவர் தம்மை இரக்கமும் தயவும் உள்ள இறைவனாகவும் (யாத் 34:6) தமது கடுஞ் சினத்தின் வெப்பத்தைத் தாமாகவே தணிப்பவராகவும் (சங் 84:4; 102: 8-12) தம் மக்களுக்குச் சமாதானம் கூறுகிறவராகவும் (சங் 84:9) வெளிப்படுத்துகிறார். இஸ்ராயேலர் தம் பாவங்களால் சீனாய் உடன்படிக்கையைக் கைவிட்டனர். இந்நிலையிலும் இறைவன் வாழா இருப்பதை விடுத்து, புதிய நித்திய உடன்படிக்கைக்கான முயற்சியில் முந்திக் கொள்வார் (எரே 31:31; எச 16:60-63). இங்கெல்லாம் ஒப்புரவு என்பதற்கான சொல் பயன்படாவிடினும், உண்மையில் யாவே தமது நம்பிக்கையிழந்த துணைவியோடும் (ஓசே 2:16-22), அடங்காத பிள்ளைகளோடும் (எச 18:31 தொ) ஒப்புரவு செய்து கொள்ள முன்வருகிறார். இன்னும் பல் வேறு குற்றங்குறைகளிலிருந்து சுத்திகரிப்புப் பெறுவதற்கென்று மோசேயின் சடங்குமுறை கற்பித்த பரிகாரச்சடங்குகள் எல்லாம், இறுதியாக மனிதன் இறைவனோடு ஒப்புரவு காண்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன; எனினும் பாவங்களுக்கு முழுமையான மன்னிப்புப் பெறும் காலம் இன்னும் வரவில்லை; எனவே உண்மை இறைவனிடம் நம்பிக்கை வைத்த ஊழியர்கள் நல்ல தொரு காலத்தை எதிர்பார்த்தவர்களாய் இருந்தனர் (2 மக் 1:5; 7:33; 8:29).

கடவுளையும் மனிதரையும் இணைப்பவரான (1 திமோ 2:5) இயேசுகிறிஸ்து குறைபாடற்றதும் நிலையானதுமான ஒப்புரவு செய்துவிட்டார். கிறிஸ்து செய்துமுடித்த மீட்பினில் ஒப்புரவாக்குதல் ஒரு கூறுதான். எனினும் பவுலில் கண்டுள்ள ஒரு சில வாக்கியங்களின் ஒளியில் (உரோ 5:10 தொ; 2 கொரி 5:18 தொ; எபே 2:16 தொ; கொலோ 1:20 தொ) மீட்பின் மறையுண்மையை ஒப்புரவு என்ற இந்தக் குறிப்பிட்ட கோணத்திலிருந்து ஆழ்ந்து சிந்தனை செய்வது சரியே. இவ்வாறு சிந்தனை செய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. கிறிஸ்து வழியாக நாம் இறைவனோடு ஒப்புரவாக்கப் பெறுதல்:-

இறைவனே இதற்குத் தொடக்கம்:- மனிதன் தன் பாவத்தால் புண்படுத்திய படைப்பவரோடு தானாகவே ஒப்புரவுகொள்ள இயலாதவன். இங்கு இறைவனின் செயல் முதன்மையானது, முடிவானது: ''எல்லாம் கடவுள் செயல்தான்; அவரே கிறிஸ்துவின் வழியாய் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்'' (2 கொரி 5:28). நாம் அவருக்குப் ''பகைவர்களாக'' (உரோ 5:10) இருந்தபோதே, அவர் நம்மை அன்பு செய்தார்; அப்பொழுது தான் அவர் திருமகன் ''நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்'' (5:8). நமது ஒப்புரவு பற்றிய மறையுண்மை சிலுவை பற்றிய (எபே 2:16) மறையுண்மையோடும், நம்மீது காட்டப்பட்ட ''பேரன்பு'' பற்றிய (எபே 2:4) மறையுண்மையோடும் தொடர்பு கொண்டது.

2. ஒப்புரவாக்கப் பெறுதலின் விளை பயன்கள்:- இறைவன் இனிமேல் மனிதரின் குற்றங்களுக்குரிய கடனைக் கணிப்பதில்லை (2 கொரி 5:19). இறைவனின் இச் செயல் சட்டத்தைச் சார்ந்த ஒரு சாமானிய போலி நடவடிக்கையன்று; மாறாக, சரியாகச் சொன்னால், அது பவுலின் வாக்குகளில், ''புதியதொரு படைப்பை'' (5:17) ஒத்ததாகும். ஒப்புரவாக்கப் பெறுதல் ஒருவாறான புதுப்பித்தலைக் குறிப்பாக உணர்த்துகிறது. இப்புதுப்பித்தல் பயனடைய விரும்புகிறவர்களிடம் நிறைவுபெறும்; ஒப்புரவாக்கப்படுதல் ஏற்புடையராவதோடும் (உரோ 5:9 தொ) பரிசுத்தராவதோடும் (கொலோ 1:21 தொ) இணைந்திருக்கிறது. நமது தீய நடத்தையால் இதுமட்டும் இறைவனுக்குப் பகைவராய் இருந்தோம் (உரோ 1:30; 8:7); இப்பொழுதோ, நமக்குக் ''கடவுளில் பெருமை கொள்ளக்'' (5:11) கிடைத்துள்ளது; அவர் நம்மை ''மாசுமறுவும் குறைபாடுமின்றிப் பரிசுத்தர்களாய் நிறுத்த'' (கொலோ 1:22) விரும்புகின்றார்; நாம் அனைவரும் ''ஒரே தேவ ஆவியில் தந்தையை அணுகும் பேறு' (எபே 2:18) பெற்றுள்ளோம்.

3. ஒப்புரவு செய்தல்பற்றிய திருப்பணி:- இறைவனைப் பொறுத்தமட்டில், மீட்புப் பணி ஏற்கெனவே முழுமையாக நிறைவேறி விட்டது; ஆயினும் மற்றொரு வகையில் இப்பணி கிறிஸ்து திரும்பி வருமட்டும் தொடர்ந்து நடைபெறுகின்றது; எனவே பவுல் அப்போஸ்தலத்துவப் பணியை, ''ஒப்புரவு செய்யும் திருப்பணி'' (2 கொரி 5:18) எனத் தெளிவுபடுத்தக் கூடுமாயுள்ளது. ''கிறிஸ்துவின் தூதுவர்கள்'' என்ற அளவில் அப்போஸ்தலர்கள், ''ஒப்புரவுச் செய்தியை'' அறிவிப்பவர்களாவர் (5:19 தொ). இந்த ஒப்புரவுச் செய்தியைப் பண்டைய மூலப் படிவம் ஒன்று இந்த இடத்தில் ''ஒப்புரவு நற்செய்தி'' என்றுகூடக் குறிப்பிடுகின்றது; இதுவே அப்போஸ்தலச் செய்தியின் போக்குமாகும் (எபே 6:15; ''சமாதான நற்செய்தி''). எனவே நற்செய்திப் பணியாளர்கள் தங்களது திருப்பணியில், பவுலை மாதிரியாகப் பின்பற்றி, தங்களைப் பொறுத்த அளவில் தாங்கள் அறிவிக்கும் சமாதானத்தைத் தோற்றுவிப்பவர்களாக இருக்க முயற்சி செய்கிறார்கள் (2 கொரி 6:4-13).

4. இறைவனின் கொடையை வரவேற்றல்:- முதன்மையானவராகவும் முக்கியமானவராகவும் ஒப்புரவுசெய்கின்றவர் இறைவன்தான் என்பதால், இங்கு மனிதன் முற்றிலும் செயல்பட முடியாத ஒரு நிலையில் உள்ளான் என்ற முடிவுக்கு வரலாகாது: இறைவனின் கொடையை அவன் பெற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசத்தால் இக் கொடையை விரும்பி அதைப் பெற்றுக் கொள்ள உடன்படுகிறவர்களுக்குத்தான், இறைவனின் முயற்சி பயன் அளித்ததாகும். எனவேதான், ''கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் மன்றாடுகிறோம். கடவுளோடு ஒப்புரவாகுங்கள்'' (2 கொரி 5:20) எனப் பவுல் வற்புறுத்தி அழைப்பு விடுக்கின்றார்.

5. அனைத்தும் ஒப்புரவாக்கப் பெறுதல்:-

அ. ஒப்புரவாக்கப் பெற்ற படைப்பு:- உலகம் ஒப்புரவாக்கப் பெறுதலைக் குறித்துப் பேசுகையில் (2 கொரி 5:19; உரோ 11:15) பவுல் இத்கருவாய் மட்டும் பாவ மனித

இனத்தைக் கருத்தில் கொண்டிருக்கிறார்; எனினும் பருப்பொருள் உலகமே மனித இனத்தோடு கூட்டுச் சேர்ந்துள்ளது என்பதையும் அது மனித இனத்தின் விடுதலையில் பங்கு கொள்ள உள்ளது என்பதையும் பவுல் புறக்கணித்திடவில்லை (உரோ 8:19-22). சிறைக்கூட மடல்களில், கொலோசேயருக்கும் எபேசியருக்கும் எழுதிய திருமுகங்களில், அப்போஸ்தலருடைய பார்வை விரிந்து, ''விண்ணிலும் மண்ணிலும்'' (கொலோ 1:20) உள்ள படைப்பனைத்தையும் உள்ளடக்குகின்றது. கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தால் இறைவனோடு ஒப்புரவாக்கப்பெற்ற மனிதர் விண்ணக ஆவிகளோடும் ஒப்புரவாகின்றனர்; சட்டத்தின் ஆட்சி எடுபடாதிருந்த காலத்தில் (கொலோ 2:15) அதிகாரம் தாங்கிய தேவ தூதர்கள் நம்மீது கொள்ளக் கூடுமாயிருந்த பகைமை உணர்ச்சி இப்பொழுது தீர்ந்தது.

ஆ. யூத இனத்தாரும் புற இனத்தாரும் ஒப்புரவாக்கப் பெறுதல்:- எபே 2:11-22-இல் பவுலின் போதனை உச்ச நிலையை அடைகிறது. இங்கு ''நம் சமாதானம்'' (2, 14) எனப்படும் கிறிஸ்துவின் செயலும், சிறப்பாக அவர் முந்தியகாலத்துப் புறவினத்தாருக்குப் பெற்றுத் தந்துள்ள வியத்தகு நலன்களும் முழுமையாக விளக்கம் கண்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்களுள் இப்பொழுது யூத இனத்தார் ஒன்றாய் இணைக்கப் பெற்றதுபோலப் புறவினத்தாரும் ஒன்றாய் இணைக்கப் பெற்றுள்ளனர்; பிரிவினையும் பகைமையும் கொண்டிருந்த காலம் ஒய்ந்தது; மக்கள் அனைவரும் கிறிஸ்துவில் ஒரே உடலாகவும் (2:16) ஒரே புனித ஆலயமாகவும் (2:21) உருவாகி வருகின்றனர். புறவினத்தாரின் அப்போஸ்தலர் அவர்களுக்கு இந்த மறைபொருளை அறிக்கையிட்டு, அதனால் பெருமைப்படுத்துவதற்குரிய வகையில் தாம் பட்ட வேதனைகளை அவர் பொருட்படுத்துவதில்லை (எபே 3:1-13).

பவுல் ஒப்புரவுபற்றி இறை ஏவுதலால் சிந்தனை செய்த மறையியலாரும், ஒப்புரவுக்காகச் சோர்வின்றி உழைத்த திருப்பணியாளரும் ஆவார்; ஆனால் இயேசுவே தனது ''ஊனுடலில்'' (கொலோ 1:22) தம் பலியினால் ஒப்புரவை ஆக்கியவர் ஆவார்; இயேசுவே முதன் முறையாக இந்த ஒப்புரவுபற்றிய மிக ஆழ்ந்த உடனடித் தேவைகளை வலியுறுத்தினார்; இறைவனால் ஒப்புரவாக்கப்பெற்ற பாவி முதன்முதலில் தன் சகோதரனோடு ஒப்புரவு (சமாதானம்) செய்து கொள்ளாவிடில் (மத் 5:23 தொ) இறைவனுக்கு உகந்த வழிபாடு செலுத்த இயலாது.

ஒப்பேல் (OPHEL - குன்று அல்லது மேடு)

இப்பெயரானது பழைய எருசலேமின் ஒரு பகுதிக்குக் கொடுக்கப்பட்டது. கிதரோன், தீரோபேயோன் பள்ளத்தாக்குகளுக்கிடையிலுள்ள மலை முகடு. கடல் மட்டத்திலிருந்து 600 மீ (2000 அடி) உயரமுள்ளது. தாவீதால் தனது தலைநகராக நன்கு பாதுகாக்கப்பட்டது (காண்க 2 சாமு 5:7.9; 1 நாள் 11:5.7). இங்கே அமைக்கப்பட்ட அரண்களுக்கு யூதாவின் பிற்கால அரசர்கள் யோத்தாம் (2 நாள். 27:3) மனாசே (33:14) முக்கியத்துவம் கொடுத்தனர் (2 நாள் 27:3; 33:14). அடிமைத்தனத்திற்குப்பின் ஆலய ஊழியர்கள் இந்த அரண் அழிவுகளைப் புதுப்பித்து அங்குத் தங்கினர் (நெக 3:25-27; 11:21). இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி இந்த இடமானது தாவீதின் நகரம் அமைந்திருக்கும் முக்கோணமலையில் வடகிழக்குப் பகுதியாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. யோசிப்பசு இந்த இடம் ஆண்டவனின் ஆலயத்திற்கு அருகிலிருந்ததாகக் கூறுகிறார்.

பழைய ஏற்பாடு சமாரியாவிலுள்ள ஓர் ஒப்பேலைக் குறிக்கிறது (2 அர 5:24). மற்ற இடங்களில் ஒரு குன்றைக் குறிக்க இச்சொல் பயன்படுகிறது (ஏச 32:14; மீக் 4:8).

ஓமார் (OMAR - பேச்சுத்திறனுடைய, சொல், பாட்டு, புகழ்ச்சி)

இவர் ஓர் ஏதோம் குலத்தலைவர். இவர் தந்தையின் பெயர் எலிப்பாக (ஆதி 36:11.15; 1 நாள் 1:36).

ஓமிரி (OMRI - யாவேயை வழிபடுபவன்)

1. அரசன்:- கி.மு.876 முதல் 869 வரை இவர் இஸ்ராயேலின் அரசனாக இருந்தார். இவர் சிமிரி மன்னனுக்குப் பின் அரசாண்டவர். மேலும் இவர் ஓமிரி அரச வம்சத்தை நிறுவினார். ஓமிரியின் ஆட்சிக் காலம் பற்றி விவிலியத்தில் முரண்பாடான, குழப்ப மிகுந்த குறிப்புகள் தரப்பட்டுள்ளன (1 அர 16:15.21-22.23.29).

ஏலா மன்னனை அவரது படைத்தலைவர் சிமிரி கொன்று அரசனானபோது நாட்டிலே குழப்பம் ஏற்பட்டது. இந்த நேரத்திலே இஸ்ராயேலர் எல்லோரும் கூடி அப்பொழுது பாளையத்தில் இஸ்ராயேலின் படைத் தலைவனாயிருந்த ஓமிரியை அரசனாக்கினர். அப்பொழுது ஓமிரி கிபத்தோனை விட்டுப் புறப்பட்டு இஸ்ராயேல் படையோடு வந்து திரிசாவை வளைத்து முற்றுகையிட்டார். நகர் பிடிபடப்போகிறது எனச் சிமிரி அறிந்து அரண்மனைக்குள் புகுந்து அதைத் தீக்கிரையாக்கினான். தானும் தீக்குளித்தான். அப்போது உள்நாட்டுப் போர் மூண்டது. இஸ்ராயேல் மக்கள் இருவகுப்பாய்ப் பிரிந்து ஒரு சாரார் கினாத்தின் மகன் திபினியை அரசனாக்கி அவனைப் பின்பற்றிச் சென்றனர். மறுசாரார் ஓமிரியைப் பின்பற்றிச் சென்றனர் (1 அர 16:15-21). பின்னர் திபினி இறக்கவே ஓமிரி இஸ்ராயேலுக்கு அரசனானார். இருவருக்கும் உள்நாட்டுப் போர் 4 ஆண்டுகளுக்கு நடந்து. திபினியின் மரணத்தோடு முடிந்தது (872).

ஓமிரியின் ஆட்சிக்காலம்பற்றிக் குழப்பமான, எதிர்மாறான குறிப்புக்கள் உள்ளன (1 அர 16:15.21-22.23.29). யூதாவின் அரசனான ஆசாவின் 31-ஆவது ஆண்டு இவர் ஆட்சி தொடங்கினால் (16:23), மேலும் இவருக்கு அடுத்து இவர் மகன் ஆகாபு ஆசாவின் 38-ஆவது ஆண்டு ஆட்சிக்கு வந்ததால், இவர் 7 ஆண்டுகள்தான் ஆட்சி செய்தார், சொல்லியிருக்கிறபடி 12 ஆண்டுகள் (16:23) அல்ல என்பது தெளிவு. ஆனால் 7 நாட்களுக்கு மட்டும் ஆண்ட சிமிரி ஆசாவின் 27-ஆவது ஆண்டு ஆட்சிக்கு வந்தார் (16:15). இது இவரது ஆட்சி, ஆசாவின் 27-ஆவது ஆண்டிலிருந்து 38-ஆவது ஆண்டு வரை அதாவது 12 ஆண்டுகள் நீடித்தது என்றுகூட்ட வல்லது. இவர் அரசனானது பற்றிய சூழ்நிலைகளின் விளைவாகும் இந்தக் குழப்பம். உள்நாட்டுப் போர் நடந்த 4 ஆண்டுகளையும் சேர்த்ததால் இவரது ஆட்சி 12 ஆண்டுகள் நீடித்தது எனலாம்.

மேலும் திபினியின் தந்தையின் பெயர் கொடுக்கப்பட்டிருக்கும்போது ஓமிரியின் தந்தை பெயர் கொடுக்கப்படவில்லை. இது இவர், சிமிரியைப்போல் ஓர் அந்நியன், தனது சொந்த ஆற்றலாலும் முயற்சியாலும், பதவிக்கு வந்தவர் என்பதைச் சுட்டுகிறது.

ஓமிரி மன்னன் மிகுந்த திறமையுடனும் பலத்துடனும் ஆண்டு வந்தார். இவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கினார். எனவே இவர் இஸ்ராயேலின் மிகச் சிறந்த மன்னர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார். ஆனால் அரசர்கள் நூல் அவரைப் புகழ்ந்து பேசவில்லை. ஏனெனில் விவிலிய ஆசிரியர் அரச சாதனையை நோக்காமல் மதக் கோட்பாட்டையும், மதத்திற்கு அவர் செய்த சேவையையுமே நோக்கினார். எனவே ஓமிரி ஆண்டவர் திருமுன்பாவம் புரிந்து தனக்கு முன் இருந்த எல்லோரையும் விட மிகவும் இழிவான முறையில் நடந்து வந்தார்' என்று அரசர்கள் நூல் ஆசிரியர் எழுதுகின்றார் (1 அர 16:25).

ஓமிரியின் ஆட்சிக் காலத்திலே யூதாவும், இஸ்ராயேலும் நட்புறவோடு இருந்தன. இவ்வரசுகளின் அரச திருமணம் இவ்வுறவை மேலும் வலுப்படுத்தியது. ஓமிரி மோவாபியர்களை வென்று அவர்கள் தனக்குக் கப்பம் செலுத்தச் செய்தார் (2 அர 3:4). தாவீது, சாலமோன் மன்னர்களைப் போல ஓமிரியும் பெனிக்கிய நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். தம் மூத்த மகன் ஆகாபுக்கு, சீதோனியரின் அரசன் எத்துபாகாலின் மகள் ஈசபேலை மணமுடித்து வைத்தார் (1 அர 16:31).

இந்த உடன்படிக்கையும் மணமுடிப்பும் இஸ்ராயேலுக்கு வாணிப வளர்ச்சியையும், படைபலத்தையும் பெருக்கினாலும், இறுதியில் ஒமிரி வம்சம் அழிவுறுதலுக்குக் காரணமாக அமைந்தது. மேலும் இது பெரும்பாலான ஏழை மக்களுக்கு எதிராய்ச் செல்வம் கொழிக்கும் வாணிப வர்க்கத்தையும் உருவாக்கியது.

இதற்கெல்லாம் மேலாக ஒமிரி கி.மு. 870-இல் தம்முடைய நகரைத் திரிசாவிலிருந்து சமாரியாவிற்கு மாற்றினார். இப்புதிய தலைநகரின் பெயரானது வடக்கு அரசை மட்டுமல்லாமல், பிற்காலத்தில் அசீரிய மாகாணத்தையும் குறித்தது (1 அர 16:23). இறைவாக்கினர் ஒசேயாவும் இப்பெயரைத் தம்சொந்த நாட்டைக் குறிக்கப் பயன்படுத்தினார் (ஒசே 10:5.7).

ஒமிரி மன்னனின் புகழ் அவர் இறந்து பல ஆண்டுவரை நிலைத்திருந்தது. அவர் இறந்த நூறு ஆண்டுகளுக்குப் பின்னும், சமாரியா, ''ஒமிரியின் வீடு'' என்றும், இஸ்ராயேல் நாடு ''ஒமிரியின் நாடு'' என்றும் அசீரிய ஏடுகளில் குறிக்கப்படுகிறது. ஒமிரி அரச மரபை இரத்தக் களரியில் அழித்த ஏகூ கூட ''ஒமிரியின் மகன்'' என்றழைக்கப்படுகிறார். அவரது பெருமையை இறைவாக்கினர் மீக்கா ''ஒமிரியின் கட்டளைகளைச்'' (மீக 6:16) சுட்டுதல் எடுத்துக் காட்டுகிறது.

ஒமிரியை அடுத்து அவர் மகன் ஆகாபு 869-இல் அரசனானார் (1 அரச 16:28).

2. பென்யாமின் குலத்தைச் சார்ந்த இவர் பெக்கேரின் புதல்வராவார். பென்யாமினின் பேரன் (1 நாள் 7:8).

3. யூதாவின் வழியில் தோன்றிய இவர் இமிரியின் மகன். நாடு கடத்தலிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிய ஊத்தாயின் தாத்தா (1 நாள் 9:4).

4. மிக்காயேலின் மகன். இவர் தாவீது மன்னன் காலத்தில் இசக்காருக்கு முக்கியத் தலைவராயிருந்தவர் (1 நாள் 27:18).

ஒமேகா (OMEGA)

கிரேக்க நெடுங்கணக்கில் கடைசியும் 24-ஆவதுமான எழுத்தாகும். முடிவைக் குறிக்க அடையாளமாகப் பயன்பட்டுள்ளது. ஆனால் அதன் நேர் எதிர் முதல் எழுத்தான ''ஆல்பா'' வோடு இல்லாமல் பயன்படுவதில்லை. இது ஆல்பாவோடு சேர்ந்து ''தொடக்கமும் முடிவும்'' (காண்க. திருவெளி 1:17; 2:8) என்ற பொருளில் இறைவனையும் (1:8; 21:6) கிறிஸ்துவையும் (22:43) குறிக்க உருவகமாகப் பயன்பட்டுள்ளது.

காண்க. ஆல்பா ஒமேகா

ஒருநாள் பயணம், ஒரு நாள் வழி (DAY'S JOURNEY)

விவிலியத்தில் ஒரு நாள் பயணம் (எண் 11:3; 1 அர 19:4; யோனா 3:4; லூக் 3:18), மூன்றுநாள் பயணம் (ஆதி 30:3; யாத் 3:18; 5:3; 8:27; எண் 10:33; யோனா 3:3), ஏழு நாள் பயணம் (ஆதி 31:23; 2 அர 3:9) என்று பலவிதநாள் பயணங்கள் பற்றிக் குறிக்கப் பட்டுள்ளன. இதன்படி தூரத்தை நாம் கணக்கிட முடியாது. கடக்கும் தூரம் ஒரு மனிதன் பயணம் செய்யும் இடத்தையும் பயணம் செய்பவரையும் பொருத்தது. பொதுவாக ஒரு நாள் பயணம் என்பது 25 முதல் 40 கி.மீ வரை இருக்கும்.

ஒரிதோசியா (ORTHOSIA)

சீமோன் மக்கபேயு காலத்தில், உரிமையில்லாது பதவியைக் கைப்பற்றிக் கொண்ட நான்காம் அந்தியோக்கு சிதேதேசால் தோற்கடிக்கப்பட்ட துருபோன் இவ்விடத்திற்குள் தான் ஓடினார் (1 மக் 15:37). இது பெனிக்கியாவில் திரிபோலிசுக்கு வடக்கிலுள்ள ஊர். அர்த்-அர்தூசி ஆக இருக்கலாம்.

ஒரிபா(ORPAH - கழுத்து, அல்லது மேகம்)

இவள், ரூத் ஆகமத்தில் வரும் கதாபாத்திரங்களுள் ஒருத்தி. மோவாபியர்களான ஒரிபாவும், ரூத்தும் யூதா நாட்டுப் பெத்லகேம் ஊரிலிருந்து மோவாபு நாட்டிற்குச் சென்று குடியேறிய எபிரேயரை மணந்தனர். அவர்கள் கணவர்கள் இறந்தபின், இருவரும் தங்

கள் மாமியார் நகோமியுடன் பெத்திலகே முக்கு வரவிழைந்தனர். பெத்திலகேமில் அவர்களுக்கு வரும் இன்னல்களைப் பற்றி நகோமி வருந்தி எடுத்துக் கூறியவுடன் ஓரிபா தன் வீடு திரும்பினாள். ஆனால் ரூத் தன் மாமியை விட்டுப் பிரியவில்லை (ரூத் 1:4-14)

ஒரினான் (ORNAN)

அரவுனாவின் மற்றொரு பெயர் (நாளாகம நூல்கள்)

ஒலிவ மரம் (OLIVE TREE)

இது எப்பொழுதும் பசுமையாய் இருக்கக் கூடிய வகையை சார்ந்தது. உண்ணுவதற்குரிய பழங்களைத் தரும் மரம். மத்தியதரைக் கடல் பகுதிகளில் இதன் முக்கியத்துவத்திற்குப் பழங்கால இலக்கியங்களில் காணப்படும் பல குறிப்புகள் சான்று பகர்கின்றன. இது மருந்தாக, எரிபொருளாக, உணவாக, பொதுவாக வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும், பயன்படுகிறது. விவிலியத்தில் பல்வேறு இடங்களில் இம்மரம், அதன்கட்டை, பழம், எண்ணெய் ஆகியவை பற்றி வரும் குறிப்புகள் இதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றன.

ஒட்டு முறையிலே ஒலிவ மரங்கள் வளர்கின்றன. கொஞ்சம் தண்ணீரும் மண்ணைக் கிளறிவிடுவதும் அதன் வளர்ச்சிக்குப் போதுமானது. எனவேதான் இது வறட்சிக் காலத்திலும் மலைப்பாங்கான பகுதிகளிலும் வளர்கின்றது. நூறு ஆண்டுகள் வரை ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் பலனைக் கொடுக்கக் கூடியது. இம்மரத்தின் முதல் எதிரி வெட்டுக்கிளிகளாகும் (ஆமோ 4:9). பொதுவாக இம்மரங்கள் பாலஸ்தீனத்தின் மத்தியப் பகுதியிலும், கெபிரோன், பெத்திலகேம் ஆகியவற்றைச் சுற்றிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

விவிலிய காலத்திலே ஒலிவ எண்ணெய் தயாரித்தல் பெரும் தொழிலாக இருந்தது. ஒலிவக் கொட்டைகளைச் செக்கில் இட்டு ஆட்டுவார்கள் (மீக் 6:15). பாலஸ்தீனத்தில் காணப்படும் செக்கு அமைப்புகள் இந்த உண்மையை நிரூபிக்கின்றன. மெசபொத்தாமியாவின் கலையில் ஒலிவ மரமானது வாழ்வின் மரமாகச் சித்தரிக்கப்பட்டது. பெரும் வெள்ளத்தின்போது புறாகொண்டுவந்த ஒலிவக்கிளையானது அமைதிக்கும் நட்புக்கும் அடையாளமாக அமைந்தது (ஆதி 8:11). யூதர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைந்தபோது அவர்கள் பெற்ற வளங்களுள் ஒலிவமரமும் ஒன்றாக இருந்தது. ஆனால் நாடு இறைவனுக்குப் பிரமாணிக்கமில்லாதபோது மோசேயால் அளிக்கப்பட்ட சாபங்களிலும் காணப்படுகிறது (24:40; ஏச 17:6).

விவிலியத்தில், ஒலிவ மரங்கள் அனேக இடங்களில் உருவகமாக எடுத்தாளப்பட்டுள்ளன. யோவாத்தாமின் கதையிலே ஒலிவ மரங்களே முதன் முதலாக மரங்களில் அரசனாக இருக்கக் கேட்கப்பட்டன (நீதி 9:8-9). தீயவனின் மரணத்தை வசந்தகாலத்தில் ஒலிவப்பூக்கள் உதிர்வதற்கு ஒப்பிடுகிறார் எலிப்பாசு (யோபு 9:8-9).

குழந்தைகளால் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமானது நன்கு தளிர்விடும் ஒலிவ மரத்துடன் ஒப்பிடப்பட்டது (சங் 128:3). இஸ்ராயேலின் கடந்தகால மற்றும் எதிர்கால ஆன்மீக வாழ்க்கை செழித்துச் சிறந்து கனிகளால் நிறைந்த ஒலிவமரத்திற்கு ஒப்பிடப்படுகின்றன (எரே 11:16; ஒசே 14:6). செக்கரியா காட்சியிலே யோசுவாவும் செருபாபேலும் இரண்டு ஒலிவ மரங்களுடன் ஒப்பிடப்படுகின்றனர் (செக் 4:3. 11:12).

ஒலிவக்கிளை ஒட்டுவைக்கப்படுதல் பற்றிய பவுலின் உருவகம் புற இனக் கிறிஸ்தவர்கள் பற்றிய அவரது நம்பிக்கையை ஆற்றலோடு எடுத்துக் கூறுகிறது (உரோ 11:17-24).

ஒலிவமலை (MOUNT OF OLIVES, OLIVET)

இது எருசலேமின் கிழக்குப் பகுதியில் கிதரோன் பள்ளத்தாக்கிற்கு அப்பால் உள்ள மலை.

1. விவரிப்பு:- ஒலிவ மலையானது பாலஸ்தீனத்தில் வடக்கிலிருந்து தெற்கில் வரும் மலைத் தொடர்ச்சியின் 4 கி.மீ. நீளமுள்ள ஒரு பகுதி. இம்மலையிலே மூன்று மலைச்சிகரங்கள் உள்ளன. இவை கிதரோன் பள்ளத்தாக்குக்கு அப்பாலுள்ள எருசலேமை நோக்கியுள்ளன. வடகோடிச் சிகரம் ராஸ்-ஆபூ-கர்னூ ஆகும். இது துல்லிய மற்றது ஸ்கோப்பஸ் மலை என்றும் அழைக்கப்படுகிறது. மூன்றிலும் இதுதான் மிக உயரமானது. மத்திய தரைக்கடலின் மட்டத்திலிருந்து 903 மீ (2963 அடி) உயரமுள்ளது. பெரிய யாத்திரை விழாக்களைக் கொண்டாட வந்த கலிலேயர்கள் இங்குதான் தங்குவர். ஒரு கிரேக்கக் கத்தோலிக்கப் பாரம்பரியம், இங்குதான் இயேசு தமது ''பெரிய ஆணையைக்'' கொடுத்தார் என்று கூறுகிறது (மத் 28:10-16).

சிறிது தெற்கில் எருசலேம் ஆலயப்பகுதிக்கு நேர் எதிராக, எபேல் எத்-தூர் என்ற இரண்டாம் சிகரம் உள்ளது. கடல்மட்டத்திலிருந்து 818 மீ (2684 அடி) உயரமுடையது. பாரம்பரியப்படி இங்கிருந்துதான் இயேசு விண்ணேற்றமானார் (லூக் 24:51; அ.ப. 1:12). இக்கால எருசலேம்-எரிகோ பெருஞ்சாலை இதற்குச் சிறிது தெற்கில் செல்கிறது.

மூன்றில் தென்கோடிச் சிகரமான எபேல் பத்ன ஏல் - காவா (காற்றின் வயிறின் மலை) குறைந்த உயரமுடையது. இது ''அவதூறின் மலை'' என்றும் அழைக்கப்படுகிறது. இது சாலமோன் இங்குச் சிலைவழிபாட்டுக்குக் கோவில்கள் கட்டியதைச் சுட்டுகிறது (1 அர 11:7; 2 அர 23:13-14). இதன் அடியில் கிதரோன் சுழன்று, தென்கிழக்கில் சாக்கடலை நோக்கிச் செல்லுகிறது. இது செல்வான் கிராமத்துக்கு அருகிலுள்ளது. ஆலயப் பகுதிக்குத் தெற்கிலுள்ள பழங்காலக் கானானிய மற்றும் தாவீதின் எருசலேமை மேல் நோக்குகிறது.

இந்த மலைப்பகுதி கிழக்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் அடிக்கும் காற்றுகளைத் தடுப்பதோடு, மத்தியதரைக்கடலிலிருந்தும் மேற்கிலிருந்தும் அடிக்கும் காற்றைத் தடுத்து மழைபெய்யச் செய்கிறது. இதனால் எருசலேம் போதிய நீரைப் பெறுகிறது. நீர் அதிகமாகக் கிடைத்ததால், பழங்காலத்தில் அடர்த்தியான தோப்புகள் இருந்தன. அதனால் ஒலிவாமலை (ஒலிவத் தோப்பு, காண்க, 2 சாமு 15:30) என்ற பெயர் பெற்றது. இதில் பெரும்பகுதி கி.பி 70-இல் தீத்து நகரை அழித்தபோது அழிந்து போயின.

2. பழைய ஏற்பாடு, இறுதிக்கால யூத மதத்தில் ஒலிவ மலை:-

அபிசலோம் செய்த கிளர்ச்சியை அடக்க முடியாமல் தாவீது எருசலேமை விட்டு ஒலிவ மலை மேல் ஏறிச் சென்றார் (2 சாமு 15:30). மலையின் உச்சியிலே ஆண்டவரை வழிபடும் இடம் ஒன்று இருந்தது. தாவீது நடந்து சென்று இம்மலையின் கிழக்குச் சரிவில் உள்ள பகுரிமை அடைந்தார் (2 சாமு 16:5).

ஒலிமலை கூடாரவிழாவோடு நெருங்கிய தொடர்புடையது. ஒருவேளை, நாடு கடத்தப்பட்டுத் திரும்பியவர்கள் முதல் தடவையாக இவ்விழாவைக் கொண்டாட ஒலிவக் கிளைகளைச் சேகரித்திருக்க வேண்டும் (நெக 8:15).

செக்கரியாவின் எருசலேம் அழிவைப் பற்றிய இறைவாக்கில் ஆண்டவரின் நாளிலே ஒலிவ மலை இரண்டாகப் பிளவுபடும் என்று கூறுகிறார். ''உயிருள்ள நீர் எருசலேமிலிருந்து ஓடிக் கிழக்கு மேற்குக் கடல்களுடன் சேரும். அப்போது எஞ்சியுள்ள எல்லா நாடுகளும் கூடார விழாவைக் கொண்டாட எருசலேமுக்குச் செல்வர்'' (செக் 14). எசக்கியேலின் காட்சியில் ஆலயத்திலிருந்து ''ஆண்டவரது மகிமை'' அகன்று சென்றபோது இங்குத் தங்கியது (எச 11:23).

மேலும் சுத்திகரச் சடங்கிற்கு நீர் தயாரிக்கச் செந்நிறக் கிடாரியைச் சுட்டெரித்து அதன் சாம்பலை நீரில் கலந்தனர் (எண் 19:1-10). தால்மூதின்படி இந்தச் சடங்கு ஆல

யத்தின் கிழக்கு வாயிலின் எதிரே இம்மலையில் நடந்தது.

3. புதிய ஏற்பாட்டில் ஒலிவ மலை:-

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த கடைசி நாட்களின் பல நிகழ்ச்சிகள் இம்மலையில் நடைபெற்றன. மேலும் ஆண்டவரின் விண்ணேற்றத்திற்குமுன் தம் சீடர்களை இயேசு கடைசி முறையாக இங்கே சந்தித்தார் என அப்போஸ்தலர் பணி கூறுகிறது. இயேசு மகிமையுடன் எருசலேம் நோக்கி நுழையும் செய்தியில் ஒலிவ மலை குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவும் அவருடைய சீடரும் ஒலிவ மலையின் கிழக்குப் பகுதியில் உள்ள பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு ஒலிவ மலையருகில் இருந்த பெத்துபாகேயை அடைந்தனர் (மத் 21:1).

எருசலேம் அழிவைப்பற்றியும், இறுதிக் காலத்தைப் பற்றியும் இயேசு இம்மலையிலிருந்துதான் அழுது இறைவாக்குரைத்தார் (மத் 24:3; மாற் 13:3-4; லூக் 21:4).

இயேசு பாடுபடுவதற்கு முந்திய வாரம் பகலிலே எருசலேமில் போதித்து, இரவிலே ஒலிவத் தோப்பு மலைக்குப் போய் வெட்ட வெளியில் தங்குவார் (லூக் 21:37). இம்மலையில், இயேசு பெத்தானியா ஊரில் தொழுநோய்ச் சீமோன் வீட்டிலோ, கெதுசமனித் தோட்டத்திலோ தங்கியிருக்கலாம். மேலும் ஆண்டவரின் விண்ணேற்பு இந்த மலையிலேதான் நிகழ்ந்தது (லூக் 24:50; அ.ப. 1:12).

4. பிற்காலத்தில்:-

ஒலிவ மலையோடுகொண்ட பல வேறு பட்டபாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு, பல காலங்களில் யூத, கிறிஸ்தவ, முகமதிய புனிதத்தலங்கள் இங்குத் தோன்றியுள்ளன. இறுதித்தீர்ப்பை (செக் 14: காண்க யோவே 3:2) முன்னோக்கி இங்குப்பெரிய யூதக் கல்லறை இருக்கிறது. விண்ணேற்பு ஆலயம், மரியாளின் கல்லறை. ''ஆண்டவர் அழுதார்'' ஆலயம், ஆண்டவர் செபத்தை இயேசு கற்பித்த இடமாகக் கருதப்பட்டுக் கட்டப்பட்டுள்ள ஆலயம், எல்லா நாடுகளின் பெயரால் கெதுசமனித் தோட்டத்தில் எழுப்பப்பட்ட ''துன்பத்தின் பேராலயம்'' போன்ற கிறிஸ்தவப் புனித இடங்கள் இங்குள்ளன. முகமதியர்களின் ''விண்ணேற்ற மசூதியும்'' இங்கு உண்டு.

ஒலிம்பா (OLYMPUS விண்ணக)

கிறிஸ்தவராகிய இவருக்கு உரோமையர் மடலிலே வாழ்த்து அனுப்பப்படுகிறது. இவர் பிலோலகு யூலியா ஆகியோரின் மகனும் நேரயுவின் சகோதரனாகவும் இருக்கலாம் (உரோ 16:15). ஏனெனில் ஒரே வரியில் இவர்கள் யாவரும் குறிக்கப்படுகின்றனர்.

ஒலிம்பிய செயுசின் ஆலயம். (TEMPLE OF OLYMPIA ZEUS)

எருசலேம் ஆலயம் கிரேக்கர்களால் தீட்டுப்படுத்தப்பட்டபோது அதற்குக் கொடுக்கப்பட்ட பெயராகும் (2 மக் 6:2). யூதர்கள் ''தங்கள் நாட்டினுடையவும் இறைவனுடையவும் கட்டளைகளைக் கைவிட்டு விடும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்''.

ஒழுக்கச் சட்டமறுப்புக் கோட்பாடு (ANTI-NOMIANISM)

இக்கோட்பாடு ஒழுக்கக் கட்டுப்பாடும், சட்டங்களும் விசுவாசத்தினால் தேவையற்றவை ஆகின்றன, பயனற்றவை ஆகின்றன என்றும், மீட்பருடைய விசுவாசம் ஒன்றே அவசியமானது, போதுமானது என்றும் கூறுகிறது. இப்பதம் விவிலியத்தைச் சேர்ந்ததன்று. யோகான் அகிரிகொலாவின் கருத்துக்களை விவரிக்க லூத்தரால் பயன்படுத்தப்பட்டது. ஆயினும் இக்கருத்து யாக்கோபின் திருமுகத்தில் தாக்கப்படுகிறது. அதன் ஆசிரியர் ''தன்னிடம் விசுவாசம் உண்டு எனச் சொல்கிறவன் செயலில் அதைக் காட்டா விட்டால் அதனால் பயன் என்ன? அந்த விசுவாசம் அவனை மீட்க முடியுமா?'' (யாக் 2:14) என்று கேள்வி எழுப்புகிறார். செயல்கள் அற்ற விசுவாசம் மீட்பளிக்க முடியுமா? இதில் மறைந்துள்ள விடை முடியாது என்பதாகும். விசுவாசத்தால் ஏற்புடையவர்களாவது பற்றிய பவுலின் போதகத்தைத் (உரோ 3:23 தொ) தவறாகப் புரிந்து

கொண்டவர்களை யாக்கோபு இங்குத் தாக்கித் திருத்துகிறார். ஆயினும் பவுலின் கருத்துப்படி செயல் இல்லாமல் விசுவாசம் இருக்க முடியாது. ஏற்புடையவனாக்கப்பட்ட மனிதன் தூய ஆவியையும் பெற்றுக் கொள்கிறான்; ஆவி அளிக்கப்பட்டால் ஆவியின் கனிகள் வெளிப்படவேண்டும்.

ஒழுக்கச் சட்ட மறுப்புக் கோட்பாடு புதிய ஏற்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது அறிவுநெறிக்கோட்பாட்டின் சில வடிவங்களில் காணப்பட்டது. வரலாற்றில் இக் கோட்பாடு சில குழுக்களால் ஆதரிக்கப்பட்டுள்ளது.

ஒழுக்கநெறி இயல் (ETHICS)

இக்கட்டுரையானது விவிலிய ஒழுக்க நெறிஇயலைப் பற்றியதாகும். இத்தலைப்புப்பற்றிய எவ்வித முறையான ஆய்வும் இல்லாமையால் வரலாற்று ஆசிரியர்கள், இறைவாக்கினர்கள், கவிஞர்கள், அப்போஸ்தலர் ஆகியோரால் உருவாக்கப்பட்ட ஒழுக்கக் கருத்துக்களை யூத மற்றும் கிறிஸ்துவ நூல்களினின்று சேகரிப்பது மட்டுமே இயலக்கூடியதாகும். பழைய வரலாறானது நிறைவானவரான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய வரலாற்றில் உச்சநிலை அடைகிறது. அவரினின்று உயர்ந்த ஒழுங்கமைப்பும், பரந்த செல்வாக்கும் உடைய வாழ்வு அளிக்கப்படுகிறது.

I. பழைய ஏற்பாட்டு ஒழுக்க நெறி இயல்:-
விவிலியத்தின் பல நூல்களின் காலமானது உறுதிப்படுத்தப்படாமலிப்பதால் எபிரேயரிடையே ஒழுக்க வளர்ச்சியின் நிலைகளைத் துல்லியமாக எடுத்துக் கூறுவது அவ்வளவு எளிதான காரியமன்று. உலகில் ஒழுக்க அமைப்பு இருக்கின்றது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். ஒழுக்கநிலையை இயன்றதாக்குகின்ற சுதந்தரம், அறிவுத்திறன் முதலியன மனித உயிர்களுக்கு உண்டு என்றும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 'மனசாட்சி' என்ற சொல்லானது புதிய ஏற்பாட்டுக் காலம் வரை காணப்படவில்லை. அனேகமாக ஸ்தோயிக்கியரிடமிருந்து இக்கருத்து பெறப்பட்டிருக்கலாம். ஆனால் இக்கருத்து இறைவனுடைய பண்டைய மக்களின் குறிப்புகளில் வேண்டிய அளவிற்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆதி 3:5-இல் நன்மை, தீமை என்னும் இரு தன்மைகளை நாம் காண்கிறோம். முதலாவதானது 1:31-இல் அமைப்பிற்குப் பதிலளிப்பதாகவும் 2:18-இல் நன்மைத்தனத்திற்கு ஏற்றதாகவும் இருப்பதைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. சில நேரங்களில் முடிவுகளுக்கும், சில நேரங்களில் சாதனங்களுக்கும் பயன்படும் இச்சொற்கள் அனேகமாக உள்ளுணர்வின் இறுதிக்கட்டங்களைச் சுட்டிக்காட்டுவதனால் இன்பம், துன்பம் போன்று வரையறுக்கப்பட முடியாது. ஒழுக்க நிகழ்ச்சிகளை மூதாதையரின் கதைகளிலே காண்கிறோம். மோசேயின் அல்லது மற்ற சட்டநெறியானது வடிவமைக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே, இழிவான அல்லது பெருந்தன்மைமிக்க, உண்மையான அல்லது பொய்யான, பாராட்டுக்குரிய அல்லது பழிச்சொல்லுக்குரியவராக மனிதர்கள் ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளனர்.

1. வாழ்வின் சமயத் தோற்றம்:-
எபிரேய இலக்கியத்தில் வாழ்வினுடைய சமயத் தோற்றங்கள் உயிர்நாடியானவையாக இருப்பதனால், ஒழுக்க நெறிகளும் வழிபாடும் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளன. இறைவனை மனிதன் பார்க்கிறான்; அவரைத் திருப்திசெய்ய ஆசை கொள்கிறான். அவரது கோபத்தைத் தூண்டியெழுப்புகின்ற எதையும் செய்ய நடுங்குகிறான் (ஆதி 20:6; 39:9). எனவே ஒழுக்கமின்மையானது பாவமாகிறது. பற்றுறுதியானது ஒரு தூய நபருக்கு உரியதேயன்றி ஆட்தன்மையற்ற சட்டத்திற்கு உரியதல்ல. பிற மனிதருக்குச் செய்யும் கடமையானது இறைவனுக்குச் செய்யும் கடமையாகும். ஒழுக்கமானது இறை பாதுகாப்பின் கீழ் உள்ளது. உடன்படிக்கைப் பேழையிலுள்ள சட்டத்தின் பலகைகள் யாவேயின் கோயிலில் மிகவும் புனிதமான இடத்தை வகிப்பதில்லையா? (யாத் 40:20; உப 10:5; 1 அர 8:9; எபி 9:4). கட்டளைகள் தன்னிச்சைத் தன்மையுடைய

தாய் இருப்பதற்குப் பதிலாக, இறைவனுடைய குணத்தின் பொழிவுகளாக உள்ளன. நேர்மையாயும் இரக்கமுடனும் இருக்க வேண்டும் என்று கோரும் இறைவன் இவை தமக்கே உரியதனித்துவமிக்க மகிமை என்று கருதுகிறார்; இக்குணங்களைக் கொண்டிருக்குமாறு மனிதரை அழைக்கிறார் (யத் 33:19; 34:6-7). மனித அன்பினுடைய பதிலுக்காக ஏங்குவதாக இறை அன்பை ஓசேயா எடுத்துரைக்கிறார். நேர்மையுள்ள இறைவனின் பெயரால் நேர்மையினை ஆமோஸ் கோருகின்றார். சங் 111 மற்றும் 112-ஐ ஒப்பிடுவதில் தோன்றுவதுபோன்று அதே சொற்களால் விவரிக்கப்படும் மனிதனின் நன்மைத் தனமானது ஒரு வகையில் இறைவனது நன்மைத்தனத்தைப் போன்றே உள்ளது.

2. தேசிய நோக்கு:-

பழைய ஏற்பாட்டு நோக்கு தனிநபர்த் தன்மையுடையதாய் இருப்பதைவிடத் தேசியப் பண்புடையதாக உள்ளது. சமூகத்தின் கூறுகள் பொது நன்மைக்கெனப் பங்களிக்காவிடின் அவற்றிற்கு மதிப்பில்லை. தனிமனிதன் சமூக அமைப்பின் ஒரு சிறு பகுதி மட்டுமே. குழுவினுடைய பகுதிக்கு எதிராகப் பெரும் பாவம் குற்றம் சாற்றப்பட்டால், அக்குழுவோடு சேர்ந்து எந்தத் தனிமனிதனும் கொல்லப்படலாம் (யோசு 7:19-26). மக்களனைவரும் சேர்ந்த முழு இஸ்ராயேல் தான் இறைவனுடைய மகன் என்று அழைக்கப்படுகிறது. செபங்கள், பலிகள், விழாக்கள், நோன்புகள் முதலியன நாட்டைச் சேர்ந்த பொதுக்காரியங்களாகும். இஸ்ராயேல் காக்கப்படுமெனில் சாவதற்கும் தயாராக இருத்தல் மிக உயர்ந்த மாட்சியாகும் (யாத் 32:31-32; நீதி 5:15-18). பெரும்பாலும் சட்டங்கள் நடுவர் மட்டுமே செயல்படுத்தக் கூடியவையாக உள்ளன. வாதாடும் குழுக்களுக்கிடையில் நியாயமாக நடுவரால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்'' என்னும் உரிமையானது (உப 19:21), நீதி மன்றத்திற்கு வெளியே வழிகாட்டுதலுக்கு மிகவும் கொடூரமானதாக உள்ளது (மத் 5:38-39). இஸ்ராயேல் பாவம் செய்தபோது தன்டிக்கப்பட்டது; இறைவனுக்குக் கீழ்படிந்திருந்தபோது வளமுற்றிருந்தது. எபிரேய தேசிய வாழ்வு அழிக்கப்பட்ட பின்னரே, இறைபராமரிப்பின் நேர்மை (யோபு; சங் 36:72) மற்றும் சுய அறியாமை முதலியன பற்றிய வினாக்களைத் தனிமனிதன் அனுபவம் எழுப்புகின்றது. பிற்கால இறைவாக்கினரில் ஒவ்வொரு மனிதனுடைய ஆன்மா பற்றி மிகுந்த ஆர்வம் காட்டப்பட்டபோதும் (எச 18), தேசிய இலட்சியங்கள் உயர்ந்த நிலையைக் கொண்டுள்ளன. நாடுதான் உயித்தெழவேண்டும் (ஏச 25:8; எச 37:1-14; ஓசே 13:14; செக் 8-1-9). தனி நபர்களின் அக்கறைகளில் மூழ்கிப் போவதற்கு எதிரான குழுவின் நலனுக்குக் காட்டும் இந்த ஆர்வமிக்க பற்றுறுதிதான் எபிரேய வரலாற்றினுடைய உன்னத முத்துக்கள் கோக்கப்படுகின்ற தங்கக்கயிறாக உள்ளது எனலாம்.

3. உடன்படிக்கை:-

நடத்தையைத் தீர்ப்பிடுவதற்கான நிலையான மேல் வரிச்சட்டமாக எப்போதும் கருதப்படுகிறது. உடன்படிக்கைக்குக் காட்டும் மரியாதை இறைவனுக்குக் காட்டும் மரியாதையாகும் (ஓசே 6:7; 8:1; ஆமோ 3:1-3). இறைவன் எப்போதும் பிரமாணிக்கமுள்ளவராய் இருப்பதால் தங்களுடைய முன்னோர் முழுப்பற்றுதலுடன் ஏற்றுக் கொண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கும் வரை அவரது மக்கள் வளமுற்றிருப்பார் (யாத் 24:37). இஸ்ராயேலின் மீது உடன்படிக்கை கோருபவைகளின் சுருக்கமாக உள்ள பத்துக்கட்டளைகளின் முதற்கட்டளைகள் விசுவாசம், மதிப்பு மற்றும் பணி ஆகியவற்றைக் கோருகின்றன. பின்னர் வருபவை (யாத் 20; கட்டளைகள் 5 முதல் 9 முடிய) மனிதன் மனிதனுக்குச் செய்யும் கடமை, யாவேக்கு மனிதன் ஆற்றும் கடமையின் ஒரு பகுதியாகும் என்று எடுத்துக்கூறுகின்றன. ஏனெனில் ஒருவர் மற்றவரோடு நடந்து கொள்ளும் முறையால் இறைவன் திருப்தியோ அதிருப்தியோ அடைகிறாரென மோசேயும் அனைத்து இறைவாக்கினர்களும் பறைசாற்றுகின்றனர். மனிதனின் உள்ளார்ந்த வாழ்வையும் ஊடுருவிச் செல்லும்

பத்துக் கட்டளைகள், அனைத்துக் கட்டளைகளும் அவற்றின் சொற்பொருளில் மட்டுமின்றி, அவற்றின் உட்பொருளிலும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென நினைவுறுத்துவதாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் (லேவி 19:17-18; உப 6:5; சங் 138; உரோ 7:14). யாத் 20-23; சங் 15;23 ஆகிய பகுதிகளில் தொகுக்கப்பட்டிருப்பதுபோல் மனிதக் கடமைகள், ஒழுக்கம் மற்றும் சடங்குக் கோரிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. மனிதக்கடமைகளைப் புறக்கணிக்கும் நிலையைக் குற்றஞ்சாட்டுதல் அடிக்கடி இறைவாக்கினர்களில் காணப்படுகிறது (ஏச 1:11-12; எரே 6:20; 7:21-22; ஓசே 6:6; ஆமோ 5:21-22). இக்கடமைகள் ஏராளமான் குறிப்புகளைக்கொண்டுள்ளன. அனுபவத்தின் ஒவ்வொரு துறையையும் உள்ளடக்குகின்றன. உடலூனமுற்றோர் (லேவி 19:14), ஏழைகள் மற்றும் அன்னியர் (உப 10:18-19; 15:7-11; 24:17-19; யோபு 31:16-18.32. சங் 41:1; ஏச 58:6; எரே 7:5-7; 22:3; செக் 7:9-10) முதலியோர்மீது இரக்கம் காட்டுதல் அழுத்திக் கூறப்படுகிறது. பெற்றோரும் முதியோரும் மதிக்கப்படவேண்டும் (யாத் 20:12; உப 5:16; லேவி 19:32). பிள்ளைகளின் கல்வி வற்புறுத்தப்படுகிறது (யாத் 12:26-27; 13:8.14; உப 4:9; 6:7 20-25; 11:19; 31:12-13; 32:46; சங் 78:5-6). பழமொழிநூலில் சுறுசுறுப்புத்தன்மை (6:6-11), தூய்மை (7:6), ஏழைக்கு இரங்குதல் (14:21), உண்மை (7:7), முன்சிந்தனை (24:27) ஆகியவற்றின் மீது அழுத்தம் செலுத்தப்படுகிறது. விலங்குகள் நடத்தப்படும் முறையும் விடப்படவில்லை (யாத் 23:11; லேவி 25:7; உப 22:4.6; 25:4; சங் 104:11-12; 148:10; பழ 12:10; யோனா 4:11). சில நேரங்களில் சிறப்பான குணங்களின் கவரக்கூடிய சித்திரங்களைக் காணலாம் (குடும்பப்பெண், பழ 31; அரசன், 2 சாமு 23:2-4; குரு, மலா 2:5-7). மனிதன் மீதான இறைவனுடைய ஆட்சியானது உலகின் மீதான அவரது ஆட்சிக்கு ஒத்ததாக உள்ளது. இறைவன் யாவற்றின் மேலும் அக்கறை கொண்டுள்ளார் என்பதை மனிதன் உணர வேண்டும். ஏனெனில் அவர் எவ்வளவு உயர்ந்தவரெனில் விண்மீன்களுக்கும் மனித துயரங்களுக்கும் அவர் சமமாக ஈடுபாடு செலுத்த முடியும் (சங் 19:33; 147:3-6).

4. நடத்தைக்கு அளிக்கப்படும் சன்மானம் அல்லது தண்டனை பெரும்பாலும் இவ்வுலகத்தைச் சார்ந்ததாகும் (விளைச்சல், பஞ்சம், பகைவர் மீதான வெற்றி முதலியன). ஆயினும், அவை தேசிய அளவினவாய் இருப்பதால் சுயமதிப்பானது மந்தமானதல்ல. மேலும் எந்த எபிரேய மனமும் ஒழுக்கத்தினுடைய உள்ளார்ந்த மதிப்பினை உணரவில்லை என்று கருதுவது தவறாகும். சட்டவாதப்போக்கு உலகளாவியதல்ல. இறைவன் தம் உடன்படிக்கையின் சொற்பொருளுக்குள் மட்டுமே தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை என்று எண்ணுவதில் இறைவாக்கினர்கள் பெருமகிழ்வு கொண்டனர். இந்த உடன்படிக்கை யாவே தம்முடைய அன்பின் உயர்தன்மையில் இஸ்ராயேலைத் தன்னுடைய சிறப்பான செல்வமாகத் தேர்ந்தெடுத்தார் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

வெறும் நீதியினாலன்றி அருளினால் இறைசெயலானது வழிநடத்தப்பட்டது. இறைவனே இரக்கமிக்க மீட்பர் (உப 7:8; ஓசே 11:1; 14:4). மக்கள் சட்டத்தைப் புறக்கணித்ததுகூட அவரது மன்னிக்கும் அன்பை அழித்து விடவில்லை (சங் 25:6-8; 103:8-10; ஏச 63:9; எரே 3:12; 31:3; 33:7-8; மீக் 7:18-19). இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட தாராள குணத்துக்குப் பதிலுரையாகக் கூவி எதிர்பார்க்காத ஆர்வமானது இஸ்ராயேலில் உண்டாயிற்று. இதனால், இறைவன் அவருக்காகவே அன்பு செய்யப்பட்டு, வறுமையும் இருளும், பொறுத்துக் கொள்ளப்பட வேண்டிய வேளையில், அவரது புன்னகையானது செல்வமாகவும் ஒளியாகவும் கருதப்பட்டது. ''உம்மையன்றி வேறுயாரை நான் விண்ணகத்தில் கொண்டுள்ளேன்?'' ''எந்த அளவு உமது சட்டத்தை நான் அன்பு செய்கிறேன்!'' என்பன போன்ற கூற்றுக்கள் இஸ்ராயேலின் பக்தி இலக்கியத்தில் மிகுந்து காணப்படுகின்றன. அவை இறைவன்பால் தன்னலமற்ற பக்தியையும் கடமையில் உண்

மையான மகிழ்ச்சியையும் காட்டுகின்றன. பழ 8-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஞானத்தின் அழகையும் மாண்பையும் சிறந்த முறையில் போற்றுவதும் அதே கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டதே.

II. புதிய ஏற்பாட்டு ஒழுக்கநெறி இயல்:- பல புதிய கூறுகளை அனுமதிக்கின்ற வேளையில் (மத் 11:11; 13:17.35.52; மாற் 2:21-22; யோவா 13:34; எபே 2:15; எபி 10:20; திருவெளி 2:17; 3:12; 5:9), பழைய ஏற்பாட்டின் சிறப்பான பகுதிகளைக் கிறிஸ்தவம் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது (மத் 5:17; உரோ 3:31). அதில் மதிப்பு மிக்கவற்றையெல்லாம் கிறிஸ்து பாதுகாத்து, ஒன்றுபடுத்தி விரிவாக்கினார். பழைய கோட்பாடானது இறக்கைகளைப் பெற்று, உயரிய, இனிய பாடலைப் பாடியது (யோவா 1:17). ஆனால் இயேசு அளிக்கவந்த மகிழ்ச்சியான, உயரிய, வாழ்வானது, மனிதனுடைய உண்மையான நிலையின் மீதான நெருங்கிய கவனத்திலிருந்தே வரக்கூடும்.

1. பாவம்:- அதற்கேற்பக் கிறிஸ்தவ ஒழுக்கநெறி இயலானது பாவத்தின் முழுப்பொருளையும் கவனத்தில் கொள்கிறது. உள்ளிருந்து, வெளியிலிருந்து, கீழிருந்தான சோதனைகளின் தோற்றத்துடன் சேர்ந்து மனித இயல்பின் குற்ற நிலையானது, மனிதர்கள் நல்லவர்கள் அல்லது ஒழுக்கம் சாராதவர்கள் என்று மட்டும் கருதும்போது உள்ள நிலைக்கு மிகவும் வேறுபட்ட ஒரு பிரச்சனையை எழுப்புகிறது. நன்மையினின்று மிக நன்மையான நிலைக்கு முன்னேறுவதனுடைய கலையின் பாடங்களால் நமது தேவை நிறைவுசெய்யப்படுகிறதா? மனித சித்தமானது பழுதுபட்டதும் கிளர்ச்சிமிக்கதும் அல்லவா? தனி நபரிலும் சமூகத்திலும் உள்ள ஒழுக்கக் கேடுகள் இறை மீட்புச் செயல்களையும், மனித மனத்துக்கத்தையும், விசுவாசத்தையும் கோருகின்றன. கிறிஸ்து மனிதரிடையே வாழ்ந்த காலம் முதல் பாவ உணர்வானது மிகவும் முனைப்பாக இருந்தாலும், எபிரேய உள்ளுணர்வானது தனது ஒழுக்க வேதனையைக் கொண்டிருந்தது. பண்டைய வெளிப்பாட்டினுடைய சொற்றொகுப்பானது ஒழுக்கமின்மையின் பல்வேறு தோற்றங்களுக்குக் கவனத்தை ஈர்க்கின்றது. பாவமானது பாய்வதற்குத் தயாராகப் பதுங்கியுள்ள மிகுந்த பசியுடன் உண்கிற விலங்காகும் (ஆதி 4:7). அது பரந்து நிலவும் துன்பத்தினுடைய ஒரு காரணமாகும் (ஆதி 3:15-19; 9:25; 20:9; யாத் 20:5). அது உலகளாவியது (ஆதி 6:5; 8:21; 1 அர 8:46; சங் 130:3; 143:2). அது மடமையானது; அது குறிக்கோள் தவறுதல், வன்முறை, வரம்பு மீறுதல், கிளர்ச்சி, தூய்மைக்கேடு முதலியவையாகும் (சங் 51). இந்தக் கடுமையான கருத்தானது புதிய ஏற்பாட்டினாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆண்டவரும் அவரது அப்போஸ்தலர்களும் மனவருத்தத்தை உருவாக்க உழைக்கின்றனர். பாவ உலகைத் தீர்ப்பிடுவது தூய ஆவியின் பணிகளில் ஒன்றாகும் (யோவா 16:8). வருத்தும் இதயத்தினால் தீய ஒழுக்கமானது விலக்கப்பட்டாலொழிய, நல்வாழ்வு வாழ முடியும் எனக் கருதமுடியாது. நடத்தையின் ஊற்றுகள் தூய்மையாக்கப்படவேண்டும் என்று கருதப்படுகிறது. ஆன்மாவின் பழைய கெட்ட நிலையினாலும், மற்றும் கொடிய சூழ்ச்சிமிக்க சோதனைகளுக்கு உட்படுவதனாலும், ஆன்மா தன் மேல்நோக்கிய எழுச்சியில் பெரும் துன்பங்களை எதிர்கொள்கிறது என்பது எப்போதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. தனிநபர்த்தன்மை:-

ஒழுக்கக்கேடு கோட்பாட்டிற்கு ஒத்த நிலையில் தனிநபர்த் தன்மையை ஏற்றுக்கொள்வது தெளிவாக உள்ளது. ஓர் ஆள் தான் பாவம் செய்யமுடியும். பாவம் புரியும் திறனானது ''ஆளுமை'' என்று குறிக்கப்படும் உயரிய நிலையின் அறிகுறியாகும். கிறிஸ்தவம் மனிதனுடைய வேறாக்கும் தனித் தன்மைக்கு மரியாதை கொண்டுள்ளது. மற்ற உயிர்கள் உட்புக முடியாத தடைகளால் சூழப்பட்டதன்மையையும், பெரும் வேறுபட்ட தீமையையும் மற்றும் மாட்சிமை மிக்க செயல்களை ஆற்றும் திறமைகளையும், மற்றும் உலகங்களிடையிலே ஓர் உலக அமைப்பையும் காண்கிறது. மனித

உயிரானது தன்னிலேயே ஒரு முடிவாகும். இறைவன் நம்மை ஒவ்வொருவராக அன்பு செய்கிறார். தனிமனிதனுடைட அளவற்ற மதிப்பை இயேசு உறுதிப்படுத்துகிறார். மேய்ப்பர் தொலைந்துபோன ஓர் ஆட்டின் மீது அதிக அக்கறை கொண்டுள்ளார் (லூக் 15:4-7). மந்தையின் ஆடுகள் அனைத்திற்கும் அவர் பெயர்கொடுத்துள்ளார் (யோவா 10: 14). சில பொதுவான சொற்களால் மக்கள் திரளைக் குணப்படுத்தியிருக்கக்கூடிய மருத்து வர், துன்புறும் ஒவ்வொருவர்மீதும் தமது நலந்தரும் கரங்களை வைக்கிறார் (லூக் 4:40). நற்செய்தி நூல்களினின்றும், அப் போஸ்தலர் பணியினின்றும் தனிப்பட்ட பணிகளின் கதைகளை நீக்கிவிட்டால், அவற்றில் பெரும் இடைவெளிகள் காணப் படும் (யோவா 1:35-37; 3:4; அ.ப. 8:26-39; ...). தனிநபரை ஓர் அளவாக எடுத்துக் கொண்டு, அவரை மையமாக வைத்துச் செயல்படுவதில், புதிய ஏற்பாட்டு ஒழுக்க நெறி அவரது செயல்களை மட்டுமே கருத் தில் கொள்வதில்லை (மத் 6; உரோ 2:28-29). அவற்றின் உள்ளார்ந்த தன்மையையும், நோக்குகிறது (மத் 5:21-22; 27-28; 6:1.4.6.18; 12:34-35; 23:5.27; மாற் 7:2-8. 18-23; லூக் 16:15; 18:10-14 யோவா 4:23-24). திருவரு கைக்கு முற்பட்ட சிறந்த மனங்களுக்குத் தோன்றிய கருத்துக்களின் தொடர்ச்சியே ஆகும் இது (1 சாமு 16:7; சங் 7:9; 24:3-4; 51:17; 139:2-3.23; எரே 17:10; 31:33).

3. சமூகக் கூறு:- அனுபவத்தினுடைய சமூகக்கூறுகள் மேலோட்டமாகப் பார்க்கப் படவில்லை. ஒவ்வொருவரும் தன்னுடைய சுமையைச் சுமக்க வேண்டும் (உரோ 14:4; கலா 6:5). அனைத்து மனிதருடைய நடுவரி டம் தனக்குரிய கணக்குக்கொடுக்கவேண் டும் (2 கொரி 5:10). ஆனால் அவர் தனிமைப் படுத்தப்படவில்லை. மற்றவருக்கான அக்கறை யானது தவிர்க்க முடியாததாகும். கட்ட ளைக்குட்பட்டதாகும். ஏனெனில் மன்னிக் காத மனநிலையானது மன்னிப்பு அடைய முடியாது (மத் 6:15; 18:23-35). சகோதரத்தன்மை யற்ற வழிபாடு நிராகரிக்கப்படுகிறது (மத் 5:23-24). கிறிஸ்தவ அன்பானது புத்து யிர்பெறுதலின் அடையாளமாகும் (1 யோவா 5:1). தீங்கு விளைவிக்கும் செயல் கள் இன்மைமட்டுமே ஒருவரைத் தண்டனை யினின்று காக்க முடியாது. பிறருக்கு நேரடியாக உதவுதல் தேவைப்படுகிறது (மத் 25:41-45; லூக் 10:25-37; 16:19-31; எபே 4:28-29). இந்த உதவிசெய்தலே புதிய சடங்கு முறையாகும் (எபி 13:16; யாக் 1:27). பெற் றோர், பிள்ளைகள் மற்றும் ஊழியருடனான குடும்பம் (எபே 5:22-6:9; கொலோ 3:18-4:1); பல்வேறுபட்ட தன்மையும் மற்றும் கொடைகளும் கொண்ட திருச்சபை (உரோ 14:15; கலா 6:1-2; 1 கொரி 13;14;15); அரசன் மற்றும் நடுவர்களையும் கொண்ட நாடு (மாற் 12:14-17; உரோ 13:1-7; 1 தீத் 2:1-2) முதலியன, கிறிஸ்துவின் ஊழியன் உன்னத மானவருக்குத் தனது பக்தியை வெளிப் படுத்த வேண்டிய தலமாக அமைந்துள்ளன. கீழ்ப்படிதல், பொறுமை, தயாளம், தூய்மை, தாழ்ச்சி, உலகினின்றும் ஊனுடலி னின்றும் விலகியிருத்தல் முதலியன நடை முறையில் கிறிஸ்தவ இலட்சியம் பரிந்து ரைக்கின்ற தலையாய, புதிய மற்றும் குறிப் பிடத்தக்க பண்புகளாகும். கிறிஸ்தவ ஒழுக்க நெறி இயலானது பாவம், தனிநபர்த் தன்மை, சமூகக்கோரிக்கைகள் மற்றும் விண் ணக உதவியின் தேவை முதலியவற்றை ஏற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

4. இயேசுவின் இயல்பே கிறிஸ்தவ மேல்வரிச்சட்டம்:- இறைவனுக்காகவும் மனிதனுக்காகவும் நிறைவாய் வாழ்ந்த ஆண் டவராகிய இயேசு கிறிஸ்துவின் தன்மையே கிறிஸ்துவ மேல்வரிச் சட்டமாகும். அவர் தீமையை வெல்கிறார் (மத் 4:1-11; யோவா 16:33). தமது வாழ்வின் குறிக்கோளைச் செய்து முடித்தார் (யோவா 17:4). மற்றும் பாவம் புரியவில்லை (யோவா 8:46; 2 கொரி 5:21; எபி 4:15; 1 பேதுரு 2:22; 1 யோவா 8:46;). மகனுக்குரியதாகவும் சகோதரத்துவத் தினுடையதாகவும் இருக்குமளவில் அவரு டைய வாழ்வே மாதிரியாகும். மகனுக்குரிய தைப் பொறுத்தமட்டில் அவரது மேல்நோக் கிய பார்வையையும், அவரது அன்பின்

மிகுதியில் போற்றுரையாகவும் மன்றாட்டாகவும் வெளிப்படுத்துதலையும், அவரது கடமை உணர்ச்சியையும், பணிவையும் சுட்டிக்காட்டலாம். ''தந்தையின் மார்பில்'' அவர் வாழ்ந்தார். இறைவனுக்கு விருப்பமானதையே அவர் செய்ய விரும்பினார். சகோதரத்துவத்தைப் பொறுத்தமட்டில் மனிதருக்கான அவரது இரக்கம் அளவற்றதாக உள்ளது. மனித நன்மைக்கான அவரது பலியானது எல்லையற்றதாக உள்ளது. 'நீங்கள் இறைவனை அன்பு செய்ய வேண்டும்; நீங்கள் மனிதனை அன்பு செய்ய வேண்டும்' இவ்விரு துருவங்களுக்கிடையில் நிறை வாழ்வானது சுழல்கிறது. அவரும் அவரது போதனைகளும் ஒன்றே. ஒழுக்கச் சட்டமானது அவரில் உயிருடன் இருப்பதன் காரணமாக, மனிதனுடைய எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள்மீது தலைமையுரிமை கோருகின்றார் ''ஆண்டவர்'' என்று அவர் போதிக்கப்படுகிறார் (2 கொரி 4:5). மனிதனோ (அ.ப. 11:25-26) வானதூதரோ பெறமுடியாத வணக்கத்தை (திருவெளி 22:8-9) பெறுவதைச் சரியானதாக அவர் கருதுகிறார் (யோவா 13:13). இது மாறுபட்ட விதமாக இருக்க முடியுமா? ஒழுக்கச் சட்டமே மேலாண்மையுடையதாக இருக்க வேண்டும். அவரே அந்தச் சட்டம். எனவே பழைய உடன்படிக்கையின்கீழ்ச் சிலை வழிபாடு கொண்டிருந்த அதே விபரீத இடத்தினை, அவரிடமிருந்து விலகியிருக்கும் நிலையும் கொண்டுள்ளது. அதையொத்த காரணத்திற்காகச் சிலை வழிபாடு நேர்மையும் இரக்கமும் உள்ள அவரைத் துறப்பதாகும். இயேசு தம்முடைய மகனுக்குரிய மற்றும் சகோதர நிறை தன்மையினால் ஆண்டவராக இருப்பதனால், அவரைவிட்டு விலகி நிற்பதென்பது அழிவுக்குரியதாகும் (லூக் 10:13-16; யோவா 3:18; 8:24; 15:22-24; 16:8-9; எபி 2:3; 6:4-8; 10:26). உண்மை மற்றும் நேர்மையின் கோரிக்கைகளுக்கு எதிராக மனைவியோ குழந்தையோ, வாழ்வோ தேர்ந்துகொள்ளப்படக்கூடாது. எனவே உண்மையாகவும் நேர்மையாகவும் ஆள்வடிவில் உள்ள கிறிஸ்துவிற்கு மேலாக அவை தேர்ந்து கொள்ளப்படக் கூடாது (மத் 10:37-39; லூக் 9:59-60; 14:26-27). இயேசு கிறிஸ்துவினுடைய அடிமை ஊழியனாகத் தன்னை அழைப்பதென்பது (உரோ 1:1; யாக் 1:1; 2 பேதுரு 1:1) ஞானமும் இரக்கமும் மிக்கவருக்குத் தனது மிகவலுவான அன்பையும் அவரின் மகனில் உருவங்கொண்டுள்ள இறைவனுடைய தூய சித்தத்திற்கு மிகுந்த பிரமாணிக்கத்தையும், ஒரே சமயத்தில் உறுதிப்படுத்துவதாகும். இயேசு கிறிஸ்துவுக்குக் காட்டும் பாசமிக்க இணக்கத்தின் மூலமாக இறைவனுடைய சித்தமானது தனக்குரியதாகிறது; இந்த இயேசு கிறிஸ்துவிற்காகத் துன்புறுவதென்பது மெய்யான பேரின்பமாகிறது (மத் 5:10-12; அ.ப. 5:41; 2 கொரி 4:11; பிலி 1:29; 1 தெச 2:14; எபி 10:32-34).

5. உதவி அளிப்பதாக வாக்குறுதிகள்:-

கிறிஸ்தவ ஒழுக்கநெறி இயலானது அதன் மேல்வரிச் சட்டத்தின் தரத்தினுடைய உயர்ந்த தன்மையைப்போன்று, அதிக அளவில் உதவிபற்றிய உறுதிமொழிகளாலும் சிறப்புப்பெறுகிறது. மகனை அளிக்கும் கொடையிலும் பலியிலும் முழுமையாக விவரிக்கப்படுகின்ற இறைவனுடைய இரக்கத்தன்மையானது புனிதத்திற்கான பெரிய தூண்டுதலாகும். இறை ஆதரவினால் மனிதன் சூழப்படுகிறான். விண்ணக இரக்கமானது அவர்களது போராட்டங்களில் அவர்களுடன் துணைநிற்கின்றது. அடையவேண்டிய நற்குணங்களும் (மத் 5:1-16; கலா 5:22-23; கொலோ 3:12-17; 2 பேதுரு 1:5-7; தீத் 2:12) வெறுத்துத் தவிர்க்கப்பட வேண்டிய தீய பண்புகளும் (மாற் 7:21-22; கலா 5:19-21; கொலோ 3:5-9), ஆற்றலுள்ள உதவியின் வாக்குறுதியுடன் சேர்ந்து நோக்கப்பட வேண்டும். ஆர்வமுடையோர் சார்ந்திருப்பதற்கென அதிசயிக்கத்தக்க அன்பு ஒன்று உள்ளது (யோவா 3:16; உரோ 5:7-8; 2 கொரி 5:19-20). அந்த அன்பினை இதயபூர்வமாக ஏற்பதென்பது விசுவாசமாகும். அந்த விசுவாசம் நற்குணமாகவும், நற் குணங்களுக்கெல்லாம் பிறப்பிடமாகவும் மதிப்பிடப்படுகிறது (2 பேதுரு 1:5; உரோ 5:1-2; 1 கொரி 13; எபி 11). விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு முதலியன பண்டைய நற்குணங்க

ளான அடக்கம், திடம், ஞானம், நீதி முதலியவற்றை உருமாற்றி நிறைவூட்டுகின்றன. கிறிஸ்துவால் உண்மையான தகுதி அளிக்கப்படுவதற்கு முன்னர் அங்கீகரிக்கப்படாத பல உயர்ந்த சிறப்புகள் அவற்றைச் சுற்றி வளர்கின்றன. ஆயினும், கிறிஸ்தவம் தன்னுடைய ஒழுக்க போதனையின் செல்வாக்கை விட அதிக அளவில் சோதனையை எதிர்த்து, புனித மனித முழுவளர்ச்சியை அடைவதற்கான திறமையின் உறுதிப்பாட்டால் முதன்மை அடைகிறது. கிறிஸ்துவினுடைய புதுமைகள், அவருடைய மன்னிப்பின் நற்செய்தி, மறு பிறப்பு, மற்றும் புதிய அதிகாரங்கள் முதலியவற்றினுடைய விளக்கங்களாக உள்ளன (மத் 9:5-6). மனிதனுக்கு முன் அமைக்கப்பட்ட வாழ்வு இயேசுவால் வாழப்படுகிறது. அவர் தமது ஆவியால் மனிதருக்கு மீண்டும் உயிரளித்துத் தம்முடனான ஒன்றிப்பில் அவர்களை ஏற்றுக்கொள்கிறார் (யோவா 3:3.6; 8:36; 15:1-10; உரோ 8:2.9.29; 1 கொரி 1:30; 2 கொரி 5:17; கலா 5:22-23; பிலி 2:5.12-13; கொலோ 3:1-4; யாக் 1:18; 1 பேதுரு 2:21; 1 யோவா 2:6). ஆண்டவருக்கும் சீடருக்கும் இடையிலான இணைப்பானது நிரந்தரமானதாக இருப்பதால் (மத் 28:20; யோவா 14:3.19; 17:24; எபி 2:11-18; 1 யோவா 3:1-3) விவேகத்தோடும் நீதியோடும் பக்தியோடும் (தீத் 2:12-14) வாழப்பயில்வது மிகுந்த ஆதரவைப்பெறுகிறது. புனிதத்தன்மை என்பது, ஒரு சமயம் ஒழுக்க அளவில் இயலாதவர்கள் என்று கருதப்பட்ட நபர்களால், அடையக்கூடியதாக மட்டுமில்லாமல் (மாற் 2:16-17; லூக் 7:47; 15; 19:8-9; 23:42-43; 1 கொரி 6:11; எபே 2:1-7) ஒவ்வொருகிறிஸ்தவனும் உடனேயோ, பின்னரோ நன்மைத் தனத்தின் உயர்வான வடிவங்களுக்குத் தகுதியானவராக இருக்க வேண்டும் என்பதுமாகும் (மத் 5:1-10). அழியாமையும் அதோடு மீட்பரோடு முடிவில்லாத ஒன்றிப்பும் ஆன்மாவுக்கு வாக்களிக்கப்படுகிறது. அவருடைய சாயலானது அவர் மீட்கும் ஒவ்வொரு மனிதனிலும் காணப்படவேண்டும் (உரோ 8:37-39; 1 கொரி 15:49-58; 2 கொரி 5:8; பிலி 3:8-14; 1 தெச 4:17; 1 யோவா 3:2-3; திருவெளி 22:4).

III. மறுப்புகள்:-

விவிலிய ஒழுக்கநெறி இயல் இக்கட்டுரையில் சிறிதளவு குறிக்கப்பட்டாலும் அதற்கு எதிராக எழுப்பப்பட்ட மறுப்புகளை ஒதுக்கிவிட முடியாது. பழைய ஏற்பாட்டின் சில பகுதிகள் ஒழுக்கமற்றவையெனப் பழிக்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டின் சில பகுதிகள் நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளன. கடமையின் சில முக்கிய நிலைகள் முழுமையான விதத்தில் விளக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அ. பழைய ஏற்பாட்டைப் பொறுத்தவரை நமது ஒழுக்க உணர்வானது புண்படுத்தப்படும் போது, அது இறைஏவுதலுக்குக் காட்டப்படும் அவமரியாதையாகும் என்ற குற்ற உணர்வு கொள்ளவேண்டியதில்லை. ஏனெனில், மோசேயின் சட்டமானது நிறைவற்றது என்னும் கருத்தை ஆண்டவராகிய இயேசு அதிகாரபூர்வமானதாக ஆக்குகிறார் (மத் 5:21-23; மாற் 10:2-9). இறைஅதிகாரத்திற்கு உரியவை என்று கருதப்பட்டு ஏற்கப்பட்ட கோட்பாடுகளை எரேமியாவும் எசக்கியேலும் பாதகமான முறையில் விமர்சிக்கின்றனர் (யாத் 20:5; எரோ 31:29-30; எச 18:2-3. 19-20). மனிதரை முன்னேற்ற வேண்டுமெனில் நம்முடையதைப்போல இராத சூழ்நிலைகளுக்கும் மனதின் நிலைகளுக்கும் சிறிது இடம் அளிப்பது அறிவுக்குகந்ததாயினும், சில சட்டங்கள் அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன. உடனே அழிக்கமுடியாத பலதாரமணம், அடிமைத்தனம் முதலியவை தங்களுடைய எல்லையில் ஒடுக்கப்பட்டு, அவற்றினுடைய சில மோசமான தீமைகள் நீக்கப்பட்டிருக்கின்றன (யாத் 21:2-4; லேவி 25:42-49; 1 நாள் 2:35; பழ 17:2). இறைவனுடைய கட்டளை இணக்கம் கோரப்பட்ட நிலையிலும் இறைவனுக்கு எப்போதுமே அருவருக்கத்தக்கவையாக உள்ள பல சட்டங்களும், நடைமுறைகளும் அங்கு உள்ளன (யாத் 22:18-20; 31:14-15; 35:2-3; லேவி

20:27; எண் 15:32-36; 31; உப 13:5.16; 17:1-5; 18:20; 21:10-14; 2 சாமு 21:1-9). முற்றிலும் ஒழுக்கமற்ற உணர்ச்சிகளும், கருத்துகளும் இறைவனுடைய சித்தத்தோடு இசைந்து செல்லக்கூடும் என்ற உண்மையை நாம் எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டுக் காலத்து இந்த அச்சமூட்டும் தவறுகள், தவறுசெய்வதன் மூலமும் நாம் இறைவனுக்குப் பணிபுரிகிறோம் என்று தவறாகக் கருதுவதிலிருந்து நம்மை எச்சரிக்க எழுதப்பட்டிருக்கலாம் (யோவா 16:2). 1) சில கொடிய சம்பவங்கள் அரிதாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. 2) சில அவற்றின் சூழ்நிலையால் கண்டிக்கப்பட்டுள்ளன; 3) வாசிப்பவரே அவற்றை உடனே கண்டிப்பார் என்ற எண்ணத்தில் ஆசிரியரே சிலவற்றைப் பற்றி எக்கருத்தும் கூறாமல் விட்டுவிடுகிறார். இவற்றைக் கருத்தில் கொண்டால், சில பகுதிகளே தகுதியில்லாத போதனைகளைக் கொண்டுள்ளன என்பது தெளிவாகும், மற்றவற்றைப் பொறுத்தமட்டில், இறைசித்தத்திற்கு முரண்பட்ட நிலையில் இறைமுத்திரையானது உபயோகிக்கப்பட்டிருப்பது உறுதியாகும். வெறுப்பைத்தரும் பகுதிகளைக் கொண்டுள்ள நூலே மாபெரும் கொடுமைகளைக் கண்டிப்பதை இயன்ற தாக்குகிறது என்பது குறிப்பிடப்படவேண்டும். இந்த உயரிய சிறந்த இலக்கியம் முழுவதும் பொதுவாக வெளிப்படுத்தப்பட்ட உயர் தொனியையும், ஒவ்வொரு தலைமுறையிலும் இஸ்ராயேலின் புலவர்கள், வரலாற்று ஆசிரியர்கள், மற்றும் இறைவாக்கினர்கள் முதலியோரால் பாராட்டப்பட்ட நீதி, இரக்கம் மற்றும் உண்மை முதலியவற்றையும் மேலோட்டமாகப் பார்ப்பதென்பது அடிப்படையிலேயே சரியல்ல.

ஆ) புதிய ஏற்பாட்டைப் பொறுத்தமட்டில் மலைப்பொழிவு கீழ்ப்படியக்கூடியது ஆனாலும் இந்தக் கீழ்ப்படிதலானது அழிவிற்குரியது எனக் குறிப்பிடப்படுகிறது. ஆயினும் இது கிறிஸ்துவினுடைய கருத்திற்கு நேர் எதிராக உள்ளது (மத் 7:24-27). இது ஓரளவு, ஒவ்வொரு சட்டமும் ஒவ்வொரு மனிதனுக்கும் உயரியது என்ற ஊகத்தின் விளைவாகும். ஆண்டவரே தன்னுடைய செல்வங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, தம்முடைய அறிவுரையில் குறிப்பிட்ட கருத்துக்களை வாழ்ந்து காட்டியது போலச் சிறப்பான பணியைக் கொண்டுள்ள சீடர்கள், சிறப்பான கட்டளைகளைப் பெறக்கூடும் (2 கொரி 8:9). பயன்பட்டுள்ள முரணான வடிவங்கள், பல கூற்றுக்களுக்குத் தவறான விளக்கம் அளிப்பதற்கு எதிரான போதுமான எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவை எல்லா உயிர்களையும் வழிநடத்த வேண்டிய கோட்பாடுகளைத் தியானிப்பதற்கு நம்மை வற்புறுத்தவேண்டும். நாம் கேட்பது சட்டமுறையின் குரலாக இல்லாமல் அன்பின் குரலாக உள்ளது. கிறிஸ்தவ ஒழுக்கநெறி இயலானது சமூக அமைப்புகளைப் பற்றி அக்கறையற்றதாக இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அடிமைத்தனம் போன்றவற்றிற்கு எதிராக உடனடியாகப் போதிக்காமலிப்பதற்காகக் கிறிஸ்தவமானது குறைகூறப்படுகிறது. அனேகமாக, ஒதுக்கிவைக்கப்பட்ட மனிதரால் அளிக்கப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார உரைகளால் நன்மையைவிடத் தீமையே அதிகமாக விளைந்திருக்கவேண்டும். ஆனால் நாட்டிற்கெனப் புதிய கோட்பாட்டினை முன் கொண்டுவர, கிறிஸ்தவச் சிந்தனைப் போக்கு போதுமான அளவில் அறிவுறுத்தப்பட்டது என்று எதிர்பார்க்கக் கூடியதன்று.

மேலும் உலகமானது தனது முடிவிற்கு அருகில் உள்ளது என்ற எண்ணம் சமூகத் திட்டங்களினின்று கவனத்தைத் திருப்பியிருக்கக்கூடும். உலகினின்று பிரிந்திருப்பதானது தீமையினின்று விலகியிருப்பதேயன்றி மனிதத் துன்பம், துக்கம் ஆகியவற்றின்மீது அக்கறையின்மையல்ல. விசுவாசிகளினுடைய வறுமை, அதிகாரவர்க்கத்தினர் விசுவாசிகளுக்குக் காட்டிய இகழ்ச்சி, சிலைவழிபாட்டிற்கு உடன்படாமல் பொதுக் கொண்டாட்டங்களில் பங்கு கொள்ள முடியாத நிலை, அரசுகள் அவர்களின்பால் பரந்த மனப்பான்மை காட்டாமை முதலிய அனைத்தும் கிறிஸ்தவனை அவனது உடனி

ருப்போரினின்று ஒதுக்கி வைத்தன எனலாம். மக்கள் கூட்டமும், அரசுகளும் நாகரீக வகுப்பும், தங்களுடைய வெறுப்பு மற்றும் இகழ்ச்சியால் அதனுடைய போக்கிலேயே இயங்குமாறு கிறிஸ்தவத்தை வற்புறுத்தின. முதலாவதாகப் பல்வேறு வகையான கலாபனைகளின் மூலமாக வரும் கேட்டினின்று அது காப்பாற்றப்பட்டது. மேலும் அப்படித் தனித்து இயங்கியது மனித இனத்திற்கு ஓர் ஆசியாக அமைந்தது. ஏனெனில் புது வாழ்வானது தனது ஆற்றல்களை ஒன்று சேர்த்துத் தன்னுடைய வல்லமைகள் மற்றும் பணியின் அறிவைப் பெறக்கூடியதாயிற்று. புதிய இலட்சியம் அதனுடைய பிரபலமின்மையினாலேயே பாதுகாக்கப்பட்டது. அதே வேளையில் இறைவனுக்கும் மனிதனுக்குமான அன்பு வாழ்வு வாழ்வதற்கும் முயற்சி எடுக்கப்பட்டது. மேலும் பலவிதமான கனிகளைத் தரக்கூடிய மரங்களாக வளரக்கூடிய பல புனித விதைகளை மிகவும் நம்பிக்கையளிக்கின்ற காலத்திற்காகப் பாதுகாப்பாக வைத்திருந்த நற்செய்தி நூல்களையும் திருமுகங்களையும் பாதுகாப்பதற்கும் முயற்சியெடுக்கப்பட்டது. இறைதந்தை பற்றிய கோட்பாடானது ஒவ்வொரு சமூக, அரசியல் தீமையையும் மறைமுகமாகக் கண்டனம் செய்கிறது. அதேசமயம் நாடுகளுக்கிடையே சமாதானத்தை வளர்க்கவும், ஒவ்வொரு நாட்டினுடைய ஏழைகளையும் அறிவிலிகளையும் சீர்கெட்டவர்களையும் பொருளாதார, அறிவுசார்ந்த, ஒழுக்க ஆசீருக்கு உயர்த்தவும் முயற்சிகள் எடுப்பதற்கு வழிகோலியது. ''உமது அரசு வருக, உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும், நிறைவேறுக'' என்ற செபத்தில் இல்லாத நன்மை எதுவும் இல்லை.

ஒழுக்கநெறிப் பட்டியல்கள் (ETHICAL LISTS)

புதிய ஏற்பாட்டிலே இரண்டு விதமான ஒழுக்க நெறிப் பட்டியல்களைப் பார்க்கின்றோம். 1. குடும்பத்தையும் வாழ்கின்ற சமூகத்தையும் பொறுத்த வகையில் தனிப்பட்டவரின் கடமைகள். 2. பொதுவான ஒழுக்க நெறிகள்.

1. சொற்பொருள்:-

சில விவிலிய மொழி பெயர்ப்புகளில் ''குடும்ப ஒழுக்கம்'' என்ற தலைப்பின்கீழ் இரு பட்டியல்களைக் காணுகின்றோம் (எபேசி 5:21-6:9; கொலோ 3:18-4:1). ''கிறிஸ்தவ ஒழுக்கம்'' என்ற தலைப்பின்கீழ் மற்றொரு தொகுப்பானது திருச்சபையிலுள்ளவர்கள் தங்களுக்குள்ளேயும் மற்றவர்களோடும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறது (1 தீமோ 2:1-15; 5:1-21; 6:1-21; 1 பேதுரு 2:13-3:7). மிகப் பொதுவான ஒழுக்க நெறிப் பட்டியல்கள் ஒழித்துவிடவேண்டிய பாவங்களையும் தீய பழக்கங்களையும், அணிந்து கொள்ள வேண்டிய புண்ணியங்களையும் எடுத்துக் கூறுகின்றன (கொலோ 3:514; கலா 5:19-23). இப்பட்டியல்களின் பின்னணியும் தோற்றமும் இன்னும் பரவலான சர்ச்சைக்குரியவையாகும்.

2. குடும்ப நெறிகளின் பின்னணி:-

அ) யூதப்பின்னணி பழைய ஏற்பாட்டிலே உள்ள உடன்படிக்கைப் புத்தகத்தில் உள்ள பத்துக் கட்டளைகளில் ஐந்தாவது கட்டளையானது குடும்ப ஒழுக்க நெறிகளைப் பற்றிய பின்னணிக்குக் கருவாக அமைந்துள்ளது (யாத் 20:12; உப 5:16). இதுவே எபேசி 6:2-13, மாற் 7:10:1 ஆகிய பகுதிகளில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. தந்தைக்கும் தாய்க்கும் மரியாதை செலுத்துவது பரிசுத்தத்தின் சட்டத்திலும் (லேவி 19:3) உபாகமச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட பழித்துரையிலும் (உப 27:16; யாத் 21:15, 17) முதலிடம் பெறுகிறது. மகன் தந்தைக்குச் செலுத்துவது போன்றும், அடிமை தலைவனுக்குச் செலுத்துவது போன்றும், இறைவனுக்குச் செலுத்தும் மரியாதை அமைய வேண்டும் (மலா 1:6). இவ்வாறே ராபிகளின் போதகமும் யாத் 20:12-ஐ, பழ 3:9-ஓடும் லேவி 19:3-ஐ உப 6:13-ஓடும் ஒன்றிணைத்தது. தோபி 4:3-5; சீரா 3:1-16 ஆகிய பகுதிகளும் பிலோவின் நூலும் பெற்றோர்க்குக் காட்டும் மரியாதையை இறைவனுக்குரிய கடமைகளோடு இணைக்கின்றன. எபிரேயக் குடும்ப உறுப்பினர்கள் கணவன், மனைவி, ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் மட்டுமல்லாமல்,

மருமகள், மாமியார், அடிமைகள், அவர்களுடைய மக்களையும் கொண்டதாக இருந்தது. மிஸ்னா என்ற நூலின்படி மனைவி, பிள்ளைகள், அடிமைகள் ஆகியோர் ஆண்களைப் போன்று அல்லாமல் சில மதக் கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்கள். ஒரு பெண் கலியாணம் ஆவதற்கு முன்பு தந்தையின் கட்டுப்பாட்டிலும், பின்பு கணவனின் கட்டுப்பாட்டிலும் வளர்ந்தாள். குடும்பத் தலைவன் தன் மனைவி, பிள்ளைகள், அடிமைகள் ஆகியோரின் சில செயல்களுக்குப் பொறுப்புடையவன் ஆவான் என்று இராபிகளின் போதனை விரித்துரைக்கிறது. பொதுவாக யூதக் குடும்பநெறி, வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் பாதிக்கின்ற வகையில் அமைந்திருந்தது. நண்பர்கள், மனைவி, அடிமைகள், பிள்ளைகள், வீட்டு விலங்குகள், பெற்றோர்கள், ஆண்டவர் அவருடைய குருக்கள், ஏழைகள், இறந்தோர், துக்கம் கொண்டாடுபவர்கள், நோயுற்றோர் ஆகிய அனைவரையும் இந்நெறி உள்ளடக்கியது (சீரா 7:18-36).பிலோ அளிக்கும் பட்டியல் நாட்டிற்கும் ஆளுநர்களுக்கும் காட்ட வேண்டிய கடமைகளையும் எடுத்துக் கூறுகிறது. கண்டு எடுக்கப்பட்ட சாக்கடல் ஏடுகள் குடும்ப ஒழுக்க நெறிகளோடு சம்பந்தப்பட்டவை அல்ல. மாறாக சமூக அமைப்புகளே.

ஆ) கிரேக்க உரோமைப் பின்னணி:- தெய்வங்களுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையும் வணக்கமும் பெற்றோர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கிரேக்க உரோமை ஒழுக்க நெறியாளர்கள் கருதுகின்றனர். பித்தாகோரசு தெய்வங்களுக்கு அடுத்துப் பெற்றோர்கள் மதிக்கப்பட வேண்டும் என்று தெளிவுபடுத்துகின்றார். கிரேக்க, உரோமையர் குடும்பத்தில் உறவினர்கள் மட்டுமல்லாமல் பணியாளர்களும் உறுப்பினர்களாக இருந்தனர். தந்தையே குடும்பத் தலைவராக இருந்து, மனைவி மக்கள் மற்றும் பணியாளர்களை வழிநடத்தினார். குடும்ப ஒழுக்க நெறிகள் எதுவும் எழுத்து வடிவில்லாமல் பழக்க வழக்கமாகயிருந்ததால், அவ்வப்போது அதைக் குறித்துக் குழப்பங்கள் எழுந்தன. செனேக்க என்பவர் எவ்வாறு கணவன் தன் மனைவியையும், தந்தை தன் பிள்ளைகளையும், தலைவன் தன் அடிமைகளையும் நடத்த வேண்டும் என்பது பற்றி அறிவுரை இருந்ததாகக் கூறுகிறார். எப்பிக்தேத்துசு பொதுவான கடமைகளைப் பற்றிப் பேசும்போது, மகன், தந்தை, சகோதரன், கணவன், மனைவி, அந்நியர்கள், ஆட்சியாளர், ஆளப்படுவோர், ஆகியவர்களின் கடமைகளைத் தெளிவாக விளக்குகின்றார். எனவே தெய்வங்களுக்கு வணக்கத்தையும் பெற்றோருக்கும் பெரியோர்களுக்கும் மரியாதையும் அளிக்க வேண்டும்; சட்டங்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் கீழ்ப்படியவேண்டும். பிள்ளைகளிடம் அன்பாயும் நடந்து கொள்ள வேண்டும், அடிமைகளிடம் அன்பாய்ப் பழக வேண்டும், என்று ஒழுக்க நெறிகள் விளக்குகின்றன.

3. புதிய ஏற்பாட்டிலே குடும்ப நெறிகளின் வளர்ச்சி:

இக்கால அக்கறைகள் கடந்து செல்வதால், ஆதித்திருச்சபையின் இறுதிக்காலம் பற்றிய ஆர்வமிக்க எதிர்பார்ப்புகள் குடும்ப உறவுகளைப் பலவீனப்படுத்துவதாகத் தோன்றுகிறது (மாற் 10:29-30; 13:12; மத் 8:21-22; 10:35 தொ; லூக் 12:52-53; 14:26). இந்தச் சூழ்நிலையில் பவுல் அவர் அழைக்கப்பட்ட நிலைக்கு ஏற்ற வாழ்க்கை நடத்த அழைப்பு விடுக்கின்றார். திருமணம் செய்து கொள்வதை அவர் பரிந்துரைக்கவில்லை. அடிமைத் தனத்தைப்பற்றி அவ்வளவு அக்கறை கொள்ளவுமில்லை (1 கொரி 7:17-35). 1 கொரி 7:3-6-இல் கணவனும் மனைவியும் விசுவாசிகளாயிருந்தால் அவர்களுடைய கடமையையும், 7:12-இல் யாராவது ஒருவர் மட்டும் விசுவாசியாயிருந்தால் அவர்களுடைய கடமையையும் தெளிவாக்குகின்றார். கொலோ 3:18-4:1-இல் வரும்பட்டியலில் குடும்பநெறிக் கோட்பாடுகளை நாம் காண்கின்றோம். பிலமோனுக்கு எழுதிய கடிதமானது எவ்வாறு தலைவன் அடிமைகளை வழிநடத்த வேண்டும் என்று தெளிவான அறிவுரை வழங்குகிறது. தலைவனாகிய ஒனேசிமு தன் அடிமையாகிய பிலமோனை அடிமையாக அன்று, அடிமையை விட

மேலானவனாக, அன்புமிக்க சகோதரனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் (பில 16). உன் அடிமை உனக்குப் பிரமாணிக்கமுள்ளவனா னால் அவனைச் சகோதரனைப்போல நடத்து (சீரா 33:31). எபே 5:22-6:4 இல் மனைவிகள், கணவன்கள், பிள்ளைகள், பெற்றோர்கள் ஆகியோருடைய கடமைகள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அறிஞர் சிலர் இத்தகைய ஒழுக்க நெறிப் பட்டியல்கள் திருமுழுக்குப்பெறத் தயாரித் துக் கொண்டிருந்தவர்களுக்குக் கொடுக்கப் பட்ட அறிவுரைகள் என்று கருதுகின்றனர். மற்றும் சிலர் பழங்காலத்தில் பெயர் பெற்று விளங்கிய ஸ்தோயிக்கு மெய்யியல் கருத்துக ளான இவை கிறிஸ்துவத் தன்மையுடைய தாக மாற்றிக் கொள்ளப்பட்டன என்று கருது கின்றனர். 1 தீமோ 3:2-7; தீத் 1:7-9-இல் விவரிக்கப்பட்டுள்ள ஆயருக்குத் தேவை யான தகுதிகள், கிரேக்கப் பின்னணி கொண் டவையாய் உள்ளன. ஆனால் பொதுவாகப் புதிய ஏற்பாட்டு ஒழுக்கநெறிப்பட்டியல்கள் யூதப் பின்னணியைப் பெரிதும் சார்ந்ததாகத் தெரிகிறது. கொலோ 3:22 தொ என்ற பகுதி யில் ''ஆண்டவருக்கு அஞ்சுதல்'' ''நேர்மை யான உள்ளம்'' ''மனிதருக்காக'' போன்ற பதங்கள் காணப்படுகின்றன. ஆதி 2:24; யாத் 20:12 ஆகிய பகுதிகளை எபே 5:31தொ எடுத்துக் கூறுவதோடு மற்றப் பழைய ஏற் பாட்டுச் சிந்தனைகளையும் மொழித்தன்மை யையும் கொண்டுள்ளது.

4. சமூக வாழ்விற்குப் புதிய ஏற்பாடு காட்டும் நெறிமுறைகள்:-

மேய்ப்புப்பணித் திருமுகங்கள் குடும்ப நெறிமுறைகள் சமூக வாழ்வில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குத் தெளிவாக விளக்கம் கொடுக்கின்றன. 1 தீமோ 3:4-15-இல் ஓர் ஆயர் முதன் முதலில் தன்னுடைய குடும்பத்தைக் கட்டிக் காத்து வழிநடத்தக் கூடியவராக இருக்தல் வேண்டும். அப்பொழு துதான் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மந்தையை அவரால் நல்ல முறையில் வழி நடத்த முடியும். இந்தப் பெரிய குடும்பத்தில் பெண்களும், பெரியவர்களும், பெற்றோர்க ளுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் பெற வேண்டும். இளைஞர்களும், பெண்களும் சகோதர சகோதரிகளைப் போலும் நடத்தப் படவேண்டும் (1 தீமோ 5:1-2; மத் 23:8; மாற் 3:35). அதேபோல் ஒரே விசுவாசத்தில் பங்கு கொண்ட தலைவர்கள் தங்கள்கீழ்ப் பணிபுரி யும் அடிமைகளை அன்பாய்ச் சகோதரனைப் போல் வழிநடத்த வேண்டும் (எபே 6:9; கொலோ 4:17). அடிமைகளும் தங்கள் தலை வர்களுக்குரிய மரியாதையைச் செலுத்த வேண்டும் (1 திமோ 6:2).

இவ்வாறாக இருந்த சமூகநெறிக் கோட்பா டுகள் திருச்சபையின் மக்களிடையேயும் மற் றவர்களுடனும் ஒரு நல்ல உறவை ஏற்படுத் தத் தூண்டுகின்றன. அதே போல் விசுவாசம் பெற்ற அடிமைகள் அதைப்பெறாத தலை வர்களிடம் வேலை செய்கின்றபோது தங் கள் நடத்தையால் இறைவனுடைய பெய ருக்கும் திருச்சபையின் போதனைக்கும் இழுக்கு ஏற்படாதவாறு நடந்துகொள்ள வேண்டும் (1 திமோ 6:1; தீத் 2:9-10; 1 பேதுரு 2:18). அதேபோல் கிறிஸ்தவர்களும் விசுவாசத்தைப் பெறாத ஆட்சியாளர்களுக் காக வேண்டிக்கொள்வதோடு அவர்களுக் குக் கீழ்ப்படியவும் வேண்டும் (1 தீமோ 2:1; தீத் 3:1; 1 பேதுரு 2:13). எல்லாவற்றுக்கும் மேலாகக் கிறிஸ்தவர்கள் நெறியற்ற முறை யில் துன்புறுத்தப்பட்டால் அதை அவர்கள் கிறிஸ்துவைப்போல் ஏற்றுக்கொள்ள வேண் டும். அதைத் தவிர்த்துத் தண்டிக்கப்படக் கூடிய தீச் செயல்களைச் செய்யக் கூடாது (1 பேதுரு 3:13; 4:13). சமூகத்தில் ஒழுக்கநெறிக ளைச் செயல்படுத்த அரசாங்க அதிகாரத்தை யும் பயன்படுத்தலாம்.

5. பிற ஒழுக்க நெறிப்பட்டியல்கள்:-

சில இடங்களில் குடும்ப சமூக ஒழுக்க நெறிப் பட்டியல்களைத் தொடர்ந்து விலக்கப் பட வேண்டிய தீச்செயல்கள் கொடுக்கப்பட் டுள்ளன (எபே 5:3-8; கொலோ 3:5-9; 1 தீமோ 1:9-10; தீத் 3:3; 1 பேதுரு 4:3). சில இடங்களில் புண்ணியங்களுக்கெதிரான தீச் செயல்கள் தொகுக்கப்பட்டுள்ளன (கலா 5:22-23; கொலோ 3:12; எபே 4:25; 5:2; தீத்

3:2). அறிஞர் சிலர் இத்தகைய ஒழுக்க நெறிப் பட்டியல்கள் ஸ்தோயிக்கு மெய்யியலின் பாதிப்பு எனக் கருதுகின்றனர். உரோ 1:28தொ-இன் தலைப்பாகிய தகாத செயல்கள் கிரேக்க யூதத்துவத்தின் பாதிப்பு ஆகும். 1 தீமோ 3:2-4-இல் வந்துள்ள பாதிக்கும் மேற்பட்ட கருத்துக்கள் எழுபது நூலில் காணப்படவில்லை. மாற் 7:21-22 இதற்கு மேலும் ஓர் உதாரணமாகும். எபிரேய எண்ணப்படி தீய செயல்களும் தீய இச்சைகளும் உள்ளத்திலிருந்தே எழுகின்றன (மத் 5:28; ஆதி 6:5).

சாக்கடல் ஏடுகளில் காணப்படும் ஒழுக்க நெறிப் பட்டியலில் மனிதனின் உள்ளத்தில் இருந்தே தீமைகள் எழுகின்றன என்பதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. ஒரு வேளை இது அந்நியர்களின் கருத்துப் பாதிப்பாகக் கூட இருக்கலாம்.

முடிவாக ஒழுக்கநெறிக் கோட்பாடுகள் மனிதனின் உள்ளத்தையே அடிப்படை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன (மாற் 7:21-22; லூக் 6:35). எல்லாப் புண்ணிய நெறிகளையும் ஆவியின் கனிகளாகப் பவுல் பட்டியல் படுத்துகின்றார் (கலா 5:22-23).

ஒளியும் இருளும் (LIGHT AND DARKNESS)

விவிலிய வெளிப்பாடு முழுவதும் ஒளி பற்றிய கருத்து காணப்படுகிறது. இருளையும் ஒளியையும் பிரித்ததே படைத்தவரின் முதல் செயலாகும் (ஆதி 1:3 தொ). மீட்பு வரலாற்றின் இறுதியில், புதியபடைப்பானது (திருவெளி 21:5) இறைவனையே ஒளியாகக் கொண்டிருக்கும் (21:23). இரவின் இருளுடன் மாறுதலடைகின்ற உலக ஒளியினின்று அழியாத ஒளியாகிய இறைவனிடம் மனிதன் கடந்து செல்வான் (1 யோவா 1:5). இத்தகைய இரு எல்லைகளுக்கு இடையில் உண்டாகின்ற வரலாறு, வாழ்விற்கும் சாவிற்கும் இடையில் ஏற்படும் போராட்டத்தைப் போன்று, இருளும், ஒளியும் ஒன்றையொன்று நேரெதிராக எதிர்ப்பதான நிலையிலான அமைப்பைக் கொண்டிருக்கும் (யோவா 1:4 தொ). ஈரானிய சிந்தனையில் உள்ளதைப் போன்று, இந்த நாடகப் பாணியான உலக நோக்கை எந்த மீபௌதீக இருமைக் கோட்பாடும் இறுக்கமுடையதாக்குவதில்லை. ஆனால், இக்கிளர்ச்சியில் மனிதனின் பங்கு எந்த அளவும் குறைந்ததல்ல; அவனுடைய இறுதி முடிவானது ஒளி மற்றும் இருள், வாழ்வு மற்றும் சாவு ஆகிய சொற்களால் விளக்கப்பட்டுள்ளது. மறைநூல்கள் பயன்படுத்தும் சமய அடையாளத்தில் இக்கருத்து மைய இடத்தினை வகிக்கின்றது.

I பழைய ஏற்பாடு:-

1. ஒளியின் இறைவன்:-

அ) ஒளியைப் படைத்தவர்:- மற்றவற்றைப் போன்றே ஒளியும் இறைவனின் படைப்பாகவே உள்ளது; எடுத்துக்காட்டாக, பகலின் ஒளியானது மூலக் குழப்பத்திலிருந்து எழுகிறது (ஆதி 1:1-5); பூமியை இரவிலும் பகலிலும் ஒளியால் நிரப்பும் விண்மீன்கள் ஒளிர்விக்கின்றன (1:14-19). இறைவன் அதனை அனுப்புகிறபோதும், திரும்ப அழைக்கும் போதும், ஒளியானது அச்சத்துடன் கீழ்ப்படிகிறது (காண் பாரூ 3:33). அதே இறைவன் இருளையும் ஒளியினையும் அமைத்தமையால் ஒளியிலிருந்து மாறுபடும் இருளும் இதே நிலையிலேயே உள்ளது (ஏச 45:7; ஆமோ 4:13). ஆகவே இருளும் ஒளியும் படைத்தவருக்கு ஒரே புகழ்ச்சிக் கீதத்தையே பாடுகின்றன (சங் 19:2 தொ; 148:3; தானி 3:71 தொ). இவ்வாறாக அனைத்துப் புராணக் கருத்துகளும் இவற்றிலிருந்து நீக்கப்படுகின்றன. ஆயினும், இருளும் ஒளியும் தனிப்பட்ட அடையாளப் பொருளைக் கொண்டிருப்பதை இது தடுக்கவில்லை.

ஆ) ஒளியால் உடுத்தப்பட்ட இறைவன்:- மற்றப் படைப்புகளைப் போன்று, ஒளியும் இறைவனின் சில கூறுகளை வெளிப்படுத்தும் அடையாளமாகியது. ஒளி இறைவனது மகிமையைப் பிரதிபலிக்கின்றது. இந்நிலையில், ஒளி இறைத்தோற்ற மகிமையை எடுத்துக்காட்டும் இலக்கிய யுக்திகளில் ஒன்றாகும். ஒளியானது இறைவனின் உடையாகும்

(சங் 104:2). அவர் தோன்றும் பொழுது, ''அவருடைய பேரொளி பகலைப்போல் இருக்கிறது, அவர் கையினின்று ஒளிக்கதிர்கள் வெளிப்படுகின்றன'' (அப 3:3-4). அவரது அரியணையைத் தாங்கியுள்ள வானத்தின் அமைப்பானது நீலமணிக்கல் போல ஒளி வீசுகின்றது (யாத் 24:10; எச 1:22). தீயினால் சூழப்பட்டவராகவும் (ஆதி 15:17; யாத் 19:18; 24:17; சங் 18:9; 50:3), புயலிலிருந்து வெளிப்படும் மின்னலைப்போலவும் (எச 1:13; சங் 18:15) அவர் வர்ணிக்கப்படுகிறார். இத்தகைய உயிர்ச்சித்திரமான அடையாள வர்ணனையானது இறைபிரசன்னத்திற்கும், மனிதரில் பளிச்சிடும் ஒளி ஏற்படுத்தும் எண்ணத்திற்கும் இடையில் ஒரு இணைப்பை அமைக்கின்றது. இருளைப் பொறுத்தவரை அதனை ஆராய்ந்து அங்கு என்ன நடக்கிறது என்று பார்ப்பதால், இறைவனின் பிரசன்னம் அங்கிருந்து விலக்கப்படுவதில்லை (சங் 139:11 தொ; தானி 2:22). ஆனாலும், முழுமையான இருளினைக் குறிக்கும் ''செயோல்'' என்னும் பாதாளமானது இறைவனின் கரத்தினின்று பிரிக்கப்பட்ட மனிதர்கள் இருக்கும் இடத்தினைக் குறிப்பிடுகின்றது (சங் 88:6-7.13). இத்தகைய இருளில் இறைவன் காண்கிறார், ஆனால் காணப்படுவதில்லை; இருக்கிறார், ஆனால் வெளிப்படையாக அல்ல.

இ) இறைவனே ஒளி:- ஒளியின் அடையாளம் பற்றி மேற்குறிப்பிட்ட விளக்கத்திற்குப் பின்னும், ஒளியை இறைவன் தன்மைக்குச் சாற்றிக்கூற 'ஞான ஆகமம்' வரை காத்திருக்க வேண்டியதிருந்தது. இறைவனின் மகிமையினின்று பொழியப்படுகின்ற ஞானமானது, முடிவில்லா ஒளியின் பிரதிபலிப்பாகவும், படைக்கப்பட்ட அனைத்து ஒளியிலும் உயர்வானதாகவும் உள்ளது (ஞான 7:27. 29-30). புதிய ஏற்பாட்டில் முழுமையாகப் பயன்படும் அளவில் இவ்வடையாளம் இங்கு ஓரளவு முன்னேற்றம் அடைகின்றது.

2. ஒளி, இறைவனின் கொடை:-

அ) வாழ்வோரின் ஒளி:- ''ஒளி மகிழ்ச்சியூட்டும்; கதிரவன் தோற்றத்தைக் கண்டு கண்கள் களிக்கும்'' (திருவுரை 11:7). இது ஒவ்வொருவருடைய அனுபவம் ஆகும். இத்தகைய பொதுவான அனுபவத்தினின்று ஒளிக்கும் வாழ்வுக்கும் இடையிலுள்ள நெருங்கிய உறவு உருவாகின்றது. பிறப்பது ''ஒளியைக் காண்பதாகும்'' (யோபு 3:16; சங் 58:9). இறை ஒளியைக் கண்டிராத குருடன் (தோபி 3:17; 11:8) மரணத்தின் முன்சுவையைக் கொண்டிருக்கிறான் (5:11-12). செயோல் இருளின் அரசாக இருப்பதனால் (சங் 88:13), சாவின் பிடியினின்று இறைவனால் விடுவிக்கப்பட்ட நோயாளி மனிதன், தன்மீது மீண்டும் 'வாழ்வின் ஒளி ஒளிர்வதைக் கண்டு' மகிழ்ச்சியடைகிறான் (யோபு 33:10; சங் 56:14). இவ்வாறு மனிதனுக்கு இருளும் ஒளியும் எதிர்மாறான பொருளைக் கொண்டிருக்கின்றன; இதுவே அவற்றின் அடையாளத் தன்மைக்கு அடிப்படையாகும்.

ஆ) ஒளியின் அடையாளம்:- முதலாவதாக, இறை மகிமைத்தோற்றத்தின் ஒளியானது, பங்கு பெறுவோருக்கு உயிருள்ள அனுபவப் பொருளை அளிக்கின்றது. ஒளியானது, இறைவனின் மாட்சியை மனிதனுக்கு நெருக்கமான சொற்களால் அழுத்திக் கூறலாம் (யாத் 24:10-11) அல்லது மனிதன் அவரது அச்சம் தரும் தன்மையை உணரச் செய்யலாம் (அப 3:3 தொ). இறைபிரசன்னத்தை மறைபொருளாக வெளிப்படுத்தும் நிலைக்கு, சுடர்வீசும் தோற்றத்தின் உருவகமானது உறுதியூட்டும் தயாள மனப்பான்மையினைச் சேர்க்கின்றது (சங் 4:7; 31:17; 89:16; எண் 6:24 தொ; பழ 16:15). ஆனால் எல்லாவற்றையும் விட, மனிதனுடனான இறைபிரசன்னமானது பாதுகாக்கும் பிரசன்னமாகும். தமது சட்டத்தின் மூலம், மனிதருடைய பாதையை ஒளிமயமாக்குகிறார் (பழ 6:23; சங் 119:105); எனவே, அவர் வழிகாட்டும் விளக்காக உள்ளார் (யோபு 29:3; சங் 18:29). கண்களில் ஒளியேற்றுவதன் மூலம் துன்பங்களினின்று காப்பாற்றுகிறார் (சங் 13:4). இவ்வாறு, அவர் மனிதனுடைய ஒளியாகவும் மீட்பாகவும் உள்ளார் (27:1). இறுதியாக அவர் நீதிமான்களை ஒளிமிக்க நாளின்

மகிழ்ச்சிக்கு நடத்திச் செல்லுகிறார் (ஏச 58:10; சங் 36:10; 97:11; 112:4); ஆனால் தீயவன் இருளில் தடுக்கி விழுந்து (ஏச 59:9 தொ), தனது விளக்கு அணைந்து போவ தைக் காண்கிறான் (பழ 13:9; 24:20;யோபு 18:5 தொ). முடிவில், இருளும் ஒளியும் மனிதனுடைய இறுதிநிலையின் இருபகுதிக ளாகிய துன்பம் மற்றும் இன்பத்தினைக் குறிக்கின்றன.

இ) ஒளி பற்றிய உறுதிமொழி:- இருளும் ஒளியும் பற்றிய அடையாளம் இறைவாக்கி னர்களின் நூல்களில் இறுதிக்கால நோக்கில் காணப்படுவது வியப்பளிக்க வேண்டிய தில்லை. எகிப்தியருக்கு மிரட்டுகிற தொல் லையாக இருந்த இருளானது (யாத் 10:21), யாவேயின் நாளை அறிவிக்கும் அடையா ளங்களில் ஒன்றாகும் (ஏச 13:10; எரே 4:23; 13:16; எச 32:7; ஆமோ 8:9; யோவே 2:10; 3:4; 4:15). பாவ உலகிற்கு இந்நாளானது ஒளியாக இல்லாமல் இருளாக இருக்கும் (ஆமோ 5:18; ஏச 8:21 தொ).

ஆயினும், தாழ்ந்து துன்புற்ற நிலையி லுள்ள எஞ்சிய நீதிமான்களுக்கு யாவேயின் நாள் மீட்பின் நாள் என்ற மற்றொரு கூறைக் கொண்டிருக்கும். அப்போது ''இருளில் நடக்கும் மக்கள் பேரொளியைக் காண்பர்'' (ஏச 9:1; 42:7; 49:9; மீக். 7:8 தொ). உருவகமா னது தெளிவான பொருளைக் கொண்டுள் ளது. ஆனால் பல்வேறு விளக்கங்களுக்கு இடமளிக்கிறது. முதலாவதாக, இது பகல் இரவு என்னும் மாற்றங்கள் இல்லாத (செப் 14:7), நீதியின் கதிரவனால் ஒளிமயமாக்கப் பட்ட (மலா 3:20), வியப்புக்குரிய நாளின் தெளிவான நிலையைச் சுட்டுகிறது (ஏச 30:26). ஆயினும், புதிய எருசலேமின் மீது தோன்றுகின்ற புதிய விடியலானது (60:1 தொ) இன்றைய உலகைச் சேர்ந்ததிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். உயிருள்ள இறை வனே அவருக்குரியவர்கள் மீது ஒளி வீசு வார் (ஏச 2:5; 51:4; காண். பாரூ 4:2). அவருடைய ஊழியன் நாடுகளுக்கெல்லாம் ஒளியாக இருப்பார் (ஏச 42:6; 49:6).

எனவே அந்த உன்னத நாளில் யாத்திரை யின் வரலாற்றில் குறிப்பிடப்பட்டது போன்று, நீதிமான்களுக்கும் பாவிகளுக்கும் இருவகை முடிவுகள் தோன்றும். அது தீய வர்களுக்கு இருளும், புனிதர்களுக்கு ஒளி யும் அளிக்கும் நாளாக இருக்கும் (ஞான 17:1-18:4). நீதிமான்கள் ஆகாயம் மற்றும் விண்மீன்களைப்போன்று ஒளிவீசும் வேளையில், பாவிகள் சேயோலின் இருள் சூழ்ந்த துன்பத்தில் மூழ்கியிருப்பர் (தானி 12:3; ஞான 3:7). இது ஒளியின் இறைவனு டைய சாயலினால் மறுஉருவான உலகினை முன்னோக்குகிறது.

II புதிய ஏற்பாடு:

1. கிறிஸ்து உலகின் ஒளி:-

அ) வாக்குறுதியின் நிறைவேற்றம்:- இறைவாக்கினர்களால் வாக்களிக்கப்பட்ட இறுதிக்கால ஒளியானது, புதிய ஏற்பாட்டில் உண்மையாக உருவாயிற்று. இயேசு கலிலே யாவில் போதிக்கத் தொடங்கியபொழுது, ஏச 9:1-இன் இறைவாக்கு நிறைவேறிற்று (மத் 4:16). இறைவாக்குகளின்படி அவர் உயிர்த்தெழுந்தது, ''தம்மினத்தாருக்கும் புற வினத்தாருக்கும் ஒளியை அளிப்பதற்கே யாம்'' (அ.ப. 26:23). இவ்வாறாக, லூக்கா நற்செய்தியில் காணப்படும் பாடல்கள், அவ ரது குழந்தைப் பருவத்திலிருந்தே அவரை இருளில் இருப்போரை ஒளிக்குக் கொண்டு வரும் இளஞாயிறாகவும் (லூக் 1:78 தொ; மலா 3:20; ஏச 9:1; 42:7), நாடுகளுக்கு இருள் அகற்றி ஒளிமயமாக்கும் ஒளியாகவும் (லூக் 2:32; ஏச 42:6; 49:6) விவரிக்கின்றன. புற வினத்தாருக்கு நற்செய்தி அறிவிப்பதற்காகப் பவு லின் அழைப்பும் இதே இறைவாக்கு வரிசை யில் அமைந்திருக்கும் (அ.ப.13:47; 26:18).

ஆ) கிறிஸ்து ஒளியாக வெளிப்படுத்தப் படல்:- முதன்மையாகத் தமது சொற்களா லும், செயல்களாலும் கிறிஸ்து தம்மை உல கின் ஒளியாக வெளிப்படுத்துகிறார். பிறவி யிலேயே குருடனான மனிதனின் நிகழ்ச்சி யில் யோவான் குறிப்பிடுவது போல (யோவா 9), குருடரைக் குணமாக்குதல் (மாற் 8:22-26) இங்கு ஒரு சிறப்பான பொரு

ளைக்கொண்டுள்ளது. ''இவ்வுலகில் இருக்கும் வரை நான் உலகிற்கு ஒளி'' என்று இயேசு அங்குக் குறிப்பிடுகிறார் (யோவா 9:5). மற்றொரு இடத்தில், ''என்னைப் பின் செல்பவன் இருளில் நடவான். உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்'' (8:12) என்கிறார். ''என்னில் விசுவாசங் கொள்பவன் எவனும் இருளிலேயே இருந்துவிடாதபடி நான் ஒளியாக இவ்வுலகத்திற்கு வந்தேன்'' (12:46). இறைவார்த்தையாகவும் மனிதர்களின் உயிராகவும் ஒளியாகவும், உலகிற்கு வருகை புரிந்ததன் மூலம் ஒவ்வொரு மனிதனையும் ஒளிர்விக்கும் ஒளியாகவும் (யோவா 1:4.9) தம்மிலேயே அவர் இருப்பதிலிருந்து, அவரது ஒளிமயமாக்கும் செயல் தொடங்குகின்றது. அவ்வாறே, அவரைச் சுற்றி நிகழும் செயல்களும், இருளுக்கும் ஒளிக்கும் இடையிலான போராட்டமே யாகும். இருளில் ஒளிரும் ஒளியினைப் (யோவா 1:4), பாவ உலகம் அழிக்க முயல்கிறது; ஏனெனில், மனிதனுடைய செயல்கள் தீயவையாக இருப்பதால் (3:19) அவன் ஒளியைவிட இருளையே விரும்புகிறான். இறுதியாக, பாடுகளின் நேரத்தில் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக யூதாஸ் பந்தியினைவிட்டு எழுந்து செல்லுகையில், ''அப்பொழுது இரவு'' (13:30) என்று யோவான் உள்நோக்கத்துடனேயே கூறுகின்றார்; இயேசுவும் கைது செய்யப்படும்போது, ''இது உங்கள் நேரம்; இருள் ஆட்சி புரியும் நேரம்'' என்றே கூறுகின்றார் (லூக் 22:53).

இ) இயேசு உருமாறுதல்:- இயேசு உலகில் வாழ்ந்த காலத்தில், அவர் தம்மகத்தே கொண்டிருந்த இறை ஒளியானது, தாழ்மையான ஊனுடலின்கீழ் மறைக்கப்பட்டிருந்தது. ஆனாலும், சிறப்புமிக்க ஒரு சிலருக்கு ட்டும் அவரது உருமாற்றத்தினால் இறைஒளி வெளிப்படுத்தப்பட்டது. அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிவீசியது; அவர் ஆடைகள் ஒளியைப்போல் வெண்மையாயின (மத் 17:2). இனி அவை அழிந்து போகும் மனித்த்தின் வெறும் பகுதிகள் அல்ல. பவுலுக்கு மிளிரும் ஒளியில் அளித்த காட்சியான இயேசுவின் உயிர்த்த நிலையின் முன்னோடியாக இது உள்ளது (அ.ப.9:3; 22:6; 26:13). உருமாற்றமானது பழைய ஏற்பாட்டு இறைத்தோற்ற மகிமைக்குரிய அடையாளத்தினைச் சார்ந்ததாகும். கிறிஸ்துவின் முகத்தில் வீசிய ஒளியானது, இறைவனுடைய மகிமையின் ஒளியே ஆகும் (2 கொரி 4:6). இறைமகன் என்னும் நிலையில் அவர், அவரது 'மகிமையின் பிரதிபலிப்பாக' இருக்கிறார் (எபி 1:3). ஒளியாகிய கிறிஸ்துவின் மூலம், இறைத்தன்மையானது வெளிப்படுத்தப்படுகிறது. இறைவன் அணுகமுடியா ஒளியில் உறைபவர் மட்டுமல்லர் (1 தீமோ 6:16), மற்றும் 'ஒளியின் தந்தை' என்று மட்டும் அழைக்கப்படுபவர் மட்டுமல்லர் (யாக் 1:5), மாறாக, யோவான் விளக்குவது போல ''இறைவன் ஒளியாய் இருக்கிறார், அவருள் இருள் என்பதே இல்லை'' (1 யோவா 1:5). முதல் நாளில் படைக்கப்பட்ட உலகின் ஒளியிலிருந்து (யோவா 1:4), நமது இதயங்களை ஒளிமயமாக்கும் கிறிஸ்துவின் ஒளிவரை (2 கொரி 4:6), ஒளியாகிய அனைத்தும் அவரிடமிருந்தே வருகின்றன. இவ்வொளிக்குப் புறம்பான, இரவின் இருள், சேயோவின் பாதாளம் மற்றும் மரணம் ஆகியவற்றின் இருள், சாத்தானின் இருள் ஆகிய அனைத்தும் இருளின் அரசைச் சேர்ந்தவையாகும்.

2. ஒளியின் பிள்ளைகள்:-

அ) இருளுக்கும் ஒளிக்கும் இடையில் மனிதன்:- இயேசுவே உலகின் ஒளி என்னும் வெளிப்பாடானது, இயல்நிலை கடந்த முன்னோக்கில் அல்லாது, ஒழுக்க முறை அளவில் இருள்-ஒளி என்னும் எதிர் முரண் நிலையை வெளிக் தொணர்கிறது. ஒளியானது இறைவன் மற்றும் கிறிஸ்துவின் அரசை நீதியும் நேர்மையும் கொண்டதாக விளக்குகிறது. சாத்தான் சில நேரங்களில் ஒளியின் தூதனாகத் தன்னை வெளிப்படுத்தி மனிதனை ஏமாற்றினாலும் (2 கொரி 11:14), இருளானது சாத்தானின் ஆட்சியைத் தீயதாகவும் இறைபற்றற்றதாகவும் குறிப்பிடுகின்றது (2 கொரி 6:14-15). 'இருளின் மகன்' அல்லது 'ஒளியின் மகன்' ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்துகொள்ளும்படியாக மனிதன் இரண்

டுக்குமிடையில் வாழ்கிறான். கும்ரான் குழுவினர் இறுதிக்காலப் போருக்கு இவ்வர்ணனையினை ஏற்கெனவே பயன்படுத்தியுள்ளனர். தாம் உருவாக்கிக் கொண்டிருந்த அரசினின்று இன்றைய உலகை வேறுபடுத்திக் காட்ட இயேசு இதனைப் பயன்படுத்துகிறார். அவரது எண்ணத்தில், மனிதர்கள் 'உலகின் மக்கள்' என்றும் 'ஒளியின் மக்கள்' என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர் (லூக் 16:8). ஒளியாகிய கிறிஸ்து தோன்றும்போது இப்பிரிவினை தெளிவாகும். தீமை புரிவோர், தங்கள் செயல்கள் வெளிப்பட்டுவிடும் என்ற எண்ணத்தில் ஒளியைவிட்டு விலகி ஓடுவர். உண்மையில் செயல்படுவோர் ஒளியை நோக்கி வருவர் (யோவா 3:19 தொ). ஒளியின் மக்களாக உருவாவதற்காக அவர்கள் ஒளியினை விசுவாசிக்கின்றனர் (12:36).

ஆ) இருளினின்று ஒளிக்கு:- பிறப்பினால் அனைத்து மனிதரும், குறிப்பாகத் 'தம்து சிந்தனைகளில் இருட்டடிக்கப்பட்ட' புற இனத்தார் (எபே 4:18), இருளின் ஆட்சிக்கு உட்பட்டவர்களே. 'நம்மை இருளினின்று வியத்தகு ஒளிக்கு அழைத்தவர்' இறைவனே (1 பேதுரு 2:9). இருளின் ஆட்சியினின்று நம்மை வெளிக்கொணர்ந்த அவர், ஒளியில் புனிதர்களின் ஊழியில் பங்கு பெற, அவரது மகனின் அரசிற்கு நம்மை மாற்றினார் (கொலோ 1:12-13). திருமுழுக்கில் 'கிறிஸ்துவினால் ஒளிமயமாக்கப்பட்டு' (எபே 5:14), 'ஒளிக்குக் கொண்டு வரப்பட்ட நாம்' (எபி 6:4) அனுபவித்த உறுதியான அருள் இதுவேயாம். முன்பு இருளில் இருந்த நாம் இப்போது ஆண்டவரில் ஒளியாக உள்ளோம் (எபே 5:8). 'ஒளியின் பிள்ளைகளாக வாழ்வது' (எபே 5:8; 1 தெச 5:5) நமது நடத்தையின் மேல்வரிச்சட்டத்தை நிர்ணயிக்கிறது.

இ) ஒளியின் மக்களுடைய வாழ்வு:- பவுலின் மேற்குறிப்பிடப்பட்ட ஊக்குரை ஏற்கனவே இயேசுவால் போதிக்கப்பட்டதுவே (யோவா 12:35-36). உடலின் விளக்காகிய கண்களை ஒருவன் ஒதுக்காமல் இருப்பது போல, தனது உள்ளொளியானது இருளடைவதை மனிதன் அனுமதிக்கக்கூடாது (மத் 6:22-23). இந்த அறிவுரையைப் பவுல் வழக்கமாக எடுத்துக் கூறுகிறார். இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக (உரோ 13:12); இல்லாவிடில், அந்நாள் உங்களைத் திடுக்கிடச்செய்யும் (1 தெச 5:4-8). நல்லவை, நேரியவை மற்றும் உண்மையானவை அனைத்தும் ஒளியின் செயல்களாகும்; இருளின் இழிசெயல்கள், அனைத்துவகைப் பாவங்களையும் தம்முள் கொண்டிருக்கும் (எபே. 5:9-14) என்பதில் அவரது அனைத்து ஒழுக்கநெறிப்போதனைகளும் உள்ளடங்கும். யோவானின் கோட்பாடும் இத்தகையதே. ஒளியாகிய இறைவனில் இணைந்திருக்க, 'ஒளியில் நடந்து செல்லுங்கள்' (1 யோவா 1:5 தொ). ஒரு மனிதன் இருப்பது ஒளியிலா அல்லது இருளிலா என்பதை அறிய உதவும் அளவுகோல் சகோதர அன்பேயாகும் (2:8-11). ஒளியின் உண்மையான மகனாக வாழும் மனிதன், தன்னுள் இருக்கும் இறை ஒளியை மனிதர்முன் ஒளிரச் செய்கிறான். உலகின் ஒளியாகிய மனிதன் தனது பங்கிற்கு (மத் 5:14), கிறிஸ்து தனக்கு அளித்த பணியை ஏற்றுக்கொள்கிறான்.

ஈ) முடிவற்ற ஒளியினை நோக்கி:- ஒளிக்கு அர்ப்பணிக்கப்பட்ட மனிதன், இறைவன் தமது அரசில் நீதிமானுக்கு வாக்களித்த சிறப்புமிக்க மாற்றத்தினை எதிர்பார்க்கலாம் (மத். 13:43). இறைவாக்கினர்களின் கருத்துப்படி, அவர்கள் இறுதியாகச் சென்றடையும் விண்ணக எருசலேம் இறை ஒளியினை அவர்கள் மீது ஒளிர்விக்கும் (திருவெளி 21:23 தொ; ஏச 60). பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்டோர் இறைவனின் திருமுகத்தைக் கண்டு தியானிப்பதால் இவ்வொளியினால் ஒளிர்விக்கப்படுவர் (திருவெளி 22:4-5). ஒளியின் மக்களுடைய நம்பிக்கை இத்தகையதாகும். தனது இறந்த உறுப்பினர்களுக்காக இறைவனிடம் திருச்சபை செய்யும் செபமும் இத்தகையதே.

ஒற்றர்கள் (SPIES)

வேவுக்காரர்கள், தூதர், உளவுக்காரர் என்போர் எதிரிகளின் நாடுகளிலும் வேற்று நாடுகளிலும் தங்கி இரகசியமாகத் தங்கள் சொந்த நாட்டின் நலத்திற்குத் தேவைப்படுகின்ற நாட்டு நடப்புகளையும் செய்திகளையும் சேகரித்து அனுப்புவோர் ஆவர். "ஒற்றர்களு"க்கான எபிரேய மூலச் சொல்லின் சாதாரணப் பொருள் இரகசிய வழிப்போக்கர்கள் அல்லது அயல்நாட்டு வணிகர்கள் என்பதாகும் (எண் 14:6; 1 அர 10:15; 1 நாள் 9:14). இக்கால நடைமுறையின்படியே பழங்காலத்திலும் பகைநாட்டாரின் படைகளின் வலுவையும் வலுவின்மையையும் உளவு பார்த்துத் தெரிவிப்பதற்காக ஒற்றர்களை அனுப்பும் வழக்கம் இருந்தமை தெரிகின்றது (ஆதி 42:9.12). எண் 13; யோசு 2:1; 2 சாமு 15:10 - ஆகிய குறிப்புகளும் உளவு பார்க்கும் ஒற்றர்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. ஒற்றர்கள் செய்திகள் சேகரிப்பதற்குமட்டுமன்று வதந்திகளைப் பரப்புவதற்கும் பயன்படுத்தப்பட்டனர் (2 சாமு 15:10). புதிய ஏற்பாட்டில் காணும் ஒற்றர்களைப் பற்றிய குறிப்புகள் இரண்டு; லூக் 20:20; எபி 11:31.

ஒன்றிப்பு (COMMUNION)

நற்கருணை ஒன்றிப்பில் கிறிஸ்துவன் தன்னுடைய விசுவாசத்தின் தனித் தன்மையை வெளிப்படுத்துகிறான். அதாவது விவரிப்பதற்கு அப்பாற்பட்ட முறையில் இறைவனுடன் கொண்டுள்ள நெருங்கிய மற்றும் உண்மையான தொடர்பின் அறுதியான நிலையை வெளிப்படுத்துகிறான். இந்தத் தனிச்சிறப்பான அனுபவம் விவிலிய மொழியில் பிரதிபலிக்கிறது. இந்த அனுபவத்தை விவரிக்கும் சிறப்புச்சொல் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு வெளிப்படுத்திய இறைவனோடு கிறிஸ்தவன் கொள்ளும் உறவையும் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ளேயே கொண்டிருக்கும் உறவையும் ஒன்றித்த உறவு என்று பொருள்படும் ''கொய்னோனியா'' என்ற கிரேக்கச் சிறப்புச் சொல் எடுத்துக் கூறுகிறது.

இறைத்தலைமையுடனான ஒன்றிப்பிற்கான ஆர்வமானது, மனிதனுக்கு ஒன்றும் புதிதல்ல. பெரும்பாலும் இறைவனுடன் ஒன்றிப்பதைச் சமயம் தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் இறைவன் தம்முடைய விசுவாசிகளுடைய உணவில் பங்குகொள்வதாகக் கருதி அளிக்கப்படும் பலிகள் அல்லது புனித உணவு என்னும் வடிவை அடிக்கடி சமயம் ஏற்கின்றது. மற்றொரு புறத்தே உடன்படிக்கை உணவானது சகோதரத்துவத்தின் பிணைப்பு அல்லது நட்பு ஆகியவற்றை முத்திரையிட முயல்கிறது.

ஒரே இணைப்பாளராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே ஒன்றிப்பிற்கான ஆவலை நிறைவேற்ற முடியும். ஆனால் பழைய ஏற்பாடானது, மனிதாவதாரத்திற்கு முன்பு கடக்க முடியாததாகிய இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பரந்த இடைவெளியைக்கவனத்துடன் காத்து வந்தாலும், மனிதனுடைய ஆசையை நிறைவேற்றுதற்குத் தயாரித்து வந்தது.

1. பழைய ஏற்பாடு:-

அ) வழிபாடு:- இஸ்ராயேலின் வழிபாடானது இறைவனுடனான ஒன்றிப்பில் புக வேண்டியதன் தேவையை வெளிப்படுத்துகிறது. இந்த அவசியமானது, பலிப்பொருளின் ஒரு பகுதியானது பலியிடுபவருக்கே திருப்பி அளிக்கப்படுகின்ற ''சமாதானப்பலிகளில்'' முக்கியமாக வெளிப்படுத்தப்படுகிறது. இப்பகுதியை உண்பதன் மூலம், மனிதன் இறைவனுடைய விருந்துக்கு அனுமதிக்கப்படுகிறான். இந்த உணவில் பங்கு கொள்வதை இறைவனோடு ஒன்றிப்பாகப் பழைய ஏற்பாடு ஒருபோதும் கூறவில்லை. மாறாக இறைவன் முன் எடுக்கப்பட்ட உணவாக மட்டுமே விவரிக்கிறது (யாத் 18:12; 24:11). பல மொழிபெயர்ப்புகள் இதை வெறுமனே ''ஒன்றிப்புப் பலிகள்'' (லேவி 3) என்றே அழைத்தன.

ஆ) உடன்படிக்கை:- உண்மையான பரிமாற்றத்திற்காக அமைப்பு மற்றும் வாழ்வின்

சமுதாயம் ஆகியவற்றை இறைவன் தம் மக்களுக்கு அளிக்காதிருந்திருந்தால் ஒன்றிப்பிற்கான தேவையானது ஒரு வெறுமையான கனவாகவே இருந்திருக்கும். உடன்படிக்கையில் யாவே இஸ்ராயேலின் வாழ்விற்குப் பொறுப்பேற்று, இஸ்ராயேலின் அக்கறைகளைத் தமக்குரியவை ஆக்குகிறார் (யாத் 32:22). அவர் இஸ்ராயேலைச் சந்தித்து (ஆமோ 3:2) அவன் இதயத்தை வெல்ல விரும்புகிறார் (ஓசே 2:16). ஒன்றிப்பிற்கான இத்திட்டமானது உடன்படிக்கையில் தெளிவாகுகிறது. தமது முன்முயற்சியைச் செயல்படுத்த இறைவன் பயன்படுத்தும் அமைப்பினின்று தெளிவாகிறது. மோசேயுடன் நீண்ட உரையாடல்கள் (யாத் 19:20-24:12-18) மற்றும் அவர் மோசேயைச் சந்திக்கின்ற இடத்தின் ''சந்திப்பின் கூடாரம்'' என்னும் பெயரே (யாத் 33:7-11) இதை வெளிப்படுத்துகின்றன.

இ) சட்டம்:- உடன்படிக்கையின் சாசனமான சட்டம் இறைவனுடைய பதிலளிக்கும் முறையை இஸ்ராயேலுக்குக் கற்பிப்பதற்காகவே அளிக்கப்பட்டது (உப 24:18; லேவி 19:2). சட்டத்திற்குக் கீழ்ப்படிதல் மற்றும் அதனுடைய கட்டளைகளின்படி நடத்தப்படும் வாழ்க்கை முறையானது இறைவனைக் கண்டுபிடிக்கவும் அவருடனான ஒன்றிப்புக்கும் இட்டுச் செல்லுகின்றன (சங் 119). இதையே மறுபுறம் நோக்கினால் இறைவனைத் தேடுதல், அவரை அன்பு செய்தல் ஆகியவை அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாகும் (உப 10:12-13).

ஈ) செபம்:- உடன்படிக்கைக்கு விசுவாசமாக வாழ்கின்ற இஸ்ராயேலர் மிக நெருக்கமாகச் செபத்தினுடைய இரண்டு அடிப்படையான வடிவங்களில் இறைவனைச் சந்திக்கின்றனர். 1) இறைவனின் பெரும் செயல்களைக் கண்டு தன்னிச்சையாகப் பொங்கி வடியும் வியப்பும் மகிழ்ச்சியுமாகும். இவை ஆசீர், போற்றுரை மற்றும் நன்றி கூறுதலுக்கு இட்டுச் செல்கின்றன. 2) மரணத்திற்கு அப்பாலும் நிலைத்திருக்கக்கூடிய ஒன்றிப்பில் (சங் 16:9; 49:16; 73:24) இறைவனின் பிரசன்னத்தை அனுபவிப்பதற்கான ஆர்வமிக்க விண்ணப்பம் (சங் 42:2-5; 63:2-6) ஆகும்.

உ) மக்களிடையிலான இதயங்களின் ஒன்றிப்பானது உடன்படிக்கையின் விளைவாகும்:- குடும்பம், குலம், கோத்திரம் ஆகியவற்றிடையே உள்ள இயற்கையான ஒருமைப்பாடானது இஸ்ராயேலை ஒன்றுபடுத்திய இறைவனுடைய பணியில் எண்ணம் மற்றும் வாழ்வினுடைய கூட்டமைப்பாக உருவாகிறது. இந்த மீட்பளிக்கும் இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதென்பது, சக இஸ்ராயேலரைச் ''சகோதரராகக்'' கருதச் செய்கிறது (உப 22:1-4; 23:20); உரிமைச் சொத்து ஏதுமில்லாதவர்களிடம் தாராளமாக இருக்கச் செய்கிறது (24:29 தொ). குருக்கள் பாரம்பரியத்தின் வழிபாட்டுச் சபையும் தன்னுடைய இறைமுடிவை நோக்கி முன்னேறுகின்ற சமூகமாக (எண் 1:16 தொ; 20:6-11; 1 நாள் 13:2) ''யாவேயின் சமூகமாக'' மற்றும் அனைத்து இஸ்ராயேலரின் சமூகமாக (1 நாள் 15:3) விவரிக்கப்படுகின்றது.

2. புதிய ஏற்பாடு:-

இயேசு தன்னுடைய இறையியல்பில் மனிதருக்குப் பங்களிப்பதால் இறைவனுடனான ஒன்றிப்பானது கிறிஸ்துவில் உண்மையாகிறது (2 பேதுரு 1:4). ஏனெனில் அனைத்து மனிதருக்கும் பொதுவான இயல்பில், அதன் வலுவின்மையிலும் கூட, அவரே பங்குகொள்கிறார் (எபி 2:14).

அ) திருச்சபையில் அனுபவிக்கப்படும் இறைவனுடனான ஒன்றிப்பு:- தன்னுடைய பொதுவாழ்வின் தொடக்கத்தில், போதித்தல் மற்றும் இரக்கம் ஆகிய தமது பணியில் மிக நெருங்கிய விதத்தில் பங்குகொள்ளப் பன்னிரண்டு தோழர்களை இயேசு தம்முடன் சேர்த்துக் கொள்கிறார் (மாற் 3:14; 6:7-13). தமக்குத் தகுதியுடையவர்களாயிருக்க வேண்டுமென்றால் தம்மைப் பின்செல்வோர் தம்முடைய துன்பங்களிலும் பங்கு பெற வேண்டும் என்று அவர் கூறுகிறார் (மாற் 8:34-37; மத் 20:22; யோவா 12:24 தொ;

15:18). அவரே உண்மையான மெசியா, தம்முடைய மக்களுடன் ஒன்றித்துள்ள அரசர். அதே நேரத்தில், இரண்டு அன்புக்கட்டளைகளின் அடிப்படை ஒற்றுமையையும் அவர் வலியுறுத்துகிறார் (மத் 22:37 தொ).

முதல் கிறிஸ்துவர்களுடைய சகோதர ஒன்றிப்பானது ஆண்டவர் இயேசுவின் மீதான அவர்களுடைய பொதுவான விசுவாசம், ஒன்றுபட்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என்ற ஆசை, மற்றும் ஒருவருக்கொருவர் பால் கொள்ளும் அன்பு அவசியமாக இட்டுச் செல்லும் இயேசுவின்பால் கொள்ளும் அன்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். அவர்கள் ''ஒரே உள்ளமும் ஒரே உயிரும்'' மட்டுமே கொண்டிருந்தனர் (அ.ப. 4:32). அவர்களுக்கிடையே நிலவிய இந்த ஒன்றிப்பானது, முதலில் அப்பம் பிடுதலில் ஏற்கப்பட்டது (2:42). எருசலேம் திருச்சபையில் அவர்களுடைய உடைமைகளைப் பகிர்தலிலும் (4:32-5:11) யூதரல்லாதோரிடையேயும் எருசலேமிலிருந்து வந்த சமுதாயங்களுக்கிடையேயும் வறியவர்களுக்காகப் பவுல் சேகரித்த காணிக்கைகளிலும் (2 கொரி 8-9; உரோ 12:12) இது நிகழ்கிறது. நற்செய்தியைப் போதிப்பவர்களுக்கு அளிக்கப்படுகின்ற பொருளுதவியானது ஆன்மீக நன்றியறிதலின் குணவியல்பை அதற்கு அளிப்பதன் மூலம், சிறப்பான ஒளியில் இந்த ஒன்றிப்பினைக் காட்டுகின்றது (கலா 6:6; பிலி 2:25). நற்செய்தியைப் பரவச்செய்வதில் காட்டிய கூட்டுறவைப்போன்று (பிலி 1:5) ஒன்றாக வேதகலாபனைகளை அனுபவிப்பதும் இதய ஒன்றிப்புக்கு இட்டுச் சென்றது (2 கொரி 1:7; எபி 10:33; 1 பேதுரு 4:13).

ஆ) ஒன்றிப்பின் பொருளும் ஆழமும்:-

பவுல்:- விசுவாசம் மற்றும் திருமுழுக்கினால் கிறிஸ்துவுடன் ஒன்றிக்கப்பட்ட விசுவாசி, அவரது மறைபொருளில் பங்கு கொள்கிறார். கிறிஸ்தவன் கிறிஸ்துவுடன் பாவத்திற்கு இறந்து, அவரோடு புதிய வாழ்விற்கு உயிர்த்தெழுகிறான் (உரோ 6:3-4; எபே 2:5-6). தனது பாடுகள் மற்றும் மரணத்தின் மூலம் ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் பாடுகள் மரணம் மற்றும் உயிர்ப்பினில் அவரைப்போல அமைக்கப்படுகிறான் (2 கொரி 4:14; உரோ 8:17; பிலி 3:10-11; 1 தெச 4:14).

கிறிஸ்துவின் நற்கருணை உடலில் பங்கு கொள்ளுதல், ஒரே சமயத்தில், ''மகனுடன் கொள்ளும் ஒன்றிப்புக்கும்'' (1 கொரி 1:9) உடலின் உறுப்புகளுக்கிடையே ஒற்றுமைக்கும் இட்டுச் செல்கிறது (10:17). அதே சமயம் அனைத்துக் கிறிஸ்தவருக்குமான தூய ஆவியின் கொடையானது அவர்களுக்கிடையிலான நெருங்கிய ஒன்றிணைப்பின் மீது முத்திரையிடுகிறது (2 கொரி 13:13; பிலி 2:1).

ஆ) யோவான்:- ''வாழ்வின் வார்த்தை'' பற்றிய அறிவிப்பை வரவேற்கின்ற சீடர்கள், அதனுடைய சாட்சிகளுடனும் (அப்போஸ்தலர்கள்) அவர்கள் மூலமாக இயேசு மற்றும் தந்தையுடனும் ஒன்றிக்கின்றனர் (1 யோவா 1:3; 2:24). தந்தையும் மகனும் ஒருவர் மற்றவரில் ஒன்றியிருப்பதுபோல், தங்களுக்குள் ஒன்றுபட்ட கிறிஸ்தவர்கள் இறுதியாகத் தந்தை மற்றும் மகனுடைய அன்பில் உறைகின்றனர் (யோவா 14:20; 15:4:7; 17:20-23; 1 யோவா 4:12). இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதே இந்த முடிவற்ற ஒன்றிப்பிற்கான ஆவலின் நிலையான அடையாளமாகும் (யோவா 14:21; 15:10). தூய ஆவியின் வல்லமை இதனை வெளிக்கொணர்கிறது (யோவா 14:17; 1 யோவா 2:27; 3:24; 4:13). நற்கருணை உணவானது இதனுடைய அத்யாவசியமான ஊட்டச்சத்தாகும் (யோவா 5:56).

ஆண்டவருடைய மகிமையில் பங்கு கொண்டு (1 பேதுரு 5:1) ''அவரோடு என்றென்றும் இருக்க வேண்டும்'' (1 தெச 4:17; யோவா 17:24) என்னும், ஒவ்வொரு மனித இதயத்தினுடைய கனவாகவும் இஸ்ராயேலின் நம்பிக்கையாகவும் உள்ள முடிவில்லா மகிழ்ச்சியின் முன்சுவையைக் கிறிஸ்தவர் இவ்வாறு கொண்டுள்ளார்.

ஒற்றுமை (UNITY)

தந்தை, மகன் மற்றும் தூய ஆவி எனும் ஒரே இறைவனைப்பற்றிய விசுவாசம் தந்

தையையும் மகனையும் ஒன்றுபடுத்துகிற அன்புக்கும் விசுவாசிப்பவருக்குத் தூய ஆவியால் அளிக்கப்படுகிற அன்புக்கும் மனிதனை அறிமுகப்படுத்துகிறது (யோவா 15:9; 17:26; உரோ 5:5). ஒரே இறைவனுடன் மனிதனை ஒன்றுபடுத்துவதன் மூலம் இந்த அன்பானது மனிதனை உலகில் இறைவனுடைய சாட்சியாகவும், ஒரே மகனில் முழு உலகையும் அனைத்து மனிதரையும் ஒன்றிணைக்க விரும்பும் இறைவனின் திட்டத்தில் துணையாளராகவும் ஆக்குகிறது (உரோ 8:29; எபே 1:5;10).

1. ஒற்றுமையின் ஊற்றும் பாவத்தால் அது உடைபடுதலும்:-

பல்வகை வேறுபாடுகளை உடைய உலகமானது இறைவனுடைய படைப்பாகும். ''பலுகிப் பூமியை நிரப்பி அதனை ஆளுங்கள்'' (ஆதி 1:28) என்னும் ஆண், பெண்ணிற்கான அவருடைய கட்டளையில் இறைவனுடைய திட்டம் வெளிப்படுத்தப்படுகிறது. இறைசெயலில் வெளிப்படையான வேற்றுமை மற்றும் ஒற்றுமையினையுடைய உடன்பாடு உள்ளது. மனிதனுடைய ஆதிக்கத்தின்கீழ், படைப்பானது ஒன்றுபடுத்துவதற்கு மனிதன் பெருகவேண்டும். மனிதன் பலுகுவதற்கு, தனது மனைவியுடனான அன்பு ஒன்றிப்பால் அவனுக்கேயுரிய ஒற்றுமையானது அடையப்படுகிறது (ஆதி 2:23-24). ஆனாலும் இத்திட்டம் நிறைவேறுவதென்பது, மனிதன் இறைவனுடன் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதையும் கோருகிறது.

இவ்விசுவாச நிலையை ஏற்க மறுப்பது தான் அடிப்படையான பாவமாகும். இறைவனுக்கு இணையானவனாக வேண்டும் என்பதற்காக மனிதன் இப்பாவத்தைச் செய்கிறான். உண்மையில் இப்பாவம் இறைவன் ஒருவரே என்பதை மறுப்பதாகும். எனவே ஒற்றுமையின் ஊற்றாக உள்ள அன்பாகிய இறைவனிடமிருந்து முறித்துக் கொள்வதாகும் இது (1 யோவா 4:16). இத்தொடக்க முறிவானது, விவாகரத்து மற்றம் பலதார

மணம் மூலம் திருமணத்தின் ஒருமைப்பாட்டையும் (ஆதி 4:19; உப 24:1) பயங்கரப் பொறாமையின் மூலம் சகோதரர்களின் ஒற்றுமையையும் (ஆதி 4:6 தொ 24) பல்வேறு மொழிகளால் உயிர்ச்சித்திரமாக அடையாளப்படுத்தப்படுகின்ற தப்பெண்ணத்தின் மூலம் சமூகத்தின் ஒற்றுமையையும் (11:9) தகர்க்கப்போகின்ற பிளவுகளை உருவாக்குகின்றது.

2. உடன்படிக்கை மூலம் ஒற்றுமை தேடுதல்:-

ஒரு பரிகாரமாக, இறைவன் மனிதரைத் தேர்ந்தெடுத்து, விசுவாசத்தில் உறுதிசெய்யப்பட்ட தமது உடன்படிக்கையை அவர்களுக்கு அளிக்கிறார் (ஒசே 2:22). விசுவாசமானது உண்மையில் இறைவனுடனான ஒன்றிப்பிற்கும் அவருடைய ஒன்றிணைக்கும் பணியில் ஒத்துழைப்பதற்கும் நிபந்தனையாகும். இந்தப் பணியைப் புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களாகிய நோவா, ஆபிரகாம் (எச 51:2), மோசே, தாவீது, துன்புறும் ஊழியன் போன்றவர்களை அழைப்பதன் மூலம் இடைவிடாமல் புதுப்பிக்கின்றார். அவர் தமது மக்களுக்குச் சட்டத்தை அளிக்கிறார். தாவீதின் குடும்பத்திலிருந்து ஓர் அரசரைத் தேர்ந்தெடுக்கிறார். எருசலேம் ஆலயத்தில் அவர் தமது மக்களுடன் தங்குகிறார். விசுவாசத்தின் மாதிரியாக அவர் ஊழியனை அளிக்கின்றார். ஒன்றுபட்ட இஸ்ராயேலைக் கொணர்வதற்கென இவையனைத்தையும் இறைவன் செய்கிறார். பின்னரே, இஸ்ராயேல் குருத்துவ மக்களாகவும் (யாத் 19:6) ஒரு சாட்சியாகவும் (எச 43:10) தனது பணியை நிறைவு செய்ய முடியும்.

இறைவன் இஸ்ராயேல் மக்களைத் தனிப்பட்ட குலமாகப் பிரிப்பதென்பது அவர்கள் மூலமாக மற்ற நாடுகளுக்குத் தன்னை வெளிப்படுத்துவதற்கும், வழிபாட்டின் ஒன்றிப்பில் மீண்டும் அவர்களை ஒன்றுசேர்ப்பதற்குமாகும். இஸ்ராயேலின் பிரமாணிக்கமின்மையைத் தண்டிக்கச் சிதறிப்போகச் செய்தல், படைத்தவரும் மீட்பவருமாகிய ஒரே இறைவனைப் புறவினத்தாருக்கு அறிமுகப்படுத்துவதற்காகவே (எச 45). ஆனா

லும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பணியை நிறைவு செய்யவும், சாலமோனின் பிரமாணிக்கமின்மைக்குப் (1 அர 11:31 தொ) பிற்பாடு ஏற்பட்ட பிளவால் தகர்க்கப்பட்ட ஒற்றுமையை மீளவும் அமைக்கவும், ஒரே வழிபாட்டில் இஸ்ராயேலுடன் பிறநாடு களை ஒன்று சேர்க்கவும் (ஏச 56:6 தொ), ஊழியனும், புதிய தாவீதும், மனுமகனுமா னவர் வரவேண்டும். வரவிருப்பவரே இஸ் ராயேலை ஒன்றுபடுத்தி, தனது மரணத்தி னால் எண்ணற்ற பாவிகளைக் காப்பாற்றுவ தற்கெனப் பணிக்கப்பட்ட ஊழியன்னாவார் (ஏச 42:1; 49:6; 53:10 தொ). புனித மக்களின் தலைவராகிய மனுமகன் இவரே. இவரது ஆதிக்கம் முடிவற்றது, எல்லாவற்றையும் உள்ளடக்கியது (தானி 7:13-14.27). வரவிருக் கும் ஒருவரின் காரணமாக ஆண்டவருடைய முடிவற்ற அன்பின் ஒரே துணைவியாகிய சீயோன் எல்லா நாடுகளுக்கும் பொதுவான தாயாக உருவாவாள் (சங் 87:5; ஏச 54:1-10; 53:3 தொ). இந்த நாடுகளுக்கு ஆண்டவர், ஒருவர் மட்டுமே அரசராக இருப்பார் (செக் 14:9).

3. திருச்சபையில் அடையப் பெறும் ஒற் றுமை:-

இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட இவர், கிறிஸ்துவாகிய அவருடைய ஒரே மகன் இயேசுவே (லூக் 9:35). தம்மை அன்பு செய்து தம்மில் விசுவாசங்கொள்பவர்களுக் குத் தமது ஆவியையும் தமது தாயையும் அளித்தும் (உரோ 5:5; யோவா 19:27) சிலு வையில் பலியிடப்பட்ட தமது உடலாகிய ஒரே அப்பத்தால் அவர்களை உணவூட்டியும் (1 கொரி 10:16-17) அவர்களை ஒன்றுபடுத்து கிறார். அதன் பயனாக அனைத்து மக்களை யும் அவர் ஒருடலாக்குகிறார் (எபே 2:14-18). இவ்வுடலின் உறுப்புகளாக அவர் விசுவாசி களை அமைக்கிறார். ஏனெனில், திருச்சபை யாகிய தமது உடலின் முழு நன்மைக்காகக் குறிக்கப்பட்ட அருங்கொடைகளால் அவர் தமது உறுப்பினர்களை நிரப்பியுள்ளார் (1 கொரி 12:4-27; எபே 1:22-23). இறைவனு டைய ஒரே ஆலயத்தின் உயிருள்ள கற்களாக இயேசு விசுவாசிகளை அமைக்கிறார் (எபே 2:19-22; 1 பேதுரு 2:4-5). ஒரே ஒரு மேய்ப்பர் என்ற நிலையில் எல்லாவித வேறுபாடுகளி லும், இயேசு தமது ஆடுகளை அறிகிறார் (யோவா 10:3). தமது வாழ்வை அளித்து, அதன் மூலம், இறைவனுடைய சிதறிக் கிடக்கும் பிள்ளைகளைத் தமது மந்தைக்குள் சேர்க்க வேண்டும் என்பதே அவருடைய விருப்பம் (10:14 தொ; 11:51-52).

இச்சைகளால் கிழிக்கப்பட்ட மனிதனு டைய உள்ளார்ந்த ஒற்றுமை (உரோ 7:14-15; 8:2,9), கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்குமாக ஒன்றிப்பை மாதிரியாகக் கொண்ட மண வாழ்வு ஒற்றுமை (எபே 5:25-32), ஆவியி னால் இப்போது அதே தந்தையின் மக்களாக் கப்பட்ட அனைத்து மக்களின் ஒற்றுமை (உரோ 8:14 தொ; எபே 4:4 தொ), போன்ற எல்லா நிலைகளிலும் கிறிஸ்து ஒற்று மையை மீண்டும் அமைக்கிறார். இப்பிள் ளைகள் ஒரே உள்ளமும், ஒரே ஆன்மாவும் உள்ளவர்களாக இருப்பர் (அ.ப. 4:32). அவர் கள் ஒரே குரலில் தங்களுடைய தந்தையைப் போற்றுவர் (உரோ 15:5-6; அ.ப. 2:4,11).

பிளவுகளால் எளிதில் பாதிக்கப்படக்கூடி யதாயினும் (1 கொரி 1:10), ஒரே ஆண்டவ ரில் ஒரே விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட (எபே 4:5.13; மத் 16:16 தொ) இந்த ஒற்றுமையை வளர்ப்பது தனிநபர்களைச் சார்ந்துள்ளது. பேதுருவின் அன்பிற்குக் கைய ளிக்கப்பட்டுள்ள ஒரே திருச்சபையின் அடை யாளம் (யோவா 21:15 தொ) அதனுடைய ஒற்றுமையே. மனிதர்கள், கிறிஸ்துவின் அன்பில் வாழ்வதன் மூலமும், ''நான் உங்க ளுக்கு அன்பு செய்ததுபோல நீங்களும் ஒரு வருக்கொருவர் அன்பு செய்யுங்கள்'' (13:34-35) என்னும் அவருடைய உயரிய கட்ட ளையை விசுவாசத்துடன் கடைப்பிடிப்பதன் மூலமும், இந்த ஒற்றுமையை அடைகின்ற னர். பிரமாணிக்கம் மற்றும் ஆன்மீக வளர்ச் சியானது திராட்சைக் கொடிக்கும் கிளைக ளுக்குமிடையிலான இணைப்புடன் (15:5-10) ஒப்பிடப்படக்கூடிய, கிறிஸ்துவோடு கொள்ளும் ஒன்றிப்பால் அளவிடப்படுகின் றன. கிறிஸ்தவ ஒற்றுமையானது, தமது ஒரே

மகனை அளிப்பதிலான இறைவனின் அன்பை மனிதருக்கு வெளிப்படுத்துவதற்கும் (3:16), கிறிஸ்துவில் ஒற்றுமையை அடைவதற்குமான (எபே 4:13) இன்றியமையாத தேவையாகும். இது நிகழும்போது, ''தந்தாய், நாம் ஒன்றாய் இருப்பதுபோல், அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி'' (யோவா 17:21 தொ) என்னும் இயேசுவின் உயர்வான ஆசை முழுமை பெறும்.

ஒற்றைத்திமில் ஒட்டகம் (DROMEDARY)

இது வேகமாக ஓடக்கூடிய அரேபியாவைச் சேர்ந்த ஒட்டக வகையைச் சேர்ந்தது.

அரிஸ்தாத்திலின் காலத்திலிருந்தே இரண்டு திமில்களுள்ள பக்திரியன் ஒட்டகத்திலிருந்து ஒரு திமிலுள்ள அரேபிய ஒட்டகம் வேறுபடுத்தப்பட்டிருந்தது. ஒரே திமில் உள்ள அரேபிய ஒட்டகங்களில், பொதிசுமக்கும் ஒட்டகம் என்றும், வேகமாக ஓடும் ஒட்டகம் என்றும் இரண்டு வகை இருந்தன. இதில் இரண்டாம் வகைதான் ஏச 66:20; எரே 2:23; 1 சாமு 30:17; 1 அர 4:28; எஸ்த 8:10 ஆகிய பகுதிகளில் குறிக்கப்படுகிறது.

தாவீதின் தாக்குதலிலிருந்து தப்பியோடிய அமலேக்கியர்கள் அநேகமாக இந்த ஒட்டகத்தின் மேல்தான் தப்பியோடியிருந்திருக்க வேண்டும் (1 சாமு 30:17). இதே மாதிரியான ஒட்டகம்தான் ஏச 6:20-இலும் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

ஒனேசிப்போர் (ONESIPHORUS - பயன் கொண்டு வரும்)

எபேசைச் சேர்ந்த கிறிஸ்தவனாகிய இவர் திருச்சபைக்கும் பவுலுக்கும் விசுவாசத்துடன் உழைத்தார் (1 திமோ 1:16-18). ஒனேசிப்போரின் குடும்பத்தின்மேல் இரக்கம் காட்டப் பவுல் இறைவனிடம் வேண்டுகிறார். அவருடைய வீட்டாரை வாழ்த்தும்படி திமோத்தேயுவுக்குக் கூறுகிறார். பவுல் எபேசிலும் உரோமையில் சிறையிலிருந்த போதும் ஒனேசிப்போர் ஆறுதல் அளித்ததாகக் கூறுகிறார். இங்கே ஒனேசிப்போரின் குடும்பத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளனவே தவிர, ஒனேசிப்போரைப் பற்றிய குறிப்புகள் இல்லை. எனவே அவர் வீட்டில் இல்லாமலோ இறந்திருக்கவோ கூடும். அப்படி அவர் இறந்திருப்பாரேயானால் 1 திமோ 1:18-இல் நாம் முதல் முறையாகக் கிறிஸ்தவ இறந்தோர்க்கான செபத்தைக் காணலாம்.

பவுல் உரோமையில் சிறைப்பட்டிருந்த போது ஒனேசிப்போர் அவரைக் குறித்து வெட்கப்படாமல் அவரைச் சென்று தேடினார். அவருடைய தேவைகளை நிறைவு செய்தார். அவர் செய்த நன்மைகளுக்கெல்லாம் கைமாறாகக் கிறிஸ்து இயேசுவின் அருளைப் பவுல் அருளுகிறார்.

ஒனேசிமு (ONESIMUS - பயனுள்ள)

பவுல் இந்த ஒனேசிமு அடிமைக்காகப் பரிந்து பேசி, பிலமோனுக்குக் கடிதம் எழுதினார். கொலோசியர் மடலைக் கொணரும் திக்கிக்குடன் ஒனேசிமு செல்வதாகக் கொலோசியர் மடல் கூறுகிறது. 'ஒனேசிமு உங்கள் சபையைச் சேர்ந்தவன் தான்' எனவும் அதில் எழுதப்பட்டுள்ளது (கொலோ 4:9).

ஒனேசிமு பிலமோனுக்குக் கீழே அடிமையாக இருந்து திருடிக்கொண்டு தப்பி ஓடியவர். பின்னர் உரோமையில் பவுலோடு சேர்ந்து கிறிஸ்தவனாகி, அவரது அன்பிற்கு ஆளானார். பவுல் இவரைத் தன் மகனாகக் கருதினார் (பில 10). ஒனேசிமு என்ற சொல்லின் பொருளான ''பயனுள்ள' என்பதை வைத்துச் சொல்லாடி, பவுல் பயனற்றவனாக இருந்த அவன் பயனுள்ளவனாக இருப்பதாகவும், அவனை அனுப்புவது தன் உயிரையே அனுப்புவதை ஒக்கும் எனவும் எழுதுகிறார். அவரைப் பிலமோன் தன் சகோதரனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவரைப் பிலமோனிடம் பவுல் அனுப்புகிறார்.

இந்த ஒனேசிமு இரண்டாம் நூற்றாண்டில் (கி.பி. 115) அந்தியோக்கிய இஞ்ஞாசியார் எழுதிய மடலில் குறிப்பிடப்பட்டுள்ள எபேசிய ஆயராக இருக்கலாம். இங்கும் இஞ்ஞாசியார் அதே வகைச் சொல்லாடல் விளையா

டுகிறார். இப்பெயர் முதலில் அடிமைகளிடையிலும், பின் பவுலோடு தொடர்புடைய கிறிஸ்தவர்களிடையேயும் சாதாரணப் பழக்கத்தில் இருந்திருப்பதாகத் தெரிகிறது. இவர்தான் புதிய ஏற்பாட்டில் வருபவராக இருந்தால், அவர் உயிருடன் இருந்திருந்தால் மிகுந்த வயோதிகராக இருந்திருக்க வேண்டும். அல்லது திமோத்தேயு இரண்டாம் மடலிலே வரும் ஒனேசிப்போராக் இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். இவர் எபேசில் அதிகப் பணிபுரிந்தவர். ஒனேசிமு பயன் கொண்டுவரும் என்ற பொருளுடைய ஒனேசிப்போரின் சுருக்கமாக இருக்கலாம். இருவரும் பவுலுக்குச் சிறையில் பணிபுரிந்திருக்கின்றனர் (2 திமோ 1:16-17). ஒனேசிமு, திக்கிக்குடன் சென்று கொலோசே மக்களுக்கும், பிலமோனுக்கும் மடல்களைத் தந்தார். இவர்கள் இருவரும் சிறந்த நண்பர்களாய் இருந்தனர்.

ஓ

ஓகலா (OHOLAH - கூடாரமுடையவர்)

இப்பெயர் சமாரியாவைக் குறிக்கிறது (எச 23:4-5.36.44). சமாரியா, எருசலேமைப் பற்றிய உருவகத்தில் ஓகலா, ஓகலிபா என்ற சகோதரிகளுடன் சமாரியாவும் எருசலேமும் ஒப்பிடப்பட்டுள்ளன. அக்காள், தங்கை இவ்விருவரும் முதலில் எகிப்திலும், பின்பு பக்கத்து நாட்டு மக்களுடனும் விபச்சார உறவு கொண்டிருந்தனர். எசக்கியேல், இவர்களுள் மூத்தவளான ஓகலாவைச் சமாரியாவுக்கு ஒப்பிடுகிறார் (23:4). அசீரிய ஆண்கள் பால் காதல் கொண்டாள். ஆண்டவர் இவளுக்குத் தண்டனையாக இவளை அசீரியர் கையில் வேசியாக ஒப்படைத்தார். இதன் காரணமாக அவள் பெண்களுக்குள்ளே பழிமொழிக்காளானாள். இந்த உருவகத்தின் வழியாக எசக்கியேல் இறைவாக்கினர் எருசலேம், சமாரியா மக்களின் சிலைவழிபாட்டையும் யாவேக்குப் பிரமாணிக்கமின்மையையும் சுட்டிக்காட்டுகிறார். இந்த அசீரிய சிலை வழிபாடு எசக்கியாவின் மரணத்திற்குப்பின் மனாசேயின் காலத்திலே பரவியது. இதன் காரணமாக, ஆண்டவர் அம்மக்களுக்கு அழிவை ஏற்படுத்துவதாகக் கூறுகிறார்.

ஓகாது (OHAD - பலம்)

இவர் சிமியோனின் மூன்றாம் மகன் (ஆதி 46:10; யாத் 6:5). எண் 26:12-14; 1 நாள் 4:24-25-இல் வரும் இதற்கிணையான மரபு முறைப் பட்டியலில் இவர் குறிக்கப்படவில்லை.

ஓகாம் (HOHAM - ஒட்டப்பட்ட)

கெபிரோனின் அரசர் (யோசு 10:3). எருசலேமின் தென்மேற்குப் பகுதியை யோசுவா கைப்பற்றுவதைத் தடுத்து நிறுத்தப் போர் புரிந்த எமோரியர்களோடு கூட்டணியில் சேர்ந்துகொண்ட ஐந்து அரசர்களில் இவரும் ஒருவர். இவர்கள், கிபயோனியர் இஸ்ராயேலர்களோடு சமாதானம் செய்து கொண்டதற்குப் பழிதீர்க்க முயன்றனர். இதனால் யோசுவா இவரையும் இவரது கூட்டணியினரையும் பேத்து-கோரோனில் தோற்கடித்து, தூக்கிலிட்டார் (யோசு 10:3-4.23-27).

ஓகு (OG - மேன்மையான, பெரிய)

வலிமை மிகுந்த இவர் யாபோக்கு ஆற்றுக்கு வடக்கில் உள்ள பாசானின் எமோரிய மன்னன். மனாசேயின் கோத்திரத்தார் இவருடைய நாட்டைச் சொந்தமாக்கினர் (எண் 21:33; 32:33; உப 1:4; 3:1.3-4.10-11.13; 4:47; 29:7; யோசு 2:10; 9:10; 12:4; 13:12.30-31; 1 அர 4:19; நெக 9:22; சங் 135:11; 136:20).

இஸ்ராயேலர் மரபிலே ஓகு மன்னன் அரக்க வம்சத்தைச் சார்ந்தவராகவும் கற்பனைக் கதாநாயகனாகவும் கருதப்பட்டார். அவருடைய இரும்பினால் செய்யப்பட்ட கட்டில் ஒன்பது முழ நீளமும், 4 முழ அகலமும் கொண்டதாக இருந்தது; அவர் இறந்த வெகு காலத்திற்குப் பின்னும் ஒரு காட்சிப் பொருளாகக் கருதப்பட்டது (உப 3:11). இந்த ஓகுவைப் பற்றிய செய்திகள் கற்பனையாக இருக்க முடியாது. ஏனெனில் உப ஆகமம் ஓகுவைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. இவர் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள சமவெளியின் வடபகுதியில் 60 நன்கு பலப்படுத்தப்பட்ட நகரங்களைக் கொண்டிருந்தார் (3:1-10). மேலும் அவரது அரசில் அசித்தரோத்திலும், எதிரையிலும் இரு தலைநகர் இருந்ததாக யோசுவா நூல் கூறுகிறது (யோசு 12:4). ஓகு மன்னனை இஸ்ராயேலார் எதிரையில் தோற்கடித்துக் கொன்றனர் (எண் 21:33-35; உப 1:4). இவரது நாடு மனாசே கோத்திரத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டது. ஓகும் எமோரிய அரசன் சீகோனும் மிகப் புகழ்பெற்ற கானானிய அரசர்களாகக் கருதப்பட்டனர் (சங் 135; 10-12; 136:18-21). இப்பகுதியின் மேல் இஸ்ராயேலர் கொண்டிருந்த ஆதிக்கம் பலவீனமானது. அடிக்கடி தமஸ்குவின் அரேமேயர்கள் இவர்களுக்குச் சவால் விட்டனர்.

ஓகேல் (OHEL - இறைவனின் கூடாரம்)

இவர் தாவீது மன்னனின் வழித்தோன்றல். ஒருவேளை செருபாபேலின் பேரனும் மெசுல்லாமின் மகனுமாக இருக்கலாம் (1 நாள் 3:20).

ஓசன்னா (HOSANNA)

இஃது ஓர் எபிரேய வார்த்தை. இதற்கு 'எங்களை மீட்டருளும் உம்மை வேண்டுகிறோம்' என்பது பொருள் (சங் 118:25; காண் க.2 சாமு 14:4; சங் 20:9; மத் 21:9; மாற் 11:9; யோவா 12:13).

அல்லேல் சங்கீதங்களின் ஒரு பகுதியான சங்.118-இல் ஒரு திருப்பயணி, பயனற்றவனாக ஒதுக்கப்பட்ட அவன் மீண்டும் நீதிமானாக ஏற்றுக் கொள்ளப்படுகிறான். எனவே ஆண்டவரின் நன்மைத்தனத்துக்கு நன்றி கூறும் வண்ணம் அவன் ஆலயத்தினுள் நுழைகிறான். யாவேயின் பெயரால் வருபவர் வாழி எனக் குருக்கள் வரவேற்கின்றனர். வசனம் 25-இல் இறைவனிடமிருந்து அதிகமாக மீட்பையும் வெற்றியையும் தரும்படி மன்றாடுகின்றான். கூடாரத் திருவிழாவின் போது இவ்வசனம் பாடப்படும். பீடத்தைச் சுற்றி நின்று இதைப் பாடுவர். அப்போது பகமைமாறாத நறுமணச் செடி மற்றும் குருத் தோலைகளைத் தூக்கிப் பிடித்து மக்கள் ஆட்டுவர். சில நேரங்களில் இம்மரக் கிளைகளையே ஓசன்னா என்பர்.

விவிலியக் காலத்தின் பிற்கால யூத நூல்களில் ஓசன்னா' என்பது மெசியாவின் வருகையோடு இணைத்துக் கூறப்பட்டது. ஆண்டவர் பெயரால் வருபவரே மெசியா எனப் பட்டார். ஆனால் இது பழமையானதொரு விளக்கமாகக் கருதப்படுகிறது. நறுமணச் செடிகளை ஆட்டுவது என்பதைக் கருத்திடீ கொள்ளும்போது இது இயேசு எருசலேம் நகரத்தில் நுழைந்த சூழ்நிலையை நன்கு விளக்கும். அவர் வருகைக்காகக் காத்திருந்தவர்கள் குருத்தோலைகளை ஏந்தித் தாவீதின் மகனே என வாழ்த்தினர் (சங் 20:9).

இவர் வழியாகவே ''நம் தந்தை தாவீதின் அரசு'' வருகிறது என மாற்கு குறிப்பிடுகிறார். இவரே இஸ்ராயேலரின் அரசர் என யோவான் கூறுகின்றார். ஆதித் திருச்சபையிலே திருவிருந்தை அர்ச்சிப்பதற்குமுன் கூறப்பட்ட ''தூயவர், தூயவர், தூயவர்'' பாடலில் மத்.21:9 இடம் பெறுகிறது. இதைத் திதாங்கே-யிலும் காணலாம். ''இறைவனின் அருள் வருவதாக; உலகம் அழிவதாக; தாவீதின் இறைவனுக்கு ஓசன்னா'' என அப்போஸ்தலிக்கச் சட்டம் கூறுகிறது.

ஓசாமா (HOSAMA - யாவே கேட்டருளினார்)

யோயாக்கினின் ஏழு புதல்வர்களில் ஒருவர். நாடுகடத்தப் பட்டிருந்த போது பிறந்தவர் (1 நாள் 3:18).

ஓசாயா (HOSHAIAH - யாவே மீட்டுவிட்டார்)

1. அசரியா (16) (எரே 42:1) அல்லது எசனியாவின் தந்தை. எரேமியாவுக்கு எதிரி. அசரியா எருசலேம் வீழ்ச்சிக்குப் பிறகு யூதர்கள் மத்தியில் தலைவராக விளங்கியவர். அவர் ஒரு மாக்காவியர்போல் தோன்றுகிறது (40:8).

2. எருசலேம் மதிலைப் புதுப்பித்து அர்ப்பண விழா எடுத்தபோது, விழா ஊர்வலத்தில் கலந்துகொண்ட யூதாவின் இளவரசர்களில் ஒருவர் (நெக 12:32).

ஓசியா (HOSHEA யாவே காப்பாற்றுவாராக)

1. இது யோசுவாவின் மூலப் பெயராகும். இவர் எப்பிராயிமியக் கோத்திரத்தாரான நூனின் புதல்வராவார் (எண் 13:8). மோசே தான் இவரது பெயரையும் அதன் பொருளையும் மாற்றி (13:16), யாவேயின் மீட்புச் செயல்களை உறுதிப்படுத்தினார் (எண் 13:17).

2. தாவீதின் அலுவலர்களில் ஒருவர். எப்பிராயிம் கோத்திரத்தாரின் தலைவராவார். அசசியாவின் புதல்வராவார் (1 நாள் 27:20).

3. ஓசேயா என்ற பெயரின் எபிரேய வடிவம். 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த

இறைவாக்கினர். இவரது கூற்றுகள் ஓசேயா நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. காண்க ஓசேயா.

4. இவர் வட அரசாகிய இஸ்ராயேலின் கடைசி அரசராவார் (கி.மு. 732-724). ஏலாவின் புதல்வராவார். பெக்காவைக் கொலை செய்தவரும் அவருக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவரும் ஆவார் (2 அர 15:30). ஐந்தாம் சால்மனேசரால் சிறைக்கைதியாகக் கொண்டு செல்லப்பட்டார்.

இவர் பெக்காவைச் சூழ்ச்சி செய்து கொலை செய்து, அரசராகப் பொறுப்பேற்றார். ஆனால் திகிலாத்து-பிலேசர் என்பவர் தான் ஓசியாவை அரசராக்கியதாக உரிமை கொண்டாடுகிறார். அசீரிய மன்னனின் சம்மதம் இல்லாமல் ஓசியா அரசர் ஆகியிருக்க முடியாது. எனவே இரண்டு கூற்றுக்களும் சரியானதாகும். இவர் ஒன்பது ஆண்டுகாலம் ஆட்சி செய்தார் (2 அர 17:1).

'ஆண்டவரின் பார்வையில் எது தீமையாகப்பட்டதோ அதையே இவர் செய்தார்' என்று உபாகமப் பாரம்பரிய ஆசிரியர் கூறினாலும் இவருக்கு முன்னிருந்த அரசர்களைப்போல் இவரில்லை என்ற கருத்தும் (2 அர 17:2) சேர்த்துக் கூறப்படுகின்றது.

அசீரியாவின் ஆதிக்கம் இன்னும் நீடித்தது. கி.மு. 727-இல் மூன்றாம் திகிலாத்து-பிலேசர் இறந்தபின் அவரது புதல்வர் ஐந்தாம் சால்மனேசர் ஆட்சிக்கு வந்தார். இந்த ஆண்டுவரைக்கும் ஓசியா தொடர்ந்து திகிலாத்து-பிலேசருக்குச் செலுத்தவேண்டிய திறையினைச் செலுத்திக் கொண்டுதான் இருந்தார். கப்பம் செலுத்தும் சுமையினைத் தாங்க இயலாமல் திகிலாத்து-பிலேசர் இறக்கும் தருவாயில் இருக்கும்பொழுது ஓசியா கிளர்ச்சி செய்தார். இந்தப் புரட்சிக்கு எகிப்தும் உதவியது. மீண்டும் சால்மனேசர் ஆட்சிக்கு வந்தபின் கி.மு. 704-இல் ஓசியாவிற்கு எதிராகப் படையெடுத்துவர, அவர் அடிபணிந்து கப்பம் செலுத்தலானார் (2 அர 17:3). ஆனால் ஓசியா திறை செலுத்த மறுத்ததால் அவரைச் சிறையிலடைத்துவிட்டு, சால்மனேசர் சமாரியாவை முற்றுகையிட்டார். இந்த முற்றுகையானது மூன்று வருடங்களுக்குத் தொடர்ந்தது. அதற்குள் சால்மனேசர் இறந்துவிட்டார். 2-ஆம் சார்கோன் பதவிக்கு வந்தார்.

விவிலியக் குறிப்பினைப் பொறுத்தவரையிலும் அசீரிய அரசனின் பெயரில் குழப்பம் இருக்கின்றது. ஏனென்றால் 2 அர 17:6-இல் ''ஓசியாவின் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில் அசீரிய அரசன் சமாரியாவைப் பிடித்தான்'' என்று கூறப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் இதற்கு இணையான பகுதியாகிய 18:9-10-இல் 'அசீரிய அரசன் சால்மனேசர் சமாரியாவிற்கு வந்து அதை முற்றுகையிட்டுப் பிடித்தார். அதைப்பிடிக்க மூன்று ஆண்டுகள் ஆயின' என்று கூறப்பட்டிருக்கின்றது. சால்மனேசருக்குப்பின் அரசராக வந்த 2-ஆம் சார்கோன் இஸ்ராயேல் மக்களைச் சிறைப்பிடித்துக்கொண்டு போய்க் கெலாகு, காபோர், கோசான் மேதிய நகரங்கள் போன்ற இடங்களில் குடியேறக் கட்டளையிட்டார் (2 அர 17:6). சமாரியாவில் இவர்கள் இருந்த இடத்தில் பாபிலோன், கூத்தா, அவ்வா, கமாத்து, செப்பாவாயிம் ஆகிய இடங்களிலிருந்து வேற்று மக்களைக் குடியேற்றினார் (17:24).

5. எஸ்ரா-நெகமியா காலத்தில், புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் ஒருவர் (நெக 10:23).

ஓசியேல் (OZIEL)

யூதித்தின் முன்னோர் (யூதி 8:1).

ஓசிரிங்கஸ் துணுக்குகள் (OXYRHYNCHUS FRAGMENTS)

கயிரோவுக்குத் தெற்கே 185 கி.மீ. தொலைவிலுள்ள பழங்கால ஓசிரிங்கசில் (நவீன பெக்னேசாவில்) கண்டுபிடிக்கப்பட்ட பல கையெழுத்துத் துணுக்குகளில் பல புதிய ஏற்பாட்டு நூல்களின் துணுக்குகளும் திருமுறை சேராத நற்செய்திகளிலிருந்து நான்கு துணுக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னவற்றில் மூன்று கி.பி. 3-ஆம் நூற்றாண்

டைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. இவை புல் தாள் துணுக்குகளாகும். இவற்றில் திரு முறைத் தொகுப்பைச் சேராத தோமையாரின் நற்செய்தி நூலில் இயேசுவின் கூற்றுகளும் கிரேக்க மொழியில் உள்ளன. இவற்றின் கோப்டிக் மொழிபெயர்ப்பு நக்-கம்மாதீ ஏட்டுத் தொகுப்பில் முழுவதும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

நான்காவது துணுக்கு கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தோல் துணுக்காகும். இதில் லேவி என்ற ஒரு ''பரிசேயப் பெரிய குரு'' இயேசுவும் அவரது சீடர்களும் ஆலயத்துக்குள் நுழைவதற்குரிய தூய்மைச் சடங்குகளைச் செய்யவில்லை என்று குற்றம் சாற்றி, ஆலய முற்றத்தில் சவால் விடுகிறார். லேவி குளித்த நீரையும் ''உயிருள்ள நீரையும்'' வேறுபடுத்தி இயேசு பதில் அளிக்கிறார். இச்சட்டம் பற்றிய பரிசேயர்களின் பாரம்பரிய விளக்கங்கள் பற்றிச் சட்டவல்லுநர்களோடு இயேசு நடத்திய தர்க்கங்கள் ஒத்தமை நற்செய்திகளின் விவரிப்புகளோடு ஒத்திருக்கிறது (காண்க.மாற் 2:23-28; 7:1-23).

ஓசு (OX - தெளித்தல்)

இஸ்ராயேல் இனத்தில் தோன்றியவர். இவர் மெராரியின் தந்தை. யூதித்தின் தாத்தா (யூதி 8:1; ஆதி 22:21).

ஓசேம் (OZEM - பலம்)

1. இவர் ஈசாயியின் ஆறாவது மகனும் தாவீது மன்னனின் சகோதரனுமாவார் (1 நாள் 2:15).

2. யூதா வழித்தோன்றலாகிய இவர் எரகுமேலின் ஐந்து புதல்வர்களில் நான்காமவர் ஆவார் (1 நாள் 2:25).

ஓசேயா (HOSEA - யாவே காப்பாற்றுவாராக) - இறைவாக்கினர்

நூல் பெற்ற பன்னிரண்டு சிறிய இறைவாக்கினர்களில் ஒருவர். கி.மு.8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். நூல் பெற்ற இறைவாக்கினர்களில் இவர் ஒருவர்தான் வட அரசாகிய இஸ்ராயேலைச் சேர்ந்தவர். பெயேரீ என்பவர் இவரது தந்தையாவர் என்பதைத் தவிர, அதிகம் இவரைப் பற்றிக் கூறமுடியாது. ஆமோசை அடுத்து, இவர் இஸ்ராயேலில் தனது பணியைத் தொடங்கி 40 ஆண்டுகளுக்குச் செய்திருக்கவேண்டும். இஸ்ராயேலில் 2-ஆம் எரொபயாமின் இறுதிக்காலத்திலிருந்து (779-747) யூதாவில் எசக்கியாவின் எழுச்சிவரை (715 ஓசே 1:1) இவர் இறைவாக்குரைத்திருக்க வேண்டும். ஆனால் 721-இல் சமாரியா வீழ்ந்தபின் இவர் இறைவாக்குரைத்தற்கு ஒரு சான்றுமில்லை. இவரது பின்னணியைப் பற்றி அறிஞர்களிடையே கருத்தொற்றுமையில்லை. இவர் குருத்துவத்தோடோ, அதிகாரப்பூர்வமான இறைவாக்கினர்களோடோ தொடர்புடையவரா? இவர் வட அரசைச் சேர்ந்தவர்தானா? கோமேரோடு இவர் செய்து கொண்ட திருமணம் துன்பமிக்கது. ஆனால் உண்மையானது என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். இத்திருமணம் இறைவனுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே நிலவிய உறவை எடுத்துக் காட்டியது.

ஓசேயா நூல் (BOOK OF HOSEA)

1. முன்னுரை:-

வட அரசாகிய இஸ்ராயேலுக்கு, எலியா, எலிசா, ஆமோஸ், ஓசேயா ஆகிய நான்கு இறைவாக்கினர்கள் அனுப்பப்பட்டனர். இறுதியாக வந்த ஓசேயா, இஸ்ராயேல் ஓர் அளவு செல்வச் செழிப்பில் மிதந்து கொண்டிருந்த காலத்தில் தோன்றினார். ஆமோசுக்குச் சமகாலத்தவர். ஆனாலும் ஆமோசின் போதகத்திலிருந்து ஓசேயாவின் போதகம் பெரிதும் வேறுபட்டது எனலாம். ஆமோஸ் தன் பணி முடிந்து தன் இறைவாக்குகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்துக் கொண்டிருந்த போது, ஓசேயா போதிக்கத் தொடங்கினார் என்று கருத இடமிருக்கிறது. அப்போது, ஏசயாவும் மீக்காவும் யூதாவில் இன்னும் போதிக்கத் தொடங்கவில்லை. ஓசேயா வட அரசைச் சேர்ந்தவர்; தனது சொந்த மக்களுக்கே இறைவாக்குரைத்தவர். இறையன்பை எடுத்துக்காட்டி மக்களை அவர்களது சமயத் தூக்க மயக்கத்திலிருந்து எழுப்ப முயன்றார். ஓசேயா பழைய ஏற்பாட்டு

கவர்ச்சிமிக்க இறைவாக்கினர்களுள் ஒருவராவர். உணர்ச்சி வசப்படக் கூடியவர். மன எழுச்சி தரும் வாக்குகளை அறிவிக்க வல்லவர். இறையன்பு பற்றிய கருத்துக்களில் புதிய ஏற்பாட்டுக்கு மிக நெருங்கியவற்றை வழங்கிய பழைய ஏற்பாட்டு ஆசிரியர். இஸ்ராயேல் வரலாற்றில் இடுக்கண்மிக்க காலத்தில் செயலாற்றினார். கி.மு. 721-இல் அசீரியர்களால் வரவிருந்த பேரழிவு நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தக் கொடிய துன்பமிக்க நிகழ்ச்சிக்குமுன், இஸ்ராயேலரை இறைவன்பால் ஈர்க்கும் அலுவல் ஓசேயாவுக்கு அளிக்கப்பட்டது. இப்பணியை வெகு சிரத்தையாகச் செய்தார். உணர்ச்சி மிக்க விதத்தில் மனவெழுச்சி தரும் சொற்களில், கிளர்ச்சிசெய்யும், பிடிமுரண்டான இஸ்ராயேலுக்கு இறைவனது அன்பை எடுத்தியம்பினார். இறையன்பு பற்றிய சொல்லோவியம் வரைவதில் வல்லவர்.

2. பெயரும் வாழ்க்கையும்:-

ஓசேயா என்ற சொல்லுக்கு மீட்பர் என்ற பொருளுண்டு. இயேசு, யோசுவா என்ற பெயர் ஓசேயா என்ற பெயரோடு தொடர்புடையன. மோசேயின் பணியாளரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு இட்டுச் சென்றவருமான யோசுவா, முதலில் ஓசேயா அல்லது ஓசியா என்று அழைக்கப்பட்டார். இதை மோசே எகோசுவா (யாவே மீட்கிறார்) என்று மாற்றினார் (எண் 13:17). இச்சொல் ஏசுவா என்று மாறியது. இப்பெயர்தான் கன்னிமரியாளின் மகனுக்குச் சூட்டப்பட்டது. இப்பெயர் கிரேக்க மொழியில் இயேசுஸ் என்று மாறியது. இதை நாம் இயேசு என்று பயன்படுத்துகிறோம்.

இறைவாக்கினர் ஓசேயா பெயேரியின் மகனாவார் (ஓசே 1:1). இவர் வட அரசாகிய இஸ்ராயேலைச் சேர்ந்தவர் (2:1; 7:5). இவரைப் பற்றி வெகு சிறிதே அறிகிறோம். அதுவும் இந்நூலில் காணப்படும் குறிப்புகளில் இருந்துதான் அறிகிறோம். ஓசேயாவின் திருமண அனுபவம் அவரது வாழ்க்கையைப் பாதித்தது; அவர் இஸ்ராயேலருக்கு அளித்த செய்தியையும் பாதித்தது; உருக்கொடுத்தது. ஓசேயா திபிலாயிமின் மகளான கோமேரை மணந்தார். இது அவரது வாழ்க்கையைத் துன்பமிக்கதாகவும் குழப்பமிக்கதாகவும் ஆக்கியது. கோமேர் மூன்று குழந்தைகளைப் பெற்றளித்தாள். முதல் குழந்தையும் மகனுமானவனுக்கு இசிரியேல் (பல தலை முறைகள் பெறுவான்) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இரண்டாவது குழந்தையாகிய மகளுக்கு ''லோருகாமா'' (அன்பு பெறாதவள்) என்றும், மூன்றாவது குழந்தையாகிய மகனுக்கு ''லோஅம்மீ'' (என் மக்கள் அல்லர்) என்றும் தீய அடையாளப் பெயர்கள் கொடுக்கப்பட்டன. இவர்களுக்கும் இவர்களது தாயின் விபச்சாரத்திற்கும் தொடர்பில்லை. அவரது குற்றம்பற்றிய குறிப்பேயில்லை. ஆகவே ஓசேயாவின் மக்கள் முறையான திருமணத்தில் பிறந்தவர்கள் என்று ஏற்றுக் கொள்ளலாம். காலப்போக்கில் கோமேர் தன் கணவனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கவில்லை. பிற ஆடவரிடம் இன்பம் தேடத் தொடங்கினாள். இறுதியில் சடங்கு விபச்சாரியானாள். ஆனால் ஓசேயா இப்படிப்பட்ட கோமேரை இன்னும் அன்பு செய்தார். அவளைத் தேடி மீட்டு வந்து தன் வீட்டில் ஏற்றுக் கொண்டார். இந்தத் துன்பமிக்க ஆனால் மன்னிப்பும், நிலையான அன்பும் கலந்த வாழ்க்கைதான் ஓசேயாவினுடையது. இது ஒரு நம்பமுடியாத கதையாகத் தோன்றலாம். இக்கதை இறைவாக்கினரின் சொந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதா, அல்லது வெறும் உருவகவடிவமான இறைவாக்குப் பாடல் கதையா என்பது பற்றி வாதங்கள் உண்டு. முன்னது உண்மையாக இருக்க வேண்டும். ஏனெனில் இந்நூலில் காணப்படும் இறைவாக்கினரின் மனைவியின் பெயர், 1:8-இல் வரும் குழந்தையைப்பால் குடி மறக்கச் செய்தல், கோமேரை விலை கொடுத்து வாங்குதல் போன்றவை இறைவாக்கினரின் வாழ்க்கை விவரிப்பை வெறும் உருவகமாகக் கருதத் தடையாயுள்ளன. நூலில் காணப்படும் குறிப்புகளில் இருந்து இறைவாக்கினரின் திருமண அனுபவம் அவருடைய வாழ்க்கையையும் அவரது செய்தியையும் பாதித்தது;

தனிச் சிறப்புடைய தாக்கியது; மனதில் பதிய வைக்கும் ஒன்றாக்கியது. இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையே நிலவிய அன்புறவை எடுத்துக் காட்டும் மிகச் சிறந்த அடையாளமாகியது.

மற்ற இறைவாக்கினர்களைப் போன்று, ஓசேயாவையும் மக்கள் பழித்துரைத்தனர்; கேலி செய்தனர் (9:7 தொ). தனது இறைவாக்கு உரைக்கும் பணியை ''என் கடவுளின் மக்களாகிய எப்பிராயிமுக்கு இறைவாக்கினன் காவல் காரணனாய் இருக்கின்றான்'' என்று ஓசேயா விவரிக்கின்றார் (9:8). இஸ்ராயேலர் அசீரியர்களோடு கொண்ட நட்புறவு பற்றி ஓசேயா குறிப்பிடுவதிலிருந்து அசீரியர்கள் இஸ்ராயேலர்களை மூர்க்கத்தனமாய், முழுமையாக, கி.மு. 722-இல் அழித்ததற்குச் சில ஆண்டுகளுக்குமுன் (2 அர 17) ஓசேயாவின் பணி முடிந்திருக்க வேண்டும் என்று கருதலாம். அவரது இறுதிக்காலம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது.

ஓசேயாவில் காணப்படும் வரலாற்று அறிவு, கடந்த காலம் பற்றிய பரந்த முதிர்ந்த தீர்ப்பு, அவர் காலத்தின் நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு, அவரது நடையில் காணப்படும் நயமான நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உருவகங்கள் ஆகியவை அவர் பண்பாடுடைய வகுப்பினரைச் சேர்ந்தவர் என்று காட்டுகின்றன. அவர் குருகுலத்தைச் சேர்ந்தவர் என்று கூறமுடியாது. 9:7-இல் காணப்படும் இடித்துரையிலிருந்து அவர் நபிகளின் குழுவைச் சேர்ந்தவர் என்றும் கூறமுடியாது.

3. அரசியல் பின்னணி:-

இந்நூலின் பொதுப் பின்னணி ஆமோசில் காணப்படுவதைப்போன்றதே. ஆனால் ஆமோஸ் முன்னறிவித்த சமூகவீழ்ச்சி இப்போது ஏற்கனவே நிகழ்ந்த விட்டதொன்றாகும்.

நூலின் தொடக்கம், ஓசேயா இரண்டாம் எரொபயாமின் ஆட்சிக் காலத்தில் இறைவாக்குரைத்ததாகக் கூறுகிறது. ஆனால் இரண்டாம் எரொபயாமின் மகனான செக்கரியா (746-45), சல்லூம் (745), மெனகேம் (கி.மு. 745-738) ஆகிய மூன்று அரசர்கள் காலத்திலும் ஓசேயாவின் இறைவாக்குரைக்கும் பணி நீடித்தது என்பது உறுதி. எரொபயாமின் மரணத்துக்குப்பின் இருபது ஆண்டுகளுக்கு நாட்டில் அரசியல் குழப்பம் தொடர்ந்து நிலவியது. சல்லூம், செக்கரியாவையும், மெனகேம் சல்லூமையும் கொன்றனர். மெனகேமின் காலத்தில் ''அசீரியாவின் அரசன் பூல் இஸ்ராயேல் நாட்டின் மீது படையெடுத்தான்'' (2 அர 15:19). பூல் என்பது மூன்றாம் திகிலாத்து பிலேசருடைய பாபிலோனியப் பெயராகும். பேரழிவுக்குத் தீர்ப்பிடப்பட்ட இஸ்ராயேல்மீது அசீரியர்களின் பேரபாயம் இறங்கியது.

உண்டு கொழுத்துச் சுகத்தைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்ட இஸ்ராயேலர் ஆற்றல் மிக்க பூலின் தலைமையில் முன்னேறிக் கொண்டிருந்த பெரும் சேனையின் பேரிரைச்சலைக் கேட்கத் தவறினர் அல்லது புறக்கணித்தனர். இதன் விளைவாக மெனகேம் பூலுக்குப் (738/37) பெரும் கப்பம் கட்ட வேண்டியிருந்தது. மெனகேமின் மகனான பாசேயாவை அவன் அரசுக்கு வந்த இரு ஆண்டுகளில் பெக்கா (737-32) கொன்றான். பெக்காவை இரு வருடங்களுக்குப் பின் ஓசியா (732-724) கொன்றான். ஓசியா தான் இஸ்ராயேலரின் கடைசி அரசன். பத்து ஆண்டுகளுக்குப்பின் வட அரசு அழிந்து போயிற்று. இந்தச் சிக்கல் மிக்க அரசியல் பின்னணியில் இறைவாக்கினர் ஓசேயா தனது பணியை நிறைவேற்றினார்.

4. சமய, சமூகப்பணி:-

எரொபயாமின் ஆட்சிக் காலத்தில் இஸ்ராயேல் நாடு பல வழிகளில் செல்வச் செழிப்பு நிலையில் இருந்தது. உண்டு கொழுத்த செல்வர்களையும் தலைவர்களையும் ஆமோசின் போதகம் ஒரு சிறிதும் மாற்றவில்லை. ஊழல் மிகுந்தது. அநீதி பெருகிற்று. எளியோரும் வறியோரும் பெரிதும் துன்புற்றனர். ஆமோசின் காலத்தில் நிலவிய சமய சமூக நிலையே ஓசேயாவின் காலத்திலும் நிலவியது. இவற்றை ஆமோஸ் - திருநூல் என்ற தலைப்பின் கீழ் வாசித்தறியலாம்.

இந்நூலில் உடன்படிக்கை இறையியல், உபாகமச் சட்டமரபு, சிலை வழிபாடு ஆகிய மூன்று சமயக் கருத்துக்களும் முக்கிய இடம் பெறுகின்றன.

5. எப்போது? எங்கு?

யூதாவில் ஊசியா (கி.மு. 793-750), யோத்தாம் (750-742) ஆகாசு (742-715), எசக்கியா (715-687) ஆகியோரும் இஸ்ராயேலில் எரொபயாமும் ஆட்சி செய்தபோது ஓசேயா இறைவாக்குரைத்தாரென்று அறிகிறோம் (1:1). இவர் தன் பணியை ஏகூவின் மரபு ஆட்சி செய்தபோது தொடங்கியதாகத் தெரிகிறது (1:4). இதன்படி எரொபயாமின் மகன் செக்கரியாவின் மரணத்திற்குமுன் செயல்படத் தொடங்கி இருக்கலாம். 7:16; 8:4; 10:3.15 ஆகிய வாசகங்களின்படி, கி.மு. 746-க்குப் பின் அரச மாற்றங்களின் துன்பங்களுக்கு இறைவாக்கினர் ஓசேயா சாட்சியாகிறார். திகிலாத்து-பிலேசருக்கு மெனகேம் கப்பம் கட்டியதற்கும், அசீரியர்களோடு அவன் கொண்ட உறவுக்கும் 5:13; 7:11-12; 8:9; 10:5-7; 12:2 ஆகிய குறிப்புகள் சான்றாக அமைகின்றன. சீரியர்களும் எப்பிராயிமும் நடத்தியபோரை 5:8-6:6 என்ற பகுதி சுட்டுகிறது. இஸ்ராயேலரின் கடைசி அரசரான ஓசியா எகிப்தியரோடு கொண்ட உறவு பற்றி 7:11; 9:6; 12:2 ஆகிய வாசகங்கள் சுட்டுகின்றன. சமாரியாவின் வீழ்ச்சி, வட அரசின் அழிவு ஆகியவற்றுக்குப்பின் இறைவாக்கினர் ஓசேயா பணியாற்றினார் என்று சுட்டும் எக்குறிப்பும் இல்லை. ஆகவே 2-ஆம் எரொபயாம், செக்கரியா, சல்லூம், மெனகேம் ஆகியோர் காலத்தில் ஓசேயா இறைவாக்குரைத்திருக்கலாம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஓசேயா கி.மு. 750-25-க்கு இடைப்பட்ட காலத்தில், தன் பணியைச் செய்திருக்கலாம் என்று கூறலாம். இவர் ஆமோசுக்கு இணையான காலத்தவரானாலும், ஆமோசுக்குப் பின்னரே இறைவாக்குரைத்தார். எசயாவுக்குச் சமகாலத்தவராயினும் எசயாவுக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே இறைவாக்குரைத்தார் எனலாம். ஓசேயாவின் இறைவாக்குகள் எப்போது நூல்வடிவம் பெற்றன என்றும், நமக்குக் கிடைத்துள்ள வடிவம் எப்போது இறுதியாகப் பதிப்பிக்கப்பட்டது என்றும் உறுதியாகக் கூற முடியாது.

இந்நூலின் தொடக்க வாக்கியம் யூதாவாகிய தென் அரசில் ஆட்சி செய்த அரசர்களுக்கு முக்கியம் அளிப்பதாகத் தெரிகிறது. இந்த யூகம் இந்நூல் இறுதியாக யூதாவில் எழுதப்பட்டிருக்கலாம் என்று சுட்டுகிறது. இது விநோதமாகத் தோன்றலாம். ஏனெனில் ஓசேயா வட அரசைச் சேர்ந்தவர். அங்குதான் இறைவாக்குரைத்தார். வடஅரச மக்களுக்குத்தான் தனது சிறப்புச் செய்தியை அளித்தார். சமாரியா பிடிபட்டு அழியுமுன், இருண்ட கொடுமை மிக்க அவநம்பிக்கை மிகுந்த, அரசியல் குழப்பமிக்க வட அரசின் இறுதி ஆண்டுகளில் ஓசேயா கொடிய மரணம் எய்தியிருக்கலாம். இந்நூல் வட அரசில் தோன்றியிருந்தால், வட பகுதி அரசர்களை மட்டுமே வைத்துக் காலவரையறை செய்து தோன்றியிருக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கலாம். ஆனால் யூதாவின் அரசர்கள் சிறப்புப் பெறுகின்றனர். இதற்கு ஓசேயா இறந்தபின் கி.மு. 722-இல் சமாரியா அழிந்தபின் யூதாவில் இந்நூல் பதிக்கப்பட்டது காரணமாய் இருக்கலாம். இந்த அழிவிலிருந்து தப்பிய ஓசேயாவுக்குப் பற்றுறுதியான சீடர்களும் ஒருவரோ பலரோ இறைவாக்குகளை ஒன்று சேர்த்து ஒரே நூலாகத் தொகுத்திருக்கலாம். அப்படிச் செய்தபோது யூதாவுக்குப் பொருத்தமான குறிப்புகளைச் சேர்த்து ஓசேயாவின் இறைவாக்குகளைத் தங்கள் காலத்திற்கு ஏற்றதாகவும் யூதாவுக்கு உரியதாகவும் செய்தனர் (1:1.7; 4:15; 5:5; 6:4.11; 8:14; 10:11; 12:1). ஏனெனில் யூதாவும் சமய, சமூக இழிநிலையிலேயே இருந்தது. அதற்கும் சமய சமூகச் சீர்திருத்தம் தேவைப்பட்டது.

6. இலக்கியச் சிறப்பு:-

பழைய ஏற்பாட்டு எபிரேய வாசகத்தில் இந்நூலின் வாசகம்தான் மிகவும் பழுதுபட்ட நிலையில் நமக்குக் கிடைத்துள்ளது. இதற்குப் பொறுப்பானவர் யாவர் என அறியோம். சில பகுதிகளை மொழி பெயர்க்க மூலமொழி வாசகம் இதுவாகத்தான் இருக்

குமென ஊகிக்க வேண்டியுள்ளது. ஆயினும் புலமைவாய்ந்த மொழி பெயர்ப்புகள் பல வற்றினிடையே ஓரளவு ஒற்றுமை காணப் படுவது வியப்புக்குரியதாகும்.

இந்நூலில் எத்தகைய திட்டமும் அமைப் பும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்குப் பொறுப்பானவர் ஓசேயாவா? அல்லது அவ ரது சீடர்களா? யாராய் இருந்தாலும் இறை வாக்கினரின் பல கூற்றுக்களை ஒட்டு மொத் தமாகக் குவித்துத் தருகின்றனர். முதல் மூன்று அதிகாரங்களில் மாறா அன்புடைய காதலனாகிய யாவேயைப் பற்றிய விவரிப்பு வருகிறது. அதி. 14-இல் மெசியாவைப்பற் றிக் குறிப்பு உள்ளது. இவ்விரண்டுக்கும் இடையில் மற்றக் கருத்துக்கள் எல்லாம் குவிக்கப்படுகின்றன. தந்திச்செய்திபோன்ற நடையுண்டு. மனவெழுச்சி மிக்க போக்கும் எங்கும் பரவிக்கிடக்கிறது. ஓர் உணர்ச்சியிலி ருந்து திடீரென மறு உணர்ச்சிக்குத் தாவுதல் சர்வசாதாரணம். தனித்து நிற்கும் வாக்குப் பகுதிகள் பல உண்டு. மொழிகடினமானது. வாக்குகள் சுருக்கமானவை; பொருள் பொதிந்தவை. காலவரையறைப்படியோ, அறிவு சார்ந்த முறையிலோ, ஆன்மீகப் பொருள் அடிப்படையிலோ, எத்தகைய திட்டத்தின் படியும் நூல் அமைக்கப்பெறவில்லை. ஆசிரி யர் ஓர் உணர்ச்சியிலிருந்து நேர் எதிர் உணர்ச் சிக்குத் தாவும் தன்மையுடையவர். இத்தகை யவரிடமிருந்து திட்டமிட்ட நூலை நாம் எதிர்பார்க்க முடியாது. நாட்டில் நிலவிய அரசியல் குழப்ப நிலையும் இந்நூலைப் பாதித்தது எனலாம். ஓசேயாவின் வாக்குகள் இறை ஏவுதல் பெற்றவர்களால் பாதுகாக்கப் பட்டுப் பிற்காலத்தில் எத்தகைய திட்டமும் இல்லாமல் ஒரு நூலாகத் தொகுக்கப்பட்டி ருக்க வேண்டும். அறிவுசார்ந்த முறையிலும், தலைப்பின் அடிப்படையிலும் ஒழுங்கு செய்ய வேண்டியதின் அவசியத்தையோ, அப்படிச் செய்வது இயலும் என்றோ பதிப் பாசிரியர்கள் உணர்ந்ததாகத் தெரிய வில்லை. கவலைப்பட்டதாகத் தெரிய வில்லை. ஆகையால் இந்நூலை வாசிக்கும் போது ஒரு பகுதி அதே அதிகாரத்தில் வரும் மற்றப்பகுதிகளோடு எப்படித் தொடர்புடை யது என்று வியந்து கொண்டிராமல் ஒவ் வொரு பகுதியிலும் காணப்படும் செய்தி யோடு வாசகர்கள் மனநிறைவடைய வேண் டும். சாதாரணமாய் நூலில் கொடுக்கப்பட்டி ருக்கும் துணைத்தலைப்புக்களும், விளக்கங் களும் தனிப்பகுதிகளின் செய்தியைக் கண்டு ணர வாசகர்களுக்கு உதவலாம்.

இந்நூலில் அச்சுறுத்தல்கள் உண்டு; மனந் திரும்பக்கோரும் அழைப்புகள் உண்டு. வருங்காலத்திற்கு நம்பிக்கை அளிக்கும் மெசியா பற்றிய வாக்குகளும் காணக்கிடக் கின்றன. நகரவாயில்களில் மூப்பர்கள்முன் நடக்கும் வழக்காடும் அமைப்பை இறை வாக்கினர் விரும்பிப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. அதனால் யாவேவின் சொற்க ளையும் இறைவாக்கினரின் சொற்களையும் வேறுபடுத்துவது கடினம். நூல் முழுவதும் அன்பு பற்றிய உருவகங்கள் நறுமணம் கமழ் கின்றன. இணையமைப்பு, சொற்களை வைத்து விளையாடுதல், எதுகை மோனை யோடு முக்கிய கருத்துக்களை மீண்டும் மீண்டும் கூறுதல் ஆகியவற்றைச் செவிசாய்ப் போரின் கவனத்தை ஈர்க்க ஓசேயா பயன் படுத்துகிறார்.

யூதாவைப் பற்றிய கூற்றுகள் (1:7; 5:5; 6:11; 12:1), சில பகுதிகளில் சிந்தனை ஓட் டத்தைத் தடை செய்கின்றன. ஒரு வேளை ஓசேயாவின் மரணத்திற்குப்பின் யூதாவைச் சேர்ந்த பதிப்பாசிரியர்களால் இவை புகுத் தப்பட்டிருக்கலாம். இவை யூதாவைச் சார்ந்த மக்களுக்கும் ஓசேயாவின் கூற்றுக்கள் பொருத்தமானவை என்று காட்டப் புகுத்தப் பட்டிருக்கலாம்.

நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் இந் நூல் கி.மு. 700-ஐ ஒட்டி நிலையான எழுத்து வடிவம் பெற்றிருக்கலாம். அறிஞர்கள் பொதுவாக இந்நூலின் உண்மைத் தன் மையை ஏற்றுக்கொள்வர். இந்நூலை ஓசே யாவே எழுதினார் என்று கருதுபவர்களும் உண்டு. ஆனால் பெரும் பகுதி ஓசேயாவின் சீடர்களால் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்ட தென்பதே உண்மையாக இருக்கலாம்.

7. திட்டம்:

இந்நூலில் தெளிவான திட்டம் இல்லையாயினும் இதைப் பின் வருமாறு பிரித்துத் திட்டம் அமைக்கலாம்.

1) முன்னுரை 1:1.

2) ஓசேயாவின் திருமணமும் அதன் உட்பொருளும் (1:2-3:5).

3) இஸ்ராயேலுக்கு எதிரான இறைவாக்குகள் (4:1-14:1).

4) இஸ்ராயேல் மனந்திரும்ப அழைப்பு (14:2-9).

5) முடிவுரை:- அறவுரை (14:10).

8. சிறப்புக் கருத்துக்கள்:-

8. அ. உடன்படிக்கை அன்பு:-

ஓசேயாவின் முக்கிய செய்தி ''கெசது'' என்ற சொல்லைச் சுற்றிச் சுழல்கிறது. இச்சொல் பழைய ஏற்பாட்டில் 247 தடவை வருகிறது. இச்சொல்லை இரக்கம், அருள், அன்பிரக்கம் என்று பலவாறு மொழி பெயர்ப்பர். ஆனால் இவற்றில் எதுவும் அதன் உண்மைப் பொருளை முழுமையாக உணர்த்தவில்லை எனலாம். இது உடன்படிக்கையோடு உறவு கொண்ட சொல்லாகும்; உடன்படிக்கை செய்து கொள்வோரிடையே நிலவ வேண்டிய பற்றுறுதியையும், உறவையும் உணர்த்தும். இறைவனைப் பொறுத்தமட்டும், இச்சொல் அவர் காட்டும் இரக்கத்தையும் அன்பையும் உணர்த்தும். அது எப்போதும் பற்றுறுதியான அன்பும் உடன்படிக்கை செய்யப்பட்ட இரக்கமும் ஆகும். மனிதனைப் பொறுத்தமட்டும், அவன் இறைவனைச் சார்ந்து இருந்து, அவருக்குக் காட்டும் பற்றுறுதியான பிரதி அன்பு மிக்க வாழ்க்கை நியதி ஆகும். நாம் ''கெசது'' என்ற சொல்லை உடன்படிக்கை அன்பு என்று குறிப்பிடுவோம். இது இறைவன் மனிதனுக்குக் காட்டும் அன்பையும், மனிதனிடமிருந்து அவர்கோரும் அன்பையும் குறிக்கும்.

பழைய ஏற்பாட்டிலேயே முதல் முறையாகத் திருமணத்தை உவமையாக ஓசேயா பயன்படுத்தி, இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையே உள்ள உடன்படிக்கை உறவை விவரிக்கிறார். இந்த உவமை உடன்படிக்கை அன்பை எடுத்துக்கூற இயற்கையான அடையாளமாகத் தோன்றலாம். ஓசேயாவினுடைய சொந்தவாழ்க்கை அனுபவத்திலிருந்து இந்த உவமை அவருக்குக் கிடைத்தது. அவரது துன்பமிக்க வாழ்க்கையே அவரது நற்செய்தியாயிற்று. யாவேக்கும் அவரது மக்களுக்கும் இடையேயுள்ள உறவை எடுத்துக்காட்ட இது சரியான உவமை என்று உணர்ந்தார். திருமண அன்பின் தன்மை மனிதரோடு இறைவன் கொள்ளும் உறவின் பொருளையும், யாவேயின் அன்பின் உண்மையையும் ஆழத்தையும் வியத்தகு முறையில் எடுத்துக் கூறவல்லது என்று உணர்ந்தார். இந்த உவமையைத் துணிவோடு கையாண்டார். இறைவனது அன்பையும் கோபத்தையும் உணர்ச்சி மிக்க விதத்தில் விவரிக்கிறார்.

ஓசேயாவின் நூலில் வரும் நிகழ்ச்சிகளின் அடையாளப் பொருள் தெளிவாக உள்ளது. இறைவனே கணவன்; பாகாலை வணங்கும் இஸ்ராயேலே கோமேர் என்பவள். இறைவாக்குப் பராம்பரியத்தில் சிலைவழிபாடு விபச்சாரமாகும். இந்த விபச்சாரத்தால் இஸ்ராயேல் இறைவனைக் கைவிட்டது. இஸ்ராயேலாகிய மனைவி, 'தன் கணவனாகிய யாவேயையும் அவரது வீட்டையும் விட்டு, அந்நிய தேவதைகளைத் தீவிரமாகத் தேடி ஓடினாள். இது இஸ்ராயேல் இறைவனுக்குக் காட்டிய பிரமாணிக்கமின்மையாகும்; விபச்சாரமாகும். இத்தேவதைகளுக்கு அளிக்கப்பட்ட வழிபாட்டு முறைகளும் இக்குற்றத்தை இரட்டிப்பாக்கின. இவ்வழிபாடு சடங்கு விபச்சாரமாகும். இனப்பெருக்கத் தேவர்களும் தேவதைகளும் புணர்ச்சி கொள்வதைச் சடங்கு முறையில் செய்து காட்டுவதாகும். இது நிலத்தின் பெரும் விளைச்சலுக்கும், வீட்டு விலங்குகள் பெருகுவதற்கும், அநேகப் பிள்ளைகளைப் பெறுவதற்கும் உத்திரவாதமாகக் கருதப்பட்டது. இவற்றின் உண்மையான காரணமான யாவேயைப் புறக்கணித்தனர். இது அக்கால மதிகேடான பைத்தியப் போக்காகும். இதை ஓசேயா வன்மை

யாகக் கண்டிக்கிறார். இத்தகைய சிற்றின்பச் சடங்குச் செயல்கள் யாவேயை அவமானப் படுத்தின. இவ்வாறு இறைவனுக்கும் தனக்கு முள்ள உடன்படிக்கை உறவை இஸ்ராயேல் உடைத்தெறிந்தது. உடன்படிக்கையின் கொள்கையான ''நாம் உங்கள் இறைவன்; நீங்கள் எமது மக்கள்'' என்ற கூற்று வெறுமை யாயிற்று. யாவேதான் தனது தனிச் சிறப் பான ஒரே இறைவன் என்பதை இஸ்ராயேல் நிராகரித்தது. ஆகவே இறைவன் இஸ்ரா யேலை நிராகரிக்கவிருந்தார். ஆனால் இஸ் ராயேலைத் திரும்பத் தம்முடையதாக்கவே விரும்புகிறார்; தேடுகிறார். திருந்துவதற்கா கக் கோமேரை ஓசேயா அடைத்து வைத்தி ருப்பது, இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்டுச் சுத்தி செய்யப்படுவதைக் குறிக்கிறது. பிள் ளைகளுக்குக் கொடுக்கப்படும் பெயர்கள் இஸ்ராயேல் அடையப் போகும் தண்டனை களைக் குறிக்கின்றன. இஸ்ராயேலை மீண் டும் இறைவனிடம் கொண்டு வருவதே இஸ்ராயேல் அனுபவிக்கும் தண்டனை களின் ஒரே நோக்கமாகும்.

இஸ்ராயேல் அந்நிய நாட்டவரோடு செய்து கொண்ட நேச உடன்படிக்கையில் தனது பலத்தையும் நம்பிக்கையையும் வைத் தது. இது யாவேக்கு இஸ்ராயேல் காட்டும் பிரமாணிக்கமின்மையின் மற்றொரு கூறா கும். தான் நம்பிக்கையும் பற்றுறுதியும் கொள்வதற்குத் தகுதியற்றவராக யாவேயை இஸ்ராயேல் கைவிட்டது. அக்காலத்தில் பலம் வாய்ந்த அரசாகத் திகழ்ந்த அசீரியர்க ளின் சேனையை நம்பியது. இந்த மூடத் தனத்தை ஓசேயா கண்டிக்கிறார். விரைவில் அசீரியப் பேராசைக்கு இஸ்ராயேல் பலியா கும் என்றும், கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படும் என்றும் எச்சரிக்கிறார். ஓசே யாவுக்கும் கோமேருக்கும் திருமணம் புதுப் பிக்கப்படுதல் யாவேக்கும் அவரது மக்களுக் குமிடையே நல்லுறவு மீண்டும் ஏற்படு வதை உறுதிப்படுத்துகிறது. அவர்களது இறையன்பு வளர்ச்சிக் காலமாகிய யாத்தி ரைச் சூழ்நிலைக்கு மீண்டும் ஒருமுறை இஸ்ராயேலைக் கொண்டுவர இறைவன் திட்டமிடுகிறார் (2:16 தொ). இஸ்ராயேலின் மகிமை மிக்க பழங்காலத்தையும், அதன் பாலை வாழ்வையும் 92:17) உடன்படிக்கை யையும் ஓசேயா விரும்பித் திரும்பிப் பார்க்கி றார். ஓசேயாவுக்குப் பாலை, தண்டனையின் இடமாகும்; சோதனை இடமாகும் (2:15); இறைவனும் இஸ்ராயேலும் உடன்படிக்கை அன்புறவு கொள்ளும் இடமாகும் (2:16); தண்டனையோ சுத்தி செய்யும் சாதனமாகும்.

இறைவன் இஸ்ராயேலை பாலையையும் கடந்து கூட்டிச் செல்லுகிறார். புதிய இன்ப வனத்துக்குக் கொண்டு வருவதாக உறுதிய ளிக்கிறார் (2:23-24). அங்கே இஸ்ராயேலுக் கும், இறைவனுக்குமுள்ள அன்பு, முதல் தம்பதியர் கொண்டிருந்த அன்பின் நிறைவா கவும் கொடுமுடியாகவும் இருக்கும் (2:21-25). ''முடிவில்லாக் காலத்திற்கு உன்னோடு நான் மண ஒப்பந்தம் செய்து கொள்வேன்; நேர்மையிலும் நீதியிலும், பேரன்பிலும் உன் னோடு மணஒப்பந்தம் செய்து கொள்வேன்; மாறாத அன்புடன் உன்னோடு மணஒப்பந் தம் செய்து கொள்வேன்; ஆண்டவரை நீயும் அறிந்து கொள்வாய்'' (2:21-22).

ஓசேயாவின் முக்கிய செய்தி இறைவனது அன்பாகும். பிரமாணிக்கமற்ற மனைவியா கிய இஸ்ராயேலைக்கூட இறைவனால் அன்பு செய்யாமல் இருக்கமுடியாது (11:8-9). இது அன்பும் எழுச்சியுமிக்க அழுத்தத் தோடு எடுத்துக் கூறப்படுகிறது. இறைவ னும் இறைவாக்கினனும் இம்மக்களிட மிருந்து இரக்கம், பிரமாணிக்கம், இறையறிவு போன்ற சமய அடிப்படை உண்மைகளைக் கோருகின்றனர் (2:21-22; 4:1; 6:6). இவற்றின் வழியாக இம்மக்கள் இறைவனது தன்மையி லேயே பங்கு கொள்ளுகின்றனர். இறைவன் தம் அன்பு நிறை கொடைகளில் இரக்கமுள் ளவராய் இருப்பதுபோல், தமது ஞானமிக்க அருள்பாலிப்பில் மனிதத் தேவைகளை அறிந்தவராய் இருப்பதுபோல், மனிதன் இறைவனது கொடைகளுக்கு அளிக்கும் அன்பு நிறை பதிலில் இரக்கமிக்கவனாய் இருக்கவேண்டும்; உடன்படிக்கைக் கோரிக் கைகளுக்கு அளிக்கும் பதிலில் பிரமாணிக்க முள்ளவனாக இருக்க வேண்டும். அவரத

அருள்பாலிப்பு உதவியில் எப்போதும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். இறைவனது சித்தத்தை அறிந்து அதற்கேற்றபடி நடப்பது என்ற பொருளில் மனிதன் இறைவனை அறிய வேண்டும். இவைதான் இறைவாக்கினர் மக்கள் முன் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளாகும். அவர்களுக்கு அளிக்கும் வாய்ப்புகளாகும்.

இறைவன் தனது மக்கள்பால் கொண்டிருக்கும் அன்பை வலியுறுத்திக் கூறுவதில் ஓசேயா தலைசிறந்தவர். ஓசேயா தனது மனைவி கோமேருக்குக் காட்டிய அன்பு ஓர் எடுத்துக் காட்டாகும்; அதுவும் பலவீனமான எடுத்துக்காட்டாகும். இஸ்ராயேலை இறைவன் அன்பு செய்கிறார். அதைத்தேடிக் கண்டுபிடிக்கிறார்; நயமாகப் பேசி அதை இணங்கச் செய்கிறார்; அதற்குப் போதிக்கிறார்; அதை எச்சரிக்கிறார்; அதை மீண்டும் வரவேற்று ஏற்றுக்கொள்கிறார். ''நாம் இறைவன்; வெறும் மனிதனல்லன்'' *(11:19)*. அன்பே இறைவனது தன்மையாய் இருப்பதால், இவ்வாறு இறைவன் செயலாற்றுகிறார். இதை விளக்கப்பயன்படும் மனித எடுத்துக்காட்டுகள் தோல்வியுறுகின்றன என்று கூறலாம். ஓசேயா போன்ற கணவனாக இறைவன் தோன்றுகிறார். இஸ்ராயேலாகிய தமது குழந்தையைக்கையில் ஏந்தும், அதற்கு நடை பயிற்றுவிக்கும், உண்ணக்கற்றுக்கொடுக்கும் தந்தைபோல் இருக்கிறார் *(11:1-4)*. இவையெல்லாம் எடுத்துக் காட்டுகள்தான். உண்மை நிலையோ இவற்றையெல்லாம் கடந்தது; உயர்ந்தது. இறைவன் இறைவனாய் இருப்பதால் அன்பு செய்கிறார். இதைவிட மேலானதொன்றும் கூற முடியாது. இவ்விளக்கத்தில் மனிதனுக்கு இறைவன் அளித்த வெளிப்பாட்டின் உச்ச நிலையை ஓசேயா எய்துகிறார். புதிய ஏற்பாட்டின் ஆழ்ந்த ஆன்மீக இறையியல் வல்லுநராகப் புனித யோவான் தனது நற்செய்தியிலும் திருமுகங்களிலும் இந்த உண்மையைச் சிறப்பித்துக் கூறுவார். ''அன்பே கடவுள்; அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான்; கடவுளும் அவனுள் நிலைத்திருக்கிறார்'' *(1 யோவா 4:16)*.

இறைவன் மனிதனுக்குக் காட்டும் அன்பையும், மனிதரிடமிருந்து, அவர் கோரும் அன்பையும் குறிக்க மட்டும் ''கெசது'' என்ற சொல்லை ஓசேயா பயன் படுத்தவில்லை. மனிதன் தன் உடன் மனிதர்களுக்குக் காட்ட வேண்டுமென்று இறைவன் எதிர்பார்க்கும் அன்பைக் குறிக்கவும் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார் *(ஓசே 4:1; 12:6)*. இஸ்ராயேலர் அனைவரும் ஒரே உடன்படிக்கையால் இறைவனோடு இணைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் ஒருவர் ஒருவரோடு இணைக்கப்பட்டிருக்கின்றனர். ஒருவர் தன் அயலாருக்குக் காட்டும் அன்பும் பற்றுறுதியும் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தலின் ஒரு பகுதியாகும்.

இறைவனது அன்பில்தான் வருங்கால மகிமை பற்றிய வாக்குறுதி இறைவாக்கின் ஒன்றிணைந்த பாகமாகிறது. இறைவனது அன்பின் திட்டம் பாழ்படமுடியாது. பல நூற்றாண்டுகளுக்குமுன், குலமுதியவர்களுக்கும், மோசேக்கும், தாவீது மரபு அரசர்களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற வேண்டும். ஏனெனில் இறைவன் அன்பும் பிரமாணிக்கமும் மிக்கவர். ஒளிமிக்க, மகிமை மிக்க வருங்காலத்தைப் பற்றிய பகுதிகளில் இக்கருத்து காணப்படுகிறது. ஓசேயா தனது பிரமாணிக்கமற்ற மனைவியை அன்பு செய்து அவளை மீண்டும் ஏற்றுக் கொண்டதுபோல், யாவேயும் தமது பிரமாணிக்கமற்ற மக்களை அன்பு செய்து மீண்டும் ஏற்றுக்கொள்வார். ஓசேயாவின் சொந்த வாழ்வானது பாவம், இழிவு ஆகியவற்றின்மேல் வெற்றி கொண்டது போல், யாவேயின் அன்பு இஸ்ராயேலின் பாவத்தின் மேல் வெற்றிகொள்ளும் *(அதி 14)*. இஸ்ராயேல் இறைவனிடம் திரும்பிவரும். ஓசேயா இதை உறுதியாக நம்பினாலும் இத்திரும்புதல் பற்றிய விபரங்கள் அவரது நூலில் கொடுக்கப்படவில்லை. இதைப் புதிய ஏற்பாடு ஈடுசெய்கிறது *(உரோ 11:26; 2 கொரி 1:20)*.

8. ஆ. மக்களின் ஒழுக்க வாழ்வு:-

இஸ்ராயேலின் ஒழுங்கீனம் ஆமோசின்

காலத்தைவிட, ஒசேயாவின் காலத்தில், மோசமாக இருந்தது. குருக்களும் (ஓசே 4:8; 6:9), பெருங்குடி மக்களும், அரசர்களும் (5:1; 7:3) கலகத்தலைவர்களாய் இருந்தனர்.

இஸ்ராயேலின் வரலாற்றில் காணப்படும் கடந்தகாலப் பாவங்கள், இறைவாக்கினர் கால நிலைக்குத் தீய அடையாளமாக அமைந்தன என்று ஓசேயா எடுத்துக் கூறுகின்றார். பல நூற்றாண்டுகளுக்குமுன் பாகால் பெயோருக்குச்செய்த சிலைவழிபாடும் (9;10), கில்காலில் இருந்த ஒழுக்கங் கெட்ட அரச நிறுவனமும் (4:15; 9:15), கிபயாவில் நடந்த பயங்கர காமக்கொலையும் (9:9; 10:9), பேத்தேலில் காளையை வணங்கியதும் (8:4-6), இஸ்ராயேல் மக்களின் மூதாதையரான யாக்கோப்பின் தவறான போக்கும் (அதி 12) ஆகிய பாவங்கள் இஸ்ராயேலின் வரலாற்றில், நீண்ட துன்ப நிழலை விட்டுச் சென்றன. ஆனால் ஓசேயாவின் கால மக்கள் இவற்றையெல்லாம் மிஞ்சி விட்டனர் என்பதை இறைவாக்கினர் சுட்டிக்காட்டுகிறார்.

முதல் கற்பனைக்கு எதிரான குற்றங்களோடு இஸ்ராயேலர் நிற்கவில்லை. தனது இறைப்பற்றற்ற தன்மையாலும் பாவப் போக்காலும் மற்றக் கற்பனைகளையும் கைவிட்டது, மீறியது; சபித்தல், பொய்யுரைத்தல், கொலை, கொள்ளை, விபச்சாரம், நேர்மையின்மை, பேராசை, கபடம் ஆகியவை இறைவாக்கினரின் போதகத்தில் குறிக்கப்படும் சில பாவங்களாகும். குருக்களும் இறைவாக்கினர்களும் ஊழல் மிக்கவர்களாயினர். குருடர்கள் குருடர்களுக்கு வழிகாட்டினர். அரசியல் கொலைகள் பெருகின. அரச மரபு இழிவுபட்டது. இஸ்ராயேல் சவுலை அரசனாகப் பெற்றபோதே அரசாட்சி இஸ்ராயேலுக்கு முழுவதும் நன்மை பயப்பதாக அமைய வில்லை (1 சாமு 8:4-22). தீமை கலந்ததாகவே இருந்தது. காலப்போக்கில் அரசர்கள் இறைவனிடமிருந்து இன்னும் வெகு தூரம் அகன்று போயினர் (7:3-7; 8:4-10; 9:15; 10:3.4.19; 13:9-11).

ஓசேயா ஆட்சிசெய்யும் வகுப்பினரை வன்மையாகக் குற்றம் சாட்டுகிறார். இறைவனது சித்தத்திற்கு எதிராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசர்கள் உலகியல் போக்கைப் பின் பற்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைப் பிற மக்களின் நிலைக்குத் தாழ்த்தினர்; இழிவு படுத்தினர். அறியாமையும் பேராசையும் மிக்க குருக்கள், மக்களை அழிவுக்கு இட்டுச் சென்றனர். அநீதி மிகுந்தது. இதை ஓசேயா வன்மையாகக் கண்டிக்கிறார். இன்னும் கடினமாகப் பதிதத்தின் தீய விளைவுகளை வலியுறுத்துகிறார்.

8. இ. மக்களின் சமயம்:-

மக்களின் புறவழிபாட்டு முறையைப் பொறுத்த மட்டும் குறையிருக்கவில்லை. பலிபீடங்களும் பலிகளும், திருயாத்திரைகளும் பெருகின. ஆனால் இவற்றில் யாவேக்கு இடமே இல்லை. மனிதன் படைத்த தேவதைகளும் விண்பொருட்களுமே பெரும்பாலும் வழிபடப்பட்டன. இஸ்ராயேலர் குடியேறுமுன் கானானில் வாழ்ந்த மக்களின் சிற்றின்ப வழிபாட்டு முறைகள் இஸ்ராயேலரிடையே ஆழமாக வேரூன்றின. மனிதனுக்கு வேண்டியது பூமியின் செழிப்பும் விலங்குகளின் பெருக்கமும் குடும்பப்பெருக்கமும் ஆகும். இவற்றிற்காக எல்லா நலன்களையும் நல்கும் யாவேயை அணுகாது பாகாலை நாடினர். இச்செயலில் உள்ளத்தாலும் உடலாலும் விபச்சாரம் செய்தனர். இறைவனைக் கைவிட்டு, அகன்று போனதால் ஆன்மீக விபச்சாரம் செய்தனர். இன்பப்பெருக்கச் சிற்றின்பச் சடங்குகளால் உடலாலும் விபச்சாரம் செய்தனர். இதன் உண்மைத் தன்மையைத் திரை கிழித்துக் காட்டி ஓசேயா வன்மையாகக் கண்டனம் செய்கிறார் (4:14; 2 அர 23:7; ஆமோ 2:7).

புறச்சடங்குகளை நோக்கின் ஓசேயா காலத்து மக்கள் இறைப்பற்று உள்ளவர்களாகத் தோன்றலாம். ஆனால் இவற்றில் எல்லாம் விபச்சாரத்தையே ஓசேயா கண்டார். அதிமா, கிபயா, செக்கேம், மிசுப்பா, தாபோர்மலை, தாண், பேத்தேல், சமாரியா ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட கோர

மான வழிபாடுகள் நடந்ததாகக் குறிக்கப் பெறுகின்றது. இவ்விடங்களில் காளை வழி படப்பட்டது. ''மனிதர் கன்றுக் குட்டிகளை முத்தமிடுகிறார்களே'' (ஓசே 13:2). இனப் பெருக்க வழிபாடு பெருகுகிறது. இச்சிலை கள் பயனற்றவை, சக்தியற்றவை என்று ஏற்றுக்கொள்ள மக்கள் மறந்து விட்டனர். பாகாலின் வழிபாட்டோடு இணைத்துத் தமக்கு வழிபாடு செலுத்துவதை யாவே மறுத்து விட்டார் (2:18; 13:2). அவர்களது புற ஆசாரச் சடங்குகளை ஏற்க மறுத்தார் (8:13; 10-1.5.6; 12:2). குருக்கள் தங்கள் கடமையைச் செய்ய வில்லை. மாறாக மக்களின் தவறான போக் கைத் தங்களுக்கு ஆதாயமாக்கிக். கொண்ட னர். இவையெல்லாம் மக்களின்மேல் போரையும் அழிவையும் தண்டனையாகக் கொண்டு வரும் என்று ஓசேயா எச்சரிக்கி றார்.

8.ஈ. நூலின் சமய போதகம்:-

பிற்காலத்தில் எரேமியா திகழ்ந்ததுபோல், ஓசேயா ஆழ்ந்த உணர்ச்சியும் நுண்ணுணர் வும் கொண்டவர். அவரது சொந்த வாழ்க் கையின் சிறப்பு அவரது இறைவாக்குரை யோடு கொண்ட நெருங்கிய தொடர்பில் அடங்கியிருக்கிறது. கோமேரோடு கொண்டி ருந்த திருமண உறவில் தான் உணர்ந்ததை யும் அனுபவித்ததையும் இறைவெளிப்பாட் டுச் சேவைக்கு அர்ப்பணிக்க வேண்டு மென்று அவரது ஆழ்ந்த சமய அறிவு ஓசே யாவுக்கு உணர்த்தியது. அதை எடுத்தியம் பிய அவரது மனவெழுச்சி பெரிதும் உதவி யது: இறைவனே அன்பு; அந்த அன்பு, ஒருபோதும் தவறாது; கைவிடாது (2:12 தொ; 3:1; 9:15; 11:1 தொ; 14:15 தொ). இதுவே ஓசேயாவின் சொந்த அனுபவம். இதுவே அவரது உறுதியான சமய போதகம்.

இஸ்ராயேலின் தொடக்கம் பற்றிய காப்பி யத்தில் யாவே பாரம்பரிய ஆசிரியர் இறை வனது அன்பை விவரிப்பதை ஓசேயா அறிந் திருந்தார். இஸ்ராயேலரோடு கொண்ட உற வில் இறைவனது அன்பே உந்து காரணமாய் இருந்தது என்று உபாகமம் தெளிவாய் அறிக் கையிடுவதை ஓசேயா படித்திருந்தார். ஆனால் இந்த உறவை விளக்கத் திருமண உறவு, தந்தை-மகன் உறவு ஆகிய அழகிய உருவகங்களைப் பயன்படுத்திப் பழைய ஏற் பாட்டில் இறையன்பின் மைய நிலையை உலகிற்கெல்லாம் ஓசேயா பறை சாற்றுகி றார். இது அவருக்குப் பெருமையும் மகிமை யுமாகும். இரண்டாம் அதிகாரத்தில் வரும் கணவன்-மனைவி என்ற உவமையில் தன் இனத்தவரின் கடந்த காலத்தை உருக்கத் தோடு நோக்க ஓசேயாவைத் தூண்டுகிறது. இந்த அன்பை இஸ்ராயேலர் அவமதித்துப் புறக்கணித்து யாவேயைக் கைவிட்டாலும் அதை அழிக்க முடியாது. இதை அறிவிக்கும் உணர்ச்சி மிக்க தூதுவராகத் திகழ்கிறார் ஓசேயா. மனித வரலாற்றில் தூண்டும் ஆக்க சக்தி யாவேயின் வாக்கும் அன்புமாகும் (2 சாமு 7:21) என்று தாவீது ஏற்கனவே அறிவித் திருந்தார். இக்கருத்தை ஓசேயா நிறைவு படுத்துகிறார். அதனால் அவர் அன்பின் இறை வாக்கினர் என்ற பட்டம் பெறத் தகுதி பெறுகி றார். அதனால் அன்பே அவரது வாக்குக ளுக்குத் திறவுகோலாக அமைகிறது.

இறையன்பை இஸ்ராயேலர் புறக்கணித்த னர். இதுவே அவர்களுக்குத் தீர்ப்பாயிற்று. ஆகவே இத்தீர்ப்பைக் கடுமையான சொற்க ளால் ஓசேயா எடுத்துக் கூறுகிறார் (ஓசே 5:14; 13:7 தொ). ஆனால் இத்தீர்ப்பு வெறும் தண்டனை மட்டுமன்று; அது ஒழுங்குமுறை படுத்தும், படிப்பிக்கும், குணமளிக்கும் அன் பாகும். தீர்ப்பு கடுமையாக இருந்தாலும் இஸ்ராயேலை அதன் தொடக்க கால அன்புற விற்குத் திரும்ப அழைத்தலே அதன் குறிக் கோளாகும். இறைவனது அன்புக்குப் பதில் அன்பு செலுத்த வேண்டும்; வரையற்ற முழுமை யோடு அவரை அன்பு செய்ய வேண் டும். இதயம், ஆவி, சித்தம் ஆகிய அனைத் தோடும் மனிதன் இறைவனிடம் சரணடைய வேண்டும். 4:1; 6:6-இல் ஓசேயா கோரும் பிரமாணிக்கம், உடன்படிக்கை அன்பு, கட வுளை அறியும் அறிவு ஆகியவற்றின் பொருள் இதுதான்.

பத்துக் கற்பனைகளை நினைவுபடுத்தும் அடிப்படை ஒழுக்கக் கட்டளைகளும் எடுத்

துக் கூறப்படுகின்றன. இவை யாவரையும் கட்டுப்படுத்தவல்லன (4:2). இவ்வாறு யாவேயின் உண்மையான உடன்படிக்கை வழிபாட்டுப் பாரம்பரியத்தின்மேல் ஓசேயா தனது போதகத்தைக் கட்டி எழுப்புகிறார். அவ்வழிபாடே அவர் அறிவிக்கும் தீர்ப்புக் கும் திருமண உவமையில் வருங்காலம் பற்றிய அவரது நம்பிக்கைக்கும் (2:18. 21 தொ) அடிப்படையாகிறது.

நற்செய்தியில் விவரிக்கப்படுவதுபோல் (மத் 23) பரிசேயர்களின் சட்டத்தன்மை யுடைய நெறிக்கோட்பாடுகளைப்பற்றிய அறிவை அடிப்படையாகக் கொண்டு, பழைய ஏற்பாடு பற்றிய தங்கள் கருத்துக் களை அமைத்துக் கொள்பவர்களுக்கு, ஓசேயா அவசியமான திருத்தம் ஒன்று அளிக் கிறார். பழைய ஏற்பாட்டு இறைவன் நீதியுள் ளவராகவும், பழிக்குப் பழிவாங்குபவராக வும் தம்மை வெளிப்படுத்துகிறார் என்ற தவறான கருத்து மக்களிடையே உண்டு. இது மிகைப்படுத்திக் கூறுதலாகும். இதைத் திருத்தி இறைவன் மனிதனோடு கொண்ட உறவில் அன்பே மையமாகும் என்று பறை சாற்றுகிறார் ஓசேயா. இறைவன் பழைய ஏற்பாட்டில் நீதியின் இறைவனாகவும், புதிய ஏற்பாட்டில் அன்பின் இறைவனாக வும் தோன்றுகிறார் என்பர். இறைவனிடம் மாற்றம் இருக்க முடியாது. ஆனால் அவர் தமது பண்புகளை வெளிப்படுத்தும்போது வேறுபாடு தோன்றலாம். ஒரு சமயம் நீதி யையும் மற்றொரு சமயம் அன்பையும் அறி வுறுத்தலாம். இந்த அடிப்படையில் இறைவ னது அன்பின் மிக உன்னத வெளிப்பாடு மனு உருவாதலில் காணப்படுகிறது. ஆனால் பழைய ஏற்பாட்டில் இறைவன் ஓசேயா எடுத்துக் கூறுவதுபோல் ஒரே சம யத்தில் நீதியின் இறைவனாகவும் அன்பின் இறைவனாகவும் விளங்குகிறார். மாற்றம் இருந்ததென்றால் அது தரத்தில் தான்; வகை யில் அன்று. ஏனெனில் இறைவன் தமது அன்பையும் நீதியையும் எல்லாக் காலங்களி லும் வெளிப்படுத்துகிறார்.

8. உ. ஓசேயாவில் காணும் வரலாற்று ஆய்வும் தீர்ப்பும்:-

ஓசேயாவில் வரலாற்று ஆய்வு குலமுதிய வரான யாக்கோபிலிருந்து தொடங்குகிறது (12:3-7). யாக்கோபின் மேன்மையான பண் புகளை ஓசேயா விவரிக்கவில்லை. மாறாக ஏமாற்றுதலில் வல்லவனாகவே யாக் கோபை விவரிக்கிறார். ''யாக்கோபு தன் தாயின் வயிற்றிலேயே தமையனை முந்திக் கொண்டான்; பெரியவனாக வளர்ந்த பின்போ கடவுளோடு போராடினான்'' (12:4). முன்னோர் இப்படியென்றால் அவரு டைய வழித்தோன்றல்கள் எப்படியிருப்பர்?

இஸ்ராயேலர் பாலையில் அலைந்து திரிந்த காலத்தில் யாவேக்கும் அவர்களுக் கும் இடையே அன்பு தொடங்கியது. இக்கா லம் நோக்கி மீண்டும் மீண்டும் ஓசேயா தமது சிந்தனையைத் திருப்புகிறார். ''இஸ் ராயேல் குழந்தையாய் இருந்தபோது, அவ னின்மேல் அன்புகூர்ந்தேன்'' (11:1). தாயைப் போன்று இஸ்ராயேலைக் கவ னித்து வந்தார் இறைவன். அதற்கு நடை பயிற்றுவித்தார் (11:2). எகிப்து காலத்திலி ருந்து அவரே அவர்களது இறைவனும் மீட் பரும் ஆவார் (13:4). அவர்களோடு உடன் படிக்கை செய்து (2:20; 8:1; 10:4) அவர்களுக் குத் தமது சட்டத்தை அளித்தவரும் அவரே.

ஓசேயாதான், சீனாய்மலை உடன்படிக் கையைத் திருமண உடன்படிக்கையோடு ஒப்பிடுகிறார். இறைவன் இஸ்ராயேலரை அறிந்து தேர்ந்தெடுத்து அன்பு செய்தார். ''வறண்ட நிலமாகிய பாலை வெளியில் உன்னை அறிந்து ஆதரித்தவர் நாமே'' (13:5). இறைவனது இந்த முன்முயற்சி அதற்கொத்த தாராளமிக்க அன்பு நிறைந்த பதிலை இஸ்ரா யேல் மக்களுள் தோற்றுவித்திருக்க வேண் டும். ஆனால் அவர்களோ ''அறிவின்மை யால் அழிகிறார்கள். நீ அறிவைப் புறக்க ணித்தாய்; நாமும் நீ எமக்கு அர்ச்சகனாய் இராதபடி உன்னைப் புறக்கணிப்போம்; நீ உன் கடவுளின் திருச்சட்டத்தை மறந்து விட் டாய்; நாமும் உன் மக்களை மறந்துவிடு வோம்'' (4:6). உடன்படிக்கை அன்பு அவர்க

ளிடமிருந்து பதிலன்பையும் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கத்தையும் கோரியது (6:6). ஆனால் அவர்கள் உடன்படிக்கையை முறித்தனர். ஆதலால் இறைவனது அன்பு மேன்மைமிக்கதாயினும் அவர்களுக்குப் பயன்படவில்லை.

உடன்படிக்கை உறவு முறிக்கப்பட்டுவிட்டது. கலைக்கப்பட்டு விட்டது என்று ஓசேயா தனது கால மக்களுக்கு அறிவிக்கிறார். ''நாட்டில் உண்மையும் இல்லை; இரக்கமும் இல்லை; கடவுளை அறியும் அறிவும் இல்லை'' (4:1). அதன் விளைவாக ஒழுக்கமும், இசைவிணக்கமும் அழிந்துவிட்டன. பொய்யும் வன்செயல்களும் மிகுந்தன (4:2; 12:1). இறைவன் தமது உரிமையை இழந்த போது, மனிதனுக்கு மிஞ்சியது அழிவு ஒன்றே. அரசியல் பாதுகாப்பு ஆன்மீக இழப்பை ஈடுசெய்யமுடியாது. அசீரியர்கள், எகிப்தியர் ஆகியவரோடு இஸ்ராயேல் செய்யும் நேச உடன்படிக்கைகளில் அர்த்தமில்லை. அவைகளால் பயனுமில்லை. இவ்வுடன்படிக்கைகள் யாவேயில் இஸ்ராயேலர் கொண்ட நம்பிக்கையின்மையைக் காட்டுகின்றன. இவை இஸ்ராயேலின் கீழ்ப்படியாமைக்கும் பதிதத்திற்கும் எடுத்துக்காட்டுகளாகும் (5:13-14; 7:8-16; 8:8-10; 12:1).

இவையெல்லாம் இஸ்ராயேல் கிளர்ச்சி செய்யும் விபச்சார இனம் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவர்களின் குற்றங்களுக்குரிய சான்றுகளைத் தொகுத்துத் தருகிறார் ஓசேயா. அக்கால நிலைக்கேற்பத் தீர்ப்புக் கூறுவதே அவரது கடமையாகும். அத்தீர்ப்பு கண்டனமாகக் ''கேளுங்கள்'' என்ற அறைகூவலில் எக்காளமாய் ஒலிக்கிறது (4:11; 5:1). ''தற்போது இரக்கம் என்னிடமில்லை'' (13:14). தண்டனை விரைவில் கடும் புயல் போல் வரும் (8:7). அது அழிவையும் (8:14; 10:8), சாவையும் (14:1) கொண்டுவரும். பிள்ளைகளும் கர்ப்பவதிகளும் கொடூரமாய்க் கொலை செய்யப்படுவர் (14;1). அரண்கள் அழிக்கப்படும் (8:14). மேட்டு நிலங்கள் அழிக்கப்படும். அங்கே முட்களும் புதர்களும் வளரும் (10:8). எகிப்தோடும் அசீரியர்களோடும் உடன்படிக்கை செய்த அரசியல் சூழ்ச்சிகள் முழுவதும் அழிந்துபோகும். அரசர்களோ, பெருங்குடி மக்களோ, பலிகளோ, கற்றூண்களோ இனி இரா. இறைவனது சித்தத்தை அறியப்பயன்படும் ''ஏபோது'' என்ற குருவின் ஆடையும் இராது. வீட்டுத் தெய்வங்கள் அழிந்துபோம் (3:4).

அழிவே இறைத் தீர்ப்பின் முடிவன்று. அழிவின் வழியாகவும் அதைக்கடந்தும் இறைவனது நன்மையும் அன்புமே தீர்ப்பின் முக்கிய பண்பாகும். இறைவனது உடன்படிக்கை அன்பு இஸ்ராயேலின் தொடக்கத்திற்குக் காரணமாய் இருப்பதுபோல, அதன் முடிவும் இறுதி விளக்கமும் ஆகும் (2:21). இந்த அன்பு மக்களிடம் கோருவது உறுதியான அன்பும், உண்மையான இறையறிவுமாகும் (6:6). உண்மையான சமயம் செயல்முறையான அன்போடு இறைவனை ஏற்றுக்கொள்ளுதலாகும்; அவருக்குத் தங்களை முழுவதும் அர்ப்பணிப்பதாகும்.

8. ஊ) மனந்திரும்புதலும் வருங்கால மகிமையும்:-

ஓசேயாவின் காட்சியில் இறைவனின் உடனடியான தீர்ப்பு இருள் மிக்கதாயும் துன்பமிக்கதாயும் இருந்தாலும், வருங்காலம் ஒளிமிக்கதாயும் மகிமை மிக்கதாயும் இருக்கிறது. இறைவாக்கினர் காலத்து இஸ்ராயேலுக்கு இறைவன் சிங்கம், வேங்கை, பெண் கரடி போல் இருப்பார். சாவையும், அழிவையும் இஸ்ராயேல்மேல் கொண்டுவருவார். இத்தீர்ப்பு நிகழவேண்டிய ஒன்று. ஏனெனில் ''அவர்கள் தங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பவில்லை. அவரைத் தேடவில்லை'' (7:10). ''இருமனம் கொண்ட மக்கள் அவர்கள்'' (10:2). ''மனநிறைவடைந்து செருக்குற்று எம்மை மறந்து போனார்கள்'' (13:6). மதுபானமும் திராட்சைரசமும் அவர்கள் அறிவைக் கெடுத்தன. இறைவனது அழைப்புக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை (4:11). அவர்கள் ''தங்கள் உள்ளத்திலிருந்து எம்மை நோக்கிக் கூக்குரலிடவில்லை'' (7:14). உடன்படிக்

கையை முறித்தனர். இதன் விளைவு அழிவு தான்.

அழிவை அறிவிப்பதுதான் ஓசேயாவின் முக்கிய செய்தி என்று எண்ணுபவர்கள் அவரைத் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். அழிவுதான் முடிவன்று. அழிவு புதிய தொடக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் மகிமைக்கும் வித்தாகும். இதுதான் ஓசேயாவின் சிறப்புச் செய்தியாகும். இறைவனது நோக்கமும், அன்பின் உருக்கமும் ''எப்பிராயிமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ராயேலே உன்னை எப்படிக் கைந்நெகிழ்வேன்? உன்னை எப்படி அதிமாவைப் போலாக்குவேன்? செபோயிமுக்குச் செய்தது போல் உனக்குச் செய்வேனா? என் உள்ளம் அதை வெறுத்து ஒதுக்குகிறது. என் இரக்கம் பொங்கி வழிகிறது. என் சீற்றத்தின் கனலைக் கொட்டமாட்டேன்; நான் இறைவன்., வெறும் மனிதன் அல்லன். நானே உங்கள் நடுவிலிருக்கும் புனிதர்'' (11:8-9), என்ற அருள்வாக்கில் தெளிவாக உள்ளன. இறைவனோடு கொண்டிருந்த உரையாடலை இஸ்ராயேல் முறித்தது. அது மீண்டும் புதுப்பிக்கப்படும் (2:16). மக்கள் தபசு செய்ய வேண்டும். உண்மையாக மனந்திரும்ப வேண்டும். அழிவுத்தீர்ப்பின் நடுவிலும் உணர்ச்சிமிக்க அறைகூவல் கேட்கப்படுகிறது; ''வாருங்கள் ஆண்டவரிடம் திரும்புவோம்; நம்மைக் காயப்படுத்தியவர் அவரே; அவரே நம்மைக் குணம் ஆக்குவார். நம்மை அடித்து நொறுக்கியவர் அவரே; அவரே நம் காயங்களைக்கட்டுவார். இரண்டு நாட்களுக்குப் பிறகு நமக்குப் புத்துயிர் அளிப்பார். மூன்றாம் நாளில் நம்மை எழுப்பி விடுவார் அப்பொழுது நாம் அவர் முன்னிலையில் வாழ்ந்திடுவோம்'' (6:1-2). முதலில் காயப்படுத்துதல், குணமாக்குதல்; இரண்டாவது புத்துயிர் அளித்தல்; மூன்றாவது எழுப்புதல், வாழ்த்தல். இந்தப் படிமுறையே இஸ்ராயேலின் வருங்காலம் ஆகும். இதை இறைவன் வல்லமையோடு செய்வார்; அவரே அவர்களின் மீட்பர். வேறு ஒருவருமில்லை (13:4). ''ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்'' (14:3) என்பதே இறைவாக்கினர் மக்களுக்குக் கூறும் அறிவுரையாகும். தீமையிலிருந்து மனந்திரும்பாவிடில் இறைவனிடம் திரும்பாவிடில் (5:4) மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திற்குத் திரும்பிச் செல்வர். உறுதியாக மனந்திரும்பினால், யாவேயை நாடிவந்தால் (2:9; 5:15; 6:1), யாவேயின் சீற்றம் தணியும் (14:5); மக்களை அவர் தம்து அன்பால் ஈர்ப்பார் (11:7 தொ).

மனந்திரும்புதலுக்குப்பின் உடன்படிக்கை புதுப்பிக்கப்படும். அரசியல் உடன்படிக்கைகள் மீட்பைத் தரா (14:4). அவை அழிவுக்கே இட்டுச்செல்லும். உண்மையான மீட்போ சீனாய்மலை உடன்படிக்கை புதுப்பிக்கப் படுவதால் வருவதாகும். யாவே எப்போதும் மறவாதவர்; அப்படியே அவரது உடன்படிக்கையும் மாறாததாகும். அவரில் புதிய யுகம் தொடங்கும். அவரது அன்பைப் பதிதமும் பிரமாணிக்கமின்மையும் வெல்லமுடியாது. ''அந்நாளில்'' (2:20) இறைவனின் அன்பு வெற்றியடையும். ஏனெனில் அந்நாளில் இறைவனுக்கும் மக்களுக்கும் புதிதாகத் திருமணம் நடைபெறும். இத்திருமணம் எக்காலத்திற்கும் நிலைத்திருக்கும். இவ்வுடன்படிக்கை ''முடிவிலாக்காலத்திற்கும்'' (2:21) நிலைத்திருக்கும் புதிய உடன்படிக்கையாகும். ஓசேயா உடன்படிக்கையை ஆன்மீகப் படுத்தி எல்லாருக்கும் உரியதாக ஆழ்ந்த ஆட்தன்மையுடையதாக ஆக்குகிறார். இறை நீதி தீர்ப்பளிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் அதைவிட இறையன்பு மேலானது. புதிய யுகத்தின் பண்புகளாவன: புற இனத்தேவதைகளும் அவற்றின் வழிபாடும் அழிந்து போகும்; கிளர்ச்சி செய்யும் குருக்கள் மறைந்து போவார்கள்; மக்கள் நாடு கடத்தப்படுவர்; நாடு பாலையாகும்; ஆனால் இந்த அழிவிலிருந்து புதிய மக்களினம் தோன்றும். இம்மக்கள் பிரமாணிக்கத்திலும் அன்பிலும் நீதியிலும் தங்களையே இறைவனுக்கு அர்ப்பணிப்பர். பூமி மீண்டும் இன்பவனமாகும் (2:23). இஸ்ராயேல் பல ஆசீர்களைப் பெறும் (14:6-9). அவற்றில் ஒன்று புதிய மக்கள் ''தங்கள் அரசனாகிய தாவீதைத் தேடி வருவார்கள்'' (3:5). ஓசேயாவின் கருத்தின்படி வடஅரசு இருப்பதே ஒரு

பாவமாகும் (8:14; 13:11). தாவீது மரபு அரசன்கீழ் வட, தென் அரசுகள் ஒன்று படுவது ஓசேயாவின் முன்னோக்காகும் (2:2; 3:5). மெசியா கோட்பாடு இந்நூலில் இரண்டாம் தர நிலையையே கொண்டுள்ளது. தாவீதின் வீட்டிற்கும் புதிய உடன்படிக்கைக்கும் முடிவில்லா அரக வாக்களிக்கப்படுகிறது. ஓசேயாவில், மெசியா கோட்பாடு வருங்காலம் பற்றிய நம்பிக்கையின் ஒரு பகுதியாகும். இதை அடிப்படையாகக் கொண்டு பிற்கால இறைவாக்கினர்கள் இக் கோட்பாட்டை விரிவாக்குவார்கள்.

9. ஓசேயாவும் விவிலியத்தின் பிறநூல்களும்:-

ஓசேயா நூலின் போதகம் பழைய ஏற்பாடு முழுவதும் பரந்து காணப்படுகிறது. பிற்கால இறைவாக்கினர்களில் இவருடைய குரல் எங்கும் எதிரொலிக்கிறது. இவர் இறைவனது அன்பை முக்கிய கருத்தாகக் கொண்ட இதயம் சார்ந்த சமயத்திற்கு மக்களைத் தூண்டினார். ஓசேயாவைப் பின்பற்றி, இறைவன் தம் மக்கள்பால் கொண்ட அன்புக்குத் திருமணத்தை உவமையாகப் பயன்படுத்துவதில் எரேமியாவும், எசக்கியேலும், 2-ஆம் ஏசயாவும், உன்னத சங்கீதமும் சிரத்தை காட்டுகின்றன (எரே 2:1-3; 2:20-21; 3:1-5; 31:22; எச 16:23; ஏச 54:1-10; 61:10-12; 62:4-5).

புதிய ஏற்பாடு ஓசேயா ஆகமத்தை மேற்கோள் காட்டுவதிலோ சில சமயம் இதன் கருத்துகளைப் பயன்படுத்துவதிலோ வியப்பில்லை. திருமண உவமை கிறிஸ்துவப் பண்படைகிறது (மத் 9:15; 23:3 தொ; யோவா 3:4; 2 கொரி 11:2; எபே 5:22-23 தொ; திருவெளி 21:1-49). புதிய ஏற்பாட்டின் தொடக்க காலக் கிறிஸ்தவ சமூகம் இந்த உவமை வழியாகக் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள உறவை விளக்கியது. கிறிஸ்தவ இறையனுபவ நூல்களும் இறைவனுக்கும் தனிப்பட்ட ஆன்மாவுக்கும் உள்ள உறவை இந்த உவமை வழியாக விளக்குகின்றன.

இந்நூலைப் புதிய ஏற்பாடு பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறது. உரோ 9:25; 1 பேதுரு 2:10 ஆகியவை ஓசே 2:25-ஐயும், உரோ 9:26 என்பது ஓசே 2:1-ஐயும், லூக் 23:20; திருவெளி 6:16 ஆகியவை ஓசே 10:8-ஐயும், மத் 4:13; 12:7 ஆகியவை ஓசே 6:6-ஐயும் எடுத்துக்கூறுகின்றன. ஓசே 11:1-இல் விவரிக்கப்படும் யாத்திரை விவரிப்பு, புதிய இஸ்ரேலாகிய கிறிஸ்துவுக்கு மத் 2:15-இல் சாற்றிக் கூறப்படுகிறது.

10. முடிவுரை:-

இந்நூல் ஆழ்ந்து படிப்பதற்குச் சிறிது கடினமானது. ஆனால் இறைவாக்கு நூல்களில் சிலதான், இந்நூலைப் போன்று பெரும் ஆன்மீக செல்வத்தை அளிக்கின்றன. இறைவனது அன்பு பற்றிப் புதிய ஏற்பாட்டுக் கருத்துக்குப் பழைய ஏற்பாட்டு நூல்களில் இந்நூல்தான் மிக நெருங்கியது. விவிலியத் தொகுப்பாசிரியர்கள் இந்நூலைக் காலத்தால் முந்தியதாகக் கருதவில்லை. ஒரு வேளை நூலின் குறுகிய தன்மை இப்படி நினைக்கத் தூண்டியிருக்கலாம். கால வரைப்படி ஆமோஸ் ஓசேயாவுக்கு முந்தியவர். இறைவனது நீதி பற்றிய வெளிப்பாடு அவரது அன்பு பற்றிய வெளிப்பாட்டுக்கு முன் வரவேண்டும். இதற்கேற்பக் காலவரையும் அமைந்திருக்கிறது. ஆனால் ஆன்மீக முறையில் ஆமோசைவிட ஓசேயா அதிக உன்னதமான வெளிப்பாட்டை அளிக்கிறார். இதை உணர்ந்த இஸ்ராயேலின் பாரம்பரிய விவிலியப்பட்டியல் சிறிய இறைவாக்கினர் பட்டியலில் ஓசேயாவின் நூலை முதலில் வைத்தது. இது இந்நூலின் சிறப்பையும் மேன்மையையும் விளக்குகிறது.

ஓடு (TILE)

கூரைகள் வேய ஓடுகள் பயன்படுத்தப்படுகின்றன (லூக் 5:19). மேற்கண்ட ஒரே இடத்தில்தான், ஓடுகளைப் பற்றி விவிலியம் கூறுகின்றது. எச 4:1 செங்கல்லின் ஒருவகை ஓடு என்று கூறுகின்றது.

ஓடுதல் (RUN)

அரச பாதுகாப்புப் படையில் ஓடுபவர்கள்

(1 சாமு 22:17) போரைப் பற்றிய செய்தியை அறிவிக்க விரைவாகச் செல்வது போன்ற (2 சாமு 18:19-27) இயல்பான பொருளில் ஓடுதல் பயன்பட்டுள்ளது. இதற்குமேல் இறைவனுடைய வார்த்தையின் செயலாற்றல் அல்லது அதனை அறிவிப்பவர்களின் செயலாற்றலை விவரிக்க ''ஓடுதல்'' என்ற சொல்லை விவிலியம் உருவகமாக உபயோகிக்கின்றது. பிற்காலத்தில் கிரேக்க உலகினுடைய விளையாட்டுப் போட்டிகளுடைய தாக்கத்தால், இச்சொல்லானது, ஒரு குறிக்கோளை நோக்கி விரைகின்ற வாழ்க்கைக் கட்டத்தை விவரிக்கப் பயன்படுகின்றது.

1. இறைவனுடைய வார்த்தை ஓடுகிறது:- இறைவனுடைய வார்த்தையானது விரைவானது, பயனுறுதியுடையது. மற்றும் ஆற்றல் மிக்கது: ''எல்லாம் வல்ல உம் சொல் விண்ணகத்திலுள்ள அரச அரியணைவிட்டு எழுந்து....பாய்ந்து வந்தது'' (ஞான 18:15; 1 சாமு 22:17). அது வீரனைப் போல் யோபுவின்மேல் பாய்கிறது (யோபு 16:14). இதில் ஓடுகிறவனின் வேகத்திற்குப் பாய்தல் பயன்படுகிறது. இறைவன் தனது வார்த்தையை நம்மை நோக்கி அனுப்புகிறார்; அவருடைய வார்த்தை வேகமாகச் செல்கிறது (சங் 17:15; ஏச 55:11). ''இறைவனுடைய வார்த்தை தன்னுடைய ஓட்டத்தை முடிப்பதற்கென'' (2 தெச 3:1) பவுல் செபத்தைக் கேட்கும்போது ஒருவேளை இப்பகுதியை மனதில் கொண்டிருக்க வேண்டும். அரசனுடைய தேருக்குமுன் ஓடுகிறவர்களைப் போன்று (1 சாமு 8:1) இறைவாக்கினர்களும் வார்த்தையை அறிவிக்க ஓடுகின்றார். ''ஆண்டவரின் கை எலியாவின் மேல் இருந்தது. அவரும் தம் இடையை வரிந்து கட்டிக் கொண்டு இசிரியேல்வரை ஆகாபுக்கு முன்னே ஓடினார்'' (1 அர 18:46). இறைவனால் அனுப்பப்படாத இறைவாக்கினர்களும் இதையே செய்கின்றனர்: ''நாம் அந்தத் தீர்க்கத் தரிசிகளை அனுப்பவில்லை; அவர்களாகவே ஓடினார்கள்; நாம் அவர்களிடத்தில் பேசினதுமில்லை; அவர்களாகவே தீர்க்க தரிசனம் சொன்னார்கள்'' (எரே 23:21).

2. வாழ்க்கை ஓர் ஓட்டம்:- அடிக்கடி பயணத்துடன் ஒப்பிடப்படுகின்ற மனித வாழ்வானது (யோவா 8:12; 1 பேதுரு 1:6-7), ஆர்வமிக்க கீழ்ப்படிதல் அல்லது அவசரப் பணியைக் குறிக்கும் போது ஓட்டமாக உருவாகிறது. தனது பணியை முடித்துவிட்ட திருமுழுக்கு யோவான் (அ.ப. 13:24-25) அல்லது நற்செய்தியைப் போதிப்பதன்மேல் கவனம் கொண்டுள்ள பவுல் (20:24) ஆகியோரைப் போன்று, சில நேரங்களில் ஓடுதல் என்பது வார்த்தையை அறிவிப்பதையே உணர்த்துகிறது (20:24). மகிழ்ச்சி ஆர்வம் மற்றும் உயிருள்ள வாழ்வு போன்ற குறிப்பை இறைவனுடைய வழிகளில் நடத்தல் என்ற உருவகத்துடன் சேர்த்து நேர்மையான வாழ்வினால் வரும் சுறுசுறுப்பையும் மகிழ்ச்சி ஆர்வத்தையும் ஓடுதல் என்பது கட்டிக் காட்டலாம். ''நீர் என் அறிவை விரிவாக்கும் போது, உம் கற்பனைகள் காட்டும் வழியில் நான் செல்வேன்'' (சங் 119:32). ''ஆண்டவர் மேல் நம்பிக்கை வைப்பவர்கள்... கழுகுகளைப் போல் இறக்கைகள் பெற்றுப் பறந்திடுவர், ஓடுவார்கள். ஆனால் களைக்க மாட்டார்கள்'' (ஏச 40:31). உன்னத சங்கீத மொழியில், ஆண்டவருடைய பணியில் செலவழிக்கப்பட்ட முழு வாழ்வின் இந்த ஆர்வமானது, மணமகனின் குரலின் சத்தத்தைக் கேட்டவுடன் மகிழ்ச்சியால் பொங்கிவழிகின்ற மணமகளின் ஆவலாக உருவாகிறது. ''என்னை உம்மோடு கூட்டிச் செல்லும்; ஓடிடுவோம்'' (உ.ச. 1:4). தலைவரின் கல்லறை நோக்கிய பேதுரு மற்றும் யோவானும் ஓடுவது இதே கருத்தையே கட்டுகிறது (யோவா 20:4).

பவுலின் நூல்களில், வெற்றி எய்த, தியாகங்களைக் கோருகின்ற விளையாட்டுப் போட்டியாக இந்த ஓட்டம் உருவாகின்றது (1 கொரி 9:24-27). அதே உருவகமானது வேறொரு வினைச்சொல்லைப் பயன்படுத்திப் பவுலின் வாழ்வின் மொத்த வீரச்செயல்களையும் விவரிக்கிறது. கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தும் நோக்கோடு தமஸ்கு செல்லும் பாதையில், கிறிஸ்து அவருடன்

சேர்ந்து கொள்கிறார். இதனால் தனது குறிக்கோளை அடைந்துவிட்டதாக அவர் கற்பனை செய்யவில்லை: ''எதற்காகக் கிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டாரோ, அதை நான் பற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து ஓடுகிறேன்...கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு பரிசு பெற வேண்டி இலக்கை நோக்கி முனைந்து ஓடுகிறேன்''. கிறிஸ்து இயேசுவுக்குள் என்னைக் கடவுள் மேலுலகுக்கு அழைப்பதே அப்பரிசாகும் *(பிலி 3:12 தொ).*

தடைகளால் நம்மைத் தடுத்து நிறுத்துவதற்கு அனுமதிக்காமல் *(கலா 5:7)* ''எண்ணிக்கையில்லாச் சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க (அதாவது அரங்கிலுள்ள பார்வையாளர்களும், முந்தைய வெற்றி வீரர்களும்) நமக்குக் குறிக்கப்பட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக. விசுவாசத்தைத் தொடங்கி வைத்தவரும் அதை நிறைவு பெறச் செய்பவருமான'' நமது முன்னோடியாகிய ''இயேசுவின் மேல் கண்களைப் பதிய வைப்போம்'' *(எபி. 12:1 தொ; 6:20).* அப்போது ஓட்டமானது பயனற்றதாக இருக்காது *(1 கொரி 9:26; கலா 2:2; பிலி 2:16).* அப்போது ''சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன்; ஓட்டத்தை முடித்துவிட்டேன்; விசுவாசத்தைப் பாதுகாத்தேன்'' *(2 திமோ 4:7)* என்று பவுலுடன் சேர்ந்து கூறக்கூடியவர்களாக நாமும் இருக்க முடியும். ஆனால் அனைத்தும் இறைவனிடமிருந்து மட்டுமே வருகின்றன என்பதை இவையனைத்திலும் நாம் மறந்துவிடக்கூடாது. ''விரும்புகிறவனாலும் அன்று; உழைக்கிறவனாலும் அன்று; இரக்கம் வைக்கும் கடவுளாலேயே எதுவும் ஆகும்'' *(உரோ 9:16).*

ஓடை (BROOK)

ஒரு சிறு நீரோடையையும் அது தோன்றும் பகுதியையும் இவ்வார்த்தை குறிக்கும். அராபிய மொழியில் இது வாடி என்றழைக்கப்படுகிறது. மழையைப் பொறுத்து இது வறண்டும், நீர் நிறைந்தும் காணப்படும். *லேவி 23:40; உப 9:21; 1 சாமு 17:40; 1 அர 17:7* ஆகிய பகுதிகளில் ஓடை என்பது எபிரேய வார்த்தையின் மொழி பெயர்ப்புதான். இந்த வார்த்தை, வாசகம் மற்றும் நிலப்பரப்பு ஆகிய சூழ்நிலையைப் பொறுத்து, ஆறு, பள்ளத்தாக்கு என்பதையும் குறிக்கும். எபிரேய வாசகம் ஓடை, ஆறு, பள்ளத்தாக்கு ஆகியவற்றை வேறுபடுத்துகிறது. ஆயினும் இந்த வேறுபாட்டை அறிவது கடினம். காரணம், ஓடை மழைக் காலங்களில் ஆறாக மாறும் தன்மையுடையது.

பாலஸ்தீனத்திலும் யோர்தானுக்குக் கிழக்கிலும் ஓடைகள் ஏராளம் இருந்தன. இவை கடற்கரைச் சமவெளிகளுக்குள்ளும், கலிலேயாக்கடலுக்கும், யோர்தான் பள்ளத்தாக்குக்குள்ளும் சாக்கடலுக்கும் ஓடின. இவைகளின் பக்கமுள்ள ஊர்களுக்கு இவைகள்தான் நீர்நிலைகளாக இருந்தன. விவசாயத்திற்குப் பெருமளவு பயன்பட்டன *(உப 8:7; 2 நாள் 32:4; சங் 110:7; எரே 31:9).* இவை மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்துக் காட்டாறு போல் செல்லும் *(யோபு 6:15)* அபாயம் எப்போதும் இருந்தது. இவ்வோடைகள் நாட்டின் இனப்பிரிவுகளின் எல்லைகளைச் சுட்டிக்காட்டும் பொருட்டுக் குறிக்கப்படுகின்றன (எ.கா. அரபா, பெசோர், கெரித்து, எகிப்திய, கானா, .கிதரோன், கீசோன், அலரி, செரேத்து ஆகிய ஓடைகள்).

ஓணான் (CHAMELEON)

இது மரத்தில் வாழும் பல்லி வகையைச் சேர்ந்தது. சூழ்நிலைக்கேற்றவாறு தனது தோலின் வண்ணத்தை மாற்றும் ஆற்றலுடையது. பாலஸ்தீனத்தில் இது மரங்கள் மற்றும் நீர் நிலைகளுக்கருகில் பொதுவாகக் காணப்படும். தனது நீண்ட ஒட்டிக்கொள்ளும் காலால் தனது இரையைப் பிடிக்கும். இது அசுத்த விலங்குகளில் ஒன்றாகும் *(லேவி 11:30).*

ஓதவா (HODEVAH)

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய லேவிய குடும்பத்தின் தலைவர் *(நெக 7:43)* காண்க. ஓதவியா (4).

ஓதவியா (HODAVIAH - ஆண்டவரைப் போற்று)

1. தாவீதின் வழித்தோன்றல் (1 நாள் 3:24). எலியோனாயின் மகனும் செருபாபேலின் வழித்தோன்றலுமாவர்.

2. மனாசேயின் பாதிக்கோத்திரத்துக் குடும்பத்தலைவர்களுள் ஒருவர் (1 நாள் 5:24).

3. பென்யாமின் கோத்திரத்தைச் சேர்ந்த அசனுவாவின் மகன் (1 நாள் 9:7).

4. நாடு கடத்தலுக்குப்பிறகு செருபாபேலின் தலைமையில் திரும்பிவந்த லேவியர்கள் குடும்பத்து முன்னோர் (எஸ் 2:40). நெக 7:43-இல் ஓதவா என்றழைக்கப்படுகிறார். எஸ் 3:9-இல் வரும் யூதா இவரையே குறிக்கலாம். லேவியரைப் பற்றிக் குறிப்பு இருப்பதால், ''யூதாவின் புதல்வர்கள்'' என்ற எபிரேய வாசகம் ''ஓதவியாவின் புதல்வர்கள்'' என்று மாற்றப்பட வேண்டும்.

ஓதியா (HODIAH - யாவே என் பேரொளி)

1. யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் கணவர். நாகாமின் மைத்துனர் (1 நாள் 4:19).

2. தண்ணீர் வாயிலுக்குமுன் இருந்த வளாகத்தில் எஸ்ரா மக்கள் முன்னிலையில் சட்டப்புத்தகத்தை வாசித்தபோது அதை மக்களுக்கு விளக்கிச் சொன்ன லேவியர்களுள் ஒருவர் (நெக 8:7). பாவப் பரிகார நாளில் வழிபாட்டை வழிநடத்த உதவியவர் (9:5). எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட லேவியர்களில் சந்தேகமின்றி இவரும் ஒருவர் (10:10 அல்லது 10:13). இவர் 3-இல் வருபவராக இருக்கலாம்.

3. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட வேறொரு லேவியர் (நெக 10:10 அல்லது 10:13).

4. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு மக்கட் தலைவர் (நெக 10:18).

ஓது (HOD - மாட்சிமை, மகிமை)

ஆசேரின் குலத்திலே ஒரு குடும்பத்தலைவர் (1 நாள் 7:37) சோப்பாகின் மகன்.

ஓதேது (ODED - திரும்ப அமைப்பவர், நேரம் கணிப்பவர்)

1. ஆசா மன்னன் காலத்திலே வாழ்ந்த இறைவாக்கினர் அசரியாவின் தந்தை (2 நாள் 15:1,8).

2. ஆகாக மன்னன் காலத்தில் வாழ்ந்த ஓதேது இறைவாக்கினர், பெக்கா யூதா மக்களை அடிமைகளாக்குவதைக் கடுமையாக எதிர்த்தார்; விடுவித்தார் (2 நாள் 28:8-15).

ஓத்திர் (HOTHIR - அபரிமிதம், ஏராளம்)

ஆண்டவரின் ஆலயத்திலே தாளம், தம்புரு, சுரமண்டலம் ஆகிய இசைக் கருவிகளை வாசிக்கவும், ஆலயத்திலே திருப்பணி செய்யவும் தாவீதால் நியமிக்கப்பட்ட ஏமானின் (2) புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 25:4). ஆலயத் திருப்பணி செய்யக் குறிக்கப்பட்ட நேரம் 24 பிரிவுகளில் 21ஆவது சீட்டு ஓத்திருக்கு விழுந்தது (25:28).

ஓநாய் (WOLF)

இது நாய் இனத்தைச் சார்ந்த புலால் உண்ணும் காட்டு விலங்காகும். இந்நாய் தனியாகவும், கூட்டமாகவும் சென்று, சாதாரணமாக இரவில் (அ.ப. 1:8) வேட்டையாடும். அதன் விருப்பமான இரை ஆடுகளாகும். இது அசுரப் பசியுடைய கொடூரமான விலங்காகும் (எச 11:6; யோவா 10:12). பெரும்பாலும் விவிலியத்தில் ஓநாய் உருவகமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. ''ஓநாய்களிடையே ஆடுகளைப்போல் உங்களை நான் அனுப்புகிறேன்'' என்று இயேசு தம்முடைய சீடர்களை எச்சரிக்கிறார் (மத் 10:16; லூக் 10:3). பென்யாமின் பிறிக்கிழிக்கும் ஓநாய்க்கு ஒப்பாவார் (ஆதி 49:27). யூதாவின் எதிரி, மற்றும் யூதாவின் தலைவர்கள் ஓநாய்களுக்கு ஒப்பிடப்படுகிறார்கள் (எரே 4:6; எச 22:27; செப 3:3). போலி இறைவாக்கினர்கள், போலி ஆசிரியர்கள் ஓநாய்களுக்கு ஒப்பிடப்படுகின்றனர் (மத்

7:5; அ.ப. 20:29). மெசியாவின் ஆட்சியில் இக்கொடிய ஓநாயும் சாந்தமுறும்; செம்மறியோடு சேர்ந்து வாழும் என்று ஏசயா இறைவாக்கினர் இறுதிக்கால அமைதியை விவரிக்கிறார் *(ஏச 11:6; 65:25)*.

ஓபால் (OBAL - அம்மணமான, திறந்துள்ள)

இவர் யோக்கிதானின் மகன். மேலும் இப்பெயரானது ஓர் அராபிய இனத்தையும் குறிக்கிறது. இந்த இனம் எங்கு வாழ்ந்ததெனத் தெளிவாகத் தெரியவில்லை *(ஆதி 10:28)*. இவர் *1 நாள் 1:22*-இல் ஏபால் என்றழைக்கப்படுகிறார்.

காண்க. ஏபால் (2)

ஓபில் (OBIL - ஒட்டகம் ஓட்டுபவன்)

இசுமயேல் குலத்தினனான ஓபில் தாவீது மன்னனின் அரச கண்காணிப்பாளராக இருந்தார். இவர் அரசனின் ஒட்டகங்களுக்குப் பொறுப்பாளராக இருந்தார் *(1 நாள் 27:30)*.

ஓபேது (OBED - ஊழியன், வழிபடுபவன்)

1. இவர் போவாசுக்கும் ரூத்திற்கும் பிறந்த மகன். இவர் தாவீதின் தந்தையாகிய ஈசாயியுடைய தந்தை *(ரூத் 4:17.21-22; 1 நாள் 2:12)*. நகோமி இவருடைய குழந்தைப் பருவத்திலே தாதியாக இருந்தாள். மேலும் இவர் இயேசு கிறிஸ்துவின் முன்னோராவார் *(மத் 1:5; லூக் 3:32)*.

2. இவர் ஒரு யூத குலத்தினர். எபிலாவின் மகனும் எரகுமேலின் வழித் தோன்றலுமாவார் *(1 நாள் 2:37-38)*.

3. தாவீதின் வலிமை வாய்ந்தவர்களில் ஒருவர் *(1 நாள் 11:47)*.

4. சாலமோனின் ஆலயத்திலே வாயில் காப்பவராக இருந்த லேவியர். ஒருவேளை கோராகியர் ஆவார். செமாயாவின் புதல்வர்களில் ஒருவர் *(1 நாள் 26:7)*.

5. இவர் யூதாவை ஆண்ட அத்தாலியா அரசியின் காலத்தில் படைத் தலைவர் அசரியாவின் தந்தை *(2 நாள் 23:1)*.

ஓபேது-ஏதோம் (BED-EDOM - ஏதோமின் ஊழியன்)

1. காத்து நகரத்தைச் சேர்ந்த பெலிஸ்தியர். கிரியத்து-எயாரிமுக்கும் எருசலேமுக்கும் இடையில் வாழ்ந்தார். ஊசாவின் அவலமான இறப்புக்குப் பிறகு, இவர் வீட்டிலேதான் தாவீது மன்னன் ஆண்டவரின் பேழையைவிட்டு வைத்தார். இப்பேழையின் பொருட்டு ஆண்டவர் ஓபேது-ஏதோமையும் அவருக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் எனக் கேள்விப்பட்ட தாவீது அதை எருசலேமுக்குக் கொண்டு வர முடிவு செய்தார் *(2 சாமு 6:10-12; 1 நாள் 13:13-14; 15:25)*.

2. தாவீது காலத்தில் ஒரு லேவிய இசைக் கலைஞர் *(1 நாள் 15:18-21)*. இசை வல்லுநர் எதுத்தூனின் மகன் *(16:38)*. பெட்டகத்தின் வாயில் காப்போனாகவும் இருந்தார் *(15:24)*. இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் பெட்டகத்தின் முன் பணி செய்ய நியமிக்கப்பட்டனர் *(16:5.38)*. ஆய்வாளர் சிலர் இவர் 1-இல் குறிக்கப்படுபவரே என்று கருதுகின்றனர் அல்லது வாயிற்காப்பவர்கள் பெலிஸ்தியரான ஓபேது-ஏதோமைத் தங்கள் குலப் பெயர் மூதாதையராகத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என்பர்.

3. ஆண்டவர் ஆலயத்தின் தெற்கு வாயிலையும் பண்டக சாலையையும் காவல் காத்தவர். கோராக்கிய லேவியர் *(1 நாள் 26:4-8.15)*. இவர் 2-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம் *(1 நாள் 15:18.21)*.

4. அமசியா அரசன் காலத்தில் பொருட்களின் பொறுப்பாளர். இஸ்ராயேல் அரசன் யோவாசு யூதாவின் அரசன் அமசியாவைத் தோற்கடித்து எருசலேமைக் கைப்பற்றிய பின் (கி.மு. 790) ஓபேது-ஏதோமை ஒரு பிணையாளியாக அழைத்துச் சென்றார் *(2 நாள் 25:24)*. *2 அரச 14:14*-இல் வரும் இணையான விவரிப்பில் இவர் பெயர் காணப்படவில்லை.

ஒபோத்து (OBOTH - நீர்ப்பை)

இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது மோவாபிலுள்ள பூனோனுக்கும் இயே-அபாரிமுக்கும் இடையில் உள்ள ஒபோத்தில் தங்கினர் (எண் 21:10; 33:43-44). இது பூனோனுக்கு (இக்காலப் பெயினான்) மேற்கில் உள்ள அயின் ஏல்-வேய்பா அல்லது வடக்கில் 19 கி.மீ. தொலைவிலுள்ள அயின் கோசோப் ஆகிய இரு இக்காலப் பாலைவனச் சோலைகளில் ஒன்றாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

ஓமர் (OMER)

ஓர் அளவை. ஏப்பா என்ற அளவையில் பத்தில் ஒரு பாகமாகும் (யாத் 16:16-36).

ஓய்வு (REST)

பல விவிலிய உபயோகத்தில் இளைப்பாறுதல் என்னும் பொருளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1. பழைய ஏற்பாடு:- இங்கு இது தங்கியிரு, குடியேறு என்னும் பொருளிலும் (ஆதி 8:4; யாத் 33:14; உப 3:20; யோசு 1:13-20; யோசு 1:13-15; 23:1; ரூத் 1:9;3:1; 2 சாமு 7:1.11; 1 அர 5:4; 1 நாள் 22:9; யோபு 3:17-9), யோபு 23:13-இல் அமைதி என்னும் பொருளிலும் செயோலின் ஓய்வைக் குறிக்கவும் (யோபு 21:13; எரே 6:16) ஓய்வு, முடிந்து போதல் என்னும் பொருளிலும் (யாத் 20:10; 23:12; 31:15-17) பயன்பட்டுள்ளது.

ஓய்வு என்பது பொதுவாக உடல் ஓய்வையே குறிக்கும். அது மனிதர்கள் தாமே எடுத்துக் கொண்டாலும் சரி கடவுளால் அளிக்கப்பட்டாலும் சரி, ஆன்ம இளைப்பாற்றியைவிட உடல் இளைப்பாற்றியையே குறிக்கிறது. இது பலவகைப்படும். பழைய ஏற்பாட்டைப் பொறுத்த அளவில், முதன் முதலில் குறிக்கப் பெறுவது தங்களுக்கென ஒரு நாட்டைப் பெற்றவுடன் அவர்கள் பெறும் நிம்மதி ஓய்வாகும். ''எனது பிரசன்னம் உன்னோடு செல்லும் நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்'' (யாத் 33:14). அடுத்து, இந்த ஓய்வு போரிலிருந்து கிடைக்கும் விடுதலையையும் குறிக்கும் (யோசு 23:1; 2 சாமு 7:1.11; 1 அர 5:4). சாலமோன் ஓய்வின் மனிதன் அல்லது அமைதியின் மனிதன் என அழைக்கப்பட்டது இந்தப் பொருளில்தான். ஆண்டவர் அவரது எல்லா எதிரிகளினின்றும் போரினின்றும் விடுவித்து அவருக்கு அமைதி அளிப்பார் என்பதாகும். கணவனை இழந்த தனது மருமகளுக்கு நகோமி விரும்பிய சாந்தி என்பது பாதுகாப்பு நிறைந்த ஒரு வாழ்வுதான் (ரூத் 1:9; 3:1). ஓய்வு நாளில் இஸ்ராயேலுக்கு மட்டுமல்ல அவர்களின் வேலையாட்கள், அங்கு தங்கியிருக்கும் அன்னியர்கள், விலங்குகள் (யாத் 20:10) ஆகிய அனைவரும் ஓய்வெடுக்கவேண்டும்; சாதாரண வேலையிலிருந்து இளைப்பாற வேண்டும். மீண்டும் புத்துணர்ச்சி பெறுவதே இதன் நோக்கம் ஆகும் (23:12). கடவுள் தனது படைப்பின் இறுதியில் ஏழாம் நாள் ஓய்வெடுத்து இளைப்பாறினார் (31:15-17). சாவுக்குப் பிறகு கிடைக்கும் ஓய்வு பற்றி யோபு 3:17-19-இல் மட்டுமே குறிப்பிடப்படுகிறது. இது எந்தவிதச் செயலுமற்ற ஓய்வானாலும், தொடர்ந்து வரும் துன்ப வாழ்க்கையைவிட மேலானதாகக் கருதப்பட்டது. இக்கருத்து சீரா 22:11; 30:17-இல் குறிக்கப்படுகிறது; அங்குச் சாவு நித்திய இளைப்பாற்றி என்றழைக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் இளைப்பாற்றி, ஓய்வு என்பது மன அமைதியைக் குறிப்பதாக எவ்விடத்திலும் வரவில்லை. எரே 6:16-இல் கூறப்படும் அமைதி, அரசியல், சமூகப் பாதுகாப்பைச் சுட்டுவதாகும். ''உங்கள் ஆன்மாவுக்''கென்று கூறுவது உங்களுக்கு மட்டுமே எனும் பொருள்படும். ''ஆண்டவரில் அமைதிகொள்'' எனச் சங் 37:7-இல் வருவது தவறான மொழிபெயர்ப்பாகும். ''ஆண்டவர்முன் அமைதியாக இரு'' என்பதே சரி.

2. புதிய ஏற்பாட்டில்:- ஓய்வுபற்றி இங்கு அதிகம் பேசப்படவில்லை. அப்படியே பேசப்பட்டாலும், சமய, இறையியல் முக்கி

யத்துவம் அதற்கு அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. ''உங்களை நான் இளைப் பாற்றுவேன்'' என்று மத் 11:28-29-இல் கூறப் படும் பொருளிலே பொதுவாக எல்லா இடங்களிலும் ''ஓய்வு'' என்ற சொல் பயன் படுத்தப்படுகிறது. ஊக்கமூட்டப்படுதல் புத் துணர்ச்சி பெறுதல் எனும் பொருளிலும் 1 கொரி 16:18; 2 கொரி 7:23; பில 7:20 போன்ற இடங்களில் பவுலால் பயன்படுத்தப்பட்டுள் ளது.

புதிய ஏற்பாட்டில் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் ஆசிரியரே ஓய்வு பற்றி அதி கம் பேசுகிறார் (3:7-4:11). கிறிஸ்துவின் நற்செய்தி நிறைவடைவது அனைவரும் ஆண்டவரின் அமைதி பெறுவதேயாகும். கடவுளுக்குக் கீழ்ப்படியாதவர்கள் பாலை வனத்திலே சுற்றித் திரிவர்; ''அவர்கள் என் இளைப்பாற்றி அடையமாட்டார்'' (சங் 95:1) என்பது கானான் நாட்டை அடைய மாட்டார்கள் என்பதையே குறிக்கிறது. ஆனால் இதே வரியை எடுத்துக் கொண்டு (ஆதி 2:2-இன் ஒளியில்) கடவுளின் திட்டப் படி அவரது அமைதியில் பங்குகொள்ள வேண்டுமெனப் பரந்த, ஆழ்ந்த பொருள் கொடுக்கிறார் எபிரேயர் திருமுக ஆசிரியர். கடவுளின் அமைதியில் பங்கு கொள்கிறவன் அவனது வேலைகளிலிருந்தும் இளைப் பாற்றி அடைகிறான் (எபி 4:9-10). இறந்த பேறு பெற்றோர் கடினமான உழைப்பி னின்று மட்டுமே ஓய்வு பெறுகின்றனர் என்ற கருத்து இருந்தது. பொதுவாக ஆதி 2:2-இன் ஆழ்ந்த பொருளை உணராமல் கடவுளை மனிதத் தன்மையில் பார்த்தால், மீட்படைந்தோரின் மகிமையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் உடல் உழைப்பி னின்று விடுதலை எனப் புரிந்து கொண்ட னர்.

புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் பகுதியி லும் ஓய்வுக்கு அதிகம் சமய முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படவில்லை.

ஓய்வு ஆண்டு (SABBATICAL YEAR)

ஓய்வு வருடம் அல்லது ஏழாவது வருடம் ஐந்நூலில் உள்ள மூன்று சட்டத் தொகுப்பில் தரப்பட்டுள்ளது. உடன்படிக்கைச் சட்டம் (யாத் 23:10-11); உபாகமச் சட்டம் (உப 15:1-3); புனிதச் சட்டம் (லேவி 25:2-8).

யாத்திரையாகமமும், லேவியராகமமும் இந்த ஓய்வு வருடத்தைப்பற்றிக் கூறுகையில் ஒத்துள்ளன. இச்சட்டமானது ஏழாம் வரு டம் பயிர் செய்வதைத் தடுக்கிறது. மனித னைப்போல் விலங்குகளும் நிலமும் ஓய்வு எடுக்க வேண்டும். உப ஆகமத்தின் ஏழாம் வருடம் பற்றிய சட்டம் (15:1-3.9) நிலத்தைப் பற்றியோ ஓய்வைப் பற்றியோ பேச வில்லை. இது வாங்கப்பட்ட கடன் ஏழாம் வருடம் மன்னிக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறது. உப 15:9-இன்படி இந்தச் சட்டம் 7 வருடச் சுழலைக் குறிக்கிறது. இந்த ஓய்வு வருடச் சட்டமும் யாத் 21:2; உப 15:12-14 ஆகிய இடங்களில் வரும் 7 வருட உழைப் பிற்குப்பின் அடிமைகளுக்குச் சுதந்தரம் வழங்க வேண்டும் என்ற சட்டமும் தொடர் புடையதா என்பது தெரியவில்லை.

இந்தச் சட்டங்களை ஆராயும்போது இவை நடைமுறைக்கு ஒத்து வருமா? அப் படிக் கடைப்பிடிக்கப்பட்டனவா? என்பது சந்தேகமே இறைவாக்கினர் எரேமியா அடி மைகளைப் பற்றிய சட்டங்களை இஸ்ரா யேல் மக்கள் கடைப்பிடிக்கவில்லையெனச் சாடுகிறார் (எரே 38:8-22). மேலும் கடனைக் கட்ட முடியாத நிலையில் மன்னிக்க வேண் டுமென எல்லா இனத்தவரும் அக்காலத்தில் கருதிவந்தனர். இதையே சட்டமாக மாற்றி யது கடன்கொடுப்பவர் தாராள மனத்துடன் செயல்பட வேண்டுமென்பதற்காகவே ஆகும்.

ஏழு, ஏழு ஆண்டுச் சுழலுக்குப்பின் ஜூபிலி ஆண்டு வந்தது (லேவி 28:8-55). ஒவ்வொரு ஓய்வு ஆண்டிலும் கூடாரவிழாவின்போது சட்டம் வாசிக்கப்பட்டது (உப 31:10-11). நெகமியாவின் தலைமையில் புதுப்பிக்கப் பட்ட உடன்படிக்கையில் ஓய்வு ஆண்டு சேர்க்கப்பட்டிருக்கிறது (நெக 10:31). அச மோனியர்கள் காலத்தின் தொடக்கத்தில்

சில சமயங்களிலாவது ஓய்வு ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது (1 மக் 6:48.53).

ஓய்வு நாள் (SABBATH - DAY OF REST)

I. பழைய ஏற்பாட்டில்:-

1. ஓய்வுநாளின் அடிப்படைக் கருத்து:- ''ஓய்வு நாள்'' என்பது இறைவனால் புனிதப்படுத்தப்பட்ட ஓர் ஒப்பற்ற நாளாகும். நம்மைப் படைத்து, (ஓய்வின்றிக்) காத்து வரும் இறைவனுக்காக இந்நாளில் வேலை முதலியவற்றில் ஈடுபடாமல் இறைவழிபாட்டில் ஈடுபடுவதைக் குறிக்கிறது. முன்னோர்களுக்கு ஓய்வுநாளை அனுசரிப்பது சட்டமாதலால் அவர்கள் அதைத் தொன்றுதொட்டுப் பரிசுத்தமாகக் கொண்டாடி வந்திருக்கின்றனர் (யாத் 20:8; 23:12; 34:21). இறைவாக்கினர் மோசே காலத்திற்கு முன்பே ஓய்வு நாளை அனுசரிக்கும் பழக்கம் இருந்து வருவதால் எப்பொழுதுமுதல் இப்பழக்கம் வழக்கத்திலிருந்து வருகிறது என்பதை நிர்ணயப்படுத்திக் கூற இயலாது. ஓய்வு நாள் வாரத்தின் இறுதி நாளாகவும், மகிழ்ச்சிக்குரிய நாளாகவும், இறைவனை எல்லாரும் ஒன்று சேர்ந்து தொழுவதற்கு ஒரு முக்கிய நாளாகவும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஓசே 2:13; 2 அர 4:23; ஏச 1:13).

2. ஓய்வு நாளை அனுசரிக்கக் காரணம்:- இறைவன் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கைச் சட்டம் மனிதன் ஓய்வு நாளை அனுசரிப்பதின் மனிதாபமான கோணத்தை வலியுறுத்துகிறது (யாத் 23:12). இதுவே உபாகமச் சட்டத்தின் நோக்கமாகும் (உப 5:12). ஆனால் 'குருக்களின் சட்டம்' ஓய்வு நாளைப்பற்றிக் குறிப்பிடும்போது அதன் பொருள் வேறுபட்டுக் காணப்படுகிறது. மனிதன் தனது வேலைகளைச் செய்யும் போது படைப்புத் தொழில் புரியும் இறைவன் வழியைப் பின்பற்றுகின்றவனாகக் காட்சி அளிக்கிறான். மனிதனும் வாரத்தில் ஏழாவது நாளன்று வேலைகளில் ஈடுபடாமல் ஓய்வெடுத்துக் கொள்ளும் போது இறைவனுடைய புனித ஓய்வைப் பின்பற்றுகிறான் (யாத் 31:12 தொ; ஆதி 2:2 தொ). இவ்வாறாக இஸ்ராயேல் மக்களுக்கு ''அவர்களைப் பரிசுத்தப்படுத்தும் ஆண்டவர் நாமே என்பதை அவர்கள் அறியும்படி நமக்கும் அவர்களுக்கும் அடையாளமாக ஓய்வு நாட்களை'' (எச 20:12) அவர்களுக்கு அருளினார்.

3. ஓய்வுநாளைக் கடைப்பிடித்தல்:- ஓய்வு நாளைப் புனித நாளாக அனுசரிப்பதை இஸ்ராயேல் மக்கள் கட்டளையாகக் கருதி வந்தனர்: ''ஓய்வு நாளிலே...உங்கள் உறைவிடங்கள் எங்கும் நெருப்பு மூட்டாதீர்கள்'' (யாத் 35:3). ஓய்வு நாளிலே சட்டத்திற்கு விரோதமாகப் பாலைவனத்தில் விறகு பொறுக்கியவனுக்குத் தண்டனை வழங்கப்பட்டது (எண் 15:32). ஓய்வு நாளில் சமைக்கக்கூடக் கூடாது என்பதற்காக அதற்கு முந்தின நாளே சமைத்துக் கொண்டார்கள் (யாத் 16:23). ஆண்டவர் மக்களுக்கு வாக்களித்த இறுதிக்கால வாக்குறுதிகள் நிறைவேறும் பொருட்டு ஓய்வுநாளைப் புனித நாளாக அனுசரிப்பது அவசியம் என்பதற்கு இறைவாக்கினர்கள் சான்று பகர்கின்றனர் (எரே 17:19-27; எச 58:13 தொ). இதன்படி நெகமியா எவ்வாறு ஓய்வு நாளைக் கடைப்பிடித்தார் என்பதையும் (வேதாகமத்தில்) காண்கின்றோம் (நெக 13:15-22). ஓய்வுநாளைப் புனித நாளாக்கும் பொருட்டு (உப 5:12) புனிதக் கூட்டங்களும் (லேவி 23:3) தகனப் பலிகளும் (எண் 28:8) நிறைவேற்றப்பட்டன. அந்நாளில் ''நித்திய உடன்படிக்கையாக இஸ்ராயேல் மக்களிடம் பெற்றுக்கொண்ட அப்பங்களை ஆண்டவர் முன்னிலையில் மாற்றிப்'' புதுப்பித்துக் கொண்டனர் (லேவி 24:8; 1 நாள் 9:32). எருசலேம் நகருக்கு வெளியே சுற்றுப் புறத்திலுள்ள மக்கள் மேற்கூறப்பட்டுள்ள வழிபாட்டு முறைகளுக்குப் பதிலாகச் செபக்கூடங்களில் பொதுச் செபம் செய்வதிலும் வேதாகமத்தின் வாசகங்களுக்கு விளக்கங்கள் பெறுவதிலும் ஓய்வு நாளைப் புனித நாளாகக் கடைப்பிடித்தனர். மக்கபேயர் காலத்தில் கசிதேயர் ஓய்வு நாளினை எந்த அளவுக்குப் புனித நாளாகக் கருதினார்கள் என்றால் அந்நாளில் எதிரிகளால் வெட்டுண்டு மடிவதற்குத் தயாராக

இருந்தார்களே தவிர அப்புனித நாளின் ஒழுங்குக்கு மாறாகப் போருக்குரிய ஆயுதங் களைக் கையிலேந்திப் போராடவில்லை (1 மக் 2:32-48). புதிய ஏற்பாட்டின் காலத்தில் எஸ்ஸேனியக் குழுவைச் சேர்ந்தவர்கள் ஓய்வு நாளைக் கடுமையாகக் கடைப்பிடித்த னர் என்பதையும், பரிசேயர் ஓய்வுநாளை அனுசரிப்பதில் ஒரு சிறு காரியத்தையும் பெரிதுபடுத்தித் தர்க்கித்தனர் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

II. புதிய ஏற்பாட்டில்:-

1. இயேசுவும் ஓய்வுநாளின் சட்டத்திற்கு அமைந்தே நடந்து வந்தார்:- அந்நாளைச் செபக் கூடங்களுக்குச் சென்று பலமுறை போதிப்பதற்குச் சாதகமான நாளாகக் கருதி வந்தார் (லூக் 4:16). இயேசு ஓய்வு நாளை அனுசரிக்கும் ஒழுங்குகளுக்கும் சட்டத்திற் கும் விரோதமாக எதையும் செய்யவில்லை. மாறாகப் பரிசேயர்களின் ஆசாரத்தின் கண் டிப்பை அகற்றினார். ''ஓய்வுநாள் இருப்பது மனிதனுக்காக, மனிதன் இருப்பது ஓய்வு நாளுக்காக அன்று'' (மாற் 2:27) என்றும், சட்டத்தின் வெறும் வார்த்தைகளுக்குப் பணிந்து, கருத்தினை உணராமல் ஓய்வு நாளை அனுசரிப்பதைவிடப் பிறருக்கு அன்பு செய்வது முதன்மையானதும் சிறப்பு வாய்ந்ததும் ஆகும் என்றும் எடுத்துரைத்தார் (மத் 12:5; லூக் 13:10-16; 14:1-5). மேலும் மனுமகன் ஓய்வு நாளுக்கு ஆண்டவர் என் றும், தமக்கு அதன்மேல் அதிகாரம் உண்டு என்றும் உரிமை கொண்டாடினார் (மாற் 2:28). அதன் பொருளை உணராத யூத மக்கள் இயேசுவுக்கு எதிராகத் தொல்லை கொடுக் கத் தொடங்கினர் (யோவா 5:9); ஆனால், தந்தை எவ்வாறு படைப்பு வேலைகளுக்குப் பிறகு ஓய்ந்தபின்னும் இவ்வுலகை ஆட்சி செய்யவும் வாழ்வளிக்கவும் தொடர்ந்து செய்கிறாரோ அதுபோல இயேசுவும் தந்தை வழிநின்று நன்மை செய்வது தவறு என்று எவரும் கூற இயலுமோ?

தொடக்கத்தில் இயேசுகிறிஸ்துவின் சீடர் கள் ஓய்வு நாளுக்கு முந்தின நாளை ஆயத்த நாளாகவும் ஓய்வு நாளைப் புனித நாளாக வும் கடைப்பிடித்து வந்தனர் (மத் 28:11; மாற் 15:42; 16:1; யோவா 17:42). இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகும் ஓய்வுநாளை யூதர்களிடையே நற்செய்தி பரப்புவதற் குகந்த நன்னாளாகக் கொண்டாடி வந்தனர் (அ.ப. 13:14; 16:13; 17:2; 18:4). ஆனால் வாரத்தின் முதல்நாள் இயேசு உயிர்த்த நாளா னதால் விரைவில் அந்நாள் 'திருச்சபை' ன்று கூடி இறைவனை வாழ்த்தி வணங்கும் நன்னாளாகப் போற்றப்பட்டு வந்தது (அ.ப. 20:7; திருவெளி 1:10). பிறருக்குப் பொருளு தவி செய்வதும் இறைவனை வாழ்த்தி வணங்குவதுமாகிய யூதர்களின் பழக்கவழக் கங்கள் ஆண்டவருடைய நாளாகிய இன்று கடைப்பிடிக்கப்பட்டன. இந்தப் புதிய நோக் கில் மற்றப் பழைய ஏற்பாட்டு நிறுவனங்க ளைப்போல் யூதர்கள் கடைப் பிடித்து வந்த ஓய்வுநாளும் உருவகப் பொருள் பெற்றது. இறைவன் படைப்பின் வேலை கள் அனைத்தும் முடித்தபின்பு ஏழாம்நாள் ஓய்வெடுத்துக்கொண்ட நாளை நினைவு படுத்தும் புனித நாளாக மக்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடித்து வந்தனர். இப்போது இயேசு தமது உயிர்ப்பினால் ஒரு புனிதமான ஓய்வு நிலையை அடைந்திருக்கின்றார். இயேசு வைப் பின்பற்றுவோர் அனைவருக்கும் இப் புனிதமான ஓய்வை அளிப்பதாகவும் வாக்க ளித்துள்ளார் (எபி 4:1-11). இறைவனின் இளைப்பாற்றியை அடைந்தவனே வேலை களிலெல்லாம் ஈடுபடாமல் உண்மையான ஓய்வைப் பெறுவான். அப்பொழுது இறை வன் ''தம் வேலையை முடித்து இளைப்பா றுவது போலவே, தானும் தன் வேலையை முடித்து இளைப்பாறுகிறான்'' (எபி 4:10; திருவெளி 14:13).

ஓய்வுநாள் பயணத் தூரம் (SABBATH DAY'S JOURNEY)

யூத மதச்சட்டம் ஒருவர் ஓய்வு நாள் அன்று, இவ்வளவு தொலைவு பயணம் செய்யலாம் என்று அனுமதி அளித்துள்ளது.

அ.ப. 1:12-இல் ஒலிவத்தோப்பு என்னும் மலையிலிருந்து எருசலேம் வரை செல்லும் தொலைவு ''ஓய்வு நாளில் நடக்கக்கூடிய

தூரம்'' என்று கூறப்படுகிறது. யோசிப்பஸ் என்பவர் இதை 5 அல்லது 6 பர்லாங்கு என்று குறிப்பிடுகிறார். எனவே ஏறக்குறைய 990 மீட்டர் அல்லது 1200 மீட்டர் ஆகிறது. இந்தச் சொற்றொடர் விவிலியத்தில் வேறெங்கும் பயன்படுத்தப்படவில்லை. இது யோசு 3:4-இலிருந்து பெறப்பட்டது. அதில் ''உங்களுக்கும் உடன்படிக்கைப் பேழைக்கும் 2,000 முழ தூரம் இருக்கட்டும்'' என்றிருக்கிறது. இதிலிருந்துதான் 2,000 முழ தூரம் என்பது பேழையிலிருந்து இஸ்ரா யேல் இருப்பிடத்திற்கு அதிகப்பட்ச தூர மாக மாறியது. எனவே 2,000 முழதூரம் ஓய்வு நாளில் பயணம் செய்யக்கூடியதாய் மாறியது. யாத் 16:29-இல் ''ஏழாம் நாளிலே உங்களில் எவனும் தன் இடத்தை விட்டு நகராமல் அங்கேயே இருக்கட்டும்'' என்றி ருக்கிறது. எண் 35:5-இல் ''சுற்றுவெளிகள் நகரின் மதிற்சுவரிலிருந்து நகருக்கு 2,000 முழம் எப்பக்கமும் இருக்கும்''. யூத இராபிக ளின் பாரம்பரியம் இதை ''ஓய்வு நாள் பயண'' அளவாக விளக்குகிறது.

யாத் 16:29 என்ற பகுதிக்கு எருசலேம் தார்கூம் ''எவனும் ஏழாம் நாளிலே 2,000 முழ தூரம் இந்த இடத்திலிருந்து போக வேண்டாம்'' என்று விளக்கம் கொடுத்துள் ளது. அதே முறையிலேயே மற்ற யூத போதக மும் அமைந்துள்ளது.

ஓரசு (HORESH - காடு)

தாவீது பாலைவனத்திலுள்ள சிப்பு என்ற காட்டில், சவுலிடமிருந்து தப்பித்து வந்து, சில காலம் தங்கிய இடம். இங்குதான் சவுலின் மகன் யோனத்தானுக்கும் தாவீதுக் கும் ஆண்டவருக்கு முன்பாக உடன் படிக்கை நடந்தது (1 சாமு 23:15-19). கெபிரோ னுக்குத் தென்கிழக்கில் 9.6 கி.மீ. தொலைவி லும், தேல் சிப்பிலிருந்து 3 கி.மீ. தொலைவி லும் உள்ள கிர்பெத் கொரெசியா தான் இவ்விடம் என்று வழக்கமாகக் குறிப்பிடப் பட்டு வருகின்றது.

ஓராம் (HORAM - ஆணவம்)

கெசெரின் அரசர். இவர் இலாக்கீசுக்குத் துணை செய்ய வந்திருந்தபோது, யோசுவா வால் வெட்டி வீழ்த்தப்பட்டவர் (யோசு 10:33).

ஓரியன் (ORION - மிருக சீரிடம்)

இது மிருக சீரிடம் என அழைக்கப்படும் விண்மீன் கூட்டத்தின் பெயர். இதே வார்த்தை மற்ற இடங்களில் மந்தத்தன்மை, முட்டாள் தனம் இறைப்பற்றற்ற தன்மை போன்ற பொருட்களையும் குறிக்கிறது (சங் 49:10; 92:6; 94:8). விவிலியத்தில் மூன்று இடங்களில் இந்த மிருகசீரிடம் வெளிப் படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (யோபு 9:9; 38:31; அமோ 5:8).

பண்டைய புராணக் கதைகள், ஓரியன் ஒரு பலமுள்ள மனிதன் எனவும், அவர் சாகும் போது வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட் டாரெனவும், ஆகாயத்தில் கட்டுண்டு இந்த விண்மீன் கூட்டமானாரெனவும் கூறுகின் றன. யோபு 38:31-இன்படி இந்தப் பலசாலி இறைவன்மேல் நம்பிக்கை கொள்ளாமல் தன் சுயபலத்தை நம்பினார். எனவே அவரை, அவரைவிடப் பலமுள்ள சக்தியா கிய இறைவன் அடக்கிவிட்டார்.

ஓரேபு (OREB - அண்டங்காக்கை)

மிதியானிய இளவரசர்களான ஓரேபு, செயேபு ஆகியோரின் படைகள் கிதயோ னால் தோற்கடிக்கப்பட்டபின், இவர்கள் எப் பிராயிமியர்களால் பிடிக்கப்பட்டுக் கொல் லப்பட்டனர்.

இஸ்ராயேலர் பாவம் செய்ததால், இறை வனால் அனுமதிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் மிதியானியர், இவர்கள்மேல் ஆட்சி செலுத்தி வந்தனர். இவர்களை எதிர்த்து நீதிபதி கிதயோன் இசிரியேல் பள்ளத்தாக் கில் பாளையம் இறங்கியிருந்த மிதியானிய ரைத் தாக்கினார். கிதயோன் எப்பிராயிம் மலைநாடெங்கும் தூதர்களை அனுப்பி ''மிதி யானியருக்கு எதிராய் இறங்கிப் பேத்துபா ராவின் நீர்த்துறைகளையும், யோர்தானின் நீர்த்துறைகளையும் கைப்பற்றிக் கொள்ளுங் கள்'' என்றார். அவர்களும் அப்படியே செய்து மிதியானிய இளவரசர்களான

ஓரேபை, ஓரேபு பாறையிலும், செயேபு வைச் செயேபு என்ற ஆலையிலும் கொன்ற னர். மேலும் அவர்கள் இவ்விளவரசர்களின் தலைகளை யோர்தான் நதிக்கு அப்பால் இருந்த கிதயோனிடம் அளித்தனர் (நீதி 7:24-8:3). இவர்கள் கொல்லப்பட்ட இடத்திற்கு இவர்கள் பெயர் சூட்டப்பெற்றது. இவ்விரு வரது கொலையும் மிதியானியர் தோல் வியும் இஸ்ராயேலர்களிடையே ஒரு முது மொழியாயிற்று (சங் 83:11; ஏச 9:4; 10:26).

ஓரேன் (OREN வெற்றி மாலை, புன்னை)
யூதா வழித்தோன்றலான இவர் எரகுமே லின் மகனாவார் (1 நாள் 2:25).

ஓர் (HOR) - மலை
1. ஏதோமின் எல்லையில் உள்ள ஒரு மலை. ஒரு பாரம்பரியத்தின்படி, ஆரோன் இங்குதான் புதைக்கப்பட்டதாகக் கூறப்படு கிறது (எண் 20:22; 21:4; 33:37; உப 32:50). ஆனால் இதற்கு மாறாக உப 10:6-ஐப் பின் பற்றும் பாரம்பரியம் ஆரோன் மொசேரா வில் இறந்ததாகவும் அங்கேயே புதைக்கப் பட்டதாகவும் கூறுகிறது.

பெத்திராவுக்கு அருகில் உள்ள மலைக ளில் ஒன்றுதான் ''ஓர்'' என்று யோசிப்பஸ் கூறுகிறார். இது ஏதோம் மலைத் தொடர்ச்சி யிலே மிகவும் கரடுமுரடானதும், உயரமான துமான அதாவது 1460 மீட்டர் உயரத்தில் இரட்டைச் சிகரம் கொண்ட மணல் கற்க ளால் ஆன குன்று. ஆரோனின் மலை என் கிற எபேல் ஆரூன் 'ஓர்' மலை என்று பாரம்பரியம் கூறுகிறது. எபேல் ஆரூன் மேல்தான் ஆரோனுக்குச் சொந்தமான கல் லறை இருக்கிறது என்று சொல்லப்படுகி றது. மேல்பகுதியில் முகமதிய மசூதி ஒன்று இருக்கிறது. ஆனால் பேரரசன் யுஸ்தினியன் காலத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவ கோயில் தான் ஒரு வேளை இக்கல்லறையாக இருக்க லாம்.

ஏதோமின் எல்லையில் அல்லாமல் (எண் 20:22) நடுப்பகுதியில் ஓர் மலையைக் குறிப்பி டும் இந்தப் பாரம்பரியம் பல பெரிய சந்தே கங்களுக்கு வழிகாட்டுகிறது. ஏதோமைக் கடந்து செல்ல இஸ்ராயேலருக்கு அனு மதியை மறுத்துவிட்டதுமல்லாமல், பெரும் படையை ஏதோம் தன் எல்லையில் நிறுத்தியி ருந்தால் (எண் 20:17-21; உப 2:8) இஸ்ரா யேல் ஏதோமைக் கடக்காமல் எபேல் ஆரூனை அடைந்திருக்க முடியாது. எனவே காதேசிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்ள எபேல் மதுராதான் 'ஓர்' மலையாக இருந்தி ருக்கவேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. அதனுடைய இட அமைப்புக் கூட, மக்கள் முன்னிலையில், தந்தையிடமிருந்து மகனுக் குக் (எண் 20:22-29) குருத்துவ பட்டத்தை மாற்றிக் கொடுக்கும் வழிபாட்டை நடத்துவ தற்கு ஒத்துப் போவதாக அமைகிறது. ஆனால் எபேல் ஆரூன் மிக உயரமானதும், அங்கு என்ன நடந்தது என்று மக்களால் சாட்சி சொல்ல எட்டாததாகவும் உள்ளது. இருப்பினும் 'இதுதான் ஓர்' என்று உறுதியா கக் கூறப்போதுமான அளவு சான்றுகள் இல்லை.

2. இன்னொரு மலைச்சிகரமும் இதே பெயரில் அழைக்கப்படுகிறது (எண் 34:7-8). இஸ்ராயேல் ஆட்சியின் வடக்கு எல்லை யில் இது குறிக்கப்படுகிறது. லெபனோன் மலைத் தொடரிலே முக்கியமான சிகரமாக இருக்கலாம். கெர்மோன் மலையும், லெப னோனின் வடகிழக்கு முகட்டிலுள்ள எபேல் அக்காரும், 'ஓர்' மலைச்சிகரம் இருந் திருக்கக் கூடிய இடங்களாகச் சுட்டிக் காட் டப்படுகின்றன.

ஒலபெரினே (HOLOFERNES - ; நதிரமுள்ள, ஏமாற்றுகிற)
'மேற்கு நாட்டினர் அனைவர்மீதும்' படையெடுக்க நெபுக்கதுனேசரால் நியமிக் கப்பட்ட அசீரியப் படைத்தளபதியாவார் ஒலபெரினே. இவர் ஒரு பெண்ணின் கைக ளில் இறுதித் தோல்வியைத் தழுவினார்.

நூற்றிருபதினாயிரம் (120,000) காலாட் படையினரையும், வில் எய்யும் 12,000 குதி ரைப் படையினரையும் கொண்ட பெரும் படையை நடத்திச் சென்ற ஒலபெரினே மத்திய

தரைக்கடல் நாடுகளில் பெரும் பீதியை உண்டாக்கி அசீரிய ஆட்சியை நிலைநாட்டினார். நெபுக்கதுனேசாரைத் தவிர வேறு யாரை வழிபட்டாலும் அவர்கள் எங்கிருந்தாலும் அழித்துவிட, தேடிக் கொண்டிருந்தார். யூதேயாவையும் கைப்பற்ற அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தபோது, 'யாரும் வெற்றி கொள்ளமுடியாத இறைவனுடைய பாதுகாப்பில் இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்று அம்மோனியர் அனைவருக்கும் தலைவனான அக்கியோரால் ஓலபெரினே எச்சரிக்கப்பட்டார். கலகக்காரனான படைத்தளபதி ஓலபெரினே அக்கியோரின் அறிவுரையைத் தூக்கி எறிந்துவிட்டு, அவரைக் கட்டி யூதேயாவில் கொண்டு போய்ப் போட்டுவிடக் கட்டளையிட்டார். பெத்தூலியா என்ற நகரை முற்றுகையிட்டார். இந்த அவல நேரத்தில் எபிரேயர்கள் அவர்களுடைய தலைவர்களைப் பணிந்துவிடத் தூண்டினர். விதவை யூதித்து எல்லைகளைக் கடந்துச் செல்ல அனுமதி பெற்றுக் கொண்டு அவளுடைய அழகால் அந்த ஆற்றல் மிக்க போர்வீரனை மயக்கினாள். அவர் குடித்து மயங்கிக் கிடந்தபோது, அவர் தலையைக் கொய்து, இஸ்ராயேல் மக்களுக்கு மீட்பைப் பெற்றுத்தந்தாள்.

அதிகாரத்தில் நெபுக்கதுனேசாருக்கு அடுத்தபடியாக இருந்த அவர் ஒரு பெண்ணின் அழகில் நிராயுதபாணியானார். அசீரிய ஏடுகளில் இப்படிப்பட்ட ஒரு தளபதியைப் பற்றிய வரலாறு இல்லை. ஆனால் மூன்றாம் அர்த்தா செருசின் கீழ் ஓலபெரினே என்ற பெயரில் இருந்த தளபதி சிறிய ஆசியாவைக் கைப்பற்றினார் என்று அறிகிறோம்.

ஓனாம் *(ONAM - பலமான, ஊக்கமான)*

1. ஏதோம் நாட்டிலிருந்த ஒரு கோரியர் உப-குலத்தின் மூதாதையர் (ஆதி 36:23; 1 நாள் 1:40). இவர் சோபாலின் ஐந்தாம் மகனாவார்.

2. எரகுமேல்-அத்தாரா-வின் மகன் (1 நாள் 2:26.28).

ஓனான் *(ONAN - ஊக்கமிக்க, செல்வமிக்க)*

யூதாவுக்கும் கானானிய (பது-) சூவாவுக்கும் பிறந்த இரண்டாம் மகன் (ஆதி 38:4-10; 46:12; எண் 26:19; 1 நாள் 2:3). தன் தீய அண்ணன் ஏர் வாரிசு இல்லாது இறந்தபின், அவன் மனைவியைத் தன் மனைவியாக ஏற்று அவனோடு தன் தமையனுக்கு மகப்பேறு அளிக்க, சமூக வழக்கமும் (காண்க. 25:5-10) பெற்றோர் கட்டளையும் வற்புறுத்தின. அந்தச் சந்ததி தன் சந்ததியாய் இராதென்று அறிந்து அவன் தன் தமையனின் விதவையான தாமாரோடு படுக்கையில், தன் தமையனுக்கு மகப்பேறு உண்டாகாதபடிக்குத் தன் விந்தைத் தரையிலே விழவிட்டுவிட்டு வந்தான். அவன் செய்தது பெரிய அக்கிரமமென ஆண்டவர் அவனை அழித்து விட்டார் (38:9-10).

ஓனியா *(ONIAS)*

மக்கபேயர் காலத்தில், குருக்கள் குடும்பத்தில் இப்பெயரைத் தாங்கியவர் பலர் இருந்தனர்.

1. முதலாம் ஓனியா:- யூதேயாவிலிருந்த பெரியகுரு. யாதுவா என்ற பெரிய குருவின் மகனாவார் (கி.மு. 320-290). இவருடைய மகன் பெரிய குரு முதலாம் சீமோன் ஆவார். ஓனியா, ஸ்பார்த்தரின் மன்னன் அரியோசு (கி.மு. 309-265) காலத்தில் வாழ்ந்தவர். அரியோசு, ஸ்பார்த்தர் யூதருக்கு உறவினர் ஆகும்படி, அவர்களுடன் நட்பையும் உடன்படிக்கையையும் ஏற்படுத்திக் கொண்டார் (1 மக் 12:7-23). இந்த ஓனியா குடும்பம், சாலமோன் மன்னரால் நியமிக்கப்பட்ட பெரிய குரு சாதோக்கின் வழித்தோன்றல் என எண்ணப்படுகிறது (1 அர 2:35).

2. இரண்டாம் ஓனியா:- (227 கி.மு.) முதலாம் சீமோனின் மகனாவார். சீரா 50:1, இந்தச் சீமோனைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறது. இரண்டாம் ஓனியா மூன்றாம் தோலமி மன்னருக்குத் திரை செலுத்த மறுத்தார். இவர் தோலமியை எதிர்த்துப் பாபிலோனியர் பக்கம் சேர்ந்தார். இதற்குப் பதிலடியாக எகிப்தியர் அச்சுறுத்தியபோது தோபியாது

யோசேப்பு தலையிட்டுத் தடுத்தார். இதற்காகத் தோபியாதுக்கு எகிப்தியர் போர்த்துறையில்லாத அரச அதிகாரத்தைக் கொடுத்தனர். மேலும் ஓனியா காலத்தில் அரசாட்சி இவர் தம் சகோதரி மகன் தோபியாது யோசேப்பு கையிலும், மத அதிகாரம் குருக்கள் கையிலும் இருந்தது. இந்த அரசாட்சி இழப்பு பெரிய குருவின் பதவியையும் ஓனியா குடும்பத்தின் வருங்காலத்தையும் பெரிதும் பாதித்தது.

3. மூன்றாம் ஓனியா:- இரண்டாம் சீமோனின் மகனாவார். 4-ஆம் செலூக்கிய பிலோபாத்தேர் காலத்தில் பெரிய குருவாக இருந்தவர். செலூக்கிய ஆட்சியில் நிலவிய ஆற்றலற்ற தன்மையால், இவர் தோலமேயர்களுக்கு ஆதரவு தந்தார். இதனால், எருசலேம் ஆலயத்திற்கு அலெக்சாந்திரியாவிலிருந்து செல்வமிக்க திருயாத்திரீகர்களைக் கவர எண்ணினார்.

செலூக்கிய அரசுக்குப் பொருளாதார ஆட்சியைக் கொண்டிருந்த தோபியாது 3-ஆம் ஓனியா அநியாயமாகப் பணத்தைக் கொடுக்காது வைத்துக் கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டினார். செலூக்கஸ் தன் அமைச்சன் கெலியதோரை இக்குற்றத்தை ஆய்வு செய்ய அனுப்பினார். ஓனியா தடுத்தும் ஆலயத்துக்குள் கெலியதோர் நுழைந்த போது, ஒரு பயங்கரக் காட்சி கண்டு மயங்கி வீழ்ந்தார். கெலியதோர் சாகக் கிடந்தபோது, அவரது நண்பர்கள் இறைவனிடம் மன்றாடப் பக்தியுள்ள ஓனியாவைக் கேட்டுக் கொண்டனர். அவர் மன்றாடக் கெலியதோர் நலம்பெற்றுத் தன் அரசனிடம் திரும்பினார் (2 மக் 3).

தோபியாதின் குடும்பத்தைச் சேர்ந்தவனும் ஆலயப்படைத் தலைவனுமான சீமோன், கெலியதோரின் துன்பத்துக்கு ஓனியாவே காரணம் என்று குற்றம் சாட்டினார். அரசன்முன் இவற்றை விளக்கிக்காட்ட ஓனியா அந்தியோக்கியாவுக்குப் பயணம் செய்தார். இதற்கிடையில் கெலியதோர் 3-ஆம் அந்தியோக்கைக் கொன்றார். அவனது சகோதரன் 4-ஆம் அந்தியோக்கு எப்பிபான் அடுத்து அரச பதவி ஏற்றார். ஓனியா எகிப்துக்கு ஓடிப்போனதாகத் தெரிகிறது. யோசிப்பசின் கருத்துப்படி அங்குக் கெலியோபோலிசில் ஒரு போட்டி ஆலயம் கட்டினார் எனத் தெரிகிறது. போட்டி தோபியாதால் தூண்டப் பெற்று, ஓனியாவின் சகோதரன் யோசுவா யாசோன், பெரிய குருப்பதவிக்காக ஒரு பெருந்தொகையை அந்தியோக்குக்குக் கொடுக்க முன் வந்தார். 2 மக்கபேயர் நூலின்படி பிற்காலத்தில் யாசோனுக்குப் பின் வந்த, சாதோக்கின் குடும்பத்தைச் சேராத மெனலாவு அவரைச் சிறையில் அடைத்துக் கொன்று போட்டார் (2 மக் 4:1-34; தானி 9:26).

இந்த மூன்றாம் ஓனியாதான் ஓசே 10:12; யோவே 2:23-இல் குறிக்கப்படும் 'நீதியின் ஆசிரியர்' என்று கருதப்படுகிறது.

4. நான்காம் ஓனியா:- மூன்றாம் ஓனியாவின் மகனாவார். இவர் பெரிய குருவாக இருக்கவில்லையெனத் தெரிகிறது. 5-ஆம் அந்தியோக்கு பெரிய குரு மெனலாவைக் கொன்று ஆல்கிமுவை நியமித்த போது நேர்மையான உரிமையுள்ள இவர் எகிப்திற்குத் தப்பி ஓடி, அங்கே தோலமி பிலோமேத்தரிடம் கி.மு. 154-இல் 'யாவே' கடவுளுக்கு லெயோன்டொபோலிசில் ஓர் ஆலயம் கட்ட உத்தரவு கேட்டுக் கட்டினார். அங்கு ஒரு போர்ப் படைக் குடியிருப்பையும் அமைத்தார். இவரது புதல்வர்கள் மூன்றாம் கிளியோபத்திராவின் போர்ப்படைத்தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

5. இவர் ஓனியா மெனலாவு என்றழைக்கப்படுகிறார். இவர் யோசேப்பு பென்தொபியாவின் புதல்வர்களில் ஒருவர். 3-ஆம் ஓனியாவின் உறவினர். யோசேப்பு-யாசோன் பெரிய குருப்பதவியிலிருந்து விலக்கப்பட்டவுடன் 4-ஆம் அந்தியோக்குவின் படையின் ஆதரவோடு பெரிய குருப்பதவிக்கு வந்தனர். இதற்குப் பதிலாக, 4-ஆம் அந்தியோக்குக்குப் பெரும் பணம் தருவதாக வாக்களித்தார். இந்தப் பணத்தைச் சேர்க்க முடியாத

தால், தன் சகோதரன் இலிசிமாக்கைத் தற்காலிகப் பெரிய குருவாக நியமித்துவிட்டு, அந்தியோக்குவிடம் சென்றார். இலிசிமாக்கு பணம் சேர்ப்பதற்காக, ஆலயத்தைக் கொள்ளையடித்து, இறைக்குற்றம் செய்தான். ஆகவே உயிருடன் தோலுரிக்கப்பட்டான்.

ஓனோ (ONO - ஊக்கமுள்ள)

பென்யாமினின் நகரம். சாரோன் சமவெளியின் தெற்குக் கோடியில் யோப்பாவிலிருந்து தென்கிழக்கில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது (நெக 11:35). லோது, காதிது நகரங்களுடன் ஒனோவும் பாபிலோனியாவிலிருந்து வந்த எழுநூற்று இருபத்தைந்து அகதிகளுக்கு மூதாதையர் நாடாக இருந்தது (எஸ் 2:33; நெக 7:37; 11:35). பென்யாமின் வழித்தோன்றலான எல்பாலின் புதல்வர்கள் இந்நகரைக் கட்டினர். ஆரம்பகாலத்தில் இது ஒரு முக்கியமான மதில் சூழ்ந்த நகரமாக விளங்கியது (1 நாள் 8:12).

3-ஆம் துத்துமோஸ் இந்நகரைக் கி.மு.1468-இல் வென்றதாக அவனது கர்னாக் பட்டியலில் உள்ளது. பிற்காலத்தில் ஓனோவுக்கு அருகிலுள்ள சமவெளியில்தான், சம்பல்லாத்து, கெசம் ஆகியோர் நெகமியாவுக்குத் தீங்கு செய்ய அவரை ஈர்க்க முயற்சித்தனர் (நெக 6:2; 11:35). வாடி முஸ்ராராவிலுள்ள கெப்ருஆன என்ற கிராமம் விவிலிய இடத்தின் பெயரைக் கொண்டுள்ளது.

ஓன் (ON - பலம், செல்வம்) - ஆள்

ரூபனின் குலத்திலுள்ள பெலத்தின் புதல்வரான ஓன், கோராகுடன் சேர்ந்து கொண்டு மோசேக்கு எதிராகக் கலகம் செய்தார் (எண் 16:1).

ஓன் (ON - பலம், செல்வம்) - இடம்

எகிப்தியப் பெயரான கெலியோபோலிசின் எபிரேய வடிவம் இது. நைல் நதியின் தெற்கு முனையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இது ஓர் எகிப்திய மாவட்டத் தலைநகரமாகவும், சூரியக் கடவுள் அசான்-ரே-இன் வழிபாட்டு இடமாகவும் விளங்கியது. யோசேப்பின் மாமனார் போத்திபார் ''ஓன்''-இன் குரு என்றழைக்கப்படுகிறார். ஒரு வேளை இந்த வழிபாட்டோடு தொடர்புடையவராக இருக்கலாம் (ஆதி 41:45.50; 46:20).

எபிரேய இறைவாக்கினர்கள் இந்த நகரை ஆவேன் என்றழைக்கின்றனர் (எசே 30:17).

க

ககாபா (HAGABAH - வெட்டுக்கிளி)

பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்த ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத் தலைவர் (நெக 7:48; எஸ் 2:45). இவர் காகாபு என்பவரிடமிருந்து (எஸ் 2:46) வேறுபட்டவர்.

ககாம் (GAHAM - கொழுந்துவிட்டு எரிகிற)

நாகோர் என்பவருக்கும் அவருடைய வைப்பாட்டி இரயுமாவுக்கும் பிறந்த இரண்டாம் மகன் (ஆதி 22:24).

ககார் (GAHAR - மறைந்துகொள்ளும் இடம்)

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத்தலைவர் (எஸ் 2:47; நெக 7:49).

ககிமோனி (HACHMONI - ஞானி)

எகியேலின் தந்தை; தாவீதின் ஊழியன். அரசருடைய மக்களைக் கவனித்து வந்தார் (1 நாள் 27:32). 11:11-இல் சொல்லப்பட்டிருக்கின்ற ககிமோனியா என்பதும் இச்சொல்லும் எபிரேயத்தில் ஒன்றையே குறிக்கின்றன.

ககிமோனியர் (HACHMONITE)

தாவீதின் வலிய வீரர்களில் ஒரு தலைவனான யாசொபெயாம் குடும்பத்தினர் (1 நாள் 11:11). 2 சாமு 23:8-இல் வரும் தக்கமோனியா என்பது வாசகத் தவறாக இருக்கலாம்.

கக்குபா (HAKUPHA - வளைந்த, கோணலான)

அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த பின்பு உள்ள தாழ்மட்ட ஆலய ஊழியர்களின் ஒரு குடும்பத்தலைவர் (எஸ் 2:51; நெக 7:53).

கசசோன் - தாமார் (HAZAZON-TAMAR - பனைமரங்களுள்ள மணற்பகுதி)

கெதர்லா கோமேர் தன் கூட்டணியுடன் சேர்ந்து கைப்பற்றிய எமோரியரின் நகரம் (ஆதி 14:7). சோதோம் நகருக்கும், சமவெளி நகரங்களுக்கும் அருகில் இருந்திருக்கவேண்டும். 2 நாள் 20:2-இல் சாக்கடலுக்கு மேற்கேயுள்ள ஏங்கேதியாக அடையாளம் காட்டப்படுகிறது.

சாலமோனால் மீண்டும் கட்டப்பட்டு, பலப்படுத்தப்பட்ட தாமார் நகரமாக இருக்கலாம் (1 அர 9:18). இந்நகருக்கு இஸ்ராயேல் நாட்டின் தென்கிழக்கு மூலையில் எசக்கியேல் இடம் குறிக்கிறார் (எச 47:28). அயின் இதிக்கு வடமேற்கிலுள்ள பாலைவனச் சோலையான இக்கால வாடி ஏல்-கசாசா என்ற பெயரில் இந்நகரப் பெயர் பாதுகாக்கப்பட்டுள்ளது.

கசபத்தானா (HASHBADDANAH - யாவே கருத்தில் கொண்டார்)

ஒரு லேவியராக இருக்கலாம். திருச்சட்ட நூல் வாசிக்கப்பட்டபோது எஸ்ராவுக்கு இடப்பக்கத்தில் நின்று சட்டத்திற்கு விளக்கமளித்தவராக இருக்கலாம் (நெக 8:4). நெக 9:5-இல் குறிக்கப்படும் கெசப்னயாவும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

கசப்பு (BITTER, BITTERNESS)

விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், பல இலக்கியங்களில் சுவைகளைப்பயன்படுத்தி விவரிக்கப்படுவதுபோல் விவிலியத்திலும் சொல்லப்படுகின்றன. விவிலியத்தில் 'கசப்பு' என்பது துன்பம், அடிமைத்தனம், கொடூரம், போன்றவற்றைக் குறிக்கும். கசப்பு அனுபவத்தை நான்காகப் பிரிக்கலாம்.

அ. உணர்ச்சிகள்:- இரக்கமற்ற சுடுசொற்கள் (ஆதி 27:34; யோபு 13:26; சங் 106:33), புறக்கணித்தலை வெளிப்படுத்துதல் (உரோ 3:14); உள்ளார்ந்த உணர்வுகள் (ஓசே 12:14; யாக் 3:14).

ஆ. வாழ்வின் நிலைகள்:- உயிர்ச்சித்திர மாக விவரிக்கப்படுதல் (ஆதி 26:35; யாத் 1;14; 2 சாமு 2:26; 2 அர 14:26).

இ. உணவுப்பொருட்கள்:- கசப்பான பழங்கள் (உப 29:18; 32:32), கசப்பான கீரைகள் (யாத் 12:8; எண் 8:11); சுவையான உணவுக்கு எதிரானவை (ஏச 5:20; பழ 5:4).

ஈ. தண்ணீர் அல்லது பிற பானங்கள்:- (யாத் 15:23; ஏச 24:9). குற்றம் செய்த பெண்ணைக் கண்டுபிடிக்கக் கசப்பான தண்ணீர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சமூக ஒழுக்க மதிப்பீடுகளைக் குறிக்க இந்த வகைப்பட்ட சொற்கள் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டன (உப 29:8; 32:32). கசப்பான பொருட்களைப் பல திருவிழாக்க ளில் அடையாளமாகப் பயன்படுத்தினார் கள். காண்க. கசப்புக்கீரை.

கசப்பு, நஞ்சு (GALL)

கசப்பானதும் நஞ்சானதுமான ஒரு பூண்டு. அதன் சாறு சாக்ரடீஸ் குடித்த நச்சுப் பானமாக இருக்கலாம் என்று பொதுவாக எண்ணப்படுகிறது. எட்டிக்காயுடன் சேர்த் துக் கூறப்படுகிறது (உப 29:18; எரே 9:15; புல 3:19; ஆமோ 6:12); கசப்புத் தன்மையை யும், துக்கத்தையும் குறிக்கிறது.

புல 3:19-இல் ''கசப்பு'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உப 29:18-இல் ''நஞ்சு'', ''கசப்பான கனி'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சொல் லுக்கு, ''நஞ்சு கலந்த தண்ணீர்'' (எரே 8:14; 9:15; 23:15), ''நச்சுப் பூண்டுகள்'' (ஓசே 10;4), ''நஞ்சு'' (உப 32:32; சங் 69:21; ஆமோ 6:12), ''கசப்பு'' (புல 3:5) என்றும் பொருள் கொடுக்கப்படும்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தபொழுது, ''கசப்பு கலந்த திராட்சை ரசம்'' அவருக்குக் கொடுக் கப்பட்டது (மத் 27:34; சங் 69:21; மாற் 15:23). அ.ப. 8:23-இல் இந்தச் சொல் அடையாளச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கசப்பு ஏரிகள் (BITTER LAKES)

இணைக்கப்பட்ட இரு ஏரிகள். பெரிய கசப்பு ஏரி, சிறிய கசப்பு எரி என்றழைக்கப் பட்டன. ஒருகாலத்தில் இவை சூயெஸ் வளைகுடாவோடும் செங்கடலோடும் நேரடி யாக இணைக்கப்பட்டிருந்தன. ஆனால் இடைப்பட்ட பகுதிகள் வண்டல் மண் ணால் மேவப்பட்டுவிட்டன. நவீன காலத் தில், இந்த இரு ஏரிகளும் சூயெஸ் கால்வாய் வழியாகச் செங்கடலோடு இணைக்கப்பட் டுள்ளன.

யாத்திரை நிகழ்ச்சியில் நாணல் கடலை இஸ்ராயேலர் கடந்தது, இந்தக் கசப்பு ஏரிக ளுக்கு வடக்கே நடந்திருக்கவேண்டும் என்று சிலரும், இவற்றின் தெற்கே நடந்தி ருக்கவேண்டும் என்று வேறு சிலரும், இன் னும் சிலர் இவற்றின் கிழக்குப் பகுதியில் நடந்திருக்கவேண்டும் என்றும் கருதுவர்.

கசப்புக்கீரைகள் (BITTER HERBS)

பாஸ்கு விழாவில் பாஸ்குச் செம்மறி யோடு (யாத் 12:8; எண் 9:11) ·கசப்புக் கீரைகள் உண்ணப்பட்டன. இது தொடக்கத் தில் உணவு தயாரிக்கப்பட்டு உண்ணப்பட்ட விரைவைக் குறித்தது. ஆனால் காலப்போக் கில் எகிப்திய அடிமைத்தனத்தின் கசப்பான அனுபவத்தை நினைவு கூரும் அடையாள மாகக் கருதப்பட்டது.

பலவகைக் கசப்புக் கீரைவகைகளில், பாஸ்கா நாளில் பயன்படுத்திய கசப்புக் கீரை எது என அறியப் பல தாவர இயல் வல்லுநர்கள் முயற்சி செய்துள்ளார்கள்; வெற்றியடையவில்லை எனலாம். நாடு கடத்தப்படுவதற்கு முந்தைய கிரேக்க, எபி ரேயச் சொற்களின் மூலத்திலிருந்து 'பல வகைக் கசப்புக் கீரைகள்'' பயன்படுத்தப்பட்டி ருக்கலாம் என்று தெரிகிறது. இதற்கு ஆதார மாக மிஸ்னாவில் ஐந்துவிதக் கசப்புக் கீரைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எது சரியானது என்று தெரியவில்லை.

கசப்பு நீர் (WATER OF BITTERNESS)

திருக்கூடாரத்தின் தரையிலிருந்து எடுக்கப்

பட்ட துகள், சாபம் எழுதப்பட்ட தோல் ஏட்டிலிருந்து எடுக்கப்பட்ட மை, தீர்த்தம் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு வகை மந்திரப் பானமாகும். இது சினத்தின் உணவுப் படையலில் பயன்பட்டது. இது எண் 5:11-31-இல் ஒரு கணவன் தன் மனைவியின் மீது சந்தேகம் கொண்டால் அதை நிரூபிக்க வழி இல்லை என்றால், தவறியவர்களுக்குரிய சாபம் சொல்லப்பட்டு அவள் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டது. ஆண்டவருடைய தண்டனை அல்லது ஆசிர்வாதம் அவள்மேல் விழும்படி அவள் பீடத்தின் முன்பாக அமர்வாள். அவள் தலைமுடி அவளின் வெட்கக்கேட்டின் அடையாளமாக அவிழ்த்து விடப்பட்டிருந்தது. மிஸ்னாவின் கூற்றுப்படி அவள் கருப்பு ஆடை உடுத்தி இருந்தாள். பின் குரு அவளின் கையில், அவள் கணவனின் நினைவுப்பலியை வைப்பார். பின் சாட்சியாகக் கூடாரத்தின் புழுதியில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீரில் போடுவார். பின் அவள்முன் நின்று மிகக் கொடிய சாபத்தைச் சொல்வார். அவள் 'ஆமென்' என்று இருமுறை சொல்லி அதை ஏற்றுக் கொள்வாள். பின் இந்தச் சாபங்கள் எழுதப்பட்டு அவை நீரில் கலக்கப்பட்டு, அவள் அந்நீரைக் குடிக்கும்படி அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அவள் குற்றமுள்ளவளாயின் அவள் உடலின் கீழ்ப்பகுதி அழுகி விடும்; குற்றம் அற்றவளாயின் அவள் பிள்ளைப்பேற்றை அடைவாள். நீர், நெருப்பு, போர் இவைகளின் மூலம் நடத்தப்படும் சோதனை எபிரேயர்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வருவதாகும். இஸ்ராயேலரின் எண்ணப்படி இந்தச் சோதனைகளின் முடிவுகளெல்லாம் ஆண்டவரிடமிருந்தே வருகின்றன.

கசமோனியர்கள், அசமோனியர்கள் (HASMONEANS)

1. கசமோனியு:-

கி.மு. 142 முதல் 63 வரை யூதேயாவை ஆண்டு வந்த அரசகுலத்தினைச் சார்ந்த தலைமைக்குருக்களும் அரசர்களும் கசமோனியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இப்பெயர் அவர்களது குடும்பப் பெயராகும். முதலாம் மக்கபேயர் நூலானது ஆதிகாலத்தைச் சேர்ந்த கசமோனியர்களை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. 1 மக் 5:62-இல் இஸ்ராயேல் மக்களை மீட்பதற்காக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் கசமோனியர்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆதி காலத்தைச் சேர்ந்த கசமோனியர்கள் சில சமயங்களில் மக்கபேயர்கள் என்று அழைக்கப்பட்டதுபோல் தோன்றுகிறது. மக்கபேயர் என்ற பெயரானது மத்தத்தியாவிற்கும் அவரது புதல்வர்களுக்கும் மட்டும்தான் கொடுக்கப்பட்டது. கசமோனியர் என்ற பெயரானது கி.மு. 135 முதல் 63 வரை அவர்களின் வழித்தோன்றல்களுக்குக் கொடுக்கப்பட்டது. வரலாற்று ஆசிரியர் யோசிப்பஸ் என்பவரால் மத்தத்தியாவின் தந்தையாகக் குறிப்பிடப்பட்ட அசமோனியு என்ற பெயரிலிருந்து 'கசமோனியர்' என்ற பெயர் பெறப்பட்டது. இந்த அரசகுலமானது 65 ஆண்டுகாலமாக யூதமக்களை அமைதியிலும், சுதந்தரத்திலும் வழி நடத்தி வந்தது.

மத்தத்தியாவின் தந்தையாகக் கூறப்பட்ட அசமோனியு என்பவரைப்பற்றிக் குறிப்புக்கள் ஒன்றும் காணப்படவில்லை. 'அசமோனி' என்ற பெயரானது 'கெசிமோன்' அல்லது ''கசமோனா'' என்ற இடப்பெயரிலிருந்து தோன்றியிருக்கவேண்டும்.

2. கசமோனியர் எழுச்சி:-

'கசமோனியர்' என்ற பெயரானது மக்கபேயர் நூல்களில் காணப்படவில்லை என்றாலும் யோசிப்பசின் குறிப்புக்களில் காணப்படுகின்றது. மிஸ்னாவில் யூதா மக்கபேயுவும் அவரது சகோதரரும் மக்கபேயர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கின்றனர். கி.மு. 167-இல்தான் இந்தக் குலமானது வரலாற்றில் காலடி எடுத்து வைத்தது. கி.மு. 167-இல் முதன்முதலாக மோதயின் நகரில் மத்தத்தியா என்ற குரு அந்நியத் தெய்வங்களுக்குப் பலி செலுத்துமாறு கட்டளை பிறப்பித்த செலூக்கிய அரசரின் கட்டளையை எதிர்த்து, அரச அலுவலன் ஒருவனையும், யூதன் ஒருவனையும் கொலை செய்து விடுகின்றார்.

இதைத் தொடர்ந்து மத்தத்தியாவும், அவரது புதல்வர்களும், இன்னும் பல யூதர்களும் பலிபீடங்களை உடைத்தெறிந்தனர். குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்தனர். இத்தகைய சமயக்கிளர்ச்சியை மத்தத்தியா இறந்தபின் அவரது மகனாகிய யூதா மக்கபேயு முன்னின்று நடத்தினார். இவர் தன்னை எதிர்த்துப் போரிட்ட மூன்று சிரியத் தளபதிகளை எம்மாவு என்ற இடத்தில் தோற்கடித்தார். பின் சிரியாத் தலைவனாகிய இலிசியா என்பவனைச் சந்தித்து, சமாதான உறவினை ஏற்படுத்தினார். இத்தகைய சமாதான உறவினால் உண்மையான இறைவனை வழிபடும் உரிமை யூதர்களுக்கு வழங்கப்பட்டது. கி.மு. 165-இல் ஆலயத்தில் நடந்த சிலை வழிபாடுகள் நீக்கப்பட்டு ஆலயத்தின் அபிடேக விழா நடத்தப்பட்டது.

சமய சுதந்தரம் வழங்கப்பட்டபோதிலும் சில இடங்களில் யூதர்களை மிகவும் இழிவான முறையில் நடத்தியதால், யூதா மக்கபேயு தனது இறப்பு வரையிலும் யூத மக்களின் உரிமைக்காகப் போராடினார் (1 மக் 9:22). பின் இவரது சகோதரர் யோனத்தான் மக்கபேயர்களின் தலைவனாக இருந்து புரட்சியைத் தொடர்ந்து நடத்தினார். சிரியப் படைகளைத் தாக்கினார். கிரேக்கப் பண்பாடு பரவுவதைத் தடுத்து நிறுத்தினார். சில காலங்கள் கழித்து அந்தியோக்கியாவில் செலூக்கிய அரசகுலத்தின் வலிமை குறைய ஆரம்பித்தது, இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு யூதர்கள் முழுச்சுதந்தரமும் பெறுவதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னால், யோனத்தான் அலக்சாந்தர் பாலா என்பவரால் தலைமைக்குருவாக நியமிக்கப்பட்டார். பின், தன் சொந்தப் பிரச்சனைகளில் மூழ்கிவிட்ட பாலாவின் செயல்பாடுகளைச் சாதகமாகப் பயன்படுத்தி மக்களின் மத்தியில் பெரும் புகழும் பெற்றார். சமாரியாவின் பெரும் பகுதிகள் யோனத்தானின் தலைமையின்கீழ் வந்தன. வரிசெலுத்துவதிலிருந்து முழுச்சுதந்தரம் கிடைத்தது. செலூக்கிய அரசர்களை எதிர்த்து நின்று வெற்றி பெறுகின்ற அளவிற்குப் படைபலத்தை யோனத்தான் பெருக்கினார். ஆனால் கி.மு. 143-இல் சிரிய உளவாளியால் தந்திரமாகப் பிடிக்கப்பட்டு யோனத்தான் கொலைசெய்யப்பட்டார். யோனத்தானுக்குப்பின் அவரது சகோதரர் சீமோன் மக்கபேயு தலைமைக்குருவாகவும், அவர்களுக்குக் குறிக்கப்பட்டிருந்த எல்லைப் பகுதியின் தலைவனாகவும் பொறுப்பேற்றார். எருசலேமைச்சுற்றி யோனத்தான் கட்ட ஆரம்பித்த கோட்டைச் சுவரினை இவர் முழுமையாகக் கட்டி முடித்தார். அந்தியோக்கிய அரசு அவருக்கு ஒன்றன்பின் ஒன்றாகச் சலுகைகளை வழங்கியது. எருசலேமிலுள்ள சிரியர்களின் படைமையத்தைக் கைப்பற்றிடவேண்டும் என்ற அவரது ஒரே எண்ணம் நிறைவு பெறுகின்றது. இதுவே அவரது இறுதி வெற்றியாகும் (1 மக் 13:33-52). மக்கபேயர்களின் இரத்தமானது வீணாகச் சிந்தப்படவில்லை என்பதை மத்தத்தியாவின் கடைசி மகன் நிரூபித்துக் காண்பித்துவிட்டார்.

3. கசமோனியர்களின் ஆட்சி (142-63)

அ. சீமோன் (141-135):- கி.மு. 141-இல் சீமோன் தலைவராக இருக்கும்படியும், அவரது வழிவருபவர்கள் இனிமேல் தலைவர்களாக இருக்கும் உரிமையைக் கொண்டிருப்பார்கள் என்றும் மக்களால் உறுதி செய்யப்பட்டது (1 மக் 14:41-49). இந்தத் தீர்மானங்களெல்லாம் பலகைகளில் எழுதப்பட்டு ஆலயத்தில் வைக்கப்பட்டன. புதுயுகம் ஆரம்பித்தது. நாணயங்கள் புதிதாக வெளியிடப்பட்டன. இந்த அமைதியின் காலமானது யூதேயாவின் வளமையைப் பெருக்குவதற்கும், ஆளும் திறமையை வளர்ப்பதற்கும் குருக்களின் உறவை வலுப்படுத்துவதற்கும் பெரிதும் உதவியாக இருந்தது. இவர் நாடு கடத்தலுக்குப்பின் யூதர்களின் மிகச் சிறந்த அரசர் ஆவார். இவர் இலக்கியம், கலை வாணிபம் போன்றவைகளை வளர்த்தார். உரோமையரோடும் ஸ்பார்தர்களோடும் உடன்படிக்கை ஏற்பட்டது. இவரது ஆட்சிக்காலத்தில் முடிவில் யூதேயாவானது சிரிய அரசராகிய ஏழாவது அந்தியோக்களால் தாக்கப்பட்டது. சீமோனின் இரண்டு புதல்வர்களாகிய யூதா, யோவான் ஆகிய இருவராலும் மோதயின் என்ற இடத்திற்கு அருகில் சிரியத் தளபதி

தோற்கடிக்கப்பட்டார். பின் 135-இல் சீமோனின் மருமகனாகிய தோலமி என்பவர் அதிகாரத்தை அல்லது பதவியைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் தோக்கு என்ற இடத்தில் சீமோனையும், அவரது இரண்டு புதல்வர்களையும் முறியடித்தார். ஆனால் தோலமியின் கிளர்ச்சியானது எருசலேமை அடைவதற்குள், சீமோனின் புதல்வர்களில் ஒருவராகிய யோவான் என்பவர் தப்பிச்சென்று தன் தந்தை கொண்டிருந்த தலைவர் பொறுப்பையும், தலைமைக்குரு பதவியையும் தனதாக்கிக் கொண்டார். இவர்தான் இரிக்கானு என்று அழைக்கப்பட்டவர்.

ஆ. யோவான் இரிக்கானு (135-105):- இவர் சீமோனின் மகனாவார். இவர் தனது தந்தைக்குப்பின் யூதேயாவின் தலைவராகவும், தலைமைக்குருவாகவும் விளங்கினார். இவர் தனது ஆட்சிப்பகுதியைக் கிழக்குப் பாலஸ்தினம், ஏதோம் வரையிலும் நீட்டினார். ஏதோமில் இதுமேயர்களை விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். இவர் சமாரியர்களைத் தாக்கி, கெரிசிம் மலையிலிருந்த சமாரியர்களின் ஆலயத்தைத் தரைமட்டமாக்கினார். பரிசேயர்கள் இவரது அரசியல் இலட்சியங்களையும், தன்னலப்போக்கினையும் கண்டு கொதித்தெழுந்தனர். இவரது ஆட்சிக்காலத்தில் கசமோனியர்களிடம் பரிசேயர் கொண்டிருந்த உறவு முறிவுபட்டது.

இ. முதலாம் அரித்தோபுல் (105-104):- இவர் யோவான் இரிக்கானுவின் மகனாவார். இரிக்கானு தனது அரச உரிமையைத் தனது மனைவிக்குக் கொடுத்திருந்ததால் தனது அம்மாவை அரித்தோபுல் சிறையில் வைத்தார். இவர் அவரது சகோதரர்களில் அந்திக்கோனுவைத் தவிர மற்ற அனைவரையும் சிறையிலடைத்தார். பின் அந்திக்கோனுவைக் கொலை செய்தார். இவர்தான் 'அரசன்' என்ற அடைமொழியை ஏற்றுக்கொண்டார்.

ஈ. அலக்சாந்தர் யன்னாயு (யோனத்தான்) (104-76):- இவர் முதலாம் அரித்தோபுலின் சகோதரர் ஆவார். அரித்தோபுலின் விதவையான சலோமை அலக்சாந்திரா தன் கணவனின் சகோதரர்களை எல்லாம் விடுவித்தாள். இவர் யோனத்தான் என்ற பெயரை யன்னாயு என்ற கிரேக்கப் பெயராக்கி, அலக்சாந்தர் என்ற கிரேக்கப் பெயரையும் சேர்த்துக் கொண்டார். இவர் பண்டைக்காலத்தைச் சேர்ந்த தாவீதின் அரசப்பகுதிக்கு இணையாகத் தனது அரசப்பகுதியைப் பரந்து விரியச் செய்தார். இவர் பெலிஸ்தியா கிழக்குப் பாலஸ்தீனத்தின் பகுதிகள் வரைக்கும் தனது அரசை விரிவாக்கினார். பாலஸ்தீனத்தின் வடபகுதியைத் தனது அரசுடைமைப்பகுதியாக மாற்றும்போது நபத்தேய அரசனாகிய ஒபோதாத்தை எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது. இதில் தோல்வியடைந்தார். தன் சொந்த மக்களின் எதிர்ப்பைச் சந்திக்கவேண்டியிருந்தது. இவரை எதிர்த்த யூதர்கள் செலூக்கிய அரசராகிய மூன்றாம் தெமேத்திரியுவின் உதவியை நாடினார்கள். எனவே, தெமேத்திரியு யூதேயாவைத்தாக்கி அலக்சாந்தரைத் தோற்கடித்தார். ஆனால் யூதர்கள் தாங்கள் கொண்டிருந்த தேசப் பற்றால் அலக்சாந்தர் மீது அனுதாபம் கொண்டு தெமேத்திரியு, பின்வாங்க வேண்டிய நிலைவருமாறு தங்கள் ஆதரவை நிறுத்திவிட்டனர். பின் மூன்றாம் தெமேத்திரியுவுக்குப் பின்வந்த 12-ஆம் அந்தியோக்கு தியோனிசு பாலஸ்தீனத்தைத் தாக்கியதை அலக்சாந்தரால் தடுக்க இயலவில்லை. ஆனால் நபத்தேயர்களால் அந்தியோக்கு தோற்கடிக்கப்பட்டபின், மீண்டும் அலக்சாந்தர் பாலஸ்தீனப் பகுதிகளில் தனது வெற்றியைத் தொடர்ந்தார். அவருக்கும் பரிசேயர்களுக்குமிடையே இருந்த பகைமை வலுப்பெற்றுக் கொண்டே சென்றது. ஆனால் தான் அரசுரிமை வழங்கிய தனது மனைவியிடம் பரிசேயர்களுடன் ஒப்புரவாக இருக்க முயற்சி எடுக்கவேண்டும் என்று ஆலோசனை கூறியதாக யோசிப்பஸ் கூறுகின்றார்.

2. சலோமை (75-67):-

இவள் அலக்சாந்தரின் விதவை ஆவாள். இவர் தனது மூத்த மகனாகிய இரண்டாம் இரிக்கானுவைத் தலைமைக் குருவாக்கி

னாள். இளையமகன் இரண்டாம் அரித்தோபுலை, அவர் பேராசை கொண்டிருந்ததால், தன்னோடு வைத்துக் காத்து வந்தாள். இவளது இறப்பிற்குப்பின் இரிக்கானுவுக்கும் அரித்தோபுலுக்குமிடையே நிகழ்ந்த போரினால் இருவருமே பாம்பேயின் உதவியை நாடினார்கள். இறுதியில் அரித்தோபுல் உரோமையரின் சமரசத் தீர்ப்பினை ஏற்க மறுத்தார். கி.மு. 63-இல் பாம்பே எருசலேமைத் தாக்கி அதைக் கைப்பற்றினார். பாம்பேதான் கசமோனியர்களின் அரச மரபுக்கு முடிவுகட்டியவர். கசமோனியர்களால் வெற்றி கொள்ளப்பட்ட எல்லைப் பகுதிகள் பிரிக்கப்பட்டு சீரியா மாகாணத்தின் ஒருபகுதியாக யூதேயா ஆக்கப்பட்டது. இரண்டாம் அரித்தோபுல் உரோமைக்குச் சிறைக்கைதியாகக் கொண்டு செல்லப்பட்டார். இரண்டாம் இரிக்கானு தலைவ்ராகவும், தலைமைக்குருவாகவும் பொறுப்பேற்றார்.

இரண்டாம் இரிக்கானு அந்திப்பத்தாரின் பொம்மையாகவே விளங்கினார். அரித்தோபுல் உரோமையிலிருந்து தப்பிவந்த, தன் புதல்வர்களுடன் சேர்ந்து கிளர்ச்சி உண்டு பண்ணினார். யூதர்களின் நம்பிக்கையை வளர்த்து வந்தார். யூலியு சீசரால் விடுவிக்கப்பட்ட சிறிது காலத்திற்குள் கி.மு. 49-இல் கொலை செய்யப்பட்டார். அவரது உயிர் தப்பிய ஒரே புதல்வனான இரண்டாம் அந்திக்கோனு கி.பி. 40-இல் அரசனாகவும் தலைமைக்குருவாகவும் அறிக்கையிட்டுக் கொண்டார். ஆனால் உரோமையரின் ஆதரவு பெற்ற பெரிய ஏரோது, கி.மு. 37-இல் எருசலேமைக் கைப்பற்றி, அந்திக்கோனுவைக் கொலை செய்தார். ஆனால் இரண்டாம் இரிக்கானுவின் மகளும் எரோதின் மாமியுமான அலக்சாந்திரா, ஏரோது பெரிய குருவாக அனானேலை நியமித்திருந்ததை ஒதுக்கிவிடும்படி அந்தோனி, கிளியோப்பத்திரா ஆகியவர்களைக் கொண்டு கட்டாயப்படுத்தி, தனது மகனான மூன்றாம் அரித்தோபுலை நியமிக்கும்படிச் செய்தாள். ஆனால் மக்களிடையே பிரபல்யமான இந்தப் பதினேழு வயது அரித்தோபுலை நீரில் மூழ்கடித்துக்கொல்ல ஏரோது வழிவகுத்தார். இரண்டாம் இரிக்கானு (கி.மு.30) அலக்சாந்திரா (28), தனது மனைவி மரியம்னே (29) ஆகியோரைக் கொன்றதோடு, கசமோனியச் செல்வாக்கை முழுவதும் நீக்கும் நோக்கோடு கி.மு. 7-இல் மரியம்னேயின் எஞ்சிய புதல்வர்களான அலக்சாந்தர், அரித்தோபுல் ஆகியோரைக் குற்றம் சாட்டிக் கொலை செய்தார். கசமோனியர்களின் காலத்தில் தான் யூதசமயமும், யூதர்களின் நாடும் நல்ல வளர்ச்சி பெற்றது. சட்டங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளும், அதை ஆலயமுற்றங்களில் வாசித்துப் பொருள் புரிந்து கொள்ளும் பழக்கமும் வளர்ந்தன. இறைவாக்கு நூல்களின் மேல் அவர்கள் அதிகமான மதிப்புக் கொண்டிருந்தனர். மேலும் இறப்பிற்குப்பின் உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கை இவர்கள் காலத்தில்தான் தோன்றியது. காண்க. தனிப்பட்ட தலைவர்களின் பெயர்கள்; மக்கபேயர்கள் நூல்கள்.

கசயேல் (HAZAEL - இறைவன் பார்க்கிறார்)
அரசவையின் ஒரு சாதாரண ஊழியன். உரிமையில்லாது அரசைக் கைப்பற்றி, அசீரியர்களின் படையெடுப்பை எதிர்க்கும் அளவுக்கு, ஆற்றல்மிக்க அரசனாக விளங்கினார். இஸ்ராயேலுக்கும் யூதாவுக்கும் எதிரியாக விளங்கினார் (2 அர 13:3; ஆமோ 1:3-5).

இரண்டாம் பென் அதாது என்ற அரசனால் அவரது நோய்பற்றி எலிசாவிடமிருந்து அறிந்துவரக் கசயேல் அனுப்பப்பட்டார் (2 அர 8:7-9). அப்போது இறைவாக்கினர் எலிசா, கசயேல் தமஸ்கு அரசைக் கைப்பற்றி, இஸ்ராயேலர்களுக்குத் தீமை செய்வார் என்று அறிவித்தார் (8:10-13). எலிசா தனக்குக் கட்டளையிட்டதாகக் கருதி, கசயேல் தமஸ்கு திரும்பி, அரசனைக் கொன்று அரசைக் கைப்பற்றினார் (8:15). விரைவில் இஸ்ராயேலின் அரசன் யோராமும், யூதாவின் அகசியாவும் சேர்ந்த கூட்டணிக்கு எதிராக இராமோத்து-கிலயாதில் கசயேல் போரிட்டு, காயப்பட்ட யோராமை இசிரியேலுக்குத் தப்பியோடச் செய்தார். அங்கு யோராம் அவரது தளபதி ஏகூவால் கொல்லப்பட்டார் (8:28-24; 9:14-26).

எந்தக் கூட்டணியின் உதவியுமின்றிக் கச யேல் கி.மு. 841-இல் அசீரியாவைச் சேர்ந்த மூன்றாம் சால்மனேசரின் தாக்குதலை எதிர்த்து, தமஸ்குவில் தன் ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டார். கி.மு. 837-இல் சால் மனேசர் மத்திய சீரியாவில் பல அழிவுகளை உண்டாக்கினாலும், கசயேல் தமஸ்குவில் தனது ஆட்சியை இழந்துவிடவில்லை. இறு தியில் அசீரியர்கள் தமஸ்குவுக்கு எதிரான தங்கள் தாக்குதலைக் கைவிட்டனர். கசயேல் தனது கவனத்தைப் பாலஸ்தீனத்திற்குத் திருப்பி, யோர்தானுக்கு அப்பால் ஏகூவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைக் கைப்பற்றி னார். இதற்குப்பின் யோவகாசின் படை களை அழித்து, சீரியர்கள் பாலஸ்தீனத்தில் சுதந்தரமுடன் நடமாட வழி செய்தார் (13:4-7.22). பின்பு காத்தையும், பெலிஸ்தியாவில் உள்ள வியாபாரச்சாலையையும் கைப்பற்றி னார் (12:17). யூதாவின் அரசன் யோவாக, ஆலயத்திலிருந்தும் அரண்மனையிலிருந்தும் செல்வங்களைக் கப்பமாக அளித்ததால், எரு சலேமைத் தாக்காது கைவிட்டார்.

கசயேல் கி.மு. 798-இல் இறந்தார். அவரு டையமகன் மூன்றாம் பென்-அதாது ஆட் சிக்கு வந்தார் (2 அர 13:24). எட்டு நூற்றாண் டுகளுக்குப் பின் வந்த யோசிப்பஸ் தமஸ்கு வின் வளர்ச்சியில் கசயேலின் பங்கைப்பற் றிக் குறிப்பிடுகிறார். ''எங்கள் தலைவர் கசயேலுக்குச் செந்தமானது'' என்ற வாசகத் தைக் கொண்ட ஒரு தங்கப்படுக்கை அசிரிய மாகாணத் தலைநகரமான அதாத்து என்னும் இக்கால அரசுலான் தாஸ் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாம் அதாதநிராரியின் படையெடுப்பில் கொள் ளையடிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்ட தாக இருக்கலாம்.

கசர்-அத்தார் (HAZAR-ADDAR - வலிமை வாய்ந்த கிராமம்)

கானானின் தென் எல்லையில், ஏதோமை நோக்கி அமைந்த ஓர் இடமாகும் (எண் 34:4). காதேசு-பார்னேயாவுக்கும் அசிமோ னுக்கும் இடையில் குறிக்கப்படும் இந்த இடம், யூதாவின் தென் எல்லையில் அமைந் துள்ள கெசிரோனாகத் தெரிகிறது (யோசு 15:30). இது எங்கு இருந்தது என்று உறுதியா கக் கூறமுடியவில்லை. ஆயினும், காதேசு பார்னேயாவுக்கு வடமேற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து ஏல்குதெய் ராத்து என்ற இடம் சுட்டிக்காட்டப்படுகிறது.

கசர்-ஏனான் (HAZAR-ENAN - நீரூற்றுக்கிரா மம்)

எண் 34:7-10-இன்படி பாலஸ்தீனத்துக்கும் கமாத்துக்கும் இடையில் எல்லைப்பகுதி யில் அமைந்துள்ள ஒரு நகரம் (எச 27:16-17). தற்பொழுது கெர்மோன் மலை அடிவாரத் தில் உள்ள காதார் நகரத்தோடு அடையாளம் காட்டப்படுகிறது.

கசர்-கதா (HAZAR-GADDAH - நற்பேற்றின் கிராமம்)

யூதாவின் தென்பகுதியான நெகேபில், பேயேர்-செபாவுக்கருகில் கெசிமோன், மோலதா ஆகிய இரண்டு நகரங்களுக்கும் இடைப்பட்ட நகரமாகக் குறிப்பிடப்படுகி றது (யோசு 15:27). 'கதா' என்ற பகுதி இவ்விடத்தில் நற்பேற்றின் கடவுளான காது கடவுளுக்கு ஒரு புனித இடம் இருந்திருக்க லாம் என்று சுட்டுகிறது. இவ்விடம் இருந்த இடம் தெரியவில்லையானாலும், இராஸ் சுவெயிராவுக்குத் தென்மேற்கிலுள்ள கிர் பெத்து காசாவாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

கசர்-சூசா (HAZAR-SUSAH - குதிரைக் கிராமம்)

யூதாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள சிமியோனுக்குரிய நகரம். இந் நகரில் சாலமோன் எகிப்திலிருந்து இறக்கு மதி செய்த குதிரைகளை வைத்திருந்த சீரியர் களுக்கும், இத்தியர்களுக்கும் விற்பார் (1 அர 4:26; 9:19; 10:29; காண் குதிரை வீரர்கள் இருந்த நகரம்; 2 நாள் 8:6). பேயேர்-செபாவுக்குக் கிழக்கில் 32 கி.மீ. தொலை வில் உள்ள சபாலாத்து அபு-செசெயினாக இருக்கலாம்.

கசர்-சூசிம் (HAZAR-SUSIM)

கசர்-சூசாவின் மற்றொரு பெயர் (1 நாள் 4:31).

கசர்-சூவால் (HAZAR-SHAUAL - நரியின் கிராமம்)

யூதாவின் தென்பகுதியான நெகேபில் சிமியோனுக்குரிய ஒரு நகரம். இது எப்போதும் பேயேர்-செபாவுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது (யோசு 15:28; 19;3; 1 நாள் 4:28). யோசு 15:28-இல் யூதாவுக்குரிய பகுதியாகக் குறிக்கப்படுகிறது. இந்நகரம் அடிமைத்தனத்திற்குப் பின்பு, யூதர்களால் மீண்டும் குடியேற்றப்பட்டது (நெக 11:27). இப்பெயர் நரியைச் சின்னமாகக்கொண்ட கானானிய இனத்தவரால் குடியேற்றப்பட்டதாகும் இப்பகுதி என்று சுட்டுகிறது.

கசர்-மவேத்து (HAZAR-MAVETH - சாவின் கிராமம்)

சேமின் வழித்தோன்றலும் யோக்கிதானின் மகனும் ஆவார் (ஆதி 10:26; 1 நாள் 1:20). ஓர் இனத்தையும் குறிக்கலாம். நாடுகளின் பட்டியலில் இடப்பெயர்களின் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளது. இது, தென் அரேபியத் தீபகற்பத்தின் ஒரு மாவட்டமான கதிமவுத்து என்று அடையாளம் காட்டப்படுகிறது. இப்பழங்கால நாடும், அதன் தலைநகரான சப்வாவும், வாசனைப்பொருட்கள் வியாபாரத்தால் செல்வமிக்கதாகவும் வலிமை வாய்ந்ததாகவும் விளங்கியது.

கசாம் (GAZZAM - அழிப்பவன், ஒருவகைப் பறவை அல்லது பூச்சி)

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஆலய ஊழியர்களின் முன்னோர் அல்லது ஒரு குடும்பத்தலைவர் (எஸ் 2:48; நெக 7:51).

கசாயா (HAZAIAH - யாவே பார்க்கிறார்)

அடிமைத்தனத்திற்குப் பின் எருசலேமில் வாழ்ந்த மாசேயாவின் வழிவந்த யூதத்தலைவர் (நெக 11:5).

கசிதீம் (HASIDIM)

கடவுளின் இரக்கத்தைத் (கெசது) தம் வாழ்விலே கடைப்பிடிப்பவார்கள் 'கசித்' எனப்பட்டனர். 'கெசது' என்ற வார்த்தையானது உடன்படிக்கையோடு தொடர்பு உடையது. இந்த இரண்டு சொற்களுமே ஒரே கடமையைத்தான் குறிக்கிறது என்பது 'உடன்படிக்கையையும் இரக்கத்தையும் காக்கிறவர்' என்ற வாக்கியத்தின் மூலம் தெளிவாகின்றது (உப 7:9). உடன்படிக்கை என்பது சடங்குகளின் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது; ஆனால் 'இரக்கம்' (கெசது) என்ற பண்பு உடன்படிக்கையை வாழ்ந்து காட்டுவதில் வெளிப்படுகின்றது. பரந்த பொருளில் 'இரக்கம்' (கெசது) என்பது சமூக, அரசியல், பொருளாதாரக் காரியங்களில் ஈடுபட்டுள்ளவர்களின் அல்லது எதாவது ஒருவழியில் ஒன்றித்துள்ளவர்களின் இணைந்த பொறுப்புடைமையைக் குறிக்கிறது. சமூகத்தை ஒன்றிணைக்கும் பண்பு என்று சுருக்கமாகக் கூறலாம். இச்சொல்லானது லோத்தைக் காப்பாற்றிய வானதூதர்களுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றது (ஆதி 19:19). இப்பண்பானது மனைவி கணவனுக்கும், மகன் தந்தைக்கும், மருமகள் மாமியார்க்கும் காட்டும் பிரமாணிக்கமாகும் (ஆதி 20:13; 47:29; ரூத் 1:8); வேவு பார்ப்பவர்களுக்கு அளிக்கப்படும் சன்மானம் (நீதி 1:24), தாவீதுக்கும் யோனத்தானுக்கும் இடையே இருந்த நட்புறவு (1 சாமு 20:8; 2 சாமு 9:1), மக்கள் அரசனுக்குக் காட்டும் பிரமாணிக்கம் (2 சாமு 3:8; 2 நாள் 24:22), வெற்றிபெற்றவன் தோல்வியுற்றவனுக்குக் காட்டும் இரக்கம் (1 அர 20:31), நல்ல மனைவியும், தாயும் தன் குடும்பத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கும் உயர்லட்சியங்கள் (பழ 3:20) ஆகிய அனைத்துச் செயல்களும் 'கெசது' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. இச்சொல்லை மொழி பெயர்ப்பது கடினம். இச்சொல் 'இரக்கம்', 'அன்பு', 'அன்பிரக்கம்' என்று பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிரமாணிக்கம் அல்லது 'பற்றுறுதி' என்பதுதான் 'கெசது' என்ற சொல்லின் அடிப்படையான பொருளாகத் தோன்றுகிறது. மனித உறவுகளைக் குறிக்கச் சிலமொழி

பெயர்ப்புகள் இச்சொல்லினைப் பயன் படுத்தியிருக்கின்றன (1 சாமு 20:15; 2 சாமு 2:5; 3:8; 16:17; 1 அர 2:7; சங் 101:1; பழ 3:3; 14:22; 16:6; 19:22; 20:6.8; யோனா 2:8).

'கெசது' என்ற சொல்லானது நல்ல வாழ்க் கையில் காண்பிக்கப்பட்ட பற்றுறுதியினை உணர்த்தும் நல்ல செயல்களைக் குறிக்கக் 'கசிதீம்' என்று பன்மையில் பயன்படுத்தப் பட்டுள்ளது (2 நாள் 32:32; 35:26; நெக 13:14). இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பினைக் குறிக்கும் வகையில் கெசது என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடத்தில் எல்லாம் சில மொழிபெயர்ப்புக் கள் 'நிலையான அன்பு' என்ற சொல்லி னைப் பயன்படுத்தியிருக்கின்றன. யோபு 37:13-இல் கெசது என்ற சொல்லானது 'அன்பு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கெசது என்ற பண்பினைக் கொண்டிருக் கும் மனிதர் 'கசிதி' என்று அழைக்கப்படு கின்றார் (பழ 11:17; ஏச 57:1). பொதுவாகக் 'கசிதி' என்ற சொல்லானது சங் 145:17; எரே 3:12 ஆகிய இரண்டு இடங்களைத்தவிர மற்ற இடங்களிலெல்லாம் மனிதனைக் குறிப்பதற் குத்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச் சொல்லானது இறைவனைக் குறிக்கப் பழைய ஏற்பாட்டிலோ, தால்மூதிலோ, பிற் காலத்தைய யூத இலக்கியங்களிலோ பயன் படுத்தப்படவில்லை. விசுவாசிகளின் சமூகத் தில் மனிதன் கடவுள்மட்டில் கொண்டிருக் கும் பற்றுறுதியைக் குறிக்க இச் சொல் பயன்படுத்தப்பட்டது. சில மொழிபெயர்ப் புகள் கசிதீம் என்பதைப் 'புனிதர்கள்' என்று மொழிபெயர்த்திருக்கின்றன (சங் 16:3; 30:4; 31:23; 37:28; 79:2; 85:8; 97:10; 116:15; 132:9.16; 145:10; 148:14; பழ 2:8).

'ஆண்டவரின் புனிதர்கள் ' (சங் 85:8; 148:14; 149:1) என்று இஸ்ராயேல் மக்கள் அனைவரையும் சேர்த்துக் குறிப்பிட இவ் வார்த்தையானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

கசிதேயர் (HASIDEANS - பக்தியுள்ளவர், புனிதர்)

மக்கபேயர் காலத்தில் சட்டத்திற்காகத் தங்களையே அர்ப்பணித்துக்கொண்ட யூதக் கூட்டம் (1 மக் 2:42). ''போரை நீடிக்கச்செய் கின்றார்கள், கலகம் மூட்டுகின்றார்கள், நாட் டின் அமைதியைக் குலைக்கின்றார்கள்'' என்று ஆல்கிமு என்பவரால் குற்றம் சாட்டப் பட்டவர்கள் (2 மக் 14:6). இந்த யூதக் கூட்டம் யோசிப்பஸ் என்பவரால் குறிப்பிடப் படவில்லை. இப்பெயர் இராபிகளின் நூல்களில் அடிக்கடி குறிப்பிடப்பட்டாலும் இவர்களைத்தாம் குறிப்பிடுகின்றார்களா என்பது தெரியவில்லை. இக்கூட்டம் சட்டத் திற்கு அர்ப்பணித்துக் கொண்டதால், இவர் களிலிருந்து உருவானவர்களே பரிசேயர்கள் என்பது விவிலிய வல்லுநர்களின் நம் பிக்கை. கும்ரான் கூட்டத்தினருக்கும், கசி தேயர்களுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும்.

கசிபோ (CHASPHO)

கிலயாது நாட்டில் அமைந்த ஒரு நகரம். யூதா இந்நகரைப் பிடித்து அங்குச் சீரியர்க ளால் சிறைபடுத்தப்பட்டிருந்த யூதர்களை விடுவித்தார். இது கசிப்பின் என்ற இடமாக இருக்கலாம். ஆகவே இது கலிலேயாக் கடலின் கிழக்கே அமைந்துள்ள கிசிபின் நகரமாக அல்லது யார்முக்கு ஆற்றின் கரை யோரம் உள்ள ஏல்-முசேரிபா நகரமாக இருக்கலாம் என்பது பலர் கருத்து.

கசிப்பின் (CASPIN)

பாலங்களாலும், மதில்களாலும் சூழப் பட்டுப் பல இனத்தார் கலந்து வாழ்ந்துவந்த ஒரு வலிமையான நகரம். யூதா மக்கபேயு என்பவர் இந்நகரைத் தாக்கி ஏராளமான மக்களைக் கொன்றார் (1 மக் 12:13). இது 1 மக் 5:26.36-இல் வரும் கசிபோ என்னும் இடமாக இருக்கலாம். தற்போது இது கலி லேயக் கடலின் கிழக்கே 14 கி.மீ. தொலை வில் அமைந்துள்ள கிசிபின் என்னும் நகர மாக அல்லது கவுரான சமவெளியில் உள்ள ஏல்-முசேரிபா என்னும் நகரமாக இருக்க லாம் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

கசுத்தோர், பொல்லுக்சு (CASTOR, POLLUX)

காண்க. மிதுனம்.

கசுமோனா (HASHMONAH - *கொழுத்த, பருத்த)*

சீனாய் பாலைவனத்திலிருந்து இஸ்ராயேல் நாட்டிற்குச் செல்லும் வழியில் உள்ள ஒரு தங்கும் இடம் (எண் 33:29-30). யூசேபியு, காதேசு-பார்னேயாவின் சுற்றுப்புறத்திலுள்ள அசெமோன் (விவிலிய அசிமோன்) தான் இந்த இடம் என்று அடையாளம் காட்டுகிறார். அறிஞர் சிலர், காதேசு-பார்னேயாவுக்கு வடமேற்கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள அயின் ஏல்-கெசெமேயின் அருகிலுள்ள புதைபொருள் சிதைவுகள்தான் கசுமோனா என்று கூறுவர்.

கசுரா (HASRAH - *ஏழ்மையான)*

1. கார்காசு என்ற பெயரின் நாளாகம வடிவம்.

2. சல்லூமின் தாத்தா (2 நாள் 34:22; 2 அர 22:14).

கசுலுகிம் (CASLUHIM)

ஆதி 10:14; 1 நாள் 1:12-இல் இனவிவரிப்பில் வரும் அடையாளம் காணமுடியாத தோற்றமுடைய இப்பெயர், காமின் மகனான மிசுராயிம் சந்ததியினரையும் (எகிப்தியர்கள்) பெலிஸ்தியர்களின் முன்னோரையும் குறிக்கிறது. விவிலியத்தில் இப்பெயருக்குமுன் இலீதியர், அனாமியர், இலாகாபியர் நெப்துகிமியர், பத்துருசியர் ஆகிய பெயர்களும் பின்னால் கப்பதோரியர் என்ற பெயரும் வருகின்றன. இவர்கள் நைல் கழிமுகப்பகுதிக்குக் கிழக்கில் கசியுமலைக்கு அருகில் வாழ்ந்து வந்த மக்களோடு தொடர்புடையவர்கள் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

கசூபா (HASUPHA - *வேகமான)*

அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிவந்த ஆலய ஊழியர் குடும்பங்களில் ஒன்றின் முன்னோர்கள் (எஸ் 2:43; நெக 7:46).

கசூபு (HASSHUB - *கருத்தில்கொண்ட)*

1. அடிமைத்தனத்திற்குப்பின் எருசலேமில் குடிபுகுந்த மெராரி என்ற லேவிய வம்சத்தைச் சேர்ந்தவர். செமாயா என்பவனின் தந்தை (1 நாள் 9:14; நெக 11:15).

2. எருசலேம் மதிலைத் திரும்பக் கட்டுவதற்கு நெகமியாவின் காலத்தில் இரண்டு அலுவலைப் பெற்ற ஒரே ஆள் அல்லது ஒரே பெயரைத்தாங்கிய இரண்டு ஆட்கள் (நெக 3;11.23). ஒரே ஆள் என்றால் பகாத்து-மோவாபு என்பவரின் மகன் (3:11).

3. எருசலேம் மதில்களைத் திரும்பக்கட்ட உதவியர்களுள் ஒருவர் (நெக 3:23). இவர் அல்லது 2-இல் குறிக்கப்பட்டவர் நெகமியாவின் தலைமையில் எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பம் இட்டார் (நெக 10:23).

கசேசு (GAZEZ - *மயிர் கத்தரிப்போர்)*

1. கெசிரோனின் பேரன்; ஏப்பா என்ற வைப்பாட்டி வழியாகக் காலேபுக்குப் பிறந்த மகன். ஆரானுடைய சகோதரனாகவும் மகனாகவும் இரண்டுமுறை இந்தப் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது (1 நாள் 2:46). ஆனால் இந்த வாக்கு தெளிவில்லாமல் உள்ளது. பின்னால் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

2. காலேபின் பேரனும் ஆரானின் மகனுமாவார் (1 நாள் 2:46) 1-இல் கூறப்பட்டிருப்பவர்க்கு உறவினர்.

கசேர் - அத்திக்கோன் (HAZER-HATTICON - *நடுமுற்றம், நடுக்கிராமம்)*

இலச்சிய இஸ்ராயேலின் வடகிழக்கு மூலையில் கவுரானின் எல்லையில் உள்ள ஒரு இடமாக இதை எசக்கியேல் குறிப்பிடுகிறார் (எச 47:16). இதன் படிவம் வினோதமாக இருப்பதால் ஒருவேளை கசர்-ஏனோனுக்குப் பதிலாக, கசேர்-அத்திக்கோன் என்று மறைநூல் வல்லுநர்கள் தவறாக எழுதியிருக்கலாம்.

கசையடி (SCOURGING, FLOGGING)

தடியால், குச்சியால் அடிப்பது. அடிமைகள், குழந்தைகள், ஞான இலக்கியங்களில் மூடர்கள் ஆகியோர்களுக்கு அளிக்கப்பட்ட

தண்டனையாகும். பயிற்சியிலும் பயன்பட்டது (யாத் 21:20; பழ 13:24:3; ஏச 9:4). இதைவிட வலிதருவது, தோலால் செய்யப்பட்ட கசையாகும் (1 அர 12:11.14). இதில் முள்சாட்டை மிகக் கொடியதாகும்.

உப 25:1-3-இல் 'அடித்தல்' சட்டப்பூர்வமான தண்டனையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பழமொழி ஆகமத்தின்படி முன்கருதலில்லாத சரியாகக் கணிக்காமல் செய்யப்படும் தீர்ப்புகள், கவலையற்ற பேச்சைப் போல், சண்டை சச்சரவுக்கு இட்டுச் செல்லும். யார் தவறாக நடந்து கொண்டார்களோ அவர்களுக்குத் தண்டனை கொடுத்துச் சண்டை தீர்த்து வைக்கப்படும். 'மதிகெட்டோரின் உடம்புகளுக்கு'த்தான் கசையடி என்பது அங்கீகரிக்கப்பட்டிருந்தது (பழ 19: 29; காண் 18:6; 20:3). சிறுவனைப் பிரம்பால் அடிப்பது அனுமதிக்கப்பட்டிருந்தது. அவனைத் திருத்த வேண்டுமென்பதே இதற்குக் காரணம் (பழ 23:13-14).

பழைய ஏற்பாட்டின் வேறொரு இடத்தில் ஒன்றுமறியாத அப்பாவிகூடச் சில நேரங்களில் கெட்ட தனி நபர்கள், தனிக்குழுக்களால் அடித்து நொறுக்கப்படலாம்' என்பதும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது (ஏச 52:13-53:12). மாசற்றவர்களின் துயரம் அடிக்கடி தீமை செய்பவர்களின் கரங்களிலிருந்தே வருகிறது என்பதுதான் சங்கீதங்களின் பொதுவான உட்கருத்தாக அமைந்திருக்கிறது (சங் 13:22; 28; 31:19-24; 35; 38; 41; 69; 71; 86; 102; 109).

நீதிமுறைத் தண்டனையாக உயர்ந்த அளவாக நாற்பது அடி அனுமதிக்கப்பட்டிருந்தது (உப 25:1-3). அளவுக்கு அதிகமாய்க் குற்றவாளியை இழிவுபடுத்துவதைத் தடுப்பதே இதற்குக் காரணமாகும். குற்றத்திற்கேற்றவாறு அடிகளின் எண்ணிக்கை வேறு பட்டது. ஆனால் எந்தக் குறிப்பிட்ட குற்றங்கள் கசையடியால் தண்டிக்கப்பட்டன என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை. குற்றவாளி படுக்கவைத்து நீதிபதியின் மேற்பார்வையில் அடிக்கப்பட்டார்.

பிற்காலத்தில் யூதச்சட்டம் விவிலியத் தடைகளுக்கு மாறாகக் கசையடியால் தண்டித்தது (மாற் 3:1-9). மிஸ்னாவின்படி, குற்றவாளி கசையடித் தண்டனைக்குரியவனா என்று விசாரித்தறிந்தபின், அவரது கைகள் ஒரு தூணில் கட்டப்பட்டன. அவரது நெஞ்சும் முதுகும் வெறுமையாக்கப்பட்டன. கன்றுகளின் தோலால் செய்யப்பட்ட கசையால் செபக் கூடத்தலைவர் அடித்தார். சிலசமயம் இக்கசை இரட்டைத் தோலுடையதாகவும் கழுதைத் தோல் சேர்ந்ததாகவும் இருக்கும் (உப 25:2-3; மத் 10:17). மூன்றில் ஒருபகுதி நெஞ்சிலும் மூன்றில் இருபகுதி முதுகிலும் அடிக்கப்பட்டன. மொத்தம் முப்பத்தொன்பது அடிகள் கொடுக்கப்பட்டன. இது சட்டம் அனுமதித்ததைவிட ஒன்று குறைவாகும். எண்ணிக்கையில் தவறு நேர்ந்துவிடக்கூடாது என்பதால் இவ்வாறு குறைக்கப்பட்டது.

உரோமையரின் கசையடிமுறை குற்றவாளியின் நிலையைப் பொருத்ததாகும். சுதந்தரக் குடிமகன் தடியால் அடிக்கப்படலாம் (1 கொரி 4:21; அ.ப. 16:22.35.38; 2 கொரி 11:25). அடிமைகளும் உரோமையர் அல்லாதவரும் கசையடி கொடுத்து விசாரிக்கப்படலாம் (அ.ப. 22:24-25). குற்றவாளி ஆடைகள் நீக்கப்பட்டு (16:22), ஒரு தூணில் வார்களால் கட்டப்பட்டு அடிக்கப்பட்டார். மரணத் தீர்ப்புக்குட்பட்ட அடிமைகளும், அந்நியரும், குற்றவாளிகளும் முடிச்சுள்ள வார்களால் அடிக்கப்பட்டனர். இந்த வார்களில் சிலசமயம் உலோகத் துண்டுகளும் எலும்புத் துண்டுகளும் கட்டப்பட்டிருக்கும்.

இயேசு தம் சீடர்களிடம், நீங்கள் நற்செய்தியைத் தொடர்ந்து போதித்தால் செபக் கூடங்களில் சாட்டைகளால் அடிபடுவீர்கள் என்று எச்சரிக்கின்றார் (மாற் 13:9). அ.ப. 5:40 இன்படி அப்போஸ்தலர்களைத் தலைமைச் சங்கத்தின் பிரதிநிதிகள் கசையால் அடித்து இனி இயேசுவின் பெயரைச் சொல்லிப் போதிக்கலாகாதபடி எச்சரிக்கை விடுத்தார்கள். கமாலியேல் சங்கத்தாரை இவர்கள் சாவுக்கு உள்ளாக்கவேண்டாம் என்று கேட்

டுக் கொண்டதற்குப் பிறகே கசையடி கொடுத்தார்கள். பவுலே பல கிறிஸ்தவர்களைச் சாட்டையால் அடித்துச் சிறையில் தள்ளியிருக்கிறார் (அ.ப. 22:19-20). மும்முறை தடியால் அடிபட்டிருக்கிறார் (2 கொரி 11:25; அ.ப. 16:11-24).

கசையின் கயிறு (LASH)

தண்டிக்கப் பயன்பட்ட ஒரு கருவி. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கசை விலங்குகள் மேல்தான் பயன்படுத்தப்பட்டது (பழ 26:3; நாகூ 3:2). மனிதர்களைத் தண்டிக்கக் குச்சிகள், தடிகள் பயன்பட்டன (யாத் 21:20; பழ 10:13; 26:3). மிஸ்னாவின்படி, உப. 25:2-3-இன்படி நாற்பது கசையடி கொடுக்கப்பட்டபோது, முள் முனையுள்ள கசை பயன்படுத்தப்பட்டது. 1 அர 12:11.14; 2 நாள் 10:11.14-இல் வரும் சாட்டையடி விலங்குகளுக்குக் கொடுக்கப்பட்டதாகும். இங்கு உருவகமாகப் பயன்படுகிறது.

நாற்பது அடிகொடுக்கும் யூதவழக்கு, எண்ணிக்கையில் தவறு வந்துவிடுமோ என்ற அச்சத்தில் முப்பத்தொன்பதாகக் குறைக்கப்பட்டது. இவ்வாறு, 2 கொரி 11:14-ஐ எழுதுவதற்கு முன்பே பவுல் ஐந்துமுறை அடிபட்டிருந்தார்.

உரோமை ஆட்சியில் உரோமையைச் சேராத மக்களுக்கே கசையடி வழங்கப்பட்டது (அ.ப.22:24-25). உரோமைக் குடிமக்கள் தடியால் அடிக்கப்பட்டனர். அதுவும் அவர்கள் குற்றம் சாற்றப்பட்டு எண்பிக்கப்பட்ட பின்புதான் கொடுக்கப்பட்டது. சிலசமயம் இக்கசைக் கயிறுகளில் உலோகத்துண்டுகள், கண்ணாடித்துண்டுகள் கட்டப்பட்டிருக்கும். இதனால் அடிபடுதல் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியதாகும். இயேசு, சிலுவையில் அறையப்படுமுன் கசையால் அடிக்கப்பட்டார் (மத் 27:26).

கச்சை (BELT)

அசீரிய போர் வீரர்களுடைய போர் அணிகளுள் (எ.ச. 23:15) ஒன்று. வீரர்களால் அணியப்பட்ட ஒரு கச்சை (நீதி 14:19; 2 சாமு 2:21). தோலோடு ஒட்டிக் கட்டப்பட்ட ஒரு கச்சையும் (சங் 109:19) உண்டு.

'கச்சையைத் தளர்த்திவிடுவது' என்ற சொற்றொடர் ஒரு போர்வீரனை வலிமையற்றவனாக்கி விடுவதைக் குறிக்கிறது (யோபு 12:21).

ஆதி 38:18-இல் வரும் இடைவார் மல்யுத்தக் கச்சையாகும் என்று பொருள் கூறப்படுகிறது. மத் 10:9; மாற் 6:8-இல் வரும் குறிப்புகள் பணம் வைத்திருக்கும் கச்சையைச் சுட்டுகின்றன.

கடந்துபோகும் விழாவும், புளியாத அப்ப விழாவும் (PASSOVER AND UNLEAVENED BREAD)

காண்க: பாஸ்கா விழாவும் புளியாத அப்ப விழாவும்.

கடப்பாறை (PICK)

இரும்பினால் செய்யப்பட்ட ஒரு கூர்மையான ஆயுதம். தாவீது தோல்வியுற்ற அம்மோனியர்களை இரம்பம், கடப்பாறை, கோடரி முதலியவற்றால் வேலை செய்யும் படியும், செங்கற்சூளையில் வேலை செய்யும் படியும் செய்தார் (2 சாமு 12:31; 1 நாள் 20:30). அம்மோனியர்கள் துன்புறுத்தப்பட்டார்களா அல்லது கடினமான வேலைகளைச் செய்யுமாறு பணிக்கப்பட்டார்களா என்பது பற்றிக் கருத்துவாதம் உண்டு.

கடமையுணர்வுள்ள ஊழியன் - உவமை (லூக் 12:35-38)

இறைமகன் இயேசுவின் வருகைக்காக விழிப்புடனும் கடமையுணர்வுடனும் அவர்தம் சீடர்கள் காத்திருக்க வேண்டும். தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்து உலகில் நல்வாழ்க்கை வாழ வேண்டும். இதற்காகத் தூய ஆவியானவர் சீடர்தம் உள்ளங்களிலே செயல்படுகின்றார். நம்முடைய அன்றாட வாழ்க்கையிலே துணையாக இருந்து நம்மை நற்செயல் புரியத் தூண்டுகிறார். மனுமகனின் வருகை எதிர்பாராத நாளில் இருக்கும் என்பதால், சீடர்களுக்கு விழிப்புணர்வு அவசியம்.

கடலின் அடிப்பரப்பு (CHANNELS OF THE SEA)

இது விவிலியத்தில் கடல் பாதாளங்களை யும் (2 சாமு 22:16) கடல் நீரோட்டங்களை யும் குறிக்கிறது (சங் 18:15). இந்தக் கடல் நீரோட்டங்கள்தான் பூமியைச் சுற்றியும், கீழ் உலகிற்கு மேல்புறத்திலும் இருக்கின்ற கடல் நீரை ஆற்றுப்படுத்தி, நெறிப்படுத்திச் சீரான முறையில் இருக்க வழிப்படுத்துகிறது.

கடலின்பெருநாகம், திமிங்கலம் (SEA MONSTER)

இது கடலின் பெருநாகம் என்றும் (ஆதி 1:21), நீரில் வாழும் பறவைநாகம் என்றும் (சங் 74:13-14) பலவாறு குறிப்பிடப்படுகின் றது. எபிரேய வழக்கில், இது கடலில் வாழும் ஒருபெரிய விலங்காகும். இது உண் மையாகவோ, புராணக் கருத்தாகவோ இருக் கலாம் (யோபு 7:12; ஆதி 1:21; சங் 148:7). இஸ்ராயேலர் கடலை ஒரு விநோதமான, ஆபத்தான இடமாகக் கருதினர். கடலையும் அதன் பெரிய விலங்குகளையும் யாவே அடக்கி ஆள்வார் என்ற கருத்து இஸ்ராயே லின் விசுவாசத்தின் ஒரு முக்கிய கருத்தா யிற்று (சங் 74:13-14; 89:9-10; 93:3-4; 104:6-9).

கடலூராஞ்சி (OSPREY)

ஆந்தையைப் போல் உடல் அமைப்புக் கொண்ட மீன் தின்னும் பறவை. இது அசுத்தமான பறவைகளில் ஒன்று (லேவி 11:13; உப 14:12).

கடல் (SEA)

1. இந்த வார்த்தை ஒன்றாகச் சேர்ந்த நீர்த் திரள்களையும் குறிப்பிட்ட தண்ணீர்ப் பகுதி களையும், செம்புக்கடல், கண்ணாடிக் கடல் போன்ற அமைப்புக்களையும் குறிக்கின்றது. குருக்கள் பாரம்பரியப்படி இறைவன் காய்ந்த தரையிலிருந்து தண்ணீரைப் பிரித்து அதைக் கடல் என்று அழைத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது (ஆதி 1:9-10). இறை வனின் வல்லமை கடல் மீதும் இருந்தது என்று விவிலியம் குறிப்பிடுகின்றது (யோசு 26;12; அ.ப. 14:15). அங்கு மீன்கள் வாழ்கின் றன (ஆதி 1:26.28). இதை வைத்துதான் திருவெளிப்பாட்டின் எழுத்தாளர்கள், உலக சக்திகளின் பயங்கரமான பெரிய மிருகங்கள் கடலிலிருந்து வெளி வருவதாக எழுதியிருக் கின்றார்கள் (தானி 7:3; திருவெளி 13:1). பாலஸ்தீன மக்கள் மத்தியதரைக்கடலில் கப் பல்வழியாகப் பயணம் செய்ததற்கு எந்தவித மான ஆதாரமும் இல்லை.

பாலஸ்தீன மக்கள் அடிப்படையில் கடற் பயண வாழ்வு வாழாதவர்களாக இருந்தா லும் தங்களுக்கு அருகிலுள்ள கடல்பிரதே சங்களையும், அவற்றின் வரலாறுகளையும் தெரிந்து வைத்திருந்தனர்; பொதுவாகப் பாலஸ்தீன மக்கள் அவைகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். மேற்கு எல்லை எப்பொழு துமே பெருங்கடல் அல்லது மேற்கத்தியக் கடல் என்று குறிக்கப்பட்டுள்ளது. இன்னும் சிறப்பாகக் ''கடல்'' என்றும் அழைக்கப்பட் டது (யோசு 16:8; 1 அர 5:9; அ.ப. 10:6). செங்கடல், சாக்கடல், கலிலேயாக் கடல் போன்றவைகளும் விவிலியத்தில் இடம் பெறுகின்றன. எபிரேயர்களின் விடுதலை வரலாற்றில் செங்கடல் இடம் பெறுகின்றது (யாத் 10;19; 15:4). கடல் அல்லது கடலின் ஒரு பகுதி ஏச 11:15-இல் எகிப்தியக் கடல் என்று அழைக்கப்பட்டுள்ளது. சாக்கடல் பொதுவாக உப்புக் கடல் என்று அழைக்கப் படுகின்றது (ஆதி 14:3; உப 34:12; உப 3:17; யோசு 3:16). இது ''அரேபியாக் கடல்'' என்றும் (உப 3:17; 4:49; யோசு 3:16) கிழக்கத்தியக் கடல் என்றும் (எச 47:18; யோவே 2:20; செக் 14:18) அழைக்கப்படுகி றது. கலிலேயாக் கடல்தான் பாலஸ்தீனத்தி லேயே மிகப்பெரிய சுத்தமான தண்ணீர் உள்ள ஏரியாகும். இயேசுவின் அப்போஸ்த லிக்கப் பணியிலே அடிக்கடி குறிப்பிடப்பட் டுள்ள இடமாகும் (மத் 4:18; 15:29; மாற் 7:31). இது புதிய ஏற்பாட்டிலே கெனசரேத்து என்றும் (லூக் 5:1), திபேரியாக்கடல் என் றும் (யோவா 6:1; 21:1) அழைக்கப்படுகின் றது; பழைய ஏற்பாட்டிலே கின்னரேத்துக் கடல் (எண் 34:11; யோசு 3:27) என்றும் கின்னரோத்துக் கடல் (யோசு 12:13) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. விவிலியத்தில் 'கடல்' என்று குறிப்பிட்டிருந்தால் அது பெரும்பாலும் மத்தியதரைக் கடலையே குறிக்கும். கலிலேயக் கடல், செங்கடல், கருங்கடல் என்பதும் இஸ்ராயேல் மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட கடல்கள்தாம். பொதுவாக இஸ்ராயேல் மக்கள் கடலோடு அதிகம் தொடர்பு கொண்டிருந்ததாகவோ, கடற்பயணத்தை விரும்பியதாகவோ தெரியவில்லை. யோனாவும் புனித பவுலும் கடற்பயணம் செய்ததாக விவிலியம் கூறுகிறது. கடலென்று குறிப்பிடும் பொழுதெல்லாம் கடலின் கொடூரத் தன்மையைத்தான் குறிப்பிடுகிறார்கள். இதற்குக் காரணம், பாலஸ்தீனத்தின் நிலவமைப்பும், கடற்கரைகள் இயற்கைத் துறைமுகமில்லாது அமைந்திருத்தலும்தான். மேலும் இக்கடல்களில் எழும் புயல்காற்றையும், மூன்று முறை தான் அனுபவித்த கப்பற்சிதைவையும், கடலில் பலமுறை பட்ட இடறல்களையும் புனித பவுல் குறிப்பிடுகின்றார் (2 கொரி 11:25 தொ). புயலடிக்கும்போது கப்பலோடு கடலில் மூழ்குபவரது துன்பத்தின் பயங்கரத்தையும், அவர்களை இறைவன் யாவே காப்பாற்றுவதையும் சங் 107:23-30 நன்கு சித்தரிக்கிறது. இறைவன் யாவேதான் கடலில் புயலை எழுப்புகிறார் என்பது இஸ்ராயேலரின் நம்பிக்கை (எரே 31-35). இந்தக் கருத்துக்களுக்கு மாறாக, சங் 104:25 கடலைச் சிறிது உயர்வாகக் கருதிப் பேசுகிறது: ''பரந்து விரிந்தது கடல்; பரபரப்பூட்டும் எழுச்சிமிக்கது கடல்; கப்பல்கள் மிதக்கும் கடல்; கடவுளின் கைவேலையே கடல்.'' புராண இதிகாசக் கதைகளும் இஸ்ராயேல் மக்கள் கடலின் மீது கொண்டிருந்த பயத்துக்குக் காரணமாக இருந்தது. அழிவின் அரக்கன் கடல் என்றும், அதைப் படைப்பு இறைவன் பணிய வைக்கிறார் என்றும் பழைய படைப்புக் கதைகள் கூறுகின்றன. பழைய ஏற்பாடும் பல இடங்களில் கடலை அரக்கன் என்றே குறிப்பிடுகிறது. படைப்புத் தேவனின் எதிரிகளில் ''யாம்'' என்னும் கடலும் ஒன்று என்று உகாரித்துப் புராணப் பாடல்கள் கூறுகின்றன.

3. இறைவனின் படைப்பு:- தரையிலிருந்த நீரெல்லாவற்றையும் ஒரே இடத்தில் ஒன்றாகச் சேர்த்தபோதுதான் கடல் உண்டானது என்று ஆதியாகமம் கூறுகிறது (ஆதி 1:9 தொ). இறைவன் யாவேதான் கடலைப் படைத்தார்; கடலும் அவரது பெரும்புகழைப் பறைசாற்றுகிறது என்று விவிலியம் கூறுகிறது (நெக 9:6; சங் 24:2; யோனா 1:9; திருவெளி 10:6). இறைவன் யாவேதான் கடல்நீரை முகந்தெடுத்து மாநிலத்தின்மேல் பொழிகிறவர் (ஆமோ 5:8). கடலலைகளை அடிபணிய வைக்கிறவர், கடலுக்கு எல்லையையும் அமைக்கிறவர் (பழ 8:29). அவரது கடுஞ்சினத்திற்குக் கடலும் காய்ந்துவிடும் (ஏச 50:2; நாகூ 1:4). யாத்திரையாகமத்தில் யாவே கடலை இரண்டாகப் பிரித்து இஸ்ராயேல் மக்களைக் காக்கின்றார் (யாத் 14:15). யாத்திரையாகமத்தில் காணும் காட்சியை, அதாவது கடலினின்று மீட்புப் பெறும் காட்சியை, இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தளையினின்று மீட்புப் பெறும்போது மீண்டும் காண்கிறோம் (ஏச 11:15). கடலின் எல்லா எல்லைகளிலும் இறைவன் யாவே இருக்கிறார் (சங் 139:9). கடலும் கடலிலுள்ளவைகளும் ஆண்டவரைப் புகழ அழைக்கப்படுகின்றன (சங் 148:7).

4. சமய அடையாளம்:- கடலைப்பற்றிய புராண இதிகாசக் கதைகளின் உட்கருத்தைப் பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் நன்மை விளைவிக்கும் விதத்தில் கையாளுகின்றனர். அரசராகமத்தில் வரும் ''வார்ப்புக் கடல்'' அல்லது ''வெண்கலக்கடல்'' என்ற வட்டமான தொட்டி ஆழ்கடலின் அடையாளமாக விளங்குகிறது (1 அர 7:23 தொ; 25:13). ஆனால் விவிலியம் இதனை வேறொரு முறையில் உபயோகிக்கிறது.

வெண்கலக் கடல் என்றால் ஒரு பெரிய வெண்கலத்தால் செய்யப்பட்ட தொட்டியைக் குறிக்கின்றது. இது எருசலேம் ஆலயத்தின் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்தது; 2 நாள் 4:6-இன்படி இது ஒரு தண்ணீர்ச் சேமிப்பு இடமாகும். குருக்கள் இதைத் தங்களுடைய கழுவும் சடங்கில் பயன்படுத்தினர். இது வெண்கலக்கடல் என்று அழைக்கப்பட்டதோடு (2 அர 25:13; 1 நாள் 18:8)

வார்ப்புக்கடல் என்றும் (1 அர 7:23; 2 நாள் 4:2), அல்லது வெறுமனே ''கடல்'' என்றும் (1 அர 7:24; 2 அர 16:17) அழைக்கப்பட்டது. ஆழியின் தண்ணீர் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அடையாளமாக உள்ளது (சங் 69:3). ஏனென்றால் அதன் அடிப்பாகம் பாதாளத்தின் அருகில் உள்ளது என்ற கருத்து, பரவலாக நிலவி வந்தது (யோனா 2:6 தொ). தீமையின் விளைவான அழுகிய அருவருப்பான நாற்றம், சீர்குலைந்த கொடிய தாக்குதல்கள் போன்றவை கடலில் மிதந்து வருகின்றன. அந்தக் கொடிய சக்திகளை இறைவன் யாவே வெல்ல வேண்டும்; அப்போதுதான் அவர் வெற்றி வாகை சூடுவார் என்பதன் அடையாளமாக அது இருக்கிறது.

இந்தக் காப்பியத்தன்மையுடைய உருவகமனைத்தும் மூன்று கருத்துக்களை உணர்த்துகின்றன. முதலாவது, படைப்பின் எதிரிகளோடு சண்டையிட்டு, வெற்றி பெறுவதன் அடையாளமாக இறைவனது படைப்பின் செயல் அமைகிறது எனப் படைப்புப் பாக்கள் எடுத்துரைக்கின்றன (ஏச 51:9; யோபு 7:12; 38:8-11). இரண்டாவதாக, இந்த உருவகங்களை, அல்லது வருணனைகளைச் சரித்திர நிகழ்ச்சியென்றும் கொள்கின்றனர். எ.கா. செங்கடலை இரண்டாகப் பிரித்து இஸ்ராயேல் மக்களைக் காத்தது (யாத் 14-15; சங் 77:17-20; 114:3-5); ஆழ்கடலின் அரக்கனை வென்றதாகக் கருதப்பட்டது (ஏச 51:10). இதுபற்றிக் கடலின் அமைதியற்ற நிலை, கடவுள் நம்பிக்கையற்ற நாடுகளில் கடவுளுக்கு எதிராக எழும் கலகத்தோடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது (ஏச 5:30; 17:12). கடைசியாக (மூன்றாவதாக) ஆழியினின்று கொடிய மிருகங்கள் வரும் (தானி 7:2-7). அவைகளைப் படைப்பின் இறைவன் பணியச் செய்து உலகில் அமைதி நிலவச் செய்வார் (சங் 65:8; 89:10; 93:3 தொ).

5. கிறிஸ்துவும் கடலும்:- புதிய ஏற்பாட்டிலும் கடலைச் சமயக்கண்கொண்டு நோக்கும் முறை காணப்படுகிறது. இது நற்செய்தியில் கண்கூடாக அமைகிறது. கடல் ஒரு சாத்தானின் இடம் என்று கருதப்படுவதால் பேய்பிடித்த பன்றிகளெல்லாம் கடலில் புகுந்து இறக்கின்றன (மாற் 5:13). தமது தெய்வீகத் தன்மையைக் காண்பிப்பதற்காகக் கடலின் மீது இயேசு நடக்கிறார் (மாற் 6:47 தொ; யோவா 6:19 தொ). கடற்காற்றையும், அலையையும் கண்டித்து அடிபணிய வைக்கிறார் (மத் 8:23-27; மாற் 4:35-41; லூ 8:22-25). புராண இதிகாசங்களை அறிந்ததினாலோ என்னவோ, திருவெளிப்பாட்டின் ஆசிரியர் கடலைப் புதிய வானம், புதிய பூமியிலிருந்து விலக்கி வைக்கிறார் (திருவெளி 21:1). அமைதி நிலவும், ஆண்டவன் ஆட்சியிருக்கும் இடத்தில் பகையை விளைவிக்கும் எதற்கும் இடங்கிடையாது என்பது ஆசிரியரின் கருத்து.

கடற்கரை (SEA COAST)

மத்தியதரைக்கடலை ஒட்டிய ஒரு நாட்டின் (ஏச 23:2) அல்லது தீவின் (எரே 2:10; 47:4) கடல் ஓரமாகும். கடற்கரைநாடு, தூரத்திலுள்ள (புற இனத்தாரின்) நாட்டைக் குறிக்கிறது (ஏச 40-66; எரே 31:10; எச 26:15). பாலஸ்தீனத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதிகளில் முதலில் கானானியர்களும் (உப 1:7), பின்னர்ப் பெலிஸ்தியர்களும் (எச 25:16), அதையடுத்துப் பெனிக்கியர்களும் (லூக் 6:17) குடியேறினர்.

கடற்காளான் (SPONGE)

கடற்பாசி, கடற்பஞ்சு, உறிஞ்சும் இயல்புள்ள பஞ்சு; நுண் துளை நிறைந்த மென்மையான பொருள், நீண்டு சுருங்குந் தன்மையுள்ள பொருள்.

கடற்காளான் நிறைந்த உள்துளைகளை உடையதால் உறிஞ்சும் தன்மையுள்ள பொருள். ஆகையால் தவறிச் சிதறிய திரவங்களைச் சேகரிக்கப் பயன்படுத்தப்பட்டது...

புதிய ஏற்பாட்டில் கடற்காளான் மூன்று நற்செய்திகளில் இடம் பெறுகின்றது (மத் 27:48; மாற் 15:36; யோவா 19:29). சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவுக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தது இத்தகைய கடற்காளானைக் கொண்டுதான்.

கடன், கடன்பட்டவன் (DEBT, DEBTOR)

பாலஸ்தீனத்தில் கடன் கொடுப்பது, வாங்குவது பற்றி உள்ள விதிமுறைகளையும், ஒழுங்குகளையும், விவிலியத்தில் உள்ள பழமொழிகளிலிருந்தும், ஐந்நூலில் உள்ள சட்டங்களிலிருந்தும், நாம் தெரிந்து கொள்ளலாம்.

1. இரவல் வாங்குவதே கடனுக்குக் காரணம்:-

செமித்திய மக்கள் கடனுக்கு வட்டி வாங்கி வந்தனர். இந்தப் பழக்கமானது ஐந்நூலிலே கண்டிக்கப்பட்டுள்ளது. தன்னோடு வாழ்கிறவனிடமிருந்து வட்டி வாங்குதல் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது (யாத் 22:25; லேவி 25:36-37; உப 23:19-20). ஆனால் இந்த விதியை மீறி இஸ்ராயேல் மக்கள் வட்டி வாங்கினர். கடன்பட்டவன் மிகவும் மோசமான நிலையில் இருந்தான். எனவே எசக்கியேலும், நெகமியாவும் வட்டி வாங்குவதை விட்டு விட்டு மக்கள் சட்டத்தை ஒழுங்காக அனுசரிக்க வேண்டும் எனக் கூறுகின்றனர் (எச 18:8.13.17; 22:12; நெக 5:6-13). பழமொழி ஆகம ஆசிரியர் வட்டியால் சேகரிக்கப்பட்ட பணம் நிலையற்றது. அது உடைமையாளனுக்கும் காலப்போக்கில் பயன் படாது என்கிறார் (பழ 28:8). இஸ்ராயேலர் வட்டி வாங்க அனுமதிக்கப்படவில்லையாதலால் அவர்கள் வட்டியை முதலில் இருந்தே பிடித்துக்கொள்வார்கள். அதாவது ஒருவன் 40 செக்கேல் கடன் வாங்கினால், வட்டியோடு சேர்த்து 60 செக்கேல் என எழுதிக் கொள்வார்கள். இதில் 20 செக்கேல் மறைமுகமாக வட்டியாகப் பெறப்படுகிறது.

2. அடகுப்பொருள்:-

கடன் கொடுப்பவர், தான் கொடுத்த கடனைத் திரும்பப்பெற உத்தரவாதமாக ஏதாவது பொருளைப் பெற்றுக் கொள்வது மேற்கு ஆசியாவிலும், இஸ்ராயேலிலும் இருந்த பழக்கம். உப 24:10-11 இன்படி கடன் கொடுப்பவன் அடகுப்பொருளை வாங்கக் கடனாளியின் வீட்டிற்குள் நுழையக் கூடாது. கடன் வாங்குபவனே வாசலில் வந்து, சாட்சிகள் முன்னிலையில் அதைத் தரக் கடன் கொடுப்பவன் அதைப்பெற வேண்டும். அன்றாட வாழ்க்கையில் விற்க முடியாத பொருட்கள் அடகுப் பொருளாக வாங்கப்படமாட்டாது (உப 24:6). ஈடாக வாங்கப்பட்ட மேலாடை சூரியன் மறையுமுன் திருப்பித்தரப்படவேண்டும் (யாத் 22:26-27; உப 24:12-13). மேலும் அடகாக மகனையோ, மகளையோ வைப்பது இஸ்ராயேலர் வழக்கம். சட்டத்திலே கண்டிக்கப்பட்ட இப்பழக்கத்தை மக்கள் விட மனமில்லாதவராய் இருந்தனர். நெகமியாக் காலத்தில் மக்கள் வயல்களையும் திராட்சைத் தோட்டங்களையும் ஒற்றி வைத்தபின் தங்கள் புதல்வர் புதல்வியரை அடகாகக் கொடுத்தனர். அவர்களின் உழைப்பு வட்டியாகக் கருதப்பட்டது. இது அடிமைத்தொழிலாகும் (நெக 5:2-3). மேலும் கடன் வாங்குபவன் ஒரு செல்வமிகுந்த மூன்றாம் ஆளையும் அடகாக வைக்கலாம். இவர் கடனைத் திரும்பக்கொடுப்பதில் பொறுப்புடையவராகிறார். பழமொழி ஆகமம், அன்னியனுக்குப் பிணையாகிறவன் துன்பத்தால் வருந்துவான் எனக் கூறுகிறது (பழ 6:1; 11:15; 17:18; 20:16; 22:26; 27:13).

3. புதிய ஏற்பாட்டில் கடனும் கடன்பட்டவனும்:-

இயேசுவும் தம்முடைய போதனையில் கடன், அடகுப்பொருள் போன்றவற்றைக் குறிப்பிட்ட கருத்தைக் கூறப் பயன்படுத்தியுள்ளார். கெட்ட ஊழியன் உவமையிலே (மத் 18:23-35) அவன் தன்னிடம் கடன்பட்ட உடனூழியனைச் சிறையில் அடைக்கிறான் (மத் 5:25-26; லூக் 12:58-59). இந்தப் பழக்கம் கிரேக்கர், உரோமையர் பழக்கம். இப்படிச் சிறையில் அடைப்பது, அவனிடமிருந்து எப்படியாவது கடன் கொடுத்தபணத்தைத் திரும்பப் பெறவேயாகும். மேலும் இந்தக் கடன், ஈடு போன்ற சொற்கள் புதிய ஏற்பாட்டில் உருவகப்படுத்திப் பேசப்பட்டுள்ளன (மத் 6:12; லூக் 11:4; எபி 7:22). இவற்றை இஸ்ராயேலரின் மற்றும் யூதர்களின் வழக்கப் பின்னணியில் புரிந்து கொள்ளவேண்டும்.

கடன் கொடுத்தல் (LENDING)

மோசேயின் சட்டத்தில் ஒரு கடமை. ஏழைகளுக்கு உதவிடும் நோக்குடையதாகும் (உப 15:7-11). சக யூதர்களிடமிருந்து வட்டி பெறக்கூடாது. ஆனால் அந்நியர்களிடமிருந்து வட்டிபெறுவது அனுமதிக்கப்பட்டிருந்தது (யாத் 22:25; லேவி 25:35-37; உப 23:19-20). கடனுக்கு அடகுப்பொருள் பெறுவதுகட்டுப்படுத்தப்பட்டிருந்தது (யாத்22:26-27; உப 24:6.17). ஓய்வு ஆண்டில் எல்லாக்கடனும் தள்ளுபடி செய்யப்பட்டது (உப 15:1-6). ஆயினும் நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தில் இவ்வடிமைத்தன்மை வழக்கில் இருந்தது (நெக 5:1-5). உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருந்தால், ''நீ பலமக்களுக்கும் கடன் கொடுப்பாயேயன்றி எவனிடத்தும் கடன்வாங்கா'' நிலையை இஸ்ராயேலுக்கு அளித்து இறைவன் ஆசிர்வதிப்பார் (உப 15:6).

இந்தப் பழைய ஏற்பாட்டின் போதனையையும் கடந்து செல்லுகிறார் இயேசு. ஓய்வு ஆண்டின் தொடக்கத்திலே இருப்பது போலவே ஒருவன் நடந்து கொள்ளவேண்டும். முதலையோ வட்டியையோ எதிர்பார்க்கக் கூடாது (லூக் 6:35).

கடன் வாங்குதல், கொடுத்தல் (BORROW, LEND)

வாங்கிய பொருள் அல்லது அதற்குச் சமமான வேறொரு பொருள் திரும்பிக் கொடுக்கப்படும் என்ற எண்ணத்தில் வாங்கப்படும் கடனுதவி. கடன் வாங்கியவர்களுக்கு அடைமானப் பொருளின் மீது தற்காலிக உரிமை உண்டு. சில சமயம் கடன் கேட்பவரிடமிருந்து, அடகுப்பொருள் வாங்கப்படும் (உப 24:11.13; யாத் 22:7 தொ). பொதுவாகப் பணமே கடனாக வாங்கப்படும். இஸ்ராயேல் குலத்திற்குள் கடனுக்கு வட்டி வாங்கக்கூடாது (யாத் 22:25; லேவி25: 35). ஆனால் புறவினத்தாரிடமிருந்து வட்டி பெற்றுக் கொள்ளலாம் (உப 23:20). தகாவட்டிமுறை என்பது இஸ்ராயேல் ஒருவரிடமிருந்து அல்லது பிறரிடமிருந்து அளவுக்கு அதிகமாக வட்டி வாங்குவதே ஆகும். கடன் கொடுத்தலும், திருப்பிக் கொடுத்தலும் பிறவன்புச் செயல்களாகக் கருதப்பட்டன (சீரா 29:1-14). இயேசுகூட கடன் கொடுத்தலை ஊக்கப்படுத்துகிறார் (மத் 5:42; லூக் 6:34-35; 7:41தொ; பழ 19:17). எனினும் கடன் வாங்குபவன் மகிழ்ச்சியாக இருக்க முடியாது (பழ 22:7; மத் 18:23 தொ).

கடுகுச்செடி (MUSTARD)

கடுகுச்செடி என்பது ஒரு வருடப்பயிர். மிகவும் சிறிய விதைகளைக் கொண்டது. கடுகுச்செடி இயேசுவின் உவமை ஒன்றின் வாயிலாக விவிலியத்தில் நமக்கு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது (மத் 13:31; மாற் 4:31; லூக் 13:19). இக்கடுகு விதையின் வாயிலாக விசுவாசம் இருக்க வேண்டிய நிலையை விவரிக்கின்றார் (மத் 17:20; லூக் 17:6), இவ்வுவமையில் கடுகை விண்ணரசுக்கு ஒப்பிடுகின்றார்.

கடுகு விதையைவிட ஆர்கிட் என்ற மலர்ச் செடியின் விதை மிகவும் சிறப்பாக உள்ளது. கடுகு விரைவில் முளைத்துப் பலன் தரக்கூடியது; ஆனால் மரமாக வளருவதில்லை. பறவைகள் தங்கிக் கூடுகட்டும் இடமாக அமைந்திருப்பதில்லை. ''கடுகு விதைகளிலெல்லாம் மிகச் சிறியதாயினும், வளர்ந்து செடிகளில் எல்லாம் மிகப் பெரியதாகி வானத்துப் பறவைகள் வந்து அதன் கிளைகளில் தங்கக்கூடிய மரமாகும்'' (மத் 13:32) என்று கூறியிருப்பது மிகவும் சிறிய பறவைகளுக்கே. இதையே மறைமுகமாக, தானி 4:11-12.20-21-இல் கூறுவதைப் பார்க்கலாம்.

கடுகு விதை - உவமை

சிறிய கடுகு விதை பெரிய செடியாக வளர்ந்து வானத்துப் பறவைகளுக்கு இடம் அளிப்பதுபோல இறையரசும் இருக்கும். இயேசுவின் போதனையின் விளைவு பரந்து விரிந்த இறையரசாக இறுதியில் வளர்ச்சியடையும். இறையரசு வரக் காலந்தாழ்த்துகிறது என்பது இரண்டு கருத்தை வலியுறுத்துகிறது. முதலாவதாக, இறையரசு அரசியல் சம்பந்தப்பட்டது; வன்முறையால் நிறுவப் படப் போகிறது என்ற கருத்திற்கு எதிரானது.

இரண்டாவதாக, மனித முயற்சிகளுக்கு மேலாக இறைவன் இந்த அரசிற்காக வேலை செய்கிறார் என்பதை உணர்த்து கிறது (மத் 13:18-19; மாற் 4:30-32; லூக் 13:18-19).

கடைசி இடம் - உவமை

பரிசேயர் பலர் விருந்துண்ணக் கூடியிருந்த போது இயேசு இந்த உவமையைக் கூறி னார் (லூக் 14:7-11). இவர்களைப் பார்த்து இயேசு, தாழ்ச்சியைப் பற்றிப் போதிக்கி றார். கீழிடத்தைத் தேர்ந்தெடுப்பதால் ஏற்ப டும் நன்மைகளைப் பற்றி இயேசு விளக்குகி றார். பழமொழி ஆகமமும் இதே கருத்தைக் கூறுகிறது (பழ 25:6-7). மற்ற உவமைக ளைப்போல் அல்லாமல் இந்த உவமையின் கருத்தாகிய 'தாழ்ச்சி' வெளிப்படையாகத் தெரிகிறது. கடவுள் விருந்தை ஏற்பாடு செய் வதால் அவரே இருக்கைகளையும் அளிப் பார். இறையரசை அடையத் தாழ்ச்சி அவசிய மாதலால், அதிகத் தாழ்ச்சியுடையவன் முதலிடத்தைப் பெறுகிறான்.

கடைவீதி (BAZAAR)

வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்ட சாலை யின் ஒரு பகுதியாகும். பென்-அதாது தனது தந்தை சமாரியாவில் வைத்திருந்ததுபோல், ஆகாபு தமஸ்குவில் கடைவீதிகளை அமைத் துக் கொள்ள அனுமதி அளித்தார் (1 அர 20:34).

கட்சி (PARTY)

பரிசேயர் (அ.ப.15:5; 23:9; 26:5), சதுசேயர் (5:17), மற்றும் விருத்தசேதனம் செய்தோர் (அ.ப.11:2; கலா 2:12; தீத் 1:10) ஆகியோ ரைக் குறிக்கும் ஒரு சொல். இப்பொருளை உடைய எபிரேயச்சொல் புதுநெறி (அ.ப.24: 14), பிரிவினை (1 கொரி 11:19), மற்றும் தவறான கொள்கை (2 பேதுரு 2:1) என் றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

'கட்சி' சில நேரங்களில் குற்றச்சாட்டில் லாப் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. எ.கா.சதுசேயர் (அ.ப.5:17), மற்றும் பரிசே யர் (15:5; 26:5). ஆனால், பவுல்கட்சி மனப் பான்மையினை ஊனியல்பின் செயலாகக் கலா 5:20-இல் குறிப்பிடும்போது, அது ஒரு குற்றமாகக் கருதப்படுகின்றது.

விருத்தசேதனக் கட்சி என்பது, இயேசு வின் சகோதரராகக் கருதப்பட்ட யாக்கோ பைத் தலைவராகக் கொண்ட சில யூதக் கிறிஸ்தவர்களின் அமைப்பாகும். இந்த யாக் கோபுதான் பேதுரு புறஇனத்தாருடன் அமர்ந்து உணவு உண்டபொழுது யூத உண வுச் சட்டங்களை அவர் மீறினார் என்று குறைகூறியவர்.

கட்டளை (COMMANDMENT)

இது அதிகாரபூர்வமான ஒரு கட்டளை. இது பெரும்பாலும் இறைவனின் கட்டளை யைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. 'ஆண்டவரின் வாய்ச்சொற்படி' அல்லது 'ஆண்டவரின் கட்டளைப்படி' என்று மொழிபெயர்க்கப்படுகிறது (யாத் 17:1). இதற்குச் 'சொல்லப்பட்டது' என்ற பொரு ளும் கொள்ளப்படும்.

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டி லும் கட்டளை என்பது ஐந்நூலில் காணப் படும் பத்துக் கட்டளைகளைக் குறிக்கும். புதிய ஏற்பாட்டிலே இந்தக் கற்பனை அல் லது கட்டளைகள் இரண்டாகச் சுருக்கப்பட் டன. இயேசு இவைகளைச் சுருக்கமாக 2 கட்டளைகளில் அடக்கினார். அதாவது கட வுளையும் நம் அயலானையும் அன்பு செய் வது (மத் 22:35-40; மாற் 12:28; லூக் 10:25-28; உப 6:5; லேவி 19:18).

கட்டி எழுப்புதல் (BUILD)

தமக்கு வேண்டிய கட்டடங்களைத் தாமே அமைப்பதிலும் தங்களது வீடுகள், நகரங் கள், கோவில்கள் முதலியவவற்றைத் தாமே கட்டுவதிலும் ஈடுபட்டிருந்த மக்கள் இனம் ஒன்றைப் பற்றி நமக்கு எடுத்துரைக்கும் நூல் ஒன்றுதான் வேதாகமம். எனவே, கட்டடம் அமைத்தல், நினைவுச் சின்னங்கள் எழுப்பு தல் போன்ற கருத்துக்கள் இந்நூலில் சிறப்பி டம் பெறுகின்றன. பொருட்களை உருவாக் குவது என்பது மனிதனிடம் இயற்கையா

கவே உள்ள ஓர் உள்ளக்கிடக்கை. இம்மனித இயல்பை இறைவன் தமது மீட்புத்திட்டத்தின் அச்சாணிகளில் ஒன்றாக ஆக்கிக்கொள்கிறார்.

I. பழங்கால இஸ்ராயேல் மக்கள் உருவாதல்:-

1. ஒரு குடும்பம் உருவாகின்றது, ஒரு நினைவுச் சின்னம் எழுகிறது:-

''பனா'' என்ற எபிரேய வினைச்சொல்லின் முதல் பொருள் நாம் கண்கூடாகக் காணக்கூடிய நினைவுச் சின்னங்கள் எழுப்புதல் என்பதுதான். இந்த நினைவுச் சின்னங்கள் ஒரு பீடமாகவோ (ஆதி 8:20), ஒரு வீடாகவோ (33:17) ஒரு நகரமாகவோ (4:17) இருக்கலாம். இம்மாதிரி மனித முயற்சிகளை இறைவன் பொதுவாக வெறுத்து ஒதுக்குவதில்லை. ஆனால் இவை இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே பகைமையை ஏற்படுத்தக் காரணமாக இருக்குமானால் அவற்றை இறைவன் உடனே தண்டிக்கிறார் - எடுத்துக்காட்டாக, பாபேல் கோபுரம் (ஆதி 11:1-9). ஓர் அலுவலானது தவிர்க்க முடியாத தோல்வியிலிருந்து தவிர்க்கப்பட வேண்டுமானால் அது இறைவனின் முன்னிலையில் நடந்தேறுவது இன்றியமையாத தேவையாகும் (சங் 127:1). புறமதத்தார் எழுப்பும் கட்டடங்கள் இறைவனின் கண்களில் அரிய பெரிய காரியங்களாகப் படுவதில்லை. அவை எத்துணை எழில் மிக்கவையாக, உறுதியாகக் காணப்படினும் அவற்றைத் தாம் விரும்பும்போது இறைவன் அழிப்பார் (ஆமோ 3:13; செப் 2:4தொ; செக் 9:3).

ஒரு கட்டடம் அமைவதைப் போல, உருவாதலைப் போல, எழுதலைப்போல ஒரு குடும்பமும் அமைகிறது; உருவாகிறது; எழுகிறது. ஆதாமின் விலா எலும்பிலிருந்து இறைவன் ஏவாளை உருவாக்கினார் (ஆதி 2:22). தான் இவ்வுலகில் பெறும் பிள்ளைகள் வழியாக ஒருதாய் உருவாகின்றாள் (ஆதி 16 2: 30:3). ஆனால் குடும்பம் என்ற இக்கட்டடத்தைக் கட்டுபவர் இறைவனே (1 அர 17:28). ஆள், குடும்பம், குலம், மக்களினம் இவற்றை எல்லாம் நாம் ஒரு வீடு எனக் கருதுவோமானால், ஆளிலிருந்து குடும்பத்திற்கும், குடும்பத்திலிருந்து குலத்திற்கும், குலத்திலிருந்து மக்களினத்திற்கும் நாம் எளிதாகவும் இயற்கையாகவும் தாவிச் செல்லலாம். இங்கும் செயல்புரிபவர் இறைவன் தான். அவர்தாம் தாவீதின் அரச மரபை அமைத்தவர் (2 சாமு 7:11); அவர்தாம் இஸ்ராயேல் என்ற மக்களை அல்லது வீட்டைக் கட்டியவர் (எரே 12:16; 24:5; 31:4).

2. ஆக்கமும், அழித்தலும்:-

மனிதனின் கை செய்யும் வேலைகளை எல்லாம் இறைவன் ஆசிர்வதிப்பதில் (உப 14:29; 15:10) அவைகளுக்கு அவர் இறுதிப் பூச்சு அளித்து உறுதிப்படுத்துகிறார். அவரே அவற்றைக் ''கட்டி எழுப்புகிறார்;'' இறைவனை மனிதன் மறக்கும்போது அவருடைய துணையின்றிக் கட்டப்பட்ட எல்லாவற்றையும் அவர் அழிப்பார் (எரே 24:6; 42:10). ஆட்களின், அவர்கள் தங்குமிடங்களின், அவர்கள் வாழும் நகரங்களின், அவர்களது இனங்களின், அழிவு இறைவனின் தண்டனைக்குச் சாட்சியங்களாயிருக்கும். இந்த அழிவின் இறைவாக்கினரான எரேமியா ''பிடுங்கிப்பறிக்கவும், இடித்துத் தகர்க்கவும், அழித்து ஒழிக்கவும், கவிழ்த்து வீழ்த்தவும், கட்டி உயர்த்தவும், நட்டுவைக்கவும்'' அனுப்பப்பெறுகிறார் (எரே 1:10). இறைவன் நம்பிக்கைக்குரியவர்; கட்டுபவர். எனவே அவர் முற்றிலும், திரும்பக்கட்ட முடியாதவாறு எதையும் அழிப்பதில்லை. அழிக்கும் தன்மையுள்ள தமது கோபம் மடைபுரண்டு வரும்போதும் (ஏச 28:18; 30:28) அதை மனித மேன்மையை, சிறப்பை நோக்கித் திருப்பிவிடுகிறார் (2:11). இன்னும் அவர் ஆக்கப்பூர்வமாகத் தொடர்ந்து செயலாற்றுகிறார் (44:26; 58:12). விழுந்து கிடக்கும் தாவீதின் கூடாரம் மறுபடியும் கட்டி எழுப்பப்பெறும் (ஆமோ 9:11). மக்கள் நாடு கடத்தலிலிருந்து தம் சொந்த நாட்டிற்குத் திரும்பி வருவர்; அவர்களது நகரங்களை மீண்டும் அமைப்பர் (எரே 30:4, 18); எருசலேம் நகரும் அதிலுள்ள தேவாலயமும் மீண்டும் அமைக்கப்பெறும் (ஆகா 1:8;

செக் 6:13; எரே 31:38). அதாவது, சிதைந்து கிடக்கும் கட்டடங்கள் எல்லாம் திரும்பக் கட்டப் பெறுகின்றன. மக்கள் மீண்டும் தம் சொந்த நிலையைத் திரும்பப் பெறுகின்ற னர்; வீடுகள் எழுகின்றன, மக்கள் தொகை பெருகும் (ஏச 49:19-21; எரே 30:18தொ) என்று மேற்கூறிய வேதாகம வர்ணனை நமக்கு விளக்குகிறது.

II. புதிய அடித்தளம்:-

புதிய நினைவுச் சின்னமானதும், புதிய மக்களினமானதும் உண்மையாகவே புதிய தன்று. அது பழைய இஸ்ராயேல் மக்களின், அவர்களது நிறுவனங்களின் தொடர்ச்சி தான். ஆனால் இப்புதிய நிறுவனம் பழைய தைச் சார்ந்து, அதன்மேல் கட்டப்பட்டிருக்க வில்லை. அது இன்றியமையாத ஒரு மூலப் பொருள் ஒன்றின்மேல் அமைக்கப்பட்டிருக் கிறது. இஸ்ராயேல் மக்களிடையே இறைவ னால் கட்டப்பெற்ற எல்லாவற்றினது உச்சி யும் கொடு முடியுமாக இருக்கவேண்டும் என்று அவராலேயே நிர்ணயிக்கப்பெற்ற ஒரு பாறைதான் இம்மூலப் பொருள் (ஏச 28:16; செக் 4:7). ஆனால் இவ்வலுவல் ஒப்படைக்கப்பெற்ற வேலையாட்களோ இக்கல்லை ஒதுக்கித் தள்ளிவிட்டனர். ஏனெ னில், அது அவர்களுக்கு முட்டுக்கட்டை யாக இருக்கிறது (காண் மத் 21:41; சங் 118:22). இவ்வாறு ஒதுக்கித் தள்ளப்பெற்ற கல்லானது முதல்கட்ட அமைப்பு வேலை யில் வியப்புக்குரியதொரு சிறப்புத்தன்மை பெறுகிறது. எனவேதான், அதைப்புதிய நினைவுச் சின்னத்தின் அடிக்கல்லாக இறை வன் அமைத்ததன் மூலமாக (சங் 117:22) அவர்தம் முந்திய அலுவலை எல்லாம் மறு படியும் தொடங்கி முடிக்கிறார். வேலையாட் கள் தீய உள்ளத்தினராயிருப்பதால் ''காண் போர் வியக்கும் வேலை ஒன்றை'', நம்ப முடியாத தலை சிறந்த படைப்பு ஒன்றை இறைவன் தாமே செய்து முடிக்கிறார். விலக்கி ஒதுக்கப்பெற்ற கல் ''மூலைக்கல் லாய் அமைகிறது'' (1 பேதுரு 2:7). இம் மூலைக்கல்தான் இப்படைப்பிலேயே இருக் கக்கூடிய ஒரே அடித்தளமாகிற இயேசு கிறிஸ்து (1 கொரி 3:11).

எனவே, இயேசு கிறிஸ்துதான் புதிய தேவாலயம். இறைவாக்கினர் எரேமியா வைப்போல் (காண் எரே 7:12-15) இயேசு வும் இஸ்ராயேல் மக்களின் தனிப்பெருமை யாக விளங்கிய எழில் மிக்க நினைவுச் சின்னத்தின் அழிவைப்பற்றி இறைவாக்கு ரைக்கின்றார். ஏனெனில், அது ''கள்வர் குகையாகிவிட்டது'' (எரே 7:11; மத் 21:12). அதே வேளையில், மற்றொரு தேவால யத்தை அவர் மூன்று நாட்களில், அதாவது ஒருசில தினங்களில் எழுப்பிவிடுவதாகச் சவால் விடுகிறார். ''அவர் இங்குக் குறிப்பி டுவது அவரது உடலாகிய ஆலயத்தை''. இக்கட்டடத்தின் அமைப்பாளராக அமைப வர் கிறிஸ்து (யோவா 2:19-22).

III. கிறிஸ்துவின் உடல் உருப்பெறுதல்:-

1. எனது திருச்சபையை நான் கட்டுவேன்:-

இயேசுதான் மூலைக்கல், அவரே புதிய தேவாலயம். மூலைக்கல்லும் புதிய தேவாலய முமாகிய இக்கிறிஸ்து புதியதொரு நினை வுச் சின்னம் மட்டுமில்லை, அதைக் கட்டுப வரும் அவர்தான். இப்புதிய நினைவுச் சின் னம் அவரது கைவேலை; அவரது திருச்சபை (மத் 16:18). அதைக் கட்டுவதற்குத் தேவை யான பொருட்களை எல்லாம் தாமே தேர்ந் தெடுத்து, அவற்றை எல்லாம் அவையவை இருக்க வேண்டிய இடத்தில் இடுகிறார். இவ்வாறு அவர் பேதுருவை அதன் அடிக் கல்லாக நியமித்தார். இப்புதிய கட்டடத்தின் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் ஒருமைப்பாட் டையும் இணைப்பையும் அளிப்பவரும் அவர்தாம். தம் சொந்த உடலாகிய அன்பின் சின்னத்தை எழுப்புகிறவரும் அவர்தாம் (எபே 4:11-16).

2. கட்டடம் அமைப்போர்:-

கிறிஸ்துவின் உடலாகிய கட்டடத்தின் அடிக்கல்லாகக் கிறிஸ்துவினாலே நியமிக் கப்பட்டோர் சிலருள்ளனர். இவர்களைத் தான் நாம் அப்போஸ்தலர்கள் என அழைக்கி றோம் (எபே 2:20). இவர்கள் நிறுவின இறைமக்களின் குழுக்கள் அதாவது திருச் சபைகள் பல. இவைகளுக்கெல்லாம் அடிக்

கற்களாகவும் அடிக்கல்லிட்டவர்களாகவும் திகழ்பவர்கள் இந்த அப்போஸ்தலர்கள். எவ்வாறு ''கட்டி எழுப்புதல்'' எரேமியா இறைவாக்கினரது பணியின் ஒரு பகுதியாக அமைந்திருந்ததோ (எரே 1:10; 24:6), அது போல ''ஞான வளர்ச்சியானது'' பவுலின் அப்போஸ்தலிக்க அலுவலின் சிறப்பியல்பாக அமைகிறது (2 கொரி 10:8; 12:19; 13:10). ''இறைவனோடு உழைப்பவர்'' என்ற முறையில் நடுவதும் (1 கொரி 3:9.6), இயேசு கிறிஸ்து என்ற ''அடித்தளத்தை இடுவதும்'' (3:10தொ) அப்போஸ்தலர்களின் கடமையாகும்.

3. உருப்பெறும் உடல்:-

கிறிஸ்து தலைவராக நின்று நடத்திச் செல்ல முழு உடலும் அதன் ஒவ்வொரு உறுப்பும் தாமே வளர்ச்சி பெறுகின்றன (எபே 4:15 தொ). ''அப்போஸ்தலருக்கும், இறைவாக்கினருக்கும், நற்செய்தித் தூதருக்கும், ஆயருக்கும், போதகருக்கும்'' (எபே 4:11) குறிப்பிட்ட பொறுப்புகள் ஒப்படைக்கப்பெற்றிருக்கின்றன. ஆனால் திருச்சபையைக் கட்டுவது என்பது இவர்களுக்கு மட்டும் அளிக்கப்பெற்ற ஒரு பணியன்று, தூயவர் அனைவரும் இறைவனுக்குகந்தவர்களாக, அவருக்கு ஊழியம் புரியும் அனைவரும் இக்கட்டடப்பணியில் முக்கியப்பங்கு எடுக்கவேண்டும். அது எல்லோருக்கும் பொதுவான, எல்லோரும் ஒத்துழைக்க வேண்டிய ஓர் அலுவல். ஒருவர் வளர்ச்சிக்கு ஒருவர் உறுதுணையாகப் பக்கபலமாக இருக்கவேண்டும் (உரோ 14:19; 15:2; 1 தெச 5:11; யூதா 20). திருச்சபையிலுள்ள பல சிறப்புப்பணிகளின் விவரங்களைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு இக்கட்டடப் பணியானது ஒரு முக்கிய கடமையாகவும் இன்றியமையாத அளவு கருவியாகவும் அமைகிறது.

திருச்சபையின் ஞான வளர்ச்சிக்காக உழைப்பதுதான் இக்கட்டடப்பணிகளிலெல்லாம் தலைசிறந்ததும் மதிப்புமிகுந்ததுமாகும் (1 கொரி 14:12). நமது சகோதரர்களின் சீர்திருத்தத்திற்காக உழைப்பதன் வழியாக நாம் திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைக்கிறோம். ஆனால் இப்பணியில் ஒரு முக்கிய நிபந்தனை என்னவென்றால் சீர்திருத்தப்பெற்ற இச்சகோதரர்கள் கிறிஸ்துவிலும் அவரது உண்மையான நம்பத் தகுந்த பாரம்பரியத்திலும் ''வேரூன்றி, அவர்மீது அவர்கள் வாழ்க்கையாகிய கட்டடத்தை எழுப்பவேண்டும்'' (கோலோ 2:6 தொ). இறுதி நாளில் நெருப்பானது இக்கட்டடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருட்கள் ''எத்தன்மையது என்பதை எண்பித்துவிடும்'' (1 கொரி 3:10-15).

4. புதியதொரு நினைவுச் சின்னம்:-

புதிய நகரம், புதிய எருசலேம் என்றெல்லாம் விவரிக்கப்படுவதுதான் இப்புதிய சின்னம் (திருவெளி 21:2). அது விண்ணிலிருந்து வருகிறது, இறைவனால் எழுப்பப்பெற்றது. எனவே, பாவம் விளைவிக்கும் எக்காரியங்களும் இங்குக் காணப்படுவதில்லை. இங்குக் ''கடவுள்தாமே அவர்களோடு இருப்பார், அவர்களுடைய கண்ணீரனைத்தையும் துடைத்துவிடுவார்; இனிச்சாவில்லை, புலம்பலில்லை, அழுகையில்லை, நோவில்லை'' (21:4). ''இந்நகரில் மதில் பன்னிரு அடிக்கற்கள் மேல் கட்டப்பட்டிருக்கிறது. அவற்றின் மேல் செம்மறியின் பன்னிரு அப்போஸ்தலர்களின் பன்னிரு பெயர்களும் இருக்கின்றன'' (21:14). ''இஸ்ராயேலின் பன்னிரு குலத்தாரின் பெயர்கள் (இந்நகரின்) வாயில்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன'' (21:12). இதுதான் கிறிஸ்துவினால் நிறுவப்பெற்ற அவரது அப்போஸ்தலர்களிடம் ஒப்படைக்கப்பெற்ற நினைவுச் சின்னம். இதுதான் புனிதர் அனைவரது உழைப்பாலும் கட்டப்பெற்ற திருச்சபை. இதுதான் உண்மையான மணமகள். ''இறைமக்களின் நீதிச் செயல்களே'' இம்மணமகளின் அணிகலன்கள் (19:8). இந்த நினைவுச் சின்னத்தில் எல்லாமே கடவுளது கைவேலைதான். அது முற்றிலும் புனிதர்களால் அமைக்கப்பெற்றிருக்கிறது. இதுதான் அருளைப்பற்றிய மறையுண்மை.

கட்டில் (BEDSTEAD)

படுக்கையைத் தாங்கும் ஓர் அமைப்பு. யோபு 7:13, ஆமோ 6:4-இல் கட்டிலைக் குறிக்கும் எபிரேயச்சொல் பொதுவாக மொழி பெயர்க்கப்படும்; ஆனால் உப 3:11-இல் உள்ள அதே வார்த்தை 'கட்டில்' என்று மொழிபெயர்க்கப்படும்; இது பாசானின் அரசனான ஓகு என்பவனுடைய 'இரும்புக் கட்டிலைக்' குறிக்கின்றது; இது ஒன்பது முழம் நீளமுடையது. யோர்தான் பகுதியில், தொடக்க இரும்புக் காலத்தில் இதுபோன்று கட்டில்கள் செய்ய இரும்பு கிடைத்திருக்க லாம்; ஆனால் இங்குச் சொல்லப்பட்டுள்ள கட்டிலின் அளவு இது கந்தகப்பாறையால் செய்யப்பட்ட ஒரு பொருளாக இருந்திருக்க லாம் என்று தோன்றுகிறது. கருமையாக வும், உறுதியாகவும் இருக்கும் இந்தப் பாறை யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதி யில் சாதார்ணமாகக் கிடைக்கக்கூடியது. கந் தகப் பாறையை இரும்போடு அடையாளப் படுத்தும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பிளினியில் அரக்கனின் படுக்கை என்று மக்களால் கருதப்பட்ட ''தோல்மெனை'' அநேகமாக இது குறிக்கலாம்.

கட்டுக்கதை, கற்பனைக்கதை (FABLE)

அறிவுரை வழங்குவதற்காகச் செடிகள், விலங்குகள் எல்லாம் மனிதர்களைப் போல் பேசுவதாகவும் செயல்படுவதாகவும் கூறப் படும் கதைகள். இது உவமையோடும், தொடர் உருவகத்தோடும் தொடர்புடையதா கும். இம்மூன்று வகையிலும் அவற்றைப் படிப்பவர்கள் அவைகள் தெரிவிக்கும் அறி வுரைகளை உணர்ந்து கொள்வார்கள். மரங் கள், விலங்குகள், உயிரற்ற பொருட்கள் ஆகியவற்றின் பேச்சும், மனிதச் செயல் களுமே கட்டுக்கதையை மற்ற இரண்டு வகையினின்றும் வேறுபடுத்துகிறது.

எபிரேய விவிலியத்தில் இத்தகைய கற்ப னைக் கதைகள் இரண்டு காணப்படுகின்றன. இரண்டும் அரசியலைச் சார்ந்ததாகும். முத லில், அபிமெலக்கின் புரட்சிக்குப் பிறகு எருபாகாலின் உயிர் பிழைத்த ஒரே மகனான யோத்தாம் செக்கேம் நகர மக்களுக்குக் கற்ப னைக் கதை ஒன்று கூறினார் (நீதி 9:8-15). இதில் மரங்கள் தங்களுக்கு ஓர் அரசன் வேண்டி ஒலிவ மரத்திடமும், அத்தி மரத்திட மும், திராட்சையிடமும் கேட்கின்றன. முட்செடி மட்டுமே அரசனாக இருக்கச் சம்ம தம் தெரிவிக்கிறது. ஆனால் கொடுங்கோல் புரிவதாக வாக்களிக்கிறது. இரண்டாவதாக, யோவாசு யூதாவின் அரசனான அமாசியாவி டம், லீபான் நாட்டு நெருஞ்சிச் செடி கேதுரு மரத்திடம் தூது அனுப்பியதாகவும், காட்டு மிருகங்கள் அந்த நெருஞ்சிச் செடியை மிதித் துப் போட்டதாகவும் கூறுகிறார் (2 அர 14:9). முதல் கதை அபிமெலக்குக்கு எதிராகச் செக் கேம் மக்களை எச்சரிக்கிறது. இரண்டாவது கதை அமாசியா அழிவுப்பாதையில் செல் கின்றார் என்று கூறுகிறது. கதையில் கூறப் பட்டுள்ளவை உண்மையில் நிகழ்ந்தவை அல்ல. அறிவுரைக்காகவே இக்கதைகள் கூறப்படுகின்றன. இத்தகைய கதைகள் சொல்வதில் சாலமோன் புகழ் பெற்றிருந் தார் (1 அர 4:33).

கட்டுதலும், அவிழ்த்தலும் (BINDING AND LOOSING)

கட்டுதற்கும் அவிழ்ப்பதற்கும் உரிய அதி காரம் பேதுருவுக்கு அளிக்கப்பட்டது. ''வானகத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன். எதெல்லாம் மண்ணகத்தில் நீ கட்டுவாயோ அதெல்லாம் விண்ணகத்தி லும் கட்டப்பட்டதாகவே இருக்கும். எதெல் லாம் மண்ணகத்தில் நீ அவிழ்ப்பாயோ அதெல்லாம் விண்ணகத்திலும் அவிழ்க்கப் பட்டதாகவே இருக்கும்'' (மத் 16:19). பின்பு, அதே சொற்களில், அதே வாக்குறுதி யைச் சீடர்கள் அனைவருக்கும் இயேசு அளிக்கிறார் (18:18). ஆனால் திறவுகோல் பற்றிய கூற்று இல்லை. திறவுகோல் அதிகா ரம் பேதுருவிடம் மட்டுமே ஒப்படைக்கப் பட்டது. கட்டுதலுக்கும் அவிழ்த்தலுக்கும் இணையான கூற்று, இயேசு தாம் உயிர்த்த நாளில் அளித்த போதகத்தில் காணக்கிடக்கி றது: ''எவர்களுடைய பாவங்களை மன்னிப் பீர்களோ அவர்களுக்கு அவை மன்னிக்கப் பெறும். எவர்களுடைய பாவங்களை மன்

னியாது விடுவீர்களோ அவை மன்னிப் பின்றி விடப்படும்'' (யோவா 20:23).

இவ்விரு சொற்களும் இராபிகளின் இலக் கியங்களில் இரு தனிப்பட்ட பொருள் களைக் கொண்டுள்ளன. முதலில் ''தடைசெய் தல், அனுமதித்தல்'' என்ற பொருளையுடை யன. சட்ட ஆசிரியர் ஒரு செயல் அவிழ்க்கப் பட்டதாக (அனுமதிக்கப்பட்டதாக) அறி விப்பதாகும். இரண்டாவது ஒரு தடையுத் தரவை இடுவதையும் நீக்குவதையும் அதா வது தண்டனை கொடுப்பதையும் நீக்குவ தையும் குறிக்கின்றன.

இரண்டு பொருள்களிலும் மேற்கூறப் பட்ட வாசகங்களுக்கு விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது. இரண்டாவது பொருள் மிகப் பொருத்தமுள்ளதாகும். ஏனெனில் சீடர்கள் சட்ட வல்லுநர்கள் அல்லர். மாறாக நற்செய் தியின் தூதர்களாவர். இந்த நற்செய்தி, அதை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்பவர்களுக்கு மன்னிப்பை அளிக்கிறது (மத் 10:13-14). இதுவே, யோவானின் கூற்றுக்கும் பொரு ளாகும். சுருக்கமாக, ''அவிழ்த்தல்'' பாவங் களை மன்னிக்கும் இறை அதிகாரத்தைக் குறிக்கிறது. இவ்வாறு திருச்சபைக்குள் புதி யவர்களை ஏற்றுக்கொள்வதையும் மனம் வருந்தும் பாவிகளைத் திருச்சபையின் தோழமைக்கு மீண்டும் ஏற்றுக்கொள்வதை யும் குறிக்கிறது. ''கட்டுதல்'' அவிசுவாசிக ளுக்கும் மனம் வருந்தாத பாவிகளுக்கும் இறைவனுடைய தண்டனைத் தீர்ப்பை அறி விப்பதாகும்.

இவ்வாறு, (வெளிப்பாட்டின் அதிகாரத் தாலும், அதன் விளைவான ஆவி வழிகாட்டு வதாலும், யோவா 16:13), வாழ்வு மற்றும் போதகம் பற்றிய ஒழுங்குகளை நிர்ணயிக் கும் அதிகாரமும் திருச்சபையிடமிருந்து கீழ்ப்படிதலைக்கோரும் அதிகாரமும் பேதுரு வுக்கு அளிக்கப்படுகிறது. இது பழைய ஏற்பாட்டில் அரச முதல் அமைச்சனுடைய அதிகாரத்தைப் பிரதிபலிக்கிறது (ஏச 22:22). கட்டும்-அவிழ்க்கும் அதிகாரம் முதலில், சீடர்களின் தலைவர் என்ற முறையில் பேது ருவுக்கு அளிக்கப்படுகிறது. பின்பு மற்றச் சீடர்களுக்கும் (மத் 18:11) அதாவது பன்னிரு அப்போஸ்தலர்களுக்கும் (யோவா 20:23) அளிக்கப்படுகிறது. திருச்சபைக்கு அளிக்கப் படவில்லை. இதுபோலவே அப்போஸ்த லக் காலத்தின் முடிவில் இந்த அதிகாரம், அப்போஸ்தலர்களின் வழித் தோன்றல்களா கிய பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது; சமூகத்திற்கன்று (2 திமோ 2:24-26; தீத் 3:10).

மற்றொரு விளக்கம், ''கட்டுதலும் அவிழ்த்தலும்'' என்பது அப்போஸ்தலர் களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் முழுமை யைக் குறிக்கும் என்பதாகும். பழைய ஏற்பாட்டில், சில இடங்களில் ''நல்லது மற்றும் கெட்டது'' என்பது யாவற்றையும் குறிப்பதாகப் (ஆதி 24:50) பொருள் கொள் ளப்படுவதுபோல், இங்கும் இவ்விரு சொற் கள், ''எல்லாவற்றையும்'' செய்ய அப் போஸ்தலர்கள் அதிகாரம் கொண்டிருந்தனர் என்று, பொருள் கொள்ளலாம்.

கட்டுதல் (EDIFICATION)

புதிய ஏற்பாட்டில் இச்சொல் 'கட்டு', 'கட்டுபவர்', 'கட்டடம்', 'உற்சாகப்படுத்து தல்' போன்ற வடிவங்களில் வருகிறது (1 கொரி 8:10; எபே 2:21). ஒத்தமை நற்செய்திக ளில் இச்சொல் வினைச் சொல் வடிவிலே, கட்டுதல் என்ற பொருளிலே பயன்படுத்தப் படுகிறது.

பவுல் இச்சொல்லை வினைச்சொல் வடி விலும், பெயர்ச்சொல் வடிவிலும் பயன் படுத்துகிறார். ஆனால் அவர் இதைக் கட்ட டம் கட்டும் பொருளில் ஒருபோதும் பயன் படுத்தவில்லை. மாறாக, உருவகமாக, திருச் சபையைக் கட்டுவதற்கும், விசுவாசிகளைக் கட்டுவதற்கும் பயன்படுத்துகிறார். பவுல் திருச்சபையை ஒரு கட்டடமாக வர்ணிக்கி றார் (1 கொரி 3:9; எபே 2:21). தான் இட்ட அடித்தளத்தில் திருச்சபையைக் கட்டுவது பற்றியும் (1 கொரி 3:10.12.14), அப்போஸ்த லர்களையும் இறைவாக்கினர்களையும் அடிக்கல்லாகக் கொண்டு கட்டப்பட்ட திருச்

சபையைப் பற்றியும் (எபே 2:20) பவுல் கூறுகிறார்.

பவுல் அடிக்கடி இவ்வார்த்தையை 'வலிமைப்படுத்துதல்', 'ஒன்று சேர்த்தல்' 'அமைதிக்கு உழைத்தல்' போன்ற பொருட்களில் பயன்படுத்துகிறார். இது 'தளர்ச்சிப்படுத்துதல்', 'பிரித்தல்', 'அழித்தல்', 'பிரிவினை உண்டாக்குதல்' முதலியவற்றின் எதிர்ச் சொல்லாகும். ''எல்லாம் ஞான வளர்ச்சி தர நடைபெறட்டும்'' (1 கொரி 14:26) என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறார். அதாவது திருச்சபையைக் கட்டி எழுப்புவதற்கும், பலப்படுத்துவதற்கும், ஒன்றுபடுத்துவதற்கும் எல்லாம் நடைபெறட்டும் என்பது பொருளாகும். இங்குக், 'கட்டுதல்' என்பது உணர்ச்சிவசத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. மாறாக, இச்சொல் 'நிறைவாக்குதல்', 'ஒற்றுமைப்படுத்துதல்', 'ஒன்றுபடுத்துதல்' என்ற பொருட்களைத் தாங்கியிருக்கிறது. எனவே, கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் கட்டியெழுப்ப வேண்டும் (1 தெச 5:11). அதாவது, ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திப் பலப்படுத்த வேண்டும். அன்பு ஒன்று தான் ஒருவரை ஒருவர் கட்டியெழுப்ப முடியும் (1 கொரி 8:1).

கட்டுமரம் (RAFT)

மிதக்கக் கூடிய மரக்கட்டைகளை இணைத்துக் கட்டிய கட்டுமரம் நீரில் பயணம் செய்யப் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய முறையில்தான் கேதுரு மரங்களையும், சைப்ரஸ் மரங்களையும் தீர் நாட்டின் கீராம், கடல் வழியாக லெபனோனிலிருந்து யோப்பாவுக்கு, ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கட்டி அனுப்பினார். இத்தகைய கட்டுமரம் போன்ற அமைப்பில் உள்ள மரங்கள் படகுகளால் கட்டியிழுத்துச் செல்லப் பட்டிருக்கலாம். யோர்தான் பகுதிகளில் விலங்குகள் அதிகம் சுமையுள்ள பொருட்களை முதுகில் சுமந்து செல்வது கடினமானதால், இத்தகைய கட்டுமரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இத்தகைய கட்டுமரங்களின் மிதக்கும் தன்மை, ஊதச் செய்யப்பட்ட தோல் சித்தைகளால் அதிகப்படுத்தப்பட்டிருக்கலாம்.

கணவாய் (PASS)

வழி, மலையிடுக்கு அல்லது மலைச்சமவெளியில் செல்லும் ஒடுக்கமான வழி. மெகிதோ, செக்கேம், மிக்மாசு எனப் பல்வேறு மலைக்கணவாய்கள் கானான் நாட்டில் இருந்தாலும். மிக்மாசு கணவாய் மட்டுமே, கணவாய் என்ற பெயரில் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (1 சாமு 13:23; 14:4). ஏச 10:28-29-உம் இதே கணவாயினை மீளவும் குறிப்பிடுகிறது.

மலைநாடுகளில் கணவாய் என்பது ஏற்றம் அல்லது இறக்கம் என்றும் அழைக்கப்படுகின்றது. எ.கா. கடற்கரைச் சமவெளிக்கும் எருசலேமிற்கும் இடையிலான பேத்துகோரோன் ஏற்றம், யோர்தான் பள்ளத்தாக்கிற்கும் மலைநாட்டிற்கும் இடையிலான அதுமிம் ஏற்றம், மற்றும் கானான் நாட்டின் தென் எல்லையில் உள்ள 'அக்ராபிம்' ஏற்றம் போன்றன.

கண் (EYE)

விவிலியத்தில் செவியைப் போன்று கண் அவ்வளவு இறையியல் முக்கியத்துவம் பெறவில்லை. செவியைப் போன்றே, இறைவனுடைய வார்த்தைகளை அறிந்து, புரிந்து கொள்வதைக் குறிப்பதற்குச் சில வேளைகளில் கண் பயன்படுத்தப்பட்டுள்ளது (எரே 5:21). இச்சொல் அடிக்கடி ''தீர்ப்பு'' அல்லது ''கருத்து'' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது (பழ 3:7; எரே 7:11). வெகு அரிதாகவே கண் கடவுளைக் ''காண்பதாகக்'' கூறப்பட்டுள்ளது (ஏச 6:5). ஆனால் இச் சலுகை இறுதி நாட்களையே சாரும் (ஏச 33:17; எச 18:23; திருவெளி 1:7).

பார்க்கக்கூடிய, வருத்தத்தைத் தெரிவிக்கக் கூடிய உறுப்பு என்ற பொருளில் 'கண்' அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. வருத்தத்தை வெளிப்படுத்துவது கண்களின் முக்கிய வேலைகளில் ஒன்றாகும் (சங் 119:136; எரே 9:1). ஒளிமிக்க கண்கள் உடல் நலத்தின்

அறிகுறியாகும் (1 சாமு 14:27; சங் 38:10); ஒளி இழந்த கண்கள் உடல்நலக் குறைவைக் குறிக்கின்றன (யோபு 17:7). கண்களினால் இறுமாப்பையும் (பழ 6:17), தாழ்ச்சியையும் (சங் 123:2), இரக்கத்தையும் (எச 16:5), கேலியையும் (பழ 30:17) தெரிவிக்க முடியும். அடிக்கடி காமவெறி, ஆசை போன்ற சொற்களுக்குச் சமமாகக் கண்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன (பழ 17:24; சீரா 4:8; 2 பேதுரு 2:14).

''தீய கண்'' என்ற சொல் மந்திரவாதத்தைக் குறிப்பதல்ல. மாறாக, இது அக்கண்ணுடையவனின் தீய எண்ணங்களையே குறிக்கிறது (பழ 23:6; மாற் 7:22).

கண்களுக்கிடையில் சீட்டுப்பட்டம் (FRONTLETS)

செப நேரத்தில் இரு கண்களுக்கும் இடையில் தலை மயிருக்குக் கீழ், நெற்றியில் அணிந்திருக்கின்ற அல்லது தொங்கவிடப்பட்டிருக்கின்ற அணி. இது அவர்களின் நினைவுச் சின்னமாகவும், அடையாளமாகவும், மட்டுமல்லாமல் தீய சக்திகளுக்கு எதிர்ப்பாகவும் இருக்கின்றது. அதில் ''நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே; உன் முழு இதயத்தோடும் அன்பு செய்வாயாக'' என்ற கட்டளை எழுதியிருக்கும் (யாத் 13:1-10.11-16; உப 6:4-9; 11:13-21).

தலைப்பேற்றாண்களின் மீட்பிற்கு இது ''கையிலே ஓர் அடையாளமாகவும், கண்களுக்கு முன் நிற்கும் ஒரு நினைவுச் சின்னமாகவும்'' இருக்கிறது (யாத் 13:16). ஆண்டவருடைய கட்டளைகள் அடங்கியதே அந்த நினைவுச் சின்னம் (யாத் 13:9).

கண்களைப்பிடுங்குதல் (GOURGING THE EYES)

துளை போடுதல், தோண்டி எடுத்தல், அகழ்ந்து எடுத்தல் போன்ற வினைச் சொற்கள் இரண்டாம் வேற்றுமைச் சொற்களாகக் கண்ணுடன் வருகின்றன (நீதி 16:21; 1 சாமு 11:2; காண். எண் 16:14; யோபு 30:17; பழ 30:17; ஏச 51:1). இவ்விடங்களில் கண்களைப்பிடுங்குதல் அல்லது தோண்டி எடுத்தல் என்று மொழி பெயர்க்கப்படுகிறது. 1 சாமு 11:1-4-இன்படி போருக்குப் பிறகு யபேசின் ஆட்கள் அம்மோனியனாகிய நாகாசுடன் உடன்படிக்கை செய்ய முற்பட்டார்கள். ஆனால் ''உங்கள் எல்லோருடைய வலக்கண்களையும் பிடுங்கிய பிறகே அமைதியின் உடன்படிக்கைக்கு உட்படுவேன்'' என்று நாகாசு கூறினான். நாகாசு அரசன் இதை ஓர் இழிவாகவே கருதியிருக்க வேண்டும். இது சவுலைத் தூண்டி எழுப்பிப் போருக்குத் தலைமை தாங்கச் செய்தது.

அடிமைகளின் கண்களைப் பிடுங்குவது அப்பொழுது பழக்கமாயிருந்தது. அசீரியர்கள் தங்களது சிறைக் கைதிகளின் கண்களைக் கூரிய கருவிகளால் குருடாக்கினார்கள். பெலிஸ்தியர் சிம்சோனைப் பிடித்து அவர் கண்களைப் பிடுங்கிக் காசா சிறைக்கு இழுத்துச் சென்றனர் (நீதி 16:21). கி.மு. 586-இல் பாபிலோனியர்கள் எருசலேமைக் கைப்பற்றியபோது செதேக்கியாவின் புதல்வர்களை அவரது கண் முன்னே வெட்டினர். மேலும் அவரது இரு கண்களையும் பிடுங்கியபின் விலங்கிட்டு அவரைப் பாபிலோனுக்குக் கொண்டு சென்றனர் (2 அர 25:7).

கண்காணிப்பாளர், கண்காணிப்புப்பணி (STEWARD, STEWARDSHIP)

மேலாளர், செயல்முகவர், செயலாட்சித் துணைவர், கருவூலக் காவலர், ஒழுங்கு காப்பாளர், சொத்து மேற்பார்வையாளர், காரியக்காரன்.

செல்வந்தர்களின் இல்லங்களில் வேலைக்காரர்களை மேற்பார்வையிடுதல், வரவு செலவுக் கணக்குகளைப் பார்த்தல், வீட்டுத் தலைவனின் பந்தியினைப் பார்வையிடுதல் பொறுப்பேற்றல் முதலான காரியங்களைக் கவனிக்கும் பணியாளர் தலைவனே ''கண்காணிப்பாளன்'' ''காரியக்காரன்'' என்று அழைக்கப்பட்டான்.

யோசேப்பின் வீட்டுவேலைகளை எல்லாம் மேற்பார்வையிடுவதற்கு இத்தகைய

கண்காணிப்பாளன் இருந்தான் (ஆதி 43:19; 44:4; 1 அர 16:9).

இஸ்ராயேல் அரசர்கள் இத்தகைய கண்காணிப்பாளர்களை, பொருளாளர்களைக் கொண்டிருந்தனர் (1 அர 15:18; 1 நாள் 27:31; 28:1). ''கண்காணிப்பாளன்'' என்ற சொல்லும் ஏச 22:15-இல் ''பொறுப்பாளன்'' என்ற சொல்லும் இடம்பெறுகின்றது.

புதிய ஏற்பாட்டில் அனைத்துக் கிறிஸ்தவர்களுமே இவ்வுலகில் இறைவனின் மறைபொருள்களின் கண்காணிப்பாளர்களாக இருக்கவேண்டும் (1 கொரி 4:1; கலா 4:2; 1 பேதுரு 4:10). தீத் 1:7 ஆயர்களைக் கடவுளுடைய காரியங்களை மேற்பார்வையிடும் கண்காணிப்பாளர்கள் என்று அழைக்கின்றது. கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் கண்காணிப்புப் பணி என்பது தன் நேரம், திறமைகள் சொத்துக்கள் இவைகளை மட்டுமல்லாது தன்னையே அர்ப்பணிக்க அழைக்கும் ஒரு பணியாகும் (லூக் 12:42; எபே 3:2).

சில நேரங்களில் ஒரு நகரத்தின் பொருளாளனையும் கண்காணிப்பாளன் என்று அழைப்பது வழக்கமாக இருந்தது (உரோ 16:23).

''நீதியற்ற கண்காணிப்பாளன்'' உவமையில் ஒரு கண்காணிப்பாளனின் கடமைகள் விவரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம் (லூக் 16:1-8) யோவா 2:8-9 கானாவூர் கல்யாணத்தில் விருந்து மேற்பார்வையாளனைப் பற்றியும், மத் 20:8; லூக் 8:3 திராட்சைத் தோட்டக் கண்காணிப்பாளனைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

கண்ணாடி (GLASS)

1) கண்ணாடி எளிதில் ஒளி ஊடுருவக் கூடிய ஒரு பொருளாகும் (யோபு 28:17). எபிரேயர்கள் கண்ணாடியை மிக மதிப்புள்ள பொருளாகக் கருதினார்கள். கண்ணாடிகவின் ஒப்புமைகளில் அதிகமாகச் சொல்லப்படுகின்றது (யோபு 28:17; திருவெளி 4:8; 15:2; 21:18.21).

கி.மு.2500-ஐ ஒட்டி, மேற்காசியாவில் கண்டுபிடிக்கப்பட்டு, பெனிக்கியர்களாலும் எகிப்தியர்களாலும் பல பொருட்கள் செய்யப் பயன்படுத்தப்பட்டது. கி.மு. 50-ஐ ஒட்டிக் கண்ணாடியை உருக்கிக் காற்று ஊதிப் பொருட்கள் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் மலர்க்குவளை, புட்டி, உருண்டை மணி, மற்றும் பல அலங்காரப் பொருட்கள் செய்யப்பட்டன. யோசிப்பசின் கருத்துப்படி இத்தொழிலில் பெனிக்கியர்கள் புகழ்பெற்று இருந்தனர்.

யோபு 28:17-இல் கண்ணாடி மற்ற விலையுயர்ந்த உலோகங்களோடு குறிப்பிடப்படுகின்றது. இவையாவும் ஞானத்தின் மதிப்பிற்குச் சமமானவையன்று. இது அதிக அளவில் கிடைக்காததால் பழங்கால மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டுக் கவனமாய்ப் பாதுகாக்கப்பட்டது.

திருவெளிப்பாட்டு ஆசிரியர் இருமுறை ''கண்ணாடி போன்ற கடல்'' என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார். ஆனால் பொருள் தெளிவாக இல்லை. திருவெளி 4:6-இல் ஆசிரியர் ''பளிங்கெனத் தெளிந்த கடல் போன்றதொன்று'' இறைவனின் அரியணை முன் இருப்பதைக் காண்கிறார். இது ஒருவேளை மகத்துவத்தையும் தூய்மையையும் கட்டலாம் (21:18). அல்லது எபிரேயர்கள் பழக்கப்பட்ட கொந்தளிப்புள்ள கடலிலிருந்து வேறுபட்ட அமைதியைச் சுட்டலாம். இதன் பொருள் எதுவாயிருந்தாலும் யாத் 24:10-இலும், இறைவனது அரியணை அருகில் ஒளி ஊடுருவும் பொருட்களைக் கூறும் மற்றப் பகுதிகளிலும் ''கண்ணாடிக்கடல்'' பின்னணி காணப்படுகிறது. திருவெளி 15:2-இல் இப்பதம், பழைய ஏற்பாட்டுப் புனிதர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையும் முன் செங்கடலைக் கடந்ததுபோல், விசுவாசிகள் இறைவன் திருமுன் நுழையத் தகுதி பெறுமுன் அனுபவிக்கவேண்டிய கடுந்தேர்வை அடையாளமாக உணர்த்தலாம்.

கண்ணாடிக்கடல் (SEA OF GLASS, GLASSY SEA)

திருவெளிப்பாட்டு நூலாசிரியரின் காட்சியிலே இது தென்படுகின்றது (திருவெளி 4:6; 15:2). விண்ணக அரியணை உள்ள அறையிலே, இந்தக்கடல் பளிங்கு போல் காணப்படுகின்றது. இந்தக் கருத்து எசக்கியேல் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது (எச 1:22); ஆனால், திருவெளி 15:2 கண்ணாடிக்கடல் நெருப்புடன் கலந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றது. யோவானின் கண்ணாடிக் கடலைப் புரிந்து கொள்வதற்கு முன்னதாக யூதர்களின் படைப்புப் படிப்பினையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். யூதர்களின் நம்பிக்கையின்படி வானவெளிக்கு மேலேயும், கீழேயும் தண்ணீர் இருந்ததாகக் கருதப்பட்டது (ஆதி 1:7; சங் 148:4; லேவி 2:7; யோபு 2:4). பின்வரும் கருத்துக்கள் இதன் பின்னணியில் அமைந்துள்ளன. அ) இறைவனுடைய பேழைக்கும், ஆலயத்திற்கும் நுழைவதற்கு முன்னால் வெண்கலத்தாலான தொட்டியிலோ (யாத் 30:17 தொ), வார்ப்புக் கடல் என்ற தொட்டியிலோ (1 அர 7:23 தொ) யாவேக்கு வழிபாடு செலுத்தச் செல்கின்ற குருக்கள் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆ) செங்கடலைக் கடந்த போது அடைந்த வெற்றி யோவானைப் பொறுத்தவரை மனிதன் இறைவனுடைய தீர்ப்பு என்னும் இறுதிக்கால நெருப்பைக் கடந்து செல்லும் நிகழ்ச்சியை அடையாளமாகக் குறிக்கின்றது. இந்த இரண்டு நிகழ்வுகளும், மோசேயின் பாடலிலும் செம்மறியின் பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன (திருவெளி 15:3 தொ; யாத் 15). ஆகையினாலே கண்ணாடிக் கடலில் விண்ணகப் பேழையின் ஒரு பகுதியான வெண்கலத் தொட்டியையும், அதே நேரத்தில் மனிதனுடைய பாவத்திற்குக் கடவுளுடைய தண்டனையையும் அதனுடைய பரிகாரத்தையும் குறிக்கும் அடையாளத்தையும் நாம் காண வேண்டும் (எபி 12:14; சங் 24:4; மத் 5:8; 1 கொரி 10:1 தொ; திருவெளி 22:3-4) கண்ணாடிக் கடலை நெருப்புக்கடலுடன் குழப்பிக் கொள்ளக்கூடாது (திருவெளி 19: 20). இது இரண்டாவது சாவைக் குறிக்கின்றது (20:14).

கண்ணி, வலை, பொறி (SNARES AND TRAPS)

பறவைகளையும் விலங்குகளையும் வேட்டையாடுவதில் பயன்படுத்தப்படும் கருவிகளை இது குறிக்கும்.

பெரும்பாலும் இது உருவகமாகப் பயன்பட்டுள்ளது. குறிப்பாக எதிர்பாராது, திடீரென்று வரும் ஆபத்துக்களையும், வாழ்க்கையில் எதிர்பாராது வரும் கேடுகளையும் (திருவுரை 9:12), தீயவர்கள் திட்டமிடும் கொடுமைகளையும் (சங் 140:4-5), தீயவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் அழிவையும் (யோபு 18:7-10), போர்த்தோல்வியையும் (எச 19:8) இறுதிக்கால அழிவையும் (லூக் 21:34) குறிக்கக் கண்ணி, வலை என்ற சொற்கள் பயன்பட்டுள்ளன. சங் 69:22-இல் பலி உணவு, கவர்ந்திழுத்துப் பொறியாக மாறும் தூண்டில் இரைக்கு ஒப்பிடப்படுகிறது. ஆமோ 3:5-இல் இறைவனுடைய தனிச் சிறப்பான மக்கள் மீது வரவிருக்கும் அவருடைய தவிர்க்கமுடியாத தண்டனையை விளக்க வேடனது வலை பயன்படுகிறது.

கண்மணி (APPLE OF THE EYE)

கண்ணுக்கு அதன் மணி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமான, ஆகவே மதிப்பு மிகுந்த ஒருபொருள் என்பதனைக் காட்டப் பயன்படும் சொல்லாகும் இது (பழ 7:2). உப 32:10; சங் 17:8 ஆகியவற்றில் கடவுளுக்கு மிகவும் பிரியமானவரைக் குறிக்க இது பயன்படுத்தப்படுகிறது. ''இறைவன் கண்மணியைப் போல் காத்து வழிநடத்தினார்'' எனக் கூறப்படுகிறது.

கண் மை (EYE PAINT)

முற்கால எகிப்திலும் பாபிலோனியாவிலும், கண்களைச் சுற்றி வர்ணம் பூசிக் கொள்வது வழக்கமாக இருந்தது. ஆனால் யூதர்களிடையே தீய பெண்கள் மட்டுமே பெரும்பாலும் கண் மை பூசிக்கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. விவிலியத்தில் கண்மை:-

விவிலியத்தில் மூன்று முறை 'கருப்புக் கண்மை' என்ற சொற்றொடர் காணப்படுகிறது; ஏகூ இசிரியேலுக்கு வந்தபோது ஈசபேல் தன் கண்களுக்கு மையிட்டுத் தன்னை அழகுபடுத்திக் கொண்டிருந்தாள் (2 அர 9:30). விபச்சாரப் பெண்ணாக உருவகப்படுத்தப்பட்ட எருசலேம் கண்களுக்கு மைதீட்டி அணி செய்வதாக எரேமியா கூறுகிறார் (எரே 4:30). யோபுவின் புதல்வியரில் ஒருத்தியின் பெயர் கெரன்-அப்பூக்கு. இதன் பொருள் ''கண் மை வைக்கும் அல்லது அஞ்சனச் சிமிழ்'' ஆகும். (யோபு 42:14).

எச 23:40-இல், எருசலேமைக் குறிக்கும் விபச்சாரியான ஒகலிபா கண்களுக்கு மை தீட்டுகிறாள். யூதர்களிடையே தீய குணமுடைய பெண்களே மை தீட்டும் பழக்கம் கொண்டிருந்தனர் என்பதற்கு மேற்கூறிய குறிப்புகளே சான்றாகும்.

2. பொருட்கள்:-

முற்கால எகிப்தில், உயர்மெருகு ஏற்கும் பச்சை நிறக் கனிப்பொருள் வகையும், பிற்காலத்தில் பளபளப்பான ஈயச் சுரங்கக் கலவை வகையும் பொதுவாகக் கண் மையாகப் பயன்படுத்தப்பட்டன. பிற்காலத்தில் இவை வியாபாரத்திற்காகவும் தயாரிக்கப்பட்டன. பாபிலோனில் இக் கண்மை 'குஃலு' என்றழைக்கப்பட்டது. சனகெரிபுக்கு எசக்கியா அரசன் அளித்த கொடைகளில் கண் மையும் ஒன்றாகும். இன்று எகிப்தில் ஈயக் கனிமத்திலிருந்தும், எரித்த சாம்பிராணியிலிருந்தும், வாதுமைக் கொட்டையின் தோட்டிலிருந்தும், குசும்புப் பூவிலிருந்தும் கண் மை செய்யப்படுகிறது.

3. அஞ்சனச் சிமிழ்:-

யோபுவின் புதல்வியின் பெயரிலிருந்து, கண் மை கொம்பினால் செய்யப்பட்ட கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்தது (யோபு 42:14) என்பது தெரிகிறது. எகிப்தில் பண்டைக் காலத்தில் கண் மை மாவை நாணலால் செய்யப்பட்ட அல்லது நாணல் வடிவில் கல்லாலும், உலோகத்தாலும் செய்யப்பட்ட குழாய்களில் வைத்தனர். எகிப்திலும் பாபிலோனிலும் சில வேளைகளில் கண் மை மாவு குழம்பாக்கப்பட்டுத் தோடுகளில் வைக்கப்பட்டது.

மை தடவப்பட்டவிதம்:-

பண்டைய எகிப்தில், மரம், தந்தம் அல்லது உலோகத்தாலான சிறிய குச்சி ஒன்றை முதலில் ஈரப்படுத்திப் பிறகு கண் மை மாவைக் குழப்பி, அதனால் உண்டாகும் குழம்பைக் கண்களைச் சுற்றிப் புருவத்தின் மேல் பூசினார்கள். சில வேளைகளில் கண்களின் அடிப்பாகத்தில் பச்சை நிறக் களிம்பும், மற்ற இடங்களில் கருப்பு நிறமும் பூசப்பட்டன. உலோகத்திலும், தந்தத்திலும் செய்யப்பட்ட தடவும் குச்சிகள் பாலஸ்தீன அகழ்வாராய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நோக்கம்:-

கண்கள் துல்லியமாகக் காணப்படுவதற்கும், அவை வாதுமைக் கொட்டை அளவில் தோன்றுவதற்கும் கண் மை பயன்படுத்தப்பட்டது. கூசுவதினின்றும் வியாதியினின்றும் இது கண்களைப் பாதுகாப்பதாக அவர்கள் நினைத்தார்கள்.

கதவு, வாயில் (DOOR)

சங் 141:3; எச 25:20-இல் குறிக்கப்படுபவை குடைகுழியில் பொருத்தப்பட்ட சுழலும் கதவுகளாகும். உலோகத் தகடுகள் அடிக்கப்பட்ட கதவுகள் (2 நாள் 4:9.22) உலோகக் கீல்களுடன் பொருத்தப்பட்டிருந்தன. சுவரில் துளையிட்டு அதில் ஒன்று அல்லது இரண்டு சுழலும் கதவுகள் இருந்தன. 'கதவு நிலையில் மேலுத்திரமானது படுக்கையாகப் போடப்பட்டிருந்த ஒரு மரவிட்டம். நிலைகள் பக்கங்களில் இருந்தன. யாத் 35:17; யோபு 38:17-இல் உள்ளது சரியாக வாயில் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மத் 6:6;27:6-இல் 'சுழலும் கதவுகள்' குறிக்கப்படுகின்றன. மேலும் உவமானமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன (யோவா 10:7; 18:16; அ.ப. 14:27).

கதவுத்துளை (LATCH)

உ.ச. 5:4-இல், இது ''கதவுத்துளை'' எனக் கூறப்படுகிறது. இது சரியான மொழி பெயர்ப்பாக இல்லை. ஒருவேளை இது (வேறொன்றைக் குறிப்பதற்காக) மறைத்துக் கூறும் மங்கல வழக்கமாக இருக்கலாம்.

கதாது (HADAD - இடி இடிப்பவன்)

1. இசுமாயேலின் எட்டாவது புதல்வன். ஆபிரகாமின் பேரன் (ஆதி 25:15; 1 நாள் 1:30).

2. ஏதோமின் அரசன் பெதாதின் மகன் (ஆதி 36:35-36; 1 நாள் 1:46-47). அவிதுவில் ஆட்சி செய்தார்.

3. ஏதோமின் மற்றுமொரு அரசன் (ஆதி 36:39; 1 நாள் 1:50-51). பாகூவில் ஆட்சி செய்தார். வாசகத் தவறால், ஆதி 36:39-இல் இப் பெயர் ஆதார் என்றுள்ளது.

4. தாவீது ஏதோமை வெற்றிகொண்ட பொழுது எகிப்திலிருந்து தப்பிய ஏதோமின் அரச குடும்பத்தைச் சார்ந்த ஓர் உறுப்பினர். பின்பு அவர் சாலமோனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய மீண்டும் தாய் நிலத்திற்கு வந்தார் (1 அர 11:14-22.25).

5. பழங்காலத்தில் புயலின் கடவுள். உகாரித்துக் கடவுள்களின் தலைவர்.

கதிமியேல் (KADMIEL - இறைவன் முன்செல்கிறார்)

பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஒரு லேவியர் குடும்பத் தலைவர் (எஸ் 2:40; நெக 7:43; 12:8.24). இவரும் இவருடைய புதல்வர்களும் ஆலயம் மீண்டும் கட்டப்படுவதை மேற்பார்த்தனர் (எஸ் 3:9). பொதுப் பாவ அறிக்கையில் பங்கெடுத்தனர் (நெக 9:4-5). புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டனர் (10:9).

கதிமோனியர் (KADMONITES - கீழ்த் திசையினர்)

இவர்கள் பாலஸ்தீன-சீரியாவுக்கும், யூப்பிரத்திசு ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியான சீரிய அரேபிய பாலைவனத்தில் இஸ்ராயேலருக்குமுன் வாழ்ந்த நாடோடி இனத்தவர்கள். கதிமோனியா நாட்டைக் கடவுள் ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தவர்க்கும் தந்தார் (ஆதி 15:18-21). இவர்களும் ''கெதாமின் புதல்வர்களும்'' ஒரே இனமாக இருக்கலாம். சில மொழிபெயர்ப்புக்கள் இவர்களைக் ''கிழக்கில் வாழும் மக்கள்'' என்றழைக்கின்றன (ஆதி 29:1; நீதி 6:3.33; யோபு 1:3).

கதியேல் (GADDIEL - இறைவன் என் நற்பேறு ஆவார்)

செபுலோன் கோத்திரத்தில் சோதியின் புதல்வன். இவரும் கானான் நாட்டில் உளவறிய அனுப்பப்பட்டவர் (எண் 13:10). இவருடைய பெயர்தான் அனேகமாகக் காது என்ற பெயரின் முழுவடிவமாக இருக்கலாம்.

கதிரவன் (SUN)

விவிலியத்தில் உலகத் தொடக்கம், முடிவு ஆகியவற்றைக் கூறும் பகுதிகளில் கதிரவன் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதனைப் புறவினத்தார் வழிபட்டதாகவும் குறிப்புகள் உள்ளன. இது நிலைத்த தன்மையின் அடையாளமாகக் கருதப்பட்டது.

1. சொல்:- கதிரவனைக் குறிக்கும் எபிரேயச் சொல் எல்லா செமித்திய மொழிகளிலும் காணப்படுகிறது. இது பெரும்பாலும் ஆண்பாலாகக் கருதப்பட்டாலும், சில சமயங்களில் (யாத் 22:3; உப 24:15; 2 சாமு 2:24; சங் 104:22; யோனா 4:8; மீக் 3:6; நாகூ 3:17) பெண்பாலாகவும் கருதப்படுகிறது. இதற்குக் காரணம் முற்காலச் செமித்தியப் புராணங்களில் சூரிய தேவதைக்கு அளிக்கப்பட்ட பாலின வேறுபாடாகும். கதிரவனைக் குறிக்க மற்றப் பெயர்களும், குறிப்பாக அதன் தன்மையை விவரிக்கும், பெயர்களும் விவிலியத்தில் காணப்படுகின்றன.

2. அண்டப் பிறப்பு இயலிலும், இறுதிக் கால இயலிலும்:- நான்காவது நாள் படைப்பில் பகலில் ஒளி கொடுக்கவும், காலங்க

ளைக் குறிக்கவும் பகலை ஆளவும், கதிரவன் உண்டாக்கப்பட்டு விண்ணுலக வானத்தில் அமைக்கப்பட்டது (ஆதி 1:14-19). மண்ணுலகம் அழிந்து எல்லாப் பொருட்களும் மூல நிலையை அடையும்போது கதிரவன் இருண்டுவிடும் (ஏச 13:10; எச 32:7; யோவே 2:10; 2:31; செப் 1:15; மத் 24:29; திருவெளி 8:12) அல்லது அது தன் போக்குத் திசையை மாற்றிக் கொள்ளும் யாவேயின் இறுதி வெற்றியில் புதிய அமைப்புத் தோன்றும்போது கதிரவன் இப்போதுள்ளதைவிட ஒளிவிடும் (ஏச 30:26).

3. கதிரவன் வழிபாடு:- கதிரவன் (செமசு) எல்லாச் செமித்திய பல தெய்வக் கோவில்களிலும் காணப்படுகிறது. பாலஸ்தீனத்தில் சூரிய வழிபாடு இருந்தது என்பதற்கு "பேத்து-செமசின் வீடு" (யோசு 15:10; 1 சாமு 6:9; 1 அர 4:9), "ஏன் செமசு" (சூரியனின் ஊற்று) (யோசு 15:7; 18:17) போன்ற பெயர்கள் சான்று பகர்கின்றன. உகாரித்து இராஸ்-சாம்ராவில் இருந்து வரும் சடங்குப் பட்டியலில் சூரியனுக்குப் பலிகள் குறிப்பிடப்படுகின்றன. தேல் ஏல் அமர்னாவின் கடிதங்ளில் ஒன்று சூரியனைப் பிப்ளோஸ் பெண்ணோடு தொடர்புபடுத்துகிறது.

சூரிய வழிபாடு, மற்றக் கிரக வழிபாட்டைப் போலவே யூதர் சமயத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தது (உப 4:19; 17:3). ஆனாலும் சூரிய வழிபாடு, விசுவாசத்தை இழந்த மனாசே மன்னனால் அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது (2 அர 21:3.5). இது அவருடைய வழித்தோன்றல்களாலும், மக்களாலும் பயன்படுத்தப்பட்டது (எரே 8:2). இவ்வழிபாடு யோசியா மன்னனால் (2 அர 23:5) கி.மு.621-இல் அழிக்கப்பட்டிருந்தாலும் எசக்கியேல் இறைவாக்கினர் காலத்திலும் பழக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது (எச 8:16).

சூரியனின் குதிரை, தேர்களின் உருவங்கள் கடவுள் ஆலயத்தின் மேற்புறத்தில் நிறுவப்பட்டன (2 அர 23:11). செமசுக்கு, அக்காதியன் மொழியில் எழுதப்பட்ட பாடல்களில், சூரியன் தேரோட்டியாகச் சித்தரிக்கப்படுகிறது. இதுபோன்ற இணையான கருத்தைப் பழங்கால இந்தியாவிலும், கிரீசிலும் காணலாம்.

4. விவிலிய நாடோடிப் பாடலில்:-
இஸ்ராயேல் மக்கள், அவர்கள் எதிரிகளைக் கிபயோனில் முறியடிக்கும் மட்டும், யோசுவாவின் கட்டளைப்படி சூரியன் ஒரே இடத்தில் நின்றது (யோசு 10:12). கிரேக்கக் காவியமாகிய இலியதில் ஏரா கிரேக்கர்களுக்கு உதவி செய்யும் பொருட்டுச் சூரியனைச் சீக்கிரமாக மறைந்து போகச் செய்கிறார். ரிக் வேதத்தில் வரும் நிகழ்ச்சியான, இந்திரன் தேவர்களோடு போரிடும்போது, சூரியனின் தேரின் ஒரு சக்கரத்தை இழுத்து விடுவது, சூரியனைச் சீக்கிரம் மறையாதிருக்கச் செய்த முயற்சி என்று கருதப்படுகிறது.

2 அர 20:8-11; ஏச 38:7 ஆகிய பகுதிகளில் எசக்கியா அரசன் உடனே இறக்கமாட்டான், இன்னும் பதினைந்து ஆண்டுகள் வாழ்வான் என்பதைக் காட்டக் கதிரவக் கடிகையில் பத்துப்பாத அளவு பின்னோக்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இடுக்கண் மிக்க காலத்தில் கதிரவன் தன்போக்கை மாற்றிக்கொள்ளும் என்ற பொதுப்பாணிக்கருத்தின் பிரதிபலிப்பாகும் இது. மலா 4:2-இல் நீதியின் நாளில் "உங்கள்மேல் நீதியின் கதிரவன் எழுவான்; தன் இறக்கைகளில் நலத்தைத் தாங்கி வருவான்" என்று கூறப்பட்டுள்ளது.

நண்பகல் சூரியன் ஒரு பேயாகக் கருதப்பட்டது (சங் 91:6). இக்கருத்து பழங்காலத்தில் பரவலாகக் கருதப்பட்டது.

இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது கதிரவன் இருண்டுவிட்டதாக நற்செய்திகள் கூறுகின்றன (மத் 27:45-56; மாற் 15:33; லூக் 23:44-49; யோவா 19:28-30). மிகவும் சிறப்பு வாய்ந்த மனிதர் இறந்தால் கதிரவன் இருண்டுவிடும் என்ற நம்பிக்கையை இங்குக் காணலாம்.

கதிரவன் நகரம் (CITY OF SUN)

எகிப்தில் உள்ள ஒரு நகர். யாவேயின்

வழிபாடு எகிப்தில் பெருகும் என்று கூறப் பட்ட இறைவாக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நகர் (ஏச 19:18-22).

கதிராக்கு (HADRACH - குடியிருத்தல்)

லெபனோனின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு நகரம். தமஸ்கு, கமாத்து ஆகிய நகரங்களோடு சேர்ந்து இஸ்ராயேலோடு பகைமை கொண்ட நகரம் (செக் 9:1). இது அலேப்போவிற்குத் தென்மேற்கில் 45 கி.மீ. தொலைவிலுள்ள தேல் அபிசாகு என அடையாளம் காட்டப்படுகிறது.

கதிர் (EAR OF GRAIN)

தானியம் உருவான ஒரு தனித்தனி முனை. மேலும் உப 23:25; லேவி 2:14; 2 அர 4:42 ஆகியவற்றிலும் 'கதிர்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

பார்லி (யாத் 9:31), கோதுமை (உப 23:25; லேவி 2:14) போன்ற தானியங்களின் முதலில் உருவாகும் தானிய முனை இப்பெயரால் குறிக்கப்பட்டது (மாற் 4:28; ஆதி 41:5-7; ரூத் 2:2; யோபு 24:24; ஏச 17:5).

கதீ (GADDI - என்நற்பேறு)

1. மோசேயால் அனுப்பப்பட்ட ஒற்றர்களில் இவரும் ஒருவர். கானான் நாட்டைப் பற்றிய செய்தியை அறிய அனுப்பப்பட்டவர். யோசேப்பின் கோத்திரத்தில் மனாசே வம்சத்தானாகிய சூசியின் புதல்வன் (எண் 13:11).

2. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் யூதர்களின் விடுதலைப் போராட்டத்தில் தலைவராக இருந்த யோவானின் பட்டப்பெயர் (1 மக் 2:2). இவர் யூதா மக்கபேயரின் மூத்த சகோதரன் ஆவார்.

கதித்தா (HATITA - ஆய் செய்யும், தேடும்)

ஆலய வாயில்காப்போர்களின் குடும்பங்களில் ஒன்று (எஸ் 2:42; நெக 7:45).

கதுலாய் (HADLAI - பொறுமையுள்ள, அமைதியான)

ஓர் எப்பிராயிமின் நபர் அல்லது குடும்பம். எப்பிராயிமியர் அமாசாவின் தந்தை (2 நாள் 28:12).

கதை (LEGEND)

இச்சொல் கட்டுக்கதைகளையும், தேவதைக்கதைகளையும் மற்றும் பலதரப்பட்ட கதைகளையும் குறிக்கிறது. இது பழங்காலக் கதைகளை மட்டுமல்லாது புலமைமிக்க கலைத்திறம் வாய்ந்த கதைகளையும் குறிக்கின்றது.

இச்சொல் கி.பி.12 ஆம் நூற்றாண்டுமுதல் வேதசாட்சிகளையும் புனிதர்களையும் பற்றிக் குறிப்பிடத்தொடங்கியது. அவர்களது நினைவு நாட்களில் இவை வாசிக்கப்பட்டு அதனால் புதுமைக்கதை என்று அழைக்கப்பட்டன. இறுதியில், வீரர்களைப்பற்றி நூதனமான, உண்மையற்ற கட்டுக்கதைகள் அனைத்திற்கும் இச்சொல் நிலைபெறத் தொடங்கியது. அறிஞர்களின் கூற்றுப்படி இச்சொல், சமய சம்பந்தமான பிரிவுகளுக்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும். இவ்வாறு புராணங்களுக்குச் சமமாக உள்ள மற்றப் பிரிவு இலக்கியங்களிலிருந்து இவை வேறுபடுத்தப்படுகின்றன. இச்சொல்லின் பொதுவான உபயோகத்தினாலும், பல்வேறு பிரிவுகளிலும் ஒவ்வொரு முறையும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவது கடினமாயுள்ளதாலும், மற்றப் பிரிவுகளைப்பற்றி இங்குக் குறிப்பிடுவது முறையாகும்.

1. தேவதைக்கதை:- தேவதைக் கதை என்பது எங்கும், எக்காலத்திலும் காணப்படும் புதுமையான வாய்மொழி இலக்கியமாகும். மனிதனின் உட்புலனில் உள்ள கட்டுக்கதை ஆசையினாலும், அவற்றின் நூதனத்தினால் ஏற்படும் ஒருவித உவகையினாலும் இக்கதைகள் ஆரம்பித்தன. காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில் தேவதைகள், வேதாளம், இயற்கையான ஆவிகள், பூதங்கள், மிருகங்கள், தாவரங்கள் மற்றும் பொருட்கள் முதலியவற்றோடு, பெரும்பாலும் சகோதரர்களால் வெறுக்கப்பட்ட இளையமகனைத் தலைவனாகக் கொண்டு இக்கதைகள் எழுதப்படுகின்றன. ஏராள

மான துன்பங்கள், சோதனைகள், அனுபவித்த பின் வியக்கத்தக்க செயல்களைச் செய்த பின் அவன் இளவரசியையும் அரசில் பாதியையும் பெறுவான்.

பழைய ஏற்பாட்டில் தேவதைக் கதையானது பாடலில் உருவகமாக மட்டுமே காணப்படுகிறது. விடியற்காலையில் சிறகடித்துப் பறக்கும் மனிதன் (சங் 139:9); சபித்தலை ஆடையாக அணிபவன் (சங் 109:18); வரலாற்றுப் பின்னணியுடனோ, இல்லாமலோ அமையும் கதைகள்: பேசும் பாம்பு (ஆதி 3), பிலயாமின் பேசும் கழுதை, யோனாவை விழுங்கிப் பின்னர்க் கரையில் துப்பும் கடல் மீன். இங்கு நாம் நாடு விட்டு நாடு சுற்றும் நிலையில், உலகளாவிய நோக்கம் கொண்டிருக்க வேண்டும். மோசேயின் சிறப்பு மற்றும் இளம்பிராய வாழ்க்கை பற்றிய கதையும் இத்தகையதே. பழைய பாபிலோனிய அரசன் சார்கோன், சைரஸ், பொசெயு, உரோமுலு மற்றும் இரேமுஸ் (சகோதரர்களின் வஞ்சக நோக்கமும் இணைந்தது) ஆகியோரைப் பற்றியும் இதே நோக்கத்துடன் கூடிய கதைகள் கூறப்படுகின்றன. சில சமயங்களில் முழுக்கதையுமே மற்றொரு கதைக்கு இணையாகவுமிருக்கும்: சாலமோனின் தீர்ப்பு (1 அர 3:16-28) கதைக்கு இணையான கதை ஒன்று இந்தியாவிலும் உள்ளது - போத்திபாரின் மனைவி மற்றும் யோசேப்பு பற்றிய கதைக்கு இணையான கதை எகிப்திய நிகழ்ச்சிகளிலும் உள்ளது. சகோதரர்களின் வஞ்சகத்தைப் பின்னணியாகக் கொண்ட யோசேப்பின் கதையைப் போலவே யாக்கோபு எசாயு கதையும் உள்ளது; தோபியாவின் கதையின் நோக்கமாக உள்ள நன்றியுள்ள இறந்தவர்கள் என்னும் கருத்து பழங்காலப் பல்வேறு கதைகளில் காணப்படுகிறது. யோனா, எஸ்தர், யூதித்து மற்றும் ரூத் பற்றிய கதைகளும் இத்தகைய வரலாற்றுப் புதினங்களுடன் தொடர்பு உடையவையே.

மிருகங்கள், தாவரங்கள் ஆகியவற்றையும் இணைத்துக் கூறப்படுபவையே கட்டுக்கதைகள்.

2. வீர காப்பியத் தொகுப்புக்கள்: 1-இல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல இதுவும் நூதனக் கதையே; ஆனால், உண்மையாகவே வாழ்ந்த மனிதன், பொருள், நிகழ்ச்சி, இடம், சமூகக் கலாச்சார உறவு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு, உண்மை நிகழ்ச்சியாகக் காட்டப்படுவது. நிலவுகின்ற பாரம்பரியமானது தலைவர்களையும், நிகழ்ச்சிகளையும் பெருமைப்படுத்துவதற்காகப் பல்வேறு தேவதைக் கதைகளையும், கவிதை வர்ணனைகளையும் இணைத்துக் கூறுகின்றது.

அ) மூதாதையர் பற்றிய கதைகள்:- எபிரேயர் மற்றும் செமித்திய இனத்தவர் இடையே மூதாதையர் கதைகள் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. மூதாதையர் என்பவர் அவர்களது கோத்திரத்தின் பெயரைக் கொண்ட கற்பனை உருவமாகவும் இருக்கலாம்; அவர்களது மரபின் சிறந்த குறிக்கோள்களின் மனித வடிவமாக அவர் இருப்பார். அம்மரபின் மக்கள், நிகழ்ச்சிகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றுடன் முற்றிலும் இணைந்து காணப்படுவதால், இக்கதைகளைத் தற்சமயம் விலக்கிவிடுவது என்பது இயலாத ஒன்று. மரபின் குணங்களைக் கொண்டு விளங்கும் விவிலியக் கதைகள் காயின் மற்றும் இலாமேக்கு (ஆதி 4), தாமார் மற்றும் யூதா (ஆதி 39) போன்றவையாகும். இலாமேக்குக் கதையை நோக்கும்போது இத்தகைய குணநலன்களின் வர்ணனையானது அடிக்கடி கவிதை நடையினை மேற்கொள்வது தெரிகிறது. மூதாதையர் என்பது சில நேரங்களில் வரலாற்றின் தனித்துவக் கோட்பாடுகளைக் கொண்ட, சமுதாயத்தில் காணப்பட்ட உண்மையாகும். மூதாதையருக்கும் இவை பொருந்தும். அவர்கள் சார்ந்து நின்ற சமூகக் கோட்பாடுகளைப் பற்றி நோக்குவது ஆபிரகாம், யாக்கோபு போன்ற தனி மனிதர்களைப் பற்றிச் சிந்திப்பதைவிட மிக முக்கியமாகும்.

ஆ) பண்பாட்டு வீரக்கதைகள்:- மூதாதையர், முக்கியமாகக் குலமரபுச் சின்னம் கொண்டோர் பெரும்பாலும் பல்வேறு

மனித கலாச்சாரங்கள், சமயச் சடங்குகள், வழிபாடுகள் மற்றும் மறைவான ஞானம் ஆகியவற்றைக் கண்டுபிடித்தவர்களாகவும், தொடங்கியவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்களாகவும், இயற்கைக்கு அப்பாற்பட்ட பிறவிகளாகவும் கருதப்படுகின்றனர். பழைய ஏற்பாட்டில் முதல் நகரத்தைத் தோற்றுவித்த ''ஏனோக்கு'', ஆடு மேய்ப்பவர் மற்றும் கூடாரத்தில் வசிப்போரின் தந்தையாகிய யாபால், இசைக்கலைஞர்களின் தந்தையும் இசை மற்றும் இசைக்கருவிகளைக் கண்டுபிடித்தவருமான யூபால், முதல் கொல்லனாகிய தூபால்-காயின், முதலில் திராட்சை ரசத்தை உருவாக்கும் நோவா, மற்றும் முதலில் கடவுளின் பெயரைச் சொல்லி அழைக்கத் தொடங்கிய ஏனோசு (ஆதி 4:26) ஆகியோரைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். இங்கிருந்து முதல் மனிதனாகிய ஆதாம், ஏனோசு ஆகியோரைப் பற்றிய உன்னதச் செயல்களும், ஊகங்களும் ஆரம்பமாகின்றன. 1

இ) அண்டம் பற்றிய கதைகள்:- இவை உலகம் மற்றும் உயிரினங்கள் ஆகியவற்றின் படைப்பு மனிதனின் உண்மையான இன்பம் (ஏதோன் தோட்டம், இன்பவனம்), மனித வாழ்வின் இன்றைய நெருக்கடி ஆகியனவற்றைப் பற்றிய கதைகளாகும். பாரசீகத்திலிருந்து பின்னாளைய யூதர்கள் எடுத்துக் கொண்ட ஆதிமனிதனைப்பற்றிய நூதன யூகங்களும், இவற்றைப் போன்றவையே. மனிதனுடைய உலகின் படைப்புப் பற்றிய கதைகள், சடங்குகளின் மூலம் தினசரி படைக்கப்பட்டவற்றையே விவரிக்கின்றன; அவை கட்டுக்கதையின் நடையையும் கொண்டுள்ளன. ஆனால், இந்தக் கட்டுக் கதைகள் பிற்காலத்தில் வரலாற்று உண்மைகளுடன் இணைக்கப்பட்டு உண்மை நிகழ்ச்சியாகவும் மாற்றப்படலாம். இவ்வாறே, வெள்ளம் பற்றிய விவிலிய மற்றும் பாபிலோனியக் கதைகளின் மூலம், நீரிலிருந்து அனைத்தும் படைக்கப்பட்டன என்னும் எண்ணம் உதயமானது.

ஈ) காரண விளக்கக் கதை:- மேற்குறிப்பிட்ட பிரிவுகள் அனைத்தும், பெரும்பாலும் கதைக்குக் காரணங்களையும் கொண்டிருக்கும். தற்சமயம் ஒரு சில பொருட்கள் அவ்வாறு உள்ளதற்கான காரணங்களை இக்கதைகள் விளக்குகின்றன. உ-ம் உப்புத்தூண் (லோத்தின் துர்ப்பாக்கிய மனைவி), பாபேல் கோபுரம், வழக்கம், சடங்கு, சமூக அரசியல் நிலையின் தோற்றம், மற்றும் ஒரு மனிதனின் அல்லது குணத்தின் பெயருக் கரன பின்னணி, போன்ற கேள்விக்கிடமான உண்மை நிகழ்ச்சிகளின் காரணங்கள், மற்ற நிகழ்ச்சிகள்: காதேசில் உள்ள புனிதக் கிணறு எவ்வாறு தோன்றிற்று? மேல் மற்றும் கீழ் நிலையிலுள்ள நீர்ச்சுனைகள் ஏன் காலேபுக்கு இல்லாமல் ஓதினியேல் கோத்திரத்திற்கு மட்டும் உரிமையாக்கப்பட்டன? ஆயி நகரைப் பற்றிக் கூறப்பட்டதெல்லாம் என்ன ஆயிற்று? யோசுவா ஆகமம் கூறும் பெரும்பாலான வெற்றிகள், இத்தகைய காரணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவையே.

உ) வழிபாட்டு இடங்கள் பற்றிய காரணக் கதைகள்:- பழைய ஏற்பாட்டில் ஒவ்வொரு மூதாதையருக்கும் பொதுவாக ஒதுக்கப்படும் ஒரு புனித இடத்தின் ஆரம்பத்தைப்பற்றிக் குறிப்பிடும் ஒருவகையான காரணக் கதை உண்டு. மூதாதையரின் கருத்துப்படி, புனித இடமானது அதற்குரிய புனிதத் தன்மை கொண்டிருப்பதால், தலைவன் அதனை எவ்வாறு கண்டுபிடித்தான் என்பதை இக்கதை கூறுகின்றது. உ-ம்: யாக்கோபு பெத்தேலில் செய்தது. பழைய ஏற்பாட்டில் ஒரு இறையியல் விளக்கம் தவறாமல் அளிக்கப்படுகிறது: கடவுளின் சாட்சியினால் அவ்விடம் புனிதப்படுத்தப்பட்டு ஏற்படுத்தப்பட்டது. பலிபீட விழாவின்போது, இடம் மற்றும் புனிதரின் புகழ்ச்சிக்காக, இத்தகைய வழிபாட்டுக் காரணம் சொல்லப்பட்டதால், இஃது வழிபாடு பற்றிய கதை எனப்பட்டது.

3. வரலாற்று வர்ணனை:- வீரர்களைப் பற்றிய கதைகளையும் வரலாற்று வர்ணனை

களையும் பிரிப்பதற்கென்று எந்தவித எல்லையுமில்லை. தாவீது மற்றும் அவரது குடும்பத்தவரின் வாழ்க்கை மற்றும் செயல்களைப்பற்றிய கதைகளிலும், கதை சொல்பவரின் பாடற்கலை நயத்தையும், அவரது காலத்திய சடங்குகள் மற்றும் வழக்கங்களின் படி அவர் நடந்த சம்பவங்களை அமைக்கும் விதத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் (2 சாமு 6). நாட்டை வெல்வதற்குமுன் யோசுவா மேற்கொண்ட இருபெரும் போர்களைப் (யோசு 10-11) போன்ற வரலாற்றுப் பூர்வமான நிகழ்ச்சிகள்கூட, பிற்காலப் புராண ஆசிரியர்களாலேயே அமைக்கப்பட்டிருக்கலாம்.

4. முறையான கதை:- இவ்வகையானது, மேற்குறிப்பிட்ட எல்லாவிதமான கதைகள் மற்றும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. சமயத் தலைவர்கள் புனிதர்கள், இறைவாக்கினர், மூதாதையர் மற்றும் பண்பாட்டு வீரர்கள் ஆகியோரின் வாழ்வு மற்றும் எழுத்துகளிலிருந்து அமைக்கப்பட்ட மனதைக்கவரும், பக்தி உருக்கத்துடன் கூடிய கதைத்தொகுப்பு என்று இதனைக் குறிப்பிடலாம். தெய்வத்தின் அதிசயங்களும், செயல்களும் இதில் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. புனிதர்களைப் பற்றிய வியப்பு, அதிசயம் மற்றும் சமய, சமுதாய நற்கோட்பாடுகள் போன்றவையும் இத்துடன் இணைக்கப்படும். புனிதருடன் சம்பந்தப்பட்ட விழாக்களின்போது, அவரைப்பற்றிய கதைகள் அனைவருக்கும் கூறப்படும். இன்றைய வடிவில் மோசே மற்றும் யாத்திரைக் கதைகள் உள்ளதைப் போன்று, கதை வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு அமையலாம்.

இங்கு இறைவனுடைய மீட்புச் செயல்கள் மீண்டும் கூறப்பட்டு, மீண்டும் வாழ்ந்து காட்டப்படுகின்றன. எனவே, இவை விழா சம்பந்தப்பட்ட புராணக்கதை என்று கூறப்படலாம்.

பழைய ஏற்பாட்டிலுள்ள பெரும்பாலான கதைகள் இறைவாக்கினர்களுடனும், அவர்களது அதிசயிக்கத்தக்க முன்னறிவிப்புகள், புதுமைகள் போன்றவற்றுடன் தேவதைக் கதைகளைப் போன்ற நோக்கங்களை வைத்தும் எழுதப்பட்டுள்ளன. எலியா பற்றிய கதைகளே இக்காவியங்களில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. எலிசா பற்றிய கதைகள் 'தூய மனிதர்' என்னும் சொல்லையே கொண்டு விளங்குகின்றன. ஏசயா கதைகளில் பக்தி மனப்பான்மையும் (36-39) கதையின் நோக்கங்களும் இணைந்து காணப்படுகின்றன. சிதறிப்போதல் என்பதன் ஆன்மீக நிலை தானியேல் கதைகளில் சிந்திக்கப் படுகிறது.

திருமுறையைச் சேராத இலக்கிய ஏடுகளான, மோசேயின் விண்ணேற்றம்; ஜுபிலிகளின் புத்தகம், கும்ரான் குகைகளில் எடுக்கப்பட்ட, ''போலி ஆதியாகமப் பகுதிகள்''; பன்னிரு மூதாதையர்களின் ஏற்பாடுகள், பெரிய செபக்கூடம் போன்றவை சிறிதளவு உலக அளவிலான தேவதைக் கதைகளின் நோக்கங்களும், சிறிதளவு விரிவுபடுத்தப்பட்ட விவிலியப் பகுதிகளும் சேர்த்து எழுதப்பட்டவையாக உள்ளன. யோசிப்பசிலும் தால்மூதிலும் உள்ள பிலயாம் இதற்குத் தக்க உதாரணமாகும். பின்னாளைய யூதமதம், வேதசாட்சிகளைப்பற்றிப் பலகதைகளைக் (உ-ம் 2 மக்கபேயர் மற்றும் ஏசயாவின் மரணம்) குறிப்பிடுகின்றது.

5. புராணக்கதை:- வழிபாட்டில் மீளவும் நிகழ்கின்ற, வாழ்ந்து காட்டப்படுகின்ற மீட்பின் கோட்பாடுகள் மற்றும் செயல்களின் உண்மையான புராணம் என்பது, கதையினின்று வேறுபட்டதாக இருக்க வேண்டும். ஆனால், இங்கும் அவற்றிற்கு இடையிலான எல்லை கூர்மையானதாக இல்லை. கவிஞர்களின் கையில் இருக்கும்போது வழிபாட்டுப் பு[illegible]ணம்கூட வழிபாட்டுடன் உள்ள நேரடித் [illegible]தொடர்பை இழந்துவிட்டு, காரணக் கதை பே[illegible]ன்ற பாடல் இலக்கியமாக மாறிவிடுகின்ற[illegible]. சுமேரிய கில்காமிஸ் காப்பிய[illegible] [illegible]வரலாறு கடவுள் பாதி இறைத்தன்மை [illegible] கொண்ட தலைவனாக வருவதாகவும், உகா[illegible]த்[illegible] இலக்கிய[illegible] போன்று மனித

ரின் சிறப்பான வம்சத்தை ஏற்படுத்துபவராக வும், இவ்விலக்கியம் வாழ்க்கையில் இடம் பெறுகிறது.

கத்தாத்து (HATHATH)

காலேபின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒதினியேலின் மகன் (1 நாள் 4:13).

கத்தாத்து (KATTATH - சிறிய)

இது செபுலோனில் உள்ள ஓர் ஊர் (யோசு 19:15). இந்த ஊரும் கேத்திரோனும் ஒன்று எனக் கருதப்படுகிறது (நீதி 1:30). பின்னதிலிருந்து கானானியர்களை இஸ்ராயேலரால் விரட்ட முடியவில்லை. இந்த இடம் தேல் கெயிமுன்னுக்குத் (விவிலிய யோக்கினயாம்) தென்மேற்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் கொத்தையினாவாக இருக்கலாம்.

கத்தி (KNIFE)

வீட்டு வேலைகளில் வெட்டுவதற்குப் பயன்பட்ட ஒரு கருவி. இதைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன.

அகழ்வாய்வுகளின்படி, சாதாரணமாய்ப் பயன்பட்ட கத்தி 15-25 செ.மீ. நீளமுள்ளதாகும். கற்கத்திகள் கி.மு. 3500 வரைக்கும், செம்புக்கத்திகள் கி.மு. 1220 வரைக்கும், மீதமுள்ள விவிலியக் காலம் முழுவதிலும் இரும்புக் கத்திகளும் பயன்பட்டன. இவை விலங்குகளைக் கொல்லவும் (ஆதி 22:6-10; நீதி 19:29) மரங்களைக் கவாத்து செய்யவும், உணவு உண்ணவும் (பழ 30:14) இது போன்ற பல நோக்கங்களுக்கும் பயன்பட்டன.

இஸ்ராயேலரை விருத்த சேதனம் செய்வதற்காகக் ''கற்களால் கத்திகள்'' செய்யும்படி யோசுவாவுக்கு இறைவன் கட்டளையிட்டார் (யோசு 5:2-3). போர் பற்றிய இறைவாக்கை எடுத்துக் காட்ட, இதையொத்த கருவியாவில் முடியை வெட்டிக்கொள்ளுமாறு எசக்கியேலுக்கு இறைவன் கட்டளையிட்டார் (எச 5:1-2). சவரக்கத்தி குறிக்கப்படுகிறது; பயன்பட்டதாகத் தெரிகிறது. சைரசு திரும்பக் கொடுத்த ஆலயப் பொருட்களில் கத்தியும் இடம்பெறுகிறது (எஸ் 1:9).

கத்திபா (HATIPHA - கைதியாகப் பிடிபட்ட)

அடிமைத் தனத்தினின்று திரும்பிவந்த ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத்தலைவர் (எஸ் 2:54; நெக 7:56).

கத்திரி, அணைப்பான் (SNUFFERS)

விளக்கின் கரிந்த திரியினை வெட்டப் பயன்படுத்தப்படும் கத்தரிக்கோல் (2 அர 12:13; 25:14; எரே 52:18) அல்லது குறடு (ஏச 6:6) போன்ற கருவி.

ஆலயங்களிலும் வாக்குத்தத்தத்தின் பெட்டகத்திலும் விளக்கு அணையாமல் காப்பதற்காக அதன் கருகிய திரியினை அவ்வப்போது வெட்டப் பயன்படுத்தப்பட்ட ஒருவகைக் கத்தரி அல்லது குறடு (யாத் 37:23;...)

இக்கருகியதிரி கத்தரிப்புக் கருவி பசும் பொன்னால் செய்யப்பட்டிருந்ததாக ஒரு கருத்து நிலவி வந்திடினும், 2 அர 25:14; எரே 52:18 குறிப்புகளின்படி இவை வெண்கலத்தினால் செய்யப்பட்டமை தெரியவருகின்றது. 2 அர 24:14; எரே 52:8 ஆகியவை இக்கருவி திரியை வெட்டப் பயன்படுத்தப்பட்ட ஒருவகைக் கத்தரி என்று கூறினாலும், ஏச 6:6-இல் உள்ளபடி இது கரிநெருப்பினை எடுக்கவல்ல ஒருவகைக் குறடாகவும் இருந்திருக்கலாம் என்பதை மறுக்கமுடியாது.

கத்தீல் (HATTIL - தடுமாறும், ஐயுறும்)

சாலமோனின் ஊழியர்களுடைய மக்கள் குடும்பங்களில் ஒன்று (எஸ் 2:57; நெக 7:59).

கத்தூசு (HATTUSH)

1. அடிமைத்தனத்திற்குப் பின் தாவீதின் வழிவந்தவர்களில் ஒருவரும், எஸ்ராவுடன் யூதாவுக்குத் திரும்பி வந்தவரும் ஆவார் (1 நாள் 3:22; எஸ் 8:2). 1 நாள் ஆகமத்தில் கத்தூசு செக்கனியாவின் பேரனாகவும், எஸ்ராவின் மகனாகவும் குறிப்பிடப்படுகிறார்.

2. நெகமியாவின் தலைமையில் எருசலேம் மதிலை மீண்டும் கட்டியவர்களுள் ஒருவர் (நெக 3:10). சிலர் மேலே (1)

குறிப்பிடப்பட்டிருக்கும் ஆளோடு ஒன்றாக் குகின்றனர்.

3. அடிமைத்தனத்திற்குப் பின் உள்ள ஒரு குரு (நெக 12:2). இவர் இஸ்ராயேலின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டார் (நெக 10:4; 12:2).

கந்தகம், கந்தகக்கல் (BRIMSTONE)

இது சோதேம் கொமேரா நகரங்களை அழிப்பதற்கும் (ஆதி 19:24; லூக் 17:29), நெறிகெட்டவர்களையும், தீயவர்களையும் அழிப்பதற்கும் (உப 29:23; யோபு 18:15; சங் 11:6), அசீரியா மன்னனை அழிக்கவும் (ஏச 30:33), ஏதோம் நாட்டை அழிக்கவும் (34:9), கோகுவை அழிக்கவும் (ஏச 38:22), சிலை வழிபாட்டுக்காரர்களை அழிக்கவும் (திரு வெளி 14:10), கொடிய மிருகங்களையும், போலி இறைவாக்கினர்களையும், அழிக்க வும் (19:20), அலகையை அழிக்கவும் (20: 10), மற்றும் பொதுவாகப் பாவிகளை அழிப் பதற்கும் (21:8) கடவுள் பயன்படுத்திய ஒரு பொருளாக விவரிக்கப்படுவது ஆகும்.

கந்தாக்கு (CANDACE)

எத்தியோப்பியா அரசிகளில் ஒருத்தி. பிலிப்பு இவளுடைய அண்ணகரான பொரு ளாளனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். கந் தாக்கு என்பது ஒரு பட்டம், (ஏறக்குறைய 'அரசி' எனப் பொருள்படும்; சரியான பொருள் தெரியவில்லை) ஆள்பெயரல்ல. இன்றைய சூடானில் நைல் நதியின் கரையி லுள்ள மெரோ, நபத்தா நகர்களைக் கொண்ட அரசைச் சேர்ந்த எத்தியோப்பியா வின் பல அரசிகள் இந்தப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அ.ப.8:27-இல் உள்ள கந்தாக்கு (கி.பி.30-ஐ ஒட்டிய காலம்) என்பது ஆளும் அரசித்தாய்க்குக் கொடுக்கப்பட்டது. இது பூர்வீக வரலாற்று ஆசிரியர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அகுஸ்து, நீரோ காலத்தில் இருந்த அரசிகள் இந்தப் பட்டத்தைப் பயன்படுத்தினர். கி.மு. 300க்கும் கி.பி.300க்கும் இடைப்பட்ட காலத் திய பல கந்தாக்குகளின் பிரமிடு கல்லறை கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கபசினியா (HABAZZINIAH - யாவேயின் களிப்பு)

எரேமியாவால் சோதிக்கப்பட்ட இரக்கா பியரான யாசானியாவின் தாத்தா (எரே 35:3).

கபடு, வஞ்சகம் (GUILE)

சூழ்ச்சி, ஏமாற்றுத்தந்திரம்; நம்பிக்கைத் துரோகம்; வஞ்சகம், ஏய்ப்பு. ஒருவனுக்கு வஞ்சகம் செய் என்றால், அது அவனை ஏமாற்றுவதாகும். இச்சொல்லுக்குத் தகுந்த எதிர்ச்சொல் நேர்மையும், வாய்மையுமா கும். உரோ 16:19-இல் பவுல் உரோமைக் கிறிஸ்தவர்களை ''நீங்கள் நன்மை செய்வ தில் ஞானிகளாகவும், தீமை செய்வதில் பேதைகளாகவும் இருக்கவேண்டுமென விழைகிறேன்'' என்று தூண்டுகிறார். ஒரு வேளை வாய்மையுள்ள, நேர்மையுள்ள கிறிஸ்தவர்கள் நன்மையையும் தீமையை யும் இனம் கண்டுகொள்ளக் கற்றுக் கொண்டு, தங்கள் ஒழுக்கத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்பது அவரது நம்பிக்கையாக இருக்கும். யோவா 1:47-இன்படி நத்தானி யேலிடம் கபடு இல்லாததால் இயேசு பாராட்டினார். 1 பேதுரு 2:22-இல் 'அவர் பாவம் எதுவும் செய்ததில்லை, அவரது வாயினின்று வஞ்சகம் வெளிப்பட்டதில்லை' என்று இயேசு பாராட்டப்படுகின்றார். அதே திருமுகத்தின்படி 3:10-இல் ''வாழ்வை விரும்பி இன்ப நாளைச் சுவைக்க விழைப வன் தீமையினின்று தன் நாவைக் காத்துக் கொள்க; வஞ்சகப் பேச்சினின்று தன் வாயைக் காத்துக்கொள்க'' என்று குறிப்பி டப்படுகிறது. ஆதி 27:35-இன்படி 'யாக் கோபு கபடமாய் வந்து உனக்கு உரித்தான ஆசிரைப் பெற்றுச்சென்றுவிட்டானே' என்று ஏசாவிடம் ஈசாக்கு ஒத்துக்கொண்டார் (காண் சங் 119:78; பழ 26:26).

கபத்தா (GABATHA)

அகசுவேரு அரண்மனையில் தங்கியிருந்த அரண்மனைக் காவலரும் அரசனுக்கு எதிரா கச் சதி செய்த இரு அண்ணகர்களில் ஒருவ ரும் ஆவார். இவர்களுடைய சதியை மோர் தெக்காய் கண்டுபிடித்து வெளிப்படுத்தினார் (எஸ்த 12:1).

கபத்தா (GABBATHA - திறந்தவெளி, உயர்ந்த இடம்)

கபத்தா என்ற அரமேயச் சொல்லுக்குக் கல்தளம் என்பது பொருள். திறந்தவெளி, அல்லது உயரமான இடம் என்றும் பொருள் வரும். எருசலேமில் ஏரோதின் அரண் மனைக்கு முன்னால் உள்ள உயரமான இருக்கை அமைந்த கல்பாவப்பட்ட இடத் தைக் கபத்தா என்று கூறுவார்கள்.

இந்தச் சொல் விவிலியத்தில் ஒருமுறை மட்டுமே பயன்பட்டுள்ளது (யோவா 19:13). இதற்கு இணையான கிரேக்கச் சொல் சில இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. போந்தியு பிலாத்தின் முன்னிலையில் இறு தித் தீர்ப்புக்காக இயேசு நின்ற இடம் இதுவே. இது ஆளுநர் தங்கும் இடத்திற்கு வெளியில் இருந்தது. இந்த இடம் உறுதியாக அடையாளம் காட்டப்படவில்லை. மத்திய காலத்திலிருந்து ஏரோது கட்டிய கோட்டை யின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது என்றனர். தியடோசியஸ் ''பிலாத்தின் வீடு'' என்றழைக்கும் ஏரோதின் அந்தோனியாக் கோட்டை அருகில் இந்த இடம் இருந்ததா கக் கருதப்படுகிறது. ஆனால் கல்பாவப் பட்ட இடம் காணப்படவில்லை. அருகி லுள்ள ''சியோனின் தாய்'' என்ற துறவியர் இல்லத்தின் நிலவறையில் காணப்படும் கல் பாவப்பட்ட தளம் இக்கருத்துக்கு ஆதரவு அளிக்கிறது. இவ்விடத்தில் 2000 ச.மீ.பரப் புள்ள கல்தளம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள் ளது. இதன் ஓரத்தில் ''இதோ மனிதன்'' என்ற தோரண வளைவு உள்ளது (19:5). இங்குக் காணப்படும் கற்கள் ஒரு ச.மீ.பரப் பும் 30 செமீ. பருமனும் உடையவை. அவற் றின் மேல் விளையாட்டுக்கோடுகள் காணப் படுகின்றன. இந்தத்தளம் ''கசையடித்'' துற வியர் இல்லம்வரை பரவியுள்ளது. இயேசு வின் காலத்தில் இந்த இடம் நகரின் வடசுவ ருக்கு வெளியில் அமைந்திருந்தது. பிற்கா லத்தில் முதலாம் ஏரோது அகிரிப்பாவும், அதிரியானும் கட்டிய சுவர்கள் இதை அந் தோனியாக் கோட்டையின் வடகிழக்குப் பகுதியில் உள்ளடக்கின. வேறு சிலர், கல் தளத்தையும் தோரண வளைவையும் அதிரி யான் காலத்தில் கட்டப்பட்டதாகக் கணித்து, கபத்தாவை நகரின் மேல்பகுதியில் அடை யாளம் காட்டுகின்றார். இது அர்மேனியன் கிழக்குத்திருச்சபைக் குருகுலமடத்திற்கரு கில் இக்கால யாப்பா வாயிலுக்குக் கிழக்கே உள்ளது.

கபயா (HABAIAH - யாவே மறைத்து வைத் தார்)

அடிமைத்தனத்தினின்று செருபாபே லோடு திரும்பிய கபயாவின் மக்கள் தங்கள் குருத்துவப் பாரம்பரியத்தை எண்பிக்கமுடி யாததால் குருத்துவப் பணியினின்று நீக்கப் பட்டனர் (எஸ் 2:61; நெக 7:63).

கபர்ச்சலாமா (CAPHARSALAMA)

யூதா மக்கபேயுவுக்கும், சீரியாவின் தளபதி யான நிக்கானோருக்கும் இங்குப் போர் நடைபெற்றது. இதில் யூதர்கள் வென்றார் கள். நிக்கானோர் ஐநூறு வீரர்களை இழந்தார் (1 மக் 7; 31-32). இந்தப் போரானது 2 மக் 4;6 -இல் சொல்லப்பட்டுள்ள தெசாவில் நடந்த போராக இருக்கலாம் என்று கருதப் படுகிறது. எருசலேமிற்கு வடமேற்கே ஏறக் குறைய 10 கி.மீ.தொலைவில் பெத்துகோரா னுக்கு அருகிலுள்ள கிர்பெத்செல்மா என்ற இடமாக இது இருக்கலாம் என்று வேறு சிலர் கருதுகின்றனர்.

கபிசேல் (KABZEEL - இறைவன் ஒன்று சேர்ப்பாராக)

இது யூதேயாவின் தென் கிழக்குக் கோடி யில் ஏதோமின் எல்லை ஓரமாக உள்ள ஊர் (யோசு 15:21). தாவீது, சாலமோன் மன்னர்க ளின் தலைமை அதிகாரிகளுள் ஒருவனான பெனாயாவின் சொந்த ஊர் (2 சாமு 23:20; 1 நாள் 11:22). இந்நகரானது பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப்பின் யூதேயர்களால் மீண்டும் குடியேறப்பட்டது. இது இருந்த இடம் தெரியவில்லை.

கபிரி (CHABRIS)

இவர் கொதொனியேவின் மகன். பெத்தூ லியாவில் உள்ள மூப்பர்களுள் ஒருவர். இவர்களிடம்தான் யூதித்து உதவி கேட்டுச் சென்றார் (யூதி 6:15; 8:10; 10:6).

கபிரியா (GABRIAS)

கபேலின் சகோதரர் அல்லது தந்தை. கபேலிடம் தோபித்து விட்டுச்சென்ற பணத்தை வாங்கிவருவதற்காகத் தோபியா அனுப்பப்பட்டார் (தோபி 1:14; 4:20).

கபிரியேல் (GABRIEL - இறைவன் ஆற்றலுடையவர்; இறைவனது மனிதர்)

இந்த வான தூதர் தானியேலுக்குக் காட்சியில் தோன்றி இறைவாக்கை விளக்குகிறார் (தானி 8:6). வரவிருக்கும் தீர்ப்பின் நாளை வெளிப்படுத்தவும், காட்சியை விளக்கிக் காட்டவும் அனுப்பப்படுகிறார் (8:17). தானியேலுக்கு விவேகத்தையும் மெய்யுணர்வையும் அளிக்க அவர் வந்தார் (9:22). பிற்கால இலக்கியங்களில் அவருடைய பெயரும் அலுவலும் சிறப்புப் பெறுகின்றன. கபிரியேல் தூதர் விண்ணிலிருந்து பார்ப்பவர். கடவுளின் மகிமை மிக்கவர்களில் ஒருவர்; பரிசுத்த அதிதூதர். கடவுளின் இடப்பக்கம் அமர்ந்திருப்பவர். வெளிப்படுத்துபவர் மட்டுமின்றிப் பரிந்துபேசுபவரும் ஆவார். சில சமயம் கடுமையாகச் செயல்படுவார். தீயவர்களை அழித்து, இறைவனுக்காகப் பழிவாங்குகிறார் (ஏனோக்கின் நூல்கள்). புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்துபவராகவும் உறுதி அளிப்பவராகவும் காட்டப்படுகிறார். திருமுழுக்கு யோவானின் பிறப்புச் செய்தியை அறிவிக்கிறார் (லூக் 1:11-20). மரியாளுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று அறிவிக்கிறார் (லூக் 1:26-35). அவர் கடவுளின் நிலையில் இருப்பதால் ''பயப்படாதே உன் செபம் கேட்கப்பட்டது'' என்றும், ''அஞ்சாதே, நீ இறைவனிடம் சலுகை பெற்றுள்ளாய்'' என்றும் உறுதி அளிக்கிறார்.

இறைதூதர் இருக்கின்ற இடத்தில் இறைவன் முழுமையாகப் பிரசன்னமாயிருக்கிறார். கபிரியேல் தூதர் அதிகாரத்தாலும், அருள் தன்மையாலும் அனுப்பியவரையே வெளிப்படுத்துகிறார். அறிஞர் சிலர் திருவெளி 8:2-இல் வரும் ஏழு வானதூதர்களில் கபிரியேலும் ஒருவராவார் என்று கருதுகின்றனர்.

கபீரு (HABIRU)

ஒரு மக்கள் கூட்டத்தின் பெயர். இச்சொல்லுக்குரிய இரண்டு விதமான உச்சரிப்புகளில் எது சரியானது என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆதலால் இரண்டு பெயருமே அதற்கு விளங்குகிறது.

ஊரின் மூன்றாவது அரச பரம்பரையில் கி.மு.2050 ஆண்டளவில் இந்தக் கபீரு என்ற சொல் காணப்படுகிறது. அதிலிருந்து மேற்காசியாவில் காணப்படும் ஏடுகளில் இச்சொல் இடம் பெறுகின்றது.

கபீருகளின் சமூக வாழ்க்கையைப் பொறுத்தவரையில் ஏதாவது ஓர் அரசனது பணியில் குறிப்பாகப் போர் வீரர்களாகப் பணிசெய்கின்றனர். அவர்களின் பெயர்கள் பெரும்பாலும் மேற்குச் செமித்தியப் பெயர்களாக உள்ளன. சில பெயர்கள் அக்காதியப் பெயர்களாகவும் உள்ளன; செமித்தியப் பெயர்களைச் சாராதவைகளாகவும் உள்ளன. இது இச்சொல் ஓர் இனப்பெயரன்று, ஒருவகைச் சமூகக் குழுவையே குறிக்கிறது என்று கருத ஆய்வாளர்களைத் தூண்டியுள்ளது. இவ்வாறு போகாஸ்கோய் பட்டியலில் கபீரு என்பது ஒரு சமூக வகுப்பைக் குறிக்கிறது. அவர்கள் தாழ்ந்த குலத்தவராகக் கருதப்பட்டிருக்கிறார்கள். சுதந்தரக் குடிமகனுக்கும், அடிமைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் ஒரு வகையினராக இருந்திருக்கிறார்கள். இன்னும் சில சுவடிகளில் கபீரு இனத்தவரின் கடவுள்கள் குறிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் ஒரு தனி வகுப்பினரைச் சார்ந்தவர்கள் என்பது தெளிவாகிறது.

சில சுவடிகளில் இது இனப்பெயராகத் தோன்றுகிறது. இவ்வாறு மாரி ஏடுகளும், அலலாகு ஏடுகளும் குறிக்கின்றன. இதிரிமி என்ற அரசர் கபீரு போர் வீரர்களிடையே ஏழு ஆண்டுகளாக இருந்தார். அவர்கள் குழுக்குழுவாக வாழ்ந்து வந்தார்கள். அமர்னா ஏடுகளில் கபீரு மக்கள் மேற்கு செமித்தியப் பெயர்களைக் கொண்டவர்களாகத் தோற்றமளிக்கிறார்கள். மேலே கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து அவர்கள்

சில இடங்களில் ஒரு சமூகக் குழுவாகவும் மற்ற இடங்களில் இனக்குழுவாகவும் தோன்றுகின்றனர். மூலத்தில் குழுவைக் குறித்த பெயர் பின்பு இனத்தைக் குறிக்கும் பெயராக மாறியிருக்கலாம். இந்த வளர்ச்சி, கானானியர் என்ற பெயரின் வளர்ச்சிக்கு ஒத்ததாகும். ஆதி 14-இல் ஆபிரகாம் எபிரேயர் என்றழைக்கப்படுகிறார். இது இனப்பெயராகவும், சமூகக்குழுப்பெயராகவும் இருக்கலாம். ஆனால் பழைய ஏற்பாட்டில் எபிரேயர் என்ற பெயர் பொதுவாக ஓர் இனப்பெயராகும். ஒரு வேளை எபிரேயர் என்பதன் அக்காதியவடிவம் கபீராக இருக்கலாம்; எபிரேயர் கபீருவின் ஒரு பிரிவினராக இருக்கலாம்.

கபேல் (GABAEL)

1. தோபித்தின் ஒரு முன்னோர் (தோபி 1:1).

2. கபிரியாவின் புதல்வன் அல்லது சகோதரன். இவர் இராகியுவில் வாழ்ந்து வந்தார். இவரிடம்தான் தோபித்து 14 தாலந்து வெள்ளியை விட்டு வைத்திருந்தார். பின்பு அதைப் பெற்றுவரத் தோபியாவை அனுப்பினார் (தோபி 4:1-20; 5:6;10:2) இரபேல் இராகியு சென்று, கபேலைக் கண்டு அவரது பத்திரத்தை அவரிடம் கொடுத்து, பணம் முழுவதையும் பெற்றுக்கொண்டு அவரைத் தம்மோடு தோபியாவின் திருமண விருந்திற்கு அழைத்து வந்தார் (9:2-6).

கபோன் (CABBON - சுற்றிப்போர்த்து, சுற்றிவளை)

இலாக்கீசிலுள்ள செப்பேலாவில் யூதாவைச் சேர்ந்த ஓர் ஊராகும் (யோசு 15:40). அனேகமாக இலாக்கீசிற்குக் கிழக்கேயுள்ள கெபிராவாக அடையாளம் காட்டப்படலாம். சில சமயங்களில் இதுவும் மக்கபேனாவும் ஒன்றாகும் என்று கருதப்படுகிறது (1 நாள் 2:49).

கப்பதோக்கியா (CAPPADOCIA)

இது, புதிய ஏற்பாட்டின்படி, சிறிய ஆசியாவில் கிழக்குப் பகுதியிலிருந்த ஒரு பெரிய உரோமை மாகாணம்.

கப்பதோக்கியாவின் எல்லைகள் காலப் போக்கில் பெருமளவு மாறியிருக்கின்றன; ஆனால், பொதுவாகப் போந்துவையும் காவி ஆற்றோடு கூடிய மலைப்பகுதியையும் தெற்கு எல்லையாகவும், கலாத்தியாவையும் இலிக்கவோனியாவையும் கிழக்கு எல்லையாகவும், சிலிசியாவையும் தவுரஸ் மலையையும் வடக்கு எல்லையாகவும், அர்மேனியாவையும் யூப்பிரத்திசு ஆற்றையும் மேற்கு எல்லையாகவும் கொண்டிருந்தது.

பாரசீகர் காலத்திலும், செலூக்கியர் காலத்திலும் இப்பகுதி குறுநில மன்னர்களால் ஆளப்பட்டது. உரோமையர் இதை ஆண்ட காலத்தில் இதற்கு ஒரு சிற்றரசன் இருந்தான். இதனுடைய கடைசி அரசனான அர்கெலாவு என்பவன் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு உரோமைக்கு அழைக்கப்பட்டான். இவன் கி.பி. 17-இல் இறந்த பிறகு, இஃது ஓர் அரச மாகாணமாக மாற்றப்பட்டு, ஆளுநரின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இச்சமயத்தில் இதனுடைய பரப்பளவு 33000 சதுர மைல்கள். பிறகு வந்த பேரரசர்களின் ஆட்சியின்கீழ் இதன்பரப்பளவு இன்னும் வளர்ந்தது; இது முக்கியமான எல்லை மாகாணமாகியது.

கப்பதோக்கியா ஒரு கரடுமுரடான மலைப்பகுதியாகும்; சில நகரங்களையே கொண்டிருந்தது. அவற்றில் முக்கியமானவை தியான், மசாக்கா (செசரியா) ஆகியவையாகும். இதில் மரங்கள் இல்லை, ஆனால் விளைச்சலுக்கு, சிறப்பாக கோதுமைக்குப் பெயர்போனது. கால்நடைகளுக்கும், குதிரைகளுக்கும் புகழ் வாய்ந்தது. மஞ்சள் களிமண், வெண்கலம், அப்பிரகம், வெள்ளி, ஈயம் போன்ற தாதுப்பொருட்களை ஏற்றுமதி செய்தது. சில பகுதிகளில் அருமையான திராட்சைரசம் தயாரிக்கப்பட்டது. இங்குச் சென்ற சாலைகளின் பொருட்டு, போர் முக்கியத்துவம் வாய்ந்து திகழ்ந்தது.

கி.மு.2-ஆம் நூற்றாண்டிலேயே கப்பதோக்கியாவில் குறிப்பிடத்தக்க யூத சமுதா

யம் இருந்தது என்று கப்பதோக்கிய அரசனான, அரியாரதேசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (1 மக் 15:22). கப்பதோக்கியாவிலிருந்து யூதர்கள் ஐம்பதாம்நாள் விழாவின்போது எருசலேமுக்கு வந்திருந்தனர் (அ.ப.2:9). முதல் நூற்றாண்டின் முடிவிற்குள் கிறிஸ்துவ மதமானது கப்பதோக்கியாவிலிருந்து போந்துக்குப் பரவியது (1 பேதுரு 1:1). கி.பி.4-ஆம் நூற்றாண்டிற்குள் புதிய மதம் செழிப்புற்று வளர்ந்திருந்ததாகத் தெரிகிறது. கப்பதோக்கியத் திருச்சபை சிறந்த தலைவர்களைக் கொண்டிருந்தது. அதன் தலைநகரான செசரியா (மசக்கா) கிறிஸ்தவ மதத்தின் முக்கிய மையங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது.

கப்பதோரியர் (CAPHTORIM)

கப்பதோரில் வாழ்ந்த மக்கள் (ஆதி 10:14; உப 2:23; 1 நாள் 1:11)

கப்பதோர் (CAPHTOR)

விவிலியப் பாரம்பரியத்தின்படி இங்குதான் பெலிஸ்தியர்கள் முதன்முதலில் தோன்றினார்கள்.

அக்காதிய ஏடுகளில் இப்பெயர் முதலில் கப்பதாரா என்று உள்ளது. மாரி ஏடுகளிலும், அக்காதிய, உகாரித்து வாசகங்களிலும் இப்பெயர் காணப்படுகிறது. மிகத் தொன்மையான புவியியல் குறிப்பு, இது பெருங்கடலுக்கு அப்பால் அமைந்துள்ளதாகவும், அக்காதின் அரசன் சார்கோனின் ஆதிக்கத்திற்குட்பட்டதாகவும் விவரிக்கப்படுகிறது.

கெப்டியு என்ற வார்த்தை கி.மு.2200-1200க்கு இடைப்பட்ட எகிப்திய ஏடுகளில் காணப்படுகிறது. எகிப்திய இயல் அறிஞர்களின் கருத்துப்படி இது கப்பதாரா அல்லது கப்பதோரின் எகிப்திய வடிவமாகும். புவியியல், வரலாறு, இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் இது கிரேத்துத் தீவாகும் என்பது தெளிவு. இதனுடன், கி.மு.2200-க்குப் பிறகு எகிப்து பொருளாதார உறவுகளை வைத்திருந்தது.

விவிலியப் பாரம்பரியத்தில் பெலிஸ்தியர்கள் கப்பதோரிலிருந்து வந்தவர்களாவர் (எரே 47:4; ஆமோ 4:7). உப 2:23-இல் அவ்வியர்களை விரட்டியடித்த பெலிஸ்தியருக்குப் பதிலாகக் கப்பதோரியர் என்ற பெயர் பயன்படுத்தப்படுகிறது. ஆதி 10:14 (1 நாள் 1;12)-இல் கப்பதோரியர் எகிப்திய வழித்தோன்றல்கள் என்றும் பெலிஸ்தியர் கசுலுகியர் என்றும் விவரிக்கப்படுகிறது. இந்த இரு பாரம்பரியங்களுக்கிடையே பல பிரச்சனைகள் உள்ளன; ஏனெனில் பெலிஸ்தியர்கள் கிரேத்தில் தங்கியிருந்ததற்கு ஒரு ஆதாரமுமில்லை. புதைபொருள் ஆராய்ச்சிகளிலிருந்தும், இலக்கிய மூலங்களிலிருந்தும் பெலிஸ்தியர்களைப் பற்றி அறிந்தவைகளிலிருந்து, இவர்கள் கிரேத்தில் தங்கினார்கள் என்பதற்கு அறிகுறியில்லை. சில வல்லுநர்கள் கப்பதோரானது சிறிய ஆசியாவின் கடற்கரைப் பகுதி என்றும் அல்லது கார்பதோஸ் தீவு என்றும் கூறுகின்றார்கள். ஆனால் இவைகளுக்கு ஆதாரமில்லை.

மேற்சொன்ன இருபாரம்பரியங்களுக்கிடையே உள்ள முரண்பாட்டை விளக்க, சில பெலிஸ்தியர்கள் கிரேத்தைவிட்டு, கசுலுகியர் வாழ்ந்த நைல்நதிக் கழிமுகத்தில் குடியேறினர். பின்பு பாலஸ்தீனத்தின் மேற்குப் பகுதியான பெலிஸ்தியாவில் குடியேறினர் என்று அறிஞர் சிலர் ஏற்றுக்கொள்வர்.

கப்பம், திறை (TRIBUTE)

வெற்றிபெற்ற நாடு, தோற்கடிக்கப்பட்ட நாட்டை வலுக்குறையச் செய்வதற்காக அதனிடமிருந்து பணமாகவோ பொருளாகவோ கோரும் பெரும் தொகையாகும்.

மேற்காசியாவில் இது சாதாரண வழக்கமாகும். கானான் நாட்டில் குடியேறிய தொடக்கத்தில் இஸ்ராயேலர் மோவாபியருக்குக் கப்பம் செலுத்தினர் (நீதி 3:15-18). பிற்காலத்தில் தாவீது மோவாபியரிடமிருந்தும் (2 சாமு 8:2), சீரியர்களிடமிருந்தும் (8:6) கப்பம் வாங்கினார். சாலமோன் ''யூப்பிரத்திசு தொடங்கிப் பெலிஸ்தியரின் நாடுவரையிலும், எகிப்தின் எல்லை வரையிலும்

இருந்த நாடுகளிடமிருந்து'' கப்பம் வாங்கினார் (1 அர 5:1; சங் 72:10). நாடு இரண்டாகப் பிளவுபட்டபின் யூதா நாடு பெலிஸ்தியர், அராபியர்கள், மற்றும் அம்மோனியர்களிடமிருந்து கப்பம் பெற்றது (2 நாள் 17:11; 26:8). மெரொதாக்கு - பலதானின் தூதுவர்கள் எசக்கியாவுக்கு ''அன்பளிப்பு'' கொடுத்தனர் (2 அர 20:12). இது ஒருவேளை, இரண்டு நாடுகளில் சிறியதான யூதாவை அசீரியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டுவதற்காக இருக்கலாம். இஸ்ராயேல் நாடு அடிக்கடி கப்பம் செலுத்த வேண்டியிருந்தது. ஓசியா அசீரியர்களுக்குக் கப்பம் செலுத்த மறுத்தது அந்நாட்டை முடிவுக்குக் கொண்டுவந்தது (17:3-6).

கப்பர்நகூம் (CAPERNAUM - நகூமின் கிராமம்)

கலிலேயாக் கடலின் வடமேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஊர்.

1. இருப்பிடம்:- 'நாகூம்' என்ற நபரின் பெயரால் 'கப்பர் நகூம்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தாலும், பழைய ஏற்பாட்டில் இப்பெயர் கொண்ட இறைவாக்கினருக்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை. யோசிப்பஸ், நற்செய்திகள் அளிக்கும் சாட்சியங்கள் இந்த ஊரின் இருப்பிடத்தைப் பற்றி உறுதியாகக் கூறப் போதியவையல்ல.

இந்த ஊர் இருந்ததாக இரண்டு இடங்கள் குறிக்கப்படுகின்றன. வடமேற்குக் கரையில், கெனசரேத்துச் சமவெளியின் வடகிழக்கு எல்லையிலுள்ள இன்றைய கிர்பெத்து மின்யே என்ற இடத்திலுள்ள பழங்காலச் சிதைவுகள்தான் இந்த இடம் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. இக்கருத்துக்கு யோசிப்பஸ் ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் கெனசரேத்திலுள்ள நீரூற்றுகள் நிறைந்த இடத்தின் பெயராகக் கப்பர்நகூமைக் குறிப்பிடுகிறார். மின்யேவிற்கு அருகில் இரண்டு நீரூற்றுகள் உள்ளன. பயணிகளும் (கி.பி.670) இந்த இடத்தைக் கப்பர்நகூம் என்று அழைத்தாலும், 1931-இல் நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் இது ஓர் அரேபியருடைய இடம் என்று நிரூபித்துள்ளன.

கிர்பெத்து மின்யேவிற்கு வடகிழக்கே ஏறக்குறைய 4 கி.மீ. வட கிழக்கிலுள்ள தேல் கும் என்ற இடம்தான் கப்பர்நகூம் என்று இப்பொழுது முடிவாகத் தெரிந்துள்ளது. தியதோசியஸ் (530) காலத்திலிருந்து உள்ள கிறிஸ்துவப் பாரம்பரியம் இதுதான் கப்பர்நகூம் என்று சொல்கிறது.

தேல் கும் ஆனது கடற்கரையில் குறுகிய சமவெளியில் அமைந்துள்ளது. இது நற்செய்திகளில் நகரம் என்று அழைக்கப்படுவதும், அதனுடைய சிதைவுகள் 1 கி.மீ. நீளத்திற்குப் பரவியுள்ளதும் இதன் முக்கியத்துவத்தைச் சுட்டுகின்றன. கிழக்கிலிருந்து மேற்கே சென்ற முக்கிய வணிகச் சாலை இதற்கு அருகில் சென்றது இதைச் செழிப்புற்றதாக்கியது.

2. புராதனப் பொருட்கள்:-

தேல் கும்மின் சிதைவுகளில் எண்கோண அமைப்புடைய ஒரு கட்டடம் உள்ளது. இது பேதுருவின் வீடு என்று காட்டப்படுகிறது. ஆனால் இது ஒரு கோவிலாகப் பேதுருவின் வீட்டின் மேல் கட்டப்பட்டு, எத்தேரியாவால் (385) குறிக்கப்படும் ஆலயமாக இருக்கலாம்.

பாலஸ்தீனத்தில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுள்ள செபக்கூடங்களில் ஒன்றுதான் இங்குள்ள சிதைவுகளில் மிகவும் முக்கியமானது. இது முதலில் லூக் 7:5-இல் கூறப்பட்டுள்ள ஒரு கட்டடம் என்று கருதப்பட்டது. இது கி.பி.3-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட செபக்கூடமாக இருக்கமுடியாது என்று பின்பு 1905-இல் நடந்த ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. இந்தச் செபக்கூடம் 20 மீட்டர் நீளமும், இரண்டு மாடிகளும் கொண்டுள்ளது. இது கண்ணாம்புக் கற்களினால் கட்டப்பட்டுள்ளது.

3. நற்செய்திகள்:-

நற்செய்திகளில் சிறப்பாக இயேசுவின்

கலிலேயப் பணியில், இது மிகவும் முக்கிய மான இடம். இயேசு தம்முடைய பணியைத் தொடங்கியபொழுது, ஏன் நாசரேத்தைவிட்டுக் கடற்கரையிலிருந்து பெரிய நகரமான கப்பர்நகூமிற்குச் சென்றார் என்பதற்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை (மத் 4:13). இவ்விடத்தை இயேசு தம் ''வீடாகக்'' (மாற் 2:1) கருதியதாகத் தெரிகிறது. ஆலயத்தைச் சுத்திசெய்தபின் இயேசுவும், அவருடைய குடும்பமும், சீடர்களும் கப்பர்நகூமிற்குச் சென்று அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தனர். (யோவா 2:12). பேதுரு, அந்திரேயா ஆகியவர்களுடைய வீடுகள் இங்குதான் இருந்தன (மத் 8:14; மாற் 1:29; லூக் 4:38). கப்பர்நகூமில் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இவ்விடத்துச் செபக்கூடத்தில்தான் இயேசு பேய்பிடித்தவனைக் குணமாக்கினார் (மாற் 1:21-28; லூக் 4:31-38). இந்தச் செபக்கூடத்தைக் கட்டியதாகச் சொல்லப்பட்டுள்ள நூற்றுவர் தலைவனின் ஊழியனைக் குணப்படுத்திய நிகழ்ச்சியிலும் இந்தச் செபக்கூடம் குறிக்கப்படுகிறது (மத் 8:5-13). ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்ச்சிக்கும், அதன்பின் அளித்த போதகத்திற்கும் இந்தச் செபக்கூடம் பின்னணியாக அமைகிறது (யோவா 6:16-59).

கப்பர்நகூமில் இயேசு திமிர்வாதக்காரனைக் குணமாக்கினார் (மாற் 2:1-12). யார் பெரியவன் என்பதைப் பற்றிய தர்க்கமும் (மாற் 9: 33-37), வரிசெலுத்துபவரைப் பற்றிய ஆராய்ச்சியும் (மத் 17;24-27),செபக்கூடத்தலைவன் யாயீரின் மகள் உயிர்பெற்றதும் இங்குதான் நடைபெற்றன (மாற் 5:21-24. 35-43). இயேசு ஓர் அதிகாரியின் மகனைக் குணப்படுத்தினார் (யோவா 4:46-54). இயேசுவின் பணியின் மையமாகவும், பலரைக் குணப்படுத்திய இடமாகவும் இந்நகரம் விளங்கியது (லூக் 4:23). இது இயேசுவினுடைய வீடாக இருந்திருந்ததால், தன்னுடைய மகத்தான செயல்களைக் கண்டும் மனம் திரும்பாத நகர்கள் மேல் இயேசு சொன்ன சாப மொழிகளில் இதுவும் பங்கேற்றது (மத் 11:23; லூக் 10:15).

கப்பலின் பாய் (SAIL)

இது நூ லினால் நெய்யப்பட்ட கடினமான விரிப்பாகும். இது காற்றை வாங்கித் தண்ணீரில் படகு உந்திச் செல்வதற்குப் பெரிதும் பயன்படுகிறது.

கலிலேயாக் கடலில் படகுகள் சிறிய பாய்களைக் கொண்டுள்ளதாய் இருந்தன. மேலும் துடுப்புகளும் உண்டு (லூக் 8:22-23).

விவிலியக் காலத்தில், மத்தியதரைக் கடலில் உள்ள கப்பல்கள் இரண்டு பாய்களைக் கொண்டிருந்தன. இது சதுர வடிவம், செவ்வக வடிவம் கொண்டிருந்தது. அ.ப. 27:40-இல் வரும் வார்த்தை முன்பாயைக் குறிக்கிறது. இது அக்கப்பல் இரு பாய்களைக் கொண்டது எனச் சுட்டுகிறது. கப்பல்கள் காற்றுக்கு முன்னால் ஓடிக் கொண்டிருக்கும் போது, நல்ல கப்பல் தலைவன் காற்றடிக்கும் திசை நோக்கிச் செல்ல முடியும். இது பொதுவானதல்ல. காற்றினுடைய முக்கியத்துவம் அ.ப.27: 4.7.15-இலிருந்து தெரிகிறது.

கப்பலின் மேல்தளம் (DECK)

இது கப்பலில் பக்கத்துக்குப் பக்கமாகச் சென்று தளமாகவும் கூரையாகவும் பயன்படும் தட்டடுக்காகும். எசக்கியேல் ஆகமத்திலே யானைத் தந்தங்களைப் பொருத்திக் கப்பலின் மேல்தளத்தை அமைத்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது (எச 27:6).மேலும் நோவாவின் பெட்டகம் மூன்று தளத்தைக் கொண்டதாக இருந்தது (ஆதி 6:16).

கப்பலோட்டி, மாலுமி (SAILOR)

பவுலை உரோமைக்குக் கொண்டு சென்று கொண்டிருந்த கப்பல், மால்தாவை நெருங்கியது. கரை அருகிலிருப்பதைத் தெரிந்து கொண்ட மாலுமிகள் நங்கூரம் இறக்குவது போலச் சிறு ஓடங்களைக் கடலில் இறக்கினர். ஆனால் படைவீரர் படகின் கயிறுகளை அறுத்து விட்டனர். அப்போஸ்தலர் பணி நூல், மாலுமிகள் படகிலிருந்து தப்பிக்க வழி தேடினர் என்கிறது. ஆனால் ஏன் என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால் சிறிய

படகு இல்லாமல் கரையேற முடியாது (அ.ப.27:27.30).

திருவெளிப்பாட்டில் யோவான், உரோமையின் அழிவைப் பற்றிக் கப்பல் தலைவர்களும் மாலுமிகளும் புலம்புவதைப் பற்றிய காட்சி கண்டார். அதில் ''கடலில் கப்பல் செலுத்திய அனைவரையும் தன் செல்வ வளத்தால் செல்வம் மிக்கவராக்கிய இம் மாநகர்'' என்று இருக்கிறது (திருவெளி 18:19).

கப்பல்களும் கப்பலோட்டுதலும் (SHIPS AND SAILING)

1. இஸ்ராயேலிலும் மேற்காசியாவிலும்:- உலகின் மற்றப் பகுதிகளைப் போல், பழங்கால மேற்காசியாவில் நீரில் போக்குவரத்துக்குப் படகுகளும் மரங்களாலும் நாணலாலும் செய்யப்பட்ட கட்டுமரங்களும் பயன்பட்டன. கி.மு.மூன்றாம் ஆயிரமாண்டை ஒட்டி எகிப்திலும் மெசப்பொத்தாமியாவிலும் நாணல் கட்டுகளைப் பிணைத்து ஓரளவு திறனுடைய படகுகள் செய்யப்பட்டன. இக்காலத்தில் அனத்தோலிய மற்றும் சீரியாவோடு கடல் வழித் தொடர்பு கொண்டிருந்த கிரேத்தும் சைப்பிரசும் படகுகளின் வளர்ச்சியில் மையங்களாகத் திகழ்ந்தன. கி.மு.2500-ஐ ஒட்டிக் கடலில் செல்லக்கூடிய கப்பல்கள் நாணல்கட்டுகளைப்போல் இணைக்கப்பட்ட பலகைகளால் செய்யப்பட்டன. அல்லது பெரும் மரக்கட்டைகளைக் குடைந்து பலகைகளால் அடைக்கப்பட்டுச் செய்யப்பட்டன. இத்தகைய கலங்கள் ஒரே ஒரு சதுரப்பாயையும் பத்திலிருந்து இருபது துடுப்புகளையும் கொண்டிருந்தன. நுண்ணிய கலை வளர்ச்சியால் பெரிய கப்பல்கள் கட்டுவது ஏதுவாயிற்று. ஒரு முக்கிய முன்னேற்றம் கப்பலின் அடிக்கட்டை சேர்க்கப்பட்டதாகும். சதுரப் பாய்களும் துடுப்புகளும் பழங்காலம் முழுவதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன. துடுப்பு வலிப்போரின் எண்ணிக்கை கப்பல்களின் நீளத்தோடு மட்டுமல்லாமல் துடுப்புகளின் கூடுதலான வரிசையோடும் அதிகரித்தது.

மத்தியதரைக்கடலில் பெனிக்கியர்கள் தான் முதல் பெரிய கடல் வணிகர்கள். இவர்களின் கடல் வாணிபத்தில் இஸ்ராயேலின் தொடக்ககாலப் பங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (ஆதி 49:13; நீதி 5:17). தாவீது, சாலமோன் அரசர்கள் காலத்தில் இஸ்ராயேல் பெனிக்கியர்களின், குறிப்பாகத் தீரியரின், திறமையை நம்பியிருந்தது (1 அர 5:9; 10:11). அக்காபா வளைகுடாவிலிருந்த ஏசியோன் கெபேருக்குத் தெற்கிலிருந்து பொருள்களைக் கொண்டு வருவதற்காகவும் (9:26-28) மத்தியதரைக்கடற்கரையிலிருந்து தார்சிசுக்குக் கப்பல் வழியாகச் செல்லவும் (10:22) சாலமோன் ஒரு கப்பற்படையைக் கட்டியிருந்தார். ஆனால் பெனிக்கிய மாலுமிகளைப் பயன்படுத்தினார். இந்தப்படையைக்கொண்டு எகிப்திலிருந்து வந்த வியாபாரத்தையும், தெற்கிலிருந்து சீரியாவுக்கும் வடக்கில் அனத்தோலியாவுக்கும் நடந்த வியாபாரத்தையும் சாலமோனால் கட்டுப்படுத்த முடிந்தது (10:29). பிற்காலத்தில் யூதாவின் அரசன் யோசபாத்து தெற்கில் இந்த வியாபாரத்தைப் புதுப்பிக்க முயற்சி எடுத்தார். ஆனால் வெற்றி பெறவில்லை (22:48).

ஒரு குறுகிய காலத்திற்கே இஸ்ராயேல் கடற்பயணம் செய்யும் நாடாகத் திகழ்ந்தது. மற்றபடி, கடல் இஸ்ராயேலர்களுக்கு அச்சம் தரும் இடமாகும் (சங் 107:23-30; ஏச 51:15; 57:20; எரே 31:35). தார்சிசு போன்ற கடலுக்கு அப்பால் உள்ள இடங்களின் பெயர்கள் தெளிவில்லாமல் பயன்பட்டன; சில சமயம், வணிகர்களுக்கு மட்டும் தெரிந்திருந்த தூரமான இடங்களை உருவகமாகக் குறித்தன (1 அர 10:22; 22:48; சங் 72:10; எச 38:13).

கடல் வியாபாரத்தாலும், வியாபாரக் குடியிருப்புகளை ஏற்படுத்துவதாலும் பெனிக்கியா தொடர்ந்து வளர்ச்சியுற்றது. அவர்கள் வியாபாரத்தால் மிகுந்த செழிப்புற்றிருந்ததாகக் கருதப்பட்டது (சங் 45:12-13; செக் 9:3). நெபுக்கதுனேசாரால் தோற்கடிக்கப்படும் வரை பெனிக்கியா முக்கிய துறைமுகமாக விளங்கியது. தீர் நகரம் பற்றிய எசக்கியேலின் புலம்பல், பெனிக்கியர்களின் பரந்த வியாபாரத்தைப் பற்றிச் சித்தரிக்கிறது (எச

கப்பல்களும் கப்பலோட்டுதலும் (தொடர்ச்சி)

26:1-28:19; ஏச 23; யோவே 3:4-8). காலப் போக்கில் பெனிக்கியா கிரேக்கர்களோடும் உரோமையர்களோடும் போட்டியிடவேண்டியிருந்தது. உரோமையர் பிற்காலத்தில் மத்தியதரைக் கடலில் ஏகபோக உரிமை கொண்டாடினர். தீரைப்பற்றிய எசக்கியேலின் புலம்பலைப் போன்று, பாபிலோனைப் (உரோமை) பற்றித் திருவெளி, 18-இல் வரும் புலம்பல் அந்நகர் கடல்வியாபாரத்தில் கொண்டிருந்த ஆதிக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

2. புதிய ஏற்பாடு:- பவுல் பெரும்பாலும் சரக்குக் கப்பல்களில் பயணம் செய்தார் *(2 கொரி 11:25).* செசரியா பிலிப்பியிலிருந்து உரோமைக்குச் செய்த பயணம் பற்றிய விவரிப்பு பழங்காலத்தில் கப்பலோட்டுதல் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு முக்கியமான ஏடாகும் *(அ.ப.27:1-28:14).* அவரது குழு முதலில் பயணம் செய்த ''அதிராமித்தியக் கப்பல்'' *(27:2)* ஒரு சிறிய கப்பலாக இருந்திருக்கலாம். இது சிரியா மற்றும் சிறிய ஆசியாக் கடற்கரையோரங்களை ஒட்டியே பயணம் செய்தது. இந்தப் பயணத்தில் மேற்கிலிருந்து அடித்த காற்றிலிருந்து பாதுகாப்பு வேண்டியிருந்தது *(27:4).* இலிக்கியாவிலுள்ள மீராவிலிருந்து இச்சிறு கப்பல் புறப்பட்டு மேற்கு நோக்கிப் பயணம் செய்து, பிறகு வடக்கு நோக்கித் துறைமுகம் துறைமுகமாகத் தங்கி அதிராமித்தியம் நோக்கிப் பயணம் செய்தது. இங்குப் பவுலின் குழுவினர், எகிப்திலிருந்து உரோமைக்கும் மற்றக் கோவில்கள் உள்ள நகரங்களுக்கும் தானியங்களைச் சுமந்து சென்ற ஒரு கப்பலுக்கு மாற்றப்பட்டனர். இக்கப்பலிலும் பல பயணிகள் இருந்தனர் *(27:5-6.37).* இக்கப்பலும் சிறிய ஆசியாக் கடற்கரையை ஒட்டி வடக்கு நோக்கிப் பயணம் செய்திருக்கவேண்டும். கினிதுவில் எதிர்காற்றால் பயணம் முன்னேற முடியவில்லை. ஆகவே கப்பல் தெற்கு நோக்கிக் கிரேத்துவுக்குச் சென்று பாதுகாப்புப்பெற்றது. கிரேத்தின் மேற்குக் கோடித் துறைமுகமான செந்துறை என்ற இடத்தில் கப்பல் நங்கூரம் இறக்கியது. ஏனெனில் இவ்விடத்தை நோக்கிக் கப்பல் பாதுகாப்பாய்ப் பயணம் செய்ய முடிந்தது *(27:7-8).*

கப்பலோட்டுதல் குளிர்காலத்தில் முடியாததாகவும், இலையுதிர் காலத்தில் கடினமானதாகவும் இருந்தது. ஏற்கெனவே அது அக்டோபர் மாதமாய் இருந்ததால், பயணம் செய்து அனுபவப்பட்ட பவுல், கப்பல் வசந்த காலம் வரை அங்குக் காத்திருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார் *(27:9-10).* குளிர்காலத்தில் தங்குவதற்குச் செந்துறை ஏற்ற துறைமுகமாக இல்லாததால், கிரேத்துவில் இன்னும் வடக்கிலிருந்த பேனிக்சு துறைமுகத்துக்குப் புறப்பட்டுச் சென்றது *(27:11-12).* சில நாட்களுக்குப் பயணம் நன்கு அமைந்திருந்தது *(27:13).* ஆனால் வடகிழக்கிலிருந்து அடித்த புயல் இக்கால லிபியா மற்றும் துனிசியாவின் கடற்கரையில் உள்ள ஆழமில்லா வளைகுடாவான சீர்த்தில் தரையில் புதையும் ஆபத்தைக் கொண்டு வந்தது. காற்று கப்பலைத் தீவின் காற்றுக்கு மறைவான இடத்திற்குத் துரத்தியது. ஆனால் இது தற்காலிக ஓய்வையே கொடுத்தது. ஆகவே, சாதாரணமாக் கப்பலின்பின் இணைக்கப்பட்ட உயிர்ப் பாதுகாப்புப் படகைத் தூக்கிக் கட்டினர்; அதன்பின் வடக்கயிற்றினால் கப்பலைச் சுற்றிக்கட்டினர்; கப்பலின் வேகத்தைக் குறைக்கத் தடுப்புப் பலகைகளை இறக்கினர் *(27:14-17).* கடுமையான காற்று தொடர்ந்து அடித்தது. காற்றின் போக்கில் கப்பல் மேற்கு வடமேற்கில் சென்று கொண்டிருந்தது. கடும்புயல் கப்பலை மிகவும் அலைக்கழிக்கவே, கப்பலின் சுமையைக் குறைக்கச் சரக்குகளையும் தளவாடங்களையும் கடலில் எறியத் தொடங்கினர் *(யோனா 1:5).* புயல் வானத்தை மறைத்திருந்ததால் எங்குப் போகின்றார்கள் என்று அறிய முடியவில்லை. கப்பல் மூழ்கிப்போகும் பயம் எழலாயிற்று. தப்பிப்பிழைப்போம் என்ற நம்பிக்கை பயணிகளுக்கு இல்லாமல் போயிற்று *(27:18-20).*

இரு வாரங்களுக்குப்பின் இரவில் மால்தாத் தீவை நோக்கி வந்தனர். விடியும்

மட்டும் நங்கூரமிட்டுக் காத்திருந்தனர். கப்பலின் முக்கிய சரக்கான கோதுமையைக் கடலில் எறிந்தனர் (27:27-38). காலையில், மாலுமிகள் கப்பலைக் கரையோரம் செலுத்தத் திட்டமிட்டனர். எனவே கயிறுகளை அவிழ்த்து நங்கூரங்களைக் கடலிலேயே விட்டுவிட்டுச் சுக்கான் கட்டுகளைத் தளர்த்தினர். முன்பாயை விரித்துக் கப்பலைக் காற்றுக்கிசைவாகக் கரையை நோக்கிச் செலுத்தினர்., ஆழமற்ற ஓரிடத்தில் கப்பல் மோதி, அதன் முன்னணியம் மண்ணில் புதைந்து அசையாமல் போகவே, பின்னணியும் அலைகளின் வலிமையால் சிதைவுறத் தொடங்கிற்று. ஆனாலும் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தனர் (27:39-44).

அடுத்த வசந்த காலத்தில் பவுல் உரோமையை நோக்கிச் செய்த பயணம் அவ்வளவு நிகழ்ச்சிகள் மிக்கதன்று. ஆனால் அது பற்றிய விவரிப்பு கப்பலோட்டுதல் பற்றிய சில விவரங்களைக் கொடுக்கிறது. அலக்சாந்திரியாவிலிருந்து வந்த ஒரு கப்பல் பவுலையும் அவரது குழுவினரையும் மால்தாவிலிருந்து சிசிலியிலுள்ள சிரக்கூசாவிற்குக் கொண்டு சென்றது. ஒரு வேளை இக்கப்பலும் தானியம் ஏற்றிச்செல்லும் சரக்குக் கப்பலாக இருக்கலாம். காற்று சாதகமில்லாமல் இருந்ததால், அங்கு மூன்று நாட்கள் தங்க வேண்டியதாயிற்று. அங்கிருந்து கரையோரமாக இத்தாலிய நாட்டின் இரேகியும் என்ற துறைமுகத்தை அடைந்தனர். அங்கிருந்து ஒரு சாதாரணமான காற்று நெயாப்போலி வளைகுடாவிலுள்ள புத்தயோலி துறைமுகத்திற்குக் கொண்டு சென்றது. அங்கிருந்து பவுலின் பயணம் தரைமார்க்கமாகத் தொடர்ந்தது.

கப்பல் தலைவன் (SHIP MASTER)

இந்தச் சொல் கப்பல் இயக்குநர், மாலுமி போன்ற பொருளைக் கொடுக்கின்றது. அதே வேளையில் ஒரு சில நேரங்களில் கப்பலின் சொந்தக்காரனையும் குறிக்கும்.

திருவெளிப்பாட்டு ஆசிரியர் உரோமை நகரின் அழிவைப் பற்றிக் காட்சி கண்டதை விவரிக்கின்றபோது, உரோமை நகர அழிவிலிருந்து புகை வந்ததைக் கண்ட கப்பல் தலைவர்களும், கடற்பயணம் செய்தவர்களும் ''இம் மாநகருக்கு நிகரான ஒரு நகருண்டோ?'' என்று கூக்குரலிட்டு அழுததாக எழுதியுள்ளார் (திருவெளி 18:17-19).

அ.ப.27:11-இல் வரும் கிரேக்கச் சொல் கப்பலோட்டியையும், கப்பலுக்குரியவனையும் குறிக்கின்றது.

கப்பற்பாய் இழுப்பு வடக்கயிறு (TACKLE)

கப்பலைச் செலுத்துவதில் பயன்படும் கயிறுகள், மற்றும் கப்பிகள் அடங்கிய சாதனம். ஏச 33:23-இல் இதனால் பாய் மரத்தை நிலையாகப் பிடிக்கவும், விரிக்கவும் இயலாது என்று கூறப்படுகின்றது. அ.ப.27:19-இல் இது, ஆபத்தில் தவிர்க்கக் கூடிய எல்லாத் தளவாடங்களையும் குறிக்கும் எனக் கருதப்படுகிறது.

கப்பனாத்தா (CHAPHENATHA)

எருசலேம் நகருக்கு வெளியே அமைந்த ஓர் இடம். இது தற்காலத்தில் எது என்று தெரியாது. இந்நகரின் இடிந்துபோன சுவர்களை யூதா மக்கபேயு மீண்டும் கட்டியெழுப்பினார் (1 மக் 12:37).

கப்பாரயிம் (HAPHARAIM)

இசக்காரின் நகர்களில் ஒன்றாகும் (யோசு 19:19). இந்நகர் சீசாக்குப் பட்டியலில் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீன நகர்களோடு காணப்படுகின்றது (கி.மு.918). பேத்துசானிலிருந்து வடமேற்காக ஏறக்குறைய 14 கி.மீ. தொலைவிலுள்ள எத்தாயிபேயில் இந்நகர் இருந்ததாகக் கூறப்படுகிறது. யுசேபியுவைப் பின்பற்றி அறிஞர் சிலர், உரோன லேகியோவுக்கு (ஒரு வேளை விவிலிய அதாதுரிம்மோன், இக்கால லெயூன்) வடமேற்கில் 9.6 கி.மீ. தொலைவிலுள்ள அல்பாரியாவாக (இக்காலக் கிர்பெத்து ஏல்-பர்ரியே) இதை அடையாளம் காட்டுவர்.

கமாது (GAMAD - குள்ளர்கள்)

சீரியாவில் கடலோரப் பகுதியில் ஆர்வா

துக்கு அருகில் உள்ள நகரத்திலிருந்து வந்த மனிதர்கள். தீரின் படைவீரர்களில் இவர்கள் இருந்ததாக எசக்கியேல் இறைவாக்கினர், இந்நகருக்கு எதிராகக் கூறிய இறைவாக்கில் குறிப்பிடுகிறார் (எச 27:11). இந்த இடம், அமர்னா ஏடுகளில் குறிக்கப்படும் குமிடி என்ற இடமாக இருக்கலாம்.

கமாத்தின் நுழைவாயில் (ENTRANCE OF HAMATH)

வாக்களிக்கப்பட்ட நாட்டின் வட எல்லையாகவும் (எண் 34:5), புதிய காலத்தில் இஸ்ராயேல் கோத்திரத்தாருக்குச் சொந்தமான பகுதியின் வட எல்லையாகவும் அமைந்திருப்பது (எச 47:15; 48:1). சாலமோனின் அரசு எகிப்து ஓடையிலிருந்து கமாத்தின் நுழைவாயில் வரை பரவியிருந்தது (2 அர 4:25; ஆமோ 6:14).

லெபனோன் மலைத்தொடர்களுக்கு இடையில் ஓன் பள்ளத்தாக்கில் இவ்விடம் உள்ளது. கெர்மோன் மலைக்கும், லெபனோன் மலைக்கும் இடையே கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள சமவெளி என்று சிலர் கூறுவர். எண் 13:21-இல் இது தாணுக்கு அருகில் உள்ள இரகோபுவோடு குறிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் செதாதோடும் (இக்காலச் சதாது) கசர்-ஏனானோடும் (இக்காலக் கரியத்தேயின்) உள்ள தொடர்பு, இது இரிபிலாப் பகுதியில் இருக்கவேண்டும் எனச் சுட்டுகிறது. லெபோ-கமாத்து என்ற சொல்லின் எழுத்துப் பெயர்ப்பின் அடிப்படையில் பாகால்பேக்குக்கு வட-வட கிழக்கில் 22 கி.மீ. தொலைவிலுள்ள பழங்கால லெபோ (இக்கால லெப்போ) என்ற இடமாகக் கருதுகின்றனர் ஆய்வாளர்கள் சிலர்.

கமாத்து (HAMATH - கோட்டை)

1. சிரியாவில் ஒரோன்தெஸ் ஆற்றங்கரையில் முக்கியமான நகரம் இது. இப்பொழுது நகிர் ஏல்-ஆசி எனப்படுகிறது. ஆற்றங்கரையில் இரு மருங்கிலுமுள்ள சமவெளியில் அலெப்போவுக்கும், தமஸ்குவுக்கும் இடைப்பட்ட பகுதியில் பூமத்திய ரேகைக்கு 35°-க்குச் சிறிது தெற்காக அமைந்துள்ளது. இந்த இடம் கடல்மட்டத்திலிருந்து 305 மீட்டர் உயரத்தில் உள்ளது. சுதந்தர அரசின் மையமாக அதிக காலம் இது இருந்தது. இதன் தென் எல்லை இஸ்ராயேல் அரசின் வட எல்லையாக அமைந்தது (எண் 13:21; யோசு 13:5; நீதி 3:3; எச 47:15; 48:1).

புதிய கற்காலத்திலே இங்கு மக்கள் குடியேறியிருந்தனர். இது முக்கிய இத்திய நகரமாக விளங்கியது. அமர்னா காலத்தில் எமோரியர்களின் அரச மையமாக இருந்தது. இது புகழ்பெற்ற அபிதி-அசிர்த்தாவால் வெல்லப்பட்டது.

இங்கு இத்திய ஆப்பு எழுத்து வாசகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தாவீது காலத்தில் கமாத்து ஒரு முக்கியமான அரசின் தலைநகரம். அதோடு தாவீது ஒத்துழைத்தார். பின்பு சோபாவின் அரசர் அதாதெசரைத் தாவீது வெற்றிகொண்டார். இதில் கமாத்தின் அரசர் தோய் என்பவர் உதவி செய்ததாகத் தெரிகிறது. சோபாவின் அரசர் தமஸ்குவோடு கூட்டணி வைத்திருந்தார் (2 சாமு 8:3-12). இரண்டாம் எரொபயாம் இஸ்ராயேல் அரசின் பகுதிகளை மீண்டும் நிலைப்படுத்தியபோது மீண்டும் கமாத்தின் எல்லை இஸ்ராயேலின் வட எல்லையாக அமைந்தது (2 அர 14:25). இதற்குத் தமஸ்கு, மற்றும் கமாத்தால் கைப்பற்றப்பட்ட பகுதியை மீளவும் வென்றிருக்கவேண்டும். அசிரியர்களின் அரச ஏடுகளிலும் கமாத்து குறிக்கப்படுகிறது. இரண்டாம் சால்மனேசர் வெற்றிகொண்ட பல நகரங்களுள் கமாத்தும், தமஸ்கும் அடங்கும். 2 - ஆம் சார்கோனின் வெற்றி இந்தை உறுதிப்படுத்தியது. இப்போது அசீரிய வழிபாட்டு முறைகள் கமாத்தில் கடைப்பிடிக்கப்பட்டன.

கிரேக்கர்கள் காலத்திலும் கமாத்து முக்கியமான நகரமாக இருந்தது. நான்காம் அந்தியோக்கு காலத்தில் கமாத்து எப்பிபானியா என்று பெயர் மாற்றப்பட்டது. மக்கபேயர்களின் போர்க்காலத்தில், கமாத்து போர் அரங்கமாகச் செயல்பட்டது. 1 மக் 12:24-25-இன்படி தெமேத்திரியுவின் படைகள் இங்

குத் தங்கியிருந்தன. இஸ்லாமியர்கள் காலத்தில், கமாத்து கிறிஸ்தவர்களின் முக்கிய மையமாக விளங்கியது.

இப்போது உல்லாசப் பயணிகளுக்குக் கமாத்து நகரம் ஒரு விருந்தாக அமைந்துள்ளது. இந்தக் கமாத்து நகரம் வாணிபத்திலும், தொழிலிலும் சிறந்து விளங்குகிறது.

2. கமாத்து - சோபா என்றழைக்கப்பட்ட நகரம் (2 நாள் 8:3) அல்லது 1-இல் குறிக்கப்படும் இடத்திற்குத் தெற்கில் அமைந்துள்ள சோபா (2 சாமு 8:9; 2 நாள் 8:3-4), ஒருவேளை எச 47:1 இல் குறிக்கப்பட்டிருக்கும் நகரமாக இருக்கலாம். அநேகமாகச் சோபா நகரமாகவே இருக்கலாம்.

கமாத்து – சோபா (HAMATH - ZOBAH)

சோபாவைக் குறிக்கும் மற்றொரு பெயர். சாலமோனால் வெல்லப்பட்ட ஒரு நகரம் அல்லது ஒரு பகுதி (2 நாள் 8:3). இப்பெயர் நாளாகமங்கள் தொகுக்கப்பட்ட பாரசீகர்கள் காலத்தைப் பிரதிபலிக்கிறது. அப்போது சோபா, கமாத்து மாகாணத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. இதற்கு இணையான விவரிப்பான 1 அர 19:17-19-இல் இந்நகரின் பெயரும் நிகழ்ச்சியும் கொடுக்கப்படவில்லை. இது வாசகம் பழுதுபட்டிருக்கலாம் என்று எண்ணத் தூண்டுகிறது. 2 நாள் 8:3-இல் எழுபதுநூல் வாசகம் பேத்து-சோபா அல்லது சோபாவின் வீடு என்று வாசிக்க இடமளிக்கிறது.

கமாலியேல் (GAMALIEL - இறைவனின் சன்மானம்)

1. மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த பெதாசூரின் மகன். பாலையில் அலைந்து திரிந்த போது, தனது கோத்திரத்தின் தலைவராகத் திகழ்ந்தார். முதல் கணக்கெடுப்பில் மோசேக்கு உதவி செய்தார் (எண் 1:10; 2:20; 7:54.59; 10:23).

2. கமாலியேல் ஒரு பரிசேயர். மக்கள் எல்லாரிடமும் நல்ல மதிப்பைப் பெற்றிருந்த சட்டவல்லுநர். சனேதிரின் பொதுச்சங்கத்தில் ஓர் அங்கத்தினர். பவுல் இவரிடம்

40A

தான் சட்ட நுணுக்கங்களைக் கற்றறிந்தார் (அ.ப.22:3). இவர் சங்கத்தில் எழுந்து பேசுகையில் அனைவரும் அவரை ஏற்றுக்கொண்டனர். பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் மட்டோடு நடத்தும்படி இவர் அறிவுரை கூறினார் (5:34-39).

இவர் புகழ்பெற்ற இராபி இல்லேலின் பேரனும் இரண்டாம் கமாலியேலின் பாட்டனுமாவார். இராபி (என் தலைவர்) என்பதற்குப் பதிலாக, இராபான் (நம் தலைவர், நம் பெருந்தலைவர்) என்ற பட்டம் பெற்றவருள் முதலானவர். யூத ஒழுக்கப் பாரம்பரியத்தில் தாராள மனப்போக்கைப் புகுத்தியவர்.

யூத பாரம்பரியம் அவரைச் சனேதிரின் சங்கத் தலைவராகத் தவறாகக் கருதியது. இக்கருத்து இவரது முக்கியத்துவத்தைச் சுட்டுகிறது. எல்லோரும் அவரை ''இராபான் (எங்கள் தலைவர்) கமாலியேல் இறந்த போது, சட்டத்தின் மகிமையும், புனிதத்தன்மையும் கட்டுப்பாடும் அழிந்தன'' என்று சொல்லி அவருக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

கமாலியேல் தனது உரையில் (அ.ப.5:36-37) கலிலேயனான யூதாவுக்குமுன் 'நான் ஒரு பெரிய மனிதன்' என்று கூறிய தெயுதாவைப் பற்றிப் பேசுகிறார். மேலும் பவுல் கமாலியேலின் மாணவர் என்ற குறிப்பு உள்ளது (22:3). இவை காலக்கணிப்புப் பிரச்சனைகளை எழுப்புகின்றன. ஏனெனில் யூதாவின் கிளர்ச்சி கி.பி.6-இல் நடந்தது. தெயுதா ஆளுநன் பாதுவின் காலத்தில் (கி.பி.44) கிளர்ச்சி செய்ததாகத் தெரிகிறது

உண்மையிலேயே இவர் பவுலுக்கு ஆசிரியரா? அப்படியென்றால் பவுல் தன்னுடைய கடிதத்தில் ஏன் குறிப்பிடவில்லை? பவுல் கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தும் செயல்களையும், அவர் பயன்படுத்தும் விளக்கமுறையையும், சட்டத்தின்பால் கொண்டிருந்த மனப்பான்மையையும் விளக்குவது கடினம். இப்பிரச்சனைகளுக்கு அளிக்கப்படும் விளக்கங்கள் நிறைவு அளிப்பதாக அமையவில்லை.

கமோங்கோகு (HAMON - GOG - கோகுவின் கூட்டம்)

யோர்தானுக்கு அப்பாலுள்ள இப்பள்ளத் தாக்கில் கோகுவின் சேனையில் இறந்தவர்கள் புதைக்கப்படுவார்கள் என்று எசக்கியேல் இறைவாக்கினர் முன்னறிவித்தார் (எச 39:11.15).

இது பயணிகளின் பள்ளத்தாக்கு என்றும் அழைக்கப்பட்டது (39:11). சாக்கடலுக்கும் மோவாபு சமவெளிக்கும் இடைப்பட்ட வட மோவாவிலுள்ள அபாரிம் மலைகளோடு இது தொடர்புபடுத்தப்படலாம்.

கமுத்தாள் (HAMUTAL - பனிபோன்ற, மாமனார் பனி போன்றவர்)

யோசியாவின் மனைவியும் இலிபுனாவைச் சேர்ந்த எரேமியாவின் மகளும் யோவாக்காசு, செதேக்கியா ஆகியோரின் தாயுமாவாள் (2 அர 23:31; 24:18; எரே 52:1). 2 அர 24:18; எரே 52:1-இல் சில வாசகங்கள் கமித்தாள் என்ற பெயரைக் கொண்டுள்ளன. எச 19:2-இல் வரும் பெண்சிங்கம் கமுத்தாள் அரசியைக் குறிப்பதாக அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

கமோர் (HAMOR - கழுதை)

செக்கேம் நாட்டின் இத்திய அரசன். இவருக்குச் செக்கேம் பெயரில் ஒரு மகன் இருந்தார். கமோரும், செக்கேமும் யாக்கோபின் புதல்வரான சிமியோன், லேவி என்பவர்களால் பழிவாங்கிக் கொல்லப்பட்டனர் (ஆதி 34; நீதி 9:28). கமோரின் புதல்வரிடமிருந்து யாக்கோபு நிலம் ஒன்று வாங்கி அங்கே ஒரு பீடத்தைக் கட்டினார் (ஆதி 33:19). இங்குதான் பிற்காலத்தில் யோசேப்பின் எலும்புகளைப் புதைத்தனர் (யோசு 24:32). ஆனால் ஸ்தேவான் மக்கபேலாவோடு செக்கேமைக் குழப்பிவிடுகிறார் (அ.ப.7:16; காண் ஆதி 23;48:22;50:13-25).

கம்பளி - (WOOL)

இது செம்மறியாடுகளின் உரோமத்தால் நெய்யப்பட்டதாகும். மோவாபு மன்னன் மெசா இஸ்ராயேல் மன்னன் ஆகாபுக்குக் கம்பளியைக் காணிக்கையாகக் கொடுக்கிறான் (2 அரச 3:4). பாலஸ்தீனத்தில் இது அதிகமாகத் தயார் செய்யப்படுகிறது. அதிகமாகவும் பயன்படுத்தப்பட்டது. குளிர்காலத்தில் இது சிறந்ததொரு பாதுகாப்பாகும். கம்பளி வெண்மைக்கும், தூய்மைக்கும் உருவகமாகக் கூறப்பட்டது (சங் 147:16; ஏச 1:18).

ஆட்டு மயிரும் சணல்நூலும் கலந்து நெய்யப்பட்ட ஆடைகள் இஸ்ராயேலின் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளன (உப 22:11; லேவி 19:19). இதற்குக் காரணம் தெளிவாக இல்லை. ஒருவேளை, யோசிப்பஸ் கருதுவது போல், இப்படிப்பட்ட கலப்பு ஆடை குருக்களுக்கு உரியது என்பது காரணமாக இருக்கலாம்.

கம்பளிப்பூச்சி (CATERPILLAR)

வண்ணத்துப்பூச்சி அல்லது மற்றப் பூச்சிகளின் புழுப்போன்ற இலார்வா ஆகும். இது வெட்டுக்கிளியுடன் கூறப்படுகிறது (1 அர 8:37; 2 நாள் 6:28). இது சில இடங்களில் வெட்டுப்புழு என்று கூறப்படுகிறது (யோவே 1:4; 2:25).

இது சங் 78:46-இல் வெட்டுக்கிளியைக் குறிக்கலாம். இலைகளைத் தின்று அழிக்கும் கம்பளிப்பூச்சி (பச்சைப்புழு), போருக்குப் பின் வீரர்கள் கொள்ளை அடிப்பதற்கு உவமையாகக் கூறப்படுகிறது.

கம்பளிப் பொருட்கள்

இச்சொல் பழைய ஏற்பாட்டில் பல சொற்களின் மொழிபெயர்ப்பாகும்.

அ) இச்சொல் நீலம், கருஞ்சிவப்பு, அல்லது சிவப்பு முதலிய நிறமுடைய பொருட்களைக் குறிப்பிடும் பகுதிகளில், ''பொருள்கள்' அல்லது ''துணி'' ஆகியவற்றைக் குறிக்கும் துணைச்சொல்லாகும். இந்தப் பொருட்கள், வழிபாட்டுப் பொருட்கள் (யாத் 25;4; 35:6.23.25), திரைகள் (யாத் 26:1; 36:8), மெல்லிய திரை (யாத்26:31; 36:35), பெரிய திரைகள் (யாத் 28:5-6; 39:1-3.5), குருக்கள் அணியும் அலங்கார ஆடைகள், புனித உடை

கள் (யாத் 28:33; 39:24.29) ஆகியவை தயாரிக்கக் காணிக்கையாகத் தரப்பட்டன. சிவப்புக் கம்பளி நோயைக் குணமாக்கப் பயன்படுத்தும்படி குறிக்கப்பட்ட பொருட்களுள் ஒன்றாகும் (லேவி 14:4.6.49.51; எண் 19:6).

பலவண்ணம் கொண்ட விரிப்பு வாணிகத்தில் விலையுயர்ந்த பொருளாகக் கருதப்பட்டது (எச 27:24).

கம்மாத்து (HAMMATH - சூடான விவாதம்)

1. நப்தலியில் உள்ள கோட்டைகள் கொண்ட நகரம் (யோசு 19:35). கலிலேயக் கடலின் மேற்குக் கரையில் திபேரியாவிற்குத் தெற்கில் 3 கி.மீ. தொலைவிலுள்ள கம்மாம் தபரியே என அடையாளம் காட்டப்படுகிறது. இதுவும் லேவியர்களின் நகரமான கம்மோனும் (1 நாள் 6:76) யோசு 21:32-இல் குறிக்கப்படும் கம்மோத்து-தோரும் ஒன்றேயாகும். தால்மூதில் அடிக்கடி குறிக்கப்படுகிறது. பழங்காலத்திலிருந்தே இது மருந்துகள் கலந்த நீரூற்றுகளுக்குப் பெயர் பெற்றது.

2. இரக்காபு குடும்பத்தின் ''தந்தை'' (1 நாள் 2:55) அல்லது இரக்காபு குடும்பத்தைச் சேர்ந்த கேனியர்களின் நாடு. இதை இடப்பெயராகக் கருதினால், இது யூதாவின் நெகேபில் அல்லது அதற்குத் தெற்கில் இருந்திருக்கலாம்.

கம்முராபி (HAMMURABI)

பாபிலோனை ஆண்ட முதல் அரச மரபில் ஆறாவது அரசன் (கி.மு. 1792 - 1750). இவர் சின்-முபாலித் என்பவரின் மகனும், சம்சு-இலுனா என்பவரின் தந்தையுமாவார்.

கம்முராபி அரசனைப் பற்றிய வரலாறு மிகவும் சுருக்கமாகவே உள்ளது. ஆனால் மற்ற அரசர்களைவிட அதிகமாக அறிகிறோம். அரச எழுத்துப் பொறிப்புகளைத் தவிரப் பல அரசியல் கடிதங்களும், கம்முராபி அரசன் ஆண்ட 42 ஆண்டுகளுக்கு அளிக்கப்பட்ட பெயர்களும் இவரைப் பற்றிக் கூறுகின்றன. நகரைச் சுற்றிச் சுவர் கட்டுதல், பலியிடுதல், கோவிலில் சிலைகளை வைத்தல், போர்கள் முதலிய அரசனுடைய செயல்களைக் குறிப்பனவாக இருந்தன. கம்முராபி சட்டத் தொகுப்பின் முகவுரையிலுள்ள வரலாற்றுப் பகுதி அவருடைய அரசின் பரப்பைப் பற்றித் தெளிவாகக் கூறுகிறது. கம்முராபியால் ஆளப்பட்ட பெரிய நகரங்களின் பெயர்களும், இந்நகர்களில் அவர் ஆற்றிய பக்திச் செயல்களும், சமூகப் பணிகளும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன. கம்முராபியைப் பற்றிக் கவிதை வடிவில் அமைந்த இரு கற்பொறிப்புகள் உள்ளன. முதல் கற்பொறிப்பு ஊர் நகரத்தில் காணப்பட்டது. இதில் கம்முராபி, சுமேரிய மொழியிலும் அக்காதிய மொழியிலும் தான்குத்தியும், சுபார்து, துருக்கி போன்ற மலைப்பகுதிகளை வென்றதைப் பற்றிப் பொறித்து வைத்துள்ளார். இரண்டாவது எழுத்துப் பொறிப்பு ஓர் உடைந்த சிலையின் மீது காணப்படுகிறது. கட்டடங்களில் காணப்படும் பொறிப்புக்களில் கோவில்களைப் பழுது பார்த்தது பற்றியும், நகரச் சுவர் கட்டியது பற்றியும் குறிப்பு உள்ளது. சில சுமேரிய மொழியிலும் சில அக்காதிய மொழியிலும் பாடல் வடிவில் எழுதப்பட்டுள்ளன.

சட்ட முறைகளைப் பற்றியும் நிர்வாக சம்பந்தப்பட்டவைகளைப் பற்றியும் பல உயர் நிர்வாக அதிகாரிகளுக்குக் கம்முராபி எழுதிய 140 கடிதங்கள் கிடைத்துள்ளன. மாரியிலுள்ள சுவடித் தொகுப்பில் இக் கடிதங்கள் உள்ளன. இங்கு அரசாங்க அதிகாரிகளுக்குக் கம்முராபி எழுதிய மூன்று கடிதங்களும், மாரியின் அரசன் சிம்ரிலிமுக்கு எழுதிய ஒரு கடிதமும் உள்ளன. மாரியின் அரசனால் கம்முராபிக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்றும், மாரியின் அரசத் தூதுவர்களால் கம்முராபியைப் பற்றி எழுதப்பட்ட 15 கடிதங்களும் அங்குள்ளன.

மெசபொத்தாமிய வரலாற்றிலும், பாபிலோனிய நகரத்து வரலாற்றிலும், பாபிலோனிய கலாச்சாரத்தின் வளர்ச்சியிலும் கம்முராபி முக்கிய இடத்தை வகிக்கிறார். அவருக்கு முன்னால் நூறு ஆண்டுகளாகப் பாபி

லோனை ஆண்ட ஐந்து அரசர்களின் காலத்தில் பாபிலோன் ஒரு மறைவான நகரமாக இருந்தது. இந்த அரசர்கள் அண்டை நாடான ஈசு நகரை இழந்ததோடு அல்லாமல், திகிரிசு நதிக்கு அப்பால் பல இடங்களில் போரிட்டுத் தோற்றனர். சிறிது காலம் சுதந்தரம் அடைந்திருந்தாலும் மீண்டும் ஐசின் அல்லது லார்சா அரசர்கள் பாபிலோனைத் தங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தனர். கம்முராபியின் தந்தையான சின் முபாலித்து எழுதிய குறிப்புகளில் முன்பு இருந்ததை விட அதிகமான நகரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர் காலத்தில்தான் பாபிலோன் புகழ்பெற்றிருக்க வேண்டும். இருந்தபோதிலும், சின்முபாலித்து தென்பகுதியில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. ஏனெனில் வடக்குப் பகுதியில் அசிரியா மன்னனான முதலாம் சம்சி ஆதாத் சக்தி வாய்ந்தவனாக இருந்தார்.

கம்முராபி அரசனான போது, இந்த அசிரிய மன்னன் இறந்துவிட்டதால், கம்முராபி பாபிலோனை விரிவுபடுத்துவதில் தீவிரமாக இறங்கினார். அவர் ஆட்சி செய்த ஏழாம் ஆண்டிலிருந்து பதினொன்றாம் ஆண்டுக்குள்ளாக உருக்கு நகரையும் ஐசின் நகரையும் கைப்பற்றினார். மால்குமை அழித்துவிட்டு, திகிரிசு நதியைக் கடந்து எமுத்பாலுக்குச் சென்றார். அங்கிருந்து யூப்பிரத்திசு நதி ஓரமாக இராபிக் வரை சென்றார். அதற்குப்பின் தனது ஆட்சியின் இருபத்தொன்பதாம் ஆண்டுவரை தனது நாட்டைப் பலப்படுத்துவதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் ஈடுபட்டார். ஆனால் முப்பதாம் ஆண்டிலிருந்து தனது காலம் முடியும்வரை இடைவிடாமல் போர் செய்தார். இரண்டாவதாக அவர் போர்தொடுத்த காலங்களில் அவரது அரசின் பரப்பு குறைவுற்றதுபோல் தோன்றுகிறது. கம்முராபியின் இறுதி ஆண்டுகள் அவர் தனது நாட்டின் வடக்குப் பகுதியில் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளன. உதாரணமாக 42-ஆம் ஆண்டுக்குத் திகிரிசு, யூப்பிரத்திசு நதிகள் ஓரமாகக் கட்டப்பட்ட சுவர் என்றும், 43-ஆம் ஆண்டுக்குச் சிப்பாரில் மணலைக் குவித்து எழுப்பப்பட்ட சுவர் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

கம்முராபி இறந்தபோது நாட்டில் போர் நிலைமை எப்படி இருந்தது என்று நமக்குத் தெரியாது. அவரது மகன் சம்சு இலுனா அரசனானவுடன் முதல் வேலையாகச் சமுதாயத்தில் ஒரு பிரிவினரின் கடன்களை எல்லாம் இரத்து செய்ததாகக் கற்பலகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது. ஆனால் கம்முராபிக்குப் பிறகு 150 ஆண்டுகளாகப் பாபிலோனை ஆண்ட 5 அரசர்களும் எவ்வாறு பாபிலோனை ஆண்டார்கள் என்பது தெரியவில்லை. கம்முராபி ஆட்சியின் நிலையான வெற்றி என்னவென்றால் பின்னால் பாபிலோனை ஆண்ட மன்னர்கள் எல்லாம் பாபிலோனிலேயே தங்கியிருந்தனர். மற்ற நகரங்களெல்லாம் மாகாணங்களாக்கப்பட்டன. இரண்டு ஆறுகளின் முகத்துவாரத்திலுள்ள பகுதி மட்டும் மாகாணமாக்கப்படவில்லை.

கம்முராபியின் 12-ஆம் ஆண்டிலிருந்து 30-ஆம் ஆண்டுவரை பாபிலோனியாவில் அமைதி நிலவியதால் அது வளம் நிறைந்த முக்கியமான நகரமாக விளங்கியது; கல்வியும் தழைத்தோங்கியது; சுமேரிய மொழியில் அரச எழுத்துப் பொறிப்புகளைவிட்டுச் சென்ற முதல் அரசன் கம்முராபியே ஆவார். கம்முராபியின் ஆட்சிக்குப்பின் வந்த நூற்றாண்டுகள் பொற்காலமாக விளங்கின என்று பல பழைய பாபிலோனிய இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. கம்முராபியின் சட்டத்தொகுப்பு ஒன்று அசிரிய மன்னன் அசூர்பானிபாலின் நூலகத்தில் காணப்பட்டது.

கம்முராபி என்ற பெயர் அக்காதியப் பெயரல்ல. இப்பெயரைக் கொண்டிருப்பவர்களின் மொழி 'கிழக்குக் கானான் நாட்டு மொழி' அல்லது 'மேற்குச் செமித்திய மொழி' அல்லது 'எமோரிய மொழி' என்று கூறப்படுகிறது. இலார்சாவை ஆண்ட மன்னர்சிலரைத் தவிர கம்முராபி மன்னன் தான் இப்பெயரைக் கொண்ட முதல் மன்னன் ஆவார். கம்முராபியின் தந்தையும், அவ

ருக்கு முன் ஆண்ட இரு மன்னர்களும் அகாதியப் பெயர்களையே கொண்டிருந்த னர். கம்முராபி என்ற பெயர் மாரியிலுள்ள இலக்கியங்களில் அரச குலப் பெயராகத் தோன்றுகிறது. இதிலிருந்து இப்பெயரைக் கொண்டிருப்பவர்களின் இன, சமூக, முக்கி யத்துவம் நமக்குத் தெளிவாகிறது. இதன் பொருள் இன்னும் தெளிவாகவில்லை. 'கம்மு' என்பது இறைவனைக் குறிப்பதாகவும் உள்ளது. ஆதி 14:1.9-இல் கூறப்படும் அம்ரா பேல் அரசனின் பெயரோடு கம்முராபியின் பெயரும் இணைக்கப்பட்டு வருகிறது.

கம்முவேல் (HAMMUEL - இறைவனின் சினம்)

சிமியோன் கோத்திரத்தில் ஒரு குலத்தின் அல்லது குடும்பத்தின் பெயர் (1 நாள் 4:26). மிசிமாவின் மகனும், சாக்கூரின் தந்தையுமா வார்.

கம்மோத்து-தோர் (HAMMOTH-DOR - தேரின் சூடான ஊற்று)

நப்தலி பகுதியிலுள்ள ஒரு லேவியர் நக ரம் (யோசு 21:32). கம்மோன் (1 நாள் 6:76), கம்மாத்து (யோசு 19:35) ஆகியவை இந்நக ரின் மற்றப் பெயர்களாக இருக்கலாம்.

கம்மோன் (HAMMON - சூடான ஊற்று)

1. அசேர் புதல்வரின் கோத்திரத்துக்குக் கிடைத்த எல்லை நகர் (யோசு 19:28). இராஸ்-ஏன் நாக்குரா பகுதிக்குத் தென்மேற் காக 8 கி.மீ. தொலைவில் கடற்கரையில் அமைந்துள்ள 'உம் ஏல் அவாமித்' நகரும் கம்மோன் நகரும் ஒன்றாக இருக்கலாம்.

2. நெப்தலி கோத்திரத்துக்குச் சொந்தமான ஒரு லேவியர் நகர் (1 நாள் 6:76). இதுவும் கம்மாத்து - (யோசு 19:35) கம்மோத்து-தோர் (21:32) ஆகிய பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

கம்ரான் (HAMRAN)

குலத்தலைவரான திசோனின் மூத்த மகன் (1 நாள் 1:41). ஆதி 36:26-இல் கெமிதான் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கயாபா, யோசேப்பு (CAIPHS, JOSEPH)

இயேசுவை விசாரனை செய்த ஒரு தலை மைக்குரு.

யோசிப்பஸ் இவருடைய பெயரை இரண்டு முறை சொல்கிறார். முதலில் இவர் வலே ரியு கிராத்து என்பவரால் தலைமைக் குரு வாக நியமிக்கப்பட்டார்: இரண்டாவதாக, இவர் ஆளுநர் விட்டேலியு இவரை நீக்கி விட்டு அனானுசின் (ஒருவேளை அன்னா சாக இருக்கலாம்) மகனான யோனாத்தானைத் தலைமைக்குருவாக நியமித்தார். இக் குறிப்பு யோசேப்பு என்ற பெயரையும் சேர்க்கி றது. அனேகமாகக் கயாபா கி.பி. 18-இல் தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டிருக்க லாம்; ஆகவே 18 ஆண்டுகள் தலைமைக்குரு வாகச் சேவை செய்திருக்கலாம்.

புதிய ஏற்பாட்டுக்குப் புறம்பே அன்னாசு, கயாபா ஆகியோரைப்பற்றி மேலும் கூறும் முக்கிய சான்றுகள் இல்லை. ஆனால் புதிய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கதைகள் உள்ளன (உ.ம். கயாபா கிறிஸ்துவனானார்).

இயேசு கைது செய்யப்பட்ட பின்பு தலை மைக்குருவிடம் கொண்டு செல்லப்பட்டார் என்று மாற் 14:53 சொல்கின்றது; ஆனால் மாற்கு அவர் பெயரைச் சொல்லவில்லை. இதற்கு இணையான மத் 26:57-இல் இவர் பெயர் கயாபா என்று சொல்லப்பட்டுள்ளது. ''இயேசுவைத் தந்திரமாகக் கைது செய்து கொலை செய்யவேண்டும்'' என்று திட்டம் தீட்டியவர்களில் ஒருவராக இவர் மத் 26:3-இல் சொல்லப்பட்டிருக்கின்றார். மற்றொரு இணைப்பகுதியான லூக் 22:54-இல் இவர் பெயர் விடப்பட்டுள்ளது. ஆனால் அ.ப. 4:6 தொ-இல் பேதுருவும் யோவானும் கைது செய்யப்பட்டபின்பு தலைமைக்குரு அன்னாசு, கயாபா, யோவான், அலெக்சாந்தர் ஆகிய யூதத் தலை வர்கள் கூடியிருந்ததைப் பற்றிக் கூறுகின் றது. அன்னாசு கயாபாவுக்கு முன்பு தலை மைக்குருவாக இருந்தார் என்றும், அன்னா சின் பதவிக்காலம் கி.பி.14(அ)15-இல் முடிந்த தென்றும் யோசிப்பஸ் தெளிவாகக் கூறுவ தால், கி.பி.30-இல் அன்னாசு தலைமைக்குரு வாக இருந்தார் என்று சொல்வது வியப்புக்குரி யதாகவும், குழப்பமாகவும் இருக்கின்றது. மேலும் லூக் 3:2-இல் 'அன்னாசு, கயாபு

தலைமைக்குருக்களாக இருக்க' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் கீழ்க்கண்ட கேள்விகள் எழலாம்.

1) அன்னாசு, கயாபாவிற்கு முன்பு தலைமைக்குருவாக இருந்தாரா?

2) அப்படியானால் எப்பொழுது அன்னாசின் பதவிக்காலம் முடிந்து கயாபாவின் பதவிக்காலம் ஆரம்பமானது?

3) லூக் 3:2-இல் உள்ளதுபோல் இருவரும் ஒரேசமயத்தின் தலைமைக் குருக்களாக இருந்தனரென்றால் அந்தப் பழக்கம் யூதர்கள் மத்தியில் இருந்ததா?

4) கயாபா அன்னாசோடு சேர்ந்தோ அவருக்குப்பின்போ, தலைமைக்குருவாக இருந்திருந்தார் என்றால், ஏன் அ.ப. 4:6 அன்னாசை மட்டும் தலைமைக்குரு என்று சொல்கின்றது?

ஆனால் யோவான் நற்செய்தியில் இந்தப் பிரச்சனை இன்னும் கடுமையாகிறது. யோவா 11:49-50 கயாபாவைத் தலைமைக் குரு என்று அழைக்கின்றது (அவ்வாண்டில் தலைமைக்குருவாக இருந்தார்). யோவா 18: 13.22.24 ஆகிய பகுதிகள் கயாபாவைத் தலைமைக்குருவாகக் குறிக்கின்றன. அப்படியானால் மீண்டும் கேள்வி எழலாம்;

1) தலைமைக்குரு பதவி ஓராண்டு மட்டும்தானா (எவ்வாண்டு)?

2) சரிசமமான இரண்டு தலைமைக்குருக்கள் ஒரேசமயத்தில் இருந்திருக்கமுடியுமா?

3) ஏன் லூக்காவும், மத்தேயுவும், அன்னாசு, கயாபாவின் மாமனார் என்பதைச் சொல்லவில்லை?

இக்கேள்விகளுக்குப் பதில் அளிக்கப் பலரும் பலவாறு முயன்றுள்ளனர். எப்பதிலும் திருப்தி அளிப்பதாக அமையவில்லை. மேலும் பல கேள்விகளை எழுப்பக்கூடியவைகளாகவே அமைந்துள்ளன.

நற்செய்திகள் துல்லியமான வரலாறு அல்ல; ஆகவே அதன் விவரங்கள் துல்லியமான வரலாறாக இருப்பது மிகமிகக் கடினம்.

இப்பிரச்சனைகளைத் தவிர்க்கப் பின்வரும் விளக்கம் சாதாரணமாக அளிக்கப்படும். அன்னாசு கயாபாவின் மாமனார் என்ற முறையிலும், பதவி நீக்கப்பட்டாலும் முன்னாள் தலைமைக்குரு என்ற முறையிலும், தலைமைக்குரு அதிகாரத்தைக் கொண்டிருந்தார் என்று மக்கள் மதித்தனர். ஆனால் இக்கருத்துக்குப் போதிய சான்றுகள் இல்லை எனலாம்.

கயிறு (CORD, ROPE)

பூர்வீகக் காலத்தில் கயிறுகளைச் செய்வதில் பலவகை நார்கள் பயன்படுத்தப்பட்டன. கருஞ்சிவப்பு நிறமுள்ள சணல் (எஸ்த 1:6), வெள்ளி (திருவுரை 12:6), பொன் (யாத். 28:24-25) ஆகியவைகளில் கயிறுகள் செய்ததாக விவிலியம் கூறுகிறது. பிற்காலத்தில் ஆட்டுமயிர், ஒட்டகமயிர் ஆகியவை இந்த வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டன.

கயிற்றைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. கயிறு என்னும் பொதுப்பெயர் மனிதனுடைய எடையைத் தாங்கக் கூடியதாக இருக்கும் (யோசு 2:15; எரே 38:6); கற்களை இழுக்கவும் (2 சாமு 19:13) திரைச் சிலைகளைக் கட்டவும் பயன்படுத்தப்பட்டது (எஸ்த 1:5). விளக்குகளைத் தொங்கவிடவும் (திருவுரை 12:6) பயன்படுத்தப்பட்டது. இது பொறிக்கும் (சங் 119:61), தீயோருக்கும் (யோபு 18:10), பாதாளம் அல்லது மரணத்தால் அமைக்கப்படும் கண்ணிவலைக்கும் உவமையாகப் பயன்படுத்தப்பட்டது (சங் 18:4-5). அளக்கும் கருவியாகவும் இது பயன்படுத்தப்பட்டது (மீக். 2:5; செக் 2:1).

கயிற்றைக் குறிக்கும் மற்றொரு எபிரேயச் சொல் கூடாரத்தின் கயிறுகளையும் (ஏச 54:2; எரே 10:20) உடன்படிக்கைக் கூடாரத்தின் கயிறுகளையும் (யாத் 35:18; எண் 3:17)

வில்லின் கயிறுகளையும் (சங் 21:2) குறித்தது.

மற்றொரு எபிரேயச் சொல் ''சுற்ற, பிணைக்க'' என்ற மூலப்பொருள்களைக் கொண்டுள்ளது. அடிமைகளைக் கட்டும் கயிற்றைக் குறிக்கும் (நீதி 15;13;சங் 23; எச 4:8; ஏச 3:24). இது தலைமைக் குருவின் ஆடையிலிருந்த பின்னல் வேலைப்பாட்டை யும் குறிக்கும்.

புல்லினால் செய்யப்பட்ட ஒரு கயிறும் (யோவா 2:15; அ.ப. 27:32) வழக்கில் இருந் தது. கப்பலில் இரட்டைச் சுக்கான்களை இணைக்கவும் கயிறு பயன்பட்டது (அ.ப. 27:40).

முறுக்கப்பட்ட தோல், தசைநார்கள், செடி நார்களால் செய்யப்பட்ட ஒரு வலிமையான பருமனான கயிறும் பயன்பட்டது. இது வேளாண்மைக்கு, போரிடும் படைக்கு, கப்ப லுக்கு, மற்றும் வீட்டு வேலைக்குப் பெரி தும் பயன்பட்டது.

எபிரேய மொழியும், கிரேக்க மொழியும், இக்கயிற்றுக்கும் நூல் கயிற்றுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பிரித்துக் காட்டவில்லை. இந்தக் கயிறு செய்யும் கலை நூற்றலையும், நெய்தலையும் விடப் பழமையானது. படகு களைக் கட்டி வைப்பதிலிருந்து சிறைப்பட் டவர்களைக் கட்டி வைப்பது வரைக்கும் கயிறு பயன்படுகிறது என்று எகிப்திய, மெச பொத்தாமியக் கலை காட்டுகிறது. இஸ்ராயே லில் கயிறு மிகவும் குறைந்த விலைக்குக் கிடைத்தது. அதை உடையாகப் பயன்படுத் துவது ஏழ்மைக்கு அடையாளமாக இருந்தது (ஏச 3:24). மேலும் சரணடைவதற்கு அடை யாளமாக இருந்தது (1 அர 20:31). விவி லியம், கயிறு எப்படிச் செய்யப்படுகிறது என்று சொல்லவில்லையானாலும், அதன் பயன் களை அது விவரிக்கிறது. இது சேணம் பூட்டுவதற்கும் விலங்குகளை வழிநடத்துவ தற்கும் (யோபு 41:2; ஏச 5:18), கண்ணிகளை உருவாக்கவும் (யோபு 18:10), சிறைப்பட்ட வர்களைக் கட்டவும் (நீதி 15:13; 16:11-12; சங் 2;3;129:4; எச 3:25), கற்களை இழுக்கவும் அரணை இடிக்கவும் (2 சாமு 17:13) கப்பற் பாயையும் (ஏச 33:23), கூடாரத்தையும் இழுத்துப் பிடிப்பதற்கும் (ஏச 33:20), அளப் பதற்கும் (2 சாமு 8:2; செக் 2:1) கனமான பொருட்களை மேலே தூக்குவதற்கும் கீழே இறக்குவதற்கும் (யோபு 2:15; எரே 38:11) பயன்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில், கயிறு கப்பலில் பாய்மரக் கருவியாகப் பயன் பட்டிருக்கிறது (அ.ப. 27:32.40).

கயீன் (KAIN) - ஆள்.

இது ஒருமையில் உள்ள குழுப்பெயர். கேனியர்களைக் குறிக்கிறது. இது பிலயா மின் குறி சொல்லுதலிலும் (எண் 24:22) நீதி 4:11-இலும் வருகிறது.

கயீன் (KAIN) இடம்.

இது யூதா மலைநாட்டின் தென் பகுதியில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:57). சோதோம், கொமோரா நகர அழிவுகளை ஆபிரகாம் ஒரு மலை உச்சியில் நின்று பார்த்ததாக அரேபி யப் பாரம்பரியம் கூறுகிறது. அது இந்தக் கயீன் பகுதியாக இருக்கலாம். ஆனால் கயீன் கேனியர்களின் குடியிருப்பு என்று பெயர் சுட்டுகிறது. கெபிரோனுக்குத் தென்கிழக்கி லுள்ள இக்காலக் கிர்பெத் யாகினை இந்நக ருக்கு அறிஞர் சிலர் அடையாளம் காட்டு கின்றனர்.

கரடி (BEAR)

நீண்ட முடி, குட்டையான வால், உள்ளங் கால்களைத் தரையில் பதித்து நடக்கின்ற முரட்டுத்தனமான பாலூட்டி வகையைச் சார்ந்த விலங்காகும் கரடி. இருபதாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் வடபகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பாலஸ்தீனக் கரடிகள், சீரியாவில் உள்ள சாம்பல் நிறக்கரடிவகை யைச் சார்ந்ததாகும். இவ்வகைக் கரடிகள் மாமிசத்தை உண்பதைவிடக் காய்கறிகள், பழங்கள், பூச்சிகள் ஆகியவற்றையே அதிக மாக உட்கொள்கின்றன.

பழைய ஏற்பாட்டுக் குறிப்புக்கள் பழங் கால இஸ்ராயேலில் கரடிகள் இருந்ததாகக் கூறுகின்றன. பொதுவாக இவைகள் சாதுவா

னவை என்றாலும், தொந்தரவு செய்யப்பட்டாலோ, பசி ஏற்பட்டாலோ ஆபத்தை விளைவிக்கக் கூடியவையாக மாறிவிடுகின்றன. கரடியின் இத்தகைய கொடூரத் தன்மை பற்றி ஆமோ 5:19-இலும் கூறப்படுகின்றது. புல. 3:19-இல் உணவுக்காகப் பதுங்கி இருக்கும் கரடி கடவுளைக் குறிக்க உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. 1 சாமு 17:34. 36-37-இல் கரடி மந்தையைத் தாக்குவது தாவீதின் வீரத்திற்கு ஒப்பிடப்படுகிறது. ஏச. 11:7-இல் பசுவும் கரடியும் அமைதியான காலத்தில் கூடிமேயும் என்று கூறப்படுகிறது. குட்டிகளைத் துன்புறுத்தினால் கரடிகள் அதிகக் கோபமடைகின்றன (2 அர 2:24-க்கான விளக்கம் இதுவே). 2 சாமு 17:8-இல் (மேலும் காண் ஏச. 59:11; திருவுரை 25:17) குட்டிகளைப் பறி கொடுத்த பெண் கரடியின் கோபம் மனிதனின் கோபத்திற்கு உவமையாகவும், ஓசே 13:8-இல் இறைவனின் கோபத்திற்கு உவமையாகவும் சொல்லப்படுகின்றது. பழ 17:17-இல் தன் மதியீனத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற மடையனைப் பார்ப்பதைவிடத் தன் குட்டிகளை இழந்த பெண் கரடியைப்பார்ப்பது மிக நல்லது என்று கூறப்பட்டுள்ளது.

வெளிப்பாட்டுக் கற்பனையிலும் கரடி பங்கு வகிக்கிறது. தானி 7:5-இல் கடலில் இருந்துவரும் நான்கு விலங்குகளில் கரடி இரண்டாவதாகக் கூறப்படுகிறது. கரடியின் பருமன், பலம், கடினத்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மிதியான் நாட்டைப்பற்றிக் கூறுவதற்கே இந்த விலங்கு இங்குக் கூறப்படுகிறது. திருவெளி 13:2-இல் வரும் விலங்கு உரோமைப் பேரரசரை மனதில் கொண்டு தானி 7-ஆம் அதிகாரத்தைத் தழுவி எழுதப்பட்டதாக இருக்கலாம். திருவெளிப்பாடு கரடியின் கால்களைப்பற்றிக் குறிப்பிடுவது, பகைவர்கள் அனைவரும் வீழ்ந்துவிடுவார்கள் என்பதை அடையாளமாக உணர்த்துகிறது.

கரம் மற்றும் புயம் (ARM AND HAND)

கரம் மற்றும் புயம் என்பவை பொதுவாகச் செயல், வெளியிடுதல் தொடர்பு ஆகியவற்றை உணர்த்தும் உறுப்புகள் மற்றும் அடையாளங்களாகும். புயம் வலிமையையும், கரமானது திறமை மற்றும் செயல் வல்லமையையும் அடையாளமாக எடுத்துக் காட்டுகின்றன.

1. இறைவனின் கரமும் புயமும்:- இறைவனின் கரமானது வானத்தையும் பூமியையும் உருவாக்கியது (ஏச 66:2). குயவனுடைய கரத்தைப் போன்று, அது உருவம் அளிக்கின்றது (யோபு 10:8; எரே 18:6; ஆதி 2:7). இவ்வாறாகப் படைப்பிலும் (எரே 32:17) வரலாற்றிலும் (உப 4:34; லூக் 1:51) இறைவன் அவருடைய கரத்தின் (அவரது கரம் என்பது பொதுவான பொருளில், எச 53:1) வலிமையை வெளிப்படுத்துகிறார். பெரும்பாலும் அவர் ''விரிந்த புயத்துடனும்'' வலிமையான கரத்துடனும் செயலாற்றுகின்றார். அவரது ''புனிதப் புயம்'' (ஏச 52:10) அவரது ''நற்கரம்'' (எஸ் 7:9), ''அவரது கரத்தின் நிழல்'' (ஏச 49:2), உறுதிமொழியில் அவரது உயர்த்தப்பட்ட கரம் (உப 32:40) ஆகியவை, அவரது வலிமைமிக்க பாதுகாப்பை நிறைவிற்குக் கொண்டுவருகின்றன (யோவா 10:29). இறைவனின் கரத்தில் பாதுகாப்பு கண்டடையப்படுகிறது (ஞான 3:1; சங் 3:6; லூக் 23:46). இறைவனின் கரமானது ஓர் இறைவாக்கினரின் மீது இருக்கும்போது, அது அவரை உடைமையாக்கிக் கொண்டு, காட்சியின் ஆவியை அவருக்கு அளிக்கின்றது (எச 1:3). இறைவனுடைய கரமானது காப்பாற்றுவதற்கு மிகக் குறுகியதல்ல (ஏச 50:2). ஆயினும், தான் அடையாளங்காட்டிய இடைவிடா அன்பானது (ஏச 65:2; உரோ 10:21) வெறுத்து ஒதுக்கப்படும்போது, அது கடினமாகித் (சங் 32:4) தண்டிக்கக்கூடும் (ஏச 5:25; எபி 10:31). இறைவனுடைய கரத்தைப் போன்று கிறிஸ்துவினுடைய கரமும் எல்லாம் வல்லதாக உள்ளது (மாற் 6:2; யோவா 10:28); அது அனைத்தையும் கொண்டுள்ளது (யோவா 3:35); அது நோய் தணிக்க விருப்பமுடையது (மத் 8:3).

2. மனிதனுடைய கரமும் புயமும்:- இறைவனுடையதுடன் ஒப்பிடும் போது ஊனா

லான புயமானது வலிமையற்றது (2 நாள்.32:8; ஏச 40:12; பழ 30:4). ஆனாலும், மனிதனிலும் புயமானது தீவிரமான செயலின் கருவியாகவும் அடையாளமாகவும் உள்ளது (சங் 18:35). கரத்தினுடைய சைகையானது மகிழ்ச்சி (2 அர 11:12), துன்பம் (எரே 2:37), ஆசி (ஆதி 48:14), உறுதிமொழி (ஆதி 14:22) மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாகச் செபம் மற்றும் ஆராதனை (சங் 28:2; 1 திமோ 2:8; யோபு 31:27) முதலிய ஆன்மாவின் இயக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது. இறுதியாக, வேண்டுவோரின் கரங்கள் மாசற்றவையாக இருக்க வேண்டும் (சங் 24:4; யாக் 4:8; ஏச 1:15). இறைவனுடைய கரம் எவருடனாவது இருக்குமெனில் (லூக் 1:66), அவரைப் பாதுகாக்க அல்லது அவரது செயலுக்கு ஆற்றல் அளிப்பதற்கேயாம் (அ.ப. 11:21; 5:12). இவ்வாறு, அப்போஸ்தலர்கள் தங்களுடைய கரங்களை விரிப்பதன் மூலம், இறைவனின் ஆவியை அளிக்க முடியும் (அ.ப. 19:6; 1 திமோ 4:14).

இன்றும், கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களைப் போல, ஆயர் அல்லது குருவின் கரமானது, முக்கியமாக அருட்சாதனச் செயல்களில் வாழ்வை அளிக்கின்றது.

கராதா (HARADAH - அச்சம், திகில்)

இஸ்ராயேலர் சீனாய் மலையிலிருந்து பயணம் செய்தபோது பாளையம் இறங்கிய இடம் (எண் 3 3:24-25). இந்த இடம் எங்கேயிருந்தது என்று தெளிவாகத் தெரியவில்லை.

கரி (CHARCOAL)

தாதுப் பொருள்கள் அல்லது கனிப் பொருள்களிலிருந்து கரி தயாரித்ததாக விவிலியக் காலத்தில் காணப்படவில்லை. விறகிலிருந்து தயாரிக்கப்பட்ட கரிதான் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது (பழ. 26:21; யோவா. 18:18).

கரிசனா (CARSHENA - கறுப்பான, சிறப்புப் பெற்ற)

அகசுவேரு மன்னனின் ஏழு அமைச்சர்களில் ஒருவர். இவர்கள் பேரரசின் சிற்றரசர்களாகவும் சட்ட திட்டங்களில் அறிஞர்களாகவும் இருந்தனர் (எஸ்த. 1:14).

கரிமியர் (GARMITE)

யூதாவைச் சேர்ந்த கெயீலாவின் இனக் குறிப்புப் பெயர் (1 நாள் 4:19)

கருங்காலி மரம் (EBONY)

மிகவும் விலையுயர்ந்த ஒரு வகை மரத்தின் அடிப்பாகம். இலங்கையிலிருந்தும் தென் இந்தியாவிலிருந்தும், எத்தியோப்பாவிலிருந்தும் இது இறக்குமதி செய்யப்பட்டது. யானைத்தந்தமும், கருங்காலி மரமும் தீர் நாட்டின் வியாபாரப் பொருட்களாகும் (ஏச 27:15). எகிப்தியர்களும், பெனிக்கியர்களும், பாபிலோனியர்களும், கிரேக்கர்களும், உரோமையர்களும் கருங்காலியையும், யானைத் தந்தத்தையும் மனைத்துணைப் பொருட்களும், பாத்திரங்களும் செய்வதற்குப் பயன்படுத்தினர். மேற்காசிய நாடுகளில் விக்கிரகங்கள் செய்வதற்குக் கருங்காலியைப் பயன்படுத்தினர்.

கருஞ்சிவப்பு (PURPLE)

பழங்காலத்திலிருந்து மதிக்கப்பட்ட ஒரு நல்ல வண்ணச் சாயம். இது வயிற்றால் நகர்ந்து செல்லும் ஒருவகை நத்தையிலிருந்து, குறிப்பாக மத்தியதரைக்கடலில் கிடைத்த நத்தையிலிருந்து தயாரிக்கப்பட்டது. இதைப், பின்னப்படும் நூலுக்கும், உடைகளுக்கும் தெளித்துச் சாயம் ஏற்றினார்கள். இதுபோன்ற தொழிற்சாலைகள் மத்தியதரைக்கடல் பகுதியில்தான் தொடங்கப்பட்டது. நாளடைவில் அது விரிவடைந்தது. கருஞ்சிவப்பு என்பது கிரேத்து, பெனிக்கியாவில் காணப்படும் கதைகளில் முக்கிய இடம் பெறுகின்றது. கானான் என்பதற்குக் ''கருஞ்சிவப்பு நிலம்'' என்பது பொருள். இச்சாயம் தெளிக்கப்பட்ட துணிகள் உகாரித்தில் (கி.மு.1500) கிடைத்தது. இது அரசனுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்தில் கருஞ்சிவப்புச் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பெனிக்கியர்களின் ஏகபோக உரிமையாக இருந்தது. எனி

னும் இது மற்ற இடங்களிலும் கிடைத்தது (எச 27:7).

நத்தையின் செவுளின் அடிப்புறத்திலுள்ள சுரப்பியிலிருந்து இந்தச் சாயம் தயாரிக்கப் படுகின்றது. சாயங்கள் மாற்ற வேண்டுமானால் நத்தையின் வகையைச் சேர்ந்த பல வகை நத்தையின் சுரப்பியிலிருந்து சுரக்கின்றவற்றை எடுத்து ஒரு குறிப்பிட்ட விதத்தில் கலந்து இதனுடன் செங்கொட்டையென முன்பு கருதப்பட்ட கருத்தரித்த பெண் பூச்சியினத்தின் உடலிலிருந்து எடுக்கப்படும் செஞ்சாயப் பொருளைக் கலந்து ஒளியையும் காற்றையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குச் செலுத்தினால் அவற்றின் நிறம் மாறும். சிறந்த தீர் சாயம் என்பது இரண்டு வண்ணச் சாயங்களின் கலவையாகும். நத்தையைப் பற்றியும் சாயம் சேர்த்தல் பற்றியும் பிளினி, விட்ருவியாஸ் ஆகியோர் குறிப்புகள் எழுதியிருந்தாலும் அவைகள் போதுமானதாக இல்லை.

எபிரேயர்கள் சாயங்களை இறக்குமதி செய்தார்கள் என்பதில் சந்தேகமில்லை (எச 27:16.27). நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு நிற நூலால் செய்யப்பட்ட நார்ப்பட்டையால் ஆலயத்தின் திரைகளும் (யாத்.26:1.31), குருக்களின் ஆடைகளும் (யாத் 28:4-6; 39:1. 28-29) செய்யப்பட்டன. கும்ரான் குருகுலத்தில் காணப்பட்ட போர் ஆடைகள் இச்சாயத்தில் தோய்க்கப்பட்டிருந்தன. சாலமோன் எருசலேமின் ஆலயம் கட்டுவதற்கு ஊதா, கருஞ்சிவப்பு நூல், நீல நூல் ஆகியவற்றிலும் வேலைசெய்யும் நிபுணனாகவும் சித்திர வேலை தெரிந்தவனாகவும் இருக்கும் கைவினைஞர்களை அனுப்புமாறு தீர் நாட்டைக் கேட்கின்றார் (2 நாள் 2:6.13; 3:14). அவரது சிவிகை செம்பட்டு மெத்தையால் அலங்கரிக்கப்பட்டிருந்தது (2 ச.3:10). அகசுவேரு அரசனின் அரண்மனையில் கருஞ்சிவப்பு நிறமான மெல்லிய சணல் கொண்டு கட்டப்பட்ட நீலம், பச்சை ஊதா நிறமுள்ள மெல்லிய சணல் திரைகள் தூண்களின் நான்கு பக்கங்களிலும் தொங்கிக் கொண்டிருந்தன (எஸ்த 1.6); உ. ச. 7:5-இல் கூந்தல் செம்பட்டுப் போன்றுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. சிலைகளின் உடை ஊதாவாலும் கருஞ்சிவப்பாலும் செய்யப்பட்டிருந்தது என்று எரேமியா 10:9-இல் பார்க்கிறோம். ஒரு நல்ல மனைவியின் உடை மெல்லிய சணலும் கருஞ்சிவப்பு ஆடையும் ஆகும் என்று 31:22 கூறுகின்றது.

கருஞ்சிவப்புச் சாயங்கள் எபிரேய மக்களினால் வரவேற்கப்பட்டது. கருஞ்சிவப்புச் சாயங்கள் ஏற்றிய உடைகள் மற்றவர்களிடமிருந்து வேறுபாட்டை அளித்தது; மதிப்பைக் கொடுத்தது; ஒருவனது செல்வத்தின் சிறப்பை எடுத்துக்காட்டியது. அரசத்தன்மையைக் காட்டியது. மிதியானிய அரசர்கள் பொன்னாடைகள் அணிந்தனர் (நீதி 8:26). மோர்தெக்காய் அரண்மனையையும் அரச சமூகத்தையும் விட்டுப்புறப்பட்டு நகரத்தினுள் சென்றபொழுது கருஞ்சிவப்பு மென்துகில் அணிந்திருந்தார் (எஸ்த 8:15); வலிமை வாய்ந்த உரோமையர்கள் கருஞ்சிவப்பு ஆடை அணியாததைக் கண்டு யூதா மக்கபேயு வியப்படைந்தார் (1 மக் 8:1.14); கோர்கியாவிடமிருந்து யூதா போரிலிருந்து திரும்புகையில் விலை உயர்ந்த பட்டாடைகளைக் கொள்ளைப்பொருளாக எடுத்து வந்தார் (1 மக் 4:23). அலக்சாந்தர், யோனத்தானைத் தலைமைக் குருவாக நியமித்தபோது, அதற்கு அடையாளமாக அவர் கருஞ்சிவப்பு உடையும் பொன்முடியும் அனுப்பினார் (1 மக் 10:20; 11:58). ஓனியா அநியாயமாய்க் கொல்லப்பட்ட இடத்தில் அந்திரோனிக்கு கருஞ்சிவப்பு உடை உரியப்பட்டுக் கொல்லப்பட்டார் (2 மக் 4:38). பால்தசார், தானியேலுக்கு அளிக்கப்பட்ட வெகுமதியில் ஒன்று கருஞ்சிவப்பு ஆடையாகும் (தானி 5:7).

கருஞ்சிவப்புச் சாயம் ஏற்றப்பட்ட துணிகள் மனிதனின் பொருளாதார நிலைக்கும் தன்மைக்கும் அடையாளமாக உள்ளது என்பதைப் புதிய ஏற்பாட்டுக் குறிப்புகளிலிருந்து அறிகின்றோம். தியாத்தைரா நகரைச் சார்ந்த இலீதியா என்பவள் இரத்தாம்பரம் விற்பவள் (அ.ப. 16:14). சாயம் ஏற்றப்பட்ட

ஆடைகள் பொருளாதார நிலையை எடுத்துக்காட்டுகின்றன (லூக் 18:19). இயேசுவை அரசனாகப் பாவித்துக் கேலி செய்தபோது அவருக்குச் சிவப்புப் போர்வையை அணிவித்தார்கள் (மாற் 15:17-20; யோவா 19:2.5). இரத்தாம்பரமும் செந்நிற ஆடையும் அரசவையில் ஓர் உறுப்பினன் என்பதை எடுத்துக் காட்டின (திருவெளி 17:4). திருவெளி 18:16 உரோமை நகரமானது ''மெல்லிய துணியும் இரத்தாம்பரமும் செந்நிற ஆடையும் அணிந்தவள்'' என்று உருவகப்படுத்தப் பட்டுள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியிலுள்ள கருஞ்சிவப்புச் சாயமுள்ள பட்டாடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைப் பற்றியும், இப் பட்டாடைகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும் புதிய ஏற்பாட்டுக்குப் புறம்பே பல கல்வெட்டுகளும் சரித்திரக் குறிப்பேடுகளும் குறிப்பிடுகின்றன.

கருத்து வேறுபாடு, பிளவு, கலகம் (DISSENSION)

இது ஆதித்திருச்சபையின் பிரிவினரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைக் குறிக்கும். இரண்டாம் தரமாகத்தான் பிளவைக்குறிக்கும் (அ.ப. 15:2). பதிதம் கடும் கருத்து வேறுபாட்டைக் குறிக்கும்.

கருத்து வேறுபாடுகள் பிரிவினைகளை உண்டாக்க அனுமதிப்பதற்கு எதிராகப் பவுல் எச்சரிக்கிறார் (1 கொரி 1:10 தொ). மேலும் ஆண்டவருடைய இரவுணவைக் கடைப்பிடிப்பதில், திருச்சபையின் பல சமூகக் குழுக்கள் பிரிவுகளையோ வேறுபாடுகளையோ உண்டாக்க அனுமதிப்பதற்கு எதிராகவும் எச்சரிக்கிறார் (11:18.20-21). ஆயினும் இறையியல் வாதங்களில் உண்மையான விசுவாசத்திலிருந்து தப்பானவற்றை வேறுபடுத்துவதில் இத்தகைய கருத்து வேறுபாடுகளின் மதிப்பீட்டை ஏற்றுக்கொள்கிறார் (11:19).

கருநிறங்கொண்ட (SWARTHY)

மிகவும் பாதுகாப்போடு, பராமரிக்கப் பட்ட அழகான பெண்ணின் நிறத்தோடு, மாநிறம் கொண்ட நாட்டுப்புறப் பெண்ணின் நிறம் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது (உ.ச. 1:6).

கருமாபு (HARUMAPH - ஊனமுற்ற மூக்கு)

நெகமியாவின் காலத்தில் எருசலேம் சுவரைப் பழுது பார்க்க உதவி செய்த எதாயா என்பவரின் தந்தை (நெக 3:10).

கருமை, காரிருள் (BLACK)

இயற்கையின் சீற்றம், குழப்பம், துயரம் போன்றவற்றை விளக்கும்போது இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில், இருளின் தரத்தை விவரிக்கப் பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் கருமையும் ஒன்று. கருமை என்ற சொல் மயிருக்கும் (லேவி 13:31.37;உ.ச. உ.ச. 5:11), தோலுக்கும் (யோபு 30:30; உ.ச.1:5.6), மனித முகத்திற்கும் (புல 8) குதிரைகளுக்கும் (செக் 6:2.6) அடைச் சொல்லாகப் பயன்படுத்தப் படுகிறது.

வானம் இருளாக இருப்பது மழையின் அடையாளமாகும் (1 அர 18:45). கருமை அல்லது இருள் அண்டத்துயரத்தையும் (எரே 4:28), அழிவின் அடையாளமாகவும் (எச 50:3) திருக்காட்சியற்ற நாளையும் (மீக் 3:6), சோகத்தையும் (யோபு 30:28) மனிதரின் துயரமிக்க அழுகையையும் (எரே 8:21) அடையாளமாகக் குறிக்கிறது.

புதிய ஏற்பாட்டில் கருமை முடி (மத் 5:36), திருவெளிப்பாட்டுக் குதிரைகள் (திருவெளி 6:5), இருளடைந்த சூரியன் (6:12) ஆகியவற்றின் விவரிப்பில் பயன்பட்டுள்ளது. சீனாய் மலைக்காட்சி (எபி.12:18), பாதாள உலகம் (யூதா 13) ஆகியவற்றின் விவரிப்பிலும் இருள் பயன்பட்டுள்ளது.

கருவாலி மரம் (OAK)

பல எபிரேயச் சொற்கள் கருவாலி மரம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இம் மரம் பாலஸ்தீனத்திலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் சாதாரணமாய்க் காணப்பட்ட

மரங்களில் ஒன்று. இதில் முந்நூறுக்கும் மேற்பட்ட வகைகள் உண்டு. சில எப்போதும் பச்சையாக இருக்கும். இந்த மரங்கள் அதனுடைய வலிமைக்கும், உயரத்திற்கும் பெயர்போனது. இந்த மரத்தின் ஒரு வகையான ''கோல்ம்'' மரமானது 25 முதல் 30 அடி உயரமும், தாபோர் மலை போன்ற பகுதிகளில் 40 முதல் 50 அடி வரையும், வளர்கிறது. இந்த மரம் எந்த இனத்தைச் சார்ந்தது என்பது பற்றி இன்றும் கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. விவிலியத்திலே தெளிவாக இந்த மரத்தைப் பற்றி ஆதி 35:8; ஏச 2:13; 6:13; 44:14; எச 27:6; ஓசே 4:13; ஆமோ 2:9; செக் 11:2 போன்ற பகுதிகள் குறிப்பிடுகின்றன.

சில கருவாலிமரங்கள் அவை இருந்த இடத்தின் அடிப்படையில் சிறப்புப்பெயர் பெறுகின்றன; பாசானின் கருவாலி மரங்கள் (ஏச 2:13; எச 27:6; செக் 11:12), மமிரேயின் கருவாலி மரம் (ஆதி 13:18; 14:13; 18:1), சிலைத்தூண் கருவாலி (நீதி 9:6).

கருவாலி மரம் சிலைகள் செய்யப் பயன்பட்டது (ஏச 44:14-17). எமோரியரின் வலிமை கருவாலி மரத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது (ஆமோ 2:9).

கருவூலம், கருவூலக்காப்பாளர் (TREASURY, TREASURER)

1. இது செல்வங்களைச் சேர்த்து வைப்பதற்குப் பயன்பட்ட பாதுகாப்பான இடமாகும். சொந்த உடைமைகளைச் சேர்த்து வைப்பதற்குப் பேழை பயன்படலாம் (எச 27:24). ஞானியின் பேழை ஒரு கருவூலமாக இருக்கலாம் (மத் 2:11). இயற்கையின் வழியாகச் செயல்படும் இறைவனது அருளும் பராமரிப்பும் அவரது ஆசிர்களின் கருவூலத்தை வெளிப்படுத்துகிறது (உப 28:12; 33:19; ஏச 45:3).

அ) ஆலயக் கருவூலம்:- சுமேரின் தொடக்க காலக் கோவில்கள் செல்வமிக்கவையாக இருந்தன. கருவூலங்களைக் கொண்டிருந்தன. தீர் ஒரு நகரக் கருவூலத்தைக் கொண்டிருந்தது (எச 28:4). இது இந்த வியாபார நகரத்தின் பொதுவான சொத்தைக் குறிக்கலாம். ஆண்டவரின் கூடாரத்தில் ஒரு கருவூலம் இருந்ததாகத் தெரிகிறது (யோசு 6:19). எருசலேம் ஆலயம் பலவகையான செல்வங்களுக்கு அறைகளைக் கொண்டிருந்தது (1 அர 7:51;1 நாள் 28:11தொ). சாலமோன் சொத்துக்களை ஆலயக் கருவூலங்களில் சேர்த்து வைத்தார் (1 அர 7:51; 2 நாள் 5:1) கானானியக் கோவில்கள் பற்றிய அகழ்வாய்வுகள் தானியங்களைச் சேர்த்து வைக்கும் குழிகளையும்,கருவூலங்கள் எனக் கருதக் கூடிய இடங்களையும் காட்டுகின்றன.

ஏரோதின் ஆலயத்தில் வருவாயில் பத்தில் ஒரு பங்கும்,வரிகளும் கருவூலத்திற்குச் செலுத்தப்பட்டன. யோசிப்பஸ், ஆலய வரியைச் சேர்த்து வைக்கப் பதின்மூன்று பேழைகள் இருந்ததாகக் கூறுகிறார். கருவூலப்பேழைகள் எக்காள வடிவில் மகளிர் முற்றத்தில் இருந்ததாக மிஸ்னா கூறுகிறது. யூதாஸ் வெள்ளிக் காசுகளைத் திருப்பிக் கொடுத்த போது அவற்றைக் கருவூலத்தில் போடக் குருக்கள் மறுத்துவிட்டனர் (மத் 27:6). கருவூலத்தில் போடப்படும் காணிக்கைகளைக் கவனிக்கும் வண்ணம், அதன் சுற்று வட்டாரத்தில் இயேசுவை அடிக்கடி காண்கிறோம் (மாற் 12:41 தொ; லூக் 21:1 தொ;யோவா.8:20)

ஆ) அரசக் கருவூலம்:- ஆலயக் கருவூலமும் அரசக் கருவூலமும் சாலமோன் காலத்தில் ஒன்றாய் இருந்திருக்கலாம். ஆனால் எசக்கியா தமது சொத்துக்களைச் சேர்த்து வைக்கக் கருவூலங்களையும் சேமிப்பு இடங்களையும் கொண்டிருந்தார் (2 நாள் 32:27-28; ஏச.39:2). சமாரியாவைச் சேர்ந்த இடங்களில் ஏடுகளும் வரி இரசீதுகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஆவணங்களும் சட்டங்களும் அரசக் கருவூலத்தில் வைக்கப்பட்டிருக்கலாம் (எஸ் 5:17). பாரசீகத்தில் கைக்கூலி அரசக் கருவூலத்திற்குச் சென்றது (எஸ்த 3:9;4:7). பொதுச் சொத்துக்களைப் பொருத்தமட்டில் நெகமியா பாரசீகப் பழக்கத்தைக் கடைப்பிடித்தார் (நெக 10:37; 13:7). மக்கபேயர் காலத்தில் பொது ஆவணங்கள் கருவூலத்

தில் வைக்கப்பட்டன (1 மக் 14:49). சில சமயங்களில் கருவூலம் ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் குறிக்கவில்லை. அரசனது சொத்துக்கள் சேர்த்து வைக்கப்பட்ட இடங்களையெல்லாம் குறித்தது (எஸ். 7:20). களஞ்சியங்களும் சேமிப்பு நகரங்களும் அரசக் கருவூலங்களாகத் திகழ்ந்தன (நெக 13:12; ஆதி 41:48 தொ; யாத். 1:11; 1 அர 9:19; 2 நாள். 8:4-6).

2. கருவூலக்காப்பாளர்:- அ) பழைய ஏற்பாட்டில்:-

இவர், பொருட்கள்,ஆவணங்கள், பணம், மற்றும் அணிகலன்கள் அடங்கிய அரச அல்லது ஆலயச் சொத்துக்களுக்குப் பொறுப்பாளர் ஆவார். இவரே அரசனது சொத்துக்களைக் கண்காணிப்பவரும் கருவூலத்தை மேற்பார்ப்பவரும் ஆவார்.

அசிமவேத்து தாவீதின் கருவூலக்காப்பாளர் ஆவார் (1 நாள் 27:25). இவர் அரசக் கருவூலத்திற்குப் பொறுப்பான அதிகாரி. ஒருவேளை அவருக்குக்கீழ், உசியாவின் மகனான யோனத்தான் நாட்டின் கருவூலங்கள் அனைத்திற்கும் பொறுப்பாளராக இருந்தார். ஒருவேளை இவர் அரச வரிகளின் சேமிப்பிற்கும் அரச நிலங்களுக்கும் பொறுப்பாய் இருந்திருக்கலாம். ஆனால் இருவரும் கண்காணிப்பாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் (1 நாள் 27:31). அகியா, தாவீதின் கீழ், ஆண்டவருடைய வீட்டின் கருவூலத்தைக் காப்பவராகக் கூறப்படுகிறார் (1 நாள் 26:20). அதே வேலையைச் சாலமோன் காலத்தில் எகியேல் செய்தார் (1 நாள் 29:7-8). எசக்கியா காலத்தில் செப்னாவை ஏசயா அரண்மனைப் பொறுப்பாளன் என்று கூறுகிறார் (ஏச 22:15).

நெபுக்கதுனேசார் தமது அதிகாரிகளில் கருவூலக்காப்பாளர்களைக் கொண்டிருந்தார் (தானி 3:2). மித்திருதாத்து சைரக காலத்தில் கருவூலக் காப்பாளராக இருந்தார்; கைப்பற்றப்பட்ட கொள்ளைப் பொருட்களுக்கும் பின்பு அவற்றை உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கும் பொறுப்பாளர் ஆவார் (எஸ். 1:8). பாழடைந்த நாட்டை மீண்டும் அமைக்கப் பொருள்கொடுத்து எஸ்ராவுக்கு உதவிடுமாறு அர்த்தாசெருசு தமது கருவூலக் காப்பாளர்களுக்குக்கட்டளையிட்டார்(7:21-22) காணிக்கைகளைக் கவனிக்கப் பல கருவூலக் காப்பாளர்களை நெகமியா நியமித்தார் (நெக 13:13; 1 நாள் 9:26; நெக 12:44).

ஆ) புதிய ஏற்பாட்டில்:- எத்தியோப்பிய அண்ணகன் அரசி கந்தாக்குவின் கருவூலத்திற்குப் பொறுப்பாளர் ஆவார் (அ.ப. 8:27). ஏரத்து கொரிந்து நகரத்தின் பொருளாளர் ஆவார் (உரோ 16:23).

கரூபியர் (HARUPHITE)

தாவீது சிக்கிலாகு என்னுமிடத்தில் இருந்த போது அவரோடு சேர்ந்துகொண்ட பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஆற்றல் மிக்க வீரனான செப்பத்தியா என்பவரின் இனப் பெயர் (1 நாள் 12:5). இப்பெயர், 1 நாள் 2:51-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் காலேபு குலத்தினரான காரேபு அல்லது நெக 7:24; 10:19-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் காரிபு குடும்பத்தோடும் தொடர்புடையதாக இருக்கலாம். ஆனால் இங்குக் காரேபு அல்லது காரிபு என்பது தெரியாத ஓர் இடத்தின் பெயரையே குறிக்கின்றது.

கரோசத்து — ககோயிம் (HAROSHETH - HAGOIIM — புறவினத்தாருடைய காடு)

கானான் நாட்டவர்கள் வாழ்ந்த ஒரு நகரம். இஸ்ராயேலர்களான பாராக்கு, தெபோரா ஆகியவர்களால் தோற்கடிக்கப்பட்ட சிசரா இவ்வூரைச் சேர்ந்தவர் (நீதி 4:2-13.16). இது எங்கிருந்தது என்று சரியாகத் தெரியாத போதிலும், தேல் அமுர் அல்லது தெல் எல் ஆர்பாசு பகுதியே இந்நகரமாக இருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் இந்த இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியின் முடிவுகள் இக்கருத்துக்கு எதிராக இருக்கின்றன. அநேகமாகக், கரோசத்து-ககோயிம் என்பது அமர்னாக் கடிதங்களில் காணப்படும் முக்ராஸ்தி என்ற நகராக இருக்கலாம். அப்படியானால், இந்நகர் சரோன் சமவெளியில் அமைந்திருக்க வேண்டும்.

கரோது (HAROD — பயம், நடுங்குகிற)

1. மிதியானியரோடு போரிடுவதற்காகக் கிதயோன் பாளையம் இறங்கியிருந்த இடத்திற்கு அருகில் இருந்த நீரூற்று (நீதி 7:1). பெலிஸ்தியரோடு போரிடும்போது சவுல் பாசறை அமைத்திருந்த நீரூற்றும் இதுவாக இருக்கலாம் (1 சாமு 29:1). கில்போவா மலைக்கு வடமேற்காக அமைந்துள்ள அயின் சலுது என்ற நீரூற்றே இது என்று அடையாளம் காட்டப்படுகிறது.

2. தாவீதின் வீரர்களில் இருவரான சம்மா, எலிக்கா என்பவர்களின் ஊராகும் (2 சாமு 23:25). எருசலேமிலிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள பேத்து — கதூத்து இவ்விடமாக இருக்கலாம். யூதப் பாரம்பரியப்படி இங்கிருந்து காடு தொடங்குகிறது. இது, கிதரோன் ஓடையில் எருசலேமுக்கும் மார்சாபாவுக்கும் இடையிலுள்ள கிர்பெத்துகரேய்தான் இவ்விடமாக இருக்கலாம் என்று கருத ஆதரவு அளிக்கிறது.

கர்கமிசு (CARCHEMIS)

யூப்பிரத்திசுக்கு மேலுள்ள ஒரு முக்கியமான சீரிய — இத்தியத் தலைநகரம், இப்பொழுது தோண்டி எடுக்கப்பட்டுள்ள இடம் செராபுலுஸ் என்றழைக்கப்படுகின்றது.

அசீரியர்களால் கர்கமிசு பிடிபட்டதை ஏச 10:9 சுட்டிக்காட்டுகிறது. யோசியாவின் முப்பத்தொன்றாம் ஆண்டில் பாரவோன் இரண்டாம் நெக்கோ கர்கமிசின் மேல் படையெடுத்தது, 2 நாள் 35:20 இல் குறிப்பிடப்படுகிறது. யோசியாவின் மகனான யோயாகிமின் நான்காம் ஆண்டில் நெபுக்கதுனேசார் கர்கமிசில் இரண்டாம் நெக்கோ பாரவோனைத் தோற்கடித்தார் (எரே, 46:2).இந்தப்போர் நெபுக்கதுனேசாரின் ஆட்சிக்குறிப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கர்கமிசு பற்றிய குறிப்புகள எகிப்திய சித்திர எழுத்து ஏடுகளில் காணப்படுகிறது. உகாரித்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இத்திய ஏடுகள் அமர்னாக் காலத்தில் இந்நகரத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றன.

கர்காசு (CARKAS - அனேகமாக ''ராஜாளி'' என்று பொருள்படும்)

அகசுவேரு மன்னனின் அரண்மனையில் பணிசெய்த ஏழு அண்ணகர்களில் ஒருவர். அரசி வாஸ்தியை அழைத்து வரும்படி இவரும் அனுப்பப்பட்டார் (எஸ்த 1:10).

கர்க்கா (KARKA — தரை)

இது யூதாவின் தென் எல்லையில் அசிமோனிற்கு அருகில் உள்ள ஓர் ஊர் (யோசு 15:3). இது வாடி ஏல் — அயினும் உம்காசும் ஒன்றுகூடும் இடத்திலுள்ள இக்கால அயின் ஏல் — கோசேயிமேயாக அடையாளம் காட்டப்படுகிறது.

கர்க்கோர் (KARKOR)

இது தெற்குக் கிலயாத்தின் மலைப் பகுதியில் உள்ள ஓர் இடம். நீதிபதி கிதயோன், இந்த இடத்தில் மிதியானியர்களை இரண்டாம் முறை தோற்கடித்தார் (நீதி 8:10-11). பழைய காலத்து நகரம் பாலஸ்தீனத்திற்கும் துமாவுக்கும் இடையிலுள்ள வர்த்தகச் சாலையில் இருந்தது. இது வாடி சீர்கான் சமவெளியில் உள்ள இக்காலக் கார்க்கார் என்பதோடு அடையாளம் காட்டப்படுகிறது.

கர்த்தா (KARTAH)

செபுலோனுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியிலுள்ள ஒரு லேவியர் ஊர் (யோசு 19:15; 21:34).

கர்த்தான் (KARTAN)

கெர்சோனியருக்குக் கொடுக்கப்பட்ட நப்தலி இனப்பகுதியைச் சேர்ந்த ஒரு லேவியர் நகர் (யோசு 21:32). இதற்கு இணையான விவரிப்பில் (1 நாள் 6:76) இந்நகர் கிரியத்தயிம் என்று குறிக்கப்படுகிறது. வட கலிலேயாவில் கெதேசுக்கு வடமேற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத்து ஏல்-

குரேயியே இந்நகர் இருந்த இடமாகக் கூறப்படுகிறது.

கர்மி (CARMI — திராட்சைத் தோட்ட உரிமையாளன்)

1. ரூபனின் நான்கு புதல்வர்களில் கடைசி மகன் (ஆதி 46:9; யாத் 6:14; எண் 26:6; 1 நாள் 5:3). கர்மி என்பவர் கர்மியர் குடும்பத்தின் குலத்தலைவராவார்.

2. இவர் யூதா இனத்தைச் சார்ந்தவர். ஆக்கான் என்பவனின் தந்தை (இவர் 1 நாள் 1:7-இல் ஆக்கார் என்றழைக்கப்படுகிறார்). இந்த ஆக்கான்தான் எரிகோவில் கடவுளின் கட்டளையை மீறியவர் (யோசு 1:18; 1 நாள் 2:7; 4:1 இல் காலேபு என்பது கர்மி என்று வாசிக்கப்படவேண்டும்).

3. ஒருவேளை காலேபின் மற்றொரு பெயராக இருக்கலாம் (1 நாள் 4:1)

கர்மியர் (CARMITES)

கர்மி என்பவரைக் குலத்தலைவராகக் கொண்ட குடும்பத்தின் பெயர் (1 எண் 26:16).

கர்மேலியர்(CARMELITE)

கர்மேல் நகரின் குடிமகன் நாபால் (1 சாமு 30:5;2 சாமு 2:2; 3:3) கெசிரோ (2 சாமு 23:35; 1 நாள் 11:37) ஆகியோர் இவ்வூரைச் சேர்ந்தவர்களாவர்.

கர்மேலியள்(CARMELITESS)

கர்மேல் நகரைச் சேர்ந்த பெண். நாபாலின் மனைவியான அபிகாயிலுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது (1 சாமு 27:3; 1 நாள் 3:1).

கர்மேல் (CARMEL - திராட்சைத் தோட்டம்) - நகரம்.

யூதாவிலுள்ள மாவோன் மாவட்டத்தில் அமைந்த ஓர் ஊர் (யோசு 15:55). தற்காலத்தில் இது ஏல் - கெர்மில் என்பதாகும். கெபிரோனிலிருந்து தெற்கே, தென்கிழக்கே 13 கி.மீ. தொலைவில் உள்ளது. அமலேக்கியர்களை முறியடித்தபின் மன்னர் சவுல் இவ்விடத்தில் நினைவுச் சின்னம் ஒன்றை ஏற்படுத்தினார் (1 சாமு 15:12). தாவீது மன்னனுக்கும் நாபால் என்பவனுக்கும் இடையே ஏற்பட்ட நிகழ்ச்சி இவ்விடத்தில்தான் நிகழ்ந்தது. அதன் விளைவாகத் தாவீது நாபாலின் மனைவியாகிய அபிகாயில் என்ற விதவையைத் தம் மனைவியாக ஏற்றுக்கொண்டார் (1 சாமு 25:2-40; 27:3; 30:5; 2 சாமு 2:2; 3:3; 1 நாள் 3:1). மன்னன் தாவீதின் வலிமையான போர் வீரர்களுள் ஒருவரான கெசிரோ கர்மேல் ஊரைச் சார்ந்தவர் (2 சாமு 23:35; 1 நாள் 11:37).

கர்மேல் மலை (CARMEL MOUNT - தோட்டம், திராட்சைத் தோட்டம்)

பாலஸ்தீனக் கடற்கரையில் அமைந்த மிக முக்கியமானதொரு மலை. இது மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள மலைத் தொடர்களுக்குத் தலைமையாக உள்ளது. இறைவாக்கினர்கள் எலியா, எலிசா ஆகியவர்களோடு அதிகமாகத் தொடர்புடையது. சின்னமானியன் என்ற கடுமையான சுண்ணாம்புக் கற்களால் ஆன இந்த மலை தென்கிழக்கே சுமார் 13 மைல் தூரம் நீண்டு செல்கிறது. எசிபியா என்னுமிடத்தில் மிக அதிகமாக 530 மீட்டர் உயரம் கொண்டது. சாதாரணமாகத் தரைமட்டத்திலிருந்து 140 மீட்டர் உயரம் கொண்டது. இம்மலையின் வடகிழக்குப் பகுதியானது சரிந்து செங்குத்தாகக் காணப்படுகிறது. ஆனால் தென்மேற்குப் பகுதியானது கடல்மட்டத்தை நோக்கி வரும்போது படிப்படியாக உயரம் குறைந்து செல்கிறது. செழிப்புவாய்ந்த அடர்த்தியான செடி கொடிகள் இம்மலையில் காணப்படுகின்றன.

ஆப்பு வடிவத்தில் காணப்படும் இம்மலை பாலஸ்தீனக் கடற்கரையை இருபகுதிகளாகப் பிரிக்கிறது. வடக்கே ஆக்கோ சமவெளி என்றும் தெற்கே சாரோன், பெலிஸ்தியா சமவெளிகள் என்றும் இருபகுதிகளாகப் பிரிக்கிறது. இம்மலையின் அடி மட்டத்திற்கும் கடலுக்கும் இடையே காணப்படும் குறுகிய கடற்கரைச் சாலைதான் இந்த இரு பகுதிகளையும் இணைக்கிறது. இம்மலைத்

தொடரின் கணவாய்கள் வழியாகத்தான், வணிக, இராணுவப்பாதைகள், இபுலயாம், தனாக்கு, மெகிதோ, யோக்குனேயாம் ஆகிய இடங்களுக்குச் சென்றன.

கர்மேல் மலை பிறபகுதிகளிலிருந்து பிரிந்து இருப்பதால் வரலாற்றுக் காலங்களில் இதன்மேல் மக்கள் குறைவாகவே குடியேறினர். எனினும் இம்மலையின் மேற்குப் பகுதியில் காணப்படும் குகைகளில் கற்காலங்களில் மனிதர்கள் வாழ்ந்ததற்குச் சான்றுகள் உள்ளன. இம்மலையைப்பற்றிய முதல் வரலாற்று விளக்கங்கள் மூன்றாம் துத்து — மோசு, இரண்டாம், மூன்றாம் இராமசேக ஆகியோரது குறிப்புகளில் காணப்படுகின்றன. எனினும் பலர் இக்குறிப்புகளில் காணப்படும் ரோஸ் கிதுசு என்ற இடத்தைக் கர்மேல் மலையெனக் கூறுவர். ரோஸ் கிதுக என்பதன் பொருள் புனிதமுனை என்பதாகும். இதுதான் கர்மேல் மலைக்குப் பெயர் என்றால், இம்மலை முற்காலத்தில் புனித இடமாக அல்லது பீடமாகக் கருதப்பட்டது என்பது பலரது கருத்து.

விவிலிய வரலாற்று ஏடுகளில் இம்மலை முக்கியத்துவம் வாய்ந்தது. இறைவாக்கினர் எலியாவிற்கும் பாகால் தெய்வத்தின் இறைவாக்கினர்களுக்கும் போட்டி நடந்தது இம் மலையில்தான் (1 அர 18:19-40). இறைவாக்கினர் எலிசா கர்மேல் மலையில் தான் தங்கிச் செபித்து வந்தார் (2 அர 2:25; 4:25). கர்மேல் மலையின் அழகும் (உ.ச. 7:5) அதன் வலிமையும் விவிலிய ஆசிரியர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. எனவேதான் அவர்கள் இம் மலையைச் சாரோன், லெபனோன், பாசா, கிலயாது, (எச 33:25; எரே 50:19; மீக் 9:14) ஆகிய சமவெளிகளோடு ஒப்பிட்டுக் கூறுவர். அல்லது இம்மலையின் காய்ந்த நிலையைப் (வறட்சியை) பெரும் வறட்சி என்று உவமைப்படுத்தியும் கூறுவர் (எச 33:9; ஆமோ 1:2; நாகூ 1:4).

எலியாவின் பெயர் இன்றும் இம்மலையோடு தொடர்புபடுத்தப்பட்டு இறைவாக்கினர் எலியாவின் மலை என்ற பொருளில் ''எபெல் மார் எலியா'' என்றழைக்கப்படுகிறது. இம்மலை அடிவாரத்தில் இக்காலத்திய கயிபா என்ற நகர் உள்ளது.

கர்னயிம் (CARNAM)

அசித்தரோத்து — கர்னயிம் என்பதன் மற்றொரு பெயர் (1 மக் 5:26;2 மக் 12:21.26)

கலப்பை (PLOUGH)

நிலத்தை உழுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கருவி. அக்காலத்தில் கலப்பைகளின் தரம் மிகக் குறைவாகவே இருந்தது. இந்தக் காலத்திலும்மேற்காசிய நாடுகள் சிலவற்றில் கலப்பையின் தரம் இன்னும் முன்னேறவில்லை. இக்கலப்பைகள் நிலத்தின் மேல்பரப்பை நான்கு அல்லது ஐந்து அங்குலங்களுக்குத் தோண்டி ஆழப்படுத்தும். நல்ல மழை பெய்தபின் கெட்டியான நிலத்தில் பயிரிடுமுன் நிலம் இக்கலப்பையின் மூலம் உழப்படுகிறது. உப 22:10-இல் மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழும் அரேபியப் பழக்கத்தை இஸ்ராயேல் மக்கள் பின்பற்றக்கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

இக்காலம் போல் அக்காலத்திலும் பல்வேறு மிருகங்களை உழுவதற்குப் பயன்படுத்தியிருப்பார்கள் என அறிஞர்கள் கருதுகிறார்கள்.

கலயம் (CRUSE)

பத்து முதல் பதினைந்து செ.மீ உயரமுள்ள இந்தக் கலயம் ஒலிவ எண்ணெயை வைத்திருக்கப் பயன்பட்டது. இறைவாக்கினர் எலியா சரேப்தா ஊரின் விதவையிடம் உணவு கேட்கும்போது, அவள் பானையில் சிறிது மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் இருப்பதாகக் கூறுகிறாள் (1 அர 17:12-16). 1 சாமு 26:11-16-இல் களிமண்ணால் செய்யப்பட்ட தண்ணீர்க் குவளையைக் குறிக்கப் பயன்படுகிறது. 2 அர 2:20-இல் கிண்ணம் என்று குறிக்கப்படுகிறது.

கலயேது (GALEED - சாட்சிக் குவியல்)

கலயேது என்பதற்குச் சாட்சியக்குவியல் என்று பொருள். கற்குவியல், எல்லைக்கல்,

நினைவுத்தூண் என்றும் பொருள் கொள்ளல் வேண்டும். யாக்கோபும் இலாபானும் தங்களுக்குள் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாகவும், தங்களுக்குரிய பகுதியின் எல்லையாகவும் அமைத்துக் கொண்ட கற்குவியலுக்குக் கலயேது என்ற பெயரை யாக்கோபு இட்டார். இதையே இலாபான் எகர்-சகதூத்தா என்றழைத்தார் (ஆதி 31:46-54). பின்னது அரமேயிக்குப் பெயராகும். சொல்லிலக்கணப்படி கலயேது கிலயாதுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

கலாத்தியருக்குத் திருமுகம் (LETTER TO THE GALATIANS)

1. ஆசிரியர்:- இந்தத் திருமுகத்தைப் பவுல் தான் எழுதினார் என்பது பற்றித் தொடக்க காலத் திருச்சபையில் ஐயம் இருந்ததில்லை. இதையே பழங்காலத் திருச்சபை ஆசிரியர்களும் நவீனகால ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டனர். இதற்கு மாறாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சில புரட்சி ஆய்வாளர்கள் எழுத ஆரம்பித்தனர். இவர்கள், பாவுர், வான்மொனென். லூரவாசி, துபியன் குழுவினர் போன்றவர்களாவர்.இந்தத் திருமுகத்திலிருந்து அந்தியோக்கிய இஞ்ஞாசியர், போலிக்கார்பு, யூஸ்தீன் போன்றவர்கள் எடுத்துக்காட்டுக் கூறுகின்றனர். இரனேயு, இந்நூல் பவுலால்தான் எழுதப்பட்டது என்று தெளிவாகக் கூறுகிறார். இது முராதோரியன் பட்டியலிலும், தொடக்க காலத் திருச்சபைச் சங்கங்களின் பட்டியலிலும் இடம் பெறுகின்றது. மேலும் உள்ளார்ந்த ஆய்வு, நூலின் ஒவ்வொரு வரியிலும் பவுலின் கரத்திற்குச் சான்று காட்டுகிறது.

2. கலாத்தியா:- சிறிய ஆசியாவின் மத்தியிலுள்ள ஒரு பகுதியாகும். கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேறிய காலியரின் (கெல்தியர்) பெயரால் கலாத்தியா என்றழைக்கப்பட்டது. இவர்கள் இந்தோ-ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஐரோப்பாவிலிருந்து தென் கானலூப் பகுதிகளுக்கும் மக்கதோனியாவுக்கும், கிரேக்கத் தீபகற்பப் பகுதி வரையும்கூடப் படையெடுத்து வந்தனர். இங்குப் பித்தினியாவின் அரசன் முதலாம் நிக்கோதேமு தன் சகோதரனுக்கு எதிராக இவர்களின் உதவியைப் பயன்படுத்தினார். இந்தக் கலாத்தியக் கூட்டத்தினர் மேற்குச் சிறிய ஆசியாவில் பரவ ஆரம்பித்தனர். இவர்களின் முன்னேற்றம் செலூக்கிய அரசன் முதலாம் அந்தியோக்குவால் தடுக்கப்பட்டு, காலி ஆற்றின் இருமருங்கிலும் உள்ள பகுதி இவர்களின் பகுதியாயிற்று. இப்பகுதி வடக்கில் பித்தினியாவாலும் மற்றும் பாப்லகோனியாவாலும், தெற்கிலும் மேற்கிலும் பிரிகியாவாலும் கிழக்கில் போந்துவாலும் தென்கிழக்கில் கப்பதோக்கியாவாலும் சூழப்பட்டிருந்தது. இப்பகுதியின் முக்கிய நகரங்கள் அன்சீரா (இக்கால அங்கரா) பெசினு, தாவியும் ஆகும். பிற்கால விவிலிய இலக்கிய வாத எதிர் வாதத்தில் ''வட பகுதி'' என்றழைக்கப்படும். தொடக்க காலக் கலாத்தியா மூன்று காலிய இனத்தவர் சேர்ந்த கூட்டரசு ஆகும். பன்னிரண்டு தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டது. இவர்கள் சுற்றியுள்ள பகுதிகளைத் தாக்கித் தொந்தரவு கொடுத்து வந்தனர். கி.மு. 189-ஐ ஒட்டி மனலியு வுல்சோ என்ற உரோமைப் படைத் தலைவர் இவர்களை அடக்கினார். மித்திரிதேத்தியப் போரில் பெர்காமோனுக்கு எதிராக இப்பகுதியைத் தாக்குதலைத் தாங்கும் இடைப்பகுதியாக உரோமையர் பயன்படுத்தினார். பின்னர் இப்பகுதி உரோமையருக்குப் பணிந்த நாடாகியது. கலாத்தியர் செய்த உதவிக்குச் சன்மானமாக இப்பகுதி விரிவாக்கப்பட்டது. கி.மு. 40-ஐ ஒட்டிப் பிசிதியா, பிரிகியா, இலிக்கவோனியா, பாப்லகோனியா, போந்து மற்றும் இசாவுரியா ஆகிய பகுதிகள் கலாத்தியாவின் பகுதிகளாகின. இவை பிற்காலத்தில் பிற்கால விவிலிய இலக்கிய வாத எதிர் வாதத்தில் ''தென்னாடு'' என்றழைக்கப்படும். கி.மு.25-இல் கடைசி காலிய அரசன் அமின்தாஸ் இறந்தபின் இப்பகுதி ஓர் உரோமையர் மாகாணமாயிற்று. அன்சீரா இம்மாகாணத்தின் தலைநகராயிற்று. பிசிதிய அந்தியோக்கியா, இக்கோனியா,இலிசித்திரா, தெர்பை போன்றவை தென்பகுதியின் முக்கிய நகரங்களாகும்.

பவுல் தமது முதல் (அ.ப. 13:14; 14:24) இரண்டாம் (16:1-5) மறைபரப்புப் பயணங்களில் இம்மாகாணத்தின் பல நகரங்களுக்கும் சென்றார். 2 திமோ 4:10; 1 பேதுரு 1:1-இல் குறிக்கப்படும் கலாத்தியா உரோமை மாகாணத்தையே குறிக்கலாம்.

3. யாருக்கு எழுதப்பட்டது?:- ''கலாத்தியா'' என்ற சொல்லை எந்தப் பொருளில் பவுல் பயன்படுத்தினார்? யாருக்கு இந்தத் திருமுகத்தை அவர் எழுதினார்? கலாத்திய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கா? அதாவது வட பகுதியில் வாழ்ந்தவர்களுக்கா? அல்லது வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கா? அதாவது, உரோமை மாகாணத்தின் தென் பகுதியில் வாழ்ந்தவர்களுக்கா? வட பகுதியினருக்குத்தான் பவுல் இத்திருமுகத்தை எழுதினார் என்றனர் சிலர். வேறு சிலர் தென்பகுதியினருக்குத்தான் பவுல் இத்திருமுகத்தை எழுதினார்என்று வாதிட்டனர். முதல் வாதத்தைப் புனித எரோனிமு தொடங்கி வைத்தார். கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தியோகிலேசியன் உரோமை மாகாணத்தை இருபகுதியாகப் பிரித்தார். கலாத்தியா வட பகுதியை மட்டுமே குறித்தது. ஆகவே இந்நூல் வட கலாத்தியாவுக்கு எழுதப்பட்டது என்று எரோனிமு கருதினார். இதைப் பின்பற்றிப் பலரும் இக்கருத்தையே எடுத்துக் கூறினர். இதற்கு மாறாக, கலாத்தியா என்பது உரோமை மாகாணத்தையும் குறிக்கலாம். இப்பகுதி வடபகுதியையும் தென்பகுதியையும் பிரிகியா, பிசிதியா இலிக்வோனியப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். தென்பகுதியின் நகர்களுக்குப் பவுல் சென்றுள்ளார் (அ.ப. 13:13-14:23). ஆகவே இப்பகுதியினருக்குத்தான் பவுல் தம் திருமுகத்தை எழுதினார் என்று சிலர் கூறினர். இக்கருத்து யோகனான் சிமித்து என்பவரால் (கி.பி. 1748) தொடங்கி வைக்கப்பட்டது; இரேனான், இராம்சே போன்றவர்களும் இக் கருத்தை ஆதரித்தனர்.

இரண்டாவது கருத்துப்படி, அந்தியோக்கியா, இக்கோனியா, இலிசித்திரா, மற்றும் தெர்பை ஆகிய இடங்களிலுள்ள திருச்சபைகளுக்கு இந்தத் திருமுகத்தைப் பவுல் எழுதியிருக்கலாம். ஏனெனில் அவரே தமது முதல் மறைபரப்புப் பயணத்தில் இத்திருச்சபைகளை நிறுவினார் (அ.ப. 13:14.51; 14:6); இரண்டாவது பயணத்தில் இத்திருச்சபைகளைப் பார்வையிட்டார் (16:1-2). இக்கருத்துக்கு ஆதரவாகக் கூறப்படும் காரணங்கள் அ) லூக்காவைப்போல் அல்லாமல், பவுல் தாம் குறிப்பிடும் இடங்களுக்கு, நாட்டுப் பெயர்களை அளிக்காமல், உரோமை மாகாணப் பெயர்களையே கொடுப்பது அவரது வழக்கம். சான்றுகள்: உரோ 15:26-அக்காயா; 1 தெச 1:7-8-மக்கதோனியா; உரோ. 16:5-ஆசியா.....ஆ) கலாத்தியா வழியாகப் பவுலின் பயணங்களைக் குறிக்கும் அ.ப. 16:6 என்ற பகுதியோ அ.ப. 18:23 என்ற பகுதியோ வட கலாத்தியாவில் எந்தத் திருச்சபையும் நிறுவப்பட்டதாகச் சுட்டவில்லை. இ) பவுல் கலாத்திய மொழியைப் பேசியிருக்க முடியாது. ஏனெனில் அது அப்போது எரோனிமு காலம்வரை கெலித்திய மொழியாகும். ஈ) கலா 3:2, 13-14.23-24; 4:25; 5:1 என்ற பகுதிகள், இந்தத் திருமுகம் யூத-கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதாகச் சுட்டுகின்றன. அப்படிப்பட்ட யூதக் கிறிஸ்தவர்கள், தென் கலாத்தியாவிலுள்ள கிரேக்கக் கலாச்சாரத்தைத் தழுவிய நகரங்களில்தான் வாழ்ந்து வந்தனர்.

இக்காரணங்கள் உண்மையிலேயே மதிப்பீடு உடையவையா? இவற்றிற்கு எதிராக, இத்திருமுகம் வடகலாத்தியருக்குத்தான் எழுதப்பட்டது என்று கூறுபவர்கள் பின்வரும் பதில்களைத் தருகின்றனர். அ) கலா 1:21, ''சீரிய மற்றும் சிலிசியா'' என்பவற்றை உரோமை மாகாணங்களின் பெயர்களாக அல்லாமல், நாடுகளின் பெயர்களாகப் பவுல் பயன்படுத்துவதைக் காட்டுகிறது. 1:17-இல் அவர் ''அராபியா'' வைப் பற்றிப் பேசுகிறார். இப்பகுதி கி.பி.106 வரை உரோமை மாகாணமாகவில்லை. 1:1-இல் வரும் ''கலாத்தியா'' என்ற பெயர் பற்றி ஒருவர் தயங்கினாலும், 3:1-இல் வரும் ''கலாத்தியா'' பற்றி அவர் ஐயுற வேண்டியதில்லை. பின்னதில் ''அறிவிலிகள்'' என

ஒரு நாகரீகமற்ற இனத்தைப் பற்றிக் குறிப்பிடு கிறார் பவுல். இக்கூற்று தென்கலாத்தியா வைச் சேர்ந்த கிரேக்கக் கலாச்சார மக்களுக் குப் பொருந்தாது. ஆ) சுருக்கிக் கூறப்பட்ட லூக்காவின் அ.ப. விவரிப்புகளில் ஒன்று கூறப்படவில்லை என்பதிலிருந்து வாதிப் பது அவ்வளவு பொருத்தமுடையதன்று. உண்மையில் அ.ப. 18:23; இப்பகுதியில் ஏற்கெனவே திருச்சபைகள் நிறுவப்பட்டிருந் தன என்பதை உணர்த்துகின்றது. பவுல், இலிசித்திரா மற்றும் இக்கோனியாவிலி ருந்து பிரிகியாவுக்கும் ''கலாத்தியா பகுதிக ளுக்கும்'' சென்றார் என்பது அ.ப. 16:6-இன் விளக்கமாகும். ''கலாத்தியா பகுதிகள்'' என்ற அதே சொற்கள் 18:23-இலும் வருவ தைக் காண்க. இ) வடகலாத்தியர் வேறொரு மொழி பேசியது உண்மையே. பவுலுக்கு மொழி பெயர்ப்பாளர் தேவைப்பட்டது இந்த இடத்தில் மட்டுமன்று (அ.ப. 14:11). ஈ) கலா 3:2-3; 13:14.23-24; 4:2; 5:1 என்ற பகுதியும், யூதப் பற்றுடையவர்களைத் தவிர்த்த மற்ற யூதக் கிறிஸ்வர்கள் கலாத்திய சமூகத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர் என்று குறிக்க வேண்டும். உண்மையில் கலா 4:8; 5:2-3; 6:12-13 ஆகிய பகுதிகள் இத்திரு முகத்தின் வாசகர்களின் புற மதப்பின்னணி யையே சுட்டுகின்றன. யூதர்கள் வாழ்ந்ததா கக் கருதப்பட்ட அந்தியோக்கியா, இலிசித் திரா போன்ற நகர்களில், கிறிஸ்துவத்தோடு சட்டம் கொண்டிருந்த உறவு பற்றிய பிரச் சனை ஏற்கெனவே எழுந்திருக்கலாம். கலா 1:6-இல் குறிக்கப்படும் சட்டக் கவர்ச்சி சமீப காலத்தைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. இவை காரணமாக, பவுல் இத்திருமுகத்தை வட கலாத்திய புறவினச் சமூகங்களுக்குத்தான் எழுதியிருக்க வேண்டும் என்று வடகட்சியி னர் கூறுகின்றனர்.

இத்திருமுகம் கலாத்தியாவின் வடபகு திக்கு எழுதப்பட்டதா தென்பகுதிக்கு எழு தப்பட்டதா என்ற பிரச்சனை இப்போது அவ்வளவு முக்கியத்துவமுடையதன்று. இப் பகுதிகளில் இருந்த திருச்சபைகள் பற்றி அறியும் செய்திகள் மிகக் குறைவே. அவை திருமுகத்தை விளக்குவதில் அளிக்கும் உதவி மிகக் குறைவே.

5. எப்போது எழுதப்பட்டது?:- இதைக் கணிப்பது கடினம். ஒருவேளை மூன்றாவது பயணத்தில் அ.ப. 18:23-இல் குறிக்கப்படும் கலாத்தியாவுக்குப் பவுல் இரண்டாம் முறை சென்றதற்குப் பிறகு இத்திருமுகம் எழுதப் பட்டிருக்கலாம் என்று கலா 4:13 சுட்டுகிறது. எபேசிலிருந்து பவுல் இத்திருமுகத்தை எழுதி யிருக்கலாம். தொடக்கத் திருச்சபையில் யூதப் பற்றுடையவர்களின் செல்வாக்கோடு பவுல் ஆற்றிய முக்கிய போராட்ட காலத் தைச் சேர்ந்ததாகும் இத்திருமுகம் என்றும் கூறலாம். இந்தக் காலத்தில்தான் கொரிந்திய ருக்கு முதல், இரண்டாம் திருமுகங்களை யும் உரோமையருக்குத் திருமுகத்தையும் ஒருவேளை பிலிப்பியருக்குத் திருமுகத்தை யும் பவுல் எழுதினார். கலாத்தியருக்குத் திருமுகம் உரோமையருக்கு முந்தியது என்று உறுதியாகக் கூறலாம். இத்திருமுகம் கொரிந் தியருக்கு முதல் இரண்டாம் திருமுகங்க ளோடு கொண்டுள்ள தொடர்பு சர்ச்சைக்குரி யதாகும். இவற்றின் அடிப்படையில் தமது மூன்றாம் பயணத்தில் எபேசுக்கு வந்த பிற் பாடு கி.பி. 54-55-ஐ ஒட்டிப் பவுல் இத்திரு முகத்தை எழுதியிருக்கலாம்.

தென் கலாத்தியருக்குப் பவுல் இத்திரு முகத்தை எழுதினார் என்று கூறுபவர்கள், முதல் பயணத்திலிருந்து திரும்பியபின், சிரி யாவிலுள்ள அந்தியோக்கியாவிலிருந்து, எருசலேம் சங்கத்திற்குமுன் இத்திருமுகம் எழுதப்பட்டது என்பர். இக்கருத்தைத் திரு முகத்தில் காணப்படும் எல்லாச் செய்திக ளோடும் ஒத்துப் போகச் செய்வது கடினம். இத்திருமுகம் இரண்டாம் கொரிந்தியருக் கும் உரோமையருக்கும் இடையில் எழுதப் பட்டதாகவும் சிலர் கருதுவர்.

5. சூழ்நிலையும் நோக்கமும்:- மீட்புப் பெற, கிறிஸ்துவில் கொண்டிருக்கும் விசு வாசத்தைப்போல், விருத்த சேதனமும் மோசேயின் சட்டமும் கடைப்பிடிப்பது அவசியமாகும் (கலா 2:16; 5:2) என்று

போதித்துக் ''கள்ளச் சகோதரர்களின்'' கோட்பாட்டால் புதிதாய் மனந்திரும்பிய கலாத்தியர் மயங்கிப்போய், அதைப் பின் பற்ற ஆரம்பித்தனர். இவர்கள் பெரும்பா லும் புற இனத்தாராகத் தெரிகிறது (அ.ப. 13-14; கலா 4:8). இவர்களின் புதிய போக் கைப் பற்றிய செய்தியே, இத்திருமுகத்தைப் பவுல் எழுதத் தூண்டியது. இப்புதிய கோட் பாட்டை ஏற்றுக்கொண்டால், மோசேயின் சட்டத்தை ஏற்றுக் கடைப்பிடிக்காவிட்டால் இயேசுவில் விசுவாசமும் அவர் சிலுவைச் சாவின் மூலம் அளித்த மீட்பும் ஒருவரை ஏற்புடையவராக்கப் பற்றாக்குறையானவை என்ற முடிவு ஏற்படும். அதாவது மனந்திரும் பிய கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதமுறைப் படி வாழ வேண்டும். இது, திருச்சபையின் உலகளாவிய தன்மைக்கும் ஒரு மரண அடி யாகும். இயேசுவின் போதனைக்கும் பேது ருவுக்கு அ.ப. 10-11-இல் அளிக்கப்பட்ட போதனைக்கும் முற்றிலும் மாறானதாகும்.

யூதமயமாக்கும் இக் ''கள்ளச் சகோதரர் கள்'' அந்தியோக்கியாவுக்குச் சென்று, அங் குத் தங்களின் கோட்பாட்டுக்கு அப்போஸ்த லர்களின் ஆதரவு இருப்பதாக உரிமை கொண்டாடியதாகத் தெரிகிறது (அ.ப. 15:1. 5.24). அந்தியோக்கியாவில் கலகம் விளை வித்ததோடு திருப்தி அடையாமல், இவர்க ளில் சிலர் இரகசியமாகக் கலாத்தியாவுக்குச் சென்று (கலா 2:4) பவுல் மனந்திருப்பியவர் களைத் தங்கள் கோட்பாட்டுக்கு மனந் திருப்ப முயன்றனர்.

இவர்களின் வாதமானது, மோசேயின் சட் டம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையும்,சட்டத்தை ''அழிப்பதற்கன்று நிறைவேற்றுவதற்கே வந்தேன்'' என்று இயேசு கூறியதுமே ஆகும் (மத் 5:17). இவர்கள் கலாத்தியர்களின் மனவுறுத்தல் களைப் போக்கப் பவுலின் அதிகாரத்தை விட மேலான பன்னிரு அப்போஸ்தலர்களின் அதிகாரம் தங்களது கோட்பாட்டுக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறினர். பவுலும் தம் உள்ளத் திலே இவர்களோடு ஒத்த கருத்துடையவ ராய் இருப்பதாக இவர்கள் உரிமை கொண் டாடினர். பவுலின் அதிரடிச் செயல் வேகமா கவும் கடுமையாகவும் இருந்தது. உள்ளம் கலங்கியவராய், நேர்மையான சினத்தால் துடித்தவராய், இத்திருமடலை எழுதினார். இதிலே உணர்ச்சிப் பெருக்கோடு தமது அப்போஸ்த்துவ அதிகாரத்தை எண்பிக்கி றார். கள்ளச்சகோதரர்களின் தீயதவற்றை யும், அதைப் பின்பற்றியவர்களையும், அதற்கு ஆதரவு அளித்தவர்களையும் கடுமை யாகக் கண்டனம் செய்கிறார். தவறாகப் புரிந்து கொள்ள முடியாத ஆற்றலோடும் தெளிவோடும் கலாத்தியருக்கு உண்மை யான பிரச்சனையை எடுத்துக் கூறுகிறார். அதாவது ''நீங்கள் விருத்தசேதனம் செய்து கொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்குப் பயனே இல்லை'' (கலா 5:2). சட்டத்திற்கு மாறாகக் கிறிஸ்தவர்கள் அடைந்திருக்கும் ''புதிய சுதந்தரத்தை'' வலியுறுத்துகிறார். தாம் போதித்த நற்செய்தியே ஒரே சரியான நற்செய்தியாகும் என்று அறிவிக்கிறார். அவ ரது கோட்பாட்டையும் செயல்முறையையும் எருசலேம் சங்கம் ஏற்றுக் கொண்டது.

5. நூலின் திட்டம்:-

1. முன்னுரை (1:1-19).

அ. இறைவாழ்த்து (1:1-5).

ஆ. வியப்பும் (1:6-7) சாபமும் (1:8-10).

2. பவுல் தம் நற்செய்திக்கு அளிக்கும் காப்புரை (1:11-21).

அ. இந்நற்செய்தி மனிதனின் படைப்பன்று இறைவனால் அளிக்கப்பட்டது (1:11-24).

ஆ. இந்நற்செய்தி எருசலேம் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது (2:1-10).

இ. இந்நற்செய்தி பேதுருவின் முரண் பாட்டை வெளிப்படுத்துகிறது (2:11-14).

ஈ. பவுலின் நற்செய்தியின் சுருக்கம் (2:15-21).

3. இறைவனின் திட்டத்தில் மீட்பளிப்பது விசுவாசமே, சட்டமன்று (3:1-4:31).

அ. விசுவாசத்தின் ஆட்சி (3:1-29).

ஆ. கிறிஸ்தவ சுதந்தரத்தின் ஆட்சி (4:1-20).

இ. இச்சுதந்தரத்தை விளக்கும் சாரா மற்றும் ஆகார் பற்றிய உருவகம் (4:21:31).

4. அறவுரை: கிறிஸ்துவில் இச்சுதந்தரத்தைப் பாதுகாத்தல் (5:1-6:10).
அ. கிறிஸ்துவில் அடைந்த இச்சுதந்தரத்தை இழக்காமலிருக்க எச்சரிக்கை (5:1-12).
ஆ. இச்சுதந்திரத்தைப் பயன்படுத்தும் முறை (5:13-6:10).

5. முடிவுரை (6:11-18).

6. போதகம்:-

1. யாவருக்கும் மீட்பும், அதனோடு சட்டத்தின் தொடர்பும்:-

இறைவனின் வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டதும், யூதர்கள் மற்றும் புறஇனத்தவர்கள் ஆகிய அனைவருக்குமானதுமான மீட்புத்திட்டமும், அதோடு மோசேயின் சட்டம் கொண்டுள்ள தொடர்பும் இத்திருமுகத்தின் போதனையாகும். இத்திருமுகத்திற்கும், பவுலின் இறையியலுக்கும் தொடக்கம், தமஸ்கு சாலையில் மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவைப் பவுல் காட்சியில் கண்டதாகும். கிறிஸ்துவே பவுலின் மீட்பர். அவரே யூதர்களையும் புறஇனத்தாரையும் மீட்க வந்தவர். மீட்பின் பலனில் பங்குகொள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் மோசேயின் சட்டத்தையும் விருத்தசேதனத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்; இல்லையென்றால் மீட்புப்பெற முடியாது என்று யூதப்பற்றுடையவர்கள் வலியுறுத்தினர். இந்த யூதப்பற்றுடையவர்கள் அவர்கள் காலத்து யூதத்துவத்தின் சிந்தனைப் போக்கால் பாதிக்கப்பட்டிருக்கலாம். இந்தச் சிந்தனைப்போக்கு, மோசேயின் சட்டம் நித்தியமானதென்றும், மாற்றமுடியாதது என்றும், இறைஞானத்தோடு ஒன்றானது என்றும் அருளுக்கும் வாழ்வுக்கும், மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் ஊற்றானது என்றும் கருதியது.

சட்டம் இறைவனால் கொடுக்கப்பட்டது என்று பவுல் ஏற்றுக் கொள்கிறார் (கலா 3:19). ஆனால் அதற்கு மீட்பாற்றலையோ ஏற்புடையவராக்கும் ஆற்றலையோ அளிக்கப் பவுல் மறுத்துவிடுகிறார். அப்படி ஏற்றால் கிறிஸ்து சிலுவையில் செலுத்திய தனிச்சிறப்பான எல்லாம் நிறைவான பலிக்குச் சமமான இடத்தைச் சட்டத்திற்கு அளிப்பதாகும் (3:21). இந்தத் தவறு அடிப்படையானது, உடனேதகர்க்கப்பட வேண்டும். இதில் எந்த விட்டுக்கொடுத்தலும் கிறிஸ்துவின் சிலுவையை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும் (2:21). ஆகவே இத்திருமுகத்தில், கிறிஸ்துவிலும், ஏற்புடையவராக்கும் அவரது அருளிலும் கொண்ட விசுவாசத்தை எல்லா மனிதர்களுக்கும் எல்லாக் காலங்களிலும் அளிக்கப்படும் மீட்பு அடிப்படையாகக் கொண்டிருந்தது, கொண்டிருக்கிறது, கொண்டிருக்கும் என்று பவுல் காட்டுகிறார். அதே சமயத்தில், சட்டம் ஒருவரை ஏற்புடையவராக்க முடியாது என்றும், மீட்புத் திட்டத்தில் அதன் உண்மையான இடம் எது என்றும் கலாத்தியருக்குக் காட்டுவதில் பவுல் மிகவும் சிரத்தை எடுக்கிறார்.

யூதா இனத்தின் தந்தையான ஆபிரகாமிலிருந்து உலக சமய வாழ்வில் மூன்று கட்டங்களைப் பவுல் காண்கிறார். அ) ஆபிரகாமிலிருந்து மோசே வரைக்கும்:- இக்காலத்தில் இறைவனின் வாக்குறுதிகளில் கொண்ட விசுவாசத்தினால் ஏற்புடைமை வந்தது. இக்காலத்தில் நேரடிச் சட்டம் என்று கூறப்படும் ஒன்றுமில்லை. விருத்தசேதனம் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் அடையாளமேயாகும் (ஆதி 17:11). ஆ) மோசேயிலிருந்து கிறிஸ்து வரைக்கும்:- இக்காலத்திலும் வாக்குறுதிகளில் கொண்ட விசுவாசத்தினாலேயே ஏற்புடைமை வந்தது. ஆனால் சீனாய் மலையில் அளிக்கப்பட்ட சட்டத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் (சட்டமன்று விசுவாசமே ஏற்புடையவர்களாக்கியது). இ) கிறிஸ்துவிலிருந்து:- அவரில் கொண்டுள்ள விசுவாசத்தாலும் அதே சமயம் நற்செய்தியைக் கடைப்பிடிப்பதாலும் ஏற்புடைமை வருகிறது. இந்நற்செய்தி புதிய, முன்னேற்றமான யூதத்துவத்தைவிட மேலானது.

கிறிஸ்துவம் குறையுள்ள பழைய ஏற்பாட்டு முறைமைகளோடு சேர்க்கப்பட்டது, அதை நிறைவு செய்வது என்பதைவிட அதிகமானது, அது கிறிஸ்து வழியாகவும் கிறிஸ்துவிலும் மன்னிப்பு, ஏற்புடைமை, மீட்பு மற்றும் வாழ்வின் சமயமாகும். ஆபிரகாமோடும் அவரது சந்ததியினரோடும் இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கையை மோசேயின் சட்டத்தின் இடைக்காலத்திற்கு அப்பாலும் நீடிக்கச் செய்வது. இந்தத் திருமுகத்தில், மோசேயின் அமைப்பின் நிலையில்லாத் தன்மை தெளிவாகக் காட்டப்படுகிறது. சட்டம் வானதூதர்கள் மற்றும் மோசே ஆகியோரின் இடையீட்டாலும் அறிவிக்கப்பட்டது என்பதாலும், இருதரப்பினர் உட்பட்ட உடன்படிக்கை வடிவிலும் அளிக்கப்பட்டது என்பதாலும் மோசேயின் சட்டத்தின் நிலையில்லாமை வலியுறுத்தப்படுகிறது. யூத மக்களின் பதிதம் இவ்வுடன்படிக்கையைச் செயலற்றதாகச் செய்யக்கூடும். இதற்கு மாறாக, வாக்குறுதிகள், ஆபிரகாமுக்கு நேரடியாகவும் ஒருதரப்பாகவும் அளிக்கப்பட்டன. அவை சலுகையாகவும் நிபந்தனையின்றியும் அளிக்கப்பட்டன. உலக மக்கள் எல்லாரையும் சார்ந்ததாகும். விருத்தசேதனம் பிற்பாடுதான் உடன்படிக்கையின் அடையாளமாகவும் முத்திரையாகவும் கொடுக்கப்பட்டது. இயேசுவுடன் கூடிய ஒன்றிப்பின் வழியாக, இறைவாழ்வு நிறுவப்படுவதும் வளர்ச்சியடைவதும்தான் ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமானதாகும் என்று பவுல் கருதுகிறார். சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் இதை அடையமுடியாது (கலா 3:20.21). இந்த இறைவாழ்வு, சட்டத்தின் செயல்களைச் சேராமலும், முழுவதும் சலுகையாகவும் இறைவனின் வாக்குறுதிகளில் கொண்ட விசுவாசத்தால் ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்டது (3:6-9). பவுலின் கருத்துப்படி ஏற்புடைமை என்பது மூலப் பாவத்தாலும் ஒருவனுடைய சொந்தப் பாவத்தாலும் விளையும் இறைவனோடு கொள்ளும் பகைமை நிலையிலிருந்து மகன் நிலைக்கு மாறுவதாகும். இதில் மனிதன் தன்னிலேயே கிறிஸ்துவின் இறைவாழ்க்கை கொண்டுள்ளான். இது எப்போதும் விசுவாசத்தின் விளைவாக அளிக்கப்படும் இறைவனின் சுதந்தரமான கொடையாகும். இதிலே கிறிஸ்தவர்கள் அவர்கள் யூதர்களானாலும் புறவினத்தார் ஆனாலும், இப்போது ஆபிரகாமின் உண்மையான புதல்வர்களும் வாக்குறுதிகளின் உரிமையாளர்களும் ஆவர். ஏனெனில் அவர்களும் இறைமகனில் கொண்டுள்ள விசுவாசத்தால் ஏற்புடைமையைப் பெற்றுள்ளனர். அதையும் முழுமையும் இறைவனுடைய வள்ளன்மையிலிருந்து பெற்றுள்ளனர். கிறிஸ்து, மனுகுலத்தின் பிரதிநிதி என்ற அளவில் தமது சிலுவை மரணத்தால் மனித இனத்தில் எல்லாப் பாவங்களும், அவை மோசேயின் சட்டத்திற்கோ இயற்கைச் சட்டத்திற்கோ மாறானதாய் இருந்தாலும், பரிகாரம் செய்துள்ளார். இறைவனில் வாழும் பொருட்டு, கிறிஸ்துவைப்போல கிறிஸ்தவனும் திருமுழுக்கில் பெறும் மறுபிறப்பு அவனை ஒருபுதிய மட்டத்தில் வாழச் செய்கிறது. அதில் அவன் ''ஆவியினால் வாழ்கிறான்'' (5:25 தொ). அதனால் அவன் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவனல்லன் (5:18). இறைவன் புதல்வர்களின் இந்தச் சுதந்தரம், தீய பழக்கங்களையும் ஊனின் இச்சைகளையும் சாகடிப்பதால் வருவதாகும். அவன் ஒரு புதிய படைப்பாகிறான் (6:15). அவனது வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வு ஆகிறது. அவரில் அவன் ஓர் அங்கமாகிறான். அவரின் ஆலயமாகிறான் (2:20). 1 கொரி 6:15,19 ஆவி விளைவிக்கும் பலன்களைக் காட்டுகிறது (கலா 5:22-23). இவையுள்ள இடத்தில் சட்டம் எத்தடையும் விதிப்பதற்கு இடமில்லை.

ஆ) மோசேயின் சட்டத்தின் உண்மையான தன்மை:- ஏற்புடைமை ஒருபோதும் மனுக்குலச் சமயவரலாற்றில் சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் வருவதில்லை. மாறாக வாக்குறுதிகளில் கொண்டுள்ள விசுவாசத்தால் வருவதால், யூதர்களின் வரலாற்றில் சட்டத்தின் இடம் என்ன?

சட்டம், அதற்குட்பட்டு அதைக் கடைப்பிடிக்கத் தவறியவர்களின் மேல் ''சாபத்தையே'' கொண்டு வந்தது. ஆனால் அதைக்

கடைப்பிடிக்க வேண்டிய சாதனங்களை அது அளிக்கவில்லை. யூதர்கள் தீர்ப்பிடப் பட வேண்டியதும் அவர்களின் குற்றங்களை வெளிப்படுத்தியதுமான ஒரு மேல்வரிச்சட் டத்தை அல்லது விதிமுறையையே அது வெறுமனே கொடுத்தது. அவர்கள் சட்டத் தைக் கடைப்பிடிக்கத் தவறியதால் அவர்கள் குற்றத்தை மேலும் அதிகப்படுத்தியது (கலா 3:19). சட்டம் ஒரு சிறைச்சாலை போன்றது. ஏனெனில், அது மனித இனத்தின்•அடிமைத் தன்மையின் இழிநிலையையே வெளிப் படுத்தியதோடு, இந்நிலையிலிருந்து தப்பிப்ப தற்கு வேண்டிய சாதனங்களைக் கொடுக்க வில்லை (3:22). அதே சமயத்தில் சட்டம் ஒரு பயனுள்ள அலுவலைச் செய்தது. புற இனத் தீய பழக்கங்களிலிருந்தும் சிலை வழிபாட்டிலிருந்தும் யூதர்களை அது தனி மைப்படுத்தியது; அவர்களை ஒன்றித்திருக் கச் செய்து, வருங்கால மெசியாவை நோக் கிச் செயல்படச் செய்தது (3:22). இந்தப் பொருளில் கிறிஸ்துவின் வருகைக்குமுன் மனுகுலம் சிறுவனாகவும் மாணவனாகவும் இருந்தது. சட்டம் அவனது வழித்துணையா கவும் கண்காணிப்பாளனாகவும் இருந்தது (3:24). இப்போது கிறிஸ்து வந்துவிட்ட தால், வழித்துணையின் அலுவல் முடிந்து விட்டது. யூதர்கள் இனிச் சட்டத்தின் அதிகா ரத்தில் இல்லை. மாறாக மகன் தன்மையின் முழுமையிலும் உரிமையிலும் புக வேண்டி யவர்களாவர் (4:5-6). இவ்வாறு சட்டம், யூதவரலாற்றில், தற்காலிகமானதும் கடந்து போகும் தன்மையும் கொண்டதாகும். மனு குலத்தின் சிறுவன் பருவத்திற்கு ஏற்றதும். கிறிஸ்துவின் வருகை தனது முழு முதிர்ச்சி யைத் தொடங்கி வைத்தபோது, கடந்து போவதுமாகும். இதன் விளைவாக, இப் போது யூதர்களுக்கும் புற இனத்தார்க்கும் இடையே வேறுபாடு இல்லை.

இ) மோசேயின் சட்டம் அகற்றப்படுதல்:- சட்டம் அகற்றப்படுவது பற்றியும் ஏற்புடை யவராக்க அதன் ஆற்றலற்ற தன்மையைப் பற்றியும் பின்வரும் குறிப்புகளைப் பவுல் தருகிறார் (2:16-21). 1) சட்டத்தின் ஆற்றலற்ற தன்மையின் அடிப்படையிலே அப்போஸ்த லர்களும் விசுவாசிகளும் எப்போதும் செயல்பட்டனர். 2) திருநூலே இதை அறி விக்கிறது (சங் 143:2). 3) சட்டம், அதைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தன்மை யைக் கொண்டிருந்தால், மீட்பளிக்கச் சட்டம் போதுமானது என்ற அளவில் அதைக் கைவிடு வது பாவமாகும். அதற்குரிய குற்றத்தை இயேசுவின்மேல் சுமத்த வேண்டும். இது இறை நிந்தனையாகும். இதற்கு மாறாகச் சட்டத்திற்குத் தங்களையே கீழ்ப்படுத்திக் கொள்பவர்கள் முதலில் அதைக் கைவிட்ட தற்கான பாவத்தை ஏற்றுக் கொள்ள வேண் டும். 4) கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு சேர்ந்து சட்டத்திற்கு மரித்துவிட்டனர். 5) எல்லா அருளுக்கும் ஊற்றான கிறிஸ்துவின் மரணம் அளவில்லா மதிப்பைக் கொண்டி ருப்பதால், முழுநீதியை அடைய மற்றொரு சாதனத்தை அமைப்பது, கிறிஸ்துவின் சிலு வையின் மீட்பாற்றலை மறுப்பதாகும். 6) சட்டத்தின் ஆட்சியின் பண்புகள் வாக்குறுதி களின் பண்புகளோடு ஒத்துப்போகா. ஏனெ னில் வாக்குறுதிகள் சுதந்தரமாய்க் கொடுக் கப்பட்ட ஆன்மீகக் கொடைகளின் காரண மாய் இருக்கும்போது, சட்டம் எப்போதும் சரிக்குச்சரி தன்மையுடையது, அளந்து செய் யப்பட்ட பணிக்கு அளந்து சன்மானம் அளிக் கக் கூடியது (3:12). 7) கிறிஸ்து தமது சிலுவை மரணத்தால் ''நமக்காகச் சாபமா னார்'' (3:13). அம்மரணத்தால், சட்டத்தின் எல்லாக் கோரிக்கைகளையும் தம்மிலே முழுமையாக நிறைவேற்றியும், அதே சமயத் தில் சட்டத்திற்கு எதிரான யூதர்களுடைய வும், பொதுவாக மனுகுலம் முழுவதினு டையவும், குற்றங்களுக்கு முழுமையும் நிறைவுமான பரிகாரம் செய்தும், சட்டத்தின் சாபத்திலிருந்து நம்மை மீட்டார். இவ்வாறு பரிகாரம் செய்யப்பட்ட சட்டம், அவர் மேலும், அவரோடு திருமுழுக்கால் ஒன்றிக் கப்பட்ட மனுகுலத்தின் மேலும் எந்த உரி மையும் கொண்டாட முடியாது. ஆகவே ''கடவுளுக்கென்று வாழும்படி நான் சட்டத் தின் செயலால் சட்டத்தைப் பொறுத்தமட் டில் இறந்தவன் ஆனேன்'' (2:19) என்று பவுல் கூறமுடியும். 8) தமது வாதத்தின் முடிவுரையாக ஆகார் மற்றும் சாரா பற்றிய

புகழ்பெற்ற உருவகத்தைக் கொடுக்கிறார். இருவரும் இரு ஏற்பாடுகளைக் குறிக்கின்றனர். அடிமையான ஆகார் செபக்கூடத்திற்கும், சுதந்தரப் பெண்ணான சாரா திருச்சபைக்கும் அடையாளமாகின்றனர். அவர்களின் பிள்ளைகள் தங்கள் தங்களின் நிலையையே ஏற்கின்றனர். ஆகவே யூதப்பற்றுடையவர்கள் ஊன் அளவில் மகனான இசுமயேலோடு சேர்ந்துகொள்கின்றனர். வாக்குறுதியின் மகனான ஈசாக்குக்கு அளிக்கப்பட்ட தந்தைவழி உடைமையை நிராகரித்து விடுகின்றனர். அந்த உடைமை, ஆபிரகாமின் உண்மையான வழித்தோன்றல்களாகிய கிறிஸ்தவர்களுக்கும் உரியதாகும். குறையுள்ள ஏற்பாடு, புதிய, நிறைவான ஏற்பாட்டுக்கு இடம்விட்டு அகலவேண்டும் என்பதே இந்த ஒப்புமையின் கருத்தாகும். ஏனெனில் இரண்டும் ஒத்துப் போகமாட்டா; இரண்டும் ஒருசேர இருக்க முடியாது. ''அடிமைப் பெண்ணையும் அவள் மகனையும் விரட்டிவிடு; அடிமையல்லாத மனைவியின் மகனோடு அடிமைப்பெண்ணின் மகன் உரிமை கொண்டாட முடியாது'' (4:30; ஆதி 21:9-13). இராபிகளின் முறையைப் பின்பற்றி, தமது வாதத்துக்கு ஆதரவாக மறைநூல் வாசகத்தைப் பயன்படுத்துகிறார். இப்படிப்பட்ட வாதங்கள் எப்போதும் நம்மை நம்பச் செய்வதில்லை. பவுல் இங்குப் பயன்படுத்தும் முறை, ஒரு கருத்துக்கு ஆதரவாக மறைநூல் வாசகத்தை ஆன்மீகப் பொருளில் பயன்படுத்துவதற்கு ஒரு மேலான எடுத்துக்காட்டாகும். தாக்கம் முழுவதில் பவுல் இராபிகளோடு தர்க்கமாடும் இராபியாக உள்ளார்.

7. கலாத்தியர், உரோமையர் திருமுகங்களுக்கிடையே உறவு:-

கலாத்தியருக்குத் திருமுகம் உரோமையருக்குத் திருமுகத்தின் வெறும் கருக்கமோ திருந்தா முதல் குறிப்போ அன்று என்பது தெளிவு. ஏனெனில் இரண்டு திருமுகங்களின் முன்னோக்கும் வெவ்வேறானவையாகும். உரோமையருக்குத் திருமுகத்தில் ஏற்புடையவராக ஆகவும், புனிதப்படுத்தப்படவும், கிறிஸ்துவில் இறைவனுக்காக வாழவும், நற்செய்திப் போதகத்தின் வழியாக மனிதர்களுக்கு இப்போது அளிக்கப்படும் வரலாற்று வாய்ப்புப் பற்றிய தமது அப்போஸ்தல மற்றும் மறைபரப்புச் சிந்தனைகளைப் பவுல் தருகிறார். இது அடிப்படையில் மனிதனின் ஏற்புடைமையையும், புனிதப்படுத்தலையும் ஏற்படுத்தும் நேர்மை மற்றும் இறைவனின் அன்பு, ஆகியவை பற்றிய விளக்கமாகும். கிறிஸ்தவ வாழ்வின் இந்தச் செய்முறையை மனிதன் விசுவாச முயற்சியால் தொடங்கிவைக்க வேண்டும். இந்த நற்செய்தி ''மீட்பளிப்பதற்குக் கடவுளின் வல்லமையாக உள்ளது'' (உரோ 1:16).

ஆனால் கலாத்தியருக்குத் திருமுகத்தில், பவுல் வாதத் தன்மையுடைய திருமுகத்தை எழுதுகிறார். இதில், யூதமயமாக்கும் தவறு பற்றிக் கலாத்தியக் கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறார். கிறிஸ்துவில் அளிக்கப்பட்ட புதிய சுதந்தரத்தை வலியுறுத்துகிறார். சட்டம் மற்றும் விருத்தசேதனம் ஆகியவற்றை நிராகரிப்பது அவரது கவனத்தை மிகவும் ஈர்க்கிறது. விசுவாசத்தால் ஏற்புடைமையும் கிறிஸ்துவில் வாழ்வும் அடுத்தபடியான இடம் பெறுகின்றன. இவை உரோமையருக்குத் திருமுகத்தின் முதன்மையான கருத்துக்களாகும். கலா 1:1-2:14-க்கு இணையான பகுதி உரோமையரில் இல்லை. ஆனால் கலா 2:15-21-இல் வரும் பவுலின் நற்செய்தியின் கருக்கம், ஏறக்குறைய உரோ 1-8-இன் கருக்கமாகும். இரண்டிலும் அதே சிந்தனை வளர்ச்சியுள்ளது.

கலாத்தியா (GALATIA)

1. கலாத்தியா என்பது மத்திய சிறிய ஆசியாவிலுள்ள உரோமை ஆட்சிப் பகுதியாகும் (அ.ப. 16:6; 18:23; 1 கொரி 16:1; கலா 1:2;2 திமோ 4:10;2 பேதுரு 1:1).

கலாத்தியர் என்பவர்கள் இந்தோ-ஐரோப்பிய இனமாகிய கெலிதிய இனத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள், சிறிய ஆசியாவில் வந்து குடியேறிய கெலிதிய இனத்தவர்கள் கலாத்தியர் என அழைக்கப்பட்டனர்.

சொல்லிலக்கணப்படி இரண்டு சொற்களும் ஒரே பொருளையே உணர்த்துகின்றன.

கி.மு. முதலாம் ஆயிரம் ஆண்டுகாலத்தில் ஐரோப்பாவில் அலைந்துகொண்டிருந்த கெவிதிய இனத்தவர்கள் ஒரு குழுவாகத் தான்யூப் ஆற்றுப் பகுதிக்கும், கிரீசு நாட்டிற்கும் சென்று கி.மு. 278-இல் தெல்பியை முற்றுகையிட்டனர். பின் போஸ்போரசைக் கடந்து செல்லப் பித்தினியாவின் அரசராகிய முதலாம் நிக்கோமேதால் கெவிதிய இயக்கத்தின் ஒரு பிரிவினர் அழைக்கப்பட்டனர். இவ்வாறு பித்தினியா மன்னரால் உற்சாகப் படுத்தப்பட்ட படையெடுப்பு சிறிய ஆசியாவிற்குப் பேராபத்தாக அமைந்தது. ஏனென்றால் போஸ்போரசைக் கடந்த கலாத்தியர்கள் நிக்கோமேதுவின் குறிக்கோளை நிறைவேற்றியபின் அவர்களுடைய சொந்தப் பலத்தால் மேற்குச் சிறிய ஆசியாவைத் தாக்கிப் பொருள்களைச் சூறையாடினர்.

நகரங்களை முற்றுகையிடுதல், ஊர்களைப் பயமுறுத்துதல், நிலங்களை, கருவூலங்களைச் சூறையாடுதல் போன்றவை அவர்கள் கையாண்ட யுக்திகளாகும். முதன் முதலாகச் செலூக்கிய அரசரான முதலாம் அந்தியோக்கு இந்தக் கலாத்தியர்களை யானைகளின் உதவியால் சண்டையில் தோற்கடித்தான். இதன் விளைவாக அந்தியோக்கு மன்னன் மேற்குச் சிறிய ஆசியாவின் உட்புறத்தில் அவர்களுக்கென்று எல்லைப் புறத்தை ஒதுக்கிக் கொடுத்தான். அப்பகுதி கலாத்தியா என்ற பெயரைப் பெற்றது. இப்பகுதியின் வடக்கில் பித்தினியாவும் பாபிலகோனியாவும், தெற்கிலும் மேற்கிலும் பிரிகியாவும், கிழக்கில் போந்தும், தென்கிழக்கில் கப்பதோக்கியாவும் அமைந்திருந்தன. இதன் முக்கியமான நகரங்கள் அன்சீரா (இக்கால அங்காரா), பெசினு, தாவியும் ஆகியவையாகும். இப்பகுதி மூன்று கலாத்திய இனங்கள் சேர்ந்த கூட்டரசினைக் கொண்டிருந்தது.

கி.மு. 64-இல் கலாத்தியா உரோமின் ஆட்சிக்கு உட்பட்ட நகரமாகியது. மேலும் அதைப் பின்தொடர்ந்து வந்த ஆண்டுகளில் அரசாட்சியின் எல்லையானது இதனோடு தொடர்புடைய பகுதிகள் வரைக்கும் விரிந்து சென்றது. கலாத்தியா என்பது கி.மு. 24-இல் கடைசி அரசர் அமிர்தாஸ் இறந்த பின் ஏற்படுத்தப்பட்ட உரோமை மாகாண மாகிய கலாத்தியாவையும் குறித்தது. இம் மாகாணம் கலாத்தியப் பகுதிகளையும், பிசிதியா, பம்பிலியா, இலிக்கவோணியா போன்ற பகுதிகளையும் உள்ளடக்கியிருந்தது.

மக் 8:2-இல் கலாத்தியா என்பது உரோம் நகருக்கும் ஆல்ப்ஸ் மலைத் தொடருக்கும் இடைப்பட்ட பகுதியைக் குறிக்கின்றது. 2 மக் 8:20 கலாத்தியருக்கு எதிராகச் செலூக்கிய அரசாட்சிக்கு உதவியதாக இருந்து செயல் பட்ட கூலிப்படை வீரர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

பவுல் தமது இரண்டாவது பயணத்திலும் (அ.ப. 16:16) மூன்றாவது பயணத்திலும் (18:23) கலாத்தியாவிற்குச் செல்கின்றார். எருசலேம் சமூகத்திற்கு உதவுவதற்காக எடுக்கப் பட்ட காணிக்கைத் தொகையில் கலாத்தியர்களின் பங்கும் சேரும் (1 கொரி 16:1). கலாத்தியா சபையில் கிரேசெக்கு என்பவர் மிகவும் தீவிரமாகச் செயல்பட்டார் (2 திமோ 4:10) என்று கூறப்படுகின்றது. பேதுருவின் முதல் திருமுகம் 1:1-இல் தேர்ந்து கொள்ளப் பட்ட நாடுகளில் ஒன்றாகக் கலாத்தியாவும் கூறப்பட்டுள்ளது.

2. கலாத்தியாவைப் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சிகள்:-

கலாத்தியர்களின் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் சில கல்வெட்டுக்களும், உரோமைச் சாலைகளைப் பற்றிய குறிப்புகளும், மற்றும் சில பொருட்களும்தான் கிடைத்தன. மூன்று முக்கியமான நகரங்கள் இருந்த இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெசினுஸ், பால்கிசார் போன்ற நகரங்கள் மிகவும் அழிந்துபோன நிலையிலிருந்தன.

பிரிகியர்களின் தலைநகரமாக விளங்கிய கோர்தியம் கலாத்தியாப் பகுதிகளில் முக்கிய

மானதாகக் கருதப்படவில்லை. தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உரோமை மைல் கற்கள் தாவியும் இருந்த இடத்தை நிர்ணயிப்பதற்கு உதவின.

3. வடக்கு, தெற்குக் கலாத்தியக் கோட்பாடுகள்:-

கலாத்தியாவிலிருந்த ஆதி சபைகளின் வரலாறு பற்றி எந்தவிதமான புதைபொருள் ஆராய்ச்சிகள் சார்ந்த ஆதாரங்கள் எதுவுமே இல்லையாகையால், 1 கொரி 16:1-இலும் கலா 1:2-இலும் கூறப்பட்டுள்ள சபைகள் கலாத்தியாவைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்றும் ஆயநிலையாகத்தான் கருதப்படுகின்றன.

வடக்குக் கலாத்தியக் கோட்பாட்டின்படி கலாத்தியா என்று கூறுவது மத்திய அனத்தோலியாவில் உள்ள கலாத்தியாவின் அரசாட்சிப் பகுதிகளைக் குறிப்பிடுகின்றது. தெற்குக் கலாத்தியக் கோட்பாட்டின்படி கலாத்தியா என்பது அப்போஸ்தலர் பணியில் கூறப்பட்டிருக்கும் பிசிதியா, தெர்பை, இலிசித்திரா இக்கோனியா போன்ற பகுதிகளைக் குறிப்பிடுகின்றது. இந்நகரங்கள் மூல கலாத்தியாவின் எல்லைப்பகுதிக்குள் உட்படவில்லை என்றாலும் கலாத்தியா மாகாணத்தில் உள்ளடங்கியிருக்கின்றன. அப்போஸ்தலர் பணிநூல் இங்குள்ள மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டு குறிக்கிறது: பிசிதியா, இலிக்கவோனியா.

இன்றைய விவிலிய விளக்கவுரையாளர்கள் பலர் வடக்குக் கலாத்தியக் கோட்பாட்டையே ஏற்றுக் கொள்கின்றனர். அ.ப. 16:6; 18:23 இந்தக் கலாத்தியாவைத்தான் குறிக்கின்றன. அங்குத் திருச்சபைகள் நிறுவப்பட்டது பற்றி அ.ப. ஒன்றும் கூறாவிட்டாலும், உண்மையான கலாத்தியாவைக் குறிக்கின்றன.

கலால் (GALAL - ஆமை, உருண்டு போகிற).

1. மெராரியின் மரபுவழிவந்த நாடுகடத்தலுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒரு லேவியர் (1 நாள் 9:15).

2. ஒரு லேவியர். எதுத்தூனின் மகனும், செமாயாவின் தந்தையுமாவார். மெராரியின் வழித்தோன்றல் (1 நாள் 9:16; நெக 11:17).

கலிலேயர் (GALILEANS)

கலிலேயாவில் வாழ்ந்த யூதர்கள், பிற மதத்தினர் அடங்கிய மக்களைக் குறிக்கும். கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவர்களைக் குறிக்கும். சமயக் கருத்துக்களில் அவர்கள் குறிப்பான முறையில் வேறுபட்டிருக்கலாம்.

1. யூதக் கட்சிகளுக்கிடையே ஒன்று:-

கி.பி. முதல் நூற்றாண்டில் உள்ள யூதமத நூல்களின் சான்றுப்படி அவர்களிடையே பரிசேயர்கள், சதுசேயர்கள், எஸ்ஸேனியர், கலிலேயர் போன்ற பிரிவுகள் இருந்தன. இது, இஸ்ராயேலில் பிற இடங்களில் இல்லாத பழக்கவழக்கங்கள், கலிலேயாவில் இருந்தன என்பதைச் சுட்டுகிறது.

கலிலேயாவில் பாஸ்காவிற்கு முன் தினத்தை ஓய்வு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஆயத்த நாளிலே பாஸ்கா விழாக் கொண்டாட்டம் ஆரம்பமாகிறது. பரிசேயர்கள் கலிலேயர்களின் ஒலிவ எண்ணெயை அசுத்தமானது என்று கருதினார்கள். கலிலேயர்கள் பரிசேயர்கள் சட்டங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள் (யாத் 23:19; உப 14:21). விதவைகளின் உரிமைகள், பரிகார நாள் ஆகியவைபற்றிக் கலிலேயர்கள் வேறுபட்ட கருத்துகள் கொண்டிருந்தனர்.

பரிசேயர்கள் கலிலேயர்களைப் பண்பாடற்றவர்கள், படிக்காதவர்கள், மூடர்கள், சண்டைபோடும் குணமுடையவர்கள் என்று கருதினர். பரிசேயர்கள், எஸ்ஸேனியர்களைப் போன்று கலிலேயர்களும் சமயம் பற்றிய சுய உணர்வுடையவர்கள். கலிலேயர்கள் பலவகையான பழக்கவழக்கங்களை உடையவர்கள். ஆழ்ந்த சமய உணர்வு இல்லாதவர்கள், பழமைவாதிகள், எழுத்தறிவு இல்லாதவர்கள். இயேசு இந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்கு எவ்வகைச் சான்றும் இல்லை.

2. கலிலேயக் கிறிஸ்தவம்:-

கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் கலிலேயாவில் உள்ள கிறிஸ்தவத்தை அறிவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எல்லா நற்செய்தி மூலங்களையும் விட மாற்கு நற்செய்தியே கலிலேயப் பின்னணிக்கு மிக நெருங்கியதாக அமைகிறது. இயேசுவின் திருப்பணிகள் இந்தக் கலிலேயே நாட்டில்தான் அதிம் செய்யப்பட்டிருக்கின்றன. இயேசுவின் போதனைகளை மாற்கு நற்செய்தியாளர் இருபிரிவாகப் பிரிக்கிறார் (அ) இறையரசு பற்றிய போதனை (ஆ) மனுமகனைப் பற்றிய போதனை. இரண்டும் கலிலேயாவைச் சேர்ந்ததாக இருக்கலாம். கலிலேயாவில் திருப்பணிகள் என்ற அமைப்பில் இறையரசு பற்றிய போதனையும் அமைக்கப்பட்டிருக்கிறது. நான்கு நற்செய்திகளிலும் மாற்கு நற்செய்தியே தென்யூதாவிலிருந்து வரும் கும்ரான் ஏடுகளோடு மிகவும் குறைந்த இணைவுத்தன்மை கொண்டிருக்கிறது. நற்செய்தியின் முடிவில் இயேசுவின் உயிர்ப்பும், வெளிப்பாடும் கலிலேயப் பின்னணியில் கூறப்படுகின்றன. இதில் மத்தேயு, மாற்கைப் பின்பற்றுகிறார். யோவானும், லூக்காவும் இயேசுவின் திருப்பணிகள் சமாரியாவிலும், யூதேயாவிலும் அதிகம் செய்யப்பட்டதாகக் கூறுகின்றார்கள்.

கலிலேயக் கிறிஸ்தவத்தைப் பற்றிப் பின்னால் வந்த குறிப்புகள் தெளிவில்லாமல் இருக்கின்றன. ஆண்டவரின் சகோதரராகக் கருதப்படும் யாக்கோபு கலிலேயாவிலிருந்துதான் வந்திருக்க வேண்டும்; ஆனால் அப்போஸ்தலர் பணியும் மற்ற மூலங்களும் அவரை எருசலேம் திருச்சபையின் தலைவராகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவர் எருசலேமில் நிலவிய விசுவாசத்தின் பிரதிநிதியாக விளங்கியிருக்க வேண்டும். யூதாவும் கலிலேயராக இருக்கலாம். கிளோப்பாவின் மகன் சிமியோன், மற்றும் ஆண்டவரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலிலேயர்களே.

சில சமயம் யோக்கோபும் யூதாவும் எழுதிய கடிதங்கள் கலிலேயக் கிறிஸ்தவத்தை வெளிப்படுத்துவதாக எண்ணப்பட்டன. யாக்கோபு பாலஸ்தீனத்தில் நிலவிய யூதக் கிறிஸ்தவ பழமைவாதிகளின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கலாம்.

கலிலேயா (GAULEE - வட்டம்)

வடக்குப் பாலஸ்தீனத்திலுள்ள ஒரு சிறிய பகுதிதான் கலிலேயாவாகும். இதற்கு வடக்கே நகர்ஏல் காசிமியேவும், மேற்கே மத்தியதரைக்கடலும், தெற்கே எசுதிரலோன் சமவெளியும், கிழக்கே யோர்தான் நதியும், கலிலேயாக் கடலும் இதனைச் சூழ்ந்துள்ளன. இப்பகுதியின் பரப்பளவு வடக்கு தெற்காக 80 கி.மீ. தொலைவும், கிழக்கு மேற்காக 40-இலிருந்து 56 கி.மீ. தொலைவும் கொண்டது. வடக்குக் கலிலேயா தெற்குக் கலிலேயாவிலிருந்து மாறுபட்ட இயற்கைக் கூறுகளையும் மலைத்தொடர்களையும் கொண்டிருக்கிறது. இம்மலைத் தொடரின் உயரம் 1200 மீட்டராகும். தெற்குக் கலிலேயா மலைப்பிரதேசமாக இருந்தாலும் இந்தக் குன்றுகள் பெரும்பாலும் சமவெளியால் பிரிக்கப்படுகின்றன. இப்பகுதி மண்வளம் நிறைந்தது. வடக்குக் கலிலேயா வெறுமனே ''மலைப்பகுதி'' என்று (யோசு 11:2) அல்லது நெப்தலியின் மலைகள் என்று அழைக்கப்படும் (20:7).

கலிலேயாவின் புவியியல் அமைப்பு தெற்குநோக்கி இருப்பதால் விவிலிய வரலாற்றில் சமாரியாவோடும், யூதாவோடும் இணைத்துக் கூறப்படுகின்றது. எல்லா இடங்களை நோக்கியும் செல்கின்ற முக்கிய சாலைகள் சந்திக்கின்ற இடமாகக் கலிலேயா விளங்குகிறது. எனவே கலப்பு இன மக்களைக் கொண்டிருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இந்தக் கலப்புத்தன்மை மிகுந்திருந்தது. இப்பகுதியின் ஆட்சிமையமான சேப்போரை மையமாகக் கொண்டு கிரேக்கப் பண்பாடும், மக்கள் தொகுதியும் அமைந்திருந்தன. திபேரியா கலிலேயாக் கடற்கரை நகரமாக விளங்கியது.

கலிலேயாவைக் கைப்பற்றி வெற்றி கண்டது யோசுவாவைச் சாரும் (யோசு 11). மிக முக்கியமான கானானிய நகரங்களாகிய காதேசு, யானோவாம் போன்றவை, குடியேற்றத்திற்குப்பின்னும், கானானிய நகரங்களாகத்தான் விளங்கின. கலிலேயாப் பகுதியில்தான் செபுலோன், நப்தலி, ஆசேர், இசக்கார் ஆகிய இனங்கள் குடியேறின. இந்த இனங்கள் சிசராவை எதிர்த்துப் போரிட்டபொழுது பாராக்கு, தெபோராவால் வழி நடத்தப்பட்டார் (நீதி 4-5). பழைய ஏற்பாட்டு வரலாற்றில் சாலமோன் காலத்திலிருந்து புதிய ஏற்பாட்டுக் காலம்வரை கலிலேயா முக்கியத்துவம் உடையதாகக் கருதப்படவில்லை.

வடநாட்டு அரசின் மாவட்டங்களில் ஒன்றாக விளங்கிய கலிலேயா கி.மு. 784-இல் மூன்றாம் திகிலாத்துபிலேசர் என்பவரால் பிரிக்கப்பட்டு அசீரிய மாகாணத்தோடு சேர்க்கப்பட்டது. கலிலேயாவில் சீமோன் போரிட்டார் (1 மக் 5:14-23). சீமோன் கலிலேயர்களை எதிர்த்துப் போர் புரிந்தவர்களைத் தனது படையினால் விரட்டி அடித்தபின் கலிலேயாவில் உள்ள யூதர்களை யூதேயாவிற்கு அனுப்பினார். ஆனால் அவ்வாறு அனுப்பப்பட்ட யூதர்கள் கலிலேயாவுக்கு விரைவில் திரும்பி வந்தனர். கி.மு. 100-இலிருந்து கி.பி. 100-வரை கலிலேயாவில் ஒரு யூதச் சமூகம் வாழ்ந்து வந்தது. பெரிய ஏரோதின் ஆட்சிப் பகுதியில் ஒரு பிரிவாக விளங்கிய கலிலேயா இயேசுவின் பொதுப் பணிக்காலத்தில் ஏரோது அந்திப்பாவின் ஆளுகைக்கு உட்பட்ட மண்டலத்தின் ஒரு பகுதியாக விளங்கியது.

ஒத்தமைவு நற்செய்திகளில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை கலிலேயாவில்தான் நிகழ்ந்தன. இயேசு தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை இங்குதான் கழித்தார். அவரது அதிகமான பணிகள் இங்குதான் நடந்தேறின. இயேசு கலிலேயாவைச் சேர்ந்தவராகக் கருதப்பட்டார். எருசலேமிலும் யூதேயாவிலும் உள்ள யூதர்கள் கலிலேயா மட்டில் செருக்கு கொள்ளும் மனநிலையை யோவா 1:46;7:52 பிரதிபலிக்கின்றன.

தொடக்க காலத்தில் திருச்சபையின் வரலாற்றில் கலிலேயா முக்கியமானதாகக் கருதப்படவில்லை. நற்செய்திக்குப்புறம்பே புதிய ஏற்பாட்டில் ஒருமுறைதான் கலிலேயாவைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது (அ.ப. 9:31). கி.பி. 66-70-க்குப்பின் கலிலேயாவானது யூதர்கள் தங்கிக் கல்விகற்கும் இடமாக மாறியது.

கலிலேயாக் கடல் (SEA OF GALILEE)

கலிலேயாக் கடல் யோர்தான் நதியால் உருவாக்கப்பட்டுள்ளது. அங்குக் கிழக்கே கவுரான் மேட்டுநிலப்பகுதிக்கும், மேற்கே கலிலேயாக் குன்றுகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் யோர்தான் ஓடுகின்றது. கலிலேயாக் கடலின் தரைமட்டமானது கடல்மட்டத்திற்கும் 212 மீட்டர் தாழ்ந்திருக்கிறது. 50-இலிருந்து 70 மீட்டர் ஆழம் கொண்டது. இக்கடல் 21 கி.மீ. நீளமும் 13 கி.மீ. அகலமும் உள்ளது. இக்கடலைச் சுற்றிக் குன்றுகள் சூழ்ந்துள்ளன. மேற்குப் பகுதியில் உள்ள குன்றுகளைவிடக் கிழக்குப் பகுதியிலுள்ள குன்றுகள் தண்ணீருக்கு அருகில் உள்ளன. இம்மலைச்சரிவு செங்குத்தாகவும் கடலின் தரைமட்டத்திலிருந்து 810 மீ. உயரம் கொண்டதாகவும் இருக்கிறது. இதனால் கிழக்குப் பகுதியிலுள்ள மேட்டு நிலங்களோடு தொடர்பு கொள்வது கடினம். எனவே பண்டைக் காலத்தில் முக்கியமான மையங்கள் எல்லாம் கடலுக்கு மேற்கே இருந்தன.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கடலைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்டதாக நிலைபெற்றிருக்கும் அழிவுச் சின்னங்கள் குறித்துக்காட்டுகின்றன. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கடலின் கரையிலிருந்த ஒன்பது முக்கிய நகரங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நகரத்தின் மக்கள் தொகை குறைந்தது 15,000 ஆக இருக்கும். புதிய ஏற்பாட்டுப் பாலஸ்தீனத்தில் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியாக கடற்கரைப் பகுதி

விளங்கியது. இது ஒரு வெப்ப மண்டலப் பகுதியாகும்.

இயற்கையிலே கிடைக்கும் மூலதனங்கள் மக்களைப் பாதுகாப்பதற்கும், தொழிற் சாலைகளை உருவாக்குவதற்கும் உதவியாக இருந்தன. வரலாற்று ஆசிரியர் யோசிப்பஸ் இப்பகுதியை வளமிக்க கனிகள் கிடைக்கும் பகுதியாக விவரிக்கின்றார். பெரும்பாலும் கடலுக்கு வடமேற்கு மூலையில் உள்ள கெனசரேத்து சமவெளிப்பகுதியில்தான் மண் நிறைந்த சமவெளிப்பகுதிகளில் வேளாண்மைத் தொழிலும் நடைபெற்றது. இப்பகுதிகளில் உள்ள நகரங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் காணப்பட்டன. மீன்பிடித்தலும் மீன்களைப் பதப் படுத்தி அனுப்புவதும் முக்கியமான செயல்களாகும். எனவே, மீன்பிடித்தல் பற்றி அடிக் கடி புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

கடலைச் சுற்றியுள்ள நகரங்களில் நற்செய் திகளில் சொல்லப்படாத 'தாரிக்கேயே' என்ற நகரம்தான் தலைசிறந்த தொழில் மையமாக விளங்கியது. பழைய ஏற்பாட்டில் அத்தி பூத்தாற்போல் கின்னரேத்து அல்லது கின்னரோத்து என்ற பெயரில் இக்கடல் ஒரு எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (எண் *34:11*; யோசு *12:3; 13:27*). யோனத்தான் தன் படையுடன் கெனசார் கடலோரம் என்று அழைக்கப்படும் கலிலேயாக் கடல் பக்கம் வந்ததாகக் குறிப்புக் காணப்படுகின்றது (1 மக் *11:67*). கெனசாரின் வேறு பெயர்தான் நற்செய்திகளில் கடலைக்குறிக்கப் பயன் படுத்தப்படும் கெனசரேத்தாக இருக்கலாம் (மத் *14:34*; மாற் *6:53*; லூக் *5:1*). இதுதான் புதிய ஏற்பாட்டில் கலிலேயாக் கடலாகக் குறிக்கப்படுகிறது (மத் *4:18; 15:28*; மாற் *1:6; 7:31*; யோவா *6:1*). பெரிய ஏரோது கட்டிய பெரிய நகரின் பெயரால் இது திபேரியாக் கடல் என்றும் (யோவா *6:1; 21:1*) அழைக்கப் பட்டது.

கலிலேயாவில் இயேசுவின் பணி கலிலே யாக் கடலையும், குறிப்பாகக் கப்பர்நகூம் நகரையும், மையமாகக் கொண்டிருந்தது. நற்செய்திகளில் கலிலேயாக் கடலில் நடந்த நிகழ்ச்சிகளாகக் கூறப்படுபவைகளில் அள வுக்கு அதிகமாகக் கிடைத்த மீன்பாடும், நான்கு சீடர்களின் அழைப்பும் (லூக் *5:1-11*), கடல்நீரின் மீது நடந்த அருங்குறியும் (மத் *4:21-33*; மாற் *4:35-41*; லூக் *8:22-25*), கடல் கரையில் உயிர்த்த இயேசு தந்த காட்சியும் (யோவா *21:1* தொ) அடங்கும். இன்றையக் காலத்தில் கலிலேயாக் கடற்கரைப் பகுதி யில் உள்ள மக்கள் தொகை முதலாம் நூற் றாண்டில் இருந்ததைவிடக் குறைவு. இங்கு நடைபெற்ற வேளாண்மைத் தொழில், பழ மரங்கள் வளர்க்கும் தொழில், மீன்பிடித்தல் ஆகிய அனைத்தும் இப்பொழுது அழிந்து போய்விட்டன என்று கூறலாம்.

கலிலேயாப் பேச்சு (GALILEAN ACCENT)

இயேசுவும், அவரது அப்போஸ்தலர்க ளும் அரமேய மொழியில் பேசினாலும், அவர்கள் கலிலேயர்களானதால் அரேமேயத் திரிபு மொழியைப் பேசினர். அதையும் கலிலேயப் பகுதிக்கேயுரிய அசைவுடன் பேசினர். இயேசுவைக் கைது செய்தபின், பேதுருவும் அவருக்குப்பின் சென்றார். அப் பொழுது கூட்டத்தில் இருந்த ஒருவன் ''நீ யும் கலிலேயன் அல்லவா, உன் பேச்சே உன்னைக் காட்டிக் கொடுக்கிறதே'' என்று கூறுவதாக மத்தேயு குறிப்பிடுகிறார் (மத் *26:3*). ஏனெனில் அவர் அரமேயம் பேசிய முறையிலிருந்து அவர் இயேசுவின் சீடரெ னக் கருதினர்.

கலினே (CALNEH)

ஒரு பாபிலோனியா நகரம். எரேக்கு, அக்காது ஆகியவற்றுடன் சேர்த்துக் கூறப்படு கிறது (ஆதி *10:10*). சீனார் நாட்டில் நிம்ரோ தால் நிறுவப்பட்ட நகரங்களில் ஒன்று (ஆதி *10:10*). இன்றுவரை அது இருந்த இடம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆமோ *6:2*-இல் கலினே, கமாத்து, காத்து என்ற வரிசை யில் இப்பெயர் காணப்படுகிறது. இது கலினே வடகிழக்கிலுள்ளது என்பதைச் சுட் டுகிறது. ஆதியாகமத்தில் இவ்விடம் தெற் கில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டிற்குக் காரணம், வடக்கு

நகரமானது வணிகக் குடியிருப்பாக இருந்திருக்கலாம். ஆனால் அது தெற்கிலுள்ள தாய் நகரின் பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம். (உ.ம்) ஆபிரகாமின் பிறப்பிடமான ஊர் வடக்கேதான் இருந்திருக்க வேண்டும். இது ஒரு வணிகக் குடியிருப்பாகும். இது பாபிலோனியாவிலிருந்த ஊர் என்ற தாய்நகரின் பெயரால் அழைக்கப்பட்டது.

கலினே, கர்கமிசுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளது (ஏச 10:9). இது இந்நகர் வடக்கே இருந்தது என்பதைச் கட்டுகின்றது. தால்மூதின்படி, பாபிலோனுக்கும் எரேக்குக்கும் இடையிலுள்ள பாபிலோனிய நகரமான நிப்பூர்தான் கலினேவாகும்.

கலினோ (CALNO)

ஏச 10:9-இல் குறிப்பிடப்படும் ஒரு நகர். கர்கமிசைப் போல், இதுவும் கி.மு. 738-இல் அசீரிய ஏடுகளில் குல்லானி என்றழைக்கப் படுகிறது. இது, அலெப்போவிற்கு வடமேற்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் குலன்கோய் என்று அடையாளம் காட்டப் படுகிறது, ஆமோ 6:2-இல் வரும் கலினேவும் இதுவும் ஒன்றானால், இந்நகர் அசீரியரால் கைப்பற்றப்படுமுன், ஆமோஸ் இந்நகரை அறிந்திருக்க வேண்டும்.

கலீ (HALI - கழுத்தணி)

ஆசேருக்குக் கிடைத்த பகுதியில் ஒரு எல்லை நகரம் இது (யோசு 19:25). வாசகச் சூழ்நிலையில் கெலிக்காத்துக்கு அருகில் இது இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்த நகரத்தின் சரியான இட அமைப்புத் தெரியவில்லை. இது தேல் ஏல்-கர்பாகக்குத் தெற்கிலுள்ள கிர்பேத்து இராஸ் அலியாக இருக்கலாம்.

கலை (ART)

இங்கு ஓவியம், சிற்பம் செதுக்குதல் போன்றவை விவிலியக் காலத்தில் எவ்வாறு செய்யப்பட்டன என்பதையும், அழகு செய்யும் கருத்துக்களும் மாதிரிகைகளும் எவ்வாறு தோன்றி வளர்ச்சியுற்றன என்பவற்றையும் பார்ப்போம். அழகு செய்யப்பட்ட பொருட்களின் தன்மையைப் பற்றியல்ல.

1. வரலாற்றுக்கு முந்திய பாலஸ்தீனத்தில் கலை

கி.மு. 8000-இல் அதாவது இடைக் கற்காலத்தில் பாலஸ்தீனத்தில் கலை எப்படியிருந்தது என்பதற்கான சான்றுகள் சில கிடைத்துள்ளன. அவைகள், ஓர் அரிவாளின் கைப்பிடியில் உள்ள ஒய்ந்த நிலையில் படுத்திருக்கும் ஒரு மானின் சித்திரமும், ஒரு காவி பூசப்பட்ட களிமண் பலகையில் உள்ள ஒரு வகை அரேபியமானின் முகச்சாயல் பதிந்த ஓவியமும் ஆகும். மனித உருவங்களை வரைவதற்கான முயற்சிகள் நடந்ததற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன. கர்மேல் மலைக்கு அருகில் உள்ள குகை ஒன்றில் மண்டை ஓடுகளுக்கு, ஒருவித சிப்பியில் முடி செய்து அணிவிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

ஏறக்குறைய கி.மு. 6000 ஆண்டுகாலத்தில் எரிகோவில் பயன்படுத்திய பொருட்களில் கலை தொடர்பான பலபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சுண்ணாம்புக் களிமண்ணால் செய்யப்பட்ட மனித முகமூடிகளும், மனிதக் கண்களுக்கு கடல்சிப்பிகளையும், நாணல் துண்டுகளை உடல் அமைப்பை அமைப்பதற்கும் பயன்படுத்தினார்கள்.

தெலெயிலாத்து கசூல் என்ற இடத்தின் சிதைவுகளில் (கி.மு. 3500) உள்ள மண், செங்கல் ஆகியவற்றால் கட்டப்பட்டுள்ள ஒரு வீட்டில், சுவரில் வரைந்த சித்திரங்களைப் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. ஓவியர்கள் உலோகக் கலவையினால் தயாரிக்கப்பட்ட கருமை, கடுஞ்சிவப்பு, மஞ்சள், காவி, வெள்ளை போன்ற வர்ணங்களைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். இவ்வாறு வரையப்பட்ட 8 ஒளிக்கதிர்களை உடைய விண்மீனும், அதைச்சுற்றி வரையப்பட்ட வேதாளங்களும், மருத்துவர்கள், சூனியக்காரர்கள் அணியும் முகமூடி போன்றவைகளும் ஒழுங்கற்ற முறையில் ஆங்காங்கே சிதறிச்

சிதறி வரையப்பட்டிருக்கின்றன. இன்னொரு இடத்தில் ஒரு பறவையைச் சுற்றி மேற்கண்ட முகமூடிகளும் மற்றவைகளும் வரையப்பட்ட அழிவுற்ற நிலையிலான ஒரு படம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்னொரு சிதைந்த ஓவியமும் கிடைத்துள்ளது. அந்த ஓவியத்தின் இடப்பக்க மூலையில் ஒரு விண்மீன் இருந்திருக்கலாம். படத்தில் மனிதனின் கால்கள் மட்டுமே தெரிகின்றன. அவன் சின்னத்திற்கு முதுகைக் காட்டி, மனித அல்லது விலங்கு உருவங்களைப் பார்க்கிறான். படத்தில் உருவங்களின் கால்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றின் பொருளை முழுவதுமாகக் கூற இயலாது. காரணம் இப்படம் சிதைந்துள்ளது.



2. கானானியக் கலை:-

13-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த, நிலையான வாழ்க்கையமைக்காத, பல்வேறு கலாச்சாரங்களால் பாதிக்கப்பட்ட சமூகக் குழுவையே கானானியர்கள் என்கிறோம். கானானியக் கலைஞர்கள், அவர்களது கலைக்கான உள்ளுணர்வை மெசபொத்தாமியா, எகிப்து அனத்தோலியா போன்ற நாட்டு மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். தொடக்க வெண்கலக் காலத்தில் (கி.மு. 3000-2000) வளர்ச்சியடையாத கானானியக்கலை சீரிய-பாலஸ்தீனிய கரையோரப் பகுதியில், அனத்தோலிய மக்களோடு தொடர்பு ஏற்பட்டுப் பின் வெண்கலக் காலத்தில் (கி.மு. 1600-1200) வளர்ச்சியடைந்தது.

அ) உகாரித்துக் கலை:- சீரியாக் கரையோரத்தில் வாழ்ந்த இராஸ் சம்ரா (உகாரித்து) என்ற இடத்து மக்கள், கானானியர்களை விட மொழியில் சிறிது வேறுபட்டாலும் இவர்களின் கலை கி.மு. 14-15 ஆம் நூற்றாண்டுகளில் கானானில் வளர்ந்த கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்தக் காலத்தில் உள்ள கலைகளை அறிய உகாரித்துக் கடவுள்களின் சிலைகள் மட்டுமே கிடைத்துள்ளன. இதில் இடிக் கடவுளைப் பிரதிபலிக்கும் ஒரு சுண்ணாம்புக் கல்லில் செய்யப்பட்ட கடவுளின் உருவம் சிறப்பு வாய்ந்ததாகும். அந்த உருவத்தில் கடவுள் எழுந்து நிற்கிறார். அவரது வலக்கரத்தில் ஓர் அதிகார முத்திரைக் கோல் உள்ளது. அவரது இடக்கை ஈட்டியால் குத்துவது போல் உள்ளது. இது மின்னலை அடையாளமாகக் குறிக்கலாம். இறுகிய இடைக்கச்சையும், இடத் தோள்முழுவதும் தெரியுமாறும், முகமும், உடலும் வலப் பக்கம் முழுதுமாக ஒரு சித்திரம் இருந்தால் நிச்சயமாக அதில் எகிப்தியப் பாதிப்பு இருக்கிறது என்று கூறி விடலாம். இந்தக் கடவுளின் சிலையில் மேற்கூறிய அம்சங்கள் காணப்படுகின்றன. ஆனால் தலைக்கவசங்களும், தொங்கும் மயிர்ப்பின்னலும், சிறிய ஆசியாவின் பாதிப்பு ஆகும். கடவுளின் முன்னால் உள்ள சிறிய உருவம் ஒருவேளை பக்தனைக் குறிக்கலாம். அந்த உருவமானது சீரியா முறைப்படி ஆடை அணிந்துள்ளது. இவ்வாறு, எகிப்து, சீரியா, சிறிய ஆசியா ஆகியவைகளின் குணநலன்களை உள்ளடக்கிய இன்னும் பல சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னொரு சிலையில், தந்தத்தால் செய்யப்பட்ட, மலையின்மேல் அமர்ந்திருக்கும் பெண் தெய்வத்தின் இரண்டு பக்கங்களிலும், இரண்டு காட்டு ஆடுகள் மைசீனியாக் கலையின் அப்பட்டமான பிரதிபலிப்பாகும். மிருகங்கள் ஒன்றையொன்று நேரடியாகப் பார்த்துக்கொண்டிருப்பதுபோல வரையப்பட்ட ஓவியங்கள் மெசபொத்தாமியாக்

கலையைச் சார்ந்தவை என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இயற்கை அலங்கரிப்பிலும், புராண ஓவியங்களிலும் கூட உகாரித்துக் கலையில் கலப்புத் தன்மை பிரதிபலிக்கின்றது. எடுத்துக் காட்டாகத் தங்கத்தால் செய்யப்பட்ட ஒரு சிற்பத்தில் காட்டு எருதுகளும், வில்லோடும் அம்போடும் வேட்டையாடும் ஒரு தேர் ஓட்டியின் உருவமும், அந்தத் தேரின் பக்கத்தில் துள்ளிவரும் மானின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் வீரமிக்க விலங்குகளாகச் சித்தரிக்கும் முறை அகியன் வகைக்கலையைச் சார்ந்தது ஆகும். தேர் ஓட்டுபவரின் முகமும், தோளும் அமைந்திருக்கும் விதம் எகிப்தியக் கலைக்குச் சொந்தம். தேரும் வேட்டையாடும் முறையும் சிறிய ஆசியாவைச் சார்ந்தது ஆகும். 'வாழ்வின் மரம்' எனப்படும் இன்னொரு ஓவியம் ஒரு தங்கக் கோப்பையைச் சுற்றி விலங்குகளும் சிறகுள்ளதோற்றங்களும் நிறைந்த படங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆ. கானானியப் பாலஸ்தீனத்தில் சிற்பக் கலை:-

கானானியர்களுக்கே உரித்தானது என்று கூறப்படுகின்ற சில நினைவுச் சின்னங்கள் பிறநாட்டு உருவங்களை மனதில் கொண்டு வரையப்பட்டவையாகும். எகிப்திய 18-19-ஆவது அரசமரபுக் காலத்தில், எகிப்தியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாலஸ்தீனத்தில் பேத்துசானிலிருந்து கல்சிற்பத் தொழிலாளிகள் வரவழைக்கப்பட்டு, அவர்களின் தெய்வமான மேகலுக்கும், அவரது துணைவிக்கும் கோவில்கட்டி, அதில் நாட்டுத் தூண்களும், நேர்ச்சைக்குரிய தூண்களும் செய்யப் பணிக்கப்பட்டனர். அப்படிப்பட்ட மேகல்கடவுளின், ஆட்சிபீடத்தில் அமர்ந்து, வலப்பக்க முகத்தைக் காட்டி, தாமரை மலர்களை இரண்டு எகிப்தியர்களிடமிருந்து பெறும் உருவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிற்பக்கலைஞர் இந்த உருவத்திற்கு எகிப்திய உருவம் கொடுக்க முயற்சி செய்துள்ளது நன்றாகவே தெரிகிறது. வலக்கரத்தில் செங்கோலையும், இடக்கரத்தில் எகிப்தியக் கடவுளுக்கான முத்திரையையும் கொடுத்ததோடு இடப் புறப்புஜத்தைக் காட்டுவதன் மூலம், இது தெளிவாக விளங்குகின்றது. அதே நேரத்தில் நீண்ட தாடியும், கொம்புகளும், எகிப்திய மணிமகுடத்திற்குப் பதிலாக உள்ள நீண்ட தொப்பியும், நிச்சயமாக எகிப்தியர்களுக்கு உரியன அல்ல.

மெகிதோவில் கிடைக்கப் பெற்ற ஒரு தங்கமுலாம் பூசப்பட்ட, கானானியக் கடவுளின் சிலையும் இவ்வகையைச் சார்ந்ததாகும். இந்தச் சிலையானது பீடத்தில் அமர்ந்து, இறுகிய நீண்ட ஆடை அணிந்து அமர்ந்த நிலையில் உள்ளது. அமர்ந்திருக்கும்முறை எகிப்தியக் கலையைத் தழுவியது. அந்தச் சிலை கைநீட்டி இருக்கின்றதைத் தவிர்த்து மற்ற அமைப்புக்கள் மெசபொத்தாமியக் கலையோடு ஒத்துப்போகின்றன.'

இன்னும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, காலம் கணிக்கப்படாத பல களிமண் உருவங்கள் கலைப்பொருட்கள் சொல்லமுடியாத அளவில் உள்ளன.

இ. தந்த வேலைப்பாடுகள்:-

கானானியச் சிற்பக் கலையானது மிகவும் நுணுக்கமான ஒன்றாக இல்லாவிட்டாலும், இங்குள்ள தந்த வேலைப்பாடுகள் மிகவும் கவர்ச்சியானவை. இவைகள் கலைஞர்களின் சிறந்த கைவன்மையை வெளிப்படுத்துவதோடு, இந்தக் கலைகளின் கருத்துகளுக்கு, மையப்பொருளைப் பல இடங்களில் இருந்து எடுத்திருக்கின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இலாக்கீசு என்னுமிடத்தில் கிடைத்த கி.மு. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு தந்தப் பெயர்ப் பலகையில், மயிர்நிறைந்த காளைகளும், சிங்கங்களும் சண்டையிடுவது போன்ற காட்சியும், அதன்மேலே கழுகுகள் பறந்து திரிவதையும் செதுக்கியிருக்கிறார்கள். இந்தச் சித்திரத்தின் கருத்து, மெசபொத்தாமியாப் புராணக் கதைகளில் இருந்து எடுக்கப்பட்டதாகும். தேல் ஏல்-பாராவில் கிடைத்த தந்தப் பேழை ஒன்

றில் எகிப்திய விருந்து நிகழ்ச்சி ஒன்றும், காட்டு வாத்துக்களைப் பிடிக்கும் நிகழ்ச்சி ஒன்றும் செதுக்கப்பட்டுள்ளன. விருந்து நிகழ்ச்சியில் உள்ள உடைகள் சீரியக் கலாச் சாரத்தைச் சார்ந்தன. காட்டின் ஓரத்தில் நிற்கும் காளைகள் ஆகியன் கலையைச் சார்ந்தன. காட்டில் உள்ள பனைமரங்கள் மெசபொத்தாமியாவைச் சார்ந்தன.

மெகிதோவில் கிடைத்த இரண்டு தந்த வேலைப்பாடுகள் மிகவும் முக்கியமானவை. அவற்றில் ஒன்றில் ஓர் அரசனின் வெற்றி பற்றிய சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அதில் வலப் பாதியில், அரசன் அவரது தேரில் எழுந்து நிற்பது போலவும், அவருக்கு முன்னால் ஓர் இசை வல்லுநரும் படை வீரனும், மேலும் இரண்டு நிர்வாணக் கைதிகள் குதிரைச் சேணத்தோடு கட்டப்பட்டது போலவும் உள்ளது. இடப் பாதியில், அரசபீடத்தில் அமர்ந்திருக்கும் அரசன் கிண்ணத்தில் ஏதோ குடிப்பது போலவும், அதற்குப் பின்புறம் சமையல்காரர்கள் எதையோ சமைப்பது போலவும், அரசி பூக்களை அரசனுக்கு அளிப்பது போன்ற நிகழ்ச்சிகளும் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு எகிப்தியக் கலையம்சம், பிராந்தியக் கலையம்சத்தோடு கலந்துள்ளது. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள நீண்ட அங்கிகள் சீரியாவைச் சார்ந்தவை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள சூரியத்தட்டு ஆசியாவைச் சார்ந்தது. இன்னொரு தந்தச் சிற்பமானது, ஒரு தந்தச் சிமிழின் மேல் செதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிற்பத்தில் பெண் சிங்கங்களும், நரசிங்கங்களும் ஓய்வெடுத்த நிலையில் உள்ளன. பெண் சிங்கங்கள் சிறிய ஆசியக் கலையைச் சார்ந்தவை. மொத்தத்தில் இந்தச் சிமிழில் உள்ள உருவங்கள் இத்தியர்களின் கடவுளைக் குறிப்பவையாகும். மேலும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும், சீப்பு, கண்ணாடி, கரண்டியின் கைப்பிடிகள் ஆகியவற்றின் தோற்றங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

ஈ) பானைகளில் வரையப்படும் அலங்காரங்கள்:- தேல் ஏல்-அசுல், தேல் ஏல்-பாரா, இலாக்கீக, மெகிதோ போன்ற பகுதிகளில்



கிடைத்துள்ள கி.மு. 1500-ஐச் சார்ந்த வரைபடங்களோடு கூடிய பானைகள், பாத்திரங்கள் போன்றவற்றில் உள்ள சித்திரங்கள் கானானியக் கலையோடு தொடர்புடையன.

இந்தச் சித்திரங்கள் அப்போது பாலஸ்தீனத்தில் பிரசித்தி பெற்றிருந்த ஆகியன் வடிவ இயல் வகையைச் சார்ந்ததாக அல்லாமல் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அந்த வரைபடங்களில் மெசபொத்தாமியக் கலையைத் தழுவிய மிருகங்களின் நேர்த்தியான தோற்றங்கள் நேர், வளைகோடுகளைப் பயன்படுத்தி வரையப்பட்டுள்ளன. பானைகளில் காணப்படும் அழகான மரம், காட்டு ஆடுகள், ஓர் இறந்த மீனைக் கொத்தும் கொக்குகள் போன்ற படங்கள் இதற்கான சில எடுத்துக்காட்டுகள் ஆகும். இத்தகைய கருத்துக்கள் கொண்ட வரைபடங்கள் கி.மு. 2000-இல் மெசபொத்தாமியாவின் தென்பகுதியில் காணப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. கி.மு. 1200-இல் பெலிஸ்தியர்கள் பயன்படுத்திய பாத்திரங்களில் இன்னும் வேறுசில சித்திரங்கள் காணப்படுகின்றன. இந்தப் படங்களில் பறவைகள், தங்கள் தலைகளைத் திருப்பி, அலகுகளால் இறகுகளை மென்மைப்படுத்துவது போன்ற ஒவியங்கள் காணப்படுகின்றன. இந்தக் காட்சியானது பொதுவாகப் பாலஸ்தீனக் கடற்கரை ஓரங்களில்தான் அதிகமாகக் காணமுடியும். எனவே பெலிஸ்தியர்கள், பாலஸ்தீனக் கலையைப் பின்பற்றியே இந்தச் சித்திரத்தை வரைந்திருக்க முடியும்.

3. எபிரேயக் கலை:- எபிரேயர்கள் பாலஸ்தீனத்தில் தங்கள் ஆட்சியை அமைத்தபோது அவர்களுக்கென்று சொந்தமாக எந்தக் கலையும் கிடையாது. வெறும் நாடோடிகளாகத் திரிந்ததால் அவர்களுக்குக் கலைவளர்ப்பதற்கு அதிக வாய்ப்புக்கள் கிடைத்திருக்க நியாயமில்லை. துன்பக் காலத்தில் இருந்து தாவீதின் காலம் வரை அரசியல் நெருக்கடி போன்ற காரணங்களால் கலைவளரவில்லை. சாலமோன் காலத்தில் கலை வளர்ச்சியடையத் தொடங்கினாலும், இதற்காக வெளிநாட்டுக் கலைஞர்களையும் செயல்பாட்டு முறைகளயும்தான் நம்பியிருக்க வேண்டியிருந்தது (1 அர 5:6.18; 7:13-14; 2 நாள் 2:7.14). யூதா, இஸ்ரேல் ஆகியவற்றின் அரசர்களின் அரண்மனையும், ஆலயங்களும், எபிரேயக்கலை ஆற்றல் முழுவதையும் பயன்படுத்திவிட்டதாகத் தெரிகிறது.

அ) ஆலய அலங்கரிப்பு:- சாலமோன் கட்டிய ஆலயத்தின் அழகை, 1 அரசர் ஆகமத்திலும் 2 நாள் ஆகமத்திலும் வாசிக்கின்றோம். இதில் காணப்படும் குறிப்புகள் கலை நுணுக்கத்துடன் எழுதப்பட்டவை அல்ல; காரணம் இவற்றை எழுதியவர்கள் சட்ட வல்லுநர்களே அன்றிச் சிற்பிகள் அல்லர். சட்ட வல்லுநர்கள், ஆலயத்தின் அழகைப் பற்றி எழுதுவது 'யாவேயின் இல்லம்' எவ்வளவு அழகாக இருந்தது என்று குறிப்பிடுவதற்கு மட்டும்தான். இவர்கள் ஒரு சில பிழைகளைச் செய்தாலும் மீதி எல்லாவற்றையும் பற்றிய தகவல்களைத் தருகின்றனர். விவிலியக் கூற்றுப்படி, சாலமோனின் ஆலயத்தில் பலிபீடத்தின் உட்சுவர்களில் மரமானது, தங்கமுலாம் பூசப்பட்டு, மினுமினுக்கச் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. ஆலயத்தில் உள்ள அணிகலன்களின் அமைப்பு, மரவேலைப்பாடுகள் போன்றவை ஒவ்வொரு மொழியிலும் வேறுபட்டவிதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஆலயத்தைப்பற்றிக் குறிப்பிடும் பகுதியிலே அலங்கரிப்பு தாவரங்களையும் கெருபீம்கள் என்றழைக்கப்படும் உயிருள்ள உருவங்களையும் கொண்டுள்ளது. இந்த வேலைப்பாடுகளில் சுரை, மலர்ந்த பூ, பனை போன்றவை காணப்படுகின்றன (1 அர 6:18.29.31.35). ஆலயத்தின் கெருபீம்கள், மெசபொத்தாமிய ஆலயவாயில்களில், காவல் நிற்பதாக அமைக்கப்பட்டிருக்கும், மனித முகமும், சிறகும் கொண்ட ஒரு கலப்பு உயிரைப் போல அமைந்துள்ளன. உடன்படிக்கைப் பேழையின் மீதுள்ள கெருபீம்கள் எகிப்திய கடவுள்கள் ஊர்வலம் வரும்போது அமைக்கப்படும் ஒருவகைத் தோற்றத்தைக் கொண்டவையாக உள்ளன. யாக்கின், போவாஸ் ஆகியோரின் நினைவுத் தூண்களில் கூட, மரத்தால் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றில் லில்லி, பனை, பூ, கேதுரு (1 அர 7:18.22.24.26.36.42.49) ஆகியவை காணப்படுகின்றன. வார்ப்புக் கடல் தொட்டியை அலங்கரிக்க

12 எருதுகளின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திசையை நோக்கி மூன்று எருதுகள் நிற்கின்றன (1 அர 7:25; 2 நாள் 4:4). கெருபீம்கள், மிருகங்களின் தோற்றங்கள், சிங்கங்கள், எருதுகள், நீர் எடுக்கப் பயன்படும் வெண்கலத் தொட்டி போன்ற அமைப்பு (1 அர 7:27-37) ஆகியவையெல்லாம் சீரிய, இத்திய தெய்வச்சிலைகளின் அடிப்பகுதிகளைத் தழுவி அமைந்தவைகள் ஆகும்.

யாத் 25.27-இல் உடன்படிக்கைப் பேழையின் அமைப்பு கூறப்பட்டிருப்பதைக் கொண்டு, உடன்படிக்கைப் பேழை இவ்வாறுதான் இருக்கும் என்று தீர்மானிக்க இயலாது. காரணம் தெரியாப் பல கருத்துக்களை மனதில் கொண்டு, வசதிக்கு ஏற்றாற்போல ஓர்அமைப்பைக் கொடுத்து எழுதப்பட்டதே உடன்படிக்கைப் பேழையின் அமைப்பு ஆகும்.

ஆ) தந்த வேலைப்பாடுகள்:- இஸ்ராயேலர்கள் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிய போது ஏற்பட்ட பிரச்சனைகளால் முன்னேறாமல் இருந்த தந்த வேலைப்பாட்டுக் கலையானது மேற்குச் செமித்திய முடியாட்சி வளர்ச்சியின்போது, மீண்டும் முன்னேறத் தொடங்கியது. மரவேலைப்பாடுகளும், வீடுகளும் தந்தத்தால் அழகுபடுத்தப்பட்டதாக விவிலியத்தில் ஆங்காங்கே குறிப்புக்கள் காணப்படுகின்றன (1 அர 10:18; 22:39; ஆமோ 3:15; 6:4). புதைபொருளில் கிடைத்த இரண்டு தந்த வேலைப்பாட்டுப் பலகையில் இருந்து இவற்றை விவரிக்கலாம். ஒரு தந்தப் பலகையானது அசீரியப் பகுதியில் கிடைத்துள்ளது. இந்தத் தந்தத் தட்டில், 3-ஆம் சால்மனேசரால் தோற்கடிக்கப்பட்டு அவனது! சொத்துக்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு அதாத்து அரண்மனையில் வைக்கப்பட்ட தமஸ்கு அரசனான கசாயேலின் பெயர் இருப்பதால் இது அவனது காலமான கி.மு. 841-ஐ ஒட்டிய பலகையாகத்தான் இருக்கக்கூடும். அரசுலான் தாஸ் என்னுமிடத்தில் கிடைக்கப் பெற்றுள்ள தந்த வேலைப்பாட்டு அமைப்பில், பெண் நரசிங்கங்கள், சிறகுடன் அமைந்த பெண் உருவங்கள், சன்னல் கம்பிவழியாகத் தெரியும் ஒரு பெண்ணின் உருவம் போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்தச் சிற்பங்களுக்கான கருத்தமைவுகள், மத்தியதரைக்கடல் பகுதியிலிருந்து எகிப்து எடுத்து பயன்படுத்திய, புதிய அரசின் எகிப்தியக் கலை வகையைச் சார்ந்ததாக இருக்கலாம். அரசுலான் தாஸ் என்னுமிடத்திலுள்ள தந்தச் சிற்பிகள் எகிப்தியக் கருத்துக்களை எளிதாகப் பின்பற்றினார்கள். நீண்ட தாடியுடன், சால்வை போர்த்திய மனித உருவம் அமைந்த இன்னொரு தந்தச் சிற்பமானது அசீரிய வகையைப் பின்பற்றியதாக உள்ளது. இன்னொரு சிற்பத்தில் காணப்படும் பசு, தன் கன்றை நக்குவதான காட்சி ஆகியன் சிற்ப வகையைச் சார்ந்ததாக இருக்கலாம்.

சமாரியாப் பகுதியில் கிடைத்த பல தந்த வேலைப்பாடுகளில் தங்கமுலாம் பூசப்பட்டு, நீலக்கற்களும், கண்ணாடிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இவைகள் சுத்த எகிப்தியக் கலையைச் சார்ந்தவை.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளும், நிம்ரூதில் கிடைத்த தந்தச் சிற்பங்களும், விவிலியம் கூறும் மெசபொத்தாமிய தந்தச் சிற்பங்களும், சீரியா, பாலஸ்தீனம் போன்ற இடங்களில் கிடைத்த தந்தப் பலகைகளும், கி.மு.9-8 நூற்றாண்டுகளில் மேற்குச் செமித்திய நாட்டின் தந்தச் சிற்பங்களும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன என்று தெரிவிக்கின்றன.

4. யூதக்கலை:- நாடு கடத்தப்படுவதற்கு முன்பு யூதக் கலை வளர்ச்சியடைந்திருக்கவில்லை. நாடுகடத்தப்பட்டபின் அவர்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்து வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கும்போதும், செலூக்கிய அரசர்களோடு போர் தொடுத்தபோதும் யூதக்கலை வளர்ச்சியடையவில்லை. யூதர்கள் சொந்தமாக சுய ஆட்சி பெற்றபோதும், உரோமை ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோதும், யூதக்கலை மெல்லத் தலையெடுக்கத் தொடங்கியது. யூதக்கலை என்றுமே தனித்து நின்றதில்லை. மேற்கு

ஆசியாவில் உள்ள கிரேக்கக் கலையைத் தழுவியே அமைந்திருந்தது. இதற்கான சான்றுகள் பாலஸ்தீனத்திலும், அதன் சுற்றுப்புறங்களிலும் ஏராளம் காணப்படுகின்றன. இதுமேயாவிலும், மாரிசாவிலும் அமைக்கப்பட்டுள்ள கிரேக்கமயம் கொண்ட சீதோனியக் குடியிருப்பில் உள்ள கல்லறைகளில் அமைந்துள்ள புராணக் கருத்துக்கள், மிருக முகங்களின் கலவை, பெண் நரசிங்கங்கள் போன்றவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். கிரேக்கர்களின் காலத்திலும், உரோமையர் காலத்திலும் இருந்த யூதக்கலையானது இவ்வாறாகப் பலகலைகளை உள்ளடக்கிய ஒரு கலையாகும்.

அ) கல்லறை நினைவுச் சின்னங்களின் அலங்கரிப்பு:-

கிறிஸ்துவம் தொடங்குவதற்கு முன்பு உள்ள சில பணக்கார யூதர்களின் கல்லறையானது தோரிய, அயோனியக் கலைகளோடு எகிப்தியக் கலையையும் சேர்த்து நினைவுச் சின்னங்களாக அமைக்கப்பட்டுள்ளன. கோபுர அமைப்பு, கூம்பு வடிவம், பூச்சின்னம் போன்றவைகள் எகிப்தியக் கலை வடிவமயமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. கிதரோன் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள கல்லறைகளின் அமைப்பு கீழ்த்திசை சார்ந்த கலைகளின் இணைவாக வெளிப்படுகின்றன. அபிசலோம், செக்கரியா, சின்ன யாக்கோபு, கெலன் அரசி, யோசுவாவின் கல்லறை, நீதிபதிகளின் கல்லறைகள் என்று இன்று சொல்லப்படுபவை எல்லாம் தாவர உருவங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆ) தொடக்க காலச் செபக்கூடங்களில் அலங்கரிப்பு:- கெபிர் பிரிம், தேல் கூம் போன்ற இடங்களில் காணப்பட்ட செபக்கூடங்களில் எல்லாம், யூதக் கல்லறைகளில் காணப்பட்ட தாவர உருவங்கள் அதிகம் காணப்படுகின்றன. இதைத் தவிர்த்து வித்தியாசமான முறையில் ஏழு கிளைகள் உடைய விளக்குத் தண்டும், ஆறுமுனைகளையுடைய தாவீதின் விண்மீனும், 1 நாள் 28:17-இல் குறிக்கப்பட்டுள்ள சக்கரத் தேரும், கடல் குதிரைகள், காதல் தெய்வம் ஆகிய உருவங்களும் காணப்படுகின்றன.

கி.பி. 4-5-ஆம் நூற்றாண்டுகளில் உள்ள பாலஸ்தீனச் செபக்கூடங்களில் பளபளப்பாக்கப்பட்ட மொசைக் தரைகளில் மனிதர்களின் உருவங்களும், மிருகங்களின் உருவங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. புற இனத்தாரின் புராணங்களில் கூறப்பட்டுள்ள, சூரியக் கடவுளின் தேர், ஐந்நூல் ஆலயம், விளக்குத் தண்டுகள் ஆகியவற்றை இவர்கள் எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள். செபக்கூடங்களின் சுவர்கள், உரோமை, அலக்சாந்திரியா வர்ணம் தீட்டும் முறையில் அமைந்துள்ளன. சுவர் முழுவதும், மோசே நைல் நதியில் இருந்து காப்பாற்றப்படுதல், பேயேரில் உள்ள மோசேயின் கிணறு, தாவீதின் அபிடேகம், கர்மேல் மலையில் எலியா இறைவாக்கினரின் பலி போன்ற பல விவிலிய நிகழ்ச்சிகளை வரைந்து அழகுபடுத்தியிருக்கிறார்கள்.

கலைமான் (HART)

இது சிவந்த மான் வகையில் வயது வந்த ஆண்மானாகும். இது பரவலாகக் காணப்படுகிறது. இதனுடைய நிறம் பருவத்திற்கு ஏற்றவாறு லேசாக மாறுகிறது. ஆனால் இது சிவந்த தவிட்டு நிறமாக இருக்கிறது. இதன் உயரம் கழுத்தில் நான்கு அடி.

பழைய ஏற்பாட்டில் இது பல இடங்களில் குறிக்கப்பெறுகிறது (உப 12:15.22; 14:5; 15:22; 1 அர 5:31). உணவாகவும், வேட்டையாடப்படும் மிருகமாகவும் உள்ளது. வேறு குறிப்புகள்: ஏச 35:6-மான் குதித்தல் பற்றியும்; சங் 42:1-மான் தண்ணீரையும் உணவையும் தேடிச் செல்வதைப் பற்றியும்; உ.ச. 2:9, 17:8:14-மானின் பலத்தையும் வேகத்தைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

கல் (STONE)

பாலஸ்தீன நாட்டில் கற்கள் இல்லா இடங்களைப் பார்ப்பது அரிது, ஆகையால் எபிரேய மக்களுக்குக் கற்கள் மிக எளிதாக அதிக அளவில் கிடைக்கின்றன. அவர்களு

டைய சிந்தனை, சொல், செயல் வாழ்க்கை முறையில் கற்கள் இடம்பெற்றன. பழம் பெருங்குடி மக்களின் மனத்திலும், வெளி யடையாளங்களைப் பயன்படுத்தும் எல்லா வகையான மக்களிடத்திலும், உறுதியான, உடையாத, கனமான கல் வலிமையைக் காட்டுகிறது.விவிலியம் கல் வடிவங்களின் உருவங்களை மெசியாவிற்குச் சுட்டிக் காட்டி விளக்குவதை மேற்கூறியவற்றின் மூலம் அறிய முடியும்.

1. புனிதக் கற்களும், கிறிஸ்துவின் பீட மும்:- புனிதக் கற்சிலைகளை வணங்கும் வழிபாடு எல்லாப் பழைய மதங்களிலும் வளர்ச்சியுற்றிருந்தது. ஆனால் இஸ்ராயேல் மக்களுக்கு இந்தச் சிலை வழிபாடு தடை செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் சிலைவழி பாடு செய்யும் அருகிலுள்ள மக்களின் கவர்ச் சியால் அவர்கள் தவறக்கூடும். ஆகையால் அவர்கள் எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டும் (லேவி 26:1; உப 16:22; ஏச 57:6). இந்தச் சிலை வழிபாட்டிற்கு அப்பால் புனி தக் கற்களில் கருத்து (பொருள்) இருந்தது. மாய மந்திர வித்தையால் கற்கள் ஆற்றல் பெறவில்லை. ஆனால் இந்தக் கற்களின் பலன் அல்லது ஆற்றல் காலத்தைக் கடந்த இறைவன் அளித்தவையாகும். இக்கருத்து டன் யாக்கோபு ஒரு புனிதக் கற்றூணைப் பெத்தேல் என்ற இடத்தில் நாட்டினார் (ஆதி 28:16 தொ). இஸ்ராயேல் பன்னிரண்டு கோத் திரங்கள் பலிபீடத்தினால் தூய்மையடை கின்றன என்று எடுத்துக்காட்டப் பன்னி ரண்டு கோத்திரங்கள் கற்றூண்களைப் பலி பீடத்திற்கு அருகில் மோசே நிறுவினார் (யாத் 28:10.21; 2:4). இந்தப் பீடங்கள் செதுக்கப் படாத கற்களால் கட்டப்பட்டவை. இந்தப் பீடத்தின் வழியாக இறைவன் தம் ஆசீரை அளிக்கிறார் (யாத் 20:25; காண் 23:19). உண்மையில் இந்தத் தூய கற்கள் இறைவன் இவ்வுலகில் தங்கியிருப்பதைப் பலவகை யான வெளியடையாளங்களால் காட்டுகின் றன. இவை கிறிஸ்துவின் பல்வேறு உருவங் களாகும். கிறிஸ்துவில் இறைவன் இவ்வுல கிற்குத் தம்மைக் காட்டுகிறார். புதிய ஏற் பாட்டில் இது மறைமுகமாகக் காட்டப்பட் டிருக்கிறது (காண் எபி 13:10; 1 கொரி 10:18). வெளிப்படையாகத் திருச்சபையின் தந்தைய ரின் நூல்களிலும் வழிபாட்டு முறையிலும் கிறிஸ்து பீடத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டி ருக்கிறார்.

2. நினைவுத் தூணும் அழியாத உடன்படிக் கையும்:-

தூய கல்லுக்கும் (பீடத்திற்கும்) நினைவுத் தூண்களுக்கும் அவ்வளவு வேறுபாடு இருப் பதாகத் தெரியவில்லை. அழியா, உறுதித் தன்மையைப் பழங்கால நினைவுச் சின்னங் களில் காணலாம். இந்த நினைவுச் சின்னம் உடன்படிக்கையின், சாட்சிய மேடைமட்டு மன்று (ஆதி 31:45-52), இறந்தவர்களின் அழியா நினைவுச் சின்னமுமாகும் (யோசு 8:29; 2 சாமு 18:17). இவை இறைவன் தம் மக்களோடு செய்த உடன்படிக்கையை நினைவூட்டுகிறது (யோசு 4:7.20-24; 24:26). இந்த உடன்படிக்கையின் சட்ட திட்டங்கள் கற்பலகையில் எழுதப்பட்டன (யாத் 24:12). ஆனால் அழியாத வாக்குறுதியின் அடையா ளம் கல்லான இதயங்கொண்ட இஸ்ராயேல் மக்களால் சிறுமையுற்றது (எச 11:19). இறுதி யாக அவர்களது பிடிவாத குணத்தையும், இதயமற்ற மனத்தையும் குறிக்கும் அடையாள மாகவும் மட்டும் நின்றது. இந்த நிலைக்கு மாறாக உணர்ச்சியுள்ள இதயத்தைப் படைத்து, எரேமியா, எசக்கியேல் கூற்றுப் படி (எரே 31:33; எச 11:19; 36:26) ஆவியி னால் எழுதப்படுகிற புதிய சட்டத்தை உள்ள மாகிய உயிர்ப்பலகையில் எழுதுவதாகக் கூறுகிறார் ஆண்டவர் (2 கொரி 3:3).

3. பாலைவனத்தில் பாறையும் மீட்பரான கிறிஸ்துவும்:-

பாலைவனத்தில் மோசே பாறையிலி ருந்து தண்ணீர் வழிந்தோடச் செய்தார். இந்த அருங்குறியில் பவுல் கிறிஸ்துவைக் காண்கி றார். ஏனெனில் கிறிஸ்து தம்மிடமிருந்து அளிக்கும் நீரோ முடிவில்லா வாழ்வளிக்கும் நீராகும் (1 கொரி 10:4). இந்தப் பாலைவனத் தின் பாறையை மக்களோடு செல்கின்ற யாவே இறைவனுக்கு யூத ஆசிரியர்கள் ஒப்பிட்டனர். இந்த விளக்கத்தைப் பவுல்

ஒப்புக் கொள்வதோடு மட்டுமின்றிப் பழைய ஏற்பாட்டின் பாரம்பரியத்தைப் புதிய ஏற்பாட்டுடன் இணைக்கிறார். பழைய ஏற்பாடு ஆசிரியர்கள், பாறையிலிருந்து தண்ணீர் வழிந்தோடிய புதுமையைத் தங்கள் எழுத்துக்களில் எடுத்துக்கூறத் தயங்குவதில்லை (சங் 78:15; 105:41; ஞான 11:4). ஏனென்றால் உலர்ந்த உயிரற்ற பாறையிலிருந்து உயிரும் பலனும் அளிக்கவல்ல நீரைச் சுரக்கச் செய்த நிகழ்ச்சியில் யாவேயின் மாட்சிமைமிக்க அருளின் வல்லமையைக் கண் குளிரக் கண்டனர். மேலும் கற்பாறை இறைவனின் சாயலாக மக்களுக்கு இருந்து, அவருடைய அருளை வழங்கியது (எச 47:1-12; செக் 14:8; திருவெளி 22:1). பாறையிலிருந்து சுரந்த நீருக்கும் இறந்த கிறிஸ்துவின் விலாவிலிருந்து வழிந்த நீருக்கும் உள்ள ஒற்றுமையைப் புனித யோவான் குறிப்பாகக் காட்டுகிறார் (யோவா 19:34; காண் 7:37). இந்த ஒற்றுமையைப் பற்றி வெளிப்படையாகப் பல திருச்சபையின் தந்தையர்கள் எழுதியிருக்கிறார்கள்.

4. மூலைக்கல்லாகிய கிறிஸ்துவும், உயிருள்ள கற்களாகிய கிறிஸ்தவர்களும்:-

கிறிஸ்துவின் துன்பங்களும், சோதனைகளும், இறுதியாகத் தோல்வியாகக் கருதப்பட்ட மரணத்தின் வழியாக மீட்புக் கிடைத்தது. ''வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று'' என்று சங் 118:22 மெசியாவைப் பற்றி அறிவித்திருக்கிறது. தம் சொந்த மக்களால் கைவிடப்படுவார் என்ற கருத்தை இயேசு கொடிய குத்தகைக்காரர் உவமையால் கூறினார். இதனால் கிறிஸ்து மூலைக்கல்லாகவும், கட்டடத்தின் அடித்தளமாகவும், மிக முக்கியமான மையக் கல்லாகவும் விளங்குவார் என்பதை அறிகிறோம் (மத் 21:42; அ.ப. 4:11; 1 பேதுரு 2:4.7). புனித ஆலயம் இந்த வழியாக ஒன்றோடு ஒன்று இணைந்து இருக்கும் என்று உறுதியளிக்கிறார். அவரில்தான் கடவுளுடைய இருப்பிடம் கட்டப்பட்டு வளர்ச்சியடைகிறது.

மற்றொரு உருவகத்தின்படி கிறிஸ்து அசையாத கல்லாகக் கூறப்படுகிறார் (எச 28:16; உரோ 9:33; 1 கொரி 3:11; 1 பேதுரு 2:6), இந்த அசையாத கல்லில் விசுவாசம் கொண்டு நம்பும்போது, விசுவாசிகள் உயிருள்ள கற்கள் போல மாற்றப்பட்டு, கட்டடத்தில் ஒரு பகுதியாகப் பொருத்தப்பட்டுத் தூய ஆலயமாக்கப்படுகின்றனர் (1 பேதுரு 2:15; எபே 2:21).

5. கிறிஸ்து, அழிக்கும் பாறையும், இடறலான கல்லும்:-

இறைவனது தூய்மையும், அன்பும் வெளிப்படும்பொழுது கிறிஸ்து ஒவ்வொரு மனிதனையும் ஒளியையோ இருளையோ தேர்ந்தெடுக்கத் தூண்டுகிறார். தற்பெருமை கொண்ட விசுவாசமற்றவர்களுக்கு இடறல் கல்லாகவும், வழுக்கிவிடும் பாறையாகவும் கிறிஸ்து இருக்கிறார் (எச 8:14; உரோ 9:33; 1 பேதுரு 2:8). ஆனால் கிறிஸ்துவின் பகைவர் இறுதியாக அழிக்கப்படுவர். இந்தக் கைவிடப்பட்ட பாறை மூலைக்கல்லாகிற உவமையின் தொடர்ச்சியைப் புனித லூக்கில் காணலாம். ''அக்கல்லின்மேல் விழுபவன் எவனும் நொறுங்கிப் போவான். எவன் மேல் அது விழுகிறதோ அவன் தவிடுபொடியாக ஆவான்'' (லூக் 20:17 தொ). ஒரு வேளை லூக்கா இங்குத் தானியேல் புத்தகத்தில் கூறப்படும் பாறையின் உருவகத்தைச் சுட்டிக்காட்டியிருக்கலாம். மெசியாவும் அவருடைய அரசும் இவ்வுலகின் மற்ற எல்லாச் சக்திகளையும் தோல்வியடையச் செய்து, வெற்றியடைவதைப் பாறையின் உருவகத்தில் தானியேல் காண்கிறார். ''நீர் பார்த்துக் கொண்டிருந்தபோது, கைகளால் பெயர்க்கப்படாத கல்லொன்று உருண்டு வந்தது; வந்து சிலையின் இரும்பும் களிமண்ணுமாகிய அதன் பாதங்களில் மோதி நொறுக்கிப் போட்டது.... சிலையை மோதிய கல் பெரிய மலையாய் வளர்ந்து மண்ணுலகம் முழுவதும் நிரம்பிற்று (தானி 2:34) தொ.

6. விலை உயர்ந்த கற்களும் புதிய எருசலேமும்:-

மகிமை பொருந்திய மாற்றம் அடையக்

காத்திருக்கும் புதிய எருசலேமுக்கு ஓர் அதிசய மான அடையாளம் உண்டு; அந்தத் தூய நகரம் விலை உயர்ந்த கற்களால் கட்டப் படும் (ஏச 54:11 தொ; தோபி 13:16 தொ; திருவெளி 21:10-21).

கல்கூல் (HALHUL - நடுங்குகின்ற)

யூதாவின் மலைப்பகுதியில் உளள பேத்து சூர் மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:58). கெபிரோனுக்கு வடக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலக் கல்கூலோடு அடையாளம் காட்டப்படுகிறது. இந்த நகரி லுள்ள மசூதியில் யோனாவின் கல்லறை இருப்பதாக ஒரு பாரம்பரியம் உள்ளது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஏலிய காப்பித் தோலினா (எருசலேம்) பகுதியின் தென் எல்லை அருகிலுள்ள அலுபோஸ் (கல்கூல்) இருந்தது என்று கூறப்படுகிறது.

கல்கோல் (CALCOL)

தாமார் தன் மாமன் யூதாவிற்குப் பெற்ற செராகுவின் புதல்வர்களுள் ஒருவர் (1 நாள் 2:6). சாலமோனுக்கு அடுத்து ஞானத்தில் சிறந்தவர் என்று போற்றப்படுகிறார்; ''மா கோலின் புதல்வர்களுள்'' ஒருவர் என்று சொல்லப்படுகின்றார். அதாவது, ''இசை மீட்டோரின் சங்கத்தின் அங்கத்தினர்'' (1 அர 5:11).

கல்தளம் (LITHOSTROTOS)

அந்தோனியாக் கோட்டையின் முற்றத் தில் இருந்த நீதி இருக்கை. இங்கு இயேசு சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டார் (யோவா 19:13).

கல்தேயா, கல்தேயர்கள் (CHALDEA, CHALDEANS)

கல்தேயா என்பது பாபிலோனியாவின் தென்பகுதியில் உள்ள ஒரு பகுதி. கல்தேயர் கள் என்பது அங்கு வாழ்ந்த மக்களைக் குறிக்கும். இப்பெயர் பாபிலோனைக் கடை சியாக ஆட்சி புரிந்த (கி.மு. 626-539) அரச பாரம்பரியத்தையும் குறிக்கும்.

1. நாடு:- கி.மு. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து அசீரிய அரச ஏடுகளில் கல்தூ என்ற நாட் டைப் பற்றியும், அங்கு வாழ்ந்த கல்தாய் என்ற மக்களைப் பற்றியும் அறிகிறோம். இந்நாடு யூப்பிரத்திசு, திகிரிசு ஆகிய நதிக ளின் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள பாரசீக வளைகுடாவுக்கும் பாபிலோனியத் தென்கோடி நகர்களுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். ஏரிகள், குளம், குட்டைகள் நிறைந்த இப்பகுதியில் ஒரு சில நகரக் குடியிருப்புகளே இருந்தன. இங்கு வாழ்ந்த மக்களின் முக்கிய தொழில்கள் மீன்பிடித் தல், வேட்டையாடுதல், சிறுசிறு விவசாயத் தொழில்கள், ஆடு மாடு மேய்த்தல் முதலிய னவாகும். இப்பகுதி ஒவ்வொரு இனத்திற் கும் ஏற்றாற்போல் சிறு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டு அவைகள் ''வீடுகள்'' என்றழைக் கப்பட்டது. ஒவ்வொரு பகுதிக்கும் தலைவர் கள் உண்டு. இவர்கள் அரசர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவ்வாறு சிறுசிறு பகு திகளாகப் பிரிக்கப்பட்டதால் இம்மக்கள் சுற்றுப்புறத்தில் வாழ்ந்தவர்களோடு தொடர்பு கொள்ளாமல் தனித்து வாழ்ந்த னர். எனவே அவர்களுக்குள்ளே ஒரு சுதந்தர மான மனப்பாங்கும் வாழ்க்கை முறையும் அமைந்திருந்தன.

கல்தேய மக்கள் எந்த மொழியில் பேசி னார்கள் என்பதற்குக் குறிப்பு இல்லை. இவர்கள் அக்காதியர்கள் மொழியையே பேசியிருக்கலாம். எனினும் அவர்கள் அரே பிய மொழியையும் உபயோகப்படுத்தினர் என்பதற்கும் சான்றுகள் உள. கல்தேய இன மும் அரமேய இனமும் சமூக, பொருளாதார அமைப்பில் ஒத்து வாழ்ந்தாலும் இவ்விரண் டும் வெவ்வேறு இனங்களே.

இரேக்க மூலங்களும், ஆப்பு எழுத்து வாச கங்களும் கல்தேயா, கல்தேயர்கள் பற்றிப் பேசுகின்றன. ஆனால் நெகமிய, தானியேல் ஆகிய நூல்களின் எபிரேய, அரமேயிக்கு வடிவங்கள், பாபிலோன், பாபிலோனியர் களைப் பற்றிப் பேசுகின்றன. இந்த வேறுபாடு களுக்குப் போதிய மொழியியல் விளக்கம் கிடைக்கவில்லை.

2. வரலாறு:- வரலாற்று ஏடுகளைத் தவிர்த்துக் கல்தேயர்களைப் பற்றி அறிய வேண்டுமெனில் நமக்கு உதவுவன நினிவே அரண்மனையில் கிடைத்துள்ள சான்றுகளே. இவைகள் அசீரியர்கள் கல்தேயர்களோடு எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதை விளக்குகின்றன. அசீரியர்கள் ஆட்சிக்குப் பின் கல்தேயர்பற்றி நாம் அறிவதற்கு உதவும் வரலாற்று ஏடுகள் மிகக் குறைவே, எனினும் சில கருத்துக்கள் தெளிவாக உள்ளன. நகரத்தில் வாழ்ந்த மக்களுக்கும் கல்தேயர்களுக்கும் கலாச்சார அடிப்படையில் வேறுபாடு ஏதுமில்லை. இருவரும் ஒரே தெய்வங்களையே வழிபட்டனர். ஆப்பு எழுத்துக்களைப் பயன்படுத்தினர். ஆனால் அவர்களின் சமூக வாழ்க்கைமுறைதான் வேறுபாடாக உள்ளது. கல்தேயர்கள் இனத்தின் அடிப்படையில் குழுக்களாக வாழ்ந்தனர். பணத்திற்கும் சக்திக்கும் ஏற்றாற்போல் கூட்டுச்சேர்வர்; வரிகொடுக்க மறுத்தனர்; சேவை செய்ய மறுத்தனர்; தங்கள் இனத்தைத் (குழுவைத்) தவிர்த்து, பிறருக்குப் பிரமாணிக்கம் காட்டவில்லை; நகரத்துச் செல்வங்களைக் கொள்ளையிடுவர். கருக்கமாகச் சொன்னால் அவர்கள் நகரத்தில் வாழ்ந்த மக்களின் பரம எதிரிகள்.

அசீரிய அரசர்கள் கல்தேயாப் பகுதியில் படையெடுத்தது பாபிலோனிய நகரத்து மக்களுக்கும் கல்தேயர்களுக்கும் உள்ள சமூக உறவை அழித்தது. எனவே பாபிலோனியர் தங்கள் பகுதியில் கோட்டைகள் அமைத்துக் காவல் காத்தனர். இவைகள் கல்தேயர்களை மேலும் ஒற்றுமையுள்ளவர்களாகவும், சுதந்தரமானவர்களாகவும் ஆக்கியது. ஆனால் அசீரியப் பாதுகாப்பில் வாழ்ந்த நகரத்து மக்களோ அசீரியர்களுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தனர். இந்நிலையில், பாபிலோன் நகரங்களில் ஒன்றாக மட்டும் இராமல், அரசியல் ஆர்வம் மற்றும் கலாச்சாரத்தின் அடையாளமாக விளங்கியது. இதனால், சூழ்நிலை மும்முனைப் போட்டியாக உருவெடுத்தது.

இந்தச் சூழ்நிலைகள் கல்தேயர்களைப் போர்க்கலையில் சிறந்தவர்களாக்கியது. உள்நாட்டுக் கிளர்ச்சி, கொரில்லாப் போர் முறை, திடீர்த் தாக்குதல், உடன்படிக்கைகளைக் கடைப்பிடிக்காத தன்மை ஆகியவற்றால் இம்மக்கள் பிறரின் பயங்கர எதிரிகளாயினர். ஏறக்குறைய 2 நூற்றாண்டு வெற்றி-தோல்விக்குப்பின் கல்தேயர்கள் அசீரியர்களை முறியடித்துப் பாபிலோனியப் பேரரசை நிறுவினர். இப்பேரரசு எகிப்து முதல் சிலிசியா வரை பரவியிருந்தது.

கல்தேயா அரசர்களில் குறிப்பிடத்தக்கவர் மெரோதாக்கு-பாலதான் என்பவர். இவர் பாபிலோனிய அரசர்களான மூன்றாம் திகிலாத்துபிலேசர் இரண்டாம் சார்கோன், சனகெரிபு ஆகியவர்களோடு போர்புரிந்தவர். இவர் ஏலாம் நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டு அங்கு இறந்து போனார். இவர் திறமைமிக்கவராதலால் இவர் காலத்தில் நாட்டில் அரசியல் நிலை சுமூகமாக நிலவியது. கல்தேயர்கள் அசீரியர்களை எதிர்க்க ஏலாம் நாடு எப்போதும் உதவியது. கல்தேயர்களை அசீரியருடைய படை பலம், அறிவு ஆகியன அச்சுறுத்தியபோதும் ஏலாம்நாடு கல்தேயர்களுக்குப் புகலிடம் தந்தது. இந்தக் கல்தேயர்கள் தொலைவிலுள்ள அசீரிய மேலதிகாரிகளோடு சேர்ந்து மறைமுகமாகச் சூழ்ச்சி செய்வதில் வல்லவர்கள். நகரங்களில் அசீரிய எதிர்ப்புப் படைகள் எப்போதும் இருந்தன. சில சமயங்களில் அசீரியரோடு உடன்படிக்கை செய்து ஆட்சி செய்வதும் உண்டு.

அசீரிய அரசன் அசூர்பானிபால் இறந்தபோது அசீரிய அரசு சிதையத் தொடங்கியது. அப்போது கல்தேயர்கள் வரலாற்றின் இரண்டாம் கட்டம் மன்னன் நபுபோலசரோடு தொடங்குகிறது. இவர்தான் கல்தேயப் பேரரசை நிறுவியவர். இவர் காலத்தில் தான் பாபிலோனியா கைப்பற்றப்பட்டது. மேதிய நாட்டோடு உடன்பாடு செய்து நினிவேயை கி.மு. 614-இல் வென்றார். அடுத்து இவர் மகன் நெபுக்கதுனேசார் பெருமை வாய்ந்தவர்; வலிமை படைத்தவர் (கி.மு. 604-562). இவர் பாலஸ்தீனம், சீரியாப் பகுதிகளில் வாழ்ந்த எகிப்தியரை விரட்டினார். இவர் கர்கேமிசில் எகிப்தியரை வென்றார் (605; எரே 46:2); எருசலேமைத் தாக்கி (597)

587-இல் யூதாவைத் தோற்கடித்தார். இது பாபிலோனிய நாடு கடத்தலுக்கு இட்டுச் சென்றது (2 அர 24-25). இவர் காலத்தில்தான் கல்தேயர்கள் அசீரியாவின் முழுப்பகுதியை யும் கைப்பற்றினர். இப்போது பாபிலோ னியா என்ற சொல்லுக்குப் பதிலாகக் கல் தேயா என்ற சொல் வழங்கப்பட்டது. நெபுக் கதுனேசார் பிற நாடுகளை வென்று ஏராள மான கொள்ளைப் பொருளைப் பாபிலோ னியாவிற்குக் கொண்டு வந்தார். அந்நாட்க ளில் பாபிலோனின் பெயர் உலகம் முழுவ தும் பரவியது. இவரது காலத்தில் கல்தேய ஆதிக்கம் உச்சநிலை அடைந்து, கல்தேயப் பேரரசு முடிவுற்றது எனக் கூறலாம். இவருக் குப்பின் ஆட்சிபுரிந்த இவர் மகன் எவில் மெரோதாக்கு (கி.மு.562-560; 2 அர 25:27-30; எரே 52:31-34), மருமகன் நெர்கெல் சாரெசார் (560-558) ஆகியோர் மிகச் சிறிதுகாலமே ஆட்சி செய்தனர். இக்காலத்தில் கல்தேய அரசன் எனக் கூறப்படும் நபோனிது (556-539) முற்றிலும் வேறுபட்ட உலகைச் சேர்ந்த வராவார். பாரசீக மன்னன் சைரசின் தலை மையில் பாபிலோன் கைப்பற்றப்பட்ட தோடு (539) கல்தேயப் பேரரசு முடிவுக்கு வந்தது.

பாபிலோனியர்கள் என்றழைக்கப்பட்ட கல் தேயர்கள் தங்கள் நாட்டிலிருந்து வெளியேறிய போது இவ்வினத்தின் இறுதிக்கட்டம் தொடங்கியது. இவர்கள் பல நாடுகளுக்கு மந்திரவாதிகளாகவோ, வானவியல் அறிஞர் களாகவோ, தீர்க்க தரிசிகளாகவோ சென்ற னர். இவர்கள் கிரேக்க ஆதிக்கம் நிலவிய எகிப்திலும் கிரேக்க நாட்டிலும் உரோமையி லும் பெரும் புகழ்பெற்றனர். இவர்களது புகழ் மேற்கத்திய நாடுகளிலும் பரவியது. இந்த இடங்களில் இவர்கள் செய்த தொழில் களுக்குத் தங்கள் பெயர்கள் இட்டனர்.

3. கல்தேயர்கள் விட்டுச் சென்ற மரபு ரிமை:-

கல்தேயர்கள் பாபிலோனில் ஆட்சிசெய்த காலத்தில், அவர்கள் விரிவாக்கப்பட்ட எழுத்தர் குழுக்களைப் பாதுகாத்து வந்ததா கத் தெரிகிறது. இவர்கள் சமயம், வரலாறு, அறிவியல் போன்ற தலைப்புகள் பற்றிப் பரந்த இலக்கிய உலகை விட்டுச்சென்றுள்ள னர். நெபுக்கதுனேசார் காலத்திலும் அவருக் குப்பின் வந்த கடைசிக் கல்தேய மன்னர்கள் காலத்திலும் இலக்கியம் பெரிதும் வளர்ச்சி யுற்றது. நெபுக்கதுனேசார் காலத்தில் கட்ட டக்கலையும் கட்டடங்களைக் கட்டியெழுப் புதலும் பெரிதும் வளர்ச்சியுற்றிருந்தன (தானி 4:30).

வானியல், சோதிடம் ஆகியவற்றில் இவர் கள் புலமை பெற்றிருந்தனர். இரேக்கர் காலத்தில் பாபிலோனிலிருந்து வந்த மந்திர வாதிகளும் சோதிடர்களும் மத்திய தரைக் கடல் நாடுகள் முழுவதிலும் பரவியிருந்தனர். இதன் விளைவாகக் கல்தேயர்என்ற சொல் இனப்பொருளிலோ, அரசியல் பொரு ளிலோ (எஸ் 5:12; தானி 5:35) பயன்படாமல் இந்தக் கலைகளைக் குறிக்கும் கலைச்சொல் லாகியது (தானி 2:2-5.10; 4:5; 5:7-11).

கல்தேயர்களின் மொழி, பாபிலோனில் பயன்படுத்தப்பட்ட அக்காதிய மொழிப்பிரி வைப் போன்றதாகவே இருந்திருக்கவேண் டும். மற்ற மேற்காசிய நாடுகளில் நிகழ்ந்தது போலவே இரண்டாம் ஆயிரமாண்டு மத்தி யில், கல்தேயர்களும் அரமேயிக்கு மொழியை ஏற்றுக் கொண்டனர். இம்மொழி யைக் கல்தேய மொழியென்று அழைப் பது சரியானதன்று.

கல்தொலைவு (STADION, FURLONG)

ஸ்தாடியோன் எனற சொல் இச்சொல் லால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (2 மக் 12:9-11; லூக் 24:13; யோவா 6:19; 11:18; திருவெளி 14:20; 21:16). சில மொழிபெயர்ப் புகள் மைல் என்ற சொல்லையும் பயன்படுத் துகின்றன. ஸ்தாடியோன் 231 முழம் நீளமுள் ளது.

கல்மழை, ஆலங்கட்டி மழை (HAIL, HAIL-STONES)

மழைமுகில் ஒன்று திரண்டிருக்கும்போது ஏற்படும் கடும் கொந்தளிப்பினால் கல்மழை தோன்றுகிறது. கல்மழை பெய்யும்போது

இடியும் மின்னலும் அடிக்கடி ஏற்படுகின்றன. மேகத்தின் மீதுள்ள மழைத்துளிகள் பயங்கர உயரத்திற்கு அதாவது 0°-க்கும் குறைவான வெப்பநிலை உள்ள இடத்திற்குத் தூக்கிச் செல்லப்படுகிறது. பனிக்கட்டிகள் உருவாகி மேலே தூக்கப்பட்டுக் கீழே விழுகின்றன. முடிவாக அவை பூமியை நோக்கி விழும் போது, 1-2 செ.மீ. அளவு விட்டமுள்ள ஆலங்கட்டிகளாக மாறுகின்றன. இவை நிலத்தின் பயிர் விளைச்சலைப் பாதிக்கக் கூடியதாகவும் மனிதர்களையும் மிருகங்க ளையும் சில சமயங்களில் காயப்படுத்தும் அளவுக்கும் அமைகின்றன. சில விதிவிலக் கான நேரங்களில், மிகவும் பெரியதாக இருக் கின்றன. 1937-ஆம் ஆண்டு அக்டோபரில் தேல் அவிவ்வுக்குப் பக்கத்தில் கடற்கரை யோரமாக ஆலங்கட்டி மழையினால் மேல் தள ஓடுகள் உடைந்தன.

விவிலியத்தில் கல்மழை குறிக்கப்பட்டி ருக்கிறது. விளைச்சலை நாசம் செய்வதாக வும் (யாத் 9:18-34; ஆகா 2:17), மனிதர்களை யும் மிருகங்களையும் திறந்த வெளியில் காயப்படுத்தியதாகவும் (யாத் 9:25; யோசு 10:11), மின்னலோடு ஆலங்கட்டி மழை பெய்ததாகவும் (யாத் 9:23; சங் 18:12-13; திருவெளி 11:19), கடும் புயலோடும் (எச 13:11), அலைக்கழிக்கும் மழையோடும் (ஏச 28:17), பனியோடும் (யோபு 38:22) ஆலங் கட்டி மழை பொழிந்ததாகக் குறிப்பிடப்பட் டிருக்கிறது. கிபயோனில் எமோரியர்களைக் கொன்ற ஆலங்கட்டி மழை ''சூரியனும்... இஸ்ராயேலர் தங்கள் எதிரிகளைப் பழி வாங்கித் தீரும் மட்டும் நிலைகுலையாமல் நின்றதற்கு'' (யோசு 10:11-13) பின்னால் மேகங்கள் ஒன்று திரண்ட (பெருமளவில்) போது ஏற்பட்டிருக்க வேண்டும்.

கல்லாய் (KALLAI - விரைவான)

இது பெரிய குரு. யோயாக்கிமின் காலத் தில் வாழ்ந்த சல்லாயின் குருகுலத் தலைவர் (நெக 12:20).

கல்லால் எறிந்து கொல்லல் (STONING)

விவிலியச் சட்டத்தின்படி பொய்க்கடவு ளரை வணங்குதல் (உப 19:2-7), சிசுக் கொலை அல்லது குழந்தைப்பலி (லேவி 20:2-5), புறக்கடவுளர் பெயரால் தீர்க்கதரிச னம் மொழிதல் (உப 13:1-5), ஆவிகளைக் கொண்டு குறிசொல்லுதல் (லேவி 20:27), இறைநிந்தனை (லேவி 24:15-16), ஓய்வு நாளை மீறுதல் (எண் 15:32-36), சோரம் போதல் (உப 22:22-23) போன்ற குற்றங்க ளுக்குக் கல்லால் எறியப்படுவது தண்டனை யாகக் கருதப்பட்டது. ஓர் ஆடவனோ, பெண்ணோ மாட்டினால் முட்டப்பட்டு இறக்க நேர்ந்தால் அந்தமாடு கல்லால் எறி யப்பட்டுக் (யாத் 21:28-32) கொலை செய்யப் பட்டது.

பாலஸ்தீனம் கற்களால் நிறைந்த ஒரு மலைப்பாங்கான நாடாக இருந்தமையால் கூட்டத்தின் வெறுப்பையோ, கோபத் தையோ வெளிக்காட்டும் ஒரு வெளி அடை யாளமாகக் கல்லெறியும் வழக்கம் இருந்தது. சிலவேளைகளில் கூட்டத்தினர் கல்லால் எறிந்து குற்றவாளியைக் கொன்றுவிடுவதும் வழக்கமாகவே இருந்தது (1 சாமு 30:6; 1 அர 12:18). புதிய ஏற்பாட்டிலும் இத்தகைய கல்லெறி நிகழ்வு முறைகள் பல காணலாம் (மத் 21:35; 23:37; யோவா 10:31; அ.ப. 14:5).

பிற்கால யூதச் சட்டத்தின்படி குற்றவாளி அவன் உடைகள் உரியப்பட்டு, பின்னர்ச் சாட்சிகளுள் ஒருவனால் மேல் சாரத்தி னின்று கீழே தள்ளப்படுவான். சாரத்தி னின்று விழுந்த பின்னும் உயிர் பிழைத்திருந் தால் மற்றொரு சாட்சியினால் பெரிய கல் ஒன்று குற்றவாளியின் நெஞ்சின் மீது உருட்டி விடப்படும். பின்னும் குற்றவாளி உயிருட னிருக்கக் கண்டால் கூடியிருப்போர் அனை வரும் கற்களால் எறிந்து கொன்று விடுவது வழக்கம். அ.ப. 7:57-58 குறிப்பிடும் ஸ்தே வானின் கொலை அங்கு நிகழ்ந்ததனைத்தும் குறிப்பிடாதது போல் உள்ளது அல்லது அன்றைய நிகழ்வுகளின் சுருக்கமான குறிப் பாக இருக்கலாம்.

கல்லிகத்தேன் (CALLISTHENES)

சீரியா நாட்டுத் தளபதியான நிக்கானோரு

டன் வந்து யூதர்களின் தலைவரான யூதா மக்கபேயுவிற்கு எதிராகப் போர் செய்த ஒரு சீரியன். நிக்கானோர் தோற்கடிக்கப்பட்ட பின்பு, யூதர்கள் இவனை நெருப்பில் சுட்டுக் கொன்றனர். ஏனெனில் கோவில் வாயிலுக்குத் தீ வைக்க இவன் உதவினான்.

கல்லியோ (GALLIO)

கொரிந்தைத் தலைநகரமாகக் கொண்ட அக்காயாவின் ஆளுநராக யுனியு கல்லியோ அன்னாயு அ.ப. 18:12-17-இல் குறிக்கப்படுகிறார். இவர் அன்னாயு செனேகக்ர என்பவரின் மகனும், தத்துவ ஞானி செனேகாவின் சகோதரனுமாவார். 'கிளாதியு 26-ஆவது தடவை பேரரசனான அறிக்கையிடப்பட்ட பின்பு கல்லியோ அக்காயாவின் ஆளுநராக இருந்தார் என்று தெல்பியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு காட்டுகிறது. இந்த அறிக்கை கி.பி. 52-இல் நடந்தது. ஆகவே 51-52 அல்லது 52-53-இல் கல்லியோ அக்காயாவில் ஆளுநராக இருந்திருக்கவேண்டும். இக்குறிப்பு பவுலின் பயணக்காலக் கணிப்புக்கு முக்கியமானதாகும்.

கல்லியோ ஆளுநராக இருந்தபொழுது பவுலின் மேல், யூதர்கள் 'மக்களை இவன் கெடுக்கப் பார்க்கிறான்' என்று குற்றம்சாட்டித் தீர்ப்புக்காக இழுத்து வந்தனர் (அ.ப. 18:13). ஆனால் பவுல் வாய் திறந்து பேசுவதற்குமுன், கல்லியோ யூதர்களை நோக்கி 'அநீதியோ, அக்கிரமமோ இருந்திருக்கும் என்றால் நானே முறைப்படி விசாரித்திருப்பேன். நீங்கள் சொல்லுவதெல்லாம் வெறும் பூசல்தான்' என்று கூறி இதற்குத் தீர்ப்புச் சொல்ல நான் நடுவராக இருக்க விரும்பவில்லை என்று அவர்களைத் துரத்திவிட்டான் (18:15-16).

அக்காயாவின் தட்பவெப்பநிலை, கல்லியோவை நோயுற்றவராக ஆக்கியது. ஆகவே, அவர் உரோமைக்குத் திரும்புவதில் மகிழ்ச்சி கொண்டார். அங்கு ஓர் உயர் அதிகாரியாகத் திகழ்ந்தார். நீரோவின் ஆட்சிக்காலத்தில் ஒரு சதித் திட்டத்தில் ஈடுபட்டதற்காகக் கல்லியோவின் குடும்பம் முழுவதும் தற்கொலை செய்ய வேண்டியிருந்தது.

இவர் தனது அவையிலிருந்து யூதர்களையெல்லாம் அகற்றினார். செபக்கூடத்தலைவர் சோசுதேன் அடிக்கப்பட அனுமதித்தார். இவையும், பவுல் குற்றம் சாட்டப்பட்டபோது நடந்துகொண்ட விதமும், வெறுக்கத்தக்க யூதர்கள்பால் உரோமையர் காட்டிய அகந்தைமிக்க மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

கல்லீம் (GALLIM - குவியல்கள்)

1. எருசலேமை நோக்கி அசீரியப்படை முன்னேறிச் செல்லும் பாதையிலுள்ள பென்யாமினைச் சேர்ந்த ஓர் இடமாகக் கல்லீமை ஏசயா விவரிக்கிறார் (ஏச 10:3). ஆல்பிரைட் என்பவர், இப்பாதையின் விவரிப்பைத் திருத்தி அமைத்து இந்த இடத்தைச் சவுலின் கிபயாவுக்குப் பின்வைத்து, அனாத்தோத்துக்கு மேற்கே ஒரு கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து சாகுலை அடையாளம் காட்டுகிறார்.

2. இலாயிசின் மகன் பலித்தியின் சொந்த ஊர். சவுல் தனது மகள் மீக்களின் கணவன் தாவீதோடு பகைமை கொண்டபின், அவளைப் பலித்திக்கு மனைவியாகக் கொடுத்தார் (1 சாமு 25:44). ஒருவேளை 1-இல் குறிக்கப்படுபவரும் இவரும் ஒன்றே.

3. எழுபது நூல் வாசகத்தில் குறிக்கப்படும் யூதாவைச் சேர்ந்த மலைப்பகுதியிலுள்ள ஓர் ஊர். கரேமுக்கும் பெத்தேருக்கும் இடையில் அமைந்திருந்தது (யோசு 15:59). பெத்திலகேமுக்கு மேற்கே வடமேற்கில் அடையாளம் காட்டப்படும் இக்காலப் பெயித்யாலாவாக இருக்கலாம்.

கல்லீரல் (LIVER)

கல்லீரலைப் பற்றிய விவிலியக் குறிப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன. அப்போதும் உடல் அங்கத்தையே குறிக்கிறது. இதற்கான விவிலியச் சொல் 'கனமாக இருத்தல்' என்ற பொருளினைக் கொண்டதாகப் பயன்படுத்தப்படுகிறது. இதற்குக் கல்லீரலின்

அடர்த்தித் தன்மையே காரணம். உடலில் இந்த உறுப்பு மிகக் கனமானதாக உள்ள தெனக் கருதப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சமா தானப் பலியிலே இரண்டு சிறுநீரகங்களை யும், விலாப்புறத்திலிருக்கிற கொழுப்பை யும், சிறுநீரகங்கள், கல்லீரல் ஆகியவற்றின் சவ்வையும், ஆண்டவனுக்கு மிக்க நறுமண முள்ள காணிக்கையாகச் செலுத்துவதற்காக ஒதுக்கி வைத்தனர் (லேவி 3:4.10.15).

பண்டைய கிழக்கத்திய நாட்டில், புனிதத் தன்மையைக் கண்டுபிடிப்பதற்காகக் கல்லீர லின் அமைப்பு அடையாளங்களையும், செயல்வடிவினையும் கவனித்தனர். எபிரே யர்களிடம் இத்தகைய பழக்கம் இருந்ததற் கான எந்தவித நேரடிச் சான்றும் இல்லை. ஆனால் பாபிலோனிய மன்னன் ஒருவனின் நிகழ்ச்சியை உதாரணமாகக் கொடுத்துள்ளது பழைய ஏற்பாடு (எச 21:21). அசுத்த ஆவி களை விரட்டுவதற்காக, மீனின் கல்லீரல் பயன்படுத்தப்பட்டதாகத் தோபி நூலில் குறிப்பிட்டுள்ளது (தோபி 6:4-7; 8:2).

கல்லீரல், மனநிலை வாழ்வின் இருப்பிட மாகவும், குறிப்பாக உணர்ச்சிப் பண்புளைக் கொண்டதாகவும் கருதப்பட்டது. இதைப் பற்றிய சான்று, இன்றைய எபிரேய விவிலி யத்தில், ஒன்று மட்டுமே உள்ளது (புல 2:11). இன்று ''மகிமையைக்'' குறிப்பிடப் பயன்படுத்தப்படும் மற்றச் சில பகுதிகள் உண்மையிலே கல்லீரலைக் குறிப்பிடுபவை களாக இருக்கலாம். ஏனென்றால் எபிரேய மொழியில் 'மகிமை', 'கல்லீரல்' ஆகிய இரண்டிற்கும் ஒரே சொல்லே பயன்பட்டது (ஆதி 49:6). ஆதி 49:6; சங் 16:9; 57:8 போன்ற பகுதிகளில் கல்லீரலைக் குறிப்பிடக்கூடிய நிலையைச் சற்று மாற்றி 'ஆவி', 'ஆன்மா' என்ற பொருளில் பயன்படுத்தினர்.

கல்வாரி (CALVARY - மண்டை ஓடு)

கொல்கொத்த என்ற இடத்தின் பெயரின் இலத்தீன் மொழிபெயர்ப்பாகும் (லூக் 23: 33). காண் கொல்கொத்தா.

கல்வி (EDUCATION)

I. கடவுளின் திட்டம் கணிக்கப்பட்ட காலத்தில் நிறைவெய்துகிறது. கடவுள் தேர்ந்தெடுத்த இனம், படிப்படியாக வளர்ந்து அதன் உன்னத நிலையை அடைந் தது. இறைவனின் இம்மீட்பு வழியைத்தான் கடவுளின் கல்வித்திட்டம் எனக் குறிப்பிடுகி றார் புனித பவுல். குழந்தை, மனிதனாக வளர்ச்சிடைவதற்கு ஒப்பிடுகிறார். இறை வன் குறித்த காலம் வரும்வரை, ஆசிரிய னின் கண்காணிப்பில் வளரும் மாணவன் போலத் திருச்சட்டத்தின் கண்காணிப்பில் வளர்ந்து வந்தது இஸ்ராயேல் இனம். இறுதி நாளில் நம் அனைவருக்கும் இறைவனின் புதல்வர்களுக்கான உரிமைகளை வழங்கும் பொருட்டுத் தம் திருமகனையே இவ்வுல கிற்கு அனுப்பினார். பரிசுத்த ஆவியே இதற் குச் சான்று பகர்கின்றார் (கலா 4:1-7; 3:2 தொ). ஆயினும் இறைவனின் கல்வித்திட் டம் கிறிஸ்துவின் வருகையோடு முடிந்து விடவில்லை. ''நாம் கிறிஸ்துவின் முழுப் பருவத்தின் நிலையை அடைந்து, முழு மனி தர்களாக வேண்டும்'' (எபே 4:13). ஆதி முதல் அந்தம் வரை, இறைவன் தாம் தெரிந்து கொண்ட மக்களுக்குக் கல்வி புகட்டி வருகி றார். இக்கல்வித்திட்டத்தின் பாங்கை விசு வாசக் கண்கொண்டு காணும் எக்கிறிஸ்துவ னும், அதனின் பலநிலைகளையும், அவைக ளின் சீரிய பண்புகளையும் உணரமுடியும். கல்வி என்பது இருவரிடையே ஏற்படும் கருத்துப் பரிமாற்றமே ஆகும். கற்றுக்கொடுப் பவர், அறிவுபுகட்டுகிறார்; தெளிவுபடுத் துகிறார்; அறிவுரை கூறுகிறார்; வாக்களிக்கி றார்; தண்டிக்கிறார்; பரிசளிக்கிறார்; முன் மாதிரியாக விளங்குகிறார்; தான் வகுத்த திட் டத்தை நிறைவேற்றியபின், பலனை எதிர் நோக்கி, பொறுமையாகக் காத்திருக்கிறார். இறைவனின் கல்வித்திட்டத்தைக் குறிப்பி டும்போது ''மூசார்'' என்னும் சொல்லை உபயோகிக்கிறது வேதநூல். இச்சொல்லிற் குக் கற்பித்தல், தவற்றைத் திருத்துதல் போன்ற பல பொருட்கள் உண்டு. ஞானாக மத்தில் குடும்பக்கல்வி முறையைக் குறிக்க

வும், தீர்க்க தரிசனங்களில் பொதுவாக இறைவன் செயல்படும் முறையைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

வேதநூலின்படி இறைவன் மட்டுமே முதன்மையான ஆசிரியர். தமது சட்டதிட்டங்கள், சோதனைகள் ஆகியவைகளின் மூலம், தாம் தேர்ந்தெடுத்த மக்கள் மட்டுமன்று ஒவ்வொரு மனிதனும் தமக்குப் பணிந்து நடக்கவேண்டும் என விரும்புகிறார். குடும்பத்தில் உள்ள ஆசான்கள் அளிக்கும் கல்வி, இறைத்திட்டத்திற்கு மாறுபட்டதாக இருப்பினும், அவையும் இறைவனின் கல்வி முறையின் ஓர் அங்கமே என்று கூறுகிறது ஞானாகமம் (பழ 1:7). கடவுள் ஆசானுக்கெல்லாம் மேலான ஆசான். அவர் கல்வித் திட்டத்தை மூன்று நிலைகளில் நிறைவேற்றுகிறார். ஆசிரியர் மாணவனின் வளர்ச்சியில் நேரடிப் பங்கு வகிக்கிறார் என்பதை உணர்த்தவே இந்நிலைகள்.

II. கடவுள் தம் மக்களுக்குக் கல்வி புகட்டுகிறார்:-

1. தந்தை மகனுக்கு அறிவு புகட்டுகிறார்:- கடவுள் தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, தமக்குரிய மக்களாக மாற்றிய பெருஞ்செயலை விவரிக்கும்போது, ஒரு தந்தை தன் மகனுக்குக் கல்வி புகட்டும் விதத்திற்கு ஒப்பிடுகிறது உப ஆகமம். ''ஆதலால் ஒருவன் தன் மகனுக்குக் கற்பிப்பது போல், கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கற்பித்தாரென்று நீ உன் இதயத்தில் உணர்ந்து கொள்வாயாக'' (உப 8:5). இவ்வாசிரியர் தீர்க்க தரிசிகளின் வழியாகக் கல்வி புகட்டினார். ஓசேயா கூறுகிறார்: ''இஸ்ராயேல் குழந்தையாய் இருந்தபோதே, நாம் அவன்மேல் அன்பு கூர்ந்தோம்...எப்பிராயிமுக்கு நடை பயிற்றுவித்தவர் நாம்தான். அவர்களைக் கையிலேந்தி நாம் சீராட்டினோம்...பரிவு என்னும் கயிற்றால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிற்றால் கட்டி நடத்தி வந்தோம். அவர்களை இளைப்பாரச் செய்து உணவளித்தோம்'' (ஓசே 11:1-4). எசக்கியேல் கூறும் சாலையோரத்தில் கண்டெடுக்கப்பட்ட குழந்தை உருவகமும் இவ்வன்பையே வெளிப்படுத்துகிறது (எச 16). ''இஸ்ராயேல் என் தலைமகன்'' என மொழிகிறார் இறைவன்.

இவ்வாக்கின் முழுப்பொருளையும் உணர வேண்டுமாயின், இஸ்ராயேல் மக்களின் கலாச்சாரத்தையும், குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கல்வி முறையையும் பற்றி அறிவது அவசியம். இஸ்ராயேலின் கல்வித்திட்டத்தில் இரண்டு குறிப்பிடத்தக்க அம்சங்களைக் காணலாம். கல்வியின் குறிக்கோள் மெய்ஞ்ஞானம், அந்த ஞானத்தைப் புகட்டும் முக்கிய வழி தவற்றைத் திருத்திக் கண்டித்தல். ஆசிரியர் ஞானத்தையும், அறிவையும், ஒழுக்கத்தையும் மாணவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் (பழ 23:23). நல்லொழுக்கமே நல்ல கல்வியின் உன்னத விளைவு; ஒருவன் தன்னையே வாழ்வில் நடத்திச் செல்லும் நுண்திறத்தைக் கற்றுக் கொள்வதும், அதனைப் பயன்படுத்தி வாழ்வதும் அவசியம் (பழ 4:13; 5:23; 10:17). வாழ்வில் வெற்றிபெற வேண்டுமாயின் கட்டுப்பாட்டை முழுமனதோடு கடைப்பிடிக்க வேண்டும் (பழ 23:12 தொ; சீரா 21:21). பெற்றோரும், ஆசிரியர்களும் சட்டத்தால் குழந்தைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட மேலாளர்கள் ஆவார் (யாத் 20:12). தன் தாய் தந்தைக்குச் செவி கொடுக்க ஒவ்வொருவனுக்கும் கடமையுண்டு (பழ 23:22). அதை மீறுபவன் தண்டனைக்குள்ளாவான் (பழ 30:17; உப 21:18-21). கற்பது ஒரு கடினமான கலை; ஏனெனில் ''சிறுவனின் இதயத்தில் மடமை கட்டப்பட்டிருக்கிறது (பழ 22:15). சீர்கெட்ட சமுதாயம் கேட்டின் வழியில் மயக்கிச் சிக்க வைக்கிறது'' (பழ 1:10; 5:7-14; 6:23-25). இதைக் கண்டு பெற்றோர்கள் கவலையுறுகிறார்கள் (சீரா 22:3-6; 42:9 தொ). அப்பொழுது தடுப்புரைகளும், அது வெற்றி பெறாவிட்டால் கசையும், தேவைப்படுகிறது. ஞானம், என்றும் போதனையையும், தண்டனையையும் கையாளுகின்றது (சீரா 22:6; 30:1-13; பழ 23:13).

2. இறைவன் இஸ்ராயேலுக்குக் கற்பிக்கும் முறையிலும், அறிவுபுகட்டுதல், குறைக

ளைத்‘திருத்திக் கண்டித்தல் ஆகிய குடும்பக் கல்வி முறையின் இரண்டு அம்சங்களையும் காணலாம். மக்களின் பாவ வாழ்க்கையின் காரணமாகத் தீய வழியிலிருந்து முதலில் மக்களைத் திருத்துவது அவசியமாயிற்று.

2. அ) இறைவனின் படிப்பினைகள்:-

கடவுள் எகிப்தில் ஆற்றிய அருஞ்செயல்கள், பலைவனத்தில் விளைவித்த புதுமைகள், இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்தினின்று மீட்ட முறை, ஆகிய இவையனைத்தும் அவரின் கல்வித் திட்டத்தில் அளிக்கப்பட்ட பாடங்கள் (உப 11:2-7). இஸ்ராயேல் தான் பாலைவனத்தில் அனுபவித்த பாடங்கள், துயரத்தை என்றும் மறவாதிருக்க வேண்டும். மனிதன் அப்பத்தினால் மட்டுமின்றி இறைவனின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான் என்பதை உணரப் பசியால் வாடினர். ஒவ்வொருநாளும் இறைவனின் கருணையை மட்டுமே நம்பி வாழ்வதன் மூலம் தந்தையாகிய கடவுள் இஸ்ராயேல்மேல் கொண்டுள்ள அக்கறையை உணரவேண்டும். அவர்கள் பாலைவனத்தைக் கடந்து சென்ற நாற்பது ஆண்டுகளிலும், அவர்களின் உடைகள் கிழியவோ அவர்களின் கால்கள் காயமுறவோ கடவுள் விடவில்லை (உப 8:2-6). இறைவன், இஸ்ராயேல் தம்மேல் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை அறியவும், தம்மோடு உறவுகொள்ள அழைக்கவும் எண்ணி இச்சோதனைகளை அவர்களுக்கு அனுப்பினார். கடவுளின் திருச்சட்டம் அவரின் கல்வித் திட்டத்தை நிறைவேற்றும் வழிமுறையாக ''உனக்குக் கற்பிக்கக் கருதி, அவர் வானத்தினின்று தனது குரலொலியை உனக்குக் கேட்கச் செய்து'' (உப 4:36), தம் சித்தத்தைக் கட்டளைகள் மூலம் தெரிவித்தது மட்டுமின்றித் தாம் மக்கள்மேல் கொண்டுள்ள அளவற்ற அன்பையும் வெளிப்படுத்தினார் (உப 4:37). உனக்கு நல்வாழ்வையும், உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டில் நீ நெடுங்காலம் வாழும்பொருட்டும் இதைச் செய்தார். அவரின் கட்டளைகளைக் கடைப்பிடிப்போருக்கு வாக்குத் தவறா ஆசிரியராகிய இறைவன் வெகுமதியளிக்கிறார். அவரின் திருச்சட்டம் ஆசானின் வாக்கு என்றும் நம்முன் நிலைத்திருப்பதைக் குறிக்கிறது. அவ்வாக்கு உயரே ஆகாயத்திலோ, கடல் கடந்து தூரத்திலோ இல்லை அக்கட்டளை ''உனக்கு அண்மையிலேயே இருக்கிறது'' (உப 30:14-14).

2. ஆ) கண்டிப்புகள்:- கடவுளின் கட்டளைகளை மக்கள் சரிவர அனுசரிக்கவேண்டுமாயின், கண்டிப்பு அவசியம் தேவை. சில நேரங்களில் இக்கண்டிப்பு குற்றங்களை எடுத்தியம்பிக் குறைகூறுவதோடு நின்று விடும். சில நேரங்களில் தண்டனை கொடுக்கும் நிலையும் வரலாம். இஸ்ராயேல், பாவ நாட்டத்தால், மடமை கொண்ட குழந்தை போல் இதயத்தைக் கடுமைப்படுத்திக் கொண்டனர். ஆகவே கடவுள் தம் தீர்க்கதரிசியை வலிமைக்கரங்களால் பற்றி மக்கள் செல்லும் தீய வழியினின்று விலகிப் போகச் செய்தார் (ஏச 8:11). இத்தீர்க்கதரிசி, அளவற்ற நிலையான பொறுமையோடு, காலையும், மாலையும், கடவுளின் அன்பையும், திருச்சித்தத்தையும் அறிக்கையிடுவார். இறைவனின் தண்டனையால் மனிதன் கற்றுக்கொள்வது அதிகம் (ஓசே 7:12; 10:10). இறைவன் தம் மக்களைக் கண்டிப்பதைத் தன் பிரமாணிக்கமற்ற மனைவியைத் தன் பால் இழுக்க ஒரு கணவன் மேற்கொள்ளும் வீண் முயற்சிகளுக்கு ஒப்பிடுகிறார் ஒசேயா (2:4-5; ஆமோ 4:6-11). எரேமியா மீண்டும், மீண்டும் ''எருசலேமே, எச்சரிக்கையாய் நடந்து கொள்'' என்று எச்சரிக்கிறார் (எரே 6:8). ஆனால் இவையனைத்தும் பயனற்றுப் போயின. அடங்காக் குழந்தைகள் இப்போதனைக்குச் செவிமடுப்பதில்லை. கற்றுக் கொள்ள மறுக்கின்றனர் (எரே 2:10; 7:28; செப் 3:2.7). ''அவர்கள் தங்கள் முகத்தைக் கல்லினும் கடியதாக்கிக் கொண்டனர்'' (எரே 5:3). அப்பொழுது கண்டிப்பு கடும் தண்டனையாக மாறி, கடுமையாகவும், ஆனால் காரணத்தோடும் வந்தடையும் (லேவி 26:18.23 தொ.28). இறைவனின் கோபம் எதையும் அழிக்காது (எரே 10:24; 30:11; 46:28; சங் 6:2; 38:2). மனமாற்றத்தைத் தூண்டுகிறது. ''நீர் என்னைத் திருத்தினீர்,

அடங்காத காளைபோல் இருந்த நான் உமக்கு அடிபணிந்தேன்'' என இஸ்ராயேல் பறைசாற்றி, அதன் துயரத்தில் ''நீர் என்னைத் திரும்ப அழைத்துச் செல்லும்; நானும் திரும்பி வருவேன்; ஏனெனில் என் கடவுளாகிய ஆண்டவர் நீரே'' என்று மன்றாட வேண்டும் (எரே 31:8). இறைவனின் நல்வழி காட்டும் முக்கியத்துவத்தை உணர்ந்த சங்கீத ஆசிரியர், ''இரவில்கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது'' (சங் 6:7) என்கிறார். மேலும், ''கடவுளால் திருத்தப்படுகிறவன் உண்மையில் பேறுபெற்றவன். ஆதலால் எல்லாம் வல்லவரின் திருத்தத்தைப் புறக்கணிக்காதீர்'' (யோபு 5:17). ஏனெனில் இறைவன் மக்களை ஆளும் முறை அது (சங் 94:10; ஏச 28:23-26).

2. இ) தம் மக்களின் இதயத்தில் தம் திருச்சட்டம் அழியாது நிலைக்கும்வரை, கடவுளின் கல்விப் பயிற்சி தொடரும். அந்நேரத்தில் ஒருவன் மற்றவனுக்குக் கற்றுக் கொடுக்கமாட்டான். ''அவர்களில் சிறுவர் முதல், முதியவர் வரை அனைவரும் என்னை அறிந்து கொள்வார்கள்'' (எரே 31:33). இந்நிலையை அடைவதற்கு, ஊழியன் திருத்தப்படவேண்டும். ''நம்மை நலமாக்கும் தண்டனை அவர்மேல் விழுந்தது, அவருடைய காயங்களால் குணமடைந்தோம்'' (ஏச 53:5). அப்பொழுதுதான், தன் அருமை மகனைத் தண்டிக்க மிரட்டும்போது எவ்வளவு தூரம் யாவேயின் உள்ளம் உருகுகின்றது என உணர இயலும் (எரே 31:20; ஓசே 11:8 தொ).

III. இயேசு கிறிஸ்து - இஸ்ராயேலின் ஆசிரியர்:-

கடவுளின் ஊழியனாகிய இயேசு கிறிஸ்து, மக்கள்முன், தம் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டும் யூத ஆசிரியர்போல் தோன்றுகிறார். அவர் வழியாக இறைவனே தம் சித்தத்தை நிறைவேற்றும் விதத்தை வெளிப்படுத்துகிறார். இறை ஊழியன், நம் அனைவரையும் தீய நெறியிலிருந்து திருத்தும் அலுவலையும் மேற்கொண்டுள்ளார். அவரே இஸ்ராயேலின் மீட்பர். இவ்விரண்டு அலுவல்களைச் சரிவர உணர்த்தக் கூடச் சொல்லைக் காண்பது அரிது. ஆயினும் பழைய ஏற்பாட்டில் காணப்படும் உருவகங்களிலிருந்து இவற்றை உணரலாம்.

1. வெளிப்படுத்துபவர்:- கிறிஸ்துவின் போதனா முறையை விவரிப்பதற்குப் பொதுவாக நற்செய்தியாளர்கள், முக்கியமாகப் புனித மத்தேயு, எழுதியுள்ள பின்னோக்கிய குறிப்புக்களை நன்கு கவனிப்பது அவசியம். தமது சீடர்களுக்கு விசுவாசத்தைக் கற்பித்த இயேசு படிப்படியாகத் தாம்தான் வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்பதை வெளிப்படுத்துகிறார். மத்தேயு இயேசுவின் படிப்பினையை இரண்டு அங்கங்களாகப் பிரிக்கிறார். பேதுரு இயேசு மெசியா, உயிருள்ள கடவுளின் மகன் என்று விசுவாச அறிக்கையிட்ட நாள்முதல், அவர் தம் செயல்முறையை மாற்றியமைத்தார் (மத் 16:21). முதலில் அவரோடு வாழ்பவர்கள் இறைவனால் வாக்களிக்கப்பட்ட அரசு அவரில் வந்தடைந்திருக்கிறது என்பதை உணர வேண்டும் (4:17). அவர்தம் அதிகாரபூர்வமான போதனையாலும் (மத் 7:28 தொ; மாற் 1:27), அவருடைய புதுமைகளாலும் (மத் 8:27; லூக் 4:36), மக்களின் மனதில், ஏன் திருமுழுக்கு யோவானின் மனதிலும் சங்கேதக் குறிகளை எழுப்பினார் (மத் 11:3). தமக்குச் செவிமடுப்போரின் மனநிலைக்கேற்ப அவர் போதித்தார். அவர் கையாண்ட உவமைகளே இதற்குச் சான்று. இவ்வுவமைகள் மூலம் மக்களுக்கு அறிவு புகட்டுவது மட்டுமின்றி, அவற்றின் முழுப்பொருளையும் உணர்ந்துகொள்ள ஓர் ஆர்வத்தையும் செவிமடுப்போரின் உள்ளத்தில் ஏற்படுத்த விரும்புகிறார் (மத் 13:10-13.36). மக்கள் எல்லாக் கருத்துக்களையும் நன்கு புரிந்து கொள்ளும்வரை கற்பிக்கிறார் (13:51). தம் சீடர்கள் தங்களின் இயலாமையையும், வெறுமையையும் அதே நேரத்தில் பாலைவனத்தில் மக்களுக்கு உணவளிக்க அவருக்குள்ள வல்லமையையும் உணரச் செய்கிறார் (14:15-21). அப்பத்திலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதை அவர்களுக்கு உணர்த்துகிறார் (16:8-12). அவர்களுக்குத்

தேவையான போதனைகளையும், படிப்பி னைகளையும் அளித்தபின் (10:5-16) தம் பணியில் அவர்களின் பங்கை நிறைவேற்ற அனுப்புகிறார் (மாற் 6:30; லூக் 10:11). அவரை மீட்பர் என்று ஏற்றுக் கொண்ட பிறகு, அவர்களுக்குக் கசப்பான பரமரகசிய மான சிலுவை மரணத்தைப்பற்றி அறிவிக்கி றார். அதன் பிறகு அவரது போதனைகள் மிகவும் கண்டிப்பானதாக மாறுகின்றன. அவரைக் கண்டிக்கத் துணிந்த பேதுருவைத் திருத்துகிறார் (மத் 16:22 தொ). தம் சீடர்க ளின் விசுவாசமின்மையை எண்ணி வருந்து கிறார் (17:17). ஆயினும் அவர்கள் பேய் களை விரட்ட இயலாததற்குக் காரணங்க ளையும் எடுத்தியம்புகிறார் (17:19 தொ). அச்சிறிய குழுவில் ஏற்படும் பொறாமை மனப்பான்மையைக் கொண்டு அவர்களுக் கோர் பாடம் புகட்டுகின்றார் (20:24-28). அவரின் ஒரே குறிக்கோள், தமது' படிப்பி னைகள் என்றென்றும் அவர்களது உள்ளத் தில் பதிய வேண்டும் என்பதே என்பது அவர் கையாண்ட வழிமுறைகளிலிருந்து தெளிவாகிறது. அவர் மும்முறை பேதுருவி டம் 'நீ என்னை நேசிக்கிறாயா?' என்று கேட்டதன் மூலம் தம்மை மறுதலித்தலால் அவர் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் துய ரத்தை நீக்க விளைகிறார் (யோவா 21:15 தொ).

2. மீட்பர்:- உண்மையான போதகராகிய இயேசு, தாம் போதிப்பதோடு நின்றுவிடா மல் அதன்படி எல்லோருக்கும் முன்மாதிரி கையாக வாழ்ந்து காட்டினார். ஏழ்மை வாழ் வின் எடுத்துக்காட்டு அவர். ஏனெனில் அவ ருக்குத் தலைசாய்க்க இடமில்லை (மத் 8:20). தொண்டுபுரிவதில் பிரமாணிக்கத்தின் முன்னோடி அவர். அதனால்தான் யூதத் தலைவர்களுக்கு எதிராகப் பேசினார், காரி யங்களைச் செய்தார், வியாபாரம் செய்வோ ரைக் கோவிலிலிருந்து விரட்டியடித்தார். கடவுளின் சேவையில் அவர் காட்டிய அள வற்ற ஆர்வம்தான் அவரை மரணத்துக்குள் ளாக்கியது (யோவா 2:17). சகோதர அன்பின் எடுத்துக்காட்டு அவர். ஆண்டவரும் போதக ருமான அவர் தமது சீடர்களின் பாதங்க ளைக் கழுவினார் (13:14 தொ).

தாம் கற்பிப்போருக்கு முன் மாதிரிகை யாக இருப்பது மட்டுமின்றி, அவர்களோடு ஒன்றித்து விடுகின்றார். அவர்கள்மேல் கடின, பழுவாக விழுந்துள்ள தண்டனை யைத் தம்மேல் ஏற்றுக்கொள்கிறார் (ஏச 53:5). அவர்களின் பிணிகளை ஏற்றுக் கொண்டார் (மத் 8:17). உலகின் பாவத்தைப் போக்கினார் அவர் (யோவா 1:29). இவ்வித மாக மனிதனின் வலிமையற்ற நிலையை அவர் உணர விரும்பினார். பாவம் தவிர, மற்றெல்லாவற்றிலும், சோதனை, துன்பங்க ளுக்கு உட்பட்டவரானார் (எபி 4:15). ''அவர் இறைமகனாய் இருந்தும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார். அவ்விதம் நிறைவுள்ளவரானார்'' (எபி 5:8). கல்வாரிப்பலி மூலம் இஸ்ராயேலுக்குக் கல்வி புகட்டுவதை முடிவுக்குக் கொணர்ந் தார். மனிதருக்குமுன் அவர் தோற்றுவிட்ட தாகக் காணப்பட்டார். ஆனால் தமக்கு நேரப்போவதை முன்கூட்டியே தெளிவாக அறிவுறுத்தியிருந்தார் (யோவா 16:1-4). ஆயி னும் தம் முயற்சியாலேயே சீடர்களுக்கு எல்லாவற்றையும் புரியவைக்க இயல வில்லை (16:12). ஆகவே இவ்வுலகைவிட் டுச் சென்று தூய ஆவியை அனுப்புவது தேவையாயிற்று (17:7).

IV. மாணவனும், ஆசிரியனுமாகிய திருச் சபை.

1. அறிவுபுகட்டும் ஆவி:- இறைவனால் அனுப்பப்பட்ட ஆவியானவர்தான் இறைக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றி வைக்கி றார். சட்டம் இனி நமக்கு ஆசிரியனாக இருக்க இயலாது (கலா 3:19; 4:2). நம் உள்ளத்தில் உறைந்து, நம்மை அப்பா, தந் தையே என அழைக்கவைக்கும் ஆவியான வர் மட்டுமே நம் ஆசிரியர் (4:6). இனிமேல் நாம் ஊழியர்கள் அல்லர், ஆனால் நண்பர் கள், குமாரர்கள் (யோவா 15:15). ஆவியான வர் விசுவசிப்போர் மனத்தில் இறை இயேசு வின் போதனைகளை நினைவூட்டுவதன் மூலமும் (14:26; 16:13), இவ்வுலகின் தாக்கு

தலிலிருந்து அப்போதனைகளைக் காப்பதன் மூலமும், இந்த அலுவலை நிறைவேற்று கின்றார் (16:8-11). அப்போது தந்தையின் அழைப்புக்கு எல்லோரும் செவிசாய்க்கின்ற னர் (6:45). அபிடேகத்தின் விளைவாக ஏற்படு கிறது இது (1 யோவா 20:20.27). ஏனெனில் நம் கண்ணுக்கெட்டாத, உள்ளத்தே உறை யும் இறைவன் மட்டுமே தலைசிறந்த ஆசிரி யன்.

2. போதனையும், திருத்துதலும்:- பழைய ஏற்பாட்டில் காணப்படுவதுபோல், கல்விப் பயிற்சி பயன்பெற வேண்டுமாயின், கண் டிப்பும், திருத்துதலும் அப்பயிற்சியின் முக் கிய அம்சமாக இருக்க வேண்டும். புனித பவுல் கூறுவதுபோல் ''கடவுள் உங்களைத் தம் மக்கள் என நடத்துகிறார். தகப்பன் கண்டித்துத் திருத்தாத மகன் உண்டோ? நீங்கள் அவ்வாறு திருத்தப்படாவிடின் உண் மையான பிள்ளைகளல்லர், வேசிப்பிள்ளை களே'' (எபி 12:7). நாம் ஆர்வம் குன்றி இருக்கும்போது கண்டிப்பும், தண்டனையும் நம்மை வந்தடையும் (திருவெளி 3:19). நம்மை அழிப்பதற்கன்று, ஆனால் அழிவிலி ருந்து காத்து, சொற்பத் துன்பத்திற்குப்பின், மகிழவைக்கும் இறைத்தீர்ப்புக்கள் இவை கள் (2 கொரி 6:9). கண்டிப்பு கல்வி புகட்டுவ தற்கு மட்டுமின்றித் தவறான வழியினின்று திருத்தவும் உதவுகிறது (1 கொரி 10:11; தீத் 2:12;2 திமோ 3:16). புனித பவுல் தன் கடிதங்களில் தன் முன்மாதிரிகையைப் பின் பற்றுமாறு அறிவுறுத்துகிறார் (1 தெச 1:16; 2 தெச 3:7; 1 கொரி 4:16; 11:1). இறுதியாக ஒவ்வொரு விசுவாசியும், இயேசுவின் கட்ட ளைக்கிணங்கத் தம் சகோதரனைத் திருத்தி நல்வழி நடத்தக் கடமைப்பட்டுள்ளான் (மத் 18:15; 1 தெச 5:14; 2 தெச 3:15; கலா 3:16; 2 திமோ 2:21). பவுல் இக்கடமையை நிறை வேற்றப் பிரம்பெடுக்கக்கூடத் தயங்க வில்லை (1 கொரி 4:4-11). குற்றம் புரிந்தோ ரின் மனம் புண்படச் செய்வதற்குக்கூட அவர் தயங்கவில்லை (2 கொரி 7:8-11). அவர் அயராது நம் மக்களுக்குப் போதிக்கி றார்; எச்சரிக்கிறார் (1 கொரி 4:14; அ.ப. 20:31). தங்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதில் பெற்றோர்கள் உன்னதமான ஒரே ஆசானாகிய கடவுளின் பிரதிநிதிகளா கவே இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் குழந்தைகளுக்குச் சினமூட்டாமல், இறை வனே செய்வது போல் கற்பிக்கவும், கண்டிக் கவும், கடமைப்பட்டிருக்கிறார்கள் (எபே 6:4).

கல்வெட்டுவோர் (STONE CUTTERS)

சாலமோன் அரசன் கோவில் கட்டுவதற் கெனக் கல்வெட்டுபவர்கள் எண்பதாயிரம் பேரை மலையில் வைத்திருந்தார் என்று 1 அர 5:15 தொ கூறுகிறது. புதைபொருள் ஆராய்ச்சியில் கல்வெட்டும் பாணியும் வெட்டுவோரின் முத்திரைகளும் காலத்தைக் கணிக்கப் பெரிதும் உதவுகின்றன.

கவண்; கல்லெறி கருவி (SLING)

சிறு கற்களையும், களிமண் கட்டிகளை யும் சுழற்றி எதிரிகளின்மேல் எறிந்து அவர்க ளைத் தாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த மிகப் பழமை வாய்ந்த ஒரு கருவி. இரு தோல்வார்கள் கற்களை வைத்துச் சுழற்ற வசதியான சிறிது அகலமான தோல் பட்டை நடுவில் இணைக்கப்பட்ட இக் கருவி பாலஸ்தீனத்தில் ஆட்டிடையர்களினா லும் (1 சாமு 17:40) படைவீரர்களினாலும் பயன்படுத்தப்பட்டது (2 அர 3:25; 2 நாள் 26:14).

தாவீது கோலியாத்தைக் கொன்று பெலிஸ்தியரின்மேல் வெற்றி கொண்டது இக்கல்லெறி கருவியைக் கொண்டுதான் (1 சாமு 25:29; 17:40). கவண் எறிபவர்கள் துல்லியமாகக் குறியைத் தாக்கக்கூடும். கிப யாவில் வாழ்ந்த பென்யாமினியர் ''தலை முடி இழையளவும்'' குறிதவறாது இடக்கை யால் கவண் எறிவர் (நீதி 20:16; 1 நாள் 12:2).

கவலை, கலக்கம் (ANXIETY)

கவலை பலதரப்பட்டது. அக்கறையிலி ருந்து அச்சம் மற்று கிலிவரை செல்லக் கூடியது. இதுபற்றிய விவரிப்புகள் இரு ஏற்பாடுகளிலும் காணப்படுகிறது. பெற் றோர் தங்கள் பிள்ளைகள் மேல் காட்டும்

கவலை (1 சாமு 9:5) அல்லது சகோதரர்கள் மேல் காட்டும் அக்கறை (பிலி 2:20) இயற்கையானதாகும். கவலை, அன்னா தன் மலட்டுத் தன்மை பற்றியும் (1 சாமு 1:16) தானியேல் தான் கண்ட கனவு பற்றியும் (1 தானி 7:15) கொண்ட கலக்கத்தையும் உள்ளடக்கும்; போரினாலும் (1 நாள் 17:9) இயற்கைப் பேரழிவுகளாலும் (எரே 17:8) வரும் அச்சத்தையும் நடுக்கத்தையும் உள்ளடக்கும். இத்தகைய உணர்வுகளைச் சங்கீதங்கள் எடுத்துக் கூறுகின்றன (சங் 127:2; 102:7; பழ 12:25).

அன்புடைய அக்கறை ஆக்கபூர்வமானதாக இருக்கலாம் (2 கொரி 11:28). ஆனால் விசுவாச வாழ்வையும் இறையரசில் கிறிஸ்தவன் பங்கெடுப்பதையும் தடை செய்யக் கூடிய உடல் சார்ந்த தேவைகளைப்பற்றிய அக்கறை, மற்றும் ''இவ்வுலகக் கவலைகளையும்'' பற்றி இயேசு எச்சரிக்கிறார் (மத் 6:25-34; லூக் 12:22-31; மத் 13:22; மாற் 4:19; லூக் 8:14). கிறிஸ்தவன் கடவுள்மேல் தன்கவலைகள் அனைத்தையும் சுமத்திவிடவேண்டும். அவர் தமது மக்கள்பால் அக்கறை கொண்டுள்ளார்; அவர்களைப் பாதுகாக்கிறார் (பிலி 4:6; 1 பேதுரு 5:7).

கவலை பற்றிய இயேசுவின் போதனை புதிய, மற்றும் அடிப்படை மாற்றுக் கோணத்தையுடையது. அவர் எல்லாக் கவலையையும் புறம்பாக்குகிறார். அது புறமதத்தினருடையதும் உலகம் சார்ந்ததும் ஆகும். ஆனால் ''அவர் மக்கள் கூட்டத்தைக் கண்டு, அவர்கள் ஆயனில்லா ஆடுகள்போல் தவித்துக் கொண்டிருந்தமையால், அவர்கள்மேல் மனமிரங்கினார்'' (மத் 9:36). அவருடைய சீடர்கள் ''ஓநாய்களிடையே ஆடுகளைப் போல்'' உள்ளனர் (10:16). எருசலேமின் வருங்காலம் அவரைக் கண்ணீர் விட்டுப் புலம்பச் செய்தது (லூக் 19:41-44). ஆனால் தம்மையும் தம் வருங்காலத்தையும் பொருத்த மட்டும், மனிதரால் பாதிக்கப்படாத உள்ளார்ந்த வலிமையும் அமைதியும் உள்ளவராகவுள்ளார். ஏரோதின் அச்சுறுத்தலைக் கேட்டு, அங்கிருந்து ஓடிப்போய்விட மறுத்துவிடுகிறார் (13:31-33). அவரைக் குறை கூறியவர்கள் கூட அவரது இந்த மன அமைதி குலையாத தன்மையைக் கண்டுணர்கின்றனர்: ''போதகரே, நீர் உண்மையுள்ளவர், எவர் தயவும் உமக்கு வேண்டியதில்லை''.

கவலை பற்றிய இயேசுவின் தெளிவான போதனை மலைப்பொழிவில் கொடுக்கப்படுகிறது (மத் 6:15-34; லூக் 12:22-31). சாதாரணத் தேவைகள் பற்றியும், அவற்றிற்கு அதிகமானவைகளைப் பற்றியும் கவலைப்படுவதை இயேசு தடை செய்கிறார். ''உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்று கவலைப்படவேண்டாம்''. ஏனெனில் முதலில் இவற்றைவிட வாழ்வு மேலானது. வாழ்வின் உண்மையான நோக்கம் பற்றியே மனிதன் கவலைப்படவேண்டும். இரண்டாவது உணவு மற்றும் உடை பற்றிய கவலைகள், உலகில் இறைவன் கொண்டுள்ள பராமரிப்பை மறுத்துக் காட்டுகின்றன. பறவைகளுக்குக்கூட, உணவளிக்கும் இறைவன், அவரது சாயலில் படைக்கப்பட்ட மனிதனுக்குத் தேவையானதெல்லாம் கொடுப்பார் என்று மனிதன் நம்பலாம். மூன்றாவது மனிதனது கவலைக்குத் தடையாயிருக்கும் விதத்தில் இறைவன் பராமரிப்பு செயல்படுகிறது. ''கவலைப்படுவதால் எவனும் தன் வளர்த்தியில் ஒரு முழம் கூட்டமுடியுமா?'' நான்காவது இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பில் போடப்படும் மலர்களையும் இறைவன் அழகு செய்கிறார் என்றால் மனிதன் அவரிடமிருந்து தனக்கு வேண்டிய குறைந்த அளவு ஆடையாவது எதிர்பார்க்கலாம். ஐந்தாவது இத்தகைய கவலை புறவினத்தாருக்குடையதாகும். இது இறைவனுடைய முன்னறிவு மற்றும் அக்கறைக்கு நேர்மாறானதாகும். ஆறாவது மனிதன் முதலில் இறைஅரசையும் அவருக்கு ஏற்புடைமையையும், விண்ணுலகின் செல்வத்தையும் (மத் 6:19) இறைவனான ஒரே தலைவருக்குப் பணி செய்வதையும் (6:24) தேடவேண்டும். இந்தக் கவலை மற்றக் கவலையெல்லாம் அகற்றிவிடும்.

வேறொரு இடத்தில் ''உலகக் கவலையும், செல்வமாயையும் மற்ற இச்சைகளும்

நுழைந்து வார்த்தையை நெரித்து'' விடுவதாக இயேசு கூறுகிறார் (மற் 4:19). லூக் 21:34-இல் ''களியாட்டத்தாலும், குடிவெறியாலும், உலகக் கவலையாலும் உங்கள் உள்ளங்கள் மந்தமடையாதபடி'' எச்சரிக்கையாக இருக்கும்படிக் கூறுகிறார். இறையரசின் வாழ்வுக்கு இவையெல்லாம் தகுதியற்றவையாகும்.

இப்போதகத்தை அப்படியே சொற்பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டும் என இயேசு கருதினாரா? அல்லது ஓர் இடைக்கால ஒழுக்கமுறையாகவோ இறுதிக்காலப் பொருளிலோ கூறினாரா? இயேசுவைப் பொருத்தமட்டும் இறையரசு ஏற்கெனவே உலகிற்குள் வந்துவிட்டது. தன் நிறைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அரசை ஏற்றுக் கொள்ளும் சீடர்கள் வாழ்விற்குப் புதிய ஒழுங்கு அமைவைக் கண்டுபிடித்து விட்டனர். அதிலே இறைவனது சித்தம் எல்லா நோக்கங்களையும் குறிக்கோளையும் கட்டுப்படுத்துகிறது. மனிதன் இப்போது கவலை நிறைந்த சுயநலத்தில் வாழாமல், இறையரசாகிய இறைவனுடைய பெரிய கொடைக்கு நன்றியறிதலில் வாழவேண்டும். இறையரசில் மனிதனின் எல்லாஅக்கறையும் ஆசைகளும் தங்களுக்குரிய உண்மையான இடத்தையும் தரத்தையும் பெறுகின்றன. ஏனெனில் இறைவனின் சித்தமும் பராமரிப்பும் சிறிய தேவையிலிருந்து மிக உயர்ந்த குறிக்கோள்வரை யாவற்றையும் உள்ளடக்குகிறது.

கவுதா (CAUDA)

கிரேத்தா தீவின் தெற்கே 37 கி.மீ. தொலைவில் அமைந்த ஒரு சிறு தீவு. தற்காலத்தில் கவுதோஸ் அல்லது கோஸோ என்றழைக்கப்படுகிறது. புனித பவுல் தன் இறுதிப்பயணத்தில் உரோமைக்குச் சென்றபோது அவருடைய கப்பல் இத்தீவின் ஒதுக்கிலே சென்றது (அ.ப. 27:16). மாரிக்காலத்தில் தங்குவதற்கென ஒரு துறைமுகத்தை நாடிக் கிரேத்தா தீவின் தெற்குக் கரையோரமாய்ப் பயணம் செய்தனர். அப்போது தெற்கிலிருந்து வாடைக் கொண்டல் வீசவே கப்பல் காற்றை எதிர்த்துச் செல்ல முடியாமல் போனது. காற்றடித்த திசையிலேயே கப்பல் சென்றது. இறுதியில் கவுதா தீவின் கரையில் கப்பலின் படகைத் தூக்கிக் கட்டினர். புயலினின்று தப்பிக்க இத்தீவில் ஒதுங்கித் தங்கள் சரக்குகளையும், கப்பல் தளவாடங்களையும் கடலில் எறிந்தனர் (27:17-19).

கவுதாரி (PARTRIDGE)

பாலஸ்தீனத்தில் பொதுவாகக் காணப்படும் கவுதாரி, சகோரப்பறவை வகையைச் சேர்ந்தது. ஆனால், மற்ற வகைகளும் காணப்படுகின்றன. இந்திய கருப்புக் கவுதாரி இனத்தைச் சேர்ந்த, வான் கோழி போன்ற பறவையினைத் தாழ்ந்த சமவெளிகளில் காணலாம்.

பறவையைத் தொடர்ந்து துரத்திச் சென்று வேட்டையாடுவதை 1 சாமு 26:20 குறிக்கிறது. பாலஸ்தீனத்தில் பெரும்பாலான கவுதாரிகள் இவ்வாறே பிடிக்கப்பட்டன.

கவுதாரி தான் இடாத முட்டைகளை அடைகாக்கும் எனும் பொதுவான, ஆனால் தவறான, கருத்தை எரே 17:11 கூறுகின்றது. சகோரப்பறவை தனக்காகவும், சேவலுக்காகவும் இருபிரிவுகளாக முட்டையிடுவதால், இத்தகைய தவறான நம்பிக்கை ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

கவுரான் (HAURAN - ருகை)

கலிலேயாக் கடலுக்குக் கிழக்கில் யார்முக்கு ஆற்றுக்கு வடக்கிலுள்ள, யோர்தானுக்கு அப்பால் உள்ள ஒரு மாவட்டம். இப்பெயர் எசக்கியேல் நூலில் மட்டும் காணப்படுகிறது (எச 47:16.18). திரும்ப அமைக்கப்படும் எடுத்துக்காட்டான இஸ்ராயேல் நாட்டின் வடக்கு, கிழக்கு எல்லையாக இப்பெயர் குறிக்கப்படுகிறது. இது பழைய ஏற்பாட்டில் பாசான் பகுதியின் பிற்காலப் பெயராகும். ஆனால் இப்பெயர், எகிப்திய பத்தொன்பது அரசமரபு காலத்திய ஏடுகளில் காணப்படுகிறது. இஸ்ராயேல் நாடு பிளவுபட்ட காலத்தில் இது தமஸ்குவின் அரமேயர்களின் ஆட்சிக்குட்பட்டது. அசீரியாவின்

மூன்றாம் சால்மனேசர் இதைக் கி.மு. 842-இல் வெற்றி கொண்டதாகக் குறிப்பிடுகிறார். அசூர்பானிப்பால், இங்கு நடந்த ஒரு கிளர்ச்சியை அடக்கினார். நான்காம் நூற்றாண்டில் இங்கு யூதர்கள், கிரேக்கர்கள், நபத்தேயர்கள் ஆகியோர் வாழ்ந்து வந்தனர். ஆதிக்கம் இவர்களுக்குள்ளே அடிக்கடி மாறியது. இரண்டாம் நூற்றாண்டில் மக்கபேயர்களால் கைப்பற்றப்பட்டது. அலக்சாந்தர் யன்னாயு கி.மு. 90-இல் நபத்தேயர்களிடம் இழந்தார். பாம்பே இதைத் தெக்காப்போலியோடு இணைத்தார். அப்போது இது அவுரான்டிசு என்றழைக்கப்பட்டது. அகுஸ்து இதைப் பெரிய ஏரோதுக்கு அளித்தார். (கி.மு. 23) நாற்பகுதிக்குத் தலைவனான ஏரோது பிலிப்பு இறந்தபின், கலிகுலா முதலாம் ஏரோது அகிரிப்பாவுக்கு அளித்தார் (கி.பி. 37). உரோமையர் போருக்குப்பின் இது மீண்டும் நபத்தேயர்களின் ஆட்சிக்குட்பட்டது. ஆனால் கி.பி. 106-இல் .திரேசன் இதை உரோமையரின் சீரியா மாகாணத்தில் ஒரு பகுதியாக்கினார்.

இதன் கிழக்கு எல்லையில் 1830 மீட்டர் உயரமுள்ள எபெல் எத்-துருசு மலையுள்ளது. நிலம் செழிப்பானது. கிரேக்கர், உரோமையர் காலத்தில் பாலஸ்தீனத்தின் அப்பம் செய்ய விளைபொருட்களை அளித்தது.

கல்வோத்து - யாயிர் (HAVVOTH - JAIR - யாயிரைச் சேர்ந்த கூடாரக் கிராமங்கள்)

பாசான் நாட்டுக் கிலயாத்து மாவட்டத்திலுள்ள அருகோபிலுள்ள பல கிராமங்கள் அடங்கிய பகுதி. இதுபற்றிப் பல குறிப்புகள் உள்ளன. கிராமங்களின் எண்ணிக்கை வேறுபடுகின்றன. உப 3:4; யோசு 13:30-இல் அறுபது என்றும், நீதி 10:4-இல் முப்பது என்றும், 1 நாள்.2:22-இல் இருபத்து மூன்று என்றும் குறிக்கப்படுகின்றது. இது இவற்றின் அரசியல் சார்பின் வேறுபட்ட காலங்களைக் குறிக்கிறது எனலாம். எண் 32:41; உப 3:14-இன்படி இந்த ஊர்கள் பாசான் மாவட்டத்தில் இருந்தன, யாயிரின் புதல்வர்களால் அதாவது யாயிரின் இனத்தவரால் கைப்பற்றப்பட்டன என்று தெரிகிறது.

1 நாள் 2:21-இல் மனாசே இனத்தவருக்கும் யூதா இனத்தவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது. யூதாவின் பேரன் கெசிரோன் கிலயாத்தைச் சேர்ந்த மாக்கரின் புதல்வியை மணந்து செகூபு என்பவரைப் பெற்றார். செகூபின் மகன் யாயிர், கெசூர், ஆராம் உள்ளடங்கிய பல பகுதிகளை வென்றார். நீதி 10:3-4-இல் கிலயாத்தைச் சேர்ந்த யாயிர் என்ற நீதிபதிக்கு 30 புதல்வர்கள் இருந்ததாகவும், இவர்கள் 30 ஊர்களை ஆட்சி செய்ததாகவும், இவை இவர்களின் தந்தையின் பெயரால் அழைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

கல்வோத்து-யாயிர் என்ற பெயருக்கு விளக்கம் அளிக்கும் விதத்தில் இந்த விவரிப்புகள் தோன்றியிருக்கலாம். நாளாகமத்தில் வரும் விவரிப்பு, மனாசே இனத்தவரோடு கொண்ட உறவுக்கும் கிலயாத்து பகுதியின் மேல் ஆட்சிக்கும் உரிமை கொண்டாட யூதா இனத்தவர் அளித்த விளக்கமாக இருக்கலாம். நீதிபதியான யாயிர் பற்றிய விவரிப்பு ஐயத்திற்குரியது. நீதிபதிகளின் எண்ணிக்கையைப் பன்னிரண்டாக்க எடுத்த பிற்கால முயற்சியாக இருக்கலாம். யாயிர் இனத்தவர் வென்ற பகுதி என்ற விளக்கம் வரலாற்று உண்மைக்கு நெருங்கியதாக இருக்கலாம்.

கழிபேருவகை (ECSTASY)

உணர்வு சக்தி முழுவதுமோ ஒரு பகுதியோ செயலற்ற ஒரு மன நிலை; மெய்மறந்த நிலை. அப்படிப்பட்ட ஆள் கடவுளின் ஆவியால் உந்தப்படுவார். ஆவியோ, ஆன்மாவோ உடலைவிட்டுச் சிறிது நேரம் பிரிந்திருக்கும் நிலையையும் (கிரேக்கக் கருத்து), தெய்வத் தன்மையோடு தொடர்பும் உறவும் கொண்டுள்ள நிலையையும் இச்சொல் விவரிக்கிறது. இது எபிரேயக் கருத்துக்கு மாறானது. இதன்படி, மெய் மறந்த நிலையில் இருப்பவன், அவன் தானாக இருப்பதில்லை. தெய்வத்தன்மை ஆட்கொள்ளப்பட்டவராக உள்ளார். இந்த மெய்மறந்த நிலை தானாகவோ, இசை, நடனம், பொருட்கள் ஆகியவற்றோடு கூடிய தியானத்தாலோ (1 சாமு 9:2 அர 3:15) உந்தப்பட

லாம். இந்நிலையோடு நிகழும் உடல் அசைவுகள், உளறல்கள், ஆவேசமிக்க நடத்தை ஆகியவற்றால் இந்நிலை பைத்தியமாகவும் சிலசமயம் கருதப்படும். (2 அர 9:11; 1 கொரி 14:23). இது பொதுவாகப் பல்வேறு தன்மையில் இருக்கிறது.

1. பழைய ஏற்பாடு:-

பழைய ஏற்பாட்டில், தொன்மையான இறைவாக்குகளை இந்த வகையில் பார்க்கலாம். இவை, குழுப்பாடல்களாலும், நடனங்களாலும் உண்டாகலாம் (1 சாமு 10:15. 12; 19:20). இது மோசே 'ஆண்டவரின் எல்லா மக்களும்' இறைவாக்கினர்களாக ஆசைப்படும்போதும் (எண் 11:25-29), எலியா காற்று, பூகம்பம், நெருப்பு, குரல் போன்றவற்றை அனுபவிக்கும்போதும் (1 அர 19:11-18), பெட்டகத்திற்கு முன் தாவீது நடனமாடும்போதும் (2 சாமு 6:12-13) மெய் மறந்த நிலை உருவானது. ஆபிரகாம் ஆழ்ந்த தூக்கத்தில் கண்ட காட்சியும், எரியும் புதர்க் காட்சியும் அங்குக் கேட்ட குரலும், யாக்கோபின் போராட்டமும் ஆகிய எல்லாம் மெய் மறந்த நிலையின் அடையாளங்களைக் கொண்டுள்ளன (ஆதி 15:12; 32:24, யாத் 3:2-14).

முதல் தரமான இலக்கிய நடை சார்ந்த இறைவாக்குகள் தோன்றியவுடன் இந்த மெய்மறக்கும் நிலை போய்விடவில்லை. ஏசயா, ஆமோஸ் இவர்களின் பணிகள், மெய்மறந்த நிலையில்தான் ஆரம்பமாகின்றன (ஏச 6; ஆமோ 7-9) ''நான் ஒரு குடிகாரன்'' என்று தன்னைப் பற்றிக் கூறுகிறார் எரேமியா (ஏரே 23:9; அ.ப.2:13-15). வானும் இருண்டதாகவும், மலைகள் சப்தம் இடுவதாகவும், குன்றுகள் நகருவதாகவும், பூமி வெறுமையாய்ப் போனதாகவும் அவர் காணும் காட்சி அவரது மெய் மறந்த நிலையைக் காட்டுகிறது (எரே 4:23-26). மேலும் எசக்கியேல் தன்னுள் ஆவி புகுந்ததாகவும், உயரத் தூக்கி எழுப்பியதாகவும், முகம் குப்புற விழுந்ததாகக் கூறுவதும், ஆவி அவரைத் தூக்கிக் கொண்டு போனதாகக் கூறுவதும், ஆகிய இவையெல்லாம் மெய்மறந்த நிலையைச் சார்ந்ததாகும் (எச 2:2; 3:14, 23-27; 8:3; 11:1.5; 37:1).

2. புதிய ஏற்பாட்டில்:-

இயேசுவின் பிறப்பு, பணி இவற்றைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் மெய் மறந்த நிலையின் அடையாளங்களைக் கொண்டுள்ளன. மரியாள், எலிசபெத்து வாழ்த்தும் பாடலும் (லூக் 1:41-55) செக்கரியா, சிமியோன், அன்னா ஆகியவர்களின் ஆவியால் தூண்டப்பட்ட கூற்றுகளும் (லூக் 1:67-79; 2:25-39), இயேசுவின் திருமுழுக்குச் சமயத்தில், வானம் திறக்கப் புறா வந்ததும் (மாற் 1:9-11), அவரது சோதனை, எசக்கியேல் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டது போல் நடப்பதும் (லூக் 4:1-12; எச 8:3), மேகம், குரல், சூழ்ந்த ஒன்றிப்பால் எழும் மீள்பொளதீக நிலை ஆகியவற்றோடு கூடிய, அவரது தந்தையோடு ஆன்மீக இணைப்பைக் கூறும் அவரது குருத்துவச் செபமும் (யோவா 17), ஆகிய எல்லாம் இந்த வகையைச் சார்ந்ததாகும்.

திருச்சபை மெய்மறந்த நிலையில்தான் தொடங்கியது. காற்று, நெருப்பு, பரவசப் பேச்சு ஆகியவையெல்லாம் இருந்தன (அ.ப. 2:24). பேதுரு செபத்தில் கண்ட காட்சியும் குரலும் மெய் மறந்த நிலையைச் சார்ந்ததே (அ.ப. 10:9-16). ஸ்தேவானின் காட்சியிலும் இக்கூறுகள் இருக்கலாம் (7:55; 6:15).

கொரிந்து திருச்சபையில், மெய் மறந்த நிலையில் பேசும் பரவசப் பேச்சு பெரும் குழப்பத்தை உருவாக்கியது (1 கொரி 12-14; 1 தெச 5:9-21). பவுல் பரவசப்பேச்சு பேசினார் (1 கொரி 14:6.18). அவர் தெய்வீகக் குரலைக் கேட்டார் (2 கொரி 12:9; அ.ப. 18:9; 22:17). அவரது மனம்திரும்பும் அனுபவமும் அப்படியே (அ.ப. 9:22; 26); மூன்றாம் வானம்வரை கவர்ந்தெடுக்கப்பட்டு, சொல்லமுடியாத பொருட்களைக் கேட்டார் (2 கொரி 12:2-4). இவையெல்லாம் இதைச் சார்ந்தவையே, ஆனால் இவற்றிற்கு அவர் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க

வில்லை. புறவினத்தாரின் கழிபேருவகையில் வரும் அறிவையெல்லாம் கடந்து செல்லும் கிறிஸ்துவின் அன்பையே தேடவேண்டும் என்று அவர் கிறிஸ்தவர்களைத் தூண்டுகிறார் (உரோ 8:38; அ.ப. 3:14-19). யோவானில் ''ஆண்டவரின் நாளில் ஆவியில் இருத்தல்'', குரலைக் கேட்டல், காட்சி காணுதல் போன்றவை ஐயமற கழிபேருவகை நிலையைச் சார்ந்தவையே. ஆனால், பொதுவாகப், புதிய ஏற்பாட்டு சமயத்தில் ''ஆவியில் இருத்தல்'' சாதாரணக் கிறிஸ்தவ வாழ்வைச் சேர்ந்ததாகும்.

கழிவறை (LATRINE)

பொது உபயோகத்துக்கோ, தனி உபயோகத்துக்கோ பயன்பட்ட மறைவிடம். பாகாலின் கோயிலை இடித்து அதைக் கழிவறையாக்கியது வெற்றியின் மற்றும் அவமதிப்பின் அடையாளமாகும் (2 அர 10:27). இறைவாக்கினர் ஆதரவு பெற்ற ஏகூவின் புரட்சி, ஓமிரியின் வீட்டுக்கும், அதன் அந்நிய தேவர்களின் வழிபாட்டுக்கும் எதிராகச் செயல்பட்டதின் கடுமையை எடுத்துக்காட்டுகிறது.

கழுகு (EAGLE)

கழுகு அசுத்தமானது என்று லேவி 11:13; உப 14:12 ஆகிய பகுதிகளில் கூறப்பட்டிருக்கிறது. கழுகு பாலஸ்தீன நாட்டிலே உள்ள பறவைகளில் மிகவும் பெரியதாகும். விவிலியம் எழுதப்பட்ட காலத்தில், 'தங்கக் கழுகு', 'அரச கழுகு' என்ற இருவகையான கழுகுகள் காணப்பட்டன. கழுகுகள் விரைவாகப் பறப்பது பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களை மிகவும் கவர்ந்தது (பழ 23:5; ஏச 40:31; ஒப 4). கழுகுகளின் பறக்கும் சக்தி உவமானமாகப் பயன்படுத்தப்பட்டது (உப 28:49; 2 சாமு 1:23; எரே 49:16) குஞ்சுகளின் மேல் அவற்றிற்கு உள்ள அக்கறை பற்றியும் (உப 32:11) விவிலியம் கூறுகிறது. சங் 102:5 கழுகுகளின் இளமை புதுப்பிக்கப்படுகிறது என்று குறிப்பிடுகிறது. இதிலிருந்து இப்பறவைகள் அதிக நாள் உயிர் வாழ்வதாகக் கருதப்பட்டது என்பது தெரிகிறது.

கழுகைக் குறிக்கும் அதே எபிரேயச் சொல் பிணந்தின்னிக் கழுகைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. வானத்தில் உயரே பறக்கும்போது இருவகைக் கழுகுகளுக்கும் வேறுபாடு கண்டுபிடிப்பது மிகக் கடினம்.

பறவைகளின் அரசனாகக் கழுகு இருந்ததால் இறைவாக்கினர்களுக்கும் திருக்காட்சி காண்பவர்களுக்கும் அது உவமானமாகப் பயன்பட்டது. எசக்கியேல் கண்ட காட்சியில் கெருபிம்கள் கழுகு முகம் உடையதாக இருந்தன (எச 1:10; 10:17). மேலும் ஏச 17-இல் உள்ள உவமையில் இரு கழுகுகளைப் பயன்படுத்துகிறார். தானி 7-இல் விலங்குகளில் சிறந்ததான சிங்கமும், பறவைகளில் சிறந்ததான கழுகும் இணைந்து பாபிலோனிய அரசைக் குறிக்கின்றன. திருவெளி 4:7-இல் கடவுளின் அரியணையைச் சூழ்ந்து நிற்பவைகளில் ஒன்று பறக்கும் கழுகைப் போன்ற தோற்றமுடையதாகும். திருவெளி 8:13-இல் ஒரு கழுகு மண்ணில் வாழும் மனிதர்களை எச்சரிக்கின்றது. முற்காலத்திலேயே கடவுளையும் கழுகையும் தொடர்புபடுத்தியிருக்கின்றனர்.

கழுதை (ASS)

இஸ்ராயேல் மக்கள் தங்கள் மூதாதையர் காலத்தில் கழுதைகளை வீட்டில் வளர்த்தனர். இவ்வாறு வளர்ப்பது மேற்கு ஆசியாவில் நாகரீகமாகும். கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே மெசபொத்தாமியாவில் பழக்கப்படுத்தப்பட்ட சுமை சுமக்கும் கழுதைகளும், எகிப்திய நுபியின் என்ற காட்டுக் கழுதைகளும் இருந்தன. இவ்வகையான கழுதைகள் அன்றைய பாலஸ்தீனிலும், விவிலியத்திலும் இருந்ததாகத் தெரிகிறது.

(1) வேலை செய்யும் விலங்கு:-

சுமைகளைத் தூக்கவும் (ஆதி 42:46; 1 சாமு 16:20; 25:18; நெக 13:15), விவசாயத் தொழில் செய்யவும் (ஏச 30:24) இவை பயன்படுத்தப்பட்டன. கழுதையின் வலிமை இசக்காருக்கு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 48:14). மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழலாகாது (உப 20:10) என்ற சட்டம் கழுதை

யின் மேல் உள்ள அக்கறையினால் வந்தது. பழங்கால எகிப்தில் கழுதைகள் போரடிக்கும் இடத்தில் பயன்படுத்தப்பட்டது. ஆனால் உப 25-இல் மாட்டுக்கு இருக்கும் சக்தி இதற்கு இருப்பதாகக் கூறவில்லை. பிற்கால யூதர்கள் வாடகைக்குக் கழுதைகள் வைத்திருந்ததாக மிஸ்னா கூறுகிறது.

(2) பயணம் செய்யப்பயன்பட்ட விலங்கு:-

கடிவாளம் போடப்பட்ட கழுதையானது (பழ 26:3) ஆண்களாலும் (எண் 22:21; 2 சாமு 17:23) பெண்களாலும், குழந்தைகளாலும் (யாத் 4:20; யோசு 15:18; 2 அர 4:24) பயணம் செய்யப்பயன்படுத்தப்பட்டது. மக்களால் மதிக்கப்பட்டவர்களும், உயர்பதவியில் இருப்பவர்களும் இதைப் பயன்படுத்தினர் (நீதி 10:41; 12:14; 1 சாமு 25:20). சீயோனின் வருங்கால அரசர் கழுதையில் வருவார் என்பது அமைதி நாடும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது (செக் 9:9; மத் 21:1-7; யோவா 12:14).

(3) உணவாகப் பயன்பட்ட விலங்கு:-

செனோபன், பிளினி ஆகிய இருவரும் கழுதையின் உடல் உணவாகப் பயன்பட்டதாகக் கூறுகின்றனர். 2 அர 6:25-இன் படி கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் எபிரேயர்களிடையே கழுதையின் இறைச்சி பழக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. இஸ்ரேல் மக்கள் உணவு உண்ணும் முறையில் (லேவி 11:1-8; உப 14:3-8) கழுதையின் இறைச்சி அசுத்தமானது என்று கருதப்பட்டதால் அதை உணவாக ஏற்றுக் கொள்ளவில்லை.

(4) பொருளாதாரச் சொத்து:-

ஒருவன் தான் வாழக் குறைந்தது ஒரு கழுதையாவது வைத்திருக்கவேண்டும் (யோபு 24:3). மிருகங்கள்தான் சொத்து எனக் கருதப்பட்டது. அந்த மிருகங்களில் பொதுவாகக் கழுதையும் உண்டு (ஆதி 12:16; 24:35; யோபு 1:3). கழுதைகள் ஏற்புடைய காணிக்கையாகக் கொடுக்கப்பட்டன (ஆதி 32:13-15). யூகா மக்கள் நாடு கடத்தப்பட்ட பிறகு, கழுதைகளின் எண்ணிக்கை மற்ற மிருகங்களை விட அதிகமாக இருந்ததாகக் குறிப்புகள் உண்டு (எஸ் 2:66-67; நெக 7:68-69). ஒரு கழுதை இறந்துவிட்டால் அதன் பிணம் உடனே அப்புறப்படுத்தப்படவேண்டும். இந்நிலையை எரேமியா யோவாக்கிமின் அடக்கத்தின் முன் உருவகமாகக் கூறுகின்றார்.

(5) இஸ்ராயேலின் சமய மரபில்:-

கழுதையும் ஓய்வு நாளில் ஓய்வு எடுக்க வேண்டும் (உப 5:14). ஓய்வு நாளில் தனக்கு வேண்டியதைப் பெறுகிறது (லூக் 13:15; 14:5). கழுதைகளும் தலையீற்றுக் கொள்கைக்கு உட்பட்டன (யாத் 13:13). பிலயாமின் எண்ணத்தைக் கடவுள் கழுதை மூலம் முறியடிக்கிறார் (எண் 22:24; 2 பேதுரு 2:16). பிற்காலத்தில் கழுதையின் தலைகளை யூதர்கள் வழிபட்டதாக எகிப்திய நாட்டைச் சேர்ந்த அபியோன் கூறுகின்றார்.

கழுதைப்புலி (HYENA)

இது மாமிசம் உண்ணும் இரவில் உலவும் விலங்கு. இது பூனைகளுக்கும் நாய்களுக்குமிடைப்பட்ட ஒரு விலங்காகும். அழுகிய இறைச்சியைத் தின்னும் இந்த விலங்கு கோழைத்தன்மையும் கொடூரத்தன்மையும் உடையது. இதனுடைய சப்தம் சகிக்கமுடியாததும், மண்ணுலகில் கேட்கமுடியாததும் ஆகும். கோடுகளுள்ள கழுதைப்புலி, பாலஸ்தீனத்தில் நரிக்கு அடுத்தபடியாக எல்லாருக்கும் தெரிந்த மிருகமாகும். இது வட ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா வரை காணப்படுகிறது.

விவிலியத்தில் கழுதைப்புலி பாழ்நிலையோடும் கைவிடப்பட்ட மனிதக் குடியிருப்புகளோடும் தொடர்புபடுத்தப்படுகிறது (ஏச 13:22; 34:14). இடப்பெயரான செபோவிமின் பொருள் கழுதைப்புலியாகும் (நெக 11:34). 1 சாமு 13:18-இல் அது வாடி அபுகபாவைக் குறிக்கிறது.

கழுத்துத்துண்டு (SCARF)

அராபியப் பாரம்பரியப்படி இரட்டை மறைப்பாகும். இதில் ஒன்று கண்களுக்கு

மேலே தலையைச் சுற்றி அமைந்திருக்கும் மற்றது கண்களுக்குக் கீழே அமைந்திருக்கும். அதன் முனைகள் நெஞ்சில் தொங்க விடப்பட்டிருக்கும் (ஏச 3:19).

கழுத்தை நெரித்துக் கொல்லுதல் (STRANGLING)

கழுத்தை நெரித்துக் கொல்லுதல் இராபிகளின் சட்டத்தில் குறிப்பிடப்படும் நான்கு வகையான மரண தண்டனைகளில் ஒன்றாகும். கல்லால் எறிதல், உயிரோடு எரித்தல், தலையை வெட்டுதல் ஆகியவை பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், கழுத்தை நெரித்துக் கொல்லுதல் குறிப்பிடவில்லை. தால்மூதின் கூற்றுப்படி இதுதான் மிகவும் இரக்கம் வாய்ந்த சாவுத் தண்டனை ஆகும். எனவே விவிலியச் சட்டம் எதுவும் தெளிவாகக் கூறாத இடங்களில் இந்தத் தண்டனை பொருந்தும். சிலைவழிபாடு, கெட்ட நடத்தை, கழுத்தை நெரித்து கொல்லப்பட்டதன் இறைச்சியை உண்ணுதல் ஆகியவற்றிலிருந்து புறவினக் கிறிஸ்தவர்கள் விலகியிருந்தால் சட்டங்களை முழுமையாகக் கடைப்பிடிக்கத் தேவை இல்லை என்று யாக்கோபு (அ.ப. 15:20) கூறுகின்றார். புறவினக் கிறிஸ்தவர்கள் யூதர்களின் முறையான கழுத்தை வெட்டி இரத்தத்தைச் சிந்திவிடும் சட்டத்தைப் பின்பற்றும்படி கூறுகின்றார். ஆனால் பிலோ விலங்குகள் கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்டன என்று கூறுகின்றார். ஆனால் மற்ற மூலங்களைக் கண்ணோக்கும் போது, இது யூதச்சட்டம் அமைதியான எல்லா வகையான மரண தண்டனைகளையும் குறித்ததாகத் தெரிகிறது.

கழுவ உதவும் தொட்டி (LAVER)

யூதமதக் குருக்கள், கழுவுவதற்காகப் பயன்படுத்திய பெரிய வெண்கலப் பாத்திரமாகும். பழைய ஏற்பாட்டில் இந்தப் பொருளைக் கொடுக்கும் எபிரேயச் சொல்லானது துப்புரவுச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் குழிவான வட்டவடிவமான உலோகத்தாலான பாத்திரத்தைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் இந்த எபிரேயச் சொல்லுக்கு இணையான கிரேக்கச் சொல் திருமுழுக்குக் கொடுக்கும் தண்ணீரோடு தொடர்புடையது (எபே 5:26; தீத் 3:5).

1. கூடாரத்தில்:- கழுவுவதற்கென வெண்கலத்தால் செய்யப்பட்ட தொட்டி ஒன்று கூடார வாயிலுக்கும் பீடத்திற்கும் நடுவில் வைக்கப்பட்டு அதில் தண்ணீர் நிறைக்கப்பட்டிருக்கும் (யாத் 30:18.28; 31:9; 35:16; 38:8; 39:9; 40:7.11.30). மேலும் ஆசாரக் கூடாரத்து வாயிலிலே காத்துக் கொண்டிருந்த பெண்களின் வெண்கலக் கண்ணாடிகளைக் கொண்டு இந்த வெண்கலத் தொட்டியும் அதன் பாதமும் செய்யப்பட்டிருக்கிறது (யாத் 38:8; காண் 1 சாமு 2:22). லேவியர்கள் ''தூப வகைகளை ஒப்புக்கொடுக்கும்படி பலிபீடத்திற்கு வரும்பொழுது, அவர்கள் கை கால்களைக் கழுவாவிட்டால் ஒரு வேளை சாவார்கள்'' (யாத் 30:20-21; எண் 8:7) என்று கூறப்பட்டுள்ளதை வைத்துப் பார்க்கும்பொழுது குருக்களும், பலிகளும் புனிதப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தண்ணீர் நிரம்பிய பாத்திரம் வைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது.

2. சாலமோன் ஆலயத்தில்:- (அ) உருக்கி வார்க்கப்பட்ட கடல் என்ற தொட்டியும் (ஆ) சித்திர வேலைப்பாடுகள் அமைந்த பத்து வெண்கலப் பாதங்களால் தாங்கப்பெற்ற பத்து வெண்கலத் தொட்டிகளும் இருந்தன (1 அர 7:27-39; 2 நாளா 4:6). ஒவ்வொரு தொட்டியும் 'நாற்பது' குடம் கொள்ளும் (1 அர 7:38).

ஒவ்வொரு பாதமும் நான்கு முழ நீளமும், நான்கு முழ அகலமும், மூன்று முழ உயரமுமாய் இருந்தன. அந்தப் பாதங்களில் சிங்கங்கள், காளைகள் போன்ற சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு பாதத்துக்கும் நான்கு பித்தளை அச்சுகளும், உருளைகளும் இருந்தன. தொட்டியின் கீழ் நான்கு கோடிகளுக்கும் கொப்பறையைத் தாங்க வார்க்கப்பட்ட புயங்களின் நான்கு காதுகளும் ஒன்றுக்கொன்று நேராய் இருந்தன. பாதத்தினுடைய நான்கு மூலைகளிலும்

தாங்கும் கால்கள் பாதத்திலிருந்து புறப்படு கிற தனிவார்ப்பாக இருந்தன.

ஒவ்வொரு பாதத்தின் தலைப்பிலும் அரைமுழ உயரமுள்ள வளைவான வரம்பு இருந்தது. அதன் மேற்பகுதி தொட்டி பதியத் தக்க விதமாயும், பலவித வேலைப்பாடுக ளோடும் அமைக்கப்பட்டிருந்தது (1 அர 7:27-37). மேலும் மேலே கூறப்பட்ட சித்திர வேலைப்பாடுகள் அமைந்த பத்துத் தாங்கிக ளும் அரசன் ஆகாசினால் அசீரியாவிற்கு அனுப்பப்பட்டன (2 அர 16:17; காண் 2 அர 25:13.16; எரே 52:17.20).

2 நாள் 4:6-இல் தகனப்பலிப் பொருட்க ளெல்லாம் பத்துக் கொப்பரைகளிலுள்ள நீரில் கழுவப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கி றது. எசக்கியேல் ஆலயத்தைப் பற்றி விவரிக் கும்பொழுது இந்தக் கொப்பறைகள் பற்றி ஒன்றும் கூறவில்லை (எச 40:48-43:17).

3. புதிய ஏற்பாடு 'தண்ணீர் நிரப்பப்பட்ட கொப்பரை' என்ற வார்த்தையைக் குறிக்க 'எழுபது நூல்' வார்த்தையாகிய ''லூத்ரோன்'' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. இவ்வார்த்தையானது ''திருமுழுக்கோடு'' உருவகமாகத் தொடர்புபடுத்தப்படுகிறது (எபே 5:26; தீத் 3:5). இச்சொல்லானது 'கழுவுதல்' என்று மொழிபெயர்க்கப்படுகி றது.

கழுவுதல், துவைத்தல் (WASH)

இது உடலைச் சுத்தி செய்வதையும் சடங்கு முறையில் தூய்மைப்படுத்தலையும் குறிக்கும். சாதாரணக் கழுவுதல் பற்றிய குறிப்புக்கள் கால்களையும் (ஆதி 13:4; 19:2; 24:32; 43:24) கைகளையும் (யாத். 30:19.21) முகத்தையும் (ஆதி 43:31) குறிக்கிறது. சடங்கு முறைத் தூய்மைப்படுத்துதலில் குருக்களும் லேவியர்களும் குளிக்கவேண் டும் (யாத் 40:12; லேவி 8:6; 16:4.24). ஆடைகளைத் துவைக்க வேண்டும் (எண் 8:21; 19:7). அப்படிச் செய்யாவிட்டால், யாத் 30:20-இன் படி, அவர்கள் ''செத்து மடிவார் கள்''. நோயிலிருந்தும் உயிரற்ற ஊனைத் தொடுவதிலிருந்தும் தூய்மைப்படுத்த, சமூ கத்தினரும் மற்ற அங்கத்தினர்களும் சடங் குத் தூய்மை செய்து கொள்ள வேண்டும் (லேவி 14:8; 15:5; 17:15). முகத்தையும் (மத் 6:17) கைகளையும் (15:2) கால்களையும் (யோவா 13:3-9) கழுவும் வழக்கத்தை இயேசு அறிந்திருந்தார்.

கும்ரானில் நடத்தப்பட்ட அகழ்வாய்வு கள் சடங்குமுறைத் தூய்மைப்படுத்தலில் பயன்பட்ட குளங்களின் சிதைவுகளை வெளிக் கொணர்ந்துள்ளன. குருக்களுக் குரிய லேவியர் சட்டத்தில் கோரப்பட்ட சடங் குத் தூய்மைப்படுத்துதல் கும்ரான் குழுவில் அனைவருக்கும் கட்டளையிடப்பட்டதாகத் தோன்றுகிறது.

கழுவுதல் பாவத்திலிருந்து தூய்மை அடைதலையும் (சங் 51:2; ஏச 1:16) ஆன்மீ கப் புதுப்பிறப்பையும் (தீத் 3:5; யோவா 3:5) உணர்த்துகிறது.

கழுவுதல் சடங்கு (ABLUTIONS)

சடங்குமுறைப்படி கழுவும் நிகழ்ச்சியை இது குறிக்கிறது. புதிய ஏற்பாட்டிலே 3 முறை இது குறிப்பிடப்பட்டுள்ளது. எபி 6:2-இல் கழுவுதல் சடங்குகள் போன்றவை தொடக்க நிலைக் காரியங்களாகும். கிறிஸ்த வர்கள் இதையெல்லாம் தாண்டி முதிர் நிலையை அடையவேண்டும் என்று ஆசிரி யர் படிப்பிக்கிறார்.

கிறிஸ்தவத் திருமுழுக்கிற்கும், மற்றக் கழு வுதல் சடங்கிற்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றிய தர்க்கத்தை இவ்வாறு ஆசிரியர் குறிப்பிடலாம். லேவியர் சட்டம் கூறும் பலவகைக் கழுவுதல் சடங்குகளைப்பற்றிச் சற்று இகழ்ச்சியோடு பேசுகிறார். இவை அனைத்தும் உடலைச் சார்ந்த புறச்சடங்கு களே. கிறிஸ்தவர்கள் நிறைவுள்ளவர்கள் ஆக இவ்வெளிச் சடங்குகளைவிட ஓர்படி மேலே செல்லவேண்டும் என்றும் கூறப்பட் டுள்ளது.

மாற் 7:4-இல் பரிசேயர்களால் பின்பற்றப் பட்டுவந்த சில பாரம்பரியங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றில் கிண்ணங்களையும், பாத்திரங்களையும் கழுவுதல் உள்ளடங்கும்.

கழுவும் பாத்திரம் - (WASH BASIN)

இதைக்குறிக்கும் எபிரேயச்சொல் சாதாரண மாக அகன்ற வாயுடைய சமைக்கும் பானையைக் குறித்தது. இவற்றைச் சடங்கு முறையில் தூய்மையாக வைத்திருக்கவேண் டும். சங் 68:8; 108:9-இல் சமைப்பதற்குரிய பானை, கழுவ உதவும் பாத்திரமாக இழி நிலை அடைந்தது என்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். இவற்றில் மோவாபு இறைவனின் கழுவும் பாத்திரம் என்று விவரிக்கப்படுகிறது. இதற்கு, இந் நாடு சாக்கடலுக்கு அருகில் இருந்தது காரண மாகலாம்.

கழுவேற்றுதல் (IMPALEMENT)

தூக்குத்தண்டனை அளிக்கும் பழைய மேற்காசிய முறையாகும். அங்கே கூர் முனையான கழுமரம் நிலத்தில் அல்லது சுவரில் அமைக்கப்பட்டது. அதன்மேல் உயி ருள்ள உடலைக் குத்தித் தள்ளினார்கள் (வழக்கமாகக் கால்களுக்கு இடையில்). எஸ் 6:11-இல் எவனும் எருசலேம் ஆலயத்தை மீண்டும் எழுப்புவது பற்றிய தாரியுவின் கட்டளையை மாற்றினால், அவனுக்கு இத் தண்டனை அளிக்கப்படும். அவன் வீட்டிலி ருந்தே ஓர் உத்திரத்தை எடுத்து நாட்டி, அதில் அவன் கழுவேற்றப்படவேண்டும் என்று காணப்படுகிறது. தாரியு அரசன் எருச லேமிலுள்ள கடவுளின் ஆலயத்தைப் பலி கள் செலுத்தப்படுவதற்குத் தகுந்த ஓர் இடத் தில் கட்டக் கட்டளை இடுகிறார். மறுப்ப வர்களுக்குத் தண்டனையாகக் கழுவேற்று தல் நடைபெற்றது. கழுவேற்றுதல் அசீரியர் களால் போர்க் கைதிகளுக்கும், இயற்கைக்கு மாறான குற்றவாளிகளுக்கும் செயல்படுத் தப்பட்டது. தாரியு பாபிலோன் நகரைக் கைப்பற்றியபோது 3000 பேரைக் கழுவேற்றி யதாகச் சொல்லப்படுகிறது. எண் 25:4; உப 21:22-23; யோசு 8:29;2 சாமு 21:6.9; எஸ்தர் 9:14 ஆகிய விவிலியக் குறிப்புகள் கழுவேற் றுதலைக் குறிப்பதாக அறிஞர் சிலர் கருது கின்றனர்.

களஞ்சிய நகரங்கள் (STORE CITIES)

களஞ்சிய நகரங்கள் பண்டகசாலை கட்டி அரசாங்கப் பொருட்களைச் சேமித்து வைக் கப்பயன்படுத்தப்பட்ட நகரங்கள் ஆகும்.

எகிப்து இத்தகைய களஞ்சிய நகரங்களுக் குப் பெயர் பெற்றிருந்தது. இவை தேல்ரெத் தபா (பித்தோம்), தானிஸ் (இராம்சேசு; யாத் 1:11) ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. தாவீது பாலஸ்தீனத்தில் பல ஊர்களிலும் நகரங்களிலும் இத்தகைய பண் டகசாலைகளைக் கட்டியிருந்தார் (1 நாள் 27:25). ஒவ்வொரு மாதத்திற்கும் அரண் மனைக்கு வேண்டிய பொருட்களைச் சேமித்து வைக்க நாட்டின் பல பகுதிகளிலும் சால மோன் பல களஞ்சிய நகரங்களைக் கட்டி னார் (1 அர 4:7-19; 9:19). யோசபாத்து யூதா நாடெங்கிலும் பல பண்டகசாலைகளை அமைத்தார் (2 நாள் 32:27-29). இந்தப் பண்டக சாலைகள் மக்கள் செலுத்தும் பத்தில் ஒரு பகுதியின் கிடங்காகவும் விளங்கின (மாலா 3:10). இவை லேவியர்களால் கண்காணிக் கப்பட்டிருக்க வேண்டும் (1 நாள் 9:26.29). பெரிய தனியார் கிடங்குகளும் இருந்தன.

களஞ்சியம் (GRANARY, BARN)

பதர் நீக்கிய தானியங்களைச் சேமித்து வைக்குமிடம். இவை மிகப்பெரிய சாடியி லிருந்து மிகப் பெரிய பள்ளம் வரை ஆகும்.

சேமிக்கும் இடங்களைக் குறிப்பதற்கு எபி ரேயச் சொற்கள் நிறைய உண்டு. ஆனால் எல்லாச் சொற்களும் களஞ்சியத்தைத் தெளி வாகக் குறித்துக்காட்டுவதில்லை (ஆகா 2:19; யோவே 1:17; உப 28:8; பழ 3:10; எரே 50:26). மத் 3:12; லூக் 3:17-இல் குறிப்பிடப்படும் சேமிக்கும் இடங்கள் களஞ்சியத்தைக் குறிக் கின்றன. பாலஸ்தீனத்தில் நடந்த அகழ்வாய் வுகளில் தானியங்களைச் சேமித்து வைக்கும் பல முறைகள் காணப்பட்டன.

தானியக் களஞ்சியம் நிறைந்திருந்தால், அது செழுமைக்கு அறிகுறி (உப 288; பழ 3:10; லூக் 12:18). களஞ்சியம் வெறுமையாக இருந்தால் அது பஞ்சத்தின் அறிகுறியாகும் (யோவே 1:17).

களவு, திருட்டு (THEFT)

பத்துக் கட்டளைகளில் எட்டாவது கட்ட

ளையில் களவு செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது (யாத் 20:15; உப 5:19; லேவி 19:11). யாத் 21:1-4 களவு செய்தலுக்குரிய தண்டனை பற்றிய குறிப்பிட்ட ஒழுக்கங்களைக் கொடுக்கிறது. ''ஆட்டையோ மாட்டையோ ஒருவன் திருடி வெட்டிவிட்டால் அல்லது விற்றுவிட்டால், ஒரு மாட்டுக்கு ஐந்து மாடு என்றும், ஓர் ஆட்டுக்கு நான்கு ஆடு என்றும் ஈடு கட்டுவான்'' (21:1). ''திருட்டுக்கு ஈடாக அவனிடம் எதுவுமே இல்லையெனில் அவன் விற்கப்படுவான்'' (21:3). ''அவன் திருடின மாடோ கழுதையோ, ஆடோ, உயிருடன் அவன் கையில் பிடிபட்டால்'' திருடுபோன பொருளோடும் அல்லது பணத்தோடும் ''இருமடங்காக ஈடுகொடுப்பான்'' (21:4.7). பழமொழி நூல் (6:30-31) ஏழுமடங்கு ஈடுகொடுக்கவேண்டும் என்று கூறுகிறது.

களவு செய்தலைப் பொருத்தமட்டும் கம்முராபியின் சட்டம் மிகக் கொடுமையாக இருந்தது. ஒரு குடிமகன் கடவுளுக்கோ அரண்மனைக்கோ சொந்தமான ஆட்டையோ, மாட்டையோ, கழுதையையோ, பன்றியையோ, படகையோ திருடினால் அவன் முப்பது மடங்கு ஈடுகொடுக்கவேண்டும். திருடப்பட்ட பொருள் சமூகத்தின் தாழ்ந்த மக்களுக்குச் சொந்தமாயிருந்தால், அதற்குப் பத்து மடங்கு ஈடுகொடுக்கவேண்டும். ஈடுகொடுக்கக் கள்வனிடம் எதுவுமே இல்லையெனில் அவன் கொல்லப்படுவான். இத்தியச் சட்டம் பதினைந்து மடங்கு ஈடுகொடுத்தலைப் பற்றிப் பேசுகிறது. பிற்கால உரோமைச்சட்டம், திருடன் களவு செய்யும்போதே பிடிபட்டால் நான்கு மடங்கு ஈடுகொடுக்கவேண்டும் என்று கூறுகிறது.

யாத் 22:2-இன்படி இரவில் ''திருடன் கன்னமிடுகையில் கண்டு பிடிக்கப்பட்டுத் தாக்குண்டு இறந்துபோனால் அவனுக்கு இரத்தப்பழி இல்லை''. ஏனெனில் இரவு நேரத்தில் கன்னமிடுபவன் தடுக்கப்படாவிட்டால் கொலைகாரனாக மாறக்கூடும் (மத் 24:43). ஆனால் பகல் வெளிச்சத்தில், கள்வன் கொல்லப்பட்டிருந்தால், கொன்றவன் இரத்தப்பழிக்கு உள்ளாகுகிறான் (யாத். 22:3).

புதிய ஏற்பாட்டில் களவு செய்தல் பாவங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது (மத் 15:19; மாற் 7:21; 1 கொரி 6:10; 1 பேதுரு 4:15; திருவெளி 9:21; எபே 4:28).

களிமண் (CLAY)

இதைக் குறிக்க எபிரேய மொழி பல சொற்களைப் பயன்படுத்துகிறது. மொழிபெயர்ப்புகள் அவற்றின் வேறுபாடுகளை வெளிக் கொணர்வதில்லை.

ஆதியில், இறைவன் களிமண்ணால் மனிதனை உருவாக்கியதாக வாசிக்கிறோம் (ஆதி 2:5). இயேசு குருடனைக் குணமாக்குவதற்கு மண்ணைப் பயன்படுத்தினார் (யோவா 9:1 தொ).

களிமண் கல் செய்வதற்கும், பாண்டங்கள் செய்வதற்கும் பயன்பட்டது. கற்கள், சூரிய வெப்பத்தில் காயவைக்கப்பட்டதாகவும் சூளையில் சுடப்பட்டதாகவும் விளங்கின. கைவினை ஆற்றலுடன் குயவன் களிமண்ணைப் பயன்படுத்தினான். சட்டி, பானைகளுடன், பொம்மைகள், சிலைகள், கலைப் பொருட்கள் செய்வதற்கும் களிமண் பயன்பட்டது. ஆப்பு எழுத்து ஏடுகள் களிமண் தகடுகளில் எழுதப்பட்டன. பாண்டங்களில் எழுதுவதும் உருவங்கள் வரைவதும் உண்டு. உலோகத் தொழிலில், களிமண் வார்ப்பட அச்சாகவும், சுடப்பட்டபோது மூசையாகவும் பயன்பட்டது. தானி 2:33-இல் குறிக்கப்பட்ட களிமண் தெராக்கோட்ட வகையைச் சேர்ந்ததாகும்.

களிமண் தகடு (CLAY TABLETS)

மெசபொத்தாமியாவில் சாதாரணமாய், எழுதப்பயன்பட்ட பொருளாகும். புல்தாளைப் போன்ற அதிக விலையில்லாமல், களிமண் மிகுதியாகக் கிடைத்தது. தகடு வடிவில் களிமண் அமைக்கப்பட்டு, வழுவழுப்பாக்கப்பட்டு, அதன்மேல் ஆப்பு எழுத்து அடையாளங்கள் பதிக்கப்பட்டன. தகடு,

காய்ந்தபின் அல்லது சுடப்பட்ட பின், கடின மாகியது. அழிக்கமுடியாததாயிற்று. இம் முறையில் எழுதுவது முதலில் சுமேரியர்க ளால் அறிமுகப்படுத்தப்பட்டது. பின் இம் முறை, செமித்தியர், அக்காதியர்களால் ஏற் றுக்கொள்ளப்பட்டது. பின்பு மேற்கு ஆசிய மக்களிடையே கூரியர்கள், இத்தியர்கள், ஏலாமியர்கள் உகாரித்தைச் சேர்ந்த கானானி யர்களால் ஏற்றுப் பயன்படுத்தப்பட்டது.

களிம்பு (DROSS)

எரியும் தீச்சூளையில் சேர்ந்திருக்கும் உலோக, சிறப்பாக வெள்ளியின் அழுக்கு கள் (பழ 25:4). வெள்ளி 'களிம்பாக மாறு வது' கீழ்த்தரமான ஒழுக்கத்தின் விளைவா கும். பழைய ஏற்பாட்டில் களிம்பு ஒழுக்கக் கேட்டிற்கு அடையாளம் (ஏச 1:22; எச 22: 18:19; சங் 119:119).

களை (WHEED)

இதைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன.

1. ''வேண்டாதவைகளைக்'' (யோபு 31: 40) குறிக்கும் எபிரேயச்சொல். களைகளின் பொதுப்பெயராகும். இது பார்லி போன்ற தோற்றமுடையது.

2. கடற்பாசி (யோனா 2:6). சில இடங்க ளில் இது நாணல் என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

3. ''நச்சுப்பூண்டு'' (ஓசே 10:4)

4. தானிய வயலில் வளரும் களை. கோது மைச் செடியைப்போல் தோன்றும். அத னின்று இதை எளிதாக வேறுபடுத்த முடி யாது. சில சமயம் இக்களைகள் அறுவடை வரை விட்டு வைக்கப்படும். அப்போது பெண்களும் குழந்தைகளும் இவற்றைக் கையால் பிடுங்கிப் போடுவர்.

களைகள் பற்றிய உவமையில் (மத். 13:24-30. 36-43) சீடர்கள் இறுதித் தீர்ப்புவரை பொறுமையாக இருக்கவேண்டும் என்று இயேசு போதிக்கிறார். காலத்திற்குமுன் களைகளிலிருந்து கோதுமையைப் பிரித்தெ டுப்பது நிராகரிக்கப்படுகிறது (1 கொரி 4:5); அறுவடைவரை பொறுமையாகக் காத்திருச் கத் தூண்டப்படுகிறது. இதற்கு இயேசு இரு காரணங்கள் கூறுகிறார். அ) களைகளோடு கோதுமையையும் பிடுங்கிவிடக்கூடும் (மத் 13:29). ஆ) பிரித்தெடுப்பதற்கு இறைவன் நேரத்தைக் குறித்துள்ளார். அதை முந்திக் கொள்ளக்கூடாது. ''எல்லா வகை மீன்களை யும் வாரி வரும் வலை'' பற்றிய உவமையும் (13:47-43) இதே பாடத்தைப் போதிக்கிறது. ஒரு கருத்தை வலியுறுத்த இயேசு பயன்படுத் திய ''இரட்டை உவமைக்கு'' இந்த இரண்டு உவமைகளும் எடுத்துக்காட்டுகளாகும்.

களைகள் பற்றிய உவமையின் விளக்கம் (13:36-43) காலத்தால் பிந்தியதாகும். ஒரு வேளை மத்தேயுவே இதை எழுதியிருக்க லாம். இவ்விளக்கம் உவமையை உருவகப் படுத்துகிறது. விளக்கம் இறுதித் தீர்ப்பைப் பற்றிக் கவனம் செலுத்துகிறது.

களைகளின் உவமை: (மத் 13:24-30; 36-43)

விண்ணரசைப் பற்றிய இந்த உவமையை இயேசு கூறி அதன் விளக்கத்தையும் அளிக்கி றார். விதைவிதைப்பவர் இயேசு (மத் 18:11). நிலம் விசுவாசிகளைக் குறிக்கிறது. களை கள் நேர்மையற்ற மனிதர்கள் ஆவர். அவர் கள் விண்ணரசிற்கு ஏற்றவரல்லர். களையை விதைத்தவன் அலகை. அறுவடை இறுதி நாளைக் குறிக்கிறது. அறுப்போர் வானதூத ராவர். நெறிகெட்டவர்க்குத் தண்டனையும், நீதி மான்களுக்கு மகிழ்ச்சியும் கிடைக்கும் படி அறுவடை நடைபெறும். இதிலே குறிப் பாக மணமகன் ஆரம்பத்திலேயே களைக ளைக் களைந்துவிட மறுக்கிறார். இதே போல இறைவன் நல்லவர்களுடன் தீயவர்க ளையும் வாழ அனுமதிக்கிறார். இறுதி நாளில் தீயவர் நல்லவர்களிடமிருந்து அகற் றப்படுவர்.

கற்கள் (STONES)

பாலஸ்தீனம் கற்களும் கற்பாறைகளும் நிறைந்த ஒரு மலைப்பாங்கான நாடாகும். பாலஸ்தீனத்தில் கற்களும் கற்பாறைகளும்

பல தேவைகளுக்காக மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தன. விவிலியத்தில் காணும் பலவகைக் கற்களைப் பற்றியும் அவற்றின் பயன்களைப் பற்றியும் இங்குக் காண்போம்.

ஒரு சில கற்கள் மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களாகப் பயன் படுத்தப்பட்டன. கூரிய கற்கள் கத்திகளாகப் பயன்படுத்தப்பட்டன (யாத் 4:25; யோசு 5:2). சில க்ற்கள் நெருப்பு உண்டாக்குவதற்கான சக்கி முக்கிக் கற்களாகப் பயன்படுத்தப் பட்டன (2 மக் 10:3). மிகவும் கன எடையுள்ள கற்கள் எடைக்கற்களாகப் பயன்படுத்தப்பட்டன (லேவி 19:36; உப 25:13.15; 2 சாமு 14:26; பழ 11:1; 16:11; 20:10.23; மீக் 6:11; செக் 5:8); தூக்கு நூற்குண்டுகளாகவும் (ஏச 34:11; ஆமோ 7:7-8) பயன்படுத்தப்பட்டன. நீரை முகந்து செல்வதற்கேற்ற கற்குடங்களும் உபயோகத்தில் இருந்ததை யாத் 7:9 யோவா 2:16 உறுதிப்படுத்துகின்றன.

ஒருசில பெரும் பாறைகள் எல்லைக்கற்களாகவும் திசைகாட்டும் கற்களாகவும் பயன் பட்டன. கிபயோனின் பெரும்பாறையும் (2 சாமு 20:8) போகானின் பெரும் பாறையும் (யோசு 15:16; 18:17) சோகெலேத்து என்ற பாம்புப் பெரும்பாறையும் (1 அர 1:9), எசேல் பெரும் பாறையும் (1 சாமு 29:19), இத்தகைய எல்லைக் கற்களாக விளங்கிய பாறைகளாகும். கற்கள் கைகாட்டிகளாகப் பயன்படுத்தப்பட்டமையை எரே 31:21-இலிருந்து அறிகிறோம். அவை எல்லைக் குறிகளாகவும் பயன்பட்டன (உப 19:14)

கட்டட வேலைகளுக்கும் கற்கள் (பாறைக்கற்கள்) வெகுவாகப் பயன்படுத்தப் பட்டன. செங்கற்களைவிட, கட்டடங்களுக்கு உறுதி தருபவை என இக்கற்கள் கருதப்பட்டன. கற்கள் கிடைக்காத பாபிலோனிலும் (ஆதி 11:3) மற்றும் பாலஸ்தீனத்தின் ஒருசில பகுதிகளிலும் கற்களுக்குப் பதிலாகச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. ஆலயம் கட்டுவதற்காகத் தாவீது அரசன் இத்தகைய பாறைக்கற்களைச் சேகரித்ததை 1 நாள் 22:14-15; 29:2 குறிப்பிடுகின்றன. ஆலயத்தின் அடித்தளமும் (1 அர 5:17-18; 7:10), கட்டடத்தின் பெரும்பகுதியும் செதுக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்டிருந்தன (1 அர 6:18; 7:9; 11.12). ஆலயத்தைப் பழுது பார்த்த யோவாசும் (2 அர 12:2), யோசியாவும் (2 அர 22:6; 2 நாள் 34:11) செதுக்கப் பட்ட கற்பாறைகளையே பயன்படுத்தினார்கள். ஏரோது அரசனின் ஆலயக்கற்களைப் பற்றிய குறிப்புக்கள் மத் 24:1-2; மாற் 13:1-2; லூக் 21:5-6 ஆகியவற்றில் காணப்படுகின்றன. மேலும் கற்பாறைகள் நகரச் சுவர்களுக்கும் (நெக 4:3), வீடுகள் கட்டுவதற்கும் (லேவி 14:45; ஆமோ 5:11) அரண்மனைகளுக்கும் (1 அர 7:1.9), கோட்டைச்சுவர்களுக்கும் நடைபாதைகளுக்கும் (யாத் 24:10; யோவா 19:13) நெடுந்தூண்களுக்கும் (எஸ்த 1:6) கட்டட வேலையில் பயன்படுத்தப்பட்டன. பெரும்பாறைகள் மூடுகற்களாகவும் பயன்படுத்தப்பட்டன. கிணறுகளை மூடுவதற்கும் (ஆதி 29:3.8.10), குகைகளை மூடுவதற்கும் (யோசு 10:18.27) கல்லறைகளை மூடுவதற்கும் (மத் 27:60, யோவா 11:38) பயன்படுத்தப்பட்டன. புதிய கற்காலத்தில் பெரும் பாறைகள் ''டோல்மென்ஸ்'' என்றழைக்கப்படும் சவக்கிடங்குகள் கட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

போர் செய்வதற்கும் கற்கள் பயன்படுத்தப்பட்டன. கற்களை எறிந்து எதிரிகளைத் தாக்குவது பழங்காலப் போர்முறைகளில் ஒன்றாக இருந்தது (யாத் 21:18; 2 சாமு 16:6.13; சீரா 22:29; 27:25; 2 மக் 1:10; 4:41; மாற் 12:4). கற்களை எறிவதற்கென்று ''கவண்'' எனப்படும் கல்லெறி கருவிகளையும் மக்கள் பயன்படுத்திவந்தமை நீதி 20:16; 1 சாமு 17:40.49-50; 1 நாள் 12:2; 2 நாள் 26:14; பழ 26:8; யூதித் 6:12; சீரா 47:4; 2 நாள் 26:15; 1 மக் 6:51 ஆகியவற்றிலிருந்து அறியப்படுகின்றது.

அணிகலன்களைச் செய்வதற்கும் சில விலையுயர்ந்த கற்கள் பயன்படுத்தப்பட்டன. குருவின் மார்புக்கவசம் பல கற்கள் பதிக்கப்பட்டு அணி செய்யப்பட்டிருந்தது (யாத் 28:17.21). மாணிக்கக்கல், முத்து,

வைடூரியம், செவ்வந்திக்கல், சிவதாதுக்கல், சவரக்காரக்கல் போன்ற கற்களினின்று மணிகள் செய்யப்பட்டு அணிகளுடன் பதிக்கப் பட்டன.

கற்கள் நினைவுச் சின்னங்களாகவும் பயன் படுத்தப்பட்டதை விவிலியத்திலிருந்து நாம் அறிய வருகிறோம் (யோசு 7:26; 8:29; 2 சாமு 18:17). சில இடங்களில் கற்றூண்கள் நினைவுச்சின்னங்களாகவும் (யோசு 24:26.27; 1 சாமு 7:12), இறந்தவர்களின் ஞாபகச் சின்னமாகவும் (2 அர 23:17; எச 39:15), நினைவுத் தூண்களாகவும் (ஆதி 28:18-22; ஏச 19:19) பயன்படுத்தப்பட்டமை அறிகிறோம்.

நினைவுத் தூண்களின் மீதும், பலிபீடங்களின் மீதும் கல்வெட்டுக்களும் இருந்திருக்கின்றன (உப 29:4.8 யோசு 8:32). சட்டங்கள் கற்பலகைக்ளில் செதுக்கப்பட்டிருந்தன. (யாத் 32:15.16.19; 34:4.29).

இஸ்ராயேலர்கள் செதுக்கப்படாத பெருங்கற்களையே பலிபீடங்களாகப் பயன் படுத்தினர் (யாத் 20:25; உப 27:5-5; யோசு 8:31). கர்மேல் மலையில் கட்டப்பட்டிருந்த எலியாவின் பீடம் இத்தகைய கற்பீடமே. எச 40:22; 1 மக் 4:46-47 இதுபற்றிய பிற குறிப்புகளாகும்.

சில நேரங்களில் செதுக்கப்படாத கற்களும், பலவேளைகளில் செதுக்கப்பட்ட கற்களும் வழிபாட்டிற்குரிய சிலைகளாகப் பயன் படுத்தப்பட்டன (லேவி 26:1; உப 29:17; 2 அர 19:18; எரே 2:27; அப 2:19). இஸ்ராயேலர்கள் அயல்நாட்டு மக்களின் நம்பிக்கைகள், வழிபாடுகளைப் பார்த்துத் தங்கள் வாழ்க்கையிலும் சிலை வழிபாட்டை மேற்கொண்டிருக்கலாம்.

விவிலியத்தில் கற்களின் கடினத்தன்மை உறுதி ஆகியவற்றைக் கருதி உருவகமாகவும் ''கல்'' என்னும் சொல் பலவிடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது (யாத் 15:5.16; 1 சாமு 25:17; நெக 9:11; யோபு 6:12; 38:30; 41:24; எச 11:19; 36:26). புதிய ஏற்பாட்டில் கற்களின் பலனளிக்காத் தன்மையும் (மத் 3:9), செவிட்டுத் தன்மையும் (மத் 4:3; 7:9) குறிப்பிடப்படுகின்றன. விதைகள் முளைக்காமற்போன கற்பாறை நிலம்பற்றி மத் 13:5; மாற் 4:16; லூக் 8:4-8 கூறுகின்றன. செக் 3:9-இல் காணும் ஏழு பக்கங்களையுடைய கல்லொன்று தலைமைக்குருவின் முன் வைக்கப்படுகின்றது. இக்கல் செக்.4:7-இல் காணும் தலைக்கல்லாகவோ, தலைமைக்குருவின் மார்புக் கவசத்தினை அலங்கரிக்கும் கற்களில் ஒன்றாகவோ, செருபாபேலின் தலைக்கிரீடத்தினையோ, கட்டிமுடிக்கப் பட்ட பேராலயத்தையோ குறிக்கலாம்.

கிறிஸ்தவர்கள் அனைவரும் உயிருள்ள கற்கள் (1 பேதுரு 2:4-8). ஏனெனில் கிறிஸ்துவே மூலைக்கல்லாக அமைந்துள்ள பரிசுத்த ஆலயம் அவர்களாலேயே கட்டப்பட்டுள்ளது (எபே 2:20-22). கிறிஸ்துவே மூலைக்கல் (சங் 118:22; ஏச 28:16; மத் 21:42; லூக் 20:17-18).

திருவெளிப்பாடு 2:19 ''வெள்ளைக்கல்'' ஒன்றினைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த வெள்ளைக் கல்லுக்குப் பல்வேறு பொருள்களும் விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. ஒருவேளை வெற்றி கொள்பவனுக்கு அளிக்கப்படும் இந்த வெள்ளைக்கல் அவன் பெயரைத்தாங்கிய இரகசியக் கல்லாக இருக்கலாம். அதன் வெண்மைநிறம் விண்ணகத்தின் தூய்மையையும், அதனை அடைந்தோன் தீமைகளை வென்று தூய்மை அடைய வல்லவன் என்பதனையும் குறிக்கலாம்.

கற்குவியல் (HEAP OF STONES)

விவிலிய காலத்தில் கற்குவியல் என்ற அடையாளம் பல வகையில் பயன்படுத்தப் பட்டது. வெட்கப்படுகின்ற அளவு நடந்து கொள்கின்ற ஒருவனின்மேல் குவிக்கப் பட்ட கற்குவியல்கள் பிறருக்கு எச்சரிக்கையாக அமைந்தன. ஆக்கானும் அவரது குடும்பமும் கற்களால் எறியப்பட்டு எரிக்கப்பட்ட பின்பு, அவரது உடல்மேல் கற்களைப் போட்டு மூடினார்கள் (யோசு 7:26). யோசுவாவால் ஆயிநகர் அரசன் தூக்கிலிடப்பட்ட

பிறகு, அவன் உடல்மேல் கற்களைக் குவித்தார்கள் (யோசு 8:29). யோவாபும் அவருடன் இருந்தவர்களும் அபிசலோமைத் தூக்கிச் சென்று காட்டிலுள்ள மிகவும் ஆழமான ஒரு பள்ளத்தாக்கில் எறிந்தனர். பின் அவர்மேல் கற்களைப் பெருமளவில் குவித்தனர் (2 சாமு 18:17).

இந்த எபிரேயச் சொல் அழிவின் குவியல், கற்குவியல் என்று பலவாறு மொழி பெயர்க்கப்படும். அழிவின் குவியல் என்பது சிதைந்து குவியலான இடத்தைக் குறிக்கும். இது இறைவன் பாவிகளுக்கு அளிக்கவிருக்கும் அழிவை நினைவுபடுத்தியது (ஏச 25:2).

ஒரு நகரமோ, வீடோ, பீடமோ கற்குவியலாகும் என்பது வரவிருக்கும் அழிவை அறிவிப்பதாகும் (யோபு 15:28; ஏச 37:26; எரே 9:11; ஓசே 12:11). இக்கால அரபு கிராம மக்களைப்போல் முற்கால இஸ்ராயேலரும் இத்தகைய கற்குவியல்கள் தீய அல்லது ஆபத்தான ஆவிகள் தங்குமிடமாகக் கருதினர் (ஏச 13:21; 34:14; யோபு 8:17).

கற்சுரங்கங்கள் (QUARRY)

கட்டடங்களுக்கான கற்கள் தோண்டியெடுக்கப்படும் இடம். யோசு 7:5-இல் ஆயி நகர மக்கள் இஸ்ராயேல் மக்களைச் செபாரிம் வரை துரத்திச் சென்று அவர்களில் முப்பத்தாறு பேரைக் கொன்றனர். இந்தச் செபாரிம் என்ற பெயரை இடப்பெயராக அல்லாமல் கற்சுரங்கம் என்று மொழி பெயர்க்க வேண்டும் என்று விளக்கவுரையாளர் பலர் கருதுகின்றனர். பல நூற்றாண்டுகளாகப் பாலஸ்தீன தேசத்தில் கற்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. பெரும்பாலான இடங்களில் சிறிதளவு ஆழத்திலேயே சுண்ணாம்புக் கற்பாறைகள் கிடைத்தன. மக்கள் இவற்றைப் பாளம் பாளமாக வெட்டி எடுத்தனர். எருசலேம் ஆலயத்திற்கு அருகிலுள்ள சாலமோனின் தொழுவம் எல்லாம் பழங்காலத்தில் கல்வெட்டி எடுக்கும் இடமாகத்தான் இருந்தது

நீதி 3:19-இல் குறிப்பிடப்படும் சிலைகள் அழகான கண்ணாம்புக் கற்களால் செய்யப்பட்டவையாகும். இவையே உப 7:5; ஏச 10:10; மீக் 5:12 ஆகிய பகுதிகளில் குறிக்கப்படுகின்றன.

முதலில் பெரிய பெரிய கற்களாகச் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுப்பார்கள். பிறகு தங்களுக்குத் தேவையான அளவைக் குறியிட்டு, முதலில் லேசான பிளவு உண்டாக்கி மரக்கட்டை செருகி விடுவார்கள். பிறகு சற்று இடைவெளியில் மற்றொரு குழியைப் போடுவார். இவ்வாறு இவர்கள் பலகையைப் போன்று அறுப்பார்கள். 27 அடி நீளம் 3 அடி அகலமும் உள்ள பலகையை, எருசலேமிலுள்ள யூதர்கள் தங்குமிடத்தில் 1934-இல் கண்டுபிடித்தார்கள்.

கற்பாறை (FLINT)

தூய்மையற்ற படிகக்கல்லின் ஒருவகை. மிகவும் கடினமாக இருக்கும். எளிதாகப் பிளக்கமுடியாது. கற்களினாலான கலைத் தொழில் வேலைப்பாடமைந்த பொருட்கள் ஆதிமனிதனின் கருவிகளில் இடம்பெற்றன. இவற்றின் அடுக்கான அமைப்பைக் கொண்டு காலம் குறிக்கப்படும். கற்கருவிகளால் வரலாற்றுக்கு முந்தைய கலாச்சாரம் நிர்ணயம் செய்யப்படுகின்றது. உலோகக் கருவிகள் மனிதனுடைய வாழ்க்கையில் இடம்பெறத் தொடங்கிய பிறகும் கற்களினால் செய்யப்பட்ட கருவிகள் தொடர்ந்து அவனது வாழ்வில் பயன்படுத்தப்பட்டன. பல நோக்கங்களுக்காக அவை பயன்படுத்தப்பட்டன. செதுக்கு கருவியாகவும் கோடரிகளாகவும், கத்திகளாகவும், போர்த்தளவாடங்களாகவும், கதிர் அரிவாளாகவும், குத்துக் கோடரிகளாகவும், தோல் தைக்கும் ஊசிகளாகவும் பயன்படுத்தப்பட்டன.

'மிகக் கூர்மையான கல்' சிப்போரா தன் மகனுக்கு விருத்தசேதனம் செய்யப் பயன்படுத்திய கருவியாகும் (யாத் 4:25). கில்காலில் யோசுவா இஸ்ராயேல் மக்களுக்கு விருத்தசேதனம் செய்யக் கற்கருவிகளைப் பயன்படுத்தினார் என்பதை யோசு 5:2-3-இல் 'கற்கத்திகள்' குறிப்பிடுகின்றன. ஏச 5:28-இல் குதிரைகளின் குளம்புகள் கருங்கல் போலக்

கெட்டியானவை எனக் குறிப்பிடப்படுகின்றன. எச 3:9 வைரக்கல்லின் குணம் கல்லை விடக் கெட்டியானது எனக் கூறப்படுகிறது. ஆண்டவர் பாறையை நீரூற்றாக மாற்றினார் (சங் 114:8) என்பது யாத்திரைப் புதுமையைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது (உப 8:15; காண் யாத் 17:6; எண் 20:8-11; உப 32:13). எச 50:7-இல் ஆண்டவருடைய ஊழியனின் மனோதிடத்தைக் கற்பாறை அடையாளமாகச் சித்தரிக்கிறது.

கற்பாறையில் வீட்டைக் கட்டிய அறிவாளி - உவமை

(மத் 7:24-27; லூக் 6:47-49)

இயேசுவின் போதனைகள் மக்களுக்கு அழைப்பையும் அதே நேரத்திலே நல்ல செயல்களைச் செய்யத் தூண்டுதலையும் அளிக்கின்றன. அவருடைய போதனையைப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது, வாழ்க்கையில் செயல்படுத்தியும் காட்ட வேண்டும். இவ்வாறு செயல்படுத்த இயேசுவின் சீடன் மறந்தால் அவன் பெரும் அழிவுக்கு உள்ளாவான். வீடு கட்டுபவர்கள் பற்றிய உவமை பாலஸ்தீன மக்களது வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. லூக்கா நற்செய்தியாளர்களுக்குப் பாலஸ்தீன நாட்டு நிலவரம் தெரியாது. ஆழக்குழி தோண்டிக் கட்டடம் கட்ட வேண்டும் என்பது கிரேக்கரின் முறை. இதே போல வெள்ளத்தை, ஆற்று வெள்ளமாகச் சித்தரிக்கிறார். ஆனால் பாலஸ்தீன நாட்டிலே மழை பெய்யும்போது பெருமளவில் நீர் பாயும் என்பதை மத்தேயு அறிவார். இந்த வேளையிலே மணல்மீது கட்டிய வீடுகள் பலத்த சேதமடைகின்றன. எனவே சிறந்த வாழ்க்கையே விசுவாசிகளுடைய வாழ்க்கையின் அடித்தளமாக அமைய வேண்டும். அறிவும், ஆண்டவனுடைய கட்டளைகளில் நம்பிக்கையும் மட்டும் இருந்தால் போதாது. அவற்றின்படி நடப்பது மிகவும் அவசியமானது.

கற்பித்தல் (TEACH)

இரு ஏற்பாடுகளிலும், விசுவாசமானது இறைவாக்கினர்கள் (மிகப் பொதுவான பொருளில்) கொண்டு வந்த இறைவெளிப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால், இவ்வெளிப்பாடானது அதனுடைய விவரங்களிலும் செயல்முறை விளைவுகளிலும்கூட மனிதருடைய அறிவிற்கு வர வேண்டும். எனவே, இறைவனுடைய மக்களில் இறைபொருட்கள் பற்றிய அறிவைப் போதிக்கும் முறையில் அளிக்கின்ற கற்பிக்கும் பணியானது முக்கியத்துவம் பெறுகின்றது. முதற்படியாக இக்கற்பித்தலானது, வரலாற்றில் தோற்றுகிறவாறே இறைவனது மீட்பைப் போதிக்கும், அறிவிக்கும் வடிவை ஏற்கின்றது. பின்னர், அது ஓர் ஆழமான பொருளை அளித்து, இறைவனால் படைக்கப்பட்ட உடன்படிக்கைச் சூழ்நிலையானது எவ்வாறு செயல்முறையில் அவரது மக்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

1. பழைய ஏற்பாடு:-

பழைய ஏற்பாட்டில் இப்பணியானது, அதனை நிறைவேற்றுகின்றவர்களின் குணவியல்பிற்கேற்பப் பல்வேறு வழிகளில் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் அவர்கள் அனைவரின் மூலமாகவும் தமது மக்களுக்குக் கற்பிப்பது எப்போதும் இறைவனே.

1. கற்பித்தலின் பல்வேறு வடிவங்கள்:-

அ. குடும்பத்தின் தந்தை:- பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்பாளர் தந்தையே. அவர் கற்பிப்பதன் மூலம் நாட்டின் கடந்தகால சமய உரிமைச் சொத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும். இது ஆழமான போதனையை அளிக்க வேண்டும் என்பதில்லை. விசுவாசத்தினுடைய அத்யாவசியமான கூறுகளைக் கொண்ட அடிப்படை ஞான உபதேசத்தை அது கொண்டிருக்க வேண்டும். இறைச்சட்டத்தினுடைய கட்டளைகளைக் குறிப்பிடுகின்ற ஒழுக்க உபதேசமாக அது அமைந்திருக்க வேண்டும். ''நான் உனக்குக் கற்பிக்கின்ற இக்கற்பனைகளை உன் புதல்வர்களுக்கு நீ விவரித்துச் சொல்வாய்....'' (உப 6:7; 11:19). இஸ்ராயேலின் பெருவிழாக்களின் வாய்ப்பைப் பயன்படுத்திப் பெரும் நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து அவற்

றின் பொருளை விளக்கும் வழிபாட்டு மற்றும் வரலாற்று உபதேசங்கள் உண்டு. பாஸ்காப் பலி (யாத் 12:26), மற்றும் புளியாத அப்பச்சடங்கு (யாத் 13:8) போன்றவை இவ்வாறு பயன்பட்டன. பழக்கங்கள் மற்றும் சடங்குகள் பற்றிப் பிள்ளைகள் எழுப்பும் கேள்விகள், இஸ்ராயேலின் விசுவாசத்தைக் கற்பிக்க, அவர்களின் தந்தைக்கு இயல்பாகவே வாய்ப்பளித்தன (உப 6:20-25). மரபின் ஒரு பகுதியாகிய பழைய கவிதைகளை அவரே அவர்களுக்குக் கற்பிக்கிறார் (உப 31:19.22; 2 சாமு 1:18-19). இவ்வாறாக, சமயப் படிப்பினையானது குடும்பச்சூழலில் தொடங்குகின்றது.

ஆ. குருக்கள்:- இப்பணியில் குருக்கள் அதிகப் பொறுப்பைக் கொண்டுள்ளனர். வழிபாடு மற்றும் சட்டத்தினுடைய பணிக்கடமைகளை அவர்கள் தொழிலாகக் கொண்டிருப்பதால் அவர்கள் ஆசிரியர்களாகத் தங்கள் பங்கை நிரப்புகின்றனர். மக்களுக்கு அறிவிக்கும் பணியுடன் மோசே சீனாய் மலையில் சட்டத்தைப் பெற்றார். இவ்வாறு அவரே இஸ்ராயேலில் முதல் ஆசிரியர் ஆவார் (யாத் 24:3.12). லேவியர்கள் இப்போது இச்சட்டத்தினை வாழ்வில் கடைப்பிடிப்பதற்கெனக் கற்பித்து விளக்க வேண்டும் (உப 17:10-11; 33:10; 2 நாள் 15:3). மற்றக் குருக்கள் இதனைப் புறக்கணித்து, அதன் விளைவாக இறைவாக்கினர்களின் கண்டனங்களுக்கு உட்பட்டனர் (ஓசே 4:6; 5:1; எரே 5:31; மலா 2:7). இப்போதனையில் செயல்முறையான பின்னணியைக் கற்பனை செய்வது கடினமல்ல. செக்கேமில் உடன்படிக்கை புதுப்பிக்கப்படுகின்ற புனித இடங்களில் கொண்டாடப்பட்ட விழாக்களை அது கொண்டிருந்தது (உப 28:9 தொ; யோசு 24:1-24). எஸ்ரா அறிவித்த சட்டம் இதன் மற்றொரு வடிவமாகும் (நெக.8). அளிக்கப்பட்ட படிப்பினையானது, மீண்டும் படிக்கப்பட்டு விளக்கப்பட வேண்டிய சட்டத்தையும் (உப 31:9-13) இறைவனுடைய திட்டத்தின் வரலாற்றையும் (யோசு 24) கொண்டிருந்தது. இயல்பாகவே, விசுவாச வாழ்விற்கு மக்களை வழிநடத்துவதற்கும், சட்டத்தைச் செயல்படுத்துவதற்குமான அறிவுரைகள் கலந்திருந்தன. உப. 4-11-இல் காணப்படும் கற்பித்தல் பற்றிய பல சொற்களில் இந்தக் குருத்துவக் கற்பித்தலின் எதிரொலி காணப்படுகின்றது: ''இஸ்ராயேலே, கேளுங்கள்...'' (உப 4:1; 5:1); ''அறிந்து கொள்ளுங்கள்....'' (4:39); ''விசாரித்துக் கேள்...'' (4:32); ''மறவாதே....'' (4:9; 8:11-12). செயல் விளைவில், இது இஸ்ராயேலானது இதனை அடிக்கடி மனதில் கொண்டிருக்குமாறு, இறைவனின் வார்த்தையை அறிவிப்பதாகும் (உப 11:18-21).

இ. இறைவாக்கினர்கள்:- வேறுபட்ட பணியினைக் கொண்டுள்ளனர். அவர்கள் அளிக்கின்ற இறைவனுடைய வார்த்தையைப் பாரம்பரியத்திலிருந்து பெறாமல் இறைவனிடமிருந்தே அவர்கள் நேரடியாகப் பெறுகின்றனர். போதிக்கும்போது அவர்கள் மிரட்டுகின்றனர், கண்டிக்கின்றனர், வாக்களிக்கின்றனர், ஆறுதல் அளிக்கின்றனர். இவையனைத்தும் கற்பித்தலைச் சார்ந்ததன்று. ஆனால், அறியப்பட்டுள்ளதென அவர்கள் கருதிய ஓர் உபதேசத்தை (ஒப்பிடுக ஓசே 4:1-2 மற்றும் பத்து கற்பனைகள்) அவர்கள் . அடிக்கடி வலியுறுத்துகின்றனர்; அதனின்று அவர்கள் தங்களுடைய போதகத்தின் முக்கிய கருத்துக்களை எடுத்துக் கையாளுகின்றனர். தங்களுடைய தீர்க்கதரிசனங்களை அறிவிக்கின்ற சீடர்களாகவும் அவர்களே உள்ளனர் (ஏச 8:16; எரே 36:4). அவர்களுடைய செய்தியானது பாரம்பரிய போதனையோடு சேர்க்கப்பட்டு, அதனை வலுமிக்கதாக்குகிறது...பிறகு இறைவாக்கினரின் போதனையே ஒரு பாரம்பரிய வடிவம் எடுக்கிறது. ஒரு இறைவாக்கினருக்கும் அடுத்தவருக்கும் இடையில் தொடர்ச்சியுள்ளது. இதை எரேமியா நூல் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது (எரே 28:8). தனது செய்தியை அறிவிப்பதற்கென ஓர் இறைவாக்கினர் தனக்கு முற்பட்ட ஒருவரின் வார்த்தைகளை உபயோகிக்கும்போதும் (எரேமியாவின் நூலை எசக்கியேல் பயன்படுத்தும்விதம்), அல்லது உப ஆகம மறைநூல் அறிஞர்கள் தங்களுக்கே உரிய இறையி

யலில் வரலாற்றை இறைவாக்கு முறையில் விளக்கம் தரும்போதும், இது தெளிவாகக் காணப்படுகிறது.

ஈ. ஞானிகள்:- இவர்கள் தன்மையிலே ஆசிரியர்கள் ஆவர் (திருவுரை 12:9). தங்களுடைய சீடர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தந்தையும் தனது பிள்ளைகளுக்குச் செய்வது போன்ற அதே போதிக்கும் பணியையே மேற்கொள்கின்றனர் (சீரா 30:3; பழ 3:21; 4:1-17.20). அவர்களுக்குச் செவிமடுக்காத சீடர்களுக்கு ஐயோ கேடு! (பழ 5:12-13). நாடு கடத்தப்படுவதுவரையில் ஞானப் படிப்பினையானது இறைவனின் வார்த்தையைவிட அதிகமாக முன்னோர்கள் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. என்றாலும், அதன் பின்னர் அது படிப்படியாகச் சட்டம் மற்றும் இறைவாக்கு நூல்களின் உட்பொருளை ஏற்றுக்கொண்டு, அனைவரின் உபயோகத்திற்காகவும் அதனை அளிக்கின்றது. இவ்வாறு பாரம்பரிய செய்தியால் நிரப்பப்பட்டவராய் ஆசிரியர் தன்னுடைய பிள்ளைகளுக்கு உண்மையான ஞானம் (யோபு 33:33) அறிவு, மற்றும் ஆண்டவரைப் பற்றிய பயம் (பழ 2:5; சங் 34:12) ஆகியவற்றை அளிக்க விரும்புகிறார். சுருக்கமாக, மகிழ்ச்சியான வாழ்வின் நிபந்தனையாகிய சமய அறிவை அளிக்கின்றனர். இறை பற்று அற்றவர்களுக்கு இறைவனின் வழிகளைக் கற்பிப்பதாலன்றோ, அவர்களை அவர் மனமாற்றத்திற்கு வழி நடத்திச் செல்கிறார் (சங் 51:5)! மறைநூல் அறிஞர்களில் சூழ்நிலையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற போதிக்கும் முயற்சியானது குருக்கள் மற்றும் இறைவாக்கினர்களின் இடத்தை ஏற்கின்றது. இப்பள்ளிகளில் (சீரா 51:23), இறைவனைக் கண்டடைய அனுமதிக்கும் விதமாக, அறிஞர்கள் அனைவருக்கும் நிலையான உறுதியான அறிவுரையை அளிக்கின்றனர் (சீரா 51:25-26).

2. யாவேயே, மேலான்மைமிக்க ஆசிரியர், குரு:-

அ. அனைத்து மனித ஆசிரியர்களுக்கும் அப்பாற்பட்டு, அவர்கள் தங்களுடைய எல்லா அதிகாரத்தையும் பெறுகின்ற ஒரே உண்மையான ஆசிரியராகிய யாவேயைக் கண்டடைவது முக்கியமானதாகும். மோசேக்கும் மற்ற இறைவாக்கினர்களுக்கும் உந்து உணர்ச்சி அளிக்கின்ற அவரது வார்த்தையே, பெற்றோர், குருக்கள் மற்றும் ஞானிகள் முதலிய அனைவருக்கும் அளிக்கின்ற பாரம்பரியத்தின் ஊற்றாக உள்ளது. அவர்களின் மூலமாக, ஞானத்தையும் அறிவையும் மனிதருக்குக் கற்பிக்கின்ற அவரே, அவரது வழிகளையும் சட்டத்தையும் அவர்களை அறியச் செய்கிறார் (சங் 25:9; 94:10 தொ). ஆட்தன்மைப்படுத்தப்பட்ட அவரது ஞானமானது, ஓர் இறைவாக்கினரோ மருத்துவரோ செய்வது போன்று, அவர்களுக்கு அறிவுறுத்தத் தன்னையே அறிவிக்கின்றது (பழ 8:1-11.32-36). இதன் வழியாக அனைத்து நற்பொருட்களும் அவர்களுக்கு வருகின்றன (ஞான 7:11 தொ). இவ்வாறாக ஒவ்வொரு பக்தியுள்ள யூதனும் தனது இளமைப் பருவத்தினின்று இறைவனால் கற்பிக்கப்பட்ட உணர்வினைக் கொண்டிருந்தான் (சங் 71:17). அதற்குப் பிரதிபலனாகத் தனக்கு அவரது வழிகளையும், கட்டளைகளையும், விருப்பங்களையும் கற்பிக்குமாறு அவன் தொடர்ந்து அவரை வேண்டுகிறான் (சங் 25:4; 143:10; 119:7.12). இறைபோதனைக்கு இதயத்தைத் திறப்பதென்பது, சட்டம் மற்றும் இறைவாக்கினுடைய வார்த்தைக் கோட்பாடு அறிவிற்கு அப்பாற்பட்டு செல்கிறது, இறைவனுடைய செய்தியை ஆழமாகப் புரிந்து கொள்ளுதலுக்கும், அதனை வாழ்வில் செயல்படுத்துவதற்கும் இட்டுச் செல்லுகின்ற நெருங்கிய பற்றினைச் சுட்டுகிறது.

ஆ. ஆயினும், இறைவன்பால் இஸ்ராயேலின் மனப்பான்மையானது இத்தகைய இதயப்பணிவை எப்போதும் கொண்டிருக்கவில்லை என்பது தெரிந்ததே. இறைவன் தனது படிப்பினைகளை அறிவிக்கும்போதெல்லாம் அவற்றிற்குச் செவிமடுக்காமல், இறைவனுடைய மக்களின் உறுப்பினர்கள் தங்களுடைய முதுகைத் திருப்பிக் கொண்டனர் (எரே 32:33). எனவே, இறைவன் தமது பிரமாணிக்கமில்லாச் சீடர்கள்மீது எடுத்துக்

காட்டான தண்டனைகளை விதித்தார். இத்தகைய இதயத்தின் கடினத்தன்மையை அகற்ற, இறுதியில் ஒப்பிடமுடியாத ஆசிரியராக மனிதருக்குத் தன்னையே வெளிப்படுத்தப் போவதாகத் தமது இறைவாக்கினர்கள் மூலமாக இறைவன் வாக்களிக்கிறார் (ஏச 30:20-21). ஒருவருக்கொருவர், கற்பிக்காமலே அவரது சட்டத்தை அவர்கள் அறிவதற்கென, அவர்கள் உள்ளாழத்தில் அவர் செயல்புரிவார் (எரே 31:33-34). இவ்வாறு அவரால் நேரடியாகக் கற்பிக்கப்பட்டதன் மூலம், அவர்கள் மகிழ்ச்சியைக் கண்டடைவர் (ஏச 54:13). அவரது இறைபிரதிநிதிகளால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கற்பிக்கும் முயற்சியையும் உன்னத அருள் பயனுடையதாக மாற்றும். சங்கீத ஆசிரியர்களின் செபமும் இவ்வாறு அருளப்படும்.

II. புதிய ஏற்பாடு:-

அனைவரிலும் மிகப் பெரிய ஆசிரியர் கிறிஸ்துவே. ஆனால், தமது வார்த்தையைத் தமது சீடர்களுக்கு, ஒப்படைப்பதன் மூலம்:, தம்முடையதைத் தொடர்கின்ற போதிக்கும் பணியை அவர் அவர்களுக்கு அளிக்கின்றார்.

1. ஆசிரியராகிய கிறிஸ்து:-

அ. இயேசுவினுடைய பொது வாழ்வின் போது, கற்பித்தலானது அவரது செயலின் முக்கியமான கூறாகும். விழாக் காலங்களிலும் (யோவா 8:20), அனுதினமும் கூட (மத் 26:55) செபக்கூடங்களிலும் (மத் 4:23; யோவா 6:59), கோயிலிலும் (மத் 22:23; யோவா 7:14) கற்பிக்கிறார். அவரது படிப்பினையின் வடிவங்கள், அவர் தமது இளமைப்பருவத்தில் கலந்து பழகிய (லூக் 2:46), சில சந்தர்ப்பங்களில் அவரே வரவேற்ற (யோவா 3:10), ஒருமுறைக்கு மேலாக அவரை வினவிய (மத் 22:16-17.36) இஸ்ராயேலின் ஆசிரியர்கள் பயன்படுத்திய முறைகளுக்கு ஒத்ததாகவே இருந்தன. இவ்வாறு ஆசிரியர் என்று பொருள்படும் ''இராபி'' என்ற பெயர் அவர்களைப் போன்று அவருக்கும் அளிக்கப்படுகிறது. மனிதருக்கு ஒரேயொரு ஆசிரியராகிய இறைவன் இல்லாதது போன்று, ஆசிரியர்பட்டமீது நாட்டம் கொண்ட அக்கால மறைநூல் அறிஞர்களை அவர் கண்டித்தாலும் (மத் 23:7-8) அவர் அதனை ஏற்கிறார் (யோவா 13:13).

ஆ. ஆயினும் மற்றவர்களிடையே ஓர் ஆசிரியராக அவர் கூட்டத்தினருக்குத் தோன்றினாலும், அவர் தம்மை மற்றவர்களிடமிருந்து பல்வேறு வழிகளில் வேறுபடுத்துகின்றார். சில நேரங்களில் ஓர் இறைவாக்கினரைப்போன்று பேசவும் செயல்புரியவும் செய்கிறார். அல்லது மீண்டும் தாம் முழுமைக்குக் கொணர்கின்ற சட்டத்தின் அதிகாரபூர்வமான விளக்கவுரையாளராக அவர் தம்மைக் காட்டுகிறார் (மத் 5:17). இத்தகைய நிலையில், முன்னோரின் அதிகாரத்திற்குப் பின்னால் மறையத் தயாராக உள்ள மறைநூல் அறிஞர்களினின்று மாறுபட்டுள்ளார் (மத் 7:29). தனிச்சிறப்பான அதிகாரத்தோடு அவர் கற்பிக்கிறார் (மத் 13:54). மேலும் அரசு பற்றிய அவரது அறிவிப்புகளைப் பற்றியோ அவரளிக்கின்ற வாழ்க்கை விதிமுறைகளைப் பற்றியோ அவர் பேசினாலும் அவருக்குச் செவிமடுக்கிறவர்களிடையே அவரது போதகம் ஒரு புதுமை மயத்தை உண்டாக்கியது (மாற் 1:27; 11:18). அவர் நிராகரிக்கின்ற பாரம்பரியத்தின் கருத்து, போதக முறைகளிலிருந்து பிரிந்து (மத் 15:1-9), இறைவனுடைய உண்மையான செய்தியை அறியச்செய்து, அதனை ஏற்குமாறு மனிதனை நடத்திச்செல்ல அவர் விரும்புகிறார்.

இ. இத்தகைய புதிய போக்கின் இரகசியம் என்னவெனில், அதிகாரபூர்வமாக ஏற்கப்பட்ட மனித ஆசிரியர்களைப் போலன்றி, அவரது போதகம் அவருடையதாக இல்லாமல், அவரை அனுப்பியவருடையதாக உள்ளதே ஆகும் (யோவா 7:16-17). தந்தை மட்டுமே தமக்குக் கற்பிப்பதாக அவர் கூறுகிறார் (8:28). அவரது படிப்பினையை ஏற்றுக்கொள்வதென்பது இறைவனுக்கே பணிந்திருப்பதாகும். ஆனால் இந்நிலையை அடைவதற்கு இறைசித்தத்தைச் செயல்படுத்தலை நாடுகின்ற இதயத்தினுடைய உறுதியான மனநிலையை ஒருவன் கொண்டிருக்க வேண்டும் (7:17). மேலும்

ஆழமான அளவில், இறைவாக்கினர்களுடைய வாக்குறுதியின்படி, மனிதனை இறைவனுடைய படிப்பினைக்குப் பணிவுகொள்ளச்செய்கின்ற உள் அருளை அவன் பெற்றிருக்கவேண்டும் (6:44-45). இங்கே அருளுடன் இறுகப்பிடிப்புக் கொள்ளும் மனித சுதந்தரத்தின் மறைபொருளை ஒருவன் தொடுகிறான். ஆசிரியராகிய கிறிஸ்துவின் வார்த்தையானது, தெளிவாகக் காண்பது போல நடிக்கின்றவர்களின் தன்னிச்சையான குருட்டுத்தன்மைக்கு எதிராகச் செயல்படுகிறது (9:39 தொ).

2. அப்போஸ்தலிக்க படிப்பினை:-

அ. தமது பொதுவாழ்வின்போது இயேசு, விரிவான படிப்பினையைவிட நற்செய்தியைப் போதிப்பதில் அக்கறைகொண்ட தற்காலிகத் தூதுகளைத் தமது சீடர்களுக்கு அளித்தார் (மத் 10:7). அவரது உயிர்ப்பிற்குப் பின்னரே, அவர்களை ஒரே நேரத்தில் ''போதகர்களாகவும், அப்போஸ்தலர்களாகவும், ஆசிரியர்களாகவும்'' (2 திமோ 1:11) உருவாக்குகின்ற உறுதியான கட்டளையை அவரிடமிருந்து அவர்கள் பெறுவர்: ''போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள்'' (மத் 28:19-20). இத்தகைய பரந்த பரிணாமங்களையுடைய பணியை நிறைவேற்ற, அவர்களுக்கு அனைத்தையும் கற்பிக்கக்கூடிய தூய ஆவியைக் குறித்த காலத்தில் அவர்களுக்கு அனுப்புவதாக அவர் வாக்களிக்கிறார் (யோவா 14:26). கிறிஸ்துவினுடைய முழுமையான சீடர்களாவதற்கென ஆவியின் சீடர்கள் ஆகி, அவர்கள் தங்களிடமிருந்து வராமல், இறைவனிடமிருந்து வரவிருக்கின்ற போதனையை மனிதருக்கு அளிப்பர். இதற்காகவே அவர்கள் அதிகாரத்துடன் பேசக்கூடியவர்களாவர். உலக முடிவுவரை ஆண்டவரே அவர்களுடன் இருப்பார் (மத் 28:20; யோவா 14:18-19).

ஆ. பெந்தகோஸ்தேவிற்குப் பின்னர் அப்போஸ்தலர்கள் கற்பிக்கும் இந்தத்தூதுப்பணியைத் தங்களுடைய இயேசுவின் பெயரால் நிறைவேற்றுகின்றனர் (அ.ப. 4:18; 5:28). அவரது அதிகாரத்தைக் கவசமாகக் கொண்டு அவருடைய சொற்கள் மற்றும் செயல்களைப் பற்றி எடுத்துக்கூறுகின்றனர். இயேசுவைப் போன்று கோயிலிலும் (அ.ப.5:21), செபக்கூடத்திலும் (13:14....), தனி வீடுகளிலும் (5:42) அவர்கள் கற்பிக்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, இக்கற்பித்தலின் குறிக்கோள் மீட்பின் செய்தியைப் போதிப்பதாகும். மெசியாவும் இறைமகனுமாகிய இயேசு, இஸ்ராயேலின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுகிறார். அவரது மரணமும் உயிர்ப்பும் இறைவாக்குகளை நிறைவு செய்கின்றன. வாக்களிக்கப்பட்ட ஆவியைப் பெற்று, தண்டனையினின்று தப்பிப்பதற்கென அவர்கள் மனம்மாறி அவரில் விசுவாசம் கொள்ள வேண்டும் (காண். அப்போஸ்தலர் பணியின் உரைகள்). மனிதரை விசுவாசத்திற்கு நடத்திச்செல்ல எண்ணுகின்ற அடிப்படை உபதேசமானது (அ.ப. 2:22-40) திருமுறைக்குப்பின் இன்னும் ஆழமான போதனையால் நிறைவு செய்யப்படும். அதற்கு முதல் கிறிஸ்தவர்கள் கவனமாய்ச் செவிமடுத்தனர் (2:42). கிறிஸ்தவர்களைச் சேராதவர்களில் சிலர் அதனுடைய புதுமையைக் கண்டு வியப்புற்றனர் (17:19-20). யூத அதிகாரிகள் அதன் வெற்றியைக் கண்டு அஞ்சினர். மறைநூல் அறிஞர்களின் சாதாரணப் பயிற்சியையே பெறாத மனிதருக்கு அதனைத் தடைசெய்ய அவர்கள் முயல்கின்றனர் (4:13; 5:28). ஆனால், அது வீண் முயற்சியே. யூதேயாவில் பரவிய பின்னர், இப்படிப்பினையானது மொத்தக் கிரேக்க உலகில் பெரும் மக்கள் திரளுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அது வார்த்தை (18:11), சான்று நற்செய்தி என்று அடையாளம் காணப்படுகிறது. இதயங்களுக்குள் அது இடம் பெறுகிறதென்றால், ஆவியின் ஆற்றல் துணை செல்வதே அதற்குக் காரணமாகும் (2:17 தொ). இந்த ஆவியின் அபிடேகம் கிறிஸ்தவர்கள் மீது தங்கி, எல்லாவற்றிலும் அவர்களைப் படிப்பிக்கிறது (யோவா 2:27).

இ. மேலும் அதே ஆவியானவர் தமது அருங்கொடைகளால் (1 கொரி 12:8.29),

திருச்சபையில் அப்போஸ்தலர்களைத் தவிரப் போதிக்கும் பணியில் அவர்களுக்கு உதவுகின்ற மற்ற ஆசிரியர்களையும் எழுப்புகின்றார். இவர்கள் இளம் சமுதாயத்தினருக்கு நற்செய்தியின் உட்பொருளைத் தீர்மானித்து விரிவாக்கப் பணிக்கப்பட்ட போதகர்கள் ஆவர் (அ.ப. 13:1; எபே 4:11). அதே நேரத்தில் விசுவாசத்தின் விதிமுறையாகிய கோட்பாட்டின் உருவம் வடிவமைக்கப்படுகிறது (உரோ 6:17). மேய்ப்புப்பணித் திருமுகங்களின் காலத்திற்குள், அது ஏற்கனவே ஒரு பாரம்பரிய அமைப்பைக் கொண்டிருக்கிறது (1 திமோ 4:13.16; 5:17; 6:1 தொ). விசுவாசமானது போலி ஆசிரியர்களால் பரப்பப்படுகின்ற (2 திமோ 4:3:2 பேதுரு 2:1) தவறான அல்லது விளையாட்டுத் தனமான படிப்பினைகளால் அச்சுறுத்தப்படுவதாகக் காணப்படும் போது (உரோ 16:17; எபே 4:3.14; 1 திமோ 1:3; 6:3; திருவெளி 2:14-15.24), இந்த அதிகாரபூர்வ சேமிப்பைப் பாதுகாத்து மற்றவருக்களிப்பது போதகர்களின் முதன்மையான அக்கறைகளில் ஒன்றாக உள்ளது.

கனமேல் (HANAMEL - இறைவன் கருணை மிக்கவர்)

எரேமியா இறைவாக்கினரின் பெரியப்பாவான சல்லூம் என்பவரின் மகன் (எரே 32:7-15). எருசலேம் முற்றுகையிடப்பட்டிருந்தபோது இவரிடமிருந்துதான் எரேமியா அனத்தோத்து என்னுமிடத்தில் ஒரு நிலம் வாங்கினார்.

கனவுகள் (DREAMS)

பண்டைக்காலமும் இக்கால அறிவியலும் மாறுபட்ட காரணங்களுக்காகக் கனவுகளுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கின்றன. பண்டைக்காலமானது இயற்கைக்கு மேற்பட்ட உலகுடன் மனிதன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு வழியை அவற்றில் கண்டது. ஆனால், இக்கால அறிவியலானது மனித ஆளுமையின் ஆழத்தின் வெளிப்பாட்டை அவற்றில் காண்கிறது. இவ்விரண்டு கருத்துக்களும் பொருந்தாதவை அல்ல; இறைவன் மனிதன்மீது செயல் ஆற்றுகிறார் எனில், அது அவனுடைய மனதின் ஆழத்திலாகும்.

1. பழைய ஏற்பாடு:-

இஸ்ராயேலுக்கு முன்சென்றவர்களும், அதனைச் சூழ்ந்த மக்களும் கனவுகளை இறை வெளிப்பாடாகக் கண்டனர். கனவுகளை அதிகாரபூர்வமாக விளக்குபவர்களைத் தங்களது பணியில் வைத்திருக்குமளவிற்கு எகிப்து மற்றும் மெசபொத்தாமியா அரசர்களுக்கு அவை அடிக்கடி நிகழ்ந்தன (ஆதி 41:8; எரே 27:9).

இஸ்ராயேலிலும் வெளிப்பாடானது கனவுகளில் ஏற்பட்டது எனப் பழைய ஏற்பாடு குறிப்பிடுகிறது. இவற்றுடன் இரவில் நிகழும் இறைவனின் வார்த்தைகளும் காட்சிகளும் சேர்க்கப்படவேண்டும். இவ்வெளிப்பாடுகள் சில நேரங்களில் தனி நபர்களுக்கும் (யோபு 4:12-21; சீரா 34:6), யூதரல்லாதோருக்கும் (ஆதி 40-41; தானி 4) உரைக்கப்பட்டன. ஆனால், பெரும்பாலானவை தமது மக்களுக்கான இறைவனின் திட்டத்தைப் பற்றியனவாகவே இருந்தன: அவை மூதாதையருக்கும் (ஆதி 15:12-21; 20:3-6; 28:11-22; 37:5-11; 46:2-4: எலோகிம் மரபில் இவ்வழியிலேயே இது எப்போதும் உள்ளது), கிதயோனுக்கும் (நீதி 6:25-26), சாமுவேலுக்கும் (1 சாமு 3), நாத்தானுக்கும் (2 சாமு 7:4-17), மற்றும் சாலமோனுக்கும் (1 அர 3), அறிவுரை அளிக்கின்றன, வழிகாட்டுகின்றன. நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர், மீட்பின் வருகையைப் பற்றிச் செக்கரியாவிற்கும் (1-6), தானியேலுக்கும் (2:7) கனவுகளில் கூறப்பட்டது. ஆவியைப் பொழியும் காலத்திற்கு யோவேல் கனவுகளை வாக்களிக்கிறார் (3:1).

தங்களுடைய யூதரல்லா அயலாரைப் போன்று, இஸ்ராயேலானது அதிகாரபூர்வ கனவு விளக்குநர்களைக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, சாமுவேல், நாத்தான் மற்றும் சாலமோன் ஆகியோர் எந்த உதவியுமின்றி அவற்றைப் புரிந்து கொண்டனர். மேலும்,

கோவில்லும் அரசவையிலும் இத்தகைய விளக்குநர்கள் காணப்படவில்லை. ஆனால், யூதரல்லாத அரசர்களுக்கு ஆண்டவர் கனவுகளை அனுப்பியபொழுது, யூதரல்லாத விளக்குநர்களுக்கு இயலாத நிலையில், உண்மையான இறைவனின் ஊழியர்களே இவற்றின் மறைபொருளை விளக்கினர் (ஆதி 41; தானி 2:4). இதன் மூலமாக, ஆண்டவர் மட்டுமே மறைபொருளின் தலைவர் என்றும், தமக்குரியவர்களுக்கு அவர் மட்டுமே அவற்றை வெளிப்படுத்தினார் என்றும் அறிந்துகொள்ளுமாறு யூதரல்லாதோர் கட்டாயப்படுத்தப்பட்டனர். மெய்யான மற்றும் போலியான இறைவாக்கினர்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை இறைவாக்கினர்கள் பிரதிபலித்ததுபோன்று, பொய் கூறும் கனவுகளை அவர்கள் கண்டித்தாலும் (உப 13:2-6; எரே 23:25-32; செக் 10:2), தங்களுடைய முன்னோரின் கனவுகளின் இறைதொடக்கத்தை அவர்கள் மறுக்கவில்லை. ஆனால், சாலமோனுக்கும் செக்கரியாவிற்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளிலும், இறைவாக்கினர் காலம் முழுவதிலும் விவிலியமானது கனவுகளைப் பற்றிக் குறிப்பிடாதது தனக்கேயுரிய பொருளைக் கொண்டுள்ளது. இக்காலத்தில் கனவானது தனிநபருக்காக (முற்காலத்தில் மூதாதையர் கனவுகளைக் கண்டனர், ஆனால் அக்காலத்தில் மக்களோ இறைவாக்கு இயக்கமோ இருக்கவில்லை), அல்லது யூதரல்லாதவருக்காக ஒதுக்கப்பட்ட, வெளிப்பாட்டின் இரண்டாம் தர வடிவமாகக் கருதப்பட்டதை இது சுட்டுகிறது. மற்றொரு புறத்தே இறைவாக்கு வார்த்தையானது மக்களுக்கு உரைக்கப்பட்ட மிக உயர்ந்த வடிவான வெளிப்பாடாக இருந்தது.

2. புதிய ஏற்பாடு:-

இயேசு கண்டதாக எந்தக் கனவையும் புதிய ஏற்பாடு கூறவில்லை. இதற்கு அவரது உளவியலைப் பற்றிப் பேசாதது காரணமாக இருக்கலாம். இதைவிட, எவ்வித இடையுதவியும் இன்றித் தந்தையை அறிகிற ஒருவரை அது அவரில் காண்பதும் முக்கிய காரணமாக இருக்கலாம்.

ஆனாலும் புதிய ஏற்பாட்டிலிருந்து கனவுகள் முற்றிலுமாக மறைந்துவிடவில்லை. பெந்தகொஸ்தே நாளில், யோவேலினுடைய இறைவாக்கின் (3:1) நிறைவேற்றம் பற்றிப் பேதுரு குறிப்பிடுவதில், இறுதி நாட்களிலான ஆவியின் வெளிப்பாடாகக் கனவுகள் கருதப்படுகின்றன (அ.ப. 2:17). அப்போஸ்தலர் பணியானது பவுலின் பல இரவுக் காட்சிகளைக் குறிப்பிடுகிறது (16:9-10; 18:9; 23:11; 27:23). இக்காட்சிகள் அப்போஸ்தலரை அவரது பணியில் வலிமைப்படுத்தி வழிகாட்டினாலும், அவருக்கு எவ்விதக் கோட்பாட்டுச் செய்தியையும் கொண்டுவரவில்லை. யூதரல்லாதோருக்கு வெளிப்பாட்டை அளிக்கவும் (மத் 27:19) அல்லது இயேசுவின் குழந்தைப்பருவத்தில் யோசேப்புக்கு வழிகாட்டவும் (1:20; 2:13-19.22: இவை பழைய ஏற்பாட்டு முறையிலமைந்த ஆண்டவருடைய தூதரின் மூன்று காட்சிகள்), பழைய ஏற்பாட்டிலுள்ளவற்றையொத்த பல கனவுகளை மத்தேயு குறிப்பிடுகிறார். இவ்வாறு, பழைய ஏற்பாட்டின் தொடக்க காலங்களில் இறைவனால் உபயோகிக்கப்பட்ட வெளிப்பாட்டின் இவ்வித முறைகளைப் புதிய ஏற்பாடு அறிந்திருக்கிறது. அது இறைவாக்கினர்களைப்போன்று, தனி நபரை (சில நேரங்களில் யூதரல்லாதவரை) ஒளிமயமாக்கக் குறிப்பிடப்பட்ட ஒரு வெளிப்பாட்டினை அவற்றில் காண்கிறது. ஆனால், முழுத்திருச்சபைக்கும் உரைக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவில் மிக உயர்ந்த முறையில் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைக்குக் கீழ்ப்பட்டவைகளாக அவற்றை அது கருதுகிறது.

கனனியா HANANIAH - யாவே கருணைமிக்கவர்)

1. தாவீது காலத்தில் ஏமான் குழுவைச் சேர்ந்த ஒரு பாடகர். ஆலயப் பாடகர்களின் பதினாறாம் பிரிவின் தலைவர் (1 நாள் 25:4.23).

2. ஊசியாவின் படையிலிருந்த படைத் தலைவர்களுள் ஒருவர் (2 நாள் 26:11).

3. எரேமியாவின் காலத்திலிருந்த அரசன் யோயாக்கிமின் உயர் அதிகாரிகளில் ஒருவரான செதேக்கியாவின் தந்தை (*எரே 36:12*).

4. எரேமியாவுக்கு எதிராக இறைவாக்குரைத்த போலி இறைவாக்கினர், கிபயோனைச் சேர்ந்தவர். அசூரின் மகன். இவர் பாபிலோனிய மன்னன் விரைவில் வீழ்ச்சியடைவான் என்றும், யூதாவினின்று பாபிலோனுக்குச் சென்றவர்கள் விரைவில் திரும்பி வருவார்கள் என்றும் எரேமியாவின் இறைவாக்குக்கு எதிராகக் கூறினார் (*எரே 28:1.5.10-17*). இந்த விவரிப்பு எரேமியா காலத்திலிருந்த போலி இறைவாக்கினர்கள் பிரச்சனையைப் பற்றியும், இறைவாக்கினர்களின் அடையாளச் செயல்களின் முக்கியத்துவத்தையும் தெளிவாகக் கூறுகிறது (*எரே 28*). இவர், யோவேயின் வார்த்தையின்படி, இரு மாதங்களுக்குப்பின் இறந்தார் (*28:12-17*).

5. எரேமியா எருசலேமை விட்டுப் பென்யாமின் நாட்டுக்குப் போனபோது, அவர் கல்தேயர் பக்கம் சேரப்போவதாய்க் குற்றம் சாட்டி அவரைப் பிடித்த காவலாளியான இரியாவின் தாத்தா (*எரே 37:13*).

6. தானியேல் நூலில் விவரிக்கப்படும் மூன்று இளைஞர்களில் ஒருவரின் எபிரேயப் பெயர். நெபுக்கதுனேசாரின் அண்ணகர், இவரது எபிரேயப்பெயரைச் சதிரக்கு என்று மாற்றினார் (*தானி 6:6-7.11.19*).

7. செருபாபேலின் மகன். பெலத்தியா, எசாயா ஆகியோரின் தந்தை. இவர் தாவீதின் வழித்தோன்றல் (*1 நாள் 3:19-21*).

8. சாசாக்கின் மகன். பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர் (*1 நாள் 8:24*).

9. பெபாய் குடும்பத்தைச் சேர்ந்தவர். எஸ்ராவின் காலத்தில் புறவினமனைவியரை விலக்கியவர்களில் ஒருவர் (*எஸ் 10:28*).

10. நெகமியாவின் காலத்தில் எருசலேம் மதிலைக் கட்டுவதற்கு உதவிய நறுமணப் பொருள் விற்பனையாளர் (*நெக 3:8*).

11. அரண்மனைத் தலைவன். நெகமியா தன் சகோதரன் கனானியிடமும் இவரிடமும் எருசலேமின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார் (*நெக 7:2*). எபிரேய மொழியில் இந்த வசனத்திற்குக் ''கனானி என் சகோதரன்'' என்று பொருள் அளிக்கலாம். அதாவது ''கனனியா, கோட்டை ஆளுநன்''. எபிரேய மொழியில் கனானி என்பது கனனியா என்பதன் சுருக்கமாகும்.

12. உடன்படிக்கைப் பத்திரத்தில் கையொப்பமிட்ட மக்கள் தலைவர்களில் ஒருவர் (*நெக 10:23*).

13. எருசலேம் மதிலை அர்ப்பணிக்கும் போது எக்காளத்தை ஏந்தி நின்ற குருக்களில் ஒருவர். பெரிய குரு யோயாக்கிம் காலத்தில் எரேமியாவின் வீட்டுத் தலைவர். இவர் செருபாபேலோடு நாடு திரும்பியவர் (*நெக 12:12.41*.

14. நெகமியாவின் காலத்தில் எருசலேம் மதிலைக் கட்டியவர்களில் ஒருவர் (*நெக 3:30*). *10*-இல் கூறப்பட்ட கனனியாவும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம். பட்டியலில் இது தெளிவாக இல்லை. அதேபோல *9;12;14*-இல் காணப்படும் மூவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

15. எஸ்ராவோடு நாடு திரும்பிய ஒரு லேவியர் குடும்பத்தின் முன்னோர் (காண். *எஸ் 8:19*).

கனனேலின் கோபுரம் (TOWER OF HANANEL - கருணைமிக்க இறைவனின் கோபுரம்)

எருசலேம் நகரின் வடக்குக் காப்பரணில் ஒரு கோபுரம். யாருடைய பெயரால் இக்கோபுரம் கட்டப்பட்டது என்பது தெரியவில்லை.

முதலில் எரேமியாவாலும் (*எரே 31:38*), நாடு கடத்தப்பட்டபின், திருத்தி அமைக்கப்பட்ட எருசலேமின் வடகிழக்கு மூலை என்று செக்கரியாவாலும் (*செக் 14:10*) இது குறிப்பிடப்படுகிறது. இது மீன் வாயிலுக்கும் ஆட்டுவாயிலுக்கும் இடையில் அமைந்

திருந்தது (நெக 3:1; 12:39). இது ஆலயத்தின் கோட்டை என்றழைக்கப்பட்டது (2:8). மக்க பேயர்களின் தலைமையகமாகவும் இருந்தது (1 மக் 4:41). யோசிப்பசின் கூற்றுப்படி, இது 4-ஆம் அந்தியோக்கு எப்பிபானால் ஒரு செலூக்கிய அக்ராவாகவும் முதலாம் யோவான் இரிக்கானுவால் கசமோனிய அரணாகவும் கட்டப்பட்டது. இங்கு, ஒவ்வொரு மூலையிலும் ஒரு கோபுரத்தைக் கொண்ட அந்தோனியாக் கோட்டையைப் பெரிய ஏரோது கட்டினார். இவற்றில் உயரமான கோபுரம் ஆலயப் பகுதியைக் கட்டுப் படுத்தியது.

கனானி (HANANI - கருணையுடைய)

1. இறைவாக்கினர் ஏகூவின் தந்தை (1 அர 16:1.7; 2 நாள் 19:2; 20:34). 2 நாள் 16:7-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் இறைவாக்கினர் கனானியும் இவரே. இவர் ஒரு காட்சியாளர். அரசன் ஆசா சிரிய அரசன் பென்-அதாதோடு கொண்டிருந்த கூட்டணியைக் குறை கூறியதால் அவனால் சிறை செய்யப் பட்டார் (2 நாள் 16:7-10)

2. ஏமான் குழுவைச் சேர்ந்த ஆலயப் பாடகர்களில் ஒருவர். தாவீது காலத்தில் ஆலயப் பாடகர்களின் பதினெட்டாம் பிரிவின் தலைவர் (1 நாள் 25:4.25).

3. எஸ்ராவின் காலத்தில் புறவினத்தைச் சேர்ந்த மனைவியரை விலக்கிய குருக்களில் ஒருவர். இம்மேர் குடும்பத்தைச் சேர்ந்தவர் (எஸ் 10:20).

4 அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த யூதர்களைப் பற்றியும், எருசலேமைப் பற்றியும் செய்திகள் கொணர்ந்த இவர் நெகமியாவின் சகோதரர் அல்லது உறவினர் ஆவார். இவர் கொணர்ந்த செய்திகளைக் கொண்டு நெகமியா செயலாற்றத் தொடங்கினார். பிறகு எருசலேமின் ஆட்சிப் பொறுப்பு இவரிடமும் கனனியாவிடமும் ஒப்படைக் கப்பட்டது (நெக 1:2-3; 7:2).

5. நெகமியா காலத்தில் எருசலேமின் மதில் அர்ப்பணிக்கப்படும்போது இருந்த ஒரு பாடகர் (நெக 12:36). மேலே 3-ஆவது எண்ணில் கூறப்பட்டிருப்பவரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

கனான் (HANAN - யாவே கருணையுடையவர்)

1. பென்யாமினின் வழித்தோன்றலும், சாசாக்கின் மகனும் ஆவார் (1 நாள் 8:23).

2. பென்யாமின் குலத்தில், சவுல், யோனத்தான் வழியாக வந்த வழித்தோன்றல்களில் ஒருவர் (1 நாள் 8:38; 9:44).

3. தாவீது அரசனின் படையிலிருந்த வல்லமைமிக்க ஒரு படைவீரர். மாக்காவின் மகன் (1 நாள் 11:43).

4. கோவிலின் கருவூல அறையில் தங்கியிருந்த இறைவாக்கினர் குழுவின் தலைவர். இகிதலியாவின் மகன் (எரே 35:4).

5. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு பாலஸ்தீன நாட்டுக்குத் திரும்பிய ஆலய ஊழியர்கள் குடும்பம் ஒன்றின் தலைவர் (எஸ் 2:46; நெக 7:49).

6. எஸ்ராவால் கூட்டப்பட்ட சபையில் திருச்சட்ட நூலை மக்களுக்கு விளக்கிக் கூறிய லேவியருள் ஒருவர் (நெக 8:7). உடன்படிக்கையில் இவரும் கையொப்பமிட்டார் (நெக 10:10:11). இவர் 9-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

7. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மற்றொருவர் (நெக 10: 22).

8. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பிறிதொருவர் (நெக 10: 26).

9. கருவூல அறைக் கண்காணிப்பாளர்களுக்குத் துணையாக நெகமியாவினால் நியமிக்கப்பட்டவர் சாக்கூரின் மகள் (நெக 13:13).

கனி, பலன். (FRUIT)

சரியான பொருளில் கனிதரும் தன்மையி

னையோ (திருவயிற்றின் கனி:லூக் 1:42), உருவகப் பொருளில் பெறப்படும் விளைவையோ (ஒருவரது செயல்களின் பலன்: எரே 17:10) குறிப்பிட்டாலும், கனி என்ற சொல்லானது உயிர்வாழும் பொருளால் குறிப்பாக ஒரு படைப்பினால், உருவாக்கப் படுவதைக் குறிப்பிடுகிறது. ஏனெனில் இறைவன் மனிதனைப்போல் பயிரிட்டு விதைவிதைத்தாலும் அவர் கனி தருகிறார் என்று நாம் கூறுவதில்லை. மாறாக, அவரது மகிமையை வெளிப்படுத்த வேண்டிய பலனை அவர் அறுவடை செய்கிறார்.

I. கனி கொடுக்கவேண்டிய கடமை:-

ஒவ்வொரு உயிரிலும் வாழ்வின் வித்தைப் பொருத்திய படைப்புச் செயலானது வெற்றிகரமான ஆசியாகும். தங்களது வகைக்கேற்பக் கனி தருகின்ற கனி மரங்களை நிலமானது உருவாக்க வேண்டும் (ஆதி 1:11-12). விலங்குகளும் மனிதனும் ''பல்கிப் பெருகுங்கள்'' என்னும் கட்டளையைப் பெற்றனர் (1:22.28). நிலத்தில் விதைக்கப்பட்ட உயிரானது அளப்பரிய விதத்தில் கனி தருகின்றது. பயிர் செய்பவன் பலனை அறுவடை செய்வான் என்பது வாழ்வின் அடையாளங்களில் ஒன்றாகும் (ஏச 37:30; 1 கொரி 9:7; 2 திமோ 2:6). ஆகவே இறைவன் தமது திராட்சைத் தோட்டத்தின் கனிகளுக்கு உரிமை கொண்டாடுகிறார். எல்லாச் செயலற்ற தன்மையும் கண்டிக்கப்பட வேண்டியது (யூதா 12); கனிகொடாக் கிளைகள் தீயில் போடப்பட்டு எரிக்கப்படும் (யோவா 15:6; மத் 21:41). காய்க்காத அத்திமரம் நிலத்தில் இருக்க எவ்வித உரிமையும் இல்லை (லூக் 13:6-9). இறுதியாக, வியாபாரச் செயல்பாடுகள் பற்றிய பண்டைக்காலக் கிழக்கத்திய அமைப்பின்படி, ''நான் வரும் வரை வாணிகம் செய்யுங்கள்'' என்றும் தனது உடன்பாட்டின்படி வாழாதவரைத் தண்டிக்க உரிமையாளருக்கு உரிமையுண்டு (லூக் 19:13).

II. இறைவனோடு மனிதனின் ஒத்துழைப்பு:-

1. வாழ்வில் ஆண்டவராகிய இறைவன்:- கனிகளை உருவாக்கும் சாதனங்களை அளிக்காமல் இறைவன் தன்னுடைய படைப்புகளிடம் கனிகளைக் கோருவதில்லை. கனியை உருவாக்குவதில் தனது உழைப்பினால் ஒத்துழைப்பதன் மூலம், முதன்மையாக இது இறைவனின் வேலை என்பதை மனிதன் அறியவேண்டும். பேரின்ப வனத்தில் இறைவனால் விடப்பட்ட ஆதாமிற்கு, அத்தோட்டத்தில் பயிர்செய்து, மரங்களின் கனிகளைச் சேகரிக்குமாறு கூறப்பட்டது. ஆனால், வாழ்வின் மரத்தினுடைய கனியைத் தொடவேண்டாமென அவர் தடுக்கப்பட்டார் (ஆதி 3:22). இது மற்றவற்றோடு, இறைவன் மட்டுமே வாழ்வின் மூலம் என்று அவருக்குக் கூறப்படுவதைச் சுட்டுகிறது. தனது வரலாறு முழுவதிலும், தான் கனி கொடுத்தால் அது பசுமையான தேவதாரு மரமாகவும் வாழ்வின் மெய்யான மரமாகவும் உள்ள ஆண்டவருடைய செயலால்தான் என்பதை (ஓசே 14:9) எப்பிராயிம் (''யோசேப்பை விருத்தியாக்குகிறவர்'' என்று பொருள்படுவது ஆதி 41:52) உணர்ந்து கொள்ள வேண்டும் (உப 26:2); எல்லாவற்றிற்கும் மேலாக இத்தகைய வியத்தகு கனியை அளிக்கின்ற மலர்களையுடைய இறைஞானத்தில் புகலிடம் கொண்டிருக்கவேண்டும் (சீரா 24:17).

2. வாழ்வு தரும் நீர்:- அதே இன்பவனத்தில் பயிர் வளர்வதற்கு, மழையைப் பெய்யச் செய்வதும், மண்ணைப் பயன்படுத்த ஒரு மனிதனை உருவாக்கும் இறைவனுக்கு அவசியமாயிருந்தது (ஆதி 2:5). விவிலிய அடையாளவியலின்படி, நீரானது விதையை முளைக்கச் செய்யாவிடில், மனிதனுடைய உழைப்பினால் நிலமானது தன்னுடைய கனிகளை உண்டாக்க முடியாது. நீரில்லாவிடில் நிலமானது தரிசாகவே இருக்கும். அது சோதோமைப் போன்று ''கனித்துப் பழுக்காத காய்களை மரங்கள் தரும் பாலைவனமாகும்'' (ஞான 10:7). ஒரே பிரமாணிக்கமுள்ள பாறையாகிய ஆண்டவர் இன்றி, மனிதனால் கனிதர இயலாது: ''அவர்களுடைய கொடி முந்திரியானது நஞ்சு போன்றது'' (உப 32:32). மழையின் கருணையால் ''நிலமானது தனது கனியைத் தருவதற்கென''

(யாக் 5:17-18), எலியாவைப்போன்று அவனும் செபிக்க வேண்டும். அப்போது நிலமானது இறைவனின் ஆசியைப் பெற்று, பயன்தரும் பயிரை முளைப்பிக்கும் (எபி 6:7-8). மற்றும், ''நீரருகில் நடப்பட்ட மரத்தைப் போன்று'' (எரே 17:8; சங் 1:3) நீதிமான் ''முதிர்வயதிலும் பலனளிப்பார்'' (சங் 92:14).

3. மனிதனின் பங்கு:- நீரானது எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனைச் சார்ந்துள்ளதெனில் நிலத்தைத் தேர்ந்தெடுத்துப் பயிர் செய்வது மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ளது. முற்களின் நடுவே விதைக்கப்பட்ட விதையானது முதிர்ச்சியடைவதில்லை (லூக் 8:14); மற்றும், அது விழுகின்ற மண்ணின் தரத்திற்கேற்பப் பலன் தரும் (மத் 13:8). ஆனால் ஒவ்வொரு முறையும் வளர்ச்சியானது மனிதனுடைய முயற்சிகளைச் சார்ந்திருப்பதில்லை; நிலமானது தானாகவே தனது கனிகளை உருவாக்குகிறது (மாற் 4:26-29). ஞானத்தைப் பயிர் செய்ய உழைக்கவேண்டியது அவசியம் என்பதில் எச்சந்தேகமும் இல்லாவிடினும், அதனுடைய சிறப்புமிக்க கனிகளை ஒருவன் கணிக்கலாம் (சீரா 6:19). அதே சமயத்தில் உழைப்பினாலான பணியின் படிப்பினையும், கனிகளுக்காகக் காத்திருப்பதனுடைய பொறுமையின் படிப்பினையும் உள்ளது.

III. நல்ல மற்றும் கெட்ட கனி:-

தனக்கெனக் குறிக்கப்பட்ட வாழ்வின் கனியை இறைவனிடமிருந்து பெறுவதை மட்டுமே விரும்பாமல், ஆதாம், ''பார்வைக்கு அழகிய, நாவிற்கு இனிய'' தோட்டத்து மரங்களுக்குப் பதிலாகச் (ஆதி 2:9) சபிக்கப்பட்ட நிலத்தில் பயிர் செய்யுமாறு தான் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறார். அது முட்களையும் முட்செடிகளையும் விளைவிக்கும் (ஆதி 3:18). நன்மை, தீமை பற்றி அறியும் மரத்தின் கனியைச் சுவைத்த பின்னர், நன்மை எது தீமை எது என்பதைத் தனக்கே தீர்மானிப்பதாக ஆதாம் நடிக்கிறார். அவருடைய கண்களிலேயே அவரது செயலானது பொருள் மயக்கமுள்ளதாக உள்ளது. ஆனால், மனிதனைச் சோதித்தறியும் இறைவன் தமது தோட்டமாகிய இஸ்ராயேல் அளிக்கின்ற கனியின்படி அதைத் தீர்ப்பிடுகிறார். அதனின்று திராட்சைக்கனிகளை எதிர்பார்க்க அவை காட்டுக் கனிகளாக இருப்பதைக் கண்டார் (ஏச 5:1-7). இதயத்தின் எண்ணங்களை உலகம் வெளிப்படுத்துவதுபோலக் கனியானது பழத்தோட்டத்தின் தரத்தை அறிவிக்கிறது (சீரா 27:6). ஆபிரகாமின் பிள்ளைகள் என்று கூறிக்கொண்டு, எவ்வித நற்கனியும் தராதவர்களுடைய பொய்த்தோற்றத்தினைத் திருமுழுக்கு யோவான் வெளிப்படையாகப் பழித்துரைக்கிறார் (மத் 3:8 தொ). ''தன்னுடைய கனியினாலேயே மரமானது அறியப்படும்'' என்று போதிக்கும் இயேசு, பரிசேயத் தோற்றத்தின் கீழுள்ள கொடிய சத்தை வெளிப்படுத்துகிறார் (மத் 12:33 தொ). போலி இறைவாக்கினர்களைக் கண்டறியுமாறு அவர் தமது சீடர்களுக்குப் போதிக்கிறார். ''அவர்கள் கனிகளைக்கொண்டே அவர்களை அறிந்து கொள்வீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையோ, முட்புதர்களில் அத்திப்பழங்களையோ பறிப்பதில்லை'' (மத் 7:16). மிகப்பொதுவாக ''வாழ்விற்குக் கனிகொடுக்க வேண்டிய'' சட்டத்தில் ''சாவிற்குக் கனிதர'' விரும்பும் மனிதனின் இதயத்தில் தெளிவற்ற தன்மை நிலவுகின்றது (உரோ 7:4 தொ).

IV. கிறிஸ்துவின் ஆற்றலும், ஆவியின் கனியும்:-

ஆனால், கிறிஸ்து இத்தெளிவற்ற தன்மைக்கு அடிபணிந்தார். ''கோதுமைமணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால்தான், மிகுந்த பலனளிக்கும்'' (யோவா 12:24) என்று, உலகிற்குமுன் தாம் அறிவித்த பலனளிப்பதன் சட்டத்தின்படி அவர் வாழ்ந்தார்; அது பலியின் நேரத்தை ஏற்றுக்கொண்டு, தந்தையால் மகிமைப்படுத்தப்பட்டதாகும். கிறிஸ்துவின் மூலமாக இயற்கையின் சட்டமானது, கிறிஸ்தவ வாழ்வின் சட்டமாக உருவாயிற்று. ''நானே உண்மையான திராட்சைக்கொடி; என் தந்தையே பயிர் செய்ப

வர்; என் கிளைகளில் கனிகொடாத எக்கிளையையும் அவர் தறித்துவிடுவார்'' (யோவா 15:1-2); கனி தருவதற்கு அது கொடியிலேயே இருக்கவேண்டும் (15:4); அதாவது, கிறிஸ்துவிற்கு விசுவாசமாக இருக்கவேண்டும். இயேசுவுடனான ஒன்றிப்பானது பலனுள்ளதாகவும், தாராளமானதாகவும் இருக்கவேண்டும்: ''கனி தரும் கிளையையோ மிகுந்த கனி தரும்படி கழித்துவிடுவார்'' (15:2). அபரிமிதமாகப் பலன் அளிப்பது சீடனையும், அவனது பொறுமையினையும் தொடர்ந்து தூய்மைப்படுத்துவதை முன்கொண்டுள்ளது. இதுவே இறைவழி ஆகும் (லூக் 8:15). ''கடவுளின் மகிமைக்காகவும் புகழுக்காகவும் கிறிஸ்துவின் மூலம் நாம் கொண்டுள்ள நீதியின் கனியானது முழுமுதிர்ச்சிக்குப்'' பின்னர் வந்துசேரும் (பிலி 1:11; யோவா 15:8).

இறுதிக்காலம் பற்றிய இறைவாக்கானது அப்போது நிறைவேறும். முன்னர் மாட்சிமிக்கதாயிருந்து (யாத் 17:8), பின்னர் உலர்ந்து போன (19:10-14; ஓசே 19:1; எரே 2:21) இஸ்ராயேலின் திராட்சைத் தோட்டமானது தனது கனியை மீண்டும் அளிக்கும். மற்றும் நிலமும் அதனுடைய விளைச்சலை அளிக்கும் (செக் 8:12). ஒருவன் ஞானத்தினால் போதையூட்டப்பட்டவனாகவும் (சீரா 1:16), வாழ்வின் ஊற்றாகவும் உருவாகலாம்; ''நீதிமானுடைய கனி வாழ்வு தரும் மரமாம்'' (பழ 11:30). கிறிஸ்துவினுடைய உயிர்ச்சத்தால் விளைவிக்கப்படும் ஆவியினுடைய கனியின் உட்பொருளைக் குறிப்பிட புதிய ஏற்பாடு நம்மை அனுமதிக்கிறது. இது பலவகையானதல்ல, ஆனால் பலுகக்கூடியது; எல்லாவிதமான குணநலன்களாகவும் விரியக்கூடிய அன்பு ஆகும் (கலா 5:22-23). அன்பு என்பது துணையாளருடைய ''நாவுக்கு இனிப்பாக உள்ள'' பழம் மட்டுமல்ல (உ.ச. 2:3). அன்புக்குரியவரே ''தம் தோட்டத்திற்கு வந்து அதன் சுவைமிக்க கனிகளைச் சுவைப்பார்'' (4:16). காலத்தின் இறுதியில், காலங்களின் வரிசைமுறையானது புதுப்பிக்கப்படுவதை இறைவாக்கினர் கண்டார் (ஆதி 8:22; அ.ப. 14:17). பரிசுத்த இடத்திலிருந்து புறப்பட்டு வரும் வெள்ளத்தின் ஓரமாய் நிற்கும் மரங்கள் மாதந்தோறும் புதிய கனிகளைக்கொடுக்கும் (எச. 47:12). இக்காட்சியைப் பேரின்ப வனக் காட்சியுடன் இணைப்பதன் மூலம் திருவெளிப்பாடானது, யூதரல்லாதோரையும் குணப்படுத்த வல்லதாக உள்ள சிலுவை மரமாக உருவாகிய வாழ்வின் ஒரு மரத்தைப் பற்றியே சிந்திக்கிறது (திருவெளி 22:2).

கனிஉலோகக் கலவை (ORE)

உலோகங்கள் பிரிக்கப்படும் பாறை. யோபு 28:3-இல் ''மனிதர்கள் எட்டின மட்டும் மண்ணில் வெட்டிச் சென்று இருட்டிலும் காரிருளிலும் உலோகங்களைத் தேடுகின்றார்கள். மனிதர்கள் வாழுமிடத்திற்குத் தொலைவிலுள்ள பள்ளத்தாக்குகளில் சுரங்கங்கள் தோண்டுகிறார்கள்'' என்ற குறிப்பைக் காண்கிறோம்.

கனுக்கா (HANUKKAH - திருநிலைப்படுத்துதல், அர்ப்பணித்தல்)

மறு அர்ப்பணிப்புத் திருவிழா. கி.மு. 165-ஆம் ஆண்டில், யூதா மக்கபேயு புறவினத்தாரின் வழிபாடுகளை ஒழித்து ஆலயத்தைப் புனிதப்படுத்தினார். ஆண்டுதோறும் கிசிலேவு (டிசம்பர்) மாதத்தின் 25-ஆம் நாளை இதன் நினைவு நாளாகக் கொண்டாடினார்கள். காண்க அர்ப்பண விழா.

கனூன் (HANUN - சலுகைபெற்ற)

1. அம்மோனியர்களின் அரசன். நாகாசின் மகன். தாவீதின் ஊழியர்களை அவர் அவமானப்படுத்தியதால், இஸ்ராயேலர்கள் இரபா நகரை முற்றுகையிட்டனர். கனூன் அதாதெசரைத் துணைக்கு அழைத்தார். இந்த முற்றுகை அரமேயப்போர்வரை தள்ளிவைக்கப்பட்டது (2 சாமு 10:1-14). இறுதியில் இஸ்ராயேலர்கள் இரபா நகரைக் கைப்பற்றி அதன் மக்களை அடிமைகளாக்கினர் (2 சாமு 11:1; 12:26-31). கனூனுக்குப் பதிலாக அவருடைய தம்பி சோபியைத் தாவீது அரசனாக நியமித்தார் (2 சாமு 17:27).

2. சானோவாகு ஊரைச் சேர்ந்த இவர் நெகமியாவின் காலத்தில் எருசலேம் மதி

லைக்கட்ட உதவினார் (நெக 3:13.30). நெக 3:30-இல் இவர் 'சாலாப்புவின் ஆறாவது மகனான கனூன்' என்று அழைக்கப்படுகின் றார். தலைமுறைப் பட்டியல்களில் இவர் பெயர் காணப்படவேயில்லை. எனவே, 'சானோவகு ஊரார்' என்பதே மருகி இவ்வாறு வந்திருக்கலாம்.

3. சாலாப்புவின் ஆறாவது மகன். எருச லேம் சுவர்கள் மீண்டும் கட்டப்பட்டபோது உதவியவர் (நெக 3:30). இவரும் 2-இல் கூறப்படுபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

கனோக்கு (HANOCH - ஞானி, அர்ப்பணிக் கப்பட்ட)

1. மிதியானின் மகனும் ஆபிரகாம், கெத் தூரா ஆகியோரின் பேரனுமாவார் (ஆதி 25:4; 1 நாள் 1:33).

2. யாக்கோபின் மூத்த மகனான ரூபனின் மூத்தமகன் (ஆதி 46:9; யாத் 6:14; 1 நாள் 5:3). இவரது வழித்தோன்றல்கள் கனோக்கி யர் என்றழைக்கப்பட்டனர் (எண் 26:5).

கன்று போடாத இளம்பசு (HEIFER)

இத்தகைய இளம்பசு புணையடிக்கவும் (ஓச 10:11; உப 25:4) மற்ற விவசாய வேலை களுக்கும் பயன்பட்டது. இறைவன் ஆபிரகா முடன் செய்த உடன்படிக்கையில் மூன்று வயதுள்ள இளம்பசுவும் இடம் பெற்றது (ஆதி 15:9). சாமுவேல் ஓர் இளம் பசுவைப் பலியிட்டார் (1 சாமு 16:2). கொலை செய்த வன் இன்னாரென்று தெரியாத கொலைக் குப் பரிகாரம் செய்தலில், ''நுகத்தடியில் இன்னும் பிணைக்கப்படாததும் கலப்பை யால் நிலத்தை உழாததுமான'' இளம் பசு வின் தலை வெட்டப்பட்டது (உப 21:1-9).

சிம்சோன் தன் பெலிஸ்திய மனைவியைக் குறிக்கவும் (நீதி 14:18) எகிப்தையும் (எரே 46:20), பாபிலோனையும் (50:11), கட்டுக் கடங்காத இஸ்ராயேலையும் (ஓசே 4:6), பணி வுடைய எப்பிராயிமையும் (10:11) உருவக மாகக் குறிக்கவும் இளம்பசு பயன்படுத்தப் பட்டுள்ளது. கண்ட இடத்தில், புல் தின்னும் இளம்பசு அழிவழக்கத்தின் அடையாளமாகி றது (எரே 50:11).

இடப்பெயரான எகிலாத்து-செலிசியாவை (ஏச 15:5; எரே 48:34) ''மூன்று வயதுள்ள இளம்பசு'' என்று சில வாசகங்கள் மொழி பெயர்க்கின்றன.

கன்னாத்தோன் (HANNATHON - கருணை யுடைய, தயவுடைய)

செபுலோன் புதல்வர்கள் வாழ்ந்த நாட் டின் எல்லையில் அமைந்த ஒரு நகரம் (யோசு 19:14). கி.மு. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமர்னா கற்பலகையில் இருமுறை யும், மூன்றாம் திகிலாத்துபிலேசாரின் வாழ்க்கைக் குறிப்பில் ஒரு முறையும் இந் நகர் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேல் ஏல்-பெதைவியே பகுதியில் இந் நகர் இருந்திருக்கலாம். இப்பகுதி நசரேத் துக்கு வடக்கே ஏறக்குறைய 9-கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நகர் ஆக்கோ சமவெளியின் தென் எல்லையில் உள்ள ஏல் கார்பாசு என்ற இடத்தில் இருந்ததாகச் சிலர் வாதாடுகின்றனர்.

கன்னான் (COPPERSMITH)

வெண்கலம் அல்லது செம்பு உலோகத் தைப் பயன்படுத்தி வேலை செய்யும் கொல் லன். 2 திமோ 4:14-இல் குறிக்கப்படும் அலக்சாந்தர் ஒரு கன்னான் ஆவார். இவர் திருமுகத்தின் ஆசிரியருக்குப் பெரும் தீங்கி ழைத்தார்.

சொற்பொருளியல்படி இவ்வகைக் கொல் லர்கள் கேனியர் என்றழைக்கப்பட்டனர்.

கன்னிமை (VIRGINITY)

பண்டைக்காலச் சமயங்களில் கன்னிமை சிறப்பானதொரு புனிதத்தன்மையைப் பெற் றிருந்தது. அனத்து, அர்திமிஸ், அத்தினா போன்ற அக்காலத் தேவதைகள் தங்களது நிரந்தரமான இளமைப்பருவத்தையும், வலி மையும் பொலிவையும் அவர்தம் அழியா மையையும் உறுதிப்படுத்தும் வகையில் 'கற்பு நிறை கன்னியர்' என்றே அழைக்கப்

பெற்றனர். இத்தகைய கன்னிமைக்கு நிறைவான மறைபொருள் கொடுத்து, பழைய ஏற்பாட்டில் கண்டதுபோல், ஒவ்வொரு மனிதனும் தனது விசுவாசம் அன்பின் அடையாளமாக இறைவனுக்குப் படைக்கக்கூடியதொரு ஒப்பற்றபொருள் கன்னிமை என உலகறியச் செய்தது கிறிஸ்துவத் திருவெளிப்பாடேயாகும்.

I. பழைய ஏற்பாட்டில் காணும் கற்பு:-

1. மலட்டுத் தன்மையும் கன்னிமையும்:-

பண்டைக்கால இறைமக்களின் பண்பாட்டில் கன்னிமை மலட்டுத்தன்மைக்கு நிகராகக் கருதப்பட்டது. மலட்டுத்தன்மை ஓர் இழிவானதாகவும் வெட்கத்திற்குரியதாகவும் கருதப்பட்டது (ஆதி 30:23; 1 சாமு 1:11; லூக் 1:25). இதனை இபிதாகுவின் மகள் மகப்பேறு அடையா நிலையில் மரணத்திற்குத் தீர்வையிடப்பட்டபோது, அவள் தன் கன்னிமைக்காக நான்கு மாதங்கள் வருந்தியழுதாள் (நீதி 11:37); ஏனெனில் அவள் மகப்பேற்றிலும் (சங் 127:3), இறைவனின் கிருபையிலும் (சங் 128:3-6) பங்கு பெறமாட்டாள், என்பதிலிருந்தும் அறியலாம். இருந்தபோதிலும் திருமணத்திற்கு முன்னால் கன்னிமையுடையவராய் இருப்பது சிறப்பாகக் கருதப்பட்டது (ஆதி 24:16; நீதி 19:24). உதாரணமாகத் தலைமைக்குரு (லேவி 21:13 தொ) சாதாரண குருகூட (எச 44:22; லேவி 21:17) ஒரு கன்னிகையை மட்டுமே மணக்க முடியும். ஆனால் சிற்றின்ப எல்லைக்குள், சடங்கு முறைத்தூய்மைக்கே அக்கறை காட்டியது (லேவி 12:15). கன்னிமைக்கு உண்மையான அக்கறை காட்டவில்லை.

கிறிஸ்துவத்தின் கன்னிமை குறித்த முன்னேற்பாடானது இறைவனது வாக்குறுதியிலும் அவரது உடன்படிக்கையின் சூழ்நிலையிலும் காணப்படுகிறது. மலடாயிருந்த பெண்டிரை மகப்பேறு பெறச் செய்கிறதன் மூலம், வாக்குறுதியளிக்கப்பட்ட மக்கள், ஆக்க வளமுடையதும் மகப்பேறளிக்கிறதுமான சாதாரண வழிமுறைகளின் மூலம் அல்லாது, ஆண்டவர்தம் சக்திவாய்ந்த முடிவில்லாத் தலையீட்டின் காரணமாகவே உயர்த்தப்படுகிறார்களென்பதை உணர்த்த விரும்புகிறார் இறைவன். மலட்டுத்தன்மையுடையோருக்குக் காட்டப்படும் செயல் நோக்குடைய இந்தச் சலுகையில் இறைவனுடைய தேர்வின் பலன் கருதாமை வெளிப்படுகிறது.

2. தானாக விரும்பி முன்வரும் தன்னடக்கம்:-

கன்னிமை பற்றிய இத்தகைய முக்கிய கருத்தைத் தவிர்த்து, சுயதன்னடக்கத்தைப் பற்றிய வேறுபல நிகழ்ச்சிகளும் காணக் கிடக்கின்றன. இறைவனின் கட்டளைப்படி எரேமியா தன் திருமணத்தைத் துறக்கவேண்டும் (எரே 16:2); ஆனால் இஸ்ராயேல் மக்களுக்கு அண்மையில் நடக்கவிருக்கும் தண்டனையைப் பறைசாற்றும் ஓர் அடையாளச் செயலாகவே இது இருக்கிறது (16:3 தொ; 10-13). கட்டுப்பாட்டுடன் வாழும் எஸ்ஸேனியர் என்ற யூதத் துறவியர் சட்டத்தின் அடிப்படையினாலான தூய்மை கருதியே தன்னடக்கத்தோடு வாழ்வதாகத் தோன்றுகின்றனர்.

கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகள் சமயப் பொருளும் தனிச் சிறப்பும் கொண்டிருக்கின்றன. தெபோரா (நீதி 5:7) என்பவள் ஒரு காலத்தில் இருந்தது போலவே, யூதித்து என்பவளும் தான் மேற்கொண்ட கைமையினாலும், நோன்பினாலும் (யூதி 8:4 தொ; 16:22), தனது இனததார்க்கெல்லாம் தாயாகும் தகுதியுடையவளானாள் (16:4.11.17). அவளுடைய வாழ்க்கை முறையானது புதிய ஏற்பாட்டில் கைமை வாழ்வுக்கும் கன்னிமைக்கும் அளிக்கப்பட்ட சாதாரண மரியாதைக்குத் தயாரிக்கிறது. புதிய ஏற்பாட்டில் அன்னா என்பவள் ஆண்டவரோடு நெருங்கி நிலைத்திருக்க எண்ணி மறுமணத்தை மறுக்கிறாள் (லூக் 2:37). மீட்பரின் வருகைக்காகத் தயார் செய்யும் வகையில் கடுந்துறவினை மேற்கொள்ளும் திருமுழுக்கு யோவான், தன்னை மணமகனின் நண்பன் என அழைக்கத் துணிகிறார் (யோவா 3:29).

3. இறைவனுக்கும் இறைமக்களுக்கு மிடையேயான திருமணம்:-

மேற்கண்டபடி, மீட்பரின் முன்னோடியான திருமுழுக்கு யோவான் இறைவனுக்கும் அவர்தம் மக்களுக்குமிடையே திருமண உறவுகள் பற்றிய இறைவாக்குப் பாரம்பரியத்தின் வாரிசாகக் காண்பிக்கப்படுகிறார். இதுவே கிறிஸ்துவக் கன்னிமைக்கு முன்னேற்பாடாக இருந்தது. இறைவாக்கினர், பெரும்பாலும் வென்றடைந்த நாட்டிற்குக் (*ஏச 23:12; 47:1; எரே 46:11*) குறிப்பாக இஸ்ராயேல் நாட்டிற்கு (*ஆமோ 5:2; ஏச 37:23; எரே 14:17; 1:15; 2:13*), கன்னி என்ற பெயரையே சூட்டுகின்றனர். இது இஸ்ராயேல் நாட்டின் முழுமை இழந்தமை குறித்தெழும் புலம்பலாகவே இருக்கிறது. இது போன்றே, இஸ்ராயேல், உடன்படிக்கையை மீறியபோது அவளுடைய விசுவாசம் எப்படி இருந்திருக்கவேண்டுமென்பதை நினைவு படுத்துவதுபோல, எரேமியா இறைவாக்கினர், அவளைக் ''கன்னி இஸ்ராயேல்'' (*எரே 18 : 13*) என்றே அழைக்கின்றார். இதே பட்டம் பின்னர்க் கடவுளுக்கும் அவர்தம் மக்களுக்குமிடையேயான அன்பு, பிரமாணிக்கம் என்னும் உறவானது புதுப்பிக்கப்படும் தறுவாயில் மீண்டும் குறிப்பிடப்படுகிறது (*எரே 31:4,21*). இளம் ஆண் பெண் இருவருக்கிடையே நிகழும் திருமணமானது, கடவுளுக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையே மெசியாக் காலத்தில் நடக்கும் திருமணத்தைக் குறிப்பதாக ஏசயா இறைவாக்கினர் எண்ணுகிறார் (*ஏச 62:5*). தனிப்பட்டதொரு உரிமையின் மூலம், இறைவன், தன் மக்கள், தன்மட்டில் கொண்டுள்ள முழு அன்பினையும், தனக்கென ஒதுக்கிவைக்குமாறு அவர்களைத் தயார் செய்கின்றார்.

II. புதிய ஏற்பாடு:-

கிறிஸ்துவின் காலத்திலிருந்தே, கன்னியான இஸ்ராயேல் 'திருச்சபை' என அழைக்கப்படுகின்றாள். கன்னிமை கொள்ளவிரும்பும் விசுவாசிகள் திருச்சபையின் கன்னிமையில் பங்கு கொள்கின்றார்கள். கன்னிமையானது, தன்மையாலே இறுதிக்கால இயல் உண்மையாகும். மெசியாத் திருமணத்தின் இறுதி நிறைவில் மட்டுமே தனது முழுப் பொருளையும் அடைகிறது.

1. கன்னித் திருச்சபை, கிறிஸ்துவின் துணைவி:- பழைய ஏற்பாட்டில் காணப்படுவது போலவே, புதிய ஏற்பாட்டிலும் கன்னிமையின் தலைமைக்கருத்து இறைவனுக்கும் இறைமக்களுக்குமிடையேயான மண ஒப்பந்தக் கருத்தைக் குறிப்பதாக இருக்கிறது. ஏனெனில், கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையேயுள்ள ஒன்றிப்பு, மண உறவால் அடையாளப்படுத்தப்பட்டாலும், கன்னிமை ஒன்றிப்பாக இருக்கிறது. ''கிறிஸ்து திருச்சபையை நேசித்தார், அதற்காகவே தம்மைக் கையளித்தார்'' (*எபே 5:25*). கொரிந்து நகரிலிருக்கும் கடவுளின் திருச்சபையைக் கிறிஸ்துவோடு மண ஒப்பந்தத்தில் பிணைக்கும் புனித பவுல், அதனைக் கற்புள்ள கன்னியாகவே நிறுத்த விரும்புகிறார் (*2 கொரி 11:2; எபே 5:27*). அத்திருச்சபையின் மட்டில் கடவுள் கொண்டிருக்கும் அன்பார்வத்தைப் போலவே தானும் கொண்டிருப்பதால் (*2 கொரி 11:2*), புனித பவுல், அத்திருச்சபையைச் சார்ந்த மக்களின் விசுவாசத்திற்கு எவ்விதக் களங்கமும் எவரும் விளைவிக்க விரும்பவில்லை.

2. மரியாளின் கன்னிமை:- திருச்சபையின் கன்னிமையானது சீயோன் மகளான கன்னி மரியாளிடத்தில் உருவாகும் இரு உடன்படிக்கையின் பிணைப்பில் செயல்படத் தொடங்குகிறது. புதிய ஏற்பாட்டில் 'கன்னி' என்ற பெயர் சூட்டப்படுபவள், இயேசுவின் அன்னையாகிய மரியாள் மட்டுமே (*லூக் 1:27; மத் 1:23*). அவள் தனது கன்னிமையைப் பாதுகாக்க விரும்பி (*லூக் 1:34*), மகப்பேறில்லா அநேகப் பெண்களோடு தன்னையும் ஒருத்தியாகக் கருதிக் கொண்டாள். ஒரு காலத்தில் தாழ்வுக்குரியதாக இருந்தது பின்னர் அவளுக்குப் பெரும் பேற்றினைத் தரவிருந்தது.

ஒரு காலத்தில் சிறுமையெனக் கருதப்பட்டது, பின்னர் மரியாளுக்கு முன்னமே தீர்வு

செய்து வைக்கப்பட்டதொரு அருள் வளத்தைத் தரக்கூடியதாக இருந்தது (லூக் 1:48). தூதரது வருகைக்கு முன்னால் மரியாள் கடவுளுக்கே முழுவதும் சொந்தமானவளாக இருக்க விரும்பினாள். மங்கள வார்த்தையின்போது (லூக் 1:38) அவள் கொடுத்த ஒப்புதலின்மூலம் மரியாள், இறைமகனுக்கு முழுமையாகவும் பிரிக்க முடியாதவிதத்திலும், அர்ப்பணிக்கப் பட்டவளாயிருக்கின்றாள். பழைய ஏற்பாட்டில் நீண்டகாலமாகத் தயார் செய்யப்பட்டு வந்த கன்னிமையானது, புதிய ஏற்பாட்டில், கடவுளின் மகனுக்குத் தாயான மரியாளின் கன்னிமையில் நிறைவு பெறுகின்றது. இதுபோன்றே மகப்பேறில்லாப் பெண்களின் வேண்டுதலும் கேட்கப்பெற்று அவர்தம் மகப்பேற்று விருப்பமும் இறைவனால் நிறைவேற்றப் படுகிறது.

3. கிறிஸ்துவ மக்களின் கன்னிமை:- திருமுழுக்கு யோவானும் மரியாளும் கன்னிமையில் நிலைத்திருந்தது போலவே, தானும் நிலைத்திருந்துகொண்டு, அக்கன்னிமையின் உண்மையான பொருளையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட அதன் சிறப்பியல்புகளையும் வெளிப்படுத்தியவர் கிறிஸ்துவே ஆவார். கன்னிமை என்பதானது ஒரு கட்டளையன்று (1 கொ 2:25). ஆனால் கடவுளிடமிருந்து வரும் நேரடி அழைப்பாகும். அதுவொரு தனிப்பட்ட வரம் (1 கொரி 7:7). ''பிறவியிலேயே அண்ணகராகப் பிறந்தவரும், பிற மனிதரால் அவ்வாறு ஆக்கப்பட்டவருமேயல்லாது விண்ணரசை முன்னிட்டுத் தம்மைத் தாமே அண்ணகராக ஆக்கிக் கொண்டவரும் உளர்'' (மத் 19:12). விண்ணரசு ஒன்றே கிறிஸ்துவக் கன்னிமையை நேர்மையென்று எண்பிக்கிறது. தனிப்பட்ட வரம் பெற்றவர் மட்டுமே இதனையுணர்ந்து கொள்ளுதல் முடியும் (மத் 19:11).

கன்னிமையைக் கைக்கொண்டவர் கடவுளோடு பிளவுபடாது காலமெலாம் கலந்து இருப்பதால், கன்னிமையானது திருமணத்தைக் காட்டிலும் உயர்வாக இருப்பதாகக் காண்கின்றார் புனித பவுல் (1 கொ 7:32-35). ஆகையால் திருமணமானவர்களின் மனம் பிளவுபட்டபோதிலும், மணமாகாது கன்னிமை பூண்டவரது இதயம் கிறிஸ்துவுக்கு முழுவதுமாக அர்ப்பணிக்கப்பட்ட நிலையில், பிளவுபடாமலிருந்து கடவுளுக்குரியவற்றில் கருத்தாயிருக்கும். இத்தகையோர் கடவுளுக்குப் புறம்பான காரியங்களைச் சகித்துக் கொள்ளமாட்டார்கள்.

புனித மத்தேயு எழுதிய நற்செய்தியில் வரும், 'விண்ணரசை முன்னிட்டு' (மத் 19:12) என்னும் இயேசுவின் வார்த்தையானது, கன்னிமைக்கு அதனுடைய உண்மையான இறுதிக் காலவியல் பருமனைத் தருகின்றது. ''இப்போதுள்ள நெருக்கடியை முன்னிட்டும்'' (1 கொரி 7:26) குறுகிய காலத்தை முன்னிட்டும் (7:29) கன்னிமையே பொருத்தமானதெனப் புனித பவுல் கருதுகின்றார். இல்லறத்தைத் தெரிந்துகொண்டோர், இவ்வுலகத்திற்குக் கட்டுப்பட்டவராயிருக்கின்றனர்; ஆனால் இவ்வவுலக அமைப்போ கடந்து கொண்டே செல்கிறது (7:31). கன்னிமையைக் கைக்கொண்டோர் இக்காலத்தோடு பற்றற்றவராயுள்ளனர். உவமையில் வருவது போன்று (மத் 25:1-6) அவர்கள் மணாளனையும் விண்ணரசையும் எதிர்பார்த்திருக்கின்றனர். திருச்சபையின் கன்னிமையின் நிரந்தர வெளிப்பாடாகக் கன்னிமை பூண்டவரின் வாழ்க்கையானது, கிறிஸ்துவர்கள் இவ்வுலகத்தைச் சார்ந்தவர்களல்லர் என்பதற்குச் சாட்சி கூறுகிறது. கன்னிமையானது திருச்சபையின் இறுதிக்காலவியல் நெருக்கடி நிலையின் நிரந்தரமானதொரு அடையாளமாக இருக்கின்றது; உயிர்த்தெழுதலின் முன் எதிர்பார்த்தலாகவும் உள்ளது. அதிலே, வரும் உலகத்திலே பங்கு பெறத் தகுதிபெற்றோர் வானதூதரைப் போன்றும் இறைவனது புதல்வர்களைப் போன்றும் இருப்பர் (லூக் 20:34 தொ).

ஆகையால் கன்னிமையில் அந்தஸ்தானது திருச்சபையின் உண்மையான நிலையினைக் குறிப்பதாக இருக்கின்றது. விவேகமுள்ள கன்னியரைப் போலக் கிறிஸ்தவ மக்கள் தங்களுடைய மணாளனாகிய கிறிஸ்து

வோடு சேர்ந்து திருமண விருந்தில் பங்கு கொள்ளுமாறு அவரைச் சந்திக்கச் செல்கின்றனர் (மத் 25:1-13). விண்ணக வீடாகிய எருசலேமில் வாழும் தெரிந்து கொள்ளப் பட்ட மக்களனைவரும் கன்னியரென்றே அழைக்கப்படுகின்றனர் (திருவெளி 14:4). காரணம் அவர்கள் சிலை வழிபாடான வேசித்தனத்திற்குட்பட மறுத்தவர்கள்; தங்களை முழுதுமாகக் கிறிஸ்துவுக்குள் கையளித்தவர்கள். முழுப்பணிவோடு, செம்மறியானவர் செல்லுமிடமெல்லாம் அவரைத் தொடர்ந்து செல்பவர்கள் (யோவா 10:4.27). இது முதற்கொண்டு அவர்கள் வானக வீட்டைச் சார்ந்தவர்களாயும் செம்மறியின் மணமகளாயுமிருக்கின்றனர் (திருவெளி 19:7.9; 21:9)

கன்னியின் விண்ணேற்பு (ASSUMPTION OF THE VIRGIN) - நூல்

கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த, தோசேத்திக்கு, அறிவு நெறிக் கோட்பாட்டு நற்செய்திநூல். புதிய ஏற்பாட்டுப் போலி நூல்களில் ஒன்று. அதில் காணப்படும் பதித போதகத்திற்காக கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் செலாசியன் சட்டத்தால் கண்டனம் செய்யப்பட்டது. இது கோப்டிக்கு, கிரேக்கம், இலத்தீன், சீரியக்கு மொழிகளில் காணப்படுகிறது. இவை பெரும்பாலும் 11-14-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாகும். இந்த வாசகங்கள் விவரங்களிலும் பின்னணியிலும் வேறுபட்டாலும், அடிப்படையில் ஒற்றுமை கொண்டுள்ளன. மரியாளுக்கு உடனடியாக வரவிருக்கும் மரணமும் உருமாற்றமும் உயிர்த்த இயேசுவாலோ தூதனாலோ அவளுக்கு அறிவிக்கப்படுவதும், அவளுடைய உடலைத் தொடுவதால் நிகழும் புதுமையான குணமாகுதல்கள் விவரிக்கப்படுவதும் மனித ஆன்மாவைப் பற்றி இயேசு தம் சீடர்களுக்கு அளிக்கும் உரையும் இந்நூலில் அடங்கியுள்ளன.

கன்னியின் வெளிப்பாடுகள் (APOCALYPSES OF THE VIRGIN)

இவை கத்தோலிக்கத் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்படாத நூல்களாகும். இவை கிரேக்க மொழியில் ஒன்றும் எத்தியோப்பிய மொழியில் மற்றொன்றுமாக உள்ளன. ஆனால் இரண்டுமே தண்டிக்கப்பட்டோரின் வேதனைகளைக் கன்னிமரியாளுக்குக் காட்சியில் காட்டுவதுபோல அமைந்திருக்கின்றன. கிரேக்கத் திருவெளிப்பாட்டில், கன்னிமரியின் வேண்டுகோளுக்கிணங்கி அவளுக்கு நரகத்தின் காட்சியைக் காண்பிக்கிறார், மிக்கேல் அதிதூதர். நரகத்தில் அவிசுவாசிகள், மூவொரு இறைவனை மறுப்பவர்கள், கெட்ட குருக்கள், குருக்களை மதிக்காத பெண் துறவியர், இயேசுவைக் கொலை செய்த யூதர்கள் மற்றும் கொலைகாரர்கள் துன்புறுவது காட்டப்படுகிறது. இக்காட்சியைக் கண்ட கன்னிமரி மனவேதனையுற்று, அவர்களுக்கான தனது மன்றாட்டில் உதவிடுமாறு புனிதர்களைக் கேட்கிறார். இறுதியில் தன்மகனையே சந்திக்கிறாள். அவர், நரகத்தில் துன்புறுவோருக்கு, ஐம்பதாம் நாள் விழாவிற்குப்பின் வரும் நாட்களில் ஒய்வு அளிக்கிறார்.

மற்ற வெளிப்பாடு எத்தியோப்பிய மொழியில்தான் உள்ளது. இது கிரேக்க மொழியில் எழுதப்பட்டு அரபிக் அராபிய மொழிக்கும், பின் அதிலிருந்து எத்தியோப்பிய மொழிக்கும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். இது பவுலின் வெளிப்பாடு என்ற நூலிலிருந்து திருடப்பட்ட கருத்துக்களைக் கொண்ட நூலாகும். இதில் கூடுதல் சேர்க்கை, பெண் துறவியரின் கருச்சிதைவு மற்றும் சிசுக்கொலை பற்றிய கருத்துக்களாகும். தனிமையில் கொல்கொத்தாவில் செபித்துக் கொண்டிருந்தபோது தான் கண்ட காட்சியைக் கன்னிமரி யோவானுக்குக் கூறுவதாக இந்த உப்புச்சப்பற்ற நூல் அமைந்துள்ளது. அவளது மகன் தோன்றி ஒரு மாபெரும் இரகசியத்தைக் காட்டப்போவதாகக் கூறுகிறார். காட்சியின் முடிவில், ''இவர்களை மன்னிக்கமாட்டீரா?'' என்று மரியாள் கேட்க, ''அவர்கள் மனம் வருந்தினால் மன்னிப்புப் பெறுவர். ஆனால் இவர்களை எச்சரிக்கத் தவறிய ஆயர்கள், தனது மக்களைக் கண்டிக்கத் தவறிய ஏலியைப்போலவும், ஒரு மாட்டிற்காகத் தனது புதல்வியர்களை

விற்ற போலாவைப் போலவும் நடத்தப்படு வர்'' என்று மகன் கூறுகிறார்.

கன்னியேல் (HANNIEL - இறைவன் கருணை மிக்கவராக இருந்தார்)

1. மனாசேயின் கோத்திரத் தலைவனும், எபோதுடைய புதல்வனுமாவார் (எண் 34: 23). யோர்தானுக்கு மேற்கில் கானான் நாட்டில் குடியேறவிருந்த பத்துக் கோத்திரத்தாருக்கும் நாட்டைப் பங்கிட்டுக் கொடுக்க எலயாசர், யோசுவா ஆகியோரின் தலைமையில் நியமிக்கப்பட்ட கோத்திரத் தலைவர்களில் இவரும் ஒருவர். கன்னியேல் என்ற பெயரும், மற்றத் தலைவர்களின் பெயர்களும் கானான் நாட்டின் புதிய வாழ்வுக்கு இஸ்ராயேலர்கள் இறைவனைச் சார்ந்திருக்கின்றனர் என்று உணர்த்துகின்றன.

2. ஆசேரின் குலத்திலே குடும்பத் தலைவராகவும், படைத்தலைவராகவும் விளங்கியவர்; உல்லாவுடைய புதல்வர் (1 நாள் 7:39).

கன்னே (CANNEH)

தீரோடு வியாபாரத்தொடர்புடைய மெசபொத்தாமிய நகர் (எச 27:23). இது கலினேயாகவோ (ஆமோ 6:2) கலினோவாகவோ (எச 10:9) இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

கா

காகசு (GAASH - நில அதிர்ச்சி)

1. தனது 110-ஆவது வயதில் உயிர்நீத்த யோசுவாவை இஸ்ராயேலர் திமினாத்து-செராகுவில் அவருக்குச் சொந்தமான ஒரு நிலத்தில் அடக்கம் செய்தனர் (யோசு 24:30; நீதி 2:9). இவ்விடம் எப்பிராயிமின் மலை நாட்டில் காகசு மலைக்கு வடக்கே உள்ளது. காகசு செக்கேமுக்குத் தென்மேற்கில் 32 கி.மீ. தொலைவில் உள்ளது.

2. காகசின் நீரோடைகள் ஆற்றுப்பகுதி(சம வெளி). இப்பகுதியில் தாவீதின் முப்பது வலிமைமிக்க வீரர்களில் ஒருவருடைய வீடு இருந்தது (2 சாமு 23:30; 1 நாள் 11:32).

காகல் (GAAL - அருவருப்பான)

ஏபேதுவின் மகன்; இவர், அரசாட்சி செய்த அபிமெலக்குக்கு (3) எதிராகச் செக்கேமியர் கிளர்ச்சியை நடத்தினார். அப்பொழுது நகரின் தலைவன் செபூல் கோபமுற்று மறைமுகமாகச் செய்தியை அரசருக்குத் தெரிவித்தான். அபிமெலக்கும் தன்னுடைய எல்லாப் படைகளோடும் இரவில் செக்கேமைச் சுற்றிப் பதுங்கியிருந்தான். காகல் தன் சகோதரர்களோடு அங்குப் போரிட வந்தார். ஆனால் செபூலின் சூழ்ச்சியால் காகல் தோற்கடிக்கப்பட்டார். அவருடைய ஆள்களும் இறந்துபோயினர் (நீதி 9:26-41).

காகாபு (HAGAB - வெட்டுக்கிளி)

பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்த ஆலய ஊழியர்களின் குடும்பம் ஒன்றின் தலைவர் (எஸ் 2:46). இதற்கு இணையாக உள்ள நெக 7:48-இல் இந்தப் பெயர் இல்லை.

காகித்து (HAGGITH - விழாநாளில் பிறந்த)

தாவீதின் ஒரு மனைவி. இவள் அதோனியாவின் தாய் ஆவாள் (2 சாமு 3:4; 1 அர 1:5.11; 2:13; 1 நாள் 3:2).

காகியா (HAGGIAH - விழா நாளில் பிறந்த)

ஒரு லேவியர். மெராரியின் வழித்தோன்றல் (1 நாள் 6:30).

காகீ (HAGGI - விழா நாளில் பிறந்த)

காதுவின் இரண்டாம் புதல்வர். யாக்கோபு, சிலிப்பா ஆகியோரின் பேரன் (ஆதி 46:16; எண் 26:15). காகியரின் இனப்பெயர் குலமுதியவர்.

காகியர் (HAGGITES)

காகியின் வழித்தோன்றல்கள் (எண் 26:15). காண்க:காகீ.

காக்கை (Raven)

விவிலியத்தில் காக்கை என்ற பெயர் பல வகைப் பறவைகளை உள்ளடக்குகிறது. காக்கைகள் மிகக் கறுமையாயிருக்கும் (உ.ச.5:11). காக்கை பொதுவாகக் கீழே கிடப்பதை எடுத்து உண்பது என்றாலும் பலமற்ற, எதிர்ப்புக்காட்டாத சிறு விலங்குகளைக் கொன்று தின்னும் இயல்புடையது (பழ 30:17).

தூய்மையற்ற பறவைகளின் வரிசையில் ''காக்கையும் அதன் இனமும்'' பற்றிக் குறிப்பிடப்படுகிறது (லேவி 11:15; உப 14:14); இதிலிருந்து ''காகம்'' என்ற பெயரில் பல வகையான அதே இனத்தைச் சேர்ந்த பறவைகள் உள்ளன எனத் தெரிகிறது. திரிஸ்திராம் என்பவர் பாலைவனத்தில் இவற்றின் எட்டு வகைகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். தனக்கும், தனது குஞ்சுகளுக்கும் உணவு தேடிக்கொள்ளும் காகத்தின் பண்பு, இறைவன் தம் படைப்புக்குக்காட்டும் அருள் பாலிப்புப் பராமரிப்பை எடுத்துக்காட்ட, பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் எடுத்துக்கூறப்படுகிறது (யோபு 38:41; சங் 147:9; லூக் 12:24; மத் 6:26). காக்கைகளைச் சிறப்பித்துக் கூறும் இரு பகுதிகள் வெள்ளம் முடிந்த நிகழ்ச்சியும் (ஆதி 8:7) எலியாவுக்குக் காகம் உணவு கொடுத்ததுமாகும் (1 அர 17).

காசா (GAZA - வலிமையான)

பாலஸ்தீனத்தில் தென்மேற்கில் அமைந்துள்ள நகரம் இது. பெலிஸ்தியாவில் உள்ள 5 முக்கிய நகரங்களுள் தென்கோடியில் அமைந்துள்ளது. எகிப்திற்குச் செல்லும் வழியிலும், கடற்கரைக்கு 5 கி.மீ. தொலைவிலுமாக இது அமைந்துள்ளது.

விவிலியத்தில் இந்த நகரம் இருபது முறையும், மற்ற இலக்கியங்களில் அடிக்கடியும் காணப்படுகிறது. வரலாற்றில் முக்கியமான இடமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. நீண்ட வரலாற்றையும் கொண்டுள்ளது. இது ஒரு கடற்கரைத் துறைமுகமல்ல. மாறாக ஆசியாவிற்கும் எகிப்திற்கும் செல்லுகின்ற ஓர் இராணுவ வழியாக அமைந்திருக்கின்றது. தென் அரேபியாவோடு வியாபாரம் கொண்டதற்குச் சான்றுகளும் உள்ளன.

காசா நகரம் கானானியர்கள் காலத்தில் அமைந்த ஒரு பழைய நகரம் (ஆதி 10:19: உப 2:23). காலத்தால் முந்திய எகிப்தியக் குறிப்புகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இது எகிப்தியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. மூன்றாம் துத்துமோக தமது ஆசியப் படையெடுப்பைத் தொடங்குமுன் இங்குத் தங்கினார். அமர்னா ஏடுகளும் காசா எகிப்தின் ஆளுகைக்குட்பட்டிருந்தது என்றும் ஆனால் கபிரூகளின் ஆபத்துக்குட்பட்டிருந்தது என்றும் கூறுகின்றன.

இஸ்ராயேலர் காசாவில் காலடி வைக்க முயற்சித்தனர். ஆனால் அங்கு வந்த பெலிஸ்தியர்கள் தென் கடற்கரைப் பகுதியைப் பிடித்துக் காசாவைத் தமதாக்கிக் கொண்டனர் (யோசு 10:41; 11:22; 13:3; 15:47; நீதி 1:18; 6:4; 16:1-2:21; 1 சாமு 6:17). சாலமோனின் எல்லை காசாவரை சென்றது. ஆனால் அதை உள்ளடக்கவில்லை (1 அர 4:24).

ஏதோமோடு நடத்திய அடிமை வியாபாரத்திற்காக, ஆமோஸ், கி.மு. 8-ஆம் நூற்றாண்டு மத்தியில், காசாவைக் கண்டனம் செய்கிறார் (ஆமோ 1:6-7). இது இங்கு நடந்த வலுவான வியாபாரத்திற்குச் சான்று கூறுகிறது. ஆனால் இது ஒழுக்க நெறியுடன் நடந்தது என்று கூறமுடியாது. காசாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பெண் அடிமைகளைப் பற்றி மினாயன் ஏடுகளும் சான்று கூறுகின்றன. மூன்றாம் திகிலாத்து பிலேசார் (கி.மு. 744-727) தமஸ்குவுக்கும் இஸ்ராயேலுக்கும் எதிராகப் படையெடுத்தபோது, காசாவையும் தாக்கிக் கைப்பற்றினார். அசீரியர்களுக்கு எதிரான கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய காசாவின் அரசன், கன்னோ, எகிப்துக்கு ஓடிப்போனார். ஆனால் விரைவில் திரும்பிவந்து தனது சதித்திட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார். கி.மு.721-720-இல், அவரது படைகள் எகிப்தியரோடு சேர்ந்து 2-ஆம் சார்கோனோடு காசாவில் போரிட்டன. அப்போது கன்னோ பிடிபட்டு அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். அதன்பின்பு காசா அசீரியர்களுக்குப் பிரமாணிக்கமாக இருந்தது. அசீரியாவுக்கு எதிரான கிளர்ச்சியில், யூதாவின் அரசனான எசக்கியா காசாவைத் தாக்கினார் (2 அர 18:8). இதன் விளைவாக, சனகெரிபு படையெடுத்து வந்து, யூதாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றி அதனை அசீரியர்களுக்குப் பிரமாணிக்கமான காசாவின் அரசனான சில்லிபெல்லுக்கும் மற்றப் பெலிஸ்திய ஆளுநர்களுக்கும் பங்கிட்டு அளித்தார் (701). எகிப்தை வென்ற ஏசர்கதோனுக்கும் (680-669), அசீரியாவின் கடைசி வலிமைமிக்க அரசனான அசூர்பானிப்பாலுக்கும் (668-633) காசா கப்பம் செலுத்தியது. யூதா பெலிஸ்தியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த இக்காலத்தில்தான் காசாவுக்கும் பெலிஸ்தியர்களுக்கும் எதிரான செப் 2:4-7. 13-14-இல் காணப்படும் கசப்பான இறைவாக்குகள் கூறப்பட்டிருக்கலாம்.

பாரவோன் நெக்கோ கல்தேயர்களுக்கு எதிராக அசீரியர்களுக்கு உதவ வடக்கு நோக்கிச் சென்றபோது, காசாவையும் கல்தேயர்கள் வெற்றிகொள்வர் என்று எரேமியா முன்னறிவித்தார் (எரே 25:20; 47:5). நெபுக்கதுனேசாரின் ஏடுகள், காசா, யூதா முதலிய பகுதிகளின் அரசர்கள் பாபிலோனுக்கு அடிமைப்பட்டிருந்தனர் என்று கூறுகின்றன.

காசாவும், பெலிஸ்தியாவும் பாபிலோனிய அடிமைத் தனத்திற்குப் பின்பும் யூதர்களால் வெறுக்கப்பட்டன (செக் 9:5). கம்பிசேஸ் காலத்தில் (525) பாரசீகப் பேரரசோடு காசா இணைக்கப்பட்டது. ஆயினும் சுதந்தரமாய் விளங்கியது. அலக்சாந்தரைக் காசா இருமாதங்களுக்கு எதிர்த்து நின்றது (322). இக்காலத்திற்குப்பின் பெலிஸ்தியர்கள் மறைந்து போயினர். பாரசீகர்களும் அரேபியர்களுமே அங்கு வாழ்ந்தனர். அங்குள்ள அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. பின்பு மீண்டும் அமைக்கப்பட்டுக் கிரேக்கக் கலாச்சாரத்தின் மையமாக விளங்கியது. மக்கபேயர்கள் காலத்தில் யோனத்தானிடம் அடிபணிந்தது (1 மக் 11:61-62). அதற்குப்பின் யூதர்களுக்கு எதிராகக் காசா சதி செய்தது. அதனால் அலக்சாந்தர் யன்னாயுவால் கி.மு. 96-இல் அழிக்கப்பட்டது. பாலைவனமாக்கப்பட்டது' என்று எழுத்தாளர் கூறுகின்றனர். கி.மு.57-இல் உரோமைய காபினு என்பவரால் திரும்பக் கட்டப்படக் கட்டளையிடப்பட்டது. சிலருடைய கருத்துப்படி புதிய இடம் பழையதிலிருந்து சிறிது தொலைவில் கட்டப்பட்டது. எனவே அங்கு இரண்டு காசா நகரம் இருந்திருக்கலாம். அ.ப. 8:26-க்கு விளக்கவுரை தரும்பொழுது இதனால் அங்குச் சில பிரச்சனைகள் எழுகின்றன.

உரோமையர்களின் காலத்தில் காசா புறஇனத்தாரின் பண்பாட்டுக் கூடமாக விளங்கியது. கி.பி.400-இலிருந்துதான் பல இன்னல்களுக்கிடையில் கிறிஸ்தவம் அங்கு வேரூன்றியிருக்கிறது. கி.பி.635-இல் மகமதியர்களால் ஆட்கொள்ளப்பட்டது. சிலுவைப் போருக்குப் பின் ஒரு சிறிது காலத்தைத் தவிர மற்றக் காலங்களில் இன்றுவரை பலமான மகமதிய மையமாகத் திகழ்ந்துள்ளது.

பழைய இடத்தில் இன்றைய நகரம் இருப்பதாலும் மற்றப் பிரச்சனைகளாலும் பயனுள்ள புதைபொருள் ஆராய்ச்சி எதுவும் நடத்தப்படவில்லை. தோண்டிக் கண்டு பிடிக்கப்பட்ட தேல் ஏல்-அகூல் என்ற இடம் முன்பு காசா இருந்த இடமாகக் கருதப்பட முடியாது. அது பேத்து-எகி-லாயிம் ஆக இருக்கலாம். கிரேக்க, உரோமையர்கள் காலத்தில் மயோமாஸ் என்று பெயர்கொண்ட துறைமுகம் கரையோரத்தில் இருந்தது. பின்பு கிறிஸ்தவமாக்கப்பட்ட பின் அது கான்ஸ்டான்டியா என்று பெயர் பெற்றது. அதற்கு வடக்கில் ஆந்திடோன் அல்லது அகிரிப்பியா என்ற இடம் இருக்கிறது.

காசாவியர் (GAZAITES)

காசாவில் வாழ்ந்தவர்கள் (நீதி. 16:2). காண்க. காசா.

காசிப்பியா (CASIPHIA - வெண்மையான, வெள்ளி ஆசாரிகளின் இடம்)

இவ்விடத்திலிருந்துதான் எருசலேம் ஆலயத் திருப்பணிக்கென லேவியர்களை எஸ்ரா அழைத்து வந்தார் (எஸ் 8:17). இது பாபிலோனில் இருந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. இது ஒரு நகரமாகவோ, மாவட்டமாகவோ இருக்கலாம். யூதப் பாரம்பரியம் இதனைப் ''பரந்த வெளி'' என்று கூறுகிறது (ஏச 22:18). இந்த இடத்திற்கு எசக்கியாவின் செயலர் செபினா நாடு கடத்தப்பட்டார்.

காசூம் (HASHUM - பரந்த மூக்குடைய)

இவருடைய சந்ததியினர் செருபாபேலின் தலைமையில் நாடு கடத்தலிலிருந்து திரும்பினர் (எஸ் 2:19; நெக 7:22). ஒருவேளை இந்தக் குடும்பத்தினர்தான் எஸ்ரா சட்டத்தை வாசித்தபோது அவரது இடப்புறம் நின்றனர் (நெக 8:4). இவர் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டார் (10:18). இக்குடும்பத்தினர் தங்கள் புற இன மனைவியரை ஒதுக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

காசேசு (GAZEZ - மயிர் கத்தரிப்போர்)

1. கெசிரோனின் பேரன். ஏப்பா என்ற வைப்பாட்டி வழியாகக் காலேபுக்குப் பிறந்த மகன் (1 நாள் 2:46). ஆரானின் சகோதரனாகவும் மகனாகவும் இருமுறை இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வாசகம் தெளிவில்லாமல் உள்ளது.

2. காலேபின் பேரனும் ஆரானின் மகனுமாவார் (1 நாள் 2:46). 1-இல் கூறப்பட்டிருப்பவர்க்கு உறவினன்.

காசோர் (HAZOR - வேலி அடைக்கப்பட்ட மனை).

1. கூலே ஏரிக்குத் தென்மேற்கே 8 கி.மீ. தொலைவிலும், கலிலேயோக் கடலுக்கு வடக்கே 14 கி.மீ. தொலைவிலும், தேல் ஏல்-வக்கர்ஸ் என்றும் அழைக்கப்படும் இக்காலத் தேல் ஏல்-கெதா இருக்கும் இடத்தில் இருந்த வடகலிலேயாவைச் சேர்ந்த முக்கிய நகரமாகும். கூலேச் சமவெளியில் முக்கிய போர் மையத்தில் அமைந்த இந்த இடம் கடல் வழியைக் கட்டுப்படுத்தியது.

இந்த இடம் 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எகிப்திய பழிவாசகங்களில் முதலில் காணப்படுகிறது.18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாரி ஏடுகளில் முக்கிய வணிக மையமாகக் குறிக்கப்படுகிறது. மூன்றாம் துத்துமோஸ் (கி.மு. 1490-1436) இரண்டாம் அமென்-கோதேப்பு (1438-1412), முதலாம் சேத்தி (1301-1287) ஆகியோரால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீன ஊர்களின் பட்டியலில் காணப்படுகிறது. அமர்னா ஏடுகளிலும், விவிலியத்திலும் இப்பெயர் இடம்பெறுகிறது.

காசோர் என்பது யாபின் என்ற அரசனால் ஆட்சிசெய்யப்பட்டு வந்த கானானிய நகரமாகும். இவர் யோசுவாவிற்கு எதிராகக் கூட்டாகக் கிளம்பிய வட கானானிய அரசுகளை முன்னின்று வழி நடத்தினார். இந்தக் கூட்டணி முறியடிக்கப்பட்டுக் காசோர் நகர் தீக்கிரையாக்கப்பட்டது (யோசு 11:1-15; 12: 19). ஒரு நூற்றாண்டு கழித்துத் தெபோராவும், பாராக்கும், வட இஸ்ராயேலை ஆண்டு வந்த மற்றொரு யாபினுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். தனாக்கு என்ற இடத்தில் நடந்த இந்தப் போரானது இஸ்ராயேலுக்குச் சாதகமாக முடிந்தது. அதில் சிசராவின் தலைமையில் வந்த யாபின் படைகள் முறியடிக்கப்பட்டன (நீதி 4-5). கூலே சமவெளியைப் பாதுகாக்க, காசோர்நகரைச் சுற்றிச் சாலமோன் மன்னன் அரணைக் கட்டியெழுப்பினார். கி.மு. 732-இல் மூன்றாம் திகிலாத்துபிலேசார் என்பவரால் காசோர் கைப்பற்றப்பட்டது (2 அர 15:29). கி.மு. 147-இல் காசோர் நகரச் சமவெளிப்பகுதிகளில் செலூக்கிய அரசரான இரண்டாம் தெமெத்திரியுவின் படைகளை எதிர்த்து யோனத்தான் வெற்றிகரமாகப் போர் புரிந்தார் (1 மக்க 11:67).

1928-இல் காசோர் நகரத்தினை ஆராய்ச்சி செய்ய ஜான் கர்ஸ்டாக்கு என்பவர் முயன்றார். ஆனால் 1955-56-இல் இகயேல் யாதின் என்பவரால்தான் முழுமையான புதைபொருள் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. காசோர் நகரினைப்பற்றி நடத்திய அகழ்வாராய்ச்சியில் கைக்சோஸ், அமர்னா காலத்தைச் சேர்ந்த நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் சில யோசுவாவால் அழிக்கப்பட்டிருக்கலாம். இவை மீண்டும் கட்டப்படவில்லை. மற்றொரு கண்டுபிடிப்பில் ஒன்றன் மேல் ஒன்றாகக் கட்டப்பட்ட நான்கு கானானிய ஆலயங்களின் அமைப்பானது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நான்கு ஆலயங்களில் இறுதியாகக் கட்டப்பட்ட ஆலயம் சாலமோனால் கட்டப்பட்ட ஆலயத்தின் அமைப்பினைப் பிரதிபலித்தது. காசோரின் 'தாழ்வான நகரம்' கட்டப்பட்ட ஆலயத்தின் அமைப்பினைப் பிரதிபலித்தது. காசோரின் 'தாழ்வான நகரம்' கட்டப்பட்ட பொழுது தான் காசோர் நகரானது மிகவும் செழிப்புடன், வளமையானதாகக் காணப்பட்டது. கி.மு. 13 ஆம் நூற்றாண்டில் காசோர் நகரானது சாலமோனால் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது.

2. காசோர் என்பது நெகேப்பில் உள்ள யூதாவின் கோத்திரத்தார்க்குரிய நகராகும் (யோசு 15:23). இந்நகரானது பிர்கபிருக்கு அருகில் ஏல்-அவுசாவுக்குத் தென்கிழக்கே 14 கி.மீ. பெயேர்-செபாவுக்குத் தென்மேற்கில் 60 கி.மீ. தொலைவிலும் வாடி உம்-எத்னான் மேல் உள்ள ஏல்-பெரியே என்ற நகரோடு தொடர்புபடுத்தப்படுகின்றது.

3. காசோர் என்பதும் கெரியோத்து-கெசுரோன் என்பதும் ஒன்றுதான் (யோசு 15:25). மாவேனுக்குத் தெற்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத்-ஏல்-கரியத்தேயின் என்பதாக அடையாளம் காட்டப்படுகிறது.

4. காசோர் என்பது அடிமைத்தளையிலிருந்து திரும்பி வந்தபின் பென்யாமின் கோத்திரத்தார் மீண்டும் வந்து குடியேறிய நகராகும் (நெக 11:33). இந்நகர் எருசலேமிற்கு வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத் கசூர் என்ற ஊராக அடையாளம் காட்டப்படுகிறது.

5. கி.மு. 598-இல் நெபுக்கதுனேசாரால் கொள்ளை அடிக்கப்பட்டு அழிக்கப்பட்ட, அடையாளங்காட்டப்படாத, நகர் காசோராகும். இது பாலஸ்தீனத்துக்குக் கிழக்கே அரேபிய பாலைவனத்தில் உள்ளது (எரே 49:28-33). இங்குக் காசோர் என்பது தனிப்பட்ட இடத்தைக் குறிக்கிறதா அல்லது அங்குத் தங்கியிருந்த கோத்திரங்களைக் குறிக்கிறதா என்பது தெளிவாக இல்லை.

காசோர் - கதாத்தா (HAZOR - HADATTHAH - புதிய காசோர்)

பெயேர் செபா என்ற நெகேபு மாவட்டத்திலுள்ள யூதாவைச் சேர்ந்த ஓர் ஊர். ஏதோமை நோக்கிய திசையில் இருந்தது (யோசு 15:25). மாவோனுக்குத் தென்கிழக்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள ஏல்-குடெய்ராவாக இருந்திருக்கலாம். இது துவானிக்குத் தென்மேற்கில் சாக்கடலை நோக்கிய பகுதியாகும்.

காடி (VINEGAR)

விவிலிய காலத்தில் காடி அதிகமாகப் புளிப்பேறிய அல்லது அதிகமாக நொதித்துப் போன திராட்சை ரசத்திலிருந்து பெறப்பட்டது (எண் 6:3). சாறு பிழிந்தபின் விடப்பட்ட திராட்சைகளின் மேல் நீரை ஊற்றி எல்லாவற்றையும் நொதிக்கச் செய்தும் பெறப்பட்டது. நீர்கலக்கப்பட்ட காடி, உற்சாகமளிக்கப்பயன்படும் பானமாக இருந்தது. சங்கீத ஆசிரியர் ''கசந்த பிச்சை.... என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தனர்'' என்று முறையிடுகின்றார் (சங் 69:21). காடி சுவையூட்டும் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டது. போவாசு ரூத்தை அவளுடைய ரொட்டித்துண்டைக் காடியில் தோய்த்துக் கொள்ளும்படி கூறுகிறார் (ரூத் 2:14). காடி திராட்சை ரசத்தோடு தொடர்புடையது. ஆகையால், நசரேயர்களுக்கு இது விலக்கப்பட்ட பொருளாகும்.

காடியின் அமிலப்பண்பு பழமொழி நூலில் சுட்டப்படுகிறது. காடியைப் புண்ணில் வார்த்தால் புண் மிகுதியாக எரியும் (பழ 25:20). ''பல்லுக்குக் காடியும் கண்ணுக்குப் புகையும் எப்படி இருக்குமோ அப்படியே ஒரு சோம்பேறி தன்னைத் தூது அனுப்பினவனுக்கு இருப்பான்''(10:26).

புதிய ஏற்பாட்டில், இயேசுவின் சிலுவை இறப்பின்போது காடி குறிப்பிடப்படுகிறது. நான்கு நற்செய்திகளிலும் (மத் 27:48; மாற் 15:36; லூக் 23:36; யோவா 19:29-30), இயேசு இறப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் அவருக்குக் காடி கொடுக்கப்பட்டதாக வாசிக்கிறோம். இங்கு நற்செய்தியாளர்கள் பழைய ஏற்பாட்டு வாசகத்தை எடுத்துக் கூறவில்லை. ஆயினும் இந்நிகழ்ச்சியில் சங் 69:21 நிறைவேறுவதாக விளக்கப்பட்டிருக்கலாம். அனேகமாக இது காடி, தண்ணீர், முட்டை முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட, படைவீரர்களும், அடிமைகளும் அருந்தும் உரோமையரின் பானமாக இருக்கலாம்.

காடு (FOREST)

விவிலியத்தில் காடு பற்றிய குறிப்புகள் பல உள்ளன. இப்போது இருப்பதைவிடப் பழங்காலத்தில் மரங்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்திருக்கவேண்டும் என்று பிற்காலப் பயணிகளின் ஏடுகள் சுட்டுகின்றன. பாலஸ்தீனத்தில் எத்தனை மரங்கள் இருந்தன என்று கூறமுடியாவிட்டாலும், அவை சிறியவையாக இருந்திருக்கலாம். அவற்றின் மரம், புகழ் பெற்ற லெபனோனின் கேது

மரங்களைப் போல் விலையுயர்ந்ததன்று (1 அர 7:2; 10:17.21;.....). காடுகள் பற்றிய குறிப்புகள் 1 சாமு 22:5; 2 அர 19:23; சங் 50:10; ஏச 21:13; மீக் 3:12; உப 19:5; யோசு 17:15.18; 1 சாமு 14:25-26; 2 சாமு 18:6; சங் 8:13; 2 நாள் 27:4; 1 சாமு 23:15-ஆகிய பகுதிகளில் சிறப்பாகக் காணப்படுகின்றன. நெக 2:18-இல் அரசருடைய காடுகள் குறிக் கப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் காடு என்ற சொல் யாக் 3:5-இல் மட்டும்தான் வருகிறது; ''சிறியதொரு நெருப்புபொறி எவ்வளவு பெரிய காட்டை எரித்து விடுகி றது, பாருங்கள். நாவும் அந்த நெருப்புப் போலத்தான்''.

பழங்காலப் பாலஸ்தீனத்தில் காடுகள் பரந்த அளவில் காணப்படவில்லையானா லும், எப்பிராயிமின் மலைப் பகுதிகளிலும் (யோசு 17:15.18; 2 சாமு 18:6), நெகேபிலும் (எச 2:46-47) காடுகள் இருந்ததாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது. கிலயாதிலும் காடுகள் இருந்திருக்கலாம். இங்கு இப்போதும் மரங் கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இன்று இருப்பதுபோல பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்மேல் மலையில் மரங்கள் பல இருந்திருந்தாலும் 2 அர 19 :23-இல் வரும் ''காடுகளின் மிக அடர்ந்தபகுதி'' என்ற சொற்றொடர் (செ 37:24) லெபனோனின் அடர்த்தியான காடுகளையே குறிக்கிறது. காட்டில் காட்டுவிலங்குகள் வசித்தன (சங் 80:13; எரே 5:6; ஆமோ 3:4;...). ஆகவே அது அஞ்சத்தக்க இடமானது (2 சாமு 18:18). 1 சாமு 22:5-இல் தாவீது காரேத்துக் காட்டில் தஞ்சம் புகுந்தார் என்று கூறப்பட்டுள்ளது. இந்தக்காடு எங்கிருந்தது என்று உறுதியாக அடையாளம் காட்டப்படவில்லையானா லும், தாவீதின் நடவடிக்கைகளை அடிப் படையாகக் கொண்டு, இக்காடு பெலிஸ்தியர் சமவெளிக்கு அருகில் இருந்திருக்கலாம் என்று யூகிக்கலாம்.

காடை (QUAIL)

இது நாடு கடந்து நாடு செல்லக்கூடிய பறவை. கவுதாரியைப் போன்றது. சில காடைகள் பாலஸ்தீனத்திலும், சீரியாவிலும் வருடம் முழுவதும் அங்கேயே இருந்திருக் கின்றன. காடைகள் பாலஸ்தீனம், சீரியா, எகிப்து இவைகளைக் கடந்து மார்ச்சு ஆரம் பத்தில் வடதுருவத்தை நோக்கியும், நவம்ப ரில் தென்துருவம் நோக்கியும் செல்லும். இது உருவத்தில் பெரியது. நெடுந்தூரம் கஷ்டப்பட்டுப் பறந்தாலும் உயிர்வாழும் வலிமை பெற்றது. சில சமயம் சோர்வினால் கீழே விழுந்துவிடும். காற்றடிக்கும் திசையி லேயே பறந்து மத்திய தரைக்கடலைக் கடந்து செல்லும். இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தைக் கடந்து செல்லும் பொழுது மாலையில் காடைகள் வந்து விழுந்து பாளையத்தை மூடிக் கொண்டதாகப் பார்க் கின்றோம் (யாத் 16:13; எண் 11:31 தொ; சங் 105:40). பறவைகளின் பழக்கவழக்கங்கள் பற்றிய தலைப்பில் இதைப்பற்றிய விவரங் களை அறியலாம்.

காட்சி (VISION)

கடவுள் இறைமனிதர்களோடு பெரும்பா லும் இறைவாக்கினர்களோடு, கொள்ளும் தொடர்பாகும். பொதுவாக அணுகக்கூடிய தொடர்பல்ல. எபிரேய மொழியில் பயன் படுத்தப்பட்டுள்ள வார்த்தை உடனடியாக ''அறிபவர்'' அல்லது ''காட்சியாளர்'' என்ற பழைய ஏற்பாட்டு வார்த்தையுடன் தொடர்பு கொண்டுள்ளது. இச்சொல் எசக்கி யேல், தானியேல் ஆகிய நூல்களில் சாதார ணமாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆதி 46:2; எண் 12:6; 1 சாமு 3:15-இலும், புதிய ஏற்பாட்டில் மத் 17:9; லூக் 1:22; 24:23; அ.ப. 26:19; 2 கொரி 12:1; 2:17; திருவெளி 9:17-இலும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

இறைவாக்கினர் தானியேல் நூலிலே இந் தச் சொல், பலவடிவங்களில் வருகிறது; வருங்காலம் பற்றிய அறிவை முப்பது முறை, வியத்தகுமுறையில் வெளிப்படுத்து வதைக் குறிக்க இந்தச் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. தானியேலுக்குப்பிறகு, காட்சி யைக் குறிக்கும் எபிரேயச் சொல் அடிக்கடி எசக்கியேல் நூலில் பயன்படுத்தப்பட்டுள் ளது. இச்சொல்லின் பொருள் ''ஆண்டவரது

மாட்சியினுடைய சாயலின் காட்சி'' (1:28)-இல் தொடங்கி அக்கால இஸ்ராயேலின் தன்மை மற்றும் பொருள், மற்றும் அதன் வருங்காலம் (எச 8) ஆகியவற்றை உள்ளடக்குகிறது. வருங்காலத்தில் மீட்படைந்த புதிய இஸ்ராயேலின் உன்னதமான அமைப்பையும் உள்ளடக்கும் (எச 40-48). ஒருவேளை, எசக்கியேலின் காட்சிகள் அசாதாரண உளவியல் அனுபவத்தின் விளைவாக இருக்கலாம். ஆனால் அவற்றை உளவியல் அடிப்படையில் மதிப்பீடு செய்வது அவ்வளவு விவேகமுடையதன்று.

தொடக்ககால இறைவாக்கினர் மத்தியிலே ''காட்சி'' என்பது கடவுள் இறைவாக்கினர்களுடன் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்திய மரபு வழக்கமான ஒரு சாதனமாகும். இதன் வழியாக இஸ்ராயேலின் வரலாற்றில் உடனடியாக நடக்கப் போவதின் பொருளை யாவே கூறுவார். ''காட்சி'' யானது யாவேயின் வார்த்தையை வெளிப்படுத்துவதற்கு இணையானதாகும்; இவ்வாறு தான் பின்வரும் கூற்றுக்களைப் புரிந்து கொள்கிறோம். ''ஆமோஸ் என்பவர் யூதாவின் அரசனாகிய ஊசியா காலத்திலும், இஸ்ராயேலின் அரசனாகிய எரொபயாம் காலத்திலும்,..... இஸ்ராயேலைக் குறித்துக் கண்ட காட்சியின் வார்த்தைகள்'' (ஆமோ 1:1); ''யூதாவின் அரசர்களாகிய ஊசியா, யோத்தாம், ஆகாசு, எசக்கியா ஆகியோரின் காலத்தில், யூதா, எருசலேம் இவற்றைக் குறித்து, ஆமோஸ் என்பவரின் மகன் ஏசயா கண்ட காட்சி'' (ஏச 1:1); ''ஒபதியா கண்ட காட்சி யாவே... இவ்வாறு கூறுகிறார்'' (ஒப 1:1).

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், இறைவாக்குரைத்தலில் காட்சியின் மறைபொருள் வார்த்தையின் மறைபொருளாகும். அதாவது கடவுள் தம்மையே வெளிப்படுத்துதல், வரலாற்றைப் பாதிப்பு செய்யும் கண்ணோட்டத்தில் வரலாற்றின் பொருளும், அதன் மீது அவரது ஆட்சி, இறுதியாக எல்லா வரலாற்றையும் மீட்பதில் அவரது நோக்கம் ஆகியவற்றின் மறைபொருளாகும்.

காட்சியாளர் (SEER)

காண்க. இறைவாக்கினர்

காட்டாடு, வரையாடு (WILD GOAT)

இவ்வகையான ஆடுகள் மலைப்பகுதியிலும், பாறைகளிலும் வாழ்ந்து வந்தன. இவ்வாடுகளை நூபியின் இபெக்ஸ் என அழைப்பதும் உண்டு. இது, அடக்கப்படாத, பின்புறமாக வளைந்த கொம்புகளையுடையது. இவற்றைப் பற்றி விவிலியம் பல இடங்களில் குறிப்பிடுகிறது (1 சாமு 24:2; யோபு 39:1; சங் 104:18).

காட்டாடுகளின் பாறை, வரையாடுகளின் பாறை (WILD GOAT'S ROCKS)

தாவீது, சவுலுக்குத் தன்னுடைய பெருந்தன்மையைக் காட்டிய ஒரு குகையிருந்த இடம் (1 சாமு 24:2). இது இருந்த இடம் சரியாகத் தெரியாவிட்டாலும், சாக்கடலின் மேற்குக் கரையின் நடுப்பகுதியில் ஏன்-கேதிக்கு அருகில் இருக்கும் சுண்ணாம்புக் கல் வனாந்தரத்தில் இருந்தது. இங்கு இன்றும் காட்டாடுகள் மிகுந்துள்ளன.

காட்டு அத்திமரத் தோட்டக்காரன் (DRESSER OF SYCAMORE TREE)

மரங்கள் நல்ல பயன் கொடுக்கவேண்டும் என்ற காரணத்திற்காக மரத்தைக் கவாத்து செய்பவர் அல்லது அதன் பழத்தின் பின்பகுதியைக் கிள்ளிவிடுபவர். ஆமோஸ் தன்னைப் பற்றிக்கூறும்போது ''நான் இறைவாக்கினனும் அல்லேன், இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனும் அல்லேன்-நான் ஆடு மேய்ப்பவன், காட்டு அத்திமரங்களின் கண்காணிப்பாளன்''. அப்படிப்பட்ட தன்னை ஆண்டவர் இஸ்ராயேல் மக்களுக்கு இறைவாக்குக் கூற அனுப்புகிறார் என்கிறார் ஆமோஸ் (ஆமோ 7:14).

காட்டு அத்திமரம் (SYCAMORE)

இது, செப்பேலவோடு சிறப்புத் தொடர்புடைய ஒரு மரமாகும். இது முசுக்கொட்டை

இலைகள் போன்ற இலைகளையுடைய அத்தி மரம். தாவீது இந்தக் காட்டு அத்திமரங்களைக் கவனிக்கத் தனியாக மேற்பார்வையாளர்களை நியமித்ததிலிருந்து (1 நாள் 27:28; சங் 78:47, ஏச 9:10) இதன் முக்கியத்துவம் விளங்குகிறது. ''காட்டத்திமரங்கள் போல மிகுதியாய் இருந்தன'' (1 அர 10:27; 2 நாள் 1:15; 9:27) என்னும் வாக்கியத்திலிருந்து அவை எவ்வளவு அதிகமாய்ப் பயிரிடப்பட்டன என்பது விளங்கும். ஆமோஸ் காட்டத்தி மரங்களைக் கண்காணிப்பவராக இருந்தார் (ஆமோ 7:14). இது பழுக்காத காய்களைக் கனியச் செய்வதாகும். சக்கேயு எரிகோவில் இயேசுவைக் காண ஓடி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறிக்கொண்டார் (லூக் 19:4). இது அத்திமரங்களை விடத் தரத்தில் குறைந்ததாக இருந்தாலும், ஆண்டில் பல முறை பழங்கள் தருவதால் ஏழைகளுக்கு ஓரளவு உணவு கொடுக்கின்றது.

காட்டுக்கழுதை (WILD ASS)

இது காட்டில் வாழும் நான்கு கால்களையுடைய, குதிரை இனம் சார்ந்த ஒருவகை விலங்காகும். விவிலிய காலத்தில் இவை மேற்கு ஆசியாவில் காணப்பட்டன. செனோபோன் என்பவர் தனது நூலில், இக்காட்டுக்கழுதைகள் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் மெசபொத்தாமியாவில் காணப்பட்டதாகக் கூறுகிறார். காட்டுக் கழுதைகள் மிக வேகமாக ஓடக்கூடியனவாகவும், கட்டுப்படுத்த முடியாதனவாகவும் இருந்தன. விவிலியத்தில் கூறவேண்டிய ஒன்றை வலியுறுத்தவும் உருவகமாகவும் காட்டுக்கழுதை குறிக்கப்படுகிறது. ஆதி.16:12-இல் இசுமாயேலின் கட்டுக்கடங்காத தன்மை ''காட்டுக் கழுதை போல்'' என்று விவரிக்கப்படுகிறது. ஏச 32:14-இல், முன்பு மக்கள் குடியிருந்த பகுதியில் காட்டுக்கழுதை காணப்படுவது, அப்பகுதியில் அப்போது மக்களே இல்லை என்பதைச் சுட்டுகிறது. எரே 4:6 அச்சுறுத்திய பஞ்சம், காட்டுக் கழுதைகள் கூடப் பெருக முடியாத அளவுக்குக் கொடுமையாக இருக்கும் என்று கூறுகிறது. இறைவாக்கினர் ஓசேயா இஸ்ராயேல் நாட்டை அசீரியாவுக்குத் தனியாக ஓடிச்செல்லும் காட்டுக்கழுதைக்கு ஒப்பிடுகிறார் (ஓசே 8:9). எரேமியா, இந்த உவமையைப் பின்பற்றி மக்கள் பொய்த்தேவன் பாகால்மேல் கொண்டுள்ள பற்றைக் காட்டுக்கழுதையின் காமத்திற்கு ஒப்பிடுகின்றார் (எரே 2:24). ''அவர் காட்டுக் கழுதைகளோடு வாழ்ந்தார்'' என்ற குறிப்பு (தானி 5:21) நெபுக்கதுனேசாரின் நிலைமாற்றத்தைக் குறிக்கிறது. காட்டுக்கழுதைகள் மற்ற விலங்குகளுடன் ஆண்டவரின் நீரூற்றில் நீர்பருகுவதைச் சங்கீதம் கூறுகிறது (சங் 103:11). யோபு நூலில் இக்காட்டுக்கழுதை பற்றி நிறையக் குறிப்புக்கள் காணப்படுகின்றன (யோபு 6:5; 11:12; 39:5-8; 24:5).

காட்டுத்திராட்சை (WILD GRAPES)

திராட்சையில் மோசமான, துர்நாற்றம் வீசக்கூடிய ஒருவகையாகும். இதை இஸ்ராயேல் மக்களுக்கு ஒப்பிட்டுக்கூறுகிறார், இறைவாக்கினர் ஏசயா (ஏச 5:2.4). இறைவன் இரக்கமும், கருணையும் நிரம்பியவராய் இருந்தும்கூட இஸ்ராயேலர் தீய காட்டுத்திராட்சைகளையே அதாவது நன்றிகெட்டதனத்தையே கைம்மாறாகக் கொடுத்தனர் என்று விளக்குகிறார்.

காட்டுப்பன்றி (BOAR)

வீட்டுப்பன்றிகளின் மூதாதையாக இருந்திருந்தாலும் இது ஒரு காட்டுப்பன்றி.

விவிலியத்தில் காட்டுப்பன்றியைப் பற்றிய ஐயமற்ற ஒரே ஒரு குறிப்பு உள்ளது: 'காட்டுப்பன்றிகள்' திராட்சைத் தோட்டங்களை (இஸ்ராயேலை) அழித்துவிட்டன (சங் 80:13). பயிர்களுக்கும், திராட்சைத் தோட்டங்களுக்கும் இதுபோன்ற ஆபத்துக்கள் விவிலிய காலங்களில் அப்பொழுதும் இருந்திருக்க வேண்டும். லேவி 11:7; உப 14:8-இல் சொல்லப்பட்டுள்ள அசுத்த விலங்கு (சாதாரணமாகப் 'பன்றி' என்று மொழி பெயர்க்கப்படுவது), அனேகமாகக் காட்டு, வீட்டுப் பன்றியைக் குறிப்பிடலாம்; ஏனெனில் இப்பெயர் இடம் பெறும் பட்டியலில் வனவிலங்குகளும், பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளும் இடம் பெறுகின்றன.

காட்டுப்புறா (TURTLE DOVE)

புறாக்களில் சிறுத்துக் காணப்படும் ஒரு வகையான புறாக்கள் இவை. பாலஸ்தீனத்தில் மூன்றுவகைக் காட்டுப்புறாக்கள் இருந்திருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட பருவ காலங்களில் காட்டுப்புறாக்கள் தோன்றுவது உ.ச.2:12; எரே 8:7-இல் கட்டப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில், காட்டுப்புறா மாடப்புறாவோடு சேர்த்து வழிபாட்டு அல்லது பலிப்பொருளாகக் கூறப்படுகிறது. லூக் 2:24 இதை எடுத்துக்காட்டுகிறது. லேவி 12-இல் கூறப்பட்டுள்ள கட்டளைக்கு இணங்க மரியாள், இயேசுவின் பிறப்புக்குப் பிறகு, வழக்கான காணிக்கையான இரு காட்டுப்புறாக்களையோ மாடப்புறாக்குஞ்சுகளையோ அளித்தாள்.

இஸ்ராயேலைக் குறிக்க, புறா உருவகமாகப் பயன்படுவது சங் 74:19-இல் மட்டும் வருகிறது.

காட்டு வெள்ளாடு (IBEX)

இஸ்ராயேலர் உண்ண அனுமதிக்கப்பட்டிருந்த விலங்குகளின் பட்டியலில் ஒன்று (உப 14:5). இதன்பொருள் தெளிவாக இல்லை. இது கொம்பு மானாக இருக்கலாம் என்றும் கருதப்படும்.

காட்டெருது (WILD OX)

இது காட்டில் வாழும், இரு கொம்புகளையும், நான்கு கால்களையும் கொண்ட எருது வகையைச் சார்ந்த விலங்காகும். விவிலிய மக்கள் இவ்விலங்கினைப் பற்றி அறிந்திருந்தனர். இதுபற்றி விவிலியத்தில் ஒன்பது குறிப்புகள் உள்ளன. இவ்வெருதுகளின் வலிமை, மற்றும் கொம்புகள் சிறப்பாகக் கூறப்படுகின்றன (யோபு 39:9-12; சங் 92:10; எண் 23:22; 24:8; உப 33:17). ஏதோமின் காட்டெருதும் ஆண்டவரின் தண்டனையால் வீழ்த்தப்படும் என ஏசயா இறைவாக்கினர் கூறுவது தண்டனையின் தன்மை எத்தகையது என்பதை விளக்குகிறது (ஏச 34:7). இவ்வகையான காட்டெருதுகளைப் பற்றிய குறிப்புகள் அசீரிய ஏடுகளில் காணப்படுகின்றன. மெசபொத்தாமியாவில் இவை வாழ்ந்ததாக வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன.

காணாமற் போன ஆடு (LOST SHEEP) - உவமை

மத்தேயு நற்செய்தியிலே விண்ணரசில் நுழைய குழந்தை மனம் அவசியம் என்பதைக் கூறிக் குழந்தைகளின்மேல் இறைவனுக்குள்ள அன்பை இயேசு விவரிக்கிறார். இந்த வேளையிலே இந்தக் காணாமற்போன ஆடு உவமையையும் கூறுகிறார். லூக்கா நற்செய்தியிலே இந்த உவமை பாவிகளும் பரிசேயரும் ஒன்றாய்க் கூடியிருந்தபோது கூறப்படுகிறது. இயேசுவின் காலத்திலே மேற்காசிய நாடுகளில் ஆயர்கள் தங்கள் ஆடுகளைப் பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நேசித்தனர். எனவே இந்த உவமை கடவுள் மனிதர்மேல் கொண்டிருக்கும் அளவற்ற அன்பை விவரிக்கிறது. இயேசு பாவிகள் மேல் கொள்ளும் பரிவைப் பரிசேயர் எதிர்த்தபோது, இயேசு தாம் இத்தகையோருக்கே அதிகம் தேவை என்பதை உணர்த்துகிறார்.

காணாமற்போன பணம் (LOST COIN) - உவமை

ஆயக்காரரும் பாவிகளும் ஆண்டவரை அணுகினர். ஆனால் பரிசேயரும் மறைநூல் வல்லுநரும் அவருக்கு எதிராக முணுமுணுத்தனர் (15:1-2). மனந்திரும்புபவர்களை ஆண்டவர் ஏற்கிறார் என்பதை விளக்க இந்த உவமை கூறப்படுகிறது. சாதாரண நடைமுறை நிகழ்ச்சிகளைக் கொண்டு நற்செய்தியை வழங்கிய இயேசு இங்கே இந்த உவமை மூலம் அன்பும், பரிவும், பாசமும், மன்னிக்கும் மனப்பான்மையும் கொண்டவர் இறைவன் எனக் கூறுகின்றார்.

காணாமற்போன மகன் (LOST SON) - உவமை.

காண்க. ஊதாரியின் உவமை.

காதணி (EAR - RING)

இஸ்ராயேலர்களிடையே ஆண்களும் பெண்களும் ''புதல்வர் புதல்வியரும்''

கூடக் காதில் அணியும் அணிகலனாகும் (யாத் 32:2-3). இதைக்குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. இவற்றில் சில வளையல்களையும் தகடுகளையும் (எச 16:12) குறிக்கலாம். காதிலோ (யாத் 35:22; நீதி 8:24-26), மூக்கிலோ (ஏச 3:21) அணியப்படும் வளையல்களைக் குறிக்கும் பொதுச் சொற்களும் உண்டு (ஆதி 35:4, யாத் 32:2). உ.ச. 1:10-இல் வரும் அணி இப்படிப்பட்ட அணிகளையே குறிக்கலாம். இஸ்ராயேலர் தங்கள் நகைகளைப்பற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டனர். பகட்டாக அணிந்துகொண்டனர். பொற்கன்று செய்வதற்கு அவர்களின் அணிகலன்களை ஆரோன் கேட்டபோது அதற்கு அவர்கள் மறுப்பு எழுப்பவில்லை (யாத் 32:2-3). பிற்பாடு பேழைசெய்வதற்கு ஏற்படும் செலவிற்கும் (35:22) மற்றக் காணிக்கைகளுக்கும் (எண் 31:50) இவற்றைக் கொடுத்தனர்.



காதாரா (GADARA - சுவருடைய)

தெக்காப்பொலியில் உள்ள நகரம் இது. பேய்பிடித்தவனைக் கொண்டுவர, அவனிடமுள்ள அசுத்த ஆவியை இயேசு விரட்டிய நற்செய்திப் பகுதி ஒன்றுதான் இதற்கு ஆதாரமாக உள்ளது (மத் 8:28; மாற் 5:1; லூக் 8:26.37).

காதரேனா மத் 8:28, மாற் 5:1; லூக் 8:26.37-இல் குறிக்கப்படுகிறது. இப்பகுதிகளில் வரும் மாற்றுப்பெயர்களான "கெரசேனர்" மற்றும் "கெர்கசானியா" ஆகியவை வாசகத்தின் குழப்ப நிலையைச் சுட்டுகின்றன.

காதாரா, கலிலேயாக் கடலுக்குத் தென்கிழக்கில் 8 கி.மீ. தொலைவில் இருந்தாலும் அதன்பகுதி யார்முக்குக்கு வடக்கில் அமைந்துள்ள எல்கம்மேயின் வெப்பநீர் ஊற்றுகளையும் கொண்டிருந்தது. இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ள நாணயங்கள், கப்பல் வாணிபத்தில் ஆர்வத்தைக்காட்டுகின்றன.

பழங்காலக் காதாரா நகரமானது இப்பொழுது உம்குயில் என்றழைக்கப்படுகிறது. யோர்தான் சமவெளியின் கிழக்கு முனையில் இது கட்டப்பட்டுள்ளது. இந்த இடத்தில் புதிதாக ஒன்றும் புதைபொருள் ஆராய்ச்சி செய்யப்படவில்லை. அங்கு வெளிப்படையாகக் காணக்கூடிய அளவில் இருக்கின்ற அடையாளங்களே 3 கி.மீ. சுற்றளவுள்ள நகரம் இது எனக் காட்டுகிறது. அங்கு வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் கிரேக்கர்களே. ஏனெனில் அந்த நகரின் அமைப்பும், 2 அரங்குகளும், ஓர் ஆலயமும், தூண்கள் கொண்ட தெருக்களும், குளியலகங்களும் கிரேக்க அமைப்புக்குச் சரியான எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றன.

காதி (GADI - என் நற்பேறு)

இஸ்ராயேலின் அரசன் மெனகேமின் தந்தை (2 அர 15:14). ஒரு வேளை கதியேல் என்ற பெயரின் சுருக்கமாக இருக்கலாம்.

காதியர் (GADITES)

காது இனத்தைச் சேர்ந்தவர்கள்.

காத்து (HADIO — கூர்மையான)

செப்பேலாவின் வடமேற்கு எல்லையில், கடற்கரைப் பகுதியை நோக்கி அமைந்த பென்யாமினைச் சேர்ந்த நகரம். உலோது, ஓனோ ஆகியவற்றுக்கருகில் அமைந்திருந்தது (எஸ் 2:33; நெகே 7:37). பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களுள் 720-க்கும் மேலானவர்கள் குடியேறிய

இடம். அய்யலோன் சமவெளியின் ஆரம்பத்தில் உள்ளது.

இதுபற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் நாடு கடத்தலுக்குப் பிற்பட்டவையாக உள்ளன. மூன்றாம் துத்துமோசின் பட்டியலில் இது காணப்படுகிறது. இது யோசுவா காலத்தில் சுற்றுச் சுவரைக் கொண்டிருந்ததாக மிஸ்னா விவரிக்கிறது.

இந்த இடம் இலிதியாவிற்கு, வடகிழக்கில் 6.5 கி.மீ. தொலைவில் செங்குத்தான குன்றில் அமைந்திருந்தது. இப்போது ஏல் சுதித்தே என்றழைக்கப்படுகிறது. இந்த இடம் சீமோன் மக்கபேயரால் வலுப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது (1 மக் 12:35; 13:13). இந்த இடத்திற்கு அருகில்தான் அலக்சாந்தர் யன்னாயுவை நபத்தேய மூன்றாம் அரேத்த தோற்கடித்தார். பிற்காலத்தில் எருசலேமுக்கு எதிராகப் படையெடுத்தபோது வெஸ்பாசியன் இந்நகரைப் பலப்படுத்தினார்.

காது (EAR) — அங்கம்

ஒலியை ஏற்கும் உடல் அங்கங்களில் ஒன்றாகும். இதன் உதவி கொண்டு மனிதரும் விலங்குகளும் புறத்தூண்டுதலைப் பெறுகின்றனர் (யோபு 12:11). உடல் அங்கமாகிய காதை இஸ்ராயேலர் நன்கு தெரிந்திருந்தாலும் புரிந்து கொள்ளுதலிலும் (13:1) கேட்டவற்றின்படி நடப்பதிலும் அதிகம் கவனம் (உப 6:3) செலுத்தினர். பழைய ஏற்பாட்டு மக்கள் கேட்கும் சக்தியை இறைவனின் படைப்புச் செயல் என்று கருதினாலும் (சங் 94:9; பழ 20:12) படைப்பவரின் செய்தியை அடிக்கடி கண்டுணர முடியாமல் போவதையும் உணர்ந்திருந்தனர். சங்கீத ஆசிரியர், தனது மன்றாட்டுக்களைக் கேட்க இறைவனால் முடியாமல் போவதைப்போல் தோன்றுவதாகப் பலதடவை முறையிடுகிறார் (உம்.சங் 31:2). இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பைப் பாவம் பாழாக்கிவிட்டதால் மனிதர் இறைவனது குரலைக் கேட்டுப் பதில் அளிக்க (ஏச 50:5) இறைவனே ''அவர்களுடைய செவிகளைத் திறக்க வேண்டும்'' (யோபு 36:10.15; சங் 40:6). அதன்பின் இறைவன் மனிதமன்றாட்டுக்களைக் கேட்டுப் (1 சாமு 8:21; ஏச 59:1) பதில் அளிப்பார்.

யூதாவுக்கும், ஒருவேளை இஸ்ராயேலுக்கும், அவர்கள் புரிந்துகொள்ள முடியாத போது, இறைவாக்குரைக்க ஏசயாவைக் கட்டளையிடுவதில் (ஏச 6:9-10) வஞ்சப்புகழ்ச்சி அடங்கியிருக்கிறது. இக்கூற்றை இயேசு பிற்காலத்தில் தமது தலைமுறை மக்களைப் பற்றிக் கூறுகிறார். ஏனெனில் இறையரசின் தன்மையைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அருளப்படவில்லை (மத் 13:14-15 இணை; 13:16-17). இஸ்ராயேலர் மனந்திரும்ப வேண்டுமென்று இறைவன் மீண்டும், மீண்டும் எச்சரித்த பின்னே, ஏசயாவின் கூற்று வந்தது என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தக் கிளர்ச்சி செய்யும் மக்கள்பால் (ஏச 7) தற்காலிகமாவது, இறைவனது பொறுமை எல்லை கடந்துவிட்டது என்பதை இந்த இறைவாக்கு உணர்த்தலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசு செவிடரும் ஊமையுமானவரைக் குணப்படுத்துகிறார் (மாற் 7:35). பெரிய குருவின் ஊழியனது காது வெட்டப்பட்டபோது அதைக் குணப்படுத்துகிறார் (லூக் 22:51). ''கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்'' என்ற பழைய ஏற்பாட்டு எச்சரிக்கையை மீண்டும் மீண்டும் இயேசு கூறுகிறார் (மத் 11:15; 13:9). திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியர், ''ஆவி சபைகளுக்குக் கூறுவதைச் செவியுள்ளவன் கேட்கட்டும்'' (திருவெளி 2:7) என்று கூறுகிறார். நற்செய்தியின் செய்தி போதிக்கப்படுவதைக் கேட்பதால் விசுவாசம் வருவதாகப் பவுல் கருதுகிறார். கிரேக்கர்களைப்போல் அல்லாமல் அப்போஸ்தலர் வெளிப்பாட்டை, கண்ணோடு தொடர்புபடுத்தாமல், காதோடு தொடர்புபடுத்துகிறார்.

கொரிந்தியர்களுக்கு ஆன்மீகக் கொடைகளைப் பற்றி எழுதும்போது காது உட்பட்ட உடலின் அங்கங்கள் அனைத்தும் ஒருங்கமைந்து செயல்படும் போதுதான் உடல் சிறந்த முறையில் செயல்படுகிறது என்பதை

ஒரு வாதமாகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர் (1 கொரி 12:16).

காது (GAD /நற்பேறு) — ஆள்.

1. யாக்கோபின் மனைவி லேயாவின் வேலைக்காரி சிலிப்பாவின் வழியாகப் பிறந்த யாக்கோபின் ஏழாவது மகன். காது பிறந்தபோது, லேயா ''நன் நற்பேறு பெற்றுள்ளேன்'' என்று கூறியதிலிருந்து இப் பெயர் வருகிறது (ஆதி 30:11). காதுக்கு ஏழு புதல்வர்கள் இருந்தனர் (46:16; எண் 26:15-18).

யாக்கோபின் ஆசிர், காதை ஒரு கொள்ளைக் கூட்டமாக விவரிக்கிறது (ஆதி 49:19). இவ்வினத்தவர் போரில் ஆர்வம்மிக்கவர். இவர்களது போராற்றல் அவர்களுக்கு யோர்தானுக்கு அப்பால் முதன்மையான பகுதியைப் பெற்றுத் தந்தது; மோசேயின் பாடலில் போற்றப்படுகிறது (உப 33:20-21). இஸ்ராயேல் பாலையில் பயணம் செய்தபோது எடுக்கப்பட்ட முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் காது இனத்தைச் சேர்ந்தவர்களில் போர்க்கடமை செய்யத் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை 45, 650 ஆகவும் (எண் 1:24-25), இரண்டாம் கணக்கெடுப்பில் 40,500 ஆகவும் (எண் 26:15-18) கொடுக்கப்படுகிறது. சிசராவுக்கு எதிராகத் தெபோரா செய்தபோரில் காது இனத்தவர் பங்கெடுக்காவிடினும் (நீதி 5:17), பென்யாமினுக்கு எதிராகப் பழிவாங்குவதில், காது இனத்தவர் மற்ற இனத்தாரோடு சேர்ந்து கொண்டனர் (20:1). சிக்கிலாகில் தாவீது மறைந்து வாழ்ந்தபோது, காது இனத்தலைவர்களும் தாவீதுக்கு உதவி புரிந்தனர் (1 நாள் 12:8-15). காதுக்குரிய இன உரிமைப்பகுதி சீகோனின் முந்தைய அரசுக்குள் அமைந்தது. இது யோர்தானுக்குக் கிழக்கிலும் தெற்கில் ரூபன் பகுதிக்கும், வடக்கில் மனாசேயின் பாதி இனத்திற்கும் இடைப்பட்ட பகுதியாயும் அமைந்தது (யோசு 13:24-28; எண் 32:33 தொ). எசக்கியேல் இறைவாக்கில், காதுக்கு அளிக்கப்படும் பகுதி, எல்லா இனத்தவருக்கும் தெற்கிலுள்ள மிகச் சிறந்த அரசாகும் (எச 48:27). இந்தச் செழிப்பான பகுதி, பெலிஸ்தியர்களிடமிருந்து தப்பித் தஞ்சம் புக இடமளித்தது (1 சாமு 13:7); அபிசலோமின் கிளர்ச்சியின்போது, தாவீதுக்குத் தஞ்சம் அளித்தது (2 சாமு 17:24). இருப்பினும் இது மோவாபியர், அம்மோனியர் தாக்குதலுக்கு உட்பட்டது (1 நாள் 15:18-22). இறுதியில் அவர்களிடம் வீழ்ச்சியுற்றது (ஏரே 49:1).

2. காட்சியாளர்:-

தாவீது அரசனோடு தொடர்புடைய இறைவாக்கினர் அல்லது திருக்காட்சியாளர். ''சவுலுக்குத் தப்பியோடி, அதுல்லாம் குகையில் தாவீது மறைந்து வாழ்ந்தபோது, காது அவரை யூதாவுக்குத் திரும்பிப்போகச் செய்தார் (1 சாமு 22:5). மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தாவீது யாவேயின் சீற்றத்தைத் தூண்டியபோது, தாவீது தேர்ந்தெடுக்க மூன்று தண்டனைகளைக் காது அரசனுக்கு எடுத்துரைத்தார் (2 சாமு 24:11-14; 1 நாள் 21:9-12). பின்பு, அரவுனாவின் சூட்டடி நிலத்தில் ஒரு பீடம் கட்டுமாறு தாவீதுக்குக் கட்டளையிட்டார். இந்த இடத்தில் பிற்காலத்தில் சாலமோன் ஆலயத்தைக் கட்டுவார் (2 சாமு 24:18; 1 நாள் 21:18). லேவியர் பாடகர்களின் கடமைகளைத் திருத்தி அமைப்பதில் தாவீதுக்கும் இறைவாக்கினர் நாத்தானுக்கும் இக்காட்சியாளர் உதவி செய்தார் (2 நாள் 29:25). நாளாகமங்களின் மூலங்களை இவர் தொகுத்திருக்கலாம். கெபிரோனுக்கு வடக்கில் 6 கி.மீ. தொலைவில் இவரது வீடும் கல்லறையும் கல்கூலில் இருப்பதாகப் பாரம்பரியம் கூறுகிறது.

''தாவீது அரசனின் வரலாறு முழுவதும், அவர் செய்த ஆற்றல்மிக்க செயல்களும்.... திருக்காட்சியாளரான சாமுவேல்,...காது ஆகியோரின் நூல்களில் எழுதப்பட்டுள்ளன'' (1 நாள் 29:29). இக்கூற்றில் வரும் காதின் நூல் ''அரசர்களின் நூல்'' (2 நாள் 24:27) பற்றிய விளக்கவுரையாக இருக்கலாம். இதிலிருந்து நாளாகம நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கலாம் (20:34).

காது (GAD — நற்பேறு) — தேவதை.

உண்மையிலேயே இது ஒரு மனிதனின் பெயராக இருந்தாலும் மற்றவர்கள் தெய்வத்தைக் குறிப்பதற்கு இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் (ஏச 65:11).

நற்பேற்றின் தேவதை. நாடு கடத்தலுக்குப்பின் யூதப் பதிதர்கள் இதை வழிபட்டனர் (ஏச 65:11). இதன் வழிபாடு கவுரானில் சிறப்பான முறையில் இருந்தது. ஏசயாவில் வரும் இத்தேவதை பற்றிய குறிப்பு, நாடு கடத்தலுக்குப்பின், ஏதோமியர் அல்லது அராபியர் பாலஸ்தீனத்திற்குள் புகுந்து ஆதிக்கம் செலுத்தியதைச் சுட்டுகிறது.

இப்பெயர் கெர்மோன் மலைக்கடுத்த பாகால் காது (யோசு 13:5), யூதாவில் மிகிதல் - காது போன்ற இடப்பெயர்களிலும், காதி, கதியேல், அசிகாது போன்ற ஆட்களின் பெயர்களிலும் காணப்படுகின்றது.

காது நோக்கிய பள்ளத்தாக்கு (VALLEY TOWARD GAD)

தாவீதின் மக்கள் தொகைக் கணக்கெடுப்போடு தொடர்புடைய ஓர் இடம் (2 சாமு 24:5). சில மொழிபெயர்ப்புக்கள் ''பள்ளத்தாக்கின் மத்தியிலுள்ள நகரிலிருந்து, காது நோக்கி....'' என்றுள்ளது. இது ஒரு வேளை ஆர்னோன் பள்ளத்தாக்கைக் குறிக்கலாம்.

காதேசு, காதேசு — பார்னேயா (KADESH, KADESH — BARNEA — புனிதமான)

சின் பாலைவனத்திலுள்ள ஒரு பாலைவனச் சோலை. இங்கு, இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து கானானுக்குச் சென்ற விடுதலைப் பயணத்தில் நெடுங்காலம் தங்கினர்.

1. பெயர்:- காதேசு, கெதேசு என்ற பெயர்கள், பழங்காலத்தில் புனித இடங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. மோசரோட்டிக் வாசகம், தென்பகுதியான யூதாவைச் சேர்ந்த நகரங்களைக் காதேசு என்றும் வடபகுதியிலுள்ள நகரங்களைக் கெதேசு என்றும் அழைப்பதில் கவனமாக உள்ளது. இந்தக் காதேசை மற்றவற்றிலிருந்து பிரித்துக்காட்டச் சேர்க்கப்பட்டிருக்கும் பார்னேயா என்ற சொல்லுக்குப் பொருள் தெரியவில்லை. இது ஓர் ஆளின் சொந்தப் பெயராக இருக்கலாம்.

2. இருந்த இடம்:- காதேசு-பார்னேயா, இஸ்ராயேலின் எல்லைக்குத் தெற்கிலும் எகிப்திய ஆற்றின் முனைக்கு மேற்கிலும் அமைந்திருந்தது (எண் 34:4-5; எச 47:19; 48:28). இங்கு அயின் ஏல்-குதெயிராத், அயின-கேதேயிஸ், அயின் கொசெய்மே என்ற மூன்று நீரூற்றுகள் இருந்தன. இவற்றில் பெரியதான அயின் ஏல்-குதெயிராத்தில் ஆண்டு முழுவதும் நீர் ஓடுகிறது. ஓரளவு பயிர் செய்வதற்கும் ஏதுவானது. இங்குக் கி.மு.10-8-ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையிட்ட இஸ்ராயேலரின் கோட்டைச் சிதைவுகள் உள்ளன. இப்பகுதியில் தங்கிய இஸ்ராயேலர் மூன்று நீரூற்றுகளையும் பயன்படுத்தியிருக்கலாம்.

வரலாறு:- இவ்விடம் பற்றிய முதல் குறிப்பு அதன் பழைய பெயரான ஏன்-மிசுபாத்து என்பதனோடு ஆதி 14:7-இல் வருவதாகும். ஆபிரகாம் காலத்தில் படையெடுத்த அரசர்கள் இதைத் தங்கள் பகுதியாகக் கைப்பற்றினர். இது பெயேர்-லகாய்ரோயிக்கு அருகில் இருந்தது என்று 16:14 கூறுகிறது. இந்த இடத்தில் ஆபிரகாமும் ஈசாக்கும் அடிக்கடி தங்கியதாகத் தெரிகிறது. அப்போது இவ்விருவரும் காதேசு-பார்னேயாவில் தங்கியிருந்திருக்கவேண்டும் (20:1).

சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டபின் மோசேயும் இஸ்ராயேலரும் பாலைவனத்தில் அமலேக்கியர் நாட்டை நோக்கிப் பயணம் செய்து, காதேசு-பார்னேயாவில் தங்கினர் (உப 1:19-20). இது எண் 13:26-இல் பாரான் என்று அழைக்கப்படுகிறது. இங்கிருந்து கானான் நாட்டில் உளவு பார்த்துவர வேவுகாரர்கள் அனுப்பப்பட்டனர். இங்குதான் மோசேக்கு எதிராக இஸ்ராயேலர்கள் முணுமுணுத்தனர். அதற்காகத் தண்டிக்கப்பட்டனர். மோசேயின் ஆலோசனையை

நிராகரித்து இங்கிருந்து இஸ்ராயேலர் எமோரியர் நாட்டிற்குள் படையெடுத்தபோது, பேரழிவுடன் தோற்கடிக்கப்பட்டனர். அதற்குப்பின் நீண்ட காலத்திற்கு இங்குத் தங்கினர் *(எண் 13:14; உப 1).*

இங்கிருந்துதான் மோசே, ஏதோம் நாட்டின் வழியாகச் செல்ல அதன் அரசனிடம் அனுமதி கேட்டுப் பெறவில்லை *(எண் 20:14-21).* இன்னும் அலைந்து திரிந்தபின் இஸ்ராயேலர் காதேசுக்குத் திரும்பினர் *(33:36-37).* இங்குதான் ஆரோன் இறந்தார் *(33:38).*

இங்குதான் பாலைவனப்பயணத்தின் துன்பங்கள் பற்றி இஸ்ராயேலர் முறையிட்டனர்; மோசேயைக் கோபமுறச் செய்தனர். மோசே பாறையை இருமுறை அடித்தார் *(எண் 20:1-13; யாத் 17:1-7).* மோசே நீரூற்றுக்கு மெரிபா என்று பெயரிட்டார். இந்தப் புதிய பெயர் புதிய இஸ்ராயேல் பற்றிய எசக்கியேலின் காட்சியில் வருகிறது *(எச 47:19; 48:28).*

காத்தாம் *(GATAM — எரிபட்ட பள்ளத்தாக்கு).*

எலிப்பாசின் புதல்வர்களில் ஒருவர். ஏதோமிய குலத்தலைவர், ஏசாவின் வழித்தோன்றலாக இருக்கலாம் *(ஆதி 36:11.16; 1 நாள் 1:36).*

காத்திருத்தல் *(WAIT)*

இப்பொருளைத்தரக்கூடிய பல எபிரேய கிரேக்கச் சொற்கள் உள்ளன. சிலசமயம், இவை ஒன்றுமே செய்யாது வெறுமனே இருத்தல் அல்லது தள்ளிப்போடுதலை உணர்த்துகின்றன. மற்றச் சமயங்களில் எதிர்நோக்கிக் காத்திருத்தலை உணர்த்துகின்றன.

பழைய ஏற்பாட்டில் ஒன்றும் செய்யாது தங்கியிருத்தல் என்ற பொருளிலும் *(நீதி 3:25; ரூத் 1:13; 1 சாமு 14:9;..),* பதுங்கியிருத்தல் என்ற பொருளிலும் *(எண் 35:20; நீதி 16:2; 1 சாமு 5:5; சங் 59:3)* பல குறிப்புகள் உள்ளன. பழைய ஏற்பாட்டு மக்கள் முதன்மையாக இறைவனுக்குக் காத்திருக்கின்றனர். ''இறைவனுக்காகக் காத்திருத்தல்'' என்ற சொல் ஆக்கப்பொருளுடையது. ''இடுக்கண் நிலையையும்'' ''நீடித்துச் செயல் ஆற்றுவதையும்'' உணர்த்தவல்லது. இறைவனுக்காகக் காத்திருப்பதில், எபிரேயர் முனைப்பாக எதிர்நோக்கினர்; நம்பிக்கை நிறைந்தவர்களாக இருந்தனர்; இறைவன் வருமட்டும் நீடித்துப் பொறுத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்களாக இருந்தனர் *(சங் 25: 3.5.21; 27:14; 39:7; ஏச 26:8; 33:2; 49:23; 51:5; 60:9).* இறைவனுக்காகக் காத்திருத்தல் அவரிடம் நம்பிக்கை வைப்பதாகும் *(எரே 14:22;* இரண்டிற்குமுள்ள உறவை *சங் 39:7; 130:5; ஏச 8:17*-இல் காண்க). ஆனால் காத்திருப்பது அல்லது எதிர்நோக்கி இருப்பதுமட்டும் போதாது; காத்திருப்பவர் ''இறைவனுடைய வழிகளைக் கடைப்பிடிக்கவேண்டும்'' *(சங் 37:34);* ''இரக்கத்தையும் நீதியையும் கடைப்பிடிக்க வேண்டும்'' *(ஓசே 12:6).* இப்படிப்பட்டவர் ''வெட்கமடையார்'' *(ஏச 49:23);* ''புதுவலிமை பெறுவர்'' *(40:31).* ஆண்டவர் இவரைக் காப்பார் *(பழ 20:22).* இறைவனுக்காகக் காத்திருப்பவர் ''பக்கமாய்க் குனிந்து'' அவரது ''கூக்குரலை'' இறைவன் கேட்பார் *(சங் 40:1).* இறைவனுக்காகக் காத்திருப்போர் ''புனித நாட்டை உரிமையாக்கிக் கொள்வர்'' *(37:9);* ''இறைவன் தரும் மீட்பில்'' அகங்களிப்பர் *(ஏச 25:9; ஆதி 49:18).* இறுதியாக, இஸ்ராயேல் நற்கனிகளைக் கொடுப்பர் என்று இறைவனே எதிர்பார்த்துக் காத்திருந்தார் *(ஏச 5:2.7).*

புதிய ஏற்பாட்டில் ஒரேவார்த்தை எதிர்பார்த்திருப்பதையும் *(மாற் 15:43),* ஏற்றல், பெறுதலையும் *(உரோ 16:2)* உணர்த்தவல்லது. காத்திருப்பவர் பெற்றுக் கொள்ளுதலை எதிர்நோக்கியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் 'காத்திருத்தல் வழக்கமாக மீட்போடு தொடர்புடையதாகும். இதற்கு விதிவிலக்குகளும் உண்டு *(அ.ப.17:16; 1 கொரி 11:33; யாக் 5:7).* கிறிஸ்தவர்கள் ''இறைமக்களாக்கப்படுதலை'' *(உரோ 8:23)* எதிர்நோக்கியுள்ளனர்; ''மீட்பர் வருவாரெனக் காத்திருக்கின்றனர் *(பிலி 3:20;* மேலும் காண்க: *உரோ 8:19.25; 1 கொரி 1:7; கலா 5:5; 1 தெச 1:10; தீத் 2:13; எபி 9:28; 10:13; 11:10; யூதா 21).* ''நோவா பேழையைச் செய்து

கொண்டிருந்த காலத்தில் கடவுள் பொறுமையோடு காத்திருந்ததாகக்'' (1 பேதுரு 3:20) கூறப்பட்டுள்ளது.

காத்து (GATH — திராட்சை ஆலை)

பெலிஸ்தியரின் ஐந்து முதன்மையான நகரங்களில் ஒன்று. யூதேயாவிற்குக் கிழக்கிலும், எக்கரோனுக்குத் தெற்கிலுமாக அமைந்துள்ளது. இது அமைந்திருந்த இடத்தின் காரணமாக இது அடிக்கடி வெவ்வேறு ஆட்சிக்குக் கைமாறியது. யூதேயாவின் அதிகாரத்திற்கும் சில சமயங்களில் உட்பட்டிருந்தது. அதனால் பழைய ஏற்பாட்டில் 40 முறைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

மற்றப் பெலிஸ்திய நகரங்களைப்போலக் காத்தும் கானானியர்கள் காலத்தில் உள்ள ஒரு பழைய நகரம் என்று இஸ்ராயேலர்களால் கருதப்பட்டது. ஒரு காலத்தில் அனாக்கியர்கள் அங்கு வாழ்ந்தார்கள் (யோசு 11:22). எப்பிராயிம், பென்யாமின், இனத்தவர்களின் உடைமையைக் கைப்பற்றக் காத்து நகரத்தைச் சார்ந்தவர்கள் அவர்களைக் கொலை செய்தனர் (1 நாள் 7:21; 8:13). யோசுவா இந்நகரைக் கைப்பற்றவில்லை. இது பெலிஸ்திய நகரமாகவே விளங்கியது.

உடன்படிக்கையின் பேழை அசுதோத்தில் துன்பம் வருவித்ததால் காத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கும் துன்பம் வருவித்ததால் எக்கரோனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது (1 சாமு 5:6-10; 6:17). பிற்காலப் பாரம்பரியம் காத்தும் எக்கரோனும் சாமுவேல் காலத்தில் கைப்பற்றப்பட்டதாகச் கட்டுகிறது (1 சாமு 7:14). ஆயினும் இந்த இடங்கள் (எக்கரோன், காத்து) எல்லாம் பெலிஸ்தியரின் ஆட்சிக்கு உட்பட்டதாகவே இருந்தன. புகழ்பெற்ற கோலியாத்து என்ற பெலிஸ்திய வீரன் காத்தைச் சேர்ந்தவன் (1 சாமு 13:4.23; 2 சாமு 21:19). மற்றத் திறமை படைத்த வீரர்களும் காத்திலிருந்து தோன்றினர் (2 சாமு 21:20-22; 1 நாள் 20:5-8). பெலிஸ்தியர்கள் இஸ்ராயேலர்களால் தோற்கடிக்கப்பட்டபோது பாதுகாப்பிற்காக அருகிலிருந்த எக்கரோன், காத்து ஆகிய நகரங்களுக்கு ஓடினார்கள்.

சவுலிடமிருந்து தப்பியோடியபோது தாவீது காத்தின் அரசன் ஆக்கிசிடம் தஞ்சம் தேடிச் சென்றார். ஒரு பாரம்பரியப்படி அவர் நல்ல முறையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை (1 சாமு 21:10-15; சங் 56:1). இன்னொரு மரபு, அவசியம் ஏற்பட்டால் இஸ்ராயேலருக்கு எதிராகப் போரிடுவதற்குத் தாவீது தயாராக இருந்ததால், அவர் வரவேற்கப்பட்டார் என்று கூறுகிறது (1 சாமு 27:1 - 28:2; 29). சவுலைப் பற்றியும் யோனத்தானைப் பற்றியும் புலம்பும் பொழுது நகரின் பெலிஸ்தியப்பண்பும் வெளிப்படுகிறது.

பேழையை எருசலேமுக்குள் கொண்டுவருவதைக் (2 சாம 1:20), காலம் தாழ்த்திய போது தாவீது காத்தைச் சேர்ந்த ஓபேது - ஏதோமின் பாதுகாப்பில் மூன்று மாதங்களுக்கு அதை விட்டுவைத்தார் (2 சாமு 6:10; 1 நாள் 13:13). தாவீது பெலிஸ்தியர்களை முறியடித்து அவர்களை அடிமைப்படுத்தினார் (1 நாள் 8:1; 2 சாமு 8:1). காத்திலிருந்து வந்த ஆற்றல் வாய்ந்த அறுநூறு வீரர்கள் அரசருக்குமுன் நடந்து போனார்கள் (2 சாமு 15:18-22). இவர்களுக்குக் காத்தைச் சேர்ந்த இத்தாய் தலைமைதாங்கினார்.

சாலமோனின் காலத்தில் அவருடைய நட்புறவும், அரசியல் நிர்வாகமும் காரணமாக எருசலேமிற்கும், காத்திற்கும் நல்ல தொடர்பு இருந்தது. ஆக்கீசு தாவீதின் நண்பன் (1 அர 2:39-42). இரகபெயாம் யூதாவின் முக்கிய நகரங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட காத்தைப் பலப்படுத்தினார் (2 நாள் 11:8-10). சீரியா நாட்டு அரசன் கசயேல் காத்து நகரோடு போரிட்டு அதைக் கைப்பற்றினார் (2 அர 12:17). யூதாவைச் சேர்ந்த ஊசியா பெலிஸ்தியரோடு போரிட்டுக் காத்து நகரின் மதிலைத் தகர்த்தெறிந்தார் (2 நாள் 26:6). கி.மு. 74-இல் இரண்டாம் சார்கோன் காத்தையும் மற்றக் கிளர்ச்சிசெய்த நகரங்களையும் கைப்பற்றிக் கொள்ளை அடித்ததைப் பேசுகி

நார். இதற்குப் பின் இந்நகரம் வரலாற்றில் இருந்து மறைந்துவிட்டதாகத் தெரிகிறது. ஆமோ 6:2-இல் காத்து அழிந்துபோன நகரத்திற்கு அடையாளமாகப் பயன்படுகிறது. பெலிஸ்திய நகர்களின் பட்டியலில் காத்து நகரத்தை இறைவாக்கினர்கள் குறிப்பிடவில்லை (ஆமோ 1:6-8; செப் 2:4; எரே 25:20; யோசு 13:3; 1 சாமு 6:17). புதிய ஏற்பாட்டிலும் திருவெளிப்பாட்டிலும் காணப்படவில்லை.

கி.மு. 8-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இடம் அழிந்துபோனதால் காத்து இருந்ததாகக் கருதப்படும் பல இடங்கள் அடையாளங்கள் காட்டப்படுகின்றன. இரண்டு இடங்கள் முக்கியமானவை: ஒன்று அசுதோதுக்குக் கிழக்கில் 19 கி.மீ. தொலைவிலுள்ள, தேல் எஸ்-சாவி, மற்றது அசுக்கலோனுக்குக் கிழக்கில் 24 கி.மீ. தொலைவிலும் தேல் எஸ்சாபிக்குத் தெற்கில் 11 கி.மீ. தொலைவிலும் அராகு எல்-மென்சியேக்கு அருகிலுள்ள தேல் செயிக் அகமது ஏல்-அரேய்னி ஆகும்.

பாலஸ்தீனத்தில் பல இடங்களில் திராட்சை ரசம் பிழியும் ஆலைகள் காணப்படுகின்றன. அஃதோடு தொடர்புடைய பல பெயர்கள் விவிலியத்தில் வருகின்றன. அவற்றில் சில: காத்து-கேப்பர், காத்து-ரிம்மோன், மோரசேத்து-காத்து, கித்தாயிம்.

காத்து - கேப்பர் (GATE-HEPHER - கிணற்றின் ஆலை)

செபுலோனின் எல்லையிலுள்ள ஓர் ஊர் (யோசு 19:13). இஸ்ராயேலின் இரண்டாம் எரொபயாமுக்குச் சமகாலத்தவராகிய இறைவாக்கினர் யோனாவின் இல்லம் (2 அர 14:25). அனேகமாகக் கிர்பெத்து எஸ்-சூரா என்ற இடமாக இருக்கலாம். இது நாசரேத்திற்கு வடகிழக்கில் 5 கி.மீ.மைல் தொலைவில் உள்ளது.

இரும்புக்காலத்திலும் பிற்கால வெண்கலக் காலத்திலும் இங்கு மக்கள் வாழ்ந்ததாக அகழ்வாய்வுகள் காட்டுகின்றன. இந்த இடத்திற்குச் சிறிது வடக்கில், யோனாவின் கல்லறை இருப்பதாகப் பாரம்பரியமாகக் கருதப்படும் மெஸ்டகெத் என்ற கிராமம் உள்ளது. எரோனிமுவின் கருத்துப்படி, திபேரியாவுக்குச் செல்லும் பாதையில் செப்போரிசிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள முக்கியமற்ற கிராமம் ஆகும் காத்து - கேப்பர்.

காத்து-ரிம்மோன் (GATH-RIMMON - மாதுளம் பழ ஆலை)

1. தாண் கோத்திரத்தின் புதல்வர்களுக்கு அளிக்கப்பட்ட லேவியர் நகரங்களில் ஒன்று. இது கெகாத்தியருக்கு அளிக்கப்பட்டது (யோசு 21:24; 1 நாள் 6:69).

யார்கோன் ஆற்றின் தென்கரையில் வாடி முசுராரா சேருமிடத்தில் உள்ள தேல் எக்-கெரிசேயாக இருக்கலாம். இங்குக் கைக்சோசின் தொடக்ககாலக் கோட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஊர், மூன்றாம் துத்துமோசின் பட்டியலில் வரும் காத்து ஆக இருக்கலாம்.

2. மனாசேப் பகுதியில் கெகாத்தியருக்கு அளிக்கப்பட்ட ஒரு லேவியர் நகரம் (யோசு 21:25). இங்கு வாசகம் பழுதுபட்டிருக்கலாம். இதற்கு இணையான வாசகமாகிய 1 நாள் 6:70-இல் பிலியாம் என்ற பெயர் வருகிறது.

காபாய் (GABBAI - ஒன்று சேர்ப்பவன்.)

நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் வாழ்ந்த பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஒருவர் (நெக 11:8). அறிஞர் சிலர் இவ்வாசகம் பழுதுபட்டது என்று கருதிக் காபாயை ''வலிமை மிக்க வீரர்கள்'' என்று திருத்துகின்றனர்.

காபு (GAPH)

எபிரேய நெடுங்கணக்கில் பதினோறாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இல், இவ்வெழுத்து தலைப்பாக அமைந்து ஒவ்வொரு வரியும் இவ்வெழுத்தோடு தொடங்குகிறது.

காபூல் (CABUL - மகிழ்ச்சிதராத, வெறுப்புத் தருகிற)

1. ஆசேரின் நிலப்பரப்பிலுள்ள ஓர் எல்லை நகரம் (யோசு 19:27). அக்ரோவிற்

குக் கிழக்கு தென்கிழக்கில் ஏறக்குறைய 15 கி.மீ. தொலைவிலும், கர்மேல்மலைக்குக் கிழக்கு வடகிழக்கில் 16 கி.மீ. தொலைவிலும் உள்ள இன்றைய காபூலாகக் கருதப்படுகிறது. இது இரு சமவெளிக்கிடையிலுள்ள மலைமேல் அமைந்திருந்தது. செம்புக்காலத்திலேயே மக்கள் இங்குக் குடியேறியிருந்தனர்.

2. கலிலேயாவிலுள்ள ஒரு மாவட்டம். 1 அர 9:13-இன்படி தீரைச் சேர்ந்த கிராம் என்பவர் ஒருசமயம் ஆலயம் கட்டுவதற்கு உதவிசெய்ததற்காகச் சாலமோன் தனக்குக் கொடுத்த 20 நகரங்களைக் காபூல் என்று அமைத்தார். 2 நாள் 8:2-இல் வரும் இணையான வாசகம் கிராம் அல்ல, சாலமோன்தான் இந்த இடங்களைப் பரிசாகப் பெற்றார் என்கின்றது. இருப்பினும் அரசராகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளதுதான் சரி என்று விளக்கவுரையாளர்கள் ஒப்புக்கொள்கின்றார்கள். தீர் அரசன் ஆக்கோ சமவெளியிலுள்ள கடற்கரை நகரங்களை விரும்பினார். ஆகையால், மலைமேலுள்ள பயனற்ற இந்த ஊர்கள் அவருக்குப் பிரியமான கொடையாக அமையவில்லை.

இந்த மாவட்டத்தில் ஆட்சி மையம் காபூல் என்ற இடத்தில்தான் இருந்தது. ஆனால் போதிய ஆதாரங்கள் இல்லாமையால் இந்த மாவட்டத்தை அடையாளம் காட்ட முடியவில்லை.

காபோர் (HABOR)

யூப்பிரத்திக என்ற பெரிய நதியின் உபநதியாகும். மக்கள் நெருக்கமாக வாழ்ந்த பகுதியில் ஓடியதாகத் தெரிகிறது. இது வடகிழக்கிலிருந்து பாய்கிறது. ஓசயா அரசரின் ஒன்பதாவது ஆண்டில் சில இஸ்ராயேலர்களைச் சால்மனேசர் என்பவர் இந்த ஆற்றங்கரைக்கு நாடு கடத்தினார் (2 அர 17:6; 18:11; 1 நாள் 5:26).

இந்த ஆறு இப்போது நகிர் ஏல்-காபூர் என்றழைக்கப்படுகிறது. இது காரான் சுற்றுவட்டாரத்தில், ஒருவேளை கோசான்பகுதியில், தோன்றித் தென்மேற்காக ஓடி, சிர்கேசியும் என்ற இடத்தில் யூப்பிரத்திகடன் சேர்கிறது. இதையும் கெபார் நதியையும் குழப்பிவிடக்கூடாது.

காப்புக்கருவி (MANTELET)

இது, நகரம் முற்றுகையிடப்படும்போது, முற்றுகையிடுபவர்களைத் தற்காப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட, நகர்த்தக்கூடிய அமைப்பாகும் (நாகூ 2:6).

நினிவேயின்மீது தொடுக்கப்பட்ட ஒரு தாக்குதலைப்பற்றிய விவரிப்பில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதன் தெளிவான பொருள் தெரியவில்லை. இதனுடைய எபிரேய மூல வார்த்தை, ''இணைந்து நெய்தல்'', ''திரையிடல், பாதுகாத்தல்'' என்ற பொருளைத் தருகின்றது. எழுபதுநூலும் வுல்கத்தா வாசகமும் ஆகிய இரண்டும், 'பாதுகாப்பு' என்ற பொருளையே கொண்டுள்ளன (நாகூ 2:5).

காமவெறி (LICENTIOUSNESS)

தீயொழுக்கம், சிற்றின்ப அல்லது புலனுணர்ச்சி இன்பங்களில் ஒழுக்க வரம்பு கடந்த செயல்கள். இது புறவினத்தார் (எபே 4:17-13), பதிதர்கள் (யூதா 4; 2 பேதுரு 2:2) ஆகியோரைக் குறித்துக் காட்டும் பண்பாகும். இச்சொல்லைப் பவுல் பயன்படுத்தும்போது, சிற்றின்ப ஒழுக்க வரம்பு கடந்த செயல்களையே சிறப்பாகக் குறித்துக்காட்டுகிறார் (உரோ 13:13; 2 கொரி 12:11).

காமியர் (HAMITES)

நோவாவின் கடைசிப்புதல்வனான காமின் சந்ததியினர். நாடுகளின் பட்டியலின்படி (ஆதி 10); காமின் புதல்வர்களான கூசு, எகிப்து (மிகராயிம்), பூத்து, கானான் ஆகியவர்களைத் தலைவர்களாகக் கொண்டு நான்கு பிரிவினராகப் பெயர் பெற்றனர்.

இலக்கியப்படியும் அதன் விளைவாகக் கலாச்சாரப்படியும் காமிய மொழிகள் பேசிய மக்கள் காமியர் என்றழைக்கப்பட்டனர். இம்மொழிகள் செமித்திய மொழிகளோடு தொடர்புடையன. எனவே காமிய-

செமித்திய அல்லது ஆப்பிரிக்க-ஆசிய மொழிகள் என்றழைக்கப்பட்டன. இந்த மொழிக்குழுவில், வடஆப்பிரிக்கா, கனரித் தீவுகளில் பேசப்படும் பேர்பேர் மொழிகளும், பழங்கால எகிப்திய மொழிகளும், எத்தியோப்பியா, செமாலிய ஆகிய பகுதிகளில் பேசப்பட்ட கூசிய (அல்லது கிழக்குக் காமிய) மொழிகளும், வட நைசீரியாவில் பேசப்பட்ட சாது மொழிகளும், கிழக்கு ஆப்பிரிக்காவில் பேசப்பட்ட நீலோ-காமிய மொழிகளும் அடக்கும்.

காமுல் (GAMUL - பால்குடி மறக்கச் செய்யப்பட்ட, பயனடைந்த)

தாவீது காலத்தில் ஒரு குருவும், குருக்களின் இருபத்திரண்டாவது பிரிவின் தலைவரும் ஆவார் (1 நாள் 24:17).

காமூலியர் (HAMULITES)

காமூலின் சந்ததியினர். யூதாவின் ஒரு இனப்பிரிவினர் அல்லது துணைப் பிரிவினர் ஆவர் (எண் 26:21).

காமூல் (HAMUL - காப்பாற்றப்பட்ட)

யூதாவின் பேரனும், பேரேசின் இளைய மகனுமாவார் (ஆதி 46:12; எண் 26:21; 1 நாள் 2:5). காமூலிய மரபின் தலைவர் (எண் 26:21).

காமோன் (KAMON - நிலையம்)

இது நீதிபதி யாயிர் உயிர் துறந்த, புதைக்கப்பட்ட நகரம் (நீதி 10:5). இது கிலயாத்தில் உள்ளது. யாயிரின் வழித்தோன்றல்களுக்குச் சொந்தமான முப்பது ஊர்களில் ஒன்று. இவையாவும் சேர்ந்து கவ்வோத்து-யாயிர் என்றழைக்கப்பட்டன. இது பொதுவாகக் கலிலேயாக் கடலுக்குத் தென்கிழக்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கம் என்ற ஊராக அடையாளம் காட்டப்படுகிறது. இது இருந்ததாக அடையாளம் காட்டப்படும் மற்றொரு இடம் இர்பித்துக்குக் கிழக்கு - வடகிழக்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள குமெயிம் ஆகும்.

காம் (HAM - சூடான) - ஆள்

நோவாவின் மூன்று புதல்வர்களுள் காம் என்பவர் இரண்டாவது மகன் (ஆதி 5:32; 6:10; 1 நாள் 1:4). ஆனால் 9:24-இன்படி இவர்தான் இளையமகனாவார். நோவா பெட்டகத்தில் காம் தன் மனைவியோடும், மணமுடித்த மற்றச் சகோதரர்களோடும், தந்தையோடும் சேர்ந்து கொண்டார் (7:13). பெருவெள்ளத்திற்குப் பிறகு இவர் இறை உடன்படிக்கையிலும், ஆசியிலும் பங்கு கொண்டார் (ஆதி 9:1-17).

யாவே மரபின்படி நோவா போதைத் தூக்கத்திலிருந்து விழித்தெழும்போது அவருடைய மகன் செய்தது கண்டு கானானைச் சபித்தார். காமை அல்ல அவருடைய சகோதரர்கள் சேமுக்கு யாப்பேத்துக்கு ஊழியம் செய்யும்படித் தண்டித்தார் (ஆதி 9:20-27). வடிவ ஆய்வுப்படி, இக்கதையைப் பெருவெள்ளக் கதையிலிருந்து பிரிப்பது நல்லதெனத் தெரிகிறது. மூலவரிசையில் நோவாவின் புதல்வர்கள் சேம், யாப்பேத்து, கானான் என்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இரண்டு கதைகளையும், ஒன்றுபடுத்த பதிப்பாசிரியர் காமைக் கானாவின் தந்தை எனக் கூறுகிறார் (9:18.22).

காமின் மக்களாகக் கூசு, மிசுராயிம் (எகிப்து), பூத்து, கானான் என்பவர்கள் நாடுகளின் பட்டியலிலும் (10:6-20), மரபுமுறைக் கொடியிலும் (1 நாள் 1:8-16) குறிக்கப்படுகின்றனர்.

''காமின் கூடாரங்கள்'' (சங் 78:51), ''காமின் நாடு'' (சங் 105:23.27; 106:22), காமின் வழித்தோன்றல்களின் நாடான எகிப்தைக் குறிக்கின்றன. 1 நாள் 4:40-இன்படி ''காமைச் சேர்ந்தவர்கள்'' கானானியர்களைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

காம் (HAM) - இடம்.

யோர்தானுக்குக் கிழக்கே உள்ள சூசிம் பகுதியில் உள்ள ஒரு நகரம். ஆபிரகாம் காலத்தில் கெதர்லாகோமேரும் அவரது கூட்டணியும் இந்நகரைத் தோற்கடித்தனர் (ஆதி

14:5). மூன்றாம் துத்துமோசின் பட்டியலில் இருகூமா என்றழைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இர்பித்தின் தென்மேற்கில் 7 கி.மீ தொலைவிலும் யாப்போக்குக்குக் கிழக்கிலுமுள்ள தேல்காமாக இருக்காலாம். இது பழங்கால நகரம் என்பதை அங்கு இருக்கின்ற பெரிய கற்களால் கட்டப்பட்ட முப்படிச் சுவரின் சிதைவுகளிலிருந்து அறியலாம்.

காயி (GAI - பள்ளத்தாக்கு)

1 சாமு 17:52-இன் படி பெலிஸ்தியாவில் எக்கரோனுக்கு அருகிலுள்ள பகுதியாகும். சில மொழிபெயர்ப்புகள் ''பள்ளத்தாக்கு'' என்று கொண்டுள்ளன. இது சரியாக இருக்க முடியாது. சில மொழிபெயர்ப்புகள் காத்து என்று கொண்டுள்ளன.

காயினான் (CAINAN)

1. அருபகசாதுவின் மகன் (லூக் 3:36; எழுபதுநூல் ஆதி 10:24; 11:12).
2. கேனானின் மற்றொருபெயர் (லூக் 3:37).

காயின் (CAIN - காழ்ப்புணர்ச்சியுள்ளவன், பிறப்பு அளித்தல்)

பாவம் புகுந்தபின் ஆதாம்-ஏவாளுக்குப் பிறந்த மூத்தமகன். நிலத்தைப் பயிர் செய்பவர் (ஆதி 4:1-2). பெயரின் பொருளை விளக்குவது கடினம். ஏவாள் தன் மகனுக்குப் பெயரிட்டபோது ஆதி 3:15-இல் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நினைவில் கொண்டிருக்கலாம். பாம்பை அழிக்கும் வித்தாக அமைவான் என்று கருதியிருக்கலாம். தங்களுடைய விளைச்சலின் பலன்களைச் சகோதரர்களான காயினும், ஆபேலும் யாவேயின் முன்கொண்டு வந்தனர்; ஆனால் யாவே காயினின் காணிக்கை பற்றிக் கவலைப்படவில்லை. ஆகவே காயின் சினந்து தன்னுடைய சகோதரனைக் கொன்றார் (ஆதி 4:2-8). அதைப்பற்றி யாவே கேட்டபோது ''என் சகோதரனுக்குக் காவலாளியோ?'' என்று முரட்டுத்தனமாகப் பதில் கூறினார். அதன் விளைவாக யாவே அவரைச் சபித்தார்.

காயினுக்கு அளிக்கப்பட்ட தண்டனை அவரைத் தன்னுடைய நாட்டினின்றும், வீட்டினின்றும், கடவுளிடமிருந்தும் அந்நியனாக்கிவிட்டது. ''மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்'' என்று யாவே காயினைச் சபித்தார். ஆனால் காயினின் மன்றாட்டுக்கிணங்கித் தண்டனையைக் குறைத்தார் (ஆதி 4:9-16). அது இந்தக் கொலைகாரனை யாரும் கொல்லக்கூடாது என்று எச்சரித்தது.

''ஆண்டவர் திருமுன்னைவிட்டுச் சென்று'' காயின் நோதில் குடியேறித் தன் மனைவியுடன் வாழ்ந்தார். அவர்களுக்கு ஏனோக்கு பிறந்தார். காயின் ஒரு நகரை நிறுவி அதற்கு ஏனோக்கின் பெயரை வைத்தார் (4:16-17). காயினைப் பற்றிய பழைய ஏற்பாட்டில் வரும் ஒரே குறிப்பு, இலாமேக்கின் பாடலில் காயினின் சாபம் குறிக்கப்படுவதாம் (4:24).

யாவே ஏன் ஆபேலின் காணிக்கையைமட்டும் ஏற்றுக்கொண்டார்? காயினுடையதைப் புறக்கணித்தார்? என்பதற்கு ஆதியாகமமும் தெளிவாகக் காரணம் காட்டவில்லை. விளக்கங்கள் அனைத்தும் பிற்காலத்தில் தோன்றியவையே (ஞானம் 10:3-4).

தன் சகோதரனைக் கொன்ற இந்தக் கொலைகாரனைப் புதிய ஏற்பாடு சில இடங்களில் குறிப்பிடுகிறது (மத் 23:35இ; லூக் 11:51). காயின் சென்ற வழியில் தீயவர்கள் சென்றார்கள் என்று யூதா கூறுகிறது.

யோவர் 3:12, காயின் ''தீயோனைச் சார்ந்தவனாக'' இருந்ததால், காழ்ப்புணர்ச்சி கொண்டு தன் தம்பியைக் கொன்றார் என்று கூறுகிறது. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம், ஆபேலின் காணிக்கை விசுவாசத்தினால் அளிக்கப்பட்டது. ஆகவே ஏற்புடையதாயிற்று என்று கூறும்போது, காயினின் காணிக்கையில் இப்பண்புகள் காணப்படவில்லை என்று சுட்டுகிறது (எபி 11:14). கிறிஸ்தவர்கள், காயினைப்போல் இல்லாது (1 யோவா 3:12) விசுவாசமுள்ள ஆபேலைப் பின்பற்றுமாறு (எபி 11:4) அறவுரை கூறப்பெறுகின்றனர்.

காயுக (GAIUS)

1. பவுலின் பயணத்தில் துணைநின்ற மக்கதோனியக் கிறிஸ்தவர். எபேசு நகரில் தெமேத்திரியு என்னும் பொற்கொல்லன் கிறிஸ்தவ நெறிக்கு எதிராகப் பெரும் கல கத்தை உண்டு பண்ணினபோது பவுலோடு பிடிக்கப்பட்ட இருவருள் காயுகம் ஒருவரா வர் (அ.ப.19:29).

2. இவர் சிறிய ஆசியாவில் தெர்பை நகரத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர். எபேசிலி ருந்து மக்கதோனியாவிற்குப் பவுலோடு பய ணம் செய்தவர். அ.ப. 20:4-இல்வருபவரும் இவரும் ஒரே ஆளாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. ஏனெனில் இருவரும் அரித் தார்க்கோடு சேர்த்துக் குறிக்கப்படுகின்றனர். பழங்கால வாசகம் இவர் கிழக்கு மக்கதோனி யாவில் தோபேருவில் வாழ்ந்ததாகக் குறிக்கிறது.

3. கொரிந்து நகரத் திருச்சபையில் பவு லால் திருமுழுக்குப்பெற்ற இரு கிறிஸ்தவர் களுள் இவரும் ஒருவர் (1 கொரி 1:14). உரோம 16:23-இல் சொல்லப்படுகின்ற காயு சும் இவராகத்தான் இருக்கவேண்டும். ஏனெ னில் கொரிந்து நகரில் இவரது வீட்டில் தங்கித்தான் பவுல் உரோமையருக்குக் கடி தம் எழுதினார். அ.ப.18:7-இல் வருகிற தீத்து என்று கருதப்படுகிறார்.

4. பவுல் திருமுழுக்கு அளித்த, கொரிந் தைச் சேர்ந்த கிறிஸ்தவர் (1 கொரி 1:14). இவரது முழுப்பெயர் காயுசு தீத்து யுஸ்து என்று கூறப்படுகிறது. அ.ப. 18:7-இல் வரும் இவர், பவுலை விருந்தோம்பியவர். இவ ரும் 3-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்க லாம்.

5. யோவானின் மூன்றாம் திருமுகம் இவ ருக்கு எழுதப்பட்டது (3 யோவா 1). இவர், தனக்கு அன்னியரான கிறிஸ்தவர்களையும் விருந்தோம்பினார் (வச 5-6). யோவான்தான் இவரை விசுவாசத்திற்குக் கொண்டு வந்தி ருக்கலாம்.

காய்கறி, மரக்கறி (VEGETABLES)

அவரை, வெள்ளரி, வெங்காயம், உள்ளிப் பூண்டு, பீன்ஸ் முதலியவை பாலஸ்தீனத் தில் பயிரிடப்படும் காய்கறிகளாகும். காய்கறி களைப் பொருத்தமட்டில் பாலஸ்தீனம் எகிப்தைவிடத் தாழ்ந்தது. எகிப்தில் விதை களை விதைத்து, நீர்பாய்ச்சினால் தோட்டம் உருவாகிவிடும்(உப 11:10). காய்கறிகள் பெரும்பாலும் தோட்டங்களில் பயிரிடப் பட்டன. இதற்காகத்தான் ஆகாபு நாபோத் தின் திராட்சைத் தோட்டத்தைத் தனக்குத் தரும்படி கேட்டார் (1 அர 21:2).

தானியேலும் அவருடைய தோழர்களும் தங்களுக்கு மரக்கறி உணவு தருமாறு கண்கா ணிப்பாளரிடம் கேட்டுப்பெற்றுக் கொண்ட னர் (தானி 1:12.16). காய்கறிகள் மட்டும் போதிய உணவாக அமையாது. விசுவாசத் தில் வலுவில்லாதவர்களை மரக்கறி உணவை மட்டும் உண்பவர்களோடு ஒப்பிடு கிறார் பவுல் (உரோ 14:2).

காய்க்காத அத்திமரம்: (லூக் 13:6-9) - உவமை

இந்த உவமை மனந்திரும்ப வேண்டிய தன் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றது. மூன்று வருடங்களாகப் பலன் தராத இம் மரத்தை வெட்டிவிடு எனத் தலைவன் கூற, தோட்டக்காரன் இன்னும் ஒருமுறை பொறுத்திருக்கலாமென்கிறான். இந்த உவ மையை மூன்று விதமாக விளக்கலாம். முத லாவதாக, அத்திமரம் யூதர்களையும், மூன்று ஆண்டுகள் இயேசுவின் பணிக்காலத்தையும் அவ்வேளையில் யூதர்கள் அவரை ஏற்க மறுத்ததையும் குறிக்கிறது. அடுத்த ஆண்டு இயேசுவின் பாடுகள், உயிர்ப்பையும் குறித்து, அப்போதும் மனமாறவில்லை யெனில் அவர்களுக்கு மீட்பு மறுக்கப்படும் என்பதையும் குறிக்கிறது. இரண்டாவதாக, அத்திமரம், பாலஸ்தீன நாடாகிய தோட்டத் திலே நடப்பட்ட ஊராக எருசலேமைக் குறிக்கிறது. இந்நகரில் மக்கள் இயேசுவைத் தொடர்ந்து மறுத்ததால், இந்நகரம் அழிக்கப்

படும். கி.பி. 70-இல் எருசலேம் அழியப் போவதை இது குறிக்கிறது. மூன்றாவதாக அத்திமரம் ஆன்மீகக் கனி கொடாத மனித இனத்தைக் குறிக்கிறது. தோட்டத்தலைவன் மனிதரின் ஆன்மீக முன்னேற்றத்திலே அக் கறை கொண்டிருக்கும் கடவுள். தோட்டக்கா ரன் மனிதர்களைக் கட்டிக்காத்து இயேசுவை அவர்கள் முழுமையாக ஏற்க வகை செய்யும் திருச்சபை. இம்மூன்று விளக்கங்களும் இயேசுவை ஏற்காதவர்க்கு எச்சரிக்கையாக அமைகிறது.

காய்ச்சல் (FEVER)

விவிலியத்தில் குறிப்பிடப்படும் வியாதி களை இனம் கண்டுகொள்வது எப்பொழு தும் சுலபமில்லாதபோது, காய்ச்சல்வரும் சூழ்நிலை எப்பொழுதும் ஒரே மாதிரியான விளக்கத்தோடு வர்ணிக்கப்படுகிறது.

உப 28:22-இல் காய்ச்சல் கடும் காய்ச்சல் அல்லது விட்டுவிட்டு வரும் காய்ச்சலை வர்ணிப்பதாக அமையலாம். 28:22-இல் வரும் கடுங்குளிர் மலேரியாக் காய்ச்சலைக் குறிப்பிடலாம். உப 28:22 காய்ச்சலின் இரண்டு நிலைகளைக் குறிப்பிடுகிறது. முத லில் வருவது மலேரியாக் காய்ச்சலோடு மஞ்சள்காமாலை வருவதைக் குறிப்பிடுகி றது. இரண்டாவது காய்ச்சலை மட்டும் குறித்துக்காட்டுகிறது.

லேவி 26:16; உப 28:22 ஆகிய பகுதிகளில் ''என்புருக்கி நோயும் காய்ச்சலும்'' குறிக்கப் படுகின்றன. இது காய்ச்சலினால் மெலிய வைக்கிற வியாதி. இந்நோய் சீரியாவில் அவ்வளவாக இல்லை. விட்டுவிட்டு வரும் காய்ச்சலைத்தான் இந்நோய் குறிப்பிடுகிறது. இவ்வியாதி இரத்தசோகை, கடும் காய்ச்சலி னால் வரும் வலிப்பு, மெலிந்துபோதல் போன்ற விளைவுகளை ஏற்படுத்தும். மலே ரியாக்காய்ச்சல் பழங்காலப் பாலஸ்தீனத்தில் மக்களை வருத்திப் பலரை மரிக்கச்செய்ததா கத் தெரிகிறது. பேதுருவின் மாமியாரும் (மத் 8:14; மாற் 1:30; லூக் 4:38) அரச அலுவலர் மகனும் (யோவா 4:52) இவ்வித நோயால் பீடிக்கப்பட்டிருக்கவேண்டும்.

அ.ப. 28:8-இல் காய்ச்சல், சீதபேதியோடு குறிப்பிடப்படுகிறது. இது மலேரியாக்காய்ச் சலின் தளர்ந்த நிலையாக இருக்கலாம். ஆனால் இங்கு விவரிக்கப்படுகின்ற காய்ச் சல் ஆளைக்கொல்லும் கொடூரக் காய்ச்சலா கச் சித்தரிக்கப்படுகிறது.

காய்வான் (KAIWAN)

சனிக் கிரகத்தின் பாபிலோனியப்பெயர். இதை ஆமோஸ் ''விண்மீன் கடவுள்'' என அழைக்கிறார் (ஆமோ 5:26). இஸ்ராயேலர் பாபிலோனியத் தெய்வத்தை வழிபட்டதால் (அத்தெய்வத்தின் அருகில் இருக்கும் பொருட்டு) பாபிலோனுக்கு அனுப்பப்படு வர் என்று ஆமோஸ் முன்னுரைக்கிறார். ஸ்தேவான் எழுபது நூலைப்பின்பற்றி எடுத் துக்கூறும்போது (அ.ப. 7:43) இது இரப் பான் என்று கூறப்படுகிறது. இது ஓர் எழுத் துப் பெயர்ப்புத் தவறாகும்.

காரக்கரைசல், சாம்பல் உப்பு (LYE)

இது தூய்மை செய்வதற்காகப் பயன்படுத் தப்படும் ஒரு பொருள். இது சோடியம் கார்பனேட்டாக இருக்கலாம். இந்தப் பொருள், எகிப்து, அர்மீனியா ஆகிய நாடுக ளில் இயற்கையாகக் கிடைத்தது என்று பண் டைய எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது, பொட்டாசியம் கார்பனேட்டையும் குறிக்கலாம். இது மரச்சாம்பல் அல்லது மற்றக் காய்கறிப் பொருட்கள் முதலியவற் றைக் கொண்டு செய்யப்படும் காரத்தன்மை கொண்ட கரைசலாகும். பாலஸ்தீனத்தில் பின்னதுதான் பயன்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், பாலஸ்தீனத்தில் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய சோடியம் கார்பனேட் டைப்பற்றி நாம் அறியவில்லை.

பொட்டாசியம் கார்பனேட்டு மற்றும் சோடியம் கார்பனேட்டு இரண்டும் தூய் மைப்படுத்தும் பண்பினைக் கொண்ட வையே. ஆகவே சுத்தப்படுத்தப்பயன்பட்

டன. புளிக்காடியை இதுபோன்ற காரத்தன்மையுடைய பொருட்களில் ஊற்றினால் (பழ 25:20) அவை பயனற்றவைகளாகிவிடும்.

காரயாகு (KAREAH - வழுக்கத்தலை) •

இவர் யோகனானின் தந்தை. இறைவாக்கினர் எரேமியாவின் காலத்தில் வாழ்ந்தவர். இராணுவத் தலைவர். நெபுக்கதுனேசார் மன்னனின் நாடு கடத்தலில் இருந்து தப்பித்தவர் (2 அர 25:23; எரே 40:8-16; 41:11-16; 42:1.8; 43:2 தொ).

காராகு (CHARAX)

யோர்தானின் கிழக்கே அமைந்த யூதர்கள் குடியேறி வாழ்ந்த ஒரு நகரம். இது தற்காலத்தில் எது என்று தெரியாது. யூதா மக்கபேயு காலத்தில் இந்நகரம் இருந்தது (2 மக் 12:17).

காரான் (HARAN) - இடம்.

வடக்கு மெசபொத்தாமியாவைச் சேர்ந்த இந்நகரில் ஆபிரகாம் வாழ்ந்தார் (ஆதி 11:31; அ.ப. 7:2.4). ஆபிரகாமின் தந்தை இங்கு இறந்தார் (ஆதி 11:32). இங்கிருந்துதான் ஆபிரகாம் கானான் நாட்டிற்குக் குடிபெயர்ந்தார் (ஆதி 12:4-5). மூதாதையர்களின் உறவினர்கள் இந்நகரிலேயே அரமேயர்களாக வாழ்ந்து வந்தனர். ஈசாக்குக்கு மணமுடிக்க ஆபிரகாமின் ஊழியன், பெத்துவேலின் மகளாகிய ரெபேக்காவைக் காரானிலிருந்துதான் கூட்டிக்கொண்டு வந்தார் (ஆதி 24). பிறகு லாபானோடு வாழ்வதற்கு யாக்கோபு லாபானின் புதல்வியரான லேயாவையும் ராக்கேலையும் மணந்து கொண்டார். பென்யாமினைத் தவிர மற்ற எல்லாக் குழந்தைகளும் அங்குதான் பிறந்தார்கள் (ஆதி 29:32-30:24).

பாபிலோனிலிருந்த சந்திர வழிபாடு இங்கும் காணப்படுவதால், ஏறக்குறைய கி.மு. 2000 ஆண்டில் மூன்றாவது ஊர் வம்சத்தின் அரசரால் இந்நகர் உருவாக்கப்பட்டிருக்கலாம். புகழ்வாய்ந்த வியாபாரத் தலங்களில் இந்நகரும் ஒன்றாகும் (எச 27:23). சனகெரிபுவின் முன்னோர் மற்ற நகரங்களோடு இந்நகரையும் அழித்துவிட்டதாக 2 அர 19:12 கூறுகிறது (ஏச 37:12) காண்க. காரானில் அகழ்வாராய்வு இந்நகரின் நீண்ட வரலாற்றைத் தெளிவுபடுத்துகிறது.

காரிபு (HARIPH - இலையுதிர்காலம், அவமதிக்கின்ற)

நாடு கடத்தப்பட்ட பின் செருபாபேலோடு திரும்பி எருசலேமில் தங்கியிருந்த குடும்பம் ஒன்றின் தலைவர் (நெ 7:24). எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் இவரும் ஒருவர் (நெக 10:19). எஸ் 2:18-இல் யோரா என்ற பெயர் காணப்படுகிறது. இது காரிபு என்ற பெயருக்கு இணையான பெயராக இருக்கலாம்.

காரிம் (HARIM - இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்)

1. ஆரோனின் வழித்தோன்றல்களில் ஒருவர். தாவீது அரசரின் காலத்தில் இருந்த ஒரு குருகுலத்தின் இனப்பெயர் முதல்வர். குருக்களில் மூன்றாவது பிரிவின் தலைவர் (1 நாள் 24:8). பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்தவர்களின் பட்டியலிலும் இப்பெயர் காணப்படுகிறது (எஸ் 2:39; நெக 7:42; 12:15). இக்குடும்பத்தைச் சேர்ந்த பலர் புறவின மனைவியரை விலக்க வேண்டியிருந்தது (எஸ் 10:21). இவர்களில் ஒருவர் நெகமியாவின் தலைமையில் எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர் (நெக 10:5).

2. பாபிலோனிலிருந்து திரும்பி வந்த குருகுலத்தைச் சேராத குடும்பம் ஒன்றின் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:32; நெக 7:35). இவர்களில் சிலர் எஸ்ராவின் காலத்தில் தங்கள் புறவின மனைவியரை விலக்க வேண்டியிருந்தது (எஸ் 10:31). எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டுவதில் உழைத்த மலக்கியா இக்குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் (நெக 3:11).

3. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட குருக்களில் ஒருவர் (நெக 10:5).

4. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மக்கள் தலைவர்களில் ஒருவர் (நெக 10:27).

காரியா (CARIA)

பூர்வீகக் காலத்திலிருந்து இது சிறிய ஆசியாவின் தென்மேற்குப் பகுதிக்கு அளிக்கப்பட்ட பெயராகும். இதன் வடக்கில் இலிதியாவும், கிழக்கில் இலிசியாவும், தென்மேற்கிலும், மேற்கிலும் மத்திய தரைக்கடலும் அகியன் கடலும் சூழ்ந்திருந்தன. அயோனியா, தோரியா கிரேக்கர்கள் கடற்கரைப் பகுதியில் சுதந்தரமான நகர்களை நிறுவியிருந்தனர். கி.மு.139-இல் யூதர்களின் பெயரால் உரோமையரசன் காரியாவிற்குக் கடிதம் எழுதினான் (1 மக் 15:23). இங்கு யூத மக்கள் இருந்ததாக இந்தக் கடிதம் காட்டுகின்றது. ஏறக்குறைய கி.மு. 1290-இல் ஆசியாவிலிருந்து, உரோமை மாகாணத்தின் ஒரு பகுதியாகக் காரியா மாற்றப்பட்டது. ஆகையால், புதிய ஏற்பாட்டில் இது தனியாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அதன் இரு நகரங்கள் அப்போஸ்தலர் பணியில் குறிக்கப்படுகின்றன. பவுல் தனது மூன்றாம் மறைபரப்புப்பணியின் முடிவில் இங்குத் தங்கினார் (அ.ப.20:15-17). அவர் உரோமைக்குப் பயணம் செய்தபோது அவரது கப்பல் ''கடினமான பயணம் செய்து'' கினீது நகரம் சேர்ந்தது (27:7).

காருசு (HARUS - தங்கம், உழைப்புமிக்க)

அரசன் மனாசேயின் மனைவி மெசுல்லமேத்தின் தந்தை; தாயின் வழியில் அரசன் ஆமோனுடைய தாத்தா (2 அர 21:19). இவருடைய பெயர் ஓர் அராபியப் பெயராக இருக்கலாம். இவர் பிறந்த ஊர் யோத்திபா.

காரேபு (GAREB - சொறிநாய்)

1. ஓர் இதிரியர்; தாவீதின் ஆற்றல்மிக்க முப்பது வீரர்களில் ஒருவர். அனேகமாக யத்திர் நகரைச் சேர்ந்தவராக இருக்கலாம் (2 சாமு 23:38; 1 நாள் 11:48).

2. தென்மேற்கு மலைப்பகுதியில் இருந்ததாகக் கருதப்படும் எருசலேமின் ஒரு பகுதி. நகரம் மீண்டும் அமைக்கப்படுவது பற்றிய எரேமியாவின் இறைவாக்கில் (எரே 31:39) குறிக்கப்படுகிறது.

காரேபு (HAREPH - முந்திப்பிறந்த, அவமதிக்கிற)

யூதாவைச் சேர்ந்தவர். கூரின் மகன். காலேபுவின் பேரன். பேத்து - காதரின் தந்தை அல்லது நிறுவியவர் (1 நாள் 2:51).

கார்கயா (HARHAIAH - ஆண்டவர் சீற்றம் கொண்டார்)

நெகமியாவின் காலத்தில் எருசலேம் சுவரைக் கட்டுவதற்கு உதவி செய்த பொற்கொல்லர் ஊசியேலின் தந்தை (நெக 3:8).

கார்கரேக (HAR-HERES - சூரியனின் மலை).

அய்யாலோனுக்கு அருகில் உள்ள ஒரு மலை. தாண் பகுதியைச் சேர்ந்தது. ஆனால் தாணியர் இதை எமோரியரிடமிருந்து கைப்பற்ற முடியவில்லை. அனேகமாக எல்லைக் கோட்டையாகிய ஈர்செமேஸ் (யோசு 19:4) அல்லது பேத்துசெமெஸ் (யோசு 15:10; 21:16) ஆக இம்மலை இருக்கலாம்.

இது யாலோ (விவிலிய அய்யாலோன்) வுக்குத் தென்கிழக்கில் மலைச்சரிவிலுள்ள இக்காலக் கிர்சாவாக அடையாளம் காட்டப்படலாம்.

கார்காசு (HARHAS - ஏழ்மையான, வறுமையான)

இவர் குலிதா இறைவாக்கினரின் கணவனாகிய சல்லூம் என்பவரின் தாத்தா. யோசியாவின் திருச்சட்ட நூலைப் பற்றிக் குலிதாவிடம் கலந்து பேசினார்கள் (2 அர 22:14). 2 நாள் 34:22-இல் இவர் கசுரா என்றழைக்கப்படுகிறார்.

கார்கூர் (HARHUR - காய்ச்சல்)

பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஆலய ஊழியர்கள் குடும்பம் ஒன்றின் முதல்வர் (எஸ் 2:51; நெக 7:53).

கார்சா (HARSHA - ஊமையான)

பாபிலோனிலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த ஆலய ஊழியர்கள் குடும்பம் ஒன்றின் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:52; நெக 7:54).

கார்த்திகை விண்மீன்குழு (PLEIADES)

இது விண்ணில் எருது வீட்டில், மார்கழி அல்லது மான்தலை விண்மீன் குழுவுக்கு அருகிலுள்ள ஒரு விண்மீன் கூட்டமாகும் (யோபு 9:9; 38:31; ஆமோ 5:8). கிரேக்கப் புராணக் கதைப்படி கார்த்திகை விண்மீன்கள், அட்லாஸ் மற்றும் பிலேயோனே ஆகியோரின் ஏழு புதல்வியர்கள் ஆவர். இவர்கள் வேட்டைக்காரன் ஓரியனால் துரத்தப்பட்டார்கள். ஓரியன் இவர்களைத் தொந்தரவு செய்ய முயன்றபோது சேயுவால் விண்மீன்களாக இவர்கள் மாற்றப்பட்டனர்.

கார்ப்பு (CARPUS - பலன், பலம்)

2 திமோ 4:13-இன்படி, துரோவா ஊரா ரான இவர் பவுலின் நண்பர். இவரிடம் பவுல் தன் போர்வை, நூல்கள், தோல் சுருள்கள் ஆகியவற்றை விட்டுச் சென்றிருந்தார். இவற்றைத் துரோவாவிலிருந்து கொண்டு வரும்படி திமோத்தேயுவைப் பவுல் கேட்டுக் கொண்டார்.

ஒரு பாரம்பரியத்தின்படி, இவர் திரேசிலுள்ள பெரித்துவின் ஆயரானார். பெர்கமோனில் வேதசாட்சியாக மரித்ததாக எண்ணப்படுகிறது.

கார்மி (CHARMIS)

மெக்கியேலின் மகன். பெத்தூலியாவில் இருந்த நகர நடுவர்களுள் ஒருவர். இவர்களிடம் யூதித்து உதவி கேட்டுச் சென்றாள் (யூதி 6:15; 8:10; 10:6).

கார்னப்போர் (HARNEPHER - கோரஸ் இரக்க முள்ளவர்)

ஆசேரின் கோத்திரத்தில் ஒரு குடும்பம் அல்லது இடம். சோப்பாகுவின் மகன் (1 நாள் 7:36).

கார்னாயீம் (KARNAIS - இரு கொம்புகள் அல்லது சிகரங்கள்)

இது யோர்தானுக்கு அப்பால் வடபகுதியில் உள்ள ஓர் ஊர் (ஆமோ 6:13). இதுவும் அசித்தரோத்து-கார்னாயிமும் (ஆதி 14:5) ஒரு வேளை நாடுகடத்தப்பட்ட பிற்காலக் கார்னாயிமும் ஒன்றே. ஆமோ 6:13-இல் இறைவாக்கினர் கார்னாயிம் (எருதின் கொம்புகள், ஆகவே வலிமை) என்ற சொல்லையும் லோ-தபார் (ஒன்றுமின்மை) என்ற சொல்லையும் வைத்து விளையாடுகிறார். இவையிரண்டும், இஸ்ராயேலின் இரண்டாம் எரொபயாம் அரசனால் கைப்பற்றப் பட்டவை.

காலநிறைவு (FULLNESS OF TIME)

''காலநிறைவு'' என்று எபே. 1:10-இலும் ''காலம் நிறைவுற்றபோது'' என்று கலா 4:4-இலும் இக்கருத்து வருகிறது. இரண்டு பகுதிகளும் மனிதனுக்கும் வரலாற்றுக்குமான இறைவனது நோக்கங்கள் இறுதியாகப் பலன் தருவதைக் குறிக்கின்றன. இறைவனது நோக்கங்கள் நிறைவடைய இறைவனால் குறிக்கப்பட்ட நேரத்தைக் குறிக்கின்றன.

காலந்தப்பிய பிறப்பு (UNTIMELY BIRTH)

பழங்காலத்தில் முழுவளர்ச்சிக்குரிய சுமார் நாற்பது வாரங்களுக்குமுன் பிறக்கும் குழந்தைகள், அவை தனியாக வாழ முடிந்தாலும், இறந்துவிடும் கருவாக இருந்தாலும், அது குறைப் பிரசவமாகவே கருதப்பட்டது. இது ''முதிராப்பிண்டம்'' (யோபு 3:16); ''சிதைந்தழியும் கரு'' (சங் 58:8); ''கருச்சிதைந்த பிண்டம்'' (திருவுரை 3:16); ''காலந்தப்பிய பிறவி'' (1 கொரி 15:8) என்று பலவாறு விவரிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டின்படி காலம் தப்பிய பிறவிகள் ''ஒளியைக் காணாததால்' இது கருச்சிதைவைக் குறிக்கலாம். எண் 12:12 தாயின் கருவிலிருந்து செத்து விழுந்த கருவைப் பற்றிப் பேசுகிறது. இதில் இறந்துவிட்ட கருவானது தாயின் வயிற்றிலேயே பலநாள் இருக்கும்.

பவுல் தன்னைக் 'காலந்தப்பிய' பிறவி என்று கூறும்போது, இயற்கைக்கு மாறாகத் தான் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்ததைக் குறிப் பிடுகின்றார் *(1 கொரி 15:8)*.

காலம், நேரம் (TIME)

யாவும் கடந்த இறைவனுடைய வெளிப் பாடாகிய விவிலியமானது, காலம் பற்றிய குறிப்புடன் தொடங்கி முடிகின்றது: ''ஆதி யிலே கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார்'' (ஆதி 1:1), மற்றும் ''ஆம், விரைவாகவே வருகிறேன்'' (திருவெளி 22: 20). பிளேட்டோ மற்றும் அரிஸ்டாட்டி லைப்போன்று இறைவன் அவரது நித்தியத் தன்மையில், கருத்தியலான முறையில் விவி லியத்தில் அறிந்து கொள்ளப்படவில்லை. ஆனால், உலக வரலாற்றைப் புனித வரலா றாக்குகின்ற அவருடைய இவ்வுலகத் தலை யீடுகளால் அறியப்படுகிறார். இதன் காரண மாகவே, வளர்ச்சியுறும் மனிதத்தன்மை தன் னிடமே காலத்தைப்பற்றிக் கேட்கின்ற சமய வினாக்களுக்கு விவிலிய வெளிப்பாட்டி னால் விடையளிக்க முடிகிறது. ஏனெனில், இவ்வெளிப்பாடே தன்னுடைய அமைப் பில் வரலாற்றுப் பூர்வமானதாக உள்ளது.

I. முன்னுரை:-

1. ''ஆதியிலே'':- ஆதியாகமமானது தனது தொடக்கமாக இறைவனின் படைப் புச் செயலைப் பற்றிப் பேசுகிறது. நீடித்த அளவில் படைக்கப்பட்ட பொருள்களின் அமைப்பைச் சேர்ந்த முறையில், இச்செய லானது முழுமையான தொடக்கத்தைக் குறிக்கிறது. இத்தகைய சிந்தனை முறையா னது, சூழ்ந்துள்ள யூதரல்லாதோரில் காணப் படும் தொடக்கம் பற்றிய கருத்தினின்று முற்றிலுமாக வேறுபடுகிறது. உதாரணமா கப் படைப்புப் பற்றிய பாபிலோனியக் கவிதையில், மார்துக் கடவுள் மனித மற்றும் அண்டத்தின் காலவரைச் சட்டத்தினை நிறு வுகிறார்: விண்மீன்கள், விண்மீன் குழுக்கள், இயற்கையின் பருவங்கள், பின்னர், வானூ லுக்குரிய மற்றும் அளவிடப்படக்கூடிய காலம் தொடங்குகிறது. ஆனால், அதற்கு முன்னரே, அண்ட காலத்தின் மாதிரியாகிய மூல அமைப்புக் காலத்தில் பாபிலோனிய சிந்தனை அறிந்திருந்த ஒரே புனித வரலாறா கிய புராண வடிவ வரலாற்றைக் கடவுள்கள் ஏற்கனவே கொண்டிருந்தனர். அப்சு மற்றும் தியாமாத் என்னும் மூல இறைத் தம்பதியின ரிடமிருந்து தொடர்ச்சியான சந்ததிகள் வெளிவந்தன. ஒரு போராட்டமானது கடவு ளர்களை அடிபிடிச் சண்டைக்கு உட்படுத்தி யது. இப்போராட்டத்தின் இறுதி விளை வாக, உலகமும் மனிதரும் தோன்றினர். இவ்வாறு, கடவுளர்களே முழுமையற்ற நிலையில் காலத்தின் பகுதியினின்று புறம் பாக்கப்பட்டவர்கள் போன்று, ஒரே தொடக் கத்தில் முழு அண்டத்துடன் சேர்க்கப்பட் டுள்ளார்கள்.

இதற்கு முரண்பட்ட நிலையில், விவிலிய ஆதியாகமத்தில், இறைவனின் யாவும் கடந்த தன்மை வேர்நிலையான முறையில் உறுதிப்படுத்தப்படுகிறது. ''தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார்'' (ஆதி 1:1); ''அந்நாளில் ஆண்ட வராகிய கடவுள் விண்ணையும், மண்ணை யும் உண்டாக்கியபொழுது'' (2:5). ஒரு இறைவரலாற்றை விவரிக்கின்ற மூல அமைப்புக்காலம் எதுவுமில்லை. ஏனெனில் குழப்பச் சக்திகளை இறைவன் எதிர்கொள் கிற அண்டப் போரைப் பற்றிய காட்சிகள் *(சங் 74:13-14; 89:11)* இறைவனைப் பற்றிய வரலாற்றைச் சுட்டவில்லை, இறைவன் ஒழுங்குபடுத்திய உலகின் வரலாற்றையே கட்டுகிறது. படைப்புச் செயலானது, மற்றப் படைப்புகளைப் போன்று நல்லதாக உள்ள நமது காலத்தினுடைய முழுமையான தொடக்கத்தைக் குறிக்கின்றது; ஆனால், இக் காலத்தில் இறைவன் ஏற்கனவே இருந்தார். காலத்தில் விவரிக்கப்படுவது அதற்கான திட்டமேயாகும். அது முதலில் மனிதனை நோக்கி அனைத்துப் படைப்பையும் ஒழுங்கு படுத்துகிறது. பின்னர் மறைபொருளான முடிவைநோக்கி நடத்துகிறது; மனிதனின் ஊழியை நடத்துகிறது.

2. காலமும் நித்தியமும்:-

அ) காலம்:- இறைவனின் படைப்பாகிய காலம், நம்மைப் பொருத்த வரலாற்றுக்கும் பணித்திட்டமாக அமைகிறது. படைப்புப் பற்றிய விவிலிய வர்ணனையில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. படைப்பின் ஏழு நாட்கள் சந்தேகத்திற்கிடமின்றி ஒரு போதனைமுறை அமைப்பைக் கொண்டுள்ளன; அவை ஓய்வுநாளின் புனிதத்தை ஆழப் பதிய வைக்கின்றன. பூவுலகானது படிப்படியாக முழுமையாக்கப்பட்ட காலத்தினுடைய சமயக் கருத்தையும் அளிக்கின்றன. இறைவன் வளர்ச்சியுள்ள முறையில் மனிதனைக் காலத்தில் அமைக்கிறார். இறுதியாக மனிதனைப் பெறவிருக்கின்ற பணிச்சட்டம் படிப்படியாக நிறைவு செய்யப்படுகிறது. மேலும், மனிதனுடைய தோற்றமானது அவனுக்கு முன்சென்ற அனைத்திற்கும் பொருளைத்தரும். இதனின்று, காலமானது வெறுமையான வடிவம் அல்ல; அடுத்தடுத்த நொடிகளின் வெறும் தொடர்ச்சியல்ல என்று காணலாம். அது பூமியின் கால அளவாகும். அந்த அளவில், அது தன்னைச் செயல்முறையில் வெளிப்படுத்துகிறது. முதலாவதாக, மனிதனின் வருகையால் ஒரு முகப்படுத்தப்பட்ட அண்டகாலம்; பின்னர், மனிதன் தனது குறிக்கோளை நோக்கிப் பயணிக்கின்ற சந்ததிகளின் இலயத்தால் குறிக்கப்பட்ட வரலாற்றுக்காலம்.

ஆ) நித்தியம்:- இந்த இருவிதக் காலத்தைப் பொறுத்தவரை இறைவன் யாவும் கடந்தவராக இருக்கிறார். மனிதன் காலத்திலும், இறைவன் நித்தியத்திலும் வாழ்கின்றனர். நித்தியத்தைக் குறிக்கும் ''ஓலாம்'' என்ற எபிரேயச்சொல் பலவாறு மொழிபெயர்க்கப்படுகிறது. இவை யாவும் மனித அறிவைக் கடந்த காலத்தை உணர்த்துகின்றன. இறைவன் காலங்களின் காலங்களில் எப்போதும் வாழ்கிறார். நாம் எவ்வித அனுபவமும் கொண்டிராத இக்காலத்தின் இயல்பை அறியச் செய்வதற்கென விவிலியமானது, அதை, அண்ட காலத்தின் (''உமக்கு ஆயிரம் ஆண்டுகள் கூட, கடந்துபோன நேற்றைய தினத்தைப் போலவும், ஓர் இரவுச் சாமத்தைப் போலவும் உள்ளன'' சங் 90:4) மற்றும் புனித காலத்தின் (''என்னுடைய வாழ்நாள் மாலை நிழலுக்கு ஒப்பாயிற்று...உமது பெயரின் புகழ் தலைமுறை தலைமுறையில் நிலைத்திருக்கும்'' சங் 102: 11-12) நிலையற்ற குணவியல்பிற்கு மாறான தாக்குகிறது. இத்தகைய சிந்தனைப்போக்கு, பிற்கால வாசகங்களில் தனிப்பட்ட விதத்தில் எடுத்துக்கூறப்படும் இறைவனின் யாவும் கடந்த தன்மையின் பொருளை வலியுறுத்துகிறது. ஆதியாகமமானது இறைவனை அவரது படைப்புச் செயலின் தொடக்கத்தில் கருதும்போது, பழமொழி ஆகமமானது, அவருக்குமுன்னால் ஞானத்தைத்தவிர வேறெதுவுமில்லாத, காலத்திற்கு முற்பட்ட, நித்தியத்தில் அவரைப்பற்றிச் சிந்திக்கிறது (பழ 8:22 தொ). இந்த நித்தியம் யோபுவைக் குழப்புகிறது (யோபு 38:4); ''ஊழ் ஊழிக்காலமாக, இறைவா, நீர் இருக்கிறீர்'' எனச் சங்கீத ஆசிரியரும் அறிவிக்கிறார் (சங் 90:2). பின்னர் விவிலியமானது, இறைவனின் யாவும் கடந்த தன்மை பற்றிய தனது கருத்தை, வரலாற்றில் அவருடைய தலையீட்டினுடைய உறுதியான உண்மையுடன் சமரசப்படுத்துவதில் வெற்றியடைகிறது. காலத்தை இறைமைப்படுத்துதல் (கிரேக்கக் கடவுள் தொகுப்பின் கிரானோ கடவுள்) அல்லது இஸ்லாமியரைப்போன்று, இறைவனுக்கு முன் அதற்கு எச்சிறப்பையும் மறுத்தல் என்னும் இருவித சோதனையினின்றும் அது இவ்வாறு தப்பிக்கிறது.

II. பழைய ஏற்பாடு:-

மனித அனுபவத்தில் காலத்தின் இரு கூறுகள் ஒன்றன்மீது ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளன. அவை, இயற்கையின் பருவங்கள், ஆட்சி புரியும்கூறு (அண்ட காலம்), மற்றும் நிகழ்ச்சிகளின் வரிசையில் தன்னையே வெளிப்படுத்தும் கூறு (வரலாற்றுக் காலம்) ஆகும். இறைவன் இரண்டையும் சமமாக நடத்தி, ஒரே குறிக்கோளை நோக்கி ஒன்றாக அவற்றிற்குத் திசை அளிக்கிறார்.

1. அண்ட காலம்:-

அ) காலத்தின் அளவுகள்:- இரவு பகல் என்னும் மாற்றம் (ஆதி 1:5), ஒன்றையொன்று கட்டளையிடுகின்ற விண்மீன்களின் இயக்கம் (1:14), மற்றும் பருவங்களின் சுழற்சி (8:22) போன்ற இயற்கை கீழ்ப்படிகின்ற ஒழுங்கமைப்புகளைப் படைத்தவராகிய இறைவன் நிறுவியுள்ளார். குறிப்பிட்ட இடைவெளிகளில் இச்சுழற்சிகள் நிகழ்கின்றன என்ற உண்மையானது, அவர் தமது படைப்பில் அமைத்தளித்த அமைப்பின் அடையாளமாகும் (சீரா 43). காலத்தை அளப்பதற்கான அடிப்படையாக அனைத்து மக்களும் இச்சுழற்சிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். இக்கருத்தின் நோக்கில் யூத நாட்காட்டியானது, அதனுடைய இறுதி ஓய்வு நாளுடன் கூடிய வாரத்தை உபயோகிப்பதைத் தவிர, வேறு தனித்தன்மையைக் கொண்டிருக்கவில்லை. மற்றவற்றைப் பொறுத்தவரை அது பிறரிடமிருந்து கடன் வாங்கிய கூறுகளைக் கொண்டதாகவும், காலங்களின் போக்கில் பரந்த அளவில் மாறுபட்டதாகவும் தோன்றுகிறது. பழைய ஏற்பாட்டில் இது சூரிய காலக்கணிப்புக்கும், சந்திர காலக் கணிப்புக்கும் இடையில் ஊசலாடுகிறது. வருடத்தைப் பன்னிரண்டு மாதங்களாகப் பிரித்திருப்பது சூரிய சுழற்சிக்கு ஏற்ப அமைகிறது. ஆனால் மாதமானது அதனுடைய பெயரிலும் பிரிவுகளிலும், சந்திர சுழற்சியைப் பின்பற்றுகிறது. ஏனெனில் அது அமாவாசையோடு தொடங்குகிறது (சீரா 43:6 தொ). இஸ்ராயேலின் ஆண்டானது முதலில் இலையுதிர் காலத்தில் திசிரி மாதத்திலும் (யாத் 23:16; 34:22), பின்னர் இளவேனில் காலத்தில் நிசான் மாதத்திலும் (யாத் 12:2) தொடங்கியது. முதலில் தீர்மானிக்கும் நிகழ்ச்சிகளாகிய ஆட்சிகள் (ஏச 6:1) அல்லது இயற்கை நிகழ்ச்சிகள் (ஆமோ 1:1) ஆகியவற்றின்படி ஆண்டுகள் கணக்கிடப்பட்டன. பிற்காலத்தில் வரலாற்றுச் சகாப்தம் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது; சான்று செலூக்கிய சகாப்தம் (1 மக் 1:10: 14:1; 16:14); பின்னர் இராபிகளின் காலத்தில் உலகைப் படைத்தது முதல் தொடங்கியுள்ள யூத ஆண்டு.

அ) காலத்தைப் புனிதப்படுத்துதல்:- நாட்காட்டியால் அளவிடப்பட்ட அண்ட காலமானது முற்றிலும் சமயசார்பற்ற பொருளல்ல. அனைத்துப் பண்டைய சமயங்களும் இதனைப் புனிதப்படுத்தின. இயற்கையின் சுழற்சிகளில் ஒரு புனிதப் பொருளைக் கண்டனர்; ஏனெனில் இறை வல்லமைகள் அவற்றை ஆட்சி புரிந்து அவற்றின் மூலமாகத் தங்களையே வெளிப்படுத்தின என்று அவர்கள் எண்ணினர். இந்தப் புராணப் புனிதப்படுத்தல், பருவங்கள் மற்றும் மாதங்களின் இலயத்தைப் பின்பற்றுகின்ற விழாக்களுடைய நாட்காட்டியினை நிறுவத்தூண்டியது. புனித காலங்களின் இத்தகையதொரு கோட்பாடானது, இஸ்ராயேலுக்கு நிரந்தரமான சோதனையாக அமைந்தது. அதை இறைவாக்கினர்கள் கண்டனம் செய்கின்றனர் (ஓசே 2:13). ஆனால், அதனுடைய சமய நாட்காட்டியினின்று பலதெய்வப் புராணங்களுக்கான அனைத்துக் குறிப்புகளையும் விளக்குவதன் மூலம், பழைய ஏற்பாடானது அண்ட சுழற்சிகளின் இயற்கையான புனிதத்தன்மையினை நிராகரித்து விடவில்லை.

அமாவாசைக் கொண்டாட்டத்தையும் (1 சாமு 20:5; ஆமோ 8:5; ஏச 1:3) இளவேனிற் காலத்தில் நாடோடிகளின் பாஸ்கா விழாவையும் (யாத் 12), அது பாதுகாத்துள்ளது. கானானிய நாட்காட்டியின் உழவு சார்ந்த பழக்கங்களை அது மதித்தது. அவை, இளவேனிற்காலத்தில், பார்லி விளைச்சலின் தொடக்கத்திலுள்ள புளியாத அப்ப விழாக்கள் (யாத் 23:15; உப 16:8), முதற்கனிகள் (உப 26:1) மற்றும் முதற்கதிர்க்கட்டுகளைக் (லேவி 23:10-11) காணிக்கையாக்குதல்; மற்றும் வாரங்களின் விழா, அல்லது பெந்தகோஸ்தே எனப்படும் அறுவடையின் விழா (யாத் 23:16; 34:22; லேவி 23:16); இலையுதிர் காலத்திலான விளைச்சலின்

விழாவும் அப்பருவ இறுதியிலான கொண்டாட்டங்களும் (யாத் 23:16; உப 16:13; லேவி 23:3 43) ஆகும். ஆனால், வெளிப்பாடானது அவற்றின் புனிதப்பண்பை மாற்றியமைத்த ஒரு புதிய உட்பொருளைப் படிப்படியாக இந்தப் பாரம்பரியமான கொண்டாட்டங்களுக்கு அளித்தது. வரலாற்றில் இறைவனுடைய பெரும் செயல்களின் நினைவுகூர்தலாக அது அவற்றை ஆக்கியது. பாஸ்காவும், புளியாத அப்பவிழாவும் எகிப்திலிருந்து புறப்பட்டதையும் (யாத் 12:17.26-27), கானானில் வந்து சேர்ந்ததையும் நினைவுபடுத்துகின்றன (யோசு 5:10தொ). மேலும், பெந்தகோஸ்தே, சீனாய் மலை உடன்படிக்கையையும், இலையுதிர்கால விழாவானது பாலைவனத்தில் அலைந்து திரிந்ததையும் நினைவுபடுத்துகின்றன (லேவி 23:43). புனித வரலாற்றின் மற்ற நிகழ்ச்சிகளை நினைவுபடுத்துகின்ற மற்ற விழாக்கள் தோன்றின (உ.ம். அர்ப்பண விழா 1 மக் 4:36-59).

ஆண்டுக்கணிப்பிற்கு அப்பாற்பட்டு, மூன்றாண்டிற்கு ஒரு முறை பத்திலொரு பங்கு அளித்தல் (உப 14:28-29), ஓய்வு மற்றும் ஜூபிலி ஆண்டுகள் (லேவி 25) போன்ற மற்ற நீண்ட சுழற்சிகளும் காணப்படுகின்றன. வாரங்களின் முறையான சுழற்சியானது ஒரு விழாவினின்று மற்றொன்றிற்குச் சென்று கொண்டே இருக்கிறது. இறுதியாகக் காலத்தைச் சமயப் புனிதப்படுத்தலானது, பலிகள், காணிக்கைகள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் செபங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சடங்குமுறைகளைக் கொண்ட அன்றாடச் சுழற்சிக்குள் நுழைகின்றது (2 அர 16:15; எச 46:13-14; எண் 28:3-8). இவ்வாறாக, மனிதனுடைய முழுவாழ்வானது அதனைப் புனிதப்படுத்துகின்ற சடங்குகளின் வரிசைக்குள் உட்படுத்தப்படுகிறது. இஸ்ராயேலின் வாழ்வில் புனித நாட்காட்டியின் பங்கு எவ்வளவு முக்கியத்துவம் உடையதெனில் அதற்கெதிராகக் குற்றம் புரிவதன் மூலம், கொடுமைப்படுத்தும் அரசனாகிய அந்தியோக்கு எப்பிபான் இறைவனுக்கெதிராகவே எழுகிறான் (தானி 7:25; 1 மக் 1:39.43.55). ஏனெனில் வெளிப்பாட்டினால் அளிக்கப்பட்ட முறையில் காலத்தைப் புனிதப்படுத்துவதற்குப் பதிலாகப் புறமதப் புனிதச்சடங்கை ஈடுபடுத்த ஆசைப்படுவான்.

2. வரலாற்றுக்காலம்:-

அ) அண்டச் சுழற்சியும் வரலாற்றுக் காலமும்:- அண்டக்காலமானது சுழற்சி இயல்புடையது. கிழக்கத்திய அல்லது கிரேக்க சிந்தனையானது அண்டத்தின் இத்தகைய சுழற்சிகளில் மனித வாழ்வு புகுத்தப்படுவதால் எந்த அளவு தாக்கப்பட்டதெனில், அவர்கள் பொருட்களின் நித்திய திரும்புதலைக் காலத்தின் அடிப்படை விதியாக அமைத்தனர். திருவுரை ஆசிரியர் இவ்வுண்மையால் பெரிதும் கவரப்பட்டார். மனித வாழ்வானது, தப்பிக்கமுடியாத காலங்களினாலும் (''பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு'' திருவுரை 3:18), அதே நிகழ்ச்சிகளின் இடைவிடாத திருப்புதல்களினாலும் (''முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே இனிமேலும் செய்யப்படும்'', 1:9; 3:15) ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இவ்வாறு மனித முயற்சியின் வரையறைக்கும் இறை ஆட்சியின் செயலைப் பொருட்களின் இடைவிடாத் திரும்புதலில் காண்பதின் கடினத்தன்மையும் கட்டிக்காட்டப்படுகின்றன. ஆனால் இந்த நம்பிக்கையின்மை ஒரு விதிவிலக்காகவே உள்ளது. ஏனெனில் விவிலியமானது காலம்பற்றிய மற்றொரு கோட்பாட்டால் ஆதிக்கம் செய்யப்படுகிறது. அது வரலாறு பற்றிய விவிலிய விவரிப்போடு ஒத்துப் போகிறது.

வரலாறானது முடிவில்லாத் திரும்புதலின் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதில்லை. இது திரைவிலக்கப்பட்டு அதனில் வெளிப்படுத்தப்படுகின்ற இறைவனின் திட்டத்தால் அடிப்படையகத் திசை அளிக்கப்படுகிறது. திரும்ப நிகழாமல், மனிதருடைய நினைவுகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தனிச்சிறப்

புப் பண்பைக் கொண்ட நிகழ்ச்சிகளால் அது குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு, காலம் பற்றித் தனது அனுபவத்தினால் படிப்படியாக ஊட்டம் பெற்ற நிலையில், மனித இனமானது முன்னேறும் திறனுடையதாகிறது. இம்முறையில் வரலாற்றுக் காலமானது, அண்டைக்காலத்தினின்று தரத்தைப் பொறுத்தவரையில் மாறுபட்டு உள்ளது. அதை ஏற்று, மனிதனது சாயலில் உருமாற்றம் அளிக்கிறது. மனித வாழ்வுடன் தொடர்புடைய முக்கிய நிகழ்ச்சிகளுக்கு, அது தனக்கேயுரிய அளவைகளைக் கொண்டுள்ளது. தொடக்க காலங்களில் இஸ்ராயேலானது காலம்பற்றிக் குடும்பக் கருத்தைக் கொண்டிருந்தது. காலம் தலைமுறைகளால் எண்ணப்பட்டது (ஆதி 2:4; 5:1). அரசாட்சித் தொடக்க முதல், காலமானது ஆட்சிகளால் கணிக்கப்பட்டது. சகாப்தங்கள் பின்னர் வரவிருந்தன. இத்தகைய வரலாற்றுக் கணிப்புகளில், எண்களில் குறிப்பிட்ட ஆர்வம் பலமுறை தோன்றுகின்றது. ஆயினும் நம்பகமான விவரங்கள் இல்லாமையின் காரணமாகச் சுட்டிக் காட்டப்பட்ட எண்ணிக்கைகள் இப்போது நாம் வரலாற்றில் எதிர்பார்ப்பவைகளுடன் எப்போதும் ஒத்துப் போவதில்லை. அவற்றில் சில தோராயமானவையாகவும் தெளிவற்றவையாகவும் உள்ளன (ஆதி 15:13-இன் 400 ஆண்டுகள்); மற்றவை அடையாள மதிப்பைக் கொண்டுள்ளன (ஏனோக்கினுடைய 365 ஆண்டுகால வாழ்வு ஆதி 5:23). ஆனால், வெளிப்பாட்டைக் காலத்தினில் புகுத்தப்பட்டதாகக் காட்டப் புனித ஆசிரியர்கள் எடுத்த ஆர்வத்தை அவை காட்டுகின்றன.

ஆ) வரலாற்றுக் காலத்தைப் புனிதப்படுத்துதல்:- புறச் சமயங்களில், வரலாற்றுக் காலமானது இயற்கையின் சுழற்சியைப் போன்று, ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியானது, இயற்கையின் சுழற்சிகள் செய்வதுபோலத் தெய்வங்களின் மூல அமைப்பு வரலாற்றை மீண்டும் உருவாக்கிய அளவிலேயே புனிதத் தன்மையைக் கொண்டிருந்தது. இது புராணப் புனிதத்தன்மையைச் சார்ந்ததாகும். இக் கருத்தில் விவிலிய வெளிப்பாடானது வேர்நிலையான ஒரு புதுமுறையை உருவாக்குகிறது. உண்மையில் இறைவன் புனித வரலாற்றின் சாதனங்களால் திருவெளிப்பாட்டில் தம்மையே வெளிப்படுத்துகின்றார். இப் புனித வரலாற்றைப் பின்னுகின்ற நிகழ்ச்சிகளாக இருப்பவை கீழுலகிலான அவரது செயல்களே. இதன் காரணமாக இந்நிகழ்ச்சிகள் குறிப்பிட்டுள்ள காலமானது, இறைவன் ஒரே தடவையில் உலகைப் படைத்தபோது மூல அமைப்புக் காலத்தை மீண்டும் நிகழ்த்துகிறது என்பதற்காக அல்லாமல், இறைவனுடைய திட்டத்தின்படிகள், தங்களுக்கே உரியபொருளுடன், ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன என்ற அளவுக்கு அது புதுமையைக் கொண்டுவருகிறது என்ற உண்மையில் தன்னிலேயே புனித மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. காலத்தினுடைய இந்தக் காலக்கட்டங்களுக்குப் பொருளை அளிப்பது பின்னிப் பிணைந்த வரலாற்று உண்மைகளின் பின்னல் அல்ல. விவிலியமானது உண்மையில் பொருட்களின் இந்தக் கூறு பற்றி முழுவதும் அக்கறையற்றதாக உள்ளது. ஏனெனில் இறை எண்ணம் மட்டும், காலமானது தனது முடிவையும் நிறைவேறுதலையும் ஒரே நேரத்தில் அடைகின்ற மறைபொருள் மிக்க முடிவை நோக்கித் தனிப்பட்ட விதத்தில் அவைகளை நடத்துகிறது.

3. காலத்தின் முடிவு:-

அ) தொடக்கமும் முடிவும்:- இறைவனுடைய மக்களின் முழு ஊழையும் கொண்டுள்ள புனித வரலாறானது, தொடக்கம் மற்றும் முடிவு என்னும் இரண்டும் தொடர்புடைய சொற்களுக்கிடையில் எழுதப்படுகின்றது. பண்டைய சிந்தனையானது மனித நிறைவினைக் குறிப்பிடும்போது அதைப் பொற்காலமாகத் தொடக்கத்தில் அமைத்தது; அதைத் தொடர்ந்து வளர்ச்சியுள்ள இழிநிலை ஏற்பட்டது. காலம் பற்றிய சுழற்சியின் கோட்பாட்டுடன் இன்னமும் பிணைக்கப்பட்டுள்ள பெரிய ஆண்டின் மறுவருகையுடன், அது சில நேரங்களில் இப் பொற்காலத்தின் மறுமலர்ச்சியைக் கண்டது.

மனிதனுடைய தொடக்கத்தில் விவிலியமும் ஒரு மூல முழுமையை அமைக்கின்றது

(ஆதி 2). ஆனால் விவிலியத்தைப் பொறுத்த வரையில், இத்தொடக்கநிலையின் இழப்பானது, அண்டம் பரிணாமத்தின் இயல்பான வளர்ச்சியின் விளைவல்ல; இந்த முழு நிகழ்ச்சிக்கும் காரணமாக இருப்பது மனிதனுடைய பாவமே ஆகும். அது முதல், வரலாறானது இரு முரண்பட்ட இயக்கங்களால் செயல்படுத்தப்படுகிறது. ஒருபுறம், தவறாமல் இறைவன் தண்டனையைத் தூண்டுகின்ற ஆன்மீக வீழ்ச்சியாகிய தீமையின் முன்னேற்றமான வளர்ச்சி காணப்படுகிறது. இவ்வாறு, வரலாற்றிற்கு முற்பட்ட காலமாகிய தொடக்கமுதல், தண்டனையின் ஒரு வகையாகிய வெள்ளப்பெருக்குக் காலம் வரையில் அது இருந்தது. இவ்வாறே பின் வந்த காலத்திலும் இருந்தது. இதன் விளைவாக வெளிப்பாட்டுநூல்கள் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பேரழிவு வி.ாக்கங்கள் அளித்தன *(தானி 2:7)*. ஆனால், மற்றொரு புறம், தவறாமல் மனிதனின் மீட்பைத் தயாரிக்கின்ற நன்மையை நோக்கியும் முன்னேற்றம் உண்டு. வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில், இறைவன் நோவாவைக் காக்கவும், அவருடன் உடன்படிக்கையை ஏற்படுத்தவும் அவரைத் தேர்ந்துகொண்ட போது இவ்வாறு இருந்தது. புனித வரலாற்றின் முடிவில், இவ்வுலகில் மூல நிறைவு திரும்ப அமைக்கப்படும்போதும் இவ்வாறே இருக்கும். இந்த மூல நிறைவு மீண்டும் அமைக்கப்படுதல், தொடக்கத்திற்குத் திரும்பவும் தன்னியக்கமுடைய செயல் முறையின் மூலமாக இல்லாமல், ஒரே நேரத்தில் பாவ உலகிற்கான தண்டனையையும் நீதிமான்களின் மீட்பையும் நிறைவேற்றுகின்ற இறைவனுடைய மேலாண்மைமிக்க செயலால் நிகழும். புறமதக் கவர்ச்சியினின்றும், அதனுடைய மனிதக் காலம் பற்றிய கோட்பாட்டினின்றும், இஸ்ராயேலைக் காப்பாற்றுவதற்குக் காலத்தினுடைய இந்த முடிவையும் அது கோரும் ஒழுக்கத் தயாரிப்பையும் இறைவாக்கினர்கள் வலியுறுத்துவர்.

ஆ) இறுதிநிலை எவ்வாறிருக்கும்:- முதலாவதாகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட கருத்தாகிய ஆண்டவரின் நாளானது *(ஆமோ 5:18; ஏச 2:12)*, பாவ உலகின் மேல் அந்தரத்தில் தொங்கும் எப்போதும் உடனடி அச்சுறுத்தலாக முதலில் தோன்றுகிறது. அதனுடைய காலமானது இறைவனின் இரகசியங்களில் குறிக்கப்பட்டிருந்தாலும், அறியப்படாமலே உள்ளது. அதனைக் குறிப்பிட இறைவாக்கினர்கள் வெறுமனே ''இறுதி நாட்கள்'' *(ஏச 2:2)* பற்றிப் பேசுகின்றனர்; அல்லது கடந்தகாலமாகிய ''முதல்காலத்தை'' இறுதிக்காலத்தோடு எதிர்கொள்ளச் செய்து, இரண்டையும் ஒப்பிட்டு வேறுபடுத்துகின்றனர் *(ஏச 8:23)*. பாவ உலகின் கால வட்டமாகிய இன்றைய காலக் கட்டமானது உறுதியான தண்டனையால் முடிவுக்குக் கொண்டுவரப்படும். பின்னர், புதிய காலம் தொடங்கும். இக்காலம் பற்றிய வாசகங்கள் கவர்ச்சிமிக்க விவரிப்புக்களைக் கொடுக்கின்றன. நீதி மற்றும் மகிழ்ச்சியின் காலமானது கீழுலகில் இன்பவனத்தின் முழு நிறைவை மீண்டும் அமைக்கும் *(ஓசே 2:20 தொ; ஏச 11:1-9)*. எதிர்காலமானது இனியும் நிகழ்காலத்துடன் ஒத்த அளவாக இராது. ஆனாலும் தொடக்கத்தில், இறைவாக்கினர்கள் இவ்விரண்டிற்குமிடையே எவ்வித அடிப்படையான பிளவையும் அமைக்கவில்லை: எல்லையற்ற காலக்கட்டத்தினுடைய புதிய காலங்கள் *(ஏச 9:6)*, வரலாறு இப்போது வெளிப்படும் நிலையை விட்டுவிடாமல் வரலாற்றிற்கு முடிவாக அமையும். நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர் ''வரவிருக்கும் காலத்திற்கும்'' (அல்லது உலகத்திற்கும்), இன்றைய உலகிற்கு இடையிலான வேறுபாடானது முற்போக்கான அளவில் வலியுறுத்தப்பட்டது. வரவிருக்கும் உலகமானது ''புதிய வானங்கள்'' மற்றும் ''புதிய மண்ணுலகம்'' ஆகியவற்றின் படைப்பினால் தொடங்கப்படும் *(ஏச 65:17)*. அதாவது, அது அடிப்படையிலே புதிய மட்டத்தில், இறைமறைபொருள்களின் மட்டத்தில் அமைக்கப்படும். இந்த மறைபொருள்களின் வெளிப்பாடு, வெளிப்பாட்டு நூல்களின் பொருளாகிறது.

இ) முடிவு எப்போது வரும்:- யூதர்களுடைய நம்பிக்கையானது பொறுமையின்றி

எதிர்நோக்கியுள்ள இம்முடிவை (தானி 9:2), முடிவின் காலத்தை (11:40) வெளிப்பாட்டு நூல்கள் ஏக்கத்தோடு நோக்குகின்றன. எரிந்து போகும் நிகழ்காலத்தை இடைவிடாது தொடரும் நெருங்கிய எதிர்காலத்தில் அதை அவை காண்கின்றன. ஆனால், இறைவனால் குறிக்கப்பட்டுள்ள ''நேரங்களும் காலங்களும்'' அவரது மறைபொருளாகவே உள்ளன (அ.ப. 1:7). இதுபற்றி முன்னுரைக்கப்படுகின்ற எண்ணியல் யூகங்கள், அடையாளவியல் அமைப்பைச் சேர்ந்தவையாகும். உதாரணமாக எரேமியாவினுடைய எழுபது வருடங்கள் (எரே 29:10); தானியேலின் எழுபது வார வருடங்கள் (தானி 9). இக்காலங்களின் பொருள் ஓய்வு ஆண்டு மற்றும் ஜூபிலி ஆண்டு ஆகியவற்றின் பொருளோடு ஒத்ததன்மையுடையது (எச 61:2; லேவி 25:10). இம்முறையின் மூலமாக, இறுதிக்காலங்கள் பற்றிய விவிலிய அறிவிப்பானது, பிரச்சனைக்குரிய காலங்கள் எப்போதும் வாய்ப்பளிக்கின்ற இறுதிக்கால ஊகங்களினின்று முழுமையாகப் பிரித்துக் காட்டுகிறது. இயேசு கிறிஸ்துவினுடைய பிறப்பு அல்லது உலக முடிவின் தேதியினுடைய கணிதவியல் தீர்மானத்தைப் பழைய ஏற்பாடு தரவில்லை. அது கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய காலத்தின் முழுமையின் ஆழம்பற்றிய காட்சியாகும். அதன் இரகசியத் திசைநோக்கை வெளிப்படுத்துகிறது; அதனால் அதன் பொருளை வெளிப்படுத்துகிறது. மனிதன் நிம்மதியற்ற ஆர்வத்திற்கு எவ்விதத் திருப்தியையும் அதிலிருந்து அடைய முடியாது. மனிதன் தான் வாழ்கின்ற காலம் கோரும் ஆன்மீகத் தேவைகளைப் பற்றி உணரமட்டுமே கூடும்.

III புதிய ஏற்பாடு:-

1. இயேசுவும் காலமும்:-

அ. இயேசு வரலாற்றின் காலத்தில் வாழ்கிறார்:- தயாரிப்பின் காலங்கள் எதிர்நோக்கியிருந்த முடிவானது இயேசுவுடன் வந்தடைந்துள்ளது. இறைவனுடைய இந்த இறுதியான செயலானது வரலாற்றின் காலத்தில் துல்லியமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது: ''ஏரோது அரசனின் நாட்களில்'' இயேசு பிறந்தார் (மத் 2:1); ''திபேரியு செசார் ஆட்சியேற்ற பதினைந்தாம் ஆண்டில்'' யோவானின் போதனை தொடங்குகின்றது (லூக் 3:1); ''போஞ்சு பிலாத்தின் முன்னிலையில் இயேசு தனது விசுவாச அறிக்கையைச் செய்கிறார்'' (1 திமோ 6:3). ''ஒரேமுறை நிகழ்ந்த (உரோ 6:10; எபி 9:12) இந்தக் கடைசிச் செயலானது புனித வரலாற்றின் மைய, முக்கிய நிகழ்ச்சியாக இருப்பதால், கிறிஸ்தவ விசுவாசத்தின் அனைத்து அறிக்கைகளும், மனித காலத்தில் இது நிகழ்ந்த தருணத்தைக் குறிப்பிடுகின்றன. மேலும் அனைத்து மனித முதிர்ச்சிக்கும் தேவையாக உள்ள சாதாரணத் தாமதங்களையும் தனது மண்ணுலக வாழ்வில் இயேசு ஏற்றுக் கொள்கிறார் (லூக் 2:40,52). காலம் பற்றிய நமது அனுபவத்தில் அவர் முழுமையாகப் பங்கேற்கிறார். அவருடைய இறைவாக்குணர்வு மட்டுமே நிகழ்ச்சிகளின் போக்கிற்குத் தலைவராக அவரை ஆக்கியது. அதனால் பிற்பாடு உயிர்த்தெழுவதற்காக அவர் படவேண்டிய மரணத்தில் கண்களைப் பதித்தவராய் வாழ்ந்தார் (மாற் 8:31; 9:31; 10:33-34). இதுவே அவரது நேரம் (யோவா 17:1). அதை முன்பே ஏற்றுக்கொள்ள, தந்தைபால் அவர் காட்டிய கீழ்ப்படிதல் தடை செய்கிறது (2:4).

ஆ) இயேசுவின் காலம், காலத்தின் நிறைவாகும்:- இயேசுவினுடைய இக்காலத்தின் பொருளை அறிதல் மிகவும் அவசியமாகும். தமது போதனையின் தொடக்கத்திலிருந்தே, தனிப்பட்ட தெளிவுடன் அவர் அதனைப் போதிக்கிறார்: ''காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கிவிட்டது'' (மாற் 1:15; லூக் 4:21). தன்னுடைய பணிக்காலம் முழுவதும், தாங்கள் வாழ்கின்ற காலத்தின் அடையாளங்களைப் புரிந்துகொள்ளுமாறு, தமக்குச் செவிமடுப்பவர்களை அவர் தூண்டுகிறார் (மத் 16:1 தொ). இறுதியாக, இறைவனின் வருகையினுடைய காலத்தைப்பற்றி அறியாத எருசலேமிற்காக அவர் அழுகிறார் (லூக் 19:44). பின்னர், இயேசு யூதர்களின் காத்திருத்தலுக்கு முடிசூட்டுகிறார். ''காலத்தின் நிறைவானது'' அவரோடு வந்துவிட்டது (கலா 4:4; எபே 1:10). நற்செய்தியின்

போதனையானது தெளிவாக ஒளியில் அளிக்கின்ற உறுதியான கூறை, இஸ்ராயேலின் வரலாற்றில் அவர் அறிமுகப்படுத்துகிறார்: ''இப்பொழுதோ கடவுளின் திருவருட் செயல்முறை திருச்சட்டத்தின் சார்பின்றியே வெளியாக்கப்பட்டுள்ளது; அச்செயல்முறையையே திருச்சட்டமும் இறைவாக்கினரும் முன்னறிவித்தனர்'' *(உரோ 3:21)*. இறைவனின் திட்டத்தினை வெளிப்படுத்துதலில், அனைத்தும் ''முன்னால்'' அல்லது ''பின்னால்'' என்று பகுக்கப்படும் உறவுடைய ஒரு நிகழ்ச்சியானது நிகழ்ந்து விட்டது: ''ஒரு காலத்தில் மெசியாவின்றி, வாக்குறுதியைக் கொண்டிருந்த உடன்படிக்கைக்கு அந்நியராக இருந்தீர்கள்'' *(எபே 2:12)*; ''இப்பொழுதோ உங்களைத் தம்முடைய ஊனுடலில் ஒப்புரவாக்கினார்'' *(கொலோ 1:22)*. எனவே, இயேசுவின் காலமானது மண்ணுலகக் காலத்தின் மத்திய பாகமாக மட்டுமே இருக்கவில்லை; காலத்தைத் தனது முழுமைக்குக் கொண்டுவந்து, முழுமையாக அதன்மீது ஆதிக்கம் செலுத்துகிறது.

2. திருச்சபையின் காலம்:-

அ) இறுதிக்காலத்தை நீட்டித்தல்:- பழைய ஏற்பாட்டின் நோக்கில், முடிவானது ஒட்டுமொத்தமான முறையில் எதிர்நோக்கப்பட்டது. கீழுலகில் ஒரே நேரத்தில் தண்டனையையும் மீட்பையும் நிறுவுவதன் மூலம் இறைவனின் திட்டமானது தனது முடிவை அடையும். புதிய ஏற்பாடானது இம்முடிவின் இடையில் ஒரு சிக்கலை அறிமுகப்படுத்துகிறது. காலத்தின் முடிவான நிகழ்ச்சியானது இயேசுவில் வந்துள்ளது; ஆயினும், தனது பலன் அனைத்தையும் அது அளித்துவிடவில்லை. இறுதிக்காலங்கள் தொடங்கப்பட்டு மட்டுமே உள்ளன; உயிர்த்தெழுதல் முதல், இறைவாக்கினர்களும், இறைவெளிப்பாடுகளும் வெளிப்படையாக முன்னோக்காத முறையில் அவை விரிவுபடுத்தப்படுகின்றன. இயேசு உவமைகளில் குறிப்பிட்ட கால இடைவெளியைக்கொண்ட எதிர்கால முழுமையை நோக்கிய அரசின் பயணத்தை நோக்க ஏற்கனவே வழிதிறந்துவிடுகிறார் *(மத் 13:30; மாற் 4:26-29)*. உயிர்ப்பிற்குப் பின்னர், அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு அளிக்கின்ற பணியானது, இறுதிக்காலத்தின் அதே நீட்டித்தலை முன்னுரைக்கிறது *(மத் 28:19-20; அ.ப. 1:6 தொ)*. இறுதியாக விண்ணேற்பின் காட்சியானது, இறைவனின் வலப்புறத்தில் இயேசு தமது இடத்தை ஏற்கும் தருணத்தையும், மீண்டும் அவர் மகிமையில் வந்து இறைவாக்கினர்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றுதலைச் செய்துமுடிக்கும் தருணத்தையும் கூர்மையாக வேறுபடுத்துகிறது *(அ.ப. 1:11)*. இவை இரண்டிற்கும் இடையில் ஓர் இடைக்காலம் அமையும். யூதரல்லாதோர் மூழ்கடிக்கப்பட்ட ''அறியாமையின் காலம்'' *(17:30)*, மற்றும் இஸ்ராயேல் மக்கள் இதுவரை வாழ்ந்த பாதுகாப்புக்காலம் *(கலா 3:23 தொ; 4:1 தொ)* ஆகிய இரண்டினின்று பண்பால் இவ்விடைக்காலம் வேறுபட்டிருக்கும். இது திருச்சபையின் காலம்.

ஆ) திருச்சபையினுடைய காலத்தின் பொருள்:- திருச்சபையின் இந்தக் காலமானது சலுகை பெற்ற காலமாகும். இது மீட்பிலிருந்து அனைவரும் பலன் பெறுவதற்கென யூதர் மற்றும் யூதரல்லாதோர் முதலான அனைத்து மனிதருக்கும் நற்செய்தி போதிக்கப்படுகிற காலமாகும்; ஆவியின் காலமாகும் இது *(யோவா 16:5-15; உரோ 8:15 தொ)*. இது உண்மையிலேயே ஒரு புதிரான சூழ்நிலையாகும். ஒருபுறம், விவிலியம் முன்னுரைத்த பொருட்களின் குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்ததாக உள்ள இக்காலம், ஞானஸ்நானத்தினால் இக்காலத்திற்குள் நுழையும் நமக்கு ''இறுதிக்காலமானது'' வந்துள்ளது *(1 கொரி 10:11)*. ஆனால், மற்றொருபுறம், இவ்வுலகின் உருவம் கடந்து செல்வதுபோலக் *(1 கொரி 7:29 தொ)* கடந்து செல்லவேண்டிய ''இக்காலத்துடன்'' இது இணைந்து இருக்கிறது *(தீத் 2:12)*. இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தியை நோக்கி மனந்திரும்புதலானது ஒவ்வொரு மனிதனுக்கும் கால மாற்றத்தைக் குறிப்பிடுகிறது. ஏனெனில் இது, இன்றைய உலகினின்று வர இருக்கும் உலகிற்கும், அழிவை நோக்கிச்செல்லும் பழைய காலத்தினின்று

அதனுடைய முழு விரிவாக்கத்தை நோக்கிப் பயணிக்கின்ற புதிய காலத்திற்கும், செல்லும் பாதையாக உள்ளது. இப்பாதையை இயலக்கூடியதாகச் செய்வதில், திருச்சபையினுடைய காலத்தின் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. அனைவருக்கும் எட்டுகின்ற அளவில் அளிக்கப்படும் ''ஏற்புடைய காலம், மீட்பின் நாள்'' இதுவே *(2 கொரி 6:1-2)*. ஒவ்வொரு மனிதனும் மனமாற்றத்திற்கு அழைக்கப்படுகின்ற, இறைவனுடைய குரலுக்குக் கவனம் செலுத்த வேண்டிய, இறைவனின் ''இந்நாள்'' இதுவே *(எபி 3:7-4:11)*.

இறைவனுடைய மறைபொருளான சித்தத்திற்கேற்பப் பழைய ஏற்பாட்டில் மீட்பின் திட்டமானது வெளிப்படுத்தப்பட்டது போலத் திருச்சபையின் காலமும் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்குக் கீழ்ப்படிகிறது. இத்திட்டத்தின் அமைப்பைச் சிலவாசகங்களில் காணலாம். முதலில் இரண்டு கூறுகளை உள்ளடக்கிய ''யூதரல்லாதோரின் காலம்'' உள்ளது. ஒருபுறம், (பண்டைய மொத்த இஸ்ராயேலின் அடையாளமாகிய) ''எருசலேம் புறவினத்தாரால் மிதிபடும்'' *(லூக் 21:24)*. மற்றொருபுறம், இதே புறவினத்தார் படிப்படியாக நற்செய்திக்கு மனமாற்றப்படுவர் *(உரோ 11:25)*. இறுதியாக, இஸ்ராயேலின் காலம் வரும்; பின்னர், அதன் பங்கிற்கு ''மொத்த இஸ்ராயேலும் மீட்கப்படும்'' *(உரோ 11:26)*. அதன்பின்னர், முடிவு வரும். மொத்த மனித வரலாற்றையும் சேர்ந்த காலத்தின் மறைபொருள், அது முழுமையாக வெளிப்படுத்தலில் இத்தகையதே. இக்காலத்தின்மேல் ஆதிக்கம் செலுத்துகின்ற இயேசு மட்டுமே, உலகின் முடிவுகள் எழுதப்பட்டுள்ள, ஏழு முத்திரைகளுடன் கூடிய நூலைத் திறக்க முடியும் *(திருவெளி 5)*.

இ) திருச்சபையின் காலத்தைப் புனிதப்படுத்துதல்:- எதிர்கால உலகைச் சேர்ந்தது என்ற நிலையிலே திருச்சபையின் காலமானது புனிதமானதாக உள்ளது. ஆயினும் மனிதரால் காலமானது புனிதப்படுத்தப்படுவதானது செயல் ஆற்றல் மிக்கதாயிருக்க, பரிசுத்தகாலம் மற்றும் சமய விழாக்கள் ஆகிய காணக்கூடிய அடையாளங்களால் குறிக்கப்படவேண்டும். இவை ஆண்டுதோறும் மீண்டும் வருவதால் அண்டக்காலத்தின் இலயத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. ஏற்கனவே பழைய ஏற்பாடானது புனித வரலாற்றின் பெரும் செயல்களின் கொண்டாட்டத்தில் இவ்வடையாளங்களுக்குப் புனிதத்தின் புது ஊற்றைத் தேடியது. இயேசுவின் இவ்வுலக வருகைக்குப்பின், மீட்பின் நிகழ்ச்சியானது வரலாற்றுக் காலத்தில் அமைக்கப்பட்டதன் காரணமாக, இச்செயல்கள் இனிமேல் உருவக மதிப்பை மட்டும் கொண்டிருப்பதில்லை. மனித காலத்தைப் புனிதப்படுத்துவதற்கென அதன் வழிபாட்டு நாட்காட்டியின் வட்டத்தில் திருச்சபையானது மெய்யாக்குவது இத்தனிச்சிறப்பான நிகழ்ச்சியையே. ஆண்டவரின் நாளாகிய *(திருவெளி 1:10; அ.ப. 20:7; 1 கொரி 16:2)* ஒவ்வொரு ஞாயிறும், வாரத்தின் வரைச் சட்டத்திற்குள் இயேசுவினுடைய உயிர்ப்பின் கொண்டாட்டமாக ஆகிறது. சிறப்புமிக்க விழாவாகிய பாஸ்காவின் தேதியும் *(1 கொரி 5:8)*, ஆண்டவருடைய மரணம் மற்றும் உயிர்ப்பின் ஆண்டு நினைவும், ஆண்டுதோறும் கொண்டாடப்படும்போது, கொண்டாட்டமானது மிகச்சிறப்புப்பண்பைப் பெறுகிறது. இவ்வாறு, திருச்சபையில் வளர்ச்சிபெற இருக்கின்ற கிறிஸ்துவ வழிபாட்டு வட்டங்களின் முதல் தோற்ற அமைப்புக்களைப் புதிய ஏற்பாட்டில் காணலாம். இதன் மூலமாக அனைத்து மனித வாழ்வும், வரலாற்றில் வந்துவிட்ட மீட்பின் மறைபொருளோடு தொடர்புபடுத்தப்படும். இந்த உண்மையிலேயே எடுத்துக்காட்டான காலம், புறமதப் புராணங்களின் மூல அமைப்புக் காலத்தின் இடத்தை இறுதியாக எடுத்துக்கொள்ளும்.

3. காலங்களின் நிறைவு:-

அ. கிறிஸ்தவ இறுதிக்கால இயல்:- ஆயினும் திருச்சபையின் காலமானது அதனிலேயே போதியதாக இல்லை. பழைய ஏற்பாட்டுடன் ஒப்பிடும்போது ''இறுதிக்காலங்களின்'' ஒரு பகுதியை இது அமைக்கிறது; ஆனால், அதே முறையில் வரலிருக்கும்

முழுநிறைவை நோக்கி விரிவுபடுத்தப்பட்டும், ஆண்டவரது நாளாகிய முடிவை நோக்கித் திசைப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது ஆவியானவர் மனிதருக்கு அளிக்கப்பட்ட நிலையில், அனைத்துப் படைப்புகளும் இறைவனுடைய பிள்ளைகளின் இறுதி வெளிப்பாட்டிற்காகவும், தங்களது உடலின் மீட்பிற்காகவும் ஏங்குகின்றன (உரோ 8:18-24). அதன் பின்னர் மட்டுமே கிறிஸ்துவின் பணியானது அகரமும் னகரமும் ஆனவரும், ''இருக்கிறவர், இருந்தவர், இனிவருபவருமாகிய'' அவரால் செய்து முடிக்கப்படும் (திருவெளி 1:8). அந்நாளில், இக்காலமும் திருச்சபையின் காலமும் ஒன்றாக முடிவுறும். ஏழாவது வானதூதர் தனது கிண்ணத்திலிருந்து ஊற்றும்போது மற்றும் ''முடிந்துவிட்டது'' (16:17) என்ற குரலொலி ஒலிக்கின்ற நேரத்தில், ஒரு உறுதியான பேரழிவில் மூழ்குவதன் மூலம், இக்காலம் முடிவடையும். புதிய வானங்களும், புதிய வையகமும் தோன்றும்போது, தனது முழுமையான உருமாற்றத்தை அடைவதன் மூலம் திருச்சபையின் காலம் முடிவுபெறும் (21:1). அப்போது, மனிதர்கள் இறைவனின் முடிவிலா வாழ்வில் நுழைந்து விடுவார்களாதலால், பழைய உலகில் இருந்ததைப்போன்று காலத்தைக் குறிப்பிடச் சூரியனோ, சந்திரனோ இருக்காது (21:23).

ஆ) முடிவு எப்போது வரும்?:- காலங்களின் நிறைவு, இவ்வுலகின் முடிவு எப்போது வருமென இயேசு அறிவிக்கவில்லை. அது தந்தைக்கேயுரிய இரகசியமாகும் (மாற் 13:32). தமக்கேயுரிய அதிகாரத்தினால் அவர் குறித்துள்ள காலங்களையும் பருவங்களையும் அறிவது மனிதருக்குரியதல்ல (அ.ப. 1:7). தொடக்ககாலத் திருச்சபையானது, ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் மீதான ஆர்வமிக்க நம்பிக்கையில், அது நெருங்கியுள்ளது என்ற தொடர்ச்சியான எண்ணத்தில் வாழ்ந்தது: ''காலம் குறுகியது'' (1 கொரி 7:9); ''நாம் விசுவசிக்கத் தொடங்கியபோது இருந்ததைவிட மீட்பு இப்பொழுது மிக அண்மையில் உள்ளது. இரவு முடியப்போகிறது. பகல் அண்மையிலுள்ளது'' (உரோ 13:11-12). இக்கருத்து எவ்வளவு வலிமையடையதாய் இருந்ததெனின், இம்மொழியைப் பயன்படுத்தும்போது பவுல் இறைவாக்கு நாளைத் துல்லியமான கணக்கீடு செய்வதற்கு எதிராகத் தெசலோனியரை எச்சரிக்க வேண்டியிருந்தது (2 தெச 2:1 தொ). படிப்படியாக, அனுபவத்தின் விளைவாக இறுதிக்காலங்களின் நீட்டிப்பைப்பற்றி மனிதர்கள் அறியலாயினர். மனுமகன், இரவில் திருடனைப்போல் வருவதன் காரணமாக, ஆண்டவருடைய மறுவருகையின் உடனடித்தன்மை நம்பிக்கையினுடைய உளவியலின் முக்கிய கூறாகியது (மத் 24:43; 1 தெச 43; 1 தெச 5:2; திருவெளி 3:3). நாம் காண்கின்ற திருச்சபையின் காலமானது முடிவை முன்குறித்துக் காட்டுகின்ற அடையாளங்களால் குறிக்கப்பட்டுள்ளது (2 தெச 2:3-12; திருவெளி 6:19). இவ்வாறு, பழைய ஏற்பாடு வரைபடமாக அமைத்த மனித வரலாற்றின் இறைவாக்குக் காட்சியைப் புதிய ஏற்பாடு நிறைவு செய்கிறது.

காலவரிசைமுறை (CHRONOLOGY)

விவிலிய விவரிப்புகள், நிகழ்ச்சிகளின் காலத்தைக் குறிக்கும்படி முழுமையான தொடர்ச்சியான காலவரிசைமுறையைத் தருவதில்லை. அகழ்வாய்வுக் கண்டு பிடிப்புக்கள் பொதுவாக ஒப்புமை சார்ந்த தொடர்பையே கொடுக்கின்றன. ஆட்கள், நிகழ்ச்சிகள் மற்றும் சில சமயங்களின் வரலாற்று வரிசையின் காலத்தை நிர்ணயிக்கும்முறை ஆகியன பல்வேறுபட்ட காலக்கணிப்பு முறைகளாலும், நூல்களின் தன்மையாலும் இன்னும் சிக்கல் மிக்கதாக ஆகிறது. ஏனெனில் இந்நூல்களின் அக்கறை வரலாற்றுத் துல்லியத்தைவிட இறையியலை முதன்மையாகக் கொண்டது.

1. பழைய ஏற்பாடு:-

காலவரிசைமுறையை நிர்ணயிக்க அறிவு சார்ந்த தொடக்கம் விவிலிய நூல்களே ஆகும். சில ஆட்கள் அல்லது நிகழ்ச்சிகளில் பொதுப்படையாகக் காலம் குறிக்கப்பட்டாலும் (ஆதி 10:1) மற்றவைகள் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி, புலனான

முறையில் விவரிக்கப்பட்டுள்ளன; இதற்குச் சான்றுகள் ஆபிரகாம் கானானை வந்தடைந்தது (ஆதி 16:3); யாத்திரை (யாத் 16:1; 19:1; 33:38; 1 அர 6:1); நாடுகடத்தப்படுதல் (எச 8:1; 20:1; 24:1) போன்றவையாகும். சிலசமயம் யூதாவின் அரசன் யோயாக்கினின் நாடு கடத்தலிலிருந்தும் (2 அர 25:27 இணை; எரே 52:31; எச 1:2) அல்லது எருசலேமின் வீழ்ச்சியிலிருந்தும் (எரே 1:3; எச 40:1) காலம் கணிக்கப்படுகிறது.

இத்தகைய விவிலிய நிகழ்ச்சிகளின் காலத்தைத் துல்லியமாகக் கணிப்பதற்கு ஒரு முக்கிய சாதனம், ஒத்த நிகழ்ச்சி அடிப்படையில் வரலாற்று நிகழ்ச்சிகள் அல்லது வான இயல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வதாகும். இவற்றைப் பழங்கால மற்ற மூலங்களோடு ஒப்பிட்டு இவற்றிற்குக் காலம் குறிக்கலாம். சான்றாக, எகிப்திய பாரவோன் சிசாக்கு பாலஸ்தீனத்தின்மேல் படையெடுத்தது, எகிப்திய நாளேடுகளிலிருந்து, கி.மு. 926-இல் நடந்ததாகத் தெரிகிறது. இந்நிகழ்ச்சி இரகபெயாமின் ஐந்தாம் ஆண்டு நடந்ததாக விவிலியத்தில் குறிக்கப்படுகிறது (1 அர 14:25). இவ்வாறு சாலமோனின் மரணம் 931-இல் நிகழ்ந்ததாகக் கூறலாம். மற்ற நிகழ்ச்சிகள் இதற்கேற்றவாறு கணிக்கப்படலாம். ஆனால் துர்லபமாக, எட்டாம் நூற்றாண்டுக்குமுன் சில ஒத்த நிகழ்ச்சிகளே உள்ளன. மேலும் மற்ற நாடுகளின் நாளேடுகளில் இஸ்ராயேலைப் பற்றிய குறிப்புகள், குறிப்பாக அரசு பிளவுபடுவதற்கு முந்திய காலத்தைப் பற்றிய குறிப்புகள் அரிதாகவே உள்ளன. பிற்காலத்தைப் பொருத்தமட்டும், பாபிலோனிய மற்றும் அசீரிய அரசர்களின் பட்டியல், நாளேடுகள் அடங்கிய மெசபொத்தாமிய ஏடுகளோடும், வானஇயல் அமைப்புக்கள் மற்றும் விண்ணக நிகழ்ச்சிகளின் பட்டியல்களோடும் ஒப்புமை ஆய்வுகள் செய்யலாம். இவ்வாறு, கர்காரில் சால்மனேசர் நடத்திய போர் பற்றிய அசீரிய ஏடுகளிலிருந்தும், அவருக்குக் கப்பம் செலுத்திய அந்நிய அரசர்களின் பட்டியலிலிருந்தும், ஆகாபின் மரணம் 853-இலும், ஏகூ ஆட்சிக்கு வந்தது 842-இலும் என்று காலம் குறிக்கலாம். 763, ஜூன் மாதமும் அசீரிய அரசன் மூன்றாம் அசூர்தானின் ஒன்பதாம் ஆண்டு சில்வான் மாதமும் நடந்த சூரிய கிரகண அடிப்படையில் பழங்கால மேற்காசிய வரலாற்றுக்கும், விவிலிய நிகழ்ச்சிகளுக்கும் காலம் குறிக்கலாம். மேலும் உறுதியாகக் காலம் கணிப்பதில் மதிப்புடையவை நைல் நதி எழுச்சிக்கும் விடிவெள்ளியாகச் சீரியசின் எழுச்சிக்கும் இடையில் உள்ள தொடர்பால் நிர்ணயிக்கப்பட்ட 1460-ஆண்டுகள் அடங்கிய காலமாகிய சோதிக்கு சுழலோடு கொண்டுள்ள எகிப்திய குறிப்புகளும் கி.மு. 747-இலிருந்து மெசபொத்தாமியாவிலும் எகிப்திலும் வான் இயல் குறிப்பீடுகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் கொண்டுள்ள, தோலமியாவின் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பட்டியலும் ஆகும்.

விவிலியத்தில் காணப்படும் காலவரிசைச் செய்திகள் எகிப்தில் இஸ்ராயேலர் தங்கிய காலம் (400 ஆண்டுகள்-ஆதி 15:13; 430 ஆண்டுகள்-யாத் 12:40-41), வனாந்தரத்தில் அலைந்து திரிந்த காலம் (40-ஆண்டுகள்-எண் 14:33) யாத்திரைக்கும் சாலமோன் ஆலயம் கட்டியதற்கும் இடைப்பட்ட காலம் (480 ஆண்டுகள்-1 அர 6:1) இஸ்ராயேல் மற்றும் யூதாவின் அரசர்கள் ஆட்சி செய்த காலம் (1 அர 15:10; 16:8.15.23.29) ஆகியவை பற்றிய எண்ணிக்கைகள் ஆகும். மற்றச் செய்திகள் பெருவெள்ளத்திற்கு முந்திய மூதாதையர்களின் அசாதாரணமான வயதுக் காலத்தையும் உள்ளடக்கும் (ஆதாமின் வயது 930; யாரேதின் வயது 962; மெத்துசலாவின் வயது 969-ஆதி 5). கி.மு. 931-இல் நடந்த சாலமோனின் மரணத்துடன் தொடங்கி இந்த விவரங்களைக் கொண்டு இஸ்ராயேலின் தொடக்க வரலாற்றின் காலங்களைக் கணிக்கலாம். இதன்படி 967-இல் சாலமோன் ஆலயத்தைக் கட்டினார்; யாத்திரை ஏறக்குறைய 1447-ஐ (அல்லது நீதிபதி நூலில் காணப்படும் எண்ணிக்கைகளின் அடிப்படையில் 1445-ஐ) ஒட்டி நிகழ்ந்திருக்கலாம்; யாக்கோபு 1875-இல் எகிப்துக்குச் சென்றார். ஆபிரகாம் 2165-இல் பிறந்தார்; பெருவெள்ளம் 2457-ஐ ஒட்டி

நடந்தது; 4113-இல் உலகம் படைக்கப்பட்டது.

19-ஆம் நூற்றாண்டின் மத்தி வரை பெரும்பாலான அறிஞர்கள் இத்தகைய எண்ணிக்கைக் கணிப்பை ஏற்றுக் கொண்டனர்; பழைமைவாதிகள் பலர் இன்றும் ஏற்றுக்கொள்கின்றனர்; ஆனால் ஆய்வுகளும் தொல்பொருள் சான்றுகளும் இத்தகைய எண்களின் மதிப்பீட்டுக்குச் சவால்விடப் பலரைத் தூண்டின. ஆதி 5 மற்றும் 11-ஆம் அதிகாரங்களில் காணப்படும் எண்ணிக்கைகள் எபிரேய மாசரோட்டிக் வாசகத்திலும், எழுபது நூல் வாசகத்திலும் சமாரியரின் ஐந்நூலிலும் குறிக்கப்பட்டிருக்கும் முறையில் காணப்படும் வேறுபாடுகளால் இச்சவால் தூண்டப்பட்டது. மேலும் ஐந்நூலிலும் நீதிபதிகள் நூலிலும் காணப்படும் விவரிப்புகளுக்கிடையிலும் அரசர்கள் மற்றும் நாளாகம நூல்களுக்கு இடையிலும் பல முரண்பாடுகள் கவனிக்கப்பட்டன. வாசகக் கடினங்களைத் தவிர்த்து, இந்த வேறுபட்ட எண்ணிக்கைகள் நிகழ்ச்சியுரைகள் காலத்தில் கையளிக்கப்பட்ட பல்வேறு கட்டங்களில் பழங்கால விவரிப்புக்குக் குறிப்பிட்ட விவரங்களை அளிக்க அல்லது தோராயமாக எடுத்துக் கூறச் செய்த முயற்சிகளை எடுத்துக்காட்டுகின்றன என்று ஒரு விளக்கம் கூறலாம். சில எண்ணிக்கைகள் உருவகப் பொருளைக் கொண்டிருக்கலாம் (சான்றாக 40 என்பது மிகவும் நீண்ட காலத்தைக் குறிக்கலாம்) அல்லது விவரிப்பைச் ''சமன்'' செய்யத் திட்டமிட்ட முயற்சியாக இருக்கலாம் (சான்று 40 ஆண்டுகளைக் கொண்ட 12 தலைமுறைகளைக் குறிக்க முழுமையாக்கப்பட்ட எண்ணாக 480 பயன்படுகிறது). இந்த எண்ணிக்கைகள் பலவற்றின் துல்லியமான பொருள் யூகமாகவே உள்ளது. பழங்காலத்தையும் நவீன காலத்தையும் சேர்ந்த மற்றச் சமூகங்களின் மரபு முறைப்பட்டியல்களின் தன்மை மற்றும் பயன்முறை பற்றிய ஆய்வுகள் விவிலிய மரபு முறைப்பட்டியல்கள் மிகவும் திட்டமிட்டவையாகும் என்று சுட்டுகின்றன. தனிநபர்களுக்கிடையிலும் குழுக்களுக்கிடையிலும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்ட இவை பாதுகாக்கப்பட்டன. இந்தப் பட்டியல்கள் ஒரு திட்ட அமைப்பைக் கொண்டுள்ளன (சான்று ஆதாமுக்கும் நோவாவுக்கும் இடையில் 10 தலைமுறைகள்-ஆதி 5; சேமிலிருந்து தெராகு வரையில் 11 தலைமுறைகள்; 14 தலைமுறைகள் கொண்ட மூன்று தொகுப்புக்கள்-மத் 1). இவை, திட்டத்திற்கு ஒத்ததாகச் செய்ய, தனிநபர் சிலரை விட்டு விடுகின்றன அல்லது வரலாற்றைச் சுருக்கித் தருகின்றன. இத்தகைய விளக்கங்கள் விவிலிய விவரிப்புகளின் வரலாற்றுத்தன்மையை நம்பத்தகாததாகச் செய்கின்றன என்று சிலர் கருதினாலும், மற்றவர்கள், ஆசிரியர் வரலாற்றைப் புரிந்து கொள்வதின் இறையியல் பொருளைப் புரிந்துகொள்ள எடுக்கப்பட்ட முயற்சியாக இவைகளை நோக்குகின்றன.

பழங்கால எகிப்திய மற்றும் மெசபொத்தாமிய ஏடுகளோடு செய்யப்பட்ட ஒத்தமை ஆய்வுகள், அரசாட்சிக் காலத்தில் காலவரிசைக் கணிப்பின் சிக்கல்களைப் பொருத்த மட்டும், பொருள் பொதிந்த நுண்ணறிவைக் கொடுத்துள்ளன. இவற்றில் ஆட்சி அல்லது பெயர்கள் பயன்பட்டிருக்கும்முறையும், குறிப்பாக யூதாவில் உடன் ஆட்சிகள் அடிக்கடி கூறப்படுவதும் அடங்கும் (2 அர 15:1-7.32-33). மேலும் அரசர்களின் ஆட்சியைக் கணிக்க இருமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அ) எகிப்திய ''அரியணை ஏறும் ஆண்டு'' அல்லது முன்குறிக்கும் முறை: இதில் அரசன் அரியணை ஏறிய ஆண்டே அவனது ஆட்சியின் முதலாண்டாகக் கணிக்கப்பட்டது. ஆ) மெசபொத்தாமிய ''அரியணை ஏறா ஆண்டு'' அல்லது பின் குறிக்கும் முறை: அரியணை ஏறியபின் வரும் முதல் முழு காலண்டர் ஆண்டிலிருந்து கணிப்பைத் தொடங்குவது. யோராமிலிருந்து யோவாஸ் வரையுள்ள ஆட்சிகளைத் தவிர, மற்றவற்றில் யூகா முன்குறிக்கும் முறையைப் பயன்படுத்தியது என்றும், கி.மு. 798-ஐ ஒட்டி, யோவாசு முன்குறிக்கும் ஆண்டை ஏற்றுக் கொள்ளும் வரை இஸ்ராயேல் பின்குறிக்கும் முறையைப் பயன்படுத்தியது என்றும் புரிந்துகொண்டால், அரசாட்சி பற்றிய எண்ணிக்கைகளில் காணப்

படும் வேறுபாடுகள் விளக்கப்படலாம் (2 அர 12; 2 அர 9:24-27; 10:10). இதனோடு தொடர்புடைய மற்றொரு கூறு அரச ஆட்சித் தொடக்கத்தைக் கணிக்க இருவகைக் 'காலண்டர்கள்' பயன்பட்டதாகும். யூதா, இலையுதிர்காலத்தில் (செப்டம்பர்-அக்டோபர்) தொடங்கிய திசிரி 'காலண்டரையும்' (1 அர 6:1.37-38), இஸ்ராயேல் வசந்த காலத்தில் (மார்ச்-ஏப்ரல்) தொடங்கிய நீசான் 'காலண்டரையும்' பயன்படுத்தினர். இந்த வழக்கங்கள் இருந்தன என்பதை ஏற்றுக்கொள்வது எருசலேமின் அழிவு 586-இல் நடந்தது என்று கணிக்க உதவுகிறது (அப 7 [ஆகஸ்ட் 12]; 2 அர 25.8; அப 10 [ஆகஸ்ட் 15]). யூதா அல்லது இஸ்ராயேலைச் சேர்ந்த அரசர்களின் காலத்தைக் கணிப்பதும், ஒரே காலக்கணிப்பு முறைப்படி ஒன்றோடு ஒன்று ஒத்துப்போகச் செய்வதும் கடினமானதாகும்.

யாத்திரை போன்ற தனிப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய காலக்கணிப்பை அந்தத் தலைப்புகளில் காண்க.

2. புதிய ஏற்பாடு:-

புதிய ஏற்பாடு உள்ளடக்கும் வரலாற்றுக் காலம் குறுகியது. ஆனாலும் அதில் எழும் காலவரிசைமுறை பற்றிய பிரச்சனைகள் பழைய ஏற்பாட்டைப்போல் பரந்ததும் சிக்கல்மிக்கதும் ஆகும். இங்கு மற்றப் பழங்கால உலகோடு ஒப்புமைப்படுத்தி நிறைவாகக் காலம் குறிக்க விவிலிய விவரிப்புகள் வெகு சிறிதே அடிப்படை அளிக்கின்றன. இதில் காணப்படுபவற்றில் பெரும்பாலானவை பொருத்தமில்லாதவைகளாகவோ தெளிவில்லாமலோ இருக்கின்றன. மேலும் பலவகையான ஆண்டுக் கணிப்புமுறைகள் இருந்ததால் காலவரிசைக் குறிப்புகள் சிக்கல் மிக்கவையாக உள்ளன.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் நிர்ணயிக்கப்பட்டபடி ''கிறிஸ்தவ சகாப்தம்'' இயேசு பிறந்த ஆண்டாகிய ''உரோமை நிறுவப்பட்ட'' 753-இலிருந்து கணிக்கப்பட்டாலும், இயேசுவின் பிறப்பு சில ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்து விட்டதாக நம்பப்படுகிறது. கி.மு. 4-இல் மரித்த பெரிய ஏரோதின் ஆட்சியில் இயேசுவின் பிறப்பு நடந்ததாக மத்தேயு குறிப்பிடுகிறார் (மத் 2:1). திருக்குடும்பம் எகிப்துக்குப்போனது பற்றிய விவரிப்பு (2:13 தொ) ஏரோதன் இறந்தபோது இயேசுவுக்கு ஏறக்குறைய இரண்டு வயது ஆகியிருக்கக்கூடும் என்று சுட்டுகிறது. இது இயேசு கி.மு. 7 அல்லது 6-இல் பிறந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. கி.மு. 43-இலிருந்து கி.பி. 14 வரை ஆண்ட சீசர் அகுஸ்துவால் கட்டளையிடப்பட்ட மக்கள் கணக்கெடுப்புப் பற்றிய லூக்காவின் குறிப்பு இது ''சீரியா நாட்டைக் கிரேனியு ஆண்ட காலத்தில்'' நடந்தது என்று கூறுகிறது (லூக் 2:1-2). ஆனால் கிரேனியுவின் காலம் கி.பி. 6 அல்லது 7-க்குமுன் கணிக்கப்படுவதில்லை (அ.ப. 5:37). இவையெல்லாம் பெத்லகேமில் மரியாளும் யோசேப்பும் இருந்ததை விளக்கவே லூக்கா முயலுகிறார் என்று சுட்டலாம்; இதைவிட மேலான விளக்கம் முந்தைய காலக்குறிப்பு வரிசையாகச் செய்யப்பட்ட மற்றொரு கணக்கெடுப்பையோ கிரேனியுவின் காலத்தில் உண்மையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு கணக்கெடுப்பின் தொடக்கக் கட்டத்தையோ குறிக்கிறது என்பதாகும்.

இயேசுவின் பணிக்காலத்தைக் கணிப்பதும் பிரச்சனைக்குரியதாகும். அவர் திருமுழுக்கு யோவானால் திருமுழுக்குப் பெற்றது திபேரியுவின் பதினைந்தாம் ஆண்டு நடந்ததாகக் குறிக்கப்படுகிறது. மேலும் போந்திய பிலாத்து, நான்கில் ஒரு பகுதிகளுக்குத் தலைவர்களான அந்திப்பா, பிலிப்பு மற்றும் இலிசானியா, பெரிய குருக்கள் அன்னா மற்றும் கயாப ஆகியோரின் ஆட்சியோடும் தொடர்புபடுத்தப்படுகிறது (லூக் 3:1-2). உரோமையர் காலக்கணிப்பு முறை அரியணை ஏறிய நாளிலிருந்து ஆட்சிக்குக் காலம் குறித்தது. இதன்படி இயேசுவின் திருமுழுக்கு கி.பி. 28 அல்லது 29-இல் நடந்திருக்க வேண்டும். அகுஸ்துவோடு உடன்-பேரரசனாகத் திபேரியு நியமிக்கப்பட்டதிலிருந்து கணித்தால் திருமுழுக்கு கி.பி.

25 அல்லது 26-இல் நடந்திருக்கலாம். இயேசு பணிதொடங்கியபோது ''அவருக்கு வயது ஏறக்குறைய முப்பது'' என்ற லூக்காவின் குறிப்பு தோராயமானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அது, திபேரியுவின் பதினைந்தாவது ஆண்டை முன் குறிப்பதோடும், இயேசு கி.மு. 4-இல் பிறந்தார் என்பதோடும் ஒத்துப்போகும். கிறிஸ்துவின் பணியில் முதல் பாஸ்கு ஏரோதின் ஆலயம் கட்டப்பட்ட 46-ஆவது ஆண்டு என்ற யோவானின் குறிப்பு (கி.பி. 28 அல்லது 29; யோவா 2:13-20) திபேரியுவின் பிற்காலக் கணிப்போடு ஒத்துப்போகிறது. ஆனால் இயேசுவின் பிறப்பு ஆண்டைப்பற்றிய பிரச்சனையை எழுப்புகிறது. மேலும் இயேசுவின் பணியின் காலமும் சிலுவையில் அறையப்படுதலின் கணிப்பும் பல சர்ச்சைகளுக்குரியவையாகும். இப்பணிக்காலத்தில் வரும் பாஸ்கு கடைப்பிடிப்புப் பற்றிய குறிப்புகளின் எண்ணிக்கையையும் அவை பரவிக் கிடக்கும் தன்மையையும் மனதில் கொண்டால், இயேசுவின் பணிமுழுவதும் ஒரே ஆண்டில் நிகழ்ந்திருக்கலாம் என்று ஒத்தமை நற்செய்திகள் சுட்டுகின்றன (லூக் 4:19); ஆனால் யோவானின் நற்செய்தி இரண்டு அல்லது மூன்று ஆண்டுக்காலத்தைச் சுட்ட வல்லது (யோவா 2:13; 6:4; 11:55; 5:1). இறுதி இரவுணவைப் பாஸ்கு உணவோடு ஒன்றாகக் கருதும் அறிஞர்கள் இயேசு மற்றொரு 'காலண்டரை' ஒருவேளை எஸ்லேனியரின் 'காலண்டரைப்' பின்பற்றியிருக்கலாம் என்று கருதுகின்றனர் (யோவா 13:29; 18:28).

பின்வரும் ஆண்டுகள், அப்போஸ்தலர் காலத்துக் காலவரிசைக்கு வேறுபட்ட அளவில் முக்கியத்துவம் உடையவையாகும். 1) கி.பி. 36வரை பிலாத்து யூதேயாவின் ஆளுநராக இருந்தார். 2) நபத்தேய அரசன், நான்காம் அரேத்தா, கி.பி. 37-இலிருந்து அவர் மரித்த 40 வரை தமஸ்குவைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். 3) முதலாம் ஏரோது அகிரிப்பா (அ.ப.12) கி.பி. 44-இல் இறந்தார். 4) கி.பி. ·'6-48-க்கு இடைப்பட்ட காலத்தில் பாலஸ்தீனத்தில் பஞ்ச நிலை நிலவியிருக்கலாம். 5) கிளாதியு யூதர்களை உரோமையிலிருந்து விரட்டிய ஆண்டு ஒருவேளை கி.பி. 49 ஆகலாம். 6) கி.பி. 51-52-இலோ 52-53-இலோ கல்லியோ ஆக்காயாவுக்கு ஆளுநராக இருந்தார். 7) பெஸ்து, பெலிக்சுக்குப் பதிலாக யூதேயாவுக்கு ஆளுநராக ஆன ஆண்டு சர்ச்சைக்குரியதாயினும் அது ஒருவேளை கி.பி. 59 அல்லது 60-இல் நடந்திருக்கலாம்.

முந்திய காலவரிசைமுறையிலிருந்து பின்வரும் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தைத் துல்லியமாகக் கூறமுடியாவிட்டாலும் அவை நடந்த காலத்தைத் தோராயமாகக் கூறலாம். 1) ஸ்தேவான் மக்கள் கூட்டத்தால் கல்லால் எறிந்து கொல்லப்படுதல் (அ.ப. 7:58) பிலாத்து ஆளுநராக இருந்தபோது ஒருவேளை நடந்திருக்காது. ஆகவே இந்நிகழ்ச்சிக்கு கி.பி. 36-க்கு முந்திய ஆண்டுகளைக் குறிக்கமுடியாது 2) பவுல் மனந்திரும்பியது, அவர் தமஸ்குவிலிருந்து தப்பி எருசலேமுக்குச் சென்றதற்கு மூன்று ஆண்டுகள் முன்பும் (அ.ப. 9:23-26; 2 கொரி 11:32-33; கலா 1:18), ஸ்தேவானின் மரணத்துக்குப்பின்னும் (அ.ப. 7:58; 8:1; 9:1) நிகழ்ந்தது. ஆகவே இது 36-37-ஐ ஒட்டி நடந்திருக்கலாம். 3) அ.ப. நூல், பவுல் மற்றும் பார்னபாவின் பஞ்ச நிவாரணத்திற்காக எருசலேம் சென்றதையும் (11:27-30; 12:25), ஏரோதின் கீழ் நடந்த கொடுமையையும் (12:1-23), தோன்றுவதுபோல், அவ்வளவு நெருக்கமாகத் தொடர்புபடுத்த விரும்பவில்லை. இந்தக் கொடுமைகள் பாஸ்கு காலத்திலும் (12:3), ஏரோதின் மரணத்திற்குச் சிறிது முன்பும், 43 அல்லது 44-இல் நடந்தன.பஞ்ச நிவாரணத்திற்காக இரு அப்போஸ்தலர்களும் எருசலேம் சென்றது ஏரோது மரித்துச் சில ஆண்டுகளுக்குப்பின் நடந்திருக்கலாம். 4) பவுல் மற்றும் பார்னபா எருசலேமுக்குச் சென்றது பவுல் மனந்திருந்திய பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் நடந்ததாகக் கலா 2:1-10 கூறுகிறது. எனவே அது கி.பி. 48-ஐ ஒட்டி நடந்திருக்கலாம். பொதுவாக இது அ.ப.15:1-29-இல் வரும் அப்போஸ்தல சங்கத்தோடு ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆனால் இது,

அ.ப. 11:29-30; 12:25-இல் வரும் பஞ்ச நிவாரணத்திற்காகச் சென்றதாக இருக்கலாம். 5) உரோமையிலிருந்து யூதர்கள் விரட்டப்பட்ட பிற்பாடும் (18:1-3) அக்காயாவுக்குக் கல்லியோ ஆளுநராக ஆவதற்கு முன்னும் (18:12) ஒருவேளை 18 மாதங்களுக்கு முன்னும் (18:11) பவுல் கொரிந்தை அடைந்திருக்கலாம். ஒருவேளை இந்த 18 மாதங்கள் பவுல் கொரிந்தில் தங்கிய காலம் முழுவதையும் குறிக்கலாம். பவுல், தனது இரண்டாம் மறைபரப்பும் பயணத்தில் 49-51-இலிருந்து 51-53 வரை கொரிந்தில் தங்கியிருந்திருக்கலாம். 6) பவுல் எருசலேமில் கைதியானது (21:27-2:29) அல்லது அவர் செசரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது (23:16-35) போன்ற சில நிகழ்ச்சிகள் (24:27; 25:1) நடந்த இரு ஆண்டுகளுக்குப்பின் பெஸ்து பதவி ஏற்றார். பவுல் எருசலேமிலிருந்து புறப்பட்டது கி.பி. 57-58 இலும், செசரியாவிலிருந்து புறப்பட்டது, பெஸ்து பதவி ஏற்ற சிறிது காலத்திற்குப்பின் 59-60 இலும் நடந்திருக்க வேண்டும்.

பவுலின் திருமுகங்களுக்குத் தோராயமாகக் காலம் குறிப்பதை அகச்சான்றுகளின் அடிப்படையில் பின்வருமாறு செய்யலாம். 1, 2 தெசலோனியர் கி.பி. 50-இலும் கலாத்தியர், கொரிந்தியர் கி.பி. 52-54 இலும், உரோமையர் 54-இலும், கொலோசியர், எபேசியர் மற்றும் பிலேமோன் 58-இலும், பிலிப்பியர் 59-இலும் (54-இல் எழுதப்பட்டதாகச் சிலர் கூறுவர்) எழுதப்பட்டதாகக் கூறலாம். இதுபற்றி அந்தந்தத் திருமுகங்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் காண்க.

காலாகு (CALAH - முதிர்ந்த வயது, பரிசுத்த வாயில்)

எபிரேய பாரம்பரியத்தில் நிம்சோதினால் கட்டப்பட்ட நகரங்களுள் ஒன்று (ஆதி 10: 11). இது ஓர் அசீரியா நகரம்; நினிவேக்குத் தெற்கே 35 கி.மீ. தொலைவில் திகிரிசு நதியின் இடக்கரையில் சாபஆறு சேருமிடத்தில் உள்ள ஒரு நகரம். முதலாம் சால்மனேசர் ஆட்சியின்கீழ் (கி.மு. 1273-1244) இது முதன்முறையாகக் குறிக்கப்படுகிறது; ஆனால் இதைத் தொடர்ந்து இந்நகர் அழிவுக்கு உட்பட்டது. இது இரண்டாம் அசூர்-நசீர்-பால் என்பவரால் மீண்டும் கட்டப்பட்டு, சனகெரிபு (கி.மு. 704-681) ஆட்சி வரை அசீரிய அரசனின் இருப்பிடமாக இருந்தது. பிறகு சனகெரிபு தன் தலைநகரை நினிவேக்கு மாற்றிவிட்டார். ஏசர்கதோன் (கி.மு. 680-669) ஒரு புதிய அரண்மனை காலாகுவில் கட்டினார்; ஆனால் அசூர்-பானி-பால் (கி.மு. 668-626) தன்னுடைய உறைவிடத்தை மீண்டும் நினிவேக்கு மாற்றிக் கொண்டார். அசூர்-எதில்-இலானி (கி.மு. 625-621) ஒரு புதிய அரண்மனையை இங்குக் கட்டினான். நிம்ரோது என்ற மேட்டில் நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் அசூர்-நசீர்-பால், மூன்றாம் திகிலாத்து-பிலேசார் ஏசர்கதோன் ஆகியவர்களின் அரண்மனைகளை வெளிக்கொணர்ந்துள்ளன. இஸ்ராயேலின் கப்பம் கட்டும் சித்திரம் கொண்ட மூன்றாம் சால்மனேசரின் கருங்கல்தூண் காலாகுவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு முறை சொல்லப்பட்டுள்ளது ஆச்சரியமாக உள்ளது (ஆதி-10:11-12).

காலாக்கு (HALAK - மொட்டையான மலை)

அராபாவுக்குக் கிழக்கில், காடுகள் நிறைந்த சரிவுகளில் சேயிருக்குச் செல்லும் வழியில் உள்ளது என்று விவரிக்கப்படுகிறது. இம்மலை நெகேபில் உள்ளது. பெயரும் இடமும் பேயேர் செபாவுக்குத் தென் கிழக்கில் 42 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால எபேல் காலாக்கு என்னுமிடத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

காலானியர் (GAULANITIS)

கலிலேயாவிற்குக் கிழக்கில் உள்ள யோர்தானுக்கு அப்பால் உள்ள பீடபூமிப்பகுதி. யார்முக்கு இதன் தெற்கு எல்லையாகவும் உலாத்தா, பானே ஆகிய மாவட்டங்கள் வடக்கு எல்லையாகவும் அமைந்திருக்கின்றன. யோர்தான் பள்ளத்தாக்கிலிருந்து செங்குத்தாக எழும் மலை உச்சிகளிலிருந்து கிழக்கில் திராக்கோனித்து, பத்தனேயா வரை பரவியிருந்தது.

விவிலியத்தில் இந்தப் பெயர் சொல்லப் படாவிட்டாலும் பழைய ஏற்பாட்டில் மனா சேயுக்குச் சொந்தமான பாசான் நாட்டில் உள்ள கோலான் என்ற பகுதியின் பெயராக விளங்கியது (யோசு 20:8; உப 4:43). யோசிப் பஸ் காலம் வரை இந்த நகரம் இருந்தது. பெரிய ஏரோதின் ஆட்சியில் இருந்ததால் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் தன் மகன் பிலிப் புக்கு அதைக் கொடுத்தார். பிலிப்புவின் மரணத்திற்குப் பின்பு கி.பி:34-இல் உரோ மைப் பேரரசில் உள்ள சிரியாவோடு இது இணைக்கப்பட்டது. ஆனால் பின்பு பேரரசர் காலிகுவா என்பவரால் முதலாம் ஏரோது அகிரிப்பாவுக்குக் கொடுக்கப்பட்டது. கி.பி. 66-70-இல் உரோமைக்கு எதிராக யூதர்கள் செய்த புரட்சியில் இதுவும் பங்கு கொண் டது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாசான் பகுதியைப்போன்று புதிய ஏற்பாட்டுக் காலத்தில் காலானியா செழிப்புற்று விளங்கி யது. இப்போதும் செழிப்புள்ள பகுதியாகத் திகழ்ந்தாலும் இப்போது உள்ள மக்கள் தொகையைவிட முன்னால் அதிக மக்கள் வாழ்ந்தனர். இப்பகுதிக்கு யாலான் என்று இப்பொழுது பெயரிடப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் உள்ள கோலான் என்ற பெயரின் வடிவைக் கொண்டுள்ளது.

காலிபி (CHALPHI)

இறந்துபோன ஒரு குழந்தைக்குப் பதிலா கக் கிடைத்த குழந்தை என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல். யூதாவின் (2) தந்தை. இவர் யோனத்தான் படையில் ஒரு தளபதி (1 மக் 11:70)

காலியர் (GAULS)

பழங்கால எழுத்தாளர்களால் கெலித்தியர் என்று அழைக்கப்பட்ட மக்கள் இவர்கள். இவர்கள் முக்கியமாக இப்பொழுது இருக் கின்ற பிரான்ஸ், வட இத்தாலியா ஆகிய பகுதிகளில் இருந்தனர். ஆனால் மக்கதோ னியா, அக்காயா, திராக்கு, சிறிய ஆசியா ஆகிய பகுதிகளிலும் குடியேறிக் காலாத்தி யர்கள் என்று அழைக்கப்பட்டனர். உரோ மையர்கள் காலியர்களைத் தோற்கடித்ததாக 1 மக் 8:2 கூறுகிறது. இது ஐரோப்பாவிலுள்ள காலியர்களைக் குறிக்கலாம். பாபிலோனி யாவில் கலாத்தியருக்கு எதிராக யூதர்கள் செய்தபோரில் ஆண்டவருடைய உதவி கொண்டு வெற்றி பெற்றார்கள் (2 மக் 4:10). கிரேசெக்கு என்பவர் கலாத்தியாவிற்கு நற் செய்திப்பணி ஆற்றச் சென்றார் என்று 2 திமோ 4:10 கூறுகிறது. காண்க. கலாத்தியா.

காலேபியர் (CALEBITE)

நாபாலின் மற்றொரு பெயர். எப்புன்னே யின் மகனான காலேபின் வழித்தோன்றல் (1 சமு 23:3)

காலேபு (CALEB — நாய், அடிமை)

கானான் நாட்டை வேவு பார்க்க மோசே யால் அனுப்பப்பட்ட ஒற்றர்களுள் ஒருவர். பிற்காலத்தில் கெபிரோனை வென்றவர்.

ஒற்றர்கள் குழுவில் இவர் யூதா கோத்திரத் தின் பிரதிநிதி. ஒற்றர்கள் திரும்பியதும், உடனடியாகக் கானானின்மீது படையெடுக்க வேண்டும் என்று காலேபு தூண்டினார். யோசுவா இதை ஆமோதித்தார். ஆனால் மக்கள் மற்ற ஒற்றர்கள் சொன்னதைக் கேட்டு இதை எதிர்த்தனர். பிற ஒற்றர்களின் விவரிப்புகளைக் கேட்டு, மக்கள் அஞ்சி மோசேக்கு எதிராகக் கலகம் செய்தனர். இது யாவேக்கு எதிரான கலகமாகவும் யாவே தங்களுடன் இருப்பதை மறுப்பதாகவும் கரு தப்பட்டது (எண் 14:9). இதனால்தான் காலே பும், யோசுவாவும் தவிர மற்ற வயது வந்த சந்ததியார் அனைவரும் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையவில்லை. ஆனால் ''என் அடியான் காலேபு வேறுபட்ட மனநிலை கொண்டு என்னை முழுமையாகப் பின்பற்றி னான்'' என்று தனிப்பட்டவிதமாக யாவே யால் போற்றப்பட்டார் (எண் 14:24; உப 1:36). இஸ்ரேலுக்கு நாடு அளிப்பதாக இறை வன் அளித்த வாக்குறுதியில் அச்சமற்ற, தளராத நம்பிக்கைக்குக் காலேபு ஓர் எடுத் துக்காட்டாக விளங்குகிறார்.

பழைய ஏற்பாட்டில், கெபிரோனைச் சுற் றியுள்ள இடங்களுடன் இவர் தொடர்பு

படுத்தப்பட்டுள்ளார். இந்த இடம் கடவுளால் குறிக்கப்பட்ட பாரம்பரியச் சொத்தாக இவருக்குக் கொடுக்கப்பட்டது. இதிலிருந்து இதனுடைய குடிமக்களான அனாகியர்கள் அல்லது 'இராட்சதர்களை' இவர் வெளியேற்ற வேண்டியிருந்தது. கெபிரோனுக்குத் தென் மேற்கிலுள்ள தெபீரை ஒதினியேல் வென்று அதனால் காலேபின் மகளான அகிசாவைத் திருமணம் செய்து கொண்டாலும், இவ்விடத்தை வென்றது காலேபுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது (யோசு 15:16-17; நீதி 1:12-13). காலேபு கெபிரோனை ஆளவில்லை (ஏனெனில் கெபிரோன் லேவியரின் நகரமாக்கப்பட்டது). ஆனால் அதைச் சுற்றியிருந்த நிலங்களையும், ஊர்களையும் ஆண்டார் (யோசு 21:12; நாள் 6:56). காலேபு யூதாவிற்குத் தெற்கேயிருந்த நெகேபையும் ஆண்டார் (1 சாமு 30:14).

யூதாவை வென்ற வரலாற்றில் காலேபின் பங்குபற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் சிக்கலானவையாகும். காலேபு, யூத கோத்திரத்தில் சேர்க்கப்பட்ட ஒரு பிற குலத்தவராகத் தெரிகிறது. குருக்கள் பாரம்பரியமும் (எண் 13:6; 34:19) நாளாகமமும் (1 நாள் 2:18; 2:4-5) காலேபுவின் மூதாதையர் யூதாவைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகின்றன. ஆனால் அவைகளைவிடப் பழைய மூலங்கள் இவர் கெனிசியனான எப்புன்னேயின் மகன் என்றும் (எண் 32:12) அல்லது ஒதினியேலின் தந்தையான கெனாசின் மூத்த சகோதரன் என்றும் (யோசு 15:17; நீதி 1:13) கூறுகின்றன. ஆகவே இது காலேபியர்கள் இஸ்ராயேலைச் சாராதவர்கள் என்று சுட்டுகிறது; கெனாசு ஏதேமியக் குழுத்தலைவன் அல்லது அதனுடைய தலைவன் (ஆதி 36:4; நாள் 1:53). கெனிசியர்கள் குலமுதியவர்கள் காலத்தில் அநேகமாகத் தெற்குப் பாலஸ்தீனத்தில் வாழ்ந்து வந்தனர் (ஆதி 15:19). காலேபும், கெனாசும், கூரியப் பெயர்கள்; மேலும் கூர் என்பது ஓர் ஆள் பெயராக நாளாகம குலமரபுக்கொடியில் தோன்றுகின்றது (1 நாள் 2:19.50).

1 நாள் 2:4-இல் உள்ள காலேபியர்களின் குலமரபுப் பட்டியல்கள் இவர்கள் யூத கோத்திரத்தில் ஒன்றாகக் கலந்ததைச் சுட்டுகின்றன. காலேபியரிடையே பல திருமணங்களும் அவைகள் வழியாகப் பெற்ற பிள்ளைகளும் இவர்களுடைய இத்தகைய கோத்திர வரலாற்றைச் சுட்டுகின்றன (1 நாள் 2:18-19.24.42-50; 4:15).

காலேபின் மனைவி எப்பிராத்தா பெத்திலகேம் பகுதியைக் கைப்பற்றியதை அடையாளமாகக் குறிக்கிறார் (1 நாள் 2:24; மீக் 5:2). சிப்பு, கெபிரோன் போன்ற பெயர்கள், காலேபியர்கள் இன்னும் தெற்குப்பகுதியில் குடியேறியதைக் குறிக்கின்றன. கெசிரோனின் மகனாகக் காலேபு குறிக்கப்படுவது (1 நாள் 2:18.24) இவரேதான் எப்புன்னேயின் மகனாவர் என்று சுட்டுகிறது. இதை நாளாகமம் அறிந்திருக்கிறது (1 நாள் 4:15). இரு நிகழ்ச்சியிலும் காலேபின் மகள் அகிசா என்றே அழைக்கப்படுகிறாள் (யோசு 15:16; 1 நாள் 2:49). கெசிரோன் எரகுமேல் ஆகியோருடன் காலேபைத் தொடர்புபடுத்துவது, காலேபு யூதாவின் வழித்தோன்றல் என்று உறுதிப்படுத்த நாளாகமம் பயன்படுத்தும் ஒரு யுக்தியாக இருக்கலாம்.

2. கெசிரோனின் மகன். எரகுமேலின் சகோதரன் (1 நாள் 2:12-20. 42-50). 2:9-இல் இவர் செலூபாய் என்றழைக்கப்படுகிறார்.

காலேபு — எப்பிராத்தா (CALEB — EPHRATAH)

இது கெசிரோன், அவரது மனைவி அபியா, அவரது மகன் அசூரைப் பெற்றெடுக்கும் முன் இறந்த இடமாகும் (1 நாள் 2:24). சில வாசகங்களின்படி எப்பிராத்தா கெசிரோனின் விதவையாவாள்; அவரது மகன் காலேபுக்கு அசூரைப் பெற்றெடுத்தாள். காலேபு தன் தந்தையின் உடைமைகளுக்கு உரிமைகொள்ளத் தன் தந்தையின் மனைவியைச் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டும்.

கால், காலடி (FOOT)

விவிலியத்தில் இச்சொல் சாதாரணமாக, உடலின் அங்கத்தையே குறித்தது. சில சம

யங்களில் இது உருவகமாகப் பயன்பட்ட போது, இது சிறப்பான முறையில் ஆட்களைக் குறிக்கிறது (1 சாமு 2:9; சங் 40:2; 66:9; உரோ 3:15; சங் 36:11). ''காலடியில் வைத்தல்'' என்ற சொற்றொடர், வெற்றி மற்றும் ஆதிக்கத்தையும் அடையாளமாக உணர்த்துகிறது (சங் 8:6). இது பழங்காலத்தில் வெற்றி பெற்றவர்கள் நடந்துகொண்ட முறையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது (யோசு 10:24). ''காலடியில் அமர்தல்'' (லூக் 10:39; அ.ப. 22:3) சீடரைக் குறிக்கும் அடையாளமாகும். கால்கள் கழிவறைக்குச் செல்வதை மங்கல வழக்காகக் குறிக்கலாம் (நீதி 3:24; 2 அர 18:27; ஏச 6:2; எச 16:25).

பழங்காலத்தில் சாலைகள் தூசு படிந்திருந்ததால், பயணம் செய்யும்போது கால்கள் விரைவில் அசுத்தமாகின (மாற் 6:11). ஆகவே விருந்தாளிகளின் கால்களைக் கழுவ வசதி செய்து கொடுப்பது விருந்தோம்பலின் ஒரு பகுதியாகும் (ஆதி 18:4; லூக் 7:44; யோவா 13:5). மிதியடிகள் தூசுபடிந்திருக்கக் கூடுமானதால் புனித இடங்களில் அவற்றை நீக்குதல் அவசியமாகும் (யாத் 3:5). கால்களின் தாழ்ந்த நிலையினாலும் அவை கீழ்ப்படுதல், சீடனாய் இருத்தல் ஆகியவற்றின் அடையாளமாய் இருப்பதாலும், தன்னையே ஒருவன் தாழ்த்திக் கொள்வதின் இயற்கையான செயல் காலடியில் முகம் குப்புற விழுவதாகும் (1 சாமு 25:24; மாற் 5:22). பழங்கால இஸ்ராயேலில் சாதாரணமாய்த் தண்டிக்கும் முறை கால்களைக் கட்டிச், சிறையில் அடைப்பதாகும் (யோபு 13:27; எரே 20:2).

கால் கழுவுதல் (FOOT — WASHING)

பாலஸ்தீனத்தில் விருந்தாளி வீடு சேர்ந்தவுடன் விருந்தோம்புபவர் செய்யும் முதல் பணியாகும். வீட்டு வேலைக்காரனோ வீட்டுத்தலைவியோ இப்பணியைச் செய்தனர் (லூக் 7:44; மாற் 1:7 இணை). இயேசு இறுதி இரவுணவின்போது இப்பணியைத் தாழ்ச்சியின் அடையாளமாகத் தம் சீடருக்குச் செய்ததாக யோவான் தன் நற்செய்தியில் கூறுகிறார் (யோவா 13:4தொ). இப்படிப்பட்ட தாழ்ச்சிமிக்க பணிகளைச் செய்ய அவர்கள் எப்போதும் தயாராக இருக்கவேண்டும். இது ''உங்களுக்கு எவன் பெரியவனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ அவன் எல்லோருக்கும் ஊழியனாய் இருக்கட்டும்'' (மாற் 10:43-44) என்ற இயேசுவின் போதகத்தின் செய்து காட்டப்பட்ட உவமையாகும். இதில் தாழ்ச்சி பற்றிய பாடம் கற்பிப்பதை விட ஆழ்ந்த பொருளைக் கூற விழைகிறார் யோவான். இச்செயல் இயேசுவைச் சிலுவையின் இழிவுக்கு இட்டுச்சென்ற அவரது முழுவதும் சுயநலமற்ற அன்பின் அடையாளமாகும் (13:1). இக்கால்களைக் கழுவும் செயலைத் திருமுழுக்கு மற்றும் நற்கருணை ஆகிய அருட்சாதனங்களின் அடையாளமாகக் கருதுகின்றனர் பல விளக்கவுரையாளர்கள். இவ்வருட்சாதனங்கள் வழியாகக் கிறிஸ்தவர்கள் பாவத்தீட்டிலிருந்து தூய்மையடைகின்றனர். ஆண்டவரோடும் தங்களுக்குள்ளேயும் கொண்டுள்ள அன்பு ஒன்றிப்பால் ஊட்டம் பெறுகின்றனர்.

சபையில் சேர்க்கப்படத் தகுதியுள்ள கைம்பெண்களின் பண்புகளில் ''இறைமக்களின் பாதம் கழுவுதல்'' ஒன்றாகும் (1 திமோ 5:10). திருச்சபையின் வழிபாட்டில் ''கால் கழுவும் சடங்கு'' பற்றிக் கி.பி.400-ஐ ஒட்டி அகுஸ்தினார் சான்று கூறுகிறார். பெரிய வியாழக்கிழமை வழிபாட்டில் கடைப்பிடிக்கப்படும் கால்கழுவும் சடங்கு, கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் முதலில் ஸ்பெயின் திருச்சபையில் தோன்றியதாகும். பல திருச்சபைகளில் இச்சடங்கு இப்போதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

கால்நடை, ஆடுமாடு (CATTLE)

வீட்டு வேலைகளுக்குப் பழக்கப்பட்ட விலங்குகளைக் குறிக்கும். விவிலிய வழக்கில், இச்சொல் ஆடு, மாடு, மற்ற விலங்குகளையும் உள்ளடக்கும்.

கால்நடை, காட்டு மற்றும் பழக்கப்பட்ட விலங்குகளைக் குறிக்கலாம் (ஆதி 7:23).

சில சமயம் ஆடுகளிலிருந்து வேறுபடுத்தப்பட்டுப் பெரிய விலங்குகளைக் (எருது, கழுதை) குறிக்கலாம் (எண் 31:9). பெரும்பாலும் காளை வகையைச் சேர்ந்த விலங்குகளைக் குறிக்கிறது (எண் 31:9.33.44; 1 அர 1:9.19.25; சங் 144:14; ஏச 7:25;...). பொதுவாக வீட்டில் பழக்கப்பட்ட விலங்குகளையும் (ஆதி 1:24; 2:20; 33:14; எண் 20:4.8.11; சங் 50:10; யோவா 4:12;...), குறிப்பாக எருதுகள் செம்மறியாடு, வெள்ளாடு முதலியவைகளையும் (ஆதி 13:2-7; 46:32; எண் 7:87-88), குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, எருது, கழுதை முதலியவற்றையும் (ஆதி 47:16-17), ஒட்டகங்களையும்கூட (யாத் 9:3; 1 நாள் 5:21) குறிக்கலாம். இதற்கு மாறாகக் கால்நடை என்பது செம்மறியாடு, வெள்ளாடு ஆகியவற்றை மட்டும் குறிக்கும் இடங்களும் உண்டு (ஆதி 30:39-31:43; திருவுரை 2:7).

கால்நடைகளின் ஒலி எரே 9:9-இல் குறிக்கப்படுகிறது. இவை சாதாரணமாகப் புல்லைத் தின்றன (உப 11:15; யோக 21:2; 1 அர 5:3; சங் 104: 14; ஏச 30:23). சில தொழுவங்களில் வைக்கப்பட்டிருந்தன (2 நாள் 32:28). விலங்கோடு புணர்தல் எச்சரிக்கப்படுகிறது (யாத் 22:19). கால்நடைகள் மூடமானவை என்ற கருத்தைப் பிலிதாதுவின் கேள்வி பிரதிபலிக்கிறது (யோபு 18:3). ''உன் கால்நடைகளை வேறுவகை விலங்குகளோடு பெலியவிடாதே'' (லேவி 19:19). எல்லாக் கால்நடைகளும் ஆண் தலையீற்றுச் சட்டத்திற்கு உட்பட்டனவாகும் (யாத் 13: 12). இவைகளுக்கு ஓய்வு நாளில் ஓய்வு அளிக்கவேண்டும் (20:10). மற்ற விலங்குகளைப்போல் கால்நடைகளும் சுத்தமானவை அசுத்தமானவை என்று வேறுபடுத்தப்பட்டுள்ளன. சுத்தமானவை மட்டுமே உணவாகவும் பலியாகவும் பயன்படுத்தப்படலாம் (லேவி 5:2; 11:1-8). பெருமளவில் கால்நடைகளைக் கொண்டிருப்பது ஒருவரின் நிலையையும் செல்வத்தையும் குறிக்கும் (ஆதி 13:2; 1 சாமு 25:2; யோபு 1:3;...). இவைகளுக்கு வரிவிதிக்கலாம். இவை அந்நியத் தலைவர்களால் பறிமுதல் செய்யப்படலாம் (நெக 9:37). போரின் கொள்ளைப் பொருளாகலாம் (யோசு 8:2; எரே 49:32).

கால்நடைத்தீவனம் (FODDER)

பல தானியங்களைக் கலந்து தயாரிக்கப்பட்ட கால்நடை விலங்குகளின் உணவு (யோபு 6:5; 24:6). ஏச 30:24 (காண் நீதி 19:21) - இல் இதே வார்த்தை ''தீனி'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இவ்வுணவு உப்புக் கலக்கப்பட்டிருக்கும். விலங்குகளுக்கு உப்பின் தேவையை நிறைவு செய்து சுவைமிக்கதாக மாற்றும் பொருட்டு இப்படிச் செய்திருக்கலாம். ''பல்லா'' (ஈரமாக்குதல்) என்ற அராமேய வார்த்தையின் அடிப்படையில் அறிஞர் சிலர் ''இவ்வுணவு நீரில் ஊறவைத்துப் புளிக்க ஆரம்பிக்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டதாக இருக்கும்'' என்று நம்புகிறார்கள்.

கால்மணை (FOOT — STOOL)

வழக்கமாக இச்சொல் உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. சாலமோனின் அரியணைக்குப் பொன்னாலான ஒரு கால்மணை இருந்ததாகக் கூறப்படுகிறது (2 நாள் 9:18). சங் 99:5; 132:7; புல 2:1-இல் ஆலயத்தையே குறிக்காவிட்டாலும் (ஏச 60:3; எச 43:7) கால்மணை என்பது சீயோனை உருவகமாகக் குறிக்கிறது. 1 நாள் 28:2-இல் இச்சொல் பொதுவாக, உடன்படிக்கைப் பேழையின் மேல் உள்ள இரக்க இருக்கையைக் குறிக்கிறது. இந்நான்கு குறிப்புகளிலும் வழிபாட்டில் காணப்பட வேண்டிய வணக்கத்தை உருவகமாகக் குறிக்கிறது. ஏச 66:1; மத் 5:35; அ.ப.7:49-இல் ஆண்டவரது அரியணையாகிய விண்ணகத்தோடும் ஆலயத்தோடும் ஒப்பிட்டு வேறுபட்ட நிலையில், ஆலயத்துக்கு மாற்றுக் கால்மணையாக, இச்சொல் உலகை உருவகமாகக் குறிக்கிறது. சங் 110:1-இல் இச்சொல் உருவகமாகத் தாவீதின் அரசைச் சுட்டுகிறது.

பரிசேயரோடும் சட்ட வல்லுநர்களோடும் நடத்திய வாதத்தில் (மத் 22:44; மாற் 12:36; லூக் 20:43) இயேசு சங் 110:1-ஐ எடுத்துக் கூறுகிறார். இயேசுவின் அரசு மற்றும் விண்

னேற்றத்திற்கும் சான்றாகப் பேதுரு இவ்வசனத்தை எடுத்துக் கூறுகிறார் (அ.ப. 2:35). இதே கருத்தை எபி 1:13; 10:13-என்ற வசனங்கள் எதிரொலிக்கின்றன. யாக் 2:3-இல் செல்வந்தர்களுக்கு நல்ல இருக்கைகளை அளித்து, ஏழைகளைத் ''தரையில் உட்கார்'' (கால்மணை) என்று கூறுவதைப் பற்றிக் கிறிஸ்தவர்களை யாக்கோபு எச்சரிக்கிறார்.

இறைவனின் கால்மணை, முதலில் பேழையையும் (1 நாள் 28:2), பின்பு ஆலயத்தையும், பின்பு உலகையும் உணர்த்திற்று. இங்குதான் பகைவர்கள் தங்கள் வணக்கத்தால் இறைவனது அரசை எடுத்துக்காட்டுகின்றனர். கால்மணை பற்றிய கருத்தைப் புதிய ஏற்பாடு விண்ணேற்றத்திற்குச் சாற்றிக் கூறுகிறது.

கால்வாய் (CONDUIT)

நீரைக்கொண்டு செல்லப் பயன்படும் சாதனம் (2 அர 18:17; 20:20; ஏச 7:3; 36:2). எசக்கியேல் கிகோன் குளத்தைத் தடுத்து, அதன்நீர் எருசலேமுக்குச் செல்ல, கட்டிய கால்வாய் புகழ்பெற்றதாகும். இது 1838-இல் கண்டுபிடிக்கப்பட்டது.

காவலர், சாமக்காவலர் (WATCHMAN)

காவலர், பெரும்பாலும் இரவில், ஓர் ஆளையோ பொருளையோ பாதுகாப்பவர் ஆவார். புதிய ஏற்பாட்டில் சிறையைப் பாதுகாக்க அமர்த்தப்பட்டவர்கள் காவலர்களாகக் கருதப்பட்டனர் (அ.ப. 5:23; 12:6.19).

குறிப்பாக அறுவடையின்போது திராட்சைத் தோட்டத்துக்கும், மற்ற நிலங்களுக்கும் காவலர்கள் அமர்த்தப்பட்டனர். பார்வையிட வசதியாகக் கோபுரங்கள் கட்டப்பட்டன (2 அர 17:9; 2 நாள் 20:24; யோபு 27:18...).

காவலாள் இரவில் நகரின் சுற்றுச்சுவர்களை எதிரிகளிடமிருந்து பாதுகாத்தான் (1 சாமு 14:16; 2 சாமு 28:14; 2 அர 9:17; உ.ச. 3:3; 5:7). முற்றுகையின்போது இவர்கள் மிகவும் தேவை (எரே 51:12). இஸ்ராயேலின் எண்ணப்படி ஆண்டவரே நகரைக் காத்தாலொழிய அதைக் காப்பவன் விழிப்பெல்லாம் வீணே (சங் 127:1). பக்தியுள்ளோர் ஆண்டவரது ஆசிர்களுக்காகக் காத்திருக்கும் காவலர்கள் ஆவர் (130:6).

இறைவாக்கினர்கள் கடவுளின் காவலர்களாக, வரப்போகும் தண்டனையை உணர்ந்து அதை மக்களுக்கு எடுத்துக் கூறினர் (ஓசே 9:8). ஓர் இறைவாக்கினரின் பணி ஆண்டவரின் மக்கள்மீது சாமக்காவலனாக இருப்பதுதான் (ஏச 21:6; எரே 6:17; எச 3:17). இறைவாக்கினர்கள் எப்போதுமே கண்டனத்தைக் கொண்டு வருவதில்லை (ஏச 52:8; 62:6). இறைவாக்கினர், மக்களை மீண்டும் இறைவனிடம் கொண்டு வருவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றார் (எரே 31:6). இதுவே அவரது சுமையான பொறுப்பாகும். பொய்த்தேவர்களின் இறைவாக்கினர்கள் அல்லது போலி இறைவாக்கினர்கள் குருட்டுக் காவலர்கள் ஆவர் (ஏச 56:10).

இறைவனின் தூதர் காவலர் என்றழைக்கப்படுகிறார் (தானி 4:13). இறைவனே மனிதரைக் காவல் செய்கிறார் (யோபு 7:20).

காவலர்கூடம் (COURT OF THE GUARDS)

அரண்மனைப் பகுதியில் கைதிகளைத் தங்க வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட திறந்தவெளி இடமாகத் தெரிகிறது. எருசலேம் முற்றுகையிடப்பட்டபோது இவ்வித இடம் பயன்பட்டதாகத் தெரிகிறது. இங்கு எரேமியா அடைத்து வைக்கப்பட்டிருந்தார். ஆனால் இங்கிருந்து அவர் தொடர்ந்து இறைவாக்கு உரைத்து வந்தார். தன்னுடைய செயலரின் வழியாக அவசியமான வேலைகளைச் செய்ய முடிந்தது (எரே 32:8.12; 33:1; 37:21; 38:6.13.28; 19:14-15).

காவலர் வாயில் (GATE OF THE GUARD)

எருசலேமில் அரண்மனைச் சுற்றுச் சுவரில் இருந்த ஒரு வாயிலாக இருக்கலாம் (நெக 12:39). சூழ்நிலை விவரிப்பு, மந்தை வாயிலைச் (3:31) கட்டலாம்.

காவலாளி (KEEPER)

இது பல எபிரேய, கிரேக்கச் சொற்களின் மொழிபெயர்ப்பாகும்.

அ) கால்நடைகள், திராட்சைத்தோட்டம், பழத்தோட்டம், மந்தைகள் ஆகியவற்றைக் காவல் செய்ய நியமிக்கப்பட்டவர்கள். தேல்-ஏல்-ஒபேய்து என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சங்கில் இத்தகையவர்கள் சித்தரிக்கப்பட்டுள்ளனர். எகிப்தில் கால்நடைகளைக் கவனிப்பவர்கள் சமூகத்தில் மிகத் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். ஆனால் இஸ்ராயேலரிடையே இவர்களுடைய தொழில் மேன்மையாகக் கருதப்பட்டது (ஆதி 47:6; 1 சாமு 11:5; 21:7; 1 நாள் 27:29;...). நகரக் கலாச்சாரம் வளர்ந்தபோது இவர்களது பெருமை தாழ்வுற்றது (1 அர 4:23; திருவுரை 2:7). யூதாவைச் சேர்ந்த ஊசியா, எசக்கியா, யோசியா ஆகியோரும் மோவாபைச் சேர்ந்த மேசாவும் கால்நடைகளை வளர்ப்பவர்கள் ஆவர் (2 அர 3:4 தொ; 2 நாள் 26:10; 32:28-29; 35:7-9). ஆமோஸ் கால்நடைகளைக் கவனிப்பவர் ஆவார் (ஆமோ 7:14). ஆபேல் செம்மறிகளைக் கவனிப்பவரும் ஆயனும் ஆவார் (ஆதி 4:2). திராட்சைத் தோட்டங்களையும் (உ.ச.1:6; 8:11; ஏச 27:3) பழத்தோட்டங்களையும் (பழ 27;18) கவனிப்பவர்களையும், காவல்காரர்களையும் (2 அர 17:9; யோபு 27:18; எரே 31:5) இச்சொல் குறித்தது.

ஆ) சிறைக்கூடங்களைக் காப்பவர்களையும் இச்சொல் குறித்தது (ஆதி 39:21.23; அ.ப. 5:23; 12:6). இயேசுவின் கல்லறையைக் காக்கக் காவலர்கள் அனுப்பப்பட்டனர் (மத் 27:65).

இ) உருவகமாக, ஒருவன் தன்னுடைய நாவையும் உதடுகளையும் காவல் செய்ய வேண்டும் (சங் 34:13; 141:3).

காவல் கோபுரம் (WATCH — TOWER)

ஓரிடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தைப் பாதுகாக்கப் பயன்படும் கோபுர அமைப்பாகும் (2 அர 18:8; ஏச 5:2; 21:8; 32:14; 2 நாள் 20:24). நிலச் சொந்தக்காரரோ, அவருடைய வேலையாளோ மேலே நின்று பார்க்கவும், பாதுகாக்கவும் வயல்களில் கோபுரங்கள் கட்டப்பட்டன. இந்தக் கோபுரங்கள் கற்களால் கட்டப்பட்டன. இவை தற்காலிகமாகத் தங்க அறைகளையும் கொண்டிருந்தன. ஏனெனில் ஒரு காலத்திற்கு இரவும் பகலும் காவல் செய்ய வேண்டியிருந்தது. இன்றைய பாலஸ்தீனத்தில் காவல்புரியும் கோபுரங்கள் வட்ட வடிவமாகவும், 10 அடி உயரமுள்ளவைகளாகவும் உள்ளன. இவை பெரும்பாலும் இரண்டு நிலைகளைக் கொண்டிருந்தன. கீழ்ப்பகுதியில் தங்குவதற்கான வசதிகள் உண்டு. மேற்பகுதியிலிருந்து வயல் முழுவதையும் காணலாம்.

காளை (BULL)

யாக்கோபு ஏசாவுக்கு அளித்த அன்பளிப்பில் காளைகளும் இடம் பெறுகின்றன (ஆதி 32:16). வெற்றிகரமாகக் காளை பொலிதல் யோபு 21:10-இல் சுட்டிக்காட்டப்படுகிறது.

காளைக்குப் பலவித உருவகப்பொருள் கொடுக்கப்படுகிறது. ''இவனழகு பசுவின் தலையீற்றுக் காளையின் அழகைப்போலாம்'' (உப 33:17) என்று யோசேப்பின் தாக்கும் ஆற்றல் விவரிக்கப்படுகிறது. அசீரியாவின் அகந்தையும் பலமும் (ஏச 10:13), சங்கீத ஆசிரியரின் எதிரிகள் (சங் 22:12), புறஇனத்தாரின் அரசர்கள் (68:30), ஏதோமின் தலைவர்கள் (ஏச 34:7), பாபிலோன் (எரே 50:27) ஆகியோர் காளை என்ற உருவகத்தால் விவரிக்கப்படுகின்றனர். எச 39:18-இல் வரும் குறிப்பும் இவ்விதமே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

பெரும்பாலும் பலி செலுத்தவே காளை பயன்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட காளை ''விதையடிக்கப்படாததாய்'' இருக்க வேண்டும் (லேவி 22:24). அதன் வயது குறிக்கப்படவில்லை. ஆனால் ஏழு நாளாவது அதன் வயது இருக்கவேண்டும் (22:27). காளைக்கன்று (9:2), மூன்று வயதுடைய (1 சாமு 1:24), ஏழு வயதுடைய (நீதி 6:25) வகையில் குறிக்கப்படுகின்றன.

காளைகள் பலியிடப்படும் குறிப்பிட்ட காலங்களும் நோக்கமும் கொடுக்கப்படுகின்றன (லேவி 22:33; எண் 23:1; எஸ் 6:9; சங்

50:13; 51:19; ஏச 1:11; ஓசே 12:11). நீதி 6:25; 1 சாமு 1:24; 1 அர 18:23; எஸ் 6:35; யோபு 42:8-இல் குறிப்பிட்ட சூழ்நிலையில் தனிநபர்களால் காளை பலியாக ஒப்புக் கொடுக்கப்படுகிறது.

காளை பற்றிய பெரும்பாலான பழைய ஏற்பாட்டுக் குறிப்புக்கள் குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்தவையாகும். அவை பலியமைப்புத் தொடக்கத்தோடோ, வெவ்வேறு புனித நாட்களில் அளிக்கப்பட்ட பலிகளோடோ தொடர்புடையன. அப்படிப்பட்ட முக்கிய காலங்கள், குருக்கள் திருநிலைப் படுத்தப்படுதல் (யாத் 29:1-37), பீடமும் கூடாரமும் அர்ப்பணிக்கப்படுதல் (எண் 7; எச 48:18-27), லேவியர் தூய்மைப்படுத்தப்படுதல் (எண் 8:5-22), பல்வகையான பாவக் காணிக்கைகள் (லேவி 4:16; எபி 9:13; 10:4), அமாவாசை நாள் (எண் 28:11-15), பாஸ்கு விழா (28:16-25; எச 45:21-25), வாரங்களின் விழா (28:26-31), ஏழாவது மாதத்தின் முதல் நாள் (29:1-6), கூடாரங்களின் விழா (29:12-40) ஆகியவையாகும். கூடாரவிழாவின் போது அதிகமான காளைகள், (எழுபத்தி ஒன்று) பலியிடப்பட்டன. எஸ் 6:17-இல் நூறு காளைகளும், 1 நாள் 29:21-இல் ஆயிரம் காளைகளும் பலியிடப்பட்டதாகக் கூறப் பட்டுள்ளது.

இஸ்ராயேலின் வழிபாட்டில் காளைகளைப் பயன்படுத்தியது மேற்காசிய சமயப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். காளைகளையும் மற்ற விலங்குகளையும் பலியிடுவது கடவுள்களைத் திருப்திப்படுத்தும் வழக்கமாகக் கருதப்பட்டது. மேலும் காளை இனப் பெருக்க அடையாளமாகும். இது இப்பழக்கம் பரவலாக இருந்ததற்குக் காரணமாகலாம். உகாரித்துத் தேவர் குழுவின் தலைவரான ஏலைத் ''தந்தையாகிய காளை ஏல்'' என்று கானானியர் ஏற்றுக்கொண்டது மத்தியதரைக் கடற்கரைப் பகுதிகளில் இந்த வழிபாட்டுமுறை பரவுவதற்குப் பெரிதும் உதவியது. ஏலைக் காளையாக ஏற்றுக் கொண்ட கானானியப் பாரம்பரியம் பாகாலோடு காளை தொடர்புபடுத்தப்பட்ட போது, பெத்தேல் மற்றும் தாணிலும் எரொபயாம் நிறுவிய பொன்னாலான காளைகளோடு (கன்றுக்குட்டிகள்) (1 அர 12:28) நேரடித்தொடர்புடையதா என்பது சர்ச்சைக் குரியது. எருசலேம் ஆலயத்தில், வெண்கலக்கடலைப் பன்னிரண்டு காளைகள் தாங்கி நின்றன (1 அர 7:25; 2 அர 16:17; எரே 20).

காற்சிலம்புகள் (ANKLETS)

கணுக்காலுக்குமேல் அணியப்படும் வளை அணிகலன்கள். சியோன் மகளிர் அணிந்த சொகுசுப்பொருட்கள் பற்றிய ஏசயாவின் விவரிப்பில் இவை வருகின்றன (ஏச 3:18). பாலஸ்தீனத்தில் நடந்துள்ள தொல்பொருள் அகழ்வாய்வுகளில் பல காற்சிலம்புகளும் கணுக்கால் காப்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன; இலாக்கீசில் புதைகுழிகளில் காணப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் செம்பினால் செய்யப்பட்டவை; தட்டையான பக்கங்களைக்கொண்டவை. 5½ முதல் 11 செ.மீ.விட்டமுடையவை; 5 செ.மீ. அகலமுடையவை.

காற்று (WIND)

விவிலியத்தில் இவ்வார்த்தை பல பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

அ) பரந்து வீசும் காற்றின் வலிமை (யோபு 21:18), வேகம் (சங் 17:10), வெறுமை (எரே 5:13), சடப்பொருளற்ற தன்மை (திருவுரை 1:14), இரைச்சல் (அ.ப. 2:2), கணிக்க முடியாத நிலை (யோவா 3:8), மாறும் தன்மை (எபே 4:14) என்பவை மக்களை வியக்கச் செய்கின்றன. இது பொதுவாகப் புயல் காற்றாகவே இருக்கும். இது கடவுளின் காணமுடியாச் சக்தியை எண்பிக் கிறது (ஓசே 13:15).

ஆ) இறைவனது இறையாற்றல் காட்சியில் வரும் புயல்காற்று (2 சாமு 22:11; எச 1:4).

இ) கடவுளின் ஆவி: வெறுமையை யாவே வெற்றிகொள்ளும் சாதனம் (ஆதி 1:2;

8:1); இறைவாக்கினரைத் தூக்கிச் செல்லும் சாதனம் (1 அர 18:12; 2 அர 2:16; எச 8:3; 11:1).

கானா (CANA — நாணல்)

கலிலேயாவைச் சேர்ந்த ஓர் ஊர். இது இருந்த இடம் தெரியவில்லை. விவிலியத்தில், நற்செய்திகளில் மட்டும் சொல்லப்படுகின்றது. இதே பேர் கொண்டு அழைக்கப்பட்ட மற்ற இடங்களிலிருந்த இதை வேறுபடுத்திக்காட்டுவதற்காக (யோசு 16:8; 19:28) இதைக் 'கலிலேயாவிலுள்ள கானா' என்று அழைத்தனர். (யோவா 2:2; 21:2).

1. இருப்பிடம்:- சொல்லிலக்கணத்தையும் பாரம்பரியத்தையும் தவிர இதன் இருப்பிடத்தைக் குறிப்பிட்டுக்காட்ட வேறு அடிப்படையில்லை. நற்செய்திகளில் வருகின்ற கானாவிற்கு இரண்டே இரண்டு இடங்களைச் சுட்டிக்காட்டலாம். இது இருந்திருக்கக்கூடுமான இடம் கேபர் கேன்னா என்பதாகும். இக்கருத்துக்கு ஆதரவாகப் பூர்வீக, இடைக்காலப் பாரம்பரியங்களும், கிரேக்க, உரோமைய கோவில்களும் துணை நிற்கின்றன. இது கப்பர்நகூமிலிருந்து பெத்துசயிதாவிற்குச் செல்லும் சாலையில் நாசரேத்திலிருந்து ஏறக்குறைய 6 கி.மீ தொலைவில், திருயாத்திரிகர்கள் வருவதற்குச் சுலபமாக இருப்பதால், இந்த இடம் கானாவாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

ஏறக்குறைய எல்லா வல்லுநர்களும் இந்த இடம் இன்றைய கிர்பெத்கானா என்ற இடத்தில் இருந்திருக்கலாம் என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். இவ்விடம் நாசரேத்திற்கு வடக்கே ஏறக்குறைய 12 கி.மீ. தொலைவில் உள்ளது. இது ஒரு பாழடைந்த இடம். கி.பி.12ஆம் நூற்றாண்டு தொடங்கிப் பல யாத்திரிகர்கள் இது நற்செய்தியில் சொல்லப்பட்டுள்ள கானா என்று நினைத்து இந்த இடத்திற்குச் சென்றதாகக் கூறப்படுகிறது. அரேபியப் பெயரான கானா, [illegible] என்பதைவிடக் கானாவிற்கு மிக நெருங்கிய தொடர்புடையதாக இருக்கின்றது. இந்த இடத்தின் முழுப் பெயரான கானாரல் கெலில் என்பது கலிலேயாவின்கானா என்பதைப் பாதுகாத்துள்ளது. இப்பெயரின் பொருள் ''நாணல் நிறைந்த இடம்''. உண்மையில் இப்பகுதியில் இன்றும் நாணல் நிறைந்த சதுப்பு நிலம் காணப்படுகிறது.

பழங்காலச்சமவெளியான அசோக்கிசிலுள்ள ஏல்—பாட்டுபுச் சமவெளியின் ஓரத்தில் உள்ளது இவ்விடம். இதற்கு யோசிப்பசும் யூசெபியுவும் ஆதரவு அளிக்கின்றனர். இந்த அழிவுகள், மலையுச்சியில் உள்ள சிதைவுகள் இன்னும் தோண்டப்படாமல் இருக்கின்றன. ஆனால் நீர்க்குட்டைகளும் கட்டடங்களின் சிதைவுகளும் காணப்படுகின்றன. பாறைகளில் செதுக்கப்பட்ட கல்லறைகள் உள்ளன. கி.பி.முதலாம் நூற்றாண்டு நாணயங்களும், பாண்ட ஓடுகளும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

2. நற்செய்தியில்:- இது பன்னிருவருள் ஒருவரான நத்தனியேல் என்பவரின் சொந்த ஊராகும் (யோவா 21:2). சீமோன் இவ்வூர் தான் என்று சிலர் கூறினால், இது இருந்திருக்கமுடியாது எனத் தோன்றுகிறது. மத் 10:4; மாற் 3;18-இல் சீமோன் கானானியர் என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் இதற்குத் 'தீவிரவாதி' என்று பொருள் கொடுக்கப்படுகிறது (காண் லூக் 6:15)

நற்செய்தியில் இரண்டு நிகழ்ச்சிகள்தான் கானாவில் நடைபெற்றன. ஒன்று, இயேசு தண்ணீரை இரசமாக மாற்றிய திருமண நிகழ்ச்சியாகும் (யோவா 2:1-11); மற்றது தன்னுடைய மகனைக் குணமாக்கும்படி இயேசுவை அணுகிய கப்பர்நகூமைச் சேர்ந்த ஓர் அதிகாரி (4:46-54).

கானா (KANAH — நாணல்)

1. கானா ஓடைப் பள்ளத்தாக்கு எப்பிராயிம் மனாசேயின் எல்லையில் உள்ள முக்கியப் பகுதி. எப்பிராயிமின் வடஎல்லையானது தப்புவாகுவிலிருந்து கானா ஓடை வழியாக ஓடி மத்தியதரைக்கடலில் முடிகிறது (யோக 16:8). மனாசேயின் தென்எல்லையும் இந்த ஓடையை உள்ளடக்குவதாகக் கூறப்

பட்டுள்ளது (யோசு 17:9). இந்த ஓடை கெரிசீம் மலையின் தண்ணீர்ப் பந்தலில் தொடங்கிப் பாலஸ்தீனத்தின் ஆறாகிய யார் கோனின் உப ஆறாகிக் கடலில் பாய்கிறது. இது இக்காலத்தில் வாடி கானா என்றழைக் கப்படுகிறது.

2. கானா நகரம் (புதிய ஏற்பாட்டுக் கானா அல்ல). ஆசேருக்கு உரிமையான நிலத்தின் வட எல்லையில் உள்ள ஒரு நகரம் (யோசு 19:28). இது தற்பொழுது நவீன கானா என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இது தீர் நகருக்குத் தென்கிழக்கில் 10 கி.மீ.தொலை வில் உள்ளது.

கானானியர் (CANANAEN — ஆர்வமிக்க, தீவிரவாதி)

இயேசுவின் சீடருள் ஒருவர். சீமோன் பேதுருவிடமிருந்து வேறுபடுத்திக்காட்ட, சீமோனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு காரண இடுகுறிப்பெயர் (மத் 10:4; மாற் 3:18).

லூக் 6:15-இல் அதே சீடர் ''தீவிரவாதி என்னும் சீமோன்'' என்று அழைக்கப்படுகி றார். இவர் ஆண்டவர்பால் ஆர்வம் கொண் டவர் என்று சிலர் பொருள் கொண்டாலும், தீவிரவாதிகளின் கட்சியைச் சேர்ந்தவராகத் தெரிகிறது. காண். தீவிரவாதி.

கானானியர்கள் (CANAANITES)

இஸ்ராயேலர்கள் படையெடுத்த காலத் தில், யோர்தானுக்கு மேற்கிலுள்ள பாலஸ்தீ னப் பகுதியைக் கொண்டிருந்த மக்கள் இவர் கள். இந்த வார்த்தை 'வியாபாரிகள்' என்ற பொருளிலும் பயன்படுத்தப்படும். இது இயேசுவின் சீடர்களில் ஒருவருக்கு அடை பெயராகவும் உள்ளது.

1. பெயர்:-

இது செமித்திய மூலமொழி வார்த்தை என்று சொல்லிலக்கணமுறையில் விளக்க முடியாது. இது கூரியன் வார்த்தையாகக் கருதப்படுகிறது. கி.மு.15-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த இரண்டாம் அமெனோபிசின் கானானியர்கள் பற்றிய குறிப்பு ஒன்று இருக் கிறது. இதுதான் தொன்மைவாய்ந்தது.

இதில் சீரியாவின் மேல் படையெடுத்ததாகக் குறிப்பு உள்ளது. இதிலுள்ள குறிப்புப்படி 'கானானுக்கு' 'நாணல் நாடு' என்ற பொரு ளும் கூறலாம்.

இரண்டாம் அமெனோபிசின் பதிவேட் டில் ''கானா'' ஒரு சமூகக் குழுவாகவுள்ளது. இது கூரியன் இராணுவ உயர்குடியாட்சி ''மரியானாவுடன்'' நெருங்கிய தொடர்பு டையது. ''கானா'' வியாபாரிகளைக் குறிக்க லாம் என்பதற்குப் பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் ஆதாரமாக இருக்கின்றன (ஏச 23:8-இன்படி கானானியர்கள் (வியாபாரி கள்) ஏசயா காலத்தில் தீரின் உயர்குடிமக்க ளாக இருந்தனர். ஏச 17:4; ஓசே 12:8; செப் 1:11; செக் 11:7.11-இதில் வருபவற்றை 'ஆட்டு வியாபாரிகள்' என்று வாசிக்கவேண் டும்).

2. மக்களும் நாடும்:-

தலைமுறை அட்டவணைகளை நாம் அப் படியேஎடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனென் றால் இவை இன வரலாற்றை அப்படியே கூறுவது கிடையாது. பூகோள, பண்பாட்டுக் குறிப்புகளையும் உள்ளடக்கியுள்ளன. ஆதி 9:18; 10:6-இல் கானான் ''காமின் புதல்வரா கக்'' கூறப்பட்டுள்ளது. இதன்மூலம், காமின் ஒரு குழுவினர் கானானியர்கள் ஆவர் என்று நம்ப வாய்ப்பிருக்கிறது. ஆதி 10:15-18-இல் கானானின் புதல்வர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கானா னின் தலைமகன் சீதோன்; ஏனைய புதல்வர் கள்: கேத்து, எபூச, எமோரி, கிருகாசி, கீவி, அரக்கி, சீனீ, ஆர்வாதி, செமாரி, கமாத்தீ''. இந்தப் பல்வேறு, கானானியர்களின் பிரிவு கள் தெற்கிலிருந்து வடக்கு வரை உள்ள பூகோள வரைமுறையைப் பிரதிபலிக்கிறது (10;19). இரண்டாம் ஆயிரமாண்டுத் தொடக் கத்தில், கானானியர்களோடு செமித்திய குழுக்களில் முக்கியமான ஒன்றான எமோரி யர்கள் மிகுந்த தொடர்பு கொண்டிருந்தார் கள் என்பது தெளிவாகிறது. மற்றொரு கருத் தும் கூறப்பட்டுள்ளது. அதாவது காம் கானா னின் தந்தையாகவும், கேத்து கானானின் புதல்வராகவும் சொல்லப்பட்டுள்ளது. இது

எதைக்காட்டுகிறதென்றால், இந்தத் தலை முறை அட்டவணையை இன ஆதாரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைக் காட்டுகிறது. இத்தியர், காமியர்களின் வழித் தோன்றலாக இருக்கமுடியாது, பழைய ஏற்பாட்டில் வரும் இத்தியர்களும், சிறிய ஆசியாவைச் சார்ந்த இத்தியர்களும் ஒரே இனத்தவர் அல்லர். இத்தியர்கள் இஸ்ராயேல் மக்களின் முன்னேற்றத்தில் மிக முக்கியமான பங்கு கொண்டுள்ளனர் (எச 16:45). 2-ஆம் அமெனோபிசு காலத்திலே செமித்திய இனத்தைச் சேராத மக்கள் நாட்டில் காணப்படுகின்றனர். அனேகமாகக் கி.மு. 2000-க்கும் பிறகு இது நிகழ்ந்திருக்கலாம். இராஸ்சம் மரா ஏடுகளின்படி இரண்டாம் ஆயிர மாண்டு மத்தியில், இப்பகுதியில் செமித்திய மக்களே பெருவாரியாகக் குடியேறியிருந்தனர். கானானியர்கள்செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

பழைய ஏற்பாட்டில் கானான் என்பது யோர்தானின் மேற்குப் பகுதியில் உள்ள பகுதியை முழுவதும் குறிப்பதற்குப் பயன் படுத்தப்படுகிறது (ஆதி 12:5; எண் 33:51). இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் கானானியர்கள் ஆவர் (ஆதி 12:6; 50:11; யோசு 7:9). ஆனால் மற்றப் பகுதிகளின்படி ஒரு சிறியபகுதியில்தான் கானானியர்கள் குறிக்கப்படுகிறார்கள் (எண் 13:29; 14:25; யோசு 11:3). சில இடங்களில் பெனிக்கியர்களையும் குறிப்பதாக இந்த வார்த்தை வருகிறது (நெக 9:8; ஏச 23:11; ஓப 20). எனவே, இச்சொல் பொதுவாகப் பழைய ஏற்பாட்டு யோர்தானின் மேற்குப்பகுதியை முழுதும் கானானாகக் குறிக்கிறது எனலாம். தற்கால இலக்கிய மரபில், கானான் யோர்தான்-சீரியா பகுதிகளின் மேற்குப் பகுதியைக் குறிப்பதாக உள்ளது; இதில் வாழ்ந்த மக்கள் கானானியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். எனவே கானானியர்களும், எமோரியர்களும் உண்மையில் ஒரே குழுவினராகக் கருதப்படலாம்.

3. கானானியர்களின் மொழி:-

இவர்களின்மொழி, செமித்திய மொழிகளின் வடமேற்குக் குழுவைச் சார்ந்தது. இம்மொழி அதிகமான பகுதிகளில் பேசப்பட்டதால், பிரிவுமொழிகளும் திரிபுமொழிகளும் இருப்பதைக் காணலாம். இருந்தாலும் மற்றச் செமித்திய மொழிகளிலிருந்து எளிதாகத் தனித்துப்பிரித்துப் பார்க்கக் கூடியது; ஒரே சீரான தன்மையுடையது. கானானியர், எமோரியர் ஆகியவர்களிடையே நிலவிய தொடர்பு மிகவும் முக்கியமானதாகும். அறிஞர்சிலர் இரண்டு மொழிகளையும் தொடர்புபடுத்திப் பார்க்கின்றனர். உகாரித்து மொழி கண்டுபிடிக்கப்பட்டபின் இவை முக்கியமடைந்துவிட்டன. எமோரியர் என்ற வார்த்தை அக்காதிய மொழியிலிருந்து வந்ததாகும். எமோரிய மொழி ஒரே சீராக அமைந்தது அல்ல. ஆனால் கானானிய மொழி ஒரே சீராக அமைந்ததாகும். கானானிய மொழியும், எமோரிய மொழியும் ஒரு காலத்தில் ஒரே மொழியாக இருந்ததுதான் என்று கோட்பாடு ஒன்றும் உண்டு.

சில கண்டுபிடிப்புகளின்படி, கானானிய, எமோரிய, எபிரேய, அரமேய மொழிகளுக்கிடையில் சில பொதுவான பண்புகள் இருக்கின்றன, கி.மு. 2000-க்கு முன்பு ஒரு கானானிய நெடுங்கணக்கு எண்பது அடையாளங்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இந்தப் பழைய பிரதி எகிப்திய சித்திர எழுத்து முறையோடு சிறிது தொடர்பு உடையது. பிபுலோசில் பல கானானியப் பதிவேடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இராஸ்சம்சராவில் மற்றொரு கானானிய எழுதும்முறை பயன் படுத்தப்பட்டுள்ளது. பெனிக்கியர் பயன் படுத்திய நெடுங்கணக்குமுறை மூன்றாவது கானானிய எழுத்து முறையாகும்.

4. வரலாறு:-

பழைய கற்காலத்திலிருந்தே பாலஸ்தீன, சீரிய நாடுகளில் மக்கள் வசித்து வந்துள்ளனர் என்பது நெகேபு பகுதிகளில் உள்ள குகைகளில் கற்கால நாகரிகம் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து தெளிவாகிறது. மேலும் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிதைவுகள் பல படிகளைக்கொண்டுள்ளதால் இங்குச் செமித்தியர்கள் கி.மு. 3000

-த்திலிருந்தே வசித்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இது இங்குள்ள நகரங்கள் செமித்தியப் பெயர்களைக் கொண்டுள்ளதிலிருந்து தெரியவருகிறது. இப்பெயர்கள் எரிகோ, பெத்துசெயான், மெகிதோ, பிபுலோஸ், உகாரித்து முதலியனவாகும். அதே நேரத்தில் செமித்தியமில்லாத பெயர்களும் காணப்படுகின்றன. வெண்கலக் காலத்திலிருந்து கானானியர் வரலாற்றை நன்கு அறிய முடிகிறது. கி.மு. 2600-2200 எகிப்தியர்கள் கானானியர்கள் மேல் அதிகாரம் செலுத்தியுள்ளனர், ஐந்தாம், ஆறாம் எகிப்திய அரச வம்சங்கள் சீரியா, பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்தனர். 20-ஆம் நூற்றாண்டில் எகிப்தியர் பாலஸ்தீனம், சீரியாவின் ஒரு பகுதி, போன்றவற்றை அடிமைப்படுத்தினர் என்பது பிபுலோஸ், இராஸ்சம்ரா போன்ற சான்றுகளிலிருந்து தெளிவாகிறது. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கானானியர்கள் எகிப்திய ஆட்சியினின்று விடுபட்டனர். கி.மு. 2000-ஐ ஒட்டி எமோரியர்கள் உருவாக்கிய முதல் பாபிலோனிய அரசின் பண்பாட்டு, அரசியல் பாதிப்பு மெசபொத்தாமியாப் பகுதியில் இருந்து, பாலஸ்தீனம் வரை பரவியது. அதனால் கானானியர்களின் பண்பாடும் பெரிதும் அவர்களது பாதிப்பைக் கொண்டிருந்தது. இக்கானானியர்கட்குப் பொதுவான கலாச்சாரத்தை அடையாளம் காட்ட முடியாது; ஏனெனில் அவர்கள்பல சிறு, சிறு அரசுகளாகப் பிரிந்தே வாழ்ந்தனர்.

கைக்சோஸ், இத்தியர், கூரியர் ஆகியோர் கானானிய வரலாற்றில் புகுந்தனர். இவர்களின் பண்பாடும் கலாச்சாரமும் கானானியரின் கலாச்சாரத்தில் பெரிதும் கலந்து அதைப் பாதித்தது. முக்கியமாக வடசீரியாவில் இத்தியரின் பாதிப்புப் பெரிதும் இருந்தது. அதே நேரத்தில் கிழக்குச்சீரியாவில் மெசபொத்தாமியாப் பாதிப்புதான் இருந்தது. இவ்வாறு பல பாதிப்பு இருந்தாலும் கானானியர்களுக்கென்றே சிறப்பான தனியான கலை ஒன்று வளர்ந்திருக்கிறது என்பது பல ஓவியங்களிலிருந்து தெரிகிறது.

கைச்சோசியர் கி.மு. 16-ஆம் நூற்றாண்டில் எகிப்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டபின், எகிப்தியர் மீண்டும் இப்பகுதியில் அரசியல் ஆதிக்கம் செலுத்தத்தொடங்கினர். மீண்டும் கி.மு. 14-ஆம் நூற்றாண்டில் எகிப்தியரின் வீழ்ச்சிக்குப் பிறகு என்ன நிகழ்ந்தது என்பது பற்றி அமர்னா சான்றுகள் எடுத்துக் கூறுகின்றன. பிபுலோசின் அரசனே எகிப்தியரோடு ஒத்துழைத்த இறுதி அரசனாவான். பிபுலோசின் அரசன் பாரவோனின் உதவியை நாடினாலும் பாரவோனால் உதவி ஒன்றும் செய்ய இயலவில்லை. இந்தக் காலத்தில் கானான்நாட்டில் இருந்த சிறு, சிறு அரசுகள் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டன. இதன்பிறகு தான் 'இஸ்ராயேல்' என்ற நாடு தனிவடிவம் எடுத்தது, இஸ்ராயேலர் கானானியர்களை அடுத்த அரசியல், பண்பாட்டு வாரிசுகளாக வந்தனர். கானானியர்களின் மற்றொரு பிரிவினரான 'பெனிக்கியர்' கடலோடிகளாகவும், வியாபாரிகளாகவும் இருந்தனர். வட ஆப்பிரிக்கா வரை தங்கள் வாணிபத்தை விரிவுபடுத்தி அங்குத் தங்களது குடியேற்றங்களை நிறுவினர். கிழக்குப் பிரான்சுவரை இவர்களது செல்வாக்குச் சென்றது.

5. சமூக அமைப்பு:-

அன்றைய தென்கிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட சமூக அமைப்பே கானானியர்களிடம் காணப்பட்டது. சமூகத்தில் பணியாளர்கள் மூன்று பிரிவுகளாக இருந்தனர். சுதந்தர மனிதர்கள், பணியாளர்கள், அடிமைகள் ஆகியோர். மூன்று பிரிவினராக இருந்தாலும் அடிமைகளும், கூலிகளுமே அதிகம் இருந்தனர், இவர்களில் பலர் அந்நிய நாட்டுப் போர்க்கைதிகளாகவோ, அடிமைகளாகவோ வந்தவர்கள். பெரும்பாலோர் உள்நாட்டைச் சேர்ந்தவர்களே. இவர்கள் கடன் கட்டத்தவறியவர்களும் வேலையில்லாதவர்களும் ஆவர். இவர்கள் தங்களையே அடிமைகளாக விற்றுக்கொண்டனர். தங்கள் குழந்தைகளை விற்றுவிடுவர். அவர்கள் அடிமை வேலை செய்தே பிழைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறு பெரும்பாலானோர் அடிமைகளாகவே இருந்தனர். அன்றைய கானானிய சமூகத்தில், அடிமைகள் நாட்டு அடிமைகள், ஆலய

அடிமைகள், தங்களுக்கெனச் சொந்த நில மில்லாது நிலத்தில் உழைத்த அடிமைகள் எனப் பலவகையாக இருந்தனர். குறிப்பிட்ட அளவே விடுதலை பெற்ற பணியாளர்களும் இருந்தனர்.

கானானியர்களின் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண் டிருந்தது. அரசுக்கும், கோவிலுக்கும் சொந்த மான நிலங்களைத் தவிர தனியார் நிலங்க ளும் அதிகம் இருந்தன. சிறு விவசாயிகளும் நிலங்கள் வைத்திருந்தனர். விவசாயிகளே பொருளாதாரத்தின் முதுகெலும்பு எனுமள வுக்கு உழைக்கும் வர்க்கமாக இருந்தனர். விவசாயிக்கு அதிக நிலமில்லாவிடினும் அவரது வீட்டுவேலைக்காரர்களே அவரது வேலைகளுக்குப் பெரிதும் உதவினர். அதே நேரத்தில் நிலத்தில் பணிபுரிந்த கூலியாட் கள், நிலத்தின்பெரும் பகுதியைக் கொண்டி ருந்த நிலச்சுவான்தார்களது நிலங்களில் வேலை செய்து பிழைத்தனர். நாட்டிலே அரசன்தான் அதிக சொத்துக்களை வைத்தி ருந்தான். அரசநிலங்கள் பல சிறு அதிகாரிக ளின் பொறுப்பில் விடப்பட்டது. அவற்றை அவர்கள் பலவிவசாயிகளிடம் குத்தகைக்கு விட்டனர். கோவில் நிலங்கள் கோவில் அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டன.

தென்கிழக்காசிய நாடுகளில் நிலவிய நிலப்பிரபுத்துவ முறை கானானியர்களிடை யிலும் இருந்தது, ஆனால் இது முழுமை யான நிலப்பிரபுத்துவமுறை என்று கூறமுடி யாத ஒன்றாக உள்ளது என்பதை உகாரித்து, அலலாக் வாசகங்கள் தெளிவுபடுத்துகின் றன. அரசன் இவ்வமைப்புகளுக்குத் தலைவ னாகவும், படை, பாதுகாப்பு, சமயம் போன்ற அமைப்புகளுக்குத் தலைவனாக வும் இருந்தான். மற்றப்படி சமூகம் பெரும் அமைப்புகளால் தன் கடமைகளை நிறை வேற்றியது. அவை, குருக்களின் அமைப்பு, போர்வீரர்கள், வாணிகர்கள், கைவினைஞர் கள் என்பனவாகும்.

அக்காதிய ஆதார மூலங்கள் அரச நிலங் கள் எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டன என்பது பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. ஒரு சில நிலங்கள் அரசகுடும்பத்தைச் சேர்ந் தவர்கட்கும், அரச அலுவலர்கட்கும், மற் றும் சிலருக்கும் கொடுக்கப்பட்டன. இவ் வாறு நிலம் பெறுவோர் அரசனது ஊழியன் எனப்படுவர். அவர் அரசனுக்கு வரி செலுத்த வேண்டும். இத்தகைய சொத்துக்களில் திராட்சைத் தோட்டங்கள், பழத்தோட்டங் கள், ஒலிவ மரத்தோட்டங்கள், ஆடுகள், கழுதைகள், அடிமைகள் ஆகியவை அடங் கும்.

அரசின் மற்றச் செலவினங்களுக்கெனக் குடிமக்கள்மேல் வரிவிதிக்கப்பட்டது. பல வகையான வரிகள் விதிக்கப்பட்டதாக இராஸ்சம்ரா வாசகம் தெரிவிக்கிறது. மேலும் அரசன் தான் நிர்மாணிக்கும் சாலை கள், கோட்டைகள், ஆலயங்கள், அரசநிலங் கள் ஆகியவற்றில் வேலை செய்ய, குடிமக்க ளைப் பயன்படுத்தினான். இத்தகைய அமைப்புதான் அன்றைய கானானியர்களி டையேயும், சீரியாவிலும் காணப்பட்டது.

6. இலக்கியமும், சமயமும்:-

30 ஆண்டுகளுக்கு முன்வரை ஒரு சில விவரங்களைத்தவிர, கானானிய இலக்கி யமோ, சமயமோ எதுவென்று யாருக்கும் தெரியவில்லை 'இராஸ் சம்ரா' எனுமிடத் தில் கிடைத்த ஆதாரங்கள் கானானிய சம யம், இலக்கியம் பற்றிய பரந்த அறிவை நமக்குத் தருகின்றன. கி.மு. 14-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த வாசகங்கள் களிமண் தட்டுகளில் எழுதப்பட்டுள்ளன. ஆப்பு எழுத்துமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

உகாரித் இலக்கியங்களுக்கு இணையா னவை பல விவிலியத்தில் உள்ளன. உகாரித் துக் கடவுளர்களில் முக்கியமான 'இல்' எனப்படும் வானங்களின் கடவுள், மற்றக் கடவுள்களின் தந்தையும் தலைவரும் ஆவார். பாகால் எனப்படும் கடவுள் பற்றிக் கூறப்படுகிறது. பாகாலும் அவரது மனைவி அனாத்தும் இயற்கைக் கடவுளர் ஆவர். இவர்கள் தாவரங்கள் மடிந்து புதிதாக முளைத்து எழுவதின் அடையாளமாகத்

திகழ்கின்றனர். முக்கியமாகப் புதுவருட விழாவில் இது நினைவுகூரப்பட்டுக் கொண்டாடப்பட்டது. எனவே, பாகால் இறந்து மீண்டும் உயிர்பெறும் கடவுள். அவரை வழிபடும் பக்தர்களுக்கும், அவரின் பிரதிநிதியாக அரசன் வழியாக இதே வரம் அருளப்படும் என்ற நம்பிக்கை அவர்களி டையே இருந்தது.

கானான் (CANAAN) - ஆள்

கானானியரின் மூதாதையார் (ஆதி 10:15-19; 1 நாள் 1:13-16). காமின் மகனும் நோவா வாவின் பேரனுமாவார் (ஆதி 9:18; 10:6; 1 நாள் 1:8). ஆதி 9:24-28-இல், கானான் நோவானின் இளைய மகனாகவும், சேம், யாப்பேத்து ஆகியோரின் சகோதரன் எனவும் குறிக்கப்படுகிறார். (காண் நோவா).

கானான் (CANAAN) - இடம்

இஸ்ராயேலர் வருவதற்கு முன்பு கானா னியர்களால் குடியேறப்பட்ட இடம்; இது யோர்தானுக்கு மேற்கேயுள்ள பாலஸ்தீனத் தையும், சீரியாவின் சில பகுதிகளையும், பெனிக்கியா என்று கிரேக்கர்களால் அழைக் கப்பட்ட கடற்கரைப்பகுதிகளையும் கொண் டிருந்தது.

கானேசு (HANES - அரசக்குழந்தையின் வீடு)

வடஎகிப்து நாட்டின் 20-ஆவது பகுதித் தலைநகரின் பிற்காலத்திய பெயர். செரிசேபு என்ற கடவுளும், செர்குலசும் ஒன்று என்று கருதிய கிரேக்கர்கள் இந்நகருக்கு ''எராப் போலி'' என்று பெயரிட்டனர். தென் எகிப் தில் இதே பெயரைக் கொண்ட நகர் ஒன்று இருந்ததால் இதனோடு பெரிய என்ற பெய ரையும் சேர்த்துக் கொண்டனர். இந்தக் கிரேக்கப் பெயருக்கு எபிரேய மொழியில் 'அரசக் குழந்தையின் வீடு' என்பது பொருள்.

இங்கு எகிப்தியரும் இஸ்ராயேலரும் கூட் டணி அமைக்கக் கூடினர் (எச 30:4). இது, கயிரோவுக்குத் தென்மேற்கில் 129 கி.மீ. தொலைவிலுள்ள அனூசிஸ் அல்லது பெரிய எராப்பொலி (இக்கால இகுனாசியே ஏல்-மெதினா) ஆக அடையாளம் காட்டப்படுகி றது. இஸ்ராயேல் சுலபமாக வரக்கூடிய கழிமுகப்பகுதியில் இது இருந்திருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

கானோக்கு (HANOCH - ஞானி, பின்பற்று பவர், அர்ப்பணிக்கப்பட்டவர்)

1. எபோதின் மகன். கெத்தூராவழியாக ஆபிரகாமின் பேரன் (ஆதி 25:4; 1 நாள் 1:33).

2. யாகோப்பின் மூத்த மகனானரூப னின் மூத்தமகன் (ஆதி 46:9; யாத் 6:14; 1 நாள் 5:3). இவருடைய வழித்தோன்றல்கள் கானோக்கியர் என்றழைக்கப்பட்டனர் (எண் 26:5).

கி

கிங்காம் (CHIMHAM)

இவர் கிலயாதைச் சேர்ந்த பார்சில்லாயின் மகன். இவர் தன் தந்தைக்குப் பதிலாகத் தாவீதுடன் சென்றவர் (2 சாமு 19:37-40). பார்சில்லாய் அரசனுக்கு மகனாயிம் என்ற இடத்தில் அளித்த தாராள உதவியைப் பாராட்டி அரசன் கிங்காமுக்கு அரசமானியம் அளித்தார் (1 அர 2:7). அத்துடன் பெத்திலகேமுக்கு அருகில் ஒரு நிலப்பகுதியையும் பரிசாக அளித்தார். அந்த இடம் பிற்காலத்தில் கேருத்து கிங்காம் (கிங்காம்-தங்கும் இடம்) என அழைக்கப்பட்டது. காரயாகுவின் மகன் யோகனானும், அவரது படைகளும் எகிப்துக்குச் செல்லத் திட்டமிட்ட போது இந்த இடத்தில்தான் தங்கினர் (எரே 41:17).

கிசிக்கி (HIZKI - என் வலிமையே)

பென்யாமினின் ஒரு வழித் தோன்றல் (1 நாள் 8:17).

கிசிப்ப (GISHPA - கெஞ்சுதல், மன்றாடுதல்)

நெகமியாவின் காலத்தில் ஆலய ஊழியர்களை மேற்பார்த்தவர்களில் ஒருவர் (நெக 11:21). எஸ் 2:43-இல் வரும் கசூபா என்ற பெயரின் திரிபாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

கிசியோன் (KISHION)

இசக்கார் பகுதியிலுள்ள ஒரு லேவியர் நகரம் (யோசு 19:20; 21:28) - இதற்கு இணையான பகுதியில் (1 நாள் 6:72) இந்நகர் கெதேசு (1) என்றழைக்கப்படுகிறது. மூன்றாம் துத்துமோசு வெற்றிபெற்ற நகர்ப்பட்டியலில் இப்பெயர் வருகிறது. இது இருந்த இடம் உறுதியாக அடையாளம் காட்டப்படவில்லை என்றாலும், அறிஞர் சிலர் ஏந்தோருக்கும் தாபோர் மலைக்கும் இடையிலுள்ள கிர்பெத் காசியுன் என்ற இடத்தையும், வேறு சிலர் ஏந்தோருக்குக் கிழக்கேயுள்ள தேல் ஏல்-முகார்காசு என்ற இடத்தையும் இது இருந்ததாக அடையாளம் காட்டுவர்.

கிசிலேவு (CHISLEV)

எபிரேயர்களின் நாள்காட்டியில் உள்ள ஒன்பதாவது மாதத்தின் பெயர். (நவம்பர் திசம்பர் காலத்திற்கும், கார்த்திகை மாதத்திற்கும் இணையானது). இந்த மாதத்தில் தான் நெகமியா பாபிலோனிய அடிமைத்தனத்தில் துன்புற்ற யூதர்களின் நிலையை அறிந்தார் (நெக 1:1). இம்மாதத்தில்தான் நோன்பு இருத்தல் பற்றிய கேள்விக்கு இறைவனுடைய பதில் செக்கரியாவுக்குக் கிடைத்தது (செக் 7:1). இம்மாதத்தின் 25-ஆம் நாளில் தான் யூதர்கள் ஆலயம் புதுப்பிக்கப்பட்டதின் விழாவைக் (ஆலய அர்ப்பண விழாவை) கொண்டாடினர் (யோவா 10:22).

கிசிலோத்து தாபோர் (CHILSLOTH - TABOR - தாபோரின் சரிவுகள்).

இது கலிலேயாவின் கீழ்ப்பகுதியில் உள்ள செபுலோன், இசக்கார் ஆகிய இடங்களின் இடைப்பட்ட எல்லையிலுள்ள ஓர் ஊர் (யோசு 19:12).

நசரேத்துக்குத் தென்கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால இக்சால் இவ்விடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இதுவும் யோசு 19:18-இல் வரும் கெசுலோத்தும் ஒன்றே என்று பலர் கருதினாலும், ''தாபோர்'' என்ற கூடுதல் வார்த்தை இரண்டையும் வேறுபடுத்துகிறது.

கிசிலோன் (CHISLON - வலிமை, நம்பிக்கை)

பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்த இவர் எலிதாத்தின் தந்தையாவார். எலிதாது, யோர்தானுக்கு மேற்கே கானான் நாட்டைப் பத்துக் கோத்திரங்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கக் கண்காணிப்பாளருக்கு உதவி செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார் (எஸ் 34:21).

கிசோனியர் (GIZONITE)

தாவீதின் முப்பது வலிமைமிக்க வீரர்களில் ஒருவரான ஆசேம் என்பவருக்கு அளிக்

கப்படும் இனப்பெயர் (1 நாள் 11:34). இப்பெயர் தோன்றக்கூடிய கிசோன் அல்லது கிசோ என்ற பெயர்கள் எங்கும் காணப்படா ததால், அறிஞர் சிலர் இச்சொல்லைக் ''கூனி யர்'' என்று திருத்துகின்றனர் (1 நாள் 5:15; 7:13). வேறு சிலர் ''கிஞ்சோவிலிருந்து'' என்று திருத்துகின்றனர் (2 நாள் 28:18).

கிஞ்சோ (GIMZO - கிக்கமோர் உள்ள இடம்)

செப்பேலாவில் உள்ள ஒரு நகரம் (யூத நாட்டில்). கிஞ்சோவும் அதைச் சார்ந்த கிரா மப்பகுதிகளும் ஆகாசு காலத்தில் பெலிஸ்தி யர்களால் கைப்பற்றப்பட்டன (735-715; 2 நாள் 28:18). நாகம் என்ற புகழ்பெற்ற இராபி யின் உறைவிடமாகக் கிஞ்சோ இருந்தது.

இந்த இடம் லோதுக்குத் (இலிதா) தென் கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலும், ஏர்-ரம்லேக்குக் கிழக்கில் 6 கி.மீ. தொலைவி லும் உள்ள இக்காலக் கிஞ்கவாக அடையா ளம் காட்டப்படுகிறது.

கிண்ணம், கோப்பை (CUP)

விவிலியக் காலத்தில் இருவகை வடிவ முடைய கிண்ணங்கள் வழக்கில் இருந்தன. ஒன்று நாம் கொண்டிருக்கும் கிண்ணங்க ளின் வடிவிலேயே, கைப்பிடியோடும் அது இல்லாமலும் செய்யப்பட்டது. மற்றது பொதுவாகப் பயன்பட்டது. இது பள்ள மான பாத்திரமாகும். இது பல வடிவங்களி லும் பலவிதப் பருமனிலும் இருந்தது. யோசேப்பு குறிபார்க்கப் பயன்படும் வெள் ளிக் கோப்பையை வைத்திருந்தார் (ஆதி 44:2-5). ஆலய விளக்குத்தண்டின் கிளைகள் வாதுமை வடிவில் மூன்று கிண்ணங்களைக் கொண்டிருந்தன.

கிண்ணமானது, விவிலியத்திலே பல இடங்களில் உருவகப்படுத்திப் பேசப்பட் டுள்ளது. எரேமியா நூலில் ''இறந்த தாய் தந்தையர்க்காகத் துயரப்படுகிறவனுக்கு ஆறுதலாக ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப் பார் யாருமில்லை'' எனக் கூறப்பட்டுள்ளது (16:7). நல்லவர்களுக்கு இறைவன் தமது ஆசிரின் கிண்ணத்தை அளிக்கிறார் (சங் 23: 15; 116:13). கெட்டவர்களுக்கு இறைவன், தமது கோபத்தின் கிண்ணத்தை அளிக்கிறார் (ஏச 51:17.22; எரே 25:15; 49:12; அ.ப. 2:15-16; சங் 11:6; 75:8). பாபிலோன் ஆண்டவர் கையில் பொற்கிண்ணம் போலிருந்தது. அது உலகமனைத்துக்கும் போதையூட்டிற்று. மக் களினங்கள் அதன் இரசத்தைப் பருகின (எரே 51:7). சிலை வழிபாட்டினால், துயரமும் அழிவும் கொண்ட பாத்திரமே சமாரியாவின் பாத்திரம். அதே வழியைப் பின்பற்றிய எருச லேம் அதே பாத்திரத்தைப் பருக வேண்டு மெனக் கூறப்பட்டுள்ளது (எச 23:31-33). எருசலேம், சுற்றியுள்ள மக்களினங்களுக் கெல்லாம் போதையேற்றும் மதுக்கிண்ண மாகச் செய்யப்படும் (செக் 12:2). இயேசு வின் கிண்ணம் துன்பங்கள் நிறைந்த ஒன்றா கும் (மத் 20:22-23). கடவுளின் கோபம் என்னும் கிண்ணம் திருவெளிப்பாட்டில் பேசப்படுகிறது (திருவெளி 14:10; 16:19; 17:4; 18:6). ஆண்டவரின் இரவுணவு விவரிப் பில் கிண்ணம் தனிச்சிறப்பான முறையில் பயன்படுத்தப்படுகிறது.

ஆண்டவரே விசுவாசிகளின் கிண்ணம் என்று கூறப்படுகிறார் (சங் 16:5). ''மீட்பின் கிண்ணம்'' (சங் 116:13) ஆண்டவரின் மீட்ப ளிக்கும் உதவியை அடையாளமாக உணர்த் தும் ஆலய வழிபாட்டில் பயன்பட்ட திராட் சைரசப் பானப்பலியாக இருக்கலாம். எரே 16:7-இல் வரும் ''ஆறுதலின் கிண்ணம்'' துக்கம் கொண்டாடுவோர்க்கு, நோன்பின் முடிவில் அளிக்கப்பட்ட திராட்சைரசமாக இருக்கலாம். ஆண்டவரின் இறுதி உணவின் கிண்ணம் ''ஆசிர்களின் கிண்ணம்'' என்ற ழைக்கப்பட்டது. இது பாஸ்கு உணவின் போது பருகப்பட்ட மூன்றாவது கிண்ணத் தைக் குறித்தது. இது ''பேய்களின் கிண்ணத்'' திலிருந்து வேறுபடுத்தப்படுகிறது (1 கொரி 10:16-21).

கிதக்கேல் (HIDDUKEL)

திகிரிசு ஆற்றின் எபிரேயப் பெயர் (ஆதி 2:14; தாணி 10:4).

கிதசிபே (HYDASPES)

எலிமாயிலுள்ள ஓர் ஆறு (யூதி 1:6). இதை வுல்கத்தா வாசகம் யாதோசோன் என்றழைக்கிறது. இது பஞ்சாபில் ஓடும் கிதசிபே (வித்தஸ்தா) ஆறாக இருக்க முடியாது. ஒரு வேளை, யூப்பிரத்திக, திகிரிசு ஆகியவற்றின் கழிமுகப்பகுதியில் ஓடும், இப்போது கேராகு என்று அழைக்கப்படும், ஆற்றின் பழுதுபட்ட வாசகமாக இருக்கலாம்.

கிதயோனி (GIDEONI - *மரங்களை வெட்டுபவர்*)

பாலைவனத்தில் பென்யாமின் கோத்திரத்துக்குத் தலைவனாக இருந்த அபிதானின் தந்தை (எண் 1:11; 2:22; 7:60.65; 10:24).

கிதயோன் (GIDEON - [*(கையை) வெட்டுபவர்*)]

கிதயோன் என்பவர் மனாசேயின் கோத்திரத்தில் உள்ள அபியேசாரின் குலத்தைச் சேர்ந்த யோவாசின் புதல்வர். இவர் இஸ்ராயேலின் நீதிபதிகளில் ஒருவர். பாலைவனத்தில் இஸ்ராயேலர்களைத் தாக்கிய மிதியானியர்கள் (நீதி 6:1-7), ஓர் இறைவாக்கினரால் கண்டிக்கப்படுகின்றனர் (6:7-10). மேலும் கிதயோன் என்பவர் இஸ்ராயேல் மக்களைக் காப்பாற்றுவதற்காக ஆண்டவரின் தூதரால் அழைக்கப்படுகின்றார் (6:11-16). உடனே தன்னிடம் பேசுவது ஆண்டவர் தாம் என்றறிய கிதயோன் அடையாளம் கேட்கின்றார். உடனே அடையாளமாக அவர் ஒப்புக் கொடுத்த பலிப்பொருள்கள் அனைத்தும் தீயினால் சுட்டெரிக்கப்படுகின்றன. எனவே இந் நிகழ்ச்சியைக் கொண்டாட ஒரு பலிபீடம் அமைத்து அதை 'ஆண்டவனின் சமாதானம்' என்று அழைக்கின்றார் (6:17-24). பின் தன் தந்தைக்குரிய பாகால் பீடத்தை அழித்துவிட்டு, தந்தையிடமிருந்து 'எருபாகால்' என்ற பெயரைப் பெற்றுக் கொள்கிறார். அதாவது பாகாலே அவனைப் பழிவாங்கட்டும் என்று பொருள் (6:25-32). இங்குக் கிதயோனைச் செக்கேமை ஆண்டுவந்த குலத்தின் தலைவராகிய எருபாகாலோடு தொடர்புபடுத்திக் கூறவும் வாய்ப்புண்டு (நீதி 9:1 தொ).

பின் கிதயோன் தன் சொந்தக் குலத்திலிருந்தும் மனாசே ஆசேர், நப்தலி, செபுலோன் குலத்திலிருந்தும் வீரர்களை அழைத்துத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, இஸ்ராயேல் மக்கள் மீட்கப்படுவார்கள் என்பதைக் காட்ட ஓர் அடையாளம் கேட்டு உறுதி செய்து கொண்டார் (6:33-40). பின் வீரர்கள் அனைவரோடும் ஏன்-காரேது நீரூற்றோரம் சென்றார். வீரர்களின் எண்ணிக்கை அதிகம் இருந்ததால், கடவுளின் கட்டளைப்படி அவர்களைத் தண்ணீரைக் குடிக்க வைத்து நீரைக் குடிக்கும் முறையிலிருந்து எண்ணிக்கையைக் குறைத்தார் (7:1-8). அன்று இரவில் ஏற்பட்ட கனவின் மூலமாகக் கிதயோன், மிதியானியர், ஆகிய இருவருக்கும் இஸ்ராயேல் மக்களின் வெற்றி அறிவிக்கப்பட்டது. கிதயோனின் போர்வீரர்கள் எக்காளத்தை முழங்கிக் கொண்டு செல்ல மிதியானியர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டு அவர்கள் பயந்து ஓட இஸ்ராயேல் மக்கள் வெற்றி பெற்றனர் (7:9-25).

கிதயோன் மிதியானியர்களை எதிர்த்தெழுந்து சுதந்தரமாகப் போர்புரிந்த செயலைக் கண்டு உயர்ந்தகுலமாகக் கருதப்பட்ட எப்பிராமியர் கோபித்துக் கொள்ள, கிதயோன் தனது பணிவான சொற்களால் அவர்களின் கோபத்தைத் தணிக்கிறார் 8:1-3). கிதயோன் யோர்தானைக் கடந்து மிதியானியர்களைத் தொடர்ந்து சென்றார். செல்கின்றவழியில் அவர்களது களைப்பை ஆற்றச் சுக்கோத்து ஊராரும் பெனுவேல் ஊராரும் மறுக்கின்றனர். எனவே வெற்றி பெற்றுத் திரும்பி வரும் பொழுது அவர்களைப் பழிவாங்குவதாகப் பயமுறுத்திச் செல்கின்றார் (8:4-5). அவர் மிதியானியர்களைத் தோற்கடித்து அவர்களின் இரண்டு மன்னர்களையும் பிடித்தபின் தங்களது களைப்பை ஆற்ற மறுத்த இரண்டு நகரங்களையும் பழிவாங்குகின்றார் (8:10-16). பின் தாபோர் மலையில் தன் சகோதரர்களைக் கொன்ற அந்த இரண்டு அரசர்களையும் கொலை செய்கின்றார் (8:18-21). கிதயோன் தனது இளையபுதல்வனாகிய எத்தேருக்கு அந்த இரண்டு மன்னர்களைக் கொலை செய்யுமாறு கட்டளையிட அவ

னால் அதை நிறைவேற்ற இயலவில்லை. ஏனென்றால் சிறுபிள்ளையாக இருந்ததால் அவனுக்கு அவ்வளவு வலிமையில்லை. அனால் சிறுவர்களைக் கொலை செய்யும் செயலுக்கு உட்படுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடிய பழக்கமாகும். இஸ்ராயேல் மக்கள் கிதயோனைத் தங்கள் அரசராக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். ஆன்னால் அவர் யாவே ஒருவர் மட்டும்தான் இஸ்ரா யேலின் அரசர் என்று அரசபதவியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். மேலும் மக்கள் மிதியானியரிடமிருந்து கொள்ளையிட்ட பொற்கடுக்கண்களைக் கொண்டு வரச் சொல்லி அதைக் கொண்டு ஓர் எப்போத் தைச் செய்தார். இதுவே அவருடைய குடும் பத்தின் அழிவைத் தேடித்தந்தது (8:22-28).

பழைய ஏற்பாட்டில் பிற இடங்களில் கிதயோனின் வெற்றியைக் குறிப்பிட்டிருக் கும் பகுதிகளெல்லாம் (சங் 83:10; ஏச 9:3; 10:26) இஸ்ராயேல் மரபிலே கூறப்படும் மாபெரும் செயல்களில் இதுவும் ஒன்றாகும் என்று எடுத்துக்காட்டுகிறது. நீதி 6-8 அதிகா ரங்களில் கிதயோனைப் பற்றிய கதையின் பல்வேறுபட்ட பதிப்புக்களைக் காணலாம் என்று இன்றைய மதிப்பீட்டாளர்கள் கூறு கின்றனர். நீதி 8:4-21-இல் கூறப்பட்டிருக்கும் கதையானது நீதி 7:1-8:3-இல் கூறப்பட்டிருக் கும் கதையோடு தொடர்பில்லாத தனித்த கதையாகும் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. முதல் கதையில் கித யோன் தன்குலத்தைத் தாக்க வரும் பகைவர் களை எதிர்த்து எழுகின்றார். இரண்டாவது கதையில் கிதயோனும் அவரது குடும்பத்தா ரும் தம் சகோதரர்களைக் கொலை செய்தவர் களைக் கொலை செய்கின்றனர். அவரு டைய சகோதரர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி முன்னால் கூறப்படவில்லை. இந் தக் கதைக்கு எந்தவிதமான முன்னுரையும் கிடையாது. இரண்டு கதைகளிலும் தலைவர் களின் பெயர்கள் வேறுபடுகின்றன. 7:1-8:3-இல் ஓரேவு, செயேபு என்பன தலைவர்க ளின் பெயர்களாகவும், 8:4-21-இல் செபாகு, சல்முன்னா என்பன தலைவர்களின் பெயர்க ளாகவும் தரப்பட்டுள்ளன முதல் கதையில் தரப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் மீட்பும் சுதந்தரமும் மனிதனின் வலிமையி னால் அல்ல, கடவுளின் செயல்பாட்டால் தான் முடியும் என்பதை வலியுறுத்து கின்றன.

கிதயோனின் அழைப்பைப்பற்றிய இரண்டு வேறுபட்ட உரைகளை (6:11-24; 6:25-35) வின்செண்டு என்பவர் எடுத்துக்காட் டுகின்றார். ஆண்டவரின் தூதர் தந்த காட்சி யானது, மனோவாவுக்கும் அவரது மனை விக்கும் தூதர் தந்த காட்சியினை அடிப்படை யாக வைத்து இங்குத் தொகுத்துத் தரப்பட் டுள்ளது.

இஸ்ராயேல் மக்கள் வந்து குடியேறிய விவசாயிகளாகவும், தங்களைத் தாக்க வரும் எதிரிகளை எதிர்த்து நிற்கும் வலிமையற்ற வர்களாகவும் இக்கதையில் காட்டப்படுகின் றனர். மேலும் பொருள்களைச் சூறையாட வருபவர்கள் வேகமாகவும், வெகுதூரமும் பயணம் செய்யக்கூடிய குதிரைகளை வைத் திருந்ததால் விவசாயிகளால் அவர்களை எதிர்த்து நின்று சூறையாடுவதைத் தடுக்க முடியவில்லை. முடிவுரை (8:22-28), உண் மையான பாரம்பரியமானாலும் அரசாட்சி முறைக்கு எதிர்வாதமாக அமைந்துள்ளது.

கிதரோன் (KIDRON — கருப்பான, இருண்ட)

கிதரோன் ஓடையின் பள்ளத்தாக்கு எருச லேமிற்குக் கிழக்கில் உள்ளது. இது ஒலிவ மலையையும் கிழக்கு எருசலேமையும் பிரிக் கிறது. இது நவீன காலத்தில் வாடி சித்தி மரியாம் (புனித மரியாவின் பள்ளத்தாக்கு) அல்லது வாடி என்-நார் (தீப்பள்ளத்தாக்கு) என்றழைக்கப்படுகிறது. இந்த ஓடை யூதா மலைநாட்டின் வழியாகச் சென்று சாக்கட லில் கலக்கிறது. மழைக்காலத்தில் மட்டும் இப்பள்ளத்தாக்கில் நீர் ஓடும். இஸ்ராயேல் முடியாட்சியின் ஆரம்ப காலத்தில் கீகோன் நீரூற்றிலிருந்து கிதரோன் பள்ளத்தாக்கிற் குள் நீர் வடிந்தது. பிறகு இந்நீரானது சீலோ வாம் குளத்திற்கு மாற்றி அனுப்பப்பட்டது.

தாவீது மன்னர் காலத்திலே இப்பகுதியில் பழச்சோலைகளும், தோட்டங்களும் வளர்க்

கப்பட்டன (2 அர 23:4; எரே 3:40). தாவீதுக்குப் பின் வந்த அரசர்கள் இப்பள்ளத்தாக்கின் சில பகுதிகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கினர். எனவே இது அரசரின் பள்ளத்தாக்கு என அழைக்கப்பட்டது. அபிசலோம் இவ்விடத்தில் அவர் பெயரால் ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தினார் (2 சாமு 18:18). எசக்கியா கீகோனைத் தடுத்து நீரோட்டத்தை மாற்றியதால் இப்பகுதியில் விவசாயம் தடைப்பட்டது.

கிதரோன் எருசலேமின் கிழக்கு எல்லையெனப் பொதுவாகக் கருதப்படுகிறது. அபிசலோமின் கலகத்தின்போது தாவீது தலைநகரைவிட்டு ஓடினார். அவ்வாறு ஓடும்போது தாவீது இவ்வருவியின் வழியாகத் தப்பிச் சென்றார் (2 சாமு 15:23). சாலமோன் அரசன் சிமயியை எருசலேமில் கட்டாயமாகத் தங்க வேண்டுமெனவும் கிதரோனைக் கடக்கக் கூடாதெனவும் கட்டளையிட்டார் (1 அர 2:37).

இப்பள்ளத்தாக்கும் இதையொட்டிய பகுதிகளும் எபிரேயக் கடவுள் வழிபாட்டிற்கும், மற்ற வெளிநாட்டுக் கடவுள் வழிபாட்டிற்குமிடையே சர்ச்சைகள் பல கண்ட இடமாகும். ஆசா அரசனும், யோசியா அரசனும் இவ்விடத்தில் நடந்த சிலை வழிபாட்டையும் விண்சக்தி வழிபாட்டையும் அழித்தொழித்தனர் (1 அர 15:13; 2 அர 23:4.6.12; 2 நாள் 15:16; 29:16; 30:14). இப்பள்ளத்தாக்கின் கரடுமுரடான கிழக்குப் பகுதி இறந்தவர்களைப் புதைக்கப் பயன்பட்டது (2 அர 23:6).

இறைமகன் இயேசு கடைசி இராவுணவு முடிந்தபின் தம் சீடரோடு கிதரோன் ஓடையைக் கடந்து கெதுசமனித் தோட்டத்திற்குச் சென்றார் (யோவா 18:1).

கிதலிதி (GIDDALTI — நான் யாவேயைப் பெருமைப்படுத்தினேன்)

ஏமான் என்பவரின் மகன். திருத்தலத்தில் இன்னிசைக் கருவிகளோடு இறைவாக்குரைக்க, தாவீது அரசனால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் (1 நாள் 25:4-29). இப்பெயரின் பொருள் ''நான் கடவுளை ஏற்றிப் போற்றுகிறேன்'' என்பது போல் தோன்றுகிறது. ஆனால் இப்பெயர் முற்காலத்திய வழிபாட்டுச் செபம் ஒன்றின் ஒரு பகுதியாகும்.

கிதலீசு (CHITLISH — சுவர்)

இலாக்கீசின் செப்பேலா மாவட்டத்திலுள்ள யூதாவைச் சேர்ந்த நகரம் (யோக 15:40). மூன்றாம் துத்துமோக (கி.மு.1490-1436) பாலஸ்தீன நாட்டிலுள்ள இடங்களைப் பற்றித் தயாரித்த குறிப்பில் காணப்படுகின்ற கெந்திசா என்ற இடமாகவும் இது இருக்கலாம் என எண்ணுகின்றனர். கெந்திசா என்ற இதன் பெயர் மெர்நப்தா(கி.மு. 1224-1216)வின் ஆட்சிக் காலத்தில் தள்ளிவைக்கப்பட்ட ஒன்றாக இருந்தது என்பது இலாக்கீசில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது இலாக்கீசுக்குத் தென்மேற்கில் 8 கி.மீ தொலைவிலுள்ள கிர்பெத்து எல்-மாகாஸ்-என்று அடையாளம் காட்டப்படுகிறது.

கிதேல் (GIDDEL)

1. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிவந்த ஆலய ஊழியர் குடும்பம் ஒன்றின் குலத்தலைவர் (எஸ் 2:47; நெக 7:49).

2. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த சாலமோன் ஊழியர்களுடைய மக்கள் குடும்பம் ஒன்றின் குலத்தலைவர் (எஸ் 2:56; நெக 7:58).

கிதோம் (GIDOM — வெட்டுதல், பாழடைந்த நிலை)

கிபயாவுக்கு மேற்கேயுள்ள பாலைவனத்தில் அமைந்துள்ள இரிம்மோன் என்ற பாறைக்கு அருகிலுள்ள பென்யாமின் கோத்திரத்துக்குச் சொந்தமான இடம். உள்நாட்டுச் சண்டையின்போது இந்த இடம் வரையிலும் இஸ்ராயேலர் பென்யாமினரைத் துரத்திச் சென்றனர் (நீதி 20:45). இந்த இடம் பெத்தேலுக்குக் கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

கித்தாயிம் (GITTAIM — இரு திராட்சைரச ஆலைகள்)

சவுலின் கொடுமையிலிருந்து தப்பிக்க, பேரோத்தின் மக்கள் ஓடித் தஞ்சம் புகுந்த

இடம் (2 சாமு 4:3; யோசு 9:17). நாடு கடத்தலுக்குப்பின் பென்யாமினர் இங்குக் குடியேறினர் (நெக 11:33). இந்த இடம் இக்கால இரம்லேக்கு அருகில் இருந்திருக்க லாம்.

கித்தித்து (GITTITH)

பொருள் தெளிவில்லாத சொல். 8;81; 84-ஆம் சங்கீதங்களின் மேல் குறிப்பாக வரு கிறது. கித்தித்துப்படி சங்கீதம் பாடவேண் டும் என்று குறிப்பு உள்ளது. இது காத்தோடு தொடர்புடைய ஒரு மெட்டையோ இசைப் பாங்கையோ குறிக்கலாம். இது பாடப்படு வதற்குப் பயன்பட்ட இசைக்கருவி காத்தி லிருந்து வந்திருக்கலாம். அல்லது காத்தி லிருந்து வந்த ஒருவரின் மேன்மைக்காகப் பாடப்படுவது என்று பொருள் கொள்ள லாம்.

எபிரேய மெய்யெழுத்துக்களை உச்சரிக் கும் விதத்தைப் பொருத்து ''திராட்சை ஆலையில் வேலை செய்யும்போது பாடப் படுவது'' என்று பொருள் கொள்ளலாம். அப் போது இது திராட்சை அறுவடைக் கொண் டாட்டத்தோடு தொடர்புடையதாகும்.

கித்தியர் (GITTITE)

காத்திலிருந்த பெலிஸ்திய நகர மக்களின் இனப்பெயர் (2 சாமு 6:10-11; 15:18).

கித்திரோன் (KITRON — முடிச்சான)

செபுலோனில் உள்ள கித்திரோன் என்ற ஊரிலிருந்து கானானியர்களைத் தொடக்கத் தில் இஸ்ராயேல் மக்களால் வெளியேற்ற முடியவில்லை (நீதி 1:30). அனேகமாகக் கத்தாத்து (யோசு 19:15) என்பதும், கித்தி ரோன் என்பதும் ஒன்றாக இருக்கலாம். சரியான இடம் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும் யோக்னியாமுக்குத் தென்மேற் கிலுள்ள கிர்பெத் கொத்தினாவையும் தேல் ஏல்-பாரையும் இது இருந்த இடமாக அடை யாளம் காட்டுவர்.

கித்தீம், கித்தியர் (KITTIM)

கித்தீம் என்ற எபிரேயச் சொல்லானது சைப்ரசு தீவின் பெயரைக் குறிக்கின்றது. பிற்கால எழுத்தர்களால் கிரேக்கையும் உரோ மையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. பழைய ஏற்பாட்டிலும் கித்தீம் என்பது சைப் ரசு தீவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. கித்தீம் என்னும் சொல், சைப்ரசு தீவின் தென்கிழக்கிலுள்ள கித்தியோன் என்ற நகரத் தின் பெயரிலிருந்துதான் பெறப்படுகிறது என்று யோசிப்பஸ் கூறுகின்றார். கி.மு.9-ஆம் நூற்றாண்டில் இது பெனிக்கியாவின் முக்கிய நகரமாகும். அங்குக் காணப்பட்ட சாசனங்களும் நகரைக் 'கித்தி' என்று அழைக் கின்றன. அந்நாட்டவரே அங்கு வசித்தாலும் கி.மு.8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிரேக்க மக்களே அங்கு அதிகமாக வாழ்ந்த னர். கித்தீம் யாவானின் மக்களில் ஒருவரா கக் கருதப்படுவதிலிருந்து இவ்வுண்மை புல னாகிறது (ஆதி 10:4;1 நாள் 1:7). இஸ்ராயேல் மக்கள் கித்தீம் என்ற பெயரைக் கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளைக் குறிக்கப் பயன் படுத்தினர் என்பதைப் பிலயாமின் பாடலி லிருந்து அறியலாம் (எண் 24:24). சைப்ரசு, தீர் நாட்டினருடன் வாணிக உறவு கொண்டிருந் தது; சில காலம் அசீரியாவிலிருந்து வந்தவர் களுக்கு அதாவது தீர் சீதோன் நாட்டினருக் குப் புகலிடமாகவும் இருந்தது (எச 23:1; எச 27:6). அசீரிய மன்னன் சார்கோன் ஆட்சியில் அவருடைய அரசு சைப்ரசு வரையிலும் பரவி இருந்தது. சனகெரிபின் ஆட்சியில் இவ்வரசு விரிவாக்கப்பட்டது. இறைவாக்கி னர் எரேமியா மக்களின் கீழ்ப்படியாமை யைப் பற்றிப் புலம்பும்போது கிழக்கில் கேதாரையும் மேற்கில் கித்தீமையும் சுட்டிக் காட்டுகிறார் (எரே 2:10). எசக்கியேல் இறை வாக்கினர் தீர்நாட்டைப்பற்றிப் புலம்பும் போது கித்தீமிலிருந்த கார்வாலி மரங்கள் கப்பல் மேல்தளம் அமைக்கப் பயன்பட்ட தாகக் கூறுகிறார் (எச 27:6). சைப்ரசு கிரேக் கர்களின் ஆதிக்கத்திலிருந்ததால், கித்தீம் என் பது கடலுக்கு அப்பாலுள்ள எல்லா நாடுக ளையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. 1 மக் 1:1-இல் கித்தீம் மக்கதோனியாவைக் குறிக்கின்றது. 1 மக் 8:5-இல் மக்கதோனியா வின் அரசன் பெர்செயு கித்தீமின் அரசன் என்று குறிப்பிடப்படுகின்றார். தானி 11:30-

இல் கித்தீம் உரோமையர்களைக் குறிக்கின்றது. சாக்கடலின் சுருள்களிலும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. ஒளியின் மக்களுக்கும், இருளின் மக்களுக்கும் நடந்த போரில், இருளின் மக்களை இச்சொல் குறிக்கின்றது. கித்தீம் மக்களின் அழிவே போரின் நோக்கமாகும்.

கிபத்தோன் (GIBBETHON — உயர்ந்தகுன்று)

தாண் கோத்திரத்தார் வடக்கே குடிபெயர்வதற்கு முன்னால் மத்திய பாலஸ்தீன நாட்டில் அவர்களுக்குக் கிடைத்த நகர் *(யோசு 19:44)*. கெகாத்து இனத்தைச் சேர்ந்த லேவியர்கள் வாழ்ந்த நகராகவும் இது கருதப்பட்டது *(யோசு 21:23)*. பெலிஸ்தியர்கள் இந்நகரைக் கைப்பற்றினர். இஸ்ராயேலை ஆண்ட இரு அரசர்கள் அதை மீண்டும் கைப்பற்ற முயன்றனர். ஆனால் வெற்றி பெறவில்லை *(1 அர 15:27; 16:15.17)*. கெசருக்கு மேற்கேயுள்ள தேல் ஏல்-மெலாத்து என்பது இவ்விடமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கிபயா (GIBEA — குன்று)

யூதாவின் வழித்தோன்றலும் காலேபின் பேரனும் ஆவார். செவாவுக்கும் காலேபின் வைப்பாட்டி மாக்காவுக்கும் பிறந்தவர் *(1 நாள் 2:48-49)*.

காலேபு வழியாக யூதாவின் வழித்தோன்றல்களின் புவியியல் தொடர்புகள், கெபிரோனுக்குத் தெற்கேயுள்ள மலைப்பகுதியிலுள்ள ஓர் ஊரைச் சுட்டிக்காட்டலாம். இதைச் செவா நிறுவியிருக்கலாம்.

கிபயா (GIBEAH — குன்று) - இடம்

இந்த எபிரேயச் சொல்லுக்குப் பொதுவாகக் 'குன்று' அல்லது 'உயர்வு' என்பது பொருள். இருப்பினும் பழைய ஏற்பாட்டில் இது இடப்பெயராகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. யூதாவிலுள்ள மலைப்பகுதியில் உள்ள ஒரு நகரம் *(யோசு 15:57; 1 நாள் 2:49)*. பெத்திலகேமிலிருந்து தென்கிழக்காக 12 கி.மீ தூரத்திலிருக்கும் இப்போதைய ஏல்-எபா இந்நகராக இருக்கலாம். ஆனால் இந்நகர் கெபிரோனுக்குத் தென்மேற்கேயுள்ள யூதாவின் நகரங்களோடு குறிப்பிடப்பட்டிருப்பதால், சிப்பு, கர்மேல், மாவோன் முதலிய நகரங்கள் அடங்கிய பீடபூமிப் பகுதியில் இருந்திருக்க வேண்டும்.

2. ஆரோனின் பேரனும் எலயசாரின் மகனுமாகிய பினகாசுக்கு எப்பிராயிம் மலையிலே கொடுக்கப்பட்ட ஊர். இங்குதான் எலயசார் அடக்கம் செய்யப்பட்டார் *(யோசு 24:33)*. கிரேக்க விவிலியத்தின் பிற்சேர்க்கைப்படி, பினகாசும் கிபயாவிலேயே அடக்கம் செய்யப்பட்டார். இந்த இடத்தைப் பற்றி இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இப்போதைய இபியா, நெபிசாலே அல்லது எத்தேல் இந்த இடமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சமாரிய மரபு ஒன்றின்படி, எலயசாரும் பினகாசும் நப்லுசுக்குத் தென்மேற்காக 6 கி.மீ தொலைவிலிருக்கும் அவர்தா என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

3. பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்த நகர் *(நீதி 19:14; 20:4.10; 1 சாமு 13:2.15; 14:16; 2 சாமு 23:29; 1 நாள் 11:31)*. மேலும் இந்நகர் சவுலின் ஊராகிய கிபயா என்றும் *(1 சாமு 11:4; 15:34; ஏச 10:29)*, கிபயாத்து என்றும் *(யோசு 18:28)*, 'கடவுளின் மலை' என்று பொருள்படும் கிபயாத்து-எலோகிம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது *(1 சாமு 10:5)*.

கிபயா நகர மக்கள், பயணம் செய்யும் வழியில் அங்குத் தங்க நேர்ந்த எப்பிராயிமைச் சேர்ந்த லேவியரையும் அவரது வைப்பாட்டியையும் வரவேற்காதது மட்டுமில்லாமல், அவரது வைப்பாட்டியைப் பங்கப்படுத்திக் கொன்று விட்டனர். இதை அறிந்த இஸ்ராயேல் மக்கள் ஒன்றுகூடி, இப்பழியைச் செய்த கிபயா மனிதரைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று பென்யாமின் கோத்திரத்துக்குத் தூது அனுப்பினார்கள். பென்யாமின் கோத்திரத்தார் அதற்கு இணங்காமல் போகவே, இஸ்ராயேல் மக்கள் கிப

யாவுக்கு எதிராகப் போரிட்டு அந்நகரை அழித்தனர். பென்யாமின் கோத்திரத்தில் பலர் இறந்தார்கள் (நீதி 19-20).

சவுலின் ஊர் கிபயாவாகும் (1 சாமு 10:26); இங்குதான் சாமுவேலின் முன்னறி விப்பின்படி சவுல் இறைவாக்கினர்கள் கூட் டத்தில் இறைவாக்குரைத்தார் (1 சாமு 10:1.5. 10). மிசுப்பாவில் அரசராக அறிவிக்கப்பட்ட பின் சவுல் கிபயாவைத் தலைநகராக்கிக் கொண்டார் (1 சாமு 15:34; 22:6; 23:19). பெலிஸ்தியர்களோடு சவுல் செய்த போர்க ளில் கிபயா முக்கிய பங்கு பெற்றது (1 சாமு 13:2; 14:2.16). கொடுமைப்படுத்திய அம் மோனியர்களுக்கெதிராக உதவ வருமாறு முற்றுகையிடப்பட்ட யாபேசு-கிலயாதி லிருந்து தூதுவர்கள் இங்கு வந்தனர் (1 சாமு 11:4). அவர்களுக்கு உதவிடுமாறு இஸ்ராயேலுக்கு இங்கிருந்துதான் சவுல் கட் டளையிட்டார் (11:47). இங்குதான் சிப்பு ஊரார் தாவீதின் மறைவிடத்தைப் பற்றிச் சவுலிடம் கூறினர் (23:19; 26:1). இரிபாயின் மகன் இத்தாய் (2 சாமு 23:29; 1 நாள் 11:31), செமகாவின் புதல்வராகிய அகியேசர், யோவாசு (1 நாள் 12:2-3) ஆகிய தாவீதின் வலிய வீரர்களில் மூவர் கிபயா நகரைச் சேர்ந்தவர்களே. யூதாவின் அரசன் அபியா வின் தாய் மீக்காயாவுக்குக் கிபயா சொந்த ஊராகும் (2 நாள் 13:2).

கி.மு.எட்டாம் நூற்றாண்டின் இறைவாக் கினர் சிந்தனையில் இந்நகர் முக்கியத்துவம் பெற்றது. ஏனெனில் எருசலேமை நோக்கிப் படையெடுக்கும் அசீரியர்கள் கிபயா வழியே செல்வார்கள் என்று ஏசயா முன்னறி வித்தார் (ஏச 10:29). ஓசேயா இறைவாக்கி னரோ ''முன்னாட்களில் கிபயாவில் நடந் தது போல அவர்கள் கனமான பாவங்க ளைக் கட்டிக் கொண்டனர்'' (ஓசே 9:9; 10:9; 5:8) என்று அன்றைய இஸ்ராயேலரின் பாவத்தன்மையைக் கிபயாவோடு ஒப்பிட் டுப் பேசினார்.

பழைய ஏற்பாட்டின்படி கிபயா நகரம் எருசலேமிற்கு வடக்கே, எருசலேமுக்கும் இராமாவுக்கும் இடையில், வடக்குத் தெற் காகப் பென்யாமின் மலைநாடு வழியாகச் செல்லும் சாலையின் அருகில் அமைந்தி ருக்க வேண்டும் (நீதி 19:11-15; ஏச 10:28-32). யோசிப்பசின் கூற்றுப்படி இந்நகர் எருசலே மிலிருந்து 30 பர்லாங்கு தூரத்தில் அமைந்தி ருந்தது. எனவே எருசலேமுக்கு வடக்கே 5.5 கி.மீ தொலைவில் சற்று உயர்ந்து காணப் படும் தேல் ஏல்-புல் என்பதே இந்நகராகும். இது வசதியான இடத்தில் அமைந்திருந்த தால் பென்யாமின் குலத்தாரின் மலைநாடுக ளுக்குக் காவல் மாடமாகப் பயன்பட்டு வந்தது. தேல் ஏல்-புல்லில் 1922-23, 1933, ஆகிய ஆண்டுகளில் நடந்த அகழ்வாராய் வில் கி.மு.12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சிறிய கிராமம் நெருப்பில் அழிக்கப்பட் டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது பென் யாமின் குலத்தாருக்கும் இஸ்ராயேலருக்கும் நடைபெற்ற போரின் விளைவாக இருக்க லாம் (நீதி 19-20). சவுல் மன்னனின் அரண் மனையும் இங்குக் காணப்பட்டது. மற்றவை பிளவுபட்ட அரசாட்சிக்காலத்தில் (கி.மு.7-6-ஆம் நூற்றாண்டு) நிலவிய வேறுபட்ட செழிப்பையும் கிரேக்க, உரோமை காலத்து நிலையையும் சுட்டுகின்றன.

4. பெலிஸ்தியரிடமிருந்து திரும்பப் பெற்ற கடவுளின் பேழை தாவீதால் எருசலே முக்குக் கொண்டு செல்லப்படும்வரை அபின தாபின் வீட்டில் இருந்தது. அபினதாபின் வீடு இருந்த கிரியத்து எயாரிமில் உள்ள ஒரு குன்றின் பெயர் கிபயாவாகும் (2 சாமு 6:3-4; 1 சாமு 7:1-2). இங்கு இப்பெயரை ஓர் இடப்பெயராக அல்லாமல் வெறுமனே 'மலை' என்றுதான் மொழி பெயர்க்க வேண்டும்.

கிபயாத்து — எலோகிம் (GIBEATH — ELOHIM — இறைவனின் மலை)

சாமுவேல் முன்னறிவித்தபடி, இம்மலை யில் சவுல் இறைவாக்கினர்கள் கூட்டத்தின் நடுவில் நின்று கொண்டு இறைவாக்குரைத் தார். இஸ்ராயேலின் அரசனாக இறைவ னால் தான் தேர்ந்தெடுக்கப்பட்டதை இம் மூன்றாம் அருங்குறியின் மூலம் சவுல் அறிந்து கொண்டார் (1 சாமு. 10:5-6).

1 சாமு 10:10-இல் வெறுமனே 'மலை' என்று அழைக்கப்படும் இடம் உயரியதாகவும் பெலிஸ்தியர்களின் தலைமையின் சின்னத்தைக் கொண்டதாகவும் இருந்தது. இச்சின்னம் படையின் வடிவிலோ, தூணின் வடிவிலோ, படைத்தலைவர் வடிவிலோ இருந்திருக்கலாம். இச்சின்னம் அங்கு இருந்ததால், கடவுளின் மலையும், 1 சாமு 13:2-3-இல் குறிப்பிடப்படும் பென்யாமினின் கிபயாவும் ஒன்றே எனக் கூறலாம். கிபயா எனப்படும் இந்நகர்தான் சவுலின் சொந்த ஊராகும். சவுலின் பயணமும் (1 சாமு 10:2-5), நகரில் சவுலை அடையாளம் கண்டு கொள்ளுதலும் (1 சாமு 10:11-16) மேற்கூறியவற்றையே எடுத்துரைக்கின்றன. எனவே எருசலேமுக்கு வடக்கே 16 கி.மீ. தொலைவிலிருக்கும் இன்றைய தேல் ஏல்-புல் என்னும் இடம்தான் கடவுளின் மலையாகும். இந்த நகரம் இருந்ததாக அடையாளம் காட்டப்படும் மற்ற இடங்கள் அருகிலுள்ள நெபிசம்வில்லும் பெத்தேலும் ஆகும்.

கிபயாத்து-கா-அரலோத்து (GIBEATH-HA-ARALOTH — நுனித்தோலின் குன்று)

எரிகோவுக்கும் யோர்தானுக்கும் இடையில், கில்காலுக்கு அருகில் அமைந்துள்ள ஒரு குன்று. இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டினுள் நுழைந்த பிறகு விருத்தசேதனம் செய்து கொண்டதை இக்குன்று நினைவுபடுத்துகிறது (யோசு 5:3)

கிபயோன் (GIBEON — குன்று)

பென்யாமின் கோத்திரத்தார் வாழ்ந்த நகர். எருசலேமிற்கு வடமேற்கில் 8 கி.மீ. தொலைவிலிருக்கும் இப்போதைய ஏல்-சிப் நகரமே கிபயோனாகும்.

1. விவிலியத்தில் இதன் வரலாறு:-

எரிகோவும், ஆயிநகரும் யோசுவாவால் அழிக்கப்பட்டதைக் கண்டு பயந்த கிபயோன் நகரத்தினர் இஸ்ராயேலரோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். இதைக் கேள்விப்பட்ட ஐந்து எமோரிய அரசர்கள் ஒன்று சேர்ந்து கிபயோன் நகரை முற்றுகையிட்டனர். ஆனால் யோசுவா அவர்களை முறியடித்தார் (யோசு 10:1-11). இத்தருணத்தில்தான் சூரியனும் சந்திரனும் நிலைகுலையாமலும் அசையாமலும் நின்றதாக யோசுவா ஆகமம் கூறுகிறது.

யோசு 9:17-இல் கெப்பிரா, பேரோத்து, கிரியத்து எயாரிம் ஆகிய நகர்களோடு கிபயோன் நகரும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிபயோனில் குடியிருந்தவர்கள் இவியர்கள் என்பவர்களாவர் (யோசு 9:7; 11:19). பென்யாமினின் நகர்களாகிய மிசுப்பா, இராமா, பேரோத்து ஆகியவற்றோடு கிபயோனும் யோசு 18:25-26-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றரை நூற்றாண்டு அளவுக்குக் கிபயோன் எந்த நிகழ்ச்சியிலும் பங்கு பெறவில்லை. ஏறக்குறைய கி.மு.1000 ஆண்டில் சவுலின் படையும், தாவீதின் படையும் கிபயோனில்தான் போர் தொடுத்தன. சவுலின் மகனான இசிபோசத்தின் தளபதியான அபிநேரும், தாவீதின் தளபதியான யோவாபும், கிபயோனின் குளத்தருகே சந்தித்தனர் (2 சாமு 2:12-17). இங்கு, சவுலின் படையிலிருந்து பன்னிருவரும், தாவீதின் படையிலிருந்து பன்னிருவரும் ஒருவருக்கொருவர் விலாவில் வாளால் குத்தி இறந்தனர். எனவே அந்த இடம் ''வாள்முனைகளின் நிலம்'' என்று அழைக்கப்பட்டது. கிபயோனிலுள்ள பெரும்பாறை அருகேதான் யோவாபு அமாசாவை வாளால் வெட்டிக் கொன்றார் (2 சாமு 20:8)

கிபயோனியர்கள்தாம் சவுலின் புதல்வரில் எழுவரைத் தூக்கிலிட்டுக் கொன்றனர் (2 சாமு 21:1-9). கிபயோனியர்கள் பலரைச் சவுல் கொன்றதற்குப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று கிபயோனியர் தாவீதைக் கேட்டுக் கொண்டதால் தாவீது அதற்கு இசைந்தார். சாலமோன் ஆட்சிக்காலத்தில் கிபயோனில் பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன (1 அர 3:4). இங்குதான் சாலமோனுக்கு இறைவன் கனவில் தோன்றி அவர் விரும்புவது யாது என்று கேட்டார் (1 அர 3:4-15).

எரேமியா இறைவாக்கினரை எதிர்த்த போலி இறைவாக்கினரான கனனியர் கிப

யோன் நகரைச் சேர்ந்தவர் (எரே 28:1). எரே 41:12 கிபயோனிலுள்ள 'பெரிய நீர் நிலை' பற்றிக் கூறுகிறது. கி.மு.5-ஆம் நூற்றாண்டில் எருசலேம் சுவர் கட்டப்பட்டபோது கிபயோன் நகரத்தார் மிகவும் உதவினார்கள் (நெக 3:7).

2. விவிலியத்திற்குப் புறம்பான நூல்களில் கிபயோன் பற்றிய குறிப்புகள்:-

முதலாம் செசோங்கு (விவிலிய சீசாக்கு) என்ற எகிப்திய அரசனின் பட்டியலில், கிபயோன் அவர் சென்ற இடமாகவோ கைப்பற்றியதாகவோ கூறப்பட்டுள்ளது. யோசிப்பசின் குறிப்புப்படி, கி.பி.66-இல் செஸ்தியுஸ் எருசலேமிலிருந்து 50 பர்லாங்கு தொலைவிலுள்ள காபாவோலில் (கிபயோன்) முகாமிட்டார்.

3. அகழ்வாராய்வின் முடிவுகள்:-

ஏல்சிப் என்ற இடத்தில் 1956-இலிருந்து 1957 வரை அகழ்வாராய்வுகள் நடைபெற்றன. ஏல்சிப் அமைந்துள்ள மலை தரைமட்டத்திலிருந்து 60 மீட்டர் அடி உயரத்திலிருக்கிறது. 8 நீரூற்றுகள் இங்குள்ளன. மலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட குகை ஒன்றும் இங்குள்ளது. இந்த இடத்தின் மொத்தப்பரப்பளவு ஏறக்குறைய 16 ஏக்கர்களாகும்.

இப்பகுதியில் முதன் முதலாகக் கி.மு.2900-ஐ ஒட்டி (தொடக்க வெண்கலக்காலம்) மக்கள் குடியேறினர். கி.மு.800-ஐ ஒட்டி (மத்திய வெண்கலக்காலம்) இப்பகுதியின் வடகிழக்குப் பகுதியில் மக்கள் குடியேறினர். எபிரேய அரசர்கள் காலத்தில் (முதலாம் இரும்புக்காலம்) இக்குன்றின் வடகிழக்குப் பகுதியில் கட்டடங்கள் கட்டப்பட்டன. கி.மு.900-600 (2-ஆம் இரும்புக்காலம்) ஆண்டுகளில்தான் அதிக மக்கள் இங்கு வந்து குடியேறினர்; நகரைச் சுற்றிச் சுவர் கட்டப்பட்டது.

இந்த இடத்தின் வடபகுதியில் 8 மீட்டர் விட்டமுள்ள குளம் ஒன்று , படிக்கட்டுகளோடு உள்ளது. இக்குளம் 25 மீட்டர் ஆழமுடையது. 'கிபயோன் குளம்' என்று 2 சாமு 2:13-இல் குறிப்பிடப்பட்டிருப்பது இதுவே.

1959-60-இல் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின்போது கற்களிலிருந்து வெட்டப்பட்ட 66 கொப்பறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. திராட்சை ரசம் வடிக்கும் தொழிற்சாலைகள் இங்கு நிறைந்திருந்தன.

கிபார் (GIBBAR — வலியவன், வீரன்)

பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து பாலஸ்தீன நாட்டிற்குத் திரும்பிய ஒரு குடும்பத் தலைவர் (எஸ் 2:20). இதற்கு இணையான வாசகம் நெக 7:25-இல் காணப்படும் பட்டியலில் கிபயோன் என்ற ஊர்ப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எஸ் 2:21-இல் ஊர்ப் பெயர்களும் கூறப்பட்டிருப்பதால், கிபயோன் என்பதுதான் மருவிக் கிபாராக மாறியிருக்க வேண்டும்.

கிபிசயிம் (KIBZAIM — இரு குன்றுகள், இரு குவியல்கள்)

கானான் நாட்டைக் கைப்பற்றியபின் லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட நாற்பத்தி எட்டு நகர்களில் இதுவும் ஒன்று. எப்பிராயிமைச் சேர்ந்தது (யோசு 21:22).

முதலாம் நாள் ஆகமம் இந்த நகர்களின் பெயருக்கு இணையான அட்டவணையில் இப்பெயர் குறிக்கப்பட்ட இடத்தில் யோக்குமயாம் என்ற பெயரைத் தருகிறது (1 நாள் 6:68). கிபிசயிம், யோக்குமயாம் ஆகிய இரு நகரங்களும் மூல வாசகத்தில் இந்த இடத்தில் காணப்பட்டன என அறிஞர் சிலர் கருதுவர்.

கிபிரோத்து — அத்தாவா (KIBROTH — HATTAAVAH — இச்சைகோரி, பெரும்பசி, பேராவல்)

இஸ்ராயேல் மக்கள் சீனாய் மலையை விட்டுப் புறப்பட்டு, கெசெரோத்தை அடையுமுன் இவ்விடத்தில் முதலில் தங்கினர் (எண் 11:34-35; 33:16-17). இந்த இடத்தில் ஆண்டவர் வீசச் செய்த ஒரு பெருங்காற்று கடலுக்கு அப்பாலுள்ள நாட்டிலிருந்து

காடைகளைத் திரளாக அடித்துக்கொண்டு வந்தது. அவைகளின் மாமிசத்தை இஸ்ரா யேல் மக்கள் பேராவலுடன் உண்டதால் கொள்ளை நோய் அவர்களைத் தாக்கியது. இதில் பலர் மாண்டனர் (எண் 11:31-33; உப 9:22). மாண்டவர்களைப் புதைத்த கல்லறை கள் இந்த இடத்திற்கு இப்பெயரை வழங்கு கின்றன. இது ரூலிஸ் ஏல்-ஏபெய்லி என அடையாளம் காட்டப்படுகிறது. இது வழக் கமாகச் சீனாய் மலையென்று அடையாளம் காட்டப்படும் எபெல் மூசாவிலிருந்து கிழக் கில் 50 கி.மீ.தொலைவிலுள்ளது.

கிமல் (GIMEL)

எபிரேய நெடுங்கணக்கில் மூன்றாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இல் மூன்றாவது பகுதிக்குத் தலைப்பாக உள்ளது.

கியாகு (GIAH — ஊற்று, அருவி)

அபினேர் தப்பி ஓடிய வழியில், கிபயோ னிலிருந்து பாலைவன வழியாக அரபாவுக் குச் செல்லும் வழியில், உள்ள ஓர் இடம் (2 சாமு 2:24). ஆனால் இவ்வாசகம் பழுது பட்டிருப்பதாகத் தெரிகிறது. கிபயோனுக் குப் பதிலாகக் 'கெபா' என்றிருக்கவேண் டும். ஏனெனில் கெபா தான் யோர்தானுக் குச் செல்லும் பாலைவன வழியில் அமைந் துள்ளது.

கியோர்கியன் மொழிபெயர்ப்பு (விவிலி யத்தின்) (THE GEORGIAN VERSION)

கருங்கடலுக்கும் காஸ்பியன் கடலுக்கும் இடைப்பட்ட இடத்தில் வாழ்ந்த மக்கள் கியோர்கியன் என்ற மொழியைப் பேசிவந்த னர். இப்பகுதி, இப்போது உருசியா நாட் டில் அடங்கியுள்ளது. கி.பி.4-ஆம் நூற்றாண் டில்தான் கிறித்துவ மதம் இங்குப் பரவ ஆரம்பித்தது. இந்த 4-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான், கியோர்கியன் மொழிக்கு எழுத்து வடிவம் கண்டுபிடிக்கப்பட்டது என்று அர மீனியர் பாரம்பரியம் கூறுகிறது. மெஸ் ரோபு என்பவர்தான் இம்மொழிக்கான தனி எழுத்துக்களைக் கண்டுபிடித்தார் என்று தொடர்ந்து அப்பாரம்பரியம் கூறுகிறது.

யார் முதலில் விவிலியத்தைக் கியோர்கி யன் மொழியில் மொழி பெயர்த்தார்கள்? எந்தப் புத்தகங்கள் முதலில் மொழியாக்கம் செய்யப்பட்டன? எந்த மொழியிலிருந்து கியோர்கிய மொழிக்கு விவிலியம் மொழி யாக்கம் செய்யப்பட்டது என்பன போன்ற விபரங்களை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை.

அனேகமாக நற்செய்திகளும் சங்கீதங்க ளும் கி.பி.5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத் தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண் டும். ஆனால் திருவெளிப்பாடு கி.பி.10-ஆம் நூற்றாண்டு இறுதிவரை மொழிபெயர்ப்புச் செய்யப்படவேயில்லை.

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் அனைத் தும் ஒரே நேரத்தில் மொழி பெயர்ப்புச் செய்யப்படவில்லை. புத்தகங்கள் தனித்தனி யாக வெவ்வேறான இடத்திலும், வெவ்வே றான மற்றமொழி விவிலியங்களிலிருந்தும் வேறுபட்ட காலத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாகப் பழைய ஏற்பாட்டின் முதல் எட்டுப் புத்தகங் கள், எழுபது நூல்கள் என்ற கிரேக்க விவிலி யத்திலிருந்து மொழி பெயர்ப்புச் செய்யப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இறைவாக் கினர் நூல்கள், அரமீனிய மொழிபெயர்ப்பு விவிலியத்திலிருந்து மொழி ஆக்கம் செய் யப்பட்டுள்ளன.

கியோர்கிய மக்களின் பாரம்பரிய கருத் துப்படி புதிய ஏற்பாடு, கிரேக்க மூலத்திலி ருந்தே கியோர்கிய மொழிக்கு ஆக்கம் செய் யப்பட்டது என்பதாகும். ஆனால் இதன் மொழி நடையை ஆராய்ந்து பார்க்கும் போது, அநேகமாக அரமீனிய மொழி பெயர்ப்பு அல்லது சீரிய மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டுதான், இந்தக் கியோர்கிய புதிய ஏற்பாடு ஆக்கம் செய்யப் பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகி றது. ஆனால் கியோர்கிய மொழியில் பல முறை, புதிய ஏற்பாடு மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. கி.பி.10ஆம் நூற்றாண்டின் இறுதியில் எத்திமியஸ் என்பவர் அவருக்கு

முன் நிலவிய பல மொழிபெயர்ப்புகளை ஒருங்கிணைத்துத் திருத்தினார். அப்போது குறைந்தது ஐந்து வேறுபட்ட மொழி பெயர்ப்புகள் பழக்கத்தில் இருந்தன. இதற்கு அடுத்த கஜியோரைட் என்ற ஜார்ஜ் கி.பி.11-ஆம் நூற்றாண்டில், கியோர்கிய புதிய ஏற்பாட்டை முற்றிலுமாக நன்கு திருத்தினார். இதனை அத்தோஸ் மலை என்ற இடத்தில் செய்து முடித்தார். இவ்வாறு ஜார்ஜ் செய்த திருத்தமான மொழி பெயர்ப்புதான், பிறகு அச்சிட்டு வெளியிட ஆதாரமாயிருந்தது.

கிரத்தே (CRATES)

இவர் சைப்பிரசு தீவை அந்தியோகு எப்பிபான் கைப்பற்றியபோது சிறிது காலம் அதன் அரசபிரதிநிதியாக இருந்தவர். இவர், சோசித்திராத்து எருசலேம் கோட்டையில் ஆளுநனாக இருந்தபோது அவருக்கு உதவி செய்ய, சைப்பிரசிலிருந்து வந்த கூலிப்படையின் தலைவன் (2 மக் 4:29).

கிராமம் (VILLAGE)

கிராமம், சில குடியிருக்கும் வீடுகளையும் பலவகைக் கட்டடங்களையும் கொண்டதும், நகரத்தைவிடச் சாதாரணமான அமைப்பையும், எளிய ஆட்சிமுறையையும் உடைய தொகுப்பு ஆகும். பழைய ஏற்பாட்டில், நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு தெளிவாகக் கூறப்படுகிறது (லேவி 25:29.31; உப 3:5; 1 சாமு 6:18; 1 நாள் 27:45). நகரம் பெரியதாகவும், சுற்றுச் சுவர்களைக் கொண்டதாகவும் இருந்தது. ஆனால் கிராமம் ஓர் அறையுள்ள சிறிய வீடுகளைக் கொண்டதாகவும், சுற்றுச்சுவர்கள் இல்லாமலும் இருந்தது. மேற்காசியப் பகுதிகளில் கிராமங்களில் மண்குடிசைகள் இன்றும் காணப்படுகின்றன. கிராமங்கள் அகழிகளையும் உயர்ந்த கோபுரங்களையும் கொண்டிருக்கவில்லை (எச 38:11). இவை அரணற்ற, திறந்த கிராமங்கள் ஆகும் (எஸ்த 9:19). இதில் ஒரு விருந்தினர் மாளிகை இருந்தாலும் ஆலயம் இல்லை. தால்முதின் காலத்தில் கிராமம் செபக்கூடம் இல்லாத இடம் என்று வரையறுக்கப்பட்டது. புதிய ஏற்பாடு இத்தகைய வேறுபாட்டைப்பற்றிப் பேசவில்லை என்றாலும் (மாற் 1:38-39) பழைய ஏற்பாட்டுக் காலத்திய வேறுபாடுகள் இன்னும் இருந்ததாகத் தோன்றுகிறது (மத் 9:35; 10:11; மாற் 6:56; லூக் 8:1; 13:22).

விவிலிய காலத்தில் சிறப்பாகப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நகரங்கள்கூட சிறியதாக இருந்தன. மெகிதோவும் எரிகோவும் 13 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்தன. இலாக்கீசும், தெபீரும் 8 ஏக்கருக்கும் குறைவான பரப்பளவைக் கொண்டிருந்தன. கானானை வெற்றிகொண்ட காலத்தில் இஸ்ராயேல் தன் நகரங்களை அநேகமாகக் கைப்பற்றின என்றும், பின் மலைநாடுகளில் அவர்களின் கிராமங்களை அமைத்தார்கள் என்றும் சொல்லலாம்.

கிராமங்கள் நாளடைவில் வளர்ந்தன. அவற்றிற்குப் பாதுகாப்புகள் அமைக்கப்படலாம் (1 சாமு 23:7). இந்தக் கிராமங்களின் அளவு நாட்டில் நிலவும் சூழ்நிலையைப் பொருத்தது. அமைதியான காலங்களில் மக்கள் நகரச் சுவர்களுக்கு வெளியே வாழவும் தயங்கவில்லை. கிராமங்கள் நகரங்களாக வளர்ந்தது அவற்றின் பெயர்களில் காணப்படுகின்றன. கப்பர்நகூம் (நகூம் கிராமம்) கசர்-அத்தார் (அத்தார் கிராமம்) பெத்திலகேம் முதலியன நகரமென்றும் (லூக் 2:14) கிராமம் என்றும் (யோவா 7:42) அழைக்கப்படுகின்றன. அழிக்கப்பட்ட நகரம் கிராமமாக மாறலாம் (செக் 2:4). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கலிலேயாவில் இருந்த பல கிராமங்கள், சுற்றுச்சுவர்களைக் கொண்டிருந்தன. பல சமயங்களில் கிராமம், பாதுகாப்பிற்கும், பொருளாதார, அரசியல் காரியங்களிலும் நகரத்தைச் சார்ந்திருந்தது. இதனால் நகரங்களின் ஆட்சியில் கிராமங்கள் இருக்க வேண்டியதாயிற்று. ஆனால் மூப்பர் குழுவே கிராமத்தின் நீதி மன்றமாக இருந்தது. இந்த உண்மை, யோசுவா யூதாவுக்கு 114 நகரங்களையும் அவற்றைச் சார்ந்த கிராமங்களையும் பகிர்ந்தளிப்பதிலிருந்து புலனாகிறது (யோசு 15:32-62; 18:24.28; 1 நாள் 6.24 தொ).

கிராமங்கள் நகருக்கு மிக அருகிலேயே இருந்தன. இவை இக்காலத்திய புறநகர்ப் பகுதிகளை ஒக்கும். நகரில் வசிப்பவர்கள் ஓய்வெடுக்கவும், பொழுது போக்கிற்காகவும் கிராமங்களுக்குச் செல்வார்கள் (உ. ச. 7:11). இதனால் இந்தக் கிராமங்கள் நகரத்துடன் இணைய வாய்ப்புண்டு என்பதை, இரண்டு சுவர்களையுடைய நகரங்கள் கூறுகின்றன. பல கிராமங்கள் சேர்ந்தது ஒரு மாவட்டம் ஆகும். எ.கா. எமோரியர்களின் ஊர்கள் (எண் 21:23), செசரியா பிலிப்பி ஊர்கள் (மாற் 8:27), சமாரியர்களின் ஊர்கள் (அ.ப. 8:25). பின்வரும் நகரங்கள் இத்தகைய கிராமங்களைக் கொண்டிருந்தன. பேத்து-சான் (யோசு 17:11; நீதி 1:27), செக்கேம் (1 நாள் 7:28), கெசர் (1 நாள் 7:28), காத்து (1 நாள் 18:1), தோர் (1 நாள் 7:29) தானாக்கு (1 நாள் 7:29), மெகிதோ (1 நாள் 7:29), இரபா (எரே 49:2), கொபோன் (எண் 21:25). பெத்துசயிதா, பெத்தானியா, எம்மாவு முதலியவை புதிய ஏற்பாட்டுக் காலக் கிராமங்களாகும்.

கிராமங்களில் முக்கியத் தொழில் விவசாயமாகும். கிராமத்தைச் சுற்றி இருந்த நிலங்களில் அவர்கள் பயிரிட்டனர். இது விவசாய மையமாகவும், குளிர்காலத்தில் ஆடுமாடுகள் மேய்ப்போர் கூடுமிடமாகவும் இருந்தது. கிராமத்திற்குப் பொதுவான ஒன்றுக்கு மேற்பட்ட போரடிக்கும் களங்கள் இருந்தன. கோடையில் அவர்கள் ஊருக்கு வெளியே இருந்தனர். மேய்ச்சல் நிலங்கள் கிராமத்திற்கே சொந்தமானவையாகக் கருதப்பட்டன (1 நாள் 6:54).

நாடோடிகளின் பாளையங்கள் கிராமங்களாகக் கருதப்பட்டன (ஆதி 25:16; ஏச 42:11; எண் 32:41). இஸ்ராயேலின் கிராமங்களிலிருந்து சவுல், தாவீது போன்ற தலைவர்கள் தோன்றினர். குடியானவர் இஸ்ராயேலில் தாழ்ந்தவராகக் கருதப்படவில்லை (நீதி 5:11).

கிரிசிப்பு (CRISPUS - சுருண்ட)

கொரிந்தில் தங்கியிருந்த ஒரு யூதர்; செபக்கூடத் தலைவர் (அ. ப. 18:8). பவுலின் போதனைகளின் மூலம், இயேசுதான் கிறிஸ்து என்று விமர்சித்து இவரும் இவருடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்; பவுல் தானே ஞானஸ்நானம் கொடுத்த சிலருள் இவரும் ஒருவர் (1 கொரி 1:14). பிறகு இவர் எகினாவிற்கு ஆயரானார் என்று பாரம்பரியம் கூறுகிறது.

கிரியத்தயிம் (KIRIATHAIM - இரட்டை நகரம்)

1. கிரியத்தயிம், சீகோன் என்ற அரசனின் மோவாபு நாட்டில் இருந்தது. இதில் எமோரியர்கள் வாழ்ந்தனர். இந்நகரம் சாக்கடலில் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. வரலாற்று நோக்கில் இந்நகரம் மோவாபிய பீடபூமியில் அமைந்திருந்தது (எரே 48:1.23; எச 25:9). இது ரூபன் கோத்திரத்தாருக்கு மோசேயால் பிரித்துக் கொடுக்கப்பட்டது (எண் 32:27; யோசு 13:19). மேசா மன்னனின் ஆட்சியில் இது மோவாபு மக்களின் பிடியில் இருந்தது. அந்த இடமானது தீபோனுக்கு வடமேற்கில் 9 கி.மீ. தொலைவிலும், ஆர்னோன் ஆற்று முகப்பிலிருந்து வடகிழக்கில் 15 கி.மீ. தொலைவிலும் உள்ள இன்றைய கிர்பெத் ஏல்-கைரெய்யாத் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

2. கெரிசோம் லேவியர்களுக்கு அளிக்கப்பட்ட நப்தலியைச் சேர்ந்த ஓர் ஊர் (1 நாள் 6:76). இதற்கு இணையான பட்டியலில் (யோஅ 21:32) வரும் கர்த்தானும் இதுவும் ஒரே ஊரைக் குறிக்கலாம்.

கிரியத்தரிபா/கிரியத்து - அரிபா (KIRIATH - ARIBA - நால்வரின் நகரம்)

கிரியத்தரிபா என்பது யூதா மலை நாட்டிலுள்ள கெபிரோன் என்னும் நகரத்தின் பழைய பெயர். இதன் அருகில்தான் ஆபிரகாம், சாரா, ஈசாக்கு முதலியோர் அடக்கம் செய்யப்பட்ட இரட்டைக் குகையான மக்கபேலா உள்ளது (ஆதி 23:2; 35:27). இந்நகரம் அரபிக் மொழியில் 'எல் காலில்' அதாவது 'நண்பன்' என்பதாகும். காலேபு என்பவர் இதை அனாக்கின் புதல்வர்களிடமிருந்து கைப்பற்றினார். அனாக்கியருள் மிகப் பெரி

யவனாக மதிக்கப்பட்டு வந்த அர்பே என்பவன் அங்குப் புதைக்கப்பட்டிருந்ததால் இது கிரியாத்தரிபே என்று அழைக்கப்பட்டது (யோசு 14:15; 15:13). இது மலைநாட்டின் முக்கிய நகரமாகவும் (15:14) அடைக்கல நகரமாகவும் (20:7) லேவியரின் நகரமாகவும் விளங்கியது. விவிலிய காலம் முழுவதும் கெபிரோனின் பழைய பெயர் விளங்கியது. கெபிரோன் தானிஸ் கட்டப்படுவதற்கு 7 ஆண்டுகளுக்கு முன்னதாகவே கட்டப்பட்டு விட்டதாகக் கருதப்படுகிறது. இது ஆதி 14:13-இல் எமோரியர்களுக்குச் சொந்தமானதென்றும், ஆதி 23-இல் கேத்து என்பவனுக்கு உரிமையானது என்றும், பாரம்பரியத்தின்படி அனாத்துக்கு உரியது என்றும் (யோசு 11:21; 14:15) கூறப்படுகிறது. நீதி 1:10-இல் யூதா நாட்டினர் கெபிரோனை வென்றதாகக் கூறப்படுகிறது. சிம்சோன் காசா நகரத்தில் வாயிலைத் தூக்கிக் கொண்டு கெபிரோனை நோக்கியுள்ள குன்றுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது (நீதி 16:3). தாவீது கெபிரோன் நகரைத் தலைநகரமாகக் கொண்டு 7 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அபினேருடன் உடன்படிக்கை செய்தார். இங்குதான் தாவீது அரசராக முடி சூட்டப்பட்டார். அபிசலோம் கெசூர் நாட்டுக்கு நாடு கடத்தப்பட்டிருந்தபோது ஆண்டவருக்குச் செய்த நேர்ச்சையைத் தீர்க்கக் கெபிரோனுக்குச் சென்றது அது ஒரு சிறந்த வழிபாட்டு இடமாகவும் விளங்கியது என்பதைத் தெளிவாக்குகிறது. இங்கு விடுதலை அடைந்த யூதர்கள் வந்து தங்கினார்கள் (நெக 11:25). கெபிரோனும் மற்ற மூன்று நகரங்களும் ''அரசருக்கு'' என்ற வாசகமும் கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் ஜாடிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இது அரசரால் அங்கீகரிக்கப்பட்ட அளவுகள் கொண்ட மட்கலன்கள் செய்வதில் சிறந்திருந்திருக்க வேண்டும். மக்கபேயர் போரில் இது யூதா என்பவரால் கொள்ளை அடிக்கப்பட்டது. பைசாண்டைன் காலத்தில் கெபிரோன் குறிப்பிடாதது அது பல ஆண்டுகள் கைவிடப்பட்ட நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. இது புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை. கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இது மீண்டும் முகமதியர்களால் கைப்பற்றப்பட்டது.

கிரியத்தாரிம்/கிரியத்து - ஆரிம் (KIRIATH - ARIM)

நாடு கடத்தலிலிருந்து திரும்பியவர்களின் ஊர்ப்பட்டியலில் வரும் ஒரு பெயர் (எஸ் 2:25). இதன் பெயரின் சரியான வடிவம் கிரியத்து எயாரிம் ஆகும். இது இப்பட்டியலின் இணைப்பகுதியான நெக 7:29-இல் வருகிறது.

கிரியத்து (KIRIATH)

பென்யாமின் பகுதியைச் சேர்ந்த ஒரு நகர் (யோசு 18:28). இது கிரியத்து எயாரிம் என்றும் அழைக்கப்பட்டது.

கிரியத்து எயாரிம் (KIRIATH - JEARIM - காடுகளின் நகரம்)

யூதாவின் நகரங்களில் ஒன்றான கிரியத்து எயாரிம் இன்றைய தேர் அல் - அஸ்கார் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இந்நகரம் ஏறக்குறைய 13 கி.மீ. தொலைவில் எருசலேமிற்கு வடக்காக அமைந்திருந்தது. யுசேபியு கிரியத்து எயாரிம் நகரைப் பற்றி இரண்டு இடங்களில் குறிப்பிடுகின்றார். முதலில் அது எருசலேமிலிருந்து தியோசுப்பொலி செல்லும் சாலையில் 14 கி.மீ. தொலைவில் உள்ளது என்றும், பின் 15 கி.மீ. தொலைவில் உள்ளது என்றும் கூறுகிறார். தியாக்கோன் பேதுருவும் கிரியத்து எயாரிம் எருசலேமிலிருந்து 14 கி.மீ. தொலைவில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். தேர் ஏல்-அஸ்கார், அபுகோஸ் என்ற இடத்திற்கு மேற்கில் உள்ள குன்றின் மீது அமைந்திருந்தது. பாதுகாப்பாகவும் மற்ற நகரங்களைக் கவனிக்கவும் வசதியாக இருந்த இந்நகரம் குன்றிலிருந்து, 'அபுகோஸ்' என்ற இடத்திற்கு உரோமானியர் காலத்தில் மாற்றப்பட்டதாக 1944-இல் நடந்த அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதலில் கிரியத்து எயாரிம் கோட்டைகளுடன் கூடிய நான்கு நகரங்களின் கிபயோனிய

ஐக்கியத்தின் அங்கத்தினராக விளங்கியது. இந்நகரம் பல பெயர்களால் அழைக்கப்படு கிறது. இதன் பழைய பெயர் கிரியத்து பாகால் அதாவது ''பாகால் கடவுளின் நகரம்'' என்பதாகும். யூதா நாட்டின் வடக்கு எல்லைகளைக் குறிப்பிடும்போது இது ''பாகலா'' (யோசு 15:9-10; 18:14) என்றும் பென் யாமின் நாட்டின் எல்லைகளைக் குறிப்பி டும்போது ''கிரியத்து பாகால்'' (யோசு 15:60; 18:14) என்றும் அழைக்கப்பட்டது. இந்நகரம் ''தாண்'' கோத்திரத்தின் கிழக்கு எல்லையும், பென்யாமின் நாட்டின் மேற்கு எல்லையும், யூதா நாட்டின் வடக்கு எல்லை யும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. எபனேசர் (கி.மு. 1050) போருக்குப் பிறகு பெலிஸ்தி யர்கள் உடன்படிக்கைப் பெட்டகத்தைக் கைப்பற்றி அசுதோதுக்குக் கொண்டு சென்ற னர். இதனால் அவர்கள் பாளையத்தில் பல கொள்ளை நோய்கள் உண்டாயின. எனவே அதைப் பெலிஸ்தியர்கள் பேத்து செமே சுக்கு அனுப்பிவிட்டனர். இதன் பின்னர் உடன்படிக்கைப் பேழை கிரியத்து எயாரி மில் வைக்கப்பட்டிருந்தது. தாவீது அரசர் அதை எருசலேமுக்குக் கொண்டு வரும் வரை அங்கேயே இருந்தது (1 சாமு 5:1-7:2; 2 சாமு 6:1-15; 1 நாள் 13:1-13; 15:1-29). அரசு திருத்தி அமைக்கப்பட்ட போது அந்நகரம் எருசலேம் மாகாணத்தோடு சேர்க்கப்பட் டது (யோசு 15:60; 18:28). யோயாக்கிம் அரசனால் கொலைசெய்யப்பட்ட உரியா இறைவாக்கினர் கிரியத்து எயாரிமில் இருந்து வந்தவர் (எரே 26:26-23). நாடுகடத் தப்பட்டு விடுதலை அடைந்தவர்களுள் கிரி யத்து எயாரிமைச் சேர்ந்தவர்களும் இருந்த னர் (எஸ் 2:25; நெக 7:29).

கிரியத்து குசோத்து (KIRIATH - HUZOTH - வீதிகளின் நகர்)

கிரியத்து குசோத்து என்பது மோவாபியர் களின் நகரங்களில் ஒன்று. பாலாக்கு குறி சொல்லும் பிலயாமை இங்குதான் முதன் முதலில் அழைத்துவந்தார் (எண் 22:39). இது ஆர்னோன் ஆற்றின் வடக்கில் அமைந்திருந் தது (22:39).

கிரியத்து-சன்னா (KIRIATH - SANNAH)

கிரியத்து-சேபர் என்ற பெயரின் மற் றொரு வடிவம் அல்லது எழுத்துப் பிழையா கும் (யோசு 15:49). இவ்வடிவம் மோசரோட் டிக் வாசகத்தில் மட்டும் வருகிறது.

கிரியத்து-சேபர் (KIRIATH - SEPHER - நூல்க ளின் நகர்)

கிரியத்து சேபர் என்பது தெபீர் (1)-இன் பழைய பெயர் ஆகும் (யோசு 15:15-16; நீதி 1:11). யூதாவின் நகரங்களில் ஒன்றான தெபீர் இன்றைய தேல் பெயித்து மிர்சுன் என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது கெபி ரோனில் இருந்த செப்பேலாவில் இருந்து 19 கி.மீ. மேற்கு வடமேற்கில் உள்ளது. யோசுவா தெபீரை வென்ற நிகழ்ச்சி இரண்டு இடங்களில் குறிப்பிடப்படுகிறது (யோசு 10:30; 11:21). இத்தியரின் நகரம் என்றும் அழைக்கப்பட்ட இந்நகரம் ஒதினி யேல் என்பவரால் கைப்பற்றப்பட்டது (யோசு 15:15). தெபீர் யூதாவின் நகரங்களில் ஒன்றாகவும் (யோசு 15:49), லேவியரின் நகரங்களில் ஒன்றாகவும் (யோசு 21:15; 1 நாள் 6:43) எண்ணப்பட்டது. ஆல்பிரைட் என்பவர் அகழ்வாராய்ச்சி நடத்தியபோது அந்நகரம் 7.5 ஏக்கர் பரப்பளவு கொண்டதா கும் என்பதைக் கண்டுபிடித்தார். தெபீர் முதன்முதலில் முற்கால வெண்கலக் காலத் தில் கட்டப்பட்டது (கி.மு. 2300-2100). 19-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட 11 அடி குறுக்களவுள்ள சுவர் ஒன்றும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. பாலஸ்தீன நாட்டில் நில விய குழப்பநிலை கி.மு. 1800-1500-க்கு இடைப்பட்ட காலத்தில் நடந்த நான்கு பெரிய அழிவுகளாலும் நான்கு சிறிய அழிவு களாலும் எண்பிக்கப்படுகிறது. கண்டுபிடிக் கப்பட்டுள்ள பிற்கால வெண்கலக் காலத்துக் குரிய அணிகலன்களிலிருந்து கானான் நாட் டிலும் பழைய ஏற்பாட்டிலும் நிலவிய இனப்பெருக்க வழிபாட்டு முறை தெளிவா கிறது. இவற்றில் பெண்கடவுளும் பாம்பு உருவமும் பொறிக்கப்பட்ட கல்வெட்டு முக்கியமானதாகும். இந்நகரம் கி.மு. 1200-இல் மிகவும் கொடூரமாகத் தீயால் அழிக்கப் பட்டாலும், மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இந்த அழிவும் புதுப்பித்தலும் இஸ்ராயேல் மக்களால் நடந்திருக்கக்கூடும் என்று கருதப் படுகிறது. இறுதியாகத் தெபீர் கி.மு. 598-587-க்கு இடைப்பட்ட காலத்தில் பாபிலோனிய ரால் அழிக்கப்பட்டுக் கைவிடப்பட்டது.

கிரியத்து - பாகால் (KIRIATH - BALL - பாகாலின் நகர்)

கிரியத்து எயாரிம் என்ற இடத்தின் மற்றொரு பெயர் (யோசு 15:60; 18:14).

கிருகாசியர் (GIRGASHITE)

கானானில் தொடக்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் பட்டியலில் மட்டும் குறிக்கப்படும் ஓர் இனம் . இவர்கள் ஏழுமுறை குறிக்கப் படுகின்றனர் (ஆதி 10:16; உப 7:1; யோசு 3:10; 24:11; 1 நாள் 1:14 நெக 9:8). இவர்களை இஸ்ராயேலர் நாட்டைவிட்டு அகற்றினர். இவர்களுக்கென்று ஓர் இடமில்லை. புதிய ஏற்பாட்டில் காதராவியர் வாழ்ந்த, கலிலேயக் கடலுக்கருகில், யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதியாக இருக்கலாம் (மத் 8:28; மாற் 5:21; லூக் 8:26).

கிருசியர் (GIRZITE)

எகிப்துக்கும் பெலிஸ்தியாவுக்கும் இடையில் வாழ்ந்த ஒரு வித இனமக்கள். கெசூரியர், அமலேக்கியர் போன்று இவர்களும் தாவீது சீக்கிலாகில் தங்கியிருந்தபோது அடித்த கொள்ளைகளுக்குப் பலியாயினர் (யோசு 13:2; 1 சாமு 27:8). இதைத் தவிர வேறொன்றும் இவர்களைப்பற்றித் தெரியவில்லை.

கிரேக்க மெய்யியலும், மதமும் (GREEK PHILOSOPHY AND RELIGION)

கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கிரேக்க உலகினில் காணப்பட்ட மெய்யியல், மற்றும் மதம் சம்பந்தமான செய்திகளை இக்கட்டுரை அளிக்கிறது.

1. முன்னுரை:- கி.மு. 338-இல் கிரீசு நாடு மக்கதோனிய மன்னரான பிலிப்புவின்கீழ் வந்தது. இது கிரேக்க நாட்டின் நகர அமைப்பு முறையை மாற்றி நாட்டாட்சிமுறையைத் தோற்றுவித்தது. அரசியல் சுதந்தரத்தினை இழந்தபோதிலும் கிரேக்கர்கள் தங்கள் நாகரீகத்தை விட்டுவிடவில்லை. மாறாகக் கிரேக்கர்களின் நாகரீகம், மக்கதோனிய மன்னன் மகா அலக்சாந்தர் காலத்தில் மேற்காசிய நாடுகளில் வெகுவாகப் பரவியது. சீரியா, பாபிலோனியா, பாரசீகம், எகிப்து போன்ற மேற்காசிய நாடுகளில் கிரேக்க நாகரீகம் செழிப்புற்று வளர்ந்தது. கிரேக்க நாகரீகமும் மேற்காசிய நாடுகளின் நாகரீகமும் சேர்ந்து ''ஹெல்லனிசம்'' என்ற கிரேக்கக் கூட்டு நாகரீகம் பிறந்தது. இது மதம், கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றைத் தழுவிய ப்ன்னாட்டு, நாகரீகமாகும். இந்த நாகரீகம் கிரேக்க, மெய்யியல் மற்றும் மறையை அதிகமாகப் பாதித்தது.

2. பழைய கடவுள்களும் வழிபாடுகளும்: புதிய மறை சம்பந்தமான கொள்கைகள் பல தோன்றினாலும் கிரேக்கர்கள் தங்களது பண்டைய வழிபாடுகளையும், தெய்வங்களையும் விலக்கிவிடவில்லை. தொன்று தொட்டே இயற்கையினை வழிபட்ட இவர்கள் இயற்கையை ஒரு மாபெரும் சக்தியாகவே கருதினர். காலப்போக்கில் இயற்கையினைப் பற்றிய அறியாமை அகன்றது. இருப்பினும் இயற்கையில் வழிபட்ட பல தெய்வங்களை அவற்றின் பண்புகளுக்காவே பின்னும் வழிபட்டனர். பண்டைய கடவுள்களில் மிகவும் முக்கியமானவர்கள், சேயுஸ், அத்தீனா, தியோனிசியஸ் ஆவார்கள். பெர்கமோன் என்னுமிடத்தில் சேயுசுக்குப் பிரமாண்டமான ஒரு பீடம் கட்டப்பட்டது (திருவெளி 2:13). எகிப்து, சீரியா போன்ற நாடுகளில் தியோனிசியசின் கோவில்கள் கட்டப்பட்டன. எருசலேமில் இந்தக் கிரேக்க மறை திணிப்புக் காரணமாக மக்கபேயர்களின் புரட்சிவெடிக்கிறது. கிரேக்கக் கடவுள்களின் விழாக்கள் கிரேக்க உலகம் முழுவதும் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டன. பழைய கடவுள்களும் விழாக்களும், புதிய வழிபாடுகள் மற்றும் புதிய நாகரீகத்தால் பாதிக்கப்பட்டாலும் முழுமையாக அழிந்துவிடவில்லை.

3. தனிப்பட்ட மறைகள்:- அலக்சாந்தரின் ஆட்சிக்குப்பிறகு மக்கள் தங்களுக்கு விருப்பமான மறையினைப் பின்பற்றத் தொடங்கினர். இது ஒரு கூட்டு வழிபாடாகவே அமைந்தது. ஒவ்வொரு குடும்பமும் ஒரு தெய்வத்தைக் குடும்ப தெய்வமாக ஏற்று வழிபட்டது. குலம் வாரியாகவும் தெய்வங்களை மக்கள் வழிபட்டனர். தியோனிசியஸ் என்ற அழகுக் கடவுளே வணங்கப்பட்ட கடவுள்களில்' குறிப்பிடத்தக்கவர். கிரேக்க உலகம் பரந்து விரிந்திருந்ததால், அதன் கிளை நாட்டுமக்கள் கிரேக்க ஆதிக்கத்தின் பாதிப்பு ஏற்பட்டபின்னும் தங்களது மறைகளையே பின்பற்றினர்.

4. கிரேக்க உலகின் கிழக்கத்திய மறைகள்:- கிரேக்க உலகம் எகிப்து, சீரியா, பாபிலோனியா, பாரசீகம் போன்ற நாடுகளைத் தன்னகத்தே கொண்டதாகும். இந்நாடுகள் தங்களின் மறைகள் மூலமாகக் கிரேக்க நாகரீகத்தைப் பெருமளவில் பாதித்தன.

அ) எகிப்திய வழிபாட்டுமுறைகள்:- இம்முறை செராபிஸ் என்னும் கடவுளை வழிபடுவதாகும். தோலமிகளின் ஆட்சிக்காலத்தில் எகிப்தில் இம்முறை காணப்பட்டது. செராபிஸ் என்ற கடவுள் எகிப்தில் மெம்பிசில் ஓசிரிஸ் என்றும், பிரியாக்சிசில் சேயுஸ் ஏலியோஸ் என்றும் அழைக்கப்படுகிறார். எகிப்திலிருந்து இவ்வழிபாடு கிரேக்கத்திற்குப் பரவுகிறது. கிரேக்கக் கடற்கரைப் பகுதியிலுள்ள மக்கள் இம்முறையைத் தழுவுகின்றனர். செராபிஸ் என்ற இக்கடவுளின் வழிபாடு எகிப்தின் பண்டைய கடவுளான ஐசீஸ் என்பவரின் வழிபாட்டையும் மறையையும் ஆரம்பித்து வைத்தது. ஐசீஸ் கிரேக்க மக்களின் கடல்கடவுளாகக் கருதப்பட்டாள். இவளுடைய வேறுபெயர்கள், ஆர்தமிஸ், அப்ரோடைட், தெமெட்டர், ஏரா, எஸ்தியா, நானை, என்பனவாம். இவள் உலகின் தாய்க் கடவுளாகக் கருதப்பட்டாள். இவளுக்கு 10,000 பெயர்களுக்கு மேல் உண்டு. இவளை வழிபடுபவர்கள், விதியின் தண்டனையிலிருந்து விடுபடுவார்கள்.

ஆ) அனதோலிய வழிபாட்டு முறைகள்:- அனதோலிய முறைகளில் மிகவும் தொன்மையானது, தாய்க்கடவுள் 'மா'வின் மறையாகும். இக்கடவுளுக்குச் சிபில், அக்டிஸ்டிஸ் என்ற பெயர்களும் உண்டு. கிரேக்கர்கள் இவளை ''மண்மாதா'' என அழைத்தனர். இக்கடவுளின் கோவில்களை அடிமைகளும், தேவதாசிகளும் பராமரித்து வந்தனர்.

இ) சீரியா வழிபாட்டுமுறைகள்:- சீரியா முறைகள் வானக்கடவுள் அதாதை வழிபட்டன. இந்த அதாது சேயுஸ் என்ற கிரேக்கக் கடவுளாகக் கருதப்பட்டார். இது தவிர அதர்காதிஸ் என்ற பெண்கடவுளும் வணங்கப்படுகிறாள். இவள் அனதோலிய கடவுளான 'மண்மாதாவின்' வடிவமாகக் கருதப்பட்டாள்.

ஈ) பாரசீக வழிபாட்டு முறைகள்:- பாரசீக முறைகள், சொராஸ்டர் அறிவித்த மாஸ்டா என்னும் கடவுளை ஆதாரமாகக் கொண்டவையாகும். 'அகூரா மாஸ்டா' என்ற இக்கடவுள், ஞானத்தின் கடவுளாகக் கருதப்பட்டார்.

மறை உண்மைகள்:- கிரேக்க உலகில் தெமெத்தர் என்னும் கடவுள் பற்றியும், தியோனிசியஸ் என்னும் கடவுள் பற்றியும் மறை உண்மைகள் பல நம்பப்பட்டன. மறை உண்மைகள் அறிவுக்கு விபரீதமாகத் தோன்றும் கட்டுக்கதைகளைப் போல் காணப்பட்டாலும் அவற்றின் மூலமாக மக்கள் தங்கள் இயலாமையை, அறியாமையைப் போற்றிவந்தனர். மறைஉண்மைகள் மக்களை இத் தெய்வங்களிடத்து அபரிமிதமான நம்பிக்கை கொள்ளத் தூண்டின.

6. இறைவனாகப் போற்றப்பட்ட அரசர்கள்:- இவ்வகையான பழக்கம் எகிப்திய மக்களிடம் காணப்பட்டது. மன்னன் இறைவனின் அவதாரமாகக் கணிக்கப்பட்டான். அதற்கேற்றவாறு பெருமையும் மதிப்பும் அதிகாரமும் கொண்டிருந்தான். கிரேக்கரிடையேயும் இப்பழக்கம் பரவியது. கிரேக்கர்கள் அரிய பெரிய செயல்களைச் செய்த சாதாரண வீரர்களையும் இறைவனாக வழிபட்டனர்.

7. நல்லூழும் விதியும்; சோதிடமும் மாய வித்தையும்:- இவை மதங்களோடு சென்றன. கிரேக்கர்கள் நல்லூழையும், விதியையும் கடவுளாக வழிபட்டனர். சோதிடம் மக்களின் எதிர்காலத்தை எடுத்துரைப்பனவாக அமைந்தன. கோள்களைக் கொண்டு சோதிடம் கணிக்கப்பட்டது. கோள்களே கடவுள்களாகவும் மாறின. பற்பல மாயமந்திர வேலைகள் நடைபெற்றன. மக்களிடம் மதம் சம்பந்தப்பட்ட மூடநம்பிக்கைகளும், சடங்கு சம்பிரதாயங்களும் வளர ஆரம்பித்தன. இவற்றுக்கெல்லாம் எதிராக மெய்ஞானம் பிறந்து வளர ஆரம்பித்தது.

8. மெய்யியல் பள்ளிகள்:- கிரேக்கர்கள், மேலை நாட்டு மெய்யியலின் தந்தையர்கள். அரிஸ்டாட்டில், பிளேட்டோ, சாக்ரடீஸ் போன்ற தத்துவ மேதைகளை உலகினுக்கு அளித்தவர்கள் கிரேக்கர்கள். அரிஸ்டாட்டிலின் காலத்திற்கு முன்பிருந்த நகராட்சி அமைப்புமுறை மறைந்தது. பின்னர்த் தேசிய ஆட்சிமுறை வளர்ச்சி பெற்றது. ஆனால் இம்முறையும் மக்களை மகிழ்ச்சிகரமாக வாழவைக்கவில்லை. எனவே கிரேக்க மெய்யியல் பள்ளிகள் தோன்றின. இவை மனிதனின் மெய்யறிவை ஆராய ஆரம்பித்தன. மனித வாழ்வின் பகுத்தறிவினை மூலதனமாகக் கொண்டு மனித வாழ்வினை மேம்படுத்தத் திட்டம் தீட்டினர். இதன் விளைவாக மெய்யியல் அறிவு வளர்ந்தது. மனிதனின் வாழ்வுக்குப் புண்ணியம் அதாவது நல்லநடத்தை இன்றியமையாதது என்னும் கொள்கை பரவ ஆரம்பித்தது. தனிமனித சுதந்தரம், சிந்தனை போன்றவை வலுப்பெற்றன.

அ) ஐய வாதமுறை:- இந்த முறை மெய்யியலை ஆதாரமாகக் கொண்ட முறையாகும். பழைய கால வழிபாடுகளில் அறிவு பூர்வமான எதுவும் காணப்படவில்லை என்பதால் இம்முறை தோன்றியது. அரிஸ்டாட்டில் மற்றும் பிளேட்டோவின் பள்ளிகள் இந்த ஐயவாதமுறையை வளர்த்தன. மனிதனுடைய அறிவு முழுமையான ஞானத்தை எட்ட முடியாது. எதையும் முழுமையாக அறியமுடியாது என்பது இம்முறையின் வாதமாகும்.

ஆ) சினிக் முறை (எடுத்ததெற்கெல்லாம் குறைகூறும் முறை):- இம்முறையின் கருத்துப்படி, கலாச்சாரம், மதம், மற்றும் மனிதனின் எந்த ஒரு அமைப்பும் சரியானதொன்றல்ல. எனவே ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு வாழவேண்டும். இம்முறை கடுமையான தபசையும், எளிய வாழ்க்கையையும் போதித்தது. இம்முறையில் மிகப்பிரசித்தி பெற்றவர் ஆண்டிஸ்தேனஸ் ஆவார். தனிப்பட்ட கொள்கையுடைய மக்களே பொதுமக்களிடம் காணப்படும் அநீதிகளைக் குறிப்பிட முடியும் என்பது இம்முறையின் கருத்தாகும். இம்முறையின் மற்றொரு சிறந்த ஆசிரியர், தியோசெனஸ ஆவார். இவரின் எளிய வாழ்க்கையும், கடுமையான நீதிப்போராட்டமும் குறிப்பிடத்தக்கவை.

இ) ஸ்டோயிக் முறை:- இம்முறையை ஆரம்பித்தவர் செனோ ஆவார். இவர் குறைகூறும் முறையின் மாணவர். இவருடைய கருத்துப்படி நன்னடத்தையே மிகச் சிறந்த கொள்கையாகும். நன்னடத்தைஎன்பது இயற்கையுடன் இயைந்து வாழும் வாழ்க்கையாகும். இயற்கை என்பது மனிதனின் பகுத்தறிவோடு இணைந்தது. எனவே பகுத்தறிவால் மட்டும் இயற்கையை முழுமையாக அறிய முடியும். மனித சுதந்தரம் என்பது உலகக் குறிக்கோளுக்குக் கட்டுப்பட்டதேயாகும். மனிதன் குழுவாக வாழவே ஏற்படுத்தப்பட்டுள்ளான். உலகம் என்பது, கடவுள்கள், மனிதர்கள் மற்றனைத்து உயிர்களும் வாழும் ஒரு பொது இடமாகும். தெய்வீக சக்தி ஒவ்வொரு உயிர்களிடத்தும் காணப்படுவதாகக் கருதப்படுகிறது. தெய்வீக சக்தி ஒவ்வொரு உயிரிடத்திலும் சிறு பொறியாக அமைந்துள்ளது. இப்பொறியே உயிர்களை மோட்சத்தில் சேர்க்கும் கருவியாகும்.

ஈ) எப்பிக்கூரிய முறை:- இம்முறையின் கோட்பாடு என்னவென்றால், ''இன்பமே

மனிதனின் குறிக்கோளாகும்''. எப்பிக்கூருஸ் என்பவர் இம்முறையை நிறுவினார். வாழ்க்கை இன்பமானதாய் இருக்கவேண்டும். இன்பமே மனித வாழ்வின் இறுதிக் குறிக்கோள். ஆனால் இந்த இன்பம் அளவானது, அறிவுபூர்வமானது. அளவுகடந்த, அறிவுபூர்வமற்ற இன்பம் இன்பமாகாது. அது துயரத்தையே கொடுக்கும். இம்முறையின் கருத்துப்படி சாவு மனித துயரங்களிலிருந்து நாம் பெறும் விடுதலையாகும்.

கடவுள் தொடர்புக்கோட்பாடும், மெய்ஞானமும்:- மெய்யியல், பகுத்தறிவினை மேம்படுத்தியது. இதன்விளைவாக அறிவியல் வளர்ந்தது. மூடநம்பிக்கைகள் குறைந்தன. இருப்பினும் மனித அறிவுக்கு எட்டாதன பல இருக்கின்றன. இவைகளை அறிய இறைவெளிப்பாடு அவசியம். இதைக் கருத்தில் கொண்டு புதிய மறைகள் பல தோன்றின. இவை அனைத்தும் இறைவெளிப்பாட்டினையும், மெய்ஞானத்தையும் ஆதாரமாகக் கொண்டவையே. கிறித்தவ மறை, இஸ்லாம் மறை போன்ற இறைவெளிப்பாட்டு மறைகள் மனிதனை வெகுவாகக் கவர்ந்தன. இருப்பினும் பகுத்தறிவு வாதிகள் தங்கள் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்காமல் புதிய கருத்துக்களை வெளியிட்டு இறையியல், மெய்யியல் இரண்டையும் வளர்த்து வந்திருக்கிறார்கள்.

கிரேக்க மொழி (GREAK LANGUAGE)

கிரீசிலும் அதன் குடியேற்றப் பகுதிகளிலும் பேசப்பட்ட மொழியாகும். பெரிய அலக்சாந்தரின் வெற்றிக்குப்பின் கிரேக்க உலகத்தின் பொதுமொழியாகத் திகழ்ந்தது. இது இந்தோ-ஐரோப்பிய மொழிக்குழுவைச் சேர்ந்தது. கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டு மத்தியிலேயே இம்மொழி பற்றிய சான்றுகள் காணப்படுகின்றன. கோமேருக்கும் (கி.மு. 8-ஆம் நூற்றாண்டு) அலக்சாந்தருக்கும் இடைப்பட்ட காலத்தில் இம்மொழி உயர்தரமடைந்தது. இக்காலத்தில் இதன் அத்திக்காவைச் சேர்ந்த திரிபுமொழி முதன்மை பெற்றது. இதை உரோமையர் மற்றும் பைசாந்தியன் பேரரசுகள் பயன்படுத்தின. உரோமைப் பேரரசர்களும் மேலவை அங்கத்தினர்களும் தங்கள் சட்டங்களை இம்மொழியில் வெளியிட்டனர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை, உரோமைத்திருச்சபை தனது வழிபாடுகளை இம்மொழியிலேயே நடத்தியது. நவீன கிரேக்க மொழிக்கு இலக்கிய வடிவங்களை அளிப்பதோடு கிரேக்க மொழியின் செல்வாக்கை உருசிய மற்றும் சேர்பிய மொழிகளின் அகரவரிசையிலும் காணலாம். புதிய ஏற்பாடு, பழங்கால மெய்யியல் மற்றும் தொடக்ககால அறிவியல் ஆகியவை இம்மொழியைத்தான் பயன்படுத்தின. அதன்விளைவாக மேற்கு நாடுகளின் கலாச்சார அமைப்பில் கிரேக்க மொழி முக்கிய இடம்பெறுகிறது.

எழுபது நூலிலும் புதிய ஏற்பாட்டிலும் பயன்பட்டுள்ள கிரேக்கமொழி ''கோய்னே'' என்றழைக்கப்படுகிறது. இச்சொல்லுக்குப் பொதுவானது என்பது பொருளாகும். இதற்குக் காரணம் இது பலதிரிபு மொழிகளின் கலப்பு மொழியாகும் என்பது மட்டுமன்று வணிகத்திலும் அரசியலிலும் இது பொது மொழியாகப் பயன்படுத்தப்பட்டதுமாகும். மத்திய தரைக் கடலுக்குக் கிழக்கிலுள்ள நாடுகள் முழுவதிலும் இம்மொழி பயன்பட்டது. இந்தநிலை நற்செய்தி பரப்புவதற்கு மிகுந்த உதவியாக இருந்தது.

அடிப்படையில் கோய்னே கிரேக்கமொழி அத்திக்கு அல்லது உயர்தர ஏதென்ஸ் திரிபு மொழிகளின் எளிமையாக்கப்பட்ட வடிவமாகும். இதன்விளைவாக, இம்மொழி தனக்கேயுரிய இலக்கிய, இலக்கணச் சிறப்புக்களை உடையது.

விவிலியத்தில் காணப்படும் கோய்னே கிரேக்கமொழி ''உயிருள்ள'' மொழியாகும். இதற்குக் கடந்த காலத்தைச்சேர்ந்த விவிலியத்துக்குப் புறம்பான புல்தாள் ஏடுகள், கல்வெட்டுக்கள் மற்றும் உடைந்த பாண்டச் சிதறல்களில் காணப்படும் வாசகங்கள் சான்று பகர்கின்றன. இம்மொழியை இயேசு அறிந்திருந்தாரா அல்லது பயன்படுத்தினாரா என்பதுபற்றி அறிஞர்களிடையே கருத்துவேறு

பாடு உண்டென்றாலும் கிரேக்க உலகில் தோன்றிய பவுல், மாற்கு போன்ற அப் போஸ்தலர்கள் இம்மொழியைப் பயன் படுத்தினர் என்பது உறுதி. புதிய ஏற்பாட்டில் காணப்படும் கோய்னே கிரேக்க மொழியில் தர வேறுபாடுகள் உண்டு. லூக்காவின் நடை உயர்தரமானதாகும். பவுலின் நடை அவ்வ ளவு நயமிக்கதன்று. திருவெளிப்பாட்டு நடையில் தொடக்கநிலையுடையதாகும். புதிய ஏற்பாட்டுக் கோய்னே மொழியில், குறிப்பிட்ட அக்கறை மற்றும் சூழ்நிலை காரணமாக, செமித்தியப் பண்புகளையும் (மத் 19:5; லூக் 1:34) இலத்தீன் மொழித் தாக்கத்தையும் காணலாம்.

கிரேக்க மொழிபெயர்ப்புகள் (விவிலியத்தின்) (GREAK VERSIONS)

கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து, அலக்சாந்தர் மன்னனின் பெரும் வெற்றியால், கிரேக்க அரசாட்சி பல நாடுகளில் பரவியது. இதனால் கிரேக்கக் கலாச்சாரம் என்று ஒன்று பிறந்தது. இந்தக் கிரேக்க அரசாட்சியிலும் கலாச்சாரத்திலும், கலந்து வாழ்ந்து வந்த யூத மக்களுக்காக, விவிலியத்தைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும் அவசியம் ஏற்பட்டது. இம்மொழியாக்கத்தினால் யூதர்கள் அல்லாதாரும் சற்றுப் பயனடைந்தனர் என்று சொல்லலாம்.

1. அரிஸ்டெயாஸ் கடிதம் தரும் வரலாற்றுக் கதை:-

விவிலியத்தின் கிரேக்க மொழி பெயர்ப்பில் மிக முக்கியமானது செப்துவா ஜின்த் என்று அழைக்கப்படும் எழுபது நூலாகும். இதுவே கிரேக்க விவிலிய மொழி பெயர்ப்பு களில் மிகப் பழமையானதாகும். இம் மொழிபெயர்ப்பைப் பற்றி ஒருபாரம்பரியமான கதை கூறப்படுகிறது. இந்தக் கதை அரிஸ்டெயாஸ் என்பவர் எழுதிய கடிதத்தில் காணப்படுகிறது.

இக்கதையின்படி இரண்டாம் தோலமின் பிலடெல்புஸ் என்ற அரசன், அலக்சாந்திரிய நகரில் ஒரு பெரிய நூலகம் அமைக்க விரும்பினார். இவர் வாழ்ந்த காலம் கி.மு. 285 முதல் 247 வரை. இந்நூல் நிலையத்தில் உலகிலுள்ள எல்லா முக்கிய புத்தகங்களையும் சேகரிக்க விரும்பினார். யூதர்களின் வேதப்புத்தகம் விவிலியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, அப்புத்தகத்தைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்க விரும்பினார். எனவே எருசலேமிலிருந்த பெரிய குருவிற்கு இதைப்பற்றிக் கடிதம் எழுதினார். கடிதத்தில் விவிலியத்தைக் கிரேக்கத்தில் மொழி பெயர்த்துத்தரத் தகுந்த வல்லுநர்களை அனுப்பி வைக்கக் கேட்டிருந்தார். எருசலேம் பெரிய குருவும் 72 மொழி பெயர்ப்பாளர்களை எகிப்திய அலக்சாந்திரியா நகருக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் அலக்சாந்திரியா நகருக்கு வந்து, தனித் தனியாக 72 அறைகளில் தங்கினர். சில நாட்கள் கழித்து அனைவரும், மொழிபெயர்ப்பை முடித்து வெளியே வந்தனர். அப்போது 72 மொழி பெயர்ப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, எல்லா மொழிபெயர்ப்புகளும் ஒரே வண்ணமாயிருந்தன. இது ஒரு கதை தான்.

ஆனால் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து பார்க்கிறபோது கீழ்க்கண்ட விபரங்களை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஐந்நூல் என்றழைக்கப்படும் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூற்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்க மொழியில் ஆக்கம் செய்யப்பட்டுள்ளன. அதற்கடுத்து இரண்டு நூற்றாண்டுகளில் பழைய ஏற்பாட்டின் மற்றப் புத்தகங்களும், சீராக், தோபியாஸ், ஞானஆகமம், யூதித், எஸ்தர், மக்கபேயர் ஆகமங்கள் போன்ற புத்தகங்களும் கிரேக்கத்தில் மொழிபெயர்க் கப்பட்டன. மேலே பெயர் கொடுத்துக் கூறப்பட்டிருக்கும் புத்தகங்கள் இணை அல்லது துணைத் திருமுறைநூல்கள் என்று அழைக்கப்படும். ஏனென்றால் அவைகளைப் பிரிவினைச் சகோதரர்கள் தங்கள் விவிலியப் புத்தகங்களின் அட்டவணையில் சேர்த்துக் கொள்வதில்லை.

இத்தோடு, இன்னும் பல புத்தகங்களும் மொழி பெயர்க்கப்பட்டன. அவை இப்

போது நமது விவிலியத் தொகுப்பில் இடம் பெறவில்லை. ஆனால் கி.மு. முதலாம் நூற்றாண்டில் மேற்கூறப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு எழுபதுநூல் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், நற்செய்தியாளர்களும், மற்றவர்களும் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டியபோது, இந்த எழுபதுநூல் என்ற கிரேக்க விவிலியத்திலிருந்துதான் எடுத்துக் கூறுகின்றனர். மூலமான எபிரேயமொழி விவிலியத்திலிருந்து மேற்கோள் காட்டப்படவில்லை. கிறிஸ்துவ மறையைத் தழுவிய புறவினத்தாரும், அவர்களுக்கு எபிரேயம் தெரியாதாகையால் இந்த எழுபதுநூல் என்ற கிரேக்க விவிலியத்தையே பயன்படுத்தினர். இவ்வாறு கிறிஸ்தவர்களால் இந்த எழுபது நூல் என்ற கிரேக்க விவிலியம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதால், யூதர்கள் இந்த எழுபதுநூல் சரியான மொழிபெயர்ப்பல்ல என்று அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். எனவே அவர்களுக்கென்று தனியாகக் கிரேக்க மொழியாக்கம் செய்ய ஆரம்பித்தனர்.

இவ்வாறு கிறிஸ்தவர்களுக்கு எதிராக மொழிபெயர்க்கப்பட்ட புதிய கிரேக்க விவிலியம் நிறைய உண்டாயின. இவைகளில் 6 மொழிபெயர்ப்புகளைப் பற்றிக் குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. இந்த ஆறு மொழிபெயர்ப்புகளிலும், மூன்று மொழிபெயர்ப்புகளுக்கு, அவைகளை மொழிபெயர்த்தவரின் பெயர்கள் தெரிகின்றன. மற்ற மூன்றிற்கும், அவைகளை எழுதிமுடித்தவர் பெயர்கள் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் மேற்கண்ட எல்லா மொழிபெயர்ப்பின் ஏடுகள் அனைத்தும் அழிந்துபோய் விட்டன. ஒரு சில உடைந்த துண்டு ஏடுகள் மட்டுமே இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்றன. அத்துடன் கி.பி.4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, மறைத்தந்தையர்கள் என்று அழைக்கப்படும் அறிஞர்கள் எழுதிவைத்த குறிப்புகளிலிருந்தும் மேற்கண்ட மொழிபெயர்ப்புகளின் ஒருசில வசனங்களை நாம் காண முடிகிறது.

2. அக்குவிலாஸ் செய்த மொழிபெயர்ப்பு:-

கி.பி.160 ஆம் ஆண்டு வாக்கில், போன்துஸ் என்ற இடத்தில் பிறந்த அக்குவிலாஸ் என்பவர் எபிரேய மூலத்திலிருந்து, கிரேக்க மொழியில் விவிலியத்தை மொழி பெயர்த்தார். இவர் கிறிஸ்துவ மதத்திலிருந்தார். பிறகு திருச்சபையில் சில வருத்தங்கள் ஏற்பட்டு, யூத மதத்தைத் தழுவினார். இவர் எபிரேய மூலத்திலிருந்த ஒவ்வொரு எபிரேய வார்த்தைக்கும், ஒவ்வொரு கிரேக்க வார்த்தையிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மொழிபெயர்த்தார். திரிபுபட்ட எபிரேய வார்த்தைகளுக்குக்கூட, அதே போன்ற திரிபுபட்ட கிரேக்க வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதினார். எனவே இவரது மொழி பெயர்ப்பு, புரிந்து கொள்ள முடியாத நிலையில், அமைப்பற்ற கிரேக்க வாக்கியங்களில் நிறைந்திருந்தது. எபிரேயமும் கிரேக்கமும் ஆகிய இரண்டு மொழிகளும் தெரிந்தவர்களுக்குத்தான், இவரின் மொழிபெயர்ப்பை யூகித்துப் புரிந்து கொள்ள முடியும். அத்தகையவர்கள் யாரும் அப்போது அதிகம் இருந்ததில்லை.

அத்துடன் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவே தன் மொழிபெயர்ப்பு அமைய வேண்டும் என்பதில் மிகக் கருத்தாகயிருந்தார். இயேசுதான் மெசியா என்று மேற்கோள்காட்ட முடியாதபடி சில பகுதிகளை மொழிபெயர்ப்பு செய்தார். இப்பகுதிகளை வேண்டுமென்றே எழுபதுநூல் மொழி பெயர்ப்பை விட மாறுபட்டிருக்கச் செய்தார்.

3. தியோடிசியன் செய்த திருத்தம்:-

இதற்கடுத்து கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் தியோடிசியன் என்பவர், வழக்கத்திலிருந்த எழுபதுநூல் கிரேக்க மொழிபெயர்ப்பை, எபிரேய மூலமொழியிலிருந்த விவிலியத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தம் செய்தார். இவர் யூத மதத்தைத் தழுவியவர் என யுசேபியு கூறுகிறார். ஆனால் எரோனிமு இவர் எபியோனியக் கிறிஸ்தவர் என்கிறார். யோபு ஆகமத்தை மிகவும் சுருக்கி எழுபதுநூல் மொழிபெயர்த்துள்ளது. அதா

வது உண்மையான அளவிலிருந்து ஆறில் ஒருபாகத்தைத்தான் எழுபதுநூல் மொழி பெயர்த்திருக்கிறது. எனவே தியோடிசியன் இப் புத்தகத்தைத் திருத்தும்போது எபிரேய விவிலியத்தைப் பின்பற்றித் தன் மொழிபெயர்ப்பைத் தந்திருக்கிறார். தானியேல் ஆகமத்தை, எழுபதுநூல் மொழிபெயர்ப்பு, சில விளக்கங்களை இடையிடையே தந்து மொழி பெயர்த்திருக்கிறது. எனவே அத்தகைய வேண்டாத விளக்கங்களை நீக்கிவிட்டுச் சீரமைத்தார் தியோடிசியன். இச்சீர்திருத்தங்களைக் கிறிஸ்தவம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, தியோடிசியனின் திருத்தப் பதிப்பைத் திருச்சபை நடைமுறையில் பயன்படுத்தவும் தலைப்பட்டது. ஆனால் தியோடிசியனின் திருத்தத்தில் காணப்படுகின்ற முக்கிய குறை என்னவென்றால், எபிரேய வார்த்தைகளை அப்படியே கிரேக்க மொழியில் எழுத்துப் பெயர்ப்பு செய்கிறார். உதாரணமாக GOD என்ற ஆங்கில வார்த்தையை இறைவன் என்று மொழி பெயர்க்காமல் ''காட்'' என்று எழுதுவதைப்போல எபிரேயச் சொற்களைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்காமல், எபிரேயச் சொற்களை அப்படியே கிரேக்க எழுத்தால் எழுதிவிடுகிறார்.

எழுபது நூலிலிருந்து வேறுபட்டுப் புதிய ஏற்பாட்டில் காணப்படும் பல பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் தியோடிசியனின் திருத்திய பதிப்பை ஒத்திருக்கின்றன. (இம் மேற்கோள்கள் எழுபது நூல் மேற்கோளிலிருந்து மாறுபட்டு விளங்குகின்றன. இதற்குக் காரணம் தியோடிசியன் பல பழைய கிரேக்க மொழி பெயர்ப்புகளையும், மற்ற ஆய் மொழி ஆதாரங்களையும் பயன்படுத்தித் திருத்தி எழுதியிருக்கிறார்). எபேசு நகரில் கி.பி.முதலாம் நூற்றாண்டில் தவழ்ந்த பல கிரேக்க மொழியாக்கங்கள் இவருக்குத் துணையாய் நின்றிருக்கின்றன.

4. சிம்மாகுசின் புதிய மொழிபெயர்ப்பு:-

இதையடுத்து, கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில், எபியோனிய நாட்டைச் சார்ந்த சிம்மாகுஸ் என்பவர் விவிலியத்தின் ஒரு புதிய கிரேக்க மொழிபெயர்ப்பைச செய்தார். அக்குவிலாஸ் மொழி பெயர்ப்பில் விளங்கிய எழுத்துப் பெயர்ப்பையும் தியோடிசியனில் விளங்கிய எபிரேய நெடியையும் களைந்து, தன் மொழி பெயர்ப்பைச் செய்தார். நல்ல கிரேக்க மொழி நடையை இவரது மொழிபெயர்ப்பில் காணமுடிகிறது. ஆனால் ஒரு சிலவிடங்களில், நல்ல கிரேக்க மொழி நடைக்காக வேண்டி, பல வசனங்களைச் சேர்த்து, அவ்வசனங்களின் பொருள் மட்டும் கிடைக்கும் அளவில் எழுதியிருக்கிறார். அத்துடன் விவிலியத்தில் இறைவனுக்கு மனிதப் பண்புகளைச் சாற்றிக்கூறும் பகுதிகளை மாற்றி எழுதியிருக்கிறார். யூதமதத்தில் காலப்போக்கில், இறைவன் மனிதனை விட முற்றிலும் வேறுபட்டவர் என்ற கருத்து இடம்பிடித்தது. இதனால் தான் சிம்மாகுஸ் இவ்வாறு மனிதப் பண்புகளைச் சாற்றிக்கூறும் பகுதிகளை மாற்றி எழுதுகிறார்.

5. ஓரிஜன் தயாரித்த ஆறுபடிவ நூல்:-

அக்காலத்தில் அனைத்தும் கைப்படவே எழுதிப் படிசெய்ய வேண்டியிருந்ததால், ஒவ்வொரு படியிலும் பல பிழைகள் நுழைய ஆரம்பித்தன. பிழைகள், தவறுகளைப் பிறப்பிக்க, இவைகள் வளர்ந்து கொண்டேயிருந்தன. அத்துடன் பல கிரேக்க மொழிபெயர்ப்புகள் மக்கள் மத்தியில் பழக்கத்திலிருந்தன. இவ்வாறு வளர்ந்து வந்த பிழைகளைத் தடைசெய்து நிறுத்த வழி ஒன்று தேடினார் கி.பி.3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓரிஜன் என்ற அறிஞர்.

இவர் ''ஹெக்ஸாப்லா'' என்ற ஆறுபடிவத் தொகுப்பைச் செய்தார். 20 ஆண்டுகள் இதற்காக இடைவிடாது உழைத்து, விவிலியத்தின் ஆறுவித மொழிபெயர்ப்புகளை, ஆறு பத்திகளில் வைத்து நேருக்கு நேராக மொழிபெயர்ப்புகளில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் தெரிந்து கொள்ள வழி செய்தார்.

ஒருதாளின் பக்கம் 6 பத்திகளாக மேலிருந்து கீழாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பத்தியிலும் கீழ்க்காணும் விவிலியத்தின்

மொழிபெயர்ப்புகள் எழுதப்பட்டன. ஒரு பத்தியில், ஒருவரிக்கு, ஒன்று அல்லது இரண்டு வார்த்தைகள் மட்டும் எழுதப்பட்டன. முதல் பத்தியில் எபிரேய விவிலியத்தின் வாக்கியம் எபிரேய மொழியிலேயே எழுதப்பட்டது. இரண்டாவது பத்தியில் எபிரேய வார்த்தைகளைக் கிரேக்க மொழி எழுத்துக்களைக் கொண்டு எழுத்துப் பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது பத்தியில் அக்குவிலாஸ் செய்த கிரேக்க மொழிபெயர்ப்பு எழுதப்பட்டுள்ளது. நான்காவது பத்தியில் சிம்மாக்குஸ் தயாரித்த கிரேக்க மொழிபெயர்ப்பு இடம் பெற்றது. ஐந்தாவது பத்தியில் எழுபதுநூல் மொழிபெயர்ப்பு எழுதப்பட்டது. ஆறாவது பத்தியில் தியோடிசியன் தயாரித்த கிரேக்க மொழிபெயர்ப்பு இடம் பெற்றது. இதைக் கீழ்க்காணும் படத்தின்மூலம், சற்று விளக்கமாகத் தெரிந்து கொள்ளலாம்.

எபிரேய விவிலியம்	எபிரேயவிவிலியம் கிரேக்க எழுத்துகளில்	அக்குவிலாஸின் கிரேக்க மொழி பெயர்ப்பு	சிம்மாக்குஸ் செய்த கி.மொ.பெ.	எழுபது நூல் கி.மொ.பெ	தியடோசியன் செய்த கி.மொ.பெ

இக்கடினமான வேலையை மிக நுணுக்கமாகச் செய்தார் ஓரிஜன். எழுபது நூல் மொழிபெயர்ப்பை, இந்நூலில் எழுதியபோது, திருத்தப்பட்ட மொழி பெயர்ப்பைத்தான் பயன்படுத்தினார். அத்தோடு துல்லியமாகச் சில விபரங்களையும் ஆங்காங்கே சில குறியீடுகள் கொடுத்துத் தருகிறார். சிறப்புக் குறியீட்டைப் பயன்படுத்தி, கிரேக்க மொழி பெயர்ப்பில் காணப்படும் இவ்வார்த்தைக்கு இணையான எபிரேய வார்த்தை, எபிரேய மூலத்தில் இல்லை என்று சுட்டிக் காட்டுகிறார்.

★என்ற குறியீட்டைத் தந்து தியோடிசியன் செய்த திருத்தத்தைத் தருகிறார். அதாவது ஒரு குறிப்பிட்ட வார்த்தை எபிரேய மூலத்தில் இருக்கிறது. ஆனால் எழுபதுநூல் அவ்வார்த்தைக்குச் சரியான கிரேக்க வார்த்தை கொடுக்காமல் விட்டுவிட்டது. ஆனால் தியோடிசியன் அதைக் கண்டு பிடித்து, சரியான கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தி, தன் மொழிபெயர்ப்பில் நிறைவு செய்திருக்கிறார். எனவே வார்த்தை விடுபட்டுள்ள இடத்தை எழுபதுநூலில் ★ என்ற குறியிட்டு அவ்வார்த்தை தியோடிசியனின் மொழி பெயர்ப்பில் அதாவது ஆறாவது பத்தியில் காணலாம் என்று குறிப்புக் கொடுக்கிறார். இவ்வாறு பல குறியீடுகளைப் பயன்படுத்தி அவற்றிற்கு விளக்கம் காணும் இடத்தையும் சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வாறு ஒரு பெரும் பணியைச் செய்து முடித்தார் ஓரிஜன். ஆறு பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களை ஒன்று சேர்த்துக் கட்டினாற் போலப் பெரிய புத்தகமாக அமைந்தது இப்புத்தகம். சுமார் 7000 பக்கங்களைக் கொண்டதாக விளங்கியது. இப்புத்தகம் முழுவதும், மறுபிரதி ஒருமுறைகூட எடுக்கப்படவில்லை.ஆனால் இந்தப் புத்தகத்தைத் திருச்சபையின் தந்தையர்கள் பலயிடங்களில் மேற்கோள்காட்டி எழுதியிருக்கிறார்கள். இதனால் இந்த ஆறுபடிவ வேதாகமத்

தைப் ப்ற்றிச் சிறிதாவது தெரிந்து கொள்ள முடிகிறது. அத்துடன் இந்த ஆறுபடிவ விவிலியத்தின், ஐந்தாவது பத்தியில் எழுதப் பட்ட, எழுபதுநூல் வேதாகமம் மட்டும் தனியாக எடுக்கப்பட்டுப் பதிப்பு செய்யப் பட்டது. இவ்வாறு எழுபதுநூல் பத்தி மட்டும் பிரித்து எழுதப்பட்டது சில பிரச்சனைகளையும் உருவாக்கியது. மற்றக் கிரேக்க மொழி பெயர்ப்புகளுக்கும், இன்னும் குறிப்பாக எபிரேய மூலத்திற்கும் தொடர்பு படுத்தி, ஓரிஜன் கொடுத்த குறியீடுகளைப் படிகள் எடுத்தவர்கள் பலமுறைகளில் தவறாகப் புரிந்து கொண்டார்கள். தியோடிசியன் சேர்த்துத்தந்த பல வார்த்தைகளைப் படிகள் எடுத்தவர்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இதனால், ஓரிஜன் செய்த மாபெரும் பணி, பல குழப்பங்களையே எழுபதுநூல் படிவங்களில் தோற்றுவித்தது என்று கூறலாம்.

6. லூசியனின் திருத்தம்:-

ஓரிஜனின் இந்தப் பணியை அடுத்து, அதற்கடுத்த நூற்றாண்டில் மூன்று முக்கிய திருத்தப்பட்ட எழுபதுநூல் கிரேக்க விவிலியப் பதிப்புகள் வெளியிடப்பட்டன. (1) செசரையா நகரைச் சார்ந்த யுசேபியு என்பவர், தன் நண்பர் பாம்பிலுஸ் என்பவரின் உதவியுடன், ஓரிஜன் எழுதிய ஆறுபடிவ விவிலியத்தின், ஐந்தாவது பத்தியிலிருந்த எழுபது நூலை மட்டும் பிரித்தெடுத்து, அதனை 50 பிரதிகள் செய்தார். இது கான்ஸ்டன்டைன் என்ற அரசனுக்காகச் செய்யப்பட்டது. இதில் பக்கங்களின் ஒரத்தில் மற்ற மொழிபெயர்ப்புகளில் காணப்பட்ட வேறுபட்ட வாசகங்களைத் தந்திருக்கிறார். (2) சமோஸ்தா நகரைச் சார்ந்த லூசியன் என்பவர் எழுபது நூல் கிரேக்க விவிலியத்தைத் திருத்தி வெளியிட்டார். இவரது திருத்தத்தில் இவரின் ஒரு தனிப்பட்ட குணத்தை நாம் காண முடிகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட சொல்லிற்கு இணையான மற்றொரு சொல், மற்றக் கிரேக்க மொழி பெயர்ப்புகளிலிருந்து காணப்பட்டால், அச்சொல்லையும் அதேயிடத்தில் இணைத்து எழுதியிருக்கிறார். இவர் அந்தியோக்கியா நகரில் குருவாக இருந்தவர். நிக்கோமெதியா என்ற இடத்தில் மறைசாட்சியாகத் தன் இன்னுயிரை ஈந்தார். (3) எகிப்து நாட்டில் ஆயராக இருந்த கெசிகியுசு என்பவரும் எழுபதுநூல் கிரேக்க வேதாகமத்தைப் பதிப்பித்துத் திருத்தி வெளியிட்டார். இவரைப்பற்றி யுசேபியு தன் வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார். இவரும் மறை சாட்சியாகவே இறந்திருக்கிறார்.

மேற்கண்ட மூன்று எழுபதுநூல் கிரேக்க வேதாகமங்களும், தங்களுக்கென்று தனித் தனி நாடுகளைப் பிடித்துக் கொண்டன. அங்கு அவைகள் மக்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. யுசேபியுவும் பாம்பிலகம் சேர்ந்து வெளியிட்ட பதிப்பு பாலஸ்தீன நாட்டில் பயன்படுத்தப்பட்டது. லூசியன் வெளியிட்ட பதிப்பு, அது வெளியான அந்தியோக்கியா நாட்டில் மட்டுமல்லாமல், கான்ஸ்டான்டிநோபிள், சிறிய ஆசியா ஆகிய இடங்களிலும் பயன்படுத்தப்பட்டது. கெசிகியுசு வெளியிட்ட திருத்தப்பட்ட எழுபதுநூல், எகிப்து நாட்டில் பயன்படுததப்பட்டது.

மேற்கூறப்பட்டுள்ளவை, விவிலியத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பின் ஒரு சுருக்கமான வரலாறுதான். எதுதான் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க விவிலியம் என்று ஆராய்ந்தால் அதில் பல சிக்கல்கள் மறைந்திருக்கின்றன. தற்போது நமக்குக் கிடைக்கும் எழுபதுநூல் பழம் ஏடுகள், காலப்போக்கில் பல முறை திருத்தப்பட்ட வசனங்களின் கலப்புத்தான் என்று சொல்ல வேண்டும்.

நமக்குக் கிடைக்கும் பழம் ஏடுகளை, மற்ற மறைத்தந்தையர்கள் எழுதிய மற்றப் புத்தகங்களோடு கவனமாக ஒப்பிட்டுப் பார்த்துத்தான், இக்குறிப்பிட்ட ஏடு, இவர் செய்த பதிப்பின் படிவம் என்று கூற முடியும். எனவே நமக்குக் கிடைக்கும் ஏடுகளையெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்து, ஒப்புமை செய்துதான், எது முதலில் செய்யப் பட்டது, எது எதைச் சார்ந்தது என்ற வர

லாற்றை நாம் முறையாகத் தொகுக்க முடியும்.

இந்தக் கிரேக்க மொழிபெயர்ப்பு காலப் போக்கில் தொடர்ந்து திருத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால் மூலமொழி எபிரேய விவிலியத்துடன் ஒப்பிட்டு பார்க்கிறபோது சரியான மொழிபெயர்ப்பின்மையை எப்போதுமே காண முடியும்.

அத்துடன் கிரேக்க மொழி பேசிவந்த யூதர்களிடம் ஒருபழக்கம் இருந்து வந்திருக்கிறது. அதாவது, அவர்களின் செபக்கூட வழிபாட்டிற்காக, அவரவர் நினைத்ததைப் போல் கவனமின்றி மொழிபெயர்ப்பு செய்யும் வழக்கம் உண்டு. இந்த வழக்கத்தின் பின்னணியில் பார்த்தால், நாம் மேற்கண்டவாறு, எழுபதுநூல் கிரேக்க விவிலியம் எகிப்தில் முறையுடன் தயாரிக்கப்பட்டது என்று சொல்ல முடியாது. மாறாகப் பலவிடங்களில், பலவிதமாக வழங்கப்பட்ட மொழிபெயர்ப்புகளைச் சேர்த்து இணைக்கப்பட்டதாகும் என்றுதான் சொல்ல வேண்டும். எனவே முதலில் ஆக்கம் செய்யப்பட்ட கிரேக்க விவிலியம் எது என்று கண்டுபிடிப்பது,ஆராய்ச்சியாளர்களின் கடும் பணியாக விளங்குகிறது.

கிரேக்க மொழி பேசும் யூதர்கள் (HELLENIST)

இவர்கள் அ.ப.6:1; 9:29-இலும், சிறிது மாறுபட்டவிதத்தில் 11:20-இலும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் எபிரேயர்களிடமிருந்து அதாவது எபிரேயம் அல்லது அராமேயம் பேசும் யூதர்களிடமிருந்து வேறுபடுத்தப்படுகின்றனர். இரண்டு குழுக்களிடையே நிலவிய பதட்ட நிலையை அ.ப.7-உம் மற்றப் பகுதிகளும் பிரதிபலிக்கின்றன. இந்நிலை புறவினத்தாரைத் திருச்சபைக்குள் சேர்ப்பது பற்றிய பிரச்சனையைச் சந்தேகமின்றி மிகைப்படுத்தியது (அ.ப.15; கலா 1-2). அ.ப.2:5-6-இன்படி எருசலேமில் தங்கியிருந்த வேற்றுநாட்டில் பிறந்த யூதர்கள் பல்வேறு மொழிகளைப் பேசினர். முதல் நூற்றாண்டில் இவர்கள் கிரேக்க மொழி பேசினார்கள். ஏனென்றால் மேற்காசிய நாடுகள் முழுவதிலும் (அ.ப.2:9 குறிப்பிடும் நாடுகள் உதாரணங்களாகும்) கிரேக்கம் பொதுவாகப் பேசப்பட்ட மொழியாகும். ''ஹெல்லேனியர்கள்'' என்ற சொல்லுக்குப் 'புறஇனத்தவர்கள்' என்று பொருள் கொள்வதைவிட ''அந்நியர்கள்''என்று கொள்வது மேலாகும்.

''கிரேக்கர்கள்'' என்றால் 'யூதரல்லாதவர்கள்' என்று சொல்வது பல காரணங்களில் பொருத்தமில்லாததாகும். அவற்றில் சில: அ) அ.ப.1-5 கருத்துக்கள் எருசலேமிலுள்ள யூதர்கள் மத்தியிலும் திருச்சபை பரவியது என்று கூறுகின்றன. ஆ) பந்தியில் பரிமாறும் பிரச்சனை வருகிறது என்றால் ''கிரேக்கர்கள்'' ஒரு பெரிய குழுவாக இருந்திருக்கவேண்டும் என்பதைத்தான் குறித்துக்காட்டுகிறது. இ) பிலோ எபிரேயர்களுக்கும் ''நமக்கும்'' அதாவது கிரேக்கம்பேசும் யூதர்களுக்கும் என்று பிரித்துக் காட்டுகிறார். ஈ) கொய்னே கிரேக்க மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட கிறிசோஸ்தோம் என்பவர் ''ஹெல்லேனியர்கள்'' என்றால் 'கிரேக்க மொழி பேசும் யூதர்கள்' என்று தெளிவாகக் கூறியிருக்கிறார். உ) புறஇனத்தாரின் மனந்திருப்புதல் (அ.ப.10:45; 15:3) புதிய ஒன்றை எடுத்துக் கூறுகிறது. ஊ) யூதச் சட்டமும் விருத்தசேதனமுமின்றிப் புறஇனத்தவர் திருச்சபையில் சேர்வது பற்றிய பிற்காலப் பிரச்சனை தொடக்கத்திலிருந்தே திருச்சபையில் இருந்திருந்தால், சிக்கல் மிக்கதாய் இருந்திருக்கும்.

கிரேக்கர்கள் (GREEKS)

கிரீசு என்ற சொல்லானது கி.மு.700-க்குப்பின் ஒரு பொதுவான மொழி, சமயம், பண்பாடு,கலை, இலக்கியம் போன்றவைகளைக் கொண்டிருந்த மாநிலங்கள், நகர்கள், மக்கள் குழுக்களைக் குறிக்கக் கிரேக்கர்களால் பயன்படுத்தப்பட்டது. உலகத்தில் உள்ள மற்ற மக்களும், மற்ற நாடுகளும் அயல் நாட்டவராக எண்ணப்பட்டனர். உலகிலே சிறந்த பண்பாடுகளைக்கொண்ட நாகரிகமுள்ள மக்கள் கிரேக்கர்கள் தாம் என்று

அவர்களிடையே நிலவிய தந்நம்பிக்கைக்கும், தாங்கள் தேந்தெடுக்கப்பட்ட மக்கள் என்று யூதர்கள் கொண்ட தந்நம்பிக்கைக்கும் தொடர்பிருக்கின்றது., கிரேக்கர்களின் பெருமையும், மகத்துவமும் இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அல்லது இறைவெளிப்பாட்டை உணர்ந்தவர்கள் என்பதிலோ, மற்றும் எந்தச் சமய காரியங்களின் அடிப்படையிலோ அமையவில்லை. மாறாகக் கலை, இலக்கியம், தத்துவம் போன்ற துறைகளில் அவர்கள் கொண்ட முன்னேற்றத்தில்தான் அவர்களது பெருமையும், மாண்பும் அடங்கியிருந்தது.

கிரேக்கர்களின் பண்பாட்டின் சிறப்பினை அவர்கள் கொண்டிருந்த நகர அமைப்பு, சமூக அமைப்பு ஆகியவற்றிலிருந்து அறியலாம். அலக்சாந்தரின் மாபெரும் வெற்றிக்குப்பின் 'கிரேக்கர்' என்ற சொல்லானது கிரேக்கமொழி பேசிய அனைவரையும், கிரேக்கப் பண்பாட்டை நாகரீகத்தைப் பின்பற்றிய எல்லா மக்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. மேற்காசியப் பகுதிகளில் வளர ஆரம்பித்த கிரேக்கப்பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் ஆகிய அனைத்தும் யூதர்களையும் பாதிக்க ஆரம்பித்தது. இத்தகைய பரந்த கண்ணோட்டத்தில் 'கிரேக்கர்' என்ற சொல் விவிலியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்பணி, உரோமையர், கொரிந்தியர், கலாத்தியர், கொலோசேயர் போன்ற திருமுகங்களில் இவ்வார்த்தையானது பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுல் தனது நற்செய்தி அறிவிப்புப் பயணங்களின்போது ஒவ்வொரு நகரத்திலும் முதலில் யூதர்களிடமும், பின் கிரேக்கர்களிடமும் பேசினாரென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இங்குக் கிரேக்கர்கள் என்பது யூதர்கள் அல்லாத எல்லா மக்களையும் புதிதாக யூதமதக் கோட்பாடுகளை, கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்களையும் குறிக்கின்றது *(அ.ப.11:20; 14:1; 18:4; 19:10.17; 20:21; உரோ 2:9; தொ; 1 கொரி 1:24; 10:32)*. ஞானத்தைப் பெற ஆவல் கொண்டவர்கள் அதாவது தத்துவ இயலிலும் இலக்கியத்திலும் ஆர்வம் கொண்டவர்கள் என்று பவுல் கூறுகின்றார் *(1 கொரி 1:18-2:16)*.

சிலுவையைப் பற்றிய செய்திகள் எல்லாம் மடமையானது என்று எண்ணுபவர்கள் கிரேக்கத் தத்துவ ஆசிரியர்கள். பவுல் கிரேக்கர்களின் அப்போஸ்தலராக இருந்தபோதிலும், யூதன் என்ற முறையில் மீட்பு யூதர்களுக்கு மட்டும்தான் என்ற குறுகிய கண்ணோட்டத்தை நன்கு உணர்ந்திருந்தார். பின் புறவினத்தாருக்கு நற்செய்தி அறிவிப்பதே தனது பணி என்று உணர்ந்து, உழைக்க ஆரம்பித்த பவுல் நற்செய்தியானது மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் ஆற்றல் மிக்க கருவி என்று உணர்ந்தார். இயேசு கிறிஸ்துவில் மீட்புப்பெற யூதனென்றோ; கிரேக்கனென்றோ வேறுபாடு இருக்கத் தேவையில்லை என்று ஏற்றுக்கொண்டார் *(உரோ 19:12)*. எனவே கிறிஸ்தவ சமூகத்தில் இந்த இரண்டு குழுக்களிடையே காணப்படும் வேறுபாடுகள் ஒழித்துக் கட்டப்படவேண்டும் *(கலா 3:28; கொலோ 3:11)*. ஏனென்றால் யூதராயினும் கிரேக்கராயினும் நாம் அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாகத் திருமுழுக்குப் பெறுகின்றோம் *(1 கொரி 12:13)*. எருசலேம், தமஸ்கு நகர்களில் வாழ்ந்து கொண்டு கிரேக்கமொழிபேசும் யூதர்கள் கிரேக்கமொழி பேசுவோர் என்று அழைக்கப்பட்டார் *(அ.ப.6:1; 9:29)*

கிரேசெக்கு (CRESCENS — வளர்ச்சியடைகிறது, பெருகுகிறது)

பவுல் சிறைப்பட்டிருந்த ஒரு சமயத்தில் கிரேசெக்கு அவருடைய தோழராக இருந்தார் *(2 திமோ 4:10)*. திமோத்தேயு திருமுகம் எழுதப்பட்டபோது, இவர் கலாத்தியாவுக்குச் சென்றுவிட்டார். இவர் சென்றதற்குக் காரணம் கூறப்படவில்லை.

கிரேத்து (CRETE)

கிரேக்க நாட்டிற்குத் தென் கிழக்கில் மத்திய தரைக்கடலில் உள்ள ஒரு பெரிய தீவு.

கி.மு.இரண்டாம் ஆயிரமாண்டு மத்தியில் மிகவும் வளர்ச்சியடைந்த மினோவான் நாகரீகம் இங்குச் சிறந்து விளங்கியது. இதை அக்காதியர்கள் கப்தாரா என்றும், எகிப்தியர்கள் கெப்டியு என்றும் எபிரேயர்கள் கப்பதோர் என்றும் அழைத்தனர். கி.மு.2-ஆம் நூற்றாண்டில் யூதர்கள் இங்குக் குடியேறினர். யூதமக்கள் நல்லமுறையில் கவனிக்கப்படவேண்டும் என்று உரோமைய அதிகாரி உலூக்கியு கிரேத்துவிலிருந்த கோர்த்தீனா என்ற நகருக்குக் கடிதம் எழுதினார் (1 மக் 15:23). எருசலேமிற்கு வந்த யூதர்களின் இடங்களில் கிரேத்தும் ஒன்றாகச் சொல்லப்பட்டுள்ளது (அ.ப.2:11). பவுல் உரோமைக்குச் சென்றபொழுது கிரேத்துத் தீவின் கரையோரம் சென்றார் (அ.ப.27:7-21). கீழ்த்தரமான வாழ்க்கைமுறை இங்கு இருந்தாலும், இந்தத் தீவில் கிறிஸ்துவ மதம் ஆரம்பத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. வேலைகளைக் கண்காணிக்கவும், யூத மயமாக்கும் போக்கை எதிர்த்துப் போராடவும் தீத்து இங்கு நியமிக்கப்பட்டார்.

கிரேனியு (QUIRINIUS)

இவர் இயேசு பிறந்தபோது, மக்கட் கணக்கெடுப்பு நடந்த சமயத்தில் சீரியாவின் ஆளுநராக இருந்தவர் (லூக் 2:1-3:1). தாசித்தசிடமிருந்தும், சில கல்வெட்டுகளிலிருந்தும் இவரைப்பற்றி நாம் அறிந்து கொள்கிறோம். இவரது முழுப்பெயர் சல்பிசியுஸ் கிரேனியு ஆகும். இவர் செனட்டராகவும், கிரேத்து, சீரேனேஆகியவற்றில்ஆளுநராகவும்கி.பி.6-7-இல் சீரியாவில் உரோமைப் பிரதிநிதியாகவும், சிலகாலம் பணியாற்றியுள்ளார். யோசிப்பஸ் இவரது ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புப்பற்றிக் குறிப்பிடுகிறார்.ஆனால் இயேசு பிறந்தது இதற்கு மிகவும் முந்திய காலமாதலால் இதனோடு ஒத்துப் போகவில்லை. அப்படி இருக்க வேண்டுமெனில் கிரேனியு ஆண்டகாலம் இயேசு பிறந்தபோது இருந்திருக்க வேண்டுமெனக் கொள்ளவேண்டும். ஆனால் அப்படி ஏதும் எக்குறிப்பிலுமில்லை. சீரியாவின் பிரதிநிதிகள் பற்றி கி.மு.9-1 வரை உள்ளவர்களின் வரிசையில் யோசிப்பஸ் குறிப்பிடுவதில் கிரேனியு இல்லை. புதிய ஏற்பாட்டில் 'ஆளுநர்' என்ற சொல் ஏதாவது ஒரு அலுவலரைக் குறிப்பதாகப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட சொல்லேயெனச் சிலர் கருதுகின்றனர்.ஆனால் கிரேனியு ஆளுநராக இல்லாமல், சீரியாவை நிர்வகித்தார் என்பது ஏற்றுக்கொள்ளவியலாத ஒன்றாகும்.

கிர்பெத்து கும்ரான் (KHIRBET QUMRAN)

சாக்கடலுக்கு அருகில் இருந்த கும்ரான் சந்நியாசிகளின் இருப்பிட அழிவுச் சின்னங்கள். இது சாக்கடலின் மேற்குக் கரையிலும், எரிகோவிலிருந்து 13 கி.மீ.தொலைவிலும் உள்ளது. காண்க: எஸ்ஸேனியர்; உப்பு நகர்; சாக்கடல் ஏடுகள்.

கிர்பெத்து — கேராக்கு (KHIRBET KERAK — அரணில் எஞ்சியுள்ளவை)

கலிலேயக் கடலின் தென்கரைப் பகுதியிலும், யோர்தானுக்கு மேற்கு வாய்ப்பகுதியிலும் உள்ள ஒரு முக்கிய புதைபொருள் ஆராய்ச்சிக்குரிய இடம். இந்த இடமானது பாலஸ்தீனத்திலிருந்து தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இது வணிகத் துறையில் ஒரு முக்கிய இடத்தை வகித்தது.

இந்தக் குன்றானது அறுபது ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டது. 1944-55 ஆண்டுகளில் இங்குப் புதைபொருள் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆராய்ச்சியின்படி இவ்விடத்தில் மக்கள் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தனர். பின்பு பாரசீகர் காலம் வரை இங்கு மக்கள் வாழவில்லை. எனவே பழைய ஏற்பாட்டில் இவ்விடம் குறிப்பிடப்படவில்லை. கிரேக்கர்களின் காலத்திலே இந்த இடத்தில் அழகிய மதில் சூழந்த நகர் ஒன்று கட்டப்பட்டது. இந்த நகரிலே அழகான வண்ணம் பூசப்பட்ட சுவர்களுடைய வீடுகள் இருந்தன. உரோமையர் காலத்தில் இங்கு ஓர் அரணும் நீச்சல் குளமும் கட்டப்பட்டன.

கிலயாத்தின் பொன்மெழுகு (BALM OF GILED)

மருத்துவப் பண்புகளுடைய ஒரு பொருள். எரே 8:22; 46:11-இல் குறிக்கப்படு

கிறது. இது ஒரு வேளை கிலயாத்தில் செய்யப்பட்டிருக்கலாம். அல்லது இப்பகுதியிலிருந்து எகிப்திற்கும் (ஆதி 37:25), பெனிக்கியாவிற்கும் (எச 27:17) ஏற்றுமதியாகி இருக்கலாம். எந்தச் செடியிலிருந்து இந்த வாசனைப் பிசின் செய்யப்பட்டது என்று அடையாளம் காட்ட முடியவில்லை.

கிலயாத்து (GILEAD — கற்களின் சின்னம்) — ஆள்.

1. கிலயாத்து என்பவர் மாக்கிரின் புதல்வரும் மனாசேயின் பேரனுமாவார் (எண் 26:29-30; 27:1; 36:1; யோசு 17:1.3; நீதி 5:17; 1 நாளா 2:21.23; 7:14.17). ஆனால் பொதுவாகக் கொடுக்கப்படும் பெயர்கள் ஆளைக் குறிக்கிறதா அல்லது குலத்தையோ ஓர் இடத்தையோ குறிக்கிறதா என்று அறிவது கடினம். நீதி 5:17-இன்படி கிலயாத்து யோர்தானுக்கு அப்பாலேயே தங்கியிருந்தார். சிசராவுக்கு எதிரான போரில் தெபோரா, பாராக்கு ஆகியோருடன் சேரவில்லை. இது அப்போது இந்த இனத்தில் நிலவிய அமைதியின்மையைச் சுட்டலாம். கிலயாத்து இனத்தின் இடத்தைக் காது இனம் எடுத்துக்கொண்டது.

2. கிலயாத்து இபிதாகுவின் தந்தையாவார் (நீதி 11:1-2).

3. கிலாயாத்திலுள்ள காதின் எல்லையில் வாழ்ந்த ஒரு குடும்பம் அல்லது இனம். (1 நாள் 5:14).

கிலயாத்து (GILEAD) — இடம்

அ. யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு நகரம், ஒரு குலம் அல்லது ஒரு பகுதியின் பெயராகும்.

கிலயாத்து என்ற வார்த்தையானது கலியேது என்ற சொல்லில் இருந்து வந்ததாக விவிலியம் கூறுகின்றது. கிலயாத்து என்றால் கரடுமுரடான பகுதியாகும் என்பது பொருள். இந்நகரம் 'தீயவர்களின் நகரம்' என்று கூறப்பட்டுள்ளது (ஓசே 6:8). தெபோராவின் பாடலில் (நீதி 5:17) கிலயாத்து என்பது ரூபன், தாண் போன்ற கோத்திரங்களுக்கு இணையானதாகவும், காது கோத்திரத்திற்குச் சமமாகவும் கருதப்படுகிறது.

கிலயாத்து என்பது குறுகிய பொருளில் தெற்கே ஆர்னோனாலும், மேற்கே யோர்தான் பள்ளத்தாக்காலும் கிழக்கில் யோபோக்கின் தெற்கு-வடக்குப் பகுதியாலும் பாலைவனத்தாலும் வடக்கில் யார்முக்கு ஓடையாலும் சூழப்பட்ட பகுதியாகும். பரந்த பொருளில் கிலயாத்தின் நிலப் பகுதி வடக்கே பாசானுக்குள்ளும், யார்முக்கிற்கு அப்பாலும் விரிந்து செல்கின்றது. கிலயாத்து யோர்தான் பள்ளத்தாக்கில் உயரமாக உள்ள உயர்ந்த நிலப்பகுதியாகும். இங்கு யாபோக்கு ஆறு கிழக்கு மேற்காக ஓடுகின்றது.

ஆ. வரலாறு:-

கி.மு.23-ஆம் நூற்றாண்டிலிருந்து கிலயாத்தின் வடபகுதியில் மக்கள் தங்கி வாழ ஆரம்பித்தனர். ஆனால் தென்பகுதியில் யாபோக்கிற்குக் கீழே கி.மு.20 முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் அதிகமாகக் குடியேறவில்லை. இஸ்ராயேல் மக்கள் இவ்விடத்தில் நுழைவதற்குச் சிறிது முன்னால் அங்கு எமோரியர்களும், மோவாபியர்களும் வாழ்ந்து வந்தனர். பின் இஸ்ராயேல் மக்கள் மோசேயின் தலைமையில் எமோரியர்களை வெளியேற்றிவிட்டு அப்பகுதியை ரூபன், காது, மனாசே போன்ற கோத்திரத்தாருக்குக் கொடுத்தனர் (எண் 21). கானானைக் கைப்பற்றியதற்குப்பின் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த கோத்திரங்கள் அனைத்தும் பாதுகாப்புடன் வாழ்ந்துகொண்டு, மேற்குப் பகுதியில் சிசராவிற்கு எதிராகப் போரிட்டுக் கொண்டிருக்கும் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு உதவ மறுத்துவிட்டனர் (நீதி 5:16-17). விரைவில் அவர்கள் கிழக்கிலிருந்து வந்த பகைவர்களால் தாக்கப்பட்டனர். சிறிது காலத்திற்கு மிதியானியர்கள் அமலேக்கியர்களுடன் சேர்ந்து இந்தப் பகுதியைக் கைப்பற்றினர். கிதயோனால் இப்படையெடுப்பு நீக்கப்பட்டது (நீதி 6-7). பின் அரை நூற்றாண்டு கழித்து அம்மோனியர்களால் இந்நகரம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்

டது. இதனால் கிலயாத்திலுள்ள மூப்பர்கள் இபிதாகுவிடம் சென்று தங்களை இந்த அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர் (நீதி 10-11).

அம்மோனியர்களை இபிதாகு வெற்றி கொண்டாலும் அவர்களிடமிருந்து ஆபத்து தொடர்ந்து இருந்து கொண்டு இருந்தது. சவுல் அரசரானபின் முதல்செயல் அம்மோனியர்களின் அரசராகிய நாகாசிடமிருந்து யாபேசு-கிலயாத்தை மீட்பதற்காக அம்மன்னனை எதிர்த்துப் போரிட்டதாகும் (1 சாமு 11). சவுல் தோற்கடிக்கப்பட்டுப் பெலிஸ்தியர்களால் கொலைசெய்யப்பட்டபோதிலும், அபினேர் என்பவர் சவுலின் மகனான இசிபாகால் என்பவனுக்குக் கிலயாத்தில் ஓர் அரசாட்சியை அமைத்துக் கொடுத்தார் (2 சாமு 2:8-9). இவருக்குப்பின் அரசராக வந்த தாவீது மீண்டும் ஒருமுறை அம்மோனியர்களை எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது (2 சாமு 8:12; 10:1-17); அபிசலோமின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சி ஓடிவந்த தாவீது கிலயாத்தில் அடைக்கலம் புகுந்தார். பின் கிலயாத்தில் இருவருக்கும் பெரிய போர் நிகழ்ந்தது. அதில் அவர் வெற்றியடைந்து மீண்டும் அரியணை ஏறினார் (2 சாமு 15-19).

கி.மு.ஒன்பதாம் எட்டாம் நூற்றாண்டில் சீரிய அரசாட்சிப் பகுதியாகிய தமஸ்குவில் புதிய கிளர்ச்சி உருவாகி அது கிலயாத்தை "இருப்புருளையில் வைத்து ஆட்டியது" (ஆமோ 1:3). இந்த ஆட்சிப்பகுதியில் நடந்த போர்களில் சீரியா முதலிலும், இஸ்ராயேல் பின்னும் வெற்றிகொண்டன. ஏகூவின் ஆட்சிக்காலத்தில் கசயேலால் இந்த ஆட்சிப்பகுதியானது இஸ்ராயேலின் கையிலிருந்து எடுக்கப்பட்டது (2 அர 10:32 தொ). யோவாசு, இரண்டாம் எரோபயாமின் காலத்தில்தான் இஸ்ராயேலரால் இப்பகுதி மீண்டும் கைப்பற்றப்பட்டது. இந்த அழிவின் விளைவாகவும் அசீரிய ஆதிக்க எழுச்சியின் காரணமாகவும் கிலயாத்தில் பிளவு ஏற்பட்டது. ஒருகட்சி, சீரியாவோடு சேர்ந்து அசீரியாவை எதிர்க்க விரும்பியது. யாபேசின் மகன் சல்லூம் ஏகூவின் ஆட்சி மரபை அகற்றினார். அவரும் ஒரு மாதத்திற்குள் அசீரியர்களுக்குச் சார்பான கட்சியைச் சேர்ந்த மெனகேமால் கொல்லப்பட்டார் (2 அர 15:10-14). பின் இரமலியாவின் மகன் பெக்கா ஆட்சிக்கு வந்தார். அவருக்கு அளிக்கப்படும் இருபது ஆண்டு ஆட்சி (2 அர 15:27) காலவரைக் கணிப்போடு ஒத்துப்போகவில்லை. இவர் தனக்கு முந்திய அரசனைக் கொன்று ஆட்சிக்கு வந்தபோது, ஏற்கெனவே பெக்கா சுதந்தர ஆட்சியைக் கிலயாத்தில் ஏற்படுத்தியிருக்கவேண்டும். இவர் அசீரியர்களுக்கு எதிராகச் சுற்றியுள்ள பகுதிகளையெல்லாம் ஒன்று திரட்டினார். இதன் விளைவு 734-இல் இப்பகுதியில் மூன்றாம் திகிலாத்து பிலேசர் என்பவரால் இஸ்ராயேலரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அசீரிய மாகாணத்தோடு சேர்க்கப்பட்டது (2 அர 15:29). கிலயாத்திலுள்ள இஸ்ராயேலர் அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

மக்கபேயர்களின் காலத்தில் கிழக்குப் பாலஸ்தீனத்திலிருந்த யூதர்களைப் புறவினத்தாரிடமிருந்து காப்பாற்றுவதற்காக யூதா என்பவரால் கிலயாத்தில் இராணுவத்தளம் அமைக்கப்பட்டது. இராணுவம் வெற்றி கண்டபின் கிழக்குப் பாலஸ்தீனத்தில் இருந்த யூதர்களை மேற்குப் பாலஸ்தீனத்திற்கு மாற்ற யூதா தீர்மானித்தார் (1 மக் 5:9-54).

கிலயாபு (CHILEAB — தந்தையைப் போன்ற)

கிலயாபு தாவீதின் இரண்டாவது மகன். கெபிரோனில் நாபாலின் விதவை அபிகாயிலுக்குப் பிறந்தவர் (2 சாமு 3:3). 1 நாள் 3:1-இல் இவர் தானியேல் என்று அழைக்கப்படுகிறார்.

கிலலாய் (GILALAI - கனமான)

கி.மு.6-ஆம் நூற்றாண்டில் எருசலேம் மதில் மீண்டும் கட்டப்பட்டு அர்ப்பணம் செய்த நாளில் இசை மீட்டிய பெரும் இசை வல்லுநர் (நெக 12:36).

கிலிக்கியா *(HILKIA - யாவே என் பாகம் ஆவார்)*

1. எசக்கிய அரசனின் அரண்மனை மேலதிகாரியான எலியாக்கிமின் தந்தை (2 அர 18:18.26; ஏச 22:20; 36:3).

2. சல்லூமின் மகன். யோசியா அரசன் காலத்திய பெரிய குரு. திருச்சட்ட நூலைக் கோயிலில் கண்டெடுத்தவர். அரசனது மதச் சீர்திருத்தங்களுக்கு உதவிசெய்தவர் (2 அர 22:4-14; 1 நாள் 6:13; 2 நாள் 34:9-22; 35:8). எஸ் 7:1-இன் படி எஸ்ராவின் முன்னோர். ஒரு பாரம்பரியம் இவரை எரேமியாவின் சகோதரர் என்றழைக்கிறது.

3. அம்சியின் மகன். மெராரியின் வழிவந்த லேவியர் (1 நாள் 6:45).

4. கோசாவின் மகன்; மெராரி வழிவந்த லேவியர். தாவீது காலத்தவர் (1 நாள் 26:11).

5. எஸ்ரா திருச்சட்டத்தை மக்கட்கூட்டத்தாரின் முன் வாசித்தபோது பக்கக்கில் இருந்தவர்களுள் ஒருவர். ஒருவேளை குருகுலத்தைச்சாராத சாதாரண மக்களில் ஒருவராக இருக்கலாம் (நெக 8:4).

6. நாடு கடத்தலுக்குப் பிறகு செருபாபேலோடு திரும்பி வந்தவர்களில் குருக்களுக்குத் தலைவர் (நெக 12:7); நாடு கடத்தலுக்குப் பிந்தைய காலத்திலிருந்த குருகுல வீட்டாரையும் குறிக்கலாம் (12:27). அறிஞர் சிலர் இவரரையும் 5-இல் குறிக்கப்பட்டவரையும் ஒரே ஆளாகக் கருதுகின்றனர்.

7. அனதோத்தைச் சேர்ந்த குரு. இறைவாக்கினர் எரேமியாவின் தந்தை (எரே 1:1).

8. கெமரியாவின் தந்தை. செதேக்கியா பாபிலோனிய அரசனாகிய நெபுக்கதுனேசாரிடம் அனுப்பிய தூதர் (எரே 29:3).

9. எரேமியாவின் ஊழியன் பாரூக்கின் முன்னோர் (பாரூ 1:1).

10. சூசன்னாவின் தந்தை (தானி 13:23.63). சிலர் இவரை 2-இல் கூறப்பட்டவரோடு ஒரே ஆளாகக் கருதுகின்றனர்.

கிலிமாது *(CHILIMAD - மூடப்பட்ட).*

அசூர் என்ற இடத்திற்கு அடுத்துக் கூறப்படுகின்ற ஓர் இடத்தின் பெயர். இது தீரோடு வியாபாரம் செய்தது (எச 27:23). இது இப்பொழுது பாக்தாத் என்று அழைக்கப்படும் இடத்தின் அருகே அடையாளம் காட்டப்படுகிறது.

கிலியாசம் *(CHILIASAM)*

இது 'ஆயிரம் ஆண்டுக்காலம்' என்ற பொருளைக் குறிக்கின்ற ஒரு சொல். குறிப்பாக ஆயிரமாண்டுக்காலம் பற்றிய ஆதிக் கிறிஸ்தவர்களின் கொள்கையைக் குறிக்கும் சொல். இக் கொள்கை பருப்பொருள் சார்ந்த புலன்சார்ந்த இன்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால், இகழ்ச்சிக்குரியதாயிற்று.

கிலியோன் *(CHILION - சோர்வு, அழிந்து போதல்)*

இவர் மோவாபு நாட்டில் குடியேறச் சென்ற எலிமெலக்கு நகோமி என்பவர்களுக்குப் பிறந்த இளைய புதல்வன். இவர் ஓர்பா என்ற மோவாபிய பெண்ணை மணந்து கொண்டார் (ரூத் 1:2தொ; 4:9). இவரது சகோதரன் மகலோனைப்போல் இளம் வயதிலேயே மரித்துத் தன் மனைவியை விதவையாக்கினார் (1:5).

கில்கால் *(GILGAL - கற்களின்வட்டம்)*

இந்த இடத்தின் புவியியல் அமைப்பு இன்னும் முழுமையாகத் தெரியவில்லை. இப்பெயர் பல இடங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

1. எரிகோவுக்கு அருகில் ஓர் இடம் (யோசு 4:19). கானானை இஸ்ராலேயர் கைப்பற்றியபோதும், அரசாட்சியின் தொடக்க காலத்திலும் சிறப்புப் பெற்றிருந்தது. இது இருந்த இடம் உறுதியாக அறியப்படவில்லை. ஆயினும் தேல் எல்சுல்தானுக்குத் தென்கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து ஏன்-நித்திலேதான் என்று சில

ரும், தேல் எஸ்-சுல்தானுக்கு வடக்கே 2 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து மெபர் தான் என்று வேறுசிலரும், அடையாளம் காட்டுவர்.

இஸ்ராயேலர் ஆயியையும் எரிக்கோவையும் தாக்குமுன் இங்குக் கூடாரம் அடித்துத் தங்கினர். யோர்தானிலிருந்து கொண்டு வந்திருந்த பன்னிரண்டு கற்களை யோசுவா இங்கு நாட்டினார் (யோசு 4:19-20). எகிப்திலிருந்து வந்தவர்களுக்குப் பிறந்தவர்களுக்கு இங்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது (5:3). இச்செயலால் ''உங்கள்மேல் இருந்த எகிப்தின் பழியை இன்று நீக்கிவிட்டோம்'' என்று ஆண்டவர் அறிவிக்கிறார். ஆகவே இந்த இடம் கில்கலா என்றழைக்கப்படுகிறது என்று பொதுப்பணிச் சொல்லிலக்கணம் இப்பெயருக்கு அளிக்கப்படுகிறது (5:9).

இஸ்ராயேல் தொடக்க வரலாற்றில் பல முக்கிய நிகழ்ச்சிகள் கில்காலில் நிகழ்ந்தன. ஆயின் அழிவிற்குப்பிறகு கிபயோனியர் யோசுவாவை ஏமாற்றி அவரோடு இங்கு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர் (9:6). எருசலேம் அரசன் அதோனி சதேக்கு தங்களைத் தாக்கியபோது, யோசுவாவிடமிருந்து உதவி கேட்டனர் கிபயோனியர் (10:6-7.9.15.43). கில்காலில், யோர்தானுக்கு மேற்கேயுள்ள பகுதிகளைக் கோத்திரங்களுக்குள் யோசுவா பகிர்ந்தளித்தார் (14:6). உடன்படிக்கைக் கடமைகளை அனுசரிக்கத் தவறியதற்காக இஸ்ராயேலரைக் கண்டிக்க, கில்காலிலிருந்து ஒரு தூதர் பயணம் செய்தார் (நீதி 2:1). கில்காலுக்கு அருகில் பென்யாமின் இனத்தவராகிய ஏகூது மோவாபின் அரசன் எகிலோனின் கொலைகளிலிருந்து இஸ்ராயேலரை விடுவித்தார் (3:12-30).

இரு நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு சாமுவேலின் சுற்றுப்பயணம் பெத்தேல், கில்கால், மிசுப்பா ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது (1 சாமு 7:16). இஸ்ராயேலின் அரசனாகச் சவுலை அபிடேகம் செய்தபின், அவரைக் கில்காலுக்குச் செல்லுமாறு, சாமுவேல் பணிக்கிறார். அப்போது அது ஒரு முக்கியமான வழிபாட்டுத்தலமாகும். அங்குச் சவுல் அரசராக வெளிப்படையாக அறிவிக்கப்படுவார் (10:8; 11:14-15).

பெலிஸ்தியர்களின் கொடுமையிலிருந்து விடுதலை பெற இஸ்ராயேலர் கில்காலிலிருந்துதான் போராடினர் (13:2-4). சாமுவேல் தாம் வருமுன் பலிசெலுத்திய செயலுக்காகச் சவுலைக் கண்டித்து, அவரை ஆண்டவர் நிராகரித்துவிட்டார் என்று அறிவித்ததும் இங்குதான்.

அபிசலோமின் கிளர்ச்சி அழிக்கப்பட்டபின், எருசலேமைநோக்கி வந்து கொண்டிருந்த தாவீதை, யூதாவின் மக்கள் கில்காலில் சந்தித்தனர் (2 சாமு 19:15). கி.மு.8-ஆம் நூற்றாண்டில், அந்நிய அல்லது பதித வழிபாட்டுக்காகக் கில்காலைப்பற்றி ஓசேயாவும் (ஓசே 4:15; 9:15; 12:11), ஆமோசும் (ஆமோ 4:4; 5:5) மீக்காவும் (மீக் 6:5) வசைபாடுகின்றனர்.

புவியியல் சூழ்நிலை மட்டுமன்று, யோசு 4:19-உம் கில்கால் எரிக்கோவுக்கு அருகில் இருப்பதைக் காட்டுகின்றன.

2. எலியா,எலிசா ஆகியோரைப் பற்றிய கதை வட்டங்களில் கூறப்படும் பெத்தேலுக்கு வடக்கிலுள்ளது கில்கால். இருவரும் கில்காலிலிருந்து யோர்தானுக்குப் பயணம் செய்தனர். அங்கு எலியா சுழல்காற்றால் எடுத்துக் கொள்ளப்பட்டார் (2 அர 2:1). சுனாமியப்பெண்ணின் மகனை இறப்பிலிருந்து உயிர்ப்பித்தபின்னும், இறைவாக்கினர் குழுவினர் உண்டு கொண்டிருந்த கெட்டுப்போன உணவைத் தீமையற்றதாக்கியபின்னும், எலிசா கில்காலுக்குத் திரும்பினார்.

மலைப்பகுதியில் பெத்தேலுக்கு வடக்கே 13 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கில்கிலியே, கில்கால் இருந்த இடமாக இருக்கலாம்.

3. ஒருவேளை கலிலேயாவிலுள்ள ஒரு கானானிய நகரமாக இருக்கலாம் (யோசு 12:23). இங்குக் கில்காலுக்குப் பதிலாகக்

கலிலேயா என்று வாசிக்கவேண்டும் என்பர் அறிஞர் சிலர்.

4. எரிகோவுக்கும் எருசலேமுக்கும் இடையில் யூதாவின் எல்லையில் அதும்மீம் ஏற்றத்திற்கு எதிராக உள்ள இடம் (யோசு 15:7). யோசு 18:17-இல் இது கெலிலோத்து என்றழைக்கப்படுகிறது. அறிஞர் சிலர் இந்தக் கில்காலை, நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட பேத்து-கில்காலோடு ஒன்றாக்குகின்றனர் (நெக 12:29). இவ்விடம் பொதுவாக இக்காலக் கான் ஏல்-அக்மாராகக் கருதப்படும் (இது பாரம்பரியமாகக் கருதப்படும் நல்ல சமாரியன் சத்திரமாகும்). ஆனால் தொல்பொருள் ஆய்வுகள் 1.5 கி.மீ. மேற்கேயுள்ள அராகு ஏத்-தெபீரைச் சுட்டுகின்றன.

5. எருசலேமை முற்றுகையிடச் சென்ற வழியில் தெமேத்திரியு கடந்துசென்ற இடம் (1 மக் 9:2). ஒருவேளை எழுபதுநூலில் வரும் வாசகத்தில் இப்பெயர் கலிலேயா என்று வாசிக்கப்படவேண்டும் (யோசு 22:10).

கில்போவா (GILBOA — கொப்பளிக்கும் ஊற்றின்மலை) — மலை.

சவுல் பெலிஸ்தியர்களால் இங்குக் கொல்லப்பட்டார். மிதியானியர் ஓர் உயர்ந்த குன்றின் வடபக்கம் பள்ளத்தாக்கில் பாளையம் இறங்கியிருந்தனர். இங்குப் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் கிதியோனின் பாசறைகளைக் குறிக்கின்றது (நீதி 7:1). 1 சாமு 28:4; 2 சாமு 21:12-இலும் கில்போவா என்ற பெயர் 'குன்று' என்ற வார்த்தை இல்லாமல் வருவதால் இவ்வூரின் பெயர் அம்மலைக்குப் பெயராக வந்திருக்கலாம்.

யோர்தான் பள்ளத்தாக்கிலிருந்து இசிரியேல் சமவெளிக்கு இட்டுச்செல்லும் இரு பள்ளத்தாக்குகளில் ஒன்றின் அருகில் அமைந்திருந்ததால், இது போர் நடக்கும் இடமாக அடிக்கடி பயன்பட்டது. இந்த மலையில் உயரத்தைச் சாதகமாகக் கொண்டு, சவுல் பெலிஸ்தியர்களுக்கு எதிராகப் போரிட்டார் (1 சாமு 22:4). அதில் அவரும் யோனத்தான் உள்ளிட்ட அவருடைய மூன்று புதல்வர்களும் கொல்லப்பட்டனர் (1 சாமு 31:1.8; 1 நாள் 10:1.8). அருகில் இருந்த ஓர் அமலேக்கியன், காயம்பட்ட சவுலைக் கொன்றதாக ஒரு பாரம்பரியம் கூறுகிறது (2 சாமு 1:6.8-21).

சவுல், யோனத்தானுக்காகத் தாவீது பாடிய புலம்பல்பாடல் அவர்கள் இறந்த இடத்தைச் சபிக்கிறது: ''கில்போவாவின் குன்றுகளே பனியோ மழையோ உங்கள் மீது பொழியாதிருப்பதாக, உங்கள் வயல்கள் முதற் பலனைத் தராதிருப்பனவாக'', (2 சாமு 1:21).

கில்போவா, இசிரியேல் பள்ளத்தாக்கின் கிழக்கு ஓரத்திலுள்ள மலைத்தொடரிலுள்ள 529 மீட்டர் உயரமுடைய உச்சிமலையாகும். இசக்கார் பகுதியில் மோரே குன்றுக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இது பேத்து-சானுக்கு மேற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால ஏபேல் புக்குவா ஆக அடையாளம் காட்டப்படுகிறது. தெற்குச் சரிவிலுள்ள இக்காலக் கிராமமாகிய ஏல்போனில் பழங்காலப் பெயர் பாதுகாக்கப்படுகிறது.

கிழக்குக்கடல், கீழைக்கடல் (EAST SEA, EASTERN SEA)

ஒரு சில பிற்கால இறைவாக்குப் பகுதிகளில் இப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது (எச 47:18; யோவே 2:20; செ 14:8). இது ஐந்நூலிலும், யோசுவாவிலும் உப்புக்கடல் என்று அழைக்கப்பட்ட ஏரி; தற்பொழுது சாக்கடல் என்று அழைக்கப்படுகின்றது. இப்பெயர், பழங்கால இஸ்ராயேலின் கிழக்கு எல்லையில் கடல் இருந்த அமைப்பிலிருந்து பெறப்படுகின்றது.

கிழக்கு வாயில் (EAST GATE)

இவ்வாயிற்படி நெக 3:29-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நெகமியாவால் சீர்திருத்தப்பட்ட கட்டடங்களில் ஒன்றல்ல; ஒருவேளை ''யாவேயின் கோயிலின் கீழ்த்திசை வாயிற்படியாக'' இருக்கலாம் (எச 10:19; 11:1). ''கிழக்கு வாயிற்படி'' என்றும் இச்சொல் எரேமியாவில் குறிப்பிட்டுள்ள

மண்கல உடைசல் வாயிலுக்குப் பதிலாகத் (எரே 19:2) தவறாகச் சில மொழிபெயர்ப்பு களால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிளமந்தின் திருமுகங்கள் (EPISTLE OF CLEMENT)

கிளமந்து பேதுருவின் உற்ற சீடர். இவர் உரோமை நகரத்தின் மூன்றாவது ஆயர். ஒரு கடிதமும் ஒரு மறையுரையும் இவரால் எழுதப்பட்டதாகக் கி.பி:இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கூறப்படுகின்றன. இவை சில புதிய ஏற்பாட்டுச் சுவடிகளின் தொகுப்பு நூலிலும் இணைக்கப்பட்டுள்ளன. 2-ஆம் நூற்றாண்டில் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்ட இவரது நூல்தான் பழைமையான கிறிஸ்தவ இலக்கியத்திலே முதன் முதல் எழுதப்பட்டது. ஆனால் கிளமந்துதான் மறையுரையை எழுதினாரா என்பதை உறுதியாகக் கூறமுடியாது. இரண்டிற்கும் உள்ளார்ந்த தொடர்பு இல்லை.

அ) கிளமந்தின் கடிதம்:- இது உரோமை நகரத் திருச்சபை அதிகாரபூர்வமாக ஆலோசகர் பலரின் ஆலோசனைப்படி, கொரிந்து நகரத் திருச்சபைக்கு எழுதிய மடல். சில தேவையற்ற காரணங்களுக்காகக் கொரிந்து நகரத் திருச்சபையில் விளைந்த குழப்பத்தைக் கண்டித்துத் திருத்த இது எழுதப்பட்டது. கொரிந்து திருச்சபையின். சிலர், குருகுல முதியவர்களை நீக்கிவிட்டு திருச்சபையின் அதிகாரத்தை எடுத்துக்கொண்டனர். இது இறைவனது சித்தத்தால் வெளிப்படுத்தப்பட்ட குருகுல படிமரபுக்கும் அப்போஸ்தலர்கள் நிறுவிய திருநிலைப்படுத்தப்பட்டோரின் வாரிசுமுறைக்கும் மாறானது என்று உரோமைத் திருச்சபை கண்டித்து, தன்னுடைய மூன்று முதியவர்களை இக்கடிதத்துடன் கொரிந்து திருச்சபைக்கு அனுப்பியது. ஆகவே இம்மடல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், இதில், ஆயர்கள், முதியவர்கள் மற்றும் தியாக்கோன்கள் அடங்கிய முப்படியுடைய பணியாளர் மரபும், பணியில் அப்போஸ்தோலிக்க வாரிசு முறைக் கொள்கையும், இடங்கொள்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொரிந்து நகர மக்களுக்குக் கிறிஸ்தவ புண்ணியங்களான அன்பு,.தாழ்ச்சி, தன்னடக்கம், பிறரன்பு, ஆகியவற்றைப் பற்றியும் பாவங்களான பொறாமை, கர்வம், சந்தேகம் ஆகியவற்றைப் பற்றியும் இந்நூலின் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். பேதுரு, பவுல் ஆகியோர் எப்படிப் பொறுமையைக் காப்பாற்றி மறைசாட்சியாய் மரித்தார்கள் என்பதை மேற்கோள் காட்டி மக்களைப் புண்ணிய வாழ்விற்குத் தூண்டுகிறார். தன் கருத்துக்குச் சார்பாக இயேசுவின் வார்த்தைகளை மேற்கோள் காட்டியிருக்கிறார். ஆனால் இதில் கருத்து வேறுபாடு இல்லையெனினும் நற்செய்தியின் வசனங்கள் சிறு மாற்றங்களோடு மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. பவுலின் திருமுகங்களான உரோமையர், கொரிந்தியர், எபேசியர்கள்,எபிரேயர் ஆகியோருக்கு எழுதப்பட்ட திருமுகங்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார் இந்நூலின் ஆசிரியர் (1 கொரி 13). 1 கொரி 13-ஐத் தழுவி அன்பைப் பற்றி விளக்குகிறார்.

கிறிஸ்தவ செபத்தைப் பற்றிய பவுலின் கருத்துக்கள் ஆங்காங்கே இந்நூலில் காணப்படுகின்றன. இந்நூலின் மொழி நடையும் வார்த்தைகளும் கிரேக்கர்களின் நடையைத் தழுவியதாக அமைந்துள்ளன. திருச்சபைப் பாரம்பரியக் கருத்து இந்தக் கிளமந்துதான் பிலி 4:3-இலும் வருபவர் என்று கூறுகிறது. வேறுசிலர், கெரிமாசின் காட்சியில் குறிக்கப்படும் கிளமந்து இவர்தாம் என்று கூறுவர். இவருடைய பெயரிலிருந்து இவர் பிலாவியன் அரச வம்சத்தைச் சேர்ந்தவர் எனலாம். உரோமை நகரத்திலுள்ள மிகவும் பழைமையான ஒரு மறைப்பிரிவான புனித கிளமந்து பேராலயம் இவர் வாழ்ந்த வீடு இருந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார்கள். இந்நூல் போலிகார்பின் திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலில் கூறப்பட்டுள்ள சில நிகழ்ச்சிகளைப் பார்த்தால், இது கி.பி. 95-96-இல், அதாவது தொமிசியன் காலத்தில், எழுந்த வேதகலாபனை காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் எனலாம்.

ஆ) மறையுரை:- இது மனம் மாறிய புறவினத்தாருக்கு எழுதப்பட்டது. மனமாற்றம், பரிகாரம், விழிப்புணர்ச்சி, தன்னடக்கம், தீர்வை நாள் ஆகியவற்றைப் பற்றி இது கூறுகிறது. இதிலும் புதிய ஏற்பாட்டிலிருந்து பல மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இது இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்டிருக்கலாம். இது எழுதப்பட்ட இடமாக, உரோமை, கொரிந்து, அலக்சாந்திரியா ஆகிய நகரங்கள் சுட்டிக்காட்டப்படும். இதை இரேனேயு அறிந்திருப்பதாகத் தெரிகிறது.

கிளமந்து (CLEMENT)

இவர் பிலிப்பையில் வாழ்ந்தவர். பவுலின் உடன் உழைப்பாளியான இவர் (பிலி 4:3) முதன் முதலில் ஐரோப்பாவில் திருச்சபையைக் கட்டியெழுப்ப உறுதுணையாக இருந்தார். இங்கே கிளமந்துவின் பெயர் வாழ்வின் நூலில் எழுதப்படுகின்ற அளவு தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது. மற்றவர்களின் பெயர்கள் 'உடன் ஊழியம் பலரோடும்' என்று எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து பவுல் பிலிப்பியில் வாழ்ந்தபொழுது கிளமந்து பற்றி அவர் சிறப்பான மதிப்புக் கொண்டிருந்தார் என்பது தெளிவு. இவ்வாறு எழுதுவதிலிருந்து ஒரு வேளை அவர் ஏற்கெனவே இறந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. ஆனால் இவ்விடத்தில் அவரது பெயர் குறிப்பிடப்படும் சூழ்நிலையில் பவுலின் உண்மைத் தோழர்களான எவோதியாள், சிந்திக்கேயாள் என்ற பிலிப்பியில் உள்ள இரண்டு பெண்களிடையேயும் ஒப்புரவை ஏற்படுத்த பவுல் அவருக்கு அறிவுரை கூறுகிறார். இந்த இரு பெண்களும் பவுல், கிளமந்து மற்றும் பலருடன் சேர்ந்து பிலிப்பியில் திருச்சபையை ஏற்படுத்த பணிபுரிந்தவர்கள்.

இவர் உரோமையில் உள்ள கிளமந்தாக இருக்கலாம் என்று கருதுவதற்கும் போதிய சான்று இல்லை. இவர் உரோமைக்குச் சென்றதற்கான ஆதாரமே இல்லை. மேலும் காலச் சூழ்நிலையில் பார்க்கும்பொழுது முதிர்ந்த இவர் முதல் நூற்றாண்டின் முடிவில் இறந்திருப்பார் என்றும், உரோமையில் கிளமந்து அப்பொழுது வாழ்ந்து வந்தவர் எனவும் தெரிகிறது. பொதுவாகக் காணப்படுகின்ற இப்பெயரைப் போதிய ஆதாரமின்றி இவ்வாறு ஒப்புமைப்படுத்த முடியாது.

கிளயோப்பா (CLEOPAS)

எம்மாவுக்குச் செல்லும் பாதையில் உயிர்த்த இயேசுவுடன் உரையாடிக் கொண்டு சென்ற இரண்டு சீடர்களில் ஒருவர் (லூக் 24:18). மற்றவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவரது உடன் சென்ற சீடர் சீமோன் என்றும், லூக் 10:1-24-இல் கூறப்படுகின்ற 70 சீடர்களில் இவர்கள் இருவரையும் சேர்த்துப் பாரம்பரியம் கூறுகிறது. கிளயோப்பாவும் கிளோப்பாவும் ஒருவரே என்று சில சமயம் கூறப்படுவதுண்டு. எனினும் போதிய ஆதாரமின்றி அவ்வாறு கூற இயலாது.

கிளாதியா (CLAUDIA — முடமான)

2 தீமோ 4:2-இல் தீமோத்தேயுக்கு வாழ்த்து அனுப்புகின்ற உரோமைச் சார்ந்த கிறிஸ்தவப்பெண் இவள். உரோமையின் முதல் ஆயரான லீனஸ் என்பவரின் தாய் அல்லது மனைவி ஆவாள் இவள் என்று அப்போஸ்தல சட்டம் கூறுகின்றது. இவள் புதென்ஸ் என்பவரின் மனைவியாகவும் இருந்தாள் எனப்பாரம்பரியம் கூறுகிறது.

கிளாதியு (CLAUDIUS)

உரோமைப் பேரரசரான கலிகுலாவை அடுத்து ஆட்சிக்கு வந்தவர் திபேரியு கிளாதியு நீரோ கெர்மானிக்கஸ் ஆவார். அவரது பெயர் அ.ப.11:28; 18:2-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. 17:7-இல் குறிக்கப்படும் சீசார் இவரே.

கிளாதியு கி.மு.10-ஆம் ஆண்டில் லிவியாவின் மகனும், திபேரியுவின் சகோதரருமான துருசுஸ் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். சிறிது பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட இவர் அகுஸ்து, திபேரியு, கலிகுலா போன்றவர்களால் முட்டாள் எனக் கருதப்பட்டார். கலிகுலா கொலை செய்யப்பட்டபொழுது ஏற்

பட்ட கலவரத்தில் இவர் பிரேத்தோரியன் படைவீரர்களால் அரசரான அறிக்கையிடப் பட்டதால்தான் அரியணைக்கு வந்தார். அவர்கள் செய்த உதவிக்குக் கைம்மாறாக இராணுவத்தை வைத்துப் பல போர்கள் நடத்தினார். பிரிட்டனின்மீதும் படையெடுத்து, அதைப் பேரரசனுக்குரிய ஒரு மாநிலமாக மாற்றினார்.

அவர் ஓய்வு பெற்ற தொடக்க காலத்தில் உரோமை வரலாற்றிலும்,சமயத்திலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். 47-ஆம் ஆண்டில் உரோமையில் உள்ள வழிபாட்டு முறைகளைப் புதுப்பித்தார். ஐசிஸ் கடவுளுக்கு நடத்தப்பட்ட வழிபாட்டிற்கு இவர் தடை விதித்ததற்குப் போதிய ஆதாரங்கள் இல்லையெனினும், அகுஸ்து, திபேரியு ஆகியவர்களைப் போன்று துருயித் சமயத்தை வளரவிடாமல் தடுத்தார்.

இவரது ஆட்சியின் தொடக்கத்தில் கலிகுலா ஊக்குவித்த யூத இனத்திற்கு எதிரான சக்தியை அழிக்கப் பெருமுயற்சி எடுத்தார். யூதர்களுக்கு ஆதரவாகக் கிளாதியு இயற்றிய சட்டங்களைப் பற்றி யோசிப்பஸ் குறிப்பிட்டுள்ளது இதற்குச் சான்று. ஒருவேளை இவர் உரோமையில் உள்ள யூதர்களுக்கு எதிராகச் செயல் புரிந்தது இவரது பிற்காலத்தில் நடந்திருக்கலாம். கிளாதியுவின் வெளிநாட்டு உறவைப் பற்றிக் கூறுகையில் சூட்டேனியஸ் என்பவர் ''கிளாதியு உரோமை நகரில் கிரேஸ்தஸ் என்பவரின் கீழ்ப் புரட்சி செய்த யூதர்களை வெளியேற்றினான்'' என்று கூறுகின்றார். கிரேஸ்தஸ் என்ற சொல்லும் கிறிஸ்து என்ற சொல்லும் ஒரே மாதிரி உச்சரிக்கப்பட்டதால், இவர் கிறிஸ்துவை மனதில் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் இது ஐயத்திற்குரியது. இரேனயு என்பவர் இயேசுவின். மரணம் கிளாதியுவின் ஆட்சியின் கீழ்நடந்ததாகக் குறிப்பிட்டிருந்தாலும் கிறிஸ்தவ ''மூட நம்பிக்கைகளைக்'' தோற்றுவித்த கிரேஸ்தஸ் அல்லது கிறிஸ்துஸ் என்பவர் கிளாதியுவின் கீழ் உரோமில் இருந்தவரா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்று.

அ.ப.18:3-இல் பவுலின் நண்பர்களான அக்கிலாவும், பிரிசிக்கில்லாவும் கிளாதியுவின் கட்டளையினால் வெளியேற்றப்பட்டார்கள் என்பதிலிருந்து இவரது ஆட்சிக் காலத்தில் உரோமையில் கிறிஸ்துவ யூதர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பது தெளிவு. உரோமையில் யூதர்கள் கலகம் செய்தார்கள் என்றும் அது கிறிஸ்து என்ற ஒருவரோடு தொடர்புபடுத்தப்பட்டது என்றும் மட்டுமே சூட்டேனியஸ் அறிந்திருந்தார் எனலாம். கிளாதியுவின் உண்மையான சட்டத்தைப் பற்றி தியோகாசியுஸ் விவரித்துள்ளார். உண்மையில் அச்சட்டம் அவர்களை உரோமையிலிருந்து வெளியேற்ற அல்ல; மாறாகக் குழப்பத்தின் காரணமாக யூதர்கள் ஒன்று கூடுவதைத் தடை செய்வதற்காகவே. பக்தியுள்ள யூதனை இச்சட்டம் உரோமையிலிருந்து வெளியேறித் தனது சமயச் சடங்குகளை நல்ல முறையில் செய்யத் தூண்டியது.

கிளாதியு இறை மகிமையை வெறுத்த போதிலும், மக்கள் அவனைக்கடவுளாக மகிமைப்படுத்தினர். பிரிட்டனில் உள்ள கொல்செஸ்டர் என்ற இடத்தில் அவருக்காக ஓர் ஆலயமே கட்டப்பட்டுள்ளது.

இவரது ஆட்சிக்காலத்தில் நார்சிகஸ், பாலாஸ் என்ற இருவரும் அதிகச் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தனர். இவரது அந்தரங்க செயலாளரான நார்சிசுஸ், அரசனின் மூன்றாவது மனைவி மெசலீனா செய்த சதியையும் அவளுடைய முறைகேடான வாழ்க்கையையும் அரசனுக்கு வெளிப்படுத்தினார். நிதிச் செயலாளரான பாலாஸ் அரசனின் மருமகளான அகிரிப்பினா என்பவளை மணப்பதற்கும், இறுதியில் அவளது மகன் நீரோவை அரசன் தன் மகனாக ஏற்றுக் கொள்வதற்கும் அரசனைத் தூண்டினார். இவர்கள் வகித்த பதவிக்காக மூப்பர் சபையோரால் இவர்கள் பெரிதும் மதிக்கப்பட்டனர்.

ஆனால் அரசன் 54-ஆம் ஆண்டில் தனக்குப்பின் யாா ஆட்சிக்கு வருவது என்று சிந்தித்துப் பார்க்கையில் மெசலீனா வழியா

கத் தனக்குப் பிறந்த பிரித்தானிகுஸ் என்பவனைத் தேர்ந்தெடுத்தார். நீரோவைத் தேர்ந்தெடுக்கவில்லை. இம்முடிவை அரசர் மக்களுக்கு அறிவிக்குமுன் அகிரிப்பினா காளானில் நஞ்சைக் கலந்து கொடுத்து அவரைக் கொன்றுவிட்டாள். மக்களின் முன் பிரமாண்டமான அடக்க ஊர்வலம் நடத்தி, அகிரிப்பினாவும் நீரோவும் கிளாதியுவை ஒரு தெய்வமாக மாற்றிவிட்டனர்.

கிளாதியுவின் காலத்தில் வரிக்கொள்கையிலும், போரிலும் ஓரளவு வளர்ச்சி அடைந்த நாடு, செழிப்படையவில்லை. நாட்டில் நடந்த சதி வேலைகளும், உளவு வேலைகளும், அவரது செயலற்ற தன்மையும் இதற்குக் காரணங்களாகும். அவருக்குப் பின் வந்த நீரோவினால் நாடு இன்னும் மோசமடைந்தது.

கிளாரோமோன்தானுவின் கையெழுத்துச் சுவடி (CLAROMONTANUS CODEX)

இது ஆறாம் நூற்றாண்டில் இலத்தீனிலும், கிரேக்கத்திலும் எழுதப்பட்ட பவுலின் கடிதங்கள் ஆகும். இது முதலில் எழுதப்பட்டவைகளை அழித்துவிட்டு, அதன்மேல் எழுதப்பட்டதாகும். பழங்காலச் சுவடிகளைப் பற்றி அறிந்து கொள்ள இது ஒரு சிறந்த உதவியாகும்.

இது மொத்தம் 533 மெல்லிய தோல் வகைத் (கன்றின் தோலிலிருந்து செய்யப்பட்டது) தாள்களில் எழுதப்பட்டது. ஒருபக்கம் கிரேக்க மொழியும் மறுபக்கம் இலத்தீன் மொழியும் காணப்படுகிறது. (இடப்புறம் கிரேக்கம், வலப்புறம் இலத்தீன்) ஒவ்வொரு பக்கத்திலும் 21 வரிகள் உள்ளன. இது ஓரளவு அழிந்த நிலையில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

இது எங்கு எழுதப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. ஆனால் மேலை நாடுகளில் ஒன்றில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது இதன் நடையிலிருந்து தெரிகிறது. தியோடோர் பேசா என்பவர் இச் சுவடியை 1565-1582-இல் கிளாரோமோன்டில் உள்ள துறவியர் (கன்னியர்) மடத்தில் கண்டுபிடித்தார். பின் இது பாரீசு நகர நாடாளுமன்ற ஆலோசகரான கிளவுதே துபி என்பவர் வசம் வந்தது. இதன்பின் இவர் புதல்வர்கள் கைக்குச் சென்றது. பின் 14-ஆம் லூயிஸ் காலத்தில் இது அரசரின் நூல் நிலையத்தில் இடம் பெற்றது. 1707-இல் நம் முறையை மறுதலித்த ஜான் அய்மண்ட் என்ற பதிதக் குருவால் இதில் ஒரு சுவடி திருடப்பட்டு ஹாலந்து நாட்டில் விற்கப்பட்டுப் பின் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் 1720-இல் பாரீசு நூல் நிலையத்திற்கு வந்தது. மற்ற 34 சுவடிகள் விற்கப்பட்டு, மீண்டும் பாரீசு நூல் நிலையத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

இது பேசே கையெழுத்துச் சுவடிக்கு ஒத்ததாக உள்ளது. கிரேக்க இலத்தீன் மொழி பெயர்ப்புகள் எதிர்எதிர்ப் பக்கங்களில் காணப்படுகின்றன. பேசே சுவடியில் காணப்படாத நூல்களும் சேர்க்கப்பட்டு மேற்கத்திய கிரேக்க வாசகத்தை நிறைவு செய்கிறது.

கிளியோப்பத்திரா (CLEOPATRA - மகிமை மிக்க தந்தையைக் கொண்டிருக்கிற)

1. இப்பெயர் எகிப்திலுள்ள தோலமி வம்சத்தைச் சார்ந்த அரசிகளுக்கு வழங்கப்பட்ட ஒன்று. நான்கு தோலமிகள் இப்பெயரில் மனைவிகள் வைத்திருந்தார்கள். எஸ்த 11:1-இல் கூறப்படும் கிளியோபத்திரா பிலோமேத்தர் (கி.மு. 181-146) என்பவரின் மனைவியாவாள். இவர்களிடம்தான் பூரிம் விழாவைப் பற்றிய மொழி பெயர்க்கப்பட்ட கடிதம் கொண்டுவரப்பட்டது. தலைமைக்குருவான ஓனியாவின் மகனான ஓனியா, கொடிய ஆல்கிமு என்பவர் தலைமைக்குருவின் இடத்தைப் பிடித்ததைப் பார்த்து, எகிப்திய மன்னனான தோலமி பிலோமேத்தரிடம் தஞ்சம் புகுந்தார். அரசனும், அவருடைய மனைவி கிளியோபத்திராவும் தன்னிடம் மிகுந்த மரியாதை கொண்டிருப்பதைக்கண்டு கெலியோப்போலியின் நோமுவில் ஓர் இடத்தைப்பெற்று அங்கு எருசலேமில் உள்ளதைப் போன்று ஆலயம் ஒன்று கட்டினார். ஏச 29:19-இல் வரும்

இறைவாக்கை ஒனியா எடுத்துக்காட்டியது கிளியோபத்திராவையும் அவளது கணவ னின் மனதையும் கொள்ளை கொண்டது.

2. 1 மக் 10:57-58-இல் கூறப்படும் கிளியோ பத்திரா மேலே கூறப்பட்டவரின் மகள் என்று கருதப்படுகிறது. தெமேத்திரியு கொலை செய்யப்பட்டபின் சிரியா நாட் டைக் கைப்பற்றிய அலக்சாந்தர் பாலாஸ் என்பவனுக்கு இவளை மணம் செய்து வைத் தனர். அவளது தந்தை ''தோலமி அரசர்கள் செய்வதுபோலத் தோலமாயில் மிகச்சிறப்பு டன் திருமணம் செய்வித்தார்'' (1 மக் 10:58). 45-ஆம் சங்கீதம் இதையொட்டி எழுதப் பட்ட திருமணப்பாடலாக இருக்கலாம் என் பது சிலரின் கருத்தாகும். அலக்சாந்தர் தன் னைக் கொல்லச் சதிவேலையில் ஈடுபட்டுள் ளதைப் பின்னால் அறிந்த தோலமி தன் மகளை அவனுக்கு மணம் செய்து வைத்ததற் காகவும், தெமேத்திரியுவுக்கு எதிராக உதவி செய்ய இவனுடன் உடன்படிக்கை செய்த தையும் எண்ணித் தன்னை நொந்து கொண் டார். எனவே அவனுடன் கொண்ட உற வைத் துண்டித்துவிட்டுத் தன் மகளை அவ னிடமிருந்து பிரித்துத் தெமேத்திரியுவுக்கு மணம் செய்து கொடுத்தார்'' என்று யோசிப் பஸ் கூறுகிறார்.

கிளை/தளிர் (BRANCH)

இச்சொல் விவிலியத்தில் உள்ள பல வார்த்தைகளின் மொழிபெயர்ப்பு.

பழைய ஏற்பாட்டில் கிளை என்ற பொரு ளுக்குரிய சொற்கள் பின்வரும் பகுதிகளில் வருகின்றன (எச 17:6; 31:3; எரே 11:16; யோபு 14:9). தளிர் என்ற பொருளில் வரும் சொற்கள் ஏச 11:1; யோபு 8:16 ஆகிய பகுதிகளில் வருகின்றன. எரே 23:5-இல் தாவீதின் அரச குலத்திலிருந்து நீதியுள்ள தளிர் தோன்றும் என்றுள்ளது. பிற பழைய ஏற்பாட்டு வார்த்தைகள் ''திராட்சைக்கொடி யின் கிளை'' (எண் 13:23) மற்றும் ''ஒலிவ மரக்கிளையையும் நாணலையும்'' (ஏச 9:14; 19:15) ஆகியன. இதில் கிளை என்பது மேல் குலமக்களுக்கும், நாணல் என்பது சாதாரண மக்களுக்கும் உவமையாகக் கூறப்பட்டுள் ளன.

புதிய ஏற்பாட்டில் 4 சொற்கள் கிளை என்ற பொருளில் மொழி பெயர்க்கப்படு கின்றன. யோவா 12:13-இல் குருத்தோலை என்பதும், உரோ 11:16-இல் இஸ்ராயேல் குலத்தில் ஓர் உறுப்பினன் என்பதும், யோவா 15:1-8-இல் உண்மையான திராட் சைக் கொடியின் கிளை என்பதும் மாற்கு 11:8-இல் இலைதழைகள் என்பதும் ஆகும்.

ஒரு மரத்தின் அல்லது திராட்சையின் கிளைகள் படர்ந்து வளர்வது என்றால் அது மனிதனின் வளர்ச்சிக்கு உவமையாகக் கூறப் படுகிறது (ஆதி 49:22; யோபு 8:16) அல்லது தேசத்தின் வளர்ச்சியோடு ஒப்பிடப்படுகி றது (சங் 80:11). உலர்ந்து போன (யோபு 18:16), காய்ந்துபோன (எரே 11:16; எச 15:2) வெட்டப்பட்ட (எச 8:14) கிளைகள் அழி வுக்கு உவமையாகக் கூறப்படுகின்றன.

கிளை அல்லது தளிர் என்பது இஸ்ராயே லரின் நிகழ்கால அல்லது வருங்கால அரசர்க ளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கம் அரசர்களை, ''நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தோடு'' அடையா ளம் காட்டுவதிலிருந்து தோன்றியிருக்க லாம். வாழ்வு தரும் மரம் என்பது இறந்து உயிர்க்கும் தாமுஸ் தெய்வத்தோடு தொடர்பு படுத்திப்பேசப்படுகிறது. யோபு 14:7-இல் மரம் வெட்டுண்டால் மீண்டும் தளிர்க்கும்; ஆனால் மனிதன் அழிந்தால் மீண்டும் உயிர் பெற மாட்டான் என்பதில் மரம் மீண்டும் தளிர்ப்பது மனிதனோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. ஏச 17:10-இல் கிளை என் பது அந்நியத் தெய்வங்களுக்குரிய நாற்றுகள் என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. விவிலியத்தில் கிளை என்ற வார்த்தையோடு தொடர்புபடுத்தப்படும் முக்கியமான பகுதி கள் பின்வருமாறு.

அ) ஏச 11:1-இல் ஈசாயின் வாரிசு என்று குறிப்பிடத் தளிர் என்ற வார்த்தை அங்குக் கையாளப்பட்டிருக்கிறது. ஆதி 49:22-இல் யோசேப்பின் அபிவிருத்தியைக் குறிப்பிடக் கிளையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆ) எரே 23:5; 33:15-இல் நீதியுள்ள தளிர் என்று வருகிறது. இச்சொற்றொடர் பெனிக்கிய பரம்பரையிலும் அரசாட்சிக்கு உரிமையுள்ள வாரிசைக் குறிக்க வருகிறது. இவ்விரண்டு விவிலியப் பகுதிகளிலும் பின்னது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாக இருக்கலாம். முதலில் உள்ளது இறைவாக்கினராலே எழுதப்பட்ட ஒன்றாக இருக்கலாம். அப்படியானால் அங்கு நீதியுள்ள தளிர் என்பது தன்மையால் இல்லாமல் பெயர்ப் பொருளில் மட்டும் நீதியுள்ள வரவிருக்கும் அரசர் மெசியாவைக் குறிக்கும். எனினும் இரு பகுதிகளும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதே என்பர்.

இ) செ 3:8; 6:12-இல் செருபாபேலைக் குறிப்பிட்டுக் கிளை என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இங்குச் செருபாபேல் என்ற பெயரே கிளை என்பதைப் பயன்படுத்தக் காரணமாயிருந்திருக்கலாம். ஏனெனில் செருபாபேல் என்ற சொல்லுக்குப் ''பாபிலோனின் தளிர்'' என்பது பொருளாகும். இவையாவும் அரசனை வாழ்வின் மரத்தோடு அடையாளம் காட்டாமல் வெறும் காவிய உருவகமாய்க் காட்டுவதாக இருக்கலாம். எச 8:17-இல் திராட்சைக் கொடியை எடுத்து முத்தி செய்வது என்பது அந்நிய தெய்வத்தை வழிபடுவதைக் குறிக்கும். இச்செயல் (முத்தி செய்வது) யாவேயின் கோபத்திற்குக் காரணமாயிருக்கும் என்றும் உவமையாகக் கூறப்படுகிறது.

கிளோப்பா (CLOPAS)

கிளோப்பா என்பவர் சிலுவையின் அடியில் நின்ற பெண்களில் ஒருத்தியின் கணவர். சில சமயங்களில் இவர் கிளோயோப்பாவுடனும், அல்பேயுவுடனும் ஒப்பிடப்பட்டாலும், இவரைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் யோவா 19:25-இல் வேறு தெளிவான குறிப்புக் காணப்படவில்லை. 'கிளயோப்பா' என்ற கிரேக்கப் பெயருக்கும் 'கிளோப்பா' என்ற செமித்தியத் தோற்றத்திலிருந்து வந்த பெயருக்குமிடையே மொழிசார்ந்த உறவுகள் அல்லது தொடர்புகள் இல்லை. யோவான் நற்செய்தி 19:25-இல் இடம் பெற்றுள்ள 'கிளோப்பா' என்ற பெயரானது 'கிளயோப்பா' என்றும் வழங்கப்பட்டது என்பதற்கு எவ்விதக் குறிப்பும் காணப்படவில்லை. மேலும் கிளோப்பாவின் மனைவியாகும் மரியாளும், யாக்கோபு, யோசே ஆகியோரின் தாயான மரியாளும் ஒரே ஆளாகவும் (மாற் 15:40 = மத் 27:56; காண் லூக் 23:49; 24:10), இங்கே குறிப்பிட்டுள்ள யாக்கோபும் அல்பேயுவின் மகன் யாக்கோபும் ஒரே ஆளாகவும் (மாற் 3:18 = மத் 10:3 = லூக் 6:15; அ.ப. 1:33) இருந்தால் மட்டும் தான் அல்பேயு என்ற பெயருக்கும், கிளோப்பாவிற்கும் தொடர்பு இருப்பதாகக் கூறமுடியும். இவ்வாறு கிளோப்பாவின் மனைவி மரியாளை, அல்பேயுவின் மனைவியாகக் கருதினால் அல்பேயுவும் கிளோப்பாவும் ஒரே ஆள்தான் என்று பெரும்பாலும் கருதலாம்.

கிளோப்பாவையும் ஆகவே அல்பேயுவையும் அவரது புதல்வர்களையும் இயேசுவின் குடும்பத்திற்கு உறவுபடுத்த அல்லது தொடர்புபடுத்தக் கையாளுகின்ற முயற்சிகள் அனைத்தும் யோவான் நற்செய்தி 19:25 ''அவருடைய தாயும், தாயின் சகோதரியுமான கிளோப்பாவின் மனைவி மரியாளும், மதலேன் மரியாளும்'' என்பது மூன்று பெண்களை மட்டுந்தான் குறிப்பிடுகிறது என்ற அடிப்படையில் அமைந்துள்ளது (காண் மாற் 15:40 = மத் 27:56). எனவே கிளோப்பாவின் மனைவியாகிய மரியாள், இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரியாகக் கருதப்பட வாசகம் இடமளிக்கிறது. ஆனால் அப்படித்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. அதேநேரத்தில் யோசேப்பின் சகோதரனின் பெயரும் கிளோப்பாவாகும் என்று கெசிப்பஸ் கூறுவதையும் உற்றுநோக்கவேண்டும்.

கிறிஸ்தவப் பணி அமைப்பு (CHRISTIAN MINISTRY)

'பணி, பணியாளன்' என்ற சொற்கள் முதலில் சாதாரணத் தொழில் செய்பவர்களுக்

குப் பயன்படுத்தப்பட்டது (எஸ்த 1:10; 6:1-5). பிறகு குருக்களுக்கும், வழிபாடுகளில் உதவி செய்பவர்களுக்கும் வழங்கப்பட்டது (யாத் 24:13; ஏச 61:6; எச 44:11; 1 யோவா 1:9). எப்படியிருந்தாலும் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே சமயசேவை என்பது கடவுளின் மக்களால் செய்யப்பட்டு வந்தது. இவ்வாறு சமய சேவை செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அரசர்கள், இறைவாக்கினர்கள், குருக்கள் ஆவார்கள். இவர்கள் இறைவனுக்கும் இறைமக்களுக்கும் இடையில் இருந்து ஊழியம் புரிந்து வந்தார்கள். எனவேதான் பவுல் மோசேயை முதல் உடன்படிக்கையின் பணியாளன் என்று அழைக்கின்றார் (2 கொரி 3:7-9). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து ஒருவரே மனிதர்களையும் கடவுளையும் இணைக்கும் இணைப்பாளராக இருக்கின்றார். இவரே தலைமைக் குருவாயிருந்து மீட்பின் பலியைச் செலுத்துகின்றார். இறைவனையே தன்னில் முழுவதும் வெளிப்படுத்தும் வார்த்தையாகவும், மனித உருவெடுத்த இறைவனாகவும் இருக்கின்றார். அவர் ஏற்படுத்திய திருச்சபையில் அவருடைய வார்த்தைக்கும் அவருடைய அருளுக்கும் புதிய பணிகள் செய்யப்படுகின்றன.

I. திருச்சபையில் பணிகள்:-

இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்குத் தாங்கள் செய்யும் பணியை ஊழியமாகவே கருத வேண்டும் என்று போதித்தார். நாட்டுத்தலைவர்கள், தங்கள் பணியால் கொடையாளர்கள், தலைவர்கள், என்று அழைக்கும்படி விரும்பினார்கள். ஆனால் இயேசு ''உங்களுக்குள் எவன் பெரியவனாய் இருக்க விரும்புகிறானோ அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுக்குள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ அவன் எல்லாருக்கும் ஊழியனாய் இருக்கட்டும்'' (மாற் 10:42தொ) என்று கூறுகின்றார். மேலும் ''எங்கே நான் இருக்கிறேனோ அங்கே என் பணியாளனும் இருப்பான். எவனாவது எனக்குப் பணிவிடை செய்தால் அவனுக்கு என் தந்தை மதிப்பளிப்பார்'' (யோவா 12:26) என்று கூறுகின்றார். இறைவனுக்கு ஊழியம் புரிய யூதாசின் இடத்தில் மத்தியாவைத் தேர்ந்தெடுத்தார்கள் (அ.ப. 1:17.25). பவுலும் இயேசுவின் பணிக்காக அழைக்கப்பட்டார் (1 தீமோ 1:12; 2 கொரி 4:1). ''கடவுளுடைய அருளைப்பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவராகிய இயேசு என்னிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்றி என் வாழ்க்கைப் பயணத்தை முடிப்பேனாகில் அதுவே போதும்'' (அ.ப. 20:24) என்று கூறுகின்றார். தமது திருப்பணியின் வாயிலாகப் புறவினத்தார்க்குச் செய்த ஒவ்வொன்றுக்கும் நன்றி கூறுகின்றார் (21:19). கடவுளின் பணியாளன் என்றும் (2 கொரி 6:3தொ), இயேசுவின் ஊழியன் (11:23) என்றும் தன்னையே அறிமுகம் செய்துகொண்டார். தனது பணியில் பவுல் என்றும் நிறைவு கொண்டார். மோசேயின் பணியிலும் சிறந்த பணியாகத் தன் பணியைக் கருதினார். ஏனென்றால் கடவுளே அவருக்குப் புதிய உடன்படிக்கையின் பணியாளராகும் தகுதியைத் தந்தார். நீதியை வழங்கவும், ஆவியை அளிக்கவும் ஒப்புரவு செய்யும் திருப்பணியை அவர்களுக்கு அளித்தார் (2 கொரி 3:6-9; 5:12) ''வானத்தின் கீழுள்ள எல்லாப் படைப்புக்கும் அறிவிக்கப்பட்ட இந்த நற்செய்திக்குத்தான் பவுலாகிய நான் பணியாளன் ஆனேன்'' (கொலோ 2:23) என்று கூறுகின்றார். மேலும் ''கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் அலுவலை நிறைவேற்ற, கடவுள் உங்களை முன்னிட்டு எனக்களித்த பொறுப்பை ஏற்றுள்ளதால் நான் திருச்சபையின் பணியாளன் ஆனேன்'' (கொலோ 1:25) என்று கூறுகின்றார்.

புதியதாக உருவான திருச்சபையில் பணியாளர்களின் பொறுப்பு அதிகமாக்கப்பட்டது; விரிவடையச் செய்யப்பட்டது. எனவே 'பணியாளன்' என்றசொல் முதன் முதலாகப் பந்தியில் பணிவிடை செய்பவர்களுக்கும் (அ.ப. 6:1-4; லூக் 10:40), எருசலேமிலுள்ள ஏழைகளுக்குப் பொருளுதவி சேகரிப்பவர்களுக்கும் பயன்படுத்தப்பட்டது (அ.ப. 11:29; 12:25; 1 கொரி 16;15; 2 கொரி 8;4; 9:1-12). இத்துடன் அர்க்கிப்புவுக்கும்

(கொலோ 4:17), தீமோத்தேயுவுக்கும் (2 திமோ 4:5) திருப்பணிகள் ஒப்படைக்கப்பட்டன. திருப்பணியாளன் என்ற பட்டம் பவுலுக்கு அளிக்கப்பட்டதுபோல் அப்பொல்லோவுக்கும் (1 கொரி 3:5), தீமோத்தேயுவுக்கும் (1 தெச 3:2; 1 தீமோ 4:6), திக்கிக்கும் (கொலோ 4:7); எப்பப்பிராவுக்கும் (கொலோ 1:7), பொய் யூத அப்போஸ்தலர்களுக்கும் (2 கொரி 11:23) அளிக்கப்பட்டது. இதிலிருந்து திருச்சபையில் பல பணிகள் இருந்ததாகத் தெரிகின்றது (1 கொரி 12:5). கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும், திருப்பணிக்குரிய வேலையை முடிக்கவும், இறைமக்களைப் பக்குவப்படுத்தவும் பரிசுத்த ஆவி இக்கொடைகளை வழங்கியுள்ளார் (எபே 4:12). எல்லாத் திருப்பணிகளும் பரிசுத்த ஆவியின் ஏவுதலாலேயே நடைபெறுகின்றன (திருவெளி 12:7). பணி செய்யும் வரம் கடவுளிடமிருந்தே பெறப்பட்டது (1 பேதுரு 4:11). கொடுக்கப்பட்ட பணிகள்: அப்போஸ்தலர்கள், இறைவாக்கினர்கள், நற்செய்தியின் தூதர்கள், ஆயர்கள், போதகர்கள் அனைத்தும் கிறிஸ்துவின் வார்த்தைகள் நிறைவு பெறச் செய்வதற்கே. இதைச் சேராத பணிகளும் கிறிஸ்துவின் உடலைக்கட்டி எழுப்ப உதவுமாயின் அவையும் ஏற்றுக்கொள்ளப்படும் (எபே 4:11).

II. படிமரபுடைய பணிகள்:-

அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே திருச்சபைப் பணிகள் பல பிரிக்கப்பட்டு வளரத்தொடங்கின. எல்லா யூத சமூகத்திலும் மூப்பர்கள் இருந்தார்கள். பவுலும் பார்னபாவும் ஒவ்வொரு சபைக்கும் மூப்பர்களை ஏற்படுத்தினர். நோன்பிருந்து செபம் செய்த பின்னர், அவர்கள் விசுவசித்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தனர் (அ.ப. 14:23). சிக்கல் ஏதாவது வரும்போது ''எருசலேமிலுள்ள அப்போஸ்தலர் மூப்பர்களிடம் செல்லத் தீர்மானித்தனர்''. யாக்கோபு சபைக்குத் தலைமை தாங்கினார் (அ.ப. 15:2-4;22தொ; 16:4). பவுல் மறுபடியும் யாக்கோபைக் காண வந்தபோது அங்கே மூப்பர்கள் அனைவரும் கூடியிருந்தார்கள் (21:18). கடைசிப் பயணத்தின்போது பவுல், மிலேத்திலிருந்து எபேசுக்கு ஆள் அனுப்பிச் சபையின் மூப்பர்களை வரவழைத்தார் (20:17). அந்த நாள் முதல், அப்போஸ்தலர்கள் நேரிடையாகவோ ஆட்களை அனுப்பியோ மூப்பர்களை ஏற்படுத்தினார்கள் (தீத் 1:5). மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சில சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன. யார்மேலும் பதற்றத்தோடு கைகளை விரித்துப் பட்டம் கொடுக்காதீர் என்று 1 திமோ 5:17-22-இல் கூறப்பட்டுள்ளது. எனவே மூப்பர்கள் பரிசுத்த ஆவியினால் இயக்கப்படுகின்றார்கள். எனவே அவர்களுடைய பணிகள் சாதாரணப் பணிகள் அன்று. யாக்கோபு எழுதிய திருமுகத்தில் ''உங்களுள் ஒருவன் நோயுற்றிருந்தால் அவன் திருச்சபையின் மூப்பர்களை அழைக்கட்டும். அவர்கள் ஆண்டவர் பெயரால் அவன் மீது எண்ணெய் பூசி அவனுக்காகச் செபிப்பர் (யாக் 5:14) என்று எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக மூப்பர்கள் சபைகளுக்குத் தலைமைதாங்கி அதைச் செவ்வனே நடத்தினார்கள் (1 திமோ 5:17). ''சகோதரரே உங்களிடையே உழைத்து ஆண்டவர் பெயரால் உங்களுக்குத் தலைவர்களாக இருந்து, அறிவுபுகட்டுவோரை மதித்து நடக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்'' (1 தெச 5:12தொ). இங்கு, தலைவர் மூப்பர்களைக் குறிக்கின்றது.

பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் மேற்பார்வையாளரும் திருப்பணியாளரும் அறிமுகப்படுத்தப்படுகின்றார்கள் (பிலி 1:1). இப்போது திருச்சபையின் பணி ஆரம்பக் கட்டத்தில் இருக்கின்றது. அப்போஸ்தலர்கள் தேவ ஆவியும் ஞானமும் நிரம்பப் பெற்ற எழுவரை அறப்பணி செய்வதற்காக ஏற்படுத்தினர். அப்போஸ்தலர்கள் செபம் செய்து அவர்கள் மேல் கைகளை விரித்தனர் (அ.ப. 6:1-6). பிலிப்பு என்பவர் திருப்பணியாளர் மட்டுமன்று அவர் ஒரு போதகர் (8:4.26தொ). திருப் பணியாளருக்கு உரியதகுதிகளை மேய்ப்புப்பணிக் கடிதங்களில், குறிப்பாக 1 திமோ 3:8-13-இல் பார்க்கலாம். மற்றும் சில பணிகள், கடமைகள் உள்ளன. இவைகளைக் குறிப்பிட்டு விளக்கமுடியாது. திருவழிபாட்டிலும் சபையிலும்

பெண்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதைப் பவுல் அழகாக விளக்குகின்றார் (1 கொரி 11;1-16; 14:33தொ).

ஆயர்கள் அனைவரும் ''மேற்பார்வையாளர்கள்'' என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் சபைகளுக்குத் தலைவர்களாயிருந்து அனைத்தையும் மேற்பார்வையிட்டார்கள். யூதர்கள் நடுவில் இப்பணி இருந்ததாகத் தெரியவில்லை. கும்ரான் சமூகத்தில் இப்படிப் பட்டவர்கள் இருந்ததாகத் தெரிகிறது. ''மந்தை முழுவதும் குறித்து விழிப்பாயிருங்கள். ஏனெனில் கடவுள் தமது இரத்தத்தினால் சொந்தமாக்கிக்கொண்ட தம் திருச்சபையை ஏற்படுத்தியுள்ளார்'' (அ.ப. 20:28) என்று பவுல் கூறுகின்றார். தலைமை ஆயர் கிறிஸ்துவுக்குப்பின் தங்களிடம் ஒப்படைக்கப் பட்ட மந்தைகளுக்கு முன்மாதிரியாய் இருந்து அதை மேய்க்க வேண்டும் (1 பேதுரு 5:4) என்று பேதுரு கூறுகின்றார். இவர்கள் மந்தைகளின் ஆன்மாக்களின் ஆயரும் காவலருமானவர்கள் (1 பேதுரு 2:25). மேய்ப்புப்பணி திருமுகங்களில் காண்பது என்னவெனில் ஒவ்வொரு சபைக்கும் ஒரு மேய்ப்பாளரே இருந்ததாகத் தெரிகின்றது. மேய்ப்பாளருக்கு உள்ள தகுதிகளை 1 திமோ 3:1-7-இல் காணலாம். பெரும்பாலும் இவர்கள் மூப்பர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் (தீத் 1:5-9). இவர்களே மேய்ப்புப்பணியை முழுமை அடையச் செய்கிறார்கள் (அ.ப. 20:28 தொ). இவர்கள் மந்தைகளை மேய்ப்பதில் முழுக்கவனம் செலுத்திக் கடமையை நிறைவேற்றுகின்றார்கள் (யோவா 21:15தொ; மத் 18:12தொ). பவுலின் தூதுவர்களான தீத்துவும் திமோத்தேயுவும், திருச்சபை ஒப்படைக்கப்பட்டுள்ள குருக்கள், திருப்பணியாளர்கள் மேற்பார்வையாளர்களின் மீது அதிகாரம் கொண்டிருந்தனர். வழிபாடுகளிலும், விசுவாசக் கோட்பாடுகளிலும், போதனையிலும் அதிகக் கவனம் செலுத்தினர் (1 திமோ 2:1-15; 4:6.13-16; 6:3). மேற்பார்வையாளர்கள் தங்களுக்கு உட்பட்டவர்கள் மீதுதான் அதிகாரம் செலுத்தமுடியும் (தீத் 1:9). இவ்வாறு திருச்சபையில் பணிகள் படிப்படியாக வளர ஆரம்பித்தன. அப்போஸ்தலர்களின் மறைவுக்குப் பின் திருச்சபையின் தலைவர்கள் மேற்பார்வையாளர், மூப்பர், திருத்தொண்டர் என்ற மூன்று பதவிகள் மட்டுமே பெற்றார்கள் (பிலி 1:1; அ.ப. 20:17.28; 1 திமோ 3:1.8; தீத் 1:5.7). அவர்களின்மீது கைகளை விரித்துக் கடவுளின் வரம் வேண்டி அவர்களைப் பணிகளுக்கு அனுப்புகின்றார்கள் (2 தீமோ 1:6).

புதிய உடன்படிக்கையின் ஊழியர்களுக்குக் குருக்கள் என்ற பட்டம் அளிக்கப்படவில்லை. அப்போஸ்தலர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டிருந்தது. ஒரே தலைமைக்குருவாகிய இயேசுவின் பணிகளை இவர்கள் தொடர்ந்து செய்தார்கள். அப்போஸ்தலர்களுக்குப் பிறகு குருக்கள் கடவுளுக்கு ஊழியம் புரிந்தார்கள் (தீத் 1:7); மறைபொருளின் கண்காணிப்பாளராய் இருந்தார்கள் (1 கொரி 4:1-2); கடவுளுடைய பலவகைப்பட்ட அருளின் சீரிய கண்காணிப்பாளராக இருந்தார்கள் (1 பேதுரு 4:10). இத்தகைய தன்மைகளோடு கிறிஸ்துவத்தில் குருத்துவம் மூன்று நிலைகளில் வளருகின்றது. திருத்தொண்டர்கள், குருக்கள், ஆயர் ஆகியநிலைகள் ஆகும். புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்ட அத்தனைப் பணிகளையும் இவர்கள் நிறைவேற்றுவார்கள். தங்களுக்களிக்கப்பட்ட அருள் நிலைக்கேற்ப இதைச் செய்வார்கள்.

கிறிஸ்தவர்கள் (CHRISTIANS - கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள்)

இறைமகனும் மனுக்குலத்தின் மீட்பருமான இயேசு கிறிஸ்துவை விசுவசித்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயராகும். இது உண்மையான பட்டப் பெயராக, அல்லது கேலியாகவும் அவமரியாதையாகவும் அளிக்கப்பட்ட பெயராக இருக்கலாம். கலப்பின மக்கள் வாழ்ந்த அந்தியோக்கியாவில் பவுலும் பார்னபாவும் ஓர் ஆண்டு தங்கிப் போதித்தபின் அங்குக் கிறிஸ்துவின் சீடர்களானவர்களுக்கு இப்பெயர் அளிக்கப்பட்டது (அ.ப.11:26).

அ.ப. 26:18-இல் பவுல் அகிரிப்பா அரசனைப் பார்த்து ''அரசே, நீர் இறைவாக்கு

களை நம்புகிறீரா? நம்புகிறீர் என்று அறிவேன்'' என்று சொல்ல, அரசன் ''நீ சொல்வதையெல்லாம் நம்பச் செய்து, சிறிது நேரத்திற்குள் ா என்னைக் கிறிஸ்தவனாக்கிவிடுவாய் ாலிருக்கிறதே'' என்றார். துன்பத்திற்கு ாவதும் (1 பேதுரு 4:16), சிலுவையில் கிறிஸ்து அனுபவித்த துன்பங்களை நினைவு கூர்வதும் (2:21-25; 4:1) கிறிஸ்தவனாய் இருப்பதின் பங்காகும்.

கிறிஸ்து (CHRIST)

யூதர்கள் தாங்கள் எதிர்பார்த்த வருங்கால அரசரை மெசியா, அபிடேகம் செய்யப்பட்டவர் என்றழைத்தனர். இச்சொல்லுக்கு இணையான புதிய ஏற்பாட்டுச் சொல்தான் கிறிஸ்து என்பது. இது இயேசுவுக்குப் புதிய ஏற்பாடு அளிக்கும் பட்டமாகும். பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் முன்னுரைத்த உண்மையான அபிடேகம் செய்யப்பட்டவர் இவரே என்பதை (1 சாமு 2:10; சங் 2:2), நற்செய்திகள் மீண்டும், மீண்டும் ''கிறிஸ்து இவரே'' எனக்கூறி வலியுறுத்துகின்றன (யோவா 20:31).

நற்செய்திகளில் கிறிஸ்து என்னும் சொல் பெயருரிப் பொருளில் வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது. சான்றாக, 'நீர் மெசியா' (மாற் 8:29); ''ஆண்டவருடைய மெசியா'' (லூக் 2:26); ''இயேசு கிறிஸ்துவை'' (அ.ப. 5:42). ஆனால் இது ஏறத்தாழ இயேசுவின் மற்றொரு பெயராக அல்லது பட்டமாக மாறிவிட்டது எனலாம். சான்றாகக் ''கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி'' (மாற் 1:1); ''நாம் பாவிகளாக இருந்தபோதே, கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்'' (உரோ 5:8); ''கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும்'' (6:3).

ஆனால் இந்த இரு பெயர்களும் உண்மையில் ஒன்றுக்கு மற்றொன்றாக மாற்றுப் பெயர்கள் அன்று. ஏனெனில் இயேசு என்பது அவர் விருத்தசேதனம் பெற்றபோது கொடுக்கப்பட்டபெயர் (லூக் 2:21). ஆனால் மெசியா அல்லது கிறிஸ்து என்பது, அவர் இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையில் ஒப்புரவு ஆக்குபவராக, இடைநிலையினராக உள்ள அவரது மீட்புப் பணியைச் சிறப்பாகக் குறித்துக் காட்டும் பெயராக உள்ளது. சில நேரங்களில் வழக்கமாகப் பயன்படுத்தும் முறையை மாற்றிக் 'கிறிஸ்து இயேசு' என்று பவுல் குறிப்பிடுகிறார் (உரோ 3:24; 8:2.39).

''அபிடேகம் செய்யப்பட்டவர்'' என்ற அடைமொழி பழங்கால மேற்காசிய நாடுகளில் உருவான ஒன்றாகும். அதாவது, உயர் பதவி பெறப்போகும் ஒருவரை எண்ணெயால் அபிடேகம் செய்து, அவரைப் பொறுப்பேற்கச் செய்வது வழக்கம். இது இஸ்ராயேல் மக்களுக்கு நன்கு அறிமுகமான ஒரு பழக்கமாகும். ஏனெனில், அவர்கள் சமூகத்தில் இறைவாக்கினர்கள், அரசர்கள், குருக்கள் அனைவருமே (1 அர 19:16; சங் 133:2) அவர்கள் பதவிப் பொறுப்பேற்பதன் அடையாளமாகவும், அதை அறிமுகப்படுத்தும் முகமாகவும் இதைப் பயன்படுத்தினர். ஆனால் இத்தகைய பழைய ஏற்பாட்டு மனிதர்கள் குறுகிய காலத்திற்கே பணிசெய்தனர். அதுவும் முழுமையான சிறப்பான பணியாக அமையவில்லை. எனவே, என்றும் குறைவில்லாத பணிசெய்யக்கூடிய ஓர் அபிடேகம் செய்யப்பட்டவரை மக்கள் எதிர்பார்த்தனர். அவர் மனிதர்களாலோ அவர்கள் கையால் செய்யப்பட்ட எண்ணெயாலோ அபிடேகம் செய்யப்படமாட்டார். மாறாகக் கடவுளாலும் அவரது ஆவியாலும் அபிடேகம் செய்யப்படுவார் (மத் 3:16-17; மாற் 1:10-11; லூக் 3:21-22). அதனால்தான் இயேசு தம்மைப் பற்றி ''ஆண்டவரின் ஆவி என்மேலே. ஏனெனில் என்னை அவர் அபிடேகம் செய்துள்ளார்'' (லூக் 4:18; ஏச 61:1; அ.ப. 10:38) என்று சான்று கூற முடியும். எனவே கிறிஸ்து அல்லது மெசியா என்ற பெயர் அவரது புனிதமான பணியாகிய மீட்பையும் நடுநிலையாளராக விளங்கியதையும் மட்டும் குறிக்கவில்லை. மாறாக அவரது ஆட்தன்மையையும் அதிகாரத்தையும், ஆற்றலையும் அவற்றின் வழியாக அவர் பணிமுடித்த விதத்தையும் குறிக்கிறது.

II. வாசகம் ஆய்வு:-

1. பழைய ஏற்பாட்டுப் பின்னணி:- பழைய ஏற்பாட்டு மக்கள் வரப்போகின்ற அரசரிடத்தும், மீட்பின் எதிர்காலத்திலும் கொண்டிருந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் கிறிஸ்து இயல் எழுந்தது. எபிரேய அரசனும் (1 சாமு 10:1; 16:13) தலைமைக் குருவும் (எண் 35:25) அவர்கள் பதவிப் பொறுப்பை ஏற்கும்போது அபிடேகம் செய்யப் பட்டனர். எனவே அரசன் பொதுவாக ஆண்டவரால் அபிடேகம் செய்யப்பட்டவர் என்றே (1 சாமு 16:6; லூக் 2:26) அழைக்கப் பட்டார். ஆனால் பழைய ஏற்பாட்டின் பிந்தைய காலத்திலே அவர்களின் எதிர்பார்ப்பு மாறியது. அதாவது தாவீதின் வழியிலே ஓர் இலட்சிய அரசர் வரவேண்டுமென்றும் அப்பொழுது கடவுள்என்றும் அழியாத ஓர் அரசை மண்ணில் நிறுவுவார் என்றும், அதனால் இந்த அரசு அமைதி, வளம், நீதி, நேர்மை, கடவுளை உண்மையாக வழிபடும் அறிவு அனைத்தையும் கொண்டு விளங்கும் என்றும் எதிர்பார்த்தனர். ஆனால் ஒரு சில பழைய ஏற்பாட்டு நூல்களிலும், திருமறைப் புறநூல்களிலும் கடவுளே தமது அரசை நிறுவுவார் என்று கூறப்பட்டுள்ளதே யொழிய, இதுபோன்ற மெசியாபற்றிய எந்தக் கூற்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

மெசியாவைப் பற்றிய கூற்றுக்கள் இஸ்ராயேலின் எதிர்காலம் பற்றிய இறைவாக்குகளிலிருந்து வருகிறதா (ஆதி 12:1-3; 49:10; எண் 24:17-19) அல்லது தாவீதின் சந்ததி என்றென்றும் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையிலிருந்து வருகிறதா என்பது மிகத் தெளிவாக இல்லை. தாவீது அரசு பற்றிய காலத்தால் முந்திய இறைவாக்கு சங் 18;2 சாமு 22:2-51 ஆகும். யூதாவும், இஸ்ராயேலும் ஒரே தலைவரின் கீழ் இணைக்கப்படும் என்று ஒசே 1:11 கூறுகிறது. எசக்கியேல் நாடுகடத்தப்பட்ட நிலையில், எதிர்காலத்தில் தாவீதின் சந்ததியில் தோன்றும் இளவரசன் மக்களின் உண்மையான மேய்ப்பராக இருப்பார்; அவர் என்றென்றும் அரசாள்வார் (எச 37:24) எனக் கூறுகிறார். தாவீதின் வழித் தோன்றல் என்றென்றும் அரசாள்வர் என்ற நம்பிக்கை பழைய ஏற்பாட்டிலே இறுதியாக மிகத் தெளிவாக வருவது, ஆகா 2:21-23; செக் 4:6-10 ஆகிய இறைவாக்கினர்களின் எதிர்பார்ப்பில்தான். இவ்விரு இறைவாக்கினர்களுமே செருபாபேலின்கீழ் மீண்டும் ஆட்சி நிலைநிறுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால், இது பாரசீக மன்னருக்கெதிராக நிகழ்த்தும் புரட்சியால் வராது. சேனைகளின் ஆண்டவர் கூறுகிறார், ''எனது ஆவியால் நிகழும்'' (செக் 4:6).

சங் 132 நாடு கடத்தலுக்கு முன்னர் உள்ள நம்பிக்கையை மட்டுமே பிரதிபலிக்கிறது (சங் 78:65-72; 89;19-37). ஆமோ 9:11-12 நாடுகடத்தலுக்குப் பின் எழுந்த இறைவாக்காக இருக்கலாம்.

''அந்த நாளில் விழுந்த தாவீதின் கூடாரத்தை
மீண்டும் நிலைநாட்டுவேன்.....

பழைய நாளைப் போலவே அதனைக் கட்டியெழுப்புவேன்''. ஏச 9-11-இல் உள்ள இறைவாக்குகள்தாம் பழைய ஏற்பாட்டில் உள்ள தாவீது பற்றிய நம்பிக்கைகளில் மிகச் சிறந்ததாக, உயர்ந்ததாக உள்ளன. 'அமைதியின் மன்னர்' எனப்படும் அவர் தாவீதின் அரியணையில் அமர்ந்து அமைக்கும் நீதியின் ஆட்சிக்கு என்றுமே முடிவு இராது (ஏச 9:6-7). ஈசாயின் தண்டிலிருந்து ஒரு தளிர் கிளம்பும்; ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கும்; அவர் நீதியை நிலைநாட்டுவார்; ஏழைகளுக்கும் நீதி வழங்கி நிலைநிறுத்துவார். ''ஏனெனில் கடலில் நீர் சூழ்ந்திருப்பது போல ஆண்டவரது அறிவால் இப்பூமி நிறைந்திருக்கும்'' (11:1-9).

ஆனால் இக்கருத்து இரண்டாம் ஏசயாவில் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. ''தாவீதுக்கு இறைவன் காட்டும் மாறாத பேரன்பு'' தவறாது. இறைவன் என்றுமுள உடன்படிக்கையைச் செய்வார் (55:3). ஆனால் அரசாட்சியை மீண்டும் அமைப்பது பற்றிய வெளிப்படையான வாக்குறுதியில்லை. மக்கள் முழுவதும் எதிர்பார்ப்புக்குரியவர்களாகின்

றனர். இங்கு மக்களின் பாவங்களுக்காகத் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் ஒரு துன்புறும் ஊழியனைப் பார்க்கிறோம். அவர் தனிப்பட்ட மனிதராக விளக்கப்படுகிறார் (52:13-53:12). ஆனால் அவர் இஸ்ராயேல் முழுவதையும் அடையாள முறையில் குறித்துக்காட்டுகிறவராக இருக்கிறார் (49:3). இக்கருத்து பின்னர்த் தோன்றிய மெசியா பற்றிய கருத்து வளர்ச்சிக்கும், கிறிஸ்து இயலுக்கும் முக்கியமான ஒன்றாக அமைகிறது. யோவேல், நாகூம், செப்பனியா போன்ற இறைவாக்கினர்கள் கடவுளே நேரடியாக வந்து ஆட்சி செய்வார் என்று குறிப்பிடுகிறார்களேயொழிய இலட்சிய அரசனைப் பற்றிய இதே கருத்தைத்தான் பிரதிபலிக்கின்றனர். ஆனால் ஆண்டவரின் நாள் வருமுன்னே இறைவாக்கினர் எலியா வருவார் எனக் கூறுகிறார் (மலா 4:5-6). தானியேல், ஒரு புதிய யுகத்தை இறைவன் தொடங்கி வைப்பார்; அப்பொழுது மனுமகனைப் போன்ற ஒருவர் இவ்வுலகத்தின் ஆட்சியைக் கையிலேந்தி என்றென்றும் அரசாள்வார் என்கிறார் (தானி 7:13-14.26-27).

2. வெளிப்பாட்டு இலக்கியங்களில்:-

இந்த இலக்கியங்களில் மெசியா பற்றிய நம்பிக்கை நாடுகடத்தலிலிருந்து திரும்பிய பிறகே இடையிடையே வளர்கிறது. யூதா பாரசீக தோலமி ஆட்சிக்குட்பட்டிருந்த போது இந்நம்பிக்கை பின்னோக்கித் தள்ளப்பட்டாலும், மக்கபேயர்களின் புரட்சிக்கு முன்னால் எழுந்த சீராக் ஆகமம், சங்கத் திருவுரையாகமம் ஆகியவை தாவீதின் அரியணையை வானளாவப் புகழ்கின்றன (சீரா 47;22). அது மட்டுமல்ல. தாவீது, எசக்கியா, யோசியாவைத் தவிர மற்ற எல்லா அரசர்களுமே பாவிகள் எனக் குறிப்பிடுகிறது. சீராக்கிலே சீமோன் எனும் தலைமைக் குருதான் கதாநாயகனாகக் காட்சியளிக்கிறார். சாலமோனின் ஞானத்தில் 'தாவீதின் வழிமெசியா' பற்றிய எந்தப் பேச்சுமே இல்லை.

மக்கபேயர்களின் தலைமைக் குருக்கள் இஸ்ராயேலில் முக்கியத்துவம் பெற்ற போது, மெசியா நம்பிக்கை ஒரு புதுத்திருப்பத்தைப் பெற்றது. அதாவது மாபெரும் அற்புதங்களுடன் என்றென்றும் நிலையான ஆட்சியை நிறுவ வருகிற அவர் 'கடவுளால் தேர்ந்து கொள்ளப் பெற்றவர்' அல்லது மனுமகன் எனும் கருத்து 'ஏனோக்கின்' புத்தகத்தில் காணப்படுகிறது. ஆனால் பிந்திய மக்கபேயர்களின் கொடுமை அதிகரித்த போதும், கி.பி.63-இல் பாம்பே எருசலேமைக் கைப்பற்றிய போதும், 'தாவீதின் மெசியாக் கொள்கை' புதியவடிவம் பெற்றது. கடவுள் நம்பிக்கையற்ற எல்லா நாடுகளையும் அழிக்க ஒருவர் வருகிறார். அவர் குதிரையின் மேலோ, பொன் வெள்ளியின் மேலோ நம்பிக்கை வைக்க மாட்டார். ஏனெனில் ஆண்டவரே அரசராக வருகிறார். அந்த அரசர் கடவுளால் அபிடேகம் செய்யப்பட்டவர் எனப்படுவார்.

கும்ரான் சமூகத்தினர், அதாவது எஸ்ஸேனியர்கள், மக்கபேயக் குருக்களை எதிர்த்தனர். ஆனால் இலட்சிய குரு ஒருவரை எதிர்பார்த்தனர். இஸ்ராயேலை ஆள, ஒரு மெசியாவும், ஒரு குருவும் தோன்ற வேண்டும். ஆனால் குரு அரசர்மேல் முன்னுரிமை கொண்டு புனித விருந்திற்குத் தலைமை ஏற்கவேண்டும் என்று எதிர்பார்த்தனர். இக்கருத்துக்களை 'சாக்கடல் சுவடிகளிலிருந்து' பெறுகிறோம். ஆனால் இவர்களின் எதிர்பார்ப்பு குழப்பமாக உள்ளது. இருவரும் மெசியாக்கள்தாம் என்பது தெளிவாக இல்லை. ஒரு சில இடங்களில் மெசியா ஆரோனின் குலத்திலிருந்தும், இஸ்ராயேலினின்றும் தோன்றுவார் எனக் கூறப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் மெசியா ஓர் அரசியல் ஆட்சியாளராக இருப்பார் எனும் எதிர்பார்ப்பு இருந்தது.

மெசியா என்ற கருத்தைப் பற்றிப் பேசும் கிறிஸ்துவம்அல்லாத முதல்புத்தகம் ''பாரூக்கின் சீரியா வெளிப்பாட்டு ஆகமம்'' ஆகும். இது யூதப்போர்களின் காலமான கி.பி.66-70-இல் எழுதப்பட்டிருக்க வேண்டும். பாவமும், துன்பங்களும் உச்சத்தை அடையும்போது மெசியா வெளிப்படுத்தப் படுவார். பெகமோத், இலவியத்தான்

போன்ற பூதங்கள் உணவாகக் கொடுக்கப் படும். அதே புத்தகத்தில் இதைத் தொடர்ந்து அற்புதமாக உணவு பெருகியதைப்பற்றி வருகிறது. இதனை ஏராப்போலி நகர் பப்பியாஸ் இயேசு கிறிஸ்துவோடு தொடர்பு படுத்துகிறார். மெசியாவின் நேரம் வந்ததும் அவர் மகிமையோடு திரும்புவார். அவர்மீது நம்பிக்கைகொண்டு இறந்தோர் அனைவரும் வாழ்வுபெற எழுவர். இவ்வாறு மெசியாவின் விருந்து, மன்னர் போன்ற கருத்துக்கள் நற்செய்தியிலிருந்து எடுக்கப்பட்டவை எனத் தெளிவாகிறது (லூக் 14:15; 22:28-30; யோவா 6:27-35). எஸ்திரா எனப்படும் திருமறை சேராத புறநூலிலே மெசியா வெளிப் படுத்தப்பட்ட பிறகு 400 ஆண்டுகள் வாழ்வார். அதன்பின் அவரும் அனைத்து உயிரினங்களும் இறந்துவிடுவர். அதற்குப் பிறகு ஏழுநாட்கள் உலகம் முன்பிருந்த மூல அமைதியை அடையும். இவை முடிந்தபின் புதிய உலகம், உயிர்ப்பு, நீதித் தீர்ப்பு அனைத்தும் நிகழும்.

மெசியா வருவார் என்ற நம்பிக்கை இரண்டாம் யூதக் கலகம்வரை (கி.பி. 135) மிக உயிருள்ளதாக இருந்தது. அக்காலக் கட்டத்தில் பலர் தங்களை மெசியாவாகக் காட்டிக் கொண்டனர். அதேநேரத்தில் கடவுளே நேரடியாகத் தமது அரசை நிறுவுவார் என்ற நம்பிக்கையும் வளர ஆரம்பித்தது.

3. இராபிகளின் யூதத்துவம்:-

இராபிகளின் நூல்களில் மெசியா பற்றிய எதிர்பார்ப்பு முக்கியத்துவம் பெறவில்லையெனினும், பரிசேயர்களின் மத்தியில் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் மெசியா பற்றிய பேச்சு இருந்ததை மரபுகள் கூறுகின்றன. மெசியா வருவது கடவுளுக்கு மட்டுமே தெரியும். மெசியா தாமே தோன்றி அற்புதங்களாலும் அருங்குறிகளாலும் தாம் மெசியா என்று வெளிப்படுத்தும் நாள்வரை இவ்வுண்மை மறைந்தே இருக்கும் என மெசியாவின் வருகைபற்றி இராபிகள் போதித்தனர். அவர்கள் பொதுவாக மெசியா வரும் காலத்தைக் கணிப்பதை விரும்பவில்லை. கணிப்பவர்களையும் உற்சாகப்படுத்தவில்லை. இஸ்ராயேலின் பாவம்தான் அவரது வருகையைத் தாமதப்படுத்துகிறது என்று இராபிகள் கூறினர். பல இராபிகளின் கருத்துக்கள் புதிய ஏற்பாட்டுக் கருத்துக்களை ஒத்திருக்கின்றன. உதாரணமாக மெசியா மக்களுக்கும் கடவுளுக்குமிடையே இடைநிலையாளராக இருந்து அவர்களுக்காகப் பரிந்துபேசி மன்னிப்பைப் பெற்றுத் தருகிறார். 'தார்கும்' மெசியாவை இரண்டாம் ஏசயா கூறும் துன்புறும் ஊழியனோடு தொடர்புபடுத்திப் பேசினாலும் இறுதியில் அவரது துயரங்களைக் குறைத்து வெற்றி வீரராக அடையாளம் காட்டுகின்றது. இராபிகள் மெசியாவின் நீதித்தன்மையையும், ஞானத்தையும் பாராட்டி அவர் ஆண்டவரின் ஆவியால் நிரம்பியிருப்பதால் சட்டத்தைச் சரியான முறையிலே புரிய வைப்பார் என்கின்றனர் (யோவா 4:25). அவர் மீட்பரும், ஆறுதல் தருபவருமாவார்.

இராபிகளின் நூல்களில், தாவீதின் மகனான மெசியா என்பதோடு யோசேப்பின் மகனான மெசியா என்ற கருத்தும் வருகிறது. மேலும் முதல் நூற்றாண்டில், மெசியா இறந்து அவர் ஒரு தற்காலிக ஆட்சியைக் கொண்டிருக்க வேண்டும் எனும் கருத்து புதிதல்ல. இக்கருத்து யூதக்கலகங்களில் ஈடுபட்டு இறந்த சீமோன் கொகிபா போன்றவர்களையும் வைத்து எழுந்திருக்கலாம். செக் 12:10-14-இல் காணப்படும் இறக்கும் மெசியாவை யோசேப்பின் மகன் மெசியாவோடு ஒப்பிட்டுப்பார்க்க முயன்றாலும் யோசேப்பின் மெசியா பற்றிய கருத்து கி.மு. முதல் நூற்றாண்டில் தெளிவாக இருந்ததா என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஏனெனில் அவர் மக்களின் பாவங்களுக்காகத் தம்மையே பலியாக்கிக் கொள்ளவில்லை. அவர்வெறும் போர்வீரர் மட்டுமே.

4. மோசேயும், பிலோவில் வார்த்தையும்:-

அலக்சாந்திரியா நகரத்து மெய்யியலார் பிலோ இறைவார்த்தையைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துதான் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்து இயலைப் பெரிதும் பாதித்தது என்பதை நிரூபிக்கமுடியாது. ஆனால் இறை

வார்த்தையைப் பற்றி அக்காலத்தில் நிலவிய தத்துவத்தைக் கூறுகிறார். உலகுக்கும் கடவுளுக்குமுள்ள உறவையே இத்தத்துவத்தால் விளக்குகிறார். வார்த்தை கடவுளின் முதல் மகனாவார். முதலில் கடவுள் வார்த்தையையும் கருத்துக்களையும் படைத்தார். அவற்றை மாதிரியாக வைத்துதான் உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் படைக்கப்பட்டன. பிலோ, யாக்கோபுக்குப் பெத்தேலில் தோன்றிய கடவுள் இந்த இறைவார்த்தைதான் (ஆதி 31:13) என்று கூறுகிறார். இந்த வார்த்தைதான் மனித இனத்தின் சார்பாக நிற்பவரும், கடவுளின் தூதுவராக மனிதரிடம் வருபவருமாக இருக்கிறார் எனக் குறிப்பிடுகிறார்.

தலைமைக்குரு வார்த்தையை அடையாள முறையில் காட்டுபவராக இருக்கிறார் என்று 'பிலோ' கூறினாலும் மோசேக்கும் வார்த்தைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை வலியுறுத்துகிறார். மோசே சட்டம் கொடுத்தவர் மட்டுமல்லர். அவர் ஓர் இறைவாக்கினர். அந்த இறைவாக்கினர் தமது ஆன்மீகக் கண்களினால் பருப்பொருள்களின் உருவமற்ற தன்மையைக் காண முடிந்ததால்தான் உடன்படிக்கையின் பேழை செய்வதற்கான அமைப்பு அவர் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து போயிற்று. மோசேயை ஒரு நிலையில் வார்த்தையின் வடிவாகவே காண்கிறார் பிலோ. இத்தகைய கருத்துக்களை நோக்கும்போது இது கிறிஸ்து இயலுக்கு ஒரு தொடக்கமாக இருக்கிறதென்று சொல்லலாம். ஏனெனில், பிலோவின் 'வார்த்தை ஒரு தனிமனிதனன்று.

5. மாற்கு நற்செய்தி:-

முதல் நற்செய்தியிலேயே கிறிஸ்து இயல் போதியஅளவு வளர்ச்சிபெற்றுவிட்டது என்றுதான் கூறவேண்டும். மாற்கு இயேசுவுக்குக் கொடுக்கும் அடைமொழிகளில் சிறப்பானது 'கடவுளின் மகன்' என்பது. அதே நேரத்தில் இயேசு துன்புற்று இறந்து, உயிர்த்து மீண்டும் விண்ணகம் செல்லும் 'கடவுளின் மகன்'. ஆதலால், அவரை அவ்வப்பொழுது மெசியா என்றும் (மாற் 8:29; 14:61-62) ''ஆண்டவர்'' என்றும் (11:3), கடவுளுக்குப் பிரியமானவர் என்றும் (1:11; 9:7) அழைக்கிறார். 'தாவீதின் மகன்' என்ற அடைமொழியை அவர் மற்றவர்களைப் போல (10:47-49) இயேசுவுக்குக் கொடுப்பதில்லை. ஏனெனில் இயேசுவே தாவீதுக்கு ஆண்டவராகும் பொழுது (12:35-37) அது ஒத்துவரும் அடைமொழியாக இல்லை என்பதால் ஒதுக்கிவிடுகிறார். அதே நேரத்தில் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழிகள் எதுவுமே இயேசுவின் முழுமையான தன்மையை வெளிக் கொணர்வதாக அமையவில்லை. ஏனெனில் அவர் அவைகளையெல்லாம் கடந்து நிற்கும் மகாமனிதர். அவரே இறையரசின் தூதுவரும் நற்செய்தி அறிவிப்பவருமாக இருக்கிறார் (1:14-15). ஒரு புதுயுகத்தைத் தொடங்கி வைப்பவர் அவர் (2:19). அவர் ஓர் இறைவாக்கினர் (6:4); வெளிப்படாத உண்மைகளையெல்லாம் உணர்ந்து போதிக்கும் ஆற்றல் பெற்றவர் (மாற்கு 13). அவர் இவையெல்லாவற்றையும் மிகுந்த அதிகாரத்தோடு போதித்தார் (11:33); அப்போஸ்தலர்களை அதிகாரத்தோடு அழைத்தார் (1:16-20; 2:14). ஏனெனில் அவரை ஏற்பது கடவுளை ஏற்பதாகும் (9:37). இறைவனின் விருப்பத்தைச் செயல்படுத்துபவர் இயேசுவின் உறவினராவார். அவர் குணமாக்கிப் பாவங்களை மன்னிக்கிறார் (2:10). இயற்கையின் மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு (4:35-41; 6:34-44. 45-42). அப்போஸ்தலர் மாபெரும் ஆச்சரியத்திற்கு உள்ளாகிறார்கள். ஒருமுறை அவர் உருமாற்றம் பெறுவதைக் காண்பதால் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது பெற்ற அனுபவத்தை அவர்களும் பகிர்ந்து கொள்கிறார்கள் (1:9-11). இறுதியாகச் சிலுவையருகில் ஓர் உரோமைய நூற்றுவர் தலைவன்கூட ''இவர் உண்மையிலே கடவுளின் மகனாக இருந்தார்'' (15:39) என்று கூறுமளவுக்கு இயேசுவின் வாழ்வு அமைகின்றது.

இயேசுவின் பணியும், அவரது தன்மையும் சீடர்களுக்கு மறைபொருளாகவே உள்ளது. அவர் துன்புறுவதை அவர்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை (6:52;

8:17-21. 32-33). இயேசுவின் போதனையைக் கூட, இயேசுவின் சிறப்பானவிளக்கம் பெறாமல் (4:10-13. 33-34) அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரது எதிரிகளிடம், தாம் எந்த அதிகாரத்தால் போதிக்கிறார் என்பதை அவர் விளக்க மறுக்கிறார் (11:27-33). 'தீய ஆவிகள்' ஆவிகளாக இருந்ததால் அவை இயேசுவை மிக எளிதாக இனம் கண்டு கொண்டு (1:34) கடவுளின் தூயவரே (1:24), கடவுளின் மகனே (3:11) என அழைப்பதைக் காட்டுகிறார். மாற்கு நற்செய்தியாளர் தாம் பயன்படுத்தியுள்ள மூலங்களில் 'மெசியா ரகசியம்' எனும் கொள்கையைப் புகுத்தியுள்ளதால், இயேசு ஏன் மறுக்கப்பட்டார், ஒதுக்கப்பட்டார் என்பதை ஆதிக் கிறிஸ்தவர்கள் விளக்குவதற்கு வசதியாக அமைந்தது.

மாற்கு காட்டும் இயேசு, மனிதத்தன்மையும் தெய்வீகத் தன்மையும் இணைந்தவராகக் காட்சியளிக்கிறார். ஞானஸ்நான நிகழ்ச்சியில் பரிசுத்த ஆவி அவர்மீது இறங்கிவருவதால் (1:10) அவர் கடவுளின் மகனாகச் சுவிகாரம் செய்யப்படுகிறார் என்ற எண்ணம் எழலாம். அதைத் தொடர்ந்து அவர் சாத்தானால் சோதிக்கப்படுகிறார் (1:13); கடவுளைத் தவிர நல்லவர் வேறு எவருமில்லை என்பதை நிலைநாட்டுகிறார் (10:18). அவரது வலப்பக்கமும் இடப்பக்கமும் அமர அருள்வது அவருடைய கையில் இல்லை (10:40). அவரது அழைப்பின் தனித்தன்மை எளிமையான சேவையில் அடங்கியிருக்கிறது (10:45). எதிர்காலத்தைப் பற்றிய எல்லா உண்மைகளையும் அவர் அறிந்திருக்கவில்லை (13:32). கெதுசமனியிலே தந்தையிடம் அவர், ''இந்தப்பாத்திரம் என்னை விட்டு அகலக்கடவது ஆயினும் என்னுடைய விருப்பமன்று; உமது விருப்பத்தின் படியே எனக்கு ஆகட்டும்'' என்று செபிக்கிறார் (14:35). சிலுவையிலே உரத்த குரலெழுப்பி ''என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்?'' (15:34) எனக் கூறுகிறார்.

6. மாற்கைச் சேராத, மத்தேயு, லூக்காவின் பகுதிகள்:-

மத்தேயு நற்செய்தியிலும், லூக்காவின் நற்செய்தியிலும் மாற்கு எழுதாத பகுதிகள் இருந்தால் அந்த மூலச் செய்திகள் எல்லாம் 'கியூ' (Q) என்ற எழுத்தால் குறிக்கப்படுகின்றன. இவை வழக்கமாக இயேசுவின் பணியையும், ஆள்தன்மையையும் விளக்குவதிலிருந்து சற்று வேறுபட்டு நிற்கின்றன.

இந்தக் 'கியூ' மூலச் செய்திகள் காட்டும் இயேசு ஓர் ஒழுக்க ஆசிரியராகத் தென்படுகிறார். அவரை, ''ஆண்டவரே, போதகரே'' என அழைத்தபோது அதைவிட என்விருப்பத்தை ஏற்று நடப்பதே மிகமுக்கியமானது என்கிறார். அவரோடு உண்டது குடித்தது ஆகிய எதுவுமே, இறையரசின் இறுதிநாள் தீர்ப்புக்குப் பயன்படாது என எச்சரிக்கிறார் (லூக் 13:26-27).

கிறிஸ்து இயல் முக்கியத்துவம் வாய்ந்த பல பகுதிகள் இயேசுவின் ஆள்தன்மையைப் பற்றிய நேரடியான, வெளிப்படையான எப்போதனையையும் கொண்டிருக்கவில்லை. காணாமல்போன ஆடு உவமையில் (மத் 18:12-14 = லூக் 15:3-7) பாவிகள்மீது இயேசு கொண்ட அக்கறையும், கடவுள் கொண்டிருக்கும் பரிவும் வெளிப்படுகிறது. அஃதோடு இறையரசு இத்தகைய ஒதுக்கப்பட்டவர்களுக்கு உரியதாக மாறியதை உள்ளார்ந்த விதத்திலே நியாயப்படுத்துகிறது. இயேசு தம் பணியைச் சரியென்று காட்டுவது மத்தேயு நற்செய்தியின் திராட்சைத் தோட்ட உவமையில் (20:1-15), சிறப்பாகப் பெரும் விருந்து பற்றிய உவமையில், வெளிப்படையாகத் தெரிகிறது (மத் 22:1-10 = லூக் 14:15-24). தாலந்துகளின் உவமை அப்போஸ்தலர்கள் நற்செய்தி அறிவிக்க வேண்டிய பொறுப்பை வலியுறுத்துகிறது எனப புரிந்து கொள்ளலாம் (மத் 25:14-30=லூக் 19:1-17).

இயேசு தொடங்கி வைத்துள்ள புதிய யுகத்திற்கும் பழைய யுகத்திற்குமுள்ள வேறுபாட்டை விளக்கும் பகுதிகள் பல உள்ளன

(மத் 11:4-6=லூக் 7:28-23; மத் 11:11=லூக் 7:28; மத் 11:12=லூக் 16:16; மத் 12:28=லூக் 11:20; மத் 13:16-17=லூக் 10:23-24). ''கியூ'' செய்தி மூலங்களில் தம் சீடர்களை இறையரசின் நற்செய்தியை அறிவிக்குமாறு கட்டளையிடும் இயேசு *(லூக் 10:1-16=மத் 9: 37-38; 10:7-16.21-23.40)* கூறுகிறார்: ''உங்களை ஏற்றுக்கொள்பவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்: என்னை ஏற்றுக்கொள்பவனோ என்னை அனுப்பியவரையே ஏற்றுக்கொள்கிறான்''. எனவே, இயேசு கடவுளின் தூதர். அவர் மனிதனது மீட்பிற்கு முடிவானவராக இருக்கிறார். இதைத் தொடர்பாகக் கொண்டு, இயேசுவும் அவரது சீடர்களும் புறக்கணிக்கப்படுவது பற்றியும், புதியபணி ஏற்படுத்தியுள்ள முரண்பாடுகள் பற்றியும், விசுவாசிப்போர் ஏற்றுக்கொள்ளவேண்டிய தியாகம் பற்றியும் *(மத் 10:34-38=லூக் 12:51-53; 14:26-27; மத் 12:30=லூக் 11:23)* பல பகுதிகள் தெளிவாகக் கூறுகின்றன.

புது யுகத்தைப் பற்றிக்கூறும் பகுதிகளும் *(லூக் 11:29-32=மத் 12:38-42)*, இயேசு புறக்கணிக்கப்படுவதைச் சொல்பவையும் *(மத் 8:20 =லூக் 9:58; மத் 11:19=லூக் 7:34)*, சீடத்துவத்தைப் பற்றிக் கூறுபவையும் *(மத் 10:26-33=லூக் 12:2-12; மத் 24:43-51=லூக் 12:35-46)* ஆகிய அனைத்துமே இயேசுவை 'மனுமகனாக' அடையாளம் காட்டுகின்றன.'கியூ' மூலத்தைத் தொகுத்தவர் இயேசுகிறிஸ்து மீண்டும் மனுமகன் என்ற பெயரில்தான் இவ்வுலகைத் தீர்ப்பிடும் நடுவராக வருவார் என எண்ணியிருக்கலாம்.

மேலே கூறப்பட்டவையெல்லாம் ஒரு தொடர்ச்சியான கருத்தை நமக்கு உணர்த்துகிறது. ஆனால் இவற்றினூடே ஒரு புதிய கருத்தும் புகுத்தப்படுகிறது. அதில் இயேசு கடவுளின் மகனாகவும், கடவுளின் ஞானமாகவும் அடையாளம் காட்டப்படுகிறார். இயேசு சோதிக்கப்படும்பொழுது 'கடவுளின் மகன்' என அழைக்கப்படுகிறார். கடவுளின் மகன் எனும்போது மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகள் இருப்பதாகப் பொருளாகிறது. அவர் உலக அரசைக் கைப்பற்றுவதென்பது அவரால் செய்து முடிக்கக்கூடியது; அப்படிச் செய்யத்தூண்டும் சோதனையும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. எனவே, 'கியூ' காட்டும் கடவுளின் மகன் என்பது ஒருபுதுவகை மெசியாவை நமக்கு அடையாளம் காண்பிக்கிறது. மத் 11:25-30=லூக் 10:21-22-இல் இயேசு ''மகன்''என்றே அழைக்கப்படுகிறார். ஆனால் இது மெசியாவின் பணியோடு தொடர்புடையதாகக் காட்டப்படாமல், இறைவனைப் பற்றிய அறிவு ஞானிகளுக்கும், விவேகிகளுக்கும் மறைக்கப்பட்டு, குழந்தைகட்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்டதோடு தொடர்புபடுத்தப்பட்டு, அதனால் தந்தை யாரென்பது மகனுக்கும், மகன் யாருக்கு வெளிப்படுத்துவாரோ அவர்களுக்கு மட்டுமே தெரியும் என்றும் விளக்கப்படுகிறது. இக்கருத்து யூதர்களுக்கு முற்றிலும் புதிது. எனவே மெசியா பற்றியகருத்தில் ஒரு புதிய சிந்தனை புகுகிறது. இத்தகைய பகுதிகள் பழமொழியிலும், சாலமோனின் ஞானத்திலும் வரும் 'விண்ணக ஞானத்தோடு' இயேசு ஒன்றாகக் கருதப்படுவதைக்காண முடிகிறது. எருசலேமை நினைத்துக் கண்ணீர்விடும் நிகழ்ச்சியில் *(மத் 23:37-39 = லூக் 13:34-35)* ஞானம் தன் குழந்தைகள் மீது ஒரு புறாவைப்போல் அசைந்தாடிக்கொண்டிருப்பதாகச் சுட்டுகிறது.

7. மத்தேயு:-

'கியூ'-வில் காணப்படும் கிறிஸ்தியல் மாற்கு நற்செய்தியைப் போலவே நன்கு வளர்ச்சி பெற்றதாக உள்ளது. எனவே மத்தேயு தாம் பெற்ற மூலச் செய்திகளோடு மிகக் குறைவாகவே கருத்துக்களைச் சேர்க்கிறார். மத்தேயு இயேசுவைக் கடவுளின் மகனாக, மெசியாவாக, சட்டத்தை அளிப்பவராகக் காட்டுவதிலே அதிக முக்கியத்துவமும், முயற்சியும் எடுக்கிறார். இதனை நிலைநாட்டுவதற்கு அவர் கொடுத்த முதல் கருத்து கன்னியிடம் இயேசு பிறப்பதைப் பற்றியதாகும் *(மத்1:18-25)*. மெசியா என்ற முறையிலே தமது அரச மாண்பை இயேசு சட்டப்படி தமது தந்தையான யோசேப்பிடமிருந்து பெறுகிறார் *(1:1-17)*. இயேசு வளர்ந்த ஊர்

நசரேத்து என்பதை அறிந்த நற்செய்தியாளர், அவர் பிறந்த ஊர் பெத்திலகேமாகத்தான் இருக்கவேண்டும் என்பதை மனதில் வைத்து மிகக் கவனமாக இரண்டு உண்மைக ளும் முரண்படாதபடி பார்த்துக் கொள்கி றார். எனவே அவரும் லூக்காவும் இயேசு பெத்திலகேமில்தான் பிறந்தார் என்பதை வலியுறுத்துகின்றனர். மத்தேயு இயேசுவின் வாழ்விலேயே அவரைப் பற்றிய பழைய ஏற்பாட்டு மெசியா பற்றிய முன்னறிவிப்புக ளைக் காண்கிறார் (1:23; 2:6.15.18; 4:15-16; 8:17; 12:18-21; 13:35). மத்தேயு பயன்படுத்தி யுள்ள சிறப்பான தனிப்பட்ட கருத்துக்கள் எவையென்று பார்க்கப்போனால், மலைப் பொழிவில் இயேசு கூறுபவற்றைப் பழைய போதனைகளோடு இணைத்து வேறுபடுத் திக் காட்டுவதில்தான் உள்ளது. உதாரண மாக ''உங்கள் முன்னோருக்கு இப்படிக் கூறியுள்ளதைக் கேள்விப்பட்டிருப்பீர் கள்.....நானோ உங்களுக்குச் சொல்கிறேன்' '(5:21-22).

8. லூக்கா - அப்போஸ்தலர் பணி:-

நற்செய்தியாளரின் கருத்துக்களையும் அவர் பயன்படுத்திய மூலத்தின் கருத்துக்க ளையும் வேறுபடுத்திப் பார்ப்பது மிகக் கடினமென்றாலும், மெசியா தாவீதின் மகன் எனும் கருத்தில் ஆழமாக ஊன்றிய மர போடு லூக்கா அதிகமாகத் தொடர்புகொண் டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இயேசு வின் வியப்புக்குரிய பிறப்பு காபிரியேல் தூதரால் அறிவிக்கப்படுகிறது (லூக் 1:26-38). அவர் பெத்திலகேமில் பிறக்கிறார் (2:4). மரியாவின் கன்னிமைக்கு அதிக முக்கியத்து வம் தரப்படவில்லை. ஆனால் 1:34;2:5-இல் சுட்டிக்காட்டப்படுகிறது. லூக் 1:11.32-33.35; 2:26.38-இல் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழிநடை யூத மெசியா கொள்கையின் அப்பட்டமான பிரதிபலிப்பாகத் தெரிகிறது. ஒரே ஒரு கருத்துமட்டும் வேறுபட்டு நிற்கி றது. அதாவது இயேசு கடவுளின் மகன் என அழைக்கப்படுகிறார். இயேசு இஸ்ராயே லுக்கு இறையரசை மீட்டுத்தருவார் என்ற கருத்து லூக் 24:21; அ.ப.1:6 என இரண்டிலும் கூறப்படுகிறது. லூக்காவும் மத்தேயுவைப் போல மறைநூல் இயேசுவின் வாழ்வில் நிறைவேறுவதை வலியுறுத்துகிறார் (லூக் 24:25-27.44-46).

கடவுளின் மகனான தான் தந்தையின் இல்லத்தில் இருப்பது இயல்பு எனச் சிறுவ னான இயேசு நினைக்கிறார் (2:49). அதே நேரத்தில் அவர் ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவ ரானார். தூய ஆவி அவர்மேல் காணக் கூடிய வடிவிலே அவரது ஞானஸ்நானத்தின் போது இறங்கி வருவதால் அவர் தூய ஆவியால்நிரப்பப்படுகிறார்(4:1;அ.ப.10:38-இல் பேதுரு இயேசு கிறிஸ்துவைக் கடவுள் பரிசுத்த ஆவியாலும், ஆற்றலாலும் நிரப்பி னார் என்கிறார்). லூக்கா நற்செய்தியாளர் கொணரும் இயேசுவின் தலைமுறை அட்ட வணை (3:23-38) இயேசு யோசேப்பின் வழி யிலே ஆதாமின் மகனாகவும், இறுதியில் கடவுளின் மகனாகவும் இருக்கிறார் என்ப தைக் காட்டுகிறார். வேறு ஓர் இடத்தில் இயேசு, கடவுளைத் தம் தந்தையாகக்காட் டிப் பேசுகிறார் (22:28-30; 23:46; 23:34).

லூக்காவின் சிறப்பான பகுதிகள் இயேசுவை இறைவாக்கினராகவும் (7:16) இயேசு தம்மையே இறைவாக்கினராகக் கூறுவதை யும் காட்டுகின்றன (13:33). 24:19 இலும் ''கடவுளுக்கும் மனிதருக்கும் முன்னால் சொல்லிலும் செயலிலும் வல்லமை பெற்ற இறைவாக்கினராகத் திகழ்ந்தார்'' எனும் அதே கருத்து வலியுறுத்தப்படுகிறது. அப் போஸ்தலர் பணியில் இயேசு, மோசேயி னால் முன்னறிவிக்கப்பட்ட, மோசேயைப் போன்ற இறைவாக்கினர் என்று கூறப்படுகி றது (அ.ப.3:22-23). லூக்காவின் சிறப்புப் பகுதிகளில் பல இயேசுவின் கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளன. அவை அனைத்தும் இறைவாக்குத்தன்மை கொண்டவையாக உள்ளன (லூக் 11:27-28; 12:14.54-56; 13:1-9; 16:19-31).

நற்செய்தியின் பிறபகுதிகள், பல புதுமை களும் அற்புதத்தன்மைகளும் கொண்டதாக உள்ளன. ஏராளமான மீன்பாட்டைக்கண்ட

பேதுரு, ''ஆண்டவரே பாவியெனைவிட்டு அகலும்'' என்கிறார் (லூக் 5:8). ''சாத்தான் மின்னலைப்போல் விழக்கண்டேன்'' (10:17-20) என இயேசு கூறுகிறார்; நல்ல கள்ளனிடம் ''இன்றே என்னோடு வான் வீட்டில் இருப்பாய்'' என்கிறார் (23:43).

லூக்கா நற்செய்தியாளர் இயேசுவை ஆண்டவர் என அழைப்பதிலே மற்ற ஒத்தமை நற்செய்தியாளர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு நிற்கிறார் (10:1; 11:39; 12:42; 17:5-6; 19:8; 22:61; 24:34). 'ஆண்டவரே' எனும் வார்த்தை 'மதிப்பிற்குரியவரே' என்பதிலிருந்து கடவுளைக் குறிக்கும் அடைமொழி வரை பல பொருள்களிலே புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இயேசுவின் வாழ்க்கையில் பொதுவாக அவர் 'இராபி' என அழைக்கப்பட்டார் (மாற் 9:5; 11:21; 13:1; லூக் 7:40). இராபி என்ற சொல்லுக்குப் பதிலாக நற்செய்தியாளர்கள் ஆண்டவரே எனும் சொல்லைப் பயன்படுத்துகின்றார் (மத் 7:21-22; 17:4-15; லூக் 7:6; 11:1; 18:41). ஆனால் லூக்கா ஆண்டவரே எனும் சொல்லைப் பயன்படுத்தும்போது அவர் மக்களனைவருக்கும் ஆண்டவராக இருக்கிறார் என்பதை மனதில்வைத்து, அவரது விண்ணக மாண்பை உணர்ந்து கூறுகிறார்; அப்போஸ்தலர் பணி, கடவுள் அவரை உயர்த்தி அவரை ஆண்டவராகவும், மெசியாவாகவும் மாற்றினார் என்பதற்குச் சான்று பகர்கின்றது (2:36; 3:13; 10:40-42; 13:32-35).

அப்போஸ்தலர் பணியில் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றும் பல அடைமொழிகள் இயேசுவைப் பற்றிய போதனைகளிலிருந்து எடுக்கப்பட்டவை: மீட்பர் (5:31; 13:23); ஊழியன் (3:13.26; 4:27.30); மன்னர், வாழ்வின் ஊற்றானவர் (3:15; 5:31); தூய்மையும், நீதியும் மிக்கவர் (3:14; 7:52; 22:14); வரப்போகிறவர் (19:4) எனப் பல அடைமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

9. பவுல்:-

இயேசு சிலுவையிலறையப்பட்ட சில ஆண்டுகளிலே மிகச் சிறந்த கிறிஸ்தியல் உருவாகி வளர்ந்துள்ளதைத்தான் பவுலின் திருமடல்கள் காட்டுகின்றன. பவுல் கிறிஸ்து இயல் கொள்கைகளில் ஆர்வம் கொண்டவரல்லர். ஆனால் கிறிஸ்துவுக்கு விசவாசத்தோடு, பணிந்து, ஊழியம் செய்யமுன் வருபவனே அவர்வழியாக மீட்புப் பெறமுடியும் எனும் கருத்தைக் கூற வருகிறார். இதனால் அவரது கிறிஸ்து பற்றிய சிந்தனைகள் நான்காம் நற்செய்தியின் சிந்தனையை ஒட்டியுள்ளன.

பவுலின் எல்லாமடல்களிலும் 'கிறிஸ்து' எனும் பெயர் இயேசு எனும் பெயருக்குத் துணைப் பெயராக, முன்வரும் ஒன்றாக அல்லது இயேசு எனும் பெயருக்குப் பதில் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்து என்ற பெயர் உயிர்த்த இயேசுவோடு உள்ள உறவுகளைப் பரந்துபட்ட அளவில் உணர்த்துகிறது. 'கிறிஸ்துவுக்குள்' அல்லது 'இயேசு கிறிஸ்துவுக்குள்' வாழ்வது என்பது ஒருவன் கிறிஸ்தவனாய் அது உள்ளடக்கும் எல்லாப் பண்புகளையும் கொண்டு, வாழ்தல் ஆகும். மேலும் இயேசுவைப் பின்பற்றுபவருக்கு என்ன நிகழும் என்பதைப் பல உருவகங்களால் விளக்குகிறார். அவர் ஏற்புடையவராக்கப்படுவார் (உரோ 3:24); அவரது தீட்டுக் கழிக்கப்படும் (3:25); அவரது அடிமைத்தனம் நீக்கப்பட்டு உரிமையுள்ள மனிதராவார் (3:24; கலா 3:13); ஒரு காலத்தில் கடவுளுக்கு எதிரியாக இருந்தும் இன்று கடவுளோடு ஒப்புரவாக்கப்படுவார் (2 கொரி 5:18-20); கடவுளின் மகனாகச் சுவிகாரம் செய்து கொள்ளப்படுவார் (உரோ 8:15-16). இவையெல்லாம் ஒருவர் வாழ்வில் நிகழவேண்டுமென்றால் அது ஒருவர் கிறிஸ்துவின்மேல் கொள்ளும் விசுவாசத்தையும் அவர் இயேசுவோடு தம்மை இனம் காண்பதைப் பொறுத்தும் இருக்கிறது. எனவே கிறிஸ்து மட்டுமே ஒருவனுக்கு இவை ஒவ்வொன்றையும் செய்ய முடியும் என்பது பவுலின் தெளிவான நம்பிக்கை.

தெசலோனிக்கேயருக்கு எழுதிய திருமுகங்கள்தான் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசும் முதல் மடல்.

அவை நற்செய்தி கூறும் மனுமகனைப் போன்றவரைத்தான் தனது செய்தியில் படம் பிடித்துக் காட்டுகின்றன. (1 தெச 1:10; 3:13; 4:13-17; 2 தெச 2:3-12). இயேசு ஆண்டவர் எனவும் அழைக்கப்படுகிறார் (1 தெச 1:1).

கிறிஸ்து, அல்லது மெசியாவைப் பற்றி வழக்கமாகக் கூறப்படும் விளக்கத்தை மாற்றி அமைக்கிறார் பவுல். அவர் சிலுவையில் அறையப்பட்டாலும் அவர் கடவுளின் ஞானமாகவும் ஆற்றலாகவும் இருக்கிறார் (1 கொரி 1:24). இந்த ஞானம்தான் எல்லா அறிவுக்கும் போதனைக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது (1 கொரி 2:10); இதன் மறைபொருளை உலகத்தை ஆள்வோர் அறிவதில்லை (1 கொரி 2:8). பழைய ஏற்பாட்டு மீட்பு நிகழ்ச்சிகளில் இந்த மெசியா ஈடுபாட்டோடு செயல்பட்டுக் கொண்டிருந்தார்; இவரே பாலைவனத்தில் மோசே வழியாக இஸ்ராயேலர்கள் தண்ணீர் பெற்ற பாறை. இவரே வானிலிருந்து பொழியப்பட்ட மன்னா (1 கொரி 1-4). விசுவசிப்போர் அவரது உடலைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள்; இந்த உடலை ஆண்டவரின் விருந்தில் பயன்படுத்தப்படும் ஒரே அப்பம் சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் அனைவரும் அவரது உடலிலும் இரத்தத்திலும் பங்குபெறுகின்றனர் (1 கொரி 10:16-17). திருச்சபையும் உறுப்பினர் பலரோடு சேர்ந்து அவரது உடலாக உள்ளது (1 கொரி 12:13-31). மெசியா என்பவர் விண்ணக மனிதர். அவர் மண்ணில் உள்ள எல்லா எதிரிகளையும் அழித்தொழிக்கும்வரை, சாவு உட்பட அனைத்தையும் வீழ்த்தும்வரை, அவரது ஆட்சி முடிவு பெறாது. ஆனால் தந்தையிடம் அரசாட்சியை ஒப்படைத்தபின் அவரது ஆட்சி நிறைவுறும். ஏனெனில் கடவுளே அனைத்திலும் அனைத்துமாக இருக்கிறார் (1 கொரி 15:24-27). பவுலைப் பொறுத்தவரையில் கிறிஸ்து ஒருவகையில் கடவுளுக்குக் கீழ்ப்பட்டவர்; கடவுளே கிறிஸ்துவுக்குத்தலையாக உள்ளார். எவ்வாறு ஆண் பெண்ணுக்குத் தலையாயிருக்கிறானோ அவ்வாறே என்க (1 கொரி 11:3). உலகிலே பல ஆண்டவர்கள், கடவுள்கள் இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு கடவுளாம் தந்தையும், ஒரே ஒரு ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவும் மட்டுமே உலகில் இருக்க முடியும் எனும் கருத்தையும் முதல் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலில் பவுல் தெளிவாகக் கொண்டு வருகிறார்.

2 கொரிந்தியர் திருமுகத்திலே கிறிஸ்துவை விசுவசிப்பவன் அவரோடு தன்னை ஐக்கியப்படுத்தி ஒன்றுபடுவதை வலியுறுத்துவதோடு, மூன்று முக்கியகருத்துக்களை முன் வைக்கிறார் (அ) இயேசு கிறிஸ்து ஆண்டவர் விண்ணகச் செல்வங்கள் நிறையப் பெற்றவராயினும் அவரைப் பின்பற்றுவோர் செல்வராகும் பொருட்டுத் தம்மையே அவர் ஏழையாக்கிக் கொண்டார் (2 கொரி 8:9). (ஆ) இயேசுவே புதிய உடன்படிக்கை. இது மோசேயின் வழியாகச் செய்த பழைய உடன்படிக்கையைப் போலன்று; அது தீர்ப்புக்கும் தண்டனைக்கும் பலரை இட்டுச் சென்றது. இவ்வுடன்படிக்கையின் வழியாக ஆண்டவர் இயேசுவின் மகிமை, அப்போஸ்தலர்களின் இதயங்களில் ஒளிவீசுகிறது (4:4-6). (இ) மேலும் கிறிஸ்து தூயஆவியோடு மிக நெருங்கிய முறையிலே ஒன்றித்திருப்பதால் கிறிஸ்துவுக்கும், தூய ஆவிக்கும் எந்த வேறுபாடுமில்லை என்று கூறுமளவுக்கு இணைந்திருக்கிறார்கள். பவுல் இயேசு சிலுவையில் பலவீனமுள்ளவராகத்தான் அறையப்பட்டார் என்பதை வலியுறுத்தியதன் காரணமாக அவரது மனிதத்தன்மையைச் சிறப்பாகக் கொணர்கிறார் (2 கொரி 13:4). உரோமையருக்கு எழுதிய திருமடலிலும், கலாத்தியருக்கு எழுதிய திருமடலிலும் இயேசு கிறிஸ்து மனிதனாகப் பிறந்த பலவீனத்தை வேறொரு விதத்திலே சுட்டிக்காட்டுகிறார்; ''கடவுள் தமது மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்'' (கலா 4:4); சட்டத்தின் சாபத்திலிருந்து மனிதனை மீட்க அவரே சாபமானார் (கலா 3:13; 2 கொரி 5:21); பாவத்தின் சாயலான உடலை எடுக்கு மாறு செய்தார் (உரோ 8:3). இவ்வாறு பலவகைகளில் அவர் கடவுளைவிடச் சற்றுத் தாழ்நிலையிலே வந்தார் என்பதை உணர்த்துகிறார்.

பிலிப்பியருக்கும், கொலோசேயருக்கும் எழுதிய திருமடல்களிலே மற்றமடல்களைப் போலவே இரண்டாம் வருகையைப் பற்றிப் பேசுகிறார் (பிலி1:6; 3:20; 4:5; கொலோ 3:4). பிலிப்பியருக்கு எழுதிய திருமடலில் வரும் கிறிஸ்து இயல் பாடல் 2:5-11 வேறு மடல்கள், கூறாத எந்தப் புதிய கிறிஸ்தியல் கருத்தையும் கூறவில்லை.''கடவுள் நிலையில் இருந்த அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின்தன்மைபூண்டு நம்மைப்போல் ஒருவரானார். அவர் கீழ்ப் படிதலினால் இறைத்தந்தை அவரை எல்லோருக்கும் மேலாய் உயர்த்தி எப்பெயருக்கும் மேலான இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்ற பெயரை வழங்கினார்''.

பவுல் இயேசுவின் தெய்வீகத்திலே முழுமையான விசவாசம் கொண்டிருந்தார் என்பது கொலோ 2:9-இல் மிகத் தெளிவாகிறது: தெய்வீகத்தின் முழுமையே இயேசுவிலே உடலெடுத்து வந்ததாகக் குறிப்பிடுகிறார். அவரிலே அவருக்காக அனைத்தும் படைக்கப்பட்டன. அனைத்திற்கும் முந்தியவராக அவர் இருக்கிறார். எனவே அவர் படைப்பிற்கெல்லாம் முந்தியவராகப் பாதுகாப்பு, மீட்பு ஆகிய அனைத்தின் காரணமாகவும் இருக்கிறார்.

எனவே பவுல் தம் சிந்தனையில் இயேசுவின் தன்மையையும், அவரது மனிதச் செயல்பாடுகளையும் பலவகைகளிலே அணுகி ஆய்கிறார். கிறிஸ்துவை, ஆசிரியராக, அவரது அப்போஸ்தலர்களின் அன்பு நண்பனாக,மெசியாவின் பல்வேறு நிலைகளிலே அவரைப் புரிந்து கொள்ளும் விதத்தில், விண்ணக மனிதனாக, ஆண்டவராக, புதிய உடன்படிக்கையைத் தொடங்கி வைப்பவராக, கடவுளின் ஞானமாக இப்படி எல்லாவகைகளிலும் ஒருங்கிணைத்துப் பார்க்கிறார். எனவே, இயேசுவின் எத்தன்மையும் இவரது பார்வையில் விடுபட்டுப் போக வாய்ப்பே இல்லை. இவ்வாறு கிறிஸ்துவைப் பற்றிச் சிந்தனையில் அளவிடமுடியாத செயல்பாடு பவுலால் நிகழ்ந்துள்ளது. எனவே பின்னர் வளர்ந்த கிறிஸ்து இயலில் காணும் எல்லாக் கூறுகளுமே ஏற்கெனவே பவுலின் மடல்களில் காணும் இறையியலில் பொதிந்துள்ளன. நற்செய்திகள் கூறுவது போல் இயேசுவின் பணியில் நிகழ்ந்த எந்த அற்புதங்களையும் அவர் இங்குக் குறிப்பிடவில்லை. ஏனெனில் மண்ணில் வாழ்ந்த இயேசுவை அவர் சிலுவையில் அறையுண்டவராக மட்டுமே அதிகம் அறிந்திருந்தார் (1 கொரி 7:10.25). இவ்வாறு பவுல் சிந்தனையில், நன்கு வளர்ச்சி பெற்ற கிறிஸ்து இயல் சிந்தனைகளை நாம் காணமுடிகிறது.

10. பிந்தைய புதிய ஏற்பாட்டு நூல்கள்:- முதலாம் நூற்றாண்டின் இறுதியில்தான் பவுலின் மடல்கள் சிறப்பும், பெருமையும் பெற்றன. ஏனெனில் அப்பொழுதுதான் அவை ஒன்று சேர்க்கப்பட்டுப் பல சபைகளில் வாசிக்கப்பட்டு வந்தன. எனவே மற்றப் புத்தகங்களும் அந்த மடல்களைப்போலவே அமைக்கப்பட்டன.

அ. எபேசியருக்கு எழுதிய திருமுகம்:- இது போன்று எழுதப்பட்டவைகளில் முதலாவது எபேசியருக்கு எழுதிய திருமுகமாகும். இம்மடல் கொலேசியருக்கு எழுதிய திருமுகத்திற்கு மேலாகப் புதிதான எந்தக் கிறிஸ்து இயல் கருத்தையும் கூறவில்லை. கிறிஸ்து கீழுலகங்களுக்கு இறங்கிச் சென்றதைப் பற்றிப் பேசுகிறது (4:9-10); இவ்வாறு இறந்தோர்கட்கும் அவர் போதித்தார் எனும் கொள்கைக்கு இது வழிவகுக்கிறது (1 பேதுரு 3:18-22).

ஆ. எபிரேயருக்கு எழுதிய திருமுகம்:- எபிரேயருக்கு எழுதியதிருமுகத்தை ஒரு பெரும் மறையுரை என்றே சொல்லலாம். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படப் போகின்ற வேளையிலே இயேசுவையும் அவரது பணியையும் மையமாக வைத்து அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன்மூலம் கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப்படுத்தும் நோக்கோடு எழுதப்பட்டது இது. மற்ற எல்லாப் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களையும்விட இந்நூல் இயேசு கிறிஸ்துவின் மனிதத்தன்மையைப் பெரிதும் வலியுறுத்துகி

றது. அவர் எல்லா மனிதர்களுக்காகவும் சாவைச் சுமந்தார் (2:9); எனவே அவர் மனித குலத்தின் பிரதிநிதியாகிறார். அவர் மனித உடலெடுத்து வந்தபோது உரத்த குரலெழுப்பிக் கண்ணீரோடு செபித்தார். தம் பாடுகள் வழியாகக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (5:7-8). மற்ற மனிதர்களைப் போலச் சோதனைக்குட்பட்டாலும் அவர் பாவமில்லாதவராயிருந்ததால் மனிதர்களின் பலவீனத்தின் மீது இரக்கம் கொண்டார் (4:15). அவர் கடவுளின் தனிப்பெரும் அப்போஸ்தலராகவும், தூதுவராகவும், தலைமைக் குருவாகவும் (3:1) இருந்தாலும் அவர் தம்மையே மகிமைப்படுத்திக்கொள்ளவில்லை; கடவுளே அவரை மகிமைப்படுத்தினார் (5:5). இயேசுவின் தலைமைக் குருத்துவம் ஆரோன்வழி வந்த குருத்துவம் போலன்று; இது நிலையானதும் நிறைவானதும் ஆகும் (5:6.10; 6:13-7:17). இது புதிய சட்டத்தையும் புதிய உடன்படிக்கையையும் பிரதிபலிக்கிறது (7:18-28). இயேசு கடவுளின் பிரசன்னத்திலே தம்மைப் பலியாக்குகிறார்; தமது மக்களுக்காகப் பரிந்து பேசும் வண்ணம் அவர் என்றென்றும் வாழ்கிறார் (7:25).

(இ) திருவெளிப்பாடு:-
இந்நூலில் வரும் இறைவாக்குகள் ஏனைய கிறிஸ்து இயல் சிந்தனையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நிற்கின்றன. ஏனெனில் இது பிந்திய யூத வெளிப்பாட்டு நடையைப் பின்பற்றி மெசியாவின் ஆயிரம் வருடம், புனிதர்களின் உயிர்ப்பு (திருவெளி 20:2-5), சாத்தானின் இறுதிப் போராட்டம் (20:11-22:5) பொதுத்தீர்வும் உயிர்ப்பும், வரப்போகின்ற புதிய காலமும் (20:11-22:5) எனப்பல கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. இதில் காட்டப்படும் மெசியா யூதாவின் சிங்கம்; தாவீதின் அடிப்படை வேர் (5:5; 22:16); விடியற்காலத்தின் நட்சத்திரம் (22:16); அதுமட்டுமல்ல, மனுமகனும் பிறந்தோரினின்று பிறந்தவர்களில் முதல்வரும், மேகங்களிடையே அளவற்ற சக்தியோடு வருபவருமாக இருக்கிறார் (1:5-7.13-16; 14: 14). மெசியா, யூத மரபின்படி ஒரு காளையல்லர், மாறாகப் பலியாக்கப்படும் செம்மறி (5:6); அவரே தம் மக்களிடத்து அன்பு செய்து தமது இரத்தத்தால் அவர்களது பாவங்களிலிருந்து விடுவித்தவர் (1:6).

இந்த நூலின் முழுமையான தோற்றத்தைக் காணும்பொழுது இது கிறிஸ்து மயமாக்கப்பட்டிருக்கிறது எனலாம். விசுவாசத்தின் சான்றாக விளங்கிய, விசுவாசச் சாட்சியான அவர் (1:5) கிறிஸ்தவ வேத சாட்சிகளின் மாதிரியாக விளங்குகின்றார். அவர் கடவுளின் மகன் (14:1); இறைவார்த்தை என்பது அவரது பெயர் (19:13); இங்கே இறைவாக்குரைக்கும் அவரது வார்த்தையையே இப்பெயர் குறிக்கிறதேயொழிய 'வார்த்தை' எனும் பெயர் அவரைக் குறிக்கவரவில்லை. யூத வெளிப்பாட்டு நடையில் வரும் புதிய எருசலேம் அவரது மணமகளாகவும் (21:9-10) மெசியாவின் விருந்து செம்மறியின் திருமண விருந்தாகவும் (19:9) ஆகிறது. நிச்சயமாக இந்த விருந்து நற்கருணை விருந்தோடு உள்ள தொடர்பை உணர்த்தத்தான் வருகிறது (3:20).

(ஈ) 1 பேதுரு:- இந்நூலும் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டபோது எழுதப்பட்டாலும் இது கிறிஸ்துவின் மென்மையான தன்மையையும் அவரது பழிவாங்கா மாக மருவற்ற தன்மையையுமே (1:19; 2:21-24) அதிக முக்கியத்துவத்தோடு எடுத்துக்காட்டுகிறது. இக்கோட்பாட்டில் வந்துள்ள புதிய கருத்து என்னவென்றால் இயேசு பாதாளங்களுக்கும் சென்று அங்குள்ளவர்களுக்கும் வாழ்வு தந்தார் (3:18-24; 4:6) என்பதாம்.

(உ) மேய்ப்புப்பணித் திருமுகங்கள்:- திமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் எழுதப்பட்ட திருமுகங்கள் கிறிஸ்துவை 'மீட்பர்' என அழைப்பதிலே ஒரு தனி ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது (1 திமோ 1:1;2 திமோ 1:10; தீத் 1:4; 2:13; 3:6). மீட்பர் எனும் வார்த்தை பொதுவாக உலக வழக்கிலிருந்த ஒன்று. இம்மடல்களில் அவரது மனிதத்தன்மையும், மீட்பில் அவர் வகிக்கும் பங்கைப் பற்றியும் அதிகம் பேசப்படுகிறது; அவரே கடவுளுக்கும் மனிதருக்குமிடையேயுள்ள

ஒரே இடைநிலையாளர், அவரே இயேசு கிறிஸ்து ஆவார் (1 திமோ 2:5; 6:13-14; 2 திமோ 2:8; 4:1; தீத் 2:11-14).

(ஊ) மற்ற நூல்கள் :- பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகத்திலே, உருமாற்றம் இரண்டாம் வருகையின் முன்சுவையாகக் (1:16-18) குறிக்கப்படுகிறது. காலத்தால் பிந்திய இந்நூல் மீட்பர் எனும் வார்த்தையைப் பல முறைகள் உபயோகப்படுத்துகின்றது (1:11; 2:20; 3:2.18). யாக்கோபு, ஆண்டவரின் இரண்டாம் வருகையைப் பற்றியும் (5:7) இயேசுவை மகிமையின் ஆண்டவராகவும் (2:1) குறிப்பிடுகிறார்.

11. யோவான் நற்செய்தி:- யோவான் நற்செய்தி புதிய ஏற்பாட்டின் மிகப்பிந்திய நூலாக இல்லாவிடினும், கிறிஸ்து இயல் சிந்தையின் உச்சத்தை இந்நூல் அடைந்திருக்கிறது என்று திண்ணமாகக் கூறலாம். இந்நற்செய்தியாளர் ஒத்தமை நற்செய்திகள், பவுலின் மடல்கள், எபிரேயருக்கு எழுதிய திருமுகம் ஆகிய அனைத்திலும் உள்ள கிறிஸ்து இயல் சிந்தனைகளை எடுத்துக் கொள்கிறார். இயேசு மெசியாவாகவும் (9:22; 21:27; 20:31) ஆண்டவராகவும் இருக்கிறார் (13:13-14; 20:18.28; 21:12). அவர் முழுமையும் கடவுளின் மகனாக இருக்கிறார், அதாவது கடவுளிடமிருந்து வந்து, மீண்டும் கடவுளிடமே செல்கிறார் (13:1-3). அவர் மனிதரிடமிருந்து தோன்றியவரல்லர் (1:12-14.18; 8:58). தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற உலகில் பணியாற்றுகிறார் (2:16; 5:17. 19-29). மீண்டும் தமது நிலையான மகிமைக்கு எடுத்துச் செல்லப்பட்டார் (11:4; 12:27; 14:13.28; 17:1 பிலி 2:5-11). கடவுளின் மகன் என்ற கருத்தோடு மெசியாவின் மறைந்த தன்மை தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது (6:42; 8:19; 19:9). இயேசுவைக் கடவுளின் மகன் என அழைக்கும் இடங்களில் எல்லாம் இக்கருத்தோடு தொடர்புபடுத்தித்தான் அழைக்கிறார் நற்செய்தியாளர் (1:51; 3:13.14; 6:27.53; 8:28; 12:34). இயேசு மீட்பர் எனவும், இறைவாக்கினர் எனவும் அழைக்கப்படுகின்றார். ஆனால் வார்த்தைகள் வரையறுக்கப்பட்டு விளக்கப்படவில்லை (7:40; 6:14: இவ்வுலகிற்கு வரப்போகும் இறைவாக்கினர்). இயேசுவின் மீது முழுமையான விசுவாசமும் அவரைப்பற்றிய முழுமையான அறிவும் இல்லாதவர்களே இறைவாக்கினர் எனும் பெயரைப் பயன்படுத்தினர். இயேசுவே உலகின் பாவங்களைப் போக்கவந்த செம்மறி (1:29). சிறப்பாக இந்த நற்செய்தியில் பாஸ்கா செம்மறிபலியாவதற்கு முன்னே துன்புறுகிறார். பாஸ்கா செம்மறி பலியாகும் போது இறக்கிறார். பாஸ்கா செம்மறி பலியிடப்படுவதின் அடையாளம் சாவிலிருந்து மீட்பதற்கேயொழியப் பாவத்தைப் போக்குவதற்கல்ல; மெசிய வெற்றியுள்ளவராக எழுவார் என்பதை வெற்றிகொள்ளும் செம்மறியாக அதைக் காட்டுவதன் வாயிலாகப் புரிந்து கொள்ளலாம். இந்த மெசியா பாவங்களைச் ''சுமப்பவரல்லர்''; அவற்றிற்கு ஓர் இறுதியான முடிவுகட்டுபவர். இந்த மெசியா மோசேயின் சட்டத்திற்கும் மேலானவர் (5:16-18; 7:22-24). ஆனால் அவர்தரும் ஒரே சட்டம் அன்பு எனும் புதிய கட்டளைதான் (13:34). இயேசுவின் திருமுழுக்கைப் பற்றி எதுவும் சொல்லாமல், திருமுழுக்கு அருளப்பரின் பணி, அவரிலும் மேலானவர்க்குச்சான்று பகர்வதுதான் (1:19-34; 3:22-30) எனக் கூறப்படுகிறது. மெசியா ரகசியம் என்பது இந்நற்செய்தியிலே மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது; அவரின் சீடர்கள் மட்டும் இதனைப் புரிந்துகொள்கின்றனர் (முழுமையாக இல்லையென்றாலும்); ஆனால் அவரது எதிரிகளோ இயேசு சாதாரணமாகப் பேசியபோதுகூட அது என்னவோ ஏதோ எனத் தங்களைக் குழப்பிக் கொண்டனர்.

மற்ற நற்செய்திகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட விதத்திலே யோவான் நற்செய்தியில் வரும் இயேசுவின் போதனைகள் அனைத்துமே விசுவசிப்போரையும் விசுவாசமற்றோரையும் பற்றியே பேசுகின்றன. இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் கடவுளையே ஏற்றுக் கொண்டார்கள் என்பது

உண்மையாயினும் (13:20) இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்பது மீட்பிற்குக் கட்டாயம் தேவைப்படுகிறது.

இந்நற்செய்தி ஒரு முன்னுரைப் பாடலோடு தொடங்குகிறது. இப்பாடல் இயேசுவை வார்த்தையாகக் கொண்டு வருகிறது. ''வார்த்தை'' என்னும் சொல்லை இந்நற்செய்தியில் எங்கும் பயன்படுத்தாததால் ஏற்கெனவே இருந்த ஒரு பாடலை ஆசிரியர் எடுத்துத் தம் நற்செய்தியில் இணைத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இவற்றில் வரும் கருத்துக்கள் எல்லாம் பின்னர் மீண்டும் மீண்டும் வருவதால் இது ஒரு முன்னுரைபோல் அமைந்துள்ளது எனலாம் (1:4; 11:25; 6:35.51; 7:37-38). அதாவது கிறிஸ்துவே வாழ்வு; அவரே உலகின் ஒளி (1:4; 8:12; 9:5) என்பன போன்றவை உதாரணங்களாகும். முன்னுரைப்பாடல் கொலோசேயர் எபிரேயர் திருமுகங்கள் சுமந்துவரும் கருத்தாகிய கிறிஸ்து படைப்பின் முக்கிய கருவியாக இருக்கிறார் எனும் கருத்தைக் கூறினாலும், மீட்பிலே கிறிஸ்து கொண்டிருக்கும் பங்கிற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது (1:11-13). அதோடு வெளிப்பாட்டுக்கும் இணையான முக்கியத்துவம் தரப்பட்டது (1:9.14.1 7-18). யோவான் பவுலைவிட ஒரு படிமேலே போய் இறை வார்த்தையே கடவுள் எனக்கூறி அவர் தந்தையோடு இருந்தாலும் (1:2) தந்தையிடமிருந்து வந்தவர்தான் (1:18) என்கிறார். மற்றொரு கருத்தும் நற்செய்தியின் இடைப்பட்ட பகுதியிலே வருகிறது. மகன் கடவுளுக்கு இணையாக இருப்பதால் (3:35; 5:18; 10:18-30; 16:32; 17:10) அவர் கடவுள் என அழைக்கப்படத் தகுதியுள்ளவரே (10:34-36; 20:28). இவ்வாறு கிறிஸ்து எனும் தெய்வத்தில் கிறிஸ்து இயல் அதன் உச்சத்தையே தொடுகிறது.

கிறிஸ்துவை விளக்க நற்செய்தியாளர் பயன்படுத்தியுள்ள கருத்துக்களைப் போன்றவை ஞானவாதக் கொள்கையினரிடத்திலும் காணப்படுகிறது. அதாவது கிறிஸ்துவே வாழ்வு தரும் உணவு; வாழ்வு தரும் பானம் (6:35; 7:37-38); வாழ்வும் உண்மையும் (14:6); வழியும் வழியில் முன் செல்பவரும் (13:36; 14:2-6); உண்மையான திராட்சைக்கொடி (15:1-10); நல்ல ஆயன் (10:11); அவரே வாயில் (10:7); துணையாளர் அல்லது துணையாளரை அனுப்பும் துணையாளர் (14:16-17.26; 16:13-15). இங்கே முன்னுரைப் பாடலில் யோவானுக்கும் ஞானவாதக் கொள்கையினருக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், யோவான் படைப்பவரையும் வெளிப்படுத்துபவரையும், மீட்பரையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை; இவை அனைத்துமே ஒருவர்தாம்; அவர் தாம் கடவுள். உலகம் எவ்வளவுதான் பாவம் நிறைந்ததாக இருந்தாலும், படைப்பு என்பது ஒரு வீழ்ச்சி அன்று; மாறாகக் கடவுள் அன்பின் வெளிப்பாடு (3:16).

யோவானின் மற்றொரு வித்தியாசம் உலகம் கடவுளின் படைப்பு என்பதோடு தொடர்புடையதாகும். ஞானவாதக் கொள்கையினரின் மீட்பர் என்றுமே முழுமனிதனாக உருவெடுக்க முடியாது, மனு உரு எடுத்ததாகத் தோன்றலாம். மேலும் அவரைப்பின்பற்றும் அனைவரையுமே மீட்க முடியாது, மாறாக, யாரிடம் இறைத்தன்மையின் சிறு ஒளியாவது ஒட்டிக்கொண்டிருக்கிதோ அவர்களை மட்டுமே மீட்க முடியும். ஆனால் யோவான் மனுவுருவான வார்த்தை மக்களிடையே கூடாரமடித்தது (உடலைக் கூடாரத்துக்கு ஒப்பிடும் கருத்தைக் காண் 2 கொரி 5:1;2 பேதுரு 1:13), ஏனெனில் அவர்களைத்து (யோவா 4:6), தாகமுற்றுச் (4:7; 19:26) சிலுவையில் இறந்தார்.

இயேசுவின் செயல்களையும், வார்த்தைகளையும் பற்றி நற்செய்தியாளர் கூறும் நிகழ்ச்சிகள் இயேசுவின் இறைத்தன்மைபற்றிய கொள்கையினால் அதிகம் பாதிக்கப்பட்டனவேயொழிய அவரது மனிதத்தன்மை பற்றிய கருத்துக்களால் அல்ல. பைசாந்திய ஓவியங்களில் கிறிஸ்து அனைத்தும் செய்ய வல்லவராகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறார். எனவே, அவரது மனித சாயல் இறை சாயலைச் சுமந்து செல்லும் ஒரு கருவியாகவே பயன்

பட்டுள்ளது. எனவே நான்காம் நற்செய்தியைக் கிறிஸ்துவைப் பற்றிய இறையியல் விளக்கம் தரும் நற்செய்தி வடிவில் உள்ள ஒரு விசுவாச அறிக்கை எனலாம். இவ்விசுவாச அறிக்கை 'பவுலின் கருத்துப்படி உயிர்த்து மகிமைபெற்று மண்ணகப் பணியிலே தொடர்ந்து ஒளிவிடும் இயேசுவுக்குச் சொந்தமானது. ஒத்தமை நற்செய்திகளில் வரும் இயேசுவின் ஞானஸ்நானத்திற்குப் பதிலாக, யோவானின் சாட்சியாக மாறுகிறது. இந்நற்செய்தியில் உவமைகளே இல்லை; ஆனால் உருவகங்கள் உள்ளன. சட்டத்தைப் பற்றிய பேச்சே இல்லை; ஆனால் சட்டத்திற்கெல்லாம் மேலான மேல்வரிச் சட்டமாகிய இயேசு புதிய கட்டளையாம் அன்பைப் போதிக்கிறார். மனித இரக்கத்தால் நிறைந்து யாரையும் குணப்படுத்துவதாகக் காட்டாமல் இறைவனின் மாபெரும் இரக்கத்தின் அடையாளமாகக் குணமாக்குதல்கள் காட்டப்படுகின்றன. முடிவில்லா வாழ்வு, கிறிஸ்துவில் விசுவாசம், அவரில் வாழ்வது போன்ற போதனைகள் இறையரசு பற்றிய கருத்துக்களை விளக்குகின்றன. இயேசுவின் பணி இங்கு வெளிப்படையாகச் சமாரியர்களுக்கும், கிரேக்கர்களுக்கும், யூதர்களிலே அவரைச் சேர்ந்தவர்களுக்கும் உரியதாகக் காட்டப்படுகிறது.

இயேசுவின் செயல்களையும் வார்த்தைகளையும் இறைவனுக்குரியவையாக நற்செய்தியாளர் காண்கிறார். இயேசு, இயல்புக்கு அப்பாற்பட்ட அறிவுத்திறன் கொண்டு விளங்குவதைக் காட்டுகிறார் (1:47-51; 2:25; 4:17-19; 13:21-27); சில நேரங்களில் புதிராக இருக்கிறார்; அவரிடம் கொடுக்கப்படும் கருத்துக்களைப் புறக்கணிக்கிறார்; அது அவர் பதிலளிக்க மறுப்பதைக் காட்டவில்லை; மாறாக மனிதருடைய கருத்துக்கள் கடவுளுடைய கருத்துக்கள் அல்ல என்பதை உணர்த்தத்தான் (2:4-5). தந்தையோடு அவர் செபிப்பது அவருக்கும் தந்தைக்குமுள்ள முழுமையான உறவையும், புரிந்துகொள்ளுதலையும் காட்டுகின்றது (11:41-42; 12:27-28; அதி 17). பிலாத்துவின் முன்னிலையில் உண்மையின் சாட்சியாக, இவ்வுலகத்தைச் சாராத அரசனாக நின்று பேசுகிறார் (18;19-21.33-37;1 9:10-11). அவர் தம்முடைய சொந்த விருப்பத்தினால்தான் தம் உயிரைக் கொடுக்கிறார்; மீண்டும் எடுத்துக்கொள்கிறார் (10:17-18; 15:13). எனவே அவருடைய விருப்பமின்றி யாரும் அவரைக் கைது செய்ய முடியாது (7:44-46; 18:5-8). சிலுவையில் அவரது இறுதி வார்த்தைகள் ''எல்லாம் நிறைவேறிற்று'' என்பதாகும். அதன்பின்னரே தம் ஆவியைக் கையளிக்கிறார். எனவே கிறிஸ்துவின் வாழ்வு முழுவதுமே இறைவனுக்கு இணையானதாய் அமைந்ததை யோவான் தெளிவாகக் காட்டுகிறார்.

12. திருச்சபைத் தந்தையர்கள்:- ஒரு சில பழைய கிறிஸ்துஇயல் சிந்தனைகள் முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த திருச்சபைத் தந்தையர்களின் நூல்களில் மீண்டும் தோன்றுவதை நாம் காண்கிறோம் (உ-ம்) கடவுள் கிறிஸ்துவைத் தேர்ந்தெடுத்து (1 கிளமெந்து 64:1), அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார் (1 கிளமெந்து 24:1). அவரே ஆண்டவரும் மீட்பரும் தலைமைக் குருவுமாக இருக்கிறார். துன்புறும் ஊழியனும், பாலைவனத்தில் உயர்த்தப்பட்ட பாம்பும் அவரையே சுட்டுகின்றன. ஒரு சில கருத்துக்கள் முழுமையான வளர்ச்சியடைவதையும் பார்க்கிறோம். மூவொரு கடவுள் பற்றிய சான்றும் (1 கிளமெந்து 58:2; திதாகே 7:1.3), விசுவாச அறிக்கையின் ஒரு பகுதியாகிய ''வாழ்வோர் இறந்தோரைத் தீர்ப்பிடுவர்'' (2 கிளமெந்து 1:1) எனும் கருத்துக்களும் வருவதைப் பார்க்கிறோம். புனித இஞ்ஞாசியார் (திருச்சபைத் தந்தை) கன்னிப் பிறப்பை வலியுறுத்துகிறார் (7:1; 18:2; 19:1). தோற்றக் கொள்கையினருக்கு எதிராக அவர் மனித உடலெடுத்து வந்தார் என்பதை வலியுறுத்துகிறார். அவர் ஆவியின் இயல்பு கொண்டிருந்தவர், மனித உடலெடுத்து வந்தார் என்கிறார் (எபேசு நகரத்து இஞ்ஞாசியார் 7:1; 20:1).

ஒருசில இடங்களில் திருச்சபைத் தந்தையர்கள், கிறிஸ்து மனிதனாக வருவதற்கு அவர் காட்டிய தாழ்ச்சியைப் பற்றிப் பேசு

கின்றனர். கிறிஸ்து மனிதகுலம் அனைத்தின் பிரதிநிதியாக நிற்கிறார் எனும் கருத்தை இன்னும் ஆழமாகச் சிந்தித்துப் பேசுகிறார் இஞ்ஞாசியார். கிறிஸ்தவர்கள் சிலுவை எனும் மரத்தில் விளைந்த கனிகள் எனும் கருத்தையும் கூறுகிறார். மேலே கூறிய கருத்துக்களைப் பார்க்கும்பொழுது திருச்சபைத்தந்தையர்கள், இயேசுவில் திருச்சபை வெளிப்பட்டது, இயேசுவே கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயன் போன்ற கருத்துக்களைப் பற்றித் தெளிவாகப் பேசியதில் சந்தேகமே இல்லை. புனித இஞ்ஞாசியார், இயேசு தந்தையோடு இணைக்கப்பட்டுள்ளது போலத் திருச்சபை இயேசுவோடு இணைக்கப்பட்டுள்ளது என்கிறார். தந்தையை அடைவதற்குரிய வழியாக அவர் இருப்பதால் அவரே முதுபெரும் தந்தையர்க்கும், இறைவாக்கினர்கட்கும், அப்போஸ்தலர்கட்கும், திருச்சபைக்கும் வர்யிலாக இருக்கிறார். இவைபோன்ற சில கருத்துக்கள் யோவான் நற்செய்தியில் காணக்கிடக்கின்றன. இஞ்ஞாசியார் இயேசுவை இறைவார்த்தையென அழைத்தபோது அவ்வார்த்தை அமைதியிலிருந்து புறப்படுவதாகக் கூறுகிறார்.

''ஊழியன்'' அல்லது ''குழந்தை'' எனும் வார்த்தை அவர்களின் செபங்களில் வருகிறது. சிறப்பாகப் போலிகார்ப்பு வேதசாட்சியாக மரித்தபோது 'குழந்தை' எனும் வார்த்தை மகனைக் குறிப்பதற்காக வருகிறது என்பதே உண்மை. மேலும், சில புதிய கருத்துக்களும் இவர்களுடைய நூல்களில் தோன்றுகின்றன. இஞ்ஞாசியார் இயேசுவைத் 'தந்தையின் திருவுளம்' என அழைக்கிறார். மேலும், அவரது பிறப்பின்போது அதனை அறிவித்த நட்சத்திரம், மாயவித்தைகள், தீமைகள், அறியாமை அனைத்தையும் அழிக்கவந்த ஒன்றாகக் காண்கிறார்.

III. கிறிஸ்து என்கிற ஆள்:-

பழைய ஏற்பாட்டுப் பெரியவர்களைப் போல இயேசுகிறிஸ்து எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் அபிடேகம் செய்யப்படவில்லை; தன் பதவியில் நியமனம் செய்யப்படவில்லை. படைப்பிற்கு முன்னே அவர் அபிடேகம் செய்யப்பட்டுவிட்டார். 1 பேதுரு 1:20-இன்படி கிறிஸ்து உலகம் உருவாவதற்கு முன்னரே கடவுளுக்கும் மனிதகுலத்திற்குமிடையே இடைநிலையாளராக இருக்கும்படி முன் குறித்து வைக்கப்பட்டார் (2 திமோ 1:9); அதாவது தந்தை எவ்வாறு தம் மக்களை உலகம் தோன்றுவதற்கு முன்னரே தேர்ந்தெடுத்துக் கொண்டாரோ அவ்வாறு கிறிஸ்துவையும் முன்குறித்தார் (எபே 1:4). பவுலின் வார்த்தைகளின்படி ''காலம் நிறைவுறும் முன் மண்ணிலுள்ளவை, விண்ணிலுள்ளவை அனைத்தையும் ஒருங்கிணைக்க வேண்டுமென்பதே அவரது திட்டம்'' (எபே 1:10).

கடவுள், உடன்படிக்கையின் மக்களுக்குக் கிறிஸ்துவின் என்றும் நிலவும் மீட்பு, நடுநிலைப்பணி பற்றிய மறையுண்மைகளைச் சிறிது சிறிதாக வெளிப்படுத்தி, காலம் நிறைவுறும்போது தம்பணியை முடிக்க அவர் வருவார் எனவும் உணர்த்தினார் (கலா 4:4). பழைய ஏற்பாட்டில் மெசியாவின் வருகை பற்றிய செய்தி வெறும் வாக்குறுதியாக இருந்தது. காலம் நெருங்க நெருங்க அது பற்றிய விளக்கங்கள் தரப்பட்டன. இறுதியில் கால-காலங்களுக்கும் மறைத்து வைக்கப்பட்ட அவர் முழுவதுமாகத் தோன்றினார் (கொலோ 1:26; உரோ 16:25).

காலங்களுக்கெல்லாம் முன்பு வாழ்ந்தவர் மட்டுமல்லர் கிறிஸ்து. அவர் மனித குலத்தில் ஒருவராகவும் இருக்கிறார். மற்ற மனிதர்களைப்போல அவரும் பெண்ணிடம் பிறந்தவர் தாம் (ஆதி 3:51). கடவுள் ஆபிரகாமுக்கு வாக்களித்தபோது மெசியா முதுபெரும் தந்தையரின் வழித்தோன்றல்களில் ஒருவராக இருப்பார். அதனால் எல்லா நாடுகளும் ஆசிர்வதிக்கப்படும் என்கிறார் (22:17-19). யாக்கோபு இறக்கும் தருவாயில் யூதாவின் கோத்திரத்திலிருந்தே மெசியா பிறப்பார் என்கிறார் (49:10). பிந்தைய இறைவாக்குகள் மெசியா என்ற ஆளைப்பற்றிய விளக்கங்களைத் தருகின்றன. ஏசயா இறைவாக்கினர் அவரை வெறுத்து ஒதுக்கப்படும் துன்புறும் ஊழியனாகக் காட்டினாலும், 11:4-இல்

எதிரிகளைத் தமது மூச்சினாலே அழித்தொழிக்கும் அரசனாகவும், தமது நீதியின் ஆட்சியை நிலைநாட்டுபவராகவும் காட்டுகிறார். பழைய ஏற்பாட்டுக் காலத்தின் இறுதியிலே அவரை முறிந்துபோன தாவீதின் மரபிலிருந்து வரும் புதிய தளிராகக் கண்டனர் (மீக் 5:2).

1. தெய்வீகத் தன்மை:- புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் முன்னிருப்பைப் பழைய ஏற்பாட்டை விட இன்னும் அதிகமாக விரித்துப் பொருள் கொள்கிறது. அவர் உலகம் உருவதற்கு முன்னரே இருந்தவர் மட்டுமல்லர். அவர் என்றும் வாழும் கடவுளாகவும் இருக்கிறார் (யோவா 1:1). உலகிலே மனித உடலெடுத்தபோதும்கூட (1:14) அவர் இறைத்தன்மை கொண்டவராகவும் விளங்கினார்.

திருச்சபை கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் பற்றிக் கூறுவது வெறும் மனிதக் கண்டுபிடிப்பல்ல; இறைவனே அதனை வெளிப்படுத்தியுள்ளார் (மத் 16:17). விவிலியத்தின் எல்லா நூல்களுமே அவர் இறைவன் என்பதைத் தெள்ளத்தெளிவாகக் கூறுகின்றன (மீக் 5:2; ஏச 9:6). புதிய ஏற்பாட்டிலே அவரது தெய்வீகத்தை அடிக்கடி அறிக்கையிடும்போது, கிறிஸ்துவாலே சில நேரங்களில் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பேதுரு கிறிஸ்துவை ''உயிருள்ள கடவுளின் மகன்'' என அறிக்கையிடுகிறார் (மத் 16:16; மாற் 8:29; லூக் 9:20). பவுல் ''அவர் கடவுள் தன்மையில் விளங்கினாலும், கடவுளுக்கு இணையாக, இருப்பதை விடாது பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை'' என்று கூறுகிறார் (பிலி 2:6). யோவான் கிறிஸ்துவை முடிவில்லா வாழ்வைக் கொண்டிருக்கும் உண்மையான கடவுள் எனப் புகழ்கிறார் (யோவா 5:20). தலைமைக்குரு கயாபா ''நீர் கடவுளின் மகனான கிறிஸ்துவா?'' என்று கேட்டபோது ''நீரே சொல்லிவிட்டீர்'' (மத் 26:64; மாற் 15:2) என ஏற்றுக்கொள்கிறார். ஆனால் மற்ற நேரங்களில் தாமும் தந்தையும் ஒன்றே என்வும் (யோவா 10:30), தாம் ஆபிரகாமுக்கு முன்னரே இருப்பதாகவும் கூறுகிறார் (8:58). தலைமைக் குருத்துவச் செபத்தில் தமது தந்தையோடு அவரது மகிமையை உலகம் உருவாவதற்கு முன்னரே பகிர்ந்து கொள்வது பற்றிக் குறிப்பிடுகிறார் (17:5). அவரது தெய்வீகத் தன்மையை உணர்ந்ததால்தான் நோயாளிகளைக் குணமாக்கிப் பாவங்களை மன்னிக்கிறார் (மாற் 2:5-11; மத் 9:27; லூக் 5:20-2). அது மட்டுமல்ல தம் சீடர்கள் தம்மை விசுவசிக்கும்படி கூறுகிறார் (யோவா 14:1).

புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்து மூவொரு கடவுளில் இரண்டாம் ஆளாகிய கடவுளின் மகன் என அழைக்கப்படுகிறார் (மத் 16:16; 26:63-64). மரியாளைச் சந்தித்த வானதூதரின் செய்திப்படி அவள் மகன் 'கடவுளின் மகன் எனப்படுவார்' (லூக் 1:35). இயேசு திருமுழுக்குப் பெற்றபோது ''இவரே என் அன்பார்ந்த மகன். இவரில் நான் பூரிப்படைகிறேன்'' என்ற குரல் வானத்திலிருந்து கேட்டது (மத் 3:17; மாற் 1:10; லூக் 4:22). கிறிஸ்து எனும் இந்த அடைமொழி மற்ற மண்ணக அரசர்கள் சூட்டிக்கொள்வதுபோல் வெறும் அழகுக்குத் தரப்பட்ட ஒரு பெயரல்ல. விவிலியம் ''கிறிஸ்து தந்தையைப்போலத் தனிப்பெரும் ஆற்றல்கொண்டு விளங்குகிறார்'' (யோவா 5:26) என்று கூறுகிறது. பவுல் கிறிஸ்துவைக் கடவுளின் மகனாகவே அழைக்கிறார் (உரோ 8:32). ஆனால் யோவானோ, ''வார்த்தை கடவுளோடு இருந்தார், கடவுளாகவும் இருந்தார்'' (யோவா 1:1), தந்தையிடமிருந்து வந்த ஒரே மகன் அவரே, எனக் குறிப்பிடுகிறார். (1:14; 5:18 இயேசுவே கடவுளைத் தம் தந்தையெனக் குறிப்பிடுகிறார்).

2. கிறிஸ்துவின் மனிதத்தன்மை:- புதிய ஏற்பாடு அவரது தெய்வீகத்தை எவ்வளவு தூரம் வலியுறுத்தியிருக்கிறதோ அவ்வளவு தூரம் அவரது மனிதத்தன்மையையும் வலியுறுத்தியிருக்கிறது. என்றென்றும் வாழும் கடவுளின் மகன் மனிதர்களைப் போல மனிதவடிவிலே தோன்றினார் (பிலி 2:7-8). அவரே மனிதன் இயேசு கிறிஸ்து (1 திமோ 2:5);

அவர்தாம் வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்டவர் (யோவா 1:14); மனிதர்களோடு உடலையும் இரத்தத்தையும் பகிர்ந்துகொண்டார் (எபி 2:14). எனவே மனிதத் தன்மைகள் எதுவும் அவருக்குப் புறம்பானதல்ல. மனிதர்களோடு மனிதர்களாக வாழ்ந்து மகிழ்ச்சி துன்பங்கள் அனைத்தையும் பகிர்ந்து கொண்டார். அவர் மனிதனாக வெறும் தோற்றமளிக்கவில்லை; இயல்பிலே மனிதனாக இருந்தார். எல்லா மனிதர்களையும் போலவே ஆதாமின் வழியில் பிறந்தார் (லூக் 3:38); பெண்ணிடம் பிறந்தவராகவும் (லூக் 2:6-7; மத் 1:18; கலா 4:4) இருந்தார். அவரது முன்னோர்கள் ஆபிரகாமும் (மத் 1:1) தாவீதும் (மத் 1:6) ஆவர்.

ஆதாமினால் வந்த வீழ்ச்சியுற்ற இயல்பைக் கிறிஸ்து மனுக்குலத்தின் மற்ற மனிதர்களோடு பகிர்ந்து கொண்டார். அவர் உலகில் பாவ உடலை எடுத்துவந்தாலும் (உரோ 8:3) பாவத்திற்கு அடிமையாகவில்லை (எச 53:2-3). எபிரேயர் திருமுக ஆசிரியர் கூற்றுப்படி அவர் எல்லா வகைகளிலும் சோதனைக்குள்ளானார். ஆனால் இறுதிவரை பாவமற்றவராக வாழ்ந்தார் (எபி 4:15; 2 கொரி 5:21). அதாவது, கிறிஸ்து புனிதமான, குற்றம்சாற்றப்படமுடியாத, கறையற்ற, பாவிகள் அனைவரிடமிருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட தலைமைக்குரு (எபி 7:26) ஆவார்.

IV. பணிகள்:

கடவுளின் உண்மையான மகனும், அவர் மனுமகனுமாக இருந்து ஆவியால் அபிடேகம் செய்யப்பட்ட நோக்கம் என்னவென்றால், ''என்றென்றும் நமது தலைமை இறைவாக்கினரும், ஆசிரியரும், நம் ஒரே பெரிய குருவும், எந்நாளும் உள்ள அரசருமாக'' விளங்க வேண்டுமென்பதே. விவிலியம் பணிகள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தாவிடினும், (கி.பி. 330-இல் செசரியாவின் யுசேபியு என்பவர் பயன்படுத்தியது) அவர் பல பணிகளை நிறைவேற்றுதல் என்ற கருத்து விவிலியத்தைச் சேர்ந்ததாகும். உப 18:15-இன்படி கடவுள் ஓர் இறைவாக்கினரை எழுப்புவார். சங் 110:4-இல் ஆண்டவர் என்றென்றைக்கும் குருவாக இருக்கிறார் என்றும், செக் 6:12-13-இல் வருங்காலத் ''தளிர்'' ''அரச மாண்பைக் கொண்டவராய் அரியணை வீற்றிருந்து அவர் ஆட்சி செலுத்துவார்'' என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு பாவத்தில் விழும் நிலைக்குமுன் ஆதாம் கொண்டிருந்த பணிகளை, இயேசு கிறிஸ்து சிறப்பாகத் தமது மூன்று பணிகளால் நிறைவேற்றுகிறார்.

அ. இறைவாக்கினர்:- பழைய இறைவாக்கினர்களைப் போலவே கிறிஸ்துவும் கடவுளின் செய்தியை மனிதர்களுக்கு அளிக்கவும், கடவுளின் சித்தத்தை வெளிப்படுத்தவும் நியமிக்கப்பட்டார்; எனவே இறைவாக்கினர் ஆகிறார். ஆனால் அவர் சாதாரண இறைவாக்கினர் மட்டுமல்லர்; இறைவாக்கினர்களில் எல்லாம் தலைசிறந்தவர். அவர் தந்த செய்தியை வேறு எந்த வருங்கால இறைவாக்கினரும் கூட்டமுடியாது. ஏனெனில் அவருக்குள்ளே இறைவனின் ஞானமும் அறிவுமாகிய செல்வம் எல்லாமே மறைந்துள்ளது. அவர் கடவுளோடு கொண்டிருந்த மிகச் சிறப்பான உறவினால் தந்தை யாரென்பதை உலகிற்கு வெளிப்படுத்தினார் (யோவா 1:18; 15:15). அவரது செய்தி பாவத்தில் உழலும் மனிதனை மீட்பது பற்றியும், அவரால் அழைக்கப்பட்டவர்கள் மன்னிக்கப்பெற்று, ஏற்புடையவர்களாகவும், மகிமை பெறுபவர்களாகவும் ஆவது பற்றியும் ஆகும் (உரோ 8:30). எனவே இறைவனைப் பற்றியும், மீட்பைப் பற்றியும் உண்மையான அறிவு 'உலகின் ஒளியான' கிறிஸ்துவைத் தவிர வேறு யாரிடமிருந்தும் ஒருவர் பெற்றுக்கொள்ள முடியாது (யோவா 8:12). கிறிஸ்துவை ஒதுக்கும் எவனும் ஆன்மீக இருளில் மூழ்கி (யோவா 3:18-20), முடிவில்லா வாழ்வுக்குச் செல்லும் வழியைக் காணமுடியாமல் போகிறான். இறைவாக்கினருக்குரிய அதிகாரத்தோடும், ஆற்றலோடும் கிறிஸ்து மக்களிடம் பேசித் தம்மை விசுவசித்துத் தம் வார்த்தையை ஏற்றுக் கொள்ளும்படி கூறுகிறார்.

ஆ. குரு:- சங் 110:4-இன் படி ஆண்டவர் அபிடேகம் பெற்றவரிடம் சொன்னதாவது, ''நீ மெல்கிசதேக்கின் முறைமைப்படி என்றென்றும் குருவாக இருக்கிறாய்'' என்பதாகும். இதன்பொருள் என்னவென்றால், இயேசு கிறிஸ்து தலைமைக் குருவாக இருப்பது ஆரோன் குலத்தைச் சேர்ந்த குருக்கள் குறிப்பிட்ட ஆரோனின் குலத்தில் பிறந்ததால் குருவாவது போலன்று; மாறாக ஒரு சிறப்பான அழைத்தலாலும் கொடுக்கப்பட்ட பணியாலும் அவர் குருவாக இருக்கிறார் என்பதாகும். உடன்படிக்கையின் பேழைக்கும் ஆலயத்திற்கும் பணி செய்த பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் முழுவதுமே, மனிதக்கைகளால் கட்டப்படாத விண்ணகத்தின் தூயகத்துக்குள் நுழையும் மாபெரும் தலைமைக்குருவாம் கிறிஸ்துவையே முன்னுணர்த்தியது (எபி 9:24).

இயேசு கிறிஸ்துவின் தலைமைக் குருப்பணியை மூன்று பண்புகளில் காணலாம். முதல் பண்பு: தம் வாழ்வையே பலியாக அளித்தல். அதனால் மக்கள் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டது மட்டுமன்றி, அவரது ஏற்புடைமையும் விளங்கிற்று. முன்னர் நிறைவேற்றப்பட்ட பாவப் பரிகாரப் பலிகளில் எல்லாம், கிறிஸ்து நிறைவேற்றப்போகும் பலி முன் உணர்த்தப்பட்டது. சிறப்பாகப் பாஸ்காச் செம்மறி பலியானபோது இது இன்னும் தெளிவாக வெளிப்பட்டது. ஆரோனும் மற்றக் குருக்களும் அடையாள முறையில் மீண்டும் மீண்டும் நிறைவேற்றிய பணியை இயேசு கிறிஸ்து முற்றிலுமாக ஒரேமுறையில் நிறைவேற்றி முடித்தார். காலங்களின் முடிவில் ''தம்மைத் தாமே பலியிட்டுப் பாவங்களைத் தொலைக்க ஒரேமுறை உலகில் தோன்றினார்'' (எபி 9:26); அவரே உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறி (யோவா 1:29.36); நமக்காகப் பலியான செம்மறி அவரே (1 கொரி 5:7). தம்மை மனிதப் பாவங்களுக்காகப் பலியாக்கியதால் கடவுளுக்கான பாவக் கடனை அவர் தீர்த்தார். இவ்வாறு பலருடைய பாவங்களை அவர் ''சுமந்தார்'' (எபி 9:28). பழைய ஏற்பாட்டின் தலைமைக்குரு பாவப்பரிகார நாளிலே பலியான விலங்கின் இரத்தத்தோடு இறைவனின் தூயகத்திலே நுழைந்தார். கிறிஸ்துவோ தமது புதிய உடன்படிக்கையின் தமது இரத்தத்தோடே விண்ணகத் தூயகத்தில் நுழைந்து என்றென்றும் பாவத்தை ஒழித்தார். இவ்வாறு அவரை விசுவசிப்பவர்கள் அனைவரையும் குற்றத்திலிருந்தும் பாவத்தின் தண்டனைகளிலிருந்தும் விடுவிக்கிறார். அதுமட்டுமல்ல, தமது ஒப்பற்ற கீழ்ப்படிதலினால் ஒவ்வொருவருடைய மீட்புக்கும் என்னென்ன தேவையோ அவை ஒவ்வொன்றையும் நிறைவேற்றினார். தூய உள்ளத்தோடு பலி நிறைவேற்றிக் கடவுளுக்குத் தம்மை அர்ப்பணித்ததால் அனைவருடைய பாவமும் கழுவப்பெற்றது. தமது ஏற்புடைமையை மக்களுக்கு வழங்கியதால், ஒவ்வொருவருக்குமே முடிவில்லா வாழ்வுக்கான பிரிக்கமுடியா உரிமையை வழங்கினார்.

அவரது குருத்துவத்தின் இரண்டாம் பண்பு அவரது செபமாகும். முழுநம்பிக்கையோடு மக்களனைவரும் அருளின் அரியணையை அணுகிச் செல்லும் வாய்ப்பை மட்டும் கிறிஸ்து அருளவில்லை (எபி 4:16; 10:19); செபிக்கும் கலையை மட்டும் கற்றுக் கொடுக்கவில்லை (லூக் 11:1-4; மத் 6:9-13), இவற்றிற்கெல்லாம் மேலாக அவரது பெயரால் நேர்மையாகச் செபிக்கும் எவரும் இறைவனின் துணையைப் பெறுவர். எவராயினும் அவரது செபம் இறைவனால் கேட்கப்படும் (யோவா 16:23-24). இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோதும் சரி, விண்ணகத்தில் மகிமையோடு வீற்றிருக்கும் போதும் சரி, மக்களனைவருக்காகவும், இடைவிடாது இடைநிலையாளராக இருந்து பரிந்துபேசிக் கொண்டேயிருக்கிறார் (லூக் 22:32; 23:34; யோவா 17). நமது துன்பங்களை முற்றிலும் புரிந்து கொண்டு, நம்மீது அளவற்ற இரக்கமும், அன்பும் காட்டுகிறார். மனித தேவைகளையும், அவர்களின் குறையுள்ள செபங்களையும் புரிந்து கொண்டு அவற்றைக் குறையற்றதாக்கி, கடவுளின் முன் மணம் நிறைந்த தூபமாக

மாற்றுகிறார் என்பதையே இயேசுவின் செபங்கள் நமக்கு உணர்த்துகின்றன (திரு வெளி 5:8; சங் 141:2).

கிறிஸ்துவின் குருத்துவத்தின் மூன்றாவது பண்பு குருவாக இருந்து மக்களை ஆசீர் வதிப்பது. பழைய ஏற்பாட்டுக் குருக்களின் முக்கியப்பணி மக்கள் மேல் கைகளை விரித்து அவர்களை ஆசிர்வதிப்பதாகும். அவர்கள் ஆண்டவரின் பெயரைச் சொல்லி மக்கள் தலைமீது கரங்களை வைப்பதால் ஆண்டவரின் ஆசீர்வாதம் நிறைய உண்டு என்பதை வாக்களித்தனர் (எண் 6:22-27). இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பிரசன்னமே இம்மண்ணகத்திற்கு மாபெரும் ஆசீர்வாத மாகும். அவர் மண்ணிலே பணி செய்த போது மட்டுமின்றி விண்ணகத்திற்கு ஏறிச் சென்றபோதும் (லூக் 24:50-51), விண்ணகத் திலிருந்து எல்லா ஆன்மீக நலன்களாலும் நிறைத்துத் தமது மக்களை ஆசீர்வதிக்கிறார் (எபே 1:3). அவரது தூய ஆவியின் வழியாக விண்ணகக் கொடைகளால் நம்மை நிரப்பி ஆசிர்வதிக்கிறார்.

இவ்வாறு இயேசு கிறிஸ்துவே தலை சிறந்த தலைமைக் குருவாகத் திகழ்கிறார். அவரே பாவப் பரிகாரப்பலியாக இருந்து சட்டத்தின் படி அனைத்தையும் நிறைவேற் றினார். அவரே இடைநிலையாளராக இருந்து வானகப் பேறுகள் அனைத்தையும் பெற்றுத் தருகிறார். எனவே விசுவாசமின் மையால் ஒருவர் அவரது தலைமைக் குருப் பணியை ஏற்றுக்கொள்ளாதபோது பாவத் திற்காகப் பலியாகும் தலைமைக்குரு வேறு யாரையும் பெற்றுக்கொள்ளமுடியா நிலை யிலே அவர்கள் தவிக்க நேரிடும். அவர்க ளுக்குப் பரிந்து பேசும் ஒருவரை இழந்து விண்ணக நலன்களுக்குப் பதிலாக நீதித் தீர்ப்பினையே பெற நேரிடும்.

இ. அரசர்:- கிறிஸ்துவும் பழைய ஏற் பாட்டு அரசர்களைப் போலவே ஒரு குறிப் பிட்ட பணிக்காக அபிடேகம் செய்யப்பட்ட வர்தாம். ஆனால், மற்ற மண்ணக அரசர்க ளைப் போலத் தமது அதிகாரத்தையும், புக ழையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டிய சுட்டாயத்தில் இல்லாதவர். அவர் என்றென்றும் அரசராக ஒப்பற்ற மகி மையோடு விளங்கினார். பழைய ஏற்பாடும் அவரது அரசு மகிமையைக் கூறுகிறது (ஆதி 49:10; ஏச 9:6; மீக் 5:2). தாவீது, சாலமோன் ஆகியவர்களின் இறையாட்சி அரச அமைப் பில் கிறிஸ்துவின் அரசு முன் உணர்த்தப்பட் டது.

மெசியாவின் அரசத்தன்மையை இஸ்ரா யேல் மக்கள் மிகக் குறைவாகவே புரிந்து கொண்டனர்; சாமுவேல் காலத்தில் தங் களை ஆள மற்ற நாடுகளைப்போலவே தங்களுக்கும் ஓர் அரசன் வேண்டுமென்று சொன்னதுபோல (1 சாமு 8:15), இயேசுவும் ஒரு மண்ணக அரசராகவந்து தங்களை உரோ மைப் பேரரசின் பிடியிலிருந்து விடுவிப்பார் என நினைத்தனர் (மத் 21:9-11; 4:8-10; லூக் 4:5). யூதர்களின் எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாறுபட்டதாகும் இயேசுவின் அரசு. அது ஆன்மீக அரசு ஆகும். அது வெளிப்படை யான பகட்டோடும், புகழோடும் தோன் றாது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களின் உள்ளங்களிலே அது நிறுவப்படும் (லூக் 17:20-21). யோவான் ''அவர் அரசு இவ்வுல கைச் சார்ந்ததன்று'' (யோவா 18:36) எனக் கூறுகிறார். பவுலின் கூற்றுப்படி ''அது தூய ஆவியில் நீதியும், மகிழ்ச்சியும், அமைதியும் நிறைந்த அரசு'' (உரோ 14:17; 1 கொரி 1:10) ஆகும். அவர் தமது வார்த்தையால் ஆளு வார் என்று எபிரேயர் திருமுகம் கூறுகிறது.

கிறிஸ்துவின் அரசு யூதர்களுக்கு மட்டும் உரியதன்று. விசுவாசத்தில் இணையும் மனித குலம் (எபே 4:15) அனைத்திற்கும் உரியது. ஓர் அரசரைப் போலக் கிறிஸ்து விசுவாசிக ளின் கூட்டமாகிய இத்திருச்சபையை அனைத்துத் தீமைகளிலிருந்தும் காக்கிறார். நரகத்தின் வாயில்கள்கூட அதை வெற்றி கொள்ளாது எனும்போதே இதன் உண்மை புரியும் (மத் 16:18). ஓர் அரசனைப்போல மக்களை அன்போடும் அருளோடும் ஆள்கி றார். இதனால் மக்களனைவரும் அவருக்குச் சிறப்பான விதத்திலே அடிபணிகின்றனர்.

அவரது அரசத்துவத்தை ஏற்க விரும்பாதவர்கள்கூட அவரது ஆட்சியிலிருந்து தப்பமுடியாது. ஏனெனில் அவருக்கு மண், விண் அனைத்தின் மீதும் இறைத்தந்தை அதிகாரம் அளித்துள்ளார் (மத் 28:18). அவரே அரசர்க்கெல்லாம் அரசராகத் துலங்குவதாகக் (திருவெளி 1:5) கூறப்படுகிறது.

கிறிஸ்துவின் அரசமாண்பு அதனை ஏற்றுக்கொள்ளாதவர்கட்கு இல்லாத ஒன்றாகத் தோன்றலாம். ஆனால் அவரது மாட்சிமை விண்ணகத்திலே ஒளிர ''அரசர்க்கெல்லாம் அரசராக ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவராகத் துலங்குகின்றார்'' (திருவெளி 19:16). வான்மேகங்கள் மீது மாட்சியோடு அவர் மீண்டும் வந்து விசுவாசிகளை உயர்த்தி விசுவாசமற்றவர்களைத் தாழ்த்துவார் (மத் 25:31-46). இவ்வாறு கிறிஸ்துவின் அரசு மண்ணிலும், விண்ணிலும் நீதியோடு நிலை நாட்டப்படும் (2 பேதுரு 3:13; திருவெளி 21).

இறையியலார்கள் சிலர் கிறிஸ்து மூன்று பணிகளையும் ஒன்றன்பின் ஒவ்றாக நிறைவேற்றினார் எனக் கருதுகின்றனர்; மண்ணிலே பணியாற்றியபோது அவர் இறைவாக்கினராகவும், சிலுவையில் தொங்கிய போது குருவாகவும், உயிர்த்து விண்ணகம் சென்றபோது அரசராகவும் விளங்கினார் என்கின்றனர். இக்கருத்து அவரது முப்பணிகளைப் பிரித்துப் பிரித்துப் பார்க்கிறது. ஆனால் புதிய ஏற்பாடு, அவர் ஒரே நேரத்தில் இறைவாக்கினராகவும், குருவாகவும், அரசராகவும் விளங்கினார் என்று சித்தரிக்கிறது. எப்படியெனில் அவர் இறைவாக்கினராக இறைவனின் செய்தியைக் கூறியபோது அதிகாரமுள்ள அரசர்போலப் போதித்தார் (லூக் 4:32); பிலாத்துவிடம் அரசர் என்று ஏற்றுக்கொண்டபோது ''உண்மைக்குச் சாட்சியம் பகர்வதே எனது பணி'' என்கிறார்; இங்கே இறைவாக்கினராகக் காட்சியளிக்கிறார் (யோவா 18:17). புதுமைகள், செய்த போது தமது அரசவல்லமையையும், இறைவாக்குப் போதனையையும், குருவுக்கான இரக்கத்தையும் (மத் 8:17) வெளிப்படுத்துகிறார்.

V. இறையியல் சிந்தனை: காண்க. கிறிஸ்து இயல்.

கிறிஸ்து இயல் (CHRISTOLOGY)

1. கிறிஸ்து இயல் என்பது இயேசுகிறிஸ்துவை இறையியல் அடிப்படையில் புரிந்து கொள்ளும் ஒரு முயற்சியாகும். அவரது ஆட்தன்மையையும் பணியையும் சிறப்பாக விளக்கச் செய்யப்படும் இறையியலாக்கமே கிறிஸ்து இயல் எனலாம். புதியஏற்பாடு இயேசு கிறிஸ்துவைப் பல வழிகளில் சித்தரிக்கிறது. அப்போஸ்தலர்களின் போதனை கிறிஸ்துவை மையமாகக் கொண்டது என்பதை யாரும் மறுக்க முடியாது (1 கொரி 2:2). ஆனால் கிறிஸ்துவின் சொந்த சுயவெளிப்பாடோ அப்போஸ்தலப் போதனையோ கிறிஸ்துஇயல் தன்மையுடையது என்று கூற முடியாது. ஏனெனில் திருச்சபையில் கிறிஸ்துவின் ஆட்தன்மைபற்றிய சிந்தனைகள் தோன்றி வளர ஆரம்பித்தது முதல் நூற்றாண்டுக்குப் பிறகுதான். எனவே கிறிஸ்துவின் ஆட்தன்மை, பண்புகள், பணி ஆகியவற்றைப் பற்றித் திருச்சபையில் இன்றுவரை வளர்ந்துள்ள இறையியல் சிந்தனையைக் கிறிஸ்துஇயல் எனப் புரிந்துகொண்டால் அது எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதை ஆய்வது முக்கியமானதாகும்.

2. கிறிஸ்து இயலின் தொடக்கம்:- எந்த வகையில் யூத மெசியாக் கொள்கை கிறிஸ்து இயலாக உருவெடுத்தது என்பதைக் கண்டு பிடிப்பது கடினமான ஒன்றாகும். இயேசு தமது பணியைப் பற்றியும், தம்மைப் பற்றியும் கொண்டிருந்த ஆழ்ந்த உணர்வே கிறிஸ்து இயலின் ஊற்றாகும் என்றால் அது நூற்றுக்கு நூறு உண்மை. எல்லா உவமைகளும் இயேசுவை ஒரு இறைவாக்கினராகத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுகின்றன. யூதர்கள் ஒரு மனிதனுக்குத் தரக்கூடிய விலைமதிப்பற்ற உயர்வு ஒருவரை இறைவாக்கினர் என அழைப்பதுதான். இயேசு மெசியா எனும் நிலையே அவர் ஓர் இறை

வாக்கினர் எனும் நிலையைச் சார்ந்து நிற்பது தான். இயேசு தாம் கூறவந்த செய்தி உண்மையென்பதையும் அதை அறிவிக்கவேதான் வந்தேன் என்ற தெளிவோடும் பேசினார். எனவே ''ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்'' என்ற வாய்ப்பாட்டை உபயோகிக்காமல் அவரே கூறுவதாக அதிகாரத்தோடு போதிக்கிறார். இவ்வாறு தம்மில் ஒரு புதிய யுகம் மலர்வதையும் தாம் செய்யும் செயல்கள் அவற்றிற்குச் சாட்சியாக அமைவதையும் அவர் பார்க்கிறார். அத்தோடு இஸ்ராயேலரின் விதி அவர்கள் இயேசுவுக்குக் கொடுக்கும் பதிலைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும்; அவர்தரும் செய்தியை ஏற்பதைப் பொறுத்து அவர்கள் வாழ்வு பெறுவதும் பெறாமல் போவதும் முடிவு செய்யப்படும் என்பதை உணரமுடிகிறது. இத்தகைய அதிகார உணர்வோடு இயேசு தனிப்பட்ட சொந்தப் பாவத்தைப் பற்றியோ, கடவுளிடமிருந்து பிரிந்திருப்பதைப் பற்றியோ தெளிவான உணர்வுகொண்டிருந்தாரா என்பது தெரியவில்லை. ஆனால் தந்தையோடு நெருங்கிய மகனின் உறவு கொண்டிருந்தார் என்பதும், இந்த உறவின் உணர்வை மற்றவர்களிடமும் தூண்டி அதனை உறுதிப்படுத்த வேண்டுமென்பதையும் இயேசு பெரிதும் விரும்பியதாகத் தெரிகிறது. இதனையே நற்செய்திகள் அவரைக் 'கடவுளின் மகன்' என உணர்த்தவிரும்புவதாக ஒரே பார்வையில் கூறுகின்றன. தம்மையே அவர் 'மனுமகன்' எனக் குறிப்பிட்டிருக்கலாம்.

எருசலேமுக்கு அவர் மேற்கொண்ட இறுதிப் பயணம் ஒரு சமயப் புரட்சியை உருவாக்கத்தான்; அதனால் அவருக்கும் அவரது சீடர்களுக்கும் ஏற்படவிருக்கும் ஆபத்தை உணர்ந்திருந்தார். எருசலேமுக்குள் அவர் நுழைந்தமுறையைப் பார்க்கும்பொழுது அவர் மெசியாவாக, அமைதியின் அரசராகக் காட்சியளிக்கிறார். மனிதன் மனந்திருந்தாவிடில் இதிலும் மேலான தண்டனையைக் கடவுள் மனிதர்மேல் கொண்டுவருவார் என்பதின் அடையாளமாக அவர் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தினார். தமது இரத்தம் சிந்தப்படும், தம் உடல் சிதைக்கப்படும் என்பதை நன்கறிந்த இயேசு அப்பத்தையும், இரசத்தையும் தன் சீடர்களுக்குக் கொடுத்து இந்த இறப்பு அவர்களுக்குப் பெரும்பயன் அளிக்கும் என்பதை அடையாள முறையில் உணர்த்துகிறார். மேலும் அவர்களை இறையரசின் விருந்தில் மீண்டும் சந்திப்பதாக வாக்களிக்கிறார்.

இயேசு தம்மை 'யூதர்களின் அரசன் என்றார்' என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தான் உரோமையர் அவரைச் சிலுவையிலறைந்தனர். இறந்து மூன்று நாட்களிலே அவரை அவரது சீடர்கள் உயிர்த்தவராகக் கண்டு அனுபவித்தனர். அவரது பணிக்காலத்தில் அவரிடம் பெரிதும் பிரமாணிக்கமாய் இருந்தவர்கள் கடவுள் அவரை மெசியாவாகவும், ஆண்டவராகவும் உயர்த்திவிட்டார் என்ற முடிவுக்கு வந்தனர். உடனே அவர்கள் கிறிஸ்துவின் இந்நிகழ்ச்சிகளை முன்னுரைத்த பழைய ஏற்பாட்டுப் பகுதிகளைத் தேடியிருக்கவேண்டும். இத்தகைய அணுகுமுறையைத்தான் கும்ரான் சமூகத்தின் நூல்களில் நாம் காண்கிறோம். அவர்களது விசுவாசமும் அனுபவங்களும், ஞானஸ்நானத்தின்போது பெற்ற தூய ஆவியாலும், ஆண்டவரின் விருந்தை உண்டபோது அவர்கள் உணர்ந்த உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தாலும் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து உறுதிப்படுத்தப்பட்டன. இப்பொழுது இயேசுவின் சீடர்களுக்கு மெசியா என்ற வார்த்தை இறைவாக்கினரை, புதிய சட்டம் தந்தவரை, கடவுளின் மகனான மனுமகனை, இயேசுவைப்பற்றி என்னென்ன நம்பிக்கைகள் கொண்டிருந்தார்களோ அத்தனையும் சுட்டிக்காட்டியது. இதிலிருந்து புதிய ஏற்பாட்டின் பிற கிறிஸ்து இயல் சிந்தனைகளும் மிக இயல்பாக வளர்ச்சி பெற்றன.

3. கிறிஸ்து இயல் வளர்ச்சி:- விவிலிய நற்செய்திகளும் பவுலின் மடல்களும், இயேசு கிறிஸ்து உண்மையிலேயே இறைவனும் மனிதனுமாக இருந்தார் என்று தெளிவாகக் கற்பிக்கிறது. புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களில் ஒரு சிலர் சில நேரங்களில் அவரது

இறைத்தன்மையையும் வேறுசிலர் அவரது மனிதத் தன்மையையும் அதிகம் வலியுறுத்திக் கூறினாலும், அனைவருமே இயேசு இறைவனின் மகன் என்பதை ஏற்கின்றனர். கிரேக்க மொழிபேசும் திருச்சபையில் பல சந்தேகங்கள் எழுந்தன. எவ்வாறு இறைவன் மனிதனாக வரமுடியும்? எவ்வாறு இறைத் தன்மையும், மனிதத்தன்மையும் ஒருவரில் தனித்தனியே அமையமுடியும்? எவ்வாறு கிறிஸ்து சோதிக்கப்பட முடியும்? இவை போன்ற பல சந்தேகங்கள் எழுந்தன. ஆனால் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இவை போன்ற கேள்விகளை அறியாததால் அவற்றிற்கான பதில்களை விட்டுச் செல்லவில்லை.

விரைவில், தொடக்க காலத்திருச்சபையில் கிறிஸ்துவின் ஆட்தன்மைபற்றிக் கடுமையான, ஆழமான தர்க்கம் தோன்றியது. முதல் நூற்றாண்டின் முடிவில் ஒருபுறம் தோசேத்தியர் என்ற குழுவினர் கிறிஸ்து மனித உடலை ஏற்றவராகத் தோன்ற மட்டுமே செய்தார் என்று கூறி அவரது மனிதத் தன்மையை மறுத்தனர். மேலும் இவர்கள் கிறிஸ்துவின் துன்பம், மரணம் உட்பட்ட அவரது இவ்வுலக வாழ்வும் வெறும் மாயை தான் என்று கூறினர். மறுபுறம் எபியோனியர் என்ற குழுவினர் கிறிஸ்துவின் இறைத் தன்மையை மறுத்தனர். மேலும், இயேசு வெறும் மனிதனே, அவரது திருமுழுக்கின் போது, அவருக்கு இறையாற்றல் அளிக்கப் பட்டது என்று கூறினர். இவ்வாறு ஆதித் திருச்சபை இரு முற்றிலும் முரணான போதனைகளை எதிர்கொண்டது.

இத்தர்க்கம் மேலும் மோசமடைந்தது. அலக்சாந்திரியாவைச் சேர்ந்த ஆரியுஸ் என்பவர் (கி.பி. நான்காம் நூற்றாண்டு) இயேசு கிறிஸ்து என்றுமுள்ளவர் அல்லர்; அவர் இறைவனின் இறைத்தன்மையில் பங்குபெறவில்லை; ஆனால் தந்தையாகிய இறைவனால் படைக்கப்பட்ட முதல் படைப்பு மட்டுமே அவர் என்று வாதிட்டார். மேலும் மனிதனுமல்லாத இறைவனும் அல்லாத ஒருவரால் மீட்பு செயலாக்கப்பட்டது என்றும் போதித்தார்.

இந்தக் குழப்பங்களுக்கிடையில், கிறிஸ்துவைப்பற்றிய விவிலிய போதனையைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. நீசேயா விசுவாச அறிக்கையில் (கி.பி. 325) திருச்சபையின் தந்தையர்கள் இயேசு கிறிஸ்துவின் இறைத்தன்மையையும், தந்தையோடு கொண்டுள்ள சமத்தன்மையையும் அறிக்கையிட்டனர். இதன்படி கிறிஸ்து ''யுகங்களுக்கு எல்லாம் முன்பே பிதாவினின்று செனித்தார். கடவுளின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக, மெய்யங் கடவுளினின்று மெய்யங் கடவுளாகச் செனித்தவர். இவர் செனித்தவர் உண்டாக்கப்பட்டவர் அல்லர். பிதாவோடு ஒரேபொருளானவர். இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன'' என்று திருச்சபை போதித்தது.

திருச்சபையில் மற்றொரு பிரச்சினை எழுந்தது. இயேசு கிறிஸ்து இறைத்தன்மையும் (இறைவனின் மகன்) மனிதத்தன்மையும் (மரியாளின் மகன்) கொண்டவரானால், இரு தன்மைகளுக்குமிடையேயுள்ள உறவு என்ன? நெஸ்தோரியஸ் என்பவர், கிறிஸ்துவின் இரு தன்மைகளுக்கும் இடையில் கடுமையானவேறுபாட்டைப் புகுத்தினார். இதற்காக எபேசு பொதுச்சங்கத்தில் (கி.பி. 431) கண்டனம் செய்யப்பட்டார். ஆனால் அவர் குற்றம் சாட்டப்படும் அளவுக்கு இருமை வாதத்தை அவர் போதித்தார் என்று கூறமுடியாது. அவரது எதிரியான எயுதிக்கஸ், கிறிஸ்துவின் இரு தன்மைகளும் எவ்வளவு இரண்டறக் கலந்துபோயின என்றால், மனித அவதாரத்திற்குப் பிறகு கிறிஸ்து ஒரே தன்மையைக் கொண்ட ஒரே ஆளாக விளங்கினார் என்று போதித்தார். கால்சிதோன் பொதுச்சங்கத்தில் (451) தந்தையர்கள், கிறிஸ்துவின் இரு தன்மைகளும் முழுவதும் பிரிந்தவையுமல்ல, முழுவதும் ஒன்றித்தவையுமல்ல என்று அறிவித்தனர்.

4. பிற்கால நிலை:-

கிறிஸ்துவின் இறைத்தன்மைக்கும் மனிதத்தன்மைக்கும் இடையிலுள்ள உறவை மேலும் ஆய்வு செய்ய மேலும் ஒரு பொதுச் சங்கத்தைக் கிறிஸ்துவத் திருச்சபை கூட்ட

வில்லை. கிறிஸ்துவின் ஒரு தன்மை, ஒரு சித்தம் பற்றிக் கிழக்கத்திய திருச்சபைகள் கொண்டிருந்த முடிவில்லாத் தர்க்கங்களில் மேற்கத்திய திருச்சபை பங்கு கொள்ள வில்லை. சீர்திருத்தவாதிகள் என்று கூறிக் கொண்டவர்கள் கூட கால்சிதோன் விசுவாச அறிக்கையை ஏறக்குறைய அப்படியே ஏற்றுக்கொண்டனர். ஆனால் லூத்தர் சபையினர். நெஸ்தோரியசின் போதனையை மீண்டும் புகுத்துவதாகக் கால்வினியர்களைக் குற்றம் சாட்டினர். கால்வினியர்கள் லூத்தர் சபையிலே எயுதிக்கசின் போதனையின் தொடக்கநிலை இருப்பதாகக் குற்றம் சாட்டினர். பழங்காலத் திருச்சபைத் தந்தையர்களின் பொருத்தமில்லாத மொழியைப் பல நவீன கிறிஸ்தவர்கள் குறை கூறலாம். ஆனால் கால்சீதோன் விசுவாச அறிக்கையைப் பெருமளவில் ஏற்றுக்கொள்வர். ஏனெனில் கால்சீதோன் தந்தையர்கள் ''கிறிஸ்துவத்தின் சாரத்தையும், கிறிஸ்துவச் சமயத்தின் கலப்பற்ற முழுமையான தன்மையையும், அதனால் அதன் சொந்த சுதந்தரத்தையும்'' பாதுகாத்துள்ளனர்.

கிறிஸ்து பிறப்பு விழா - கிறிஸ்மஸ் - கிறிஸ்துமஸ் (CHRISTMAS)

கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் விழாவாகும். மேற்குத் திருச்சபை, கி.பி. 336-இலிருந்து, இவ்விழாவைத் திசம்பர் மாதம் 25-ஆம் நாள் கொண்டாடி வருகிறது. உரோமையர் ''வெற்றிபெற முடியாத சூரியனின் பிறப்பு நாளையும்'' பேரரசன் அவுரேலியுவின் பிறப்பு நாளையும் கொண்டாடினர். இதற்கு மாற்றாகக் கிறிஸ்து பிறப்பு நாளைக் கொண்டாடினர். அலக்சாந்திரியாவிலும் கிழக்குத் திருச்சபைகளிலும் தொடக்கத்தில் இயேசுவின் பிறப்பு, இயேசுவின் திருமுழுக்கை நினைவு கூறும் திருவெளிப்பாட்டு விழாவுடன் சேர்த்து, சனவரி 6-ஆம் நாள் கொண்டாடப்பட்டது. கிழக்குத் திருச்சபையின் சில பிரிவுகள் இன்றும் இந்நாளிலேயே இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுகின்றன. கிறிஸ்துமஸ் என்ற பெயர் புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. மேற்குத் திருச்சபை வழிபாட்டில் தந்தையின் உள்ளத்திலிருந்தும், மரியாளின் உதரத்திலும், விசுவாசியின் ஆன்மாவிலும் இயேசு பிறக்கும் முப்பிறப்பைக் குறிக்கும் முறையில் மூன்று திருப்பலிகள் ஒப்புக் கொடுப்பதிலிருந்து இப்பெயர் வருகிறது.

கிறிஸ்துவின் இறைத்தன்மை (DIVINITY OF CHRIST)

இயேசு கிறிஸ்து தெய்வீகத் தன்மை நிறைந்தவர் என்பது கிறிஸ்துவ மதத்தின் நம்பிக்கை. இயேசுவின் ,இறைத்தன்மைக்கும் அதாவது கிறிஸ்து கடவுள் என்பதற்கும், இயேசு இறைத்தன்மையில் பங்கு பெறுபவர் என்று கூறுவதற்கும் வேறுபாடுகள் உண்டு. ஐந்தாம் நூற்றாண்டில் உண்டான இறையியல் கிறிஸ்துவைக் கடவுள் என்று ஏற்றுக்கொண்டது. இது பாரம்பரியப் போதகமாயிற்று. ''ஆதியிலே வார்த்தை இருந்தார். அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார்.'' என்று யோவா 1:1-இல் பார்க்கின்றோம். யோவா 10:34-36-இல் கடவுளின் மகன் என்று எண்பிக்கின்றார்; யோவா 20:28-இல் தோமையார் ''என் ஆண்டவரே, என் கடவுளே'' என்று அறிக்கையிடுகிறார். பவுல் கொலோ 2:9-இல் ''அவருள்தான் (இயேசு) கடவுள் தன்மையின் முழுநிறைவும் உடலுருவில் குடிகொண்டிருக்கிறது'' என்று கூறுகின்றார். தீத் 2:13-இல் ''மகத்துவமிக்க கடவுளும் நம் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின்'' என்று கூறப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாடு இயேசுவைக் 'கடவுளின் மகன்' என்று குறிப்பிடும் போதெல்லாம் ஏதாவது ஒருபொருளில் அவருடைய இறைத்தன்மையை உறுதியாகக் கூறுகிறது. ஏனெனில் இறைமகன் என்ற சொல் இயேசு மனிதரைப்போலல்லாமல் இறைவனைப் போல் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு பண்பைக் குறிப்பிடுகிறது. புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு பகுதியும் இயேசுவை இறைமகனாகச் சித்தரிக்கிறது. 'கிறிஸ்து' என்ற சொல் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்டது. இச்சொல் இறைமகன், மனுமகன், ஆண்டவர் போன்ற கருத்துக்களையெல்லாம் உள்ளடக்குகிறது. ஆகவே கிறிஸ்து

வின் இறைத்தன்மை புதிய ஏற்பாட்டில் காணும் பொதுக்கோட்பாடாகக் கருதப்பட லாம். புதிய ஏற்பாட்டு ஆசிரியரில் பெரும் பாலோர் இயேசுவைக் கடவுளின் மகன் என்று கூறியபோது கொண்டிருந்தபொருள் பிற்காலத்திருச்சபை இயேசுவை இறைவன் என்று கூறியபோது கொண்டிருந்தபொருளே ஆகும். ஆனால் யோவான் பயன்படுத்திய மொழிகளைத் தவிர்த்தனர். ஏனெனில் கிறிஸ்துவின் இறைத்தன்மையைப்போல் மனிதத்தன்மையையும் உறுதியாக விசுவசித் தனர். அதே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளை விசுவசித்தனர் என்ற குற்றச்சாட் டையும் தவிர்க்க விரும்பினர். இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னும் எழுப் பப்பட்ட பிரச்சனைகளை ஆதிக்கிறிஸ்தவர் கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

கிறிஸ்து இயலின் முக்கிய ஆசிரியர்க ளான பவுலும் நற்செய்தியாளர் யோவானும் மகன் தந்தைக்கு ஒருவிதத்தில் தாழ்ந்தவர் என்று கூறமுயலுகின்றனர். எனவேதான் யோவா 5:19-இல் ''மகன் தாமாகவே ஒன் றும் செய்யமுடியாது. தந்தை செய்யக் காண் கிறதையே செய்வார்'' என்றும் 5:30-இல் ''தன் விருப்பத்தை நாடாமல் தன்னை அனுப்பியவருடைய விருப்பத்தையே நாடு வார் என்றும்'' யோவான் கூறுகின்றார். பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திரு முகத்தில் 'உலகமுடிவில் அனைத்தையும் தகர்த்துவிட்டு இயேசு, கடவுளும் தந்தையு மானவரிடம் அரசை ஒப்படைப்பார்' (15:24) என்றும் 'மகனும் அனைத்தையும் தமக்குப் பணியச் செய்த இறைவனுக்குத் தாமே அடி பணிவார்' (15:28) என்றும் கூறுகின்றார். இது போலவே திருவெளிப்பாட்டு நூலில் மெசியாவின் ஆட்சி முடிவுக்கு வருகிறது (திருவெளி 20:6-7).

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை தொடர்ந்து முடிவில்லாமல் இருக்கின்றது. அதற்கு ஆரம்பம்கூட இல்லையா? நான் காம் நற்செய்திப்படி ''அவர் (வார்த்தை) ஆதியிலே கடவுளோடு இருந்தார்'' (1:2) என்று வாசிக்கின்றோம். எபிரேயருக்கு எழு தப்பட்ட திருமுகமும் காலங்கள், அல்லது உலகங்கள் எல்லாம் மகன் வழியாக உண் டாக்கப்பட்டன என்று கூறுகின்றது. இப்பகுதி யில் வரும் மற்றக் கூற்றுக்களும் மகனின் முடிவில்லா நிலையை எடுத்துரைக்கின்றன. பவுல் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத் தில் 'அவரில் அனைத்தும் உண்டாயிற்று'' (1:16) என்று கூறுகின்றார். மேலும் அவர் கடவுள் தன்மையில் விளங்கினார் (பிலி 2:16); கொலோ 1:15-இல் காணப்படும் 'படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர்' என்பது படைப்புக்கெல்லாம் முதல் படைப்பு இவர்தானா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

பவுலின் திருமுகங்களிலிருந்து எழும் மற் றொரு பிரச்சனை, கிறிஸ்து தமது இவ்வுல கப் பணியின் போது தெய்வீகத்தின் குணங்க ளைக் கொண்டிருந்தாரா அல்லது செயலாற் றினாரா என்பதாகும். பிலிப்பியருக்குரிய திருமுகத்தில் வரும் கிறிஸ்து இயல் பகுதி ''இயேசு, தம்மையே வெறுமையாக்கி, அடி மையின் தன்மைபூண்டு மனிதருக்கு ஒப்பா னார்'' (பிலி 2:7) என்று உறுதியாகக் கூறுகி றது. மற்ற இடங்களில் தமது மனித நிலைக ளுக்கு இயேசு கட்டுப்பட்டிருந்தார் (2 கொரிநி 13:14; கலா 4:4) என்பதைப் பவுல் வலியுறுத்திக் கூறுகின்றார்.

பெரும்பாலான புதிய ஏற்பாட்டு நூல்கள் இதுபோன்ற கருத்துக்களைப் பிரதிபலிப்ப தில்லை. மாற்கு நற்செய்தியைப் பொருத்த மட்டில் இயேசு திருமுழுக்கின் போதுதான் கடவுளின் மகன் ஆனாரா அல்லது அவர் எப்பொழுதும் கடவுளின் மகன் என்றும் திருமுழுக்கின் போது பொதுப்பணிக்குக் குறிக்கப்பட்டார் என்றும் நற்செய்தியாளர் விசுவசித்தாரா என்று கேள்வி எழுப்பலாம். மத்தேயு, லூக்கா நற்செய்திகள், மரியாள் பரிசுத்த ஆவியால் கருவுற்றதிலிருந்து இயேசு கடவுளின் மகன் என்று ஏற்றுக் கொள்கின்றன. இம்மூன்று நற்செய்திக ளுமே கடவுளின் மகனின் முன் வாழ்வு பற்றிய கருத்துக்களைக் கொண்டிருந்தன என்று கண்டுபிடிக்கப்போதுமான சான்றுகள் இல்லை எனலாம்.

கிறிஸ்துவின் உடல் (BODY OF CHRIST)

புதிய ஏற்பாட்டின் மீட்பின் மறைபொருளில், கிறிஸ்துவின் உடலானது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாய் உள்ளது. ஆனால் இச்சொற்றொடர் பல்வேறுபட்ட பொருட்களை உணர்த்தவல்லது. இச்சொற்றொடரானது சில நேரங்களில் அவரது நற்கருணை உடலையும், மற்ற நேரங்களில் நம்மை உறுப்பினர்களாகக் கொண்ட உடலாகிய திருச்சபையையும் குறிப்பிடுகிறது.

I. இயேசுவின் தனிப்பட்ட உடல்

1. இயேசுவும் அவரது உடல் வாழ்வும்:- இயேசு நமது உடல் வாழ்வில் பங்கு கொண்டார் என்ற உண்மையானது, புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்படுகின்றது. ஊனுடலின்படி இயேசு குலமூதாதையர்கள் வழிவந்து, தாவீதின் மரபில் (உரோ 1:3; 9:5), பெண்ணுக்குப் பிறந்தவர் (கலா 4:4) என்று பவுல் வலியுறுத்துகிறார். நற்செய்தி நூல்களில் இயேசுவின் மனித இயல்பு எங்கும் தெளிவாக இருப்பதால், அவரது உடலைப்பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுவது அவசியமற்றது. அவர், பசி (மத் 4:2), களைப்பு (யோவா 4:6), தாகம் (4:7), உறக்கம் (மாற் 4:38), மற்றும் துன்பம் முதலானவற்றையும் அனுபவிக்கிறார். அதே உண்மைகளை வலியுறுத்துவதற்கென யோவான் இயேசுவின் ஊனுடலைப்பற்றிப் பேசி (யோவா 1:14). ''இயேசு ஊனுடலெடுத்து வந்தார்'' என்பதை மறுப்பவர்கள் மீது சாபத்தை விதிக்கிறார் (1 யோவா 4:2:2 யோவா 7).

2. இயேசுவின் உடல்சார்ந்த மரணம்:- இயேசுவின் உடல் பற்றிய குறிப்புகள், பாடுகளின் நிகழ்ச்சியுரைகளில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பெத்தானியாவில் உணவு நேரத்தில், அடக்கம் செய்யப்படுவதற்கென அவரது உடலுக்குத் தைலம் பூசப்படுகிறது (மத் 26:12). இறுதியாக அவர் சிலுவையில் மரித்து (மத் 27:50), கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார் (மத் 27:58 தொ; யோவா 19:38தொ). ஒவ்வொரு மனிதனுக்கும் நிகழும் சிறப்பற்ற இந்தச் சாதாரண முடிவானது, மீட்பின் மறைபொருளில் ஒரு சிறப்பான பொருளைக் கொண்டுள்ளது. ஏனெனில், சிலுவையில் தமது உடலில் இயேசு நமது பாவங்களை ஏற்றுக்கொண்டார் (2:24); இவ்வுடலை மரணத்திற்குக் கையளித்ததன் மூலம், இறைவன் இந்த ஊனுடலில் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் (கொலோ 1:22). உண்மையான பாஸ்காச் செம்மறியாகிய (கொரி 5:7) கிறிஸ்துவின் இவ்வுடல், நம்முடைய மீட்பின் கருவியாக உள்ளது. குத்திஊடுருவப்பட்ட அவரது பக்கவாட்டினின்று இரத்தமும் நீரும் வழிந்தோடியது (யோவா 19:33 தொ). கிறிஸ்துவினுடைய பலியை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக, எபிரேயருக்கான திருமுகம் இயேசுவின் உடலுக்குத் தனிப்பட்ட கவனத்தை அளிக்கின்றது. உலகிற்கு அவர் வருகை தந்தபோது இறைவன் அவருக்கென ஒரு உடலை அமைத்திருந்ததால் (எபி 10:5), தம்மையே பலியாக்குவதற்கு இயேசு தயாராகவுள்ளார். மேலும், தமது உடலையே காணிக்கையாக்கியதன் மூலம் ஒரே முறையாக அவர் நம் அனைவரையும் புனிதப்படுத்தினார் (10:10).

3. இயேசுவின் மகிமைப்படுத்தப்பட்ட உடல்:- உறுதியாகக் கூறுவதாயின், இந்த மறைபொருளானது இயேசுவின் உடல் மரணத்துடன் முடிந்துவிடாமல், அவருடைய உயிர்ப்பிலேயே நிறைவடைகிறது. நற்செய்தியாளர்கள், உயிர்ப்புக் காட்சிகளைப் பற்றிய தங்களுடைய விவரிப்புக்களில், உயிர்த்த இயேசுவினுடைய உடலின் உண்மையை வலியுறுத்தும்போது (லூக் 24:39.42; யோவா 20:27), அவருடைய மரணத்திற்கு முற்பட்டது போன்ற அதே கட்டுப்பாடுகளுக்கு அது இனியும் கட்டுப்பட்டிருக்கவில்லை என்பதையும் வலியுறுத்துகின்றனர் (யோவா 20:19.26). அது இனிமேலும் ''மனித உயிர்கொண்ட உடலாக'' இல்லாமல் (1 கொரி 15:44), ''மாட்சிமைக்குரிய உடலாகவும்'' (பிலி 3:21), ''தேவ ஆவிக்குரிய உயிர்கொண்ட உடலாகவும்'' உள்ளது (1 கொரி 15:44). இவ்வாறு, மனிதனானதிலிருந்து தொடங்கிய புதிய அமைப்பில்

இயேசுவினுடைய உடலின் புனிதப்பொருளானது குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படுத்தப்படுகிறது. அழிக்கப்பட்டுப் பின்னர் மூன்று நாட்களில் கட்டப்பட்ட இவ்வுடலானது, மனிதரிடையிலான இறைவனுடைய பிரசன்னத்தின் அடையாளமாக இப்போது பழைய ஆலயத்தின் இடத்தைக் கொண்டுள்ளது (1 யோவா 2:18-22).

II. கிறிஸ்துவின் உடலினுடைய திருவருட் சாதனம்:-

1. ''இது என் உடல்'':- உயிர்ப்பிற்குப் பின்னர், கிறிஸ்துவினுடைய உடலானது ''இறைவனுடைய வலப்புறத்தில்'', காணவியலா விண்ணக வாழ்க்கையை மட்டும் அனுபவிக்கவில்லை (எபி 10:12). தமது மரணத்திற்கு முன்னர், அடையாளங்களை உபயோகிப்பதன்மூலம், அவர் தாம் பலியாக்கப்பட்ட உடலின் உலகப் பிரசன்னத்தை, நிலைப்படுத்துவதற்கென ஒரு சடங்கை உருவாக்கினார். நற்கருணையை ஏற்படுத்திய நிகழ்ச்சிபற்றிய விவரிப்புக்கள், இச்சடங்கானது அண்மையில் நிகழவிருந்த சிலுவையில் முன்னோக்கில் நிறுவப்பட்டது என்பதைக் காட்டி, அதனால், இயேசுவினுடைய உடல் மரணத்தின் பொருளை வெளிப்படுத்துகின்றன. ''இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல்'' (1 கொரி 11:24); ''உடன்படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இது'' (மாற் 14:24). இவ்வாறு, அப்பம் மற்றும் திராட்சை ரசத்தினுடைய அடையாளமானது, இவ்வுலகில் நமக்கெனக் கையளிக்கப்பட்ட இயேசுவின் உடலையும், சிந்தப்பட்ட அவரது இரத்தத்தையும் இப்போது பிரசன்னமாக்குகின்றது.

2. திருச்சபையினுடைய நற்கருணை அனுபவம்:- திருச்சபையில் இதே சடங்கானது புதுப்பிக்கப்படும்போது, கிறிஸ்துவினுடைய மரணத்தின் கொண்டாட்டமாக இது உள்ளது (1 கொரி 11:24 தொ). அதே நேரத்தில், கிறிஸ்துவின் உடலானது ''உயிரளிக்கும் ஆவியாக உருவாகக்'' காரணமாகவுள்ள உயிர்ப்பின் ஒளியில் இந்த நினைவு நிறுவப்பட்டுள்ளது (15:45). மேலும், நற்கருணையானது ஆண்டவரின் வருகையைப் போதித்து, அதனை நோக்குமாறு மனிதனை அழைப்பதன் காரணமாக, இறுதிக்காலப் பரிணாமத்தையும் கொண்டுள்ளது (11:26). எனவே இச்சடங்கின் மூலமாக, மீட்பின் மறைபொருளுக்கு அத்தியாவசியமான அனைத்துக் கூறுகளிலும், திருச்சபை மீண்டும் வாழ்வதற்குக் காரணமாக உள்ள ''கிறிஸ்துவின் உடலில் பங்கு பெறுதல்'' என்னும் ஓர் ஒப்பற்ற அனுபவத்தில் திருச்சபை பங்கு கொள்கிறது.

III. திருச்சபை கிறிஸ்துவின் உடல்:

1. ஒரே உடலின் உறுப்பினர்கள்:- நற்கருணையைப் பெறுவதன்மூலம், நாம் கிறிஸ்துவினுடைய உடலின் உறுப்பினர்கள் என்பதை உணர்கிறோம். ''நாம் அப்பத்தைப் பிடுகிறோமே; அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அன்றோ? அப்பம் ஒன்றே; ஆதலால், நாம் பலராயினும் ஒரே உடலாய் உள்ளோம்'' (1 கொரி 10:16-17). எனவே, கிறிஸ்துவுடனான நமது ஒன்றிப்பை நாம் உண்மையான பொருளில் புரிந்துகொள்ளவேண்டும். நாம் உண்மையில் அவரது உறுப்புக்கள். ஆகவே தகாத உறவு கொள்கின்ற கிறிஸ்தவன் ''கிறிஸ்துவினுடைய ஓர் உறுப்பினரை எடுத்து, வேசியுடன் சேர்க்கிறான்'' (1 கொரி 6:15). நாம் ஒருவருக்கொருவர் அங்கத்தினர்களாய் உள்ளோம் (உரோ 12:5) என்று பவுல் கூறும்போது, இச்சந்தர்ப்பத்தில் அவர் உபயோகிக்கின்ற வயிறு மற்றும் பிற உடல் உறுப்புகள் பற்றிய கிரேக்கக் கதைகளைப் போன்று, உருவகமாக அவர் பேசவில்லை (1 கொரி 12:14-26). ஞானஸ்நானத்தினாலும் (1 கொரி 12:13.27) நற்கருணை ஒன்றிப்பினாலும் (1 கொரி 10:17) ஒன்று சேர்ந்த ஒரே உடலின் பல்வேறு உறுப்பினர்களைக் கிறிஸ்துவின் உடலானது ஒன்றிணைக்கிறது. இவ்வுடலில் மொத்த நன்மைக்காக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்குரிய பணியைக் கொண்டுள்ளான் (1 கொரி 12:27-30; உரோ 12:4). சுருக்கமாக இயேசுவின் இந்தச் சிறப்பான உடலில்தான் மனுக்குலத்தின் ஒன்றிப்பு உண்மையாகிறது.

ஏனெனில் இந்த உடலில் தங்களையே ஒன்றிக்க எல்லா மனிதரும் அழைக்கப்படுகின்றனர்.

2. திருச்சபையாகிய கிறிஸ்துவின் உடல்:- சிறைக்கூட மடல்களில் பவுல் மீண்டும் இக்கோட்பாட்டினை வெளிப்படுத்தி, கிறிஸ்து உடலுக்கும் ஆகவே திருச்சபைக்கும் தலையாக உள்ளார் என்பதை வலியுறுத்துவதன் மூலம் மிக முழுமையான வடிவம் அளிக்கின்றார் (கொலோ 1:18).- அதே சமயம், இயேசு படைத்தவராய் இருப்பதால் அவரது அண்டவியல் பங்கையும் (1:16-17; எபே 1:22) வானதூதர்கள் மீதான அவரது உயர்நிலைமையையும் (கொலோ 1:16; 2:10; எபே 1:21) பவுல் வற்புறுத்துகின்றார். உடலின் தலையாகவும் (எபே 5:29) தலைவருமாகவும் உள்ள கணவன் தனது மனைவியைத் ''தனது சொந்த உடலாக'' அன்பு செய்வது போன்று (5:23), கிறிஸ்துவும் திருச்சபையை அன்பு செய்து, மீட்பராகத் (5:23) தம்மையே அவளுக்கு அளித்துள்ளார் (5:25). இவ்வாறு, உடலின் ஒன்றிப்பிற்கு உறுதியளிக்கின்ற (கொலோ 2:19) தலையாக அவர் உள்ள நிலையில் (கொலோ 1:18; எபே 1:22) திருச்சபையானது அவரது உடலாகவும் முழுமையாகவும் உள்ளது (எபே 5:30); நாம் அனைவரும் ஒன்றாக உள்ளோம் (கொலோ 3:15). நம்முடைய தொடக்கம் எப்படிப்பட்டதாயினும் ஒரே மக்களாக, ஒரே புதிய மனிதனாக உருவாவதற்கென, நாம் அனைவரும் இறைவனுடைய நட்புறவிற்குள் மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளோம். அதன் விளைவாக நாம் ஒரே மக்களாகிறோம், ஒரே புதிய மனிதனாகிறோம் (எபே 2:14-16). கிறிஸ்துவின் உடலின் பருமனும் பரப்பும் இத்தகையதாகும். கிறிஸ்தவ அனுபவம் கிறிஸ்துவின் மனிதாவதாரம் என்ற வரலாற்று உண்மையிலும், நற்கருணைச் சடங்கிலும் நிறுவப்பட்டுள்ளது. இந்த அனுபவம் திருச்சபையின் மறை உண்மையுள் புக நமக்கு வாய்ப்பளிக்கிறது.

3. கிறிஸ்துவின் உடலும் நம் உடலும்:- நமது உடல்களும் கூடப் புதிய உலகினுள் புக அழைக்கப்படுகிறது. ஏனெனில் அவை கிறிஸ்துவுக்குள் அவரது அங்கங்களாக ஒட்ட வைக்கப்பட்டுள்ளன. அவை பரிசுத்த ஆவியின் ஆலயங்களாக மாறிவிட்டன (1 கொரி 6:19), ''தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்ற வல்லவரான (பிலி 3:21) கிறிஸ்துவோடு அது உயிர்த்தெழும். இதிலே நமது மீட்பில் கிறிஸ்துவின் உடலின் பணிநிறைவாகச் செயல்படும்.

கிறிஸ்துவின் தலைமுறை அல்லது மரபுமுறை (GENEOLOGY OF CHRIST)

இத்தலைமுறை அட்டவணைகள் மத் 1;1-16; லூக் 3:23-38 ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. இரண்டு அட்டவணைகளும் வேறுபடுவதால், அவற்றைத் தனித்தனியே ஆய்வு செய்வது நன்று.

1. மத்தேயு:- இயேசுவின் தலைமுறை அட்டவணை ஆபிரகாமிலிருந்து தாவீதுக்கும், பின்பு யூதா அரசர்கள் வழியாகவும் எடுத்துக்கூறப்படுகிறது. இதில் முக்கியமானவர்கள் தாவீதும், ஆபிரகாமும் ஆவார்கள் என்று தெளிவாகக் கூறப்படுகிறது (மத் 1:1). மெசியா தாவீதின் வழித்தோன்றலாக இருப்போர் என்பதும் வாக்குறுதிகள் ''ஆபிரகாமுக்கும் அவரது வழித்தோன்றலுக்கும்'' (கலா 3:16; ஆதி 12:7; 22:18) அளிக்கப்பட்டன என்பதும் யூத விசுவாசத்திற்குப் பொதுவானவையாகும்.

மத்தேயு ஆபிரகாமிலிருந்து தொடங்குகிறார். அவரது பெயர் அட்டவணையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் இரண்டு பகுதிகள் ஒவ்வொன்றும் பதினான்கு பெயர்களையும் மூன்றாவது பதின்மூன்று பெயர்களையும் கொண்டுள்ளன. ஆகமொத்தம் நாற்பத்தொரு பெயர்கள் உள்ளன. ஆபிரகாமிலிருந்து தாவீது வரைக்கும், சாலமோனிலிருந்து எக்கொனியா மற்றும் நாடு கடத்தப்படுதல் வரைக்கும், செயல்தியேலிலிருந்து இயேசுவரைக்குமாக இவ்வட்டவணை பிரிக்கப்படுகிறது. இது ஏழுமுறை

இரண்டு, பதினான்காகும். ஏழு தாவீதுக்கு ரிய அடையாள எண்ணாகும்.

பேரேசிலிருந்து தாவீதுவரைக்குமுள்ள பெயர்கள் ரூத் 4:18-22-இன் எழுபதுநூல் வாசகத்திலிருந்து அப்படியே எடுக்கப்பட்டுள்ளன. சாலமோனிலிருந்து எக்கொனியா வரைக்கும் உள்ள பெயர்கள் 1 நாள் 3:10-15-இல் வரும் பெயர்களோடு ஓரளவு ஒத்துப் போகின்றன. ஆனால் யோராம் ஊசியாவுக் கிடையில் அகசியா, யோவாசு அமசியா ஆகிய பெயர்கள் விடப்பட்டுள்ளன. யோயாக்கிமுக்குப் பதிலாக எக்கொனியா (யோயாக்கின்) வருகிறது. மூன்றாவது பகுதியில் செருபாபேல், லூக் 3:27, எஸ்ரா, நெகமியா மற்றும் ஆக்காயில் உள்ளதுபோல் செயல்தியேலின் மகன் எனக் குறிப்பிடப் படுகிறார். ஆனால் 1 நாள் 3:19-இல் இவர் பெதாயாவின் மகனும் செயல்தியேலின் சகோதரன் மகனும் ஆவார். மூன்றாவது பகுதியில் வரும் பலபெயர்கள் விவிலியத்திலேயே இங்கு மட்டும்தான் காணப்படுகின்றன. செயல்தியேலிலிருந்து யோசேப்பு வரையுள்ள பத்துப்பெயர்கள் ஐந்நூறு ஆண்டுக் காலத்தை நிரப்புகின்றன. இது போதுமானதன்று என்பது தெளிவு. இது சில பெயர்கள் தவறிப்போய்விட்டன அல்லது அகற்றப்பட்டு விட்டன என்பதைக் காட்டுகிறது. இயேசுவின் பாட்டன் பெயர் யாக்கோபு என்று தரப்பட்டுள்ளது.

2. லூக்கா:- இவ்வட்டவணை இயேசுவில் தொடங்கி, பின்னோக்கி ஆதாம் வரைக்கும் ஆதாமைக் கடந்து இறைவன் வரைக்கும் போகிறது. மத்தேயு நாற்பத்தொரு பெயர்களைக் கொடுக்கும்போது லூக்காவின் அட்டவணை எழுபத்தேழு பெயர்களைக் (இறைவனையும் சேர்த்து எழுபத்தெட்டுப் பெயர்களைக்) கொடுக்கிறது. இரண்டு அட்டவணைகளுக்கிடையில் பதினேழு பெயர்கள் பொதுவானவையாகும். ஆர்பகசாதுவின் மகனாகக் காயினானைச் சேர்ப்பதைத்தவிர, இந்த அட்டவணையில் ஆதாமுக்கும் ஆபிரகாமுக்கும் இடையில் வரும் பெயர்கள் ஆதி 5; 11:10-27; 1 நாள் 1:1-4.24-26-இல் வரும் பெயர்களோடு ஒத்துள்ளன. ஆர்னி, அதிமின் ஆகிய பெயர்களைச் சேர்ப்பது தவிர லூக்காவின் அட்டவணையில் ஆபிரகாமுக்கும் தாவீதுக்கும் இடையில் வரும் பெயர்கள் மத்தேயுவின் பெயர்களோடு ஒத்துப் போகின்றன. ஆனால் இப்பெயர்கள் தொடர்பான வாசக வேறுபாடுகள் பல உள்ளன. இரண்டு அட்டவணைகளிலும் செயல்தியேல், செருபாபேல், யோசேப்பு ஆகிய பெயர்கள் மட்டுமே பொதுவாக உள்ளன. மத்தாத்தும் (லூக் 3:24), மாத்தானும் (மத் 1:15) ஒரே ஆளைக் குறிக்கலாம். யோதா (லூக் 3:26) அபியூதுவின் (மத் 1:13) சுருக்கமாக இருக்கலாம். செருபாபேலின் மகனாக லூக்கா குறிக்கும் இரேசா என்பது ஆளின் பெயராக இல்லாமல் இருக்கலாம். இளவரசன் என்ற பொருளில் செருபாபேலின் பட்டமாக இருக்கலாம். இரேசாவின் மகனாக லூக்காவால் குறிக்கப்படும் யோவனான் 1 நாள் 3:19-இல் செருபாபேலின் மகனாகக் கொடுக்கப்படும் கன்னியாவாக இருக்கலாம். இப்படியிருந்தால் லூக்காவின் மூல வாசகத்தில் இளவரசான செருபாபேலின் மகன் யோவனான் என்றிருந்திருக்கவேண்டும்.

தாவீதுக்குப் பின்வரும் பெயர்கள் இரண்டு அட்டவணைகளிலும் வேறுபடுவதற்குக் காரணம் இயேசுவின் தலைமுறையை மத்தேயு சாலமோனின் வழியாகவும், லூக்கா நாத்தான் வழியாகவும் தருகின்றனர். இந்த நாத்தான் பதுசோபா வழியாகத் தாவீதுக்குப் பிறந்த மற்றொரு மகனாவார் (2 சாமு 5:14; 1 நாள் 3:5; 14:4). லூக்காவின் அட்டவணையில் நாத்தான் மற்றும் செயல்தியேலுக்கு இடையிலும் செருபாபேல் மற்றும் யோசேப்புக்கிடையிலும் முப்பத்தேழு பெயர்களும் அறியப்படாதவையாகும். யோயாக்கிமின் மீதும் அவரது மகன் யோயாக்கின் மீதும் விழுந்த எரேமியாவின் சாபத்தால் லூக்காவின் அட்டவணை பாதிக்கப்பட்டிருக்கலாம்(எரே22:18-19.28.30;36:30-31). மத்தேயு (1 நாள் 3:17-இல் இருப்பது போல்) செயல்தியேலை எக்கொனியாவின் மகனாகக் குறிப்பிடுகிறார். ஆனால் லூக்கா

செயல்தியேலை நேரியின் மகனாகக் குறிப் பிடுகிறார்.

லூக்காவின் அட்டவணை இயேசுவுக்கும் ஆதாமுக்கும் இடையில் எழுபத்தேழு பெயர்களைக் கொண்டுள்ளது. இது ஏழு முறை பதினொன்றாகும். மத்தேயுவில் உள் ளது போல், லூக்காவின் பெயர்களையும் குழுவாகப் பிரிக்கலாம். ஆனால் இது நான்கு பகுதிகளாகும். அ) இயேசுவி லிருந்து செருபாபேல் வரைக்கும் இருபத் தொரு பெயர்கள்: இ) தாவீதிலிருந்து ஈசாக்கு வரை பதினான்கு பெயர்கள் (ஏழுமுறை இரண்டு); ஈ) ஆபிரகாமிலிருந்து ஆதாம் வரை இருபத்தொரு பெயர்கள். இந்த அட்ட வணையில் செருபாபேல், தாவீது, ஆபிர காம் ஆகிய பெயர்கள் முக்கியமானவைக ளாகும்.

3. வேறுபாடுகளின் விளக்கங்கள்:- இரண்டு அட்டவணைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் தொடக்கத்திலிருந்து பிரச்ச னைகளை எழுப்பியுள்ளன. கி.பி. 220-ஐ ஒட்டிய யூலியு ஆப்பிரிக்கானு என்பவர் அரிஸ்திதைடு என்பவருக்கு எழுதிய கடிதத் திலிருந்து, இரு அட்டவணைகளும் அடை யாளப் பண்புடையவைகள் என அறிகி றோம். மத்தேயு இயேசுவின் தலை முறையை யூதாவின் அரசர்கள் வழியாகக் கூறு வதால், அவரது அட்டவணை கிறிஸ்துவின் அரசப்பண்பை எடுத்துக்காட்டுகிறது. லூக்கா வின் அட்டவணை கிறிஸ்துவின் குருத் தன்மையை எடுத்துக்காட்டுகிறது. யுசேபியு வின் கருத்துப்படி, ஆப்பிரிக்கானுவே, தாவீ திலிருந்து யோசேப்புக்கிடையில் வரும் பெயர்களின் வேறுபாடுகளை உடன் பிறந் தான் திருமணச்சட்டம் விளக்கவல்லது என்று நம்பினதாகத் தோன்றுகிறது. இச்சட் டத்தின்படி, ஒரு மகனைப் பெறாத விதவை, தன் கணவனின் சகோதரனை மணக்கவேண் டும். இதன் விளைவாக அவள் பெற்றெடுக் கும் மகன், தன் தாயின் முதல் கணவனின் மகனாகக் கருதப்படுவான். இவ்வாறு ''இறந்தவனுடைய பெயர் இஸ்ராயேலில் மறைந்து போகாது'' (உப 25:5 தொ). இக் கருத்தின்படி லூக்காவில் உள்ளதுபோல், யோசேப்பு உண்மையில் கேலியின் மகனா வார். ஆனால் அவர் (மரியாவின் முதல் கணவனான) தன் சகோதரன் (மத்தேயுவில் உள்ளதுபோல்) யாக்கோபின் பெயரை எடுத் துக் கொண்டார். ஆகவே கேலியும் யாக்கோ பும் சகோதரர்கள். ஆனால் இவர்கள் வெவ் வேறு தகப்பன்களுக்கு ஒரே தாயிடம் பிறந்த வர்கள். கேலியன் தலைமுறை நாத்தான் வழியாகத் (லூக்) தாவீதுக்குச் சென்றது. யாக்கோபுவின் தலைமுறை சாலமோன் வழியாகத் (மத்) தாவீதுக்குச் சென்றது. இந்த விளக்கம் விசித்திரமானது. மத்தேயுவும் லூக்கா வும் இயேசுவின் கன்னிப் பிறப்புப்பற்றிக் கூறுபவற்றோடு ஒத்துப்போகாது. ஆகவே இதை ஏற்கமுடியாது. வேறுசிலர், மத்தேயு இயேசுவின் உடல் சார்ந்த தலைமுறையை யும் லூக்கா, உடன்பிறந்தான் திருமணம் என்ற சட்டமுறையின் கீழ், சட்டமுறையான தலைமுறையையும் கொடுப்பதாகக் கூறு வர். இக்கருத்தின்படி, கேலி குழந்தையின்றி இறந்தார். இதனால் அவரது ஒன்றுவிட்ட சகோதரன் யாக்கோபு கேலியின் வித வையை மணந்தார். அதன் விளைவாக இயேசுவின் தந்தையாகிய யோசேப்பு பிறந் தார். மற்றும் சிலர், மத்தேயு சட்டமுறைத் தலைமுறையையும் லூக்கா உடல்சார்ந்த தலைமுறையையும் கொடுப்பதாகக் கருது வர்.

கி.பி. 1490-ஐ ஒட்டிய அன்னியு வித் தெர்போ என்பவர் மத்தேயு யோசேப்பின் தலைமுறையையும், லூக்கா மரியாவின் தலைமுறையையும் கொடுக்கின்றனர் என் றார். இத்தகைய விளக்கம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. சமீப காலத்தில் இந்த விளக்கத் திற்கு அறிஞர் சிலர் ஆதரவு அளித்துள்ளனர். இதில் ''அவரை மக்கள் யோசேப்பின் மகன் என்று கருதினர்'' (லூக் 3:23) என்ற கூற்றின் அடிப்படையில், லூக்கா இயேசுவுக்கும் யோசேப்புக்கும்இடையில் உள்ள தொடர் பைப் புறக்கணிப்பதாகத் தெரிகிறது.

முடிவாக இரண்டு அட்டவணைகளும் தொடக்கத்திலிருந்தே வெவ்வேறு யூதக் கிறிஸ்தவர்களால், இயேசுவின் மெசியாத் தன்மையை வலியுறுத்தச் சுதந்தரமாக அமைக்கப்பட்டவைகளாகத் தெரிகிறது. இவற்றை இரு நற்செய்தியாளரும் தங்களுடைய இறையியல் நோக்கத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்தினர். இதன்படி, மத்தேயு, பொதுப்பாணியில் அமைந்த தாவீதின் அரச தலைமுறையைக் கொடுத்து அதோடு யோசேப்பு மற்றும் இயேசுவின் பெயர்களைச் சேர்த்தார். இதன்படி இயேசு தாவீதின் வழித்தோன்றலாயிருப்பது அவர் தாவீதின் மகன் (மத் 22:45) மற்றும் சாலமோனுக்கும் மேலானவர் (12:42) என்ற அளவில், அவர் நிறைவேற்றும் அலுவல்களைக் குறிக்கிறது. லூக்கா, இயேசுவின் உடல்சார்ந்த தலைமுறையையும் மனுக்குலத்தோடு அவர் கொண்டிருக்கும் பிணைப்பையும் எடுத்துக்கூறுகிறார். இது தலைமுறைப் பகுதிக்கு உடனடியாக முன்வரும் திருமுழுக்கு விவரிப்பால் எடுத்துக்காட்டப்பெறுகிறது (லூக் 3:21-22). ஆனால் இப்போதுள்ள அட்டவணைகளில் உள்ள பிரச்சனைகளும், அவற்றில் இருக்கக்கூடிய இரட்டிப்பு விவரிப்புகளும் துல்லியமான வரலாற்று விவரங்களை மறைத்துவிடுகின்றன. பழங்காலத் தலைமுறை அட்டவணைகளில் இருப்பதுபோல், முதலும் (இயேசு) முடிவுமே (ஆதாம்) முக்கியமானவையாகும்.

கிறிஸ்துவின் நாள் (DAY OF CHRIST)

பழைய ஏற்பாட்டில் ''யாவேயின் நாள்'' குறிப்பிடப்படுகிறது (ஏசா 2:12; 13:6 தொ; யோவே 1:15; 2:31; ஆமோ 5:18; செப் 1:7 தொ; செக் 14:1; மலா 4:5). இது பொதுவாக இறைவன் பழிவாங்குதலையும் அழிவையும் தீர்ப்பையும் கொண்டுவரும் பயங்கர நாளாகும். இந்த இறைவாக்குக் கருத்து, யூத வெளிப்பாட்டு இலக்கியங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நாளில் இறைவன் இத்தீமையின் காலத்தை இறைதீர்ப்போடு கூடிய பெருங்கேடான முடிவுக்குக் கொண்டு வருவார். சில வாசகங்களில் இறைவன் அல்லது மெசியாவே நீதிபதியாக இருப்பார்.

''இறைவனின் நாள்'' என்ற சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் இருமுறை மட்டும் தான், அதுவும் வெளிப்பாட்டுச் சூழ்நிலையில் வருகிறது. 2 பேதுரு 3:12-இல் இக்காலத்தின் முடிவில் விண்ணும் மண்ணும் நெருப்பால் வெந்துருகி அழிந்துபோவது ''கடவுளுடைய நாள்'' என்று அழைக்கப்படுகிறது. திருவெளி 16:14-இல் ''எல்லாம் வல்ல கடவுளின் பெருநாள்'' இக்காலத்தின் முடிவுக்குச் சிறிது முன்பு, ஆர்மாகதோன் போருக்காகக் குறிக்கப்பட்ட நாளாகும்.

பழைய ஏற்பாட்டின் எழுபதுநூல் மொழிபெயர்ப்பு ''யாவே'' என்ற எபிரேயச் சொல்லுக்குப் பதிலாக ''ஆண்டவர்'' என்று பொருள்படும் கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்தியது. ஆகவே எழுபது நூலில் ''யாவேயின் நாள்'' ''ஆண்டவரின் நாளா''யிற்று.

தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் இயேசுவை இறைவன், ஆண்டவர் என்றழைத்ததால், கிரேக்க விவிலியத்தில் அவர்கள் கண்ட ''ஆண்டவரின் நாள்'' கிறிஸ்துவின் நாளாய் இயற்கையாகவே புரிந்துகொள்ளப்பட்டது (1 கொரி 5:5). பவுல் ''பாவியைச் சாத்தானுக்குக் கையளிக்கவேண்டும். அவனது உடல் அழிவுற்றாலும், அவனது ஆன்மா ஆண்டவரின் நாளில் மீட்படையும்படி இவ்வாறு செய்வோம்'' என்று கூறுகிறார்.

1 கொரி 1:8-இல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படவேண்டும் என்று ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் வருகை ''ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாள்'' என்று தெளிவாக அழைக்கப்படுகிறது; 2 கொரி 1:14-இல் ''இயேசு கிறிஸ்துவின் நாள்'' என்றும், பிலி 1:10; 2:16-இல் ''கிறிஸ்துவின் நாள்'' என்ற குறுகிய வடிவிலும் அழைக்கப்படுகிறது.

இதற்கு இணையான சொற்றொடர் மனுமகன் வெளிப்பட்டுத் தீயவர்களை அழிக்கும் நாள் என்பதாகும் (லூக் 17:24.30). அதாவது இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகை

யில் விண்ணக மனுமகனாகத் தோன்றும் நாளாகும். புதிய ஏற்பாட்டில் மற்ற இடங்க ளில் கிறிஸ்துவின் நாள் வெறுமனே ''நாள்'' என்றும் (2 திமோ 1:12.18; 4:8; எபி 10:25) ''கடவுள் வரும்நாள்'' என்றும் (1 பேதுரு 2:12), ''தீர்ப்பின் நாள்'' என்றும் (2 பேதுரு 2:9; 1 யோவா 4:17) அழைக்கப்படுகிறது.

கடவுளின் நாளும், ஆண்டவரின் (அதா வது இயேசுவின்) நாளும் எப்போதும் தெளி வாக வேறுபடுத்தப்படுவதில்லை. 2 பேதுரு 3:10.12-இல் இரண்டும் செயல் அளவில் ஒன்றாகப்படுகின்றன. இது போலவே உரோ 2:16-இல் ''இயேசு கிறிஸ்துவின் வாயிலாகக் கடவுள் மனிதர் உள்ளங்களில் மறைந்திருப்பவற்றைத் தீர்ப்பிடும் நாளைப்'' பவுல் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவின் பாடுகள் (PASSION OF CHRIST)

இத்தலைப்பு கிறிஸ்து தமது இவ்வுலக வாழ்வின் இறுதிநாட்களில் அனுபவித்த மீட் புத் துன்பங்களைக் குறிப்பாக அவரது சிலுவை மரணத்துக்கு இட்டுச்சென்ற நிகழ்ச் சிகளைக் குறிக்கிறது. இது ''தாம் பாடுபட்ட பின்னர்'' என்று அ.ப. 1:3-இல் குறிக்கப்படு கிறது. இப்பொருளில் பாடுகள் என்ற சொல்லை அப்போஸ்தலர்காலத் தந்தையர் கள் குறிப்பாக அந்தியோக்கிய இஞ்ஞாசியர் தன் திருமுகங்கள் வழியாக மக்களிடையே பரவச் செய்தனர். இச்சொல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் மத்தியிலேயே பொது வழக் கில் இருந்தது. அதன்விளைவாக அதன் பொருள் துல்லியத்தைக் கொண்டிருக்க வில்லை. இயேசுவின் சிலுவை மரணத் திற்கு இட்டுச் சென்ற துன்பங்களைக் குறிப் பதோடு, அவற்றை விவரிக்கும் நற்செய்திப் பகுதிகளையும் (குறிப்பாக மத் 26-27; மாற்கு 14-15; லூக் 22-23; யோவா 18-19) குறித்தது. இரண்டாம் வாத்திக்கான் சங்கத்திற்கு முன் உயிர்ப்பு ஞாயிறுக்கு முந்திய இரண்டாம் ஞாயிறு பாடுகளின் ஞாயிறு என்றழைக்கப் பட்டது. உயிர்ப்பு ஞாயிறுக்கு முந்திய இரு வாரகாலம் பாடுகளின் காலம் என்றழைக்கப் பட்டது. இப்போது உயிர்ப்பு ஞாயிறுக்கு முந்திய முதல் ஞாயிறு பாடுகளின் ஞாயிறு என்றழைக்கப்படுகிறது. பொதுவாகப்பாடு கள் என்பது இயேசுவின் இறுதி நாட்களில் நடந்த அவரது இறுதி இரவுணவு, கெதுசம னியில் வேதனை, கைதியாக்கப்படுதல், விசாரணை, மரணம், அடக்கம் ஆகியவை அடங்கிய நிகழ்ச்சியைக் குறிப்பதாக எடுத் துக் கொள்ளலாம்.

இயேசுவின் பாடுகளைப்பற்றிய புதிய ஏற்பாட்டுக் குறிப்புகளை அ) இயேசு கூறி யவை ஆ) அவரைப் பற்றிக் கூறப்பட்டவை யென இரு தொகுப்புகளாகப் பிரிக்கலாம். தமது துன்பங்கள், மரணம், மற்றும் உயிர்ப்பு பற்றி இயேசு மும்முறை தம் சீடர்களுக்கு முன்னறிவித்தார் [அ) மாற் 8:31-32; மத் 16:21; லூக் 9:22; ஆ) மாற் 9:31-31; மத் 17:22-23; லூக் 9:43-45; இ) மாற் 10:32-34; மத் 20:17-19; லூக் 18:31-34)]. மலை யில் உருமாறிய நிகழ்ச்சிக்குப்பின், மனு மகன் பாடுகள் பலபட வேண்டும் என்று போதித்தார் (மாற் 8:12; மத் 17:12; லூக் 17:25). ''நான் பாடுபடுவதற்குமுன் உங்க ளோடு இந்தப் பாஸ்கா உணவை உண்ண ஆசைமேல் ஆசையாய் இருந்தேன்'' என்று கூறினார் (லூக் 22:15). ''மனுமகன் அவர் களை விட்டுப்பிரியும் நாள்'' (மாற் 2:19; மத் 15; லூக் 5:35), ''நான் பெறவேண்டிய ஞானஸ்நானம் ஒன்றுண்டு'' (லூக் 12:50), இறைவாக்கினர்கள் மடியும் எருசலேம் (லூக் 13:33), கொல்லப்பட்ட மகன் (மாற் 12:8; மத் 2:19; லூக் 20:15), ''என் அடக்கத் தைக் குறித்து முன்னதாகவே என் உடலுக் குத் தைலம் பூசினாள்'' (மாற் 14:8; மத் 26:12) ஆகியவை பற்றிய கூற்றுக்கள் அவரது துன் பங்களை உள்ளடக்கியுள்ளன. ''பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்க வந்தார்'' (மாற் 10:45; மத் 20:28), ''உடன் படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இது'' (மாற் 14:24; காண் மத் 26:28; லூக் 22:20), அவரின் பாடுகளின் அவசியத்தைக் கூறும் மறைநூல் (லூக் 24:26-27.46), இறைவனின் விருப்பம் நிறைவேறு தல் (மாற் 14:36; மத் 26:39; லூக் 22:42) ஆகியவை யாவும் பாடுகளில் இயேசுவின் நோக்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றன.

இத்துன்பங்கள் பற்றிய இயேசுவின் கூற்றுக்களைக் கேட்ட சீடர்கள் முதலில் மலைத்துப் போயினர். பிற்பாடு, அவரது மரணம் மற்றும் உயிர்ப்புப் பற்றிய உட்பொருளை உணர்ந்து கொண்டனர். அதற்குத் தங்கள் விசுவாசத்தின் உதவி கொண்டு விளக்கம் அளித்தனர். இயேசுவின் பாடுகளில் பங்கு கொள்ளுதலில் உள்ள வியப்பையும், ஆறுதலையும் வாக்குறுதியையும் பவுல் அறிந்திருந்தார் (*உரோ 8:17; 2 கொரி 1:5; பிலி 3:10; கொலோ 1:24*). அவர் உயிர்ப்பைக் கிறிஸ்து துன்பங்கள் மற்றும் மரணத்தின்மேல் கொண்ட வெற்றியின் அடையாளமாக நோக்கினார். விசுவாசி கிறிஸ்துவின் மரணத்தில் பங்குகொள்வதால் அவனும் புதிய வாழ்வுக்கு உயிர்த்தெழுவான். இயேசுவின் பாடுகள் பற்றிய குறிப்புகள் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலும், பேதுருவின் முதலாம் திருமுகத்திலும் வருகின்றன. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில், இயேசு பாடுகளால் நிறைவுள்ளவராகிறார் (*எபி 2:10*). ''தாமே சோதனைக்குள்ளாகித் துன்பப்பட்டதனாலேயே சோதிக்கப்படுகிறவர்களுக்கு அவரால் உதவி செய்ய முடிகிறது'' (*2:18*). ''தமது சொந்த இரத்தத்தால் மக்களைப் பரிசுத்தப்படுத்த வேண்டி, நகர் வாயிலுக்கு வெளியே'' (*13:12*), ''பல்லோர் பாவங்களைப் போக்கும்பொருட்டு ஒரே முறையில் எக்காலத்திற்குமே தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்'' (*9:26*). பேதுருவின் முதலாம் திருமுகத்தின் ஆசிரியர், இயேசுவின் துன்பங்களுக்குத் தாம் நேரடிச் சாட்சி என்றும், இத்துன்பங்கள் மறைநூலில் முன்னறிவிக்கப்பட்டவை என்றும் (*1 பேதுரு 1:11; 4:13; அ.ப. 3:18; 17:3*), அவற்றில் அவரது சீடர்கள் மகிழ்வோடு பங்கு பெறுகின்றனர் என்றும், கிறிஸ்துவின் ஊழியர்கள் அநீதியாகத் துன்பப்பட்டாலும், ''இயேசுவின் அடிச்சுவடுகளை'' அவர்கள் பின்பற்றவேண்டும் என்றும் (*1 பேதுரு 2:21.23*) கூறுகிறார்.

பாடுகளின் பொருளைப் புரிந்துகொள்ள, புதிய ஏற்பாட்டுக் குறிப்புகளைக் கடந்து, சிந்தனை மற்றும் பொருள் பற்றிய ஒருமைப்பாடுவேண்டும். இயேசு தம் பாடுகளை முன்னறிந்திருந்தார்; ''பலருடைய'' பாவங்களுக்காக இறைவனின் சித்தத்தின் ஆழ்ந்த மறையுண்மையைத் தம்பாடுகளிலே கண்டார். துன்பங்களுக்கு அப்பாற்பட்ட ஓர் அரசை எதிர்நோக்கினார். அவருடைய பாடுகளில் அவருடைய சீடர்கள் இரக்கமும் மன்னிப்பும் மிக்க தந்தையைப் பற்றிய வெளிப்பாட்டைக் கண்டனர். அவர்களுக்கு முன்மாதிரியான கிறிஸ்துவில் தங்களின் துன்பங்களை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டனர். பாவத்திலிருந்து மனிதனின் விடுதலைக்காகக் கொல்லப்பட்ட செம்மறியானாலும், அவர் என்றும் வாழ்கிறார். பாடுகளே அவர்களின் போதனையின் காலத்தால் முந்தியதும் பொருள் பொதிந்ததுமான கருவாயிற்று. பாடுகளை மையமாக வைத்தே நற்செய்தி போதிக்கப்பட்டது. நான்கு நற்செய்திகளும் எழுதப்பட்டன.

கிறிஸ்துவின் மணமகள் (BRIDE OF CHRIST)

இக்கருத்து *2 கொரி 11:2; திருவெளி 19:7; 21:2.9; 22:17;* எபே *5:25-26* போன்ற பகுதிகளில் காணப்படுகின்றது. கன்னி, மனைவி என்ற சொற்களும் பயன்படுத்தப்படலாம். திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள உறவை விளக்கும் ஓர் உவமானம். கிறிஸ்து திருச்சபையின் மணமகன். பழைய ஏற்பாட்டில் இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும் உள்ள திருமணஉறவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (*சங் 45; ஏச 54:6; எச 16:8; ஓசே 2:19-20*).

கிறிஸ்துவின் மரணம் (DEATH OF CHRIST)

1.மீட்புநிகழ்ச்சியின்வரலாற்றுத்தன்மை:- ஆதியிலிருந்து, மீட்பு வரலாற்றின் மையமாக இயேசு கிறிஸ்துவின் மரணமே கிறிஸ்தவத் திருச்சபையால் கருதப்பட்டது. பக்தியுள்ள யூதனோ மீட்பு வரலாற்றின் மைய நிகழ்ச்சி எதிர்காலத்தில் வரும் என இன்னும் எதிர்பார்க்கிறான். ஒரு கடந்தகால நிகழ்ச்சியில், குறிப்பாக, குறிப்பிட்ட நேரத்திலும், இடத்திலும் நடைபெற்ற இயேசுவின் மரணத்தில் கடவுள் உறுதியாகப் பேசியுள்ளார் எனக் கிறிஸ்தவன் அறிந்துள்ளான். இயேசு

கிறிஸ்துவத்தின் தொடக்கத்தில் நிற்கும் எண்பிக்கக்கூடிய இவ்வரலாற்றுச் செயலானது, உறுதிமொழி தேவைப்படும் ஒரு கோட்பாடு அன்று. புதிய ஏற்பாட்டின்படி நாசரேத்து இயேசுவின் மரணத்தைப்பற்றிய ஒருவனது சிந்திக்கும்முறை மீட்பை நிர்ணயிக்கிறது; விசுவாசமற்ற நிலையினின்று விசுவாசத்தை வேறுபடுத்துகிறது. ஆனால், இவ் விசுவாசமும் தனக்கெனத் தனிப்பட்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. எல்லா வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் மேலாகக் கடவுள் உயர்த்திய (பிலி 2:9) ஆண்டவரின் உயிர்ப்பு அனுபவமே, ஏமாற்றம் அடைந்திருந்த சீடர்களின் கண்களைத் திறந்தது. உயிர்ப்பு இல்லாமலிருந்தால் இயேசுவின் மரணம் சாதாரண ஒன்றாகக் கருதப்பட்டு விவாதிக்கப் படாமலே மறைந்திருக்கும். உயிர்ப்பே இயேசுவின் மரணம்பற்றிய சிந்தனைக்கு உண்மையான பொருளை அளிக்கிறது. ஆகவே புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும் இணைந்தே உள்ளன. இந்த இணைப்பைக் கிறிஸ்தவச்சிந்தனை ஒதுக்கிவிட முடியாது.

2. விளக்கவுரையும் வரலாற்று மூலப் பொருட்களாகும்:- இயேசுவின் மரணம் பற்றிக் கூறும் மூலங்களைப் பொருத்த மட்டும் இது உண்மையே. பாரம்பரியத்தை அமைப்பதில் உயிர்ப்பின் விசுவாசம் பெரிதும் பங்கு பெற்றது என நான்கு நற்செய்திகளின் விரிவான விவரிப்புகள் காட்டுகின்றன (மாற் 14-15; மத் 26-27; லூக் 22-23; யோவா 18-19). நற்செய்தியாளர்கள் வரலாற்று ஆசிரியர்களைப் போலன்றி மீட்பினை அனுபவித்த போதகர்களாக அதனைப் பிறருக்கும் அறிவிக்கவே விரும்புகின்றனர். ஆயினும், வரலாற்றுச் செயல்களாய் இக்குறிப்புகளை அமைப்பதற்கு இவை ஒருபோதும் தடையாக இருக்கமாட்டா. இயேசுவின் மரணம் எண்பிக்கக்கூடிய வரலாற்றின் நிகழ்ச்சியாகும். எனவே, வரலாற்று ஆசிரியர்களின் கண்ணோட்டத்திற்கு முழுவதும் உட்பட்டது.

3. இயேசுவினுடைய கொலை பற்றிய உண்மைகள்:- அக்காலக் கொலைக் கருவியான சிலுவையில் இயேசு குற்றவாளியின் மரணத்தை அடைந்தார். கிறிஸ்தவமல்லாத நூல்களும் இதனை அறிந்திருந்தன (தாசித்துஸ், யோசிப்பஸ்). கிறிஸ்தவர்கள் என்றும் வலியுறுத்தியதுபோல இயேசுவின் மரணத்திற்கு யூதகுலத் தலைவர்களே முழுப்பொறுப்பாவர். இந்தப் போக்கு நற்செய்தி நூல்களிலும், பவுல் (1 தெச 2:14-15) மற்றும் பேதுருவின் போதனைகளிலும் (அ.ப. 2:23; 3:14; 4:10) பார்னபாவின் நற்செய்தியிலும் மற்றும் இடைக்காலத்திய யூத கலாபனை வரையிலும் காணப்படுகிறது. ஆயினும், நீதிப்பொறுப்பானது உரோமை அதிகாரிகளால் ஏற்கப்பட்டுள்ளது. விசாரணை, மரணத் தீர்ப்பு, சிலுவையிலறைதல் ஆகியவை உரோமை முறைப்படி அமைந்தன. இயேசு உரோமையரால் தீவிரவாதி என்றும் அரசியல் போராட்டக்காரன் என்றும் தீர்ப்பிடப் பட்டார். இயேசுவின் அடையாளங்களையும், அவரது அரும்பெரும் செயல்களையும் கண்ட யூதப் பெரியோர்களே ஆளுநன் போந்தியு பிலாத்து (கி.பி. 26-36)-வின் முன் அவரைக் குற்றம் சாட்டினர் (மாற் 11:15தொ. இணை; யோவா 11:47தொ). அவரை உரோமை அவைக்கு அழைத்துச் செல்லு முன் அவர்மீது குற்றம் கண்டுபிடிக்க, அவரை முதலில் விசாரித்ததும் இக்குழுவே.

லூக் 23:2-இல் வரி தரவேண்டாமென இயேசு கூறியதாகப் பிலாத்துவின்முன் யூதத் தலைவர்கள் குற்றம் சுமத்துகின்றனர் (மாற் 12:13-17). உரோமையர்கள் இதனையே தீவிரவாதிகளின் கோட்பாடு எனக் கருதினர். இக்குற்றமே அவர்களுக்குப் போதுமானது. சிலுவையின் மேற்பகுதியில் அடிக்கப்பட்ட குற்றப் பலகையும் (மாற் 15:26 இணை; யோவா 19:19) சிலுவையில் அறையப்பட்டவர் ஓர் அரசியல் குற்றவாளி, தீவிரவாதி, அவரோடு சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளைப் போன்றவர் என்று குறிப்பிடுகிறது. ஆயினும் இயேசு தீவிரவாதியல்லர். அவரது பணியின்போது தீவிரவாத அமைப்பிற்கு ஒத்துழைப்புத் தருமாறு அவர் கேட்

டுக்கொள்ளப்பட்டார்; அவரது சீடர்களாகத் தீவிரவாதிகளும் இருந்தனர்: உதாரணமாக, கனானிய சீமோன், தீவிரவாதி சீமோனையே குறிக்கிறது (மாற் 3:18; லூக் 6:15) யூதாஸ் இஸ்காரியோத்து என்பது தீவிரவாதி என்று பொருள்படும் சிக்காரியுவிலிருந்து வந்திருக்கலாம் (அ.ப. 21:38). சீயோன் போதுரு ''பார்யோனா'' என்பது சீமோன் போதுரு ''தீவிரவாதி'' என்று பொருள் கொடுக்கலாம்; செபதேயுவின் மக்கள் இருவரும்கூட தீவிரவாதிகளாக இருக்கலாம். ஆனால் இயேசு தீவிரவாதத்தை நிராகரித்தது தெளிவாகக் காட்டப்படுகிறது (மாற் 12;17 இணை; மத் 11:12; யோவா 10:8). சாத்தானின் சோதனையான தீவிரவாத மெசியா என்னும் உருவகத்தை மீண்டும் மீண்டும் நிராகரித்தார் இயேசு. (மத் 4:9-10; 26:53; மாற் 8:33). ஆயினும் தீவிரவாதி போன்று தண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் கொலை செய்யப்பட்ட காலம் வரலாற்றுப் பூர்வமாக, உறுதியாகச் சொல்லப்பட முடியாது. பாஸ்கா காலத்தில் ஒரு வெள்ளிக்கிழமையில் இது நிகழ்ந்தது என்பதை மட்டுமே உறுதியாகக் கூறமுடியும். யோவான் நற்செய்தியின்படி (19:14) தேதியானது, பாஸ்கா வாரத்தின் முதல் முக்கிய விழாவன்று இல்லாமல் அதன் முந்திய நாளான ''நீசான்'' மாதத்தின் 14-ஆம் நாள் ஆகும். கிறிஸ்து இறந்த ஆண்டு 33-ஆக இருக்கலாம்; ஏனெனில், அவ்வாண்டில் பாஸ்காவின் முதல்நாளும் ஓய்வுநாளும் ஒன்றாக அமைந்தன.

4. இயேசுவுக்கே அவரது மரணத்தின் பொருள்:- இயேசு அவரது மரணத்தை மனதார ஏற்றுக்கொண்டார். வாழ்க்கை தோல்வியில் முடிவதைப் பற்றி அவர் ஒன்றும் கருதவில்லை. அவரது அழைப்பின் மையமாகத் தாம் எதிர்பார்த்த மரணத்தைக் கருதினார். திருமுழுக்கின்போது வானிலிருந்து வரும் குரல் (மாற் 1:11; எச 42:1) தந்தையின் பணியை ஏற்பதே அவரது கடமை என்றுரைத்து, அதற்குரிய காலத்தை அவருக்கு உணர்த்துகிறது. ஏச 52-53-இல் வரும் கடவுளின் துன்புறும் ஊழியனைப்போன்று அவர் தமது மரணத்தால் இஸ்ராயேலின் பாவங்களையும் அனைத்து மக்களின் பாவங்களையும் கழுவவேண்டும். இப்போதிலிருந்து தமக்குரிய பாதையை நன்கு அறிந்திருக்கிறார். மனுமகன் என்று தம்மையே அழைப்பதின் விளைவாக, மிக உன்னத மதிப்பு மிக்க பட்டத்தைத் தமக்கே சாற்றிக்கொள்ளும் இவர் துன்புறவேண்டும். ஆகவே இயேசு தனது திருமுழுக்கைப்பற்றிப் பேசும்போது, துன்புறுவதின் எண்ணம் பின்னணியாக எப்போதும் உள்ளது (மாற் 10:38; லூக் 12:50). அவரது சீடர்களால் அவர் புரிந்து கொள்ளப் படாவிட்டாலும் (மாற் 8:33; லூக் 24:31) அவரது போதனை இக்கருத்தினைச் சுற்றியே உள்ளது (மாற் 8:31இணை; 9:31; 10:33-34,45).

வெளிப்படையாக, ''எருசலேமை நோக்கிப்போவதே'' (மாற் 10:32இணை) இம்முடிவைக் கொணர்ந்தது. ஏனெனில் இயேசுவிற்கு உறுதிப்படுத்தப்பட்ட இந்த மரணமானது ஒரு நண்பனாக வரவில்லை; மாறாக, இறுதிவரை எதிர்க்க வேண்டிய (மாற் 14:32தொ.இணை; 15:34 = மத் 27:46; எபி 5:7) கடைசி விரோதியாகக் (1 கொரி 15:26) காணப்பட்டது. ஆனால், அது அவரது அழைப்பின் விளைவாக ஏற்பட்டதால் கீழ்ப்படிதலோடு ஏற்றுக்கொண்டார். இறைவனின் மகன் எனத் தனிப்பட்ட முறையில் தந்தையுடன் இணைக்கப்பட்ட அவர், தந்தையின் மீட்புத் திட்டத்தின்படி நடத்திச் செல்லப்பட்டார். கடவுளின் எல்லா மீட்புச் செயல்களின் உச்சநிலையாக அவரது மரணம் அமைந்தது. ''எல்லாம் நிறைவேறிற்று'' (யோவா 19:30) என்பதன் பொருள் இதுவேயாகும்.

5. யூதத்துவத்துக்குள் விளக்கம்:- இயேசுவின் சீடர்களுக்கு அவரது முடிவு முதலில் எல்லா நம்பிக்கைகளின் சிதைவாகத் தோன்றிற்று. இஸ்ராயேலின் மெசியாவை எந்த அளவிற்கு அவரில் கண்டார்களோ அந்த அளவு அவரது அவல மரணம் அவர்களுக்கு யூதர்களைப் போன்றே இடறலாகத் தோன்றி

யது (1 கொரி 1:18). ஏனெனில், துன்புறும் மெசியா என்னும் கருத்து யூதரின் சிந்தனைக்குப் புறம்பானதாகும். துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்படும் இறைவாக்கினரின் முடிவைப்போலவே, இயேசுவின் மரணத்தை நோக்கும் வாய்ப்பும் அமைந்திருந்தது (மாற் 13:57; 23:37; 1 தெச 2:15). இவ்விளக்கத்தின் அடையாளங்கள் லூக் 24:19-இலும் இயேசுவை இறுதிக்கால இறைவாக்கினர் எனக் கருதிய பதித யூதக் கிறிஸ்துவத்திலும் காணப்படுகின்றன. எல்லாக் காலத்திலும் அவமானத்தின் பாதையில் கடவுளால் நடத்திச் செல்லப்பட்டும், தங்களது மரணத்தால் கடவுள் முன்னிலையில் பரிகாரம் புரிந்தும் (4 மக் 6:29) வாழ்ந்த இஸ்ராயேலின் துன்புறும் நேர்மையாளர்களில் ஒருவராகவும் சிலுவையில் அறையப்பட்டவர் காணப்படலாம். உண்மையாகவே கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய இவ்வித விளக்கம் ஆதி சமுதாயத்திலும் இருந்தது. பழைய பாரம்பரியங்களில் அவரது துன்பப்பாதையின் காரணமாய் அவர் ''நீதியுள்ளவர்'' எனப்படுகிறார் (அ.ப. 3:14; 7:52; 22:14; 1 பேதுரு 3:18). நேர்மையாளரின் துன்பங்களைக் கூறும் பழைய ஏற்பாட்டுச் சங்கீதங்களுடன் பாடுகளின் வர்ணனை கொண்டுள்ள உறுதியான இணைப்பு இதனையே குறிப்பிடுகின்றது. இறுதியாகப் பொறுப்புள்ள யூதத் தலைவர்கள்-அவரது இரத்தத்தில் சாட்சியம் கூறும் தீவிரவாதியைப்போன்று, நாட்டு நன்மைக்காக அவர் கொலை செய்யப்பட்டார் என அவரது சீடர்கள் அவரை வணங்குவர்-என்னும் காரணத்திற்காகப் பயந்தனர் (மத் 27:64). எனினும், இந்த நிகழ்ச்சிக்குப்பின் சீடர்கள் நடந்துகொண்ட விதமும் (மாற் 14:50 = மத் 26:56; மாற் 14:66இணை) கலிலேயாவில் அவர்கள் ஓரளவு சிதறிப்போனதும் (மாற் 14:28; 16:7) இயேசுவின் மரணத்திற்குப்பிறகு அவர்கள் முதலில் எந்த உதவியுமின்றி நின்றனர் என்பதைக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து இயேசுவின் வாழ்நாளில், மெசியாவைப்பற்றிய தீவிரவாதிகளின் பொய்யான கருத்துக்களை அவரைப் பின்பற்றுகிறவர்களிடமிருந்து நீக்க முடியவில்லை என்பது தெரிகிறது.

6. உயிர்ப்பின் நோக்கில் விளக்கம்:- அ. மீட்பு வரலாற்றின் மையம்:- உயிர்த்தவரின் காட்சிகள் மட்டுமே இயேசுவின் மரணம் பற்றிய கிறிஸ்தவ விளக்கத்திற்கு வழிதிறந்தன. நிகழ்ச்சியுடன் வளர்ந்த சிந்தனையானது முழுவதும் அனுபவத்திலிருந்து மட்டுமே ஆரம்பித்தது. வேறு வழியில்லை என்பதை நாம் அழுத்திக்கூறவேண்டும். மாட்சிமைப்படுத்தப்பட்ட ஆண்டவரெனத் தமது சமூகத்தைத் தெளிவாக நடத்திச் செல்லும் உயிர்த்து வாழ்கின்ற இயேசு பின்னோக்கிப் பார்க்கும்போது தனது மரணத்தைப் புதிய ஒளியில் அமைக்கிறார். கடவுள் சிலுவையில் அறையப்பட்டவருடன் வெளிப்படையாகச் சார்ந்து நிற்கிறார் (அ.ப. 2:24; 3:15; 4:10; 5:31). இதன் விளைவாக, இயேசுவின் மரணம் கடவுளின் மீட்பு வரலாற்றில் ஒரு செயலாகக் கருதப்படவேண்டும். முதல் கிறிஸ்தவர்களின் சிந்தனையில் உயிர்ப்பின் மகிழ்ச்சி முழுவதும் ஆதிக்கம் செலுத்தியது என்பது உண்மையானது. இது ஒரு சார்பான கூற்றே. ஏனெனில் இயேசுவின் மரணத்தைப் புரிந்துகொள்வதிலேயே உயிர்ப்பின் விசுவாசம் விளைவை ஏற்படுத்தியது. மீட்பு வரலாற்றின் மையமாக இயேசுவின் மரணம் அமைந்திருந்ததை, ஆதிக்கிறிஸ்தவர்கள் இம்முறையில்தான் தொடக்கமுதல் புரிந்து கொண்டனர். பவுல் முதலில் இதை வலியுறுத்தவில்லை. இயேசுவின் இறப்பு மற்றும் அதன் மீட்புப் பொருள் பற்றிய இறையியல் சிந்தனைக்குப் புரிந்துகொள்ளக்கூடிய விளக்கத்தை முதலில் அளித்தவர் பவுல் என்பது உண்மையே. அவருக்குச் ''சிலுவை என்ற சொல்'' கிறிஸ்தவப்போதனை முழுவதையும் உணர்த்தும் கலைச்சொல்லாகும் (1 கொரி 1:18). ஆயினும் இதே கருத்து, ஒத்தமை நற்செய்திகளிலும் ஏற்கெனவே காணப்படுகிறது. ஆதியிலிருந்தே சிலுவையானது குறிக்கோளும் உச்சநிலையுமாக இருந்தது (மாற் 3:6; மத் 1:21). யோவான் குறிப்பிடும், இயேசுவின் வாழ்வு நோக்கிச் செல்லும் 'நேரம்' என்பது (யோவா 2:4; 7:6; 8:20; 12:23; 13:1; 17:1) சிலுவையின் நேரத்தை மட்டுமே குறிப்பிடும்.

ஆ) பழைய ஏற்பாடு நிறைவேறுதல்:- லூக் 24:25.44தொ-இல் உயிர்த்த ஆண்டவர் பழைய ஏற்பாட்டைச் சுட்டிக்காட்டி, தமது மரணத்தின் பொருளை அறியுமாறு சீடர்களின் கண்களைத் திறக்கின்றார். ஆதிக் கிறிஸ்தவ சமுதாயத்தில் இயேசுவின் இறப்பை விளக்கப் பழைய ஏற்பாடு பெரிதும் உதவியது என்பது உறுதியாகும். இறைவாக்கு வரலாறு எனப்புரிந்துகொள்ளப்படும் பழைய ஏற்பாட்டு வரலாறு (உரோ 15:4; 1 கொரி 10:6.11), இயேசுவின் மரணத்தைப் புரிந்துகொள்ளத் தேவையான கோட்பாடுகளை அளிக்கின்றது. அவர் கண்டிப்பாய் இறக்கவேண்டும் என்பது பழைய வாக்குறுதிகள் இறுதிக்காலத்தில் நிறைவேறும் என்ற உறுதியை அடிப்படையாகக் கொண்டதாகும் (மத் 26:31; லூக் 22:37; 24:7.26-27.44-45; யோவா 3:14). தொடக்க காலச்சமூகத்தின் இத்தகைய இறையியல் திடீரென்று தோன்றியதன்று. இயேசு மண்ணில் இருந்தபோதே தமது மரணத்தைப் பழைய ஏற்பாட்டின் பின்னணியில் விளக்குகிறார். உயிர்ப்புக்குப் பின் வந்த சமூகம் அவருடைய சிந்தனையோடு தன்னையே நேரடியாகத் தொடர்புபடுத்திக்கொள்ள முடிந்தது. யோவான் நற்செய்தியின்படி சீடர்களின் "நினைவுகூர்தல்" இயேசுவினுடைய போதனைகளின் பொருளை அவர்களுக்கு உணர்த்துகிறது (யோவா 12:16). அவர்களுக்குள் உள்ள ஆவியினால் அது அவர்களுக்கு உணர்த்தப்படுகிறது (யோவா 14:26; 15:25-26). இயேசுவின் மரணத்தைப்பற்றிய ஆதிக்கிறிஸ்தவரின் இரட்டை அடிப்படையை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்: பழைய ஏற்பாடு மற்றும் உலகில் வாழ்ந்த இயேசுவின் போதனையின்படி அவரே பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்தினார். "துன்புறும் ஊழியன்" என்னும் சொற்றொடரின்படி, ஆதிக்கிறிஸ்தவ விளக்கங்களைப் பொருத்தமட்டும் இது உண்மையாகும் (அ.ப. 3:13.26; 4:25.30; 8:26). இவை பேதுருவின் சமூகங்களில் இருந்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் மரணத்தை, எச 53-இல் உள்ள பழைய ஏற்பாட்டு "கடவுள்தம் ஊழியனின் மீட்பச் செயல்களின் நிறைவை" ஆதிக்கிறிஸ்தவ சமூகம் உணரும்போது இதில் இயேசுவினுடைய விளக்கத்தையே அச்சமூகம் பின்பற்றுகிறது.

இ) பாவத்திற்குப் பரிகாரம்:- சிலுவையில் இறந்த மனுமகன், இறை ஊழியனின் அலுவலை நிறைவேற்றிப் பாவங்களுக்கும் பரிகாரம் புரிகிறார் (மாற் 10:45) என இயேசுவின் மரணத்தின் உறுதியான பொருளை ஏற்றுக்கொள்கின்றனர். இதில் இயேசுவின் கருத்திலே பங்குகொள்கின்றனர். பாவத்தின் காரணமாகவே 'மீட்பின் வரலாறு அவசியமாகிறது. ஆகவே இயேசு பாவங்களுக்குப் பரிகாரம் செய்கிறார். பாவத்திற்கான இயேசுவின் மரணத்தை ஆதிக்கிறிஸ்தவரின் இறையியல் சிந்தனையுடன் முதலில் இணைத்தவர் பவுல் அல்லர்; பண்டைய சமுதாய போதனை 1 கொரி 15:3-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக இறைவாக்குகளின்படி மரித்தார் (அ.ப. 10:43). இக்கோட்பாட்டில் இந்தக் குறுகிய வாய்பாட்டில் ஆதிக்கிறிஸ்தவ சிந்தனையின் மற்றொரு அடிப்படை வெளிப்படுகிறது. பாவத்திற்கான இயேசுவின் பரிகார மரணத்தில் விசுவாசம் இறைவாக்குகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எச 53-ஐ நினைவுகூறும் 1 கொரி 15:3-இல் உள்ள "பாவங்களுக்காக" என்ற சொல், இயேசுவின் மரணத்தைப் பரிகாரத் துன்பமாக விளக்குவதற்கு முக்கியமான சொல்லாகும்; இச்சொல் ஆதிக் கிறிஸ்தவ போதனைகள் அனைத்திலும் உள்ள முக்கிய சொல்லாகவும் காணப்படுகிறது. இயேசுவின் இறுதி உணவினை அடிப்படையாகக் கொண்டு ஆதிக் கிறிஸ்தவ நற்கருணை வழிபாட்டில் இச்சொல் ஏற்கெனவே வருகிறது. ["உங்களுக்காக" (1 கொரி 11:24; லூக் 22:19) "பலருக்காக" (மாற் 14:24; மத் 26:28)]. பின்னர், இது சிறப்பாகப் பவுலின் திருமுகங்களிலும் (உரோ 4:25; 5:8; 8:34; 2 கொரி 5:14-15.21; கலா 1:4; 2:20; 3:13; எபே 5:2; 1 தெச 5:10), மேய்ப்புப்பணி மடல்களிலும் (திமோ 2:6; தீத் 2:14), பொதுத் திருமுகங்களிலும் (1 பேதுரு 2:21; 3:18), மற்றும், யோவானின் நூல்களிலும் (யோவா 10:11; 11:50;

15:13; 1 யோவா 2:2; 3:16; 4:10) வருகிறது. பழைய ஏற்பாடும் மற்றும் யூதச் சொற்களும் கருத்துக்களும், உலகின் பாவங்களுக்குப் பரிகாரமாக இயேசுவின் மரணத்திற்கு அளிக்கப்படும் விளக்கத்திற்கு இயேசுவின் மரணத்தைப் பொருத்தமட்டும் கடவுளின் முன் பாவியின் நிலை அடிப்படையில் மாற்றியமைக்கப்படுவதாகிய சட்டச்செயலை நீதி என்ற சொல் அதன் குறுகிய பொருளில் வலியுறுத்துகிறது. இங்கு இயேசுவின் மரணத்தை ''விடுதலைச் செயலாக'' விளக்கம் அளிப்பது (உரோ 3:24-25; 1 கொரி 6:20; 7:23; 1 திமோ 2:6; 1 பேதுரு 1:18; திருவெளி 1:5; மாற் 10:45) சிலுவை நிகழ்ச்சியில் அடிப்படையைக் கொண்டுள்ள பவுலின் ''ஏற்புடைமை'' பற்றிய கருத்துக்கள் அனைத்தும் இங்கு இடம்பெறுகின்றன (உரோ 3:24-25; 4:24-25; 5:9-10; 2 கொரி 5:21). பழைய ஏற்பாட்டுப் பலிகள் பற்றிய சொற்களில் பரிகாரச் சட்டச் செயலை விவரிக்கும் வழிபாட்டுச் சொற்களும் இக்கருத்தோடு நெருங்கிய தொடர்புடையனவாகும். இயேசுவின் மரணமானது பாவத்திற்கான பரிகாரப்பலியாகும் (உரோ 3:25); பாஸ்காப் பலியாகும் (1 கொரி 5:7); அல்லது பொதுவான பலியாகும் (எபே 5:2). குறிப்பாக, எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் இதனைப் பெரிதும் விவரிக்கிறது. இயேசு இங்கு பலியிடுபவராகவும் பலியாகவும் உள்ளார்; அவரது பலி ஒரே தடவையில் மதிப்புடையதாகும் (எபி 7:27; 9:12.25; 10:10).

பாவத்திற்குப் பரிகாரமாகப் பலியிடுவது என்னும் எண்ணமே, செம்மறியின் வடிவத்திற்கும் அடிப்படையாக உள்ளது. இது ஏச 53:7-ஐச் சுட்டுகிறது (அ.ப. 8:32; 1 பேதுரு 1:19). யோவானின் நூல்களில் இது பெரும் பங்கு வகிக்கிறது. ஆலயத்தில் பாஸ்காச் செம்மறிகள் கொல்லப்படும் நேரத்தில் இயேசு மரணமடைகிறார் (யோவா 19:14); உலகின் பாவங்களைச் சுமக்கும் உண்மையான பாஸ்காச் செம்மறி அவரே (1:29; 19:36). திருவெளிப்பாட்டில் சிலுவையில் அறையப்பட்டவர் செம்மறி என்றே மீண்டும் மீண்டும் கூறப்படுகிறார்.

பாவங்களைப் போக்க ஊற்றப்படும் கிறிஸ்துவின் இரத்தத்தைப்பற்றிப் பேசுவதன் ஆரம்பமே, பழைய ஏற்பாட்டுப் பலி பற்றிய மொழியாய்க் காணப்படுகிறது (அ.ப. 20:28; உரோ 3:25; 5:9; எபே 1:7; 2:13; கொலோ 1:20; 1 பேதுரு 1:2.19; 1 யோவா 1:7; திருவெளி 1:5). பரிகாரமாக இயேசுவின் மரணத்தை விளக்குவது, இங்குப் புலன் சார்ந்த முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இது பிற்காலத்தில் கிறிஸ்துவுடன் கொள்ளும் பல்வகையான மறைபொருளாக உறவுகளுக்கு வலிமையான தாக்கமாக அமையும். பாரம்பரியப்படி இயேசுவும் கடைசி இராவுணவில் தமது மரணத்தைப் பற்றிக் கூறும்போது, கிண்ணத்தைக் கையில் ஏந்தி இதே வார்த்தைகளை உச்சரிக்கின்றார் (மாற் 14:24 - ''உடன்படிக்கையின் இரத்தம்''; யாத் 24:8-ஐ தழுவியது). பவுல் இயேசுவின் மரணத்தில் நற்கருணையினை இம்முறையில் நிலைப்படுத்துவதும் சரியானதே (1 கொரி 10:16; 11:23 தொ); அனேகமாய், ஆதிக்கிறிஸ்தவனுடைய ஆண்டவரின் இராவுணவில் காணப்படும் மூடத்தனமான, கொள்கை வெறியுடைய பழக்கங்களிலிருந்து காக்கவே பவுல் இவ்வாறு செய்திருக்கலாம். இவ்வாறு இயேசு புரிந்து கொண்டதையே அடிப்படையாகக்கொண்டு அவர் ஆதிக்கிறிஸ்தவ ஞானஸ்நானத்தினைச் சிலுவையுடன் இணைத்துக் கூறுகிறார் (உரோ 6:4).

ஈ) அண்ட நிகழ்ச்சி:- பாஸ்காவிற்குப் பிறகு வந்த சமுதாயம் மாட்சிமைப்படுத்தப்பட்ட ஆண்டவரை நோக்கிச் செபித்து, இயேசுவின் மரணத்திற்கு அளித்த விளக்கத்தில் மற்றொரு பருமனைக்கண்டது (1 கொரி 16:22; திருவெளி 22:20; 2 கொரி 12:8). அண்ட நிகழ்ச்சியின் தீர்மானமான செயல் இந்த மரணமே. சிலுவை, கடவுளுக்கு எதிரான சக்திகளின் மீதான வெற்றியினைக் குறிக்கிறது. அவற்றுடனான போராட்டத்தை இயேசு ஏற்கெனவே தொடங்கிவிட்டார் (மாற் 1:12 இணை; 1:34). அவரது வல்லமைமிக்க செயல்களான பேயோட்டுதல், குணப்படுத்துதல், இறந்தோரை உயிர்ப்பித்தல்

போன்றவை சிலுவையால் கொண்ட வெற்றியின் முன் அடையாளங்கள் என ஆதிச் சமூகத்தினரால் கருதப்பட்டது. சங் 109-இலிருந்து கூறப்படும் பல்வேறு எடுத்துக் காட்டுகளில் காணப்படும் இவ்வெற்றியானது (1 கொரி 15:25; எபி 10:13; அ.ப. 2:34; மாற் 12:36; மத் 22:44; லூக் 20:42), விசுவாச அறிக்கையில் முக்கிய இடத்தினை வகிப்பதாகத் தோன்றுகிறது (பிலி 2:10; 1 பேதுரு 3:22; மாற் 16:19). பிலி 2:6 தொ.-இல் உள்ள அறிக்கை சங்கீதத்தில் இயேசுவின் வெற்றிக்கு அவரது மரணத்தை நேரடிக் காரணமாகக் காட்டுகிறது. ''சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படியலானார். ஆதலால்தான் கடவுள் அவரை எல்லாருக்கும் மேலாய் உயர்த்தினார்''.

அண்டம் செயல்படும் முறையில் இயேசுவின் மரணம் ஒரு திருப்புமுனையாக உள்ளது. இயேசுவின் மரணத்தினால் இயற்கையே பாதிக்கப்பட்டதாக ஒத்தமை நற்செய்திகளின் விவரிப்புகள் சுட்டுகின்றன (மாற் 15:33 இணை; மத் 27:5); இதற்குக் கொலோ 1:20 இறையியல் விளக்கம் அளிக்கின்றது: இயேசுவின் சிலுவையின் இரத்தத்தினால், உலகம் கடவுளோடு ஒப்புரவாகிறது. இயேசுவின் மரணத்தினுடைய மீட்பு விளைவுகளிலிருந்து எதுவுமே விலக்கப்படவில்லை. பொதுவான ஆதிக்கிறிஸ்தவ நோக்கின்படி சிலுவையானது மீட்பின் வரலாறு ஒன்றிலிருந்து பலவற்றிற்குச் செல்லவும், குறுகிய பயனுடைமையிலிருந்து அனைத்திற்கும் பயனுடையதாக மாறவும் வழியை வகுக்கிறது (மாற் 10:45;மத் 20:28; மாற் 14:24 இணை). சிலுவை அனைத்திற்கும் உரிய நிலைக்குப் பவுல் மிகவும் ஆய்வுடைய அடிப்படை அளிக்கிறார். பாவத்தின் அனைத்தையும் உள்ளடக்கும் தன்மையின் நோக்கில் அனைவரும் வீழ்ந்துவிட்டனர் (உரோ 3:6.29; 1 கொரி 6:2; 11:32). அதற்கேற்றவாறு கிறிஸ்துவும் அனைவருக்காகவும் இறந்தார் (உரோ 8:32; 2 கொரி 5:14). முன்னர் மதிப்புடைய வரையறைகள் இப்போது நீக்கப்படவேண்டும்; யூதரும் புறவினத்தாரும் மீட்பில் பங்குபெறுகின்றனர் (உரோ 11:32; கலா 3:27; லூக் 24:47). பாவம் மற்றும் மரணத்தின் பக்கமுள்ள சட்டத்தின் முடிவு கிறிஸ்துவே (உரோ 7:5-6; 10:4). உரோ 5:2 தொ-இல் காணப்படும் கூற்று இங்கு முக்கியமாகப் பொருள்பொதிந்ததாகும். அனைவரும் கடவுளின் தண்டனைக்கு உள்ளாவதுபோல் இரண்டாவது ஆதாமாகிய கிறிஸ்துவில் அனைவரும், கடவுளின் மீட்புச்சித்தத்திற்குள் உள்ளடங்குகின்றனர் (உரோ 5:15).

உ) மரணத்தின் மீது வெற்றி:- கீழ்ப்படுத்தப்பட்ட சக்திகளின் மரணம் முக்கியமாக உள்ளடங்குகிறது (உரோ 8:38). கிறிஸ்து மரணத்தின் வல்லமையை அழித்துவிட்டார் என்பது புதிய ஏற்பாட்டின் மைய உறுதிப்பாடாகும். அவரது மரணமானது உருவகப்படுத்தப்பட்ட சாவின் வல்லமைக்கு எதிராகவும் (அ.ப. 2:24; 1 கொரி 15:45-46; திருவெளி 6:8), மற்றும் வல்லமை இழந்த (2 திமோ 1:10) ''இறுதிப்பகைவனுக்கு'' எதிராகவும் (1 கொரி 15:26; திருவெளி 20:14), வெற்றிகரமான போரட்டமாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. உடலின் பிடியினின்று மனதை விடுவிக்கும் நண்பன் என மரணத்தைப்பற்றிய கருத்து புதிய ஏற்பாட்டில் எங்கும் இல்லை. பாவத்தினுடைய பயங்கர விளைவு மரணம் என்பதன் மூலம் இக்கருத்து முற்றிலும் நீக்கப்படுகிறது. ஏற்னெவே யூதத்துவத்திலும் பவுலிலும் (உரோ 1:32; 6:7.36; யாக் 1:15; யோவா 8:24) இதைக்காணலாம். இயேசுவின் பரிகார மரணத்திற்கும் மரணத்தின் மீதான வெற்றிக்கும் இடையிலான இணைப்பு இங்கு ஏற்படுகிறது. பாவத்தின் விளைவு மரணம் எனில், மரணத்தின் வல்லமையை அழிக்கப் பாவத்திற்குப் பரிகாரம் தேவை. பாவசாபத்தின் அமைப்பிற்குள் இயேசு புகுவது அவரது வெற்றியின் முன் சுட்டலாகும் (2 கொரி 5:21; கலா 3:13-14; உரோ 8:3). பாவம் வெற்றிகொள்ளப்பட்ட பின் மரணம் தனது வலிமையின் அடிப்படையை இழந்துவிட்டது (உரோ 6:7). மனுமகன் இப்போதுமுதல் மரணம் மற்றும் பாதாளத்தின் திறவுகோல்களைத் தம்மிடம் கொண்டுள்ளார் (திருவெளி 1:18).

இயேசுவின் மரணத்தின்மீதான வெற்றியை நோக்கி அனைத்து விசுவாசிகளும் ஈர்க்கப்படுகின்றனர்; துஞ்சினோரின் முதற்கனி (1 கொரி 15:20)-யின் வெற்றிக்குப்பின் மரணம் தன் கொடுக்கை இழந்துவிட்டது (1 கொரி 15:55). இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்குப்பின், உலகிலேயே விசுவாசிகளுக்கு ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்ட ''முடிவில்லா வாழ்வு'' பற்றி யோவான் வலிமையாகப் பேசலாம் (யோவா 3:36; 5:24; 6:47). மையமீட்பு நிகழ்ச்சியில் கிறிஸ்தவரின் பங்கை விளக்குவதற்காக, பவுல் 'கிறிஸ்துவோடு இறந்து எழும்' உருவத்தைத் திருமுழுக்கிற்குப் பயன்படுத்துகிறார் (உரோ 6:3; கலா 6:14; கொலோ 2:20; 2 திமோ 2:11). முதல் மற்றும் இரண்டாம் ஆதாமைப்பற்றிய கருத்தும் இதில் பங்குபெறுகிறது. ஏனெனில், பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை மற்றும் அதன் நிறைவு ஆகியவற்றின் மீட்பு நிகழ்ச்சியோடு மரணம் பற்றிய தம் விளக்கத்தை நிலைப்படுத்த பவுல் இக்கருத்தைப் பயன்படுத்துகிறார் (1 கொரி 15:45).

ஊ) துன்பத்தில் சீடனாயிருக்க அழைப்பு:- இயேசு கிறிஸ்துவின் பரிகார மரணத்தை விசுவசிக்கும் கிறிஸ்தவன், புதிய ஏற்பாட்டில் இயேசுவைப் பின்செல்ல தான் அழைக்கப்படுவதைக் காண்கிறான். சீடனாயிருக்க இந்த அழைப்பு என்பது முதலில் துன்பத்தில் சீடனாய் இருப்பதாகும். இயேசு ஏற்கெனவே தம்முடன் துன்புறவும், துன்புறுத்தப்படவும், தம் சீடர்களைத் தயாரித்திருந்தார். தன்னுடைய சிலுவையைச் சுமப்பது என்பது (மாற் 8;34-35இணை; மத் 10:38; யோவா 12:25-26) தனது குருவைப்போலவே சீடனும் மரணத்தை முடிவாக ஏற்கவேண்டும் (மாற் 10:38-39; லூக் 14:26-27; யோவா 15:20) என்று பொருள்படும். ஆதித்திருச்சபை, கிறிஸ்துவின் பெயருக்காகத் தனது வாழ்வை அளிக்கும் வேதசாட்சி மட்டுமே (மாற் 13:13; அ.ப. 15:26; 21:13) இயேசுவின் சீடராக இருக்கமுடியும் என்று ஒருதலையாகக் கருதியது. ஒருவரது இரத்தத்தினால் சாட்சியம் பகர்பவரை மட்டுமே 'சாட்சி' என்று கருதும்போக்கு, புதிய ஏற்பாட்டில் ஏற்கெனவே காணப்படுகிறது (அ.ப. 22:20; திருவெளி 2:13; 12:11). இயேசுவின் மரணம், சீடர்களின் மரணத்திற்கு விவரங்களில்கூட முன் அடையாளமும் மாதிரியுமாகும். அ.ப. 6-7-இல் உள்ள ஸ்தேவானின் மரணம் பாடுகளின் வர்ணனையினுடைய தாக்கத்தை வெளிப்படுத்துகிறது; ஆண்டவரின் துன்பங்களைப் போலவே சீடரின் துன்பங்களையும் அமைப்பது, பிற பகுதிகளிலும் காணப்படுகிறது (லூக் 23:26-ஐ மாற் 15:21-ஓடு ஒப்பிடுக; மேலும் மத் 10:17; யோவா 15:18-19; அ.ப. 21:13; 2 கொரி 12:7-8).

கிறிஸ்துவின் துன்பங்களைத் தனது உடலில் காட்டுவதாகப் பவுல் கூறும் முறையானது (1 கொரி 15:31; 2 கொரி 4:10; கலா 6:17) ஒருவர் தம் சிலுவையைச் சுமப்பது கிறிஸ்துவனுக்குப் பரந்த பொருளைக் கொண்டுள்ளதாகும் என்பது உறுதி. அவனது முழுவாழ்வும் துன்பத்தில் சீடனாய் இருப்பதாகும். தினசரி சிலுவையைச் சுமப்பது என்னும் லூக்காவின் கருத்தும் (லூக் 9:23) இதே எண்ணத்தில் வழிநடத்தப்படுகிறது (அ.ப. 9:16; 1 பேதுரு 4:13; 1 தெச 1:6). தாழ்ச்சி (பிலி 2:5தொ), சுயநலமின்மை (உரோ 15:3), தொடர்ந்து செயலாற்றல் (எபி 12:1தொ), பொறுமை (1 பேதுரு 12:20), அன்பு (யோவா 15:13) ஆகியவற்றில் பின்பற்ற வேண்டிய குறிக்கோள் பற்றிய கிறிஸ்தவ விளக்கம் இங்கு ஆரம்பமாகிறது. பிற்காலத் துறவறத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ''துன்பத்தின் மறை அனுபவம்'' பற்றிய பவுலின் அறவுரைகளும் கிறிஸ்துவின் மரணம் பற்றிய கோட்பாட்டிலிருந்தே தோன்றுகின்றது. உ-ம். மாமிசத்தைச் சாவிற்கு உட்படுத்த அழைப்பு (உரோ 8:13), பழைய இயல்பைச் சிலுவையில் அறைதல் (உரோ 6:6; கலா 5:24; கொலோ 3:5), துன்ப நேரங்களில் கிறிஸ்துவின் மரணம் பற்றிய சிந்தனை என்பன எல்லாக் காலத்துக் கிறிஸ்தவர்களுக்கும் ஆறுதலாய் உள்ளது; சீடன் குருவுக்கு மேற்பட்டவன் அல்லன், ஊழியன் தலைவனுக்கு மேம்பட்டவன் அல்லன் (மத் 10:24; லூக் 6:40; யோவா 13:16).

கிறிஸ்துவின் மனிதத்தன்மை (HUMANITY OF CHRIST)

புதிய ஏற்பாட்டில் வரும் இக்கருத்து இறைமகன் இயேசுவின் உண்மையான மனிதத்தன்மையை வலியுறுத்துகிறது. நற்செய்திகளில் முதலாவதாக எழுதப்பட்ட மாற்குவின் நற்செய்தி இயேசுவின் மனித பலவீனத்தை அழகாகச் சித்தரிக்கிறது. அவருடைய கருத்துப்படி இயேசுவின் 'அறிவு வரைமுறைக்குட்பட்டது (லூக் 13:32). இயேசுவே தன்னை முழுமையாக நல்லவரென்று ஏற்பதாகத் தெரியவில்லை (10:18). 15:34-இல் வரும் கூற்று அவரது உண்மையான மனிதத்தன்மையை எடுத்துக்கூறுவதாகத் தெரிகிறது. லூக்கா இயேசுவின் மனித வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றார் (லூக் 2:52). பொதுவாக நற்செய்திகள் இயேசுவின் மனிதச் செயல்களை எடுத்துரைக்கின்றன. மக்கள் இயேசுவை போதகரெனவும், இறைவாக்கினர் எனவும் அறிந்திருந்தனர்.

கிறிஸ்து இயலை அதிகம் விரிவாக்கியுள்ள புதிய ஏற்பாட்டு நூலான யோவானின் நற்செய்தி, இயேசுவைக் களைப்படைந்தவராயும், தாகம் கொண்டவராயும் சித்தரிக்கிறது (யோவா 4:6-7; 19:28). இயேசுவின் விலா ஈட்டியால் குத்தப்பட்டு, உடனே இரத்தமும் நீரும் வெளிவந்தன என்ற விவரிப்பு, அவருடைய பாடுகள் வெறும் மாயையல்ல உண்மையானவை என்று காட்டுகிறது (19:34).

பவுல் ஒரு யூதக் குடும்பத்திலிருந்து இயேசுவின் மனிதத் தோற்றத்தையும் அவரிடம் காணப்பட்ட மனித வரையறைகளையும் வலியுறுத்துகிறார் (உரோ 9:5; 2 கொரி 13:4; கலா 4:4; பிலி 2:7-8).

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் இயேசு தனிப்பெரும் குரு என்றும், மக்களுடைய குறைபாடுகளைக் கண்டு இரக்கம் காட்டக் கூடியவர் என்றும், பாவம் தவிர மற்றவற்றில் எல்லாம் சோதனை, துன்பங்களுக்கு உட்பட்டவர் என்றும் (எபி 4:14; மத் 4:1-11 = லூக் 4:1-13), பாடுகளால் நிறைவுள்ளவர் ஆனார் 2:10) என்றும் மனித ஊனையும் இரத்தத்தையும் கொண்டிருந்தார் (2:14) என்றும், கடவுளிடம் பலத்த குரலெழுப்பி, கண்ணீர் சிந்தி, வேண்டுதல்களையும் மன்றாட்டுகளையும் ஒப்புக்கொடுத்தார் என்றும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்தணர்ந்தார் என்றும் வலியுறுத்துகிறது (5:7-8). மேய்ப்புப்பணித் திருமுகங்கள் இயேசுவை ''மனிதனான இயேசு கிறிஸ்து'' என்று குறிப்பிடுகின்றன (1 திமோ 2:5).

கிறிஸ்துவும் அப்காரும் (CHRIST AND ABGARUS)

காண்க. அப்கார் - கிறிஸ்துவின் திருமுகங்கள்.

கினிது (CNIDUS)

சிறிய ஆசியாவின் தென்மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு கிரேக்க நகரமாகும்.

கினிது பழங்காலத்தில் புகழ்பெற்ற ஒரு நகரமாக இருந்தது. தோரியன் கிரேக்கர்களால் இது குடியேற்ற நாடு ஆக்கப்பட்டது. இந்த இடம் வரலாற்றுக்குமுன் எகியன் பகுதியிலிருந்து மக்கள் வந்து குடியேறிய நிலப்பகுதியில் அமைந்து இருந்தது. கினிதின் நிலக்கூம்புப் பகுதி காரியா கடற்கரையின் தெற்கேஉள்ளது. இது மேற்கிலிருந்து கிழக்காக 64 கி.மீ. நீளம் கொண்டது. கிழக்கே சில கடற்கரைப் பகுதிகள் உள்ளன. இரண்டும் ஒரு நில இடுக்கால் பிரிக்கப்படுகிறது. ஆனால் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இந்தக் கினிதில் 2 துறைமுகங்கள், ஒழுங்காகக் கட்டப்பட்ட ஒரு நகரம், பல வழிபாட்டிடங்கள், 4-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த பெருமை வாய்ந்த கிரேக்கச் சிற்பங்கள் ஆகியவை இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறு பவுல் இலிஸியாவிலிருந்து பயணம் செய்கையில் கடற்காற்றால் துன்பப்பட்டாரோ அதேபோன்று ஓர் அனுபவம் யாராவது கினிது தீபகற்பத்தின் தெற்குக் கடலைத் தாண்டிப் பயணம் செய்தால் ஏற்படும்.

கினிது கோசுத் தீவுக்கு எதிராக உள்ளது. உரோமைக்குப் பவுலையும் மற்றக் கைதிக ளையும் சுமந்து சென்ற கப்பல் புயலை எதிர்கொண்டபோது ''கினிது நகர் எதிரே'' பயணம் செய்தது (அ.ப. 27:7).

கின்னத்தோய் (GINNETHOI)

நாடுகடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிவந்த ஒரு குரு (நெக 12:4). இவர் கின்னத்தோன்-2-ஆக இருக்கலாம்.

கின்னத்தோன் (GINNETHON - தோட்டக்கா ரன்)

1. எஸ்ராவின் கீழ் இஸ்ராயேலின் உடன் படிக்கை புதுப்பிக்கப்பட்டதற்குச் சாட்சி பகர்ந்தவர் (நெக 10:6).

2. யோயாக்கிம் காலத்தில் ஒரு குருக்கள் குடும்பங்களில் ஒன்றுக்குத் தலைவராக இருந்தவர் (நெக 12:16).

நெக 10:12-இல் வரும் பெயர்ப்பட்டியல் குலமுதியவர்களுடையது என்றால், ஒரு கின்னத்தோன்தான் இருக்க முடியும். சிலர் இவரைக் கின்னத்தோயோடு ஒன்றாக்குவர்.

கின்னரேத்து (CHINNERETH - யாழ்வகைக் கருவி)

1. கின்னரேத்து என்பது கலிலேயாக் கட லுக்கு (மத் 15:29) வழங்கப்பட்ட முற்காலப் பெயர் (எண் 34:11; யோசு 13:27). இது யோசு 12:3-இல் கின்னரோத்து என்றழைக்கப்படுகி றது. காண்க. கலிலேயாக்கடல்.

2. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத் தில் பென்அதாது என்பவன் பாசா அரசனின் காலத்தில் கைப்பற்றிய நெப்தலி நாட்டி லுள்ள ஒரு மாவட்டமாகும் (1 அர 15;20). புதிய ஏற்பாட்டில் இது கெனரேத்து என்ற ழைக்கப்படுகிறது (மத் 14:34).

3. இது நப்தலி நாட்டில் கட்டப்பட்ட ஒரு நகரமாகும் (யோசு 19:35). இது 3-ஆம் துத்துமோசு கைப்பற்றிய நகரங்களின் பட்டி யலில் குறிக்கப்படுகிறது. இது தேல்-ஏல்-ஒரேய்மே என்ற இடத்தில் அடையாளம் காட்டப்படுகிறது. இந்த நகரம் கலிலேயாக் கடலின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு குன்றின் மேல் காணப்படுகின்றது. இங்கு நடத்திய சிறு அகழ்வாய்வுகள் மூலம் இக் குன்றில் இடைவெண்கலக்காலம் முதல், முதல் இரும்புக்காலம் (சுமார் கி.மு. 2000-900) வரை மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இக்குன்றில் இடைக்கற்காலத்தைச் சேர்ந்த சில கலைப்பொருட்களும் கண்டுபிடிக்கப் பட்டன.

கின்னரோத்து (CHINNEROTH)

கின்னரேத்தின் மற்றொரு வடிவம் (யோசு 12:3). காண்க. கின்னரேத்து.

கீ

கீகோன் (GIHON - பீறிடுதல்) - ஆறு

ஏதேன் தோட்டத்தில் பாயும் நான்கு நதிகளில் இரண்டாவது (ஆதி 2:13). இது எத்தியோப்பியா நாடு முழுவதும் வளைந்து ஓடுகிறது. அறிஞர்சிலர் தியாலா அல்லது கெர்கா ஆறுகளாக அடையாளம் காட்ட முயன்றுள்ளனர். அனேகமாகக் கீகோன், யூப்பிரத்திசு நதியின் உபநதியாகவோ ஓடையாகவோ இருக்கலாம்.

கீகோன் (GIHON - பீறிடுதல்) - ஊற்று

கிதரோன் பள்ளத்தாக்கில் தாவீதின் நகருக்குக் கீழ்ப்புறத்தில் உள்ள ஓர் ஊற்று. எபூசியர்கள் கட்டிய தரையடிக் கால்வாய் ஒன்று நகரைக் கைப்பற்றத் தாவீதுக்கு உதவியது. இது பரிசுத்தமானதாகக் கருதப்பட்டது. ஆகவே சாலமோன் அரச அபிடேகம் பெற்ற போது இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது (1 அர 1:33.38.45).

அரசர்கள் ஆட்சிக்காலத்தில், கீகோனின் நீர் ஓர் குட்டையில் சேர்க்கப்பட்டுக் கால்வாய் வழியாக மற்றொரு குளத்திற்குக் கொண்டு சேர்க்கப்பட்டது. அது இக்காலப் பிர்கெத்து ஏல்-கமாராவாக இருக்கலாம். அங்கிருந்து அருகிலிருந்த பள்ளத்தாக்கில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. அசீரியர்கள் படையெடுத்தபோது அரசன் எசக்கியா அதன் ஓட்டத்தை மறித்துத், தரையடிச்சுரங்கப்பாதை வழியாக, திரோபேயேன் பள்ளத்தாக்கிலுள்ள சிலோவாம் குளத்திற்குத் தண்ணீரைக் கொண்டு சேர்த்தார். இக்குளம் பாதுகாப்பு அரணுக்குள் அமைந்திருந்தது (2 அர 20:20; 2 நாள் 32:30). இந்தச் சுரங்கப்பாதை 536 மீட்டர் நீளமான சிலோவாம் சுரங்கப்பாதையாகும். பிற்காலத்தில் மனாசே கீகோனின் மேற்கு முனை வரை நகர மதிலை விரிவாக்கினார் (2 நாள் 33:14).

இந்த ஊற்று, ஓர் இயற்கையான குகையிலிருந்து விட்டுவிட்டு நீரைப் பீறிட்டது. வறட்சியான காலத்தில் நாளொன்றுக்கு இரு முறையும் மழைக்காலத்தில் நான்கு, ஐந்து முறையும் நீரைப் பீறிட்டது. கீகோன் என்ற சொல்லின் சொல்லிலக்கணம் இச்செயலைச் சுட்டலாம்.

கீசி (KISHI)

கூசயா என்ற பெயரின் மற்றொரு வடிவம் (1 நாள் 6:44).

கீசு (KISH - வில்) - ஆள்

1. கீசு பென்யாமின் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் இஸ்ராயேலரின் முதல் அரசனான சவுல் என்பவரின் தந்தை ஆவார். 1 சாமு 9:1-இல் கீசு அபியேல் என்பவரின் மகன் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அனேகமாகக் கீசு 'நேர்' என்பவரின் மகனாகவும் கிபயோனிய எயியேலின் பேரனாகவும் இருக்கவேண்டும் (1 நாள் 8:29-33; 9:35-39). இவருக்குப் பல வேலையாட்களும், கழுதைகளும் இருந்ததாகவும், இவர் செல்வந்தர் என்றும் கூறப்படுகின்றது (1 சாமு 9:3). மிசுப்பாவில் அரசனைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சியில் மதிரியர் வம்சத்துக்குச் சீட்டு விழுந்தபோது இவர் அங்கு இருந்திருக்க வேண்டும். இக்குலத்திலிருந்துதான் சவுல் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1 சாமு 10:20-24). கீசு பென்யாமின் நாட்டில் உள்ள சேலாவில் புதைக்கப்பட்டார் என்பதைத் தவிர அவரது வாழ்க்கையைப் பற்றி வேறு எதுவும் குறிப்பிடப்படவில்லை. இங்குதான் சவுலும் யோனத்தானும் அடக்கம் செய்யப்பட்டனர் (2 சாமு 21:14).

2. கீசு பென்யாமின் குலத்தில் எயியேல், மாக்கர் ஆகியோரின் மகனாவார் (1 நாள் 8:30; 9:36). இவர் சவுலின் தந்தை அல்லர்.

3. கீசு மொராரி லேவியர் குடும்பத்தில் மகுலி என்பவரின் மகன் (1 நாள் 23:21). இவருடைய புதல்வர்கள், இவருடைய சகோதரரான எலயாசரின் பெண்களை

மணந்தனர் (23:22). கீசின் மகன் ஏரகுமேல் ஆவார் (24:29).

4. கீசு மொராரி லேவியர் குடும்பத்தில், அபிதியின் மகன். இவர் எசக்கியா அரசனின் ஆட்சியில் ஆலயத்தைத் தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார் (2 நாள் 29:12).

5. இவர் பென்யாமின் குலத்தைச் சேர்ந்தவர் எஸ்தரின் தந்தையின் சகோதரரான மோர்தெக்காயின் சகோதரர் (எஸ் 2:5). அறிஞர் சிலரின் கருத்துப்படி இவர்தாம் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவராவார்; மோர்தெக்காய் அல்லர் (2:6).

கிசோன் (KISHON - வளைந்த)

கிசோன் ஆறு இசிரியேல் பள்ளத்தாக்கு அல்லது எசுதிரலோன் சமவெளியின் மேற்குப்பகுதியிலும், ஆக்கோ சமவெளியிலும் பாய்கிறது (நீதி 4:7.13; சங் 83:9). அராபிய மொழியில் நாகர், ஏல்-முக்கட்டா என்று அழைக்கப்படுபவை இதன் முக்கிய ஊற்றுக்களாகும். மழைக்காலத்தில் மட்டும் நீரோடும் பல ஓடைகள் இந்நதியோடு கலக்கின்றன. இசிரியேல் பள்ளத்தாக்கில் சிறு ஓடையாகவே உள்ள கிசோன், சமவெளியின் மேற்கு எல்லையில் 9 மீட்டர் அகலமும் 1 அல்லது 1½ மீட்டர் ஆழமும் கொண்டதாக விளங்குகிறது. இது ஒரு சிற்றாறாக இருந்தாலும் மழைக் காலத்தில் இதன் படுகைகள் சதுசதுப்பாக இருப்பதால் சிறந்த அரணாகவும் உள்ளது. இது சமவெளியைக் கடக்கும் பகுதியில் சுமார் 90 மீட்டர் உயரத்திலிருந்து இறங்கிச் செல்கிறது. சமவெளியின் நடுப்பகுதி சற்று உயரமாக இருப்பதால் வடக்கு நோக்கி ஓடி, இசிரியேல் பள்ளத்தாக்கைக் கடந்து, ஆக்கோ சமவெளியில் நுழைந்து, கர்மேல் மலையடிவாரத்தில் வடக்கு நோக்கி ஓடி, கரையிலுள்ள மணற்குன்றுகளுக்குத் தெற்காக மத்திய தரைக்கடலில் கலக்கிறது. இதன் நீளம் சுமார் 37 கி.மீ. ஆகும். ஆக்கோ சமவெளியில் பல துணை ஆறுகள் இதனுடன் கலக்கின்றன. அவை கலிலேயாவின் தென்மேற்கிலுள்ள வாடி ஏல்-மெலக்கு, ஏல்-கர்பாசு ஆகியவற்றின் வடக்கில் உள்ள ஊற்றுகள் ஆகும். கிசோன் ஆறு இச்சமவெளியில் சுமார் 19 மீட்டர் அகலமுடையதாக உள்ளது. கரோசத்தில் தங்கியிருந்த கானானியரின் படைத்தலைவனான சிசரா என்பவர், பாராக்கு, தெபோரா ஆகியவர்களுடன் போரிடப் படைகளை இங்குதான் கொண்டு வந்தார் (நீதி 4:7.13). போர் நடந்த இடம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தெபோராவின் நன்றிப்பாடலில் மெகிதோ நீர்த்துறை அருகே தானாக்கில் போர் நடந்ததாகக் கூறப்படுகிறது (நீதி 5:17). இப்போர் மழைக்காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். சங்கீத ஆசிரியர், அவருடைய காலத்தில் இஸ்ராயேலின் எதிரிகளை வெல்ல இறைவனை வேண்டும்போது இவ் வெற்றியைக் கூறுகின்றார் (சங் 83:9). கர்மேல் மலையில் எலியாவுக்கும், பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் நடந்த சமயப் போராட்டத்தில், அவர்கள் தோற்றபோது எலியா அவர்களைக் கிசோன் ஆற்றங்கரையில் கொன்றார் (1 அர 18:40).

கிதோன் (CHIDON - அம்பு)

1 நாள் 13:9-இன் படி உசா என்பவன் உடன்படிக்கைப் பேழையினைத் தொட்டதற்காகக் கொல்லப்பட்ட சூடடிக்கும் களத்தின் பெயர். இது இடத்தின் பெயரா அல்லது உரிமையாளரின் பெயரா என்பது சுட்டிக்காட்டப்படவில்லை. இதற்கு இணையான பகுதி 2 சாமு 6:6-இல் 'நாக்கோனின் களம்' என்று கூறப்படுகின்றது. இது ஓபேது-ஏதோமின் அருகில் எருசலேமின் மேற்குப் பகுதியில் இருந்திருக்கவேண்டும்.

கியேல் (HIEL - இறைவன் வாழ்கிறார்)

ஆகாபு காலத்தில் எரிகோ நகரைத் திரும்பக் கட்டிய பெத்தேல் ஊரைச் சேர்ந்தவர் (1 அர 16:34). அவர் தன் புதல்வர்களை இழந்ததற்குக் காரணம் யோசுவாவின் பழைய சாப நிறைவேற்றமே என்று விளக்கப்படுகிறது. யோசுவா எரிகோவை அழித்த போது யாராவது திரும்பக்கட்டினால் அழிந்து போவார்கள் என்று சாபமிட்டார் என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிறது (யோசு 6:26).

நூறாண்டுகளுக்குப் பிறகு ஆகாபின் காலத்தில் ஈயேல் எரிகோவைத் திரும்பக் கட்டும் மோசமான கடும் வேலையை எடுத்துச் செய்தார். அந்தச் சாபத்தை மீறினார். புதுப்பிக்கும் வேலையைச் செய்து கொண்டிருந்தபோது ஈயேல் தன் தலைமகன் அபிராமையும் கடைசிப் புதல்வன் செகூபையும் இழந்து தவித்தார். இயற்கையான காரணங்களால் அவர்களுடைய சாவுகள் நிகழ்ந்திருக்கலாம் அல்லது அடிக்கல் நடும்போது பலி கொடுத்திருக்கலாம். வரலாற்று ஆசிரியர் யோசுவாவின் சாபத்தின் விளைவால் வந்த அழிவு என்று கூறுகிறார் (யோசு 6:26; 1 அர 16:34).

கீயு (CHIOS)

எகியன் கடலின் கிழக்கு மத்திய பகுதியில் அமைந்திருக்கும் மலைப்பாங்கான ஒரு தீவு ஆகும். இது வடக்கிலிருந்து தெற்காக 50 கி.மீ. நீளமும், கிழக்கிலிருந்து மேற்காக 13 முதல் 26 கி.மீ. அகலமும் கொண்டது. இத்தீவு திராட்சைரசம், பிசின் போன்றவற்றிற்குப் பெயர் பெற்றது. மேலும் கோமேர் பிறந்ததாகக் கூறப்படுகின்ற ஏழு இடங்களில் இதுவும் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இத்தீவின் முக்கிய நகரம் கீயு ஆகும். சிமிருனாவுக்கு 19 கி.மீ. தொலைவிலுள்ளது.

யோசிப்பசின் கூற்றுப்படி ஏரோது மன்னன் வடக்கே கோசு என்ற இடத்திலிருந்து புறப்பட்டு இலஸ்போசு என்ற இடத்தை நோக்கிக் கப்பல் பயணம் செய்தபோது வடகாற்றால் கீயு தீவிற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே அவர் சமஇடைவெளிகளில் நிறுத்தப்பட்ட தூண்களை நல்ல முறையில் கட்டுவதற்கு நிதி உதவி செய்தார்.

பவுல் காலத்தில் கீயு தீவு உரோமையரின் மாநிலத்திலுள்ள சுதந்தர நகரமாகும். பவுல் எருசலேமுக்குச் சென்ற இறுதிப் பயணத்தில் அவர் மித்திலேனிலிருந்து தெற்கே கப்பற் பயணம் செய்தபோது அவர் சென்ற கப்பல் ஓரிரவு கீயு தீவின் எதிரே நங்கூரமிட்டுக் கிடந்தது. மறுநாள்தான் அவர் கடலைக் கடந்து சாமு என்ற இடத்திற்குச் சென்றார் (அ.ப. 20:15).

ஈரா (HIRAH - உயர்தரமான)

யாக்கோபின் மகன் யூதாவின் அதுல்லாமிய நண்பன் (ஆதி 38:1.12.20-23). ஈரோவைச் சந்திக்கச் சென்றபோதுதான் யூதா கானானியப் பெண்ணான சூவாவைச் சந்தித்தார். பின் அவளை மணந்தார்.

ஈராம் (HIRAM - [(என்) சகோதரர் உயர்த்தப்பட்டவர்]

1. தீர் நாட்டின் அரசன் (கி.மு. 986-935). தாவீது, சாலமோன் ஆகியோரின் சமகாலத்தவர். பத்தாம் நூற்றாண்டில் பெனிக்கியர்களின் வியாபார ஆதிக்கம் பயங்கர முன்னேற்றம் அடைந்ததாகத் தெரிகிறது. ஈராமின் ஆட்சியின் மத்தியில் கதஸ், தார்தெசுஸ் (தார்சிக) குடியிருப்புக்கள் ஸ்பெயினில் தொடங்கப்பட்டன. வரலாற்று ஆசிரியர் மெனாந்தர், கட்டடவேலையை விரிவுபடுத்தியது, தீர் நாட்டின் தேவதை மெல்காத்துக்கு விழா எடுக்கும் அமைப்பையும், உத்திகா வாழ் மக்களின் புரட்சியை ஒடுக்கியதையும் முதலாம் ஈராம் செய்த செயல்களாகக் குறிப்பிடுகின்றார். தாவீதோடும் சாலமோனோடும் ஒருவருக்கொருவர் தேவையைப் பூர்த்திசெய்யும் அடிப்படையில் நட்பு வைத்திருந்தார். நவீன கருவிகள் உற்பத்தி முன்னேற்றத்திற்குத் தேவையான தொழில் திறமைகள் இஸ்ராயேலிடம் குறைவாக இருந்தன. ஆனால் அதே சமயத்தில பெனிக்கியா விவசாய உற்பத்தித்திறனில் குறைவாக இருந்தது.

தாவீதின் அரண்மனை கட்டத் தேவையான பொருட்களையும், ஆட்களையும் கொடுத்ததன் வாயிலாக இஸ்ராயேலோடு ஈராமின் முதல் தொடர்பு தொடங்கியதாகப் பழைய ஏற்பாடு குறிப்பிடுகின்றது (2 சாமு 5:11). எருசலேமைத் தாவீது கைப்பற்றியவுடன் இது நடந்தது. ஈராம் அரசனாவதற்கு முன் எருசலேம் கைப்பற்றப்பட்டது. அவருடைய தந்தை அபிபாகாலுக்குப் ...திலாகக் ஈராமின் பெயரைப் பழைய ஏற்பாடு தவறா

கக் குறித்திருக்கலாம் அல்லது பழைய ஏற்பாடு கிராமோடு உள்ள தொடர்பை வெகு முன்பே குறிப்பிட்டிருக்கலாம். தாவீது பெலிஸ்தியர்மேல் வெற்றிகொண்ட பிறகு கிராம் தாவீதோடு தொடர்பு கொள்வது நடந்திருக்கலாம்.

கிராம் இதேபோலச் சாலமோனோடும் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார் (1 அர 5:12). சிதோனிய இளவரசியைச் சாலமோன் மணந்ததாகத் தெரிகிறது (1 அர 11:1; காண் சங் 45:12). கோதுமைக்கும் ஒலிவ எண்ணெய்க்கும் பண்ட மாற்றாகக் கிராம் இஸ்ராயேலர்களுக்குக் கேதுரு மரங்களையும், திறமைவாய்ந்த தொழிலாளரையும் அவர்களுடைய கட்டடவேலைக்குக் கொடுத்தார் (1 அர 5:1-11; 2 நாள் 2:1-16). இக்காலக்கட்டத்தில் கட்டப்பட்ட அரச கட்டடங்கள் பெனிக்கியர்களுடைய வேலைப்பாடுகளையும் அவர்களுடைய அலங்கார வேலைப்பாடுகளையும் எடுத்தியம்புகின்றன.

வர்த்தகத் தொழிலில் சாலமோனுக்குக் கிராம் உதவினார், ஏசியோன்-கெபேரில் கடற்படை அமைக்கத் தேவையான கப்பல்களையும் திறமைவாய்ந்த ஊழியர்களையும் அனுப்பி உதவினார் (1 அர 9:26-28; 10:11:22; 2 நாள் 8:17-18; 9:10.21). சந்தேகமில்லாமல் கிராம் இலாபத்தின் ஒரு பகுதியைப் பெற்றார். ஒருவேளை அவருடைய கப்பற்படையைச் சாலமோனுடைய துறைமுகத்தில் நிறுத்திக்கொள்ளும் உரிமையையும் பெற்றிருக்கலாம். சாலமோன் தார்சிசு என்ற பெனிக்கியக் குடியிருப்போடு வியாபாரத் தொடர்பு வைத்திருந்தார் (2 நாள் 9:21) என்ற நாள் ஆகம ஆசிரியரின் கூற்று 'தார்சிசு கப்பல் படை' என்ற வார்த்தையைத் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவாகும் (1 அர 10:22). 'தார்சிசு' என்ற வார்த்தை கப்பல் வகையைக் குறிக்கிறது. அது ஓர் இடமல்ல.

சாலமோன் தன்னுடைய கட்டட வேலையை நீட்டிக்கொண்டே போனதால் பணப்பற்றாக்குறை ஏற்பட்டபோது கர்மேலுக்கும், பெனிக்கிய நாட்டிற்கும் இடையே உள்ள கடற்கரைப் பகுதியிலுள்ள 20 நகர்களைக் கிராமிடம் விற்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார். ஆக்கோ துறைமுகமும் இதில் அடங்கலாம். ஏனென்றால் இது தாவீதின் அரச எல்லைக்குள் இருந்தபோதிலும் (2 சாமு 24:5-7) சாலமோனுடைய மாகாணப் பெயர்வரிசை அட்டவணையில் இப்பெயர் காணப்படவில்லை (1 அர 4:8-19).

கிராமுக்குப்பின் அவரது மகன் முதலாம் பாகால்-ஏசெர் அரசனானார். 2-ஆம் நாளாகமத்தில் அவரதுபெயர் கூராம் என்றுள்ளது (2 நாள் 2:3.11-12; 8:2.18; 9:10).

2. தீரைச் சேர்ந்தவர். பித்தளை வேலையில் கைதேர்ந்தவர். ஆலயத்தை அலங்கரிப்பதற்கு இவரைச் சாலமோன் பயன்படுத்தினார் (1 அர 7:13-14.40.45).

கிரிய எலேயிசோன் (KYRIA ELEISON - ஆண்டவரே இரக்கமாயிரும்)

இறை இரக்கத்தை மன்றாடும் செபம். மாறிமாறிச் சொல்லப்படும் அல்லது பாடப்படும் செபம். திருச்சபையின் வழிபாட்டின் தொடக்கத்திலிருந்து வருவது. இது மத் 15:22-இல் கானானியப் பெண்ணுடையவும் மத் 20:30-33-இல் குருடர்களுடையவும் மன்றாட்டை நினைவுபடுத்துகிறது.

கீரை (HERB)

இது, பல எபிரேயச் சொற்களின் மொழிபெயர்ப்பாகும். 2 அர 4:39-இல் காட்டுக்கீரை குறிக்கப்படுகிறது.

கீர் (KIR - சுவர், கோட்டை)

1. ஒரு மோவாபிய நகரம் (ஏச 15:1). ஒருவேளை இதுவும் கீர் கரசேத்து என்ற இடமும் ஒன்றாக இருக்கலாம்.

2. மெசபொத்தாமியாவில் உள்ள இந்த இடத்திலிருந்து (ஏச 22:6) அரமேயர்கள் சீரியாவிற்குக் குடிபெயர்ந்து போயினர் (ஆமே 9:7). பிறகு அசீரியாவின் அரசன் மூன்றாம் திகிலாது-பிலேசர் இவர்களைக்

இருக்கு நாடு கடத்தினார் (2 அர 16:9; ஆமோ 1:5).

கீர்-கரசேத்து (KIR HARESETH - சுவர் சூழ்ந்த நகரம்)

இது மோவாபின் பழைய தலைநகரம். இது ஆர்னோனுக்குத் தெற்கில் 28 கி.மீ. தொலைவிலும், சாக்கடலின் கிழக்கே 18 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இறைவாக்கினர் எலிசா காலத்தில் இஸ்ரா யேல், யூதா, ஏதோமின் அரசர்கள் மோவா பின் அரசனாகிய மேசாவிற்கு எதிராகப் போரிட்டனர் (2 அர 3:4தொ). இப்போரில் மோவாபின் மக்கள் முறியடிக்கப்பட்டனர். எதிரிகள் மோவாபு நாட்டைப் பிடித்துக் கீர் கரசேத்தை முற்றுகையிட்டனர். அப்போது மேசா மன்னன் தனக்குப்பின் அரசாள வேண் டிய தன் தலைமகனைப் பிடித்து மதிலின் மேல் அவனைத் தகனப்பலியாக ஒப்புக் கொடுத்தான். இதனால் இஸ்ராயேலர் தங்க ளுக்கு எதிராகக் கடுஞ்சினம் மூள்வதைக் கண்டு விரைவில் அவனைவிட்டு அகன்று தம் சொந்த நாடு திரும்பினர் (3:24-27). மோவாபுக்கு எதிரான ஏசயாவின் இறை வாக்கில் இருமுறையும் (ஏச 16;7.11), எரேமி யாவில் இருமுறையும் (எரே 42:31.36) கீர் கரசேத்து அல்லது கீர்கரேசு குறிக்கப்படுகி றது. இதுவும் கீர் (1) என்ற இடமும் ஒரே ஊரைக் குறிக்கலாம் (ஏச 15:1).

கீர் கரேசு (KIR HERES)

கீர் கரசேத்தின் மற்றொரு பெயர்.

கிலேன் (HILEN - குகைகள்)

யூதா மலைநாட்டில் கெகாத்தின் லேவிய குடும்பத்தாருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிராமம் (1 நாள் 6:58). யோசு 15:51; 21:15-இல் இது கோலோன் என்றழைக்கப்படுகி றது-

கிலோ (GILOH - நாடு கடத்தல்)

யூதாவின் மலைப்பகுதி. தெபீர் மாவட் டத்திலுள்ள ஓர் ஊர் (யோசு 15:51). அகித் தோபலின் ஊர் (2 சாமு 15:22; 23:24). பொதுவாகக் கெபிரோனுக்குத் தென்-தென் கிழக்கில் 8 கி.மீ. தொலைவில் உள்ள கிர் பெத் யாவாவாக அடையாளம் காட்டப்படு கிறது. இது சரியானால், புவியியல்படி கிலோ பேத்து-சூர் மாவட்டத்தைச் சேர்ந்ததா கும் (யோசு 15:58தொ). ஆனால் யோசு 15:48-51 கிலோ கெபிரோனுக்குத் தென்மேற் கில் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.

கீல் (PITCH)

எரியும் தன்மையுடைய பசையான தாதுப் பொருள். ஏறக்குறைய நீரகக்கரியத்தின் நீர்மயமான கலவையாகும்.

பெருவெள்ள நிகழ்ச்சியுரையில், பேழையை உள்ளேயும் வெளியேயும் கீலால் பூசும்படி நோவாவுக்கு இறைவன் கட்டளையிடுகிறார் (ஆதி 6:14). பாபிலோ னிய வெள்ளக்கதையிலும் பேழை வெளி யிலே கீலால் பூசப்படுகிறது. யாத் 2:3-இல் கோரைப் புல்லால் செய்யப்பட்ட பேழைக்கு நிலக்கீல், கீல் ஆகியவை பூசப் படுகின்றன. ஏதோம் தண்டிக்கப்படும் போது, அதன் ''நீரோடைகள் கிலாகும்;... அதன் நிலம் கொழுந்து விட்டெரியும் கீலா கும்'' (ஏச 34:9).

கீல்பட்டை, கீல், கதவின் மூட்டுவாய், முளையாணி (HINGE)

குடை குழியில் பொருந்துமாறு கதவோடு இணைக்கப்பட்ட உலோகத்தாலான ஒரு கீல் பட்டை அல்லது சுழலச்சாகும். தன்னுடைய படுக்கையில் உருளும் சோம்பேறி கீல்பட் டையில் சுழலும் கதவைப் போன்றவனா வான் (பழ 26:14).

கீல் முனை (CLAMP)

எருசலேம் ஆலயம் கட்டுவதற்காகத் தாவீ தால் தயாரிக்கப்பட்ட பொருட்களில் ஓர் இரும்புக்கருவி (2 நாள் 22:3).

கிவியர் (HIVITES)

இஸ்ராயேலர்களின் குடியேற்றத்துக்கு முன் கானான் நாட்டில் இருந்த முக்கிய மக்களில் ஒரு குழுவினர்.

இஸ்ராயேலர்களால் துரத்தப்பட்ட நாடுகளின் பெயர் வரிசையில் ஒன்றாக இவ்வார்த்தை பொதுவாகத் தோன்றுகிறது (யாத் 3:8.17; 13:5; 23:23.28; 33:22; 34:11; உப 7:1; 20:17; யோசு 3:10; 9:1; 11:3; 12:8; 24:11; நீதி 3:5; 1 அர 9:20; 2 நாள் 8:7). ஆனால் இந்நிகழ்ச்சிகள் அந்த மக்களைப் பற்றிச் சிறிதே தெரிவிக்கின்றன. ஆதி 10:17; 1 நாள் 1:15-இல் வரும் உண்மையான தலைமுறைப் பட்டியலும் வெகு சிறிதே தெரிவிக்கின்றன.

காமின் மகன் கானானின் வழித்தோன்றல்களாகக் கீவியர்கள் விவரிக்கப்படுகின்றனர் (ஆதி 10:15; 1 நாள் 1:15). ஆதி 34-இல் கீவியரான காமோரின் மகன் செக்கேம், யாக்கோபின் மகள் தீனாவைக் கற்பழிக்கிறான். செக்கேம் தீனாவை மணம் செய்யும் பொருட்டு, காமோர், செக்கேம், நகரிலுள்ள எல்லா ஆண்களும் விருத்தசேதனம் பெறுகின்றனர். ஆனால் அவளுடைய சகோதரரான சிமியோனும் லேவியும் விரைவில் அவர்கள் அனைவரையும் கொன்றுவிடுகின்றனர். கிபயோனைச் சேர்ந்த கீவியர்கள் இஸ்ராயேலரிடமிருந்து உயிர்தப்புவதற்குத் தந்திரம் செய்கின்றனர். அதன்விளைவாக அவர்களின் ஊழியர்களாகின்றனர் (யோசு 9). மற்றக் கீவியர்கள் வடகானானியர்களின் கூட்டணியில் சேர்ந்து யோசுவாவால் மேரோமில் தோற்கடிக்கப்படுகின்றனர் (11: 3.19). இஸ்ராயேலின் போர்வீரர்கள் பற்றிய தாவீதின் எண்ணிக்கையில் கீவியர் நகரங்களும் உள்ளடங்கும் (2 சாமு 24).

கீவியர்களைப்பற்றிய மற்றக் குறிப்புகள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதிலும் அவர்களைப்பற்றிய பல செய்திக்குறிப்புகளைக் கொடுக்கின்றன. ஆதி 34:2 செக்கேமின் தந்தை காமோரைக் குறித்துக்காட்ட இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறது. எருசலேமின் வடக்குப் பகுதியிலுள்ள கிபயோனின் குடிகள் கீவியரோடு ஒன்றுபடுத்தப்படுகிறார்கள் (யோசு 9:7; 11:19). சீதோனுக்கும் பெயேர்செபாவுக்கும் இடையே வழியில் கீவியர் நகர்கள் காணப்படுகின்றன (2 சாமு 24:7). லெபனோன் மலையில் கீவியக் குடியிருப்புகள் இருந்திருக்கின்றன (நீதி 3:3). கெர்மோன் அடிவாரத்திலும் குடியிருந்திருக்கிறார்கள் (யோசு 11:3). கடைசியாக எழுபது நூலின்படி இஸ்ராயேலின் வெற்றிகளால் ''கீவியர், எமோரியர்களின் நகரங்கள் பாழடைந்தன'' (ஏச 17:9). இவையெல்லாம் கீவியர்கள் தொடக்கத்தில் முக்கியத்துவம் பெற்றவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

ஆனால் விவிலியத்துக்குப்புறம்பே இவர்களைப்பற்றிய குறிப்புகள் ஒன்றுகூட இல்லை. எபிரேயப் பெயர்களான கீவியர், கோரியர், இத்தியர் ஆகியவை மெய்யெழுத்து அடிப்படை உடையவை. எழுதப்படும்போதுநடு எழுத்து மட்டுமே வித்தியாசமாக இருக்கும். இதுதான் மூல வாசகத்தில் சில குழப்பங்களை ஏற்படுத்தக் காரணமாகும். இவ்வாறு மோசரோட்டிக் வாசகம் ஆதி 36:2-இல் சிபயோனை ஒரு கீவியர் எனக் குறிப்பிடுகிறது. ஆனால் 36:20-இல் அதே ஆளைக் கோரியராக வரிசைப்படுத்துகிறது. ஆதி 34:2; யோசு 9:7-இல் மோசரோட்டிக் வாசகம் கீவியர்கள் என்று குறிப்பிடுகிறது. கடைசியாக எழுபது நூல் யோசுவா 11:3-இல் இத்தியர்களைப் பற்றிப்பேசுகிறது. ஆனால் மோசரோட்டிக் வாசகம் கோரியர்களைக் குறிப்பிடுகின்றது. மோசரோட்டிக்கு வாசகம் கீவியர்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் கோரியர்களுக்குப் பொருத்தமாக அமைகிறது. பொதுவாக நாடுகளின் பட்டியலில் எபூசியர்களுக்கு முன்னால் கீவியர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். எபூசியர்கள் கோரியர்களோடு வைத்திருந்த தொடர்பு யாரும் அறிந்ததே. எனவே இங்கும் கோரியர்களுக்குப் பதிலாகக் கீவியர்கள் பயன்பட்டிருக்கலாம். பிறகு ஏன் இப்பெயர்கள் மாறிக்கிடக்கின்றன?

புவியியல் அடிப்படையில் சில நிகழ்ச்சிகளை விளக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் விளக்கமுடியாது. சேயீரில் ஏதோமியருக்கு முன் வாழ்ந்தவர்கள் கோரியர்களாகக் கருதப்பட்ட பாரம்பரியம் ஒன்றுண்டு. ஆனால் இப்பகுதியோடு கோரியர் அதிகத்

தொடர்பு கொண்டதாகத் தெரியவில்லை. கோரியர் நிலையாகக் குடியேறிய பகுதியில் ஈவியர் குறிக்கப்படும் பாரம்பரியம் ஒன்றும் உண்டு. இவை காலப்போக்கில் கோரியர்கள் ஈவியர்கள் என்றழைக்கப்படுவதற்கு வழிவகுத்திருக்கலாம்.

கிழைக்காற்று, அனல்காற்று (EAST WIND)

இக்காற்று ''வடகாற்று'' (பழ 25:23). இது திசையை மட்டும் குறிக்கும் காற்றல்ல; சிறப்புப் பண்புகள் பெற்ற ஒரு காற்றினுடைய பெயர். தற்பொழுது இதற்குக் காம்சின் அல்லது சிரோக்கோ என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இது பாலைவனப் பகுதியிலிருந்து, பாலஸ்தீன நாட்டுத் தென்கிழக்குப் பகுதிகளை நோக்கி வீசுகின்ற வெப்பமான, உலர்ந்த, தூசு படிந்த காற்றாகும் (எரே 4:11; ஓசே 13:15). இக்காற்று, பருவகால மாற்றங்களின் மாதங்களாகிய ஏப்ரல்-சூன் மாதங்களிலும் செப்டம்பர்-நவம்பர் மாதங்களிலும் பல நாட்களுக்கு வீசும். உயர்ந்த வெப்ப நிலையுடனும், மிகக் குறைந்த ஈரப்பதமும் தூசு கலந்ததுமாய் இருப்பதனால் மிருகங்களையும், மனிதர்களையும் பலவீனப்படுத்துவதாய் உள்ளது (ஏச 27;8; யோனா 4:8). மேலும் செடிகொடிகளை உலரவைக்கின்றது (ஆதி 41:6; எச 17:10). இக்காற்று ஒருசில வேளைகளில் கழற்காற்றாக மாறி (யோபு 27:20-21), கடலூர்திகளையும் நாசப்படுத்தவல்லது (சங் 48:7; எச 27:26). ஆழமற்ற நாணல் கடல் நீரைப் பின்வாங்கச் செய்யவல்லது (யாத் 14:21).

கீழ்த்திசை நாடு (EAST COUNTRY)

ஆபிரகாம் தனது வைப்பாட்டிகளின் பிள்ளைகளை இந்நாட்டிற்கு அனுப்பினார். இச்சொற்றொடர் அரேபியா நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியை, அதாவது பாலஸ்தீன நாட்டுக்குத் தென்கிழக்கிலுள்ள பகுதியைக் குறிக்கிறது.

கீழ்த்திசை மக்கள் ((THE PEOPLE OF THE EAST)

இஸ்ராயேலின் கிழக்கில் உள்ள நாடுகளில் வாழ்ந்துவந்த மக்களைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு கலைச்சொல்லாகும். இவ்வாறு ஆதி 29;1 யாக்கோபு கீழ்த்திசை மக்களின் நாட்டை நோக்கிப் பயணம் செய்தார் என்று குறிப்பிடுகின்றது. நீதி 6-8-இல் இச்சொல் மிதியானியர் அமலேக்கியர்களுடன் சேர்ந்து இஸ்ராயேலைத் தாக்கிய அரபு நாட்டுக் கூட்டத்தைக் குறிக்கின்றது. மேற்சொன்ன பொருளிலேயே எரே 49:28; எச 25:4.10-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏச 11:4-இல் இச்சொல் இதுமேயாவுக்கும் மோவாபுக்கும் சரிநிகராகப் பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகின்றது. மேலும் யோபு 1:3-இல் இதே பொருளில் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்றது. கீழ்த்திசை மக்கள் ஞானத்திலும் அறிவு வளர்ச்சியிலும் தனிச்சிறப்புப் பெற்றிருந்தனர் (1 அர 5:10). இக்காரணத்தை முன்னிட்டே இயேசு கிறிஸ்து பிறந்தபொழுது கீழ்த்திசையிலிருந்து மூன்று ஞானிகள் வந்ததாக அறிமுகப் படுத்தப்படுகிறது (மத் 2:1-12).

கீழ்ப்படிதல் (OBEDIENCE)

கீழ்ப்படிதல் என்பது ஒருவர்மேல் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட நீடித்த கட்டுப்பாட்டினை அல்லது அடங்கிப்போகிற பணிவைக் குறிக்கிறதில்லை. மேலாக, ஒருவன் தன் முழுச் சுதந்தரத்தோடு, இன்னும் வெளிப்படாததும் ஆனால் வார்த்தையானவரின் விசுவாசத்தால் முன்மொழியப்பட்டதுமான, இறைவனது திட்டத்தோடு ஒட்டிக் கொள்ளுதலாகும். இக்கீழ்ப்படிதலானது மனிதனை இறைவனது சேவைக்குட்படுத்தி அவனை அவரது மகிழ்ச்சியில் நுழையச் செய்கிறது.

1. படைப்பு இறைவனுக்குப் பணிகிறது:-

மனிதனைத் தவிர, படைப்பிலேயே ஒரு வகைப் பணிவும் மகிழ்வும் உணர்த்தப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஆண்டவர் லேவியாத்தனின் இதயத்தை ஈட்டியால் துளைத்ததும் (யோபு 40:24) இராகாபை (சங் 89:11) ஒழித்ததும், அவரது ஏகோபித்த சர்வ அதிகாரத்திற்குச் சான்றாக இருக்கின்றது.

இயேசு புயலினை அடக்கிய அன்று சாத்தான்களை விரட்டிய செயலானது, சாத்தான்களைப்போலவே, ''காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றன'' (மத் 8:27; மாற் 1:27) என்பதற்கு அத்தாட்சியாக இருக்கிறது. இவ்விதச் சக்திவாய்ந்த செயல்கள் தெய்வ பயத்தை உண்டாக்குகின்றன. உலகமே தனது தலைவரை அமைதியோடு ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும், உலகிலுள்ள உயிர்வாழ்வனவெல்லாம் அந்த இறைவனது குரலுக்கு மகிழ்வோடும், ஆர்வத்தோடும் விரைந்தும் மறுமொழி பகர்வதையே விவிலிய ஏடு வியந்து நோக்கி, அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறது: ''தத்தம் சாமத்தில் விண்மீன்கள் ஒளி வீசின, மகிழ்ச்சியாயிருந்தன; அவற்றை அவர் அழைத்தார், அவை 'இதே இருக்கின்றோம்' என்றன; தங்களை உண்டாக்கியவருக்காக இன்பத்தோடு ஒளிவீசின'' (பாரூ 3:34தொ; காண் சங் 104:4; சீரா 42:23; 43:13-26). இத்தகைய ஆர்வமுனைப்புடைய மிகவும் நேர்த்தியான படைப்புகள், தங்களுக்கு இறைவன் தமது பிரபஞ்சத்தில் குறித்துள்ள பணியினை நிறைவேற்றி வருகையில், மனுக்குலம் மட்டும் ''கீழ்ப்படியாமையால் கட்டுண்டு கிடப்பது'' (உரோ 11:32) நமது மனத்திற்கு, மனிதன் எப்படியாகிலும் இறைவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்ற நினைவை வருத்தத்தோடு உணர்த்துகின்றது. மேலும் இறைவன், தமது ஏக மகனின் கீழ்ப்படிதலின் பொருட்டு விடுதலையடைந்த படைப்பனைத்தும் எப்படி இயல்பாகவே கீழ்ப்படியக்கூடும் என்ற உண்மையை மனிதன் நோக்கவும் அதன் மூலம் அவனுக்கு அசையா நம்பிக்கை பிறக்கவும் செய்தார் (உரோ 8:19-22).

II. கீழ்ப்படியாமையின் விளைவு:-

1. ஆதாம் இறைவனுக்குக் கீழ்ப்படியாதது தொடக்கத்திலிருந்தே அவனது சந்ததியனைத்தையும் இறைவனுக்கெதிராய் நிறுத்திப் (உரோ 5:19) படைப்பனைத்தையும் பயனற்ற நிலைக்கு உட்படுத்தியது (8:20). ஆதாமினுடைய எதிர்ப்பானது அதற்கு மாறாகக் கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதையும் அதிலிருந்து இறைவன் எதிர்பார்ப்பது என்ன என்பதையும் காட்டுகிறது. கீழ்ப்படிதலானது இறைவனது விருப்பத்திற்கு மனிதன் பணிந்து நடப்பதாகும். இறைவனது கட்டளையை நிறைவேற்றுவதன் பொருளையும் மதிப்பையும் நாம் பார்க்கிறதில்லையானாலும், அதன் சிறப்பியல்பு தெய்வக் கட்டளையாகுமென்பதைக் கண்டுணர்கிறோம். இறைவன் நம்முடைய கீழ்ப்படிதலைக் கோருகின்றாரென்றால், அது, உலகினை உருவாக்கி முடிப்பதற்கானதொரு திட்டத்தினை அவர் வைத்திருக்கிறாரென்பதால்தான்; நமது ஒத்துழைப்பும், விசுவாசத்தில் நமது பற்றுதலும் அவருக்கு வேண்டியிருக்கிறது. விசுவாசம், நம்பிக்கை அல்லது கடவுள் பற்று என்பது கீழ்ப்படிதலன்று, ஆனால் அது கீழ்ப்படிதலின் இரகசியமாக இருக்கிறது. கீழ்ப்படிதலானது விசுவாசத்தின் அடையாளமும் பயனுமாகும். இறைவார்த்தையை மறந்து ஏவாளின் குரலுக்கும், சாத்தானின் குரலுக்கும் செவிமடுத்ததே ஆதாம் இறைவனுக்குக் கீழ்ப்படியாததன் காரணமாகும் (ஆதி 3:4தொ).

2. மனுக்குலத்தைக் காக்கும்பொருட்டு இறைவன் ஆபிரகாமின் விசுவாசத்தினைக் கிளறினார்; அந்த விசுவாசத்தினைக் கீழ்ப்படிதல் மூலமாக உறுதிப்படுத்தும்படி அவர் செய்தார்: ''உன்னுடைய நாட்டைவிட்டுப் புறப்படு'' (ஆதி 12:1), ''நமக்கு முன் நடந்து உத்தமனாய் இரு'' (17:1); ''உன்னுடைய மகனை எடுத்து... அவனைத் தகனப் பலியாய் ஒப்புக் கொடுப்பாய்'' (22:2). ஆபிரகாமின் வாழ்வு முழுவதும் இறைவனது வார்த்தையில் அமைந்திருக்கிறது. ஆனால் அந்த வார்த்தையோ, அவரை எதையும் பாராமல் முன்னோக்கிச் சென்று, தான் புரிந்துகொள்ள முடியாத செயல்களையும் செய்யுமாறு எப்போதும் தூண்டுகிறது. இவ்வாறு ஆபிரகாமுடைய கீழ்ப்படிதலானது அவருக்கு இறைவனால் தரப்பட்டதொரு சோதனையும் பலப்பரிட்சையுமாக இருக்கிறது (22:1). அது கடவுளுக்கோ விலைமதிக்க முடியாததொரு சாட்சியாகும்; ''நம்மைப் பற்றி நீ

உன் ஒரே மகனையும் பலியிட மனம் துணிந்தாய்'' (22:16).

3. கடவுளுடைய உடன்படிக்கையும் இதே நடைமுறையைத்தான் மேற்கோளாகக் கொண்டிருக்கிறது: இறைவன் தங்களுக்கு முன்மொழிந்த உடன்படிக்கையோடு ஒட்டிக்கொண்ட இஸ்ராயேல் அதற்குப் பதிலளிக்கும் வகையில், ''ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம்'' (யாத் 24:7) என்றார்கள். உடன்படிக்கையானது, இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கைக்கும், அவர்களை இறைமக்களாய் வாழச் செய்யும் நோக்கிற்கும் பொருத்தமான வகையில் ஓர் ஒப்பந்தத்தையும், திருச்சட்டம், கட்டளைகள், நிறுவனங்கள் போன்றவற்றையும் தன்னோடு கொண்டு வந்தது. இவைகளில் அனேக ஒழுங்குகள் மனிதருக்குள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய கடமையினை வலியுறுத்தின. பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல் (உப 21:18-21); அரசர், இறைவாக்கினர் குருக்களுக்குக் கீழ்ப்படிதல் (17:4-18, 22). மனித இயற்கையிலேயே இவ்விதமான கடமைகள் பொதிந்திருப்பினும், இறைவன் அவைகளைத் தமது உடன்படிக்கைக்குள் சேர்ப்பதன்மூலம் மனிதனுடைய பணிவான நடத்தையை அவனது விசுவாசத்திலூன்றியதோர் கீழ்ப்படிதலாக இருக்கச் செய்கிறார். ஒருவனுக்குச் சட்டத்தின் மேலுள்ள உண்மையான பற்றானது அவன் இறைவனது வார்த்தையிலும் அவரது உடன்படிக்கையிலும் கொண்டுள்ள பற்றுதலைப் பொருத்தே மெய்யாகிறது. இதுபோன்றே கீழ்ப்படிதலும் அதனுடைய கட்டளைகளுக்கும் அடிமைத்தனம் பூண்டதோர் பணிவாக அன்பின் மனப்பான்மையில் அமைந்திருக்கிறது. ஏற்கெனவே பத்துக் கட்டளைகளில் முதற்கட்டளை இதனைத் தொடர்புபடுத்துகிறது; ''நம்மிடம் அன்புகூர்ந்து, நம் கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகி வருகிறவர்களுக்கு'' (யாத் 2?:6); உப ஆகமமும் இதே கருத்தினைத் திரும்பக் கூறி இன்னும் சற்று விரிவுபடுத்துகின்றது (உப 11:13.22); சங்கீதங்களில் திருச்சட்டத்தினை, மனிதனுக்களிக்கப்பட்ட இறையன்பின் பெருங்கொடை என்றும் அன்பினாலான கீழ்ப்படிதலின் தோற்றுவாயென்றும் கொண்டாடுகின்றன (சங் 19;8-11; 119).

III. கிறிஸ்துவும் நமது கீழ்ப்படிதலும்:-

கடவுளுக்குக் கீழ்ப்படிவது யார்? இஸ்ராயேல் ''ஒரு கலகக்காரர்களின் வீடாக'' (எச 2:5)வும் ''எதிரான பிள்ளைகளாகவும்'' (ஏச 1:2) இருக்கிறது; ''திருச்சட்டத்தைப் பற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டு அது அச்சட்டத்தை மீறிக் கடவுளை இழிவுபடுத்துகிறது'' (உரோ 2:23). அது புறவினத்தானைவிட மேலாகப் பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது. ஏனெனில் அது அவனோடு சேர்ந்து ''கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கிறது'' (உரோ 3:10; 11:32). பாவத்திற்கு அடிமையான மனிதனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற ஆவலிருப்பினும் இறைவனுக்குக் கீழ்ப்படிய இயலாதவனாயிருக்கிறான் (7:14). இதற்கு வழிசெய்யும் வகையில் ''திருச்சட்டத்தை அவர்களது உள்ளத்தில்'' (எரோ 31:33) காண்பதற்கு இறைவன் தமது ஊழியனை அவர்களிடம் அனுப்புவது அசியமாயிருக்கிறது. ''நாள்தோறும் காலையில் அவர் அவனது செவிப்புலனைத் தூண்டுகிறார்'' (ஏச 50;4). அதனால் ''இதோ வருகிறேன்...உமது திருவுளத்தின்படி நடப்பதே எனக்கின்பம்'' (சங் 40:7தொ) என்று ஊழியனால் கூறமுடிகிறது.

''ஏனெனில், ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் அனைவரும் பாவிகளானது போல், ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும் இறைவனுக்கு ஏற்புடையவர்களாவார்கள்'' (உரோ 5:19). இயேசுகிறிஸ்துவின் கீழ்ப்படிதல் நமது மீட்பாக இருக்கிறது; அது திரும்பவும் நாம் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கு இயலுமாறு செய்கிறது. கிறிஸ்துவின் வாழ்க்கையானது ''அவர் உலகிற்கு வந்ததிலிருந்து'' (எபி 10:5), ''சிலுவையில் மரிக்கும் வரை'' (பிலி 2:8) கீழ்ப்படிதலாக இருந்தது; அதாவது, இறைவனோடு நெருங்கிய பற்றுக்கொண்டு, அவருக்கும் மனிதனுக்குமிடையே நடுவராகத் திகழ்ந்தார். ''தன் விருப்பத்தையல்லாமல், தன்னை

யனுப்பியவருடைய விருப்பத்தையே நிறைவேற்ற வந்த இயேசு'' (யோவா 6:38;-காண் மத் 26:39), தம்முடைய வாழ்நாள் முழுவதும் தமது தாய் தந்தையர்க்கும் (லூக் 2:5), சட்டத்தின் அதிகாரிகளுக்கும் (மத் 17:27) பணிந்தேயிருந்தார். அவர் தமது திருப்பாடுகளின்போது, எவ்வித எதிர்ப்பும் காட்டாது, தம்மையே கையளித்து, ''இறைமகனாயிருந்தும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார்'' (எபி 5:8). இதனால் இயேசு தமது கீழ்ப்படிதலினால் தமது மரிப்பை அதியுன்னதப் பலியாக இறைவனுக்குப் படைக்கின்றார் (10:5; காண் 1 சாமு 15:22).

IV. கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்:-

தமது கீழ்ப்படிதலினால், ''ஆண்டவராகவும்'' (பிலி 2:11) ''விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரத்தையும்'' (மத் 28:18) பெறக்கூடிய நிலைக்கு வந்துள்ளவருமான இயேசுகிறிஸ்து, உலகின் ஒவ்வொரு படைப்பிடத்திருந்தும் கீழ்ப்படிதலைப் பெறுவதற்கு உரிமை பெற்றிருக்கின்றார். அவர் மூலமாகவும், அவருடைய நற்செய்திக்கும் அவரது திருச்சபையின் வார்த்தைக்கும் பணிந்து நடப்பதன் மூலமாகவுமே (2 தெச 3:14; மத் 10:40) மனிதன் தனது விசுவாசத்தில் இறைவனையடைகின்றான் (அ.ப. 6:7; உரோ 1:5; 10;3; 2 தெச 1:8). இதனால் அவன் உலகின் தொடக்க காலத்திலிருந்துள்ள கீழ்ப்படியாமையிலிருந்து தப்பித்துக் கொண்டு மீட்பின் இரகசியத்தால் அடியெடுத்துவைக்கின்றான். இயேசு கிறிஸ்துவே கிறிஸ்தவர்களின் முழுச்சட்டமாக இருக்கிறார் (1 கொரி 9:21). இச்சட்டம், சட்டரீதியான மனித அதிகாரத்திற்கும், பெற்றோர்களுக்கும் (1 கொலோ 3:2), இவ்வுலகில் தலைவர்களாயிருப்போர்க்கும் (3:22), கணவர்களுக்கும் (3:18) பொது அதிகாரிகளுக்கும் மக்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுகிறது; அத்தோடு, அவை ஒவ்வொன்றிலும் இறைவனது அதிகாரம் நிலைத்திருப்பதை உணர்த்துகின்றது (உரோ 13:1-7). கடவுளுக்குப் பணிசெய்வதற்காக மட்டுமே கீழ்ப்படிவதால், அவசிய மேற்பட்டால், கிறிஸ்தவனால் அநீதியான கட்டளைகளை எதிர்த்து நிற்க முடிகிறது. ''கடவுள் சொல்வதைக் கேட்பதற்கு மேலாக மனிதர்கள் சொல்வதைக் கேட்பது கடவுளுக்கு முன் நீதியற்ற செயல்'' (அ.ப. 4:19) என்பதைக் கிறிஸ்தவன் வரையறுத்துக் காட்டவேண்டும்.

கீனா (KINAH - இரங்கற்பா, கொல்லன்பகுதி)

யூதாவின் தென்கிழக்குக் கோடியில் ஏதோமின் எல்லை ஓரமாக உள்ள ஓர் ஊராகும் (யோசு 15:22). இது கேனியர்களின் இருப்பிடமாக இருக்கலாம். இது கெபிரோனுக்குத் தெற்கில் உள்ள வாடி ஏல் கெய்னியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கீனாத்து (GINATH - பாதுகாப்பு)

இவர் திபினியின் தந்தை. இஸ்ராயேலின் அரியணைக்கு ஒமிரியுடன் போட்டியிட்டவர். ஆனால் வெற்றியடையவில்லை (1 அர 16:21-22).

கு

குகை (CAVE, DEN)

யோர்தானுக்குக் கிழக்கிலும் பாலஸ்தீன மலைகளிலும், சுண்ணாம்புக்கற்கள், மணற்கற்கள் நிறைந்த இடங்களில் இயற்கையாகவோ செயற்கையாகவோ அமைந்த குகைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இக்குகைகள் உறைவிடமாகவும், சரணாலயமாகவும், அடக்கம் செய்யப்படும் இடங்களாகவும் பயன்படுத்தப்பட்டன என்று விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

ஆதி 19:30; 23:9; யோசு 10:16; நீதி 6:2; 1 சாமு 13:6 ஆகிய இடங்களில் வரும் எபிரேயச் சொல் குகையென்று பொதுவாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யோபு 30:6; ஏச 2:19; 2:21; உ.ச. 2:14; எரே 49:16; ஒப 3; யோபு 37:8; 38:40; சங் 104:22; உ.ச. 4:8; நாகூ 2:12; சங் 10:9 ஆகிய இடங்களில் குகையைக் குறிக்க வேறுபல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. குகைகள் சாதாரணமாகத் திருடர்களின் தலைமை அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டதால், 'கள்வர் குகை' என்பது எருசலேமுக்கு உவமையாகக் கூறப்பட்டபோது எருசலேம் தீய செயல்கள் திட்டம் செய்யப்படும் குகையாகும் என்று பொருள்படும் (எரே 7:11; மத் 21:13; மாற் 11:17; லூக் 19:46). தானியேல் நூலில் வரும் 'சிங்கக் குகை' அனேகமாக ஒரு செயற்கைக் குகையாக இருந்திருக்கலாம். ஆனால் யூத எழுத்தாளர் இது ஒரு குழி அல்லது நீர்த் தொட்டி என்று நினைத்ததாகத் தோன்றுகிறது. குகையானது தண்ணீர் சேர்க்கும் தொட்டியாகவோ சிறைச்சாலையாகவோ பயன்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில் ''குகை'' என்பது மூன்று இடங்களில் வருகின்றது; இந்த மூன்று இடங்களிலும் அடக்கம் செய்யப்படும் இடம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலாசரின் கல்லறை (யோவா 11:38), வேத கலாபனையின்போது அடைக்கலம் புகும் இடம் (எபி 11:38; திருவெளி 6:15).

ஆதி 19:30-இல் லோத்து தன்னுடைய புதல்வியருடன் குகையில் தங்கியிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாராவை அடக்கம் செய்ய ஆபிரகாம் மக்கபேலா குகையை வாங்கினார் (ஆதி 23:11-16). இதே குகையில் ஆபிரகாம் (ஆதி 25:9), ஈசாக்கு, ரபேக்காள், லேயா (ஆதி 49:30-37) யாக்கோபு (ஆதி 50:13) ஆகியோர் அடக்கம் செய்யப்பட்டதாகப் பாரம்பரியம் கூறுகின்றது. யோசுவாவால் தோற்கடிக்கப்பட்ட ஐந்து கானானிய அரசர்களும் மக்கேதா குகையில் அடைக்கலம் புகுந்தனர். அவர்களுடைய உடல்களை வைத்துக் கற்களால் மூடியபிறகு அது கல்லறையானது (யோசு 10:17-27).

மிதியானியர்களாலும் (நீதி 6:2) பெலிஸ்தியர்களாலும் (1 சாமு 13:6) துன்புறுத்தப்பட்டபொழுது இஸ்ராயேலர்கள் குகையில் மறைந்து வாழவேண்டியதாயிற்று. தாவீது, சவுலிடமிருந்து தப்பி அதுல்லாம் குகையில் மறைந்து கொண்டார் (1 சாமு 22:1). எலியா ஈசபேலுக்குப் பயந்து கோரேபு மலையிலிருந்த ஒரு குகையில் பதுங்கிக் கொண்டார் (1 அர 19:90). கர்மேல் மலையிலிருந்த ஒரு குகையில் ஒபதியா நூறு இறைவாக்கினர்களைப் பதுக்கி வைத்தார் (1 அர 18:4.13). புதைபொருள் ஆராய்ச்சிகள் குகைகள் உறைவிடமாகவும், வழிபாட்டு இடமாகவும் அடக்க இடமாகவும் பயன்படுத்தப்பட்டன என்று காட்டுகின்றன. பெத்திலகேமுக்கும் சாக்கடலுக்கும் இடையிலும், கர்மேல் மலையிலும் உள்ள குகைகள் கற்காலத்திலிருந்து இன்று வரை ஆடுமேய்ப்பவர்களால் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. கல்லறையாகப் பயன்படுத்தப்பட்ட இயற்கை, செயற்கைக் குகைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சாக்கடலுக்கு வடமேற்குத் திசையில் உள்ள கிர்பெத்து கும்ரான் என்ற குகையில் புகழ்பெற்ற சாக்கடல் ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எருசலேம், பெத்திலகேம், கெபிரோன், நாசரேத்து போன்ற இடங்களில் உள்ள பழங் காலக் குகைகளின் மேல் கிறிஸ்தவர்களும் முகமதியர்களும் புனித இடங்களை எழுப்பி யுள்ளனர். ஆனால் அகழ்வாய்வுச் சான்றுகள் இன்மையால், இந்த விவிலிய இடங்களை உறுதியாக அடையாளம் காட்ட முடிய வில்லை.

குக்கோக்கு (HUKKOK - ஆழ்ந்தகன்ற பிளவு)

நெப்தலி பகுதியில் ஒரு எல்லையோர நகர் (யோசு 19:34). கின்னரேத்துக்கு மேற் கில் 5 கி.மீ. தொலைவில் எபெல் கபகுக்கு அருகிலுள்ள இக்கால யாகுக்கு ஆக அடை யாளம் காட்டப்படுகிறது.

குங்கிலியம் (ONYCHA)

கடலில் வாழும் ஒருவகையான மிருகத்திட மிருந்து தயாரிக்கப்பட்டது. ஆலயத்தில் பீடத்தில் எரிக்கப்படும் நறுமணக் கலவை யில் சேர்க்கப்பட்ட பொருள்களில் ஒன்று (யாத் 30:34).

குசாம் (HUSHAM - விரைவான)

இவர் ஒரு தேமானியர். ஏதோம் நாட்டை ஆண்டு வந்த மூன்றாம் அரசன். யோபாபு வுக்குப் பின் அரசரானார் (ஆதி 36:34-35; 1 நாள் 1:45-46).

குஞ்சம் ((Tassel)

இஸ்ராயேல் மக்கள் தங்கள் ஆடையில் நான்கு மூலைகளிலும் குஞ்சங்களை வைத் துத் தைத்துக் கொள்ள வேண்டும் (எண் 15:38-39).

குடிகொள்ளுதல், தங்குதல் (ABIDE)

I. இடம்விட்டு இடம் பெயர்ந்து, நாடோ டிகளாகவும், தாயகமிழந்து அயல் நாடுக ளில் அவதியுற்றவர்களாகவும் வாழ்ந்த இஸ் ராயேல் மக்களுக்குக் ''குடிகொள்ளுதல்'' என்றால் என்ன என்பது பற்றிய அனுபவ உணர்வு இருந்ததில்லை. இக்கருத்தைத் துல் லியமாக வெளியிடும் சொல்கூட அவர்க ளிடை வழக்கிலில்லை. எனவே, தாங்கள் கண்ட சில நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு கீழ்க்காணும் விதங்களில் இக் கருத்தை உணர்த்தினர்: ''அமர்ந்திருக்கும் மனிதன்'' (ஆதி 25:27), ''போரிட்டு வெற்றி வீரனாக நிற்பவன்'' (யோசு 7:12), ''அதே இடத்தில் தொடர்ந்து நிலைக்கும் கூடாரங் கள்'' (ஆதி 16:12; 25:18). ஆதலின் 'இல்லம்', 'நிலைத்து நிற்றல்', 'நிலைபேறு' போன்ற இவற்றிற்கு ஒத்த கருத்துக்களைக் கிரேக்க மொழி பெயர்ப்பாளர்களிடமிருந்து பெறுகி றோம்.

எப்போதும்- அலைந்து திரிந்த இம்மக்க ளுக்கு, பாலைவனத்தில் களைப்பு நீங்கி இளைப்பாறும் ஆவல் இருந்தது. இறைவன் தங்களுக்குக் கொடுக்கப் போவதாக உறுதிய ளித்த நாட்டில் அமைதியுடன் தங்கிவாழ விழைந்தனர் (ஆதி 49:9.15; உப 33:12.20). அவர்களது வரலாற்றில் வேறு வேறு கட்டங் களின் முடிவில் ''நிலையாகத் தங்கள் கூடா ரங்களை நிறுவக் (உப 12:8 தொ) கனவு கண்டனர். ஒரு கட்டத்தை விடுத்து இன் னொரு கட்டத்தில் அவர்கள் வாழத் தொடங் கியபோது நடக்கவிருப்பதை இறைவாக்கி னர் முன்னுரைத்தது கேட்டுத் திடம் அடைந் தனர்''. ''அவர்கள் சொந்த நாட்டில் அவர்க ளைத் திரும்ப நாட்டுவோம்'' (ஆமோ 9:15); ''அது அமைதியான இருப்பிடம், அசைக்க முடியாத கூடாரம்'' (ஏச 33:20); ''நம் மக் களை ஓரிடத்தில் நிலைநிறுத்துவோம்; அவர்களை அவ்விடத்தில் உறுதிப்படுத்து வோம்'' (2 சாமு 7:9 தொ; காண் ஏச 54:2). ஆனால் அம்மக்களைத் தண்டித்து, மீண்டும் பாலைவனத்திற்கு இட்டுச் செல்லவும், அல் லது பசும்புல் தரைகளை நோக்கிச் செல்லும் பாதைகளில் அவர்களை நடத்தவும் மேய்ப்ப ராம் யாவே ''இல்லங்களை அழித்தார்'' (சங் 23; எரே 50:19; எச 34:23-31; காண் ஆமோ 5:15; எரே 2:14). ஓரிடத்தில் நிலைத்துக் குடிகொள்ளுதல் என்பது ஆசித்த இலட்சிய மாக இருந்ததேயொழியக் கைகூடுவதா யில்லை. இந்த இலட்சியம் கடவுளில் மட் டுமே கைகூடவிருந்தது.

II. நிலையாமையும், நிலைமையும்:-

1. ''இவ்வுலகின் அமைப்பு கடந்து செல்

கின்றது'' (1 கொரி 7:31; 2 கொரி 4:18). நித்திய வழிப்போக்கனான மனிதன் இம் மண்ணுலகில் இருக்கும் வரையில் நிலைத்து வாழ முடியாதவன். இன்று தோன்றி நாளை காய்ந்து போகவிருக்கும் புல்லைப்போன்றவன். ஆதவின் நீடித்து இருப்பவனல்லன். அவன் இறந்து மடியவேண்டியவன். அவனது வாழ்வோ குறுகியது (ஏச 40:8; யோபு 14:2). இருந்தாலும் மனிதன் வாழும் உலகம் அவனுக்கு நிலைத்திருக்கக்கூடியதொன்றாகத் தோற்றம் அளிக்கிறது (2 பேதுரு 3:4). தனது அடித்தளங்கள் மீது உறுதியாக அமைந்துள்ளது உலகம் (சங் 104:5). இயற்கையின் சட்டங்கள் மாறாமல் நிலைத்திருப்பவை எனக் கடவுள் நோவாவுக்கு உறுதியளித்தார் (ஆதி 8:12). எனினும் இவ்வாக் குறுதி படைப்புப்பொருள் நிலைக்குமட்டுமே நீடிக்கும். ஏனெனில் வானுலகங்கள் நடுக்கமுறும் (எபி 12, 26 தொ): ''விண்ணும் மண்ணும் அழிந்துபோம்; என் வார்த்தைகளோ அழியவே அழியா''(மத் 24:35) என்று தம்மவருக்குக் கிறிஸ்து எச்சரிக்கை தந்து உள்ளார்.

கடவுளின் சொற்கள் மீதும், திருச்சட்டத்தின் மீதும் சீனாய் உடன்படிக்கை ஏற்பட்டதாயினும், அதுகூட நிலையற்றது என முன்னரே அறிவிக்கப்பட்டது. யாவேயிடம் விசுவாசமற்ற அவரது திருச்சட்டத்திற்குப் பணியாத எபிரேயர்கள் இறைவன் வாக்குறுதி அளித்த நாட்டில் நிலைத்து வாழ இயலவில்லை (உப 8:19 தொ; 28:30-36). சுருங்கக் கூறின் ''அவர்கள் என் உடன்படிக்கையில் நிலைத்திருக்கவில்லை'' (எபி 8:9.13). மேலும் இந்த உடன்படிக்கை வரவிருக்கும் புதிய உடன்படிக்கையின் நிலையற்ற மாதிரிப் படிவமேயாம் (எரே 31:31; மத் 26:28; கலா 4:21-31).

புதிய ஏற்பாட்டிலுள்ள மீட்பு உண்மைகளிலும், அருட்கொடைகள்; இறைவாக்கு அறிவு, பரவசப் பேச்சு போன்ற கூறுகள் சில மறைந்துவிடும் தன்மையன. ஆனால் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றுமே நிலைத்து நிற்பவை (1 கொரி 13:8-13). இம்மண்ணுலகம் நிலைத்திருக்கும் நகரமன்று; அதை நீத்தேயாக வேண்டும் (எபி 13:13 தொ). ஒவ்வொரு கிறிஸ்தவனும் ''தான் வாழும் உலகம் ஒரு கூடாரமே''; அதைவிட்டு நீங்கி ஆண்டவருடன் நிலையாகத் தான் வாழவேண்டும் என்பதை அறிவான் (2 கொரி 5:1-8).

2. கடவுள் மட்டுமே நிலைநிற்பவர்: ''இருந்தவரும், இறக்கிறவரும், இனிவருபவரும் அவரே'' (திருவெளி 4:8; 11:17). ''என்றும் நிலைத்து வாழும் கடவுள் அவர்'' (தானி 6:27; சங் 102:27 தொ). புனிதமானவையும், என்றும் நிலைத்திருப்பவையும், யாராலும் அணுகவொண்ணாதவையுமான வானங்களில் வீற்றிருக்கும் கடவுள் மிரட்டல்களைக் கண்டு எள்ளி நகையாடுகின்றார் (சங் 2:4; 9:8; ஏச 57:15). அசைக்க முடியாத பாறையாகிய அவர்மீது மட்டுமே மனிதன் ஊன்றி நிற்க வேண்டும். அவரது சொல் (ஏச 40:8; 1 பேதுரு 1:23 தொ), திட்டம் (ஏச 14:24), வாக்குறுதி (உரோ 4:16), அரசு (தானி 4:31), நீதி (சங் 11:3), அன்பு (சங் 136) இவை என்றென்றும் நிலைத்திருப்பன. படைக்கப்பட்ட பருப்பொருள் உலகிலோ அறத்துறை சார்ந்தவற்றிலோ எதுவேனும் நீடித்து நிலைப்பின் அதற்கு உறுதி அளிப்பவர் அவரே (சங் 119:89 தொ; 112:3.6).

எனவே, நீதிமான் தீர்ப்புநாள் வரை செழித்து நிற்கும் மரம்போலும் (சங் 1:3 தொ), ஒரே அசைக்க முடியாத மூலைக்கல்லாகிய கிறிஸ்து என்ற பாறையின்மீது தன் வீட்டைக் கட்டியெழுப்பும் மனிதனைப் போலும் (மத் 7:2 தொ; ஏச 28:16; 1 கொரி 3:10-14; எபே 2:20 தொ) வாழ்வான். நிலைத்து வாழவிரும்பும் மனிதன் எவனும் கடவுளின் வல்லமையைச் சார்ந்து நிற்க வேண்டும் (ஏச 7:9). அதாவது ''நேற்றும், இன்றும், என்றும்'' ஒரே தன்மையராகத் திகழும் (எபி 13:8) கிறிஸ்துவில் மாறாத விசுவாசம் கொள்ள வேண்டும் (யோவா 8:31; 15:5 தொ; 2 திமோ 3:14; 2 யோவா 9).

III. இறைவன் நம்மில் வாழ்கிறார்; நாம் அவரில் வாழ்கின்றோம்.

1. கடவுள் திருமுன் மனிதன் வாழ்வதால் அவன் நிலைத்து வாழ்வதை அனுமதிக்கின்றார். சீயோனில் அவர் எழுப்பியுள்ள ஆலயத்தில் அவரது திருப்பெயர் நிலைத்துள்ளது; மாட்சியால் நிறைந்துள்ளது (உப 12:5-14; 1 அர 8:11; மத் 23:21). எனினும் இக்கோவிலும் தற்காலிகமானதே; இது மட்டுமன்று-ஒரு நாள் வரும், அன்று இக்கோவில் பாவத்தால் தீட்டுறும்; ஆண்டவர் மாட்சி அதனின்று நீங்கும்; மக்கள் நாடு கடத்தப்படுவர் (எச 8:1-11:12).

2. வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார் (யோவா 1:14). இறைவனாகிய தந்தை கிறிஸ்துவிலும், கிறிஸ்து தந்தையிலும் (யோவா 14:10) குடிகொள்வதால் இயேசு ''இம்மானுவேல்''. அதாவது கடவுள் நம்மோடு (மத் 1:23; ஏச 7:14) என அழைக்கப்படுகிறார். அவரது அரசுக்கு முடிவு இராது (லூக் 1:33). அவர் என்றுமே நிலைத்திருப்பார் (யோவா 12:34). ஆயினும் அவர் மனிதப் புலன்களுக்குட்பட்டு வாழும் நிலை முடிவுறும். ஏனெனில் தமது தந்தையின் இல்லத்தில் உள்ள உறைவிடங்களைத் தம்மவர்களுக்கு ஏற்பாடு செய்ய (யோவா 14:2 தொ) அவர்களை விட்டு அவர் விலக வேண்டும் (13:33).

3. தூய ஆவியார் நம்மோடு தங்கி, நம்முள் வாழ (யோவா 14:17) கிறிஸ்து தந்தையிடம் திரும்புவது இன்றியமையாதது (16:7). கிறிஸ்துவிடமிருந்து அபிடேகம் பெற்றதால் (1 யோவா 2:27 தொ) ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவரது தசையை உண்டால் (யோவா 6:27-56), அவரைப்போலவே வாழ்ந்தால் (யோவா 2:6), பாவத்தை விடுத்து (3:6) அவரது அன்பில் வாழ்ந்தால் (யோவா 3:6), அவரது சொற்களைக் கடைப்பிடித்தால் (14:15-23; 1 யோவா 3:24) என்றும் அவரில் நிலைத்திருப்பான். இதன் காரணமாகக் கிறிஸ்துவுடனும், தூய ஆவியருடனும் சேர்ந்து இறைவனாகிய தந்தை அவனில் குடிகொள்கிறார் (யோவா 14:23). திராட்சைக் கொடிக்கும், அதன் கிளைகளுக்கும் இடையே உள்ள நெருங்கிய பலன்தரும் பிணைப்பைப்போன்று கடவுளுக்கும் கிறிஸ்தவனுக்கும் இடையே ஓர் இணைப்பு உருவாகும் (15:4-7). இந்த இணைப்பே கிறிஸ்துவில் ஒருவன் நிலைத்து வாழ, அதாவது கனிதர (15:16), இறவாது என்றும் வாழச் (6:56 தொ) செய்கின்றது.

இவ்வாறு கடவுள் தன்மையில் நிறைவுடன் குடி கொண்டுள்ள கிறிஸ்து (கொலோ 1:19; 2:9) என்றென்றும் நிலைத்திருக்கும் (எபி 12:27 தொ) அரசைத் தொடங்கி வைக்கின்றார்; நிலையான நகரத்தைத் (எபி 11:10) தோற்றுவிக்கின்றார். அவரே அதன் ஒரே அடித்தளம் (ஏச 28:16; 1 கொரி 3:11; 1 பேதுரு 2:4).

குடிசை (HUT)

குடிசை என்பது தங்குதலுக்கு அல்லது இரவைக் கழித்தலுக்கு உரிய இடம் எனப் பொருள்படும். ஏச 24:20-இல் ஆசிரியர், வரவிருக்கும் பேரழிவின் கடுமையை முன்னோக்கும்போது, பூமியே ''குடிசைபோல் இடம் பெயர்ந்து செல்கிறது'' என்கிறார். குடிசையைக் குறிக்கும் எபிரேயச்சொல், ஏச 1:8-இல் மட்டும் வருகிறது.

குடிமயக்கம் (DRUNKENNESS)

குடிப்பதன் ஆபத்துக்கள் விவிலியத்தின் பல பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். இத்தகையதொரு நிலையானது மனிதனை, அவனுடைய உணர்ச்சியின் தீய ஆற்றலுக்கும் அவனது பகைவரின் கைகளிலும் கையளிக்கின்றது. இறைவாக்கினரிடையே குடிமயக்கமானது அடிக்கடி, சட்டத்துக்குப் புறம்பான சடங்குகளுடனும் (ஆமோ 2:8; ஓசே 4:11; திருவெளி 17:2), சமுதாயத்தின் இழிவடைந்த நிலையுடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழ்நிலையில் குடிமயக்கமானது அடையாள மதிப்பினை ஏற்கலாம்.

1. குடிமயக்கமும் இடர்ப்பாடும்:- குடிமயக்கமானது ஒரு நபரை ஏளனத்திற்கு உள்

ளாக்குகிறது. விவிலியமானது இடர்ப்பாட்டில் வெட்கத்தின் ஒரு தோற்றத்தை எப்போதுமே காண்கிறது. குடித்த மனிதனும், இடர்ப்பாடுமிக்கவனும் முகமதிப்பு, சம நிலை மற்றும் நல்லதோற்றத்தைப் பாதுகாக்கின்ற அனைத்தையும் இழக்கின்றனர். இரு வித மனிதரும் எடுத்துக்காட்டுகளாலும் காட்சிப் பொருளாகவும் ஆகின்றனர். ஒரு மனிதன் மற்றவனை வெட்கக்கேட்டிற்கு உள்ளாக்குவதற்கென அவனைக் குடிக்கச் செய்ய முடியும். ஆண்டவர் தயாரிக்கின்ற இடர்ப்பாட்டினை விவரிப்பதற்கென அப *2:15-16*, இத்தகையதொரு சூழ்நிலையினை எடுத்துரைக்கின்றது. அப்போது ஒருவன் 'சினத்தினுடைய கிண்ணத்தை' அருந்தலாம் *(எரே 25:27-28; 51:7)*. ஆண்டவரது வார்த்தைகள் வரவிருக்கும் இடர்ப்பாட்டினை இத்தகைய தீவிரமான வழியில் அறிவிப்பதன் காரணமாக, ''ஆண்டவர் மற்றும் அவரது வார்த்தைகளின் காரணமாய்'' *(எரே 23:9)*, எரேமியா குடித்தவனைப் போலாகிறார். எல்லா எதிர்ப்பும் வீணானது மற்றும் அனைத்து அறிமுகமான சாதனைகளும் மறைந்துவிடும் என்பதுபோல, மண்ணுலகமே ஒருவரது பாதங்களின் கீழ்ச் செயல்படுவதுபோல் தோன்றுகிறது. இறுதி நாள் ஏற்கனவே நம்மீது இருப்பதுபோலவும் தோன்றுகிறது *(ஏச 24:19 தொ)*.

2. குடி மயக்கமும், விழிப்புணர்வும்:-

ஓர் ஒழுக்கநெறி எச்சரிக்கை குடிமயக்கமானது நினைவிழக்கச் செய்யலாம், அதனின்று அதிகம் ஊடுருவக்கூடிய உண்மைகளையும் கொணரக்கூடும். அரேபிய அரசன் இலமுவேலின் தாய், கடும் குடிபானங்களில் மறக்கச்செய்யும் ஒரு சாதனத்தைக் காண்கிறார். பேரழிவுகளால் துன்புறுகிறவர்களுக்கு நாம் இதனை அளிக்கலாம். ஆனால், அரசர்களும், இளவரசர்களும், தங்களது அறிவிப்புகளையே மறந்து, நீதியைத் தவறாக விளக்கக்கூடிய அச்சத்தினால் அவற்றைத் தவிர்த்தனர் *(பழ 31:4-7)*. ஏசயா இதற்குமேலும் செல்கிறார். குடித்த மனிதன் மறப்பது ஆண்டவரின் திட்டத்தையே *(ஏச 5:12)*. குடிமயக்கமானது 'தளர்ச்சி மற்றும் குழப்பம் ஆகியவற்றினுடைய நோய்க்குறி மற்றும் சாயலாகும் *(ஏச 19:14; 29:10; எரே 13:13; யோவே 1:5)*. இதே முறையில் புதிய ஏற்பாடானது, உலகில் நிகழ்கின்ற, நிகழவிருக்கின்ற மீட்பில் கிறிஸ்தவனை உறுதியாக நிலைப்படுத்தியுள்ள விழிப்புணர்ச்சியைக் கைவிடுதலைக் குடிமயக்கத்தில் காண்கிறது. காத்திருந்தது போதும் என்று எண்ணி, குடிக்க ஆரம்பிக்கின்ற மனிதன், கிறிஸ்து வருவதை அப்போதுதான் கண்டுணர்கின்றான் *(மத் 24:45-51)*.கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அறியாதவர்களாக இல்லாமலிருக்க, இரவு செபத்தில் எடுக்கப்பட்டுள்ள பேதுருவின் அறிவுரையைப் பின்பற்றி *(1 பேதுரு 5:8)*, குடிமயக்கமற்றவர்களாகவும் விழிப்புள்ளவர்களாயும் நாம் இருக்கவேண்டும்: ''தூங்குபவர்கள் இரவில்தான் தூங்குவார்கள்; குடிகாரர் இரவில் தான் குடிப்பார்கள்'' *(1 தெச 5:6-7; உரோ 13:13)*.

3. குடிமயக்கமும் ஆவியும்:-

குடிமயக்கம் ஒருவனை அரசினின்று புறம்பாக்குகிறது *(1 கொரி 5:11; 6:10; உரோ 13:13; கலா 5:21; 1 பேதுரு 4:3)*. ஆனாலும் புனிதத்தின் ஆளுகைக்குள் ஊடுருவிச் செல்ல இது முயல்கிறது. கொரிந்தியர்கள் தங்களுடைய அன்பு விருந்திற்குக் குடித்துவிட்டு வந்தனர் *(1 கொரி 11:21)*. எருசலேமில் பெந்தகொஸ்தே நாளில் கூடியிருந்த மக்கள் திரளில் சிலர், ஏளனம் செய்யும் விதமாக, ஆவியின் விளைவுகளைக் குடிமயக்கத்திற்குச் சாற்றிக் கூறினர் *(அ.ப.2:13-15)*. ஆயினும், இவ்விடத்தில் ஏளனத்தைக் கொண்டு வந்தது இனிமேலும் குடிமயக்கமாக இல்லாமல் ஆவியின் விடுவிக்கும் பிரசன்னமாக உள்ளது. ஆவியின் முழுமையை நாடுவதற்குக் குடிமயக்கத்தினைத் தடை செய்யும் போதும், பவுல் அதே உறவினைச் சுட்டுகிறார் *(எபே 5:18)*. மனிதன் தனது உள்மனதின் அறிவையும், தன் பேச்சுச் சுதந்தரத்தையும் தனது முழு மனித நிலையையும் இடையூறுபடுத்துகின்றவற்றினின்று விடுதலை பெறுதலையும் குடிமயக்கத்தில் நாடுகிறான். அந்நிலையில், உன்னத சங்கீதம் அன்புடன் இணைக்கின்ற மகிழ்ச்சியை

அவன் காண்கிறான் (உ.ச. 5:1). ஆனால், ஆவியானவர் மட்டுமே இந்த நிறைவை அவனுக்கு உண்மையில் கொண்டுவர முடியும்.

குடியானவன் (FARMER)

நிலத்தைப் பண்படுத்துகிறவன். 'விளைச்சலின் பலனை முதலில் பெறவேண்டியவன்' (2 தீமோ 2:6; யாக் 5:7) என்பதிலும், 'கொடிய குத்தகைக்காரர்' என்ற உவமையிலும் (மத் 21:33 தொ; மாற் 12:1 தொ; லூக் 20:9 தொ) 'திராட்சைக் கொடியும், அதன் கிளைகளும்' என்ற தொடர் உவமையிலும், 'திராட்சை விளைவிப்பவர்களிலும்' (யோவா 15:17; காண் 1 கொரி 3:6-9) இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

குடியிருப்பு (COLONY)

உரோமைய குடியிருப்புகள், யூலியு சீசரின் முயற்சியினால் தொடங்கின; நிலமும் வேலையும் குறைந்த விலைக்குக் கிடைத்ததால் இந்தக் குடியிருப்புகள் ஏற்பட்டன. இந்தக் குடியிருப்புக்கள் உரோமைய மாகாணங்களில் நிறுவப்பட்டன. இதனால் உரோமையின் மக்கள் தொகையைக் குறைக்கவும், இத்தாலிக்கு வெளியில் உரோமையின் பண்பாட்டைப் பரப்பவும் முடிந்தது. இவைகளில் பெரும்பாலானவை, 20 குடியிருப்புகள், மேற்கில் அமைந்தன. கிழக்கில் இக்குடியிருப்புகளில் கொரிந்தும் பிலிப்பையும் அடங்கும்.

அகுஸ்து, சீசரின் கொள்கையைப் பின்பற்றினார். இவர் தன் வேலையைப் பெருமையடித்துக்கொண்டு ''அரச நடவடிக்கையில்'' இவ்வாறு எழுதுகின்றார்: ''நான் போர் வீரர்களுடைய குடியிருப்புகளை ஆப்பிரிக்காவிலும், சிசிலியிலும், மகத்தோனியாவிலும், இஸ்பானியாவிலும், அக்காயாவிலும், ஆசியாவிலும், சீரியாவிலும், கல்லியாவிலும், நர்போனேசியாவிலும், பிசிதியாவிலும் ஏற்படுத்தியுள்ளேன்; இவை புகழ்பெற்றும், மக்கள் தொகை நிறைந்தும் காணப்படுகின்றன''. மேலும், அவர்களுடைய ஆட்சியில் இத்தாலியில் 28 குடியிருப்புகளை நிறுவினார். அந்தியோக்கியா (பிசிதியா), இலிசித்திரா, துரோவா, சிரக்கூசா ஆகியவை அகுஸ்து ஏற்படுத்திய குடியிருப்புகளாக அப்போஸ்தலர் பணியில் சொல்லப்பட்டுள்ளன. தோலாமேய் கிளாதியுவனால் குடியிருப்பாக்கப்பட்டது. இக்கோனியாவும் கிளாதியுவினால் குடியிருப்பாக்கப்பட்டதா அதிரியன்னால் ஆக்கப்பட்டதா என்று உறுதியாகக் கூறமுடியாது.

இந்தக் குடியிருப்புகளைத் தவிர மற்றவையும் உரோமைக் குடியிருப்புகள் என்று வெறுமனே அழைக்கப்பட்டன; இதனால் அவர்களுக்கு உரோமையிடமிருந்த உறவு உறுதிப்படுத்தப்பட்டது. அவற்றின் குடிமக்கள் மேன்மைப்படுத்தப்பட்டனர். இந்தப் பழக்கமானது கிழக்கைவிட மேற்கில் அதிகமாக இருந்தது.

இந்தக் குடியிருப்புகள் தன்னாட்சியைக் கொண்டிருந்தன. சில வரிவிலக்கும் கொண்டிருந்தன; இத்தாலியா சட்டத்தைக்கூட பயன்படுத்த உரிமைபெற்றிருந்தன. அ.ப. 16:12-40-இல் இது போன்ற ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கின்றோம்.

குடியுரிமை (CITIZENSHIP)

உரோமை அல்லது கிரேக்க நாட்டுக் குடிமகனாக இருக்கும் உரிமையாகும். பவுல் பிறப்பால் உரோமைக் குடியுரிமை பெற்றிருந்ததாக அ.ப. 22:28 குறிப்பிடுகிறது. மாற்கு அந்தோனி இந்தக் குடியுரிமை தனிப்பட்ட மனிதர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே கொடுத்தார் எனச் சிசரோ குறிப்பிடுகிறார். சுயுடோனியு ''சீசர் உரோமையில் இருந்த மருத்துவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பிறகலைஞர்களுக்கும் குடியுரிமை வழங்கினார்'' என்று கூறியுள்ளார். இவைகள், எப்படிக் குடியுரிமை வழங்கப்பட்டன என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகள் ஆகும். கிளாதியு குடியுரிமை வழங்குதலை மேலும் விரிவுபடுத்தினார். குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் போர் வீரர்கள், அவர்கள் படையிலிருந்து விடுவிக்கப்பட்டபின் குடியுரிமை பெற்றார்கள். பேரரசரின் மனைவி மெச

வினா முதலில் பெரிய தொகைக்கும், பின்பு ''கண்ணாடித் துண்டுகளுக்கும்கூட'' குடியுரிமையை விற்றார். இந்தச் சூழ்நிலையில் கிளாதியு இலிசியா பணம் கொடுத்துக் குடியுரிமை வாங்கியிருக்கலாம் (அ.ப.22:28).

குடியுரிமை பெற்றதற்கான அடையாளம் ஏதாவது மக்கள் வைத்திருந்தார்களா என்று தெரியவில்லை. ஒருவேளை தற்காலத்துப் 'பாஸ்போர்ட்' போல ஏதாவது வைத்திருக்கலாம். கிளாதியுவின் ஆட்சியின்போது, போலியாகக் குடியுரிமை கொண்டாடியவர்கள் பலர் தண்டிக்கப்பட்டார்கள்.

குடியுரிமை பெற்ற எவரையும் விசாரணை இன்றித் தண்டிக்கக்கூடாது. அ.ப. 16:39-இல் பிலிப்பியைச் சார்ந்த நடுவர்கள், பவுல் உரோமைக் குடியுரிமை பெற்றார் என்பதை அறிந்து அவருக்குத் தண்டனை கொடுத்ததற்காக அவரிடம் மன்னிப்புக் கேட்கிறார்கள். குடியுரிமை பெற்றவனைச் சாட்டையால் அடித்தோ, கட்டிவைத்தோ (அ.ப. 22:24-29), விசாரிக்கக்கூடாது. ஆனால் சட்டத்திற்கு விரோதமாகப் பவுல் மூன்று முறை நடுவர்களால் தான் அடிக்கப்பட்டதாக குறிப்பிடுகிறார் (2 கொரி 11:25). உரோமைக் குடியுரிமை பெற்றிருந்தால் சீசரிடம் நேரடியாக முறையிடுவதற்கு உரிமை இருந்தது (அ.ப. 25:10-12). ஒரு தடவை இந்த உரிமையைப் பயன்படுத்தினால், அந்தக் கோரிக்கையைத் திரும்பப் பெறமுடியாது (அ.ப. 26:32). கிளாதியு மன்னனின் ஆட்சியின்போது உரோதின் தன்னாட்சி நீக்கப்பட்டதற்குக் காரணம் அங்கு, சில உரோமைக் குடிமக்கள் தூக்கிலிடப்பட்டார்கள்,

அ.ப. 21:39-இன்படி பவுல் சிலிசியாவின் தலைநகரான தார்சுவின் குடியுரிமை பெற்றிருந்தார். அ.ப. 22:3-இல் பவுல் அங்குப் பிறந்ததாகக் கூறப்படுகிறது. முதல் நூற்றாண்டின் இறுதியில் குறைந்தபட்சம் 500 திராக்குமாக்கள் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே தார்சு நகரக் குடியுரிமை வழங்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பகுதியின் குடியுரிமை பெற, அந்தப் பகுதியில் வாழும் இனத்தவரைச் சார்ந்தவராக இருக்கவேண்டும். அத்தகைய இனத்தவரின் சமயப்பண்பு காரணமாகத் தார்சு நகரம் யூதர்கள் மட்டும் வாழ்ந்த ஒரு நகராக இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

இவ்வாறாகப் பவுல் தார்சு நகரில் உள்ள யூத இனத்தவரைச் சார்ந்தவராக இருந்திருக்கவேண்டும் (அ.ப. 26:4). ஆனால் அவர் தார்சு குடியுரிமையும், உரோமைக் குடியுரிமையும் பெற்றிருந்தார். நகர அரசுகள் இணையும் போது, இப்படி இரண்டு விதக் குடியுரிமைகள் வழங்குவது கிரேக்க உலகில் அப்போது இருந்தது. பவுல் ஒரு குடியுரிமை பெற்ற மனிதராக இருந்தது, அவர் புறவினத்தாரின் அப்போஸ்தலராக ஆவதற்குப் பொருத்தமான கூறாக அமைந்தது.

குடில், குடிசை, பந்தல், கூடாரம் (BOOTH)

மனிதர்களுக்கும் (யோனா 4:5) ஆடுமாடுகளுக்கும் (ஆதி 33:17) குறிப்பாகப் போர்க்களங்களில் வீரர்களுக்கும் (2 சாமு 11:11; 1 அர 20:12.16) அமைக்கப்படும் தற்காலிகக் கூரையாகும். இது மிலாறு, கிளைகளால் அமைக்கப்பட்டுக் குச்சிக்கால்களால் தாங்கப்பட்டிருக்கும். ஏச 1:8-இல் குடிசை கைவிடப்பட்ட நிலைக்கு உருவகமாகும். யோபு 27:18-இல் இது சிலந்திக் கூடுபோல் மெல்லிய நம்ப முடியாதபொருள்களுக்கு உருவகமாகிறது. குடிசைகள் அறுவடை செய்யப்படக் காத்திருக்கும் விளைச்சலைக் காவல் காப்போர் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. கூடாரவிழா அல்லது சேகரிக்கும் விழா என்ற விழாவில் பின்னப்பட்ட கிளைகளைக் கொண்டு இக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன (லேவி 23:40.42; நெக 8:15).

குடும்பம் (FAMILY)

விவிலிய காலத்தில் இஸ்ராயேலில் சமூக அடிப்படை அமைப்பாகும். இது வீடு, தந்தையின் வீடு, இனம் போன்ற சொற்களாலும் குறிக்கப்படும்.

1. ''கரு''வான குடும்பம்:-

இது மிகச் சிறிய குடும்ப அமைப்பாகும்.

இது தனக்கே உரிய உறைவிடத்தைக் கொண்டிருந்தது. இக்கருவான குடும்பத்தில் பெற்றோர் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் அடங்குவர். சில சமயம் அடிமைகள், விருந்தாளிகள் போன்ற உறவினர் அல்லாதோரும் ஒரே வீட்டில் வாழ்ந்தனர். தொல்பொருள் ஆய்வுகள், ஆறு அல்லது ஏழுபேர் சேர்ந்து வாழ்ந்ததற்கான சான்றுகளைத் தருகின்றன. இந்தக் கருக்குடும்பத்தில் பிள்ளைகள் சமூக உணர்வுபெற, அவர்களுக்கு அவர்கள் இனத்தைச் சேர்ந்த பழக்கவழக்கங்களையும், பழங்கதைகளையும் (பழ 1:8; 6:20), இஸ்ராயேலோடு இறைவன் செயலாற்றியது பற்றிய கதைகளையும் (யாத் 10:2; 12:26; 13:8; உப 4:9; 6:7.20-25; 32:7.46) கற்றுக் கொடுத்துப் பயிற்சி அளித்தனர். அரசர்கள் ஆட்சிக் காலம்வரை (கி.மு. 1020-586) இக்கருவான குடும்பங்கள் தங்களையே நிறைவுசெய்து கொள்ளும் பொருளாதாரம் உடையதாக இருந்தன. குடும்பம் பயிர்செய்த விவசாயப் பொருட்கள் வீட்டிலுள்ள சேமிப்பு இடங்களில் சேர்த்துவைக்கப்பட்டன. வீட்டிற்குச் சொந்தமான விலங்குகளும் அங்கு வளர்க்கப்பட்டன.

இக்கருக்குடும்பத்தின் தந்தையே பெரும்பாலான அதிகாரத்தைக் கொண்டிருந்தார்; குழந்தைகள், மனைவிகள் மீது சட்டபூர்வமாக கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார். ஆனால் இந்த அதிகாரம் வரையற்றதன்று (யாத் 21:7-11; உப 21:15-21). பிள்ளைகள், தாய் தந்தையை மதிக்கவேண்டும்; அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். இவற்றில் தவறுதல் கடுமையாக நோக்கப்பட்டது (யாத் 20:14; லேவி 18:20; 20:10-21; உப 5:18; 22:22). ஆனால் விவாகரத்தால் குடும்பங்கள் கலைக்கப்படலாம் (உப 24:1-4).

பிள்ளைகள், திருமணமாகும்வரை தந்தையின் கட்டுப்பாட்டிலிருந்தனர். திருமணத்திற்குப்பின், அவர்கள் புதுக்குடும்பங்களை அமைத்தனர். திருமணம் கவனமாய் முறைப்படுத்தப்பட்டது (லேவி 18). தொடக்ககால இஸ்ராயேலில் பல மனைவியரைக் கொள்ளுதல் சாதாரணமாய் வழக்கில் இருந்தது (ஆதி 4:19; 16:1-2; 22:20-24; 25:13.6; 29:15-30). ஆனால் அரசாட்சிக்காலத்தில், இவ்வழக்கம் அரசுகுடும்பங்களில் மட்டுமே நிலவியதாகத் தெரிகிறது. திருமணத்திற்குப்பிற்பாடும் பிள்ளைகள் பெற்றோரை மதிக்கவேண்டும், அவர்களது முதுமையில் அவர்களைப் பேணவேண்டும் என்ற அறவுரை கூறப்படுகிறது (பழ 23:22).

2. விரிவான குடும்பம்:-

இது ஒரே மூதாதையரிடமிருந்து தோன்றிய இரண்டு அல்லது மூன்று கருவான குடும்பங்களின் கூட்டமைப்பாகும். இது ''தந்தையின் வீடு'' என்றழைக்கப்பட்டது. இந்த விரிவான குடும்பத்தின் நபர்கள் சில சமயம் அருகருகே அமைந்த வீடுகளில் வாழ்ந்தனர். ஆனால் இது பொதுவான பழக்கமன்று. சில சமயம் இவர்கள் ஒரே தொழிலைச் செய்தனர் (1 நாள் 4:14.21.23). இந்த விரிவான குடும்பம் ஒரு கூட்டமைப்பாகச் செயல்பட்டது. அதன் ஒற்றுமையைப் பாதுகாக்க அதற்குச் சில சட்ட உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் ஒரு கருவான குடும்பம் தன் சொத்தை விற்கக் கட்டாயப்படுத்தப்பட்டபோது; விரிவான குடும்பம் அதை மீட்க உரிமைபெற்றிருந்தது. இதனால் சொத்து விரிவான குடும்பத்துக்குள்ளேயே இருந்தது (லேவி 22:25; எரே 32:6-15). தனி நபருக்கு அடிமையாக விற்கப்படும் நிலை ஏற்பட்டபோது, அவரை விரிவான குடும்ப நபர் மீட்கலாம். தொடக்க காலத்திலாவது, ஒரு நபருக்குச் செய்யப்பட்ட தீமைக்குப் பழிவாங்க விரிவான குடும்பத்திற்கு உரிமையிருந்தது (லேவி 25:47-49). யாரிடமிருந்து இந்தக் கருவான குடும்பங்கள் தோன்றினவோ, அவரே விவான குடும்பத்தின் மீது அதிகாரம் செலுத்தினார். அவர் உயிருடன் இல்லையென்றால் கருவான குடும்பங்களின் தலைவர்கள் சேர்ந்து அதிகாரம் செலுத்தினர்.

3. குலமும் கோத்திரமும்:-

சில சமயம் பல விரிவான குடும்பங்கள் சேர்ந்து ஒரு குலமாக அமைந்தன. இந்த அமைப்பில், அங்கத்தினர்களின் தலை

முறைப்பட்டியல் ஒரே குலத்தலைவரைக் கொண்டிருந்தது. ஆனால் குலம் என்ற அளவில், உண்மையான இரத்த உறவைத் தவிர்த்த கூறுகளும் குழு ஒற்றுமையை அமைப்பதில் பங்கு பெற்றன. ஒரு குலத்தைச் சேர்ந்த நபர்கள் சாதாரணமாய் ஒரு புவியியல் பகுதியில் வாழ்ந்தனர். சில சமயம் ஒரு கிராமம் முழுவதும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களைக்கொண்டிருந்தது (நீதி 18:11-13). குலம், புறத்திலிருந்து தாக்கப்படுவதிலிருந்து பாதுகாத்துக்கொள்ளப்பயன்பட்டிருக்கலாம். மற்றப்படி அதிகமாகப் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

குலத்திற்கு அப்பால், குடும்பம் என்ற உருவகம் கோத்திரத்திற்கும் இஸ்ரயேல் என்ற நாட்டுக்கும் சாற்றிக் கூறப்படுகிறது. சிக்கல்மிக்க பிரிவுபட்ட தலைமுறைப்பட்டியலோடு கூடிய ஒரு பெரும் குடும்பமாக மக்கள் தொகுப்பு முழுவதும் கருதப்பட்டது (ஆதி 46:8-27; எண் 26:5-62; 1 நாள் 1-9). இந்தக் குழுக்களில் அடங்கிய மக்களின் பெரும் எண்ணிக்கையினால், இந்தக் குழுக்கள் சமூக அமைப்புக்களாக எவ்வளவு திறமையாகச் செயல்பட்டன என்று கூறுவது கடினம்.

குலம், கோத்திரம் ஆகியவற்றின் சில அதிகாரங்கள் அரசாட்சியால் எடுத்துக் கொள்ளப்பட்டாலும், கருவான குடும்பம், விரிவான குடும்பம் ஆகியவை இஸ்ராயேல் வரலாறு முழுவதும் பழுதுபடாமல் நிலைத்திருந்ததாகத் தெரிகிறது. இஸ்ராயேலின் அமைப்பில் நாடு கடத்தப்படுதல் பல மாற்றங்களை ஏற்படுத்தியபின்னும் மக்களின் ஒருமையை நிலைப்படுத்துவதில் குடும்பம் அதிகமான பங்கு வகித்திருக்கிறது.

4. புதிய ஏற்பாட்டில்:-

பழைய ஏற்பாடு குடும்பத்தை நோக்கிய விதத்திலிருந்து ஓரளவு வேறுபட்ட விதத்தில் புதிய ஏற்பாடு அதை நோக்குகிறது. ஒருபுறம் குடும்பத்திற்குக் காட்டும் பிரமாணிக்கம், நற்செய்திக்குக் காட்டும் பிரமாணிக்கத்திற்குக் கட்டுப்பட்டதே என்று இயேசு கூறுகிறார் (மத் 10:34-39; மாற் 3:31-35; லூக் 12:49-53), மறுபுறம் பெற்றோருக்கு மரியாதை காட்டும் கட்டளையை எடுத்துப் போதிக்கிறார். இதனால் பாரம்பரிய யூதக் குடும்ப அமைப்பை ஆதரிக்கிறார் (மத் 19:16-22; லூக் 18:18-30). தொடக்ககாலத் திருச்சபை, குடும்பத்தைப் பேணுவதை ஒரு நற்செயலாகக் கருதியது (1 திமோ 5:8). ஆனால் குடும்பம் பற்றிய பாரம்பரியக் கருத்தை மாற்றி, கிறிஸ்தவ சமூகத்தை ஒரு புதிய குடும்பமாக நோக்குகிறது (கலா 6:10; எபே 2:19). எல்லா விசுவாசிகளும் இறைவனது வீட்டைச் சேர்ந்தவர்கள்: விசுவாசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

குடை கால்வாய் (WATER SHAFT)

சுனையிலிருந்து நகருக்குள் நீர்கொண்டு வரப் பயன்படும் ஓர் அமைப்பு ஆகும். இத்தகைய நிலத்தடிக் குடை கால்வாய்கள் அல்லது சுரங்கக் கால்வாய்கள் அகழ்வாராய்ச்சியின்போது கெசர், கிபயோன், எருசலேம், மெகிதோபோன்ற பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (2 சாமு 5:8).

குட்டி (COLT)

குதிரையினுடைய குட்டி அல்லது குதிரையைப் போன்ற விலங்குகளின் குட்டிகள். பழைய ஏற்பாட்டில் இது ஒட்டகக் குட்டிகளையும் (ஆதி 32:15), வீட்டுக் கழுதைக் குட்டிகளையும் (ஆதி 49:11; செக் 9:9) காட்டுக் கழுதைக் குட்டிகளையும் குறிக்கும் (யோபு 11:12).

இயேசு எருசலேமிற்குள் நுழைவதற்குப் பயன்படுத்திய விலங்கு இவ்வாறு அழைக்கப்படுகின்றது (மாற் 11:2). இதன் தொடர்பாக இரண்டு நற்செய்தியாளர்கள் செக் 9:9 என்ற பகுதியை எடுத்துக்கூறுகின்றனர் (மத் 21:5; யோவா 12:15). மத் 21:2; யோவா 12:14-இல் இது ஒரு கழுதைக் குட்டி என்று சொல்கின்றார்கள். ஆனால் மாற்கும், லூக்காவும் எந்த அடைமொழியுமின்றிக் குறிப்பிடுகின்றனர்.

குணமளிக்கும் வரம் (GIFT OF HEALING)

ஆதித்திருச்சபையிலே இந்தக் குணமளிக்கும் வரம் பலருக்கு இருந்ததை நாம் அறிகிறோம் (அ.ப. 2:22; 3:16; 4:30). தேவ வரங்களில் இதுவும் ஒன்றாகப் பவுல் கூறுகின்றார் (1 கொரி 12:9.28).

இயேசு பலருக்குக் குணமளித்த நிகழ்ச்சிகளை நாம் வாசிக்கிறோம் (மாற் 1.29-32. 40-45). ''நோய் தீர்ப்பதற்கென ஆண்டவரின் வல்லமை அவரோடிருந்தது'' என லூக்கா கூறுகின்றார் (5:17). இதை அவரின் எதிரிகள் பேயின் சக்தி என்றனர் (மாற் 3:22). ஆனால் இயேசுவே ''கடவுளின் வல்லமையால் செய்தேன்'' என்றார் (மத் 12:28; லூக் 11:20). ஆவியின் ஆற்றலில் தமது பணியைத் தொடங்கினார் (மாற் 1:10; லூக் 4:18-19). இறையரசை அறிவித்தார் (மாற் 1:15-15). இறைவனின் சட்டமாகிய ''ஆண்டவரின் அருள்தரும் ஆண்டு'' தொடங்கிவிட்டதற்குரிய அடையாளங்களில் குணமாக்குதலும் ஒன்று என்று உறுதியாகக் கூறுகிறார் (மத் 11:5; லூக் 4:19; 7:22). இதுவே புதிய காலத்தின் முன்னறிவிக்கப்பட்ட பண்பாகும் (ஏச 35:5-6; 61:1-2). இயேசு தம் சீடர்களைக் குணமளிக்கும் வல்லமையோடு அனுப்பினார் (மத் 10:1). அவர்களும் வெற்றி பெறுகின்றனர் (மாற் 6:13). இவ்வெற்றியே இறையரசு நெருங்கியுள்ளது என்பதற்குச் சான்றாகும் (லூக் 10:9).

ஆதித்திருச்சபையிலேயும் இப்பணி தொடர்ந்தது. இது பரிசுத்த ஆவியின் கொடையாகவே கருதப்பட்டது (1 கொரி 12:10.28). இந்த ஆவியைக் ''கடவுளின் வல்லமையால் உயர்த்தப்பெற்றவர்'' அளிக்கிறார் (அ.ப. 2:33). குணமளிக்கும் வரம் உள்ளிட்ட பெருஞ்செயல்கள் மெசியாக் காலத்தின் அடையாளங்களாகும் (அ.ப. 2:16-21; யோவே 2:18-31). பரம தந்தை விசுவாசிகளைத் ''தம் அன்பார்ந்த மகனுடைய அரசில் கொண்டு வந்து சேர்த்தார்'' (கொலோ 1:13); ''வரவிருக்கும் உலகத்தைச் சார்ந்த ஆற்றல்கள்'' (எபி 6:5) நிகழ்காலத்திற்குள் புகுந்துவிட்டன. கிறிஸ்துவின் ஆற்றல், அவரில் விசுவசிப்பவர்களுக்கு அளிக்கப்படுகிறது. பேதுரு, பவுல், பிலிப்பு ஆகியோர் பிறரைக் குணமாக்குவதைக் கண்டு மக்கள் வியப்பெய்துகின்றனர் (அ.ப. 3:11; 5:15; 8:9-13; 14:8-10). ''இயேசுவின் பெயர் மீதுள்ள விசுவாசம்'' (அ.ப. 3:6.16; மத் 9:27-31; மாற் 5:34; 9:14-27), செபம் மற்றும் எண்ணெயால் பூசுதல் (யாக் 5:14-15; மாற் 6:13), ''கைகளை வைத்தல்'' (அ.ப. 9:12.17; 28:8; மத் 9:18; மாற் 5:23) முதலியவை குணமாக்குதலில் பயன்படுகின்றன. குணமளிப்பதும் பாவங்களுக்கு மன்னிப்பும் சேர்ந்து போகின்றன (யாக் 5:16; மாற் 2:3-12; சங் 103:3).

குணமளிக்கும் புதிய ஏற்பாட்டுக்கொடைகள் இயேசுவின் தூது மற்றும் செய்தியின் முழுமையைச் சேர்ந்ததாகும். அவை நிறைவேறுவது தொடக்க காலத் திருச்சபையின் உணர்வுபூர்வமான அனுபவமாகும். அவற்றை உளவியல் நோய் மருத்துவம் விசுவாச குணமாக்குதல் ஆகியவற்றோடு குழப்பிவிடக்கூடாது.

குணமளித்தல் (HEALING, HEALTH)

காயத்தை ஆற்றுவதாலோ, தகுந்த சிகிச்சை அளிப்பதாலோ ஒரு நோயினின்று விடுதலை அளிப்பதே குணமளித்தல். குணமாக இருப்பது, சௌக்கியமாக இருப்பது என்பது வியாதியின்றி இருப்பது மட்டுமல்ல; மாறாக ஒருவரின் உடல் உள்ள நிலை சீராகப் பணிபுரிவதையே இது குறிக்கும்.

ஆரோக்கியமான வாழ்வு மேற்காசிய நாடுகளில் எல்லோராலும் போற்றப்பட்ட ஒன்று. ஆரோக்கியம் ஒருவரின் நல்வாழ்விற்கு அடையாளமாகக் கொள்ளப்பட்டது. நோய் என்பது உடலின் ஏதாவது ஒரு பகுதியில் ஏற்படும் கோளாறு எனவும் கருதப்பட்டது. அக்கால அரசுகளும் தங்கள் குடிமக்களின் ஆரோக்கிய வாழ்விற்கு ஆவன செய்தன. முடியாதவர்களும், நோயுற்றோரும் மிகவும் இழிவாகக் கருதப்பட்டனர். எடுத்துக்காட்டான உடல்நலம், தாவீதை விவரிக்கும்போது கொடுக்கப்படுகிறது. ''அவன் யாழ் மீட்டுவதில் வல்லவன்; வீரமுள்ள

வன், போர்த்திறம் பெற்றவன், பேச்சுத்திறம் உடையவன்; அழகானவன். மேலும் ஆண்டவர் அவனோடு இருக்கிறார்'' (1 சாமு 16:18). சீரா 30:14. உலக நன்மைகளில் எல்லாம் நலம் மிகப்பெரியது என்று கருதுகிறது.

1. உடல் நலமும் நீண்ட வாழ்வும்:-

ஒருவனை ஆசிர்வதிக்க வேண்டுமென்றால் அவனின் ஆரோக்கிய வாழ்விற்காக வேண்டப்பட்டது. ''எங்கள் வாழ்நாள் 70 ஆண்டுகள்; வலிமையுடையோருக்கு 80 ஆண்டுகள்'' என்றும் சங் 90:10-இல் கூறப்பட்டுள்ளது. ஒரு மனிதன் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான வாழ்வை வாழ்கிறான் என்பதைக் குறிக்க அவன் நூற்றுப்பத்து ஆண்டுகள் வாழ்ந்தான் எனக் கூறப்பட்டது (ஆதி 50:26; 6:3). ஆனால் திருவுரை 12:1-8, முதிய வயதின் துன்பங்களை உருவகமாக எடுத்துக் கூறுகிறது.

மெசபொத்தாமியா, எகிப்து போன்ற நாடுகளில் பல தொத்து வியாதிகள் தோன்றியதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால் பாலஸ்தீனத்தில் இவ்வாறு காணப்படவில்லை, இதற்கு, அதன் சுற்றுப்புறச் சூழ்நிலை காரணமாய் இருக்கலாம். ஆனாலும் வேறு நாட்டிலிருந்து சில வியாதிகள் பாலஸ்தீனத்தில் பரவியிருக்கலாம். எனவே பழங்கால எபிரேயர்கள் இக்காலத்தைவிட ஆரோக்கியமான வாழ்வு வாழ்ந்தார்கள் என்று உறுதியாகச் சொல்லமுடியாது.

பழங்காலத்தில் நோய் என்பது பாவிகளுக்கு இறைவன் தரும் தண்டனை என்றே கருதப்பட்டது (யோபு 2:7). கடவுளின் உத்தரவோடுதான் தீய ஆவிகள் மனிதனை ஆட்கொண்டிருக்கின்றன எனவும் எண்ணப்பட்டது (மாற் 9:17). பெற்றோரின் பாவங்களாலும், தனிநபரின் பாவங்களாலும் ஒருவர் நோயால் வருந்தலாம் (யோவா 9:2; சீரா 37:30-31; யாத் 15:26).

சிலரின் கவனக்குறைவால் தனி மனிதனுக்கோ சமுதாயத்திற்கோ ஏற்படும் நோய்களைத் தவிர்ப்பதற்காக அவர்களின் ஆரோக்கிய வாழ்விற்காக மோசேயின் சட்டத்தில் சில விதிகள் உள்ளன. இது பழங்கால மருத்துவ அறிவைப் பிரதிபலிக்கிறது. இச்சட்டம் நோய்களை, மாய மந்திரங்களிலிருந்து வேறுபடுத்தியது. ஆனால் மக்களோ நோய் பேயின் சக்தியால்தான் ஏற்படுகிறது; எனவே கடவுளோடு ஒருவன் வைத்திருக்கும் தொடர்பினாலேயே இதைச் சமாளிக்க முடியும் எனக் கருதினர். நோய் வருமுன் பாதுகாப்பதையே பெரிதாகக் கருதினர். இது எவ்வாறு முடியுமென்றால் ஒருவன் கடவுளோடு கொண்டிருக்கும் தொடர்பினால் மட்டுமே இயலும். ஆனால் நோய் வந்தபின் அதைத் தடுக்க முயல்வது தவறு. எனவே மோசேயின் சட்டத்தில் கூறப்பட்டிருப்பது நோய்த்தடுப்பு முறையே எனக் கூறலாம். இந்த மருத்துவக் குறிப்புகளை நாம் லேவியராகமத்தில் காணலாம். இந்த மோசேயின் சட்டத்தில் ஏழு அடிப்படையான கூறுகளைக் காணலாம்.

அ) ஓய்வு நாள்:-

கடின உழைப்புக்குப்பின் மாதத்தில் ஒரு நாள் ஓய்வெடுப்பது அக்காதியான் மத ஒழுங்குகளில் ஒன்று (கி.மு. 2360-2180). எபிரேயர்களின் ஓய்வுநாள் முதலில் வளர்பிறையை ஒட்டியே அமைந்தது. ஓய்வு நாளன்று கடவுள் வழிபாட்டோடு உடல் ஓய்வும் தேவை என்று இச்சட்டம் வலியுறுத்துகிறது (யாத் 31:13-17; 23:12). இந்த ஓய்வு நாளுக்கு 2 நோக்கங்கள் உண்டு. 1) சமயக் கூறு:- மனிதன் ஓய்வு பெறுவதால் புத்துணர்ச்சி பெறுவான். அவன் உடலும் உள்ளமும் தெளிவு பெறும். 2) உடல்கூறு:- மனிதனின் வலிமை திறமை அழியாமல் காப்பதற்கு இது அனுசரிக்கப்பட்டது. இது மனிதனுக்கு உழைப்பிற்குப்பின் ஓய்வு அவசியம் என்னும் அரிய தத்துவத்தை விளக்குகிறது. இவ்வாறாக, ஓய்வு நாள் சட்டம் (களைப்பினால் வரும்) நோயைப் போக்க வழிவகுக்கும் ஒரு சிறந்த சட்டமாக உள்ளது. ஒவ்வொரு ஏழாவது ஆண்டும் நிலம் பயிர் சாகுபடியின்றி, விடப்பட்டது. ஏனெனில் நிலத்தில் உர, வளச்சத்து முழுவதும் உறிஞ்சி விடாதபடிக்கு இந்த முறை கையாளப்பட்டது (லேவி 25:2-7).

ஆ) இதைத்தவிர உண்ணும் உணவு வகைகள் பற்றிய சில சட்டங்களும் குறிப்பிடத்தக்கவை. இவை, மற்ற மேற்காசிய நாடுகளில் காணப்படுவதைவிட அறிவியலானதாகும். இந்தச் சட்டங்களின்படியே சில உணவுகள் அசுத்தமானவை என்றும் மற்றும் சில சுத்தமானவை எனவும் கூறப்பட்டது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள சமய காரணங்களைத் தவிர வேறு காரணங்கள் இருக்க முடியுமா என்ற கேள்விக்கு விடை விவிலியத்தில் காணப்படவில்லை. ஆனால், இது பழங்காலத்தில் இருந்த ஒரு பழக்கம் என்றே தெரிகிறது (ஆதி 7:2; லேவி 11:3-8; 14:4-8). தசையிலிருந்து இரத்தம் வடிந்த பின்னரே அந்த இறைச்சி சமைக்கத் தகுந்தது. மூச்சடைத்துச் செத்ததன் இறைச்சியை உண்ணலாகாது (உப 14:21; லேவி 11:13-19). இது அவர்களின் சமூக ஆரோக்கிய வாழ்வைக் கருதியே ஏற்படுத்தப்பட்டது எனச் சிலர் கருதுகின்றனர்.

வெப்ப மண்டலத்தைச் சார்ந்த இந்நாடுகளில் தாவரங்களை உண்டுவாழும் பிராணிகள், உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடும். குறிப்பாக யூதர்களுக்குப் புறம்பான பன்றி இறைச்சியில் பரவக்கூடிய பல வியாதிக் கிருமிகள் இருக்க வாய்ப்புண்டு. இப்பன்றி இறைச்சியில் உள்ள கிருமிகள் சில குடலில் வளர்ந்து தசைகளுக்குப் பரவிக் காய்ச்சல், கை கால்களில் உருண்டைவடிவான கட்டிகள் ஆகியவற்றை ஏற்படுத்தும். மற்றும் சில வியாதிகள் கிருமிகள் தாக்கப்பட்ட பிராணிகளைக் கடித்த கொசு மனிதரைக் கடிப்பதாலும், அத்தகைய பிராணிகளின் இறந்த உடல்களை மனிதன் இயல்பாய்த் தொடுவதாலும் பரவலாம். இந்த வெப்பநிலையில் எந்தக் குளிர்சாதன முறையுமின்றி இறைச்சியை நீண்டநாள் வைத்திருக்க முடியாது. இத்தகைய ஒரு சூழ்நிலையிலே எபிரேயர்களின் உடல் நலத்தைக் காக்கவே இத்தகைய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன (லேவி 11:31-38). இத்தகைய ஓர் ஒழுங்கு வெப்பமண்டலத்தில் உள்ள நாடுகளுக்கு அவசியமான ஒன்று.

இ) விருத்தசேதனம் என்பது வெறும் சமயச் சடங்கு மட்டுமல்ல. அவர்கள் சமூகத்தில் சேருவதைக் குறிக்கும் ஒரு வெளி அடையாளமும் ஆகும். எகிப்தியர்கள் இதை நாகரீக மக்களின் சின்னமாகக் கருதினர். இஸ்ராயேலுக்கு இது உடன்படிக்கையின் சின்னமாகவே விளங்கிற்று. இது மேக நோய், நச்சுப்பரு, பிளவை போன்ற நோய்களைத் தடுப்பதாகக் கருதப்பட்டது. நவீன மருத்துவத்தின்படி இது ஆண்குறியில் ஏற்படும் புற்றுநோயைத் தவிர்க்கும்.

ஈ) பாலுறவைப் பற்றிய சட்டங்கள்:- இவை குடும்பம் என்பது சமுதாயத்தை உருவாக்கும் ஒரு கூறு என்ற கருத்தைக் கொண்டே இயற்றப்பட்டன. பழங்காலத்தில் இருந்த சில பழக்கங்களை ஆதி 20:12-இல் காணலாம். இது லேவியரின் சட்டத்தால் புறக்கணிக்கப்பட்டது (லேவி 18:6-18). அவர்களின் உடன்படிக்கையின்படி அவர்கள் ஒழுக்கத்துடன் வாழவேண்டும். இதற்கு இச்சட்டங்கள் வழிசெய்தன. அவர்களைச் சுற்றி வாழ்ந்தமக்கள் நெறி தவறி வாழ்ந்த போது இவர்களுக்கு இந்தச் சட்டங்கள் தேவையாயின.

உ) பாலுறவு சுகாதாரம் பற்றிய சட்டங்கள், அவர்களின் ஆரோக்கிய வாழ்வைக் காப்பதற்கு அவசியமாயின (லேவி 15:16-18). அவர்களைச் சுற்றி வாழ்ந்தவர்கள் நெறிகெட்ட உடலுறவு கொண்டு சுகாதாரமாக இல்லாமல் வாழ்ந்ததால் அத்தகைய ஒரு பழக்கம் இஸ்ராயேலருக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற காரணத்திற்காக இச்சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன (லேவி 15:19-24; 20:18). மருத்துவ ரீதியாக, மாதவிடாய்க் காலத்தில் உடலுறவு கொள்பவனுக்குச் சிறுநீர்க் குழாயில் கோளாறுகள் ஏற்படக்கூடும் என்ற காரணத்தினால் இது தடைசெய்யப்பட்டிருந்தது.

ஊ) யூதர்களுக்குக் 'கழுவுதல்' என்பது முக்கியமானது. தீட்டுப்பட்டிருந்தால் தங்களைக் கழுவிவிட்டால் அது சரியாகிவிடும் எனக் கருதப்பட்டது. தொழுநோயாளி குண

மானபின் அவனை ஏற்றுக்கொள்ளும் சடங்கில் கழுவுதல் ஒரு முக்கியமான சடங்காகும் (லேவி 14:2-32; யாத் 30:18-21). இவையெல்லாம் நோய் பரவுவதைத்தடுப்பதையும், உடல்நலத்தை முன்னோக்காகக் கொண்டவையுமாகும்.

ஏ) பழங்கால நாடோடி மக்கள் தங்களின் சுகாதாரத்தைப் பற்றி அதிகம் கவலைகொள்ளவில்லை. எனவேதான் பல தொத்து நோய்கள் அவர்களிடையே பரவின. இந்த ஒரு சூழ்நிலையில்தான் மோசேயின் சட்டம் இஸ்ராயேலருக்கு ஒரு தனிச் சுகாதாரச் சட்டத்தை வகுத்துக் கொடுத்திருந்தது (உப 23:12-13; எண் 31:7-24).

பழைய ஏற்பாட்டிலே, மேற்கூறியுள்ளவைகளை நோக்கும் போது ஆரோக்கியம் என்பது கடவுளின் கொடை எனக் கருதப்பட்டது. அவரே அவர்கள் மருத்துவர். அவர்களுக்கு நோயிலிருந்து மீட்புத் தேவையாயின் கடவுளையே நாடவேண்டும் (2 நாள் 16:12). ஆரோக்கிய வாழ்வு என்பது நல்லோர்க்கு மட்டுமே இறைவன் தரும்கொடை என்பதால், நோயுற்றவன் அதனின்று மீளத் தனக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உறவைப் பலப்படுத்திப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஏதோ ஒருசில கை மருந்துகளைத் தவிர முறையான சிகிச்சை என்று எதுவும் அவர்களுக்குக் கிடையாது.

இயேசு வியாதிகளைப் பற்றி விளக்கவில்லையானாலும், அதைப் பற்றிய எண்ணம் பழைய ஏற்பாட்டுக் காலத்தைவிட, சற்று மாறுபட்டிருக்கிறது. பழைய காலம்போல நோயுற்றோரையும் பலவீனர்களையும் வெறுப்பதற்குப் பதிலாக, அவர்களை இயேசு அன்பு செய்தார் (யோவா 3:16; 10:10). நோய், கடவுள் தரும் தண்டனை என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நோய்க்குக் காரணத்தை அந்த மனிதனிடமே உள்ளத்திலோ, உடலிலோ காண்கிறார். யோவா 4-இல் சமாரியப் பெண்ணிடம் இயேசு பேசியது ஓர் உளவியல் சிகிச்சைக்குச் சிறந்த உதாரணம். இயேசு தம் அன்பினாலும் இறையரசின் அருங்குறிகளாலும் நோய்களைக் குணமாக்கினார்; அன்றி மருந்துகள் தந்து குணமாக்கவில்லை. நோயாளிகள் குணமாக முயற்சிக்கக்கூடாது. மாறாகப் பொறுமையாய் அதைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை முற்றிலும் மறுத்தார் இயேசு (மத் 8:2-3; மாற் 1:40; லூக் 5:12-13).

ஆனால் சிலநேரங்களில் நோய் தீயோரின் சக்தியால் வந்தது எனக் கூறுகிறார் (லூக் 13:16). ஏனெனில் அவரின் தலையாய பணி தீயோனின் ஆதிக்கத்தை ஒழிப்பதே. மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் குழப்பத்தாலும், கவலையாலும் அவனுக்கு உள்ளத்தைச் சார்ந்த உடல் நோய்கள் ஏற்படும் என இயேசு அறிந்திருந்தார். இயேசு குணமளித்த சில நிகழ்ச்சிகளில் நாம் இதைக் காண்கிறோம். இயேசு குணமளிக்கும்முன் அந்த நோயாளியின் விசுவாசத்தைத் தூண்டுகிறார் (மத் 9:29; லூக் 17:19; 18:42). சில இடங்களில் இது வெளிப்படையாக இல்லாவிடினும் நோயாளியின் வார்த்தைகளில் இது மறைந்து காணப்படுகிறது (மத் 9:1-8; 12:9-13). இயேசு குணமளிக்கும் போது முழுமனிதனையும் நோக்குகிறார். அவனது விசுவாசம், மனநிலை ஆகியவற்றை ஆராய்கிறார். இதைக்கொண்டு இயேசு வெறும் உளவியல் அடிப்படையில் தான் குணமளித்தார் எனக் கூறமுடியாது. எனெனில் நவீன உளவியல் ஆய்வு கூறும் பலமுறைகளை அவர் கையாளவில்லை. ஏச 3:4-இல் கூறப்பட்டுள்ள சொற்களின் முழுமையே கிறிஸ்துவின் குணமளிக்கும் பணி என மத் 8:17 கூறுகிறது.

நோய்களைக் குணப்படுத்துவது அப்போஸ்தலர்களுக்குக் கிறிஸ்து அளித்த சிறந்த பணியாகக் கருதப்பட்டது. பெந்தகோஸ்தே திருநாளை ஒட்டிப் பலர் குணம் பெற்றனர் (அ.ப. 2:43; 5:12; 8:7). இயேசுவின் பெயரால் அவர்கள் குணம் பெற்றனர் (யாக் 5:14-15; 2 திமோ 4:20).

பாலஸ்தீனத்தில் பல மூலிகைகள் இருந்தும் அதன் சிகிச்சை பற்றிய குறிப்புக்கள்

எதுவும் காணப்படவில்லை. மாறாக, எகிப்திலும், மெசபொத்தாமியாவிலும் இவை காணப்படுகின்றன. சாம்பிராணி, வெள்ளை போளம், கலிபான்பிசின், குங்கிலியம் போன்ற நறுமணப் பொருட்களின் கலவையான தூபவகை ஒரு மருந்தாகவும் பயன்பட்டது (யாத் 30:34-36). இறைவனைப் புகழவே இது முதன்மையாகப் பயன்பட்டது. மேலும் புகையூட்டவும் நாற்றத்தைப் போக்கவும் பயன்பட்டது. சில வாசனை எண்ணெய்கள் சுகாதாரமாக இருக்கப் பயன்படுத்தப்பட்டன. விருந்தாளிகளுக்கு எண்ணெய் பூசுவது அவர்களுக்கு மரியாதையைக் காட்டும் ஒரு சின்னம் (ரூத் 3:3; 2 சாமு 12:20; உப 28:40). சில சமயங்களில் ஒலிவ எண்ணெயும் திராட்சைரசமும் நோய்த் தடுப்பு மருந்தாகக் கையாளப்பட்டன (யாத் 12:8). நறுமணப் பொருட்களால் ஆன ஒரு வகைக் களிம்பும் மருந்தாகப் பயன்பட்டது. சமைக்கக்கூடிய கீரைகளைப்பற்றிய குறிப்பும் உள்ளது (யாத் 12:8).

குதிங்காலைத் தூக்குதல் (HEEL LIFTED)

மிதிக்க, காலைத்தூக்குதல் (சங் 41:9) இச்சொற்றொடர் நண்பர்களின் துரோகத்தைக் குறிக்கிறது. இந்த நண்பர்கள் செமித்திய பழக்கத்தின்படி நோயுற்றவனின் துன்பத்தை இறைவனுடைய தண்டனையாகும் என்று பொருள்கொண்டு அவனைச் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவராகக் கருதினர். உதைத்துத் தாக்கக் காலைத் தூக்குவது பற்றியோ (ஓசே 12:3) குதிங்காலைத் தூக்குதலையோ (ஆதி 25:26; 27:36) மற்போர் வீரன் தந்திரமாய்ப் பாய்வதையோ (யோவா 13:18) இச்சொற்றொடர் குறிக்கவில்லை; புறக்கணித்தல், விலகிச்செல்வதையே குறிக்கிறது.

புதிய ஏற்பாட்டில் ''எனக்கு எதிராகக் காலைத் தூக்கினான்'' அதாவது ''என்மேல் பாய்ந்தான்'' (யோவா 13:18) என்ற இயேசுவின் சொற்கள் யூதாவின் துரோகத்தைச் சுட்டுகிறது. யூதாவின் செயல் இச்சொற்றொடருக்குப் புதுப்பொருள் அளிக்கிறது. சமாதான உடன்படிக்கையில் பிணைக்கப்பட்ட ஒருவர் - உணவில் பங்குகொண்ட ஒருவர் - விருந்தோம்பலின் ஒழுங்குகளை மீறி, விருந்தளித்தவருக்கு எதிராகத் துரோகம் செய்தலைப் புதிய ஏற்பாட்டில் இச்சொற்றொடர் குறிப்பிடுகிறது.

குதிரை (HORSE)

பழங்கால மேற்காசியாவில் குதிரை போரிலும், பயணங்களிலும் வேட்டையாடுவதிலும் பயன்பட்டது. சுமைதூக்கவோ, விவசாயத்திலோ அரிதாகத்தான் பயன்பட்டது. விவிலியத்தில் போர் மற்றும் சடங்குச் சூழ்நிலையில் குதிரைகள் குறிக்கப்படுகின்றன. உருவகமாகவும் பயன்பட்டுள்ளன.

கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டுகளில் இஸ்ராயேலில் குதிரையைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. கப்பதோக்கிய ஏட்டுப்பலகைகளில் (கி.பி.19-ஆம் நூற்றாண்டு) முதல்முதலாகக் கழுதைகளைப்போன்று, குதிரைகளும் குறிக்கப்படுகின்றன. 18-ஆம் நூற்றாண்டில் ஆரிய இனத்தைச் சேர்ந்த மித்தானியர்கள் இருசக்கரமுடைய குதிரைகள் பூட்டிய போர்த் தேர்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். இத்தகைய தேர்களைக் கொண்டு காசியர்கள் பாபிலோனியாவில் ஆதிக்கம் செலுத்தினர். கைக்சோஸ் இனத்தவர் (18-16-ஆம் நூற்றாண்டுகள்) எகிப்தில் குதிரைத்தேரை அறிமுகம் செய்தனர். அமர்னா ஏடுகள் (14-ஆம் நூற்றாண்டு) குதிரைத்தேர் பாலஸ்தீனத்தில் பயன்பட்டதைக் குறிப்பிடுகின்றன.

தொடக்ககால இஸ்ராயேலில், புறஇனத்தவரின் சொத்தோடும் சொகுசோடும் குதிரை தொடர்புபடுத்தப்பட்டது (உப 17:16; 1 சாமு 8:11). தாவீதின் ஆட்சிவரை இஸ்ராயேலின் படையில் தேர்ப்படை இடம் பெறவில்லை (2 சாமு 8:4). சாலமோன் ஆட்சிக்காலத்தில், இஸ்ராயேலர் கொண்டிருந்த குதிரைகளின் பெரும் எண்ணிக்கை நாட்டின் செல்வத்தை யும் போர்ப்படை ஆற்றலையும் சுட்டுகிறது. சாலமோன் எகிப்திலிருந்து தனது சொந்த உபயோகத்துக்காகக் குதிரைகளையும் தேர்களையும் வாங்கி, மற்ற நாடுகளுக்கும் அவற்றை விற்றார் (1 அர 10:28-29). அவர்

குதிரைகளுக்குப் பரந்த இலாயங்கள் கட்டினார்; அற்றிற்குத் தீவனம் கொடுக்கக் குறிப்பிட்ட முறையை அமைத்திருந்தார் (5:6-8). குதிரைகள் எருசலேமில் வெகு சாதாரணமாய்விட்டபடியால் நகரச் சுவரிலும், அரண்மனையிலும் குதிரைவாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன (2 நாள் 23:15; நெக 3:28; எரே 31:40). குதிரைகள் போரிலும் (யாத் 14:9; யோசு 11:6.9; நீதி 5:22; 2 சாமு 1:6; 8:4; 1 அர 4:26; 18:5; 20:1.20; 22:4; 2 அர 3:7; 18:23; 2 நாள் 9:25; ஏச 5:26; எரே 4:13; 50:42; எச 38:4; நாகூ 3:2; செக் 14:15; அ.ப. 23:23.32; திருவெளி 19:18). பயணம் செய்வதற்கும் (ஆதி 41:43; 2 சாமு 15:1;2 அர 5:9; 14:20; 2 நாள் 23:15; எண் 2:66; நெக 3:28; எஸ்த 6:8-11; எரே 31:40; 17:25; 22:4; செக் 14:20) வேட்டையாடுவதிலும் (யோபு 39:8), உணவாகவும் (லேவி 11:4; 2 அர 7:13), போரடிக்கவும் (ஏச 29:28), வழிபாட்டிலும் (2 அர 23:11), வியாபாரத்திலும் (ஆதி 47:17; 1 அர 10:28; எச 27:14) பயன்படுத்தப்பட்டன.

இஸ்ராயேல் மற்றும் யூதாவின் அரக முடிவுவரை, குதிரைகள் முக்கிய இடம் வகித்தன என்பதற்கு விவிலியத்திலும் விவிலியத்துக்குப் புறம்பேயும் சான்றுகள் உண்டு. அசீரிய அரசன் மூன்றாம் சால்மனேசர் (9-ஆம் நூற்றாண்டு) இஸ்ராயேலின் அரசன் ஆகாபு அசீரிய எதிர்ப்புக் கூட்டணிக்கு இரண்டாயிரம் குதிரைகள் கொடுத்ததாகக் கூறுகிறார். சனகெரிபு (8-ஆம் நூற்றாண்டு) யூதாவிலிருந்து கொள்ளையடித்த குதிரைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். எகிப்தியக் குதிரைகளையும் தேர்களையும் யூதா நம்பியிருப்பதைப் பதிதத்தின் அடையாளமாகக் கருதி வெறுப்புடன் ஏளனஞ்செய்கிறார் இறைவாக்கினர் ஏசயா (ஏச 2:7; 31:1). பிற்பாடு மெசியாக்காலத்தில் குதிரைகள் கைவிடப்படும் என்று செக்கரியா முன்னறிவிக்கிறார் (செக் 9:10). தென் அரசின் இறுதி நாட்களில், யூதாவின் அரசர்கள் யாவேக்குக் கீழ்ப்படிந்தால், அவர்கள் குதிரைகளிலும் தேர்களிலும் வெற்றிச் சவாரி செய்வர் என்று எரேமியா கூறுகிறார் (எரே 17:24-25; 22:4).

குதிரையின் பலமும், வேகமும், மற்ற உடற்பண்புகளும், பழைய ஏற்பாட்டின் பாடல்களிலும் இறைவாக்கு நூல்களிலும் ஒப்புமையாகவும் உருவகமாகவும் பயன்பட்டுள்ளன (சங் 32:9; ஏச 63:13; எரே 12:5; எச 23:20). யோபு 39:19-25 விவிலியத்தில் குதிரைபற்றிய முழுமையான விவரிப்பைக் கொடுக்கிறது.

புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலில் குதிரை உருவகமாகப் பயன்பட்டுள்ளது. திருவெளி 6:2.4-5.9-இல் வரும் நான்கு குதிரைகள், அவற்றின் மேல் ஏறியிருந்தவர்கள் பூமியின்மேல் செயல்படுத்திய தீர்ப்பை உருவகமாக விவரிக்கின்றன சிங்கத்தின் பற்களையும் பாம்பின் வால்களையும் கொண்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட குதிரைகளைக் கொண்ட குதிரைப்படையும் தீர்ப்பைச் செயல்படுத்துகிறது (திருவெளி 9:17.19). காலமுடிவில் வரும் வெற்றிப்பவனியில் கிறிஸ்துவும் அவரது படையும் வெண்குதிரைகளில் சவாரி செய்வர் (19:11.14.19.21).

குதிரைப்படை (CAVALRY)

இது திருவெளி 9:16-இல் மட்டும் காணப்படுகிறது. இது படைகளைக் குறிக்கும். யூப்பிரத்திக நதியில் கட்டப்பட்டிருந்த நான்கு தூதர்களை அவிழ்த்து விட்டபோது, இருபது கோடி குதிரைகளும் குதிரைமேல் ஏறியிருந்தவர்களும் தோன்றினர். இதன் விளக்கம் அழிவைப்பற்றிக் காட்சியாகம ஆசிரியர் கூறும் சில காட்சிகள் ஆகும். இங்குக் கூறப்பட்டுள்ள படைகளின் எண்ணிக்கை சங் 68:17-ஐப் பொருத்தது. மனித இனத்தில் மூன்றில் ஒரு பாகம் கொல்லப்பட்டது என்றும் இங்கே கூறப்பட்டுள்ளது. திருவெளி 9:6-இல் சாத்தானின் சேனை அழிவைக் கொண்டு வருவதாக விவரிக்கப்படுகிறது. 19-ஆம் அதிகாரத்தில் விண்ணுலகப் படைகள் சிறப்பாக ''நம்பிக்கைக்குரியவர் மற்றும் உண்மையுள்ளவர்'' எனப்படும் மெசியா வெண்குதிரைகள் மீது வருவதாகவும் விவவரிக்கப்படுகிறது.

குதிரைவாயில் (HORSE GATE)

அரண்மனைக்கு அருகில் (எரே 31:40) கோயில் நிலப்பரப்பின் தென்கிழக்குத் திசையில், கிதரோன் நோக்கிச் செல்லும் எருசலேமின் வாயில் (எரே 31:40). இவ்வாயில் நெகமியாவால் மீண்டும் கட்டப்பட்டது (நெக 3:28). அரசி அத்தாலியாவின் கொலையோடு தொடர்புடைய வாயில் இதுவாக இருக்கலாம்.

குதுகோதா (GUDGODAH)

பாலைவனப் பயணத்தில் இஸ்ராயேலர் தங்கிய இடங்களில் ஒன்று (உப 10:7). ஆரோன் மரித்த இடமாகிய மொசேர(மோசரோத்து)வுக்குப்பின் முதலிடமாகக் குறிப்பிடப்படுகிறது. எண் 33:32-33-இல் இது கோர்-ககிதுகாது என்றழைக்கப்படுகிறது.

குத்தூசி (AWL)

இது ஒருவன் என்றென்றும் அடிமையாக இருக்கத் தானாக முன்வரும்போது அவனது காதைக்குத்தப் பயன்படும் ஒரு கருவியாகும் (யாத் 21:6; உப 15:17). கற்காலத்திலிருந்தே இக்கருவி பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மரத்தாலும், எலும்பாலும் கடினமான கற்களாலும், உலோகத்தாலும் செய்யப்பட்ட இக்கருவிகள் பல அகழ்வாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குப்பா (HUPPAH - மேற்கட்டி, பாதுகாப்பு)

தாவீது காலத்தில் குருக்களின் பதின்மூன்றாம் பிரிவிற்குத் தலைவர் (1 நாள் 24:13).

குப்பிம் (HUPPIM - கடற்கரை மக்கள்)

பென்யாமினின் வழித்தோன்றல் (ஆதி 46:21; 1 நாள் 7:12). 1 நாள் 7:15-இல் இவர் மனாசேயின் வழித்தோன்றலாகத் தெரிகிறார். இப்பெயர் ஒரு இஸ்ராயேல் துணைக் குழுவின் குலப்பெயராக மாறியதாகத் தெரிகிறது. இது ஒருவேளை, கூப்பாமின் திரிபாக இருக்கலாம்.

குப்பை மேட்டுவாயில் (DUNG GATE)

இன்னோம் பள்ளத்தாக்கிற்கு இட்டுச் செல்லக்கூடிய எருசலேம் நகரத்து வாயில். நெகமியாவால் மீண்டும் கட்டப்பட்டது (நெக 3:14; 12:31). வரலாற்று ஆசிரியர் யோசிப்பஸ் இதனை ''எஸ்ஸேனியர்களின் வாயில்'' என்கிறார். இது எருசலேமின் தெற்குச் சுவரில் தென்மேற்கு மூலையிலோ அருகிலோ இருந்திருக்கவேண்டும் என்று அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். இங்கு நகரத்தின் கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டிருக்கலாம்.

குமிதா (HUMITHA - கோட்டை)

மலைநாடான கெபிரோனில் யூதா கோத்திரத்தாரின் ஊர் (யோசு 15:54). இதன் இன்றைய இருப்பிடம் அறியப்படவில்லை.

குமிழ்கள் (BOSSED, BOSSES)

குமிழ்கள் பெரும்பாலும் தட்டையான மேற்பரப்பில் அழகொப்பனையாக அமைக்கப்பட்டன. பழங்காலத்தில் இவைகள் கேடயத்தில் அமைக்கப்பட்டு அவற்றைப் பலப்படுத்தின. பெரும்பாலும் மரக்கட்டைச் சட்டத்தின்மேல் தோலால் சுற்றி இக்குமிழ்கள் அமைக்கப்பட்டன. உலோகக் கேடயங்கள் வழக்கில் வந்தபோது, இவை ஒப்பனையாக அமைந்தன.

யோபு 15:25-இல் தீயவன் கடவுளுக்கெதிராகத் ''திண்ணிய கேடயம் தாங்கியவனாய்ப் பாய்ந்தான்'' என்றுள்ளது. அதாவது சொற்பொருளில் ''அவனது கேடயத்தின் தடித்த குமிழ்களுடன் பாய்ந்தான்'' என்றுள்ளது. இது கடவுளிடம் அவன் காட்டும் திமிரான போக்குக்கு ஓர் உருவகமாகும்.

கும்ரான் (QUMRAN)

எரிக்கோவிலிருந்து தெற்கே 14 கி.மீ. தொலைவில், சாக்கடலின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது கிர்பெத்து கும்ரான். எஸ்ஸேனியர்கள் வாழ்ந்த துறவற மடத்தின் சிதைவுகள் இங்குக் காணப்படுகின்றன. அன்றைய கும்ரான் சமூகத்தின் மையமாக விளங்கிய துறவற மடம் இதுவே.

கும்ரான் ஏடுகள்

காண்க: சாக்கடல் ஏடுகள்

குயவன் சக்கரம் (POTTER'S WHEEL)

குயவன் சக்கரம் என்பது வட்டவடிவமான தட்டுப் போன்றதொரு அமைப்பு. இது ஒரு செங்குத்தான தண்டின் மேல் பொறுத்தப்பட்டிருக்கும். இத்தண்டின் மேல் தான் இச்சக்கரம் சுழலும். இப்படிப்பட்ட அமைப்பு குயவன் களிமண்ணால் பாத்திரங்களைச் செய்ய உதவுகிறது.

குயவன் சக்கரம் எங்கும் வழக்கத்தில் இருந்தாலும் புதிய ஏற்பாட்டில் கூறப்படவே இல்லை. பழைய ஏற்பாட்டில் ஒரு முறை மட்டும் இது கூறப்பட்டுள்ளது (எரே 18:3). குயவன் ஓர் வடிவமற்ற களிமண்ணை இக்கருவியின் மூலம் ஒரு வடிவாக அமைத்து மண்கலமாக ஆக்குகிறான். இது கடவுளின் செயலுக்கு ஒப்பிடப்படுகிறது. இறைவனும் தம் மக்களின் முடிவைத் தம் கையால் வழிநடத்துகிறார் (ஏச 29:1; 45:9; 64:8; எரே 18:6; உரோமை 9:21-23). பழைய ஏற்பாட்டில் 'படைப்பவர்', 'குயவன்' ஆகிய இரண்டுமே ஒரே சொல்லால் கூறப்பட்டன. எகிப்து நாட்டிலும் இத்தகைய கருத்தைக் காணலாம் எகிப்தியரின் புராணப்படி குனும் என்ற கடவுள் மனிதனைக் குயவன் சக்கரத்தில்தான் படைக்கிறார்.

புதைபொருள் ஆராய்ச்சிச் சான்றுகள் பாலஸ்தீனத்தில் கி.மு. 3000-2000-இலிருந்து குயவன் சக்கரம் இருந்ததை உறுதிப்படுத்துகின்றன. முதலில் இது ஒரே ஒரு வட்ட அமைப்பு மட்டுமே கொண்ட ஒரு தட்டுப் போல் காணப்படுகிறது. கி.மு. 2000-ஐ ஒட்டிப் பெனிகாசனின் கல்லறையில் இத்தகைய சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. மத்திய செம்புக்காலத்தில் இத்தோடு வேறொரு தட்டும் இணைக்கப்பட்டது. இச்சக்கரங்கள் வேகத்தைக் கூட்டின. இது காலால் இயக்கப்பட்டது. நூல்களில் முதன்முதலில் சீரா 38:29-இல் நாம் இதைப்பற்றிக் காண்கிறோம்.

மெகிதோ, தேல்-எல்-அகுசுல், இலாக்கீசு, காசோர் ஆகிய இடங்களிலும் குயவன் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதைபொருள் ஆராய்ச்சியில் இவைகளைக் கண்டுபிடிப்பது அரிது. ஏனெனில் இச்சக்கரம் பொதுவாக மண், களிமண், மரம் போன்ற அழியக் கூடிய பொருட்களாலேயே செய்யப்பட்டது. ஆனால் இதன் எபிரேய வார்த்தை இது கல்லால் செய்யப்பட்டது எனச் சுட்டுகிறது.

குயவன் நிலம் (POTTER'S FIELD)

காண்க. அக்கலிதமா

குரு (PRIEST)

பழைய ஏற்பாட்டில் குருவின் அலுவல் இறைவனுக்கும் மனிதர்களுக்குமிடையில் இடையாளராக, நடுவராக இருத்தலாகும். இறைவனின் உடன்படிக்கை மக்கள் என்ற அளவில், இஸ்ராயேலர் உலகமக்களிடையே ''குருக்களின் அரசாகவும் தூயமக்களினமாகவும்'' (யாத் 19:5-6) இருக்கவேண்டும். குருவின் இந்த ஆட்பேரான அலுவலில் இறைவன்முன் இஸ்ராயேலின் பணியைப் பாதுகாக்கவும், எளிதாக்கவும் வாய்ப்புடையதாகச் செய்யவும், பரிசுத்தத்தின் எடுத்துக் காட்டான நிலையும் இடையாளர் பணியும் வலியுறுத்தப்பட்டுப் பேணிப்போதிக்கப்பட்டது.

குருவைப் பெரும்பாலும் குறிக்கும் எபிரேயச் சொல்லான ''கேகேன்'' எந்தச் சமயத்திலும் குருவைக் குறிக்கும் மேற்குச் செமித்திய பொதுவான சொல்லாகும். மூலத்தில் இச்சொல் ''நிற்றல்'' என்ற பொருளுடைய ''காகன்'' என்ற சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம். அதன் விளைவாகத் தேவதையின்முன் பணிசெய்ய நிற்பவரைக் குறிக்கலாம் ''கேகன்'' என்றசொல் (உப 10:8). இச்சொல் சோதிடரைக் குறிக்கும் ''ககீன்'' என்ற சொல்லோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இறுதியில், இஸ்ராயேலில் குரு கொண்டிருந்த நிலை மற்றும் அலுவலிலிருந்து இச்சொல்லுக்குப் பொருள் காண வேண்டும்.

I. குருவின் பதவி:-

1. ஆரோனின் வழித்தோன்றல் அல்லது சந்ததியினர்:-

ஆதியாகம விவரிப்பில், குருவின் நிலையை இனத்தின் தலைவர் கொண்டிருந்

தார் (சான்று: நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு). ஆரோனும் அவரது புதல்வர்களாகிய நாதாபு, அபிகு, எலயாசர், இத்தாமர் (யாத் 28:1) ஆகியவர்களும் குருக்களென முறையாகக் குறிக்கப்பட்ட முதல் இஸ்ராயேலர் ஆவர். ஆயினும் சீனாயில் இஸ்ராயேல் வந்து சேர்ந்தபோது, அடையாளம் குறிக்கப்படாத குருக்கள் இஸ்ராயேலரிடையே குறிக்கப்படுகின்றனர் (19:24). ஒருவேளை இவர்கள் யாவேக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட தலைப்பேற்றான்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்.

ஆரோனும் அவரது புதல்வர்களும் லேவியின் இனத்தைச் சேர்ந்தவர்கள். லேவியர்களின் தோற்றமும், குருகுலத்தோடு அவர்களின் வரலாற்றுத் தொடர்பும் விவிலிய ஆய்வுக்கு மிகவும் சிக்கலான பிரச்சனையை அளித்தாலும், திருமுறைப்பட்டியல் வாசகமும் லேவியர்களை வழிபாட்டுப்பணியிலிருந்து வேறுபட்ட இனமாகக் காட்டுகிறது. பாலைவனத்தில் அலைந்து திரிந்த காலம்முதல் நாடுகடத்தப்பட்ட காலம் வரை, யாவேயின் பணிக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட ''இஸ்ராயேலின் தலைப்பேற்றான்களின்'' இடத்தில் (எண் 3:5-13) குருக்களுக்குப் பணிவிடை செய்யும் கடமையை லேவியர் கொண்டிருந்தனர். ஆனால் அதிகாரபூர்வமான குருக்களாகப் பணிசெய்வது ஆரோன் வீட்டிற்கு மட்டுமே உரிய சலுகையாகும்.

இத்தகைய சிறப்பான அமைப்பு இருந்தாலும், வழக்கில் சிலமுறைகேடுகள் புகுந்தன. எருசலேமில் மையப்புனிதத்தலம் நிறுவப்படுவதற்குமுன் வழிபாட்டில் புகுந்த முறை கேட்டுக்கு எடுத்துக்காட்டாக நீதி 17-18 ஒரு நிகழ்ச்சியைக் கொடுக்கிறது. அதில் மோசேயின் வழித்தோன்றலான ஓர் இளம் லேவியர், வீட்டுக்குருவாகச் செயலாற்றுகிறார். அவர் பிற்பாடு, தான் இனத்தின் குருவாகச் செயலாற்றப்பணிக்கு அமர்த்தப்படுகிறார். சாமுவேல் எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவராக அறிமுகப்படுத்தப்படுகிறார் (1 சாமு 1:1). அவர் யாவேக்கும் குருத்துவப்பணிக்கும் அர்ப்பணிக்கப்படுகிறார் (1 நாள் 6:25-28). ஏலியின் வீட்டின் வீழ்ச்சிக்குப்பின், இறைவாக்கினராகவும், நடுவராகவும், குருவாகவும் செயலாற்றும் சாமுவேலும் (1 சாமு 4), சிலைவழிபாட்டில் மூழ்கிப்போயிருந்த வட அரசில் பலிசெலுத்தும் இறைவாக்கினரான எலியாவும் (1 அர 18), இடுக்கண்மிக்க காலங்களில் சுற்றி வளைத்துக் குருத்துவத்தை நிறுவுவதற்கு எடுத்துக்காட்டுகளாவர்.

2. மற்ற நிபந்தனைகளும், முன்னேற்பாடுகளும்:-

குருக்கள் ஆரோனின் சந்ததியினராக இருப்பதுடன், உடல் ஊனமற்றவர்களாக இருக்கவேண்டும் (லேவி 21:17-23). திருமணம் மற்றும் சடங்குத் தூய்மை பற்றிய ஒழுங்குகளைக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் (21:10-15). குருத்துவ நிறுவனம் இறைவனுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே நடுவரின் அவசியத்தை வலியுறுத்தியது போல், பரிசுத்தத்தின் சட்டத்தின் தாக்கம் இஸ்ராயேலின்முன் இறைவனின் பரிசுத்தத்தை வலியுறுத்துவதாகும்.

லேவியின் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அளவில் குருகுலத்திற்குக் கானான் நாட்டு நிலப்பகுதி பங்கீடு செய்து அளிக்கப்படவில்லை (எண் 18:20.23-24). ஆனால், லேவியர்களுக்கென ஒதுக்கப்பட்ட நாற்பது நகரங்களில் பதின்மூன்றில் குருக்கள் தங்கி வாழ வசதி அளிக்கப்பட்டிருந்தது. அவர்களது வருவாய் நிலத்திலிருந்து நேரடியாக வரவில்லை. மக்கள் அளித்த பத்தில் ஒரு பாக வரி (18:26-28), பீடத்தில் எரிக்கப்படாத பலிப்பொருட்களின் பகுதி (லேவி 5:13; 6:26; 7:31-34; 10:14-15), மந்தையின் முதற்பலன், அறுவடையின் முதற்பலன், இஸ்ராயேலின் தலைப்பேற்றான்களுக்காக அளிக்கப்பட்ட மீட்புப்பணம் (எண் 18:12-19), திருமுன் அப்பம் (லேவி 24:5-9) ஆகியவற்றிலிருந்து குருக்களுக்கு வருவாய் வந்தது. இதோடு, எருசலேமிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்த குருக்களுக்கு வீடுகளும்

நிலமும் அளிக்கப்பட்டன (நெக 11:31; 1 நாள் 9:2).

3. ஆடைகளும் பதவி ஏற்பும்:-

மெல்லிய நார்ப்பட்டால் ஆன உள்ளங்கி, நீலம் கருஞ்சிவப்பு நிற நூலால் நெய்யப்பட்டுப் பின்னல் வேலைப்பாடும் உடைய இடைக்கச்சை, நார்ப்பட்டுக் காற்சட்டை, வெண்ணிறத்தலைப்பாகை, கச்சை ஆகியவை குருக்களின் ஆடைகளாகும் (யாத் 28:40-43). பெரியகுரு நீல நிறத்தில் நெய்யப்பட்ட ஆடை அணிந்திருந்தார். அதிலிருந்து பொன்மணிகளும் கருஞ்சிவப்பு, சிவப்பு, நீலநிற மாதுளைகளும் ஒன்றுவிட்டு ஒன்று தொங்கின. இந்த ஆடைமேல், பக்கத்திற்கு ஒன்றாகத் தோள்களில் ஏபோது என்ற ஆடை அணிந்திருந்தார். இவை நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு நிற நூலால் நெய்யப்பட்டிருந்தன. இரு கோமேதகக் கற்கள் பொருத்தப்பட்டிருக்கும், ஒன்றில் ஆறுபெயர்களும் மற்றதில் ஆறுபெயர்களுமாக, இவற்றில் இஸ்ராயேலின் பன்னிரண்டு இனங்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருக்கும். ஏபோதிலிருந்து பசும்பொன் சங்கிலியால் தொங்கவிடப்பட்டு இடையில் இழுத்துக்கட்டப்பட்ட மார்புப்பட்டை அமைந்தது. அதில் வரிசைக்கு மூன்றாக நான்கு வரிசையில் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் ஓர் இனத்தின் பெயராகப் பன்னிரண்டு இனத்தாரின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்த மார்புப்பட்டையில் ஒரு பையிருந்தது. அதில் ஊரிம் தும்மீம் என்றழைக்கப்பட்ட புனிதச் சீட்டுப் போடும் கருவிகள் இருந்தன. பரிகார நாளில், நாட்டிற்காகப் பரிகாரம் செய்யத் திருத்தூயகத்துள் நுழையும்போது பெரிய குரு நார்ப்பட்டாடை மட்டுமே அணிந்திருப்பார்.

பாலைவனத்தில் அலைந்து திரிந்த காலத்தில் ஆரோனின் புதல்வர்கள் குருக்களாக ஏற்படுத்தப்பட்டபோது எண்ணெயால் அபிடேகம் செய்யப்பட்டனர் (யாத் 28:41; 40:15; லேவி 8:30). பிற்காலத்தில் பதவி ஏற்றபோது பெரிய குரு மட்டுமே அபிடேகம் செய்யப்பட்டிருக்கலாம். இந்த அபிடேகம் பரிகத்தப் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டதைக் குறித்தது.

4. கடமைகள்:-

அவர்களின் திருத்தலப்பணியில் குருக்கள் பரிசுத்தத்தைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் மட்டுமே பொன் தூபப்பீடம், விளக்குகள், திருமுன் அப்பம், பலிபீடம் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஆனால் மக்கள்முன் இறைவனையும், இறைவன் முன் மக்களையும் பிரசன்னப்படுத்தும் நடுவர் அலுவலே ஒரு குருவின் முதன்மையான அலுவலாகும்.

மக்கள் முன் இறைவனைப் பிரசன்னப்படுத்தி, நடத்தை மற்றும் வழிபாடு பற்றிய இறைவனின் சட்டத்தை மக்களுக்குக் குரு போதித்தார் (உப 33:11; 2 நாள் 17:7-9). இந்த அலுவல், நாடு கடத்தப்பட்ட காலத்திலும் அதற்குப்பின்னும் மேலும் விரிவடையும். கடினமான சட்டத் தீர்ப்புக்களில், உயர்நீதி மன்றம்போல் குரு ஆலோசிக்சுப்பட்டார் (உப 17:8-13; 19:16-17; 2 நாள் 19:8-11). மக்கள்மேல் இறைவனின் ஆசிரைக்கூறவும் (எண் 6:22-27), சடங்குத் தூய்மையை நிர்ணயிக்கவும் (லேவி 13) குருவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இவற்றோடு, ஊரிம் தும்மீம் என்ற புனிதச் சீட்டுப்போடும் கருவியைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட காரியங்களை யாவேயைக் கேட்டுச் சொல்லும் பொறுப்பும் குருவுக்கு அளிக்கப்பட்டிருந்தது.

இறைவன் முன் மனிதர்களைப் பிரசன்னப்படுத்திப் பலிச்சடங்கைச் செய்தனர். அவர்கள் மட்டுமே பலிப்பொருள்களின் இரத்தத்தைக் கையாளவும், பலிப்பொருட்களான விலங்கையோ (லேவி 4:30-31), தானியத்தையோ (5:11-12), பீடத்தின்மேல் வைப்பதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தது.

குருக்களின் பணி அவர்களின் பிரிவுகளின்படி முறைசெய்யப்பட்டிருந்தது. தாவீது காலத்தில் இப்பிரிவுகள் தோன்றியது பற்றிச் சர்ச்சைகள் இருந்தாலும் 1 நாள் 24:7-18

பிரிவுகளைக் கொடுக்கிறது. இது ஒவ்வொரு பிரிவினரும் ஆண்டில் இரு வாரங்களுக்கு ஆலயத்தில் பணிசெய்யும் சலுகை அளித்தது (லூக் 1:5.8).

II. குருத்துவத்தில் வளர்ச்சி:-

அரசாட்சி அமைக்கப்பட்டு, எருசலேமில் வழிபாடு மையப்படுத்தப்படுதலோடு, குருத்துவம் அரசனின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. தாவீதின்கீழ், குருவின் பதவி, ஏலியின் வீட்டைச் சேர்ந்த அபியத்தாரையும், எலயசாரின் வழித்தோன்றலான சாதோக்கையும் (2 சாமு 8:17; 15:24-29.35) மையமாகக் கொண்டிருந்தது. சாலமோனின் ஆட்சியிலிருந்து மீண்டும் ஆட்சி அமைக்கப்படும் வரை, சாதோக்கின் வீட்டார் எருசலேமில் பெரிய குருவாக நியமிக்கப்பட்டனர் (1 அர 2:26-27.35). நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பிற்காலத்தில் பெரிய குருப்பதவி சாதோக்கின் வீட்டினரிடையே இருந்தது. ஆனால் பாபிலோனிலிருந்து வரப் பலர் விரும்பாமையால், குருக்களின் எண்ணிக்கையில் பற்றாக்குறை ஏற்பட்டது. தாவீது மரபு வழி வந்த அரசர்கள் காலத்தைத்தவிர, மற்றக் காலங்களில் பெரியகுருவின் நிலையும் தன்னாட்சியும் வளர்ந்து, அது செல்வாக்கிலும் அதிகாரத்திலும் அரச குல வழித்தோன்றல்களுடையதற்குச் சமமாக இருந்தது. இது குருகுலத்தவர் எருசலேமின் ஆலய-ஆட்சியில் ஆதிக்கம் செலுத்த வழிவகுத்தது. செலூக்கிய அரசன் நான்காம் அந்தியோக்கு எப்பிபான், மெனலாவு என்ற சாதோக்கு குடும்பத்தைச் சேராதவரைக் குருவாக நியமிக்கும் வரை (கி.மு. 171) சாதோக்கின் குடும்பத்தினரே குருக்களாக இருந்தனர். கி.பி. 6-ஐ ஒட்டிச் சதுசேயர் பிரிவைச் சேர்ந்த செல்வமிக்க குருக்கள் குடும்பங்களிலிருந்து பெரிய குரு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

III. புதிய ஏற்பாடு:-

சதுசேய குருக்களால் குற்றம் கூறப்பட்டாலும் இயேசுவோ, அவரது சீடர்களோ குருத்துவம் மற்றும் பலிகளின் நேர்மையை நிராகரிக்கவில்லை. ஆயினும், தொடக்கத்திலிருந்தே திருச்சபை இயேசுவின் பரிகார மரணத்தைப் பலி என்று நோக்கியது (மாற் 10:45; உரோ 3:25; 8:23; 1 கொரி 5:7); உயர்த்தப்பட்ட கிறிஸ்துவை நடுவராகக் கருதியது (உரோ 8:34). கிறிஸ்துவின் குருத்துவம் பற்றிய போதனையை எபிரேயருக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் மிகவும் நிறைவாக விவரித்துள்ளார். அதிலே, பழைய ஏற்பாட்டுக் குருத்துவத்தையும் பலியையும் முடிவுக்குக் கொண்டுவரும் நிறைவான பெரிய குரு மற்றும் பலிப்பொருள் ஆகியவற்றின் பாகத்தைக் கிறிஸ்து நிறைவேற்றுகிறார் (எபி 8:1-6). சங் 110:4-இன் அடிப்படையில், கிறிஸ்து மெல்கிசதேக்கின் முறைப்படியான குருவாக அடையாளம் காட்டப்பட்டு, ஆரோனின் குருத்துவ அமைப்பு நிறுத்தி வைக்கப்படுகிறது (எபி 7:11-13). பிற இடங்களில் விசுவாசிகளே "ஞான இல்லமாகவும்... அரச குருத்துவத்திருக்கூட்டமாகவும்" அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது (1 பேதுரு 2:5.9; திருவெளி 1:6; 5:10; 20:6). இது இறைவனின் பழைய ஏற்பாட்டு மக்களின் மாதிரிகையியல் நிறைவேறுதலாகும் (யாத் 19:6).

குருகு (CARRION VULTURE)

அசுத்தப்பறவைகளில் ஒன்று (லேவி 11:18; உப 14:17). இது கருப்பு, வெள்ளை இறகுகளைக் கொண்டிருந்ததால் எகிப்திய வெள்ளை, கருப்புக் கழுகு என்றழைக்கப்பட்டது. இது கழுகு வகையிலே மிகவும் சிறியது. பாலஸ்தீனத்தில் அதிகம் காணப்பட்டது. இது பருமனிலும், நடையிலும் அமருவதிலும் காக்கையை ஒத்திருக்கும்.

குருக்கள் பாரம்பரிய ஏடு (PRIESTLY DOCUMENT)

ஐந்நூலின் கருதுகோளான மூலங்களில் ஒன்று. பொதுவாகப் "P" என்று குறிக்கப்படும். இந்த ஏட்டைச் சேர்ந்ததாகப் படைப்புப்பற்றிய முதல் விவரிப்பு (ஆதி 1:1-2:4), ஐந்நூலில் வரும் தலைமுறைப்பட்டியல்கள், யாத்திரை, லேவியர், எண்ணிக்கை ஆகமங்களில் வரும் குருக்கள், பலிகள் பற்றிய சட்டங்களின் பெரும்பகுதியும் கருதப்படும்.

நாடு கடத்தப்பட்டபோதும் அதற்குப் பின்னும் இதற்குக் காலம் குறிக்கப்படும்.

காண்க. ஐந்நூல்.

குருட்டுத்தன்மை (BLINDNESS)

மேற்காசிய நாடுகளில் குருட்டுத்தன்மை மிகவும் சாதாரணமாகக் காணப்பட்டது. விவிலியம் இரண்டுவிதமான குருட்டுத்தன்மை பற்றிப் பேசுகின்றது. 1. அதிக சூரிய ஒளி, தூசு, மணல் போன்றவை கண்ணில் படுவதாலும், தூய்மைக்குறைவினாலும் வரும் ஒருவகைக் கண்நோய். இது ஒரு தொத்துநோய். இந்நோய் தொடங்கும்போது கண்கள் சிவப்பாகவும், பார்வை குறைவாகவும் இருக்கும். ஒருவேளை லேயா இந்நோயினால் துன்பப்பட்டிருக்கலாம் (ஆதி 29:17). 2. வயது முதிர்ச்சியினால் ஏற்படும் குருட்டுத்தன்மை எ. கா. ஈசாக்கு (ஆதி 27:1), ஏலி (1 சாமு 3:2), அகியா (1 அர 14:14). குருடன் குருவாக முடியாது என்பது சட்டம் (லேவி 21:18). குருட்டு விலங்கு பலியாக ஒப்புக்கொடுக்கப் படக்கூடாது (உப 15:21). செதேக்கிய மன்னன் கண்கள் நெபுக்கதுனேசரால் குருடாக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார் (2 அர 25:7). "குருடாக்கப்படல்" என்ற தண்டனை கம்முராபியின் சட்டப் புத்தகத்தில் இரண்டுமுறை கூறப்பட்டுள்ளது. எபிரேயர் சட்டத்தில் இது இடம்பெறவில்லை. குருடர்களுக்கு இரக்கமும் உதவியும் காட்டவேண்டுமென்றும், அவர்களுக்கு இடறலாக இருப்பது தடை செய்யப்பட்டது என்றும் சட்டம் கூறுகிறது (லேவி 19:14; உப 27:18). யோபுவின் இரக்கச் செயல்களில் யோபு குருடர்களுக்குக் கண்களாகத் திகழ்ந்தார் என்று கூறப்படுகிறது (யோபு 29:15). இயேசு மூன்றுமுறை குருடர்களைக் குணமாக்குகிறார்; பேத்து-சாயித்தில் (மத் 9:27 தொ; மாற் 8:22); எரிகோவில் (மத் 20:30 தொ; மாற் 10:46 தொ; லூக் 18:35 தொ); எருசலேமில் பிறவிக்குருடனுக்குப் பார்வை அளிக்கிறார் (யோவா 9:1 தொ). குருடர்களைப் பார்வையடையச் செய்வது இயேசுவின் மெசியாப் பணிகளில் ஒன்று என்று அவர் கூறுகிறார் (மாற் 11:5; லூக் 7:22).

ஆன்மீகத்தில் ஈடுபாடற்ற தன்மைக்குக் குருட்டுத்தன்மை உவமையாகக் கூறப்படுகிறது (ஏச 42:19; 29:18; 56:10; உரோ 2:19; 2 கொரி 4:4;2 பேதுரு 1:9; 1 யோவா 2:11; திருவெளி 3:17). மெசியாவின் மீட்புச்செயல் குருடுக்கு ஒளி கொடுத்தலாக விளக்கப்படுகிறது (ஏச 35:5; 42:16.18; 43:8; எரே 31:8; சங் 146:8). பரிசேயர்கள் குருட்டு வழிகாட்டிகளுக்கு ஒப்பிடப்படுகிறார்கள் (மத் 15:14; லூக் 6:39).

ஆதி 19:11; 2 அர 6:18-இல் வரும் தற்காலிகக் குருட்டுத்தன்மை உடல் சம்பந்தப்பட்ட குருட்டுத்தன்மை அல்ல. மாறாக, உளவியல் சார்ந்த குருட்டுத்தன்மையையே குறிப்பிடுகிறது. பவுலுக்கு ஏற்பட்ட குருட்டுத்தன்மை (அ.ப. 9:8.18) உளவியல் தன்மையுடையது மட்டுமன்று. உடல்சார்ந்த குருட்டுத்தன்மையுடையதுமாகும்; இதை எந்த நோயோடும் ஒப்பிடமுடியாது.

குருத்துவம் (PRIESTHOOD)

"இயேசு என்றென்றும் நிலைத்திருப்பதால், மாறாத குருத்துவத்தைப் பெற்றுள்ளார்" என்கின்றார் புனித பவுல் (எபி 7:24). கிறிஸ்துவின் இணைப்பாளர் பணியை விளக்கிக் கூறுகின்ற எபிரேயருக்கு எழுதிய திருமுகம், அப்பணியை வரையறுக்கும்படியாகச் சுற்றிலுமிருந்த மற்றெல்லாச் சமயங்களிலும் காணப்பட்டதுபோலப் பழைய ஏற்பாட்டிலும் காணப்பட்ட ஒரு பணியோடு கிறிஸ்துவின் பணியை ஒப்பிட்டுப் பார்க்கிறது; அந்தப் பழைய ஏற்பாட்டுப் பணி குருக்களின் பணியாகும். எனவே, இயேசுவின் குருத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில், பழைய ஏற்பாட்டில் உள்ள குருத்துவத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவு முக்கியம். ஏனெனில், பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் இயேசுவின் குருத்துவத்திற்கு ஆயத்தமும் முன்னடையாளமுமாய் அமைந்துள்ளது.

அ. பழைய ஏற்பாடு:-

I. குருத்துவ நிறுவனத்தின் வரலாறு:-

1. குல முதுவர்கள் காலத்தில்:-

இஸ்ராயேலரைச் சூழ்ந்துள்ள பல்வேறு இனத்து மக்களும் நாகரீகமடைந்தவர்கள்; அவர்களிடையே சிறப்பாக , மெசபொத்தாமியா, எகிப்து மக்களிடையே குருத்துவப் பணி பெரும்பாலும் அரசனின் பாதுகாப்புப் பெற்றதாகும்; திரு ஆட்சி முறைப்படி அமைந்த குருகுலத்தார் அரசனுக்குத் துணை புரிகின்றனர். இக்குருகுலம் ஏறத்தாழ எப்பொழுதுமே பிறப்புரிமை கொண்டாடி, உண்மையில் ஒரு சாதியை உருவாக்குகிறது. பழைய ஏற்பாட்டில் குலமுதியவர்களின் காலத்தில் இத்தகைய குருகுலம் பற்றி எதுவும் தென்படக் காணோம். அப்பொழுது ஆலயம் என்பதில்லை; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் கடவுளுக்குரிய தனிப்பட்ட குருக்கள் என்று இல்லை. ஆதியாகமத்து மரபுகள் கட்டிக்காட்டுகின்றபடி, குலமுதியவர்கள் கானான் நாட்டில் பீடங்கள் அமைக்கின்றார்கள் (ஆதி 12:7 தொ; 13:18; 26:25); பலிகள் ஒப்புக்கொடுக்கிறார்கள் (22; 31:54; 46:1). இவர்கள் குடும்பச் சூழலில் குருத்துவப்பணி புரிகின்றனர். இத்தகைய பழக்கம் பண்டைய மக்களினத்தாரிடையே மிகப் பரவலாகக் காணப்படுகிறது. ஆதியாகமத்தில் ஒருசிலர் குருக்களாக மட்டும் தோன்றுகிறார்கள் எனில், அவர்கள் அந்நியர்கள். அவர்கள், எருசலேமின் அரசனும் குருவுமான மெல்க்கிசதேக்கும் (14:28தொ), பாரவோனுடைய குருக்களுமாவர் (41:45; 47:22). லேவி குலத்தவர் இன்னும் திருப்பணிக்கென்று திருநிலைப்படுத்தப் பெறாத குலத்தவர்தாம் (34:25-31; 49:5 தொ).

2. மோசேயின் காலத்தில்:-

மோசே ஒரு லேவியர்; இந்த லேவியர் தொடங்கித்தான் வழிபாட்டுப் பணிகளில் லேவி குலத்தவர் தனிப்படக் குறிப்பிடப் பெறுவது ஆரம்பமானதாய் உள்ளது. யாத் 32:25-29-இல் கண்டுள்ள பண்டைய வருணனை, லேவி குலத்தவர் பெறும் குருத்துவத்தின் தனிச்சிறப்பியல்பினை உணர்த்துகிறது; அதாவது, லேவி குலத்தாரை இறைவனே தமது ஊழியத்திற்கென்று தேர்ந்து, திருநிலைப்படுத்துகிறார். யாக்கோபு லேவியருக்கு அளித்த ஆசியுரையிலிருந்து வேறுபடுகின்ற மோசேயின் ஆசியரை, அவர்களுக்குக் குருக்களின் தனிப்பட்ட பொறுப்புகளை உரித்தாக்குகிறது (உப 33:8-11). இந்த விவிலிய வாசகம், மோசேக்கு மிகப் பிந்திய தொரு சூழ்நிலையினை எடுத்துக்கூறுகிறது என்பது உண்மை. இந்தப் பிந்தைய சூழ்நிலையில், லேவியர் தனிச்சிறப்புள்ள குருக்கள் (நீதி 17:7-13; 18:19). நாட்டின் பல்வேறு வழிபாட்டு இடங்களுக்கு உரியவர்கள். எனினும், லேவியரின் குருத்துவம் ஒருபுறம் இருக்க, மறுபுறம் குடும்பத்துக் குருத்துவமும் தொடர்ந்து செயல்படுகிறது (நீதி 6:18-29; 13:19; 17:5; 1 சாமு 7:1).

3. முடியாட்சிக் காலத்தில்:-

முடியாட்சிக் காலத்தில், சூழ்ந்துள்ள மக்களினத்தாரின் அரசர்களைப் போலவே இஸ்ராயேலரின் அரசரும் பல்வேறு குருத்துவப் பணிகள் ஆற்றுகிறார். சவுல் (1 சாமு 130:9), தாவீது (2 சாமு 6:13.17; 24:22-25) ஆகியோர் தொடங்கி, ஆகாக (2 அர 16:13) ஈறாக அரசன் பலி ஒப்புக்கொடுக்கிறான்; அரசன் மக்களுக்கு ஆசி வழங்குகிறான் (2 சாமு 6:18; 1 அர 8:14). எனினும், குரு என்ற சிறப்புப் பட்டத்தை அரசன் பண்டையச் சங்கீதம் 110-இல்தான் பெறுகிறான். இச்சங்கீதம் அரசனை மெல்க்கிசதேக்கோடு ஒப்பிடுகிறது. இவ்வாறு கானான் நாட்டு அரச குருத்துவத்தைப்பற்றிய குறிப்பு இருப்பினும், மெல்க்கிசதேக்கு குருக்கள் எனும் புனித சாதியில் ஓர் உறுப்பினர் என்பதைவிடக் குருத்துவத்தின் காப்பாளர் என்பது உண்மையாகும்.

இச்சூழ்நிலையில் இந்தப் புனித சாதி ஒழுங்காய் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகிறது; சிறப்பாக இத்தகைய நிறுவனம், தாவீது காலத்திலிருந்து இஸ்ராயேலரின் வழிபாட்டு மையமாக அமைந்துவிட்ட எருசலேம் திருவிடத்தில் உருவாகிறது. தொடக்கத்தில் இரு குருக்கள் திருப்பணியைப் பகிர்ந்து கொள்கின்றார்கள்: அவர்கள் அபியத்தாரும் சாதோக்குமாவார்: அபியத்தார் சீலோவில் இருந்த திருவிடத்தில் பணிபுரிந்த ஏலியின் வழித்தோன்றல்; அவர் அநேகமாய் லேவியர் குலத்தவராய் இருக்கலாம் (2 சாமு

8:17); ஆனால், அவருடைய குடும்பம் சால மோனால் சிதறுண்டு போகும் *(1 அர 2:26* தொ). சாதோக்கின் மரபு தெரியவரக் காணோம்; எனினும், அவருடைய வழித் தோன்றல்களே இரண்டாம் நூற்றாண்டு மட் டும் ஆலயத்தில் குருத்துவப் பொறுப்பு உள்ளவர்கள். பிற்காலத்தில் தோன்றிய தலைமுறை அட்டவணைகள் அபியத்தா ரைப்போலச் சாதோக்கையும் ஆரோன் மரபு வழியினரோடு தொடர்புபடுத்தும் *(1 நாள் 5:27-34)*.

எருசலேமில் குருத்துவம் தலைமைக் குரு வின்கீழ்ப் பல்வேறு பணித்துணைவர்க ளைக் கொண்டது. இஸ்ராயேலர் நாடுகடத் தப்படுவதற்கு முன்னரும்கூட, ஆலய ஊழிய ஆட்களுள் விருத்தசேதனம் செய்யப் பெறாத ஒருசிலரும் உண்டு *(எச 44:7* தொ; *யோசு 9:27* காண்). தவிர மற்றத் திருவிடங்க ளில் குறிப்பாக யூதா நாட்டில் அமைந்த திருவிடங்களில் லேவியரின் எண்ணிக்கை போதுமானதாய் இருத்தல் வேண்டும். தாவீ தும் சாலமோனும் லேவியரை நாடு முழுவ தற்கும் பகிர்ந்து கொடுக்கப் பார்த்தார்கள் எனத் தோன்றுகிறது *(யோசு 21; நீதி 18:30* காண்). ஆனால், ஆங்காங்கு அமைந்த பல திருவிடங்களில் உள்ள குருக்கள் வெவ் வேறு மரபினராவர் *(1 அர 12:31)*.

4. யோசியாவின் சீர்திருத்தம்:-

கி.மு.621-ஆம் ஆண்டில் நிகழ்ந்த யோசி யாவின் சீர்திருத்தம் ஆங்காங்கு அமைந்த திருவிடங்களை ஒழித்துக்கட்டி, லேவியரின் ஏகபோகத்தனி உரிமையையும், எருசலே மில் உள்ள குருத்துவத்தின் தலைமைத்துவத் தையும் நிலைநாட்டுகிறது. இச்சீர்திருத்தம் *உப 18:6*தொ குறிப்பிடும் விதிகளைப் பொருட்படுத்தாது, நடைமுறையில், குருத் துவப் பணிகளை ஆற்றும் பொறுப்பினைச் சாதோக்கின் வழித்தோன்றல்களுக்கு மட் டும் என்று ஒதுக்கி வைக்கிறது *(எரே 43:19)*; இவ்வாறு, இச்சீர்திருத்தம் பின்னர்க் குருக் கள் என்றும் லேவியர் என்றும் வேறுபடுத்து வதற்குத் தொடக்கமாக அமைகிறது; இந்த வேறுபாடு *எச 44:10-31*-இல் மிகத் தெளிவ டைகிறது.

ஆலயமும் முடியாட்சியும் ஒரே சமயத் தில் *(587)* அழிவுக்குள்ளாகின்றன; இத னால், அரசர்கள் குருத்துவத்தைப் பாது காத்து வந்த நிலை முடிவுறுகிறது; குருத்து வம் மக்கள் மீது மிகுந்த அதிகாரம் பெறுகி றது. இப்பொழுது முதல், புறச்சமயத்தினர் ஆட்சிக்குரிய அதிகாரத்தைக் கையாளுகின்ற னர்; இந்த அதிகாரத்தின் செல்வாக்கு, சோத னைகளிலிருந்து விடுதலை பெற்றதாய்க் குருத்துவம் நாட்டின் சமய வழிகாட்டியாகி றது. இறைவாக்குரைத்தல் என்பது ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து தேய்பிறைபோல் மறைந்துபோகிறது. இதன் காரணமாகக் குருத்துவ அதிகாரம் இன்னும் சிறப்படைகி றது. 573-ஆம் ஆண்டிலிருந்து, எசக்கியேல் கொணர்ந்த சீர்திருத்தத் திட்டங்களின்படி, ''தலைவன்'' திருவிடத்தில் நுழையத்தடை விதிக்கப்படுகிறான் *(எச 44:1*தொ; *46)*. இனி முதல், லேவியர் இனம் போட்டியற்ற ஏக போகத் தனியுரிமை கொண்டாடுகிறது *(எச 66:21*-இல் கண்டுள்ள ஒரே விதிவிலக்கும் இறுதிக்காலத்தை மட்டும் சார்ந்ததாகும்). இறுதியாக, (5-ஆம் 4-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய) ஐந்நூலில் உள்ள குருக்களைப் பற்றிய பகுதிகளும், அடுத்து (3ஆம் நூற் றாண்டுகளில் தோன்றிய) நாளாகம ஆசிரிய ரின் வேலையும் சேர்ந்து குரு ஆட்சிமுறை யின் முழு விவர வருணனையைத் தருகின் றன.

5. குரு ஆட்சிமுறை:-

இக்குரு ஆட்சிமுறை, ஒழுங்குமுறைக் கண்டிப்புள்ளது. இந்த ஆட்சி முறையின் உச்சியில் இருப்பவர் சாதோக்கின் மகனான தலைமைக்குரு; இவர் குருவுக்கோர் எடுத் துக்காட்டான ஆரோனின் வழிவருபவரா வார். ஒவ்வொரு திருவிடத்திலும் எப்பொழு தும் குரு ஒருவர் தலைவராக இருந்து வந்திருந்தார். அரசர் இல்லாமையால் இறை யாட்சிக்கான ஒரு தலைவர் தேவை என்று உணர்ந்தபோதுதான், தலைமைக்குரு என்ற சிறப்புப்பட்டம் தோன்றலாயிற்று. தலை

மைக்குரு 4-ஆம் நூற்றாண்டிலிருந்து தைலம் பூசி அபிடேகம் பெறுதல் (லேவி 8:12; தவிர 4:13; தானி 9:25 காண்), கடந்த காலத்தில் அரசர்கள் இவ்வாறு திருநிலைப்படுத்தப் பெற்றதை நினைவூட்டுகின்றது.

தலைமைக்குருவின் கீழ் ஆரோனின் மக்களான குருக்கள் உள்ளனர். இறுதியாக, துணைக் குருகுலத்தாரான லேவியர் மூன்று குடும்பங்களாகத் தொகுக்கப்பெறுகின்றனர்; இம்மூன்று குடும்பங்களோடு பாடகர்களும் வாயிற்காவலரும் ஒருங்கிணைக்கப் பெறுகின்றனர் (1 நாள் 25-26). இம்மூன்று வகுப்பினரும் சேர்ந்து புனித குலத்தார் என்பவரை உருவாக்குகின்றனர்; இக்குலத்தார் அனைவரும் ஆண்டவரின் ஊழியத்துக்கென்று தம்மை நேர்ச்சி செய்கின்றனர்.

6. பழைய ஏற்பாட்டின் இறுதியில்:-
இனிவரும் காலத்தில் குரு ஆட்சிமுறை, தலைமைக்குரு நியமனத்தைத் தவிர, மற்றப்படி மாறுபாடு எதற்கும் ஆளாகாது. 172-ஆம் ஆண்டில் சாதோக்கின் வழித்தோன்றலான இறுதித் தலைமைக்குரு 3-ஆம் ஒனியா அரசியல் சதிகளின் விளைவாகப் படுகொலை செய்யப்படுகிறார். அவரைத் தொடர்ந்து வந்த தலைமைக்குருக்கள் அவருடைய மரபு வழிக்குப் புறம்பே இருந்து, சீரியா நாட்டு அரசர்களால் நியமனம் பெறுகிறார்கள். மக்கபேயரின் எதிர்ப்பு, யோனத்தான் என்பவரைத் தலைமைக்குருவாகப் பதவியேற்றி வைப்பதற்கு இட்டுச்செல்கிறது; இந்த யோனத்தான் அத்துணை இனந்தெரியாத ஒரு குருத்துவக் குடும்பத்தின் வழித்தோன்றலாவார். யோனத்தானைத் தொடர்ந்து (143) தலைமைக் குருவான அவருடைய சகோதரர் சீமோன், குருக்களும் அரசர்களுமான கசமோனிய குலத்தவருள் (134-37) முதல்வர் ஆவார். இத்தலைமைக் குருக்கள் சமயத் தலைவர்களாய் இருப்பதைவிட அரசியல் தலைவர்களாயும் படைத்தலைவர்களாயும் இருக்கிறார்கள். எனவே இவர்கள் பரிசேயரிடையே எதிர்ப்பைக் கிளப்புகிறார்கள். பரிசேயர் பக்கமிருக்கும் சம்பிரதாயப் பற்றுடைய குருகுலத்தார், கசமோனிய குலத்தார் சாதோக்கின் வழிவந்தவராய் இல்லாததைக் கண்டிக்கின்றனர்; கசமோனிய குலத்தாரை ஆதரிப்பதா இல்லையா என்பதுபற்றிக், கும்ரானைச் சேர்ந்த குருத்துவப் பிரிவினர் பிளவுபடும் நிலைக்குக்கூட ஆளாகின்றனர். இறுதியாக, ஏரோதின் ஆட்சிக் காலத்திலிருந்து (37), அரசியல் அதிகாரமுடையவர் தலைமைக்குருக்களை நியமனம் செய்கின்றார். இத்தலைமைக்குருக்களைப் பேர்போன குருத்துவக் குடும்பத்தினரிடமிருந்து தேர்ந்து கொள்கின்றார்; இத்தலைமைக் குருக்களே, புதிய ஏற்பாடு ஆங்காங்குத் ''தலைமைக் குருக்கள்'' எனக் குறிப்பிடும் வகுப்பினரை உருவாக்குகின்றார்கள்.

II. குருத்துவப் பணிகள்:-
பண்டைய சமயங்களில், குருக்கள் வழிபாடு நடத்தும் திருப்பணியாளர்களாகவும், புனித மரபுகளைப் பாதுகாப்பவர்களாகவும், சமயத்துறை அறிஞர்கள் என்றளவில் இறைவாக்குரைஞர்களாகவும் இருந்தனர். இஸ்ராயேலரிடையே குருத்துவம் நூற்றாண்டுகளின் போக்கில் சமுதாய வளர்ச்சியையும் கோட்பாட்டு விளக்கத்தையும் குறிப்பிடத்தக்க அளவில் காணுகின்றது; எனினும், இக்குருத்துவம் எப்பொழுதும் அடிப்படையான இரு பணிகளை ஆற்றிவருகின்றது; அப்பணிகள் இணைப்பாளரின் (தொடர்புபடுத்துகிறவரின்) இருவகைச் செயல்களாகும்: அவை, 1. வழிபாடு நடத்தும் பணியும், 2. இறைவார்த்தையை எடுத்துரைக்கும் பணியுமாகும்.

1. வழிபாடு நடத்தும் பணி:- குரு திருவிடத்து ஆள். பழங்காலத்தில் குரு கடவுளின் பேழைக்குப் பாதுகாப்பாளர் (1 சாமு 1-4; 2 சாமு 15:24-29); இப்பொறுப்பினில், குரு விசுவாசிகளை ஆண்டவரின் ஆலயத்தினுள் வரவேற்கிறார் (1 சாமு 1); மக்கள் விழாக்கள் நடத்தும்போது குரு வழிபாட்டில் தலைமை தாங்குகிறார் (லேவி 23:11.20). குருவின் இன்றியமையாத பணி பலிசெலுத்துதலாகும். பலி செலுத்துவதில்தான் குரு, இணைப்பாளர் என்ற பொறுப்பின் நிறைவு பூண்டவராய்க் காணப்படுகிறார்; குரு கடவு

ளுக்கு மக்களின் காணிக்கையை முன்னிலைப்படுத்துகிறார்; கடவுளின் ஆசியைப் பெற்று மக்களுக்கு அளிக்கிறார். இவ்வாறுதான் சீனாய் மலையருகில் நடந்த உடன்படிக்கைப் பலியின்போது மோசே செய்கிறார் (யாத் 24:4-8); இவ்வாறுதான் குருத்துவக் குலமனைத்தின் தலைவரான லேவியும் செய்கிறார் (உப 33:10). நாடு கடத்தப்பட்ட பின்னர், நாள்தோறும் குருக்கள் இப் பணியை இடையறாத பலியில் நிறைவேற்றுகிறார்கள் (யாத் 29:38-42). ஆண்டுக்கொரு முறை, பரிகார நாளன்று தலைமைக்குரு தம் மக்களின் குற்றங்கள் அனைத்திற்கும் மன்னிப்புப் பெறும்படி பணியாற்றும்போது, தலைசிறந்த இணைப்பாளர் என்ற பொறுப்புள்ளவராய்க் காணப்படுகிறார் (லேவி 16; சீரா 50:7-23). மேலும், குரு திருநிலைப்படுத்துதல், தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றின் சடங்குமுறைகளுக்கும் பொறுப்புள்ளவர்; அரசரை அபிடேகம் செய்தல் - தைலம் பூசித் திருநிலைப்படுத்துதல் (1 அர 1:39; 2 அர 11:12); தொழுநோயாளிகளையும் (லேவி 14) பேறுகாலமான பெண்களையும் (லேவி 12: 6தொ) கத்திகரிப்புச்செய்தல் - தூய்மைப் படுத்துதல் ஆகியவை.

2. இறைவார்த்தையை எடுத்துரைக்கும் பணி:- மெசபொத்தாமியாவிலும் எகிப்திலும் குரு குறிசொல்லும் பணியாற்றினார்; விசுவாசிகள் (மக்கள்) அறிவுரை நாடிய போது, குரு தம் கடவுளின் பெயரால் பதில் அளித்தார். பண்டைய இஸ்ராயேலரிடையே குரு எபோதையும் (1 சாமு: 307மு). யூரிம் தும்மீம் என்பவற்றையும் (1 சாமு 14:36-42; உப 33:8 காண்) பயன்படுத்திக் குறிசொல்லுவது போன்றதொரு பணியாற்றுகிறார்; ஆனால், தாவீதுக்குப் பின்னர், இதுபோன்ற நடைமுறைகளைக் குறிப்பிடக் காணோம்.

இஸ்ராயேலரைப் பொருத்த அளவில், இறைவனின் வாக்கு வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற்போல, வேறு ஒரு வழியாக இறைமக்களை வந்தடைகின்றது. அந்த வழி, ஆவியால் தூண்டப்பெற்ற இறைவாக்கினர்களாவர். ஆனால், பரம்பரை வடிவில் வரும் இறைவாக்கும் உண்டு; இந்த இறைவாக்கு புனித வரலாற்றின் மாபெரும் நிகழ்ச்சிகளிலிருந்தும், சீனாய் மலை உடன்படிக்கை விதியின் கூறுகளிலிருந்தும் தொடங்குகிறது. மேற்குறிப்பிட்ட புனிதப் பரம்பரை, கடந்த காலத்துச் சிறந்த நினைவுகளை உயிர்ப்பிக்கும் விவரமான அறிக்கைகளில் ஓரளவும், அந்த அறிக்கைகளைக் கொண்டு தனது பொருளை உணர்த்தும் சட்டத்தில் ஓரளவும் உருப்பெறுகிறது. உப 4:14-16-இல் காணப்படும் ஆரோனைப்போலக் குருக்கள் இறைவனின் வாக்கை எடுத்துரைக்கும் திருப்பணியாளர்கள். திருவிழாக்களில் வழிபாட்டின்போது குருக்கள் விசுவாசிகளுக்கு, அவர்கள் விசுவாசத்திற்கு அடிப்படையாக இருக்கும் மேற்குறிப்பிட்ட அறிக்கைகளைத் திரும்ப எடுத்தோதுகிறார்கள் (யாத் 1-15; யோசு 2-6 ஆகியவை ஒருவேளை இத்தகைய வழிபாட்டுக் கொண்டாட்டங்களின் எதிரொலியாக இருக்கலாம்). உடன்படிக்கையைப் புதுப்பிக்கின்ற காலத்தில் குருக்கள் மோசேயின் சட்டத்தை விளம்பரப்படுத்துகிறார்கள் (யாத் 24:7; உப 27; நெக 8); அவ்வாறே குருக்கள் வழக்கமாக மோசேயின் சட்டத்தை விளக்கி, அறிவுரை நாடும் விசுவாசிகளுக்கு நடைமுறைக்குரிய போதனைகள் தருகிறார்கள் (உப 33:10; எரே 18:18; எச 44:23; ஆகா 2:11 தொ); தீர்ப்பளிக்கும் பொறுப்பினையும் நிறைவேற்றுகிறார்கள் (உப 17:8-13; எச 44:23 தொ). இத்தகைய பணிகளின் தொடர்ச்சியாகக் குருக்கள் பல்வேறு சட்டத்தொகுப்பேடுகளில் கண்ட திருச்சட்டத்தின் புதிய பதிப்பை எழுதி உறுதிப்படுத்துகிறார்கள்: உபாகமம், பரிசுத்தமாக்குதல்-தூய்மைப் படுத்துதல்-பற்றிய சட்டம் (லேவி 17-26), எசக்கியேல் தரும் திருச்சட்டம் (40-48), குருத்துவச் சட்டதிட்டங்கள் (யாத், லேவி, எண்), ஐந்நூலின் இறுதித்தொகுப்பு (எஸ் 7:14-26; நெக 8 காண்). எனவே, பரிசுத்த புத்தகங்களில் ஏன் குரு அறிவொளியாகக் காணப்படுகிறார் என்பது தெளிவாகிறது (ஓசே 4:6; மலா 2:6தொ; சீரா 45:21). வரலாறு, சட்டத்தொகுப்பேடுகள் என்று பரம்பரையாக வரும் வடிவத்தில், குரு

இறைவனின் வார்த்தைக்கு இணைப்பாளராய் இருக்கிறார்-இறைவனின் வார்த்தையை வாங்கி வழங்குபவராய் இருக்கிறார்.

யூதத்துவத்தின் இறுதி நூற்றாண்டுகளிலோ, செபக்கூடங்களின் எண்ணிக்கை பெருகிட, குருத்துவம் சடங்குமுறைப் பணிகளிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்துகிறது. அதே சமயத்தில், பொது நிலையினருள் தோன்றும் மறைநூல் அறிஞர்களின் அதிகாரம் வளர்வதைக் காணலாம். இவ்வறிஞர்கள் இயேசுவின் காலத்தில் பெரும்பாலும் பரிசேயர் கட்சியிற் சேர்ந்து கொண்டு இஸ்ராயேலரிடையே முதன்மையான ஆசிரியர்களாய் விளங்குவார்கள்.

III. நிறைவான குருத்துவத்தை நோக்கி:-
பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் மொத்தத்தில் தன் திருப்பணிக்குப் பிரமாணிக்கமாய் இருந்து வந்துள்ளது: குருத்துவம் தன் வழிபாடுகளாலும் தன் போதனைகளாலும் பரிசுத்த நூல்களைப் புதிதாகப் பதிப்பித்தும் மோசேயின் வழியும் இறைவாக்கினர்கள் வழியும் வந்த பரம்பரையை இஸ்ராயேலரிடையே உயிருள்ளதாய்த் தொடர்ந்து பாதுகாத்துமுள்ளது. தலைமுறை தலைமுறையாக இறைமக்களின் சமய வாழ்வுக்குக் காப்புறுதி அளித்துள்ளது. எனினும், இக் குருத்துவம் இறுதியாக இடம் பெயர்ந்தாக வேண்டும்.

1. குருத்துவத்தைப் பற்றிய மதிப்பீடு:- குருத்துவப் பணி மிகக் கண்டிப்பான கடமைகளைக் கொண்டது; தமது பணிக்குத் தரம் குன்றிய குருக்களே எப்பொழுதும் இருந்தனர். இறைவாக்கினர்கள் குருக்களின் தவறுதல்களை இடித்துரைத்தனர்; இஸ்ராயேலரிடையே ஆங்காங்கு இருந்த திருவிடங்களில் நடந்த யாவேயின் வழிபாட்டினைக் கானானியரின் பழக்க வழக்கங்களைக் கொண்டு தீட்டுப்படுத்துதல் (ஓசே 4:4-11; 5:1-7; 6:9), எருசலேமில் புறச்சமயக் கலப்படம் (எரே 2:26தொ; 23:11; எச 8), திருச்சட்டத்தை மீறுதல் (செப் 3:4; எரே 5:8; எச 22:26), இறைவாக்கினர்களை எதிர்த்தல் (ஆமோ 7:10-17; ஏச 28:7-13; எரே 20:1-6; 23:33தொ; 26), தனி ஒருவரின் தன்னலம் (மீக் 3:11; தவிர 1 சாமு 2:12-17; 2 அர 12:5-9 காண்), ஆண்டவருக்குரிய வழிபாட்டில் ஆர்வக் குறைவு (மலா 2:1-9). இத்தகைய கண்டன உரைகளில், ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு வகுப்பினர், அதாவது இறைவாக்கினர், குருக்கள் ஆகியோரிடையே எழுந்த வாதங்களை மட்டும் கண்டுகொள்ளுதல் அரைகுறை மதிப்பீடாகும். எரேமியாவும் எசக்கியேலும் குருக்கள்; உபாகமத்தையும், தூய்மைப்படுத்துதல் பற்றிய சட்டத்தையும் நூலாக்கிய குருக்கள் தம் சொந்த வகுப்பினரைச் சீர்திருத்த விரும்பினார்கள் என்பது வெளிப்படை; யூதத்துவத்தின் இறுதி நூற்றாண்டுகளில், 'கடவுள் பற்றற்ற' குரு ஒருவருக்கு எதிராக ஆலயத்தை விட்டு விலகிச் சென்ற கும்ரான் சமுதாயத்தினர் ஒரு குருத்துவப் பிரிவினர் ஆவர்.

2. குருத்துவத்தின் உயர்குறிக்கோள்:- குருத்துவ உயர் குறிக்கோள் ஒன்று இந்தக் கண்டனவுரைகள், சீர்திருத்தத் திட்டங்கள் ஆகிய அனைத்தையும் தூண்டியுள்ளது என்பது இங்குக் காணப்படும் முதன்மையான நோக்கம். இறைவாக்கினர்கள் தங்கள் காலத்துக் குருக்களுக்கு அவர்களுடைய கடமைகளை நினைவூட்டுகிறார்கள்: திருச்சட்டத்தின்மீது மெய்யான பற்றுதல் கொண்டிருத்தல் என்ற தூய வழிபாட்டினைக் குருக்களிடமிருந்து வற்புறுத்திக் கேட்கிறார்கள். குருத்துவச் சட்ட அறிஞர்கள் குருக்களின் தூய்மை, புனிதத்துவம், ஆகியவற்றை வரையறுத்துக் கூறுகிறார்கள் (எச 44:15-31; லேவி 21:10).

ஆனால், இத்தூய்மையையோ புனிதத்துவத்தையோ மனிதன் தன் சொந்த ஆற்றலால் மட்டும் கண்டடைய முடியாதென அனுபவம் உணர்த்துகிறது. இன்னும், இறுதியாகத் திரும்ப மீட்படையும் நாளன்றும் (செக் 3), தீர்ப்பின் நாளன்றும் (மலா 3:1-4) நிறைவான குருத்துவம் எய்தப்பெறும் என்ற நம்பிக்கை உள்ளதெனில், இறைவனே அந்த நம்பிக்கைக்கு அடிப்படை. தாவீதின் மக

னாக, மெசியாவுக்குப் பக்கத்தில் உண்மையான குரு ஒருவர் எதிர்பார்க்கப்படுகின்றார் (செக் 4;6:12தொ; எரே 33:17-22). இவ்வாறு, ஆரோன் வழித்தோன்றலும் இஸ்ராயேலர் வழித்தோன்றலுமான இரு மெசியாக்களைப்பற்றிய நம்பிக்கை, கும்ரான் நூல்களிலும், விவிலியத்தில் இடம் பெறாத ''குலத் தந்தையர்களின் உடன்படிக்கைகள்'' என்ற நூலிலும் பன்முறை காணப்படுகிறது. இந்த வாசகங்களில் உள்ளதுபோல் (செக் 3:8; 6:11) மேற்படி நம்பிக்கை இடம் பெற்ற பகுதிகளிலும் குருத்துவ மெசியா அரசுரிமை கொண்ட மெசியாவைவிட முக்கியத்துவம் பெறுகிறார். குருவின் இத்தகைய தலைமைச் சிறப்பு, உடன்படிக்கை பற்றிய கோட்பாட்டின் இன்றியமையாத பண்புக்குப் பொருத்தமாய் உள்ளது: இஸ்ராயேலர் ஒரு ''குருத்துவ மக்கள்'' ஆவர் (யாத் 19:6; ஏச 61:6; 2 மக் 2:17 தொ); இம்மக்கள் மட்டுமே உலகில் உண்மைக் கடவுளுக்குரிய வழிபாட்டை உறுதிப்படுத்துகிறவர்கள்; இம்மக்களே முழுமையடைந்த தமது இறுதி நிலையில் ஆண்டவருக்கு நிறைவான வழிபாடு செலுத்துவார்கள் (ஏச 40-48; ஏச 60-62; 2:1-5). ஆனால், இம்மக்களின் தலைமையில் குருத்துவம் இல்லையெனில், இதுவெல்லாம் எங்ஙனம் ஆகும்?

பழைய ஏற்பாட்டில், இறைவனையும் அவர்தம் மக்களையும் தொடர்புபடுத்தும் பணிகளுள் குருவின் பணியைத் தவிர்த்து வேறு பணிகளும் உண்டு. அரசன் இறைவனின் மக்களை அவர்களின் அமைப்பு, படை, அரசியல், சமயம் ஆகியவற்றின் தலைவராக வரலாற்றில் வழிநடத்துகிறார். இறைவாக்கினர் குறிப்பிட்டதொரு சூழ்நிலையில் தம் சகோதரர்களின் மீட்புக்குப் பொறுப்புள்ளவராய், அச்சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல், இறைவனிடமிருந்து நேராகச் செய்தி ஒன்று கொண்டு செல்லும்படியாகத் தனிப்பட்ட முறையில் அழைக்கப்பெறுகிறார். இறைவாக்கினரின் பணியைப் போலக் குருவின் பணியும் கண்டிப்பாகச் சமயப் பணியாகும்; ஆனால் குரு நிறுவனங்களின் திட்ட அமைப்புக்குள் இருந்து தமது பணியாற்றுகிறார்; குரு பிறப்புரிமையாக நியமனம் பெற்று, திருவிடத்திற்கும் அதன் மரபுகளுக்கும் உரியவராகிறார். குரு, மக்களுக்கு, அவர்களின் சரியான தலைவர் என்றளவில் அல்ல, பரம்பரையின் பெயரால் இறைவனின் வார்த்தையைக் கொண்டு வருகிறார்; குரு புனித வரலாற்றில் நடந்த நினைவுகூரத்தக்க நிகழ்ச்சிகளைக் கொண்டாடுகிறார், மோசேயின் திருச்சட்டத்தைக் கற்பிக்கிறார். குரு வழிபாட்டின்போது மக்களின் செபத்தை இறைவனிடம் எடுத்துச் செல்கிறார், அருளாசி கூறி மக்களின் செபத்திற்குப் பதிலளிக்கிறார். குரு தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களிடத்தில் புனித பரம்பரையைக் கொண்டு சமய வாழ்வு நிலைபெற்றிருக்கும்படி உறுதிசெய்கிறார்.

ஆ. புதிய ஏற்பாடு:-

பழைய ஏற்பாட்டுச் சிறப்புக்கள் இயேசுவில் மட்டுமே தம் முழுப்பொருளையும் சிறப்பையும் பெறுகின்றன; இயேசுவே அச்சிறப்புகளை நிறைவுசெய்து, மேம்பாடுறச் செய்கிறார். இறைவெளிப்பாட்டின் இப்பொதுச் சட்டம் எல்லாவற்றிற்கும் மேலாகக் குருத்துவக் காரியத்திற்குப் பொருந்துகிறது.

I. இயேசு, ஒரு தனித்தன்மை வாய்ந்த குரு:-

1. ஒத்தமை நற்செய்தி நூல்கள் - இயேசு தாமே குரு என்ற பட்டப்பெயருக்கு ஒரு முறைகூட உரிமை கொண்டாடுகிறதில்லை. இதற்குக் காரணம் போதுமான அளவு புரிந்து கொள்ளத்தக்கது. இயேசுவின் சூழ்நிலையில் இப்பட்டப்பெயர் வரையறுக்கப்பட்ட ஒரு பணியைக் குறித்துக்காட்டுகிறது; அப்பணி லேவிகுலத்து உறுப்பினருக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது; இயேசுவோ லேவியர் பணியினின்றும் தமது கடமைப் பொறுப்பு முற்றிலும் வேறுபட்டதாகவும், இவ்வாறாக மிக முழுமையானதாகவும் மிகப் படைப்புத் திறனுள்ளதாகவும் கண்டுணர்கிறார். இயேசு தம்மை மகன் என்றும், மனுமகன் என்றும் பெயரிட்டு அழைத்திடப் பெரிதும் விரும்புகிறார். எனினும், அவர் தமது திருப்பணியை வரையறுத்துக் கூறுவ

தற்காகக் குருவிற்குரிய சொற்களைப் பயன் படுத்துகிறார். அவருடைய வழக்கப்படி, இத்தகைய சொற்றொடர்கள் பொருள் தொக்கி நிற்கின்றனவாகவும், உருவகப்படுத்திக்காட்டுகின்றனவாகவும் உள்ளன.

இவ்வாறு கூறுவதெல்லாம், இயேசு தமது சாவைக்குறித்துப் பேசும்போது சிறப்பாக வெளிப்படுகிறது. இயேசுவின் சாவு, அவருடைய பகைவர்களுக்கு, இறை நிந்தைக் குரிய தண்டனையாக உள்ளது; இயேசுவின் சீடர்களுக்கு அச்சாவு இடறலாயிருக்கும் ஒரு தோல்வி. இயேசுவுக்கோ அவருடைய சாவு ஒரு பலியாகும். அவர் அப்பலியை பழைய ஏற்பாட்டு உருவகங்களைக் கொண்டு வருணிக்கிறார். சில வேளைகளில் இயேசு தமது சாவை, இறை ஊழியன் பரிகாரப்பலியாவதோடு ஒப்பிடுகிறார் (மாற் 10:45; 14:24;தவிர, ஏச 53காண்). இன்னும் சிலவேளைகளில் இயேசு தமது சாவை, மோசே சீனாய் மலையடிவாரத்தில் ஒப்புக்கொடுத்த உடன்படிக்கைப்பலியோடு ஒப்பிடுகிறார் (மாற் 14:24; தவிர, யாத் 24:8 காண்); மேலும், பாஸ்கா விழாவின் போது இயேசு அளிக்கும் இரத்தம் பாஸ்கா செம்மறியின் இரத்தத்தை நினைவூட்டுகிறது (மாற் 14:24; தவிர, யாத் 12:7.13.22 தொ காண்). இயேசு தமக்குத் தண்டனையாக அளிக்கப்படும் சாவை ஏற்றுக்கொள்கிறார்; குரு பலிப்பொருளை ஒப்புக்கொடுப்பதுபோல், இயேசுதாமே தமது சாவை ஒப்புக்கொடுக்கிறார்; இவ்வாறு, அவர் பாவங்களைப் பரிசுரிக்கவும், புதிய உடன்படிக்கையை நிலைநாட்டவும், தம் மக்களின் மீட்பைக் காணவும் எதிர்பார்க்கிறார். சுருங்கச் சொல்லின், இயேசு தமது சொந்தப் பலியை ஒப்புக் கொடுக்கும் குருவாய் உள்ளார்.

பழைய ஏற்பாட்டுக் குருக்களின் இரண்டாம் பணி, திருச்சட்டத்தைச் சார்ந்த பணியாகும். இயேசுவோ மோசேயின் சட்டத்தைச் சார்ந்த அளவில் தெளிவானதொரு பொறுப்புள்ளவர், அவர் அச்சட்டத்தை நிறைவேற்ற வருகிறார் (மத் 5:17 தொ). அவர் எழுதிய சட்டத்திற்குக் கட்டுண்டவராய் இராது, அச்சட்டத்தை உயர்த்துகிறார் (மத் 5:20-48). அவர் அச்சட்டத்தின் ஆழ்ந்த மதிப்பை வெளிப்படுத்தி, அம்மதிப்பை முதன்மையான கட்டளையிலும், அதையொத்த இரண்டாம் கட்டளையிலும் உள்ளடக்குகிறார் (மத் 22:34-40). இயேசு ஆற்றும் பணியின் இந்தப்பண்பு, பழைய ஏற்பாட்டுக் குருக்கள் பணியின் தொடர்ச்சியாக இருந்து, அதே பொழுது அவர்களின் பணியினையும் மிஞ்சுகிறது; ஏனெனில், இயேசுவின் வார்த்தை ஒப்புயர்வற்ற இறைவொளிப்பாடாகும், திருச்சட்டத்தை இறுதியாக நிறைவு செய்யும் மீட்பின் நற்செய்தியாகும்.

2. பவுல் தொடங்கி யோவான் வரை:-

பவுல் எத்தனையோ முறை இயேசுவின் சாவைப்பற்றிச் சிந்திக்கிறார்; அவர் தம் தலைவரான இயேசுவைப் பின்பற்றி, அச்சாவைப் பல உருவங்களில் காட்டுகிறார்: பாஸ்கா செம்மறிப் பலி எனவும் (1 கொரி 5:7), இறையடியானின் தாழ்ச்சிப் பலி எனவும் (பிலி 2:6-11), பரிகாரத்திருநாள் பலி எனவும் (உரோ 3:24 தொ) காட்டுகிறார். தவிர, இத்தகைய பலிசார்ந்த விளக்கம் கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொண்டு உறவாடுதல் (1 கொரி 10:16-22) கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்புப் பெறுதல் (உரோ 5:9; கொலோ 1:20; எபே 1:7; 2:13) போன்ற வருணனைகளிலும் திரும்ப வெளிப்படுகிறது. பவுலுக்கு இயேசுவின் சாவு இயேசு தன்னுரிமையுடன் (சுதந்தரமாய்) ஆற்றிய ஒப்புயர்வற்ற செயலாகும், எல்லாவற்றிற்கும் மேலான பலியாகும்; குருவுக்கே உரிய செயலாகும், இவ்வாறு இயேசு தம்மையே ஒப்புக்கொடுத்திருக்கிறார். எனினும், அப்போஸ்தலரான பவுல் தம் தலைவரான இயேசுவுக்கும் மிஞ்சியவராய், இயேசுவுக்குக் குரு என்ற பட்டப்பெயரைச் சூட்டுகிறாரில்லை; இந்தப் பட்டப்பெயருக்கு உரிமை கொண்டாடாதிருக்க, இயேசு கொண்டிருந்த காரணங்களையே அப்போஸ்தலரும் கொண்டுள்ளார் போலும்.

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தைத் தவிர்த்து, புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்கள்

அனைத்திலும் இவ்வாறுதான் உள்ளது. இந்நூல்கள் இயேசுவின் சாவை இறைஊழியப் பலியாகவும் (அ.ப. 3:13.26; 4:27.30; 8:32 தொ; 1 பேதுரு 2:22 தொ), செம்மறியின் பலியாகவும் (1 பேதுரு 1:19) காட்டுகின்றன. இந்நூல்கள் இயேசு இரத்தத்தைக் குறிப்பிட்டு வேண்டுகோள் செய்கின்றன (1 பேதுரு 1:2.19; 1 யோவா 1:7). இந்நூல்கள் இயேசுவைக் குரு என்று அழைக்கக் காணோம். இப்போக்கில் யோவானுடைய நூல்கள் சிறிதளவு அடக்கக் குறைவு காட்டுகின்றன; இந்நூல்கள் இயேசுவைப் பெரிய குருவின் உடையில் வருணிக்கின்றன (யோவா 19:23; திருவெளி 1:13). பலிச் செயலான பாடுகளின் தொடர் உரை, இந்நூல்களில் ''குருவுக்குரிய செபத்தைக்'' கொண்டு தொடங்குகிறது (யோவா 17); பல ஒப்புக்கொடுக்கப்போகும் குருவைப்போல், இயேசு ''தம்மையே அர்ச்சனையாக்குகிறார்'', அதாவது, பலி ஒப்புக்கொடுத்துத் தம்மையே அர்ச்சனையாக்குகிறார் (திருநிலைப்படுத்துகிறார்) (17:19); இவ்வாறு இயேசு பயனுறுதி படைத்த இணைப்பாளரின் பணியாற்றுகிறார்; இத்தகைய பணிக்குப் பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் உரிமை கொண்டாடியது வீணாகத்தான்.

3. எபிரேயருக்கு எழுதிய திருமுகம் மட்டும் தெளிவாகவும் நிதானமாகவும் கிறிஸ்துவின் குருத்துவத்தைப்பற்றிப் பேசுகிறது. இது பற்றி ஏற்கனவே கண்டுள்ள அடிப்படையான கருத்துக்களை இத்திருமுகம் திரும்பவும் கையாண்டு, சிலுவைப் பலியைப் பரிகாரப்பலியாகவும் (9:1-14; தவிர, உரோ 3:24 தொ காண்), உடன்படிக்கைப் பலியாகவும் (9:18-24), இறைஊழியனின் பலியாகவும் (9:28 காட்டுகிறது. எனினும், இத்திருமுகம், கிறிஸ்து ஒப்புக்கொடுத்த பலியில், ஒப்புக்கொடுத்த கிறிஸ்து என்ற ஆளின் பணியைப்பற்றி முழுக்கவனம் செலுத்துகிறது. இந்த ஆள் இயேசு, இவர் ஆரோனைப் போலவும், இன்னும் அவருக்கு மேலாகவும் இறைவனால் அழைக்கப் பெறுகிறார்; எதற்காகவெனில், மனிதர்களின் சார்பாகத் தலையிடவும், அவர்களின் பாவங்களுக்காகப் பலிகள் ஒப்புக்கொடுக்கவுமாகும் (5:1-4). இயேசுவின் குருத்துவம், சங் 110:4-இல் கண்டுள்ள அருள்வாக்கினுக்குப் பொருத்தமாய், மெல்க்கிசதேக்கின் குருத்துவத்தில் நிழலாடியது (ஆதி 14:18 தொ). இக்கருத்தைத் தெளிவுபடுத்துவதற்காக, இத்திருமுக ஆசிரியர் பழைய ஏற்பாட்டு வாசகங்களுக்கு நுட்பமான விளக்கம் அளிக்கின்றார்; அரசரும்குருவுமான மெல்க்கிசதேக்கின் தலைமுறை வரலாறு பற்றி ஆதியாகமம் மவுனம் காப்பது இத்திருமுக ஆசிரியருக்குக் கடவுளின் மகன் என்றென்றுமுள்ளவர் என்பதற்கு அறிகுறியாகத் தென்படுகிறது (7:3); ஆபிரகாம் மெல்க்கிசதேக்கிற்குப் பத்திலொரு பங்கு அளிப்பது மேற்படி ஆசிரியருக்கு, இயேசுவுக்கு முன்னால் லேவியின் குருத்துவம் தரம் குறைந்தது என்பதைக் குறித்துக் காட்டுகிறது (7:4-10); இன்னும் அந்த ஆசிரியருக்கு, சங் 110: 4-இல் கண்டுள்ள இறைவனின் ஆணை, இறுதியாக வரும் குருவின் மாறாத முழு நிறைவினை அறிக்கையிடுகிறது (7:20-25); இயேசு ஒரு தனித்தன்மையுடைய குரு; புனித குரு (7:2 தொ). பழைய ஏற்பாட்டுக் குருத்துவத்திற்கு அவருடைய குருத்துவம் முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறது.

இயேசுவின் குருத்துவம் அவருடைய இயல்பிலும் இருப்பிலுமே வேரூன்றியது; இந்த உண்மை அவரை எல்லாருக்கும் மேலான இணைப்பாளர் ஆக்குகிறது: அவர் உண்மை மனிதன் (2:10-18; 5:7 தொ); சோதனைக்கும் உள்ளாகும் அளவுக்கு நமது தாழ்நிலையில் பங்கு கொண்டவர் (2:18; 4:15). அதேபொழுது, இயேசு கடவுளின் மகன்; வானதூதர்களுக்கும் மேலானவர் (1:1-13). இயேசு ஒரு தனித்தன்மையுடைய குரு; என்றென்றுமுள்ள குரு. அவர் ஒரே முறையில் எக்காலத்திற்குமே தமது பலியை நிறைவேற்றிவிட்டார் (7:27; 9:12.25-28; 10:10-14). இதுமுதற்கொண்டு, அவர் என்றென்றும் பரிந்து பேசுகிறவர் (7:24 தொ); புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர் (8:6-13; 10:12-18).

4. கிறிஸ்து என்னும் மறையுண்மையை எந்த ஒரு பட்டப்பெயரும் தனிப்பட்ட நிலையில் முற்றிலும் உணர்த்துகிறதில்லை. இயேசு இறைத்தந்தையிடமிருந்து பிரிக்க முடியாத மைந்தன், மனுக்குலமனத்தையும் தம்முள் ஒன்றுகூட்டிச் சேர்க்கும் மனுமகன். அவர் ஒரே வேளையில் புதிய உடன்படிக் கையின் தலைமைக்குருவும், மெசியா-அரசரும், இறைவனின் வார்த்தையும் ஆவார். பழைய ஏற்பாடு, அரசன், குரு ஆகிய இணைப்பாளர்களின் பணிகளை (இம்மைக்குரிய பணி என்றும், ஆன்மீகப் பணி என்றும்) வேறுபடுத்தியிருந்தது; அவ்வாறே, குரு, இறைவாக்கினர் ஆகிய இணைப்பாளர்களின் பணிகளையும் (நிறுவ நிரந்தரமான பணி என்றும், குறிப்பிட்ட சூழ்நிலையில் நிகழ்கிற பணி என்றும்) வேறுபடுத்தியிருந்தது; இத்தகைய வேறுபாடுகள் இறைவெளிப்பாட்டிற்கு உரிய தனிச் சிறப்புக்களைப் புரிந்துகொள்வதற்கும் தேவையாகும். ஆனால், இயேசுவின் இயற்கை கடந்துநிற்கும் தன்மை அவரை வரலாற்றின் தெளிவற்ற நிலைகளுக்கு மேலே நிறுத்துகிறது; எனவே, தனி ஒருவர் என்ற நிலையில் அவர் தம்மிலேயே இணைப்பாளரின் மேற்குறிப்பிட்ட பல் பணிகள் அனைத்தையும் மீண்டும் ஒன்றுபடுத்துகிறார்; இறைமகன் என்ற அளவில், இயேசு நித்திய (நிலைபேறுடைய) வார்த்தை. இவ்வார்த்தை இறைவாக்கினர்களின் செய்தியை நிறைவுசெய்து, மேம்பாடுறப் பண்ணுகிறது; மனுமகன் என்ற அளவில், இயேசு மனுக்குலமனைத்தையும் தம்முள் மேற்கொள்கிறார்; அவர் மனுக்குலத்தின் அரசர்; அவர் காலம்வரை நாம் கண்டிராத அதிகாரமும் அன்பும் கொண்ட அரசர், கடவுளுக்கும் தம் மக்களுக்கும் இடையே ஒரு தனிப்பட்ட இணைப்பாளர் என்ற அளவில், இயேசு நிறைவான குரு; அவர் வழியாக மனிதர்கள் புனிதப்படுத்தப் பெறுகிறார்கள்.

II குருத்துவ மக்கள்:-

1. இயேசு குருத்துவத்தைத் தெளிவாகத் தமக்கு உடமையாக்கிக் கொள்வதில்லை; அதுபோலவே, தம் மக்களுக்கும் அதை உடைமையாக்குவதில்லை. ஆனால் இயேசு குருவாகச் செயல்புரிவதைத் தவிர்க்கவில்லை, இன்னும், அவர் புதிய ஏற்பாட்டு மக்களைக் குருத்துவ மக்கள் எனக் கருதியதாகத் தெரிகிறது. இயேசு தமது பலியை ஒப்புக்கொடுத்தும், இறைவார்த்தையை அறிவிக்கும் பணிபுரிந்தும் தம்மைக் குரு என வெளிப்படுத்துகிறார். இயேசு தமது குருத்துவத்தின் இவ்விரு பணிகளிலும் தம் சொந்த மக்கள் ஒவ்வொரும் பங்குகொள்ள அழைக்கிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். சீடர் ஒவ்வொருவரும் அவருடைய சிலுவையைச் சுமக்கவேண்டும் (மத் 16:24); அவருடைய கிண்ணத்தில் குடிக்கவேண்டும் (மத் 20:22; 26:27). ஒவ்வொருவரும் அச்செய்திக்காகச் சாகுமளவுக்கும்கூடச் சான்று பகர வேண்டும் (மத் 10:17-42). இயேசு மக்கள் அனைவரையும், மகன், அரசர்-மெசியா என்ற தமக்குரிய பட்டப்பெயர்களில் பங்குகொள்ளச் செய்கிறதுபோல், அவர்களைத் தம்மோடு குருக்களாகவும் ஆக்குகிறார்.

2. அப்போஸ்தவர்கள் இயேசுவின் இத்தகைய கருத்தைப் பின்பற்றுகிறார்கள்; எனவே கிறிஸ்துவ வாழ்வை ஒரு வழிபாடாகவும், ஒரு தனித்தன்மையுடைய குருவின் குருத்துவத்தில் ஒருவகையில் பங்குகொள்வதாகவும் காட்டுகின்றார்கள். பவுல் விசுவாசிகள் கொண்டுள்ள விசுவாசத்தைத் 'திருப்பலியாகவும்' 'காணிக்கையாகவும்' (பிலி 2:17) கருதுகிறார்; அவர் பிலிப்பிய திருச்சபையிடமிருந்து பெறும்பல உதவிகள் ''நறுமணம் வீசும் காணிக்கையும், கடவுளுக்குப் பிரியமான, உகந்த பலிப்பொருளுமாகும்'' (பிலி 4:18). பவுலைப் பொறுத்த அளவில், கிறிஸ்துவர்களின் வாழ்வு முழுவதும் ஒரு குருத்துவச் செயலாகும்; கிறிஸ்துவர்கள் தங்கள் ''உடலைக் கடவுளுக்கு உகந்த பரிசுத்த பலியாகவும் உயிருள்ள பலியாகவும்'' ஒப்புக்கொடுக்கும்படி பவுல் அழைக்கிறார்; ''இதுவே நீங்கள் செலுத்தவேண்டிய ஆன்மீக வழிபாடு'' என்கிறார் (உரே 12:1; தவிர பிலி 3:3; எபி 9:14; 12:28 காண்). இந்த வழிபாடு, ஆண்டவரைப் புகழ்வதில் அடங்கும் அள

வுக்குப் பிறருக்கு உதவி புரிவதிலும், உடைமைகளைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதிலும் அடங்கும் (எபி 13:15 தொ). யாக்கோபு எழுதிய திருமுகம், உண்மை வழிபாட்டினை உருவாக்கும் திட்டவட்டமான செயல்களை விவரமாகக் கூறுகிறது; நாவடக்கம், அனாதைகளையும் கைம்பெண்களையும் ஆதரித்தல், உலகத்தால் மாசுபடாமல் ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ளுதல் ஆகியன (யாக் 1:26 தொ).

பேதுரு எழுதிய திருமுகமும் திருவெளிப்பாடு நூலும் மக்களின் குருத்துவம்பற்றி வெளிப்படையாகப் பேசுகின்றன: இத்திருமுகமும் நூலும் இஸ்ராயேலரின் ''அரச குருத்துவத்தை'' கிறிஸ்துவ மக்களுக்கு உரித்தாக்குகின்றன (1 பேதுரு 2:5.9; திருவெளி 1:6; 5:10; 20:6; தவிர, யாத் 19:6 காண்). பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்கள் அறிவிப்பதுபோல, இஸ்ராயேலர் அரச குருத்துவத்தினர் என்ற பட்டப்பெயர் பெற்றதன் காரணமாகப் புறச்சமய மக்களினங்கள் நடுவே, உண்மைக் கடவுளுக்குரிய வழிபாட்டை உறுதிப்படுத்த வேண்டும்., இப்பணியை இனிக் கிறிஸ்துவ மக்கள் மேற்கொள்வார்கள். இவ்வாறு கிறிஸ்துவ மக்கள் மேற்கொள்வதற்குக் காரணம், இயேசு அரசரும் குருவுமான மெசியா எனும் தமது மேன்மையில் அம்மக்களைப் பங்குபெறச் செய்வதாகும்.

III. இயேசுவின் குருத்துவத்தைச் சார்ந்த திருப்பணியாளர்கள்

புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு வாசகமும் திருச்சபையில் பொறுப்புடையவர்களுள் எந்த ஒரு நபருக்கும் குரு என்ற பெயரைக் கொடுக்கிறதில்லை. ஆனால், இயேசு, குரு என்ற பட்டப்பெயரைப் பயன்படுத்துவதில் மிக அடக்கமாக நடந்துகொள்கிறார்; இவ்வாறு, அவர் இப்பட்டப்பெயரைப் பொறுத்தளவில் மவுனம் காப்பது எதையும் மெய்ப்பிக்கிறது என்பது அரிது. இயேசு தம் மக்களைத் தமது குருத்துவத்தில் பங்குபெறச் செய்கிறார்; பழைய ஏற்பாட்டில் உள்ளது போலப் புதிய ஏற்பாட்டிலும் இறைமக்களுடைய இந்தக் குருத்துவம், இறைவனால் அழைக்கப்பெற்ற திருப்பணியாளர்களால் மட்டுமே உண்மையில் செயல்பட முடியும்.

1. இயேசு பன்னிருவரை அழைத்து, தமது திருச்சபைமீதான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார் என்பது நிலைநாட்டப்பட்ட உண்மை. அவர் அவர்களை இறைவார்த்தையை எடுத்துரைக்கும் பணிக்கென்று ஆயத்தம் செய்தார்; அவர்களுக்குத் தமது அதிகாரத்திலும் ஓரளவு பங்குகொடுத்தனுப்பினார் (மத் 10:8.40; 18:18); மேலும், தமது இறுதி நாள் மாலையில் அவர்களிடம் நன்றித் திருப்பலித் திருவிருந்தினை ஒப்படைத்தார் (லூக் 22:19). இவையெல்லாம் இயேசுவின் குருத்துவத்தில் திட்டவட்டமான முறைகளில் பங்கு பெறுதலாகும்.

2. அப்போஸ்தலர்கள் இவ்வாறெல்லாம் புரிந்து கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு அடுத்துத் தங்கள் பணியைத் தொடர்ந்தாற்றும்படி பொறுப்புடையவர்களை ஏற்படுத்துகிறார்கள். இவ்வாறு ஏற்படுத்தப்பட்டவர்களுள் ஒருசிலர் மூப்பர்கள் என்ற பட்டப்பெயரைக் கொண்டிருக்கிறார்கள்; மூப்பர்கள் என்பது, குருக்கள் என்று நடைமுறையில் உள்ள பெயருக்குத் தொடக்கமாகும் (மூப்பர்கள்: அ.ப. 14:23; 20:17; தீத்து 1:5). பவுல் அப்போஸ்தலத்துவம், அருட்கொடைகள் ஆகியவை பற்றிச் செய்யும் ஆழ்ந்த சிந்தனை ஏற்கெனவே, திருச்சபையில் உள்ள திருப்பணியாளர்களின் குருத்துவத்தை நோக்கிச் செல்கிறது. பவுல் சமுதாயக் குடும்பங்களில் பொறுப்புடையவர்களுக்குக் குருத்துவப் பட்டப்பெயர்களை வழங்குகிறார்: ''கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளர்கள்'' (1 கொரி 4:1 தொ) ''புதிய உடன்படிக்கையின் பணியாளர்கள்'' (2 கொரி 3:6); இன்னும் அவர் அப்போஸ்தலத்துவப் போதனையை ஒரு வழிபாட்டுப் பணிபோல வருணிக்கிறார் (உரோ 1:9; 15:15 தொ); இங்கிருந்துதான், பணிவிடைக் குருத்துவம்பற்றிய பரம்பரையில் மிகுதிப்படியான விளக்கங்கள் எல்லாம் தொடங்குகின்றன. எனவே, இப்பணி

விடைக்குருத்துவம் தனிச்சலுகை பெற்றவர்களால் ஆன சாதி ஒன்றினை உருவாக்குவதில்லை. இப்பணிவிடைக் குருத்துவம், கிறிஸ்துவின் தனித்தன்மை வாய்ந்த குருத்துவத்திற்கோ, விசுவாசிகளின் குருத்துவத்திற்கோ தீங்கிழைப்பதில்லை. மாறாக, பணிவிடைக்குருத்துவம் இவ்விரு குருத்துவத்திற்கும் ஊழியம் புரிவதாய, இணைப்பாளரின் பணிகளில் ஒன்றாய் அமைகிறது; இணைப்பாளரின் பணிகள் எல்லாம் இறைமக்களுக்குரிய ஊழியத்தை உறுதிப்படுத்துகின்றன.

குருவி (SPARROW)

காண்க: அடைக்கலான் குருவி.

குருவே! (MASTER')

இயேசுவின் பட்டங்களில் ஒன்று. பொறுப்பாளர் அல்லது தலைவர் என்ற பொருளில் குருவைக் குறிக்கும் கிரேக்கச் சொல் எழுபது நூலிலும் கிரேக்க இலக்கியங்களிலும் பலவகையான அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இப்பெயரை லூக்கா மட்டுந்தான் [illegible] இயேசுவை அழைக்கப் பயன்படுத்துகிறார் (லூக் 5:5; 8:24.45; 9:33.49; 17: [illegible]

குலத்தந்தையர்கள், குல மூதாதையர்கள்

இவர்கள் இஸ்ராயேலின் குல முதியவர்கள். இவர்கள் இஸ்ராயேலர் கோத்திரங்களில், குலங்களில் சிறப்புமிக்கவர்கள். அவர்களிடையே ஆட்சித்தன்மை அல்லது நடுவர் பதவி வகித்தவர்களாவர் (1 நாள் 24:31: 27:22; 2 நாள் 19:8; 23:20; 26:12) ஆனால் குறுகிய பொருளில், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய மூதாதையரே குலத்தந்தையர் அல்லது குல மூதாதையர்கள் என அழைக்கப்படுவர். புதிய ஏற்பாட்டில் தாவீதும் (அ.ப. 2:29). யாக்கோபின் [illegible] புதல்வர்களும் (7:8-9) ஆபிரகாமும் (எபி 7:4) குலமூதாதையர்கள் என்றழைக்கப்படுகின்றனர். தந்தை, என்ற எபிரேயச் சொல் ஒருவருடைய ஆண் பெற்றோரை மட்டுமன்று, தூரத்து இன முன்னோரையும் குறிக்கவல்லது (ஆதி 10:21; [illegible] 6:1, [illegible] இது [illegible] மொழியிலும் தந்தை என்ற சொல், இஸ்ராயேலின் குல மூதாதையர் உள்ளிட்ட முன்னோர்களைக் குறிக்கவல்லது (உரோ 9:5; 11:28; 15:8; 1 மக் 2:51-60). விவிலியத்தின் இறைவன், அடிக்கடி ''என்/எங்கள் தந்தையரின் கடவுள்'' என்றும் (ஆதி 31:5; தாணி 2:23: அ.ப.5:30) அல்லது மூதாதையரின் பெயர்களையும் கொண்ட இத்தகைய வாய்பாட்டாலும் (ஆதி 28:13; 31:42; யாத் 3:6) அழைக்கப்படுகிறார்.

குலமூதாதையர் பற்றிய நிகழ்ச்சியுரைகளை மூன்று கதைச் சுழல்களாகப் பிரிக்கலாம். முதலாவது கதைச்சுழல், ஆபிரகாமையும் ஈசாக்கையும் பற்றியதாகும் (ஆதி 11:27-25:18). இரண்டாவது இஸ்ராயேலாகிய யாக்கோபையும் ஏசாவையும் பற்றியதாகும் (25:19-37:1). மூன்றாவது யோசேப்பும் அவரது சகோதரர்களும் பற்றிய கதைகளைக் கூறுகிறது (37:2-50:26). வாக்களிக்கப்பட்ட நாடு (26:3; 28:4), சந்ததிகள் (12:2; 17:1; 22:17), குலமூதாதையர்கள் வழியாக உலகம் முழுவதும் ஆசிர்பெறும் என்ற வாக்குறுதி (12:3; 26:4; 28:14) ஆகியவற்றின் சூழ்நிலைகளில் இறைவனது அழைப்பு இந்த மூதாதையர்களுக்கு வந்தது. அவர்களும் அதற்குப பணிந்தனர். ஆனால் இந்நிகழ்ச்சியுரை மூதாதையர் கானானில் நுழைந்ததோடு தொடங்குகிறது; எகிப்தில் குடியேறியதோடு முடிகிறது; வாக்குறுதிகள் இனிமேல்தான் நிறைவேறவேண்டும். குலமூதாதையர்கள் அறிந்த கடவுள் அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டவராவார். இரு சந்தர்ப்பங்களில் இறைவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்துகொள்கிறார் (ஆதி 15:17); இரண்டிலும் தாம் கட்டுப்பட்டவராக இறைவன் தோன்றுகிறார். இந்த உடன்படிக்கைச் சடங்குகள் இஸ்ராயேல் மக்களோடு இறைவன் செய்துகொண்ட உடன்படிக்கையின் முதல் வடிவங்களாகும் (17:7; யாத் 2:24; 34:10; யோசு 24:2 சாமு 23:5).

குலமூதாதையர்கள் நாடோடிகளாக, கூடாரங்களில் வாழ்ந்தவர்களாக ஆடு, மாடுகளைக் கொண்டிருந்தவர்களாகச் சித்த

ரிக்க[illegible]கின்றனர் (ஆதி 13:5-7; 18:7; 30:29-43; 37:2); ஆயினும் கிணறுகள் தோண்டினர் (21:30); பயிர் செய்தனர் (26:12); நகர்களுக் கருகில் குடியேறினர்; பீடங்களைக் கட்டினர் (13:18; 26:25); பலிகள் செலுத்தினர் (31:54; 46:1). இத்தகைய வாழ்வு கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டைச் சேர்ந்த வட யூப்பிரத்திசைச் சேர்ந்த மாரி ஏடுகளில் காணப்படும் மாதிரிகளோடு ஒத்துப்போகின்றது. நூசி ஏடுகளில் காணப்படும் வாழ்க்கைமுறைக்கு இணையாக உள்ளது. ஆயினும் மத்திய வெண்கலக் காலத்தில் எந்த நூற்றாண்டுகளில் இந்தக் குலமூதாதையர்கள் வாழ்ந்திருக்கக்கூடும் என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்தொற்றுமை இன்றும் ஏற்படவில்லை.

குலமூதாதையர் பற்றிய நிகழ்ச்சியுரைகளின் வரலாற்றுத்தன்மை கடுமையான சர்ச்சைக்குரியதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் வளர்ச்சியடைந்த வெல்ஹாசனின் "ஏடுகள் கருதுகோள்" இக்கதைகளில் வரலாற்று மதிப்பீடே இல்லையென்று கருதியது. கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டு காலம் பற்றியச் செய்திகள் இன்று நமக்குக் கிடைத்திருப்பதுபோல் வெல்ஹாசனுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த மூதாதையர்கள் நாட்டுப்பாடல்களாலும், இதிகாசங்களாலும் படைக்கப்பட்ட ஆட்களாகவும், அநேகமாக இந்த மூதாதையர்களிடமிருந்து தோன்றிய இனங்களின் ஆட்தன்மைப்படுத்தப்பட்ட தின் விளைவாகவும் அவர்களைக் கருதினர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மெசபொத்தாமிய ஆப்பு எழுத்து ஏடுகளும் மற்றச் சான்றுகளும் ஆதியாகமத்தில் காணப்படும் வழக்கங்களைத் தெளிவுபடுத்தியுள்ளன. இவை ஆய்வாளர்களைக் குலமூதாதையர் பற்றிய நிகழ்ச்சியுரைகளை மறுபரிசீலனை செய்யச் செய்துள்ளன. ஆயினும் இவர்கள் ஆதி 12-50- என்ற பகுதியின் வரலாற்று மதிப்பீடு பற்றி ஐயப்பாடே கொண்டிருந்தனர். ஆனால் பாலஸ்தீனத்தில் நடந்த தொல்பொருளாய்வுக் கண்டுபிடிப்புக்களால் அறிஞர்பலர் இந்நிகழ்ச்சியுரைகள் தன்மையால் நம்பத்தகுந்த வரலாற்று ஏடுகள் என்றும், இவை வரலாற்றுச் சூழ்நிலையில் வேரூன்றியவை என்றும் ஏற்றுக்கொண்டனர். 1970-இன் மத்தியில் தோன்றிய அறிஞர்களின் புதியதலைமுறையினர் ஆதியாகமம் பற்றிய இலக்கிய ஆய்வின் அடிப்படையிலும், விவிலியத்துக்குப் புறம்பான சான்றுகள் பற்றிய மறுபரிசீலனையின் அடிப்படையிலும், மேற்கூறப்பட்ட கருத்தொற்றுமையைத் தாக்கினர். இதன் விளைவாக, கருத்தொற்றுமைக்கு ஆதரவான சான்றுகள் கவனமாய் மறுமதிப்பீடு செய்யப்பட்டன. இதன்விளைவாக, சிலர் கருத்தொற்றுமையைக் கைவிட்டனர். மற்றவர்கள் அதன் திருந்திய வடிவில் அதைத் தொடர்ந்து ஆதரித்தனர்.

குலிதா (HULDAH - கீரியின் வகை)

சல்லூமின் மனைவி. இவள் ஓர் இறைவாக்கினள். 'ஆடை வைக்குமிடத்தைக் காவல் செய்பவள்'' (2 அர 22:14). சட்ட நூலை ஆலயத்திற்குள் கண்டெடுத்தபிறகு, ஆண்டவருடைய விருப்பத்தைக் கேட்டறிய இவளிடம்தான் யோசியா அரசன் தன் தூதர்களை அனுப்பினார். நாட்டின் மீது கடவுளுடைய நீதித்தீர்ப்பைப் பற்றி இறைவாக்குரைத்தாள். ஆனால் யோசியா மனந்திரும்பிப் பாவப்பரிகாரம் செய்ததால் அவருக்குச் சமாதானத்தை இறைவாக்குரைத்தாள் (22:16-20). இந்த ஆலோசனை[illegible]குதான் யோசியா மதச் சீர்திருத்தங்களைச் செய்தார் (2 அர 23:1-25). குலிதாவின் இறைவாக்கு நிறைவேறியதா? என்பது கேள்விக்குரியதாகும். ஏனெனில், யோசியாசு பிறகு கொல்லப்பட்டார். மேலும், வழக்கத்துக்கு மாறாக, ஒரு பெண் இப்படித் தீவிரமாக நடந்து கொள்வதற்கு உதாரணமாகவும் அமைந்துவிடுகிறது.

குலோயி (CHLOE - பச்சைப்புல்[illegible], பகமை[illegible])

பவுல் எபேசில் பணிபுரிந்தபொழுது இவளது வீட்டில் உள்ள அடியார்[illegible], இவள் வீட்டாரோ அவரிடம் சென்று கொரிந்து திருச்சபையில் பிளவுகள் [illegible] செய்தனர் (1 கொரி 1:11). [illegible]

வப் பெண்ணா, அல்லது எபேசிலோ, கொரிந்து நகரிலோ வாழ்ந்தவளா என்பது பற்றித் தெளிவாகக் கூறப் போதிய ஆதாரங்கள் இல்லை. இருப்பினும் பவுலுக்கும் கொரிந்து மக்களுக்கும் நன்கு அறிமுகமானவளாக இருந்தாள்.

குவார்த்து (QUARTUS - நான்காவது)

பவுல் வழியாக உரோமைக் கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்து அனுப்பும் கொரிந்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர் (உரோ 16:23). கொரிந்தியருக்கு எழுதிய முதல் மடலில் இவரது பெயரும் அடிக்குறிப்பில் காணப்படுகிறது.

குளம் (POND, POOL)

இயற்கையான அல்லது செயற்கையான நீர்த்தேக்கங்களாகும். இவை மழை நீராலும், ஊற்றுக்கள் மற்றும் ஆறுகளிலிருந்தும் நிரப்பப்பட்டன. இவை, விவிலிய கிராமங்களுக்கு நீர் வழங்கியதில் முக்கியமானவையாகும். இவற்றில் பலவற்றை இன்றும் காணலாம். இவற்றைக் குறிக்கப் பல எபிரேயச்சொற்கள் பயன்பட்டுள்ளன.

இவற்றில் சிலவற்றை, சில இடங்களோடு தொடர்புபடுத்தி அடையாளங்காட்டலாம். அப்படிப்பட்ட இடங்களிலுள்ள குளங்களில் சில; கிபயோன் (2 சாமு 2:13); கெபிரோன் (4:12); சமாரியா (1 அர 22:38); கெசிபோன் (2 சாமு 7:4); எருசலேம் (2 18:17; ஏச 7:3; 36:2); சீலோவாம் (9:7).

நகருக்கு அருகிலுள்ள குளங்கள் பாறையில் குடையப்பட்ட நீர்த்தேக்கங்களாகும் (நெக 3:16; திருவுரை 2:6). அவற்றில், பாறையில் வெட்டப்பட்ட கால்வாய்களால் மழைநீர் சேகரிக்கப்பட்டது. முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்த சந்திப்பு இடங்களில் குளங்கள் குறிக்கப்படுகின்றன (2 சாமு 2:13; 1 அர 22:38). நகர் முற்றுகைக்கு ஆயத்தமாகும் போது குளங்களைப் பழுதுபார்ப்பது, புதியவற்றை அமைப்பது என்பன முக்கியமான செயல்களாகும் (2 அர 20:20). சில குளங்கள் குணமாக்கும் இடங்களாகவும் திகழ்ந்தன (யோவா 5:2-3; 9:7).

பாலைவனத்தை மாற்றியமைக்கும் இறைவனது ஆற்றலையும் (ஏச 41:18), நினிவேயின் அழிவையும் (நாகூ 2:8) இளம்பெண்ணின் கண்ணழகையும் (2 சாமு 7:4) சுட்டிக்காட்ட, குளங்கள் உருவகமாகப் பயன்பட்டுள்ளன.

இன்றும் இருக்கும் புகழ்பெற்ற குளங்களில் சில கெபிரோன், கிபயோன், எருசலேம் போன்ற இடங்களில் உள்ளவையாகும். பெத்திலேகேமின் அருகில் உர்தாசு பள்ளத்தாக்கிலுள்ள ''சாலமோனின் குளங்கள்'' மூன்றுள்ளன. 200 அடி அகலமுள்ளவை. இவற்றில் பெரியது 600 அடி நீளமும், 50 அடி ஆழமும் கொண்டது. உரோமையர் காலத்திலேயே இவை எருசலேமுக்கு நீர் வழங்கின. இதற்குக் கால்வாய்களின் சிதைவுகள் சான்று பகர்கின்றன. இப்போது அருகிலுள்ள மக்கள் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

குளவிகள் (HORNETS, WASPS)

பாலஸ்தீனத்தில் காணப்பட்ட குளவிகள் பெரியவையாகவும் மஞ்சள், சிவப்பு நிறங்களுடையவையாயும் இருந்தன. எறும்பு, தேனீ போன்ற கூட்டு வாழ்வுடைய பூச்சிகளாகும். கானானியர்களை விரட்டியடிப்பதில், இஸ்ராயேலர்களுக்குச் சார்பாக இறைவனது தலையீட்டை விவரிக்கும்போது குளவிகள் விவிலியத்தில் குறிக்கப்படுகின்றன. (யாத் 23:28; உப 7:20; யோசு 24:12). இவை கொடிய பூச்சிகள், இவை தங்களது வேட்டைப் பொருளைக் கொட்டி அதை உணர்ச்சியற்ற பொருளாக்கியபின், அதன் உயிர்ச்சத்தை உறிஞ்சும். உருவகப்பொருளில், யாவேயின் தாக்குதல் கானானியர்களை உணர்ச்சியற்ற பொருளாக்குவதால், அவர்கள் எபிரேயர்களுக்கு எதிராகத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. இது, எகிப்திலிருந்து வந்த விடுதலைப் பயணத்தைப் போலவே, கானானை வெற்றிகொண்டதி

லும் யாவே முக்கியமான பங்கு கொண்டிருந்தார் என்பதைச் சுட்டுகிறது.

குடிசங்கள், இளம்பிறை அணிகள் (CRESCENT)

இது இளம்பிறை வடிவம் கொண்ட தாயத்து. அந்தக் காலத்திலே இதைக் கழுத்திலோ, ஆடையில் தைத்தோ அணிந்தார் (நீதி 8:21.26).

குளித்தல், கழுவுதல், துவைத்தல் (BATH, BATHING)

விவிலிய மொழியில் குளித்தலுக்கும், கழுவுதலுக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை. ஆனால் துணிகளைச் சுத்தம் செய்தலுக்கும், உடம்பைச் சுத்தம் செய்தலுக்கும் வேறுபாடு உண்டு. ஆடைகள் நீருக்குள் வைத்துத் துவைக்கப்படுகிறது; மற்றப் பொருட்கள் நீரில் நனைத்துக் கழுவப்படுகிறது.

பாலஸ்தீனத்தில் உள்ள வறட்சியான வெப்பநிலை ஒருவன் குளிப்பதை ஊக்கப்படுத்தவில்லை. ஓடைகள் அல்லது குளங்கள் உள்ள இடத்தில் குளிக்கலாம் (2 அர 5:10; யோவா 9:7). ஆனால் முகம், கை, கால்கள் இவற்றில் காணப்படும் தூசுகள் கழுவப்பட வேண்டும். ஒப்பனையில் எண்ணெய் பூசு முன் ஒருவரது முகம், கை, உடம்பு முழுவதும் கழுவப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது (ஆதி 43:31; 2 சாமு 12:20; ரூத் 3:3; எச 23:40; உ.ச. 5:3). துக்க காலத்தில் முகமும், ஆடையும் கழுவாமல் விடப்படும் (2 சாமு 12:20; 19:25). இதைத்தான் நோன்பு இருக்கும்போது தவிர்க்கப்படவேண்டும் என இயேசு கூறினார் (மத் 6:17). விருந்தாளியை உபசரிக்க அவரது பாதம் கழுவுவதும் (ஆதி 18:4; நீதி 19:21). மற்றவரது பாதம் கழுவுவதும் அடிமையின் வேலையாகும்; இது தாழ்ச்சியையும் குறித்தது (1 சாமு 25:41; 1 தீமோ 5:10; யோவா 13). தாழ்ச்சியின் இந்த அடையாளம் உருவகமாகத் தலைகீழாகச் சங் 58:10-இல் நீதிமான் தீயவரின் இரத்தத்தில் தன் பாதங்களைக் கழுவுவான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிலாத்து இயேசுவின் விசாரணையில், கைகழுவுவது போன்று செய்வது குற்றமில்லாத் தன்மையைக் குறிக்கும் அடையாளமாகும் (உப 21:6; சங் 26:6; 73:13; மத் 27:24). உணவு உண்ணுமுன் கை கழுவுவது ஒரு சடங்காகப் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நிலவியது (மத் 15:2; மாள் 7:3; லூக் 11:38). ஆடுகள் மயிர் கத்தரிப்புக்குமுன் கழுவப்பட்டன (உ.ச. 4:2). குழந்தைகள் பிறந்த பிறகும் (எசே 16:4) உடல்களை அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னும் (அ.ப. 9:37) திராட்சை ரசமும் (ஆதி 49:11), பாலும் (உ.ச. 5:12) பாடல்களில் கழுவும் பொருட்களாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

சடங்குகளில் நீரினால் கழுவுவது பற்றிய குறிப்பு எண்ணிக்கையில் விஞ்சிவிட்டன. குருக்களும், லேவியர்களும் பீடத்திற்கு வரு முன்னும், பிற சடங்குகளின்போதும் தங்களது ஆடை, கை, கால், உடம்பு முழுவதையும் கழுவுவார்கள் (யாத் 30:20; லேவி 8:6; எண் 8:21). அத்துடன் தகனப்பலிகளின் தொடைகளையும் குடல்களையும் கழுவுவார்கள் (லேவி 8:21). பலவிதங்களில் தீட்டுப்பட்டவர்கள் தங்களது ஆடைகளையும் உடம்பையும் (லேவி 14:9; 15:5.13; எண் 19:10) கழுவுவார்கள். தீட்டுப்பட்ட ஆடையும் கழுவப்படவேண்டும் (லேவி 6:24).

பழைய ஏற்பாட்டில் கழுவுதல் என்பது பாவத்தைக் கழுவுவது என்று உருவகமாகக் குறிப்பிடப்பட்டது (ஏச 1:16; 4:4). இவ்விதம் குறிப்பது புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் கொடுத்தல் என்ற கருத்தில் கூறப்பட்டது (அ.ப. 22:16; எபி 10:22; எபே 5:26; தீத் 3:5). நான்கு முறை (சங் 51:2; எரே 2:22; 14:14) ஆடைகளைத் துவைத்தல் என்ற சொல் பாவத்திலிருந்து கழுவுதல் என்ற பொருளில் உருவகமாகக் கூறப்பட்டுள்ளது.

குள்ளன் (DWARF)

பலி ஒப்புக் கொடுக்க உடலளவில் தகுதியற்றவர்களாகக் குறிக்கப்படுபவர்களில் ஒரு வகையினர் (லேவி 21:20); குறிக்கப்படும் சூழ்நிலையில் பார்வைக் குறையுடையவனாகவோ, சூம்பிய அங்கம் கொண்டவனா

கவோ (வாதம், எலும்புறுக்கி நோய்) இருந்திருக்கவேண்டும. மற்ற இடங்களில் இந்த வார்த்தை 'மெலிந்த', 'சிறிய', 'மெல்லிய' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

குழந்தை (CHILD)

எல்லா மக்களையும் போன்று, இஸ்ராயேல் மக்களும் பிள்ளைப்பேற்றில் இறைவனுடைய ஆசியின் அடையாளத்தைக் காண்கின்றனர். பிள்ளைகளே ''முதியோரின் மணிமுடியாம்'' (பழ 17:6). மக்கள் ''பந்தியைச் சுற்றியுள்ள ஒலிவச் செடிகள்'' (சங் 128:3). ஆனால், சில குறிப்பிட்ட நவீன காலத்தவரைப் போலன்றி, விவிலிய ஆசிரியர்கள் குழந்தையானது முற்றுப்பெறாத உருவம் என்பதை மறந்துவிடாமல், திட்டமிட்ட உறுதியான கல்வியின் முக்கியத்துவத்தை [illegible] கொண்டிருந்தனர். மடமையானது அவனது இதயத்தில் [illegible] கொண்டுள்ளது (பழ 22:15), மனம் போலப் போகிற போக்கே அவனது சட்டம் (மத் 11.16 19). மற்றும் எல்லாக் காற்றுகளாலும் பந்தாடப்படாமலிருக்க (எபே 4:14), அவன் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட வேண்டும் [illegible]. இத்தகைய கூற்றுகளின் பின்னணியில் குழந்தையினுடைய சமயத் தகுதி பற்றிய விவிலியக் கருத்துக்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

1. இறைவனும் குழந்தைகளும்:-

தனக்கேயுரிய வலுவின்மை மற்றும் முழுமையின்மையின் காரணமாகப் பழைய ஏற்பாட்டின் குழந்தையானது இறைவனுடைய சலுகை பெற்றதாகக் காணப்படுகிறது. ஆண்டவரே அனாதையின் பாதுகாவலராகவும், அவனது [illegible]களை நிறைவேற்றுபவராகவும், உள்ளார் (யாத் 22:21-22, சங் 68:6). எகிப்திலிருந்து வெளியேறல் மற்றும் பாலைவனப் பயணம் போன்ற காலத்திலிருந்து ''இஸ்ராயேல் குழந்தையாக இருந்தபோதே'' தமது தந்தைக்குரிய கனிவையும், இஸ்ராயேலின் கல்விக்கான தமது அக்கறையையும் அவர் காட்டினார் (ஓசே 11:1-4).

ஆண்டவரை வழிபடுவதிலின்று பிள்ளைகள் விலக்கப்படவில்லை. பாவபரிகார மன்றாட்டுக்களிலும் அவர்கள் பங்கேற்கின்றனர் (யோவே 2:16; யூதி 4:10-11). குழந்தைகள் மற்றும் சிறியோரின் வாயினின்று இறைவன் தமக்கெனப் புகழ்ச்சியைத் தயாரிக்கிறார் (சங் 8:2-3; மத் 21:16). தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இறைவனது ''தாய்க்குரிய'' அன்பின் அனுபவத்தைப் பெறக்கூடிய விண்ணக எருசலேமிற்கும் அவ்வாறே செல்வார் (எச 66:10-13). ஆண்டவரை நோக்கிய தனது உறுதியான கைவிடப்பட்ட நிலையினை வெளிப்படுத்த சங்கீத ஆசிரியரும், தனது தாயின் மடியில் உறங்குகின்ற குழந்தையைவிட உயரிய உருவத்தைக் காணவில்லை (சங் 13:2). மேலும் தம்முடைய வெளிப்பாடு மற்றும் மீட்பின் பயனை முதலில் பெறுபவர்களாகவும், அதன் பயனாளர்களாகவும் குறிப்பிட்ட குழந்தைகளைத் தேர்ந்தெடுக்க இறைவன் தயங்கவில்லை. சிறுவனாகிய சாமுவேல் ஆண்டவரின் வார்த்தையைப் பெற்று, பிரமாணிக்கத்தோடு அதனை மற்றவருக்கு அளிக்கிறார் (1 சாமு 1-3); தாவீது அவருடைய மூத்த சகோதரர்களை விட, சிறப்பான முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார் (1 சாமு 16:1-13); சூசன்னாவைக் காப்பாற்றுவதில் சிறுவனாகிய தானியேல் இஸ்ராயேலின் முதியோரைவிட ஞானமுள்ளவனாக விளங்குகிறார் (தானி 13:44-50).

இறுதியாக, மெசியா பற்றிய இறைவாக்கினுடைய உயர் நிலையானது, மீட்பின் அடையாளமாகிய இம்மானுவேலின் பிறப்பாகும் (எச 7:14 தொ); தாவீதின் அரசோடு நேர்மையையும் நீதியையும் மீண்டும் ஏற்படுத்தக்கூடிய அரச குழந்தையைப் பற்றி செயா அறிவிக்கிறார் (9:1-6).

2. இயேசுவும் குழந்தைகளும்:-

புதிய உடன்படிக்கையினைத் தொடங்குவதற்கு இறைமகன் தம்மையே ஒரு சிறு குழந்தையாக உருவாக்குவது பொருத்தமானதன்றோ? லூக்கா தேர்ந்தெடுத்த வரலாறு [illegible] வின் குழந்தைப்பருவத்தின் நிலைகளைக் கவனமாகக் குறிப்பிடுகின்றார்; முன்னிட்டியில் கிடத்தப்பட்டிருந்த புதிதாய்ப் பிறந்தவர் (லூக் 2:12), ஆலயத்தில் காணிக்கையாக்கப்

பட்ட சிறு குழந்தை (2:27). தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்த குழந்தை ஆனாலும் தம்முடைய தந்தையைச் சார்ந்திருக்கும் நிலையில் மறைபொருள்மிக்க சுதந்தரத்துடன் பெற்றோரைச் சாராதிருந்த நிலை (2:43-51)

இளைஞனாக வளர்ந்த நிலையில், குழந்தைகள்பால் இறைவன் கொண்டிருந்த மனப்பான்மையையே இயேசுவும் கொண்டுள்ளார். ஏழைகளின் பேறுடைமையை அறிவித்ததுபோன்றே அவர் குழந்தைகளையும் ஆசிர்வதிக்கின்றார் (மாற் 10:16). இவ்வாறு அரசிற்குள் நுழைகின்ற நிலையில் அவர்கள் அவ்வாறே இருப்பர் என்பதை வெளிப்படுத்துகின்றார். குழந்தைகள், உண்மையான சீடர்களைக் குறிக்கும் அடையாளமாக உள்ளனர்; ''ஏனெனில், விண்ணரசும், இத்தகையோரதே'' (மத் 19:14). உண்மையில் ஒருவன் சிறுகுழந்தையைப்போன்று விண்ணரசை ஏற்றுக்கொண்டு (10:15) தங்களுக்குரியது என்று கோராமல், முழு எளிமையுடன் தந்தையின் கொடையாக அதைப் பெற வேண்டும். இந்த அரசில் நுழைவதற்கு அவன் ''குழந்தைப்பருவத்திற்குத் திரும்பி'' (மத் 18:3) ''மீண்டும் பிறக்கச் சம்மதிக்க வேண்டும் (யோவா 3:5). உண்மையான மேன்மையின் இரகசியமானது ''ஒரு குழந்தையைப்போலத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுதலாம்'' (மத் 18:4). இத்தகைய உண்மையான தாழ்ச்சி இல்லாமல் ஒருவன் விண்ணகத் தந்தையின் மகனாக உருவாக முடியாது.

உண்மையான சீடர்கள் என்பவர்கள், முன்னர் தானியேலுக்குச் செய்ததைப் போன்று, தந்தை அருளுடன் ஞானிகளிடமிருந்து மறைக்கப்பட்ட மறைபொருள்களை வெளிப்படுத்துகின்ற ''சின்னஞ்சிறியோராவர்'' (மத் 11:25-26). நற்செய்தியின் மொழியில், சிறியோர் மற்றும் சீடர் என்னும் சொற்கள் சில இடங்களில் இணையானவையாக உள்ளன (மத் 10:42; மாற் 9:41). இச்சிறியோரில் ஒருவனை ஏற்றுக்கொள்பவர் ஆசிர்வதிக்கப்பட்டவர் (மத் 18:5; 25:40). ஆனால், அவர்களுக்கு இடறலாக இருப்பவர்களும், அவர்களைப் புறக்கணிப்பவர்களும் சபிக்கப்படுவர் (18:6.10).

3. அப்போஸ்தலிக்க மரபு:

குழந்தைப்பருவம் வெளிப்படுத்துகின்ற முழுமையற்ற நிலையினைப்பற்றி, பவுல் சிறப்பான முறையில் உணர்ந்திருந்தார் (1 கொரி 13:11; கலா 4:1; எபே 4:14). ''கிறிஸ்துவின் முழுமையை'' அடைவதற்காக அவர்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்துமாறு அவர் கிறிஸ்தவர்களை வலியுறுத்துகின்றார் (எபே 4:12-16). கொரிந்தியரின் குழந்தைத்தனமான நடத்தைக்காக அவர்களைக் கண்டிக்கின்ற அவர் (1 கொரி 3:1 தொ) ஆன்மீகக் குழந்தைப்பருவம் பற்றிய பொய்யான கருத்திற்கு எதிராக அவர்களை எச்சரிக்கிறார். இயேசுவின் வார்த்தைகளைப்பற்றிய தவறான விளக்கத்திற்கு எதிர் எச்சரிக்கையாக இது தோன்றுகிறது (1 கொரி 14:20; மத் 18:3-4). ஆனாலும், சிறியோரின் சலுகையைப்பற்றி பவுல் அறியாமலில்லை; ''வலுவற்றது என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்துகொண்டார்'' (1 கொரி 1:27-28). அவருடைய அப்போஸ்தலிக்க அன்பில் அவருடைய ''சின்னஞ்சிறு குழந்தைகளாகிய'' புதுக்கிறிஸ்தவர்பால் அவரது தன்னியல்பான மனப்பான்மையானது, தாயின் கனிவைக் கொண்டுள்ளது (1 தெச 2:7-8; கலா 4:19-20; 1 கொரி 4:15).

கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாக உள்ள வளர்ச்சியின் சட்டம்பற்றி இது போன்ற ஒரு கோட்பாட்டை எபி 5:11-14 கொண்டுள்ளது. ஏனெனில் பாலை மட்டுமே அருந்துகின்ற சிறு குழந்தையின் நிலையிலேயே இருப்பது பற்றிய கேள்விக்கு இடமே இல்லை. புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போன்று இறைவனுடைய வார்த்தையின் பாலுக்காக ஏங்குமாறு புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்களை 1 பேதுரு 2:2 வலியுறுத்துவதென்பது, மீட்பில் அவர்கள் வளரவேண்டும் என்பதற்காகவே. யோவானைப் பொறுத்தவரை இறைவனது சுவிகாரப் பிள்ளைகளின் புதுப பிறப்பை

விடக் குறைந்த அளவிலேயே ஆன்மீகக் குழந்தைப்பருவம் பற்றி அவர் பேசுகிறார் (1 யோவா 3:1). ஆனால், தனது பிள்ளைகளை நோக்கிப் பேசும்போது, பவுலைப் போன்றே ஒரு தந்தையாக அவர் அதிகமாகவே பேசுகிறார் (2:1.18; யோவா 13:33).

குழந்தையைப்பெறுதல் (CHILDBEARING)

முதல் பெற்றோரின் பாவத்திற்குத் தண்டனையாக ''வேதனையில் நீ குழந்தைகளைப் பெறுவாய்'' என்று மனுக்குலத்தினை இறைவன் சபித்தார். ஆயினும் விவிலியம் பிள்ளை பெறுதலின் துன்பத்தை அபூர்வமாகத்தான் குறிப்பிடுகிறது. மாறாகப் பிள்ளை பெறுதலை வலியுறுத்துகிறது (ஆதி 4:1.25). இருப்பினும் குழந்தைகள் பெறுவதிலுள்ள துன்பம் பற்றிய உருவகம் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில், குறிப்பாகப் பெரிய இறைவாக்கினர் நூல்களில் காணப்படுகிறது. ''பேறு காலம் நெருங்குகையில் கர்ப்பவதி தன் வேதனையில் வருந்திக் கதறுவது போல்'' இஸ்ராயேல் இறைவனிடம் மன்றாடுகிறது (ஏச 26:16-17). ''மூச்சுத்திணறும்'' பெண்ணாகவும், ''தன் முதற்பிள்ளை பெறுதலில்'' துன்புறும் பெண்ணாகவும் யூதா ஆட்தன்மைப்படுத்தப்படுகிறது (எரே 4:31). எரேமியா, இருமுறை வீரர்களை, பேறு காலப் பெண்கள் துடிப்பதோடு ஒப்பிடுகிறார் (48:41; 49:22). ''பேறுகாலப் பெண்கள் போல் ஏன் வேதனைப்படுகிறார்?'' என்று ஏளனமாக மீக்கா சீயோனைப் பார்த்துக் கேட்கிறார் (மீக் 4:9-10). இறைவனின் சுத்தி செய்யும் தீர்ப்பின் துன்பங்களைப் பேறுகால வேதனையோடு ஓசேயா ஒப்பிடுகிறார் (ஓசே 13:13).

புதிய ஏற்பாட்டில் படைப்பு அனைத்தும் அழிவிலிருந்து விடுதலை அடைந்து மீட்பு அடைவதற்குமுன் அதன் துன்பத்தை விவரிக்கப் பேறுகால வேதனையை உருவகமாகப் பவுல் பயன்படுத்துகிறார் (உரோ 8:22). மேலும் ''கர்ப்பவதிகளுக்கு வேதனை ஏற்படுவது போலத்'' தீர்ப்பு வரும்; அதிலிருந்து ''யாரும் தப்பிக்க முடியாது'' என்று பவுல் கூறுகிறார் (1 தெச 5:3), மேலும் பெண் ''அடக்க ஒடுக்கத்தோடு விசுவாசம், அன்பு, பரிசுத்தத்தில் நிலைத்திருப்பின் தாய்மைப் பேற்றினால் மீட்புப்பெறுவாள்'' என்று (1 திமோ 2:15) மூன்றாம் முறையாகப் பவுல் குழந்தை பெறுதலைக் குறிக்கின்றார். இது சர்ச்சைக்குரிய வாசகமாகும். பிள்ளைப் பேறு மீட்புப் பெற ஒரு கருவியாக இருக்கலாம் என்று பவுல் கருதியிருக்கலாம். இது தான் அவள் மீட்புப்பெற இறுதியாகக் காரணம் என்று கூறவில்லை. பெண்ணின் பங்கை, குழந்தை பெறுவதற்காக மட்டும் அவர் வரைசெய்யவில்லை எனலாம். ஏனென்றால், எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டிய விசுவாசம் மற்றும் அன்பு என்ற பரந்த சூழ்நிலையில் இவ்வலுவலைக் குறிக்கிறார்.

குழம்பு (BROTH)

இது இறைச்சி வேகவைக்கப்பட்ட நீராகும். இதிலே ஊட்ட உணவுப்பொருட்கள் தங்கிவிடுவதால் இது புறம்பே ஊற்றப்படுவதில்லை. மாறாக இறைச்சியோடு உண்ணப்பட்டது. கிதியோன், கடவுளின் தூதருக்குப் புளியாத அப்பத்தையும் ஆட்டுக்குட்டியின் இறைச்சியையும் குழம்பையும் உணவாக அளித்தார் (நீதி 6:19-20; ஏச 65:4; எச 24:10).

குழல் (PIPE)

இசைக்கருவி. இது இரு குழலுடையதாகவோ (1 சாமு 10:5; 1 அர 1:40; ஏச 30:29; எரே 48:36; மத் 11:17; 1 கொரி 14:7; திருவெளி 18:22), ஒரு குழலுடையதாகவோ (ஆதி 4:21; யோபு 21:12; 30:31; சங் 150:4) இருக்கலாம். இது சில இடங்களில் புல்லாங்குழல் என்றும், சில இடங்களில் தாரை என்றும் குறிக்கப்படுகிறது. நெபுக்கதுனேசாரின் அவையில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகளுள் பைக்குழல் குறிக்கப்பட்டுள்ளது (தானி 3:5.7.10.15).

குழல்களும் புல்லாங்குழல்களும் அடிக்கடி காதலோடு தொடர்புபடுத்தப்பட்டன. ஆகவே பொதுவாக, எருசலேம் ஆலயத்தில் பயன்படுத்தப்படவில்லை. இவை குறிப்பா

கத் துக்க நிகழ்ச்சிகளில் பயன்பட்டதாகத் தெரிகிறது (எரே 48:36; மத் 9:23).

குழிமுயல், குறுமுயல் (BADGER, ROCKBADGER)

சிறிய காதுகளையுடைய ஒருவகை முயல். இம்முயல்கள் பாறைகளைக் குடைவதில்லை. ஆனால் பாறைப்பகுதிகளை விரும்புவதாகக் குறிப்பிடப்படுகிறது (சங் 104:18; பழ 30:26). யோர்தான் பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளிலும், இஸ்ராயேலின் தென் பாலைவனப்பகுதிகளிலும், கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளிலும் காணப்படுகிறது. இம்முயலின் தாடை ஆடிக்கொண்டேயிருப்பதால், இது அசைபோடும் விலங்கெனத் தவறாகக் கருதப்பட்டது. இது அசுத்த விலங்குகளில் ஒன்றாகும் (லேவி 1 1:5; உப 14;7).

குறடு, அள்ளு கருவி (SHOVEL)

ஆண்டவருடைய பேழையின் முன் வைக்க வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களில் இந்தச் சாதனமும் இடம்பெறுகின்றது (யாத் 27:3; 38:3; எண் 4:14). அதேபோல் சாலமோன் ஆலயத்தைப் பற்றிய விளக்கத்திலும் இது இடம் பெறுகின்றது (1 அர 7:40.45; 2 நாள் 4:11.16). அள்ளுகருவிகள் வெண்கலத்தால் செய்யப்பட்டவை. பலிப்பீடத்தைத் தூய்மைப்படுத்துவதற்கும், நெருப்பு தழல் மீதுள்ள சாம்பலை நீக்கிவிட்டு அதைச் சட்டியில் போடுவதற்கும் பயன்பட்டது (யாத் 27:3). கி.மு. 586-இல் எருசலேம் வீழ்ச்சியடைந்தபோது கல்தேயர்கள் எடுத்துச் சென்ற கொள்ளைப் பொருட்களில் இதுவும் இடம்பெற்றிருந்தது (2 அர 25:14; எரே 52:18).

குறிகூறல் (DIVINATION)

சில மறைபொருளை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை முன்னறிவிக்கும் முறை. இது பழங்கால மெசபொத்தாமியாவில் அதிகம் பயிற்சி செய்யப்பட்டு வந்தது. மெசபொத்தாமியாவில் பயிற்சி செய்யப்பட்ட இந்தக் குறிகூறும் பழக்கம் பல இடங்களில் பரவியது. குறிப்பாக ஐரோப்பாவில் மத்திய, நவீன காலங்களில் இது அதிகமாகப் பரவியது. பெரும்பாலான மெசபொத்தாமிய இலக்கியங்கள் இந்தக் குறிகளுக்கு அளிக்கப்படும் விளக்கங்களாக அமைந்துள்ளன. மெசபொத்தாமிய குறிசொல்பவர்கள் கிடைக்கின்ற அடையாளங்களை வைத்தும், கடவுள்களின் அதிகாரம்பெற்ற சிலர் கூறும் வாக்குகளைக் கொண்டும், பல யூகங்களைக் கொண்டும் மக்களின் எதிர்காலங்களை விளக்கினர். சில பழக்கங்கள், செயல்கள் ஆகியவைக்ளை வைத்தும் எதிர்காலத்தைக் கூறினர். குறி சொல்லுவதில் பலவகை உண்டு. சீட்டுப் போட்டும், எய்யப்பட்ட அம்பு செல்லும் போக்கைக் கொண்டும், மந்திரக்கோலினாலும் குறிகூறுதல்; முகத்தோற்றங்கள், மற்றும் மனித நடத்தைகளைக் கவனித்தும், கைகளின் ரேகை பார்த்தும், பிறப்பு முறைகள், குறிப்பாக இயல்மீறி ஈனுதல், மிருகங்களின் நடத்தை ஆகியவைகளை வைத்தும், பலியிடப்படும் மிருகங்களின் கல்லீரலை வைத்தும் பறவைகள் பறக்கும் முறையைக் கொண்டும்; பல்லிகளை வைத்தும், நெருப்பின் கனல் வைத்தும், மரங்களின் அசைவைக் கொண்டும், புகையை வைத்தும், நீரில் ஒருதுளி எண்ணெய் நிலையை வைத்தும், வானத்துக் கோள்கள், மற்றும் அசாதாரண நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக்கொண்டும் குறிகூறினர்.

குறிகூறுதலைக் குறிக்கும் பல சொற்கள் எபிரேய மொழியில் உள்ளன. ஆனால் அவைகளின் சரியான பொருளைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினமாய் உள்ளது. யூத சட்டத்தில் குறிகூறுதல் தடுக்கப்பட்டிருந்தது; இதைப் பயிற்சி செய்பவர்களுக்குச் சாவு தண்டனையாக அளிக்கப்பட்டது (லேவி 19:31; 20:6; உப 18:10-11). சிலைவழிபாட்டைப் போல் குறிகூறுதலும் கொடிய பாவமாகும் (1 சாமு 15:23). சவுல் சூனியக்காரரையும் குறிசொல்பவர்களையும் நாட்டில் இராதபடித் துரத்தியிருந்தார் (1 சாமு 28:3). அவரே குறிகாரிகளில் ஒருத்தியைத் தேடி அலைந்தார் (1 சாமு 28:7 தொ). ஏசயா காலத்தில் நாடுகள் முழுவதிலும் குறிகூறுபவர்கள் மலிந்து காணப்பட்டனர் (ஏச 2:6; 8:19). இஸ்ராயேலர் குறிகேட்டும், சகுனம்

பார்த்தும் இன்னும் பல தீய வழிகளில் நடந்தும் வந்ததனால் ஆண்டவருக்குக் கோபம் உண்டாக்கினர் (2 அர 17:17). மனாசே அரசன் குறிபார்த்துச் சகுனங்களையும் கடைப்பிடித்து ஆண்டவர் திருமுன் பாவம் செய்தான் (2 அர 21:6). யோசியா யூத நாட்டிலும் எருசலேம் நகரிலும் இருந்த மந்திரவாதிகளையும் குறிசொல்வோரையும் சிலைகளையும் தூய்மையற்றவைகளையும் அருவருப்பானவற்றையும் அழித்தொழித்தார் (2 அர 23:24). யூதாவில் காணப்பட்ட போலித் தீர்க்கதரிசிகளை எரேமியாவும், எசக்கியேலும் பயனற்ற குறிகூறுபவர்கள் (எரே 14:14; 27:9; எச 13:6.23) என்று அழைத்தார்கள். எச 21:26-இல் நெபுக்கதுனேசாரின் குறிகூறும் சாதனங்கள் குறிக்கப்படுகின்றன. இங்கு இறைவனே எருசலேமைத் தண்டிப்பதற்குத் தேவையான அடையாளங்களைக் கூறுகின்றார். ''இது என் தலைவர் பருகப் பயன்படுத்துவது அல்லவா? இது அவர் குறிபார்க்கப் பயன்படுத்துவது அல்லவா? (ஆதி 44:5.15) என்று யோசேப்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

குறிசொல்பவர், சோதிடர் (ASTROLOGER)

தனி நபருக்கோ சமூகத்திற்கோ வருங்காலத்தில் என்ன நிகழும் என்று உறுதியாக அறிய உள்ள ஆவல், குறிசொல்லும் போலி விஞ்ஞானத்தைத் தோற்றுவித்தது எனலாம். வானத்திலுள்ள கோள்களின் கனம், இயக்கம், மற்றும் அமைப்புக்கள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் வானநூல் ஆய்வாளர்களைப் போல் அல்லாமல், குறிசொல்பவர்கள் விண்ணகத் தோற்றங்கள் மனித வாழ்வில் ஏற்படுத்தும் விளைவுகளில் அக்கறை செலுத்தினர். பழங்காலத்திலிருந்தே பாபிலோனிலும் எகிப்திலும் குறிசொல்லுதலைத் தொழிலாகக் கொண்டவர்கள் இருந்தனர். வானத்தில் தோன்றும் மாற்றங்கள் மற்றும் கோள்களின் இணைப்புக்கள் பூமியில் நிகழவிருப்பவைகளை முன்னறிவிக்க வல்லன என்ற நம்பிக்கையில் இவர்கள் வானத்தில் கோள்களை மிக நுணுக்கமாகக் கவனித்து வந்தனர்.

பழைய ஏற்பாட்டுச் சான்றுகளிலிருந்து, பழங்கால இஸ்ராயேல் குறிசொல்லுதலை அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. குறிசொல்பவர்களைக் குறிக்கும் சில பகுதிகளும் பாபிலோனிய பழக்கத்தையே குறிப்பிடுகின்றன. ஏசயா பாபிலோனிய குறிசொல்பவர்களை ஏளனத்தோடு குறிப்பிடுகிறார். ''வான்வெளியைக் கவனிப்போரும், விண்மீன்களை ஆய்வோரும் நிகழவிருப்பதை அமாவாசைகளில் உனக்கு முன்னுரைப்போரும் வந்து நின்று உன்னை விடுவிக்கட்டும்'' (ஏச 47:13). ''வானத்தில் தோன்றும் அடையாளங்களைக் கண்டு கலங்காதீர்கள், வேற்றினத்தாரே அவற்றால் கலக்கமுறுவர்'' என்று எரேமியா (10:2) மக்களை எச்சரிக்கின்றார்.

நெபுக்கதுனேசாரின் கனவுகளை விளக்கிக்காட்ட மந்திரவாதிகளும், மாயவித்தைக்காரர்களும், சூனியக்காரர்களும், கல்தேயர்களும் அழைக்கப்படுகின்றனர் (தானி 2:2). இவர்களது தொழில் கனவுகளை விளக்குவது மட்டுமன்று. ஏனெனில் பேல்சசார் சுவரில் எழுதப்பட்டதை விளக்கவும் இவர்களுக்குப் பணிக்கிறார் (5:7). தானியேல் நெபுக்கதுனேசாரின் ''மந்திரவாதிகளின் தலைவர்'' என்று குறிப்பிடப்படுகிறார் (4:6; 5:11). ஆனால் தானியேல் ''அரசர் கேட்கும் மறைபொருளை அரசருக்கு அறிவிக்க எந்த ஞானியாலும் மாயவித்தைக்காரனாலும், மந்திரவாதியாலும் சோதிடனாலும் இயலாது. மறைபொருள்களை வெளிப்படுத்தும் விண்ணகக்கடவுள் பிற்காலத்தில் நிகழப் போவதை உமக்குத் தெரிவித்துள்ளார்'' 2:27-28) என்று அறிவிக்கிறார்.

குறிசொல்லும் ஆவி (FAMILIAR SPRIKIT)

இறந்த ஆவிகளோடு தொடர்புகொண்டு பின்னால் நடக்கப்போவதை அறியும் பழக்கம் மேற்காசிய நாடுகளில் பின்பற்றப்பட்டு வந்தது. ஆவியுலகப்பேச்சு, சூனியக்காரன் என்று பொருளுடைய வார்த்தைகள் விவிலியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன (1 சாமு 28:8; ஏச 29:4; உப 18:11; ஏச 1:19). சவுல் ஓர் ஆபத்தில் இருக்கும்போது இத்தகைய ஒரு சூனியக்காரியிடம் சென்று தனக்குக்

குறிசொல்லுமாறு கேட்டுக்கொண்டார். அவளும் சாமுவேலை வரவழைப்பதாக விவிலியத்தில் நாம் வாசிக்கிறோம்.

இவ்வாறு ஆவிகளோடு பேசிக் குறி சொல்லும் பழக்கம் பழைய ஏற்பாட்டில் தடை செய்யப்பட்ட ஒன்றாகும் (லேவி 19:31; உப 18:11; ஏச 8:19). அவ்வாறு குறிசொல்பவரும் குறி கேட்பவரும் சாவுத் தண்டனைக்குள்ளாவர் (லேவி 20:6.27; 1 நாள் 10:13). தங்கள் நாட்டினின்று குறிசொல் பவர்களைத் துரத்தின அரசர்கள் புகழ்ப்பட் டனர் (1 சாமு 28:3.9:2 அர 28:24). ஆனால் குறிசொல்பவர்களைத் தண்டிக்காத அரசர் கள் வெகுவாகக் கண்டனம் செய்யப்பட்ட னர் (2 அர 21:6; 2 நாள் 33:6).

குறிசொல்வோரின் கருவாலிமரம் (DIVENER'S OAK)

செக்கேம் நகர் அருகிலுள்ள ஒரு மரம். இம்மரத்தை அடையாளமாக வைத்துத்தான் மக்கள் ஊருக்குள் நுழைந்தனர் (நீதி 8:37). செக்கேம் அருகிலிருந்த மோரேயின் கரு வாலி மரம் இதுவாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது (ஆதி 12:6; 35:4). முற் காலத்தில் இவ்விடத்தில் புனித மரம் ஒன்று இருந்திருக்கலாம் எனவும், அங்குக் குறி சொல்லுதல் நடந்திருக்கலாம் எனவும் ஒரு கருத்து நிலவுகிறது.

குறைபாடு, ஊனம், பழுது, மாசுமறு ((BLEMISH)

சமயச் சூழ்நிலையில் குருவிடமோ பலியி டப்படும் விலங்கிடமோ இருக்கக்கூடிய உடல்சார்ந்த குறைபாடுகளை இக்கருத்து குறிக்கும்.

திருவுறைவிடமாகிய கூடாரத்திலும், பிற் காலத்தில் ஆலயத்திலும் நடக்கும் சடங்கு வழிபாடுகள் எக்குறையுமின்றி மனிதனால் முடிந்த அளவு நிறைவாக நடக்கவேண்டும் என்பதால், ''ஊனமுற்ற குரு உணவுப் படை யலைச் செலுத்தல் ஆகாது'' (லேவி 21:17). ஆனால் ''கடவுளின் தூய அப்பத்தை அவர் உண்ணலாம்'' (21:22). பின்வந்த இறைவாக்கு களில் வரவிருக்கும் மீட்பர் இக்குறைகளி லிருந்து, குறிப்பாகக் குருட்டுத்தன்மை மற் றும் செவிட்டுத்தன்மையிலிருந்து அவரது மக்களை விடுவிப்பார் (ஏச 29:18; 35:5-6; 42:7). புதிய ஏற்பாட்டில் திருச்சபை ''அரச குருத்துவத்திருக்கூட்டம்'' (1 பேதுரு 2:9) என்றழைக்கப்படுகிறது. இது, உடலளவி லும் ஒழுக்க அளவிலும் ''கறைதிரையோ வேறுஎக்குறையோ இன்றி, பரிசுத்தமும் மாசற்றதுமாய்'' (எபே 5:27) இறைவன் முன் துலங்க வேண்டும்.

இவ்வாறே உடல் ஊனமுள்ள விலங்கு கள் பலிசெலுத்தப்படக் கூடாது (லேவி 20:20-24). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து ''மாசு மறுவற்ற செம்மறி'' (1 பேதுரு 1:19) என்ற ழைக்கப்படுகிறார். அவருடைய நிறைவி லிருந்து யாவரும் தூய்மை பெறுகின்றனர் (எபி 9:13).

குற்றங்களும், தண்டனைகளும் (CRIMES AND PUNISHMENTS)

ஒரு குறிப்பிட்ட செயலைச்செய்தால் தண் டனை கிடைக்கும் என்றுள்ள ஒரு சட்டத்தை மீறுவது குற்றமாகும். குற்றம் என்று சொல் லும்போது அது தனிமனிதவாழ்க்கையில் நடந்த ஒரு தவறைக் குறிப்பது அல்ல. மாறாகச் சமூகத்தோடு தொடர்புடைய சமூக நீதியைப் பாதிக்கக்கூடிய ஒன்றாகும். பழைய ஏற்பாட்டுச் சட்டமானது, குற்றம் புரிந்தவனைத் தண்டிக்கும் உரிமையைச் சமூ கத்திடம் கொடுக்கவில்லை. மாறாகப் பாதிக்கப்பட்டவனிடமே விட்டிருந்தது. இதுவே பழைய காலத்தில் மக்களிடையே பரவியிருந்த சட்டமுறையும் ஆகும். இப் படிச் செய்யும்போது, குறிப்பாகத் தலையாய குற்றங்களில், தனிப்பட்ட குற்றம் சாட்டுப வர், தனது நலனையும் பொதுநலனையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார். இது தீர்ப்பைச் செயல்படுத்துவதில் வெளிப் படுகிறது. அடிக்கடி குற்றம் செய்தவரைத் தண்டிப்பதில் சமூகம் முழுவதும் பங்கு பெறுகிறது.

I. பழைய ஏற்பாட்டின்படி குற்றங்களும்

தண்டனைகளும்:-

1. குற்றத்தின் இயல்பு:- விவிலியத்தில் குற்றவியல் சட்டமானது அண்மை மேற்காசிய நாடுகளில் காணப்பட்ட குற்றவியல் சட்டங்களைவிடச் சற்று வேறுபட்டது. காரணம் விவிலியக் கண்ணோட்டத்தின்படி சட்டம் என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது. அதை மீறினால் பாவம் ஆகும். மேலும், விவிலிய மரபுப்படி, சட்டமானது எல்லா இஸ்ராயேல் மக்களுக்கும் கொடுக்கப்பட்டது. எனவே, இஸ்ரேலிய சமூகம் முழுவதும் சட்டத்தை நிறைவேற்றவேண்டும். அதன்படி குற்றம் புரிந்தவர்களை இஸ்ரேலிய சமூகம் தண்டிக்காவிடில் கடவுள் இஸ்ராயேல் சமூகம் முழுவதையும் தண்டித்து விடுவார் என்று கருதப்பட்டது. இந்தக் கருத்தானது இஸ்ராயேலின் நல்வாழ்வுக்குச் சொல்லப்படும் சட்டப்பகுதிகளின் முன்னுரையில் அதிகமாக வலியுறுத்தப்படுகிறது (லேவி 18:26-28; 26:3-45 உப 28.). பிற தேவர்களை வழிபடுதலும், பாலுணர்வுக் குற்றங்களும், கொலையும், சமூகம் முழுவதையும் குற்றப்படுத்துவதாகக் கருதப்படும் (மேற்சொன்ன குறிப்புகளும், உப 19:10; 21:1-9). ஆகவே குற்றங்களைப் பகிரங்கமாகத் தண்டிக்கும் போக்கைச் சட்டம் கொண்டுள்ளது.

புறவியலான குற்றத்தன்மை விவிலியத் தண்டனைச் சட்டங்களில் அவ்வளவு இடம் பெறவில்லை. குற்றம் செய்பவனின் எண்ணமே குற்றத்தின் இயல்பை நிர்ணயிக்கிறது. எனவே, விரும்பிச்செய்த கொலை, தெரியாமல் செய்த கொலை, என்று குற்றத்தையே சட்டம் பலவாறாகப் பிரித்து நோக்குகிறது. வேண்டுமென்று, திட்டமிட்டு ஒருவனின் உடலைக் காயப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, ஒருவனைக் காயப்படுத்துவதும், திடீரென்று உணர்ச்சிவசப்பட்டு ஒருவனைக் காயப்படுத்துவதும் சட்டத்தால் வேறு வேறாக நோக்கப்பட்டன. மேலும், இஸ்ராயேலர்களின் மதமானது, கடவுளுக்குச் சொந்தமானவை எல்லாம் தூய்மையானவை என்பதைப் பொதுவான மையமாகவும், தனிமனிதனின் அறநெறி வாழ்வின் முக்கியத்துவத்தைத் தனிமனித மையமாகவும், கொண்டிருந்தது. எனவே சட்டத்தின் அடிப்படையில் இந்த இரண்டு மையங்களுக்கும் இடையே போராட்டங்கள் நிகழ்வது உண்டு.

2. தண்டனையின் இயல்பு:- குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது தேவ நீதியாகும். அதனால்தான் 1 அர 8:32-இல் ''நீர் விண்ணில் அவனது வழக்கை விசாரித்து, நீதி வழங்கி அநியாயக்காரனைக் கண்டித்து, அவனது கெட்ட நடத்தையை அவன் தலையின்மேல் சுமத்தி அவனைக் குற்றவாளியாகத் தீர்த்து, நீதிமானுக்கு அவனது நீதிக்குத் தகுந்தபடி நீதிமானாக்கி நீதி வழங்குவீராக'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றச்சட்டத்தில் இதையே பின்பற்ற மனிதன் கட்டளை பெறுகிறான். ஏனெனில் பழ 11-10-இல் 'தீயோரின் அழிவைப் பார்த்து மக்கள் மகிழ்வார்கள்'' என்று கூறப்படுகிறது.

தலையாய குற்றங்கள் சமூகம் முழுவதையும் கறைபடுத்தியது. குற்றவாளி சட்டத்தின் தீர்ப்புப்படி கொல்லப்படவேண்டியவன். அவன் தண்டனையைப் பெறவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, மாறாகத் தீமையானது இஸ்ராயேலில் இருந்து அகற்றப்படவேண்டும் என்பதற்காகவுமே கொல்லப்படுகின்றான் (உப 17:17; 13:5; 17:7; 19:19; 21:21; 22:21-22.24; 24:7; நீதி 20:13; 2 சாமு 4:11). குற்றமில்லாத இரத்தப்பழியானது இஸ்ராயேலின்மேல் விழாமல் இருக்க, கொலை செய்தவன் சாகடிக்கப்படவேண்டும் (உப 19:13). பால் உணர்வுக் குற்றங்கள் நாட்டையும், நாட்டுமக்களையும் தீட்டுப்படுத்துகின்றன. அத்தகைய பாவங்கள் விலக்கப்படவேண்டும். அன்றி, நீ உன்னைத் தீட்டுக்குரியவன் ஆக்கிவிட்டால் நாடு தன் குடிகளைக் கக்கிவிடும் (லேவி 18:24-28). பொதுவில் ஒருவனுக்கு மரண தண்டனை அளிப்பதன் மதிப்பீட்டையும் விவிலியம் சொல்கிறது. ''மற்றவர்களும், அதைக் கேள்விப்பட்டு, அஞ்சி அப்படிப்பட்ட தீச்செயலைச் செய்ய அஞ்சுவார்கள்'' (உப 10:20; 17:13; 21:21).

சிறிய குற்றங்களுக்கான தண்டனை அந்தக் குற்றத்தைப்பொறுத்து வழங்கப்பட்டது. ஒருவனுடைய சொத்துக்கு எதிராகத் தீங்கு விளைவித்தவன், அவனது சொத்துக்களைக் கொண்டே தண்டிக்கப்படுவான். உடலுக்கு எதிராகத் தீங்கு விளைவிப்போர்கள் பழிக்குப்பழி என்ற முறைப்படி தண்டிக்கப்பட்டார்கள். அதாவது உயிருக்கு உயிர், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் *(யாத் 21:23-25; லேவி 24:19-20; உப 19:21)* என்று, எந்த அளவுக்கு ஒருவன் துன்புறுத்தினானோ அதே அளவு துன்பத்தையே அவனுக்குக் கொடுக்கவேண்டும். சொத்துக்கு எதிரான குற்றங்களைத் தலையான குற்றங்கள் என்று கருதாமையிலும், பழிக்குப்பழி என்ற கொள்கையிலும் விவிலியம் அண்மை மேற்காசிய நாடுகளின் சட்டங்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது.

விவிலியச்சட்டம் சமயப்பண்பைக் கொண்டிருந்தாலும், சடங்குப்பரிகாரம் தண்டனை அளிப்பதில் இடம் பெறவில்லை எனலாம். திட்டமிட்டு மீறப்பட்டுச் செய்த எந்தக் குற்றத்திற்கும் பாவப்பரிகாரம் செய்ய முடியாது. லேவி 4-5-இல் வரும் பாவம் மற்றும் குற்றக்காணிக்கைபற்றிய விரிவான அமைப்பு அறியாது சட்டத்தினை மீறியது பற்றியதாகும்.

பல சமய, பாலினக் குற்றங்களைக் குருக்கள் சட்டம் தண்டிக்கிறது. குற்றம் செய்பவர்கள் இனத்திலிருந்து விலக்கிவைத்துத் தண்டிக்கப்படுவார்கள் *(உம் ஆதி 17:14; யாத் 31:14; லேவி 18:7-29)*. இத்தகைய தண்டனைகளைப் பிற்காலத்தில் ''கரேத்து'' (வெட்டுதல்) என்று வழங்கியதாகத் தெரிகிறது. இதன் தன்மை தெளிவாக இல்லை. ''கரேத்து'' முறைப்படி தண்டிக்கப்பட்ட பல குற்றங்களுக்குக் குருத்துவ சட்டங்கள் மரண தண்டனை அளித்திருக்கின்றன *(லேவி 18:8. 29-ஐ 20:11-ஓடும்; 10:17-ஐ 20:14-ஓடும்; 10:23-ஐ 20:15-ஓடும் ஒப்பிடுக)* யாத் 31:14-15-இல் ஓய்வு நாளை மீறுவதற்காகக் கொல்லப்படுதல், நாடு கடத்தப்படுதல் ஆகிய இரண்டு தண்டனைகளும் இடம் பெறுகின்றன. லேவி 20:4-5-இல் மோலக்கு விக்ரகத்தை ஆராதனை செய்பவனைத் தண்டிக்காதவர்களை ''நாம் நாடு கடத்துவோம்'' என்று கடவுள் பயமுறுத்துவது, இத்தகைய தண்டனையானது மனிதனால் கொடுக்கப்படுவதல்ல, கடவுளால் கொடுக்கப்படுவதே என்று மக்கள் நம்பியதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

II. சட்டங்கள் காணப்படும் இடங்கள்:-

விவிலியத்தில் காணப்படும் சட்டப்பகுதிகளும் நிகழ்ச்சியுரைப்பகுதிகளும் முக்கிய மூலங்களாகும். பிற்கால யூத இலக்கியங்கள் குறிப்பாகத் தன்னாயிமின் சட்ட நூற்கள் மதிப்புள்ள பிற்சேர்க்கைகளையும், விளக்கங்களையும் அளிக்கின்றன. பழங்கால மேற்காசிய நாடுகளில் காணப்படும் சட்டத் தொகுப்புகள் இதற்கு ஒத்த, எதிர்மறையான சட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

1. சட்டத்தொகுப்பு:- யாவே-எலோயிம், குருக்கள், உபாகமம் ஆகிய பாரம்பரியங்களைச் சேர்ந்த மூன்று தொகுப்புகளும் தங்களுக்கே உரிய வரலாற்றையும் நடையையும் கொண்டிருந்தாலும், குற்றங்கள் மற்றும் தண்டனைகள் பற்றிக் கொள்கையளவில் ஒருமைப்பாடு கொண்டுள்ளன. அழுத்தம் வேறுபடலாம். வளர்ச்சியின் விவரங்களில் வேறுபாடுகள் தோன்றலாம்.

குற்றவியல் சட்டத்தொகுப்பில் காணப்படும் கீழ்க்காணும் பண்புகள், இவற்றைப் பிற அண்மை மேற்காசிய நாட்டின் சட்டங்களிலிருந்து வேறுபடுத்திக்காட்டுகின்றன.

அ) எல்லாச் சட்டத்தொகுப்புக்களும், இறைவனே சட்டம் அளிப்பவர் என்றும், அவற்றை மீறுபவர்களுக்கு இறுதியாகத் தண்டனையைத் தருபவரும் அவரே என்றும் ஏற்றுக்கொள்கின்றன.

ஆ) இவற்றில் மத, சமூகக் குற்றங்களும் அடங்கும்.

இ) இவை திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்ட கொலையை, எதிர்பாராதவிதமாக

57

நடக்கும் கொலையிலிருந்து தெளிவாகவும், அழுத்தமாகவும் வேறுபடுத்துகின்றன.

ஈ) இவை சொத்துரிமைச் சட்டத்தை மீறுவதற்காக மரணதண்டனை அளிப்பதில்லை.

உ) இவை தன்னிச்சையான தண்டனையை விலக்கும் நோக்கத்துடன் பழிக்குப் பழி என்ற தண்டனை முறையைப் பயன்படுத்துகின்றன.

ஊ) இவை தண்டனை அளிப்பதில் இஸ்ராயேல் வகுப்பு வேறுபாடுகளை ஏற்றுக் கொள்வதில்லை.

சட்டத்தொகுப்பின் சமூக வடிவமைப்பானது அரசாட்சி வகையைச் சார்ந்தது அல்ல; மாறாகப் பழங்குடி வகையைச் சார்ந்தது என்பதை நாம் கவனிக்கவேண்டும். குற்றங்களைத் தண்டிக்கும் சட்டம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவனோ அவனது உறவினனோ தண்டிக்கவேண்டும் என எதிர்பார்க்கிறது; நீதிமன்றம் அல்ல. சுயஉதவி உரிமை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதற்காக, எபிரேயர்களின் குற்றவியல் சட்டங்களுக்கு வரலாறு இல்லை என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் பிற்கால அரசியல் அமைப்புக்களின் பாதிப்பு இந்தச் சட்டத்தில் ஏற்பட்டு, வளர்ச்சியடைந்த நிலையை, விவிலியத்தை வாசிக்கும்போது தெளிவாகப் புரிந்து கொள்ளமுடிகிறது.

2. சட்டமல்லாத இலக்கியங்கள்:-

சட்டத்தொகுப்புகளுக்குப் புறம்பாகக் குற்றங்கள் கட்டிக்காட்டப்படுவது. இவற்றில் சில, சில நேரங்களில் குறிப்பிட்ட சட்டத்தோடு ஒத்துப்போகின்றன. சில நேரங்களில் ஒத்துப்போவதில்லை. ஏன் ஒத்துப்போகவில்லை என்று பார்ப்போமாயின் ஒன்று சட்டத்தில் வளர்ச்சி ஏற்பட்டு மாற்றம் ஏற்பட்டிருக்கும் அல்லது சட்டத்திற்கும் நடைமுறைவாழ்க்கைக்கும் உள்ள இடைவெளி, காரணமாக இருக்கும்.

இதைச்சார்ந்த சில நிகழ்ச்சிகளின் தொடர்பு கேள்விக்குரியதாக இருக்கின்றது. இலாபானின் கடவுளைத் திருடியவர் யாரானாலும் கொல்லப்படுவார்கள் என்று யாக்கோபின் கதையில் வருவது, தொடக்க காலத்தில் 'தந்தை தலைமைக்குடும்பம்' என்ற கருத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறதேயன்றி அங்கு நடந்த திருட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. 2 சாமு 12:5-இல் நாத்தானின் உவமையில் ஆடுதிருடிய பணக்காரன் கொல்லப்படவேண்டும் என்று தாவீது சொல்வது, திருட்டு தலையாய தண்டனைக்குரிய குற்றம் என்று சொல்வதற்கான சான்று ஆகாது. பழ 6:31-இல் வரும் 'திருடன் ஏழுமடங்கு திரும்பக் கொடுக்கவேண்டும்'' என்ற குறிப்பானது பலமடங்கு தண்டனையை மிகைப்படுத்திக் கூறுவதேயாகும்.

தந்தையின் மகளை மணந்து கொள்வதைப்பற்றி விவிலியத்தில் சொல்லப்படுவதற்கும் சட்டத்திற்கும் இடையே பெரிய வேறுபாடு காணப்படுகின்றது.

தந்தையின் மகளை மணம் செய்வது ஆதி 20:12-இல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தாவீதின் காலம்வரை அனுமதிக்கப்படுகிறது (2 சாமு 13:13). லேவி 18:9; 20:17-இல் இது தடைசெய்யப்படுகிறது. யாக்கோபு கதையில் (ஆதி 29:21) இரண்டு சகோதரிகளை மணப்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால், லேவி 18:18-இல் இது தடைசெய்யப்படுகிறது. சட்டம், நெருங்கிய உறவினர்களுக்குள்ளே புணர்ச்சி என்ற கருத்தை விரிவுபடுத்தும் பிற்காலப் போக்கைப் பிரதிபலிக்கிறது. ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் தண்டிக்கப்படக்கூடாது என்கிறது உப 24:16:''மக்களுக்குப் பதிலாய்ப் பெற்றோர்களேனும், பெற்றோர்களுக்குப் பதிலாய் மக்களேனும் கொலைசெய்யப்படவேண்டாம். அவனவன் செய்த பாவத்திற்கு அவனவனே கொலை செய்யப்படுவான்''. இந்தச் சட்டமானது அமாசியாவின் ஆட்சியில் மட்டும் ஒரே ஒருமுறை கடைப்பிடிக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது (8-ஆவது நூற்றாண்டில் 2 அர 14:6). இதற்கு முன்பு ஒருவருக்குப் பதில் இன்னொருவர் அல்லது கூட்டாகத் தண்டிக்கப்படுதலுக்குப் பல நிகழ்ச்சிகள்

காணப்படுகின்றன. ஆக்கான் செய்த குற்றத்திற்காக அவனது குடும்பமும் கொல்லப்படுகிறது (யோசு 7:24-26), யாபேசு-கிலயாத்து மக்களின் அழிவு (நீதி 21:10-11), குருக்கள் இனத்தவரின் அழிவு (2 சாமு 22:19) சவுலின் மகன்களின் அழிவு (2 சாமு 21) நாபோத்தின் மகன்களின் அழிவு (2 அர 9:26) போன்றவை சில எடுத்துக்காட்டுகள் ஆகும். இதிலிருந்து, உப ஆகமப் பாரம்பரியச் சட்டங்கள் பிற்காலத்தில் உருவாகி வளர்ச்சி அடைந்தவை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் மேற்கூறிய அனைத்து எடுத்துக்காட்டுகளும், கடவுளின் கட்டளைகளை எதிர்த்ததால், கடவுளால் அளிக்கப்பட்டவையாகக் கருதப்பட்டவை ஆகும். எனவே, ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் தண்டிக்கப்படுவது சட்ட பூர்வமாக இல்லை என்றாலும், கடவுளின் தீர்ப்பாகச் சில நேரங்களில் கருதப்பட்டது. இதற்கு ஆதாரமாக யாத் 20:5-ஐ சுட்டிக்காட்டலாம். அதில் கடவுளே கூறுகிறார்: ''உன் கடவுளாகிய ஆண்டவராய் இருக்கிற நாம் வல்லவரும், எரிச்சல் உள்ளவருமாய் இருக்கிறோம். நம்மைப் பகைக்கிறவர்களைக் குறித்து, தந்தையின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடம், மூன்றாம், நான்காம் தலைமுறைவரை விசாரித்து, வருகிறவராய் இருக்கிறோம்''. கடவுளின் இந்தச் சுதந்தரத்திற்கும் உப 24:16-இல் மனிதனால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும் சட்டபூர்வமான தண்டனைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. இரண்டும் இரண்டுவிதமான ஆட்சிக்கு உட்பட்டவை.

சட்டம் செயல்பட்டமுறைக்குச் சட்டமல்லாத பகுதிகள்தான் சான்றுபகர்கின்றன. இவற்றில் சில: இரத்தத்திற்குப் பழிவாங்குதல் (2 சாமு 3:27. 30; 14:6-11); அடைக்கலப் பீடம் (1 அர 1:51; 2:28தொ); இறைவனை (மற்றும் அரசனை) நிந்தித்தல் (1 அர 21:10); வேசியை எரித்தல் (ஆதி 38:24); சூனியக்காரர்களை அழித்தல் (1 சாமு 28:9); போலித் தீர்க்கதரிசி(எரே 26:7-24); பிறதேவர்களை வழிபட்டதற்கான தண்டனைகள் ஆகியவை ஆகும்.

பொதுவாகச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட இலக்கியங்கள் மதிப்புமிக்கவை. காரணம் அரசன், நாடு போன்றவற்றிற்கு எதிராகக் கூறப்படும் குற்றங்கள் எல்லாம் இத்தகைய இலக்கியங்களில்தான் காணப்படுகின்றன.

3. விவிலியம் பற்றிய யூத நூல்கள்:- பீலோ, யோசிப்பஸ் ஆகியவர்களின் நூற்கள் இரண்டாவது ஆலயம் கட்டப்பட்ட நேரத்தில் உள்ள சட்ட ஒழுங்குகளைப்பற்றித் தெளிவாகக் கூறுகின்றன. தன்னாயிமின் எனும் சட்டமுறை நூலானது தொடக்ககாலச் சட்டவியலைத் தெளிவாக விளக்குகின்றன.

யூதர்கள் விவிலியச்சட்டங்களை ஒருங்கமைவுடைய முழுமையாகக் கருதியதால் அவர்கள் வரலாற்றைப் பற்றிக் கண்டுகொள்ளவே இல்லை. அவர்கள் பயன்படுத்திய விளக்க முறைகளை இக்கால ஆய்வாளர்கள் கைவிடவேண்டும். விவிலியச்சட்டம் சில பொதுவான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றது என்ற அளவில், ஒத்தமை நோக்கு பயனளிக்கும்.

4. பழைய மேற்காசிய நாடுகளின்சட்டம்:- விவிலியத்தில் உள்ள சட்டங்களைப் புரிந்து கொள்ள பழைய மேற்காசிய நாடுகளின் சட்டம் மிகவும் உதவுகின்றது. இந்த மேற்காசிய நாடுகளின் சட்டமானது விவிலியச் சட்டங்களைப்போல அல்லாமல், மன்னர்கள், அரசமைப்பு ஆகியவற்றால் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டவையாகும். சட்டங்களை உருவாக்குவது அரசனுக்குரிய ஒரு தெய்வீகக் கடமையாகக் கருதப்பட்டாலும், ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் மதஉணர்வோடு சம்பந்தப்பட்டு ஏற்படுத்தப்படவில்லை. தண்டனைக்குரிய சட்டங்கள் பொருளாதாரத்தை மனதில் கொண்டும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்காமல் அவற்றைப் பாதுகாப்பதை மனதில் கொண்டும் இயற்றப்பட்டன. கொலை நிகழ்வில் இழப்புக்கு ஈடாகப் பணமோ, ஓர் உயிரோ கொடுக்கப்படவேண்டும். சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக உயிர்த்தியாகம் செய்தார்கள். ஒருவன் செய்த தீச்செயல்களையும்,

அவன் பெற்ற தண்டனைகளையும் கொண்டே சமூகத்தில் அவனது சமூகநிலை கணிக்கப்பட்டது. பாலினக் குற்றங்கள், கடவுளுக்கு எதிராகக் கருதப்படாத குற்றங்கள் போன்றவைகளுக்குக் குறைவான தண்டனைகளே வழங்கப்பட்டன. விவிலியச் சட்டங்களில் பல, மேற்காசிய நாடுகளின் சட்டங்களில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவையாகும். பழைய ஏற்பாட்டுக் குற்றவியல் சட்டமானது, எசுன்னாவின் சட்டத் தொகுப்பு கம்முராபியின் சட்டத்தொகுப்பு, இடைக்கால அசீரியச் சட்டங்கள் ஆகிய பல சட்டத்தொகுப்புக்களிலிருந்து எடுத்துக் கையாளப்பட்டவையாகும்.

III. பழைய ஏற்பாட்டின் குற்றவியல் சட்டம்:-

பின்வரும் பகுப்பு, குற்றம் தலையாய, உடல்சார்ந்த, சொத்து சார்ந்த தண்டனையைப் பெற்றதா என்பதைப் பொருத்ததாகும்.

1. கடவுளுக்கும், மதத்திற்கும் எதிரான குற்றங்கள்:-

எல்லாச் சட்டங்களையும் கடவுள் கொடுத்ததால், அவற்றை மீறும்போது எல்லாம் கடவுளுக்கு எதிரான குற்றமாக மாறுகின்றன. என்றாலும், கீழ்க்கண்ட குற்றங்கள், நேரடியாகக் கடவுளுக்கு இழைக்கப்படுகின்ற குற்றமாகக் கருதப்பட்டு, மரணதண்டனை வழங்கப்படும்.

அ. பிறமதக் கடவுளை வழிபடுதல்:-

பிறமதக்கடவுளை வணங்குவது தண்டனைக்குரிய காரியமாகும் (யாத் 20:3-5). அவ்வாறு பிற மதக்கடவுளை வணங்குபவனும், வணங்கத் தூண்டுபவனும் கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டும் (உப 13:6-10). மோலக்கு விக்கிரகத்துக்குத் தன்னுடைய பிள்ளையை நேர்ந்து கொடுப்பவனையும் நாட்டுமக்கள் கல்லால் எறிந்து கொல்லவேண்டும் (லேவி 20:2-5). பிற கடவுளின் பெயரால் இறைவாக்குரைப்பவன் கொல்லப்படவேண்டும் (உப 13:1-5). பிற தெய்வங்களை வழிபடுவதால் சமுதாயம் மாசுபடுததப்படுகிறது. அது நீக்கப்படும்வரை, மக்கள் கடவுளின் தீர்ப்புக்கு உள்ளாக்கப்படுவார்கள். எண் 25:1-9 இது பற்றிய நிகழ்ச்சி ஒன்றைத் தெளிவாக விளக்குகிறது.

புறத்தேவர்களோடு தொடர்புடைய யாவும் அழிக்கப்படவேண்டியவை ஆகும். அந்நிய சிலைகளும், அவற்றின் ஆபரணங்களும் (உப 7:25), அந்நிய சிலைகளுக்குப் படைப்பவனும் (யாத் 22:20-22:19), இவ்வாறு அழிக்கப்படவேண்டியவைகளில் அடங்கும். இதில் ஈடுபட்டுள்ள மக்கள் கொல்லப்படவேண்டும். இது சம்பந்தமான பொருட்கள் எரிக்கப்படவேண்டும். பிற விக்கிரகங்களை வீட்டிற்குக் கொண்டு செல்வது, வீட்டிலுள்ள அனைத்தையும் தீட்டு உள்ளதாக ஆக்குகிறது. ஆகவே யாவும் அழிக்கப்படவேண்டும் (உப 7:26; யோசு 6:18; 7:20-26).

சகுனம் பார்த்தல், கனவுகளுக்கு விளக்கம் தேடுதல் போன்றவை கூடாது (லேவி19:26-31; உப 18:10). இதைமீறிப் பில்லி சூனியக் காரர்களையும் குறி சொல்கிறவர்களையும் யாராவது கலந்தாலோசித்தால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் (லேவி 20:6). சூனியக்காரர்களை உயிர்வாழவிடக்கூடாது (யாத் 22:18). பில்லிசூனியம் பார்ப்பதற்கான பேய்ப்புத்தியுள்ளவர்கள் கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் இழைக்கின்ற குற்றமானது, மக்களின் பொதுவாழ்க்கையை மாசுபடுத்துவதால் அவர்கள் கொல்லப்படவேண்டும் (லேவி 20:2; உப 13:6-18). தண்டனையானது பொதுவாகப் பொதுமக்களால் கல் எறிந்து கொல்லப்படுதலே ஆகும். சட்டத்திற்கு அப்பாற்பட்ட இலக்கியங்கள் இத்தகைய குற்றங்களுக்கும் தண்டனைகளுக்கும் ஏராளமான எடுத்துக்காட்டுகளைத் தருகின்றன. அரசாட்சிக் காலத்தில் அரசனே இக்குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும் (1 சாமு 28:3.9; 1 அர 15:11-13; 2 அர 10:18-28; 23).

ஆ. இறைநிந்தனை:-

கடவுளைப் பழித்தல் கூடாது என யாத்

22:28-இல் கூறப்பட்டுள்ளது. கடவுளை நிந்திப்பவன் கல்லால் எறியப்படவேண்டும் என்று லேவி 24:15-1-இல் கூறப்பட்டுள்ளது. நாபோத்து (1 அர 21:10) கொல்லப்பட யாத்திராகமத்தில் கூறப்படும் சட்டமே அடிப்படையாக அமைந்து வருகின்றது. லேவி 24:10-23; 1 அர 21:8-14 ஆகிய பகுதிகளைக்கொண்டு பார்க்கும்போது, இறை நிந்தனை புரிந்ததைப் பார்த்த சாட்சிகள் குற்றவாளியைக் கொல்லவேண்டும்போலக் காட்டப்படுகின்றது.

இ. மதக்கோட்பாடுகளை மீறல்:-

ஓய்வுநாட்களில் வேலைசெய்வது (யாத் 20:8-11; 23:12; 34:21; லேவி 23:3; உப 5:12-15) குருக்கள் மரபுப்படி சாவுத்தீர்ப்புக்கு (யாத் 31:14-15; 35:2) உரிய குற்றமாகும். எண் 15:32-36-இல் குறிப்பிடப்பட்டுள்ள கதையானது இத்தோடு தொடர்புடைய கதையாகும். இக்கதையிலிருந்து, ஓய்வுநாளை மீறுபவர்களைக் கண்டுபிடிப்பவர்களே, அவர்களைக் கல்லால் எறிந்து கொல்லவேண்டும்போலத் தோன்றுகின்றது. எட்டாம் நூற்றாண்டில் இஸ்ராயேலில் ஓய்வு நாளின்போது வியாபாரம் செய்யக்கூடாது (ஆமோ 8:5). ஆனால் பிற்காலத்தில் இந்தத் தடையானது ஒழுங்காக அனுசரிக்கப்படவில்லை (எரே 17:19-27). எனவே, நெகமியாவால் மீண்டும் அழுத்தமாக அமுல்படுத்தப்பட்டது (நெக 13:15-22).

கடவுள் கட்டளையிடாத வார்த்தைகளை, அவரது பெயராலே எந்தத் தீர்க்கத்தரிசியாவது சாதித்துச் சொன்னாலோ, வேறு தேவர்களின் பெயரில் பேசினாலோ அவன் கொல்லப்படவேண்டும் (உப 18:20-22). இந்தச் சட்டத்தைப் பற்றி எரேமியா ஆகமத்தில் நிறைய குறிப்புகள் காணப்படுகின்றன (26: 9.15-16; 28:5-9).

2. கொலைபாதகம்:-

விவிலியக் கண்ணோட்டத்தின்படி மனித உயிர் விலைமிக்கது, கொலை செய்பவனுடைய உயிரைப் பறிப்பதே அவனுக்கு அளிக்கப்படும் தண்டனையாகும். எனவேதான் ஆதி 9:6-இல் மனிதரத்தத்தைச் சிந்துபவனின் இரத்தமும் சிந்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரினங்களின் இரத்தத்தைக்கூடச் சிந்தக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. அதனால்தான் ஆதி 9:5-இல் உயிரின் இரத்தத்திற்காக எல்லா உயிரினங்களிடத்தும் மனிதனிடத்தும் பழிவாங்குவோம் என்று கூறப்பட்டுள்ளது. விவிலியச் சட்டமானது கொலையை நான்கு வகையாகப் பிரிக்கிறது.

அ. கொலை:-

ஒருவன் திட்டமிட்டு, பிறருக்குத் தீமை செய்தாக வேண்டும் என்ற எண்ணத்தோடு கொலை செய்யும்போது, கொலை செய்தவனும் சாவுக்கு உட்படுத்தப்படவேண்டும். கொலை செய்யக் காத்திருத்தல் (யாத் 2:13; எண் 35:20.22; உப 19:11), இருவருக்குமிடையே பகையுணர்வு (எண் 35:20-21; உப 19:11), கொலைசெய்ய ஒரு கருவியைப் பயன்படுத்துதல் (எண் 35:16-18) ஆகியவை ஒருவன் கொலையைத் திட்டமிட்டே செய்துள்ளான் என்று உணரப்போதுமான சான்றுகள் ஆகும்.

கொலை செய்தவன் உயிர்பிழைக்க எந்த விதப் பரிகாரமும் செய்ய அனுமதிக்கப்படவில்லை: ''இரத்தம் சிந்திய மனிதன் தன் உயிருக்காகப் பணத்தைக் கொடுத்தாலும் நீங்கள் வாங்கலாகாது. அவன் செத்தே தீரவேண்டும்....நீங்கள் குடியேறினநாடு குற்றமில்லாதவருடைய இரத்தத்தினால் தீட்டுள்ளதாகிவிட்டதே! அந்தத் தீட்டு இரத்தம் சிந்திய பாதகனுடைய இரத்தத்தினாலன்றி மற்ற எதனாலும் கழுவப்படாது''. (எண் 35:31-33). இவ்வாறு இழப்புக்கு ஈடு வழங்கக்கூடாது என்று கூறும் விவிலியச்சட்டம் மேற்காசிய நாடுகளின் சட்டங்களோடு ஒத்துப்போகவில்லை. மனித உயிரின் புனிதத் தன்மைபற்றி ஆதி 9:66 குறிப்பிடுகின்றது.

கொலைபாதகம் செய்தவனை, கொலை செய்யப்பட்டவனின் உறவினர்கள் கொல்ல வேண்டும் (எண் 35:19; உப 19:12). அவர்கள் செய்யவில்லையென்றால், நிலத்தில் ஏற்

பட்ட தீட்டைநீக்க மற்றவர்கள் அவனைக் கொல்லவேண்டும் (2 சாமு 4:11).

ஆ. எதிர்பாராதவிதமாக நேர்ந்த கொலை:-

கொலையானது, மனப்பூர்வமின்றிச் செய்யப்படும்போது, கொல்பவனுக்குச்சட்டம் புகலிடம் கொடுக்கின்றது (யாத் 21:13; எண் 35:9-15.22.28; உப 19:1-10). கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்கள் யாவும் எதிர்பாராத விதமாக நடந்த கொலைக்கான சில உதாரணங்கள் ஆகும். ஒருமனிதன் விறகுவெட்டிக் கொண்டிருக்கும்போது, அவனது கோடரி பறந்துவந்து அவனோடு இருந்தவனை வெட்டிக்கொல்லுதல் (உப ஆகமம்); ஒருவன் இன்னொருவனைப் பார்க்காமல் கல் எறிந்ததால் அவன் இறந்தது (எண்ணாகமம்); யாத்திரை ஆகமம் இக்கொலை கடவுளால் அனுமதிக்கப்பட்டது என்று கருதுகிறது. அறியாமல் கொலை செய்தவனுக்குச் சட்டத்தின் மூலம் பாதுகாப்புக் கொடுப்பது சமூகத்தின் கடமை. அவனுக்குப் புகலிடம் கொடுப்பதற்கு முன்னால் கொலை செய்யப்பட்டவனின் உறவினர் அவனைக் கொன்றுவிட்டால் அந்த இரத்தப்பழி சமூகத்தையே சாரும் (உப 19:10).

இ. எருது குத்திக்கொலை:-

ஒரு மனிதனின் எருது இன்னொருவனைக் குத்திக்கொல்லும்போது, மிருகத்தின் மீதும் இரத்தப்பழி விழுகின்றது. மாட்டிற்குச் சொந்தக்காரன் யாத் 21:28-32-இல் கூறியுள்ள விதிமுறைகளின்படி தண்டிக்கப்படுவான். அதாவது, ஒரு மாடு ஓர் ஆடவனையோ பெண்ணையோ முட்டியதால் அவர் இறந்தால் அந்த மாடு கல்லால் எரியப்படவேண்டும். அதன் இறைச்சியை உண்ணலாகாது. ஆனால் மாட்டின் உரிமையாளர் குற்றவாளியாகமாட்டார். ஆயினும், தன் மாடு வழக்கமாய் முட்டுகிறமாடு என்று மக்கள் அவனுக்குத் தெரிவித்திருந்தும், அவன் அதைக்கட்டி வைக்காததால் அது ஓர் ஆடவனையோ பெண்ணையோ கொன்றிருந்தால் மாடும் கல்லால் எறியப்படவேண்டும்; மாட்டின் உரிமையாளனும் கொல்லப்படவேண்டும். ஆனால் அவன் குற்றம் செய்ய எண்ணவில்லை என்பதாலும் அவனே நேரடியாக அக்குற்றத்தைச் செய்யவில்லை என்பதாலும், அவன் தன் உயிரை மீட்டுக்கொள்ள சட்டம் அனுமதிக்கிறது. அவன், இறந்தவனின் உறவினனுக்கு அவர் நிர்ணயிக்கும் தண்டம் கொடுக்கக்கடவான். ஒருவனுடைய மகனையோ, மகளையோ மாடு முட்டினால், அந்தத் தீர்ப்புப்படியே மாட்டுக்குடையவனுக்குச் செய்யப்படும். ஊழியனையோ, ஊழியக்காரியையோ (அடிமை) மாடு முட்டியிருந்தால் மாட்டுக்குடையவன் (அவர்களுடைய) தலைவனுக்கு முப்பது சீக்கல் வெள்ளி கொடுப்பான்; மாட்டேனென்றால் கல்லால் எறியப்படவேண்டும்.

இந்தச் சட்டமானது, பாபிலோனிய சட்டங்களோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. ஆனால் பாபிலோனிய சட்டத்தில், மத சம்பந்தமான இரத்தப்பழி போன்றவை இல்லை, மாறாகப் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்குவது பற்றிய எண்ணத்தோடு சொல்லப்பட்டிருக்கின்றது.

ஈ. நியாயப்படுத்தப்படும் கொலை:-

தற்காப்பிற்காகக் கொலை செய்வது இரத்தப்பழியைச் சுமத்தாது. வீட்டில் இரவில் கன்னமிட்டுத் திருடுவோனைக் கொலை செய்யவும் (திருடன் கொலையும் செய்வான் என்ற உணர்வில்) வீட்டுக்காரருக்கு உரிமையுண்டு. ஆனால் பகல்நேரத்தில் அவனைக் கொல்ல உரிமையில்லை (யாத் 22:1-2). போரில் கொல்லப்படுபவர்களின் உறவினருக்குக் கொலை செய்தவர்களைக் கொல்லும் உரிமை இல்லை (2 சாமு 2:18-23; 3:26-30; 1 அர 2:5).

3. பாலுணர்வுக்குற்றங்கள்:-

பால்உணர்வுக்குற்றங்களால் தீட்டும், அசுத்தமும் ஏற்படுகின்றன (ஆதி 34:5.13.27; 49:4; லேவி 19:29; 21:9; எண் 5:29; உப 24:4; ஓசே 5:3; 6:10). பரிகாரம் செய்ய முடிகின்ற சில நிகழ்ச்சிகளைத் தவிர (திருமணமாகாப் பெண்ணைக் கற்பழித்தல்) மற்றவைகளுக்கு

மரணமே தண்டனையாக வழங்கப்பட்டது. அவர்களால் ஏற்பட்ட பாவமும் தீட்டும் சமூகம் முழுவதன் மீதும் விழுகின்றன (ஆதி 20:9; 26:10; உப 24:4).

அ. திருமணத்திற்கு எதிரானவை:-

இஸ்ராயேலரின் திருமண நிகழ்ச்சி, அக்காலத்தில் வாழ்ந்த பிற இனத்தாரைப் போலப் பொருளாதாரம், சமூகத்தோடு தொடர்புடைய நிகழ்ச்சியாக இருந்தாலும். திருமண உறவு மத அடிப்படையின்படி 'புனிதமான உறவு' என்று கருதினார்கள். பிற்கால நூற்கள் இதைப் புனித உடன்படிக்கை (பழ 2:17; மலா 2:14) என்று குறிப்பிடுகின்றன. ஆனால் இந்தப் 'புனித உடன்படிக்கை' என்னும் கருத்து ஓசே 1:6-இல் வரும் உவமையில் குறிப்பிட்டுள்ள கருத்தாகும். எனவே விபச்சாரம் என்பது, கணவனின் உரிமைகளை மீறுவதோடு மட்டுமல்லாமல், கடவுளுக்கு எதிரான பாவமாகவும் கருதப்பட்டது (ஆதி 2:6; 39:9; சங் 51:1.4). மேற்காசிய நாடுகளின் சட்டங்களோடு, விவிலிய சட்டத்தை இக்காரியத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மேற்காசிய நாடுகளின் சட்டமானது, விபச்சாரத்தைக் கணவனுக்கு எதிரான குற்றமாக மட்டுமே கருதுகின்றது. மேலும் அவன் நிட்டத்தால் அவனது மனைவியை மன்னிக்கவும் அவனுக்கு உரிமையுண்டு.

மணமாகி இருந்தாலோ, மண ஒப்பந்தமாகி இருந்தாலோ, அதற்குப்பின் ஒரு பெண் கணவனைத் தவிர்த்து, விருப்பத்தோடு மற்றொருவருடன் உறவு கொண்டால், அவள் விவிலியச்சட்டப்படியும், பாபிலோனியச் சட்டப்படியும் கொல்லப்படவேண்டும் (லேவி 2:10; உப 22:22.24; யோவா 8:3-7). ஒரு பெண்ணை ஊருக்குள்ளே கண்டு அவளோடு உறவு கொண்டால், ஊருக்கு உள்ளிருந்தும் அந்தப்பெண் கூக்குரலிடவில்லை என்றால் இருவரும் கொல்லப்படுவார்கள். கூக்குரலிட்டு யாரும் உதவிக்கு வரவில்லையென்றால் அவன்மட்டுமே கொல்லப்படுவான். இச்சம்பவம் நகருக்கு வெளியே நடக்குமாயின், அவளுடைய சம்மதத்தோடு நடந்தது என்று கருதி அவளும் கல்லால் எறியப்படுவாள். ''அடிமைப்பெண் ஒருத்தி, ஒருவனுக்கு நியமிக்கப்பட்டவளாயிருந்து மீட்கப்படாமலும், விடுதலை அடையாமலும் இருக்கையிலே, அவளோடு ஒருவன் படுத்தான் என்றால் அவர்கள் இருவரும் கொலை செய்யப்படாமல் அடிக்கப்படவேண்டும். இது விபச்சாரமாகக் கருதப்படமாட்டாது'' (லேவி 19:20-22).

விபச்சாரம் செய்தவளை (அவளோடு விபச்சாரம் செய்தவனையும்) தண்டிப்பது கணவனின் கடமையாகும் (எண் 5:11-31; பழ 6:32-35). ஆனால் ஆண் விபச்சாரத்தில் ஈடுபட்டால் பெண்ணானவள் ஆணுக்குத் தண்டனை கொடுக்கமுடியாது.

ஆ. கற்புக்கு விரோதமானவை:-

திருமணமாகாத எந்தப்பெண்ணுடனும் எந்த ஆணும் உறவுகொண்டால் அது தண்டிக்கப்படவேண்டிய குற்றமாகக் கருதப்படவில்லை. இத்தகைய வேசித்தனம் தடைசெய்யப்பட்டிருந்தாலும் இதற்காக எந்தத் தண்டனையும் இல்லை (லேவி 19:19; உப 23:17). லேவி 21:7-இலிருந்து குருக்கள் அல்லாதவர் இத்தகைய காரியங்களில் ஈடுபடும் வேசியை மணக்கலாம் என்று தெரிகிறது. ஆனால் இதற்கு விதிவிலக்காகக் ''குருவுடைய புதல்வி வேசித்தனம் புரியும்போதே அகப்பட்டுக்கொண்டு தன் தந்தையின் பெயருக்கு இழுக்கு வருவித்தால், அவள் சாம்பலாய்ச் சுட்டெரிக்கப்படக்கடவாள்'' (லேவி 21:9). உப 22:20-21-இல் புதிதாகத் திருமணம் செய்யப்பட்ட மனைவியானவள், ஏற்கெனவே கன்னிகழிந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால் (லேவி 21:9) அவள் கல்லால் எறியப்படட்டும் என்றுள்ளது. ஆனால் எப்போது கன்னி கழிந்திருந்தாள் என்பதற்கான சரியான தகவல்கள் இதில் குறிப்பிடப்படவில்லை.

ஒரு கன்னிப்பெண்ணைக் கெடுப்பதும், கற்பழிப்பதும் பற்றித் தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளது. ''கன்னிப்பெண் ஒருத்தியை ஒருவன் வலுவந்தமாய்ப் பிடித்து அவ

ளோடு உறவுகொண்டு, காரியம் வழக்கிற்கு வந்தால், அவளோடு உறவுகொண்ட மனிதன் ஐம்பது சீக்கல் வெள்ளியைப் பெண்ணின் தந்தைக்குக் கொடுக்கக்கடவான். அவன் அவளைக் கெடுத்ததனால், அவளை மனைவியாகக் கொண்டு, உயிர் உள்ளளவும் அவளைத் தள்ளிவிடலாகாது'' (உப 22:28-29). கன்னிப்பெண்ணை அவன் கற்பழித்து அவளோடு படுத்தால் அவன் அவளுக்காகப் பரிசம்போட்டு அவளை மணந்துகொள்ளக் கடவான். பெண்ணின் தந்தை அவளை அவனுக்குக் கொடுக்க இசையாவிடின் கன்னிகளுக்காகக் கொடுக்கப்படும் பரிச முறைமையின்படி கொடுக்கவேண்டும். அவன் அப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால், அவளுடைய மணமுறிவுக்கு எதிராக உறுதிகூற முடியாது. காரணம் குற்றத்தில் அவளுக்கும் பங்கு உண்டு (யாத் 22:16-17; 22:15-16).

இ. நெருங்கிய உறவினர்களுக்குள்ளே புணர்ச்சி:-

பாலின உறவின் கட்டுப்பாடு பற்றி விவிலியக்காலத்தில் அதிகமாகவே பேசப்படுகிறது. உப 27:20:22-இல் தந்தையின் மனைவியோடு உறவு வைத்தவன் சபிக்கப்படுகிறான். தன் தந்தைக்கேனும், தாய்க்கேனும் பிறந்த புதல்வியாகிய தன் சகோதரியோடு தகாத உறவு கொள்பவன்மேல் சாபம் விழும் என்று உப 27:22-23-இல் கூறப்படுகிறது. லேவியர் ஆகமத்தின் குருக்களின் சட்டம் மேற்கண்ட குற்றங்களுக்காக மரணதண்டனை நிச்சயிக்கிறது. மகளை மனைவியாக்கிக் கொண்டு, பிறகு அவளின் தாயையும் கொண்டானாயின், அவனையும், அவர்கள் இருவரையும் சுட்டெரிக்கவேண்டும் (லேவி 20:14).

ஈ. இயற்கைக்குப் புறம்பான உடல்உறவு:-

''ஆண் பெண்ணோடு சேர்க்கை கொள்வது போல ஆணோடு சேர்க்கை கொள்ளக் கூடாது.'அது வெறுப்புக்குரிய தீச்செயல். எந்த மிருகத்தோடும் நீ புணர்ச்சிசெய்து அதனால் உன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. மிருகத்தோடும் புணரும்படி எந்தப்பெண்ணும் அதற்குத் தன் மடியை வெளிப்படுத்தக் கூடாது. அது பெருந்தீச்செயல்'' (லேவி 18:22-23; 20:13.15-16). இவ்வாறு செய்பவர்கள் கொல்லப்படவேண்டும் என்பது விவிலியச் சட்டம். ஆனால் மேற்காசிய நாடுகளின் சட்டங்கள், ஓரினச் சேர்க்கையாயின் (ஆணோடு ஆண் உடலுறவு கொண்டால்) அவன் காயடிக்கப்படவேண்டும் என்றும், தந்தையும் மகனும் இத்தகைய உறவுகொண்டால் கொல்லப்படவேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. மிருகங்களோடு சேர்க்கை பற்றிக் குறிப்பிடும்போது, வெள்ளாடு, செம்மறியாடு, போன்றவைகளோடு புணர்ந்தால் அவர்கள் கொல்லப்படவேண்டும். இத்தகைய தண்டனையை மன்னிக்க அரசனுக்கு உரிமையுண்டு. ஆனால், குதிரை, கோவேறு கழுதை ஆகியவற்றோடு புணர்ந்தால் அதற்குத் தண்டனை இல்லை.

4. கீழ்ப்படியாமையும், அரசத்துரோகமும்:-

பெற்றோர்களின் அதிகாரம் கடவுள் கொடுத்த ஒன்றாகக் கருதப்பட்டது (யாத் 20:12; லேவி 19:3) அவர்களை அடித்தலோ (யாத் 21:15), சபித்தலோ (யாத் 21:17; லேவி 20:9) சாவுக்குரிய தண்டனைக்குரியவையாகும். பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் நடக்கும் மகனை அவர்கள் நகரத்தலைவர்களிடம் சொல்ல, அவர்கள் அவனைக் கல்லால் எறிந்து கொல்லப் பணிப்பார்கள் (உப 21:18-21). கடவுளால் தேர்ந்து தரப்பட்டிருக்கும் தலைவர்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள் சாவுக்குரிய தண்டனையை அடைவார்கள் (உப 17:8-13).

யாத் 22:28-இல் குலத்தலைவனைச் சபிப்பவன் தண்டிக்கப்படுவான் என்று கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் இதே சட்டமானது சிறிது மாற்றி அமைக்கப்பட்டு அரசனைப் பழிப்பவன் கொல்லப்படுவான் என்று கூறப்பட்டுள்ளது (1 அர 21:10; யோசு 1:18).

அரசாட்சிக்காலத்தில் புதிதாக வந்த சட்ட, சமூக ஒழுங்கமைப்புகளைப் பற்றி அதற்கு

முன்பு செயல்பாட்டில் இருந்த சட்டத் தொகுப்பு அதிகமாகத் தெரிந்து கொள்ளாததால், அரசத்துரோகம் பற்றிச் சட்டத்தொகுப்பு அதிகமாகச் சொல்லவில்லை. இருந்தாலும் இஸ்ராயேலிய கண்ணோட்டத்தின்படி அரசத் துரோகம் என்பது என்னவென்பதற்குப் போதிய சான்றுகளை இது தருகின்றது. அ) அரசனுடைய மரணத்தைக் குறித்துக் கூறுதல் (ஆமோ 9:9-10; 1 அர 22:18-27; எரே 32:1-5). அரசனுடைய ஆட்சிக்கு எதிராகக் கிளம்பும் எவனும் மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டான் (1 அர 1:21.50; நீதி 9:5; 1 சாமு 20:31; 2 சாமு 13:30). ஆ) அரசனுடைய மனைவிகளைப் பங்கப்படுத்தல் (2 சாமு 12:8), அரசனின் மனைவியோடு கூடுதல் (1 சாமு 16:21; 1 அர 2:22) போன்றவை அரச பதவியை அபகரித்தலுக்குச் சமமாகும். இ) அரசனுடைய ஆட்சிக்கு உட்பட்ட இடத்தில் அவனுக்கெதிராகப் போர்தொடுத்தல் (2 சாமு 15:2). ஈ) அரசனின் எதிரிக்கு அடைக்கலமும் உதவியும் கொடுத்தல் (1 சாமு 22:7-19). உ) அரசனுடைய பணியாள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது அவனைக் கொல்லுதல் (1 அர 12:18-19). அரசனைப் பழித்துப் பேசுதல் (2 சாமு 16:5-9; 1 அர 21:10) ஆகியவை அரசத் துரோகம் என்பதற்கு இஸ்ராயேல் மக்கள் கொடுத்த உட்பொருளாகும்.

5. பொய்ச்சாட்சியும் அவதூறு பேசுதலும்:-

பொய்ச்சாட்சி சொல்வதைச் சட்டம் தண்டிக்கிறது (யாத் 20:16; 33:1). அவ்வாறு பொய்ச்சாட்சி சொல்கிறவனுக்கு, அவன் பிறருக்கு என்ன தண்டனை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று விரும்பினானோ, அதே தண்டனையைக் கொடுக்க வேண்டும் (உப 19:16-21).

தன்னுடைய மனைவி, திருமணத்திற்கு முன் கற்பிழந்தவள் என்று ஒருவன் குற்றம் சாட்டி, அவள் குற்றமற்றவள் என்று கண்டு பிடிக்கப்பட்டால், பெரியோர் முன்னிலையில் அவன் மணப்பெண்ணின் தந்தையால் அடிக்கப்படவேண்டும். கணவன், தன் மாமனாருக்கு 100 செக்கேல் அபராதத் தொகையாகக் கட்டவேண்டும். அப்பெண்ணை இனி விவாகரத்து செய்யக்கூடாது (உப 22:13-19).

6. ஓர் ஆளுக்கு எதிரான குற்றங்கள்:-

அ) ஆளைக்கடத்துதல்:-

அடிமையாக விற்பதற்காக, ஆட்களைக் கடத்தும்போது இது நடந்தது (ஆதி 37:28; 40:15). விற்பதற்காக ஒரு இஸ்ராயேலனைத் திருடுதல். கடத்தப்பட்டவன் கடத்தியவனிடமிருந்தாலும், மரணதண்டனைக்குரியதாகும் (யாத் 21:16; உப 24:7).

ஆ) உடலில் காயம் ஏற்படுத்துதல்:-

இருவர் சண்டை செய்யும்போது, ஒருவன் மற்றொருவனைக் கல்லால் எறிந்ததினாலோ, கையால் குத்தியதினாலோ அவன் சாகாமல் படுக்கையாய்க் கிடந்து, பிறகு எழுந்திருந்து தன்கோலை ஊன்றி வெளியே நடந்தால், அடித்தவன் அவனுக்கு உண்டான மானக்கேட்டைப் பற்றியும் மருத்துவச் செலவைப்பற்றியும் நட்டத்திற்குப் பரிகாரம் செய்தால் அவன் குற்றமில்லாதவனாக இருப்பான் (யாத் 21:18-19). லேவி 24:19-இல் ஒருவனுக்கு எவன் தீங்கிழைத்தானோ அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்படும். கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல், என்று குறிப்பிடப்பட்டுள்ளது, வேண்டுமென்றே தீங்கிழைப்பவர்களைத் தாம் குறிக்கிறது என்று யாத் 21:23-25 வசனங்களில் இருந்து தெரிகிறது.

இரு ஆடவர் ஒருவரோடொருவர் வாயாடி, சண்டைபோட ஆரம்பித்திருக்கையில் ஒருவனுடைய மனைவி தன் கணவனை அடிக்கிறவன் கைக்கு அவனைத் தப்புவிக்கும்படி வந்து, கையை நீட்டி அடிக்கிறவனுடைய மானத்தைப் பிடிக்கத் துணிவாளாயின் அவளுடைய கை துண்டிக்கப்படவேண்டும் (உப 25:11-12).

மனிதர்கள் சண்டையிலே ஒருவன் கருதாங்கிய ஒரு பெண்ணை அடித்ததினால் கருவிழந்து அவள் உயிர் பிழைத்துக்கொண்டால், அவளுடைய கணவன் கேட்டபடி, நீதிபதிகள் விதிக்கும் தண்டத்தைச் செலுத்தக்கடவான் (யாத் 21:22).

யாரேனும் ஒருவன் தன் அடிமை ஊழியனையோ, ஊழியக்காரியையோ கண்ணில் அடித்ததினால் அவர்கள் கண் குருடானால், பழுதுபட்ட கண்ணுக்குப்பதிலாக அவர்களை விடுதலை செய்யக்கடவான். அப்படியே பல் உதிர அடித்திருந்தாலும் அவர்களை விடுதலை செய்யவேண்டும் (யாத் 21:26-27). அடிமையும் மனிதன் என்ற அளவில் உரிமையுடையவன் எனக் கருதி அக்கறை காட்டும் இச்சட்டத்திற்கு இணையான சட்டம் பிற மேற்காசியச் சட்டங்களில் இல்லை.

7. சொத்துக்கு எதிரான குற்றங்கள்:-

அ) அழிவை ஏற்படுத்துதல்:-

ஒருவன் சொத்து அழியும்படி செய்தாலோ (லேவி 24:18.21), சொத்தைக் கவனிக்காததால் அதுவாக அழிந்தாலோ (யாத் 21:33-34.36; 22:5-6) அவன் குற்றம் செய்தவனாகக் கருதப்படுவான். ஒருவனுடைய மாடு மற்றொருவனுடைய மாட்டைக் காயப்படுத்தினதாலே ஒருவேளை அது செத்தால், உயிரோடிருக்கிற மாட்டை விற்று, இருவரும் அதன் விலையைப் பங்கிட்டு, செத்த மாட்டையும் பங்கிட்டுக்கொள்வார்கள் (யாத் 21:35).

ஆ) திருட்டும் ஆக்கிரமித்தலும்:-

ஒருவனுடைய சொத்தை, அவனது சம்மதமின்றி அவனுக்குத் தெரியாமல் எடுப்பது திருட்டாகக் கருதப்படும். விவிலியத்தின்படி, அந்த உடைமை குற்றவாளிக்குச் சட்டப்படி வந்ததா? வரவில்லையா? என்பது முக்கியமல்ல. ஒருவன் தன்னிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்தினால் அதுவும் திருட்டாகவே கருதப்படும். அதற்காக அவன் உரிமையாளருக்கு இருமடங்கு திரும்பச் செலுத்தவேண்டும் (யாத் 22:4.7.9). மாட்டையோ, ஆட்டையோ திருடிவிற்றவன், அல்லது கொன்றுவிட்டவன், அந்த ஒரு மாட்டுக்கு ஐந்து மாடுகளையும், ஓர் ஆட்டுக்குப் பதிலாக நான்கு ஆடுகளையும் கொடுத்து ஈடு செய்யவேண்டும் (யாத் 22:1). திருட்டுக்கு ஈடுசெய்யத் திருடன் கையில் ஒன்றுமில்லையாயின், தான் செய்த திருட்டுக்காக விற்கப்படுவான். விற்கப்பட்ட பணம், திருடப்பட்ட பொருளின் உரிமையாளரைச் சாரும் (யாத் 22:). இந்த வகைச்சட்டத்தில் விவிலியச் சட்டமானது பாபிலோனியச் சட்டத்திலிருந்து வேறுபடுகின்றது. பாபிலோனிய, அசீரியச் சட்டங்கள் மனித உயிரையும், சொத்தையும், சரிசமமாகவே மதிப்பிடுகின்றன. ஆனால் தண்டனைபற்றிப் பேசும்போது, உயிரிழப்பிற்கு அபராதத் தொகையும், திருட்டுக்கு மரணதண்டனையும் என்று குறிப்பிடுகின்றன.

இ) கொள்ளை:-

ஒருவனுடைய சொத்தை வலுக்கட்டாயமாகப் பறித்தல் (ஆதி 31:31; 2 சாமு 23:21), ஒருவனுடைய உடைமையை அவனிடமிருந்து பிடுங்குதல் (மலா 3:5) ஆகியவை கொள்ளை எனக் கருதப்பட்டு, சட்டத்தால் தண்டிக்கப்பட்டன (லேவி 19:13; உப 24:14-15). ஆனால் குற்றவாளிக்கு என்ன தண்டனை என்று குறிப்பிடவில்லை. (கம்முராபியின் சட்டம் கொள்ளைக்கு மரணதண்டனை அளிக்கிறது). லேவி 6:1-7; எண் 5:5-8-இல் பிறனுடைய சொத்தைப் பறிப்பவன், பறித்த சொத்தோடு மேலும் இழப்பீடாக 5-இல் ஒரு பங்கு சொத்தோடு, பாவமன்னிப்புப் பரிகாரமும் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. ஏழைகள் அதிகமாகக் கொள்ளையடிக்கப்படுவதால் பாதிக்கப்பட்டனர் (சங் 35:10; ஏச 3:14; எரே 7:6; ஆமோ 4:1). அவர்கள் தங்கள் உடைமைகளைத் திரும்பப்பெறுவதில் சட்டமுறைகள் பயனளிக்கவில்லை.

4. தண்டனையின் வகைகள்:-

1. மரணதண்டனை:-

இஸ்ராயேலிலிருந்து தீமையை விலக்குவதற்காகவே, கல்லால் எறிந்து குற்றம் செய்தவன் கொல்லப்படவேண்டும் என்று கூறப்பட்டது. நகருக்கு வெளியேதான் கல்லால் எறிந்து கொன்றார்கள். இதில் சமூகம் முழுவதும் பங்குகொண்டது (லேவி 24:14; உப 22:24; 1 அர 21:13). ஆனால் உப 22:21-இல் ''அவனுடைய தந்தையின் வீட்

டில் கல் எறியப்பட்டதாகக்'' கருதப்படுகிறது. சாட்சிகள், குற்றவாளியின் தலையில் கைவைத்து (லேவி 24:14; தானி 13:34) அவனால், இந்தச் சமூகத்தில் விளைந்த தீட்டு அனைத்தையும் அவன்மேல் சுமத்தியது போல (லேவி 4:15; 16:21), அவர்கள் முதலில் கல் எறிந்தார்கள். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் கல் எறிந்தார்கள் (உப 17:7).

இருவிதப் பாலுணர்வுக் குற்றங்களுக்காக எரித்துக் கொல்லப்பட்டதாக லேவி 2;14, 21:9-இல் காணப்படுகிறது. ஆதி 38:24-இல் வேசித்தனத்திற்காகச் சுட்டெரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் கிடைத்த தகவலின்படி இத்தகைய குற்றம் செய்தவர்கள் சுள்ளிக்கட்டால் சுற்றப்பட்டு, உயிரோடு கொளுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடவுள் கொடுத்த நகரங்களில், அவருக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்கள் வாளால் வெட்டிக் கொல்லப்படவேண்டும் (உப 13:15; யாத் 32:27). சிலை வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் சொல்லப்பட்டார்கள் (1 அர. 18:40: உப 9:21; 2 அர 23:20). தனிப்பட்டவிதத்தில் மரணதண்டனை அளிப்பதற்கும் வாள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் (2 சாமு 3:27). அரசனுக்கு எதிராகக் குற்றம் புரிபவர்களின் தலையை வெட்டுவது அரச தண்டனையாகக் கருதப்பட்டது (2 அர 6:31-32; 2 சாமு 16:9). பிற்காலத்தில் கொலையாளிகளுக்கு இத்தகைய தண்டனை வழங்கப்பட்டது.

புனித இடங்களை நெருங்கிப் போனதற்காக, அம்பால் எய்யப்பட்டதாக யாத் 19:13-இல் கூறப்படுகிறது.

தூக்குத்தண்டனை ஒரு தண்டனைமுறையாகக் கருதப்படவில்லை. ஆனால் அவ்வாறாக உடலை உயர்த்தி வைத்திருப்பது பிறருக்கும் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது (உப 21:22-23). மரணதண்டனை அளிக்கப்பட்டவரின் உடல் உறுப்புக்களைச் சில நேரங்களில் வெட்டுவதும் உண்டு (2 சாமு 4:12).

சின்னாபின்னமாய்க் கிழிக்கப்படுதல் (தானி 2:5), மிருகங்களுக்கு முன் எறியப்படுதல் (தானி 6:7) போன்ற தண்டனைகளை இஸ்ராயேலர் பின்பற்றவில்லை.

2. உடல் சார்ந்த தண்டனை:-

உடல் சார்ந்த தண்டனைகளில் சில குறிப்பிட்ட தண்டனைகளைப்பற்றி விவிலியச்சட்டம் கூறுகிறது. பாபிலோனிய, அசீரியச்சட்டங்களில், உடல் உறுப்புக்களை வெட்டித் தண்டனை கொடுப்பது பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. எ.கா. நாக்கு, கண், மார்பகம், காது ஆகியவை வெட்டப்பட்டன.

திட்டமிட்டு உடலுக்குத் தீங்கு விளைவித்திருந்தால் 'பழிக்குப்பழி' என்ற சட்டமுறையில் பழிவாங்கவேண்டும். பாதிக்கப்பட்டவனோ, அவனது உறவினரோ தண்டனையை நிறைவேற்றவேண்டும் என்பது அரசாட்சிக்காலத்திற்கு முந்தையசட்டம். ஆனால் விவிலிய சட்டம், பாதிக்கப்பட்டவரே அந்தத் தண்டனையை நிறைவேற்றினால்தான் சரியாகத் தண்டிக்கமுடியும் என்று கருதுகின்றது. பாபிலோனியாவிலும், அசீரியாவிலும் மேற்சொன்ன பழிக்குப்பழி என்ற சட்டம் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், அது விவிலியத்தில் சற்று வித்தியாசமாகக் காட்டப்படுகின்றது. அதாவது, கடன்பட்டிருந்தவன் ஒருவனின் மகனைக் கடன்கொடுத்திருந்தவன் கொன்றுவிட்டால், கடன் கொடுத்தவனின் மகனும் கொல்லப்படவேண்டும்; ஒருவன் இன்னொருவனின் கர்ப்பமான மகளை அடித்ததால், அவள் கரு கலைந்துவிட்டால் அடித்தவனின் மகள் கொல்லப்படவேண்டும்; ஒருவன் தவறான வீடு கட்டியதால் அது இடிந்து, வீட்டு உரிமையாளரின் மகன்மீது வீழ்ந்து அவன் இறந்தால், கட்டியவனின் மகனும் கொல்லப்படவேண்டும் என்கிறது பாபிலோனிய அசீரியச் சட்டங்கள். ஆனால் விவிலியச் சட்டமானது இத்தகைய பழிவாங்கலை ஏற்றுக்கொள்ளவில்லை (யாத் 21:22-23.31; உப 24:16).

பழிவாங்கல் சட்டம் என்பது சட்டமுறையில் தண்டனை வழங்குவதாகும் என்பது

ஐயத்திற்குரியதாகும். விவிலியத்தின் திருந்திய படிவங்கள்கூட, தவறு செய்தவனுக்கு, அதே அளவு தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றதே யன்றி, வார்த்தைக்கு வார்த்தை அப்படியே பொருள் கொள்ளவேண்டும் என்று குறிப்பிடவில்லை. சட்டத்தில், பரிகாரத்தைப்பற்றிப் பேசும் மூன்று பகுதிகள், பழிக்குப்பழி வாங்குவதற்குப் பதிலாக, பணஇழப்பீடு வாங்கியதாகக் கூறுகின்றன. ஆனால் கொலைக்கு மட்டும் இத்தகைய இழப்பீடு இல்லை. யாத் 21:30-இல் மாடு குத்தி ஒருவன் கொலை செய்யப்பட்டால், அதன் உரிமையாளன், அபராதம் கொடுக்கும்படி பணிக்கப்பட்டு அவன் அபராதத்தைக் கொடுத்துத் தன் உயிரை மீட்டுக்கொள்ளட்டும் என்றுள்ளது. எண் 35:31-இல் இரத்தம் சிந்திய மனிதன் தன் உயிருக்காகப் பணத்தைக் கொடுத்தாலும் நீங்கள் வாங்கலாகாது என்று கூறப்பட்டுள்ளது.

விவிலியச்சட்டம் 'தற்காப்பை' ஏற்றுக் கொள்வதால், காயப்படுத்தப்பட்டவன், எதிர்த்துத் தாக்குவது, அவனுக்குரிய உரிமையாகக் கொடுக்கப்பட்டது.

சாட்டையால் அடிப்பது சட்ட பூர்வமான தண்டனையாகும். குற்றத்தின் அளவிற்கு ஏற்ப சாட்டை அடிகள் அதிகமாகும். சட்டத்தின்படி அதிகபட்சத் தண்டனையாக 40 கசையடிகளே வழங்கலாம் (உப 25:1-3).

சிறையில் அடைத்தல் விவிலியத்திலோ, மற்ற மேற்காசிய நாடுகளின் சட்டத்திலோ தண்டனையாகக் கூறப்படவில்லை. குற்றம் சுமத்தப்பட்டவனை விசாரித்துத் தீர்ப்புக் கூறும்வரை அவனைச் சிறைக்குள் வைத்திருந்தார்கள் (லேவி 24:12). ஆனால் பிற்காலத்தில் மிகவும் ஆபத்தானவர்கள் என்று கருதப்பட்டவர்களைச் சிறையில் அடைத்தார்கள் (எரே 32:2-3).

திருடப்பட்ட பொருட்களுக்கு இழப்பீடு கொடுக்கமுடியாதவனை மட்டுமே அடிமையாக விற்கவேண்டும் (யாத் 22:16) என்றாலும் கடனுக்காகவும் சிலரை இஸ்ராயேலில் விற்றார்கள் (2 அர 4:1; நெக 5:5; லேவி 25:39).

3. பண அபராதம்:-

விவிலியச் சட்டத்தில் பண அபராதம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவனுக்குப் பாதிப்பு ஏற்படுத்தியவன் அபராதம் செலுத்தவேண்டும். நீதிமன்றத்திற்கும், அரசுக்கும் அபராதம் கொடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை. அ) சண்டையில் ஒரு பெண்ணை அடித்ததினால், கருகலைந்திருந்தால் அவளுக்கும் (யாத் 21:22), ஆ) கன்னியைக் கெடுத்ததற்காக அவளது தந்தைக்கும் (உப 22:29; யாத் 22:16-17) இ) ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருந்து, மீட்கப்படாத அடிமைப்பெண்ணைக் கெடுத்தற்கும் (லேவி 19:20), ஈ) முரட்டு மாடு குத்தியதால் இறந்தால், இறந்தவனின் உறவினருக்கும் (யாத் 21:30) அபராதத் தொகைகொடுக்கப்பட வேண்டும். திருட்டுக் குற்றத்திற்கு, இரு மடங்காகவும், நான்கு மடங்காகவும், ஐந்து மடங்காகவும் திருப்பிக் கொடுக்கவேண்டும் (யாத் 22:1-4; 22:3.8). கன்னி கழியாத பெண்ணைக் கழிந்துவிட்டபெண் என்று பொய்க் குற்றம் சாட்டினால், மணப்பெண்ணின் தந்தைக்கு அபராதம் கட்டவேண்டும் (உப 22:19).

V. புதிய ஏற்பாட்டில் குற்றங்களும் தண்டனைகளும்:-

1. பொதுக்கருத்துக்கள்:-

புதிய ஏற்பாடு ஒரு சட்ட நூலின் தொகுப்பு அல்ல. ஆனால் இயேசுவின் போதனைகளில் பல, விவிலியச் சட்டத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றன. ஆனால் அவைகள் சட்டத்தின் வடிவில் இருப்பதில்லை. மாறாக நல்வாழ்க்கை வாழ்வதற்கான அறிவுரையாக இருக்கும் (எ.கா. மத் 5:20-32). கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்ற பழைமை விவிலியச் சட்டமாகக் கருதப்பட்டதை இயேசு எதிர்க்கிறார். யாத் 21:23; மத் 5:38-41-இல் மாற்றிச் சொல்லப்படுகிறது. இந்தப் பரிசுத்த போதனையானது, சட்டத்திற்கு எதிரானதாக அமைகின்றது. புதிய ஏற்பாட்டில் காணப்

படும், குற்றவியல் தண்டனைச்சட்டங்கள், அக்காலத்தில் உள்ள உரோமை, யூதச் சட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. குறிப்பாகப் புதிய ஏற்பாட்டு ஆட்கள், உரோமை, யூத அதிகாரிகளோடு மோதும்போது இது தெளிவாக வெளிப்படுகின்றது.

புதிய ஏற்பாட்டுச் சட்டச் சூழ்நிலைகளைச் சரியாகப் புரிந்துகொள்வது என்பது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கின்றது. பழைய ஏற்பாடு சட்ட நுணுக்கங்களைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுவதுபோல் புதிய ஏற்பாடு நுணுக்கமாகக் குறிப்பிடவில்லை. இயேசுவின் தீர்ப்பு, பவுலுக்கு அளிக்கப்பட்ட பல தீர்ப்புக்கள், ஆகியவற்றைக்கூட சரியான சட்டநீதியாகப் புரிந்துகொள்ளமுடியவில்லை. என்றாலும், உரோமை, யூத குற்றவியல் சட்டங்களைப் பின்னணியாகக் கூறியிருப்பது புதிய ஏற்பாட்டில் குற்றம், தண்டனை போன்றவற்றை விளக்கப்பயன்படுகின்றது.

2. புதிய ஏற்பாட்டில் காணப்படும் யூதகுற்றவியல் சட்டம்:-

6-ஆம் ஆண்டில் யூதேயா, உரோமை ஆளுநர்களின்கீழ், பாரசீக, கிரேக்க ஆட்சியில் தனித்தன்மை பெற்றிருந்ததுபோல், குறிப்பிட்ட சுதந்தரம் பெற்றிருந்தது (எண் 7:25-26). ஏரோதின் ஆட்சியைத் தொடர்ந்து, அரசுக்கு ஆதிக்கம் வழங்கப்பட்டது. நாட்டை ஆள, தலைமைக்குருக்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. யூத சட்டத்தையும், பழக்க வழக்கங்களையும் தழுவிய நீதிமுறை அனுசரிக்கப்பட்டது. சிதறிக்கிடந்த யூதர்கள்மீது தலைமைக்குருக்கள் ஆட்சிசெலுத்தினர் (அ.ப. 9:1-2). சிதறிக்கிடந்த சமூகங்களில் சமயகாரியங்களில் அளிக்கப்பட்டிருந்த சலுகைகள் (18:12-17), அது தலைமைக்குருவின் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதாகக் கருதப்பட்டிருக்கலாம்.

அ) மரணதண்டனை:-

யூத சட்டங்களுக்கு எதிரான குற்றங்களுக்கு, யூத அதிகாரிகள் மரணதண்டனை அளிப்பதற்கான தகுதி பெற்றிருந்தார்களா என்பது கேள்விக்குறி. ஆலயம் இடிக்கப்படுவதற்கு 40 ஆண்டுகளுக்குமுன்பே, யூத நீதிபதிகளிடமிருந்து, மரணதண்டனை அளிக்கும் உரிமை பறிக்கப்படுகிறது. ஆனால் இதற்கு யோவா 18:31-இல் கூறப்படுவது முரணாக உள்ளது. உரோமையின் தலையீடு இன்றி யூதர்கள், மரணதண்டனை அளித்ததற்கான பல சான்றுகள் காணப்படுகின்றன. பேதுருவின் மீதான இரண்டாவது விசாரணை (அ.ப. 5:27 தொ), தலைமைக்குருக்களின் அதிகாரத்தை, கொல்வதற்காகப் பெற்றதாகப் பவுல் கூறுவது (26:10) போன்றவை இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் ஆகும். ஸ்தேவான் கல்லால் எறியப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து (7:57-60) அவர் சட்டத்திற்குப் புறம்பாகக் கொல்லப்பட்டாரா, சட்டபூர்வமாகக் கொல்லப்பட்டாரா என்று தெளிவாகத் தெரியவில்லை.

கொடிய சமயக்குற்றங்களுக்குச் சட்ட பூர்வமில்லாத முறையில் தண்டனை அளிப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவேதான், தமஸ்குவில் பவுலைக் கொல்ல முயற்சி செய்ததையும் (அ.ப. 9:23-24), எருசலேமில் கொல்ல முயன்றதையும் (23:12-15), இலிசித்திராவில் கல்லால் எறிந்ததையும், யூதமரபுப்படி, சட்டபூர்வமானது என்றே கருதினார்கள்.

ஆலயத்தின் தூய்மைப்பகுதிக்குள் நுழையும் எந்த அந்நியனையும், அவன் உரோமைக் குடிமகனாக இருந்தாலும் அவனைக் கொல்ல யூதர்களுக்கு உரிமை இருந்தது.

இயேசுவை மதத்திற்கு எதிராகக் குற்றம் செய்ததாகவே தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக்கினார்கள். 'தேவநிந்தனை' கூறியதாக இயேசுவும், ஸ்தேவானும் குற்றம் சுமத்தப்பட்டார்கள் (மத் 9:3; 26:65; யோவா 10:33 தொ; அ.ப. 6:11). கிறிஸ்தவ விசுவாசத்திற்காகவே யூதர்கள் தன்னைக் கொடுமைப்படுத்தியதாகப் பவுல் கூறுகிறார் (அ.ப. 26:19-23). இக்குற்றங்களின் சமயப்பண்பு தெளிவாக இல்லை. தேவநிந்தனை என்பது இறைவனுக்கு அளிக்கப்படும் அவமரியாதை

என்ற பரந்த பொருளைக் கொண்டுள்ளது எனலாம்.

ஆ) உடல் சார்ந்த தண்டனை:-

விவிலிய விதிகளை மீறி நடந்து, அதற்கான தண்டனை விவிலியத்தில் குறிக்கப்படவில்லை என்றால், அக்குற்றத்திற்குத் தண்டனையாக 39 சாட்டையடிகள் யூத சட்டத்தில் கொடுக்கப்பட்டது. கசையடித் தண்டனை என்பது யூத அதிகாரிகளுக்கும், உரோமை அதிகாரிகளுக்கும் அடக்கி ஆளவே பயன்பட்டது (மத் 10:17; அ.ப. 5;40; 22:19; 2 கொரி 11:24). விசாரணைக்கு முன்பு குற்றவாளியாகக் கருதப்படுபவர் சிறையில் வைக்கப்படுவார் (அ.ப. 4:3; 5:18).

செபக்கூட அதிகாரிகளுக்கு, மதத்திற்கு எதிரான குற்றங்களில் அவர்களை ஒதுக்கி வைக்கும் தண்டனை வழங்க உரிமை இருந்தது.

3. புதிய ஏற்பாட்டில் உரோமை குற்றவியல் சட்டம்:-

மக்களின் பொதுவாழ்வில் சட்டத்தையும், அமைதியையும் காப்பதற்கான உரிமை ஆளுநரிடமிருந்தது. கலவரம், கொள்ளை போன்ற நேரங்களில் அவர் இந்த உரிமையைப் பயன்படுத்துவார். தெயுதாவும், கலிலேய யூதாசும் (அ.ப. 5:36-37) கலகம் விளைவித்ததற்காகத் தண்டிக்கப்பட்டார்கள். திருமுழுக்கு யோவானுக்கும் கலகம் விளைவித்ததால்தான் தண்டனை வழங்கியதாக யோசிப்பஸ் கூறுகிறார். இயேசுவின் சீடர்களையும், உரோமைக்கு எதிரான புரட்சிவாதிகளாகவே கருதினார்கள் (அ.ப. 5:35-39). இவ்வாறாக, ஆளுநருக்குத் தண்டனை வழங்கி நிறைவேற்ற உரிமை இருந்தபோது, யூத அதிகாரிகளுக்குக் கைது செய்யவும், விசாரணை செய்யவும், ஆளுநரிடம் ஒப்படைக்கவும் அதிகாரம் இருந்தது (மாற் 14:43 தொ).

அ) தண்டனைகள்:-

பிற்பட்ட வகுப்பினருக்கும், அடிமைகளுக்கும் வழங்கப்பட்ட சிலுவையில் அறையப்படும் தண்டனைதான் உரோமர்களால் வழங்கப்பட்ட மிகக் கொடுமையான மனிதாபிமானமற்ற தண்டனையாகும். இத்தண்டனை வழங்கப்படுவதற்குமுன் குற்றவாளிகள் கட்டிவைக்கப்பட்டு அடிக்கப்படுவார்கள். தலையை வெட்டும் தண்டனை பொதுவாக வாள் கொண்டு நிறைவேற்றப்பட்டது (மத் 14:10). ஆனாலும் பழைய காலத்தில், கோடரிகொண்டு வெட்டியிருக்கிறார்கள் (திருவெளி 20:4). இதற்கு அடுத்தபடியாக, மிகக்கொடூரமான தண்டனையாகக் கருதப்பட்டது காலகாலமாகச் சுரங்கங்களில் வேலை செய்தல் ஆகும். அங்கே அவர்களின் கால்கள் விலங்குகளால் பூட்டப்பட்டிருக்கும். நகர நீதிபதிகள் சிறிய குற்றங்களை விளைவிப்பவர்களுக்குத் தண்டனை வழங்க அனுமதி பெற்றிருந்தார்கள் (அ.ப.16:22). அடிமைகளிடமிருந்து தகவல்களைப்பெற அவர்கள் கட்டி வைக்கப்பட்டு அடிக்கப்பட்டார்கள் (22:24). சிறைக்குள், விசாரணைக் கைதிகளை மட்டுமே வைத்திருந்தார்கள். இதைப் பயமுறுத்துவதற்கும் பயன்படுத்தினார்கள் (16:23-24).

ஆ) உரோமைக் குடியுரிமையின் முக்கியத்துவம்:-

அகுஸ்து சீசரால் ஏற்படுத்தப்பட்ட ''பொதுவாழ்வு பற்றிய யூலியுசட்டப்படி'', ஓர் உரோமைக் குடிமகனைக் கட்டிவைத்து அடிப்பதோ, சிறையில் தள்ளுவதோ குற்றமாகும். உரோமைக் குடியுரிமையைப் பவுல் பெற்றிருந்ததால் பல இடங்களில் அவருக்குச் சுதந்தரம் வழங்கப்பட்டது (அ.ப.22:25-29; 16:37). ஆனால் சில நேரங்களில், இந்தக் குடியுரிமை மதிக்கப்படவில்லை (2 கொரி 11:25). யூத மத அதிகாரிகள், அவர்களின் மதத்திற்கு எதிராக யாராவது குற்றம் செய்தால், அவன் இந்தக் குடியுரிமை பெற்றிருந்தாலும் கண்டு கொள்வதில்லை (2 கொரி 11:24). பெரிய வழக்குகளில், ஆளுநரின் முன்னால் வாதாட உரோமைக் குடிமகனுக்கு உரிமையுண்டு (அ.ப.25:12). மேலும், இந்த நீதிமன்றத்தைப் புறக்கணித்துவிட்டு நேரடியாக உரோமைப் பேரரசிடம் நீதிகோரவும் இக்குடியுரிமை பெற்றவருக்கு உரிமை உண்டு (25:11-12).

குற்றஞ்சாட்டுதல், வழக்காடுதல் (INDICTMENT)

நீதிமன்றத்தில் முறையாகக் குற்றம் சாட்டுதலாகும். ''சட்டத்தில் ஒரு வழக்கு'', ''ஒரு சட்ட பூர்வமான வழக்கை நடத்தல்'', ''ஒருவனுக்கு முன்னால் ஒரு வழக்கைச் சமர்ப்பித்தல்'' போன்ற தொடர்களைக் குறிக்கும் சட்டக் கலைச் சொல்லாகும். (யோபு 31:35; எரே 25:31; ஓசே 12:2; ஏச 3:13-15; எரே 2:9; ஓசே 4:1; மீக் 6:2). குற்றம் சாட்டுதல் என்றபொருளில் இது இறைவனுக்கு மட்டும் பயன்படுகிறது. இஸ்ராயேலின் தீய பெரியவர்களுக்கு எதிராக (ஏச 3:13-4), நாட்டிற்கு எதிராக (எரே 2:9; மீக் 6:2), இஸ்ராயேலுடைய குடிகளுக்கு எதிராக (ஓசே 4:1), யாக்கோபுக்கு எதிராக (ஓசே 12:2), நாடுகளுக்கு எதிராக (எரே 25:31), அவர்களுடைய அறநெறி மற்றும் ஆன்மீக நிலையினை முன்னிட்டு இறைவன் வழக்கினைக் கொண்டு வருகிறார். யோபு அவருடைய குற்றமற்ற நிலையை நிலை நிறுத்துவதில் அவருடைய எதிரியின் எழுதப்பட்ட குற்றச் சாட்டுக்காகக் கூக்குரலிடுகிறார் (யோபு 31: 35). மீக் 6:2-இல் '''மலைகளே, மண்ணுலகின் நிலையான அடித்தளங்களே, ஆண்டவருடைய வழக்கைக் கேளுங்கள், ஏனெனில் தம் மக்கள்மேல் ஆண்டவர் வழக்குத் தொடுக்கிறார். இஸ்ராயேல் மீது குற்றம் சாட்டுகிறார்'', என்ற விவரிப்பால் அண்டங்களைக்கொண்டு அமைக்கப்பட்ட நீதி மன்றக் காட்சியைக் காண்கிறோம்.

குற்றத்தின் குன்று (MOUNT OF CORRUPTION)

எருசலேமிற்குக் கிழக்கே அமைந்த ஒரு குன்று. இது ஒரு வேளை ஒலிவ மலையின் தெற்கு முனையாக இருக்கலாம். இங்குதான் மன்னன் சாலமோன் தன் அன்னிய மனைவிகளின் தெய்வங்களுக்குக் கோவில்களைக் கட்டினார் (1 அர 11:7). மற்ற ஒழுங்கற்ற வழிபாட்டு மையங்களோடு சேர்த்து இதுவும் மன்னன் யோசியாவால் அழிக்கப்பட்டது. விவிலியத்துக்குபுறம்பே, ஒலிவ மலை, தைலமலை என்றழைக்கப்பட்டது. இதைக் குறிக்கும் மூலச்சொல்லைக் குற்றத்தின் குன்று எனப் பொருள்படும் சொல்லாகத் திரிபுபடுத்தி ஏளனம் செய்கிறார் ஆசிரியர் (2 அர 23:13).

குற்றம் (OFFENCE)

அறநெறி அல்லது இறைச்சட்டத்தை மீறுவதாகும். விவிலியப் பொருளில் குற்றம் இடறலாய் இருப்பதையும், பாவத்திற்குச் சந்தர்ப்பமாகவும், காரணமாகவும் இருப்பதையும் உள்ளடக்கும்.

குற்றம் பாவத்தையே குறிக்கலாம். குற்றங்கள் சகமனிதருக்கு எதிராகவோ (மத் 6:14-15; யாக் 5:16) இறைவனுக்கு எதிராகவோ (உரோ 5:17; எபே 1:7) இருக்கலாம்.

குற்றம் சாட்டுபவர் (ACCUSER)

பொதுவாக, இச் சொல் நீதிமன்றத்தில் எதிராளியைக் குறிக்கும் (யோபு 9:15); ஆனால் புதிய ஏற்பாட்டில் இரு இடங்களில் இச்சொல் தனிச்சிறப்பான பொருளைப் பெறுகிறது. யோவா 5:45-இல் யூதர்கள் நம்பியிருக்கிற மோசேயே தந்தையிடத்தில் அவர்களைக் குற்றம் சாட்டுவார் என்று இயேசு கூறுகிறார். ஏனெனில், அவர்கள் மோசேயின் செய்திக்குச் செவிமடுத்திருந்தால், அவர்கள் சட்டத்தால் குற்றம் சாட்டப்பட்டு, பாவிகள் என்று தீர்ப்பிடப்படுவர். மிக்கயேலுக்கும் பறவைநாகம் அல்லது சாத்தானுக்குமிடையே நடக்கும் போரில் (திருவெளி 12:10), சாத்தானை ''நம் கடவுளின் முன்னிலையில் இரவும் பகலும்'' இறைவனது மக்களைக் குற்றம் சாட்டியவன் என்று யோவான் குறிப்பிடுகிறார்.

கூ

கூசயா (HUSHAIAH)

கூசயா மெராரியின் புதல்வர்களுள் ஒருவர். இவர் தாவீது அரசன் காலத்தில் பாடகர்களில் ஒருவராக விளங்கினார் (1 நாள் 15:17). இவர் 1 நாள் 6:44-இல் கீசி என்றும் அழைக்கப்படுகின்றார்.

கூசா (CHUZA - சிறிய ஜாடி, காட்சியாளர்)

கூசா, ஏரோது அந்திப்பாவின் காரியத் தலைவன். இயேசுவைப்பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்த கலிலேயப் பெண்ணான யோவானாவின் கணவர் (லூக் 8:3). இவர் ஏரோதின் காரியத்தலைவனாக இருந்து ஏரோதின் சொத்துக்களைக் கண்காணிக்கும் பதவியில் இருந்திருக்கலாம். இவரும் இவரது மனைவியும் அதிகாரிகளிடையே விசுவாசிகளாக இருந்திருக்கலாம்.

கூசா (HUSHAH - விரைவான)

யூதா மலைநாட்டிலுள்ள ஒரு கிராமம். இது ஏசேரால் நிறுவப்பட்டது (1 நாள் 4:4). தாவீதின் பலம் வாய்ந்த படைவீரர்களில் ஒருவரான சிப்காயின் ஊர் (2 சாமு 21:18; 1 நாள் 11:29; 20:4; 27:11). 2 சாமு 23:27-இல் இது மெபுன்னாய் என்றழைக்கப்படுகிறது. இவ்விடம், பெத்திலகேமுக்குத் தென் மேற்கிலுள்ள இக்காலக் கூசான் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

கூசாபு (HUZZAB)

கூசாபைச் சிலமொழி பெயர்ப்புகள் ஓர் ஆளின் பெயராகக் கருதுகின்றன. ஆனால் அதனை வேறுசில ''அதன் தலைவி'' என்று மொழிபெயர்க்கின்றன. இது ஒரு தெளிவில்லாத சொல்லாகும். நாகூம் நூலில் மட்டும் வருகிறது (நாகூ. 2:7). மேலும் சில விளக்கங்கள்; (அ) கூசாபு என்பது அசீரியாவின் அரசியான நினிவே அல்லது பெண் தெய்வமாக இருக்கலாம்; (ஆ) இச்சொல் ஒரு வினைச்சொல்லாக இருந்தால் 'நிறுவப்பட்ட' அல்லது 'தீர்ப்புச் செய்யப்பட்ட' என்று பொருள்படும்.

கூசாபியர் (HUSHATHITE)

கூசாவில் குடியிருந்த மக்களின் இனப் பெயர் (2 சாமு 21:18; 23:27; 1 நாள் 11:29; 17:11; 20:4).

கூசாய் (HUSHAI - விரைவான)

தாவீது அரசனின் நண்பனும் நம்பிக்கைக் குரியவருமாவார் (2 சாமு 15:37; 1 நாள் 27:33). ஓர் அர்க்கியர். சாலமோனின் அதிகாரிகளில் ஒருவரான பானாவின் (2) தந்தை. அபிசலோமின் ஆலோசகராகத் தன்னையே நியமித்துக் கொண்டு, அபிசலோம் அகித்தோபலின் ஆலோசனையைப் பின்பற்றாத படி ஆலோசனை கூறியவர் (2 சாமு 15:32-33; 16-17:14). மேலும், அரண்மனையில் வேவு பார்த்து, சாதோக்கு மற்றும் அபியத்தார் ஆகிய குருக்களின் புதல்வர்கள் வழியாக அவ்வப்போது செய்திகளைத் தாவீதுக்குத் தெரிவித்து வந்தார் (15:34-36).

கூசான் (CUSHAN)

அப 3:7-இல் மிதியானுக்கு இணையாக எடுத்துக்கூறப்படும் ஒருமாவட்டம் அல்லது ஒரு மக்களினம். கூசின் சந்ததியினர் மிதியானில் இருந்ததை அடிப்படையாகக் கொண்டு மிதியானியர்களுக்குப் பழைய பாடல் பெயராக இருந்திருக்கலாம். இதனால்தான் அநேகமாக, மோசேயின் மனைவி 'கூச இனத்தாள்' என்று அழைக்கப்பட்டிருக்கிறாள் (எண் 12:1). இங்குக் கூசிய இனத்தவள் என்பது எத்தியோப்பியாவைச் சேர்ந்தவள் என்று பொருள் அளிக்காமல், மிதியானைச் சேர்ந்த சிப்போராளவைக் குறிக்கலாம்.

கூசான்-ரிசத்தாயிம் (CUSHAN - RISHATHAIM - ''இரு மடங்கு பொல்லாங்குள்ள கூசான்'')

அராம் நகராமின் அரசனுடைய பெயர் அல்லது அவர் பெயரின் திரிபாக இருக்கலாம். நீதிபதிகள் நூலில் கூறப்பட்டுள்ளபடி இவர்தான் இஸ்ராயேலரைக் கொடுமைப் படுத்திய முதல் அரசர் (நீதி 3:8-10). முதல்

நீதிபதியான ஒதினியேலின் போர் வெற்றியின் மூலம் இவருடைய 8 வருடக் கொடுங்கோன்மை ஒழிந்தது.

கூசி *(CUSHI)*

1. யோயாக்கிமின் அரசவையில் சிற்றரசனாக இருந்த எகுதியின் கொள்ளுப் பாட்டன் (எரே 36:14).

2. இறைவாக்கினர் செப்பனியாவின் தந்தை (செப் 1:1).

கூசி *(CHUSI - இடம்)*

யூதி 7:18-இல் கூறப்பட்டுள்ள ஓர் இடமாகும். இப்பெயர் வுல்கத்தா வாசகத்தில் காணப்படவில்லை, மாறாகப் பழைய இலத்தீன் மொழி வாசகத்தில் காணப்படுகிறது. இந்த இடம் அகிராபே என்ற இடத்தின் மேற்கிலும், நப்லூஸ் என்ற இடத்தின் தெற்கிலும் அமைந்திருந்ததாகக் கூறப்படும்.

கூசியர் *(CUSHITE)*

அபிசலோமின் தோல்வி, மரணம் பற்றிய செய்தியை யோவாபிடமிருந்து தாவீதிற்குக் கொண்டுவந்தவரின் பெயர். இவர் அனேகமாக ஒரு நீக்ரோ அடிமையாகவோ, கூலிப் படை வீரனாகவோ இருந்திருக்கலாம். ஆகவே, அன்னியனான இவர் துக்கச் செய்தியைக் கொண்டு செல்ல, அகிமாசைவிடத் தகுதியானவராக யோவாபால் கருதப்பட்டார்.

எண் 12:1-இல் மோசேயின் மனைவி சிப்போரா ஒரு கூசியப்பெண் என்றழைக்கப்படுகிறாள். இது கூசு மிதியானின் ஒரு மாவட்டம் என்று சுட்டுகிறது.

கூசிம், கூசியர் *(HUSHIM)*

1. தாணின் மகன் அல்லது அவரிலிருந்து தோன்றிய ஒரு சமூகக் குழு (ஆதி 46:23). இப்பெயர் எண் 26:42-இல் சூகாம் என்று வருகிறது.

2. பென்யாமினைச் சேர்ந்த அகேரின் மகன் (1 நாள் 7:12). இந்த வரியின் எபிரேய வாசகத்தை விளக்குவது கடினம்.

3. பென்யாமினைச் சேர்ந்த சாராயிமின் மனைவி. அபிதூது, ஏல்பால் ஆகியோரின் தாய் (1 நாள் 8:8.11).

கூசு *(CUSH - கரிய) - ஆள்*

1. காயின் மூத்தமகன். நிம்ரோதின் தந்தை (ஆதி 10:6-8; 1 நாள் 1:8-10.

2. இவர் சங் 7-இல் தலைப்பில் மட்டும் குறிப்பிட்டுள்ளார். இவர் பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர். இவர் தாவீதுக்கு எதிராக அவதூறு பேசிய எதிரி என்பதை நம்மால் உய்த்துணர முடிகிறது. இது சங்கீதத்திற்கு (7) ஒரு சூழ்நிலையைக் கொடுப்பதால், பிற்காலத் திருப்பணியாளர் இவர் பெயரைத் தலைப்பில் சேர்த்தார்.

கூசு *(CUSH) - இடம்*

1. வட அல்லது மத்திய பாபிலோனியாவிலுள்ள காசியர்களின் பகுதி (ஆதி 2:13; 10:8).

2. அடிக்கடி எத்தியோப்பியா என்றழைக்கப்படும் ஆப்பிரிக்கப் பகுதியாகும் (2 அர 19:9; எஸ்த 1:1; ஏச 11:11). இது எகிப்துக்குத் தெற்கே (எச 29:10) நைல் நதியையொட்டிய நூபிய அரசாக அடையாளம் காட்டப்பட வேண்டும். இதை இக்கால எத்தியோப்பாவோடு (அபிசீனியா) குழப்பக்கூடாது. பெரும்பாலும் எகிப்திய ஆளுகைக்கு உட்பட்ட இப்பகுதி கி.மு.11-ஆம் நூற்றாண்டு மத்தியில் தனது சுதந்தரத்தை வலியுறுத்தியது. கி.மு. 712-663-இல் எத்தியோப்பியர் எகிப்தை அதன் 25-ஆவது அரசமரபாக ஆட்சிசெய்தனர் (2 அர 19:9; ஏச 37:9).

காண்க. எத்தியோப்பியா.

3. அக்காபா வளைகுடாவுக்கு வடகிழக்கில் மிதியானில் உள்ள நகரமாக அல்லது ஒரு மாவட்டமாக இருக்கலாம் (அ.ப. 3:7, எண் 12:1). அறிஞர்கள் இதை, காசாவுக்குத் தென்கிழக்கிலுள்ள கெராரிலுள்ள மாவட்டமாகவும் (2 நாள் 14:9 தொ) காட்ட முயன்றுள்ளனர்.

கூடாரம் *(TENT)*

எளிதாக இடம் பெயரக்கூடிய நாடோடிக

ளாலும், மேய்ப்பர்களாலும், படைவீரர்க ளாலும் பயன்படுத்தப்பட்ட தங்கும் இடமா கும் (ஆதி 4:20; 25:27; நீதி 8:11). ஆனால் இது குடிசையினின்றும் வேறுபடுகிறது:-

தொடக்கத்தில் விலங்குகளின் தோல், கைகளால் பின்னப்பட்ட கனமான துணிகள் ஆகியவற்றால் கூடாரம் அமைக்கப்பட்டது (உ.ச. 1:5). இதைக் கூடாரக் கம்பங்கள் மேல் போடும்போது மழையினால் ஏற்படும் சுருக் கத்தைச் சமாளிக்க அமைப்புகள் இருந்தன (யாத் 27:10). திருமணத்திற்குப் பின் புது மணத்தம்பதியர்க்கு இனக்குடியிருப்புக்கரு கில் புதுக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன (சங் 19:5; யோவா 2:16).

கூடாரத்தின் நடுக்கால் மட்டும் மற்ற வற்றை விட உயரமாக இருக்கும். இது, வானம் கூடாரம்போல் விரிந்துள்ளது என்று உவமையாகக் கூறக் காரணமாக அமைந்தது (ஏச 40:22). மேலே போடப்பட்ட விரிப் பைக் காக்கக் கயிறுகள், தரையில் அடிக்கப் பட்ட முளைகளில் கட்டப்பட்டன (யாத் 35:18; யோபு 4:21; ஏச 54:2; எரே 10:20; நிதி 4:21). நடுக்காலில் மேலிருந்து தொங்க விடப்பட்ட பெரிய திரை கூடாரத்தை இரண் டாகப் பிரித்தது. இதில் பின்பகுதி பெண்க ளுக்கென ஒதுக்கப்பட்டது (நீதி 15:1; ஆதி 43:40). மமிரேயில் இருந்த ஆபிரகாமின் கூடாரம் இந்த அமைப்பை உடையதாக இருந்திருக்கவேண்டும். எனவேதான் சாரா வால் மூன்று விருந்தாளிகளின் பேச்சைக் கேட்க முடிந்தது (ஆதி 18:40). ஆனால் மற்றச் சமயங்களில், குல மூதாதையர் தங்கள் மனைவியருக்குத் தனிக்கூடாரம் அமைக் கும் அளவுக்குச் செல்வர்களாய் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது (ஆதி 24:67; 31:33).

இந்தக் கூடாரங்களில் இருந்த அடுப்பு தரையில் வெட்டப்பட்டது அல்லது சில கற்களை அடுக்கிச் செய்யப்பட்டது. கோரைப்பாய்கள் இவர்களுடைய படுக்கை யாகப் பயன்பட்டது. இவைகளைப் பகலில் சுருட்டி வைத்துவிடலாம். இதுதான் அவர்க ளுடைய ஆசனம் ஆகும். தரையில் விரிக்கப் பட்ட சிறுதோல் விரிப்பே மேசையாகப் பயன்பட்டது (சங் 23:5; ஏச 21:5). மற்றும் வெள்ளாட்டுத் தோலினால் செய்யப்பட்ட பைகளும், மட்பாண்டங்களும், கிண்ணங்க ளும், தண்ணீர்ச் சாடிகளும், மாவரைக்கும் உரல்களும், எளிய விளக்குகளும் பயன் படுத்தப்பட்டன.

இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறியபின், அறுவடைக் காலங்களில், விளைச்சலுக்கு அருகில் கூடாரமடித்துத் தங் குவர். இதுவே பிற்காலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த கூடாரத்திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. பிற்காலத்தில் இஸ் ராயேல் மக்கள் நிலையான வீடுகளில் வாழ்ந்தபோதும், கூடாரம் என்னும் சொல் வீட்டைக் குறிக்கப்பயன்பட்டது (1 அர 8:66; 12:16; ஏச 38:12; எரே 4:20). மேலும் இச் சொல் குடும்பத்தையும், மக்களையும் (செக் 12:7; மலா 2:12) அல்லது திருவிடத்தையும் (எஸ் 9:8) குறித்தது. புனித பவுல் ஒரு கூடாரம் தயாரிப்பவர். அவர் கொரிந்து நகரில் இருந்தபோது இதே தொழிலைச் செய்த அக்கிலா, பிரிசிக்கில்லா ஆகியவர்க ளுடன் தங்கினார்.

கூடாரம் செய்பவர் (TENTMAKER)

அ.ப. 18:3-இன் படி பவுலின் தொழில் கூடாரம் செய்வதாகும். பவுலும், அக்கிலா வும் அனேகமாக அவர் மனைவி பிரிசிக்கில் லாவும் கொரிந்து நகரில் இதே தொழிலைச் சேர்ந்து செய்ததாகக் கூறப்படுகிறது.

கிரேக்கச்சொல் கூடாரம் செய்வதைக் குறித்தாலும் அது வழக்கில் தோலைக் கொண்டு வேலை செய்தவர்களையும் குறித் தது. ஆகவே பவுல் ஒரு தோல் தொழிலாளி யாக இருந்திருக்கவேண்டும். பழைய விளக்க நூல்கள் பவுல் வெள்ளாட்டு மயி ரைக் கொண்டு நெய்திருக்கவேண்டும் என்று சுட்டுகின்றன. இத்தொழிலை அவர் எருச லேமில் கற்றிருக்கவேண்டும் (அ.ப. 22:3).

கடாரவிழா, சேகரிப்பு விழா (FEAST OF BOOTHS, FEAST OF INGATHERING)

யூதர்களின் சமூக ஆண்டு திசிரி (செப்டம்

பர்-அக்டோபர்) என்ற ஏழாம் மாதத்தில் தொடர்கிறது. இம்மாதம் விழாக்களின் மாதம் என்றழைக்கப்பட்டது. புத்தாண்டு நாளில் தங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரம் செய்யுமாறு மக்களை அழைக்கும் நோக்கத்துடன் கொம்புகள் ஊதப்படும். அடுத்த பத்துநாட்களும் மக்கள் நோன்பு இருந்து, பத்தாம்நாள் பாவப்பரிகார விழாக் கொண்டாடப்படும். அதேமாதம் பதினைந்தாம் நாள் யூதர்கள் இந்தக் கூடாரவிழா அல்லது சேகரிப்புவிழாவைக் கொண்டாடினர். இந்த விழா இஸ்ராயேலரின் மூன்று முக்கிய விழாக்களில் ஒன்றாகும் (யாத் 23:16; 34:22; 2 நாள் 8:13). இது இலையுதிர் காலத்தில் அறுவடை முடிவில் வந்தது (யாத் 34:22); ஒருவாரம் நீடித்தது (லேவி 23:34).

இவ்விழா, தொடக்கத்தில் ஒரு விவசாய விழாவாகும். இது ஒரு நன்றி விழாவாகும். அண்மையில் கிடைத்த கனிகளுக்காக, பொதுவாக ஆண்டு அறுவடைக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தப்பட்டது. பிற விழாக்களைப்போல் இஸ்ராயேலின் வரலாற்றின் நிகழ்ச்சிகளை நினைவு கூறும் விழாவாக மாறியது. இஸ்ராயேல் பாலை நிலத்தில் கூடாரங்களில் வதிந்த தொடர் நிகழ்ச்சியை நினைவுகூரும் பொருட்டு யூத ஆண்கள் யாவரும் இவ்விழாவின்போது பரந்தவெளிகளிலும் வீதிகளிலும் வீட்டுக் கூரைகளிலும் தழைகள் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்வர் (லேவி 23:40.42). அதனோடு மாமன்னன் சாலமோனால் ஆலயம் திருநிலைப்படுத்தப்பட்டதும், ஆலயத்துக்குள் திருப்பேழை எடுத்துச் செல்லப்பட்ட நிகழ்ச்சியும் நினைவு கூரப்படும். இது ஒரு மகிழ்ச்சி மிக்க விழாவாகும். ஆகவே, இதை வெறுமனே ''விழா'' என்று அழைத்தனர் (1 அர 8:2; 12:32). பீலோ இதை ''மிகப் பெரிய விழா'' என்றும், யோசிப்பஸ் ''புனிதமிக்க மிகப் பெரிய விழா'' என்றும் அழைக்கின்றனர். ஐந்நூல் இதைச் ''சேகரிப்பு விழா'' என்றழைக்கிறது.

இவ்விழ்ாவின் முதல்நாள் ஓய்வுநாளாகவும், சபை கூடும் நாளாகவும் கடைப்பிடிக்கப்பட்டது (லேவி 23:35). ஏழுநாட்களும் ஆண்டவருக்குத் தகனப்பலி செலுத்தப்பட்டது (23:36). விழாக் கூட்டங்கள் நிகழும். ஓய்வு ஆண்டில் இவ்விழாவின் முதல் நாளில் சட்டம் மக்களுக்கு வாசித்து அறிவிக்கப்பட்டது. விழா முடிந்த எட்டாம் நாளில் ஓய்வும், விழாக் கூட்டமும் கடைப்பிடிக்கப்பட்டன (23:36.39). அன்று அளிக்கப்படும் காணிக்கைகளும் பலிகளும் லேவி 23:37-38.40-இல் விவரிக்கப்படுகின்றன.

நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் இவ்விழா விவசாயக் கருத்தோடு இறைவனின் அரசுத்தன்மையையும் மக்களுக்கு நினைவுபடுத்தியது (செக் 14:17). இவ்விழா வளர்ச்சியடைந்தது. இரு சடங்குகள் சேர்க்கப்பட்டன. ஒன்று நீர்க்காணிக்கையாகும். ''மீட்பருளும் ஊற்றுகளிலிருந்து நீங்கள் அகமகிழ்வோடு தண்ணீர் முகந்துகொள்வீர்கள்'' (ஏச 12:3) என்று கூறிக்கொண்டு நீர்க்காணிக்கை செலுத்தப்பட்டது. மற்றது ஏழு நாட்களும் காலைப்பலியின்போது ஒரு தங்கக்குடத்தில் சீலோவாம் ஊற்றிலிருந்து நீர் கொணர்ந்து தகனப்பலிபீடத்தின் தென்மேற்கு முனையில் ஊற்றுவர். இவ்விழாவின்போது சமய வழிபாடு தூயகத்துள் நடந்தது. இவ்விழாவின் முதன்மையான காணிக்கை புதிதாகப் பறிக்கப்பட்ட ஒரு கூடைப்பழங்களாகும். கடவுள் எகிப்திலிருந்து இஸ்ராயேலரை மீட்ட வரலாற்றையும் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டை அளித்த வரலாற்றையும் பாடி இக்காணிக்கையை அளிப்பர்.

கிறிஸ்துவின் காலத்தில் இவ்விழா ஏழு நாட்கள் கொண்டாடப்பட்டது. முதல்நாள் இரவு ஆலய இடங்கள் யாவும், சிறப்பாகப் பெண்கள் முற்றம், விளக்குகளாலும் தீபங்களாலும் ஒளிமயமாய் அலங்கரிக்கப்படும். இவ்வொளியில் சடங்கு நடனம் நிகழும். ஒவ்வொருநாளும், காலைப்பலியின்போது வழிபடுவோர் ஒரு கையில் கிளைகளையும் மறு கையில் பழங்களையும் ஏந்தி வலம் வருவர். அப்போது லேவியர்கள் 113-118 ஆம் சங்கீதங்களைப் பாடுவர். இந்த ஏழு நாட்களும் குருக்கள் கிளைகளை ஏந்திக்

கொண்டு 119-ஆம் சங்கீதத்தின் 28-ஆம் அடியைப் பாடிக்கொண்டு தகனப் பலிபீடத்தைச் சுற்றி வருவர். ஏழாம் நாள் ஏழுமுறை பீடத்தைச் சுற்றிவருவர். இந்நாள் விழாவின் முக்கிய நாளாகும். இவ்விழாவின்போது ஒவ்வொரு நாளும் சீலோவாம் ஊற்றிலிருந்து தங்கக்குடத்தில் ஆடம்பரத்துடன் நீர் கொண்டுவந்து தகனப் பலிபீடத்தின் தென் மேற்கு முனையில் ஊற்றுவர். விழாவின் முக்கிய நிகழ்ச்சியின்போதெல்லாம் கொம்புகளும் எக்காளமும் அடிக்கடி ஊதப்பட்டன. யூதர்களது சமூக ஆண்டின் தொடக்கத்தில் வரும் இந்த மகிழ்ச்சி மிக்க விழாவை அவர்கள் பெரிதும் விரும்பினர்.

இவ்விழாப் பற்றிய கட்டளையை இஸ்ராயேலர் ஆண்டுதோறும் கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. பழைய ஏற்பாடு இக்கட்டளையை இஸ்ராயேலின் அரசர்கள் நிறைவேற்றியதாக ஒருமுறைதான் கூறுகிறது (2 நாள் 8:13). நெக 8:17-இன்படி யோசுவாவுக்குப்பின் நெகமியா காலத்தில்தான் இவ்விழா சட்டமுறைப்படி கொண்டாடப்பட்டது (நெக 8:13-14; எஸ் 3:4). அப்படியாயின் 1 சாமு 1:3-7-இல் வருவது கூடார விழாவன்று. நாடு கடத்தப்பட்டபின் இவ்விழா யூதர்களிடையே சிறப்பாகச் சிதறிக்கிடந்த யூதர்களிடையே சிறப்புப் பெற்றது. இவ்விழாவில் பங்குபெற யூதர்கள் எருசலேமை நோக்கி நீண்ட திருயாத்திரை செய்தனர்.

புதிய ஏற்பாட்டில் இவ்விழா குறிக்கப்படுகிறது. வெளிப்படையாக எருசலேமுக்குச் செல்ல மறுத்துவிட்டு, மறைவாக இயேசு அங்குச் சென்றது இவ்விழாவின்போதுதான் (யோவா 7). சீலோவாம் ஊற்றிலிருந்து நீர் கொண்டுவரும் நிகழ்ச்சியை ஒட்டி, இயேசு உயிர் ஊற்றைப்பற்றிப் பேசினார் எனலாம் (7:37 தொ). விழாவின் முதல் நாளாகிய ஒளிநாளின் போது இயேசு தாமே ''உலகின் ஒளி'' என்று (8:12) கூறியிருக்கலாம். இச்சூழ்நிலையில் அவரது சொற்களை அறிந்து உணர முயலவேண்டும். இவ்விழாவின் இறுதிநாளை யோவான் ''இறுதியான பெருநாள்'' என்று குறிப்பிடுகிறார் (7:37).

கூடு (NEST)

''கூடு'', ''கூடுகள் கட்டுவது'' என்பன பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வழக்கமாகக் ''கூடு'' என்ற சொல்லைப் பறவைகளுக்கே பயன்படுத்துவார்கள். ஆனால் மனிதன் தற்காலிக இருப்பிடமாகக் கொள்ளும் இடத்தையும் ''கூடு'' என்றே கூறிவந்தார்கள்.

புதிய ஏற்பாடு மத் 8:20; லூக் 9:58-இல் ''கூடு'' என்பது ''கூடாரம் கட்டுதல்'' என்ற சொற்பொருளில் குறிப்பிடப்படுகின்றது.

கூடை (BASKET)

பொருட்களைத் தூக்கப் பயன்படுவது கூடை. இதைக் குறிக்க எபிரேயத்திலும் கிரேக்கமொழியிலும் பலசொற்கள் உண்டு. அனேகமாக மூங்கிலால் ஆன கூடை உணவுப் பொருட்களை வைக்கப் பயன்படுகிறது. பலவித பலகாரங்கள் (ஆத 40:16-18), புளியாத அப்பம் (யாத் 29:3; 23:32; லேவி 8:2; 26, 31; எண் 6:15.17:19), இறைச்சி (நீதி 6:19) ஆகியவை இதில் வைக்கப்பட்டன. மேலும் குருவிற்குக் கொடுக்க வேண்டிய முதற்கனியை வைப்பதற்கும் (உப 26:2.4; 28:5), உணவு கொண்டுபோவதற்கும் (ஆமோ 8:1-2), பறவைகளின் கூடுபோன்ற கூடை பயன்பட்டது. மேலும் இவை அத்திப்பழம் வைக்கவும் (எரே 24:1-2), செங்கல் அல்லது கட்டடம் கட்டத் தேவையான வேறு கடினமான பொருட்கள் தூக்கவும் (சங் 81:6), ஆகாபின் மக்கள் 70 பேர்களின் தலைகளை வைக்கவும் (2 அர 10:7) பயன்பட்டது.

குழந்தை மோசேயை வைத்த கூடையானது நாணலால் செய்யப்பட்ட சிறிய பெட்டியாகும் (யாத் 2:3.5). மூடி பொருந்திய (வச 5) இப்பெட்டிநீர் புகாதவாறு கீல், நீலக்கிலால் பூசப்பட்டு நீரில் மிதப்பதற்கேற்றவாறு செய்யப்பட்டிருந்தது. நாணல் படகுகளைப் பற்றி ஏச 8:2-இல் குறிப்பு உள்ளது. இதே சொல்தான் நோவாவின் பெட்டகத்தைக் குறிக்கவும் பயன்பட்டது.

நற்செய்தியில் 5000 பேர் உணவு உண்ட பிறகு எஞ்சிய துண்டுகளை 12 கூடைகளில் எடுத்தனர் எனக் குறிப்புள்ளது (மத் 14:20; மாற் 6:43; லூக் 9:17; யோவா 6:13). சில பகுதிகள் 4000 பேர் உண்டபிறகு 7 கூடைகளில் எடுத்ததாக உள்ளது (மத் 15:37; மாற் 8:8). இவ்விரு பகுதிகளிலும் சில வேறுபாடு இருப்பினும் (மத் 16:9-10; மாற் 8:19-20) இரு வெவ்வேறான வகைக் கூடைகள் பயன்பட்டிருப்பது தெரிகிறது. பவுலைக் கூடையில் வைத்துத் தமஸ்குவின் மதில் மேலிருந்து வெளியே இறக்கிவிட்டதிலிருந்து (அப் 9:25) பெரிய கூடைகளும் பயன்பட்டதாகத் தெரிகிறது. பவுல் பழைய சம்பவங்களை நினைவூட்டுகையில் 'கூடையில் வைத்து இறக்கப்பட்டேன்' என்கிறார் (2 கொரி 11: 33).

கூட்டம், கூட்டமைப்பு (CONGREGATION, ASSEMBLY)

இது பலவகைப்பட்ட கூட்டங்களைக் குறிக்கும் (யோபு 15:34; சங் 22:16; 82:1). குறிப்பாக இஸ்ராயேலரின் சமயக் குழுக் கூட்டத்தைக் குறிக்கும். ''ஏதா'' என்ற எபிரேயச்சொல், இஸ்ராயேல் சமூகம் அனைத்தையும், சிறப்பாகப் பாலையில் அலைந்து திரிந்த சமூகத்தைக்குறிக்கும் (யாத் 12:3.6.19. 47; எண் 27:17; லேவி 8:4-5). வழிபாட்டுக்கும், சட்டத்தை அறிவிக்கப்பெறவும், நீதி பெறவும் ''காகால்'' என்ற எபிரேயச்சொல் கூடும் சமூகத்தைக் குறிக்கிறது. இச்சொல் குருக்கள் பாரம்பரியத்தில் அடிக்கடி பயன்படுகிறது. இச்சொல் நாட்டைப் பகிர்ந்து கொடுக்கும்போதும், மக்களைச் சேர்ந்த காரியங்களை நிர்ணயிக்கும்போதும் பயன்படுகிறது. சிறப்பாக உபாகமப்பாரம்பரிய வரலாற்றிலும் (உப, யோசுவா, நீதி, 1,2, சாமுவேல், 1,2, அரசர்கள்) சங்கீதங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

''எக்லேசியா'' என்ற கிரேக்கச்சொல் திருச்சபையைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் இச்சொல், உலகளாவிய திருச்சபையையும். தலத்துத் திருச்சபையையும் வேறுபடுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சிலர் கூறுவர். இத்தகைய தலத்துத் திருச்சபையைக் குறிக்க இச்சொல் பயன்பட்டிருந்தாலும் (கலா 1:2; 1 தெச 1:1) பொதுவாகத் திருச்சபையைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது (எபே 1:22; கொலோ 1:18).

கூண்டு (CAGE)

பறவைகளையும் விலங்குகளையும் அடைத்து வைப்பதற்குப் பயன்பட்ட ஒரு சாதனம் (எரே 5:27; திருவெளி 18:2).

எச 19:2-9-இல் வரும் புலம்பலில் இளஞ் சிங்கம் ஒன்றைப் (தெளிவாக இது யோயாகினைச் சுட்டுகிறது) பிடித்துச் சங்கிலியால் கட்டிக் கூட்டிலடைத்து (19:9), பாபிலோனுக்குக் கொண்டு சென்றனர் என்று கூறப்படுகிறது. எசக்கியேலில் இந்த விவரிப்பு உருவகமாக வருகிறது (2 அர 24:12-15; 25:27-30). ஆனால் போர்க் கைதிகளை இவ்வாறு அநாகரிகமாக நடத்துவது பழங்காலத்தில் சர்வசாதாரணமாய் இருந்தது.

கூத்தா (CUTHA, CUTH - எரிகின்ற)

வட பாபிலோனியாவின் ஒரு பூர்வீக நகரம்; வடகிழக்குக் பாபிலோனியாவிலுள்ள தேல் இப்ராகிமில் இதனுடைய இடிபாடுகள் காட்டப்படுகின்றன. கீழ் உலகத்தின் அரசனான நெர்கால் வழிபாட்டின் மையமாகப் புகழ் பெற்றிருந்தது. 2 அர 17:24-30-இன்படி அசீரியாவின் அரசனான இரண்டாம் சார்கோன் சமாரியாவைத் தோற்கடித்து அதன் குடிகளை அடிமைகளாக எடுத்துச் சென்ற பின்பு (கி.மு.721), அன்னியர்களால் அதை நிரப்பினார். இவர்களுள் கூத்தாவிலிருந்து வந்த குழுவும் இருந்தது. இவர்கள் புதிய இருப்பிடத்திற்கு நெர்கால் வழிபாட்டையும் கொண்டுவந்தனர்.

கூபு (CUB)

எகிப்துக்கு எதிரான இறைவாக்கில் குறிக்கப்படும் அடையாளம் காணமுடியாத இடம் (எச 30:5). இந்த இடமானது கூசு, பூத்தியா, இலீதியா போன்ற நாடுகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இது இலி

பியாவைக் குறிப்பதாக இருக்கும் எனப் பலர் கருதுகின்றனர்.

கூப்பாம் (HUPHAM - கடற்கரை மனிதன்)

பென்யாமின் புதல்வர்களின் வரிசையில் குறிப்பிடப்படுகிறார். ஒரு குலப்பெயர்த் தலைவர் (ஆதி 46:21; எண் 26:39; 1 நாள் 7:12). 1 நாள் 7:15-இல் தவறாக நுழைக்கப் பட்டிருக்கிறது. 1 நாள் 8:5-இல் உள்ள 'கூராம்' என்பதின் சூழ்நிலை அது கூப்பாம் என்று வாசிக்கப்படவேண்டும் என்று காட்டுகிறது. ஒருவேளை இவரும் குப்பிமும் ஒரே ஆளைக் குறிக்கலாம். ஆனால் 7:12.15-இல் குப்பிம் ஈரின் மகன் எனக் குறிக்கப் பெறுகிறார்.

கூராம் (HURAM - உயர்த்தப்பட்டவரின் சகோதரன்)

1. கீராம் என்ற பெயரின் மற்றொரு வடிவம். தீரின் அரசன் முதலாம் கூராமைக் குறிக்க 2 நாளாகமம் குறிப்பாகப் பயன்படுத்துகிறது.

2. ஆலய அலங்கார வேலைகளில் சாலமோன் பயன்படுத்திய வெண்கல வேலையில் கைதேர்ந்தவர். தீரிலிருந்து வந்தவர் (1 அர 7:13-14.40.45; 2 நாள் 2:13-14; 4:11-16). இவருடைய தந்தை ஒரு தீரியர். தாய் நப்தலியைச் சேர்ந்த இஸ்ராயேலியப் பெண் (1 அர 7:14). 2 நாள் 2:14 இவள் தாண் இனத்தைச் சேர்ந்தவள் என்று கூறுகிறது. இவர் அரசர்கள் நூலில் கீராம் (2) என்றும் 2 நாள் 2:13; 4:16-இல் கூராம்பி என்றும் அழைக்கப்பெறுகிறார்.

3. பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவர். பேலாவின் புதல்வர் (1 நாள் 8:5). அநேகமாக இவரது பெயர் கூப்பாம் என்றிருக்க வேண்டும் (எண் 26:39).

கூராம்பி (HURAM-ABI)

ஆலய அலங்கரிப்பில் சாலமோன் பயன்படுத்திய, தீரைச் சேர்ந்த, வெண்கல வேலைகளில் கைதேர்ந்தவர் (2 நாள் 2:13). காண். கூராம்.

கூராய் (HURAI)

தாவீதின் வல்ல வீரர்களில் ஒருவர் (1 நாள் 11:32). 2 சாமு 23:30-இல் இவர் இத்தாய் என்றழைக்கப்படுகிறார்.

கூரி (HURI - பஞ்சு நெய்பவன்)

காது இனத்தைச் சேர்ந்தவர். யாரொவாவின் மகன்; அபிகயிலின் தந்தை (1 நாள் 5:14).

கூரியர்கள் (HURRIANS)

செமித்திய இனத்தைச் சேராதவர்கள். ஆற்றல்மிக்க மித்தானியப் பேரரசை நிறுவியவர்கள். சுமேரிய - அக்காதிய கலாச்சாரம் பரவுவதற்குக் கருவியாக அமைந்தவர்.

1. வரலாறு:- கி.மு. 2400-ஐ ஒட்டிய அக்காதிய வாசகங்களில் கூரியர்கள் முதன் முதலில் குறிக்கப்பெறுகின்றனர். இவர்கள் கார்கமிசுக்கு வடக்கேயுள்ள தாவுரசு மலைத் தொடரில் அமைந்துள்ள, உர்கிசுப் பகுதியில் வாழ்ந்தனர். இதுவே இவர்கள் வரலாறு முழுவதும் இவர்களின் கலாச்சார மையமாகத் திகழ்ந்தது. கி.மு. 2000-க்கு முந்திய வாசகங்கள், திகிரிசுக்குக் கிழக்கிலும் வட சாபு ஆறுகளின் வடக்கிலும் இவர்கள் வாழ்ந்து வந்ததாகத் தெரிவிக்கின்றன. இவர்களின் மூன்றாம் அரச மரபின் வீழ்ச்சிக்குப் பின், இவர்கள் வட மெசபொத்தாமியாவிலும் வட சீரியாவிலும் படிப்படியாகப் புகுந்தனர். அலாலாக்கில் இவர்கள் இருந்தது மிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

பழைய இத்தியப் பேரரசு பலவீனமானது இவர்களை உந்தித் தூண்டியது. கூரியர்கள் பல நகர அரசுகளை அமைத்தனர். இது கி.மு.1500-ஐ ஒட்டி இத்தியப் பேரரசு வீழ்ச்சியுறுவதற்கு வழிகோலியது. இந்த நகர அரசுகளில் முக்கியமானது மித்தானியாகும். விவிலிய காரனுக்கு அருகிலுள்ள வசுக்கன்னியைத் தலைநகராகக் கொண்ட ஒரு பேரரசை அமைத்தது. இது அலாலாக்கிலிருந்து நுசிவரை பரவியிருந்தது. அசீரியாகூட அடிமை நாடானது.

ஒரு நூற்றாண்டுக்குப்பின் முதலாம் சுப்பிலு லியுமாசின் தலைமையில் (கி.1386) இத்தியப் பேரரசின் எழுச்சியோடு கூரியர்களின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. ஆயினும் கூரியர்களின் செல்வாக்கு, கலாச்சாரத்திலும் அரசியலிலும் தொடர்ந்தது. பல நகர அரசுகளில் கூரியர்கள் அரசக்குழுவில் இருந்தனர் என்பது அமர்னா ஏடுகளில் தெரிகிறது. கி.மு.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எகிப்திய 19-ஆவது அரசமரபு ஏடுகள் சீரிய-பாலஸ்தீனத்தைக் ''கூரு நாடு'' என்று குறிக்கின்றன. 12-ஆம் நூற்றாண்டில் புதிய மக்களின் குறிப்பாகக் கடல் மக்களின் வரவால், கூரியர்களின் செல்வாக்கு குறைந்தது. மற்ற மக்களோடு கலந்து போயினர். முதலாம் ஆயிரமாண்டு தொடக்கத்தில் வான் ஏரிப் பகுதியில் கூரியர்கள் இறுதியாகக் குறிப்பிடப் படுகின்றனர்.

2. விவிலியக் குறிப்புக்கள்:- 14-ஆம் நூற்றாண்டில் செக்கேம், தானாக்கு, மெகிதோ போன்ற பாலஸ்தீன நகர்களில் கூரியர்கள் ஆட்சியாளராக இருந்திருக்கின்றனர் என்பதற்கு அமர்னா ஏடுகள் சான்று கூறுகின்றன. ஆனால் அப்போதோ அல்லது விவிலியக் காலத்தில் எப்போதுமே, அப்பகுதியின் மக்கள் தொகையின் முக்கிய பகுதியாகக் கூரியர்கள் தோன்றவில்லை. கூரியர்களை விவிலியக் கோரியர்களாகவோ, கீவியர்களாகவோ காட்ட எடுக்கும் முயற்சிகளை, வரலாற்று, பெயரியல், இலக்கிய அடிப்படையில் விளக்குவது கடினம்.

3. முக்கியத்துவம்:- கூரியர்களின் மித்தானியப் பேரரசின் அரசியல் வெற்றிகளை விட, பழம் மேற்காசியாவில் இவர்களுடைய கலாச்சார, சமூகச் செல்வாக்கு வெகு முக்கியமானதாகும். மூன்றாம் ஆயிரமாண்டுக் காலத்திலேயே இவர்கள் ஆப்பு எழுத்து முறையை ஏற்றுத் தங்கள் மொழியை வளர்த்துள்ளனர். இம்மொழி உரத்திரியன் மொழி போன்றது; இன்னும் விளக்கப்படவில்லை. இவர்களுடைய வரலாற்று முடிவில், மாரி, அலாலாக்கு, உகரித்து இத்தியப் பேரரசு ஆகியவற்றின் பெயர்களில் கூரியர் வடிவங்கள் தெளிவாக உள்ளன. கூரியர் மொழியிலிருந்து கடன்வாங்கப்பட்ட சொற்கள் இத்திய மொழியில் மிகுந்துள்ளன. கூரியரின் இலக்கிய, மொழி அகரவரிசை, சமயம் சார்ந்த வாசகங்கள் மாரி, பொகஸ்கோஸ், உகரித்து பதிவேட்டு நிலையங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. கூரியரின் கடிதம் ஒன்று அமர்னா ஏடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடைய வரலாற்றின் தொடக்கத்தில் இவர்கள் சுமேரிய-அக்காதிய கலாச்சாரத்தை ஏற்று, அதைத் திருத்தங்களோடு சீரியாவிலும், இத்தியாவிலும், பரப்பினர். இது குறிப்பாகச் சமயத்திற்குப் பொருந்தும். பல கூரியக் கலப்பினத் தெய்வங்களோடு கூரியரின் பருவகாலத் தெய்வமாகிய தெசுபையும் அவரது துணைவி கெப்பாவையும், அவர்களின் மகன் சுரும்மாவையும் இத்தியர்கள் ஏற்றுக்கொண்டனர்.

நூசி, அரப்பா ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பல ஆயிர ஆப்பு எழுத்து ஏடுகள் கூரியர்களின் சமூக, சட்ட, பழக்க வழக்கங்களை விவரிக்கின்றன. பழைய ஏற்பாட்டுக் குலமுதியவர்களிடம் கூரியர்கள் கொண்டிருந்த செல்வாக்கு, ஒரு காலத்தில் ஆதி 12-50-என்ற பகுதியின் விளக்கவுரையில் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இப்போது அப்படிக் கருதப்படுவதில்லை. ஆயினும் மெசபொத்தாமியா, சீரியா-பாலஸ்தீனத்தில் பல நகர அரசுகளை ஆண்டு வந்த கூரியர் ஆட்சிக்குழுவினர் புதிய போர் முறைகளை அறிமுகப்படுத்தினர். இவற்றில் சில, அம்பு, செதில் கொண்ட போர்க் கருவிகள், தேர்ப்படை, ஆகியவையாகும். இவை போர் முறையை மட்டுமின்றி சமூக அமைப்புகளையும் பாதித்தன. பழம் மேற்காசிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ப்படையுடைய ஆட்சியாளர்களாக மாறினர்.

கூர் (GUR - தங்குமிடம்)

யூதா அரசன் அகசியாவை ஏகூவின் படைவீரர்கள், இபுலாம் அருகே இருந்த ஏற்றத்தில் காயப்படுத்தினர் (2 அர 9:27).

கூர் (HUR - குழந்தை)

1. அமலேக்கியரோடு இரபிதிமில் நடந்த போரில் இஸ்ராயேல் வெற்றி பெறுவதற் காக இறைவனின் கோல் உயர்த்தப்பட்ட நிலையில் இருக்கும் பொருட்டு ஆரோனு டன் சேர்ந்து மோசேயைத் தங்கிநின்ற மோசேயின் உதவியாளர் (யாக் 17:10-12). பின்பு மோசேயும் யோசுவாவும் சட்டப்பல கையைப் பெறும் பொருட்டுச் சீனாய் மலைக்கு ஏறிச்சென்றபோது கூரும் ஆரோ னும் மக்களின் முக்கிய தலைவர்களாக விளங்கினர் (24:14). பொன் கன்றுக் குட்டி நிகழ்ச்சியில் இவர் குறிக்கப்படாதது கவ னிக்க வேண்டிய தொன்றாகும் (யாத் 32). பிற்கால யூதப் பாரம்பரியப்படி கூர் மோசே யின் சகோதரி மிரியமின் கணவர் ஆவார்.

2. யூதாவின் வழித்தோன்றல்களில் ஒரு வர். குலப்பெயர்த் தலைவர். கலேபு- எப்பிராத்து ஆகியோரின் மகன். ஊரியின் தந்தை; பெசலேலின் பாட்டன் (யாத் 31:2; 35:20; 38:22; 1 நாள் 2:19-20; 2 நாள் 1:5). அவருடைய வழித்தோன்றல்களின் கிரி யாத்து-எயாரிம், பெத்திலகேம் ஆகிய நகரங் களின் மக்களும், மனகாத்தியரும் உள்ளடங் கும்.

3. ஒரு மிதியான் நாட்டு அரசனும் எமோ ரிய அரசன் சீகோனின் சிற்றரசனும் ஆவார் (யோசு 13:21). பேகோரில் நடந்த நிகழ்ச்சிக் காக மோசே பதிலடி கொடுத்தபோது பில யாமோடு கொல்லப்பட்ட ஐந்து மிதியான் நாட்டு அரசர்களில் ஒருவர் (எண் 31:8).

4. எப்பிராயிம் மலைப்பகுதிக்கு அதிகாரி யின் தந்தை. இந்த அதிகாரி சாலமோன் அரண்மனைக்கு வேண்டிய உணவுப் பொருட்களுக்குப் பொறுப்பாளி ஆவார் (1 அர 4:8).

5. நெகமியா காலத்தில் எருசலேம் சுவர் பழுதுபார்க்கப்பட்டபோது உதவிய இரப்பா யாவின் தந்தை, அல்லது குடும்பப்பெயர் (நெக 3:9).

கூர்பாகால் (GURBAAL - பாகால் தங்குமிடம்)

அராபியர்கள் குடியேறிய நகரம். ஏதோ முக்கு அருகில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஊசியா அரசன் இதைக் கைப்பற்றி இதன் பெயரை யாகூர் என்ற ழைத்தார் (2 நாள் 26:6-8; யோசு 15:21).

கூர்மையாக்குதல், தீட்டுதல் (WHET)

கூர்மைப்படுத்துதல் (சங் 7:12; உப 32:41; சங்-64:3; திருவுரை 10:10), ''வாளைக் கூர் மைப்படுத்துதல்'', ''நாக்கினைக் கூர்மைப் படுத்துதல்'' என்பன உவமைப் பொருளிலும் அதாவது மற்றவர்களைத் தாக்குவதற்குத் தயாராகுதல் என்ற பொருளில் பயன்படுத் தப்பட்டிருக்கின்றன. உப 32:41; சங் 7:12- இல் இறைவன் இறுதித் தீர்ப்புக்குத் தயாரா வதைக் குறிக்கும் வகையில் இச்சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது.

கூலி, சம்பளம் (WAGES)

கூலி என்பது வேலைக்காக அமர்த்தப் பட்ட ஒருவனின் வேலைக்குரிய ஊதியமா கும். குல மூதாதையர் காலத்திய, நாடோடி யாக வாழ்ந்த எபிரேயர்களிடையேயும் இஸ் ராயேல் உழவர்களிடையேயும் கூலிக்காரர் கள் தனிப்பட்ட வகுப்பினராகக் கருதப்பட வில்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கைக்காக உழைத்தனர். அதற்கு உரிய ஊதியம் அளிக் கப்பட்டது. அது பொருளாகவும் இருக்க லாம் (ஆதி 29:15; 30:32-33; 31:7.41). பழைய ஏற்பாட்டின் வரலாற்று நூல்களின் நாகரிக வளர்ச்சியின் காரணமாகவும், தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் வளர்ச்சியின் காரண மாகவும், உழைப்பாளிகள் தங்கள் ஊதி யத்தை, குறைந்தபட்சம் பாதி ஊதியத்தையா வது, நிறுக்கப்பட்ட வெள்ளியாகவோ, வெண்கலமாகவோ பெற்றனர். பாரசீகர்க ளின் காலம்வரை நாணயங்கள் பாலஸ்தீனத் தில் தோன்றவில்லை. கிரேக்கர்களின் காலத் தில்தான் ஊதியம் நாணயமாக வழங்கப் பட்டது.

மேய்ப்பவர்கள் (ஆதி 29:15; 30:32-33; யோவா 10:12), தோட்டங்களில் வேலை செய்பவர்கள் (மத் 20:1-16; லூக்10:7; 15:17;

யோவா 4:36; யாக் 5:4), மீன்பிடிப்பவர்கள் (மாற் 1:20), கூலிப்படை வீரர்கள் (லூக் 3:14), தாதிகள் (யாத் 2:9) ஆகியவர்களுக்குக் கூலி வழங்கப்பட்டதற்கு விவிலியத்தில் குறிப்புகள் உள்ளன. வேசிகள் பணத்திற்கு அமர்த்தப்பட்டது உப 23:18; ஏச 23:17; எசே 16:31; ஓசே 9:1; மீக் 1:7 ஆகியவற்றில் கூறப்படுகிறது. கூலியாட்கள் அமர்த்தப் பட்ட மேற்கூறிய வேலைகள் முழுமையான பட்டியல் அல்ல. தொழிற்சாலைகளிலும், வர்த்தக நிறுவனங்களிலும், அதிக அளவில் ஆட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டாலும், அதற்கு நேரிடையான குறிப்புகள், விவிலி யத்தில் அதிகம் இல்லை.

நிலச் சொந்தக்காரர்களுக்கும், அடிமைக ளுக்கும் இடைப்பட்ட கூலியாட்கள் அசீரியாவில் காணப்படுகின்றனர். கூலி, வேலைக்கு அமர்த்தப்படுபவனுக்கும், வேலைக்கு அமர்த்துபவனுக்கும் இடையே நிர்ணயிக்கப்பட்டது. யாக்கோப்பின் கதை, எவ்வாறு கூலி நிர்ணயிக்கப்பட்டது என்ப தற்கும், எவ்வாறு ஒருவரை ஒருவர் ஏமாற்றி இலாபம் பெற நினைக்கின்றனர் என்பதற் கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் (ஆதி 30:31-43; 31:6-7). திராட்சைத் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் உவமை யில் (மத் 20:1-16) முதலாளி, வழக்கத்திற்கு மாறான தாராளத்தன்மையைக் காட்டுகின் றார்.

கூலியாட்கள் சுரண்டப்படாமலிருக்கச் சட்டங்கள் இருந்தன. கூலியாள் இஸ்ராயேல னாக இருந்தாலும் அல்லது அந்நியனாக இருந்தாலும், அன்றைய கூலி பொழுது சாயுமுன் கொடுக்கப்படவேண்டும் (லேவி 19:13; உப 24:14-15). ஆனால் சட்டம் மதிக் கப்படவில்லை. எனவே நீதியற்ற நிலச் சொந் தக்காரர்களை நோக்கி இறைவாக்கினர்கள் கண்டனக் குரல் எழுப்பினர் (எரே 22:13; மலா 3:5). பொதுவாகக் கூலி வாழ்க்கை மகிழ்ச்சியானதொன்றாகக் கருதப்பட வில்லை. கூலியாட்கள் தங்களது குறைந்த வருவாயைப்பற்றி கவலைகொண்டனர். கைக்கு வாய் வாழ்ந்தனர் (யோபு 7:1-2; 14:6).

கூலி, சன்மானம், சம்பளம் என்ற சொற் கள், இறைவன் மனிதர்களுக்கு அளிக்கும் சலுகைகளையும் (ஏச 23:18; 40:10; 62:11) தண்டனையையும் (சங் 109:20; உரோ 6:23; 2 பேதுரு 2:15) உருவகமாகக் குறித்தன.

கூலே (HULEH)

யோர்தான் ஆற்றின் ஓட்டத்திலுள்ள மூன்று ஏரிகளுள் மிகச் சிறியது; வடகோடி யில் உள்ளது; கலிலேயாக் கடலுக்கு வடக் கில் 16 கி.மீ.தொலைவில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 2 மீட்டர் உயரத்தி லுள்ளது; கிழக்கு மேற்கில் 6 கி.மீ.நீளமும், தென்வடக்கில் அதிகபட்சமாக 3 கி.மீ. அகல மும் உடையது. இதற்குத் தெற்கில் யிசிர் பெனாத் யாக்கூப (யாக்கோபின் புதல்வியர் களின் பாலம்) உள்ளது. இது கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபியச் சாலை. இது கலிலேயா மலைகளையும் யோர்தானுக்கு அப்பால் உள்ள யோலான் பகுதியையும் இணைக்கிறது. யோர்தானின் பிளவைக் கொண்டுள்ள வடபகுதி கெர்மோன் மலை யின் தென்மேற்கு அடியில் உள்ளது. இது கூலே பள்ளம் என்றழைக்கப்படுகிறது.

கூலே ஏரி விவிலிய விவரிப்புகளில் காணப்படவில்லை. முன்பு இதை மேரோம் நீரோடையோடு அடையாளம் காட்டும் முயற்சியை அறிஞர்கள் இப்போது கைவிட்டு விட்டனர்.

கூலே - சீரியா (COELE - SYRIA)

லெபனோனுக்கும் எதிர் லெபனோனுக் கும் இடைப்பட்ட பள்ளத்தாக்கின் (யோசு 11:17) கிரேக்கப்பெயராகும். இப்போது பேகா என்றழைக்கப்படுகிறது. கிரேக்க ஆட்சி யில் இப்பெயர் பாலஸ்தீனம், பெனிக் கியா முழுமைக்கும் வழங்கப்பட்டது. ஆனால் அதற்குப்பின் வந்த தோலமி, செலூக்கிய ஆட்சியில் ஒரே ஆளுநரின் கீழ் உள்ள ஒரு மாகாணத்திற்கு இப்பெயர் வழங் கப்பட்டது. இது ஒரு வேளை யூப்பிரத்தி சுக்கு மேற்கே அமைந்த பாரசீகர்களின் மகாகாணமாக இருக்கலாம். இப்பெயர் பெனிக் கியா விலக்கிய சீரியாவின் தெற்குப் பகுதிக்

குப் பயன்படுத்தப்பட்டது (1 மக் 10:69; 2 மக் 4:4). கி.மு.47-இல் உரோமையர்கள் எரோதுக்கு இந்த இடத்தின்மேல் அதிகாரம் அளித்தபோது, இப்பெயர் யோர்தானுக்குக் கிழக்கே உள்ள எல்லாப் பகுதிகளையும் குறித்தது. அத்துடன் யூதேயா, மாரியா, கலிலேயா போன்ற இடங்களிலிருந்து இந்த இடத்தை வேறுபடுத்தியும் காட்டியது. இயேசுவின் காலத்தில் கூலே-சீரியா, பிலிப்பின் கீழ் உள்ள மாகாணத்தையும், அத்துடன் யார்முக்கின் தெற்கிலிருந்து யாபோக்கு வரை உள்ள இடங்களையும் கொண்டிருந்தது.

கூல் (HUL - வட்டம்)

ஆதி 10:23-இன்படி ஆராமின் இரண்டாவது புதல்வனும் சேமின் பேரனுமாவார். 1 நாள் 1:17-இல் சேமின் ஏழாவது புதல்வன் என்று குறிக்கப்பெறுகிறார். இவரது வழித்தோன்றல்கள் வாழ்ந்த பகுதியை உறுதியாக அடையாளம் காட்ட முடியாது. ஆயினும் கூலே ஏரிப்பகுதியும், அரேபியத் தீபகற்பம், அர்மேனியன் எல்லை ஆகிய பகுதிகள் இப்பகுதியிருந்த இடமாக அடையாளம் காட்டப்படும்.

கூவேல் (GEUEL - இறைவனின் மாட்சி, இறைவனால் மீட்கப்பட்டவன்)

மாக்கியின் புதல்வன். கானான் நாட்டைச் சுற்றி வேவு பார்ப்பதற்காகக் காது கோத்திரத்திலிருந்து அனுப்பப்பட்டவர் (எண் 13:15).

கூழக்கடா, மீன்கொத்தி, பெலிக்கான் (PELICAN)

விரியக்கூடிய பையினை அடியிற் கொண்ட நீண்ட அலகுடன், பெரிய தசையுடன் கூடிய கால்களைக்கொண்ட பறவை இனங்களில் ஒன்று இப்பறவை. இவை சதுப்பு நிலங்கள், வாய்க்கால்கள், கடல்கள், ஆறுகள் ஆகியவற்றின் அருகில் காணப்படும். இவற்றின் முதன்மையான உணவு மீன் ஆகும். இதைக் குறிக்கும் எபிரேயச்சொல், இது ஓர் அசுத்தமான பறவை என்று சுட்டுகிறது (லேவி 11:18; உப 14:17).

19-ஆம் நூற்றாண்டில் இப்பறவை பாலஸ்தீன நாட்டில் அவ்வப்பொழுது காணப்பட்டாலும் இதனைக் குறிக்கும் எபிரேயச்சொல் எதுவும் அறியப்படவில்லை. 'வாந்தியெடுப்போர்' எனப் பொருள்படும் எபிரேயச் சொல் இதைக் குறித்ததால், பெலிக்கானுக்கு இவ்வார்த்தை பொருந்தாது. ஏனெனில், பெலிக்கான் தான் உண்ட உணவையே கக்கித் தன் குஞ்சுகளுக்கு ஊட்டாது. மேலும், சங் 102:6-7; ஏச 34:11; செப் 2:14-இல் குறிக்கப்படும் பறவை பாழடைந்த இடங்களிலும் ஏதோம் மற்றும் நினிவே நகரங்களின் இடிபாடுகளிலும் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், பெலிக்கான் இத்தகைய இடங்களில் சாதாரணமாய்க் காணப்படுவதில்லை. சிலர் இந்த எபிரேயச் சொல்லை 'இரவுப் பறவை' என்றும் 'ஆந்தை' என்றும் கருதுகின்றனர்.

கூழ் (POTTAGE)

இது காய்கறிகளைக் கொதிக்கவைத்துத் தயாரிக்கப்படும் ஓர் குடிக்கக்கூடிய சாறு. கீரைகளைப் பயன்படுத்தியும் இக்கூழைத் தயாரிப்பர். சில நேரங்களில் மாமிசமும் இதோடு சேர்த்துக் கொதிக்கவைக்கப்படும் (ஆதி 25:34; 2 அர 4:38-39).

ஏறக்குறைய இக்கூழ் சிவப்பு நிறத்தில் இருக்கும் (ஆதி 25:30). யோக்கோபு தன் அண்ணன் ஏசாவை ஏமாற்றும் நிகழ்ச்சியில் இக்கூழ் பற்றிய குறிப்பு உள்ளது (ஆதி 25:29-34). எலிசாவின் சீடர்கள் இத்தகைய ஓர் கூழையே தயாரித்தார்கள் (2 அர 4:38-41). இது அறுவடை செய்பவர்களின் உணவாகவும் பயன்பட்டது (தானி 14:33).

கூனன் (HUNCHBACK)

கூன் முதுகுடையவர்கள் குருவின் அலுவல்களைச் செய்யத் தகுதியற்றவர்கள் என்று பரிசுத்தத்தின் சட்டம் கூறுகிறது (லேவி 21:20). ஆனால் அவர்கள் திருவுணவில் பங்கு பெறலாம். குரு கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புனிதத் தன்மையுள்ள மனித

னானதால் அவர் ஆன்மீக அளவிலும், உடலிலும் எந்தக் குறையும் இல்லாதவராக இருக்க வேண்டும்.

கூனி *(GUNI - வண்ணம்பூசப்பட்ட)*

1. நெப்தலின் இரண்டாவது மகன் *(ஆதி 46:24; எண் 26:48; 1 நாள் 7:13)*. கூனியர்களின் இனத்தலைவர் *(எண் 26:48)*.

2. காது இனத்தைச் சேர்ந்த அபிதியேலின் தந்தை *(1 நாள் 5:15)*.

கூன் *(CUN - தயாரான)*

இது ஒரு சீரியா நகரம்; இங்கிருந்து தாவீது மிகுந்த வெண்கலத்தைக் கொண்டு சென்றார் *(1 நாள் 18:18)*. இதற்கு இணையான வாசகம் *2 சாமு 8:8*-இல் பேரோத்தாய் என்ற பெயரைக் கொண்டுள்ளது.

வரைபடம் 1


முதுபெரும் தந்தையர் காலத்து
விவிலிய உலகு
ஆபிரகாமின் அழைப்பும் பயணமும்
காஸ்பியன் கடல்
மத்தியதரைக்கடல்
செங்கடல்
பாரசீக வளைகுடா
இத்தியார்
கோமேர்
அராரத்து
மெசபொத்தாமியா
தோகருமா
கர்க்கமிசு
ஆரான்
நினிவே
காலாகு
அசூர்
அலெப்போ
உகாரித்து
அமாது
பிபுலோசு
தமஸ்கு
சீதோன்
ஆசோர்
மெகிதோ
அம்மோன்
செக்கேம்
பெத்தேல்
ஆயி
சோவான்
கெரார்
சாலேம்
எபிரோன்
லோத்து
மம்ரே
பெயேர்-செபா
ஏதோம்
கெலியோப்பொலி
பிரமிடுகள்
பாபிலோன்
பாபிலோனியா
அக்காது
மாரி
சீனாய்
மிதியான்
தெதான்
அரேபிய
பாலைவனம்
0 100 200 300 400 500



இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணம்

(அறிஞர்களின் பொதுவான கருத்துப்படி)

0 20 40 60 80 100
கி. மீ.

வரைபடம் III



கானான் நாடு
(இஸ்ராயேலின் 12 கோத்திரங்கள்
வாழ்ந்த நிலப்பகுதிகள்)
சீதோன்
சீரியா
தமஸ்கு
சீதோனியர்
லெபனோன் மலை
எர்மோன் மலை
தீர்
தாண்
காதேசு
ஆக்கோ
காசோர்
மெரோம் ஏரி
யோர்தான் நதி
பாசான்
கெனசரேத் ஏரி
கோலான்
அபேக்கு
கார்மேல் மலை
தாபோர் மலை
தோர்
தானாக்கு
பெத்சான்
தோத்தான்
கிலயாது
பெருங்கடல்
ஏபால் மலை
கெரிசிம் மலை
செக்கேம்
இராமோத்து
சுக்கோத்து
அமோரியர்
யோப்பா
சீலோ
யாசேர்
இரபா
எக்ரோன்
பெத்தேல்
ஆயி
எரிகோ
இராமா
எருசலேம்
கெசிபோன்
நெபோ மலை
அசோத்து
பெத்லகேம்
அரேபியர்
செபிரோன்
சாக்கடல்
பெசேர்
காசா
தெபீர்
இத்தியர்
பெயேர் செபா
அரோயர்
இரகொபோத்து
தாமார்
ஏதோம்
மோவாபியர்
1. ரூபன்
2. சிமியோன்
3. மனாசே
4. யூதா
5. தாண்
6. நப்தலி
7. காது
8. ஆசேர்
9. இசக்கார்
10. செபுலோன்
11. எப்பிராயிம்
12. பெஞ்சமின்


தாவீது-சலமோனின் பேரரசு
(கி.மு. 1000-930)
சைப்ரஸ்
பெருங்கடல்
பெனிசியா
சோபா
இஸ்ராயேல்
அம்மோன்
யூதா
மோவாபு
ஏதோம்
அரேபிய பாலைவனம்

வரைபடம் V



பாலஸ்தீன் நாடு
(இயேசுவின் காலத்தில்)
Scale: 1 1.700,000
0 5 10 15 20
வ
சீதோன்
லெபனோன் மலை
சரெப்தா
தீர்
பெனிக்கியா
இதுரேயா
அபிலேன்
தமஸ்கு
எர்மோன் மலை
சீரியா
பிலிப்புச் செசரியா
தாண்
திரக்கோனித்து
கொராசின்
பெத்து சயிதா
கப்பர்நகூம்
கானாவூர்
மகதலா
தொலமாய்
கலிலேயா
கர்மேல் மலை
திபேரியா
நாசரேத்து
தாபோர் மலை
கலிலேயாக் கடல்
காதாரா
நயீன்
சலேம்
தெக்காப்பொலி
செசரியா
சமாரியா
ஐனோன்
மத்தியதரைக் கடல்
சமாரியா
ஏபால் மலை
கெரிசிம் மலை
சிக்கார்
செக்கேம்
யாக்கோபின் கிணறு
யோர்தான் நதி
அப்பொல்லோனியா
அந்திப்பத்திரி
யோப்பா
அரிமத்தியா
கெராசா
பேத்து பாரா
பெத்தேல்
எப்பிராயிம்
இலித்தா
பிலதெல்பியா
எரிகோ
ஒலிவ மலை
எம்மாவு
கும்ரான்
பெரயா
எருசலேம்
அயின் கெரேம்
பெத்து பாகே
பெத்தானியா
எசிபோன்
அசோத்து
யூதேயா
பெத்லகேம்
அசுக்கலோன்
யூதேயாவின் பாலைநிலம்
சாக்கடல்
காசா
கெபிரோன்
பெயேர்-செபா
இதுமேயா



எருசலேம்—
பாடுகளின் பாதை
இயேசு தீர்ப்பிடப்படுதல்
பிலாத்து
அரண்மனை
(அந்தோனியா)
பெத்சயிதா
குளம்
நமன்கு வாயில்
சிலுவை சுமந்து செல்லல்
கொல்கொத்தா
போதித்தல்
ஆலயம்
வியாபாரிகளைத்
துரத்துதல்
அரச முற்றம்
தங்க வாயில்
கெதுசமனித்
தோட்டம்
(இயேசு பிடிபடுதல்)
ஏரோது அந்திப்பாவின்
அரண்மனை
அழைத்துச் செல்லப்படுதல்
கய்பாவிடம்
இயேசு
ஆலோசனைக் குழுவின்
முன்னிலையில்
கய்பா
அரண்மனை
பேதுரு
மறுதலித்தல்
கெதுசமனித்
தோட்டம்
சீலோவாம்
குளம்
ஒலிவ
மலை
இரத்த நிலம்
(குயவன் நிலம்)
இன்னோம் பள்ளத்தாக்கு
மீட்டர்
0 50 100 150
1
2
3
4
5
6
7
8
9


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
மத்தியதரைக் கடல்
இத்தாலியா
அதிரியாக் கடல்
தல்மாத்தியா
சிசிலி
மால்த்தா
கிரேத்து
லிபியா
எகிப்து
திராக்கே
மோசியா
தாகியா
மக்கதோனியா
கலாத்தியா
கப்பதோக்கியா
பம்பிலியா
கருங்கடல்
0 100 200 300


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
இரண்டாம் பயணம்
கி.பி. 49—52 (அப். பணி 15:39—18:22)
மூன்றாம் பயணம்
கி.பி. 53—57 (அப். பணி 18:22—21:16)
கருங்கடல்
போந்து
பித்தினியா
மீசியா
ஆசியா
பிரிகியா
கலாத்தியா
பிசிதியா
பம்பீலியா
சிலிசியா
சீரியா
பெனிக்கியா
சைப்ரஸ்
கிரேத்து
மத்தியதரைக்கடல்
எகிப்து
மக்கதோனியா
அம்பிப்பொலிஸ்
பிலிப்பு
தெசலோனிக்கா
பெரோயா
நெயாப்பொலி
சமொத்திராக்கு
துரோவா
ஆசோ
பித்திலேன்
கீயு
அக்காயா
கொரிந்து
ஏதன்ஸ்
கெங்கிரேயா
தியத்திரா
சர்தை
சிமிருனா
எபேசு
சாமு
மிலேத்து
கோசு
உரோது
பாத்தாரா
அந்தியோக்கியா (பிசிதியா)
இக்கோனியா
இலிசித்திரா
தெர்பை
தார்சு
அந்தியோக்கியா
செலூக்கியா
தீர்
தொலமாய்
செசரியா
எருசலேம்
அலெக்சாந்திரியா
0 100 200 300

ஆசிரியரது பிற நூல்கள்

விவிலிய அறிமுக நூல்கள்

1.	"தோரா" அல்லது "ஐந்நூல்"	(ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்)
2.	வரலாற்று நாயகன்	(யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2, அரசர்கள், 1,2 நாள், எஸ்ரா, நெகேமியா, 1,2, மக்கபேயர்கள்)
3.	இஸ்ராயேலின் காவலர்கள் – I	(பொது முன்னுரை, ஆமோஸ் ஓசேயா, மீக்கா)
4.	இஸ்ராயேலின் காவலர்கள் – II	(எசாயா, செப்பனியா, நாகூப், அபக்கூக்கு, எரேமியா, எசேக்கியேல், ஆகாய், செக்கரியா, ஒதியா, மாலக்கி, யோவேல்)
5.	ஞான நூல்கள்	(யோபு, பழமொழி, சங்கீதங்கள், திருவுரை, உன்னத சங்கீதம், ஞானநூல், சீராக்கு)
6.	சில கதைகளும் காட்சிகளும்	(யோனா, ரூத்து, தோபியா, எஸ்தர், புலம்பல், பாரூக்கு, தானியேல், யூதித்து)
7.	நான்கு வடிவ நற்செய்திகள்	(மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகள்)
8.	புனித பவுலின் திருமுகங்கள் – I	(பவுலின் வாழ்க்கை வரலாறு, மற்றும் 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 & 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன் ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்கள்)
9.	புனித பவுலின் திருமுகங்கள் – II	(2–ஆம் தெசலோனிக்கர், கொலோசையர், எபேசியர், தீத்து, 1–ஆம், 2–ஆம் திமொத்தேயு ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்களும், பவுலின் இறையியலும்)

விளக்கவுரை நூல்

10.	லூக்காவின் நற்செய்தி	(அருள்வாக்கு மன்றப்பதிப்பு)
11.	விவிலியச் சித்திரக் கதைகள்	**பழைய ஏற்பாடு:** (காயின் ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சிம்சோன் ரூத்து, சாமுவேல், சவுல், தாவீது, அரசன் தாவீது)
12.	விவிலியக் களஞ்சியம் – I	**புதிய ஏற்பாடு:**
13.	விவிலியக் களஞ்சியம் – II	
14.	விவிலியக் களஞ்சியம் – III	
15.	விவிலியக் களஞ்சியம் – IV	
16.	விவிலியக் களஞ்சியம் – V	

தயாரிப்பில் உள்ளவை :

1. விவிலியச் சித்திரக் கதைகள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)

கிடைக்குமிடம்

தியான ஆசிரமம்

13, மாதா கோவில் தெரு, சென்னை – 600 028.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

"தியாகு"

விவிலியக் களஞ்சியம்

III

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்
சென்னை -28

விவிலியக் களஞ்சியம்

III

கெ, கை, கொ, கோ, ச, சா, சி, சீ,
சு, சூ, செ, சே, சை, சொ, சோ,
ஞா, த, தா, தி, தீ, து, தூ

பதிப்பாசிரியர்
"தியாகு"

விவிலிய அறிமுகம்
தியான ஆசிரமம்
சென்னை-28.

முதல் பதிப்பு: அக்டோபர், 1993.

Nihil Obstat
P.C. Thomas.

Imprimatur
+ M. Arockiasamy,
Archbishop of Madurai.

விலை: ரூ. 150/-

நூல் கிடைக்கும் இடங்கள்
தியான ஆசிரமம்
சென்னை-28.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

Type setting : Savithri Laser Printing, Madras.

Printing : Hi-Tech Offset Private Limited, Madras.

அர்ப்பணம்

இறைவனின் வார்த்தையைத் தன் இதயத்தில் ஏற்று, வார்த்தையாம் இறைவனைத் தன் உதரத்தில் வளர்த்து, மனுவுருவான வார்த் தையை உலகிற்கு அளித்து இறைவனின் அன்னையாம் மரியாளுக்கு, அன்பு கலந்த அர்ப்பணம்.

முன்னுரை

விவிலியக் களஞ்சியத் தொகுப்பின் மூன்றாம் பாகத்தைத் தமிழ்கூர் நல்லுலகிற்கு அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். தமிழ்க் கிறிஸ்தவர்கள் முதல் இரண்டு பாகங்களுக்கு அளித்த ஆர்வமிக்க வரவேற்பு, இம்முயற்சியைத் தொடர்ந்து செய்து இந்த மூன்றாம் பாகத்தை வெளிக் கொணரப் பெரிதும் உற்சாக மூட்டியது. இவ் வரவேற்பு அளித்த அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றி.

ஆள், இடம் ஆகியவற்றின் பெயர்களின் மூல எபிரேய, கிரேக்க உச்சரிப்புகள் தமிழ் இலக்கண மரபுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றோடு இப்பெயர்கள் புதிய பொதுமொழிபெயர்ப்பில் வரும் வடிவில் அடைப்புக் குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள் ளன. சங்கீதங்களின் எண்கள் எபிரேய முறையில் தரப்பட்டுள்ளன. இறையியல் கட்டுரைக ளில் பெரும்பகுதி Xavier Leon-Dufour-இன் Dictionary of Biblical Theology என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டுள்ளன.

இனி நன்றி நவிலுதல் என்ற இனிய கடமைக்கு வருகிறேன். தமிழ்க் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் முதல் முயற்சியான இத்தொகுப்பு பலர் சேர்ந்த கூட்டு முயற்சியாகும். இவர்கள் பல கட்டுரைகளின் பொருட்களையும் செய்திகளையும் தொகுத்துத் தருவதில் பெரிதும் உதவியுள்ளனர். இவர்கள் அனைவரின் பெயர்ப் பட்டியல் பின்பு தரப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

இத்தொகுப்பைத் திட்டம் செய்த காலத்தில், அறிவுரை கூறியும் உற்சாகப்படுத்தியும் பொருள் உதவி நல்கியும் ஊக்கமளித்த மேதகு கர்தினால் சைமன் D. லூர்துசாமி ஆண்டகை அவர்களுக்கு எனது உளம்கனிந்த நன்றி உரியதாகும். தயாரிப்புக் காலத்தில் பொருள் உதவிசெய்த Adam Sehall Von Bell E.V., Koln, பதிப்பித்தலுக்குப் பொருள் உதவி செய்த MISSIO, Munchen ஆகிய இரு நிறுவனத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றி. இவர்களின் உதவியின்றி இந்நூலை இவ்வளவு மலிவாகக் கொணர்ந்திருக்க முடியாது.

முதல் இரண்டு பாகங்களுக்கு அணிந்துரை வழங்கிய, தமிழ்நாடு விவிலிய ஆணைக் குழுத்தலைவர், மதுரைப் பேராயர் மேதகு M. ஆரோக்கியசாமி ஆண்டகையே இப்பகுதிக் கும் அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும், Nihil Obstat அளித்துள்ள அருட்தந்தை P.C. தாமஸ் அடிகளார்க்கும், இப்பாகத்தின் தயாரிப்பில் நெடுகலும் பிரதிகளைத் திருத்தியும் பலவாறு உதவி செய்தும் வந்துள்ள தமிழாசிரியர் ப. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கும் சிறப்பான முறையில் நன்றி கூறுகிறேன். இம் முயற்சியில் எனக்கு ஊக்கமளித்த இயேசு சபை மதுரை மாநில முன்னாள் தலைவர் அருட்தந்தை மைக்கில் செயராசு அடிகளார்க்கும், தயாரிப்புக் காலத்தில் எங்கள் குழு தங்குவதற்கு இடமளித்து, விருந்தோம்பி நல்லுதவிகள் செய்த திருச்சிராப்பள்ளி, புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியினருக்கும், அன்போடு பராமரித்து உதவிசெய்த எனது இல்லங்களாகிய லோயோலாக் கல்லூரி, தியான ஆசிரமம் ஆகியவற்றின் இயேசுசபைச் சகோதரர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. வரைபடங்கள் கொடுத்துதவிய திண்டிவனம், தமிழ்நாடு முப்பணி நிலையத்தாருக்கும் எனது மனமுவந்த நன்றி. அச்சு அமைத்த Savithri Laser Printer, Hi-Tech Offset Private Ltd, சென்னை, ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

நான் இறைவனின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இந்த இருபத்தைந்தாவது ஆண்டில், பயிற்சிக் காலத்தில் எனக்குப் பலவிதங்களில் உற்சாகமளித்த என் இறையியல் ஆசிரியர்கள்P. De. Letter, Volkart, எனது சகோதரர்M. அருளானந்தம் ஆகிய அருட்தந்தையர் களை நினைவு கூர்கிறேன்; எனது நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

இறைவார்த்தையை நன்குணர்ந்து, அன்பு செய்து, அதன்படி வாழ்வதற்கு இந்த விவிலியக் களஞ்சியம் பெரிதும் துணை செய்யும் என்று நம்புகிறேன். இக்களஞ்சியத்தைத் தயாரிப்பதில் நெடுகலும் ஊக்கமும் உரமும் அளித்து வழிநடத்தி வரும் இறைவன் திருவருள் துணைக்குச் சிரம்தாழ்த்தி நன்றியுடன் வணக்கம் செலுத்துகிறேன். இப்பாகமும் இதற்குப் பின்வரும் நூல்களும் விவிலிய அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும் நம்பிக்கை யில் இப்பகுதியை வெளியிடுகிறேன்.

"தியாகு"

விவிலியக் களஞ்சியம்

அணிந்துரை

''சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

சொல்லிய வண்ணம் செய்யும் செயல்வீரர் ''தியாகு'' (என்ற அருட்தந்தை ம. சந்தியாகு சே.ச), தம் அயரா உழைப்பினால் விவிலியக் களஞ்சியத்தின் மூன்றாம் தொகுதியை வெளியிடுகிறார். இது மகிழ்ச்சிக்குரியது, பாராட்டுக்குரியது.

இம் மூன்றாம் தொகுதியில் கெ—கோ, ச—சோ, ஞான த—தூ என்ற எழுத்துக்களில் தொடங்கும் சொற்கள் இடம் பெறுகின்றன; விவிலியத்தில் வரும் பலநூல்கள் அறிமுகமாகின்றன; இறையில் தொடர்பான தலைப்புகள் பல கட்டுரைக்கப்படுகின்றன; மிகப்பல சிறப்புப் பெயர்கள், பொதுப் பெயர்கள் பற்றிய அரிய தகவல்கள் தரப்படுகின்றன.

இக்களஞ்சியம் காலத்தை வெல்லும் கருவூலம். இதில் உள்ள புதியனவும் பழையனவும் நம் வாழ்வுக்குப் பயன்படுவனவாக என வாழ்த்துகிறேன்.

+ ம. ஆரோக்கியசாமி,
மதுரைப் பேராயர்,
தமிழ்நாடு விவிலிய ஆணைக்குழுத் தலைவர்.

இந்நூலைத் தயாரிப்பதில் உடன் உழைத்தவர்கள்

அந்தோனிசாமி A.
அந்தோனிராஜ்
அமலதாசு M.
அமல்ராஜ் P.T.
அம்புரோஸ் G.
அருள்சாமி
ஆரோக்கியசாமி C.
ஆரோக்கிய நாதன் P.
ஆன்ரு டிரோஸ்
இஞ்ஞாசி G.
இருதயராஜ் A.
இதயன் A.
உபால்டு M.
எர்னெஸ்ட் அ.
கருணைதாஸ்
சந்தனசாமி
சந்தியாகு M.
சவரிமுத்து X.
சார்லஸ் குமார் N.A.
சுந்தரம் B.
சுந்தரம் U.
சூசை ஆரோக்கியசாமி
சேவியர் இளங்கோ
ஜான்சன் ராஜ் S.
ஜெரால்டு S.
ஜேம்ஸ் ரொசாரியோ B.
ஜோ I.F.
ஜோ லாரன்ஸ்
ஜோசப் லயனல் S.
ஜோனாஸ் N.
ஞானப்பிரகாசம்' F.
தீஸ்மஸ் P.
பால்ராஜ் B.
பால்ராஜ் L.
பீட்டர் சகாயராஜ்
பிரான்சீஸ் M.
போனவென்சர்
மரிய அருள்
மரியதாஸ் I.
ராஜா ஏ.எல்
லூர்து Y.A.
லூர்து சாமி A.
லூர்துராஜ் G.G.
லூர்துராஜ் S.J.
விக்டர் M.J.
வின்சென்ட் G.

விவிலியத் திருமறைப் பட்டியலும் சுருக்கக் குறிப்பும்

I. பழைய ஏற்பாடு

1. ஆதி ஆகமம் (தொடக்கநூல்) — ஆதி.
2. யாத்திராகமம் (விடுதலைப் பயணநூல்) — யாத்
3. லேவியராகமம் (திருப்பணியாளர் நூல்) — லேவி
4. எண்ணாகமம் (எண்ணிக்கை நூல்) — எண்
5. உப ஆகமம் (துணைச்சட்டநூல்) — உப
6. யோசுவா ஆகமம் — யோசு
7. நீதிபதிகள் ஆகமம் (விடுதலைத் தலைவர்கள் நூல்) — நீதி
8. ரூத்து ஆகமம் — ரூத்
9. 1 சாமுவேல் ஆகமம் — 1 சாமு
10. 2 சாமுவேல் ஆகமம் — 2 சாமு
11. 1 அரசர்கள் ஆகமம் — 1 அர
12. 2 அரசர்கள் ஆகமம் — 2 அர
13. 1 நாள் ஆகமம் (ஆட்சிக் குறிப்பேடு) — 1 நாள்
14. 2 நாள் ஆகமம் (2 ஆட்சிக் குறிப்பேடு) — 2 நாள்
15. எஸ்ரா ஆகமம் — எஸ்
16. நெகேமியா ஆகமம் — நெகே
17. தோபியா ஆகமம் — தோபி
18. யூதித்து ஆகமம் — யூதி
19. எஸ்தர் ஆகமம் — எஸ்த
20. யோபு ஆகமம் — யோபு
21. சங்கீதங்கள் (திருப்பாடல்கள்) — சங்
22. பழமொழி ஆகமம் (நீதி மொழிகள்) — பழ
23. திருவுரையாளர் ஆகமம் — திருவுரை
24. உன்னத சங்கீதம் (பேரின்பப் பாடல்) — உ.ச.
25. ஞான ஆகமம் — ஞான
26. சிராக்கு ஆகமம் — சிரா
27. எசாயா ஆகமம் — எசா
28. எரேமியா ஆகமம் — எரே
29. புலம்பல் ஆகமம் — புல
30. பாரூக்கு ஆகமம் — பாரூ
31. எசேக்கியேல் ஆகமம் — எசே
32. தானியேல் ஆகமம் — தானி
33. ஓசேயா ஆகமம் — ஓசே
34. யோவேல் ஆகமம் — யோவே
35. ஆமோஸ் ஆகமம் — ஆமோ
36. ஒபதியா ஆகமம் — ஒப
37. யோனா ஆகமம் — யோனா
38. மீக்கா ஆகமம் — மீக்
39. நாகூம் ஆகமம் — நாகூ
40. அபக்கூக் ஆகமம் — அப
41. செப்பானியா ஆகமம் — செப்
42. ஆகாய் ஆகமம் — ஆகா
43. செக்கரியா ஆகமம் — செக்
44. மலாக்கி ஆகமம் — மலா
45. 1 மக்கபேயர் ஆகமம் — 1 மக்
46. 2 மக்கபேயர் ஆகமம் — 2 மக்

II. புதிய ஏற்பாடு

47. மத்தேயு நற்செய்தி — மத்
48. மாற்கு நற்செய்தி — மாற்
49. லூக்கா நற்செய்தி — லூக்
50. யோவான் நற்செய்தி — யோவா
51. அப்போஸ்தலர் பணிநூல் (திருத்தூதுவர் நூல்) — அ.ப.
52. உரோமையர் — உரோ
53. 1 கொரிந்தியர் — 1 கொரி
54. 2 கொரிந்தியர் — 2 கொரி
55. கலாத்தியர் — கலா
56. எபேசியர் — எபே
57. பிலிப்பியர் — பிலி
58. கொலேசியர் — கொலோ
59. 1 தெசலோனிக்கேயர் — 1 தெச
60. 2 தெசலோனிக்கேயர் — 2 தெச
61. 1 திமொத்தேயு — 1 திமொ
62. 2 திமொத்தேயு — 2 திமொ
63. தீத்து — தீத்
64. பிலமோன் — பில
65. எபிரேயர் — எபி
66. யாக்கோபு — யாக்
67. 1 பேதுரு — 1 பேதுரு
68. 2 பேதுரு — 2 பேதுரு
69. 1 யோவான் — 1 யோவா
70. 2 யோவான் — 2 யோவா
71. 3 யோவான் — 3 யோவா
72. யூதா — யூதா
73. திருவெளிப்பாடு — திருவெளி

துணை நின்ற நூல்கள்

Anderson G.N. : A Critifcal Introduction to the O.T.
A History and Religion of Israel.
The living Word of the O.T.

A New Catholic Commentary on Holy Scripture.

Bright J : A History of Israel.

Claus Schedl : History of the O.T.

Danielou J : The Lord of History

Daniel-Rops : Sacred History

Edman Jacob : God, the Lord of History

Elis P.F. : The Men and Message of the O.T.

Grelot P : Introduction to the Bible

Harry Thomas Frank : Discovering the Biblical World

Helmer Ringgren : Israelite Religion

James Hastings : Dictionary of the Bible

Leon-Dufour X : Dictionary of the Bibical Theology

Louis Hartman : Encyclopedic Dictionary of the Bible

Mc Kenzie J.L : Dictionary of the Bible

Moriarty F.L : Introducing the O.T.

Osmund Lewry O.P. : Introducing the O.T.

Robert A & Feuillet A : Introduction to the Bible

Robert A & Tricot A : Guide to the Bible

The Eerdmans Bible Dictionary

The Harper's Dictionary of the Bible

The Interpreter's Dictionary of the Bile 5 Vols

The Jerome Biblical commentary

The Jerusalem Bible

Weather head : A Guide to the Bible

Willaim P. Baber : Everyone in the Bible

''தியாகு'' : விவிலிய அறிமுகம் (10 பாகங்கள்)

கெ

கெகமோனியர் (HEGMONIDES - தலைவர், வழிகாட்டி)

பி.லிப்பு அந்தியோக்குவைத் தாக்கிய போது தாலமாய் முதல் கெரார் வரையி லுள்ள மாவட்டத்திற்கு ஆளுநராக அந்தி யோக்குவால் நியமிக்கப்பட்ட சீரிய அதி காரி (1 மக் 13:24).

கெகேலாத்தா (KEHELATHAH - கூட்டம், மக்களவை)

இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டை நோக்கி வரும்பொழுது கெசரோத்துக்குப் பின் (அட்சரேத்து) அவர்கள் தங்கிய இடங் களுள் இதுவும் ஒன்று (எண் 33:22-23). இரிசாவுக்கும் செபேருக்கும் இடையில் இருந்தது. இப்பெயரானது மக்கலோத்து என்ற சொல்லின் இரட்டிப்பாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது (எண் 33:25-26). எழு பது நூல் இரண்டு இடங்களிலும் ஒரே பெயரைப் பயன்படுத்துகிறது (எண் 33:22. 25-26).

கெக்கல்யா, அக்கல்யா (HACALIAH - யாவே காத்திருக்கிறார்)

நெகேமியாவின் தந்தையாவார் (நெகே 1:1;10:1)

கெக்கிலா, அக்கிலா (HACHILAH - இருண்ட குன்று)

சீப் என்ற பாலையின் எல்லையிலுள்ள மலை. சவுலுக்குப் பயந்து தாவீது பாலை வனத்திற்கு அருகிலுள்ள இந்தக் கெக்கிலா குன்றில்தான் ஒளிந்திருந்தார் (1 சாமு 23:19;26:3). கெபிரோனுக்கு (எபிரோன்) அருகிலுள்ள எசிமோன் பாலைவனமாக இருக்கலாம். ஆனால் இன்னும் உறுதியாக அடையாளம் காட்டப்படவில்லை.

கெங்கிரேயா (CENCHREAE)

கொரிந்து நகரிலிருந்து கிழக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ள துறைமுகம். இது சரோ னிக் அல்லது எகினா வளைகுடாவில் அமைந்துள்ளது. இந்நகர் துசிதைதிஸ், பவு சானியா, ஸ்திராபோ ஆகியோரின் நூல்க ளில் குறிக்கப்பட்டுள்ளது. பவுல் கொரிந்தில் தமது பணியை முடித்தபின், கெங்கிரேயா வில்தான் தான் செய்திருந்த பொருத்தனை யின்படி முடி வெட்டிக்கொண்டார் (அ.ப.18:18). உரோ 16:1-2-இன்படி இங்கு ஒரு திருச்சபை இருந்திருக்கிறது. இங்கு, பவுலின் திருமுகத்தை உரோமைக்கு எடுத் துச் சென்ற பெபா, பெண் தியாக்கோனாக இருந்தாள்.

கெசதியா, அசதியா (HASADIAH) - யாவே அன்பானவர், பிரமாணிக்கமுள்ளவர்)

1. செருபாபேலின் மகன்களில் ஒருவர் (1 நாள் 3:20).

2. கிலிக்கியாவின் (இலிகியா) மகனும், பாரூக்கின் முன்னோரும் ஆவார் (பாரூ 1:1).

கெசபியா, அசபியா (HASHABIAH - யாவே கணக்கில் எடுத்துக்கொண்டார்)

1. திருப்பேழை ஆண்டவரின் ஆலயத்தில் நிறுவப்பட்டபோது ஆலயப் பாடல்களுக் குப் பொறுப்பாளராய் இருந்த லேவியர்க ளுள் ஒருவர் (1 நாள் 6:45). மெராரியின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஏத்தானின் முன் னோர்.

2. ஒரு லேவியர். செமயாவின் முன்னோர். அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர் (1 நாள் 9:74; நெகே 11:15). மெராரியின் குடும் பத்தைச் சேர்ந்தவர். அசிரிக்காமின் தந்தை.

3. ஒரு லேவியர், எதுத்தூனின் மகன். ஆண்டவருடைய ஆலயபீடத்தில் பாடல்கள் பாடுவதற்கும், இறைவாக்கு உரைப்பதற் கும் என்று தாவீதால் ஒதுக்கி வைக்கப்பட்ட குழுவைச் சேர்ந்தவர். பன்னிரண்டாவது பாடகர்கள் பிரிவின் தலைவர் (1 நாள் 25:3. 19).

4. கெபிரோன் (எபிரேன்) குடும்பத்தைச் சேர்ந்தவர். யோர்தானுக்கு மேற்கே வாழ்ந்து வந்த இஸ்ராயேலரின்மேல் ஆண்டவரின்

எல்லாத் திருப்பணிக்கும் அரசனின் ஊழி யத்திற்கும் அடுத்த காரியங்களில் அதிகாரிக ளாய் இருந்தவர்களுள் ஒருவர் (1 நாள் 26:30).

5. அரசர் தாவீதின் கீழ்ப் பணி செய்த ஒரு லேவியத்தலைவர். செமுவேலின் மகன் (1 நாள் 27:17).

6. அரசர் யோசியாவின் கீழ் ஒரு லேவியத் தலைவர் (2 நாள் 35:9).

7. எஸ்ராவுடன் அகவா நதிக்கரையில் சேர்ந்து கொண்ட ஒரு மெராரிய லேவியர் (எஸ் 8:19). ஆலயக் கருவூலத்துக்குப் பொறுப்பா னவர் (8:24). எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவராக இருக்கலாம் (நெகே 10:11). மேலும் ஆலயப் பாடகர்க ளின் தலைவர் (12:24).

8. புறவின மனைவியை ஒதுக்கிவிடுமாறு எஸ்ராவால் வற்புறுத்தப்பட்ட பொதுநிலை யினர் (எஸ் 10:25).

9. நெகேமியா மதிலைக் கட்ட உதவியவர் (நெகே 3:17). கெயிலா மாவட்டத்தின் பாதிக்கு ஆட்சியாளர்.

10. ஆசாபின் வழிவந்த ஒரு லேவியர் (நெகே 11:22).

11. பெரிய குரு யோயாக்கிமின் காலத்தில், கிலிக்கியா (இலிகியா) குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குரு (நெகே 12:21).

கெசபினா, அசபினா (HASHABNAH)கருத்தில் கொண்டார்)

நெகேமியாவின் கீழ்ப் புதுப்பிக்கப்பட்ட எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்ப மிட்டவருள் ஒருவர் (நெகே 10:25).

கெசபினியா, அசபினியா (HASHABNEIAH) -யாவே என்னைக் கருத்தில் கொண்டார்)

1. கத்தூசின் (அற்றூசு) (2) தந்தை. நெகேமியாவின் காலத்தில் எருசலேம் மதி லைச் சீர்திருத்தம் செய்வதற்கு உதவி செய் தார் (நெகே 3:10).

2. எஸ்ராவின் காலத்தில் ஆண்டவருக்கு லேவியர் செலுத்திய புகழுரையில் கலந்து கொண்ட ஒரு லேவியர் (நெகே 9:5).

சீரியா வாசகம், இவர் எஸ் 8:19.24; நெகே 10:11 - இல் குறிக்கப்படும் கெசபியா (7,8 அல்லது 10) என்ற லேவியராக இருக்கலாம் என்று சுட்டுகிறது.

கெசரோத்து, அட்சரோத்து (HAZEROTH -குடியிருப்புகள்)

பாலைவனப் பயணத்தில் இஸ்ராயேலர், கிபிரோத்து (கிப்ரோத்து) - அத்தாவா என்ற இடத்திற்கு அடுத்துத் தங்கிய இடம் (எண் 33:17-18; 11:35;12:16; உப 1:1). இங்குதான், மோசே கூசியப்பெண்ணை மணந்ததைப் பற்றியும், இறைவனுக்கும் மக்களுக்கு மிடையே ஒரே நடுவர் என்ற அவரது தனிச் சிறப்பான நிலையைப் பற்றியும் (எண் 12:2) அவரோடு ஆரோனும் மிரியாமும் வாதாடி னர். இதற்காக மிரியாம் தொழுநோயால் தண்டிக்கப்பட்டார். இது, இக்கால அயின் காதரா இருக்கும்மிடமாக இருந்திருக்கலாம். இது சீனாய்த் தீபகற்பத்தில் நீரூற்றுக்கள் உள்ள இடமாகும். இது பாரம்பரியமாகக் கருதப்படும் சீனாய் மலைக்கு வடகிழக்கில் 48 கி.மீ. தொலைவில் உள்ளது.

கெசலோன் (CHESALON - பின்புறம், நம் பிக்கை)

யூதாவுக்கு அளிக்கப்பட்ட பகுதியின் வடக்கு எல்லையிலுள்ள ஒருநகரம். இது தான் நகரத்தின் அருகில் உள்ளது (யோசு 5:10). எருசலேமிலிருந்து மேற்கே ஏறத்தாழ 14 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கெஸ்லா என்ற இடமாகக் கருதப்படுகிறது. முற்காலத்தில் இப்பகுதி ஓக் மரக்காடுகள் நிறைந்த ஒன்றாகும்.

கெசிசு (KEZIZ - முடிவு, எல்லை)

இது பென்யமின் கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்ட இடங்களுள் ஒன்று (யோசு 18:21). ஒரு பள்ளத்தாக்கு. இதன் பெயர் எமெக்கெசீசு (எமக்கசீசு) ஆகும்.

கெசியேல், அசியேல் (HAZIEL - இறைவனின் காட்சி)

கேர்சோனின் வழித்தோன்றலும் சிமயின் மகனுமான ஒரு லேவியர் (1 நாள் 23:9).

கெசியோன், எசியோன் (HEZION - காட்சி)

சீரியாவின் அரசன். தபிரிம்மோனின் தந்தையும் முதலாம் பென் - அதாதின் பாட்டனுமாவார் (1 அர 15:18). அறிஞர் பலர் இவரை இரசோனோடு ஒன்றாக்குகின்றனர் (11:25).

கெசிரோ, எட்சரோ (HELRO - அகழ் தோண்டி அரண்செய்)

'முப்பதின்மர்' என்று அழைக்கப்படும் தாவீதின் ஆற்றல்மிக்க மனிதர்களுள் ஒருவர். இவர் கர்மேலிலிருந்து வந்தவர் (2 சாமு 23:35;1 நாள் 11:37).

கெசிரோன், எட்சரோன் (HEZRON - அகழ் தோண்டி அரண் செய்யப்பட்ட) - ஆள்.

1. ரூபன் கோத்திரத்திலுள்ள ஓர் இனத்தின் குலப்பெயர்த் தலைவர். ரூபனின் மூன்றாவது புதல்வர் (ஆதி 46:9; யாத் 6:14; எண் 26:6;1 நாள் 5:3).

2. யூதா கோத்திரத்தாரின் ஒரு குலத்தலைவன் (ஆதி 46:12; எண் 26:21; ரூத் 4:18-19; 1 நாள் 2:5.9.18.21.24-25; 4:1; மத் 1:3; லூக் 3:33). பெரேட்சின் மகனும், யூதாவின் பேரனுமாவார் (ஆதி 46:22; 1 நாள் 2:5;4:1). இவரது வழித்தேன்றல்கள் யூதா கோத்திரத்தின் கெசிரோனிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர் (எண் 26:21; 1 நாள் 2:9தொ). இவர் தாவீதின் நேரடி மூதாதையர் பட்டியலிலும் யூதாவின் அரசமரபிலும் குறிக்கப்படுகிறார் (ரூத் 4:18-19). இயேசுவின் இரு மரபுமுறைக் கொடியிலும் குறிக்கப்படுகிறார் (மத் 1:3; லூக் 3:33).

கெசிரோன், எட்சரோன் (HEZRON) - இடம்

காதேசு பர்னேயாவுக்கும் அத்தாருக்கும் இடையே கானான் நாட்டின் தெற்கு எல்லையில் உள்ள ஒருநகரம் (யோசு 15:3). இதன் இணைப்பகுதியான எண் 34:4 - இல் கசர் - அத்தார் (அட்சராதர்) என்று பின் உள்ளதோடு இணைக்கப்படுகிறது. யூதாவின் தெற்கில் உள்ள இன்னொரு நகரமான கெரியோத்து எட்சரோனும் இதுவும் ஒன்றல்ல.

கெசிபு (HEZIB - பொய் சொல்லுதல்)

சூவாவின் புதல்வி சேலாகுவைப் பெற்றெடுத்த இடம் (ஆதி 38:5). காண்க. அக்சீபு.

கெசில் (CHESIL - முட்டாள்)

யூதாவின் செபேலாவிலுள்ள ஒரு நகரம். எல்தோலாதுக்கும் கோமாவுக்கும் (ஓர்மா) இடையில் உள்ளது (யோசு 15:30). இது எங்கிருந்தது என்று அடையாளம் காட்ட முடியாது. நகரங்களின் சில பட்டியல்களில் கேசில் நகரம் பெத்தூல் (யோசு 19:4), பேத்துவேல் (1 நாள் 4:30), அல்லது பெத்தேல் (1 சாமு 30:27) என்று அழைக்கப்படுகிறது.

கெசுபா, அசுபா (HASHUBAH - கவனிப்புடைய) செருபாபேலின் மகன் (1 நாள் 3:20).

கெசுபோன், எசுபோன் (HESHBON)

மோவாபின் வடக்கேயுள்ள ஒரு முக்கிய நகர். இன்று கெசிபான் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இது எருசலேமுக்குக் கிழக்கே 80 கி.மீ. தள்ளி வாடிகெசிபானுக்குத் தெற்கில் குறிக்கப்படுகிறது. எமோரிய அரசன் சீகோனின் நகர் என்று பெரும்பாலும் இது அழைக்கப்படுகிறது. இவர் ஆர்னோன் (அர்னோன்) ஆறு வரைக்கும் உள்ள பகுதி முழுவதையும் மோவாபியர்களிடமிருந்து வலிந்து பறித்துக் கொண்டார். கெசுபோனை அவர் தமது தலைநகரமாக மாற்றினார். மேலும் அதன் பெயர் அவரால் அது கட்டப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. சீகோன் இஸ்ராயேலர்களினால் தோற்கடிக்கப்பட்டபிறகு கெசுபோன் ரூபன் கோத்திரத்தாராலும் பிறகு காது கோத்திரத்தாராலும் புதுப்பிக்கப்பட்டு, குடி அமர்த்தப்பட்டது (எண் 21:32: யோசு 13:17.26;21:39; 1 நாள் 6:81). இப்பகுதிக்காக மோவாபியருக்கும் இஸ்ராயேலருக்கும் இடையே கடும் போர் நடந்தது. ஒருவேளை

மோவாபு அரசன் ஏகிலோன் (எக்லோன்) இந்நகரைக் கைப்பற்றி இருக்கலாம் (நீதி 3:12). பிறகு நீதிபதிகளின் முயற்சியால் திரும்ப வெற்றி கொள்ளப்பட்டது (1 சாமு 12:9.11). ஆகாபின் இறப்புவரை (கி.மு.853) இந்நகர் இஸ்ராயேலரின் கைவசமே இருந்தது. பின்பு மோவாபின் மேசா திரும்ப இந்நகர்மேல் வெற்றி கொண்டார். அதிலிருந்து மோவாபியர்கள் கைவசமே இருந்தது. மோவாபுக்கு, எதிரான இறைவாக்குகளில் பலதடவை குறிக்கப்படுகிறது (எசா 15:4;17:8-9; எரே 48:2.33-34). கி.மு. 600 ஐ ஒட்டிக் கெசபோனை அம்மோனியர்கள் கைப்பற்றினார்கள் (எரே 49:3). இந்தப் பகுதிக்கு அவர்கள் உரிமை கொண்டாடினார்கள் (நீதி 11:26). கிரேக்கர் காலத்தில் இந்நகர் நபத்தேய அரசில் இருந்தது. அலக்சாந்தர் யன்னேயுவால் (கி.மு. 103-7) வெற்றி கொள்ளப்பட்டது. ஆனால் நாணயங்களைத் தாங்களே அச்சடித்துக்கொள்ளும் அளவுக்கு முழு சுதந்தரம் அளிக்கப்பட்டது. யூதர்களின் அரசு வீழ்ந்தபோது, கெசபோன் உரோமைய அரசின் மாகாணமான சீரியாவோடு இணைக்கப்பட்டது.

கெசமோன், எசமோன் (HESHMON - பலன் நிறைந்த)

யூதாவின் தென்மேற்குப்பகுதியில், பெயேர்-செபா சுற்று வட்டாரத்தில் கசர் - கதாவுக்கும் பேத்து-பலேத்துக்கும் இடையில் இருந்த ஒரு நகர். இது இருந்த இடம் தெரியவில்லை. தால்மூது மக்கபேயர்களுக்கு அடைமொழியான கசமோனியார் என்ற சொல் இதிலிருந்து தோன்றியிருக்கலாம்.

கெசல்லோத்து (CHESULLOTH - அழிவு, சிதைவு)

இசக்காரிலுள்ள ஒரு எல்லை நகரம் (யோசு 19:18). கிசிலோத் - தாபோரும் இதுவும் ஒன்றே. நசரேத்திலிருந்து தென் கிழக்கில் ஏறத்தாழ 5 கி.மீ. தொலைவில் உள்ள இக்கால இக்சால் என்ற இடமென அடையாளம் காட்டப்படுகிறது.

கெசேது (CHESED - ஆதாயம்)

நாகோருக்கும், மில்காவுக்கும் பிறந்த நான்காவது புதல்வன். கல்தேயர் தோன்றிய அரமேய இனத்தின் மூதாதையர் (ஆதி 22:22).

கெசேம் (GESHEM - மழை)

அராபியரான கெசேம், கொரோனியரான (ஒரோனியர்) சன்பலாற்றுடனும், அம்மோனியரான தோபியாவுடனும் சேர்ந்து கொண்டு நெகேமியா எருசலேம் மதிலைக் கட்டும்போது அவரை எதிர்த்தனர். அவர்கள் ஒன்று சேர்ந்து நெகேமியாவை எள்ளி நகையாடினர் (நெகே 2:19-20); அவருக்குத் தீங்கிழைக்கச் சதி செய்தனர் (6:1-3); அவர் மீது பொய்க்குற்றம் சாட்டி அரசருக்குக் கடிதம் எழுதுவதாகப் பயமுறுத்தினர் (6:5-9). ஆனால் எல்லாவற்றிலும் தோல்வியுற்றனர்.

'அராபியன்' என்ற பெயர் அவன் யூதாவின் தெற்குப் பகுதிக்கு ஓர் உயர் அதிகாரி என்பதைக் காட்டுகிறது. சில வாசகங்கள் 6:6-இல் இவரைக் கசிமு என்று அழைக்கின்றன.

கெசேரிம், அட்சேரிம் (HAZERIM - கிராமங்கள்)

பாலஸ்தீனத்தின் தென்மேற்குப்பகுதியில் அவ்வாயர்கள் வாழ்ந்த (உப 2:23), கவர்ப்பாது காப்பற்ற குடியிருப்புக்கள் (லேவி 25:31). சில மொழிபெயர்ப்புக்கள் இந்த எபிரேயச் சொல்லை இடப்பெயராக மொழிபெயர்க்கின்றன.

கெசேர் (GEZER - பங்கு)

கெசேர் என்பது பாலஸ்தீனச் சமவெளியில் யோப்பாவிற்கும் எருசலேமிற்கும் இடையிலுள்ள ஒரு நகரமாகும்.

யோசுவாவிற்கு எதிராக ஐந்து அரசர்கள் இணைந்து நடத்தியபோரில் கெசேர் நாட்டு அரசரும் ஒருவராவார். ஆனால் இந்நாடானது இஸ்ராயேலர்களால் கைப்பற்றப்படவில்லை (யோசு 10:33;12:12; நீதி 1:29). இந்நகர் யோசேப்பின் எல்லைப்பகுதியில்

இருந்தது (யோசு 16:3). எனவே எப்பிராயீமின் நகரம் என்று கூறப்பட்டது (1 நாள் 7:28). இது ஒரு லேவிய நகரமாகும் (1 நாள் 6:52). தாவீதுக்கும் பெலிஸ்தியருக்குமிடையே போர் நடந்த இடமாகும் (2 சாமு 5:25; 1 நாள் 14:16; 20:4).

பார்வோனால் இந்நகர் கானானியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு, சாலமோன் பார்வோனின் மகளை மணந்தபொழுது அவருக்குக் கொடுக்கப்பட்டது (1 அர 9:15தொ). சாலமோன் இந்நகரைச் சுற்றி அரண் எழுப்பினார். இவ்வாறு முதன்முதலாக இந்நகரானது இஸ்ராயேல் மக்களுக்குச் சொந்தமான நகராக மாறுகின்றது, மேலும் இந்நகர் யூதாவால் செலூக்கியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு (2 மக் 10:32தொ) யோனத்தான் என்பவரால் இந்நகரைச் சுற்றி அரண் எழுப்பப்பட்டது (1 மக் 9:52). பின் யூதர்களின் முக்கியமான நகராகக் காக்கப்பட்டு வந்தது (1 மக் 13:53; 14:7. 34). ஏழாம் அந்தியோக்கு அரசன் கெசேர், யோப்பா, எருசலேம் போன்ற நகர்களைத் தனக்கு உரித்தானது என்று உரிமை கொண்டாடினர். ஆனால் இந்நகர்களை அவரது அதிகாரத்திற்குக் கொண்டுவர இயலவில்லை (1 மக் 15:28;16:1.19.21).

எகிப்து நாட்டு மன்னன் மூன்றாம் துத்மோசால் வெற்றிக் கொள்ளப்பட்ட (கி.மு. 1502-1448) கனானிய நகரங்களில் கெசேரும் உள்ளடங்கும். அமர்னா கடிதங்களில் இந்நகர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. மெர்னப்தா (1234-1220) என்பவர் இந்நகரை எகிப்து அரசாட்சியின் கீழ் மீண்டும் கொண்டு வந்ததாகக் கூறுகின்றார்.

எருசலேமிற்கு வடமேற்கே 29-கி.மீ. தொலைவில் தற்போதுள்ள தேல்யெசர்தான் கெசேர் நகர் இருந்த இடமாகும். இந்நகர் 22 ஏக்கர் நிலப்பகுதியை உள்ளடக்கியிருந்ததால், பண்டைக்கால பாலஸ்தீனா நகரங்களில் மிகவும் பரந்து விரிந்த நகராகும்.

கற்காலத்தில் (கி.மு. 4500-3200) மக்கள் இவ்விடத்தில் குடியேறினர். புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் பெரிய மதில்சுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கி.மு. மூவாயிரத்திற்குமுன் முதல் சுவரும், கி.மு. மூவாயிரத்தில் இரண்டாவது சுவரும், கி.மு. 1500-இல் மூன்றாவது சுவரும் கட்டப்பட்டன. இந்தச்சுவர்கள் பிற்காலத்தில் மாற்றியமைக்கப்பட்டு, கிரேக்கப் பண்பாட்டுக் காலம் வரை பயன்படுத்தப்பட்டன. கி.மு. மூவாயிரத்தில் கிணற்றையும் நகரையும் இணைக்குமாறு கட்டப்பட்டிருந்த சுரங்கக் கால்வாய் போர் சமயத்தில் மக்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்குப் பெரிதும் உதவியாக இருந்தது. நிறுத்தப்பட்ட கற்களைக் கொண்ட ஓர் இடமானது புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இவை பழைய ஏற்பாட்டுக்காலத் தூண்கள் என்று உறுதி செய்யப்பட்டன. அறிஞர்கள் சிலர் இவ்விடத்தை இறப்புச் சடங்குகள் நிகழ்த்தப்படும் இடம் என்றும், மற்றும் சிலர் வழிபாடுகள் நடத்தப்படும் இடம் என்றும் கூறுகின்றார். மெசபொத்தாமியாவின் பாதிப்பைக் காட்டுகின்ற கி.மு. 15-14ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஆப்பு வடிவ எழுத்துக்களை உடைய பலகைகள் அங்குக்காணப்பட்டன. மேலும் கி.மு.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாள் காட்டியைப் பற்றிய கல்வெட்டு ஒன்றும் அங்குக் காணப்பட்டது. மாதங்களின் பெயர்கள் தரப்படவில்லை. ஆனால் குறிப்பிட்ட தானியங்கள் பயிர் செய்யப்படும் அந்தக் குறிப்பிட்ட காலத்தை வைத்து மாதங்களை அறிந்து கொண்டனர்.

புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட குறிப்புகள் விவிலியம் தரும் குறிப்புகளோடு முழுவதும் ஒத்துப்போகவில்லை. கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் இந்நகர் அழிந்தது என்பதற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால் மன்னன் பார்வோனால் இந்நகர் தீக்கிரையாக்கப்பட்டது என்ற வாக்கியத்தை அப்படியே எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

கெசூரியர்(GESHURITES)

1. பாலஸ்தீனத்தின் வடமேற்கில் அமைந்த கெசூர் அரசின் மக்கள் (உப 3:14; யோசு 12:5;13:11.13).

2. பெலிஸ்தியர் பகுதியருகில் நெகேபுவில் வாழ்ந்த மக்கள் (யோசு 12.2). தாவீது சிக்லா

கில் தங்கியிருந்தபோது கெசூரியர்களுக்கு எதிராகப் போரிட்டுக் கொள்ளையிட்டார் (1 சாமு 27:8). அரசர்கள் காலத்தில் சிமோன், யூதா இனத்தவர்கள் தெற்கு நோக்கி முன்னேறியபோது இந்த மக்கள் அழிக்கப்பட்டனர் (1 நாள் 4:39-43).

கெசூர் (GESHUR - பாலம்)

பாசானுக்கு வடக்கேயும் சீரியாவுக்குத் தெற்கேயும் உள்ள ஒரு சிறிய அரசு. இஸ்ரா யேலுக்கும் ஆரானுக்கும் இடையில் சிறிய நடுநிலை நாடாக இது இருந்தது (யோசு 13:11; 2 சாமு 15:8; 1 நாள் 2:23). தாவீது யூதாவின் அரசனாக இருந்தபோது கெசூர் அரசனோடு நட்புறவாக வாழ்ந்தார். கெசூர் அரசனான தல்மாயின் மகளாகிய மாக் காவை மணமுடித்து உடன்படிக்கை செய்து கொண்டார். மாக்கா அப்சலோமைப் பெற் றெடுத்தாள் (2 சாமு 3:3). தன்னுடைய சகோதரன் அம்மோனைக் கொன்றுவிட்டு அப்சலோம் தன் தாத்தாவிடம் (கெசூருக்கு) ஓடிப்போனான். அங்கே மூன்று ஆண்டுகள் இருந்தான் (2 சாமு 13:37-14:24). அதன் பிறகு கெசூர் இஸ்ராயேலுக்கு அடிமைநாடாக இருந்து வந்தது. ஆனால் இஸ்ராயேல் அரசு பிளவுபட்டபின், கெசூர் அரசன் ஆராமோடு சேர்ந்து பாசானின்மீது படையெடுத்துக் கொள்ளையிட்டான் (1 நாள் 2:23). காலப் போக்கில், கெசூர் தமஸ்கு அரசோடு இணைந்தது.

கெசோ, அசோ(HAZO - காட்சி)

நாகோர், மில்கா ஆகியோரின் ஐந்தாவது மகன் (ஆதி 22:22). இப்பெயர் அசீரிய அரசன் ஏசர்கத்தோனின் ஏடுகளில் குறிக்கப் படும் கவுரானைச் (அவுரான்) சுற்றிய பகுதி யான காசுவுடன் தொடர்புடைய இனத் தையோ, உப இனத்தையோ குறிக்கலாம்.

கெஸ்தாஸ் (GESTAS)

லூக் 23:39-43-இல் குறிக்கப்படும், இயேசு வோடு சிலுவையில் அறையப்பட்ட, மனம் வருந்தாத கள்வனின் பெயராகப் போலி நூல்களில் கொடுக்கப்படுகிறது. இப்பெய ரின் மற்ற வடிவங்கள் கிஸ்தாஸ், கெஸ் மாஸ், ஸ்தெக்மாஸ், துமாக்குஸ் ஆகியவை யாகும். இவர் திஸ்மசுடன் ஒப்பிட்டு வேறு படுத்தப்படுகிறார்.

கெட்சியா (KEZIAH - பரிமளம்)

யோபு தாம் இழந்த செல்வங்களைத் திரும்பப் பெற்றபின் அவருக்குப் பிறந்த இரண்டாவது மகளின் பெயர் (யோபு 42:14).

கெதமோத்து (KEDEMOTH - கீழ்த்திசை சேர்ந்த)

ரூபனின் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப் பட்ட குருக்களின் நகரம். இது வட அர்னோ னில் உள்ளது (யோசு 13:18;21:37). இதற்கு அருகிலுள்ள பாலைவனத்திலிருந்துதான் மோசே எமோரிய அரசன் சீகோனிடம் ஆள் அனுப்பி அவர்தம் நாட்டைக் கடக்க உத்த ரவு கேட்டார் (உப 2:26). மேலும் இது மெராரியின் புதல்வருக்குக் கொடுக்கப்பட்ட லேவியர் நகரமாகும் (யோசு 21:37; 1 நாள் 6:79). இந்தச் சுற்று வட்டாரத்தில் காணப் படும் கசர் எஸ்-ஸாபெரான், கிர்பெத் ஏல்-ரெமேயில் ஆகிய இரு நபத்தேய இடங் களில் ஒன்று கெதமோத்தாக இருந்திருக்க லாம். இவ்விடத்திற்கு எஸ்-சலியேயையும் அடையாளம் காட்டுவர்.

கெதரோத்தாயிம் (GEDEROTHAIM - இரு ஆட்டுப்பட்டி, இரு சுவர்கள் -)

சோரா - அசேக்காவில் செபேலா மாவட் டத்திலுள்ள யூதாவைச் சேர்ந்த ஒரு கிராமம் (யோசு 15:36). இவ்வூர் இருந்த இடம் இன்னும், தெரியவில்லை.

கெதரோத்தாயிம் என்பது எழுபது நூலில் இருப்பது போல 'அவளுடைய ஆட்டுக் கிடைகள்' என்ற பொருளில் வாசிக்கப்பட வேண்டும் என்று விவிலிய வல்லுநர்கள் பலர் கருதுகின்றனர்.

கெதரோன் (KEDRON)

இது மோதினுக்கு அருகிலுள்ள ஓர் ஊர் (1 மக் 15:39-41;16:9). இது இக்காலக் காத்ரா என்ற ஊராக இருக்கலாம் என்று கருதப்படு கிறது (யோசு 15:36). இந்நகரின் மதிற்சுவர் சீரியா மன்னன் ஏழாம் அந்தியோகினால் யூதேயா நாட்டைத் தாக்கும் பொருட்டுக் கட்டப்பட்டது.

கெதர் (GEDER - சுவர், வேலி)

கானான், நாட்டிலுள்ள இந்நகரை யோசுவா வென்றார். விவிலியத்தில் இந்நகரம் தெபீர் நகரை அடுத்துக் குறிப்பிடப்பட்டிருப்பதால் அநேகமாக இது யூதா நாட்டின் செபோலாவில் அமைந்திருக்கக்கூடும். தாவீதின் திராட்சைத் தோட்டங்களை மேற்பார்க்க நியமிக்கப்பட்ட பாகால்-அனானின் ஊர் (யோசு 12:13; 1 நாள் 27:28) ஆகும். ஆனால் அந்த இனத்தாரின் நகரப் பட்டியலில் இந்நகர் காணப்படுவதில்லை. ஒரு வேளை பிற்காலத்தில் இந்நகர் அவர்களால் கைவிடப்பட்டிருக்கலாம். ஒரு வேளை பெத்காதேர் (1 நாள் 2:51) என்பதும் கெதர் என்பதும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

கெதர்லகோமர் (CHEDORLAOMER)

ஏலாமின் அரசரான இவர் தெற்குப் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஐந்து அரசர்களை எதிர்த்துப் போர்புரிந்து அவர்களைச் சிதீம் என்ற பள்ளத்தாக்கில் வென்றார் (ஆதி 14:1-12). இவரது கூட்டணி, பின்னர் எபிரேயனான அபிராம் என்பவராலும் அவரது கூட்டாளிகளாலும் முறியடிக்கப்பட்டது. இவர்களிடமிருந்து அபிராம் தன் உறவினன் லோத்தை மீட்டார் (14:13-17).

கெதர்லகோமர் (இலகமாரின் ஊழியன்) ஏலாமியத் தோற்றம் கொண்டதாயினும், இப்பெயர்கொண்ட எந்தக் குறிப்பிட்ட ஏலாமிய அரசனைப் பற்றியும் விவிலியத்துக்குப் புறம்பான சான்றுகள் ஏதுமில்லை.

கெதல்யா (GEDALIAH - யாவே பெரியவர்)

1. அகிக்காமின் மகன். சாபானின் பேரன். சிறைப்பிடிக்கப்படாமல் யூதர் நாட்டில் விடப்பட்ட மக்களுக்குப் பாபிலோனிய அரசன் நெபுகத்னேசரால் ஆளுநராக நியமிக்கப்பட்டவர் (2 அர 25:22-26; எரே 40:6-41:18). இலாக்கிசு என்ற இடத்தில் கெதல்யா பயன்படுத்திய முத்திரை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மக்கள் கையால் கொல்லப்படாமல், எரேமியா இறைவாக்கினரைக் கெதல்யாவின் தந்தை காப்பாற்றினார் (எரே 26:2). கெதல்யா எரேமியா இறைவாக்கினரின் அரசியல் மிதவாதக் கொள்கையைப் பின்பற்றினார். ஆகவே பாபிலோனிய அரசன் நெபுகத்னேசரின் நம்பிக்கையைப் பெற்றார். இறுதியில் நாடு கடத்தப்பட்ட அரச குலத்தலைவனான இசுமயேலின் தலைமையில் யூதப் படைத்தலைவர்கள் கெதல்யாவை மிஸ்பாவிலிருந்த அவரது அரண்மனையில் விருந்தாளிகளாக இருந்தபோது வெட்டிக் கொன்றார்கள். நெபுகத்னேசர் பதிலடி கொடுப்பார் என்று அஞ்சிய மக்கள், எரேமியாவின் அறிவுரையை மதிக்காமல் காரயாகுவின் மகன் யோகனானின் தலைமையில் எகிப்துக்கு ஓடிப்போயினர்.

2. லேவியர் எதுத்தூனின் மகன். அநேகமாகத் தாவீதின் காலத்தில் வாழ்ந்த ஓர் இசைக் கலைஞர். பாடகர்களின் இரண்டாம் பிரிவின் தலைவர். நாடு கடத்தலிலிருந்து திரும்பியபின் இவரிலிருந்து ஒரு லேவியர் குடும்பம் உருவானது (1 நாள் 25:3. 9).

3. தலைமைக்குரு எசுவா குடும்பத்தைச் சேர்ந்த் ஒரு குரு. புறவினத்தைச் சேர்ந்த தங்களது மனைவிகளை விலக்கி வைத்த குருக்களில் இவரும் ஒருவர் (எஸ் 10:18).

4. பஸ்கூரின் மகன். எரேமியா இறைவாக்கினரைக் கொல்ல வேண்டுமென்று செதேக்கியா அரசனிடம் ஆலோசனை கூறிய எருசலேம் நகரத்துத் தலைவர்களில் இவரும் ஒருவர் (எரே 3 :1-6).

5. இவர் எசேக்கியாவின் பேரனும், செப்பனியா இறைவாக்கினரின் தாத்தாவுமாவார் (செப் 1:1).

கெதெரோத்து (GEDEROTH - ஆட்டுப்பட்டி)

செபேலாவில் இலாக்கிசுப் பகுதியில் யூதா குலத்தினர் வாழ்ந்த நகரமாகும் (யோசு 15:41). அநேகமாக ஏல்-மான்சுரா பகுதியில் இந்நகர் இருந்திருக்கலாம். ஆகாசு மன்னனின் ஆட்சிக்காலத்தில் (கி.மு. 735-715), கெதெரோத்து நகரை ஆகாசிடமிருந்து பெலிஸ்தியர்கள் கைப்பற்றிக் கொண்டனர் (2 நாள் 28:18).

கெதெரோத்து நகரம், கெந்தபேயுவால் கட்டப்பட்டதும், சீமோன் மக்கபேயின் மகனான யோவான் கெந்தபேயுவைத் தோற்கடித்த இடமுமான கெதரோன் (இக்காலக்

கத்ரா) நகரும் ஒன்றாக இருக்கலாம் (1 மக் 15:39;16:9). இந்தக் கத்ரா, யப்னியேலுக்குத் தென்கிழக்கில் 7 கி.மீ.தொலைவில் உள்ளது. வேறுசிலர் இந்தக் கத்ரா பழங்கால எக்ரோன் இருந்த இடமாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

கெதேசு (KEDESH - புனித இடம்)

கெதேசு, காதேசு என்ற பெயர்கள், இஸ்ரா யேலர் வருகைக்கு முந்திய பாலஸ்தீனத்தில் இருந்த இடங்களைக் குறித்தன. மாசரேட்டிக் வாசகம் வடபகுதியிலுள்ள புனித இடங்களைக் கெதேசு என்றும், தென்பகுதியில் உள்ள புனித இடங்களைக் காதேசு என்றும் அழைக்கும் மரபைக் கொண்டுள்ளது.

1. யோசுவா வெற்றிகொண்ட இடங்களில் ஒன்று (யோசு 12:22). இசக்காரின் பகுதியில் கேர்சோமியருக்கு அளிக்கப்பட்ட நகரமாக இருக்கலாம் (1 நாள் 6:72). இது மற்ற இடங்களில் கிசியோன் என்றழைக்கப்படுகிறது (யோசு 19:20;21:28). இது மெகிதோவுக்குத் தென்கிழக்கில் 4 கி.மீ. தொலைவிலுள்ள தேல் அபுகுதேயிஸ் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

2. யூதாவின் தென்கோடியிலுள்ள ஓர் எல்லை நகரம் (யோசு 15:23). அநேகமாக இதுவும் காதேசும் ஒன்று.

3. நப்தலியின் பகுதியிலுள்ள ஒரு நகரம் (யோசு 19:37). இது ஓர் அடைக்கல நகரமாக்கப்பட்டு (20:7) கேர்சோமிய லேவியர்களுக்கு அளிக்கப்பட்டது (21:32; 1 நாள் 6:76). கி.மு. 733-இல் தெகிலத்து பிலேசர் இதைக் கைப்பற்றி இவ்வூர் மக்களை அசிரியாவுக்கு நாடு கடத்தினார் (2 அர 15:29). கெதேசைச்சுற்றிய பகுதி மூன்றாம் துத்துமோசின் பட்டியலில் குறிக்கப்படுகிறது. இந்த இடம், காசோருக்கு (ஆட்சோர்) வடமேற்கில் 11 கி.மீ. தொலைவிலும் தீருக்குக் கிழக்கில் 36 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்காலத் தேல் காதேசாக அடையாளம் காட்டப்படுகிறது. இங்கு இரு குன்றுகள் உண்டு. இங்கு மூன்றாம் ஆயிரமாண்டுக் காலத்திலிருந்து இஸ்ராயேலர் காலம் முடியும் வரை மக்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

4. நப்தலியில் கெதேசு நீதிபதி பாராக்கின் சொந்த ஊர். இங்குதான் சிசராவுக்கு எதிராகப் பாராக்கு மக்களை ஒன்று திரட்டினார் (நீதி 4:6,9-11). இங்குதான் யோனத்தான் மக்கபேயு தெமெத்திரியுவின் படைகளைத் தோற்கடித்தார் (1 மக் 11:63.73). யோசிப்பசின் காலத்தில் இது பெனிசியர்களின் கையில் இருந்தது.

கெதேரா (GEDERAH - சுவர், வேலி)

1. யூதா புதல்வரின் கோத்திரத்துக்குச் செபேலாவில் கிடைத்த நகர்களில் இதுவும் ஒன்று (யோசு 15:36). யூதாவின் கோத்திரத்தைச் சேர்ந்த சிலர் அரசனின் வேலையைக் கவனிக்கும் பொருட்டுக் கெதேராவிலும் நெற்றாயிமிலும் குடியிருந்தனர் (1 நாள் 4:23). அநேகமாக இப்போது லோது நகருக்குத் தென்கிழக்காக 16 கி.மி. தொலைவிலும், கெசேருக்குத் தென்கிழக்கில் 6 கி.மீ. தொலைவிலும் உள்ள யெதிரேயாக இருக்கலாம்.

2. பென்யமின் குலத்தினர் வாழ்ந்த நகரமாகும். சிக்லாகு என்னுமிடத்தில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட ஆற்றல் மிகக் கொண்டவரும் திறமை மிக்கவருமான படைவீரர்களில் ஒருவரான யோசபாது கெதேரா நகரத்தைச் சேர்ந்தவராவார் (1 நாள் 12:4). கிபயோனுக்கு அருகிலுள்ள யெதிரே நகரும் இந்தக் கெதேரா நகரும் ஒன்றே எனக் கருதலாம்.

கெதோர் (GEDOR - கோட்டை, மதில்) - ஆள்.

கீசின் சகோதரரும் அரசன் சவுலின் உறவினரும் ஆவார். பென்யமின் குலத்தில் ஒரு நபர் அல்லது ஒரு குடும்பத்தைத் தோற்றுவித்த முதியவர் (1 நாள் 8:31;9:37).

கெதோர் (GEDOR - கோட்டை, மதில்) -இடம்

1. யூதா குலத்தினர் வாழ்ந்த நகர். பெத்சூரை அடுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெத்லகேமுக்கும் கெபிரோனுக்கும் (எபிரோன்) இடையில் அமைந்துள்ளது (யோசு 15:58). பெனுவேல் என்பவர் கெதோரின் தந்தை என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (1 நாள் 4:4). இதற்கு அவர் இந்நகரை நிறுவிய

வர் என்று பொருள் கொள்ள வேண்டும். இது இருந்த இடம் கெபிரோனுக்கு வடக்கில் 12 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து-யெதூராக இருக்கலாம். 1 நாள் 2:57-இல்வரும் பெத்காதேரும் இதுவும் ஒரே இடமாக இருக்கலாம்.

2. யூதாவில் காலேபின் புதல்வர்கள் வாழ்ந்த நகரம். சோக்கோ, சானோவாகு முதலிய நகர்களோடு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகரைக் கட்டியவர் எரேது என்பவராவார் (1 நாள் 4:18). தாவீதைப் பின் தொடர்ந்து சென்றவர்களில் யோவேலாவும் செபதியாவும் கெதோர் நகரைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளது (12:7). ஆனால் இது எந்த ஊர் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

3. நெகேபில் உள்ள நகரம். சிமியோனுடைய புதல்வர்கள் கைப்பற்றிய இடங்களின் கிழக்கு எல்லையாக இந்நகர் அமைந்திருந்தது (1 நாள் 4:39). ஆனால் எழுபதுநூலில் உள்ளது போல் இது கெரார் என்று திருத்தப்படவேண்டும் என்று பலர் கருதுகின்றனர்.

4. பென்யமின் பகுதியைச் சேர்ந்த ஓர் ஊர். தாவீதின் பல வீரர்களில் யோவேலாவும், செபதியாவும் இவ்வூரைச் சேர்ந்தவர்கள் (1 நாள் 12:7). இது இருந்த இடம் கிபயோனுக்கு மேற்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் ஏல்-குடையராவாக இருக்கலாம். அறிஞர்கள் சிலர் இதுவும் 2-இல் குறிக்கப்படும் ஊரும் ஒன்றே என்று கருதுகின்றனர்.

கெத்சமனி *(GETHSEMENE - எண்ணெய் ஆலை)*

ஒலிவ மலையில் உள்ள இவ்விடத்தில் தான் இயேசு யூதாசால் காட்டிக் கொடுக்கப் படுவதற்கு முன் வேதனையோடு செபித்தார். நான்கு நற்செய்திகளும் இந்நிகழ்ச்சியை விவரித்தாலும் மத்தேயுவும் மாற்குவும் மட்டுமே இந்நிகழ்ச்சி கெத்சமனியில் நடந்ததாகக் கூறுகிறார்கள். அவர்கள் அதை ஒரு 'தோட்டம்' என்று கூறுகிறார்கள். 'கெத்சமனி' அதாவது ''எண்ணெய்ச் செக்காலை'' என்ற பெயர்தான், அது ஓர் ஒலிவ மரங்கள் அடர்ந்த தோட்டம் என்று காட்டுகிறது (மத் 26:36;மாற் 14:32). லூக்கா நற்செய்திப்படி, இந்நிகழ்ச்சி ஒலிவ மலையில் இயேசு வழக்கமாகச் செல்கின்ற ஓர் ''இடத்தில்'' நடைபெற்றது (லூக் 22:39-40). இத்தோட்டம் கிதரோன் அருவியைக் கடந்து இருந்ததாக யோவான் கூறுகிறார் (யோவா 18:11).

இயேசு இவ்விடத்தில்தான் செபித்தார் என்று யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. ஏனென்றால் நற்செய்தியில் அதைப் பற்றி விரிவான விளக்கங்கள் தரப்படவில்லை. மேலும், முற்காலத்திய ஒலிவ மரங்களெல்லாம் தீத்து கி.பி.70-ஆம் நூற்றாண்டில் எருசலேமை முற்றுகையிட்டபோது அழிக்கப்பட்டுவிட்டன. இவ்விடம் நிச்சயமாக நகர் வாயில் அருகில், கிதரோனுக்குக் கிழக்கே ஒலிவ மலையில் அமைந்திருக்க வேண்டும். ஒரு முற்காலத்து மரபின்படி, இது கிழக்கு வாயிலுக்கு வெளியே, பள்ளத்தாக்குக்குக் கிழக்கே அமைந்திருந்தது. 5 ஆம் நூற்றாண்டில் இங்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டது. 7-ஆம் நூற்றாண்டின் திருப்பயணியான ஆர்குல்பு என்பவர் இங்குள்ள பாறை ஒன்றில் இயேசுவின் முழங்கால் சுவடுகள் பதிந்திருந்ததைக் கூறுகிறார். இவ்விடம் பிரான்சிஸ்கன் சபையினர் பாதுகாப்பில் உள்ளது. இவ்விடத்தில் 1919-1924க்கிடையில் ''எல்லா நாடுகளின் ஆலயம்'' கட்டப்பட்டது. அதற்குள் பாரம்பரியமாகக் கருதப்பட்ட இரத்தவேர்வைப்பாறை உள்ளது. நான்காம் நூற்றாண்டின் மரபு ஒன்று கெத்சமனி ஒலிவ மலையில் உயர்ந்த பகுதியில் இருந்ததாகக் கூறுகிறது.

புனித யோவான் இந்நிகழ்ச்சியை விவரிக்கும்போது இயேசு 'நுழைந்தார்', ''வெளியே சென்றார்'' என்று கூறுவதால் கெத்சமனியைச் சுற்றிலும் சுவர் இருந்ததாகவும், தனிநபர் ஒருவருக்கு அது சொந்தமாக இருந்ததாகவும், இயேசுவை அங்குச் செல்ல அவர் அனுமதித்திருந்ததாகவும் சிலர் கருதுகின்றனர்.

இயேசு எருசலேமிலிருந்து பெத்தானியா வுக்குச் செல்லும் பொழுதெல்லாம் இத் தோட்டத்தைக் கடக்க வேண்டியிருந்தது. இதையே அவர் ''இயேசு வழக்கம்போல் ஒலிவ மலைக்குச் சென்றார்'' என்று கூறி யிருக்கலாம். ஆனால் ''அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்கும் இந்த இடம் தெரியும். ஏனெனில் இயேசுவும் அவருடைய சீடரும் அடிக்கடி அங்குக் கூடுவதுண்டு'' என்று யோவான் கூறுவதால், இங்கு வருவது இயேசுவின் வழக்கம் என்பது தெளிவாகி றது. ஒத்தமை நற்செய்தியாளர்களின் விளக் கப்படி இந்த இடம் ஒரு விரிந்த பரப்பு என்று தெரிகிறது. ஏனெனில் இயேசு அவரு டைய சீடர்களிடமிருந்து ''கல்லெறி தொலைவு'' விலகி இருக்கிறார்.

கெத்தெர் *(GETHER - அச்சம்)*

ஆராமின் புதல்வர்களில் ஒருவரும், சேமின் பேரனும் ஆவார் (ஆதி 10:23;1 நாள் 1:17). ஓர் அரமேய நகரும் அரசுமாகும்.

கெத்லோன், எத்லோன் *(HETHLON மறைந்து கொள்ளும் இடம்)*

எசேக்கியேலின்படி இஸ்ராயேலின் வடக்கு எல்லையில் ஓர் இடம் (எசே 47:15; 48:1). லெபனோனில் திரிப்பொலிக் குக் கிழக்கே கெயித்தெலாவோடு ஒன்றாகக் கருதப்படுகிறது.

கெந்தபேயு *(CENDEBEUS)*

யூதாவோடு போர் புரிவதற்கென்று அந்தி யோக்கு மன்னனால் நியமிக்கப்பட்ட படைத்தலைவன். லீக்கியாவில் உள்ள காண் டுபா என்ற இடத்தை வைத்து இந்தப் பெய ரும் தோன்றியிருக்கலாம். கெந்தபேயு யாம் னியாவுக்கு வந்து அங்கிருந்து யூதேயாவின் மீது பலமுறை படையெடுத்தான். மேலும் அவன் கெதிரோன் என்ற நகரைக் கட்டி (யோசு 15:41-இல் கெதரோத்து) அங்கிருந்து யூதேயாவைச் சூறையாடினான். யோவான் இிரிக்கானு தன் தந்தை சீமோனுக்குச் செய்தி அனுப்ப, அவர் அவரையும் அவருடைய சகோதரன் யூதாவையும் கெந்தபேயுவுக்கு எதிராகப் போர் செய்ய அனுப்பினார் (1 மக் 15:38).

யோவான் மோதின் என்ற இடத்தில் இரவு தங்கிவிட்டுச் சமவெளியைக் கடந்த போது, அங்கே கெந்தபேயுவின் படைக ளைக் கண்டார். சண்டையிட்டுக் கெந்தபேயு வைத் தோற்கடித்தார். பின்னர் கெதரோன் வரை துரத்திச் சென்று, அசுதோது கோபுரங்க ளைத் தீக்கிரையாக்கினார். ஏனெனில் வீரர் சிலர் அங்கு ஓடி ஒளிந்திருந்தனர். இவ்வெற் றிக்குப் பின் யோவான் இிரிக்கானு அமைதி யாய் யூதேயா நாட்டுக்குத் திரும்பினார் (1 மக் 16:1).

கெபரம்மோனி *(CHEPPHAR-AMMONI அம் மோனியர் கிராமம்)*

பென்யமினின் நகரங்களில் ஒன்று (யோசு 18:24). இந்நகரில் அம்மோனியர் குடியேறி இருந்ததால் இது அம்மோனியக் கிராமம் என்றழைக்கப்பட்டது. தற்போது இவ்விடம் எது என்று தெரியாது. சிலருடைய கருத்துப் படி இது பெத்லகேமுக்கு வடக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து கெபிர்அனா என்ற இடமாக இருக்கலாம்.

கெபா *(GEBA - குன்று, உச்சி)*

பென்யமின் கோத்திரத்திற்கு ஒதுக்கப் பட்ட நகர்களிலிருந்து (யோசு 18:24; 1 நாள் 8:6) லேவியருக்குக் கொடுக்கப்பட்ட நகரங் களில் இதுவும் ஒன்று (யோசு 21:17; 1 நாள் 6:60). இந்தப் பகுதி பரம்பரையாக உள்ள யூதா அரசின் வட எல்லையைக் குறிக்கிறது. (2 அர 23:8; செக் 14:10; நெகே 11:31). மிக்மாசுக் கணவாயின் தெற்கில் பாதுகாப்பா கவும் உள்ளது. இராமாவின் கிழக்கிலும், எருசலேமின் வடக்கு, வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

யுத்த தந்திரத்திற்கு ஏற்ற இடமாக இருந்த தால், சவுல், யோனத்தான், தாவீது ஆகியவர் கள் பெலிஸ்தியர்களோடு இட்ட போரில் இந்த இடம் முக்கிய பங்கை வகித்தது (2 சாமு 13:16;14:5; 2 சாமு 5:25; 1 நாள் 14:16). இந்த வாசகங்களில், இப்பகுதியில் காணப் படும் கிபயா, கிபயோன் ஆகிய இடங்களைக் கவனமாக வேறுபடுத்த வேண்டும். இவற்றைக் கெபாவுடன், எபிரேய வாசகத் தில் குழப்ப வாய்ப்பு இருக்கிறது (எ. கா.

2 சாமு 5:25; 1 நாள் 14:16). அரசன் ஆசா யூத மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி இராமாவைக் கட்டும்படி பாசா தயாரித் திருந்த கற்களையும் மரங்களையும் எடுத்து வந்து கெபாவையும் மிஸ்பாவையும் கட்டிப் பலப்படுத்தினார் (1 அர 15:22; 2 நாள் 16:6). எருசலேமை நோக்கிப் படையெடுத்த பகை வரது படைகள் முன்னேறிய பாதையில் அமைந்த முக்கிய இடங்களில் ஒன்றாகக் கெபாவை எசாயா குறிக்கிறார் (எசா 10:29). நாடு கடத்தப்பட்ட பின்பு மீண்டும் பாபி லோனியாவிலிருந்து மக்கள் திரும்பி வந்து இங்குக் குடியேறினர். அவர்களில் பெரும் பாலானோர் பென்யமின் கோத்திரத்தினர் (எஸ் 2:26;நெகே 7:30;11:31;12:29). அறிஞர் கள் பலர் கெபாவை இக்கால எபாவாக அடையாளம் காட்டுகின்றனர்.

கெபார் (CHEBAR)

ஒரு நதியின் பெயர். இந்நதியின் பக்கம் அமைந்துள்ள தெல்-அபீபு என்ற ஊரில்தான் இறைவாக்கினர் எசேக்கியேல் நாடு கடத் தப்பட்ட தன் மக்களோடு வாழ்ந்தார் என்று எண்ணப்படுகிறது. இவ்விடத்தில்தான் அவ ருக்கு இறைவாக்குக் காட்சிகள் அருளப்பட் டன (எசே 1:3;3:15.23;10:15.20.22;43:3). இது பாபிலோனுக்கு அருகிலுள்ள படகுகள் செல்லக்கூடிய யூப்பிரத்தீசுவின் கால்வாயாக இருக்கலாம். இது தென்கிழக்கிலிருந்து நிப் பூருக்குக் கிழக்காக ஓடி உருக்குக்கு (விவி லிய எரேக்கு) அருகில் மீண்டும் யூப்பிரத்தீ சோடு சேருகிறது. சிலர், இது இக்காலச் சாத்து ஏன்-நில்லாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

கெபால் (GEBAL - மலை, எல்லை)

திரிபோலிக்கும் பெய்ரூட்டிற்கும் இடை யில் உள்ள பெனிசிய நகரம் (இப்பொழுது கெபெயில் என்றிருக்கிறது). மத்திய தரைக் கடல்கரையில் பெய்ரூட்டுக்கு வடக்கில் 32 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்விடம் புன்தாள் வியாபாரத்தின் மையமாக விளங்கி யதால் கிரேக்கர்கள் இதைப் பிப்லோசு என் றழைத்தனர். இது கப்பல் கட்டும் வியாபாரத் தில் ஒரு முக்கியமான இடம் ஆகும். இதைச் சுற்றிக் கப்பல் கட்டுவதற்குத் தேவையான லெபனோன் கேதுரு மரங்கள் அதிகம் கிடைத்தன. கப்பல்கள் தேவைப்பட்ட எல்லா அரசர்களுக்கும் இது முக்கிய நகர மாக விளங்கியது. எகிப்து, எமோரியா, அசீரியா ஆகிய இடங்களிலிருந்து போதிய அளவு தூரத்தில் அமைந்திருந்ததால் பேரரசு களின் ஆதிக்கத்தைத் தவிர்க்க முடிந்தது. ஆனால் அதே சமயம் வியாபாரத்திற்கும் பண்பாட்டிற்கும் இது வசதியான சந்திப்பு இடமாக விளங்கியது.

கெபால் மேற்காசியாவின் மிகப்பழைய நகரங்களில் ஒன்று; நீண்ட வரலாற்றைக் கொண்டது. இவ்விடத்தில் புதிய கற்காலத் திலேயே குள்ளமான மக்கள் வாழ்ந்திருந்திருக் கின்றனர் என்பதற்கு மனித எலும்புச் சான்று கள் கிடைத்துள்ளன. இவர்கள் வட்டமான குடிசைகளிலோ வீடுகளிலோ வாழ்ந்து வந் தார்கள். இறந்தவர்களைத் தாழிகளில் புதைத்து வந்தார்கள். என்ன மொழி பேசி னார்கள் என்பது தெரியவில்லை. கி.மு. 4-ஆம் ஆயிரமாண்டு இறுதியில் இந்தப் பண்பாடு திடீரென அழிந்துவிட்டது.

அதே நேரத்தில் புதிய மக்களினம் பிப் லோசிலும், பெனிசியாவிலும், கானானிலும் தோன்றியது. அவர்கள் பண்பட்ட நகர வாழ்க்கை நடத்தினார்கள். பிப்லோசில் புதிய கட்டடக்கலை பயன்படுத்தப்பட்டது. வீடுகளும் ஆலயங்களும் கட்டப்பட்டன. புதிய நகரம் மதில் சுவர்களால் பாதுகாக்கப் பட்டது. தொழில் நுட்பங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. வண்டிச்சக்கரம், கப் பல்கள், மட்பாண்டச் சக்கரம், அனைத்திற் கும் மேலாகப் புதிய வெண்கலம் என்ற உலோகப் பொருள் முக்கியமானதாகக் கண்டு பிடித்தார்கள். வடக்கிலிருந்து பெனிசியா வுக்கு வந்தவர்களால் இது அறிமுகப்படுத் தப்பட்டது. அவர்கள் மட்டும் படையெடுக்க வில்லை; செமித்தியர்களும் அவர்களோடு ஒன்றாகக் கலந்தனர். இந்தக் கலப்பு இனம் தான் பெனிசியர்கள் என்று கிரேக்கர்களால் அழைக்கப்பட்டது. 4-ஆம் ஆயிரமாண்டு முடிவில் பெனிசியர்களின் முக்கிய நகரங்க ளில் ஒன்றாகக் கெபால் விளங்கியது.

இந்த நகரமானது எகிப்தியர்களால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்குக் கெபால் ஆலயங்களின் சிதைவுகளிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள் சான்று கூறுகின்றன. தினிய காலத்து (கி.மு. 3,000) உருளைகளும், பார்வோன்கள் பலரின் பெயர்களைக் கொண்ட சாடிகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

கெபால் பற்றிய எகிப்திய அக்கறைக்கு மதக்காரியங்கள் மட்டும் காரணமன்று. கெபாலிலிருந்து எண்ணெய், சுவையூட்டும் மணப்பொருட்கள், இரசம், தோல் போன்ற சில பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. எகிப்தியர்களுக்குக் கப்பல்களும் கப்பல் கட்டுவதற்கான கேதுரு மரங்களும் தேவைப்பட்டன.

கி.மு. 3-ஆம் ஆயிரமாண்டின் முடிவில் கெபால் அழிக்கப்பட்டு எரிக்கப்பட்டது. புதிய நகரம் 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டது. செமித்தியர்களும் எமோரியர்களும் அரசாட்சி செய்து வந்தனர். எமோரியர்கள் ஆட்சி புரிந்து வந்தாலும் மக்களினம் கலப்பினமாகவே இருந்தது. இத்தியர்களும் கூரியர்களும் குடியேறினர். இவர்கள் வெண்கல ஆயுதங்களையும், மட்பாண்டத் தொழிலையும் கொண்டு வந்தனர். எகியன் தீவுகள் கலாச்சார ஆதிக்கம் செலுத்தின. கி.மு. 2-ஆம் ஆயிரமாண்டு மத்தியில் கெபாலைக் கூரியர்கள், இத்தியர்கள், சிறிது காலத்திற்கு மித்தானியர்கள் ஆகியோர் ஆட்சி செய்தனர். ஆனால் அரசர்களின் பெயர்கள் செமித்தியர்களுடையதாகும். அரமேயம் ஆதிக்கம் செலுத்தியது. கி.மு. 14-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த இலிப்-ஆதி என்ற அரசன் எகிப்திய மன்னருக்கு விசுவாசமுள்ளவனாக இருந்தான் என்று தெல் எல் அமர்னா ஏடுகள் கூறுகின்றன. அதற்குப் பின் வந்த நூற்றாண்டுகளில் அந்தச் சூழ்நிலை மாறியது.

நேர்கோடு நெடுங்கணக்கில் எழுதப்பட்ட எழுத்துச் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகவும் முக்கியமானது பிப்லோசில் கி.மு. 1,000-ஐ ஒட்டிய அகிராம் கல்வெட்டுகள் ஆகும்.

இந்த நூற்றாண்டுகளில் வியாபாரத்திலும் கப்பல் கட்டுவதிலும் கெபால் பெரும் பங்கெடுத்தது. கெபாலில் உள்ளவர்கள் கடல் மனிதர்களாகவும், நல்ல கொத்தர்களாகவும் விளங்கினார்கள் என்று விவிலியம் சொல்லுகிறது (1 அர 5:18;எசே 27:9; யோசு 13:5). கெபால் இஸ்ராயேலரால் கைப்பற்றப்படவில்லை.

மற்றப் பெனிசிய நகரங்களைப்போல் கெபாலும் அசீரியர்கள், பாபிலோனியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், உரோமையர்கள் ஆகியோரால் கைப்பற்றப்பட்டது. இன்று இங்குக் காணப்படும் முக்கிய சிதைவுகள் கிரேக்க, உரோமையர் காலத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றோடு கி.பி.11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிலுவைப்போர் வீரர்களின் பெரிய கோட்டையும் காணப்படுகிறது.

2. சாக்கடலுக்குத் தென்கிழக்கில் உள்ள மலைப்பகுதி. பெத்ராவிற்கு அருகில் உள்ளது. இன்று கிபால் என்று அழைக்கப்படுகிறது. இது மோவாபு, அம்மோன், அமலேக்கு மற்றும் பிற நாடுகளோடு சேர்ந்து இஸ்ராயேலுக்கு எதிராகக் கூட்டணி அமைத்ததாக சங் 83:7-இல் கூறப்பட்டுள்ளது.

கெபிரா (CHEPHIRAH - குக்கிராமம்)

கிபயோன் நகரத்தை அடுத்து இஸ்ராயேலரோடு சமாதான உடன்படிக்கை செய்த ஒரு கிவியர் நகரம் (யோசு 9:17). இங்குப் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட நிகழ்ச்சிக்குப்பின் இஸ்ராயேலர் மீண்டும் குடியேறினர் (எஸ் 2:25; நெகே 7:29). எல்-கிப் (கிபயோன்) நகரத்திற்குத் தென்மேற்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து கிபிரே என்பது இந்த இடமாக இருக்கலாம்.

கெபிரோன், எபிரோன் (HEBRON - குழு கூட்டமைப்பு) - ஆள்

1. ஒரு லேவியர். கோகாத்தின் மூன்றாம் மகன் (யாத் 6:18; எண் 3:19; 1 நாள்

6:2.18;23:12). நான்கு புதல்வர்களின் தந்தை (1 நாள் 23:19;24:23). அவருடைய வழித் தோன்றல்கள் கெபிரோனியர் (எண் 3:17;26:58; 1 நாள் 26:30-31) அல்லது கெபி ரோனின் புதல்வர்கள் (15:9) என்றழைக்கப் பட்டனர்.

2. ஒரு காலேபியர். மாரேசாவின் புதல் வர். கோராகு, தப்புவாகு, இரக்கேம், செமா ஆகிய நான்கு புதல்வர்களுக்குத் தந்தை (1 நாள் 2:42-43). இதுவும் மரபுமுறைப்பட்டிய வில் வரும் மற்றப் பெயர்களும் இடப் பெயர்களாக இருக்கலாம்.

கெபிரோன், எபிரோன் (HEBRON) - இடம்

கெபிரோன் என்பது எருசலேமிற்குத் தெற்கே 30 கி.மீ. தொலைவிலும் பெத்லகே மிற்குத் தென்மேற்கே 22 கி.மீ.தொலைவி லும் உள்ள நகரமாகும். இந்நகரானது கெபி ரோன் பள்ளத்தாக்கின் கிழக்குப் பகுதியில் இருக்கின்றது. அவ்விடத்தில் கிணறுகளுக் கும், நீரூற்றுகளுக்கும் குறைவில்லை. இந் நகரமானது ஏர்-ருமெயிதே என்ற குன்றின் மேல் கட்டப்பட்டிருந்தது. இது தற்போ தைய அதே பெயருடைய நகரத்திற்கும் மேற்குப் புறத்தில் இருந்தது. தற்போதைய நகரானது குலத்தந்தையர்களின் கல்லறை களைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது. இந்நக ரின் இன்றையப் பெயரானது ஏல்-கலீல் எனப் படுகின்றது. இச்சொல்லுக்கு (இரக்கமுள்ள வரின், அதாவது இறைவனின்) நண்பன் என்பது பொருள். இது ஆபிரகாமுக்கு அளிக் கப்பட்ட சிறப்புப்பெயரைப் பிரதிபலிக்கிறது (2 நாள் 20:7; எசா 41:8). குகைக்கு மேல் உள்ள பள்ளிவாசலானது ''காராம் ஏல்-கலில்'' என்று அழைக்கப்படுகிறது. இதற்கு (இரக்கமுள்ளவரின்) நண்பர் உறையும் புனி தமான இடம் என்பது பொருள்.

கெபிரோன் என்பது யூதா நாட்டிலுள்ள கானானிய நகரமாகும். இந்நகரானது எகிப் திலுள்ள சோவான் (தனிசு) என்ற நகருக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட் டிருந்தது (எண் 13:22). ஆபிரகாம் வாழ்ந்த காலத்தில் இப்பகுதியானது இத்தியர்களும், எமோரியர்களும் வாழ்ந்துவந்த பகுதியாக இருந்தது; எனவே ஆபிரகாம் தனது குடும் பத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்வ தற்கு இத்தியர்களின் தலைவனாகிய எபிரோ னிடமிருந்து ஒரு குகையை விலைக்கு வாங்க வேண்டியிருந்தது (ஆதி 23:8;14:13). இங்கு ஆபிரகாம் (25:9-10), சாரா (23:17-19); ஈசாக்கு, ரபேக்கா, லேயா, யாக்கோபு ஆகி யோர் (49:29-32; 50:12-13) அடக்கம் செய்யப் பட்டனர்.

முதன்முதலில் இந்நகரானது கிரியத்தா ரிபா என்று அழைக்கப்பட்டது. பின்னர் கெபிரோன் என்று அழைக்கப்பட்டது (ஆதி 23:2; 35:27;யோசு 15:24;20:7;21:11;நெகே 11:25). இந்த இரண்டு பெயர்களுக்கும் இடையே உள்ள வரலாற்றுத் தொடர்பு தெளிவாக இல்லை. கிரியத்தாரிபா என்ற பெயரானது அனாக்கியருள் பெரியவனாகக் கருதப்பட்ட 'அர்பா' என்பவனின் பெயரை வைத்து எழுந்த பெயராகும் என்று விவிலிய மரபு கூறுகின்றது (எண் 13:22;யோசு 14:15;15:13).

கி.மு. 14ஆம் நூற்றாண்டில் கெபிரோனின் எல்லைப் பகுதியானது அந்நாட்டைச் சேர்ந்த இளவரசர் சுவர்தாத்தா என்பவ ரால் ஆட்சி செய்யப்பட்டுவந்தது. இவரைப் பற்றிய குறிப்புகள் அமர்னாக் கடிதங்களில் காணப்படுகின்றன. கி.மு.13-ஆம் நூற்றாண் டில் அனாக்கிமின் புதல்வர்களாகிய அகி மான், சேசாய், தல்மாய் போன்றவர்கள் கெபிரோனில் வாழ்ந்து வந்தனர் (எண் 13:22). ஒரு தலைமுறைக்குப்பின் கெபிரோ னின் கிழக்குப்பகுதியிலிருந்து கானான் வெற்றிகரமாகத் தாக்கப்பட்டது

யோசுவாவின் கையிலிருந்த கிபயோ னைக் கைப்பற்றுவதற்காகத் தெற்குக் கனா னிய அரசர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எருசலேம் அரசனான அதோனிசெதேக்கின் தலைமையில் யோசுவாவிற்கு எதிராகப் போரிட்டனர். இந்தப் போரில் யோசுவாவா லும் அவரது படைவீரர்களாலும் கெபிரோ னின் அரசன் ஒகாம் கொலை செய்யப்பட்

டார் (யோசு 10:1-24). பின் யோசுவா கெபிரோனைக் கைப்பற்றி அங்குள்ள மக்கள் அனைவரையும், தெபீர், அனாபு மற்றும் பிற மலைப்பகுதிகளில் குடியேறியிருந்தவர்களையும் தம் வாளுக்கு இரையாக்கினார் (யோசு 10:36-37;11:21-22). புதைபொருள் ஆராய்ச்சியின்படி உடனே இஸ்ராயேல் மக்கள் தெபீரில் வந்து குடியேறியதுபோல் தோன்றுகிறது (நீதி 1:11-12). ஆனால் கெபிரோனில் அனாக்கிமின் புதல்வர்கள் மீண்டும் வந்து குடியேறியதாகவும் யோசுவா இறந்தபின் காலேபின் படைகள் கெபிரோனை மீண்டும் கைப்பற்றும் வரை இஸ்ராயேலர்களின் ஆதிக்கம் அங்கு வளரவில்லை என்றும் குறிப்புக் காணப்படுகிறது (யோசு 14:13தொ; 15:13-14;நீதி 1:10.19-29; யோசு 10:36-39; 11:21-22). கெபிரோனைக் கைப்பற்றிய கருத்துப்பற்றி விவிலியத்தின் உரையானது அவ்வளவு தெளிவாக இல்லை. கெபிரோன் நகரானது லேவியர்களின் நகராகவும், அகதிகளின் நகராகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது (யோசு 20:7;21:10-13;1 நாள் 6:57).

தாவீதினுடைய தொடக்ககால வாழ்க்கையைப் பற்றிய நிகழ்ச்சிகளில் கெபிரோன் முக்கிய இடம் வகிக்கின்றது. தாவீதுக்கும் அவரது மக்களுக்கும் செய்த பணிகளுக்காக நன்கொடை பெற்ற நகரங்களில் கெபிரோனும் உள்ளடங்கும். இங்கு இவர் யூதாவின் அரசராக அபிடேகம் செய்யப்பட்டார். இவரது ஆட்சிக்காலத்தின் முதல் ஏழரை ஆண்டுகளில் கெபிரோன் நகரானது தென்னாட்டு அரசின் தலைநகராக விளங்கியது. அப்சலோம் உட்பட தாவீதின் புதல்வர்களில் பலர் கெபிரோனில்தான் பிறந்தனர். இசுபோசேத்து (இசிபாகால்) என்பவரின் தளபதியாகிய அப்னேர் என்பவர் வடநாட்டைத் தாவீதின் அரசாட்சிக்குள் கொண்டுவர எடுத்த முயற்சியில் யோவாபாலும், அவரது சகோதரராலும் கொல்லப்படுகின்றார். அப்னேர் இறந்தபின் கெபிரோனில் அடக்கம் செய்யப்பட்டார். அப்னேரின் இறப்பிற்குப் பின் இசுபோசேத்தின் படைத் தலைவர்கள் இருவர் அவரைக் கொன்று, பரிசுபெறும் நோக்குடன் அவரது தலையினைக் கெபிரோனில் உள்ள தாவீதிடம் கொண்டுவந்தனர். தாவீது அவர்களின் கொடுமையான செயலைக்கண்டு கோபமுற்று அவர்கள் இருவரையும் கொலை செய்கின்றார். இசுபோசேத்தின் தலையினை அப்னேரின் கல்லறையில் அடக்கம் செய்கின்றார். இசுபோசேத்து இறந்தபின் வடநாட்டு அரசும் தென்னாட்டு அரசும் இணைகின்றது. தலைநகரம் எருசலேமிற்கு மாற்றப்படுகின்றது (2 சாமு 2:1-55;1 அர 2:11; 1 நாள் 3:1-4; 29:17).

அப்சலோம் தன் தந்தை தாவீதுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டி, கிளர்ச்சி உருவாக்கும் இடமாகக் கெபிரோன் மாறிவிட்டது (2 சாமு 15:7-10). எருசலேமில் வாழ்ந்த ரெகபயாம் கெபிரோனை அரணுள்ள நகராகக் கட்டியெழுப்பினான் (2 நாள் 11:5.10). கி.மு. 918 -இல் சிசாக்கு என்பவரால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளைப்பற்றிய பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 'அபிராம் நிலம்' என்பது கெபிரோனைக் குறிக்கலாம். கி.மு. 701 - இல் கெபிரோனானது சனகெரிபுவால் கைப்பற்றப்பட்டு கி.மு. 597-இல் நெபுகத்னேசரால் அழிக்கப்பட்டது.

இஸ்ராயேலர்கள் அடிமைத்தளையிலிருந்து திரும்பி வந்தபொழுது கெபிரோன் பகுதியானது இதுமேயர்களால் உடைமையாக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. கி.மு. 164 வரை இப்பகுதியானது இதுமேயர்களின் கையில் இருந்தது. அதன்பின் யூதா மக்கபேயு இந்நகரைக் கைப்பற்றி அதைத் தீக்கிரையாக்கினார் (1 மக் 5:65). பெரிய ஏரோதின் ஆட்சிக்காலத்தில் இந்நகர் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது. கி.பி. 68-இல் யூதப்புரட்சியாளர்களில் ஒருவராகிய சீமோன் என்பவர் கெபிரோனின் மீது திடீர்த் தாக்குதல் செய்து சூறையாடினார். இதற்குப்பின் செராலியு என்ற உரோமைத் தளபதி இந்நகரைக் கைப்பற்றித் தீக்கிரையாக்கினார். புதிய ஏற்பாட்டில் இதைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படவில்லை. சிலுவைப்போர்கள் நடந்த சமயத்தில் இந்நகருக்கு அருகில், உள்ள 'புனித ஆபிரகாமின் கல்லறை' பற்றிய குறிப்புகளே

காணப்படுகின்றன. 1168-இல் ஆயர் தங்கும் இடமாக இந்நகர் மாறியது. 1187-இல் இந் நகர் முஸ்லீம்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

கெபெர் (GEBER - வலிமையுள்ளவன்)

ஊரியாவின் மகன். சாலமோனின் 12 அதி காரிகளில் இவரும் ஒருவர். இவர் எமோரிய அரசன் சிகோனுக்கும், பாசானின் அரசன் ஓகுக்கும் உரிய நாடாகிய கிலயாது என்ற மாவட்டத்தின் அதிகாரி (1 அர 4:19). அறி ஞர் சிலர் இவர் பென்-கெபரின் தந்தையா வார் என்று கருதுகின்றனர்.

கெபேர், எபேர் (HEBER)

1. பெரீயாவின் மகனும் ஆசேரின் வழித் தோன்றலுமாவார் (ஆதி 46:17; 1 நாள் 7:31-32). ஆசேர் கோத்திரத்தின் ஒரு முக்கிய மான குலப்பெயர் முன்னோர் (எண் 26:45). அறிஞர் சிலர் கருத்துப்படி, இப்பெயர் கபிரூ (அபிரூ) அல்லது எபிரேயர் என்ற பெயர்களுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.

2. கோபாபு (ஒபாபு) வழிவந்த ஒரு கேனி யர். கேனியச் சமூகத்திலிருந்து பிரிந்து, கெதேசில் குடியேறினார் (நீதி 4:11). சிசரா வைக் கொன்ற யாவேலின் கணவன் (4:12-24).

3. யூதாவைச் சேர்ந்த எஸ்ரா, அவருடைய யூத மனைவி ஆகியோரின் வழித்தோன்றல். சோக்கோவை நிறுவியவர் (1 நாள் 4:18).

4. பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர். எல்பாகாலின் மகன் (1 நாள் 8:17). ஒரு வேளை 1 நாள் 8:12-இல் வரும் ஏபேரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

கெப்சிபா, எப்சிபா (HEPHZIBAH - அவளில் உள்ளது என் மகிழ்ச்சி)

1. எசேக்கியா அரசனின் மனைவியும் மனாசேயின் தாயும் ஆவாள் (2 அர 21:1).

2. 'கடவுள் உன்னிலே மகிழ்ச்சி அடை வார்' என்று பொருள் கொடுக்கும் இப் பெயர் எருசலேம் மீண்டும் அமைக்கப்பட்டதன் அடையாளப் பெயராகும் (எசா 62:4).

கெமரியா (GEMARIAH - யாவே நிறைவேற்றி விட்டார்)

1. பாபிலோனுக்குக் கொண்டு போகப் பட்ட இஸ்ராயேல் மக்களுக்கு எரேமியா இறைவாக்கினர் எழுதிய கடிதத்தைக் கொண்டு சென்ற இவர், யூதாவின் அரச னான செதேக்கியாவிடம் இருந்து பாபிலோ னிய அரசன் நெபுகத்னேசாரிடம் அனுப்பப் பட்ட தூதுவர் ஆவார் (எரே 29:3). இவரு டைய தந்தையாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இலிகியா என்பவர் யோசியாவின் ஆட்சிக் காலத்தில் பெரிய குருவாக இருந்த இலிகியா வும் அல்லர் (2 அர 22:4); எரேமியா இறை வாக்கினரின் தந்தையுமல்லர் (எரே 1:1).

2. செயலாளரான சாபானின் மகன். இவர் இருந்த மேல் முற்றத்துக் கருவூல அறையில் தான் பாரூக்கு எரேமியா இறைவாக்கினரின் வார்த்தைகளை ஓலைச்சுருளிலிருந்து வாசித் தார் (எரே 36:10-12.25). கெமரியாவின் மகன் மீக்காயா ஓலைச்சுருளிலிருந்து வாசிக்கப்பட் டவைகளையெல்லாம் கேட்டு அரசனது அரண்மனையில் இருந்த தலைவர்களிடம் அறிவித்தான். ஓலைச்சுருளிலிருந்து வாசிக் கப்பட்டதைக் கேட்ட யோயாக்கிம் அரசன் அவ்வோலைச் சுருளை எரிக்க முயன்ற போது அதை எரிக்காமல் அரசனைத் தடுக்க முயன்றவர்களில் கெமரியாவும் ஒருவர்.

கெமல்லி (GEMALLI - ஒட்டகம் உடையவன்)

தாண் கோத்திரத்திலிருந்து கானான் நாட் டைச் சுற்றி வேவு பார்க்கும்படி அனுப்பப் பட்ட அம்மியேல் என்பவரின் தந்தையா வார் (எண் 13:12). கெமல்லி என்ற சொல் 'நிறைவு' அல்லது 'ஒருவருக்கு நன்மை செய்ய' என்பதைக் குறிக்கப்பயன்படும் எபி ரேய சொல்லிலிருந்து உருவாகியிருக்கலாம்.

கெமுவேல் (KEMUVEL - இறைவன் உறுதி யாக உள்ளார்)

1. இவர் ஆராமின் தந்தையும், ஆபிரகா மின் சகோதரனாகிய நாக்கோரின் மைந்தனு மாவார். அரமேயர்களின் குலப்பெயர் முன் னோர் (ஆதி 22:21).

2. சிப்தானின் மகன்; எப்பிராயிம் கோத்திரத்தின் ஒரு தலைவனும், கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க நியமிக்கப்பட்டவருள் ஒருவரும் ஆவார் (எண் 34:24).

3. லேவியரான இவர் லேவியருக்குத் தலைவரான கெசபியாவின் (அசபியா) தந்தை. மேலும் இவர் தாவீது - மன்னன் காலத்தில் வாழ்ந்தவர் (1 நாள் 27:17).

கெமோசு (CHEMOSH)

மோவாபு இனமக்களின் தெய்வத்தின் பெயராகும். மோவாபு மக்கள் கெமோசின் மக்கள் என்றும் அழைக்கப்பட்டனர் (எண் 21:29; எரே 48:46). மோவாபு நாட்டு அரசர்களுக்குக் கெமோசு என்று பெயருண்டு. சனகெரிபு வரலாற்று ஏட்டின்படி எசேக்கியா காலத்தில் வாழ்ந்த மேசா, கம்முசுனாத்பி இவர்களின் தந்தைபெயர் கெமோசு என்பதாகும். சாலமோன் மன்னனால் கெமோசு தெய்வத்திற்கு ஒரு பீடம் எருசலேமுக்குக் கிழக்கில் உள்ள மலையில் கட்டப்பட்டது (1 அர 11:7). ஆனால் யோசியா அரசன் காலத்தில் இடிக்கப்பட்டது. மேசாவின் குறிப்புப்படி கெமோசு அதார் என்ற வீனஸ் விண்மீனோடு' தொடர்புபடுத்தப்படுகிறது. எனவே கெமோசு என்பது மோவாபு மக்களுக்கு ஒரு விண்ணகத் தெய்வமாக இருக்கலாம் என எண்ணப்படுகிறது. நீதி 11:24-இன்படி கெமோசு, அம்மோன் நாட்டு மில்க்கோம் என்ற தெய்வம் எனச் சுட்டுகிறது.

கெம்தான், எம்தான் (HEMDAN - விருப்பம், இன்பம் காணுதல்)

ஏதோமைச் சேர்ந்த ஒரு கோரியர் (ஓரியர்); தீசோனின் முதல் மகனும் சேரியின் வழித் தோன்றலும் ஆவார் (ஆதி 36:26). 1 நாள் 1:41-இல் இவர் கம்ரான் (அம்ரான்) என்று அழைக்கப்படுகிறார்.

கெம்பு (JACINTH)

விலையுயர்ந்த பல்வேறு இரத்தினக் கற்களில் ஒன்று. சிவப்பு-ஆரஞ்சு நிறக்கல். தீர்ப்புக் கூறும் மார்புப் பட்டையில் பதிக்கப்பட்டிருக்கும் கற்களில் மூன்றாவது வரிசையில் முதலாவதாக அமைந்துள்ளதாகும் (யாத் 28:19; 39:12).

புதிய ஏற்பாட்டு, புதிய எருசலேமின் அடிக்கற்களில் பதினொன்றாவதாக வருவது கெம்புக் கல்லாகும் (திருவெளி 21:20). இச்சொல்லின் அடைமொழிவடிவம் திருவெளி 9:17-இல் வரும் காட்சியில் தோன்றும் குதிரையின் மேல் ஏறிவந்தவர்களின் மார்புக் கவசத்தை விவரிக்கப் பயன்பட்டுள்ளது. அக்கவசம் நெருப்பு, நீல, கந்தக நிறத்திலிருந்தது.

கெயிலா (KEILAH - கோட்டை) - ஆள்

கர்மியரான கெயிலா யூதாவின் வழித் தோன்றல்கள் பட்டியலில் ஒதியாவின் பேரனாகக் குறிக்கப்படுகிறார் (1 நாள் 4:19).

கெயிலா (KEILAH - கோட்டை) - இடம்

இது யூதேயாவிலுள்ள மதில் சூழ்ந்த ஓர் ஊர் (யோசு 15:44). தாவீது மன்னன் இந்நகரைப் பெலிஸ்தியர்களிடமிருந்து காத்தார். ஆனால் அம்மக்கள் தம்மைச் சவுலிடம் கையளிக்கக்கூடும் என அஞ்சிக் கெயிலாவை விட்டுப்பாலைவனத்திற்குப் பின்வாங்கினார் (1 சாமு 23:1-13). பாபிலோனியாவிலிருந்து திரும்பிய யூதர்கள் இந்நகரை ஆக்கிரமித்து மீண்டும் கட்டியெழுப்பினர் (நெகே 3:17-18). கில்தி (கெயிலா) நகரானது அமர்னாக் கடிதங்களில் பல இடங்களில் குறிப்பிடப்படுகிறது. தற்போதைய கிர்பெத் கிலா பழைய கெயிலாவாக இருக்கலாம். இந்த இடம் எருசலேமுக்குத் தென்மேற்கில் 25 கி.மீ. தொலைவிலும் கெபிரோனுக்கு வடமேற்கில் 14 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இந்த இடம் தற்சமயம் பழங்கால அழிவுச் சின்னங்களையும், மதிற்சுவரையும், மலைக்குகைகளையும் கொண்டுள்ளது. இறைவாக்கினர் அபக்கூக்கு அடக்கம் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும் பல இடங்களில் கெயிலாவும் ஒன்று.

கெயுவேல் (GEUEL - இறைவனின் மகிமை)

காது இனத்தைச் சேர்ந்தவர். மாக்கியின் மகன். கானானை வேவுபார்க்க அனுப்பப்பட்ட குழுவில் ஒருவர் (எண் 13:15).

கெரசேனர் பகுதி, கெராசா (GERASENES, GERASA)

கெரசேனர் என்பது அலக்சாந்தரால் அடித்தளமிடப்பட்ட கிரேக்கப் பண்பாடுகளைக் கொண்ட நகரம். பெரும்பாலும் இந்நகரானது அலக்சாந்தரின் தளபதியாகிய பெர்திக்காஸ்அல்லது அந்தியோக்கு எப்பிபானால் நிறுவப்பட்டிருக்க வேண்டும். இது தெக்காப் பொலியின் முக்கிய நகரம். அம்மானுக்கு வடக்கே 36 கி.மீ. தொலைவில் இன்று உள்ள யெராசு என்ற இடத்தில் இந்நகர் இருந்திருக்க வேண்டும். இயேசு புயலை அடக்கியபின் அவர் தமது சீடர்களுடன் கெரசேனரில்தான் வந்து இறங்கினார் என்று நம்பத்தகுந்த வாசகங்கள் கூறுகின்றன (மாற் 5:1; லூக் 8:26). இயேசு கெரசேனில் பேய்களை ஓட்டியதைக் கண்டு அச்சம் கொண்ட மக்கள், அந்நகரை விட்டு அகலும்படி அவரைக் கேட்டுக் கொண்டனர் (லூக் 8:26-39; மாற். 5:1-20).

இந்நகரின் அழிவுச் சின்னங்களில் அரங்கம், நீதிமன்றம், ஆலயங்கள் போன்றவை அடங்கும். இவையனைத்தும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பேரரசர் அதிரியான் பார்வையிட்டுச் சென்ற பின்னும், மூன்றாம் நூற்றாண்டில் கெரசேன் மிக முக்கியமான விற்பனைத்தளமாக மாறிய பொழுதும் கட்டியெழுப்பப்பட்டவைகள்.

இரும்புக் காலத் தொடக்கத்தில் அம்மோனியர் இங்குக் குடியேறினர். நான்காம் அலக்சாந்தர் எப்பிபானினால் மீண்டும் அமைக்கப்பட்டது. கி.மு. 82-இல் அலக்சாந்தர் யன்னாயு இதைக் கைப்பற்றினார். கி.மு. 63-இல் பாம்பே இதைக் கைப்பற்றி, தெக்காப்பொலியின் ஒரு பகுதியாக்கினார். செழிப்பான வியாபார ☐மயமாகிய கெராசா முதல் யூத எழுச்சியின்போது யூதர்களால் தாக்கப்பட்டது. கி.பி.நான்காம் நூற்றாண்டில் இது ஒருமுக்கிய கிறிஸ்தவ மையமாகியது. கி.பி. 635-இல் மகமதியர்கள் இதைக் கைப்பற்றினர். 746-இல் நிகழ்ந்த நிலநடுக்கம் இந்நகரை அழித்தது.

கெராசா (GERASA)

காண்க. கெரசேனர் பகுதி.

கெரார் (GERAR - இடைத்தங்குமிடம்)

மத்திய தரைக் கடலுக்கு அருகிலும் கானான் நாட்டின் தெற்கு எல்லையிலும் அமைந்த ஒரு முக்கியமான நகரம். இதை ஆண்ட மன்னனோடு ஆபிரகாமும் ஈசாக்கும் நட்பு உடன்படிக்கை செய்து கொண்டார்கள் (ஆதி 20:26). ஆபிரகாமும் ஈசாக்கும் உடன்படிக்கை செய்து கொண்ட அரசனின் பெயர் அபிமெலக்கு. இது ஒரே அரசனின் பெயராக இருக்கலாம் அல்லது அரச குலப் பெயராக இருக்கலாம். கெரார் நகரத்து மக்கள் 'பெலிஸ்தியர்கள்' என்றுகுறிப்பிடப்பட்டுள்ளனர். ஆனால் இது கால வரிசைக்கு முரணானது. ஏனெனில் சில நூற்றாண்டுகள் கழித்துத்தான் பெலிஸ்தியர்கள் கெராரைக் கைப்பற்றினார்கள். எகிப்தியப்பதிவுக் குறிப்புக்களில் கெரார் நகரம் காணப்படவில்லை. எனவே இந்நகரம் எகிப்தியர்கள் படையெடுக்கும்போது சென்ற கடலோரப் பாதையில் அமைந்திருக்கவில்லை. 2 நாள் 14:13-14-இல் ஆசா எத்தியோப்பியர்களைக் கெரார் நகர் வரை விரட்டிச் சென்றதாகக் கூறப்பட்டுள்ளது.

இஸ்ராயேலர்களின் காலத்தில் பெலிஸ்தியர்கள் கெரார் நகரைக் கைப்பற்றினர். பிறகு யூதா குலத்தினர் அதை ஆண்டனர். இஸ்ராயேல் மக்கள் நாடு கடத்தப்பட்ட பின், கிரேக்கர்கள் இங்கு வந்து குடியேறினர்.

பெயேர்செபாவிலிருந்து வடகிழக்காக 24 கி.மீ. தொலைவிலும்,வாடி எசரியாவின் வடக்கேயும் இருக்கும் தேல் அபு குரைராதான் கெரார் நகரம் என்று வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

அகழ்வாய்வுகள் வெண்கல, இரும்புக் காலத்துப் பொருள்களைக் கண்டுபிடித்துள்ளன. இவற்றில் சில, மத்தியவெண்கலக் காலத்தில் இப்பகுதி மிகவும் செழிப்புற்றிருந்ததாகக் காட்டுகின்றன.

கெரான் (CHERAN - யாழ்)

குலத்தலைவனான தீசோனின் நான்காவது மகன். ஏதோம் நாட்டைச் சேர்ந்த கோரியர் (ஓரியர்) உபகுலத்திற்கு மூதாதையர் (ஆதி 36:26; 1 நாள் 1:41). இவர் சேயிர் நாட்டில் வாழ்ந்தார்.

கெரிக்குலிசு (HERCULES)

தீர் நகரில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை கொண்டாடப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டுக்களின் கடவுள். பழைய பெனிசியக் கடவுளான மெல்க்கார்த்துக்குப் பதிலாக நகரின் அரசனாகக் கருதப்பட்டது. தீர் நாட்டில் கெரிக்குலிசுக்குப் புகழ்ச்சிப் பலிகள் செலுத்தப்பட்டன. யாசோன் கெரிக்குலிசுக்குப் பலிசெலுத்த முந்நூறு வெள்ளித் திராக்மா என்ற நாணயங்களைக் கொடுக்க தூதுவர்களை எருசலேமிலிருந்து அனுப்பினார். ஆனால் அவைகளைக் கொண்டு போனவர்களே புறவினப் பலிகளுக்காக அவைகளைச் செலவிடுவது சரியல்ல என்றுகருதி வேறு செயல்களுக்குப் பயன்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். பிறகு அவை கப்பல்களின் வேலைக்குச் செலவிடப்பட்டன (2 மக் 4:1 9).

கெரிசிம் (GERIZIM) - மலை

ஏபால் மலைக்குத் தெற்கேயுள்ள ஒரு மலை. இன்று யெபேல் எத்தோர் என்று அழைக்கப்படும் மலைதான் கெரிசிம் மலையாகும். இரண்டு மலைகளுக்குமிடையில் கிழக்கு மேற்காக ஒரு முக்கியமான கணவாய் அமைந்துள்ளது. அதன் கிழக்கு முனையில் செக்கேமும், இரு மலைகளுக்கிடையே உள்ள பள்ளத்தாக்கில் நாப்லுஸ் என்ற இடமும் உள்ளன. இம்மலை மத்தியதரைக்கடல் மட்டத்திலிருந்து ஏறக்குறைய 881 மீட்டர் உயரத்திலும் ஏபால் மலைக்கும் இம்மலைக்கும் இடையேயுள்ள பள்ளத்தாக்கிலிருந்து 210 மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது. இம்மலை எயேசின் என்னும் சுண்ணாம்புச் கற்களினால் ஆனது. எனவே இதன் உயர்ந்த பகுதி சாம்பல் நிறத்துடன் அச்சம் எழுப்பும் தோற்றம் உடையது. வியாபாரத்திலும், பாதுகாப்புப் பணியிலும் இம்மலை மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். மேற்கு கிழக்காக எப்பிராயிம் மலை வழியாகச் செல்லும் முக்கிய சாலை இம்மலையின் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. தென்வடக்காக எருசலேமிலிருந்து கலிலேயாவுக்குச் செல்லும் சாலை மேற்கூறிய சாலையோடு செக்கேம் அருகில் இணைகிறது. மேலும் இங்குநீர்வளம் அதிகமாக இருந்ததால் முற்காலத்திலிருந்தே ஏராளமான மக்கள் இப்பகுதிக்கு வந்தனர்.

கரிசிம் மலை வரலாற்றில் மிகவும் புகழ் வாய்ந்ததாக இருந்த போதிலும், சமாரியர்கள் இதன் உச்சியில் பாஸ்கா விழாவைக் கொண்டாடி வந்த போதிலும், எபிரேய பழைய ஏற்பாடு இம்மலையைப் பற்றி நான்கு இடங்களில்தான் கூறுகிறது (உப 11:29;27:12; யோசு 8:33;நீதி 9:7). புதிய ஏற்பாட்டில் ''இந்த மலை'' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது (யோவா 4:20-21.). இம்மலைக்கு ஆபிரகாமும் (ஆதி 12:6), யாக்கோபுவும் (ஆதி 33:18-20), யோசுவாவும் (யோசு 8:33) வந்து சென்றனர். அப்போது மதச்சடங்குகளும் நிறைவேற்றப்பட்டன. இருந்தபோதிலும் இம்மலையின் பெயர் விவிலியத்தில் அடிக்கடி இடம் பெறாதது வியப்புக்குரியது. தாவீது எருசலேமைத் தலைநகராக்கியது கெரிசிமின் புகழ் குறைந்ததற்குக் காரணமாக இருக்கலாம். யூத ஆசிரியர்களும், பதிப்பாசிரியர்களும் வேண்டுமென்றே கெரிசிம் பெயரை மூதாதையர்களின் வரலாற்றோடு இணைக்கவில்லை என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மோசே இஸ்ராயேல் மக்களுக்கு ஆசிர் வழங்குவதற்காக அவர்களைக் கெரிசிம் மலைமேல் ஏறி நிற்கச் சொன்னார் (உப 27:12). உப 11:29 இந்த ஆசிருக்கான தயாரிப்பையும், யோசு 8:30-35 அது நிறைவு பெற்றதையும் பற்றிக் கூறுகின்றன. அப்போது இஸ்ராயேல் மக்களில் பாதிப்பேர் கெரிசிம் மலையிலும் மற்றவர்கள் எபால் மலையிலும் நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு நடுவில் உடன்படிக்கைப் பேழை இருந்தது. யோசு 8:30-இன்படி கெரிசிம் மலையில்

அல்லாது ஏபால் மலையில் யோசுவா ஒரு பீடத்தை நிறுவிக் கற்களில் இறைவனின் சட்டங்களைப் பொறித்து வைத்தார். சமாரியர்களின் ஐந்நூல் ஏபாலுக்குப் பதிலாகக் கெரிசிமைக் கொண்டுள்ளது. கெரிசிம் மலையில் நின்று கொண்டு யோத்தாம் செக்கேம் மக்களுக்கு உவமை ஒன்று கூறினார் (நீதி 9:7). அதற்குப்பின் இவ்விடத்தைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை.

யோசிப்பசின் கூற்றுப்படி, சமாரியர்களும் யூதர்களும் பிரிந்தபோது கெரிசிம் மலையில் சன்பல்லாற்று ஒரு கோவிலைக் கட்டினார். சமாரியர்களின் கோவில் யோவான் கிரிக்கானு என்பவரால் அழிக்கப்பட்டது என்றும் யோசிபஸ் கூறுகிறார். சமாரியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையில் கடும் போட்டி நிகழ்ந்த காலத்தில் 6-ஆம் நூற்றாண்டில் கெரிசிம் மலையில் சேனோவாலும், யுஸ்தீயனாலும் இரு கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டப்பட்டன.

சமாரியர்களின் எண்ணப்படி, ஆபிரகாம் தன் மகனைப் பலியிடக் கட்டளையிடப்பட்டது இந்த மலையில்தான். இங்குதான் யோசுவா பீடம் கட்டினார். யோசு 24:26-இல் வரும் ''ஆண்டவரின் புனித இடம்'' இந்த மலைமேல் உள்ள ஆலயம்தான். நாடு கடத்தலுக்குப்பின் சமாரியர்கள் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இம்மலைமேல் ஓர் ஆலயம் கட்டினர். இதை நான்காம் அந்தியோக்கு எப்பிபான் பங்கப்படுத்தினான் (2 மக் 6:2). இதை, கி.மு. 238-இல் யோவான் கிரிக்கானு அழித்தார். இருப்பினும் இவ்விடம் சமாரியர்களின் வழிபாட்டு மையமாகத் திகழ்ந்தது. சமாரியப் பெண் ''எங்கள் மூதாதையர் இந்த மலையில் வழிபட்டனர்'' என்று இயேசுவிடம் கூறுகிறாள் (யோவா 4:20). நப்லுசிலுள்ள ஒரு சிறிய சமாரிய சமூகத்தினர் இந்த மலையில் பாஸ்கு, ஐம்பதாம்நாள், கூடார விழா ஆகிய விழாக்களை இன்றும் கொண்டாடுகின்றனர்.

அகழ்வாய்வுகள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் அதிரியான் கட்டிய சேயுஸ் ஆலயத்தையும் ஒருவேளை யோவான் கிரிக்கானு அழித்த ஆலயத்தையும் வெளிக்கொணர்ந்துள்ளன. வட சரிவிலுள்ள மத்திய வெண்கலக்காலத்தைச் சேர்ந்த கட்டடம் யோத்தாம் அறிக்கையிட்ட இடமாக இருக்கலாம்.

கெரியோத்து (KERIOTH - நகரங்கள்)

இது மோவாபு நாட்டின் மதில் சூழ்ந்த நகரம் (எரே 48:24.41; ஆமோ 2:2). மோவாபு மன்னன் மேசா அத்தரோட்டின் தலைவனைக் கெரியோத்திலுள்ள கெமோசுக்குமுன் பிடித்து வந்தான். இந்தக் கெரியோத்தும், ஆர் நகரமும் ஒன்று எனக் கருதப்படுகிறது. ஏனெனில் ஆமோ 2:2 கெரியோத்தை மோவாபு நாட்டின் தலைநகரெனக் கூறுகிறது.

கெரியோத்து - எட்சரோன் (KERIOTH-HEZRON - பாதுகாக்கப்பட்ட நகரம்)

தென்கோடியில் இருக்கும் ஏதோமின் எல்லை ஓரமாக யூதா கோத்திரத்துக்குக் கிடைத்த ஓர் ஊர். காசோர் (ஆட்சோர்) என்றும் அழைக்கப்படுகிறது (யோசு 15:25). இந்த ஊர் பெயேர்செபாவின் மாவட்டத்தில் உள்ளது. இவ்வூரும் மாவோனிற்குத் தெற்கில் 7 கி.மீ. தொலைவில் உள்ள கீர்பெத் ஏல்-கரிய தெய்னும் ஒன்று எனக் கூறப்படுகிறது.

இஸ்காரியோத்தைக் ''கெரியோத்தின் மனிதன்'' என்றும் விளக்கும் அடிப்படையில் இவ்விடம் யூதாசு இஸ்காரியோத்தின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது (யோவா 12:4;13:2.26;14:22).

கெரீத்து, ஓடை (CHERITH, BROOK)

உடனடியாக வரவிருக்கும் பஞ்சத்தை ஆகாபுக்கு அறிவித்தபின், இறைவனின் கட்டளைப்படி இந்த நீரோடையில்தான் எலியா இறைவாக்கினர் மறைந்து வாழ்ந்தார். ஓடை வறண்டு போகும்வரை இந்த நீரோடையருகிலே தங்கினார். இங்குக் காகங்கள் அவருக்கு உணவு கொண்டுவந்தன. இந்த நீரோடை குடிநீர் அளித்தது (1 அர 17:2-7). இப்பகுதி யோர்தானுக்குக் கிழக்கே காணப்பட்டதாலும் (17:3) எலியா

இலயாது நாட்டைச் சேர்ந்தவர் ஆனதாலும், கெரித்து, மலைக்குகைகள் நிறைந்த இலயாது நாட்டிலுள்ள ஒரு சிற்றோடையாக இருக்க வேண்டும். இதை இப்போது அடையாளம் காட்டுவது எளிதன்று.

கெருபு, கெருபிம் (CHERUB, CHERUBIM -வானதூதர்)

இறக்கை கொண்ட ஓர் எருது அல்லது அது போன்ற புராணக்கதைகளில் வருகின்ற ஒரு விலங்கு. இஸ்ராயேல் மக்கள் மெசபொத்தாமியா, கானான் புராணங்களிலிருந்து இதனை எடுத்துக் கொண்டனர்.

1. விவிலியக் குறிப்புகள்:- ஆதி 3:24-இன்படி ஆண்டவர் மனிதனை ஏதோன் தோட்டத்திற்கு வெளியே துரத்தி விட்டார். அத்தோட்டத்திற்குக் கிழக்கே வாழ்வின் மரத்திற்குச் செல்லும் வழியைக் காப்பதற்குக் கெருபுகளையும், சுற்றிச் சுழலும் சுடரொளி வாளையும் வைத்தார். இங்கு ஆசிரியர், கெருபு என்ற சொல்லை, வாசகர்களுக்கு ஏற்கெனவே தெரிந்ததுபோல் பயன்படுத்துகிறார். 2 சாமு 22:11; சங் 18:10-இல் இறைவன் உலகிற்கு வரும்போது கெருபுகளில் அமர்ந்துவருவதுபோல் சித்தரிக்கப்படுகிறார். இரண்டு வாசகங்களிலும் கெருபுகள் ''காற்றின் இறக்கைகளுக்கு'' இணையாக விவரிக்கப்படுகின்றன. எசே 9:3;10:15-22-இலிருந்து இறைவாக்கினர் எசேக்கியேல் பார்த்த நான்கு இறக்கைகளும் நான்கு முகங்களும் கொண்ட ''உயிருள்ள விலங்குகள்'' (1:5.13.15.19) கெருபுகள் என்பது தெளிவு. இவற்றைப் பாதிமனிதனாகவும் பாதி விலங்காகவும் விவரிக்கும்போது, இறைவாக்கினர் அசீரிய, பாபிலோனியப் புராணங்களில் வரும் இரு உருவங்களை மனதில் கொண்டிருக்கலாம். நான்கு கெருபுகள் சேர்ந்து இறைவன் அரியணை அமர்ந்திருக்கும் பீடத்தைச் சுமந்து சென்றன.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, மரத்தால் செய்யப்பட்டு, பொன்னால் வேயப்பட்ட கெருபுகளைச் செய்து, இரக்க இருக்கையின் இரண்டு பக்கங்களிலும் அவற்றை அடிப்பு வேலையாக அமைக்கும்படி, மோசேக்கு இறைவன் கட்டளையிட்டிருந்தார். இந்த இருகெருபுகளுக்கிடையிலிருந்து தான் யாவே மோசேயிடம் பேசி இஸ்ராயேலர்களுக்கு அவரது திட்டத்தை வெளிப்படுத்தினார் (யாத் 25:18-22;எபி9:5). கெருபுகளின் சித்திரம் திருவுறைவிடத்துத் திரைகளிலும் திருத்தூயகத்திரையிலும் கலைத்திறனுடன் நெய்யப்பட்டிருந்தது (யாத் 26:1.31;36:8.35 ஆகிய பகுதிகள் சுட்டுகின்றன). பிற்காலத்தில் சாலமோன் ஆலயச்சுவர்களில் இத்தகைய உருவங்கள் பொறிக்கப்பட்டன (1 அர 6:29). உடன்படிக்கைப் பெட்டகத்தின்மேல் (8:6-7) ஒலிவ மரத்தால் செய்யப்பட்ட இரு கெருபுகள் திருத்தூயகத்தை அழகு செய்தன (6:23-28). இத்தகைய உருவங்கள் ஆலயத்திரையில் நெய்யப்பட்டிருந்தன (1 நாள் 3:14). வார்ப்புக்கடலின் சட்டங்களிலும், பத்து வெண்கலத் தள்ளு வண்டிகளின் கைப்பிடிகள், குறுக்குக் கம்பிகள் ஆகியவற்றின் மேலும் கெருபுகள் பொறிக்கப்பட்டிருந்தன (1 அர 7:29.36).

யாவே கெருபுகள் மேல் அரியணை வீற்றிருப்பதாகப் பழைய ஏற்பாடு பலதடவை கூறுகிறது (1சாமு 4:4;2 சாமு 6:2; 2 அர 19:15; எசா 37:16; சங் 80:1). உடன்படிக்கைப் பேழையின் மேலுள்ள இரக்கத்தின் இருக்கைகள் மேலுள்ள யாவேயின் அரியணையைக் கெருபுகள் பாதுகாக்கின்றன. இவை அவருடைய காவலாளிகள்; அவருடைய பரிசுத்தத்தை அடையாளப்படுத்தும் சிறப்பான ஊழியர்கள். இதைத் திருவெளி 4:6-இல் வரும் இறைவனது அரியணையைச் சூழ்ந்து நிற்கும் நான்கு உயிர்கள் பற்றிய விவரிப்பு தெளிவாக்குகிறது. எசேக்கியேலின் காட்சியில் வரும் ஆலய அணிகளில் கெருபுகளும் பங்கு வகிக்கின்றன (எசே 4:18.20.25). எசே 28:14-16-இல் வரும் கெருபுவால் காவல் செய்யப்படும் தீரின் அரசனைப்பற்றிய விவரிப்பு, அரசன் இந்த விண்ணக ஊழியரின் தயவில் உள்ளான் என்றும் அவனுடைய தவறுகளுக்காக அவர் அவனைத் துரத்திவிடுவதையும் சுட்டுகிறது.

2. பொருட்சான்றுகள்:- அலெப்போ, கர்க் கமிசு, பிப்லோசு(கெபால்), தானாக்கு போன்ற மேற்காசிய இடங்களில் கண்டு பிடிக்கப்பட்ட சிலைகளிலும் புடைப்பகழ்வுச் சித்திரங்களிலும் கலைப்பண்புடைய கெருபு கள் காணப்படுகின்றன. நிம்ரூத்து, சமாரியா ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தந்தப் பொருட்களில் இறக்கையுடைய உயிர் களும் மனித முகத்தோடு இரு இறக்கைகள், நான்கு கால்கள் கொண்ட விலங்கு உடலும் கொண்ட உயிர்களும் நுணுக்கமாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இத்தியப் புராணங்களில் காணப்படுகின்றன. நினிவே யிலும் மற்ற மெசபொத்தாமியா இடங்களி லும் அரண்மனை மற்றும் பொதுக் கட்டடங் களின் வாயிலின் முன் இறக்கைகள் கொண்ட எருதுகளின் பெரிய சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கெருபு (CHERUB - இடம்)

ஒரு பாபிலோனிய நகரம். ஆனால் இது எவ்விடமென்று இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. தங்களது வம்சவழியை எண் பிக்க முடியாத நாடுகடத்தப்பட்ட யூதர் சிலர் இவ்விடத்திலிருந்துதான் பாலஸ்தீனத்திற்குத் திரும்பினர் (எஸ் 2:59; நெகே 7:61). விளக்கவுரையாளர் சிலர் கருத்துப்படி ''கெருபு, அதான், இம்மேர்'' ஆகியவை ஒரே இடத்தைக் குறிக்கலாம் அல்லது மூன்று இடங்களைக் குறிக்கலாம்.

கெரேசின் (எரேசு) ஏற்றம் (HERES, ASCENT OF - சூரியன் எழுந்தோற்றம், உதித்தல்)

கிதியோன், மிதியானியர்களைத் தொடர் வதை நிறுத்திவிட்டுத் திரும்பிவர முனைந்த இடம் (நீதி 8:13). இந்த வாசகம் ஐயத்திற்குரி யது. சில மொழிபெயர்ப்புக்கள் இந்த வார்த் தைகளைச் ''சூரியன் உதிக்குமுன்'' என்று மொழிபெயர்க்கின்றன. அடையாளம் தெரி யாத இந்த இடம் கர்கரேசிலிருந்து (அர்கரேசு) வேறுபட்டதாகும்.

கெரேசு (எரேசு) மலை (HERES, MOUNT)

கர்கரேசின் (அர்கரேசு) மற்றொரு பெயர்.

கெரேசு (எரேசு) நகர் (HERES, city of)

காண்க: சூரிய நகர்.

கெரேத்தியர் - பெலேத்தியர் (CHERETHITES PELETHITES)

பெலிஸ்தியாவின் தென்கிழக்கில் வாழ்ந்த பெலிஸ்திய இனங்கள்.

தாவீது மன்னனின் அந்தரங்கப் படை யைச் சேர்ந்த குழுவினர். தாவீது பெலிஸ்தி யர்களை வென்று எருசலேமில் ஆட்சி அமைத்தவுடன் இவர்கள் தாவீதோடு சேர்ந்து கொண்டார்கள். யோயாதாவின் மகன் பெனாயா இக்குழுக்களின் தலைவர் (2 சாமு 8:18). இவர் தாவீதின் படைப்பிரி வில் முக்கியமான பதவி வகித்தார் (2 சாமு 20:23). இவர்கள் தாவீதுமன்னனுக்கு முழுவ தும் பிரமாணிக்கமாய் இருந்தனர். தாவீது அப்சலோமின் காரணமாக எருசலேமிலி ருந்து ஓடிப்போனபோது இவர்களும் அவ ரோடு சென்று தங்கினர் (15:18). பிக்கிரியின் மகன் சேபாவைப் பின்தொடரும் நிகழ்ச்சி யில் இவர்களும் பங்குகொண்டு எருசலேமி லிருந்து வெளியேறினர் (20:7). சாலமோன் மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை இவர் கள் ஆதரித்தனர் (1 அர 1:38. 44). இவ்வாறு தாவீது மன்னனுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தனர்.

இக்கால அறிஞர் பலரின் கருத்துப்படி கெரேத்தியர் கிரேத்தாவில் தோன்றியவர்களா வர். இது மற்ற விளக்கங்களைவிடப் பொருத்தமானதாகத் தெரிகிறது. ஏனெனில் இவர்கள் பெனிசியா அரசன் கெரேத்திட மிருந்து தங்கள் பெயரைப் பெற்றனர் என்றும் இவரது அரசு யூதாவின் நெகேபிலோ, கெரேத்தியரின் நெகேபிலோ (1 சாமு 30:14) இருந்தது என்றும் விளக்கப்படுகிறது.

தாவீது சிக்லாகில் சிறிது நாள் தங்கியிருந்த போது பெலிஸ்தியர்களோடு பழக்கம் கொண்டார். அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட் டவர்கள்தான் பெலேத்தியர்கள் ஆவர். பெலிஸ்தியர் என்பது மருவிப் பெலேத்தியர் என்றானது. காரணம் கெரேத்தியர் என்ப

தோடு ஒத்துப்போவதற்காகப் பெலேத்தியர் ஆனது எனலாம். இவ்விரு குழுக்களின் பெயர்களும் விவிலியத்தில் சேர்ந்தே தோன்று கின்றன. எசே 25:16; செப் 2:5 ஆகிய இடங்களில் பெலிஸ்தியர்களோடு கெரேத்தி யர்களும் கண்டிக்கப்படுவதால் இந்த இரு வார்த்தைகளும் ஒரே மக்களைத்தான் குறிக் கின்றனவா அல்லது வெவ்வேறு பிரிவின ரையா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

காரியர் என்ற மக்கள் யோவாசு, அரசனுக் குப் பிரமாணிக்கமாய் இருந்தனர். இவர்கள் (2 அர 11:4.19) கெரேத்தியர்கள்தாம் என விவிலிய விளக்கப்பேராசிரியர்கள் சிலர் எண்ணுகின்றனர். இம்மக்கள் முற்காலத்தில் கூலிப்படையில் வேலை செய்த ஆசியஇன மான காரியான் என்ற மக்களாக இருக்கலாம் எனச் சிலர் எண்ணுகின்றனர். ஆனால் 2 சாமு 20:23-இன் வேறுபட்ட வாசகத்தில் வரும் காரியர் என்ற வாசகம் முதல் கருத்துக்கு ஆதரவு அளிக்கிறது.

கெரேத்து, எரேத்து (HERETH - அவமதிக்கிற)

தாவீது சவுலுக்குத்தப்பி மோவாபில் சிறிது தங்கிய பிறகு அதுல்லாமுக்கும் கீலோவுக்குமிடையே ஒளிந்து கொண்ட காட்டின் பெயர் கெரேத்து ஆகும் (1 சாமு 22:5). பெய்த் கிப்ரினுக்குக் கிழக்கே 11 கி.மீ. தொலைவில் கிர்பெத்துகிலா (விவிலிய கெயிலா)வுக்கு அருகே உள்ள இக்காலச் சிறிய கிராமமான காராசைச் சுற்றியுள்ள பகுதியில் இக்காடு இருந்திருக்கலாம். இப் பகுதி, அக்காலத்தில் பெலிஸ்தியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்திருக்கலாம்.

கெரேன் - அப்பூக்கு (KERAN - HAPPUCH - அஞ்சனச் சிமிழ், கண்மை)

யோபு தாம் இழந்த செல்வங்களை மீண் டும் பெற்றபின் அவருக்குக் கடைசியாகப் பிறந்த மகளின் பெயர் (யோபு 42:14).

கெரோன் (GERON)

''அந்தியோக்கிய நகரத்தாரான முதியவர்'' (2 மக் 6:1). இது ஒரு தனிப்பட்ட நபரின் பெயராகவும் இருக்கலாம். கிரேக்க நாட்டுக் கல்வெட்டுப் பொறிப்புகளில் இது ஒரு தனிநபரின் பெயராகவே காணப்படுகிறது.

கெர்மோன் (எர்மோன்)மலை (HERMON, MOUNT - அர்ப்பணிக்கப்பட்ட மலை)

எதிர் லெபனோன் மலைத்தொடரின் தெற்கு முனையாகும். இது மிக உயர்ந்தது. உப 3:9-இன் படி சீரியா, பாலஸ்தீனப் பேச்சுவழக்கில் இப்பெயர் பலவாறு மாறு பட்டிருக்கிறது. இதைச் சிதோனியர் சிரி யோன் என்றும், எமோரியர் செனீர் என்றும் அழைக்கிறார்கள். உப 4:48-இல் சியோன் மலை என்றுபெயரிடப்பட்டிருக்கிறது. 1 நாள் 5:23-இல் பாகால் கெர்மோன், செனீர், கெர்மோன் என்பவை வேற்றுமைப்படு கின்றன. உன்னத சங்கீதத்தில் செனீர், கெர் மோன், ஆகியவற்றிடையே வேறுபாடு காட் டப்படுகிறது. ஒருவேளை செனீர் என்பது எதிர்லெபனோனின் வடக்குப் பகுதியின் பெயராக இருக்கலாம்.

கெர்மோன் மலை கடல்மட்டத்திலிருந்து 2800 மீட்டர் உயரம் இருக்கிறது. நீண்ட தூரப்பார்வைக்கு ஓர் அருமையான தோற்றத் தைக் கொடுக்கிறது. பாலஸ்தீனத்தின் பல பகுதிகளிலிருந்து இதனுடைய உச்சியைப் பார்க்கலாம். வருடத்தின் பெரும் பகுதிக்கா லம் பனியால் இம்மலை மூடப்பட்டிருக் கும். அரேபியர்கள் இதை யெபெல் ஏல் செயிக்கு அதாவது சாம்பல் நிறமுடியுடைய மலை என்றும், யெபெல் ஏல் தால்ஜ் அதா வது 'பனிமலை' என்றும் அழைக்கிறார்கள். கெர்மோன் மலையிலிருந்து ஓடிவரும் தண் ணீர் வடக்குக் கவுரான் ஆறுகளில் கலக்கிறது. மேலும் யோர்தான் ஆற்றின் மூலநீர்ச் சுனை களும் இதனுடைய சரிவுகளில் தோன்று கின்றன.

கெர்மோன் மலை ஓர் எழில் தோற்றத்தை நமக்கு அளிக்கிறது. மக்களை எக்காலமும் கவர்ந்திருக்கிறது. மேலும் ஒரு புனிதமான மலையாகவும் கருதப்பட்டு வந்திருக்கிறது. நீதி 3:3-இல் வரும் பாகால்-கெர்மோன் 'பாகால்' கடவுள் வழிபட்டதைக் குறிப் பிடுகிறது (1 நாள் 5:23).

சங் 133:3-இல் கெர்மோன் மலை பசுமை அளிக்கும் தெய்வங்களின் அடையாளமான பனித்துளியோடு தொடர்புபடுத்தப்படுகிறது. கெர்மோன் மலை வழிபடும் தளமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கண்டெடுக்கப்பட்ட கிரேக்க ஏட்டுச்சுருள்கள் 'தேவதையின் மலை'' என்று வர்ணிக்கிறது.

கெர்மோன் மலை, யோசுவா வென்ற பகுதிகளின் வட எல்லையாகும் (யோசு 11:17;12:1). உ.ச. 4:8 இந்த மலைத்தொடரின் காடுகளில் வாழும், சிங்கம், சிவிங்கி முதலியவற்றைக் குறிக்கிறது.

கெலகு, அலகு (HALAH)

அசீரியப் பேரரசில் உள்ள ஒரு நகரம் அல்லது ஒரு மாவட்டம். ஓசேயாவின் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில் அசீரிய அரசன் சல்மனேசர் இஸ்ராயேலர்களை நாடு கடத்தி நகரில் குடியேறக் கட்டளையிட்டார் (2 அர 17:6;18:11).

மூன்றாம் தெகிலத்துபிலேசர், யோர்தானுக்கு அப்பாலிருந்த இஸ்ராயேலரை நாடு கடத்திய பகுதிகளில் இதுவும் ஒன்றாகும் (1 நாள் 5:26). காரானுக்கு அருகில் அல்லது காபோர் (ஆபோர்) ஆற்றங்கரையில் அமைந்த ஒரு பகுதியாகும்

கெலால் (CHELAL)

பகாத்மோவாபின் புதல்வர்களில் ஒருவர். தாங்கள் வைத்திருந்த அந்நிய நாட்டுப் பெண்களை விலக்கிவிட வேண்டுமென்று எஸ்ரா கட்டளையிட்டிருந்தவர்களுள் இவரும் ஒருவராவார் (எஸ் 10:30).

கெலியதோர், எலியதோர் (HELIODORUS)

எருசலேமில் கோயில் பணத்தைப் பறிமுதல் செய்து அரசரின் பணத்தோடு சேர்த்துவிட அனுப்பப்பட்ட, செலூக்கிய அரசனான நான்காம் செலூக்கிய பிலோபாத்தர் என்பவருடைய அரசவை உயர் அதிகாரியாவார் (கி.மு. 187-185). 2 மக்கபே மூன்றாம் அதிகாரம் கூறுவதுபடி, அவர் இறைவனால் பழிவாங்கப்பட்டார். கோயில் அதிகாரியான சிமோன், கூலோ-சீரியா, பெனிசியா ஆகிய நாடுகளில் அக்காலத்தில் படைத்தலைவனாய் இருந்த அப்பொல்லோனியுவிடத்தில் கோயில் கருவூலத்தில் ஏராளமான பணம் உண்டு என்று தவறாகத் தெரிவித்துவிட்டார்; அப்பொல்லோனியு அரசனிடம் தெரிவித்துவிட்டார் (2 மக் 3:7-14). கெலியதோர் கருவூலத்தில் நுழைய முயன்றபோது குதிரைமேல் தோன்றிய பயங்கரத்துக்குரிய ஒருவரால் தாக்கப்பட்டார். இவர் பொன்னாயுதங்களோடும் இரு இளைஞர்களோடும் தோன்றினார் (3:22-26). தலைமைக்குரு மூன்றாம் ஒனியா வேண்டினதால், காயப்பட்டவர் காப்பாற்றப்பட்டார் (3:31-39). எவ்வாறு கடவுளின் ஆற்றல் அவர் வாழும் இடத்தைக் காப்பாற்றியது என்று சாட்சியம் சொன்னார் கெலியதோர்.

ஆப்பியன் நூலில் கெலியதோர் நான்காம் செலூக்கியுவுக்கு உற்ற நண்பன் என்று குறிக்கப்படுகிறார். தேலோசில் உள்ள அப்பொல்லோ கோயிலில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துப்பிரதி ஒன்று அமைச்சரவையில் கெலியதோர் முக்கிய அதிகாரி என்று கூறவிளைகின்றது. இவர் கி.மு. 175-இல் அரசனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார். யூமென் மற்றும் அத்தாலூசு என்பவர்கள் இவரை விரட்டியடித்துவிட்டு, செலூக்கியுவின் சகோதரன் அந்தியோக்குவை ஆட்சிபீடத்தில் அமர்த்தினார்கள்.

கெலியாப்போலி, எலியாப்போலி (HELIOPOLIS)

1. பழங்கால எகிப்து நாட்டில் இருந்த முக்கியமான நகரங்களில் கெலியாப்போலியும் ஒன்றாகும். இந்நகர் கைரோவிற்கு வடகிழக்கே 8 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள மக்காரியா என்ற இடத்தில்தான் இருந்தது. எகிப்தியர்கள் இந்நகரை ''இவ்னு'' என்று அழைத்தார்கள். இவ்வார்த்தையானது ''ஓன்'' என்று எபிரேய மொழியில் மாற்றம் பெற்றது. ஆதி 41:45.50;46:20 போன்ற பகுதிகளில் போற்றிபெரா என்பவர் கெலியாப்போலியில் ஓனின் குருவென்று குறிப்பிடப்

பட்டுள்ளார். எரே 43:13-ஐத் தவிர மற்ற இடங்களில் கெலியாப்போலியைப் பற்றிய நேரடியான குறிப்புகள் இல்லை.

கெலியாப்போலி நகரானது கெலியாப் போலி இறையியலுக்குப் பெயர் போனது. மூன்றாம் அரசகுலத்தின் ஆட்சிக் காலத் திலே கெலியாப்போலி இறையியல் தளிர் விட ஆரம்பித்துவிட்டது. இந்த இறையிய லின்படி ஆத்தும்தான் தலைமைத் தெய்வமா கக் கருதப்பட்டது. இத்தெய்வம் சூரியக் கடவுளாகிய ஆத்தும்-ரேயோடு ஒருமைப் படுத்தப்பட்டது. எகிப்திய வரலாற்றில் அரசி யல் துறையைப் பொறுத்த வரையில் கெலி யாப்போலி முக்கியத்துவம் பெறவில்லை யென்றாலும், முக்கியமான வழிபாட்டுத் தலமாக விளங்கியது.

சூரியவழிபாட்டிற்கு இந்நகர் பெயர் போன நகராகும். சூரியக்கடவுள்தான் இவ் வுலகினைப் படைத்தவராகக் கருதப்பட் டார். சமயத்துறை சார்ந்த கருத்துக்களுக்கும் வழிபாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் இங்கு அளிக்கப்பட்டது.

கெலியாப்போலி என்ற ஓன் நகரம், தென் எகிப்தின் 13-ஆவது பகுதிக்குத் தலைநகராக வும், சூரியக்கடவுள்களான ஆத்தும் மற்றும் ரேயின் வழிபாட்டு மையமாகவும் விளங்கி யது (எரே 43:13).

2 பகால்பேக்கு என்பதன் கிரேக்கப்பெயர்.

கெலிலோத்து (GELILOTH - வட்டம்))

பென்யமினையும் யூதாவையும் பிரிக்கும் எல்லையில் அதும்மிம் ஏற்றத்திற்கு எதிராக உள்ள ஓர் இடம் (யோசு 18:17). எரிகோவி லிருந்து எருசலேமுக்குச் செல்லும் சாலையில் எருசலேமிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. நல்ல சமாரியன் சத்திரமாக நெடுங் காலம் அடையாளம் கட்டப்பட்ட கான் ஏல்-அக்மாராக இருக்கலாம். அல்லது 1.5 கி.மீ. மேற்கிலுள்ள அராகு ஏத்-தெபீராக இருக்கலாம். யோசு 15:7-இல் குறிக்கப்படும் கில்காலும் இதுவும் ஒரே இடத்தைக் குறிக்க லாம். காண்க. கில்கால்.

கெலிற்றா (KELITA - குள்ளமான, முடமான)

லேவியரான இவர், திருச்சட்ட நூலை எஸ்ரா வாசிக்க, அதை மக்களுக்கு விளக்கு வதில் உதவினார் (நெகே 8:7). புதுப்பிக்கப் பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட வருள் இவரும் ஒருவர் (10:10). எஸ்ராவால் வெளிநாட்டு மனைவிகளை விட்டுவிடும் படி இவர் கட்டாயப்படுத்தப்பட்டார் (10:23). கேலாயா, கெலிற்றா என்ற பெயர் கள் ஒரே மனிதரைக் குறிக்கின்றன.

கெலுகி (CHELUHI)

தாங்கள் வைத்திருந்த அந்நிய நாட்டுப் பெண்களை விலக்கிவிட வேண்டும் என்று எஸ்ரா என்பவரால் கட்டளையிடப்பட்டவர் களில் இவரும் ஒருவர் (எஸ் 10:35). பானி யின் மகன்.

கெலுபாய் (HELUBAI)

யூதாவைச் சேர்ந்த கெசிரோனின் வழித் தோன்றல் (1 நாள் 2:9). 1 நாள் 2:18, 42-இல் இவர் காலேபு என்றழைக்கப்படுகிறார்.

காண்க. காலேபு.

கெலூசு (CHELOUS)

யூதி 1:9-இல் குறிக்கப்படும் பாலஸ்தீனத் தில் உள்ள மூன்று நகரங்களுள் ஒன்று. தற்போதைய கலாசா என்ற இடமாக இருக்க லாம். முற்காலத்தில் இதுமேயாவில் அமைந்திருந்த அலுசா என்ற இடமாகவும் இருக்கலாம். இது ஆதி 16:4;யாத் 15:22 பற் றிய பாலஸ்தீனத் தார்குமில் குறிக்கப்படு கிறது. எருசலேமிலிருந்து தெற்கு நோக்கி எகிப்துக்குச் செல்லும் பாதையில் இருக்கின் றது. காசாவுக்கும் ஏதோமுக்கும் இடையே உள்ள வியாபார வழியில் உள்ளது. அரேபிய எழுத்தாளர்கள் ஏல்-காலுசு, ஏல்-கலாசா ஆகிய இரு இடங்களை வேறுபடுத்துகின்ற னர்.

கெலூபு (CHELUB - கூடை, கூடு)

இப்பெயர் காலேபு என்ற பெயரின் திரி பாக இருக்கலாம்.

1. யூதாவின் குலத்தைச் சேர்ந்தவர். சூகாவின் சகோதரனும் மெகிரின் தந்தையுமாவார் (1 நாள் 4:11). இங்கு கெலுபு என்பதும் 1 நாள் 4:1-இல் கர்மி என்பதும் காலேபு என்று வாசிக்கப்படலாம்.

2. எஸ்ரியின் தந்தையும் மன்னன் தாவீதின் அலுவலர்களில் ஒருவரும் ஆவார் (1 நாள் 27:26).

கெல்காத்து, எல்காத்து (HELKATH)

ஆசேர் பகுதியிலுள்ள ஒரு லேவிய எல்லைப்புறநகர். கேர்சோமியருக்குரியது (யோசு 19:25;21:31). மூன்றாம் துத்மோஸ் நகர்கள் பட்டியலில் கெல்காத்தைப்பற்றிய குறிப்பேடு வரலாற்றில் முதன்முறையாக இடம்பெற்றிருக்கிறது. 1 நாள். 6:75-இல் இது குக்கோக்கு (உக்கோக்கு) என்றழைக்கப்படுகிறது.

ஆக்கோ (அக்கோ) சமவெளியின் தெற்குக் கடைசியில் கர்மேல் மலைப்பகுதியில் கிசோன் ஆறு அருகில் இருந்ததாகக் கருதப்படுகிறது. இவ்விடம் ஒருவேளை இக்காலத்திய தேல் ஏல்-கர்பாசாக அல்லது தேல் ஏல் காசிசாக இருக்கலாம்.

கெல்காத்து அட்சூரிம், எல்காத்துஅட்சூரிம் (HELKATH- HAZZURIM - கூர்மையான பாறைகளை உடைய நிலம், எதிரிகளின் நிலம்)

கிபயோன் குளத்துக்கு அருகில் உள்ள இடம் இப்பகுதியாக இருக்கலாம். 'வலியோர் இடம்' என்று அழைக்கப்படுகிற இவ்விடத்தில்தான் யோவாப்பின் பன்னிருவரும் அப்னேரின் பன்னிருவரும் ஒருவருக்கொருவர் தலையைப்பிடித்து விலாவில் வாளால் குத்த அனைவரும் ஒருங்கே இறந்தனர் (2 சாமு 2:16).

கெல்காய், எல்காய் (HELKAI - யாவே என் பங்கு ஆவார்)

தலைமைக்குரு யோயாக்கிம் காலத்தில் மெரயோத்து வம்சத்தின் தலைவரும் குருவுமாவார் (நெகே 12:15).

கெல்தாய், எல்தாய் (HELDAI - அகழ்எலி)

1. ஒரு நெற்றோபாயர். ஒத்தினியேல் வழித்தோன்றல். தாவீதின் படையில் பன்னிரண்டாம் பிரிவுக்குத்தலைவர் (1 நாள் 27:15). தாவீதின் ஆற்றல்மிக்க வீரர்கள் பற்றிய இணைவாசகத்தில் இவர் கேலேது (ஏலேது) என்றழைக்கப்படுகிறார் (11:30). ஒருவேளை இவரும், 2 சாமு. 23:29-இல் வரும் கேலேபும் (ஏலேபு) ஒரே ஆளாக இருக்கலாம்.

2. இறைவாக்கினர் செக்கரியா காலத்தில் பாபிலோனில் வாழ்ந்து வந்த ஒரு யூதர். இவர் தலைமைக்குரு யோசுவாவின் தலையில் சூட்ட 'முடி' செய்யப் பொன், வெள்ளி கொணர்ந்தவர்களில் ஒருவர் (செக் 6:10.14). செக் 6:14-இல் வரும் ஏலேம் தவறாக இருக்க வேண்டும்.

கெல்பா, எல்பா (HELBAH)

அசேர் குலத்திற்குரிய ஒரு நகர். இங்கிருந்து இஸ்ராயேலர் கானானியர்களை விரட்ட முடியவில்லை (நீதி 1:31). இது அதே வரியில் வரும் அகிலாபின் இரட்டிப்புப் பெயராக இருக்கலாம். ஆகையால் சில பதிப்புகள் இதை விட்டு விடுகின்றன. ஆனால் இரண்டுமே மகலாபு என்ற பெயரின் (இக்காலக் கிர்பெத் ஏல்-மகலிபு, யோசு 19:29) பழுதுபட்ட வாசக வேறுபாடாக இருக்கலாம்.

கெல்பான்பிசின் (GALBANUM)

கெல்பான்பிசின் என்பது ஒரு தாவரத்திலிருந்து எடுக்கப்படுகின்ற ஒருவித பரிமளத் தைல வகை. இது பிசின் போன்றது. நறுமணமுள்ளது. அநேகமாக இந்தியாவிலிருந்தோ, பாரசீகத்திலிருந்தோ இறக்குமதி செய்யப்பட்டதாக இருக்கலாம். இது எங்கிருந்து கிடைத்தது என்பது பற்றி உறுதியாக எதுவும் கூறமுடியாது. யாத் 30:34-இன்படி திருஉறைவிடத்தில் எரிக்கப்பட்ட நறுமணத் தூபப்பொருள் தயாரிக்கப் பயன்பட்ட பொருட்களில் இதுவும் ஒன்று.சீரா 24:15-இல் ஞானத்தைப் போற்றும்போது உருவகமாக இப்பொருள் பயன்பட்டுள்ளது.

கெல்போன், எல்போன் (HELBON - செழிப்பான)

தீர் நகரத்திற்கான புலம்பலில் குறிக்கப்பட்ட ஒருநகரம். அதனுடைய திராட்சைரசத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்தது (எசே 27:18). இன்றும் திராட்சை பயிரிடுதலை முக்கியத்துவமாகக் கொண்டு விளங்கும், தமஸ்குவின் வடமேற்கில் 29 கி.மீ. தொலைவில் லெபனோன் எதிர்ப்பகுதியில் உள்ள இக்காலக் கெலிவுனும் இந்தக் கெல்போனும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

கெல்லயாயியர் (CHELLEANS)

இசுமயேலர் வாழ்ந்த பகுதியின் வடக்கே குடியிருந்த மக்கள் இவர்கள் (யூதி 2:13). பல்மைராவுக்கும் யூப்பிரத்தீசு நதிக்கும் இடையேவுள்ள பழங்காலக் கொல்லே என்ற பகுதியில் வாழ்ந்தவர்கள் என்று தெரிகிறது. தற்போது இது ஏல்கொல்லே என்றழைக்கப்படுகிறது. இம்மக்கள் அரேபியப் பாலைவனத்தின் பக்கம் உள்ள கிழக்குப் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தனர் என்று விவிலிய அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

கெல்லேனிசம் (HELLENISM)

இது கிரேக்கப்பற்று, கிரேக்கப்பண்பாடு அல்லது கிரேக்க நாகரீகம், முக்கியமாகப் பழங்காலக் கெல்லேனியர்களின் உயர்ந்த பண்பாடு அல்லது மனிதப்பண்பு ஆகியவற்றை உணர்த்தும். நவீன எழுத்தாளர்கள் மத்தியில் இப்பண்பாட்டின்பால் காட்டப்படும் ஆர்வத்தையும் பற்றையும் உணர்த்தும். ஆனால் வரலாற்று ஆசிரியர்கள் கி.மு. 334-325-இல் அலக்சாந்தர் பெற்ற வெற்றியின் விளைவாக மத்திய தரைக்கடல் உலகத்திலே பரவிய நாகரீகம் என்று பொருள் கொடுக்கிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாகக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எருசலேமில் வாழ்ந்த கிரேக்க ஆதரவாளர்களின் தீவிரச் செயல்கள் நான்காம் அந்தியோக்கு ஆண்ட போது ஆபத்தான ஒரு நிலைக்கும், நீண்ட மக்கபேயர்களின் சுதந்தரப்போருக்கும் இட்டுச் சென்றது. யூதமதத்திற்குள்ளே உட்பூசலையும் உருவாக்கியது. இதன்விளைவாக அவர்களிடையே தனித்து ஒதுங்கிவாழும் தன்மையையும் தாங்கள் மேலானவர்கள் என்ற மனப்போக்கையும் வளர்த்தது. இந்நிலை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வந்தது. ஆதிக்கிறிஸ்தவர்கள் காலத்தில்தான் இந்த எண்ணங்கள் மாற்றப்பட்டு ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன (அ.ப. 15; கலாதியார்).

கெவிலா, அவிலா (HAVILAH - மணற்பூமி) - ஆள்

1. கூசின் மகனும் காமின் பேரனும் ஆவார் (ஆதி 10:7;1 நாள் 1:9).

2. சேமின் வழித்தோன்றலும் யோக்தானின் மகனும் ஆவார் (ஆதி 10:29; 2 நாள் 1:29).

கெவிலா, அவிலா (HAVILAH - மணற்பூமி) - இடம்

ஏதேன் தோட்டக்கதையில் குறிக்கப்படும் இடமாகும். இப்பகுதியில் பிசோன் ஆறு ஓடுகிறது. இப்பகுதியில் பசும்பொன், நறுமணப் பொருட்கள், வண்ணமணிக்கற்கள் நிறைய உண்டு (ஆதி 2:11). இந்த ஆறு எங்கு ஓடியது என்பது பற்றிப் பல யூகங்கள் உண்டு. இதற்கு வாடி ஏல்-தவாசிரை அடையாளம் காட்டினால், அரேபியாவின் மேற்குக் கடற்கரையில் ஏமனுக்கு வடக்கில் கெவிலாவுக்கு இடம் சுட்டலாம். நாடுகளின் பட்டியலில், மரபுமுறைப்பட்டியல் புவியியல் இடங்களைச் சுட்டினால், கெவிலா அராபிய இடப்பெயர்களாக இருக்கலாம் (ஆதி 7:29; 1 நாள் 9:29; காண்க கெவிலா - ஆள் -1 மற்றும் 2). இது இசுமயேல் பகுதியின் கிழக்கு எல்லையாகத் தெரிகிறது (ஆதி 25:18).

கெற்றூரா (KETURAH - நறுமணப்பொருள், சாம்பிராணி)

இவள் ஆபிரகாமின் இரண்டாவது மனைவி. இவள் ஆபிரகாமுக்கு ஆறு மைந்தர்களைப் பெற்றுத் தந்தாள் (ஆதி 25:1-6; 1 நாள் 1:32-33). சாராளின் மரணத்திற்குப்

பின் ஆபிரகாம் இவளை மணம் முடித்திருக்கக்கூடும். கெற்றூரா ஆதி 25:6-இல் இவள் ஆபிரகாமின் வைப்பாட்டியென அழைக்கப் படுகிறாள். ஆபிரகாம் இவர்களுக்கு வெகுமதி அளித்துக் கீழை நாட்டிற்குஅனுப்பி வைத்தார். எபிரேய மக்கள் இவர்கள் மூலமாக அரேபியர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டனர். கெற்றூராவின் மைந்தர்கள் பாலஸ்தீனத்திற்குக் கிழக்கில் வாழ்ந்த அரேபியர்களின் குலப்பெயர் முன்னோர் ஆனார்கள் (ஆதி. 25:4-6). இவர்கள் வழியாக ஆபிரகாம் எண்ணற்ற நாடுகளுக்குத் தந்தையானார் (17:4).

கெனசரேத்து (GENNESARET - இளவரசனின் தோட்டம்)

1. கலிலேயாக் கடலின் முந்தைய பெயர்.

2. கலிலேயாக் கடலுக்கு வடமேற்கில் உள்ள நீரும் வளமும் நிறைந்த பள்ளத்தாக்கு.

யோசிபசின் கூற்றுப்படி இது 6 கி.மீ. நீளமும் 4 கி.மீ. அகலமும் உடையது. இதன் தட்பவெப்பநிலை மலைகளாலும் ஏரிகளாலும் மட்டுப்படுத்தப்பட்டது. இங்கு பனை, அத்தி, ஒலிவா, திராட்சை போன்றவை பயிர் செய்யப்பட்டன. கலிலேயாக்கடலில் மீன் பிடித்தலும், விவசாயத்தைப் போல், இப்பகுதியைச் செல்வச் செழிப்புள்ளதாக்கியது. யோசிபசின் கூற்றுப்படி சமவெளியின் தென்பகுதியிலுள்ள மகதலா என்ற ஊரில் நான்குபேர் கொண்ட 230 படகுகள் இருந்தன. இப்பகுதியில் மகதலாதான் மிகப் பெரிய நகரம். இங்கு 40,000 பேர் வாழ்ந்தனர். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இப்பகுதியில் மக்கள் மிகுதியாக வாழ்ந்தனர். மற்றொரு முக்கிய நகரம் கப்பர்நாகும் ஆகும். இயேசுவும் அவரது சீடர்களும் தங்கள் பணிக் காலத்தின் ஒரு பகுதியில் கப்பர்நாகுமில் வாழ்ந்தனர் (மத் 9:1). இங்கிருந்து, அவர்கள் மலைப்பகுதிகளுக்கும் நகரங்களுக்கும் சென்று தங்களதுபோதிக்கும், குணமளிக்கும் பணிகளைச் செய்தனர். கெனசரேத்தின் விவசாயமும், மீன்பிடித்தலும், இயேசுவுக்கு உவமைகளில் பயன்படுத்தப் பல உருவங்களை அளித்திருக்க வேண்டும்.

கெனனியா (CHENANIAH - யாவே பலப்படுத்துகிறார்)

1. தாவீது மன்னன் உடன்படிக்கைப் பெட்டகத்தை எருசலேமுக்கு ஆடம்பரமாகக் கொண்டுவந்தபோது இந்த லேவியர் தலைவர். பாடல்களைத் தொடங்கும் பாடகர் தலைவர் (1 நாள் 15:22.27).

2. ஆலயத்துக்குப்புறம்பே இஸ்ராயேலருக்குக் கல்வி புகட்டுவதும், நீதி வழங்குவதுமாகிய வெளிவேலையைக் கவனிக்க நியமிக்கப்பட்ட ஒருவர். இசுரகியா குலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 26:29. நெகே 11:16).

கெனாசு (KENAZ - வேட்டையாடுகிற)

1. எலீப்பாசின் மகனும் ஏசாவின் பேரனுமாவார் (ஆதி 36:11; 1 நாள் 1:36). இவர் ஏதோமிய குலத்தின் தலைவராய் இருந்தவர் (ஆதி 36:15.42; 1 நாள் 1:53). கெனிசியரின் குலப்பெயர் முன்னோர் (ஆதி 15:19).

2. எபுன்னேயின் மகனான காலேபின் பேரன் (எண் 32:12;யோசு 14:6.14). ஏலாவின் மகன். யூதாகுலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 4:15).

3. யூதாவைச் சேர்ந்தவர்; செராயா, நீதிபதி ஒத்தினியேல் ஆகியோரின் தந்தை (1 நாள் 4:13). எபுன்னேயின் மகனான காலேபின் சகோதரன் என்றழைக்கப்படுகிறார் (யோசு 15:17;நீதி1:13;3:9.11).

கெனாத்து (KENATH - உடைமை, சொத்து)

இது கிழக்குக் கிலயாத்தில் உள்ள ஓர் ஊர். நோபாகு என்ற மன்னன் இதைக் கைப்பற்றி இதற்கு நோபாகு என்ற தன் பெயரை இட்டான் (எண் 32:42). இருப்பினும் இந்நகரின் பழைய பெயர் வழக்கத்தில் இருந்தது. ஏனெனில் 1 நாள் 2: 23 கெசூர், ஆராம் என்போர் கெனாத்தைக் கைப்பற்றியதாகக் கூறுகிறது. இவ்வூர் தற்போதைய ஏல் கவுரானில் உள்ள கனாவாத்தாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. இது கலிலேயாக் கடலுக்கு வட கிழக்கில் 97 கி.மீ. தொலைவில் அவ்ரானித்திசின் சுற்றுப்புறத்தில் உள்ளது.

கெனானா (CHENAANAH - வணிகன்)

1. ஆகாபு காலத்தில் இறைவாக்கினரான செதேக்கியாவின் தந்தை (1 அர 21:11.24;2 நாள் 18:19.23).

2. பென்யமின் இனப்பட்டியலில் குறிக் கப்படுகிறார். பில்கானின் மகன் (1 நாள் 7:10). ஆனால் இது தவறாக இருக்கலாம். ஏனெனில் 1 நாள் 7:6-12- இல் வரும் பெயர்கள் செபுலோன் இனத்தைச் சேர்ந்த வையாக இருக்கலாம்.

கெனானி (CHENANI - வாங்குதல்)

யூதர்கள் நாடு கடத்தப்பட்ட நிகழ்ச்சிக்குப் பின் வாழ்ந்த ஒருலேவியர். எஸ்ரா மக்கள் முன் சட்டத்தை வாசித்தபோது இவரும் அங்கிருந்தார். மக்களின் குற்றங்களை அறிக் கையிட்டு ஆண்டவரிடம் அபயமிட்டவர் களில் ஒருவர் (நெகே 9:4).

கெனிசியர் (KENIZZITE)

கெனிசியர்களைப் பற்றிய குறிப்புக்கள், சிறப்பாகக் கெனாசு என்ற பெயர் ஒரு தனி ஆளைமட்டுமன்று ஒரு சமூகக் குழுவையும் குறித்ததால், ஒரு சிக்கல்மிக்க சமூக, அரசி யல் வரலாற்றைச் சுட்டுகிறது. இவர்கள் இஸ்ராயேலருக்குமுன்பே கானானில் குடி யேறியவர்களாவர் (ஆதி 15:19). இவர்கள் தென்கிழக்கிலிருந்து - அனத்தோலியாவி லிருந்து நெகேபுக்குள் குடியேறியிருக்கலாம். இவர்களில், கெபிரோனில் குடியேறிய காலேபியர்கள் (யோசு 14:6.14;15:52-54) தெபீரில் குடியேறிய ஒத்தினியேலர்கள் (யோசு 15:15-14; நீதி 1:11-15), நெகேபின் தென்கோடி மலைப்பகுதியில் குடியேறிய எரகுமவேலியர் (1 சாமு 27:10;30:29) ஆகி யோர் அடங்குவர். தென்யூதாவிலோ வட நெகேபிலோ நிலைபெற்ற இவர்கள் முத லில் ஏதோமியரோடு, அநேகமாகச் சேனியர்க ளோடு, இணைந்தவர்களாகத் தோன்றுகின் றனர். பின்னவர்களிடமிருந்து இவர்கள் செம்பொன் மற்றும் இரும்புத் தொழில் களைக் கற்று இருக்கவேண்டும் (1 நாள் 4:13-14). பிற்காலத்தில் இவர்கள் யூதாவின் வழித்தோன்றல்களின் பட்டியலில் சேர்க்கப் படுகின்றனர். கானானை வெற்றி பெறுவ தில் இஸ்ராயேலர்களோடு சேர்ந்து கொண்ட கலப்புக் கூட்டத்தில் இவர்கள் சேர்ந்து கொண்டனர் என்று காட்டுகிறது (யாத் 12:38; எண் 11:4).

கெனீசா (GENIZAH - உறை, மறைப்பு, கிடங்கு களஞ்சியம்))

செபக் கூடத்தில் பயன்படுத்தப்படாத ஓர் அறை அல்லது இடம். பயன்படுத்த முடி யாத திருநூல்களையும், தவறான கருத்துக் களைக் கொண்ட நூல்களையும் யூதர்கள் இவ் வறையில் போட்டு வைத்தனர். இவ்வாறு, கையால் எழுதப் பெற்ற அல்லது அச்சிடப் பட்ட, இறைவனின் பெயரைத் தாங்கிய நூல்கள் எல்லாம் அவமதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டன. இத்தகைய கெனீசாக்க ளில் எல்லாம் மிகவும் புகழ் வாய்ந்தது கெய்ரோ நகரில் உள்ளதாகும். இதன் காலம் கி.பி. 886-ஆகக் கணக்கிடப்படுகிறது. இத னுள் ஏறக்குறைய 3 இலட்சம் துண்டுப் பகுதிகள், எபிரேயம், அரமேயிக்கு, அராபி யம், சமாரித்தன், கிரேக்கம் ஆகிய மொழி களில் காணப்பட்டன.

கெனுபத்து (GENUBATH - திருட்டு)

அரசகுல ஏதோமியனாக இருந்து பிறகு எகிப்துக்கு ஓடிச் சென்ற அதாது என்பவருக் கும் எகிப்திய அரசி தபினேசுவின் தங்கைக் கும் பிறந்த மகனாவார். (1 அர 11:20). தபினேசு கெனுபத்தை அரச மகன்களில் ஒருவனாகத் தத்தெடுத்துக் கொண்டிருப்பதா கத் தெரிகிறது.

கென்னாயு (GENNAEUS)

ஐந்தாம் அந்தியோக்கு மன்னரின் ஆட்சிக் காலத்தில் பாலஸ்தீன நாட்டில் ஒரு பகுதி யில் ஆளுநராக இருந்த அப்பொல்லோனியு என்பவரின் தந்தை (2 மக் 12:2).

கே

கே/ஏ (HE)

எபிரேய நெடுங்கணக்கில் ஐந்தாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதமான 119-இல், ஐந்தாவது பகுதிக்குத் தலைப்பாக அமைந் துள்ளது. இப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்துடன் தொடங்குகிறது.

கேகசி (GEHAZI - காட்சியின் பள்ளத்தாக்கு)

இறைவாக்கினர் எலிசாவின் ஊழியர். (2 அர 4:12;5:20;8:4). குழந்தைப்பேறு இல்லாத சூனேமியளுக்கும் அவளது கணவருக்கும் குழந்தைப்பேறு அளித்து அவர்கள் அளித்த நீண்டகால விருந்தோம்பலுக்குக் கைம் மாறு செய்யவேண்டும் என்று எலிசாவுக்கு ஆலோசனை கூறியவர் கேகசிதான் (2 அர 4:8-37). அதன்படியே குழந்தைபிறந்து சில ஆண்டுகள் கழித்து இறந்தபோது, கேகசி எலிசாவின் உயிர் அளிக்கும் ஊன்று கோலை எடுத்துக் கொண்டு போய்ச் சிறுவனின் முகத் தின்மேல் வைத்தார். ஆனால் அந்தச் சிறு வன் உயிர் பெறவில்லை. சூனேமியள் தன் வீட்டையும் நிலத்தையும் தனக்குத் திரும்பக் கொடுக்கும்படி அரசனிடம் முறையிட வந்த போது, கேகசி எலிசா செய்த புதுமைகளை யெல்லாம் அரசனிடம் எடுத்துக் கூறினார் (2 அர 8:1-6).

மேலும் சிரியனான நாமானின் தொழு நோயை எலிசா இலவசமாகக் குணமாக்கிய வுடன், கேகசி பேராசை கொண்டு நாமானிட மிருந்து இரு தாலந்து வெள்ளியும் இரு உடைகளும் பெற்றுக்கொண்டார். இதை அறிந்த எலிசா அவர் மேல் கோபம் கொண்டு சபித்து அவருக்குத் தொழுநோய் வரச் செய்தார் (2 அர 5:19-27).

கேகன்னா (GEHENNA - நெருப்பு நிறைந்த நகரம்)

இது எருசலேமிற்குத் தெற்கேயுள்ள ஒரு கணவாயின் பெயர். இஸ்ராயேல் மக்களை அரசர்கள் ஆண்டபோது இந்த இடத்தில் தான் அரசர்கள் பிற சிலைகளுக்குத் தூபம் காட்டவும், புறவினத்தாரின் வழக்கத்தைப் பின்பற்றிக் குழந்தைகளைத் தீயில் எரித்துப் பலியிடவும் செய்தனர் (2 அர 23:10; 2 நாள் 28:3; 33:16; எரே 7:3; 32:35). இதன் காரண மாக எரேமியா இந்த இடத்தைச் சபித்து, அது ஒரு படுகொலையின் பள்ளத்தாக்காக இருக் கும் என இறைவாக்குரைத்தார் (எரே 7:32; 19:6). இன்று வாடி என்னாரை, சீயோன் மலையோடு இணைக்கும் வாடி எர் ராபாபி தான் இன்னோம் பள்ளத்தாக்காகும்.

கி.மு. முதலாம் நூற்றாண்டில், மரணத்துக் குப்பிறகு அல்லது இறுதித் தீர்ப்புக்குப் பிறகு தீயவர்களைத் துன்புறுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தைக் குறிப்பதற்கு இந் தப் பள்ளத்தாக்கின் பெயரை உருவகமாகப் பயன்படுத்தி வந்தனர். பழைய ஏற்பாட்டில் தண்டனைத் தீ பற்றிய கருத்து உப 32:22; எசா 33:14 ஆகியவற்றில் காணப்படுகிறது. ஆனால் கிரேக்க - உரோமையர்களின் ஆட் சிக்காலத்தில்தான் தீ நிறைந்த பாதாளம், எரிகின்ற நரகம், தீயவர்கள் துன்புறும் இடம் முதலியவை பற்றித் தெளிவான கருத்துக்கள் உருவாயின (தானி 7:10; யூதி 16:17). இது இரானியர்களின் கருத்தாகிய தீயவர்கள் இறு தியில் உருகிய உலோக ஓடையில் தீர்ப்பிடப் படுவார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டது.

ஆனால் திருமுறைப்பட்டியலில் சேராத நூல்களில் இத்தண்டிக்கும் இடம் கேகன்னா என்று அழைக்கப்படவில்லை. இப்பள்ளத் தாக்கைப் பற்றிய எரேமியாவின் இறைவாக் கினால்தான் நரக தண்டனைக்கு இவ்விடம் ஒப்பிடப்படுகிறது (எரே 19:2-10).

புதிய ஏற்பாட்டில் 7 முறை கேகன்னா என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (மத் 5:22.29-30; 10:28; 18:9; 23:15,33; மாற் 9:43.45.47; லூக் 12:5; யாக் 3:6). அது ஒரு நெருப்பு நிறைந்த இடம் (மத் 5:22; யாக் 3:6; மாற் 9:43). தீயவர்கள் இங்கு உடலோ டும் ஆன்மாவோடும் அழிக்கப்படுவார்கள்

(மத் 10:28; 18:9; மாற் 9:45.47; லூக் 12:5). பரிசேயர்கள் கேகன்னாவின் மக்கள் (மத் 23:15). அவர்கள் கேகன்னாவின் தண்டனைக்கு ஆளாவார்கள் (மத் 23:33).

மேலும் புதிய ஏற்பாட்டில் கேகன்னா என்பதும், பாதாளம், இறந்தவர்கள் இருக்குமிடம், இறுதியில் எறியப்படும் இடமான 'நெருப்புக் கடல்' என்பவையும் ஒன்றே என்பது தெளிவாகிறது (திருவெளி 20:14). கேகன்னா என்ற பெயர் பயன்படுத்தப்படாமல் பல இடங்களில் நெருப்புத்தண்டனை பற்றிய குறிப்புகளைப் புதிய ஏற்பாட்டில் காணலாம் (மத் 3:10.12; 7:19; லூக் 3:9.17; மத் 18:8; 25:41; திருவெளி 14:10; 17:16; 18:18; 19:20; 20:9-15; 21:8; 2 பேதுரு 2:4). பொதுவாக இப்புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் அவர்கள் காலத்திய யூத மதத்தினரின் உருவகங்களையே பயன்படுத்தி வந்தனர். ஆனால் இக்கருத்து தெளிவாக விளக்கப்படவில்லை. ஏனெனில், கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யூதக் குருக்களின் கூற்றுப்படி, பெரிய தீமை புரிந்தவர்கள், விபச்சாரம் செய்தவர்கள் ஆகியவர்களைத் தவிர மற்ற எல்லா யூதர்களும் கேகன்னாவிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். கேகன்னாவின் தண்டனை 12 மாத காலமே நீடிக்கும் என யூத ராபி அக்கிபா கூறுகிறார். ஆனால் பிலோவின் கருத்துப்படி, அத்தண்டனை நித்தியத்துக்கும் உரியதாகும்.

கிரேக்கர்கள் ஆண்ட காலத்தின் இறுதி நாட்களைப் பற்றிய காட்சிகள் எல்லாவற்றையும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள ஆட்களின் பெயர்களுக்கும் இடங்களுக்கும் ஏற்றிச் சொல்கின்ற வழக்கம் இருந்தது. அவ்வாறுதான் கேகன்னாவும் பயன்படுத்தப்பட்டது. அதுபோன்றே திருவெளி 16:16-இல் அருமகதோன் என்ற இடம் சாத்தானுக்கு எதிராக இறுதிப்போர் நடக்கும் போர்க்களம் (செக் 12:11) என்றும், சாக்கடல் சுருள்களில் 'தமாஸ்கு பாலைவனம்'தான் மீட்பர் வருவதற்கு முன்னால் விசுவாசிகள் நாடு கடத்தப்படும் இடம் (ஆமோ 5:27) என்றும் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. மேலும், இறுதி நாட்களைப் பற்றிக் கூறும் போது 'புதிய எருசலேம்' ''தோபேத்து'' என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. விண்ணகத்தைக் குறிப்பதற்கு 'இன்பவனம்' என்ற சொல்லும் அதன் எதிர்மறைச் சொல்லாகக் கேகன்னாவும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு ஏற்றிக்கூறும் வழக்கம் பிறநாட்டுக் கருத்துக்களை யூத மறைக்குக் கொண்டு வரப்பெரிதும் உதவியது.

அதே போல மிஸ்னாவில் பல இடங்களில் கேகன்னா உருவகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. குரானிலும் இவ்வாறு பயன் படுத்தப்பட்டுள்ளது (சூரா 19:69).

ஆனால் புதிய ஏற்பாட்டில் சில நூல்களில் இத்தகைய உருவகம் பயன்படுத்தப்படவில்லை. புறவினத்தாராயிருந்த கிறிஸ்தவர்களுக்கு யூத மறையின் திருவெளிப்பாடுகளும் இறுதி நாட்கள் பற்றிய காட்சிகளும் பொருளற்றவை என்பதால் இவை விடப்பட்டிருக்கலாம். எனவே கடவுளின் கோபத்தையும், பாவ தண்டனையையும் விளக்க அவர்கள் வேறு உருவகங்களைப் பயன் படுத்தினர். புனித யோவானின் கருத்துப்படி தீர்ப்பினாலும் (3:8; 5:24 தொ; 12:31.48; 16:11) இறப்பினாலும், அதாவது மகன் அளிக்கும் முடிவற்ற வாழ்விலிருந்து புறம் பாக்கப்படுவதாலும் (5:29; 8:24; 10:28; 11:25 தொ; 12:25), இருளினாலும் (8:12; 12:44-46) பாவத்திற்குத் தண்டனை அளிக்கப்படுகிறது. பவுலின் கூற்றுப்படி, பாவத்தின் சம்பளம் மரணமாகும் (உரோ 6:23); பாவிகளுக்கு இறைவனின் அரசில் பங்கில்லை (1 கொரி 6:10; கலா 5:19-21). பாவிகள் முடிவற்ற அழிவுக்குள்ளாவார்கள் (2 தெச 1:9; எபி 10:26-31).

கேசான் (GESHAN - இறுதியான)

காலேபின் வழித்தோன்றல். எகிதாயின் மூன்றாம் மகன் (1 நாள் 2:47).

கேசிர், ஏசிர் (HEZIR - பன்றி, காட்டுப்பன்றி)

1. ஆரோனின் வழித்தோன்றல். தாவீது ஆட்சியின்போது குருகுலத்தின் பதி

னேழாம் பிரிவின் குலப்பெயர்த்தலை வர் (1 நாள் 24:15).

2. எஸ்ராவின் உடன்படிக்கையின்போது கையொப்பமிட்டவர்களில் ஒரு குலத் தலைவர் (நெகே 10:20).

கேடயம் (SHIELD, BUCKLER)

போரில் பயன்பட்ட அடிப்படைப் பாது காப்புக்கருவியாகும். வெடிமருந்துகள் கண்டு பிடிக்கப்படுமுன் போரில் கேடயம் பயன் பட்டது. இஸ்ராயேல் தோன்று முன்பே கேடயம் போரில் பயன்பட்டுள்ளது. வடி வத்திலும் பருமனிலும் கேடயங்கள் வேறு படும். ஒருவருடைய உடலை முழுவதும் மறைக்கக்கூடிய பெரிய கேடயம் உண்டு. இது சில சமயம் கேடயம் தாங்குவோனால் சுமந்து செல்லப்படும் (1 சாமு 17:7.41). அல்லது முகத்தையும் மேல் உடலையும் மட்டும் மறைக்கும் சிறிய கேடயமும் உண்டு. இது உடலில் போர்க்கவசம் அணி யப்பட்டிருக்கும்போது பயன்படுத்தப்பட் டது. கேடயங்கள் பொதுவாக மரத்தால் செய்யப்பட்டு, தோலால் மூடப்பட்டிருந் தன. தோல் வெடித்துப் போவதைத் தடுக்க தோலை எண்ணெய் பூசிப் பளபளப்பாக வைத்திருக்க வேண்டும். அரிதாக உலோகத் தால் கேடயங்கள் செய்யப்பட்டன. மரத்தை யும் தோலையும் வலுவாக்கக் குறிப்பாக முகத்தை மறைக்கும் பாகத்தை வலுவாக்க உலோகம் பயன்பட்டது.

பழைய ஏற்பாட்டில் கேடயத்தைக் குறிக்க மூன்று சொற்கள் பயன்படுகின்றன. ''மாசேன்'' என்ற சொல் சிறிய வட்டவடிவ மான கேடயத்தைக் குறித்தது. இதை வில் வீரர்களும் வாள்வீரர்களும் பயன்படுத்தி னர் (1 நாள் 5:18; 2 நாள் 14:8; 17:17). ''சின்னா'' என்ற சொல் பெரிய செவ்வக வடிவமான கேடயத்தைக் குறித்தது. இதை வேலைத் தாக்கும் ஆயுதமாகக் கொண்டவர்கள் பயன்படுத்தினர் (14:18). இந்த இரு சொற்களும் ஒன்று மற்றதைக் குறிக்கப் பயன்படலாம். ''செலெத்'' என்ற சொல் கேடயத்தைப் பொதுவாகக் குறித்தது.

அரச மாளிகையையும் (1 அர 10:16-17) எருசலேம் ஆலயத்தையும் (2 நாள் 23:9) அழகு செய்ய உலோகத்தால் செய்யப்பட்ட சிறிய, பெரிய கேடயங்கள் பயன்பட்டன.

உருவகமாக இறைவன் கேடயம் என்று குறிக்கப்படுகிறார் (ஆதி 15:1; சங் 3:35; 18:2.30; 33:20; 84:11; ...). கேடயம் இறைவனு டைய பாதுகாப்பின் (சங் 18:3; 8:9) அடையா ளமாகும். புதிய ஏற்பாட்டில் கேடயம் ஒரே ஒருதரம் பயன்பட்டுள்ளது. விசுவாசம் கேட யம் என்றழைக்கப்படுகிறது (எபே 6:16). அது கிறிஸ்தவனின் உயிர்நாடியான பாது காப்பாகும்.

கேடயம் தாங்குவோன், பரிசையன் (SHIELD - BEARER)

படைத்தலைவனின் கேடயத்தை ஏந்திச் செல்லும் ஏவலன் (1 சாமு 17:7. 41).

கேதமா (KEDEMAH - கீழ்த்திசை)

இது இசுமயேலின் ஒரு மகன் பெயர். இப்பெயர் ஓர் அரேபிய இனத்தையும் குறிக் கிறது (ஆதி 25:15; 1 நாள் 1:31). இப்பெயரும் நோதாபும் ஒரே ஆளைக் குறிப்பதாகத் தெரிகிறது.

கேதார் (KEDAR - கருப்பான், வலிமைமிக்க)

இசுமயேலின் இரண்டாவது மகனின் பெயர் (ஆதி 25:13; 1 நாள் 1:29). மேலும் இப்பெயர் ஒரு முக்கியமான அராபிய இனத் தின் குலப்பெயருமாகும். சில தலைமுறை வரலாற்று மேதைகள் முகம்மது இந்தக் கேதார் சந்ததியில் வந்தவர் எனக் கருதுகின்ற னர்.

1. **விவிலிய விளக்கம்:-** கேதார் மக்கள் பாலைவனத்தில் (எசா 42:11) கருப்புக் கூடா ரங்களில் (உ.ச. 1:5; சங் 120:5; எரே 49:29) தனித்து (எரே 49:31) வசிப்பவர்கள். இவர்க ளில் சிலர் அரணில்லா ஊர்களில் வாழ்ந்த னர் (எசா 42:11). இவர்கள் ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் (எசா 60:7; எரே 49:29.32). தங்கள் கால்நடைகளை விற் கத் தீர் நகரம் வரை வந்தனர் (எரே 49:29.32; எசே 27:21). இவர்கள் முன் தலையை மழித்

துக் கொள்வர். இம்மக்களின் தலைவர்கள் வியாபாரத்தை முன்னின்று நடத்தினர் (எசே 27:22). கேதார் மக்கள் வலிமை வாய்ந்த வில் வீரர்கள் (எசா 21:17). பழங்கால மேற்காசியாவில் மேன்மைமிக்கவர்களாகத் திகழ்ந்தனர் (21:16).

2. தொடர்பு:- ஆதி ஆகமத்திலே கேதாரானது இசுமயேலின் மற்றப் பதினொன்று கோத்திரங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இவர்களில் பலர் வட அரேபியாவில் வாழ்ந்தவர்கள். இவர்கள் கீழ்த்திசை மக்களாகக் கருதப்பட்டனர் (எரே 49:28).

இவர்கள் மற்ற இடங்களில் சிரியா பாலஸ்தீனத்துக்குக் கிழக்கே வாழ்ந்ததாகக் கட்டப்படுகின்றனர் (ஆதி 29:1; நீதி 6:3; எசே 25:4:10). கேதார், தெதானியர், தேமானியர் மக்களோடும் (எசே 21:13-14) செலா (42:11) மிதியான், ஏப்பாகு, சேபா, நெபயோத்து (60:6-7), காசோர் (ஆட்சோர்) (எரே 40:28.33) ஆகிய நகரங்களோடும் தொடர்புபடுத்தப் படுகின்றனர்.

3. இருப்பிடம்:- கேதாரும் அவர்தம் சகோதரரும் கெவிலாவுக்கும், (அவிலா) (அரேபியாவில் உள்ள ஓர் இடம்) அசீரியாவுக்குப் போகிற வழியில் எகிப்து நாட்டிற்கு எதிராகக் காணப்படும் சூருக்கும் (எகிப்திற்குக் கிழக்கிலும் பாலஸ்தீனத்திற்குத் தெற்கிலும் உள்ளது) இடையிலுள்ள பகுதியில் வாழ்ந்தனர் (ஆதி 25:18). இப்பகுதியில் கேதார் மக்கள் மேய்ச்சல் நிலங்களை நாடிச் சுற்றித் திரிந்தனர்.

4. வரலாறு:- கி.மு. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசீரிய வெற்றிக் குறிப்பேடுகள் இம்மக்களும் அரேபியர்களும் ஒன்றே எனக் கூறுகிறது. நெபுகத்னேசார் மன்னன் இந்நாட்டைக் கைப்பற்றினான் (எரே 49:28). கேதார் மக்களின் அரசனாகிய கெசேம் எருசலேம் மதில் கட்டுமானப் பணியைத் தடைப்படுத்தினான் (நெகே 2:19; 6:1-2.6).

5. மதம்:- இம்மக்கள் உருவ வழிபாட்டைக் கொண்டவர்கள். அவர்களுக்கெனப் புண்ணியத்தலங்கள் இருந்தன. அவர்கள் தங்கள் கடவுளை நட்சத்திர வடிவமாக்கி வழிபட்டனர். அவர்கள் தண்ணீரையும் வழிபட்டதாகப் பாபிலோனியத் தால்மூது கூறுகிறது.

கேதுரு மரம் (CEDAR)

விவிலியக் காலங்களில் லெபனோன் மலைகள் கேதுரு மரங்களைக் கொடுக்கும் ஒரு சிறந்த இடமாக இருந்தது. ஆகவே தாவீதும் சாலமோனும் அங்கிருந்து அதிகமான அளவு மரங்களை இறக்குமதி செய்தனர் (2 சாமு 5:11; 7:2.7; 1 அர 5-7; 1 நாள் 14:1; 17:1.6; 22:4; 2 நாள் 2). இந்த மரக்கட்டைகள் பெரிய, பெரிய கட்டுகளாக லெபனோனிலிருந்து யோப்பாவிற்கு மிதந்து செல்லுமாறு விடப்பட்டன. சாலமோனுடைய கட்டடங்களில் ஒன்றில் மூன்று வரிசைகளில் 15 கேதுரு மரத் தூண்கள் இருந்ததால் அது ''லெபனோனின் வனம்'' என்று அழைக்கப்பட்டது (1 அர 7:2-5). கேதுரு மரங்கள் தூண்களாகப் பயன்படுத்தப்பட்டதுமன்றிக், கூரையாகவும் (7:7), விட்டங்களாகவும் (6:9; 7:2), பலகையாகவும் (6:15), செதுக்கு வேலைகளுக்கும் (6:18) பயன்படுத்தப்பட்டன. சாலமோன் காலத்தில் ''கேதுரு மரங்கள் செபேலாவில் உள்ள காட்டத்தி மரங்கள் போல மிகுதியாய் இருந்தன'' (1 அர 10:27). கப்பல் பாய்மரத்தைக் கேதுரு மரம் கொண்டு செய்வித்தனர் (எசே 27:5).

கேதுரு மரம் அடிக்கடி வலிமையின் அடையாளமாகவும் (சங் 29:5; 37:35; எசா 2:13; 19:10; செக் 11:2....), மேன்மையின் அடையாளமாகவும் (உ.ச. 1:17); (எரே 22:14...), மகிமையின் அடையாளமாகவும் (சங் 80:10; எரே 27:7; செக் 11:1;...) லெபனோனோடு சேர்த்துப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. எசே 31-இல் உள்ள கேதுரு மர உருவகம் அநேகமாகப் புராணப் பொருளைக் கொண்டதாகும்.

பிலயாம் இறைவாக்குரையில் வரும் கேதுருமரக் குறிப்பை விளக்குவது மிகவும்

கடினம்; ஏனெனில் நீரின் அருகில் இம்மரம் வளர்வதில்லை (எண் 24:6). கேதுரு மரக் கட்டை, ஈசோப்புடனும் கருஞ்சிவப்பு நூலுடனும் சேர்ந்து தொழுநோய்ச் சுத்திகரச் சடங்கில் பயன்படுத்தப்பட்டது (லேவி 14:4-6. 49-52). செங்கிடாரிச் சடங்கிலும் இது பயன்படுத்தப்பட்டது (எண் 19:6). இவை வேறுவகையான கேதுரு மரக்கட்டைகளைக் குறிக்கக்கூடும் என்று பிற தாவரவியல் வல்லுநர்கள் கருதுகின்றார்கள். இது சாலமோன் காலத்திற்குப் பிந்திய சடங்கு முறைகளைக் காலமயக்கமாக முன்னே குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது. இந்த முறையில் லெபனோன் கேதுரு நீண்ட ஆயுளின் அடையாளமாகப் பயன்பட்டது.

கேத்து (CHETT)

எபிரேய நெருங்கணக்கில் எட்டாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இல் எட்டாவது பிரிவுக்குத் தலைப்பாக உள்ளது.

கேத்து, ஏத்து (HETH)

நாடுகள் பட்டியலில் இத்தியர்களில் குல முதியவரின் பெயர். கானானின் இரண்டாவது புதல்வர் (ஆதி 10:5;23:10;1 நாள் 1:13). ஆபிரகாம் இத்தியர்களிடமிருந்து மக்பேலாவில் தன் கல்லறைக் குகையை வாங்கினார் (ஆதி 23;25:10;49:32). யாக்கோபு இத்தியப் பெண்களை மணப்பதை ரபேக்காவும் ஈசாக்கும் தடுத்தனர். (27:46). இப்பெண்களை அவர்கள் ''கனானியப்பெண்கள்'' என்றும் குறிப்பிட்டனர் (28:1.8).

கேபர், ஏபர் (HEPHER - கிணறு, உதவி) -ஆள்

1. மனாசே அல்லது கிலயாது கோத்திரத்தில் ஓர் இனத்தின் குலப்பெயர்த் தலைவர் (எண் 26:32-33;27:1; யோசு 17:2-3).

2. யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம் அல்லது ஒரு மனிதன். அஸ்கூர், நாரா ஆகியோரின் மகன் (1 நாள் 4:6).

3. தாவீதின் ஆற்றல்மிக்க மனிதர்களுள் ஒரு மெக்கராத்தியர் (1 நாள் 11:36). 2 சாமு 23:34-இல் இருந்து இப்பகுதி வேறுபட்டிருக்கிறது. இரண்டுமே பழுதுபட்ட வாசகங்களாக இருக்கலாம்.

கேபர், ஏபர் (HEPHER) - இடம்

கானானிய நகரம்; யோசுவாவால் தோற்கடிக்கப்பட்டது (யோசு 12:17). இது பிறகு சாலமோனின் மாவட்டங்களுள் ஒன்றாகக் காணப்படுகிறது. கேபர் நாடு முழுவதும் சாலமோனின் அதிகாரிகளுள் ஒருவரான பென் - கெதுது என்பவரின் கண்காணிப்பில் இருந்தது. அருபோத்து, சொக்கோவோடு இது ஆட்சிமுறைசார்ந்த மூன்றாவது மாவட்டமாகும் (1 அர 4:10). எட்டாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் கேபர் அருபோத்தோடு வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது.

கேபர் இருந்த இடம் துல்லியமாகத் தெரியவில்லை: இது அருபோத்துக்குக் கிழக்கே 3 கி.மீ. தொலைவில் கப்பிரே என்ற இடமும், தேல் இப்சாரும் ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கேபா (CEPHAS)

காண்க. பேதுரு.

கேபீம் (GEBIM - அகழி, பதுங்குகுழி)

பென்யமின் குலத்தோர் வாழும் இந்நகரம், எருசலேமை நோக்கி அசீரியர்கள் படையெடுத்துச் சென்ற பாதையில் அமைந்திருந்தது (எசா 10:31). இந்நகர் எங்கிருந்தது என்று சரியாகச் சொல்ல முடியவில்லை என்றாலும், எசாயாநூலில் ஆய் நகருக்கும், மிக்மாசு நகருக்கும் இடையே காணப்படுவதால் இவ்விரு ஊர்களுக்கும் அருகிலே இருந்திருக்கக்கூடும்.

கேரா (GERA - விருந்தாளி)

1. பென்யமின் புதல்வர்களில் ஒருவர். உண்மையில் இது பென்யமின் குலத்தின் இனப்பெயர் முதல்வரின் பெயராகும் (ஆதி 46:21). இணையான விவரிப்பு (1 நாள் 8:3) இவரைப் பேலாவின் மகனாகக் குறிப்பிடுகிறது. ஆகவே இவர் பென்யமினின் பேரனாவார்.

2. பென்யமினைச் சேர்ந்த நீதிபதி ஏகூதின் தந்தை (நீதி 3:15).

3. அப்சலோமின் கலகத்தால் தாவீது எருச லேமைவிட்டு ஓடும்போது அவரை வசை மொழி கூறிய சிமயி என்பவனின் தந்தை (2 சாமு 16:5;19:16.18;1 அர 2:8).

4. பென்யமினின் பேரன் (1 நாள் 8:3.5). 1 நாள் 8:5 இலிருந்து கூறப்பட்டவைகளே திரும்பவும் கூறப்பட்டிருப்பதால் கெரா ஏகூ தின் புதல்வராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கேரா (GERAH - கொட்டை)

எடையின் ஓர் அளவு. செக்கேலின் இருப தில் ஒரு பாகம் (யாத் 30:13; லேவி 27:25;எண் 3:47;18:16;எசே 45:12). 0.57 கிரா முக்குச் சமமான எடை

கேராசிம் (GE-HARASHIM - தொழிலாளிகளின் பள்ளத்தாக்கு)

சாரோன் சமவெளியின் தெற்கு எல்லையில் லோது, ஓனோ என்ற ஊர்களுக்கு அருகில் உள்ள பள்ளத்தாக்கிலிருந்து ஒரு தொழிலா ளிக்குழுவினர் பெயர் பெறுகின்றனர். இப் போது யோப்பா நகரையும் எருசலேம் நக ரையும் இணைக்கும் சாலையில், லோதுக் கும் ஓனோவுக்கும் இடையில் உள்ள வாடி எஸ்செலால் என்ற அகன்ற பள்ளத்தாக்கே தொழிலாளர்களின் பள்ளத்தாக்காக இருக்க லாம். வேறுசிலர், தென்மேற்கே உள்ள பள்ளத்தாக்கிலிருக்கும் சாராபாண்ட் ஏல்-காராப்பு என்ற இடமே தொழிலாளர்களின் பள்ளத்தாக்கு என்று கருதுகின்றனர்.

யூதாவின் குலத்தைச் சேர்ந்தவரும், கெனாசு வின் வழித் தோன்றலுமாகிய யோவாபு என்பவரே இந்தத் தொழிலாளிகள் குழுவின் தந்தை அல்லது அதை நிறுவியவர் (1 நாள் 4:14). அடிமைத்தனம் முடிந்து நாடு திரும்பி வந்தபோது பென்யமின் புதல்வர்கள் இப் பள்ளத்தாக்கில் குடியேறினர் (நேகே 11:35).

இப்பள்ளத்தாக்குக்கு ஏன் இப்பெயர் சூட் டப்பட்டது என்பது இன்றும் தெளிவாக வில்லை. ஆனால் இஸ்ராயேல் நாடு முழுவ தும் ஒரு கொல்லன் கூடக் காணப்படாத வாறு இஸ்ராயேல் மக்கள் தங்கள் போர்க் கருவிகளைக் கூர்மைப்படுத்தப் பெலிஸ்தியரி டம் சென்றதை இது நினைவூட்டுகிறது (1 சாமு 13:19-20).

கேருத் - கிம்காம் (GERUTH CHIMHAM - கிம்காமின் பேட்டை)

கேருத்-கிம்காம் பெத்லகேம் அருகில் உள்ள ஓர் இடம். இவ்விடம் இன்னும் கண்டுபிடிக் கப்படவில்லை. யோகனானும் இசுமயே லும் அவர்களோடு சேர்ந்த கொலையாளிக ளும் எகிப்துக்குத் தப்பியோடியபோது தங் கிச் சென்ற இடம் (எரே 41:17). பர்சில்லா யின் மகனான கிம்காமுக்கும் (2 சாமு 19:37-38) இந்த இடத்திற்கும் இடையே யுள்ள தொடர்பு தெளிவாக இல்லை.

கேரேசு, ஏரேசு (HERESH)

அடிமைத்தளையிலிருந்து மீண்டு திரும்பி வந்தவர்களில் ஒருவராகக் குறிப்பிடப்படும் ஒரு லேவியர் (1 நாள் 9:15).

இப்பெயர் அதன் இணைப் பகுதியான நெகே 11:15-16-இல் காணப்படவில்லை.

கேரோசு (KEROS - வளைந்த)

பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப்பின் எருசலேம் தேவாலயத்தில் வேலை செய்த ஒரு குடும்பத்தலைவனின் பெயர் (எஸ் 2:44).

கேர்சோம் (GERSHOM - அந்நியர், குடியேறி யவர்)

1. மதியான் நாட்டில் மோசேக்கும், சிப் போராவுக்கும் பிறந்த மூத்தமகன் (யாத் 2:22;18:3). இவரைத்தான் சிப்போரா விருத்த சேதனம் செய்திருக்க வேண்டும் (4:24-26). இவர் தாண் வம்சத்தினருக்கு மூத்த குருவாக இருந்த யோனத்தானின் தந்தையாவார் (நீதி 18:30). ஆரோனுடைய புதல்வர்களோடு மோசேயின் புதல்வர்களும் திருவிடத்தில் திருப்பணி புரியச் சேர்த்துக் கொள்ளப்பட்ட னர் (1 நாள் 23:13-16). கேர்சோம் குருகுலத் தின் வேலை கருவூலத் தலைமைக் கண்கா

ணிப்பாளனாய் இருப்பதாகும் (1 நாள் 23:16; 26:24).

2. கேர்சோன் என்ற பெயரின் மற்றொரு வடிவம். லேவியின் புதல்வரில் ஒருவர் (1 நாள் 6:1. 16-17. 20. 43;23:6-7). இவருடைய வழித்தோன்றல்கள் ''கேர்சோமின் புதல்வர்கள்'' என்று அழைக்கப்படுகிறார்கள் (1 நாள் 6:62.71;15:7).

3. பினகாசின் (குரு, ஆரோனின் பேரன்) வழித்தோன்றல். பாபிலோனிலிருந்து வந்த குலத்தலைவர்களில் இவரும் ஒருவர் (எஸ் 8:2).

கேர்சோன் (GERSHON)

லேவியின் மூன்று புதல்வர்களில் ஒருவர் (யாத் 6:16;எண் 3:17; 1 நாள் 6:1.16.43;23:6). யாக்கோபும் அவர் குடும்பத்தினரும் எகிப்து நாட்டுக்குக் குடிபெயர்வதற்கு முன்னால் இவர் பிறந்தார் (ஆதி 46:11). கேர்சோனுக்கு லிப்னி (1 நாள் 23:7;26:24-இல் இலாதான் என்றிருக்கிறது), சிமயி என்று இரு புதல்வர்கள் உண்டு (யாத் 6:17;எண் 3:18;1 நாள் 6:17.20). பிற்காலத்தில் இவர்கள் லிப்னியர், சிமயியர் என்று பிரிவுபட்டனர். கேர்சோனின் வழித்தோன்றல்களைப் பற்றியும் அவர்களுக்குக் கிடைத்த நகர்கள் வேலைகளைப் பற்றியும் நாளாகமம் கூறுகிறது.

அ) 10-ஆம் நூற்றாண்டில் லேவியரின் நகரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டபோது, கோகாத்தியர்களும், கேர்சோனியர்களும், மெராரியர்களும்தான் பெரிய லேவியக் குழுக்களாக இருந்தனர். அவர்கள் கோவிலைச் சுற்றிக் குடியிருக்கவில்லை. திருவிடத்தை விட்டு அகன்றே இருந்தனர். கேர்சோனின் புதல்வர்களுக்கு 13 நகர்கள் கொடுக்கப்பட்டன (யோசு 21:6.27-33; 1 நாள் 6:22.71-76).

ஆ) சிறிது காலத்திற்குக் கேர்சோனியர்கள் தான் லேவியக் குழுக்களில் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக இருந்தார்கள் (ஆதி 46:11;யாத் 6:16; எண் 3:17;26: 57; 1 நாள் 6:1.16;23:6). மக்கள் கணக்கெடுப்புப் பதிவில் கேர்சோனியர்கள் முதலிடம் பெற்றனர் (எண் 26:57). பாபிலோனிலிருந்து திரும்பி வந்தபின் பாடகர்கள் பட்டியலிலும் கோவிலில் வேலைகளைச் செய்வதிலும் முதலிடம் வகித்தனர் (1 நாள் 6:16-30;23:7-11). கேர்சோனியரின் வழித்தோன்றல்களிலிருந்து ஆசாபின் இசைக்குழு (1 நாள் 6:39.43), கோவில் கருவூல நிர்வாகிகளான இலாதான் (1 நாள் 23:7-9;26:21), எகியேல் (29:8) போன்ற முக்கியமான நபர்கள் தோன்றினர்.

இ) நாளாகமத்தில் சில இடங்களில் கேர்சோனியரைவிடக் கோகாத்தியர்களே சக்தி வாய்ந்த லேவியர்களாக இருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (யோசு 21; எண் 3:21; 4:24-26; 10:17;4:34-39; 1 நாள் 15:4-7; 2 நாள் 29:12; 34:12; 20:19).

கேலக்கு, ஏலக்கு (HELEK - பகுதி)

கேலக்கிய வம்சத்தின் குலப்பெயர்த் தலைவனும் மனாசே கோத்திரத்தாரின் உறுப்பினனுமாவார் (எண் 26:30). யோசேப்பின் புதல்வனான மனாசேயின் வழித்தோன்றல்களில் ஒருவராக வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறார் (யோசு 17:2; எண் 26:29). இங்கே கேலக்கின் தலைமுறை அட்டவணை கிலயத்து, மாக்கிர், மனாசே வழியாக யோசேப்புக்குப் பின்னோக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கேலப்பு, ஏலப்பு (HELEPH - மாற்றம்)

நப்தலியில் ஒரு எல்லையோர நகர். தாபோர் மலைக்கு வடகிழக்கில் உள்ள கிர்பெத்து அர்பாத்தாவும் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆனால் இதுதான் என்று அடித்துச் சொல்லமுடியாது. இது கலிலேயாவின் மலைப்பகுதியில் தேல் கதேசுக்கு மேற்கில் 18 கி.மீ. தொலைவில் இருந்திருக்கலாம்.

கேலா, எலயா (HELAH - கழுத்தணி)

அஸ்கூரின் இரண்டு மனைவிகளில் ஒருத்தி; யூதாவின் வழி வந்தவள். தெக்கோவாவின் முன்னோர் (1 நாள் 4:5.7).

கேலாம், ஏலாம் (HELAM - கோட்டை)

கிலயாதின் எல்லைக்கு அருகில் உள்ள ஒரு நகரம். இங்கு தாவீது சீரியர்களைத் தோற்கடித்தார் (2 சாமு 10:16-17). எசே 47:16-இன் எழுபதுநூல் வாசகத்தில் இப் பெயர் வருகிறது. இது தமஸ்குவுக்கும் கமாத்துக்கும் (ஆமாத்து) இடையில் அமைந்திருந்தது. இது இருந்த இடம் பற்றித் தர்க்கம் இருந்தாலும், இது 1 மக் 5:26.35-இல் வரும் அலமாவாக இருக்கலாம்.

கேலாயா (KELAIAH - யாவே அவமதித்தார், குள்ளமான)

லேவியருள் ஒருவரான இவர் எஸ்ராவால் புறவின மனைவியை விட்டுவிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டவர் (எஸ் 10:23). கேலாயாவும் கெலிற்றா என்ற பெயரும் ஒரே ஆளைக் குறிக்கலாம்.

கேலேக்கு, ஏலேக்கு (HELECH)

தீருக்குக் கூலிப்படை கொடுத்து வந்த இடம் (எசே 27:11). இது சிறிய ஆசியாவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சிலிசியாவைக் குறிக்கலாம்.

கேலேசு, ஏலேசு (HELEZ - வலிமை, ஆற்றல்)

1. தாவீதின் ஆற்றல்மிக்க வீரர்களுள் ஒருவர் (2 சாமு 23:26; 1 நாள் 1:27; 27:10). 2 சாமுவேல் நூல் இவரைப் ''பல்த்தியர்'' என்று அழைக்கிறது, 1 நாளாகமம் ''பெலோனியர்'' என்று அழைக்கிறது. 'எழுபது நூல்' 2 சாமுவேலில் 'பெலோனியர்' என்று அமைப்பதாலும், 1 நாள் 27:10 கேலேசை எப்பிராயிமைச் சேர்ந்தவர் என்று கூறுவதாலும் 'பெலோனியர்' என்று அழைப்பது தான் சரியாக இருக்கலாம்.

2. யூதா கோத்திரத்தாரின் ஒரு குடும்பம். எரகுமவேலின் வழித்தோன்றல்; அசரியாவின் மகன்; எலயாசாவின் தந்தை (1 நாள் 2:39).

கேலேது, ஏலேது (..ELED)

தாவீதின் வலிய வீரர்களில் ஒருவா. நெற்றோபாவின் பாகனாவின் மகன் (1 நாள் 11:30). கெல்தாய் (எல்தாய்)-1-இன் மற்றொரு பெயர்.

கேலேபு, ஏலேபு (HELEB)

தாவீதின் ''முப்பது'' ஆற்றல்மிக்க வீரருள் ஒருவர். நெற்றோபாவின் பாகனாவின் மகன் (2 சாமு 23:29). காண்க கெல்தாய் (எல்தாய்)-1

கேலோன், ஏலோன் (HELON - வீரமிக்க, ஆற்றல்மிக்க)

செபுலோன் கோத்திரத்தில் எலியாபுவின் தந்தை (எண் 1:9; 2:7; 7:24.29; 10:16).

கேவே (KUE)

கேவே சிறிய ஆசியாக் கடற்கரையில் உள்ள, அநேகமாகக் கிழக்குச் சிலிசியாவின் பழங்காலப் பெயராக இருக்கலாம். இப் பெயர் 1 அர 10:28-இலும் 2 நாள் 1:16-இலும் காணப்படுகிறது. சாலமோன் அரசர் கேவேயிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்த தாகக் கூறப்படுகிறது. கேவே இங்கு மிஸ்ராயிம் என்னும் பெயருடன் சேர்த்துக் கூறப் படுகிறது. ஆனால் இங்கு மிஸ்ராயிம் எகிப்தைக் குறிக்காமல் சிறிய ஆசியாவில் உள்ள, கேவே போன்று, முசிரி என்னும் வேறு ஒரு நாட்டைக் குறிக்கிறது. சிலிசியா வளமையான கடற்கரைச் சமவெளியில் சிறிய ஆசியாவின் தெற்கில் உள்ளது. இதன் வடக்கிலும் மேற்கிலும் தவுரஸ் மலைகளும் கிழக்கில் அமானுஸ் மலைகளும் உள்ளன. அசீரிய மன்னனான மூன்றாம் சல்மனேசரின் (கி.மு. 858-824) சாசனங்களில் கேவே குறிப்பிடப் படுகிறது. கேவேயின் மன்னன் சல்மனேசரின் எதிரிகளில் ஒருவர். கேவேயின் மன்னன் ஊரிக்கும், ஊரிக்கியும் மூன்றாம் திகிலத் பிலேசருக்குக் (கி.மு. 744-727) கப்பம் கட்டிவந்தனர் என்பது அவரது கட்டடங்களிலுள்ள சாசனங்களிலிருந்து தெளிவாகிறது.

கேனதாது, ஏனதாது (HENADAD)

செருபாபேல் தலைமையில் ஆலய வேலை செய்துவந்தவர்களை ஊக்குவிப்பதற்காக நியமிக்கப்பட்ட லேவிய குலத்தலைவர் (எஸ் 3:9). நெகேமியா காலத்தில் எருசலேம் மதில்சுவர் பழுதுபார்த்தவர்க

ளுள் ஒருவராகவும் (நெகே 3:18.24), எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் ஒருவராகவும் (10:9) குறிப்பிடப் படுகின்றார்.

கேனான் (KENAN - சேர்க்கப்பட்ட, வாங்கப் பட்ட)

ஏனோசின் மகனும் மகலவேலின் தந்தையுமாவர் (ஆதி 5:9-14; 1 நாள் 1:2).

கேனியர் (KENITES - கொல்லன், கன்னான்)

கி.மு. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கொல்லர் இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் பாறைகளையும், கனிப்பொருட்களையும் கொண்ட தேல் ஆராதுக்குத் தெற்கே வாழ்ந்தனர் (எண் 24:21; நீதி 1:16). இவர்கள் வளமுடனும் மற்றவர் மதிக்கும் வகையிலும் வாழ்ந்தனர்.

1. **ஆரம்பக் குறிப்பு:-** ஆபிரகாமுக்கு இறைவன் வாக்களித்த நாடுகளிலே இந்தக் கேனியர் நாடும் ஒன்றாகும் (ஆதி 15:19). பிலயாமின் குறிசொல்லுதலில் இந்தக் கேனியரைப் பற்றிய குறிப்பு உள்ளது (எண் 24:21-22).

2. **மோசேயின் வாழ்வில் கேனியர் தொடர்பு:-** இஸ்ராயேலர் வரலாற்றில் இந்தக் கேனியர் மிகுந்த தொடர்புடையவராக இருக்கின்றனர். இவர்கள் இஸ்ராயேலருக்குச் சுரங்க வேலைகளையும், உலோக வேலைகளையும் கற்றுக் கொடுத்தனர். இந்தக் கேனியர் மோசேயின் உறவினன் கோபாபின் (ஒபாபு) வழி வந்தவர்களெனக் கூறப்படுகிறது (நீதி 4:11). இம்மக்கள் மோசேக்குப் பல வழிகளில் உதவினர். மோசே இவர்களிடமிருந்து வெண்கலத்தில் பாம்பைச் செய்யக் கற்றுக் கொண்டார் (எண் 21:8-9)

3. **கேனியரும், அமலேக்கியரும்:-** நாடோடி மக்களான கேனியர்கள் தெற்குப் பாலஸ்தீனத்தில் அமலேக்கியர் மத்தியில் வாழ்ந்தனர். சவுல் மன்னன் காலத்தில் கேனியரும் அமலேக்கியரும் நெருங்கி வாழ்வதைக் கண்ட சவுல் கேனியர்களை அமலேக்கியரை விட்டு விலகிச் செல்லுமாறு கண்டிக்கிறார் (1 சாமு 15:6). நீதிபதிகள் காலத்திலே இந்தக் கேனியரின் ஒரு பிரிவினர் கெபேரின் தலைமையிலே, கலிலேயாவில் வாழ்ந்து வந்தனர் (நீதி 4:11; 5:24). விவிலியப் பாரம்பரியம் இம்மக்களின் நாடோடி வாழ்க்கையையும், அவர்களின் தனித்தன்மைகளையும் அழகாக விளக்குகிறது. தென்யூதாவின் யகபேசில் வாழ்ந்த எழுத்தர்களின் சில குடும்பங்கள் கேனியர் என்று அழைக்கப்படுகின்றனர் (1 நாள் 2:55).

4. **கேனியரும், தாவீதும்:-** தாவீது இஸ்ராயேலின் அரசனாக ஆகும்முன்னர் இந்தக் கேனியர் நாட்டைக் கொள்ளையிட்டார் (1 சாமு 27:10). அவர் இக்கொள்ளைப் பொருள்கள் சிலவற்றைத் தம் உறவினர்களாகிய யூதாவின் மூப்பர்களுக்கு அனுப்பினார் (1 சாமு 30:29).

5. **கேனியர் மறைவு:-** கி.மு. முதலாம் ஆயிரம் ஆண்டில் இவ்வினம் மறைந்தது. இஸ்ராயேலின் பிற்கால வரலாற்றில் இவர்களைப்பற்றிய செய்திகள் இல்லை.

கேன் (HEN - சலுகை, ஆதரவு)

மாசரேட்டிக் வாசகப்படி, செப்பனியாவின் மகன் (செக் 6:14). சில மொழிபெயர்ப்புக்கள், சீரியக் வாசகத்தைப் பின்பற்றி, ''யோசியா'' என்று கொண்டுள்ளன.

கை

கை (HAND)

விவிலியத்தில் ஏராளமான பகுதியில் கை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் பல உடலின் ஒரு அங்கத்தைக் குறிக்கின்றன. வேறுபல இச்சொல்லை உருவகமாக ஏறக் குறைய 1300 தடவை பயன்படுத்துகின்றன. கை சக்தியை ஆற்றலை அடையாளமாகச் சித்திரப்படுத்துகிறது (சங் 78:42; எபி 10:31). ''கையளித்தல் அல்லது கையிலிருந்து விடு வித்தல் ''என்பது மிகப்பரவலாகப் பயன் படும் சொற்றொடராகும் (யாத் 3:8; நீதி 4:2). சில சமயம் செயல்புரிவதையும் (யாத் 14:31) இயலும் அல்லது இயலாத் தன்மையையும் (லேவி 5:7) உடைமையையும் (ஆதி 35:4) கை சுட்டவல்லது.

கை என்ற சொல் மனித உடம்பின் மற்றப் பாகங்களைக் குறிக்கும் சொற்களைப்போல், முழு மனிதனைக் குறிக்கப் பயன்படுகிறது (லேவி 8:35;எசா 1:12; 35:3).

இறைவனின் கையைக் (ஆற்றலைக்) குறிக்கும் பல குறிப்புகள் உள்ளன (எசா 41:20;லூக்1:66). அவற்றில் மிகச் சிறப்பா னவை: ஓங்கிய கை (எரே 21:5); கைவன்மை (யாத் 6:1;13:3). ''ஆண்டவரின் கைவன்மை இருந்தது'' என்பதன் பொருள் எசேக்கியேல் இறைவாக்குப் பரவசநிலையால் பிடிக்கப் பட்டார் என்பதாகும் (எசே 1:3; 3:14.22). இது இறைவாக்கு ஏவுதலையும் குறிக்க வல்லது.

சில சைகைகள் பொருள் பொதிந்தவையா கும். கைகளை உயர்த்துதல் போற்றுத லையோ வேண்டுதலையோ குறிக்கும் (1 அர 8:22; சங் 44:20; யாத் 8:5-6. 17; 2 அர5:11). கைதட்டுதல் அரசனைக் குறித்தோ (2 அர 11:12) இறைவனைக் குறித்தோ (சங் 47:1; 48:8; எசா 55:12; புல 2:15) ஆர்ப்பரித்தலா கும். ஒருவர் மேல் கைவைத்தல் ஆசீர்வழங் குவதையோ (ஆதி 48:14-15; மாற் 10:16) அதிகார மாற்றத்தையோ குற்ற மாற்றத் தையோ உணர்த்தவல்லது. கைகளை ஒன்று சேர்த்தல் அல்லது குலுக்குதல் வாக்குறுதிக ளையும் உடன்படிக்கைகளையும் முத்திரை யிட்டது (2 அர 10:15; பழ 6:1; 17:18; யாத் 23:1; 1 சாமு 22:11). தனக்கு ஒரு காரியத்தில் எவ்விதப் பங்குமில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கை கழுவுவர் (உப 21:6; சங் 26:6; மத் 27:24). விவிலியக் காலத்தில் கைகளை முடக்கி வைத்திருத்தல் சோம்பேறித்தனத் தைக் குறித்தது (பழ 6:10; 24:33). பிற்காலத் தில் இது செபம் செய்யும் நிலையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. காண்க: கரம் மற்றும் புயம்.

கைக்காப்பு (ARMLET)

இது கையின் மேற்புறத்தில் அணியும் வளையம். இது கையின் கீழ்ப்புறத்தில் அணியும் பட்டை எனப்படுகிறது. மிதியா னியரிடமிருந்து இஸ்ராயேலர்கள் கொள் ளையடித்த பொருள்களில் கைக்காப்பு அல் லது கைப்பட்டையும் ஒன்றாகும் (எண் 31:50). சீயோன் மகளிருள் உல்லாசத்தில் மிதந்த வர்கள் அணிந்த ஆடம்பர அணிகலன்களில் இதுவும் ஒன்று (எசா 3:20). சவுல் இறந்தபின் அவர் அணிந்திருந்த காப்புவளை அவர் இறந்ததன் அடையாளமாகத் தாவீதிடம் காண்பிக்கப்பட்டது (2 சாமு 1:10). யாத் 35:22 இஸ்ராயேல் மக்கள் சந்திப்புக் கூடார வேலைக்காகக் கைக்காப்பு மற்றும் பிற அணிகளையும் காணிக்கையாகக் கொடுக்கத் தயாராக இருந்தனர் என்று கூறும்போது, எசா 3:20-23 இத்தகைய உலகியல் பொருள்க ளில் மக்கள் காட்டிய ஆர்வத்தைக் கண்டு இறைவன் சினம் கொள்வதைச் சித்தரிக்கி றது.

கைக்குட்டை (HANDKERCHIEF, NAPKIN)

அ.ப.19:12 ''அவரது (பவுல்) உடலில் பட்ட கைக்குட்டை...'' இலத்தீனில் இச் சொல்லின் அடிப்படைப்பொருள் ''வியர் வை''யாகும். வியர்வையைத் துடைக்க நாம் பயன்படுத்துவது போன்ற ஒரு சிறுதுணி யையோ, அரேபியர்கள் தலைக்குமேல்

போடுகின்ற துண்டையோ குறிப்பிடலாம். அதே கிரேக்கச் சொல் லூக் 19:20-இல் கைக் குட்டை, என்றும் யோவா 11:44; 20:7-இல் முகத்தை மூடியதுணி, தலையை மூடியிருந்த துணி என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. அப்போஸ்தலர் பணியில் பவுலிடமிருந்து கைக்குட்டை நோயை குணப்படுத்தும் சக்தியைக் கொண்டுவரப் பயன்படுகிறது. லூக் 19:20-இல் பணத்தை முடித்து வைத்திருக்கக் கைக்குட்டை பயன்படுகிறது. யோவானில் இத்துண்டு இறந்தவர்களுடைய முகத்தை மூடப் பயன்படுகிறது.

கைக்சோஸ் (HYKSOS)

எகிப்தை ஆட்சி செய்த 15, 16-ஆம் அரச மரபுகளைச் சேர்ந்த அரசர்கள் அனைவரும் 'கைக்சோஸ்' என்று அழைக்கப்பட்டனர் என்பது வரலாற்று ஆசிரியர் மனேத் தோவின் கருத்து. மேலும் கி.மு. 1800 முதல் 1550 வரை எகிப்திலும், சீரிய-பாலஸ்தீனப்பகுதிகளிலும் அதிகமான எண் ணிக்கையிலிருந்து ஆதிக்கம் செலுத்திய ஒரு குழுவினரும் 'கைக்சோஸ்' என்று அழைக் கப்பட்டனர் என்பது இன்றைய அறிஞர்க ளின் கருத்து.

வரலாற்று ஆசிரியர் மனேத்தோ இச் சொல்லை 'ஆயர் மன்னர்கள்' என்று மொழி பெயர்த்துள்ளது ஓரளவே சரியாகும். இன் றைய எகிப்திய ஆய்வாளர்கள் இச்சொல்லா னது எகிப்தை ஆண்ட அந்நிய நாடுகளைச் சேர்ந்த அரசர்களைக் குறிக்கின்றது என்கின் றனர். எகிப்து நாட்டில் கைக்சோஸ் என்ப வர்களின் ஆதிக்கம் வளர ஆரம்பித்த காலம் அவ்வளவு தெளிவாக இல்லை. ஆனால் எகிப்தில் 12ஆவது அரச மரபுக்குப்பின் அர சாட்சியானது சீர்குலைந்த நிலையில் இருந்த பொழுது கைக்சோஸ் என்பவர்கள் வட கிழக்குப் பகுதியிலிருந்து நைல் பள்ளத்தாக் கின் மீது படையெடுத்ததுபோல் தோன்று கிறது (கி.மு. 1991-1782). முதன் முதலில் கி.மு. 1730-இல் அவாரிசைத் தலைநகராகக் கொண்டு கழிமுகப் பகுதியில் கைக்சோசின் அரசாட்சி தொடங்கியது. இக்காலத்தில்தான் கைக்சோசின் 14-ஆவது அரசகுலம் கழிமுகப் பகுதியிலிருந்த கோயிசிலும் 13-ஆவது அரச குலம் தெபேசிலும் ஆட்சி செய்தனர். ஆனால் உண்மையிலே தெபேசு ஆட்சிப்பகு தியில் கைக்சோசின் ஆதிக்கம் நிலவியது என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் காணப் படவில்லை.

எகிப்து நாட்டின் வடபகுதி முழுவதும் அந்நிய நாட்டவரின் ஆதிக்கம் பெருகுவ தைக்கண்டு அதிருப்தியடைந்த 17-ஆவது அரகுலத்தைச் சேர்ந்த எகிப்திய ஆட்சியாளர் காமோஸ் கைக்சோஸ் என்பவர்களை எகிப்து நாட்டின் மத்திய பகுதியிலிருந்து துரத்திச் சென்று கழிமுகப்பகுதியில் மட்டும் அவர் களது ஆதிக்கம் இருக்கும்படி செய்தார். ஆனால் 18-ஆவது அரசகுலத்தின் முதல் அரசராகிய (கி.மு. 1570-1545) அக்மோசு என்பவரால்தான் கைக்சோஸ் என்பவர் களை எகிப்திலிருந்து வெளியேற்ற முடிந் தது.

கைக்சோஸ் என்பவர்கள் ஒரு தனிப்பட்ட மனித சமூகத்தினைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பது தொல்பொருள் ஆராய்ச்சிகளி லிருந்து கிடைத்த ஆதாரங்களின் மூலம் உறுதி செய்யப்பட்டது. ஏனென்றால் எகிப்து நாட் டில் இருந்த கைக்சோசியர் அந்நாட்டு மொழியினையே தங்கள் மொழியாகக் கொண்டு பேசி வந்தனர். இவர்களது பெயர் களில் ஒருசில செமித்திய இனத்தவர்களின் பெயர்களைப்போலத் தோன்றியதால் இவர் கள் செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்க ளாகக் கருதப்பட்டனர்.

இவர்கள் எகிப்தியப் பண்பாட்டிற்கும் ஆசியப் பண்பாட்டிற்குமிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தினார்கள். போர்களில் குதிரைகளையும், குதிரை பூட்டிய தேர்களை யும் முதன்முதலில் பயன்படுத்தினார்கள். நகர்களைச் சுற்றி அரண் எழுப்புகின்ற சிறந்த செயலை இவர்கள்தாம் ஆரம்பித்து வைத்த னர். ஆபரணங்கள் செய்வதில் திறமை படைத்தவர்கள். ஆயுதங்கள் செய்வதற்குச் செம்பு போன்ற உலோகப் பொருளைப்

பயன்படுத்ினர். கைக்சோசின் ஆட்சிக் காலத்தில்தான் இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் வந்து குடியேறியிருக்க வேண்டும் என்பது அறிஞர்கள் பலரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

கைத்தடி (HANDPIKE)

கையில் வைத்திருக்கின்ற ஊன்றுகோல். இது நீண்ட கழியாகும். சிலசமயம், இது உலோகத்தினால் ஆன முனையைக் கொண்டிருக்கும். இதைக் காலாட்படையினர் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவர். அப்போது வேல்போல் பயன்படும் (எரே 39:9).

கைத்தொழில்கள், வேலைகள் (CRAFTS)

தனிப்பட்ட திறமை தேவைப்படுகின்ற வேலைகள், கைக்கலைகள். இந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், கலைஞர்கள், திறமையான வேலையாட்கள், கைவினைஞர்கள் என்று அழைக்கப்பட்டனர். விவிலிய மொழிபெயர்ப்பில் 'கைவினைஞர்கள்' என்ற பட்டம் மரவேலை செய்தவர்களுக்குத் தரப்பட்டது.

பல வேலைகள் ஆண்களாலும், பெண்களாலும் வீடுகளிலேயே செய்யப்பட்டன. அநேகமாகத் தாவீதின் காலம்வரை இஸ்ராயேலில் கொல்லர்கள் இருந்ததாகத் தெரியவில்லை (1 சாமு 13:14 தொ). வளர்ந்த கானானியப் பண்பாட்டுடனும், நாடு கடத்தப்பட்டபொழுது பாபிலோனியருடன் கொண்ட தொடர்பினாலும், இஸ்ராயேலில் பல கைவினைஞர்கள் உருவானார்கள். நாடு திரும்பியவர்களில் கைதேர்ந்த வேலையாட்கள், படிப்பறிவற்றவர்கள் என்று கருதப்பட்டனர். நாடு திரும்பிய பிறகும் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் தங்களுடைய கைவேலைத் திறனால் இராபிகள் சுதந்தரமாக இருந்தனர். உழைப்பதைப் பெருமையாகக் கருதினர்.

கைவினைஞன் சாதாரணமாக ஒரு சுதந்தரக் கலைஞன். அடிமைகள் சிலர் மட்டும் இந்தத் தொழிலில் பயிற்றுவிக்கப்பட்டனர். நாடு திரும்பியபிறகு பாலஸ்தீனத்தில் கைவினைஞர்களின் சங்கங்கள் இருந்தன (நெகே 3:8). பொற்கொல்லர்கள் எருசலேம் சுவரைக் கட்டுவதில் உதவினர்.

கைவினைஞர்களால் கடைகள் நடத்தப்பட்டன (எரே 18:2); ஆனால் வியாபாரமும், வேலையும் வீட்டிற்கு வெளியே நடத்தப்பட்டன (1 அர 20:34). ஒரேவகை வேலை செய்த இஸ்ராயேலர்கள் சாதாரணமாக ஒரே இடத்தில் வாழ்ந்தார்கள் (நெகே 11:35; எசா 7:3; எரே 37:21). கைவினைஞர்களின் பட்டியல் மிகவும் நீளமானது. தச்சர்கள், ஆசனங்களைச் செய்பவர்கள், படகுகளைக் கட்டுநர்கள், மரத்தைச் செதுக்குபவர்கள், யானைத் தந்தத்திலும் செதுக்குபவர்கள், பொன், வெள்ளி, வெண்கலக் கொல்லர்கள், நெசவாளர்கள், தோல் பதனிடுவோர், தோல் வேலைகள் செய்வோர், கூடாரம் செய்வோர், தரைவிரிப்புகளைச் செய்பவர்கள், கயிறு பின்னுபவர், சிற்பக் கலைஞர்கள், நகை செய்வோர், கண்ணாடி வேலையைச் செய்வோர், பானைகளைச் செய்வோர், விளக்குகளைச் செய்வோர் முதலானோர்.

இறைவனே ஒரு தலைசிறந்த ''சிற்பியும் ஆக்குநருமாக'' விவரிக்கப்படுகிறார் (எபி 11:10).

கைப்பிடிச்சுவர் (PARAPET)

மக்கள் மாடியிலிருந்து கீழே விழாவண்ணம் தடுக்கும்சுவர். வீடுகள் தட்டையான கூரையைக் கொண்டிருந்ததால் மக்கள் எளிதில் மேலே செல்ல முடிந்தது. ஒரு புது வீட்டைக் கட்டும்போது ''ஒருவன் மாடியிலிருந்து விழுந்தால், அவனின் இரத்தப்பழி உன்மீது'' வராவண்ணம் மாடியைச் சுற்றிலும் கைப்பிடிச் சுவரைக் கட்ட வேண்டும் என்று கூறப்படுகிறது (உப 22:8).

கைப்பிரதி (MANUSCRIPT)

இது கையால் எழுதப்பட்ட ஆவணம் அல்லது பத்திரம் ஆகும். குறிப்பாக இச்சொல் மெல்லியதோல், புல்தாள், தோல் ஆகியவற்றின் மேல் எழுதப்பட்ட விவிலியத்தின் பகுதிகளைக் குறிக்கும். இவை கிறிஸ்துவ மதம் தோன்றும்முன் சில நூற்றாண்டுகள்

முதல், கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்துக்குரியவை.

கைம்பெண், விதவை (WIDOW)

விவிலியத்தில் கைம்பெண்களைப் பற்றிக் கூறும் பல குறிப்புகள் அவர்களின் இரங்கத் தக்க நிலைமையைப் படம் பிடித்துக் காட்டு கின்றன. இவர்கள் பெரும்பாலும் கடுமை யாக நடத்தப்பட்டனர். இவர்கள் பொது வாக, அனாதைகள் மற்றும் திக்கற்றோருக்கு ஒப்பான ஒரு வாழ்க்கையை வாழ்ந்துவந்த னர். கைம்பெண்கள் தண்டனைத்தீர்ப்பின் பலியாடுகளாகக் கருதப்பட்டனர். ஆதிக் கிறிஸ்துவ மறையில் கைம்பெண்களின் தனித்த குழு ஒன்று காணப்படுகிறது. நகரங் களும் கைம்பெண்களுக்கு ஒப்புமையாகக் கூறப்படுகின்றன.

1. கைம்பெண்கள் பற்றிய சட்டம் :- எபிரேயச் சட்டம் கைம்பெண்களுக்கு அவர் களின் மரபு உரிமைகளை மறுக்கிறது என லாம். இது வேறெந்த ஒரு சட்டத்திலும் நாம் காணமுடியாத ஒரு கடுமையான, கொடுமை யான பழக்கமாகும். இதன் காரணம் என்ன வென்றால், வயதாகும் முன்பே ஒருவனுக் குச் சாவு என்பது பாவத்தின் தண்டனையா கும்; அதை இறந்தவனின் மனைவியும் ஏற்க வேண்டும் என்ற கருத்தாகும். எனவே கைம் பெண்ணாய் இருப்பது மிகவும் கேவலமான தாகக் கருதப்பட்டது (ரூத் 1:20-21;எசா 54:4). கைம்பெண்களுக்கு எனச் சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. இறந்த கணவனின் சகோதரர் யாராவது விதவையான தனது சகோதரனின் மனைவிக்கு வாழ்வு கொடுப் பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. சில இடங்க ளில் வலியுறுத்தப்படுகிறது (லேவி 22:13; ரூத 1:6). விதவைகளுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்பட்டன. அவர்கள் எடுத்துக் கொண்ட பொருத்தனைகள் நிலைக்கும் (எண் 30:10). விதவை மீண்டும் திருமணம் செய்துகொள்ளலாம் (லேவி 21:14;ரூத் 1:9;1 சாமு 25; எசே 44:22).

2. கைம்பெண்கள் கடுமையாக நடத்தப் பட்டனர்:- விதவைகள் கடுமையாக நடத்தப் படுதலை எதிர்த்து இறைவாக்கினர்கள் குரல் கொடுக்கின்றனர் (எசா 1:23; யோபு 22:9; 24:3; 31:16; சங் 94:6). கடவுள், இறுதி நாளில் விதவைகளை நசுக்குபவர்களைக் கடுமை யாகத் தண்டிப்பார் (மலா 3:5). இக் கண்டனங்களின் கடுமை, விதவைகள் கடுமை யாக நடத்தப்பட்டதைச் சுட்டுகின்றன. இவர்கள் தங்கள் கைம்மையை எடுத்துக் காட்ட அடையாள உடைகள் அணியவேண் டும் (ஆதி 38:14.19).

3. விதவைகள் இரக்கத்திற்குரியவர்கள்:- விதவை என்றால் ஊமை என்று பொருள். மேலும் விதவைகளின் உடைகள் அவளது துன்பத்தை விளக்கும். எனவே விதவை களின்மேல் இரக்கம் காட்ட வேண்டுமென விவிலியம் கூறுகிறது. அவளுக்கு நீதியும், அன்பும் காட்டப்பட வேண்டும் (உப 14:29;24:17). விதவைகள் கடவுளின் சிறந்த பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறுகிறது விவிலியம். இறைவனே விதவைகளின் தேவைகளை நிறைவு செய்கி றார் (உப10:18). மேலும் விவிலியத்தின் பல இடங்களில் இறைவனே விதவைகளைக் காப்பவர் மற்றும் அவர்களை நசுக்குபவர் களைத் தண்டிப்பவர் என்ற கருத்து காணப் படுகிறது (எரே 49:11; சங்68:5; 146:9 லூக் 20:47). விதவைகளுக்கு இறைவன் காட்டும் இரக்கம், அவர்களது நலனில், விசு வாசிகள் அக்கறையில் பிரதிபலிக்கப்பட வேண்டும் (யாக் 1:27)

4. ஆதிக் கிறிஸ்தவர்களிடையே விதவை களின் சிறப்புக்குழு:- இவர்களைப் பற்றிய குறிப்புகள் 1 திமோ 5:3-16; அ.ப. 6:1;9:39-இல் காணப்படுகின்றன. இவர்கள் போற்றப்பட்டனர்; ஆதரிக்கப்பட்டனர்; கவ னிக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் முழு நம்பிக்கையையும் கடவுள் மேல்வைத்து, அல்லும் பகலும் செபத்திலும் மன்றாட்டி லும் நிலைத்திருக்க வேண்டும். இவர்கள் அறுபது வயது குறையாதவர்களாகவும் ஒரு முறை மட்டுமே திருமணம் ஆனவர்களாக வும் இருக்க வேண்டும். பிள்ளைகளை நன் றாய் வளர்த்தல், விருந்தோம்புதல், இறை

மக்களின் பாதம் கழுவுதல், துன்புற்றோருக்கு உதவி அளித்தல் ஆகியவை விதவைகளின் கடமைகளில் சிலவாகும். இளம் விதவைகளை இக்குழுவில் சேர்க்கக்கூடாது. விதவைகள் தவிர்க்க வேண்டியவைகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன. இத்தகைய விதவையர் குழு இருந்ததற்கு ஆதிச் திருச்சபையின் தந்தையர்களுடைய நூல்கள் சான்று கூறுகின்றன.

5. கைம்பெண் என்ற சொல்லின் உருவகம்:-பாபிலோனின் நகரைக் கைம்பெண்ணாக உருவகப்படுத்துகிறார் விவிலிய ஆசிரியர் (எசா 47:9). இஸ்ராயேல் நாடும் விதவையாக விவரிக்கப்படுகிறது (54:4). புலம்பல்நூல் ஆசிரியர் எருசலேம் நகரை ஒரு விதவையாகச் சித்தரிக்கிறார் (புல 1:1; 5:3-4). திருவெளி 18:7 பாபிலோனை ஒரு விதவையாக உருவகப் படுத்துகிறது.

கையணி, கைவளையல், கைக்காப்பு (BRACELET)

கைகளில் அணிந்து கொள்ளும் பொருட்டு அமைந்த ஒரு வளைந்த அணிகலன் (எண் 31:50; 2 சாமு 1:10). இவ்வகைக் கையணிகள் பாலஸ்தீனத்தில் எங்குமே பயன்படுத்தப் பட்டன என்று அகழ்வாராய்ச்சி கூறுகிறது. ஆண்கள் பெண்கள் என்னும் இரு பாலரும் இதனை அணிந்திருந்தனர். ஒரு கையிலோ, இரு கைகளிலுமோ அணிந்து கொள்ளப் படும். பொதுவாக, இவைகள் வெண்கலத்தினால் செய்யப்பட்டன. மற்றும் இரும்பு, வெள்ளி, கண்ணாடி ஆகியவற்றால் செய்த கையணிகளும் உண்டு. தங்கத்தில் செய்யப் பட்டவை மிக அரிதே. விவிலியத்தின் சொல்லப்பட்டிருக்கும் கையணிகள், முக்கியமாக ரபேக்காவுக்குக் கொடுக்கப்பட்டவை அனைத்தும், தங்கத்தால் செய்யப்பட்டதையே குறிக்கும். இத்தகைய அணிகள் ஆடம்பர வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருக்கலாம் (எசா 3:19).

கையூட்டு, கைக்கூலி (BRIBE)

சட்டமுறையான கடமையை நிறைவேற்றுவதைப் பாதிக்கும் முறையில் மதிப்புள்ள பொருளைக் கொடுப்பது அல்லது வாங்குவதாகும். அதன்விளைவு நீதியைப் பிறழச் செய்யும்; நெறிகோணச்செய்யும் (1 சாமு 8:3;பழ 17:23). கையூட்டு வாங்குவது சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது (யாத் 23:8; உப 16:19). ஆனால் இக்குற்றத்திற்கு எந்தக் குறிப்பிட்ட தண்டனையும் விதிக்கப் படவில்லை. குற்றவாளியை விட்டுவிடுவதற்கு மட்டுமன்று, குற்றமற்றவர்களைக் குற்றஞ்செய்தவர்களாகத் தீர்ப்பிடுவதற்கும் (சங் 15:5;எசா 5:23) அவர்களைக் கொல்வதற்கும் கூட (உப 27:25; எசே 22:12), கையூட்டுக் கொடுக்கப்பட்டது. உரிய நீதியைப் பெறுவதற்கும்கூட இது கொடுக்கப்பட்டது (யோபு 6:22). நடுவர்களுக்கு அன்பளிப்புக் கொடுப்பது இறைவாக்கினர்களால் கண்டனம் செய்யப்படுகிறது (எசா 1:23; மீக் 3:11;7:3). இதனால் ஏழைகள், தீர்ப்பினால் பாதிக்கப்படாவிட்டாலும், தங்கள் வழக்குகளை நடுவர்களிடம் சொல்வதற்குக்கூட வாய்ப்பில்லாது போகக்கூடும் (எசா 1:23). இதற்கு எதிராக, உப 1:17 ''விருப்பு வெறுப்பின்றித் தீர்ப்பிடுங்கள்; உயர்ந்தோனுக்கும் தாழ்ந்தோனுக்கும் ஒன்றுபோல் செவிகொடுங்கள்'' என்று அறிவுரை கூறுகிறது.

கொடை அல்லது அன்பளிப்புக் கொடுப்பது முன்னேறுவதற்கு நேர்மையான சாதனம் என்று கருதப்படுவதாலும் (பழ 18:16), சினத்தைத் தணிப்பதற்கு நன்கொடை அளிப்பது பரிந்துரைக்கப்படுவதாலும் (21;14), அன்பளிப்புக்கும் கையூட்டுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விவரிப்பது வெகு கடினமாகும்.

கையொப்பம் (SIGNATURE)

இந்த வார்த்தை எபிரேய நெடுக்கணக்கின் இறுதி எழுத்தின் தன்மை ஒருமை விகுதியுடன் கூடிய வடிவமாகும். விவிலியத்தில் இந்த எழுத்து "X" போன்ற வடிவம் கொண்டிருந்தது (1 சாமு 21:13; எசே 9:4). யோபு 31:35 என்ற பகுதி வாதியால் தான் குற்றமற்றவன் என்று சட்டப்பிரதியில் எழுதப்பட்டுள்ள பகுதியில் தன்னுடைய கையொப்பமிட்டு வைத்திருப்பதாகவும், அதே நேரத்

தில் குற்றம் சாட்டியவனின் எதிர் அறிவிப்புக்காகக் காத்திருப்பதாகவும் பிரதிபலிக்கின்றது.

கைரேயா (CHAEREAS)

மக்கபேயர் காலத்தில் வாழ்ந்த ஓர் அம்மோனியப் படைத்தளபதி. இவர் கசரா என்ற நகரைத் தம் கைக்குள் வைத்திருந்தார். கசரா மக்கபேயர்களால் முற்றுகையிடப்பட்டபோது இவரும் யூதா மக்கபேயரால் கொல்லப்பட்டார்.

கைவினைத் தோரணங்கள் (BEVELED WORK)

சாலமோன் கட்டிய ஆலயத்தில் பயன்பட்ட தள்ளுவண்டிகளின் சட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரத் தோரணங்களாகும் (1 அர 7:29).

கொ

கொக்கி, தூண்டில் முள் (Clasp, Hook)

இது பல எபிரேய, கிரேக்கச் சொற்களை மொழிபெயர்க்கப் பயன்பட்டுள்ளது. திரு வுறைவிடத்தின் தூண்களோடு இணைக்கப் பட்ட பொன்னால் (யாத் 26:32) அல்லது வெள்ளியால் (27:10) செய்யப்பட்ட கொக்கி கள் உண்டு. அங்குத் தொங்கிக் கொண்டிருக் கும் வெள்ளாட்டுத் தோல்களையும் துணித் திரைகளையும் இறுக்கமாகப் பிடித்துக் கொள்கிற பொன் (26:6; 36:13) அல்லது வெண்கலக் (26:11; 36:18) கொக்கிகளும் உண்டு. மேலும் தூயகத்தையும் உடன்படிக் கைப் பேழை வைக்கப்படும் திருத்தூயகத் தையும் பிரிக்கும் பொருட்டுத் தொங்கவிடப் படும் திரைச் சீலையும் கொக்கிகள் அல்லது வளையங்களால்தான் தொங்கவிடப்பட் டிருந்தது (26:33).

விலங்குகள் (எசே 19:4-9) அல்லது கைதிக ளின் (2 நாள் 33:11) மூக்கில் (2 அர 19:28) அல்லது தாடையில் (எசே 29:4) செருகப் பட்ட கொக்கி, இதனோடு இணைக்கப் பட்ட கயிற்றினால் கைதிகள் இழுத்துச் செல் லப்பட்டனர். யாத் 35:22-இல் இச்சொல் ஒருவகைக் காப்பைக் குறிக்கிறது.

மீன்பிடிக்க உதவும் தூண்டில் முள்கள் (எசா 19:8; அப 1:15; யோபு 40:24; ஆமோ 4:2). மீன்பிடிக்க உதவும் தூண்டிலைக் (மத் 17:27) குறிக்கும் கிரேக்க மொழிச் சொல் 'கொக்கி' என்பதைக் குறிக்கும் பொதுச் சொல்லாகும்.

கொக்கு, நாரை (STORK)

இச்சொல் நீண்ட கால்களையுடைய நீரில் நடக்கக் கூடிய பறவை வகையைக் குறிக் கும். இவை மீன்களையும், சிறிய பாலூட்டி களையும் பறவைகளையும், ஊர்வனவற்றை யும் உணவாகக் கொள்ளும். இவை தங்க ளுடைய குஞ்சுகளைப் பாதுகாக்கும் விதம் பழமொழிகளில் போற்றப்படுகின்றது. திரிஸ்தராம் என்பவர் பத்தொன்பதாம் நூற் றாண்டுப் பாலஸ்தீனத்தில் வெள்ளைக் கொக்குகளையும், கருப்புக் கொக்குகளையும் பார்த்திருக்கிறார். இவைகளில் பல வடக்கு நோக்கி ஐரோப்பாவுக்கு இடமாற்றம் செய் தாலும் சில பாலஸ்தீனத்திலேயே கூடுகட்டி வாழ்ந்தன.

விவிலியத்தில் கொக்கு அசுத்தப் பறவை களில் ஒன்றாகக் கருதப்பட்டது (லேவி 11:19; உப 14:18). தகுதியான கட்டடங்கள் கிடைக்கா விடில் கொக்குகள் மர உச்சிகளில் தங்கள் கூடுகளைக் கட்டிக்கொள்ளும். இது சங் 104:17-இல் குறிக்கப்படுகிறது. எரே 8:7, இப்பறவைகளின் இடமாற்றச் செயலைச் சுட்டுகிறது.

கொக்கோக்கு உக்கோக்கு (HUKOK)

கேர்சோமிய லேவியர்களுக்கு அளிக்கப் பட்ட, ஆசேர் பகுதியிலுள்ள ஒரு நகரம் (1 நாள் 6:75). மற்ற இடங்களில் இது கெல் காத்து (எல்காத்து) என்றழைக்கப்படுகிறது.

கொசு, பூச்சி (Gnat)

இது கொசுவைக் குறிக்கின்றதா அல்லது மற்றப் பூச்சியினத்தைக் குறிக்கின்றதா என் பது தெரியவில்லை.

இது அறுவடைக்காலத்தில் வேலை செய் யும் ஆட்களின் கண், காது, மூக்குகளில் நுழையும் அறுவடைப் பூச்சியாக இருக்க லாம். அல்லது மலேரியா நோயைப் பரப்பு கின்ற கொசுவினமாக இருக்கலாம். "டெங்கு" என்னும் கொள்ளைக் காய்ச்சலைப் பரப்பும் மணல் பூச்சியாக இருக்கலாம். எகிப்து நாட்டின் படுக்கையறைகளில் நுழைந்து துன்பம் கொடுக்கக்கூடியது. எகிப் தில் நிகழ்ந்த மூன்றாவது வாதையை விவ ரிக்க மேலே குறிப்பிட்டுள்ள மூன்றில் ஏதா வது போதுமானது (யாத் 8:12-15; சங் 105:31). இது எசா 51:6-இல் விட்டில் எனத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அசுத்த விலங்குகளில் மிகச் சிறிதான கொசுவை வடிகட்டி அகற்றுவது தாங்களே

ஏற்படுத்திக்கொண்ட அற்பத்தனமான சிறிய சடங்குகளை அதிக நுணுக்கமாக அனுசரிப்ப தற்கு ஒப்பிடப்படுகிறது (மத் 23:24). இப் படிச் செய்த மறைநூல் அறிஞரும் பரிசேயரும் முக்கிய கடமைகளைப் புறக்கணித்தனர். முக்கிய கடமைகளைப் புறக்கணிப்பது ஒட் டகத்தை விழுங்குவதற்கு ஒப்பிடப்படுகிறது (23:24).

கொடி (Banner, Standard)

இனத்தைக் குறிக்கும் அடையாளமாகக் கொடி பயன்பட்டது (எண் 1:52; 2:2. 10; சங் 74:4). அதுவே வெற்றிச் சின்னமாகவும் பயன்படலாம். போரில் வீரர்கள் ஒன்று கூடும் அடையாளமாகவும் பயன்படலாம். கொடி அடையாளமாகப் பயன்படலாம் (எசா 5:26; 13:2; 18:3; 30:17; 49:22); எச்சரிக்கை யாகவும் பயன்படலாம் (எண் 26:10).

பாலையில் பயணம் செய்தபோது இஸ்ரா யேலின் ஒவ்வொரு இனமும் தனக்கே உரிய கொடியைக் கொண்டிருந்தது (எண் 2:2; 1:52). இவர்கள் திருவுறைவிடத்தைச் சுற்றிப் பாளையம் இறங்கினர். தங்கள் கொடியின் கீழ்ப் புறப்பட்டுச் செல்வர் (10:14.18.22.25).

இஸ்ராயேலரின் கொடிகளின் தன்மை பற்றி ஒன்றும் அறிவதற்கில்லை. மற்றப் பழங்கால மக்களைப் போல், ஒரு கோலின் மேல் நுனியில் அல்லது ஈட்டியில் பொருத் தப்பட்ட அடையாளமாக இருக்கலாம். இந்த அடையாளம் விலங்குகள் வடிவிலும் இருக்கலாம் அல்லது, பெயர்களோ மற்ற வாசகங்களோ பொறிக்கப்பட்டிருக்கலாம். ''இறைவனின் கோலைக் கையில் பிடித்த வாறு குன்றின் உச்சியில் நின்ற'' மோசே உயிருள்ள கொடியானார் (யாத் 17:9). இரபி திமில் உள்ள பீடத்தை மோசே ''யாவே என் கொடி'' என்ற பொருள்படும் ''யாவே நிசி'' என்றழைத்தார் (17:15). ''கொடி யுடைய போரணி'' காதலனுடைய மூழ்கடிக் கும் காதலை அடையாளமாக உணர்த் திற்று (உ.ச. 6.4.10).

கொடிமரம், பாய்மரம் (Flagstaff)

தப்பியோடும் இஸ்ராயேலர் ''மலை உச் சிக் கொடிமரம் போல், குன்றின் மேல் சின்னம்போல் எஞ்சி நிற்பார்'' என்று எசாயா விவரிக்கிறார் (எசா 30:11). பிற இடங்களில் மூல எபிரேயச் சொல் கப்பலின் பாய்மரத்தைக் குறிக்கிறது (எசா 33:23; எசே 27:5).

கொடிய குத்தகைக்காரர் (Wicked Tenants)

இந்த உவமை இயேசு இறைவனோடும், இறையரசோடும் கொண்டிருக்கும் உறவை வெளிப்படையாக எடுத்துக் கூறுகிறது. ஒத் தமை நற்செய்தியாளர்கள் மூவருமே (மத் 21:33-44; மாற் 12:1-12; லூக் 20:9-18) இந்த உவமை யூத சமயத் தலைவர்களுக்கு எதிரா கக் கூறப்பட்டது என எழுதுகின்றனர். இந்த உவமையில் வரும் வீட்டுத் தலைவன் வான கத் தந்தை. திராட்சைத் தோட்டமே இவ்வுல கம். பல விவிலிய விளக்கவுரையாளர்கள் இந்தக் குத்தகைக்காரர்கள் யூத மதத் தலை வர்களாவர் எனக் கூறுகின்றனர். ஏனெனில் இறைவன் இவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு அருள் வாழ்வை அவர்க ளுக்குத் தருவதாக வாக்களித்தார். ஊழியர்க ளைக் குத்தகைக்காரர்கள் துன்புறுத்தியது போல் யூதர்களும் இறைவாக்கினர்களைத் துன்புறுத்தினர். தலைவனின் மகனே மெசி யாவாகிய இயேசு. இந்த இறைமகன் மனித னின் பாவங்களுக்காக இவ்வுலகில் இறந் தார். யூதத் தலைவர்களும் உரோமையரும் சேர்ந்து இயேசுவைக் கொன்றனர். ஆனால் இயேசுவின் சாவிற்கு உண்மைக் காரணம் தனி மனிதனுடைய பாவம். புனித பவுல் உடன்படிக்கையைப் பெற்றுள்ள யூதருக்கு முதலில் இறைவனின் நற்செய்தி அருளப் படுகிறது, பின்னர் புறவினத்தாருக்கு அது அளிக்கப்படுகிறது என்கிறார். எனவே பழைய உடன்படிக்கை புறக்கணிக்கப்பட வில்லை. புதிய உடன்படிக்கையானது முத லில் யூதருக்கும் பின்னர் புறவினத்தாருக்கும் கொடுக்கப்படுகிறது. கடவுள் இறுதியிலே, தீய குத்தகைக்காரர்களை அழித்துவிட்டு நல் லவர்களைப் பணிக்கமர்த்தும் தலைவனைப் போல நல்லவர்களோடு நட்புறவு கொள்

வார். இவர்கள் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

கொடை, அன்பளிப்பு (Gift)

ஒவ்வொரு கொடையின் தொடக்கத்திலும் இறை முன்முயற்சியை அறிந்து உணருமாறு விவிலியம் நமக்குக் கற்பிக்கிறது. ''ஒவ்வொரு நற்கொடையும்... ஒளியின் தந்தையிடமிருந்தே வருகிறது'' (யாக் 1:17; தோபி 4:19). படைப்பிற்கான முதல் முயற்சியை எடுப்பவரும், எல்லா மனிதருக்கும் ஊட்டத்தையும் வாழ்வையும் அளிப்பவரும் இறைவனே (சங் 104). மேலும், மீட்பிற்கான முதல் முயற்சியை எடுப்பவரும் இறைவனே (உப 9:6; 1 யோவா 4:10). இதன் விளைவாகத் தாராள மனதானது அருளுக்கு முன்செல்வதாகப் பாசாங்கு செய்யும்போது அது பாதை மாறிச்செல்கிறது -(யோவா. 13:37-38). மனிதனிடம் கோரப்படும் முதன்மையான மனப்பான்மையானது, இறைவனின் கொடைக்குத் தன்னையே திறப்பதாகும் (மாற் 10:15). அதனைப் பெறும்போது, அவன் உண்மையான தயாள குணத்திற்குத் தகுதியானவனாக உருவாகி, தானும் கொடுத்துப் பழகுமாறு அழைக்கப்படுகிறான் (1 யோவா 3:16).

I. பழைய ஏற்பாடு.

1. **இறைவனின் கொடைகள்:-** பழைய ஏற்பாடானது கொடைகளின் காலமல்ல; மாறாக, உறுதிமொழிகளின் காலம் ஆகும். இக்கொடைகள் முன்னடையாளங்காட்டி, உறுதியான கொடைக்குத் தயாரிப்பதற்கு மட்டுமே செயல்படுகின்றன.

ஆண்டவர் ஆபிரகாமிடம் ''நாம் இந்த நாட்டை உனது சந்ததியாருக்குத் தருவோம்'' என்று கூறினார் (ஆதி 15:18). இவ்வார்த்தையின் எதிரொலியானது ஐந்நூல் முழுவதும் ஒலிக்கின்றது. உப ஆகமமானது இத்தகைய கொடையினைப் பாராட்ட முன்வருகிறது (உப 8:7; 11:10); ஆனால் பிரமாணிக்கமின்மை தீமையைக் கொண்டுவரும் என்றும் அது அறிவிக்கின்றது. திரும்புதலுக்கும் வாழ்விற்கும் நிபந்தனையான இதயத்தின் விருத்தசேதனம் என்ற மற்றொரு கொடை அவசியமாகிறது (உப 29:21-30:6).

மோசேயின் வழியாக, மற்றெல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட கொடையாக (சங் 147:8-9), இறைவன் தன் மக்களுக்குச் சட்டத்தை அளித்தார் (உப 5:22). ஏனெனில், இது அவருடைய ஞானத்திலேயே பங்கு பெறுதலாகும் (சீரா 24:23; உப 4:5-8). ஆனால் அதனைப் பெறுகின்ற இதயம் தீயதாக இருக்கும்போது சட்டமானது ஆற்றலற்றதாக உள்ளது (நெகே 9:13,26). இஸ்ராயேலுக்குப் புதிய இதயம் தேவையாக உள்ளது. இறைவாக்கினர்கள் தங்களது நம்பிக்கைகளைத் திருப்பியிருந்த வரவிருக்கும் கொடை இத்தகையதே (எரே 24:7; எசே 36:26 தொ).

பழைய ஏற்பாட்டின் எல்லாக் கொடைகளைப் பற்றியும் இப்படியே கூறலாம்: சில குறைவுபட்டவையாகக் காணப்படுகின்றன (தாவீதின் மரபு, ஆலயத்தில் மகிமையின் பிரசன்னம்); மற்றும் தொடர்ச்சியான ஏமாற்றங்கள் மேலும் முன்னேறுமாறு அவர்களின் நம்பிக்கைகளைத் தூண்டுகின்றன. வானிலிருந்தான அப்பம் (ஞான 16:20-21), பாறையிலிருந்தான தண்ணீர் (சங் 105;41) போன்ற மற்றவையனைத்தும் அவர்களின் ஆசைகளைக் கிளறுகின்ற நினைவுகளே ஆகும். இஸ்ராயேலானது பெருமளவு பெற்றிருந்தாலும் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கின்றது.

2. **இறைவனுக்குக் கொடைகள்:-** அவருடைய மேலாண்மையான ஆட்சி மற்றும் அவரது நன்மைகள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்வதற்காக, இஸ்ராயேலானது முதற்கனிகள், பத்திலொரு பங்கு (உப 26) மற்றும் பலிகள் (லேவி 1..) ஆகியவற்றை ஆண்டவருக்கு அளிக்கிறது. அவ்வாறே, உடன்படிக்கைக்குக் காட்டிய பிரமாணிக்கமின்மைக்குப் பரிகாரம் புரியவும் (லேவி 4:5), மீண்டும் ஒருமுறை ஆண்டவரின் தயவைப் பெறவும் (2 சாமு 24:21-25) அது கொடைகளை அளிக்கிறது. எனவே, இறைவனுக்குக் காணிக்கை

கள் அளிப்பது பரஸ்பர வடிவமைப்பிற்குள் இடம் பெறுகின்றது (சீரா 35:9-10).

3. பரஸ்பரக் கொடைகள்:- அதே முன்னோக்கில் தனி நபர்கள், குடும்பங்கள், அல்லது நாடுகள் ஆகியவற்றிடையே கொடையானது பெரும்பாலும் கண்டுணரப்படுகிறது. கொடை அளிக்கும்போது, தோழர்கள் அல்லது நண்பர்கள் இடையிலான சட்டமாகிய பரஸ்பர நல்லெண்ணம் மற்றும் நற்செயல் ஆகியவற்றை ஒருவன் காட்டுகிறான். கொடையை ஏற்பவன் உடன்படிக்கையை ஏற்பவனாகி, எந்தவித விரோத மனப்பான்மையினின்றும் தடுக்கப்படுகிறான் (ஆதி 32:14; யோசு 9:12 தொ; 2 சாமு 17:27; .., 19:33.). ஆனால் இலஞ்சமாகக் கருதப்படுகின்ற கொடைகள் கடுமையாகக் கண்டனம் பெறுகின்றன (யாத் 23:8; எசா 5:23). காணிக்கையின் பரஸ்பர நிலையானது சாதாரணமாக நல்லுணர்வினுடைய பரஸ்பரத்திற்குச் சாட்சியம் கூறுவதால் இந்த மனப்பான்மையானது பெருந்தன்மை இல்லாமல் இல்லை.

மிகச்சிறப்பான சொற்களால் பரிந்துரைக்கப்படும் ஏழைகளுக்கு அளிக்கப்படும் கொடையானது (பிச்சையிடுதல்) பரஸ்பரமாக அளித்தலுக்கு ஒத்ததாக உருவாக முயல்கிறது. ஏனெனில் ஒருநாள் அந்த ஏழை மனிதன் அக்கொடையைத் திருப்பியளிக்க முடியும் (சீரா 22:23) அல்லது ஆண்டவர் அதனைச் சரிப்படுத்திக்கொள்வார் (பழ 19:17) என்பதே இதன் நம்பிக்கையாகும். தீயோருக்கு அளிப்பதென்பது தெளிவாகத் தடைசெய்யப்படுகின்றது (தோபி 4:17); இத்தகைய கொடையானது வீணானதாகும் (சீரா 12:1-7); பழைய ஏற்பாடானது உண்மையான தயாள மனதுடன் அறிவு சார்ந்த விவேகத்தைச் சேர்ப்பதில் கவனமாக இருந்தது.

II. புதிய ஏற்பாடு.

''இறைவனின் கொடையை நீ அறிந்திருந்தால்...'' (யோவா 4:10). இறைவனின் முட்டாள்தனமாகத் தோன்றும் தயாள குணத்தை முழு ஒளியில் அமைப்பதன் மூலம் (உரோ 5:7-8), புதிய ஏற்பாடானது மனித மதிப்புகளைத் தலைகீழாக மாற்றி அமைக்கிறது. இதுவே உண்மையில் கொடையின் காலமாகும்.

1. இயேசு கிறிஸ்துவில் இறைவனின் கொடை:- தமது மகனையே நமக்காக அளிப்பதன் மூலம் தந்தை நம்மீதான தம் அன்பை வெளிப்படுத்துகிறார் (யோவா 3:16). இயேசு, தந்தையினுடைய எல்லாச் செல்வங்களினாலும் நிரப்பப்பட்டிருப்பதால், தமது மகனில் தந்தை தம்மையே அளிக்கிறார் (1:14): சொற்கள் மற்றும் செயல்கள், தீர்ப்பிடவும் வாழ்வளிக்கவும் உரிய ஆற்றல், பெயர், மகிமை, அன்பு முதலிய தந்தைக்குரிய அனைத்தும் இயேசுவிற்கு அளிக்கப்படுகிறது (யோவா 17).

தம்மைத் தந்தையுடன் இணைக்கின்ற அன்பின் மீதான தமது பிரமாணிக்கத்தில் (15:10), இயேசு தம்மையே முழுக் கொடையாய் ஆக்குகிறார்: ''அவர் தம் உயிரையே அளிக்கிறார்'' (மத் 20:28). ''தந்தையால் அளிக்கப்பட்ட உண்மையான விண்ணக அப்பமாகிய தமது உடலை, உலகின் வாழ்விற்காக'' அவர் அளிக்கிறார் (6:32.51; லூக் 22:19; ''இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல்''). அவரது பலியின் மூலமாக எல்லாவற்றையும்விடச் சிறப்புமிக்க இறைவனின் கொடையாகிய (அ.ப. 8:20; 11:17) வாக்களிக்கப்பட்ட ஆவியை நமக்கு அளிக்குமாறு செய்கிறார் (2:33). இவ்வாறு இவ்வுலகிலேயே நமது உரிமைச் சொத்தினுடைய பிணையைக் கொண்டிருக்கிறோம். எல்லா ஆன்மீகக் கொடைகளாலும் (1 கொரி 1:5தொ) பல்வேறுபட்ட வரங்களினாலும் (12), உயிர்த்த கிறிஸ்துவின் கொடைகளினாலும் (எபே 4:7-12) நாம் செல்வராக்கப்பட்டுள்ளோம். அருளினுடைய கொடையின் அபரிமிதம் என்றுமே போதுமான அளவில் போற்றப்படமுடியாது (உரோ 5:15-21). மறைவான ஆனால் உண்மையான முறையில் (கொலோ 3:3-4), இறைவனது இலவசக் கொடையாகிய முடிவில்லா வாழ்வி

னால் நாம் ஏற்கெனவே வாழ்கிறோம் (உரோ 6:23).

2. **இயேசு கிறிஸ்துவில் இறைவனுக்குக் கொடை:-** கிறிஸ்துவின் பலி, ஒரே நேரத்தில் மனித குலத்திற்கு இறைவனின் கொடையாகவும் (யோவா 3:16), இறைவனுக்கான மனித குலத்தின் கொடையாகவும் (எபி 2:16-17) உள்ளதால், மனிதன் இனி வேறு கொடைகளை அளிக்க வேண்டியதில்லை. அது முழுமையான பலிப்பொருளானது; எக்காலத்திற்கும் போதுமானதாகும் (எபி 7:27). ஆனால் அவர்கள் இப்பலிப் பொருளுடன் தங்களைச் சேர்த்து, தங்களையே இறைவனுக்குக் காணிக்கையாக்குவதன் மூலம் (உரோ 12:1), மற்றவர்களின் பணிக்கென அவரது செயற்பாட்டில் தங்களை ஈடுபடுத்த வேண்டும் (கலா 5:13-16; எபி 13:16). ஏனெனில் அருளானது, ஒரு மனிதன் தன்னையே அடைத்துக்கொள்கின்ற ஒரு அன்பளிப்பாகப் பெறப்படுவதில்லை; பலனைக் கொண்டு வருவதற்கென அது பெறப்படுகிறது (யோவா 16; மத் 13:12).

3. **பிரதிபலன் அற்ற கொடை:-** பிறருக்கு அளிக்கின்ற இயக்கமானது இதுவரை அறிந்திராத முழுமையினையும் தீவிரத்தையும் ஏற்றுக்கொள்கிறது. அதனை எதிர்க்கின்ற "இச்சையானது" இடைவிடாமல் போராடப்பட வேண்டும். இதுமுதல், வாக்குறுதிகளின் பிரதிபலனை நாடாமல், ஒருவன் அதனின்று விலகியோட வேண்டும் (லூக் 14:12). ஒரு மனிதன் இறைவனிடமிருந்து இவ்வளவு பெற்றிருக்கும்போது, எந்தக் கணக்கீடும், இதயத்தின் குறுகிய மனப்பான்மையும், அவதூறாகவும் ஆகிறது (மத் 18:32-33). "கேட்கிறவனுக்குக் கொடு" (5:42). "இலவசமாய்ப் பெற்றுக்கொண்டீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" (10:8). உலகப்பொருட்களாயினும் ஆன்மீகப் பொருட்களாயினும், மற்றவர்களின் பணிக்கெனத் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டு, தான் அவற்றிற்கெல்லாம் ஒரு கண்காணிப்பாளராக மட்டுமே இருக்கிறோம் என்பதை மனதில் கொண்டு அனைத்துச் செல்வங்களையும் நோக்குமாறு கிறிஸ்தவன் அழைக்கப்பட்டுள்ளான் (1 பேதுரு 4:10-11). நிறைவடைய விரும்புகின்ற மனிதனை, அவனுடைய செல்வங்கள் அனைத்தையும் அளித்துவிடுமாறு அசாதாரண அழைப்பின் மூலம் இயேசு கேட்கின்றார் (லூக் 18:22). இயேசு கிறிஸ்துவிலான இறைவனின் கொடையானது நம்மை மேலும் கூட்டிச்செல்கிறது. இயேசு "தனது வாழ்வையே நமக்கென அளித்தார்"; அவரது அருளானது "நமது வாழ்வையும் நமது சகோதரர்களுக்கென அளிக்குமாறு" நம்மைத் தூண்டுகிறது (யோவா 3:16); "உயர்ந்த அன்பு வேறில்லை" (யோவா. 15:13).

இக்கொடையானது அன்பினில் ஒன்றிப்பைக் கொண்டுவந்து, அனைவரிலும் நன்றியறிதலைத் தூண்டியெழுப்புகிறது (2 கொரி 9:12-15). பயன்பெறுபவனைவிட அளிப்பவன் இறைவனுக்கு அதிக அளவில் நன்றி செலுத்துகிறான்; ஏனெனில், அவனுடைய தாராள மனப்பான்மையே ஓர் அருளாகவும் (2 கொரி 8;1), இறைவனிடமிருந்து வருகின்ற அன்பின் கனியாகவும் (1 யோவா 3:14-18) உள்ளதென அவன் அறிந்துள்ளான். இதனாலேயே, இறுதியாக, "பெறுவதிலும் தருவதே இன்பம்" (அ.ப. 20:35).

கொட்டைகள் (Nuts)

உணவாகக் கொள்ளுதற்குரிய பல பழமரங்களின் கொட்டைகள். உ.ச. 6:11இல் குறிப்பிடப்படும் கொட்டை வகை, வாதுமையினக் கொட்டை வகையாக இருக்கலாம். வாதுமை மரம் கலிலேயாக் கடல் ஓரத்தில் அதிகம் காணப்படுகின்றது. இது பாரசீகத்தில்தான் முதல் முதலில் காணப்பட்டது. பின் அரேபியாவில் குறிப்பாகப் பாலஸ்தீனத்தில் காணப்பட்டது.

யாக்கோபு தன் புதல்வர்களிடம் வாதுமைப் பருப்பையும் தேவதாருக் கொட்டைகளையும் எகிப்து மன்னனுக்குக் காணிக்கையாக்கும்படி கூறுகின்றார் (ஆதி 40:11). தேவதாருக் கொட்டை மிகவும் ருசி உள்ளது;

உண்பதற்கு மிகவும் நன்றாக இருக்கும். தாவரவியல் வல்லுநர் சிலர் இவைகளைத் தவிர இதே வகையைச் சேர்ந்த மற்றவகைக் கொட்டைகள் உண்பதற்கு ஏற்றவையல்ல என்று கூறுகின்றனர். யோர்தான் சந்தையில் சிரியாவிலிருந்து தருவிக்கப்பட்டு வறுக்கப் பட்ட கொட்டைகள் கிடைக்கின்றன. யோர் தான் நதிக்குக் கிழக்கில் (பெற்றோனிம் யோசு 13:26) என்ற நகரம் அங்குக் காணப் பட்ட பழமரங்களிலிருந்து தன் பெயரைப் பெற்றிருக்கலாம்.

கொதொனியேல் (GOTHONIEL)

கபிரி என்பவரின் தந்தை. யூதித்து வாழ்ந்த நகரமான பெத்தூலியா நகரின் முதியவர்க ளில் ஒருவர் (யூதி 6:15).

கொத்த மல்லி விதை (Coriander Seed)

இந்த விதை இன்றையக் கசகசா, ஒரு வகைச் சீரகம், எள்ளு விதைகள் போல அன்று பயன்படுத்தப்பட்டது. சிறிய, உருண் டையான, பழுப்பு நிறமுள்ள வாசனை யுள்ள இந்த விதையானது விவிலியத்தில் இரண்டு முறைதான் சொல்லப்பட்டுள்ளது (யாத் 16:31; எண் 11:7). இது மன்னாவை வருணிக்கும் பொழுது சொல்லப்பட்டுள் ளது.

கொத்தர்கள் (Masons)

மதில்கள் கட்டுவதிலும் கற்களால் கட்ட டங்கள் அமைப்பதிலும் ஆற்றல் உள்ளவர் கள். குறிப்பாக, இவர்கள் பெரிய, பகட் டான கட்டடங்கள் கட்டுவதிலும், நினைவுச் சின்னங்கள் அமைப்பதிலும் நகரைச் சுற்றிப் பாதுகாப்புச் சுவர்கள் அமைப்பதிலும் கைதேர்ந்தவர்கள். தீரைச் சேர்ந்த கீராம் (ஈராம்) பெனிசியாவிலிருந்து ஆற்றலுள்ள கொத்தர்களை எருசலேமில் தாவீதின் அரண் மனையைக் கட்ட அனுப்பினார் (2 சாமு 5:11; நாள் 14:1). நெடுங்காலத்திற்குப் பெனி சியாவைச் சேர்ந்த கொத்தர்களே இஸ்ராயே லில் வேலை செய்திருக்கலாம். சாலமோன் சொந்தமாகக் கற்சுரங்கங்களைக் கொண் டிருந்தார் (1 அர 5:15; 2 நாள் 2:18). இஸ்ராயே லுக்கும் யூதாவுக்கும் எருசலேம் ஆலயமே மிக முக்கிய கட்டடமாகையால், அதைக்கட் டுதல் (1 நாள் 22:2.15), அதைப் பழுதுபார்த் தல் (2அர 12:12; 22:6; 2 நாள் 24:12), மீண்டும் கட்டுதல் (எஸ் 3:7) ஆகிய சூழ்நிலையில் கொத்தர்கள் அடிக்கடி குறிக்கப்படுகின்ற னர். தொல்பொருள் ஆய்வு பல அரசாங்கக் கட்டடங்களையும், நினைவுச் சின்னங்களை யும், நகரைச் சுற்றிய பாதுகாப்புச் சுவர்களை யும் வெளிக்கொணர்ந்துள்ளன. இவற்றைக் கட்டுவதற்கும் கொத்தர்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

கொப்புழ்க்கொடி (Navel String)

எசே 16:1-14-இல் இஸ்ராயேலின் அனா தைத் தன்மையையும், இறைவன் இஸ்ராயே லின்மேல் கொண்ட அன்பையும், இதனால் இஸ்ராயேலுக்குச் செய்த நல்லவைகளையும் எடுத்துக்கூறுகின்றார். ''நீ பிறந்த வரலாறு இதுவே: நீ பிறந்த அன்று இன்னும் உன் கொப்புழ்க்கொடி அறுக்கப்படவில்லை; நீ நீராட்டப்பட்டுத் தூய்மையாக்கப்பட வில்லை; உப்புநீரால் கழுவப்படவில்லை; பிறந்த நாளிலேயே நீ வெறுத்து ஒதுக்கப்பட் டாய்'' (எசே 16:4-5) என்று கூறுகின்றார். பழங்காலத்தில் அரேபியா தேசத்தில் பச் சிளம் பெண் குழந்தைகள் உயிரோடு புதைக் கப்பட்டார்கள். ஆனால் கடவுள் இஸ்ராயே லாகிய அனாதைக் குழந்தையை அன்போடு பராமரித்துக் காக்கின்றார்.

16:4-இல் ஒரு மருத்துவச்சியின் கடமை எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இக்காலத் தைப் போல் அக்காலத்திலும் இவளின் பணி குழந்தையினைத் தாயின் கொப்புழிலிருந்து வெட்டி எடுத்தல், நீரால் கழுவுதல், உப்பால் தேய்த்தெடுத்தல், எண்ணெய் பூசுதல், துணி யால் பிறந்த குழந்தையை மூடுதல் போன்ற வைகளை ஏழு நாட்கள் செய்ய வேண்டும்.

கொப்புளம், கட்டி (Boil)

உடல்தோலில் ஏற்படும் வீக்கமாகும். யோபு 2:7-இல் உள்ள எரியும் புண் அம்மை நோயைக் குறிப்பதாக இருக்கலாம். யாத் 9:9-இல் எகிப்தில் நடந்த பல கொள்ளை நோய்களில் கொப்புளமும் ஒன்றாகும்.

எசேக்கியாவின் உடலில் ஏற்பட்ட கட்டி அல்லது பிளவை (2 அர 20:7; எசா 38:21) தோல் செதில்களுக்கு எரிச்சல் மூட்டி சீழ் வடிய வைக்கும் ஒருவிதத் தோல்நோய் வகையைச் சார்ந்தது. எசாயா அத்திப்பழ அடையை இதற்கு மருந்தாகக் குறிப்பிடுகிறார்.

கொப்ரா (ஒப்ரா) (HOPHRA - ராவின் இதயம் நிலைத்திருக்கிறது)

26-ஆவது அரச மரபைச் சேர்ந்த ஒரு பார்வோன் (கி.மு. 588-569). செதேக்கியா நெபுகத்னேசர் கரங்களில் துன்பப்பட்டதுபோல, இவனும் பகைவர்களிடத்திலும், அவன் உயிரைப் பறிக்கத் தேடுகிறவர்களிடமும் கையளிக்கப்படுவான் என்று எரேமியா இவனைப் பற்றி இறைவாக்கு உரைத்தார் (எரே 44:30)

கொப்ரா அவன் தந்தை ஸாமெத்திக்குவைத் தொடர்ந்து ஆட்சி பீடத்திற்கு வந்து நைல் நதிக்கழிமுகப்பகுதியில் சாயிசைத் தலைநகராகக்கொண்டு ஆண்டான். அவனது ஆட்சியின் ஆரம்பகாலத்தில் பாலஸ்தீனம் மற்றும் பெனிசியாமீது படையெடுத்தான். செதேக்கியாவைப் பாபிலோனியருக்கு எதிராகப் புரட்சி செய்யத் தூண்டிவிட்டான் (எரே 37:5). இப்புரட்சி தோல்வியடைந்தது. நெபுகத்னேசர் எருசலேமைக் கைப்பற்றினார். கொப்ரா எரேமியாவையும் ஒரு சில யூத அகதிகளையும் கழிமுக நகரமான தகபனகேசில் (43:7) ஏற்றுக்கொண்டான். கொப்ரா ஆட்சி செய்தபோது எகிப்து செழிப்புற்றது; ஆனால் கிரேக்கக் கூலிப் படைகளை விவேகமற்ற படையெடுப்புக்களில் பயன்படுத்தினான். கடைசியாக அமாசிசு என்ற அரசனின் உறவினன் கி.மு. 569-இல் கொப்ராவுக்கு எதிராக அரசனாக அறிவிக்கப்பட்டான். 566-இல் படையைத் திரட்டி அமாசிசைத் தோற்கடிக்கக் கொப்ரா முயன்றான். ஆனால் எரேமியாவின் இறைவாக்கு நிறைவேறும் பொருட்டுக் கொல்லப் பட்டான்.

கொப்னி, ஒப்னி (HOPHNI - அறட்டவளை)

கொப்னியும் பினகாசும் ஏலியின் இரண்டு புதல்வர்களாவர். சீலோவில் ஏலியோடு யாவேயின் குருக்களாகப் பணிசெய்தார்கள் (1 சாமு 1:3). நிகழ்ச்சியுரை அவர்களைப் 'பேலியாலின் புதல்வர்கள்' என்று அழைக்கிறது (அதாவது மதிப்பற்ற, முழுவதும் இழிவானவர்கள்). மேலும் அவர்கள் எவ்வாறு ஆண்டவரைப் பொருட்படுத்தவில்லை என்பதையும் கூறுகிறது (2:12). அவர்கள் ஆண்டவரின் பலியினின்று மக்களின் மனத்தைத் திருப்பினர் (2:17). ஆண்டவருக்குப் பலி கொடுக்கும்முன்பே தங்களுக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டார்கள். எந்த மனிதனாவது தடுத்தால், தேவையானால் வலுக்கட்டாயமாகப் பயமுறுத்தித் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள் (2:13-16). புனித இடத்தில் பணியாற்றிய பெண்களுடன் தகாத உறவு வைத்துக்கொண்டார்கள் (2:22). ஏலியின் கண்டனத்தை அவர்கள் கண்டுகொள்ளவில்லை (2:22-25; 3:13). அவர்களுடைய பாவத்தின் விளைவாக ஏலி வீட்டாரின் அழிவு அடையாளம் தெரியாத கடவுளின் மனிதர் ஒருவராலும் (2:27-36) சாமுவேலாலும் (3:11-18) அறிவிக்கப்பட்டது. இருவரும் அபேக்கு என்ற போர்க்களத்திற்குக் கொண்டுவரப்பட்ட கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியோடு இருந்தனர் (4:4), பெலிஸ்தியர்களால் இருவரும் கொல்லப் பட்டார்கள் (4:11.17). இச்செய்தி சீலோவுக்கு எட்டியபோது, ஏலி இறந்தார் (4:18). பினகாசின் மனைவி இக்கபோதைக் குறைமாதத்திலே பெற்றெடுத்தாள் (4:19-22).

சவுல் காலத்தில் பெட்டகத்தோடு அகியாவின் பாட்டனாகப் பினகாசை ஆக்கும் 14:3-இல் வரும் மரபுமுறைப்பட்டியல் அசாதாரணமானதாகும். இது ஓர் இடைச் செருகலாக இருக்கலாம்.

கொமோரா (GOMORRAH - அமிழ்ந்து போதல்)

சமவெளி நகரங்களுள் ஒன்று. இம்மக்களுடைய பாவம் ஆண்டவருக்குக் கோபத்தைத் தந்து அதனால் அழிபட்ட நகரம் (ஆதி 10:10; 19:24-28; உப 29:23; எசா 13:19; எரே 49:18; 50:40; ஆமோ 4:11). கானானியர்களின் எல்

லைகளைக் குறிப்பிடும்போது கொமோரா முதன்முதலாகக் குறிப்பிடப்படுகின்றது (ஆதி 10:19). கொமோராவின் அரசனான பிர்சா ஏனைய நான்கு அரசர்களுடன் கெதர்லகோமரால் சிதீம் என்ற பள்ளத்தாக்கில் தாக்கப்பட்டார் (ஆதி 14:2.8). கொமோராவின் அழிவு ஒரு முன்னெச்சரிக்கை அல்லது முன் அடையாளமாகும் (உப 29:23; 32:32; எசா 1:9-10; 13:19; எரே 23:14; 49:18; 50:40; ஆமோ 4:11; செப் 2:9; மத் 10:15; உரோ 9:29; 2 பேதுரு 2:6; யூதா 7).

பொதுவாகக் கொமோரா சோதோம் நகருடன் இணைந்துச் சொல்லப்படும் (7 முறை). ஆனால் இருமுறை ஏனைய சமவெளி நாடுகளுடன் சொல்லப்பட்டுள்ளது (ஆதி 14:2.8). ஒரு முறை மூன்று நகரங்களுடன் (சோவர் நீக்கப்பட்டு) (உப 29:23) சொல்லப்பட்டிருக்கிறது. கொமோரா 5 நகரங்களில் ஒன்றாகச் சொல்லப்படாவிட்டாலும் - இதுவும் சேர்ந்ததே ஆகும் (ஞான 10:16). பள்ளத்தாக்கு நகரங்களின் அழிவுகளில் இந்நகரும் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 19:25.29). இந்நகரம் சாக்கடலின் தென்பகுதியில் நீருக்குள் குறிக்கப்படலாம். இங்குச் செழிப்பான சிதீம் பள்ளத்தாக்கு இருந்திருக்கலாம். இது ஐந்து நகரங்களில் வடகோடியில் இருந்து இருக்கலாம்; செயில் ஏசால் ஓடைக்கருகில் இருந்திருக்கலாம்.

கொம்பு, ஊதுகுழல் (Horn)

ஓர் இசைக்கருவி. அபிடேகம் செய்வது போன்ற குறிப்பிட்ட செயலுக்காக எண்ணெய் போன்ற பொருள்களை வைத்திருக்கப் பயன்பட்ட கலமும் ஆகும். இது உலோகத்தால் செய்யப்பட்டதா என்று உறுதியாகக் கூறமுடியாது. அநேகமாக விலங்குகளின் கொம்புகளிலிருந்து செய்யப்பட்டதாக இருக்கலாம்.

கொம்பு பல அடையாளப் பொருளில் பயன்பட்டுள்ளது. இது அதிகாரத்தையும், உதவியையும், வெற்றியையும், மகிமையையும் அடையாளமாக உணர்த்தவல்லது (உப 33:17). ''ஆற்றல் உயர்கின்றது'' என்பதைக் குறிக்க (1 சாமு 2:1.10) மூலத்தில் கொம்பை உயர்த்துதல் கூறப்படுகிறது. இதற்குமாறாகக் ''கொம்பு முறிதல்'' (எரே 48:25) தோல்வியைக் குறிக்கிறது. இறைவனுக்கெதிரான ஒரு சக்தியைக் குறிக்கும் கொம்பு வருங்காலத்தில் எழுச்சியுறுவதை இறைவாக்கினர் முன்னறிவித்தனர் (செக் 2:1-2; தானி 7:8; திருவெளி 13:1). திருவெளி 5:6-இல் செம்மறி அல்லது இயேசு கிறிஸ்து, தமது ஆற்றலின் அடையாளமாக ஏழு கொம்புகளைக் கொண்டுள்ளார்.

கொம்புமான் (Antelope)

ஒருவகை மான். இது கொம்புகளையுடைய விலங்குகளான எருது, ஆடு, செம்மறி இவற்றில் எந்த வகையிலும் சேராத தனி வகை. இது மற்ற மான்கள் போல் தங்கள் கொம்புகளை ஆண்டுக்கொருமுறை உதிர்ப்பதில்லை; கொம்புகள் அதன் உடலின் ஒரு பகுதியாகவே உள்ளன. இவை உருவத்தில் வேறுபட்ட அமைப்புகளில் உள்ளன. ஆனால் எருதுகளைவிட மிக அழகிய அமைப்புடன், தங்கள் தலைகளை உடலுக்கு மேல் உயர்த்தி நடக்கும். இது சாதாரணமாய் ஆப்பிரிக்காவில் காணப்படும். பாலஸ்தீனத்திலும், பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டுள்ளது.

விவிலியம் பலவகையான கலைமான்களைப் பற்றிக் கூறுகிறது. இது உண்ணக்கூடிய சுத்த விலங்குகளில் ஒன்றாகும் (உப 14:5). இதை வலைபோட்டுப் பிடிப்பர். எசா 51:20-இல் இறைவனது சினத்தால் தண்டிக்கப்பட்ட எருசலேம் மக்கள் வலையில் சிக்கிய கலைமானைப் போன்றிருப்பர் என்று கூறப்படுகிறது.

கொராசின் (CHORAZIN - இரகசியம்)

இங்கு இயேசு பல அருஞ்செயல்களைச் செய்திருந்தாலும், அவரில் விசுவாசம் கொள்ளாததால் அவரால் கண்டிக்கப்பட்ட கலிலேயாவில் உள்ள ஒரு நகரம் (மத் 11:21; லூக் 10:13).

புதிய ஏற்பாட்டில் கூறப்படுகின்ற கொராசின் என்பதை இப்பொழுது நாம் அழைக்கின்ற கிர்பெத்து கெராசே என்ற இடத்தின் அழிவுடன் வைத்துப் பார்க்க வேண்டும் என்பது பெரும்பான்மையோரின் கருத்து. கப்பர்நாகுமின் வடக்கே 4 கி.மீ. தூரத்தில் உள்ள இந்த இடம் இக்காலத் தேல் கூம் என்ற இடத்துக்கு அருகில் உள்ளது. இக்கருத்து புனித எரோனிமு (சுமார் கி.பி. 400) என்பவரின் கருத்துடன் ஒத்திருக்கின்றது.

கொராசின் என்பது கப்பர்நாகுமிற்கு மேலே உள்ள எரிமலைப் பாறையில் கட்டப்பட்டுள்ளது. இதன் பரந்த சிதைவுகள் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக இருந்திருக்கலாம் 'என்று காட்டுகின்றன. இங்குள்ள கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஒரு கறுப்பு நிறமான எரிமலைப்பாறையில் கட்டப்பட்ட செபக்கூடமாகும். இங்குக் காணப்படும் சிதைவுகளில் வாசகத்தோடு கூடிய இருக்கை ஒன்றாகும். இது 'மோசேயின் இருக்கைக்கு' ஒரு மாதிரியாகும் (மத் 23:2). தால்மூதில் எபிரேய வடிவில் கொராசிம் என்று இந்த நகரம் குறிப்பிடப்படுகின்றது. இந்த இடம் கோதுமைக்குப் பெயர் பெற்றது.

கொராசின், பெத்சாய்தா ஆகிய இந்த இரண்டு இடங்களும் அவைகளின் விசுவாசமின்மையின் காரணமாக இயேசுவால் கடிந்து கொள்ளப்பட்ட இடங்களாகும். இந்த இரண்டு இடங்களும் கப்பர்நாகுமிற்கு அருகில் உள்ளன.

கொரிந்து (CORINTH)

இது உரோமைய மாநிலமான 'அகாயாவின்' தலைநகரமும், கொரிந்து நில இடுக்கில் அமைந்த மிக முக்கியமான வியாபார மையமும் ஆகும்.

கொரிந்து நகர் பற்றிய மிகத்தெளிவான விளக்கங்கள் ஸ்டாரோபோ மற்றும் பவுசானியா என்பவர்களால் தரப்பட்டுள்ளன. கி.பி. 1896-இலிருந்து இந்நகர் பற்றிய அகழ்வாய்வுகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

கொரிந்து வளைகுடாவின் உட்பகுதியில், 566 மீட்டர் உயரமான பகுதியில் அக்ரோகொரிந்து என்ற மலையடிவாரத்தின் உயரமான பகுதியில் அமைந்துள்ளது இந்நகர். கற்களால் ஆன கருவிகளும், மற்றும் இப்பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்பாண்டங்களும் இவை புதிய கற்காலத்தைச் சேர்ந்தவை எனக்காட்டுகின்றன. தொடக்க வெண்கலக்காலத்தில் இது அழிக்கப்பட்டது. முதலாம் ஆயிரமாண்டுத் தொடக்கத்தில் தோரியன் கிரேக்கர்களால் குடியேற்றப்பட்டது. கி.மு. எட்டாம் நூற்றாண்டில் கொரிந்து கோர்பு, சிரக்கூசா ஆகிய இடங்களில் தனது குடியேற்றங்களை நிறுவியது. 7-ஆம் நூற்றாண்டில் சிப்சேலு, பெரியாண்டர் ஆகியோர் காலத்தில் கொரிந்து பெரும் ஆதிக்கமும் செழிப்பும் பெற்று விளங்கியது. இது பெலோப்போனிசியர், கொரிந்தியப் போர்களில் அழிவிலிருந்து தப்பியது. பழைய கிரேக்க நகரமாகிய கொரிந்து கி.மு. 146-இல் உரோமையர்களால் அழிக்கப்பட்டது. ஒரு நூற்றாண்டுக் காலம் பாழடைந்த இடமாகக் கிடந்தது.

கி.மு. 44-இல் யூலியு சீசரால் இந்நகரம் மீண்டும் நிறுவப்பட்டது. இது 'அகாயா'வின் தலைநகரமானது. முதலில் விடுதலையடைந்த இத்தாலியர்கள் பலர் இங்கு வந்து குடியேறினர். பின்னர் பல நாட்டவரும் வந்து தங்குமளவுக்கு இது பலரைக் கவர்ந்திழுக்கும் நகரமாகியது.

கிரேக்கர் காலத்தைவிட உரோமையரின் காலத்தில் வியாபாரத்தில் இது அதிக முக்கியத்துவம் பெற்றது. புதிய ஏற்பாட்டுக் கொரிந்து நகரில் கிரேக்க-உரோம, கிழக்கு-மேற்கு வாணிபத் தொடர்புகள் அதிகரித்தன. கொரிந்து நகர் இரு துறைமுகங்களுக்கு நடுவே அமைந்திருந்தது. கொரிந்து வளைகுடாவில் உள்ள லெகேயோனுக்கும், சரோனிக் வளைகுடாவில் உள்ள கெங்கிரேயவுக்கும் இடையில்தான் இது அமைந்திருந்தது. பொருட்கள் இரண்டு துறைமுகங்களுக்கும் எடுத்துச் செல்லப்படும் வகையில் இந்நகரில் கால்வாய் அமைத்திருந்தனர். இவ்வாறு

பொருட்களை இரண்டு துறைமுகங்களுக்கும் சுமந்து செல்லுதல், மாற்றுதல் ஆகிய இவ்வேலைகளைச் சார்ந்துதான் இந்நகரம் வாழ்ந்தது. எந்தக் குறிப்பிட்ட பொருளும் இங்கு உற்பத்தி செய்யப்படவில்லை. ஆயினும் இந்நகரின் பெருமைபற்றி, விண்ணைத் தொடும் கட்டடங்கள் பற்றிப் பழம்பெரும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கி.மு.146-இல் இருந்த கிரேக்க நகரம் அன்று முழுமையாக அழிக்கப்பட்டுவிடவில்லை. அதில் வியக்கத்தக்க ஓர் அமைப்பு அப்பொல்லோ கோவிலின் ஏழு தூண் வரிசையாகும். அவை பிற்காலக் கிரேக்க கட்டடக் கலைக்குச் சான்று பகர்ந்தன.

1896-இல் தொடங்கிய அகழ்வாராய்ச்சிகள் தொடர்ந்து நடந்தாலும் பொது உபயோகத்திற்கான கட்டடங்கள், தனியார் வீடுகள் போன்றவற்றை இன்னும் முழுவதுமாக எடுக்கவில்லை. இலக்கியங்களும், தொல்பொருட்களும் கொரிந்து நகரில் எண்ணிக்கையற்ற கோவில்கள் இருந்ததற்குச் சான்று பகர்கின்றன.

மேலே கூறப்பட்ட அப்பொல்லோவின் ஆலயத்தைத் தவிர மேலும் பல ஆலயங்கள் அப்பொல்லோவுக்காகக் கட்டப்பட்டிருந்தன. அத்தீனா பொசிதேயோன், அஸ்கெலெபியோஸ் போன்ற பல தெய்வங்களின் ஆலயங்களும் இருந்தன. இவை எல்லாவற்றிலும் மிகப் பெரிய வழிபாட்டு மையம் அக்ரோ கொரிந்தில் உள்ள அப்ரோதைத்துவின் ஆலயம்தான். இங்கு 1000 அடிமைப் பெண்கள் தேவதாசிகளாகப் பணிபுரிந்தனர்.

கி.பி. 50-ஐ ஒட்டி ஒரு யூதக் குடியேற்ற நகரமும், செபக்கூடமும் இருந்திருக்கிறது. இங்குள்ள நகர மையம் கடைகளும், வியாபாரக் கட்டடங்களும் சூழப்பட்ட ஒரு பெரிய சந்தைக் கூடமாக அமைந்திருந்தது. இது 'அகோரா' எனப்பட்டது. அகோராவின் தென்பகுதியில் ஆலோசனைக் கூடமும், பேசுபவர்கட்குரிய மேடையும் இருந்தன. அ.ப.18:16-இல் பவுலினின் வழக்கைக் கல்லியோ இங்குதான் கேட்டிருக்கவேண்டும் (அ.ப. 18:16 தொ). இதே பகுதியில் மிகப் பெரிய பேராலயம் ஒன்று உள்ளது (பொதுக் கட்டடமாக இருந்திருக்கவேண்டும்). என்ன காரணத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பது தெரியவில்லை. அகோரா முழுவதும் பல கோவில்களால் சூழப்பட்டுள்ளது. நகரம் பல பொதுக்குளியல் மையங்களையும், அரங்குகளையும் கொண்டிருந்தது. ஒரு பொது அரங்கு 18,000 பேர் ஒரே நேரத்தில் உட்கார்ந்து நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் வசதியைக் கொண்டிருந்தது. பவுல் 1 கொரி 9:24-2-இல் குறிப்பிடும் இஸ்திமியன் விளையாட்டுகள் நடைபெறுவது இவ்விடத்தில்தான். லெகேயோனைச் சென்றடையும் சாலை பாதுகாக்கப்பட்டிருந்தாலும், அத்துறைமுகம் இருந்ததற்கான அடையாளங்கள் எதுவும் இல்லை.

கொரிந்து நகர் கிரேக்கர் காலத்திலும் சரி, உரோமையர் காலத்திலும் சரி, அதன் தீய இன்பக் களியாட்டங்களுக்குப் பெயர் பெற்றது. ''எல்லோரும் கொரிந்துக்குச் செல்வது நல்லதல்ல'' என்ற கிரேக்கப் பழமொழியே இதனை விளக்கும். 'விலைமாது' 'விலைமாதின் வீட்டிற்குச் செல்பவன்', எனும் பொருள்தரும் சொற்களாக அகராதியில் சேர்க்கப்படுமளவுக்கு இந்நகர் பெயர் பெற்றிருந்தது. பவுல் நற்செய்தி அறிவித்து அதிகம் பலன் தராத சபையென்றால் அது கொரிந்துதான். அவர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தும் அடைமொழிகளை வேறு எந்தச் சபைக்கும் அவர் பயன்படுத்தவில்லை (1 கொரி 5:19 தொ; 6:9; 6:15-20).

பவுல் ஒருமுறை கொரிந்து சென்றது பற்றி மட்டுமே அப்போஸ்தலர் பணிநூல் குறிப்பிடுகிறது (18:1-18). ஏதன்சிலிருந்து, தனது இரண்டாவது பயணத்தில் கொரிந்தை கி.பி.50-இல் அடைந்ததாகக் கூறப்படுகிறது. இங்கே அக்கிலாவோடும், பிரிஸ்கில்லாவோடும் கூடாரம் செய்யும் தனது தொழிலை மேற்கொண்டு அவர் வாழ்ந்ததாகவும், ஓய்வு நாள்களில் செபக் கூடத்திற்குச் சென்று போதித்ததின் மூலம் அதன் தலைவனான கிறிஸ்பு என்பவரை மனந்திருப்பியதா

கவும் கூறப்படுகிறது. அந்நகரத்து யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே தீத்து யுஸ்து என்பவர் வீட்டிலிருந்து போதித்தார். 18 மாதங்களுக்குப் பின் சட்ட விரோத மான ஒரு மதத்தைப் போதிப்பதாகப் பவுல் மேல் குற்றம் சாட்டிக் கல்லியோன் முன்னிலையில் கொணர்ந்தனர். ஆனால் இவ்வழக்கைக் கேட்பதற்குக் கூட மறுத்துவிட்டான் அவன். இதன்பின் பவுல் கொரிந்து நகரை விட்டு எபேசு சென்றடைந்தார் (அ.ப. 18:18).

கொரிந்தியருக்குத் திருமுகம் - I (1 CORINTHIANS, Letter to the)

I. கொரிந்தியத் திருச்சபைக்குப் பவுல் எழுதிய ஒரு மடல் இப்போது புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலில் ஏழாவதாக இடம் பெறுகிறது. இது பல காரியங்களைப் பற்றிப் பேசுகிறது. ஆகவே கிறிஸ்தவ இலக்கியத்தில் மிகவும் விளக்கம் அளிக்கும் நூல்களில் ஒன்றாகத் திகழ்கிறது. பவுலின் சிந்தனையின் பல கூறுகளைக் கூறுவதோடு தொடக்க காலத்திருச்சபை, குறிப்பாகப் புறவினத்தாரின் திருச்சபை, எதிர்கொண்ட பல பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்கிறது. ஆண்டவரின் இறுதி இரவுக் கொண்டாட்டம் ஆதித்திருச்சபையில் கடைப்பிடிக்கப் பட்டது என்பது பற்றிய விவரிப்பையும், இறுதி இரவுணவில் இயேசு பயன்படுத்திய சொற்களையும் 1 கொரி 11:23-26 என்ற பகுதி பாதுகாத்து வைத்துள்ளது. உயிர்ப்பில் விசுவாசம் எப்படித் தோன்றியது என்பதை 15:3-11 என்ற பகுதி எடுத்துக் கூறுகிறது. அதி 13-இல் வரும் அன்பு பற்றிய பாடல் யாவரும் அறிந்த, மற்றும் யாவராலும் விரும்பப் படும் ஒன்றாகும். நூல் முழுவதிலும் ஆன்மீக ஆழமும் கவிநயமும் மிளிர்கிறது.

II. கொரிந்து நகர்:- காண்க: கொரிந்து

III. கொரிந்தியத் திருச்சபை:- கி.பி. 49-இன் பிற்பகுதியில் தமது இரண்டாம் நற்செய்திப் பயணத்தைத் தொடங்கிய பவுல், ஆசியாவில் இருந்த சபைகளைப் பார்வையிட்ட பின்னர் துரோவா, பிலிப்பு, தெசலோனிக்கே, பெரயா, ஏதன்சு வழியாகக் கி.பி. 50-இல் கொரிந்து வந்தடைந்து, அங்கு ''ஓராண்டு ஆறுமாதம் தங்கியிருந்த போது'' (அ.ப.18:11) கொரிந்தில் திருச்சபையை நிறுவினார். அங்கு, கி.பி. 50-52-க்கு இடையில் 18 மாதங்கள் தங்கியிருந்து போதித்தார் (18:1-18). அங்கிருந்து சீரியா நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்ற போது கொரிந்தில் செழிப்பான திருச்சபை ஒன்று உருவாகியிருந்தது. எல்லாச் சமூகமட்டங்களிலிருந்தும் அங்கத்தினர்கள் இருந்தாலும் பெரும்பாலானவர்கள் தாழ்ந்த நிலையைச் சேர்ந்தவர்களே. இதில் யூத, புறவினக் கிறிஸ்தவர்களும் அடங்குவர்.

கொரிந்துக்குப் பவுல் சென்றடைவதற்குச் சற்று முன்னர்தான், பேரரசன் கிளாதியுவின் கட்டளைக்கிணங்க அக்கிலா பிரிஸ்கில்லாத் தம்பதியினர் உரோமையிலிருந்து வெளியேறிக் கொரிந்தில் குடியேறியிருந்தனர் (18:1-2). பவுல் ''ஓய்வு நாள்தோறும் செபக் கூட்டத்தில் விவாதித்து யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் விசுவாசமூட்ட முயன்றார்'' (18:4). மற்ற நேரத்தில் பவுல் கூடாரம் செய்யும் தொழில்செய்து, தனது வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியம் தேடிக்கொண்டார். யாருக்கும் சுமையாக இருக்கவிரும்பவில்லை. இதே தொழிலைக் கொண்டிருந்த அக்கிலா தம்பதியரின் வீட்டில் தங்கி வேலை செய்துவந்தார் (18:2-4).

பவுல், தனது வழக்கப்படி முதலில் யூதர்களை நாடிச்சென்றார் (உரோ 1:16). ஆனால் பிற இடங்களில் நிகழ்ந்ததுபோன்று இங்கும் யூதர்கள் அவரை ஏளனம் செய்தனர்; நற்செய்தியை ஏற்க மறுத்தனர். எதிர்ப்பு வளர்ந்தது. இதன் விளைவாகப், புறவினத்தாரை நாடிச் சென்றார். அவர்கள் நற்செய்தியை ஆவலோடு ஏற்றுக்கொண்டனர் (18:8). இப்பணியில் மாசிதோனியாவிலிருந்து திரும்பியிருந்த சீலாவும் திமொத்தேயுவும் பவுலுக்குப் பெரிதும் உதவியாய் இருந்தனர். பிலிப்பி நகர் மக்களின் நன்கொடையும் அவரது உழைப்பும் பயன்பட்டன (பிலி 4:15; 2 கொரி 11:9). பெயிபா அக்கிலா குடும்பத்தி

னர் முதலியோர் இப்பணியில் பெரிதும் ஆர்வம் காட்டினர். செபக் கூடத்தலைவர் கிறிஸ்பு தன் குடும்பத்துடன் திருமறையை ஏற்றார் (2 கொரி 1:14). அவர் தங்கவும் சபையினர் கூடுவதற்கும் தன்வீட்டில் இட மளித்திருந்த காயுவும் அவரது வீட்டாரும் திருமுழுக்குப் பெற்றனர் (உரோ 16:23; 1 கொரி 1:14). ஸ்தேவான் வீட்டாருக்கும் பவுல் திருமுழுக்குக் கொடுத்திருக்கிறார். இவர்களுக்கு மட்டுமே பவுல் தன் கைப் படத் திருமுழுக்கு அருளியதாகக் கூறுகிறார் (1:14-16). பிறருக்கு அவருடைய சீடர்கள் திருமுழுக்கு அளித்துவந்தனர் (1:17).

கொரிந்து திருச்சபை ஆவியானவரின் அருங்கொடைகளை நிரம்பப் பெற்று இறை அருளில் நிலைத்து நின்று (1:4-6) வளரத் தொடங்கியது. அதன் உட்கரு யூத சமூகமாகும். ஆனால் அனேக புறவினத்தார் இருந்தனர். கிரேக்க, உரோமை உலகின் பல சமூக மட்டங்களிலிருந்து மக்கள் நற்செய்தியை ஏற்றனர். அவர்களுடைய சமூக நிலை சில வற்றில் உயர்ந்தும், சிலவற்றில் தாழ்ந்தும் இருந்தது. பெயிபா போன்ற செல்வமிக்க பெண்களும், எரஸ்து போன்ற நகர அதிகாரி களும், முன்னாள் அடிமையும் கிரேக்கருமான வர்களும் (உரோ 16:23), அக்கிலா போன்ற யூதனும், தொழிலில் வல்லவரும், உயர்ந்த சமூக நிலையையுடைய அவரது மனைவி போன்றவர்களும், பொர்த்துனாத்து போன்ற உரோமையர்களும் (16:17), கிறிஸ்பு போன்ற யூதர்களும் (1:14) ஆகிய பலதரப் பட்ட மக்கள் நற்செய்தியை ஏற்றிருந்தனர். மேல் குடிமக்களும் இருந்தனர். ஆனால் பெரும்பாலோர் சாதாரண எளிய மக்களே (1:26-28). அடிமைகளும் இடம்பெற்றிருந்த னர் (7:21). யூதரும் புறவினத்தாரும் கிறிஸ்து வத்தை ஏற்றுக்கொள்வதைக் கண்ட யூதர்கள் பொறாமை கொண்டனர். அதுவும் பவுல் தங்கியிருந்து பணிசெய்து வந்த இல்லம் செபக்கூடத்தை அடுத்து இருந்ததால் (அ.ப. 18:7) யூதர்களின் எதிர்ப்பு வலுத்தது. தங்கள் சட்டத்துக்கு முரணான முறையில் இறை வனை வழிபடுமாறு மக்களைத் தூண்டிவிடு வதாக ஆளுநன்முன் அவர்மீது குற்றம் சுமத் தினார்கள் (18:12-17). ஆனால் கொரிந்தை மையமாக வைத்துத் திருச்சபை வளர்ந்து கொண்டே இருந்தது. வெகுவிரைவில் அக் காயா மாநிலம் முழுவதிலும் இறை வார்த்தை வேரூன்றியது (2 கொரி 1:1). இந்நிலையில் பவுல் சீரிய நாட்டிற்குக் கப் பல் ஏறி, எபேசு நகரை அடைந்தார். அக் கிலா தம்பதியினரும் அவருடன் சென்றனர்.

பவுல் நட்ட நற்செய்திப் பயிருக்கு அலக் சாந்திரியாவைச் சேர்ந்த அப்பொல்லோ என்ற யூதர் நீர்பாய்ச்சினார். இவர் சொல் வன்மை மிக்க மறைநூல் அறிஞர். இவர் திரு முழுக்கு யோவானின் திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். இவருக்கு அக்கிலா தம்பதி யினர் ''கடவுளின் அருள் நெறியைப் பற்றித் திட்டவட்டமாக விளக்கினர்''. பின்னர் இவர் அக்காய மாநிலத்திற்குச் சென்று, கொரிந்தில் தங்கிக் கிறிஸ்தவர்களின் விசுவா சத்தை உறுதிப்படுத்தினார் (அ.ப. 18:24-28).

பலதரப்பட்ட கொரிந்தியக் கிறிஸ்தவர் கள், கிறிஸ்துவத்தை ஏற்றவுடன், கேள்விகள் எழுப்புவதையும் மேலும் ஆய்வு செய்வதை யும் கைவிட்டுவிடவில்லை. அதற்கு யூதர்க ளின் எதிர்ப்பிரச்சாரமும், அவநம்பிக்கையும் தூண்டிவிட மற்றத் திருச்சபைகளைவிடக் கொரிந்து திருச்சபை பவுலுக்குப் பல பிரச் சனைகளை எழுப்பியது. கொரிந்து கிறிஸ்த வர்கள் பவுல் போதித்ததற்கு வேறான பிரச் சாரங்களையும் வரவேற்றனர். சமூக ஏற்றத் தாழ்வு திருவழிபாட்டிலும் பிரதிபலித்தது. இவை பல கட்சிகள் தோன்ற வாய்ப்பாயின. ஞானத்தைப்பற்றிய தவறான எண்ணமும், அதை அடைவதில் அவர்கள் காட்டிய தகாத பற்றும், ஆன்மீகப் பெருமைக்காக அவர்க ளிடையே நிலவிய போட்டிகளும், கட்சிப் பிரிவினைப் போக்கை மேலும் வளர்த்தன. சண்டை சச்சரவுகள் உண்டாயின. கிறிஸ்தவர் கள் வேற்று மறையினர்முன் வழக்காட ஆரம்பித்தனர் (6:1-11). கொரிந்தில் மேலோங்கி நிலவிய ஒழுக்கக்கேடு கிறிஸ் தவர்களையும் பாதித்தது (5:1-13; 6:12-30). திருவழிபாட்டிலும் தீயவொழுக்கம் புகுந் தது (11:2-16). ஒற்றுமையின் சின்னமாகிய

ஆண்டவரின் திருவிருந்துகூட வேற்றுமைகளை வெளிப்படுத்த வாய்ப்பாயிற்று (11:17-34). அன்றாட வாழ்வைச் சேர்ந்த பல காரியங்களில் கருத்து வேறுபாடுகளும் தவறான கருத்துகளும் (7:1-40; 8:1-11:1), ஆவியின் வரங்கள் பற்றிய முரண்பட்ட கருத்துகளும் (12:1-14:40), உயிர்த்தொழுதல் பற்றிய பிரச்சினைகள் (15:1-58) முதலியவையும் தோன்றிக் கொரிந்து திருச்சபையின் வளர்ச்சியைக் குன்றச்செய்தன. இந்நிலை புறவினத்தாருக்கே துர்மாதிரியாய் அமைந்தது (5:1).

இந்நிலையில் பவுல், கேட்டறிந்த தகவல்களாலும், கொரிந்தியரின் மடலாலும் கொரிந்தியக் கிறிஸ்தவர்களின் இரங்கத்தக்க நிலையை அறியவந்தார். அந்நிலையைச் சீர் செய்ய எழுதப்பட்டதே இந்த முதலாம் திருமுகமாகும்.

IV. நூல் தோன்றிய சந்தர்ப்பமும், நோக்கமும்:-

இதற்குப் பல காரணங்கள் உண்டு. பவுல் கொரிந்தியருக்கு ஏற்கெனவே ஒரு மடல் எழுதியிருந்ததாகத்தெரிகிறது (காண்க 5:9). சில விளக்கவுரையாளர்கள் இதன் சில பகுதிகளை இரண்டாம் திருமுகத்தில் அடையாளம் காண்கின்றனர். இவர்கள் கருத்துப்படி 2-ஆம் திருமுகம் பவுலின் பல மடல்களின் சில பகுதிகளைக் கொண்ட தொகுப்பாகும்.

1. ''இப்பொழுது நீங்கள் எழுதிக் கேட்டவற்றைக் குறித்துப் பேசுகிறேன்'' என்று பவுல் கூறுகிறார் (7:1). இதிலிருந்து கொரிந்தியக் கிறிஸ்தவர்கள் பல காரியங்களைப் பற்றிக் கேள்வி எழுப்பிப் பவுலுக்கு எழுதி அவரது ஆலோசனையைக் கேட்டதாகத் தெரிகிறது. இந்த மடல் ஸ்தேவான், பொர்த்துனாத்து அக்காய்க்கு ஆகியோர் வழியாகப் பவுலை அடைந்திருக்கலாம். அவர்கள் எழுப்பிய பிரச்சினைகள் திருமணம் மற்றும் கன்னிமை வாழ்வு பற்றிய மதிப்பீடு (7:2 தொ), சிலைகளுக்குப் பலியாக அளிக்கப்பட்ட உணவுப் பொருட்களைப் பயன்படுத்துதல் (8-9), அருங்கொடைகளின் மரபுப்படி (12:4) ஆகியவையாகும். மேலும் மடலைக் கொண்டு வந்தவர்கள் வழியாகச் சபைக்குள்ளும், நற்கருணை வழிபாட்டிலும் கூடப் புகுந்துள்ள சில தவறுகள் பற்றியும் (10-11), பொதுஉயிர்ப்புப் பற்றிய கோட்பாடு எழுப்பிய சில கடினமான கருத்துக்கள் பற்றியும் (15), பவுல் கேள்விப்பட்டிருக்க வேண்டும். இவற்றிற்கு 7:1-15:58 என்ற பகுதியில் பவுல் பதில் அளிக்கிறார்.

2. இவ்வாறு எழுத்து மூலம் அறியவந்த செய்திகளைக் கேட்டறிந்த தகவல்களும் நிறைவு செய்திருக்கவேண்டும். ''உங்கள் நடுவில் சண்டை சச்சரவுகள் இருப்பதாகக் குலோயி வீட்டினர் எனக்கு அறிவித்தனர்'' (1:11) என்று பவுல் கூறுகிறார். குலோயி எபேசு நகரில் வியாபாரம் செய்துவந்த ஒரு பெண்மணி. இவள் வியாபாரத்தின் நிமித்தம் கொரிந்துக்குச் சென்று வந்திருக்கவேண்டும். அப்போது அங்குத் தான் கண்ட திருச்சபையின் நிலைபற்றி எபேசில் தங்கியிருந்த பவுலுக்கு அறிவித்திருக்க வேண்டும். இந்நிலையின் சில கூறுகள், கொரிந்து திருச்சபையில் நிலவிய கட்சி மனப்போக்கு (1:12), சகோதரர்களிடையே நிலவிய சண்டை சச்சரவுகள் (6:1), சிலரது துர்மாதிரியான நடத்தை (5:1; 6:12-20) ஆகியவை பற்றிய செய்திகளாகும். இவற்றிற்குப் பதிலாகவும் அறவுரையாகவும் பவுல் இத்திருமுகத்தின் 1:10-6:20 என்ற பகுதியை வரைகிறார்.

கொரிந்து திருச்சபையில் நிலவிய மேற்கூறப்பட்ட சீர்குலைவுகளைத் தீர்த்துவைக்கப் பவுல் கொரிந்துக்குச் செல்ல விரும்பினார். ஆனால் அப்பொழுது எபேசில் இருக்க வேண்டிய அவசியம் பவுலுக்கு ஏற்பட்டது (அ.ப. 19:22). இருந்த போதிலும் அவர் விரைவிலே அங்குச் செல்லமுடியும் என்ற நம்பிக்கையோடு இருந்ததாகத் தெரிகிறது (4:19).

இதற்கிடையில், திமொத்தேயுவைக் கொரிந்துக்கு அனுப்பிவைத்தார். திமொத்தேயு எரஸ்துவோடு மாசிதோனியா வழியாகக் கொரிந்துக்குப் புறப்பட்டுச் சென்றார் (4:17:16:10). கொரிந்து திருச்சபையின் நிலை

மேலும் மோசமாகி விடும் என்ற அச்சத்தில் இந்தத் திருமுகத்தைப் பவுல் எழுதினார். இவ்வாறு, இந்தத் திருமுகம் குலோயி வீட்டாரிடமிருந்து கேட்டறிந்த தகவல்களுக்கும் கொரிந்தியர் கேட்டிருந்த வினாக்களுக்கு விடையாகவும், விளக்கமாகவும் அமைந்தது. இச்செய்திகள் கிறிஸ்தவச் சமூகம் பற்றிக் கொரிந்தியர்களிடையே நிலவிய அடிப்படைத் தவறுகளை எடுத்துக்காட்டின. ஆகவே, கிறிஸ்துவில் உண்மையான வாழ்வு பற்றிய உண்மையான அறிவையும் மதிப்பீட்டையும் கொரிந்தியர்க்கு உணர்த்த அவர்களை நேர் வழிப்படுத்தும் நோக்கோடு பவுல் இத்திருமுகத்தை வரைந்தார் எனலாம்.

V. **எத்தனை திருமுகங்கள்?** இப்பிரச்சினை பற்றிக் கொரிபந்தியருக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகத்திற்கு எழுதப்படும் கட்டுரையில் அலசப்படும்.

VI. **நூலாசிரியரும் நூலில் ஒற்றுமையும்:** இம்மடலை பவுல்தான் எழுதினார் என்பதை யாரும் ஐயுறுவதில்லை. புறச்சான்றுகள்: முதலாம் நூற்றாண்டின் முடிவில் உரோமைக் கிளமந்து (கி.பி. 95) இந்நூலைக் குறிப்பிடுகிறார். இந்நூலிலிருந்து பல மேற்கோள்களை எடுத்தாளுகிறார். புனித போலிக்கார்ப்பு இந்நூலைப் பயன்படுத்தியுள்ளார். புனித அந்தியோக்கியா இஞ்ஞாசியார் (கி.பி. 112) இந்நூலிலிருந்து எடுத்துக்காட்டுகள் கொடுக்கிறார். முராத்தோரியின் துணுக்குகளில் இம்மடல் பவுலின் மடல்கள் தொகுப்பில் முதலாவதாகக் குறிக்கப்படுகிறது. இது தொடக்க நூற்றாண்டுகளில் இந்நூலுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தைச் சுட்டுகிறது. தொடக்ககாலத் திருச்சபைத் தந்தையர்கள் உரோமையர், எபேசியர் ஆகிய மடல்களுடன் சேர்த்து இந்நூலிலிருந்துதான் அடிக்கடி எடுத்துக்காட்டுகள் அளிக்கின்றனர். சிலரைத்தவிர மற்ற யாவரும் இந்நூலின் உண்மைத் தன்மையை ஏற்றுக்கொள்வர்.

அகச்சான்றுகள்: இந்நூலில் காணப்படும் சொற்றொடர்கள், மொழிநடை, கருத்துகளை விளக்கும் முறை, பவுலைப் பற்றிய சில குறிப்புகள் முதலியவை இந்நூல் பவுலால்தான் எழுதப்பட்டிருக்கவேண்டும் எனச் சுட்டுகின்றன (1:1.13-16; 4:12; 16:21).

இது ஒரு தொகுப்பு நூல் என்ற கருதுகோளுக்கு ஆதரவாகக் கூறப்படும் வாதக் கருத்துக்களும் நூலுக்கு அளிக்கும் பிரிவுகளும் பலதரப்பட்டவையாகவும் முரண்பட்டவையாகவும் இருப்பதே இந்த வாதத்தின் பலவீனத்தை எடுத்துக்காட்டுகின்றன.

VII. **இடம்:** இந்நூல் எபேசு நகரில் எழுதப்பட்டது என்பது அறிஞர்களின் முடிவு. ''பெந்தக்கோஸ்து திருநாள்வரை எபேசில் தங்கியிருப்பேன்'' (16:8) என்றும், ''ஆசிய நாட்டுச் சபைகள் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றன'' (16:19) என்றும் பவுல் கூறுகிறார். ''அக்கிலாவும், பிரிஸ்கில்லாவும், இவர்களது வீட்டில் கூடுகின்ற சபையினரும் ஆண்டவருக்குள் உங்களுக்கு வாழ்த்துக்கூறுகின்றனர்'' (16:19) என்றும் கூறுகிறார். இந்த இருவரும் பவுலுடன் எபேசுக்குச் சென்றதாக அ.ப. 18:18 கூறுகிறது. ஆகவே, பவுல் எபேசு நகரிலிருந்துதான் இம்மடலை எழுதினார் என்பது உறுதி.

VIII. **காலம்:** இந்நூல் எழுதப்பட்ட காலத்தைப் பற்றித் துல்லியமாக ஒன்றும் கூறமுடியாது. கி.பி. 52-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கொரிந்து நகரைவிட்டுப் புறப்பட்ட பவுல் (அ.ப.18:18) எபேசு, செசரியா, எருசலேம் வழியாக அந்தியோக்கியாவை அடைந்து தனது இரண்டாம் நற்செய்தி பரப்புப் பயணத்தை முடிக்கிறார் (அ.ப. 18:20-22). அந்தியோக்கியாவில் ஓராண்டு தங்கியபின் கி.பி. 53-இல் தனது மூன்றாம் நற்செய்தி பரப்பும் பயணத்தைத் தொடங்கிக் கலாத்தியா, பிரிகியா ஆகிய நாடுகள் வழியாக 54-இன் பிற்பகுதியில் எபேசு நகரை அடைந்தார் (அ.ப. 19:1). அங்கு ஈராண்டுகளும் (19:10) மூன்று மாதங்களும் (19:8) தங்கியிருந்தார். அங்கிருந்து திமொத்தேயுவையும் எரஸ்து

வையும் மாசிதோனியாவுக்கு அனுப்பி வைத்ததாகத் தெரிகிறது (19:22). அவரும் மாசிதோனியா, அக்காயா வழியாக எருசலேம் செல்லத் திட்டமிட்டிருந்ததாகத் தெரிகிறது (19:21). இப்பயணங்களையே 1 கொரி 16:5-10-இல் குறிப்பிடுகிறார் எனலாம். இந்நூல் பவுல் எபேசில் தங்கியிருந்த காலத்தில் (கி.பி. 54-57) பாஸ்கு விழாவிற்குப்பின் எழுதப்பட்டதாகத் தெரிகிறது (5:6). விளக்கவுரையாளர்கள் சிலர் கி.பி. 57-இன் வசந்த காலத்திலும், இந்நூல் எழுதப்பட்டது என்பர். உறுதியாக ஒன்றும் கூறமுடியாது.

IX. **மொழிநடை:** இதன் நடை உரோமையர் திருமுகத்தைப் போன்று ஆடம்பரமானதன்று. ஆனால் நேரடியானது; உறவாடும் நடைகொண்டது. இலக்கியநயமிக்கது (8:4-6; 12:4-11; 13:1-13; 15:54-57). இரங்கற்சுவைக்குக் குறைவில்லை. வஞ்சப்புகழ்ச்சி அணி ஆங்காங்கே பளிச்சிடும் (1:25; 4:9-13). முரணணிகள் பல இடங்களில் காணப்படுகின்றன (1:21; 3:1-4; 8:7-13; 10:1-13; 13:11-12). பலவகை உவமைகளை ஆசிரியர் பயன்படுத்துகிறார் (3:2.9.16; 5:6; 15-16; 4:24-27; 12:12-30; 13:12). கிரேக்க மெய்யியலார் போன்று எழுதுகிறார். எதையும் நுணுகி ஆய்ந்து மேய்ப்பனுக்குரிய பரிவோடு எழுதுகிறார்.

கொரிந்தியர் இரண்டாம் மடலைப் போன்று அவ்வளவு கடுமை மிக்கதன்று. யாரிடையே அவர் போதித்து உழைத்தாரோ அவர்களுக்கும், அவர் ஏதன்சில் தோல்வியடைந்தபின் (அ.ப.17) அவருக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும், அவர் காட்டும் அக்கறையையும் அன்பையும் நூல் பிரதிபலிக்கிறது. கொரிந்தியர் இரண்டாம் மடலில் காணப்படுவதுபோல் அவர் யாரிடமும் கோபப்படவில்லை. ஆனால் கோபமிக்க கூற்றுக்கள் இல்லாமலுமில்லை (1 கொரி 1:13; 5:5; 11:17-22). முதல் மடல் பவுலின் இரண்டாவது நீண்ட மடலாகும்; கிரேக்க மொழியில் 6800 சொற்களையுடையது.

X. **திட்டம்:** இத்திருமுகத்தை எழுதத்தூண்டிய இரு சந்தர்ப்பங்களுக்கேற்ப இந்நூலை இரு பெரும்பகுதிகளாகத் தெளிவாகப் பிரிக்கலாம். முதல் பகுதி (அதி 1-6) குளோயி வீட்டாரிடமிருந்து அனுப்பப்பட்ட செய்திக்குப் பவுலின் பதிலாகும். கொரிந்து சபையில் நிலவிய முறைகேடுகளை ஆற்றலோடு பவுல் கண்டனம் செய்கிறார். இரண்டாம் பகுதி (அதி 7-15) கொரிந்து திருச்சபை அனுப்பிய மடலில் காணப்பட்ட பிரச்சினைகளுக்குப் பதிலாக அமைந்துள்ளது. கிறிஸ்தவச் சமூகத்தில் நிலவிய ஒற்றுமையின்மைக்கு எதிராகப் போராடுவதில் பவுல் பயன்படுத்தும் கிறிஸ்தவ ஞானம் என்ற கருத்து நூல் முழுவதும் ஓடுகிறது, ஒன்றிணைக்கிறது.

1.	முன்னுரை	: வாழ்த்தும் நன்றியுரையும் (1:1-9)
2.	முதல் பாகம்	: கொரிந்து சபையில் நிலவிய முறைகேடுகளுக்குக் கண்டனம் (1:10-6:20).

அ. கொரிந்து சபையில் கட்சிப் பிளவுகளும் கிறிஸ்தவ ஞானமும் (1:10-4:2).

1:10-16	: கட்சிப்பிளவின் தன்மை.
1;16.25	: சிலுவையின் செய்தி.
1:26-31	: கொரிந்து சபையின் அங்கத்தினர்கள்.
2:1-5	: பவுல் போக்குமுறை.
2:6-16	: உண்மையான போலியான ஞானம்.
3:1-ɘ	: கொரிந்தியரின் ஆன்மீக சிறுபிள்ளைத்தனம்.
3:5-4:13	: நற்செய்திப் பணியாளர்கள் பால் உண்மையான கிறிஸ்தவ மதிப்பீடு.
4:;14-21	: திமொத்தேயுவை அனுப்புதல்.

ஆ. உடலின் முக்கியத்துவம் (5:1-6:20).

- 5:1-8 : தகாத ஒழுக்கமுடைய மனிதன்.
- 5:9-13 : ஒழுக்கமற்ற கிறிஸ்தவர்கள் புறம்பாக்கப்படவேண்டும்.
- 6:1-11 : வேற்றுமறையினர் முன் வழக்காடுதல்.
- 6:12-20 : பாலினப்பாவங்களின் தீமை.

3. இரண்டாம் பாகம் : கொரிந்தியரின் வினாக்களுக்குப் பதில் (7:1-15:58).

அ. திருமணமும் கன்னிமையும் (7:1-40).

- 7:1-9 : திருமணத்தில் பாலின உறவு.
- 7:10-16 : திருமணமும் விவாகரத்தும்.
- 7:17-24 : சமூக நிலையில் மாற்றங்கள்.
- 7:25-40 : பாலின நிலையில் மாற்றங்கள் : கன்னிமை.

ஆ. பிற மதச்சூழ்நிலையில் எழும் பிரச்சினைகள்: சிலைகளுக்குப் படைக்கப்பட்டதை உண்ணுதல் (8:1-11:1).

- 8:1-13 : அறிவும் அன்பும்.
- 9:1.27 : சுயநலம் தேடாத அன்பிற்குப் பவுல் ஓர் எடுத்துக்காட்டு.
- 10:1-13 : மறைநூலிலிருந்து ஓர் எடுத்துக்காட்டு. மிதமிஞ்சிய நம்பிக்கையால் வரும் ஆபத்துக்கள்.
- 10:14:22 : சிலைகளோடு தொடர்பு கூடாது.
- 10:23-11:1 : சில நடைமுறை விதிகள்.

இ. திருவழிபாட்டுச் சபைகளில் எழும் பிரச்சினைகள் (11:2-14:40).

- 11:2-16 : பெண்களும் முக்காடும்.
- 11:17:34 : ஆண்டவரின் இறுதி உணவுக் கொண்டாட்டம்.
- 12:1-11 : ஆவியின் கொடைகள்.
- 12:13-31 : உடலுக்குப் பல உறுப்புகள் தேவை.
- 13:1-13 : அன்பே மிகப்பெரிய கொடை.
- 14:1-25 : பரவசப் பேச்சைவிட இறைவாக்குரைத்தலே முக்கியமானது.
- 14:26-40 : ஆன்மீகக் கொடைகளை முறைப்படுத்துதல்.

ஈ. இறந்தோர் உயிர்த்தெழுதல் (15:1-58).

- 15:1-11 : திருச்சபையின் விசுவாசம்: கிறிஸ்துவின் உயிர்ப்பு.
- 15:12-34 : கிறிஸ்தவனின் உயிர்ப்பு.
- 15:35-49 : உயிர்த்த உடலின் நிலை.
- 15:50-58 : உருமாற்றத்தின் அவசியம்: சாவின் வெற்றி.

4. முடிவுரை (16:1-24).

- 16:1-4 : பாலஸ்தீன ஏழைகளுக்கு நன்கொடை திரட்டுதல்.
- 16:5-9 : பவுலின் பயணத்திட்டம்.
- 16:10-18 : சில பரிந்துரைகள்.
- 16:19-24 : இறுதி வாழ்த்தும் ஆசீரும்.

XI. மதிப்பீடும் இறையியலும்: வரலாற்று நோக்கிலும், இறையியல் நோக்கிலும் இத்திருமுகம் மிக முக்கியமானதாகும். இது ஒரு தொடக்க காலத் திருச்சபையின் சமூக, சமய நிலையை விவரிக்கிறது. குறிப்பாகச் சமீப காலத்தில் புதிதாக மதம் மாறியவர்கள்,

சிறப்பாகப் புறவின மதத்திலிருந்து மனந்திரும்பியவர்கள், எதிர்கொண்ட பிரச்சினைகளை விவரிக்கிறது. இப்பிரச்சினைகள் ஒழுக்க, சமூகப் பண்புகளையுடையவையாகும். பவுலின் கோரிக்கைகள் இயேசுவின் மரணத்துக்குப்பின் 25 ஆண்டுகளுக்குள் நிறுவப்பட்டு 10 ஆண்டுகள்கூட ஆகியிராத திருச்சபையில் ஏற்கெனவே போதிக்கப்பட்ட உண்மைகளைப் பிரதிபலிக்கின்றன. கோட்பாட்டு உண்மைகள் பற்றிய குறிப்புகள் பொருள்மிக்கவையாகும். திருச்சபை ஏற்கெனவே விசுவாச வாய்பாடுகளைக் கொண்டிருக்கிறது (8:5-6; 12:6; 15:1-5). வழிபாட்டு முறைகளும், குறிப்பாகத் திருமுழுக்கு மற்றும் நற்கருணை பற்றிய முறைகள், திருஆட்சி அமைப்பு, திருச்சபை மரபு ஆகியவை ஏற்கெனவே மரபு வடிவம் எடுத்திருந்தன. தொடக்க காலத் திருச்சபையில், உண்மையில், சில கூறுகள் எப்படி வளர்ச்சியுற்றன என்பதற்கும், சில சமயங்களில் போதகத்திலும் வழிபாட்டிலும் எப்படி ஒரு கூறு மற்றவற்றைவிட வலியுறுத்தப்பட்டது என்பதற்கும் இம்மடல் சாட்சியாக அமைகிறது (10:16-17-ஐ 11:23-27-ஒடு ஒப்பிடுக). இம்மடல் மிக முந்திய நகர சமூகங்களில் ஒன்றின் செழிப்புமிக்க வாழ்க்கைபற்றிய காட்சியை அளிக்கிறது. இக்கடிதம் இல்லாமல் தொடக்க காலத்திருச்சபையில் நிலவிய ஆன்மீக இயக்கங்கள், மற்றும் அப்போஸ்தலர் எதிர்கொண்ட பிரச்சினைகள் பற்றிய அறிவு தெளிவில்லாதுபோகும். தொடக்க நிலையில் இருந்த அருங்கொடை இயக்கம், துறவு நிலை போன்ற ஆன்மீக இயக்கங்கள் பற்றிய விவரிப்புகளை இம்மடல் கொண்டுள்ளது.

சமூகத்தில் நிலவிய கட்சிப்பூசலோ, தகாத உடலுறவோ, கற்பு ஒழுக்கமின்மையோ, திருமணமோ, சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவை உட்கொள்ளுதலோ, கொரிந்து திருச்சபையிலும் பொதுத் திருச்சபையிலும் நிலவவேண்டிய ஒற்றுமைபற்றியோ, எதைப் பற்றிப் பேசினாலும் அப்போஸ்தலர் பவுலின்போக்கு கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளது. பொது உயிர்ப்பைத் தவிர மற்றவற்றைப்பற்றி விசுவாசக் கோட்பாட்டு அறிக்கையாக இம்மடலில் அதிகம் கூறப்படவில்லை. ஆயினும் கோட்பாட்டுச் சிந்தனையை அதிகம் வளப்படுத்தும் பல குறிப்புகளைக் கொண்டுள்ளது. உரோமையர், எபிரேயர் திருமுகங்களைப் போன்று இந்நூல் கோட்பாட்டளவில் அவ்வளவு செழிப்புமிக்கது அன்று என்று பொதுவாகக் கூறப்படும். ஆனால் இது சரியான மதிப்பீடு என்று கூறமுடியாது. ஏற்புடைமை என்ற தலைப்பை உரோமையர் திருமுகம் மிக நிறைவாக விரித்துரைக்கின்றது. ஆனால் இதுபற்றிய கருத்துக்கள் முதலாம் கொரிந்தியரில் ஏற்கெனவே உள்ளன (15:22.45). நற்கருணை பற்றிய குறிப்புக்கள், எபிரேயர் திருமுகத்தில் காணப்படும் கிறிஸ்து, குருத்துவம் மற்றும் பலிப்பொருள் பற்றிய போதகத்தை இந்நூல் வித்தாகக் கொண்டுள்ளது. மடலின் மேய்ப்புப்பணி மற்றும் அறவுரைத் தொனியால், இதன் போதனைகளில் பெரும்பாலானவை நிறைவுசெய்யப்பட வேண்டியுள்ளன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு திருமணம் பற்றிய போதகமாகும். இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளவையெல்லாம் நிலையான மதிப்பீடு உடையவையல்ல. இதற்குச் சான்று, சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுபற்றிய போதகம். ஆயினும் அப்போஸ்தலர் சிந்தனையின் அடிப்படைக் கருத்துக்களும், அவர் அளிக்கும் உந்து காரணங்களும் எக்காலக் கிறிஸ்தவர்களுக்கும் முக்கியமானவையாகும். ஏனெனில் எல்லாவற்றையும்விட உண்மையான கிறிஸ்தவ ஞானம் எதில் அடங்கியுள்ளது என்று பவுல் காட்டுகிறார். மேய்ப்புப்பணித் திருமுகங்களில் காணப்படுவதுபோல் திருச்சபையின் அமைப்பு தெளிவாகக் கூறப்படவில்லையென்றாலும், அது அப்போஸ்தலர்களைத் தவிர்த்து, மற்ற அதிகாரிகளையும் கொண்ட நன்கு அமைக்கப்பட்ட சமூகமாக ஏற்கெனவே திகழ்கிறது (12:28). விசுவாசமற்றவர்களோடு திருமணம் செய்வது பற்றிய போதகத்தில் மீட்பர் போதித்த பொதுப் போதகத்தைச் செயல்படுத்துவதில் அப்போஸ்தலரின் அதிகாரம் பற்றிய உட்கருத்து காணப்படுகிறது (7:12-16). திருச்சபை அமைக்கப்பட்டிருந்தாலும் திருச்சபையின் மற்ற நன்மை

களுக்காகப் பல்வேறு அங்கத்தினர்களும் ஆவியின் ஆற்றலுக்குத் திறந்த மனத்தவராய் இருத்தல்வேண்டும். இந்த உண்மை எக் காலத்திற்கும் பொருந்தும். ஆதித் திருச்சபை யில் இருந்த பல்வேறு பிரச்சினைகள் இன் றையத் திருச்சபையில் காணப்படும் பிரச் சினைகளுக்கு ஒத்துள்ளன. ஆகவே பவுல் அன்று கூறிய அறவுரை இன்றையத் திருச் சபைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக அமையக்கூடும்.

மேலும் பவுலினுடைய வாழ்வுபற்றிய, குறிப்பாக அவரது எபேசுப் பணிபற்றிய, பல செய்திகளை இந்நூல் அளிக்கிறது.

கொரிந்தியருக்குத் திருமுகம் - II (2 CORINTHIANS, Letter to the)

I. கொரிந்து திருச்சபைக்குப் பவுல் எழுதிய ஒரு திருமடல். இப்போது இது புதிய ஏற் பாட்டுத் திருமுறைப்பட்டியலில் எட்டாவது இடத்தைப் பெறுகிறது. இதில் அப்போஸ்த லர் பவுல் தனது உணர்ச்சிகளைக் கொட்டி யிருக்கிறார். உள்ளத்தைத் திறந்து காட்டு கிறார். அப்போஸ்தலர்பணி நூல் ஒன்றும் கூறாது செல்லும் பவுலின் வாழ்க்கைக் கட் டத்தில் அவரது நடவடிக்கைகள், அனுபவங் கள் மற்றும் மனநிலை ஆகியவை பற்றி இந்நூல் பல செய்திகளைக் கூறுகிறது. அ.ப. 18, கிளமந்தின் முதல் திருமுகம் ஆகியவற் றோடு சேர்ந்து இதுவும் முதல் நூற்றாண்டில் திருச்சபையின் நிலையையும், மற்றும் கிறிஸ்தவர் வாழ்வையும் பற்றிய சித்தி ரத்தை நமக்குத் தருகின்றது. ஆனாலும் இது ஒரு சிக்கல்மிக்க நூலாகும். அண்மையில் இந்நூல் ஒரே திருமடலா, பலவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட நூலா என்பதுபற்றிய பிரச் சினை அறிஞர்களின் கவனத்தை ஈர்த்துள் ளது. இதுபற்றிய எந்தக்கருத்துகளும் மன நிறைவு அளிக்கவல்லதன்று.

II. ஆசிரியரும் நூலின் உண்மைத்தன்மையும்: புறச்சான்றுகள்: கி.பி. 55-155-க்கு இடைப் பட்ட காலத்தில் வாழ்ந்த சிமிர்னாவின் ஆயர் போலிக்கார்ப்பு பவுல் கொரிந்தி யருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தை அறிந்திருந்தார். கி.பி. 150-ஐ ஒட்டிய மார்சி யன் என்ற பிரிவினையாளரின் புதிய ஏற் பாட்டு நூலில் இந்நூல் இடம்பெறுகிறது. கி.பி. 200-ஐ ஒட்டிய முராத்தோரியின் துணுக் குகளின் தொகுப்பு பவுல் கொரிந்தியருக்கு இரண்டு திருமுகங்கள் எழுதினார் என்று குறிப்பிடுகிறது. இரேனேயு (130-202) இதி லிருந்து எடுத்துக்கூறுகிறார். அந்தியோக்கியா வின் தியோபிலு, அலக்சாந்திரியாவின் கிள மந்து (-215), தேர்துல்லியன் (220) ஆகியோர் இந்நூலின் பெயரைச் சொல்லிப்பயன்படுத்து கின்றனர்.

நூலின் அகச்சான்றுகளும் இதையே சுட்டு கின்றன. இந்நூல் கி.பி. 50-60 ஆண்டுகளில் கிரேக்க நாட்டில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள், பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற் றைப் பிரதிபலிக்கிறது. நமக்குத் தெளிவில் லாத பல குறிப்புகள் நூலில் காணப்படுகின் றன. இவை நூலை எழுதியவர்க்கும், யாருக் காக எழுதப்பட்டதோ அவர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். இவையும் விவரங் களின் இயல்தன்மையும், சுயவாழ்க்கைக் குறிப்புகளின் நம்பகத்தன்மையும், பின்னணி யாக அமைந்துள்ளதாகக் கருதப்படும் குழப்ப மான நிலைகளும் இந்நூலின் உண்மைத் தன்மைக்குச் சான்றுகளாக உள்ளன. எல்லா வற்றையும்விட, இக்காலத்தில் எழுதப்பட்ட தாகக் கருதப்படும் பவுலின் திருமுகங்க ளோடு சிந்தனைப் போக்கிலும் சொற்றொகுதி யிலும் இந்நூல் கொண்டிருக்கும் ஒப்புமை யும், பவுல் தன் உள்ளத்தைத் திறந்து காட் டும் விதமும், இந்நூல் போலியான மடல் என்று காட்டவில்லை. இது பவுலின் மிகச் சிறந்த நூல்களில் ஒன்றாகும். ஆனால் பவுல் எழுதிய ஏனைய திருமுகங்களைப் போல் அவ்வளவு விரைவாகக் கிறிஸ்து சமூகத்தில் இந்நூல் பரவவில்லை என்று கருத இட மிருக்கிறது. முதல் நூற்றாண்டின் முடிவில் உரோமை நகரின் ஆயராகப் பணியாற்றிய கிளமந்து கொரிந்து சபைக்கு எழுதிய மட லில் பவுல் எழுதிய மடலை நினைவூட்டு கிறாரே தவிர மடல்கள் என்று பன்மையில் குறிக்கவில்லை.

III. ஒரே மடலா அல்லது தொகுப்பா? இந்நூலைப் பவுல்தான் எழுதினார் என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்துவேறுபாடு இல்லை எனலாம். ஆனால் இது பவுல் தொடர்ச்சியாக எழுதிய ஒரே மடலா அல்லது அவர் எழுதிய பல்வேறு மடல்களிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளைக்கொண்ட தொகுப்பு நூலா என்பது பற்றிப் பலத்த கருத்து வேறுபாடுகள் உண்டு. இப்பிரச்சினைக்குப் பதிலும், இந்நூலுக்கு விளக்கம் அளிப்பதும், இந்நூலை எழுதத்தூண்டிய வரலாற்றுச் சூழ்நிலையை நாம் புரிந்து கொள்ளும் விதத்தைப் பொருத்ததாகும். இச்சூழ்நிலையைப் புரிந்துகொள்ள முழுவதும் இந்நூலையே நம்ப வேண்டியிருக்கிறது. இச்சூழ்நிலையைத் திரும்ப அமைக்க நூலில் காணப்படும் பல குறிப்புகளின் தெளிவின்மை உதவியாக அமையவில்லை. ஆகவே தோராயமாகவே உண்மையில் நடந்தது என்ன என்று கூறமுடியும். அப்படிக் கூறும்போது, 1. இடைப்பட்ட மடல் 2. இடைக்காலத்தில் பவுல் கொரிந்துக்குச் செல்லல் 3. பெரும் வருத்தம் தந்த நிகழ்ச்சி 4. தீத்து கொரிந்துக்குத் தூது செல்லல் ஆகிய நான்கு காரியங்களைக் கவனத்தில் கொண்டு தீர்மானம் செய்ய வேண்டும்.

1. இடைப்பட்ட மடல்: கொரிந்தியருக்கு ஒரு மடல் எழுதியதாகப் பவுல் 2:3.4.9; 7:8.12-இல் குறிப்பிடுகிறார். 19-ஆம் நூற்றாண்டுவரை, இம்மடல் கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய முதல் திருமுகம்தான் என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்குப்பின் பவுலின் முதலாவது இரண்டாவது திருமுகங்களுக்கு இடையில் பவுல் மற்றொரு மடல் எழுதியிருக்கவேண்டும் என்று அறிஞர்கள் பெரும்பாலானோர் கருதத்தொடங்கினர். இக்கருத்திற்கு அவர்களது காரணங்கள் பவுலின் கூற்றுக்களே. ''மிகுந்த வேதனையோடும், உடைந்த உள்ளத்தோடும், கலங்கிய கண்களோடும் இதை எழுதினேன்'' (2:4) என்றும், ''நீங்கள் எல்லாவற்றிலும் எனக்குக் கீழ்ப்படிபவர்களா என்று சோதித்து அறியவே எழுதினேன்'' (2:4) என்றும், ''நான் எழுதிய கடிதத்தால் உங்களுக்குத் துயர் தந்திருந்தாலும் ...'' (7:8 தொ) என்றும் இக்கடிதத்தைப் பவுல் விவரிக்கிறார். இத்தகைய கடிதம் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்திலிருந்து மிகவும் வேறுபட்டதாகும். ஏனெனில் கொரிந்தியர் முதலாவது திருமுகம், எழுச்சியும் சீற்றமும், சில சமயம் உணர்ச்சிவசப்பட்டதாயினும், வியத்தகுமுறையில் மேன்மையும் ஆறுதலும் மிக்கதாகும். அதில் பவுல் தன்னை இழந்துவிடவில்லை. சூழ்நிலையை நன்குக் கட்டுப்படுத்திய உள்ளத்துடன் எழுதுகிறார்.

மேலும் கப்பல் பயணத்திட்டம் மாற்றப்பட்டபின் கொரிந்தியர் இரண்டாம் திருமுகத்தை எழுதுகிறார் (1:23; 2:1-3). இதுபற்றிக் கொரிந்தியர் முதலாம் திருமுகத்தில் எவ்விதக் குறிப்புமில்லை. 2-ஆம் கொரிந்தியர் கொரிந்திய சபையில் செய்யப்பட்ட ஒரு ''குற்றத்தைப்'' பற்றி எழுதப்பட்டது. இக்குற்றம் முதல் கொரிந்தியரில் குறிக்கப்படும் தகாத பாலின உறவாக இருக்கமுடியாது. இதுவே முதலாம் கொரிந்தியர் எழுதப்படுவதற்குப் போதிய காரணமாக இல்லை. ஆகவே முதலாவது இரண்டாவது திருமுகங்களுக்கு இடையில் கடுமையானதொரு கடிதம் எழுதப்பட்டதாக ஏற்றுக்கொள்ளலாம். ஆகவே பவுல் நான்கு கடிதங்கள் எழுதியதாக ஏற்றுக்கொள்ளலாம். அவை திருமுறைப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இரண்டு திருமுகங்களும், 1 கொரி 5:4-இல் குறிக்கப்படும் கடிதம், இந்தக் கடுமையான கடிதம் ஆகியவையுமாகும். இக்கடினமான கடிதம் தொலைந்துவிட்டதா அல்லது இதன் பகுதியே 2 கொரி 10-13-இல் அடங்கியுள்ளதா என்ற பிரச்சினை நூலில் ஒற்றுமை என்ற தலைப்பின் கீழ் அலசப்படும்.

2. இடைப்பட்ட காலத்தில் பவுல் கொரிந்துக்குச் செல்லல்: 12:14; 13:1-இல் வரும் குறிப்புகள் பவுல் ஏற்கனவே கொரிந்துக்கு இருமுறை சென்றிருந்தார் என்று சுட்டுகின்றன. அதாவது கொரிந்தில் திருச்சபையை நிறுவியபோது அங்குச் சென்றதையும், கொரிந்தியர் இரண்டாம் திருமுகத்திற்குப்

பின் அங்குச் சென்றதையும் தவிர்த்து இடைப்பட்ட காலத்தில் கொரிந்துக்குச் சென்றுள்ளார். முற்காலத்தில் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இப்போது அறிஞர்கள் பெரும்பாலானோர் இதை ஏற்றுக்கொள்கின்றனர். இந்த வருகையின் போது கொரிந்து கிறிஸ்தவர்கள் பவுலைத் துக்கமுறச் செய்தனர்; இழிவுபடுத்தினர் (காண்க 12:21; 2:1; 1:23). இது முதல் வருகையாக இருக்க முடியாது. ஏனெனில் அது பலவீனத்தில் தொடங்கினாலும் (1 கொரி 2:3) மறைபரப்பு வெற்றியாகும். பவுல் கொரிந்தியர் இரண்டாம் திருமுகத்தை எழுதுவதற்குமுன் இரண்டாம் முறை கொரிந்துக்குச் சென்றிருக்க வேண்டும். இதை மூன்றாவது மறைபரப்புப் பயணத்தில்தான் செய்திருக்கமுடியும். அதுவும் அநேகமாய் எபேசிலிருந்து செய்திருக்க வேண்டும். ஆகையால் முதலாம் கொரிந்தியருக்குப்பின் இது நடந்திருக்க வேண்டும். ஏனெனில் அவரே எந்தத் தவறையும் நேரடியாகக் கண்டதாக எக்குறிப்பும் இல்லை எனலாம். ஏன் அங்குச் சென்றார்? எங்கு அல்லது என்ன நடந்தது என்பதுபற்றி யூகமாகத்தான் கூறமுடியும். இதற்கு 10:10-இல் வரும் குறிப்பும், இரண்டாம் கொரிந்தியரில் தமது எதிரிகள் பற்றி அவர் அளிக்கும் விவரங்களும், ''பெரிய அநீதியும்'' உதவுவனவாகும்.

3. பெரிய அநீதி: கிறிஸ்தவ சமூகத்தில் ஒருவர் மற்றொருவருக்கு எதிராக அநீதி செய்துள்ளார் (7:12). இவர் ஒரு தனிநபராவர் என்பது தெளிவு (2:5-7.9). ஆனால் சமூகத்தின் ஒரு பகுதியினர் இதில் குற்றமற்றவர்கள் அல்லர் (2:9). குற்றம் கடுமையானது (2:1-4). அது பவுலுக்கு எதிரானதாகும் (2:5.10). அதுவும் அவருக்குக் கீழ்ப்படியாமையாகவும் கருதப்பட்டது. பாரம்பரியமாக இக்குற்றம் 1 கொரி 5:1-இல் குறிக்கப்படும் தகாத பாலின உறவாகக் கருதப்பட்டது. இதைத் தேர்துல்லியன் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது இக்குற்றமாக இருக்க முடியாது என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். முதலில் இரண்டாம் கொரிந்தியரில் குறிக்கப்படும் குற்றம் பவுலுக்கு எதிரானதாகும் (2:5-10). இதற்கு மாறாகத் தகாத பாலின உறவு இறைவனுக்கும், திருச்சபையின் நற்பெயருக்கும் எதிரானதாகும். புறவினத்தார்கூட இதைக் கண்டனம் செய்தனர் (1 கொரி 5:1 தொ). இரண்டாவது பவுல் செயல்முறை வேறுபடுகிறது. தகாத பாலின உறவைப் பொருத்தமட்டும், தனது அப்போஸ்தல அதிகாரத்தைக் கொண்டு பவுலே புறம்பாக்கும் தீர்ப்பை வெளியிடுகிறார். சமூகம் அதை அறிவிப்பதைவிட வேறு சுதந்தரம் கொண்டிருக்கவில்லை. ஆனால் இந்தப் ''பெரிய அநீதியைப்'' பற்றிச் சமூகம் தீர்ப்பிட்டது. பெரும்பான்மையினர் தீர்மானித்துத் தண்டனையிட்டனர் (2:6). அது போதுமானது எனப் பவுல் கருதுகிறார். சமூகம் மற்றொரு அதிகாரபூர்வமான தீர்மானத்தில் மன்னித்து விடும்படி (2:8:10) பவுல் ஆலோசனை கூறுகிறார். தகாத பாலின உறவுகொண்ட மனிதனுக்கு எதிரான புறம்பாக்கும் தீர்ப்பைப் பவுல் மன்னிப்பது விநோதமானதாகும். 2:6 சுட்டுவதுபோல், சமூகத்தில் ஒரு பகுதியினர் இம்மனிதனுக்கு ஆதரவு அளித்தனர் என்பதும் விநோதமானதாகும். ஆகவே இரண்டாம் கொரிந்தியரில் குறிக்கப்படும் குற்றம் வேறொன்றாக இருக்க வேண்டும் என்பது உறுதி.

இக்குற்றம் எப்போது நடந்தது என்பதுபற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. இது பவுல் இடைப்பட்ட காலத்தில் கொரிந்துக்குச் சென்றிருந்தபோது, நேருக்கு நேர் அவமானப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பலர் கருதுகின்றனர். இதைச் சமூகம் எப்படி அனுமதித்தது என்பதைப் புரிந்து கொள்ளுவது கடினமாக உள்ளது. மேலும் தனது அப்போஸ்தலிக்க அதிகாரத்திற்கு எதிரான இழிவிலிருந்து தப்பி ஓடுவது பவுலின் தன்மைக்கு மாறானதாகும். இடைப்பட்ட காலத்தில் அவர் கொரிந்துக்குச் சென்று திரும்பியபின் அவர் இல்லாதபோது இக்குற்றம் நடந்திருக்கவேண்டும். இதை அவரது பிரதிநிதிகள் அவருக்குத் தெரிவித்திருக்க வேண்டும். அதைச் சமூகம் அடக்கவில்லை என்றும் பவுல் அறிந்திருக்கவேண்டும். இது அவரை மறைமுகமாகப் பாதித்திருக்க

வேண்டும். இதைக் கேட்டறிந்தபோது, பவுல் "கடுமையான மடலை" எழுதியிருக்க வேண்டும்.

4. தீத்துவின் தூதுப் பயணங்கள்: எத்தனை தடவை தீத்து தூது சென்றார் என்பது நூலின் ஒற்றுமை பற்றிய கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அவை குறிக்கப்படும் வரிசையில் கவனிப்போம்.

அ. முதல் தூது: (2:13; 7:6 தொ; 7:13-15): மென்மையான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் தீத்து ஆற்றல் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இந்தக் 'கடுமையான மடலுடனோ' *(7:6 தொ)* அது அனுப்பப் பட்ட காலத்திலோ தீத்துவைப் பவுல் கொரிந்துக்கு அனுப்பியிருக்கவேண்டும். கொரிந்தை அடைந்தவுடன், தீத்து பவுலுக் குச் சார்பாகச் செயல்படத் தொடங்கினார். சூழ்நிலையைக் கவனமாக ஆராய்ந்தார் *(7:13; 8:6.23)*. அவரது போக்கு சமூகத்தில் சாதகமான எண்ணத்தை உண்டாக்கியது. துன்பந்தரும் பிரச்சினையைத் தீத்து வெற்றி கரமாக முடித்து வைத்தார். *7:6 தொ; 2:5-11* ஆகிய பகுதிகள், பவுலின் கடிதமும் தீத்து வின் செயல்களும் உண்டாக்கிய விளைவு களைக் கூறுகின்றன. தீத்து மாசிதோனியா வில் தங்கியிருந்த பவுலிடம் திரும்பிவந்து மகிழ்ச்சிமிக்க விளைவுகளை எடுத்துக் கூறினார் *(2:13; 7:6 தொ)*.

ஆ. இரண்டாவது தூது: காணிக்கை எடுத் தல்:- மற்றும் இரு சகோதரர்களோடு தீத்து மீண்டும் ஒருமுறை கொரிந்துக்கு அனுப்பப் படுகிறார் *(8:17.18-23)*. இந்த முறை எருச லேம் திருச்சபைக்காகக் காணிக்கை எடுத் தலை ஒருங்கமைத்து அதைச் செய்து முடிக்க அனுப்பப்படுகிறார். பவுலின் சிந்தனையி லும் செயல் முறைத்திட்டத்திலும் இந்தக் காணிக்கை மிக முக்கியமானதாகும். அதைப் பற்றி நான்குமுறை குறிப்பிடுகிறார் *(கலா 2:10; 1 கொரி 16:1-4; 2 கொரி 8:9; உரோ 15:25-27; காண் அ.ப. 24:17)*. எருசலேம் திருச்சபை மிகக்கொடிய பொருளாதார இடுக்கண் நிலையில் இருந்தது. அதன் உத விக்கு வருவதின் தேவையைப் பவுலைப் போன்ற நாட்டுப்பற்று உடையவர்கள் ஆழ்ந்து உணர்ந்தனர். மேலும் இந்த உதவி திருச்சபையின் "தூண்களானவர்களால்" *(கலா 2:9-10)* பவுலிடம் கோரப்பட்டது. இந்த உதவியை வலியுறுத்த அவருக்கு இன் னுமொரு காரணம் இருந்தது. பல யூதக் கிறிஸ்தவர்கள், யாவரையும் உள்ளடக்கும் திருச்சபையின் உலகளாவிய தன்மைக்கும், புறவினக் கிறிஸ்தவர்கள் மோசேயின் சட்டத் திற்கு உட்பட்டவர்கள் அல்லர் என்று பவுல் போதித்தது வந்ததற்கும் எதிரானவர்கள். புற வினக் கிறிஸ்தவர்கள் யூதக்கிறிஸ்தவர்க ளோடு கொண்டிருந்த ஒன்றிப்புக்கும், அவர் கள் யூத சமூகத்தின்பால் கொண்டிருந்த மரி யாதைக்கும் பகிரங்கச் சாட்சி அளிக்க வேண்டி யிருந்தது. அது வறுமையில் வாடிய எருச லேம் திருச்சபைக்குப் புதிய கிறிஸ்தவர்கள் தாராளமாய் அளிக்கும் காணிக்கையில் காட் டப்படவேண்டும். எல்லாச் சச்சரவுகளையும் இந்தப் பொதுத் திருச்சபைச் செயல் முடித்து வைக்க ஏதுவாகும் *(9:12-14)*.

இரண்டாவது கொரிந்தியரை எழுதிய போது இத்திட்டத்தைச் செயல்படுத்துவது அவசியமாயிற்று. இது மூன்றாம் மறை பரப்புப் பயணத்தின் தொடக்கத்தில் ஏற்கெ னவே கலாத்தியாவில் தொடங்கப்பட்டது. இதில் பங்குபெறக் கொரிந்து மக்கள் தூண் டப்பட்டனர். *(1 கொரி 16:1 தொ; காண் கலா 2:10)*. மாசிதோனியாவில் வெற்றிகர மாக நடந்துகொண்டிருந்தது. ஆனால் கொரிந்து திருச்சபையில் தேவைக்கு அதிக மாகக் காலம் தாழ்த்தப்பட்டது *(8:10-11; 9:2-5)*. மத்திய தரைக்கடலின் மேற்குப் பகு திகளுக்குப் பவுல் செல்லவேண்டிய நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது *(உரோ 15:17; 19:23; காண் 2 கொரி 10:15-16)*. ஆனால் அதற்கு முன்னால் செல்வச் செழிப்புமிக்க தும், மத்திய தரைக்கடலின் கிழக்குப் பகுதி யில் முக்கிய நகரங்களில் ஒன்றானதுமான கொரிந்து திருச்சபை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும். எருசலே மோடு ஒற்றுமைப்படுத்தப்படவேண்டும். அங்கு இக்காணிக்கை எடுத்தலை வெற்றிகர

மாக நடத்தி, எல்லாத் திருச்சபைகளின் மிகு தியான காணிக்கையைக் கொரிந்திலிருந்து கொண்டுவந்தால், அந்நகர் யூதக் கிறிஸ்தவர் களுக்குக்கூட அன்பு மற்றும் ஒற்றுமையின் மையமாகத் திகழும். அங்கு இக்காணிக்கை எடுத்தல் தோல்வியுற்றால் பவுலின் செயல் திட்டத்தைச் செயல்படுத்துவதைத் தாமதப் படுத்துவதோடு அதன் தாக்கத்தையும் குறைக்கும்.

ஆகவே இக்காணிக்கை எடுத்தலைச் செய்து முடிக்க ''மற்றும் இரு சகோதரர்க ளுடன் தீத்துவைப் பவுல் கொரிந்துக்கு அனுப்பி வைத்தார் (8:16-24). இரண்டாம் கொரிந்தி யரைப் பவுல் எழுதிக்கொண்டிருந்தபோது, தீத்து ஏற்கெனவே கொரிந்துக்குச் சென்று விட்டாரா? பவுலுடனே தீத்து இருந்தார் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கருத்தாகும். இது உண்மையென்றால் 12:17-18ஐ, முன்னிட்டு அதி 10-13 என்ற பகுதி இக்கடிதத்தைச் சேர்ந்ததாக இருக்க முடியாது. இக்கடிதம் எழுதப்படும்போது, தீத்து ஏற்கெனவே கொரிந்துக்குச் சென்று விட்டார் என்று கொள்வது மேலானதாகும். ஏனெனில் வாழ்த்துக்கூறுதலில் தீத்து குறிக் கப்படவில்லை. மேலும் இங்கு வரும் வினைச்சொல் உண்மையிலேயே கடந்த காலத்தைக் குறிக்கிறது என்பதுமாகும்.

இ. **தீத்துவும் சகோதரரும் (8:22):** இவர்கள் மீண்டும் 12:17-18-இல் குறிக்கப்படுகின்ற னர். இது தீத்து கொரிந்துக்குச் சென்ற முந் தைய முதல் தூதாகும் என்று சிலர் கருது கின்றனர். இதன்படி நாம் முன்குறித்த முத லாம், இரண்டாம் தூதுகள் முறையே இரண்டாம் மூன்றாம் தூதுகளாகும். இக் கருத்து அதி 10-13 என்ற பகுதிதான் ''கடுமை யான கடிதம்'' என்ற கருத்துகளோடு ஒத்துப் போகிறது. இப்பகுதி அதி 1-9 என்ற பகுதிக் குப்பின் எழுதியதாகும். ஆனால் 8:16-24-இல் நினைவுபடுத்தப்படும் சகோதர ரைப் பற்றிய குறிப்பை எப்படி விளக்கு வது? மேலும் ஒழுங்குமுறையை நிறுவும் தூதுக்குப்பின் தீத்துவுக்குக் கொரிந்தியர்கள் அறிமுகமாகவில்லை என்ற எண்ணத்தை 7:13-15 கொடுக்கிறது. இந்த வசனங்கள், காணிக்கைத் தூதிலிருந்து பவுலிடம் தீத்து திரும்பியபின் எழுதப்பட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். இக்கருத்து அதி 10-13 என்ற பகுதி பவுல் கொரிந்தியருக்கு எழுதிய ஐந்தாவது கடிதம் என்ற அவர்களது கருது கோளுக்கு ஆதரவாக உள்ளது. தீத்து இன் னும் கொரிந்திலேயே இருக்கிறார் என்பது மேலானதாகும் (12:17). காணிக்கை எடுப் பது எதிர்ப்பைக் கிளப்பியது என்று தீத்து விடமிருந்து கேள்விப்பட்டு அதை அடுத்த வரிகளில் விலக்குகிறார்.

கி.பி. 57-58-இன் குளிர்காலத்தில் கொரிந் திலிருந்து உரோமையர் திருமுகத்தை எழுதிய போது, காணிக்கை எடுப்பது வெற்றிகர மாக நடந்துவிட்டது என்று அறிகிறோம். 15:25-28.30-32; அ.ப. 24:17 தொ என்ற பகுதி கள் அதற்குப்பின் வந்தவற்றைக் கூறுகின் றன.

IV. **நூலில் ஒற்றுமை:** மூலத்தில் இரண் டாம் கொரிந்தியர் ஒரே கடிதம் அன்று என்று அறிஞர்கள் பலர் கூறுவர். பலவிதங்களில் இந்நூலின் ஒற்றுமை பற்றிக் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இத்தகைய கருதுகோ ளுக்கு வாசகப் பாரம்பரியத்திலோ, திருச் சபைத் தந்தையரின் நூல்களிலோ எவ்வித ஆதரவும் இல்லை என்பதை முதலில் நாம் கூறவேண்டும். புறச்சான்றுகள் நூலின் ஒற்று மைக்கும் முழுமைக்கும் முழுவதும் ஆதரவு அளிக்கின்றன. இரண்டாம் கொரிந்தியர் ஒரு தொகுப்பு என்பது முழுவதும் நூலின் அகச் சான்றுகளையே அடிப்படையாகக் கொண்ட தாகும். இச்சான்றுகள் மூன்று பகுதிகளைப் பற்றியவையாகும்.

அ. 6:14-7:1 - இப்பகுதி 6:12-13-க்கும் 7:2-க்கும் இடையில் சிந்தனைப் போக்கைத் தடைசெய்கிறது. இப்பகுதி இல்லையென் றால் சிந்தனை சீராகச் செல்லும். இப்பகுதி புறமதத்தினரைப்பற்றியதாகும். இப்பிரச்சி னையைப்பற்றி முன்போ பின்போ நூலில் கேள்வி எழவில்லை. மேலும் பவுலின் பாணியை அவ்வளவு கொண்டிருக்க

வில்லை. இப்பகுதி புறவினத்தாரோடு கொரிந்தியர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று அறிவுரை கூறுகிறது. இது இப்பண்பு அவர் 1 கொரி 5:4 தொ; 10:27 தொ ஆகிய பகுதிகளில் கூறிய அறிவுரையை மறுக்கிறது. இப்பகுதி கும்ரான் கலைச்சொற்களைக் குறிப்பிடத்தக்க அளவு ஒத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இப்பகுதி எஸ்ஸேனியர்களைப் பற்றிய கருத்தின் தழுவலாகும் என்று சிலர் கருதுவர். வேறுசிலர் இது 1 கொரி 5:9தொ-இல் குறிக்கப்படும் திருமுறை சேர்ந்த கடிதங்களுக்கு முந்தியதாகும் என்று கருதுவர். இப்பகுதி தவறான கருத்தைக் கொடுக்கக்கூடியதே என்றும் நாம் எதிர்பார்க்கலாம். வேறு சிலர், இப்பகுதி இடம் மாறியிருக்கிறது; இது 5:21-க்குப் பிறகோ 6:2-க்குப் பிறகோ சேர்க்கப்படவேண்டும் என்பர்.

இந்த யூகங்களுக்கு எதிராக வாசகப் பாரம்பரியம் ஒருமுகமானதாகச் சான்று கூறுகிறது. எல்லா வாசகங்களிலும் இப்பகுதி இதே இடத்தில்தான் காணப்படுகிறது. இதைவிட, திருமுறைக்கடிதங்களுக்கு முந்திய கடிதத்தையோ எஸ்ஸேனியர் பற்றிய பகுதியையோ அது ஒத்துப்போகாத இடத்தில் பதிப்பாசிரியர் புகுத்தியுள்ளார் என்பது விநோதமாக உள்ளது. மேலும் சிந்தனைப் போக்கு தடைப்படுவது அவ்வளவு வலுக் கட்டாயமானதாகத் தெரியவில்லை. ஏனெனில் 1.5:14-21-இல் வரும் போதகத்தின் ஒழுக்க விளைவுகளை இப்பகுதி வெளிக் கொணர்வதாகக் கருதலாம். கொரிந்தியர்கள் தன்னோடு திறந்த மனதினராக இருக்க வேண்டும் என்று பவுல் விரும்புகிறார் (6:12-13; 7:2). இருவருக்குமிடையேயுள்ள தடை அவர்கள் புற மதத்தினரோடு ஒத்துப் போதலேயாம் (6:14-7:1). இப்பகுதியின் நடை மொத்தத்தில் பவுலினுடையதே. அசாதாரணத் தலைப்பும் உணர்ச்சிப்போக்கும் அசாதாரணச் சொற்களுக்கு இடம் தருகின்றன எனலாம். இப்பகுதிக்கும் 1 கொரி 5:9 தொ-க்கும் முரண்பாடு இல்லை எனலாம். பவுல் புறமதத்தினரோடு கொண்டுள்ள சமூக உறவுகளைப் பற்றியன்று, சமயக்காரியங்களில் அவர்களோடு ஒத்துப்போதலைப் பற்றியே பேசுகிறார். இறுதியாகக் கும்ரான் சிந்தனைக்கு இணையான பகுதிகள் இருப்பதை, பவுலின்மேல் எஸ்ஸேனியர்களின் தாக்கம் இருப்பதை நிரூபிக்க எடுத்துக்கூறுவர் அறிஞர்கள் சிலர். சிந்தனைப் போக்கில் தடையிருப்பதாகத் தோன்றினால், எல்லாம் கூறிய பின் இப்பகுதி உரிய இடத்திலேயே இருப்பதாகத் தோன்றுகிறது.

ஆ. அதி 8-9-காணிக்கை எடுத்தல்: அதி 9, அதி 8-இன் இரட்டிப்பு வாசகமாகும் என்றும், அது அக்காயா திருச்சபைக்கு எழுதப்பட்டது என்றும், அது பவுலின் தொகுப்பு அமைக்கப்பட்டபோது இயற்கையாகவே இங்கு இடம் பெற்றது என்றும் சிலர் கருதுவர். இதற்கு இவர்கள் காட்டும் காரணங்கள்: 1. 8:7-15; 9:6-14 ஆகிய பகுதிகள் ஒரே கருத்தை மீளவும் மீளவும் கூறுகின்றன. இவற்றில் தாராள மனப்பான்மை கொள்ளத் தூண்டுதல் இருமுறை கூறப்படுகிறது. ஆனால் வெவ்வேறு விதமாய் விவரிக்கப்படுகிறது. 2. காணிக்கை எடுப்பதுபற்றி ஏற்கெனவே கூறப்படவில்லை என்பதாக 9:1-இல் பவுல் பேசுகிறார். 3. கொரிந்தியரைத் தாராளத் தன்மைக்குத் தூண்ட, 8:1-5-இல் மாசிதோனியரின் மாதிரியை எடுத்துக்கூறுகிறார். ஆனால் 9:1-6-இல் மாசிதோனியர் அக்காயா மக்களின் மாதிரியால் தூண்டப்பட்டனர் என்று கூறுகின்றார். அதே கடிதத்தில் அதே திருச்சபைக்கு அதே தலைப்பைப் பற்றி இத்தகைமையான முரண்பட்ட பகுதியைப் பவுல் எப்படி எழுதமுடியும் என்பதை விளக்க வெறும் குறுக்கீடு மட்டும் போதாது என்று கூறுவர்.

ஆயினும் இந்த முரண்பாடு வெறும் தோற்றமேயொழிய உண்மையானதன்று. ஏனெனில் 1. 9:6-இலும் 8:7 தொ; 9:6 தொ ஆகிய பகுதிகள் அதே தூண்டு காரணங்களைக் கொடுக்கவில்லை. உண்மையில் பின்னது முன்னதை நிறைவு செய்கிறது எனலாம். 2. இந்த அதிகாரங்கள் மோசமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 9:1-5 புதிய தலைப்புக்கு முன்னுரையன்று, 8:16-24-இல் கூறப்

பட்டவையின் விளக்கமாகும். 3.9:2-இல் அக்காயர்கள் தாராளமாக இருந்தனர் என்று கூறப்படவில்லை. அவர்கள் அக்காணிக்கை எடுக்க ஏற்பாடு செய்தனர் என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு மாசிதோனியர்களைச் செயலாற்றத் தூண்டியது. இதற்கு மாறாக, 8:1 தொ-இல் மாசிதோனியர்களின் தாராளத்தன்மை, அக்காயர்கள் (கொரிந்தியரும்) வெறுமனே ஆயத்தம் மட்டும் செய்யாமல், செயல்பட வேண்டும் என்று தூண்டுவதற்கும் பயன்பட்டுள்ளது. உண்மையில் தலைப்புகள் ஒன்றையொன்று நிறைவு செய்கின்றன. எது எப்படியிருப்பினும் அக்காயாவில் சிதறிக்கிடந்த சிறிய திருச்சபைகளைக் கொரிந்தியத் தாய்த் திருச்சபையிலிருந்து பவுல் பிரிக்கவில்லை. இறுதியாக இப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படும் ஒற்றுமை இதைப் பாகுபடுத்துவது நேர்மையற்றது என்று காட்டவல்லது.

இ. அதி 10 –13: திருமுகத்தின் மற்றப் பகுதிகளோடு இப்பகுதி கொண்டிருக்கும் தொடர்பு பற்றிய பிரச்சினை மிகக்கடுமையானதாகும். பொது நம்பிக்கை மற்றும் பாசத்திலிருந்து கடுமைக்குத் தொனி மாற்றம் அசாதாரணமானதாகும். உளவியல் நோக்கிலும் இது அசாதாரணமானதாகும். ஏனெனில், குறைகூறுவதும் அச்சுறுத்தல்களும் முதலில் கூறப்பட்டுப் பின்பு சமாதானச் சொற்கள் வருவதை நாம் சாதாரணமாய் எதிர்பார்க்கலாம். ஆனால் வாசகம் உள்ள நிலையில், முதல் பகுதியின் நல்ல விளைவுகளை, இப்பகுதியின் தொனி அழித்துவிடும் என்று பலர் கூறுவர். பண உதவி கேட்டபின் உடனடியாக இப்பகுதி வருவது மிகவும் விநோதமானதாகும். அறிவு சார்ந்த பல முரண்பாடுகள் எடுத்துக்கூறப்படுவதோடு அவற்றிற்கு எதிரானமுறை அறிவு சார்ந்ததாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக அதி 10-13-இல் வரும் பல குறிப்புகள் (10:6; 12:16-17; 13:2-10) அதி 1-9-இல் (2:9; 4:2; 7:2; 1:23; 2:3) நட்பு முறையில் கூறப்பட்டுள்ளன. பொதுவாகப் பவுலின் பெரும் மகிழ்ச்சியும் போற்றுரையும் (7:4.14-16; 8:7) இழிவு நிலை (12:20-21), கொரிந்தியர்களின் சுதந்தரத்தையும் பணத்தையும் எடுத்துக் கொள்ளும் இடைப்புகுந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு (11:3-4.20-21) ஆகியவை பற்றிய குற்றச்சாட்டிற்கு இடம்தருகின்றன. இவற்றின் விளைவாக அறிஞர்கள் பலர் அதி 10-13 என்ற பகுதியை அதி 1-9-என்ற பகுதியிலிருந்து பிரித்தெடுக்கின்றனர்.

இப்பகுதி பற்றிப் (அதி 10-13) பல கருதுகோள்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை மட்டும் பார்ப்போம். **முதலாவது கருதுகோள்:** இதன்படி இப்பகுதிதான் ''கடுமையான இடைக்காலக் கடிதம்''. இக்கருத்தைப் பலர் பின்பற்றுவர். இப்பகுதி அதி 1-9-என்ற பகுதிக்கு முன் எழுதப்பட்டது. இது இடுக்கண் உற்ற உச்சநிலையில் பவுலின் உள்ளக் கொதிப்பின் வெளிப்பாடாகும். அதி 1-4 என்ற பகுதி சமாதான ஒப்புரவு முயற்சியின் இறுதிச் சொற்களாகும். இக்கருதுகோளுக்கு ஆதரவாகப் பல காரியங்களைக் கூறலாம். ஆனால் இதை ஏற்பதாக இல்லை. ஏனெனில் 1. ''கடுமையான கடிதத்தின் முக்கிய தலைப்பாகக் கருதப்படும் ''கொடிய குற்றம்'' பற்றிய எக்குறிப்பும் இப்பகுதியில் இல்லை. பிற்காலப் பதிப்பாசிரியர் இக்குற்றம் பற்றிய குறிப்பை விட்டுவிட்டார் என்பது ''தெளிவில்லாததைக் கொண்டு தெளிவில்லாததை'' விளக்குவதாகும். 2. இப்பகுதியில் சீற்றமும் கோபமும்தான் முதன்மையானவை; மனவேதனையும் துக்கமும் அல்ல. 3. இக்கருதுகோள் அறிவு சார்ந்த முரண்பாடுகளை உண்மையில் பொருந்திப் போகச் செய்யவில்லை. எடுத்துக்காட்டாக 18:2-10 விரைவில் பவுல் செய்யப்போகும் பயணத்தைப் பற்றிப் பேசுகிறது. இதற்கு மாறாக 1:23; 2:3 ஆகியவை இப்பயணத்தைத் தவிர்ப்பதற்காக எழுதப்பட்ட கடிதத்தைப் பற்றிப் பேசுகின்றன. மற்றக் காரணங்கள் பின்பு கொடுக்கப்படும்.

இரண்டாவது கருதுகோள்: அதி 1-9 அடங்கிய ஒரு கடிதத்தை எழுதி அனுப்பியபின் எழுதப்பட்ட மற்றொரு கடிதமாகும் அதி 10-13 என்ற பகுதி. அதாவது இது பவுலின்

ஐந்தாவது கடிதமாகும். இதன்படி அதி. *1-9* என்ற பகுதியில் கூறப்படும் சமூகத்தில் நிலவிய இசைவிணக்கம் சிறிது காலத்திற்கே நீடித்தது. தீத்து எதிர்கொண்ட கடினங்கள், எதிர்ப்பாளர்கள் தங்கள் தாக்குதலை மீண்டும் தொடங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருந்தன. கொரிந்தியர்களை இறுதியாகப் பணியவைக்க இந்தப் புயல்தன்மையுடைய கடிதத்தைப் பவுல் எழுதினார். இக்கருதுகோளுக்கு ஆதரவாகப் பல கூறுகள் உள்ளன. குறிப்பாகக், கடிதத்தில் கூறப்படும் நிகழ்ச்சிகளின் வளர்ச்சி, *12:17-18*-இல் வரும் தீத்து மற்றும் சகோதரர்கள் பற்றிய குறிப்புகள் ஆகியவையாகும். கொரிந்தியர்கள் திருமுகத்தின் முதல் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தங்கள் ஆர்வத்திலிருந்து இன்னும் அதிகமாய் வீழ்ச்சியுற்றனர் என்ற கருத்தைப் புகுத்தி, இக்கருதுகோள் அதன் நோக்கில் பார்க்கிறது. அப்படியிருந்தால் இந்நிலை அசாதாரண வேகத்தில் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். இவ்வாறு கருதப்படும் கடிதத்தில் குறிக்கப்படும் கடற்பயணமும் *(12:19-13:10)*, வாழ்த்தும் ஆசிரும் கூறும் இறுதிப் பகுதியும் முதற்பகுதியோடோ (அதி *1-4*) இரண்டாம் பகுதியோடோ (அதி *10-13*) ஒத்துப் போகலாம். இது நூல் இருபகுதியும் அடங்கிய ஒரே திருமுகமாகும் என்று சுட்டுகிறது. அப்படியில்லையென்றால் நான்காம் கடிதத்தின் முடிவுரையும் ஐந்தாம் கடிதத்தின் முன்னுரையும் என்னவாயின என்ற கேள்வி எழும்.

மூன்றாம் கருதுகோள்: ஒரு சிலர் இத்திருமுகம் ஐந்து கடிதத்துணுக்குகளைக் கொண்ட தொகுப்பாகும். அவை *1) 2:14-7:4 (6:14-7:1* நீக்கப்பட்டது) *2)* அதி *10-13:* துக்ககரமான கடிதம் *3) 1:1-2:13; 7:5-16;* ஒப்புரவுக் கடிதம்; *4) 8:1-24:* எருசலேம் திருச்சபைக்காகக் காணிக்கை எடுத்தல் பற்றியது. *5) 9:1-15:* அதே காணிக்கையைப்பற்றி அக்காயத் திருச்சபைக்கு எழுதப்பட்டது. இக்கருதுகோள், இரண்டாம் கொரிந்தியரின் இன்றைய வாசக நிலையில் கருத்துப் பிளவுகள் உள்ளன என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. முதல் பகுதியில் காணப்படும் கருத்துப் பிளவுகள் நூலைப் பிரிக்கும் அளவு அவ்வளவு ஆழ்ந்தவையாகத் தெரியவில்லை. அதி *1-9*-என்ற முதல் பகுதிக்கும், அதி *10-13* என்ற இரண்டாம் பகுதிக்கும் காணப்படுவதாகக் கருதப்படும் கருத்துப் பிளவு அவ்வளவு முழுமையானதன்று. பின்பு பார்க்க.

நான்காம் கருதுகோள்: இந்நூல் முழுமையான ஒரே திருமுகமாகும். முன்கூறப்பட்ட கருதுகோள்களுக்கு மாறாக, வாசகப் பாரம்பரியத்தின் ஒரே சீரான வரலாறு சான்றாக அமைந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. முதல் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் இடையே இருப்பதாகக் க்ருதப்படும் கருத்துப்பிளவு அவ்வளவு முழுமையானதன்று என்று முன்பு கூறினோம். ஏனெனில் இத்திருமுகத்தை எழுதத்தூண்டிய பவுலின் நோக்கங்கள் நூல் முழுவதும் ஒரே சீராகக் காணக்கிடக்கின்றன.

1. ''சிலருடைய எதிர்ப்பை அழிப்பது''. இந்த எதிர்ப்பின் பண்புகள் நூல் முழுவதும் சுட்டிக் காட்டப்படுகின்றன. சில முதல் பகுதியில் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன *(3:1; 3:6.10; 4:1-5;...)*.

2. சமூகத்தின் பணிவைக்கோரத் தனக்குள்ள உரிமையைப் பவுல் வலியுறுத்துதல். அவரது அப்போஸ்தல நிலைபற்றிய காப்புரை அதி *10-13*-இல் உச்ச நிலை அடைகிறது என்பது உண்மை; ஆனால் அது நூலின் தொடக்கத்திலிருந்தே காணப்படுகிறது *(1:12* தொ; *2:14; 4:1-6; 6:4-10; 5:12.14; 7:2-4;...)*. அவரது நோக்கங்கள் ஏதோ ஒரு பகுதியில் மட்டும்தான் காணப்படுகின்றன என்று கூற முடியாது. அவை நூல் முழுவதும் காணப்படுகின்றன. மேலும் திருமுகத்தை இருபகுதியாகப் பிரித்தோம் என்றால், இந்த வாக்குவாதச் சுட்டுதல்கள் ஒன்றுமில்லாது போகின்றன. ஓர் இடுக்கண் நிலை உருவாக்கப்படுதலை நாம் காணலாம். வாழ்க்கைக்குச் சாற்றிக் கூறுவதற்குத் துல்லியமாகத் தயாரிக்கும் இறையியல் அடிப்படை (அதி *3-7*) அமைக்கப்படுவதைக் காணலாம். ஒரு கடினமான முயற்சியை மேற்கொள்ளப் பவுல் தன்

னையே ஊக்கப்படுத்துவதை நாம் உணர லாம். அதன் விளைவாக அதி 7-இன் முடி வில் பவுல் முழுநம்பிக்கை கொண்டுள்ளார் (7:16). இப்போது இன்னும் கடினமான மற்றும் சொந்தக் காரியங்களை அவர் தாக்க முடியும். ஆகவே நூல் ஒரு முழுமையான திருமுகம் என்று ஏற்பதுவே சாலச்சிறந்தது. அதே சமயத்தில் இத்திருமுகம் எழுதச் சிறிது காலம் பிடித்தது என்பதையும் ஏற்கவேண் டும். இவ்வளவு நீண்ட கடிதத்தைச் சொல் லச் சொல்ல எழுதுவதற்கே காலம் பிடிக் கும். அதி 7-க்குப் பின்னும் அதி 9-க்குப் பின்னும் இடைநிறுத்தத்தை அனுமதிக்க வேண்டும். இந்த நீண்ட, சொல்லச் சொல்ல எழுதும் பணி அடிக்கடி தடைசெய்யப்பட் டிருக்கலாம். இதற்கிடையில் பவுல் மேலும் சில மோசமான செய்திகளைக் கேள்விப்பட் டிருக்கவேண்டும் (எ.கா.12:17-18). இவை அவர் குற்றம் சாட்டுதலை இன்னும் கடு மைப்படுத்தியிருக்கலாம். ஆனால் அடிப் படையில் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினை ஒன்றே. இது ஒரே கடிதம் அல்லது திருமுகம் என்பதாகும்.

V. *நிகழ்ச்சிகளின் வரிசை:-* மேற்கூறப்பட் டவை நம்பத்தகுந்தவை என்று ஏற்றுக் கொண்டால் இரண்டாம் கொரிந்தியர் திரு முகம் எழுதப்படுவதற்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்த லாம்.

பவுல், கொரிந்தை மையமாகக்கொண்டு அக்காயா முழுவதிலும் இறைவார்த்தை வேரூன்றச் செய்தபின் (2 கொரி 1:1) கொரிந் தில் தனது பணியை முடித்துக்கொண்டு எபேசு நகரில் தங்கியிருந்தார். அங்கிருந்து கொரிந்தியருக்கு ஒருமடல் எழுதினார் (1 கொரி 5:9). அதில் ''காமுகரோடு உறவுவைத் துக்கொள்ள வேண்டாம்'' என்று எச்சரித் திருந்தார். இம்மடலின் கவடிகள் கவடுகூடத் தெரியாமல் மறைந்துவிட்டன என்று அறி ஞர் பலர் கருதுவர். இக்கடிதத்தின் ஒரு பகுதியே 2 கொரி 6:14-7:1 என்ற பகுதி என்பர் சிலர். இப்பகுதியைப் பற்றி முன்பு பார்க்க.

இதற்கிடையில் பல காரணங்களால், கொரிந்து திருச்சபையில் ஒழுக்கக்கேடும் (1 கொரி 6:5; 1-13; 6:12-20), கட்சிமனப்பான் மையும், சண்டை சச்சரவுகளும் (6:1-11), கருத்துவேறுபாடுகளும் (7:1-15:58) தோன்றி அத்திருச்சபையைச் சீர்கெடச்செய்தன. திருச் சபை நலிவுற்றது. புறவினத்தாருக்குக்கூட துர்மாதிரியாய் அமைந்தது (5:1). இவை பற்றிய செய்திகளைக் குலோயியாரின் வீட் டார் பவுலுக்கு அறிவித்தனர். கொரிந்தியக் கிறிஸ்தவர்களே தங்களிடையே நிலவி வந்த கருத்து வேறுபாடுகளையும் ஐயப்பாடுகளை யும் நீக்கி, கருத்துவிளக்கம் தருமாறு பவுலி டம் கேட்டிருந்தனர் (7:1). பவுல் கொரிந்துக் குத் தானே நேரில் சென்று அங்குக் காணப் பட்ட சீர்குலைவுகளைத் தீர்த்துவைக்க விரும்பினார். ஆனால் அப்போது அவர் எபேசில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற் பட்டது (அ.ப. 19:22). ஆகையால் கொரிந் துக்குச் செல்ல வாய்ப்புக் கிடைக்கும்வரை காத்திருக்கக்கூடிய பொறுமையில்லாது உட னடியாகத் திமொத்தேயுவைக் கொரிந்துக்கு அனுப்பிவைத்தார். திமொத்தேயு கொரிந் துக்குச் சென்றார் என்பதற்குச் சான்றுகள் இல்லை. அவர் கொரிந்துக்குச் செல்லக் காலம் தாழ்த்தியதாலோ, காலம் இல்லை என்ற காரணத்திற்காக எபேசுக்குத் திரும்பி விட்டதாலோ, கொரிந்தின் நிலை மோசமாகி விடுமோ என்று எண்ணிய பவுல் அத்திருச் சபையைச் சீர்திருத்த, திருமுகம் ஒன்று தீட்டு கிறார். இதுவே நமக்குக் கிடைத்திருக்கும் கொரிந்தியருக்கு முதலாம் திருமுகம். இது கோட்பாட்டளவிலாவது பயன்விளைவித் தது எனலாம். ஆனால் திருச்சபையின் நிலை மேம்படவில்லை.

இதற்கிடையில் நாடோடிப் போதகர்கள் கொரிந்துக்கு வந்தனர். விரைவில், பவுலுக் கும் அவரது அதிகாரத்துக்கும் எதிராக ஒரு கிளர்ச்சி தொடங்கி வளர ஆரம்பித்தது. கொரிந்தைப்பற்றி மோசமாகச் செய்திகள் கிடைத்ததால் பவுலே கொரிந்துக்கு நேரி டையாகச் சென்றார். அங்கே அவர் சூழ்ச்சிக ளும் சந்தேகமும் நிறைந்த சூழ்நிலையைக் கண்டார். கிறிஸ்தவ சமூகம் ஆர்வத்தோடு

அவரை ஏற்கவில்லை. ஆகவே அங்கு நீண்ட காலம் தங்கமுடியவில்லை. தன்முயற்சியில் தோல்வியடைந்து விரைவில் எபேசுக்குத் திரும்பினார். ஆனால் அடுத்த தடவை வரும் போது (2 கொரி 1:13-16) பாவம் செய்தவர்களைத் தக்கமுறையில், நடத்தப் போவதாக எச்சரித்தார் (13:2). ஆனால் அவர் கடிதத்தால் மட்டும் அச்சமூட்டும் திறமையுடையவர் என்று எண்ண அவரது எதிரிகளைத் தூண்டியது (10:10). அவர் அங்கிருந்து திரும்பிய பின் ஏதோ ஒரு கடுமையான பொது அவமதிப்பு நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டும். அதைக் கேட்டறிந்தபோது, பவுல் தான் திட்டமிட்டிருந்த கொரிந்தியப் பயணத்தை இரத்து செய்துவிட்டார் (1:15-17.23). அதற்குப் பதிலாகக் கொரிந்தியருக்கு வருத்தம் விளைவிக்கக் கூடிய கடுமையான கடிதம் ஒன்று எழுதினார் (2:1 தொ). தீத்துவால் முடிந்ததைச் செய்யுமாறு அவரை இக்கடிதத்தோடு கொரிந்துக்கு அனுப்பினார். 2 கொரி 10-13 என்ற பகுதிதான் இம்மடல் என்று அறிஞர் பலர் கருதுவர். இப்பிரச்சினை பற்றி முன்பு பார்க்க. தீத்து பிரச்சினையை ஓரளவு வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தார். சமூகம் தன் கடமையில் தவறியதற்கு வருத்தம் கொண்டது. குற்றவாளியைத் தண்டித்தது (7:7தொ). (இப்போது காணிக்கை எடுத்தலை ஒழுங்குபடுத்தினாரா என்று கூறுவதற்கில்லை). ஆனால் அவரால் அங்கு நிலவிய சூழ்ச்சிகளில் கவனம் செலுத்த முடியவில்லை. மேலும் சிறுபான்மையினரது எதிர்ப்பை நன்குணர்ந்தார். பவுல் கொரிந்துக்கு வராமையும் அவரது கடுமையான கடிதமும் இந்த எதிர்ப்பை மேலும் வளர்த்தன. இந்நிலையை அறிவிக்கப் பவுலிடம் தீத்து திரும்பிவந்தார். ஆனால் கொரிந்தியரிடையே தன்னைப்பற்றி ஒரு நல்ல எண்ணத்தை ஏற்படுத்தியிருந்தார் (7:14 தொ; 8:6 தொ).

இதற்கிடையில் பவுல் எபேசை விட்டுப் புறப்பட்டுத் (அ.ப. 19:21-20:1) துரோவாவுக்குச் சென்றார் (2 கொரி 2:2). (இப்போது ஆசியாவில் பவுல் கொடிய நோயால் தாக்கப்பட்டிருக்கலாம் 1:8-11). துரோவாவில் தீத்துவைச் சந்திக்காததால் தீத்துவின் தூதின் வெற்றியைப் பற்றி அறிய ஆவல் கொண்டவராய்ப் பவுல் மாசிதோனியாவுக்குச் சென்றார் (1:16). அங்குப் பிலிப்பியிலிலோ, தெசலோனிக்கேயிலோ தீத்துவைச் சந்தித்து அவரது தூதின் வெற்றிபற்றி அறிந்து பவுல் பெரும் மகிழ்ச்சி கொண்டார்.

காணிக்கை எடுத்தலை முடித்துவைக்க (8:6 தொ. 16 தொ) இருசகோதரர்களுடன் தீத்துவை மீண்டும் கொரிந்துக்கு அனுப்பிவைத்தார் பவுல். அதன்பின் கொரிந்து சமூகத்தில் தான் கொண்டிருந்த நம்பிக்கையை எடுத்துக்கூறவும், தவறு செய்தவர்களையும் இடைபுகுந்து குழப்பம் விளைவித்தவர்களையும் சரியான முறையில் நடத்தத் தூண்டவும் பவுல் இந்தத் திருமுகத்தை எழுதத் தொடங்கினார். ஆனால் இடை புகுந்தவர்களின் அதிகரித்த செயல்களால் கொரிந்தில் குழப்பம் கூடுவது பற்றியும், காணிக்கை எடுப்பதைப் பற்றியும் கூட அவதூறு எழுப்பப்படுவது பற்றியும் செய்திகள் கொரிந்திலிருந்து வந்தன (12:17-18). இவை ஒருவேளை பவுல் தனது முழுத் தாக்குதலையும் முழுக் காப்புரையையும் இந்தக் கடைசி நான்கு அதிகாரங்களில் எழுதத் தூண்டியிருக்கலாம்.

VI. பவுலின் எதிரிகளும் கொரிந்தின் குழப்ப நிலையும்: அடிப்படையில் இரண்டாம் கொரிந்தியரில் பவுல்தான் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டவராய்க் காட்சி அளிக்கின்றார். அவரது அப்போஸ்தலத்துவம் கேள்விக் குரியதாக்கப்படுகிறது. மேலும் அவரது ஆதாயம் தேடாமை, நேர்மை, மனஉறுதி, தாழ்ச்சி போன்ற பண்புகள் தாக்கப்படுகின்றன. ஆகவே அவரது அதிகாரம் கேள்விக் குரியதாகிறது. ஆகவே அவர் தனது நற்பெயரைப் பாதுகாக்கப் போராடவும் சமூகத்தின் மேல் அவருக்குரிய அப்போஸ்தல அதிகாரத்தை மீண்டும் நிறுவவும் வேண்டியிருக்கிறது. இதை மூன்று மட்டத்தில் செய்கிறார்.

1. தன் பிள்ளைகளிடமிருந்து மேலானவற்றை எதிர்பார்க்கும் அன்புள்ள தந்தைக்குரிய உரிமைகளைக் கொரிந்தியர்களிடம்

பவுல் கோருகிறார். அவருக்கும் கொரிந்தியர்களுக்குமிடையே குடும்ப மனவேறுபாடுகள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் சமூகமே கிறிஸ்துவின் மணமகளாகும் (11:2). சமூகம் பலவற்றில் கவனக் குறைவாய் இருந்துவிட்டது. கொரிந்தியர்கள் தங்களுக்குகிடையே கட்சிப் பூசல்களுக்கு இடம் கொடுத்துவிட்டனர் (12:20). தங்களிடையேயுள்ள பாவிகளைச் சரியான முறையில் நடத்தத் தவறிவிட்டனர் (12:21). இவற்றிற்கும் மேலாக, இடைப் புகுந்தவர்களின் சூழ்ச்சிகளுக்கு இடம் கொடுத்து வளரவிட்டுவிட்டனர் (11:19-20). இவற்றின் விளைவாக விசுவாசம் ஆபத்திலிருந்தது (11:4). இவையெல்லாம் அவர்களின் தந்தையான பவுலுக்கு அவமரியாதையாக அமைந்தன (12:11). ஆனால் அடுத்தமுறை அவர்களிடம் வரும்போது அதிக ஆர்வத்தையும் ஆற்றலையும் பவுல் எதிர்பார்க்கிறார் (10:6.15; அதி 13).

2. சமூகத்திலிருந்த கெட்ட கிறிஸ்தவர்களைப் பற்றியது:- தான் அடுத்த தடவை வரும்போது 'இவர்களை எப்படி நடத்தப் போகிறார்' என்று எந்த மறைப்புமின்றிக் கடுமையாக அச்சுறுத்துகிறார் பவுல் (12:20-13:2; 6:14-7:1). இவர்கள் பிற மதப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றிய ஒழுக்கக் கேடுகளையும், தவறான நெறிகளையும் கடைப்பிடிப்பவர்களாவர். இவர்கள் தங்களுக்கு எல்லாம் அனுமதிக்கப்படவில்லை என்று ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் (12:21; காண்க 1 கொரி 6:12; 10:23). பிள்ளைக்களுக்குரிய கிறிஸ்தவச் சுதந்தரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, எல்லா ஒழுக்கக் கட்டுப்பாட்டிலிருந்தும் சுதந்தரம் கோரிய இவர்களைப் பற்றி முதலாம் கொரிந்தியரில் பல குறிப்புகள் உள்ளன (1 கொரி 6:9 தொ; அதி 8-10). இவர்கள் தங்களுடைய தவறான கோட்பாடுகளை வெளிப்படையாகக் கூறாவிடினும் (2 கொரி 1:24) தங்கள் ஒழுக்கவாழ்வைச் சிறிது கூடச் சீர்திருத்தவில்லை (12:21).

3. இடைப்புகுந்த குழப்பக்காரர்கள்: மற்றவற்றையெல்லாம்விட, இவர்கள் மிக ஆபத்தானவர்கள். இவர்கள் கொரிந்து திருச்சபையில் புகுந்து பவுலின் அதிகாரத்தை அழிக்க முயற்சி செய்தனர். இவர்கள் யார் என்று துல்லியமாக விவரிக்கமுடியாது. இவர்கள் யூதக் கிறிஸ்தவர்கள் என்றும் அவர்கள் பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தைத் தாக்கினர் என்றும் பொதுவாகக் கூறலாம். மற்றப்படி இவர்கள் செயல்பட்ட விதம்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. சிலரது கருத்துப்படி 1 கொரி-இல் குறிக்கப்படும் யூதமயமாக்க விரும்பியவர்கள் அல்லர் 2 கொரி-இல் குறிக்கப்படும் பவுலின் எதிரிகள். இவர்கள் யூத இனத்தைச் சேர்ந்த உருவகப்படுத்தும் ஆவியினர். வேறு சிலர் இவர்களை ஞானவாதிகள் என்பர். மற்றும் சிலர், இவர்கள் பாலஸ்தீனத்திலிருந்து வந்த மறைபரப்புப் பணியாளர்கள் என்பர். மேலும் சிலர், இவர்களைக் கிரேக்க மொழி பேசிய கிரேக்கப் பிரியர்கள் என்பர். இவ்வாறு பவுலின் எதிரிகள் பற்றிய கருத்துக்கள் வேறுபடும். பவுல் சுட்டிக்காட்டும் சில கூறுகளை வைத்துத்தான் இவர்களை விவரிக்கமுடியும்.

பவுல் தன் எதிரிகளைப் ''பேர் போன அப்போஸ்தலர்கள்'' என்று அழைக்கிறார் (11:5; 12:12). இவர்கள் ''அப்போஸ்தலர்கள்'' என்ற பட்டத்தைப் பவுலுக்குத் தர மறுத்தாலும் (11:12), அது தங்களுக்கு உரியதென உரிமை கொண்டாடினர் (11:15). இவர்கள், தங்களை உண்மையான எபிரேய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் (11:22), ''நீதியின் பணியாளர்கள்'' என்றும் (11:15), ''கிறிஸ்துவின் பணியாளர்கள்'' என்றும் (11:23) காட்டிக் கொண்டனர். இவர்கள் பரிந்துரைக் கடிதங்களோடு வந்த நாடோடிப் போதகர்களாக வந்தனர். இந்தப் பரிந்துரைகள் ''பன்னிருவரிடமிருந்து'' பெற்றவையல்ல; ஒருவேளை பிற திருச்சபைகளிடமிருந்து பெற்றதாக இருக்கலாம். இவர்கள் யூதக் கிறிஸ்தவர்களாகத் தோன்றுகின்றனர். இவர்கள் கிரேக்க மொழிபேசும் கிரேக்கப் பிரியர்களாகவும் நாடோடிப் போதகர்களாகவும் இருக்கலாம். இவர்கள் ஆவியைக் கொண்டிருந்தனர் என்பதற்குத் தங்களது பேச்சுவன்மையையும், பரவச அனுபவத்தையும், புதுமை

கள் செய்யும் ஆற்றலையும் சான்றாகக் காட்டியதாகத் தெரிகிறது (10:10; 11:6). விருத்தசேதனம் பற்றி எக்குறிப்பும் இல்லை. ஆனால் மோசே உயர்த்திக் கூறப்படுகிறார். இவர்களிடமிருந்து உண்மையான நற்செய்தி மறைக்கப்பட்டுள்ளது (அதி 3-4).

ஒருவேளை தொடக்கத்திலிருந்தே இவர்கள் பவுலுக்கு எதிராகத் தப்பெண்ணம் கொண்டிருந்திருக்க வேண்டும். கொரிந்துக்கு வந்தபின் அங்குப் புறவினக் கிறிஸ்தவர்கள் புறமதத் தீய செயல்களை இன்றும் கடைப்பிடிப்பது கண்டு (12:11), பவுலைத் தாக்குவதை அதிகப்படுத்தியிருக்கவேண்டும். இவர்கள் கருத்துப்படி, பவுல் அப்போஸ்தலர் அல்லர்; போதகரும் அல்லர்; இருவிதமாகப் பேசும் பண்புடையவர் (1:17-18); தூரத்திலிருக்கும்போது கடிதத்தால் மட்டும் அச்சமூட்டும் கொடியவர் (10:8.10). ஆனால் ஒரு கோழை; நேரடியாக வரமுடியாதவர் (1:23; 18:2); அவர் கொரிந்திலிருந்து ஓடிப்போனார் (2:1; 13:2). அவர் மக்களிடமிருந்து எந்த ஆதரவும் பெறாததும் (11:7-9; 12:14), தனது ஆட்கள் வழியாக வஞ்சகமாக இந்த ஆதரவைப் பெற்றுக் கொண்டார் என்பதும் (7:2; 12:17-18), அவர் அப்போஸ்தலர் அல்லர் என்று காட்டுகின்றன. அவர் காணிக்கைப் பொருளைக் கொள்ளையடித்திருக்கலாம் என்றுகூட இவர்கள் குற்றம் சாட்டியிருக்கலாம் (8:20-21). ஆனால் அவர் எப்போதும் தன்னைப் பற்றியும் தனது வெற்றிகளைப் பற்றியும் பெருமையாகப் பேசிக் கொள்கிறார் (3:1; 12:1-17). தனது அதிகாரத்தை வலியுறுத்துகிறார் (4:5); ஒருவேளை அவர் மதிமயங்கிப் போயிருக்கலாம் (5:12-13).

இவையும், குறிப்பாகக் கொரிந்து சமூகத் தலைவர்கள் இந்த அவதூறுகளை எதிர்த்துப் போராடாமையும், பவுலின் அதிகாரத்தைப் பெரிதும் பாதித்தன என்பதில் வியப்பில்லை. ஆகவே இவர்களைச் சாத்தானின் ஏவு ஆட்கள் என்று இரக்கமற்ற முறையில் பவுல் தாக்குகிறார் (11:14-15). இவர்கள் கடவுளின் சொல்லை விலை கூறித்திரிபவர்கள் (2:17; 4:2); தங்களது நிலையைத் தக்க வைத்துக்கொள்ளக் கொடுங்கோலர்களைப் போல் தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்துகின்றனர் (11:12.20). இவர்கள் ''வேறொரு இயேசுவையும்'', ''வேறொரு ஆவியானவரையும்'', ''வேறொரு நற்செய்தியையும்'' போதிக்கின்றனர். இந்த ''வேறொரு நற்செய்தி'' எது என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. இவர்கள் தங்களை மீமனிதர்களாகவும், விண்ணக மனிதர்களாகவும், ஆபிரகாமின் சந்ததியினராகவும், உண்மையான எபிரேயர்களாகவும் காட்டிக் கொள்கின்றனர். இவர்கள் தங்களைப் போல் பிறரையும் மீமனிதர்களாக ஆக்கத் தங்களுக்கு ஆற்றல் இருப்பதாகக் கருதினர் (2 கொரி 11:15 தொ). இவர்கள் பழைய ஏற்பாட்டை உருவகப்படுத்தி, ஆவியானவரின் கொடையில் மேலான ஞானத்தைக் கொண்டிருப்பதாக எண்ணியிருக்கலாம் (3:15-16). இவர்கள் கிறிஸ்துவை விண்ணக மனிதனின் மேலான எடுத்துக்காட்டாகக் கருதினர். அவரது மனிதத்தன்மையை இழிவாகக் கருதினர். அவர் இறப்பின் முன்னும் இறப்பின் பின்னும் எப்போதும் விண்ணவராக இருந்ததால் அவரது இறப்பு எந்த மாற்றத்தையும் செய்யவில்லை என்று கருதியதாகத் தெரிகிறது. தங்களது சொந்த வெற்றிகளையும் செல்வத்தையும் தங்கள் வேதபோதக ஆற்றலின் சான்றுகளாகக் கருதி, துன்பங்கள் அல்லது பலிகள் ஆகியவை தேவையில்லாதவர்களாகத் தோன்றுகின்றனர்.

பவுல் இந்த அகந்தைமிக்கவர்களைத் தீவிரமாகத் தாக்குகிறார். இவர்களுக்கு எதிராக ஆண்டவரின் முக்கியத்துவத்தை அழுத்திக் கூறுகிறார். இயேசுவின் மரணத்தையும் உண்மையான கிறிஸ்துவ வேதபோதகரின் துன்பங்களையும் வலியுறுத்துகிறார்.

4. இறுதியாக 1 கொரிந்தியரோடு ஒப்பிடும்போது இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் அடிப்படையாகப் பவுலுக்கும் கொரிந்திய சமூகத்திற்குமிடையேயுள்ள சுமூகமான உறவு பாழ்பட்ட நிலை அமைந்திருந்தது

எனலாம். 1 கொரி எழுதப்பட்ட காலத்தில் கொரிந்தில் பல ஒழுக்க மற்றும் கோட்பாட்டு முறைகேடுகள் இருந்தாலும், பவுல் தனது தந்தைக்குரிய கட்டுப்பாடு மற்றும் அவர்களின் பிள்ளைக்குரிய பணிவு ஆகியவை பற்றி உறுதிகொண்டிருந்தார். ஆனால் இப்போது அவ்வுறவு பாழ்பட்டுவிட்டது. ஆகவே ஒருமைப்பாட்டை மீண்டும் நிறுவவும் அதைப் பாழ்படுத்தியவர்களைத் தாக்கி ஒடுக்கவும் தனது காப்புரையை இந்த இரண்டாம் கொரிந்தியரில் பவுல் எழுதுகிறார்.

VII. எங்கே, எப்போது எழுதப்பட்டது? இப்பிரச்சினைக்குப் பதில், பவுலின் வாழ்க்கைக் காலக்கணிப்பைப் பொருத்ததாகும். இந்நூல் மாசிதோனியாவிலுள்ள (2:13; 7:5; 8:1; 9:2-4) தெசலோனிக்கேயிலோ, பிலிப்பியிலோ, பவுல் தனது மூன்றாவது மறைபரப்புப் பயணத்தின் இறுதியில் எழுதினார் என்பதில் கருத்தொற்றுமை உண்டு. இந்த மூன்றாவது மறைபரப்புப் பயணம் கி.பி.53-இலிருந்து 57-வரை நீடித்தது என்று இதுவரை கணிக்கப்பட்டது. ஆனால் இக்கணிப்பை இரண்டு ஆண்டுகள் முன் கூட்டியே கணிப்பவர்கள் உண்டு. ஆகவே இந்நூல் கி.பி. 55-இன் அல்லது 57-இன் பின்பகுதியில் குளிர்காலத்தில் அவர் தங்கியிருந்த மாசிதோனியாவிலிருந்து பவுல் எழுதியிருக்கலாம்.

மேற்கூறப்பட்ட பல பிரச்சினைகளும் நூலின் பின்னிலைகளைப் புரிந்துகொள்ள உதவலாம். ஆனால் அவ்வளவு முக்கியமுள்ளவை என்று கூறமுடியாது. திருமுகங்கள் என்ன போதிக்கின்றன என்பதே முக்கியம் இவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

VIII. திட்டம்: இந்நூல் பவுலின் சொந்த, ஆழ்ந்த உணர்ச்சிகள் மிக்க கடிதமாகும். ஆகவே அதன் பொருளடக்கம் பற்றித் தெளிவான திட்டம் அமைப்பது அவ்வளவு எளிதன்று. ஆயினும் நூல் முழுவதும் ஒருதலைப்பும் ஒரு நோக்கமும் காணப்படுகின்றன. அவை, கொரிந்து திருச்சபையில் பவுல் தனது அப்போஸ்தல அதிகாரத்தை மீண்டும் நிறுவுவதாகும். கொரிந்தில் ஏற்பட்ட குழப்பங்களால் இவ்வதிகாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. இதை அவர்களின் நம்பிக்கையை மீண்டும் அடைந்தும், அப்போஸ்தலர் என்ற அளவில் அவரது பதவியை எடுத்துக்காட்டியும் அடைய, பவுல் முயலுகிறார். தொடக்க அதிகாரங்களில் அவரது காப்புரை மிகவும் பொதுவாக உள்ளது. வெளிப்பாட்டின் உண்மைகளின் ஒளியில் அப்போஸ்தல உயர்வை நிரூபிக்கிறார். பிந்தைய அதிகாரங்களில் குறிப்பிட்ட மற்றும் சொந்தப் பதவிபற்றிய காப்புரையையும் தருகிறார். நோக்கத்தின் அடிப்படையில் நூலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. முன்னுரை: வாழ்த்தும் ஆசிரும் (1:1-11).

2. பொதுக் காப்புரை : (1:12-7:16).

அ. கொரிந்துக்கு வருவதைத் தள்ளிப்போட்டதில் பவுலின் நேர்மை (1:12-2:13).

ஆ. உண்மையான அப்போஸ்தலத்துவப் பணி (2:14-6:10).

- 2:14-3:6 : அப்போஸ்தலப் பணி: கொள்கையும் செயல்பாடும்.
- 3:7-4:6 : பழைய, புதிய பணி.

இ. பணியின் துன்பமும் நம்பிக்கையும் (4:7-5:10).

- 4:7-15 : இயேசுவின் வெளிப்பாடு.
- 4:16-5:10 : சாவுபற்றிய அச்சத்தை எதிர்கொள்ளல்.

ஈ. புதிய படைப்பில் ஒப்புரவு (5:11-6:10).

- 5:11-17 : புதிய படைப்பு.
- 5:18-6:10 : ஒப்புரவுப் பணி.

உ. கொரிந்தியரோடு உறவு (6:11-7:16).

- 6:11-7:4 : திறந்த உள்ளம் கொண்டிருங்கள்.

7:5-16 : தீத்துவின் தூதின் விளைவுகள்.

3. எருசலேம் திருச்சபைக்காக நன்கொடை திரட்டும் திட்டம் *(8:1-9:15)*.

அ. தாராளத் தன்மைக்கு ஒரு சவால் *(8:1-15)*.

ஆ. தாம் அனுப்பியவர்களைக் குறித்துப் பரிந்துரை *(8:16-9:5)*.

இ. தாராளத்தன்மைக்குச் சன்மானம் *(9:6-15)*.

4. பவுல் தன்னைப்பற்றிய காப்புரை வரைதல் *(10:1-13:10)*.

அ. முழுக் கீழ்ப்படிதலைக் கோரும் வேண்டுகோள் *(10:1-18)*.

10:1-6 : கீழ்ப்படியாமையின் விளைவுகள்.

10:7-18 : சமூகத்தை நிறுவியவர் என்ற அளவில் பவுலின் அதிகாரம்.

ஆ. பவுல் தன்னையே புகழ்ந்து கொள்கிறார் *(11:1-12:13)*.

11:1-21 : அறிவிலியைப்போல் பேசுதல்.

11:21-33 : பவுலின் துன்பங்கள்.

12:1-10 : அவரது காட்சிகளும் வெளிப்பாடுகளும்.

12:11-13 : தனது அறிவிலித்தன்மைக்கு மேலும் காரணங்கள்.

இ. தான் வரப்போவதைப் பற்றிய எச்சரிக்கை *(12:14-13:10)*.

12:14-18 : உங்கள் உடையன்று; நீங்கள்தான் எனக்குவேண்டும்.

12:19-13:10 : கொரிந்தியர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

5. முடிவுரை: இறுதி அறிவுரையும் வாழ்த்தும் ஆசீரும் *(13:11-13)*.

IX. நூலின் மதிப்பீடும் முக்கியத்துவமும்: 1. பவுலின் வரலாறு பற்றிய பல விவரங்களை இந்நூல் கொடுக்கிறது. துரோவாவில் பவுலின் நற்செய்தி பரப்புப் பணி *(2:12-13)*, அவரது கடுமையான உழைப்பு, அகம் மற்றும் புறத்துன்பங்கள், கிறிஸ்தவச் சமூகங்களோடு, குறிப்பாகக் கொரிந்து திருச்சபையின் இடுக்கண் நிலையில் அவர் நடந்து கொண்ட முறைகள் ஆகியவை பற்றிய செய்திகளை இந்நூல் கொடுக்கிறது.

2. தொடக்க காலத்திருச்சபையின் வாழ்க்கைமுறை, மற்றும் அதன் வளர்ச்சி, ஏற்படும் துன்பங்கள், குறிப்பாக யூத, புற இனக் கிறிஸ்தவர்களுக்கிடையே நிலவிய நெருக்கடி நிலை, திருச்சபையின் பொதுக்கூறுகள் *(2:6-8; 8:19* தொ), அதன் பொதுவழிபாடு *(1:20)* ஆகியவை பற்றிய காட்சிகளை இந்நூல் தருகிறது.

3. பவுலின் இறையியல் போதகத்தின் முக்கியமான வளர்ச்சிகளை இந்நூல் கொண்டுள்ளது. இயேசுவே முழுவதும் மையம் கொண்டுள்ளார். அவரது இவ்வுலக வாழ்வின் துன்பங்களும் பண்புகளும் *(4:11-12; 1:5-7; 8:9; 10:1)* அப்போஸ்தலத்துவத் துன்பங்களின் மாதிரியாகும். இவற்றின் வழியாக உயிர்த்த இயேசுவின் ஆற்றல் செயல்படுகிறது. பரிசுத்த ஆவியின் அலுவல்பற்றியும் *(3:3.18; 18:14;..)* பரிசுத்த திரித்துவம் பற்றியும் (சிறப்பாக *18:14*) பல குறிப்புகள் உள்ளன. இறுதிக்காலக் கோட்பாடு பற்றியும் *(5:1-10)*, பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்குள் உள்ள உறவும் (அதி *3-4*), கிறிஸ்துவன் புதுப்பிக்கப்படுதலும் *(3:18; 4:16* தொ; *6:1-10)*, புனிதர்களின் உறவும் ஆகியவைபற்றிய சிறப்புச் செய்திகள் இந்நூலில் உண்டு. புனிதர்களின் உறவு நூலுக்கு ஒருவகைச் சூழ்நிலையாக அமைகிறது. இந்

நூலில் காணப்படும் இறையியல் சொற்களான ஆவி, ஆற்றல், அதிகாரம், மகிமை, அருள், உருவம் முதலிய சொற்களின் முழுப்பொருளையும் நாம் இன்னும் முழுமையாக உணரவில்லை எனலாம்.

4. இத்திருமுகத்தின் மிகப்பெரிய கொடை, அது பவுலைப்பற்றி அளிக்கும் உட்கருத்தாகும். இதில் இந்நூல் தனிச்சிறப்புடையதாகும். முரண்பட்ட உணர்ச்சிகளின் போராட்டத்தில் பவுல் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிறார். அறிவுசார்ந்த, உணர்ச்சிப் பெருக்குடைய, காட்சித் தன்மையுடைய, செயல்முறையான, பெண்ணின் மென்மைத் தன்மையும் பாசமும் மிக்க, உறுதியில் விட்டுக்கொடாமையுடைய பெரும் வளப்பம் மிகுந்த பவுலின் ஆட்தன்மையை இந்நூல் வெளிக்கொணர்கிறது.

கொரிந்தியர்களுக்கு எழுதப்பட்ட மூன்றாவது திருமுகம்

இது போலி நூலான பவுலின் பணிகள் என்ற நூலின் ஒரு பகுதியாகும். சிரியா மற்றும் அர்மேனிய திருச்சபைகளிலே வெகு காலம் இது உண்மைத்தன்மையுடைய நூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

கொரோனயிமர், ஒரோனயிமர் (HORONITE - கொரோனயிமிக் குடிகள்)

எருசலேமை மீண்டும் அமைப்பதில் நெகேமியாவுக்கு எதிராக இருந்த சன்பலாற்றுக்கு அளிக்கப்பட்ட இடுபெயர் (நெகே 2:10.19; 13:28). இப்பெயர், சன்பலாற்று கொரோனயிமிலிருந்து வந்தவர் என்றும் பொருள் கொடுக்கலாம். அப்படியாயின், இவர் ஒரு மோவாபியராக இருக்கலாம். யோசிபசு இவரை ஒரு சமாரியன் என்று அழைக்கிறார். அப்படியாயின் இவர் பெத்-கோரோனிலிருந்து வந்தவராக இருக்கலாம்.

கொரோனயிம், ஒரோனயிம் (HORONAIM -இரு குகைகள், இரு பொந்துகள்)

மோவாபுக்கு எதிரான இறைவாக்குகளில் மோவாபிய நகர்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது (எசா 15:5; எரே 48:3.34). ஓர் இறங்கிப் போகும் வழியில் இது குறிப்பிடப்படுகிறது (எரே 48:5). ஆனால் இதனுடைய சரியான இருப்பிடம் உறுதியாகத் தெரியவில்லை. மேசா கவுரோனென்னுக்கு எதிராகப் போர் புரிந்து அதைக் கைப்பற்றினார். அலக்சாந்தர் யன்னாயு (கி.மு. 103-76) மற்ற அரேபிய நகர்களோடு கொரோனயிமைக் கைப்பற்றினார். ஆனால் கிரிக்கான் அரேத்தாவிடம் மீண்டும் அளித்தார்.

2 சாமு 13:34-இல் சில மொழிபெயர்ப்புகள் 'அவனுக்குப் பின்னாலுள்ள பாதையிலிருந்து' என்ற எபிரேய வாசகத்துக்குப் பதிலாகக் ''கொரோனயிம் வழியிலிருந்து'' என்று மொழிபெயர்க்கின்றன. ஒருவேளை இப்பெயர் மேல், கீழ் பெத்-கோரோனைக் குறிக்கும் இரட்டை வடிவமாக இருக்கலாம்.

கொர்னேலியு (CORNELIUS)

செசரியாவில் இருந்த இத்தாலியப் படையின் நூற்றுவர் தலைவர்களுள் ஒருவர். அப்போஸ்தலர் பணி ''இவரும் இவர் வீட்டார் அனைவரும் பக்தியுள்ளவர்கள், கடவுளுக்கு அஞ்சி வாழ்ந்தவர்கள்'' என்று கூறுகிறது (அ.ப. 10:1-2); கடவுளுக்குப் பயந்தவன் எனக்குறிப்பிடுகிறது. கப்பர்நாகுமில் உள்ள நூற்றுவர் தலைவன் போல ''யூதர்களை அன்பு செய்து'' அவர்கட்குச் செபக்கூடம் கட்டிக்கொடுத்தவர்'' (லூக் 7:5). மிகத் தாராளமாக ஏழைகளுக்குத் தர்மம் கொடுத்தார். அத்துடன் கடவுளிடம் இடைவிடாது செபித்தார்.

கொர்னேலியு, யூத சமயத்தையும், கிறிஸ்தவத்தையும் இணைக்கும் ஓர் இலட்சிய புறவினத்தாராகக் காட்டப்படுகிறார். யூத மதம் நற்செய்திக்குத் தயாரிப்பாகும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் கடவுளை நம்பும் யூத மதம், இயேசு கிறிஸ்துவின் தந்தையே கடவுள் என்னும் விசுவாசத்திற்கு இட்டுச் செல்கிறது. அதே நேரத்தில் புறவினத்தாருக்கும் வாழ்வு உண்டு (அ.ப. 11:18). ஆனால் அது சட்டத்தின் செயல்களால் வருவதன்று. இயேசு கிறிஸ்துவின்மேல் கொள்ளும் விசுவாசத்தால் மட்டுமே ஒருவன் வாழ்வு பெற

முடியும். அதாவது புறவினத்தார் யூதர்களாக மாறவேண்டுமென்பது கட்டாயமில்லை. எனவே விருத்தசேதனமும் அவசியமில்லை.

கடவுளுக்குப் பயந்த மனிதன், ஏழைகட்குத் தர்மம் கொடுப்பவர்; கடவுளிடம் மன்றாடுபவர். இத்தகைய புறவினத்தாரைக் கடவுள் அழைக்கிறார். அவர் வெளிப்பாட்டை ஏற்கத் தகுதியுள்ளவர் என்பதைப் பேதுருவாலும் மற்றும் எருசலேமில் உள்ள திருச்சபையாலும் ஏற்றுக்கொள்ள முடிகிறது. மேலும் விருத்த சேதனம் பெறாத கொர்னேலியு அவரது உறவினர்கள் அனைவர் மேலும் பரிசுத்த ஆவி, இறங்கி வருவதைக் கண்டு (அ.ப. 10:45) அவர்கள் திருமுழுக்குப் பெறுவதைத் தடுக்க முடியவில்லை. தனது அழைப்பை ஆவியைப் பொழிந்ததன்மூலம் கடவுள் உறுதிப்படுத்தியதால், இதனை எதிர்ப்பது கடவுளையே எதிர்ப்பது போலாகும் எனப் பேதுரு உணர்ந்தார் (அ.ப. 11:17).

கொர்னேலியு மனந்திரும்பியபின் என்ன செய்தார் என்பது பற்றி நமக்கு அப்போஸ்தலர் பணியில் அதிகம் கூறப்படவில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சிக்கு லூக்கா அதிக முக்கியத்துவம் கொடுத்து, இரண்டு காட்சிகள், இரண்டு புதுமைகளை விவரிப்பதோடு பல விவரங்களுடன் விவரித்துக்கூறி, இதனை இன்னும் அதிக முக்கியத்துவம் உடையதாக்குகிறார். இது போன்று பவுலின் மனந்திரும்புதலுக்குத்தான் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார் லூக்கா. எனவே அப்போஸ்தலர் பணியில் கொர்னேலியுவின் மனமாற்றம் பெரும் முக்கியம் பெறுவதற்குக் காரணங்கள்:- 1) அன்றைய கிறிஸ்தவத்தின் நற்செய்தியை மிகச் சுருக்கமாகப் பேதுரு கூறுவதைக் காட்டவும், 2) பவுலும், பர்னபாவும் புறவினத்தாரிடையே மேற்கொண்ட நற்செய்திப் பணிக்கு ஆதரவாக எருசலேமில் சங்கத்தின்முன் பேசவும் 3) இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் பவுலுக்கு முன்பே பேதுரு புறவினத்தாரிடையே தமது பணியைத் தொடங்கிவிட்டார் என்பதைக் காண்பிக்கவும், இம்மனமாற்ற நிகழ்ச்சி பெரும் வாய்ப்பாக இருக்கிறது. மேலும் பேதுருதான் விருத்தசேதனம் பெற்றவர்கள்முன் (11:2) விருத்தசேதனம் பெறாதவர்களுக்கும் ஆவி அருளப்பட்டது என்பதை அறுதியிட்டுக்கூறி அவர்களது எதிர்ப்புக்குரலை அடக்கினார் (11:18). இவ்வாறு அகில உலகத் திருச்சபையைப் பவுல் தமது புறவினத்தாரின் நற்செய்திப் பணியைத் தொடங்கு முன்னரே பேதுரு நிறுவிவிட்டார்.

லூக்கா அ.ப. 10-11 அதிகாரங்களில் என்ன நோக்கோடு கொர்னேலியுவின் மனமாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார் என்பது தெரிந்தபிறகு, அத்தகையதொரு மனிதர் இருந்தாரா இல்லையா என விவாதிப்பது பொருளற்றது. இது யூதர்களுக்கு மட்டுமே என்ற திருச்சபையின் நிலைமாறி, அனைவருக்கும் மீட்பு, விருத்த சேதனமின்றியும் ஒருவன் இயேசுவின்மேல் கொள்ளும் விசுவாசத்தினால் மீட்பின் பாதையைப் பின்பற்றலாம் என்ற ஒரு முடிவான கருத்தைத் தெரிவிக்க வந்த நிகழ்ச்சியே.

வரலாற்று நிகழ்ச்சி என்ற அளவில் இது ஏரோது அகிரிப்பாவின் இறப்பிற்குப் பிறகு நடந்ததாகக் காட்டப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. ஏனெனில் அகிரிப்பா இறந்த பின் செசரியாவின் நூற்றுவர் தலைவன் ஒருவன் இருக்க வாய்ப்புண்டு.

அதே நேரத்தில் அனைவரும் இணைந்த அகில உலகத் திருச்சபை உருவானதில் 10-11 அதிகாரங்கள் எவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. விசுவாசத்தினால் எவரும் மீட்பைப் பெறலாம் என்ற கருத்தை ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக, வரலாற்று வடிவத்தில் லூக்கா தருகிறாரேயொழிய வரலாற்றைத் தரவில்லை.

கொலை செய்தல் (Kill)

இதைக்குறிக்க விவிலியத்தில் பல எபிரேய, கிரேக்கச் சொற்கள் பயன்பட்டுள்ளன. ஆனால் இச்சொல்லின் முதன்மையான பொருள் சட்டத்துக்கு மாறாகக் கொல்லுதலாகும்.

ஆறாவது கற்பனையில் வரும் எபிரேயச் சொல் (யாத் 20:13; உப 5:17; காண்க. எரே 7:9), முன்பே திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொலையைக் குறிப்பாகச் சுட்டவில்லை. ஆனால் அப்படிப்பட்ட கொலையைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது (1 அர 21:19; யோபு 24:14; சங் 94:6; ஓசே 4:2; 6:9). ''கொல்பவன்'' (எண் 35), ''கொன்றுவிட்டவன்'' (உப 4:42; 19:3 தொ; யோசு 20:3.5; 21:13) என்பன கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவனையும் கொள்ளாதவனையும் குறிக்கின்றன. சட்டத்தின் காரணமாகவோ போரிலோ கொல்லுதலை இச்சொற்கள் குறிப்பதில்லை. ஏனெனில் விவிலியக்காலத்தில் இவை ஏற்கப்பட்ட முறையாக இருந்தன. இவற்றைக் குறிக்க வேறு சொற்கள் பயன்பட்டன. ஆறாவது கற்பனை சட்டத்திற்கு மாறான கொலையையே தடைசெய்கிறது. சட்டப்படி கொல்வதையோ போரில் கொல்வதையோ தடைசெய்யவில்லை. இதே பொருளிலேயே புதிய ஏற்பாடும் இச்சொல்லைப் பயன்படுத்துகிறது (மத் 5:21; மாற் 10:19; உரோ 13:9).

கொலைஞர், தண்டனை வழங்குவோர், தூக்கிலிடுபவர் (Executioner)

தூக்குத் தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றும் கொலைஞன். எசே 9:1-இல் இச்சொல் ஒரு நகர அதிகாரியைக் குறிக்கிறது. போத்திபார் பார்வோனின் அதிகாரிகளில் ஒருவரும் மெய்க்காப்பாளர் தலைவனுமாய் இருந்தார் (ஆதி 37:36; 40:3; எசே 39:9; தானி 2:14). இந்தப் மெய்க்காப்பாளர் தலைவன் கொலைஞனாகச் செயல்படலாம் (1 அர 2:25.35). தூக்குத் தண்டனையை நிறைவேற்றுபவர்களைக் குறிப்பதற்கென்று பழைய ஏற்பாட்டில் தனிச்சொல் இல்லை.

புதிய ஏற்பாட்டுப் பாலஸ்தீன நாட்டில், ஒருவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கும் உரிமை உரோமை அரச அதிகாரிகளையே சாரும். கொலைஞர் என்ற சொல் அநேகமாக அரசனின் மெய்க்காப்பாளர்களையே குறிக்கும். ஏனெனில் இதைக்குறிக்கும் கிரேக்கச் சொல்லுக்கு 'ஒற்றன்' அல்லது 'உளவாளி' என்று பொருள். இயேசுவைக் கொலை செய்தவர்கள் படைவீரர்களே (லூக் 23:47; யோவா 19:23).

கொலோசை (COLOSSAE - தண்டனை)

இது தென்கிழக்கு சிறிய ஆசியாவில் உள்ள ஒரு நகரமாகும். கொலோசை என்பது கிரேக்க மொழியில் உள்ள பெயராகத் தோன்றினாலும் உண்மையில் அது பிரிகியப் பெயராகும். மெயாண்டர் நதியின் உபநதியாகிய இலிக்கு நதியின் பள்ளத்தாக்கில் பண்டைக்காலப் பிரிகியாவின் தென்மேற்கே அமைந்துள்ளது இலிக்கு - பள்ளத்தாக்கு, அன்றைய நாளில் மேற்கிலிருந்து கிழக்காக ஒரு பொது வழியாக இருந்தது. இன்று சாராய்கோல் என்ற இடத்திலிருந்து கிழக்கு வரை இரயில் பாதைகளும், சாலைகளும் இதேவழியில் போடப்பட்டுள்ளன. கொலோசை இருந்த இடம் துருக்கியில் இக்கால நகரமான தென்சிலிக்குக் கிழக்கில் 16 கி.மீ.தொலைவில் இருக்கிறது.

இலிக்கு மாவட்டத்தில் உள்ள மூன்று மாபெரும் கிறிஸ்தவ நகரங்களில், கொலோசைதான் நகருக்குரிய ஓர் இடத்தைப்பெற்ற முதல் இடமாகும். எரோதோதசு இதைப் பிரிகியாவில் உள்ள பெரியநகரம் எனக் குறிப்பிடுகின்றார். அந்நாட்களில் அங்குப் பிரிகியர் என்ற மக்கள், அவர்களது சொந்த மொழியில் பேசி, பெரிய தேவதையை வழிபட்டுவந்ததாகத் தெரிகிறது. கி.மு. 401-இல் கொலோசை செழுமையான ஒரு பெரிய நகரமாக இளைய சைரசின் காலத்தில் இருந்ததாகச் செனபோன் குறிப்பிடுகின்றார். இதனின்று கிரேக்கர்களின் ஆட்சிக்கு முன் கொலோசை ஒரு பெரிய நகரமாக இலிக்கு பள்ளத்தாக்கில் இருந்ததாகத் தெரிகிறது.

உரோமையர் காலத்தில் கொலோசை ஆடை நெய்யும் தொழிலுக்குப் பெயர் பெற்றதாக இருந்தது. பேரரசர்களின் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களும் கல்வெட்டுகளும் இந்த இடத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன. கி.பி. 1835-இல்

பயணம் செய்த வில்லியம் கமில்டன் என்பவரால் இது அடையாளம் காட்டப்பட்டது. இவர் நதியின் இடப்புறம் அழிந்துபோன நகரத்தைக்காட்டி அங்குச் சலவைக்கல்லால் கட்டப்பட்ட கட்டடங்களும், ஒரு நாடக அரங்கும் இருந்ததற்கான அறிகுறிகள் இருப்பதாகக் கூறினார். நதியின் வடக்குப் பகுதியில் ஓர் இடுகாடும், பாறையில் வெட்டிக் கட்டப்பட்ட கல்லறைகளும் இருந்தன.

கொலோசையின் கிழக்குப் பகுதியில், ஆற்றின் வடகரையில் புனித மிக்கேலுக்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. 12-ஆம் நூற்றாண்டில் இவ்வாலயம் துருக்கியர்களால் அழிக்கப்பட்டது. 8-ஆம் நூற்றாண்டில் கொலோசை நகரம் கைவிடப்பட்டு 5 கி.மீ. தெற்கே உள்ள சோனாய் என்ற இடத்தில் உள்ள மக்களுக்குக் கல்சுரங்கமாகப் பயன் பட்டது.

அகழ்வாய்வுகள் இங்கு நடத்தப்படவில்லை. இங்குக் கிடைத்த வாசகச்சான்றுகள் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. நமக்குக் கிடைத்த வரலாற்று, தொல்பொருள் ஆதாரங்கள் புனித பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடுகின்ற இதன் முக்கியத்தை எடுத்துக்காட்டப் போதியவையாக இல்லை.

இலிக்கு - பள்ளத்தாக்கின் மூன்று முக்கிய கிறிஸ்தவ நகரங்களில் (திருவெளி 3:14) ஏராப்பொலியிலிருந்து 21 கி.மீ. தொலைவிலும் இலவோதிக்கேயாவிலிருந்து 19 கி.மீ. தொலைவிலும் உள்ள கொலோசை புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நன்கு நிறுவப்பட்டிருந்தது. இங்குள்ள திருச்சபை எப்பப்பிராவால் நிறுவப்பட்டதாகப் பொதுவாகக் கருதப்பட்டது (கொலோ 1:7, 4:12). இத்திருச்சபைக்குப் பவுல் ஒரு திருமுகத்தை எழுதினார் (1:2). இத்தலத்திருச்சபையைச் சேர்ந்த சிறப்புப்பெற்றவர்கள் அர்க்கிப்பு (4:17; பில 2), ஒனேசிமு மற்றும் அவரது தலைவர் பிலமோன் (கொலோ 4:8-9; பில 10 தொ.) ஆகியோராவர்.

கொலோசையருக்குத் திருமுகம் (Letter to the COLOSSIANS)

I. **முன்னுரை:-** ''சிறைக்கூட மடல்கள்'' என்றழைக்கப்படும் திருமுகங்களில் இதுவும் ஒன்று. இதைப் பவுல்தான் எழுதினாரா என்பதுபற்றி இக்காலத்தில் பலத்த கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆயினும் புதிய ஏற்பாட்டின் திருமுறைப் பட்டியலில் பன்னிரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இத்திருமுகம் வளர்ச்சியடைந்த நிலையில் கிறிஸ்து இயல் போதகம் 1:15-20-இல் வரும் பாடலில் நமது கவனத்தை ஈர்க்கிறது. கலப்பு மதக்கோட்பாட்டுக்கு ஆசிரியர் மறுப்புரை தருகிறார். எபேசியர் திருமுகத்திற்கு இது முதன்மையான மூலமாக அமைகிறது.

II. **கொலோசை நகர் வரலாறு:-** காண்க கொலோசை.

III. **கொலோசைத் திருச்சபை:-** இந்நகரின் பெரும்பான்மையான மக்கள் புற இனத்தவராவர். இங்கு ஒரு யூதக் குடியிருப்பு இருந்திருக்கலாம். இங்குத் தோன்றிய திருச்சபையைப் பவுல் உருவாக்கவில்லை (கொலோ 2:1). இங்கு நற்செய்தியைப் பரப்பியவர் இந்நகரைச் சேர்ந்த (4:12) எப்பப்பிரா ஆவார் (1:7). இவர் பவுல் எபேசில் தங்கியிருந்தபோது அவரால் மனந்திருப்பப்பட்டவர் (அ.ப. 19). இவர் பவுலால் தூதராக அனுப்பப்பட்டோ, சொந்த ஆர்வத்தால் இயக்கப்பட்டோ, தனது நகர் மக்களுக்கு நற்செய்தியை அறிவித்துத் திருச்சபையை நிறுவினார் என்று கூறலாம் (4:12;1:2).

கொலோசைத் திருச்சபையில் புறவினத்தாரே அதிகம் இருந்தனர் (1:27;2:13). மடலின் பிற்பகுதியில் (3:5:7) புறவினத்தாருக்கே உரிய பாவச் செயல்களைப்பற்றி மடல் பேசுகிறது. தவறான யூதக்கொள்கைகளுக்கு எதிராக ஆசிரியர் அறிவுரை அளிப்பது (2:16), யூதர்களும் இங்கு இருந்தனர் என்பதைச் சுட்டுகிறது.

இவர்கள் கிறிஸ்துவை அறிந்து, அவரின் நற்செய்தியை ஏற்று (1:6) அவரில் தங்களது

விசுவாசத்தை வளர்த்துக் கொண்டனர் (1:5). இறையன்பிலும் பிறரன்பிலும் சிறந்து விளங்கினர் (1:8). இவர்களது பழைய வாழ்வு மறைந்து புதிய ஒழுங்குமுறையும் உறுதியான விசுவாசமும் இவர்களிடையே வேரூன்றியிருந்தது (2:5). கிறிஸ்தவ வாழ்வு வளர்ச்சியுற்ற இச்சமூகத்திலும் சில தவறு கள் தலையெடுக்கத் தொடங்கியிருந்தன (2:8). நடைமுறையில் இத்தவறுகள் பல தவறான பழக்க வழக்கங்களுக்கு இட்டுச் சென்றன (2:16). சபையின் கிறிஸ்தவ ஒழுக் கத்தைச் சீர்குலைப்பனவாகவும் அமைந் திருந்தன (3:5). இத்தவறுகளையும் அவற்றின் பின் விளைவுகளையும் எப்பப்பிராவின் வழியாகக் கேட்டறிந்த பவுல், கிறிஸ்தவ விசுவாசத்தில் சீரிய முறையில் வளர்ந்த கொலோசையக் கிறிஸ்தவர்கள் தவறான கொள்கைகளில் மயங்கித் தங்களது விசுவாசத் தைப் பாழ்படுத்திவிடக்கூடாது என்று விரும்பி இம்மடலை எழுதினார் எனலாம்.

IV. *கொலோசைத் திருச்சபையில் நிலவிய தவறுகள்:-* இவைபற்றி இம்மடலில் காணப்படும் குறிப்புகளிலிருந்தே நாம் அறி கிறோம். ஆகவே இவற்றைத் துல்லியமாக விவரிக்கமுடியாது.

கொலோசைத் திருச்சபையில் யூதர்களும் புறவினத்தாரும் இணைந்தே வாழ்ந்து வந்த னர். இவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற் றுக் கொண்டாலும், தங்கள் பழைய வாழ்க்கை முறையிலிருந்து உடனடியாக விடுபடமுடியவில்லை. காலப்போக்கில் பழைய யூத, புறவின ஆசார முறைகள் கிறிஸ்தவ வாழ்விலும் வழிபாட்டிலும் புகத் தொடங்கின. அதன் விளைவாகப் பல தவ றான கோட்பாடுகள் இத்திருச்சபையில் இடம்பெறத்தொடங்கின.

நடைமுறை வாழ்க்கையில் விருத்த சேத னம் (2:11), உணவு முறைகள் (2:16), முழு நிலவு பார்த்தல் போன்ற காலக்கணிப்புகள் (2:10) போன்ற பல யூதச் சடங்குகள் கிறிஸ் தவ யூதர்களின் வாழ்க்கையிலும் இடம் பெற்றன (2:16;21). கொள்கையளவில் யூதர் கள் வானதூதர்பால் கொண்டிருந்த கருத்துக் களும் கொலோசைத் திருச்சபையைப் பாதித் தன. இத்தூதர்கள் தங்கள் ஆற்றலால் மனி தனை அடிமைப்படுத்தி வந்ததாக யூதர்கள் கருதினர். ஆகவே இவர்கள்பால் யூதர்கள் ஒருவித அச்சம் கொண்டிருந்தனர். ஆகவே துன்பம் தவிர்க்க இந்த வானதூதர்களின் துணையை மனிதன் நாடவேண்டியிருந்தது. இக்கொள்கையின் விளைவாகக் கொலோ சைத் திருச்சபையில் மீட்பில் கிறிஸ்துக்கு அளிக்கப்பட்ட தனிச்சிறப்பான இடையா ளர் கோட்பாட்டைப் பாதிக்கும் அளவுக்கு இத்தூதர்களுக்கு மிக முக்கியத்துவம் அளிக் கப்பட்டதாகத் தெரிகிறது (1:16; 2:10). மேலும் எஸ்ஸேனிய யூத சமூகத்தினர் கடுந் தவம் புரிந்து, மணவாழ்வையே வெறுக்கு மளவுக்கு ஆன்மீகவாழ்வில் அக்கறைகாட்டி னர். இவர்களுடைய கோட்பாடுகளும் கொலோசைத் திருச்சபையினரைக் கவர்ந்த தாகத் தெரிகிறது (2:23).

யூதர்களிடையே நிலவிய சில கோட்பாடு கள் கொலோசைத் திருச்சபையைப் பாதித்தது போல், புறவினத்தாரின் சில கோட்பாடு களும் இத்திருச்சபையைப் பாதித்ததாகத் தெரி கிறது. இவற்றில் ஒன்று, ''உலகின் பூதங்கள்'' அல்லது வானதூதர்கள்மேல் கொண் டிருந்த விசுவாசமாகும். உலகம் இப்பூதங்க ளின் பிடியில் இருந்தது (2:8:20). இவை கடவுளுக்கும் உலகிற்கும் இடைப்பட்டவை யாகும். ஒவ்வொன்றும் கடவுளின் முழுமை யில் ஒரு பகுதியைக் கொண்டிருந்தது (1:19:2:9). இவையே படைப்பிற்குக் கார ணம் (1:15-17). இவை உலகின் பல்வேறு பகுதிகளையும், மனிதரின் ஊழலையும் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்தன. இந் நிலையில் மனிதனின் முக்கியமான அலுவல் தனது ஊழலைக் கண்டுணர்ந்து, அதற்கேற்ற வாறு தன் வாழ்க்கையை அமைத்துக் கொள் வதாகும்.

இந்த யூத, புறவினக் கோட்பாடுகளின் கலப்பு கொலோசைக் கிறிஸ்தவர்க ளிடையே பல விளைவுகளை உண்டுபண்ணி யது. இவற்றால் பாதிக்கப்பட்டவர்கள்,

இந்த மறைந்த, சக்திவாய்ந்த உயிர்கள் பற்றியும், இவைகள் கட்டுப்படுத்திய உலகில் இவைகளின் ஆற்றல்பற்றியும் வெளிப்படுத்தப்பட்ட ஞானம் அல்லது அறிவு தேவை என்றுணர்ந்தனர். இவைகளின் பெயர்கள், அலுவலர்கள், எப்படி இவைகளுக்குப் பரிகாரம் செய்ய வேண்டும் என்பவை பற்றி அறிவது மிகவும் முக்கியமாகும். மனித வாழ் இவைகளின் கட்டுப்பாட்டில் இருந்தால், ஒருவகை ஒழுக்கக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். உ-ம். சில காரியங்களுக்குச் சாதகமான அல்லது பாதகமான நாட்களை அறிந்து கடைப்பிடித்தல். இதுபோன்று, இந்தப் பாதகமான பூதங்களின் கட்டுப்பாட்டின்விளைவாக எந்தக் காரியங்களும் பொருட்களும் தடைசெய்யப்பட்டிருந்தன. சாதகமான பூதங்களின் ஆற்றல், எந்தக் காரியங்கள் நல்லவை என்பவை பற்றி அறிந்திருப்பது மிக முக்கியமாகும். அதுவே மீட்படைய வழி (2:23).

இந்த இரகசிய அறிவைப்பெற சமய வழிபாடுகளில் பங்குகொண்டனர் (1:10). இந்தக் கலப்புத் தவறுகள் மக்களிடையே பல தவறான கருத்துகளுக்கும் நடைமுறைக்கும் வழிகோலின. விரைவில் உலகின் பூதங்களும் வானதூதர்களும் இணைக்கப்பெற்றனர். இவர்கள் நாடுகளின் ஏற்றத்தாழ்வுகளை நிர்ணயிப்பதாகவும் இயற்கை விதிகளைக் கட்டுப்படுத்துவதாகவும் கருதப்பட்டனர். கடவுள் தன்மையும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர்கள் வழிபாடும் வணக்கமும் பெற்றனர். கிறிஸ்துவினால் வரும் மீட்பு நிறைவற்றதுபோல், இப்பூதங்களின் உதவியை மக்கள் நாடினர். இவைகளைப் போன்றவரே கிறிஸ்துவும் என்ற எண்ணம் மக்களிடையே பரவியது. இது அவர்களின் ஒழுக்க வாழ்வையும் பாதித்தது (2:23; 3:5).

இத்தகைய கலப்புத்தவறுகளை எதிர்த்துக் கொலோசையர் திருமுகம் எழுதப்பட்டது. அதன் நேரடிப்போதகத்தைப்பின்பு பார்ப்போம்.

V. எழுதியவர் யார்? இந்த மடலைப் பவுல்தான் எழுதினாரா? ஆதித்திருச்சபையில் இக்கேள்வி எழவில்லை. புனித இரேனேயு (2ஆம் நூற்றாண்டு) இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாக ஏற்றுக்கொண்டார். முராத்தோரியன் பட்டியலும் மார்சியனின் பட்டியலும் இந்நூல் பவுலால் எழுதப்பட்டது என்று ஏற்றுக்கொண்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருமறை நூல் ஆய்வுகள் அறிவியல் முறையில் தொடங்கிய காலத்தில், ஆய்வாளர்கள் சிலர் இந்நூலைப் பவுல் எழுதவில்லை என்று கூறி அதற்கு ஆதாரங்கள் காட்ட முயன்றனர். இவர்கள் காட்டிய காரணங்கள் மடலின் மொழிநடையையும், கருத்து வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டவையாகும்.

மொழிநடையைப் பொருத்தமட்டும், இந்நூல் கரடுமுரடான, வளவளவென்ற நடையைக்கொண்டுள்ளது. பவுல்தான் எழுதினார் என்று உறுதியாகக் கூறவல்ல நூல்களிலிருந்து சொற்றொகுதியில் இந்நூல் வேறுபடுகிறது. 34 சொற்கள் புதிய ஏற்பாட்டிலேயே இந்நூலில்தான் காணப்படுகின்றன. பிற பவுலின் நூல்களில் காணப்படாத 28 சொற்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இந்நூல் 10 சொற்களை எபேசியரோடுமட்டும் பொதுவாகக் கொண்டுள்ளது. கொலோசையரிலும் எபேசியரிலும் காணப்படும் 15 சொற்கள் புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப்படவில்லை. பவுலின் பிற நூல்களில் பயன்படும் ஏற்புடைமை, விசுவசித்தல், சட்டம், மீட்டல் போன்ற அவருக்கே உரிய கலைச்சொற்கள் கொலோசையரில் காணப்படவில்லை. அவரால் எழுதப்பட்டது என உறுதியாகக் கருதப்படும் மடல்களில் காணப்படும், ''சகோதரர்களே, என் சகோதரர்களே'' என்ற அழைப்புச் சொற்கள் (உரோ 1:13;1 கொரி 1:10;2 கொரி 1:8;கலா 1:1 1) இந்நூலிலோ எபேசியரிலோ காணப்படுவதில்லை. ஆவியைப் பற்றிய குறிப்புகள் இந்நூலில் அதிகம் இல்லை எனலாம். மடலின் போக்கும் வேறுபடுகிறது (உரோமையர் கலாத்தியரில் காணப்படும் வாதப்போக்குக்கு மாறாக வழிபாட்டுப் பாடல் போக்கு காணப்படுகிறது). வழிபாட்டைச் சார்ந்த

பகுதிகள் இடையிடையே செருகப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சில பகுதிகள் மிகக் கடினமானவையாகும்; மற்றும் சிலபகுதிகள் கருத்துச் செறிவுகொண்டு ஆழமிக்கவையாக உள்ளன. ஆகவே இவ்வாறு நடையிலும் போக்கிலும் பவுலின் பிற நூல்களிலிருந்து வேறுபடும் இந்நூலுக்குப் பவுல் ஆசிரியராக இருக்கமுடியாது.

வேறுசிலர் கருத்துவளர்ச்சி அடிப்படையில் இந்நூலைப் பவுல் எழுதியிருக்க முடியாது என்பர். இம்மடலில் காணப்படும் இறையியல் அதிகம் வளர்ச்சி பெற்றதாகத் தெரிகிறது. குறிப்பாக இந்நூலில் காணப்படும் கிறிஸ்துஇயல், திருச்சபை பற்றிய போதகம், இறுதிக்கால இயல் ஆகியவை, பவுலின்பிற மடல்களிலிருந்து வளர்ச்சியுடைய வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

இந்நூலைப் பவுல் எழுதியிருக்கமுடியாது என்பதற்கு மற்றொரு காரணம் காட்டப்படும். இந்நூலில் ஆசிரியர் எதிர்த்துப் போராடும் தவறுகள் ஞானவாதக் கொள்கையின் பண்புகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இக்கொள்கை கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வளர்ச்சியுற்ற ஒரு கொள்கையாகும். பவுல் இறந்ததோ கி.பி. 68ஆம் ஆண்டு. ஆகவே பவுல் இந்நூலை எழுதியிருக்க முடியாது.

மேற்கூறப்பட்ட காரணங்களைக் கூறுபவர்கள் புகழ்பெற்ற பெரும் ஆய்வாளர்கள். ஆயினும் இந்நூலைப் பவுல்தான் எழுதினார் என்பதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். திருச்சபையின் தொடக்க காலப் பாரம்பரியம் இதற்குச் சான்று கூறுகிறது. மேலும் இந்நூலுக்குச் சிறப்பான முறையில் உரிய சொற்கள் பாரம்பரியப்பாடலிலும் (1:15-20), வாதப்பகுதியிலும் (2:6-23) காணப்படுகின்றன. தவறுகளை எதிர்த்துப் போராடும்போது, பவுலுக்குத் தவறுகளைப் போதித்தவர்களின் சொற்றொகுதிகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது எனலாம். ஆகவே பவுல் புதிய சொற்றொகுதிகளைப் பயன்படுத்துகிறார்.

கருத்து வளர்ச்சியைப் பொருத்தமட்டும், பவுல் தனது முக்கிய பாடல்களை எழுதிய காலத்திற்கும் இம்மடல் எழுதப்பட்டிருக்கக் கூடிய காலத்திற்கும் இடையே குறைந்தது நான்கு ஆண்டுகளாவது கடந்துவிட்டிருந்தன. இக்காலத்தில் பவுலின் இறையியல் கருத்துக்கள் வளர்ச்சியுற்றிருக்கலாம். இய்றை இந்நூலின் போதகத்தைப் பற்றிக் கூறும்போது பார்ப்போம். மேலும் இவ் வளர்ச்சி பவுலின் சிந்தனைக்குக் கிரியாவூக்கியாக அமைந்த புதிய தவறுகளுக்குப் பதிலாக அமைந்திருக்கலாம்.

ஞான வாதத் தவறுகள் அவற்றின் வளர்ச்சியுள்ள நிலையில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாயினும், அவை முதல் நூற்றாண்டிலேயே தோன்றத் தொடங்கின. இந்தத் தொடக்கநிலை ஞானவாதத் தவறுகளுக்கு எதிராகக் கொலோசையர் அமைந்திருக்கிறது எனலாம்.

இந்நூலைப் பவுல்தான் எழுதினார் என்பதற்கு உண்மையிலேயே பவுல்தான் எழுதினார் என்று ஏற்றுக்கொள்ளப்படும் பிலமோனுக்கு எழுதப்பட்ட திருமடலோடு இந்நூல் கொண்டிருக்கும் ஒப்புமை ஒரு வலுவான சான்றாக அமைகிறது. இரண்டு மடல்களிலும், எப்பப்பிரா, அரிஸ்தர்க்கு, மாற்கு, லூக்கா, மற்றும் தேமா ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்புகின்றனர் (கொலோ 4:10 தொ;பில 23 தொ). இரண்டிலும் ஒனேசிமுவை அனுப்புவதைப் பற்றிய குறிப்பு உள்ளது. (கொலோ 4: 4; பில 12); இரண்டும் அர்க்கிப்புவுக்குச் செய்தி அளிக்கின்றன (கொலோ 4:17; பில 2).

ஆகவே பவுல்தான் இம்மடலை எழுதினார் என்று ஏற்றுக்கொள்வது சாலச்சிறந்தது. ஆனால் இக்கால ஆய்வாளர்களில் பெரும்பாலோர் முன்பு கூறப்பட்ட காரணங்களுக்காக, இம்மடலைப் பவுல் எழுதவில்லை என்பர். பவுல்தான் இம்மடலை எழுதினார் என்பவர்களில் சிலர், இந்நூல் பல இடைச்செருகல்களைக் கொண்டுள்ளது என்பர். ஒருசிலர் இந்நூல்லைப், பவுலும்

திமொத்தேயுவும் சேர்ந்தோ, அவரது சீடர்களோ எழுதினார் என்று கருதுவர்.

VI. **நூல் தோன்றிய இடமும் காலமும்:-** பவுல் சிறையில் இந்நூலை எழுதினார் (*கொலோ 4:3.18;1:24*). சிறை வாழ்வு பவுலுக்கு அடிக்கடி நேர்ந்த ஒன்றாகும். ஆகையால் இக்குறிப்பு இந்நூல் தோன்றிய இடத்தையும் காலத்தையும் கணிக்கப் போதுமானதன்று. நூலில் காணப்படும் கிறிஸ்து இயல் வளர்ச்சி, இந்நூல், *1-2* கொரி, உரோ, கலா ஆகிய திருமுகங்களுக்குப்பின் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று சுட்டுகிறது.

பவுல் சிறையிலிருந்து இம்மடலை எழுதியதால், செசரியாவிலிருந்தோ, எபேசிலிருந்தோ, உரோமையிலிருந்தோ, இம்மடல் எழுதப்பட்டிருக்கலாம் என்பர் அறிஞர்கள்.

செசரியா நகரில் பெலிக்சு என்னும் உரோமை ஆளுநரின் கீழ்ப் பவுல் ஏறக்குறைய இரு ஆண்டுகள் சிறைப்பட்டிருந்தார் (*அ.ப.24:27*). அப்பொழுது அவர் இம்மடலை எழுதியிருந்தால் மாற்கு, ஒனேசிமு ஆகியோரைப்பற்றி எழுதியிருக்க வாய்ப்பில்லை (*கொலோ 4:9-10*). ஆசியாவில் நற்செய்திப்பணி செய்து கொண்டிருந்த மாற்கு திடீரென்று செசரியாவில் தோன்றியிருக்கமுடியாது (*அ.ப.15:39*). தன் உற்ற உடன்உழைப்பாளரான பிலிப்புவைக் (*21:8*) குறிக்காமல் இருந்திருக்கமாட்டார். ஒனேசிமு தன்தலைவனிடமிருந்து வரவிரும்புவதாகப் பவுல் எழுதியிருக்கமுடியாது (*பில 22*); ஏனெனில் தன் தீர்ப்புக்காகச் செசரியாவிலிருந்து உரோமைக்குச் செல்ல வேண்டியிருந்தது (*அ.ப.23:11*). நற்செய்தியைப் போதிக்கப் பவுல் ஓரளவு சுதந்தரம் கொண்டிருந்ததாகத் தெரிகிறது (*கொலோ 4:3-4*). இந்நிலை செசரியாவில் இருந்திருக்கமுடியாது. ஏனெனில் அவரைக் கொல்ல அவரது எதிரிகள் சூழ்ச்சி செய்தனர் (*அ.ப. 23:12*) என்று அறிகிறோம். இக்காரணங்களுக்காக இம்மடல் செசரியாவில் எழுதப்பட்டிருக்க முடியாது என்று அறிஞர்கள் பெரும்பாலானோர் கருதுவர்.

இம்மடலை எபேசுப் பணியின் இறுதியில் பவுல் எழுதியிருக்கலாம் என்று அறிஞர் பலர் கருதுகின்றனர். தனது மூன்றாம் மறைபரப்புப் பயணத்தின்போது எபேசு நகரிலிருந்து தனது சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார். அப்போது திமொத்தேயு அவருடன் இருந்தார் (*அ.ப. 19:22; கொலோ 1:2*). கொலோசை அருகில் இருந்ததால், எப்பப்பிராவும் ஒனேசிமுவும் பவுலிடம் சென்று வருவது எளிதாகும் (*கொலோ 4:9*). பவுல் எபேசில் பலவாறு துன்பப்பட்டார் என்று அறிகிறோம் (*2 கொரி 1:8-10*). ஆனால் சிறையிலிருந்தார் என்று எந்தக் குறிப்புமில்லை. பவுல் எபேசின் சிறையிலிருந்து இம்மடலை எழுதினார் என்று கொண்டால், நற்செய்தியாளரான லூக்கா பவுலோடு இருந்திருக்க முடியாது. ஏனெனில் பவுல் ஆசியாவில் தங்கி நற்செய்திப் பணி செய்ததைப் பற்றி எழுதிய லூக்கா (*அ.ப. 16:17-20: 5*) இப்பகுதியில் மட்டும் தன்னையும் சேர்த்து ''நாம்'' என்று குறிப்பிடுவதில்லை. ஆனால் பவுல் கொலோசையருக்கு மடல் எழுதியபோது லூக்கா அவரோடு இருந்தார் (*கொலோ 4:14*). ஆகவே இம்மடல் எபேசிலிருந்து எழுதப்பட்டிருக்க முடியாது. மேலும் இங்கு இம்மடல் எழுதப்பட்டிருந்தால், அதில் காணப்படும் போதக வளர்ச்சியை விளக்குவது கடினம்.

இம்மடலை உரோமைச் சிறையிலிருந்து பவுல் எழுதினார் என்பது பலருடைய கருத்து. இதுவே பாரம்பரியக் கருத்தும் ஆகும். பவுலின் உரோமைச் சிறைவாழ்வைப்பற்றித் (*அ.ப. 28:16-31*) தெளிவாக எடுத்துக்கூறுகிறார். எபேசியர், கொலோசையர், பிலமோன் ஆகியோருக்கு எழுதப்பட்ட மடல்கள் பவுலின் மற்ற மடல்களிலிருந்து நடையிலும் மொழியிலும் வேறுபட்டவை; கருத்து வளர்ச்சியுடையவை. ஆகவே, பவுலின் பெரிய மடல்கள் என்றழைக்கப்படும் உரோமையர், கொரிந்தியர், கலாத்தியர் ஆகியோருக்கு எழுதப்பட்ட மடல்களுக்குப் பல்லாண்டுகளுக்குப் பின்னே இம்மடல் எழுதப்பட்டிருக்கலாம். பிலமோனுக்கு எழுதும்போது, பவுல் தன்னையே ''வயது சென்ற

வன்'', ''கைதி'' என்று குறிப்பிடுகிறார் (பில 9). வயது முதிர்ந்த கைதியாகப் பவுல் உரோமைச் சிறையில்தான் இருந்திருக்க வேண்டும். தன் தலைவனிடமிருந்து ஓனேசிமு வாய்ப்புகள் மிகுந்த உரோமையில்தான் தஞ்சம் புகுந்திருக்கக்கூடும். உரோமையில்தான் சிறையிலிருந்து நற்செய்தியைப் போதிக்கப் பவுலுக்கும் போதிய வாய்ப்பிருந்தது (அ.ப.23:12; கொலோ 4:3-4). ஆகவே கொலோசையருக்குப் பவுல் எழுதிய மடலையும், எபேசியர், பிலமோன் ஆகியோருக்கு எழுதிய மடல்களையும் உரோமையிலிருந்தே பவுல் எழுதியிருக்கவேண்டும் என்பர் அறிஞர் பலர். இம்முடிவை நாமும் ஏற்கலாம்.

பவுலின் முதல் உரோமைச் சிறைவாசம் கி.பி. 61-63-இல் நடந்தது என்று கணிக்கப்படுகிறது (அ.ப. 28:30). அப்போது பவுல் கொலோசையர், எபேசியர், பிலமோன் ஆகியோருக்குத் தன் மடல்களை வரைந்திருக்க வேண்டும்.

VII. மடலின் திட்டம்:

1. முன்னுரை: (1:1-14).
   - 1:1-2 : வாழ்த்து.
   - 1:3-8 : நன்றிகூறல்.
   - 1:9:14 : மன்றாட்டு.

2. போதனைப் பகுதி: படைப்பு முழுவதிலும் திருச்சபையிலும் கிறிஸ்துவின் முழு முதன்மையும் மேன்மையும் (1:15-2:3).
   - 1:15-20 : கிறிஸ்துவின் மேன்மை, பாடல்.
   - 1:21-23 : மீட்பில் கொலோசையர் பங்கு.
   - 1:24-2:3 : இம்மறையுண்மையை அறிவிப்பதில் பவுலின் பங்கு.

3. வாதப்பகுதி: தவறான கொள்கைகள் பற்றி எச்சரிக்கை (2:4-34 3:4).
   - 2:4-7 : உண்மை விசுவாசத்தில் நிலைத்து நிற்றல்.
   - 2:8-15 : நற்செய்தியும் போலி ஞானமும்.
   - 2:16-23 : கிறிஸ்தவ சுதந்தரம்; போலித்தவம்.
   - 3:1-4 : உயிர்த்த கிறிஸ்து புதுவாழ்வுக்கு ஊற்று.

4. அறவுரைப் பகுதி: கிறிஸ்துவில் புது வாழ்வு (3:5-4:1).
   - 3:5-17 : கிறிஸ்துவில் வாழ்வுக்குப் பொதுவிதிகள்.
   - 3:18-4:1 : குடும்ப வாழ்க்கை.

5. முடிவுரை (4:2-18).
   - 4:2-6 : இறுதி அறவுரை.
   - 4:7-9 : தன்னைப் பற்றிய செய்திகள்.
   - 4:10-18 : இறுதி வாழ்த்து.

VIII போதகம்: இம்மடல், கிறிஸ்து இயல், இறுதிக்கால இயல், திருச்சபை இயல் ஆகிய தலைப்புகளில் கருத்து வளர்ச்சியைக் காட்டுகிறது. இவற்றை எடுத்துக் கூறும்போது, அதற்கு முந்திய மடல்களோடு ஒப்புமையும் சுட்டிக்காட்டப்படும்.

1. கிறிஸ்து இயல்:- இது கொலோ 1:15-20-இல் வரும் பாரம்பரியப் பாடலை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. இதன்படி, கிறிஸ்து ''கட்புலனாகாக் கடவுளின் சாயல் (1:15; காண்க. 2 கொரி 4:4); படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர் (1:15; உரோ 8:29); அனைத்துக்கும் முன்பே உள்ளவர் (1:17). அவரே ஆதியானவர் (1:18). இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறானவர் (1:18); அவரிலேயேதான், அவராலேயே, அவருக்காகவே அனைத்தும் உண்டானது (1:16). முழுநிறைவும் அவரில் குடிகொண்டுள்ளது (1:19; எபே 3:19); அவர் வழியாகவே எல்லாம் ஒப்புரவாக்கப்படுகின்றன (1:20. உரோ 5:10: 2 கொரி 5:18-19). திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் அவரே'' (1:18; எபே 1:22;4:15; 5:23). இத்தலைப்புக்கள் மடல் முழுவதும் விவரிக்கப்படுகின்றன. பவுல்தான் எழுதினார் என்று உறுதியாகக் கருதப்படும் மடல்களோடு ஒப்புமையில்லாத கிறிஸ்துஇயல் கூற்றுக்கள் இம்மடலில் காணப்படுகின்றன. கிறிஸ்துவே இறை

வனின் மறையுண்மை (1:27;2:2-3); கிறிஸ்து வோடு விசுவாசிகளும் உயிர்த்தெழுந்துள்ள னர் (2:12); கிறிஸ்து பாவங்களை மன்னிக்கி றார் (1:13-14; 3:13; எபே 1:7). தமது சிலுவை மரணத்தால், உலகைக் கட்டுப்படுத்துவதா கக் கருதப்பட்ட தலைமை ஏற்போர், அதி காரம் தாங்குவோர் முதலிய தூதர்களின் படை களைக் கிறிஸ்து வெற்றிகொள்கிறார் (2:15). ஆயினும் பவுலுக்கே உரியதெனக்கருதப் படும் சில கிறிஸ்துஇயல் கருத்துகளும் இம் மடலில் காணப்படுகின்றன. கிறிஸ்துவே இறைமகன்; அவரில் விசுவாசிகள் மீட்புப் பெறுகின்றனர் (1:13-14; உரோ 3:24; 1 கொரி 1:30). திருமுழுக்கில் கிறிஸ்துவோடு விசுவா சிகள் புதைக்கப்படுகின்றனர் (2:12; உரோ 6:4). கடவுளின் வலப்புறத்தில் கிறிஸ்து அமர்ந்திருக்கிறார் (3:1; உரோ 8:34).

இந்த வளர்ச்சியடைந்த கிறிஸ்து இயலுக் குப் பழைய ஏற்பாட்டு ஞானநூல்கள் மூல மாக அமைந்திருப்பதாகத் தெரிகிறது. இவ் வளர்ச்சிக்கு ஒருங்கமைவும் ஒற்றுமையும் அளிப்பது கிறிஸ்துவையும் இறைஞானத் தையும் ஒன்றாக்குவதாகும். முழு அண்ட மும், தொடக்கத்திலிருந்து, இறைவனது ஞானத்தால் படைக்கப்பட்டு நடத்தப்படுகி றது. இப்போது அந்த ஞானம் கிறிஸ்துவில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது (கொலோ 1:15-20). கிறிஸ்துவே அந்த இறை ஞானம் என்ற அளவில் அவரே, நிறைவான பொருளில், எல்லாப் பொருட்களின் ''ஆதி யாவார்''; தொடக்கமாவார் (1:18). ஞான மாக எல்லாம் அவரில் உள்ளன. இதன் விளைவாகப் படைப்பிலும், மறுபடைப்பி லும் அவரது பாகம் அண்டப்பண்புடையது.

2. **இறுதிக்கால இயல்:-** பிறமடல்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், உலக இறுதிக் காலத்தையும் உடனடி எதிர் காலத்தில் பவுல் எதிர்பார்த்தாகத்தெரிகிறது. (1 தெச 4:15; 5:23; 1 கொரி 7:26). இந்த எதிர்பார்ப்பிலோ ஒருவிதத் தளர்ச்சி கொலோ சையரில் காணப்படுகிறது. இம்மடலில் வரும் இறுதிக்கால இயலை ஏற்கெனவே நேர்ந்துவிட்ட இறுதிக்கால இயல் என்று அறிஞர்கள் விவரிப்பர். வருங்காலத்தில் கிறிஸ்து மீண்டும் வருவார் என்ற கருத்து கொலோ 3:4-இல் காணப்படுகிறது. ஆனால் விசுவாசிகள் ''மேலுலகில் உள்ளவற்றை'' நிகழ்கால உண்மைகளாக ஆக்க ஊக்குவிக் கப்படுகின்றனர் (3:1-2). பவுலால்தான் எழு தப்பட்டவை என்று உறுதியாகக் கருதப் படும் மடல்களில் உயிர்ப்பு ஒரு வருங்கால எதிர்பார்ப்பாய் விவரிக்கப்படும்போது (1 கொரி 6:14; 2 கொரி 4:14) இம்மடலின்படி விசுவாசிகள் ஏற்கெனவே இறந்தோரிட மிருந்து கிறிஸ்துவோடு உயிர்த்தெழுந்துவிட் டார்கள் (2:12;3:1). பவுலின் பிறமடல்களில் நம்பிக்கை விசுவாசியினுள் உள்ளது; எதிர் காலத்தை நோக்கியுள்ளது (உரோ 5:2;8:24; 2 கொரி 1:10; கலா 5:5). கொலோசையரில் நற்செய்தியில் அடங்கியுள்ள நம்பிக்கையும் (1:23), மறை உண்மையும் (1:27) ஏற்கெ னவே வானகத்தில் விசுவாசிகளுக்கென வைக்கப்பட்டுள்ளன (1:5). இறுதிக்கால இயல்பற்றிக் கொலோசையருக்கும் பவுலின் மற்ற மடல்களுக்கும் இடையேயுள்ள வேறு பாடு திருமுழுக்குப்பற்றிய இறையியல் வேறுபாட்டின் விளைவாகும். உரோ 6:1-4-இல் திருமுழுக்கு வருங்காலத்தை முன்னோக்குகிறது. இதற்கு மாறாகக் கொலோசையரில் திருமுழுக்கு முடிக்கப் பெற்ற மீட்பைப் பின்னோக்குகிறது. திரு முழுக்கில் விசுவாசிகள் கிறிஸ்துவோடு மரிப்பதோடு, உயிர்த்தெழுந்தும் விட்டனர்.

விசுவாசிகள் கிறிஸ்துவில் ''மகிமையின் நம்பிக்கையக்'' கொண்டுள்ளனர் (1:2). இந்த ஒன்றிப்பின் பேரொளியின் வெளிப் பாடு வருங்காலத்தைச் சேர்ந்ததாகும் (3:4). ஆனால் முடிவைப்பற்றிக் கலக்கமிக்க எதிர்பார்ப்பைக் கொண்டிருப்பதற்குப் பதி லாக, கிறிஸ்துவின் அலுவலின் முக்கிய விளைவுகள் நிகழ்காலத்தில் காணப்பட வேண்டும் என்ற அமைதியான உறுதிப்பாட் டைக் கொலோசையர் திருமுகத்தில் காண லாம். இந்த அனுபவித்துக் கொண்டிருக்கும் இறுதிக்கால இயல் திருமுழுக்குப் பற்றிய பவுலின் இறையியலில் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. நாம் ஏற்கெனவே இறந் தோரிலிருந்து உயிர்த்துவிட்டோம்.

3. திருச்சபை இயல்: பவுலால்தான் எழுதப்பட்டவை என்று உறுதியாகக் கருதப்படும் திருமுகங்களில் திருச்சபை, சிறப்பானதும் செயல்முறையானதுமான விதத்தில் தலத்திருச்சபையைக் குறிக்கிறது. ஆனால் கொலோசையரில், திருச்சபை என்ற கருத்து கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட உடலாகிய உலகளாவிய பொதுத்திருச்சபையைக் குறிக்கிறது (கொலோ 1:18.24;2:19;3:15; ஆனால் 4:15.16 தலத்திருச்சபையையே குறிக்கிறது). இந்தக் கருத்து வளர்ச்சியில், திருச்சபையியல் கிறிஸ்து இயலோடு தொடர்பு கொண்டுள்ளது. உடலின் தலையாகக் கிறிஸ்துவுக்குச் சாற்றிக்கூறப்படுபவையெல்லாம் அந்த உடலின் அங்கத்தினர்களுக்கும் பொருளுள்ளதாகக் கொள்ளலாம். திருச்சபையில் விசுவாசிகளின் அலுவல் தலையாயிருப்பவரோடு இறுக்கிப்பிணைத்துக் கொள்வதும் (2:14), ஒருவருக்கொருவர் போதிப்பதும், அறிவு புகட்டுவதும் (3:16) ஆகும். திருச்சபையினுள் தனிப்பட்ட பதவிகளோ அமைப்புகளோ விவரிக்கப்படவில்லை. பவுல் தன்னையே அப்போஸ்தலர் என்றும் (1:2) எப்பப்பிரா மற்றும் திக்கிக்கு ஆகியோரை உடன் ஊழியர்கள் என்றும் (1:7.23;4:7) குறிப்பிடுகிறார்.

கிறிஸ்து இயலின் முக்கியமான விளைவு, மீட்பின் குழுக்கூறு புதிய முறையில் வலியுறுத்தப்படுவதாகும். முந்தைய திருமுகங்களில், விசுவாசிகள் கிறிஸ்துவின் ''அங்கங்களாக''க் காட்டப்படுகின்றனர். இதற்கு மாறாக, இத்திருமுகத்தில் அவர்கள் ''உடல்'' என்று வெறுமனே குறிக்கப்படுகின்றனர். திருமுழுக்கால் செயல்படுத்தப்படும் புதிய படைப்பு செயலளவில் ''புதிய மனிதன்-பழைய மனிதன்'' (3:9) என்ற தலைப்பின் கீழ் விவரிக்கப்படுகிறது. இம்மனிதர்களுக்கிடையேயுள்ள ஒன்றியத்தொடர்பு, 'மண்ணைச் சார்ந்த மனிதன்' (ஆதாம்), ''விண்ணைச் சார்ந்த மனிதன்'' (கிறிஸ்து) என்ற தலைப்புகளில் மீட்பின் இரு யுகங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளிலிருந்து (1 கொரி 15:45-49) தெளிவாக்கப்படுகிறது. இந்த முன்னோக்கில் புறஇனத்தாருக்குச் சிறப்பான கவனம் செலுத்தப்படுகிறது. ஏனெனில் பவுலால் அனுபவிக்கப்பட்ட மீட்புப் பற்றிய மறைபொருள் ''கிறிஸ்து உங்களுக்குள் இருத்தலாகும்'' (கொலோ 1:27). அவரில் கிரேக்கர்கள் யூதர்களுக்கிடையே மிலேச்சர்கள் சித்தியர்களுக்கிடையே இனி எவ்வேறுபாடும் இல்லை (3:11). மனுக்குலம் அதன் பாவத்தால் விளைந்த பிளவுகளுடன் கிறிஸ்துவுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது. ''கிறிஸ்துவே அனைவரிலும் அனைத்துமாவார்'' (3:11).

IX. பிற சிறைக்கூட மடல்களோடு தொடர்பு: கொலோசையைச் சேர்ந்த ஒனேசிமு கூடவர, திக்கிக்கு இம்மடலைக் கொலோசைக்கு எடுத்துச் சென்றார் (4:7-8). 4:16-இன் அடிப்படையில், இது ஒரு சுற்று மடலாக இருக்கலாம். கொலோசையில் வாசிக்கப்பட்டபின், அதற்கு அடுத்து அமைந்திருந்த இலவோதிக்கேயாத் திருச்சபையில் (2:1) ஒருவேளை ஏராப்போலியிலும் வாசிக்கப்படவேண்டியதாக இருந்திருக்கலாம் (4:13).

பொருளடக்கத்தில் இம்மடல் எபேசியர் திருமுகத்தோடு பெருமளவில் ஒத்திருக்கிறது. இரண்டும் திருச்சபையைக் கிறிஸ்துவின் உடல் என்று விவரிக்கின்றன (1:18; எபே 4:12.15). குடும்ப வாழ்வுபற்றி இரண்டும் ஏறக்குறைய ஒரே போதகத்தைத் தருகின்றன (3:18-4:1;எபே 5:21-6:4). ஆனால் நோக்கும் விதத்தில் சிறிது வேறுபாடு உண்டு. எபேசியர் திருமுகம் திருச்சபையையும், எல்லாவற்றின் முடிவையும் வலியுறுத்தும். கொலோசையர் திருமுகம் படைப்பில் அதிகக் கவனம் செலுத்துகிறது.

கொல்கொதா (GOLGOTHA - மண்டைஓடு)

'கொல்கொதா' என்ற இடத்தில்தான் இயேசு சிலுவையில் அறையப்பட்டார் (மத் 27:33; மாற் 15:22; யோவா 19:17). கொல்கொதா என்ற அரேபியச் சொல்லை அப்படியே தந்துள்ள மூன்று நற்செய்திகளும் 'மண்டை ஓடு' என்ற பொருள்தரும் அச்சொல்லின் கிரேக்க மொழிபெயர்ப்பையும் தந்திருக்கின்

றன. நற்செய்தியாளர் லூக்கா 'மண்டை ஓடு' என்ற பொருளைத்தரும் கிரேனியோன் என்ற கிரேக்கச் சொல்லை இயேசு அறையப் பட்ட இடத்தின் பெயராகத் தருகின்றார். ஆனால் அச்சொல்லிற்கு இணையான அர மேய வார்த்தையைத் தரவில்லை (லூக் 23:33).

'கொல்கொதா' என்பது நகரத்திற்கு வெளியே உள்ள இடம் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது (மத் 27:32; மாற் 15:21). நற்செய்தியாளர் யோவான் நகரத் திற்கு அருகிலிருந்ததாகக் கூறுகின்றார் (19:20). லூக்கா தருகின்ற உரையில் நகரத் திற்கு வெளியே உள்ள இடம் என்ற கருத்து மறைந்திருக்கின்றது. கொல்கொதா என்ற இடம் இயேசுவின் கல்லறைக்கு அருகில் இருந்ததாக யோவான் 19:41-இல் தெளிவாக வும், வெளிப்படையாகவும் மற்ற நற்செய்தி களில் மறைமுகமாகவும் கூறப்பட்டிருக்கின் றது. இந்த இடத்தில்தான் புனிதக் கல்லறை என்ற ஆலயம் இன்று இருக்கின்றது.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மக் கள் அவ்விடத்தைச் சுற்றி வாழ்ந்து கொண் டிருப்பதால் அவ்விடமானது அடையாளம் காண முடியாதவிதத்தில் பலவிதமான மாற் றங்களைக் கண்டிருக்கிறது. எனவே இயேசு ஒரு மலையில்தான் சிலுவையில் அறையப் பட்டார் என்ற மக்களின் நம்பிக்கையை வலி யுறுத்துவதற்கான இலக்கிய அல்லது தொல் பொருள் ஆதாரங்கள் அங்கு இல்லை. கி.பி. 132-135-இல் நடந்த யூதக் கிளர்ச்சிக்குப்பின் எருசலேமின் அழிவின்மேல் அதிரியான் என் பவரால் ஏலியா கப்பித்தோலினா என்ற உரோ மானிய நகரத்தில் கட்டப்பட்ட அப்ரோ தைட்டு கோவில் இருந்த இடம்தான் கொல் கொதா என்ற இடமும் இயேசுவின் கல் லறை இருந்த இடமுமாகும் என்பது கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த யூசேபி யுவின் கணிப்பாகும். இருப்பினும் இயேசு சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் பண் ணப்பட்ட இடத்தில் ஓர் ஆலயம் கட்ட வேண்டும் என்று அதிரியான் விரும்பினார் என்பதையோ, கட்டடம் கட்டும் உரோமை யர்களுக்கு அந்த இடம் தெரிந்திருந்தது என் பதையோ உறுதியாகக் கூற வழி இல்லாத தால் அப்ரோதைட்டு ஆலயம் இருந்த இடம் தான் கொல்கொதா இருந்த இடம் என்று உறுதி சொல்வதற்கும் வழியில்லை. இந்த ஆலயம் ஏலியா காப்பித்தோலினாவின் சுவர்களுக்குள் இருந்தது. இந்தச்சுவர் பழைய சுவர்களின் போக்கைப் பின்பற்ற வில்லை. கி.பி. 70-இலும் 135-இலும் நடந்த போர்களில் அழிந்து, மீண்டும் நகரம் அமைக்கப்பட்டபின், காலத்தால் முந்திய இந்த அடையாளம் காட்டுதல் மிகவும் கடின மாகும்.

அப்ரோதைட்டு ஆலயம் இருந்த இடம் தான் கொல்கொதா என்ற இடமும், இயேசு வின் கல்லறை இருந்த இடமும் என்று மன்னன் கான்ஸ்டன்டைனுக்குச் சுட்டிக்காட்டப் பட்டபோது அவர் அவ்வாலயத்தைத் தரை மட்டமாக்கிவிட்டு அவ்விடத்தில் ஒரு பெரிய ஆலயத்தை எழுப்பினார். இந்தப் பேராலயமானது கி.பி 614-இல் பாரசீகர்க ளால் அழிக்கப்பட்டது. கி.பி. 11-ஆம் நூற் றாண்டில் முன் அழிந்து புதுப்பிக்கப்பட்ட ஆலயம் முகமதியர்களால் அழிக்கப்பட்டது. 1099-இல் சிலுவைப்போர் வீரர்களால் அவ் விடமானது கைப்பற்றப்பட்டு அங்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டு 1149-ஆம் ஆண்டு திருநிலைப்படுத்தப்பட்டது.

தொல்பொருள் ஆய்வின் அடிப்படையில் இந்த இடத்தை அடையாளம் காட்டுவது முடியாத காரியமாகும். இந்த இடத்தைப்பற் றிய கடந்த 100 ஆண்டுகளாக நீடிக்கும் பிரச்சினை, இரண்டாவது சுவர் பரிசுத்தக் கல் லறை ஆலயத்தை உள்ளடக்கியதா இல் லையா என்பதைப் பொருத்ததாகும். இரண் டாவது சுவர் இப்போதுள்ள ஆலயத்தை உள்ளடக்கியதென்றால் பாரம்பரியமாக அடையாளம் காட்டப்பட்டு வரும் இடம் கொல்கொதாவாக இருக்கமுடியாது. இரண்டு கருத்துக்களும் உறுதியாகக் கூறப் படக்கூடியவை அல்ல. ஆகவே சுவர் ஆலயத் திற்குக் கிழக்கிலும் தெற்கிலும் அமைந் திருக்க வேண்டுமென்று அறிஞர்கள் தோராய

மாகக் கருதுவர். இது பாரம்பரிய அடையா ளத்திற்கு ஒத்ததாக இருக்கும்.

1842-இல் ஒத்தேனியு என்பவர் தமஸ்கு கதவிற்கு வடகிழக்கே 250 முழம் தூரத்தில் உள்ள மலைப்பாங்கான பகுதிதான் கொல் கொதா என்று கூறினார். ஏனென்றால் அவ ரது விவாதத்தின்படி அவ்விடம் நகரத்திற்கு வெளியே இருக்கிறது. மண்டைஓடு போன்ற வடிவத்தைக் கொண்டிருக்கிறது. யூதக்குற்றவாளிகளைக் கல்லால் அடித்துக் கொல்லுகின்ற இடமாகவும் விளங்கிவந் தது. எனவே அவ்விடம்தான் 'கொல்கொதா வாக' இருக்கவேண்டும் என்பது அவரது கருத்து. இக்கருத்தினை 1885-இல் தளபதி சார்லஸ் கோர்டன் என்பவரும் ஏற்றுக்கொள் கின்றார். இவ்விடம் 'கொல்கொதா'தான் என்பதை உறுதிசெய்யும் பொருட்டு அவ் விடத்திற்கு அருகில் 'கல்லறைத் தோட்டம்' ஒன்று இருக்கின்றது. இக்கல்லறை பைசாந் தியர்களின் கல்லறைக் குகைகளுக்கு அரு கில் இருக்கிறது. இக்கருத்திற்கு ஆதரவாகத் தொல்பொருள் ஆய்வுகளும் தொடக்ககாலத் திருச்சபைப் பாரம்பரியங்களும் அமைய வில்லை.

கொல்-கோசே (COL-HOZEH - எல்லாம் பார்க்கிறவர்)

1. சல்லூமின் தந்தை. நெகேமிய ஆட்சிக் காலத்தில் மிஸ்பா மாவட்டத்தின் ஆளுநர் (நெகே 3:15)

2. யூதாவைச் சேர்ந்த மாசேயாவின் மூதா தையர். நாடு கடத்தலுக்குப்பின் எருசலே மில் குடியேறியவர் (நெகே 11:5). இவரும் 1-இல் குறிக்கப்பட்டவரும் ஒருவராக இருக் கலாம்.

கொழுத்த கன்று (Fatling)

இஸ்ராயேலுடைய பலிகொடுக்கும் பழக்க முறையில் முக்கியமாகப் பயன்படுத்தப் படும் வீட்டோடு வளர்க்கப்பட்ட ஆடு அல்லது மாடுவகை விலங்கு.

இஸ்ராயேலிய விவசாயச் சூழ்நிலையில் உருவான கொழுத்த கன்று பலி கொடுக்கப் பயன்படுத்தத் தகுதியான மிருகங்களிலே முதல் தரமாக முன்னுரிமை பெறுகிறது. இப்பெயர் அதன் இனத்திற்காகக் கொடுக் கப்படுவதல்ல; அம்மிருகத்தின் தரத்தைப் பார்த்தே கொடுக்கப்படுகிறது. மிக விரும் பப்படுவதும், தேர்ந்தெடுக்கப்பட்டதுமே ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்கப்படலாம். நன்றாகக் கவனிக்கப்பட்டு, நன்றாக உணவு ஊட்டப்பட்டதே தகுதியனாதாகும். இதைக் குறிக்க மூலத்தில் பலதரப்பட்ட சொற்கள் காணப்படுகின்றன. மொழிபெயர்ப்புகளில் 'கொழுத்தகன்று' என்பதுதான் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. பலியாக ஒப்புக் கொடுப்பவைகளைக் குறிக்கும்போது அது இஸ்ராயேலின் விளைச்சலில் சிறந்ததாக இருக்கவேண்டும் (எசா 1:11) - இச்சொல் பல இடங்களில் பலியோடு தொடர்புடைய தாகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வெட்டிக் கொலை செய்து பலிகொடுக்கும் முறையில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது (2 சாமு 6:13; 1 அர 1:9.19.25; எசே 39:18). தகனப்பலி முறையிலும் ஒப்புக்கொடுக்கப் படுகிறது (எசா 1:11). மேலும் சமாதானப் பலியோடு தொடர்புடையதாகவும் இது வருகிறது (ஆமோ 5:22). ஒரே ஒரு விலங்கு மட்டுமே ஒப்புக்கொடுக்கப்படுவதன்று. மாறாக மற்றும் பல விலங்குகளோடு அட்டவ ணைப்படுத்தப்படுகிறது. எருமை (2 சாமு 6:12; 2 அர 1:19.25), செம்மறிக் கிடாய்கள் (எசா 1:11), ஆட்டுக்கிடாய்கள் (1 அர 1:9. 19.25), கன்றுகள் (1 அர 1:9) முதலியன. எசே 39:18-இல் 'கொழுத்த' என்பது பலிகொடுக் கப்படும் எல்லா மிருகங்களையும் பிரித்து எடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இச் சொல் எல்லா ஆடுமாடு முதலிய விலங்குக ளுக்கும் பொருந்துவதாக இருக்கும்போது, பலிகளுக்குத் தகுதியான மிருகங்களைக் குறிக்கத் தனிச் சிறப்பான முறையில் இது பயன்படுகிறது. ஒரே ஒரு இடத்தில்தான் இச்சொல் பலியோடு தொடர்பற்ற பகுதி யில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (எசா 11:6).

மேலும் செம்மறிக்கிடாய்கள், காளைகள், வெள்ளாடுகள் (சங் 66:15) முதலியவைகள்

தகனப் பலியோடும் தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றன. இவற்றில், பலிவிலங்கினம் முக்கியம் பெறவில்லை. அதன் தரம் வலியுறுத்தப்படுகிறது.

சவுலால் அழிக்காமல் விடப்பட்ட விலங்குகளில் ஆட்டுக்கிடாய்கள் (1 சாமு 15:9) இடம் பெறுகின்றன. இச்சொல் அழிக்காமல் விடப்பட்டதெல்லாம் நல்லவைகள் என்ற உண்மையைக் குறிப்பிடுகின்றது. முதற்கனியை விட மேலான இரண்டாவது கனிதான் 'கொழுத்த' ஒன்றாக இருக்கும். எனவே இதைத்தான் கொழுத்தவை என்ற சொல் குறிப்பிடுகிறது.

மத் 24:4-இல் காளைகளும் கொழுத்த விலங்குகளும் விருந்துக்கு ஏற்பாடாகியிருக்கிறது. இவ்விருந்துக்கும் வழிபாட்டுச் செயலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவ்வாறு இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்ற ஆடுமாடு முதலிய விலங்குகள் வழிபாட்டுக்கும், வழிபாட்டுக்குப் புறம்பான செயல்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. கொழுத்த பலிக்கு ஏற்ற விலங்கு, இஸ்ராயேல் தன் இறைவன் முன், அவ்விலங்கின் மிகச் சிறந்ததை, சிறந்த இஸ்ராயேலைப் பிரதிபலித்து அளிக்கிறது என்பதை உணர்த்துகிறது.

கொளுந்துகள் (Tenons)

மர வேலைப்பாடுகளில் அடுத்துள்ள பலகையில் உள்ள துவாரத்திற்கோ, இடைவெளிக்கோ சரியாகப் பொருந்துமாறு முதல் பலகையில் செய்யப்பட்ட நீட்டிப்பு அமைப்பாகும். திருஉறைவிடத்தின் மரச்சட்டங்கள் சட்டம் ஒன்றுக்கு இரு கொளுந்து வீதம் சட்டத்தோடு சட்டம் இணைக்கப்பட்டது (யாத் 26:17.19;36:22.24).

கொள்ளிக்கட்டை (Firebrand)

1. எசாயாவால் உருவகமாகப் பயன்படுத்தப்படுகிற சொல். இரு சினமிக்க அரசர்கள் ''புகையும் இரு கொள்ளிக்கட்டைகள்'' என ஏளனமாக விவரிக்கப்படுகின்றனர் (எசா 7:4). இஸ்ராயேல் நெருப்பிலிருந்து இழுக்கப்பட்ட ''கொள்ளிக் கட்டைபோல்'' இருக்கிறது (ஆமோ 4:11). பெரிய குரு யோசுவா ''அடுப்பிலிருந்து எடுத்த கொள்ளியாவார்'' (செக் 3:2).

2. பைத்தியக்கார மனிதனால் தூக்கியெறியப்பட்ட ஒரு பொருள் (பழ 26:18).

கொள்ளிவாய்ப் பாம்புகள் (Fiery Serpents)

இஸ்ராயேலர்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது பாம்புகள் அவர்களிடையே அனுப்பப்பட்டது. அதனால் பலர் இறந்தார்கள் (எண் 21:6.8; உப 8:15); பாம்புகள் கடித்ததால் ஏற்பட்ட பயங்கர நெருப்புப்போன்ற வீக்கத்தைக் குறிப்பிடலாம். எசா 14:29; 30:6-இல் வரும் பறக்கும் நாகம் புராணக்கதைத் தன்மையுடையதாகும். இச்சூழ்நிலையில், இராகாபு என்ற இதிகாச நாகவேதாளம் குறிக்கப்படுகிறது.

கொள்ளைக்கூட்டத்தார் (கொலை செய்பவர்) (Assassin)

பாலஸ்தீனத்தில் திட்டமிட்டு அரசியல் கொலைகள் புரியும் யூதர்களுக்கு உரோமையர்களால் வழங்கப்பட்ட பெயர் இது. இக்கொலைகள் திடீரென்று எதிர்பார்க்காத போது நடத்தப்பட்டன. உரோமை அதிகாரிகளின் கருத்துப்படி அத்தகைய கொலைகள் குற்றமாகும்.

யோசிப்பசு என்பவர் கி.பி. 66-70 ஆண்டில் நடந்த போரில் புரட்சி செய்த குழுவிற்கு இப்பெயரை அளிக்கிறார். ஆனால் அது அரசியல் கொலையில் ஈடுபட்ட ஒரே ஒரு குழுவைக் குறிக்கின்றதா அல்லது பல குழுக்களைக் குறிக்கின்றதா என்பது ஐயத்திற்குரியது. யோசிப்பசு இவர்களைக் 'கொள்ளையர்கள்' என்று கூறுகின்றார். இவர்கள்தான் முதலில் இவ்வாறு சட்டத்தை மீறிக் கொள்ளையடித்தனர் என்பது இவர் கருத்து. இவர்களின் பூர்வீகத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது கிரேனியு காலத்தில் நடந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்குத் தேசிய அளவில் நடந்த எதிர்ப்புச் சக்தியை

இவர்கள் சார்ந்தவர்கள் என்பது இவர் கருத்து. ''அந்நாளில் உரோமிற்கு ஒப்புதல் தெரிவித்த மக்களை எதிர்த்து, அவர்களைப் பகைவர்களாகவும், புற இனத்தவராகவும் கருதிச் சொத்துக்களைச் சூறையாடி, கால் நடைகளை வளைத்து, உடைமைகளைத் தீ வைத்தவர்கள் இவர்கள்''.

யோசிப்பசு இக்கொலையாளிகள் இறுதி வரை உரோமையரை எதிர்த்தனர் என்று கூறுகிறார். உரோமையர்களாலும் யூதேயா பாலைவனத்தில் மசாதா என்ற இடத்தில் இருந்த அவர்களின் அரணை கி.பி. 73-வரை அழிக்க முடியவில்லை. உரோமையர்கள் அவர்களது அரணை அழித்து நுழைந்த போது இக்கொலையாளிகள் கூட்டமாகச் சேர்ந்து தங்களைத்தாமே அழித்துக் கொண் டது தெரிந்தது. யோசிப்பசுகூட இச் செயலை நாட்டுப்பற்று, மற்றும் இறைவன் மீதும், அவரது சட்டத்தின் மீதும் உள்ள பற்றின் விளைவு என்கிறார். உரோமையர் பாலஸ்தீனைப் பிடித்த காலத்தில் இக் கொலையாளிகள் நாட்டுப்பற்று மிக்கவர்கள் என்ற எண்ணம் இருந்தது. இப்படிப் பார்க்கும் பொழுது அவர்களது நடவடிக்கை 'கொலை யாளி', 'கொள்ளைக்காரன்', மற்றும் வேத சாட்சிகள் போன்று இருந்ததாகத் தெரிகிறது.

அ.ப. 21:38-இல் 4000 கொள்ளைக் கூட்டத் தாரைப் பாலைவனத்திற்குக் கூட்டிச் சென்றது பவுலாக இருக்கலாம் எனப் படைத்தலைவன் நம்பினதாகத் தெரிகிறது.

கொள்ளைநோய் (Plague)

கொள்ளைநோய் என்பது அழிவை, சாவை அல்லது பெரிய தொந்தரவைத் தரக் கூடிய ஒரு கொடும் நோயைக் குறிக்கும் (எண் 14:37;16:47; லேவி 26:21; எண் 11:33;உப 28:59; எண் 16:46; யோசு 22:17; யாத் 11:1; 1 1 சாமு 6:4). இங்கே குறிப்பிட் டுள்ள வேதாகமக் குறிப்புகளின் எபிரேய மூல வார்த்தைகளை ஆராய்ந்தால், இவ் வார்த்தையின் பொருள் தெளிவுபடும். இத் தகைய கொள்ளைநோய் பல்வேறு சூழ்நிலை களில் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இந்த நோய் பாவிகளுக்கும் இறைவனுக்குக் கீழ்ப் படியாத மக்களுக்கும் இறைவன் தன் நீதியின்படி தரும் தண்டனை என்றே கருதப் பட்டது (1 சாமு 5-6).

1 சாமு 5-6-இல் பெலிஸ்தியர்கள், இஸ்ரா யேல் மக்களைத் தோற்கடித்து உடன்படிக் கையின் பேழையைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றவுடன் அவர்களில் பலர் இறக்கின்றனர் (1 சாமு 5:12). அம்மக்க ளிடையே கொடிய மூலக்கட்டிகள் எலியின் மூலம் பரவுகின்றது. கொடும் காய்ச்சல், சுரப்பிகள் வீக்கம் போன்றவைகள் அந்தக் கொள்ளைநோயின் சில அம்சங்கள். பெலிஸ்தியர்களின் குருக்களும் மந்திரவாதி களும் பெலிஸ்தியர்களின் பாவங்களுக்குப் பரிகாரமாகப் பலிகள் செலுத்தி அப் பேழையை அனுப்பி விடுங்கள் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது (1 சாமு 6:3). மோவாபிய ரின் கடவுளர்களை இஸ்ராயேல் மக்கள் வழிபட்டபோதும் இத்தகைய கொள்ளை நோய்கள் ஏற்பட்டதை நாம் காண்கிறோம் (எண் 25:9)

எலிகள் அசீரியர்களின் வில் நாண்களைக் கடித்துவிட்டதால் சனகெரிபின் படைக்குப் பெரும் அழிவு ஏற்பட்டது என எரோதாத் துஸ் குறிப்பிடுகிறார் (2 அர 19:35). எலிகள் அங்கு இருந்ததற்கு இது ஒரு சான்று. எலிக ளின் மூலம் ''பூபோனிக்'' கொள்ளைநோய் பரவி அவர் படை அழிந்திருக்கலாம். பொது வாகக் குளிரான தட்பவெப்ப நிலையில் ஏற்படும் நுரையீரல் சம்பந்தமான கொள் ளைநோய் அல்லது காலரா போன்ற நோய் ஏற்பட்டிருக்கலாம். கொள்ளைநோய் பழங் காலப் பாலஸ்தீனத்துக்கு உரித்தான ஒன்றாகும். காண்க. யாத்திரையில் கொள்ளைநோய்.

கொள்ளைப்பங்கு (Booty - கொள்ளையடிக் கப்பட்ட பொருட்கள்)

ஒரு நாட்டை வெற்றி கொண்டதும் அங் குள்ள விலை மதிப்புள்ள பொருட்களை எடுத்துக்கொள்வது பொதுவான பழக்கம். இவைகளில் ஒரு குறிப்பிட்ட பங்கு தெய்வத் திற்கென்று அர்ப்பணிக்கப்படும் (எண் 31:26 தொ). முகம்மது கட்டளைப்படி கொள்ளை

யடிக்கப்பட்ட பொருட்களில் 5-இல் ஒரு பகுதி அல்லாவுக்குச் செலுத்தப்பட வேண்டும்.

கொள்ளைப்பொருள் (Spoil)

சூறைப்பொருள்; போரில் வெற்றிக்குப் பின் எதிரியின் நாட்டில் கொள்ளையடித்த பொருள்; போரில் கைப்பற்றிய பொருட்கள்.

பழங்கால மேற்காசிய நாடுகளின் போர் விதிமுறைகளின்படி போரில் வெற்றிவாகை சூடியோர் எதிரிகளின் நாட்டைச் சூறையாடு தலைத் தங்களின் உரிமையாகக் கொண்டிருந் தனர். தோல்விகண்ட எதிரிகளுக்குச் சொந்த மான ஆடுமாடுகள் (உப 2:5; 3:7; 1 சாமு 14:32; 2 நாள் 15:11; எரே 49:32), ஆடை ஆபரணங்கள் (யோசு 7:21; நீதி 5:30;2 நாள் 20:25; 28:15), விலையுயர்ந்த உலோகங்கள், கற்கள் (யோசு 7:21;நீதி 8:24-25) மற்றும் எவையெல்லாம் எடுத்துச் செல்லக் கூடியன வாக இருந்தனவோ (2 நாள் 20:25) அவை அனைத்தையும் கொள்ளைப் பொருளாக எடுத்துச் செல்வது வழக்கமாக இருந்தது. எதிரிநாட்டுக் குழந்தைகள், பெண்டிரையும் (உப 20:14) தங்கள் நாட்டிற்குக் கொண்டு செல்வதும் வழக்கமாக இருந்தது. ஆனால் ஆண்கள் அனைவரும் கொல்லப்பட்டனர் என்று எண் 31:7.17 கூறுகின்றது. கொள்ளை யடிப்பது, போர்வீரனது மிகப்பெரிய இன்ப மாக இருந்தது (சங் 119:162; எசா 9:3)

கொள்ளைப் பொருளைப் பங்கிடுவதற் கான ஒருசில வரைமுறைகளும் எபிரேயர்க ளிடையே இருந்தன. பொதுவாகப் படைத் தலைவனுக்குத் தனிப்பங்கும், ஆலய வழிபா டுகளுக்கெனத் தனிப்பங்கும் அளிக்கப்படும் (நீதி 8:24-25). குருக்கள் பாரம்பரியப்படி (எண் 31) இஸ்ரயேலர் மிதியான் நாட்டின் மீது வெற்றிகொண்டு அந்நாட்டில் தாங்கள் கொள்ளையிட்ட பொருட்கள் அனைத்தை யும், பிடித்திருந்த மனிதவுயிர், மிருகவுயிர் அனைத்தையும், பங்கீடு செய்வதற்காக மோசேயிடமும் தலைமைக் குருவாகிய எல யாசரிடமும் கொண்டுவந்தனர். பெண் குழந் தைகள், கன்னிப் பெண்கள் தவிர மற்ற மனிதவுயிர்களையும் கொல்ல மோசே கட்ட ளையிட்டதையும் இந்த விவரிப்பு குறிப்பிடு கின்றது. பின்பு அக்கொள்ளைப் பொருள் இரண்டு சம பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி இஸ்ராயேல் மக்களுக்கிடை யேயும் மறுபகுதிபடைவீரர்களுக்கிடையே யும் பங்கிடப்பட்டது. கொள்ளைப் பொருட் களின் ஒரு சிறந்த பங்கு ஆலயத்திற்கும் (1 சாமு 21:9;31:9-10; 1 நாள் 26:27) அதன் தேவைகளுக்கும் அளிக்கப்பட்டது. மேலும் வீரர்களும் மக்களும் தங்கள் பங்கில் முறையே நூறில் ஒருபங்கும், ஐம்பதில் ஒரு பங்கும் ஆலயத்திற்குக் காணிக்கை செலுத்து வதும் வழக்கமாக இருந்தது.

ஒரு சில வேளைகளில் ஒரு நகரமோ அல்லது அந்நகர்வாழ் மக்களினமோ இறை வனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருப்பின் அந் நகரை வெற்றி கொண்டவர்கள் கொள்ளைப் பொருளை எடுத்துச் செல்வது தவறாகக் கருதப்பட்டது. ஆனால் இத்தகு வேளைகளில் ஆலயத்திற்குத் தேவைப்படும் விலை யுயர்ந்த உலோகங்கள், கற்கள், பொருட்கள் தவிர மற்றெல்லாப் பொருட்களும் தீக்கிரை யாக்கப்பட்டு அழிக்கப்படுவது வழக்கமாக இருந்தது. இம்முறையில் எரிகோ பட்டணம் தீக்கிரையாக்கப்பட்டு அழிந்தது (யோசு 6:17-10).

கொனனியா (CONANIAH - யாவே நிறுவி னார்)

1. ஒரு லேவியர். எசேக்கியா ஆட்சிக்கா லத்தில் முதல் பலன்களையும், பத்திலொரு பாகத்தையும் நேர்ச்சைப் பொருள்களையும் சேகரித்துப் பாதுகாப்பதைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டவர் (2 நாள் 31; 12-13).

2. யோசியா ஆட்சிக்காலத்தில் பாஸ்காப் பலிக்கெனக் காணிக்கை அளித்த லேவியத் தலைவர்களுள் ஒருவர் (2 நாள் 35:9).

கோ

கோகா (KOA)

கோகா இனத்தினர் பின்வரும் வரிசையில் குறிப்பிடப்படுகின்றனர்; பாபிலோனியர், கல்தேயர், பெக்கோத்து, சோவா, கோகா (எசே 23:23). பெக்கோத்து, தென்பாபிலோனில் வாழும் பக்காதை இனத்தாரைக் குறிப்பதால் 'சோவா' சுத்து மக்களையும் 'கோகா' குத்தி மக்களையும் குறிப்பதாகக் கருதப்படும். ஆனால் 'சோவா, கோகா' என்பவை அழகிய பேச்சு நடைக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கோகாத்து (KOHATH - கூட்டம், மக்களவை)

கோகாத்து லேவியின் இரண்டாவது மகன் (ஆதி 46:11; யாத் 6:16; எண் 3:17; 1 நாள் 6:16.38; 23:16). அம்ராம், இசார் (இட்சார்), கெபிரோன் (எபிரோன்), உசியேல் ஆகியோரின் தந்தை ஆவர் (யாத் 6:18; எண் 3:19; 1 நாள் 6:2;6:18;23:12). இவர்களுடைய தலைமையில்தான் கோகாத்து குடும்பத்தினர் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டனர். கோகாத்து தம் 133-ஆம் வயதில் இறந்தார் (யாத் 6:18). இவர் ஆரோன், மோசே, மிரியாம் ஆகியவர்களின் தாத்தா ஆவார் (யாத் 6:20; எண் 26:59). கோகாத்து புதல்வர்களின் குடம்பங்களே லேவியர் குடும்பங்களில் முக்கியமானதாக இருந்தன. இவர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் குருக்கள் பாரம்பரிய ஆசிரியர் யாத்திரை, நாட்டை வெல்லுதல், அரசாட்சி, மீண்டும் அமைத்தல் என்னும் நான்கு பகுதிகளாகத் தருகின்றார்.

1. யாத்திரையின்போது:- உடன்படிக்கைக் கூடாரம் பாலைவனத்தில் அமைக்கப்பட்ட போது கேர்சோனியர், கோகாத்தியர், மெராரி குடும்பத்தினர் ஆகியோர், அதைச் சுற்றி வாழ்ந்தனர். கோகாத்து குடும்பத்தினர் கூடாரத்தின் தெற்குப்புறத்தில் வாழ்ந்தனர். இவர்களில் ஒரு மாதமும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள ஆண்கள் 8600 (எண் 3:28); 30 முதல் 50 வரை வயதுள்ள ஆண்கள் 2750 இருந்தனர் (எண் 4:1-3.34-37). இவர்கள் பெட்டகம், கிளைவிளக்கு, பீடம், மேசை, புனிதப் பாத்திரங்கள், திரை (எண் 3: 29-31) முதலியவற்றைப் பாதுகாக்க வேண்டும். மிகவும் பரிசுத்தப் பொருட்களை இவர்கள் தொடக்கூடாது. தொட்டால் இறந்துவிடுவார்கள். பாளையம் பெயர்தலின்போது ஆரோனும் அவரது புதல்வர்களும் புனிதப் பொருட்களை மூடி அவற்றுக்குக் கழிகளைப் பொருத்துவார்கள். இதைக் கொண்டுதான் கோகாத்தியர்கள் சுமந்து செல்ல வேண்டும் (எண் 4:4-15.17-20; 7:9).

2. நாட்டை வென்றபோது:-
பாலஸ்தீனத்தை வென்றபோது ஆரோனின் வழிவந்த கோகாத்தின் புதல்வர்களுக்குப் பதின்மூன்று நகரங்களுக்குச் சீட்டு விழுந்தது. அதன்படி அவர்கள் யூதா, சிமியோன், பென்யமின் கோத்திரங்களிடமிருந்து 13 நகரங்களையும் பெற்றார்கள் (யோசு 21:4.9-19; 1 நாள் 6:54-80). கோகாத்தின் ஏனைய புதல்வர்கள் எப்பிராயிம், தாண், கோத்திரங்களிடமிருந்தும், மனாசேயின் பாதிக் கோத்திரத்திடமிருந்தும் 10 நகரங்களைப் பெற்றார்கள் (யோசு 21:5.20-26; 1 நாள் 6:61.67-70). இவ்வாறு கோகாத்தின் புதல்வர்கள் தெற்கு மற்றும் மத்திய பாலைவனத்தில் நிலங்களைப் பெற்றிருந்தனர்.

3. அரசாட்சிக் காலத்தில்:- தாவீது, கடவுளின் திருப்பேழைக்காக ஒரு தனி இடத்தைத் தயார் செய்து கூடாரத்தை அமைத்தபின், எருசலேமுக்குப் பேழையைத் தூக்கிவர, 120 கோகாத்தியர்கள் உரியேலின் தலைமையில் நியமித்தார் (1 நாள் 15:5). ''ஆண்டவரின் வீட்டில் பாடிப்புணிபுரிய'' இவர்களின் பிரதிநிதியாக ஏமான் நியமிக்கப்பட்டார் (6:33). யோசபாத்து, மோவாபியர் மற்றும் அம்மோனியர்களிடமிருந்து இஸ்ராயேல் மக்களை விடுவிக்கும்படி வேண்டும்போது கோகாத்தின் புதல்வர்கள் திருப்பணியாளர்களாக இருந்தனர் (2 நாள் 20:19). எசேக்கியா அரசன் (கி.மு. 725) வழிபாட்டு முறைகளத்

தூய்மையாக்கும்படி ஆணையிட்டபோது கோகாத்தின் புதல்வர்கள் மாகாத்தும் யோவேலும் இதில் பணிபுரிந்தனர் (2 நாள் 29:12). யோசியா கி.மு. 621-இல் ஆண்டவரின் ஆலயத்தைச் செப்பனிட்டபோது கோகாத்தின் புதல்வர்கள் செக்கரியாவும், மெசுல்லாமும் மேற்பார்வையாளர்களாகப் பணிபுரிந்தனர் (34:12).

4. நாடு மீண்டும் அமைக்கப்பட்டபோது:- பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு திருப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டபோது கோகாத்தின் புதல்வர்கள் சிலர் பிரசன்ன அப்பங்களைக் கண்காணிக்கவும், ஒய்வு நாளில் புது அப்பங்களைத் தயாரிக்கவும் நியமிக்கப்பட்டனர் (1 நாள் 9:32).

கோகு (GOG - தங்கத்தாலான விலையுயர்ந்த பொருள்)

ரூபன் கோத்திரத்தின், ஒரு குலப்பெயர் முதியவர். செமாயாவின் மகனும் சிமயின் தந்தையுமாவார் (1 நாள் 5:4).

கோகும் மாகோகும் (GOG AND MAGOG)

கோகு என்பவர் மேசேக்கு, தூபால் நாடுகளின் முதல் தலைவர். மாகோகு நாட்டிலிருந்து வந்தவர், அரசனுமாவர். அவர் எசே 38-39 அதிகாரங்களில் யாவேக்கு எதிராகப் போரிடுமாறு தீய சக்திகளை வழிநடத்துகின்றார். திருவெளி 20:8-இல் மாகோகு ஒருநாட்டைக் குறிக்கவில்லை. கோகுடன் சேர்ந்து அருமகதோன் போரில் பங்குபெற்ற உடன் குற்றவாளி ஆவார்.

கோகு என்பவரை வரலாற்றில் வாழ்ந்த ஏதாவது ஒரு தலைவனோடு அல்லது இராணுவ வீரரோடு தொடர்பு படுத்த அறிஞர் பலர் முயன்றுள்ளனர். ஆனால் முயற்சிகள் அனைத்தும் தெளிவான முடிவுக்கு வர வாய்ப்பளிக்கவில்லை. லீதியாவின் அரசராகிய கைகஸ் என்பவர் அசூர்பானிப்பாலின் பதிவேடுகளில் கூகூ என்று அழைக்கப்படுகின்றார். இவரைக் கோகுக்கு இணையாக ஒப்பிட்டுக்கூற எண்ணினர். ஆனால் இரண்டு பெயர்களின் உச்சரிப்பைப் பொறுத்த வரையில்தான் ஒற்றுமையிருக்கின்றதே ஒழிய மற்ற எந்தக் காரியங்களிலும் இவையிரண்டுக்குமிடையே ஒற்றுமையில்லை. மேலும் கோகு என்பவர் ஒளியாகிய இறைவனுக்கு எதிராக இருக்கும் இருளாகிய தீமையைப் பிரதிபலிக்கின்றார் என்று ஒரு சிலர் புராணக்கதைக் குறிப்புக்களை வைத்துக் கூறினர்.

இப்பெயரின் தோற்றம் எதுவாக இருந்தாலும் யாவேக்கு எதிராக எழுந்த உலகத்தின் முடிவை இது படம் பிடித்துக் காட்டுகின்றது என்பது தெளிவாகின்றது. பாரசீகம், கூசு, பூற்று, கோமேர், தோகர்மா, சேபா, தெதான், தர்சீசு போன்ற உலகத்திலுள்ள அரசாட்சிப் பகுதிகளை இது உள்ளடக்குகிறது. இவையனைத்தும் இறைவனின் அரசை எதிர்த்து எழுந்து இறுதியில் தோல்வியடையும். இப்படிப்பட்ட தாக்குதல் வடக்கிலிருந்துதான் தோன்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஏனென்றால் கடந்தகாலத்தில் அங்கிருந்துதான் ஏராளமான தாக்குதல்கள் உருவாகின. ஆனால் கடந்தகால அல்லது எதிர்கால வரலாற்றை நமக்கு அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது என்று எண்ணுதல் கூடாது. மாறாக நன்மைக்கும், தீமைக்கும் இடையே நடக்கும் போராட்டம் இறுதியாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

கோகுலா, ஒகுலா (HOGLAH - கவுதாரி)

மனாசே கோத்திரத்தில் செலோபுகாத்தின் ஐந்து புதல்விகளுள் ஒருத்தி (எண் 26:33; 27:1; 36:11; யோசு 17:3). இந்த ஐந்து புதல்விகளின் பெயர்களும் கானானிய நகர்களின் பெயர்களிலிருந்து வந்ததாக இருக்கலாம். எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமாரியா பாண்ட ஒடுகளில் கோகுலா என்ற பெயர் காணப்படுகிறது.

கோகெலேத்து (KOHELETH, QOHELETH)

திருவுரையாளர் நூலின் ஆசிரியரது எபிரேயப் புனைபெயர். இச்சொல் ''சபையைக் கூட்டுதல்'' என்ற பொருளுடைய ''கால்'' என்ற எபிரேயச் சொல்லின் பெண்பால் பெயரெச்சமாகும். இச்சொல் ஒருபதவி

யையோ, பதவியைக் கொண்டிருப்பவ ரையோ குறிக்கப் பயன்பட்டது. திருவுரை யாளர் நூலில் இச்சொல் பயன்படுத்தப்பட்டி ருக்கும் சூழ்நிலை (திருவுரை 1:1-2.12; 7:27; 12:8-10), இச்சொல் ஒரு தனிநபரின் பெய ரன்று, ஒரு பட்டத்தையே குறிக்கிறது என்று சுட்டுகிறது.

காண்க: திருவுரையாளர் நூல்

கோசா (KOSAH - அடைக்கலம்) - ஆள்.

மெராரி குடும்பத்தாரின் ஒரு லேவியன்; எருசலேமுக்குத் தாவீது கொணர்ந்த ஆண்ட வரின் திருப்பேழையின் கூடார வாயிற்காப் போரில் ஒருவன் (1 நாள் 16:38). வாயிற்காப் போர் பிரிவு விரிவுபடுத்தப்பட்டபோது, கோசாவும், அவருடைய 13 புதல்வர்களும், சகோதரர்களும் வாயிற்காப்பவர்கள் பிரி வில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். சல்ல கேத்து வாயிலின் மேற்புறம் காவல் காக்க இவர்களில் ஆறுபேர் நியமிக்கப்பட்டார்கள் (1 நாள் 26:10-19).

கோசா (HOSAH - அடைக்கலம்) - இடம்.

ஆசேருக்குக் கொடுக்கப்பட்ட பகுதியில் உள்ள ஓர் எல்லையோர நகர் (யோசு 19:29). விவிலியச் சூழ்நிலையில் 'தீர்' நகரத்துக்கு அருகில் இது இருந்திருக்கிறது. ஆனால் உறுதியான அடையாளம் காட்ட முடியாது. அநேகமாக, எகிப்திய, அசீரிய ஏடுகளின் ஊசுவாக, கோசா, தீருக்குத் தெற்கில் 4 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத்தேல் ரசி தியேவாக அடையாளம் காட்டப்படலாம்.

கோசாம் (COSAM - முன்கூட்டி அறிவிப்ப வன்)

இயேசுவின் மூதாதையர் ஒருவரின் பெயர் (லூக் 3:28).

கோசாய் (HOZAI - காட்சியாளர்)

2 நாள் 33:19-இன் எபிரேய மூலப்படிவத் தின்படி - அரசன் மனாசேயின் வாழ்க்கைக் குறிப்பை நூலில் எழுதி வைத்ததில், சில வசனங்களுக்கு மூல ஆசிரியர். ஓர் எபிரேய வாசகமும், எழுபது நூலும் ''காட்சியாளர்'' என்று கொண்டுள்ளன. இந்தக் கருத்துதான் பொதுவாக முதன்மைபெறுகிறது. இருப்பி னும் சில விளக்கவுரையாளர்கள் மாசரேட் டிக் வாசகத்தின் பெயர் அறியப்படாத இறை வாக்கினர் என்று எடுத்துக் கொள்கின்றனர். மூன்றாவது கருத்து எபிரேயப் பகுதியின் மெய்யெழுத்துக்களைத் திருத்தி வரிசைப் படுத்தி ''அவருடைய (அதாவது மனாசே யின்) காட்சியாளர்'' என்று பொருள் கொள் கிறது.

கோசான் (GOZAN)

வடமேற்கு மெசபொத்தாமியாவில் யூப்பி ரத்தீசுக்கு அருகில் காபோர் (ஆபோர்) ஆற் றங்கரையில் அமைந்த ஒரு நகரமும் மாவட் டமும் ஆகும். பழைய ஏற்பாட்டில் இந்த ஆறு கோசானின் ஆறு அல்லது கோசான் ஆறு என்றழைக்கப்படுகிறது (1 நாள் 5:26). கோசானும், தாலாமாயால் குறிப்பிடப்படும் கவுசானித்தும் ஒன்றாக இருக்கலாம்.

மூன்றாம் திகிலத்து பிலேசர் என்ற அசீரிய மன்னன் ரூபன், காது, யோர்தானுக்கு அப் பாலுள்ள மனசே ஆகிய இனத்தவரைக் கோசான் பகுதிக்கு நாடு கடத்தியிருந்தான் (2 நாள் 5:26). சமாரியாவின் வீழ்ச்சியோடு 5-ஆம் சல்மனேசர் அல்லது சார்கோன் மற்ற வட பகுதியினரையும் நாடு கடத்ினான் (2 அர 17:6;18:11). பிற்காலத்தில் சனகெரிபு என்ற அசீரிய மன்னன் யூதாவின் எசேக்கியா மன்னனிடம், கோசானில் அசீரியர்கள் பெற்ற வெற்றிகளைக் கூறிப் பெருமைப் பட்டுக் கொண்டான் (19:12;எசா 37:12).

காரனுக்குக் கிழக்கிலுள்ள, இக்காலத் தேல் கலாபு இந்நகரமாக இருக்கலாம்.

கோசு (COS)

எகியன் கடலின் காரியாக் கடற்கரைப்பக் கம் உள்ள ஒரு சிறு தீவு. இது கப்பல்கள் செல்லும் பாதையில் அமைந்திருந்ததால் செல்வச் செழிப்புடையதாய் இருந்தது. இது திராட்சைரசம், பட்டு ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றது. இது ஆசீர்வதிக்கப்பட்டவர் களின் தீவுகளில் ஒன்று என்று கருதப்பட்

டது. இங்கிருந்த மருத்துவப்பள்ளி புகழ் பெற்றது. அதில் கிப்போகிராத்து ஒரு அங்கத்தினராவார். இங்கு மருந்துகளின் கடவுளாகிய அஸ்கிலேபியுசுக்கு ஒரு புனித இடமிருந்தது. இது எகியன் பகுதியில் யூதர்களின் முக்கியமான இடமாக மாறியது. லூக்கியு என்ற உரோமை மந்திரி கி.மு. 130-ஆம் ஆண்டில் செய்த உடன்படிக்கையின்படி இந்நாட்டில் உள்ள யூதர்களோடு சமாதானம் செய்து கொண்டான் (கி.மு. 138; 1 மக் 15:23). பெரிய ஏரோது இந்தத் தீவை ஆதரித்தான். அவன் தன் மகனுக்கு இங்கு ஒரு சிலை எழுப்பினான். பவுல் தனது மூன்றாம் மறை பரப்பும் பயணத்தின் முடிவில் மிலேத்திலிருந்து பயணம் செய்தபோது இங்குத் தங்கினார் (அ.ப. 21:1)

கோகு (KOZ - முள்)

இவர் யூதா குலத்தைச் சேர்ந்தவர். ஆனுபு, சொபேபா ஆகியோரின் தந்தை (1 நாள் 4:8). இவர் ஒருவேளை அக்கோசு குருகுலத்தின் மூதாதையராக இருக்கலாம்.

கோசுபி (COZBI - இன்பநாட்டமுள்ள, செழிப்பான)

மிதியான் நாட்டுத் தலைவர்களில் ஒருவரான சூர் என்பவரின் மகள். சிம்ரி இவளைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். எனவே பினகாசு அவர்கள் இருவரையும் கொன்று வரவிருந்த கொள்ளை நோயைத் தடுத்தார் (எண் 25:6-15). வேசியான இந்தக் கோசுபி மோசேயைக்கூடத் தன் வசமாக்கினாள் என்று தால்மூது கருதுவதாகத் தெரிகிறது.

கோசேன் (GOSHEN)

1. எகிப்தில் நைல் நதிக் கழிமுகத்தில் ஒரு பகுதி. இங்குதான் யோசேப்பு யாக்கோபின் குடும்பங்களைத் தங்கச் செய்தார் (ஆதி 45:10; 46:28-47:6). இது வாடி துமிலாத்துக்கு மேற்கிலும் நைல்நதிக்குக் கிழக்கிலும் அமைந்திருந்தது. ஆனாலும் இதன் எல்லையைத் துல்லியமாகக் கொடுக்க முடியாது. இப்பகுதி யாக்கோபின் சந்ததியினருக்கு மேய்ச்சல் நிலமாகவும் (46:28-34;47:1) குடியேறும் பகுதியாகவும் கொடுக்கப்பட்டது. எகிப்தின் பிற பகுதிகளைத் தாக்கிய கேடுகள் இப்பகுதியைத் தாக்கவில்லை (யாத் 8:22; 9:4.26;10:23).

2. யோவாவால் கைப்பற்றப்பட்ட கானானின் ஒரு பகுதி (யோசு 10:41; 11:16). இது பாலஸ்தீனத்தின் தென்மேற்குப் பகுதியில் தாழ்ந்த மலைப்பகுதியில் அமைந்திருக்க வேண்டும். இது கெபிரோனுக்கும் (எபிரோனுக்கும்) நெகேபுக்கும் இடையில் அமைந்திருக்கலாம்.

3. யூதாவின் மலைப் பகுதியிலுள்ள ஒரு நகர் (யோசு 15:1). இது கெபிரோனுக்குத் (எபிரோன்) தென்மேற்கில் 19 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலச் சகரியே ஆக இருக்கலாம்.

கோஸ்பா (COZEBA - பொய்)

யூதேயாவைச் சேர்ந்த மலைநாடுகளில் ஓர் ஊர் (1 நாள் 4:22). தெக்கோவாவின் மேற்கே ஏல் அரூப் பக்கமுள்ள கிர்பெத்து எத்-தில்பி என்ற இடமாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. கோஸ்பா என்பது அக்சீபு (யோசு 15:44) அல்லது கெசீபு (ஆதி 38:5) என்ற இடங்களாக இருக்கலாம் என்று விவிலிய விளக்கவுரையாளர்கள் கருதுகின்றனர்.

கோடரி (AXE)

கைப்பிடி தாங்கிய ஒரு வெட்டுக்கருவி.

1. இது மரத்திலும், கல்லிலும் வேலை செய்யப் பயன்பட்டது.

2. வெட்டுகின்ற விளிம்பைக் கொண்ட போர்க் கருவியுமாகும். இதில் பலவகையுண்டு. கோடரி மனிதனால் கண்டு பிடிக்கப்பட்ட காலத்தால் மிக முந்திய கருவியாகும். இதன் தலைப்பகுதி உலோகம் கண்டுபிடிக்கப்படுமுன் எலும்பு, மரம், கல் போன்றவற்றால் செய்யப்பட்டிருந்தது.

இதன் அமைப்பு மற்றும் பணி பற்றி விவிலியத்தில் காணும் எபிரேய, கிரேக்கச் சொற்களினால் எதையும் தெளிவாகக் கூற

முடியாது. பொதுவாக இது மரம் வெட்டப் பயன்பட்டது.

2 சாமு 12:31;1 நாள் 10:3-இல் குறிக்கப் படும் கோடரி எவ்வாறு பயன்படுத்தப் பட்டது என்பது தெளிவாக இல்லை.

1 அர 6:7-இல் இக்கருவி கல்லில் வேலை செய்யப் பயன்பட்டது. ஆலயத்திற்காகக் கற்கள் தயாரிக்கப்படும்போது சம்மட்டி போன்ற இரும்புக் கருவிகளால் வரும் சப் தம் கேட்காமலிருக்க இக்கருவி பயன்படுத் தப்பட்டது. இதே சொல் கிகோன் ஓடையி லிருந்து சீலோவாம் குளத்திற்கு நீர் கொண்டு வரப் பாறையைக் குடைந்து கால்வாய் வெட்டப்பட்டது பற்றிய கல்வெட்டில் மூன்று முறை பயன்பட்டுள்ளது. இச் சூழ்நிலையில் இச்சொல் மண்வெட்டி, குந்தாலி போன்றவற்றைக் குறிக்கலாம்.

எரே 10:3-இல் இது தச்சன் கோடரி என்று கூறப்பட்டுள்ளது. மரத்தில் வேலை செய்ய இது பயன்பட்டது. கெசேர் என்ற இடத்தில் பல மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நீதி 9:4-இல் அபிமெலக்கு இக்கோடரி யைக் கொண்டு மரக்கிளையை வெட்டி செக்கேமின் கோட்டையைச் சுற்றி வைத்து அவனும் அவனைச் சார்ந்தவர்களும் தீயிட்ட னர். இது கோடரி ஒரு கருவியாகவும், ஆயுதமாகவும் பயன்பட்டது என்பதைச் சுட் டுகிறது. அழிவுக்கும் இதைப் பயன்படுத்து வதால் போரிலும் இதை ஆயுதமாகப் பயன் படுத்தினர் (சங் 74:5; எரே 46:22; 51:20; எசே 9:1-2).

இதைப் பயன்படுத்தும்போது இதன் பிடி கழன்றால் என்ன நிகழும் என்பதை மனிதக் கொலை செயல் பற்றிய சட்டத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது (உப 19:5). பிடி கழன்று நீரில் விழுந்த கோடரியை எலிசா மீட்டார் (2 அர 6:5).

கோட்டான் (IBIS)

இது ஒரு நீர்ப்பறவையாகும். ஆறுகளி லும் ஏரிகளிலும் கரை ஓரங்களில் காணப்பட் டுள்ளது. இவை விவிலியக் காலத்தில் இருந் திருந்தாலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலி ருந்து பாலஸ்தீனத்தில் காணப்படவில்லை. இது அசுத்தப் பறவைகளில் ஒன்றாகும் (லேவி 11:17).

பழங்கால எகிப்தில் இப்பறவை நன்கு அறியப்பட்டிருந்தது. அங்கு இது தோத்து என்ற தேவதைக்குப் புனிதமானதாகும். இவை நத்தை, நண்டு போன்றவற்றை உண்டு வாழ்ந்ததால், இஸ்ராயேல் மக்கள் இதை உணவாக ஏற்க மறுத்தனர்.

கோட்டை, கொத்தளங்கள் (BATTLEMENTS, CASTLE, CITADEL)

கோட்டை கொத்தளங்கள் ''காவல்கோபு ரம் முதல் அரண்சூழ்ந்த கோட்டைவரை'' (2 அர 17:9; 18:8) உள்ளடக்கிய பலவகைப் பட்டவையாகும். இவற்றைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. மொழிபெயர்ப்புகளும் பல சொற்களைப் பயன்படுத்துகின்றன.

பாதுகாப்பிற்கென நகரத்தினைச் சுற்றி (சங் 48:3.13) அல்லது அரண்மனையைச் சுற்றிக் (1 அர 16:18; 2 அர 15:25) கட்டப்பட் டது கோட்டையாகும். தாவீது எருசலே மைக் கைப்பற்றியபோது, முதன்முதலில் கோட்டையைப் பிடித்தார். பின் நகரினைக் கைப்பற்றினார் (2 சாமு 5:7.9; 1 நாள் 11:5.7).

அரண் என்று பொருள்தரும் எபிரேயச் சொல் கோட்டையால் சூழப்பட்ட கோபுரம் அல்லது கட்டடத்தைக் குறிக்கும் (சங் 122:7; எசா 34:13; ஆமோ 1:22; 2:2; எரே 6:5; புல 2:7; பழ 18:19). மக்கபேயர்கள் காலத்தில் எருசலேம் நகரக் கோட்டை சீமோனால் கைப் பற்றப்படும்வரை செலூக்கியர்களின் கோட் டையாக இருந்தது (கி.மு.142; 1 மக் 13:49-52). கி.பி. 70-இல் தீத்துவின் தலைமையில் சென்ற உரோமையர் படை ஏரோதுவின் ஆலயத் தோடு சேர்ந்த அந்தோனியாக் கோட் டையை வீழ்த்தியது.

நெகே 7:2-இல் வரும் ''அரண்மனைத் தலைவன்'' என்பது அநேகமாக நீதி 9:30;

1 அர 22:26; 2 அர 23:8-இல் வரும் ''நகர்த் தலைவன் (அல்லது ஆளுநன்)'' என்பதற்கு இணையானதாக இருக்கலாம். பாதுகாக்கப் பட்ட நகர்களின் கோட்டை, கொத்தளங்கள் செப் 1:16; 3:6-இல் குறிக்கப்படுகின்றன. இவற்றைக் குறிக்கும் எபிரேயச் சொல் உ.ச. 8:9-இல் ''வெள்ளி அரண்கள்'' என்று உருவக மாகப் பயன்படுகிறது.

கிபயாவில் தோண்டி எடுக்கப்பட்ட சவுல் அரசனின் சிறிய கோட்டை ஓர் எடுத்துக்காட் டாகும். அதன் காலத்தையும் இடத்தையும் நோக்கும்போது, அது கரடுமுரடானதாயி னும் வலிமை மிக்கதாகும். ஏரோதின் ''அந் தோனியாக்கோட்டை'' (அ.ப. 21:34) மற்றொரு எடுத்துக்காட்டு.

கோதாம், ஓதாம் (HOTHAM - முத்திரை மோதிரம்)

1. ஆசேர் வம்சத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பி னர். கெபேரின் (எபேர்) மகனும் பெரீயா வின் பேரனும் ஆவார் (1 நாள் 7:32). 7:35-இல் வரும் ஏலேம் இதே நபராகத்தான் தோன்றுகிறது.

2. அரோயேரியர். தாவீதின் ஆற்றல்மிக்க மனிதர்களுள் சாமா, எயியேல் ஆகியோரின் தந்தை (1 நாள் 11:44).

கோதிக் மொழிபெயர்ப்பு (விவிலியத் தின்) (GOTHIC VERSION)

இம்மொழி கிரேக்க மொழியிலிருந்து உரு வான ஒரு கிளை மொழி. இம்மொழி அக்காலத்தில், ஜெர்மனி, ருமேனியா, ஆஸ்ட்ரியா, ஹங்கேரி முதலிய நாடுகளில் பேசப்பட்டது. கோதிக் மொழியில், மொழி பெயர்க்கப்பட்ட விவிலியம் பலவிதச் சிறப்பு களுக்கு உரியதாகிறது. இதனை மொழி பெயர்ப்புச் செய்தவரின் பெயர் முதற் கொண்டு, இதனைப் பற்றிய பல விபரங்கள் விளக்கமாக நமக்குக் கிடைக்கின்றன. உல் பிலசு என்ற ஆயர், இம்மொழி பெயர்ப்பின் வாய்ப்பில், கோதிக் மொழிக்காகத் தனி எழுத்துக்களை உருவாக்கியிருக்கிறார். இவர் கி.பி. நான்காம் நூற்றாண்டின் மத்திய ஆண்டுகளில் (341) விவிலியத்தைக் கோதிக் மொழியில் மொழி பெயர்த்தார். இவர் செய்த மொழி ஆக்கத்தின் படிவங்கள், ஆறு பழஞ்சுவடிகளில் மட்டும் நமக்குக் கிடைக் கின்றன. இவையனைத்தும், உடைந்து குறைந்துபோன ஏடுகள். இவற்றில் மிகப் பழையது தொடக்ககால பைசாந்திய வாசக மாகும். இது சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்திருக்கிறது. ஆனால் பழைய இலத் தீன் வாசகத்தோடு கொண்டுள்ள ஒப்புமை, இது உல்பிலசுக்குப் பின்னும் கோதிக் கிறிஸ் தவர்கள் 348-இல் மேசியாவுக்கு விரட்டப் பட்ட பின்னும்தான் நிறைவு செய்யப்பட் டது என்று காட்டுகிறது. ஆனால் 5-ஆவது அல்லது 6-ஆவது நூற்றாண்டைச் சார்ந்த ஒரு நல்ல பழம் ஏட்டுத் தொகுப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இது வெள்ளிமணியேடு என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் கத்தரிப்பூ நிறம் கொண்ட தோல் ஏட்டில், வெள்ளி நீலம் கொண்ட மையால் இது எழுதப்பட்டுள்ளது. இதில் நான்கு நற்செய் தியிலிருந்தும் சில பகுதிகள் இடம் பெற் றுள்ளன.

பழைய ஏற்பாட்டைப் பொறுத்தவரை ஒரு சில துண்டுப் பழம் ஏடுகளே, இக் கோதிக் மொழிபெயர்ப்பில் கிடைத்துள்ளன. கீழ்க்காணும் வசனங்களைக் கொண்ட ஏடு கள் அவை. ஆதி 5:3-32; சங் 52:2-3; நெகே மியா நூலின் ஒருபகுதி. இந்தப் பழைய ஏற் பாட்டு மொழிபெயர்ப்பு லூசியன் என்ப வர் திருத்திய எழுபது நூலைப் பின்பற்றிச் செய்யப்பட்டதாகும்.

புதிய ஏற்பாட்டைப் பொறுத்தவரை ஏறக் குறைய எல்லாப் புத்தகங்களுக்கும் சான்றா கக் கோதிக் மொழிபெயர்ப்பின் பழம் ஏடு கள் நிறையக் கிடைத்துள்ளன. ஆனால் அப் போஸ்தலர் பணி, பேதுரு, யோவான், யூதா எழுதிய கடிதங்கள் (பொதுத் திருமுகங்கள்), திருவெளிப்பாடு ஆகிய புத்தகங்களின் வாச கங்கள், இம்மொழி பெயர்ப்பின் பழம் ஏடுகளில் இடம் பெறவில்லை. இம் மொழி பெயர்ப்பு தாள்களில் எழுதப்பட்டவிதம், பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு எழுதப் பட்ட முறையை ஒத்திருக்கிறது.

கோதுமை (WHEAT)

பல எபிரேய மூலச்சொற்கள் கோதுமை என்றும், தானியம் என்றும், தினை என்றும் வெவ்வேறு இடங்களில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. எப்பெயர் கொண்டு அழைக்கப்படினும் கோதுமை என்னும் தானியமானது உணவு தானியங்களுள் ஒரு முக்கியத் தானியமாகவும், புதிய கற்காலம் முதல் பயிரிடப்பட்டு வந்த ஒரு தானிய வகை என்றும் அறிய வருகிறோம்.

தாவரவியல் வல்லுநர்கள் இனக்கீற்றுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மூவகைக் கோதுமைகள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். 14 இனக்கீற்றுகளை உடைய எயின்கோன் வகை முதல்தரமான கோதுமை என்றும், 28 இனக்கீற்றுகள் உடைய எம்மர் வகையும், 42 இனக்கீற்றுகளை உடைய ஸ்பெல்ட் வகையும் முறையே இரண்டாம், மூன்றாம் தரக்கோதுமைவகைகள் என்றும் பிரித்துள்ளனர். சோகரி என்பாரின் கருத்துப்படி விவிலியம் குறிப்பிடும் கோதுமை இரண்டாம் தரத்தினது; 'எம்மர்' கோதுமை வகையைச் சேர்ந்ததாகும். சிறிய ஆசியாவிலும் அதன் வடக்குப் பகுதிகளிலும் ஸ்பெல்ட் வகை காணப்பட்டாலும் எகிப்திலும் அதன் தெற்குப் பகுதிகளிலும் எம்மர் வகைக் கோதுமையை அதிகமாகக் காணலாம்.

கோதுமை அறுவடைக் காலத்தைப்பற்றியும் (ஆதி 30:14; யாத் 34:22; நீதி 15:1) கோதுமையறுப்பின் முதற்பலனை ஆண்டவருக்குச் செலுத்தும் வாரங்களின் திருவிழாவைப் (யாத் 34:22; எண் 23:26-31) பற்றியும் பல குறிப்புகள் விவிலியத்தில் காணக்கிடக்கின்றன. வாரங்களின் திருவிழாவானது யூதர்களின் மூன்று முக்கியத் திருவிழாக்களுள் ஒன்றாகும். விவிலியத்தில் கோதுமை அறுவடையைப் பற்றியும் (ரூத் 2:23; 1 சாமு 6:13), கோதுமையைப் பிரித்தெடுப்பதைப் பற்றியும் (நீதி 6:11; 1 நாள் 21:20), கோதுமையைச் சுத்திகரிப்புச் செய்வது பற்றியும் (2 சாமு 4:6), கோதுமைப் பதர்களை நீக்குவதுபற்றியும் (மத் 3:12) குறிப்புகள் உள்ளன.

தீர் தீவுடன் செய்த வாணிபத்தில் கோதுமை முக்கிய இடம் வகித்ததை 1 அர 5:11; 2 நாள் 2:10:15; எசேக் 27:14; அ.ப. 12:20; திருவெளி 18:13 ஆகியவை குறிப்பிடுகின்றன. கோதுமை இறைவனுடைய அன்புக்கும், ஆதரவுக்கும் ஒரு அடையாளமாகவும் விவிலியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம் (சங் 80:16;146:14). சாபத்திற்கும் (யோபு 31:40; எரே 12:13), மணமகளின் அழகிற்கும் அடையாளமாயிற்று (உ.ச. 7:2). புதிய ஏற்பாட்டில் கோதுமை உவமைகளிலும் உருவகப் பொருளிலும் பயன்படுத்தப் பட்டுள்ளது (மத் 3:12; லூக் 3:17; மத் 13:25-30; லூக் 16:7). பவுலும் (1 கொரி 15:37) யோவானும் (யோவா 12:24) மனந்திரும்பிய அருள் வாழ்வை மண்ணில் விழுந்துமடிந்து புதிதாக முளைத்தெழும் கோதுமைமணியுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார்கள்.

புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருகிப்போன தானியவகைகள் சிலவற்றைக் கண்டெடுத்துள்ளனர். இக்கண்டுபிடிப்பு யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதி கோதுமை உற்பத்தியில் எவ்வளவு சிறந்திருந்தது என்பதனை விளக்குகிறது.

கோதேசு, ஓதேசு (HODESH - அமாவாசை)

பென்யமின் குலத்தவரான சகரயிமின் மனைவி (1 நாள் 8:9; ஆனால் இப்பகுதி பழுதுபட்டதாகும்).

கோணி, சாக்கு (SACK)

பல மேற்கோள்கள் இதைத் 'தானியம் அல்லது உணவை உள்ளடக்கி வைக்கப் பயன்படும் பைபோன்ற பொருள்' என்று குறிக்கின்றன. பெரும்பாலும், இது வெள்ளாட்டு உரோமத்தால் செய்யப்பட்ட சொரசொரப்பான துணியாக இருக்கும் (1 சாமு 9:7;2 அர 4:42). காண்க: சாக்கு உடை.

கோபம் (ANGER)

காண்க: கடுஞ்சினம், சினம்.

கோபா (CHOBA)

பாலஸ்தீனத்தின் வடபகுதியில் உள்ள பலகிராமங்களில் இதுவும் ஒன்று. ஒலபெரி

னேயின் கீழ் உள்ள அசீரியர்களின் படை யெடுப்புக்கு அஞ்சி மக்கள் இதன் கோட்டைக் குள் ஒன்று கூடினர் (யூதி 4:4). எதிரியான அசீரியர்களின் தலைவன் யூதித்தால் கொல் லப்பட்டதும்,பாலஸ்தினத்திலுள்ள, இஸ்ரா யேலர் அனைவரும் அவர்களைத் துரத்திச் சென்று கோபாவிலும், தமஸ்வுக்கு அப்பா லும் அவர்களைக் கொன்று அழித்தொழித்த னர் (15:4-5).

இக்கிராமம் எங்கு இருந்தது என்பதைத் தெளிவாகக் கூறமுடியாது. ஆயினும் பலர் பேசானிலிருந்து சமாரியர்களின் மலைநாடு களின் வழியாகச் செல்லுகின்ற முக்கியமான சாலையில் உள்ள ஏல்மெக்குபி என்ற இடம் இது என்று அடையாளம் காட்டுவர். இந்த இடம் பேசானுக்கும், தூபாசுக்கும் இடையே உள்ளது. ஆதி 14:15-இல் காணப்படு கின்ற தமஸ்குவின் வடக்கே உள்ள கோபா (ஓபா) என்ற இடத்தின் பெயரிலிருந்து இது வந்திருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

கோபா, ஓபா (HOBAH - மறைத்து வைக்கப் பட்ட)

தமஸ்குவைத் தலைநகரமாகக் கொண்டு விளங்கிய ஒரு நாடு. ஆதி 14:15-இன்படி ''தமஸ்குவின் இடப்பக்கத்தில்'' அதாவது ''தமஸ்குவுக்கு வடதிசையில்'' கோபா இருந்தது. இதுவரை, ஆபிரகாம் கெதர்ல கோமரையும் அவரது கூட்டணியையும் துரத் திச் சென்றார். கோபாவுக்கு (ஓபா) இடம் குறிப்பிடப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. உதாரணமாகத் தமஸ்குவுக்கு வட மேற்கே 96 கி.மீ. தொலைவில் உள்ள காபூன் அல்லது கோபாவைச் சிலர் குறிப்பிடுகி றார்கள். அமர்னா ஏடுகளின்படி 'உபே' தான் இந்தநாடு. அதன் தலைநகர் தமஸ்கு என்று சொல்லப்படுகிறது. கி. மு. 16-ஆம் நூற்றாண்டுக்குமுன் தமஸ்கு என்ற பெயரை யாரும் அறிந்திருக்கவில்லை. தம்சியீர்களின் குடியிருப்பு மையமாக வேறொரு நகர் விளங்கியிருக்கலாம். தமஸ்குவுக்குக் கிழக்கே 16 கி.மீ. தொலைவில் இருக்கும் தேல் ஏல்-சலிகியே குன்றுதான் இப்பகுதியில் பெரிய குன்றாகும். முற்காலத்தில் தலைநகர் இதன்மேல் இருந்திருக்க வாய்ப்பு இருப்ப தற்கு ஆதாரம் தருவதாக அமைந்திருக்கிறது. கோபா இவ்விடத்தின் பெயராக இருந்திருக் கலாம். தமஸ்கு தலைநகரானவுடன் இதனு டைய முக்கியத்துவத்தை இது இழந்துவிட் டிருக்கலாம். வரலாற்றுக்கு முற்காலத்துக்கு முன்பிருந்து இங்கு ஒரு குடியிருப்பு இருந் தது என்பதைத் தேல் ஏல்-சலிகியே காட்டு கிறது. பழைய பாபிலோனிய காலத்தில் கிழக்கி லிருந்து வரும் பகைவர்களுக்கு எதிராகக் கோட்டையும், பாதுகாப்பும் நிறைந்த ஒரு முக்கியமான நகரம் இங்கு இருந்தது.

கோபாபு, ஓபாபு (HOBAB அன்புக்குரியவர்)

கோபாபு மோசேயின் மாமன் ஆவார் (எண் 10:29; நீதி 4:11). மோசேயின் மாமனார் பெயர் பற்றி மாறுபடுகின்ற பாரம்பரியங் கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. கோபாபுவோடு மிதியான் நாட்டுக் குருவாகிய இத்திரோவும் (யாத் 3:1;18:1) இராவேலும் (யாத் 2:18) மோசேயின் மாமன்களாகக் குறிப் பிடப்படுகிறார்கள். எண் 10:29-இல் கோபாபு ஒரு மிதியான் நாட்டவராகவும் நீதி 4:11இல் கேனியராகவும் குறிக்கப்படுவதால் கோபா புவின் அடையாளம் பற்றி ஒன்றும் உறுதி யாகக் கூறமுடியாது. யாத் 2:18-இல் கோபாபு வின் பெயர்தான் குறிக்கப்பட்டிருக்கலாம். அப்படியிருப்பின் அந்த வசனத்தில் இரகு வேல் என்பது ஓர் இனக்குறிப்பாக இருக்க லாம். எழுபதுநூல் கையெழுத்துப்பிரதிக ளின் சில ஆதாரங்கள் நீதி 1:16, ஒருகாலத் தில் ''கேனியரான கோபாபு'' என்று இருந்தி ருக்கவேண்டும் என்று சுட்டுகின்றன.

பாலைவனத்தில் வழிகாட்டியாக இருந்து இஸ்ராயேலை வழிநடத்தும்படிகோபா புவை மோசே தூண்டினார். எண் 10:29-31. இப்படிச் செய்தாரா என்று கூறாவிட்டாலும், நீதி 1:16 அவர் வழிகாட்டியதை நினைவூட்ட விளைகிறது.

கோபு (GOB - தொட்டி)

இவ்விடத்தின் இருப்பிடம் தெரிய வில்லை. இங்குத் தாவீது பெலிஸ்தியர்களு

டன் இருமுறை போரிட்டார் (2 சாமு 21:18-19). 1 நாள் 20:4-இல் சொல்லப்படும் இணைக்கதையில் கோபுவுக்குப் பதிலாகக் கெசேர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே 2 சாமு 21:18-19 என்ற வாசகம், இதைப் பொருத்தமட்டிலும் தவறானதாக இருக்கலாம்.

கோபுரம் (TOWER)

விவிலியத் திருநாட்டில் கோபுரங்கள் பரவலாகக் காணப்பட்டன. நகர்களிலும், தோட்டங்களிலும், மற்றும் மேய்ச்சல் நிலங்களிலும் இவை கட்டப்பட்டன. இவை கற்கள் மற்றும் செங்கற்களால் பல உயரங்களில் கட்டப்பட்டன. இவை பாதுகாப்புக்காகவும், அடைக்கலத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டன. ஆதியிலே மனிதன் வானை முட்டுமளவுக்குக் கோபுரம் ஒன்றைக்கட்ட விரும்புகிறான் (ஆதி 11:4) 'கோபுரம்' என்னும் சொல் ''மிக்தால்'' என அழைக்கப்படுகிறது (2 அர 9: 17; எசா 2:15). பாதுகாக்கும் கோபுரமாக இறைவனை ஒப்புமைப்படுத்துகிறது விவிலியம் (2 சாமு 22:61). முற்றுகைக் கோபுரம் எனவும் (ஏசா 23:13) காவற் கோபுரம் எனவும் (32:14) பலவகைக் கோபுரங்கள் உண்டு. சில கோபுரங்களின் பெயர்களும் விவிலியத்தில் இடம் பெறுகின்றன. அவை தாவீதின் கோபுரம் (உ.ச. 4:4), ஏதேர் கோபுரம் (ஆதி 35:21), மந்தைக் கோபுரம் (மீக் 4:8), சூளைகளின் கோபுரம் (நெகே 3:11), லெபனோன் கோபுரம், நூற்றுவர் கோபுரம், பானுவேலின் கோபுரம், செக்கேமின் கோபுரம், இசிரியேலின் கோபுரம், தீர் கோபுரம், எருசலேம் கோபுரம் மற்றும் சிலோவாம் கோபுரம் என்பனவாம். ஊசியா மன்னன் (2 நாள் 26:9), யோத்தாம் அரசன் (2 நாள் 27:4), எசேக்கியா மன்னன் (2 நாள் 32:5) ஆகியோர் கோபுரங்களைக்கட்டினர். கோபுரங்கள், கடவுளின் பாதுகாக்கும் வல்லமைக்கு ஒப்பிடப்பட்டுக் கூறப்படுகின்றன (சங் 61:3). மேலும் மனிதனின் சக்தியையும் அவை எடுத்துக் காட்டுகின்றன (உ.ச. 4:4). பெண்ணின் அழகை வருணிக்கக் கோபுரம் உதாரணமாகக் கொள்ளப்படுகிறது (7:4; 8:10). தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், பற்பல புதிய கற்காலக் கோபுரங்களைத் தோண்டி எடுத்துள்ளனர். குறிப்பாக இவை எரிகோ, பெத்சான், மெகிதோ, இலாக்கிசு, மிஸ்பா சமாரியா போன்ற இடங்களில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

கோபுரங்கட்டுதல், அரசன் போர்தொடுத்தல் (PARABLE OF BUILDING A TOWER & MAKING WAR) (லூக் 14:25-35)

இந்த இரு உவமைகள் - ஒருவன் இயேசுவின் சீடனாயிருக்க அர்ப்பணிப்பு அவசியம் என உணர்த்துகின்றன; தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றை நினைத்துப் பார்க்காமல் செயலில் இறங்கினால் பின்னர் வருந்த வேண்டி வரும். கோபுரங்கட்டுதலிலே செலவைக் கணிக்க வேண்டும். இதே போன்று இறையரசிலே நுழையவும் விண்ணக இன்பத்தைச் சுவைக்கவும் ஒருவன் செய்ய வேண்டிய தியாகங்களை எண்ணிச் செயல்பட வேண்டும். உணர்ச்சிகளுக்கு அடிமையாகாதவனாய் உண்மை ஈடுபாட்டுடன் சீடன் வாழ வேண்டும். போருக்கு ஆயத்தமாகும் அரசன் போலச் சீடனும் தன்னையே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். துன்பதுயரங்களைக் கண்டு அஞ்சாமல் கடைசிவரை இயேசுவைப் பின்பற்றி வாழ்பவன் இறையரசைப் பெறுவான்.

கோப்திக்கு மொழி பெயர்ப்பு (விவிலியத்தின் - COPTIC VERSION)

கோப்திக்கு மொழி என்பது எகிப்திய மொழியின் பிற்கால வடிவம் ஆகும். கிறித்துவம் பரவிய காலத்திற்கு முன்னதாக, இம்மொழி, முற்கால எகிப்திய எழுத்து முறையில் எழுதப்பட்டது. இதில் எழுத்துக்கள், சித்திர எழுத்துமுறையில் எழுதப்பட்டன. அதாவது குறிக்கும் பொருளின் உருவத்தையே எழுத்துக்கள் பெற்றிருக்கும். ஆனால் கிறித்துவம் பரவிய காலங்களில், இம்மொழிக்குக் கிரேக்க மொழியின் எழுத்துக்களை எழுதப் பயன்படுத்தினர். இந்தக் கிரேக்க மொழி எழுத்துக்களோடு 7 பழைய எகிப்திய எழுத்துக்களையும் சேர்த்துக் கொண்டனர். காலப்போக்கில் இம் மொழியிலிருந்து பல துணை மொழிகள் பிரிந்து வளர்ந்தன.

இப்பல திரிபு மொழிகளின், 6 மொழிகளில் விவிலியத்தின் பழம் ஏடுகள் நமக்குச் சான்றாகக் கிடைத்துள்ளன. அம்மொழிகளின் பெயர்கள் பின் வருமாறு. (1) சகிதிக்கு. முதலில் இது தேபாயிக் என்று அழைக்கப்பட்டது. இது எகிப்தின் தென்பகுதியில் நைல் பள்ளத்தாக்கில் பேசப்பட்டுவந்த மொழி. (2) பொகையரிக்கு. இது முதலில் மெம்பிடிக் என்று அழைக்கப்பட்டது. இது எகிப்தின் வட பகுதியிலும், நைலின் கழிமுகப்பகுதியில் அலக்சாந்திரியா நகரப் பகுதிகளிலும் பேசப்பட்டது. (3) அக்மிமிக்கு. இதுவும் எகிப்தின் தென்பகுதியில் அக்மிம் என்ற இடத்தைச் சுற்றிப் பேசப்பட்டுவந்தது (4) துணை அக்மிமிக்கு. இது மேற்கூறப்பட்ட அக்மிமிக்கு மொ·ழியிலிருந்து சிறிதளவுமட்டும் வேறுபட்டது. இப்பிரிவு அஸ்யுத் என்ற இடத்திற்குத் தென் பகுதியில் பேசப்பட்டு வந்தது. (5) இடை எகிப்தியம். (6) ஃபாய்யுமிக்கு. இது முதலில் பஷ்முரிக் என்று அழைக்கப்பட்டது. இம்மொழி நைல் நதியின் மேற்குப் பகுதியில் பயன்படுத்தப்பட்டது.

இந்த ஆறு மொழிப்பிரிவுகளிலும் சகிதிக்கு, பொகையிரிக்கு என்ற இரண்டு பிரிவுகள், விவிலியம் மொழிபெயர்க்கப்பட்ட அளவில் முக்கியமானவை.

கி.பி. 3ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, சகிதிக்கு மொழிப்பிரிவில் புதிய ஏற்பாடு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பிறகு அடுத்த 100 ஆண்டுகளுக்குள்ளாக விவிலியத்தின் எல்லாப் புத்தகங்களும், இம்மொழிப்பிரிவில் (கி.பி. 270 -இலேயே) மொழி பெயர்க்கப்பட்டுவிட்டன. இவை ஓரிசனின் எழுபதுநூல் வாசகத்தை அடிப்படையாகக் கொண்டவை. தற்போது நமக்கு ஏராளமான, சகிதிக்கு விவிலியப் பழஞ் சுவடிகள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவைகள் ஒன்றுக்கொன்று மொழியாக்கத்தில் வேறுபடுகின்றன. இது சகிதிக்கு மொழியில், பலமுறை, பலரால் தனிப்பட்ட முறையில் விவிலியம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

பொகையிரிக்கு மொழிபெயர்ப்பு காலத்தால் பிந்தியது. கோப்திக் மொழியில் வழங்கி வந்த பல மொழி ·பெயர்ப்பிற்கெல்லாம் திருத்தம் அளித்து, மாற்று மொழி பெயர்ப்பாக இது அமைக்கப்பட்டது. இந்த மொழி பெயர்ப்பிலும் ஏராளமான பழஞ்சுவடிகள் நமக்குக் கிடைத்துள்ளன. ஆனால் அவையனைத்தும் பிற்காலத்தியவை. அதாவது கி.பி. 12 முதல் 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. ஆனால் இது 4ஆம் நூற்றாண்டிலேயே மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

கோப்திக்கு மொழி பெயர்ப்பிற்குப் பழைய ஆகமத்தின் எழுபதுநூல் என்ற கிரேக்க விவிலியத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

புதிய ஏற்பாட்டில், சகிதிக், பொகையிரிக் என்ற இரண்டு மொழி ஆக்கங்களும், அலக்சாந்திரிய நகரில் விளங்கிய பாரம்பரிய வாசகங்களுக்கு ஒத்திருக்கின்றன. சகிதிக், பொகையிரிக் மொழிபெயர்ப்புக்களைத் தவிர்த்து, துணை அக்மிமிக்கு மொழி பெயர்ப்பில் மட்டும்தான் ஒரே ஒரு முக்கியமான பழம் ஏடு நமக்குக் கிடைத்துள்ளது. இது யோவான் நற்செய்தியின் ஒரு பகுதியாகும். கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இது. ஆனால் மற்றக் கோப்திக்கு மொழி பெயர்ப்புக்களில் பழஞ்சுவடிகள் நமக்குக் கிடைக்கவில்லை. கோப்திக்கு மொழி பெயர்ப்பில் இன்னும் ஆழ்ந்து ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து வருகின்றனர்.

இவையாவும், வாசக ஆய்வுக்குக் குறிப்பாக எழுபதுநூல் தொகுப்பு ஆய்வுக்குப் பெரிதும் உதவியுள்ளன.

கோப்பு (KOPH)

கோப்பு என்பது எபிரேய நெடுங்கணக்கில் 19-ஆவது எழுத்தாகும். சங் 119-இல் 19-ஆவது பிரிவின் தலைப்பாக இவ்வெழுத்து உள்ளது. இப்பிரிவில் ஒவ்வொரு வரியும் இவ்வெழுத்தோடு தொடங்குகிறது.

கோபெர் மரம் (GOPHER WOOD)

இம்மரத்தினால் பெட்டகம் செய்ய வேண்டும் என்று நோவா கட்டளையிடப்பட்டார். இக்குறிப்பு ஆதி 6:14-இல் ''நன்கு இசையும் மரம்'' என்று மற்றொரு மொழி பெயர்ப்பு

கூறுகிறது. பிசின் பசையுள்ள மரத்தால் இப்படகு செய்யப்பட்டது என்று சிலர் கருதுவர். வேறு சிலர் குச்சிகளாலும் பனை ஓலைகளாலும் செய்யப்பட்டு நிலக்கீல் பூசப்பட்ட மெசபொத்தாமியப் படகு என்பது இச்சொல்லின் சொல்லிலக்கணம் என்பர். எதுவானாலும், இது தேவதாருமரம் போன்ற ஒன்றாகும். கப்பல் கட்டுதலில் இது பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது.

கோமாம், ஒமாம் (HOMAM - *அழிவு)*

ஏதோமில் உள்ள ஒரு கோரியர். லோத்தானின் மகனும் செயிரின் பேரனுமாவார் (1 நாள் 1:39). ஆதி 36:2-இல் இவரது பெயர் ஏமான் என்றுள்ளது. காண். ஏமான்-3.

கோமேதகம் (ONYX, SARDONYX)

நீலச் சாயலை உடைய வெண்ணிற மணிக்கல்.

பொன், வாசனைப் பொருட்களோடு இதுவும் கவிலா (அவிலா) நாட்டைச் சேர்ந்ததாகும் (ஆதி 2:12). இது ஏபோதுக்கும் மார்புப் பட்டைக்கும் வேண்டிய காணிக்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது (யாத் 25:7; 35:9.27). ஆரோனின் ஏபோதின் தோள்பட்டைகளில் பதிக்கப்பட்டிருந்த கற்களில் இதுவும் ஒன்று (28:9; 39:6). தீர்ப்புக்கூறும் மார்புப் பட்டையில் பதிப்பிக்கப்பட்ட கற்களில் இதுவும் ஒன்று (28:20;39:13). ஆண்டவரின் ஆலயத்தைக்கட்ட தாவீது சேர்த்து வைத்த பொருள்களில் இதுவும் ஒன்றாக இருந்தது (1 நாள் 29:2). ஞானத்தை மதிப்பீடு செய்ய இது பயன்படுத்தப்பட்டது (யோபு 28:16). கோமேதகத்திற்குப் பதிலாக எசே 28:13-இல் படிகப்பச்சை என்றும், யாத் 28:20-இல் பளிங்குக்கல் என்றும் சில வாசகங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தீர் நாட்டு அரசனின் மேலாடையில் பதிப்பிக்கப்பட்ட கற்களில் இதுவும் ஒன்று.

புதிய எருசலேம் நகரின் 5-ஆவது அடித்தளக் கல்லாகக் கோமேதகம் இருந்தது (திருவெளி 21:20).

கோமேர் (GOMER - *முடித்தல்)*

1. யாபேத்தின் (எபேத்தின்) மூத்த மகன். ஒரு மக்களினத்தின் குலப்பெயர் முதியவராக நாடுகளின் பட்டியலில் குறிக்கப்படுகிறார் (ஆதி 10:2-3; 1 நாள் 1:5-6). இவர்களின் பெயர் அக்காதிய கிமிர்ரா என்பதற்குச் சமமாகும். இவர்கள் சிமிரியர்கள் என்று அழைக்கப்பெறுகின்றனர். இவர்கள் ஒரு நாடோடி மக்கள்; கருங்கடலுக்கு வடக்கில் வாழ்ந்து வந்தனர். கி.மு.8-ஆம் நூற்றாண்டில் இவர்கள் தெற்கு நோக்கிப் புறப்பட்டுக் கப்பதோக்கியாவில் குடியேறினர். இவர்கள் லீதியா அரசை முடிவுக்குக் கொண்டுவந்தனர். எசே 38:6-இல் இவர்கள் யாபேத்தின் மற்ற மக்களாகிய மாகோகு, மேசேக்கு, தூபல் ஆகியோருடனும் காமின் மக்களாகிய கூசு, பூற்று ஆகியோருடனும் தொடர்புபடுத்தப்படுகின்றனர். இவர்கள் யாவரும் கோகுவின் படையைச் சேர்ந்தவர்கள்.

2. திப்லாயிமின் மகள். இறைவாக்கினர் ஓசேயாவின் மனைவி (ஓசே 1:3). இனப்பெருக்க வழிபாட்டோடு தொடர்புடைய ஒரு விலைமாதாக இருக்கலாம். இவளை மணக்க ஓசேயாவுக்கு யாவே கட்டளையிடுகிறார். திருமணத்தில் இவளுடைய பிரமாணிக்கமின்மை, இஸ்ராயேல் இறைவனுக்குப் பிரமாணிக்கமின்மையை எடுத்துக்காட்டும் ஓர் உவமையாக நாடகப்பாணியில் இறைவாக்கினரால் பயன்படுத்தப்படுகிறது.

கோயிம் (GOIIM - *நாடுகள்)*

1. மூன்று கிழக்கத்திய அரசர்களோடு சேர்ந்து திதால் அரசனால் நடத்தப்பட்டு, பள்ளத்தாக்கின் நகர்களைத்தாக்கிய மக்கள் (ஆதி 14:1.9). இவர்கள் வடபகுதியில் வாழ்ந்த செமித்தியர் அல்லாதவர்களாக இருக்கலாம். இத்திய அரச பெயராகிய துதாலியாஸ் என்பதற்கும் திதால் என்ற பெயருக்குமிடையேயுள்ள ஒற்றுமையைக் கொண்டு இம்மக்கள் இத்தியர்கள் என்று கருதப்படுவர்.

2. யோசு 12:23-இல் குறிப்பிடப்படுகின்ற மக்கள். இங்கு கோயிமின் (கலிலேயாவில் உள்ள) அரசன் யோசுவாவால் தோற்கடிக்கப் பட்டவருள் ஒருவர். இம்மக்கள் இடம் விட்டு இடம் பெயரும் குழுவாக இருக்கலாம். பெலிஸ்தியர்களுடன் தொடர்பு கொண்டவர்களாயும் இருக்கலாம். எழுபது

நூல் கலிலேயா என்பதையும் மாசரேட்டிக் வாசகம் கில்கால் என்பதையும் கொண்டுள் ளன. இங்கு அபேக்குக்கு வடக்கில் உள்ள கில்கால் குறிக்கப்படலாம். சிலர் இதை நீதி. 4:2இல் வரும் கரோசத்துகோயிமாக, (அரோசத்கோயிம்) அடையாளம் காட்டு கின்றனர்.

கோரகித்காது, ஓரகித்காது (HOR-HAGGI-DGAD - கித்காதின் குகை அல்லது பொந்து).

இஸ்ராயேல் பாலைவனத்தில் பாளையம் இறங்கித் தங்கிச் சென்ற ஓர் இடம். எண் 33:31-இல் மோசரோத்து, பென்யாக்கான், கோரகித்காது, யோற்று பாத்தா என்று பாளையம் இறங்கிய இடங்களை வரிசைப் படுத்துகிறது. ஆனால் உப 10:6-7 யாக்கான் புதல்வரைச் சேர்ந்த பேயரோத்து பென்-யாக்கான், மோசேரா, குத்கோதா, யோற்று பாத்தா என்று வரிசைப்படுத்துகிறது.

வாடி காதகெத்தோடு இவ்விடம் ஒன்று படுத்தப்படுகிறது. வாடி காதகெக் என்பது ஒரு நீரோடை. இது வாகிடி ஜெராபெ வழியா கப் பாய்கிறது, அரபா பகுதியில் உள்ள வாடி ஏல் யெயிபில் பாய்கிறது. ஆனால் இக்கருத்து, மொழியாராய்ச்சி அடிப்படை யில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

கோராகு (KORAH - வழுக்கையான)

1. இவர் எசாயுவின் மூன்றாம் மகன் (ஆதி 36:5.14; 1 நாள் 1:35). இவர் ஏதோமியரின் தலைவராக இருந்தார் (ஆதி 36:18).

2. இவர் எசாயுவின் பேரனும், எலீப்பா சின் மகனும் ஆவார். ஏதோமியரின் தலை வர்களில் ஒருவர் (ஆதி 36:16).

3. இவர் பாலைவனத்தில் நடந்த கல கத்தை முன்னின்று நடத்தியவர். எண் 16-இல் 3 கலகங்கள் இணைத்துப் பேசப்படு கின்றன. அவை: 1. யாவே, எலோயிம் பாரம்பரியங்களின்படி தாத்தன், அபிராம் இவர்களால் மோசேக்கு எதிராக எழுந்த கலகம் (எண் 16:1-2.12-15.25.26.27-32.33-34); 2. குருக்கள் பாரம்பரியத்தின்படி கோராகு என்பவனால் நடத்தப்பட்ட கலகம் (எண் 16:1-7. 18-24.35.41-50). 3. குருக்கள் பாரம்பரி யத்தில் திரும்பவும் கூறப்படும் கோராகு வின் கலகம் (16:7.7-11. 16-17.35.36-40). முதல் இரண்டு கலகங்களும் தனித்தனியாக எழுதப்பட்டவை என்றாலும், பின் இணைக் கப்பட்டன. மூன்றாவது பிற்காலத்தில் எழு தப்பட்டது.

குருக்கள் பாரம்பரியத்தில் கோராகு 250 மக்கள் தலைவர்களை லேவியர்களுக்கு எதி ராகக் கிளப்பிவிட்டார். மோசே கோராகு வையும், அவர் தோழர்களையும், சோத னைக்காக ஆண்டவர் சந்நிதிக்கு வரும்படி அழைத்தார். அவர்கள் தூபக்கலசங்களோடு அங்கு வந்தபோது வானின்று நெருப்புத் தோன்றிக் கலகக்காரர்களை அழித்துவிட் டது (எண் 16:35). மறுநாள், மோசேக்கு எதிராகவும் கோராகுவுக்குச் சார்பாகவும் பேசியவர்களை ஆண்டவர் அழிக்க இருந்த போது, மோசேயும் ஆரோனும் அவர்களுக் காக மன்றாடி அவர்களைக் காப்பாற்றினர் (எண் 16:41-50). இங்குக் கூறப்படும் கலகத் தில் கோராகுவும் அவர் தோழர்களும் லேவி யர்-அல்லாதவர்கள். சமயக்காரியங்களில் லேவியரின் உரிமைதான் இங்குப் பிரச்சி னையாகும். இந்நிகழ்ச்சியுரை, லேவியரின் முன்னுரிமையை உறுதிசெய்கிறது. ஆனால் குருக்கள் பாரம்பரியத்தில் இதே நிகழ்ச்சி திரும்பவும் கூறப்படும்போது குழப்பம் லேவியர்களுக்குள்ளேயே தோன்றியதாகக் கூறப்படுகிறது. இது ஆரோனுடைய குருத் துவ முன்னுரிமைக்கு எதிரானதாகும். இந்த இரண்டு கருத்துக்கள் உள் எதிர்ப்பால்தான் வழிபாட்டு முறையின் தலைமைப் பதவி யில் முன்னேற்றம் ஏற்பட்டது என்பதைச் சுட்டுகின்றன. மேலும், கோராகுவும் அவர் வழித்தோன்றல்களும் ஒரு காலத்தில் முக் கிய நிலையில் இருந்திருக்க வேண்டும் என் பதையும் சுட்டுகின்றன.

4. இவர் ஒரு லேவியர்; இட்சாரின் வம்சத் தவரும் கோகாத்தின் குடும்பத்தவரும் ஆவார் (யாத் 6:21; 1 நாள் 6:22.37). கோராகு வின் மக்கள், தெபோராவுக்கும் தாவீதுக்கும் இடைப்பட்ட காலத்தில் கெபிரோனில் (எபி ரோன்) வாழ்ந்த 3 அல்லது 4 லேவிய குருகுலக் குடும்பங்களில் ஒன்றாகும். ஒரு சமயத்தில் கோராகுவின் புதல்வர்களும்

ஆசாபும் ஆலய பாடற்குழுவில் இருந்தனர். எண் 26:11-இல் கோராகு நெருப்பினால் இறந்துபோக அவன் புதல்வர்கள் இறக்க வில்லை எனக் கூறப்படுகிறது. 2 நாள் 20:19-இல் கோராகுவின் புதல்வர்கள் கோகாத்தின் புதல்வர்களோடு சேர்த்துப் பேசப்படுகின்றனர். பிற்காலத்தில் கோராகின் புதல்வர்கள் வாயில் காப்போராகவும் காணிக்கை அப்பம் தயாரிப்போராகவும் விளங்கினர் (1 நாள் 9:19.31;26:1.19). பல சங்கீதங்கள் கோராகுவின் புதல்வர்கள் எழு தியதாகத் தலைப்பைக் கொண்டுள்ளன (சங் 42; 44-49; 84-85; 87-88).

5. இவர் கெபிரோனின் (எபிரோன்) புதல் வரில் ஒருவர் (1 நாள் 2:43). கோராகு ஒரு புவியியல் பெயராகவும் இருக்கலாம். இதுவே கெபிரோனின் அருகிலிருந்த யூதா வின் ஊர்களில் ஒன்றாகவும் இருக்கலாம். சிக்லாகு என்னும் இடத்தில் தாவீதோடு சேர்ந்து கொண்டவர்கள் இவ்வூரைச் சேர்ந்த வர்களாக இருக்கலாம் (12:6). இவர்கள் பென்யமின் குலத்தவராயின் அவர்கள் வேறு நகரத்திலிருந்துதான் வந்திருக்கவேண் டும்.

கோரே (KORE - கௌதாரி)

1. கோராகின் வழி வந்த ஒரு லேவியர். ஆலயத்தில் வாயிற்காப்போர்களான சல் லூம் (1 நாள் 9:19), மெசேலமியர் (26:1) ஆகியோரின் மூதாதையர்.

2. இவர் இம்னாவின் மகனும் ஒரு லேவி யரும் ஆவார் (2 நாள் 31:34). எசேக்கியா ஆட்சிக்காலத்தில் ஆலயத்தின் கிழக்கு வாயி லைக் காப்பவராகவும் ஆண்டவருக்கு ஒப் புக்கொடுக்கப்பட்ட காணிக்கைகளை மேற் பார்க்கவும் நியமிக்கப்பட்டார். இவரும் 1-இல் குறிக்கப்படுபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

கோரேபு, ஓரேபு மலை (HOREB MOUNT -பாலைவனம், பாழான பகுதி)

இறைவனின் மலை. சீனாய் என்றும் அழைக்கப்பட்டது. ஆய்வாளர்கள், கோரேபு என்ற பெயர் வரும் பகுதிகள், ஐந்நூலின் எலோகிம், உபாகமப் பாரம்பரி யங்களைச் சேர்ந்தவை என்பர்.

இங்குதான் மோசே எரியும் புதரில் இறைத் தோற்றத்தை அனுபவித்தார் (யாத் 3:1). இங்குதான் இறைவன் இஸ்ராயேலருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் நிபந்த னைகளை வெளிப்படுத்தினார் (உப 4:10.15;5:2; யாத் 19-20). இங்கிருந்துதான் இஸ்ராயேல் காதேசு பர்னேயாவை நோக்கிப் புறப்பட்டனர் (உப 1:2.6.19). பிற்காலத்தில் கோரேபு மலையில் தான் இறைவாக்கினர் எலியா இறைக்காட்சி கண்டார். சீரியாவிற்குக் கசாவேலை (அசாவேல்) அரசனாகவும், இஸ்ராயேலுக்கு ஏகூவை அரசனாகவும் அபி டேகம் செய்யவும், எலிசாவைத் தன் வழித் தோன்றலான இறைவாக்கினராக நியமிக்க வும் கட்டளை பெற்றார் (1 அர 19:8.11).

அறிஞர் சிலர் கோரேபு மலையைச் சீனாய் மலையிலிருந்து வேறுபட்டதாகக் கருதுகின் றனர். வேறுசிலர், இதைச் சீனாய்த் தீபகற்பத் திலுள்ள மலைத் தொடரின் பொதுப் பெய ராகக் கருதுகின்றனர்.

கோரேம், ஓரேம் (HOREM - அர்ப்பணிக்கப் பட்ட)

நப்தலி நாட்டில் ஓர் அரணுள்ள நகர் (யோசு 19:38). இப்பகுதி கலிலேயாவுக்கு வடக்கில் மலை நாட்டில் இருக்கிறதாக வாசகச் சூழ்நிலை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் அதனுடைய சரியான இருப்பிடம் அறியப்படவில்லை.

கோரி, ஓரி (HORI - குகைவாசி)

1. லோத்தானுக்குப் பிறந்த முதல் புதல்வ னும், எசாவின் வழித்தோன்றலும் ஆவார். ஏதோமில் கோரிய துணை இன முன்னோர் (ஆதி 36:22;1 நாள் 1:39).

2. சிமியோன் கோத்திரத்தின் சாபாற்றின் தந்தை (எண் 13:5).

கோரிக்கியா (GORGIAS)

மக்கபேயரை எதிர்த்துப் போரிட்ட நான் காம் அந்தியோக் எப்பிரானின் ஒரு படைத் தளபதி (1 மக் 3:38;2 மக் 8:9). இவருடைய

படைகள் எம்மாவுக்கு அருகில் மக்கபேய ரால் தோற்கடிக்கப்பட்டன (1 மக் 4:1-22). அசமோனியத் தளபதிகளில் இருவர் யோசேப் பும் அசரியாவும் யூதாவின் கட்டளைக்குப் பணியாது போர் தொடுத்தனர். கோரிக்கியா வால் தோற்கடிக்கப்பட்டனர் (1 மக் 5:58-61). கோரிக்கியா - இதுமேயாவின் ஆளுநராக இருந்தபோது அந்நியரைத் தன்னு டன் சேர்த்துக் கொண்டு பலமுறை யூதரோடு போர் செய்தார் (2 மக் 10:14). யூதா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார் (2 மக் 12:32-37).

கோரியர் (HORITES - குகைவாசிகள்)

1. மாசரேட்டிக்கு வாசகம் ஆரம்ப காலத்து மக்களைக் குறிக்கப்பயன்படுத்திய ஒரு பெயர். இந்நாடு பிறகு ஏதோமியர்க ளால் குடியேறப்பட்டது (ஆதி 14:6; உப 2:12.22). ஓர் இடத்தில் (ஆதி 36:2), மாச ரேட்டிக்கு வாசகம் 'கிவியர்' (இவ்வியர்) என்று கொண்டிருப்பது 'கோரியர்' என்ற சொல்லுக்குப் பதிலாக எழுதப்பட்ட தவறு ஆகும் (36:20).

2. ஆதி 34:2; யோசு 9:7-இல் எழுபது நூல் கிவியர்களுக்குப்பதிலாகக் கோரியர்கள் என்று கொண்டுள்ளது. மாசரேட்டிக்கு வாசகத்தின் இவ்விரண்டு பகுதிகளும் கோரியர்களி லிருந்து வேறுபட்ட, மத்திய பாலஸ்தீனத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றிப் பேசுகின்றன. நேர்மாறாக 'எழுபது நூல்' எசா 17:9-இல் 'கிவியர்கள்' என்று வாசிக்கிறது. அங்கே மாச ரேட்டிக்கு வாசகம் திரித்து, 'கோரியர்கள்' என்று தவறாகக் கொண்டிருக்கிறது. இங்குப் பேசப்படுகின்ற இடம் பாலஸ்தீனம். எனவே, முந்தைய ஏதோமிய கோரியர்களோடு இந்தக் கோரியர்-கிவியரைக் குழப்பக்கூடாது. எழு பது நூலில் இதுதோன்றுகிறது. இது முன் னாள் எபிரேய பாரம்பரியத்துக்குத் தெரியாத ஒன்றல்ல. இத்தகைய மேற்குக் கோரியர்கள் விவிலியத்துக்குப் புறம்பே உள்ள கூரியர்க ளோடு தொடர்புபடுத்தப்படவேண்டும். அங்கு உள்நாட்டு வழக்கிலே கிவியர்கள் என் றுதான் பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது.

மேலே சொன்ன கோரியர்கள் கூரியர்களி லிருந்து வேறுபட்டவர்கள் என்று பிரிப்பதற்கு இரண்டு தகுந்த காரணங்கள் இருக்கின்றன. அ) அவர்களுடைய சொந்தப் பெயர்கள் (ஆதி 36:20-30) கூரியர்களுடைய விதத்தில் அமை யவில்லை. ஆனால் செமித்திய அமைப் பைச் சேர்ந்தவைகளாக இருக்கின்றன. ஆ) ஏதோமில் அல்லது யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதியில் பொதுவாகக் கூரியர்கள் குடியேறி வாழ்ந்ததாகப் புதைபொருள் ஆராய்ச்சியில் எந்த ஓர் ஆதாரமும் இல்லை. எனவே 'கோரியர்' என்ற சொல்லின் இரு விதப் பயன்படுத்தல், தற்செயலாக இரண்டு வார்த்தைகளின் உச்சரிப்பு ஒலி ஒன்றாக இருப்பதிலிருந்து வந்திருக்க வேண்டும். மாசரேட்டிக்கு கோரியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது எபிரேயச் சொல் தோற் றத்தில் செமித்திய அமைப்பைக் கொண்டி ருக்கிறது. ஒருவேளை பாரம்பரியம் நெடுங் காலமாக விளக்கி வந்து கொண்டிருப்ப தைப்போலக் 'குகை-வாழ் மனிதர்களிலிருந்து' இச்சொல் தோன்றியிருக்கலாம். அதன் மாற்றுப் பயன்படுத்துதலில், இச்சொல் கூரி யர்கள் . காலம் வரை போகிறது. இரண்டு வகைப் பயன்படுத்தலிலிருந்து வேறுபாட் டைப் பாதுகாக்க வேண்டிய தேவைதான் கூரியர்களைச் சிறிது சிறிதாகக் 'கோரியர்கள்' என்று மாற்றிக் குறிப்பிடுவதற்கு இட்டுச் சென்றிருக்கும். பிறகு அதையும் நீக்கிவிட்டுக் 'கிவியர்' என்று அழைத்தது.

கோரைப்புல், நாணல்செடி (BULRUSH)

நீரோடையின் பக்கத்திலும், சேறுநிறைந்த பகுதிகளிலும் மிகவும் உயரமாக, நெருக்க மாக வளரக்கூடிய ஒருவகை நாணல் செடி. யாத் 2:3;எசா 18:2 ஆகிய பகுதிகளில் வரு கின்றவை இந்தப் பாபிரஸ் செடியிலிருந்து உண்டாக்கப்படுகின்ற கூடை அல்லது படகு என்பதைக் குறிக்கும்.

கோர்த்தினா (GORTYNA)

கிரேத்தாவின் மத்தியப் பகுதியில் இலத் தேயு ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஒரு நகரம். கடற்பகுதிக்குப் பல மைல்களுக்கு அப்பால் உள்ளது. மெட்டலும், லெபனா வும் இதன் துறைமுகங்கள். 1 மக் 15:23 கோர்த்தினா ஒன்று மட்டும் கிரேத்தாவின் நகரங்களில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது.

கி.மு. 139-ஐ ஒட்டி யூதர்களுக்குச் சார்பாக உரோமையர் கடிதம் பெற்ற நகரங்களில் இதுவும் ஒன்று. இது அப்போது அங்கு யூதர்கள் வாழ்ந்தனர் என்று காட்டுகிறது.

கோர்பான் *(CORBAN - காணிக்கை, நேர்ச்சைக்கடன்)*

யூதர்கள் நாடு கடத்தப்பட்ட பிறகு சமய காரியங்களுக்காக இறைவனுக்குச் செலுத்திய கொடையை இது குறிக்கின்றது. இந்த எபிரேயச்சொல், எசேக்கியேல் நூலிலும், பரிசுத்தத்தின் சட்டத்திலும் குருக்கள் சட்டத்திலும் எவ்வகைக் காணிக்கையையும் குறிக்கப் பயன்பட்டுள்ளது (லேவி 1:2; 22:27; 23:12; எண் 7:25; எசே 20:28; 40:43). முற்கால இலக்கியத்தில் இப்பெயர் காணப்படாததால், இப்பெயர் பிற்காலத்தில்தான் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது தெளிவாகிறது. ஒருவேளை எருசலேமே வழிபாட்டுக்கு ஊக்குவித்த குழுக்களிலிருந்துதான் இது தோன்றியிருக்க வேண்டும். பிந்தைய யூத சமயக்கோட்பாட்டில், இப்பெயரால் ஏதாவது ஒரு பொருள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால், அது முன்பின் பாராது செய்யப்பட்டாலும், எந்தப்பிற காரணத்திற்கும் பயன்படுத்தப்படமாட்டாது என்பதனை மிஷ்னா கூறுகிறது. இந்தச் சொல் இவ்வாறு கடினமாகப் பயன்படுத்தப்பட்ட அடிப்படையில்தான் மாற்கு நற்செய்தியில் இயேசு இதைக் கண்டனம் செய்கிறார் (மாற் 7:11 மத் 15:5).

கோர்மா, ஓர்மா *(HORMAH - பக்தி)*

தெற்கு யூதா நாட்டில் சிமியோன் வம்சத்தாருக்குக் கிடைத்த நகர்களில் ஒன்று. இது சிக்லாகு வட்டாரத்தில் இருந்தது (யோசு 15:30; 19:4; 1 நாள் 4:30). இப்பெயருக்கு இரட்டைப்பொருள் உண்டு. ஒன்று 'பெரிய புனிதம்'. மற்றொன்று 'முழுமையான அழிவு' (தேவதைக்குப்பலி கொடுத்ததால்). ஒரு கதை கூறுவது படி, இஸ்ராயேலர்களுடைய ஒற்றர்கள் திரும்பி வந்து,. இவர்களுடைய சந்ததி மேல் அழிவு அறிவிக்கப்பட்ட பிறகு, மனமொடிந்த நிலையில், பலனற்ற முறையில் மலைநாட்டைக் கைப்பற்ற முயன்றார்கள். ஆனால் கோர்மா வரையிலும் துரத்தி அடிக்கப்பட்டார்கள் (எண் 14:45; உப1:44). இந்தப் பகுதிகளில் சரியான இடத்தையோ, அக்காலக்கட்டத்தில் இதே பெயரில் கானானிய நகரையோ கட்டிக்காட்டக் கோர்மா காலமயக்கமாகப் பயன்பட்டிருக்கலாம். ஆனால் இன்னொரு குறிப்பு, இஸ்ராயேலர்கள் அராதுவின் அரசனின் சூறையாடலால் வெகுண்டு, அவர்களையும் அவர்களுடைய நகரங்களையும் அழித்து அவ்விடத்திற்குக் கோர்மா அதாவதுசபிக்கப்பட்ட ஊர் என்ற பெயரிட்டனர் என்று கூறுகிறது (எண் 21:3). கடைசியாக யூதா வம்சத்தார் சிமியோன் வம்சத்தாரோடு சேர்ந்து செபத்துநகரை அழித்து அவ்வூரின் பெயரைக் கோர்மா அல்லது சாபம் என்று மாற்றி வைத்தனர் என்று ஒரு கூற்று இருக்கிறது (நீதி 1:17). யோசுவா வென்ற அரசர்களில் இந்நகரைச் சேர்ந்த அரசனும் ஒருவன் ஆவான் (யோசு 12:14). ஆனால் இஸ்ராயேலர் மேற்குக் கானானில் வெற்றி பெற்ற நாடுகளின் மொத்த எண்ணிக்கையே இந்த அட்டவணையாகும். அமலேக்கியர்களைத் தோற்கடித்து அவர்களிடமிருந்து கொள்ளையடித்த பொருள்களைத் தாவீது பரிசுப் பொருட்களாக அனுப்பி வைத்த நகர்களில் இவும் ஒன்று. அதாவது அவர் நாடோடியாகத் திரிந்த போது இவர்கள் அடைக்கலம் தந்ததற்காக இப்பரிசுப் பொருட்களை அவர் அனுப்பி வைத்தார் (1 சாமு 30:30).

எண் 21-இல் கூறப்பட்டிருக்கும் இஸ்ரேலியத் தாக்குதலின் திசைக்கேற்பக் கோர்மா இருந்த இடம்பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. தாக்குதல் தெற்கிலிருந்து வந்திருந்தால் இவ்விடம் பெயேர் செபாவுக்குக் கிழக்கே 12 கி.மீ. தொலைவில் உள்ள 'தேல் ஏல் மில்' ஆக இருக்கவேண்டும். தென்மேற்காகச் சென்றிருந்தால் நகருக்கு வடமேற்கே 19 கி.மீ. தொலைவில் உள்ள 'தேல் எஸ் செரியா' வாக இருக்கவேண்டும்.

கோலயா *(KOLAIAH - யாவேயின் குரல்)*

1. பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட பின், எருசலேமில் வாழ்ந்த பென்யமின் குலத்தவர். சல்லூவின் மூதாதையர் (நெகே 11:7).

2. எரேமியாவின் எதிரியும் பொய்த்தீர்க்கதரிசியுமான ஆகாபுவின் தந்தை இவர் (எரே 29:21).

கோலா (KOLA)

கோலா யூதி 15:4-இல் குறிப்பிடப்படும் ஓர் இடமாகும். இதுவும், யோசு 15:51-இல் கூறப்படும் கோலோன் (ஓலோன்) என்பதும் ஒன்றாக இருக்கக்கூடும்.

கோலான் (GOLAN - சுற்றுப்பயணம்)

மனாசே வம்சத்தாரைச் சேர்ந்த பாசானில் உள்ள நகரம் கோலான் ஆகும். இந்நகரம் மோசேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அடைக்கல நகர்களில் ஒன்றாகும் (உப 4:43; யோசு 20:8). கேர்சோமியர்களுக்கு அளிக்கப்பட்ட லேவியர்களுடைய நகரங்களில் ஒன்றாகும் (யோசு 21:27; 1 நாள் 6:71).

கலிலேயாக் கடலுக்குக் கிழக்கில் 28 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலச் சகேம் ஏல்-யோலான் என்பதை இதற்கு அடையாளம் காட்டுகின்றனர் அறிஞர் சிலர். ஆனால் இது இந்நகரைக் கோலான் மாவட்டத்திற்குப் புறம்பாக்கும். பழைய ஏற்பாட்டில் இப்பகுதி கெசூரியர்களுடையதாகவும் மாக்காத்தியர்களுடையதாகவும், குறிக்கப்பட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது. பிற்காலத்தில் காலானிய என்றழைக்கப்பட்டது.

கோலியத்து (GOLIAH - நாடு கடத்தப்பட்டவன்)

இவன் பெலிஸ்திய நாட்டு வீரன். தாவீது இவனை ஏலா பள்ளத்தாக்கிலே நடந்த போரில் கொன்றார் (1 சாமு 17). பெலிஸ்தியர்களுக்குச் சேவை செய்து வந்த அந்நிய நாட்டு வீரர்களின் வழிவந்தவர்களில் ஒருவன். இவன் காத்தில் தங்கியிருந்தான் (2 சாமு 21:22; 1 நாள் 20:8). தாவீதுக்கும் கோலியத்துக்கும் நடந்த போராட்டம் பற்றி 1 சாமு 17-இல் வாசித்தறிக.

தாவீது பெலிஸ்தியனுடைய ஆயுதங்களை ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்தார் (1 சாமு 21:9). குரு அகிமெலக்கு, சவுலிடமிருந்து தப்பி ஓடிய தாவீதுக்குக் கோலியத்தினுடைய வாளைக் கொடுத்தார். பல சான்றுகள் தாவீதுதான் கோலியத்தைக் கொன்றார் என்று சொன்னாலும் (1 சாமு 17; 21:9; 22:10). பிற இடங்களில் இத்தீரச்செயல் எல்கானான் என்பவருக்கு உரியதாகவும் சொல்லப்படுகின்றது (2 சாமு 21:19). 1 நாள் 20:5 எல்கானான் கோலியத்தின் சகோதரன் இலகுமியைக் கொன்றதாகக் கூறும்போது, இது வேறுபட்ட பாரம்பரியங்களை ஒருமைப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சியாகத் தோன்றுகிறது. அறிஞர் சிலர் எல்கானான்தான், அரசராவதற்கு முந்திய தாவீதின் மூலப்பெயர் என்று கருதுகின்றனர். காண்க. எல்கானான்-1.

கோலோன் (HOLON - மணற்பாங்கான)

1. மலை மாவட்டமான தெபீரில் உள்ள, யூதா கோத்திரத்துக்குக் கிடைத்த ஊர் (யோசு 15:51) கோகாத்து வம்சத்தின் லேவியருக்கு ஒதுக்கப்பட்ட ஒரு நகர் (யோசு 21:15; காண் 1 நாள் 6:58). கெபிரோனுக்கு (எபிரோன்) வடமேற்கில் யாலாவுக்கு அருகில் 'கிர்பெத் அலின்' தான் கோலோன் என்று பொதுவாக அடையாளம் காட்டப்படுகிறது. அப்படியாயின் தெபீர் பகுதியில் இருந்திருப்பதைவிடப் பெத்சூர் (யோசு 15:58-59) பகுதியில் இருந்திருக்கவேண்டும்.

2. மோவாபு பீடபூமியில் உள்ள ஓர் ஊர். இது யகுசா, மேபத்து ஆகிய ஊர்களோடு குறிக்கப்படுகிறது (எரே 48:21). இது இருந்த இடம் தெரியவில்லை.

கோல், கைத்தடி (STAFF)

இச்சொல் கழி, கோல், நெடுங்கழி, கைப்பிரம்பு, ஊன்று கோல், போன்ற பல பொருட்களைக் குறிக்கும். ஆட்டிடையர்கள், வழிப்போக்கர்கள், வீரர்கள், காவலர்கள் மற்றும் பலர் தங்களுக்குத் துணையாக ஒரு கைத்தடியைப் பயன்படுத்துவது இன்று போல் அன்றும் பழக்கத்திலிருந்த வழக்கம். விவிலியத்தில் ''கைத்தடி'', ''கோல்'' என்னும் சொற்கள் சாதாரணப் பொருளில் மட்டுமல்லாது உருவகப் பொருளிலும் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளன (எசே 4:16; 5:16; 14:13).

யாத் 7:9தொ; எண் 17:20தொ-இல் காண்பது போல் மோசே, ஆரோனின் கோல்கள் எகிப்திய மந்திரவாதிகளின் கோல்களைப் போல மந்திரசக்தி நிறைந்தனவாக இருந்தன. மோசேயின் கோல் பாலைவனத்தில்

செங்கோலாகவும், போரின்போது இறைப்பிரசன்னத்தின் அடையாளமாகவும் இருந்ததை விவிலியம் தெரிவிக்கின்றது. ஒவ்வொரு கோத்திரமும் தங்கள் கோத்திரத்தின் பெயரைப் பதித்திருக்கும் ஒரு கோலைக் கொண்டிருந்தனர் என்பதற்கு எண் 17:17 சான்று பகர்ந்து நிற்கின்றது. 2 அர 4:29.31-இன் கூற்றுப்படி எலியாவின் கோல் நோய்தீர்க்கும் சக்தியுடையதாயிருந்தது.

ஆட்டிடையனுடைய கோலும் கைத்தடியும் ஆடுகளுக்குப் பாதுகாப்புத் தருகின்றன.

ஆண்டவருடைய ஊன்றுகோல் என்பது ஆண்டவரின் பிரசன்னத்திற்கும் சக்திக்கும் அடையாளமாக நிற்கின்றது (2 சாமு 22:19; சங் 18:18; எசா 3:1). ஆண்டவருடைய கோலும், கைத்தடியும் நீதித்தீர்ப்பின் கருவிகளாகவும் எசா 10:15;30:32-இல் பேசப்படுகின்றன. அசீரியாவை, இஸ்ராயேலுக்கு எதிராக ஆண்டவரின் தீர்ப்புக்கெனப் பயன்படும் கோலாகவும் தடியாகவும் எசா 10:15.24; (காண்க யோபு 9:34; சங் 2:9; எசா 9:4; எசே 20:37) உருவகமாகக் குறிப்பிடுகின்றது. வயது முதிர்ந்தவர்கள் தத்தம் கையில் கோல் வைத்திருப்பது பாதுகாப்பின் அடையாளமாகும் (செக் 8:4).

புதிய ஏற்பாட்டில் மத்தேயுவும் (10:10) லூக்காவும் (9:3) கிறிஸ்து தன் சீடர்களைப் பணிக்கென அனுப்புங்கால் கோலும் கைத்தடியும் கொண்டு செல்ல வேண்டாம் என்று கூறியதாக எழுதியுள்ளனர். மாற்கோ (6:8) கோலும் கைத்தடியும் கொண்டு செல்லும்படி அவர் கூறியதாகக் கூறுகின்றார். எபி 11:2-இல், யாக்கோபு யோசேப்பின் புதல்வர்களை ஆசீர்வதித்தபோது, தனது ஊன்றுகோலின் மீது சாய்ந்து கொண்டு இறைவனைத் தொழுதார் என்று கூறப்படுகிறது.

கோவா (GOAH - பசுவின் கதறல்)

எருசலேம் நகரின் சுற்றுப்புறத்தில் உள்ள காரேபு குன்றின் அருகில் உள்ள ஒரு பகுதியாகும். எரேமியாவின் எருசலேம் திரும்பவும் அழகுறக் கட்டப்படும் என்ற இறைவாக்குகளில் இப்பெயர் சொல்லப்பட்டிருக்கின்றது (எரே 31:39).

கோவேறு கழுதை (MULE)

கோவேறு கழுதை என்பது ஆண் கழுதையும் பெண் குதிரையும் இணைவதால் கிடைக்கும் கலப்பினம்.

கோவேறு கழுதையானது முதன் முதலில் தாவீதின் காலத்தில்தான் காணப்படுகின்றது (2 சாமு 13:29). இதற்குக் காரணம் கி.மு.1000 ஆண்டுக்குமுன் எபிரேயர் மற்றும் அவர்களைச்சுற்றி அயலாரிடையே குதிரை அரிதாகவே காணப்பட்டது. ''உன் கால்நடைகளை வேறுவகை விலங்குகளோடு பொலிய விடாதே" என்று (லேவி 19:19) சட்டம் தடுத்ததால், கோவேறு கழுதைகளைப் பிற இன மக்களிடமிருந்தே எபிரேயர் பெறக்கூடும்.

தீர் நாடு கோவேறு கழுதைகளைப் பெத்தொகர்மாவிலிருந்து (அதாவது அர்மேனியா அல்லது வடசீரியா) இறக்குமதி செய்தது. ஆகவே இஸ்ரேயலுக்குக் கோவேறு கழுதைகளை இறக்குமதி செய்த நாடுகளில் பெனிசியாவும் ஒன்றாகக் கருதப்படுகிறது (எசே 27:14).

கோவேறு கழுதைகள் கடிவாளத்தால் அடக்கப்பட்டன. இவை முதலில் பயணம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன (சங் 32:9). ஆனால் விவிலியத்தில் பெரும்பான்மையான குறிப்புகள் கோவேறு கழுதைகள் அரசர்கள், பிரபுக்களால் பயன்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றன (2 சாமு 13:29; 18:9; 1அர 10:25; 18:5). பொதிசுமப்பதற்காகக் கோவேறு கழுதைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன (2 அர 5:17; 1 நாள் 12:40). நாடுகடத்தலுக்குப்பின் யூதசமூகத்தில் 245 கோவேறு கழுதைகள் இருந்ததாக எஸ் 2:66-67 கூறுகின்றது.

கோனா (KONA)

இது யூதி 4:1-இல் குறிப்பிடப்படும் ஓர் இடமாகும். இவ்வூர் இருந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை.

கோனியா (CONIAH)

யோயாக்கினின் மற்றொரு பெயர். காண்க: யோயாக்கின்.

ச

***சகட்சிம** (SHAHAZUMAH - உச்சிநோக்கி)*

இது இசக்காரில் உள்ள ஓர் எல்லை நகரம் (யோசு 19:22). இந்த நகரத்தின் இடத்தைப் பற்றி எவ்வித நேரிடையான குறிப்பும் இல்லை. தேல் ஏல்-முகார்கசு என்ற குன்றை இதற்கு அடையாளம் காட்டுவர். இது தாபோர் மலைக்குக் கிழக்கு, தென்கிழக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இடைப்பட்ட மற்றும், இறுதி வெண்கலக் காலம், இரும்புக் காலம், பைசாந்தியர் காலம் ஆகியவற்றில் மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். இது மேல்மட்ட ஆராய்ச்சியின்போது கண்டு பிடிக்கப்பட்டது. இந்தப் பெயர் சகட்சு மற்றும் யம்மா என்ற இரு பெயர்களின் இணைப்பாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

***சகவான்** (ZAAVAN - அமைதி குலைந்த, நடுங்குகின்ற)*

இனத் தலைவனான ஏசேரின் (ஏட்சேர்) இரண்டாம் புதல்வர். ஏதோமிலிருந்த கோரியத் துணை இனம் ஒன்றின் மூதாதையர் (ஆதி 36:27; 1 நாள் 1:42).

***சகரயிம்** (SHAHARAIM - இரட்டை விடியல்)*

இவர் பென்யமின் குலத்தில் பிறந்தவர். இவருக்கு மூன்று மனைவிகள் உண்டு. ஆனால் இரண்டு மனைவிகளை அனுப்பி விட்டார். பிள்ளைகள் பலர் உண்டு (1 நாள் 8:8).

***சகோதரன்** (BROTHER)*

I. சகோதரர்கள் என்ற சொல்லானது மிகக் குறுகிய பொருளில், ஒரே உதரத்தில் உருவானவர்களைக் குறிப்பிடுகிறது (ஆதி 4:2). ஆனால், பெரும்பான்மையான மொழிகளில் உள்ளது போன்று எபிரேய மொழியில் இச்சொல்லானது விரிவுபடுத்தப்பட்டு ஒரே குடும்பம் (ஆதி 13:8; லேவி 10:4; மாற் 6:3) அல்லது அதே இனம் (2 சாமு 19:13) அதே மக்கள் (உப 25:3; நீதி1:3) ஆகியோரின் உறுப்பினர்களுக்கும் கூறப்படுகிறது. இது இவர்களை அன்னியர்களிடமிருந்து வேறு படுத்துகிறது (உப 1:16; 15:2-3). இறுதியாக, ஏதோம் மற்றும் இஸ்ராயேல் போன்று ஒரே முன்னோரிடமிருந்து வழித் தோன்றிய மக்களைக் குறிப்பிடுகிறது (உப 2:4; ஆமோ 1:11). ஊனுடலை அடிப்படையாகக் கொண்ட இந்தச் சகோதரத்துவத்துடன் விவிலியமானது ஆன்மீக அடிப்படைத் தொடர்புடைய மற்றொரு சகோதரத்துவத்தையும் பற்றிப் பேசுகிறது. இச்சகோதரத்துவமானது விசுவாசம் (அ.ப. 2:29), இரக்கம் (2 சாமு 1:26), ஒத்த பணி (2 நாள் 31:15; 2 அர 9:2), ஏற்றுகொள்ளப்பட்ட உடன்படிக்கை (ஆமோ 1:9; 1 அர 20:32; 1 மக் 12:10) ஆகியவற்றுடன் அறிமுகமாகிறது.

இச்சொல் இத்தகைய உருவக முறையில் பயன்படுத்தப்படுவது மனித சகோதரத்துவம் அதனுடைய இயல்பான அடித்தளத்தை உருவாக்கினாலும், சாதாரண இரத்த உறவிற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டதன்று என்பதைக் காட்டுகிறது. வெளிப்பாடானது அனைத்து மனிதரையும் சகோதரராக்குகின்ற ''இயற்கையினுடைய சமுதாயத்தின்'' மீதான மெய்யியல் சிந்தனையினின்று தொடங்குவதில்லை. உலகளாவிய சகோதரத்துவத்தை நிராகரிப்பதாக இதற்குப் பொருளல்ல. ஆனால், கிறிஸ்துவில் இதனை நாடாத வரையில் இதுநிறைவேற முடியாதது என்பதையும், அதனுடைய முயற்சி ஏமாற்றத்தில் முடியக்கூடியது என்பதையும் அறிந்திருப்பதுவே இதற்குக் காரணம். மேலும் தொடக்க சகோதர சமுதாயங்களாகிய குடும்பம், மக்கள், சமயம் போன்றவற்றில் பழைய ஏற்பாடு எதிர்நோக்குகின்ற அமைப்பு இதுவே. திருச்சபையின் சமுதாயத்தில் புதிய ஏற்பாடு நிறைவேற்றத் தொடங்குவது இதுவே.

II. பழைய ஏற்பாடு:-

உலகளாவிய சகோதரத்துவத்தை நோக்கி:-

1. தொடக்கங்கள்:- ''ஒரே மூலத்திலிருந்து'' மனித இனத்தைப் படைப்பதில் (அ.ப. 17:26; ஆதி 1-2), ஆதாமிலான சகோதரத்துவத்தின் கனவை மனிதரின் இதயத்தில் இறைவன் அமைத்தார். ஆனால், இக்கனவானது நீண்ட வழிப்பயணம்வரை உண்மையாகவில்லை. தொடக்கக் கட்டமாக ஆதாமின் பிள்ளைகளுடைய வரலாறானது உடைந்துபோன சகோதரத்துவம் ஆகும். ஆபேலின் மீது கொண்ட பொறாமையால், காயின் அவரைக் கொல்கிறார். தனது சகோதரன் எங்குள்ளான் என்பதை அறியவும் அவர் விரும்பவில்லை (ஆதி 4:9). ஆதாமின் நாள் முதல் மனுகுலமானது பாவம் நிறைந்ததாய் உள்ளது. மூல மனித நன்மைத்தனத்திற்குப் பின்னால் வீணாகத் திரையிட்டு மறைக்க நாடுகின்ற மனிதருடைய வெறுப்பின் முகத்தோற்றத்தின் முகமூடியானது காயினுடன் கிழிக்கப்படுகிறது. பாவமானது தனது இதயத்தின் கதவைத் தட்டுகிறது என்பதை மனிதன் உணர வேண்டும் (ஆதி 4:7). அதனுடைய ஆதிக்கத்திற்கு உட்பட விரும்பாவிடில், அவன் அதன் மீதுவெற்றி கொள்ள வேண்டும்.

2. உடன்படிக்கையில் சகோதரத்துவம்:- சகோதரத்துவத்தின் வெற்றியைக் கிறிஸ்து உறுதிப்படுத்துவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சகோதரத்துவத்தில் நீண்ட பயிற்சிக்காலத்தைக் கொண்டிருப்பர். எல்லா மனிதரிடையிலும் ஒரே நேரத்தில் சகோதரத்துவம் இருப்பதில்லை. ஆனால், அதே இறைவன் மீதான விசுவாசத்தினாலும், அதே உடன்படிக்கையின் மூலமாகவும், ஆபிரகாமின் பிள்ளைகளிடையே சகோதரத்துவம் இருந்தது. புனிதத்தின் சட்டம் அளித்த மாதிரி வடிவம் இதுவே: ''உன் சகோதரனைப் பகைக்காதே.. உன் அயலானுக்கும் அன்பு செய்'' (லேவி 19:17-18). விவாதமோ, வன்மமோ, பழியோ எதுவும் இருக்கக்கூடாது. இனவிருத்தியின் அத்யாவசியப் பணிக்கென, லேவியர் சட்டம் அளிக்கும் நேரடி உதவியாகும் இது. ஒருவன் குழந்தையின்றி இறந்தால் அவனது நெருங்கிய உறவினரொருவர் ''தனது சகோதரனுக்கென வாரிசை உருவாக்க வேண்டும்'' (உப 25:5-10; ஆதி 38:8.26). மூதாதையரின் மரபுகள் இந்தச் சகோதரத்துவத்தின் அழகிய உதாரணங்களை அளிக்கின்றன: ஆபிரகாமும் லோத்தும் வாக்குவாதத்தை விட்டுவிடுகின்றனர் (ஆதி 13:8). யாக்கோபு ஏசாவுடன் சமாதானம் செய்து கொள்கிறார் (33:4). யோசேப்பு தனது சகோதரர்களை மன்னிக்கிறார் (45:1-8).

ஆனால், இம்மாதிரி செயல்படுத்தப்படும் போது, மனித இதயங்களின் கடினத்தன்மையை இடைவிடாமல் சந்திக்க வேண்டியுள்ளது. இறைவாக்கினர்கள் காண்பது போல இஸ்ராயேல் சமூகமானது சகோதரத்துவத்தினின்று தொலைவில் விலகி இருந்தது. அங்குச் சகோதர அன்பே இல்லை (ஓசே 4:2); ''ஒருவனும் தனது சகோதரனை விட்டுவைக்கவில்லை'' (எசா 9:18). அநீதி உலகளாவியதாக உள்ளது. நம்பிக்கை இயலாததாக உள்ளது (மீக் 7:2-6); எவருமே சகோதரனை நம்ப முடியாது; ஏனெனில் ஒவ்வொருவரும் ஒரு தீமையிலிருந்து மற்றொரு தீமைக்கு முன்னேறுகிறார்கள் (எரே 9:3). எரேமியா தனது சகோதரர்களாலேயே துன்புறுத்தப்படுகிறார் (எரே 11-18; 12:6; சங் 69:9; யோபு 6:15). கடினமனதுடைய இவ்வுலகிற்கு இறைவாக்கினர்கள் நீதி, இரக்கம், கனிவு ஆகியவற்றின் கோரிக்கைகளை நினைவுபடுத்துகின்றனர் (செக் 7:9-10). ஆபிரகாமின் வழித்தோன்றல்களாக இருப்பதை விடப் படைத்தவரைப் பொதுவான தந்தையாகக் கொண்டிருக்கும் நிலை (மலா 2:10), உடன்படிக்கையின் உறுப்பினர்கள் அனைவரின்மீது உண்மையான சகோதரத்துவத்தைப் பொழிவதில்லையா (எசா 63:16)? அவ்வாறே ஞானிகளும் உண்மையான சகோதரத்துவத்தை உயர்வாகப் புகழ்கின்றனர். தனது சகோதரர்களால் கைவிடப்படுவதைவிடத்

துன்பமானது வேறெதுவுமில்லை (பழ 19:7; யோபு 19:13). ஆனால் உண்மையான சகோதரன் துன்பங்களிலும் அன்பு செய்வான் (பழ 17:17). ''சகோதரனால் உதவி பெறுகிற சகோதரன் வலுப்பெற்ற நகரம் போல'' இருப்பதன் காரணமாகப் (பழ 18:19), பொன்னுக்காக அவனைப் பண்டம் மாற்ற முடியாது (சீரா 7:18). இறைவன் சச்சரவுகளை வெறுத்து அமைதியை நேசிக்கிறார் (சீரா 25:1). ''சகோதரர் ஒருமித்துவாழ்வது எத்துணை இனியது'' (சங் 133:1).

3. முறிவுற்ற சகோரர்களை ஒப்புரவாக்குதல்:- ஆயினும் இறை சட்டத்தின் கொடையானது சகோதரத்துவ உலகை மீண்டும் அமைக்கப் போதுமானதாக இல்லை. மனித சகோதரத்துவமானது எல்லா நிலைகளிலும் தோல்வியடைந்துள்ளது. தனிப்பட்ட சச்சரவுகளுக்கு அப்பாற்பட்டு இனங்களின் இணைப்பு அழிவுறுவதை இஸ்ராயேல் காண்கிறது (1 அர 12:24). அதன்விளைவு பிரிவும் சகோதரர்களுக்கிடையே போர்களுமே (எசா 7:1-9). புற அளவில் அருகிலிருந்து தனது சகோதர நாடுகளுடன் அது போர்தொடுத்தது. உதாரணமாக அன்பு செய்யக் கடமைப்பட்டிருந்த ஏதோமோடு போர் தொடுத்தது (உப 23:8); ஏதோமும் தன்னைப் பொறுத்த அளவில் இஸ்ராயேல் மீதும் இரக்கங்காட்டவில்லை (ஆமோ 1:11; எண் 20:14-21). தீவிர விரோதத்தினால் ஒன்றுக்கொன்று விரோதம் பாராட்டிய, தூரத்திலுள்ள நாடுகளைப்பற்றி இனி என்னதான் கூறமுடியும்? இக்குழு பாவத்தை எதிர் கொள்ளும்போது இறைவாக்கினர்கள் இறைவனை நோக்கித் திரும்புகின்றனர். இறுதிக்கால மீட்பினைக் கொண்டுவரும் வேளையில் அவரால் மட்டுமே மனித சகோதரத்துவத்தை மீண்டும் உருவாக்க முடியும். அப்போது யூதாவையும் இஸ்ராயேலையும் ஒரே மக்களாக இறைவன் ஒன்றிணைப்பார் (ஒசே 2:2-3.25). ஏனெனில் அப்போது யூதாவும் எப்பிராயிமும் ஒருவர் மீது ஒருவர் பொறாமை அற்றவர்களாய் இருப்பர் (எசா 11:13-14). யாக்கோபின் இனத்தார் அனைவரையும் அவர் ஒன்றாகச் சேகரிப்பார் (மீக் 2:12); எல்லாக் கோத்திரங்களுக்கும் அவரே இறைவனாக இருப்பார் (எரே 31:1); நீதியின் அரசரின் முயற்சியால் (எரே 23:5-6), ''இரு மக்களும்'' உடன்பாட்டின்படி நடப்பர் (3:18); அங்கு ஓர் அரசு மட்டுமே இருக்கும் (எசே 37:22). இறுதியில் இச்சகோரத்துவமானது எல்லா நாடுகளுக்கும் பரவும்; தங்களிடையே ஒப்புரவான நிலையில் அவர்கள் சமாதானத்தையும் ஒற்றுமையையும் கண்டடைவர் (எசா 2:1-4; 66:18).

II. புதிய ஏற்பாடு

இயேசுகிறிஸ்துவில் அனைவரும் சகோதரரே:- உலகளாவிய சகோதரத்துவம் பற்றிய இறைவாக்கினர்களின் கனவு, புதிய ஆதாமாகிய கிறிஸ்துவில் உண்மையாகிறது. திருச்சபையிலான முழுமையடையாத அதனுடைய மண்ணுலக நிறைவேற்றமானது, அதனுடைய இறுதிச் செயற்படுத்தலின் தெளிவான அடையாளமாகும்.

1. எண்ணற்ற சகோதரர்களுடைய முதல் பிறப்பு:- தனது சிலுவை மரணத்தின் மூலமாகப் பல சகோதரர்களில் மூத்தவராக இயேசு உருவாகிறார் (உரோ 8:29). அவர் மனுகுலத்தின் இரு பிரிவுகளாகிய யூதர்களையும் பிற மக்களையும் இறைவனுடனும் அவர்களுக்கிடையிலும் ஒப்புரவாக்கினார் (எபே 2:11-18). ஒன்றுபட்ட நிலையில் அவர்கள் அரசிற்கு நுழைவுரிமை பெற்றுள்ளனர். மூத்த சகோதரனாகிய யூத மக்கள் இறுதியாகத் தந்தையின் வீட்டிற்கு வருகின்ற ஊதாரிகள்மீது இனியும் பொறாமைப்படக்கூடாது. (லூக் 15:25-32). தமது உயிர்ப்பிற்குப்பின்னர், கிறிஸ்து தனது சீடர்களைச் சகோதரர்கள் என்று அழைக்கலாம் (யோவா 20:17; மத் 28:10). இப்போதைய உண்மை இதுவே. அவரை ஏற்றுக்கொள்கிற அனைவரும் இறைவனின் பிள்ளைகளாகின்றனர் (யோவா 1:12). ஊனுடலின்படி ஆபிரகாமின் வழி வந்ததால் இல்லாமல், கிறிஸ்து

வின் மீதான விசுவாசத்தினாலும், தந்தையின் சித்தம் நிறைவேறுவதனாலும் அவர்கள் சகோதரர்களாகின்றனர் (மத் 12:46-50; 21:28-32). இவ்வழியாக, உருவகப் பொருளில் அன்று, மாறாகப் புதுப்பிறப்பினால் மனிதர்கள் கிறிஸ்துவின் சகோதரர்களாகின்றனர் (யோவா 3:3). அவர்களைத் தூய்மைப்படுத்தி ''வெளிப்படையாகச் சகோதரர்கள் என்று அழைக்கின்ற'' கிறிஸ்துவின் அதே தொடக்கத்துடன் (எபி 2:11) அவர்கள் இறைவனுக்காக மீண்டும் பிறக்கின்றனர் (யோவா 1:13). உண்மையில் நம்மை அவருடன் பிள்ளைகளாக்குவதற்காகக் கிறிஸ்து எல்லாவற்றிலும் நம்மைப் போலானார் (எபி 2:10-17). இறைவனின் பிள்ளைகள் என்பதன் முழுப் பொருளில் அவரை ''அப்பா'' என்று அழைக்கத் தகுதியுடையவர்களாய் நாம் கிறிஸ்துவோடு உடன் உரிமையாளர்களாகிறோம். ஏனெனில் நாம் அவரது சகோதரர்களாய் இருப்பதோடு (உரோ 8:14-17) ஊனியல்பின்படி சகோதரர்களுடன் இருப்பதைவிட மிக நெருங்கிய அளவில் அவருடன் உறவு கொண்டிருக்கிறோம்.

2. கிறிஸ்துவிலான சகோதரர்களின் சமுதாயம்:- தாம் வாழ்ந்த காலத்திலேயே இயேசு, சகோதரர்களின் புதிய சமுதாயத்திற்கு அடிக்கல்நாட்டி அதற்குரிய சட்டத்தையும் அறிவித்தார். சகோதரத் திருத்தத்தின் பணிக்கு முக்கிய இடமளித்து (மத் 18:15 தொ), சகோதரர்களுக்கிடையிலான உறவுகள் பற்றிய கட்டளைகளை எடுத்து அவற்றை நிறைவுபடுத்தினார் (மத் 5:21-26). அதிலே சகோதரத் திருத்தப்பணிக்குக் குறிப்பிட்ட இடமளித்தார் (மத் 18:15 தொ). விசுவாசியான சகோதரன் விலக்கப்படக்கூடிய கட்டுப்பட்ட சமுதாயத்தின் சாட்சியை இந்தக் கடைசி வாசகம் நமக்கு அளிக்குமாயின், அது அனைவருக்குமாகத் திறந்த மனதுடையதாக இருப்பதை நாம் காணலாம் (மத் 5:47). தனது நற்பேறற்ற சிறிய சகோதரரில் கிறிஸ்துவை எப்போதுமே சந்திப்பதால், ஒவ்வொருவரும் அவர்களுக்குத் தனது அன்பைக் காட்ட வேண்டும் (மத் 25:40). உயிர்ப்பிற்குப் பின்னர், பேதுரு ''தனது சகோதரர்களை உறுதிப்படுத்திய பின்னர் (லூக் 25:31-32), சீடர்கள் தங்களிடையிலேயே சகோதரத்துவத்தை உருவாக்குகின்றனர் (1 பேதுரு 5:9). உண்மையில் தொடக்கத்தில், தங்களது இனத்தின் தோழர்களாகிய யூதர்களுக்கும் ''சகோதரர்கள்'' என்ற பெயரைத் தொடர்ந்து அளித்தனர் என்று உறுதியாகக் கூறலாம் (அ.ப. 2:29; 3:17;..). ஆனால் ஊனுடலிலான தனது சகோதரரில் இருப்பதைவிட அதிகமாகப் பவுல் அவர்களில் எதையும் இன்னும் காணவில்லை (உரோ 9:3). யூதர்களுடனும் மற்ற நாடுகளுடனும் தொடங்கி (அ.ப.14:1-2), கிறிஸ்துவில் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தினால் ஒப்புரவாகிய புதிய இனமானது பிறந்துவிட்டது. உறுப்பினர்கள் என்ற அளவில் எதுவும் அவர்களைப் பிரிக்க முடியாது; தலைவர்கள் மற்றும் அடிமைகளுக்கிடையிலான சமூக நிலையின் வேறுபாடுகூட அவர்களைப் பிரிக்க முடியாது (பில 16). அவர்கள் அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றுபட்டவர்களாக, சகோதரர்களாக, இறைவனுடைய அன்பிற்குரிய விசுவாசிகளாக உள்ளனர் (கொலோ 1:2). கிறிஸ்துவின் உடலை உருவாக்குகின்ற (1 கொரி 12:12-27), ஆபிரகாமின் உண்மையான மக்கள் இத்தகையோரே (கலா 3:7-29). புதிய ஆதாமில் அவர்கள் தங்களது சகோதரத்துவத்தின் அடித்தளத்தையும் ஊற்றையும் கண்டடைந்துவிட்டனர்.

3. சகோதர அன்பு:- விசுவசிக்கும் சமுதாயத்தில் சகோதர அன்பானது முதலில் செயல்படுத்தப்படுகிறது. இந்த ''நேர்மையான மெய்யியலானது'' சாதாரண இயற்கையான மனிதவின நேயமல்ல. புதுப்பிறப்பிலிருந்து மட்டுமே இது வரமுடியும் (1 பேதுரு 1:22-23). பிளேட்டோவினுடைய தத்துவத்தையும் இது கொண்டிருக்கவில்லை. ஏனெனில் எல்லா மனிதரையும் அடைய இது நாட்டமுடையதாயின் சிறிய சமுதாயத்தினுள் செயல்படுகிறது. இது சச்சரவுகளைத் தவிர்த்தல் (கலா 5:15), ஒருவருக்கொருவர்

ஆதரவு காட்டுதல் (உரோ 15:1), பிச்சையிடுதல் (2 கொரி 8-9; 1 யோவா 3:17) மற்றும் மென்மை (1 கொரி 8:12) போன்றவற்றில் அடங்கும். உரோமையை அடைந்தபோது பவுலுக்கு ஆறுதலளித்தது இதுவே (அ.ப. 28:15). மற்றப் பகுதிகளில் சகோதரன் என்ற சொல்லானது அயலார் என்ற சொல்லுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், யோவான் தனது திருமுகங்களில் அதற்கு உலகளாவிய பொருளை அளிப்பதாகத் தெரிகிறது. ஆனால், அவரது போதனை அதே போன்று உள்ளது. சகோதர அன்பினைக் காயினுடைய மனப்பான்மைக்கு எதிர்மாறானதாக அமைத்த நிலையில் (1 யோவா 3:12-16), இறைவனுக்கான அன்பினுடைய ஒதுக்க முடியாத அடையாளமாக அமைகிறது (1 யோவா 2:9-12).

4. முழுமையான சகோதரத்துவத்தை நோக்கி:- ஆயினும் இவ்வுலகில் விசுவாசிகளின் சமுதாயமானது முழுமையான அளவில் என்றுமே அடையப்பட முடியாததாகும். ஏனெனில் தகுதியற்ற உறுப்பினர்கள் அதில் காணப்படலாம் (1 கொரி 5:11); போலிச் சகோதரரும் அறிமுகப்படுத்தப்படலாம் (கலா 2:4-5; 2 கொரி 11:26). ஆனால் இறைவனின் முன்னிலையில் அனைத்துச் சகோதரரையும் குற்றம் சாட்டுகின்ற தீயோன், ஒருநாள் கீழே தள்ளப்படுவான் என்பதை இச்சமூகம் அறிந்துள்ளது (திருவெளி 12:10). சுய நிறைவேற்றத்தின் முழுமையாகிய இந்த இறுதி வெற்றிக்கெனக் காத்திருக்கும் வேளையில், தொடக்கத்திலிருந்தே கனவில் கண்டுவந்த புதிய மனிதனை நோக்கி மனித சகோதரத்துவம் நடைபோடுகிறதென இச்சமூகம் ஏற்கனவே சான்று பகர்கின்றது.

சகோதரத்துவ அன்பு (BROTHERLY LOVE)

இந்தச் சொல் புதிய ஏற்பாட்டில் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் பழைய ஏற்பாட்டில் இதன் கருத்து விளக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் அயலான் என்பது ஒரு சக இஸ்ராயேலனையே குறிக்கிறது (லேவி 19:17-18). ஆனால் இந்த அன்பு பக்கத்தில் குடியிருக்கும் வேற்றினத்தாருக்கும் நீட்டிக்கப்படுகிறது (லேவி 19:34; உப 10:19). குடும்பங்களின் ஒற்றுமை போற்றப்படுகிறது (சங் 133:1; ஆதி 13:8;14:14-16). உண்மையான அன்பு என்பது நிலையானது, மற்றும் நெருங்கிய அன்பு, இரத்த உறவை காட்டிலும் பிணைப்பான அன்பு. தாவீதும் யோனத்தானும் வாழ்ந்த கதை இதற்குச் சான்று (1 சாமு18 — 2 சாமு1; பழ 17:9.17). மிகவும் மனத்தை உருக்குவது யோசேப்பு தன் சகோதரர்களுக்கு எகிப்து நாட்டில் காட்டும் அன்பு (ஆதி 43:30;44:14). ஒருவர் மற்றவருக்காகப் பரிந்து பேசுதலும் அன்பின் அடையாளம் ஆகும் (ஆதி 18:23;கொ 19:29; 44:33; யாத் 32:1 தொ).

புதிய ஏற்பாட்டில் இது உரோ 12:10; 1 தெச 4:9; எபி 13:1; 1 பேதுரு 1:22; 2:17; 3:8; 5:9; 2 பேதுரு 1:7-இல் காணப்படுகிறது.

கிறிஸ்தவர்கள் எல்லாம் ஒரே குடும்பம். இறைவன் ஊழியத்தில் நாம் எல்லாம் சகோதரர்கள் (மத் 23:8). எனவே நாமும் இயேசுவைப் பின்பற்றி ஒருவர் ஒருவரை அன்பு செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம் (யோவா 13:34; 15:12-13; உரோ 12:3; 13:8.10; 16:5; கலா 5:13; 6:10; எபே 4:2; கொலோ 1:4; 2:2-3; 1 தெச 3:12; தீத்து 1:8; பில 5.16; 1 யோவான்). ஒரே நம்பிக்கை, விசுவாசம், உடன்படிக்கை காரணமாக நம்முடைய இந்த அன்பு நிலையானது. இந்த அன்பு கிறிஸ்து இயேசுவாலேயே தூண்டப்பட்டதால் இவ்வன்பு சாந்த மிக்கது, பரிவுடையது, நீதியானது, உண்மையுள்ளது, மன்னிக்கக்கூடியது, பொறுமையானது, தன்னலம் நாடாதது, தியாகமிக்கது.

சகோதரி (SISTER)

அதே பெற்றோருக்குப் பிறந்த (எண் 26:59; 2 சாமு 13:4) அல்லது ஒரே பொதுப்பெற்றோருக்குப் பிறந்த பெண் (ஆதி 20:12; லேவி 18:9.11; 2 சாமு 13:2). இச்சொல் எந்த இரத்த உறவுள்ள பெண் உறவினரையும் குறிக்கலாம் (ஆதி 24:59). ஒரே குலத்தைச்சேர்ந்த ஒரு பெண்ணை (எண் 25:18) அல்லது காதலியைக் (உ.ச. 4:9-10) குறிக்கலாம்.

புதிய ஏற்பாட்டில், விசுவாசச் சமூகத்தில் பெண் அங்கத்தினரைச் சகோதரி என்ற சொல் குறிக்கிறது (உரோ 16:1; 1 கொரி 7:15; யாக் 2:15). இயேசு தம்முடைய சீடர்களைத் தம் ''சகோதரர், சகோதரி, தாய்'' என்று குறிப்பிடுகிறார் (மத் 12:50) 2 யோவா 13-இல் வரும் ''தேர்ந்தெடுக்கப்பட்ட உன் சகோதரி'' என்ற சொற்றொடர் எழுதுகிற வரை உள்ளடக்கிய தலத்திருச்சபையைக் குறிக்கிறது. இந்த வழக்கு, கடிதம் எந்தத் திருச்சபைக்கு எழுதப் பட்டதோ அந்தத் திருச்சபையைத் ''தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமாட்டி'' (2 யோவா) என்றழைக்கும் மற்றொரு உருவகத்திற்கு இட்டுச் செல்கிறது.

சக்கரம், உருளை (WHEEL)

வண்டியின் உருளை (எசா 28:28; யாக் 3:6). மைய அச்சினைக் கொண்டு சுழலும் வட்ட வடிவமான உருளை. பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இதை ஏற்கனவே இருந்ததாக ஏற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. ஆனால் இது முதன்முதலில் கி.மு. 3,000-இல் மெசபொத்தாமியாவில் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டது.

1. **அமைப்பு:-** முற்காலத்திய சக்கரங்கள் கனமான மூன்று மரப்பலகைகளால் ஆன வட்டவடிவ உருளையும் விளிம்பில் உலோகத்தினால் இறுக்கிவிடப்பட்ட வட்டைகளும் கொண்டு விளங்கின. ஒரே மரத்தினின்று முழு உருளையைச் செய்வது மிகக் கடினமாதலின் மூன்று மரப்பலகைகளால் உருளை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கி.மு. 2000-ஆம் ஆண்டிற்குள் ஆரக்கால்களுடைய சக்கரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு புழக்கத்திற்கும் வந்திருந்தன. 1 அர 7:33-இல் சக்கரங்களின் அச்சுக்கள், வட்டைகள், ஆரக்கால்கள், குடங்கள் ஆகியவை வார்ப்பால் ஆனவை என்று தெரிகிறது.

2. **வாகனங்கள்:-** சக்கரங்கள் பெருவண்டிகளுக்கும் (எசா 27:28), தேர்களுக்கும் (யாத் 14.25; எசா 5:28; எரே 47:3) உருளைகளாகப் பயன்படுத்தப்பட்டன. சக்கரம் ஆகுபெயராக வாகனத்தையே உணர்த்தலாம் (எசே 23:24; 26:1; நாகூ 3:2).

3. **ஆலயத் தள்ளுவண்டிகள்:-** சாலமோனின் ஆலய கட்டட விவரிப்பில் 10 வெண்கலத்தள்ளுவண்டிகள் விவரிக்கப் படுகின்றன. ஒவ்வோர் வண்டியும் 4 வெண்கலச்சக்கரங்களும் வெண்கல அச்சுக்களும் கொண்டவையாகும் (1 அர 7:30-33).

4. **யாவேயின் அரியணை:-** இறை பிரசன்னம் பற்றிய **எசேக்கியலின் காட்சியில்** (எசே 1:4-28;10), இறைவனின் அரியணையைத் தாங்கி நிற்கும் நான்கு கெருபீம்களும் அவற்றின் அருகில் நான்கு சக்கரங்களும் காணப் படுகின்றன. இச்சக்கரங்கள் இறைவனின் அரியணையின் சக்கரங்கள் என விவரிக்கப்படுகின்றன.

5. சக்கரம் உருவகப் பொருளிலும் பயன் படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. கிணற்றண்டையில் ஒடிந்த சக்கரம் கிடப்பின்... உயிரளிக்கும் நீரை இறைக்க முடியாமல் இறக்கும் நிகழ்வினைக் குறிப்பதைத் திருவுரை 2:6 கூறுகின்றது. அரசத்தேரின் சக்கரம் கொடியவன் மீது ஏறிச்செல்லுதல் அவன் அடையப் போகும் தண்டனையைக் குறிக்கும் (பழ 20:26). சீராக் ஒரு மடையனின் இதயத்தை வண்டியின் சக்கரத்திற்கு ஒப்பிடுகின்றார் (சீரா 38:5). யாக் 3.6-இல் வரும் வாழ்க்கைச் சக்கரத்தின் உண்மைப் பொருள் இன்னும் சரியாகப் புரியாத புதிராகவே உள்ளது.

சக்காய் (ZACCAI - தூய்மையான)

அடிமைத் தளையிலிருந்து நாடு திரும்பிய குடும்பங்களில் ஒன்றின் குலப்பெயர் மூதாதையர் (எஸ் 2:9; நெகே 7:14).

சக்கூத்து - கிய்யோன் (SAKKUTH and KAIWAN)

இப்பெயர்கள் இஸ்ராயேலரின் சமயக் கொள்கை மீறுதலோடு தொடர்புடையவை. இச்சொற்களுக்கு இரண்டு விளக்கங்கள் உண்டு. 1. சக்கூத்து என்பது சுக்காத்து (கூடாரம்) என்பதின் மொழிச் சிதைவாக இருக்கும். கிய்யோன் என்பதற்கு 'மேடை' என்று பொருள் கொள்ளலாம். 2. இந்தப் பெயர்கள் இரண்டு தெய்வங்களையும்

குறிக்கலாம். ஆமோ 5:26-இல் விண்மீன் தெய்வம் இய்யோன் என்று எழுதப்பட்டுள்ளது. இதனால் விண்மீன் தெய்வங்கள் இங்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன என்பது தெளிவு.இவைகள் மெசபொத்தாமிய நூல்களில் காணப்படுகின்றன. இரண்டுமே பாபிலோனிய சனித் தெய்வத்தின் பெயர்களாக உள்ளன.

சக்கூர் (ZACCUR - கவனமுள்ள)

1. ரூபன் கோத்திரத்து ஓர் ஆள் அல்லது குடும்பம். பாலஸ்தீனத்தை வேவு பார்க்கச் சென்ற சம்மூவாவின் தந்தை (எண் 13:4).

2. சிமியோனின் குடும்பம் அல்லது கோத்திரத்தைச் சேர்ந்தவர். கம்மூவேலின் மகன் (1 நாள் 4:26). இவர் மிசுமாவின் வழித்தோன்றல். இது ஆதி 25:14; 1 நாள் 1:30-இல் ஓர் இஸ்ராயேலியப் பெயராகும். இந்தக் குடும்பமானது அனேகமாகச் சிமியோனியர்களுடையவும், வடக்கு அரேபியா நாடோடிகளுடையவும் கலப்பாக இருக்கலாம்.

3. இவர் மெராரியின் வழிவந்த ஒரு லேவியர்; யகசியாவின் மகன் (1 நாள் 24:27).

4. அடிமைத்தளையிலிருந்து நாடு திரும்பியவருள் ஆசாபின் பாடற் குழுவைச் சேர்ந்த ஒரு குடும்பம் (1 நாள் 25:2.10; நெகே 12:35).

5. பாபிலோனியாவிலிருந்து எஸ்ராவுடன் நாடு திரும்பியதாக ஊத்தாயோடு சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கும் பிகவாயின் வழித்தோன்றல் (எஸ் 8:14).

6. இம்ரியின் மகன்; எருசலேம் மதில் சுவர்களைக் கட்ட உதவியவர்களில் ஒருவர் (நெகே 3:2).

7. நெகேமியாவின் தலைமையில் புதிய உடன்படிக்கையில் கைபெழுத்திட்ட ஒரு லேவியர் (நெகே 10:12).

8. கனானின் (அனான்) தந்தை; ஒரு லேவியர்; நெகேமியாவால் உதவிப் பொருளாளராக நியமிக்கப்பட்டவர் (நெகே 13:13).

சக்கேயு (ZACCHAEUS - தூய்மையான)

1. யூதா மக்கபேயுவின் படையில் ஒரு தலைவர் (2 மக் 10:19).

2. எரிகோவில் வாழ்ந்த ஒரு வரிவசூலிப்பவர்; இயேசுவைச் சந்தித்தபின்னர் இவர் வாழ்க்கை மாறியது (லூக் 19:1-10). மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருளின்படி இப்பெயர் சக்கேயுவிற்குத் (வெறுக்கப்பட்ட உரோமையரின் கூட்டாளி) தகுந்ததன்று என்று யூதர்கள் நினைத்திருக்கலாம்.

ஒரு மாவட்டத்திலிருந்த வரிவசூலிப்பவர்களுக்கெல்லாம் தலைவராகச் சக்கேயு தோன்றுகின்றார் (லூக் 19:2). யூதேயாவின் கிழக்கத்திய வணிகத்திற்கு எரிகோ நுழைவாயிலாயிருந்தது; மேலும் இது செழுமையான நிலத்தைக் கொண்டிருந்தது; இந்தச் சூழ்நிலையில் வரி வசூலிப்பவர்கள் தங்களைப் பெரும் செல்வந்தர்களாக ஆக்கிக்கொள்ள நிறைய வாய்ப்புகள் இருந்தன. ஆயினும் இவ்ர் இயேசு அந்த ஊரைக் கடந்து செல்கின்றார் என்று கேட்டபோது, அவரைக் காண முயற்சி எடுத்தார். இவர் குள்ளமாய் இருந்ததால், ஒரு மரத்தில் ஏறவும் தயங்கவில்லை. இதைக் கண்ட இயேசு சக்கேயுவை அழைத்து இவரது வீட்டில் தங்கவும் சென்றார். இதைக் கண்ட மக்கள் முணுமுணுத்தனர். ஆனால் சக்கேயு தனது சொத்தில் பாதியை ஏழைகளுக்குக் கொடுப்பதாகவும், எவரையாவது ஏமாற்றி எதையாவது கவர்ந்திருந்தால் நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுப்பதாகவும் கூறினார் (யாத் 22:1; லேவி 6:1-5; 2 சாமு 12:6). இயேசு இதைச் சக்கேயுவின் மீட்பின் அடையாளமாகக் கருதினார்.

நம்பத்தகாத ஒரு பாரம்பரியத்தின்படி இவர் பிறகு செசரியாவின் ஆயரானார். இந்நிகழ்ச்சி ''இழந்துபோனதைத் தேடி மீட்க வந்த'' இயேசுவின் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும் (19:10). இந்நிகழ்ச்சி சக்கேயுவின் சமயோசிதப்புத்தியையும், சமய ஆர்வத்தையும், மன உறுதியையும் நிறைவான மனமாற்றத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

சக்கேயு வாழ்ந்த எரிகோ பழைய எரிகோவிற்குத் தெற்கே ஏறக்குறைய 3.கி.மீ. தொலைவில் இருந்தது. பெரிய ஏரோது இதை விரிவுபடுத்தி, அழகுபடுத்தித் தன்னுடைய குளிர்காலத் தலைநகரமாக மாற்றினார். இது 1950-51-இல் அமெரிக்கர்களால் தோண்டி ஆராயப்பட்டது.

சங்கிலிகள் (CHAINS)

'சங்கிலிகள்' என்ற சொல்லுக்கு விவிலியத்தில் பல வகைகளில் பொருள் கொள்ளப்படுகின்றது.

அ) இச்சொல் எரேமியா நூலில் (40:1.4) கை விலங்குகளைக் குறிக்கிறது.

ஆ) எசாயா நூலில் 45:14-இல் கால்விலங்குகளைக் குறிக்கிறது.

இ) கார்த்திகை விண்மீன்களாகிய ஆறு விண்மீன்களைச் சேர்த்து இணைக்கின்ற சங்கிலியாகக் கருதப்படுகின்றது (யோபு 38:31).

ஈ) அழகு செய்யப் பயன்படுத்தும் சங்கிலிகளைக் குறிக்கிறது. இந்தச் சங்கிலிகள் எருசலேம் கோவிலை அழகுசெய்யப் பயன்படுத்தப்பட்டன (1 அர 7:17; 2 நாள் 3:5.16). குருக்களின் பணிக்கான ஆடைகளில் பசும் பொன்னால் செய்யப்பட்ட சிறிய சங்கிலிகள் பயன்படுத்தப்பட்டன (யாத் 28:14). எசா 40:19-இல் சிலைகளுக்கு வெள்ளிச் சங்கிலிகள் போடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

உ) அரமேயத்தில் இச்சொல் கழுத்தணியைக் குறிக்கின்றது. ஆதி 41:42-இலும் 5:29-இலும் அரசனின் அன்புச்செயல், அல்லது நல்லெண்ணத்தினை உணர்த்தும் பொருட்டுப் பொன்கழுத்தணியானது அணிவிக்கப்படுகின்றது. எசே 16:11-இல் ஆண்டவர் எருசலேமை அளவற்ற விதத்தில் பராமரித்துவருகின்றார் என்பதைக் குறிப்பால் உணர்த்த உருவகமாக இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஊ) புதிய ஏற்பாட்டில் சங்கிலியால் கட்டப்படல் பற்றிக் கூறப்படுகின்றது (மாற் 5:3-4; அ.ப. 28:20; திருவெளி 20:1). உரோமையர் முறைப்படி கைவிலங்கின் ஒரு முனை சிறைக்கைதியின் கையில் மாட்டப்பட்டிருக்கும். மறுமுனை சிறைக்காவலனின் கையிலிருக்கும் (அ.ப. 12:6-7).

எ) இச்சொல் கட்டுவதற்குப் பயன்படுகின்ற எந்தப் பொருளையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பொதுவான சொல் ஆகும் (அ.ப. 26:29: எபி 11:36; யூதா 6).

சங்கீதங்கள் - திருநூல் (PSALMS, BOOK OF)

காண்க: திருப்பாடல்கள் நூல்

சங்கூத்து (SHAMHUTH - அழிவு, பாழ்படுத்து)

இவர் ஓர் இசராகியர் அல்லது செரகியர் ஆவார் (1 நாள் 2:6). தாவீதின் படையில் ஐந்தாம் மாதத்திற்கான ஐந்தாம் பிரிவின் தலைவராவார் (1 நாள் 27:8). சில சமயம் இவர் சம்மாகு என்றும் கரோதின் (அரோது) சம்மோத்து என்றும் அடையாளம் காட்டப்படுவார் (2 சாமு 23:25; 1 நாள் 11:27).

சசாய் (SHASHAI - மேன்மையான)

நாடு கடத்தப்பட்டு, திரும்பியவர்களில் இவரும் ஒருவர். எஸ்ராவின் காலத்தில் வாழ்ந்தவர். இவர் புறவின மனைவியை நீக்கிவிட வேண்டியிருந்தது (எஸ் 10:40).

சடங்குச்சட்டம் (CEROMONIAL LAWS)

இஸ்ராயேலரின் சமய அனுசரிப்புக்கள், வழிபாட்டுப் பழக்கவழக்கங்கள் மற்றும் விழாக்கள் ஆகியவற்றைப்பற்றிய சட்டங்கள், ஒழுங்குகள்.

சடலப் பாதுகாப்பு (EMBALMING)

இறந்த உடலை அழிவிலிருந்து பாதுகாக்கும் முறையாகும். எகிப்தியரைப்போல் எபிரேயர் இப்பழக்கத்தை ஐயத்தோடு நோக்கினர். இப்பழக்கம் எகிப்தில் தோன்றியது எனலாம். எபிரேயர்கள் இதைக் கடைப்பிடிக்கவில்லை என்பதற்கு இதுபற்றிய குறிப்புகள் சிலவே உள்ளன என்பதும், கானானின் கல்லறைகளில் கண்டெடுக்கப்பட்ட சடலங்களின் நிலையும் சான்று கூறுகின்றன.

பழைய ஏற்பாடு சடலப்பாதுகாப்பைப்பற்றி இரு நிகழ்ச்சிகளை மட்டுமே கொடுக்கிறது. ஒன்று யோசேப்பின் தந்தை யாக்கோபின் சடலப்பாதுகாப்பாகும். யோசேப்பின் கட்டளைக்கிணங்க, எகிப்திய மருத்துவர்கள் யாக்கோபின் உடலுக்கு முறையான பாதுகாப்புச் செய்ய நாற்பது நாட்கள் எடுத்துக்கொண்டனர் (ஆதி 50:2-3). அதே பாதுகாப்பு யோசேப்புக்கும் அளிக்கப்படுகிறது (50:26). இருவரும் எகிப்தில் முக்கியமானவர்கள். அவர்களின் அடக்கம் பற்றிய ஏற்பாடுகள் அவர்களின் சமூக, அரசியல் நிலையின் மேன்மைக்குச்சான்று கூறுகின்றன. பழம் மேற்காசியாவில் மற்ற இடங்களில் சடலப் பாதுகாப்பு செய்யப்பட்டதுபற்றித் தெளிவான குறிப்புகள் இல்லை. அரசன் ஆசாவின் உடலுக்கும் (2 நாள் 16;14) இயேசுவின் உடலுக்கும் (யோவா 19:39-40) பயன்படுத்தப்பட்ட வாசனைப் பொருட்கள் சடலப் பாதுகாப்பிற்கன்று, சடங்கு முறையில் தூய்மைப் படுத்துவதற்காக இருக்கலாம். யூத அடக்கமுறையில் இறந்தவரைச் சுற்றி மூட, துணிகள் மட்டுமே பயன்பட்டது. உடலைப் பாதுகாக்கவோ, வேறு எந்த நோக்கத்திற்கோ உடலைக் கீறுவது தடை செய்யப்பட்டிருந்தது (லேவி 19:28; 21:5).

சடலத்தை அழிவிலிருந்து பாதுகாக்க விரும்பினர் எகிப்தியர். மேலும் இவ்விதம் செய்வது கீழ் உலகில் இறந்தவரின் ஆள் அடையாளத்தைத் தொடர்ந்து பாதுகாக்கும் என்று நம்பினர். இதற்குமாறாக, எபிரேயர் உடல் பாதுகாப்பின் தேவையை ஏற்றுக் கொள்ளவில்லை. இறைவன் தமது பிரசன்னத்தையும் கவனத்தையும் கல்லறைவரை தங்களுக்கு அளித்து, ஒருநாள் உடலை உயிர்ப்பிப்பார் என்று நம்பினர். மேலும் இவர்கள் எகிப்தியரின் பழக்கத்தை வெறுத்தனர். பாலஸ்தீனியர்களோ ஏழைகள். சடலப்பாதுகாப்பில் அதிகச் செலவும் இம்முறையை, அவர்கள் பின்பற்றத் தடையாய் இருந்தது.

சடைபின்னுதல் (BRAIDING)

கூந்தலில் அலங்காரப் பின்னல் இடுதல் அல்லது பூவைத்து அலங்கரித்தல் (1 பேதுரு 3:3; 1 திமோ 2:9). இது பெண்களுக்கு உண்மையான அணிகலன் இல்லை என்று கூறப்படுகிறது.

சட்ட அறிவிப்பு (DECREE)

எழுத்து வடிவில் உள்ள பொது அறிவிப்பு அல்லது பறைசாற்றலாகும். எசாயா அநீதியான சட்டங்களை ஆக்குவோர்க்கும், அநியாயங்களை எழுதி வருவோர்க்கும் 'ஐயோ கேடு' என எழுதுகிறார் (எசா 10:1). இது யூதேயாவின் அரச ஆணையால் கல்லில் பொறிக்கப்பட்ட சட்டத்தைக் கண்டிக்கவே கூறப்பட்டிருக்கும் எனக் கருதப்படுகிறது. மேலும் பிற்கால பழைய ஏற்பாட்டு நூல்களிலே (தானியேல், எஸ்தர், எஸ்ரா) சட்டங்கள் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளன. இது பாரசீகப் பேரரசின் சட்டத்தைப் பயன்படுத்துதலின் விளைவாக இருக்கலாம்.

சட்டம் (LAW)

''தோரா'' என்ற எபிரேயச்சொல் விரிவான பொருள் கொண்டது. கிரேக்கச் சொல் நீதி வழக்கில் வெளிப்படுவது. வழக்கமாய் மோசேயோடு தொடர்புபடுத்தும் பழைய ஏற்பாட்டு மரபில் சட்டம் என்பது இறைவன் அளித்த அறிவுரைகள் கொண்டது; யூத முறையில் அமைக்கப்பெற்றுள்ளதைப் புதிய ஏற்பாடு தழுவிச் சட்டம் என்கிறது (உரோ 5:20). இயேசு கிறிஸ்துவால் நிறுவப்பட்ட அருளாட்சிக்கு இது எதிரானது (உரோ 6:15;யோவா 1:17). இருந்தாலும் புதிய ஏற்பாடும் ''கிறிஸ்துவின் சட்டம்'' என்று பேசுவதைக் காண்கிறோம் (கலா 6:2). மேலும் கிறிஸ்துவ இறையியல் பழையது புதியது என்று சட்டத்தைப் பாகுபடுத்துகிறது. மீட்பின் வரலாற்றை முழுவதுமாக எடுத்துக் கொண்டால் புதிய ஏற்பாடு ''இயல்பான சட்டம்'' ஒன்றையும் ஏற்கிறது (காண். உரோ 2:14தொ). ஏனென்றால் மேலுள்ள இரண்டு சட்டங்களுக்கும் உட்படாதவரும் உள்ளனர். சட்டம் என்று சொல்லுகையில் கடவுளின் திட்டத்தில் அத்தியாவசியமாக மூன்று கட்டங்களைக் காண்கிறோம். இயல்பான சட்டம், பழைய சட்டம், புதிய சட்டம் என்னும் தலைப்புகளில் மேலும் தொடர்வோம்.

அ) மோசேக்கு முன்னால்: இயல்பான சட்டம்:- இயல்பான சட்டம் என்று விளக்கமாய் நாம் மறை நூலில் காண்பதில்லை. ஆனால் அதனுடைய உட்பொருள் தெளிவாகப் பல்வேறு உருவத்தில் பரவிக்கிடக்கிறது.

1.பழைய ஏற்பாடு:- ஆதி 1-11 (மற்றும் அபூர்வமான ஒத்த பகுதிகள்) ஆகிய இப் பகுதி காட்டுவதெல்லாம் வாக்குறுதிக்காலம் (ஆபிரகாமும் குலத்தந்தையரும்) மற்றும் (மோசேயின்) திருச்சட்டம் வரையில் மனிதனின் சமய ஆட்சி பற்றியதாகும். கடவுளின் திருவுளத்தின் வெளிப்படையான கட்டளையையே மனிதன் ஆதிமுதல் நேர்கொள்கிறான் (ஆதி 2:16தொ). இன்பவனத்தில் இது தான் சோதனையாகவும், இதை மீறுவதால் உலகில் சாவு நுழையவும் ஏதுவாகிறது (3:17தொ; காண். ஞான 2:24;உரோ 5:12). இந்த விளைவுகளிலிருந்து, இறைவன் மனிதனைச் சட்டமின்றி விட்டுவிடவில்லை என்பது தெளிவாகிறது. ஒழுக்க நெறி மனிதனை நடத்துகிறது. காயினுக்குக் கடவுள் இதை நினைவுறுத்துகிறார் (ஆதி 4:7). பெருவெள்ளக் காலத்துத் தலைமுறையும் இதையே மீறியது (6:5). நோவா கடவுளோடு செய்த உடன்படிக்கையில் சமயக் கட்டளைகளும் அடங்கியுள்ளன (9:3-6). மேலும் அக்காலத்திய மனிதனின் வழிபாட்டு முறைகளும் உள்ளன (4:3தொ;8:20). இந்தக் கருநிலைச் சட்டத்திற்கு மனிதன் காட்டும் போக்கின்படி அவர்கள் நீதிமான்கள் (4:3; 5:24; 6:9) அல்லது தீயவர்கள் (4:4; 6:5.11தொ; 11:1-9; காண்.ஞான 10:3தொ) ஆகிறார்கள்.

2. புதிய ஏற்பாடு:- ஆதாமிலிருந்து மோசே வரையில் உள்ள வரலாற்றையும் பவுலின் மீட்புத்திட்டம் உள்ளடக்குகிறது (உரோ 5:13தொ). இஸ்ராயேல் அழைப்பில் பங்கேற்காத ஏனைய இனங்கள் மோசே காலத்திற்கு முந்திய சமயத்திற்கே உட்பட்டவர்கள். அவர்களின் வழியிலே சென்றார்கள் (அ.ப. 14:16; காண் உரோ 1:24-31); கடவுளைத் தேடினார்கள் (அ.ப.17:27). எல்லாமே அறியாமையில்தான் (17:30). இவையெல்லாம் நடந்ததோ கடவுளின் திருவுளப்படியே. அவருடைய திருவுளம் அவர்களின் மனச்சாட்சி மூலம் வெளிப்பட்டது (உரோ 2:14தொ). இச்சூழ்நிலையில் சட்டம் என்று பவுல் கூறுவது, ஒழுக்க நெறி என்ற பொருளில்தான். மற்றச்சமயத்தவரைக் கடவுள் தீர்ப்பிடுவது இந்தக் கட்டளைகளின் அடிப்படையில்தான் (1:18;2:12). மனிதர் குற்றங்களுக்கு அவர் வழங்கும் தண்டனையும் ஒழுக்க நெறியை மீறுகின்றவர்களுக்கேதான் (1:32; காண் ஆமோ 1:2-2:3). கடவுளைத் தெரிந்தும் அவரது மகிமையை மறுக்கும் (உரோ 1:2) வேளையில் சமயச் சார்புள்ள பாவம் என்றும், அதற்கேற்றாற்போல் தண்டனை கிட்டும் என்றும் அடிப்படை உண்மையைப் பவுல் உரைக்கிறார்.

ஆ) மோசேயும் பழைய சட்டமும்:- மற்ற இனத்தவரிடமிருந்து பழைய ஏற்பாட்டு மக்களைக் கடவுள் பிரித்தார். மோசேயின் சட்டம் என்பதின் மூலம் அவரே வெளிப்படுத்திப் புதிய ஆளுகைக்கு அவர்களை ஏற்படுத்தினார்.

(1) பல்வகையான சட்டம்:-

1. ஐந்நூலில் மோசேயின் சட்டம் உறைந்துள்ளது. தொடக்கமுதல் மோசேயின் சாவு வரையில் கடவுளின் மீட்புத்திட்ட வரலாறு சட்டமியற்றும் வாசகங்களோடு இழைந்தோடுகிறது. படைப்பு (ஆதி 2:2தொ) நோவாவின் உடன்படிக்கை (9:1-7), ஆபிரகாமின் உடன்படிக்கை, பாலைவனத் தங்கல் (யாத் 20:1-17; 20:22-23:32; 25-31; 34:10-28; 35-40; லேவியராகமம் முழுவதும்; எண் 1:1-10:28;15;17-19;26-30;35; ஏறக்குறைய உபாகமம் முழுவதும்) ஆகியவை பற்றிய விவரிப்பில் இவ்வாசகங்கள் காணப்படுகின்றன.

2. எல்லா நிலைகளிலும் இறைமக்களை நடத்திச் செல்ல யாவற்றையும் உள்ளடக்கும் இச்சட்டம் துணையாகிறது. மற்றச் சமய மெய்யிலானவர்கள் காணமுடியாத உண்மையான உறுதியான முறையில், மனச்சாட்சியை அடிப்படையாக வைத்துப் பத்துக்கட்

டளைகள் (யாத் 20:2-17;உப 5:6-21) சுருக்க மாய் உரைக்கின்றன. நீதிமன்ற ஒழுங்கு முறையில் பற்பல நிறுவனங்களையும் (குடும்பம், சமூகம், பொருளாதாரம், நீதி முறை) கட்டுப்படுத்துகின்றன. இறுதியாக, இஸ்ராயேலின் வழிபட்டுச் சடங்குமுறைக ளுக்கு ஒழுங்குகள், நடத்துபவர்கள், தேவை யானவைகள் (தூய்மை பற்றிய ஒழுங்குகள்) என்றும் உள்ளன. எதுவும் ஏனோதானோ என்று நடக்க முடியாது. சமூக அமைப்புக ளால் ஏற்பட்டுள்ள இறைமக்களின் உலகி யல் நிறுவனங்கள், வெளிப்படையான, சம யச் சட்டத்தால் பாதிக்கப்பட்டதும் உண்மை.

3. சட்டத்தின் இலக்கிய அமைப்பிலும் பல்வேறு குணங்கள் உள்ளன. சில ஐயவாத முறை (யாத் 21:18) பழைய மேற்காசியச் சட்டத் தொகுப்பிலிருந்து கையாளப்படுவ தாகும். தனிப்பட்ட தீர்ப்புகளிலிருந்து வரு பவை. மற்றவைகள் (யாத் 21:17) தீய உரைக ளுக்கு வழக்கமாய் உடன்படிக்கையைப் புதுப்பித்தலோடு தொடர்புடைய சாபங் களை நினைவுபடுத்துகின்றன (உப 27:15...). வெளிப்படையான, திட்டவட்டமான கட்ட ளைகள் மூலம் (எ. கா. பத்துக்கட்டளைகள்) இறைவன் நேரிடையாகத் தமது திரு வுளத்தை மக்களுக்குக் காட்டுகிறார். ஞானாகமப் போதனைகளை ஒத்த மற் றத் தூண்டுதல் பெற்ற கட்டளைகளும் உள் ளன (எ.கா.யாத் 22:25தொ). சட்டத் தொகு திக்குக் கட்டளைகள்தான் உயிர் கொடுத்தன. இந்த விதத்தில் இஸ்ராயேல் சட்டம் நீதித் தீர்ப்புத் தொகுப்பிலிருந்து வேறுபட்டதா கும். கடவுளின் பெயரால் கட்டாயமாக்கப் பட்டதுதான் சட்டம் என்றாகியது.

4. சட்டம் பலவகையானதால் பழைய ஏற்பாடு அதற்கு அறிவுரை, சாட்சி, கட் டளை, ஒழுங்கு, தீர்மானம் (அல்லது தீர்ப்பு), சொல், கடவுளின் வழி (காண் சங் 19:8-11;119) எனப் பல பெயர்களைக் கொடுக்கிறது. சட்டத்தின் வரம்பினை இத் திருச்சட்டம் கடந்து மேலோங்கி நிற்பது தெளி வாகும்.

(2) பழைய ஏற்பாட்டில் சட்டத்தின் பங்கு:-

1. சட்டம் உடன்படிக்கையோடு இணைந் தது:- கடவுள் தமது உடன்படிக்கை மூலம் இஸ்ராயேலர் குலத்தைச் சிறப்பானதாக்குகி றார். இத்தேர்வோடு சில வாக்குறுதிகளை யும் சேர்க்கிறார். இவற்றின் நிறைவேறுதல் வரவிருக்கும் வரலாற்றில் ஆதிக்கம் செலுத் தும் (யாத் 23:22-33; லேவி 26:3-13; உப 28:1-14). ஆனால் தமது வாக்குறுதிகளுக்குச் சில நிபந்தனைகளையும் கடவுள் விதிக்கி றார். இஸ்ராயேல் அவருக்குச் செவிமடுக்க வேண்டும், கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையேல் அவர்களுக்குச் சாபக்கேடுதான் (யாத் 23:21; லேவி 26:14-45; உப 28:15-68). இறுதியில் உடன்படிக்கை நடைமுறைச் சட்டத்தைக் காக்கவேண்டும் என்றுதான் ஆகிறது (யாத் 19:9தொ;24:7; காண் யோசு24:21-24;2 அர23:3). வரப்போ கும் மீட்புப் பெற சட்டம்தான் இஸ்ராயே லுக்கு அடிப்படையான சமய வழிமுறையா கும். சட்டத்தைப் பூர்த்தி செய்வது கடினமே. ஆயினும் உண்மையில் அது இறை ஆதரவா கும். ஏனென்றால் அதனுடைய நோக்கம் இஸ்ராயேலை ஞானிகளாக்குவதும் (உப 4:5-8) அதன்மூலம் அவர்களை இறைவனின் திருவுளத்தோடு தொடர்புபடுத்துவதுமா கும். சட்டத்தின் பயிற்சி கடினமானாலும் அதன் வழியாகத்தான் வணங்காக் கழுத்தின ராகிய இஸ்ராயேலர், இறைவன் அவர்களிட மிருந்து எதிர்பார்க்கும் புனிதத்தைக் கற்றுக் கொண்டனர். இது தோராவின் மையமான பத்துக் க்ட்டளைகளுக்குச் சிறப்பாகப் பொருந்தும். மேலும் இது, சமூகக் காரியங்க ளையும் வழிபாட்டையும் பற்றிய ஒழுங்குக ளுக்கும் பொருந்தும். இவை கருத்தியலான வற்றை இஸ்ராயேலின் நிறுவனங்களின் செயல்முறைப் பணித்திட்டமாக மாற்றின.

2. சட்டத்திற்கும் உடன்படிக்கைக்கும் உள்ள தொடர்பு, பழைய மோசேயின் சட் டம் தவிர வேறொன்றும் இஸ்ராயேலுக்கு இல்லை என்று காட்டுகிறது. பழைய முறை யில் அமைந்த உடன்படிக்கையின் கோரிக் கைகளை இறைவன் வெளிப்படுத்துகிறார் (சங் 103:7). இதனுடைய முக்கியத்துவம்;

இருவகையில் தெளிவாகிறது. முதலாவது, எந்த மனிதச் சட்டம் இயற்றுபவரும், தாவீது, சாலமோன் ஆகியோரின் காலத்தில் கூட, நாட்டைப் படைத்தவரின் சட்டத்திற்குப் பதிலாகத் தனது அதிகாரத்தோடு புதுச் சட்டங்களைச் சேர்க்கவில்லை (மோசேயின் போக்கில் தோன்றிய எசே 40-48 கூட தோரா வில் சேர்க்கப்படவில்லை). இரண்டாவது எல்லாச் சட்டக் குறிப்புகளும் மோசேயின் பெயரால் இயங்குகின்றன. இவையும் சீனாய் மலையில் தங்கிய சூழ்நிலையில் எடுத்துக் கூறப்படுகின்றன.

3. இதனால், காலப்போக்கில் சட்டம் முன்னேற்றம் அடையவில்லை என்று சொல்லி விட முடியாது. உள்ளார்ந்த திறனாய்வு பற்பல நோக்கங்களையும், குணங்களையும் கொண்ட பகுதிகளைப் பகுத்துக்காட்டுகிறது. ஐந்நூலின் மூலங்களுக்கேற்ப மோசேயின் மரபுரிமை பல வகையான பாரம்பரியங்களில் எடுத்துக் கூறப்படுகிறது. பலமுறை அவை திருத்தம் பெற்றுப் புதுப் பொலிவு பெற்றன. பத்துக்கட்டளைகளும் (யாத் 10:1-17) உடன்படிக்கைச் சட்டமும் (யாத் 20:22-23:33) உபாகமத்தினாரால் எடுத்தாளப்பட்டு விரிவாக்கப்படுகின்றன (உப 5:2-21;12-28). இவர், கடவுளை அன்பு செய்வது ஒன்றுதான் முதன்மையானது. மற்றவை அதனை ஒட்டியே உள்ளன என்று காட்டுகிறார். (6:49). புனிதக் கடவுளைப் பின்பற்றுவதைக் காட்டுவதே (லேவி 19:1) புனிதச் சட்டத்தின் நோக்கமாகும். (லேவி 17-26).மோசேயின் சட்டத்தைவைத்தே அரசர்கள் காலத்திலும் சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றன (1 அர 15:12தொ;2 அர 18:3-6;22:1-23:25). அனேகமாக, ஐந்நூலை இறுதி நிலைப்படுத்துவது தொடர்பாக எஸ்ரா செய்த பணி, பாரம்பரியச் சட்டத்தின் அதிகாரத்தையும் சட்டப்படி செல்லக்கூடிய தன்மையையும் திருநிலைப் படுத்துவதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை (எண் 7:1-26; நெகே 8). இப்பாரம்பரியச் சட்டத்தின் அடிப்படையும் தன்மையும் மோசேயால் நிறுவப்பட்டவையாகும்.

(3) சட்டத்திற்குமுன் இஸ்ராயேல்:-

பழைய ஏற்பாடு முழுவதுமே சட்டம் எதிரொலிக்கிறது. அதன் கோரிக்கைகள் மக்களை நேரிடையாக எதிர்கொள்கிறது. அது மறைநூல் ஆசிரியர்களின் எண்ணங்களில் எப்போதும் உள்ளடங்கியுள்ளது.

1. தங்கள் பதவியின் சிறப்பிடத்தால் குருக்கள் சட்டத்தின் நிபுணர்களும், காவலர்களும் ஆவர் (ஓசே 5:1; எரே 18:18;எசே 7:26). யாவேயின் தீர்மானங்களையும் அறிவுரைகளையும் மக்களுக்குப் போதிப்பது அவர்களின் கடமையாகும் (உப 33:10). புனித இடத்தில் அளிக்கப்பட்ட (உப 31:10தொ) இந்த அறிவுரையானது வழிபாட்டு முறையைத் தழுவியதாகும் (லேவி 10:10 தொ; எசே 22:26;ஆகாய் 2:11தொ; செப் 7:3). வாழ்க்கையின் மற்றவைகளும் அப்போதனையில் அடங்கியிருந்தன. புனிதபோதகத்தை விளக்கிச் சொல்லும் குருக்கள் யாவேயின் வழிகள் பற்றிய அறிவுரை ஊட்டுவதைப் பொறுப்பாகக் கொண்டிருந்தனர் (ஓசே 4:6;எரே 5:4தொ). அவர்கள்தாம் சட்டவாசகங்களைத் தொகுத்தவர்கள். அவர்களின் ஆதிக்கத்தில்தான் சட்டம் வளர்ச்சியுற்றது.

2. இறைவனின் ஆவியால் தூண்டப்பெற்ற, வார்த்தையின் மனிதர்களான இறைவாக்கினர், சட்டத்தின் அதிகாரத்தை வலியுறுத்துகின்றனர். அதைப் புறக்கணிக்கும் குருக்களையும் சாடுகின்றனர் (காண்.ஓசே 4:6; எசே 22:26). தோராவின் சட்டங்களையும் ஓசேயா அறிந்திருக்கிறார் (ஓசே 9:12); அவர் கண்டிக்கும் பாவங்கள் பத்துக்கட்டளைகளை மீறுவதால் வந்தவையே (4:1தொ). உபாகமச் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக (2 அர 22) எரேமியா, உடன்படிக்கையின் வாக்குரைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று போதிக்கிறார் (எரே 11:1-12). புனிதச் சட்டத்திலிருந்துதான் (எசே 22:1-16.26) எசேக்கியேல் பாவங்களின் அட்டவணையைத் தொகுக்கிறார். அவர்கள் மேலானதாகப்போற்றும் ஒழுக்க நெறி மோசேயின், தோராவின் கோரிக்கைகள் பற்றிய இன்னும் ஆழ்ந்த உட்பொருளேயாகும்.

3. இஸ்ராயேலின் வரலாற்று ஆசிரியர்களி டமும் இதே மனநிலையைக் காண்பதில் வியப்பில்லை. சீனாய் உடன்படிக்கைதான் இஸ்ராயேல் இனத்தின் தொடக்கம் என்று இத்தொகுப்பாசிரியர்கள் உரைக்கின்றார்கள். உபாகமப் பாரம்பரியம் வரைந்த தகுதி களைக் கொண்டே கடந்தநிகழ்ச்சிகளுக்குப் பொருள் காண உபாகம வரலாற்றாசிரியர் கள் (உப, நீதி, சாமு, அர) முனைகின்றனர். ஐந்நூல் குருத்துவ வரலாற்றாசிரியர் அவரது சூழ்நிலையின் சட்டப் பாரம்பரியத்தால் இயங்குகிறார். இஸ்ராயேலின் இறையாட்சி வரலாற்றை மறுமதிப்பீடு செய்யும் நாளா கம ஆசிரியர் இறுதியாக நிலைப்படுத்தப் பட்ட வாசகத்தைக் கொண்ட ஐந்நூலின் கருத்தியல் நோக்கால் வழிநடத்தப்படுகி றார். சட்டத்திற்கு அளித்த மதிப்பிற்கேற்ப முற்கால மக்கள் போற்றப்படுகிறார்கள் அல் லது தூற்றப்படுகிறார்கள். இறை மக்கள் இறைவனைப் பற்றியிருக்க வேண்டும் என் பதை எடுத்துக்கூற இத்தகைய வரலாறுகள் உயிருள்ள போதகமாகின்றன.

4. இதே சட்டத்தைப் போதிப்பதில் புதுப் புது மாற்றங்களை ஞானம் பற்றி உரைப் போரிடமும் காண்கிறோம். பழமொழி, சீராக், தோபியா ஆகமங்களில் மேற்கோள் கள் உள்ளன. சீராக் சட்டத்தைத்தவிர வேறொரு ஞானம் இல்லை (சீரா 24:23...) என வெளிப்படையாக உரைக்கிறார். மோசே சட்டம் அளித்தபோது இந்த ஞானம் இஸ்ரா யேலில் குடிகொண்டது (24:28...). நாடு கடத் தப் பெற்ற பின்பு யூதகுலம் இறைப்பற்று மிகுந்து விளங்கியபோது, இறைசட்டத்தின் மேன்மையைப்பற்றிச் சங்கீத ஆசிரியர் பாடக்கூடும் (சங் 19:8...); கடவுள் வேறெந்த நாட்டிற்கும் இதைப்போல மேலான கொடை அளித்ததே இல்லை (சங். 147:19தொ). சட்டத்துக்கு அன்பு செய்வது (சங் 119) கடவுளுக்கே அன்பு செய்வதை வெளிப்படுத்துகிறது (சங் 119). இவ்வாறு யூதகுலப்பக்தி வழிவழியாய்ப் பாய அடித் தளம் ஏற்பட்டது.

5. எஸ்ராவின் காலத்திற்குப்பிறகு தனது வாழ்க்கையின் மையமாகச் சட்டத்தை இஸ் ராயேல் சமூகம் அமைத்துக்கொண்டது, சட் டத்தின் மேலுள்ள அவர்களின் ஆர்வம் கட் டுக்கு அடங்காதது. அதற்காக உயிரையும் தியாகம் செய்யத் தயங்கவில்லை. அந்தி யோக்கு எப்பிபான் புதிய காலங்களையும், சட்டத்தையும் மாற்ற (தானி 7:25;1 மக் 1:41-51) முயன்றபோது பலர் உயிர்கொடுக்க வும் (1 மக் 1:57-63;2:29-38;2 மக் 6:18-28;7:2...) தயாராகினர். கிரேக்க சார்பு டைய துரோகிகளும் இருக்கத்தான் செய்த னர். மக்கபேயர்கள் சட்டத்தின்பால் கொண்ட வேட்கையால் தூண்டப்பட்டு (1 மக் 2:27) மீண்டும் பாரம்பரிய மரபையே வலுப்படுத்தினர். இனிமேல் சட்டம் பற்றிய சர்ச்சையே எழாது. இனிமேல் சட்டம் பற்றிய விளக்கவுரையில்தான் பிரிவினை ஏற்படும். ஏனென்றால் சட்டம் தெய்வீகமானதாகவும், வாழ்க்கை அமைப்பிற்கு முக்கியமானதாக வும் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. தங்க ளின் குருக்கள்தான் சட்டத்தின் உண்மை யான விளக்கவுரையாளர்கள் என்று கருதிய சதுசேயர்கள் சட்டத்தின் எழுத்தை அப்ப டியே கைக்கொள்வார்கள். பரிசேயர்களோ வாய்வழிச் சட்டத்தையும், அதாவது முந்தை யர்களின் மரபுகளையும் ஏற்பார்கள். கும் ரான் பிரிவினர் (ஒருவேளை எஸ்ஸேனியர்) சட்டம் கொடுத்தவரின் (அதாவது மோசே யின்) வழிபாட்டு முறை கொண்டு, அவர்க ளுக்கே உரிய வழிகளில் விளக்கம் கொடுப் பார்கள்.

யூத சமயம் சட்டத்தின்பால் கொண்ட பக்தியினால் மாண்படைகிறது. ஆயினும், சட்டத்தை இவ்வாறு பற்றிக் கொள்வதில் சில ஆபத்துக்களும் உண்டு. ஒன்று சமயம் மற்றும் ஒழுக்கம், உலகியல் மற்றும் வழி பாடு ஆகியவைபற்றிய கட்டளைகளைச் சம மாகப் பாவித்து உரியவிதத்தில் வரிசைப் படுத்தாமல் போவதாகும் (உப 6:4). இந்தச் சட்ட வழிபாடு, குறுக்கிடும் புற ஆசாரத்தன் மைக்கு மாற்றப்பட்டு, ஐயவாதிகளின் யூகங் களின் போக்கால் மனிதனுக்குத் தாங்க முடி யாத சுமையாக மாறுகிறது (மத்

23:4;அ.ப.15:10). இரண்டாவது, முதலாவதைவிட ஆழமானது, அடிப்படையானது. இறைவன் முன் மனிதனின் ஏற்புடைமைக்கு இறைவனின் அருளை அடிப்படையாகக் கொள்ளாமல், மனிதனின் சட்ட அனுசரிப்பையும் மனிதர் நற்செயல்களையும் அடிப்படையாகக் கொள்வதாகும். இதில் மனிதன் தன்னையே இறைவனுக்கு ஏற்புடையன் ஆக்கிக் கொள்கிறான். புதிய ஏற்பாடு இந்த இரு தவறுகளையும் நேரடியாகத் தாக்கும்.

(4) புதிய சட்டம் நோக்கி.

பழைய ஏற்பாடு இறுதிக்காலத்திற்குச் சாட்சி அளித்தாலும், புதிய உடன்படிக்கையில் சட்டம் ஆழ்ந்த மாற்றம் பெற்றுக் கொண்டிருந்தது. புனித மலையில் இறைவன் அளித்த சட்டமும் (எசா 2:3) யாவேயின் ஊழியர் உலகில் நிறுவவிருக்கும் அமைப்பும் (42:1.4) மோசேயின் சட்டத்தைவிட சமய மதிப்பீட்டில் மேம்படவில்லையா? புதிய உடன்படிக்கையின் உட்கருத்தை இறைவாக்குரைகள் தெளிவாகக் காட்டவில்லை. எசேக்கியேல் மட்டும் மரபு முறையில் அதனைச் சுட்டிக்காட்ட முயலுகிறார் (எசே 40-48). மனிதனுக்கும் சட்டத்திற்கும் உள்ள தொடர்பு மாற்றி அமைக்கப்படும் என்று உறுதியாகக் கூறப்படுகிறது. இனிமேல் கற்பலகைகளில் எழுதப்பட்ட புறச்சட்டங்கள் மட்டுமல்ல. ஒவ்வொருவரின் நெஞ்சத்திலும் பதிக்கப் பெற்றுள்ள உள்சட்டங்களும் யாவே பற்றி அறியச் செய்யும் (எரே 31:33). பழைய உடன்படிக்கையில் இது இடம் பெறவே இல்லை (ஓசே 4:2). மனித இதயமும் மாறும், உள்ளார்ந்த ஆவியின் தூண்டுதலால் இறைவனின் சட்டங்களையும் கட்டளைகளையும் மனிதன் கடைப்பிடிப்பான் (எசே 36:26தொ). உலகிற்குக் கிறிஸ்து அளிக்கப்போவது இத்தகைய சட்டமே.

இ) இயேசுவும் புதிய சட்டமும்

(1) இயேசுவின் தனிப்பட்ட மனப்பாங்கு:-

1. பழைய சட்டம் பற்றிய இயேசுவின் மனநிலை தெளிவானது. ஆனால் அதில் வேறுபாடுகளுக்கு இடமுண்டு. மறைநூல் அறிஞர்களும் பரிசேயர்களும் போதித்த பழைய மரபு முறைகளைக் கடுமையாக எதிர்க்கிறார். ஆனால் சட்டத்தின்பால் அதே முறையில் செயல்படவில்லை. மாறாக, பாரம்பரியம் சட்டத்தை மீறுவதற்கு மனிதர்களை இட்டுச் செல்வதாலும் இறைவனுடைய வார்த்தையைத் தள்ளுபடி செய்வதாலும (மாற் 12:28-34 இணை), அப்பாரம்பரியத்தை ஒதுக்கிவிடுகிறார். இறையரசில் சட்டம் அழிவுறுவதில்லை. மாறாக மிகச் சிறிய எழுத்துவரை நிறைவு காண்கிறது (மத் 5:17 தொ). இயேசுவும் அதற்குப் பணிகிறார் (காண் 8:4). எவ்வளவு தூரத்திற்கு மறைநூல் அறிஞர்கள் மோசேக்குப் பிரமாணிக்கமாக இருக்கிறார்களோ, அவ்வளவிற்கு அவர்களின் அதிகாரம் மதிக்கப்படல் வேண்டும். அவர்களின் நடத்தையைப் பின்பற்றத் தேவையில்லை (23:2தொ).

ஆயினும் இறையரசுப் போதனையில், அடிப்படையிலே புதிதான சமய முறையைப் போதிக்கிறார். அதைத் தொடங்கி வைக்கிறார். திருமுழுக்கு யோவானோடு இறைவாக்கினர் காலம் நிறைவுறுகிறது (லூக் 16:16 இணை); சீனாய்ப் போதனையின் பழைய சித்தையில் புதிய நற்செய்தியின் இரசம் ஊற்றப்பட முடியாது (மாற் 2:21தொ இணை). இயேசு புதிய அமைப்பைத் தோற்றுவிக்கிறார். மறைநூல் அறிஞர்களால் புறக்கணிக்கப்பட்ட அடிப்படையான கடமைகள் (நீதி, இரக்கம், நேர்மை) இப்போது புதிய அமைப்பில் பொலிவு காண்கின்றன (மத் 23:16-26). பழைய சட்டத்தில் கடின இதயத்திற்காக (19:8) விட்டுக் கொடுக்கப்பட்ட குறைபாடானவைகள் புதிய அரசில் இடம் பெறா; கடவுளின் நிறைவைப் பின்பற்றும் பாணியில் அமைந்துள்ளதுதான் புதிய ஒழுக்க நெறியாகும் (5:21-48). இது தற்போதைய நிலையில் மனிதன் அடைய இயலாத ஒன்றாகும் (காண் 19;10). ஆயினும் இப்புதிய கட்டளையைக் கடைப்பிடிக்க வேண்டிய ஆற்றல்மிக்க மாதிரியும், ஆவியின் உள்ளார்ந்த வலிமையையும் இயேசு நமக்கு நல்குகிறார் (அ.ப.1:8; யோவா 16,13).

இறுதியில், இறையரசின் சட்டம், கடவுளை அன்பு செய்வதும், தன்னைப்போல் பிறரை அன்பு செய்வதுமாகிய பழைய ஏற்பாட்டின் இருவடிவக் கட்டளையை (மாற் 12:28-34 இணை). இணைக்கிறது. மற்றெதுவும் இதிலிருந்து ஊற்றெடுப்பது, இதற்குப் பணிந்திருப்பது ஆகும். ஒருவருடன் ஒருவரை இணைந்து வாழவைக்கும் இப்பொன்னான ஒழுங்கு, சட்டத்தையும் இறைவாக்கினரையும் வெளிப்படையாக (மத் 7:12) உள்ளடக்குகிறது.

2. சட்டம்பற்றிய பல்வேறு கூற்றுகளில் இயேசு சட்டம் இயற்றுகின்றவராகத் தோன்றுகிறார். ஓய்வு நாளைவிட மனிதன் முக்கியமானவன் (மாற் 2:23-27 இணை; காண் யோவா 5:18;7:21தொ) என்று கூறும்போது மோசேக்கு முரணாகச் சொல்லவில்லை. மாறாக, மோசேயின் போதனைக்கு விளக்கம் அளிக்கிறார்; அப்போதனையை நிறைவு செய்கிறார். சட்டத்தின் எழுத்துக்களைக் கடந்து புதிய ஒழுங்குகளால் அதையும் எதிர்க்கிறார். இதற்குத் தூய்மை முறைகளை (மாற் 7:15-23இணை) எடுத்துக்காட்டலாம். இப்போதனை கேட்போருக்கு வியப்பானது, மறைநூல் அறிஞர்களை அவமானப் படுத்துவது, புதிய ஒரே அதிகாரம் பற்றிய உணர்வை வெளிப்படுத்துகிறது (1:22இணை). மோசே தள்ளிவைக்கப்படுகிறார். ஏனெனில் இறையரசில் ஒரே போதகர்தான் உண்டு (மத் 23:10). அவரின் சொல்லுக்கு மனிதன் செவிமடுக்க வேண்டும். அதன்படி நடக்கவேண்டும் (7:24தொ). ஏனெனில் இதுதான் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் ஒரே வழியாகும் (7:21தொ). இராபிகளின் போதனையைப் பின்பற்றி, பிரமாணிக்கமுள்ள யூதர்கள் சட்டத்தின் நுகத்தை மேற்கொண்டது போல், இப்போது ஒருவன் கிறிஸ்துவின் நுகத்தை ஏற்று அவரிடமிருந்து கற்கவேண்டும் (11:29). இதற்குமுன், சட்டத்தின்பால் கொண்ட மனநிலையால் மனிதனின் முடிவிலா ஊழ் நிர்ணயிக்கப்பட்டது. இப்போதிலிருந்து அவன் இயேசுவின்பால் கொண்டிருக்கும் மனநிலையால் அது நிர்ணயிக்கப்படும் (10:32தொ). மோசேயைவிடப் பெரியவர் இங்கே உள்ளார். இதில் ஐயமே இல்லை, இறைவாக்கினர் முன் உரைத்த புதிய சட்டம் இப்போது அறிவிக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கிவிட்டது.

(2) தொடக்க கிறிஸ்தவத்தில் பிரச்சினை:-

1. யூத சட்ட அனுசரிப்பை அப்படியே இயேசு கண்டனம் செய்யவில்லை. கோயில் வரி (மத் 17:24-27) அல்லது பாஸ்கா சட்டம் (மாற் 14:12தொ) ஆகியவற்றைக் குறிப்பானவைகளில் அவரே பின்பற்றினார். இதைப் போலவே தொடக்கத்தில் அப்போஸ்தலிக்க சமூகமும் கோயில் வழிபாடுகளில் பங்கெடுத்தது (அ.ப. 2:46); இதற்காக யூத மக்கள் அவர்களைப்பற்றிப் பெருமையாகப் பேசினார்கள் (5:13). இயேசுவின் மாதிரியைப் பின்பற்றிச் (9:43) சிலவற்றில் ஓரளவு சுதந்தர உரிமை கொண்டாலும் சட்ட ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்தார்கள்; அதிகமான பக்திப் பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்தினார்கள் (18:77;21:23தொ). சட்டம் பற்றிய பக்திமான்களும் அவர்களிடையே இருக்கத்தான் செய்தனர்.

2. யூதப் பின்னணி இல்லாது, விருத்த சேதனம் பெறாத புறவினத்தார் விசுவாசத்தை நேரடியாகத் தழுவியபோது புதிய தொரு பிரச்சினை முளைத்தது. விசுவாசத்தாலும் ஆவியின் கொடையாலும் இறைவன் தூய்மைப்படுத்திய எல்லாம் தூய்மையானதே என்று ஏற்றுக்கொள்ளக் கட்டளை பெற்ற காட்சிக்குப்பின் பேதுரு தெளிவு பெற்று அவரே கொர்னேலியுவுக்குத் திருமுழுக்கு அளிக்கிறார் (அ.ப.10). தெய்வீகக் குறுக்கீட்டின் சாட்சிக்குமுன் சட்டத்தின்பால் ஆர்வமுடையவர்களின் எதிர்ப்பு மறைந்துபோகிறது (11:2தொ; 11:4-18). ஆனால் பர்னபாவும் பவுலும் துணைகொடுக்க (11:22-26), அதனால் பெரிய கிரேக்கர் கூட்டம் அந்தியோக்கில் மனந்திரும்புகிறது (11:20). இதனால் பிரச்சினை மீண்டும் கிளம்புகிறது. ஆனால் எருசலேமின் சில பார்வையாளர்களும், குறிப்பாக யாக்கோபின் கூட்டத்திலிருந்தவர்கள் (கலா 2:12) மனந்திரும்பியவர்கள் சட்டத்திற்குள்ளாக வேண்டும் (அ.ப.

15:1தொ.5) என்று கட்டாயப்படுத்தினார்கள். அந்தியோக்கியாத் திருச்சபையிடம் வருகையின்போது பேதுரு இதுபற்றிப் பின்னிடுகிறார் *(கலா 2:11தொ)*. அன்னிய மதத்திலிருந்து மனந்திரும்புகின்றவர்களுக்குச் சட்டக் கடைப்பிடிப்பிலிருந்து சுதந்தரம் வேண்டும் என்று பவுல் மட்டுமே ஊன்றி நின்று போராடுகிறார் *(கலா 2:14-21)*. எருசலேம் சங்கத்தில் பேதுருவும் யாக்கோபும் இதற்கு உடன்பாடு தெரிவிக்கின்றனர் *(அ.ப. 15:7-19)*. பவுலின் தோழர் தீத்து, விருத்தசேதனம் பெறவேண்டும் என்று வற்புறுத்தப்படக்கூட இல்லை. தாய்த்திருச்சபைக்கு ஈதல் வேண்டும் என்ற ஒரே நிபந்தனைதான் இருந்தது. *(கலா 2:1-10)*. சிரியாத் திருச்சபையில் சேர்ந்து அமர்வதற்கான செயல்முறைகள் ஏற்பாடாகின *(அ.ப. 15:20தொ;21:25)*. பிற மதத்திலிருந்து மனந்திரும்பியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இச்சலுகையினால் சட்டத்தின்பால் ஆர்வம்கொண்ட சிலர் பவுலின் மேல் சினம் கொண்டவர்களாகவேதான் இருந்தனர் *(காண்.21:21)*.

(3) பவுலின் சிந்தனை:-

தூதுரைப் பயணங்களின்போது, யூதக் கிறிஸ்தவர்கள், முக்கியமாகக் கலாத்தியாவில், பவுலுக்கு எதிராகச் செயல்பட்டனர். எதிர்ப்புக் கூட்டத்தினர் தனியே எதிர்த் தூது அமைத்தனர் *(கலா 1:6தொ; 4:1தொ)*. இத்தகைய சூழ்நிலை சட்டம்பற்றிப் பவுலைச் சிந்திக்க வைத்தது.

1. பவுல் போதிப்பது ஒரே நற்செய்திதான். இதன்படி கிறிஸ்துவில் மனிதன் கொள்ளும் விசுவாசத்தால் மட்டுமே அவன் ஏற்புடையவனாகிறான். சட்டத்தின் செயல்களால் ஆவதில்லை *(கலா 2:16;உரோ3:28)*. இதில் இரண்டு முக்கியக் கருத்துக்கள் உள்ளன. முதலாவதாக, விருத்தசேதனம் *(கலா 6:12)*, காலக் கடைப்பிடிப்புகள் *(4:10)* போன்ற யூதச் சடங்கு அனுசரிப்புகள், இப்பொருளில், எல்லாம் வீண். இப்பொருளில் புரிந்து கொள்ளப்படும் சட்டம் பழைய உடன்படிக்கை சார்ந்ததாகும். அடுத்து, மனிதன் சட்டத்தை அனுசரிக்கும் தனது செயல்களினால் தன்னையே ஏற்புடையவனாக்குகிறான் என்பதைத் தாக்குகிறார். இது தவறான மீட்பியல் கொள்கை. இதற்கு மாறாக இயேசுவின் பலிமூலம் இலவசமாய் மனிதன் ஏற்புடையவன் ஆகிறான். இதுதான் உண்மை *(உரோ -3:21-26; 4;4தொ)*. இங்கும் ஒழுக்கம் சார்பான கட்டளைகள் தர்க்கத்திற்குரியவை.

2. இப்போதனையின் விளைவாக மீட்புத திட்டத்தில் சட்டத்தின் பங்கு என்ன என்று ஒரு கேள்வி முளைக்கிறது. சட்டம் என்பது கடவுளிடமிருந்து வருவது. இதுபற்றி ஐயமில்லை. வானதூதர்கள் வாயிலாக அது கொடுக்கப்பட்டதால் அதனுடைய நிலை குறைவானது *(கலா 3:19)*; இருந்தாலும் புனிதமிக்கது; ஆன்மீகமானது *(உரோ 7:12.14)*; இஸ்ராயேலின் தனிப்பட்ட சலுகைகளில் ஒன்று *(9:4)*. ஆனால் தானாகவே அது ஊனியல்பான மனிதனை மீட்க இயலாது *(7:14)*. அவன் பாவத்தின் அடிமையாவான். ஒழுக்க நெறியிலும்கூட அது நல்லது கெட்டது பற்றி அறிவிக்கிறதேயன்றி அதைச் செய்ய ஆற்றல் தருவதில்லை *(7:16தொ)*; பாவம் என்ன என்கிறது *(3:20;7:7;1 திமோ 1:8)*, அதனுடைய ஆற்றலிலிருந்து தப்புவது எங்ஙனம் என்கிறதில்லை. சட்டம் பெற்று அதனால் வரும் ஏற்புடைமையைத் தேடும் யூதர்கள் *(உரோ 9:31)* புறவினத்தாரைப் போலப் பாவிகளே *(2:17-24;3:1-20)*. தீமையிலிருந்து விடுவிக்காமல் சட்டம் அதற்குள்ளேயே தள்ளுகிறது; கிறிஸ்து ஒருவர் மட்டுமே எடுத்துக் கொண்டு மீட்பளிக்கக்கூடிய சாபத்தில் மனிதனை ஆழ்த்துகிறது *(கலா 3:10-14)*. சிறுபருவத்தில், தொடக்க காலத்தில் சட்டம் இறைமக்களுக்கு ஒரு வழிமுறையாகவும், துணையாசானாகவும் இருந்தது *(3:23தொ;4:1தொ)*. நீதியின் ஏக்கத்தை அவர்களுக்கு அளித்தது. அவர்களால் அதை அடைய முடியாதுதான். ஆயினும் ஒரு மீட்பர் தேவை என்பதை உணர்த்தியது.

3. மீட்பர் வந்துவிட்டதால் அதே வழிமுறை தேவையில்லை. இனி இறைமக்கள் அதற்குப் பணிய வேண்டியதில்லை (கலா

3:25). பாவத்திலிருந்து மனிதனை விடுவிக்கும் கிறிஸ்து *(உரோ 6:1-19)* சட்டத்தின் கண்காணிப்பிலிருந்து அவனை விடுதலை செய்கிறார் *(7:1-6).* மனச்சாட்சியைத் தீமையின் சிறைக்கைதியாக்கும் உள்ளார்ந்த முரண்பாட்டையும் அவர் அகற்றுகிறார் *(7:14-25).* இவ்வாறு சட்டத்தின் தற்காலிக ஆட்சி அவரில் முடிவு காண்கிறது; அவர் தான் சட்டத்தின் முடிவு *(10:4);* ஏனெனில் அவர்தான் விசுவாசிகளை விசுவாசத்தின் ஏற்புடைமைக்கு இணங்கச் செய்கிறார் *(10:5-13).*

அப்படியென்றால் கிறிஸ்துவில் விசுவாசங் கொள்வோர் இனிமேல் செயல்முறை ஒழுங்குகள் இல்லாதவர்களா? இல்லவே இல்லை. இஸ்ராயேலின் நிறுவனங்களைச் சார்ந்த நீதி சார்ந்த, வழிபாடு சார்ந்த ஒழுங்குகள் மறைந்தாலும் கட்டளைகளின் ஒழுக்க நெறி சார்ந்தவை இன்னும் நீடிக்கின்றன. அதே கருத்து அன்பெனும் கட்டளையில் கலந்து முழுமையான நிறைவு காண்கிறது *(13:8தொ).* பழைய கருத்து பிரிக்கப்பட்டு கிறிஸ்துவின் பிரசன்னத்தினால் மாற்றியமைக்கப்பட்டு, அவரின் மாதிரியில் புதுப் பொலிவு காண்கிறது. கிறிஸ்துவின் சட்டமாக *(கலா 6:2;காண் 1 கொரி 9:21)* இக் கருத்து மனிதனுக்குப் புறம்பாக அல்லாமல், கடவுளின் ஆவி மனித நெஞ்சங்களில் பதிக்கும் அன்பாகிறது *(உரோ 5:5 காண் 8:14தொ).* நடைமுறையில் இக்கட்டளைகளின் கருத்தை நிறைவேற்றுவது ஆவிசார்ந்த செயலேயாகும் *(கலா 5:16-23).* கிறிஸ்தவன் மேல் உள்ள இவ்வொழுக்கவியல் சார்ந்த கருத்தை இவ்வாறுதான் பவுல் கைக்கொள்கிறார். பல்வேறு ஒழுக்கச்சட்டங்கள் கிறிஸ்தவத் தூய்மையைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் பவுல் அவற்றை மேலும் கடினமான தாக்க இயலுகிறது *(1 தெச 4:3).* தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க, பவுலால் முடிகிறது. இயேசுவின் சொற்களில், தனிப்பட்டவர்க்கும் முடிவுகள் அவரால் சொல்ல முடிந்தது *(1 கொரி 7:10).* பழைய சட்டம் செய்ய முடியாததைப் புதிய சட்டம் உள்ளத்தில் பதிக்கப்பெற்றுள்ள உடன்படிக்கை வாக்குறுதிகளை நிறைவேற்றம் செய்கிறது *(2 கொரி 3:3).*

4. மற்ற அப்போஸ்தல நூல்கள்:-

1. வழிபாட்டு நோக்கில், சட்டத்தைக் (பழைய மீட்புமுறை) காண்கிறது.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம்:- சட்டம் கொடுத்து சடங்கு ஒழுங்குமுறைகளை நன்கறிந்து உள்ளார் இதன் ஆசிரியர் *(எபி 7:5தொ; 8:4;9:19.22).* மனிதனின் தூய்மைக்கென்று ஏற்பட்ட இச்சட்டம் அதனைச் செய்ய இயலவில்லை என்றும் அவருக்குத் தெரியும். எதையும் நிறைவு செய்ய அச்சட்டத்தால் முடியவில்லை *(7:19).* இயேசுவின் பலியின் குறையுள்ள மாதிரி என்ற அளவில், வரவிருக்கும் நன்மைகளின் உண்மை உருவை அதுகாட்டவில்லை; அதன் நிழலாகவே உள்ளது *(10:1).* இதற்கு மாறாகப், புதிய மீட்புச் செயலானது அந்த உண்மை உருவையே நமக்கு அளிக்கிறது. நாம் காணக்கூடிய உருவில் அதை அளிக்கிறது *(10:1).* இதனால்தான் தற்காலிக குருத்துவத்திற்குப் பதிலாக வந்த இயேசுவின் குருத்துவம் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது *(7:12).* இவ்வாறு நம் உள்ளங்களில் பதிப்பிக்கப்பட்ட இறைவாக்கு வாக்குறுதி நிறைவேற்றம் காண்கிறது *(8:10; 10:16).*

2. இயேசு போதித்துள்ள, ஒழுக்கச் சார்பான நோக்கில்தான் யாக்கோபின் திருமுகம் சட்டம் பற்றிப் பேசுகிறது. சட்டம் இயேசுவின் போதனையால் ஆதரவு பெற்றதாகும். இவ்வாறு புரிந்து கொண்டால் சட்டம் பழைய ஏற்பாட்டின் கூறு என்றும் ஆகவே ஒழித்துக் கட்டப்பட்ட ஒன்றாகவும் ஆகிறதில்லை. விடுதலை நல்கும் நிறைவான சட்டமாகும் அது. அதற்கு நாம் எக்காலத்தும் கட்டுப்பட்டிருக்கிறோம் *(1:25).* அதன் நிறைவின் உச்சி அன்பு பற்றிய மேலான கட்டளையாகும் *(2:8).* அதனுடைய மற்றைய ஒழுங்குகளையும் ஒதுக்கிவிடக் கூடாது. ஒதுக்கினால் ஒருவன் அதை மீறுகிறான். அதற்குத் தகுந்தாற்போல் தண்டனையும் பெறுவான் *(2:10-13; காண்.4:11).* பழை

யதைவிடப் புதிய சட்டம் மனிதனிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறது.

3. யோவானின் கூற்றுப்படி, சட்டம் என்பது மோசேயின் சட்டம் (யோவா 1:17.45; 7:19.23), யூதர்களின் சட்டம் (7:49.51; 12:34; 18:31; 19:7), இயேசு கூறுவதுபோல் ''உங்கள் சட்டம்'' (8:17; 1:34) ஆகியவற்றையே குறிக்கிறது. சட்டம் என்பதற்குப் பதிலாகக் கட்டளை என்ற சொல் இடம்பெறுகிறது. தனது தந்தையிடம் இருந்து பெற்றுள்ள கட்டளைகளை இயேசு கடைப்பிடிக்கிறார். ஏனெனில் அவைகள்தாம் முடிவில்லா வாழ்வாகும் (12:49தொ). தமது வாழ்வையே அளிக்க ஒரு கட்டளை பெற்றுள்ளார். இது தான் மகத்தான அன்புச்செயலாகும் (15:13). இந்தக் கட்டளையே அவருக்குத் தந்தை காட்டும் அன்பின் அடையாளமாகும் (10:17தொ). கிறிஸ்துவை விசுவசிப்பதிலும் (1 யோவா 3:13), உண்மையில் வாழ்வதிலும் (2 யோவா 4) அடங்கியுள்ள கடவுளின் கட்டளைகளைக் கிறிஸ்தவர்கள் அனுசரிக்க (1 யோவா 3:22) வேண்டும். இக்கட்டளைகள் யாவும் கிறிஸ்துவினுடையனவே. அவரின் போதனைகள் தந்தையிடமிருந்தே வருகின்றன (யோவா 7:16 தொ). கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதும் இயேசுவுக்குச் சான்று பகர்வதும் ஒன்றேதான் (திருவெளி 12:17; 14:12).

இயேசுவின் தனிப்பட்ட கட்டளைகளையும் நினைவுகூர்வதில் யோவான் அக்கறை கொள்கிறார். இயேசு தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவர் அன்பில் உறைவதுபோல (யோவா 15:10), இயேசுவை மெய்யாக அறிய, அவர் அன்பை நம்மில் கொண்டிருக்க (1 யோவா 2:50), அவர் அன்பில் உறைய (யோவான் 14:15; 2 யோவா 5), அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பதே உண்மையான அன்பின் அடையாளம் (யோவா 14:21; 1 யோவா 5:2 தொ; 2 யோவா 6). கடவுளை அன்பு செய்யும் பெருக்கிலிருந்து (1 யோவா 4:21) வழிந்தோடும் மிகப் பெரிய ஒன்று-பழைய புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் மேலானது - பிறர் அன்புபற்றிய கட்டளைதான் (யோவா 13:34; 15:12; 1 யோவா 2:7தொ). இவ்வாறு யோவானின் சாட்சி, பவுல் மற்ற நற்செய்தியாளர்கள் ஆகியோருடைய போதனையோடு இணைகிறது. பழைய சட்டப்படி இயேசு தண்டனை பெற்றபிறகு (யோவா 18:31; 19:7), அது ஒழிக்கப்படுகிறது. புதிய சட்டம் பிறக்கிறது. இயேசுவின் சொல்லிலிருந்து பிறக்கும் இது புது வகையானது. இந்தச் சட்டம்தான் கிறிஸ்தவர்களை வழி நடத்தும் ஒழுங்காக எக்காலத்திற்கும் நிலைத்திருக்கிறது.

சட்டைக்கை (SLEEVES)

கையினை மறைக்கும் சட்டைப்பகுதி, மணிக்கட்டுவரை கையினை மறைக்கக் கூடிய சட்டைப்பகுதி. இதை அழகு வேலைப்பாடு நிறைந்த என்றும் பல்வண்ண என்றும் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். ஆதி 37:3-இல் யாக்கோபின் புதல்வன் யோசேப்பு பல வண்ண அல்லது அழகுவேலைப்பாடு நிறைந்த அங்கியையும் அணிந்திருந்ததை அறிகிறோம். தாவீதின் மகள் தாமார் நீண்ட ஆடை அணிந்திருந்தாள் (2 சாமு 13:18-19) சட்டைக்கை இல்லாத சாதாரண உடையை உடுத்துவோரினின்று சட்டைக்கை உடை உடுத்துவோரைச் செல்வந்தர்களென்றும் மதிப்பிற்குரியவர்களென்றும் பிரித்துக் காட்ட இத்தகு உடை பழங்காலத்தில் பயன் பட்டது என்பதையும் அறிகிறோம்.

சணல் பயிறு (FLAX)

இது ஒரு செடிவகை. யாத் 9:31 (எகிப்திய பயிர்கள் அழிந்து போகின்றன) யோசு 2:6 (இராக்காபு ஒற்றர்களைச் சணல் தட்டைகளுக்குள் மறைத்து வைத்தாள்) போன்ற வாசகங்களில் மட்டுமே இச்செடி குறிப்பிடப்படுகிறது. நீதி 15:14-இலும் இச்செடி குறிக்கப்படுகிறது என்று கருத இடமிருக்கிறது.

வேறு இடங்களில் ஆடை நெய்யத்தயார் நிலையில் உள்ள நூலை அல்லது நெய்து முடிக்கப்பட்ட ஆடையைக்

குறிப்பிடுவதுபோலத் தெரிகிறது (எரே 13:1; எசே44:17-18). சிம்சோன் அவரது உடம்பில் கட்டப்பட்டிருந்த புதுக்கயிறுகளை அறுத்தெறிந்தபோது அவை ''நெருப்பில் எரிந்த சணலைப்போல்'' என்று குறிப்பிடப்படுகின்றன (நீதி 15:14). நல்ல மனைவி ''கம்பளி, சணல் ஆகிய பொருட்களைத் தானே தேடிக் கொள்வாள்; தன் வேலையனைத்தையும் மகிழ்ச்சியுடன் தானே செய்வாள்'' (பழ 31:13). ''மெல்லிய சணலாடை செய்வோர்... வெட்கி நாணுவர்'' என்று எசாயா இறைவாக்கு உரைக்கிறார் (எசா 19:9). 'சணல் பட்டுக்கயிறும், ஓர் அளவுகோலும் வைத்துக் கொண்டிருந்த' மனிதனை எசேக்கியேல் கண்டார் (எசே 40:3). வேசித்தாய் (இஸ்ராயேல்) மயிராடையையும், சணலாடையையும் தன் காதலர்களிடமிருந்து பெற்றாள், கடவுள் அவைகளை எடுத்துவிடுவார் (ஓசே 2:7).

சணலிலிருந்து செய்யப்பட்ட புகையும் திரி எசா 42:3-இல் குறிக்கப்படுவதாகத் தெரிகிறது (மத் 12:20). தேர்ப்படைகளையும், வீரர்களையும் ஆண்டவர் ''திரியை அணைப்பதுபோல் அழித்தார்'' என்று (எசா 43:17) குறிப்பிடப்படுகிறது.

விதைகள் முற்றியவுடன் இச்செடிகள் பிடுங்கப்படுகின்றன. உலர்த்தப்பட்டு விதைகள் அகற்றப்படுகின்றன. பிறகு அதனுடைய நார்கள் தளர்வதுவரை உலர வைக்கப்படுகின்றன. திரும்பவும் உலர்த்தப்படுகின்றன. அதன் 'சணலைச் சுத்தப்படுத்தும் சீப்பை உபயோகித்துச்' சணல் உள்தண்டிலிருந்து பிரித்தெடுக்கப்படும், பிறகு சணலைச் சுத்தப்படுத்தி ஆடை நெய்வதற்கு ஏற்ற நூலாக மாற்றுவார்கள். சுத்தப்படுத்தும்போது சிறிய நூல்கள் பழுதான நூல்களாகக் கருதப்படும். இது நீதி 16:9; எசா 1:31-இல் குறிப்பிடப்படுகிறது.

கி.மு. பத்தாம் நூற்றாண்டில் கெசேர் நாட்காட்டியில், சணல் செடியின் அறுவடை மாதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சதுசேயர்கள் (SADDUCEES)

சதுசேயர்கள் எப்போது எவ்விதம் ஒரு பிரிவினராகத் தோன்றினர் என்பது பற்றி நாம் ஒன்றையும் உறுதியாகக் கூறமுடியாது. ஒருவேளை அந்தியோக்கு எப்பிபான் காலம் வரையில் குருக்களாக இருந்தவர்களின் மூதாதையரான சாதோக்கு என்பவரின் பெயரிலிருந்து சதுசேயர் என்ற பெயர் தோன்றியிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவர்கள் யூத மதத்திலிருந்து பிரிந்து வாழ்ந்தவர்கள் அல்லர்; யூத மதத்தின் ஒரு போக்கைச் சார்ந்தவர்கள். புதிய ஏற்பாட்டிலிருந்தும் யோசிப்பசின் நூலிலிருந்தும் இவர்களைப் பற்றிச் சிறிது அறிகிறோம். மற்றச் சான்றுகள் நமக்குக் கிடைத்தில. இவர்கள் பல சமயங்களில் அரசியலில் ஈடுபட்டாலும், இவர்களை அரசியல் பிரிவினர் என்பதைவிட மதப்பிரிவினர் என்று கூறுவதே நன்று.

குருக்கள் குலத்தினர் பலரும், எருசலேமில் வாழ்ந்த செல்வர்களும், உயர் குடிமக்களும் இந்தப்பிரிவைச் சேர்ந்தவர்கள். யோவான் இரிக்கான் காலத்தில் சதுசேயர் ஒருபிரிவினராக அல்ல, ஒரு கட்சியினராகத் திகழ்ந்தனர். இவர்கள் குருக்கள் குடும்பங்களையும் செல்வந்தர் குடும்பங்களையும் சார்ந்தவர்களாதலால், இயல்பாகவே சமூக வாழ்வில் பங்கெடுத்தனர்; அரசியலில் ஈடுபட்டனர். பரிசேயர் செல்வாக்கு வலுத்த காலங்களில், அவர்களை எதிர்க்கச் சதுசேயர் தயங்கியதில்லை. பெரிய ஏரோது பரிசேயரையும் சதுசேயரையும் கடுமையாக நடத்தினார். சதுசேயர் கிரேக்க மரபுகளையும் பண்பாட்டையும் பெரிதும் விரும்பினர். அப்பண்பாட்டின் அடிப்படையில் சுகபோகங்களை அனுபவிக்கத் தவறியதில்லை. யூதேயா உரோமைப் பேரரசுடன் நேரடியாக இணைக்கப்பட்டபின், ஆளும் கட்சியினரோடு ஓரளவு ஒத்துப் போகும் கொள்கையைக் கடைப்பிடித்தனர். வெளிப்படையாக உரோமை ஆளுநர்களுடன் ஒத்துழைக்காவிட்டாலும், அவர்களோடு கடுமையாக மோதுதலையும், பிற சச்சரவுகளையும் தவிர்த்தனர். கி.பி. 6-இலிருந்து 70-வரை

சதுசேயரைச் சேர்ந்தவர்களே பெரிய குரு பதவியை வகித்தனர். எருசலேமின் அழிவுடன் இப்பிரிவினரும் அழிந்தனர். அதற்குப் பின் இவர்களைப் பற்றி நாம் கேள்விப்படுவதில்லை.

இவர்களது மதக்கொள்கையைக் கவனிக்குங்கால், சதுசேயர், ஆலயப் பணியில் ஈடுபட்டவர்களாதலால், ஆலயப்பணிப் பாரம்பரியத்தைப் பின்பற்றினர். புனித எரோனிமு ஓரிசன் ஆகியோரது கருத்துப்படி இவர்கள் ''தோரா'' எனப்படும் விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களை மட்டுமே வேத நூலாக ஏற்றுக்கொண்டனர். அதன்படி தங்கள் விசுவாசத்தையும் அறவாழ்க்கையையும் அமைக்க முயன்றனர். மதகாரியங்களில் இவர்கள் மிதவாதிகள்; பழைமைப் பற்றுடையவர்கள்; மதக்கொள்கை வளர்ச்சியையும் மரபு வழக்குகளையும் ஏற்க மறுத்தனர். ஆகையால்தான் இயேசு இவர்களோடு வாதாடுகையில் ''தோரா''விலிருந்து மட்டும் சான்றுகாட்டுகிறார் (மத் 22:23தொ). இறந்தபின் உயிர்ப்பு, தீர்ப்பு, ஆன்மாவின் அழியாமை, வானதூதர்கள் உண்மை முதலியவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். மன்றங்களில் நீதி வழங்குகையில் ''தோரா''வில் கூறப்பட்டவைகளைச் சொற்பொருளில் பிரமாணிக்கமாய்க் கடைப்பிடித்தனர். பரிசேயர்களைச் சார்ந்த போதகர்களைவிட, இவர்கள் தண்டனைச் சட்டங்களைக் கடுமையாய்ச் செயல்படுத்தினர். சாதாரண மக்களுடன் இவர்கள் அகந்தையோடும் கடுமையாகவும் நடந்து கொண்டனர். ஆனால் தங்களது பிரிவினருக்குச் சலுகை காட்டினர். உலகில் தங்களுக்குக் கிடைத்துள்ள உயர்நிலையைப் பற்றி மனநிறைவு கொண்டிருந்தனர். ஆகையால் இறையரசு வருகைபற்றி இவர்கள் அவ்வளவு கவலைப்படவில்லை. அதனை எதிர்பார்க்கவுமில்லை. மெசியாவைப் பற்றிய நம்பிக்கையை இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களுக்குக் கிடைத்திருந்த சலுகை நிறைந்த நிலையைப் பாதுகாத்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். ஆகையால் யார் ஆண்டாலும் அவர்களோடு ஒத்துப்போகத் தயாராக இருந்தனர். இதன் காரணமாக இவர்கள் மக்களது மத வாழ்விலோ, ஒழுக்க வாழ்விலோ ஒரு செல்வாக்கும் பெற்றிருக்கவில்லை.

இவர்களில் நேர்மைமிக்கவர்கள் பலர் இருந்தனர். எருசலேம் அழிந்தபோது, தங்களது ஆலயப்பணியைப் பெரிதாக மதித்து, அதற்காகத் தங்களது உயிரையும் அளித்த பல குருக்களைப் பற்றி அறிகிறோம். ஆலயத்திற்கும் சட்டத்திற்கும் பிரமாணிக்கமாய் இருந்து, தங்களது குருதியைச் சிந்தி, இக்குருக்கள் தங்களது ''தேவ அழைத்தலுக்கு''த் தகுதியுடையவர்கள் ஆனார்கள்.

நற்செய்தியில் பரிசேயர்களையும், சதுசேயர்களையும் திருமுழுக்கு யோவான் கண்டிக்கிறார் (மத் 3:7). இவ்விதமே இயேசுவும் இவர்களைக் கண்டிக்கிறார் (மத் 16:1-12). இயேசு இவர்களை ஒருதடவை மட்டுமே நேருக்குநேர் சந்திப்பதாக நற்செய்தியில் வாசிக்கிறோம் (மத் 22:23தொ; மாற் 12:18-27; லூக் 20:27. 40). இந்நிகழ்ச்சியில் பழைய ஏற்பாட்டுத் திருமண முறையைப் பற்றிக் கேள்வி கேட்கின்றனர். அக்கேள்வி இயேசுவுக்கு வைக்கப்பட்ட பொறியாகும். அதனோடு தாங்கள் விசுவசியாத உயிர்ப்பை நகைப்புக்குரிய ஒரு செய்தியாக ஆக்கவேண்டும் என்பதும் அவர்களது நோக்கம். இயேசு இவர்களுக்கு அளித்த பதிலைக் கேட்டு மறைநூல் அறிஞர்களும் பரிசேயர்களும் வியந்ததாக வாசிக்கிறோம். அப்போஸ்தலர் பணியில் சதுசேயர் அப்போஸ்தலர்களை மிகுந்த பகையுடன் நடத்தினர் (அ.ப. 4:1.5.17) என்று வாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள் இயேசுவின் நற்செய்தியைப் போதிக்காதிருக்க அவர்களைச் சதுசேயர் சிறைப்படுத்தினர். பரிசேயருக்கும் சதுசேயருக்கும் இடையேயுள்ள மதக்கொள்கை வேற்றுமையைப் பயன்படுத்தி, புனித பவுல் தம்மேல் கொண்டுவந்த தாக்குதலைத் தவிர்த்ததாக அறிகிறோம் (அ.ப. 23:6-8).

இயேசுவின் மரணத்திற்கு மற்ற யாவரையும்விடச் சதுசேயர் பொறுப்பாளி ஆவர். தங்கள் உலகியல் அதிகாரம் பறிபோய்

விடுமே என்ற அச்சத்தில் தங்களது மெசியா வைக் கொல்லவும் இவர்கள் தயங்கவில்லை.

சதுப்பு நிலம் (SWAMP, MARSH)

ஆலயத்திலிருந்து புறப்படும் ஓடை நீரால் வளமை பெறாமல் உப்பளங்களாக விடப் படும் சதுப்பு நிலங்கள் எசே 47:11-இல் குறிக் கப்படுகின்றன. சாக்கடலை ஒட்டிய பகுதி யில் தவிர, பாலஸ்தீனத்தில் சதுப்பு நிலங் கள் இல்லை எனலாம். யோபு 8:11;40:21-இல் குறிக்கப்படும் நிலம் எகிப் திய சதுப்பு நிலங்களைக் குறிக்கலாம். அப் பகுதியில் நாணலும் கோரையும் வளர்ந்தன; பெகிமோத்து விலங்கு (யோபு 40:15-24) அங்கே காணப்படலாம்.

சத்தாய் (SHADDAI - மலையானவர்)

காண்க. ஏல் சத்தாய்.

சத்து (ZATTU - கிளை)

அடிமைத் தளையிலிருந்து செருபாபே லோடு நாடு திரும்பிய சாதாரணக் குடும்பங் களில் ஒன்றின் தலைவன் அல்லது குலப்பெ யர் மூதாதையர் (எஸ் 2:8; 8:5; நெகே 7:13). எஸ்ராவின் அந்நிய திருமண ஒழிப்புச் சட் டத்தின்படி இவர்களில் சிலர் அந்நிய மனை வியரையும், பிள்ளைகளையும் விலக்கிவிட் டனர் (எஸ் 10:27). இந்தக் குடும்பத்திற்கு அப்பொழுது தலைவனாக இருந்தவர் இந்தச் சீர்திருத்த உத்தரவில் கையொப்பமிட்டார் (நெகே 10:14).

சந்திப்பு (VISITATION)

I. மீட்பின் வரலாறானது தனது மக்கள் அல்லது சில சலுகைக்குரிய நபர்களுடனான ஆண்டவருடைய சந்திப்புகளின் தொடராக விவிலியத்தில் அடிக்கடி காட்டப்படுகிறது. உடன்படிக்கையில் முன்முயற்சி எடுத்தவ ரும், தமது திட்டத்தின் வளர்ச்சியில் மறை வான வடிவில் இருப்பவருமான இறைவன், ஆசிர்வதிக்கவோ தண்டிக்கவோ, ஆனால் எப்போதுமே காப்பதற்காகத் தனது மக்களின் வாழ்வில் அசாதாரண முறையில் அடிக்கடி தலையிடுகிறார். இந்தத் தலைமைக்குரிய கவனமும், இத்தகைய காணக்கூடிய தனிப் பட்ட தலையீடுகளும், இறைவனின் பிரசன் னம் மற்றும் செயல்கள், அவரது மீட்புத்திட் டத்தின் தொடர்ச்சி, அவரது மக்களுடைய நிலையற்ற வரலாறு முழுவதிலுமான அவ ரது கோரிக்கைகள் ஆகியவற்றின் அடையா ளங்களாக உள்ளன. இறைத்தலையீடுகள் என் பவை இயேசுவிலும், மீட்பினுடைய இறுதி யான செயலில் இறுதித் தீர்ப்பின்போது மகிமை மிக்க மறுவருகையிலும், இறை வனே வருதலாக மிக மேலானவிதத்தில் ஆண்டவரின் நாளுக்குத் தயாரிப்பதாகவும், அதை அறிவிப்பதாகவும் உள்ளன.

II. பழைய ஏற்பாடு

1. "கடவுள் உங்களைச் சந்தித்து, உங் களை இந்நாட்டிலிருந்து தாம் ஆபிரகாம் ஈசாக், யாக்கோபு ஆகியோருக்கு வாக்களித் திருக்கும் நாட்டிற்குப் போகச்செய்வார்" (ஆதி 50:24). பெரிய மக்கள் திரளுக்குத் தந்தையாக்குவதற்கென ஆபிரகாமை அழைத்தவரும், இந்நோக்கத்திற்காகச் சாரா வைச் சந்தித்து அவளைத் தாய்மையடையச் செய்தவருமான இறைவன் (21:1.2), தனது மக்களை எகிப்திலிருந்து விடுவிப்பதன் மூலம் தனிச்சிறப்பான முறையில் தலையிடு கிறார். தனது மக்களை அன்பு செய்து காக் கின்ற இறைவனின் சந்திப்புகள், இஸ்ராயே லின் வரலாறு முழுவதும் மீண்டும் உருவாக் கப்படும். அவை தனது வாக்குறுதிகளுக் கான யாவேயின் பிரமாணிக்கத்தின் நூலாக வும் இழையாகவும் உள்ளன. உடன் படிக்கையின் மீது பிரமாணிக்கமற்ற இஸ்ரா யேலர்பால் எரிச்சல் கொள்ளும் இறைவ னின் தலையீடானது தண்டனையின் வடிவை ஏற்கின்றது: ஆயினும் தலையீடா னது மக்களுடைய மீட்பை நோக்கியே திரும்பியுள்ளது. எல்லா இறைவாக்கினர் களும், குறிப்பாக எரேமியா, ஆண்டவரு டைய தலையீடுகளைப் பல்வேறு ஒழுங்கு முறைகளிலும், நிகழ்வுகளிலும் உபயோகிக் கின்றார். வெற்றிகள் என்பவை தனது விசுவாசிகளை ஆசீர்வதிக்கும் இறைவனு டைய சந்திப்புகளாக உள்ளன (செப் 2:7).

அதே போன்று இடையூறுகள் எனப்படுபவை, தன்னிடம் மீண்டும் நடத்திக் கொண்டு வருவதற்கென இஸ்ராயேலரையும் அவர்களது தலைவர்களையும் திருத்துகின்ற இறைவனுடைய சந்திப்புகளாகும். ''உலகத்திலுள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களைத்தான் நாம் சிறப்பாக அறிந்து கொண்டோம்; ஆதலால் உங்கள் தீச்செயல்கள் அனைத்திற்காகவும் நாம் உங்களைத் தண்டிப்போம் (ஆமோ 3:2; ஓசே 4:9;எசா 10:3;எரே 6:15;23:2.34). தன் மந்தையைப் பார்வையால் கண்காணிக்கும் மேய்ப்பனின் மேற்பார்வை என எசேக்கியேல் இச்சந்திப்பை விவரிக்கிறார் (எசே 34). எனவே, சந்திப்பானது எப்போதும் இறைவனின் அன்பிலிருந்து புறப்பட்டு, மக்களின் மீட்பை நோக்கிச் செலுத்தப்படுகிறது. மீட்பின் இறைத்திட்டத்தையே எதிர்க்கின்ற அயல்நாடுகளாகிய மோவாபு, எகிப்து மற்றும் குறிப்பாகப் பாபிலோன், முதலியனவும், இறைவனால் சந்திக்கப்படும். நீதிபதியான இறைவன் அவர்களைத் தண்டிப்பார் (எசே 46:21;48:44;50:18;27:31). ஆனால் இறுதியாக அவர்களைக் காத்தருள்வார் (எரே 12:14-17;16:19தொ). எகிப்திலிருந்தான மீட்புப் போன்று நாடு கடத்தலிலிருந்து மீண்டும் நாடு வருவதும் ஆண்டவரது செயலாகும். ''பாபிலோனில் எழுபது ஆண்டுகள் முடிந்தபின், நாம் உங்களை வந்து சந்திப்போம்; உங்களை இந்த இடத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்போம் என்று உங்களுக்கு நாம் கொடுத்த வாக்கைநிறைவேற்றுவோம்'' (எரே 29:10;32:5;சங் 80:15; செக் 10:3).

2. பின்னர் ஒவ்வொரு யூதனும், இறைவனுடைய தனிப்பட்ட கவனத்திற்குரியவன் தான் என்பதை அதிகமாக உணர்ந்திருப்பான். ''ஆண்டவரே, நீர் உம் மக்கள் மீது இரக்கம் காட்டும்போது என்னை நினைவு கூரும்: உமது உதவியை எனக்குத்தாரும். அப்போது உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குள்ள பெரும் பேற்றைக்கொண்டு நான் இன்புறுவேன்'' (சங் 106:4-5). தனிப்பட்ட சந்திப்புகள் வழிபாட்டின் அதிகார எல்லைக்குள் கட்டுப்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் ஞானிகளின் நடத்தையைப் பரிசோதிப்பதன்மூலமும் (யோபு 7:8; சங் 17:3) அல்லது கனவுகளை அனுப்புவதன் மூலமும் அவர் ஒளிர்விப்பார் (சீரா 34:6; ஆதி 20:3).

மிகக்குறிப்பாக நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர், வெளிப்பாட்டின் முன்னோக்கிய தர்க்கமானது உறுதியான சந்திப்பின் அறிவிப்பிற்கு மனதைத் திறக்கிறது. மக்களையும் நாடுகளையும் தீர்ப்பிட இறைவன் வருவார். நாடு கடத்தப்படுவதற்கு முன்பே இறை வாக்கினர்களால் அறிவிக்கப்பட்ட யாவேயின் அந்நாளானது, இறைவனுடைய வருகை, சந்திப்பு மற்றும் ஆட்சியால் காக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய வெற்றியின் நாளாக இருக்கும். உரிமையால் இது அனைத்து மக்களுக்கும் பரவும். ''கடவுளின் வருகைக் காலத்தில் அவர்கள் சுடரொளி வீசுவார்கள்... ஆண்டவர் அவர்கள் மேல் என்றென்றும் ஆட்சி செலுத்துவார்' (ஞான 3:7; சீரா 2:14). இந்நம்பிக்கையில் முதல் நூற்றாண்டின் யூதர்கள் வாழ்வர் (உம். கும்ரான்). இயேசு வந்து அரசினைப் போதிக்கும்போது, இறை சந்திப்பிற்கான வாக்குறுதியும் நம்பிக்கையும் உண்மையாக உருவாகப்போகிறது.

■. புதிய ஏற்பாடு

1. ''இஸ்ராயேலில் கடவுளான ஆண்டவரைப் போற்றுவோம்; ஏனெனில் தம் மக்களைத் தேடிவந்து விடுவித்தருளினார்'' (லூக் 1:68). இறைவன் அன்பினாலும் (1:78) தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசையினாலும் தூண்டப்படுகிறார். மனிதரைக் காப்பாற்ற இயேசுவின் வடிவில் அவர் வருகிறார். இவ்வாறு இறைவன் மனிதனுடைய நம்பிக்கைகளை நிறைவேற்றி அவனது வேண்டுதல்களுக்குப் பதிலளிக்கிறார். இதுவே முழு நற்செய்தியிலும் பரவியுள்ள மையக்கருத்தாகும். இயேசுவிலான இறைவனது வருகைக்காகவும், வெளிப்பாட்டிற்காகவும் இதயங்களைத் தயாரிக்க வந்தவராக, இறைவாக்குகளின் ஒளியில் முன்னோடியானவர் தோன்றுகிறார். யோவான் இறுதிக்காலத் தீர்ப்பைப்

போதித்து அரசின் வருகையைப் பற்றி அறிவிக்கிறார். இயேசுவும் தமது வருகையின் மீட்புப்பண்பையும், தன்மையையும் முதன்மையாக வலியுறுத்துவார். அனைத்து மனுடலுக்கும் அளிக்கப்பட்ட வருகையாக இருந்தாலும் (லூக் 3:6;1 பேதுரு 2:12), அதனை அறிந்து கொள்ளக்கூடிய தூய இதயங்களால் மட்டுமே பெறக் குறிக்கப்பட்டதாக உள்ளது. ''நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார்'' (லூக் 7:16). ஆனால், இந்த வருகை உலகளாவிய விளக்கமாக இருக்காது; ஏனெனில் புதுமைகள் நிகழ்ந்தாலும் இயேசுவிலான இறைவனின் வருகையானது, முழுமையாக, உள்ளடக்கும் மின்னல் கீற்றாக இருப்பதில்லை. இச்சந்திப்பினை ஏற்காமல் மறுக்கவும் முடியும்.

இறைவனுடைய சந்திப்பின் இந்த நாடகப்பாணித் தன்மையானது நற்செய்தியாளர்களால் குறிப்பாக யோவானால் வலியுறுத்தப்படுகிறது; ''தமக்குரிய இடத்திற்கு வந்தார்; அவருக்குரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை'' (யோவா 1:11). இயேசுவை ஏற்க மறுக்கும் இக்குற்றம் அருளைத் தண்டனையின் அச்சுறுத்தலாக மாற்றும். ''சந்திப்பின் காலத்தை'' அறிய முடியாதவர்களுக்கு ஐயோ கேடு; ''எருசலேமிற்கு ஐயோ கேடு'' (லூக் 19:43-44). ஏரிக்கரை நகரங்களுக்கு ஐயோ கேடு. புறவினத்தாருடைய மனப்பான்மைக்கு முரண்பட்ட இந்த யூதரின் நிராகரிப்பானது (மத் 8:10தொ). பழைய ஏற்பாடு முழுவதும் யாவேயின் சந்திப்புகளை ஏற்க மறுப்பது, மற்றும் புறக்கணிப்பது ஆகிய நீண்ட வரிசையில் இறுதியான துன்ப நிகழ்ச்சியாக எடுத்துக்காட்டப்படுகிறது. திராட்சைக்கொடியின் ''கனிகளைச் சேகரிக்க''த் தந்தையால் அனுப்பப்பட்ட அரசனின் மகனை வரவேற்காதவர்களுக்கான தண்டனையானது பயங்கரமானதாக இருக்கும் (மத் 21:33-46). யூத உலகின் முடிவாகவும், இறைவனுடைய தண்டனையின் குறிப்பிடத்தக்க கட்டிக்காட்டுதலாகவும், அறியக்கூடிய முன்குறிப்பாகவும் உள்ள எருசலேமின் அழிவானது, மகிமையிலான தமது இறுதி வருகையைப்பற்றிப் பேசுகின்ற மனுமகனுடைய பயங்கரச் சந்திப்பாக உள்ளது (மத் 25:31-46).

2. ஒலிவக்கிளைகள் மீதான இயேசுவின் ''மகிழ்ச்சிகரமான நுழைவினால்'' முன்னுரைக்கப்பட்ட இறுதியான சந்திப்பிற்கு முன்னர், இயேசுவின் செயலானது அப்போஸ்தலர்களுடைய பணியினாலும், ஆவியை அனுப்புவதனாலும் திருச்சபையில் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆசிய சமூகத்தினர் தங்களுடைய வழிகளை மாற்றாவிடில் அவர்களைத் தண்டிக்கத் தயாராயிருப்பவராவார் அவர். திருவெளிப்பாட்டில் காட்டப்படுவது போலத் (திருவெளி 2-3) திருச்சபையின் வாழ்வில் ஆண்டவரே நிலையான நடுவராக உள்ளார். வரவிருக்கும் கிறிஸ்துவிற்கு முன்னால் நாம் ஒரு குழுவாகச் செல்ல வேண்டியிருந்தாலும் (1 தெச 4:17; மத் 25:6), கிறிஸ்துவைப் பின்செல்லும் ஒவ்வொருவரும் இயேசுவின் சந்திப்பை வரவேற்கத் தனிப்பட்ட முறையில் அழைக்கப்படுகின்றனர்; ''ஆகவே தனக்கெனக் காத்திருப்பவர்களுக்கு மீட்பை அளிப்பதற்காக இரண்டாம்முறை இயேசு தோன்றவிருக்கின்ற'' (எபி 9:28), எவருமேயறியாத, அந்நாள் வரை கிறிஸ்துவைப் பின்செல்பவர் விழித்திருந்து (மத் 24:42தொ; 25:1-13) செபிக்கவேண்டும்.

சந்திப்புக்கூடாரம் (TENT OF MEETING)

ஐந்நூலில் திருஉறைவிடத்தைக் குறிக்க எலோயீம் பாரம்பரியமும் (பல தடவை) குருக்கள் பாரம்பரியமும் (130 தடவை) வழங்கிய பெயராகும் (யாத் 33:7; எண்11:16; 12:4; உப 31:14).

சந்தைவெளி, பொதுவிடம் (MARKET PLACE)

பழங்கால நகர்களில் சந்தையிடம் என்பது பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் மட்டும் இடமன்று. அங்கு, பொதுக் கூட்டங்களும் தர்க்கங்களும் நடக்கும். கிரேக்க நகரங்களில் மைய வளாகம் சந்தை

யாகவும் பயன்பட்டது. பழங்காலப் பாலஸ்தீன நகர்களில் இதற்கு நகரவாயில் பயன்பட்டது (சங் 50:11;பழ 1:20;7:12).

நற்செய்தியில் கூறப்படும் சந்தைவெளிக்கும் அப்போஸ்தலர் பணியில் குறிப்பிடப்படும் பொது இடத்திற்கும் வேறுபாடு உண்டு.

நற்செய்தியில் கூறப்படும் ''சந்தைவெளி'' கடைகள் நிறைந்த வீதியாகும். இங்கு, சிறுவர்கள் அமர்ந்து தம் தோழரைக் கூவி அழைப்பார்கள் (மத் 11:16; லூக் 7:32). மக்கள் நோயுற்றோரைக் கிடத்தினார்கள். இயேசு அவர்களைக் குணப்படுத்தினார் (மாற் 6:56). மக்கள் இங்கே வீணே நின்றுகொண்டிருந்தனர் (மத் 20:3). மறைநூல் அறிஞர்கள் வணக்கம் செலுத்தப்பட்டனர் (மாற் 12:38). பரிசேயர்கள் இந்த இடங்களில் வணக்கத்தை விரும்பினர் (லூக் 11:43). சந்தைவெளிகளிலிருந்து வந்தபின், தங்களைத் தூய்மை செய்யாமல் உணவு உண்ணமாட்டார்கள் (மாற் 7:4).

அப்போஸ்தலர் பணியில் குறிப்பிடப்படும் இரண்டு பொது இடங்கள் பிலிப்பி (அ.ப.16:19) ஏதன்சு (அ.ப.17:17) ஆகிய கிரேக்க நகரங்களில் இருந்தன. இவை பொது வாழ்வின் மையங்களாகும். இவை சிலைகள் நிறைந்த திறந்த வெளியாகும். இவற்றைச் சுற்றிலும் பல கோயில்களும், பெரிய கட்டடங்களும் இருந்தன. நகரத் தலைவர்கள் முன் நிறுத்த பவுலையும், சீலாவையும் பொது இடத்திற்குத்தான் அழைத்துச் சென்றனர். பவுல் ஏதன்சு நகரப் பொது இடத்தில் விவாதித்து வந்தார்.

சபக்தானி (SABACHTHANI - ஏன் என்னைக் கைவிட்டீர்)

காண்க. ஏலி, ஏலி, சபக்தானி

சபத்தாய் (SHABBETHAI - ஓய்வுநாளில் பிறந்த)

1. இவர் புறவினப் பெண்களை மனைவியாக வைத்திருப்பதற்கு எதிராகவுள்ள சாசனத்தை எதிர்த்தவர்களுள் ஒரு லேவியர் (எஸ் 10:15).

2. எஸ்ரா சட்டத்தை வாசித்தபோது, மக்களுக்கு அதை விளக்கிக் காட்டியவர்களுள் ஒரு லேவியர் (நெகே 8:7).

3. ஆலயத்தின் புறவேலைகளை மேற்பார்த்தவர்களில் ஒருவர். லேவியரின் தலைவர் (நெகே 11:16).

சபனத்து பனேகா (ZAPHENATH - PANEAH)

பார்வோன் அரசன் யோசேப்பை உயர்பதவிக்கு உயர்த்தியபொழுது இவருக்கு அவர் இட்டபெயர் (ஆதி 41:45). விவிலியக் கதைகள் பெயரை மாற்றுவது என்பது ஒரு சாதாரண வழக்கு. இருப்பினும் இப்படிப்பட்ட பெயர் மாற்றம் எகிப்திய உயர் பதவியில் அவசியமில்லை. எகிப்திய அரசியல் ஏடுகளில் பல நல்ல செமித்தியப் பெயர்கள் உள்ளன (உ.ம்.பாகால்-மாகார், யான்கமு, யாக்கோபு-கார்). கைச்சோசியர்களிடையே எகிப்தியப் பெயர்களை எடுத்துக்கொள்ளும் வழக்கம், குறிப்பாக அரச பதவி ஏற்கும் போது, இருந்திருக்கிறது.

இப்பெயரின் பொருளைப்பற்றி நிறைய வேறுபாடுகள் உள்ளன. ''கடவுள் பேசுகிறார்; (அப்பெயரைக் கொண்டிருப்பவர்) வாழ்கிறார்,'' என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு பொருளாகும். ஆனால் இப்பொருள் விளக்கம் யோசேப்புக்கும் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும்.

சபாய் (ZABBAI)

1. அன்னிய மனைவியை மணந்து கொண்டிருந்த ஒரு இஸ்ராயேலர் (எஸ் 10:28).

2. எருசலேமின் சுவரின் ஒரு பகுதியைப் பழுதுபார்க்க உதவிசெய்த பாரூக்கின் தந்தை (நெகே 3:20). இவர் 1-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

சபிக்கப்படுதல் (ACCURSED, ANATHEMA)

1. சபிக்கப்படுதலின் செமித்திய மூலச் சொல்லாகிய 'கேரேம்' ஒதுக்கிவைத்தல், புனித உபயோகத்திற்காக விலக்குதல் என்று பொருள்படும். விவிலியத்தில் இதனுடைய உபயோகமானது இறைவனுக்காகத் திருநிலைப்படுத்தப்படுதலைக் குறிக்கும்.

II. *பழைய ஏற்பாடு:-*

பழைய நூல்களில், இஸ்ராயேலானது தனது அயலாராகிய மோவாபியர் போன்றவர்களுடன் பொதுவாகக் கொண்டுள்ள சபித்தலின் வழக்கமானது, வெல்லப்பட்ட பகைவனைக் கொல்வதாக மட்டுமில்லாமல், புனிதப்போரின் சமய விதிகளில் ஒன்றாகவும் இருந்தது. வெற்றியை அடைவதற்கென, ஆண்டவரின் போர்களில் ஈடுபட்டுள்ள இஸ்ராயேலானது, கொள்ளைப் பொருளைச் சாபத்திற்குரியதென உறுதிமொழி ஏற்கிறது. அதாவது, அதனின்று எவ்வித இலாபத்தையும் அடைவதை விட்டுவிட்டு, ஆண்டவருக்கு அதனை ஒப்புக்கொடுக்க உறுதிமொழி எடுக்கிறது (எண் 21:2-3; யோசு 6). இந்த ஒப்புக்கொடுத்தலானது வாழும் உயிர்கள் மற்றும் பருப்பொருள் முதலிய கொள்ளைப்பொருளின் முழு அழிவையும் கொண்டுள்ளது. இது நிறைவேற்றப்படாவிடில், தண்டனை எதிர்பார்க்கப்படுகிறது (1 சாமு 15). இறை பழிப்புச் செயல் மூலம் மீறப்பட்டாலும், இது தோல்விக்கு இட்டுச் செல்லும் (யோசு 7).

உண்மையில் இதனுடைய செயல்பாடானது அரிதானதாகத் தோன்றுகிறது. கெசேர் (யோசு 16:10; 1 அர 9:16) அல்லது எருசலேம் (நீதி 1:21; 2 சாமு 5:6-7) போன்ற பெரும்பான்மையான கானானிய நகரங்கள் இஸ்ராயேலரால் கைப்பற்றப்பட்டன (யோசு 24:13; நீதி 1:27-35). கிபயோன் (யோசு 9) மற்றும் செக்கேம் (ஆதி 34) போன்ற சில நகர்கள் இஸ்ராயேலோடு உடன்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டன.

சபித்தலானது பாலஸ்தீனம் கைப்பற்றப்பட்ட போது ஈடுபடுத்தப்படவில்லை என்பதை உப ஆகம வரலாற்றாசிரியர்கள் அறிந்திருந்தனர் (நீதி 3:1-6; 1 அர 9:21). ஆயினும் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களின் புனிதத்தை மீண்டும் அறிவுறுத்தவும், இஸ்ராயேலின் மீதான கானானிய சமயத்தின் சீர்குலைக்கும் தாக்கத்தை எதிர்த்துப் போராடவும், சபித்தலை ஒரு சட்டமாக்கினர்.

நாட்டைக் கைப்பற்றிய வரலாற்றை (உப 7:1-6) வெற்றி வரலாறாகப் படிப்படியான திட்டமிட்ட முறையில் எடுத்துக் கூறுவதற்கு இதுவே காரணமாகும். புனிதநாடு மற்றும் அதில் குடியிருப்போரின் மீதான ஆண்டவரின் தனிப்பட்ட மேலாண்மையானது ஆபத்தில் இருந்த நிலையில், பண்டைய சமயச் சட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றனர். ''கேரேம்'' என்ற சொல்லின் வளர்ச்சி அதனுடைய இரு கூறுகளின் பிரிவினைக்கு இட்டுச் செல்லுவதாகத் தோன்றுகின்றது: ஒரு புறம், குறிப்பாக ஆண்டவர்பால் காட்டிய பிரமாணிக்கமின்மையைத் தொடரும் அழிவு மற்றும் தண்டனை (உப 13:13-18; எரே 25:9); மற்றொருபுறம் குருக்கள் பாரம்பரியத்தில் காணப்படுவதுபோல் மீண்டும் வாங்குவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லாத அளவில், மனித உயிரையோ ஒரு புறப்பொருளையோ இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தல் (லேவி 27:28-29; எண் 18:14). இவை ஆண்டவருக்குரியன. ஆகவே அழிவிற்குரியன. (உப 7:26; 21:23; யோசு 6:17-18; 7:1.11-13.15; 22:20; சங் 119:21; எசா 65:20; மீக் 6:10; 1 நாள் 2:7).

III. *புதிய ஏற்பாடு:-*

புதிய ஏற்பாட்டில் புனிதப்போர் பற்றிய கேள்வியோ, பகைவரைச் சாபத்திற்கு உட்படுத்த உறுதிகொள்வதோ இனிமேலும் எழுவதில்லை. ஆனால், சாபம் என்ற பொருளின் இச்சொல்லானது தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது (லூக் 21:5-இல் எருசலேம் ஆலயத்தில் நேர்ச்சைக் காணிக்கைகளைக் குறிப்பிடுகின்றன).

உறுதிமொழிகளில் யூதரால் உபயோகிக்கப்படும்போது (மாற் 14:71 இணை; அ.ப. 23:12), பொய்ச்சத்தியம் செய்யும் சமயத்தில் ஒருவர் தனக்கெதிராகவே உரைக்கப்படும் சாபத்தைக் குறிப்பிடுகிறது.

பவுலின் நூல்களில், விசுவாசமற்றவர்களுக்கு எதிரான இறைவனின் தண்டனையை வெளிப்படுத்துகின்ற சாபத்தின் வடிவமாக இது உள்ளது (கலா 1:8-9; 1 கொரி 16:22).

இயேசுவிற்கு எதிராக இதனை உரைப்ப தென்பது கிறிஸ்தவனுக்கு இயலாத ஒன்று (1 கொரி 12:3). தனது சக யூதர் மீட்பை அடைவதற்குப் பயன்படுமாயின், தான் சாப மாக இருக்கத் தயார் என்று அப்போஸ்தலர் கூறும்போது, கிறிஸ்துவிடமிருந்து பிரிதலே இதன் பொருள் என்பதை அவர் தெளிவு படுத்துகிறார் (உரோ 9:3). இந்த முரண்பட்ட கூற்று இறுதியான சாபத்தைக் குறிப்பிடு கிறது.

சபிக்கப்படுதல் என்ற கருத்து, புதிய ஏற் பாட்டில், மத் 24:31; மாற்11:21; லூக் 6:28; யோவா 7:49; உரோ 9:3; 12:14; கலா 3:10.13; யாக் 3:9; 2 பேதுரு 2:14 என்ற பகுதிகளில் காணப்படுகிறது.

சபு (SAPH - வாயிற்படி)

இவர் அரக்கர்கள் குலத்தில் பிறந்தவர். பெலிஸ்தியரோடு கோபு என்ற இடத்தில் போர் நடந்தது. அதில் சபுவைக் கூசாயியரான (ஊசாயியர்) சிபகாய் என்பவர் கொன்றார். சிபகாய் வலிய 'முப்பது பேரில்' ஒருவரா வார் (2 சாமு 21:18). காத்து என்ற இடத்தை இருப்பிடமாகக் கொண்டிருந்த அரக்கர்களின் வழித்தோன்றலில் சபு சேர்த்துக் கொள்ளப் பட்டார். இந்த அரக்கர்கள் பெலிஸ்தியரின் கூலிப்படையைச் சேர்ந்தவர்களாக இருக்க லாம். 1 நாள் 20:4-இல் சபு, சிபாய் என்றழைக்கப்படுகிறார்.

சப்தக்கா (SABTECA - முனைப்பான, கவர்ச்சி யான)

இவர் கூசு என்பவரின் புதல்வர். எனவே அரேபிய இடப் பெயரைச் சுட்டலாம் (ஆதி 10:7; 1 நாள் 1:9). இது இதுவரை அடையா ளம் காட்டப்படவில்லை.

சப்தா (SABTA(H) - முனைப்பான, மனம் கவர்கின்ற)

சப்தா (1 நாள் 1:9) கூசு என்பவருடைய மகன். இப்பெயர் அரேபியாவில் ஒரு இடப் பெயராகவும் உள்ளது (ஆதி 10:7). சாதாரண மாக இது கதிரமாத்தில் உள்ள சபோட்டா என்ற ஊரோடு அடையாளம் காட்டப்படுவ துண்டு. அங்கு உப்பும், தூபப் பொருட்க ளும் நிறைந்த வாணிப மையம் ஒன்று உண்டு. ஆனால் செபாயர் ஏடுகளில் இப் பெயர் எழுதப்பட்டிருக்கும் முறை இக்கருத் துக்கு ஆதரவு தரவில்லை. மேலும் சப்தா, பாரசீக வளைகுடாவுக்கு அருகில் ஒரு நிலப் பகுதிக்கும் பெயராக அமைந்துள்ளது. இது தோலமி என்பவரால் குறிப்பிடப்பட்டுள் ளது.

சப்தி (ZABDI - கடவுளின் கொடை, என் கொடை)

1. செராகுவின் குடும்பத்தைச் சேர்ந்த யூதாவின் வழிவந்தவர்; கர்மியின் தந்தை. இவர் ஒரு குடும்பமரபைத் தோற்றுவித்தார். இதில் ஆக்கான் ஓர் அங்கத்தினர் (யோசு 7:1. 17-18). 1 நாள் 2:6-இல் இவர் சிம்ரி என்று அழைக்கப்படுகின்றார்.

2. பென்யமின் குலத்தைச் சேர்ந்த சிமயி யின் மகன் (1 நாள் 8:9).

3. இவன் ஒரு சிபிமியர் தாவீதின் அரச உடைமைகளின் மேல் பொறுப்பாயிருந்த அரசாங்க ஊழியர்களில் ஒருவர். ''திராட் சைரசக் கிடங்குகளுக்குப் பொறுப்பாய் இருந்தார்'' (1 நாள் 27:27).

4. ஆசாபின் மகனும் லேவியருமாவார் (நெகே 11:17) அல்லது ஆசாபின் வழிவந்த ஒரு லேவியக் குடும்பமாக இருக்கலாம். அனேகமாக 1 நாள் 9:15-இல் சொல்லப்பட் டுள்ள சிக்ரியும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

சப்தியேல் - (ZABDIEL - இறைவன் கொடை, இறைவன் என்கொடை ஆவார்)

1. யூதா குலத்தைச் சேர்ந்தவர், யாசொப யாமின் தந்தை. தாவீதின் படையில் முதல் பிரிவின் படைத்தலைவர். பெரேட்சின் வழித்தோன்றல் (1 நாள் 27:2).

2. நாடு கடத்தலுக்குப்பின் குருக்களின் ஒரு குழுவிற்கு மேற்பார்வையாளர். அக் தோலிமின் மகன் என அழைக்கப்படுகின் றார் (நெகே 11:14).

3. அலக்சாந்தர் பாலாசு புகலிடம் தேடி அரேபியாவிற்கு ஓடியபொழுது அவரைச் சிரச்சேதம் செய்து தலையைத் தோலமி பிலோமேத்தருக்கு அனுப்பி வைத்த ஓர் அரேபியன் (1 மக் 11:17). யோசிப்பசு இவரை ஓர் இளவரசன் என்று குறிப்பிடுகிறார்.

சப்பீரா (SAPPHIRA - அழகான)

இவள் பழங்காலக் கிறிஸ்துவ எருசலேம் சமூகத்தில் ஓர் உறுப்பினராக இருந்தாள். இவள் அனனியாவுக்கு மனைவி. அனனியா தனது உடைமையில் ஒரு பகுதியை விற்று விட்டு அதைக் கொண்டு போய் அப்போஸ்தலர்களின் பாதத்தில் முழுவதும் தருவது போல் நடித்தார். இதற்குச் சப்பீரா உடந்தையாயிருந்தாள். இதற்காகப் பேதுரு இவர்களைக் கண்டித்தபோது இருவரும் இறந்து போயினர் (அ.ப. 5:1-10). ஏனெனில் இதுபரிசுத்த ஆவிக்கு எதிரான பொய்யாகும்.

சமஉரிமைச் சமூகம் (COMMON WEALTH)

பிலி 3:20-இல் பவுல் வானகமே நமது தாய்நாடு அதாவது, நமது சமஉரிமைச் சமூகம் என்கிறார். கீழ்க் காணும் விளக்கங்களை இதற்கு நாம் காணலாம்.

அ) கிறிஸ்தவர்களாகிய நமது சமஉரிமைச் சமூகம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது. ஏனெனில் மற்ற உலக அரசுகள் போலன்றி நாம் ஏற்கெனவே விண்ணகத்தின் குடிமக்கள்.

ஆ) சம உரிமைச் சமூகம் என்பது சமூக உறவைக் குறிக்கிறது. ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொண்டு வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை.

இ) கிறிஸ்தவர்களின் நடத்தையும் அவர்களின் தாய் நாடான விண்ணகத்திற்கு உகந்ததாக அமையவேண்டும்.

ஈ) விண்ணின்று அருங்குறி போல் வந்த மீட்பரில் தான் இந்தச் சமுதாய வாழ்வு முழுமையடையும்.

இந்தச் சமஉரிமைச் சமூகம் குடி உரிமை என அ.ப. 22:28-இல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

சமய அறவுரை (HOMILY)

மறைநூல் பகுதிக்கு அளிக்கப்படும் பொழிப்புரை அடங்கிய எளிய கருத்துரை. பிரசங்கம் என்பதைவிட விவிலிய வாசகத் தன்மையுடையது. அன்றாடச் செயல்முறையான காரியங்களில் கவனம் செலுத்தியது; தொடக்க காலத் திருச்சபையில் ஒரு போதக முறையாகப் பயன்பட்டது. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் ஒன்று அல்லது பல சமய அறவுரைகள் அடங்கியதாகக் கருதப்படலாம் (எ.கா. அதி 11). பொதுவாகப் பவுலின் திருமுகங்கள் குறிப்பிட்ட காரியங்களைப் பற்றிய உண்மையான கடிதங்களாகும். ஆனால் அவர் எபேசியருக்கு எழுதிய திருமுகம், பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகத்தைச் சமய அறவுரை முறையில் திரும்ப எழுதியதாகக் கருதலாம்.

சமய நிலை பிறழ்தல் (APOSTASY)

தொடக்கத்தில் இச்சொல் அரசியல் பொருளுடையதாக இருந்தது. புரட்சி செய்பவர்களைக் குறித்தது. இப்பொருளில் எழுபதுநூலில் சில இடங்களில் இச்சொல் பயன்பட்டுள்ளது. மதத்தொடர்புடைய பொருளில், அதாவது கடவுளின் சட்டத்திலிருந்து பிரிந்து செல்லுதல், ஒரு குறிக்கோளைக் கைவிடுதல், வழிபாடு, கோயில் முதலியவற்றைக் கைவிடுதல், பொதுவாகக் கடவுளுக்குக் கீழ்ப்படிதலை மறுத்தல் என்னும் பொருளில் (எழுபது நூல்; யோசு 22:22; 2 நாள் 29:19; 33:19; எரே 2:19; குறிப்பாக 2 மக் 5:8) பயன்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் இரண்டு இடங்களில் மதத் தொடர்புடைய பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அ.ப. 21:21-இல் பவுல் மத நெறியைக் கைவிட்டுத் தவறியதாகக் குற்றம் சாட்டப்படுகிறார். அவர் மோசேயின் சட்டங்களை விட்டுவிடும்படி போதித்ததாகக் கூறுகின்றனர். 2 தெச 2:3-இல் இறுதிக்காலச் சூழ்நிலைக்காட்சி ஒன்று விவரிக்கப்படுகி

றது. இது கிறிஸ்தவ மத வரலாற்றில் பல காலங்களில் மீண்டும் மீண்டும் நிகழ்வதாகும். இது ஒரு யூக காட்சி இலக்கியத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது. இதன்படி கிறிஸ்து திரும்பி வரும் முன் ஓர் எதிர்க்கும் கிளர்ச்சி நிகழவேண்டும். இந்தக் கருது கோள் இறுதிக்காலம் தள்ளிவைக்கப்படுதல் என்ற கருத்தைப் பிரதிபலிக்கிறது. இக் கருத்து 2 தெசலோனியரிலும் 2 பேதுருவிலும் காணப்படுகிறது.

எபி 6:6-இல் இச்சொல் நெறிபிறழ்வதைக் குறிக்கிறது. இது வேத கலாபனையின் போது கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தை மறுதலிப்பதை எடுத்துரைக்கின்றது.

சமயப்பிளவு (SCHISM)

I. சமயப்பிளவிற்கும் சமயப் பதிதக் கருத்திற்கும் இடையில் சிறிதளவு வேறுபாடே உள்ளது. இஸ்ராயேலில் இருந்தவற்றால் முன் நிழலிடப்பட்டு 'யாவேயின் சபை' (1 கொரி 20:8) என்ற அதன் தன்மை மறுத்துக் கூறப்பட்டு, இந்தப் பிளவுகள் எதிரெதிரான குழுக்களாக திருச்சபையைப் பிரித்து, கிறிஸ்துவின் உடல் என்ற அதன் தன்மையை மறுத்துக்கூறின.

II. பழைய ஏற்பாடு

1. பாவமானது இயல்பான பிரிவுகளைச் சமயப்பிளவுகளாக மாற்றுகிறது:- மனிதர் பல்வேறு மக்களாகவும், மொழிகளாகவும், நாடுகளாகவும் பிரிந்துபோவது (பங்கிடுவது) ஓர் இயல்பான நடைமுறையே (ஆதி 1;28; 9:1; 10). மேலும் இது மீட்பின் வரலாற்றுக்கான தயாரிப்பாகும் (உப 32:8-9). ஆனால், பாவமானது இதனை எண்ணற்ற சச்சரவுகளுக்கு ஊற்றாக மாற்றுகிறது. இதன் காரணமாகப் பிரிவுகளை எடுத்துக்கூறும் சொற்கள், ஒற்றுமையை முறித்தல் என்று இழிபொருளில் விவரிக்கின்றன (சங் 55:10;ஆதி 49:7; புல 4:16), அல்லது சிதறிப் போதலை மனித அகந்தைக்கான ஒரு தண்டனையாகவும் (ஆதி 11:1-9) எடுத்துக் கூறுகின்றன.

தனது சந்ததியில் அனைத்து நாடுகளும் ஆசிர்வதிக்கப்படக்கூடிய பேறுபெற்ற ஆபிரகாமுடன் (12:7;13:15;22:17-18;கலா 3:16) விசுவாசிகளை ஒன்று சேர்ப்பதும் (கலா 3:7தொ) மனித ஒற்றுமையை மீட்டளிப்பதும் தொடங்குகிறது. ஆனால் செம்மறியைச் சூழ்ந்த இறுதி ஒன்றிப்பிற்கு முற்பட்டபிரச்சினைகள் என்னென்ன உள்ளன (திருவெளி 7:9)!

2. சமயப்பிளவானது தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களின் விசுவாச வாழ்வை அச்சுறுத்தி, அவர்களது சாட்சித் தன்மையைப் பாழ்படுத்துகிறது:- சமூக அளவில் நிலையுறுதியற்றதாய் அமைந்த தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களின் ஒற்றுமையானது (2 சாமு 5:5; 15:6.13; 19:41; 20:2) விசுவாசத்தின் தோழமையை அடிப்படையாகக்கொண்டதாகும். அதே சட்டத்தையும் அதே வழிபாட்டையும் ஏற்றுக்கொள்வதில் கூட்டாக இணைக்கப்பட்ட இனங்களை ஒன்றுபடுத்தியது, முதன்மையாக ஆண்டவருடனான உடன்படிக்கையே (யாத் 24:4-8; யோசு 24). மத்திய புனித இடத்தை நோக்கிய (செக்கேம், சிலோவாம்,...பிற்காலத்தில் எருசலேம் ஆலயம்) திருப்பயணங்களும், கால வரையான தவணைமுறையாக அங்குக்கூடிய கூட்டங்களும் இன ஒன்றிப்பைக் காத்து, அதனுடைய சமய அடிப்படையில் செயல்படுத்தி வந்தன. ஆனால், மற்றொரு புறத்தே, புனிதப்போரில் பங்கேற்க மறுப்பது (எண் 32:23;நீதி 5:23) அல்லது மத்திய புனிதத்தலத்திற்கு விரோதமாக வழிபாட்டுத் தலத்தைக் கட்டுவது (யோசு 22:29) ஓர் இனத்திற்குப் பாவமாகும். இரண்டு அரசுகளாகப் பிளவுபட்டதானது ஓர் அரசியல் நிகழ்ச்சியாக எங்குமே கண்டிக்கப்படவில்லை; ஆனால், இறைவனது முன்முயற்சியாக விவரிக்கப்படுகிறது (1 அர 11:31-39; 12:24; 2 அர 17:21). இறைவன் இம்முறையில் சாலமோனின் பாவங்களைத் தண்டிக்கிறார் (1 அர 11:33). சமயப்பிளவு என்ற நிலையில்தான் இம்முறிவானது கண்டிக்கப்படுகிறது. எதிரான புனித இடங்களைக் கட்டுவதன் மூலமும் (12:27-28), காளையின் வடிவில் அமைக்கப்பட்ட நிலைமேடையில் இறைப் பிரசன்னத்தை நிலைபெறச்செய்து, சிலை

வழிபாட்டுக் குழப்பத்தை ஊக்குவித்ததன் மூலமும் (12:28.32; 14:9; 16:26; 2 அர 10:29; 17:16; ஓசே 8:5-6), லேவியின் சந்ததியைச் சாராத குருக்களைப் பேத்தேலில் அமர்த்துவதன் மூலமும் (1 அரு 12:31; 13:33; 2 நாள் 13:4-12) எருசலேமிலுள்ள மத்திய திருத்தலத்தினின்று இஸ்ராயேலரைத் திருப்பிவிடுவதே எரொபவாமின் பாவமாகும்.

நாடு கடத்தப்பட்ட காலத்தைச் சேர்ந்த சிலவாசகங்கள் இஸ்ராயேல் மற்றும் யூதாவினுடைய மறு ஒன்றிப்பை முன்னுரைத்து, இச்சமயப் பிளவானது புனித மக்களுடைய விசுவாச வாழ்விற்கு மட்டுமின்றி நாடுகளுக்கு முன்னிலையில் அவர்களது சாட்சியத்தின் வலிமைக்கும் தடையாக உள்ளதென எடுத்துக் கூறுகின்றன (எசா 43:1தொ; 44:8). சீயோனில் நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்வதற்காக (எரே 4:17), யூதாவானது இஸ்ராயேலுடன் இணைந்து செல்வது அவசியமாகும் (3:18; எசா 11:12தொ; எசே 37:11-12.28). புனித மக்களின் ஒற்றுமையானது, அவர்களது இறைவன் மட்டுமே உண்மையான இறைவன் என்ற உண்மையின் பிரதிபலிப்பாகவும் மெய்ப்பிப்பாகவும் நோக்கப்படுகிறது.

II. புதிய ஏற்பாடு

''எதிர்க்கப்படும் அறிகுறியாக இருக்கும் நிலையில்'' (லூக் 2:34), தமக்குச் சார்பாகவும் தமக்கு விரோதமாகவும் உள்ள அளவில் (யோவா 7:43; 9:16; 10:19), குடும்பங்களுக்குள்ளும் (லூக் 12:2-53) இயேசு பிளவைக் கொண்டு வருகிறார் (12:51). ஆனால் இதன் மூலம், மாயையாக அல்லது மிகமிக இயற்கையானதாக உள்ள அமைதியை அவர் குலைக்கிறார். ஏனெனில், ''சிதறிப்போன இறைவனின் பிள்ளைகளை ஒன்று சேர்க்கவும்'' (யோவா 11:52; 10:16), ''பகைமையை ஒழிக்கவும்'', தடைகளை முறிக்கவும், அவர்களை அதே தந்தையின் பிள்ளைகளாகவும், அதே ஆவிக்கு உட்பட்ட அதே உடலின் உறுப்பினர்களாகவும் அமைக்கவும் (எபே 2:14-18) அவர் வந்துள்ளார். இவ்வுடலில் எவ்விதமான பிரிவும் அட்டூழியமாகக் கருதப்படுகிறது (1 கொரி 12;25). இது, பாவத்தின் ஊற்றான, ஊனுடலின் கனியாகும் (கலா 5:20; 1 கொரி 3:3-4).

1. அருங்கொடைகளினின்று விளையும் பிளவுகள்:- விசுவாசிகளிடையிலான பிளவுகளின் தீமையை, முக்கியமாகக் கொரிந்தில் தான் பவுல் எதிர்கொள்கிறார் (1 கொரி 1:10; 11:18-19; 12:25). ஆனால், ''கிறிஸ்து பிளவுபட்டிருக்கிறாரா'' என அவர் கேட்கிறார். அவரது பெயரால் மட்டுமே அவர்கள் திருமுழுக்குப் பெறவில்லையா? தனது மரணத்தால் அவர்களைக் காத்தவர் அவர் மட்டுமே அல்லவா? (1:13). பிளவுகளை வளர்ப்பவர்கள் உண்மையில் ஞானிகளோ (2:6) ஆன்மீகவாதிகளோ (3:1) அல்லர். கவர்ச்சிகரமான அருங்கொடைகளை உரிமையாக்கிக்கொள்ளும் கட்டுப்பாடற்ற ஆர்வத்தினால் தூண்டப்படும் கருத்து வேறுபாடுகளைப் பவுல் கண்டிக்கிறார். பல்வேறு கொடைகளின் ஒரே இறை ஊற்றையும், தான் விரும்பியவாறு பகிர்ந்தளிக்கும் ஆவியால் ஆசிக்கப்படும் கட்டியெழுப்புதலையும் அவர்கள் மறந்து விடுகின்றனர் (12:11). அன்புணவில் சிலர் தங்களது பேராசையினாலும் சுயநலத்தினாலும் பிளவின் இடறலை மோசமாக்குகின்றனர் (11:22.27-32). ஆனால் இறுதியாக, ஆன்மீகக் கொடைகளில் உயர்வானதும் (12:31), தவிர்க்கப்பட முடியாத ஒரே நிலையும் (13:1தொ) பிளவை விலக்கி ஒன்றிப்பைக் கட்டி எழுப்புதலைத் தனது நேரடி விளைவாகவும் கொண்ட (8:1) சகோதர அன்பை அனைவரும் மறந்துவிடுகின்றனர்.

2. திருச்சபையின் சாட்சியத்தைச் சமயப் பிளவுகள் சீர்குலைக்கின்றன:- இவ்வாறாக, விசுவாசத்தின் ஒன்றிப்பை அவைகள் விட்டு விட்டாலும், முரண்பட்ட பதிதப் போதனைக்கு முன்செல்லும்போதும், அல்லது அதனைப் பின்பற்றும்போதும் பிளவுகள் விசுவாசத்தை அச்சுறுத்துகின்றன. அப்படி அவை விசுவாச ஒன்றிப்பைப் பாதிக்காவிட்டாலும், உட்பிளவுகள் திருச்சபையின் இயல்பை மறுத்துக்கூறுகின்றன; அன்பை

யும் பாழ்படுத்துகின்றன. இந்த இரண்டாம் தீமையின் ஒரு முக்கிய விளைவை யோவான் எடுத்துக்கூறுகிறார். கிறிஸ்தவர்களுடைய ஒருவருக்கொருவரளிக்கும் அன்பானது கிறிஸ்துவின் சீடர்களாக அவர்களை அடையாளம் காட்டுவதால், கிறிஸ்துவிற்கு திருச்சபை அளிக்கவேண்டிய சாட்சியமானது தடுக்கப்படுகிறது (யோவா 13:35). கிழிக்கப்படாத தையலில்லாத அங்கியானது (19:23-24), நமது பலியின் தலைமைக் குரு இயேசுவே, மற்றும் அவரது திருச்சபையானது பிளவுபடாதது என்பதற்கான அடையாளமாக இருக்கலாம். தம்மைப் பின்பற்றுபவர்கள் ஒன்றாக இருப்பதற்காகவும், அதன் மூலமாகத் தந்தையால் அனுப்பப்பட்ட ஒருவராலேயே அன்பினுடைய தோழமையானது தொடங்கப்பட்டது என்பதை உலகிற்குக் காட்டவும் (17:21.23), அவர் தம்மையே பலியாக்கினார் (17:19).

சமயம் தழுவச்செய்தல் (PROSELYTIZE)

சமய மனமாற்றமாகும். விவிலியவழக்கில், முதன்மையான பொருளில், இது ஒரு புறவினத்தவர் விருத்தசேதனம், மூழ்குதல் அல்லது திருமுழுக்கு, சிறப்பான பலிகளை ஒப்புக்கொடுத்தல், மோசேயின் சட்டத்தை ஏற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கு உட்பட்டு யூத சமயத்தை ஏற்றுக்கொள்வதை உணர்த்தியது. சமயம் தழுவியவர்கள் முழுவதும் மனந்திரும்பியவர்களாவர். இவர்கள் இஸ்ராயேலரின் இறைவனை வழிபட்டு, விருத்தசேதனத்திற்கு உட்படாத புறஇனத்தாராகிய ''இறைவனுக்கு அஞ்சுபவர்களிடமிருந்து'' வேறுபட்டவர்கள்.

எழுபது நூலில் பல காரணங்களுக்காக இஸ்ராயேலரிடையே நிலையாக இல்லாவிட்டாலும், தங்கள் குடியிருத்தலை நீடித்துக்கொண்ட அந்நியர்களைக் குறிக்கிறது இச்சொல். கைம்பெண்கள் மற்றும் அநாதைகள் ஆகியவரோடு சேர்த்து இவர்களுக்கும் மோசேயின் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது (லேவி 19:10; 23:22; உப 24:14.19-22; 27:19). இவர்கள் பலி ஒப்புக் கொடுக்க அனுமதிக்கப்பட்டனர். விருத்த சேதனம் பெற்றிருந்தால் இஸ்ராயேலரின் விழாக்களிலும் பங்குபெறலாம் (உப 16:11-14; யாத் 12:45-48). உடன்படிக்கை புதுப்பித்தலில் இஸ்ராயேலர் சபையோடு சேர்ந்து கொள்ளலாம் (யோசு 8:33-35). இச்சொல் இஸ்ராயேல் அரசு பிளவுபட்ட காலத்திலிருந்து (2 அர 5:15-19) மதம்மாறியவர் என்ற பொருளைப் பெறத்தொடங்கியது எனலாம். அந்நிய நாடுகளைக் கைப்பற்றுதல், இஸ்ராயேலும் மற்ற மக்களும் தாங்கள் தங்கியிருந்த பகுதிகளை மாற்றிக் கொள்ளல் ஆகிய சமூகக் கலவையாலும் (எஸ் 9-10;நெகே 13:23-27; எஸ்த 8:17), புரட்சிகளாலும் இம்மாற்றம் விளைந்தது. நாடு கடத்தப்படல், மீண்டும் குடியேறுதல் ஆகிய மாறிய சூழ்நிலைகள் எபிரேயச் சிந்தனையில் புதிய யாவும் அடக்கும் பொதுமைப்பண்பை ஊக்குவித்தது.

இஸ்ராயேலரின் விசுவாச அறிவைப் புறவினத்தாருக்கு அளிக்கச் செய்த ஒன்றித்த முயற்சிக்கு யூதர்கள் சிதறிப்போதல் ஓர் அடிப்படையாயிற்று (மத் 23:15). இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையிட்ட காலத்தில் சமயம் தழுவச்செய்தல் வெகுவாக வளர்ந்தது (2 மக் 9:17). யூத மதத்தைத் தழுவியவர்கள் யூதர்கள் தங்கிய பதிகளில் எல்லா இடங்களிலும், எல்லாச் சமூக வகுப்பினரிடையேயும் காணப்பட்டனர். பரிசுத்த ஆவி திருச்சபையின்மேல் இறங்கிவந்த ஐம்பதாம் நாள் விழாவிற்கு வந்திருந்த திருயாத்திரீகர்களுள் யூதர்களும் யூத சமயத்தைத் தழுவியவர்களும் அடங்குவர் (அ.ப.2:10). அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுவரில் ஒருவர் சமயம் தழுவியவராவார் (6:5). பிசிதியாவைச் சேர்ந்த அந்தியோக்கியாவிலும் மற்ற இடங்களிலும் பல யூத சமயம் தழுவியவர்கள் பவுலின் போதனையால் ஈர்க்கப்பெற்றனர் (13:43). பவுல் கிறிஸ்தவராகுமுன், புறஇனத்தாருக்கு யூத சமயத்தைப் போதித்திருக்கலாம் (கலா 5:11). கி.பி. முதல் நூற்றாண்டுக்குப்பின் யூத சமயத்தைத் தழுவிய புறஇனத்தவரின் எண்ணிக்கை குறைந்ததற்குக் கிறிஸ்துவ விசுவாசம் அவர்களுக்கு அளித்த ஈர்ப்பே முக்கிய காரணமாகும்.

சமவெளி (PLAIN, TABLELAND)

இதைக்குறிக்க நான்கு எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. முதலில் சமவெளி என்பது பாபிலோனியாவில் யூப்பிரத்தீசு, திகிரிசு எனப்படும் இரு பெரும் ஆறுகளுக்கிடையே உள்ள சமவெளியைக் குறிக்கும் (ஆதி 11:2;எசே 3:22-23; 8:4; தானி 3:1). அதோடு ஓனோ சமவெளியையும் சாரோன் சமவெளியையும் குறிக்கலாம் (நெகே 6:2). சமவெளி என்பது கரடுமுரடான ஓர் நிலத்திற்கு (எசா 40:4) எதிர்மாறான பசுமையான ஒரு சமதள நிலப்பகுதி (ஆமோ 1:5; 2 நாள் 34:22; செக் 11:11; லூக் 6:17). எரிகோ (உப 34:3), யோர்தான் ஆறு (1 அர 7:46; 2 நாள் 4:17), எருசலேம் (2 சாமு 18:23; நெகே 3:22) ஆகியவற்றை அடுத்த சமநிலப்பகுதியைக் குறிக்கவும் சமவெளி என்ற சொல் பயன்பட்டுள்ளது. இச்சொல்லின் மூல எபிரேயச் சொல் பள்ளத்தாக்கையும் குறிக்கலாம் (ஆதி 13:10; 19:17;....).

யோர்தானுக்கு அப்பாலுள்ள அர்னோனுக்கும் எஸ்போனுக்கும் இடைப்பட்டு, சாக்கடலுக்குக் கிழக்கில் பெட்சேர், மேதபா ஆகிய நகர்களைச் சுற்றியுள்ள செழுமையான சமதளப்பகுதி சமவெளி என்று குறிக்கப்படுகிறது (உப 3:10; 4:43; யோசு 13:9.16-17.21). இப்பகுதி ரூபன் கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அரசாட்சிக் காலத்தில், இது மோவாபியர்களுக்குச் சொந்தமாக இருந்தது (உப 4:43; யோசு 20:8; எரே 48:21-25). இதன் புகழ்வாய்ந்த நகரங்களுள் (யோசு 13:15-21), தீபோன், மேதபா ஆகியவை மோவாபியரின் சிறப்பு வாய்ந்த அரண்களாகும்.

சமவெளிநகர்கள் (CITIES OF THE VALLEY)

யோர்தான் பள்ளத்தாக்கிலும், சாக்கடல் பள்ளத்தாக்கிலும் அமைந்துள்ள சோதோம் கொமோரா, அதாமா, செபாயீம், சோவார் ஆகிய ஐந்து நகரங்களை இது குறிக்கும். சோவார் நீங்கலாக மற்ற நான்கு இடங்களும் தங்களது தீமைத்தனத்தின் பொருட்டு இறைவனால் அழிக்கப்பட்டன (ஆதி 19:24-29). ஞான 10:6-இல் இந்த நகரங்கள் ஐந்து நகரங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதி 14:3.8.10 ஆகிய பகுதிகளில் இந்த ஐந்து நகரங்களும் சித்தீம் பள்ளத்தாக்கில் இருந்ததாகவும், அப்பகுதி இன்று சாக்கடலின் தெற்கே உள்ள கடலால் மூழ்கடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சமாதானப்பலி (PEACE OFFERING)

இப்பலியின் சிறப்பு அங்கம் பலியின்பின் கடைப்பிடிக்கப்பட்ட பலியுணவாகும். பலிப்பொருள் ஆண் அல்லது பெண் விலங்காக இருக்கலாம். ஆனால் பழுதற்றதாக இருக்கவேண்டும் (லேவி 3:1.6). இரத்தம் பலிபீடத்தின்மேலும் சுற்றிலும் தெளிக்கப்படவேண்டும் (3:2.8.13). கொழுப்புப்பகுதிகள் பீடத்தின்மேல் எரிக்கப்பட்டன (3:3-5.9-11. 14-16). வலது பின்தொடையும் நெஞ்சுக்கறியும் குருக்களுக்கு அளிக்கப்பட்டன (யாத் 29:27-28; லேவி 7:31-36). மீதி ஊன், பலியுணவில் பயன்படுத்தப்பட்டது. இவ்விருந்தில் பலிகொடுத்தவரின் குடும்பம் முழுவதும் அடிமைகளும் பங்கெடுத்தனர். ஏழ்மை மிக்க லேவியரும் இதில் பங்குபெற அழைக்கப் பெறுவர் (லேவி 3).

இதைச் சமாதானப்பலி என்பதைவிட ஒன்றிப்புப்பலி என்றழைத்தல் சாலச்சிறந்தது. பலிகொடுப்பவர் தான் இறைவனின் அன்பன் என்று காட்ட விழைகிறார். இறைவனுக்கும் தனக்கும் உள்ள சமாதான உறவையும், ஒன்றிப்பையும் அன்பையும் வெளிக்காட்டவும் உறுதிப்படுத்தவும் இப்பலியை ஒப்புக்கொடுக்கிறார். இக்கருத்து பலியுணவில் முதன்மை பெறுகிறது. இதில் இறைவனே விருந்தளிப்பவர். பலிசெலுத்தியவர் விருந்தாளி ஆவார். விருந்து இருவருக்குமிடையேயுள்ள அன்பின் அடையாளமும் உறுதியுமாகிறது. இப்பலியுணவு மெசியா அரசில் மனுகுலத்திற்கு யாவே தயாரிப்பதாக அடிக்கடி வேதநூலில் கூறப்படும் உணவுக்கு எடுத்துக்காட்டாகும். இப்பலிச்சடங்கு மகிழ்ச்சி மிக்கதாகும். சமாதானப் பலியோடு தானியக்காணிக்கையும் எண்ணெய்க் காணிக்கையும் அளிக்கப்பட்டன (லேவி 7:12-14;எண் 14:8-10). நன்றிப்பலியும், நேர்ச்

சிப்பலியும், பொருத்தனைப்பலியும், சமாதானப்பலியின் சிறப்பு வடிவங்களாகும் (லேவி 7:11-18). இப்பலி குருக்கள் திரு நிலைப்படுத்தப்பட்ட போதும் (9:4.18.22), விழா நாட்களிலும் (23:19), நாசீர் நேர்ச்சியைச் செய்யும்போதும் (எண் 6:14.17), சிறப்பான முறையில் நன்றி கூறவேண்டிய போதும் (7:88; யோசு 8:31; நீதி 20:26; 21:4; 1 சாமு 11:15; 1 அர 8:63-64; எசே 43:27) செலுத்தப்பட்டது.

சமாதானம் (PEACE)

காண்க. அமைதி.

சமாதானம் செய்வோர், அமைதி ஏற்படுத்துவோர் (PEACE MAKERS)

மத் 5:9-இல் குறிக்கப்படும் இவர்கள் முதன்மையாக மகிழ்ச்சியையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துபவர்கள் அல்லர். எங்கே வெறுப்பும் பகைமையும் உள்ளதோ அங்கு, சமாதானத்தை ஏற்படுத்துபவர்கள். எங்கே பிளவும் பிரிவும் உள்ளதோ அங்கு ஒப்புரவை ஏற்படுத்துபவர்கள். இவர்கள் ''கடவுளின் மக்களாவர்''. இறைவன் தங்களுக்கு அளித்துள்ள சமாதானத்தைப் பகைப்பவர்களுக்குள் ஒன்றிப்பை ஏற்படுத்தப் பயன்படுத்துபவர்கள். இந்தச் சமாதானம் இறுதிக்காலஇயல் சமாதானமாகும். முன்னோக்காக இவர்களுக்குக் கிடைக்கிறது. இவர்கள் அளிக்கும் சமாதானம் கிறிஸ்து வழியாக அளிக்கும் ஒப்புரவே ஆகும். இதன் விலையோ அதிகமானது. இதன் நிபந்தனைகளை ஏற்க மறுப்பவர்களுக்குக் கிறிஸ்து சமாதானத்தை அன்று வாளையே கொண்டு வருகிறார்.

சமாரிய நிலப்பரப்பு (SAMARIA, TERRITORY OF)

பாலஸ்தீன நாட்டு மலைப்பகுதியில் ஒன்று சமாரியா. இது வட அரசாகிய இஸ்ராயேலின் தலைநகரை வைத்துப் பெயரிடப்பட்டது. இந்த நாட்டின் பரப்பு ஒவ்வொரு நூற்றாண்டும் மாறிக்கொண்டே இருந்ததால் எல்லையைச் சரியாகச் சொல்லமுடியாது. இருந்தாலும் பொதுவாகத் தெற்கே எரிகோவிலிருந்து அய்யலோன் பள்ளதாக்கு வரையும் மேற்கே கடற்கரைச் சமவெளியும், வடக்கே இசிரியேல் பள்ளத்தாக்கில் தென் முனையும், கிழக்கே யோர்தான் நதியும் கொண்டு உள்ளடங்கிய பகுதியைச் சமாரியா கொண்டுள்ளது. இந்தப் பகுதி வடக்கிலிருந்து தெற்கே 64 கி.மீட்டரும், கிழக்கிலிருந்து மேற்கே 56 கி.மீட்டரும் கொண்டது.

இதில் தெற்குப்பகுதி சிறிது உயர்ந்த பகுதியாக இருக்கிறது. கிழக்கிலும் மேற்கிலும் சிறிது தாழ்வாக உள்ளது. இங்குப் பள்ளத்தாக்குகள் இருப்பதால் வெளிநாடுகளிலிருந்து சிறிதுபிரிந்து தனியே இருப்பதுபோல் உள்ளது. நல்ல செம்மண் வகை மண்ணும் போதுமான மழையும் சேர்ந்து நிலத்தை வளப்படுத்துகிறது.

இப்பகுதியின் வடக்கில், ஒரு குழிவான பள்ளம் ஒன்று உண்டு. அது பல குன்றுகளைத் தன்னகத்தே கொண்டது. அதில் ஏபால் மலையும் (930 மீ.), கெரிசிம் மலையும் (873மீ) குறிப்பிடத்தக்கன. இப்பகுதி வேளாண்மைக்கு வளமுள்ள பகுதி. மரங்களும், திராட்சைக் கொடிகளும் மலைச்சரிவுப் பகுதியில் நடப்படும் (எரே 31:5). அந்தப் பகுதியில் அகலமான வழிகள் இருப்பதால், மற்றச் சமவெளிகளுக்குச் செல்வது அவ்வளவு கடினமாயிராது. வியாபாரம் இப்பகுதிக்கு வளர்ச்சியைக் கொடுத்தது. இது வடக்குப் பெனிசிய, அரமேயப் பண்பாடுகள் வர வாய்ப்பளித்தது. இவர்களுடைய சமய மற்றும் ஒழுக்கக் கூறுகளுக்கு எதிராகத் தான், இறைவாக்கினர்கள் எலியா, எலிசா, ஆமோஸ் மற்றும் ஓசே போன்றவர்கள் இறைவாக்கு உரைத்தார்கள் (ஓசே 7:1; 8:5; ஆமோ 4:1). இப்பகுதியின் வளமையும், திறந்த தன்மையும் பகைவரைப் படையெடுக்கத் தூண்டியது.

இப்பகுதியானது, 'சமாரியா நிலப்பகுதி' என்று அரசாட்சி இரண்டாகப் பிரிவதற்கு முன் சொல்லப்படவில்லை. இதன்படி முதலாம் எரொபவாம் காலத்தைச் சேர்ந்த 1 அர 13:32-இல் வரும் 'சமாரியாவின் நகர்' என்

பது இடைச்செருகல் என்பது தெளிவாகிறது. இஸ்ராயேலின் வீழ்ச்சிக்குப்பின் (கி.மு. 722-721) அசீரியர்கள், பாபிலோன், கூத்தா, அவ்வா, ஆமாத்து, செபர்வாயிம் போன்ற இடங்களிலிருந்த கைதிகளைச் சமாரிய நகர்களில் குடியேற்றினர் (2 அர 17:24-26). அசீரியர்கள் 7-ஆவது நூற்றாண்டு இறுதிவரை ஆண்டனர். அதன் பிறகுதான், யூதாவின் யோசியா (640-609) என்பவர் சமாரிய நகர்களின் முக்கிய பகுதிகளை அழிக்க முடிந்தது. இந்தப் பகுதி 612-இல் அசீரியரின் ஆட்சி முடிவுறும்போது, பாபிலோனியப் பகுதியாகியது.

587-இல் எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின், எருசலேம் உள்ளாக, யூதாவின் வடக்கு மலைப்பகுதிகள், சமாரிய மாகாணத்தில் சேர்க்கப்பட்டன. 539-இல் பாரசீகர்கள் பாபிலோனைக் கைப்பற்றியபோது, அவர்களது ஆட்சிப் பகுதியில் ஒன்றாக மாறியது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பியவர்களில், எருசலேம் கோவிலைத் திருப்பிக் கட்ட முயற்சித்தவர்களை இந்தப்பகுதி ஆளுநர்கள் தடுத்தார்கள் (எஸ் 4:8-24; நெகே 2:9-20; 4:1-9; 6:14). ஆனால் நெகேமியாவின் வருகையினால், வடயூதாவின் மலைப்பகுதி ஒரு தனி மாகாணமானது. அதற்கு வடக்கில் சமாரியா அமைந்தது. எஸ்ரா-நெகேமிய காலத்தில் நிகழ்ந்த யூத-சமாரியர் பிளவுக்குப்பின் இப்பகுதி சமாரியரின் மையமாக விளங்கியது. பாரசீகரைக் கிரேக்க அலக்சாந்தர் தோற்கடித்தபின், இப்பகுதி ஒருவர்பின் ஒருவராக மாசிதோனியர், தோலமியர், செலூக்கியர் ஆகியோரால் ஆளப்பட்டது. கி.மு.111-107க்கு இடைப்பட்ட காலத்தில் மக்கபேய யோவான் கிரிக்கானுவால் சமாரியாவும் செக்கேமும் கைப்பற்றப்பட்டன. கெரிசிமிலுள்ள சமாரியர் ஆலயம் அழிக்கப்பட்டது. அதன்பின் இப்பகுதி புதிய யூதநாட்டில் இணைக்கப்பட்டது. கி.மு. 63-இல் உரோமையர்களின் கையில் சென்றது. கி.பி. 41-44 வரை முதலாம் ஏரோது அகிரிப்பா இப்பகுதியை ஆண்டார். இவர் இறந்தபிறகு, மீண்டும் பேரரசின் ஆளுநர்கள் ஆட்சி செய்தனர். இது சீரியா மாகாண மேற்பார்வையில் இருந்தது. கி.மு.30-இல் அகுஸ்துவால் பெரிய ஏரோதுக்குக் கொடுக்கப்பட்டது. இவர் தன் மகன் அர்க்கெலாவுக்குக் கொடுத்தார். இவர் கி.பி. 6-வரை ஆண்டார். இவர் பதவி இழந்தபின், இப்பகுதி கி.பி. 41வரை உரோமை ஆளுநர்களால் ஆட்சி செய்யப்பட்டது. இந்த ஆளுநர்களில் ஒருவர் போந்திபு பிலாத்து ஆவார். இந்தக்காலக் கட்டத்தில் தான் இயேசுவின் பணியும், சீடர்களின் பணியும் நடந்தது. இயேசுவும் அவருடைய சீடர்களும் யூத வழக்கப்படி, யூதேயாவுக்குப் பயணமாகும்போது சமாரியா எல்லையைச் சுற்றிச் சென்றிருக்கின்றனர் (மத் 19:1, லூக் 17:11). ஆனால் ஒரு முறைதான் சமாரியா நாட்டு வழியாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது (யோவா 4:4-9). உயிர்ப்புக்குப்பின், இயேசுவின் கட்டளைக்குப் பணிந்து, சீடர்கள் சமாரியாவிலும் மற்ற இடங்களிலும் சான்று பகர்ந்தனர் (அ.ப. 1:8). பிலிப்பு, பேதுரு, யோவான் ஆகியோரின் போதனைகள் இந்தச் சமாரியப் பகுதியில் உள்ள திருச்சபையை உருவாக்கி உறுதிப்படுத்தின (அ.ப. 8:1-25; 9:31; 15:3).

சமாரியர்களின் ஐந்நூல் (SAMARITAN PENTATEUCH)

சமாரியர்கள் தங்களுக்கென்று ஒரு தனி விவிலியத்தைப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்றனர். இவ்விவிலியத்தில், நாம் பயன்படுத்தும் விவிலியத்தின் முதல் ஐந்து நூல்கள் மட்டும்தான் இடம் பெறுகின்றன. இது எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் நமது எபிரேய விவிலியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நிறைய வேறுபாடுகள் இரண்டிற்குமிடையே காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள், சமாரியர்களின் சற்று வேறுபட்ட கொள்கையால்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். அதாவது கடவுள் வாழுமிடம் கரிசிம் மலைதான், அதுதான் வழிபாட்டு மையம் (உப 11:29-30; 12:5-14) எருசலேம் அல்ல என்ற கொள்கைப் பிடிப்புடன் நின்றார்கள் சமாரியர்கள்.

ஆனால் இந்தச் சமாரியர்களின் ஐந்நூல், எழுபதுநூல் என்ற கிரேக்க மொழி பெயர்ப்பு, கும்ரான் குகைகளில் கண்டுபிடிக் கப்பட்ட விவிலிய ஏடுகள் ஆகியவற்றுடன் ஒத்துப் போகின்றன. ஒருபுறத்தில் எழுபது நூலுடன் ஒத்துப் போகின்ற இந்தச் சமாரியர் ஐந்நூல், எபிரேய விவிலியத்துடன் அதிக மாக வேறுபடுகிறது. இது எதைக் காட்டுகி றது என்றால், சமாரியர் ஐந்நூல் பின்பற்றிய சுவடிப் பாரம்பரியம் வேறு, மாசரேட் டிக்கு என்று அழைக்கப்படும் மரபுரையின ரின் எபிரேய வேதாகமம் பின்பற்றிய சுவ டிப் பாரம்பரியம் வேறாக விளங்கியிருக்கி றது. எனவே ஒரு காலத்தில் நிறைய எபிரேய விவிலியச் சுவடிகள் பழங்காலத்தில் உலாவி வந்தன என்பது தெளிவாகிறது. இவ்வாறு பல இடங்களில் பல கருத்துக் கோணங்களு டன் படிவம் செய்யப்பட்ட பல எபிரேய விவிலியங்கள் பழக்கத்தில் இருந்து வந்துள் ளன. இவைகளிடையில் மரபு முறையின ரின் விவிலியம் உயர்ந்து நின்று, பின் அத னையே பெரும்பாலானோர் பின்பற்றிய சூழ்நிலை உண்டாகியிருக்கிறது. ஆனால் சமாரியர் ஐந்நூல் வேறுபட்ட சுவடிப் பாரம் பரியத்தைப் பின்பற்றிப் படிவம் செய்யப் பட்டுள்ளது.

இந்தச் சமாரியர் ஐந்நூல் எப்போது தயாரிக் கப்பட்டது என்பதை, ஒரு முக்கியமான நிகழ்ச்சியின் காலத்தைக் கணித்துக் கூறமுடி யும். அதாவது எப்போது சமாரியா, தனி நாடாக யூதேயாவிலிருந்து பிரிந்தது அல்லது ஒதுக்கப்பட்டது என்பதுதான். இந்த யூதேயா, சமாரியா பிரிவினை கி.மு. 4ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதினர். ஆனால் தற் போது இப்பிரிவினை கி.மு. 129-128-இல் யோவான் இரிக்கான் கரிசிம் நகரைத் தாக்கி யதிலிருந்து உண்டாயிருக்க வேண்டும் என் பதைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். நமக்குத் தற்போது கிடைக்கும் சமாரியர் ஐந்நூல் பழஞ் சுவடிகள் பெரும்பாலும் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. அல் லது அதற்குப் பிந்திய காலங்களில் எழுதப் பட்டவை.

முதன்முதலாக இத்தகைய சமாரிய ஐந்நூ லின் பழஞ்சுவடிகளில் ஒன்று 1616-இல் கண்டு பிடிக்கப்பட்டது. இதனைப்பார்த்ததும், இது தான் ஐந்நூலுக்கே ஆதாரமாக விளங்கியிருக்க வேண்டுமெனப் பலரும் புகழ ஆரம்பித்த னர். ஆனால் 1815-இல் ஜெசெனியு என்பவர் மேற்கண்ட முடிவு சரியானதன்று என்று நிரூபித்துக் காண்பித்தார். 1915-இல் கால் என்பவர், பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் ஒன்றாகத் தொகுக்கப்படும் முன்பே, பல பழம் ஏடுகள் மக்களின் பழக்கத்தில் இருந்து வந்தன. எனவே இந்தச் சமாரியர் ஐந்நூல் மட்டும் ஆதாரமல்ல என்று கருத்துத் தெரி வித்தார்.

கும்ரானில் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் ஏடு இந்தச் சமாரியர் ஐந்நூலுடன் மிக ஒத்திருக்கி றது. இதில் யாத்திரை ஆகமத்தின் ஒருபகுதி எழுதப்பட்டுள்ளது. இக்கும்ரான் ஏடுகள் கி.மு. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டி ருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கணிப்பு. ஆகவே இந்தச் சமாரியர் ஐந்நூல் பழமையானது என்பதும், இது மிகவும் காலங்காலமாகக் கவனமுடன் படியெடுக் கப்பட்டிருக்கிறது என்பதும் தெளிவாகிறது.

அபிசா சுருள் என்ற பழம் ஏட்டின் புகைப் படத்தை ஆராய்ச்சி செய்தார்கள். இந்த அபிசா சுருளில் சமாரியர் ஐந்நூல் இடம் பெற்றிருக்கி றது. மேற்சொன்ன ஆராய்ச்சியின்படி, இவ் வேடு காலத்தால் முற்பட்டது என்பது தெரிய வருகிறது. ஆனால் இவ்வேடு உண் மையிலே தொன்மையானதுதானா என்று ஜெசெனியு போன்றவர்கள் கேள்விக்குறி எழுப்பினர். கால் என்ற அறிஞர் இச்சுருளில் பழையதும், கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததும் கலந்திருக்கின்றன என்று கூறுகி றார்.

சமாரியர்கள் (SAMARITANS)

இப்பெயர் சமாரிய நாட்டில் வாழும் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயராக இருந்தபோதிலும், இது சமய சம்பந்தப்பட் டது என்பது குறிப்பிடத்தக்கது. யூதர்கள் சமாரியர்களை யூத சமயத்திற்கு முரணான

கோட்பாட்டை உடையவர் எனவும், இஸ்ராயேலின் இறைவனுக்குப் போலியான வழிபாடு செலுத்தும் பிரிவினைக்காரர்கள் எனவும் கருதி ஒதுக்கினர். பிறமதத்தினரைவிட இவர்களை அதிகமாக வெறுத்தனர். இப்பிரிவு இஸ்ராயேலரின் தொடக்ககால வரலாறிலிருந்தே தொடங்கியது எனலாம். இது யூதாவும் இஸ்ராயேலும் ஒன்றிணைந்து ஒருபோதும் இருந்ததில்லை என்ற உண்மையைப் பிரதிபலிக்கிறது. யூதாவுக்கும் மற்றக் கோத்திரங்களுக்கும் இடையேயுள்ள அரசியல் மற்றும் சமயப்பிளவுகள் தாவீது, சாலமோன் ஆகியோரின் காலத்திற்கு முன்னரே தொடங்கிய ஒன்றாகும். முதலாம் எரொபவாம் ஆட்சிக்குப்பின்னரும் அப்பிரிவு தொடர்ந்தது. சைரசு மன்னனின் சாசனத்திற்குப்பின் தாயகம் திரும்பிய யூதர்கள் சமாரியாவிலே வாழ்ந்தவர்களை உண்மை இஸ்ராயேலர்களாக ஏற்றுக் கொள்ளவில்லை. இம்மக்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டுக்குமுன் குடியேறிய புறவின மக்களும், யூதர்களும் சேர்ந்த கலப்பினத்தைச் சார்ந்தவர்கள். வெளிநாட்டிலிருந்து வந்த மக்கள் தங்கள் தெய்வவழிபாட்டை இங்கே புகுத்தினர் (2 அர 17). ஆனால் இந்தச் சமயக் கொள்கைகள் சமாரியாவில் நிலைபெறவில்லை. அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த இஸ்ராயேலர் செருபாபேல், ஏசுவா ஆகியோரின் தலைமையில் ஆலயம் கட்டத் தொடங்கியபோது சமாரியர்கள் தாங்களும் அதில் சேர விருப்பம் தெரிவித்தனர். ஆனால் மற்றவர் அதை நிராகரிக்கவே ஆலய வேலைக்குச் சமாரியர்கள் பலவிதங்களில் இடையூறாக இருந்தனர் (எஸ் 4:1-6). நகரச் சுவர்கள் கட்டப்படத் தொடங்கியபோது சமாரியர்கள் பாரசீக அரசனிடம் சுவர் எழுப்புவது, அவ்வரசுக்கு எதிரான கிளர்ச்சியாகும் என்று முறையிட்டனர். ஆகவே நெகேமியா ஆளுநராக வரும் வரை கட்டுமானப்பணிகள் நிறுத்தப்பட்டன (எஸ் 4:7:24). மேலும் அவர்கள் நெகேமியாவைப் பயமுறுத்தவும், கேலிசெய்யவும், அவரைக் கொல்லவும் துணிந்தனர் (நெகே 4:6-13). ஆனால் அவர்தம் முயற்சி பலிக்கவில்லை. யூதர், சமாரியர் பிரிவு சிறுகச் சிறுகப் பெருகித் திருத்த முடியாததாயிற்று. நெகேமியாவுக்கும் மக்கபேயர் காலத்திற்கும் இடையில், சமாரியர்கள் கெரிசிம் மலையில் கோயில் கட்டியவுடன் இருபிரிவினருக்குமிடையேயுள்ள பிளவு முழுமையாயிற்று. மக்கபேயர் போர்களிலே சமாரியர்கள் செலூக்கியப் படைகளுடன் கூட்டுச் சேர்ந்தனர் (1 மக் 3:10). செலூக்கிய மன்னர்கள் யூதர்களைத் தோற்கடிக்கத் தவறி சமாரியாவின் ஒருபகுதியை யூதர்களுக்கு அளித்தனர் (1 மக் 10:30.38;11:28.34). கி.மு. 108-இல் யோவான் கிரிக்கான் சமாரியக் கோயிலை அழித்து அந்தப் பகுதியையும் கொள்ளை அடித்தார். யோசிப்பசின் கூற்றுப்படி ஒரு சமாரியர் குழு, கொப்போனியசின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 6-9), இறந்தவர்களின் எலும்புகளைப் புனிதத் தலத்தில் பரப்பி, எருசலேம் ஆலயத்தைப் பங்கப்படுத்தினர். கி.பி. 35-இல் ஒரு மெசியா இறைவாக்கினர் தலைமையில் நடந்த ஒரு சமாரிய சமய ஊர்வலத்தைப் பிலாத்து தாக்கினார். சமாரியர்களின் முறையீடு பிலாத்து பதவி இழக்கக் காரணமாயிற்று. கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் சமாரியர் செழித்து விளங்கியதாகத் தெரிகிறது. நாளடைவில் கிரேக்கப் பண்பாடு இவர்களிடையே புகுந்து வேரூன்றத் தொடங்கியது. இன்னும் இப்பிரிவினரைச் சேர்ந்த 350-க்கும் மேற்பட்டவர்கள் நபுலுஸ் என்ற இடத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கொண்டாடும் பாஸ்கா விழா ஒரு தனிச் சிறப்புடையது. இவர்கள் தங்களது வழிபாட்டுச் சுதந்தரத்தைக் காத்து வந்துள்ளனர். இந்நாள்வரை தங்களது பழக்க வழக்கங்களைக் காத்து வந்திருக்கின்றனர்.

சமாரியர்களது சமயக் கோட்பாடுகளைப் பற்றித் திட்டவட்டமாகக் கூறுவதற்கு ஒன்றும் தெளிவாக இல்லை. யூதர்களைப் போலவே இவர்களும் ஒரே இறைவனை விசுவாசித்தனர். மோசே இறைவனின் இறைவாக்கினர் ஆவார். அவர் அளித்த வேதநூலின் முதல் ஐந்து நூல்களையும் அதிகாரப்பூர்வமானதாக ஏற்றுக் கொண்டனர். சட்டத்தை விளக்குவதற்குப் பரிசேயரைப் போல் பாரம்பரியப் போதகத்தைக் கையாண்டனர். பெரியகுரு ஏலியின் காலத்தி

விருந்து இறைவனின் மக்கள் இறைவனது சினத்திற்குட்பட்டனர்; அவர்களது பாவத்தி னிமித்தம் இறைவன் தமது முகத்தை அவர்க ளிடமிருந்து திருப்பிக் கொண்டார் என்று நம்பினர். ஆனால் ஒருகாலத்தில் ''வரவிருப் பவர்'' அலலது ''சீர்படுத்துபவர்'' என்று பொருள்படும் ''தாகேபு'' என்ற மோசே யைப் போன்ற மெசியா அல்லது தூதர் வந்து, இந்நிலையை மாற்றி யாவற்றையும் சரிப்படுத்துவார் என்று விசுவசித்தனர். மெசியாவைப் பற்றிய இந்தத் தெளிவில் லாத கருத்தைச் சமாரியர்கள் கொண்டிருந்த னர் என நற்செய்தியிலிருந்து அறிகிறோம் (யோவா 4:25).

நற்செய்திக்காலத்திலும் யூதர்களுக்கும், சமாரியர்களுக்கும் இடையே பகைமை தொடர்ந்து இருந்தது என அறிகிறோம். ஒரு சமயம் ஒரு சமாரியச் சிற்றூர் இயேசுவை வரவேற்க மறுத்துவிட்டது (லூக் 9:52 தொ). பிறர் அன்புக்கு மாதிரியாக ஒரு சமாரிய னைக் காட்டுகிறார் இயேசு (10:33 தொ). குணமடைந்த பத்துத் தொழுநோயாளிகளில் ஒருவர் நன்றிகூற வந்தார். வந்த ஒருவரும் சமாரியர் ஆவார் (17:16). யோவான் எழுதிய நற்செய்தியின் 4-ஆம் அதிகாரத்தில் இயேசு ஒரு சமாரியப் பெண்ணை மனந்திருப்பிய நிகழ்ச்சியுரையை வாசிக்கிறோம். இயே சுவை அப்பெண் வாழ்ந்த கிராமத்து மக்கள் வரவேற்றாலும், அந்நிகழ்ச்சியுரை யூதர்க ளுக்கும் சமாரியர்களுக்குமிடையே நிலவிய பகையுணர்ச்சியைத் தெளிவாகப் பிரதிபலிக் கிறது (யோவா 4). சமாரியர்கள் எருசலே முக்கு யாத்திரையாகச் செல்லும் யூதர்களைத் தாக்கி வழிப்பறி செய்ததாக வரலாற்று ஆசி ரியர் யோசிப்பசு குறிப்பிடுகின்றார்.

சமாரியா (SAMARIA)

இது வட அரசாகிய இஸ்ராயேலில் அமைந்திருந்த அரச நகரமாகும். நபுலுசுக்கு வடமேற்கில் 11 கிலோமீட்டர் தொலைவி லுள்ள இக்காலச் செபாஸ்தியே இருக்கும் இடத்தில் இந்நகர் இருந்திருக்கலாம். இந்த இடமானது ஓம்ரி மன்னனால் செமேர் என்ப வரிடமிருந்து 2 தாலந்து வெள்ளிக்கு வாங் கப்பட்டது. ஓம்ரி மலையின்மேல் ஒரு நக ரைக் கட்டி மலையின் உரிமையாளன் செமே ரின் பெயரின்படியே அதற்குச் சமாரியா எனப் பெயரிட்டார் (1 அர 16:24). இந்நகர் சுற்றிலும் செங்குத்தான மலைமீது அமைந்தி ருந்தது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மலைகள் சூழ்ந்த இந்நகரின் தெற்கில் எருச லேம் தென்படும். இறைவாக்கினர் எசாயா இந்நகரைக் குடிவெறியரின் மாண்புமிகு மணி முடி என்றும், அதன் மேன்மைமிகு எழிலின் வாடிப்போகும் மலர் என்றும், செழிப்பான பள்ளத்தாக்கில் அது அமைந்துள்ளது என் றும் கூறுகின்றார் (எசா 28:1-4). இந்நகர் ஓர் இஸ்ராயேலின் அரச இருப்பிடமென அரசர் ஆகமங்கள் கூறுகின்றன (1 அர 17—2 அர 17). ஆகாபு அரசர் காலத்திலே இந்நகரானது சிரியாவின் அரசன் பென்-அதாது என்பவ ரால் முற்றுகையிடப்பட்டது. எதிரிகள் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் புறமுதுகு காட்டி ஓடினர் (1 அர 20:1-21). எலிசா இறைவாக்கினர் பற்றிய ஒரு கதை எவ்வாறு அவர் நகரைத்தாக்கிய அரமேயர்க ளைத் தற்காலிகமாகக் குருடாக்கி அவர் களை நகருக்குள் நடத்திச் சென்றார் என்று கூறுகிறது (2 அர 6:19-23). பென்-அதாதின் மற்றொரு முற்றுகையிடல் பெயர் குறிப்பி டப்படாத இஸ்ராயேல் அரசன் காலத்தில் நடந்ததாகக் கூறப்படுகிறது (6:19-23). ஏகூ இந்நகரிலே அரச வம்சத்தினரையும் பாகால் வழிபாட்டினரையும் கொன்று குவித்தார் (2 அர 10). ஓசேயா அரசன் அசீரிய அரசுக்கு எதிராக எழுந்தபோது, அசீரியா சமாரி யாவை முற்றுகையிட்டது; பின்னர் ஆக்கிர மித்தது (கி.மு. 724-721). 5-ஆம் சல்மனேச ரால் தொடங்கப்பட்ட முற்றுகை சார்கோ னால் முற்றுப்பெற்றது. சார்கோன் இஸ்ரா யேலரை நாடு கடத்தி, மற்ற இடங்களிலி ருந்து மக்கள் சமாரியாவில் குடியேறச் செய் தார் (2 அர 17). இம்மக்கள் யாவே வழிபாட் டைத் தங்கள் சொந்தக் கடவுள் வழிபாட்டு டன் இணைத்துக் கொண்டனர். எசேக்கியா சமய மறுமலர்ச்சியைச் சமாரியாவில் ஏற்ப டுத்த முயற்சி செய்தார் (2 நாள் 30:1-11). மேலும் யோசியா அரசனின் சமய மறு மலர்ச்சி இந்நகருக்கும் எட்டியிருக்க வேண்

டும். மேலும் அவர் இப்பகுதியைத் தனதரசுடன் இணைத்துக் கொள்ளவும் முயற்சி செய்தார் (2 அர 23:19).

எட்டாம் நூற்றாண்டு இறைவாக்கினர்கள் இந்நகரைப் பகையுணர்ச்சியுடன் அடிக்கடி குறிப்பிடுகின்றனர். எசாயா இறைவாக்கினர் இந்நகரை எப்பிராயிமுக்குத் தலைநகரம் என்றும் (எசா 7:9), அதற்கு அழிவு ஏற்படப் போகிறது என்றும் அச்சுறுத்துகின்றார் (8:4;28:1-4). ஆமோஸ் இந்நகரில் குழப்பத்தையும் கொடுமையையும் காண்கிறார் (ஆமோ 3:9); அழிவு வரும் என அச்சுறுத்துகிறார் (3:12;6:1). ஓசேயா சமாரியாவின் தீச்செயல்களைக் குறிப்பிடுகின்றார் (ஓசே 7:1;8:5 தொ;10:5.7;14:1).

மீக்கா சமாரியாவை இஸ்ராயேலின் பாவம் என்றழைக்கிறார்; அது முழுவதும் அழிக்கப்படும் என்று அச்சுறுத்துகிறார் (மீக் 1:5-7). பிற்காலத்தில், அசிரிய அரசர்கள் ஏசர்கத்தோன், ஒசினப்பார் ஆகியோர் புறவினத்தாரைச் சமாரியாப் பகுதியில் குடியேற்றினர் (எஸ் 4:2-10). மேலும் இந்நகர் பல ஆண்டுகளுக்குப் பாரசீக அரசில் மாவட்ட ஆட்சியகமாகத் திகழ்ந்தது. எலெபன்டைன் யூதர்கள், கி.மு. 408-இல் தங்கள் ஆலயம் அழிக்கப்பட்டபின் உதவிகேட்டு, சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் எழுதினர். அலக்சாந்தரின் படையெடுப்பிற்குப்பின், இந்நகர் கிரேக்க மயமாக்கப்பட்டது. விவிலியத்தின் மீதிக் காலம் முழுவதும் அப்படியே திகழ்ந்தது. இந்நகர் கி.மு. 108-இல் யோவான் இர்க்கானால் அழிக்கப்பட்டது. பாம்பே, கபினியு ஆகியோரால் மீண்டும் கட்டப்பட்டது. இந்த இடத்தில் ஏரோது பகட்டான, அழகுவாய்ந்த ஒரு நகரை எழுப்பி, அங்கு 6000 உரோமை ஓய்வுபெற்ற வீரர்களைக் குடியேற்றி, அதற்குச் செபாஸ்தே என்று பெயரிட்டார். இப்பகுதி சிரியா மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு, ஏரோது ம்ற்றும் அர்க்கெலாவின் ஆட்சிக்குள் சேர்க்கப்பட்டது. அர்க்கெலா பதவி நீக்கம் செய்யப்பட்டபின், முதலாம் அகிரிப்பாவின் குறுகிய காலத்தைத்தவிர (கி.பி. 41-44), யூதேயாவின் ஆளுநரால் ஆட்சி செய்யப்பட்டது.

நற்செய்தியில் சமாரியா லூக் 17:11-இல் குறிக்கப்படுகிறது. இயேசு கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குச் செல்லுகையில் சமாரியா வழியாகச் செல்கிறார் (யோவா 4:4-7). யூதேயாவுக்குப் புறம்பே, அப்போஸ்தலர்கள் இயேசுவுக்குச் சான்று பகரும் முதல் இடமாகச் சமாரியா அ.ப.1:8-இல் குறிக்கப்படுகிறது. ஸ்தேவான் கொலைக்குப்பிறகு இயேசுவின் நற்செய்தி சமாரியாப் பகுதியில் பரவியது (அ.ப.8:1-25;9:31;15:3).

சமையற்கட்டு (KITCHEN)

எசேக்கியேல் கண்ட காட்சியில் காட்டப்படும் கோவிலில் வெளிமுற்ற மூலையில் அமைந்தது சமையற்கட்டு. பொதுமக்கள் இடும் பலமிருகங்களின் இறைச்சி சமையல் செய்யப்படும் இடம் இதுவே (எசே 46:21-24). குற்ற நீக்கப்பலி, பாவநீக்கப்பலி, சாதாரண உணவுக்காணிக்கைகள் ஆகியவை குருக்களுக்குரிய அறைகளுக்கு மேற்கு ஓரத்தில் இருந்த சமையற்கட்டில் சமைக்கப்பட்டன (46:19-20). இவ்வாறு இவற்றை அவர்கள் வெளிமுற்றத்திற்குக் கொண்டுபோவதன் மூலம், இவற்றின் தூய்மை தூய்மையற்றவர்களில் தொடர்பால் கெடுவது காப்பாற்றப்பட்டது.

சமொத்திராக்கு (SAMOTHRACE)

இது ஏகியன் கடலுக்கு வடகிழக்கிலுள்ள ஒரு தீவு. இதன் வழியாக அப்போஸ்தலரான பவுல் தம் பணிப் பயணங்கள் செய்திருக்கிறார்.

இந்தத் தீவிலே சாமியார்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் குடியேறி இருக்கலாம் எனத் தெரிகிறது. அவர்கள் அங்கே திராக்கு மக்களைக் கண்டதால் ''திராக்குசமொ'' என்று பெயரிட்டிருக்கலாம். 'இந்தத் தீவு புதிய கற்காலத்தைச் சார்ந்தது' என்று புதைபொருள் ஆதாரங்கள் வழியாகத் தெரிகிறது. கிரேக்கர்களின் காலத்தில் கடற்படைக்குத் தகுந்த இடமாக இருந்தது. மேலும் சமய

வளர்ச்சிக்கு முக்கியமான இடமாகவும் இருந்திருக்கிறது. இங்கே, பெரும் தெய்வங்களின் வழிபாட்டிடம் இருப்பது புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவாகத் தெரியவந்துள்ளது. அங்கே சிறப்பு வழிபாட்டுக்காகப் பல திருப்பயணிகள் சிறிய ஆசியாவிலிருந்தும், கிரீசிலிருந்தும் வருவார்கள்.

அப்போஸ்தலரான பவுல் நெயாப்பொலிக்குப் போகும் வழியில், தென் கடற்கரையிலுள்ள ஒரு சிறிய துறைமுகத்துக்கு அருகிலே அமைந்துள்ள ஒரு பழைய நகருக்குச் சென்றார் (அ.ப. 16:11). துரோவாவுக்குத் திரும்பும்போதும் அவர் அங்குச் சென்றிருக்கலாம் (20:6).

1938-இல் இந்தத் துறைமுகத்து முனையில் ஒரு தொடக்ககாலக் கிறிஸ்துவ ஆலயம் சீர் குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இது பவுல் இங்குக் கரையிறங்கிய நிகழ்ச்சியை நினைவு கூறலாம்.

சம்கார் (SHAMGAR - சிமிக்கே கடவுள் கொடுத்தார்)

இவர் அனாத்தின் மகன். இவர் காலத்தில் பாதைகள் ஆள் நடமாட்டமின்றிக் கிடந்தன. ஏனென்றால் கொள்ளையடிப்பது மிகுதியாய் இருந்தது (நீதி 5:6). மேலும் சம்கார், பெலிஸ்தியரில் அறுநூறு பேர்களைக் கலப்பைக் கொழுவால் கொன்று இஸ்ராயேலுக்கு விடுதலை அளித்தார் (நீதி 3:31).

சம்கார் பெலிஸ்தியர்களை வென்றது சிம்சோன் கழுதைத் தாடையை வைத்துக் கொண்டு ஆயிரம் பிலிஸ்தியர்களைக் கொன்றதற்கும் (நீதி 15:14-16) ஆகேயின் மகன் சம்மா வயலைக் காப்பாற்றிப் பெலிஸ்தியர்களைத் தோற்கடித்ததற்கும் (2 சாமு: 23:11-12) ஒப்ப இருக்கிறது.

சம்கார் ஒரு நீதிபதியாக அழைக்கப்படவில்லை. ஆனால் இவர் இஸ்ராயேலர்களைக் காப்பாற்றும் பொருட்டுப் பெலிஸ்தியர்களோடு போரிடுவதில் உதவி செய்யும் ஒரு கானானிய இளவரசர் போல் தோன்றுகிறார். நீதி 5:6-இன் படி பார்த்தால் இவர் இஸ்ராயேலுக்கு எதிராக இருக்க வாய்ப்பு இருக்கிறது.

சம்கார் நெபோ (SAMGAR - NEBO)

இது பிற்காலப் பாபிலோனிய இளவரசனின் பெயராக அல்லது பட்டமாக இருக்கலாம். இவர் கி.மு. 588-586-இல் எருசலேம் முற்றுகையில் பங்கெடுத்தார் (எரே 39:3). இந்த வாசகம் மூன்று இளவரசர்களைக் குறிப்பிடுகிறது; நான்கு பேர்களை அல்ல. முதலாமவர் சம்கார் என்ற நேர்கால்-சரேத்சர், இரண்டாமவர் இரபிசாரி என்ற நெபோ-செர்செக்கிம். இந்த இரண்டும் பாபிலோனியப் பெயர்களின் எபிரேய மொழிச் சிதைவுகள்தான்.

சம்சராய் (SHAMSHERAI - சூரியன் போன்ற)

இவர் பென்யமின் குலத்தினர். எரொகாமுக்கு முதல் மகனாகப் பிறந்தவர் (1 நாள் 8:26).

சம்சும்மிம், சம்சும்மியர் (ZAMZUMMIM - பிதற்றல்)

அம்மோனியர்கள் யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதியில் குடியேறுவதற்கு முன்பு அங்கு வாழ்ந்த மக்களை அவமதிப்புக்குரிய இப்பெயர் கொண்டு அழைத்தனர். இதற்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர் விளக்கங்கள் ஒன்றுகூடத் திருப்திகரமானதாக இல்லை. ஆதி 14:5-இல் உள்ள ஓசிம் என்பதும் இதுவும் ஒன்று என்று சொல்வதை நிரூபிக்கமுடியாது.

சம்சும்மியர் என்பவர்கள் இரபாயிம் என்ற குலத்தைச் சேர்ந்தவர்களென்றும், கி.மு. 2000-ஐ ஒட்டி, கிழ்த்திசை அரசர்களிடம் (ஆதி 14:5) தோற்றார்கள் என்றும் உபாகம வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார் (உப 2:20-21). இவர்கள் யோர்தானுக்கு அப்பால் தொடர்ந்து வாழ ஆரம்பித்தார்கள்; அம்மோனியர்கள் இங்குக் குடியேறியபொழுது இவர்களை வெளியேற்றவேண்டியதாயிற்று. அம்மோனியர்கள் தங்கள் முன்னோடிகளைப் பற்றி நல்ல எண்ணம் கொண்டிருந்தனர். ஏனென்றால் உப 3:11-இல் "அரக்க

வம்சத்தாருக்குள்ளேயே பாசான் அரசனாகிய ஓகு என்பவனின்'' படுக்கைத் தலைநகரமான இரபாவில் இருந்தது. இவர்கள் ஓகுவை ஒரு கதைத்தலைவனாகக் கொண்டாடியதாகத் தெரிகிறது.

சம்பிசாம் (SAMPSAMES)

உரோமை வெளியுறவு மேலாளர் லூக்கியு என்பவர் யூதர்களுக்கு ஆதரவாகப் பல இடங்களுக்குக் கடிதம் எழுதினார். அதில் ஓரிடம் சம்பிசாம் என்பதாகும். இது கருங்கடலில் உள்ள துறைமுகமாக இருக்கலாம். இப்போது ''சம்சூன்'' என்றழைக்கப்படுகிறது.

சம்மா (SHAMMA - பாழ்பட்ட)

ஆசேர் கோத்திரத்தில், சோபாகுவின் எட்டாவது மகனாகச் சம்மா பிறந்தார் *(1 நாள் 7:37)*.

சம்மாகு (SHAMMAH - பாழ்படுதல், வீணாகுதல்)

1. ஏதோமியத் தலைவர். இவரது தந்தையான இரகுவேல், ஏசாவுக்கும் இசுமயேலின் மகளான பாசமத்துக்கும் பிறந்தவர் *(ஆதி 36:13.17; 1 நாள் 1:37)*.

2. சம்மாகு பெத்லகேமைச் சேர்ந்த ஈசாயின் மூன்றாவது மகன். இவர் அம்மோனுக்கும் பெலிஸ்திய அரக்கனைக்கொன்ற யோனத்தானுக்கும் *(2 சாமு 21:21; 1 நாள் 20:7)* ஐயுறவான நண்பனாக இருந்த சூழ்ச்சி மிக்க யோனதாபுக்குத் தந்தை *(2 சாமு 13:3.32)*. சாமுவேல் ஈசாயின் புதல்வர்களில் ஒருவனை இஸ்ராயேலுக்கு அரசனாக அபிடேகம் செய்தபோது, சம்மாகு அங்கிருந்தார். ''இவரை ஆண்டவர் தேர்ந்து கொள்ளவில்லை" என்று இறைவாக்கினர் சொல்லிவிட்டார் *(1 சாமு 16:9)*. மேலும் பெலிஸ்தியப் படையெடுப்பின்போது சவுலின் படையில் சம்மாகு, மற்ற இரு மூத்த சகோதரர்களோடு இருந்தார். இவர் தனது இளைய சகோதரரின் கைகளினால் ஏற்பட்ட அரக்கரின் தோல்வியைப் பார்த்தார் *(1 சாமு 17:13 தொ)*.

3. இவர் ஓர் ஆரரியர்; ஆகேயின் மகன்; தாவீதின் மூன்று உயர் அதிகாரிகளில் ஒருவராக உயர்த்தப்பெறத் தகுதி பெற்றவர். இவரது வீரத்தை விளக்க ஓர் எடுத்துக்காட்டுத் தரலாம். இவர் ஒருவரே தனித்துநின்று பயறு வயலைக் காப்பாற்றிப் பெலிஸ்தியர்களைத் தோற்கடித்தார் *(2 சாமு 23:11-12; 1 நாள் 11:12-14)*. இவரது மகன் யோனத்தான், தாவீதின் முப்பது வீரர்களில் ஒருவராக இருந்தார் *(2 சாமு 23:32; 1 நாள் 11:34)*.

4. கரோதியரான (அரோத்தியர்) சம்மாகு தாவீதின் முப்பது ஆற்றல்மிக்க வீரர்களில் ஒருவர் *(2 சாமு 23:25)*. இவர் தாவீதின் 24000 போர் வீரர்களுக்குத் தலைவனாக இருந்தார். இது ஐந்தாம் மாதத்தில் பணிபுரிந்தது ஆகும் *(1 நாள் 27:8)*. இவரது பெயர் கரோதியரான சம்மோத்து என்றும் *(1 நாள் 11:27)*, இசுராகியரான சங்கூத்து என்றும் *(11:8)* குறிப்பிடப் பட்டுள்ளது.

சம்மாய் (SHAMMAI - யாவே கேட்டருளினார்)

1. இவர் யூதா குலத்து எரகுமவேல் வழிவந்தவர் *(1 நாள் 2:28.32)*. ஓனாம் என்பவரின் மகன் நதாபு, அபிசூர் என்பவர்களின் தந்தை யாதாவின் சகோதரர்.

2. யூதா குலத்தைச் சேர்ந்த காலேபின் வழியில் பிறந்தவர் *(1 நாள் 24:44-45)*. இரக்கேமின் மகன். மாவோனுக்குத் தந்தை.

3. யூதா குலத்தில் பிறந்தவர் இவர் எகிப்திய மனைவி பித்தியாவின் மூலம் மெரேதுக்குப் பிறந்தவர் *(1 நாள் 4:17)*.

சம்மூவா (SHAMMUVA - பெயர்பெற்ற)

1. தாவீதின் புதல்வர்களில் ஒருவர். இவர் தாவீதுக்கு, எருசலேமிலிருந்த வைப்பாட்டியின் மூலம் (அல்லது மனைவியின் மூலம்) பிறந்தார். தாவீது தனது தலைநகரை எருசலேமுக்குக் கொண்டு சென்றபோது தனது அதிகாரத்தின் அறிகுறியாக அந்தப்புரத்தைப் பெரிதாக்கினார். சம்மூவாவும், 1 நாள் 3:5-இல் குறிக்கப்பட்டிருக்கும் சிமயாவும் ஒருவர்தாம்.

2. இவர் ரூபன் கோத்திரத்துச் சக்கூரின் புதல்வராவார் *(எண் 13:4)*. இவர் மோசே கட்டளைப்படி, பாரான் பாலைவனத்தி

விருந்து கானானை உளவு அறிய அனுப்பப் பட்ட பன்னிருவரில் ஒருவர். இது கானான் தேசத்தை இஸ்ராயேலர்கள் பிடிக்குமுன் நடந்தது.

3. சம்மூவா ஒருலேவியர்; அபிதாவுக்குத் தந்தை;. கலாலின் மகன். இவர் 1 நாள் 9:16-இல் செமாயா என்று அழைக்கப்படு வார்.

4. இவர் ஒரு குரு; பில்காவின் மகன்; ஒரு குருகுலத்திற்குத் தலைவராக இருந்தார் (நெகே 12:18). இவரும் 3-இல் குறிப்பிடப் பட்டவரும் ஒரே ஆளாக இருக்க வாய்ப்பு உண்டு.

சம்மோத்து (SHAMMOTH - அழிவு, பாழாகு தல்)

இவர் ஒரு கரோதியர் (அரோதியர்); தாவீ தின் முப்பது ஆற்றல்மிக்க வீரர்களில் ஒருவர் (1 நாள் 11:27). இதற்கு இணையான பெயர்ப் பட்டியலில், கரோதியரான (அரோது) சம்மா என்றிருக்கிறது (2 சாமு 23:25). இது சரியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 1 நாள் 11:27-இல் வரும் 'அரோரியன்' தவறா கத் தோன்றுகிறது.

சம்லா (SHAMLAH - ஆடை)

இவர் இஸ்ராயேலர்களை எந்த அரசனும் ஆள்வதற்குமுன் ஏதோமின் ஐந்தாவது மன் னனாக இருந்தார். இவருக்குச் சொந்த ஊர் மசுரேக்கவாகும். (ஆதி 36:36-37; 1 நாள் 1:47-48).

சம்லாய் (SHAMLAI)

சல்மாய் என்ற பெயரின் மற்றொரு வடி வம் (எஸ் 2:46). காண்க சல்மாய்.

சரடு (BUCKLE)

வெளி ஆடையை இறுக்கிக் கட்டுவதற் குப் பயன்படுத்தப்பட்ட ஒரு கொக்கி இது உள் ளாடைமேல் அமைந்திருக்கும்; தோள்பட் டையோடு இணைக்கப்பட்டிருக்கும். பொதுவாக, மத்தியதரைக் கடல் நாடுகளில் கிரேக்க-உரோமைக் காலங்களில் திற மைக்கு, தகுதிக்கு அடையாளமாக ஆடை யைக்கு பரிசாக வழங்கப்பட்டது. உரோமை யின் கிழக்கத்திய பகுதியில் தங்கத்தால் செய் யப்பட்ட பொன்சரடுகள் பரிசாக வழங்கப் பட்டன. இது அரசாட்சி செய்வோருக்கு, முக்கியமான பெரிய மனிதர்களுக்கு அல் லது அரசனின் ''உறவினர் நண்பர்களுக்கு வழங்கப்படும்'' (1 மக் 10:89; 11:58; 14:44).

சரேத்சர் (SHAREZER - கடவுள் அரசனைக் காப்பாற்றுவாராக)

1. சனகெரிபுவின் மகன். இவரும் அதிமெ லக்கும் சேர்ந்து கி.மு. 681-இல் நிசுரோக்கு கோவிலில் வழிபாடு செய்து கொண்டிருந்த தங்கள் தந்தையை வெட்டிக் கொன்றனர் (2 அர 19:37; எசா 37:38).

2. இரகேம்-மெலக்குடன் குறிக்கப்படுப வர். கி.மு. 518-இல், பெத்தேலின் மக்கள் எருசலேமுக்கு அனுப்பிய தூதுக் குழுவின் தலைவர்களில் ஒருவர். இத்தூதுக்குழு ஆண் டவரின் அருளைப்பெற மன்றாட வேண் டும். மேலும், ஆண்டவரது கோயிலில் இருக்கும் குருக்களையும் இறைவாக்கினர் களையும் கண்டு, ஐந்தாம் மாதத்தில் வரும் வழக்கமான நோன்பிருந்துபுலம்புதல் இன் னும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமா என்று கேட்டு வர வேண்டும் (செக் 7:2-3). இத் தூதுக்குழு பெத்தேலிலிருந்து அல்லாமல் மெச பொத்தாமியாவிலுள்ள ஒரு யூதக் குடியிருப்பி லிருந்து வந்திருக்கலாம்.

சர்செக்கிம் (SARSECHIM)

இது கி.மு. 587-இல் எருசலேம் படை யெடுப்பில் கலந்துகொண்ட பாபிலோனிய இளவரசர்களில் ஒருவரின் பெயராகவோ ஒரு தலைவனுக்கு அளிக்கப்பட்ட ஒரு பட் டமாகவோ இருக்கலாம் (எரே 39:2). இது அடிமைகளின் தலைவனைக் குறிக்கும் சொல்லாகவும் பயன்பட்டு வந்தது.

சர்தை (SARDIS)

இது இக்காலத்தில் சாரத் என்றழைக்கப் படுகிறது. இது சிறிய ஆசியாவில் சிமிர்னா வுக்குக் கிழக்கே 80 கிலோமீட்டர் தொலை விலுள்ள ஒரு நகரம். இது லீதியா ஆட்சிப்

பகுதிக்குத் தலைநகராக இருந்தது. கி.மு. 546-இல் சைரசால் கைப்பற்றப்பட்டுச் சிறிய ஆசியாவுக்கு நிர்வாகத் தலைநகராக ஆனது. இது சூசாவிலிருந்து வரும் சாலையின் மேற்குக் கோடியில் இருக்கிறது. இதுபாரசீக ஆதிக்கத்திலிருந்து, செலூக்கிய ஆட்சிக்குப் பின் பெர்கமு ஆட்சிக்கும், பின் உரோமை ஆட்சிக்கும் மாறியது. இந்நகர் கைவினைத் திறனுக்குப் புகழ்பெற்றது. கி.பி. 17-இல் ஒரு நிலநடுக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1910 - முதல் 1914 வரையிலும் 1958-இலும் நடத்தப்பட்ட புதை பொருள் ஆராய்ச்சியில் இந்நகரின் சிதைவுகளில் விளையாட்டரங்கம், நாடகஅரங்கம், மூப்பர் பேரவை போன்றவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கேயுள்ள அர்த்தமி கோவில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது. அப்போஸ்தலர்கள் காலத்திலேயே இங்குத் திருச்சபை நிறுவப்பட்டது. திருவெளிப்பாட்டில் வரும் ஏழு திருச்சபைகளில் ஒன்று சர்தையாகும் (திருவெளி 1:11;3:1-4).

சலவைக்கல் (MARBLE)

சலவைக்கல் சுண்ணாம்புக்கல்லிலிருந்து வேறுபட்டது. இவற்றின் நிறம் வெள்ளை முதல் கருப்பு வரை வேறுபடுகின்றது. தாவீது ஆலயம் கட்டுவதற்குச் சேர்த்த பொருட்களில் இதுவும் ஒன்று (1 நாள் 29:2). பரோசு நயமான சலவைக்கல் கிடைக்கும் இடமாகும். தாவீது இங்கிருந்துதான் சலவைக் கற்களைக் கொண்டுவந்தாரா என்பது சந்தேகத்திற்குரியதாய் இருக்கின்றது. இவர் ஆலய வளாகத்தின் வடக்கிலிருந்த பெசெத்தா குன்றிலிருந்த சுண்ணாம்புக் கற்களையே பயன்படுத்தி இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. ''சூசாவில் இருந்த அரண்மனையில் சலவைக் கற்களாலான தூண்கள் இருந்ததாக எஸ்த 1:6 குறிப்பிடுகின்றது. பாரசீகர்கள் பெர்சப்போலி என்ற இடத்திலிருந்து சலவைக் கற்களைப் பெற்றனர். அசூர்பானிபல் ஏலாமிலிருந்து சலவைக் கற்களாலான சிலைகளை எடுத்துவந்ததாகத் தற்பெருமை பேசினார். சனகெரிபு அம்னானா மலைகளிலிருந்து சலவைக் கற்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சலவைக்காரர், வண்ணார் (FULLER)

கம்பளி, துணி ஆடைகளைச் சுருங்கச் செய்து தடிமனாக்கிப் பதப்படுத்தும் தொழிலாளி. இது ஆடைப்பொருட்களை, அடித்து, மிதித்து, சவர்க்காரத்தையும் மற்றப் பொருட்களையும் கொண்டு தேய்த்து, தண்ணீரில் சுத்தப்படுத்துவதாகும் (மலா 3:2). இறுதியில் ஆடை சூரிய வெப்பத்தில் விரித்து உலர்த்தப்பட்டது

சலவைக்காரரின் பணியிடம் பொதுவாக, நீர் கிடைக்கக்கூடிய இடத்தில் அமைக்கப்பட்டது. உலர்த்துவதற்குப் போதிய இடம் இருக்கவேண்டும். இதிலிருந்து விரும்பத்தகாத வீச்சம் உண்டாகும் என்பதால் சலவைக்கூடங்கள் பொதுவாக ஊருக்கு வெளியே அமைக்கப்பட்டன. ஆகாசை எசாயா சந்தித்த ''வண்ணான் வயலும்'' (எசா 7:3), எசேக்கியா மற்றும் சனகெரிபு ஆகியோரின் தளபதிகள் சந்தித்த, ''வண்ணார் துறையும்'' (எசா 36:2;2 அர 18:17) மேல் புறத்துக் கால்வாய் அருகில், ஒரு வேளை ஏன்ரோகேல் அல்லது கீகோன் ஊற்றுக்கருகில் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில், தீமையிலிருந்து தூய்மை பெறுபவரைப்பற்றிச் சலவைக்காரர் சுத்தப்படுத்துதல் என்ற கருத்து உருவகமாகப் பயன்பட்டுள்ளது (சங் 51:7;எரே 2:22;4:14). சமய விழாக்களின் போது வெண்ணிற ஆடைகள் பயன்பட்டன. இவற்றைச் சிறப்பான முறையில் சுத்தப்படுத்தவேண்டும் (செக் 3:3; திருவெளி 4:4). ஆண்டவரின் நாளுக்காகத் தூதர் குருத்துவத்தைத் தூய்மைப்படுத்துவது சலவைக்காரர் சுத்தப்படுத்துவதற்கு ஒப்பிடப்படுகிறது (மலா 3:2;எரே 2:22). புதிய ஏற்பாட்டில், இயேசு ஒளி உருமாற்றம் கொண்டபோது, அவரது ஆடைகள் ''இவ்வுலகில் எந்தச் சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்குப் பளபளப்பாக வெண்மையாயின'' (மாற் 9:3; மத் 17:2).

சலாமியேல் *(SALAMIEL - இறைவன் நட்பு டையவர்)*

சலாமியேல் யூதித்தின் மூதாதையர். சராச தாய் என்பவரின் மகன். இந்தப் பெயரானது செலுமியேல் என்பதன் எழுபதுநூல் வடிவத் தோடு ஒத்து இருக்கின்றது. அனேகமாக ஒரே ஆளைக் குறிக்கலாம்.

சலிக்கா *(SALECAH - நகருகின்ற)*

பாசானின் கிழக்குப் பகுதியில் காதைச் சேர்ந்த ஒரு நகரம். இது ஒரு மாவட்டத்தின் பெயராகவும் இருக்கலாம். இது ஒரு அரசின் ஒரு பகுதியாகவும் அதன் வடகிழக்கு எல் லையாகவும் இருந்தது. பாசானை இஸ்ரா யேல் கைப்பற்றியபோது சலிக்காவும் வீழ்ச்சி யுற்றது (யோசு 12:5;13:11; 1 நாள் 5:11). இது விவிலியத்தில் அவ்வளவு முக்கிய இடம் வகிக்கவில்லை.

இந்த இடமும், பெயரும் சால்க்காது என்ற நகரில் அழியாது பாதுகாக்கப்படுகின் றன. இந்நகரம் ஒரு வட்ட வடிவ எரிமலைப் பாறையின்மேல் கட்டப்பட்டது. இந்தப் பாறை தரைமட்டத்திலிருந்து 90 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கிறது; தமஸ்குவிற் குத் தென்-தென்கிழக்கில் 115 கி.மீ. தொலை விலும் இக்காலச் சீரியாவின் தென் முனையி லும் அமைந்துள்ளது. இது கி.பி. 17-இல் மாலிக்கு என்ற நபத்தேய அரசனால் கைப் பற்றப்பட்டது என்ற செய்தி நபத்தேயக் கல் வெட்டுப் பொறிப்புகளின் மூலம் தெரிகி றது. பல உரோமையர் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

சலீம் *(SALIM - அமைதி)*

சலீம் ஐனோனுக்கு அருகில் உள்ள ஓரி டம். இந்த இடத்தைச் சரியாகக் குறித்துச் சொல்லமுடியாது. அங்கே தண்ணீர் அதிகம் இருந்ததால் யோவான் திருமுழுக்குக் கொடுத்து வந்தார் (யோவா 3:23).

இரண்டு குறிப்புகள் சொல்லப்படுகிறது. ஒன்று: அந்த இடம் யோர்தானுக்கு அருகில் பெத்சாலுக்குத் தெற்கில் 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இதை யுசேபியுவும் எரோனிமுவும் (கி.பி.400) குறித்து வைத்தி ருக்கின்றனர். இரண்டு: பலத்தாவுக்கு (செக் கேம்) 5 கிலோமீட்டர் கிழக்கே உள்ள மலைப்பாங்கான நாட்டிலே இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

சலோமி *(SALOME - அமைதி, நல்வாழ்வு)*

1. சலோமி என்பவள் இயேசுவைப் பின் பற்றிய கலிலேயப் பெண்களில் ஒருத்தி அனேகமாகச் செபதேயுவின் மனைவியாக வும், யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாயாகவும் இருக்கலாம்.

மாற் 15:40-இன்படி பல கலிலேயப் பெண்கள், சிலுவையின் அடியில் நின்றனர் என்று சொல்லப்பட்டுள்ளது. அதில் சலோ மியும் இருந்தாள். பிறகு இயேசுவின் உட லில் பூசுவதற்காகப் பரிமளப் பொருட்கள் கொண்டு வந்தவர்களோடு சேர்ந்திருந்தாள் (16:1). மத் 27:56-இன் மூலம் சலோமி, செபதேயுவின் புதல்வர்களுக்குத் தாய் என் பது தெளிவாகத் தெரிகிறது. யோவா 19:25-இல் 'அவர் தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாள்' என்றுள்ளது. இதை இரண்டாகப் பிரித்துப் பார்த்தால், முதலில் குறிக்கப்படுபவர் சலோமியாக இருக்க வாய்ப்பிருக்கிறது. இதன்படி பார்த்தால் சலோமியும், செபதே யுவும் இயேசுவுக்குச் சின்னம்மா, சித்தப்பா வாக ஆகிறார்கள். யாக்கோபும், யோவா னும் இயேசுவுக்குச் சகோதரர்கள் ஆகிறார்கள்.

அறிஞர் சிலரின் கருத்து: சிலுவையில் அறையுண்டிருந்த இயேசு தன் தாயைத் தான் அன்பு செய்த சீடரிடம் (யோவான்) ஒப்ப டைத்தார் (யோவா 19:26-27). இதைக் கருத் தில் கொண்டால் செபதேயுவின் மக்கள் இயேசுவின் அழைப்பை உடனடியாக ஏற் றுக்கொண்டது சாத்தியமாகிறது (மாற் 1:19-20). யாக்கோபு, யோவான் ஆகியோர் இறையரசில் வலப்பக்கம் ஒருவரும் இடப் பக்கம் ஒருவருமாக இருக்க அவர்களின் தாய் வேண்டியதாகக் கூறப்படும் நிகழ்ச்சி (மாற் 10:35; மத் 20:20) இந்த அப்போஸ்தலர்

களின் பொது மதிப்பைப் பாதுகாக்க மத்தேயு வால் செய்யப்பட்ட முயற்சி என்று விளக் கப்படுகிறது.

2. சலோமி ஏரோது பிலிப்புக்கும், ஏரோதி யாளுக்கும் மகளாகப் பிறந்தவள். அவளது பெயர் நற்செய்திகளில் குறிப்பிடப்பட வில்லை. ஆனால் அவள் 'விருந்தினர்களுக் காகவும், ஏரோது அந்திப்பாவுக்காகவும் நட னம் ஆடியது மட்டும் சொல்லப்பட்டுள் ளது. இந்த நடனம், அந்திப்பா ஆணையிட இதனால் திருமுழுக்கு யோவான் தலை போகக் காரணமாகியது (மத் 14:1தொ;மாற் 6:17தொ). இவளைப் பற்றி யோசிப்பசின் நூலிலிருந்து அறிகிறோம்.

சல்மனேசர் (SHALMANESER - சல்மானு தலைவராவார்)

1. முதலாம் சல்மனேசர் (கி.மு. 1274-1245) முதலாம் அதாது நிராரியின் மகன். தனது அரசின் தெளிவான விவரிப்பை விட்டுச் சென்ற முதல் அசீரிய மன்னன். முதலாம் சல்மனேசர் சக்ரோசில் உள்ள மலைவாழ் மக்களோடும், கனிகல்பட்டின் சத்தூராரோ டும் யூப்பிரத்தீசை ஒட்டிய அரமேயர்களோ டும் போர் புரிந்தார். இவரது வெற்றிகள், இருண்ட காலத்திலிருந்து அசீரியா அதிகா ரத்திற்கு வரக் காரணமாயின.

2. இரண்டாம் சல்மனேசர் (கி.மு. 1031-1020): இவரைப் பற்றி ஒன்றும் அறியப் படவில்லை. முதலாம் திகிலத்து பிலேசருக் குப் பிறகு ஆண்ட திறமையற்ற ஆட்சியாளர் களில் இவரும் ஒருவர்.

3. மூன்றாம் சல்மனேசர் (கி.மு. 858-824): இரண்டாம் அசூர்நசிர் பாலின் மகன். புதிய அசீரியப் பேரரசை நிறுவியவர்களில்' ஒரு வர். இவர் இஸ்ராயேல் அரசர்களோடு தொடர்பு வைத்துக் கொண்ட, முதல் அசீரிய அரசராவார். வடக்கில் உராத்துவோடு போரிட நேரிட்டது. இது தற்பாதுகாப்புக்கா கச் செய்ய வேண்டியதாயிற்று. மேற்கே போரிட்டது நாடு பிடிப்பதற்காகத்தான். மூன்றாம் சல்மனேசர் மூன்று வருடமாக (858-856) அரமேய அகுனியை யூப்பிரத்தீசின் இடக்கரையிலிருந்து வெளியேற்றுவதில் சிர மப்பட்டார். இதை அந்த ஆறுவரை தனது அரசு இருக்க வேண்டும் என்பதற்காகச் செய் தார். இந்த நிகழ்ச்சிகளின் விளைவாகச் சீரி யாவில் ஆண்ட ஆட்சியாளர்கள் அவர்களுக் குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இப்படி ஒன்று கூடினதால் போரிடப் பலம் பொருந்தியவர்களாகி அசீரிய ஆதிக்கத்தை முறியடிக்கலாம் என்று எண்ணியிருந்தனர். இது அந்தப் பகுதி வரலாற்றில் அரிய செய லாகும். ஆனால் எண்ணம் சரிவர நிறைவேற வில்லை. இவரது அசீரிய ஆதிக்கம் சிலி சியா உள்பகுதி வரைக்கும் கூட போய்விட் டது. இவரது ஆட்சிப் பகுதி மிகுதியான தால், ஆட்சி பாழ்பட்டது. நாடு எங்கும் கிளர்ச்சிகள்தான் இவரது ஆட்சியின் இறுதிக் காலத்தைக் களங்கப்படுத்தின.

4. நான்காம் சல்மனேசர் (கி.மு. 782-772): மூன்றாம் அதாது நிராரியின் மகன். இவரது ஆட்சிக் காலம் முழுதும் உராத்து அரசோடு போர் தொடுத்துத் தன் ஆட்சியைக் காப்பாற்ற வேண்டியதாயிற்று.

5. ஐந்தாம் சல்மனேசர் (கி.மு. 727-722): மூன்றாம் திகிலத்துபிலேசரின் மகன். இவ ரது ஆட்சிக்காலம் மிகவும் குறுகியது. இவர் வரலாற்றுப் பொறிப்பு ஒன்றை விட்டுச் சென்றி ருக்கிறார். இவர் உளுலை என்ற பெயரில், பாபிலோனில் ஆண்டு வந்தார். எகிப்தின் தூண்டுதலால் ஓசேயா அசீரியாவுக்கு எதிரா கக் கிளர்ச்சி செய்தபோது சமாரியாவை முற்றுகையிட்டார். இம்முற்றுகை மூன்று வருடங்களாக நீடித்தது என்று தெரிகிறது. இம்முற்றுகையின்போது இவர் இறந்தார் அல்லது கொல்லப்பட்டார். ஆகவே அசீரி யப்படை பின்வாங்கித் திரும்பிப்போனது. இவருடைய சகோதரர் இரண்டாம் சார் கோன் ஆட்சிக்கு வந்தார் (2 அர 17:3-6; 18:9-12).

சல்மா (SALMA)

சல்மோன் என்ற பெயரின் மற்றொரு வடிவம். காண்க: சல்மோன்.

சல்மாய் (SHALMAI - யாவே அமைதியாவார், நலம் ஆவர்)

இவர் நெத்தினிமின் ஒரு குடும்பத்தின் குலப்பெயர் முதல்வராக உள்ளார். நாடு கடத்தப்பட்டு, பாபிலோனிலிருந்து திரும்பியவர்களில் இவருடைய மக்கள் ஆலய ஊழியர்களாக இருந்தனர் (நெகே 7:48; எஸ் 2:46). சல்மாய் என்பது சம்லாய் என்பதன் மற்றொரு வடிவமாக இருக்கலாம்.

சல்மான் (SHALMAN)

இவர் அடையாளம் காட்டமுடியாத புறவினத்து அரசன் (ஓசே 10:14). இப்பெயர் மூன்றாம் சல்மனேசர் என்ற அசீரிய அரசனின் சுருக்கப் பெயராகக் கருதப்படுகிறது. இவர் கிமு. 82-இல் நடத்தியபோரில் பெத்தர் பேல் அழிக்கப்பட்டது.

சல்முன்னா (ZALMUNNA பாதுகாப்பில்லாத)

தன்னுடைய சகோதரர்களைக் கொன்றதற்காகக் கிதியோன் கைப்பற்றிக் கொன்ற இரு மிதியானிய அரசர்களில் ஒருவர் (நீதி 8:4-21; சங் 83:11).

சல்மோனா (ZALMONAH - இருண்ட)

கோர் (ஓர்) மலையைவிட்டுக் கிளம்பி பூனோனை அடைவதற்கு முன் இஸ்ராயேலர்கள் முதலில் பாளையம் இறங்கிய இடம் (எண் 33:41-42). இந்த இடம் கண்டுபிடிக்கப் பட முடியாது. நீதி 9:48; சங் 68:14-இல் சொல்லப்பட்டுள்ளது. சல்மோன் மலையைப் போன்று இதுவும் காடுகள் நிறைந்த மலையின் பெயராக இருக்கலாம்.

சல்மோனி (SALMONE - ஆடை அணியப் பட்ட)

இது கிரேத்துத் தீவின் கிழக்கு முனையில் உள்ளது. அனேகமாக இக்காலச் சிதெரோ முனையாக இருக்கலாம். ஒரு எகிப்தியக் கப்பலில், பவுலும் அவருடைய தோழர்களும் உரோமைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பல நாள் கடினப் பயணம் செய்து கினிது நகர் எதிரே வந்தனர். சாதாரண நிலையை விட அதிகம் காற்று வீசியதால், பாதுகாப்பாக இருக்க சல்மோனி முனையைக் கடந்து, கிரேத்துத் தீவின் ஒதுக்கிலே வந்து சேர்ந்தார்கள் (அ.ப. 27:7).

சல்மோன் (SALMON - ஆடை அணியப்பட்ட)

1. சல்மோன் நகசோனின் மகன்; கெலுபாய் குடும்பத்தைச் சேர்ந்த போவாசு என்பவருக்குத் தந்தை (1 நாள் 2:11; ரூத் 4:20-21; மத் 1:4-5; லூக் 3:32). இவர் தாவீதின் மூதாதையருள் ஒருவராக உள்ளதால், இயேசு கிறிஸ்துவின் தலைமுறை அட்டவணையில் இடம் பெற்றிருக்கிறார். மத்தேயு நற்செய்தியில் ''சல்மோனுக்கு இராகாபிடம் போவாசு பிறந்தார்'' (மத் 1:5) என்று குறிக்கப்பட்டுள்ளது.

2. காலேபுக்கும் எப்ராத்தியப்பெண்ணுக்கும் கூர் என்பவர் பிறந்தார் (1 நாள் 2:19.50.51); கூருக்குச் சல்மோன் பிறந்தார். சல்மோன் என்பவர் ''பெத்லகேமின் தந்தை'' அதாவது பெத்லகேமில் குடியிருந்தவர்களின் தந்தை என்று வருணிக்கப்படுகிறார். மேலும் அற்றரோத்து எபத்-யோவாபு நகர மக்களும், நெற்றோபாவியர் மற்றும் மானகத்தியரில், சோரியரைச் சேராத பாதி இனமும், யகபேசில் குடியிருந்த குடிகளும் இன்னும் பலரும் சல்மோனுடைய குலத்தைச் சேர்ந்தவர்களாவார் (1 நாள் 2:50-51).

சல்மோன் (ZALMON - இருளான) - ஆள்

ஓர் அகோகியர்; தாவீதின் ''முப்பது'' ஆற்றல் மிக்க வீரர்களில் ஒருவர் (2 சாமு 23:28). 1 நாள் 11:29-இல் இவர் ஈலாய் என்றழைக்கப்படுகிறார். ஒருவேளை இது ''சிலாய்'' என்று அழைக்கப்படவேண்டும்.

சல்மோன் (ZALMON - இருளான) - இடம்

1. செக்கேமுக்கு அருகிலுள்ள ஒரு மலை. அபிமெலக்கு இங்கிருந்த மரங்களை வெட்டி, செக்கேமின் கோபுரத்தை எரித்தார் (நீதி 9:48). கெரிசிம் மலை செக்கேமுக்கு அருகில் இருந்ததால் சல்மோன் இந்த மலையின் சிகரம் என்று கருதப்பட்டது. இம்மலை

செக்கேமுக்கு அருகில் இருந்த வேறொரு மலையாகும். ஆனால் தங்களை நெருங்கி வரும் அழிவை அவர்கள் அறியமுடியாத அளவுக்குத் தூரத்தில் இருந்திருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

2. பாசானிலிருந்த ஓர் இடம் அல்லது ஒரு மலையாகும் (சங் 68:14). இங்கு இருந்த பெயர் 'இருட்டு' அல்லது 'இருட்டான இடம்'' என்பதைக் குறிக்கிறது; ஓர் இடத்தையல்ல என்று சிலர் கருதுகிறார்கள். இருப்பினும் தொடர்ந்து வருகின்ற வசனத்தில் வரும் 'பாசானின் மலை' சல்மோனைத்தான் குறிக்கின்றது என்று கருதப்படுகிறது. கெர்மோன் (எர்மோன்) மலையில் அடிக்கடி பனிபெய்வதால், இங்குக் குறிக்கப்படும் பனி உண்மையான பனியையோ, உருவகமாகத் தோற்றவர்களின் வெள்ளையான எலும்புகளால் மூடப்பட்ட பாசானின் ஒரு மலையையோ, பிரகாசிக்கும் கொள்ளைப் பொருள்களையோ குறிக்கலாம்.

சல்லகேத்து (SHALLECHETH - வாயில்)

இது எருசலேம் கோவிலின் மேற்கேயுள்ள வாயிலாகும் (1 நாள் 26:16). நகரத்திலிருந்து இங்குச்செல்ல ஒரு பாதையிருந்தது. இந்த வாயில் பாப் - ஏல் முட்டவாடாவுக்குத் தெற்கே 20 அடியிலுள்ள ஒரு பழைய வாயிலாக அடையாளம் காட்டப்படுகிறது.

சல்லடை (SIEVE)

இச்சொல் உருவகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. நீதித் தீர்ப்பின் நாளைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, ஆண்டவர் அழிவின் சல்லடையைக் கொண்டு நாடுகளைச் சலித்து எடுப்பார் என்று எசா 30:28 கூறுகிறது. அதே போல் ஆமோ 9:9-இல் இஸ்ராயேல் வீட்டாரை ஆண்டவர் சல்லடையில் தானியத்தைச் சலிப்பதுபோல் சலிக்கப்போகிறார் என்று கூறப்பட்டுள்ளது.

சல்லாய் (SALLAI - (இறைவன்) சீர்ப்படுத்தியுள்ளார்)

1. பென்யமின் குலத்தில் பிறந்தவர். நெகே 11:18-இன் படி இவர் நாடு கடத்தப் பட்ட காலத்திற்குப்பின் எருசலேமில் தங்கியிருந்தார் என்பது தெளிவாகிறது. இதற்கு இணையான 1 நாள் 9:9-இல் இந்தப் பெயர் காணப்படவில்லை.

2. நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப்பின் இவர் ஒரு லேவியராக இருந்தார் என்று நெகே 12:20-இன் மூலம் தெரிகிறது. இப் பெயரும் சல்லூ (2) என்ற பெயரும் ஒரே ஆளைக் குறிக்கலாம்.

சல்லூ (SALLU - அளவு செய்யப்பட்ட)

1. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பென்யமின் குலத்தில் பிறந்தவர். மெசுல்லாம் என்பவர் இவருடைய தந்தை ஆவார் (1 நாள் 9:7; நெகே 11:7).

2. நாடு கடத்தப்பட்டுத் திரும்பியவர்களில் ஒரு லேவியர் (நெகே 12:7). இப் பெயரும் சல்லாய் (2) என்ற பெயரும் (நெக 12:20) ஒரே ஆளைக் குறிக்கலாம்.

சல்லூம் (SHALLUM - உறைப்பீடு)

1. இவர் யகபேசின் மகன். எகதிரலோன் சமவெளியில் இபிலயாமிலிருந்து வந்தவராக இருக்கலாம். இவர் கி.மு. 747-இல் இஸ்ராயேலின் வடக்கு ஆட்சிப் பகுதியை அரசராக ஒரு மாதத்திற்கு ஆட்சி செய்தார் (2 அர 15:10-13-15).

இவர் தனக்கு முன் இருந்த செக்கரியாவைக் கொன்று, ஆட்சியைக் கைப்பற்றினார். ஆனால் இவரை மெனகேம் என்பவர் கொன்றுவிட்டு ஆட்சியைப் பிடித்தார். இவ்வாறு அரச கொலைகள் வடக்கு ஆட்சிப் பகுதியில் இரண்டாம் எரொபவாம் காலத்திலிருந்து நடந்தது. இதனால் அசீரிய அரசன் இரண்டாம் சார்கோனிடம் கி.மு. 721-இல் பலியாக நேரிட்டது. ஆமோசும், ஓசேயாவும் இம்மாதிரி வீழ்ச்சி இஸ்ராயேல் பாவத்திற்கு விளைவாக அமையும் என்று இறைவாக்குரைத்திருந்தனர்.

2. இவர் திக்வாவின் மகன். (இவரை 2 நாள் ஆகமம் தோக்காத்து என்றழைக்கிறது). இறைவாக்கினள் குல்தாவுக்குக் (உல்தா)

கணவனாவார் (2 அர 22:14; 2 நாள் 34:22). இவர் ஆடையக மேற்பார்வையாளர் என்று குறிக்கப்படுகிறார். ஆனால் இவர் பணி செய்தமை ஆலயத்திலா, அன்றி அரண் மனையிலா என்பது தெளிவாக இல்லை.

3. சிசமாயிக்கு மகன். எக்கமியாவுக்குத் தந்தை. மேலும் இவர் யூதாவைச் சேர்ந்த எரகுமவேலின் வழித்தோன்றல் (1 நாள் 2:40-41).

4. யூதாவின் அரசன் யோசியாவின் நான்காவது மகனாகப் பிறந்தவர். இவர் தன் தந்தைக்குப்பின் கி.மு. 609 முதல் அரசாண்டார் (எரே 22:11; 1 நாள் 3:15). இவர் யோவகாசு (2) என்று அழைக்கப்படுவார் (2 அர 23:30-31; 2 நாள் 36:1-2). இவர் மூன்று மாதங்களுக்கே ஆட்சிசெய்தார். எகிப்தியர் இவரை நீக்கிவிட்டு இவரது மூத்த சகோதரன் யோயாக்கீமை (1) அரசராக்கினர்.

5. சிமியோனின் வழித்தோன்றல். சவுலுக்கு மகன். மிப்பிசாமுக்குத் தந்தை (1 நாள் 4:24-25).

6. ஒரு தலைமைக் குரு. சாதோக்கின் மகன். இலிக்கியாவின் தந்தை (1 நாள் 6:12-13; எஸ் 7:2). எஸ்ரா இவருடைய வழித்தோன்றல் என்று உரிமை கொள்கிறார். இவர் ஒருவேளை மெசுல்லாமாக இருக்கலாம் (1 நாள் 9:11; நெகே 11:11; 12:13).

7. நப்தலியின் நான்காவது புதல்வன். இவர் பில்காவின் வயிற்றில் பிறந்தவர் (1 நாள் 7:13). ஆதி 46:24; எண் 26:49-இல் சில்லேம் என்றழைக்கப்படுகிறார்.

8. ஒரு லேவிய வாயிற்காவலர். இவர் பாபிலோனிய அடிமைத் தளையிலிருந்து யூதாவிற்கு முதலில் திரும்பியவர்களில் வாயிற் காவலராக இருந்தார் (1 நாள் 9:17; எஸ் 2:42; நெகே 7:45). இவர் கோராகியரான சல்லூமாகவும் (9) (1 நாள் 19:31) மெசலேமியாகவும் (19:21), செலேமியாகவும் (26:14) செல்லூம் (11) ஆகவும் (எஸ் 10:24) இருக்கலாம்.

9. ஒரு லேவிய வாயிற்காவலர். கோராகியர் வழிவந்த கோரேயின் மகன் (1 நாள் 9:19.31). இவர் 8-இல் குறிக்கப்பட்டவராகவும் இருக்கலாம்.

10. எப்பிராயிம் குலத்தில் பிறந்தவர். பெக்காவின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த எகிசகியாவின் தந்தை (2 நாள் 28:12).

11. நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்த பின் புற இன மனைவியரை நீக்கிவிட்ட ஒரு லேவியக் காவலர் (எஸ் 10:24).

12. நாடு கடத்தப்பட்டபோது புறவினப் பெண்ணை மணந்து கொண்ட லேவியர் குலத்தைச் சேராத ஓர் இஸ்ராயேலர் (எஸ் 10:42).

13. அல்லோகேசு என்பவருடைய மகன். நெகேமியாவின் காலத்தில் எருசலேம் மதிற்சுவரைத் திரும்பக் கட்ட உதவி செய்தவர்களில் ஒருவர் (நெகே 13:12). ஐந்து அரச மாவட்டங்களில், ஒரு மாவட்டத்தின் பாதிப் பகுதிக்குப் பொறுப்பாயிருந்தார். எனவே இதிலிருந்து, இவர் கி.மு. 586-இல் தெற்கு அரசாட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு யூதாவில் வசித்து வந்த குடும்பத்தைச் சார்ந்தவர் என்ற முடிவுக்கு வரலாம்.

14. கொல்கோசேயின் மகன் (நெகே 3:15). மிஸ்பா மாவட்டத்தின் ஆளுநர். இவர் எருசலேமில் ஊருணி வாயிலைச் சீர் செய்தார். அரச தோட்டத்திலுள்ள சேலா குளத்தின் சுவர்களைப் பழுதுபார்த்தார்.

15. இறைவாக்கினர் எரேமியாவின் உறவினர் ஆவார் (எரே 32:7). கனமேலின் (அனமேல்) தந்தை. இறைவாக்கினர் எரேமியா அரசு வழக்கு மன்றத்தில் சிறையிடப்பட்டிருந்தார். சல்லூம் தனதுமகனை அனத்தோத்தில் தனக்கு இருக்கும் நிலத்தை மீட்கும் உரிமையைக் கொடுப்பதற்காக எரேமியாவிடம் அனுப்பினார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாடு பாபிலோனியர்களால் படையெடுக்கப்பட்டிருந்தாலும் ''அங்குள்ள நிலங்கள், திராட்சைத் தோட்டங்கள், வீடு

கள் யூதாவால் திரும்பவும் வாங்கப்படும்'' என்று உருவகமாக எடுத்துரைத்தார்.

16. மாசேயாவின் தந்தை. இவர் எரேமியா காலத்தில் கோவிலின் வாயில் காவலராய் இருந்தார் (எரே 35:4). இவர் மாசேயாவின் தூரத்து உறவினர் என்பது உண்மையாயின், இவரும் 6-இல் குறிக்கப்படுபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

சவரக்கத்தி, கத்தி (RAZOR)

தலையை மழிக்கவோ, முடியை வெட்டவோ, தாடியை மழிக்கவோ பயன்படும் கத்தி இது (எசா 7:20). நசரேயன் தலையில் இத்தகைய கத்தி படக்கூடாது என்ற சட்டமுண்டு (எண் 6:5; நீதி 13:5; 16:17; 1 சாமு 1:11). இது சாதாரணக் கத்தி; சற்று நீளமாகச் சிறிதுவளைந்து முடிவில் ஒரு குமிழுடன் அமைந்திருக்கலாம்; சில சமயங்களில் இவை அழகுபடுத்தப்பட்டவையாகக்கூட இருக்கலாம். எசேக்கியேல் அடையாள முறையில் தனது வாளை முடி திருத்துவோனின் கத்தியாகப் பயன்படுத்துகிறார் (எசே 5:1). சடங்குச் சுத்திகரிப்புக்காக லேவியர்கள் உடல் முழுவதையும் சிரைக்க வேண்டும் (எண் 8:7). வஞ்சகப் பேச்சை விவரிக்கவும் (சங் 52:2), முழு அழிவைக் குறிக்கவும் (எசா 7:20) சவரக்கத்தி உருவகமாகப் பயன்பட்டுள்ளது.

சவர்க்காரம் (SOAP)

இஃது ஒருவகையான சோப்பு. இச்சொல் விவிலியத்தில் இருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. எரே 2:22 இது உடலைத் தேய்த்துக் கழுவுவதற்கும், மலா 3:2 உடைகளைத் துவைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பு தருகின்றன. உடைகளைத் துவைக்கப்பயன்படும் ''வண்ணாரின் காரம்'' என்றும் எபிரேய மூலச் சொல்லுக்குப் பொருள் கொடுக்கலாம்.

சவுசா (SHAVSHA)

இவர் தாவீதின் அரசவையில் எழுத்தராகப் பணிபுரிந்த ஓர் உயர் அதிகாரி (1 நாள் 18:16). இவரது புதல்வர்கள் எலிகோரெபும், அகியாவும் சாலமோன் ஆட்சியில் இதே நிலையில் இருந்தனர் (1 அர 4:3).

இவர் 2 சாமு 8:17-இல் செராயா என்றும், 20:25-இல் செவா என்றும் 1 அர 4:3-இல் சிசா என்றும் அழைக்கப்படுகிறார். இவற்றில் சவுசா அல்லது சிசா மூலப்பெயராக இருந்திருக்கலாம்.

சவுல் (SAUL - யாவேயிடமிருந்து கேட்கப்பட்டது)

1. இஸ்ரயேலின் முதல் அரசனின் பெயர் பென்யமின் இனத்தைச் சேர்ந்த கீசின் மகன். அழகுவாய்ந்தவர். மற்ற அனைவரையும் விட உயரமானவர். மற்ற அனைவரும் அவர் தோள் உயரமே இருந்தனர் (1 சாமு 9:2). பழைய ஏற்பாட்டில் ஏறக்குறைய 400 தடவையும் புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு தடவையும் குறிக்கப்பெறுகிறார்.

சவுலின் வீடு பென்யமின் பகுதியிலுள்ள கிபயா என்ற இடத்திலிருந்தது. குடும்பம் செலாவோடும் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். ஏனெனில் அங்குதான் கீசும், சவுலும் யோனத்தானும் அடக்கம் செய்யப்பட்டனர் (2 சாமு 21:14). இக்குடும்பம் கழுதைகளையும், வேலைக்காரர்களையும் (1 சாமு 9:3) நிலங்களையும் மாடுகளையும் கொண்டிருந்தது என்பதிலிருந்து இதுபோதிய அளவு செல்வமுடையதாக இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

சவுலின் காலம்:- சவுல் அவரது காலச் சூழ்நிலைகளின் படைப்பாவார். நெருக்கமில்லாத இனங்களின் கூட்டாட்சிக்கும், ஆற்றலோடு ஒன்றிக்கப்பட்ட தாவீதுகால ஆட்சிக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவராவார் சவுல். ஆகவே அவரது வாழ்வில் காலமும் சூழ்நிலையும் பெரிதும் இடம் பெற்றுப் பாதித்தன.

சமய நோக்கில் சீலோவை மையமாகக் கொண்டு இனங்கள் ஒன்றுபட்டன. இது பிற்கால அரசியல் ஒற்றுமைக்கு வித்திட்டது. ஆனால் பெலிஸ்தியர்களின் படையெடுப்பால் சீலோ அழிக்கப்பட்டது. குருக்க

வின் தலைமை சூழ்நிலையைச் சமாளிப்பதற்குப் போதியதாகக் காணப்படவில்லை. நாட்டின் பழம்பெரும் சின்னமான உடன்படிக்கைப் பேழை செயலளவில் மறைந்து விட்டது எனலாம் (1 சாமு 6-7). இல்கால் வழிபாட்டுமையமாகியது (10:8; 11:14-15; 13:4.8-15; 15:12.21.33).

அரசியல் நோக்கில் இஸ்ராயேலர் கிழக்கிலிருந்து பாலஸ்தீனத்திற்குள் குடியேறிய போது பெலிஸ்தியர் மேற்கிலிருந்து இந் நாட்டில் குடியேற முயன்றனர். ஆகவே வாக்களிக்கப்பட்ட நாடு பெலிஸ்தியர் நாடா அல்லது இஸ்ராயேலர் நாடா என்பது பற்றி இரு இனத்தவருக்கும் பலபோர்கள் அடிக்கடி நடந்தன. கடல் மக்களாகிய பெலிஸ்தியர் பாலஸ்தீனக் கரையோரப்பகுதிகளைத் தாக்கித் தங்களுடையதாக்கிக் கொண்டு, அங்கு ஏற்கெனவே வாழ்ந்த கானானியர்களின் நகர ஆட்சி அமைப்பை ஏற்றுத் தங்களது ஆட்சியை நிலைப்படுத்த முயன்றனர். அதேசமயம் தங்களுக்குள்ளே சுயமாக ஒரு பொதுக்குழு அமைத்துப் பாதுகாப்பு, போர் போன்ற பொதுக் காரியங்களைச் செய்தனர். அப்போது ஏதாவது ஒரு நகர ஆட்சித்தலைவர் இக்குழுவுக்குத் தலைமைதாங்குவார். இதன் விளைவாகப் பெலிஸ்தியர் ஒரு பலமிக்க அமைப்பாகத் திகழ்ந்தனர். போர் செய்வது அவர்களது தொழிலாக இருந்தது. இரதங்களையும், இரும்புப் போர்க் கருவிகளையும் பயன்படுத்தினர். அவற்றைப் பிறர் கொண்டிருப்பதைத் தடுத்தனர் (13:19-22). ஆகையால் பெலிஸ்தியரை வெல்வது அவ்வளவு எளிதன்று. இவர்கள் கிழக்கிலுள்ள மலைப்பகுதிகளையும் வெல்லத் தொடங்கினர். அங்கே குடியேறிய இஸ்ராயேலரை வென்று தங்களுக்குக் கப்பம் கட்டச் செய்வதே இவர்களின் நோக்கம். அதே சமயம் கிழக்கிலிருந்து பாலஸ்தீனத்தில் குடியேறிய இஸ்ராயேலர் நிலை வேறுவிதமாக இருந்தது. இவர்களிடையே நகரங்கள் இல்லை. கோட்டை கொத்தளங்கள் இல்லை. மைய அரசு இல்லை. இனத்தலைவர்களின் நெருக்கமற்ற கூட்டாட்சி இருந்தது. போரைத் தொழிலாகக் கொண்ட படைகள் இல்லை. போர்க்கருவிகள் இல்லை. பிறர் கொடுமைப்படுத்தும் போதும் இறை ஆவி பெற்ற தலைவர்கள் தோன்றித் தலைமை தாங்கிப் போரை நடத்தினர். அது முடிந்ததும் ஒவ்வொருவனும் தனது பகுதிக்குத் திரும்பிவிடுவான். இவர்கள் யாவேயிடம் கொண்டிருந்த விசுவாசம் இவர்களது சமூக ஒற்றுமைக்கு அடிப்படையாகும். இந்த விசுவாசத்தில்தான் இவர்களின் நாட்டு ஒற்றுமை வேர் ஊன்றியிருந்தது. ஒவ்வொரு இனத்தவரும் சுயாட்சி நடத்தினர். தங்களுக்குள்ளே ஒரு மைய அரசியல் அமைப்பைப் பெற இவர்கள் இன்னும் பக்குவம் அடையவில்லை எனலாம். இந்நிலையில் இவர்களுக்குப் பெலிஸ்தியர் பெரும்பகைவர்களாக விளங்கினர். இவ்விருவருக்கும் நடந்த போர்களும் பெலிஸ்தியர் இஸ்ராயேலர்களுக்கு இழைத்த கொடுமைகளும் இஸ்ராயேல் அரசை உருவாக்கின.

2. சாமுவேலும் சவுலும்:- இந்நிலையில் அருங்கொடைபெற்ற சாமுவேல் இஸ்ராயேலர்களுக்குத் தலைமைதாங்கி வெற்றிக்கு இட்டுச் செல்கிறார். சாமுவேலுக்கு வயது முதிர்ந்தபோது அவருடைய புதல்வர்கள் நேர்மையோடு மக்களை ஆட்சி செய்யவில்லை. பெலிஸ்தியர்களிடமிருந்து வந்த அரசியல், சமய ஆபத்துக்கள் பெருகின. இச்சூழ்நிலையின் இஸ்ராயேலரின் தலைவர்கள் ஒரு புதிய வேண்டுகோளுடன் சாமுவேலைச் சந்தித்தனர். நிலையான மைய அரசையும், போரைத் தொழிலாகக் கொண்ட படையையும், அதை இயக்க ஆற்றல்மிக்க தலைவனையும் கொண்ட அரச அமைப்பைத் தங்களுக்குத் தரவேண்டும் என்று சாமுவேலிடம் கேட்டனர். விருப்பமில்லாதிருந்தும் இறைவனது ஆணைக்குப் பணிந்து சாமுவேல் மக்களது விருப்பத்திற்கு இணங்குகிறார். இப்படித் தோன்றிய அரசின் தலைவர்தான் சவுல்.

சவுல் அரசரானது பற்றி இரு பாரம்பரியங்கள் உண்டு. 1 சாமு 9:1-10:16;11 ஆகிய பகுதிகள் அரசாட்சிக்குச் சார்பாக உள்ளன.

இதன்படி, சவுல் தன்வீட்டிலிருந்து காணா மற்போன கழுதைகளைத் தேடிச்செல்கிறார். அப்போது இராமாவில் சாமுவேலால் அபி டேகம் செய்யப்படுகிறார். ஆவி அவர்மேல் இறங்கி வருகிறது (10:6.10.13). நீதிபதிக ளைப் போன்ற அருங்கொடைபெற்ற தலை வராகக் காட்டப்படுகிறார். அரசாட்சிக்கு எதிரான பாரம்பரியம் (8;10:17-27; 12), சாமு வேல் விருப்பமில்லாது மக்களின் வற்புறுத் தலுக்காகவே சவுலை முதல் அரசனாக ஆக்கு வதாக விவரிக்கிறது. இதில் சாமுவேல் கடைசி நீதிபதியாகவும் அவரைத் தொடர்ந்து சவுலும் அந்த நீதிபதிகள் பாணி யிலேயே பணிசெய்வதாகவும் காட்டப்படு கிறார். ஆகவேதான் சாமுவேல் சவுலை அரசனாக (மெலக்கு) அல்லாது, ஆயனாக (நகீது) அபிடேகம் செய்கிறார்.

சாமுவேல் தனது பணியை மிஸ்பாவிலி ருந்து தொடங்கினார். அங்குதான் மக்களைக் கூட்டி அவர்களுக்கு ஒரு நிலையான தலை வனை அளிக்கிறார். இஸ்ராயேலின் வரலாற் றில் முதல் தடவையாக ''அரசே வாழி'' என்ற கூவல் கேட்கிறது. அரசதேர்வு திரு வுண்சீட்டு வழியாக நடக்கிறது. இதை 1 சாமு 10:17-24-இல் வாசித்தறியலாம்.

சவுல் தனது பணியின் தொடக்கத்திலேயே பல வெற்றிகளைக் காண்கிறார். அவை அவருக்குப் பெரும் ஆர்வத்தை அளித்தன. யாபேசு - கிலயாதை அம்மோனியர்கள் முற்றுகையிட்டபோது, சவுல் யாவேயின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யாபேசின் மக்களை மீட்டதையும் பின் சாமுவேல் சவுலைக் கில்காலில் அரசனாக்கியதையும் 11:1-15-இல் வாசித்தறியலாம். இதற்குப்பின் சாமுவேல் அரசியல் பொதுவாழ்விலிருந்து விடைபெறுகிறார். அதன் பின் இஸ்ராயேல ரின் பயங்கர எதிரியாக விளங்கிய பெலிஸ்தி யரை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. இப்போர்கள் 13:3-14:48-இல் விவரிக்கப்பட் டுள்ளன. பெலிஸ்தியரை வெற்றி கொண்ட ஒரு போரில் சவுலின் மகன் யோனத்தான் முக்கிய பங்கு பெறுகிறார்.

முதல் அரசனான சவுல் சில தவறுகள் செய்தார். தன்னை அபிடேகம் செய்த சாமு வேலுடன் மோதினார். இம்மோதல்களில் ஒன்று கில்காலில் பெலிஸ்தியர்களுக்கு எதி ராக நடந்தது. போர் தொடங்குமுன் இறைவாக் கினர் சாமுவேலின் வரவுக்காகக் காத்திராமல் பொறுமையிழந்து சவுல் தானே பலியை நிறைவேற்றிப் போரைத் தொடங்கினார். இச்செயலை ''நீர் அறிவீனமாய்ச் செயல்பட் டீர். உமது அரசு நிலைக்காது; ஏனெனில் ஆண்டவர் கட்டளையின்படி நீர் நடக்கவில் லை'' என்று கூறிச் சாமுவேல் கண்டனம் செய்கிறார் (13:13-14). மற்றொரு சமயம், சவுல் அமலேக்கியரைத் தோற்கடித்தபோது தங்களின் சட்டப்படி, கொள்ளைப் பொருட் களை முழுவதுமாக அழிக்காமல் சிலவற் றைத் தன்னுடன் வைத்துக் கொள்கிறார் சவுல். அவர் கூறிய விளக்கங்களைச் சாமு வேல் ஏற்கவில்லை. இந்நிகழ்ச்சி சவுலுக்கு இறுதித் தீர்ப்பாக முடிகிறது. ''நீர் ஆண்டவ ரின் வார்த்தையைப் புறக்கணித்தீர். அவரும் உம்மை அரச பதவியினின்று நீக்கிவிட்டார்'' (15:23) என்று சாமுவேல் கடுமையாகக் கூறு கிறார். இச்சுடுசொற்களைக் கேட்டு அவ நம்பிக்கையுற்ற சவுல், பிரிந்து செல்லும் சாமுவேலின் போர்வையின் மேற்புறத்தைப் பிடித்தார். அது உடனே கிழிந்து போயிற்று. சவுலிடமிருந்து அரசை யாவே எடுத்துவிட் டார் என்பதற்கு இது மேலும் ஓர் அடையாள மாயிற்று. இவ்வாறு சவுல் இறைவனால் கைவிடப்பட்டதாக நினைத்து வெதும்பி மனம் உடைந்துபோய் மனநோய்க்கு ஆளா கின்றார். இச்சூழ்நிலையில்தான் தாவீது சவுல்முன் தோன்றுவதாகச் சில பகுதிகளில் காண்கிறோம்.

3. சவுலும் தாவீதும்:- சவுலின் பற்றுறுதி யின்மையின் விளைவாக அவரை, யாவே நிராகரித்து விட்டதை நினைத்து இரவும் பகலும் சாமுவேல் வருந்தினார். எல்லாம் போய் விட்டது என்ற நிலையில் யாவே தாவீதைத் தேர்ந்தெடுத்தலிலே மீட்பு வர லாற்றில் புதியதோர் கட்டத்தைத் தொடங்கு கிறார். சவுல் ஆட்சி செய்தாலும் யாவேயின் கட்டளைக்குப் பணிந்து சாமுவேல் தாவீதை

அரசனாக அபிடேகம் செய்கிறார் (16:1-13). தாவீது சவுலின்முன் முதன்முதலாகக் கொண்டு வரப்படும் நிகழ்ச்சி பற்றி இரு பாரம்பரியங்கள் காணப்படுகின்றன. 1 சாமு 16:14-23; 17:1-11.32-53- என்ற பகுதியில் சவுல் தீய ஆவியால் அலைக்கழிக்கப்படும் போது அவருக்கு முன் யாழ் வாசிக்கத் தாவீது அழைத்து வரப்படுகிறார். ஆனால் 1 சாமு 17:12-30; 17:55-18:2-என்ற பகுதியில் தாவீது தன் மூத்த சகோதரர்களைப் போர்க் களத்தில் சந்திக்கிறார். அங்குக் கோலியத்தின் அட்டகாசங்களைப் பார்த்து, அவனைக் கொன்று வெற்றிபெற அரசனிடம் அனுமதி கோரி சவுல்முன் தாவீது முதன்முதலாகத் தோன்றுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆய்வா ளர்கள் கருத்துப்படி முதல் பாரம்பரியமே உண்மையானதும் இயல்பானதுமாக இருக்க லாம். இரண்டு பாரம்பரியங்களும் அரசவை யில் தாவீது எப்படி ஆதரவு பெற்று உயர்ந் தார் என்பதைக் கூறுகின்றன. அரசனின் படைக்கலன் தாங்குவோனாகத் தாவீது பதவி பெறுகிறார் (16:21). அதன்பின் தாவீது கோலியத்தைக் கொன்ற வரலாறு வருகிறது. மேலும் சவுல் அனுப்பிய இடமெல்லாம் தாவீது சென்று வெற்றியைக் கொணர்ந்தார். அதனால் சவுல் தாவீதைப் படைத்தலைவ னாக்கினார். மக்கள் எல்லாரும் மற்றும் சவுலின் அலுவலர்களும் இதைப் பெரிதும் விரும்பினர் (18:5). தாவீது தனது போரிடும் திறமையால் படிப்படியாக முன்னுக்கு வரு கிறார். சவுலின் மகன் யோனத்தானுக்கும் தாவீதுக்கும் நெருங்கிய நட்பு ஏற்படுகிறது. தாவீதின் உயர்சக்தியையும், மக்கள் அவ ரைத்தன்னைவிட அதிகமாகப் புகழ்ந்துபாடு வதையும் கண்ட சவுல் தாவீது மீது பொறாமை கொண்டார். தன் அரியணைக் குப் போட்டியாகத் தாவீதை எண்ணினார். ஆகையால் தாவீதைக் கொல்லப் பலதரம் முயன்றார் (18:6-11.20-27). சவுல் தாவீதைச் சுத்தமாய்த் தொலைத்து விடுவதற்குப் பேயாய்ச் செயல்பட்டார். இதையறிந்த தாவீது ஒரு நாடோடியாகிறார். சவுல் அவரை வேட்டையாடுகிறார். இந்த முயற்சி யில் சவுல் ஒரு கொடிய செயலைச் செய்கி றார். நோபில் இருந்த குருகுலம் முழுவதை யும் கொன்றுதீர்க்கிறார் (22:11தொ). ஆனால் தாவீது சவுலைக் கொல்வதற்கு இருமுறை வாய்ப்புகள் கிடைத்தும் அவற்றைச் சாதக மாக்கிக் கொள்ள மறுத்துவிடுகிறார்; அரச னைப் பாதுக்காக்கிறார் (24:3-12;26: 6-25).

சவுலின் பிடியிலிருந்து தப்பியோடிய தாவீது நானூறுபேர் கொண்டபடையை ஏற் படுத்திக் கொள்கிறார். இவர்களில் பெரும் பான்மையோர் சவுலின் ஆட்சியில் திருப்தி யிழந்தவர்கள்; துன்புறுத்தப்பட்டவர்களா வர் (22:2). இவர்களை ஒரு படைப்பிரி வைப்போல் தாவீது பயன்படுத்தினார் (23:5; 25:13). இப்பிரிவு பிற்காலத்தில் தாவீது அரச னான பின் அரசபடையின் மைய ஆற்றல் மிகு படைவீரர்களாகத் திகழ்ந்தனர் (2 நாள் 12). இப்படிப்பட்ட அமைப்பு தோன்றக் கூடிய நிலை நிலவியதே சவுலின் ஆட்சியின் வீழ்ச்சியையும், அது மக்களிடையே ஏற் படுத்திய அதிருப்தியையும் எடுத்துக்காட்டுகி றது. பாலைவனத்தில் பதுங்கி வாழ்ந்த காலத்தில், தாவீது தந்திரமாகத் தங்களின் பகைவரான பெலிஸ்தியர்களுடன் இரகசிய உறவை ஏற்படுத்திக் கொள்கிறார். காத்து நகரப் பெலிஸ்திய அரசனுடன் நல்லுறவு கொண்டு சவுல் அரசன் இறக்குமுன்பே தாவீது சிக்லாகு நகரின் சிற்றரசன் ஆனார் (27:1-7). பெலிஸ்தியர்களின் கூட்டாளி போல் நடந்தாலும் தாவீது இஸ்ராயேலரின் மற்ற எதிரிகளோடு போரிட்டார் (27:8-12).

சவுல் தாவீதை வேட்டையாடித் திரிந்த போது, பெலிஸ்தியர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர் என்று நாம் வியக்கலாம். இஸ்ராயேலை முழு ஆற்றலுடன் தாக்கப் பெலிஸ்தியர் ஆயத்தம் செய்து கொண்டிருந் தனர். இத்தகைய பெரிய தாக்குதலை இது வரை எதிர் கொள்ளாத சவுல் பேரச்சம் கொண்டார். ஆண்டவரின் ஆலோசனை கேட்டார். அது கிடைக்கவில்லை (28:1-6). சவுல் குறிகாரியின் உதவியைநாடி இறந்து போன சாமுவேலின் ஆவியைச் சந்தித்து ஆலோசனை கேட்டார். சாமுவேல் அவ ரைக் கண்டனம் செய்து விரைவில் வரவிருக் கும் அவரது முடிவை முன்னறிவித்தார் (28:4-20).

கில்போவா மலையில் இஸ்ராயேலருக்கும் பெலிஸ்தியருக்கும் போர் மூண்டது. இஸ்ராயேலர் தோற்றனர். சவுலின் மூன்று புதல்வர்கள் தங்கள் தந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் உயிர்துறந்தனர். தனது முடிவு நெருங்கிவருவதை உணர்ந்த சவுல், பெலிஸ்தியர்களால் கொல்லப்படுவதைத் தவிர்க்கத் தனது வாளைத் தரையில் குத்தி வைத்துத் தாமாகவே அதன்மேல் விழுந்து உயிர்நீத்தார். இவ்வாறு இறைவனால் ஏற்படுத்தப்பட்ட முதல் இஸ்ராயேல் அரசன் அவல முடிவெய்தினார் (31:2-4). யாபேசு - கிலயாது மக்கள் சவுலின் உடலையும், அவர்தம் புதல்வர்களின் உடல்களையும் பெத்சானிலிருந்து கொண்டுவந்து யாபேசில் அடக்கம் செய்து, ஏழுநாள் நோன்பு இருந்தனர் (31:13).

4. மதிப்பீடு:- சவுலின் வாழ்வையும் அரசையும் பலரும் பலவாறு மதிப்பீடு செய்வர். அவரது வாழ்வு துன்பியல் வாழ்வுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இது மிகவும் இரங்கத்தக்கதாகும். தேர்ந்தெடுக்கப்படுதல், நிராகரிக்கப்படுதல் என்று இருசொற்கள் அவரதுவாழ்வைச் சுருக்கித் தருகின்றன.

இளைஞனான சவுல் அரசத்தன்மையும் கம்பீரத்தோற்றமும் உடையவராய் விளங்கினார் (9:2). ஆற்றல்மிக்கவராகவும் வீரமிக்கவராகவும், பிறர் தன்பால் பற்றுறுதி கொள்ளத்தூண்ட வல்லவராகவும் திகழ்கின்றார். இஸ்ராயேலர் அவரிடம் பெரும் நம்பிக்கை வைத்தனர். பல பெரும் காரியங்களை எதிர்பார்த்தனர். அவருடைய எழுச்சி மிக விரைவாக நிகழ்கிறது. அவரை யாவே தேர்ந்தெடுக்கிறார். அவரை இறைவாக்கினர் சாமுவேல் போர்த்தலைவனாக, ஆயனாக (நகீது) அபிடேகம் செய்கிறார். மக்கள் அவரை அரசராகத் தேர்ந்தெடுக்கின்றனர். வெற்றிப் படையெடுப்புகள் அவரது அரசை உறுதிப்படுத்துகின்றன. நீதிபதிகள் காலத்திய ஆவி பெற்றவர்கள் பாணியில் சவுலின் அரசு முழுமை பெறுகிறது. அது யாவேயின் கொடையிலிருந்தும் மக்களின் தேர்விலிருந்தும் தன் உருவத்தையும் பொருளையும் பெறுகிறது. சவுலின் வரலாற்றில் இஸ்ராயேலின் அரசு, பிற மக்களின் அரசுகளிலிருந்து வேறுபடுகிறது என்பதைத் தெளிவாகக் காண்கிறோம். இஸ்ராயேலின் அரசு சமய உலகம் மற்றும் இவ்வுலக அரசியல் உலகம் ஆகிய இரு உலகங்களைச் சார்ந்ததாகும். ஆனால் இரண்டையும் பிரிக்க முடியாது. சமய உலகில் இஸ்ராயேலின் அரசு யாவேயின் கொடையாகும். அவரது சலுகை பெற்றது. உலக அரசு நிறுவப்பட்டபின்னும் யாவேதான் இஸ்ராயேலின் உண்மையான அரசர். இஸ்ராயேல் சேனைகளின் ஒரே ஆண்டவர். இந்த இரு உலகத்தன்மையைப் பிரிக்க முயலும்போது, இஸ்ராயேல் அரசு வீழ்ச்சியடைகிறது. உலக அரசர் ''யாவேயின் சொற்களுக்கு'' மாறாகச் செயல்படும்போது, அது அவரை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்கிறது. அவருக்குள்ளே ஏற்கெனவே நிகழ்ந்துவிட்ட கீழ்ப்படியாமை என்னும் துன்பியல் நிகழ்ச்சியின் புறத்தோற்றமே அவருடைய புற உலக அரசியல் வீழ்ச்சியாகும். சவுல் கெட்டிக்காரரான அரசியல்வாதியாக இருக்கலாம். ஆனால் சமய உள்நோக்கு அற்றவர். சமய உலகில் வீழ்ச்சி அடைகிறார். அதன் விளைவாக அரசியலிலும் வீழ்ச்சியடைகிறார். மனித ஆற்றலைப் பெரிதும் நம்பினார். பேராசைப்பட்டார். இறைவனது ஆற்றல் செயல்படுவதற்கு அவர் இடம் தரவில்லை. சுருக்கமாக யாவேயிடம் அவருக்குப் போதிய விசுவாசமில்லை. அப்படிப்பட்ட அரசன் யாவேயின் ஆதரவு பெற்றவராக நிலைத்து நிற்கமுடியாது. மனிதன் அரசனாக இஸ்ராயேலில் செயல்பட்டாலும், யாவேதான் உண்மையான அரசர், மேலான ஆண்டவர்.

யாவே தன்னை நிராகரித்துவிட்டார் என்ற எண்ணமும், இறைவாக்கினர் சாமுவேலின் ஆதரவு தனக்கு இல்லை என்ற ஏக்கமும், சவுலின் நிலையற்ற மனப்போக்கும், மட்டுமின்மையும் அவரை ஒரு மனநோயாளியாய் ஆக்குகிறது. தன்னை யாவரும் துன்புறுத்துவதாக மயக்கம் கொள்கிறார். தாவீதின்மீது பொறாமை கொள்கிறார். தாவீதைக் கொல்லத் திட்டம் செய்கிறார்; வேட்டையாடுகி

றார். சவுலின் உள்ளத்தில் அன்பும், வெறுப்பும் போராடுகின்றன. சமய உலகில் எவ்வளவு வீழ்ச்சியடைந்தார் என்றால், குறிசொல்பவர் உதவியையும் நாடத் தயங்கவில்லை. தற்கொலை செய்து கொள்கிறார். யாவேயால் உன்னத நிலைக்கு உயர்த்தப்பெற்றார். தனது தவறால் பெரும் வீழ்ச்சிஅடைந்தார். என்னே பரிதாபமான வீழ்ச்சி!

உலக அரசைப் பொருத்தமட்டும், சவுல் இஸ்ராயேலரிடையே நிலையான போர்ப் படையை நிறுவினார். பெலிஸ்தியரின் முன்னேற்றத்தைத் தடைசெய்தார். அமலேக்கியரை வென்று அவர்களைக் கட்டுப்படுத்தினார். இரும்பால் ஆன ஆயுதங்களுக்குப் பெலிஸ்தியர் கொண்டிருந்த தனி உரிமையைத் தகர்த்தெறிந்தார் என்று கூறலாம். இஸ்ராயேலரிடையே ஓரளவு ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தினார். ஆயினும் இன்னும் இஸ்ராயேலரிடையே பல இனங்களில் கூட்டாட்சிமுறையே நிலவியது எனலாம். இஸ்ராயேலரின் அண்டை நாட்டவரான ஏதோமியர், மோவாபியர், அம்மோனியர் ஆகியோரின் அரச அமைப்பைப்பின்பற்றி இஸ்ராயேலிலும் அரசை அமைத்தார். கானானியரின் நகர ஆட்சி அமைப்பைப் பின்பற்றவில்லை. அவரது தலைநகரான கிபயாவில் நடந்த அகழ்வாய்வுகள் சாதாரணமான போர்க் கோட்டையையே வெளிக்கொணர்ந்துள்ளன. அது அதிகச் சிறப்புடையதன்று.

சவுல் ஆட்சிசெய்த காலத்தை உறுதியாகக் கணக்கிட முடியாது. ஏனெனில் 1 சாமு 18:1-இல்வரும் வாசகம் பழுதுபட்டுள்ளது. தொடக்க அரசாட்சிபற்றிய முதல் காலக்குறிப்பாகிய ரெகபயாம் ஆட்சிக் கணிப்பிலிருந்துதான் சவுலின் ஆட்சிக்காலத்தைத் தோராயமாகக் கூறலாம். இது ஏறக்குறைய கி.மு. 1220-1000 இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

எசாயா காலத்தில் கிபயாவில் சவுலின் பெயர் நினைவு கூறப்படுகிறது (எசா 10:29). அவர் தாவீதை வேட்டையாடித் திரிந்தது சில சங்கீதங்களின் தலைப்பில் காணப்படுகிறது (52:2; 54:2; 57:1; 59:1).நாளாகம ஆசிரியர் சவுலுக்குப் பாதகமான தனது மதிப்பீட்டை 1 நாள் 10:13-14-இல் சுருக்கமாகத் தருகிறார். சவுலின் மரபுமுறை 1 நாள் 8:33;9:39-இல் காணப்படுகிறது.

2. சவுல்:- பவுலின் யூதப்பெயராகும். அப்போஸ்தலர் பணியில் அவர் முதல்முதல் தோன்றியதிலிருந்து (அ.ப. 7:58), இருபெயர்களும் சேர்த்துக் கூறப்படும் வரை (13:9) அப்போஸ்தலர் சவுல் என்றழைக்கப்படுகிறார்.

சனகெரிபு (SENNACHERIB - சந்திரக் கடவுளான சின் சகோதரர்களைப் பெருக்குவாராக)

கி.மு. 705 முதல் 681 வரையில் அசிரியாவை ஆண்ட அரசன். இவரது தந்தை சார்கோன். இவர் பதவியேற்றவுடன் பேரரசின் பெரும்பகுதியில் பெரும் புரட்சியைச் சந்திக்க வேண்டிவந்தது. பாபிலோனில் மெரொதாக்கு-பலாதான் தலைமையிலும், சீரியா, பாலஸ்தீன நாடுகளில் எசேக்கியா என்ற யூதா நாட்டு அரசன் தலைமையிலும் புரட்சி ஆரம்பித்தது. இதில் யூதா நாட்டு மன்னனுக்கு எகிப்திய அரசனின் உதவியும் இருந்தது. பாபிலோனுக்கு எதிராக விரைவாகப் படையெடுத்து மெசபொத்தாமியாவில் கிளர்ச்சியை அடக்கினார். பின்பு கி.மு. 701-இல் சீரியா, பாலஸ்தீனத்துக்கு எதிராகத் திரும்பினார். யூதாவும் பெலிஸ்திய நகரங்களும் தவிர, வேறு யாரும் ஆக்கபூர்வமான எதிர்ப்பு அளிக்கவில்லை. எருசலேமைத் தவிர யூதாவின் மற்ற நகரங்களைச் சனகெரிபு கைப்பற்றினார். இத்தாக்குதலை எதிர்க்கு மாறு எசாயா எச்சரித்திருந்தாலும் (2 அர 18:17-19:34; எசா 36:1-37:15) கிளர்ச்சிக் கூட்டணியின் தலைவரான யூதாவின் அரசன் எசேக்கியா, இறுதியாக அசீரியர்களின் தாக்குதலுக்கு அடிபணிந்தார் (2 அர 18:14-16). எருசலேம் நகரைச் சுற்றிய முற்றுகை நீக்கப்பட்டது. ஆனால் 2 அர 19:36-இன்படி எருசலேமைத் தாக்குமுன்பே, ஆயிரக்கணக்கான அசீரிய வீரர்கள் அவர்கள் பாளையத்தி

லேயே மடிந்தனர். இந்த விவிலிய விவரிப்பு, எருசலேமுக்கு எதிரான இரு படையெடுப்புகளை விவரிப்பதாக அறிஞர் சிலர் கருதுகின்றனர். இதன்படி ஒன்று 701-இலும் மற்றது 688-இலும் நடந்ததாகக் கருதப்படும்.

மெசபொத்தாமியாவில் எழுந்த கிளர்ச்சி முழுவதும் அழிக்கப்படவில்லை. ஆகையால் சனகெரிபுவின் ஆட்சியின் பிற்பகுதி பாபிலோனைத் தாக்குவதில் செலவிடப்பட்டது. 689-இல் இவர் பாபிலோன் நகரைத் தரைமட்டமாக அழித்து, அங்கிருந்த மார்தூக்கு கோவிலை நினிவேக்கு மாற்றினார். இது ஒரு காட்டுமிராண்டிச் செயலாகக் கருதப்பட்டது. ஏனெனில் பாபிலோன் மிகப் பழைய, மதிப்புக்குரிய நகரமாகவும், மெசப்பொத்தாமியாவின் சமய, கலாச்சார மையமாகவும் கருதப்பட்டது. 689-க்குப்பின் சனகெரிபுவின் ஆட்சிபற்றிய குறிப்புகள் இல்லை. ஏசர்கத்தோன் என்ற இளைய மகனைத் தனது வாரிசாக நியமித்ததால், அதிரமெலக்கு, சரேத்சர் என்ற மற்ற இரு புதல்வர்களால் கொலை செய்யப்பட்டார் (2 அர 19:36-37; 2 நாள் 21:31). கொலை நடந்த இடம் காலாவிலோ நினிவேயிலோ உள்ள நிசிரோக்கின் கோவிலாகும்.

சனேத்ரின் (SANHEDRIN - பொதுச்சங்கம்)

சனேத்ரின் யூதர்களின் தலைமையான சபையும் நீதிமன்றமும் ஆகும். பெரிய அந்தியோக்கு காலத்திலிருந்து (கி.மு. 223-183) இச்சங்கம் இருந்ததாக யூத வரலாற்று ஆசிரியர் யோசிப்பசு கூறுகின்றார். மக்கபேயர் ஆகமங்களிலும் இச்சங்கம் பற்றிய சில குறிப்புகள் காணப்படுகின்றன (1 மக் 11:23; 12:6; 14:28; 2 மக் 1:10; 4:44; 11:27). பெரிய ஏரோதன் அரசுக்கட்டிலில் ஏறிய பின் இச்சங்கத்தின் அங்கத்தினர் யாவரையும் கொன்று போட்டான் என்று யோசிப்பசு கூறுகின்றார். அப்படியாயின் புதிய ஏற்பாட்டுக் காலத்துச் சனேத்ரின் எவ்வாறு எப்போது அமைந்தது என்று அறிய நாம் விரும்பலாம். இதுபற்றி நமக்கு ஒரு செய்தியும் கிடைத்திலது.

புதிய ஏற்பாட்டுக் காலத்துச் சங்கத்தில் மூன்றுவகை உறுப்பினர்கள் இருந்தனர். முதல் வகையினர் பெரிய குருக்களாவர்; அதாவது முன்னாள் பெரிய குருக்களும், குருக்களுடைய குடும்பத் தலைவர்களுமாவர். இரண்டாம் வகையினர் மூப்பர்கள் அல்லது பெரியோர்கள். இவர்கள் யூத கோத்திரங்களின் தலைவர்களும், குருக்கள் அல்லாத பிரபுக்களின் குடும்பத் தலைவர்களும், மறைநூல் அறிஞர்களுமாவர். இவ்விரு பிரிவினரும் பெரும்பாலும் சதுசேயர் பிரிவைச் சேர்ந்தவர்கள், மூன்றாம் வகையினர் பரிசேயரைச் சேர்ந்தவர்கள். மக்களோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். இவர்கள் அரசி அலக்சாந்திரா காலத்தில் (கி.மு. 76-67) சனேத்ரினில் இடம் பெற்றனர். இச்சங்கத்தில் தலைவர் உட்பட எழுபத்தொரு அங்கத்தினர் இருந்தனர். எவ்விதம் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதுபற்றி அறிவதற்கில்லை. அனேகமாக, ஏற்கெனவேயுள்ள அங்கத்தினர்கள் தேவைப்பட்ட மற்ற அங்கத்தினர்களைப் பொறுக்கி எடுத்திருக்க வேண்டும்.

பதவியிலிருக்கும் பெரிய குருவே, சட்டமுறைப்படியும் செயலளவிலும் இச்சங்கத்தின் தலைவர். பொதுவாக யூத மக்களுக்கு இச்சங்கமதான் தலைமையான நீதிமன்றமாகும். இதன் அதிகாரமும் செல்வாக்கும் ஏரோதர்கள் காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டாலும், ஆளுநர்கள் காலத்தில் பெருகி இருந்தது. உரோமையர், தங்களது கொள்கைப்படி இச்சங்கத்தின் செயல்களில் தலையிடவில்லை. உரோமையர், தாங்கள் கைப்பற்றிய நாடுகளில் அந்நாட்டின் முறைப்படி நீதிவழங்கவும் தீர்ப்பைச் செயல்படுத்தவும் சுதந்தரம் அளித்திருந்தனர். அதற்கேற்பச் சனேத்ரின் யூத சமய, சமூக, அரசியல் பாரம்பரியப்படியும் யூத சட்டமுறைப்படியும் நீதிவழங்கியது. சட்டத்தையும் பாரம்பரியத்தையும் காப்பவர்கள் என்ற முறையில் யூதர்கள் நாடு, சமயம் பற்றிய யாவற்றையும் சனேத்ரின் அங்கத்தினர்கள் நன்கு அறிந்திருந்தனர். இச்சங்கம் தனக்கென ஒரு காவலர் படையையும் கொண்டிருந்தது. இதற்குப் பிறரைக்

கைது செய்ய அதிகாரம் இருந்தது (மத் 26:27; மாற் 14:132; அ.ப. 4:3; 5:17 தொ). தண்டம் விதித்தல், கசையடி கொடுத்தல் யூத சமூகத்திலிருந்துபிரித்து வைத்தல் போன்ற தண்டனைகளை வழங்க இச்சங்கத்திற்கு அதிகாரம் உண்டு. மரண தண்டனைத் தீர்ப்பு அளிக்கவும் அதிகாரம் உண்டு. ஆயினும் அதை நிறைவேற்ற ஆளுநரின் இசைவு பெற வேண்டும் (யோவா 18:31).

இச்சங்கம் ஆலயத்தைச் சார்ந்த தென்மேற்குப் பகுதியில் இருந்த ஒரு தனி மன்றத்தில் கூடியது. இயேசுவின் பாடுகளின் போது, பெரிய குருவின் வீட்டில் சங்கம் கூடியதாக (மத் 26:57 தொ; மாற் 14:53 தொ) அறிகிறோம். ஆலயத்தின் வெளிக்கதவுகள் மூடப்பட்டிருந்ததால் இவ்வாறு நிகழ்ந்திருக்கலாம். ''தால்மூது'' பாரம்பரியப்படி இச்சங்கம் அரைவட்ட வடிவமாகக் கூடியது. இரு பக்கங்களிலும் விடுதலை கூறும் வாக்குகளைப் பதிவு செய்ய ஒருவரும் தண்டனை கூறும் வாக்குகளைப் பதிவு செய்ய மற்றொருவருமாக இரு பதிவாளர்கள் இருந்தனர். ஓய்வு நாட்களிலும் திருநாட்களிலும் சங்கம் கூடாது. அந்நாட்களில் தீர்ப்புக் கூறமுடியாது. மரண தண்டனை வழங்க நேரும் போது பல தனிப்பட்ட முன்னெச்சரிக்கை எடுக்கப்பட்டன. குற்றவாளிக்குச் சார்பாகப் பேசியவர் அவனுக்கு எதிராகச் சான்று கூற முடியாது. இரு சாட்சிகளின் சான்று இன்றித் தண்டனைத் தீர்ப்புக்கூற முடியாது. விடுதலைத் தீர்ப்பு விசாரித்த அன்றே கூறப்படலாம். மரணத்தீர்ப்பு அடுத்தநாளில்தான் கூறப்படவேண்டும். எழுந்து நின்று இளைஞர் முதலாக முதியோர் வரை வாக்குக் கொடுத்தனர். விடுதலை செய்ய ஒருவாக்கு அதிகமாய் இருந்தால் போதும்; மரணத் தீர்ப்புக்கூற, குறைந்தது இரண்டு வாக்குகளாவது அதிகமாயிருக்க வேண்டும்.

இயேசுவின் காலத்தில் யூதேயா நாட்டுக்குள்தான் இச்சங்கம் அதிகாரம் செலுத்தலாம். யூதேயாவுக்கு வெளியில் இச்சங்கத்தின் அதிகாரம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அறுதியிட்டுக் கூற முடியாது. கிறிஸ்தவர்களைப் பிடித்து வருமாறு அதிகாரத்துடன் தூதுவர்களை இச்சங்கம் அனுப்பியதாக வாசிக்கிறோம் (அ.ப. 9:2; 22:5; 26:12). யூதேய நாட்டுக்கு வெளியில் உள்ள யூத சமூகங்களிலும் சிதறிக் கிடந்த யூத சமூகங்களிலும் எருசலேம் சனேத்ரின் போன்ற சிறிய சனேத்ரின்கள் இருந்தனவாகத் தெரிய வருகிறது. இவை எருசலேமில் அமைக்கப்பட்ட சட்டமுறையைக் கையாண்டன. எருசலேம் சங்கம் செய்த தீர்மானங்கள் மற்ற எல்லா யூதச் சங்கங்களுக்கும் பொதுவானவையாக அறிவிக்கப்பட்டன. அவை மரியாதையுடன் செயல்படுத்தப்பட்டன.

இயேசு மலைப் பொழிவிலே, பிறரைத் தூற்றுபவன் சனேத்ரின் சங்கத்திற்குமுன் கொண்டு வரப்படவேண்டும் என்று கூறுகிறார் (மத் 5:22). தம்முடைய அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் போதித்ததற்காக இச்சங்கத்தின்முன் குற்றம் சாட்டப்படுவர் என்று முன்னறிவித்தார் இயேசு (மத் 10:17; மாற் 13:19). கிறிஸ்துவைப் பற்றிய வழக்கை இச்சங்கம் இருமுறை கேட்டது. பெரிய குருவின் வீட்டில் இரவில் ஒரு முறையும், வழக்கமாகச் சங்கம் கூடும் மன்றத்தில் காலையில் மற்றொரு முறையும் இயேசு விசாரிக்கப்பட்டார். இரவு விசாரிப்பை மத் 26:59 தொ; மாற் 14:55தொ என்ற பகுதியில் வாசிக்கிறோம். அன்னாசு வீட்டில் நடந்த விசாரிப்பைப்பற்றி யோவான் கூறுகின்றார் (யோவா 18:12 தொ). பெரிய குருவாகிய காயபாவின் வீட்டிற்கு இயேசு இட்டுச் செல்லப்பட்டார் என்று லூக்கா கூறினாலும் (லூக் 22:54) காலையில் நடந்த வழக்கு விசாரணையை மட்டும் குறிப்பிடுகின்றார் (லூக் 22:66). மத்தேயுவும் (27:1) மாற்கும் (15:1) சனேத்ரின் சங்கம் என்று குறிப்பிடாவிடினும், காலையில் நடந்த விசாரணை சட்டமுறைப்படி நடந்ததாகும்.

இச்சங்கம் பேதுருவையும் யோவானையும் விசாரித்து இனிமேல் கிறிஸ்துவாகிய இயேசுவின் பெயரால் போதிக்கக்கூடாது என்று தடைவிதித்தது (அ.ப. 4:5தொ). அவர்கள் சங்கத்திற்குப் பணிய மறுத்தனர். ஆயி

னும் அவர்களை விடுதலை செய்தது (அ.ப. 4:18தொ). அவர்களது போதகத்தின் வெற்றி கண்டு மீண்டும் அவர்களைக் கைது செய்தது. ஆண்டவரின் தூதர் அவர்களை விடுதலை செய்தார் (அ.ப.5:17தொ). மீண்டும் அவர்களைக் கைதுசெய்து இச்சங்கம் விசாரித்தது (அ.ப..5:26தொ). அவர்கள் பணியாததைக் கண்டு சங்கத்தினர் சினமுற்று அவர்களைக் கொன்று போடக்கருதினர் (5:33). ஆனால் ஞானி கமாலியேல் இவ்வியக்கம் கடவுளுடைய வேலையானால் அதை அழிக்க முடியாதுஎன்று கூறிச் சங்கத்தினரைச் சமாதானப்படுத்தினார் (5:35 தொ). பவுலும் இச்சங்கத்தின்முன் விசாரிக்கக் கொண்டு வரப்பட்டார் என அறிகிறோம் (அ.ப. 22:30தொ).

உரோமையரால் எருசலேம் அழிக்கப்பட்டு, யூதர்கள் சிதறுண்டு போனதோடு இச் சங்கமும் அழிந்தது எனலாம்.

சன்சன்னா (SANSANNA - கிளை, பனைக் கிளை)

இது சிக்லாகுக்கு அருகிலுள்ள யூதாவின் தெற்குப் பகுதியில் உள்ள ஒரு நகர் (யோசு 15:31). சிமியோனின் நகரங்களைப் பற்றிய இணைப்பட்டியல்கள் கசர்சூசா (அட்சர் சூசா), கசர்-சூசிம் (அட்சர் சூசிம்) என்று சொல்கின்றன. இவை இரண்டும் சன்சன்னாவைத்தான் குறிக்கின்றன. இது முன்னுள்ள பெயரான மத்மன்னாவினைப்பின்பற்றி, கையெழுத்துப் பிரதி எடுத்தவர்களின் தவறாகும். இந்த இடம், இக்காலப் பெயேர்செபாவுக்கு வடமேற்கில் 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத்து எஸ்-சம்சனியாத்துவாக அடையாளம் காட்டப்படுகிறது.

சன்பல்லாற்று (SANBALLAT - சந்திரக் கடவுளாக சின் உயிரளித்தார்)

நெகேமியாவின் காலத்தில் பாரசீகர்களுக் கடியில், சமாரியா பகுதிக்கு ஆளுநராக இருந்தார். இவர் அக்காதியப் பெயரைக் கொண்டிருந்தாலும் யாவே கடவுளை வணங்குபவராகத் தெரிகிறது. கி.மு. 408-இல் எகிப்திலுள்ள எலபைன்டைன் என்னும் இடத்தில் வாழ்ந்த யூதர்கள் சன்பல்லாற்றின் புதல்வர்களாகிய செலேமியாவுக்கும் தெலாயாவுக்கும் அவர்களுடைய கோவிலின் அழிவு பற்றிய செய்தியைக் கடிதம் மூலம் எழுதியனுப்பினர். இப்பெயர்கள் யாவே என்ற பெயரோடு இணைக்கப் பட்டுள்ளன. மேலும் அக்கடிதத்தில் சன்பல்லாற்று யூதவிசுவாசத்தைக் கடைப்பிடித்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எருசலேம் சமூகத்திற்கும், குறிப்பாக அதன் சுவர்கள் எழுப்பப்படுவதற்கும் சன்பல்லாற்று எதிரியாக இருந்தார் என்று நெகேமியா விவரிக்கிறார். சன்பல்லாற்று எருசலேமைத் தாக்கப் போவதாகவும் அச்சுறுத்தினார் (நெகே 2:10.19; 4:1.7; 6:1-2.5.12.14). இந்த அச்சுறுத்தல் பயன் அளிக்காதது கண்டு, சன்பல்லாற்று எருசலேமுக்கு வெளியில் நெகேமியாவைச் சந்திக்க முயன்றார். ஆனால் நெகேமியா தான் போனால் கைது செய்து விடுவார்கள் என எண்ணிச் சந்திப்புக்கு மறுததார் (நெகே 6:1-14). எருசலேமில் சன்பல்லாற்றின் மருமகன் ஒரு குருவாக இருந்தார். அவரை நெகேமியா எருசலேமிலிருந்து வெளியேற்றினார் (நெகே 13:28). உண்மையில் எருசலேம் யூதர்கள் கோவிலைத் திரும்பக் கட்டும் பணியில் சமாரியர்கள் பங்கெடுக்க விரும்பியபோது அதற்கு மறுத்துவிட்டனர். இது இரு குழுவினருக்கும் இடையே பகைமையை வளர்த்தது. நெகேமியா எருசலேமுக்கு ஆளுநராக வந்தபோது இந்தப் பகைமை நிலையாக வடிவெடுத்திருந்தது.

சன்னல், பலகணி (WINDOW)

விவிலியக்காலத்திலும் சரி, இன்றும் சரி சன்னல்கள் உபயோகிக்கப்படுகின்றன. இது வீடுகளின் சுவர்களில் காணப்படும் செவ்வக வடிவமான திறப்பாகும். இத்திறப்பினைச் சட்டங்களால் அழகுபடுத்தினர். திறப்பினை, மூடித்திறக்க அசையும் ஓர் அமைப்புப் பொருத்தப்படுகிறது. ஆலயத்தில் ''வெளிப்புறம் குறுகி உட்புறம் விரிந்த பலகணிகள் (1 அர 6:4; எசே 41:16) அமைக்கப்பட்டிருந்தன''. இவை ''குறுகிய பலகணிகள்'' என்று விவரிக்கப்படுகின்றன (எசே 40:16).

சா

சாகாம் (ZAHAM - வெறுப்பு)

யூதாவின் அரசன் ரெகபயாமின் மகன் (2 நாள் 11:19).

சாகே (SHAGEE - தவறுகின்ற, அலைந்து திரிகிற)

இவர் ஓர் அராரியர். இவர் தாவீதின் முப்பது ஆற்றல் மிக்க வீரர்களில் ஒருவரான யோனத்தானுக்குத் தந்தை (1 நாள் 11:34). 2 சாமு 23:33-இன்படி யோனத்தானின் தந்தை அராரியரான சம்மாவாகத் தோன்றுகிறார்.

சாக்கடல் (DEAD SEA)

இது யோர்தான் ஆற்றின் கழிமுகத்தில் உள்ள உப்பு ஏரியாகும். இதன் மிக அதிகமான உப்புத்தன்மையால் எச்செடி கொடியும் வளர்வதில்லை. ஆகையால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

1. பெயர்:- இந்த ஏரிக்கு விவிலியத்தில் பலமுறை பயன்படுத்தப்பட்ட பூர்வீகப் பெயர் 'உப்புக்கடல்' என்பதாகும் (ஆதி 14:3; எண் 34:3.12; உப 3:17; யோசு 3:16; 12:3; 15:2. 5; 18:19). இதற்கு 'அராபாவின் கடல்' என்ற பெயரும் வழங்கியது (உப 3:17; 4:49; யோசு 3:16; 12:3). சில பிற்கால இறைவாக்கு நூல்களில் ''கீழ்கடல்'' என்ற மற்றொரு பெயரும் இருந்தது (எசே 47:18; யோவே 2:10; செக் 14:8). மேற்சொன்ன எந்தப் பெயராலும், புதிய ஏற்பாட்டில் இக்கடல் குறிப்பிடப்படவில்லை. விவிலியத்துக்குப் புறம்பே, இது ''சோதோம் கடல் அல்லது ஏரி'' என்றழைக்கப்படுகிறது. ''சாக்கடல்'' என்ற பெயர் கிரேக்க, இலத்தீன் வழக்கில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகத் தெரிகிறது. சிலர் இதை ''லோத்தின் கடல்'' என்றும் அழைப்பர்.

2. பௌதிகப் பண்புகள்:- யோர்தான் நிலப்பிளவு 565 கி.மீ. நீளமானது. இது கிழக்கு ஆப்பிரிக்கா வரை நீண்டிருக்கிறது. இந்தப் பிளவின் மிக ஆழமான தாழ்வாகும் சாக்கடல். இது யோர்தான் ஆற்றின் கழிமுகத்திலிருந்து தொடங்கித் தெற்கு நோக்கி அமைந்திருக்கிறது. இதன் நீளம் ஏறக்குறைய 80 கி.மீ. இதன் அதிக அளவு அகலம் ஏங்கேதிக்கு வடக்கே 18 கி.மீ. இதன் மேல் மட்டம் கடல் மட்டத்திலிருந்து 394 மீட்டர் தாழ்ந்தது. இதிலிருந்து இதன் அதிக அளவு ஆழம் வடகிழக்கில் 396 மீட்டராகும். ஆகவே இது உலகின் மிகத் தாழ்ந்த பகுதியாகும். இதன் அடிமட்டம் கடல்மட்டத்திலிருந்து 790 மீட்டர் ஆழமானது. இது மலைகளாலும் பீடபூமிகளாலும் சூழப்பட்டுள்ளது. இதனால், இக்கடலின் சுற்றுப்புறத்திலிருந்து 1585 மீட்டர் ஆழமானதாகும். இதன் மேற்பரப்பு 1036 ச.கி.மீ. ஆகும். ஏல்-லிசான் என்ற சிறிய தீபகற்பபகுதி கிழக்கரையிலிருந்து இக்கடலை ஏறக்குறைய இருசம பகுதியாகப் பிரிக்கிறது. இப்பகுதியில் இதன் ஆழம் 9 மீட்டர்தான். வடக்கில் யோர்தான் கழிமுகப்பகுதியிலும், தெற்கில் எஸ்-செப்காவிலுள்ள சகதியான உப்புச்சதுப்பு நிலப்பகுதியிலும் தவிர, இக்கடல் பயனற்ற வறட்சியான நிலத்தாலும் செங்குத்தான மலைப்பகுதிகளாலும் சூழப்பட்டுள்ளது. ஆகவே இப்பகுதிகளை அணுகுவது கடினம்.

இதன் நீரில் பலவகையான உப்புகள் மிக அதிக அளவில் காணப்படுகின்றன. ஒரு லிட்டர் நீரில் 300 கிராம் உப்பு உள்ளது. ஆகவே பெருங்கடல் நீரில் உள்ள உப்பை விட எட்டு மடங்கு அதிக உப்புத்தன்மை கொண்டது. ஆகவே உலகிலேயே அதிக உப்புத்தன்மையுடைய நீர்த்தேக்கமாகும் இக்கடல். இதன் நீர் கசப்பானது, கண்கள், புண்களில் பட்டால் எரியும். மனித உடலை விட அதிகப் பளுவீதம் கொண்டிருப்பதால், நாம் மிதக்கலாம். இதன் நீர் தொடுவதற்கு எண்ணெய்த் தன்மையுடையது. அதில் குளித்தவுடன் உடலில் ஒட்டியுள்ள உப்பை நீக்கச் சுத்தமான நீரில் குளிக்க வேண்டும்.

மேலும் இதைச் சுற்றியுள்ள பகுதியில் அதிக அளவில் நிலக்கில் உண்டு (ஆதி 14:10). இதன் தென்மேற்குப்பகுதியில் செதோம் மலை (எபேல் உஸ்தம்) எழுகிறது. இது களிக்கல், உப்பு, கண்ணாம்புக்கல், ஆகியவற்றால் ஆனது. இந்தத் தாதுப் பொருட்களைக் காயச்செய்து உடையக்கூடியதாக்கும் கோடைகால வெப்பமும், குளிர்கால மழையால் ஏற்படும் அரிப்பும் சேர்ந்து இத்தப் பகுதியில் விநோதமான உப்புத் தூண்களைத் தோன்றச் செய்துள்ளன. இவை லோத்தின் மனைவியெனச் சுற்றுலாவில் வருபவர்களுக்குச் சுட்டிக்காட்டப்படுகின்றன (ஆதி 19:26).

பழங்காலப் பாரம்பரியம், சோதோம், கொமோராவின் அழிவிற்குமுன் சாக்கடல் இருக்கவில்லை என்று கூறுகிறது (ஆதி 13:19; 14:10). இதை இடஅமைவு ஆய்வியல் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் இப்பகுதியில் நடைபெற்றுள்ள தொல்பொருள் அகழ்வுகள் தொடக்க வெண்கலக்கால நகரங்களின் அழிவுகளைக் காட்டுகின்றன. இந்நகர்கள் சமவெளி நகர்களாக (19:29) இருக்கலாம். இந்த அழிவு, நில அதிர்ச்சியால் ஏற்பட்டிருக்கலாம். இது போன்ற அதிர்ச்சி 1927 - ஆம் ஆண்டு ஜூலை பதினொன்றாம் நாள் நிகழ்ந்திருக்கிறது. இத்தகைய நில அதிர்ச்சி, ஆபிரகாம் கண்டதாகக் கூறப்படும் காட்சியை (ஆதி 19:28), நிகழ்ச்சியை நினைவுபடுத்தலாம்.

சாக்கடல் ஏடுகள், சுருள்கள் (DEAD SEA SCROLLS)

1. 1947-ஆம் ஆண்டிலிருந்து, சாக்கடலின் வடமேற்குத் திசையிலுள்ள வாடி கும்ரான் (கும்ரான் ஓடை) என்றவிடத்தில் பழஞ்சுவடிகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. வாடிகும்ரான் எரிகோவிலிருந்து தெற்கில் 14-கி.மீ. தூரத்தில் உள்ளது. வாடி என்றால் காட்டோடை என்று பொருள். இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பழஞ் சுவடிகளில் விவிலியத்தின் படிவங்களும், பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு காலங்களுக்கிடையில் உண்டான நூல்களின்பிரதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. தொடர்ந்து இப்பகுதியின் தென்பாகத்திலும் பழஞ் சுவடிகள் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட சுவடிகளுக்கெல்லாம் தொகுப்பான பெயராகத்தான் கும்ரான் ஏடுகள் அல்லது சாக்கடல் ஏடுகள் என்று கூறப்பட்டுள்ளது.

2. ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு:-

1947 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கும்ரான் என்றவிடத்திற்கு வடக்கே பெடுயின் என்ற நாடோடி வகுப்பைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். அவனது உண்மையான பெயர் முகமது அமீது ஏல் கமீது என்பதாகும். ஆனால் அவனை எத்-திப் என்று அழைப்பார்கள். எத்-திப் என்றால் ஓநாய் என்று பொருள். அவன் பெடுயின் என்ற நாடோடி வகுப்பில் தாஅமீரே என்ற குலத்தைச் சார்ந்தவன். அவன் மேய்த்த ஆடுகளில் ஒன்று காணாமற் போக அதனைத் தேடிச் சென்றான். அவ்விடம் குகைகள் நிறைந்த பகுதியானதால், குகைகளில் ஆடு ஒளிந்திருக்கும் என்று குகைகளில் கற்களை விட்டெறிந்து தேடிச் சென்றான். ஒரு குகையில் தான் விட்டெறிந்த கல்லுக்கு ஒரு விநோதமான ஒலிவர, பிறகு அதில் இறங்கிப்பார்க்க, அங்கு மண் சாடிகள் இருக்கக் கண்டுபிடித்தான். அச்சாடிகள் 25 1/2 அங்குல முதல் 29 1/2 அங்குலம் வரை உயரமாகவும் 10 அங்குல அகலத்திலும் இருந்தன. தன் நண்பர்களையும் துணைக்கு அழைத்துவந்து அந்தச் சாடிகளைத் திறந்து பார்த்தால் அவைகளில் தோல் சுருள்கள் துணியால் சுற்றப்பட்டுக் கிடந்தன. அது தோலாயிருந்ததால் பாதணிகள் செய்பவரிடம் பெத்லகேமில் அதை விற்கச் சென்றார்கள். இதற்கு 20 பவுன் விலை கேட்டார்கள். வியாபாரி இவ்வளவு தொகைக்கு மதிப்பில்லை என மறுத்துவிட்டார். சில காலத்திற்குப்பின் பழம் ஏடாகவிருந்ததால் எருசலேமிலிருந்த புனிதமாற்கு சிரியன் ஆர்தோடாக்சு மடத்திற்கு இவைகள் கொண்டுவரப்பட்டன. அந்த மடத்தின் பேராயராக விளங்கிய மார் அத்தனேசியு சாமுவேல் 5 சுருள்களை வாங்கினார். மூன்று சுருள்களை எருச

லேம் எபிரேயப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய சுகேனிக் என்பவர் வாங்கினார். 1954 - ஆம் ஆண்டு மேற்கண்ட சுகேனிக் என்பவரின் மகன் யாதின் பேராயர் அத்தனேசியு வைத்திருந்த 5 சுருளையும் வாங்கினார். அதற்காக இரண்டு இலட்சத்தி ஐம்பதாயிரம் டாலர்களை விலையாகக் கொடுத்து வாங்கினார். ஆனால் இஸ்ராயேல் அரசு இந்த எல்லாச் சுவடிகளையும் வாங்கி இப்போது எருசலேமில் உள்ள பழஞ்சுவடிகளின் காட்சியகத்தில் சேர்த்து வைத்துள்ளது. இவ்வாறு இப்பழம் ஏடுகளின் பெரும் மதிப்பைப் புரிந்து கொண்ட பெடுயின் நாடோடி மக்கள் அப்பகுதியிலிருந்த எல்லாக் குகைகளுக்குள்ளும் நுழைந்து பல ஏட்டுத் துணுக்குகளைக் கொண்டு வர ஆரம்பித்தனர். இச்சமயத்தில் தான் யூதர்களுக்கும் அரபு மக்களுக்கும் இஸ்ராயேல் நாட்டில் கடும்போர் நடந்து கொண்டிருந்தது. 1948-இல்தான் இஸ்ராயேல் நாட்டைப் பிரகடனம் செய்தனர். எனவே இந்நாட்களில் முறையான தொல்பொருள் ஆராய்ச்சியை அங்கு நடத்த முடியவில்லை.

ஆனால் சண்டை ஓய்ந்ததும் 1949 - ஆம் ஆண்டு பிப்ரவரி 15 முதல் மார்ச் 5 வரை யோர்தானில் செயல்பட்டுவந்த தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து லங்க்ஸ்டர் ஹார்டிங் என்பவர் இப்பகுதியில் பழஞ் சுவடிகளைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டார்.

அவருடன் எருசலேம் நகரில் சாமிநாத சபைக் குருக்களால் நடத்தப்பட்ட விவிலியப் பள்ளியிலிருந்த தே வோ என்பவரும் இத் தேடும் பணியில் சேர்ந்து கொண்டார். பல நூற்றுக்கணக்கான, பல பழம் ஏட்டுத் துணுக்குகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டன. இதில் விவிலிய நூல்களும் திருச்சபையால் அங்கீகரிக்கப்படாத போலியான விவிலிய நூல்களும், இன்னும் பலவிதப் புத்தகங்களிலிருந்து வசனங்களும் அச்சுவடிகளில் காணப்பட்டன.

1947 - இல் கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சுவடிகளைப்பற்றி, முன்பே அறிஞர்களுக்கும் மக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. கி.பி. 184-250 ஆண்டுகளில் வாழ்ந்த ஒரிஜன் என்ற அறிஞர், எரிகோ நகர் அருகில், சாடி ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட சங்கீதங்களின், கிரேக்க மொழிபெயர்ப்பொன்றைப் பயன்படுத்தியிருக்கிறார். இச்செய்தியைத் தருபவர் யுசேபியு என்ற திருச்சபை வரலாற்று ஆசிரியர். கி.பி 800 - ஆம் ஆண்டு முதலாம் திமோத்தேயு என்ற நெஸ்தோரிய பிரிவினை ஆயர், தன் கடிதமொன்றில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ஓர் ஆடு மேய்ப்பவர், எரிகோ அருகே நூல்கள் இருந்த ஒரு வீட்டினைக் கண்டுபிடித்தார் என்று கூறுகிறார். கி.பி. 973 - இல் காராயத்தர் வகுப்பைச் சார்ந்த கிர்க்கிசானி என்பவர் யூதரின் பிரிவினைபற்றிப் புத்தகம் எழுதினார். அதில் மகரை என்ற வகுப்பினரைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களின் புத்தகங்கள் ஒரு குகையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறுகிறார்.

இவ்வாறு சுமார் 200 ஏட்டுச் சுருள்கள் கொண்ட ஒரு நூலகத்தையே மறைத்து வைப்பதற்காகக் கும்ரான் குகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. தன்னிடம் வந்து சேர்ந்த 5 சுருள்களைப் பேராயர் அத்தனேசியு, இஸ்ராயேல் அரசிடம் ஒப்படைக்குமுன், அமெரிக்க அறிஞர்களுக்கு ஆராய்ச்சிக்காக அனுப்பி வைத்தார். இவ்வேடுகளைப் பர்ரோஸ் என்ற அறிஞர் திரவேர், பிரவுன்லி என்ற மற்ற அறிஞர்களின் துணையுடன் 1950 ஆம் ஆண்டு பதிப்பு செய்து வெளியிட்டார். இப்பதிப்பில் இரண்டு ஓலைச் சுருள்களின் படமும் அதில் எழுதப்பட்டவைகளின் தொகுப்பும் அடங்கியிருந்தன. இச்சுருள்களில், ஒரு சுருள் எசாயா ஆகமத்தின் முழுப் பகுதியையும் கொண்டிருந்தது. அடுத்த சுருளில் அபகூக்கு ஆகமத்தின் முதல் சில அதிகாரங்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கவுரைகள் காணப்பட்டன.

மேற்கண்ட அமெரிக்க அறிஞர் பர்ரோஸ் மீண்டும் 1951 - இல் இரண்டாவது தொகுப்பை வெளியிட்டார். இத்தொகுப்

பில் மற்றயிரண்டு சிறிய ஓலைச்சுருள்களின் படங்களும், அவைகளில் எழுதப்பட்டவை களும் வெளியிடப்பட்டன. இதில் 'ஒழுக் கங்களின் கையேடு' என்ற புத்தகத்தின் பிரதி இடம் பெற்றிருந்தது. ஆயர் அத்தனேசியுவிட மிருந்து பெற்ற 5 சுருள்களில் நான்கை இவ்வாறு வெளியிட்டார். ஐந்தாவது சுரு ளைச் சரியாகத் திறக்க முடியவில்லை. எனவே வெளியிடப்படமுடியவில்லை. ஆனால் அதில் இலாமேக்கின் திருவெளிப் பாடு என்ற நூல் இடம் பெற்றிருக்க வேண் டும் என்று யூகித்தார்கள்.

1948 - ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சுகேனிக் தன்னிடம் கிடைத்த பழம் ஏடுகளில், தெளிவாகத் தெரிந்தவைகளை மட்டும் முதல் பகுதியாக வெளியிட்டார். மீண்டும் அதே போல 1950 - ஆம் ஆண்டு தன்னிட மிருந்த பழம் ஏடுகளில் மற்றொரு பகுதியை வெளியிட்டார்.

சுகேனிக் இறந்தபிறகு அவரது மகன் யாதின் அவர் பணியை அதாவது கும்ரான் ஏடுகளை வெளியிடும் பணியைத் தொடர்ந்து செய்தார். 1954 - ஆம் ஆண்டு, தன்னிடமிருந்த எல்லாக் கும்ரான் ஏடுகளை யும் தொகுத்து 'மறைந்திருந்த ஓலைகளின் கருவூலம்' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பை வெளியிட்டார். இதன் தலைப்பு எபிரேயத்தில் ஒசார் கமகிலோத் கசேனுசோத் என்பதாகும். இதில் மூன்று புத்தகத்தின் பகுதிகள் இடம் பெற்றிருந்தன. 1. எசாயா ஆகமம், 2. 'ஒளியின் பிள்ளைக ளுக்கும், இருட்டின் பிள்ளைகளுக்கும் நடக் கும் போர்' என்பதைப் பற்றிய புத்தகம், 3. நன்றி சங்கீதங்களின் நான்கு பாகங்கள்.

இதற்கிடையில் உடைக்கமுடியாதபடி இருந்த ஓர் ஓலைச்சுருளை, வல்லுநர்கள் உதவிகொண்டு எபிரேயப் பல்கலைக்கழ கம் திறக்க உதவியது. அதில் இலாமேக்கின் திருவெளிப்பாடு இருக்கும் என்று எண்ணி னார்கள். ஆனால் அதில், ஆதி ஆகமத்தை விளக்கிக் கூறும் மிட்ராஸ் என்ற கதை விளக்கங்கள் காணப்பட்டன. எனவே அதற்கு ஆதியாகமத்தின் போலிநூல் என்று பெயர் கொடுத்தார்கள். இதனையும் யாதின், அவிகாத் என்பவருடன் இணைந்து வெளி யிட்டார்.

1951 - ஆம் ஆண்டு மற்றொரு இடத்தில் பழஞ் சுவடிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடத்தையும் கண்டுபிடித்தவர்கள் தாஅமிரே வகுப்பைச் சார்ந்த பழங்குடியினர் தான். இவ்விடம் கும்ரானிலிருந்து 18 கி.மீ. தெற்கே உள்ளது. இதுவும் ஓர் ஓடைமேல் தான் உள்ளது. அவ்வோடையின் பெயர் வாடி முராபாத் என்பதாகும். இவ்வோடை யின் மேலிருந்த இரண்டு குகைகளில் பல பழம் ஏட்டுத் துணுக்குகளைக் கண்டுபிடித்த னர். இதன்பிறகு 1952 - ஆம் ஆண்டு இப்பகு தியில் (முராபாத்) தொல்பொருள் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இப்பகுதிகளையும் ஏடு களை மறைத்து வைக்கப் பல காலங்களைப் பயன்படுத்தியிருந்தனர் என்பது தெரிய வரு கிறது. இங்கு விவிலியப் புத்தகங்களும், மற்றப் புத்தகங்களும் கண்டுபிடிக்கப்பட் டன. விவிலியப் புத்தகங்கள் மாசரேட்டிக்கு முறை (மரபுரையினர்) அறிமுகப்படுத்திய புள்ளிகள் வைத்தெழுதும் முறையில் எழு தப்பட்டுள்ளன. இங்கு ஒருதோல் சுருளில் சிறிய இறைவாக்கினர் என்ற புத்தகங்களி லிருந்து வாசகங்கள் காணப்படுகின்றன. மற் றொரு புல்தாள் சுருள், அழித்துவிட்டு அதன் மேல் எழுதப்பட்ட சுவடியாகும். இந்த அழித்து எழுதப்பட்ட சுவடி கி.மு. 8 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாயிருக்க வேண்டும் என்று அறிஞர் கருதுகின்றனர்.

இந்த முராபாத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஏடுகள், இவ்வேடுகள் எழுதப்பட்ட காலத் தின் சூழ்நிலையை நாம் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன. கி.பி. 132 - 35 - ஆம் ஆண்டுக் காலத்தில் எழுதப்பட்ட இவ் வேடுகள், இவ்வாண்டுகளில் உரோமைய ருக்கு எதிராக எழுந்த இரண்டாவது புரட்சி நிலையைத் தெரிவிக்கிறது. ஓர் ஏட்டில், புரட்சியின் தலைவராக விளங்கிய கோசேபா மகன் சீமோன் கையெழுத்திட்டி ருக்கிறார். மற்ற ஏடுகள் கோசேபா மகனை

இஸ்ராயேலின் இளவரசன் என்று அழைத்து, இவன் இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்தான் என்றும் கூறுகின்றன.

மற்றொரு இடத்திலும் பழம் ஏடுகள் 1950 - ஆம் ஆண்டை அடுத்து வந்த காலங்களில் கிடைத்தன. அவ்விடத்தின் பெயர் கிர்பெத் மிர்து என்பதாகும். இது மார்சாபா என்ற மடத்திலிருந்து வடகிழக்குத் திசையில் 4 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கிறது. இங்குக் கிடைத்திருக்கும் பழம் ஏடுகள் காலத்தால் பிற்பட்டவை. இங்கு விவிலியத்தைச் சார்ந்தவை, கிரேக்க மொழியிலும் பாலஸ்தீனிய அரமேய மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. இவை கி.பி. 5 - ஆம் நூற்றாண்டு முதல் 8 - ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்திற்கு உட்பட்டவை. 1952 - ஆம் ஆண்டு சூலை மாதத்தில் கிர்பெத் மிர்துவில் நபத்தேயர், யூத புல்தாள் சுவடிகள், கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட சிறிய இறைவாக்கினர் புத்தகங்களின் ஏட்டுத் துணுக்குகள் ஆகியவை இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன. முராபாத்திலும், கிர்பெத் மிர்துவிலும் கண்டுபிடிக்கப்பட்ட பழஞ் சுவடிகள் கும்ரான் ஏடுகளுடன் தொடர்பில்லாதவையாகக் காட்சியளிக்கின்றன. ஆனால் கும்ரானில் பல புதிய பழம் ஏடுகள் பல குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

1952 - ஆம் ஆண்டு, ஒரு தனித்த தேடும் பணி கும்ரான் ஓடைப் பகுதிகளில் நடத்தப்பட்டது. அப்போது 37 குகைகளில் பல பானைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளில் சிலவற்றில் பழம் ஏடுகளும் கிடைத்தன. இவற்றில்,

குகை - 2 (2Q): இக்குகை முதல் குகையிலிருந்து, தென்புறத்தில், அதன் அருகில் உள்ளது. இங்கு விவிலிய ஏட்டுத் துணுக்குகளும், போலி விவிலியப் புத்தகங்களின் ஏட்டுத் துணுக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகளில் சுபிலி ஆகமத்தின் ஒரு பகுதி காணப்படுகிறது. சுபிலி ஆகமம் போலி விவிலியப் புத்தகங்களில் ஒன்று. அத்துடன் அரமேய மொழியில் எழுதப்பட்ட மற்றொரு புத்தகமும் இங்குக் கிடைத்தது. இதில் வரவிருக்கும் புதிய எருசலேமைப் பற்றிக் கூறப்படுகிறது.

குகை - 3. (3Q) இது முதல் குகையிலிருந்து வடக்கே சுமார் 2 கி. மீ. தூரத்தில் உள்ளது. இங்கு 274 ஏட்டுத் துணுக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வேடுகள் எபிரேய மொழியிலும் அரமேய மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. இத்துடன் செப்புத்தகடுகளில் எழுதப்பட்ட இரண்டு சுருள்களும் கிடைத்துள்ளன.

குகை. 4. (4Q): இக்குகை கிர்பெத் கும்ரான் என்ற இடத்திலிருந்து நேராக மேற்குத் திசையில் அமைந்துள்ளது. இது பெடூயின் பழங்குடியினரால் 1952 - ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு மற்றக் குகைகளைவிட அதிகமாக ஏடுகள் காணக்கிடந்தன. இவ்வேடுகள் பலதரப்பட்டவை. விவிலியத்தைச் சேர்ந்தவைகள், போலி விவிலியத்தைச் சேர்ந்தவை, விவிலிய விளக்கவுரைகள், வழிபாட்டைச் சார்ந்தவை இன்னும் அப்பகுதியில் வாழ்ந்த குறிப்பிட்ட தனிப்பிரிவினரான எஸ்ஸேனியர்களின் வாழ்க்கையைச் சார்ந்தவையெனப் பலதரப்பட்ட ஏடுகள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன.

குகைகள் - 5,6 (5Q, 6Q): இக்குகைகள் கும்ரான் அருகிலேயே அமைந்திருக்கின்றன. இங்கு ஒரு சில ஏடுகளே கிடைத்தன.

குகைகள் ஏழு முதல் பத்து வரை: இக்குகைகள் 1955 - இல் கண்டுபிடிக்கப்பட்டன. இக்குகைகள் கிர்பெத் கும்ரான் மேடுகளில் அமைந்திருக்கின்றன. இங்குக் கிடைத்த ஏட்டுத் துணுக்குகள் எல்லாம் தூய்மை செய்யப்பட்டு, வரிசைப்படுத்தப்பட்டு, தொகுக்கப்பட்டுத் தற்போது எருசலேமிலிருக்கும் பாலஸ்தீனப் பொருட்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

குகை - 11: இக்குகை, மூன்றாவது குகையின் அருகிலேயே உள்ளது. இங்குக் கண்டுபிடிக்

கப்பட்ட ஏடுகள், அதிகம் சிதையாமல் கிடைத்திருக்கின்றன. இங்குக் கிடைத்த ஒரு நூதனமான பொருள் இரண்டு செப்புத் தகட்டுச் சுருள்கள். மூன்று தகடுகளை ஒன்றாக நீளமான அளவில் அடித்துப் பிறகு அது இரண்டு சுருள்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்த இரண்டு சுருள்களில் உள்ள செப்புத் தகட்டின் நீளம் 2.5 மீட்டர். இந்தச் செப்புத் தகட்டுச் சுருள் வெகுகாலம் ஆகிவிட்டதால், துரு ஏறிப் பிரித்தெடுக்கவே முடியவில்லை. பிறகு அல்லகெரோ என்ற அறிஞரின் துணை கொண்டு, மான்செஸ்டரிலுள்ள தொழில் நுணுக்கக் கல்லூரியில் இச்செப்புத் தகட்டுச்சுருள் கவனமாகப் பிரித்தெடுக்கப் பட்டது. இந்த இரண்டு சுருள்களிலும் 12 பத்திகளில் எழுதப்பட்டுள்ளன. எழுத்துக்கள் பதிக்கப்பட்டதால், தகட்டின் பின்புறத்தில் இருந்த எழுத்துப் புடைப்பினைப் பார்த்து அறிஞர் கே.ஜி.கூன் என்பவர் வாசித்து விளக்கமளித்தார். இச்செப்புத் தகட்டு வாசகங்கள் பலவிதப் புதையல்களையும், அவை எங்குப் புதைக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றியும் தெரிவிக்கின்றன. அதில் கூறப்பட்டிருக்கின்ற எண்ணிக்கையில்லாத திரவியங்களைப் பார்க்கிறபோது, அவை எருசலேம் ஆலயத்தின் பொருட்களாயிருக்க வேண்டும் என்று அறிஞர் கூன் கருதுகிறார்.

3. கும்ரான் ஏடுகள் எழுதப்பட்ட மொழியும் எழுதப்பட்ட ஆண்டும்:-

இங்குக் காணப்படும் ஏடுகளில் எழுதப் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழி பழைய ஏற்பாட்டு எபிரேய மொழியாகும். மிஷ்னா - எபிரேயம் என்ற வகை ஒரு சில சொற்றொடர்களில் மட்டும் காணப்படுகின்றது. ஆனால் நான்காவது குகைகளில் காணப்பட்ட ஏடுகளில் மிஷ்னா எபிரேய இலக்கண நடை அதிகம் காணப்படுகின்றது.

சுவடிகளில் காணப்படும் எழுத்துக்கள் மிக அருமையாகத் திறமையுடன் எழுதப்பட்டுள்ளன. எனவே கைதேர்ந்த, நன்கு கற்றறிந்தவர்தான் இவைகளைப் படிவம் எடுத்திருக்க வேண்டும் என்பது தெளிவு. தோல் சுவடிகள் தான் இங்குப் பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டுள்ளன. தோலில் முடியிருந்த பாகத்தை நன்கு தேய்த்துவிட்டு, பிறகு அந்தப் பக்கத்தில்தான் எழுதியுள்ளனர். எழுதுவதற்கு முன்வரிசைகளைத் தளமட்டமாக வரைந்திருக்கின்றனர். பக்க ஓரங்களைக் காட்ட நேர் கோடுகளை வரைந்திருக்கின்றனர். இங்கு எழுதப்பட்டிருக்கிற கையெழுத்தின் வடிவம், கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டு நமக்குக் கிடைத்திருக்கும், நாஷ் புல்தான் சுவடியின் கையெழுத்தை ஒத்திருக்கிறது. அதே சமயத்தில் எருசலேம் நகரில் பழங்காலக் கல்லறைகளில் எழுதப்பட்ட கையெழுத்தையும் இது ஒத்திருக்கிறது.

ஆல்பரைட், திரவேர், பர்ன்பாம், சுகேனிக் என்ற அறிஞர்கள், பழம்பொருள் ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தி, கும்ரானில் கண்டுபிடிக்கப்பட்ட ஏடுகள் கி.மு. இரண்டாவது அல்லது முதல் நூற்றாண்டைச் சார்ந்தவையெனத் தெரிவிக்கிறார்கள். இவ்வேடுகளை வைத்திருந்த சாடியின் ஓடுகள் கிரேக்கர்களின் கடைசிக்காலத்தைச் சேர்ந்தவையென, ஆராய்ச்சிகள் நிருபிக்கின்றன. ஆக, சுவடிகளின் காலமும், அதைத் தாங்கியிருந்த சாடிகளின் காலமும் ஒன்று என்பது தெளிவாகிறது. சுவடிகளைச் சுற்றியிருந்த துணிகளையும் ஆராய்ச்சிக்கு அனுப்பினார்கள். ஆராய்ச்சியின்படி இவை கி.பி 33 -ஆம் ஆண்டைச் சார்ந்தது என்ற முடிவைத் தந்தது. கிடைத்திருக்கின்ற ஆதாரங்களையெல்லாம் திரட்டிப் பார்க்கிறபோது இச்சுவடிகள் அனைத்தும் கி.மு. 168 - இலிருந்து கி.பி. 233 - க்குள் என்ற கால எல்லைக்குள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவாகத் திகழ்கிறது.

4. கும்ரானில் தொல்பொருள் ஆராய்ச்சி:-

கிர்பெத் கும்ரான் என்றவிடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சிநடத்தினார்கள். இவ்வாராய்ச்சிகள்தான் மேற்கூறப்பட்ட சுவடிகளைப் பற்றிய பல விளக்கங்களை நமக்குக் கொடுத்தன. கிர்பெத் என்றால் இடிந்து விழ்ந்தஇடம் என்பது பொருள். கும்ரானில்

கிர்பெத் என்ற இடம், கும்ரானின் முதல் குகையிலிருந்து தெற்கே 1கி.மீ. தூரத்தில் உள்ளது. அயின் பெசுக்கா என்றவிடத்திலி ருந்து வடக்கே 3 கி.மீ. தூரத்தில் மலையடி வாரத்தில் உள்ளது.

இந்தக் கிர்பெத் என்ற பாழடைந்தவிடம், முதலில், ஆபிரகாம் காலத்தில் அழிந்து போன கொமோரா நகரம் என்று நினைத்தார் கள் அல்லது உரோமையர்களின் ஒரு சிறு இராணுவ முகாமாயிருந்த இடம் என்றும் ஊகித்தனர். இந்தக் கணிப்புகளெல்லாம் தவ றானவையெனத் தொல்பொருள் ஆராய்ச்சி நிருபித்தது. தே வோ என்ற குருவும் கார்டிங் என்ற அறிஞரும் இத்தொல்பொருள் ஆராய்ச்சியை முன்னின்று நடத்தினர். ஐந்து முறை இங்கு இத்தகைய ஆராய்ச்சி நடத்தப் பட்டது.

முதல்முறை ஆராய்ச்சி நடந்த காலம் 1951 - ஆம் ஆண்டு நவம்பர் 24 முதல் டிசம்பர் 12 வரை. இரண்டாவது முறையாக ஆராய்ச்சி செய்யப்பட்ட நாட்கள் 1953 - ஆம் ஆண்டு பிப்ரவரி 3 முதல் ஏப்ரல் 24 வரை. மூன்றாவது முறை ஆராய்ச்சிநடந்த காலம் 1954 - ஆம் ஆண்டு பிப்ரவரி 13 முதல் ஏப்ரல் 14 வரை. நான்காவது கட்டமாக ஆராய்ச்சி நடந்த காலம் 1955 - ஆம் ஆண்டு பிப்ரவரி 2 முதல் ஏப்ரல் 6 வரை. ஐந்தாவது முறை யாக ஆராய்ச்சி நடந்த நாட்கள் 1956 - ஆம் ஆண்டு பிப்ரவரி 18 முதல் மார்ச் 28 வரையி லும். இவ்வாராய்ச்சியில், அறிஞர்கள் முக்கிய மாகக் கண்டுபிடித்தது என்னவென்றால், கும்ரான் கிர்பெத் என்னுமிடத்தில் ஒரு பெரிய மடம் செயல்பட்டு வந்திருக்கிறது என்பதுதான். இம்மடத்தில் ஒரு குறிப்பிட்ட கொள்கை கொண்ட குழுவினர் வாழ்ந்துள்ள னர் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இவ் விடத்தில் இம்முனிவர்கள் தங்குவதற்கு முன்பாகக் கி.மு. ஏழாவது நூற்றாண்டி லேயே, இவ்விடம் ஒரு நகரமாக விளங்கி யிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. நோத் என்ற அறிஞர் யோசு 15:6 - இல் குறிப்பிடப் படும் உப்பு நகரம் இதுவாகத்தானிருக்கும் என்று கருத்துத் தெரிவிக்கிறார். 7 - ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட இவ்வி டம் கி.மு. 6 - ஆம் நூற்றாண்டின் முடிவில் கைவிடப்பட்டது. பிறகு நான்கு நூற்றாண்டு கள் இவ்விடம் பாழடைந்த நிலையில் இருந் திருக்கிறது. மீண்டும் இவ்விடம் கி.மு. 134 - 104 ஆண்டுகளில் அசமோனிய பெரிய குரு யோவான் கிரிக்கான் என்பவரால் பயன் படுத்தப்பட்டுள்ளது.

இதன்பிறகுதான் கி.மு. முதலாம் நூற் றாண்டின் ஒரு தனிப்பட்ட சபையினர் இங்கு வந்து தங்கியுள்ளனர். அவர்களுக் கெனத் தனிமடத்தையும் கட்டிக்கொண்டனர்.

5. கும்ரான் மடத்தின் வாழ்க்கைமுறை:-

இவ்விடத்தில் பல வியக்கத்தக்க அமைப் புகளைத் தொல்பொருள் ஆராய்ச்சியின் போது கண்டுபிடித்தனர். உதாரணமாக இங் குத் தண்ணீர் சேர்த்து வைக்கும்முறை. மழைக்காலத்தில் மழைபெய்யும்போது, இவ்விடத்தின் அருகேயிருந்த நீர் வீழ்ச்சியி லிருந்து, வாய்க்கால் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து, மடத்தில் பெரிய நீர்த் தொட்டிகளில் நிரப்பிக் கொண்டனர். இவ் வாய்க்கால்களைக் கற்களாலேயே கட்டி யிருக்கின்றனர். இந்நீர்த்தொட்டிகளில் படிக் கட்டுகளும் காணப்படுகின்றன. இப்படிகள், முனிவர்கள் தங்கள் சபை முறைப்படி தூய் மைச் சடங்குகள் செய்து கொள்ள, அத் தொட்டிகளில் இறங்க வசதியாகச் செய்யப் பட்டவையாகும்.

அம்மடத்தின் தென்கோடியில், பெரிய விசாலமான அறை ஒன்று காணப்படுகிறது. அதன் அளவு 22.5 மீட்டர் நீளம் 4.5 மீட்டர் அகலம். இவ்வறை பொதுவாகச் சபை உறுப்பினர்கள் ஒன்று கூடுவதற்கும், ஒன்று கூடிச் செபிப்பதற்கும் பயன்படுத்தப்பட் டிருக்கிறது. இவ்வறை உணவுக் கூடமாகவும் பயன்பட்டிருக்கிறது. ஏனென்றால் இவ் வறையுடன் மற்றொரு சிறிய அறை இணைக் கப்பட்டுள்ளது. அச்சிறிய அறையில் நூற்றுக் கணக்கான சாப்பாட்டுத் தட்டுகள், கிண்ணங் கள், சாடிகள் முதலியவைகளை வைத்திருந் திருக்கின்றனர். இம்மடத்தில் பலவிதமான

கைவினை வேலைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாகப் பானை செய்யும் சூளைகள், கொல்லுப்பட்டரை, தானியம் அரைக்கும் ஆலைகள், ரொட்டி சுடும் அடுப்புகள், துணி துவைக்கும் சலவைமனை ஆகிய இவைகள் எல்லாம் இம்மடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இம்மடத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவர்கள் மதிலைப்போல் கட்டப்பட்டுள்ளன. காவலர்கள் எதிரிகளைக் கண்காணிக்கத் தனிக் கோபுரமும் கட்டப்பட்டுள்ளது. இக்காவலர்களின் கோபுரம் வடமேற்குத் திசையில் அமைந்திருக்கிறது. இக்காவல் கோட்டைக்குப் பின்னால், தென்புறமாக எழுதுவதற்கென்று தனி அறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கு நீளமாக மேசையும், அதன் அருகே இருக்கைப் பலகைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் இரண்டு எழுத்து மைக்கலயங்களும் இருந்திருக்கின்றன.

இவ்வாறு இங்குக் காணப்படும் பொருள்கள் அனைத்தும், இங்கு வாழ்ந்த குழுவினரின் வாழ்க்கை நிலையையும் முறையையும் நமக்கு நன்கு படம் பிடித்துக் காண்பிக்கின்றன. இங்கு இருந்தவர்கள் புனித வாழ்க்கையின் வழி சென்றிருக்கின்றனர். அதே நேரத்தில் இவர்கள் எல்லாத் தொழிலிலும் ஈடுபாடு காட்டி, தங்கள் காலிலேயே நின்று வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் போர்வீரர்களைப் போலப் போரில் குதிக்கவும் தயார் நிலையில் இருந்திருக்கின்றனர். இவர்கள் எழுத்துப் பணியையும், முக்கியமானதொன்றாகக் கருதியிருக்கிறார்கள் என்பதும் நன்றாக விளங்குகிறது.

இம்மடத்தின் தென்புறத்தில் கல்லறைத் தோட்டமொன்றும் காணப்படுகிறது. இங்குச் சுமார் 1000 பேராவது புதைக்கப்பட்டிருக்க வேண்டும் எனச் சான்றுகள் கூறுகின்றன. இறந்தவர்கள், எவ்வித அலங்காரப் பொருட்களும் அணிவிக்கப்படாமல் புதைக்கப்பட்டிருக்கின்றனர். இக்கல்லறைகளில் பெண்களும் புதைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன.

கி.மு. 31-இல் இப்பகுதியில் பூமி அதிர்வு ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இதனை யோசிப்பசு என்ற யூத வரலாற்று அறிஞர் கூறுகிறார். இதனால் இவ்விடத்தில் கட்டப்பட்டது அனைத்தும் அழிவுக்கு உள்ளாகியிருக்கிறது. இவ்வழிவிற்குப் பிறகு பல ஆண்டுகள் அப்படியே பாழடைந்தவிடமாக விடப்பட்டிருக்கிறது. அனேகமாக கி.மு. நான்காம் ஆண்டுவரை (பெரிய ஏரோதின் இறப்பு) இப்படியே விடப்பட்டிருக்கிறது.

இதற்கடுத்து மீண்டும் அக்குழுவினர் இவ்விடத்தில் தங்கள் மடத்தைக் கட்டியிருக்கின்றனர். தொடர்ந்து தங்களின் பழக்கமான குழு வாழ்க்கையை நடத்தி வந்துள்ளனர். சுமார் 60 - ஆண்டுகளுக்குப் பிறகு, கி.பி 68 - இல் உரோமையர்கள் இவ்விடத்தைத் தங்கள் இராணுவத்தைக் கொண்டு தாக்கினர். இம்மடத்தின் முனிவர்களும் வீரர்களும் அவர்களை எதிர்த்துப் போரிட்டிருக்கின்றனர். இதனால் உரோமைய வீரர்கள் இம்மடத்தைத் தீ வைத்துக் கொளுத்தித் தரைமட்டமாக்கிவிட்டனர். இம்முடிவு, உரோமை இராணுவத்தின் பத்தாவது பிரிவு எரிகோவின் மீது படையெடுத்தபோது நடந்திருக்கிறது. இதனையும் வரலாற்று ஆசிரியர் யோசிப்பசு தெரிவிக்கிறார்.

இவ்வாறு இவ்விடத்தை அழித்தபிறகு உரோமைய இராணுவம் இவ்விடத்தைத் தங்கள் முகாமிற்காகப் பயன்படுத்தியிருக்கிறது. இதன் பிறகு, யூதப் புரட்சியாளர்கள் தங்களின் பதுங்கும் இரகசிய இடமாக இவ்விடத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

இங்குச் சில நாணயங்களும் கிடைத்தன. அவைகளின் காலமும் நாம் மேற்கூறிய நிகழ்ச்சியின் காலங்களும் நன்கு ஒத்துப் போகின்றன. பெரியகுரு முதலாம் இர்க்கான் காலம் தொடங்கி (கி.மு. 135 - 140) யூதர்களின் இரண்டாம் புரட்சிக்காலம் (கி.பி. 132 - 135) வரையிலான காலத்தில் நாணயங்கள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மடத்தில் காணப்படும் பானைகளின் வடிவமும் அமைப்பும், கும்ரான் குகைகளில் கண்டு

பிடிக்கப்பட்ட பானைகளின் அமைப் பிற்கு அப்படியே ஒத்திருக்கின்றன. குகைக வில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில ஏடுகளில் விவரிக்கப்படும் வாழ்க்கை முறையும், இம் மடத்தில் கிடைக்கும் தடயங்களினால் நாம் காணும் வாழ்க்கைமுறையும் அப்ப டியே ஒற்றுமையாய் அமைந்திருக்கின்றன.

இக்கும்ரான் மடத்திற்குத் தெற்கே அயின் பெசுக்கா என்றவிடத்தில் மற்றொரு சிறிய மடம் காணப்படுகிறது. இது கும்ரான் கிர் பெத் மடத்தின் கிளை மடமாகத்தான் அமைந்திருக்கவேண்டும். இம்மடத்தைச் சுற்றிலும், கும்ரான் மடத்தைப்போலவே, நன்கு காவற்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இங்கு விவசாயப் பண்ணையை நடத்தி யிருக்கிறார்கள். தானியம், காய்கள், பழமரங் கள் இவைகளைப் பயிர் செய்திருக்கின்ற னர். கால்நடைப் பண்ணையும் அங்கு இருந் திருக்கிறது. இவ்வாறு தங்களுக்கு வேண்டி யதையெல்லாம் அவர்களே உழைத்துப் பெற்று, பாதுகாத்து, பயன்படுத்தி வந்துள்ள னர். இங்குக் காணப்படும் வாழ்க்கை தற்கா லத்திய துறவியர் மட வாழ்க்கை ஒழுங்கு போலவே காணப்படுகிறது.

6. கும்ரானில் காணப்படும், விவிலிய நூல் களும், போலி விவிலியப் புத்தகங்களும்:-

எசாயா நூல்:- இங்குக் கண்டுபிடிக்கப் பட்ட பழம் ஏடுகளில் மிகவும் நீளமான பெரிய ஏடு, எசாயா ஆகமம் எழுதப்பட்ட ஏடாகும். எசாய ஆகமத்தின் இரண்டு சுருள் கள் கிடைத்துள்ளன. இவ்விரண்டு சுருள்க ளும் முதல் குகையிலேயே கிடைத்தன. முதல் சுருளில் எசாயா ஆகமத்தின் முழுப் புத்தகமும் அப்படியே சிதையாமல் காணப் படுகிறது. இச்சுவடியின் மொத்தநீளம் 7.2 மீட்டர். சுவடியின் அகல அளவு 25 செ.மீ. இதில் 17 தாள்கள் சேர்த்து ஒட்டப்பட்டிருக் கின்றன. இதில் காணப்படும் மொத்தப் பத்திகள் 54. இச்சுவடி கி.மு. 2-ஆம் நூற் றாண்டில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என அறிஞர் கருதுகின்றனர். எசாயா ஆகமத்தின் இரண்டாம் சுருளில் எல்லா அதிகாரங்களை யும் காணமுடியவில்லை. எசாயா ஆகமத் தின் மூன்றில் ஒரு பகுதிதான் இங்குக் காணக்கிடக்கிறது.

இதற்கடுத்து, காலத்தால் முற்பட்ட ஏடுக ளில் முக்கியமானதாக வருவது, லேவியர் ஆகமம் எழுதப்பட்ட பழஞ்சுவடி. இதுவும் எபிரேய மொழியில்தான் மற்றக் கும்ரான் சுவடிகளில் காணப்படும் அதே எபிரேய எழுத்து வடிவில் காணப்படுகிறது. இச்சுவ டிகளில், கடவுளின் பெயரைத் தயக்கமில்லா மல் எழுதிப் பயன்படுத்தியுள்ளனர். சாமு வேல் ஆகமத்திலிருக்கும் ஏட்டுத் துணுக்கு கள் இங்குக் கிடைத்துள்ளன. இவையும் கி.மு. 3 - ஆம் நூற்றாண்டை ஒட்டி எழுதப் பட்டிருக்கவேண்டும் என்று கணிக்கப்படு கிறது.

இக்குகைகளில் கிடைத்த மொத்த ஏட்டுத் தொகுப்புகளை வைத்துப் பார்க்கும்போது, இங்கு உப ஆகமம், சங்கீதங்கள், எசாயா ஆகமம், ஆதி ஆகமம் ஆகிய புத்தகங்களை விரும்பி அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார் கள் என்று தெரிகிறது.

சீராக் ஆகமத்தைப் பிரிவினைச் சகோதரர் கள் ஏற்றுக் கொள்வதில்லை. இதனை ஒதுக் கப்பட்ட விவிலியப் புத்தகம் என்று அழைப் பர். இப்புத்தகம் இரேக்க மொழியில்தான் முதன்முதலில் எழுதப்பட்டது என்பது பாரம்பரியக்கருத்து. ஆனால் எபிரேயத்தி லேயே எழுதப்பட்ட சீராக் ஆகமத்தின் ஏட் டுத் துணுக்குகள் 6 - ஆவது குகையில் கிடைத்திருக்கின்றன. இச்சுவடி, கெய்ரோ நகரில், செபக்கூட பழுதுபட்ட பழைய ஏடுகள் கொட்டப்படும் அறையில் கண்டு பிடிக்கப்பட்ட, மற்றொரு சீராக் ஆகமம் ஏட் டுத்துணுக்குடன் அப்படியே ஒத்திருக்கிறது.

தோபியா ஆகமத்தையும் பிரிவினைச் சகோ தரர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் எபிரேயத்திலும், அரமேயத்திலும் எழுதப் பட்ட தோபியா ஆகமத்தின் ஏட்டுத் துணுக் குகள் இங்குக் கிடைத்துள்ளன.

இன்னும் எந்தத் திருச்சபையும், விவிலி யப்புத்தகம் என்று ஏற்றுக் கொள்ளாத, பல

நூல்கள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை அப்போது விவிலியத்தைச் சார்ந்த நூல்கள் என்று கருதப்பட்டன. சுபிலி ஆகமம் என்ற நூல், பல பிரதிகளில் இங்குக் காணப்படுகிறது. இதே போன்று ஏனோக்கு ஆகமமும், அதன் ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து என்ற பகுதிகளிலிருந்து வாசகங்களும் காணப்படுகின்றன. அதே போன்று லேவியின் ஏற்பாடு, தமஸ்கு நாட்டில் புதிய உடன்படிக்கையின் ஒழுங்குகள், இன்னும் நாம் அறியாத பல போலி விவிலியப் புத்தகங்களிலிருந்து வசனங்கள் ஆகியன ஏடுகளில் காணப்படுகின்றன.

7. கும்ரானில் காணப்படும் விவிலியத்தின் விளக்கவுரைகள்:-

விவிலிய நூல்களின் படிவங்களுடன், விவிலிய நூல்களுக்கு விளக்கவுரைகளையும் கும்ரான் ஏடுகளில் நாம் காண முடிகிறது. இதில் மிட்ராசிம் என்ற கதை விளக்கங்களும் காணப்படுகின்றன. உதாரணமாகச் சுபிலி ஆகமத்திற்கு அதன் வசனங்கள் கருக்கத் திரட்டாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இங்கு ஒரு புதுவிதமான விளக்கவுரை முறை கையாளப்பட்டிருக்கிறது. இதற்கு எபிரேயத்தில் பெசாரிம் என்று கூறுகிறார்கள். பெசாரோ என்றால் 'பொருள், கருத்து என்று பொருளாகும். இம்முறைப்படி, ஒவ்வொரு சொற்றொடருக்கும், விளக்கம் கூறப்படுகிறது. இவ்விளக்கம், இவ்விடத்தில் வாழ்ந்த சபையினரின் வரலாற்றுடன் தொடர்பு படுத்திக் கூறப்படுகிறது. முக்கியமாக இறைவாக்கினர் நூல்களுக்கு இவ்விதம், சொற்றொடர், சொற்றொடராகப் பொருள் தரப்பட்டிருக்கிறது. எசாயா, மீக்கா, நாகூம், அபக்கூக்கு, செப்பானிய என்ற நூல்கள் இம்முறையில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. மிட்ராஸ் கதை விளக்கத்தால் இங்குச் சிறப்பாக விளக்கம் கூறப்பட்டிருக்கிற நூல் ஆதி ஆகமம் ஆகும். பெசாரிம் முறைப்படி, அபக்கூக்கு ஆகமம் சிறந்த முறையில் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

மற்றொரு புதுவிதமான இலக்கிய நடையில் எழுதப்பட்ட புத்தகங்களையும் இங்கு நாம் காண முடிகிறது. அதாவது விவிலிய வசனங்களின் தொகுப்பு என்றும், சான்று வசனங்கள் என்றும் ஒரு தனிப்பட்ட திரட்டுக்களை நாம் காணமுடிகிறது. சான்று வசனங்களில், ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சார்ந்து வருகின்ற வசனங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 4 - ஆவது குகையில் ஒரு விவிலிய வசனங்களின் தொகுப்பும், ஒரு சான்று வசனத் தொகுப்பும் காணப்படுகின்றன. விவிலிய வசனங்களின் தொகுப்பில், யாத்திரை ஆகமம், இரண்டாம் சாமுவேல், எசாயா, ஆமோஸ், சங்கீதங்கள், தானியேல் ஆகமம் இவைகளிலிருந்து வசனங்கள் சேர்த்துத் தொடுக்கப்பட்டுள்ளன. சான்று வசனங்களில் மெசியா என்ற தலைப்பில் பின்வரும் வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. உப 5:28-29; 18:18-19; எண் 24:15-17; உப 33:8-11.

யூதர்கள் நெற்றியிலே கட்டிக்கொள்ளும் தாயத்துகளும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளும் 4 - ஆவது குகையில் தான் கிடைத்தன. தாயத்தினுள்ளே விவிலிய வசனங்கள் எழுதப்பட்ட தாள்கள் பெரிதாக வைக்கப்பட்டிருந்தன. இவை வழக்கமாக இருப்பதைவிடப் பெரியவை.

9. கும்ரான் குழுவினரின் சம்பந்தப்பட்ட ஏடுகள்:-

இங்கு ஒரு குறிப்பிட்ட சபையினர் வாழ்ந்து வந்துள்ளனர் என்று ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இவர்களின் கொள்கைகளைப் பற்றியும், ஒழுங்குகளைப் பற்றியும் தனிப்பட்ட புத்தகங்களை இச்சபையினர் எழுதியுள்ளனர். அப்புத்தகங்களின் பிரதிகளும் இக்குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

இச்சபையினரின் ஏடுகளைப் பொறுத்தவரை நான்குவிதமாகப் பிரிக்கலாம்.

அ) முதல் வகையில், இவர்களின் வாழ்க்கையில் அனுசரிக்கப்படவேண்டிய ஒழுங்குகளின் தொகுப்பை அமைக்கலாம் (உ.ம்) ஒழுக்கக் கையேடு, போர் ஏடுகள்.

ஆ) இரண்டாம் வகையில், பாடல்களின் தொகுப்பு இடம் பெறுகிறது. இப்பாடல்க ளில் கெதயோத் என்ற நன்றிப் பாடல் முக்கியவிடத்தைப் பெறுகிறது.

இ) மூன்றாவதாக, நாம் வகைப்படுத்தக்கூடி யது வழிபாட்டு வசனங்கள், (உம்) ஆசீர் கூறும் முறை போன்றவைகள்.

ஈ) நான்காவதாக விளங்குவது அனுபவ வாக்கியங்கள், ஞான வாக்கியங்கள் முதலி யன, அல்லது சில தத்துவப் படிப்பினைகள் உள்ள பகுதிகள்.

சில இடங்களில் மேலே வகைப்படுத்திய வையெல்லாம், தனித்தனியாக அமையா மல் ஒன்றாகக் கலந்து காணப்படுகின்றன. உதாரணமாக ஒழுக்கக் கையேடு என்ற புத்த கம் இறையியல் தொகுப்பைச் சார்ந்தது என்று சொல்லலாம். ஆனால் அதன் முடி வில் ஒரு நீண்ட பாடலுடன் அப்புத்தகம் முடிவடைகிறது.

இப்போது கும்ரான் குழுவினரின் புத்த கங்களை ஒவ்வொன்றாக எடுத்து விளக்கம் காணலாம்.

அ) பெசாரிம் (விவிலியத்தின் பொருள்):- இது ஒரு தனிப்பட்ட வகையான பொருள் தரும் முறை என்று ஏற்கனவே பார்த்துள் ளோம். ஒவ்வொரு சொற்றொடருக்கும் பொருள் தருவதாகும் இம்முறை. அபக் கூக்கு ஆகமத்திற்கு எழுதப்பட்டிருக்கும் இந் தப் பெசார் விளக்கவுரை 13 பத்திகளில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்தியிலும் 18 வரிகள் காணப்படுகின்றன. மொத்தம் இந்த விளக்கவுரை எழுதப்பட்டுள்ள ஏட் டின் நீளம் 1.35 மீட்டர், இச்சுவடியின் அக லம் 12.8 செ.மீட்டர்.

இந்தப் பெசார் விளக்கவுரை, கும்ரான் குழுவினரின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள மிகவும் உதவுகிறது. ஏனென்றால் விளக்கவுரை, இவர்களின் வரலாற்றோடு தொடர்புபடுத்தி எழுதப்பட்டுள்ளது.

இந்தப் பெசார் விளக்கவுரைகளில் மூன்று முக்கிய கருத்தோட்டங்களை நாம் காண முடிகிறது. 1) நீதியான ஆசிரியருக்கும், தீமையான குருவுக்கும் இடையில் உண்டா கும் மோதலைப்பற்றி, இவ்விளக்கங்களில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. 2) மக்கள் மீது இறைவனின் தண்டனை. 3) நாடுகள் மீது இறைவனின் தண்டனை. இந்த மூன்று கருத்துக்களும் பரவலாக இந்தப் பெசார் விளக்கவுரையில் காணக்கிடக்கின்றன. இதில் முக்கியமாகக் காணப்படும் நீதியான ஆசிரியர் யார்? தீமையான குரு யார் என்ப தில் அறிஞர்கள் பலரும், பலரைக் குறிப் பிட்டு அடையாளம் கூறுவர். இதில் கித்திம் என்பவரைப் பற்றியும் குறிப்பிடப்படு கிறது. கித்திம் என்பவரிடத்தில் எருசலேமில் வாழும் குருக்கள் தங்கள் அநீதச் செல்வங் களை இழப்பார்கள் என்றும், அவரால் நாடு முழுவதும் அழிக்கப்படும் என்றும் இந்த விளக்கவுரையில் கூறப்படுகிறது. இந்தக் கித்திம் என்பவர் யார் என்பது பற்றியும் பலதரப்பட்ட கருத்துக்கள் கூறப்படுகின் றன.

ஆ) ஒழுக்கக்கையேடு:-
இச்சுவடி 1.8 மீட்டர் நீளத்தில் உள்ளது. இதன் உயரம் 23.5 செ.மீ. இதில் காணப் படும் மொத்த பத்திகள் பதினொன்று. ஒவ் வொரு பத்தியிலும் 26 வரிகள் காணப்படு கின்றன. இவ்வேட்டின் தொடக்க வரிகள் சிதைந்து போய்விட்டன. எனவே இப்புத்த கத்தின் தலைப்பு எது எனச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அனேகமாக இப் புத்தகத்தின் தலைப்பு 'சபையின் ஒழுங்கு கள்' என அமைந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். எபிரேயத்தில் ''சேரக் கப்யகாத்'' என்பதாகும். பர்ரோஸ் என்ற ,அறிஞர்தான், இதற்கு ஒழுக்கக் கையேடு என்று பெயர் கொடுத்தார்.

இப்புத்தகம் மிக முக்கியமானதாகக் கும் ரான் குழுவினரால் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. இப்புத்தகத்தைச் சார்ந்த 11 பழஞ்176 சுவடிகள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பழஞ்

சுவடிகளிலேயே, இப்புத்தக வசனங்களைத் தாங்கிய பழம் ஏடு ஒன்றும் மிகப் பழமை யானது.

இப்புத்தகத்தில் காணப்படும் ஒழுங்குகள் கீழ்வரும் முறையில் அமைந்துள்ளன.

1) உடன்படிக்கையைச் சார்ந்த ஒழுங்கு களும், அதனைச் சார்ந்த வழிபாடும்.

2) அவர்கள் சபையின் கொள்கைகள்.

3) இச்சபையில் எப்படிச் சேர்வது, அனு மதிக்கப்படுவது என்பது பற்றியது.

4) தவறுகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனை களின் விவரம்.

5) தீமையான உலகில் புனிதவாழ்வு வாழ் வது எப்படி?

6) இறைவனைப் போற்றுதல்.

இவர்கள் சபை இறைவனின் உடன்படிக் கையின் சின்னமாக விளங்குகிறது எனக் கருதினார்கள். இச்சபையில் சேருகின்றவர் கள், உடன்படிக்கையில் சேருகின்றார்கள். இவைகளைப் பற்றி விளக்கமாகக் கூறுகிறது இப்புத்தகம்.

இ) புனிதப் போர்ச் சுவடி:-

இச்சுவடி, தற்போது கிடைத்திருக்கும் நிலையில் 2.7 மீட்டர் நீளம் உள்ளது. 15.5 செ.மீ. உயரம் உள்ளது. இதில் மொத்தம் 18½ பத்திகளில் எழுதப்பட்டுள்ளன. ஒவ் வொரு பத்தியிலும் 16 முதல் 18 வரிகள் காணப்படுகின்றன. 4 - ஆவது குகையில், இப்புத்தகப் பகுதிகளைத் தாங்கிய 4 ஏட்டுத் துணுக்குகள் கிடைத்துள்ளன.

இப்புத்தகத்தில், ஒளியின் பிள்ளைகளுக் கும் இருளின் பிள்ளைகளுக்கும் நடக்கும் போராட்டத்தைப் பற்றி எழுதப்பட்டிருக் கிறது. ஒளியும் இருளும், நன்மை தீமை ஆகியவைகளின் சின்னங்களாக அமைத்துக் கூறப்பட்டுள்ளன. இப்போராட்டம் இறை வனின் நடுத்தீர்ப்பில் முடிவடைகிறது. இப் போராட்டம் இரண்டு கோணங்களில் நடை பெற்றிருக்கிறது. ஒன்று ஒழுக்கவியல் வாழ் வில் போராட்டம், மற்றொன்று நாட்டு நல விற்கான போராட்டம்.

இப்புனிதப்போரின் அமைப்புகள், பழைய ஏற்பாட்டில் காணப்படும் மற்றப் புனிதப்போர்களை ஒத்திருக்கின்றன. குறிப்பாக மக்கபேயர், கிரேக்கர்களுக்கு எதிராக நடத் திய போராட்டத்தின் சாயலும் இதில் காணப்படுகின்றது. எசேக்கியேல் ஆகமம் 38-39 அதிகாரங்களில் காணப்படும் கோகு, மகோகு இவர்களுக்கு எதிராகக் கூறப்படும் போராட்டமும், இந்நூலில் எதிரொலிக்கிறது.

ஈ) இறைபுகழ்ச்சி:-

இச்சுவடி இரண்டு பாகமாகக் கிடைத்தது. முதல் பாகத்தில் மூன்று தாள்கள் இருந்தன. ஒவ்வொரு தாளிலும் 4 பத்திகள் காணப்படு கின்றன. இரண்டாவது பகுதி சுமார் 20 ஏட்டுத் துணுக்குகள் சேர்ந்ததாகும்.

இச்சுவடிகள் பெரிதும் சிதைவுகளுக்கு உள்ளாகியிருக்கின்றன. இச்சுவடிகள் உயரத் தால் வழக்கத்தைவிடப் பெரியவையாக உள் ளன. இவ்வளவு உயரமாக இருப்பதால், ஒருபத்தியில் 35 முதல் 40 வரிகள் எழுதப்பட் டுள்ளன. இச்சுவடிகளை இரண்டு எழுத்தா ளர்கள் எழுதியுள்ளனர். 4 - ஆவது குகையில் கண்டுபிடிக்கப்பட்ட 5 ஏட்டுத் துணுக்குகள், இவ்வேடுகளில் காணப்படுகின்ற விடுபாடு களை நிரப்புதல் செய்ய உதவுகின்றன. அத் தோடு 4 - ஆவது குகையில் கண்டுபிடிக்கப் பட்ட சுவடிகள் இந்த இறை புகழ்ச்சிப் பாடல்களின் வரிசை அமைப்பு சரியே என்று நமக்கு உறுதிப்படுத்துகின்றன.

இதில் காணப்படும் சங்கீதங்கள் எல்லாம் ஏறக்குறைய, ''என் ஆண்டவரே உம்மை நான் புகழ்வேன்'' என்றே ஆரம்பிக்கின்றன.

உ) போலியான விவிலிய நூல்கள்:-

ஆதி ஆகமம் புதியமுறையில் எழுதப்பட் டுள்ளது. பல விளக்கங்களைக் கற்பனை செய்து எழுதியிருக்கிறார்கள். இது அரமேய மொழியில் எழுதப்பட்டுள்ளது. இது சாடிக

வில் வைத்துப் பாதுகாக்கப்படாததால் மிகவும் சிதைந்து காணப்படுகிறது. இச்சுருளில் 4 தாட்கள் உள்ளன. இச்சுருளின் மொத்த நீளம் 2.76 மீட்டராகும். இதன் உயரம் 30 செ.மீ. மொத்தம் 22 பத்திகளில் எழுதியுள்ளார்கள். ஒவ்வொரு பத்தியிலும் 34 முதல் 37 வரிகள் உள்ளன.

ஆதி ஆகமத்தின் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ள முறை, சுபிலி ஆகமத்தின் மொழி நடையையும் தானியேல் ஆகமத்தின் மொழி நடையையும் ஒத்திருக்கிறது. இச்சுருளில் பல திருவெளிப்பாடுகள் அடங்கியுள்ளன. இவ்வெளிப்பாடுகள் லாமெக், நோவா, ஆபிரகாம் இவர்களை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளன.

10. கும்ரான் கண்டுபிடிப்பால் நாம் காணும் உண்மைகள்:-

முதன் முதலாக, இங்கு நமக்கு இதுவரை கிடைத்திராத மிகப் பழங்காலச் சுவடிகள் கிடைத்துள்ளன. இக்கண்டுபிடிப்பிற்கு முன்னதாக நமக்குக் கிடைத்திருந்த பழம் ஏடுகள், இவ்வேடுகளுக்கு 1000 வருடத்திற்குப் பிந்தியவையாகும். இதனால் எவ்வாறு விவிலியம் காலப்போக்கில் கவனமாகப் படிவம் செய்யப்பட்டு மக்களிடையே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பது நமக்குத் தெளிவாகிறது. விவிலியத்தில் இதற்குமுன் புரியாதிருந்தவைகளையும், தெளிவாயில்லாதிருந்தவைகளையும் நன்கு புரிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகியுள்ளது.

இக்கும்ரான் காலத்தில், விவிலியத்தில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட புத்தகப்பட்டியல் என்பது கிடையாது. எனவே தற்காலத்தில் நாம் பின்பற்றும் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலுக்கு விளக்கம்கூற இக்கண்டுபிடிப்பு உதவி செய்வதில்லை.

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எழுதப்பட்ட காலத்திற்கும், புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எழுதப்பட்ட காலத்திற்கும் இடையே இருந்த மறை இலக்கியங்களை நாம் காண இந்தக் கும்ரான் ஏடுகள் உதவி செய்கின்றன. யோசிப்பசு, பிலோ, பிளினி என்ற எழுத்தாளர்கள், இவ்விடைக்காலத்தில் வாழ்ந்தவர்கள். அவர்கள் கொடுக்கும் தகவல்களை நிறைவு செய்வதாய் இக்கும்ரான் கண்டுபிடிப்புகள் அமைந்துள்ளன. இக்கும்ரானில் எஸ்ஸேனியர் என்ற தனிப்பட்ட குழு வாழ்ந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் ஒத்துக் கொள்கின்றனர். அவர்கள் எழுதிய இலக்கியங்கள் இக்கண்டுபிடிப்பால், நம் கவனத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இங்குக் காணப்படும் விவிலிய விளக்கவுரைகள் நமக்கு மிகவும் பயனளிப்பன. முக்கியமாக, இவர்கள் பின்பற்றிய பெசாரிம் முறை, விவிலியத்தை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும், நம் வாழ்க்கையில் அதை எவ்வாறு கடைப்பிடித்திட வேண்டும் என்று நாம் அறிந்துகொள்ள, இவர்கள் கொடுத்துள்ள முன்மாதிரி நமக்குப் பெரும் உதவியாகும். அத்துடன் யூதர்கள் மத்தியில் விளங்கிய, மெசியாவைப் பற்றிய கருத்துக்களையும் மறு உலக வாழ்வைப் பற்றிய கருத்துக்களையும் நாம் தெரிந்துகொள்ள கும்ரான் சுவடிகள் பெரிதும் துணை செய்கின்றன.

இக்கும்ரான் சுவடிகள் மூலமாக இராபிகள் போதித்து வந்த யூதக் கொள்கைகளையும், யூதர்களின் அறிவுசார்ந்த கொள்கைகளையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. அத்துடன் கிறிஸ்துவத்தின் ஆரம்ப நிலையில் இருந்திருக்கும் சூழ்நிலையையும் நாம் தெரிந்து கொள்ள இக்கண்டுபிடிப்புக்கள் உதவுகின்றன. திருமுழுக்கு யோவான், இயேசு, பவுல் இவர்களின் போதனை முறைகளிலும், கொள்கைகளிலும், இந்தக் கும்ரான் குழுவினரின் கொள்கைகள், கருத்துக்கள் பிரதிபலிப்பதை நாம் காணலாம். ஒருசிலர் திருமுழுக்கு யோவானும், இயேசுவின் சீடர்சிலரும் இந்தக் கும்ரான் சபையைச் சார்ந்தவர்கள் என்றுகூட வாதிடுவர். ஆனால் இக்கூற்றை முழுமையாக நிரூபிக்கத் தக்க ஆதாரங்களில்லை. இயேசுவும் அவர்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்று ஒரு சிலர் வாதிடுவர். அவர்களின்

ஏடுகளில் நீதியான ஆசிரியராக வர்ணிக்கப் படுகிறவர் இயேசுவே என்று கூறுவர். இதெல் லாம் நாம் ஏற்க முடியாத கருத்துக்கள். ஏனென்றால் அதற்கேற்ற ஆதாரங்கள் இல்லை.

சாக்கார் (SACHAR - வாடகைக்கு எடுத்தல்)

1. ஓர் ஆராரியர். இவர் அகியாமின் தந்தை. தாவீதின் வல்லமைமிக்க முப்பது வீரர்களில் அகியாமும் ஒருவராவார் (1 நாள் 11:35). இதற்கு இணையான பட்டியலில் இப்பெயர் ''ஆராரியரான சாரர்'' என்று குறிக்கப்பட்டுள்ளது (2 சாமு 23:33). ஆவின் மூலப்பெயரை நிர்ணயிக்க முடியவில்லை யாயினும் ''ஆராரியர்'' என இனப் பெயர் உண்மையான வாசகமாகும்.

2. இவர் ஒரு கோராகியர். வாயில் காப் போரின் குடும்பங்களில் ஒன்றின் குலப்பெ யர் மூதாதையரான ஓபேது - ஏதோமின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 26:4.15).

சாக்கு உடை, கோணி (SACKCLOTH)

இது வெள்ளாட்டு உரோமத்தால் அல்லது ஒட்டகத்தின் உரோமத்தால் செய்யப்பட்ட ஆடையாகும். இது துயரத்திற்குச் சின்னமாக அணியப்படும். இதைச் சில இறைவாக்கினர் களும், சிறைப்பட்டவர்களும் அணிந்திருக் கிறார்கள்.

இது தலைக்கும், கைகளுக்கும் இடம் விட்டுச் செங்கோண அமைப்பாகத் தைக்கப் பட்டதாகும் என்று சிலர் சொல்கின்றனர். இது தானியப்பை போல இருக்கும் என்பர் சிலர். இதற்கு யோசேப்பின் சகோதரர்கள் எகிப்துக்குக் கொண்டு சென்ற தானியப்பை யும் (ஆதி 42:25.27.35) கிபயோனின் குடிகள் யோசுவாவை ஏமாற்றப் பயன்படுத்திய பழைய கோணிப்பையும் (யோசு 9:4; லேவி 11:32) ஆதாரமாகக் காட்டுவர். மற்றொரு கருத்தும் உண்டு. அதாவது ஒரு சிறு அரைத் துணிபோல உள்ள துணியாகும். மேற்காசியா வின் சிறைபட்ட கைதிகள், இப்படிப் பட்ட துணியை அணிந்தவர்களாகச் சித்தரிக் கப்படுகின்றனர். இதற்கு ஆதாரமாக, இடுப் பைச் சுற்றிச் சாக்கு உடை அணியும் எபிரேய வழக்கம் உள்ளது (2 சாமு 3:31; எசா 15:3; 22: 12; எரே 4:8). இடுப்பைச் சுற்றிச் சாக்கைக் கட்டுவதும் (ஆதி 37:34; 1 அர 20:31; எரே 48:37) இருந்தது. ஒருவன், சாக்குஉடை அணி வது (2 அர 19:1-2; 1 நாள் 21:16; எஸ் 4:2; சங் 69:11; எசா 37:1-2) என்பது இது அரைத் துணியைவிட அகலமானது என்று காட்டுகிறது.

சாக்குஉடை கருமை நிறமானதாகும் என் பது எசா 5:3; திருவெளி. 6:12 ஆகிய பகுதி களிலிருந்து தெரிகிறது.

இந்தச் சாக்குஉடை எப்போது தோன்றி யது என்பது தெரியவில்லை. வரலாற்றுக்கு முன் உள்ள காலத்தில் இது ஒன்றுதான் ஆடையாகப் பயன்பட்டிருக்கலாம். இந்த ஆடையின் சொரசொரப்பான தன்மை உட லுக்கு அசௌகரியத்தை உண்டாக்கியது என் பதற்கோ தன்னைத்தானே வருத்திக்கொள் ளப் பயன்பட்டது என்பதற்கோ எந்த ஆதார மும் இல்லை. ஆனால் சொந்த இழப்பு (2 சாமு 3:31) நாட்டுப் பேராபத்து (2 சாமு 3:31; 2 அர 6:30; நெகே 9:1) ஆகிய காலங்களில் உள்ள அங்கலாய்ப்பின் அடையாளமாக அணியப்பட்டது. சாக்குத்துணி பல நூற் றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந் தது. யாக்கோபு பல நாட்களாய்த் தன் மகன் யோசேப்புக்காகச் சாக்கை உடுத்தி வருந்தி னார் (ஆதி 37:34). ஆகாபு தன் உடல்மேல் சாக்குத்துணி உடுத்தி நோன்பிருந்தார் (1 அர 21:27). சீயோனின் மூப்பர்கள் எருசலேமுக் காகக் கோணி உடுத்தி வருந்தினர் (புல 2:10). நாடு இடுக்கண் நிலையில் இருக்கும்போது, எல்லாக் குடும்பங்களும் தங்களது மந்தை, வேலையாட்கள், அடிமைகள் போன்ற எல் லோரோடும் சேர்ந்து கோணி உடுத்தியிருந்த தைக் குறித்துக் காட்டுகிறது. மத்தத்தியாவும் அவரது புதல்வர்களும், கலக்கத்தில் இருக் கும்போது, கோணி உடுத்தியிருந்தனர் (1 மக் 2:14; 3:47). புதிய ஏற்பாட்டில் இது மனம் வருந்துவதற்கு அடையாளமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (மத் 11:21; லூக் 10:13).

சாக்குத்துணி, சட்டத்தில் குறிப்பிடப்பட வில்லை. ஆனால் பொதுவாகப் பயன்படுத் தப்பட்டதால், எக்கேள்வியுமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. குருக்கள், துக்கம் கொண் டாடும்போது சாக்குத் துணியை அணிந்திருந் தனர் (யோவே 1:13). இது கன்னி, மணமக னுக்காகப் புலம்புவது போலாகும் (யோவே 1:8). ஒரு தடவை எசாயா இதை அணிந்திருந் தாலும் (எசா 20:2), இதுதான் இறைவாக்கின ருக்கு ஆடை என்று சொல்லிவிட முடியாது. எலியா மயிர் அடர்ந்த தோற்கச்சை அணிந்தி ருந்தார் (2 அர 1:8; செக் 13:4). திருமுழுக்கு யோவான் ஒட்டக மயிராடையையும், வார்க் கச்சையையும் அணிந்திருந்தார் (மத் 3:4; மாற் 1:6).

சாக்யா (SACHIA - யாவேயால் பாதுகாக்கப் பட்ட)

இவர் பென்யமின் இனத்தைச் சேர்ந்தவர். சகராயிம் மற்றும் கோதேசு (ஓதேசு) ஆகி யோரின் மகன் (1 நாள் 8:10).

சாசா (ZAZA - நிறைவுடைய)

அடிமைத் தளையிலிருந்து நாடு திரும்பிய எரகுமவேலின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். யூதாவைச் சேர்ந்தவர், யோனத்தானின் (6) மகன் (1 நாள் 2:33).

சாசாக்கு (SHASHAK - ஆர்வமுள்ள)

பென்யமின் குலத்து எல்பாகாலின் மகன். இவருக்குப் பதினொரு புதல்வர்கள் உண்டு (1 நாள் 8:14. 22-25).

சாட்சகசு (SHAASHGAZ - அழகை இரசிப்பவர்)

இவர் அரசன் அகசவேருவின் வைப்பாட் டிகளைக் கவனித்து வந்த அண்ணகர் (எஸ்த 2:14).

சாட்சிப்பலிபீடம் (WITNESS, ALTAR OF)

யோர்தான் ஆற்றிற்கு அப்பால் இருந்த கோத்திரங்கள், ஆற்றின் மேற்குப் பக்கத்தில் இருந்த யூதா கோத்திரங்களைப் போன்றே தங்களுக்கும் கடவுளிடம் பங்கு உண்டு என்பதற்குச் சாட்சியாக ஒரு பலிபீடம் எழுப் பினர் (யோசு 22:27-34). இந்தப் பீடத்திற்குச் ''சாட்சி'' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. ஆனால் ஓர் எழுத்தர் அதை யோசு 22.34 - இலிருந்து நீக்கிவிட்டார்.பின்பு அது சேர்க்கப்பட்டது. இந்தப் பகுதி எசா 19:19-20-ஐப் பாதித்திருக்கலாம்.

சாட்சியம், சான்று (TESTIMONY)

நீதி வழங்கும்போது வாய்மொழி அல் லது எழுத்து வாக்கு மூலங்கள் முதன்மை யான சான்றாக இருந்தன. ஒருவனைக் குற்ற வாளி என்று தீர்ப்பிட இரண்டு சாட்சிகள் அவசியமாகும் (எண் 35:30; உப 19:15; மத் 18:19-16). ஒருவர் பார்த்த அல்லது கேள்விப் பட்ட குற்றம்பற்றிச் சாட்சி கூற மறுப்பது அனுமதிக்கப்படவில்லை (லேவி 5:1; காண் பழ 29:24). ஒன்பதாவது கட்டளை பொய்ச் சாட்சி கூறுவதை முழுவதும் தடை செய்கி றது (யாத் 20:16). நடுவர்கள் சாட்சிகளின் சான்றை ஆய்வு செய்யவேண்டும். ஒரு குற் றத்தைத் தான் கண்டதாக உரிமைகொண்டா டும் பொய்ச்சாட்சியம் கூறுபவர் அக்குற்றத் திற்குரிய தண்டனையைப் பெறுவார் (உப 19:16-19). சிலசமயம், குற்றவாளிக்கு அளிக் கப்படும் தண்டனை சாட்சிகளாலேயே தொடங்கிவைக்கப்பட்டது (17:7).

சான்றுகள் என்று பன்மையில் பயன்படும் போது, அது தோராவின் சட்டத்தை இறைவ னின் சான்றுகளாகக் குறித்தது (உப 4:45; 6:20). பத்துக்கட்டளைகள், சிறப்பாகத் திரு உறைவிடம் (யாத் 38:21; எண் 1:50; 18:2), உடன்படிக்கைப்பேழை (யாத் 25:22; எண் 4:5) மற்றும் சட்டப்பலகை (யாத் 31:18; 32:15) ஆகியவற்றோடு சாட்சியம் என்ற சொல் தொடர்புபடுத்தப்படுகிறது. பேழையும் (16:34; 27:21) சட்டப்பலகையும் (25:16.21) வெறுமனே சாட்சியம் என்றழைக் கப்படுகின்றன. எசா 8:16.20-இல் யாவேயின் இறைவாக்கு சான்றுரை என்று கூறப்படு கிறது.

சாட்டை (WHIP)

சாட்டை, சவுக்கு, கசை போன்ற சொற்கள் (1 அர 12:11. 14; 2 நாள் 10: 11.14; பழ

26:3; நாகூ 3:2;..) பல இடங்களில் காணக் கிடக்கின்றன. யோவா 2:15 இலும் ''சாட்டை'' காணப்படுகின்றது. இஃது தண்டனைக் குரியவர்களைத் தண்டிப்பதற்கோ துன்புறுத்தி உண்மையை வெளிக்கொணர்வதற்கோ பயன்படுத்தப்படும் கருவியாகும். இச் சாட்டை . மனிதர்களை மட்டுமல்லாது விலங்குகளையும் தண்டிக்க உபயோகப் படுத்தப்படும். யோவா 2:15 - இன்படி இயேசு சாட்டைகொண்டு நாணயம் மாற்றுவோரை யும், வியாபாரிகளையும் ஆடு மாடுகளை யும் ஆலய வளாகத்திலிருந்து விரட்டினார் என அறிகிறோம்.

சாணம், மலம் (DUNG)

எரிபொருளாகவோ, எருவாகவோ பயன் படுத்தப்பட்ட மிருகங்களுடைய, பறவைக ளுடைய மற்றும் மனிதனுடைய மலம். 2 அர 18:17; எசே 4:12 - இல் மூலச்சொல் குப்பைக்கும் மனித மலத்திற்கும் பயன் படுத்தப்படுகிறது. 2 அர 9:37; எரே 8:2 - இல் உள்ள சொல் தரையில் கழிவுபோல் கிடக் கும் இறந்த உடல்களைக் குறிக்கும்.

கட்டையும், அடுப்புக் கரியும் கிடைக்காத காலங்களில் இன்று செய்வதுபோலப் பாலஸ் தீனத்தில் சாணியைச் சேர்த்துக் காய வைத்து எரிபொருளாகப் பயன்படுத்தினர் (எசே 4:12.15). இந்தச் சாணம் வைக்கோலோடு கலக்கப்பட்டு உரமாகப் பயன்படுத்தப்பட் டது (எசா 25:10). பலி ஒப்புக் கொடுக்கப் பட்ட மிருகங்களின் குடல்களில் இருந்த சாணத்தைப் பாளையத்திற்கு வெளியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எரிக்க வேண்டும் என்று குருக்களுக்குரிய சட்டம் குறிப்பிட் டுக் கூறுகின்றது (யாத் 29:4; லேவி 4:11; எண் 19:5).

ஒரு மனிதன் அல்லது நாடு அடையவிருக் கும் மோசமான முடிவைக் குறிக்க 'சாணம்' ஓர் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது (2 அர 9:37; சங் 83:10; எரே 8:2; 9:2 செப் 11:17). ஒருவனை மோசமாக இழிவுபடுத்து வதன் அடையாளமாக அவன் முகத்தில் சாணியைப் போடலாம் (மலா 2:3).

நெகேமியா நூலில் குப்பைமேடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது (நெகே 2:13; 3:13 — 14; 12:31). இது அனேகமாகக் குப்பைகள் கொட்டப்பட்டதைக் குறிக்கலாம். இந்த இடம் நகரின் மேற்கு மூலையில் இருந்திருக் கலாம்.

பென் - அதாது சமாரியாவை முற்றுகை யிட்ட பொழுது, புறாவின் மலம் அதிக விலைக்குப் போனது பற்றி 2 அர 6:25 கூறுகின்றது: ஆனால் புறாவின் மலம் எதற் குப் பயன்பட்டது என்று தெரியவில்லை

சாதாரண எழுத்துக்கள் (COMMON CHARACTERS)

படித்தவர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் குறிப்பிட்ட அடையாளமாக அல்லது எழுத் தாக, எழுதும்போது பயன்படுத்தும் குறியீடு கள் அல்லது எழுத்துக்கள் சாதாரண எழுத் துக்கள் எனப்படும். இதுவே அக்கால மொழிநடையாகவும் இருந்தது. நெடுங் கணக்கின் எழுத்துக்கள் சாதாரண முறையில் எழுதப்படுவது (எசா 8:1).

சாதோக்கியத் துணுக்குகள் (ZADOKITE FRAGMENTS)

ஒரு பழங்கால எபிரேய பிரிவினைக் கையேடு. இது 1897 - இல் கைரோவிலுள்ள கெனிசாவில் கண்டெடுக்கப்பட்ட மத்திய காலத்தைச் சேர்ந்த இரு பிரதிகளிலிருந்து அறியப்படுகிறது. இந்த ஏடு 1910 - இல் பதிப்பிக்கப்பட்டது. இது தோசித்தேயர்க ளோடு தொடர்புபடுத்தப்படுகிறது. இக் குழுவினர், சாலமோன் காலத்தில் பெரிய குருவாக இருந்த சாதோக்கின் வழித்தோன் றல்கள் என்று உரிமை கொண்டாடியதால், சதுசேயர்களுடன் தொடர்புடையவர்கள் ஆவர். ஆயினும் இந்த ஏட்டின் துணுக்குகள் சாக்கடல் சுருள்களுடன் கண்டெடுக்கப்பட் டுள்ளதால், இந்த ஏடு, கும்ரானோடு நெருங் கிய தொடர்புடைய ஒரு குழுவிடமிருந்து தோன்றியிருக்கலாம் என்று கருதப்படு கிறது. இந்த ஏடு ''தமஸ்கு நாட்டில் புதிய உடன்படிக்கையைக்'' குறிப்பிடுவதால், இது தமஸ்கு ஏடு அல்லது தமஸ்கு சட்டம்

என்று பொதுவாகக் குறிக்கப்படுகிறது. ஏடு இருபெரும்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி அறிவுரையையும் இரண்டாம் பகுதி சட்டங்களையும் கொண்டுள்ளது. இந்த ஏட்டின் கும்ரான் துணுக்குகளின் இரு பகுதிகளிலும் தொடக்கமும் முடிவும் காணப்படவில்லை.

சாதோக்கு (ZADOK - நேர்மையுள்ள)

1. சவுலின் அரசைத் தாவீதிடம் ஒப்படைக்கக் கெபிரோனுக்கு (எபிரோன்) வந்த ஒரு படைப்பிரிவின் தலைவர் (1 நாள் 12:28). யோசிப்பசின் கருத்துப்படி இவர் 2 - இல் வரும் குருவாகிய சாதோக்காக இருக்கலாம். ஆனால் இதுதான் நாளாகம ஆசிரியரின் நோக்கம் என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை.

2. தாவீதின் ஆட்சிக்காலத்தில் எருசலேமில் வாழ்ந்த இரு தலைமையான குருக்களில் ஒருவர். கி.மு. 171 - வரை பெரிய குருக்களின் மூதாதையாவார். சாதோக்கு ஆரோனின் மகன் எலயாசரின் வழித்தோன்றலாகிய அகித்தூபின் மகனும் அகிமாசின் தந்தையுமாவார் (2 சாமு 8:17; 18:19; 1 நாள் 6:8; 24:3).

தாவீது ஆட்சியின் தொடக்க காலத்தில் கிபயோனில் இருந்த திருக்கூடாரத்தின் குருவாகச் சாதோக்கு பணிபுரிந்தார் (1 நாள் 16:39 — 40). தாவீது அரசனான பின்பு, சாதோக்கும் அபியாத்தாரும் தலைமைக்குருக்களாக விளங்கினர் (2 சாமு 20:25). படைக் கணக்கெடுப்பில் சாதோக்கு ஆரோனியர்களுக்குத் தலைவராக இருந்தார் (1 நாள் 27:17). தாவீது தனதுமகன் அப்சலோமிடமிருந்து ஓடிய போது, சாதோக்கும் அபியாத்தாரும் உடன்படிக்கைப் பெட்டகத்தை எருசலேமுக்குள் எடுத்துச் சென்றனர். நகரத்தில் நடப்பவைகளைத் தாவீதுக்குத் தெரிவிப்பவர்களாகச் செயல்பட்டனர் (2 சாமு 15:24 - 29; 17:15-16). அப்சலோமின் மரணத்துக்குப்பின் தாவீதை மீண்டும் அரியணை ஏற்றும் முயற்சியில் இந்த இரு குருக்களும் முக்கிய பங்கெடுத்தனர் (19:11-12).

சாலமோனிடமிருந்து அரியணையை எடுத்துக்கொள்ளும் அதோனியாவின் முயற்சியில் அபியாத்தார் அதோனியாவுடன் சேர்ந்து கொண்டார் (1 அர 1:7). ஆனால் இந்தச் சூழ்ச்சித் திட்டத்தில் சாதோக்கு சேரவில்லை (1:8.26). சாதோக்கும் இறைவாக்கினர் நாத்தானும் சாலமோனை அரசராக அபிடேகம் செய்தனர் (1:32-40). சாலமோன் அபியாத்தாரை ஊரைவிட்டு அகற்றி, அவரது குருத்துவத்தைச் சாதோக்குக்கு அளித்தார் (2:26-27:35; 4:2.4). இவ்வாறு சாதோக்கின் வழித்தோன்றல்கள் 1 சாமு 2:35-இல் முன்னறிவிக்கப்பட்டுள்ளபடி ஏலியின் சந்ததியான அபியாத்தாரின் வழித்தோன்றல்களின் இடத்தை எடுத்துக்கொண்டனர். அதே முன்னறிவிப்பு சாதோக்கின் மரபு எக்காலத்திற்கும் நிலைத்திருக்கும் என்றும் முன்னறிவிக்கிறது. எசேக்கியா காலத்தில் வாழ்ந்த பெரிய குரு சாதோக்கின் வழித்தோன்றலாவார் (2 நாள் 31:10). நாடு கடத்தப்படும் காலத்திற்கு முன்பே சாதோக்கிய பெரிய குரு அமைப்பு உறுதியாக நிறுவப்பட்டிருந்தது (எசே 40:46; 43:19; 44:15; 48:11). நாடு கடத்தலிலிருந்து திரும்பிய பின், ஆரோனின் பெரிய குருக்கள் குடும்பத்தில் சாதோக்கு உள்ளடங்குகிறார் என்று நாளாகமம் காட்டுகிறது. ஆனால் நாளாகம ஆசிரியர், ஆரோனின் மூத்த மகனான எலயாசரின் குடும்பத்தில் சாதோக்குக்கு இடமளித்து, சாதோக்கின் குடும்பத்திற்கு முக்கிய அல்லது ''அபிடேகம்'' செய்யப்பட்ட குருவின் பதவியை அளிக்கிறார் (1 நாள் 6:1-8. 50-53; 24:6; எஸ் 7:2).

3. யூதாவின் அரசனான யோத்தாமின் தாயாகிய எருசாவின் தந்தை; ஆக்வே யோத்தாமின் பாட்டன் (2 அர 15:33; 2 நாள் 27:1). ஒருவேளை 4 - இல் வருபவராக இருக்கலாம்.

4. 2-இல் வரும் சாதோக்கு குருவின் வழித்தோன்றல். யோசதாக்கு, எஸ்ரா ஆகியோரின் மூதாதையர் (1 நாள் 6:12; 9:11; எஸ் 7:2; நெகே 11:11). எஸ் 7:1-5-இல் வரும் தலைமுறைப் பட்டியல், சாதோக்கின் பெய

ரையொட்டிக் குறுக்கிக் கூறப்படுகிறது. அதன் விளைவாகச் சாதோக்கு என்ற பெயருக்குமுன் சாதோக்கு குருவின் மூதாதையர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சாதோக்கின் சந்ததியாரின் பெயர்கள் சாதோக்கு என்ற பெயருக்குப்பின் உடனடியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

5. பானாவின் மகன், நெகேமியா காலத்தில் எருசலேம் சுவர்களை மீண்டும் கட்டுவதில் பங்கெடுத்தவர்களில் ஒருவர் (நெகே 3:4; எஸ் 2:2).

6. இம்மேரின் மகன். தன்வீட்டுக்கு முன்பிருந்த எருசலேம் சுவரைப் பழுது பார்த்தவர் (நெகே 3:29; எஸ் 2:37).

7. நெகேமியாவின் காலத்தில் எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ''மக்கள் தலைவர்களில்'' ஒருவர் (நெகே 10:21). ஒரு வேளை அதி 3 - இல் கட்டடம் கட்டுபவர்களின் பட்டியலிலிருந்து இங்குச் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

8. லேவியர்களின் கருவூலத்தைக் கவனித்துக்கொள்ள நெகேமியாவால் நியமிக்கப்பட்ட எழுத்தர்களில் ஒருவர் (நெகே 13:13).

9. இயேசுவின் சட்டப்பூர்வ தந்தையான யோசேப்பின் ஒரு மூதாதையர் (மத் 1:14).

***சாத்தான்** (SATAN)*

புதிய ஏற்பாட்டிலே சாத்தான் (எபிரேய மொழியில் சாத்தான் என்பதற்குப் பகைவன், எதிரி என்பது பொருள்) பேய் அல்லது அலகை (இரேக்க மொழியில் தியாபோலோஸ் என்பதற்குக் கேடு விளைவிப்போன் என்பது பொருள்) எனும் சொற்கள் ஏறக்குறைய ஒப்பான எண்ணிக்கையில் தோன்றுகின்றன. திருமறை நூலில் அச்சொற்கள் தனிப்பட்ட ஓர் ஆளைக்குறிக்கின்றன. கண்ணுக்குப் புலனாகாத அந்த ஆளின் செயலும் செல்வாக்கும் மற்றவர்களின் (பேய்களின் அல்லது தீய ஆவிகளின்) செயல்களிலும், சிலவேளைகளில் நமக்கு ஏற்படும் சோதனைகளிலும் வெளிப்படுகின்றன. பிற்கால யூதத்துவத்துக்கும் பண்டைய மேற்காசிய நாடுகளின் அனேகமாக எல்லா இலக்கியங்களிலும் நாம் காண்பதற்கும் மாறாக, விவிலிய நூலில் இப்பொருள் பற்றி மிகச் சுருக்கமாக எடுத்துச் சொல்லப்படுகிறது. மறைநூல் கூறுவதெல்லாம், மேற்கூறிய சாத்தான் உண்டு, அவனுடைய சூழ்ச்சிகள் யாவை? அவற்றினின்று நம்மைக் காத்துக் கொள்வது எப்படி? என்பன பற்றியேயாகும்.

I. பழைய ஏற்பாட்டில்:-

சங் 109:6-இல் குற்றம் சாட்டுபவராகவும், 1 சாமு 29:4; 2 சாமு 19:23; 1 அர 5:18 ஆகிய பகுதிகளில் அரசியல் எதிரியாகவும் கூறப்பட்டுள்ளது. ஒருசில இடங்களில் உலகில் உள்ள எதிரி என்று கூறப்பட்டாலும் பெரும்பாலான இடங்களில் விண்ணில் உள்ள உயிர்கள் என்றே பொருள் கொள்ளப்பட்டது. பிற்காலத்தில் சாத்தானைப் பற்றிய ஒரு கருத்து உருவானது யோபு ஆகமத்தின் அடிப்படையில்தான் (யோபு 1:6தொ; 2: 1 தொ). இதில் குறிப்பிடப்படும் சாத்தான் தீய ஆவி அல்ல. அவனும் கடவுள் அவையில் ஓர் உறுப்பினரே. நமது நாட்டு அரிச்சந்திர புராணத்திலே எவ்வாறு விசுவாமித்திர முனிவர் அரிச்சந்திரனைச் சோதிக்கக் கிளம்புகிறாரோ அது போலவே இந்தச் சாத்தானும் புறப்படுகிறான். அவனது பணியே மனிதனின் உண்மையான தன்மையை வெளிக்கொணர்வதுதான். அதனைச் சரியாக நிறைவேற்ற அவன் பல தீமைகளையும் வருவிக்கிறான். இங்குப் பழங்காலத்தில் தீய ஆவியின் செயல்களாகக் கூறப்பட்டவை கடவுளுடைய பணியாளர்களின் செயல்கள் என்று மாற்றமடைகின்றன. இக்கண்ணோட்டம் செக் 3.1-2; 1 நாள் 21:1 ஆகிய பகுதிகளில் வெளிப்படுகிறது.

II. யூத இலக்கியங்களில்:-

இங்குச் சாத்தானைப்பற்றிய கருத்து முக்கியமான இடத்தைப் பெறுகிறது. யூத நூல்களின் கருத்துப்படி சாத்தான் தீய ஆவியே. அவன் மனிதனுக்குச் செய்யும் தீமைகள் எல்லாம் அவன் மனிதன் மேல்கொண்ட பொறாமையினால்தான். இதனாலேயே ஆதாம், ஏவாளைச் சோதித்து ஏமாற்றினான்.

மனிதன், இறைதூதர்களுக்கும் சாத்தானுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை அறிந்திருக்க வேண்டும். ஏவாளிடம் சாத்தான் பாம்பாக மாறிப் பேசவில்லை, பாம்பின் வழியாகப் பேசினான். ஆதாம் இதற்குக் காரணம் கேட்டபோது, இறைவனின் சாயலான மனிதனை ஆராதிக்க மறுத்தபோது, விண்ணகத்திலிருந்து வெளித்தள்ளப்பட்டு மிக்கேல் வானதூதரால் நரகத்துக்குத் தள்ளப்பட்டதாகச் சாத்தான் விளக்குகிறான். ஏனோக்கின் நூலில், சாத்தான்கள் என்று பன்மையில் இச்சொல் பயன்பட்டுள்ளது. இவர்கள் வானதூதர்களைச் சோதனைக்கு உட்படுத்துகின்றனர். பக்திமான்களைப்பற்றி இறைவன் முன் அவதூறு கூறுகின்றனர். தீர்ப்புக்குட்பட்டவர்களைத் தண்டிக்கின்றனர். இவர்கள் ஆயிரமாண்டுக் காலத்திலும் மெசியாக் காலத்தில் மறைந்துபோகின்றனர். எப்படி மறைகின்றனர் என்பது தெளிவாக இல்லை. சாத்தானின் பொறாமையால் சாவு உலகிற்குள் புகுந்தது என்று ஞான 2:24 கூறுகிறது. இக்கருத்துக்களில் பல புதிய ஏற்பாட்டிலும் எதிரொலிக்கின்றன.

II. புதிய ஏற்பாடு:-

புதிய ஏற்பாடு பயன்படுத்தும் சாத்தான், பேய் என்ற சொற்களின் பொருளில் அதிக வேறுபாடு இல்லை. சாத்தான் வலிமையுடையவன் (மத் 12:29; மாற் 3:27; லூக் 11:21). சாத்தான் தீயவன் (மாற் 13:19 தொ); உலகின் தலைவன் (யோவா 12:31); மனிதர்களைச் சோதிப்பவன். அவன் இயேசுவைக்கூட விட்டுவைக்கவில்லை (மத் 4:1; மாற் 1:13; லூக் 4.2). பேதுரு இயேசுவிடம் பாடுகள் வேண்டாம் என்று கூறியபோது இயேசு அவரைச் சாத்தான் என்று அழைக்கிறார். அதாவது இறைத்தந்தையின் விருப்பத்திற்கு மாறாகச் செல்பவர்கள் சாத்தானின் பிள்ளைகள் என்று உணர்த்துகிறார் (மத் 16:23; மாற் 8:33). இறைவனின் வார்த்தையை மனிதனின் உள்ளத்திலிருந்து நீக்குபவன் (மத் 13:19; மாற் 4:15; லூக் 8:12). அதே நேரத்தில் யூதாஸ் மனத்தில் காட்டிக் கொடுக்கும் தீய விதையை விதைப்பவனும் அவனே (யோவா 13:2). பின் அதைச் செயல்படுத்த யூதாசினுள் புகுகிறான் (லூக் 22:3; யோவா 13:27). சீடர்களைக் கோதுமையைப் போல் புடைக்க முயற்சிக்கிறான் (லூக் 22:31). ஏமாற்றும்படி சாத்தான் அனனியாவை ஆட்கொண்டான் (அ.ப. 5:3). திட்டம் செய்தும் (1 கொரி 7:5; 2 கொரி 2:11), வஞ்சகத் தந்திரங்களாலும் (எபே 6:11), வலையாலும் (1 திமோ 3:7; 2 திமோ :15) சோதிக்கிறான். சாத்தான் ஒளியின் தூதனாக நடிக்கிறான் (2 கொரி 11:14). சில விசுவாசிகளை நெறிதவறச் செய்கிறான் (1 திமோ 5:15). அவனே ஆண்டவரது கோதுமை நிலத்தில் களைகளை விதைப்பவன் (மத் 13:39; லூக் 8:12). அவன், கர்ச்சிக்கும் சிங்கம்போல் யாரை விழுங்கலாம் எனத் தேடித்திரியும் எதிரியாவான் (1 பேதுரு 5:8). ஆகவே சாத்தானுக்குக் கிறிஸ்தவர்கள் இடம் கொடுக்கக் கூடாது (எபே 4:7).

சாத்தானிடம் மனித உடலுக்கு வேதனையையும், வருத்தத்தையும் கொடுக்கும் ஆற்றல் உண்டு. அவனுக்கென்று ஓர் அரசும், வீடும் உண்டு (மத் 12:26; மாற் 3:23.26; லூக் 11:18). உலக அரசுகள் எல்லாம் அவனுடைய அதிகாரத்தின் கீழ் இருப்பதாக அவனே உரிமை கொண்டாடுகிறான் (லூக் 4:6). சாத்தானின் வல்லமையை, இருளின் வல்லமை என்றும் இருள் ஆட்சிபுரியும் நேரம் என்றும் (லூக் 22:53; அ.ப. 26:18) இருளுக்கும் ஒளிக்கும் போராட்டம் என்றும் கூறுகின்றனர் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள். வாதநோயால் வாடிய பெண்ணை 18 ஆண்டுகளாகச் சாத்தான் கட்டி வைத்திருந்தான் (லூக் 13:16). பவுலை உடலில் தைத்த முள் போல் வருத்தியது சாத்தானுடைய தூதனே (2 கொரி 12:7). பாவிகளும், அப்போஸ்தலர்களின் எதிரிகளும் துன்புற சாத்தானிடம் கையளிக்கப்படுகின்றனர் (1 கொரி 5:5; 1 திமோ 1:20). பவுல் தெசலோனிக்கேயர்களிடம் வருவதைச் சாத்தான் தடுக்கிறான் (1 தெச 2:18), எதிர்க் கிறிஸ்து சாத்தானின் வல்லமையோடு வருவான் (2 தெச 2:9). ஆயிரமாண்டுக் காலம் சாத்தான் பாதாளத்தில் கட்டிவைக்கப்படுவான் (திருவெளி 20:2). உலகின் இறுதிக்காலத்தில் விடுவிக்கப்பட்டு

அழிவை ஏற்படுத்த அனுமதிக்கப்படுவான் (20:7). ஆனால் அவனுக்கு அளிக்கப்படும் காலம் குறுகியதாகும் (12:12). கொல்வதற்கு அவனுக்கு ஆற்றல் உண்டு (எபி 2:14). எவ்வளவுதான் வலிமையானவனாக இருந்த போதிலும் அவன் இறைவனின் அதிகாரத்திற்கு உட்பட்டவனே. இறுதியில் அடக்கப்படுவான். இயேசு சாத்தான் விண்ணிலிருந்து விழுந்ததைக் கண்டதாகக் கூறுகிறார் (லூக் 10:18). இதனை வெளிப்படையாக யோவான் தனது திருவெளிப்பாட்டு நூலில் (12:9-10) சுட்டிக்காட்டுகிறார். இங்குச் சாத்தான் பெரும் பறவை நாகமாகக் கூறப்படுகின்றான். சாத்தானுக்கும் அவனது பேய்களுக்கும் நித்ய நெருப்பு இருப்பதாகவும் (மத் 25:41), அவனை எதிர்த்துநின்றால், அவன் ஓடிவிடுவான் என்றும் (யாக் 4:7) கடவுள் அவனைத் தன் காலால் நசுக்குவார் என்றும் (உரோ 16:20) வாசிக்கின்றோம்.

தன் சகோதரனை அன்பு செய்யாதவன் பேயின் மகனாவான் (யோவா 3:10). பேயோ ஆதியிலிருந்தே பாவியாக உள்ளான் (3:8); இயேசு யூதர்களைப் பேயின் மக்கள் என்று அழைக்கின்றார் (யோவா 8:44). அவன் ஆதிமுதல் ஒரு கொலைகாரன். அவனிடம் உண்மையில்லை. யூதாஸ் பேய் என்றே அழைக்கப்படுகின்றான் (6:70). பதிதக் கோட்பாடுகள் ''சாத்தானின் ஆழ்ந்த ஞானமாகும்'' (திருவெளி 2:24). போலி யூதர்களாக அடையாளம் காட்டப்படும் பதிதப் பிரிவினர் சாத்தானின் கூட்டம் என்று அழைக்கப்படுகின்றனர் (2:9;3:9). பெர்கமுவில், சாத்தானின் அரியணையும் அவன் வாழும் இடமும் இருப்பதாகக் கூறப்படுகிறது (2:13). ஒருவேளை இக்குறிப்பு, அங்கு இருந்த சேயுசின் பீடத்தையோ, சீசரின் கோவிலையோ குறிக்கலாம்.

IV. மீட்புப்பற்றிய கடவுள் திட்டத்தின் எதிரி:-

1. ஒரே இறைவனின் மேன்மையை எடுத்துரைக்கும் பழைய ஏற்பாட்டில் சாத்தானைப் பற்றி வெகுவாகக் கூறப்படவில்லை. இரு கடவுளர் வழிபாட்டில் ஈடுபட விழையும் இஸ்ராயேல் மக்களை அதனின்று காப்பதுவே அதன் குறிக்கோளாகக் காண்கிறோம். சாத்தானின் தோற்றத்திலிருந்து அவனை எதிரி என நாம் சுலபமாகக் கண்டுகொள்வதற்கில்லை. யாவேயுடைய சமூகத்திலே பணிபுரியும் எண்ணற்ற வானதூதர்களில் ஒருவனாகவும் வான்வீட்டு நீதிமன்றத்திலே அரசுதரப்பு வக்கீல்போல் பூவுலகில் இறைவனின் நீதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த நியமனம் பெற்றவன் போலவும் அவன் தோன்றுகிறான். எனினும் இறைவனின் பணியாளனாக நடிக்கும் அவன் நடிப்பு, யோபு 1-3 சரிதம் கூறுவதுபோல், இறைவனுக்கு விரோதமாக இல்லாவிடினும், அவருடைய நீதிக்கும் மனிதனுக்கும் எதிராக அமைவதைக் காணலாம். தன்னலமற்ற அன்பிலே (யோபு 1:9) அவனுக்கு நம்பிக்கையில்லை. ''சோதிப்பவனாக'' இல்லாமலேயே யோபுவின் வீழ்ச்சிக்குக் காத்திருக்கிறான். மறைமுகமாக அவன் யோபுவின் வீழ்ச்சியை வரவேற்பது, அவ்வீழ்ச்சி அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொணரும் என்பதில் ஐயமில்லை. குற்றம் சாட்டும் சாத்தான் இஸ்ராயேலுக்கு இறைவன் வகுத்த அன்புத் திட்டங்களின் மெய்யான எதிரியாக மாறுவதை செப் 3:1-5-இல் காண்கிறோம். இஸ்ராயேலர் காப்பாற்றப்படுவதற்காக இறைவனின் பெயரால் இறைத்தூதர் எதிரியின் வாயையடைக்கிறார். ''ஆண்டவர் தாமே உன்னைக் கண்டிக்கட்டும்'' (யூதா 9).

2. திருமறை நூலை வாசிக்கும் நாம் மனித குலத் தோற்றத்திலிருந்தே மறைபொருளான ஒருவரின் முக்கிய பாகத்தை உணர்கிறோம். ஆதியாகமம் பாம்பினை மட்டும் குறிப்பிடுகிறது. இறைவன் படைத்தமற்ற ''எல்லாவற்றையும் போன்றே'' (ஆதி 3:1). ஆயினும், படைப்பான இந்தப் பாம்பு மனிதனையும் மிஞ்சுமளவு அறிவும் தந்திரமும் பெற்றிருந்தது (ஆதி 3:1). மேலும் தொடக்கத்திலிருந்தே இந்தப் பாம்பு மனித இனத்தின் எதிரியாகக் காட்சியளிக்கிறது. மனிதனின் இன்பம் கண்டு பொறாமை கொண்ட பகைவன் (காண். ஞான 2:24) தன் திட்டத்தை

நிறைவேற்ற எப்போதும் அவனுடையதான வஞ்சகம், சூழ்ச்சினனும் கருவிகளைப் பயன்படுத்துகிறான். அவன் 'பூமியில் தோன்றிய விலங்குகளுள் மிகச் சூழ்ச்சி மிக்க விலங்கு' (ஆதி 3:1), 'ஏமாற்றுக்காரன்' (ஆதி 3:13; உரோ 7:11; திருவெளி 12:9; 20:8தொ), 'ஆதிமுதல் ஒரு கொலைகாரன், பொய்யன்' (யோவா 8:44) எனப் பேசப்படுகிறான். ஞானாகமம் இப்பாம்பிற்கு ''அலகை'' என அதன் உண்மையான பெயரை வழங்குகிறது (ஞான 2:24).

V. கிறிஸ்துவின் எதிரி:-

ஆதிமுதல் சம்பவத்தினால் தோல்வியுற்ற மனித இனம், என்றாகிலும் ஓர்நாள் அப் பகைவனை வெற்றிகொள்ளும் என்ற உறுதி யுடன் முன்னோக்குகிறது (ஆதி 3:15). சாத்தா னின் மேல் மனிதன் கொண்ட வெற்றியே, சொல்லப்போனால் கிறிஸ்துவின் மீட்புப் பணியில் முடிவு எனலாம். 'சாவைத் தம் கையில் கொண்டிருந்தவனை, அலகையை, வலிமையிழக்கச் செய்யவும்' (எபி 2:14), 'அவனுடைய செயல்களைத் தொலைக் கவுமே (1 யோவா 3:8) கிறிஸ்து தோன்றினார். சுருங்கக்கூறின், சாத்தானுடைய ஆட்சியை அகற்றி, தந்தையின் ஆட்சியை அமைக்கவே தோன்றினார் (1 கொரி 15:24-28; கொலோ 1:13தொ). எனவேதான், நற்செய்தியாளர்கள் கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வினைச் சாத்தா னுக்கெதிராக அவர் நடத்திய போராட்டமா கவே நமக்கு வழ்ங்குகிறார்கள். இப்போ ராட்டம் இயேசு பாலை நிலத்தில் அலகை யினால் சோதிக்கப்பட்ட கட்டத்துடன் ஆரம்ப மாகிறது. இன்ப வனச் சம்பவத்திற்குப்பின், முதன்முறையாக, 'ஆதாமின் மகனென' (லூக் 3:38), ஒருவர் மனித குலத்தின் பிரதி நிதியென நேருக்கு நேராக அலகையைச் சந் திக்கும் சம்பவமாகும் இது. 'கடவுளரசு நெருங்கிவிட்டது' (மாற் 3:22 தொ), ''சாத்தா னின் ஆட்சி முடிவை எய்திவிட்டது'' (காண் லூக் 10:17-20) என்பதனை நிரூபிக்கும் வண் ணம் பேய் பிடித்தவர்கள் விடுவிக்கப்படு கிறார்கள். இது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துகிறது. நோய் வாய்ப்பட்டோர் (காண். அ.ப. 10:38) நலம்பெறலும் போராட் டத்தினை உணர்த்தும். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத ''அலகையின் மக்கள்'' (யோவா 8:44; காண். மத் 13:38), 'விரியன் பாம்புக்குட் டிகள்' (மத் 3:7 தொ; 12:34;23:23) ஆகிய யூதர்களுடன் ஏற்படும் மோதலின்போது, இப்போர் சூழ்ச்சித்திறமுடைய வகையில் மேலும் தொடர்கின்றது. கிறிஸ்துவின் பாடு களின்போது அது மும்முரமாக நடைபெறு கிறது. லூக்கா தெரிந்து விரும்பியே பாடுக ளைச் சோதனையுடன் இணைக்கிறார் (லூக் 4:13; 22:53). யோவானும் சாத்தானின் இறு தித் தோல்வியை அறிவிக்கவே, பாடுகளின் போது அவனுக்குள்ள பங்கை விளக்குகின் றார் (யோவா 13:2.27; 14:30; காண். லூக் 22:3.31). சாத்தான் போராட்டத்தை நடத்துவ தாகத் தோன்றினாலும் 'உண்மையிலே கிறிஸ்துவின் மீது அவனுக்கு எவ்வித அதி காரமுமில்லை'. அனைத்துமே இறைமக னின் அன்பும் கீழ்ப்படிதலுமிகுந்த பணியா கும் (யோவா 14:30). தனதே வெற்றி என எண்ணிய அக்கணமே 'இவ்வுலகின் இளவர சன்' 'தூக்கியெறியப்படுகிறான்' (யோவா 12:31; காண் 16:11; திருவெளி 12:9-13). அன்று அவன் துணிவுடன் இயேசுவுக்கு அளிக்க வந்த இவ்வுலக அரசு (லூக் 4:6) இனி, மரித்துயிர்த்து மகிமையில் வீற்றிருக் கும் கிறிஸ்துவுக்கே சொந்தம் (மத் 28:18; காண். 2:9).

VI. கிறிஸ்தவர்களின் எதிரி:-

கிறிஸ்துவின் உயிர்ப்பு, சாத்தான் தோல்வி யுற்றதின் அடையாளம் எனில் பவுல் கூற் றுப்படி, 'ஆண்டவருடைய நாளில்' மீட்பு வரலாற்றின் இறுதி நிகழ்ச்சிகளுடன்தான் அவனுடன் நடக்கும் போராட்டம் முடி வினை எய்தும். அந்நாளில் ''தலைமை ஏற்போர், ஆட்சிபுரிவோர், வலிமைமிக் கோர் அனைவரையும் அவர் தகர்த்துவிட்டு, கடவுளும் தந்தையுமானவரிடம் அரசை ஒப் படைப்பார்.... அதனால் கடவுளே அனைத் திலும் அனைத்துமாயிருப்பார்'' (1 கொரி 15:24.28).

கிறிஸ்துவைப்போன்றே, கிறிஸ்தவனும் எதிரியுடன் போராட வேண்டியுள்ளது.

பவுல் தெசலோனிக்கே செல்வதைத் தடுப்பவன் அந்தச் சாத்தானே (1 தெச 2:18). அப்போஸ்தலப் பணியில் தடையாக அவருடைய 'உடலில் தைத்த முள்', 'சாத்தான் அனுப்பிய தூதனாவான்' (2 கொரி 12:7-10). ஆண்டவனின் தோட்டத்திலே களைகளை விதைப்பவனும் (மத் 13:39), தேவ வார்த்தையை மக்கள் நம்பி மீட்படைவார்களே என அஞ்சி (மாற்கு 4:15) அவர்களுடைய உள்ளங்களில் விதைக்கப்பட்ட தேவவார்த்தையைப் பறித்துச் செல்பவனுமாகிய பகைவன் சாத்தானே என நற்செய்தி ஏற்கெனவே அடையாளம் காட்டியுள்ளது. கர்ச்சிக்கும் சிங்கம்போல் யாரை விழுங்கலாமென விசுவாசிகளிடையே தேடித் திரிகிறது எனப் பேதுரு சித்தரிக்கிறார் (1 பேதுரு 5:8). அன்று இன்பவனத்தில் நடந்துகொண்டவாறே, இன்றும் மக்களைப் பாவத்தில் விழச்செய்யவும் (1 தெச 3:5; 1 கொரி 7:5), கடவுளை அவர்கள் எதிர்க்கச் செய்யவும் (அ.ப. 5:3) விழையும் சாத்தான் சோதிப்பவனாகவே வருகின்றான். மேலும், பாவம் என்றழைக்கும் உருவமுள்ள சக்தியின் பின், பாவத்தின் தந்தையான சாத்தானின் கைவண்ணம் பொதுவாக உண்டு என்றே பவுல் கருதுகின்றார் (உரோ 5:12ஐ ஞான 2:24-ஓடும், உரோ 7:7-ஐ ஆதி 3:13 - ஓடும் ஒப்பிடுக). இறுதியாக எதிர்க்கிறிஸ்து இவ்வுலகில் ஏற்கனவே செயலாற்றுவது உண்மையானால், அவனுடைய தீய செயல்களில் எல்லாம் மறைந்திருப்பது சாத்தானின் ஆதிக்கம்தான் (2 தெச 2:7தொ).

எனவே, கிறிஸ்தவன் என்போன், இறைவனை அல்லது சாத்தானை, கிறிஸ்துவை அல்லது பேலியாலை (2 கொரி 6:14), தீயவனை அல்லது உண்மையானவரைத் (1 யோவா 5:18தொ) தேர்ந்துகொள்ள வேண்டும். இதுவே அவனது வாழ்வின் சோகக் கட்டமாகும். கடைசி நாளில் அவன் யாராகிலும் ஒருவருடன் முடிவில்லாக்காலமும் வாழ்வான்.

வஞ்சகமும், கடபமும், சூதும், தந்திரங்களுமே நிறைந்து விளங்கும் அஞ்சற்குரிய தீய ஆவி (2 கொரி 2:11; எபே 6:11; 1 திமோ 3:7; 6:9..) சில வேளைகளில் ஒளியின் தூதனாகத் தோன்றுவதுண்டு (2 கொரி 11:14). எனினும் சாத்தான் ஏற்கனவே தோல்வியுற்ற ஓர் எதிரிதான். விசுவாசம் (எபே 6:10), செபம் (மத் 6:13;26:41) இவற்றால் கிறிஸ்துவுடன் ஒன்றித்து, துணைக்கு இயேசுவின் வேண்டுதலும் கிடைக்கப் பெற்றால் (லூக் 22:32; காண் உரோ 8:34; எபி 7:25) கிறிஸ்தவன் வெற்றியடைவது திண்ணம். அலகைக்கு இடம் கொடுப்பவனே தோல்வி காண்பான் (யாக் 4:7: எபே 4:27).

திருவெளிப்பாடு நூலின் இறுதிப்பக்கங்கள், குறிப்பாக 12 ஆம் அதிகாரம், மனித குலமே ஆதியிலிருந்து (திருவெளி 12:9) மீட்பு வரலாற்றின் இறுதிநாள் வரை எதிர்த்துப் போராட வேண்டியுள்ள இப்பகைவனைப் பற்றிய விவிலிய போதனைகளின் தொகுப்பினைத் திரட்டித் தருகின்றன. ஓர் பெண்ணிடமும் அவள் ஈன்றெடுத்த மகனிடமும் (12:5தொ) தன் வலிமையிழந்த சாத்தான், எஞ்சிய அவள் பிள்ளைகளுடன் (12:17) போர் தொடுத்து வருகிறது. எதிர்க்கிறிஸ்துவின் ஏமாற்று வித்தைகளால் தற்காலிகமாக அவனுக்குக் கிடைக்கும் உயர்வினைச் (13:17) செம்மறியும், செம்மறியின் மணமகளாம் (18:22) திருச்சபையும் அடையும் உறுதியான வெற்றி ஓர் முடிவுக்கு கொணரும். இறுதி நாளில் விலங்கு, போலித்தீர்க்கதரிசி, சாவு, பாதாளம், இன்னும் அவனுடைய சூழ்ச்சிகளுக்கு இரையான மக்களுடனும் சாத்தான் 'கந்தக நெருப்புக்கடலில் எறியப்படுவான்'. அந்நெருப்புக்கடலே 'இரண்டாம் சாவு' (திருவெளி 20:10.14தொ).

சாத்திராபு (SATRAP)

இச்சொல்லுக்குக் கிரேக்க மொழிபெயர்ப்பில் ஆளுநன் என்ற பொருளோடு வேறு சில பொருளையும் கொடுத்துள்ளனர். பொதுவாக இச்சொல் ப்ாரசீக ஆட்சியில் ஒருபகுதிக்கு ஆளுநராக உள்ளவனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. புனித எரோனிமு தனது இலத்தீன் மொழி பெயர்ப்பில் ஆளுநன் என்ற பொருளிலேயே

பயன்படுத்துகின்றார் (நீதி.3:3; 1 சாமு 29:6; 2 நாள் 9:14).

சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேதுநெகோ (SHADRACH, MESHACH, ABEDNEGO - அகூவின் கட்டளை, அகூவைப்போல் இருப்பவர் யார்? நெபோவின் ஊழியன்)

இவர்கள் மூவரும் தானியேலின் தோழர்கள், இவர்கள் இதே வரிசையில் சேர்ந்தே சொல்லப்பட்டிருக்கிறார்கள் (தானி 1:7; 2:49; 3:12-30).

இந்த இளைஞர்களுக்கு, இந்தப் பாபிலோனியப் பெயர்களை நெபுகத்னேசரின் தலைமை அண்ணகன் கொடுத்தார் (தானி 1:7). அவர்களது எபிரேயப் பெயர்கள் அனனியா (யாவே கருணைமிக்கவர்), மிசாவேல் (இறைவன் இருப்பதுபோல் இருப்பவர் யார்?) அசரியா (யாவே உதவி செய்தார்) என்பவையாகும் (தானி 1:6-7:11.19;2:17; 1 மக் 2:59).

பாபிலோனியப் பெயர்களின் சொல்லிலக்கண விளக்கம் தெளிவற்றதாய் உள்ளது. இப்பெயர்களுக்குத் தானியேல் நூல் அல்லது அதன் பாரம்பரியம் ஓர் ஏளனக் குறிக்கோளை வெளிப்படுத்துகிறது என்பர். இப்பெயர்கள் பாபிலோனியத் தெய்வங்களின் முக்கிய அடிப்படைக் கூறுகளைக் குறிக்கும் பெயர்களிலிருந்து எடுக்கப்பட்டவையாய் உள்ளன. சாத்ராக்கு என்ற பெயர் அக்காடியர்களின் சுதூர்-அகூ (சுமேரியர்களின் சந்திரக் கடவுள்) - விலிருந்து வந்ததாக உள்ளது. இது மார்துக் என்ற பெயரின் பழுதுபட்ட வடிவமாகவும் இருக்கலாம். மேசாக்கு என்ற பெயர் அக்காடியர்களின் மிசாக்கு (அகூ இருப்பதுபோல் இருப்பவர் யார்)வின் பெயராகும். ஆபேதுநெகோ என்ற பெயர் ஆபேதுநெபோ "பாபிலோனிய அறிவுக் கடவுள்", "நபுவின் ஊழியன்" என்ற சொல்லிலிருந்து மொழிச்சிதைவு பெற்று வந்ததாகும். செலூக்கியர்களால் முற்றுகையிடப்பட்ட பாலஸ்தீன யூதர்களின் விசுவாசத்தை ஊக்குவிக்க எழுதப்பட்ட கதையாகும். இந்த மூன்று இளைஞர்களும் "மாசு இல்லாதவர்களாயும், அழகுள்ளவர்களாயும், எல்லா வகை ஞானத்திலும் தேறியவர்களாயும், அறிவில் சிறந்தவர்களாயும், கல்வியில் வல்லவர்களாயும், அரண்மனையில் பணிசெய்யும் திறமையுள்ளவர்களாயும்" இருந்தனர் (தானி 1:4). இவர்கள் மற்றவர்களைவிடத் திறமையில் புகழ்பெற்றவர்களாக இருந்தனர். இவர்களுக்கு இணையாக யாரும் காணப்படவில்லை (தானி 1:19-20; 2:17.47; 3:28-30). எந்தத் துன்பத்திலும், நெபுகத்னேசரால் உருவாக்கப்பட்ட பொற்சிலையை வணங்க மறுக்கும் அளவுக்குப் பக்தியும், விசுவாசமும் கொண்டிருந்தனர் (தானி 3). இம்மூவரும் நெபுகத்னேசரை நோக்கி "அரசே நாங்கள் வழிபடுகின்ற எங்கள் கடவுள், எரிகிற தீச்சூளையினின்றும், உம்கைகளினின்றும் எங்களைக் காப்பாற்றி மீட்க வல்லவர். அப்படியே அவருக்கு மனமில்லாமற் போயினும் உம்முடைய தெய்வங்களுக்குப் பணிபுரியோம், நீர் நாட்டிய பொற்சிலையைப் பணியமாட்டோம் இதெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கட்டும்" என்றனர். இவ்வாறு சொல்லுமளவுக்கு விசுவாசம் கொண்டிருந்தனர் (3:17-18).

இந்த மூவருடைய பெயர்கள் தனித்தனியாகப் பழைய ஏற்பாட்டில் வேறு இடங்கவில் குறிப்பிடப்பட்டாலும் அவர்களை இந்த மூவரோடும் அடையாளம் காட்ட முடியாது. இவர்கள் யூதாவின் வழிவந்தவர்கள் (தானி 1:6) என்ற குறிப்பைத்தவிர சுட்டிக்காட்டும் குறிப்புகள் வேறில்லை. ஒரு புதிய பணிக்குச் செல்லும்போது பெயர் மாற்றம் செய்வது விவிலியத்தில் சில இடங்களில் காணப்படுகிறது. உதாரணமாகப் பார்வோன் யோசேப்பின் பெயரை மாற்றினார் (ஆதி 41:45; 2 அர 23:34; 24:17). இதைப் போலவே இங்கேயும் பெயர் மாற்றியுள்ளனர்.

சாந்தம் (MEEKNESS)

"என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள், ஏனெனில் நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன்" (மத்.11,29). இறைவனுடைய சாந்தத்தின் மிகச்சிறந்த வெளிப்பாடாகிய இயேசு

வின் சொற்கள்தாம் இவை (மத் 12:16தொ). ''சாந்தமுள்ளோர் பேறு பெற்றோர்'' (மத் 5:4) என மொழிந்திடும் அவரே நம் சாந்தத்தின் ஊற்றாவார்.

1. இறைவனின் சாந்தம்:- இறைவனின் எல்லையற்ற இரக்கமிகும் நன்மைத்தனம் (சங் 31:20;86:5) அவர் அகில உலகையும் அதில் காணும் அனைத்தையும் ஆள்வதில் விளங்குகிறது (ஞான 8:1; 15:1). இதனைப் பழைய ஏற்பாடு பாடுவதுடன் அதனைச் சுவைக்க நம்மையும் அழைக்கின்றது (சங் 34:9). தேனினும் இனியன இறைவனின் வார்த்தை, அவருடைய சட்டம் (சங் 119: 103;19:11; எசே 3:3), அவருடைய ஞானத்தைப்பற்றிய அறிவு (பழ 24:13; சீரா 24:20), அவருடைய கட்டளைக்குப் பிரமாணிக்கமாயிருத்தல் (சீரா 23:27) முதலியன. எல்லாருடைய சுவைக்கும், உகந்த உணவால் கடவுள் தம் மக்களை வயிறார உண்பிக்கிறார். தம் மக்களின் அன்பார்ந்த மணவாளனாகிய இறைவன் (உ.ச 2:3) இவ்விதம் தம் சாந்தத்தை வெளிப்படுத்துகிறார் (ஞான 16:20). அதனைச் சுவைக்க அவர்களை அழைக்கிறார். இச்சாந்தத்தினைத்தான் ஆண்டவர் இயேசு நமக்கு வெளிப்படுத்தி (தீத் 3:4) நாம் அதைச் சுவைக்குமாறு செய்தார் (1 பேதுரு 2:3).

2. சாந்தமும் தாழ்ச்சியும்:- உண்மைச் சாந்தத்திற்கு மோசே ஓர் எடுத்துக்காட்டு. சாந்தம் பலவீனமன்று. இறையன்பில் ஒருவர் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையிலமைந்த தாழ்மையான கீழ்ப்படிதலாகும் (எண் 12:3; சீரா 45:4;1:27; காண் கலா 5:22 தொ). கடவுள் காப்பாற்றவிருக்கும் ''சிறு கூட்டமும்'' நாடுகளுக்கெல்லாம் அமைதியைக் கொணரும் மன்னரும், இத்தாழ்மையான சாந்தமுள்ளவர்களாயிருப்பர் (செப் 3:12; செக் 9:9தொ=மத் 21:5).

தம் வார்த்தைக்குப் பணிந்துநடக்கும் சாந்தமுள்ளோரை (யாக் 1:20 தொ) இறைவன் வழிநடத்துகிறார் (சங் 25:9); நிலைநிறுத்துகிறார் (சங் 147:6); மீட்கின்றார் (சங் 76:10); அவர்களுக்கு வல்லமைமிக்கவரின் அரியாசனத்தை வழங்குகிறார் (சீரா 10:14); மேலும் இப்பூவுலகை அமைதியில் மகிழச் செய்கிறார் (சங் 37:11=மத் 5:4).

3. சாந்தமும் அன்பும்:- இறைவனுக்கு உகந்தவன் மனிதர் மாட்டு, குறிப்பாக ஏழைகள் மாட்டு சாந்தமுள்ளவனாக நடந்து கொள்வான் (சீரா 4:8). சாந்த குணம் ஆவியின் கனியாகும் (கலா 5:23). அது வானுலக ஞானத்தின் அடையாளம் (யாக் 3:13.17). அமைதியான மென்மை, அரச பெருமிதக் கட்டுப்பாடு என்ற இருபொருள் கொண்ட சாந்த குணம் கிறிஸ்துவிலும் (2 கொரி 10:1), அவருடைய சீடர்களிடமும் (கலா 6:1; கொலோ 3:12; எபே 4:2), அவர்களுடைய மேய்ப்பர்களிடமும் (1 திமோ 6:11; 2 திமோ 2:25) சிறப்புற அமைந்துள்ளது. சாந்த குணம் கிறிஸ்தவப் பெண்களின் அணிகலன் (1 பேதுரு 3:4). அது அவர்தம் உள்ளங்களுக்கு மகிழ்வினைக் கொணர்கின்றது (சீரா 36:23). மெய்யான கிறிஸ்தவன் பொதுவாக எல்லாரிடத்தும் (தீத் 3:2; பிலி 4:5), குறிப்பாகத் துன்புறும் நிலையிலும் (1 பேதுரு 3:16) சாந்தமுள்ளவனாக இருப்பான். இவ்விதம் ''ஆண்டவருடைய நுகம் இனிது'' என அவன் சான்று பகர்வான் (மத் 11:30). ஏனெனில் அது அன்பாலான நுகம்.

சாந்திக்கு (XANTHICUS)

செலூக்கிய மாசிதோனிய நாட்காட்டியில் உள்ள ஒரு மாதம்; இது யூதர்களின் நீசான் மாதத்திற்கு (மார்ச் - ஏப்ரல், பங்குனி) இணையானது. 5-ஆம் அந்தியோக்கு மற்றும் உரோமையர் ஆகியோர் யூதர்களுக்கு எழுதிய இரு கடிதங்களில் இப்பெயர் குறிக்கப்படுகிறது (2 மக் 11:30. 33.38).

சாந்து, சுண்ணாம்புக்காரை (PLASTER)

கற்காலம் முதல் சுவரிலும் தரையிலும் களிமண்ணோ, சாந்தோ பூசுவது வழக்கத்தில் இருந்தது. இஸ்ராயேலர்கள் வந்தபின், அதாவது இரும்பு பயன்படுத்தப்பட்ட காலத்தில், கெட்டியான நீரில் கரையாத சாந்துகள் நீர்த்தேக்கத்திற்கும், நீர்த்தொட்டிகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. இதன் எபி

ரேய மூலச்சொல் சுண்ணாம்பு அல்லது சாந்து எனப்பொருள்படும். இதன் வினைச் சொல் ''கொதிக்கவைத்துச் செய்'' எனப் பொருள்படும். இது இந்தச் சாந்து தயாரிக்கும் முறையைக் குறிக்கிறது. தானி 5:5-இல் இந்த அரமேயச்சொல் சுவரின்மேல் பூசப்பட்ட சாந்துப்பூச்சையே குறிக்கிறது. இஸ்ராயேல் மக்கள் நாட்டில் நுழைந்ததும் கற்களை நிறுத்தி, சாந்து பூசி, நினைவுத் தூணை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள் (உப 27:2).

சாபதேயர் (ZABADEANS)

சாபாது என்ற ஊரில் இருந்த அரேபியா குடிமக்கள் இவ்வாறு அழைக்கப்பட்டனர்.

யோனத்தான் மக்கபேயு தன்னுடைய செலூக்கிய எதிரிகளைத் தொடர்ந்து விரட்ட அவர்கள் எலூத்தரு ஆற்றுக்கு அப்பால் நழுவியபோது அவர் அங்கு அரேபிய சாபதேயர்களைத் தோற்கடித்து அவர்களுடைய சொத்துக்களை எடுத்துச் சென்றார் (1 மக் 12:31). எலூத்தரு ஆறு, மத்திய லெபனோனில் உள்ள இக்கால நாகர் ஏல் - செபிராக இருக்கலாம்.

யோனத்தான் விரைவில் தமஸ்குப் பகுதிக்குத் திரும்பியதால் (12:32) இந்தக் கிராமம் தமஸ்குவுக்கு 28 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலச் செபதானியாவாக இருக்கலாம்.

சாபம் (CURSE)

I. எபிரேய மொழியில் சாபத்தைக் குறிக்கும் சொற்கள் பல உள்ளன. கோபம் கொண்டவர்களின் முரட்டுத்தனமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொல்லாக இது விளங்குகிறது. கோபத்தில் சபிக்கின்றனர்; ஒருவரை இழிவுபடுத்தும் வெறுப்புணர்ச்சியை வெளிப்படுத்தவும் ஒதுக்கிவைக்கவும் பிரமாணிக்கம் செய்வதிலும் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

கிரேக்க வேதாகமம் 'ஆரா' என்ற சிறப்பான அடிச்சொல்லைக் கொண்டுள்ளது. இச்சொல் செபம், வார்த்தைப்பாடு, தூற்றுதல் முதலியவற்றை விளக்குவதும், சபிக்கப்பட்டதைவிடப் பலமுள்ளதான மற்றொரு சக்தியை மன்றாடுதலைக் குறிப்பதுமான சொல்லாகும்.

மனித பலத்திற்கு அப்பாற்பட்ட பெருஞ்சக்திகளை வெளிக்கொண்டு வருகிறது. தன்னுள் தானே கொண்டுள்ள பெரும் அழிவு சக்தியின் வழியாகக் கூறப்பட்ட வார்த்தைகள் பாவத்தினுடையவும் தீமையினுடையவும் கொடும் சக்திகளின் வழியாகச் சபிக்கப்பட்டவனைத் தீமையிலிருந்து பெருங்கேட்டிற்கு இட்டுச் செல்கின்றன. துன்பத்தின் காரணம் அல்லது நிபந்தனை அதனால் விளைய இருக்கும் பலன் ஆகிய இரண்டினையும் சாபம் தன்னுள் அடக்கியுள்ளது. ''இங்ஙனம் செய்ததால் அல்லது இவ்வாறு செய்தால்... இத்தகைய துன்ப துயரம் உன் மீது வரும்'' என்பதாகும்.

யோசனையின்றி மற்றவர்மீது சாபத்தை விளைவிக்க முயன்றால் தானே அதன் தீய பலன்களை அனுபவிக்க நேரிடும் (காண்:சங் 109:17). மற்றவரைச் சபிப்பதற்கு அவர்மீது சட்டப்படியோ, சொந்தபந்தத்தினாலோ முழு உரிமையிருக்கவேண்டும்; அல்லது அவரால் அநியாயமாய்த் துன்பப்படுத்தப்பட்டிருப்பதால் பழிக்குப்பழி வாங்கும் உரிமையிருக்க வேண்டும் அல்லது அவரின் இறைவனாக இருக்கவேண்டும் (சங் 137:8; யோபு 31:20.38; யாக் 5:4).

II. வரலாற்றிற்கு முந்தியகாலம்: உலகின் மீது சாபம்:-

தொடக்க முதலே சாபத்தினைக் காண்கிறோம் (ஆதி 3:14.17). ஆனால் இதற்கு எதிராய் இறைவனின் ஆசியுரையையும், வாழ்த்திப் போற்றும் செய்கையினையும் காண்கிறோம் (ஆதி 1:22.28). மேலான ஆசிமொழியான, இறைவனின் படைப்பு 'வார்த்தைக்கு' மாறுபட்ட எதிரொலியாகச் சாபம் விளங்குகிறது.

ஒளியும், உண்மையும், வாழ்வுமான வார்த்தையானவர்முன், பொய், மரணத்தின் தந்தையும், இருளின் அரசனுமான சாத்தான் எதிர்ப்படும் பொழுது, அச்சாத்தானின் அழி

வினைக் கொணரும் மறுப்பு வெளிப்படுகிறது. இவ்வாறு மறுப்பதால் சாபம் விளைகிறது. பாவம் ஒரு தீமை, ஆனால் அவர் படைக்கவில்லை: வார்த்தையான அவர் அத்தீமையை வெளிப்படுத்தி அதை அழிப்பவர்: சாபம் ஏற்கனவே ஒரு நீதித் தீர்ப்பாகும்.

இறைவன் வாழும் தேவனாய் இருப்பதால், உயிரின் ஊற்றாய் இருப்பதால் ஆசி அளிக்கின்றார் (எரே 2:13). ஆனால் இறைவனுக்கு எதிராகச் சோதிப்பவன் (ஆதி 3:4தொ) மனிதனைப் பாவத்திற்குள் ஈடுபடுத்தித் தன்னுடைய சாபத்தினுள் அவனையும் ஈடுபடுத்துகிறான். இறையவனின் திருச்சந்நிதிக்குப் பதிலாக அவரிடமிருந்து அவருடைய மகிமையினின்று தொலைவிற்குச் சென்றுவிடுகிறான் (ஆதி 3:23; திருவெளி 3:23). வாழ்விற்குப் பதில் சாவு (ஆதி 3:19) கிடைக்கிறது. ஆனால் எப்பொழுதும் முதற்குற்றவாளியாகிய சாத்தானே (ஞான 2:24) எந்நாளும் சபிக்கப்பட்டவனாவான் (ஆதி 3:14). மற்றப்படி பெண்கள் தொடர்ந்து பிள்ளைப் பேறு பெறுவர்; விளைநிலம் கனிகொடுக்கும். பலன்கொடு என்ற முதல் ஆசிமொழி திரும்ப எடுத்துக் கொள்ளப் படவில்லை (ஆதி 3:16-20). ஆனால் சாபம் அதன்மீது துன்பத்தின் சாயலை, தொல்லைதரும் வேலையை, துயரத்தின் சாயலைப் படரவைக்கிறது. ஆனால் வாழ்வு சக்தி வாய்ந்ததாக விளங்கிச் சாபத்தின் இறுதியான தோல்வியின் அடையாளமாய் நிற்கிறது (3:15).

மரணத்தை விளைவிக்கும் இச்சாபம் ஆதாமிலிருந்து ஆபிரகாமுக்கு வந்தடைகிறது. சாபத்தின் மூலகர்த்தாவாக மனிதனே விளங்குகிறான் (4:11 இரத்தம்மீது சாபத்தின் கட்டுப்படுத்தும் தன்மை ஆதி 4:23 தொ; 9:4தொ; மத் 27:25 காண்க). இச்சாபத்தினால் அழிவு விளைகிறது. இவ்வாறாய் வாழ்வின் மூலப்பொருளாய், நிலைக்களமாய் விளங்கிய நீர், புதைகளமாய் மாறியது (ஆதி 6:5-12). ஆனால் இச்சாபத்தின் மத்தியில் இறைவன் தன் ஆறுதலை நோவாவின் வழியாக, புது மனுக்குலத்தின் முதற்கனிகள் அளிப்பதன் மூலம் எந்நாளும் தன் ஆசியை நிலைப்படுத்துகிறார் (8:17-23;9:1-17; 1 பேதுரு 3:20).

III. பிதாபிதாக்கள்: இஸ்ராயேலரின் எதிரிகளின் மீது சாபம்:-

பாபேலை அழித்து இறைவனுக்கு எதிராகக் கூடிய மக்களை ஒரு சாபம் சிதறடித்தாலும் (ஆதி 11:7), இறைவன் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்துஅவர் வழியே அவரையடுத்து உள்ளவர்களையும், அவர்வழி வருகிறவர்களையும், பெரும் பேற்றிற்கோ சாபத்துக்கோ ஏற்படுத்தினார் (ஆதி 12:1தொ). இறைவனின் இந்த ஆசி மொழியானது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை மலட்டு உதரம் (ஆதி 15:5தொ: 30;1தொ), எதிரான நிலம் ஆகிய இருவகைச் சாபத்தினின்று விடுவித்தாலும் (27:27; 49:11தொ.22-26) தெரிந்து கொள்ளப் பட்ட மக்களின் எதிரிகளால் ஏவப்பட்ட சாபம் ''நிலத்தின் செழுமையிலிருந்தும், வானின் பனித்துளியிலிருந்தும்'' வெகு தொலைவிற்குத் துரத்திவிட்டது (27:39). அவர்களது சாபமே தண்டனையாகும். அந்த ஒரு மேலான ஆசியினின்று அவர்களை விலக்கி வைக்கிறது. ''உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்படுவான்''. பார்வோன் மன்னன் (யாத் 12:29-32), பின் பாலாக்கு (எண் 24:9) ஆகியோர் இக்கூற்றின் உண்மையைத் தங்கள் வாழ்வில் உணர்ந்தார்கள். மிகவும் விநோதமான காரியம் என்னவெனில், பார்வோன் தானே இஸ்ராயேல் மக்களையணுகித் தனக்காக, தன்மீது அவர்களது இறைவனின் ஆசி வழங்கப்பட வேண்டுமெனத் தங்கள் இறைவனை இறைஞ்சுமாறு கெஞ்சினான் (யாத் 12:32).

IV. சட்டம்: பாவம் புரிந்த இஸ்ராயேல் மீது சாபம்:-

ஆசியுரை அதிகரிக்க, அதிகரிக்க சாபம் அதிகமாக வெளிப்பட்டது.

1. சட்டம்:

சட்டம் படிப்படியாகப் பாவத்தை வெளிப்படுத்தியது (உரோ 7:7-13). என்ன செய்ய

வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்று கூறுவதோடுகூட, மீறி நடப்பதால் விளையும் தீமைகளைப்பற்றியும் கூறியது. இறை உடன்படிக்கை முதல் உபாகம இறைவழி பாட்டுச் சட்டம் வரை, சாபத்தைப் பற்றிய குறிப்பீடுகள் மிகமிகத் துல்லியமாகவும், விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன (யாத் 23:21; யோசு 24:20; உபா 28; லேவி 26:14-39). இறைவனின் அழைப்பின் மறைபொருளாய் ஆசிமொழி விளங்கினால், அந்த அழைப்பை மறுத்ததின் மறைபொருளாய்ச் சாபம் விளங்குகிறது. தேர்ந்து கொள்ளப் பட்ட மக்களில் தகுதியற்றவர் இறைவனின் அழைப்பிலிருந்து விலக்கப்படுகின்றனர் (1 சாமு 15:23; 2 அர 17:17-23; 21:10-15). ஆயினும் அந்தத் தேர்ச்சி அவர்களது வாழ்வை எந்நாளும் பாதிக்கிறது (ஆமோ 3:2).

2. இறைவாக்கினர்கள்:

இஸ்ராயேல் மக்களின் கடினமான உள்ளத்திற்கும் (ஆமோ 6:1; உப 2:6-20) தங்கள் மேல் விழ இருக்கும் துன்பத்தைக் காணாத குருட்டுத் தன்மைக்கும் (ஆமோ 9:10; எசா 28:15; மீக் 3:11; மத் 3:8தொ) சாட்சி கூறுகின்றனர் இறைவாக்கினர்கள். இவ்வாறாய் இஸ்ராயேல் மக்கள் ஆட்கொள்ளப்பட்டு, கொள்ளையடிக்கப்படுவது பற்றியும் (எரே 20:8) இன்னும் பல்வேறான சாபச்சொற்களையும் கூற வேண்டியிருந்தது (ஆமோ 2:1-16; ஓசே 4:6; எசா 9:7-10; எரே 23:13; எசே 11:1-12. 13-21). மேலும் எவ்வாறாய் இச்சாபக்கேடு ஒருவரையும் விடாமல் அனைவர்மீதும், குருக்கள்மீதும் (எசா 28:7-13), பொய்த்திர்க்க தரிசிகள் மீதும் (எசே 13), கொடிய ஆயர்கள் மீதும் (எசே 34:1-10), நாட்டின் மீதும் (மீக் 1:8-16), நகரத்தின் மீதும் (எசா 29:1-10), கோவில் மீதும் (எரே 7:1-15), குவலயம் ஆளும் கோமகன் மீதும் (எரே 25:18), அவன் தன் அரண்மனைமீதும் (எரே 22:5) விழும் என்று சாபக்கேட்டை வெளிப்படுத்த வேண்டியவர்களாயினர்.

ஆனால் இச்சாபம் முழு அழிவையும் ஏற்படுத்தி விடுவதில்லை. சில சமயங்களில் எவ்விதக் காரணமுமின்றி, படிப்படியாக இல்லாமல் திடீரென்று இறைவனின் இரக்கம் வெளிப்படுத்தப்பட்டு, எச்சரிக்கையின் பின்பு மீட்பைப் பற்றிய உறுதிமொழியும் அளிக்கப்படுகிறது (ஓசே 28:11.16; எசா 6:13). ஆனால் பெரும்பாலும் சாபத்தின் மத்தியில் ஆசியின் உருவம் மிளிருகிறது (எசா 1:25தொ; 28:16தொ; எசே 34:1-16; 36:2-12. 13-38).

V. நீதிமான்கள் சாபம் இடுதல்:-

ஆபிரகாமுக்கு அளித்த ஆசி தலைமுறை தலைமுறையாய் ஒரு சில நீதிமான்கள் வழியாக வந்தது. ஆனால் இவர்கள் வாயினின்று சாபக்கேடு விளைவிக்கும் சொற்களும் வெளிவந்தன. எடுத்துக்காட்டாக, எரேமியா (எரே 11:20; 12:3; 20:12) சங்கீத ஆசிரியர்கள் (சங் 5:11; 35:4தொ; 63:10-19; 109:6-20; 137:7தொ). ஆனால் எவ்விதச் சந்தேகமுமின்றி, இவர்களது இவ்வாறான பழிவாங்க வேண்டுமென்ற விருப்பங்கள் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. ஏனெனில் நாம் மன்னிக்கத் தெரிந்தவர்கள் என நினைத்துக் கொள்கிறோம். இந்த வேண்டுகோள்கள் நாட்டின் அல்லது தனிப்பட்ட மனிதனின் வெறுப்பினை வெளிப்படுத்துகிறது. ஆனால் இவைகள் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளதைப் புதிய ஏற்பாட்டில் கண்டு கொள்ளலாம். ஏனெனில் இவைகள் பாவத்தின் சாபத்திற்கு ஆளான மனுக்குலத்தின் வேதனையின் வெளியீடாக மட்டுமின்றி, பாவத்தை அழித்தொழித்து இறையவனின் நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற விழைவின் வெளிப்பாடாகவும் விளங்குகிறது.

தன் பாவத்தை உணர்ந்து ஏற்றுக் கதறுபவனின் முறையீட்டிற்குச் செவிகொடுக்காமல் இறைவனால் இருக்கமுடியாது (பாரூக் 3:8; தானி 9:11-15). இறைபணியாளன் தான் அநியாயமாய்த் துன்புறுத்தப்படுவதால் தனக்குள்ள பழிவாங்கும் உரிமையையும் இழந்து விடத் தயாராக உள்ளார். ''தன் வாயைத் திறவாமல்'' (எசா 53:7) அவர் தன்னையே நம்முடைய பாவத்தின் விளைவான சாபத்

திற்கு ஆளாக்குகிறார் (53:3தொ). ''இனிமேலாகச் சாபம் என்றுமேயிராது'' (செப் 14:11) என்று பாவத்தின் அழிவிற்காகக் காத்திருக்கும் வேளையில், அவருடைய மன்றாட்டு பாவிகள் மீட்பின் உத்தரவாதமாக விளங்குகிறது.

VI. சாபத்தை வென்றவர், இயேசுகிறிஸ்து:-

''இயேசுகிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்கள் எவருக்குமே இனிமேலாகத் தண்டனைத் தீர்ப்பு ஏதுமில்லை'' (திருவெளி 8:1); அவ்வாறே சாபம் எதுவுமில்லை. அவர் நமக்காகப் ''பாவமாகி'' (2 கொரி 5:21) நம் பொருட்டுச் சாபமாகித் தம்மையே பாவத்துடனும், அதன் விளைவான சாபத்துடனும் ஒன்றுபடுத்தி, ''சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொணர்ந்து'' (கலா 3:13), இறைவனின் ஆசியையும், அவர்தம் தூய ஆவியையும் பெறும்படி செய்துள்ளார். வார்த்தையானவர் புதிய காலங்களைத் தொடங்குவார். அக்காலத்தில் இயேசுவால் கூறப்பட்ட சாபச் சொற்களுக்கு அதன் உண்மையான பொருளில் இடமில்லை. அப்பொழுது, பேறுபெற்ற நிலையோடு (லூக் 6:20-26) கூடிய துயரமான நிலைமட்டும் இருக்கும். வெறுத்து ஒதுக்காமல், கவர்ந்து இழுக்கவும் (யோவா 12:32) சிதறடிக்காமல் ஒன்று சேர்க்கவும் செய்வார் (எபே 2:16).

வார்த்தையானவர் மனிதனை அவனது சபிக்கப்பட்ட விலங்குகளான சாத்தான், பாவம், கோபம், மரணம் முதலியவற்றினின்று விடுவித்து அன்பு செய்ய ஆளாக்கி விடுகிறார். தன் மகன் வழியாக நம் ஒவ்வொருவரையும் மன்னித்துள்ள பரம தந்தையானவர் தம் பிள்ளைகளாகிய நாம் எவ்வாறு சாபத்தை மன்னிப்பின் மூலமாய் (திருவெளி 12:14; 1 கொரி 13:5), அன்பின் மூலமாய் (மத் 5:44; கொலோ 3:13) வெற்றி கொள்ள வேண்டுமென்று கற்பிக்கிறார். கிறிஸ்தவன் இனிமேல் ஒருநாளும் சபிக்கலாகாது (1 பேதுரு 3:9), பழைய ஏற்பாட்டில் காணும் ''உன்னைச் சபிக்கிறவன் சபிக்கப்படுவான்'' என்ற கூற்றிற்கு மாறாக, ஆண்டவரைப் பின்பற்றி, ''சபிக்கிறவனுக்கு ஆசி கூற வேண்டும்'' (லூக் 6:28).

சாபமானது கிறிஸ்துவால் வெற்றி கொள்ளப்பட்டாலும், இன்றும் உண்மையில் அது நிலவுகிறது. ஆனால் இப்பொழுது அது தவிர்க்கமுடியாத அழிவின் நிர்ணயமாக இல்லை; ஆனால் அதே சமயம் எவரும் அதற்கு ஆளாகலாம். நாம் பெறக்கூடிய பெரும்பேற்றின் உச்சநிலையிலும், தொடக்கத்திலிருந்தே சாபத்தின் நிழலும் தொடர்ந்து வருகிறது. சாபம், தன் கடைசிநாட்கள் கணக்கிடப்பட்டுள்ளன என்பதைப் பயன்படுத்திக்கொண்டு (திருவெளி 12:12) மீட்பு நிறைவேற்றப்படும் நாட்களில் (8:13) தன் முழு நஞ்சினையும் வெளிப்படுத்துகிறது. ஆதலால் புதிய ஏற்பாடு பல சாபச் சொற்களைக் கொண்டுள்ளது. திருவெளிப்பாட்டில் ''இனிமேலாகச் சாபம் இருக்காது'' (22:3) என்ற மொழியினையும் அதே சமயத்தில் காண்கிறோம். அதே சமயம் ''தீமையை விரும்புவோர்களே, அழிந்தொழியுங்கள்'' (22:15); ''கொடிய மிருகமே செத்தொழி'' (22:12); ''மிருகமும், பொய்த் தீர்க்கதரிசியும் மறைந்தொழியுங்கள்'' (22:13); கோகு, மாகோகு போன்ற நாடுகளும் (20:7) விபசாரிகளும் (17), பாபேலும் (18), மரணமும், பாதாளமும் (20:14) இருளும் (22:5), உலகமும் (யோவா 16:33) இவ்வுலகின் சக்திகள் (1 கொரி 2:6) அனைத்தும் அழிந்தொழியட்டும் என்ற சொற்றொடர்களையும் காண்கிறோம். ''அழிந்தொழி'' என்ற சொல் மீட்பற்ற முழு அழிவினைக்குறிக்கும் சொல்லாக உள்ளது. இயேசு கிறிஸ்துவிடமிருந்து வந்தாலும் இதுபழிவாங்கும் குணத்தினால் அல்ல, தீமைக்குப் பதிலடியாகவுமல்ல, அது மிகவும் தூய்மையானது; மிகவும் பயங்கரமானது; அன்பு செய்ய மறுப்பவர்கள் தாங்களாகவே தேர்ந்து கொண்ட கேட்டின் விளைவாகும்.

இயேசு சபித்துத் தண்டிக்க வரவில்லை (யோவா 3:17;12:47); ஆனால் ஆசியினையும் பேற்றினையும் கொணர்ந்தார். தம் வாழ்நாளில் யாரையும் சாபத்தின் உண்மையான பொருளில் சபிக்கவில்லை. ஆனால் அதே சமயத்தில் தன்னில் தானே திருப்திப்பட்டுக் கொள்ளும் மக்களுக்கு எதிராகவும் (லூக்

6:24), கலிலேயாவில் விசுவசிக்க மறுக்கும் நகரங்களுக்கு எதிராயும் (மத் 11:21), சதுசேயர், பரிசேயர்களுக்கு எதிராகவும் (மத் 23:13-31), இஸ்ராயேலரின் சகல பாவங்களின் இருப்பிடமான சந்ததியாருக்கு விரோதமாயும் (23:33-36), ''மனுமகன் யாரால் கையளிக்கப்பட இருக்கிறாரோ'' அவனுக்கெதிராயும் (26:24) கடுஞ்சொற்கள் கூறி எச்சரிக்காமல் இருக்கவில்லை.

தன் கடைசி வருகையின்பொழுது, ''சபிக்கப்பட்டவர்களே என்னை விட்டகலுங்கள்'' (மத் 25:41) என்ற சாபச் சொல்லைத் தவிர உண்மையான சாபச் சொல் மனுமகனின் வாயில் வருவதில்லை. அந்நேரத்திலும் கூடத் தாம் சபிப்பதில்லை என்ற மனநிலையில் எவ்விதமாற்றமும் இராது என்று கூறுகிறார். ''என் வார்த்தையை எவனொருவன் கேட்டு, அதன்படி நடவாதிருக்கிறானோ, அவனைத் தீர்ப்பிடுவது நானல்ல; அந்தக் கடைசி நாளில் நான் கூறிய வார்த்தைகளே அவனைத் தீர்ப்பிடும்'' என்கிறார் (யோவா-12:47தொ).

சாபாஒத்து (SABAOTH - படைகள்)

யாவே சாபாஒத்து என்ற எபிரேயச்சொல்லின் இரேக்க வடிவம் ''சாபாஒத்தின் ஆண்டவர்'' - படைத்திரளின் ஆண்டவர் என்பதாகும். காண்க: படைத்திரளின் ஆண்டவர்.

சாபாது (ZABAD - கொடை)

1. யூதாவின் குலத்தைச் சேர்ந்த எரகுமவேலின் வழித்தோன்றல். நாத்தானின் மகனும், எப்லாலின் தந்தையுமாவார். எலிசாமாவின் வழித்தோன்றல்கள் பட்டியலில் இப்பெயர் வருகிறது (1 நாள் 2:36-37).

2. அடிமைத்தனையிலிருந்து நாடு திரும்பிய பின்பு எப்பிராயிம் வம்ச வரலாற்றில் யோசுவாவின் மரபுப்பட்டியலில் வருகிறது இப்பெயர். இவர் தாகத்தின் மகனும் எப்பிராயிமின் வழித்தோன்றலும் ஆவார் (1 நாள் 7:21).

3. அகிலாயின் மகன்; தாவீதின் ஆற்றல் மிக்க வீரர்களில் ஒருவர் (1 நாள் 11:41).

4. யோயதாவின் மகனான செக்கரியாவைக் கல்லால் எறிந்து கொல்லக் கட்டளையிட்டதற்காக அரசன் யோவாசு கொன்ற அவரது இரு ஊழியர்களில் ஒருவர். அம்மோனியரான சிமயாத்தின் மகன் (2 நாள் 24:26). 2 அரச 12:21-இல் இவர் யோசக்கார் என்று அழைக்கப்படுகிறார்.

5. எஸ்ராவின் சீர்திருத்தப்படி அன்னிய மனைவியரை நீக்கிவிட்ட ஒரு பொது நிலையினர். சத்துவின் புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:27).

6. 5-இல் உள்ளது போன்ற மற்றொரு பொதுநிலையினர். கத்துமின் (அற்றுமின்) புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:23).

7. 5-6-இல் உள்ளது போன்ற வேறொரு பொது நிலையினர். நெபோவின் புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:43).

சாபாத்து (SABATH)

காண்க, ஓய்வுநாள்

சாபாம் (SHAPHAM - வெறுமையான)

இவர் பாசான் நாட்டில் வாழ்ந்து வந்த காதின் குலத்தினர். இந்தக் குலத்திற்குத் துணைத்தலைவராக இருந்தார் (1 நாள் 5:11-12).

சாபாற்று (SHAPHAT - அவர் தீர்ப்பிட்டார்)

1. இவர் சிமியோன் கோத்திரத்தில் பிறந்த கோரியின் (ஓரி) புதல்வர் (எண் 13:5). மோசேயால் பாரான் பாலைவனத்திலிருந்து, கானானுக்கு இஸ்ராயேலர்கள் போகு முன்பே, உளவு அறிய அனுப்பப்பட்ட பன்னிரண்டு பேர்களில் இவரும் ஒருவர்.

2. இறைவாக்கினர் எலிசாவின் தந்தை. இவர் அபல் - மெகோலாவிலிருந்து வந்தவர் எனக் கருதப்படுகிறது. இந்த நகர் தற்போது யோர்தான் நதிக்கு அருகிலுள்ள மனாசே பகுதிக்குக் கிழக்கு எல்லையில் இருக்கிறது (யோர்தான் நதிக்கருகில்) என்று எண்ணப்படுகிறது. இருந்தாலும் நகரம் இருந்த இடம் உறுதியாய்த் தெரியவில்லை.

எலியா இறைவாக்கினருக்குப் பதிலாக, நிய மனம் செய்யப்பட்ட கால கட்டத்தில், சாபாற்று வாழ்ந்து வந்தார் (1 அர 19:16;19.20; 2 அர 3:11; 6:31).

3. இவர் செமாயாவிற்குப் பிறந்த ஆறு புதல்வர்களில் இறுதியானவர். செருபாபே லுக்குப் பேரன். இவர் தாவீது குலத்தின் வழியில் பிறந்தவர் (1 நாள் 3:22).

4. பாசான் நாட்டில் வாழ்ந்த காதின் வழி வந்தவர் (1 நாள் 5:12).

5. அதிலாயின் மகன். இவர் பள்ளத்தாக்கு களிலுள்ள மாடுகளைக் கண்காணித்து வந் தார். இம்மாடுகள் தாவீது அரசனுக்குச் சொந் தமானவை (1 நாள் 27:29).

சாபான் (SHAPHAN - குழிமுயல்)

1. ஒரு குடும்பத்தின் தலைவர். யோசியா வின் ஆட்சிக்காலத்திலும், யூதாவின் அர சாட்சி இறுதி நாட்களிலும், எரேமியா வாழ்ந்த காலத்திலும், நடந்த நிகழ்ச்சிகளில் புகழ்பெற்று விளங்கியது இக்குடும்பம். இவர் யோசியாவின் காலத்தில் யோசியா வுக்குச் செயலராகவும் ஆலயத்தின் நிதி அதிகாரியாகவும் இருந்தார். இவர் புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட ''சட்டப் புத்தகத்தைக்'' இலிகியா (இலிகியா) என்ற குருவிடமிருந்து கொண்டு வந்து, யோசியாசிடம் கொடுத் தார் (2 அர 22:3-13; 2 நாள் 34:8-20). மேலும் இவர் இப்புதிய புத்தகம் பற்றிக் குலிதா (உல்தா) இறைவாக்கினரிடம் ஆலோசித்து வர, அனுப்பப்பட்டவர்களில் ஒருவர் (2 அர 22:14). சாபானும், அவரது புதல்வர்க ளும், யோசியாவின் சீர்திருத்தத்திற்கு நண் பர்களாயும், எரேமியாவின் சிறந்த ஆதரவா ளர்களாயும் இருந்தார்கள். இவருடைய புதல்வர்களில் ஒருவரான அகிக்காம் ஓர் அரசவை அலுவலர்; சட்டப்புத்தகக் கண் டெடுப்பில் பங்கு கொண்டவர் (22:11.14). யோயாக்கிம் அரசரின் காலத்தில், ஒரு கூட் டத்தின் கைகளில் இறக்கும் தறுவாயில் இருந்த எரேமியாவைக் காப்பாற்றினார் (எரே 26:24). இறைவாக்கினர் சாபானின் மற்றொரு புதல்வரான எலாசா மூலம் நாடு கடத்தப்பட்டவர்களுக்குத் தனது புகழ் பெற்ற கடிதத்தைக் கொடுத்தனுப்பினார் (எரே 29). யோயாக்கிம் காலத்தில் சாபா னின் மற்றொரு மகனான கெமரியாவின் வீட்டிலிருந்து பாருக்கு மக்களுக்கு எரேமி யாவின் வார்த்தைகளை ஓலைச்சுருளி லிருந்து வாசித்தார் (எரே 36:10-12). எரேமியா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு, சாபானின் மகனாகிய அகிக்காமின் மகன் கெதலயாவின் பொறுப்பில், அனுப்பிவைக் கப்பட்டார் (எரே 39:14; 40:5). இவர்கள் எல்லாம் சாபானின் புதல்வர்கள்தான் என்று அறிஞர் சிலர் ஐயம் எழுப்புவர். ஆனால் கால ஒருமைப்பாடும் நாட்டின் வரலாற்றில் இவர்கள் கொண்டிருந்த முக்கி யத்துவமும் இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று சுட்டுகின்றன.

2. இவர் யாசானியாவின் தந்தை. மக்க ளைச் சிலை வழிபாட்டுக்குத் தூண்டுபவ ராக இவரை எசேக்கியேலின் காட்சிகளில் ஒன்று வெளிப்படுத்தியது (எசே 8:11).

சாபீர் (SHAPHIR - அழகான)

இது மீக்காவின் இறைவாக்கிலே, சொல் லாடல் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஓரிடம்.

இந்த இடம், கெபிரோனுக்கு (எபிரோன்) மேற்கில் 13 கிலோமீட்டர் தொலைவிலுள்ள கிர்பெத்து ஏல் - கோமாக இருக்கலாம் என்று பெரும்பாலும் நம்பப்படுகிறது. வாடி எஸ் -சப்பார் என்ற பெயர் சாபீரின் அரேபியத் தழுவலாக இருக்கலாம்.

சாபு (SHAAPH - பிளவுபட்ட)

எரகுமவேலின் சகோதரரான காலேபின் வழித்தோன்றல்கள் இருவரின் பெயர்.

1. காலேபின் வழித்தோன்றலோ, மனை வியோ வைப்பாட்டியோ ஆன யகுதாயின் (எகிதாயின்) கடைசி மகன் (1 நாள் 2:47).

2. காலேபுக்கும் அவரது வைப்பாட்டி மாக்காவுக்கும் பிறந்த மகன் மத்மன்னாவின் தந்தையாவார் (1 நாள் 2:49).

சாபூது (ZABUD - கொடுக்கப்பட்ட, கொடை)

நாத்தானின் புதல்வர். இவர் ஒரு குருவாகவும், சாலமோனின் அரச நண்பனாகவும் சேவை செய்தார் (1 அர 4:5).

சாபோன் (ZAPHON - வடக்கு)

சுக்கோத்துப் பள்ளத்தாக்கிற்கு வடக்கேயுள்ள காதுவுக்குச் சொந்தமான ஒரு நகரம். முன்பு சீகோன் ஆட்சிக்குட்பட்டது (யோசு 13:27). கானானியர்களின் முக்கியமான தெய்வமான பாகால் - செபோனின் திருத்தலமாக இருந்திருக்கலாமென்று இதன் பெயர் குறிப்பிடுகின்றது. 19-ஆம் அரசமரபைச் சேர்ந்த எகிப்திய ஏடுகளில் இப்பெயர் சபுனா என்று காணப்படுகிறது; அமர்னா ஏடுகளிலும் இது சபுனா என்றுள்ளது; 'சிங்கங்களின் தலைவி', எனப்படும் அரசிளங்குமரியின் இருப்பிடமாக இது கொடுக்கப்பட்டுள்ளது. இவள் எகிப்தின் உதவியை நாடினாள். இபிதாகு (இப்தாகு) அம்மோனியரைத் தோற்கடித்துத் திரும்பியபோது, எப்பிராமியர் தங்களையும் ஏன் இப்போரில் சேர்த்துக் கொள்ளவில்லை என்று இபிதாகுவிடம் கேட்டனர் (நீதி 12:1). அதன்பின், சாபோனில் நடந்தபோரில், எப்பிராயிமியர் தோற்கடிக்கப்பட்டனர் (நீதி 12:1-6). காதின் ஒரு குலமாகிய செபோனியர் (எண் 26:15) அல்லது சிபோனியர் (ஆதி 46:16) தங்களது பெயரை இந்நகரத்திலிருந்து எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

சாபோன் இருந்த இடமாகக் கருதப்பட்ட, வாடி இரசேப்புக்கு வடக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் இக்காலத் தேல் ஏல்-கோசு, இப்போது அவ்வளவு ஆதரவு பெறுவதில்லை. ஏனெனில் அங்குப் பின்வெண்கலக்காலச் சிதைவுகள் காணப்படுகின்றன. சாபோன் இருந்த இடமாகப் பொதுவாகத் தேல் எஸ்-ஸா இதியேயும், தேல் ஏல் - மாசாரும் அடையாளம் காட்டப்படும்.

2. கானானிய இதிகாசங்களில், இது கடவுள் பாகால் வசிக்கும் மலையாகும். ஒரு காலத்தில் இப்பெயர், மத்திய தரைக் கடற்கரையில் இராஸ் சம்ராவுக்கு (பழைய உகாரித்து) வடக்கில் 48 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு மலையைக் குறித்தது. பழங்கால இதிகாசங்களைப் பொறுத்த அளவில், இந்த இடம் மக்களுக்கு ஏற்றவாறு இடமாறியது. இந்த இதிகாசம் பற்றிய எபிரேய விளக்கம் சங் 48:2; எசா 14:13 போன்ற வாசகங்களுக்குப் பின்னணியாக இருக்கலாம்.

சாமா (SHAMA - கடமையுணர்வுடைய)

ஆரோயேரியரான கோதாமின் (ஓதாம்) இரு புதல்வர்களில் இவரும் ஒருவர். இவர் தாவீதின் முப்பது ஆற்றலில் மிக்க வீரர்களில் ஒருவர் (1 நாள் 11:44).

சாமீர் (SHAMIR - கூரிய முனை, முள்) - ஆள்

மீக்காவின் மகன். ஒரு கோகாத்திய லேவியர் (1 நாள் 24:24;23:12-20).

சாமீர் (SHAMIR - கூரியமுனை, முள்) - இடம்

1. இது தெபீர் மாவட்ட மலைப் பகுதியில் பெயர் - செபாவுக்கு வடக்கில் இருக்கும் ஒரு யூதாவின் ஊர் (யோசு 15:48). கெபிரோனுக்கு (எபிரோன்) மேற்கு தென் மேற்கில் 20 கிலோமீட்டர் தொலைவிலுள்ள கிர்பெத்து சொமெரா இதே பெயரைக் கொண்டிருந்தாலும், இன்னும் இரு கிலோமீட்டர் வடக்கிலுள்ள ஏல் - பிரே என்ற இடமே சாமீராக இருக்கலாம்.

2. எப்பிராயிம் மலைப்பகுதியில் இருக்கும் ஓர் ஊர். இப்பகுதியை இசக்கார் கோத்திரத்தாரான தோலா என்ற நீதிபதி ஆண்டு வந்தார் (நீதி 10:1-2). இது சமாரியாப் பகுதியில் இருந்திருக்கலாம்.

சாமு (SAMOS - மிக உயர்ந்த இடத்தின் உச்சி)

இது ஏகியன் கடலில் தென் கிழக்கிலுள்ள அயோனியத் தீவுகளில் ஒன்று. இது எபேசுக்குத் தென் கிழக்கிலும், மிலேத்துக்கு வட கிழக்கிலும் உள்ளது. இது கிழக்கு மேற்காக 44 கிலோமீட்டர் நீளமும், 24 கிலோமீட்டர் அகலமும் கொண்ட பரப்பளவைக் கொண்டது. இதன் தலைநகர் சாமு பவுலின் காலத்தில் ''சுதந்தர நகர்'' என்று அழைக்கப்பட்டது. இது பித்தகோரசு பிறந்த இடமாகும். முந்தைய காலத்தில் இந்தத் தீவு கடற்படை

ஆற்றலுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இது கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் போலிகிராந்து காலத்தில் சிறப்புப் பெற்றது. கி.மு. 479 - இல் சாமுவுக்கும் துரோகில்லியுமுக்கும் இடையில் கிரேக்கர்களால் பாரசீகர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அங்கே யூதர்கள் கி.மு. 2 -ஆம் நூற்றாண்டில் குடியேறியிருக்கின்றனர் என்று 1 மக் 15:23 - இலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இது கி.மு. 84 - இல் உரோமையரின் ஆசியா மாகாணத்தின் ஒரு பகுதியாயிற்று. ஆனால் கி.பி. 17-இல் உரோமையர் ஆட்சியில் சுதந்தரமாகச் செயல்பட்டது. பவுல் எருசலேமுக்குச் சென்ற இறுதிப் பயணத்தில், அவரது கப்பல் சாமுத் தீவை ஒட்டியோ, சாமுத் தீவுக்குப் பக்கத்திலோ, தீவில் தங்கியோ சென்றிருக்கின்றது. இது அ.ப. 20:15-இலிருந்து தெரியவருகிறது.

சாமுவேல் (SAMUEL - ஏலின் பெயர்)

கி.மு. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் இறைவாக்கினர். இஸ்ராயேலை ஆட்சி செய்த இறுதிநீதிபதியாகக் (விடுதலை வீரராகக்) கருதப்படுபவர் (அ.ப. 13:20). ஒரு லேவியர் (1 நாள் 6:28.33). எல்கானா, அன்னா ஆகியோரின் தவப் புதல்வன் (1 சாமு 1:20).

''ஆண்டவரிடம் மன்றாடி''ப் (1:10) பிறந்தவர். சாமுவேல் பையனைச் சவரக் கத்தியே படாது ஒப்புக் கொடுப்பதாக அன்னா வாக்களித்திருந்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு (பையன் பால்குடி மறந்ததும்) அவனைச், சிலோவில் குருவாக இருந்த ஏலியிடம் ஒப்படைத்தார் (1:11.24-28). சாமுவேல் ஏலியின் மேற்பார்வையில் சிலோவிலுள்ள புனித இடத்தில் இறைவனுக்குப் பணிபுரிந்தார். ''ஆண்டவர் திருமுன்'' வளர்ந்தார் (2:21). ''ஆண்டவரின் வாக்கு அரிதாக இருந்த'' (3:1) இருண்ட காலத்தில், யாவே பையனிடம் அடிக்கடி பேசினார். பையனின் பெருமை இஸ்ராயேல் முழுவதும் பரவியது (3:20-21). குறிப்பாக ஏலியின் புதல்வர்களின் தீய நடத்தைக்காக அவரது வீட்டுக்கு எதிரான தீர்ப்பை இறைவாக்கு உரைக்கச் சாமுவேலை இறைவன் பணித்தார்.

அபேக்கு என்னுமிடத்தில் இஸ்ராயேலர் படுதோல்வி அடைந்து பெலிஸ்தியர்களிடம் உடன்படிக்கைப் பேழையை இழந்த இருபது ஆண்டுகளுக்குப்பின், சாமுவேல் நீதிபதி அல்லது விடுதலை வீரரானார். இஸ்ராயேல் இனத்தவரை ஒன்றுகூட்டி, உடன்படிக்கையைப் புதுப்பித்து மிஸ்பா என்னுமிடத்தில் பெலிஸ்தியர்களிடமிருந்து இஸ்ராயேலர்களுக்கு விடுதலை அளித்தார். சாமுவேல் ''தம்வாழ்நாள் முழுவதும் இஸ்ராயேலுக்குத் தலைவராக இருந்தார். ஆண்டுதோறும் சுற்றுப்பயணம் செய்து பெத்தேல், கில்கால், மிஸ்பா ஆகிய இடங்களில் எல்லாம் இஸ்ராயேலுக்கு நீதி வழங்கினார் (17:15-16).

சாமுவேலின் மிகப்பெரிய பங்கு, இஸ்ராயேலில் அரசாட்சிமுறை நிறுவப்பட்டதில் அவர் செயலாற்றிய விதமாகும். அவருக்கு வயது முதிர்ந்தபோது, தனது புதல்வர்களாகிய யோவேல், அபியா ஆகியோரை நீதிபதிகளாக நியமித்தார். ஆனால் அவர்கள், ஏலியின் மக்களைப் போல் ஊழல்மிக்கவர்களாக இருந்தனர்: பொருளாசைப்பட்டுக் கையூட்டு வாங்கினர்; நீதி வழங்கவில்லை (8:1-3). இந்தத் தோல்வியும், தங்களைப் போருக்கு இட்டுச் செல்ல ஓர் அரசன் வேண்டும் என்ற விருப்பமும், ''அனைத்து வேற்றினங்களிடையே இருப்பது போன்று'' தங்களுக்கும் ஓர் அரசனை நியமிக்க வேண்டும் என்று இறைவாக்கினரிடம் விண்ணப்பிக்க இஸ்ராயேலின் பெரியோர்களைத் தூண்டின (8:4-5.20). சாமுவேல் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லையாயினும், யாவேயின் கட்டளைக்குப் பணிந்து, அவர்களின் விண்ணப்பத்திற்கு இணங்கிச் சவுலை அரசனாக அபிடேகம் செய்தார் (9:1-10:16. 17-27; 11:15). அதே சமயம் அரசாட்சியால் வரும் கேடுகளைப் பற்றியும் மக்களை எச்சரித்தார் (8:11-8). அரசனுடைய உரிமைகளையும் கடமைகளையும் மக்களுக்கு எடுத்துரைத்து, அவற்றை ஓர் ஏட்டில் எழுதி, ஆண்டவர் திருமுன் வைத்தார் (10:25). புதிய அரசன் சாமுவேலின் இறைவாக்கு அலுவலை அபகரித்துக் கொண்டு (13:8-14) ஆண்டவரது

வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதபோது (15:22-23), சவுலின் அரசத்தன்மையை நிராகரித்து (15:26-29), அவருக்குப் பதிலாகத் தாவீதை அபிடேகம் செய்யும்படி (அதி 16) யாவே சாமுவேலுக்குப் பணித்தார்.

சவுலை மக்களுக்கு அரசனாக அளித்த பின், சாமுவேல் தனது நீதிபதி அலுவலைத் துறந்தார். மக்களுக்கு அளித்த பிரியாவிடையில் தனது நிலையான எடுத்துக்காட்டான வாழ்க்கையை மக்களுக்கு நினைவுபடுத்தினார். யாவேக்கு மரியாதையோடும் பிரமாணிக்கத்தோடும், பணி செய்யும்படி கட்டளையிட்டார். அவர்கள் தீயவழியில் சென்றால் வரவிருக்கும் பேரழிவுகளைப் பற்றியும் எச்சரித்தார் (அதி:12). பின்பு இராமாவிலுள்ள தன் இல்லத்திற்குத் திரும்பி அங்கு வாழ்ந்தார். தாவீதைச் சவுல் கொடுமைப் படுத்தியபோது சாமுவேல் இறந்தார். இஸ்ராயேலர் அனைவரும் ஒன்றுகூடி அவருக்காகத் துக்கம் கொண்டாடினர். பின்பு இராமாவில் அடக்கம் செய்தனர் (25:1). பிற்காலத் தலைமுறைகள், இறைவனால் அன்பு செய்யப்பட்டவராகவும், மோசேக்கு மட்டுமே அடுத்தபடியிலுள்ள பரிந்துரையாளராகவும் சாமுவேலைக் கொண்டாடிப் பெருமைப் படுத்தின (சங் 99:6; எரே 15:1; சீரா 46:13-20; 45:1).

சாமுவேலின் ஆளுமை அவர்காலத்து மக்களிடையே ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தியது. அவரது பதவி, ஆளுமை மற்றும் அரசாட்சி ஏற்படுத்துவதில் அவரது பங்கு ஆகியவை புராணப் பண்புகளாலும், அவை பற்றிய பாரம்பரியங்களில் காணப்படும் முரண்பாடுகளாலும் போர்த்தி மறைக்கப் பட்டுள்ளன. எனவே வரலாற்று உண்மைகளைப் பிரித்தெடுக்கும் எந்த முயற்சியும், இந்நிகழ்ச்சியுரைகளின் புராணப் பண்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். வரலாற்று உண்மைகளை நிராகரிக்கவோ, ஐயப்பாடுடையவற்றை ஏற்கவோ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

சாமுவேலின் பதவி:- சாமுவேல் இராமா நகரைச் சேர்ந்த ஒரு முக்கியமான செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர் (1 சாமு 1:1). நாளாகமம் அவரை 'லேவியின் ஒரு மகனாக'க் குறிப்பிட்டாலும் (1 நாள் 5:28), அவர் எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவர்.

''இறைமனிதராகவும்'', ''திருக்காட்சியாளராகவும்'', ''இறைவாக்கினராகவும்'', ''இஸ்ராயேலின் இறுதி நீதிபதியாகவும்'' மக்கள் அவரைப் போற்றினர். இஸ்ராயேல் முழுவதிற்கும் அவர் நீதிபதியாக விளங்கினார் (8:4-5) என்று உறுதியாகக் கூறமுடியாது. அவர் சமய காரியங்களிலும் அதிகாரம் கொண்டிருந்தார் என்பது போதியமட்டும் தெளிவாகிறது. இராமாவிலுள்ள தொழுகை மேட்டில், சாமுவேல் ஆசீர் வழங்குவதற்குமுன் மக்கள் தங்கள் பலியுணவைத் தொடங்க மாட்டார்கள் (9:13). பலிக் கூட்டங்களில், அவர் விருந்தினரை அழைக்கலாம்; கட்டளையிடலாம்; வழிபடுவோரின் வரிசையைத் திட்டமிடலாம் (9:22-24). அவர் அபிடேக எண்ணெயை வைத்திருந்தார்; அல்லது அதைத் திருநிலைப்படுத்தலாம் (10:1). கொள்ளைப் பொருட்களையும், போர்க்கைதிகளையும் அழிவிற்கு அர்ப்பணம் செய்யலாம் (15:3). அரசனின் காணிக்கை அளிக்கும் உரிமையை மறுக்கலாம் (10:8; 13:13). இந்த வழிபாட்டுச் சலுகைகளும், அரசனைத் தேர்ந்தெடுக்கும் சடங்கைத் தயாரிப்பதில் சாமுவேலின் பாகமும், அவரது காலத்தில் அவர் இஸ்ராயேலின் முதன்மை சமயத்தலைவராகத் திகழ்ந்தார் என்று சுட்டுகின்றன.

இஸ்ராயேலில் இறைவாக்கினர் குழுவோடு அவர் ஓரளவு தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிகிறது (10:5-6; 10:18-24). அவர் இறைவாக்கு இயக்கத்தின் ஒரு நபராகவோ தலைவராகவோ இருந்தார் என்று உறுதியாகக் கூறமுடியாது. கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் பெரும் இறைவாக்கினர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்களில் சாமுவேலும் ஒருவர் என்று உறுதியாகக் கூறலாம்.

அரசாட்சி நிறுவப்படுவதில் சாமுவேலின் பாகம்:-

சவுல் அரசனாக அபிடேகம் செய்யப்பட்டதில் சாமுவேலின் பாகம் என்ன என்று துல்லியமாக விவரிக்கமுடியாது. ஆனால் இஸ்ராயேலில் அரசாட்சி அறிமுகப்படுத்தப் படுதலில் அவரது பாகம், தீர்மானமானது என்று மூன்று பாரம்பரியங்கள் சான்று கூறுகின்றன (எலோகிம் பாரம்பரியம்: 10:17-21; யாவே பாரம்பரியம்:10:1-16; குருக்கள் பாரம்பரியம்: 10:21-27). எலோகிம் பாரம்பரியத்தில் ஆண்டவரும் சாமுவேலும் அரசாட்சிக்கு எதிர்ப்பாய் உள்ளனர். ஆனால் யாவே பாரம்பரியம் பரிவான மனப்போக்கைக் காட்டுகிறது. இந்த வரலாற்றைத் திருத்தியமைக்கும் முயற்சியில் தொடக்கத்தில் சாமுவேல் அரசாட்சிக்கு எதிராக இருந்திருக்கலாம்; ஆனால் பிற்பாடு பெலிஸ்தியர்களின் ஆதிக்கத்தை எதிர்கொண்டபோது தனது மனதை மாற்றி அரசாட்சி அறிமுகப் படுத்தப்படுவதில் ஆக்க பூர்வமான பங்கெடுத்திருக்கலாம் என்று கருதலாம். இறைவனது ஆட்சியின் உலகியல் பிரதிநிதியாக அரசனைச் சாமுவேல் கருதியிருக்கலாம். ஆகவே இறைவனது வார்த்தைக்கு முழுவதும் அரசன் கீழ்ப்படியவேண்டும் என்று கோரினார். இது இரண்டு நிராகரிப்பு நிகழ்ச்சிகளிலிருந்தும் தெளிவாகிறது (1 சாமு 13; 15). சவுலுக்குத் தனது ஆதரவை எடுத்துக் கொண்டபின், சாமுவேல் மற்றொரு இறையாட்சிப் பிரதிநிதியைத் தேடிப் போர்வீரரான தாவீதை அப்படிப்பட்ட பிரதிநிதியாகக் கண்டிருக்கலாம். இக்கருத்து வரலாற்றோடு ஒத்துப்போகக் கூடியது.

சாமுவேல் திருநூல்கள் (1, 2 SAMUEL,BOOKS OF)

1. பெயர்:

மாசரேட்டிக்கு வாசகத்தில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டுவரை, இரு சாமுவேல் ஆகமங்களும் ஒரே தொடர்ச்சியான நூலாக இருந்தது என்பர். இக்கூற்றுக்கு எரோனிமு, யுசேபியு போன்றவர்கள் சாட்சி கூறுகின்றனர். ஆனால் வெகு காலத்திற்கு முன்பே எழுபது நூல், இந்நூலை இரு நூல்களாகப் பிரித்து அவற்றை 1, 2 அரசராகமங்கள் என்றழைத்தது. இதைப்பின்பற்றி ''வுல்கத்தா'' வாசகம், இவற்றை 1. 2 அரசராகமங்கள் என்று அழைத்தது. இதைப் பின்பற்றிக் கத்தோலிக்க மொழிபெயர்ப்புகள் அப்படியே அழைத்தன. தமிழிலும் அதையே பின்பற்றினோம். ஆனால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்து எபிரேய வாசகங்கள் இவற்றை 1, 2 சாமுவேல் ஆகமங்கள் என்றழைத்தன. இதைப் பின்பற்றி இப்போதுள்ள நமது கத்தோலிக்க விவிலியப் பதிப்பு இந்நூல்களை 1, 2 சாமுவேல் ஆகமங்கள் என்றழைக்கிறது.

எபிரேய வாசகத்தில் எப்படி இப்பெயர் வந்தது? பழைய ஏற்பாடு நூல்களில் பெரும்பாலானவற்றை இறைவாக்கினர் எழுதினார்கள் என்பது ஒரு யூத பாரம்பரியமாகும். மேலும் நூலின் தொடக்கத்தில், 1, சாமு 1-15இல், சாமுவேலின் வாழ்க்கையும் செயல்களும் வருகின்றன. அவரதுவாழ்வு சிறப்புப் பெறுகின்றது. இதன் விளைவாக. இரு பகுதிகளையும் கொண்ட எபிரேய மூல நூலுக்கு அவரது பெயரே தலைப்பாயிற்று.

2. ஆசிரியர்:

யூத இலக்கியம் ''தால்மூது'' இந்நூலுக்குச் சாமுவேல்தான் ஆசிரியர் என்று நம்பிக்கையோடு கூறுகிறது. இந்நம்பிக்கை 1 நாள் 29:29-இல் வரும் கூற்றின் விளைவாக இருக்கலாம். ஆனால் இப்படி இந்நூல்கள் சாமுவேலுக்குச் சாற்றிக் கூறுவதை நிபந்தனையின்றி நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், சாமுவேலின் இறப்பு 1 சாமு 25-இல் கூறப்படுகிறது. முதல் சாமுவேல் ஆகமத்தில் வரும் நிகழ்ச்சிகளில் சாமுவேல் கொண்டிருக்கும் ஆதிக்கத்தினால் இந்நூல்களைச் சாமுவேல் எழுதியதாகக் கூறப்பட்டது என்று கருதுவது மேலானது. காலப்போக்கில் திருக்காட்சியாளரான சாமுவேலின் பெரும் பெயரும், அவரது செயல்களில் காணப்பட்ட இறையாற்றலும், இந்நூலுக்குச் சாமுவேல்தான் ஆசிரியர் என்ற கருத்து வளர்ந்து வழக்கில்வர ஏதுவாயிற்று. மற்றப்படி இந்நூல் எழுதப்படுவதில் சாமுவேல்

எப்பங்கும் கொண்டிருந்தார் என்று நம்புவ தற்கு எக்காரணமும் இல்லை.

இந்நூல்களைக் கவனத்தோடு வாசித்தா லும், இவை ஒரே ஓர் ஆசிரியரது வேலைப் பாடன்று என்பது தெளிவாகும். பல பேர் வெவ்வேறு காலத்தில் இந்நூல் தொகுப்பு வேலையில் பங்கு கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

3. எப்படித் தோன்றின? மூலங்கள்:

இந்நூல்கள் எப்படித் தோன்றின என்பது பற்றிப் பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. விவிலிய அறிஞர்கள், சிலரின் கருத்துப்படி ஏற்கனவேயிருந்த முந்தைய ஏட்டு மூலங் களிலிருந்து இந்நூல்கள் தோன்றின. இவ் வேடுகள் யாவே, எலோகிம் பாரம்பரியங்க ளால் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதற்கு மாறாக, அறிஞர்கள் வேறுசிலர் ஏட்டு மூலக் கருதுகோளுக்குப் போதிய சான்றுகள் இல்லை என்று கருதினர். வெவ்வேறு இலக் கியச் சூழ்நிலைகளில் தோன்றிய வேறுபட்ட பாரம்பரியங்களின் தொகுப்பிலிருந்து இவ் விரு ஆகமங்களும் தோன்றின. தனிப்பட்ட பாரம்பரியங்கள் மக்களிடையிலும் அரசமன் றத்திலும் தோன்றின. இவை ஏற்கெனவே யிருந்த பல நிகழ்ச்சி விவரிப்புகளைக் கொண் டிருந்தன. இவ்விவரிப்புகளின் தொகுப்பும் கலப்பும் ஒன்று சேர்ந்து ஒரே பாரம்பரியமா கியது. இது திருத்தியமைக்கப்பட்டு, இறை வாக்கு அமைப்புகளோடு சேர்ந்து, இறை யியல் விளக்கம் பெற்ற ஒரு முழு வரலாறாக உருவெடுத்தது. இது உபாகமப் பாரம்பரியத் தால் பாதிக்கப்பட்டு, அப்பாரம்பரிய ஆசிரி யர்களால் திருத்தப்பெற்றது. இதில் பிற்கா லத்தில் சில காவியப் பகுதிகள் புகுத்தப் பட்டு நாம் கொண்டிருக்கும் வடிவில் நூல் உருவெடுத்தது என்பர். இப்படித் தோன்றிய தொகுப்புநூல் வாரிசு விவரிப்பைக் கருப் பொருளாகக் கொண்டு, சாமுவேல் நூல்கள் தோன்றின என்று அறிஞர் சிலர் கருதுகின் றனர். இப்படித் தாவீது அரசு எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கக் கூடியது என்று காட்டிடும் பொருட்டு இந்நூல்கள் தோன்றின. இக் கருத்தை மையமாகக் கொண்டு பிற நிகழ்ச்சி யுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அரசு நிறு வப்படுதல், தாவீதை அபிடேகம் செய்தல் இவை போன்ற யாவும் வாரிசு நிகழ்ச்சியை ஒட்டித் தொகுக்கப்படுகின்றன.

இந்நூல்களின் தோற்றத்தில் பல மூலங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளைக் கொடுக்கலாம். (1) வாசகங்களில் வரும் எதிர்மறைத் தோற்றம் *(1 சாமு 7:13-யை 9:16 ஓடும், 13: 14-ஐ 19:22. 24-ஓடும் ஒப்பிடுக). (2) திடீர் மாற்றங்கள் (1 சாமு 1-3-ஐ 4-6 ஓடும் ஒப்பிடுக. (3)* மீண்டும் மீண்டும் வரும் இரட்டிப்பு நிகழ்ச்சி யுரைகள் (சவுலின் அபிடேகம், சவுலைத் தாவீது முதன்முறை சந்தித்தல், சவுல் தாவீதை ஈட்டியால் குத்த முயற்சித்தல், தாவீது சவுலைக் காத்தல்) (4) தொனியிலும் நடையிலும் இறையியல் போக்கிலும் காணப்படும் வேறுபாடுகள்.

இந்நூல் -தோன்ற உதவிய மூலங்களை வேறுபடுத்துவது அவ்வளவு எளிதான தில்லை. என்றாலும், பின்வருவன தெளி வாக வேறுபடுத்தப்பட்ட மூலங்களாகத் தோன்றலாம்.

(1) நீதிபதிகளோடு தொடர்புடைய மூலம் *(1 சாமு 1-3; 15:1-16:13).*

(2) பெட்டகத்தோடு தொடர்புடைய மூலம் *(1 சாமு 4-7:1;2 சாமு 6).*

(3) மன்னராட்சியின் தோற்றம் பற்றிய இரு வகை மூலம் (மன்னராட்சிக்கு மாறாக *1 சாமு 7:2-8:22; 10:17-24; 12; 13:8-14; 15;* மன்னராட்சிக்குச் சார்பாக:*1 சாமு 9:1-10:16; 11:1-11.15; 13:1-7.15-23).*

(4) ஆட்டு இடையன் பையனிலிருந்து அரச னாக உயர்ந்தது பற்றி இரு இணையான பாரம்பரியம் *(1 சாமு 16-2 சாமு 5).*

(5) தாவீது பற்றிய அரச மரபு வரலாறு *(2 சாமு 9-20).*

(6) தாவீது பற்றிய சிறு துணுக்குகள் அடங் கிய தொகுப்பு.

நாம் சாமுவேல் ஆகமங்களை வாசிக்கும் போது திட்டக் குறைவையும், ஓர் அளவு இணைப்பற்ற நிலையையும் விரைவில் உணரலாம். இதனால் மயக்கம் அடைய வேண்டியதில்லை. இந்நூல்களில் நாம் கால நடை ஒழுங்குகளைக் காண விழையக் கூடாது. இந்நூல் ஆசிரியர்கள் தாங்கள் தொகுத்தவற்றிடையே உறுதியான காரண காரியத் தொடர்பை அமைக்க முயற்சிக்க வில்லை. இக்கால ஆசிரியர்கள் செய்யக் கூடிய அளவில் வேறுபாடுகளைச் சல்லடை போட்டு நீக்கி விட முயற்சி செய்யவில்லை. தங்களது வாசகர்கள் எதிர்பார்த்த அளவிற் குத் தங்கள் தொழிலைச் செய்தனர். ஒரு குறிப்பிட்ட செயலைப் பற்றிய விவரிப்புகள் தங்களுக்குள்ளே ஒத்துப் போகவில்லை என் றாலும், தங்களுக்குக் கிடைத்த விவரிப்பு களை உள்ளடக்கிய ஒரு நிகழ்ச்சி உரை நூலைத் தொகுத்தனர்.

இத்தொகுப்பில் உபாகமப் பாரம்பரியம் பரவி நிற்கிறது. ஆசிரியர் தனது மூலங்க ளைப் பயன்படுத்தும் முறையும், அவற்றை ஒழுங்குபடுத்தும் முறையும் அவற்றிற்கு அளிக்கும் விளக்கங்களும் இதைத் தெளிவு படுத்தும். இப்பாரம்பரியமே, ஆசிரியரின் நோக்கையும் எடுத்துக் காட்டுகிறது. இது பற்றிப் பின்பு பார்ப்போம். மூலங்களை ஒழுங்குபடுத்தும் முறை வாசகர்களைத் தாவீதுக்கும் அவரது அரசமரபுக்கும் உறுதி யாகவும் வேகமாகவும், இட்டுச் செல்கிறது. தாவீது அரசு எக்காலத்தும் நிலைத்திருக்கும் என்பதை மூலங்களைப் பயன்படுத்தும் முறையால் சுட்டிக் காட்டுகிறார்.

ஆசிரியர் சாமுவேலோடு தொடங்குகி றார். ஏனெனில் மன்னராட்சியை நிறுவுவ தற்கு இறைவன் பயன்படுத்தும் கருவி சாமு வேல்தான். ஆகையால் சாமுவேல் பற்றிய மூலத்திலிருந்து சாமுவேல் ஓர் இறைவாக்கி னர் (1 சாமு 1-3), அவர் ஒரு நீதிபதி (7:3-17) என்று நிலைநாட்டுவதற்கு வேண்டியதை மட்டும் ஆசிரியர் எடுத்துக் கொள்ளுகிறார். 4:1-7:-இல் பெட்டகம் பற்றிய மூலத்தைப் புகுத்துகிறார். ஏனெனில் அது, சாமுவேல் 3:18-இல் இறைவாக்காக முன்னறிவித்தது நிறைவேறுகிறது என்று காட்டுகிறது. இப்படி யாக சாமுவேல் ஓர் உண்மையான இறை வாக்கினர் என்று உறுதிப்படுகிறது. இது மன்னராட்சியை நிறுவுவதில் சாமுவேலுக் குரிய அதிகாரத்தையும் உறுதிப்படுத்துகிறது.

பின் ஆசிரியர் மன்னராட்சி பற்றிய மூலங் களிலிருந்து மன்னராட்சிக்குச் சார்பாக உள் ளவற்றையும், மாறாக உள்ளவற்றையும் எடுத்துக் காட்டுகிறார். ஆனால் இவற்றை இணைத்துக் கூறும் விதம், வாசகர்கள் மன்ன ராட்சி பற்றிச் சரியான இறையியல் அறிவு பெறும் நோக்கோடு அமைந்துள்ளது. மன்ன ராட்சிக்குச் சார்பான மூலங்கள் அவ்வாட்சி உரிமை நேர்மையுடையது என்று காட்டு கிறது (1 சாமு 9:1-10:6; 11;. 13:1-7. 15-23). இறைவனால் அனுமதிக்கப்பட்ட மன்ன ராட்சியின் உண்மைத் தன்மை எது என்று விவரிக்கிறது. மன்னராட்சிக்கு எதிராக உள்ள மூலங்களில் (1 சாமு 8:1-22; 10:17-24; 12:13:8-14; 15) சுற்றியுள்ள புற இனத்தவ ருடைய மன்னராட்சிக்கு ஒத்த ஆட்சிக்கு எதி ராக இறைவனது வெறுப்பை எடுத்துக் கூறு வதால் மன்னராட்சி பற்றிய சரியான இறை யியல் அறிவு எடுத்துக் காட்டப்படுகிறது (8:4-22). அஃதோடு மன்னராட்சியில் மனித அரசன் அவனுடைய மக்களோடு சேர்ந்து, இஸ்ராயேலின் உண்மையான தெய்வீக அரச னான இறைவனுக்குப் பணிந்து இருக்க வேண்டும் என்று கூறுவதிலும் மன்னராட்சி பற்றிய இறையியல் கருத்து தெளிவாகிறது (1 சாமு 12:13-15.20-25). இறைவனுக்கு ஏற் புடைய மன்னராட்சி பற்றிய சரியான இறை யியல் அறிவை வாசகர்களின் மனதில் பதிய வைக்க இஸ்ராயேலின் முதல் அரசரான சவுல் நிராகரிக்கப்படுவது பற்றி இரு வேறு பட்ட வாசகங்களைக் கொடுக்கிறார் ஆசிரி யர் (13:8-14; 15:1-35). இரண்டு விவரிப்புகளி லும் ஒரே உண்மையான அரசரான இறைவ னுக்குப் பணியாதத்தால்தான் சவுல் நிராகரிக் கப்படுகிறான் என்பது மேலும் மேலும் வலி யுறுத்தப்படுகிறது. 1 சாமு 15:28இல் சவு லிடம் சாமுவேல் கூறும் வார்த்தைகள் இக் கதை எத்திசையில் போகும் என்று காட்டு

கிறது. ''இன்றே ஆண்டவர் உமது கையிலிருந்து இஸ்ராயேல் அரசைக் கிழித்து உம்மைவிட மேலான அயலானுக்குக் கொடுப்பார்''.

பின்பு தாவீது பற்றிய மூலங்களைப் பயன்படுத்த ஆசிரியர் தொடங்குகிறார் (1 சாமு 16-2 சாமு 24). தாவீதின் தொடக்க வரலாறு, சவுலின் வரலாற்றோடு பிரிக்க முடியாதவாறு பின்னியிருப்பதால், உபாகமப் பாரம்பரிய ஆசிரியர் இரு வரலாற்றையும் திறமையோடு இணைத்து இறைவனால் கைவிடப்பட்டு நிராகரிக்கப்பட்ட சவுலின் வீழ்ச்சியையும், இறைவன் ''தன் மனதுக்கேற்ற''வராகத் தேர்ந்தெடுத்த மனிதனான தாவீதின் எழுச்சியையும், எடுத்துக் கூறுகிறார். இருவரையும் ஒற்றுமைப்படுத்தி வேறுபடுத்துகிறார் (1 சாமு 13:4). இஸ்ராயேலின் அரியணைக்குத் தாவீது உயர்ந்ததை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ ஏற்றுக் கொள்ளும் வாசகங்களின் எண்ணிக்கை ஆசிரியரது இறையியல் நோக்கை எடுத்துக் காட்டுகின்றன (1 சாமு 13:14; 15:28; 16:13; 18:8.28; 20:30; 23:17; 24:20; 25:30; 26:25; 28:17). இவ்வாசகங்கள் உபாகமப் பாரம்பரிய ஆசிரியர்களின் சொந்தக் கருத்தாய் இருக்கலாம் அல்லது அவர் இவற்றைத் தனது மூலங்களில் கண்டிருக்கலாம். எது எப்படியிருந்தாலும் தாவீது முதலில் யூதாவின் அரசராகிறார் (2 சாமு 2-4). பின்பு எல்லா இஸ்ராயேலின் அரசராகிறார் (2 சாமு 5:3) என்று வாசிக்கும் போது வாசகர்கள் வியப்புக் கொள்ளார்.

இந்நூலின் உபாகமப் பாரம்பரிய ஆசிரியர், தனது மூலங்களைப் பயன்படுத்தியதைப் பற்றி மேலே கூறும்போதே, மன்னராட்சி பற்றிய ஆசிரியரின் இறையியல் கருத்தின் வளர்ச்சியைப் பற்றிக் கூறியுள்ளோம். இதை மனதில் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் மற்றொரு கருத்தையும் எடுத்துக் கூறத் தனது மூலங்களைப் பயன்படுத்துகிறார். சாமுவேல் ஆகமங்களில் தாவீது வரலாற்று நிகழ்ச்சிகளின் உன்னதமான கருத்து, தாவீதின் அரச மரபு எக்காலத்திற்கும் என்ற இறைவாக்கு உறுதியாகும் (2 சாமு 7). இதை வெளிப்படுத்த தாவீதின் பக்தியையும், இறைவன் காட்டிய வழியில் தாவீது பணிந்து நடந்ததையும் எடுத்துக்காட்டி வாசகர்களை ஆயத்தம் செய்கிறார் (1 சாமு 13:14; 15:28; 16:7; 17:37; 22:3-5; 23:2.4. 10-12; 24:6-23; 25:29; 26:9-11; 30:6-8; 2 சாமு 2:1; 5:25; 6:21-22). இதற்காகப் பொருத்தமான இடங்களில் 'இறைவன் தாவீதுடன் இருக்கிறார்'' என்று அடிக்கடி கூறப்படுகிறது (1 சாமு 16:13.18; 18:12-28; 23:14; 2 சாமு 5:10; 7:3).

முன் சென்ற நிகழ்ச்சியுரைகளாலும் 2 சாமு 7-இல் வரும் வாக்குறுதி பற்றிய விரிவான நயமிக்க விவரிப்பாலும் தாவீதை ஒரு பெரும் வரலாற்றுப் பாத்திரமாக உபாகம ஆசிரியர் அமைக்கிறார். இப்படியாகத் தாவீது அரசமரபு எப்போதும் நீடித்திருக்கும் என்பது வருங்காலத்தில் இஸ்ராயேலின் நம்பிக்கையின் ஊற்றாகும் என்ற தனது முக்கியமான இறையியல் நிலையை, உபாகம ஆசிரியர் நிலைநிறுத்துகிறார். இஃதோடு தாவீது கதைக்கு நிறைவான முடிவுரையைக் கண்டிருக்க வேண்டும் ஆசிரியர்.

அதற்கு மாறாகத் தாவீதின் முதிர்ந்த வயதுக் காலத்தை விவரிக்கத் தொடங்குகிறார். அவரது விபச்சாரக் குற்றம், கொலைக்குற்றம், குழந்தையின் சாவு மற்றும், அவருடைய புதல்வர்களிடையேயான சகோதரத் துரோகங்களும், சகோதரர் கொலைகளும், இறுதியாகத் தாவீது புதல்வர்களின் புரட்சிக் கலகங்கள் ஆகியவையும் கூறப்படுகின்றன. இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் விதத்தில், உபாகம ஆசிரியர், அரசவை வரலாற்று முடிவைப் பிரித்து, சாலமோனின் ஆட்சிக்கு முன்னுரையாகப் பயன்படுத்துகிறார் (1 அரச 1-2).

நாத்தானின் இறைவாக்கில் இரு கூறுகள் உள்ளன (2 சாமு 7:14-16). ஒன்று நிபந்தனையுள்ள கூறு. மற்றது நிபந்தனையற்ற கூறு. இவற்றை வாசகர்களுக்கு எடுத்துக் காட்ட அரசவை வரலாற்றை உபாகம ஆசிரியர்

பயன்படுத்துகிறார். இவ்விதம் தாவீது தவறிப்போகிறார்; ''மனிதர் பயன்படுத்தும் கோலால்'' தண்டிக்கப்படுகிறார். ஆயினும் துன்ப நிகழ்ச்சிகளும் புரட்சிக் கலகங்களும் நடந்தாலும், அவருக்குமுன் அரசரான சவுலிடமிருந்து அகற்றப்பட்டது போல் (2 சாமு 7:15) இறைவனது அன்பு தாவீதிடமிருந்து அகலவில்லை. 1, 2 சாமுவேல் ஆகமங்களில் உபாகம ஆசிரியர் தாவீது மரபு அரசர்களின் பற்றுறுதி இன்மையை விவரிப்பார். தாவீது மரபு அரசர்கள் செய்த குற்றமோ, ஏன் தாவீதின் குற்றமோகூட, தாவீது மரபு அரசுக்கு அளிக்கப்பட்ட நிபந்தனையற்ற வாக்குறுதியை ஒன்றுமின்மையாக்க முடியாது என்பதை நாடு கடத்தப்பட்டவர்கள் உய்த்துணர்வது மிக மிக முக்கியமானதாகும். இந்த வாக்குறுதியில் அவர்களுடைய நம்பிக்கை அடங்கியிருக்கிறது. இதற்காகவே தமது மூலங்களைப் பயன்படுத்துகிறார்.

4. எப்போது தோன்றின?

சாமுவேல் ஆகமங்கள் எப்போது தோன்றின? என்று துல்லியமாகக் கூற முடியாது. சில பகுதிகளில் இந்நூல்கள் மிகப் பழைய பொருட்களை, இஸ்ராயேலின் மன்னராட்சித் தொடக்க காலத்தைச் சேர்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. அரசு வாரிசு நிகழ்ச்சியுரை (2 சாமு 9-20) இப்படிப்பட்ட ஏட்டிற்குச் சான்றாகும். இவை நிகழ்ந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சிகள் நடந்த சிறிது காலத்திற்குள்ளாகவே இவை எழுத்து வடிவம் எடுத்திருக்க வேண்டும். பிற்காலச் சேர்க்கை, திருத்தியமைத்தல் ஆகியவற்றிற்குத் தள்ளுபடி செய்தாலும், முழு நூலும் இஸ்ராயேலர் நாடு கடத்தப்படுமுன் அல்லது நாடு கடத்தப்பட்ட காலத்தில் நிலையான வடிவம் எடுத்திருக்க வேண்டும். உபாகமப் பாரம்பரியத்தால் பாதிக்கப்பட்டு இறுதி வடிவம் எடுத்திருக்க வேண்டும். இவ்வுண்மை 1 சாமு 2:27-36; 2 சாமு 7-இல் எதிரொலிக்கிறது. இறுதி வடிவம் கி.மு. 560-539 இடையிட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம்.

5. வாசகங்கள்:

சாமுவேல் ஆகமங்களின் எபிரேய வாசகங்கள் திருப்தி அளிக்கும் முறையில் பாதுகாக்கப் பட்டிருக்கவில்லை. அதைத் திருத்தியமைப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள், இதுவரை முற்றிலும் வெற்றியடையவில்லை. எழுபது நூல் சாமுவேல் வாசகம், மாசரேட்டிக்கு எபிரேய வாசகத்திலிருந்து வேறுபட்ட எபிரேய மூலவாசகத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

கும்ரான் 4-ஆம் குகையில் கண்டுபிடிக்கப்பட்ட சாக்கடல் சுருள்களில் காணப்படும் சாமுவேல் ஆகமத்துணுக்குகள் மாசரேட்டிக்கு சாமுவேல் ஆகம வாசகத்தைப் பற்றித் தாழ்ந்த மதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றில் பல, எழுபதுநூல் சாமுவேல் ஆகம வாசகத்தோடு ஒத்துப்போகின்றன. சில சமயம் இவை எழுபது நூலையும், மாசரேட்டிக்கு வாசகத்தையும்விடச் சிறந்த வாசகத்தைக் கொண்டுள்ளன. இது எழுபது நூலுக்கும் மாசரேட்டிக்கு எபிரேய வாசகத்திற்கும் மூலமாக மற்றொரு மூலவாசகம் இருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. மாசரேட்டிக் எபிரேய வாசகத்தைத் திருத்த எழுபது நூலும் நாளாகம வாசகங்களும் உதவியுள்ளன. ஆனால் ஆய்வாளரின் இந்தத் திருத்தும் முயற்சி அவ்வளவு வெற்றி பெற்றதாகவும், உறுதியுடையதாகவும் தெரியவில்லை.

6. யாருக்காக எழுதப்பட்டது? ஆசிரியரது நோக்கம்:

நாம் கொண்டிருக்கும் வடிவில் சாமுவேல் ஆகமங்கள் நாடு கடத்தப்பட்ட யூதர்களுக்காக எழுதப்பட்டன. இதை உபாகமப் பாரம்பரியத்தைச் சார்ந்த ஒருவர் எழுதினார். நாடு கடத்தப்பட்ட உற்சாகமில்லாத, நம்பிக்கையற்ற யூதர்களுக்கு உற்சாகமும் நம்பிக்கையும் போதகமும் தேவைப்பட்டது. அந்நிலையில் மன்னராட்சி இறைவனால் நிறுவப்பட்டது என்பதைத் துன்புறும் மக்களுக்கு நினைவுபடுத்துதல் அவர்களை ஊக்குவிப்பதோடு வருங்காலத்திற்கு ஒரு நம்பிக்கையின்

ஊற்றாகவும் இருக்கும். எக்காலமும் நிலைத்திருக்கும் என்று தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியில் மெசியா பற்றிய, நாட்டு மக்களின் நம்பிக்கை அடங்கியிருக்கிறது. நாம் கொண்டிருக்கும்வடிவில், இஸ்ராயேலின் இந்நம்பிக்கைக்கு வரலாற்று இறையியல் அடிப்படை கொடுக்கும்படி 1, 2 சாமுவேல் ஆகமங்கள் உபாகம ஆசிரியரால் ஒன்றாகச் சேர்க்கப்பட்டன.

7. திட்டம்:

இஸ்ராயேல் வரலாற்றில் கி.மு. 1050-965 இடையிலுள்ள காலத்தில் நிகழ்ந்த வரலாற்றைச் சாமுவேல் ஆகமங்கள் விவரிக்கின்றன. முன் கூறிய கருத்துக்களை மனதில் கொண்டு இவ்விரு ஆகமங்களையும் பின் வருமாறு பிரித்துத் திட்டம் செய்யலாம்.

I. சாமுவேலின் வரலாறு (1 சாமு 1:1-7:17):

அ. சிலோவில் சாமுவேல் (1 சாமு 1-3).

ஆ. பெட்டகமும் பெலிஸ்தியரும் (4-7:17).

II. சாமுவேலும் சவுலும் (1 சாமு 8:1-15:35):

அ. சாமுவேல் மன்னராட்சியை நிறுவுதல் (8-12).

ஆ. சவுல் அரசன் நிராகரிக்கப்படுதல் (13-15).

III. சவுலும் தாவீதும் (1 சாமு 16-2 சாமு 1):

அ. சவுலின் அரசவையில் தாவீது (16-20).

ஆ. சவுலிடமிருந்து தாவீது ஓடிப்போதல் (21-27).

இ. சவுலின் இறுதிநாட்கள் (1 சாமு 28 - 2 சாமு 1).

IV. தாவீது அரசனாதல் (2 சாமு 2-20):

அ. யூதாவின் அரசனான தாவீது (2-4).

ஆ. தாவீது இஸ்ராயேல் முழுமைக்கும் அரசன் (5-20).

V. பிற்சேர்க்கைகள்: தாவீது பற்றிய சிறு துணுக்குகளின் தொகுப்பு (2 சாமு 21-24).

8. சிறப்புக் கருத்துக்கள்:

இந்நூல் ஆசிரியர் கலைப்பண்போடு இஸ்ராயேலில் மன்னராட்சி தோன்றியதை விவரிக்கிறார். நிகழ்ச்சிகளை ஒற்றுமைப்படுத்தி வேறுபடுத்துவதில் கவனம் செலுத்துகிறார். இதை இந்நூலின் தொடக்கத்திலேயே காணலாம்.

8.1. ஓர் எடுத்துக் காட்டான குடும்பம்:

எல்கானா என்ற சொல்லுக்கு ''இறைவன் ஈட்டிக் கொண்டார்'' அல்லது ''இறைவன் நிறைவு செய்தார்'' என்று பொருள் கொள்ளலாம். இவர் லேவியர் தோகூவுடைய மகனாவார். தங்களுடைய உரிமைச் சொத்தாகிய எப்பிராயிம் மலையிலுள்ள சோபிம் என்றழைக்கப்பட்ட இராமாத்தயிம் என்ற ஊரில் வாழ்ந்து வந்தார். இவருக்கு இரு மனைவியர். ஒருத்தி அருள், அருளுடையவள், அழகி என்று பொருள்படும் அன்னா. மற்றவள் ''பவழமுத்து' என்று பொருள்படும் பெனின்னா. ஒருவனுக்கு ஒரு மனைவி என்ற கொள்கை ஆதியாகமத்தில் நிறுவப்பட்டிருந்தாலும் (ஆதி 2:24) பல மனைவியரைக் கொள்ளுதல் இக்காலத்தில் பழக்கத்தில் இருந்தது. சிறப்பாக முதல் மனைவி மலடியாக இருந்து விட்டால் இரண்டாவது மனைவியைக் கொள்ளுதல் நடைமுறைப் பழக்கம். பல மனைவியரைக் கொள்ளுதல் ஒருவனுடைய செல்வப் பெருக்கத்திற்கு அடையாளமாகவும் கருதப்பட்டது. சட்டநூல் இப்பழக்கத்தை ஏற்று அதை ஒழுங்குபடுத்தியது (உப 21:15-17). இக் குடும்பங்களில் கணவன் யாரை அதிகம் நேசித்தானோ அவளுடைய அதிகாரம் உயர்ந்திருக்கும். ஆகையால் மனைவியருக்குள் பொறாமையும், போராட்டமும், போட்டியும், ஏச்சும், துன்புறுத்தலும் மிகுந்திருக்கும். இதை இவர்கள் சிலோவுக்குத் திருயாத்திரை செய்யும் இக் கதையில் நன்குணரலாம்.

இர்ராமாத்தயிமிலிருந்து சிலோவுக்கு 50 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டும். எப்பிராயிமில் பெத்தேலுக்கு வடக்கே சிலோ, மலைகளைப் பாதுகாப்பாகக் கொண்ட செழிப்பான சமவெளியில் அமைந்திருந்தது. யோசுவா, உடன்படிக்கைப் பெட்டகத்தை இங்கே நிறுவினார். ஏனெனில் எல்லா யூத இனத்தவருக்கும் இவ்விடம் மையமாக இருந்தது (யோசு 18:1). இவ்விடம் இஸ்ராயேலுக்கு ஆன்மீகவிகவாச மையமாக விளங்கியது.

ஒரு பற்றுறுதியுள்ள இஸ்ராயேலனாக எல்கானாவைக் காண்கிறோம். இவர் குடும்பத்தோடு சிலோவுக்குத் திருயாத்திரை செய்தது, அங்கு அன்னா செய்த மன்றாட்டு, நேர்ச்சி, பெரிய குரு ஏலி அளித்த ஆசீர், ஒரு வருடம் சென்று தான் பெற்ற குழந்தை சாமுவேலை இறைவனுக்கு அர்ப்பணித்தது ஆகியவை பற்றிய வரலாற்றை நூலில் வாசித்தறிக. அப்போது அன்னா பாடிய பாடல், நற்செய்தியில் மரியாள் பாடிய பாடலுக்கு ஒத்ததாயுள்ளது; முன்னோடியாகவுள்ளது. அதிலே யாவே ஞானம் நிறைந்தவர்; எல்லாம் வல்லவர்; உலகிற்கெல்லாம் நீதி வழங்குபவர் என்று இறைவனைப் போற்றுகிறாள். குழந்தை சாமுவேல் ஆண்டவர் முன் வளருகிறான். ஆண்டவருக்கும், பெரிய குருவுக்கும் ஊழியம் செய்கிறான். இக்கதை ஒரு பக்தியுள்ள இறைவனுக்கு அஞ்சும் நல்லதோர் இஸ்ராயேலர் குடும்பத்தைச் சித்தரிக்கிறது. இது ஒரு நாட்டுப்புற வாழ்க்கைச் சித்திரமாகும்.

8.2. பெரிய குருவின் மக்கள்:

மேற்கூறியதற்கு மாறாகச் சிலோவில் இழிவான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. சாமுவேலின் சிறு பருவமும் அவருடைய பெற்றோர் வாழ்வும் யாவேயின் சட்டத்தால் நிர்ணயிக்கப்படும் வாழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இதற்கு மாறாகப் பெரிய குரு ஏலியின் மக்கள் இழிவாக வாழ்கின்றனர். ஏலி என்ற சொல்லுக்கு 'எல்லாம் வல்லவர் நீடுழி வாழ்க' என்று பொருள். ஏலி இஸ்ராயேலில் பெரிய குருவும் நீதிபதியுமாவார். ஆகையால் இஸ்ராயேலின் அரசியலிலும் சமய காரியங்களிலும் அவரே உயர் அதிகாரி. அவர் யாவேயின் கூடார வாயிலில் அமர்ந்து சமய வழிபாட்டை மேற்பார்க்க வேண்டும். தம்மிடம் கொண்டு வரப்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்க வேண்டும். உண்மையில் அவர் தமது அதிகாரத்தைச் செயல்படுத்தவில்லை. அவர் ஒரு நிழல் தான். அவரோடு இருந்த அவரது இரு புதல்வர்கள் ஒப்னி (கொப்னி), பினகாசு ஆகியோர் அதிகாரம் செய்தனர். அவர்களைப் 'பேலியாலின் புதல்வர்கள்' என்று வேதாகமம் அழைக்கிறது. இது ஒன்றே அவர்களைப் பற்றிய போதிய தீர்ப்பாகும். 'பேலியல்' என்ற சொல்லுக்கு ''ஒன்றுக்கும் உதவாக்கரை'' என்றும் ''நரகத்தின் புதல்வர்கள்'' என்றும் பொருள் கொடுக்கலாம். இவர்கள் யாவேயையும் அவரது சட்டத்தையும் புறக்கணித்தனர். முதிய தங்கள் தந்தையின் எச்சரிக்கையோ (சாமு 2:22-26) கடவுள் மனிதர் அளித்த அச்சுறுத்துதலோ (2:27-36) சிறுவன் சாமுவேல் வழியாகக் கூறப்பட்ட இறைவனது கூற்றோ (3:1-18) இவர்களுக்குப் பயன்படவில்லை. இவர்கள் பலியின் போது செய்த தீச்செயல்களையும் (2:12-17) ஒழுங்கீனமான வாழ்வையும் (2:22) நூலில் வாசித்தறிக.

ஏலி தனது ஒழுக்கங்கெட்ட புதல்வர்களைத் திருத்தியிருக்க வேண்டும். மாறாக இறைவனையும் அவருடைய காரியங்களையும் விடத் தனது புதல்வர்களையே பெரிதும் எண்ணியதாகத் தெரிகிறது (2:29). ஏலியின் எச்சரிக்கையும் அவர்கள் செய்த குற்றத்தை மறைக்கச் செய்த முயற்சியாகத் தெரிகிறது. நமது இல்லங்களில் நமது ஆன்மீக ஒழுக்கப் பொறுப்புகளைப் பற்றி நாம் மிகவும் கவனக் குறைவாய் இருப்பது எளிது. இக்கால குடும்பத் தலைவர்களுக்கும் துறவற சபைத் தலைவர்களுக்கும் ஏலி சரியான பாடமாக அமைந்துள்ளார்.

யாவேக்கு எதிராகக் குற்றம் செய்பவன் யாவேயின் மாற்ற முடியாத தீர்ப்புக்குள்ளாகிறான். அவரிடம் மன்னிப்புக் கேட்டுப் பரிகாரம் செய்யலாம். ஆனால் ஏலியின் மக்கள் அதைச் செய்ய மறுத்து விட்டனர். அதன் விளைவு யாவேயின் பயங்கரத்தீர்ப்பாய் விளைகிறது. ஏலியின் மக்களையும் தனது குருக்களாக யாவே அழைத்தார். ஆனால் அவர்கள் யாவேயையும் அவரது சட்டத்தையும் ஏற்க மறுத்தனர். விளைவு ''இதோ! நாட்கள் நெருங்குகின்றன. உனது வாரிசையும் உன் மூதாதை வீட்டார் வாரிசையும் நான் அழிப்பேன். உன் வீட்டில் ஒரு முதியவன் கூட இருக்கமாட்டான்'' (2.31). ஏலியின் குடும்பத்திலிருந்து குருத்துவம் நீக்

கப்படுகிறது. அவரது புதல்வர் அவலமாய் மடிவர். அவருடைய வழித்தோன்றல்கள் பிச்சை எடுப்பர். அவர்களுக்குப் பதிலாக ''என் திட்டத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்ப செயல்படும் நம்பிக்கைக்குரிய ஒரு குருவைநான் எழுப்புவேன்'' (2:35).

இப்பகுதியில் வரும் ''கடவுள் மனிதர்'' பற்றி ஒரு சிறிது கூற வேண்டும். இச்சொல் இறைவனுக்கும் மனிதருக்கும் நடுவராய் இருப்பவர்களைக் குறிக்கிறது. இவர்கள் இறைவனுடைய பிரதிநிதிகள்; அவருடைய மறையுண்மைகளை அறிவிப்பவர்கள்; மனிதன் என்ன செய்ய வேண்டும் என்று அறிவிக்கும் இறைவாக்கினர். இவர்கள் இறைவனின் காரியங்களில் அக்கறை காட்டுபவர்கள். அவருடைய செய்தியை அது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், கேட்போர் அனைவரும் அதிர்ச்சி அடைந்தாலும் (3:11), அதை எடுத்துக் கூறுவர். அவர்களே நாட்டின் மனச்சாட்சி. வரவிருக்கும் அழிவையும் எடுத்துக்கூறுவர். நற்செய்தியையும் இறைமீட்பின் புதிய தொடக்கத்தையும் எடுத்துக் கூறும் விண்ணகத் தூதரும் ஆவர். சாமுவேல் ஆகமத்தில் ''கடவுளின் மனிதர்'' என்ற சொல் இப்படிப்பட்ட மனிதர்களின் தன்மையையும் தூதையும் நன்கு உணர்த்தவல்லது. கடவுள் மனிதர் ''திருக்காட்சியாளர்'' என்றும் அழைக்கப்பட்டார். காலப்போக்கில் இச்சொல் இழிவு அடைந்து இறைவாக்குரைஞர் என்ற சொல்லே வழக்கில் நீடித்தது. முற்காலத்தில் திருக்காட்சியாளரிடம் ஆலோசனை கேட்கும் பழக்கம் இஸ்ராயேலில் இருந்தது. அப்படிச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லாது, காணிக்கை கொண்டு செல்ல வேண்டும்.

8.3. சாமுவேல் அழைக்கப்படுதல்:

மேற்கூறப்பட்ட சூழ்நிலையில் ஏலியின் பாதுகாப்பில், சாமுவேல் சிலோவில் ஆண்டவர் திருமுன் வளர்ந்து வந்தார். அவருடைய தாய் ஆண்டுதோறும் அவருக்கு வேண்டிய ஆடைகளோடு பார்க்க வந்தாள். ஏலியின் குடும்ப ஒழுக்கக்கேடு சாமுவேலை ஓரளவு பாதித்தது.

இந்நிலையில் இறைவனுடைய வார்த்தை சாமுவேலுக்கு வருகிறது. இவ்வரலாற்றை நூலில் வாசித்தறிக (3:1-15). ஏலி கட்டாயப் படுத்த, யாவே தமக்குக் கூறியதைச் சாமுவேல் கூறுகிறார். அதை அறிந்த ஏலி ''அவர் ஆண்டவர்தான்! அவரது பார்வையில் எது நல்லதோ அதை அவர் செய்யட்டும்'' என்று கூறி இறைவார்த்தைக்குப் பணிகிறார். ஏலி தன் அசட்டைத்தனத்தாலும், பலவீனத்தாலும் தனது கடமையில் தவறியிருக்கலாம். ஆனால் இக்கூற்றில் ஏலியின் தாழ்ச்சியும் ஆன்மீக உணர்வும் தென்படுகிறது. ''சாமுவேல் வளர்ந்தார். ஆண்டவரும் அவருடன் இருந்தார். அவர் சொன்ன சொல்லில் ஒன்றும் வீண்போகவில்லை'' (3 :19). பாவம் பலமிக்கதாக இருக்கலாம். ஆனால் இறை அருள் அதைவிடப் பலமிக்கது.

8.4. பெலிஸ்தியர்:

விவிலியப்படி, பெலிஸ்தியர் கப்தோரிலிருந்து தோன்றியவர்கள். கப்தோர் என்பது கிரேத்து நாட்டிற்கு மற்றொரு பழமைப் பெயராகும். இவர்கள் துருக்கியரோடு கலாச்சாரத் தொடர்புடையவர்கள். இஸ்ராயேலர் கிழக்கிலிருந்து பாலஸ்தீனத்திற்குள் குடியேறிய போது, பெலிஸ்தியர் மேற்கிலிருந்து இந்நாட்டில் குடியேற முயன்றனர். ஆகவே வாக்களிக்கப்பட்ட நாடு பெலிஸ்தியர் நாடா அல்லது இஸ்ராயேலர் நாடா என்பது பற்றி இரு இனத்தவருக்கும் பல போர்கள் அடிக்கடி நடந்தன.

பெலிஸ்தியர், கடலிலிருந்து தாக்கிப் பாலஸ்தீனத்தில் கடற்கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் காசா அஸ்கலோன், அசுதோது, எக்ரோன், காத்து ஆகிய நகரங்களில் தங்களை நிலைப்படுத்தினர். ஏற்கெனவே இப்பகுதியில் வாழ்ந்த கானானியர்கள் இப்பகுதியைச் சிறிது சிறிதாகப் பிரித்துச் சுயாட்சி கொண்ட நகர ஆட்சியைக் கொண்டிருந்தனர். எகிப்தியர் இவர்களை வெற்றி கண்ட போது இவ்வமைப்பை அழிக்காது இவர்களே தொடர்ந்து ஆட்சி செய்ய விட்டுவிட்டனர். ஆனால் கப்பம் கட்டச் செய்தனர். இப்பகுதியில் புகுந்த

பெலிஸ்தியரும் இந்த நகர ஆட்சி அமைப்பை ஏற்றுத் தங்களுடையதாக்கிக் கொண்டனர். அதே சமயம் தங்களுக்குள்ளே சுயமாக ஒரு பொதுக்குழு அமைத்துப் பாதுகாப்பு, போர் போன்ற பொதுக்காரியங்களைச் செய்தனர். அப்போது ஏதாவது ஒரு நகராட்சியின் தலைவர் இக்குழுவுக்குத் தலைமை தாங்குவார். இதன் விளைவாகப் பெலிஸ்தியர் ஒரு பலமிக்க அமைப்பாகத் திகழ்ந்தனர். போர் செய்வது அவர்கள் தொழிலாக இருந்தது. இரதங்களையும், இருப்புப் போர்க் கருவிகளையும் பயன்படுத்தினர். அவற்றைப் பிறர் கொண்டிருப்பதைத் தடுத்தனர் *(1 சாமு 13:19-22)*. ஆகையால் பெலிஸ்தியரை வெல்வது அவ்வளவு எளிதன்று. இவர்கள் கிழக்கிலுள்ள மலைப் பகுதிகளையும் வெல்லத் தொடங்கினர். அங்கே குடியேறிய இஸ்ராயேலரை வென்று தங்களுக்குக் கப்பம் கட்டச் செய்வதே இவர்களின் நோக்கம்.

அதே சமயம் கிழக்கிலிருந்து பாலஸ்தீனத்தில் குடியேறிய இஸ்ராயேலர் நிலை வேறு விதமாக இருந்தது. இவர்களிடையே நகரங்கள் இல்லை. கோட்டை கொத்தளங்கள் இல்லை. மைய அரசு இல்லை. குழுத்தலைவர்களின் நெருக்கமற்ற கூட்டாட்சி இருந்தது. போரைத் தொழிலாகக் கொண்ட படைகள் இல்லை. போர்க்கருவிகள் இல்லை. பிறர் கொடுமைப்படுத்தும்போதும் இறை ஆவி பெற்ற தலைவர்கள் தோன்றித் தலைமை தாங்கிப் போரை நடத்தினர். அது முடிந்ததும் ஒவ்வொருவனும் தனது பகுதிக்குச் சென்று விடுவான். இவர்கள் யாவேயிடம் கொண்டிருந்த விசுவாசம் இவர்களது சமூக ஒற்றுமைக்கு அடிப்படையாகும். இந்த விசுவாசத்தில்தான் இவர்களின் நாட்டு ஒற்றுமையின் வேர் ஊன்றியிருந்தது. ஒவ்வொரு இனத்தவரும் சுயாட்சி நடத்தினர். தங்களுக்குள்ளே ஒரு மைய அரசியல் அமைப்பைப்பெற இவர்கள் இன்னும் பக்குவம் அடையவில்லை எனலாம். இந்நிலையில் அவர்களுக்குப் பெலிஸ்தியர் பெரும் பகைவர்களாக விளங்கினர். இவ்விருவருக்குமிடையே நடக்கும் போர்களும் பெலிஸ்தியர் இஸ்ராயேலர்களுக்கு இழைத்த கொடுமைகளும் இஸ்ராயேலர் அரசை உருவாக்கின.

8.5. பெலிஸ்தியர் இஸ்ராயேலரிடையே போர்: உடன்படிக்கைப் பேழை

அபேக்கு என்ற இடத்தில் இரு தரத்தாருக்கும் போர் நடக்கிறது. இஸ்ராயேலர் தோற்று, சேதமுற்று, புறங்காட்டி ஓடிப்போயினர். தோல்வி ஒரு சமயப் பிரச்சினையாக எழுகிறது. ''ஆண்டவர் இன்று நம்மைத் தோல்வியுறச் செய்தது ஏன்?'' *(4:3)*. இவர்களிடையே போர்த்தலைவர்கள் இல்லை. குல முதியவர்களே தீர்மானிக்கின்றனர். உடன்படிக்கைப் பேழை சிலோவிலிருந்து கொண்டு வரப்படுகிறது. இப்பேழை சட்டப்பலகையை மட்டும் கொண்டிருக்கவில்லை. அது யாவேயின் அரியணையாகும். ஆகவே பெட்டகத்தோடு இவர்களின் போர்செய்யும் சேனைகளின் ஆண்டவர் இவர்களிடையே வருகிறார். இஸ்ராயேலர் நிலம் அதிர ஆர்ப்பரித்தனர் *(4:5)*. இதைக் கேட்டு, பெலிஸ்தியர் அஞ்சிப் பெருமூச்சு விட்டனர் *(4:6)*; ஆனால் திடத்தோடு போரிட்டனர். இஸ்ராயேலர் தோல்வி, அடைந்தனர். அஃதோடு ஆண்டவரின் பேழையும் பெலிஸ்தியர் வசமாயிற்று *(40:10-11)*. இச்செய்தி கேட்டு ஏலி மரித்தார். பெலிஸ்தியர் பேழையை அசுதோதுக்கு எடுத்துச் சென்றனர். அங்குத் தாகோன் கோவிலில் தாகோன் அருகில் வைத்தனர். காலையில், ஆண்டவர் பேழைக்கு முன் தாகோன் முகங்குப்புற விழுந்து கிடக்கக் கண்டனர். இப்படி இருமுறை பெலிஸ்தியரின் தேவர்களுக்கு அவமானம் ஏற்படுகிறது *(5:1-5)*. ஆண்டவரின் கை அசுதோதியர் மேல் வன்மையாக விழுந்தது. அவர்களைப் பலவாறு தண்டித்தார். பல பெலிஸ்தியர் நகரங்கள் துன்புற்றன. காத்து, எக்ரோன், பெத்செமேசு நகரங்களுக்குப் பேழை எடுத்துச் செல்லப்பட்டது. எங்கும் ஆண்டவர் பெலிஸ்தியரைத் தண்டித்தார். இவ்வாறு பேழை பெலிஸ்தியர் நாட்டில் ஏழுமாதம் இருந்தது. ஆண்டவருக்கு அஞ்சிய பெலிஸ்தியர், பெரும் காணிக்கைகளுடன் பேழையை

இஸ்ராயேலுக்குத் திருப்பி அனுப்பிவிடுகின்றனர் (5:6-6:21). இஸ்ராயேலர் அதை ஏற்றுக் கிரியத்து எயாரிமில் நிறுவினர் (5:6-7:2).

யாவேயைப் பற்றிய அச்சம் பெலிஸ்தியர்களை ஆட்கொண்டது. இஸ்ராயேலரையும் பற்றிக் கொண்டது ''இந்தத் தூய கடவுளாகிய ஆண்டவர் திருமுன் நிற்கத் தகுந்தவன் யார்?'' என்ற கேள்வி எழுந்தது. யாவே மற்றக் கடவுள்களைப் போன்றவர் அல்லர். அவர் வெல்லப்பட்டவராகத் தோன்றலாம். அந்நிலையிலும் அவரே வெற்றி பெறுவார். இதைப் பெலிஸ்தியரும் இஸ்ராயேலரும் கண்டுணர்ந்தனர். அவரது மக்கள் உண்மையில் மனந்திரும்பி அவரிடம் வந்தால் அவர்கள் ஆற்றல் மிக்க நாடாக மாறுவர். யாவேயிடம் அவர்கள் கொண்டிருக்கும் விசுவாசம் ஒன்றே அவர்களது பலம்.

8.6. எண்ணிக்கை:

இப்போது ஆயிரம் என்ற எண்ணிக்கை பற்றிய ஒரு சிறிய குறிப்பு தேவைப்படுகிறது. இந்நூலின் பல இடங்களில் மடிந்தோர் அல்லது போர்வீரர்கள் பல்லாயிரக்கணக்கில் குறிக்கப்படுகின்றனர். சில இடங்களில் இவ்வளவு பேர் இறந்தனரா என்ற ஐயம் நம்மில் எழலாம்.

ஆயிரத்தைக்குறிக்க ''ஏலப்பு'' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல் முதலில் குடும்பங்களைக் குறிக்கிறது. நமது கிராமங்களில் பயன்படும் ''தலைக்கட்டு'' என்ற சொல்லுக்கு ஒத்தது. போர் நிகழும் போது ஒவ்வொரு குடும்பமும் இத்தனை பேரைப் போருக்கு அனுப்ப வேண்டும் என்ற ஒழுங்கு உண்டு. இந்த எண்ணிக்கை இடத்துக்கு இடம் மாறலாம். இப்படி ''ஏலப்பு'' என்ற சொல் ஓர் இனம் அல்லது குடி கொடுக்க வேண்டிய எண்ணிக்கையைக் குறிக்கிறது. இவ்வெண்ணிக்கை 3,25 அல்லது 60 ஆக இருக்கலாம். பொதுவாக 25 அல்லது 40 பேரைக் கொண்டதாக எடுத்துக் கொள்ளலாம். இப்படி ஒவ்வொரு குடும்பமும் போருக்கு அனுப்ப வேண்டிய குழுவை இச்சொல் குறிப்பதாக எடுத்துக் கொண்டால் இந்நூலில் குறிக்கப்படும் எண்ணிக்கைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளலாம். அப்போது இவ்வெண்ணிக்கைகள் உண்மைக்கு நெருங்கியதாக இருக்கும்.

''ஏலப்பு'' என்ற சொல் வீட்டைக் குறிக்கலாம்; போரில் ஈடுபட்டுள்ள ஒரு பகுதியைக் குறிக்கலாம். அரசர் காலத்தில் போர் வீரர்கள் இனவாரியாகச் சேர்க்கப்படாமல் அரசனே நேரடியாக வீரர்களைச் சேர்த்த போது, ''ஏலப்பு'' என்ற சொல் ''ஆயிரம்'' என்று பொருள் பெற்றிருக்கலாம். இது சாலமோன் காலத்தில் நிகழ்ந்திருக்கலாம்.

8.7. நீதிபதியான சாமுவேல்:

சிலோ அழிக்கப்பட்ட போதும் அதன்பின்னும் சாமுவேல் என்ன செய்தார் என்று ஒன்றும் தெரியவில்லை. தோல்வியுற்ற இஸ்ராயேலர் தங்கள் அரசியல் சுதந்தரத்தை இழந்தனர். அவர்களுடைய புனித இடமும் அழிக்கப்பட்டது. இந்நிலையில் அவர்கள் கானானியரின் தேவர்களையும் வழிபாட்டு முறைகளையும் பின்பற்றத் தொடங்கினர். இக்கொடிய நோய் அவர்கள் இனத்தை அடியோடு அழிக்கும் நிலை தோன்றியது. இச்சூழ்நிலையில் சாமுவேல் போதிக்கத் தொடங்குகிறார். இஸ்ராயேலர் மேல் வந்த பேரழிவிற்கு அவர்களே காரணம். அவர்கள் கானானியக் கடவுள்களை வணங்கத் தொடங்கியதே காரணம். அவர்கள் அடிமைத் தளையிலிருந்து விடுதலை அடைய விரும்பினால் அவர்கள் தங்களிடமுள்ள சிலைகளை அழிக்க வேண்டும். அவற்றை வழிபடுவதை விட்டு, யாவேயிடம் திரும்ப வேண்டும். அப்போது அவரே அவர்களுக்காகப் போரிட்டு விடுதலை அளிப்பார். இவ்வாறு பலவாறாகச் சாமுவேல் போதித்ததின் விளைவாக ''இஸ்ராயேல் மக்கள் பாகால்களையும், அஸ்தரோத்தையும் விலக்கிவிட்டு ஆண்டவருக்கு மட்டும் ஊழியம் செய்தார்கள்'' (7:4). இப்போதகத்தின் உச்சநிலையில் சாமுவேலை மிஸ்பா என்ற இடத்தில் காண்கிறோம். இவ்வாறு மீளவும் போர் செய்ய இஸ்ராயேலர் ஆன்மீகத் தயாரிப்புப் பெறுகின்றனர்.

மிஸ்பாவில் நிகழ்ந்த சுதந்தரச் சடங்கும், பலியும், (7:7-12) ஒரு போர் அறைகூவலாக அமைகிறது. இது கண்ட பெலிஸ்தியர் படையெடுத்தனர். யோசுவாவுக்கும் பாராக்குக்கும் உதவியது போல் யாவே ''அன்று பெலிஸ்தியர்மீது பேரிடி முழங்கச் செய்தார்'' (7:10). அதன் விளைவாகப் பெலிஸ்தியர் தோல்வியுற்றனர். இஸ்ராயேலர் வெற்றி கொண்டு கடற்கரைப் பகுதிவரை பெலிஸ்தியரைத் துரத்தினர். இந்நிகழ்ச்சிகளை நினைவு கூறும் விதத்தில் தனது முன்னோர்களைப் பின்பற்றி (ஆதி 35:14; யோசு 24:26) ஒரு கல்லை நாட்டி ''இதுவரை ஆண்டவர் நமக்கு உதவியாய் இருந்தார்'' என்று கூறி அதற்கு ''எபனேசர்'' என்று சாமுவேல் பெயரிட்டார்.

இவ்வெற்றியோடு விடுதலை அளிக்கும் நீதிபதி என்ற அளவில் சாமுவேலின் வேலை முடிந்தது. ஆனால் மக்கள் மேல் அவர் ஆன்மீகத் தலைமை கொண்டிருந்தார். தன்வாழ்நாள் முழுவதும், நாட்டின் பல பகுதிக்கும் சென்று இஸ்ராயேலர் மக்களுக்கு அவர்களின் அன்றாடச் செயல்களில் நீதி வழங்கினர். சாமுவேல் வயது முதிரவே, பெலிஸ்தியரிடமிருந்து வந்த அரசியல், சமய ஆபத்துக்கள் அதிகமாயின. இதைக் கண்ட இஸ்ராயேல் இனத் தலைவர்கள் ஒரு வேண்டுகோளுடன் சாமுவேலை அணுகினார்.

8.8. எங்களுக்கும் ஓர் அரசனை ஏற்படுத்தும்:

இஸ்ராயேலரின் எதிரிகள் வல்லவர்களாய் இருந்ததற்குக் காரணம் அவர்கள் நிலையான மைய அரசையும், போரைத் தொழிலாகக் கொண்ட படையையும், அதை இயக்கத் தகுதி வாய்ந்த தலைவர்களையும் கொண்டிருந்தனர், என்பதை இஸ்ராயேலர் உணர்ந்தனர். அப்படிப்பட்ட அரச அமைப்பைத் தங்களுக்கும் தரவேண்டும் என்று சாமுவேலை இஸ்ராயேலர் தலைவர்கள் கேட்டனர். இப்படிமுன்பு ஒருமுறை கிதியோனுக்கு அழைப்பு விடுத்தனர். அதற்குக் கிதியோன் ''நான் உங்களை ஆளமாட்டேன். என் மகனும் உங்களை ஆள மாட்டான். ஆனால் ஆண்டவரே உங்களை ஆள்வார்'' என்றார் (யோசு 8:23). இஸ்ராயேலரின் இப்போதைய வேண்டுகோளைக் கேட்டு வருந்திய சாமுவேல் ஆண்டவரிடம் வேண்ட, அவர் ''உன்னைப் புறக்கணித்து விடவில்லை; நாம் அவர்களை ஆள விடாதபடி நம்மைத்தான் புறக்கணித்து விட்டனர்'' (1 சாமு 8:7) என்று கசப்புடன் கூறி, அவர்களுக்குச் செவிமடுக்கும்படி கூறுகிறார். அரசன் இருந்தால் என்ன நிகழும் என்று சாமுவேல் எடுத்துக் கூறியும் (8:10-22) அவர்கள் அரசனைக் கோர, யாவேயின் கூற்றுப்படி அதற்கு இணங்குகிறார்.

இப்படியாகச் சமய எதிர்ப்புக்கிடையில் அரசாட்சி இஸ்ராயேலில் உருவெடுக்கிறது. காலத்தின் இடுக்கண் மிக்க நிலையும், பெலிஸ்தியர், அம்மோனியர் போன்றவர்களிடமிருந்து வந்த போர் ஆபத்துகளும் இஸ்ராயேலின் எல்லா இனத்தவரையும் ஒன்றாக இணைத்து, ஒரே தலைமையின் கீழ் இயங்கும் அரச அமைப்பைத் தோற்றுவிக்கிறது. தொடக்கத்திலிருந்து இஸ்ராயேலில் அரசு அமைப்பு போரை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாகும். மரபு முறையாக வருவது அன்று. மக்களின் விருப்பத்தால் வருவது. மக்களே தேர்ந்து கொண்ட அமைப்பாகும்.

இத்தோற்றம் பற்றி இரு பாரம்பரியங்கள் உண்டு. ஒன்று அரச அமைப்புக்கு எதிரானது. இறைவாக்கினர் வட்டாரத்தில் எழுந்திருக்க வேண்டும். மற்றது அரச அமைப்புக்குச் சார்பானதாகும். அரச மன்றத்தில் தோன்றியிருக்க வேண்டும். இதுபற்றி முன்னமே சிறிது கூறியுள்ளோம்.

8.9. முதல் அரசனின் தேர்வு:

சவுல் சாமுவேலைச் சந்தித்தது, அவர் அவனை அபிடேகம் செய்தது போன்றவற்றை நூலில் வாசித்தறிக (9:1-10:13).

சாமுவேல் சவுலை அரசனாக அபிடேகம் செய்யவில்லை. மாறாக ஆயனாக அபிடேகம் செய்கிறார். இஸ்ராயேலருக்கு ஒரு தலைவன் இருக்க வேண்டியதன் தேவையைச்

சாமுவேல் உணர்ந்தார். ஆனால் இத்தலைவ னைப் பற்றி அவர் கொண்ட கருத்திற்கும், மற்ற இஸ்ராயேலர் கொண்ட கருத்திற்கும் பலத்த வேறுபாடு உண்டு. இவர்கள் புற இனத்தவரைப் போன்று தங்களுக்கு ஓர் அரசனை எதிர் பார்த்தனர். ஆனால் சாமு வேலோ புற இனத்தவர் இஸ்ராயேலைத் தீட்டுப்படுத்தியபோதெல்லாம் எதிர்த்துப் போதித்துப் போராடி, சுத்திகரித்த சீர்திருத்த வாதி. இஸ்ராயேலுக்கு ஓர் அரசனை நியமிக் கும்போது புற இனத்தவரிடமிருந்து கடன் வாங்க வேண்டியதில்லை. இஸ்ராயேலர் பாரம்பரியப்படியே அவர்களுக்கு ஒரு தலை வனைக் கொடுக்க விரும்பினார். ஆயன் என்ற அடையாளம் (ஆதி 49:19) அதற்கு ஏற்றதாக இருந்தது. ஆகவே சவுலை இஸ்ரா யேலரின் ஆயனாக அபிடேகம் செய்தார். இவ்வாயன் யாவேயால் தனிப்பட்ட முறை யில் தேர்ந்தெடுக்கப்பட்டவர். யாவேயின் செயல் மக்களின் செயலிலிருந்து தெளிவாக வேறுபடுகிறது. மக்களின் தேர்வு ஒருவனை அரசனாக்குகிறது. யாவேயின் தேர்வு அவனை ஓர் ஆயனாக ஆக்குகிறது.

8.10. அரசனைத் தேர்ந்தெடுத்தலும் உறு திப்படுத்துதலும்:

மிஸ்பாவிலிருந்து சாமுவேல் தனது சீர் திருத்தத்தைத் தொடங்கினார். அங்கிருந்து தான் பெலிஸ்தியரை எதிர்க்கத் தொடங்கி னார். அங்குதான் மக்களைக் கூட்டி அவர் களுக்கு ஒரு நிலையான தலைவனை அளிக்கி றார். இஸ்ராயேலின் வரலாற்றில் முதல் தடவையாக ''அரசே வாழி'' என்ற கூவல் கேட்கிறது. சாமுவேல் எச்சரித்தும், மக்கள் தங்களுக்கு ஓர் அரசன் வேண்டும் என்கின்ற னர். தேர்தல் திருவுளச் சீட்டு வழியாக நடக்கிறது. இறைவனே ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்கிறார். வாக்குரிமைச் சீட்டால் அன்று, யாவேயின் வார்த்தையால் தேர்வு நடைபெறுகிறது. சவுலை மக்கள் ஏற்றுக் கொண்ட விதத்தைப் பற்றி நூலில் காண லாம் (10:17-24). அம்மோனிய அரசன் நாகசு (பாம்பு) காலத்தில் யாபோசிலிருந்து இஸ் ராயேலர்களுக்கு இட்ட இழிவான நிபந்த னைகளையும் சவுல் யாவேயின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அவர்களை மீட்டதை யும் பின்சாமுவேல் சவுலைக் இல்காலில் அரசனாக்கியதும் நூலில் வாசித்தறிக (11:1-15).

யாபோசில் கிட்டிய வெற்றி போர் வெற்றி மட்டுமன்று; உளவியல் வெற்றியுமா கும். இது தாங்களும் ஒரு நாட்டவர் என்ற உணர்வை அவர்களுக்கு அளித்தது. தங்க ளது எதிரிகளைக் கண்டு ஏதும் செய்ய இயலா நிலையில் இருக்க வேண்டிய தில்லை. தங்கள் அரசன் கீழ் ஒன்றித்துப் பகைவரை வெல்லலாம் என்பதை உணர்ந்த னர். இதுவரை அவசர காலத்தில் படைக்கு இனவாரியாக ஆட்கள் சேர்க்கப்பட்டனர். இனி நாடு ஒற்றுமையாய் அமைதியாக இருக்க வேண்டுமென்றால் இது இனிப் போதாது. நிலையான போரைத் தொழிலா கக் கொண்டபடைகள் வேண்டும். இத்த கைய அமைப்பைச் சவுல் தொடங்கி வைத் தார். இது பெலிஸ்தியரைத் தூரத்தில் நிறுத்தி வைத்தது.

இல்காலில் சவுலை அரசனாக்கிய பின், சாமுவேல் மக்கள் முன் தன் குற்றமிலா வாழ்வை எடுத்துரைக்கின்றார். அதற்கு மக் கள் சாட்சி கூறுகின்றனர். யாவேயும் சாட்சி கூறுகின்றார். மக்கள் யாவேக்குப் பற்றுறுதி யாக இருக்க வேண்டும் என்று எச்சரித்தபின் (12:15) அவர்கள் அரசனுக்குப் பணிந்து இருக்க வேண்டும் என்று கூறி மக்களிட மிருந்து பிரியா விடை பெறுகிறார்.

8.11. சவுல் நிராகரிக்கப்படுதல்:

பெலிஸ்தியருக்கும் சவுலுக்குமிடையே நடந்த போர்களைப் பற்றி வாசித்தறிக (13:3-14:48). இல்காலில் நடந்தபோரில் முன் முயற்சியாகச் சவுல் தாக்க விரும்பினார். ஆனால் இறைவாக்குக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. அதற்கு வரவேண்டிய சாமுவேல், காலம் தாழ்த்தினார். பலியோடு போரைத் தொடங்குவது மரபு. வீரர் பலி யால் தூய்மையாக்கப்பட்டனர் என்பது இஸ் ராயேலரது கருத்து. போரைத் ''தூய்மைப் படுத்துங்கள்'' என்ற அறைகூவலும்,

''போரைத் தொடங்குங்கள்'' என்ற பறைசாற்றலும் ஒன்றே. பொறுமையிழந்த சவுல் தானே தகனப்பலியை ஒப்புக் கொடுத்துப் போரைத் தொடங்கினார். அப்போது சாமுவேல் அங்குத் தோன்றிச் சவுலின் செய்கையை ''நீர் அறிவீனமாய்ச் செயல்பட்டீர்'' என்று க்ண்டிக்கிறார் (13:13). இக்குற்றத்திற்காகச் சவுல் தனது அரசையே இழக்க வேண்டியிருக்கும் (13:14). இந்நிகழ்ச்சியில் சவுலை விடச் சாமுவேலையே குறைகூறத் தோன்றலாம். ஆனால் சவுலின் குற்றம் என்ன? கடவுளின் கட்டளைப்படி அவர் காத்திருக்கவில்லை. மாறாக வேகமும் முன்முயற்சியும் கோரும் தன்திட்டப்படியே செயல்பட்டார். அதனால் யாவேயின் கட்டளையை நிராகரித்தார். அதன் விளைவு யாவே சவுலை நிராகரித்தார்; அவரிடமிருந்து அரசை நீக்கினார்.

மீளவும் ஒரு முறை குருவின் எபோதின் உதவியால் இறைவார்த்தையை அறிய முயன்று கொண்டிருக்கும்போதே அதற்காகக் காத்திராமல் போரைத் தொடங்கினார் (14:17-20). விவேகமே அவருக்கு முக்கியமாகப்பட்டது. அது மட்டுமின்றி ஆவேசத்தோடு நடந்து கொண்டார். சவுலின் இச்செய்கை பற்றியும் தனது அரசை நிலைப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் பற்றியும் நூலில் வாசித்தறிக (14:31-48).

சாமுவேல் வழியாக இறையாணை பெற்று அமலேக்கியரோடு செய்த போரில் யாவற்றையும் அழிக்க வேண்டும் என்ற அர்ப்பணப்போரை நிறைவேற்ற சவுல் தவறுகிறார். மதிப்புள்ள பொருட்களை அழிக்க, சவுலுக்கு மனம் வரவில்லை. அமலேக்கிய அரசன் அகாகுவை உயிரோடு சிறைப்படுத்துகிறார். இறைவனது ஆணைக்குப் பணியவில்லை. இது சவுலுக்கு இறுதித் தீர்ப்பாக முடிகிறது. ''நாம் சவுலை அரசனாக்கியதற்காக வருந்துகிறோம். ஏனெனில் அவன் என்னைப் பின்பற்றாமல் விலகிவிட்டான். என் வார்த்தைகளின்படி நடக்கவில்லை.'' என்று சாமுவேலிடம் யாவே கூறுகிறார். சாமுவேல் இல்காவில் சவுலைச் சந்திக்கிறார். நாடகப் பாணியில் அமைந்துள்ள இச்சந்திப்பை, நூலில் வாசித்தறிக. சவுல் கூறிய விளக்கங்களைச் சாமுவேல் ஏற்கமறுத்து ''ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது தகனப்பலிகளையோ பிறபலிகளையோ செலுத்துவதா? பணிதல் பலிகளை விடச் சிறந்ததே! கீழ்ப்படிதல் ஆட்டுக் கிடாய்களின் கொழுப்பைவிட மேலானது! ... நீர் ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்தீர்! அவரும் உம்மை அரச பதவியினின்று நீக்கிவிட்டார்'' என்று கூறினார் (15:22-23). இச்சுடு சொற்களைக் கேட்டு அவநம்பிக்கையுற்ற சவுல், பிரிந்து செல்லும் சாமுவேலின் ஆடையின் விளிம்பைப் பிடித்தார். அது உடனே கிழிந்து போயிற்று. சவுலிடமிருந்து அரசை யாவே எடுத்துவிட்டார் என்பதற்கு இது மேலும் ஓர் அடையாளமாயிற்று. பின் அகாகுவைச் சாமுவேல் கொன்றதையும், சவுலுக்காகச் சாமுவேல் வருந்தியது பற்றியும் நூலில் வாசித்தறிக. இனிச் சாமுவேலும் சவுலும் சந்திக்கவேயில்லை.

8.12. சாமுவேல்

இவ்விடத்தில் சாமுவேலைப் பற்றிச் சுருக்கமாகச் சில கூறவேண்டும். சாமுவேல் எல்கானா — அன்னா ஆகியோரின் தவப்புதல்வன்; எப்பிராயிம் இனத்தவர்; பல்திறம் கொண்டவர்; வருங்காலம் உரைப்பவர்; திருக்காட்சியாளர்; இறைவாக்கினர்; நீதிபதி; குரு. அவர் இஸ்ராயேலில் இருந்த இரு அரசியல் அமைப்புகளை இணைக்கும் பாலமாக விளங்கியவர்; மனிதனுக்கு அஞ்சாதவர்; இறைவனுக்குப் பற்றுறுதியுடையவர்.

பிறப்பால் லேவியர் இனத்தைச் சேராதவர். ஆனாலும் இவர் சிலோவில் உள்ள பெட்டகத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறார். முதலில் ஒரு நசரேயராகவும் (1 சாமு 1:24-28), பின்பு ஒரு குருவாகவும் (7:9-10., 10:8) அவரைக் காண்கிறோம். இதன் விளைவாக நாளாகம ஆசிரியர் சாமுவேலுக்கு ஒரு லேவியர் குடும்ப வரலாற்றையும் கொடுக்கிறார் (1 நாள் 6:19-28; 9:22; 26:28; 2 நாள் 35:18; சங் 99:6). இவர் சிலோவிலிருந்து தூய்மை கெட்ட குருத்துவத்திற்கு எதிராகப் புரட்சி செய்தார் என்பது தர்க்கத்திற்குரிய

கூற்றாகும். ஆனால் இவர் ஒரு சமய சீர் திருத்தவாதி. அயராது போதித்து, யாவே பால் மக்கள் கொண்ட பழம்பெரும் விசுவா சத்தைப் புதுப்பித்தார். ''இஸ்ராயேல் மக்கள் பாகால்களையும், அஸ்தரோத்தையும் விலக்கி விட்டு ஆண்டவருக்கு மட்டுமே ஊழியம் செய்தார்கள்'' (1 சாமு 7:4). இது சாமுவேலின் வாழ்வில் ஒரு பெரும் ஆழ்ந்த உன்னத அனுபவமாகும்.

இப்படி ஆன்மீகத் தலைவராக இருந்தவர் இஸ்ராயேலின் அரசியல் தலைவராகவும் போர்த்தலைவராகவும் விளங்கினார். இவர் இஸ்ராயேலின் சிறந்த நீதிபதியாவார். ஏனெனில் எதிரிகளின்மேல் யாவேயின் தீர்ப்பைச் செயல்படுத்தினார். இறை ஆவிபெற்ற தலைவராக (7:3-14) மக்களை எதிரிகளிடமிருந்து விடுவித்தார். இன வழக்குகளில் அவர் நடுவர். அவரிடம் யாரும் நீதி கோரலாம் (7:15-17; 8:1-3; 12:3.5). இவர் வருங்காலத்தை முன் உரைப்பவர் (9:6-9); ஓர் இறைவாக்கினர் (3:20-21; சீரா 46:13-15); இறைவனோடு கழிபேருவகை பெற்ற திருக்காட்சியாளர் (2 சாமு 19:20). சாமுவேல் வாழ்ந்த காலம் இஸ்ராயேலில் கொந்தளிப்பு மிக்கதாகும். அதில் அவர் மேற்கூறிய பல அலுவல்களையும் பொறுப்போடு நிறைவேற்றினார். அவ்வலுவல்களில் எல்லாம் முக்கியமானது இஸ்ராயேலின் கூட்டாட்சியின் இறுதிக் காலத்தையும் அரச ஆட்சியின் தொடக்க காலத்தையும் இணைக்கும் பாலமாக விளங்கினார். இது அவ்வளவு எளிதான ஒன்றன்று. சாமுவேல் அரச ஆட்சியை வெறுத்தார். இருப்பினும் மக்களின் வேண்டுகோளுக்கும் யாவேயின் சித்தத்துக்கும் பணிந்து அவர்களுக்கு ஓர் அரசனைக் கொடுக்கிறார். அவனையும் அரசனாக அன்று, போர்த்தலைவனாகவே அபிடேகம் செய்கிறார். இப்படித் தோன்றிய முதல் தலைவனிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கசப்பான அதிருப்தியாக முடிந்தது. சாமுவேல் இதில் தோல்வி கண்டார். தாவீதை இஸ்ராயேலின் அரசனாக அபிடேகம் செய்தபோது முடிவில்லா அரசாட்சியைச் சாமுவேல் நிறுவுகிறார்.

சவுல் இறைவனது வார்த்தையின்படி நடவாததால் யாவே அவரை நிராகரித்துவிட்டார். இதை அறிவிக்க சவுலை இறுதியாகச் சந்தித்தபோது சாமுவேல் கண்டிப்பும் மேன்மையும் மிக்கவராகவும், அச்சமற்றவராகவும் காட்சியளிக்கிறார். வயது சென்றவராய், பலவீனராய், ஆயுதமில்லாதவராய்ச் சாமுவேல், போரில் வெற்றிப் பெருமிதம் கொண்டு திரும்பும் அரசனைத் துணிவுடன் எதிர்கொள்ளுகிறார். யாவேயின் மனமிரங்காத மாற்ற முடியாத தூதுவராக நிற்கிறார். சவுலிடம் பொறாமையோ, அழுக்காறோ சாமுவேல் கொள்ளவில்லை. அவனுக்காக இரவு தோறும் ஆண்டுக்கணக்காக இறைவனை மன்றாடினார். சவுலின் அவல நிலையைப் பின்னிலையாகக் கொண்டு பார்க்கும்போது சாமுவேல் மிக உயர்ந்து திகழ்கிறார். ஆண்டவரும் அவருடன் இருந்தார். அவர் சொன்ன சொல்லில் ஒன்றுமே வீண் போகவில்லை (3:19); குரு ஏலியிடமோ அரசரான சவுலிடமோ யாவேயின் வார்த்தையை அச்சமின்றி உறுதியாகச் சொல்லத் தயங்கியதில்லை. அவர் குணச் சிறப்பு மிக்கவர்; ஆனால் இரும்பு போன்று உறுதிமிக்க மனமுள்ளவர். அவர் யாவேயின் வார்த்தையின் தீர்ப்புக்கு, அரசர்களையும் தலைவர்களையும் அச்சம், நடுக்கமின்றிப் பணியக் கட்டாயப்படுத்தும் உரமிக்கவர்; வருங்கால இறைவாக்கினர்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார். நாடு இடுக்கண் நிலையில் இருக்கலாம். சமயப் பிரச்சினைகள் எழலாம். புனித இடம் அழிக்கப்படலாம், பெட்டகம் எதிரிகளிடம் விழலாம். மக்கள் நம்பிக்கையிழந்து போகலாம். அரசன் பற்றுறுதியற்றுப் போகலாம். எந்நிலையிலும் சாமுவேல் இறைவனது வாக்குரைப்பவராக, இஸ்ராயேலின் நீதிபதியாகத் திகழ்கிறார். இறைவனுக்குக் கீழ்ப்படிதல் அவரது வாழ்வின் மையமாகும். அதுவே அவரதுசேவையை வளமிக்கதாக்கியது.

8.13. தாவீதும் சவுலும்:

சவுலின் பற்றுறுதியின்மையின் விளைவாக அவரை யாவே நிராகரித்ததை நினைத்து இரவும் பகலும் சாமுவேல் வருந்

தினார். எல்லாம் போய்விட்டது என்ற நிலையில் யாவே மீட்பு வரலாற்றில் புதிய தோர் கட்டத்தை ஆரம்பிக்கிறார். யாவே தாவீதைத் தேர்ந்தெடுத்தலிலே மீட்பு வரலாறு தொடருகிறது.

தாவீதின் எழுச்சியை ஐந்து அதிகாரங்களைக் கொண்ட மூன்று பகுதியாகப் பிரிக்கலாம். ஒவ்வொன்றும் ஒரு வீர காவியமாகும். முதல்படி சவுலின் அரசமன்றத்தில் தாவீது (16-20). இரண்டாம்படி அன்புக்கும், வெறுப்புக்கும் போராட்டம் (21:1-27:2). மூன்றாம்படி சவுலின் அவல மரணமும் தாவீதின் இரங்கற்பாவும் (1 சாமு 28-2 சாமு 1).

சாமுவேல் தாவீதை அபிடேகம் செய்த வரலாற்றை நூலில் (16:13) காணலாம். கொம்பினால் செய்த கிண்ணமும் அதில் உள்ள எண்ணெயும், பழம்மேற்காசியாவில் அரச அபிடேகத்தைக் குறித்தது. தாவீதின் அபிடேக விவரிப்பு, எப்படி யாவே இஸ்ராயேலில் ''குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவரை நமக்காகத் தோன்றச் செய்தார்'' (லூக் 1:70) என்பதையும் சுட்டுகிறது.

பெத்லகேம் யூதாவின் சிறப்பு மிக்க நகரங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். பெத்-வீடு. லகேமு என்பது ''எனுமஎலிவு'' என்ற காவியத்தில் வரும் குழப்பத்தின் கடவுளுக்குப் பெயர். இது கானானியரின் போர்க்கடவுளாகும். ஆகையால் பெத்லகேம் என்பதற்கு ''லகேமுவின் வீடு'' என்று பொருள் கூறலாம். எபிரேயர்கள் இச்சொல்லுக்கு ''அப்பத்தின் வீடு'' என்று பொருள் கொடுத்தனர். தாவீதின் வழியாகவும் அவரது மாபெரும் புதல்வரான இயேசுவின் வழியாகவும் இந்தக் கானானியப் பெயர், மீட்பின் மெசியா காலத்தின், எல்லா மக்களுக்குமுரிய அமைதி மகிழ்ச்சியின் நற்செய்திக்கு அடையாளமாகிறது.

ஈசாய் என்ற சொல்லுக்கு ''யாவேயின் மனிதர்,'' ''பலமிக்கவர்'', ''வீரமிக்கவர்'', ''யாவே இருக்கிறார்'' என்று பலவாறு பொருள் கொடுப்பர். இறை ஆவியால் தூண்டப்பெற்று தாவீதைச் சாமுவேல் அபிடேகம் செய்ததை வாசித்தறிக. ''அன்று முதல் ஆண்டவருடைய ஆவி தாவீதுமேல் நிறைவாக இருந்தது'' (16:13). இனிமேலிருந்து அவனது வாழ்வு ஆவியின் ஆதிக்கத்தில் இருக்கும். அபிடேகம் செய்யப்படுதலும், ஆவியைப் பெறுதலும் சேர்ந்து நிகழ்கிறது. அது யாவே ஒரு மனிதனைத் தேர்ந்து கொண்டார் என்பதற்கு அடையாளமாகும். யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதன், அவர் அளிக்கும் தூதுக்கும் தன்னையே ஆயத்தம் செய்ய வேண்டும். இனி அவன் தனக்குச் சொந்தமானவன் அல்லன். அவனை இறை ஆவி எடுத்துக் கொண்டது, ஆட்கொண்டு விட்டது. அவனை அதே ஆவி வழி நடத்தும். தாவீதின் தந்தையும் சகோதரரும் அதை ஓர் அரச அபிடேகமாய் எடுத்துக் கொண்டதாய்த் தெரியவில்லை. ஏதோ ஒரு அலுவலுக்குத் தாவீதை யாவே அழைத்துள்ளார் என்று உணர்ந்தனர். ஆனால் அந்த அலுவல் என்ன என்பதை ஒருவரும் அறியார். சிறுவனான தாவீது தனது வேலைக்குச் சென்றான். எல்லாம் சாதாரணமாக நடந்தன. ஆவி அவனை வேறுவிதமாக நடத்த ஆரம்பித்தது.

தாவீது என்பதற்குப் பல பொருள் கொடுப்பர்: அவற்றில் சில ''தலைவன்'' ''ஆணையிடுபவன்'' ''அன்புக்குரியவன்'' ''சலுகை பெற்றவன்'' என்பன. சிறுவனான தாவீது ஆடுமேய்ப்பவன், பாடகன், தீரமிக்க போர்வீரன். தாவீது மக்களின் மனதையெல்லாம் தன்பால் ஈர்த்தான். வரலாற்றிலே தம் மக்களின் அன்புக்குரியவனாகத் திகழ்கிறான்.

8.14. சவுலின் அரச மன்றத்தில் தாவீது:

இறை ஆவியின் தூண்டுதலுக்குப் பணியும் மனிதன் தனது குறிக்கோளை நோக்கி வெற்றியோடு முன் செல்லுகிறான். யாவே தன்னுடன் இருப்பதால் எகிப்தில் யோசேப்பைப்போல், இப்போது தாவீது, சாமுவேலால் அபிடேகம் பெற்றபின் இறைவனால் நடத்தப்படுகிறான். இதற்கு மாறாக இறை

ஆவிக்கு எதிராக எழுந்த சவுல் தீய ஆவியின் ஆதிக்கத்தில் துன்புறுகிறார். ''தீய ஆவி அவரைக் கலக்கமுறச் செய்தது'' (16:14). இந்தத் தீய ஆவியையும் ஆண்டவரே அனுப்பியதாகக் கூறப்படுகிறது. சவுலை அலைக்கழித்த நோய் என்ன? அவரைப் பேய் பிடித்ததா? இருக்கலாம். ஆனால் சவுலின் பணியாளர்கள், இத்தீய ஆவியை விரட்ட அக்காலத்தில் வழக்கமாய்ச் செய்வதுபோல் செபம் செய்யவோ தூய்மைச் சடங்கை நிறைவேற்றவோ பலி செலுத்தவோ முயற்சி செய்யவில்லை. அதற்கு மாறாக அவருக்கு அமைதியளிக்க இசையைப் பயன்படுத்த முயலுகின்றனர். இதனால் அவர்கள் இந்நோயை ஓர் உள்நோயாகக் கருதியதாகத் தெரிகிறது. சவுல் உடல் அளவில் பருத்தும் உயர்ந்தும் இருந்தாலும் கூச்சமுள்ளவர்; அச்சமுள்ளவர்; அடங்காத கோபம் கொள்ளக்கூடியவர்; நிலையான மனப்போக்குடையவர் அல்லர். நல்ல காலத்திலேயே இத்தன்மையுடைய சவுல், இப்போது யாவே தன்னை நிராகரித்தார் என்ற எண்ணத்தால், உள்ளம் தளர்ந்து மன இரக்கத்தால் வாடுகிறார். இது அவரைப் பைத்தியம் பிடித்தவர்போல் செயல்படச் செய்கிறது. இத்தகைய மன நோயால் சவுல் வருந்தினார் என நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆயினும் இந்நோயை யாவே அனுப்பினார். ஆதலால் இதற்குச் சமய வேர் உண்டு. இந்நிலையில் தாவீது சவுலின் பணிக்குக் கொண்டு வரப்படுகிறார். சவுல் தீய ஆவியால் துன்புற்ற போதெல்லாம் தாவீது யாழ் மீட்டுகிறார். அதனால் சவுல் நலம் பெறுவார், தீய ஆவி அவரைவிட்டு நீங்கும் (16:23).

8.15. தாவீதும் கோலியத்தும்:

இக்கதையை 17:4-51-இல் வாசித்தறிக. நாம் இரு குறிப்புகளை மட்டும் கொடுக்கிறோம். முதலாவதுகோலியத்து விட்ட சவாலை ஓர் இஸ்ராயேலனும் ஏற்கவில்லை என்பது பற்றித் தாவீது மிகவும் வெட்கினான். கோலியத்தை வென்றால் கிடைக்கக் கூடிய சன்மானத்தைப் பெரிதாகக் கருதவில்லை. அதைவிட மேலானது ஆபத்தில் இருந்தது. இஸ்ராயேலர் தங்கள் நாட்டுக்காக மட்டும் போரிடவில்லை. தங்கள் ''உயிருள்ள இறைவனுக்காகப் போரிடுகின்றனர்''. கோலியத்து உயிருள்ள கடவுளின் சேனைகளைத் தாக்கினான். ஆகையால் அவன் வீழ்ச்சியடைய வேண்டும். ஏனெனில் ஈட்டியையும் போர்க்கவசத்தையும் விட உயிருள்ள இறைவன் பலமிக்கவர். இது தாவீதின் நம்பிக்கை. கோலியத்து போர்க்கருவிகளுடன் வரலாம். தாவீதோ ''சேனைகளின் ஆண்டவர் பெயராலே'' செல்வான். என்ன வேற்றுமை! ஒருபுறம் கோபமிக்க கொடுமை! மறுபுறம் அமைதிமிக்க வெற்றி கொள்ளும் நம்பிக்கை! இஸ்ராயேலின் போர்க்கடவுளான சேனைகளின் ஆண்டவர் தாவீதுக்காகப் போரிடுகிறார். ''ஆண்டவர் மீட்பு வாளாலும் அன்று; ஈட்டியாலும் அன்று என்று இந்த மக்கள் கூட்டம் எல்லாம் தெரிந்து கொள்ளும்; ஏனெனில் போர் அவருடையது'' (17:47). தாவீதும் யாவேயின் பெயரால் வெற்றி பெறுகிறார். ஆகவே யாவேயின் கூடாரத்தில் இவ்வெற்றியின் சின்னங்கள் சாட்சியாக வைக்கப்பட்டன.

இரண்டாவது, 16-ஆவது அதிகாரத்தின்படி யாழிசைஞனும் பாடகனும் போர்வீரனுமாய்ச் சவுலுக்குத் தாவீது பணிசெய்கிறான். 17-ஆம் அதிகாரத்தில் சவுல் தாவீதை அறியாதிருப்பதாகக் காட்டப்படுகிறது. இந்த முரண்பாடுகளுக்குப் பலவாறு விளக்கம் அளிக்க முயன்றுள்ளனர். பின்வருவது திருப்தியளிப்பதாயுள்ளது. சாமுவேல் ஆகம வரலாற்று ஆசிரியருக்குப் பல மூலங்கள் இருந்தன. ஒரு புறம் சாமுவேலைச் சுற்றி எழுந்த இறைவாக்குப் பாரம்பரியங்கள். இவை இஸ்ராயேலில் வரும் யாவேயின் சிறப்பு நிகழ்ச்சிகளை அப்படியே சிறப்பித்துக் காட்டுவதில் கவனம் செலுத்தின. மறுபுறம் அரசமன்ற விவரிப்புகள் இளைஞனான தாவீதின் வரலாற்றை வேறு விதமாய் எடுத்துரைக்கின்றன. சாமுவேல் ஆகம ஆசிரியர், இப்படிப்பட்ட வேறுபட்ட விவரிப்புகளை ஒற்றுமைப்படுத்தாமல் அப்படியே அடுத்தடுத்துத் தருகிறார். இப்படி வேறுபட்ட மூலங்களை அப்படியே தருவதில் இவ்வாசிரியரின் நம்பகத் தகுதியுடைமை வெளிப்படுகிறது. இதே

பண்பு ஒத்தமை நற்செய்தியாளர்களிடை யேயும் காணப்படும்.

8.16. அன்பும் வெறுப்பும்:

கோலியத்தைக் கொன்றபின் தாவீது பல சண்டைகளில் வெற்றி பெற்றார். எனவே ''எல்லா மக்களும் சிறப்பாகச் சவுலுடைய ஊழியர்களும் தாவீதைப் பெரிதும் விரும்பினர்'' (18:5); அபிமானம் கொண்டனர். சவுலின் மகன் யோனத்தானுக்கும் தாவீதுக்கும் இடையே நட்பு வளரலாயிற்று. ''யோனத்தானின் உள்ளமும் தாவீதின் உள்ளமும் ஒன்றுபட்டன. யோனத்தான் அவனைத் தன் உயிர்போல் அன்பு செய்தான்'' (18:1). இந்நட்பு ஒரு தனிப்பெரும் அன்புக் காப்பியமாகும். இதை நூலில் வாசித்தறிக (18:1-5; 20:1-43; 23:16-18). பிற்காலத்தில் யோனத்தான் போரில் இறந்துபட்டபோது தாவீது புலம்பிக் கூறுவார்: ''சகோதரன் யோனத்தான்! உனக்காக என் உளம் உடைந்துபோனது! எனக்கு உவகை அளித்தவன் நீ! என் மீது நீ பொழிந்த பேரன்பை என்னென்பேன்! அது மகளிரின் காதலையும் மிஞ்சியதன்றோ!'' (2 சாமு 1:26). இவ்விருவருக்கிடையே இருந்த அன்பைப் போன்று பழம் இலக்கியங்களில் வேறொன்றைக் காண்பது அரிது.

போரில் வெற்றி பெற்றுத் திரும்பிய போது, தன்னைவிடத் தாவீதைப் பெண்கள் புகழ்ந்து பாடக்கேட்ட சவுல், தாவீது மீது பொறாமை கொண்டார். தனது அரியணைக்குப் போட்டியாகத் தாவீதை எண்ணினார். ஆகையால் அவனைக் கொல்லப் பலதரம் முயன்றார். ஆனால் தாவீதோ தப்பிக் கொண்டே முன்னேறினார். இவை பற்றி நூலில் வாசித்தறிக (18:6-19:21; 24:1-23; 26:1-25).

அரச மன்றத்தில் இனித் தங்க முடியாது; நாட்டிலும் இனி வாழ முடியாது; அரசன் தன்னைக் கொல்லத் தேடுகிறான் என்பது உறுதியானவுடன் தாவீது ஒரு நாடோடியாகிறார். சவுல் அவரை வேட்டையாடுகிறார்; துன்புறுத்துகிறார். தாவீதின் வாழ்வில் புதியதோர் அதிகாரம் தொடங்குகிறது.

8.17. நாடோடியான தாவீது:

தாவீது கோலியத்தை வென்றவர்; அரசனின் மருமகன் என்ற அளவில் பிறரது பொறாமைக்குரியவர். போரில் வெற்றி மேல் வெற்றி பெற்றவர். ஆனால் திடீரெனப் பல இன்னல்கள் அவரைச் சூழ்கின்றன. உதவியற்ற நாடோடியாகப் பாலையில் அலைந்து திரிகிறார். துன்புறுத்தப்படுகிறார். அவரது உயிருக்கே ஆபத்து வருகிறது. வேட்டையாடப்படத் தகுதி இல்லாத ''செத்த நாயைப் போலாகிறார்'' (24:75). இவற்றில் எல்லாம் அவரது ஒரே நங்கூரம் உறுதியான அடிப்படையுடைய அவரது விசுவாசமாகும். தன் இறைவன் யாவேயிடம் தளராத நம்பிக்கை வைத்திருந்தார். உறுதியான முடிவு எடுக்குமுன் யாவேயின் திருவுளத்தைத் தேடுகிறார். அதை அறிந்தபின் அவநம்பிக்கையின் மத்தியிலும், தளராது, பிறழாது அதைப் பின்பற்றுகிறார். துன்பம் எனும் புடைக்கலத்தில் தாவீது முதிர்ச்சியடைகிறார். இப்படியாக இறைவன் அளிக்கவிருக்கும் பெரும் அலுவல்களுக்கும் தாவீது தயாராகிறார்.

இக்காலத்தில் சவுல் தாவீது ஆகியோரிடையே நடக்கும் நாடகம் உச்சகட்டத்தை அடைகிறது. நூல் ஆசிரியரும் இப்பகுதியை நாடகப்பாணியில் வீர காவியமாக வரைகிறார். இறைவனது திட்டப் பின்னணியில் தான் நாம் இவற்றை வாசிக்க வேண்டும். அப்போதுதான் இந்நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடியும்; சரியாக மதிப்பிட முடியும்.

சவுலின் பிடியிலிருந்து தப்பி ஓடிய தாவீது நோபுக்குச் செல்லுகிறார். தாவீதுக்கு உணவும் போர்க்கருவிகளும் உடனடியாகத் தேவைப்பட்டன. கூடாரத்தில் இருந்த பெரிய குருவிடம் ''பிரசன்ன அப்பங்களைத்'' தவிர வேறு உணவு இல்லை. தேவையின் பொருட்டு, இதையும் தாவீதுக்குக் கொடுக்க பெரிய குரு தயங்கவில்லை. இதைப்பற்றிப் புதிய ஏற்பாட்டுக் குறிப்பு ஒன்று உளது. இயேசுவின் சீடர் ஓய்வுநாளில் தானியக்கதிரைக் கொய்து, தேய்த்துச் சாப்பிட்டபோது

பரிசேயர் குறை கூறினர். இயேசு மேற்கூறிய நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி அத்தியாவசியத்திற்குக் கட்டுப்பாடே இல்லை என்று கூறுகிறார்.

கூடாரத்தில் வெற்றிச்சின்னமாக வைக்கப்பட்ட கோலியத்தின் வாள் இருந்தது. அதைத் தாவீது எடுத்துக்கொள்கிறார். இதை, யாவேயின் உதவி தனக்கு எப்போதும் இருக்கும் என்பதற்கு ஒரு தெளிவான அடையாளமாக எடுத்துக் கொள்கிறார். தாவீதுக்கு இவ்வுதவிகளைச் செய்ததால் பெரிய குருவையும் மற்றக் குருக்களையும் சவுல் மிருகத்தனமாகக் கொல்லுகிறார். இந் நிகழ்ச்சியில் மனித வரலாற்றை இறைவன் திட்டமிட்டு நடத்திச் செல்லுகிறார் என்ற மற்ற உண்மை மீளவும் தெளிவாகிறது. இந்நிகழ்ச்சியில் ஏலியின் வீட்டிற்கு எதிராக அறிவிக்கப்பட்ட தீர்ப்பு நிறைவேறுகிறது (1 சாமு 2:30-36). குற்றமற்ற இந்தக் குருக்களின் இரத்தப்பலி, அவர்களுடைய முன்னோரின் குற்றங்களுக்குப் பரிகாரமாகிறது. மனிதன் மட்டும் வரலாற்றை அமைப்பதில்லை. நமக்குத் தோன்றாவிடினும் எல்லா நிகழ்ச்சிகளின் மத்தியிலும் யாவே இருக்கிறார்; தீர்ப்பிடுகிறார்; நிராகரிக்கிறார்; தேர்ந்தெடுக்கிறார்; வழிநடத்துகிறார். இவ்வாறு தொடர்ந்து செயலாற்றுகிறார். மனிதவரலாறு ஒரு தொடரான இறைத் தீர்ப்பாகும்.

தாவீது பைத்தியக்கார வேடம் போடுகிறார் (21:10-15); பாலையில் ஒரு சிறுபடைத் தலைவனாகிறார். சவுல் தாவீதை அழிக்கப் பல முயற்சி செய்தும் வெற்றியடையவில்லை. இரு முறை சவுலைக் கொல்ல வாய்ப்புகள் கிடைத்தும், தாவீது அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் சவுல் ''ஆண்டவரால் அபிடேகம் செய்யப்பட்டவர்''. இரு முறையும் சவுல் மனந்திருந்தி, தாவீதைத் துரத்தும் முயற்சியைக் கைவிட்டுத் திரும்புகிறார்.

தாவீது நாடோடியாகத் திரிந்த காலத்தில் சாமுவேல் மரிக்கிறார். அதற்காக இஸ்ராயேலர் அனைவரும் துக்கம் கொண்டாடினர் (25:1). இஸ்ராயேலரில் மிகப் பெரியவர்களுள் ஒருவருடைய இறப்பு இப்படி வெறுமனே கூறப்படுகிறது.

தாவீது - அபிகாயில் கதை வாசிக்க வேண்டியதொன்றாகும். பெலிஸ்தியரிடம் தஞ்சம் புகுந்து சிக்லாகு நகரைப் பெற்று, அங்கிருந்து கெசூரியர், கிர்சியர், அமலேக்கியர் ஆகியோர் மேல் பெலிஸ்தியருக்குச் சார்பாகப் படையெடுத்துச் சென்று அவர்களைக் கொள்ளையடித்தார். அதே போது யூதாவுக்குப் பாதுகாப்பு அளித்தார். இதன் விளைவாகத் தம் இனத்தவரின் அபிமானத்தைப் பெற்றார். இது அவரது வருங்கால அரசுக்கு உறுதியான அடித்தளம் இட்டது.

8.18. சவுலின் அவல முடிவு:

மிக்மாசில் தோல்வியடைந்த பெலிஸ்தியர், பின்வாங்கித் தங்கள் படைகளை ஒன்று திரட்டி, இஸ்ராயேலை மீளவும் தாக்கப் பொருத்தமான வேளைக்குக் காத்திருந்தனர். ''சவுல் பெலிஸ்தியரின் பாசறையைப் பார்த்து அஞ்சினார். அவர் உள்ளம் மிகவும் திகிலடைந்தது'' (28:5). போருக்குச் செல்லு முன் யாவேயின் திருவுள்ளத்தை உறுதிப்படுத்த சவுல் விரும்பினார். ஆனால் நோபுவில் நடந்த இரத்தக்களறிக்குப்பின் எஞ்சியிருந்த ஒரே குருவான அபியாத்தாரும் தாவீதோடு சேர்ந்து கொண்டார். இதனால் குருக்கள் வழியாக யாவேயின் விருப்பத்தை அறிய முடியவில்லை. சவுல் குறிகாரியின் உதவியை நாடி இறந்துபோன சாமுவேலின் ஆவியைச் சந்தித்ததையும், சாமுவேல் சவுலைக் கண்டனம் செய்ததையும் நூலில் காணலாம் (28;4-20). இந்நிகழ்ச்சி இறந்தபின் வாழ்வு பற்றிய இஸ்ராயேலின் விசுவாசம் பற்றிய மிகப் பழம்பெரும் ஏடாகும். இறந்தவர்கள் முழுவதும் இறந்தவர்கள் அல்லர். அவர்களுயை உயிர் முழுவதும் அழிந்து விடுவதில்லை. இறைவன் அனுமதித்தால், அவர்கள் இறந்தோர் உலகிலிருந்து எழுந்து வந்து, உலகில் உயிர் வாழ்வோரை எச்சரிக்க முடியும் (சீரா 46:23).

கில்போவா மலையில் இஸ்ராயேலருக்கும் பெலிஸ்தியருக்கும் போர் மூண்டது.

இஸ்ராயேலர் தோற்றனர். சவுலின் மக்களாகிய யோனத்தானும், அபினதாபும், மல்கிசுவாவும் தங்கள் தந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் தங்களுடைய உயிரையே அளித்தனர். தங்கள் தந்தை நம்பிக்கையற்ற முறையில் வீழ்ச்சியடைந்தபோது அவருக்குப் பற்றுறுதியாக இருந்து வீரமரணம் எய்தினர். தனது முடிவு நெருங்கி வருவதை உணர்ந்த சவுல், தன்னை வாளால் வெட்டும்படி படைக்கலம் தாங்குவோனைக் கேட்க, அவன் மறுத்து விட்டான். ஆகையால் சவுல் தமது வாளைத் தரையில் குத்திவைத்துத் தாமாகவே அதன்மேல் விழுந்து உயிர் நீத்தார். இவ்வாறு, இறைவனால் ஏற்படுத்தப்பட்ட முதல் இஸ்ராயேல் அரசன் அவல முடிவெய்தினார். இவர் இஸ்ராயேலுக்குப் பெலிஸ்தியரிடமிருந்து விடுதலை அளித்திருக்கவேண்டும். சவுலின் வாழ்வு சொற்களால் விவரிக்க முடியாத ஒரு துன்பியல் காவியமாக மாறுகிறது. இறைவனது ஆண்மையுடைய திட்டத்தின் பின்னிலையில் புரிந்து கொள்ளக்கூடிய மறை பொருளாகும் இது. சவுல் இறைவனுக்குப் பணியவில்லை. ஆகவே அவருக்கு இவ்வவல முடிவைத் தவிர வேறு முடிவு இருக்க முடியாது.

சவுலும் அவருடைய புதல்வர்களும் இறந்துபட்ட செய்தியை அறிந்த தாவீது பெரிதும் துக்கம் கொண்டாடினார். அவர் அப்போது பாடிய இரங்கற்பா சிறப்பு மிக்கதாகும். தாவீது சவுலிடம் பெரிதும் துன்பப்பட்டிருந்தாலும் சவுலைத் தாவீது நிந்தனை செய்யாது, அவரைப் போற்றிப்பாடுகிறார் (2 சாமு 1). அது தாவீதின் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

8.19. சவுல்:

சவுலின் வாழ்வு துன்பியல் வாழ்வுக்கு ஒரு சிறந்த சான்றாகும். இது மிகவும் இரங்கத்தக்கதாகும். தேர்ந்தெடுத்தல், நிராகரித்தல் என்ற இரு சொற்கள் சவுலின் வாழ்வைச் சுருக்கித் தருகின்றன.

இளைஞனான சவுல் அரசதன்மையும் கம்பீரத்தோற்றமும் உடையவராய் விளங்கினார் (9:2); மேலும் ஆற்றல் மிக்கவராகவும், வீரமிக்கவராகவும், பிறர் தன்பால் பற்றுறுதி கொள்ளத் தூண்டவல்லவராகவும் திகழ்ந்தார். இஸ்ராயேலர் அவரிடம் பெரும் நம்பிக்கை வைத்தனர். பல பெருஞ்செயல்களை எதிர்பார்த்தனர். அவருடைய தந்தையின் காணாமற்போன கழுதைகள் சவுலை அரியணைக்கு இட்டுச் செல்கின்றன. அவருடைய எழுச்சி மிக விரைவாக நிகழ்கிறது. அவரை யாவே தேர்ந்தெடுக்கிறார். அவரை இறைவாக்கினர் சாமுவேல் போர்த்தலைவனாக அபிடேகம் செய்கிறார். மக்களால் அரசராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். வெற்றி மிக்க படையெடுப்புகள் அவரது அரசை உறுதிப்படுத்துகின்றன. நீதிபதிகள் காலத்திய ஆவி பெற்றவர்கள் பாணியில் சவுலின் அரசு முழுமை அடைகிறது. அதுயாவேயின் கொடையிலிருந்தும் மக்கள் தேர்விலிருந்தும் தன் உருவத்தையும் பொருளையும் பெறுகிறது. சவுலின் வரலாற்றில் இஸ்ராயேலின் அரசு, பிற மக்களின் அரசிலிருந்து வேறுபடுகிறது என்பதைத் தெளிவாகக் காண்கிறோம். இஸ்ராயேலின் அரசு இருஉலகத்தைச் சார்ந்ததாகும். ஒன்று சமய உலகம். மற்றது இவ்வுலக அரசியல் உலகம். ஆனால் இரண்டையும் பிரிக்க முடியாது. சமய உலகில், இஸ்ராயேல் அரசு யாவேயின் கொடையாகும். அவரது சலுகை பெற்றதாகும். உலக அரசு நிறுவப்பட்ட பின்னும் யாவேதான் இஸ்ராயேலின் உண்மையான அரசர். இஸ்ராயேலர் சேனைகளின் ஒரே ஆண்டவர். உலக அரசன் ''யாவேயின் சொற்களுக்கு'' மாறாகச் செயல்படும்போது, அது அவனை உறுதியாக வீழ்ச்சிக்கு இட்டுச் செல்கிறது. அவனுள்ளே ஏற்கனவே நிகழ்ந்துவிட்ட கீழ்ப்படியாமை என்னும் துன்பியல் நிகழ்ச்சியின் புறத்தோற்றமே. அவனுடைய புற உலக அரசியல் வீழ்ச்சியாகும். சவுல் சமய உலகில் வீழ்ச்சி அடைகிறார். அதன் விளைவாக அரசியலிலும் வீழ்ச்சி அடைகிறார்.

சவுல் இஸ்ராயேலரிடையே நிலையான போர்ப்படையை நிறுவுகிறார். இஸ்ராயேலரை ஒற்றுமைப்படுத்துகிறார். நாட்டுக்கு உறுதியான அடிப்படையை நிறுவுகிறார்.

ஆனால் யாவேயின் விருப்பத்தை அறிய சாமுவேல் வரும்வரை காத்திராமல் போர் தொடங்குகிறார். குருக்களின் சிறப்பான அலுவலான பலியிடுதலையும் தாமே செய்து போர் தொடுக்கிறார். அவற்றிற்காக சாமுவேலின் வழியாக யாவேயின் கண்டனத்தைப் பெறுகிறார். யாவேயின் விருப்பத்தை அறிவதையும் அவர் வழிகாட்டுதலையும் சவுல் நிராகரித்தார். அரசு அவரிடமிருந்து எடுக்கப்படும்.

சவுலின் மற்றக் குறைகளையும் ஏற்கெனவே கூறியுள்ளோம். சவுல் கெட்டிக்காரரான அரசியல்வாதியாக இருக்கலாம். ஆனால் அவர் சமய உள்நோக்கு அற்றவர். சமய உலகில் வீழ்ச்சிஅடைகிறார். அதன் விளைவு அரசியலிலும் வீழ்ச்சிஅடைகிறார். அவர் மனித ஆற்றலைப் பெரிதும் நம்பினார்; பேராசைப்பட்டார். இறைவனது ஆற்றல் செயல்படுவதற்கு அவர் இடம் தரவில்லை. சுருக்கமாக யாவேயிடம் அவருக்கு விசுவாசமில்லை. அப்படிப்பட்ட அரசன் யாவேயின் ஆதரவு பெற்றவராக. நிலைத்து நிற்க முடியாது. மனிதன் அரசனாக இஸ்ராயேலில் செயல்பட்டாலும் யாவேதான் உண்மையான அரசர்; மேலான ஆண்டவர்.

யாவே தன்னை நிராகரித்துவிட்டார் என்ற எண்ணமும், சவுலின் நிலையற்ற மனப் போக்கும், மட்டுமின்மையும் அவரை ஒரு மனநோயாளியாய் ஆக்குகிறது. தன்னை யாவரும் துன்புறுத்துவதாக மயக்கம் கொள்கிறார். தாவீதின் மீது பொறாமை கொள்கிறார். தாவீதைக் கொல்லத்திட்டம் செய்கிறார். வேட்டையாடுகிறார். சவுலின் உள்ளத்தில் அன்பும் வெறுப்பும் போராடுகின்றன. சமய உலகில் மிக்க வீழ்ச்சியடைந்தார் என்பதாலேயே குறி சொல்பவர் உதவியையும் நாடத் தயங்கவில்லை. தற்கொலை செய்து கொள்கிறார். யாவேயால் உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டார். தனது தவறால் பெரும் வீழ்ச்சியடைந்தார். என்னே பரிதாபமிக்க வீழ்ச்சி!

8.20. தாவீதின் எழுச்சி:

சவுல் போரில் வீழ்ந்தார். இஸ்ராயேல் படை சிதறிப் போயிற்று. நாட்டின் வடபகுதியில் பெரும்பகுதி பெலிஸ்தியரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. ஆனால் தென்பகுதியில் தாவீது பொறுமையோடும், தந்திரத்தாலும், திட்டமிட்ட போர்த்திறத்தாலும் தெற்கிலிருந்து கொள்ளை அடிக்கும் கூட்டத்திலிருந்து யூதாவைக் காப்பாற்றி வந்தார். அவருடைய சொந்த ஊரான பெத்லகேம் மக்களோடு இரத்த உறவு கொண்டிருந்தார். எபிரோன் மக்களோடு திருமணத்தால் உறவு கொண்டார். கொள்ளை அடித்த பொருட்களைப் பகிர்ந்து அளித்ததால் யூதாவின் 15 நகரங்களில் ஆதரவைப் பெற்றிருந்தார். சவுல் மடிந்தவுடன் யூதாவின் தலைவர்கள் தாவீதைத் தங்கள் அரசனாக விரும்பி ஏற்றுக் கொண்டனர். யூதாவுக்குப் போகலாமா? எந்நகருக்குப் போகலாம் என்பவை பற்றி யாவேயின் விருப்பத்தை அறிந்தபின் தாவீது எபிரோனுக்குச் சென்றார். அங்கு யூதாவின் அரசனாக அபிடேகம் செய்யப்பட்டார். மதியூகத்தோடு சவுலை அடக்கம் செய்த யாபேசின் மக்களைப் பாராட்டிச் செய்தி அனுப்பினார்.

8.21. அப்னேர் - யோவாபு:

சவுலின் படைத்தலைவரான அப்னேர் சவுலின் மகனான இசுபோசேத்தை இஸ்ராயேலின் அரசனாக ஏற்படுத்தினார். அப்னேர் ஒரு சிறந்த அரசியல் வல்லுநர். சிதறிப்போன வட பகுதியை ஒற்றுமைப்படுத்தி அரசைத் திருத்தி அமைத்தார். யூதாவை வெற்றி கொண்டு தன் ஆட்சியின் கீழ் கொண்டு வர முயன்றார். அதனால் உள்நாட்டுப் போர் தொடங்கியது. தாவீதுக்குச் சார்பாக, யோவாபு படைகளை நடத்தினார். யூதாவில் தாவீதுக்கு அடுத்தபடி யோவாபு தான் முக்கியமானவர். போர்த்திறமும் பேராவலும் மிக்கவர். கடின இதயமுடையவர். இரக்கமற்றவர். அவரது உறுதியிலிருந்து அவரை மாற்ற முடியாது. விட்டுக் கொடுக்க மாட்டார். இரத்தம் சிந்த அஞ்சமாட்டார். இவரைக் குறிக்கும்போது விவிலியம் சிறிது கசப்பு உணர்வோடு செரூயாவின் மகன்

என்றே குறிக்கிறது. கிபயோனின் குளத்தருகில் இருபடையும் சந்தித்துப் போரிட்டனர். அப்னேரின் படை தோற்றது. தன்னைத் துரத்திவந்த யோவாபின் தம்பியான அசாவேலை அப்னேர் கொன்றார். தன் தம்பியின் கொலைக்குப் பழி தீர்க்க யோவாபு சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடந்தது.

அரசனின் வைப்பாட்டியை மற்றொருவன் எடுத்துக்கொண்டால், அது அவ்வரசுக்கு உரிமை கொண்டாடுவதற்குச் சமமாகும். இப்படி ஒரு பிரச்சினை எழுந்து, இசுபோசேத்துக்கும், அப்னேருக்கும் பகைமை ஏற்படுகிறது. வடபகுதியைத் தாவீதுக்கு அளிக்கப் போவதாக அப்னேர் சபதம் கூறுகிறார். அதன் விளைவாக அப்னேருக்கும் தாவீதுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்பின் தாவீதைச் சந்தித்துத் திரும்பிப்போகும் அப்னேரை யோவாபு தனியாக அழைத்துத் தந்திரமாகக் கொன்று, தன் தம்பி அசாவேலுடைய இரத்தத்திற்குப் பழி தீர்த்துக் கொண்டார். இப்படிச் செய்வது அக்காலத்தில் முறையான வழக்காகக் கருதப்பட்டது. இதன் விளைவாக இஸ்ராயேலின் இரு பகுதிகளையும் தாவீதின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வர நினைத்த அப்னேரின் முயற்சி நின்று போயிற்று.

இப்பழிவாங்கலில், தனது கரத்தைக் கறைபடுத்திக் கொள்ள தாவீது விரும்பவில்லை. ஆகவே தாவீதும் அவரது அவையும் அப்னேருக்காகத் துக்கம் கொண்டாடினர். இதனால் அரசன் நேர்மையுள்ளவன் என்று இஸ்ராயேலர் அனைவரும் அறிந்து கொண்டனர். வடபகுதி மக்கள் இசுபோசேத்தின் பொம்மை அரசால் மன நிறைவு அடையவில்லை. இந்நிலையில் பென்யமின் இனத்தைச் சேர்ந்த பானா, இரேக்கபு என்ற இருவர் இசுபோசேத்தைக் கொன்று, அவனது தலையை வெட்டித் தாவீதிடம் கொண்டு வந்தனர். இச்செயலுக்காகத் தாவீதிடமிருந்து இவர்கள் சன்மானம் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்கள் செய்த குற்றத்திற்காகத் தாவீது அவர்களைக் கொன்று கைகால்களையும் வெட்டி எபிரோனில் குளத்தருகில் அவர்களைத் தொங்கவிட்டார். இசுபோசேத்தின் தலையை எடுத்து மரியாதையுடன் அடக்கம் செய்தார். இவ்வாறு தாவீது செயல்படாமலேயே அவரது இருபெரும் போட்டியாளர்கள் ஒழிந்தனர். தாவீது மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். மேலும் தாவீது தனது எதிரிகளைக் கொன்ற இரத்தக் கறைபடியாத தூய கரத்தோடு அரியணை ஏற முடிந்தது.

8.22. இஸ்ராயேலின் அரசன் தாவீது:

யாவும் தாவீதுக்குச் சாதகமாகவே நடந்தன. இஸ்ராயேலின் கோத்திரத்தார் யாவரும் எபிரோனில் இருந்த, தாவீதிடம் வந்தனர். சவுலின் காலத்திலேயே தாவீது இஸ்ராயேலை நடத்திச் சென்றதையும், தாவீது இஸ்ராயேலுக்குத் தலைவனாக இருக்க வேண்டியது என்ற இறைவாக்கையும் நினைவுபடுத்தித் தங்களுக்கும் அவர் அரசனாக இருக்கும்படி கேட்டுக் கொள்கின்றனர். இருதிறத்தாருக்கும் உடன்படிக்கை ஏற்படுகிறது. தாவீது எல்லா இஸ்ராயேலின் அரசனாக அபிடேகம் செய்யப்படுகிறார். இது மூன்றாம் அபிடேகமாகும். முதலாவது சாமுவேல் தாவீதை அபிடேகம் செய்தார். இது அடிப்படையான அடையாளச் சடங்காகும். வரவிருக்கும் நிகழ்ச்சிகளை முன்னோக்கிச் செய்யப்பட்டது. இரண்டாம் முறையாக யூதா இனத்தவர் தங்கள் அரசனாகத் தாவீதை அபிடேகம் செய்தனர். மூன்றாம் முறையாக, எல்லா இஸ்ராயேல் இனத்தவரும் தங்கள் அரசனாகத் தாவீதை அபிடேகம் செய்தனர். ஒவ்வொரு அபிடேகமும் சமய அரசியலில் உச்சநிலையாகும்.

இதுவரை ஆதரவு அளித்து வந்த பெலிஸ்தியர் இனிமேல் தாவீதைத் தாக்கத் தொடங்கினர். யாவேயின் விருப்பத்தை அறிந்து, அதன்படி பெலிஸ்தியரைப் பல முறை தோற்கடித்து, கெபா தொடங்கிக் கெசேர் எல்லைவரை, தாவீது பெலிஸ்தியரை விரட்டினார். பாலஸ்தீனம் இஸ்ராயேலுக்குச் சொந்தமான நாடாயிற்று.

8.23. எருசலேமில் தாவீது அரசன்:

உலகின் மிகப்பழம் பெரும் நகரங்களில் எருசலேம் ஒன்றாகும். இதில் கி.மு. 3000

ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்து வந்திருக்க வேண்டும். கி.மு. 2000-த்தை ஒட்டிய எகிப்திய பழித்துரை ஏடுகளில் இப்பெயர் காணக்கிடக்கிறது ''ரூசலிமும்'' என்ற சொல்லுக்குச் ''சலிமால் நிறுவப்பட்டது'' என்ற பொருளுண்டு. சலிம் ஒரு கடவுளைக் குறிக்கலாம். ''சலீம்'' என்ற சொல்லுக்கு ''முழுமையானது'', ''நலமுள்ளது'' என்று பல பொருள் உண்டு. இச்சொல்லின் திரிபு ஆன ''சுல்மான்'' என்ற சொல்லுக்கு ''நலம் அளிப்பவர்'' என்ற பொருள் உண்டு. சுல்மானின் ஆலயம் எருசலேமில் இருந்திருக்க வேண்டும். தாவீது இந்நகரைக் கைப்பற்றியபோது, அதன் பெயரை மாற்றினார். ஆயினும் வரலாற்றிலே எருசலேம் என்ற பெயரே நிலைத்துவிட்டது. யூத மறைமெய்மையியலில் எருசலேம் ''விண்நகரமாகிறது''. புதிய ஏற்பாட்டில் இரு பரிசுத்த நகரமாகிறது. அரேபியா நாடுகளில் எருசலேம் ''புனித இடம்'', ''பரிசுத்த நகரம்'' என்று வெறுமனே குறிக்கப்படும். உலகிலே, மனிதவரலாற்றிலே இது முக்கிய நகரங்களில் ஒன்றாகும்.

எருசலேம் மலையுச்சியில் 760 மீட்டர் உயரத்தில் அமைந்திருந்தது. ஏறக்குறைய 4.5 ஹெக்டேர் பரப்புடையது. ஒரு பக்கத்தில் கிதரோன் பள்ளத்தாக்கும், மற்றொரு பக்கம் திரோப்பியன் பள்ளத்தாக்கும் இயற்கை அரணாக அமைந்திருந்தன. இப்பக்கங்களிலிருந்து இந்நகரைத் தாக்குவது முடியாத காரியம். வடக்கில் இந்நகரம் சிறிது பலவீனமாயிருந்தது. அங்கும் 70 மீட்டர் விட்டமுடைய கிணற்றால் பாதுகாக்கப்பட்டது. அதைச் சுற்றியிருந்த உயர்ந்த மலைகள் பாதுகாப்பான சுவர்கள் போல் அமைந்திருந்தன.

தாவீது அரசியல் ஞானத்தோடும் விவேகத்தோடும் எருசலேமைத் தனது தலைநகரமாக்குகிறார். அது நாட்டின் மையத்திலிருந்தது. இங்கிருந்து பல பகுதிகளுக்கும் பாதைகள் இருந்தன. மேலும் இது எந்தத் தனி யூத இனத்துக்கும் உரியதன்று. தாவீது எப்படி எருசலேமை வென்றார்; அதில் யாவேயின் பாகம் என்பது என்ன என்பவை பற்றி நூலில் வாசித்தறிக (2 சாமு 5:6-16; 1 நாள் 11:4-9).

2 சாமு 5:7-இல் முதல் தடவையாக எருசலேம் ''சீயோன்'' என்றழைக்கப்படுகிறது. இச்சொல் ''பாறை'' அல்லது ''உட்கோட்டை'' என்று பொருள்படும். ஒரு வேளை எபூசியர் நகரின் உட்கோட்டையாக இது இருந்திருக்கலாம். காலப்போக்கில் சீயோன் என்ற சொல் நகரம் முழுமையையும் குறித்தது. இஸ்ராயேல் மக்களின் சமய மையமாகத் திகழ்ந்தது. சங்கீதங்களிலும் இறைவாக்குகளிலும் பெரிதும் போற்றப்படுகிறது.

தாவீது தான் கைப்பற்றிய எருசலேமுக்குத் ''தாவீதின் நகரம்'' என்று பெயரிட்டார். ஆனால் வரலாற்றில் பழைய பெயரே நிலைத்தது. அக்காலத்தேவைக்கு ஏற்ப தாவீது எருசலேமின் பாதுகாப்பைப் பலப்படுத்தினார். தீர் அரசனாகிய ஈராமின் உதவியோடு தனக்கு ஒரு மாளிகை கட்டிக் கொண்டார். தாவீதின் குடும்பம் பெருகுகிறது.

அரசியல் ஒற்றுமைக்குப்பின், தாவீது சமய ஒற்றுமையில் தனது கவனத்தைச் செலுத்தினார். உடன்படிக்கைப் பேழை இன்னும், கிரியத்து எயாரிமில்தான் இருந்தது; அங்கே சரியான வழிபாடு கொடுக்கப்படவில்லை. திருப்பயணிகள் அங்குச் செல்லவில்லை. இந்நிலை இஸ்ராயேலுக்கு ஓர் அவமானமாகும். ஆகவே தாவீது உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்குக் கொண்டு வர முயன்றார். முதல் முயற்சியில் தோல்வியடைந்தாலும், பின்பு எப்படி வெற்றி பெற்றார் என்று நூலில் வாசித்தறிக (6:12-19). இது ஒரு மகிழ்ச்சி மிக்க நிகழ்ச்சியாகும். ஆயினும் இது தாவீதின் குடும்பத்தில் ஒரு பூசலை உண்டாக்கியது (2 சாமு 16:20-23).

8.24. தாவீதுக்கு இறைவன் அளித்த வாக்குறுதியும் உடன்படிக்கையும்:

தாவீதின் அரசு இஸ்ராயேலரிடையே உறுதிப்பட்டுவிட்டது. ஆனால் இவ்வரசும் சவுலுடையதைப் போன்று குறுகிய காலத்தியதா? அப்படியன்று என்று இறைவாக்கினர்

கூறுகிறார். இவ்வரசு எக்காலத்துக்கும் நீடித்திருக்கும்; அதற்கு முடிவு இராது. இறைவனுக்கு ஆலயம் கட்ட விரும்பிய தாவீதுக்கு இறைவாக்கினர் நாத்தான் வழியாக அளிக்கப்பட்ட இறைவாக்கு இச்செய்தியை அறிவிக்கிறது (2 சாமு 7; 1 நாள் 17). இரத்தக் கறை படிந்த தாவீது இறைவனுக்கு ஆலயம் கட்டமாட்டார்; மாறாக அவர் மகன் சாலமோன் கட்டுவான். இறைவனுக்கு ஆலயம் கட்டவிரும்பிய தாவீதுக்கு இறைவனே ''ஒரு வீட்டைக் கட்டுவார்''. ''உன் வாழ்நாள் முடிந்து நீ உன் முன்னோருடன் துயில் கொள்ளும் பொழுது உனக்குப்பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப்பின் நாம் உயர்த்தி அவனது அரசை நிலைநாட்டுவோம்...... உன் அரியணை என்றுமே நிலை பெற்றிருக்கும்'' (2 சாமு 7:12-16). இவ்வாக்குறுதி மூன்று இடங்களில் வருகிறது (2 சாமு 7:12-16; 1 நாள் 17; சங் 89). இவற்றில் காலத்தால் முந்தியதும் மூலமாய்த் திகழ்வதும் 2 சாமு 7 ஆகும். இவ்வாக்குறுதி பற்றிய பல தர்க்கங்கள் உண்டு.

இக்கூற்றில் சிலசொற்களை நாம் கவனிக்க வேண்டும். வீடு: இச்சொல் வரும் சில சிறப்பான இடங்கள்: ஆதி 7:1; 12:7; 35:2; யாத் 2:1; யோசு 7:14; 1 அரச 12:16; 13:2; 11:38; இவையெல்லாம் ஒருவனுடைய வீட்டினர் அனைவரையும் குறிப்பதாகும்; சிறப்பாக இனி வரும் தலைமுறைகளையும் குறிக்கும். வரவிருக்கும் அரச மரபையும் குறிக்கும் (1 அரச 13:38; 12:16; 13:2). இவற்றைக் கருத்தில் கொண்டால் ''வீடு'' என்பது அரச மரபைக் குறிக்கும்; இங்கு இச்சொல் தாவீதின் அரச மரபை உணர்த்தும்.

மகன் - வித்து: இச்சொல் தனிப்பட்ட குழந்தையைக் குறிக்கிறது (ஆதி 4:25; 1 சாமு 1:11). குழுப் பொருளில் பரம்பரையைக் குறிக்கும் (ஆதி 3:15; 12:7; 13:15). குடும்ப பரம்பரையைக் குறிக்கும், சிறப்பாக அரச பரம்பரையைக் குறிக்கிறது (2 அரச 11:1). இதன்படி ''உனக்குப் பிறக்கும் உன் வழித்தோன்றலை'' என்ற சொற்றொடர் தாவீதின் உடனடி நேரடி மகனான சாலமோனைத் தான் குறிக்கும். ஆனால் ''வீடு'', ''மகன்'' இவ்விரு சொற்களையும் சேர்த்துப் பார்க்கும்போது ''மகன்'' அல்லது ''வித்து'' என்பது உடனடியான வழித்தோன்றலை மட்டுமன்று, முழுப் பாரம்பரியத்தையும் குறிக்கிறது எனலாம்.

இறைமகன்: இறைவனுக்கு நேரடியான மகன் இருக்கக்கூடும் என்ற கருத்து இஸ்ராயேலின் இறையியலுக்குப் புறம்பானதாகும். ஆனால் தாவீது இறைவனைத் தந்தையாக வழிபட்டார். இது அவர் தன் மகனுக்கு ''(இறைவனாகிய) என் தந்தை சமாதானமாவார்'' என்று பொருள்படும் ''அப்சலோம்'' என்று பெயரிட்டதிலிருந்து தெரிகிறது. இஸ்ராயேலுக்கு யாவே தம்மைத் தந்தையாகக் காட்டுகிறார், வழி நடத்துகிறார் (உபா 32:6; எசா 43:6; 63:16; 64:9). ஆகவே இஸ்ராயேலர் அவரது படைப்பின் பிள்ளைகள். ஆகவே ''நாம் அவனுக்குத் தந்தையாக இருப்போம் அவனும் நமக்கு மகனாய் இருப்பான்'' என்ற கூற்று, யாவே தாவீது பரம்பரைக்குச் சிறப்பான தந்தைக்குரிய அன்பைக் காட்டுவார்; அதன்மேல் சிறப்பான அக்கறை காட்டுவார் என்பதை உணர்த்துகிறது.

என்றென்றும் (ஓலாம்): இச்சொல் தொடக்கமுதல் தூர வருங்காலம்வரை, முடிவற்ற, கால முழுமையும் குறிக்கும். யாவே என்றென்றும் ஆளுகிறார். இக்கருத்து சிறிது சிறிதாக வளர்ந்த ஒன்றாகும். தாவீது இதை எவ்வாறு புரிந்து கொண்டார் என்பதை ''நீண்ட நாட்களுக்குப்பின் நடக்கவிருக்கும் உம் அடியான் வீட்டைப் பற்றிய செய்தி'' என்ற அவரது கூற்று விளக்குகிறது. இந்த இறைவாக்கின் பொருள் எளியதே. இது, யாவேயின் ஆலயத்தைக் கட்டுபவரும், தாவீதின் உடனடியான வழித்தோன்றலும் ஆன சாலமோனை மட்டும் குறிக்கவில்லை. வரவிருக்கும் மெசியாவையும் உள்ளடக்கிய முழுப் பரம்பரையையும் குறிக்கும். இது நன்மையையும் தீமையையும் உள்ளடக்கும். தீய அரசன் தண்டிக்கப்படுவான். ஆனால் தாவீது பரம்பரையை விட்டு அரசு ஒருபோதும் அகலாது என்பது உறுதி.

இப்பெரும் வாக்குறுதியால் திகைத்து வியப்பில் ஆழ்ந்துபோன தாவீது பெட்டக அரியணையில் கொலுவீற்றிருக்கும் யாவே யின் முன் சென்று தனது நன்றியைத் திக்கித் திணறிக் கூறுகிறார். ''தம் வார்த்தையின் பொருட்டும், தம் அன்பின் பொருட்டும்'' (7:21) தாவீதின் பாதையை மட்டுமின்றி அவரது மக்களின் பாதையையும் யாவே காத்திடுவார். இறைவனது இதயம் மனித வரலாற்றில் துடிக்கிறது என்பது வெறும் கவிநயமிக்க சொற்றொடர் மட்டுமன்று. அது விவிலிய இறையியலின் அடிப்படை யான முக்கிய கருத்துக்களில் ஒன்றாகும். இக்கருத்து - வரலாற்று மனிதனை மட்டும் சார்ந்திருக்கவில்லை. ஏன் மனிதச் செயலே இறைத்திட்டத்தின் மேல் நிற்கிறது. அவர் தனது ''முழு இதயத்தோடும்'' அதாவது இறை ஆர்வத்தோடும், அன்போடும், வர லாற்றுப் போக்கில் உயிருள்ள விதத்தில் அக்கறை கொள்ளுகிறார். அதன் முடிவை நோக்கி அதை வழி நடத்துகிறார். மனித வரலாற்றில் செயலாற்றும் இக்கடவுளின் மேலுள்ள உறுதியான விசுவாசமே, தாவீது மரபு என்று நிலைத்திருக்கும் என்ற அவ் வரசு பற்றிய இறைவாக்கை நடக்கக் கூடிய தாக மாற்றுகிறது. தாவீதின் அரசு இறைவ னின் திறமிக்க மேலான திட்டத்தில் உறுதி யாய் வேரூன்றியுள்ளது. அதை எந்த மனித சக்தியும் ஏமாற்றிச் செல்ல முடியாது. இறை வாக்கினர் நாத்தானின் வாயிலாகத் தாவீ துக்கு யாவே கூறிய சொற்கள் வருங்காலத் திற்குரிய வெறும் வாக்குறுதி மட்டுமன்று. யாவே தனது விருப்பத்தை அறிவிக்கும் அதே சமயம் தாவீது மரபின் ஊழையும் நிர்ணயிக் கிறார். தாவீது மரபு மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஓர் இறை நிறுவனமாகும்; ஆகவே என்றும் நிலைத்திருக்கும்:

தொடக்கமுதல், மனுக்குலம், வேதாளத் தைக் கொன்று, தான் இழந்து போன இன்ப வனத்தைத் திருப்பித்தரும் ஒருவரை எதிர் நோக்கியிருந்தது. நோவாவோடு செய்த உடன் படிக்கையால் இறைவனது ஆசீர் சேமின் கூடாரத்துக்குள் புகுகிறது. ஆபிரகா மோடு செய்த உடன்படிக்கையில் இஸ்ரா யேல் மக்களைச் சுற்றி இவ்வட்டம் சுருங்கு கிறது. இறக்கும் தருவாயில், யாக்கோபு யூதா இனத்திலிருந்து செங்கோல் அகலாது என்று இறைவாக்கு உரைத்தார். சீனாய் உடன்படிக்கையில் யாவே சிறப்பான முறை யில் பன்னிரண்டு இனத்தவரின் இறைவனா கிறார். தாவீதோடு செய்து கொண்ட உடன் படிக்கையில் (2 சாமு 7) இறைவனின் மீட்புச் செயல் இதுவரை கேட்டிராத உச்சநிலையை அடைகிறது. தாவீது மரபை இறைவன் தன் னுரிமையாகத் தேர்ந்தெடுத்தலில் வரலாறு பற்றிய இறைவனது மாபெரும் திட்டம் புதிய கட்டத்தை அடைகிறது. தாவீதின் அரசு என்றும் நிலைத்திருக்கும் என்ற இறை வாக்கு, மெசியா பற்றிய இறைவாக்கு, எதிர் பார்ப்பைத்தூண்டி வரும் தீப்பொறியாக அமைகிறது.

இவ்விசுவாசம் பிற்கால வரலாற்றில் உயி ருள்ள விதத்தில் விளங்குகிறது என்பதற்குச் சங் 89 சாட்சியாக நிற்கிறது. இவ்விசுவாசம் தகர்க்கப்பட்டு அழியும் நிலைக்கு வருகிறது. எருசலேமின் அழிவோடு தாவீதின் அரச மரபும் முடிகிறது. ஆகையால் சங்கீத ஆசிரி யர் துயர்மிக்க கேள்விகள் எழுப்புகிறார் (சங் 89:38-46). தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்கு றுதி துன்பம், சோதனை என்ற கலத்தில் புடம் போடப்பட்டுத் தூய்மைப்படுத்தப் பட வேண்டும். இறைவன் சிந்தனை மனித னின் படைப்பன்று. அவர் தனது சொல் லைக் காப்பாற்றுகிறார். தம் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துகிறார். ஆனால் மனிதன் எதிர்பார்க்கும் முறையில் அன்று, பாலஸ்தீனத்தைப் பாபிலோனியர், பாரசீகர் மாசிதோனியர், செலூக்கியர் ஆகியோர் ஆண்டனர். எருசலேமில் புதியதோர் அரசு தோன்றியது. மக்கபேயர்களும் இதுமேய னான ஏரோதும் ஆண்டனர். ஆனால் தாவீ தின் மரபோ அழிந்து மறைந்து போயிற்று.

ஆனால் திடீரென்று புதிய ஆற்றலோடும் புத்தொளியோடும், தாவீது மரபு என்றும் நிலைத்திருப்பது பற்றிய இறைவாக்கு புத்து யிர் பெறுகிறது. இப்போது கன்னிமரியா ளுக்குத் தூதுரைக்கும் காபிரியேல் தூதன்

வழியாகப் புத்துயிர் பெறுகிறது (லூக் 1:32). மக்கள் இயேசுவைத் தாவீதின் மகனே என்று அன்போடும், ஆர்வத்தோடும் அழைத்தனர். ஆனால் தாவீது அரசு பற்றி மக்கள் கொண்டிருந்த கருத்துக்கும் இயேசு போதித்த கருத்திற்கும் அதிக வேறுபாடு இருந்தது. தான் அரசன் என்பதை மறுக்கவில்லை. அதை வெளிப்படையாகவே பிலாத்துமுன் ஏற்றுக் கொள்கிறார் (யோவா 18:33). தாவீதின் மகன் என்பதை மறுக்கவில்லை. மாறாக அதை நகைப்புக்குரிய பிரச்சினையாக மாற்றுகிறார் (மத் 22:45; சங்.110:1).

தாவீது அரசன், தன் நாட்டிற்கும் தன் அரச மரபுக்கும் ஒத்த விதத்தில் சிந்தித்தார். அது அவரது காலத்திற்கு ஏற்றதாயிருந்தது. ஆனால் இறைவனோ தெய்வீக நிலையில் சிந்திக்கிறார். நசரேத்தூர் இயேசு உண்மையான இறை மகனும் தாவீது மரபைச் சார்ந்த உண்மையான மகனும் ஆவார். அவரிலே, இறைவனின் நித்தியத்திற்கும், பாவம் நிறைந்த தகர்க்கப்பட்ட மனித அரச மரபின் கடந்துபோகும் அமைப்புக்கும் உறவு ஏற்படுகிறது. அவரது அரசு, ஒரு நாட்டை மட்டும் கொண்டுள்ள வரையறைகளை உடைத்தெறிந்து எல்லா மொழிகளையும் இனங்களையும் உள்ளடக்கும் உலகமனைத்தையும் கொண்ட அரசாகும். அது மனித காலயிட வரையறைகளைக் கடந்து செல்லுகிறது. தந்தையின் வலப்பக்கத்திற்கு உயர்த்தப்பட்டு தாவீதின் உண்மையான மகனும் இறைமகனுமான இயேசு என்றென்றும் வாழுகிறார். அவரது அரசுக்கு முடிவு இராது.

8.25. புற எதிரிகளை வெற்றி கொள்ளுதல்:

தாவீது பெலிஸ்தியரைத் தாக்கி அவர்களை வென்றார் (2 சாமு 8:1). பெலிஸ்தியர் நாட்டின் மீது தாவீதும் சாலமோனும் ஆதிக்கம் செலுத்தியதற்குப் போதிய புதைபொருட் சான்றுகள் உள. பின்மோவாபியரையும் (8:2) அம்மோனியரையும் (10:1-14) சீரியரையும் (10:15-19) வென்று, அவர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார் (8:20). பின் இதுமேய நாட்டைத் தன் ஆட்சிக்குள் கொண்டு வந்தார் (8:13-14). இவற்றை நூலில் வாசித்தறிக.

8.26. அரசமைப்பு:

இதுபற்றி 1 சாமு 8:15-18; 20:23-26-இல் வாசித்தறிக. தாவீது ஒவ்வொரு அலுவலுக்கும் சரியான ஆளை நியமித்தார். படைத் தலைவன், ஆவணங்களைப் பாதுகாப்பவன், குருக்கள், எழுத்தர்கள், அடிமை வேலையைக் கவனிப்பவர்கள், ஆலோசகர்கள் என்று பலவகைப்பட்ட அலுவலர்களை நியமித்தார். இவர்களில் ஆவணங்களைப் பாதுகாப்பவர் அரசனுக்கும் மக்களுக்குமிடையே நடுவராக, இணைப்பாளராக இருந்தார். இவர் அரண்மனை மேற்பார்வையாளராகவும், நீதித் தலைவராகவும் விளங்கினார். இப்படி, தாவீது புதியதோர் அரசமைப்பை நாட்டிற்குக் கொடுத்தார். இது குல முதியவர்களின் தலைமை அமைப்பைப் போன்று தோன்றலாம். ஆனால் இதில் வலுவான மைய அரசு சிறப்பிடம் பெறுகிறது. இஸ்ராயேல் இனத்தை ஆளுவதில் முறையை மாற்றவில்லை. அந்தந்த இனத்தவர்களின் ''முதியவர்களே'' ஆட்சி செய்தனர். தாவீது அரசு பதவியிலும் போரிலும் உயர்ந்து கொண்டே போனார்.

8.27. குடும்பதுயர நிகழ்ச்சிகளும் அரசின் நெருக்கடிகளும்:

துன்பங்கள், தொல்லைகள் மிக்க காலங்கள், ஒருவனுடைய ஒழுக்க நிலையை உயர்த்துகின்றன. அவரது ஒழுக்கத்தூய்மையையும் உயர்பண்புகளையும் உச்ச நிலையில் வெளிக்கொணர்கின்றன. மாறாக, பாதுகாப்பான, உறுதியான நிலைகள், படிப்படியான சூழலையும் ஒழுங்கினத்தையும் கொண்டு வருகின்றன. பிறர் தாக்குதலின் போது பாதுகாப்பாயுள்ளவன் பாதுகாப்பாயிருக்கும்போது அச்சுறுத்தப்படுகிறான். இது ஒரு மேல்வரிச்சட்டமான மனித சூழ் ஆகும். தாவீது இதற்கு விதி விலக்கல்லர். பாவமும் தீமையும் தாவீதை ஆட்கொள்ளுகின்றன. அவர்மேல் தீமை தனது ஆற்றலைச் செலுத்துகிறது. விவிலிய ஆசிரியர், எப்படி உண்மையோடும், நேர்மையோடும் தாவீதின் எழுச்சியை விவரித்தாரோ, அதே போன்று அவரது வீழ்ச்சியையும் விவரிக்கிறார். தனது ஆசாபாச உணர்ச்சிகளோடு

போராடி வெற்றி தோல்வி ஆகிய வட்டத்தில் தாவீதின் ஆட்தன்மை இறுதியான முதிர்ச்சி அடைகிறது. இம்முதிர்ச்சி சாதாரண மனிதனுடையதைவிடப் பலவாறு மேன்மையுடையதாகும். குடும்பத்தில் நடக்கும் துன்பமிக்க நிகழ்ச்சிகளும் நாட்டில் நடக்கும் நெருக்கடிகளும் அவரை வீறுடைய துன்பமிக்க சாவுக்கு இட்டுச் செல்கின்றன.

2 சாமு 10-12 அதிகாரங்கள் அடங்கிய பகுதி ஒற்றுமையுடைய தொகுப்பாகும். நிகழ்ச்சியுரை உயிர்ச்சித்திரமுடையது. ஆகவே நேரடிச் சாட்சியே இதை எழுதியிருக்க வேண்டும் என்பர் ஆய்வாளர்கள். தாவீதின் அரசவையில் வாழ்ந்தவரே இவற்றை எழுதியிருக்க வேண்டும் என்பர். இப்பகுதி எபிரேய இலக்கியத்தின் பொற்காலமாகிய கி.மு. 10-ஆம் நூற்றாண்டிலே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று அனேக அறிஞர் ஏற்றுக்கொள்ளுவர். இதற்கு ஒத்த பகுதியை விவிலிய இலக்கியத்தில் பார்ப்பது அரிது என்பர். இப்பகுதியின் வரலாற்றுத் தன்மையை ஒருவரும் ஐயப்படமாட்டார். இப்பகுதியின் ஆசிரியர் வெறுமனே செய்திகளை மட்டும் கொடுக்கவில்லை. அவர் ஓர் உளநூல் வல்லுநர், ஒரு கலைஞர், ஓவியர், தனது பாத்திரங்களின் உள்ள ஆழத்தை அறியக் கூடியவர். அவர்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் ஆற்றல் மிக்க விதத்தில் புதிதாகப் படைக்கக் கூடியவர். இதிலே ஒரு புதுமைத் தன்மையும் காணப்படும். ஆனால் இது வெறும் கற்பனையன்று. இது வரலாற்று நிகழ்ச்சியுரையாகும்; உளநூல் ஆழத்தை எய்துகிறது. கலைப்பண்போடும், நயத்தோடும் எடுத்துக் கூறப்படுகிறது. இதில் அருஞ்செயல்கள் இடம் பெறவில்லை. ஆனால் இப்பகுதியின் சிறப்புக் கருத்து தெளிவாகத் தெரிகிறது. அது இறை பரிபாலிப்பின் மேலுள்ள அசையாத நம்பிக்கையாகும். உளவியல் கருத்துக்கள் மனித உருவில் தோன்றுகின்றன. ஆனால், ஆசிரியர் உளவியல் வல்லுநரையும் கடந்தவர். அவரது கவனத்தின் இறுதியான குறிக்கோள் வெறும் மனித ஆண்மை மட்டுமன்று. இறைவனுடைய செயல்களாகும். அவருடைய செயல்கள் எல்லாவற்றையும் ஊடுருவுகின்றன. அவர்முன் மனிதன் தன் குற்றத்தை ஏற்றுக் கொள்ளுகிறான். மன்னிப்புக் கோருகிறான். இறைவனும் தன்னுரிமையாக ஏற்றுக் கொள்ளுகிறார். இந்த விவரிப்பில் இறையியலே இல்லை என்று தோன்றலாம். ஆனால் இது தான் இஸ்ராயேல் வரலாற்று இலக்கியங்களுக்கு இன்றிமையாத பண்பை நிறைவோடு வெளிப்படுத்துகிறது. அது ஓர் வரலாற்று இறையியலாகும். இதைக் கருத்தில் கொண்டு இவ்வதிகாரங்களை வாசிக்க வேண்டும்.

8.28. தாவீதின் பாவம்:

பாவம் பயங்கரமானது; திகில் உண்டாக்கக்கூடியது; கோரமானது; சூழ்ச்சித் திறமுடையது; தன்னையே பெருக்கவல்லது. சட்டத்தை மீறுவது, வெகு அரிதாகத்தான் ஒரு தனிப்பட்ட செயலாகும். ஒரு தடவை பாவம் செய்தால், அதில் ஓர் அழிக்கும் கொடிய தீய சக்தியை விடுவிக்கிறோம். அதைக் கட்டுப்படுத்த நமக்குச் சக்தியில்லை. ஒரு பாவம் மற்றொரு பாவத்தைத் தோற்றுவிக்கிறது. இட்டுச் செல்லுகிறது. இந்தப் பயங்கர படிமுறையை நிறுத்த நாம் ஒன்றும் செய்ய முடியாது. இந்தத் தவிர்க்க முடியாத சங்கிலித் தொடரை ஒரே ஒரு வழியால் உடைக்க முடியும். இது, இறைவன் தன் ஆற்றலாலும் மன்னிப்பாலும் நம்மிடம் பாவம் மரிக்கும் அளவுக்குப் போதிய அருளாலும் நம் வாழ்வை அவர் ஆட்கொண்டு விசுவசிக்க அனுமதிப்பதாகும். பாவத்துக்கு மரிப்பது இதுதான். இப்படிப்பினை பழைய ஏற்பாடு முழுவதும் காணக் கிடக்கிறது. ஆனால் இந்நூல்களைப் படிக்கும்போது இவ்வுண்மையைக் காணத் தவறிவிடுகிறோம். இதை நாம் தவிர்க்க வேண்டும்.

தாவீது மன்னன் பத்சேபாவுடன் செய்த விபச்சாரத்தைப் பற்றி வாசித்தறிக. சுருக்கமாகவும் மேலான அடக்கத்தோடும் விவரிக்கப்படுகிறது. தாவீது பாவத்தில் வீழ்கிறார்.

மூடி மறைக்கச் செய்த முயற்சிகள் தோல்வி அடைகின்றன. ஒரு நம்பிக்கைத் துரோகம் மற்றொரு துரோகத்துக்கு இட்டுச்செல்லு கிறது. உரியா தாவீதுக்காகப் போரிட்டு மடி கிறான். ஒரு பெரும் வீரனுடைய விதவைக்கு அதிகாரப்பூர்வமான பெருமை அளிக்கும் முகத்தான், தாவீது பத்சேபாவைத் தன் மனைவியருள் ஒருத்தியாக ஆக்கிக் கொண் டார். இவ்வாறு விபச்சாரமும் கொலையும் புறத்தோற்றத்திற்கு அரச பரிவன்பின் போர் வையின் கீழ் மறைக்கப்பட்டன. மேலான செயலாகப் பிறருக்குத் தோன்றியிருக்கலாம். திருட்டுத்தனமாக மறைவாகச் செய்யப் படும் தீமை வெற்றி பெறுவதாகத் தோன்ற லாம். வாழ்வு சாதாரண நிலைக்குத் திரும்பி யிருக்கும். ஆனால் இறைவன் ஒருவர் இருந் தார். ''தாவீதின் இச்செயல் ஆண்டவர் திரு முன் தீயதாக இருந்தது'' (11:26). தீமையை இரக்கமற்ற முறையில் எதிர்த்துப் போராட இறைவனுடைய இறைவாக்கினர் இருந் தார். அவர் இத்தீமையைத் தீமையென்று அறிவித்தார். மனித இதயத்தில் மறைந்திருக் கும் இரகசிய எண்ணங்களை வெளிப் படுத்துகிறார்.

இறைவாக்கினர் நாத்தான், தாவீதின் வாயாலே தாவீதைத் தீர்ப்பிடச் செய்கிறார். இதை நூலில் வாசித்தறிக. அவர் பயன்படுத் தும் உவமை இலக்கிய நயமிக்கது. ஒழுக்கச் சிறப்புமிக்கது. அநீதி கண்டு பொங்கி எழுந்த அரசனைப் பார்த்து ''நீரே இந்த மனிதன் என்று'' அரசனைக் குற்றம் சாட்டும் போது இறைவாக்கினரது துணிச்சலைக் காண்கிறோம். இச்செயலில், வல்லவர்களுக் கும் உண்மையை எடுத்துச் சொல்லத் தயங் காத இறைவாக்கினர்களுக்குமெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறார் நாத்தான்.

தாவீது என்ன செய்யக்கூடும்? இறைவன் பெயரால் பழிகூறுபவரை அழித்துவிடு வாரோ? இது எளிதுதானே. இங்கு தான் தாவீதின் ஆன்மீக உயர்ச்சி சிறந்து விளங்கு கிறது. பாவம் செய்ய அவருக்குத் துணிவு இருந்தது. அப்பாவத்தை ஏற்று மனம் வருந் தவும் அதைவிடத் துணிவு இருந்தது. ''நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்து விட்டேன்'' (12:13). பாவம் பற்றிய இறை யியலுக்கு, இப்பகுதியில் கூறப்படும் கருத்து மிக முக்கியமானதாகும். விபச்சாரம் வெறும் மனித காரியமன்று. அதில் ஈடுபடுபவன் யாவேயைத் தாக்குகிறான் (12:9). மனச்சாட் சியைப் புறக்கணிப்பது யாவேயின் வார்த் தையையே புறக்கணிப்பதாகும். தாவீது பெறவேண்டிய மரண தண்டனை அவருக் குக் கிடைக்காது. ஆனால் அப்பாவத்தின் சின்னமான குழந்தை மடிந்து போகும். தாவீது இறைவனின் சீரிய நீதிக்குத் தலை பணிகிறார். இந்நிகழ்ச்சி பற்றிய மற்ற வற்றை நூலில் வாசித்தறிக.

8.29. தாமார் கற்பழிக்கப்படுதல்:

இந்நிகழ்ச்சியுரை, தாவீதின் குடும்பத்துள் நிகழ்ந்த பலத்தபோராட்டங்களை எடுத்துக் காட்டுகிறது. அன்பு, காமம், வெறுப்பு, பழிவாங்குதல், கொலை யாவும் அழிவுக்கு இட்டுச் செல்லுகின்றன. தாவீது தனது முதிய வயதில் தம் கொடிய புதல்வர்கள் முன் பலவீனராகத் தோன்றுகிறார். அதே போது இப்பகுதி தாவீதின் மகன் அப்சலோ மின் பண்புகளையும் ஒழுக்கத்தையும் எடுத் துக் காட்டுகிறது. இதில் ஆசிரியர் வெறும் நிகழ்ச்சிகளை மட்டும் தரவில்லை. பங்கெடுப் போரின் மனநிலையையும் உளவியல் நாடகத்தையும் எடுத்துக் காட்டுகிறார்.

8.30. அரசியல் நெருக்கடி:

தாவீதுக்கு வயதாகிக் கொண்டிருந்தது. அவருக்குப் பின் அரசனாவது யார் என்பது ஒரு பெரும் பிரச்சினையாக மாறியது. அவ ரது அரசு நிலைத்திருக்கும் என்று இறைவாக் குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் யார் அப் பதவி வகிப்பார் என்பது பற்றி ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் அப்ச லோம் கிளர்ச்சி செய்து அரசைக் கைப்பற்ற முயற்சி செய்கிறான். இதைப் பற்றி நூலில் வாசித்தறிக. இங்குச் சில குறிப்புகளை மட்டுமே அளிக்கிறோம்.

இந்நிகழ்ச்சியுரையில் குறுகிய காலத்தில் நிகழ்ந்தவை நீண்டதாக விவரிக்கப்படு

கிறது. அதுவும் கலைப்பண்போடு விவரிக்கப் படுகிறது. வரலாற்று விவரிப்புக்களிலே மிக அழகான ஒன்றை இதில் காண்கிறோம் என் பர் அறிஞர்.

தாவீதின் மகன் அப்சலோம் திட்டமிட்டுக் கிளர்ச்சி செய்கிறான். இதுவரை மந்தமாய் இருந்த தாவீது, மிக ஆபத்தான நிலையில் சிலிர்த்து எழுகிறார்; செயல்படுகிறார். பற் றுறுதியுடைய மெய்க்காவலர் படையோடு ஓட்டம் பிடிக்கிறார். பெரிய குருக்கள் பற் றுறுதியுடன் உடன்படிக்கைப் பேழையோடு புறப்படுகின்றனர். தாவீது அவர்களைத் தடுத்து நிறுத்துகிறார். அப்போது அவர் யாவேயிடம் கொண்ட விசுவாச உறுதி வெளிப்படுகிறது. யாவே அவரை நிராகரித்து விட்டால் பேழையால் ஒரு பயனு மில்லை. மாறாக, யாவே அவரை உண்மை யாகத் தேர்ந்தெடுத்திருந்தால், யாவேயே தாவீதைப் பரிசுத்த நகருக்கு மீளவும் இட்டுச் செல்வார். தாவீது தனது துன்பப் பாதை யைத் தொடங்குகிறார். பதவியிழந்த அரச னாகத் தோன்றாமல், தபசு செய்யும் மனித னாக வெறுங்காலோடும், மூடிய தலையோ டும் ஓடுகிறார். அகித்தோபல் துரோகியாகி றார். நண்பனான கூசாய் (ஊசாய்), வயதான வராதலால், நாடோடி வாழ்க்கை நடத்த முடியாது. ஆகவே அவர் தன்னைப் பின் தொடர்வதைத் தாவீது தடுக்கிறார். அதற்கு மாறாகக் கூசாய், எதிரிகளோடு சேர்ந்து அவர்களது திட்டத்தைத் தாவீதுக்கு அவ்வப் போது தெரிவித்தால் அது பயனுள்ளதா யிருக்கும். இதைக் கூசாய் சிறப்பாகச் செய் கிறார். சவுலின் மகனான மெபிபோசேத்தின் ஊழியன் சீபா தாவீதை ஏமாற்றுகிறான். சவுலின் குடும்பத்தைச் சேர்ந்த சிமயி தாவீதை வசைமாறி பொழிகிறான். அவனைத் தண்டிக்க விரும்பிய தன் உடன் ஊழியர் களைத் தடுத்துத் தாவீது கூறுவது, அவர் சாதாரண மனிதர் அல்லர், வீரமிக்க மேலான வர் என்று காட்டுகிறது (16:10-12). தான் எழுச்சியுற்ற காலத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சி யிலும் தாவீது இறைவனது செயல்படும் கரத்தைக் கண்டார். அதே போன்று துன் புற்று இழிநிலை அடைந்தபோதும் அதே யாவேயின் கரத்தைக் காண்கிறார். யாவே ஒரு நாள் அவருக்கு இரக்கம் காட்டுவார் என்று தாவீது உறுதியாக நம்புகிறார். இதில் யோபுவைப் பிரதிபலிக்கிறார். தாவீதின் ஓட் டம் தபசு செய்யும் திருப்பயணமாகிறது. இவ்விழிநிலையில் தாவீது தளர்ந்து போக வில்லை.

அகித்தோபலின் ஆலோசனைப்படி அப்ச லோம் தீச்செயல் புரிகிறான். பின்பு தாவீ தைத் துரத்திச் செல்கிறான். கூசாய் தனது ஆலோசனையால் இப்படை எடுப்பைக் காலந்தாழ்த்தச் செய்கிறார். தனது ஆலோ சனை நிராகரிக்கப்பட்டதால் விளையும் முடிவை முன்னுணர்ந்த அகித்தோபல் வீடு சென்று நான்று கொண்டு இறக்கிறார். காட் டிக் கொடுக்கும் யூதாசுக்கு ஒரு முன் எடுத் துக்காட்டாக இருக்கிறார்.

அப்சலோமிற்கு ஏற்பட்ட அவலமுடிவை அறிந்த தாவீது புலம்புகிறார். அதனால் அன்று கிட்டிய வெற்றி கசப்பாகிறது. யோவாபு கடிந்து கொண்டபின் தாவீது சுய உணர்வு பெற்று, அரசை நடத்தத் தொடங்கு கிறார். கலகப்படைத்தலைவனாகிய அமா சாவைத் தானைத் தலைவராக்குகிறார். இது யோவாபுக்கு விருப்பமாயில்லை. சீபாவை யும் சிமயியையும் மன்னிக்கிறார். தமக்கு உதவி செய்த பர்சில்லாயிடமிருந்து தாவீது விடைபெறும் காட்சி உள்ளத்தை உருக்க வல்லது.

பென்யமின் இனத்தைச் சேர்ந்த சேபா கலகம் செய்தான். போட்டி அரசு ஏற்படுத்தி னான். யோவாபு இதை அடக்குகிறார். யோவாபு இரத்தத்தைக் கண்டு அஞ்சிய தில்லை; தயங்கியதில்லை. தனது அரி யணையை அடைந்த தாவீது யோவாபுக்கு மீளவும்' நன்றிக் கடன்படுகிறார்.

8.31. பிற் சேர்க்கைகள்:

மூலத்தில் மேற்கூறப்பட்டவையோடு இந்நூல் முடிந்திருக்க வேண்டும். 21-24 ஆகிய அதிகாரங்கள் பிற்சேர்க்கையாக அமைந்திருக்கின்றன. ஆனால் கலைப்பண் போடு எழுதப்பட்டுள்ளன. இதில் இரு

நிகழ்ச்சியுரைகள், இருபட்டியல்கள் இரு பாடல்கள் அடங்கியுள்ளன.

1. சவுலின் வழித்தோன்றல்களின் முடிவு (21:1-14).
2. பெலிஸ்தியருக்கு எதிராக நான்கு வீரச் செயல்கள் (21:15-22).
3. நன்றிப்பாடல் (22).
4. தாவீதின் இறுதிவாக்கு (23:1-7).
5. தாவீதினுடைய வீரர் பட்டியல் (23:8-39).
6. கணக்கெடுப்பும் கொள்ளை நோயும் (24:1-25).

நன்றிப்பாடலும், தாவீதின் இறுதிக்கூற்றும் (3-4) இப்பகுதிக்கு மையமாய் அமைந்திருக்கின்றன. அதைச்சுற்றிவீரச் செயல்கள் வரையப்படுகின்றன (2-5). இதைச் சுற்றி தாவீது அரசின் இரு துன்ப நிகழ்ச்சிகள் அமைகின்றன (1-6).

சாதாரணமாக இலையுதிர் காலத்திலும், இளவேனிற்காலத்திலும், மழை பெய்யா விட்டால் பஞ்சம் நிகழ்ந்தது. ஆனால் மக்கள் பேரழிவுகளுக்கு இயற்கையான காரணங்களைக் காட்டி மனநிறைவு அடைய வில்லை. இப்பேரழிவுகள் இறைவனுடைய போதகமாகவும், தீர்ப்பாகவும் கருதப்பட்டன. மக்களிடையே பரிகாரம் செய்யப் படாத ஏதோ ஒரு குற்றம், பாவம் இருந்திருக்க வேண்டும். இப்பாவம் என்ன? எப்படிப் பரிகாரம் செய்யப்பட்டது என்பதை நூலில் வாசித்தறிக.

கணக்கெடுப்பிற்குத் தாவீதே காரணம். கணக்கெடுப்பது எப்படி யாவேக்கு விரோதமாகக் குற்றமாகும் என்று நாம் வியக்கலாம். மேலும் இஸ்ராயேலிலும் யூதாவிலும் கணக்கெடுக்கும்படி தாவீதை யாவேயே தூண்டியதாக வாசிக்கிறோம் (24:1). பின் கோபப் பட்டுக் கொள்ளை நோயை அனுப்புகிறார். இதில் முரண்பாட்டைக் காண்கிறோம். ஆனால் நன்மையோ தீமையோ யாவற்றிற்கும் யாவேதான் முடிவான காரணமாவார். ஆகவே அவருக்கே சாற்றிக் கூறப்பட வேண்டும். இத்தகைய சமயக் கருத்து, சிறிது சிறிதாக வளர்ந்து, பிற்காலத்தில் நன்மை யாவேக்கும் தீமை சாத்தானுக்கும் சாற்றிக் கூறப்பட்டன (1 நாள் 20:1பின்). வளர்ச்சியுற்ற இந்த நிலையிலும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பது பாவமாகக் கருதப்பட்டது.

பழைய செமித்திய கருத்துப்படி ஒருவரை அறிதல் அவர்மேல் ஆதிக்கம் செலுத்துவதற்குச் சமமாகும். மக்கள் தொகையை அறியக் கணக்கெடுப்பது அவர்கள் மேல் வரையற்ற முழுமையான ஆதிக்கம் செலுத்துவதற்குச் சமமாகும். ஆனால் இத்தகைய ஆதிக்கம் ஆண்டவராகிய யாவேக்கு மட்டுமே உரியது. ஆகவே மக்களைக் கணக்கெடுத்தல் இறைவனுக்கு மட்டுமே உரிய ஆதிக்கத்திற்கு உரிமை கொண்டாடுவதாகும். ஆகவே அது ஒரு இறை நிந்தையாகும். ஆகவே தீர்ப்பிடவேண்டிய ஒன்றாகும். கணக்கெடுத்ததற்குப் பிறகு தாவீது மனம் வருந்தித் தன்னையே குற்றம் சாட்டிக் கொள்ளுகிறார். ''நான் (இப்படிச் செய்ததினால்) மாபெரும் பாவம் செய்தேன்'' (24:10).

கொள்ளை நோயால் பலர் இறந்தது, கடவுள் அனுப்பிய தண்டனையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இயற்கைக் காரணத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. இதைக் கண்டு நாம் வியக்கலாம். ஆனால் அவர்கள் சமயக் கருத்துப்படி இறைவனது முழுமையுடைய ஆதிக்கத்தை எவ்விதத்திலும் எதிர்க்க முடியாது. அப்படிச் செய்தால் அது தீர்ப்பிடப் படும்; தண்டிக்கப்படும். எல்லா நிகழ்ச்சிகளையும் யாவும் வல்ல யாவேயின் ஒரே அரசுத் தன்மையின் ஒளியில் காண நாம் முயல வேண்டும்.

மற்ற விவரங்களை நூலில் வாசித்தறிக. தாவீது இறைவனில் கொண்ட நம்பிக்கை இந்நிகழ்ச்சியில் சிறப்புப் பெறுகிறது. ''மனிதர் கையில் விழுவதைவிட ஆண்டவரின் கையில் விழுவது நலம் (ஏனெனில் அவர் பேரிரக்கம் உள்ளவர்)'' (24:14). இந்நிகழ்ச்சியுரை பெரும் வெள்ள நிகழ்ச்சியுரை வடிவில் அமைந்துள்ளது. இறைவனின் கோபம் (24:1); தண்டனை பற்றி எச்சரிக்கை (24:15); இறைவன் இரக்கம் கொள்ளுதல் (24:16); பீடம் கட்டுதல் (24:18).

8.32. தாவீதின் இறுதிச் சொற்கள்:

மூலத்தில் இப்பகுதி ஆற்றல் மிக்க இலக்கியப் படைப்பாகும். இச்சொற்கள் ஈசாக்கு (ஆதி 27:1தொ), யாக்கோபு (ஆதி 48:10தொ; 49:1தொ), மோசே (உப 33:1தொ) ஆகியோருடைய இறுதிச் சொற்களுக்கு ஒத்தவை. அதன் செய்தி வருங்காலத்தைச் சார்ந்ததாகும். இப்பகுதி பிற்காலப் படைப்பாகும். தாவீதின் வாய்வழியாக முன் கூறப்படுகிறது என்பர் சிலர். இதற்கு மாறாக, இலக்கிய அமைப்பாலும், கருத்தமைப்பாலும் இது தாவீதின் காலத்தியதே என்பர் பலர்.

இக்குறுகிய பாடலில் மெசியா பற்றிய மிகப்பழைய இறைவாக்கு அடங்கியிருக்கிறது என்று அறிஞர் கருதுவர். இதுவும் நாத்தானின் இறைவாக்கும் (2 சாமு 7) சேர்ந்து சாமுவேல் ஆகமத்தின் மீட்பு வரலாற்று உச்ச நிலைக்குச் சான்றாக அமைகின்றன. நாத்தானின் இறைவாக்கு காலப் போக்கில் வளர்ந்து தாவீதின் கூற்றில் முதிர்ச்சியடைகிறது. தனது அரச மரபின் பெரும் வருங்காலம் பற்றிய அசைக்க முடியாத விசுவாசம் பொங்கி வழிகிறது. இப்பாடலே ஓர் இறைவாக்காக மாறுகிறது. யாவேயின் ஆவியே தாவீதில் பேசுகிறது. முதல் அடி இறையூக்கம் பற்றிய விசுவாசத்திற்கு விவிலிய அடிப்படைகளில் ஒன்றாகும் (23:1-3). இரண்டாவது (36:4) மூன்றாவது அடிகள், நாத்தானின் இறைவாக்கை மேலும் வற்புறுத்திக் கூறுகின்றன. உடன்படிக்கை மனித ஊழினை நிர்ணயிக்கும் இறைவனுடைய செயலாகும். தாவீது அரச மரபின் வருங்காலம் எந்த மனித ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதாகும். யாவே தாவீதின் பாறையாவர். அப்பாறையின் மேல் தாவீதின் மரபு உறுதியாகக் கட்டப்பட்டுள்ளது. ஆகையால் அதை எதிர்த்துத் தீய ஆற்றல்கள் வெல்லா என்று நான்காம் அடி (6-7) கூறுகிறது.

இப்பாடல் மெசியா பற்றிய நேரடி இறைவாக்கு என்பர் அறிஞர் பலர். வருங்காலத்தில் வரவிருக்கும் பெரும் அரசரையும், அவரது வருகை கதிரவன் உதயம்போல் ஒளிமிக்கதாக இருக்கும் என்றும் முன்னோக்குகிறார் ஆசிரியர். ஆயினும் சில கருத்துக்களை நாம் நினைவில் வைத்துக் கொள்வது தேவை. மெசியா பற்றிய கருத்துக்குத் தாவீதின் காலம் இன்னும் முதிர்ச்சியடையவில்லை. மேலும் இறைவனது வாக்குறுதி, தாவீதின் அரச மரபு என்றும் நிலைத்து நிற்கும் என்று நேரடியாகக் குறிப்பிடுகிறது. இம்மரபு நல்லவர்களையும் தீயவர்களையும் கொண்டிருந்தது. மெசியா பற்றிய கருத்து சிறிது சிறிதாக வளர்ந்து, தாவீது மரபில் வரவிருக்கும் ஒரு குறிப்பிட்ட ஆளைக்குறிக்கும் விதத்தில் முதிர்ச்சியடைந்தது. தாவீது தனது அரசமரபைப் பற்றி எண்ணுகிறார். இறைவாக்கினர்கள் மெசியா காலம் பற்றி எண்ணுகின்றனர். அவர்களுடைய கூற்றுகள், தாவீதின் கூற்றுக்கு ஆழ்ந்த பொருளை அளிக்கின்றன. ''பூமியின்கண் புல் முளைப்பதையும்,'' ''காலையில் சூரியன் உதிப்பதையும்'' பற்றி மட்டும் தாவீது பேசுகிறார். இறைவாக்கினர் படிப்பினைப்படி, ''இஸ்ராயேலின் தளிர்'' வரவிருக்கும் மெசியாவின் மேன்மைமிக்க பட்டமாகிறது (எசா 4:2; செக் 3:8; 6:12; எரே 23:5; 33:15). முதிய குருவாகிய செக்கரியா, இயேசு மனிதனாகப் பிறந்ததிலே இந்த ''வானின்று இள ஞாயிறு எழுதல்'' (லூக் 1:79) நிறைவேறியதாக உணருகிறார். தாவீது நாட்டு அரச மரபு முழுவதும் மனிதத்தன்மையான அடிப்படையில் இவ்விறைவாக்கைப் புரிந்து கொண்டாலும், தாவீது மரபிலிருந்து மெசியா அரசர் தோன்றுவார் என்ற விசுவாசம் வளர்ந்தது. பழைய ஏற்பாட்டு இறைமக்களின் மைய விசுவாசம் உருவாயிற்று. மேலும் வளர்ந்து முடிவில் இயேசு கிறிஸ்துவில் திருத்தம் பெற்று, கருத்தாழம் பெறுகிறது.

பழைய ஏற்பாட்டு வரலாறு திருவெளிப்பாடு, விசுவாசம் ஆகியவற்றின் வளர்ச்சியின் வரலாறு ஆகும். பிற்காலத்தில் வளர்ந்து முதிர்ச்சியடைந்த கருத்தை முற்காலத்திற்குச் சாற்றிக் கூறுவது தவறாகும். தாவீது அவரது காலத்தியவர்; அதற்கேற்றபடியே சிந்திக்கிறார்; புரிந்து கொள்ளுகிறார். அவரிலே புதியதோர் நம்பிக்கை பிறக்கிறது. யாவே ஒருவரே. தாவீதின் அரசமரபு என்றென்றும்

நிலைத்திருக்கும். கி.மு. முதல் ஆயிரம் ஆண்டுத் தொடக்கத்திலே தாவீதோடு இறைவன் செய்துகொண்ட உடன்படிக்கையின் இறைவன் ஒருவரே என்ற கோட்பாடும் தனிச் சிறப்புடைய உண்மைகளாகும்.

8.33. தாவீது: சாமுவேல் ஆகமங்களில் ஆதிக்கம் செலுத்துபவர் தாவீதுதான். இந்நூல் ஆசிரியர், ஒரு சிறந்த ஓவியரைப் போல் தாவீதின் படத்தை வரைகிறார். இது முகப் புகழ்ச்சியானதன்று. இப்படத்தின் ஒழிவு மறைவுப் பகுதிகள் உண்மையை வெளிக் கொணருகின்றன.

தாவீது நல்லவர்; அறிவுக்கூர்மையுடையவர். ஆனால் புலனுணர்ச்சி இன்பங்களில் நாட்டமுடையவர். ஆனால் மனம் வருந்தி, சீர்திருந்த வல்லவர். கொலை செய்யத் தயங்காதவர். மென்மையான அன்பு நிறைந்த, ஆனால் பலவீனமான தந்தை. மன்னிக்கக் கூடியவர். அவரிலே ஓர் உண்மையான மனிதனைப் பார்க்கிறோம். அவரிடம் பல குறைகள் உண்டு. இருப்பினும் தாவீது இறைவனுக்குப் பிடித்த மனிதனாவார் (1 சாமு 13:14). சமயப்பற்றும், இறைப்பற்றும் மிகுந்தவர். இவை அவர் இன்னல்படும்போது சிறந்து ஒளிர்கின்றன. தாவீது இறைவனைத் தம்வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் காணுகிறார். தாவீது துன்பமிக்க பல அனுபவங்களைப் பெற்றார். ஆனால் இத்துன்பங்கள் அவரது விசுவாசத்தை உறுதிப்படுத்தின; ஆழப்படுத்தின; அவரது மனிதத் தன்மையை மிளிரச் செய்தன. சாமுவேல் ஆகமங்களும் சிறப்புப்பெற்ற சில சங்கீதங்களும் இதற்குச் சான்றுகள் கூறுகின்றன. இந்நூலில் வரும் நிகழ்ச்சிகளைச் சங்கீதங்களில் வரும் வரலாற்றுக் குறிப்புகளோடு ஒத்துப் படிப்பதுநன்மை பயக்கும் (1 சாமு 19:11-12=சங் 59; 21:10=சங் 56; 21:10-15=சங்34; 24:1-7=சங் 142; 2 சாமு 12:1-15=சங் 51; 15:13-17= சங் 3). துன்பங்கள் பெருகினாலும் இடுக்கண்கள் மிகுந்தாலும், எல்லாவற்றிலும் தாவீது தன்னை இறைவனிடம் ஒப்படைத்தார். அது அவருக்கு இறைவனுடைய பெரும் உதவிகளைப் பெற்றுத் தந்தது. வெற்றிகளைப் பெற்றவர் தோல்விகளையும் ஏற்றுக்கொள்ளத் தெரிந்திருந்தார்.

பரம்பரையான பழக்கங்களையும் கடந்து செல்லும் விசுவாசம் கொண்டவர் தாவீது. தனது குழந்தைக்கு வருந்த மறுப்பதில் இதைக் காணலாம் (2 சாமு 12:29). இறைவன் தன் ஆதரவை மறுத்துவிட்டால் பெட்டகத்தால் என்ன பயன் என்று கூறும்போது, தன்னுடைய காலத்துக் கருத்துக்களையும் கடந்து தாவீது முன்னோக்குகிறார். தாவீதை வண்ணமிக்க, கவர்ச்சிமிக்கவராக ஆசிரியர் படைக்கிறார். இக்கவர்ச்சி தாவீதை அணுகியவரையெல்லாம் அவர்பால் ஈர்த்து, இறைவனையும் ஈர்த்தது.

9. வரலாற்று மதிப்பீடு: இதை நிர்ணயிக்க இந்நூலின் இலக்கிய அமைப்பையும், இந்நூலில் காணப்படும் பாரம்பரிய விவரிப்புகளின் காலத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். விவரிப்புகள் தொன்மையானவை. அவை விவரிக்கும் நிகழ்ச்சிகளுக்கு அண்மையானவை. இவை இந்நூலின் வரலாற்று மதிப்பீட்டை மேலும் உயர்த்திக் காட்டவல்லன. இந்நூலில் பயன்படுத்தப் பட்ட மூலங்கள் நிகழ்ச்சிகளைப்பற்றிய விவரங்களை மட்டும் கொடுக்கவில்லை. அந்நிகழ்ச்சிகள் மக்கள் மனதில் விட்டுச் சென்ற பதிவுகளையும் அவை எழுப்பிய சமய சிந்தனைகளையும் விட்டுச் சென்றுள்ளன.

இந்நூலில் காணப்படும் விவரங்களைப் புற இன மக்கள் வரலாற்றோடு இணைத்துக் காட்ட முடியாது. ஏனெனில் இக்காலத்தில் எகிப்தும் அசீரியாவும் மந்தநிலையில் இருந்தன. இவ்விரு அரசுகளும் இஸ்ராயேலரோடு சிறப்பான முறையில் தொடர்பு கொண்டிருந்ததற்குத் தடயங்கள் அதிகமில்லை. இந்தத் தேக்கநிலை, தாவீது சிறப்பான முறையில் வெற்றி பெறுவதற்குப் பெரிதும் துணை செய்தது எனலாம். ஆனால் அதே சமயம் பிரவரலாறுகளோடு கால வரையறையினுடைய இணைந்த ஆராய்ச்சிக்கு இடமில்லாது போகிறது. ஆகையால் தோராய

மான காலக்கணிப்பையே ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதன்படி கி.மு. 1030-ஐ ஒட்டி, சவுல் அரசுக்கட்டில் ஏறினார். 1010-970 இடையிட்ட காலம் தாவீதின் ஆட்சியாகும்.

தொல்பொருள் ஆராய்ச்சி, பெலிஸ்தியர் களைப் பற்றி இந்நூல் கூறுவனவற்றிற்கு ஆத ரவு அளிக்கிறது. மேலும் அவர்கள் கிரேத்து, சைப்பிரசு ஆகிய நாடுகளோடு கொண்ட தொடர்புக்கும் கி.மு. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காசாவிலிருந்து எக்ரோன் வரையிலுள்ள பகுதியில் பெலிஸ்தியர் குடி யேறி வாழ்ந்ததற்கும் சான்று கொடுக்கிறது. எருசலேமுக்கு அருகில் உள்ள தேல் எல் -பூல் என்ற இடத்தில் செய்யப்பட்ட புதை பொருள் ஆராய்ச்சி இஸ்ராயேலின் மிகத் தொன்மையான கோட்டையைத் தோண்டி எடுக்க உதவியது. ஒரு வேளை இது சவுலி னால் கட்டப்பட்டதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சில புதைபொருள் ஆராய்ச் சிகள், தாவீது பெலிஸ்தியரோடு கொண் டிருந்த போராட்டங்களுக்குச் சான்று காட்டு கின்றன. இவற்றையெல்லாம்விட நூலே இஸ்ராயேலின் வரலாற்றில் ஒரு சிறப்பான கட்டமான மன்னராட்சியின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றிற்குச் சிறந்த சான்றாக இருக்கிறது. இதைச் சிறப்புக் கருத்துகளில் ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளோம்.

10. சமய மதிப்பீடு: இந்நூலில் காணப் படும் விவரங்கள், மன்னராட்சியின், தொடக்க காலத்தில் இஸ்ராயேலரிடையே நிலவிய சமய, ஒழுக்க நிலைகள் பற்றிய உயிர்ச்சித்திரமான காட்சிகளைக் கொடுக் கின்றன. அவற்றில் சில முதிர்ச்சியடையாத தொல்சமயங்களைச் சேர்ந்த சாபப்போர் போன்ற பழக்கம்; எபோத்தைக் கொண்டு ஆலோசனை கேட்டல்; நாபிகளின் கழிபேரு வகை.

பாவம் பற்றிய தரம் குறைந்த கருத்துக்கள் காணப்படும். இதன்படி, தடைகளை அறி யாது மீறுவதும் குற்றமாகும். பாவம் பற்றிய ஒட்டு மொத்தமான கருத்து, பாவம் தன்னி யக்கமாகத் தாக்கும் தன்மையையும் கொண் டுள்ளது. பரிகாரம் செய்யப்படாவிட்டால் பாவம் ஒரு குழுவினரையே தாக்கக்கூடும். இக்கருத்தை இறைவெளிப்பாட்டில் காலப் போக்கில் எய்தப் போகும் முன்னேற்றத் திற்கு ஒரு தொடக்கமாகக் கொள்ள வேண்டும். பாவம் பற்றிய மற்றொரு கருத்தை (தாவீதின் பாவத்தைப் பற்றிக் கூறியபோது) வாசித்தறிக.

சாமுவேல் இறைவாக்கினர் தத்துவத்தின் விளக்கமாக நிற்கிறார். இறைவனுடைய நம் பிக்கைக்குரியவர். அவரது விருப்பத்தை அச்சமின்றி நிறைவேற்றுபவர். இதுபற்றி ஏற்கெனவே பல கூறியுள்ளோம்.

விசுவாசமில்லாத, இறைவனுக்குப் பணி யாத அரசனுக்குச் சவுல் ஓர் எடுத்துக்காட்டு. அரசியல் ஆற்றலுக்கும் சமய ஒழுங்குத் திட்டத்திற்குமிடையே நடக்கும் போராட் டத்திற்கு ஒரு முன் எடுத்துக்காட்டு. இவ ரிடம் ஆபிரகாமின் விசுவாசமில்லை. ''பலி களைக் காட்டிலும் கீழ்ப்படிதலே மேலானது. ஆட்டுக்கடாக்களின் கொழுப்பை அவருக்கு ஒப்புக் கொடுக்கிறதைவிட அவருக்குச் செவி கொடுத்தலே சிறந்தது'' *(1 சாமு 15:22)*. இதற்கொத்த சொற்களை ஆபிரகாம் தரிசன பூமியான மோரியா மலையில் கேட்டார் *(ஆதி 22:12கொ)*. அவர் விசுவாசத்தால் தந் தையின் அன்பிற்கும் சமயக் கீழ்ப்படிதலுக்கு மிடையே நிகழும் போராட்டம் முரண்பா டான இணக்கத்தோடு முடிகிறது. ஒரு பக் கம் யாவேயாலும் மற்றொரு பக்கம் தன்னை அரசனாக்கிய மக்களின் தயவாலும் இழுக் கப்பட்டு, சவுல் மக்களையே இழந்துவிடு கிறார். மற்ற எல்லாக் கடமைகளிலும் விசுவா சம் முதன்மை வகிக்கிறது. இது மீட்பு வரலாற்றில் அடிப்படை உண்மையாகும்.

சவுலுக்கு மாறாக, ஆசிரியரின் கருத்துப் படி, தாவீது இறைவன் திட்டம் செய்த மன்னராட்சியின் உயர்ந்த எடுத்துக்காட்டா கத் திகழ்கிறார். இறைவனுக்குத் தன்னை முழுவதும் அர்ப்பணித்த அரசன், இறைவாக் கினர் கடிந்துரைக்கும் போதுகூட அவர்

களுக்குப் பணிபவர். அவர் அடையும் வெற்றி இறைவன் அவரோடு இருக்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இறைவனுக்குகந்த அரசராகத் திகழ்கிறார்.

தாவீதின் உடன்படிக்கை புதிய வடிவில் செயல்படுவதைப் பார்க்கிறோம். அது உலகில் இறையரசாக வடிவம் எடுக்கிறது. நூலின் மத்தியில் வரும் நாத்தானின் இறைவாக்கு புதிய அரசின் வருங்காலம் பற்றிய புதிய முன்னோக்கைத் திறந்து காட்டுகிறது. யாவே தம்மைத் தாவீதின் அரச மரபோடு மீட்க முடியாத விதத்தில் இணைத்துக் கொள்ளுகிறார். தம் மக்களைத் தாவீதின் மக்கள் வழியாக அரசு செலுத்தவிழைகிறார். அதற்காகத் தாவீதின் மக்களைத் தம் புதல்வர்களாகச் சுவிகாரம் செய்கிறார். இக்கருத்து பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம்.

இப்பொருளில் தாவீதின் வரலாறு இறையியல் மதிப்பீட்டால் தோய்ந்திருக்கிறது. சில மதிப்பீடுகளைப் புனித வரலாற்றில் புகுத்துவது தாவீதின் அலுவலாகும். அம் மதிப்பீடுகள் செயல்படுவதை நோக்கிய விசுவாசத்தையும் எதிர்பார்ப்பையும் எடுத்துக் காட்டுபவராகத் தாவீது திகழ்கிறார். இந்த நம்பிக்கையின் வளர்ச்சி அரசின் வருணனையிலே எழுதப்படும். அது தொடர்ந்து சரி பார்க்கப்படும்; தியானிக்கப்படும். நாடு கடத்தப்படும்வரை தாவீதை மாதிரியாகக் கொண்டே மற்ற அரசர்கள் தீர்வையிடப்படுவர். இவ்வரசர்கள் தவறிப் போகலாம்; தண்டிக்கப்படலாம். ஆனால் இவ்வரசு மீண்டும் அமைக்கப்படும் என்பதில் ஐயம் இருந்ததே இல்லை (ஆமோ 9:11; ஒசே 3:5). இடுக்கண் வேளையில் அரசர்களின் பற்றுறுதியின்மையால் ஏற்பட்ட இடர்களையும் கடந்து தாவீதின் வழித்தோன்றலான ஒரு எடுத்துக்காட்டானவரை (எசா 9:1-6; 11:1-9; 16:5; எரே 23:5-6), புதிய தாவீதை (எரே 30:9; எஸ் 34:23-24; 37:24-26), ஆண்டவரின் அபிடேகம் பெற்றவரை, மெசியாவை இறைவன் தோற்றுவிப்பார். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் ஆலயம் மீண்டும் கட்டப்படும் காலத்தில் தாவீதின் வீடும் திரும்ப அழைக்கப்படும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. செருபாபேலைச் சுற்றி மெசியாபற்றிய நம்பிக்கை மீண்டும் எழுப்பப்படுகிறது (செக் 6:12-13). தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி பற்றிய தியானத்திற்குத் தோல்வி முடிவு கட்ட முடியாது (சங் 89:32-37; எசா 55:3-4; எரே 33:14-26; செக் 9:9-10; 11:7; 12:6). நாளாகமங்கள் தனது தொலை நோக்கின் மையத்தில் தாவீதைக் கொண்டிருக்கின்றன. குருக்கள் பாரம்பரியப்படி இறையாட்சியின் எடுத்துக்காட்டான அரசனாகத் தாவீது இருப்பார். அவரே இறையூக்கம் பெற்ற பாடகர். வழிபாட்டைத் திருத்தி அமைப்பவர்.

மன்னராட்சியின் தோல்வி, மெசியாவை எதிர்பார்த்திருத்தலைச் சோதனைக்குட்படுத்தியது. ஆனால் அத்தோல்வியே மெசியாக் கருத்தை ஆழப்படுத்தியது எனலாம். தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியின் ஆழ்ந்த மதிப்பீட்டை அதன் முழுமையோடு வெளிப்படுத்த இயேசு இறுதியில் வரவேண்டியது அவசியமாயிற்று. இயேசு அவ்வரசை அறிவிக்கிறார். மறைபொருள் மிக்க உலகியல் பண்புகளையுடைய உருவங்களைப் பயன்படுத்தி ஆன்மீக உண்மைகளை விட்டுக் கொடுத்து விடுவோமே என்று அச்சப்படுபவர்போலத் தாம் தாவீது வழியாகத் தோன்றியது பற்றி எச்சரிக்கையாக இருக்கிறார் இயேசு (மாற் 2:25-26). தாம் ''தாவீது மகன்'' ஆனாலும் தாவீதுக்கும் ஆண்டவர் என்றும் காட்டுகிறார் (12:35-37). சில இடங்களில் தாவீதின் மகன் என்றழைக்கப்பட அனுமதிக்கிறார் (மாற் 10:47-48; மத் 15:22; 21:9-15). எருசலேமுக்குள் நுழைந்தபோது, தமது தலைநகர் மீதும் ஆலயத்தின் மீதும் தம் அதிகாரத்தைச் செலுத்துகிறார். ஆனால் அதன் அழிவையும், தாம் அதில் மரிக்கப் போவதை முன்னறிவிக்கவுமே அப்படிச் செய்கிறார். தன் உயிர்ப்பாலும் இறைவன் முன் அரியணை ஏறுவதாலும் அரச மெசியாத் தன்மையை உலகியல்பிலிருந்து பிரிக்கிறார். இனிமேல் அவரை மெசியா என்று ஏற்றுக் கொள்ளும் அவரது சீடர்கள், அவர் தாவீதின் குலத்தில் தோன்றியவர் என்பதையும் (மத் 1:1; லூக் 2:4; யோவா 7:42; உரோ

1:3; 2 திமோ 2:8; திருவெளி 5:5; 22:16) தாவீதுக்கு அளிக்கப்பட்ட சொல்லுறுதி அவரில் நிறைவேறுகிறது என்பதையும் (அ.ப. 2:30; எபி 1:5) வலியுறுத்திக் கூறத் தயங்க மாட்டார்கள்.

இறுதியாக, மீட்பு வரலாற்றில் மன்னராட்சி சிறப்புப் பொருள் கொண்டிருப்பதால், மன்னராட்சியின் தோற்றம் பற்றிய விவரிப்பு விவிலியத்தில் விட்டு வைக்கப் பட்டிருக்கிறது எனலாம். இஸ்ராயேலரிடையே பல அரசர்கள் ஒன்றுமில்லாமல் மறைந்து போயினர். அப்படிப்பட்ட அழிவிலிருந்து தாவீது காப்பாற்றப்பட்டிருக்கிறார். ஏனெனில் இயேசு கிறிஸ்துவில் இறையரசு நிறைவுறுதலை நோக்கித் தாவீதின் வரலாறு செயல்படுகிறது. தாவீதையும் கடந்து தம்மை வெளிப்படுத்த மெசியாவுக்குத் தாவீது தேவைப்பட்டார். கிறிஸ்துவர்களிடையே சாமுவேல் ஆகமங்கள் நினைவாக நிலைத்து நிற்பதற்கு இது ஒன்றே போதுமான காரணமாகும். கிறிஸ்து என்னும் மறைபொருளில் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தில் தாவீது ஒரு சிறப்பான இடம் வகிக்கிறார்.

சாமேக்கு (SAMECH)

எபிரேய நெடுங்கணக்கில் பதினைந்தாவது எழுத்து. இது அகர வரிசைச் சங்கீதமான 119-ஆவது சங்கீதத்தின் பதினைந்தாவது அடியின் தலைப்பில் வருகிறது. அந்த அடியில் இருக்கும் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தை முதலெழுத்தாகக் கொண்ட சொற்களுடன் தொடங்குகிறது.

சாமேது (SHEMED - அழிவு)

பென்யமின் குலத்தில் ஒரு குடும்பத் தலைவர். சகரயிம் மற்றும் கூசிம் (ஹசிம்) என்பவர்களின் வழித்தோன்றல். எல்பாகாலின் மகன். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின், இவரும் இவர் சகோதரர்களும் ஓனோ, லோது போன்ற நகரங்களை மீண்டும் கட்டியெழுப்பினர் அல்லது மீண்டும் குடியேறினர் (1 நாள் 8:12).

சாமை, மாக்கோதுமை (SPELT)

இதைக்குறிக்கும் எபிரேய மூலச்சொல் யாத் 9:32; எசா 28:25; எசே 4:9 ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. இது ஒருவகை மட்டரகமான கோதுமையாக இருக்கலாம். பாலஸ்தீனத்தில் இன்றும் காணக் கூடிய 12க்கும் மேற்பட்ட கோதுமை வகைகளில், மட்டரகமான கோதுமைவகையான இக்கோதுமை எசா 28:25 குறிப்பின்படி உயர் ரகக் கோதுமைப்பயிருக்கு வேலியாக வயல் ஓரங்களில் விதைக்கப்பட்டது என அறிகிறோம். இங்கு இது தானியங்கள் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சாம்பல் - (ASHES)

பழங்கால மதங்களில் சாம்பல் அதிகமாக உபயோகத்தில் இருந்தாலும், எக்கருத்துடன் முதன்முதல் சாம்பலை வழிபாட்டில் பயன்படுத்த ஆரம்பித்தனர் என்பது மிகவும் விவாதத்திற்குரிய கேள்வியாகும். அடிக்கடி சாம்பல் புழுதியோடு இணைத்துப் பேசப்படுகின்றது. (எழுபதுநூல் மொழி பெயர்ப்பில் பல இடங்களில் 'சாம்பல்' என்ற சொல்லுக்குப் பதிலாகப் 'புழுதி' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது). மேலும் மனிதனின் பாவத்தையும் பலவீனத்தையும் குறிக்கும் சின்னமாகச் சாம்பல் விளங்குகின்றது.

1. முதலிடத்தில் பாவியின் இதயம் புழுதியோடு ஒப்பிட்டுப் பேசப்படுகின்றது. எசாயா சிலை வழிபாட்டில் ஈடுபாடு உடையவனை 'வெறும் சாம்பலில் பற்றுவைப்பவன்' (எசா 44:20) என்று அழைக்கின்றார்; ஞான ஆகம ஆசிரியரோ ''அவன் உள்ளமோ வெறும் சாம்பல்தான்; அவனது நம்பிக்கை புழுதியிலும் தாழ்வானது'' (ஞான 15:10) என்று இயம்புகின்றார். இக்காரணத்தினால் பாவத்தின் கூலியும் வெறும் சாம்பலாகத்தான் அமையும். எவ்வாறெனில் செருக்குற்றோர் தாங்கள் ''சாம்பலாகச் சுட்டெரிக்கப்படுவதைக்'' (எசே 28:18) காண்பர்; தீயோர்களோ நீதிமான்களின் காலடியில் சாம்பல்போல் மிதிபடுவர் (மலா 3:21). மேலும் தன் அகந்தையை அகற்றி (சிரா 10:9), தன் பாவத்தை உணரும் பாவி, தன்

னைப் ''புழுதிக்கும் சாம்பலுக்கும்'' ஒப்பிட்டே (ஆதி 18:27; சீரா 17:32) அறிக்கையிடுகிறான். தான் உணர்ந்ததைத் தனக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்ட பாவியானவன் புழுதியில் அமர்ந்து (யோபு 42.6; யோவா 3:6; மத் 11:21) தலையில் சாம்பலைத் தூவிக் கொள்கிறான் (யூதி 4:11-16; 9:1; எசே 27:30).

2. பாவியின் மன வருத்தத்தின் சின்னமாக விளங்கும் சாம்பல், **இடர்ப்பாடுகளுக்கிடையே** நலியும் மனிதனின் வருத்தத்தைக் குறிக்கும் அடையாளமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இடர்ப்பாடுகளுக்கும் பாவத்துக்கும் இடையே ஒருவிதமான பிணைப்பு இருப்பதாக மக்கள் கருதியது இவ்வித உபயோகத்திற்குக் காரணம் என்பது தெளிவாகின்றது. தாமார், ஒதுக்கித்தள்ளப்பட்ட நிலையில் தன் தலையில் சாம்பலை வாரிப்போட்டுக் கொள்கிறாள் (2 சாமு 13:19). யூதர்களும், தங்கள் உயிருக்கு ஆபத்து நேர்ந்தநிலையில் இவ்வாறே சாம்பலைப்போட்டுக் கொள்கின்றனர் (எஸ்த 4:1-4; காண் 1 மக் 3:47; 4:39). இவ்வாறுதான் நலிந்த நிலையை மனிதன் எடுத்துக்காட்ட விரும்புகிறான் (யோபு 30:19). சாம்பலை உணவாகக்கூடக் கொள்கிறான் (சங் 102:10; புல 3:16). சிறப்பாகத் தன் உற்றார் உறவினரைப் பறிகொடுத்த நிலையில்தான், மனிதன் தன் வெறுமையை உணர்கிறான்; அதை வெளிக்காட்டத் தன்மேல் சாம்பலையும் புழுதியையும் போட்டுக் கொள்கிறான்; ''என் மக்களே, மயிராடையை அணிந்து கொள்ளுங்கள்; சாம்பலில் புரண்டு வருந்துங்கள்; புலம்பி அழுங்கள்...'' (எரே 6:26).

இவ்வாறு தன்மேல் சாம்பலைத் தூவிக் கொள்ளும்போது மனிதன் மௌனமாக ஊறியத் தன் பாவத்தை ஏற்றுக்கொள்கிறான் (காண். விபூதிப்புதன் திருவழிபாடு). புழுதியோடு ஒன்றாகப்போகும் இச்சடப்பொருளின் மூலம் மனிதன் தன் பாவத்தையும் பலவீனத்தையும் ஏற்றுக் கொள்கிறான்; இவ்வாறு கடவுளின் தீர்ப்பையும் தடுத்து நிறுத்தி, அவருடைய இரக்கத்தைக் கவருகிறான். இவ்விதம் தனது வெறுமையை ஏற்றுக்கொள்ளும் யாவருக்கும் பாவத்தின் மீதும் சாவின் மீதும் வெற்றிவாகை சூடவும், ''அழுகிறவர்களை மகிழ்விக்கவும், சாம்பலுக்குப் பதிலாய் மணிமுடியை அளிக்கவும்'' (எசா 61:3) மெசியா வருகின்றார் என்று வாக்களிக்கப்படுகின்றது.

சாம்பல் தட்டு (கள்), சாம்பல் கலசங்கள் (SNUFFDISHES)

திருஉறை கூடாரத்தில் வைக்கப்பட்ட பசும்பொன்னாலான அகல்கள், குத்து விளக்குகளுடன் வைக்கப்பட்டிருக்கும் தட்டு. கரிந்த திரியை வெட்டக் கத்திரிகளையும், வெட்டப்பட்ட கரிந்த திரி, சாம்பலை வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட தட்டுகள் அல்லது கலசங்கள் (யாத் 25:38; 37:23; எண் 4:9).

சாம்பிராணி, தூபம் (FRANKINCENSE)

இது மரங்களிலுள்ள ஒரு வகையான பிசின் போன்றதிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அரேபியாவிலிருந்து பாலஸ்தீனத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டது. அது வெள்ளை நிறமாக இருக்கும்.

குருத்துவ ஒழுங்கின்படி பரிமள வகைகளாகிய எல்லா நறுமணப் பொருட்களையும் கலந்து பொடிப்பொடியாக இடித்து ஆண்டவருடைய கூடாரத்து முன் வைக்க வேண்டும் (யாத் 30:34-38). மற்றத் தேவைகளுக்கு இந்தப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது. வேறுவிதமாய்ச் சேர்க்கப்பட்ட நறுமண தூபங்களையேனும், காணிக்கையையேனும் பீடத்தின் மேல் ஒப்புக்கொடுத்தல் ஆகாது (யாத் 30:9).

பிரசன்ன அப்பங்கள் ஆண்டவருக்குச் செய்யப்பட்ட நினைவுச் சின்னமாய் இருப்பதால், அவற்றின்மீது மிகவும் சுத்தமான சாம்பிராணி தூவப்படவேண்டும் (லேவி 24:7). தூப வகைகள் நிறைக்கப்பட்ட இரண்டு பொன்னாலான பாத்திரங்கள், புனித அப்பங்களின் மீது வைக்கப்படவேண்டும் என்று யோசிப்பசு கூறியுள்ளார்.

சாம்பிராணி தூவி, எண்ணெயும் வார்த்து பீடத்தின் மீது நினைவுச் சின்னமாகவும்,

நறுமணமாகவும் உணவுப்படையல் ஆண்டவருக்கு வைக்க வேண்டும் (லேவி 2:1-2; 14:16; 6:14-18). இச்சாம்பிராணி, பின்பு ஆண்டவருடைய பீடத்திற்கு முன்பாகச் சுட்டெரிக்கப்பட வேண்டும் (எசா 43:23; 66:3; எரே 17:26; 41:5). குற்றவாளி தான் செய்த குற்றத்தினிமித்தம் தான் படைக்கும் காணிக்கையின்மீது எண்ணெயோ சாம்பிராணியோ இடலாகாது (லேவி 5:11; எண் 5:15). சாம்பிராணிப்பொருட்கள் உள்ள கிடங்குகள் எருசலேம் ஆலயத்தில் இருந்தன (1 நாள் 9:29; நெகே 13:5.9). குழந்தை இயேசுவைக் காண வந்த மூன்று ஞானிகளுள் ஒருவர் தூபத்தைப் பரிசாகக் கொடுத்தார் (மத் 2:11). புதிய ஏற்பாட்டில் மத் 2:11-இலும் திருவெளி 18:13-இலும் மட்டுமே இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சாயமிடுதல் (DYEING)

இது ஒரு பூர்வீகக் கலை. விவிலியக் காலத்தில் இது பாலஸ்தீனியர் வாழ்க்கையில் அவசியமான முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. விவிலியத்தில் சாயமிடும் முறை சொல்லப்படாவிட்டாலும், சாயமிடப்பட்ட பொருள்கள் நிறைய இருந்தன (யாத் 35:6.23.25.35; நீதி 5:30; மாற் 15:17; அ.ப. 16:14). இஸ்ராயேலர்கள் தங்களுக்குத் தெற்கும், வடக்கும் வாழ்ந்த மக்களிடமிருந்து இதைக் கற்றுக்கொண்டது பற்றிக் குறிப்பிட்டுக் கூறும்படி ஒன்றும் தெரியவில்லை; ஆனால் ''ஊதா, கருஞ்சிவப்பு, நீல நூல் வேலைப்பாட்டிலும்... தேர்ந்தவனாக இருக்கும்'' ஒரு மனிதனை அனுப்பிவைக்கும்படி சாலமோன் அரசன் தீர் அரசனான ஈராமிடம் கேட்டுக் கொண்டதாகச் சொல்லப்பட்டுள்ளது (2 நாள் 2:7; காண்க: 3:14). ஊதா நிறத்தைத் தயாரிப்பது எப்படி என்பதைப் பெனிசியர்கள் இரகசியமாக வைத்திருந்தனர்; ஏனெனில் மற்றவர்கள் அதைத் தங்களிடமிருந்து வாங்கவேண்டியிருக்கும்.

சாயமிடுவோரின் சங்கங்கள் இருந்த இடங்கள் இந்த வேலையில் மையங்களாக விளங்கின (1 நாள் 2:55; 4:21). செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் மேய்வதற்கான மேய்ச்சல் நிலங்களும், தண்ணீர் நிறைந்த இடங்களும் இந்தச் சங்கங்கள் இருந்த இடங்களாகும். தேல் பெயித் மிர்சிம் என்ற இடத்திலிருந்த முக்கியமான தொழில் சாயமிடுவதும், நெய்வதும்தான் என்று புதைபொருள் ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. கெசேர் பெத்செமேஸ்,தேல் - என் - நாஸ்பே, பெத் - சூர் ஆகிய இடங்களிலும் சாயமிடுதல் நிலையங்கள் சிறிய அளவு இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. மகதலா ஒரு சாயமிடும் மையமாகவும், செக்கேம் அருகிலுள்ள உலுஸ் நீலப் பொருட்களைத் தயாரிக்கவும் இடமாகவும் இருந்தது.

பூர்வீகத்திலிருந்து சாயமிடுவது எப்படிச் செய்யப்பட்டது என்று தெரியாவிட்டாலும், இதனுடைய சாமான்கள், அமைப்பைப் பற்றி முக்கியமான சில குறிப்புகள் வெவ்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. தேல் பெயித் மிர்சிமில் இந்தத் தொழிலை வீட்டுத் தொழிலாகச் செய்து வந்த 30 வீடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொழில் ஒரு அடிப்படை அமைப்பைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு அறையும், மேலே குறுகிய திறப்புகளுள்ள இரண்டு உருளையான கற்களால் அமைக்கப்பட்டிருந்தன. இரண்டு தொட்டிகளும், மேசைகளும், இந்த இரண்டு கற்களுக்கு முன்போ இடையிலோ அமைக்கப்பட்டிருந்தன. சில சமயங்களில் மேசையில் ஒரு சிறிய சாடி செதுக்கப்பட்டிருந்தது. சாயங்களை ஒட்டவைப்பதற்காகச் சில சாடிகள் சுண்ணாம்பும், பொட்டாசியமும் வைக்கப்பட்டு அருகில் இருந்தன. இந்தக் கற்களின் மேல் திறப்பு சிறியதாக இருப்பதால் இதில் நூலுக்குச் சாயம் போடப்பட்டது; ஆடைகளுக்கு அல்ல. இந்த நூலிலிருந்து பலநிறத் துணிகள் நெய்யப்பட்டன. சாதாரணமாக ஒவ்வொரு கட்டு நூலையும் இரண்டு முறை சாயத்தில் மூழ்கச்செய்து, பின் சாயத்தைப் பிழிந்து சேர்த்தார்கள். சாயம் போடப்பட்ட நூலானது காய வைக்கப்பட்டது. பாலஸ்தீனத்தில் குளிர்ந்த சாயம் போடப்பட்டது; ஆனால் எகிப்தியர்கள் சூடான சாயத்தைப் போட்டிருக்கலாம்.

இரும்புக் காலத்தில் அமைக்கப்பட்ட இந்த அமைப்புகள் பெத் - செமேசிலும், தேல் என் - நாஸ்பேயிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; இரண்டாவதாகச் சொன்ன இடத்தில் மேலே திறப்புடைய ஒரே கல்லும், மேசைகள் இல்லாமலும் இருந்தன. கிரேக்க சாயம் போடும் இடமானது கெசேர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; பல நூற்றாண்டுகள் கடந்தாலும், இதனுடைய அடிப்படை அமைப்புகளில் சிறிதும் மாற்றம் இல்லை; இங்கு ஒரே கட்டடத்தில் மூன்று சாயம் போடும் அறைகள் இருந்தன. கற்சாடிகளுக்குப் பதிலாகக் குளிக்கும் தொட்டிகள் அமைப்பில் பெரிய தொட்டிகள் இருந்தன; ஒவ்வொரு அறையிலும் இருந்த இரண்டு தொட்டிகளுக்கு அருகில் மேசைகளும், சிறிய கற்சாடிகளும் இருந்தன; இந்த அமைப்பிற்கு அடியில் ஓர் அடுப்பு இருந்தது; இது சூடான சாயங்களைப் போட்டதைக் குறிக்கின்றது. இதேபோன்ற ஒரு சாயம்போடும் இடம் பெத் - சூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சாயிர் (ZAIR - சிறிய)

இங்குதான் யூதாவின் அரசர் யோராம் (கி.மு. 849-842) இரவுத் தாக்குதலில் ஏதோமியர்களைச் சந்தித்தார். அவருடைய தேர்ப்படை முதலில் வெற்றிகரமாகத் தாக்குதலைத் தொடங்கினாலும் அவரது படை தாக்குதலைத் தொடர்ந்து நடத்தவில்லை; அவரைக் கைவிட்டோடியது. அதன் விளைவாக ஏதோமியக் கிளர்ச்சி வெற்றிபெற்றது (2 அர 8:20 தொ). இதற்கு இணையான பகுதியில் (1 நாள் 21:8-10) இடப்பெயர் கொடுக்கப்படவில்லை. சாயிர் ஒருவேளை ஏதோமுக்கு அருகில் சாக்கடலுக்குத் தெற்கில் இருந்திருக்க வேண்டும். சில எழுபது நூல் கையெழுத்துப்பிரதிகள் சீயோர் என்ற பெயரைக் கொடுக்கின்றன. இந்நகரம் யூதாவின் மலைப்பகுதியில் உள்ளது (யோசு 15:54).

சாயீன் (ZAIN)

எபிரேய நெடுங்கணக்கில் ஏழாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதமான 119 - இன் ஏழாவது பிரிவுக்கு இந்த எழுத்து தலைப்பாக உள்ளது. இப்பிரிவின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தோடு தொடங்குகிறது.

சாரத்தான் (ZARETHAN - குளிர்ந்த)

யோர்தான் பள்ளத்தாக்கிற்குக் கிழக்கே உள்ள ஒரு நகரம். இந்தப் பெயர் முதன்முதலில் யோசு 3-இல் வருகின்றது. இங்கு யோர்தான் நதிநீர் தடுக்கப்பட்டதாகவும், அதன் உதவியால் யோசுவாவின் தலைமையில் இஸ்ராயேலர்கள் அந்த ஆற்றைக் கடந்து எரிகோவைத் தாக்கச் சென்றதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

இது மறுபடியும் சாலமோன் காலத்தில் குறிக்கப்படுகிறது. இது சாலமோனின் நான்காவது மாவட்டத்தின் பகுதியாக இருந்தது என்று சொல்லப்பட்டுள்ளது. இதுயோர்தானின் இரு பக்கங்களையும் கொண்டிருந்தது. இது பெத் - சானிலிருந்து வெகு தொலைவில் இல்லையென்று இந்த வர்ணிப்பு காட்டுகின்றது (1 அர 4:12). சுக்கோத்திற்கும் சாரத்தானுக்கும் இடையில்தான் சாலமோனின் வார்ப்படக் கலைஞரான ஈராம் ஆலயத்துக்கான வெண்கலப் பாத்திரங்களை வார்ப்பித்தார் (7:46). இது 2 நாள் 4:17-இல் செரேதா என்றும் நீதி 7:22-இல் செரேரா என்றும் அழைக்கப்படுகிறது.

இது யோர்தானிலிருந்து வெகுதொலைவில் இருந்திருக்காது; ஆதாமிற்கும் சுக்கோத்திற்கும் இடையில் அமைந்திருக்கவேண்டும். இது ஆதாமிலிருந்து 20 கி.மீ. தொலைவில் இருந்ததாகத் தால்மூது கூறுகிறது. மேற்சொன்ன அனைத்தையும் பார்க்கும்பொழுது இது அனேகமாகத் தேல் எஸ் - சயிதியேவாக இருக்கலாம்.

சாரபாத்து (ZAREPHATH - சாயமிடுதல்)

சீதோனுக்கும் தீருக்கும் இடையிலுள்ள ஒரு பெனீசிய நகரம். சீதோனுக்குத் தெற்கே ஏறக்குறைய 9 கி.மீ. தொலைவில் மத்திய தரைக் கடற்கரையில் இந்த இடம் உள்ளது. கி.மு. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு நாணல் ஏட்டில் இந்தப் பெயர் சொல்லப்பட்

டுள்ளது. இந்நகரம் கண்ணாடிச் சாமான்களுக்குப் பெயர்போனது; இந்தக் கண்ணாடியானது சீதோனுக்கு அருகில் உள்ள மணலால் செய்யப்பட்டது. சீதோன், தீரைப் போல் இதுவும் சாயங்களை உற்பத்தி செய்தது என்று இதன் அக்காதியப் பெயர் சுட்டுகிறது.

கடவுள் எலியாவைச் சீதோனைச் சேர்ந்த சாரபாத்துக்குச் சென்று அங்குச் சிறிது காலம் தங்கியிருக்கும்படி கட்டளையிட்டதை 1 அர 17:9-24-இல் வாசிக்கின்றோம். அங்கு அவர் ஒரு விதவையைச் சந்தித்து அவருடைய எண்ணெய்த் தாழியும், மாவும் மழைபெய்யும் வரை குறையாமலிருக்கும்படி ஆசீர்வாதித்தார். அவளது இறந்துபோன மகனை உயிர்த்தெழச்செய்தார். இந்தக் கதை லூக் 4:26-இல் சொல்லப்பட்டுள்ளது. ஒபதியா 20-இல் சாரபாத்து பெனீசியாவின் ஒரு பகுதியெனச் சொல்லப்பட்டுள்ளது. இப்பொழுது இது சாரபாந்து என அழைக்கப்படுகிறது.

சாரயீம் (SHAARAIM - இரண்டு கதவு)

1. அசேக்காவின் செபேலா மாவட்டத்திலுள்ள யூதாவின் நகர் (யோசு 15:36). தாவீது பெலிஸ்தியர்களின் தலைவன் கோலியத்தைக் கொன்றபின் இஸ்ராயேலர் பெலிஸ்தியர்களைச் சாரயீம், காத்து எக்ரோன் வரைக்கும் துரத்திச் சென்றனர் (1 சாமு 7:52 தொ). எனவே சாரயீம் வாடி எஸ் - சாந்துக்கருகில், அசேக்காவுக்கு அருகில் இருக்க வேண்டும்.

2. இது சிமியோனின் நகர் (1 நாள் 4:31). இது இணை நகர்ப் பட்டியலில் சாருகென் என்று வருகிறது (யோசு 19:6). அறிஞர்கள் சிலர் மத்தியதரைக் கடலிலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள நாகர்-பெசோரில் உள்ள தேல் ஏல் - பாராவோடு, இவ்விடத்தை அடையாளம் காட்டுகின்றனர்.

சாரர் (SHARAR - உறுதியான, நாபி)

இவர் ஓர் ஆராரியர். அகியாமின் தந்தை. அகியாம் தாவீதின் முப்பது ஆற்றல் மிக்க வீரர்களில் ஒருவர் (2 சாமு 23:23). 1 நாள் 11:35 - இல் இவர் சாக்கார் (1) என்று அழைக்கப்படுகிறார்.

சாரா (SARAH - இளவரசி, தலைவி)

1. சாரா ஆபிரகாமின் மனைவி, ஈசாக்குவின் தாய். சாராய் என்ற பெயர் ''சாரா'' என்றும் (ஆதி 17:15) 'அபிராம்' என்ற பெயர் ஆபிரகாம் என்றும் (17:5) மாற்றப்பட்டது. இது இலக்கியஞ்சார்ந்த திறனாய்வுக்குப் பொருள் பொதிந்த குறிப்பாக அமைகிறது. இது பிற்காலத் தொகுப்பாளர்களின் வேலையாக இருக்கலாம். இது ஆதி 17-ஆம் அதிகாரத்தின் ஆசிரியராகவோ இறுதியில் இலக்கிய உருக் கொடுத்தவராகவோ இருக்கலாம். ஏனெனில் முன்வரும் பெயர்களும், பின்வரும் பெயர்களும் இந்த மாற்றத்துக்கேற்றவாறு அமைந்துள்ளன. ஆதி 17:15-இல் சாராய், சாரா என்ற பெயர்களுக்குக் காரண விளக்கங்கள் கொடுக்காமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு பெயர்களும் 'இளவரசி' அல்லது தலைவி என்ற பொருள் கொண்டவை. ''சாராய்'' என்ற பெயர் முதலில் ஆதி 11:29-30-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கே அபிராமின் மனைவி என்றும், குழந்தை இல்லாதவள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. 20:12-இன்படி இவள் அபிராமின் ஒன்றுவிட்ட சகோதரியாக இருக்கிறாள். இவள் அபிராமோடு காரானுக்கும் (11;31) பிறகு கானானுக்கும் (12:5) சேர்ந்து சென்றாள். 12:4; 17:17-இன்படி அந்தச் சமயத்தில் சாராய்க்கு 65 வயதாகும். அவ்வளவு வயதாகியும் அழகாக இருந்தாள். எனவே தான் எகிப்துக்குச் செல்லும்போது பாதுகாப்புக்காக அபிராமும், அவளும் சகோதர சகோதரி என்று பாதி உண்மையைக் கூறி வந்தனர் (12:10-13). இதனால் பார்வோன் அவளை அவனது இல்லத்திற்குக் கொண்டு சென்றான். ஆனால் தொந்தரவுகள் வந்ததால் சாராய் அபிராமின் மனைவி எனப் புரிந்து கொண்டான். பிறகு அவர்களைத் தன் நாட்டினின்றே விரட்டினான் (12:14-13:1).

ஆதி 16-ஆம் அதிகாரம் சாரா தனது வேலைக்காரி ஆகாரோடு கொண்ட பகைமைப் போராட்டத்தைச் சொல்கிறது. சாரா அபிராமுக்கு இறைவன் வாக்களித்த வாரிசு இடைக்கமாட்டான் என்ற அவநம்பிக்கையில் அபிராமுக்கு ஆகாரைக் கொடுத்தாள்.

அதன் விளைவாகத் தங்களுக்குப் பிள்ளை உண்டாகலாம் என்று நம்பினாள். ஆகார் கருவுற்றாள். அதனால் ஆகார், சாராவை அலட்சியப்படுத்தினாள் (16:1-5). இதனால் வந்த கோபத்தினால், சாரா தங்கள் கூடாரத்தி லிருந்து ஆகாரை வெளியேற்றினாள். ஆனால் பாலையில் ஆண்டவருடைய தூத ரின் காட்சிக்குப் பிறகு, ஆகார் திரும்பி வந்து, இசுமயேலைப் பெற்றுக் கொடுத் தாள் (16:6-15).

இந்த நேரத்தில் அவளது பெயர் 'சாரா' என்று மாற்றப்பட்டது. ஓர் ஆண்டுக்குள் அவளுக்குப் பிறக்கும் மகன் வழியாக அவ ளுக்கு ஒரு பெரிய தலைமுறை உண்டாகும் என்று இறைவன் வாக்களித்திருந்தார் (17:15-21). இந்த வாக்கு மம்ரேயில் மனித உருவில் இரு வான் தூதர்களோடு யாவே யால் உறுதிப்படுத்தப்பட்டது (18:1-10). இதைக் கேட்டதும் தொண்ணூறு வயதுநிரம் பிய சாரா நம்பிக்கையின்மையினால் சிரித் தாள். அதற்கு யாவே அவளைக் கண்டிக் கிறார் (18:11-15).

இந்தக் காலத்தில் ஆபிரகாமும், சாராளும் சகோதர சகோதரியாக நடந்த கதையொன்று வருகிறது (ஆதி 20). இந்நிகழ்ச்சி கெராரில் நடைபெறுகிறது. அவர்களைச் சகோதர சகோதரி என்று எண்ணி அபிமெலக்கு அர சன் அவளைத் தனது இல்லத்திற்குள் எடுத் துக் கொண்டான். ஆனால் கடவுளால் கன வில் அவளைத் தொடக்கூடாது என எச்சரிக் கப்பட்டான் (20:1-4). இப்படி ஏமாற்றியதற் காக, அரசன் ஆபிரகாமைக் கண்டித்து, சாரா வுக்கு ஓர் அன்பளிப்பு அளித்துத் தனதுநாட் டில் தங்கிவாழ அனுமதி கொடுத்து அனுப்பி னான். இதன் விளைவாக, அவனது வீட்டிற் கும் மந்தைக்கும் இறைவன் கொடுத்திருந்த மலட்டுத்தன்மைச் சாபம் நீக்கப்பட்டது (20:8-18).

கடவுள் வாக்குறுதிப்படி சாரா தனது முதிர்ந்த வயதில் ஈசாக்கு மகனைப் பெற் றாள் (21:1-3). ஈசாக்கின் பால்குடி மறப்புவிழா வில் சாரா பொறாமையினால் ஆகாரையும் இசுமயேலையும் வெளியேறும்படி செய் தாள் (20:8-21. சாரா நூற்று இருபத்துஏழு வயதில் கானான் நாட்டிலுள்ள கிரியத்து அர்பா என்ற இடத்தில் இறந்தாள் (ஆதி 23:1-2). மக்பேலா என்ற குடும்பக் குகையில் புதைக்கப்பட்டாள். இவள் பழைய ஏற்பாட் டிலே எசா 51:2-இல் எபிரேயர்களுக்கு மூதா தையர் என்ற முறையில் குறிப்பிடப்பட் டிருக்கிறாள்.

புதிய ஏற்பாடு பல முறைகள் சாராவை நினைவு கூர்ந்திருக்கிறது. உரோ 4:19-இல் அவளது நீண்ட மலட்டுத் தன்மை ஆபிரகா மின் விசுவாசத்தின் சான்றாக, எடுத்துக்காட் டாகக் கூறப்படுகிறது. 9:19-இல் இசுமயே லுக்குப் பதிலாக, வாக்குறுதியின் வாரிசாகச் சாரா கருவுற்றது தேர்ந்தெடுத்தலின் இறை மேலாண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது. எபி 11:11-இல் அவளது சொந்த விசுவாசத்தைப் பற்றிச் சொல்லப்பட் டிருக்கிறது. அவள் கணவனுக்குப் பணிந் திருக்கும் தன்மை ஓர் உண்மையான இறை ஆபரணத்திற்கு மாதிரியாகும் என்று 1 பேதுரு 3:6 கூறுகிறது. கலா 4:21-31-இல் வேலைக்காரி ஆகாரோடு இவள் ஒப்பிடப் பட்டிருக்கிறாள். ஆனால் பெயர் குறிக்கப் படவில்லை.

விவிலியத்திற்குப் பிறகு உள்ள யூத மதம் தங்கள் முதல் தாயைப் பக்திக்கு உதாரண மாகவும், மிகச் சிறந்த அழகுடையவளாகவும் பார்க்கிறது. கி.பி. முதல்நூற்றாண்டைச் சார்ந்த அரமேய ஏடுகளின் ஒரு பகுதி இவளை ''எல்லாப் பெண்களையும் விட அன்புடை யவள், அதையும் விட அழகுடையவள்'' என்று வருணித்துள்ளது.

2. தோபித்து நூலின் தலைவியாவாள் சாரா. இவள் இரகுவேலுக்கு மகள். பல துன்பங்களுக்குப்பின் தோபியாவுக்கு மணப் பெண்ணானாள் (தோபி 3:7 தொ).

சாராபு (SARAPH - மேலான, எரிகின்ற)

இவர் யூதா கோத்திரத்தில் பிறந்தவர். இவர் மோவாபு பகுதியை ஆண்டு இலாகே முக்குத் திரும்பினார். இவர் சேலா என்பவ

ரின் சந்ததியினர் (1 நாள் 4:22). இலாகேம் என்ற இடம் ஒன்றும் அறியப்படாத இடம்.

சாராய் (SHARAI - விடுதலை அளி)

நாடு கடத்தப்பட்டுத் திரும்பியவர்களில் இவரும் ஒருவர். பின்னூயின் புதல்வர்களில் ஒருவர். இவர் எஸ்ராவின் காலத்தில் வாழ்ந்தவர். புறவின மனைவியரை நீக்கியவர் (எஸ் 10:40).

சாரிது (SARID - பிழைத்து வாழ்பவர்)

செபுலோன் பகுதியின் தென்எல்லையில் ஓரத்தில் அமைந்த ஒரு நகரம் (யோசு 9:10.12). இது இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் வடமுனையிலுள்ள சிறிய குன்றான தேல் சாதுத்துவாக அடையாளம் காட்டப்படுகிறது. இது மெகிதோவுக்கு வட-வடகிழக்கில் 9 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு நடந்துள்ள அகழ்வாய்வுகள், இங்கு வெண்கலக் காலத்தின் பின்பகுதியிலும், முதலாம் இரும்புக்காலத்திலும், கிரேக்க - உரோமையர் காலத்திலும், தொடக்க இசுலாமியக் காலத்திலும் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்று காட்டுகின்றன.

சாருகென் (SHARUHEN - அருளுடைய வீடு)

இது யூதாவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள சிமியோனின் ஒரு நகரம் (யோசு 19:6). இணையான பெயர்ப் பட்டியல்களில் இது சில்கிம் என்றும் (யோசு 15:32) சாரயிம் என்றும் (1 நாள் 4:31) அழைக்கப்படுகிறது. இந்த இடம், தற்போதுள்ள காசாவுக்கு 24 கி.மீ. தென்கிழக்கிலுள்ள தேல் ஏல் - பாராவாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. சாருகென் என்ற பெயர் பதினெட்டாவது அரச குலத்தை நிறுவியவரான முதலாம் அக்மோஸ் என்பவருடைய எகிப்திய ஏடுகளின் மூலம் உறுதியாகிறது. இவர் கைக்சோசியர்களை எகிப்திலிருந்து வெளியேற்றினார் (1570 - 1545). இந்த ஏடுகளின் படி சாருகென் ஒரு கைக்சோசியக் கோட்டை என்றும் மூன்று வருட முற்றுகைக்குப்பிறகு, எகிப்தியர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும் அறிகிறோம். மேலும் 18, 19-ஆவது எகிப்திய அரச மரபில் பாலஸ்தீனத்திலுள்ள எகிப்திய முக்கிய அடித்தளமாகச் சாருகென் இருந்தது. தேல் ஏல் - பாராவில் நடந்த ஒரு சிறிய அகழ்வாராய்ச்சியின் பயனாகச் சில பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்நகரம் கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் அழிக்கப்பட்டது. அதன்பிறகு 4-ஆம் நூற்றாண்டுகள் வரை யாரும் அதில் குடியேறவில்லை. இதன் மூலம் சிமியோனின் பட்டியல் கி. மு. 900-க்கு முற்பட்டது என்று தெளிவாகிறது. இங்கு 10-ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த 23 அடி பருமன் உடைய ஒரு பெரிய கல் சுவர் கண்டுபிடிக்கப்பட்டது. இது பார்வோன் சிசாக்கு பாலஸ்தீனத்தின் மேல் படையெடுத்தபோது அவர் கட்டியதாக இருக்கலாம்.

சாரோனியர் (SHARONITE)

இச்சொல் சிற்றாய்க்கு அடைமொழியாகச் சொல்லப்பட்டுள்ளது. இவர் சாரோன் சமவெளியிலுள்ள தாவீதின் ஆட்டு மந்தைகளுக்குக் கண்காணிப்பாளர் (1 நாள் 27:29).

சாரோன் (SHARON - சமவெளி, சமதள நாடு)

சாரோன் சமவெளி பாலஸ்தீனக் கடற்கரைச் சமவெளியின் நடுப்பகுதியாகும். வடக்கில் கர்மேல் மலையிலிருந்து தெற்கில் யோப்பா வரைக்கும் சுமார் 72 கி.மீ. தொலைவு இப்பகுதி உள்ளது. அகலம் சுமார் 20 கி.மீ. வரை உள்ளது. இந்தப் பகுதி விவிலியத்தில் அரிதாகத்தான் குறிக்கப்பட்டுள்ளது. இது எசா 33:9;35:2-இல் நல்ல வளமைப் பகுதியாகவும், 1 நாள் 27:29-இல் தாவீதின் மேய்ச்சல் நிலமாகவும், எசா 65:10-இல் மேய்ச்சல் நிலமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சாரோனில் இருப்பதாகப் பழைய ஏற்பாட்டில் குறிக்கப்படும் ஒரே ஒரு நகரம் அபேக்கு ஆகும் (யோசு 12:18). சாரோனில் பூத்த காட்டுமலர் உன்னத சங்கீதம் 2:1-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் அ.ப. 9:35-இல் மட்டும் லித்தாவோடு குறிப்பிடப்பட்டுள்ளது.

இவைகளிலிருந்து, சாரோன் சமவெளி நிலம் வளமையானதாக இருந்தாலும்,

மேலும் பல ஓடைகளால் நீர் வளம் பெற்றிருந்தாலும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் குடியேற்றம் இல்லாது இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. குடியேற்றம் இல்லாததற்கு இது சதுப்பு நிலப் பகுதியாக இருந்தது தான் காரணமாகும். பழங்காலத்தில் இந்தப் பகுதி, மிகுந்த மரங்கள் நிறைந்த காடுகளாய் இருந்தது. இதனால் விவசாயம் செய்யத் தகுதியற்றதாய் இருந்தது. எகிப்துக்கும், சிரியாவுக்கும் இடையே அமைந்த ஒரு முக்கியமான பாதை, சாரோன் சமவெளியினூடே சென்றது. இந்தச் சமவெளி, இஸ்ராயேலரின் பகுதியாகவும் இல்லை. அவர்கள் வாழ்ந்த பகுதியாகவும் இல்லை.

சார்கோன் (SARGON))

1. அக்காதின் சார்கோன்: காண்க. அக்கா ு.

2. முதலாம் சார்கோன் : அசிரிய அரசர்களில் ஒருவர். இவரைப்பற்றி அதிகம் அறிவதற்கில்லை. இவரது முத்திரை, கப்பதோக்கியாவில் கண்டெடுக்கப்பட்ட பழைய அக்காதிய ஏடுகளில் காணப்படுகிறது.

3. இரண்டாம் சார்கோன் : பாபிலோனிய அரசர். 3-ஆம் திகிலத்துபிலேசரின் மகன். கி.மு. 722-முதல் 705-வரை அசிரியாவுக்கு அரசனாக இருந்தார். இவரது காலம், அசிரியர்களின் ஆட்சியில் பரந்து விரிந்த வெற்றிகரமான காலமாக இருந்தது. இவர் மூன்று முக்கியமான பகுதிகளில் (அர்மேனியா, பாபிலோன், சிரிய -பாலஸ்தீனம்) வெற்றி அடைந்தார். சார்கோன் தன் சகோதரன் 5-ஆம் சல்மனேசரை அடுத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அப்போது சமாரியா அசிரியர்களால் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. சார்கோன் சமாரியாவை வென்றார். இவர் 27,290 இஸ்ராயேலர்களை வெளியேற்றி விட்டு மெசபொத்தாமிய மக்களைக் குடியேற்றினார். யூதாவைத் தவிர்த்து சிரிய -பாலஸ்தீனாவில் ஓர் அசிரிய மாவட்டத்தை உருவாக்கினார். கி.மு. 711 - இல் அசுதோதின் கிளர்ச்சியை முறியடித்தார். இதை எசா 20:1 குறிப்பிடுகிறது. இந்தக் கிளர்ச்சியில் எசேக்கியா பங்கெடுப்பதைத் தடுக்க, எசாயா விநோதமான இறைவாக்குச் செயல்புரிந்தார். சார்கோன் தூர் - சருக்கின் என்ற இடத்தில் (தற்போது கொர்சபாது என்றிருக்கிறது) ஓர் அரண்மனை கட்டினார். இது அசிரியர்களின் கட்டடக்கலையை எடுத்துரைக்கும் ஒரு பெரிய நினைவுச் சின்னமாக இருக்கிறது. இவர் போர் நடத்திக் கொண்டு இருக்கும்போது கொல்லப்பட்டார். எந்த இடம் எப்போது என்று குறித்து வைக்கப்படவில்லை.

சாலபிம் / சாலபின் (SHAALABIM / SHAALABIN -நரிகளின் இடம்)

இது தாண் இனத்துக்குக் குறிக்கப்பட்ட எமோரியர்களின் நகரம் (யோசு 19:42). ஆனால் தாணின் மக்களால் குடியிருக்க முடியவில்லை. காலப்போக்கில் இந்தச் சாலபிமில் உள்ளவர்கள் யோசேப்பின் இல்லத்திற்குக் கட்டாய வேலையாளர்களாக இருந்தனர் (நீதி 1:35). இந்நகரம் இறுதியாக இஸ்ராயேலர்களால் ஆட்கொள்ளப்பட்டது. சாலமோனுடைய இரண்டாவது நிர்வாக மாவட்டத்தின் ஒரு பகுதியாக மாறியது (1 அர 4:9). சால்போன், சாலீம் என்று சொல்லப்படும் இடங்களும் இதே இடமாக இருக்கலாம்.

அறிஞர் பலர் அய்யலோனுக்கு வடமேற்கில் 5 கி.மீ. தொலைவிலும், பெத்செமேசுக்கு வடக்கில் 13 கி.மீ. தொலைவிலும் உள்ள செல்பித்து என்ற இடந்தான் முன்பு சாலபிமாக இருந்திருக்கும் என்று கருதுகின்றனர்.

சாலமி (SALAMIS - அமைதி)

'சாலமி' என்ற சொல்லுக்குப் பொருள் 'அமைதி' என்பதாகும். இது சைப்பிரசில் முக்கியமானநகரம். சிரியாவுக்கு எதிரில் ஆழமில்லாத கிழக்குக் கடல் பகுதியில் அமைந்துள்ளது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில், பெரிய நகராகவும், சைப்பிரசின் துறைமுகமாகவும் இருந்தது. இந்தச் சாலமி துறைமுகத்துக்குத்தான் பவுலும் பர்னபாவும் தங்களது முதல் மறைபரப்புப் பயணத்தில் முதலில் போய்ச் சேர்ந்தனர். அங்கே யூதர்களின் செபக் கூடங்களில் கடவுள் வார்த்தையை

அறிவித்தனர் (அ.ப. 15:5). பழைய கிறிஸ்துவ பாரம்பரியத்தின்படி, பர்னபா இங்கேதான் யூதக் கூட்டத்தினரால் வேத சாட்சியாக உயிர் நீத்தார். கி.பி 116-17-இல் யூதஇன மக்கள் வன்முறையாகக் கிளர்ச்சி செய்தனர். இதனால் திரேசன் என்பவரால் நகரம் அழிவுக்குள்ளாகியது.

சாலபு (ZALAPH - ஒருவகை முட்செடி)

கானூனின் (ஆனூன்) தந்தை; இவர் நெகேமியாவின் காலத்தில் எருசலேம் சுவர்களைப் பழுதுபார்க்க உதவியவர்களுள் ஒருவர் (நெகே 3:30).

சாலமோனின் ஏற்பாடு (SOLOMON, TESTAMENT OF)

சாலமோனைப்பற்றிய வரலாற்று விவரிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு சிக்கலான புனை பெயர் நூலாகும். இது மந்திர சாதனங்களாலும் நோய்களை உண்டாக்கும் பேய்களைக் கட்டுப்படுத்துவதாலும் குணமளிப்பதில் அக்கறை செலுத்துகிறது. இந்நூல் தோன்றியதாக எகிப்து, பாலஸ்தீனம், சிறிய ஆசியா, பாபிலோன் போன்ற நாடுகள் கூறப்படும். முந்தையப் பொருள்கள் உள்ளடங்கியிருந்தாலும், இந்நூல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். இது ஒரு யூத நூலாகத் தோன்றியிருக்கலாம். இப்பொழுது காணப்படும் நிலையில் இந்நூலில் சில கிறிஸ்தவக் கூறுகளும் உண்டு. சாலமோனை மந்திரவாதிகள் மற்றும் பேயோட்டுபவர்களின் தலைவராகக் கருதும் பாரம்பரியக் கருத்தைப் பிரதிபலிக்கிறது. 1 அர 5:9-14-க்கு விளக்கமாக கி.பி. முதல் நூற்றாண்டில் இத்தகைய பாரம்பரியம் நிலவியதாகத் தெரிகிறது.

சாலமோனின் சங்கீதங்கள் (SOLOMON, PSALMS OF)

இவை விவிலியத்தில் காணப்படாத 18 சங்கீதங்கள் அடங்கிய ஒரு புனைபெயர்த் தொகுப்பு. இது கிரேக்க மற்றும் சிரிய மொழியில் உள்ளது. விவிலியத்தில் உள்ள சங்கீதங்களிலிருந்து பிரித்துக் காட்டுவதற்காக இத்தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. சாலமோனுக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. 19-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இந்நூல் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது.

முதலில் இது கிரேக்க மொழியில் எகிப்தில் எழுதப்பட்டது என எண்ணினர். ஆனால் இப்போது இது யூதேயாவில் கி.பி. 70-இல் எபிரேய மொழியில் எழுதப்பட்டது; பின் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டது என்று கருதுகின்றனர். ஆனால் தற்போது இதன் எபிரேய மூலம் காணப்படவில்லை. இந்நூல் ஒரு பரிசேயர் குழுவால் எழுதப்பட்டது என்று சிலரும், எஸ்ஸேனியர் குழுவால் எழுதப்பட்டதுஎன்று வேறு சிலரும் கருதுவர். இந்தச் சங்கீதங்கள் ஏறக்குறைய ஒரே நடையில் பல கருத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. யூதர்களின் சமய அரசியல் நிகழ்ச்சிகள் இதில் பெரிதும் காணப்படுகின்றன. இது விவிலியத்தில் உள்ள சங்கீதம் போன்ற அமைப்பைப் பெரிதும் தழுவி உள்ளது. இதிலும் விசுவாசம், சோகம், மகிழ்ச்சி, நம்பிக்கை போன்ற உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வரலாற்று மற்றும் இறுதிக்காலக்கருத்துகளுடன், இந்நூலில் வரும் செபங்களும் போற்றுரைகளும் இறைமக்களது பாவம், இறைவனது இரக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. இசைக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

இஸ்ராயேல் நாடு உள்நாட்டு, வெளிநாட்டுக் கேடுகளால் தாக்கப்பட்டபோது இது இயற்றப்பட்டதால் இது அவர்களின் பக்தியின்மையையும், வெளிவேடத்தையும் வெகுவாகக் கண்டிக்கிறது. இறைவனுக்குப் பயப்படுவோர் நல்லவர், நீதிமான், பக்தன் என அழைக்கப்படுகின்றனர்.

ஆலயத்தை மாசுபடுத்திய புறவினத்தாரை இது சபிக்கிறது. இவ்வாறு இஸ்ராயேல் அடிமையாக்கப்பட்டது அவர்களின் பாவத்திற்கு இறைவன் வழங்கும் தண்டனையாகும். இதைப் போன்றதொரு கருத்து சாக்கடல் சுருள்களிலும் காணப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள், பாபிலோ

னியர்கள் அசிரியர்கள் ஆகியோர் புறவினத்தவராய் இருப்பினும் கடவுள் அவர்களை இஸ்ராயேலைத் திருத்துவதற்குக் கருவிகளாய்ப் பயன்படுத்தினார் என்று கூறினர். இக்கருத்திலிருந்து இந்நூலின் ஆசிரியர் அதிகம் வேறுபடவில்லை. ஆயினும் புறவினத்தார் பலயூதர்களைச் சிலை வழிபாட்டுக்கு இழிவுபடுத்தியதால், இவர்கள் செயல் தன்னிலேயே தீயதாகும். இதன் ஆசிரியர் தாவீது குலத்தில் தோன்றும் அரசரும் மெசியாவுமான ஒருவர் மூலமே மீட்பை எதிர்பார்க்கிறார். தீர்வுகாண்முடியாத பிரச்சனையான மனிதனின் சுதந்தரம் - இறைவனின் திட்டம், இரண்டிற்குமுள்ள தொடர்பைப் பற்றிய ஒரு சிக்கல் இதன் ஆசிரியர் மனதிலும் இருப்பதை நாம் சில இடங்களில் காண்கிறோம். கடவுள் பூமிக்கு வரும்போது பாவிகள் அழிக்கப்படுவர்; மாறாக நீதிமான்களோ ஆசிர்வதிக்கப்படுவர் என்பதை அவர் கருத்து எனலாம்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த யூதர்களின் நம்பிக்கை பற்றி அறிய இந்நூல் பெரிதும் உதவுகிறது. நற்செய்தியில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுக்கு இது ஒரு பின்னணியாக உள்ளது. ''தன் ஒரே பேரான மகன்'', ''தாவீதின் வழியில் மெசியா தோன்றுவார்'' ஆகிய சில கருத்துக்கள் புதிய ஏற்பாட்டுடன் பெரிதும் ஒத்து அமைகின்றன.

சாலமோனின் ஞானம் (WESDOM OF SOLOMON, BOOK OF - *திருநூல்*)

1. முன்னுரை: இந்நூல் முதலிலேயே கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. எழுபது நூலைச் சேர்ந்ததன்று. வுல்காத்தா வாசகத்தில் தொடக்கத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. கத்தோலிக்கத் திருமுறைப்பட்டியலில், துணை அல்லது இணைத்திருமுறைப் பட்டியலைச் சேர்ந்தது. விவிலியத்திலேயே புலமைக்கும், உயர்ந்த சிந்தனைக்கும், கலை நயமிக்க நடைக்கும் உரிய எபிரேய, கிரேக்கப் பண்பாடுகளின் கூறுகளை இணைக்கும் நூல்களில் ஒன்றாகும்.

2. பெயர்: கிரேக்க, சீரிய வாசகங்கள், இந்நூலைச் ''சாலமோனின் ஞான நூல்'' என்று அழைக்கின்றன. வுல்காத்தா வாசகம் இந்நூலை வெறுமனே ''ஞான நூல்'' என்றழைக்கிறது. இந்நூலைக் குறிக்க இரு பெயர்களையும் பயன்படுத்தலாம். இந்நூலைப் பற்றிய காலத்தால் முந்திய குறிப்பு கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ''முராத்தோரியின் பட்டியலில்'' காணப்படுகிறது. இப்பட்டியல் இந்நூலைப் புதிய ஏற்பாட்டுத் திருமுறைப் பட்டியலின் ஒரு பகுதியாகக் கொடுக்கிறது. மேலும் ''சாலமோனின் மகிமைக்காக அவரது நண்பர்களால் எழுதப்பட்டது ஞானநூல்'' என்றும் கூறுகிறது.

3. சமய, வரலாற்றுப் பின்னிலையும் நோக்கமும்: கி.மு. 2-1-ஆம் நூற்றாண்டுகளில் யூதத்துவம் மிகக்கடுமையான இக்கட்டுகளை எதிர்கொண்டது. குறிப்பாக எகிப்தில், சிறப்பாக அலக்சாந்திரியாவில், இந்நிலை நிலவியது. மத்தியதரைக் கடற் பகுதிகளில், அலக்சாந்திரியா ஒரு பெரிய அறிவியல் மையமாக விளங்கியது. அது, சிதறிக் கிடந்த யூதர்களின் மிகப் பெரிய மையங்களில் ஒன்றாகும். அங்குப் பிற இன மக்களிடையே வாழ்ந்த யூதசமூகம், அக்காலத்தில் நிலவிய கிரேக்கப் பண்பாட்டு உலகுடன் பல வழிகளில் தொடர்பு கொண்டது. விஞ்ஞான அறிவுவளர்ச்சி உலகின் அழகையும் இரகசியங்களையும் எடுத்துக்காட்டிற்று (7:17-20). பல சமயங்களும் தத்துவ இயக்கங்களும் ஞானம், மீட்பு, வாழ்வின் உண்மைப் பொருள் ஆகியவை பற்றிப் பலவகையாக எடுத்துக்கூறின. அதன் விளைவாக ஒரு வகைக் கலப்புத் தன்மையுடைய தனிநபர்ப் பண்புடைய மனப்போக்கும், சமய அக்கறையற்ற போக்கும், பரம்பரைக் கருத்துக்கள் பற்றிய அதிருப்தியும் நிலவின. அதற்கு யூத சமூகமும் விதிவிலக்காக அமையவில்லை. அந்நிலை யூதத்துவத்தைப் பலவாறு பாதித்தது. சில யூதர்கள் தங்கள் விசுவாசத்தைக் கைவிட்டுப் (2:12) பிற இன சமயப் பழக்க வழக்கங்களையும், சமய அக்கறையற்ற தத்துவங்களையும் பின்பற்றத் தொடங்கினர் (2:1-20). மற்ற யூதர்களும் இந்த இறைபயம் அற்றவர்களைப் பின்பற்றும் ஆபத்திலிருந்தனர். இந்த அறிவியல் சூழ்நிலையால் ஏற்

பட்ட ஆபத்தோடு, செமித்திய இனத்துக்கு எதிராக எழுந்த இயக்கமும், சமயத்தின் பெயரால் ஏற்பட்ட கொடுமைகளும், தங்கள் விசுவாசத்திற்குப் பற்றுறுதியாக இருந்த யூதர்களை எதிர்கொண்டன. எகிப்தில் ஏழாம், . ஆறாம் தோலமியர்கள் காலத்தில் (கி.மு. 145-116; 116-80) யூதர்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர் (ஞான 2:10-20; 5:1; 10:15; 15:14; 16:4; 17:2). இவையாவும் சேர்ந்து, காலம்காலமாக யூதர்களிடையே நிலவிய வினைப்பயன் கோட்பாட்டுப் பிரச்சினையை மீண்டும் தலைதூக்கச் செய்தன. தீயவர்களும் இறைப்பற்று அற்றவர்களும் செழிப்படைகின்றனர். நீதிமான்களோ துன்பம் அடைகின்றனர். இது எப்படி நிகழ்கிறது? எப்படி, எங்கே இறைவன் தமது நீதியைச் செயல்படுத்துகிறார்? இப்பிரச்சினைகளோடு பக்தியுள்ள யூதர்கள் போராட வேண்டியிருந்தது.

இந்நிலையில் சாதாரண யூதர்களுக்கு விசுவாசப்பாதுகாப்பு வேண்டியிருந்தது. அவர்கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். அவர்களது விசுவாசம் எந்த விதத்திலும் குறையுடையதன்று. சிலை வழிபாட்டால் சீர்கெட்ட எகிப்திய, கிரேக்கப் பண்பாடுகளிலோ, உலோகாயுத நல்வாழ்விலோ, வெற்றியளிக்கும் உண்மையான ஞானம் அடங்கியிருக்கவில்லை (3-9). அது இறைவனிடமிருந்து வருவதாகும். அத்தகைய ஞானம் இஸ்ராயேலின் ஞானம், மற்றப் பிற இனப்பண்பாடுகளையும் சமயங்களையும் விட மேலானது என்று காட்டக்கூடிய ஒரு காப்புரை வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட நூலாகும் இந்த ஞானநூல்.

மேலும் நல்ல புலமை பெற்ற யூதர்களில் சிலர் பிறமதத்தினருக்குத் தங்களது சமயத்தை, நயமான முறையில் எடுத்துக்கூற முயன்றனர். அதற்காகக் கிரேக்கப் பண்பாட்டிற்கும் இஸ்ராயேல் பாரம்பரியத்திற்குமிடையேயுள்ள தொடர்புகளைத் தேடினர். இரண்டுக்கும் இணக்கமான கருத்துக்களையும் இலக்கிய மரபுகளையும் பயன்படுத்தித் தங்கள் சமயத்தைப் பிற மதத்தினரையும் கவரும் வண்ணம் எடுத்துக் கூற முயன்றனர். அந்த முயற்சியின் விளைவே ஆகும் இந்நூல்.

4. ஆசிரியரும் அவரது நோக்கமும்: இவ்வாறு சமயக் காப்புரையாகவும் விளக்கமாகவும் தோன்றியதாகும் ஞானநூல். இந்நூலின் ஆசிரியர், அவரது வரலாறு ஆகியவை பற்றி ஒன்றும் தெரிவதற்கில்லை. சாலமோன் இந்நூலுக்கு ஆசிரியர் என்று கூறுவது, பிற ஞான நூல்களாகிய பழமொழி, உன்னத சங்கீதம், திருவுரையாளர் போன்றவற்றில் வருவது போன்று, நூலுக்கு அதிகாரம் அளிக்கும் ஓர் இலக்கிய யுக்தியாகும்; ஒரு புனை பெயராகும். சாலமோனின் பெயரால் பேசுவதும், ஆள்பவர்களையும் (1:1), அரசர்களையும் (6:2) பார்த்துப் பேசுவதும் இந்த யுக்தியின் ஒரு கூறே. இந்நூலின் ஆசிரியர் பீலோ, செருபாபேல், அப்பொல்லோ அரிஸ்டாபூலஸ் ஆகியவர்களில் ஒருவராக இருக்கக் கூடும் என்று அடையாளம் காட்டப்பல வீண் முயற்சிகள் நடந்துள்ளன.

நூலிலிருந்து ஆசிரியரையும் அவரது பண்புகளைப் பற்றியும் சிறிது அறியலாம். இந்தப் பெயர் தெரியாத ஆசிரியர் ஒரு பக்தியுள்ள, புலமைமிக்க, சமய ஆர்வமுடைய கிரேக்க மொழி பேசும் யூதர். யூத சமயத்தை எதிர்கொண்ட பிரச்சனைகளுக்குத் தமது சமய நூல்களிலே விடை தேடுகிறார். முந்தைய புனித நூல்களைப் பயனுள்ள விதத்தில் தியானித்துத் தமது முடிவுகளை எடுத்துக் கூறுகிறார். அந்நூல்களின் இறைவழிகாட்டுதல் வழியாகத் தாம் அறிந்த ஞானத்தை அறிவிக்கிறார்.

ஒருபுறம், இந்நூலின் வழியாகச் சிதறிக் கிடந்த கிரேக்க மொழி பேசிய யூதர்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலும் உற்சாகமும் அளிக்கிறார். யூத விசுவாசத்தைப் பாதித்த எகிப்திய, கிரேக்கப் பண்பாட்டுத் தத்துவங்களையும் கருத்துக்களையும் பயன்படுத்தி இக்காப்புரையை எழுதுகிறார். யூதத்துவத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட தாக்குதல்களிலிருந்து அதைப் பாதுகாக்கவும், வாழ்வுக்கு

உண்மையான பொருள் அளிக்கவும் யூதர்களது விசுவாசத்தைப் பலப்படுத்தவும், அதற்குப் பிரமாணிக்கமாக இருக்க அவர்களைத் தூண்டவும் உற்சாகப்படுத்தவும் இந்நூலை எழுதுகிறார்

மறுபுறம் அதி. 13-15-இல் சிலை வழிபாட்டு மடமை பற்றிய விவரிப்பையும் அதி. 16-19-இல் வரும் எகிப்தியர், இஸ்ரயேலர்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் பற்றிய விவரிப்பையும் பயன்படுத்தி, பிற இனத்தார்க்கு யூதசமயத்தின் மேன்மையை எடுத்துக் காட்டவும், முடிந்தால் - அவர்களைக் கவரவும் முயற்சி செய்கிறார் ஆசிரியர்.

5. நூல் தோன்றிய இடம்: சமய, வரலாற்றுப் பின்னணிகள், எகிப்தை, குறிப்பாக அலக்சாந்திரியாவை, இந்நூல் தோன்றிய இடமாகச் சுட்டுகின்றன. ஆசிரியர் கிரேக்கப் பண்பாட்டையும் தத்துவ இயல்களையும் அறிந்திருந்தார் என்பது அவர் கிரேக்கச் சொற்களைப் பயன்படுத்தும் முறையிலிருந்து தெரிகிறது. கிரேக்கத் தத்துவங்கள் செழிப்புற்றிருந்த அலக்சாந்திரியா ஆசிரியருக்கு இதற்கான வாய்ப்பளித்திருக்கலாம். மேலும் பழைய ஏற்பாட்டில், அலக்சாந்திரியாவில் செய்யப்பட்ட எழுபது நூலின் கிரேக்க மொழியும், இந்நூலின் மொழியும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இந்நூலின் சிந்தனைப்போக்கு அதே காலத்தில் அலக்சாந்திரியாவில் நிலவிய யூத சிந்தனைப்போக்கொடு ஒத்துள்ளது. மேலும் எகிப்திய சிலை வழிபாடு, விடுதலைப் பயணத்துக்கு இஸ்ராயேலர் அங்கு அனுபவித்த அடிமைத்தனம் ஆகியவைபற்றி அதிகம் அக்கறை கொள்கிறார் ஆசிரியர். அலக்சாந்திரியாவில் நிலவிய இலக்கியத் தரத்தில் அவர் ஆற்றல் பெற்றிருந்தார் என்று கிரேக்க மூல நூல் காட்டுகிறது. இவையெல்லாம் இந்நூல், எகிப்தில், குறிப்பாக அலக்சாந்திரியாவில், தோன்றியிருக்கக்கூடும் என்று சுட்டுகின்றன.

6. எப்போது தோன்றியது: சிந்தனை வளர்ச்சியின் அடிப்படையில் ' இந்நூல் தோன்றிய காலத்தை ஓரளவு நிர்ணயிக்கலாம். இந்நூல் பழைய ஏற்பாட்டின் காலத்தால் முந்திய கிரேக்க மொழி பெயர்ப்பான எழுபதுநூலைப் பயன்படுத்தியுள்ளது என்பது உறுதி. எழுபதுநூல் ஏறக்குறைய கி.மு. 250-ஐ ஒட்டித் தோன்றியதாகும். ஆகவே கி.மு 250-க்கு முன் இந்நூல் தோன்றியிருக்க முடியாது. நூலின் கோட்பாடு இந்நூல் மிகவும் பிந்திய காலத்தைச் சேர்ந்தது எனச் சுட்டுகிறது. மேலும் கி.மு. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில், இந்நூலில் காணப்படுபவை போன்ற இலக்கியமும், சமய அறிவும் யூதர்களிடையே பரவியிருந்தன. நூலில் காணப்படும் கிரேக்கப் பாதிப்பும் இக்காலத்தையே சுட்டுகிறது. மேலும், பீலோ என்ற யூத தத்துவவியல் வல்லுநரின் (கி.மு. 20-கி.பி.54) நூல்களையோ, புதிய ஏற்பாட்டையோ அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே ஞானநூல் பீலோவுக்கு முந்தியது எனலாம். பீலோவின் நூல்கள் புதிய ஏற்பாட்டுக்கு முந்தியவையாகும். ஞானநூலைப் புதிய ஏற்பாடு பயன்படுத்துவதாகத் தெரிகிறது (உரோ 1:8-22; எபே 6:11-17; யோவான்; எபி 1:2-3;...). இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஞானநூல் கி.மு. முதலாம் நூற்றாண்டின் முற்பகுதியில், குறிப்பாக கி.மு. 50-ஐ ஒட்டி, தோன்றியிருக்கலாம் என்று கூறலாம். ஒரு வேளை இந்நூலே பழைய ஏற்பாட்டின் இறுதியான நூலாகலாம்.

ஒருசிலர், இந்நூலின் கலைச் சொற்றொகுதியை ஆய்வு செய்து, எகிப்தில் உரோமைப் பேரரசு வேரூன்றிய கி.மு. 28-க்குப் பின் இந்நூல் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதுவர்.

7. அயல் பாதிப்பு: கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இந்நூல், அம்மொழிப் பண்பாலும், கிரேக்கப் பண்பாட்டாலும் ஓரளவு பாதிக்கப்பட்டிருப்பதில் வியப்பில்லை. ஹோமர், செனேபோன், பிளேட்டோ, ஸ்தோயிக்குகள், பித்தகோரசு ஆகியோருடைய நூல்களை ஆசிரியர் வாசித்திருப்பதாகத் தெரிகிறது. ஆன்மாவின் அழியாமைபற்றிய

கருத்துக்கள், ஆசிரியரது விவரிப்புக்களைப் பாதித்துள்ளது. இது எபிரேயக் கருத்தன்று. கிரேக்க தத்துவ இயலாகும். ஆன்மா ஆவியாகக் கருதப்படுகிறது. இது ஸ்தோயிக்கு தத்துவக்கருத்தோடு ஒத்துள்ளது. உடல் ஒரு குடிசையாகும் என்ற கருத்து (9:15) பிளேட்டோ, பித்தகோரசு ஆகியோரின் நூல்களில் காணப்படுகிறது. மற்றக் கிரேக்க தத்துவக் கருத்துக்கள் 2:22-23; 6:18 தொ; 8:4.7.20; 9:15 ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.

கிரேக்க மொழிநடையும் ஞானநூலில் பெரிதும் இடம் பெறுகிறது. நூலில் காணப்படும் மேற்கோள், கூற்றுக்கள் வெறும் தொகுப்பாக அமையவில்லை; கிரேக்க தத்துவ இயல் முறையில் தொடர் வாதமாக அமைந்துள்ளன. ஞான நூல் கிரேக்கப் பண்பாட்டாலும் தத்துவங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மிகைப்படுத்தக் கூடாது. பல தத்துவங்கள் பற்றிய அறிவை ஆசிரியர் காட்டுகிறார். ஆனால் இந்த அறிவு மேல் எழுந்தவாரியானதாகும். இது அலக்சாந்திரியாவைச் சேர்ந்த எந்தச் சராசரிக் கல்வி பெற்ற குடிமகனும் கொண்டிருக்கக் கூடிய அறிவையே காட்டுகிறது. இதை அன்றாட உரையாடலிலிருந்து அவர் பெற்றிருக்கலாம்.

இஸ்ராயேல், கிரேக்கக் கோட்பாடுகளைச் சேர்த்து, ஆசிரியர் கலப்படம் செய்யவில்லை. அவரது போதகம் இஸ்ராயேல் பாரம்பரியத்தைச் சேர்ந்ததே. அதற்கு எப்போதும் பிரமாணிக்கமாய் இருக்கிறார். ஆனால் அதற்குக் கிரேக்கப் புறவடிவைக் கொடுக்கிறார். தாம் வாழ்ந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு தமது செய்தியை எடுத்துக்கூறி, கிரேக்கக் கருத்துக்களையும் இலக்கிய முறைகளையும் பயன்படுத்தத் தயங்கவில்லை. இவ்வாறு உடல், ஆன்மா பற்றிய கிரேக்கக் கருத்துக்கள் ஆசிரியருக்கு உதவியதாகத் தெரிகிறது. ஆனால் அவரது சிந்திக்கும் முறை யூதத்தன்மையுடையது. ஆசிரியர், மனித ஆத்மா அழியாதது என்ற முடிவுக்கு அதன் பருப்பொருளற்ற தன்மையிலிருந்து வரவில்லை. மாறாக இறைவனோடு மனிதன் கொள்ளும் உறவிலிருந்து வருகிறார். நீதிமானின் சன்மானத்தைக் ''கடவுளின் புதல்வர்களுள்ள இடம்'', ''பரிசுத்தர்களோடு பங்கு'' (5:5) என்று விவரிக்கிறார். ஆன்மாவின் அழியாமை என்ற கருத்து தத்துவ இயலாக அமையாமல் பழைய ஏற்பாட்டுப் பக்தியின் வளர்ச்சியாக அமைந்துள்ளது. இத்தகைய போக்கைக் கும்ரான் ஏடுகளிலும் காணலாம். நூலுக்கு அடிப்படையான நீதிமான்களின் அழியாமையும், தீயோரின் அழிவும் பற்றிய கருத்துக்கள் கிரேக்க வடிவத்தைக் கொண்டிருந்தாலும், கிரேக்க மரபுக்கு மாறாகத் தீமையின் தோற்றத்துக்கு அலகையே காரணம் என்று கூறப்படுகிறது (2:24).

ஞானத்தின் 21 பண்புகள் (3 x 7, நிறைவைக் குறிக்கும் எண்கள்), தலையாய நற்பண்புகள் (8:7) ஆகியவை பற்றிய கூற்றுக்கள் ஆசிரியர் கிரேக்க தத்துவச் சொற்களை அறிந்திருப்பதை மட்டும் காட்டவில்லை; தமது ஒரே இறைவனின் மிகச் சிறந்த பண்பாகிய ஞானத்தில் காணப்படாத எதுவும், தத்துவ ஞானிகள் ''உலக ஆன்மாவை''ப் பற்றிக் கூறுவதில் இல்லை என்று தமதுவாசகர்களின் மனதில் பதியச் செய்ய விரும்புவதைக் காட்டுகிறது. ஞானத்தை விவரிக்கும்போது, கிரேக்கச் சொற்களைப் பயன்படுத்தினாலும், தமது இறையொருமைக் கோட்பாட்டுக்குப் பங்கம் விளைவிக்காத முறையில் பயன்படுத்துகிறார். பிறமதத்தினரைப் பற்றிய ஆசிரியரது பல கூற்றுக்களோடு இதையும் மனதில் கொண்டால், ஆசிரியர் யூதர்களையும் பிற மதத்தினரையும் தனது வாசகர்களாக மனதில் கொண்டு எழுதுகிறார் எனத் தெரியும். இவ்வாறு கிரேக்க மொழியையும் தத்துவக் கருத்துக்களையும் பயன்படுத்தி எபிரேய இறையியல் சிந்தனையில் காட்டுமிராண்டித்தனமானதும், வெறுக்கத்தக்கதும் எதுவுமில்லை என்றும் அவற்றைவிட இது மேலானது என்றும் காட்ட விழைகிறார் ஆசிரியர்.

8. இலக்கியப் பண்புகள்:

8.அ) மொழி:- இந்நூலின் முதற்பகுதியாவது (அதி 1-10) முதலில் எபிரேயத்தில்

எழுதப்பட்டு, பின்பு கிரேக்கத்தில் மொழி பெயர்க்கப்பட்டது எனச் சிலர் கூறியுள்ளனர். இதற்கு அவர்கள் காட்டியுள்ள காரணங்கள்: கருத்துக்களை மொழி பெயர்ப்பதற்குப் பதிலாகச் சொற்களை மொழி பெயர்ப்பதால், கிரேக்க வாசகத்தில் காணப்படும் மொழித்தடுமாற்றம்; இப்பகுதியில் காணப்படும் எபிரேயப் பண்புகள் (1:1; 5:14-16; 2:5-6; 4:13-14; 5:16; 6:7; 8:4; 9:1.3.9-11; 10:1.8.9); பின்பகுதியில் காணப்படுவது போல் இப்பகுதியில் கிரேக்க இலக்கணக் கூறுகள் அதிகம் காணப்படாமை; எபிரேய யாப்புப் பண்பாகிய இணையமைப்புகள் அதிகம் காணப்படுதல்; இப்பகுதியின் வாசகர்கள், பின்பகுதியின் வாசகர்களிடமிருந்து வேறுபடுவதாகத் தெரிகிறது. ஆகவே இப்பகுதியில் மொழி நடை கடினமாக உள்ளது. இவற்றையெல்லாம் கருதி இவ்விருபகுதிகளும் வெவ்வேறு காலத்தில் எழுதப்பட்டு ஒன்றாக்கப்பட்டன என்று பலர் விளக்குவர். இப்போது இந்நூல் முதலிலேயே கிரேக்க மொழியில்தான் எழுதப்பட்டது என்று ஆய்வாளர்களால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். ஏனெனில், மொழிபெயர்ப்பில் காணப்படும் தடைகள் இந்நூலில் இல்லை. கிரேக்க மொழிநடை சுதந்தரமாக, சரளமாக ஓடுகிறது. நூலில் காணப்படும் மோனை அமைப்பு, சந்தம் சிலேடை போன்ற இலக்கிய யுக்திகளை ஒருமொழி பெயர்ப்பாளர் அமைத்திருக்க முடியாது. ஆசிரியர் பழைய ஏற்பாட்டை எழுபது நூலின் கிரேக்க மொழியில்தான் அறிந்து பயன்படுத்துகிறார். ஆகவே நூல் முழுவதும் கிரேக்க மொழியில் நேரடியாக எழுதப்பெற்றது என ஏற்றுக் கொள்வது சாலச்சிறந்தது.

8.ஆ) இலக்கியக் கூறுகள்:

நூல் பாடல்களையும், அறவுரைகளையும் கொண்டுள்ளது. இந்நூல் நாம் கொண்டிருக்கும் வடிவில் வாய்மொழியாய்த் தோன்றியதன்று. ஏனெனில், அது முன்னிலைப்படுத்திப் பேசும் பேச்சு முறையைப் பயன்படுத்துவது செயற்கைத் தன்மையுடையதாகும். பாடல் வடிவு முன்பகுதியில் சிறந்து காணப்படுகிறது (அதி 1-5;9); மற்றப் பகுதிகளில் இங்குமங்குமாகக் காணப்படுகிறது; அதி 13-19-ஐ விட அதி 6-8;10-12-இல் அதிகம் காணப்படுகிறது. கிரேக்க, எபிரேய இலக்கிய அமைப்புகள் கலந்து காணப்படுகின்றன. சில இடங்களில் நடைமிகக் கவர்ச்சியாக உள்ளது. ஆசிரியர் பல இடங்களில் வண்மைமிக்க, உற்சாகமிக்க, தூண்டுகிற இலக்கிய நடையைக் காட்டுகிறார். அவர் நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட, மனதில் பதியக்கூடிய சொற்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகிறார்.

பொருளடக்கத்தைப் பொறுத்தமட்டும் இந்நூல் ஞான இலக்கியங்களைச் சார்ந்ததாகும். ஆனால் இவ்விலக்கியத்தின் முக்கிய அமைப்பான இணையமைப்பு முதலில் கடைப்பிடிக்கப்பட்டு, சிறிதுசிறிதாகத் தளர்த்தப்பட்டு, பின்பு முழுவதுமே கைவிடப்படுகிறது. பழமொழி, யோபு, திருவுரையாளர், சீராக் ஆகியவற்றின் பாரம்பரியத்திலிருந்து, இந்நூல் வெகுதூரம் கடந்துவிட்டது. இது அயல்பாதிப்பைக் குறிப்பாகக் கிரேக்கப் பாதிப்பையே காட்டுகிறது. நூல் தியானமுறையில் அமைந்த அறவுரையாகும். இந்தத் தியான முறை அறிஞரது ஆழ்ந்த தியானமாக இல்லாமல், பொது மக்களுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. ஆசிரியர் தாம் எடுத்துக் கொண்ட பொருளைப் பல கோணங்களிலிருந்து தமக்கே உரிய முறையில் அணுகுகிறார்.

8.இ) இலக்கிய யுக்திகள்: அதி 1-9-இல் ''தொகுப்பு முறை''யைப் பயன்படுத்தி, ஞானம் பற்றிய தமது போதகத்தை அளிக்கிறார் ஆசிரியர். ''தொகுப்பு முறை'' என்பது முந்தைய விவிலிய நூல்களிலிருந்து கருத்துக்களையும், சொற்றொடர்களையும் எடுத்து, அவற்றை ஞான இலக்கியச் சூழ்நிலைக்கேற்ப ஒன்று திரட்டித் தருவதாகும். இப்பகுதியில் கிரேக்கப் பண்பாடு அளிக்கக்கூடிய சாதனங்களையெல்லாம் பயன்படுத்தினாலும், சிந்தனைப்போக்கு முழுவதும் யூத முறையிலேயே அமைந்துள்ளது. இதன் விளைவு திட்டமிட்ட இறையியல் அன்று; ஆசிரியர் எடுத்துக் கொண்ட பொருள்பற்றி

முந்தைய வேதாகம நூல்களில் காணப்படு பவற்றை ஒன்று சேர்த்துத் தரும் இறையிய லாகும்.

ஆசிரியர் பயன்படுத்தும் மற்றொரு யுக்தி சொல்லாட்சித் திறம் வாய்ந்த தொடர்வாத மாகும். இம்முறை ஒரு எதிரியைக் கற்பனை செய்து அவனோடு வாதாடுவதாகும். இதில் வஞ்சகப்புகழ்ச்சி அணி தாராளமாகப் பயன் படும். பல பொருள்கள் பற்றியும், சுதந்தர நடையில் வாதம் நடக்கும் இம்முறையை ஸ்தோயிக்கு வல்லுநர்கள் பெரிதும் பயன் படுத்தினர். ஆசிரியர் இம் முறையைப் பயன் படுத்தி வேதாகமத் தலைப்புகள் பற்றி, குறிப்பாக முடிவுகாலத் தீர்ப்புப்பற்றித் தம் அறவுரைகளை அமைக்கிறார்.

அதி 10-12; 16-19-இல் ஆசிரியர் "மிட்ராஷ்" என்ற இலக்கிய வடிவத்தைப் பயன்படுத்து கிறார். இந்த இலக்கிய வடிவம் பற்றி, மிட்ராஷ் இலக்கியம் என்ற தலைப்பின்கீழ் விரிவான கட்டுரை ஒன்று தரப்படும். இங்கு இவ்வடிவம் பற்றிச் சுருக்கமாகச் சிலவற் றைத் தருகிறோம். இது வேதாகம வாக்கு களைப் பற்றிய மறையுரையாகும். யூத செபக் கூடங்களில் தோன்றி வளர்ச்சியுற்றது. இம் முறை வேதாகம வாசகத்தை அடிப்படையா கக் கொண்டதானாலும், அதை அப்படியே கூறுவதன்று. இது வரிக்குவரி அளிக்கப் படும் விளக்கமாக இருக்கலாம்; மறையுரை வடிவில் அளிக்கப்படும் பாரம்பரியப் போதக மாக இருக்கலாம். கதைகளையும் விவிலி யத்துக்குப் புறம்பான விவரங்களையும் பயன்படுத்தி மீண்டும் கூறப்பட்ட விவிலிய நிகழ்ச்சியுரையாக இருக்கலாம். இது, வேதா கம நிகழ்ச்சி உரைகளில் காணப்படும் விவ ரங்களைக் கூட்டியும் குறைத்தும் மிகைப் படுத்தியும் எடுத்துக் கூறலாகும். இம்முறை யின் நோக்கம் வேதாகம வாசகத்தைப் புதிய சூழ்நிலைக்கு, நிகழ்காலத்திற்குப் பொருத் திக் காட்டுவதாகும். இன்று, இங்கு இந்த வாசகம் நமக்கு என்ன கூறுகிறது என்று அறிவிக்கும் போதனையாகும்.

இந்த முறை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக் கள் எகிப்திய அடிமைத்தளையிலிருந்து விடு தலை பெற்ற வரலாற்றில் ஞானத்தின் செயலை எடுத்துக் காட்ட ஆசிரியருக்குப் பெரிதும் உதவியது. இம்முறையைப் பயன் படுத்தி, ஆசிரியர் சில இடங்களில் யூதக் கதைகளிலிருந்தும், தாமே கட்டிய கதைகளி லிருந்து எடுத்த கூறுகளைக் கொண்டும், பாரம்பரிய வேதாகம நிகழ்ச்சியுரைகளை அணி செய்கிறார். இவற்றில் சில வெறும் விவரிப்புகளே. நடை மெருகுபடுத்தப்படு கிறது (17:17-20; 18:1தொ. 15தொ; 19:9). மற்றவை குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை உள்ளத் தில் பதியவைப்பதாகவும் பொருள் மிக்கவை யாகவும் நாடகப் பாணிமிக்கதாகவும் அமை கின்றன (17:3-6.9; 18:2; 11:11-13; 17:8.18.20: 18:17-19; 16:27-29). இம்முறையில், இறைவ னது நன்மைத் தனத்திற்கோ தேர்ந்தெடுக்கப் பட்ட மக்களின் நற்பெயருக்கோ பங்கம் விளைவிக்கக் கூடியவற்றை ஆசிரியர் நீக்கி விடுகிறார் அல்லது மாற்றி அமைக்கிறார். இதற்கு, இறைவன் பார்வோனைக் கடினப் படுத்துதல், பாலையில் மக்கள் முணுமுணுத் தல் போன்றவை சில சான்றுகளாகும்.

மற்ற இடங்களில், வேதாகம நிகழ்ச்சி களை அப்படியே எடுத்துக்கூறி, அவற்றிற் குப் புதிய விளக்கம் அளித்துத் தமது திட்டத் திற்கு ஏற்றதாகச் செய்கிறார் ஆசிரியர். சான் றாக, யாத் 23:28-30-இல் நிலம் பாலைவன மாகிவிடாமல் பாதுகாக்கும் பொருட்டு, இறைவன் கானானியர்களை நாட்டிலிருந்து சிறிது சிறிதாகத்தான் துரத்தியடிப்பார். இச் செயல் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் நன் மைக்காகச் செய்யப்பட்டது. ஆனால் இந் நூல், இதைப்பிற மதத்தினருக்குக் காட்டப் பட்ட இரக்கமிக்க செயலாகக் காட்டுகிறது. அவர்கள் குற்றமிக்கவர்கள். ஆனாலும் அவர்கள் மனந்திரும்ப ஒரு வாய்ப்பளிக்க இறைவன் விரும்பினார் (12:3-6.10தொ). இது ஒரு நயமிக்க சிந்தனையாகும். பழைய வாசகத்திற்கு ஆழ்ந்தபொருள் அளிக்கிறது. ஆனால் யாத்திரை நூலின் நோக்கத்திற்குப் புறம்பானது என்பது உறுதி. இப்படி விளக் கம் அளிப்பதில் ஆசிரியர்காட்டும் சுதந்தரப் போக்கு எகிப்தியர், இஸ்ராயேலர் ஆகியோ ருடைய முடிவுகள் பற்றிய இணையமைப்பு

விவரிப்பில் (11:5-14; 16:1-19:9) தெளிவாகக் காணப்படுகிறது. நிகழ்ச்சிகளை நாடகப் பாணியில் விவரித்து அவற்றின் வேறு பாட்டை மிகைப்படுத்திக் காட்டுகிறார். இப்படிச் செய்யும்போது தமது கருத்திலும் நோக்கத்திலும் தெளிவாக உள்ளார். இறைவன் தன்மையால் இரக்கமிக்கவர். கட்டாயப்படுத்தப்பட்டால் மட்டுந்தான் தண்டிக்கிறார். இறைவன் தமது மக்கள் பால் தனிப்பட்ட அக்கறை கொள்கிறார் என்று நூல் முழுவதும் எடுத்துக் காட்டப்படுகிறது. இதற்குப் பின்னணியாக விவரிக்கப்படும் விவிலிய நிகழ்ச்சிகள் சமய, ஒழுக்க மதிப்பீடுகளைக் கொண்டுள்ளன என்ற விசுவாசம் அமைந்திருக்கிறது. இவற்றையெல்லாம் வெளிக் கொணர்வதே மிட்ராஷ் இலக்கிய வடிவின் நோக்கமாகும்.

மிட்ராஷ் இலக்கிய முறையில் பல வகை உண்டு. அவற்றில் தோராவில் சட்டமல்லாத பகுதிகளுக்கு விளக்கமளிக்கும் முறையாகிய ''அக்காதா'' என்ற வடிவத்தை ஆசிரியர் பயன்படுத்துகிறார்.

அதி 13-15 ஒரு தனிப்பட்ட இலக்கியப் பகுதியாக அமைந்திருக்கிறது. இப்பகுதி இடைச் செருகலாக இருக்கலாம். இவை சிலை வழிபாட்டுக்கு எதிரான வசையுரைகளாக அமைந்துள்ளன. கிரேக்க, எகிப்தியச் சமயங்களைப் பலவீனப்படுத்தும் நோக்கோடு, எள்ளிநகையாடுதல், வஞ்சப்புகழ்ச்சி ஆகியவற்றைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துகிறது.

ஆசிரியர் அடிக்கடி பயன்படுத்தும் அணிகளில் ஒன்று ''குறைமதிப்பீட்டுரை''யாகும். அதாவது, ஒரு கருத்தை வலியுறுத்த, அதைக் குறைத்துக் கூறுவதாகும். சான்றாக, நூலின் தொடக்கத்திலேயே இத்தகைய கூற்று வருகிறது. ''அவரைச் சோதிக்காமல் இருக்கிறவர்கள் அவரைக் கண்டடைவார்கள்; அவர் மேல் அவநம்பிக்கை கொள்ளாதவர்களுக்கு அவர் தம்மையே வெளிப்படுத்துகிறார்'' (1:2). இங்கே ஆசிரியர் கூற விரும்புவது, விசுவாசிகள், இறைவனில் தளராத நம்பிக்கை வைப்பதாலும், நீதியைக் கடைப் பிடிப்பதாலும், இறைவனை நெஞ்சறிந்த முறையில் தேட வேண்டும் என்பதே. இதே அணியை நூலின் முடிவில் காணலாம். இறைவன் தாம் தேர்ந்து கொண்ட மக்கள் பால் காட்டும் ஆற்றல்மிக்க பாதுகாப்பைப் போற்ற விரும்பிய ஆசிரியர், ''எக்காலத்திலும் எவ்விடத்திலும் நீர் அவர்களைப் புறக்கணிக்காமல் துணை நின்றீர்'' (19:22) என்று கூறுகிறார்.

மற்றொரு இலக்கியயுக்தி ''உள்ளடக்குதலாம்''. இது பற்றித் திட்டம் என்ற தலைப்பில் பார்ப்போம். ''முன் காட்சியின் இடைப்பதிவு'' என்ற ஒரு யுக்தியையும் ஆசிரியர் பயன்படுத்துகிறார். படைப்பின் மேல் இறைவன் கொண்டிருக்கும் மேலாண்மை பற்றிய முந்தைய சிந்தனையோடு வரலாற்று நிகழ்ச்சிகளை இணைத்துப் பின்பகுதியில் சுட்டிக் காட்டுவதாகும். இவ்வாறு இந்நூலில் காணப்படும் இலக்கியச் சிறப்புக்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

9. நூலில் ஒற்றுமை: இந்நூலை ஒரே ஆசிரியர் எழுதினாரா? இதுபற்றி கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டுகளில் பல ஐயங்கள் எழுந்துள்ளன. இந்நூல் பல ஆசிரியர்களால் எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டதாகும் என்று சிலர் கூறுவர், இதற்கு இவர்கள் கூறும் காரணம்: முற்பகுதி பிற்பகுதியிலிருந்து நடையிலும், தொனியிலும் வேறுபடுகிறது. மொழியிலும் சொற்றொகுதிகளிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. முற்பகுதியில் சிறப்புப்பெறும் ஞானம், ஆன்மாவின் அழியாமை போன்ற கருத்துக்கள், 14:2-5-இல் தவிர பிற்பகுதியில் காணப்படவில்லை. சிலர், முற்பகுதிக்காவது (அதி 1-5, அல்லது அதி 1-9, அல்லது அதி.1-10) எபிரேய மூலம் இருந்திருக்க வேண்டும்; அதைப் பிற்பகுதியின் ஆசிரியரோ வேறு ஒருவரோ, கிரேக்கத்தில் மொழிபெயர்த்துப் பிற்பகுதியோடு சேர்த்திருக்க வேண்டும் என்பர். இக்காரணங்கள் அவ்வளவு பொருத்தமாய் இல்லை என்று இக்கால ஆய்வுகள்

நிறுவியுள்ளன. சமீப காலத்தில் பெரும்பாலான ஆய்வாளர்கள், கிரேக்க வாசகத்தைப் பொறுத்தமட்டுமாவது, ஒரே ஆசிரியர்தான் இந்நூலுக்குப் பொறுப்பாவார் என்று கருதுகின்றனர். இது ஏற்கத்தக்க நிலையே. ஏனெனில் நூல் முழுவதும் சொற்றொகுதியும், நோக்கமும் ஒரே சீராக அமைந்துள்ளன. நூலின் பல்வேறு பகுதிகளும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. சில சொற்களைத் தவறான பொருளில் பயன்படுத்துவதிலும் இணைத்தன்மையுள்ளது (4:12;16:25). இறையியல், ஒழுக்கப் போதகங்களில் எப்பகுதியிலும் வேறுபாடு இல்லை; மாறாகக் குறிப்பிடத்தக்க ஒற்றுமையுள்ளது. நூல் முழுதும் பக்தி மனப்போக்கு நிரவ அமைந்துள்ளது. இக்காரணங்கள் பல ஆசிரியர் என்ற கருதுகோளுக்குச் சார்பான காரணங்களை விஞ்சுகின்றன. வெவ்வேறு பகுதிகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள், இவை நீண்ட கால இடைவெளிகளில் எழுதப்பட்டதன் விளைவாகும் என்றும், அதி 11-19-இல் காணப்படும் கலைப் பண்பு, இறையியல் ஆகியவற்றில் காணப்படும் மாற்றுக்குறைவு, இவற்றை ஆசிரியர் தம் முதிய பருவத்தில் எழுதியதன் விளைவாகும் என்றும் விளக்கப்படுகின்றன. முதற்பகுதியை எழுதிய ஆசிரியரே அதி 11-19-ஐ ஒரு பாஸ்கு விழா ''அக்கதா மிட்ராஷ்'' ஆகத் தனியாகப்படைத்து ஞானம் பற்றிய தமது சிந்தனைத் தொகுப்போடு பிற்காலத்தில் சேர்த்திருக்கலாம் என்பர் சிலர். இருபகுதிகளுக்குமிடையில் அதி 10 ஒரு நிலைமாறுபாடு செய்கின்ற இடைச் செருகலாக அமைந்துள்ளது. மேலும், ஆசிரியர் ஒரு தலைப்பிலிருந்து மற்றொன்றுக்கு அறிவு சார்ந்த முறையில் இலகுவாகச் செல்லுகிறார். ''முன் நிகழ்ச்சியின் இடைப்பதிவு'' என்ற யுக்தியைப் பயன்படுத்தி எல்லாப் பகுதிகளையும் இணைக்கிறார். இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு நூல் முழுவதையும் ஒரே ஆசிரியர் எழுதினார் என்று நாம் ஏற்றுக் கொள்வோம்.

10. நூலின் திட்டம்: இந்நூலை இரண்டு (அதி 1-10; 11-19; அல்லது அதி 1-5; 6-19). மூன்று அல்லது நான்கு பகுதிகளாகப் பிரித்து, அதற்கேற்பப் பலவகைத் திட்டங்கள் கொடுக்கப் பலரும் முயன்றுள்ளனர். ஆனால் ஆசிரியரே தமது நூலுக்குத் திட்டம் அளிக்கப் பல யுக்திகளைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. இவை இப்போது ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் சிறப்பான ஒன்று ''உள்ளடக்குதல்'' ஆகும். அதாவது ஒரு பத்தியின் தொடக்கச் சொற்களையே அதன் முடிவில் பயன்படுத்தி அப்பத்தி முடிந்துவிட்டது என்று காட்டுவதாகும். இப்பத்திகள் தொகுக்கப்பட வேண்டிய முறையையும் பலவாறு ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அதி 1-6; 7-8; 13-15 ஆகியவை பொது மைய வட்ட வடிவில் அமைந்துள்ளன. அதி 9 இணையமைப்புச் செவ்வொழுங்குடன் அமைந்துள்ளது. அதி 10;11-12; 16-19 ஆகியவை நேர்கோட்டு முறையில் அமைக்கப்பட்டு எடுத்துக்கொண்ட கருத்தை மீண்டும் மீண்டும் கூறுவதால் விரிவாகின்றன.

மேலும் ஆசிரியர் தம் நூலில் வரும் பாடல் வரிகளின் எண்ணிக்கையிலும் கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிகிறது. 11:17-12:22; 13:1-15:17 ஆகிய பிரிவு செய்திப்பகுதிகளைத் தவிர, பிற்பகுதிகளில் கணிதம், சிற்பம் கட்டடக்கலை, அழகுக் கலை ஆகியவற்றில் பயன்படுத்தும் நடுநிலைச் செவ்வி அல்லது தெய்வீக வீதம் முறையைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. இந்த முறையை வெர்ஜீல் போன்ற கவிஞர்கள் தங்கள் இலக்கியப் படைப்புகளில் கையாண்டுள்ளனர்.

''உள்ளடக்குதல்'' ஆசிரியர் தாம் கூறவந்ததை நிறைவுடன் செய்ய ஆர்வம் கொண்டிருந்தார் என்று காட்டுகிறது. பாடல் வரிகளின் எண்ணிக்கையில் காட்டும் அக்கறை அவரது வீர உணர்வைக் காட்டுகிறது. இரண்டிலும் அவரது கலைப்பண்பு தெரிகிறது. அதி 10;11:17-12:22; 13:1-15:17 ஆகிய பகுதிகளைச் சேர்த்தபின் நூலைச் சம எண்ணிக்கை (பாடல் வரிகள் 251) கொண்ட இருபெரும்

பகுதியாகப் பிரிக்கலாம் (அதி 1-10; 11-19). இவற்றைக் கருத்தில் கொண்டு பின் வரு முறையில் நூலின் பொருளடக்கத்தைப் பிரிக்கலாம்.

11. பொருளடக்கம்:

I ஞானத்தைப் போற்றுதல் (1:1-10:21).

(அ) ஞானம் அளிக்கும் கொடை அழியாமையாகும் (1:2-6:23).

(ஆ) ஞானத்தின் பிறப்பிடம், இயல்பு, விளைவுகள், சாலமோன் அதைத் தேடுதல் (6:24-10:21).

II. யாத்திரையில் இறைவன் தம் மக்களுக்குக் காட்டிய பிரமாணிக்கம் (11:1-19:22).

(அ) முன்னுரை (11:1-5).

(ஆ) இடைச் செருகல்கள் (11:16-15:19).

(இ) யாத்திரை நிகழ்ச்சிகளில் எகிப்தியர், இஸ்ராயேலரின் வேறுபட்ட நிலைகள் (16:1-19:22).

12. சிறப்பு இறையியல் கருத்துக்கள்:

ஆசிரியர் இறையியலையோ மெய்யியலையோ தொழிலாகக் கொண்ட வல்லுநர் அல்லர். திருவுரையாளர், சீராக் போன்ற போதகர். ஆகவே இந்நூலில் திட்டம் செய்யப்பட்ட இறையியல் கட்டுரையைக் காண முடியாது. அவரது கருத்துக்கள் நூல் முழுவதும், சிதறி, பரவிக் கிடக்கும். அவற்றில் சில தலைப்புகளை மட்டும் இங்குத் தொகுத்துத் தருகிறோம்.

12.அ) இறைவன்:

விசுவாசமுள்ள யூதனுக்கு இறைவன் இருக்கிறார் என்பதற்கு நிரூபணம் வேண்டியதில்லை. ஆனால் கிரேக்கப் பண்பாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தகைய நிரூபணம் தேவைப்பட்டது. படைப்பின் அழகு, ஆற்றலிலிருந்து படைத்தவரைக் கண்டுணரலாம். எந்தச் சாதாரண சிந்தனையாளனும் இதைக் கண்டுணரலாம். அப்படிச் செய்யத் தவறினால் அது மடமையாகும். ஏனெனில் புலப்படுபவைகளிலிருந்து புலப்படாத இறைவனை, படைப்புகளிலிருந்து படைத்தவரை அறிதல் கட்டாயத் தன்மையுடைய நிரூபணமாகும். இதில் தவறுபவர்களுக்கு எந்தச் சாக்குப் போக்கும் இல்லை.

உலகைப் படைத்துக் காப்பாற்றும் இறைவன் இவ்வுலகத்திற்கு முழுவதும் அப்பாற்பட்டவர் (11:22). அவர் உருவமற்ற பொருளைக் கொண்டு உலகைப் படைத்தார் (11:18). அவர் எதுவாலும் கட்டுப்படுத்தப்பட்டவர் அல்லர் (11:21; 16:24). அவர் எங்கும் இருக்கிறார், எல்லாவற்றையும் அறிகிறார் (1:6-10). அனைத்தையும் அளவோடும், கணக்கோடும் நிறைவோடும் ஏற்பாடு செய்கிறார் (11:21). அவர் யாவற்றின் மேலும் மேலாண்மையுடையவர். அவரது தீர்ப்பை எதிர்ப்பவன் எவனுமில்லை (12:12-18). அவரது செயல்கள் நீதியானவை. அவற்றில் குற்றம் காண முடியாது. வாழ்வு, சாவு (16:13), ஆற்றல்கள் அனைத்தும் அவரைச் சார்ந்துள்ளன (6:1-11). பெரியவை, சிறியவை, வலுவற்றவை ஆற்றலுள்ளவை யாவும் அவரது பராமரிப்பின் கீழ்ச் செயலாற்றுகின்றன. அவரது பராமரிப்பு படைப்பு முழுவதையும் திட்டமிட்டுச் செயல்படுத்துகிறது (6:7-8; 11:26-27; 12:12-13; 14:13).

இப்பண்புகளைவிட, சில பண்புகளை ஆசிரியர் வலியுறுத்துகிறார். அவை இறைவனது அன்பும் இரக்கமும் ஆகும். இறைவன் அளவில்லா ஞானமுடையவர் (1:20); எல்லாவற்றையும் நீதியோடு நடத்துகிறார்; கட்டாயப்படுத்தும்போதுதான் தண்டிக்கிறார். அப்போதும் குற்றத்திற்கு ஏற்றவாறு தண்டனை அளிக்கிறார் (12:12-18). பாவிகள் மனந்திரும்புதலுக்காகப் பொறுமையோடு காத்திருக்கிறார் (9:1; 11:21; 12:2.22). அவர் தண்டனை அளிப்பது, கற்பிப்பதையும் பயிற்சி அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டது. அது இறைவனைப்பற்றிய அறிவுக்கு இட்டுச் செல்கிறது. ஒருவன் விரும்பி இறைவனுக்கு எதிரான நிலையை எடுக்கும் போதுதான், அவனை அவனது போக்கில் விட்டுவிடுகிறார், அவன் நித்திய அழிவைப் பெறுகிறான். இறைவன் மேலான விதத்தில் நல்லவர். மனிதர்களின் அன்பர். அவர்களது நன்மையை விரும்புகிறார். யூதர்களை மட்டுமல்ல தாம் படைத்த யாவற்றையும் அன்பு செய்கிறார்; இரக்கம் காட்டுகிறார் (11:23-25; 12:16).

12.ஆ) ஞானம்:-

ஆசிரியர் இறைவனது ஞானத்தை மிகவும் வலியுறுத்துகிறார். ஞானம் பற்றிய விவரிப்பு, பழமொழி, யோபு, பாரூக், சீராக் ஆகிய நூல்களில் காணப்படுபவையே; ஆனால் இந்நூலில் அவ்விவரிப்பு தெளிவாய் உள்ளது. கருத்து வளர்ச்சி கொண்டுள்ளது.

ஞானம் இறைவனுக்கும் மனிதனுக்கும் சொந்தமானது. இறைவன் தமது ஞானத்தின் வழியாக, உலகைத் திட்டமிட்டுப்படைத்துப் பாதுகாக்கிறார். படைப்பில் இறைவனுடைய பண்பாகும் ஞானம். அது இறைவனது அரியணையருகில் வீற்றிருக்கிறது (9:4). அது ''எல்லாம் வல்லவரது மகிமையொளியின் தூய சுடர்'', ''முடிவில்லா ஒளியின் எதிரொளி'', இறை ''வேலைத்திறனின் கறைபடியாக் கண்ணாடி'', இறைவனுடைய ''நன்மைத்தனத்தின் சாயல்'' (7:25-26). ஆகவே ஞானம் இறைப்பண்புகளைக் கொண்டிருக்கிறது; இறைவனிடமிருந்து தோன்றுகிறது (7:25); இறைவனைப் போல் அறிவுடையது; எல்லாம் வல்லது; மாறாமல் நிலைத்திருப்பது; ஆட்தன்மை கொண்டது (7:22-27); இறைவன் செய்யக் கூடியதையெல்லாம் செய்ய ஆற்றல் பெற்றது. படைப்பாற்றல் கொண்டது. அது இறைவனோடு இருப்பதால், அது அனைத்தையும் அறிந்து கொள்ள, கண்டுபிடிக்க (9:11) ஊடுருவிச் செல்ல (7:6) இனிதாய் ஒழுங்குப்படுத்த (8:1) செயல்படுத்த (7:27) வல்லது. இறைவன் உலகைப் படைத்தபோது அவர் அருகில் இருந்தது (9:9-12). அது உலகைப் பாதுகாக்கிறது. அதில் உள்ளவற்றையெல்லாம் வழி நடத்துகிறது (1:7; 7:27; 8:1). நீதிமான்களின் ஆன்மாவைப் புனிதப்படுத்துவது அதன் கடமையாகும் (7:27).

ஞானத்தின் செயல் மனிதனில் நிறைவு பெறுகிறது. ஞானம் மனிதர்களுக்குக் கற்பிக்கிறது (8:7; 9:10); அவர்களை வழி நடத்துகிறது (9:11:10:10); பாதுகாக்கிறது (9:11); உதவுகிறது (9:10). அவர்களோடு வாழ்க்கைத் துணைபோல் வாழ்கிறது (7:28;8:2.9). தனது இறைத்தன்மைக்கேற்ப, இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே பாலம் அமைக்கிறது. ஞானம் பெற எல்லா மனிதரும் தகுதியுடையவர் அல்லர். மனிதன் பல தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். அவன் பாவமில்லாது இருக்க வேண்டும் (1:4-5; 6:15-16; 7:27). அதை அடைய அவனுக்கு உரிமையில்லை. அதற்காக மன்றாடலாம் (7:1-14; 9:1-18). ஞானம் மனிதர்களின் அன்பனாகும். தன்னை விரும்புவோரிடையே தன்னைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறது (6:12-16). மனிதன் ஞானத்தை விரும்பினால், இது அவனை ''முடிவில்லா அரசுக்குக் கூட்டிச் செல்லுகிறது' (6:20). ஞானத்தோடு எல்லா நன்மைகளும் வந்து சேருகின்றன (7:15-22; 8:8). இறைவனுடைய ஆழ்ந்த இரகசியங்களை அறிமுகப்படுத்துகிறது. மனிதனை இறைவனின் அன்பனாகவும் (7:14), மகனாகவும் (2:18; 5:5; 18;13) ஆக்குகிறது.

ஞானத்தின் செயல் முதன்மையாக இஸ்ராயேலை நோக்கியதாகும் (15:1-6). உலக நாடுகளிடையே இஸ்ராயேல் ஒரு குறிப்பிட்ட தூதைக் கொண்டிருந்தது. இஸ்ராயேலின் வழியாகத்தான் இறைவனின் ''அழியா ஒளி'' இருளில் ஒளிர வேண்டும் (18:4). எல்லாக் காலங்களிலும் இடுக்கண்களிலும் ஞானம்தான் இஸ்ராயேலுக்கு வழிகாட்டியது. ஐந்நூலில் யாவேயின் மீட்புச் செயல்கள் பற்றிக் கூறப்பட்டதெல்லாம் இந்நூலில் ஞானத்திற்குச் சாற்றிக் கூறப்படுகிறது (அதி 10-19). மீட்பு வரலாற்றின் தொடக்கத்திலேயே ஞானம் செயலாற்றிக் கொண்டிருந்தது. ஞானத்தின் வழியாகத்தான் யாவே இஸ்ராயேலுக்கு விடுதலை அளித்தார், இஸ்ராயேலை மீட்டார்.

நீதிபதிகள் நூலின் அசாதாரண நிகழ்ச்சிகள் ''யாவேயின் ஆவிக்குச்'' சாற்றிக் கூறப்படுகின்றன. ஞானநூலும் அதே சொல்லைப் பயன்படுத்துகிறது. ''பரிசுத்த ஆவி'' மனிதனில் வாழ்கிறது, செயலாற்றுகிறது (1:4-5; 12:1). ஆவி உன்னதத்திலிருந்து கொடுக்கப்படுகிறது (9:17); எல்லாவற்றையும் ஊடுருவுகிறது; அனைத்தையும் சேர்த்திணைக்கிறது

(1:7). இதே கூற்றுக்கள் ஞானத்தைப் பற்றியும் கூறப்படுகின்றன (9:18). ஆசிரியர் ஆவி, ஞானம் போன்ற இரு கருத்துக்களையும் வேறுபாடின்றிப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. ஞானமும் ஆவியும் தீமையை வெறுக்கின்றன (1:4-5). இரண்டும் எல்லாவற்றையும் ஊடுருவி, சேர்த்திணைக்கின்றன (1:7; 7:2-24; 8:1). ஒரு காலத்தில் ஆவி இறைவாக்கினர்களைத் தூண்டியதுபோல், இப்போது ஞானம் செய்கிறது (7:27). இத்தகைய இணைப்பு ஏற்கனவே எசாயா நூலில் காணப்படுகிறது.

ஞானத்தைப்பற்றிய மேற்கூறப்பட்ட பண்புகள் எல்லாம் கடவுளுக்கே உரியன; படைப்புகளோடு பகிர்ந்து கொள்ளக் கூடாதவை. ஞானம் என்பது என்ன? அது இறைவனுடைய ஒரு பண்பு ஆட்தன்மையாக்கப்படுவதா? வெளிப்பாட்டின் இக்கட்டத்தில், இது ஒன்றுதான் பதில். பழமொழி, சீராக் நூல்களைவிட இந்நூல் மிகத் துணிவோடு ஞானத்திற்கு ஆட்தன்மை அளித்து உருவகப்படுத்துகிறது. ஞானம் தனி ஆள் அல்ல. 6:24-இல் வருவதுபோல், ஆசிரியர் ஞானத்தை மகிமைப்படுத்தவும், அதன் இறைத் தோற்றத்தை விசுவாசிகளுக்கு எடுத்துக் கூறவுமே எழுதுகிறார். அவர் இறைவனின் உள்ளார்ந்த வாழ்வைப் பற்றிப் பேசவில்லை. மற்ற ஞான நூல்கள் போல் இந்நூலும் ஞானத்தை உருவகமாகவே ஆட்தன்மைப்படுத்துகிறது. இது ஓர் இலக்கிய யுக்தியே தவிர, ஞானம் தன்மையால் இறைவனோடு ஒன்றானதன்று.

ஞானத்திற்கு ஆட்தன்மை அளிப்பது (7:22-8:1) அதை அதிக ஆன்மீக வடிவில் எடுத்துக்காட்டுவதற்கே. ஞானம் இறைவனைச் சார்ந்த ஒன்றானாலும், அவரிடமிருந்து புறப்பட்டு, ஆன்மாக்களுள் புகுந்து செயலாற்றுகிறது. அது எல்லாப் புண்ணியங்களுக்கும் அடிப்படையாகவும், பாதுகாப்பாகவும் அமைகிறது. மனிதர்களை இறைவனது அன்பர்களாக்குகிறது. யாவற்றிற்கும் மேலாக, சாகாமைக்கும், அழியாமைக்கும் இட்டுச் செல்லுகிறது. மனிதன் அதைத் தேடி அடைய முடியாது; அது இறைவனிடமிருந்து மன்றாடிப் பெற வேண்டிய கொடையாகும்.

இந்த விளக்கங்களில் எல்லாம், ஆசிரியர் தாம் அறிந்த கிரேக்கப் பண்பாடு பற்றிய அறிவையும், தத்துவக் கருத்துக்களையும் பயன்படுத்துகிறார். இதன் நோக்கம் கிரேக்கக் கவர்ச்சியால் யூதர்களிடையே நிலவிய பிரச்சினையைச் சுட்டிக்காட்டி, பிறர் கூறுவது போல் யூதர்கள் பண்பாடற்ற காட்டுமிராண்டிகள் அல்லர்; அவர்கள் உண்மையான ஞானத்தைக் கொண்டிருக்கின்றனர்; ஆகவே, பிறமதத்தினரது ஞானத்தைக் கண்டு பொறாமைப்பட வேண்டியதில்லை, என்று ஆசிரியரது காலத்து யூதர்களுக்குக் காட்டுவதேயாகும். அவர் கிரேக்கப் பண்பாட்டை நிராகரிக்கவில்லை. மாறாக ஓரளவு ஒன்றிணைப்புச் செய்கிறார். மனிதனை மையமாகக் கொண்ட மனிதப்பற்றுக் கோட்பாட்டுக்கும், இறைவனை மையமாகக் கொண்ட மனிதப்பற்றுக் கோட்பாட்டுக்கும் இடையில் ஒன்றிணைப்புச் செய்ய முயலுகிறார். இதைக் கிரேக்க சமயச் சார்பற்ற அறிவை உள்ளடக்கும் விதத்தில், ஞானத்தின் தூய, ஒழுக்கப் பண்புகளை விவரிப்பதால் செய்கிறார். கிரேக்கர்களின் ''உலக ஆன்மா''வின் குணங்களையெல்லாம் ஞானம் கொண்டிருக்கிறது என்று ஆசிரியர் காட்டுகிறார் (7:22-8-9). ஞானம்தான் பிளேட்டோவின் நான்கு தலையாய புண்ணியங்களைப் படிப்பிக்கிறது. கிரேக்கச் சிந்தனை - மூல முதற் பூதங்களை உலகின் அடிப்படைப் பொருள்களாகக் கருதுவதற்கு மாறாக, இந்தப் பூதங்கள் இறைஞானத்தின் கருவிகளாகவும் ஊழியர்களாகவும் இருந்து, இறைமீட்பு, தீர்ப்பு ஆகிய குறிக்கோள்களுக்கு ஏற்றவாறு செயலாற்றுகின்றன என்று ஆசிரியர் காட்டுகிறார் (அதி 16-19). எபிரேய சமய அறிவையும், கிரேக்க மெய்யியல் அறிவையும் ஒன்றிணைக்கும் முயற்சியை எபிரேய சமயத்திற்கு ஏற்றவாறு செய்கிறார்.

12.இ) நன்மை தீமை - விளைப்பயன் கோட்பாடு - அழியாமை:

தரையிலிருந்து எடுக்கப்பட்ட மண்ணும், உன்னதத்திலிருந்து வந்த ஆவியும் ஒன்று சேர்ந்து உருவாக்கப்பட்ட மனிதனின் இறுதிக் கதி என்ன? அவனுக்குச் சாவுக்கு அப்பால் வாழ்வு உண்டா? நீதிமானின் துன்பத்திற்குப் பொருள் என்ன? பலரும் பலவாறு விடைகொடுத்தனர். இவ்வுலகத்தையே மையமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் மறுவுலக வாழ்வை மறுத்தனர். இறப்போடுஎல்லாம் முடிந்து விட்டது. உடல் தூசியும் சாம்பலுமாக மாறுகிறது; உயிரோ அற்பக் காற்றுப் போல்சிதறிப் போகிறது (2:3). ஆகவே இவ்வுலகில் எல்லாவற்றையும்நன்றாய் அனுபவி (2:9).

யூத பாரம்பரியக் கருத்துப்படி, கல்லறைக்கு அப்பால் நல்லோர் தீயோர் அனைவருடைய நிலையும் ஒன்றே. அவர்கள் இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, சேயோலில் ஒருவகை நிழல் வாழ்க்கை வாழுகின்றனர். ஆகவே மனிதனது செயல்களுக்கேற்ற சன்மானமோ தண்டனையோ இவ்வுலகிலேயே நடைபெற வேண்டும். நீதிமான்களுக்குச் சன்மானமாக நீண்ட வாழ்வும், பெரிய குடும்பமும், பெருஞ் செல்வமும், புகழும் இடைக்கும். தீயோர் பல வழிகளிலும் துன்புறுவர். ஆனால் அன்றாட வாழ்வில் இக்கருத்துக்கள் பொருந்தியதாகக் காணப்படவில்லை. இக்கோட்பாட்டின் வெறுமையை இஸ்ராயேலின் பல சிந்தனையாளர்கள் அனுபவத்தால் உணர்ந்தனர். தீயோர் செழிப்புறும்போது நல்லோர் ஏன் துன்புறவேண்டும் என்ற பிரச்சினைக்கு நாட்டளவில் உப இசையாவும், தனிநபர் அளவில் யோபுவும் திருவுரையாளரும் விடை காண முயன்றனர். அவர்கள் வெற்றி அடையவில்லை.

மேற்கூறப்பட்ட கேள்விகளுக்கு விடை காணமுடியாது ஏங்கி, ஞானநூல் ஆசிரியர் அவதிப்படவில்லை. தமது செய்தியின் அழகாலும், மகிமையாலும் உந்தப்பட்டு மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் அதை எடுத்துக் கூறுகிறார். அவர் சொல்லும் முறையில் நற்செய்திப் பண்பு மிளிர்கிறது. மனிதன் சாவுக்காக அன்று, வாழவே உண்டாக்கப்பட்டான். மனிதனை அழியாமைக்கென்றே இறைவன் படைத்தார் (1:13; 2:23). அலகையின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது (2:24). ஆனால் மன்னிப்பும், அதன் விளைவாக வாழ்வும், அளிக்க இறைவன் எப்போதும் தயாராக இருக்கிறார் (12:2). புதிய வாழ்வு இவ்வுலகிலேயே தொடங்குகிறது. ஞானத்தைப் பின்பற்றுகிற ஒவ்வொருவனும் இறைவனுடைய அன்பனாகிறான். இறைவனது பிள்ளையாகிறான் (2:16-18; 5:5;9:4;7:1-14.27). ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வு சாவுக்கு அப்பாலும் சென்று சாகாமைக்கும் அழியாமைக்கும் இட்டுச் செல்லுகிறது (3:4; 4:1; 8:17; 15:3; 2:23; 6:18-19). இந்த அறிவை, மனிதனது ஆன்மீகத் தன்மைபற்றிய தத்துவச் சிந்தனையால் மனிதன் அடைய முடியாது. சாகாமையும், அழியாமையும் இறை அருளின் சுதந்தரக் கொடைகளாகும். நல்லோர் கல்லறைக்கு அப்பாலும் இறைவனோடு வாழ்கின்றனர் என்ற கருத்தைச் சில சங்கீதங்கள் ஏற்கெனவே கூறியுள்ளன (சங் 16:9-11; 49:16; 73:23-24). இக்கருத்துக்களையெல்லாம் ஒன்றிணைத்து, ஞானநூல், மறுஉலகில் இறைவனோடு வாழும் வாழ்வே நல்லோரின் உண்மையான சன்மானம் என்று உறுதியாகப் போதிக்கிறது.

இப்போதக ஒளியில், இவ்வுலக நலன்களையும் துன்பங்களையும் ஆசிரியர் மதிப்பீடு செய்கிறார். இவ்வுலகில் நடப்பவை மறு உலக வாழ்வுக்குத் தயாரிப்பாக அமைகின்றன. நீதிமான்களின் துன்பங்கள், அவர்களைத் தூய்மைப்படுத்துகின்றன. பெரும் சன்மானத்தைப் பெற்றுத் தருகின்றன. அவர்கள் இளம் வயதில் இறந்தாலோ, கொடிய முடிவை அடைந்தாலோ, மரணம் அவர்களுக்கு இரண்டாம்தர முக்கியத்துவம் உடையதே. உண்மையானதற்குச் செல்லும் - ஒரு கடந்துபோகும் செயலாகும். இறை ஞானம் அவர்களைப் பேறுடைய அழியாமைக்கு இட்டுச் செல்கிறது (6:17-20; 8:17). இறந்த பின்னும், அவர்களின் ஆன்மாக்கள் இறைவன்

முன் என்றென்றும் மகிழ்ச்சியாக வாழ்கின் றன (3:1-9; 5:16). ஆசிரியரது இந்தப் புதிய போதகம் புதிய நம்பிக்கை அளிப்பதாகும். இப்போதகம் தானியேல் நூலில் திடீரென்று தோன்றுகிறது (தானி 12:2); சீராக் நூலில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட பகுதிகளில் ஓரளவு காணப்படுகிறது. ஆனால் இந்நூலில் தெளிவாகவும், உறுதியாகவும் போதிக்கப் படுகிறது. உடல் உயிர்ப்பு அதி 3:5:16:13; 19:6-21 ஆகிய பகுதியில் உள்ளடங்கியுள் ளது, என்று ஆய்வாளர்கள் சிலர் கருதுவர். ஆனால் உடல் உயிர்ப்புபற்றிய போதகம் இந்நூலில் இல்லையென்றே கூறவேண்டும். இப்போதகத்திற்குப் பழைய ஏற்பாடு இறை யியல் இன்னும் வளர்ச்சியடையவில்லை

நல்லோரின் அழியாமைக்கு மாறாகத் தீயோரின் வாழ்வு, மனிதர்முன் எவ்வளவு மகிமை மிக்கதாயினும், உண்மையில் சாவே (1:16); பாதாளத்தின் இருளில் முடிகிறது. ஆசிரியர் மனிதனின் ''முதல் வீழ்ச்சியை'' அறிந்திருப்பதாகத் தெரிகிறது (2:2; 10:1-2). சாவு பாவிகளுக்குரியதாகும் (1:16). அது பொய்யின் (1:11), சிலை வழிபாட்டின் (14:12), பொதுவாக, நெறிதவறிய வாழ்க்கை யின் விளைவாகும் (1:12). பாவிகள், இறை வனிடமிருந்து விரும்பித் தங்களையே பிரித் துக் கொண்டு, சாவோடு உடன்படிக்கை செய்து கொண்டனர். அவர்களது சாவுக்குப் பின் வரும் வாழ்வு பயனற்றதாகும். அவர் களது தண்டனை மறுஉலக வாழ்வு வரை காத்திருப்பதில்லை. இவ்வுலகிலேயே தொடங்குகிறது.

மனிதர்கள் - பக்தியுள்ளோர், இறைப்பற் றற்றோர் என இரு குழுவாகப் பிரிக்கப்படு கின்றனர். இறைவனின் வருகைக் காலம் (3:7) பரிசோதிக்கும் நாளாகும் (4:6); தீர்வை யின்நாளாகும் (3:18). தீர்வை நாள் என்ற இறைவாக்குக் கருத்தைப் பற்றிப் பேசுகிறார் ஆசிரியர். தீர்வை நாளில் தனிப்பட்டோரும் மனுகுலம் முழுவதும் தீர்ப்பிடப்படும். சாவுக்குப்பின் தனிப்பட்டோர் தீர்ப்புப்பெறு வர் (3:1-4:6. 18.19). காலமுடிவில் பொதுத் தீர்ப்பு நிகழும் (4:20-5:23). இரண்டையும் தெளிவாக வேறுபடுத்த முடியாது. ஆனால் அவை உள்ளன.

இந்நூலில் மெசியா கருத்து இல்லை. ஆனால் இறையரசு என்ற கருத்து உள்ளது (10:10). இறைவன் ஓர் அரசராவார் என்று வெளிப்படையாகக் கூறப்படவில்லை; ''விண்ணகத்திலுள்ள அரியணையிலிருந்து'' (18:15; 9:10) ஆட்சி செய்கிறார். அங்கிருந்து தான் மனிதர்களையும், நாடுகளையும் நிர்ண யிக்கிறார்; சட்டத்தை நிறைவேற்றுவதில் இறையரசு செயல்படுகிறது. இந்தச் சட்டம் இறை ஞானத்தின் ஒளியாகும்; கண்ணாடி யாகும். தமது திட்டத்திற்கேற்ப நீதிமான் களின் வாழ்க்கையை நடப்பிக்கிறார் (2:22). சாவுக்குப்பின், அவர்கள் இறைவனது ஆட்சி யில் பங்கு பெறுகின்றனர். ''ஆண்டவர் அவர்கள் மேல் என்றென்றும் ஆட்சி செலுத் துவார்'' (8:8). ''மகிமையான மணிமுடியை யும், அழகான மகுடத்தையும்.... பெற்றுக் கொள்வர்'' (5:17); இறைவனோடு என்றென் றும் அரசாள்வார்கள் (6:22). இந்த அரசுக்கு, இட, இன, வரையறைகள் இல்லை. எங் கெல்லாம் மனிதன் இறைவனுக்குப் பணி கிறானோ, அங்கெல்லாம் இந்த அரசு நிலவு கிறது. இறைவனுக்குப்பணி செய்வது அரசாள் வதாகும்.

12.ஈ) யாவருக்கும் இறைவனது அன்பிரக்கம்:

இக்கருத்தைப் பல இடங்களில் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். இதன் நோக்கம், பிற மத வாசகர்களுக்கு மதிப்பளிப்பதும், அவர் களை யூத சமயம்பால் ஈர்ப்பதும் ஆகு மெனத் தெரிகிறது. இறைவன் அனைவருக்கும் அன்பு காட்டுகிறார். படைத்த எதனையும் அவர் அருவருத்துத் தள்ளுவதில்லை. மனி தர்கள் மனந்திரும்பிவர வாய்ப்பளிக்க, அவர்கள் பாவங்களைப்பார்த்தும் பாராதது மாய் இருக்கிறார். தண்டிக்கும்போதும், இரக்க மிக்கவராக இருக்கிறார். அவர்களை மெதுவாகத் தண்டிக்கிறார். அவர்கள் தீமையி னின்று விடுபடவும் தம்மில் அவர்கள் நம் பிக்கை வைக்கவுமே இவ்வாறு செய்கிறார் (11:24-12:2; 12:13-22). இறைவனது இரக்கத் தையும், பொறுமையையும் ஆசிரியர் மீண் டும் மீண்டும் எடுத்துக் கூறுகிறார்.

இயற்கை வழிபாடு, சிலைவழிபாடு ஆகிய மடமை பற்றிய உரையில் (13:1-15-17) அவற்றைக் கண்டனம் செய்வதில் ஆசிரியர் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. ஆயினும் ''அம்மனிதர்கள் மேல் அவ்வளவு குற்றமில்லையெனலாம். ஏனெனில் இறைவனைத் தேடிக் கண்டுபிடிக்க முயலும் போது ஒருவேளை அவர்கள் தவறியிருக்கலாம்'' (13:6) என்று அவர்களது குற்றத்தைச் சிறிது குறைத்துக் கூறுவதில் கவனமாய் இருக்கிறார் ஆசிரியர்.

மேலும், உலகின் சிற்பியாக இறைவனைத் தேடிக் கண்டுபிடிக்கப் பிற மதத்தினருக்கு அழைப்பு விடுக்கிறார் ஆசிரியர். இறைவன் நன்மை மிக்கவர், இரக்கமுள்ளவர் என்னும் உறுதியையும் அளிக்கிறார் (13:1-9). உடல் உயிர்ப்பு பற்றி ஆசிரியர் மௌனம் காட்டுவது கிரேக்கர்களின் உணர்வுக்குக் காட்டும் மரியாதையாகும் (அ.ப. 17:32) என்று ஆய்வாளர்கள் சிலர் கருதுவர்.

இவையெல்லாம் ஆசிரியர் எல்லாப் பிற மதத்தினரையும் மனதில் கொள்ளாவிட்டாலும், உண்மையான சமயத்தின்பால் ஒத்துணர்வு கொண்டவர்களையாவது, குறிப்பாக யூதமதத்தின்பால் பற்றுடைய பிற மதத்தினரையாவது, மனதில் கொண்டிருந்தார் என்பதற்கு அடையாளங்களாகும்.

12.உ) பிற கருத்துக்கள்:

மேற்கூறப்பட்டவற்றைத் தவிர, யூதப் பாரம்பரியத்தில் ஏற்கனவே வழக்கில் இருந்த பல கருத்துக்களையும் எடுத்துக் கூறுகிறது இந்நூல். இவற்றின் விளக்கத்தில், இறைவனதுபராமரிப்பு (6:7; 14:3; 17:2), மனச்சான்று (17:10), தலையாய புண்ணியங்கள் (8:7) போன்ற கிரேக்கச் சொற்களையும், கருத்துக்களையும் விவிலியச் சொற்றொகுதியில் ஆசிரியர் புகுத்துகிறார். ஆட்தன்மையுடைய மெசியாவைப்பற்றிய நம்பிக்கை இந்நூலில் காணப்படவில்லை. இது, இறைவன் தமது ஆட்சியை நிறுவ உலக முடிவில் நேரடியாகத் தலையிடுவார் என்று எதிர்பார்த்த யூதப்பிரிவை ஆசிரியர் சேர்ந்தவராக இருக்கக்கூடும் என்று காட்டுகிறது. ஆனால் ''இறையரசு'' என்ற முக்கிய புதிய ஏற்பாட்டுச் சொல் பழைய ஏற்பாட்டிலேயே இந்நூலில்தான் ஒரே ஒரு தரம் வருகிறது (10:10). மேலும் கிரேக்க மெய்யியல் சொற்களில் அருஞ்செயல்களுக்கு அளிக்கும் விளக்கம் (19:18-21), யாத்திரையை ஒரு புதிய படைப்பாக நோக்குதல் (19:6.13) படைப்பு வழியாக இறைவனை அறிதல் பற்றிய தர்க்கம் ஆகியவற்றில் ஆசிரியர் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளார். இவையெல்லாம் வாசகர்களைக் கவரக் கூடியன.

13. ஞான நூலும் விவிலியமும்:

பழைய ஏற்பாட்டின் மற்ற ஞான இலக்கியங்களிலிருந்து, பழைய ஏற்பாட்டு இறுதி நூலான இந்நூலுக்கு வரும்போது, வாசகர் பாலஸ்தீனத்திலிருந்து எகிப்துக்கும், யூதச் சூழ்நிலையிலிருந்து கிரேக்கச் சூழ்நிலைக்கும் தெளிவாக மாறினாலும், இன்னும் யூதச் செபக்கூடத்திலேயேதான் இருப்பதை உணர்வார். சிந்தனைகள் மிகவும் கருத்தியலாகவும், ஆய்வுப் பண்புடையவையாகவும் மெய்யியல் தன்மையுடையவையாகவும் உள்ளன. மொழி கலைச்சொல் மிக்கதாகவும் நயம் மிக்கதாகவும் உள்ளது. ஆனால் கோட்பாடு முழுவதும் யூதத்தன்மையுடையதும் விவிலியப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததுமாக உள்ளது.

ஞானநூல் பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்குமிடையே ஓர் இயற்கையான பாலமாக அமைந்துள்ளது. அப்போஸ்தலர்கள் காலமுதல் திருச்சபை இந்நூலைப் பயன்படுத்தியுள்ளது. புனித யோவானும், புனித பவுலும் இந்நூலை ஒரு மேற்கோள் நூலாகவும், இறைவனது புதிய வெளிப்பாட்டை எடுத்துக் கூற ஒரு மூல நூலாகவும் பயன்படுத்தத் தயங்கவில்லை. ஆதிக் கிறிஸ்தவர்களிடையே இந்நூல் பரவலாகப் பயன்பட்டதும், அதன் புகழும் யூதர்கள் தங்கள் திருமுறைப் பட்டியலில் இந்நூலை ஏற்றுக் கொள்ள மறுத்ததற்கு ஒரு காரணமாயிற்று.

புனித யோவான் தமது நற்செய்தியை எழுதும்போது, ஞானநூல் ஏற்கெனவே

தொடங்கி வைத்த தலைப்புக்களையே விரி வாக்குகிறார். அவற்றில் சில: வாழ்வின் வழியும், சாவின் வழியும்; ஒளிக்கும் இரு ளுக்கும் இடையே தொடர்ந்து நடக்கும் போராட்டம்; இருள் ஒரு காலத்திற்கு வெற்றி பெறுவது போல் தோன்றினாலும் இறுதி யில் ஒளியே வெற்றி பெறுவது உறுதி போன்றவையாகும். ஞான நூலிலிருந்து பல எடுத்துக்காட்டுக்களையும் கலைச் சொற் களையும் யோவான் பயன்படுத்துகிறார். இவற்றிற்கு ஆதாரமாக, யோவா 1:1.18-ஐ ஞானம் 8:3; 9:4-ஓடும்; யோவா 1:3.10-ஐ ஞானம் 7:21; 8:6; 9:1-9 ஓடும்; யோவா 5:20-ஐ ஞானம் 8:4;9:10. 11.17 ஓடும்; யோவா 14:23; 16:27-ஐ ஞானம் 7.28 ஓடும்; யோவா 3:16-17-ஐ ஞானம் 1:6;7:23; 11:24.26 ஓடும்; யோவா 17:3-ஐ ஞானம் 15:3-ஓடும் ஒப்பிட் டுப் பார்க்கலாம்.

புனித பவுலும் யோவானைப் போன்றே இந்நூலைப் பயன்படுத்தியுள்ளார். எபி 1:3-ஐ ஞானம் 7:26-ஓடும்; கொலோ 1:15-ஐ ஞானம் 7:26-ஓடும்; உரோ 1:18-20-ஐ ஞானம் 13:3-5 ஓடும்; உரோ 1:21-32-ஐ ஞானம் 14:22-31-ஓடும்; உரோ 2:4-ஐ ஞானம் 11:23.26; 12:2.10.19 ஓடும்; உரோ 9:20-ஐ ஞானம் 12:12-ஓடும்; உரோ 9:21-ஐ ஞானம் 15:7 ஓடும்; எபே 6:14-17-ஐ ஞானம் 5:17-20 ஓடும் ஒப்பிட்டுப் பார்க்க.

''உம்மை அறிதலே நிறைவான நீதி; உம் வல்லமையை அறிதலோ சாகாமைக்கு ஆணிவேர்'' (15:3) என்று இந்நூல் உரைக் கும்போது, வாசகர் இரண்டு ஏற்பாடுகளுக்கு மிடையேயுள்ள பாலத்தில் அடியெடுத்து வைத்துவிட்டதை உணர்வார். ''முடிவில்லா வாழ்வு என்பது - உண்மையான ஒரே இறை வனாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே'' (யோவா 17:3) என்று வாசிக்கும்போதே, அப்பாலத்தைக் கடந்து ஏற்கனவே அடுத்த பக்கத்திற்குச் சென்று விட்டதாக உணர்வார்.

14. இக்காலத்திற்கு:

ஞான நூல் ஆசிரியர், தமது கால யூதர் களுக்கிடையே நிலவிய சமய அவலநிலைக்கு ஒரு மறுப்பாகவும், பாரம்பரிய சமய போதகத்திற்கு ஒருகாப்புரையாகவும், யூதர் களுக்கும் பிறமத்தினருக்கும் யூத சமயத்தின் மேன்மையையும் உயர்வையும் எடுத்துக் காட்டவும், இந்நூலை எழுதினார். பாரம் பரிய இறையியல் போதகத்தைத் தம் காலத் திற்குத் தகுந்தவாறு புதுநிலைப்படுத்தவும், அலக்சாந்திரியாவில் நிலவிய புதிய நிலைக் கும் அப்போதகம் பொருத்தமுடையது என்று காட்டவும் விரும்பினார். அதற்கு அவர் காப்புரை அணுகு முறையைப் பயன் படுத்தினார். அம்முயற்சியில் விவிலிய விசு வாசத்தைச் சிறிதும் விட்டுக் கொடுக்க வில்லை. அதில் நம்பிக்கை இழக்கவும் இல்லை. அக்காலத்தில் நிலவிய பல சமய இணைப்புக் குளறுபடியையும், அவை, மாறிக் கொண்டிருக்கும் நிலையற்ற உல கிற்கு எந்த நம்பிக்கையையும் தரப்போவ தில்லை என்பதையும் நன்கு அறிந்திருந்தார். ஆனால் அவர் வாழ்க்கைச் சூழ்நிலைக்குப் புறம்பாக வாழவில்லை. ஆகவே கிரேக்கப் பண்பாட்டின் சாதனைகளை ஒதுக்க வில்லை. அவற்றில் கண்ட நன்மைகளை யெல்லாம், குறிப்பாகக் கிரேக்க மொழிச் செழிப்பையும் மெய்யியல் கலைச்சொற் களையும் வாதமுறைகளையும் பயன்படுத்தி, வெளிப்பாட்டின் உண்மைகளை மேன்மைப் படுத்தி, உயர்த்திக் காட்டினார். இதே முறை யைத் திருச்சபைத் தந்தையர்களின் நூல்களி லும் காண்கிறோம். ஏனெனில் இறுதி ஆய் வில், நிலைத்திருக்கும் எல்லா அறிவும் இறைவனுடைய கொடையாகும் (7:15-22); அறிவின் முடிவான நோக்கம் மனிதரை இறைவனது முடிவில்லா அரசுக்குக் கூட்டி வருவதாகும் (6:21).

இப்போது, திருச்சபையில், குறிப்பாக நம் நாட்டில், காணப்படும் ஓர் அவலநிலை யைக் குறிப்பிட வேண்டும். பிற சமய நூல்களோடு விவிலியத்தை ஒப்பிட்டு, விவி லியத்தைக் குறைத்தும் பிறசமய நூல்களை மேன்மையானதாகவும் மதிப்பீடு செய்யும் போக்கைக் காண்கிறோம். இது எந்த அள வுக்குப் போகிறதென்றால், திருப்பலியில் விவிலிய வாசகங்களை நீக்கிவிட்டு, அவற்

றிற்குப் பதிலாகப் பிறசமய நூல்களை வாசிக்கும் வழக்கத்தைப் பல இடங்களில், குறிப்பாகச் சில குருத்துவப்பயிற்சி நிலை யங்களில் காண்கிறோம். பல மீட்பர்களில் கிறிஸ்துவும் ஒருவராகக் கருதப்படுகிறார். கிறிஸ்துவின் வழியாக வரும் மீட்பின் தனித் தன்மையும், தன்னேரில்லாத் தன்மையும், எழுத்திலும் செயலிலும் மறுக்கப்படுவதைக் காண்கிறோம். நடைமுறையில் ''எல்லா மத மும் சம்மதம்'' என்ற கருத்து கிறிஸ்தவர்க ளிடையே பரவிக்கொண்டிருக்கிறது. இதை யொத்த அவலநிலையைத்தான் ஞானநூல் ஆசிரியரும் தமது காலத்து யூதர்களிடையே கண்டார். அதற்கு எதிராக இந்தக் காப்புரை நூலை எழுதினார். அதேபோன்று, இந்தியப் பண்பாட்டு இலக்கியக் கருவூலங்களி லிருந்து பழையதும் புதியதுமான நன்மையான வற்றையெல்லாம் எடுத்துப் பயன்படுத்தி, நமது மறை உண்மைகளைச் சிறிதும் விட் டுக் கொடாமல், எடுத்துக்கூறி, அவற்றின் தனித்தன்மையையும், மேன்மையையும் உயர்வையும் தாழ்ச்சியுடன் எடுத்துக்காட்டி, அவற்றை நம்மவர்களுக்கும் பிறருக்கும் வாழ்க்கைக்குப் பொருத்திக்கூறி, இறை யியல் வல்லுநர்கள் தங்கள் பொறுப்பை உண்மையான முறையில் செய்தால் எவ் வளவோ நலமாயிருக்கும்! அப்போது இவர் கள் தங்கள் அழைப்பிற்கு உண்மையானவர் களாகவும், பொறுப்புடையவர்களாகவும், பற் றுறுதி உடையவர்களாகவும் இருப்பர். இவ் வாறு செய்ய அனைவரும் முன்வருவார் களா?

சாலமோனின் பணியாளர்கள், அதிகாரிகள்

ஒவ்வொரு அரசனுக்கும் பணியாளர் இருந்தனர். சாலமோனின் தலைவர்களும் அதிகாரிகளும்தான் பணியாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் என்பது 1 அர 4:1-19-இல் கொடுக்கப்படும் பட்டியலி லிருந்து தெளிவாகிறது. 3:15-இல் குறிப்பிடப் படும் அலுவலர் அவரது அதிகாரிகளே என்று எடுத்துக் கொள்ளலாம். கிராமும் (ஈராம்) சாலமோனும் ஊழியர்களைக் கொண்டிருந்தனர். 4:6 அடிமைகள் இருந்த தைக் குறிப்பிடுகிறது. சாலமோன் காலத்தில் கட்டாய வேலைத்திட்டம் இருந்தது. அந்த அமைப்பின் நோக்கம் 9:15-19-இல் கொடுக் கப்படுகிறது. கட்டாய வேலைக்கு ஆட்கள் இஸ்ராயேலரல்லாத பாலஸ்தீனத்தில் தங்கி யிருந்த பிறமக்களிடமிருந்து பெறப்பட்ட னர். ஆனால் 9:22-5:27-ஐ மறுத்துக் கூறுவ தாக உள்ளது. 5:27-இல் வரும் இஸ்ராயேலர் இஸ்ராயேலரையும் மற்றவர்களையும் உள் ளடக்கலாம். 9:21.27; 2 நாள் 8:18; 9:10-ஆகிய பகுதிகள் கட்டாய வேலையாட்களுள் இஸ் ராயேலரும் அடிமைகளும் இருந்தனர் என்று சுட்டுகின்றன.

நாடு கடத்தலுக்குப்பின், சாலமோனின் ஊழியரின் மக்கள் என்றழைக்கப்பட்ட ஒரு குழுவினர் யூதாவுக்குத் திரும்பினர் (எஸ் 2:55-58; நெக 7:56-60). இவர்கள், ஒரு வேளை, இஸ்ராயேல் அல்லாத சாலமோ னின் அடிமைகளின் சந்ததியினராக இருக்க லாம். அதனால் இஸ்ராயேலிலும் யூதா விலும் ஒரு தனி இனமாக இருந்திருக்கலாம் (1 அர 9:20-21). நாடு கடத்தப்பட்ட பின்பு, இவர்கள் நெத்தினிமியர்களைப் போல- ஆலய ஊழியர்களாக இருந்திருக்கலாம் (எஸ் 7:24).

சாலமோனின் பாடல்கள் (SOLOMON, ODES OF)

இந்நூல் புனைபெயருடையது. நாற்பத் திரண்டு பாடல்களைக் கொண்டது. இவற் றைத் துள்ளற்கலிப்பாடல்கள் எனலாம். தலைப்பில் மட்டும்தான் சாலமோன் பெயர் வருகிறது.

இப்பாடல்கள், ஒருவேளை சிரியக் மொழியில், பாலஸ்தீனத்தில் அல்லது சிரி யாவிலிருந்த கிறிஸ்தவக் குழுவால் கி.பி 100-ஐ ஒட்டி எழுதப்பட்டதாகக் கருதப்படு கிறது. இது யூதர்களால் எழுதப்பட்டு, கிறிஸ்த வர்கள் அல்லது ஞானவாதிகளின் படைப்பு களும் சேர்க்கப்பட்டது என்று சிலர் கூறுவர். இந்த நூலின் சிரியக், கிரேக்கம், கோப்திக் கையெழுத்துப் பிரதிகள் 20-ஆம் நூற்றாண் டில் கண்டெடுக்கப்பட்டன.

இப்பாடல்கள் யோவானின் நற்செய்தி, இஞ்ஞாசியாரின் மடல்கள், சாக்கடல் சுருள்கள் ஆகியவற்றிற்கிடையே இலக்கிய, இறையியல் உறவைக் காண்கிறது. ஆனால் அது தெளிவாக இல்லை. சங்கீதங்கள் நூல் இப்பாடல்களின் வடிவைப்பாதித்துள்ளது. இப்பாடல்கள் தொடக்ககாலக் கிறிஸ்தவ வழிபாட்டைப்பற்றி முக்கியமான செய்தியை அளிக்கின்றன. ஒரு முக்கியமான பண்பாக மீட்பின் நிகழ்கால மகிழ்ச்சியில் கருத்தைச் செலுத்துகின்றன.

சாலமோனின் மண்டபம் (SOLOMON'S PORTICO)

ஏரோது கட்டிய எருசலேம் கோவிலின் வெளிமுற்றத்தைச் சுற்றிலும் நடப்பதற்கெனத் தூண்கள் கொண்ட அமைப்பு இருந்தது. அதன் கிழக்குப் பகுதி சாலமோனின் மண்டபம் என்றழைக்கப்பட்டது. இப்பகுதியில் உயர்ந்த சுவரோடுகூடிய உயர்ந்த மேடையில் தூண்கள் நின்றன. இவ்விவரங்களைக் கொடுக்கும் யோசிப்பசின் கூற்றுப்படி, இத்தகைய அமைப்பை முதலில் சாலமோன் பயன்படுத்தியதாக ஒரு பொதுப்பாணிப் பாரம்பரியம் உண்டு. ஆகவே இவ்வமைப்பு அவரது பெயரையே கொண்டிருந்தது. எருசலேம் அழிந்தபிறகு செருபாபேல் சீர்திருத்திய போது இப்பகுதியையும் சேர்த்தே அமைத்தார். ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த சாலமோன் மண்டபம் முழுக்க முழுக்க ஏரோதின் கைவண்ணமே ஆகும். ஆனால் இதற்கும் சாலமோனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. யூதராபிகள், தங்கள் சீடர்களுக்குக் கற்பிக்கவும், பொதுவுரைகள் வழங்குவதற்கும் இவ்விடத்தை அடிக்கடி பயன்படுத்தினர். ஆகவே நற்செய்திகளில் குறிக்கப்படும் பல நிகழ்ச்சிகள் இங்கு நடந்திருக்க வாய்ப்பு உண்டு (லூக் 2:46; 20:1; யோவா 7:14). ஒரு சமயம் இயேசு இங்குப் போதித்ததாகத் தெளிவாகக் கூறப்படுகிறது (யோவா 10:23).

''அழகிய வாயிலில்'' பேதுரு ஒரு முடவனைக் குணமாக்கினார் (அ.ப. 3:2-10). இவ்வாயில், புறவினத்தார் முற்றத்தைக் கடந்து சாலமோன் மண்டபத்தை நோக்கியிருந்த ஆலயத்தின் பகுதியிலுள்ள முன்முற்றத்துள் (பெண்கள் முற்றம்) இட்டுச் சென்றிருக்கலாம். குணமாக்கியபின், அதனால் கவரப்பட்ட கூட்டத்திற்குப் பேச, பேதுரு இந்த மண்டபத்திற்குச் சென்றார் (3:11-12). இந்த மண்டபம் திருச்சபை நாள்தோறும் கூடும் இடமாயிற்று (5:12).

சாலமோன் (SOLOMON - அமைதியான, செழிப்புமிக்க)

1. சாலமோனும் குடும்பமும்:-

தாவீதுக்கும் பத்சேபாவுக்கும் எருசலேமில் பிறந்த இரண்டாம் மகன் (2 சாமு 5:14; 12:24; 1நாள் 3:5; 14:4). தாவீதுக்கு அடுத்த அரசன்; இஸ்ராயேலின் மூன்றாவது அரசன் (கி.மு. 970-30). சாலமோன் என்ற பெயர் அரியணைப் பெயராக இருக்கலாம். அவர் பிறந்தபோது நாத்தானின் இறைவாக்கில் இவர் எதிதியா (ஆண்டவருக்குப் பிரியமானவர்) என்றழைக்கப்படுகிறார் (12:25). இவரது குடும்பத்தைப்பற்றி அதிகக் குறிப்புகள் இல்லை. இவர் பல பெண்களை விரும்பியதாகவும், பல மனைவிகளை அதுவும் அன்னிய மனைவிகளைக் கொண்டிருந்ததாகவும் தெரிகிறது (1 அர 11:1; உ.ச. 6:8). இம்மனைவியரில் முக்கியமானவள் பார்வோனின் மகளாவாள் (1 அர 3:1). இவளுக்கெனச் சாலமோன் தனிவீடு கட்டிக் கொடுத்திருந்தார் (1:8). பெயர் குறிக்கப்படும் மற்றொரு மனைவி அம்மோனியப்பெண்ணான நாமா ஆவாள். இவள், சாலமோனுக்குப்பின் அரசு பதவிபெற்ற ரெகபயாமின் தாய் ஆவாள். (14:21.31). சாலமோனுக்குத் தாபத்து (4:1) பாசமத்து (4:15) ஆகிய இரு புதல்வியர்கள் இருந்தனர். இருவரும் சாலமோனின் மாவட்ட மேற்பார்வையாளர்களை மணந்தனர்.

2. மூலங்கள்:-

சாலமோனைப்பற்றிய செய்திகள் உபாகமப் பாரம்பரியத்தைச் சேர்ந்த 2 சாமுவேல், 1 அரசர்கள் ஆகிய நூல்களிலும், நாளாகமப் பாரம்பரியத்தைச் சேர்ந்த 1,2, நாளாகம நூல்களிலும் காணப்படுகின்றன. இவ்வர

வாற்றைத் தொகுத்தவர் ''சாலமோன் வர லாற்று நூலிலிருந்து'' (1 அர 11:41), எடுத்துப் பயன்படுத்தியிருக்க வேண்டும். சாலமோனைப் பற்றிய தொடர்ச்சியான வரலாறு இல்லையெனலாம். தொகுப்பாளர் சாலமோன் பற்றிய பல கதைகளையும் முக்கிய நிகழ்ச்சிகளையும் கொடுக்கிறார். இவையே சாலமோனையும் அவர் காலத்தைப்பற்றிய உன்னதமான சித்திரத்தையும் அளிக்கப் போதுமானவையாயுள்ளன.

3. அரசனாக அபிடேகம் பெறுதல்:-

சாலமோன் தாவீதின் புதல்வர்கள் பலருக்கும் இளையவர். ஆனால் தாவீதின் மிகப்பிரியமான மனைவியின் மகன். சாதாரணமாக இவர் அரசு பதவிக்கு வருவது நிகழக்கூடியதன்று. ஆனால் அக்காலத்தில் அரசுவாரிசு முறைபற்றி எத்தகைய மரபும் நிறுவப்பட்டிருக்கவில்லை. தாவீது வயது முதிர்ந்த போது, அரசு வாரிசுரிமைக்காக இரு கட்சியினர் போராடினர். படைத்தலைவர் யோவாபு, குரு அபியாத்தார் ஆகியோரின் உதவியோடு தாவீதின் தலைமகன் அதோனியா அரச பதவிக்கு உரிமை கொண்டாடினார் (1 அர 1:5-10). இதை எதிர்த்தும், சாலமோனை ஆதரித்தும் பத்சேபா, இறைவாக்கினரான நாத்தான், தாவீதின் மெய்க்காவலர் படைத்தலைவர் பெனாயா, குரு சாதோக்கு ஆகியோர் போராடினர். தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளைத் தவிர வேறு எதுவும் இருகட்சியினரையும் பிரித்ததா என்று சொல்வது கடினம். பத்சேபா சுட்டிக்காட்டும் வாக்குறுதி (1:13.17) எப்போதாவது அளிக்கப்பட்டதா என்று கூறுவதும் கடினம். தாவீது சாலமோனை இணை அரசனாக்கி அதோனியா உரிமை கொண்டாடுவதை முடித்துவைத்தார் (1:11-49). இப்போராட்டத்தில் சாலமோன் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. அவர் அரசனானதில் அபிடேகமோ மக்கள் ஆரவாரமோ முக்கிய பங்கு வகிக்கவில்லை. வயதாகிக் கொண்டிருக்கும் முந்தைய அரசனின் கட்டளையால் அரசனானார். அரசனானவுடன் சாலமோன் செயல்படத் தொடங்கினார். சந்தர்ப்ப சூழ்நிலையைப் பயன்படுத்தி யோவாபையும் அதோனியாவையும், சாலமோன் கொன்றார். குரு அபியாத்தாரை எருசலேமை விட்டு வெளியேற்றினார். இந்த அரச உரிமைப் போராட்டத்தில் பங்குபெறாத பென்யமின் குலத்தைச் சேர்ந்த சிமயியையும் கொன்றார். யோவாபையும் சிமயியையும் கொல்லச் சொல்லும் தாவீதின் உயிலைப் பற்றி (1அர 2:2-9) வரலாற்று ஆசிரியர் சிலர் ஐயுறுவர். அதைச் சாலமோனின் செயல்களை எண்பிக்கப் புகுத்தப்பட்ட பிரச்சார ஏடு என்று கருதுவர். ஆனால் அப்பகுதி எபிரேயச் சிந்தனைப் போக்கு, தாவீதின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், தாவீதின் தன்மை ஆகியவற்றோடு ஒத்துப் போகிறது எனலாம்.

4. ஆட்சிமுறை:-

சாலமோனின் நீண்ட ஆட்சிக்காலம் சில சிறுசிறு பூசல்கள் தவிர அமைதியானதாகும். அரசனானவுடன் சாலமோன் தனது தந்தையின் பேரரசை உறுதிப்படுத்தினார். யூதாவின் பகுதியைத்தவிர, நாட்டின் மீதப்பகுதியைப் பன்னிரண்டு மாவட்டங்களாகப் பிரித்தார். இதில் அவர் பழைய குலஎல்லைகளைக் கடைப்பிடிக்கவில்லை; மாறாகப் புறக்கணித்தார். இதன் விளைவாகப் பழைய குலப்பற்றைப் பலவீனப்படுத்துவதும் மக்களை அரசன்பால் பற்றுக்கொள்ளச் செய்வதும், சாலமோனின் நோக்கமாக இருந்திருக்கலாம். குலப்பாகுபாட்டை அழிப்பதில் அவர் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் மக்கள் அரசன்பால் பற்றுக் கொள்ளவில்லை. இந்த மாவட்டப்பட்டியலில் யூதா இடம் பெறாததற்கு, அது அரசனுடைய சொந்தக் குலமாயிருந்ததால், அது வரிகளிலிருந்து விடுபட்டிருந்தது என்று சிலர் காரணம் கூறுவர். இதைவிடத் தாவீதின் காலத்திலேயே யூதா பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பது மேல். இதனால்தான் அப்சலோம் கிளர்ச்சி செய்தபோது, யூதாவின் மக்கள் உற்சாகமாய் அதில் பங்கு பெற்றனர் எனலாம்.

நாடு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது எருசலேமிலுள்ள அரசாங்கத்தில் கட்டுப்பாடு

களை மையப்படுத்த சாலமோனுக்கு உதவியது. இந்த அமைப்பு வரிகளைச் சேர்க்கவும், கட்டாய உழைப்பைப் புகுத்தவும் பெரிதும் உதவியது. ஒவ்வொரு மாவட்டமும் ஆண்டின் ஒரு மாதத்திற்கு அரண்மனைக்கும் ஆலயத்திற்கும் வேண்டிய பொருட்களை அளிக்கும் பொறுப்பைக் கொண்டிருந்தது (4:7-28).

5. கட்டடங்கள்:-

தனது ஆட்சியின் பதினொன்றாவது ஆண்டில், சாலமோன் எருசலேம் ஆலயத்தைக் கட்டிமுடித்தார். இதற்கு இவரது தந்தை தாவீது தயாரித்தார். சாலமோன் ஏழு ஆண்டுகளாக வேலை செய்து முடித்தார் (6:38). பின்பு தனது பகட்டான அரண்மனையைக் கட்டினார் (7:1-8). இவர் எருசலேமையும் மெகிதோ, காசோர் (ஆட்சேர்), கெசேர் போன்ற நகரங்களையும் (9;15) வலுப்படுத்தினார். இவ்விடங்களில் இஸ்ராயேலைப் பற்றிய செய்திகளை அளிக்கும் தொல்பொருள் ஆய்வுகள் பல நடைபெற்றுள்ளன. பல தேர் நகரங்களையும் பண்டகசாலை நகரங்களையும் கட்டினார் (1 அர 9:19; 2 நாள் 8:6).

6. கட்டாய வேலை:-

இக்கட்டட வேலைகளுக்குப் பெரும் நிதி வேண்டியிருந்தது. இது சுமையான வரிகளை மக்கள் மேல் விதிக்கச் செய்தது. அக்காலத்தில் பொதுவான வரி கட்டாய உழைப்பைத் தருவதாகும். அக்காலவழக்கப்படி சாலமோன் அன்னியர்களைப் பயன்படுத்தினார். இவர்களில் பெரும்பாலோர் அடிமைகள். காலப்போக்கில் இது உள்நாட்டு மக்கள் மேலும் சுமத்தப்பட்டது. அயல்நாடுகளோடு செய்த வியாபாரம் நிறைய நிதியைக் கொண்டுவந்தது என்பது உண்மையே. ஆனால் இது, பெரும் கட்டட வேலைகளுக்கும் அரண்மனையின் ஆடம்பர வாழ்க்கை முறைக்கும் போதியதாக இருக்கவில்லை (1 அர 4:22தொ). ஆகவே கட்டாய உழைப்பு நாட்டுமக்கள் மேலும் சுமத்தப்பட்டது (5:27). இந்த வழக்கு எகிப்திலும் மெசபொத்தாமியாவிலும் நிலவியது. ஆனால் இஸ்ராயேலின் மரபுகளுக்குப் புறம்பானது. மக்களால் பெரிதும் வெறுக்கப்பட்டது. இந்த வழக்கு தாவீதால் ஏற்கெனவே புகுத்தப்பட்டிருந்தது (2 சாமு 20:24). சாலமோன் எல்லா இஸ்ராயேலரின் மேலும் சுமத்தினார் (1 அர 5:27). 9:20-22 இந்தக் கட்டாய உழைப்பு கானானியர்கள் மேல் மட்டுமே சுமத்தப்பட்டது என்று கூறுகிறது. ரெகபயாம் ஆட்சிக்கு வந்தவுடன், மக்கள் அளித்த வேண்டுகோள், இப்பழக்கம் இஸ்ராயேலர் மேலும் சுமத்தப்பட்டிருந்ததை உண்மையெனக் காட்டுகிறது (12:4).

7. வியாபாரம்:-

சாலமோன் ஆட்சியில் பொருளாதாரம் அன்னிய வணிகத்தை மிகவும் சார்ந்திருந்தது. எட்சியோன்-கெபேர் என்ற இடத்தில் ஒரு கப்பல் துறைமுகத்தையும் சுரங்கமையத்தையும் அமைத்தார். அக்காலத்தில் தெரிந்திருந்த நாடுகளுக்கெல்லாம் அவரது கப்பல்கள் சென்றுவந்தன. ஒரு முழுப்பயணத்துக்கு மூன்று ஆண்டுகள் எடுக்கலாம் (9:26-28; 10:22). அவருடைய வணிகப்பொருள்களில் தேர்களும், குதிரைகளும் அடங்கியிருந்தன. சாலமோன் தேர்களைச் செய்யவுமில்லை; குதிரைகளை வளர்க்கவும் இல்லை. கேவே (சிலிசியா)யிலிருந்து குதிரைகளையும் எகிப்திலிருந்து தேர்களையும் பெற்று (1 அர 10:28 தொ) பண்டமாற்றும் தரகராகச் செயல்பட்டார்.

8. அரசியல்யுக்தி:-

அண்டை நாடுகளுடன் வியாபார, போர் உடன்படிக்கைகள் செய்து கொண்டார் சாலமோன். இதற்கு எடுத்துக்காட்டாக அவர் எகிப்தோடும் தீரின் அரசன் ஈராமோடும் செய்துகொண்ட உடன்படிக்கைகளைக் கூறலாம் (5:1-12). இவை சில சமயங்களில் திருமணத்தால் உறுதிப்படுத்தப்பட்டன. சாலமோன் எகிப்திய இளவரசியை மணந்தார் என்பது அவரது ஆட்சியின் முக்கியத்துவத்தையும் அவரது மேன்மையையும் காட்டுகிறது (3:1). எகிப்தின் இளவரசி மற்ற மனைவியரைவிடச் சிறப்பான முறையில் நடத்தப்பட்டாள். பார்வோன், கைப்பற்றியிருந்த கெசேர் நகரை அவளுக்குச் சீதனமாகக்

கொடுத்தார் (3:1; 7:8; 9:16.24). தீரின் அரசனான ஈராம், வணிகத்திலும் கட்டடங்கள் கட்டுவதிலும் சாலமோனின் முக்கிய கூட்டாளியாக இருந்தார்.

9. செல்வம்:-

சாலமோனின் செல்வங்கள் பழமொழியாக எடுத்துக்கூறும் அளவுக்குப் பெருகியிருந்தன (மத் 6:29; லூக் 12:27). அவரது ஆட்சிக் காலத்தில் நாடு செழிப்புற்று இருந்தது எனப் பாரம்பரியங்கள் கூறுகின்றன (1 அர 4:20. தொ 25; 9:10-14; 10:14-29). இவை மிகைப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுவர். சாலமோனும் அவரது அரசவையும் கொண்டிருந்த செல்வச் செழிப்பு பொது மக்களைப் போய்ச்சேரவில்லை. பெரும் செல்வமுடைய சிறிய குழுக்களும், கொடும்வறுமையால் வாடிய பெரும்பகுதியினரும் சாலமோன் காலத்தில் தான் தோன்றினர் எனலாம். இந்நிலை இறைவாக்கினர்களால் சுட்டிக்காட்டப்பட்டுக் கண்டிக்கப்படும். தீரைச் சேர்ந்த ஈராமுக்குக் கலிலேயாவிலுள்ள 20 ஊர்களைக் கையளித்து சாலமோன் தன் வரவுக்குமேல் செலவு செய்தார் என்பதைச் சுட்டுகிறது.

10. ஞானம்:-

செல்வச் செழிப்பைவிட ஞானத்திற்குச் சாலமோன் புகழ்பெற்றவராவார்; இஸ்ராயேலின் ஞானத்திற்கும் ஞான இலக்கியங்களுக்கும் தந்தையெனப் போற்றப்படுகிறார் (1 அர 3:1-28; 4:29-34; 10:23 தொ; பழ 1:10; 10:1; 25:1). 1 அர 3:5-15-இன்படி இறைவன் அரசனுக்குக் கனவில் தோன்றி ஒரு வரம் அளிப்பதாகக் கூற, சாலமோன் தனக்கு ஞானத்தைத்தர வேண்டும் என்று கேட்டார். இறைவனும் அளித்தார். சாலமோனின் ஞானம் எவ்வளவு போற்றப்பட்டதென்றால், பிற்கால இஸ்ராயேல் மற்றும் தொடக்க கால யூத இலக்கியங்களின் ஞானப் பாரம்பரியத்துடன் மிகவும் நெருங்கியவிதத்தில் சாலமோன் தொடர்புபடுத்தப்படுகிறார். இதன் விளைவாகப் பழமொழி நூலின் பெரும்பகுதிகளுக்கும் (பழ 10:1-22:16; 25:1-29:27), உன்னத சங்கீதம், திருவுரை, சங் 127, சாலமோனின் ஞானம், சாலமோனின் சங்கீதங்கள், சாலமோனின் பாடல்கள் முதலியவற்றிற்கும் சாலமோனே ஆசிரியர் ஆவார் என்ற பாரம்பரியம் நிலவியது. இந்தக் குறிப்புகளுக்குப்பின், ஒரு பெரிய இலக்கிய இயக்கம், தாவீதின் காலத்தில் தொடங்கப்பட்டு சாலமோனின் ஆட்சியில் ஊக்கம்பெற்று நிலவியது எனக் கூறலாம். இந்த இயக்கத்தில் தொடக்க இஸ்ராயேல் பற்றிய யாவே பாரம்பரிய வரலாறும் குடியேற்றம் மற்றும் நீதிபதிகள் காலத்திய வரலாறும் இடம் பெறுகின்றன. இவையெல்லாம், முதலில் வாய்மொழிப் பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்டு, பின்பு அரசராட்சிக் காலத்தில் எழுத்து வடிவம் எடுத்தன. வரலாற்றின் மற்றக் காலங்களைப்போல, அக்காலத்திலும் இந்த இலக்கியங்கள், மக்களின் நாட்டுணர்வையும், மக்கள் வரலாற்றைச் சார்ந்தவைகள் என்ற உண்மையையும் எடுத்துக்கூறும் கருவியாயின. வரலாறுகளையும் நாளேடுகளையும் தொகுப்பது இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாகும். அரசாட்சியின்கீழ்ப் பல்குலத்தவரையும் ஒன்றிணைப்பது, பல்குலத்தவர்களின் பாரம்பரியங்களையும் ஒன்றுசேர்த்து இணைத்துத் தொகுப்பதை அவசியமானதாக்கிற்று. இந்த இலக்கிய இயக்கத்தில் இஸ்ராயேலரின் ஞானப் பாரம்பரியங்களின் தொகுப்பும் இடம் பெற்றது.

11. பாவங்கள்:-

உபாகமப் பாரம்பரியத் தொகுப்பாளர் சாலமோனின் பாவங்களையும் தாழ்வுகளையும் தொகுத்துத் தந்துள்ளார் (1 அர 11). சாலமோன் அன்னிய மகளிரை மணந்ததும், அவர்களது வழிபாடுகளுக்கு ஆதரவு அளித்ததும், அவரது ஆட்சி நெடுகிலும் நிகழ்ந்திருக்க வேண்டும். இது அவரை யாவேயின் உண்மையான வழிபாட்டிலிருந்து விலகிச் செல்லச் செய்திருக்க வேண்டும் (11;1-8). அவரது மரணத்துக்குப்பின் நாடு பிளவுபட்டதற்குச் சாலமோனின் பாவமே காரணம் எனக் கூறப்படுகிறது (11:9-13). யோசியாவின் காலத்தில்கூட சாலமோன் கட்டியதாகக் கருதப்பட்ட மேட்டு நிலங்கள் இருந்

திருக்கின்றன (2 அர 28:13). அவருக்கு 700 மனைவியரும் 300 வைப்பாட்டிகளும் இருந்தனர் (1 அர 11:4) என்பது பொதுப்பாணிப் பாரம்பரியத்தால் மிகைப்படுத்தப்பட்டதாகும். காதல் மன்னன் என்ற அவரது புகழ் உன்னத சங்கீதத்தில் சுட்டிக் காட்டப்படுகிறது.

12. தாழ்வுகள்:-

இவையும் ஓரளவு அவரது ஆட்சியின் தொடக்க காலத்தைச் சேர்ந்ததாகும். ஏதோமின் அரசனான அதாது, பார்வோனின் தூண்டுதலால், சாலமோனுக்குத் தொல்லை கொடுத்துவந்தார். இது சாலமோன் எகிப்திய இளவரசியை மணந்தபின் எகிப்தில் அரச மரபு மாறியிருக்கலாம் என்று சுட்ட வல்லது. இதைவிட ஆபத்தானது தமஸ்குவில் இரசோனால் நிறுவப்பட்ட சுதந்தரமான அரசாகும் (1 அர 11:23-25). இந்த அரசு பிற்காலத்தில் இஸ்ராயேலின் அரசுக்கு அச்சுறுத்தலாகவே இருந்தது. மற்றும் சில, இறைவாக்கினர்களின் ஆதரவுடன் எரொபவாம் நடத்திய வெற்றிபெறாத கிளர்ச்சியாகும் (11:26-40). சாலமோனின் வரலாற்றைப்பற்றிய உபாகமப் பாரம்பரிய விவரிப்பை நாளாகமப் பாரம்பரிய விவரிப்போடு ஒத்துப்பார்க்கலாம். நாளாகமப் பாரம்பரிய ஆசிரியர் (1 நாள் 28-2நாள் 9) வாரிசு உரிமைப் போராட்டம் பற்றிய கதையைவிட்டு விடுகிறார்; அதற்குப் பதிலாகத் தாவீது முறையாகக் கட்டளையிடும் கதை கூறப்படுகிறது. மாவட்ட அமைப்பு, சாலமோனின் பாவங்கள், தாழ்வுகள் பற்றிய விவரிப்புகள் விடப்பட்டுள்ளன.

13. முடிவுரை:-

நவீன கால வரலாற்று ஆய்வாளர்கள் பொதுவாகச் சாலமோனுக்குப் பாதகமாகவே தங்கள் தீர்ப்பைக் கூறுகின்றனர். அவர் தன் தந்தையிடமிருந்து ஒரு வலுவான அரசைப் பெற்றார். ஆனால் அதை எப்படிப் பேணிக்காத்தார்? அவரது மரணத்துக்குப் பின் அரசு பிளவுபட்டது, அவர் அரசை நடத்திய விதம் பற்றிக் கேள்விக்குறி எழுப்புகிறது. செல்வம் மிகுந்தது; ஆனால் அதே சமயம் அரசவையின் ஆடம்பரச் செலவுகளும் மிகுந்தன. அதனால் தாவீதின் வெற்றிகள் மற்றும் சாலமோனின் வியாபாரம் ஆகியவற்றின் பலன்கள் மக்களைச் சென்றடையவில்லை. யூதாவையும் இஸ்ராயேலையும் ஒன்றிணைக்க அவர் செய்த முயற்சி தோல்வியுற்றது. சாலமோனின் அருமை பெருமை சிறுமைகள் சீரா 47:12-22-இல் போற்றப்பட்டுள்ளன.

சாலமோன் வரலாற்று நூல் (SOLOMON, BOOK OF THE ACTS OF)

1 அர 11:41-இல் குறிக்கப்படும் ஒரு நூல். 1 அர 3:1-11:40 வரையுள்ள பகுதிக்கு முக்கியமான மூலமாகக் கருதப்படுவது. இந்த நூல் கொண்டிருந்தது என்ன, மற்றும் பிற மூலங்களிலிருந்து எவை எடுத்தாளப்பட்டன என்பனவற்றைப்பற்றி ஒன்றும் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் சாலமோனின் செயல்கள், ஞானம்பற்றிய குறிப்பு (11:41) இந்நூல் பலதரப்பட்ட பொருள்களைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது.

சாலா (SALA)

1. லூக்கா அளிக்கும் இயேசுவின் மூதாதையர் பட்டியலில் சாலா போவாசின் தந்தையும் நகசோனின் மகனும் ஆவார் (லூக் 3:32).

2. அதே பட்டியலில் சாலா ஏபேரின் தந்தையும் கயினானின் மகனும் ஆவார் (லூக் 3:36).

சாலிசா (SHALISHAH - முக்கோணவடிவமான, மூன்றுபகுதி)

இப்பகுதி வழியாக, சவுல் காணாமல் போன கழுதைகளைத் தேடிச் சென்றார் (1 சாமு 9:4). அறிஞர்கள் சிலர் கிபயாவிலிருந்து வடக்குப் பகுதியாகச் சென்று எப்பிராயிம் பகுதிக்குப்பின் சாலிசா வழியாகப் போனார் என்று கருதுகின்றனர். இதனால் சாலிசா, எப்பிராயிம் பகுதிக்கு வடக்கிலோ அப்பகுதியிலோ இருந்திருக்கலாம். ஆனால் இப்பகுதியின் இறுதி மேற்கோளானது சவுல் பயணத்தின் திசையைக் குழப்புகிறது.

பாகால் - சாலிசா (2 அர 4:42) நகரம். சாலிசா பகுதியில் இருந்திருக்கலாம். இது இக்காலத் தேல் அவிவுக்கும் நபுலூசுக்கும் இடையிலுள்ள கெபிர் திலித்துவாக அடையாளம் காட்டப்படுகிறது.

சாலீம் (SHAALIM - நரிகளின் நாடு)

இது, காணாமல் போன கழுதைகளைத் தேடிச் சென்ற சவுல் கடந்து சென்ற பகுதியாகும் (1 சாமு. 9:4). அறிஞர்கள் பலர் 'இது பென்யமினின் நிலப்பரப்பில் இருந்திருக்கலாம்' என்று கருதுகின்றனர். மேலும் இப்பெயர் ''சாலபிம்'' என்ற பெயரின் மொழிச் சிதைவாக இருக்கலாம் என்றும் கருதுகின்றனர். மேலும் பெத்தேலுக்கு வடக்கிலுள்ள சூவால் என்ற இடத்தோடும் இதைத் தொடர்பு படுத்தலாம்.

சாலூ (SALU - திரும்ப அமைக்கப்பட்ட)

இவர் சிமியோனின் பரம்பரையில் பிறந்தவர். இவர் சிம்ரி என்பவருக்குத் தந்தை; சிம்ரி மிதியானியப் பெண் கோசுபியை மணந்தபோது கொல்லப்பட்டார். சிமியோனியக் குடும்பத்திற்குத் தலைவராக இருந்த சிம்ரியின் திருமணம், இஸ்ராயேலர்கள் தாங்கள் முன்செய்த பாவத்திற்கு வருந்தும் போது நடந்தது. ஆகவே இஸ்ராயேல் தலைவர்களின் சினத்தைத் தூண்டியது (எண் 25:14).

சாலேம் (SALEM - அமைதியான, பாதுகாப்பான, முழுமையான)

இது மெல்கிசதேக்கு அரசனுடைய நகரத்தின் பெயர் (ஆதி 14:18). பிற்காலத்தில் இந்நகரம் எருசலேம் நகரத்தோடு ஒன்றாகக் கருதப்பட்டுள்ளது. இது சங் 76:2-இல் மிகத் தெளிவாகிறது. இச்சங்கீதத்தில் உலகில் இறைவனின் உறைவிடமாகச் சீயோனோடு, இணையாகச் சாலேம் குறிக்கப்படுகிறது. சாவேயின் பள்ளத்தாக்கு அல்லது அரசரின் பள்ளத்தாக்கு என்ற இடத்தில், எபிரேயர் கெதர்லகோமரையும் அவரது கூட்டணியையும் தோற்கடித்தபின், மெல்கிசதேக்கு ஆபிரகாமைச் சந்தித்தார் (ஆதி 14:17-18). இவ்விடம் எருசலேமுக்கு அருகில் இருந்திருக்கலாம். ஒரு வேளை கிதரோன் பள்ளத்தாக்காக இருக்கலாம் (2 சாமு 18;18). சங் 110:4 எருசலேமில் யூதாவின் அரசனை மெல்கிசதேக்கின் வாரிசாக விவரிக்கின்றது. பிலோவின் நூலும், எபிரேயர்களுக்கு எழுதப்பட்ட திருமுகமும் இப்பெயருக்கு அமைதி என்ற பொருளைக் கொடுக்கின்றன (எபி 7:2). சாலேம் எருசலேமுக்கு மற்றொரு பெயர் அல்ல; ஆனால் சமய, கவிதைசார்ந்த இடுபெயராக உள்ளது. சாலேம் சில சமயங்களில் சாலிம் என்ற கிராமத்தோடு ஒன்றாக்கப்படலாம். இந்தக் கிராமம் பலாத்தாசெக்கேம் என்ற நகருக்குக் கிழக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ளது.

சாலேம் (SHALEM - அமைதி)

இவ்வார்த்தை ஆதி 33:6-இல் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. விளக்குரைஞர்கள் இதைப் பலவாறு எடுத்து, செக்கேமிற்கு அருகிலுள்ள ஒரு நகரத்தின் பெயர் என்றும், செக்கேமுக்கு இன்னொரு பெயர் என்றும், செக்கேமுக்கு யாக்கோபு வந்து சேர்ந்ததை விவரிக்கும் சொல் என்றும் கருதுகின்றனர். ஆதி 14:18-இல் வரும் சாலேமோடு இதைச் சேர்த்துக் குழப்ப வேண்டிய அவசியமில்லை.

சாலேம் (SHALEM - நிறைவு செய்பவர் - கடவுள்)

இராஸம்ரா ஏடுகளின் ஆதாரங்களிலிருந்து இது ஒரு தெய்வம் எனத்தெரிகிறது. இது சாலேம், சாகர் போன்ற இரட்டையர்களின் பிறப்பு பற்றி விளக்கும்போது தெளிவாகிறது. 'சாகர்' விடிவெள்ளியாகும், 'சாலேம்' மாலை வெள்ளியாகும். இரண்டும் சேர்ந்து வீனஸ் நட்சத்திரமாகும். உரோமையர்களும் இவர்கள் இருவரையும் இரட்டையர்களாகப் பார்க்கின்றனர். சாலேம் மாலை அமைதியைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் முதன்மைப் பொருள் ''முழுமைப்படுத்தல், நிறைவுபடுத்தல்'' ஆக இருக்க வேண்டும். பகலை முடிவுக்குக் கொண்டு வரும் வீனஸ் நட்சத்திரம் இதைக் குறிப்பதாக உள்ளது. அதிகாலையில் வரும் வீனஸ் நட்சத்திரம் சாகராக உள்ளது.

பழைய ஏற்பாட்டிலே சாலேம் கடவுளாகப் பாவிக்கப்படாவிட்டாலும், இவருடைய பெயர் எருசலேம் இடப்பெயரோடு கலந்து நிற்கிறது. இந்த இடப்பெயர் ஆதி 14:18-இல் சாலேமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது சங் 76:2-இல் சீயோனோடு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. சாலேம் இஸ்ராயேலர் எருசலேமுக்குக் குடியேறுமுன் அந்த இடத்துக் கடவுளாக இருந்திருக்க வேண்டும், அந்தத் தெய்வத்திற்கு மதிப்புக் கொடுக்கும் பொருட்டு தாவீதின் மகனுக்குச் சாலமோன் பெயர் கொடுக்கப்பட்டதாய் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தப் பெயரின் வேறு வடிவம் சாலமாநு ஆகும். இது வீனஸ் நட்சத்திரம், மாலையில் வெளிப்படுவதைக் கூறுகிறது. இது அரேபிய புராணக் கதையில் வரும் அத்தாரோடு ஒப்பிடப்படும். இந்த அத்தார் நீதி 11:24-இல் வரும் அம்மோன் கடவுளோடு ஒப்பிடப்பட்டுள்ளது. இது சரியென்றால் எருசலேமில் மோலக்கு வழிபாடு சாலேம் கடவுளின் வழிபாட்டு நினைவாக இருக்கலாம்.

சால்போன் (SHAALBON)

தாவீதின் பலம் வாய்ந்த மனிதர்களில் ஒருவரான எலியாபா (எல்யாகுபா) என்பவரின் சொந்த ஊர் (2 சாமு 23:32; 1 நாள் 11:33). இவ்வூர் சாலபிம் என்ற நகராயும் இருக்கலாம்.

சாவடி, சத்திரம், விடுதி (INN.)

இவற்றின் மூல எபிரேயச்சொல் பல வித்தியாசமான உறைவிடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.

1. பழைய ஏற்பாடு:

சொல்லிணக்கத்தின்படி எபிரேயச் சொல் ''இன்றிரவு தங்குமிடம்'' (யோசு 4:3) என்று குறிப்பிடுகிறது. இது ''பயணியர்'' (எரே 9), ஒரு குடும்பம் (யாத் 4:24) வழிப்போக்கர் குழு (ஆதி 42:27; 43:21), ஒரு படை (2 அர 19:23; எசா 10:29), அல்லது ஒரு நாடுகூட (யோசு 4:3.8) தங்குமிடத்தைக் குறிக்கப் பயன்பட்டிருக்கிறது. அனேகமாக ஒரு சிறிய, எளிய இடமாகப் பாலைவன வழிப்போக்கர்களுக்குப் பயன்பட்டிருக்கிறது (எரே 9:1). ஆனால் மற்றக் குறிப்புகளில் எவ்வகைக் கட்டமைப்பும் கருத்தில் கொள்ளவில்லை. வழிபோக்கர்களுக்குத் தனி வீடுகளில் தங்க இடம் கிடைக்காதபோது திறந்தவெளியில் இரவைக் கழித்தார்கள் (ஆதி 19:2; 28:11; நீதி 19:15). ''கேருத - இம்காம்'' என்பதைக் (எரே 41:17) இம்காமின் தங்குமிடம் அல்லது சாவடி என்று மொழிபெயர்க்கலாம். இவ்விடம் பெத்லகேமுக்கு அருகில் இருந்தது.

யோசு 2:1-இல் இராகாபு விலைமாதுத் தொழிலையும் சத்திரக்காப்புத் தொழிலையும் சேர்த்துச் செய்திருக்கலாம் என்று பிற்கால யூத விளக்கங்கள் சுட்டுகின்றன.

2. புதிய ஏற்பாடு:

பெத்லகேமில் யோசேப்பு, மரியாளுக்கு ''விடுதியில் இடம் கிடைக்கவில்லை'' (லூக் 2:7) என்று கூறப்பட்டுள்ளது. கிரேக்கச் சொல்லின் அடிப்படையான பொருள் ஒருவரின் சுமையைக் குறைக்கும் இடமாகும். இங்கு இச்சொல் ஓர் உணவுவிடுதியைக் குறிக்காது. ஆனால் அனேகமாக, அரபிய மொழிபோல, நகரத்தார் விருந்தினர் வீட்டைக் குறிக்கலாம். இச்சொல் விருந்தினர் அறையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே இயேசுவும் அவருடைய சீடர்களும் அவர்களுடைய கடைசி இரா உணவை உண்டனர் (மாற் 14:4; லூக் 22:11).

நல்லசமாரித்தன் காயப்பட்ட வழிபோக்கனைச் சாவடிக்குக் கொண்டு சென்றார் (லூக் 10:34). இச்சாவடி ஒரு உணவு விடுதியாக இருந்ததால் காயம்பட்ட மனிதனுக்குச் சிகிச்சையும், உணவும் அளிக்கப்பட்டது.

நல்ல சாமாரித்தனுடைய சாவடி பரம்பரையாகக் கான் - ஏல் - ஆக்மார் அல்லது அதிகம் தெரிந்த கான் காத்ரூர் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இது எருசலேமுக்கும், எரிக்கோவுக்கும் இடையில் காணப்படுகின்ற பாதையின் மத்தியில் உள்ளது. இது ஒரு பெரிய முற்றத்தையும், வில்வடிவமான கதவுகளை உடைய கட்டடத்தையும், நடுவில் ஒரு கிணற்றையும்

கொண்டிருக்கிறது. இயேசுவின் காலத்தில் சாவடிகள் இதே அமைப்பைக் கொண்டிருந்திருக்கலாம்.

சாலூல் (SHAUL - இறைவனிடம் கேட்டது, இறைவனுக்குக் கொடுக்கப்பட்டது)

1. எந்த அரசனும் இஸ்ராயேலர்களை ஆள்வதற்குமுன் ஏதோமில் ஆறாவது அரசனாக இருந்தவர் (ஆதி 36:37-38; 1 நாள் 1:48-49). இவரது ஆட்சிப் பகுதி தெளிவாகத் தெரியவில்லை. இவர் யூப்பிரத்தீசு நதிக்கருகிலுள்ள இரகாபோத்தைச் சேர்ந்தவர்.

2. ஓர் இஸ்ராயேலன், சிமியோனுக்கும் பெயர் தெரியாத ஒரு கானானியப் பெண்ணுக்கும் பிறந்தவர் (ஆதி 46:10; யாத் 6:15; 1 நாள் 4:24). 'சாலூல் வமிசத்திற்குத்' தலைவராக இருந்தார் (எண் 26:13).

3. ஒரு லேவியர். கோகாத்தின் புதல்வர்களில் ஒருவர். ஊசியாவின் மகன் (1 நாள் 6:24). இவரும் 1 நாள் 6:36-இல் வரும் யோவேலும் (5) ஒரே ஆளாக இருக்கலாம்.

சாவே - கிரியாத்தாயிம் (SHAVEH - KIRIA-THAIM - சமவெளி)

இது யோர்தானுக்கு அப்பால் மோவாபில் இருக்கிறது. இங்குதான் கெதர்லகோமரும் அவரது கூட்டணியும் ஏமியர்களைத் தோற்கடித்தனர் (ஆதி 14:5). அனேகமாகக் கிரியாத்தாயிமைச் சுற்றியுள்ள சமவெளியாக இருக்கலாம். கிரியாத்தாயிம் இக்கால ஏல் - கெரேயாத்தாக அடையாளம் காட்டப்படுகிறது. இது திபோனுக்கு வடகிழக்கே 9 கி.மீ. தொலைவில் உள்ளது. கி.மு. முதல் நூற்றாண்டுக்கு முன் உள்ள எந்த ஆதாரங்களும் அங்குக் கண்டுபிடிக்கப்படவில்லை.

சாவே பள்ளத்தாக்கு (SHAVEH, VALLEY OF)

இந்தப் பள்ளத்தாக்கில்தான் ஆபிரகாம் கெதர்லகோமரையும், அவரது கூட்டாளிகளையும் வெற்றி கண்டார். மேலும் இங்குதான் சோதோமின் அரசரும், சாலேமின் அரசரான மெல்கிசதேக்கும் ஆபிரகாமைச் சந்தித்தனர். ஆதி 14:17-18-சாவே பள்ளத்தாக்கை ''அரசர் பள்ளத்தாக்கு'' என்று வருணிக்கிறது. 2 சாமு 18:18 ''அரசர் பள்ளத்தாக்கு'' எருசலேமுக்கு அருகிலுள்ளதாகக் கூறுகிறது; அரசர் தோட்டத்தோடு தொடர்புபடுத்துகிறது. அனேகமாக இரண்டும் ஒன்றாகவே இருக்கலாம். ஆகவே சாவே பள்ளத்தாக்கு அல்லது அரசர் பள்ளத்தாக்கு கிதரோன் ஓடையைச் சுட்டலாம்.

சானானிம், சானானியர் (ZAANANNIM - மாறுகின்ற)

நப்தலியின் ஓர் எல்லை நகரம். தாபோர் மலைக்கும் யோர்தான் ஆற்றுக்கும் இடையில் கெதேசுக்கு அருகில் இருந்தது (யோசு 19:33). கேனியரான கெபேர் (எபேர்) இங்குதான் கூடாரங்களை அமைத்தார். இங்குதான் சிசரா கொல்லப்பட்டார் (நீதி 4:11).

நீதி 4-ஆம் அதிகாரம் தெளிவாக இல்லாமையால், இது இருந்த இடம் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. யோசு 19:33-இல் குறிக்கப்படும் இடம் இன்றைய கான் எத்-துசார் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. பெத்சானிலிருந்து தமஸ்குவுக்குப் போகும் வழியில் உள்ள ஒரு வணிகக்குழு தங்கிச்செல்லும் இடமாகும். அதாமிலிருந்து 6.5 கி.மீ. தொலைவிலுள்ளது. நீதி 4:11-இல் குறிக்கப்படும் இடம் மெகிதோவுக்கும் தேல் அபு கெதேயிசுக்கும் இடையிலுள்ள லெகூனாக இருக்கலாம். நப்தலியிலுள்ள இடமே இரண்டு பகுதியிலும் குறிக்கப்பட்டிருக்கலாம்.

சானான் (ZAANAN - கூட்டம் கூடும் இடம்)

யூதாவின் செபேலாவிலுள்ள இன்னும் அடையாளம் காட்டப்படாத ஒரு நகரம் (மீக் 1:11). பலமுறை இதுவும் செனானும் (யோசு 15:37) ஒன்றே என்று கருதப்படுகிறது. இந்த இரண்டு இடங்களும் இலாக்கிசோடு சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளன.

சானோவாகு (ZANOAH - சதுப்பு நிலம், நிராகரிக்கப்பட்ட) - ஆள்

எக்குத்தியேலின் மகன்; மெரேதின், அவருடைய யூத மனைவியின் வழியாக வந்த, வழித்தோன்றல் (1 நாள் 4:18).

சானோவாகு (ZANOAH - சதுப்பு நிலம், நிராகரிக்கப்பட்ட) - இடம்

1. யூதாவில் சோரா அசேக்கா என்ற செபேலா மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமம் (யோசு 15:34). அடிமைத் தளையிலிருந்து நாடு திரும்பிய யூதர்கள் குடியேறிய ஊர்களுள் இதுவும் ஒன்று என்று நெகே 11:30 கூறுகின்றது. எருசலேம் மதில் சுவரைக் கட்டும் வேலையில் கானூனும் (ஆனூன்) சானோவாகின் குடிகளும் பள்ளத் தாக்கு வாயிலைக் கட்டினார்கள் (நெகே 3:13).

பெத் - செமேசுக்கு தெற்கு- தென் கிழக்குத் திசையில் ஏறக்குறைய 5 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் - சானுதான் இவ்விடம் என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது மலைமேல் அமைந்திருப்பதால் இதைக் கிழக்கு, மேற்கு, வடக்கு வழியாக அடைவது கடினம். அரசாட்சிக்காலம், பைசாந்தியர் காலம், அரேபியர்கள் காலம் சார்ந்த சுவரின் சிதைவுகளும், பாண்டங்களும் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

2. மாவோன் என்ற மலைமாவட்டத்திலிருந்த ஒரு யூதா நகர் (யோசு 15:56; 1 நாள் 4:18). இக்கால யாத்தாவிற்கு (விவிலிய யூற்றா யோசு 15:55) வடமேற்குத் திசையில் வாடிஅபுசெனாவில் ஏறக்குறைய 2.5 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் பெயித்துஅமிரி தான் இவ்விடம் என்று கருதப்படுகின்றது.

சான்று பகர் (WITNESS)

அ. பழைய ஏற்பாடு:

I. மனிதர்களின் சாட்சியம்:

நிகழ்ந்த ஒன்றை நடந்ததென உறுதிப் படுத்துவது, சான்று பகர்தல் எனப்படும். சாட்சியின் பணி வழக்குத் தீர்க்கும் நீதித் துறையில் மிகவும் இன்றியமையாதது. மக்களின் பழக்கத்திற்கேற்ப, பலவும் சான்றாகப் பயன்படலாம். யாக்கோபு தனக்கும் லாபானுக்கும் அமைத்த சாட்சி மேடையான கலயேது (ஆதி 31:45-52), தாமார் வேசியாய் நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டபொழுது அவளுக்கு அளிக்கப்பட்ட அடைமானங்கள் (38:25) ஆகியவை இதற்குத் தக்க சான்றுகள். இத்தகைய பொருட்களைவிட, மனிதன் கூறும் சாட்சியத்தையே மறைநூல் தலை சிறந்ததாகக் கருதுகின்றது. சாட்சி கூறுவதற்கு வகுக்கப்பட்ட முறையான சட்டங்கள் உண்டு. சாட்சிகள் மூலம் தெளிவு பெறாமல், தண்டித்தல் கூடாது (எண் 5:13). சாட்சிகள் இருவராயிருப்பது சிறந்தது, அதனால் தவறு அல்லது கெட்ட எண்ணத்துடன் கூடிய தீர்ப்பு தவிர்க்கப்படும் (எண் 35:30; உப 17:6; 19:15; காண் மத் 18:16). கொலைத் தீர்ப்பு உள்ள வழக்கிலே, சாட்சிகள் இதை முதலாவதாகச் செயல்படுத்த வேண்டும் (உப 17:7; காண் அ.ப. 7:58). பொய்ச்சான்று கூறப்பல வாய்ப்புகள் உண்டு. பொய்ச் சான்று பகர்வோர் தமக்கெதிராக எழும்புவதாக முறையிடுகின்றார் சங்கீத் ஆசிரியர் (சங் 27:12;35:11). பொய்ச்சாட்சிகளால் நடந்த துயரமிகு வழக்குகளும் இஸ்ராயேல் வரலாற்றில் உள்ளன (1 அர 21:10-13; தானி 13:34-41). பத்துக்கட்டளைகளை மக்கள் கடைப்பிடித்த நாளிலிருந்து பொய்ச்சாட்சி கூறுவது மிகவும் கடுமையாகத் தண்டிக்கப் பட்டது (உப 9:16 தொ; 5:20). பொய்ச்சான்று பகன்றோர், அதே தண்டனை அனுபவித்ததை உப ஆகமத்தில் காண்கின்றோம் (உப 19:18 தொ). ஞானிகளும் இதை மிகவும் கடிந்துரைத்தார்கள் (பழ 14:5.25; 19:5.9; 21:28; 24:28; 25:18). ஏனென்றால் கடவுளின் திருமுகத்தின் முன்பு இச்செயல் மிகவும் அருவருப்பூட்டும் செயலாய் உள்ளது (பழ 6:19).

II. கடவுள் கூறும் சான்று

1. கடவுளே சாட்சி:-

மனிதனின் சான்றுக்கு மேலாகக் கடவுள் பகரும் சான்று ஒன்று உண்டு. அதை எவனாலும் மறுக்க முடியாது. திருமணச்சடங்கிலே, கணவனுக்கும் மனைவிக்கும் ஆண்டவர்தாம் சாட்சி (மலா 2:14). அதுபோல் அவர் திருமுகம் முன் மனிதன் செய்கின்ற எல்லா ஒப்பந்தங்களுக்கும் அவரே உத்தரவாதம் ஆவார் (ஆதி 31:53தொ; எரே 42:5). மனிதர்களின் பொய்ச்சான்றை மறுத்துக்கூற (யோபு 16:7 தொ 19) கடவுளையே சாட்சியாக அழைக்கலாம் (1 சாமு 12:5; 20:12).

2. திருச்சட்ட வழியாகவும், இறைவாக்கினர் வழியாகவும் இறைவன் கூறும் சான்று:-

ஆண்டவர் பகரும் சான்றை, அவரது திருவாக்குடன்சேர்த்து, வேறுவிதமாகவும் புரிந்து கொள்ளலாம். முதலாவதாகக் கடவுள் தமது திருப்பெயரின் பொருளை மோசேக்கு அறிவிக்கும் பொழுதும் (யாத் 3:14), தாம் ஒருவரே (20:2தொ) ஏகமான கடவுள் என்று எடுத்துரைக்கும்பொழுதும் தம்மைப்பற்றியே அவர் சாட்சியம் கூறுகின்றார். இந்தச் சாட்சியம் அவரால் ஆணையிட்டு மொழியப்பட்ட பொய்யாமொழி (எசா 45:21-24). இஸ்ராயேலின் இறையொருமைக் கோட்பாட்டிற்கு அடிப்படையும் இதுவே. கடவுள், திருச்சட்டங்களில் உள்ள கட்டளைகளின் வாயிலாகவும் தம்மைப் பற்றிச் சாட்சியம் கூறுகின்றார் (2 அர 17:13; சங் 19:8; 78:5.56; 119). இக்காரணத்தால்தான் திருச்சட்டப் பலகைகள் சாட்சி என்றழைக்கப்படுகின்றன (யாத் 25:16; ..31:18). வாக்குறுதிப் பெட்டகத்தில் இவை வைக்கப்பட்டதால் இது சாட்சியப் பெட்டகமாகின்றது (25:22; 40:3.5.21தொ). திருஉறைவிடமும் சாட்சியக் கூடாரமாகின்றது (38:21; எண் 1: 50-53). அனைத்தையும்விட இறைவாக்கினர்களே பகரும் தெய்வீக சாட்சியம் உண்டு. இது இறைவன் ஆணையிட்டுக் கூறும் மொழி (எசே 42:18); தனது பிரமாணிக்க மற்ற மக்களுக்கு எதிராகச் சான்று பகரும் பொழுது வருவதாகும் (சங் 50:7). அனைத்தையும் அறியும்தன்மை கடவுள் கொள்வதால் எதுவும் அவரிடமிருந்து தப்ப முடியாது. தமது சாட்சியத்தால், கடவுள் அவர்களுடைய குற்றங்களை வன்மையாகக் கண்டிக்கின்றார் (எரே 29:23). இறைவனாகிய ஆண்டவர் அவர்களைப்பாவ வழியிலிருந்து திருப்ப அவர்களுக்கு எதிராய்ச் சாட்சியம் கூறுகின்றார் (மீக் 1:2; ஆமோ 3:13; மலா 3:5).

III. கடவுளுக்குச் சாட்சியங்கள்:

மனிதர்களுக்கிடையே செய்யப்படும் ஒப்பந்தங்களில் நடைபெறுவதுபோல், கடவுளாகிய ஆண்டவரிடம் கொள்ளும் வாக்குறுதிகளுக்கும், இஸ்ராயேல் சான்று பகரும் முறையிலே சில பொருட்களைச் சான்றாகக் கொள்கின்றது. தாங்கள் அளித்த வாக்குறுதிகளுக்கு எதிராக நடக்கும்பொழுது இவை அவர்களுக்கு எதிர்ச்சாட்சிகளாய் விளங்கும். உப ஆகமத்தில் குறிப்பிட்டுள்ளபடி பெட்டகத்தில் உள்ள சட்டநூல் (உப 31:26), மோசேயின் சங்கீதம் (உப 31:19தொ) ஆகியவை இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகள். விண்ணும் மண்ணும்கூட ஆண்டவருக்குச் சாட்சியாக விளங்கும் (உப 4:26; 31:28). மனிதர்கள் மட்டுமே செய்யவல்ல சாட்சிகளாய்த் திகழும் பணி ஒன்றுண்டு. ஆயினும் கடவுள் தான் இப்பணிக்கு இவர்களை அழைக்க வேண்டும். இதுவே இறைவாக்கினரின் பணியாகும். கடவுளால் விசுவாசங்கொண்ட சாட்சியாய் அழைக்கப்பட்ட தாவீது அரசரின் பணி இவ்வகையைச் சார்ந்ததே (சங் 89:37தொ; காண் 1 சாமு 12:5). தாவீதரசர் பிறநாடுகளுக்கு முன்பு இறைவனின் சாட்சியாய் விளங்குகின்றார் (எசா 55:4). இதைப் போன்றே, இஸ்ராயேல் மக்களும் ஒரே கடவுளாம் ஆண்டவருக்குச் சாட்சிகளாய் விளங்குவதைத் தமது பணியாகக் கொள்கின்றார்கள் (எசா 43:10தொ; 44:8). இவ்வாறு கூறும் அவர்களது சான்று, சிலை வழிபாட்டை முற்றிலும் எதிர்க்கின்றது. சிலைகள் தங்களுக்கென்று எவரையும் சான்று கூற அழைக்க இயலாது (43:9). பிற மக்களுக்குச் சாட்சியம் கூறும் இப்பணியில் இஸ்ராயேல் மக்கள் பிரமாணிக்கமின்றி இருப்பினும், கடவுளால் அவர்கள் இப்பணிக்குத் தெரிந்து கொள்ளப்பட்டதால் அதிலே அவர்கள் நம்பிக்கை கொள்ளலாம் (44:8).

ஆ. புதிய ஏற்பாடு:

I. மனிதனின் சாட்சியமும் கடவுளின் சாட்சியமும்:-

பழைய ஏற்பாட்டில் நாம் காண்பது போலப் புதிய ஏற்பாடு பொய்ச்சான்று கூறுவோரை வன்மையாகக் கண்டிக்கிறது. இயேசுவின் நீதித் தீர்ப்பிலும் (மத் 26:59-65), ஸ்தேவானின் நீதித்தீர்ப்பிலும் (அ.ப. 6:11 தொ) பொய்சாட்சிகளின் குற்றச்சாட்டுகளை நாம் காண்கின்றோம். உப ஆகம ஆசிரியர் எடுத்துரைத்த மரபுப்படி இரண்டு அல்லது மூன்று

சாட்சிகளை ஆதிக் கிறிஸ்தவ சமுதாயமும் தமது மரபாக ஏற்றுக்கொள்கிறது (மத் 18:16; 2 கொரி 13:1; 1 திமோ 5:19). ஆனால் சாட்சியம் என்ற சொல்லின் உட்பொருள் நாளடைவில் மிகவும் விரிவடைகின்றது. நல்லான் ஒருவனைத் தெரிந்தவர்கள் அவனைப்பற்றி நற்சான்று பகர்கின்றனர். இம்முறையில்தான் யூதர்கள் இயேசுவுக்கும் (லூக் 4:22), கொர்னேலியுவுக்கும் (அ.ப. 10:22) அன்னியாவுக்கும் (22:12) சான்று பகர்கின்றனர். ஆதிக் கிறிஸ்தவர்களும் இதே வகையில் முதல் துணைத் தொண்டர்கட்கும் (6:3), திமோத்தேயுவுக்கும் (16:2), தெமேத்திரியுவுக்கும் (3 யோவா 12; காண் 3:6), பவுலுக்கும் (1 தெச 2:10) நற்சான்று பகர்கின்றார்கள். பவுலும் கொரிந்துவில் உள்ள சபைகளுக்கும் (2 கொரி 8:3) கலாத்தியா நாட்டில் உள்ள சபைகளுக்கும் (கலா 4:15) நற்சான்று பகர்கின்றார். இங்குச் சாட்சியம் என்பது தெளிவாகத் திருமறையைச் சார்ந்த மதிப்பீட்டைப் பெறுகிறது. நமது கிறிஸ்தவ வாழ்வு நம்மைப் பிறரிடமிருந்து ஒதுங்கி வாழும் தனி நபர்களாக்கிவிடுவதில்லை. மாறாகச் சாட்சிகளாய் விளங்கும் பலர் நடுவிலே நம்மைச் சேர்க்கின்றது. இவர்கள் நல்வாழ்வு வாழ நமக்கு வழிகாட்டிகளாகத் துலங்குகின்றார்கள். வாழ்வோர் மட்டுமன்று (1 திமோ 6:12) நம்மை விட்டு விசுவாசத்தில் முன் சென்றோரும் நமக்குத்தூண்டுதல்களாக உள்ளார்கள் (எபி 12:1தொ). இந்தச் சாட்சிகளில் முதன்மையானவர் இறைவனே. பழைய ஏற்பாட்டில் காணும் நீதிமான்களுக்கும் (அ.ப. 13:22; எபி 11:2.4தொ.39) அண்மையில் புறமதத்திலிருந்து மனந்திரும்பியவர்களுக்கும் (15:8) இறைவன் சாதகமான நற்சாட்சியாக விளங்குகின்றார்.

II. இயேசுவின் சாட்சியம்

திருச்சட்டத்தில் நாம் காணும் சாட்சியின் தன்மையும், இறைவாக்கினர் போதனையில் கண்ட சாட்சியின் பணியும், இப்பொழுது இணையற்ற சாட்சியான இயேசுவில் ஒருங்கே இணைந்துள்ளன (திருவெளி 1:5; 3:14). உண்மைக்குச் சாட்சியம் சொல்ல அவர் உலகிற்கு வந்துள்ளார் (யோவா 18:37). தந்தையிடம் கண்டதற்கும் கேட்டதற்கும் அவர் சாட்சியம் கூறுகின்றார் (7:7). தம்மைப் பற்றித் தாமே சாட்சியம் மொழிகின்றார் (8:13தொ). பிலாத்து முன்பு, இயேசு மொழிந்த அறிக்கை எல்லாச் சான்றுகளிலும் தலை சிறந்தது (1 திமோ 6:13). இது நமது மீட்பின் திட்டத்தை மிகவும் தெளிவாக்குகின்றது (2:6). இந்தச் சாட்சியம், விசுவாசங் கொள்ளாத (யோவா 3:11; 8:13) உலகத்தால் மறுக்கப்பட்டாலும், நீதி வழக்கு மரபுகளின் படி எவராலும் மறுக்கமுடியாததென்றாகும். ஏனென்றால் பிற சாட்சிகளும் இதற்கு ஆதரவு தருகின்றன. எடுத்துக்காட்டாக, இயேசுவின் முழுத் திருப்பணியை எடுத்துரைக்கும் திருமுழுக்கு யோவானின் சாட்சி (1:6தொ. 15.19; 3:26 தொ; 5:33-36), தந்தையின் திருவுளப்படி இயேசு ஆற்றிய திருச்செயல்கள் (5:36; 10:25), திருமறை நூல் அளிக்கும் சாட்சிகள் (5:39; காண் எபி 7:8.17; அ.ப. 10:43; 1 பேதுரு 1:11) தந்தையின் சாட்சி (5:31 தொ. 37 தொ; 8:16தொ) இவையனைத்தும் இதற்குத் தக்க சான்றுகள். இறைவனைப் பொய்யராக்க விரும்பாத எவரும் இவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவற்றுடன் கிறிஸ்தவனுக்குப் பரிசுத்த ஆவியே சான்று பகரும் முறையில் (1 பேதுரு 5:6தொ) அடையாளமாய் அளிக்கும் திருமுழுக்கு நீர், நற்கருணையின் திரு இரத்தம் ஆகியவற்றின் சாட்சியும் உண்டு. நமக்கு அளிக்கப்பட்ட ஆவியானவர் இயேசுவுக்குச் சாட்சியம் கூறுகின்றார் (யோவா 15:26). நாம் அனைவரும் இறைவனின் மக்கள் என்பதற்கும் அவர் சான்று பகருகின்றார் (உரோ 8:6). இவை போன்ற தொகுப்புள்ள பல சாட்சியங்கள் இயேசுவின் சாட்சியத்தை உறுதிப்படுத்துகின்றன. இவற்றை ஏற்றுக்கொள்வதன் மூலம் ஒருவன் இயேசுவின் சாட்சியத்திற்கும் பணிந்து நடந்து விசுவாச வாழ்க்கையில் நுழைகின்றான்.

III. இயேசுவுக்குச் சாட்சியம்

1. அப்போஸ்தலர் சாட்சியம்:-

மனிதர்களைச் சென்றடைய சாட்சியமானது ஒரு குறிப்பிட்ட செயல்முறையின் அமைப்பைக் கொள்ள வேண்டும். அதுவே

நற்செய்தியைப் போதிப்பதாகும் (மத் 24:14). நற்செய்தியை எங்கும் பரப்பவே, அப்போஸ்தலர்கள் சாட்சிகளாய் நியமனம் பெறுகின்றனர் (அ.ப. 1:8). அவர்கள் யோவானின் திருமுழுக்கு முதல் கிறிஸ்துவை ஆண்டவராகத் திருநிலைப்படுத்திய அவரது உயிர்ப்பு, விண்ணேற்புவரை நிகழ்ந்தவையெல்லாம் அனைவருக்கும் எடுத்துரைக்க வேண்டும் (1:22; 2:32). பவுலின் திருமறைப்பணியும் இதே பாணியில்தான் அமைந்துள்ளது. தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் அவர் அனைவருக்கும் சாட்சிகளாய் விளங்குமாறு நியமனம் பெறுகின்றார் (22:15; 26:16). புறவினத்தாரிடையே, இயேசுவின் உயிர்ப்பை எடுத்துரைத்து, அதன் வழியாகப் பலரிடையே விசுவாசத்தை வளர்க்கின்றார் (2 தெச 1:10; 1 கொரி 1:6). யோவானின் நூல்களிலும், நற்செய்தி போதிப்பதும் சான்று பகர்வதும் ஒன்றெனக் கருதப்படுகின்றன. நற்செய்தியாளரின் போதனை, அவர் தான் ஒரு நேரடிச் சாட்சி என்ற வகையில் தான் கண்டதையும் கேட்டதையும் உறுதியுடன் கூறுவதே (யோவா 19:35; 21:24). ஆனாலும் ஆவியானவரால் தூண்டப்பட்டு (யோவா 16:13) நிகழ்ச்சிகள் மறைக்கும் மறைபொருளோடும் சாட்சி சேர்ந்து கொள்கிறது. இந்த மறைபொருள் வாழ்வின் வார்த்தை ஊனுடல் எடுத்தலாகும் (1 யோவா 1:2; 4:14). இவ்வாறு அப்போஸ்தலர்களின் சாட்சியத்தை ஏற்றுக் கொள்வோர், தம்மிலே இயேசுவின் சாட்சியத்தையே ஏற்கெனவே கொண்டுள்ளார்கள். அப்போஸ்தலர்கள் அளிக்கும் சாட்சியம் இக்காலத்தைச் சார்ந்த இறைவாக்காகவும் விளங்குகின்றது (திருவெளி 12:17; 19:21). இதனாற்றான், பிறருக்குச் சாட்சியம் கூறுவோர், பழைய ஏற்பாட்டுக்கால இறைவாக்கினர் கொண்ட பண்புகளையும் மரபுகளையும் தாமும் கொண்டு விளங்குகின்றனர் (11:3-7).

2. சாட்சியமும் சான்றுக்காக உயிரையே அளிப்பதும்:-

இயேசுவின் சாட்சிகளாய் விளங்குவோரின் பணி, அவர் தம் அப்போஸ்தலர்களுக்கு விடுத்துச் சென்ற முறையில் (மாற் 13:9; மத் 10:18; லூக் 21:13 தொ) அதிகாரிகள் முன்னும் நீதிமன்றத்திலும் நின்று சான்று பகர்வதாகும். இவ்வாறு பலர்முன் உறுதியுடன் பகரும்பொழுது இச்சான்று பல வேளைகளில் பெருந்துயருக்கு முன்னோடியாய் விளங்கும். இயேசுவுக்காகச் சான்று பகர்வதால் விசுவாசிகள் துன்புறுத்தப்படுகின்றனர் (திருவெளி 1:9). முதன் முதலாக, ஸ்தேவான் தன் குருதி சிந்தித் தனது சாட்சியத்தைநிறைவேற்றினார் (அ.ப. 22:20). நற்செய்தியின் மற்றச் சாட்சிகளுக்கும் இவ்வுலகில் இதே நிலைதான் காத்திருக்கின்றது. (திருவெளி 11:7). ''இயேசுவுக்கும் இறைவார்த்தைக்கும்'' அளித்த தங்கள் சாட்சியத்திற்காக உயிரை ஈந்தோர் எவ்வளவுபேர்? (6:9; 17:6). விண்ணகத் திருத்தலத்திற்கு எதிராக எழுந்த தீய சக்தியான பாபிலோன் இச்சாட்சிகளின் இரத்தத்தைக் குடித்து வெறி கொள்ளும் (17:6). ஆனால் அவளது வெற்றி நிலையானதல்ல. உண்மையில் விண்ணரசின் மக்கள், கிறிஸ்துவுடன் இணைந்து, ''செம்மறியின் இரத்தத்தாலும் தாங்கள் சான்று பகர்ந்த வார்த்தையாலும் அலகையை வென்று வாகை சூடுவர்'' (12:11). மறைசாட்சியம் என்பது தமது விசுவாசத்திற்காகக் குருதி சிந்திச் சான்று பகர்வதே.

சி

சிகயோன், சிகியோனத்து (SHIGGAION, SHIGIONATH)

சங் 7-இல் தலைப்பிலும், அப 3:1-இலும் (பன்மை) காணப்படும் சொல்லாகும். இது, இவை புலம்பலாகவோ இரங்கற்பாடலாகவோ பாடப்பட வேண்டும் என்று பொருள்படலாம். அல்லது அமைப்பும், பாடப்படும் முறையும் அடிக்குஅடி மாறுபடும் என்று குறிப்பிடலாம்.

சிகா (ZIHA - காய்ந்து போன)

1. இது அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த ஒரு குடும்பத்தின் பெயர் (எஸ் 2:43; நெகே 7:46).

2. நெகேமியா ஆகமம், சிகா என்பவர் நாடுகடத்தலுக்குப்பின் ஆலய ஊழியர்களுக்குத் தலைவராய் இருந்தாரெனக் கூறுகிறது (நெகே 11:21).

சிகியோன் (SICYON - வெள்ளரிநகர்)

இது கொரிந்துவுக்கு வடமேற்கில் 29 கி.மீ. தொலைவில் உள்ள பழங்கால கிரேக்க நகரமாகும். இது கொரிந்திய வளைகுடாவின் தென்கரையில் அமைந்துள்ளது. தொழில் துறையிலும், கலைத்துறையிலும் சிறப்பிடத்தைப் பெற்றிருந்த இந்நகரம் உரோமையரசின் மையங்களுள் ஒன்றாக இருந்தது (கி.மு. 139). யூதர்களைக் கொடுமைப்படுத்த வேண்டாமென்று உரோமை ஆளுநன் பலநகரங்களுக்கும் கடிதம் அனுப்பியபோது (கி.மு. 139) இந்நகரத் தலைவனுக்கும் கடிதம் அனுப்பினார் (1 மக் 15:23). யூதர்கள் இவ்விடங்களில் பெருமளவில் வசித்து இருந்திருக்கவேண்டும். கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் இதன் புகழ் மங்கிப் போயிற்று.

சிக்கரோன் (SHIKKERON - போதையடைந்த)

மத்தியதரைக் கடலுக்கருகில் யூதாவின் வட எல்லையில் அமைந்த ஒரு கிராமம் (யோசு 15:11). சோரேக்கு பள்ளத்தாக்கில் சற்று வடக்கே கிர்பெத்து ஏல்-முக்கானவுக்கு 5 கி.மீ. தொலைவிலுள்ள தேல் ஏல் - பூல் (எக்ரோன்) ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சிக்கார் (SYCHAR)

சமாரியாவில் யாக்கோபின் கிணறு அமைந்திருந்த ஒரு நகர். இதன் அருகே ''யாக்கோபு தன்மகன் யோசேப்புக்கு அளித்த நிலம் உண்டு. அங்கே யாக்கோபின் கிணறு இருந்தது'' என்று யோவா 4:5-6 கூறுகிறது. இந்தக் கிணற்றுக்கருகில்தான் இயேசு ஒரு சமாரியப் பெண்ணிடம் ''உயிருள்ள தண்ணீரை''ப் பற்றிப்பேசினார் (4:7-26).

இங்கே குறிக்கப்படும் ''நிலம்'' ஆதி 48:22-இல் குறிக்கப்படுவதாக இருக்கலாம். இந்நிலம், செக்கேமின் தந்தை காமோரிடமிருந்து யாக்கோபு வாங்கிய நிலமாக இருக்கலாம் (33:18-19; யோசு 24:32). ஆகவே சிக்கார் செக்கேமுக்கும் யாக்கோபின் கிணற்றுக்கும் அருகில் இருந்திருக்கலாம். அல்லது செக்கேமாகக் கூட இருக்கலாம். கிரேக்கச் சொல் சிக்கார் செக்கேம் என்ற சொல்லின் பழுதுபட்ட வடிவமாக இருக்கலாம். ஆகவே சிக்காரும் செம்கேமும் ஒரே இடத்தையே குறிக்கின்றன என்று கருத இடமிருக்கிறது. செக்கேமுக்கு வடக்கிலும் நபுலுசுக்கு வடக்கில் 2 கி.மீ. தொலைவிலும் உள்ள அஸ்கார் என்ற கிராமம் சிக்கார் இருந்த இடமாகப் பாரம்பரியமாக அடையாளம் காட்டப்படுகிறது.

சிக்ரி (ZICHRI - என் நினைவு, என் ஞாபகம்)

1. கோகாத்திய வழியில் வந்த இசார் (இட்சகார்) லேவியர் குடும்பத்தின் ஒரு பிரிவின் பெயராக அல்லது இக்குடும்பத்தைச் சார்ந்த ஒருவனின் பெயராக இருக்கலாம் (யாத் 6:21).

2. பென்யமின் குலத்தைச் சார்ந்த இந்தக் குடும்பம் சிமயியிடமிருந்து தோன்றியது (1 நாள் 8:19).

3. பென்யமின் குலத்தைச் சார்ந்த இந்தக் குடும்பம் சாசாக்கிடமிருந்து தோன்றியது (1 நாள் 8:23).

4. பென்யமின் குலத்தைச் சார்ந்த இந்தக் குடும்பம் எரொகாமிடமிருந்து தோன்றியது (1 நாள் 8:27).

5. இப்பெயர் ஆசாப்பின் வழிவந்த லேவியரை அல்லது லேவியக் குடும்பத்தைக் குறிக்கிறது (1 நாள் 9:15). இவர் 1 நாள் 25:2.10; நெகே 12:35 இல் வரும் சக்கூராகவோ நெகே 12:11:17-இல் வரும் சபதியாகவோ (4) இருக்கலாம்.

6. லேவியரான இவர் மோசேயின் மகன் எலியேசர் வழிவந்தவர்; செலமோத்தின் தந்தையாவார் (1 நாள் 26:25).

7. ரூபானியரான இவர் எலியேசரின் தந்தையாவார். தாவீது காலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 27:16).

8. யூதாவைச் சேர்ந்த இவர் யோசபாத்தின் படையில் தளபதியான அமாசியாசின் மகனாவார் (2 நாள் 17:16).

9. இவர் எலிசபாத்தின் (எலிசப்பாற்று) தந்தை; அரசி அத்தலியாவுக்கு எதிரான கிளர்ச்சியில் யோயாதாவின் படைத் தளபதிகளில் ஒருவர் (2 நாள் 23:1).

10. எப்பிராயிம் குலத்தினரான இவர் பெக்காவின் படையில் இருந்த வலிமை மிக்க போர் வீரர். இவர் ஆகாசின் சிலைவழிபாட்டின் பொருட்டு அவரது அரசவையில் இருந்தீ பலரைக் கொன்றார் (2 நாள் 28:7).

11. பென்யமின் குலத்தினரான இவர் யோவேலின் (13) தந்தையாவார் (நெகே 11:9).

12. அடிமைத்தனத்திற்குப்பின் வாழ்ந்த ஒரு குருவின் பெயர் (நெகே 12:17).

சிக்லாகு (ZIKLAG - வளைந்து ஓடும்)

இந்த நகரம் முதலில் சிமியோன் கோத்திரத்திற்கும் (யோசு 19:5; 1 நாள் 4:30) பின்னர் யூதா கோத்திரத்திற்கும் கிடைத்தது (யோசு 15:31). கி.மு. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பெலிஸ்தியர்கள் இந்நகரைப் பிடித்தனர். இதன் பின்னர்த் தாவீதின் காலம் வரை இந்நகர் பெலிஸ்தியர் கையிலேயே இருந்தது.

சவுலின் ஆட்சிக்காலத்தில் காத்தின் மன்னன் ஆக்கிசு இந்நகரை நிலமான்யமாகத் தாவீதிற்குக் கொடுத்தார். ஆனால் தாவீது, அமலேக்கியர்களையும் மற்றவர்களையும் கொள்ளையடிக்க இதைப் பயன்படுத்தினார் (1 சாமு 27:6 தொ). மேலும் தாவீது கெபிரோனுக்கு வரும் வரை இந்நகரிலேயே தங்கியிருந்தார் (2 சாமு 1:1; 4:10; 1 நாள் 12:1. 20). தாவீதும், அவர் வீரர்களும் இல்லாதபோது அமலேக்கியர் இந்நகரைப் பிடித்துத் தீக்கிரையாக்கினர் (1 சாமு 30:1-26). அடிமைத்தனத்திற்குப்பின் இந்நகரிலே யூதர்கள் மறுபடியும் குடியேறினர் (நெகே 11:20). இந்த நகரம் நெகேபில், பெயேர்செபாவுக்கு வடக்கு, வடமேற்கில் 18 கி.மீ. தொலைவில் உள்ள தேல் ஏல் - குவெலிபேவாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதைவிட மேற்கில் 15 கி.மீ. தொலைவிலுள்ள தேல் எஸ் செரியாதான் இவ்விடம் என்று குறிப்பிடுவது மேல். இங்கு நடந்த அகழ்வாய்வுகள் தொடக்க வெண்கலக் காலத்திலிருந்து பாரசிகக் காலம் வரை குடியிருப்புகள் இருந்திருப்பதைக் காட்டுகின்றன.

சிங்கக்குகை (DEN OF LIONS)

தானியேல் 6-ஆம் அதிகாரத்தில் அடிக்கடி தோன்றுகிறது. விவிலியத்தில் இச்சொல் பிற இடங்களிலும் வருகிறது. ''ஓர் இளம் சிங்கம் தன் குகையிலிருந்து'' (ஆமோ 3:4), ''சிங்கங்களின் குகை'' (நெகே 2:11) என்றும் மற்றும் யோபு 37:8; 38:40; சங் 104:22; உ.ச. 4:8; நெகே 2:12 ஆகிய இடங்களிலும் வருகின்றது.

பழைய ஏற்பாட்டில் சிங்கக் குகை பற்றிய முக்கியமான நிகழ்ச்சி தானியேல் 6-ஆம் அதிகாரத்தில் வருகிறது. தானியேல் மீது பொய்க் குற்றம் சாட்டியவர்கள், அவர்களது

குடும்பும் முழுவதும் சிங்கக்குகையில் தள்ளப்பட்டனர் என்று தானி 6:24 கூறுகிறது. இச்சிங்கக் குகையில்தான் தானியேல் தள்ளப்பட்டார். ஆனால் எவ்வித அழிவுமின்றி, மகிழ்ச்சியோடு வெளியே வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கக்குகை என்பது உவமையாகப் பல இடங்களில் கூறப்படுகிறது. கடவுள் படைப்பின் சக்தியையும் மாட்சிமையையும் விளக்கும் பொருட்டு, சிங்கக்குகை என்று உவமையாகக் கூறப்படுகிறது (யோபு 38:39-41). நினிவே நகரின் வலிமையைக் கூற சிங்கக்குகை என்று உவமையாகக் கூறப்படுகிறது (நாகூ 2:11-12). மேலும், இவ்வகை விலங்குகளையும் இறைவன் உணவளித்துக் காப்பாற்றுகிறார் என்று விளக்கவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (சங் 104:21-22).

சிங்கக்குட்டி (WHELP)

ஆதி 49:9-இல் யாக்கோபு யூதாவை ஒரு சிங்கக்குட்டி எனப் புகழ்கின்றார். ஏனெனில் சிங்கத்தைப்போன்று யூதாவும் வலிமையிலும், தலைமைப்பண்புகளிலும் சிறந்து விளங்கும். ஆண்டவர் பாபிலோனைத் தண்டிக்கும்போது பாபிலோனியர் சிங்கங்களைப்போல் ஒருமிக்க கர்ச்சிப்பார்கள். சிங்கக்குட்டிகளைப்போல் பிடரியை உலுக்குவார்கள்; சீறுவார்கள் (எரே 51:38).

எசே 19-இல் யூதா ஒரு பெண்சிங்கமாகவும் யோவகாசும், யோயாக்கினும் அதன் குட்டிகளாகவும் பேசப்படுகின்றன. நினிவே நகர் சிங்கக்குட்டிகள் வளரும் குகையாகப் பேசப்படுகின்றது (நாகூ 2:11-13). யோபு ஆகமத்தில் எலீப்பாசு, தீயோரையும் கொடியோரையும் சிங்கம், பெண்சிங்கம், சிங்கக்குட்டிக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார் (யோபு 4:10-11).

சிங்கம் (LION)

நான்கு கால் மிருக இனத்தில் ஒன்றாகிய இந்த விலங்கு, அமைப்பில் பெரியதாகவும், இறைச்சியை உண்ணும் இயல்பு கொண்டதாகவும், மரவண்ணம், கலந்த மஞ்சள் நிறத்தைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இதன் வால் பகுதியானது முடி நிறைந்த குஞ்சம் போன்ற அமைப்பைக் கொண்டது. ஆண் சிங்கத்தின் கழுத்துப்பகுதியில் அழகிய நீண்ட பிடரி மயிர் வளர்ந்திருக்கும்.

பாலஸ்தீனச் சிங்கம் ஆசிய அல்லது பாரசீக வகையைச் சேர்ந்ததாகும். சிங்கத்தின் பிடரி முடியானது அதனுடைய கழுத்து தோல் பகுதியில் மட்டுமே வளர்ந்தாலும் அதன் நீண்ட முடியானது சிங்கத்தின் பாதி வயிற்றுப் பகுதியையும் சூழ்ந்துகொண்டிருக்கும். விவிலிய காலத்தில் பாலஸ்தீனத்தில் சிங்கங்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்தன. ஆனால் கி.பி. 1300-க்குப்பின்னர் அதன் எண்ணிக்கை குறைந்து மறைந்து போயிற்று. மெசபொத்தாமியாவில் 19-ஆம் நூற்றாண்டு வரை சிங்கம் இருந்திருக்கிறது.

அசீரிய மன்னர்களுக்குச் சிங்க வேட்டை ஒரு போட்டி விளையாட்டாக அமைந்திருந்தது. இதற்கான அசீரிய ஆதாரக் குறிப்புகள் உள்ளன. நீதிபதிகளின் காலம் தொடங்கி (நீதி 14:5-9), யோபு (யோபு 4:10-11) மற்றும் மிஸ்னா காலம்வரை இஸ்ராயேல் இலக்கியங்களில், இந்த வகை விலங்குகளைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. சிம்சோன் (நீதி14:6), தாவீது (1 சாமு 17:34-36), மற்றும் பெனாயா (2 சாமு 23:20) ஆகியோர் சிங்கத்தைக் கொன்று பெரும் புகழைப் பெற்றுள்ளனர். மற்றும் சிலர் சிங்கத்தால் கொல்லப்படுகின்றனர் (1 அர 13:24; 20:36; 2 அர 17:25). எசே 19:4-8 சிங்கத்தைப் பிடிக்கும் முறையையும் விவரிக்கிறது. தானி 6 குகையில் அடைக்கப்பட்ட சிங்கங்களைக் குறிக்கிறது.

விவிலிய நூலில், சிங்கம் மிக வீரமிக்கதாகவும், அழிவினை ஏற்படுத்தும் சக்தி கொண்டதாகவும், மந்தைகளுக்குப் பேராபத்தாகவும் (ஆமோ 3:12), பயத்தை உருவாக்கும் அளவிற்குக் கர்ச்சனை செய்யும் தன்மை கொண்டதாகவும் வர்ணிக்கப்படுகின்றது. விலங்கினங்களில் அதிமிக வலிமைகொண்டதாக (பழ 30:30) இது குறிப்பிடப்பட்டுள்

ளது. மற்ற விலங்குகளைப் போலவே சிங் கங்களும் இறைவனின் அருளால் அரவ ணைக்கப்பட்டு வந்தாலும்கூட (யோபு 38:39; சங் 104;21), ஆசிர்மிக்க எதிர் காலத் தில் இவை முற்றிலும் அழிந்து போகும் (எசா 35:9) அல்லது சாதுவான மிருகங்க ளைப் போலாகிவிடும் (எசா 11:6-7; 65:25) என்று விவிலியம் கூறுகின்றது.

விவிலியத்தில் சிங்கம் உருவகமாகப் பின் வரும் விவிலிய வாக்கியங்களில் காணப்படு கின்றது. ''யூதா சிங்கக் குட்டியாம்'' (ஆதி 49:9); ''சிங்கத்தின் முழக்கம் எப்படியோ அப்படியே அரசனின் கோபம்'' (பழ 19:12); ''அவர் தம் செயல்களில் சிங்கத்திற்கு ஒப்பா னார்'' (1 மக் 3:4). ஆண்டவரையும் சிங்கத் திற்கு ஒப்பிட்டுள்ளனர் (யோபு 10:16; ஓசே 13:7). பேய்க்கும் இதை ஒப்பிட்டுள்ளனர் (1 பேதுரு 5:8). திருவெளிப்பாட்டு நூலில் (5:5) ஆண்டவர் யூதாவின் சிங்கமாகப் புகழப் படுகின்றார். இது யூதாவைச் சிங்கக்குட்டி என்றும் (ஆதி 49:9), மெசியா தாவீது மரபில் வந்தவர் என்றும் வருகின்ற கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்.

பண்டைய மேற்காசிய நாடுகளில் சிங்கம் மத அடையாளமாக அதிகம் பயன்படுத்தப் படவில்லை. எகிப்தில் இது பெரும்பாலும் கோரூஸ், ரே ஆகியவற்றுடன் தொடர்புடைய தாக இருந்தது. தேவதைகள் பெண் சிங்கத் தின் வடிவில் தங்களை வெளிப்படுத்தின. அறிஞர் சிலர் கருத்துப்படி, பண்டைய மெச பொத்தாமியாவில் சிங்கம், குறிப்பிட்ட ஒரு கடவுளுக்கு அடையாளமாக அல்லாமல் கட வுளின் வலிமையைக் குறிப்பிடும் பொது அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது என்று அறிகிறோம். பிற்காலத்தில் சிங்கத் தின் ஆற்றல் தீய ஆவிகளின் ஆற்றலுக்கு ஒத்ததாயில்லை என்று கருதப்பட்டபோது, அதற்கு இறக்கைகள் அளிக்கப்பட்டுத் தெய் வத்தன்மை பெற்றன.

பிற்கால அசீரியாவில் சிங்கத்தை அரச விலங்காகக் கருதி அரசனுக்குரிய நிலை யைச் சிங்கத்திற்கு அளித்தனர். பாலஸ்தீனக் கலையில் சிங்கத்தின் உருவம் இடம் பெற்றி ருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று. எபிரேயர் களின் வருகைக்கு முன்னர் இது நடந்தது. இதற்கான சான்று, 1955-இல் காசோரில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியின் போது பதிமூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கானானியப் பீடத்திலிருந்து கிடைத் தது. சாலமோன் ஆலய, அரண்மனைச் சிங் கங்களை (1 அர 7:29; 10:19-20) பெனிசியக் கலைஞர் தயார் செய்தனர். எசேக்கியேலின் ஆலயத்தில் கெருபீம்கள் சிங்கமுகத்தினைக் கொண்டிருந்தன (எசே 41:15-19).

எரொபவாமின் ஊழியனான செமாவிற்குச் சொந்தமான சிங்க உருவம் கொண்ட முத்திரை யொன்று, மெகிதோ என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் காலக்கட்டத்தில் சிங்கம் எபிரேயர்களின் அரச அடையாளமாகப் பயன்படுத்தப்பட் டதா என்பது அவ்வளவு உறுதியாக இல்லை. சமாரியாவிலும் இது சம்பந்தமான அடையாளங்கள் கிடைத்துள்ளன. மேற் கண்ட உதாரணங்களிலிருந்து, விவிலிய ஆசிரியர்கள், குறிப்பாக வெளிப்பாட்டு இலக்கிய ஆசிரியர்கள் சிங்கத்தைச் சக்தியும் வீராவேசமும் கொண்ட விலங்காக விவிலி யத்தில் எழுதியுள்ளனர் என்று தெரியவரு கின்றது. எசே 1:10;10:14; 7:1-4, திருவெளி 4:7; 13:2 போன்ற விவிலிய வாக்குகளிலும் இதற்கான சான்றுகள் உள்ளன.

சிசமாய் (SISMAI - புகழ்பெற்ற)

இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்ட பிறகு யூதா இனத்தைச் சேர்ந்த எலயாசாவின் மகன்; சல்லூமின் தந்தை; எலிசாமாவின் வழித்தோன்றல் (1 நாள் 2:40).

சிசரா (SISERA - போருக்கு ஆயத்தமாக)

1. நீதிபதிகள் காலத்தில் கானான் நாட்டில் காசோரின் அரசனான 'யாபின்' என்பவனின் படைத்தலைவன் ஆவார் (நீதி 4). ஆனால் நீதி 5-இல் 'யாபின்' அரசனைப்பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. மாறாக, சிசராவே அரச னாகத் தோற்றமளிக்கிறார். இஸ்ராயேலரால் தோற்கடிக்கப்பட்ட சிசரா, யாவேல் என்ற

பெண்மணியின் இல்லத்தில் அடைக்கலமாகத் தங்கியிருந்தபோது அவளால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டார். இவரது காலத்தில் இஸ்ராயேலை வழிநடத்தி இவரைத் தோற்கடித்த நீதிபதிகள் தெபோராவும், பாராக்கும் ஆவார்கள்.

2. பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஓர் ஆலய ஊழியர் குடும்பத்தின் மூதாதையர் (எஸ் 2:53; நெகே 7:55).

சிசா (SHISHA)

சாலமோனின் செயலர்களாகிய எலிகோரேபு, அகியா ஆகியோரின் தந்தை (1 அர 4:3). இவர் தாவீதின் செயலராக இருந்திருக்க வேண்டும். இவர் 1 நாள் 18:16-இல் சவுசா என்றும் 2 சாமு 8:17-இல் செராயா என்றும் 20:25-இல் ·செவா என்றும் அழைக்கப்படுகிறார்.

சிசாக்கு (SHISHAK)

ஓர் எகிப்திய பார்வோன் (945 - 915 கி.மு.); இருபத்து இரண்டாம் அரச மரபைத் (945-730) தோற்றுவித்தவர்; பாலஸ்தீனத்தின் மீது போர் தொடுத்து எருசலேமைக் கொள்ளையிட்டுச் சென்றவர் (1 அர 14:25-26). சாலமோன் ஆட்சிக் காலத்தில் எகிப்தில் ஓர் லிபிய படைத் தலைவனாக இருந்தார். அப்பொழுது அங்கு ஆட்சி செய்த வலிமையிழந்த 21-ஆம் அரச குலத்தைக் கவிழ்த்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்.· இவரது மகனை அமோனின் தலைமைக் குருவாக்கினார். இவரைப் பற்றிய செய்திகள் பல கர்னாக்கு என்னுமிடத்திலுள்ள அமோன் ஆலயத்திலுள்ள கட்டடங்களிலிருந்து தெரிகின்றன.

இவர் எகிப்தின் வலிமையை மீண்டும் நிலை நாட்டும் நோக்கத்துடன் பாலஸ்தீனத்தைக் கைப்பற்ற எண்ணிச் சாலமோனிடம் இருந்து தப்பியோடிய எரொபவாமிற்கு அடைக்கலம் அளித்தார் (1 அர 11:40). ரெகபயாம் ஆட்சி செய்த ஐந்தாம் ஆண்டில் சிசாக்கு எருசலேமின் மீது படை எடுத்தார். எருசலேம் ஆலயம், அரண்மனை மற்றும் அங்கிருந்த அனைத்துச் செல்வங்களையும் கொள்ளையடித்துச் சென்றார் (1 அர 14:25-26). கொள்ளையடித்துச் சென்றவற்றைத் தெபேசிலுள்ள அமோன் கடவுளுக்கு அர்ப்பணித்தார்.

கர்னாக்குக் கல்வெட்டுக்களில் அவர் கைப்பற்றிய நகரங்கள் பற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்குப்பின் வந்தவர்கள் அவனைப் போல் திறமையாக ஆட்சிசெய்ய முடியவில்லை. இரண்டு நூற்றாண்டுகள் சென்ற பிறகுதான் எகிப்து பாலஸ்தீனத்தின் மீது தனது அதிகாரத்தை மீண்டும் காட்ட முடிந்தது.

சிலசமயம், சாலமோன் சிசாக்கோடு திருமண உறவுகொண்டதாகவும், அதன் விளைவாகக் கெசேர் நகரைச் சீதனமாகப் பெற்றதாகவும் கூறப்படும் (1 அர 3:1; 9:16). இந்த உறவு முந்தைய பார்வோனுடன் கொண்டதாக இருக்கலாம்.

சிட்டுக்குருவி (SWALLOW)

இச்சொல் பொதுவாக, சிறிய நீளமான இறக்கைகள் கொண்ட குடும்பத்தைச் சார்ந்த எந்தப் பறவையையும் குறிக்கும். இவை பறக்கும் விதம் அழகாக இருக்கும். ஆனால் எழுபது நூலில் இச்சொல் சங் 84:3-இல் மாடப்புறாவைக் குறிப்பதாகவும், பழ 26:2-இல் சிட்டுக் குருவியைக் குறிப்பதாகவும் கூறுகின்றது. எசா 38:14-இல் சிட்டுக்குருவியின் கூக்குரலும், எரே 8:7-இல் அதன் இடம் பெயரும் பழக்கமும் குறிக்கப்படுகின்றன. இவை இப்பறவை ஒருவகைப் புறாவைச் சுட்டலாம்.

சிதறிப்போதல் (DISPERSION)

ஆதியாகமத்தின் முதல் அதிகாரங்களிலிருந்தே மனிதர்கள் மண்ணுலகில் சிதறிப்போவதானது பொருள்மயக்கமுள்ள நிகழ்ச்சியாகத் தோன்றுகிறது. மனிதன் பல்கிப் பெருகி உலகை நிரப்ப வேண்டிய இறை ஆசியின் விளைவானது (ஆதி 9:1; 1:28) ஒன்றிப்பில் நிறைவு செய்யப்படுகிறது. பாவத்திற்கான

தண்டனை என்ற அளவில் மனிதரிடையி லான பிளவின் அடையாளமாக இது உருவா கிறது (ஆதி 11:7-8). இந்த இருவித முன் னோக்கு மீட்பின் வரலாற்றில் மீண்டும் காணப்படுகிறது.

1. மக்கள் மற்றும் நாட்டினுடைய சிதறல்:- இறைவன் தமக்கென ஒரு மக்களினத்தைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஒரு நாட்டை யும் அளித்தார். ஆனால், இறைவனுக்கு விசுவாசமற்ற நிலையில், இஸ்ராயேலானது சிதறிப்போயிற்று (2 அர 17:7-23); முன்பு எகிப்தில் இருந்ததைப்போல அடிமைத்தனத் திற்குத் திரும்புகிறது (உப 28:64-68). நாடு கடத்தப்படுதலோடு தொடர்ந்து வந்த இன் னல்கள் எழுபது நூல் மொழிபெயர்ப்பில் ''சிதறிப்போதல்'' என்ற சொல்லால் விவரிக்கப் படுகின்றன (உப 28:25; 30:4; எசா 49:6...). சிதறிப்போதல் என்ற சொல், பாபிலோ னிய அடிமைத்தனத்திற்குப் பின்னர்ப் புற வினத்தாரின் உலகில் பரவியுள்ள அனைத்து யூதரையும் குறிக்கப் பயன்பட்டது. இச்சித றிப் போதலின் நோக்கம் தூய்மைப்படுதலா கும் (எசே 22:15). இத்தூய்மைப்படுதல் நிகழ்ந்தவுடனே, திரும்பி வருதல் நிறைவே றும் (எசே 36:24). இடைப்பட்ட காலத்தில் சிதறிப்போதலானது தூய ஆன்மாக்களை வதைக்கும் வருத்தமிக்க செயலாக இருக்கும் (சங் 44). இறைவன் தமது மக்களின் உறுப்பி னர்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் காலம் வரும் (சீரா 36:10).

ஆயினும் இத்தீமையினின்று இறைவன் உயரிய நன்மையை விளையச் செய்கிறார். சிதறிய இஸ்ராயேலானது வெளியினத்தா ருக்கும் உண்மையான விசுவாசத்தை அறி விக்கிறது (தோபி 13:3-6). அடிமைத்தனத்தி னின்று புதியவர்களை ஏற்பது தொடங்கு கிறது (எசா 56:3). கிரேக்கர் ஆட்சிக்காலத்தில், புறவினத்தாராலும் செவிமடுக்கப்பட வேண்டுமென ஞானநூல் ஆசிரியர் விரும்பு கிறார்; ஏனெனில் அவரைப் பொறுத்தமட் டில், இஸ்ராயேலின் அழைப்பானது இத் தகையதே (ஞான 18:4). இத்தகைய புதிய முன்னோக்கில் இஸ்ராயேலானது நாடு என் னும் தனது நிலையினின்று விலகி, திருச் சபை என்னும் வடிவை ஏற்க முயல்கிறது. இனிமேல், எருசலேமிற்குச் செல்லும் யாத்தி ரிகர்களை அடையாளமாகக் கொண்ட உயி ருள்ள ஒற்றுமையை அதற்கு உறுதியளிப்பது விசுவாசமேயன்றி இனமல்ல (அ.ப. 2:5-11).

2. மக்கள் மற்றும் திருச்சபையின் சிதறல்:- கிறிஸ்துவுடன் இறைவனின் மக்கள் யூத தேசிய வரைச்சட்டத்தைக் கடந்து, திருச் சபையாக உரிய விதத்தில் உருவாகின்றனர். ஐம்பதாம் நாளில் பரவசப் பேச்சாலும், அன் பினாலும் ஆவியானவர் நாடுகளின் ஒன் றிப்பை உறுதிப்படுத்துகிறார். அதுமுதல் அங்கோ இங்கோ இல்லாமல் மனித இனத்தை ஒன்று சேர்க்கின்ற இறைவனை மனிதர் ''ஆவியிலும் உண்மையிலும்'' (யோவா 4:24) வழிபடுவர். எருசலேமி னின்று நெடுந்தொலைவிற்குச் சிதறடிக் கின்ற கொடுமைகளுக்கு விசுவாசிகள் இனி யும் அஞ்சுவதில்லை (அ.ப.8:1; 11:19). ஒரே திருமுழுக்கினால் ஒரே விசுவாசத்தில் எல்லா இனங்களையும் ஒன்று சேர்ப்பதற் கென, உயிர்த்தெழுந்தவரின் கட்டளைப்படி அவர்கள் தங்களுடைய விசுவாசத்தைப் பர வச் செய்யப்போகின்றனர் (மத் 28:19-20).

எனவே, யூத சிதறிய நிலைக்குப்பதிலாக, உலக மனமாற்றத்திற்காக இறைவனால் தீர் மானிக்கப்பட்ட மாறுபட்ட சிதறிய நிலையா னது உருவாகிறது. இந்த மக்களுக்கே யாக் கோபு தனது திருமுகத்தை எழுதுகிறார் (யாக் 1:1). சிதறிய மனித இனத்தை மீண்டும் ஒற்றுமைக்குக் கொண்டு சேர்ப்பதற்கென (அ.ப. 2:1-11) விசுவாசமிக்க யூதர்களுடன் புதிய இறைமக்களை உருவாக்கிய புறவின மனமாறியவர்களிடையே பேதுரு காண்ப தும் இம்மக்களே (1 பேதுரு 1:1). கிறிஸ்தவ ரைப் பொறுத்த மட்டில் விசுவாசத்தின் ஒன் றிப்பானது சிதறிப்போதலால், இடைவிடா மல் வெற்றியடைகிறது. கிறிஸ்துவின் பலி யால் இறைவனின் பிள்ளைகள் அனைவரும் ஒன்று சேர்க்கப்படுகின்றனர் (யோவா 11:52). இனிமேல், அவர்கள் தாங்கள் எவ்வி டத்தில் வாழ்ந்தாலும், ''உலகினின்று உயர்த்

தப்பெற்ற'' கிறிஸ்து, அவர்களைத் தனது உடலில் ஒன்றுபடுத்துகின்ற அன்பின் ஆவியை அவர்கள் மேல் பொழிந்து (1 கொரி 12), அனைவரையும் தம்பால் ஈர்த்துக் கொள்வார் (யோவா 12;32).

சிதீம் (SIDDIM - பள்ளத்தாக்கு)

சாக்கடலின் தென்பகுதியில் அமைந்துள்ள சமவெளி. இங்கு சோதோம், கொமோரா, அதாமா, செபோயிம், சோவர், ஆகிய ஐந்துநாட்டு மன்னர்களும் தங்கள் அடிமைத்தளையிலிருந்து விடுபட ஏலாமிய அரசன் கெதர்லகோமரின் தலைமையிலான நான்கு மெசபொத்தாமிய அரசர்களை எதிர்த்துப் போரிட்டனர்; தோல்வியுற்றனர் (ஆதி 14:3-4.8-11). இங்குக் கீல்குழிகள் பல இருந்தன. இவ்வரசர்கள் தோல்விக்கு இவையும் உதவின. இதுவே உப்புப்பள்ளத்தாக்காக இருக்கலாம் (2 சாமு 8:13; 2 அர 14:7). சோதோம், கொமோரா இருந்த பள்ளத்தாக்காகவும் இருக்கலாம் (ஆதி 19:24-25).

சிதீம் (ZIDDIM - பக்கம்)

இது நெப்தலி புதல்வருக்குக் கொடுக்கப்பட்ட நாட்டில் இருந்த அரண் எழுப்பப்பட்ட நகரம் (யோசு 19:35). இந்தச் சிதீம் காபர்-கித்தாயியாவாக (தற்கால காத்தின் ஏல் - காதிம்) இருக்குமெனத் தால்மூது கூறுகிறது. இந்தக் காத்தின் ஏல் - காதிம் மாதோனுக்கு அருகில் திபேரியாவுக்கு மேற்கு - வடமேற்கில் 13 கி.மீ. தொலைவில் உள்ளது.

சித்திம் (SHITTIM - வேல மரங்கள்)

1. சாக்கடலுக்கு வடகிழக்கே மோவாபியருடைய சமவெளியில் இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடப்பதற்கு முன் தங்கிய இடம். ''யோர்தானுக்கு அண்மையில் மோவாபியருடைய சமவெளியிலே பெத்த சிமோத்திலிருந்து ஆபல் - சித்திம் வரையிலும்'' பாளையம் இறங்கினர் (எண் 33:49). ஆபல் - சித்திம் என்பதே இவ்விடத்தின் முழுப் பெயராகும். பொதுவாகச் சித்திம் என்று சுருக்கமாக அழைக்கப்படும்.

இஸ்ராயேலர் இங்குத் தங்கியபோது முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மோவாபின் அரசனான பாலாக்கு பிலயாமைக் கொண்டு இஸ்ராயேலரைச் சபிக்கச் செய்ய முயன்றார் (எண் 22-24). இங்கு இஸ்ராயேலர்கள் மிதியானிய, மோவாபியப் பெண்களுடன்பாவம் செய்ததால் தண்டிக்கப்பட்டார்கள் (எண் 25). ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது (எண் 26). யோசுவா மோசேக்குப் பின் இஸ்ராயேல் மக்களை வழிநடத்துவார் என்று எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது (27:12-23). மிதியானியர்கள் பழி வாங்கப்பட்டனர் (எண் 31). ரூபன், காது, மனாசேயின்பாதி இனம் ஆகியவர்கள் யோர்தானுக்குக் கிழக்கே குடியேறினர் (எண் 32). மோசே இறுதி உரை ஆற்றிய பின்பு, நெபோ மலைமேல் இருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டைப் பார்த்தபின் இறந்தார். யோசுவா இரண்டு ஒற்றர்களைச் சித்திமிலிருந்து எரிகோவிற்கு அனுப்பினார் (யோசு 2). மக்கள் பாளையத்தைக் கலைத்துவிட்டு, யோர்தானைக் கடந்துசெல்ல, சித்திமிலிருந்து புறப்பட்டனர் (3:1). மீக் 6:5-இல் ''சித்திமுக்கும் கில்காலுக்கும் இடையே நடந்தவற்றையும் எண்ணிப்பாருங்கள்'' என்பது யோர்தானை வியத்தகுமுறையில் கடந்து சென்றதைச் சுட்டலாம்.

சித்திம் இருந்ததாகக் கிர்பெத்து ஏல் - கெபிரெயின்,தேல் ஏல் - கம்மாம் ஆகிய இடங்கள் அடையாளம் காட்டப்படுகின்றன. இரண்டும் எரிகோவிற்கு எதிராக யோர்தான் ஆற்றுக்கு அருகில் உள்ளன.

2. யோவேல் 4:18-இல் குறிக்கப்படும் இடமாகும். ''ஆண்டவரின் இல்லத்திலிருந்து நீரூற்று ஒன்று கிளம்பும். அது சித்திமிலிருந்த ஓடைகளில் பாய்ந்தோடும்''. இதை உறுதியாக அடையாளம் காட்டமுடியாது. ஆனால் எருசலேம் ஆலயத்தோடு கொண்டிருக்கும் தொடர்பும், பள்ளத்தாக்கின் சாதாரணமான வறட்சியும், இது கிதரோன் பள்ளத்தாக்கு சாக்கடலை நோக்கிச் செல்லும் கீழ்ப் பகுதியிலுள்ள வாடி ஏன் - நார் ஆக இருக்கலாம்.

சித்தியர் (SCYTHIANS)

தெற்கு உருசியாவில் தோன்றி, கசிப்பியன் கடலுக்குக் கிழக்கே கவுகசு மலைப்பகுதிக்கு வடக்கே குடியேறிய நாடோடி மக்கள். இங்கும் இவர்கள் நிலையாக இருக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் இவர்கள் அஸ்கனாசு என்று குறிக்கப்படுகின்றனர் (ஆதி 10:3; 1 நாள் 1:6; எரே 51:27).

அசீரிய வரலாற்றில் கி.மு.670-முதல் 612-வரையிலான கால கட்டத்தில் அசீரிய அரசுக்குப் பெரும் இடையூறாக இருந்தனர். அசீரியர்கள் அவர்களை வெல்ல முடியாமல் போகவே ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டியதாயிற்று. இவர்களைப் போன்ற பிற நாடோடிக் கூட்டங்களால் துரத்தப்பட்ட இவர்கள் மத்திய ஆசியாவிலும் ஐரோப்பாவில் கருங்கடல் மற்றும் தானுபுக்கு வட பகுதியிலும் குடியேறினர். இவர்களின் வட எல்லையான தானுபு நதிக்கரை கி.மு. 512-இல் பாரசீக மன்னன் முதலாம் தாரியுவால் தாக்கப்பட்டது.

எரோதோத்து என்ற வரலாற்று ஆசிரியர் சித்தியர்களின் தாக்குதலைப்பற்றிக் கூறும் பொழுது இவர்கள் சீரியா, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் புகுந்து எகிப்திய எல்லை வரையிலும் சென்றதாகக் கூறுகிறார். இதனையே எரே 1:13-15; 4:5-6:26 ஆகிய பகுதிகள் குறிக்கின்றன என்று பலர் கருதுகின்றனர். சித்தியர்களின் தாக்குதலால் எழுந்த பயம்தான் செப்பனியா நூலுக்கும் எரேமியாவின் சில வாக்குகளுக்கும் சந்தர்ப்பமாயிற்று என்று சிலர் கருதுவர். சமீபகால வல்லுநர்கள் பலர் இதை ஏற்க மறுப்பர். பழைய ஏற்பாட்டில் இவர்களைப் பற்றிய குறிப்பே இல்லை என்பர். கிரேக்கர்களின் காலகட்டத்தில் பெத்-சான் என்ற நகரம் இவர்களின் பெயரைத் தாங்கி ஸ்கூத்தோபொலி என்றழைக்கப்பட்டது. மக்கபேயர் நூல் இவர்களின் காட்டுமிராண்டித் தனத்தைச் சுட்டிக் காட்டுகிறது (2 மக் 4:47). இதன்விளைவாகக் கிரேக்கர்கள் நடுவே ''சித்தியனாக நடந்து கொள்ளுதல்'' என்னும் சொற்றொடர் முரட்டுத்தனமாய் நடப்பவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

பவுல் கொலோ 3:11-இல் எவ்வினத்தாராயினும் கிறிஸ்துவில் ஒருவரே என்று கூறும் போது சித்தியர் இனத்தையும் குறிப்பிடுகின்றார்.

சித்திர எழுத்துமுறை (HIEROGLYPHS)

இப்பெயர் தொன்மையான எகிப்திய எழுத்துமுறையைக் குறிக்கிறது. இம்முறையில் எழுத்துக்கள் அவை குறிக்கும் பொருட்களையே ஓவிய வடிவம் போல அமைத்தன. பொதுவாக இவை கற்களின் மேல் பொறிக்கப்பட்டன. சில சமயங்களில் புல்தாள்களில் எழுத்தாணியால் வரையப்பட்டன.

இவ்வெழுத்துக்கள் எழுத, அதிக இடம் தேவைப்பட்டதால், இதன் அளவுகளைக் குறைத்து, சிறிய பொருள் வடிவ எழுத்துமுறையை உருவாக்கினார்கள். பிறகு இவை பாரசீகர் காலத்தில், .மக்களுக்கு வசதியான முறையில் எளிமையாக்கப்பட்டது. இத்தியர்கள் தங்கள் மொழியை எழுத, ஒரு தனிப்பட்ட பொருள் வடிவ எழுத்துமுறையை அமைத்துக்கொண்டனர்.

சித்தீம் மரம் (ACACIA)

ஒருவகை மரத்தையும் அதன் கட்டையையும் குறிக்கும் சொல். உடன்படிக்கைப் பேழை, பீடம் மற்றும் திருஉறைவிடத்தைச் சேர்ந்த பொருட்களைச் செய்வதில் பயன்பட்ட மரம். அச்சூழ்நிலையிலேயே அடிக்கடி கூறப்படுகிறது (யாத் 25-27; 30:35-38).மேசை, பெட்டகம் போன்ற கடினப் பொருட்களைத் தயார் செய்ய மிகவும் பயன்படுகிறது. ஏனெனில் அதன் கட்டை கடினமானது, பூச்சிகளால் அதிகம் பாதிக்கப்படாதது. நெகேபு, சீனாய் பாலைவனப் பகுதிகளில் நிறையக் கிடைக்கின்றது. நீடித்து உழைக்கக்கூடியது. சித்திம், ஆபல் - சித்திம், பெத் - சித்திம் போன்ற பெயர்கள் இம்மரங்கள் அதிகமாக வளர்ந்து காணப்பட்ட இடங்களின் பெயர்களே. சிலர், யாத் 3:2-3-இல் காணப்படும் எரியும் முட்புதர் இம்மரத்தின் சிறியவகை என்பர். அரேபியாவில் இம்மரங்கள் பிசின் உற்பத்திக்குப் பெரிதும் உதவுகின்றன. எசா 41:19-இல் வறண்ட

பாலைநிலத்தில் வளரும் மரங்களில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது.

சித்ரி (SITHRI - மறைக்கப்பட்ட)

லேவியின் வம்சத்தில் வந்த உசியேலின் மூன்றாவது மகன் (யாத் 6:22). மோசேக்கு உறவினர்.

சித்னா (SITHNA - பகைமை, வெறுப்பு, அவதூறு)

ஈசாக்கு வாழ்ந்த இடத்தில் பஞ்சம் உண்டானபடியால் பெலிஸ்திய அரசனான அபிமெலக்கைக் காணச் சென்றார். அவ்வாறு சென்றபொழுது கெரார் என்ற பள்ளத்தாக்கில் தண்ணீருக்காகக் கிணறு தோண்டியபொழுது அபிமெலக்கின் மேய்ப்பர்கள் அதற்கு உரிமை கொண்டாடியதால் அதற்கு 'அவதூறு' என்ற பொருளில் சித்னா எனப் பெயரிட்டார் (ஆதி 26:18-19). இது கெராருக்குத் தெற்கிலும் பெயேர் - செபாவுக்கு மேற்கிலுள்ள பகுதியிலுள்ள இரகாபோத்து (2)-க்கு வடக்கிலும் இருந்திருக்க வேண்டும்.

சிந்திக்க (SYNTYCHE - நற்பேறு, பொருத்தம், வெற்றி)

பிலிப்பியிலுள்ள திருச்சபையைச் சேர்ந்த ஒரு பெண்; பவுல் இந்தப் பெண்ணை எயோதியாளுடன் ஒற்றுமையாக இருக்கும்படி அறிவுறுத்துகின்றார் (பிலி 4:2-3).

சிபகாய் (SIBBECAI - நெசவாளர்)

கூசா (ஊசா) நகரத்தைச் சேர்ந்த செரகியர். தாவீதின் குறிப்பிடத்தக்க 30 படை வீரர்களில் ஒருவர். இவர் பெலிஸ்தியரோடு நிகழ்ந்த போரில் பெலிஸ்திய அரக்கன் சாபுவை (2 சாமு 21:18) அல்லது சிபாயைக் (1 நாள் 20:4) கொன்றார். தாவீது அரசனின் எட்டாவது பிரிவு படைக்குத் தலைவராவார் (1 நாள் 27:11). 2 சாமு 23:27-இல் இவரது பெயர் மெபுன்னாய் என்றுள்ளது. இது தவறான வாசகமாய் இருக்கலாம்.

சிபமோத்து (SIPHMOTH - செழிப்பான)

தெற்கு யூதாவில் உள்ள ஒரு கிராமம். தாவீது அரசர் அமலேக்கியரை வெற்றி கொண்ட பிறகு கொள்ளையிட்ட பொருளின் ஒரு பகுதியை இக்கிராமத்திற்குத் தனது நன்றியை வெளிப்படுத்த அனுப்பிவைத்தார் (1 சாமு 30:28; 1 நாள் 27:27). இன்று இதன் அமைவிடத்தைப் பற்றிக் குறிப்பு இல்லை. தாவீதின் திராட்சைத் தோட்ட மேற்பார்வையாளரான ''சிபமியரான்'' சபதி (1 நாள் 27:27) சிபமோத்திலிருந்து வந்தவராக இருக்கலாம்.

சிபயோன் (ZIBEON - கழுதைப்புலி, கொள்ளைக்காரன்)

இவர் ஏதோம் நாட்டில் இருந்த கோரியரான சேயிரின் மூன்றாம் மகன் ஆவார் (ஆதி 36:20.24.29; 1 நாள் 1:38.40). அனாவின் தந்தையும், ஏசாவின் மனைவியான ஒகோலிபாமாவின் பாட்டனும் ஆவார் (ஆதி 36:14).

சிபா (SHIBAH - ஆணையிடுதல்)

ஈசாக்கினால் வெட்டப்பட்டதாகக் கருதப்படும், ஒரு கிணற்றின் பெயர்; பெயேர் - செபா என்ற பெயரின் மூலம் ஆகும் (ஆதி 26:33). இங்குக் கொடுக்கப்பட்டுள்ள விவரம் ஆதி 21:25-இல் கொடுக்கப்பட்டுள்ளதற்கு மாறுபட்டுள்ளது. ஆனால் இரண்டு பகுதிகளிலும் ஒரு குல மூதாதையர் கெராரின் அரசனோடு ஒப்பந்தம் செய்ததாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆபிரகாம் நிகழ்ச்சியில் அவர் உடன்படிக்கையின் அடையாளமாய் ஏழு ஆடுகளைக் கொடுத்ததாலும், இரண்டாவது நிகழ்ச்சியில் ஈசாக்கும் அபிமெலக்கும் ஆணையிட்டதாலும் 'சிபா' எனப் பெயர் ஏற்பட்டது.

அனேகமாகச் சிபா, பெயேர் - செபா என்ற இரண்டு நகரங்கள் ஒன்றாகி இருக்கலாம். பெயேர் - செபா காலப்போக்கில் புகழ்வாய்ந்ததாக இருந்ததால் இரு நிகழ்ச்சிகளையும் அந்தப் பெயருடன் தொடர்புபடுத்தினர். ஆனால் ஈசாக்கின் நிகழ்ச்சியோடு இது மிகவும் பொருந்துகின்றது. சிபா இக்காலத் தேல் எஸ் - சபாவாக இருந்திருக்கலாம் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

சிபாய் (SIPPAI)

சாபு என்ற பெயரின் மற்றொரு வடிவம்.

சிபி (SHIPHI - ஏராளம், அனேகம்)

சிமியோன் குலத்தைச் சேர்ந்த செமயா வின் வழித்தோன்றல், அல்லோனின் மகன். சோவின் தந்தை (1 நாள் 4:37).

சிபிமா (SIBMAH - நறுமணமுள்ள)

யோர்தானுக்கு அப்பாலுள்ள புல்வெளிச் சமவெளியில் உள்ள ஓர் ஊர் (எண் 32:3). எமோரிய அரசன் சீகோன் தோற்கடிக்கப்பட்ட பின் இந்த ஊர் ரூபன் குலத்திற்குக் கொடுக்கப்பட்டது (எண் 32:38; யோசு 13:19). மோவாபியருக்கு எதிரான திருவாக்கு கள் கூறப்பட்ட காலத்தில் (எச 16:8-9; எரே 48:32) இது மோவாபியருக்குச் சொந்தமாய் இருந்தது. அக்காலத்தில் இங்குத் திராட்சைத் தோட்டங்கள் சிறப்புற்று இருந்தன. இவை ''அழிப்போனால்'' அழிக்கப்பட்டன.

எரோனிமுவின் கூற்றுப்படி இந்த ஊர் கெஸ்போனுக்கு (எஸ்போன்) மிக அருகில் இருந்தது. இது இருந்த இடம் சரியாகத் தெரியவில்லை. கெஸ்போனுக்குத் தென் மேற்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள குருன் ஏல் - கிபெசாக இருக்கலாம்.

சிபிமியர் (SHIPHMITE)

செபாம் (எண் 34:10-11) அல்லது சிப மோத்து (1 சாமு 30:28)-ஊரைச் சேர்ந்தவர். தாவீதின் அரச திராட்சைத் தோட்டங்களைக் கண்காணித்துவந்த சபதியின் இனப்பெயரா கும் (1 நாள் 27:27).

சிபியா (ZIBIA - கலைமான்)

பென்யமின் குலத்திலே பிறந்த இவர் குடும்பத்தலைவராய் இருந்தார். இவர் ஏதோம் நாட்டிலே சகரயிம், கோதேசு (ஒதேசு) ஆகியோருக்குப் பிறந்த ஏழு புதல்வர்களுள் ஒருவர் (1 நாள் 8:9).

சிபியா (ZIBIAH - கலைமான்)

இவள் யூதாவின் அரசனாகிய யோவாசின் தாய் (2 அர 12:1; 2 நாள் 24:1).

சிபியோன் (ZIPHION)

இவர் காதின் மூத்தமகன் (ஆதி 46:16). எண் 26:15-இல் இவர் செபோன் என்றழைக் கப்படுகிறார்.

சிபிராயிம் (SIBRAIM - நம்பிக்கையுள்ள)

கானான் நாட்டு வட எல்லையில் தமஸ்கு வுக்கும் கமாத்துக்கும் (ஆமாத்து) இடையில் அமைந்திருந்த ஓர் இடம் (எச 47:16). ஒரு வேளை ''கம்ஸ்'' என்னுமிடத்துக்கு அரு கில் இருந்திருக்கலாம். இதுவும் செபர்வயி மும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

சிபிரோன் (ZIPHRON - வாசனைப்பொருள்)

கசர் -ஏனான் (அட்சரேனான்) (எண் 34:9) அருகில் கானானின் வடக்கு எல்லையில் உள்ள நகரம். எங்கு இருந்தது என்று கூறுவ தற்கில்லை.

சிபோலத்து (SHIBBOLETH - தானியக்கதிர், பெருவெள்ளம்)

யோர்தானைக் கடக்க முயற்சி செய்த எப்பிராமியர்களைக் கண்டுபிடிக்கக் கில யாத்தியர் பயன்படுத்திய சொல் (நீதி 12:5-6). எப்பிராமியர்கள் எபிரேய மொழியின் ஒரு தனிப்பிரிவைப் பேசியதால் இச்சொல்லைப் பாலஸ்தீனத்தில் உச்சரிக்கப்படுவதிலிருந்து சிறிது வேறாக உச்சரிப்பர்.

சிப்தான் (SHIPHTAN - தீர்ப்பு)

யோர்தானுக்கு மேற்கிலுள்ள கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிட் டுக்கொடுக்க நியமிக்கப்பட்டவர்களுள் ஒரு வரான எப்பிராயிம் கோத்திரத்தின் தலை வன் கெமுவேலின் தந்தை (எண் 34:24).

சிப்பா (ZIPHAH - ஆற்றொழுக்கான)

எகலலேலின் இரண்டாவது மகன். யூதா கோத்திரத்தில் ஒரு குடும்பத்தின் அல்லது குலத்தின் பெயர் (1 நாள் 4:16).

சிப்போரா (ZIPPORAH - சிட்டுக்குருவி, பறவை)

சிப்போரா மிதியானிய குரு இரகுவேலின் ஏழு புதல்வியருள் ஒருத்தியும் மோசேயின்

முதல் மனைவியும், கேர்சோம் (2 யாத் 2:22), எலியேசர் (18:3-4) ஆகியவர்களின் தாயும் ஆவாள் (யாத் 2:16.21-22). யாவே பாரம்பரியம் பின்வரும் நிகழ்ச்சியைக் கூறுகின்றது. மோசேயும் அவரது குடும்பத்தாரும் மிதியானிலிருந்து எகிப்துக்குச் சென்று கொண்டிருக்கையில் யாவே மோசேயைக் கொல்லத் தேடினார். உடனே சிப்போரா தன் மகனுக்கு விருத்தசேதனம் செய்தாள். இதனால் ஆண்டவர் மோசேயை விட்டுவிட்டார் (யாத் 4:24-26). பின் அவளையும், அவள் பிள்ளைகளையும் இத்திரோ (இரகுவேலின் மறு பெயர்) அழைத்துக் கொண்டு போய்விட்டார். பின்பு சீனாய் மலைக்குக் கொண்டு சென்றார் (18:1-7).

சிப்போர் (ZIPPOR - பறவை, குருவி)

இவர் பிலயாமை இஸ்ராயேல் மக்களைச் சபிக்கும்படி அழைத்து வந்த மோவாபிய மன்னன் பாலாக்கின் தந்தை ஆவார் (எண் 22:2.4.10.16; 23:18; யோசு 24:9; நீதி 11:25).

சிப்ரா (SHIPHRAH - அழகு)

எல்லா இஸ்ராயேல் ஆண் பிள்ளைகளையும் கொல்லுவதற்காக எகிப்து அரசனால் ஆணையிடப்பட்ட இரண்டு எபிரேய மருத்துவச்சிகளில் ஒருத்தி (யாத் 1:15-16). இப்பெயர் எகிப்திய அடிமைகளின் பட்டியலில் இடம் பெறுகிறது; இதன் பொருள் 'அழகுடைய' என்பதாகும். பிற்கால யூதக்கதைகள் சிப்ராவை யோக்கபேதுவுடன் ஒன்றுபடுத்துகின்றன.

சிமயா (SHIMEA - இறைவன் கேட்டருளினார்)

1. ஈசாயின் மூன்றாவது மகன் (1 சாமு 16:9; 17:13). தாவீது அரசனின் சகோதரர் (1 நாள் 2:13). பெலிஸ்திய அரக்கனைக் கொன்ற (20:7) யோனதாபு (1) (2 சாமு 13:3.32) யோனத்தான் (4) (2 சாமு 21:21; 1 நாள் 20:7) ஆகியவர்களின் தந்தை. சிமயா, சம்மா (2) என்றும் (1 சாமு 16:9; 17:13), சிமெயா (1) என்றும் (2 சாமு 13:3.32) சிமயி (3) என்றும் (21:21) அழைக்கப்படுகிறார்.

2. எருசலேமில் பிறந்த தாவீதின் புதல்வர்களுள் ஒருவர் (1 நாள் 3:5). இவர் சம்மூவா (2) என்றும் (2 சாமு 5:14; 1 நாள் 14:4) அழைக்கப்படுகிறார்.

3. மெராரி குடும்பத்தில் ஒரு லேவியர் (1 நாள் 6:30).

4. கேர்சோமின் குடும்பத்தில் ஒரு லேவியர். பெரக்கியாவின் தந்தை (1 நாள் 6:39).

5. பென்யமின் குலத்தவர். எயியேலின் வழித்தோன்றல் (1 நாள் 8:32; 9:38).

சிமயாத்தியர் (SHIMEATHITES)

யகபேசில் குடியிருந்த மூன்று எழுத்தர்களின் குடும்பங்களில் ஒன்று. இவர்கள் காலேபின் சந்ததியர் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் கேனியர்களாகவோ இரேக்காபியர்களாகவோ இருக்கலாம் (1 நாள் 2:55).

சிமயாத்து (SHIMEATH)

யூதாவின் அரசனான யோவாசைச் சதி செய்துகொன்ற அவரின் பணியாளர்களில் ஒருவனின் தாய் (தந்தை). 2 அர 12:21-இன் படி இக்கொலைகாரரின் பெயர் யோசக்கார், 2 நாள் 24:26-இன்படி சாபாது அல்லது யோசபாது ஆகும்.

சிமயாம் (SHIMEAM)

பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர். மிக்லோத்தின் மகன் (2 நாள் 9:38). 8:3-இல் சிமெயா (2) என்றும் அழைக்கப்படுகிறார்.

சிமயி (SHIMEI - யாவே கேட்டருளினார்)

1. இது ஒரு பெயர்ச்சொல். லேவியின் பேரன். கேர்சோனின் (கேர்சோமின்) இரண்டாவது மகன். எனவே இவர் லேவியின் குடும்பத்திலிருந்து தோன்றிய உட்பிரிவை நிறுவியவர் (யாத் 6:17; எண் 3:18; 1 நாள் 6:17; 23:7.10). இவர்கள் சிமயியர் என்றழைக்கப்படுகின்றனர் (எண் 3:21; செக் 12:13). 1 நாள் 23:9-10-இல் சிமயியின் புதல்வர்களைப்பற்றி இரு பட்டியல்கள் கொடுக்கப்

படுவதால் கேர்சோமுக்குச் சிமயி என்ற பெயருடைய மற்றொரு மகனும் இருந்திருக்கலாம் என்று சிலர் கருதுவர்.

2. இவர் சவுல் மன்னனின் குடும்பத்தைச் சார்ந்தவர். தாவீது அப்சலோமுக்குத் தப்பி பகூரிமைக் கடந்து சென்றபோது இவர் அவரை வசை மொழிந்து கல்லால் எறிந்தார். மேலும் தாவீது சவுல் மன்னரின் குலத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததோடு பல கொலைக் குற்றங்களைச் செய்ததாகவும் இவர் குற்றம் சாட்டினார். ஆனால் தாவீது இவருடைய வார்த்தை இறைவனின் வார்த்தையெனக் கருதி இவரைக் கொல்லவில்லை (2 சாமு 16:5-13). தாவீது அப்சலோமின் புரட்சியை அடக்கிய நேரத்திலே சிமயி தாவீதிடம் மன்னிப்பை மன்றாடவே அவரும் அவனை மன்னித்தார். அவரைத் தண்டிப்பதில்லை எனச்சத்தியமும் செய்து கொடுத்தார் (29:16-23). ஆனால் சாலமோன் மன்னர் சிமயி வசைமொழியை நீக்க அவரைக் கொல்ல வழி தேடினார் (1 அர 2:8-9). சாலமோன் சிமயியிடம் எருசலேமிலேயே தங்கியிருக்கும்படி கூற அவர் அந்தக் கட்டளையை மீறியதால் அவரைக் கொன்றார் (2:36-46).

3. ஈசாயின் மூன்றாவது மகன். தாவீது அரசனின் சகோதரர் (2 சாமு 21:21). இவர் 1 நாள் 2:13-இல் சிமயா (1) என்றழைக்கப்படுகிறார்.

4. அதோனியா அரசாட்சியை ஆக்கிரமிக்க நினைத்தபோது சிமயி அதோனியாவை ஆதரிக்கவில்லை; சாலமோனை ஆதரித்தார் (1 அர 1:8).

5. எலாவின் மகன்; பென்யமின் பகுதியில் சாலமோனின் ஆளுநராக இருந்தவர் (1 அர 4:18). இவரும் 4-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

6. இவர் செருபாபேலின் சகோதரர் (1 நாள் 3:19).

7. சிமியோன் கோத்திரத்தின் ஒரு பிரிவு அல்லது குடும்பம். சக்கூரின் மகன். இவருக்குப் பதினாறு புதல்வர்களும் ஆறு புதல்விகளும் (1 நாள் 4:26-27) இருந்தனர்.

8.ரூபன் இனத்தைச் சேர்ந்த கோகுவின் மகன் (1 நாள் 5:4).

9. மெராரி குடும்பத்தில் தோன்றிய லேவியர் (1 நாள் 6:29).

10. கேர்சோமியக் குடும்பத்தில் தோன்றிய லேவியர் யாகத்தின் மகன் (1 நாள் 6:42).

11. பென்யமின் குலத்தைச் சார்ந்த ஒரு குடும்பத் தலைவன். ஒருவேளை இவர் செமா (3) ஆக இருக்கலாம் (1 நாள் 8:13.21).

12. எதுத்தூனின் புதல்வர்களில் ஒருவர். தாவீது காலத்தில் ஆலய இசைக்கலைஞர்களின் பத்தாவது பிரிவின் தலைவர் (1 நாள் 25:3.17).

13. இராமாவைச் சேர்ந்தவர். தாவீதின் உடைமைகளைக் கண்காணித்தவருள் ஒருவர். இவர் திராட்சைத் தோட்டங்களைக் கண்காணித்தார் (1 நாள் 27:27).

14 ஏமான் குடும்பத்தில் பிறந்த லேவியர். இவர் எசேக்கியா காலத்தில் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தினார் (2 நாள் 29:14).

15. அரசன் எசேக்கியாவுக்குச் சமகாலத்திய லேவியரான இவர் ஆலயக் குருக்களுக்காகப் பெறப்படும் வரியையும் மற்றக் கொடைகளையும் கண்காணித்தார் (2 நாள் 31:12-13).

16. எஸ்ராவின் சீர்திருத்தக் காலத்திலே பிறஇன மனைவிகளை விலக்கிய ஒருலேவியர் (எஸ் 10:23).

17. எஸ்ராவின் சீர்திருத்தக் காலத்திலே பிறஇனமனைவிகளைவிலக்கிய காசூமின், (ஆசம்) புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:33).

18. எஸ்ராவின் காலத்திலே பிறஇன மனைவிகளை விலக்கிய பின்னூயின் புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:38).

19. பென்யமின் குலத்துக் கீசின் வழித் தோன்றல். மொர்தெக்காயின் மூதாதையர் (எஸ்த 2:5).

சிமால்கு (SIMALCUE)

இமால்கு என்ற பெயரின் மற்றொரு வடிவம். காண்க. இமால்கு.

சிமியோனின் பாடல் (NUNC DIMITTIS)

சிமியோனின் பாடல் (லூக் 2:29-32) லூக்கா நற்செய்தியில் இயேசுவின் குழந்தைப் பருவத்தைப்பற்றி உள்ள பகுதியில் உள்ள மூன்று பாடல்களில் ஒன்று. இது மீட்பரின் வருகைக்காக நன்றி கூறும் பாடல். இம்மீட்பர் இஸ்ராயேலுக்கு ''மாட்சிமையும்'' புறவினத்தாருக்கு ''ஒளியும்'' ஆவார் (காண்க எசா 29:6;52:10). இவ்வாறு இப்பாடல் லூக்கா நற்செய்தி, அப்போஸ்தலர் பணி முதலியவற்றின் மையக்கருத்தை வலியுறுத்துகிறது. இப்பாடல் கிழக்குத் திருச்சபையில் மாலைச் செபத்திலும், மேற்கத்திய திருச்சபையில் இரவுச் செபத்திலும் பயன்படுத்தப் படுகிறது.

சிமியோன் (SHIMEON - இறைவன் கேட்டருளினார்)

அன்னிய மனைவியை நீக்கிவிட்டவர் பட்டியலில் ஒருவர்: எஸ்ராவின் காலத்தில் வாழ்ந்தவர் (எஸ் 10:31).

சிமியோன் (SIMEON - இறைவன் கேட்டருளினார்)

1. யாக்கோபுக்கு லேயா வழியாகப் பிறந்த இரண்டாவது மகன். இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தின் குலப்பெயர் மூதாதையர்.

சிமியோன் தன் சகோதரன் லேவியோடு சேர்ந்து தங்கள் சகோதரி தீனாவைக் கற்பழித்ததற்காகச் செக்கேமிலுள்ள எல்லா ஆண்களையும் கொன்று பழிதீர்த்தார் (ஆதி 34:25-26). பிற்காலத்தில் யாக்கோபின் புதல்வர்கள் உணவு தேடி எகிப்து சென்றபோது, யோசேப்பு சிமியோனைப் பிணைக்கைதியாக வைத்துக் கொண்டு மற்றவர்களை அவர்களது இளைய சகோதரனைக் கொண்டு வர அனுப்பினார் (42:24.36; 48:33). யாக்கோபு எகிப்து வந்து சேர்ந்தபோது, சிமியோனுக்கு ஆறு புதல்வர்கள் இருந்தனர் (46:10; யாத் 6:15). சில பட்டியல்களில் சிமியோனின் ஐந்து புதல்வர்களின் பெயர்களே கொடுக்கப் பட்டுள்ளன (எண் 26:12-14; 1 நாள் 4:24). யாக்கோபு தனது புதல்வர்களை ஆசீர்வதித்தபோது லேவி, சிமியோன் ஆகியோரின் வழித்தோன்றல்கள், பிற கோத்திரங்களிடையே சிதறிப் பரவிப்போய்விடுவர் என்று முன்னறிவிக்கிறார் (ஆதி 49:5-7).

பாலைவனத்தில் எடுக்கப்பட்ட முதல் கணக்கெடுப்பிலிருந்து மற்றதற்குச் சிமியோனில் போர் செய்யத் தகுதியுடையவர்களின் எண்ணிக்கை 59300-இலிருந்து 22000-ஆகக் குறைகிறது. கோத்திரங்களுக்கு மோசே அளித்த ஆசிரில் (உப 33) சிமியோன் பெயர் இடம் பெறவில்லை. ஆனால் இந்தக் கோத்திரம் உப 27:12-13-இல் குறிக்கப்படுகிறது. தாங்கள் வழிபாட்டில் கொண்டிருந்த பாகத்தால் லேவியர் தங்கள் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டனர். ஆனால் சிமியோனியர், ஒரு கோத்திரம் என்ற அளவில் தங்களது தனித்தன்மையைக் காலப்போக்கில் இழந்துவிட்டனர். கானானில் சில நகரங்கள் சிமியோனுக்கு அளிக்கப்பட்டன. ஆனால் சிமியோனுக்குரிய பகுதி, யூதாவுக்கு அளிக்கப்பட்டதன் தென்பகுதியில் உள்ளடங்கிப்போயிற்று (யோசு 19:1-9; 15:26-32; நீதி 1:3). கெபிரோனில் சிமியோனியரில் பல வீரர்கள் தாவீதோடு சேர்ந்து கொண்டது சிமியோனியர் யூதாவுக்குக் காட்டிய பிரமாணிக்கத்தைப் பிரதிபலிக்கிறது (1 நாள் 12:25). தாவீதின் ஆட்சிக் காலத்தில் சிமியோனுக்கு உரிய பகுதி என்ற கருத்துக்கே இடமில்லை. இது, புதிய அரசியல் நிர்வாக மாற்றங்களின் விளைவாக இருக்கலாம் (4:31).

அரசாட்சிக் காலத்தின் முடிவுக்காலத்தில் சிமியோனியர் ஒரு குழுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர் (2 நாள் 15:9; 34:6). எசேக்கியாவின் ஆட்சிக்காலத்தில் சிமியோனியர்,

தங்களுக்குரிய பகுதியின் மேற்கிலும் தெற்கிலும் இருந்த மேய்ச்சல் நிலங்களை இஸ்ராயேலர் அல்லாதவர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர் (1 நாள் 4:32-43).

எசேக்கியேலின் இறுதிக்காலச் சீர் அமைப்பில் சிமியோன் கோத்திரமும் இடம் பெறுகிறது (எசே 24-25.33; திருவெளி 7:7).

2. மத்தத்தியாவின் (1) தாத்தா (1 மக் 2:1).

3. சீமோன் மக்கபேயர். சீமோன் என்பது சிமியோன் என்ற எபிரேயப் பெயரின் கிரேக்க வடிவமாகும். இவர் மத்தத்தியாவின் (1) இரண்டாவது மகனும் யூதா மக்கபேயரின் மூத்த சகோதரனுமாவார் (1 மக் 2:65). காண்க: சீமோன் மக்கபேயர்.

4. இயேசு பிறந்தபோது எருசலேமில் வாழ்ந்துவந்த ஒரு ''நீதிமானும் கடவுள் பக்தரும்'' ஆவார் (லூக் 2:25-35). இஸ்ராயேலுக்கு மீட்புகொண்டு வரும் மெசியா பற்றிய நம்பிக்கை நிறைவேறுதலாகிய ''இஸ்ராயேலரின் ஆறுதலுக்காகக்'' காத்திருந்தவர் (எசா 40:1; 49:7-10; 51:3; 61:2; 66:13; மாற் 15:43). இவர் ''ஆண்டவரின் கிறிஸ்துவைக்'' காணும்முன் தாம் சாவதில்லை என்று வாக்குப் பெற்றிருந்தார். இயேசு ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட போது, சிமியோன் குழந்தையை மீட்பர் என்று வாழ்த்தினார்; மரியாளையும் யோசேப்பையும் வாழ்த்தினார். இயேசுவும் மரியாளும் பற்றிய நிகழ்ச்சிகளை முன்னறிவித்தார்.

இவர் பாடியதாகக் கூறப்படும் ''ஆண்டவரே, இப்போது உம் அடியானை அமைதியாகப் போகவிடும்'' என்ற குறுகிய பாடல், குருக்களின் கட்டளைச் செபத்தில் இரவுச் செபத்தில் தினமும் பயன்படுத்தப்படுகிறது. இப்பாடல் தனக்கும் (2:29-30), இஸ்ராயேலுக்கும் உலகனைத்துக்கும் (2:31-32) இறைவன் அளித்துள்ள கொடைக்குச் சிமியோனின் நன்றியை எடுத்துக் கூறுகிறது. இச்சிறு பாடலில் காணப்படும் சுட்டிக்காட்டல்கள் சிமியோனின் விசுவாசத்தில் மெசியாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மைய இடத்தைக் காட்டுகிறது (எசா 40: 3-5 மற்றும் 52:10 (லூக் 3:4-6); எசா 42:6 மற்றும் 49:6 (ஊழியனைப்பற்றிய பாடல்கள்); எசா 46:13 (லூக் 2:32) எசா 25:7; 60:2-3).

லூக் 2:33-35 கூற்று மெசியாவின் தோற்றத்தோடு உடன்வரும் துன்பத்தைத் தெளிவாகச் சுட்டுகிறது. அவரது வருகை அடையாளமாகவும் (எசா 11.14; லூக் 11:30-32) பலருக்குத் தீர்ப்பாகவும் (எசா 8:14-15; மத் 21:42-43; யோவா 9:39; 16:8-11; 1 கொரி 1:23; 1 பேதுரு 2:8), அவரது தாய்க்குத் துன்பமாகவும் அமையும் (லூக் 2:35).

5. தாவீதின் காலத்திற்கும் நாடுகடத்தலுக்கும் இடையில் வாழ்ந்த இயேசுவின் மூதாதையர் (லூக் 3:30).

6. சீமோன் பேதுருவின் எபிரேயப் பெயர் (அ.ப.15:14; 2 பேதுரு 1:1). காண்க. பேதுரு.

சிமிரியர் (CIMMERIANS)

விவிலியத்தில் காணப்படுகின்ற கோமேர் என்ற மக்களின் கிரேக்கப் பெயராகும்.

சிமிர்னா (SMYRNA)

சிறிய ஆசியாவில் உள்ள ஒரு நகரம். யோவான் தனது காட்சியாகமத்தில் எழுதும் ஏழு திருச்சபை அரியணைகளில் இதுவும் ஒன்று (திருவெளி 1:11; 2:8). இந்த இடத்தில் சிறிய ஆசியாவிலேயே மிகப்பெரிய நகரமாகிய இக்கால இசிமிர் இன்று அமைந்துள்ளது. கெர்முஸ் ஆற்றுநீர் வடியும் வளைகுடாவை ஒட்டி அமைந்துள்ளது. ''பழைய சிமிர்னா'' இவ்வளைகுடாவின் வடகிழக்கில் அமைந்திருந்தது. இது எப்போது நிறுவப்பட்டது என்று கூறமுடியாது. லீதியாவின் அரசனான ஆலியாத்தெக இதனைக் கி.மு. 627-இல் கைப்பற்றினார். அவரது ஆட்சியில் அடுத்த 300 ஆண்டுகளுக்கு இவ்விடத்தில் சிறு கிராமம் மட்டுமே இருந்தது. மகா அலக்சாந்தர் சர்தையை வென்றபின் இன்றுள்ள இடத்தில் இந்நகரம் நிறுவப்பட்டது. ஒரு முக்கிய கிழக்கு - மேற்கான வியாபாரச் சாலையின் முடிவில் இருந்தா

லும், ஒரு சிறந்த துறைமுகத்தைக் கொண்டிருந்ததாலும் உரோமையர் காலத்தில் செல்வத்திலும் கட்டடங்களிலும் சிறப்புப் பெற்றிருந்தது. மருத்துவ அறிவியல் மையமாக விளங்கியது. பொருளாதாரத்திலும், அரசியலிலும் எபேசு நகரை அடுத்திருந்தது. இங்குக் கிறிஸ்துவ சமூகம் தோன்றிய காலத்தைப்பற்றியோ தோற்றுவித்தவரைப் பற்றியோ எந்தவிதக் குறிப்பும் இல்லை. ஆனால் எபேசில் பவுல் ஆற்றிய பணியிலிருந்து இங்குக் கிறிஸ்தவ சமூகம் தோன்றியிருக்கலாம் (அ.ப. 19:9-10). சிமிர்னாத் திருச்சபைக்கு எழுதப்பட்டமடல் (திருவெளி 2:8-11) இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் வறியவர்கள் என்றும், நகரில் வாழ்ந்த யூத சமூகத்தோடு சச்சரவுகள் ஏற்பட்டன என்றும் (2:9) கிறிஸ்தவ சமூகம் துன்புறுத்தப்பட்டது என்றும் (2:10) சுட்டுகிறது. யூத, கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையே தொடர்ந்து நிலவிய பகைமை கி.பி. 156-இல் சிமிர்னா ஆயரான போலிக்கார்ப்பின் மறைசாட்சி மரணத்தை விளக்குகிறது.

சிமெ்யா (SHIMEAH - இறைவன் கேட்டருளினார்)

1. ஈசாயின் மூன்றாவது மகன். தாவீதின் சகோதரன் (2 சாமு 13:3.22). இவர் 1 நாள் 2:13-இல் சிமயா என்றும் 1 சாமு 16:9; 17:13-இல் சம்மூவா என்றும், 21:21-இல் சிமயி என்றும் அழைக்கப்படுகிறார்.

2. பென்யமின் குலத்தைச் சேர்ந்த மிக்லோத்தின் மகன் (1 நாள் 8:32). 9:38-இல் இவர் சிமயாம் என்றழைக்கப்படுகிறார்.

சிமெயோன் (SYMEON)

1. அந்தியோக்கியாவிலே இருந்த திருச்சபையிலே பர்னபா மற்றும் சிலருடன் இருந்த யூதக் கிறிஸ்தவ போதகரும் இறைவாக்கினரும் ஆவார். இவரின் சிறப்புப் பெயர் நீகர் ஆகும் (அ.ப. 13:1). ஆகவே கருப்பராய் இருந்திருக்கலாம்.

2. சீமோன் பேதுருவின் மற்றொரு பெயர். இதை யாக்கோபு பயன்படுத்துகிறார் (அ.ப. 15:14; 2 பேதுரு 1:1).

சிம்சாய் (SHIMSHAI - ஒளிமயமான சூரியன்)

''ஆற்றிற்கு அப்பால்'' பாலஸ்தீனம் உட்பட உள்ள மாநிலத்தின் பாரசீக உயர் அதிகாரி. இவரின் பெரிய அதிகாரியாகிய இரகூமும் இவரும் சேர்ந்து அரசன் அர்த்தக்சஸ்தாவுக்கு இஸ்ராயேல் மக்கள் நாடுகடத்தப்பட்டபின் எருசலேமை மீண்டும் கட்டுவதை எதிர்த்து மடல் எழுதினார் (எஸ் 4:8-16). அங்கிருந்து ஒப்புதல் கடிதம் பெற்றுக்கொண்டு தங்களின் கூட்டாளிகளுடன் சேர்ந்து அந்த வேலையைத் தடுத்து நிறுத்தினான் (எஸ் 4:17-24).

சிம்சோன் (SAMSON - சூரியன் போன்ற சிறிய சூரியன்)

இந்தச் சொல்லின் சொல்லிலக்கணம் சம்பந்தப்பட்ட விளக்கம் சில முந்தைய அறிஞர்களை, சிம்சோன் ஒரு புராணப் படைப்பு என்று எண்ணத்தூண்டியது. இந்தக் கருத்து இப்போது பொதுவாகக் கைவிடப்பட்டுவிட்டது. சிம்சோன் மனோவாகு என்பவரின் மகன். இவர் தாண் இனத்தைச் சேர்ந்தவர். இவரது குடும்பம் பெலிஸ்தியர்களின் தாக்குதலினால் வடக்கிலுள்ள தாணுக்குக் குடியேறுமுன், இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்த பகுதியிலுள்ள செப்போலாவிலுள்ள சோராவில் வாழ்ந்தது. மூலத்தில் தனித்தனியானதாக இருந்த சிம்சோனைப் பற்றிய கதைகள், அதிக நெருக்கமில்லாது ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன.

நீதி 13-ஆம் அதிகாரம் சிம்சோனின் பிறப்பும், 14-ஆம் அதிகாரம் அவரது திருமணமும் சிங்கத்தைக் கொல்லுதலும், 15:1-3-இல் மனைவியின் இழப்பும் நரிகளின் கதையும் 15:9-17-இல் யூதாவைச் சேர்ந்தவர்கள் சிம்சோனுக்குச் செய்த துரோகமும் இலேகியில் ஆயிரம் பெலிஸ்தியர்களைக் கொன்றதும், 15:18-இல் ஏன்கக்கோரே ஊற்றுபற்றியும், 16:1-3-இல் காத்தின் கதவுகளும், 16:4-22-இல் சிம்சோனும் தெலீலாவும் சிம்சோன் பிடிபடுவதற்கு முன்வரும் ஒரே வடிவமைப்புடைய மூன்று கதைகளும், 16:23-31-இல் அவருடைய இறப்பில் ஒரு பெரிய செயல் நிறைவேற்றப்பட்டதும் விவரிக்கப்படுகின்றன.

இந்தக் கதைகளின் தலைவன் தாண் குலத்து நாட்டுப்புற மனிதர் வியக்கத்தக்க வகையில் இயற்கையான பலத்தைவிட அதிக உடல்பலம் கொண்டவர். தனியாகப் பெலிஸ்தியர்களோடு பழிவாங்கும் போர் புரிந்தவர். 'இஸ்ராயேலரின் நீதிபதி'' என்ற முறையில் வியப்பூட்டும் தன்மை வாய்ந்த வர். இவர் கோபமும் இச்சையும் சேர்ந்த ஒழுக்கம் சாராத அரக்க மனிதராக இருந்தார். பெலிஸ்தியரின் ஆதிக்கம் நிலவிய காலத்தி லும் இடத்திலும் இவர் இஸ்ராயேல் குலத்து ஒரே ஒரு பெருமைமிக்க வீரராக இருந்தார். நாடோடிப்பாடல்களின் கதாநாயகன் ஆனார். இவரது செயல்கள் புகழ் பெற் றவை. ஒவ்வொரு செயல்பற்றிய கதையும் அணிசெய்து புனைந்துரைக்கப்பட்டுள்ளது. அளவுக்குமீறி மிகைப்படுத்தப்பட்டுள்ளது. கதைகளை அப்படியே எடுத்துப் பார்த்தால் அவற்றில் எவ்வித சமயக் கண்ணோட்டமும் இருந்ததாகத் தெரியவில்லை. கதைகளைச் சேகரித்தவர்தான் சமயக் கண்ணோட்டத்தை அளித்திருக்கக்கூடும். இவர்தான் சிம்சோ னின் பிறப்புக் கதையையும் எழுதியிருக்க வேண்டும். பெலிஸ்தியர்களுக்கு எதிராக யாவே தாண் இனத்தவருக்கு ஆயுதமாக அளித்த இப்படிப்பட்ட மனிதர் வரலாற்றில் முக்கிய இடம் வகிக்க வேண்டும். இதைப் பிறப்புக்கு முந்திய தேர்வும் முன்னறிவிப் பும் எடுத்துக்காட்டுகிறது. இவரது வியப்பு மிக்க உடல் பலம், யாவேயின் கொடைதான் என்று கதைகளே எடுத்துக் காட்டுகின்றன. சிலகதைகள், இதை யாவேயின் ஆவி சிம் சோனுள் புகுவதன் விளைவாகும் என்று காட்டுகின்றன (13:25;14:6.19; 15:14). இன் னும் சில அவரது நசரேயர் என்ற அர்ச்சிப்புக் கும், வெட்டப்படாத தலைமுடிக்கும் (16:17.22) ஏற்றிச் சொல்கின்றன. கதை களைச் சேகரித்தவரின் நோக்கம் என்னவென் றால் யாவே இவரைப் பயன்படுத்தி அவரது மக்களைக் காப்பாற்றினார் என்பதாகும். இப்படி மறுஉருவம் அளிக்கப்பட்ட சிம் சோன்தான் எபி 11:32-இல் விசுவாசத்தின் வீரனாகச் சித்தரிக்கப்படுகிறார்.

இந்தக் கதைகள் மற்றப் பழைய ஏற் பாட்டு நிகழ்ச்சியுரைகளைவிட இஸ்ராயேல ருக்கும், பெலிஸ்தியர்களுக்குமிடையே உள்ள தொடர்பை நன்கு விளக்குகின்றன. இவர்கள் எல்லையை ஒட்டிய கிராமங்களில் வாழ்ந்துள்ளனர். சில சமயங்களில் நண்பர் களாயும், சில சமயங்களில் பகைவர்களாயும் இருந்திருக்கின்றனர். இரு இனத்தாரும் ஒரு வர் மற்றவருடைய நிலப்பகுதியில் சுதந்தர மாகச் சென்று வந்திருக்கின்றனர். இவர்களுக் கிடையே திருமணம் நடந்துள்ளது. பெலிஸ் தியர்களின் உயர் ஆதிக்கத்தினால் யூதாவைச் சேர்ந்தவர்கள் சிம்சோனைப் பெலிஸ்தியர் கள் கையில் அளிக்கக் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். பொதுப்பாணிப் பாரம்பரியம் இக்கதைகளை மிகைப்படுத்தியிருந்தாலும், இக்கதைகளின் பின்னணியின் உண்மைத் தன்மை இவை சிம்சோனின் வீரச்செயல்கள் நடந்த காலத்திலிருந்தும் இடத்திலிருந்தும் இக்கதைகள் தோன்றியிருக்க வேண்டும் என்று காட்டுகிறது. பெலிஸ்தியர்களின் அச் சுறுத்தல்களிலிருந்து இறுதியாகத் தமதுமக் களை விடுவித்த யாவேயின் மீட்பாற்றலுக் கும் சித்தத்திற்கும் சிம்சோன் சாட்சியாகத் திகழ்கின்றார்.

சிம்மா (ZIMMAH)

1. சிம்மா கேர்சோமின் வம்சத்தில் பிறந்த ஒரு லேவியர் ஆவார். ஆலயத்தில் வழி பாட்டு இசைக்குப் பொறுப்பானவர் (1 நாள் 6;20).

2. கேர்சோமிய லேவியரான யோவாகு வின் தந்தை (2 நாள் 9:12). இவரும் 1-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

சிம்மாக்கு (SYMMACHUS)

இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பாளர் யூசேபியு மற்றும் எரோனிமு ஆகியோரின் கருத்துப்படி இவர் ஓர் எபயோனியர் ஆவார். இவரதுமொழி பெயர்ப்பை ஓரிசன் தனது ஆறுவடிவ மொழி பெயர்ப்பில் நான்காவதாகப் பயன் படுத்துகிறார்.

சிம்ராத்து (SHIMRATH - காவல்காத்தல்)

பென்யமினின் குலப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள சிமயியின் (11) புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8:21).

சிம்ரான் (ZIMRAN - பாடப்படுதல்)

ஆபிரகாமுக்கும், கெற்றூராளுக்கும் பிறந்தவர் (ஆதி 25:2; 1 நாள் 1:32). இது அரேபிய இடப்பெயராகும். இப்பெயரும், எரே 25:25-இல் கூறப்படும் சிம்ரியும் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது இருந்த இடம் தெரியவில்லை. தோலமி கூறும் மெக்காவுக்கு மேற்கில் சபிரான் என்ற இடமாக இருக்கலாம். இது செங்கடலின் கரையில் இருக்கிறது.

சிம்ரி (SHIMRI - விழிப்பாயுள்ள)

1. சிமெயோனுடைய வம்சத்தார்; செமாயா (3)வின் மகன்; சீசாவின் முன்னோர் (1 நாள் 4:37).

2. தாவீதின் வலிமைமிக்க வீரர்களுள் இருவராகிய எதிவேல், யோகாவின் தந்தை (1 நாள் 11:45).

3. தாவீதால் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாயிற் காவலர் பிரிவில் மெராரியின் வழியில் வந்த கோசாவின் (ஒசா) தலைமகன் (1 நாள் 26:10).

4. எலிசாபானின் (எலிட்சாபான்) குடும்பத்தின் ஒரு லேவியர். எசேக்கியாவின் காலத்தில் ஆலயம் புதுப்பிக்கப்பட்டபொழுது முன்னின்று செய்தவர்களுள் ஒருவர் (2 நாள் 29:13).

சிம்ரி (ZIMRI - யாவேயின் மதிப்பக்கம்) - ஆள்

1. இவர் சாலுவின் மகனும், சிமியோன் கோத்திரத்தில் ஒரு தலைவரும் ஆவார் (எண் 25:6-18; 1 மக் 2:26). இஸ்ராயேல் மக்களிடையே கொள்ளைநோய் பரவி இருந்ததால் மக்கள் ஆசாரக்கூடார வாயிலின் அருகே அழுது கொண்டிருந்தார்கள். அப்போது இஸ்ராயேலன் ஒருவன் அந்நியப் பெண்ணை மணம் செய்வதைத் தடுக்கும் சட்டத்தை எதிர்த்து மிதியானியப் பெண்ணைத் தன் கூடாரத்திற்கு அழைத்து வந்தார். அப்போது, ஆரோனின் மகனான எலயாசாரின் மகன் பினகாசு அவர்களைக் கொன்றார். அதனால் கொள்ளை நோய் தடைப்பட்டது. அந்த இஸ்ராயேலன் சிமியோன் கோத்திரத்தின் ஒரு தலைவரான இந்தச் சிம்ரி ஆவார். அப்பெண் மிதியானிய நாட்டு இளவரசியான கோசுபி ஆவாள்.

2. சுமார் கி.மு. 876-இல் இஸ்ராயேலரின் அரசனாக இருந்தவர். இவர் ஏலா என்பவரைக் கொன்றுவிட்டு அரசனானவர். சிம்ரி திரட்சாவில் 7 நாட்கள் ஆண்டார் (1 அர 16:15). பாசாவால் நிறுவப்பட்ட அரசு, சிம்ரி ஏலாவைக் கொன்று அவர் குடும்பத்தை அழித்தபோது, இறைவாக்கினர் ஏகூ முன்னறிவித்ததுபோல் மறைந்தது (15:11-13). பாசா, நாதாபுக்கு எதிராகச் சதி செய்து அவரைக் கிபத்தோனில் கொன்றான். கிபத்தோன் என்பது நாதாபும், இஸ்ராயேலர் அனைவரும் முற்றுகை இட்டிருந்த இடம் (1 அர 15;27). ஏலா திரட்சாவின் ஆளுநனான அர்சாவின் வீட்டில் குடிபோதையில் இருந்தபோது சிம்ரி உட்புகுந்து அவரைக் கொன்றார். இச்செய்தி படைகளுக்கு எட்டியதும், ஒமிரி, (ஒம்ரி) அரசனாக்கப்பட்டார். இவர் படைகளால் அரசனாக்கப்பட்டாரே ஒழிய எல்லா இஸ்ராயேல் மக்களாலும் அல்ல (1 அர 16:16-17). ஓம்ரி திரட்சாவுக்கு வந்து முற்றுகையிட்டார். நகர் பிடிபடப் போகிறது என்று சிம்ரி அறிந்து அரண்மனைக்குள் புகுந்து அதைத் தீக்கிரையாக்கி அத்தீயிலே அவரும் மாண்டார். 2 அர 9:31-இல் இப்பெயர் குறிப்பிடப்படுகிறது. ஏகூ இசிரியேலுவின் நகரவாயிலுக்கு வந்தபோது ஈசபேல் ''என் தலைவரைக் கொன்ற சிம்ரிக்கு அமைதிகிட்டுமா?'' என்றாள். அதன்பின் தன் தலைவரைக் கொன்றவனுக்குச் சிம்ரியின் பெயர் இடுபெயராயிற்று.

3. சிம்ரி செராகுவின் (6) ஐந்து மக்களில் மூத்தவர். யூதா, தாமார் ஆகியவர்களின் பேரனும் ஆவார் (1 நாள் 2:6). யோசு 7:1.17-18-இல் இவர் சபதி என்று அழைக்கப்படுகிறார்.

4. சிம்ரி பென்யமின் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் சவுலின் மகனான யோனத்தானின் வழிவந்தவர். யோயதா என்பது இவருடைய தந்தையின் பெயராகும் (1 நாள் 8:36; 9:42).

சிம்ரி (ZIMRI) - இடம்

சினத்தின் கிண்ணம்பற்றிய எரேமியாவின் இறைவாக்கில் குறிக்கப்படும் நாடுகளில் ஒன்று (எரே 25:25). இப்பெயர் எழுபது நூலில் காணப்படவில்லை.

சிம்ரித்து (SHIMRITH - இறைவன் பாதுகாத்துள்ளார்)

யூதாவின் அரசன் யோவாசைச் சதி செய்து கொன்ற அவரின் பணியாளராகிய யோசபாதுவின் தாய். இவள் ஒரு மோவாபியள் (2 நாள் 24:26). 2 அர 12;21-இல் இவள் சோமேர் (1) என்றழைக்கப்படுகிறாள்.

சிம்ரோன் (SHIMRON - காவல்நிலையம்) - ஆள்

இசக்காரின் நான்காவது மைந்தன் (ஆதி 46:13; 1 நாள் 7:1). சிம்ரோனியர்களின் மூதாதையர் (எண் 26:24).

சிம்ரோன் (SHIMRON - காவல் நிலையம்) - இடம்

கானானிய அரச நகர் (யோசு 11:1); பிற்காலத்தில் செபுலோனுக்குப் பங்கிடப்பட்டது (19:5). இதன் அரசன் யாபீனுடன் கூட்டுச் சேர்ந்து யோசுவாவினால் தோற்கடிக்கப்பட்டார்.

சிம்ரோன் - மெரோன் (SHIMRON - MERON)

கானானிய அரச நகர்; இதன் அரசன் யோசுவாவினால் தோற்கடிக்கப்பட்டார் (யோசு 12:20). இந்தக் கூட்டுப் பெயர் யோசு 12:20-இல் மட்டும்தான் வருகிறது. உண்மையில் இது சிமிரோன் மற்றும் மெரோன் என்ற இரு வேறுபட்ட நகரங்களைக் குறிக்கலாம். எழுபது நூல் இவ்வாறு கொண்டுள்ளது.

சியா (ZIA - நடுங்குகின்ற)

பாசானில் வாழ்ந்த காது கோத்திரத்தில் தோன்றிய இவர் அபீகயிலினுடைய புதல்வராவார் (1 நாள் 5:13).

சிரக்கூசா (SYRACUSE)

சிசிலியின் கிழக்குக் கடற்கரையில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாநகரம். பவுல் மால்தாவிற்கும், இரேகியுவிற்கும் இடையே இங்கு மூன்று நாட்கள் தங்கினார் (அ.ப. 28:12).

இந்நகரம் கொரிந்தியர்களால் கி.மு. 734-இல் ஒரு குடியிருப்பாக மாற்றப்பட்டது. இது 5-ஆம் 4-ஆம் நூற்றாண்டுகளில் செழிப்புற்று விளங்கிற்று. சிசிலி முழுவதையும் கொண்டுவர ஏதன்சு இந்நகரை முற்றுகையிட்டது (415-413). ஆனால் இந்நகர் வெற்றி பெற்றது. 213-211-இல் நீண்ட முற்றுகைக்குப்பின் இந்நகர் உரோமையர் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. சிரக்கூசா ஒரு பெரிய செழிப்புமிக்க நகரமாகும். அதன் அழகுக்குப் பெயர் பெற்றது. கி.மு.21-இல் இதை அகுஸ்து ஒரு குடியிருப்பு நிலைக்கு உயர்த்தினார்.

சிரிப்பு (LAUGHTER)

ஈசாக்கினுடைய பெயராகிய ''சிரிப்பு'', சிரிப்பைவிடச் சிக்கலானது என்ன? என்ற தலைப்புப் பற்றிய வேறுபாடுகளைக் கூற வாய்ப்பாக உள்ளது. ஆதி 17:17; 18:12-15; 21:6... முதலிய வாசகங்களில் சிரிப்பின் இரு தன்மைகளின்மீது இறைவாக்கு கருத்துச் செலுத்துகிறது. ஒன்று விசுவாசமின்மையின் சிரிப்பாகும். இதுவியப்பு மிக்க இறை செயல்களைக்கண்டு மகிழ்ச்சியான வியப்பின் சிரிப்பாக மாற்றியமைக்கப்படலாம். எவ்வாறு சிரிக்க வேண்டுமென்பதை விவிலிய மனிதன் உறுதியாக அறிந்துள்ளான். பொதுவாகக் கற்பனை செய்யப்பட்டவைகளை விட இறை ஏவுதல் பெற்ற நிகழ்ச்சியுரைகளில், வலிமைமிக்க நகைச்சுவை உணர்வானது மறைந்துள்ளது. ஆனால் இந்த நகைச்சுவையானது அக்கால இஸ்ராயேலரின் முரட்டுத்தனத்தின் முத்திரையைக் கொண்டுள்ளது. சவால், ஏளனம் மற்றும் திருப்தியான தற்பெருமை ஆகியவற்றினின்று அரிதாகவே விலகிச்செல்கிறது. மற்றொன்று அறிவிலியின் சிரிப்பு: விவிலியப் பகுதிகள் பெரும்பாலும் நீதிமானின் சிரிப்பை எடுத்துக்கூறாமல் உண்மையின் தேவைகளுக்கேற்ப நடவாத அறிவிலியின் சிரிப்பை எடுத்துக் கூறுகின்றன.

1. அறிவிலியின் சிரிப்பு:

ஞானியின் சிரிப்பானது விவேகமானதாக இருக்கின்ற வேளையில், இது மூடத்தன மான (சீரா 27:13) அல்லது மிகைப்படுத்தப் பட்ட சிரிப்பாக உள்ளது (21:20). குறிப்பாக அறிவிலியின் சிரிப்பானது ஏளனம் செய்பவ ரின் சிரிப்பாக உள்ளது. இச்சொல்லானது துல்லியமான பொருளைக் கொண்டுள்ளது. திருத்துதல் (சங் 1:1; பழ 13:1; 15:12...), கற்பித்தல், அல்லது விசுவாசத்தை ஏற்றல் ஆகியவற்றிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் மனிதனை இது குறிப்பிடுகிறது. ஏளனம் புரிவோன் ஞானிக்கு நேர்மாறானவன் (பழ 9:12; 29:8). அவன் இறைவனுடைய வார்த் தைக்குக் கேலியாகப் பதிலளிப்பான் (எரே 20:7-8). உ.ம். எசேக்கியாவின் சீர்திருத் தத்திற்கான பதில் (2 நாள் 30:10). பிற்காலத் தில் இறந்தோரின் உயிர்ப்பு போதிக்கப்படும் போது அவன் ஏளனமாகச் சிரிக்கிறான் (அ.ப. 17:32). இறுதி நாட்களில் ''ஏளனம் செய்பவர்கள்'' (2 பேதுரு 3:3) வாக்குறுதி களையே சந்தேகிப்பர். ஆகவே ஏளனமானது கிட்டதட்ட விசுவசிக்க மறுப்பதற்குச் சமமா கும். நீதிமான் துன்புறும்போது ஏளனத் திற்கு உட்பட்டவனாக இருப்பான் (சங் 22:8; 35:26; புல 3:14). பிறநாடுகள் இஸ்ரா யேலை ஏளனம் செய்யும். கல்வாரியிலும் ஏளனம் புரிவோர் உள்ளனர் (மாற் 15:29-30;லூக் 23: 35-36).

2. விசுவாசியின் சிரிப்பு:

சிரிப்பானது மதிகெட்ட செயலெனத் திரு வுரை ஆசிரியர் அறிவிக்கிறார் (திருவுரை 2:2). அவர் கண்ணீரினின்று அதிகமாக எதிர் பார்க்கிறார் (7:3). ஆயினும் ''சிரிக்க ஒரு நேரம் இருப்பதை'' அவர் ஏற்றுக்கொள் கிறார் (3:4). உண்மையில் சிரிப்பானது நபர் களுக்கும் காலங்களுக்கும் ஏற்ப மாறுபட்ட பொருளைக் கொண்டுள்ளது. ஏளனம் புரிப வரை இறைவன் எள்ளி நகைப்பதுபோல் (சங் 2:4; பழ 3:34), குறிப்பிட்ட காலத்தில் நீதிமான், இறைப்பற்றற்ற மனிதனைப்பார்த் துச் சிரிப்பான் (சங் 52:6). ஏளனமானது போலித் தெய்வங்களுக்கு எதிரான ஓர் ஆயுத மாக உள்ளது. கார்மேல் மலையில், எலியா வாலும் (1 அர 18:27), பாரூக்கின் நூலினா லும் (பாரூ 6) இது பயன்படுத்தப்படுகிறது. மக்கபேயர் காலத்து வேதசாட்சிகள் தங்க ளைக் கொடுமைப்படுத்துபவருக்கு எதிராக ஏளனப்பழிப்புச் சொற்களைப் பயன்படுத்து கின்றனர் (2 மக் 7:39). அதே நேரத்தில் நீதிமானின் சிரிப்பானது தர்க்கவாதத்தன்மை யற்றதாய் இருக்கலாம். இறைவனால் ஆசிர் வதிக்கப்பட்ட ஆன்மாவின் ஆறுதலை வெளிப்படுத்தலாம் (சங் 35:27; 126:2; யோபு 8:21). ''நாளையை நோக்கிச் சிரிக்கின்ற'' பெண்ணைப்போலச் சிரிப்பானது நம்பிக்கை மிக்கதாக இருக்கலாம் (பழ 31:25).

இக்காலத்துடன் * திருப்தியடைகிறவர் களின் சிரிப்பைப்போன்ற சிரிப்பானது (லூக் 6:25; யாக் 4:9) நீடிக்காதென இயேசு கூறு கிறார். ஆனால் இப்போது அழுகிறவர் களுக்கு, நீடித்தமகிழ்ச்சியுடன் இணைந்த சிரிப்பை அவர் வாக்களிக்கிறார் (லூக் 6:21). இறைவனின் முன்னிலையிலும், மனிதனின் முன்னிலையிலும் தொடக்கத்திலிருந்தே செயற்பட்டு வந்துள்ள (செயல்பாடு என்பது இங்கு, 'சிரிப்பு' என்பதற்கான மற்றொரு சொல் பழ 8:30-31), ஞானத்தினுடைய நிறை வான தூய சிரிப்பை, சிரிப்பின் இறுதிநிலை யானது எதிரொலிக்கும்.

சிரியோன் (SIRION)

உப 3:9-இன்படி கெர்மோன் (எர்மோன்) மலையைச் சிதோனியர்கள் சிரியோன் என்று அழைத்தனர். சங். 29:6-இல் சிரியோன் லெப னோனுடன் சேர்த்துக் கூறப்படுவதால், சிரி யோன் எதிர்-லெபனோன் மலைத் தொட ரைக் குறிக்கலாம் என்று கருதப்படுகிறது. உப. 4:48; எரே 18:14-வரும் பெயர்கள் சில பதிப்புகளில் சிரியோன் என்று திருத்தப்படு கின்றன.

சிரேனியர்(CYRENIANS)

சிரேனின் குடிமக்கள் (அ.ப. 6:9)

சிரேன் (CYRENE)

ஆப்பிரிக்காவின் வடக்குக் கரையிலுள்ள (இக்கால லீபியா) ஒரு கிரேக்க நகரம். சிரேனாயிக்காவின் தலைநகரம்.

தேரா, கிரேத்து ஆகிய தீவுகளிலிருந்து வந்த தோரியன் கிரேக்கர்களால் இது நிறுவப்பட்டது. சிரேன், பாத்தியாது என்ற வம்ச அரசர்களால் கி.மு. 5-ஆம் நூற்றாண்டுவரை ஆளப்பட்டது. இதனுடைய பொருளாதாரம் முழுவதும் வேளாண்மையைப் பொறுத்திருந்தது. வருடத்திற்கு மூன்றுமுறை பயிர் செய்யப்பட்டது என்று எரோதோத்து கூறுகின்றார்.

கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் சிரேன் குடியாட்சியாக மாறியது; தத்துவஞானிகளுடைய கல்வி மையமாக மாறியது. கி.மு. 331-இல் அலக்சாந்தரால் வெல்லப்பட்டு பிறகு தோலமியரின் ஆட்சியின் ஒரு பகுதியானது. கி.மு. 96-இல் இது உரோமைக்குக் கொடுக்கப்பட்டது; உரோம் இதைச் சுதந்தர நாடாக அறிவித்தது. ஆனால் சில உள்நாட்டுப் பூசல்களினால் இது உரோமைய மாகாணமாக்கப்பட்டுக் கிரேத்துடன் இணைக்கப்பட்டது.

கிரேக்க, உரோமையர் காலத்தில் தோலமியினால், அனுப்பப்பட்ட கிரேக்க மொழி பேசும் யூதர்கள் இங்கு வந்து குடியேறினர்; சம உரிமைகளை அனுபவித்தனர். சீமோன் (மத் 27:32; மாற் 15:21; லூக் 23:26) இந்த யூதக் குழுவின் ஒரு அங்கத்தினராவார். அந்தியோக்கியாவின் இறைவாக்கினரான லூக்கியுவும் (அ.ப.13:1) சிரேனியர்களுக்கும் அலக்சாந்தியர்களுக்கும் சொந்தமான செபக்கூடத்தில் ஸ்தேவானைத் தாக்கியவர்களும் (அ.ப. 6:9) இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள். எருசலேமிலிருந்த யூதர்கள் மத்தியிலும், வெளிநாடுகளிலும் சிரேனியர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர் (அ.ப. 2:10).

வெஸ்பாசியன் காலத்தில் நடந்த யூதக் கலகமானது சிரேனிலும் அதன் விளைவுகளைக் கொண்டிருந்தது. ஒரு பெரும் கலகம் கி.பி. 115-116-இல் நடந்தது. இதில் யூதர்கள் புறமத நினைவுச் சின்னங்களை உடைத்தும், கொளுத்தியும், 2,00,000 குடிமக்களைக் கொன்றும் அழித்தனர். அதிரியான் இதன் கட்டடங்களை மீண்டும் கட்டினார். இதன் செழிப்பு விரைவாகக் குறைந்து நீரோவின் காலத்தில் முழுவதுமாக அழிந்துவிட்டது.

19-ஆம் நூற்றாண்டிலும், இரண்டாம் உலகப் போருக்கு முன்பும் இதன் நினைவுச் சின்னங்கள் ஆராயப்பட்டன. பலமுறை கட்டப்பட்ட அப்பொல்லோ கோவில்தான் அழிவிலிருந்து தப்பிய பெரிய கட்டடமாகும். இது கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ ஆலயமாக மாற்றப்பட்டது. உரோமைப் பேரரசர் வழிபாட்டிற்காகக் கட்டப்பட்ட பல கோவில்களும், கட்டடங்களும், அரங்கங்களும், குளியல் அறைகளும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிலந்தி (SPIDER)

பாலஸ்தீனத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட சிலந்தி வகைகள் உருவில் வித்தியாசப்பட்டாலும், அனைத்துச் சிலந்திகளுமே பட்டுப்போன்ற நூலிழையினாலான வலைகளைப் பின்னக் கூடியனவே. சிலந்திவலைகளினுடைய வலுவற்ற, நிலையற்ற தன்மையினை மேற்கோளாகக் காட்டும் வகையில் தான் சிலந்தி விவிலியத்தில் இடம் பிடித்துள்ளது (யோபு 8:14; 27:18; எசா 59:5).

சிலிசா (SHILSHAH - மூன்றாவது)

ஆசேர் குலத்தில் சோபகு கோத்திரத்தில் ஒரு பிரிவு. சோபகுவின் மகன் (1 நாள் 7:37).

சிலிசியா (CILICIA)

சிறிய ஆசியாவின் தென்கிழக்குக் கடற்கரை ஓரப் பகுதியில் ஒரு முக்கியமான மாவட்டமாகும். வரலாற்றின் முற்காலத்தில் இது வேறு பல பெயர்களைக் கொண்டிருந்தது.

1. இதன் புவியியல் அமைப்பு:

சிலிசியாவின் மேற்குப் பகுதி பம்பிலியாவிலிருந்து இலாமுசு ஆறுவரை விரிந்து கிடக்கிறது. இது சிலிசியாதிராக்கேயியா என அழைக்கப்படுகிறது. கோராசெசியுமுக்கும், சோலிபம்பேயோபோலிக்கும் இடையேயுள்ள பகுதி செங்குத்தாகவும், பாறை நிறைந்த பகுதியாகவும் உள்ளது. இதன்நில

முனைகள் சிறுசிறு துறைமுகங்களாகப் பயன்பட்டன. இதன் பின்பகுதி விவசாயம் செய்வதற்கு ஏற்ற பகுதியாக இல்லாத தோடு, குகைகளும், பள்ளங்களும் நிறைந் துள்ளது. தவுரஸ் மலையிலிருந்து உருவா கும் முக்கியநதி கலிகாடுனுஸ் ஆகும். தொடர்பற்ற சிலிசியாவின் உள்பகுதிகளில் செய்தித் தொடர்பு என்பது சற்றுக் கடினமான தாகும்; போக்குவரத்து கரையோரங்களில் மட்டும் இருந்து வந்தது. இப்பகுதிகளில் முக்கிய இயற்கைச் செல்வம் என்னவெனில் மலைச் சரிவுகளில் அடர்ந்து வளர்ந்த மரங்க ளாகும்.

இலாமுசு நதிக்குக் கிழக்கேயுள்ள பகுதி மேற்குப் பகுதியினின்றும் பெரிதும் வேறு பட்டது. இசுஸ் வளைகுடா வரைக்கும் விரிந்து கிடக்கும் கிழக்குக் கடற்கரைப் பகுதி சிறிய ஆசியாவிலே மிகவும் வளமான பகுதியாகும். இப்பகுதி சிலிசியா பேதி யாஸ் எனப்படுகிறது. இங்கு சித்னுஸ், சாருஸ், பிரமுஸ் எனப் பல நதிகள் பாய்வ தால் மிகவும் செழிப்பாக நீர்நிறைந்த பகுதி யாக உள்ளது. பல வகையில் விவசாயத்திற் குப் பயன்படும் நிலமாக இப்பகுதி வளம் நிறைந்துள்ளது. பல்வகைத் தானியங்களும் பழவகைகளும் பயிர் செய்யப்பட்டன. சிலி சியா பேதியாசுக்குள் போக்குவரத்துத் தொடர்பு எளிது. ஆனால் வட பகுதியுடன் தொடர்பு படுத்த கட்டுப்படுத்தப்பட்ட கண வாய்கள் வழியாகப் பழங்காலப் பாதைகள் இருந்தன. இக்கணவாய்களில் பெயர் பெற் றவை சிலிசிய வாயில்கள் என்றழைக்கப்பட் டன. தொடர்பு தேவையில்லையென்றால் இவ்வாயில்களை அடைத்துவிடலாம். பின் தொடர்பு அறுந்துபோகும். கிழக்குப் பகுதியிலும் இதேபோல் தொடர்பு கொள்ள ''சிரோ - சிலிசியன்'' வாயில்கள் அமைந் துள்ளன. இவற்றின் மூலம் கிழக்குப் பகுதிக் கும், பிறநாடுகட்குமுள்ள தொடர்பைக் கட் டுப்படுத்தலாம்.

2. 'வரலாற்றுக்கு முந்திய காலம்:

சிலிசியாவில் தொன்மையாக வாழ்ந்தவர் கள் கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்த னர். வரலாற்றுக்கு முந்திய காலம் புதிய கற்காலத்திலிருந்து தொடங்குகிறது. இதன் கலாச்சாரம் வட சிரியா, மெசபொத்தாமியா கலாச்சாரத்தை ஒத்திருக்கிறது. தொடக்கத் தில் தொடர்பு அதிகம் இல்லையெனினும் அந்தோலியாவின் உள்பகுதிகளுடன் பின் னர்த் தொடர்பு ஏற்பட்டது. கடற்கரைப்பகுதி களில் கப்பல் போக்குவரத்தும், விரைவில் வளர்ச்சியடைந்தது. கி.பி. 2000-த்தில் சிரியா விலிருந்து புதிய தொடர்புகள் ஏற்படுகின் றன.

3. வரலாறு: அ. இத்தியர் காலம்:-

கி.மு. 2000 ஆண்டுகளில் கிசுவத்தனா என்ற பெயரில் புதிய சுதந்தர நாடாகச் சிலிசியா வடிவெடுத்தது. இது இத்தியர்க ளுடன் ஒப்பந்தங்கள் செய்து ஆட்சி செய்தது. பின்னர் இத்திய அரசின் ஒரு பகுதியாக மாறியது. கி.மு. 1200-இல் இத்தியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தனிநாடானது. அப் பொழுது அதன் மக்கள் படித்தவர்களாக, பெரும்பகுதியினர் தர்சா (தார்சுஸ்), அத்தா னிய - அதனா போன்ற முக்கிய நகரங்களில் வசித்தனர்.

ஆ. இருண்ட காலத்திலிருந்து பாரசீகர் காலம் வரை:-

கடல் மக்களின், படையெடுப்பின்போது சிலிசியா அழிக்கப்பட்டது. கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அசீரியாவின் சார்கோன் அர சன் இதனைக் கைப்பற்றினார். அதிலிருந்து அசீரியர்கள் சிலிசியாவை ஓரளவு க்கட்டுப் படுத்தினாலும் கிரேக்கப் பண்பாட்டைப் புகுத்துவதும், காலனி ஆதிக்கத்துக்கு உட் படுத்தும் முயற்சியுமே அதிகமாக இருந்தது.

ஏழாம் நூற்றாண்டில் சிலிசியா ஒரு தனி நாடாக உரிமை பெற்றுத் திகழ்ந்தது. இத னால் லீதியா, பாபிலோன், மேதியா ஆகிய வற்றை ஒத்த ஒரு நாடாகியது. பாரசீகர் களின் காலம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டி லிருந்து தொடங்குகிறது. இக்காலத்தில் மக்கள் அதிகம் பேசியது கிரேக்க மொழிதான். கி.மு. 4-ஆம் நூற்றாண்டுவரை இது தனி நாடாகச் சுதந்தரத்துடன் இருந்தது. அதன் பின்

னரே பாரசீகர்களின் ஆட்சியின் கீழ் இது வந்தது. நாகிதுஸ், செலன்தேரிஸ், சோலி, தார்சுஸ், மல்லுஸ் ஆகியவை இக்காலங்களில் சிறந்து விளங்கிய நகரங்களாகும்.

இ. கிரேக்கர் காலத்திலிருந்து கி.மு. 67 வரை:

கிரேக்கர்கள் காலத்தில் செலூக்கியரின் ஆட்சியின் கீழ் சிலிசியா வந்தபின்னர் இது மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. செலூக்கு நிக்காத்தோர் என்பவர் கடற்கரையோரங்களில் பல புதிய நகரங்களை நிறுவினார். அந்தியோக்கியா, செலுக்கியா என்று பலநகரங்கள் மறுபெயரிடப்பட்டன. சிலிசியா திராக்கேயியா, தோலமிகளால் பிடிக்கப்பட்டாலும் மூன்றாம் அந்தியோக்கு என்பவரால் மீட்கப்பட்டது. அந்தியோக்கு எப்பிபான் எனும் அரசன் காலத்தில் மீண்டும் சிறப்புப் பெற்றது. கி.மு. 69-இல் உரோமையர்கள் ஆர்மேனிய அரசனான திகிராணெசைச் சிலிசியாவை விட்டுவிடுமாறு வற்புறுத்தினர். முடிவில் கி.மு. 67-இல் பாம்பே இதனைப் பிடித்து, சிலிசியாவின் கிழக்கு மேற்குப் பகுதிகளை உரோமை அரசின் ஒரு பகுதியாக மாற்றினார்.

ஈ. உரோமையர் காலம்:-

உரோமை ஆட்சியின் கீழ் வந்தபிறகும் சிலிசியாவில் உள்ள குறுநில மன்னர்கள் அவர்கள் பகுதியை ஆள அனுமதிக்கப்பட்டனர். கி.மு. 38-இல் சிலிசியா பேதியாஸ் சீரியா மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. கி.பி. 72-வரை சீரிய ஆளுநனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. சிலிசியா திராக்கேயியா அந்தோனியால் கிளியோபத்திராவுக்கும், ஆக்டேவியனால் கலாத்திய அரசன் அமின்சாசுக்கும், பின் கப்பதோகிய அரசன் அர்க்கெலாவுக்கும் அளிக்கப்பட்டது.

கடைசி இரேக்க அரசனான நான்காம் அந்தியோக்கு இரு பகுதிகளையும் ஒன்றிணைத்து ஒரு இரேக்க அரசை உருவாக்க முனைந்தும், இவை இணைக்கப்பட்டு வெஸ்பாசியனின் ஆட்சியில் உரோமையின் சிலிசியா மாகாணமாகியது.

4. விவிலியத்தோடு தொடர்புடைய பகுதிகள்:

அ.ப. 15:23.41; கலா 1:21-இல் குறிக்கப்படும் சீரியாவும் சிலிசியா பேதியாசு என்பது சீரியாவின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதைத் தெரிவிக்கிறது. சிலிசியா என்று பரந்த பொருளில் கூறும்பொழுது பொதுவாகக் கிழக்குப் பம்பிலியாவின் கடற்கரைப் பகுதி முழுவதையுமே அது உள்ளடக்கும் (அ.ப. 27:5).

பவுல் தனது சொந்தநாட்டில் எங்கெல்லாம் சென்றார் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லையெனினும் அவர் அந்தியோக்கியாவிலிருந்து தார்சு நகர் செல்லும் சாலையில் சென்றுள்ளார் என்பதும் தனது இரண்டாவது மறைபரப்பும் பயணத்தில் சிலிசியா வாயில்களிலிருந்து தெர்பைக்குச் செல்லும் வழியில் சென்றுள்ளார் என்பதும் இவ்வழி அன்றையப் பல சிலிசியா நகரங்களுக்கு அவரை இட்டுச் சென்றிருக்குமென்பதும் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

5. தொல்பொருள் ஆராய்ச்சிகளினின்று (தார்சு, மெர்சியன் எனுமிடங்களின் சான்றுகள்) கி.மு.700-ஆம் ஆண்டு சிற்பங்களையும், இத்திய இருமொழி ஏடுகளையும் அறிய வருகிறோம். சிலிசியா திராக்கேயியாவின் கி.பி. முதல் நூற்றாண்டின் உரோமைய நகரத்தின் சிதைவுப் பகுதிகள் பற்றிய ஒரு கருத்தைத் தந்துள்ளன ஆராய்ச்சிகள். சிலிசியா பேதியாசின் பல பகுதிகள் இன்றைய நகரங்களால் சூழப்பட்டுவிட்டதால் பழையவற்றைக் காணமுடியவில்லை. ஆனால் இப்பகுதிகள் அன்றுபோல் இன்றும் வளமைபெற்றுத் திகழ்கின்றன.

சிலுவை (CROSS)

1. இயேசு சிலுவையிலறையப்பட்டு மரித்தார். இவ்வாறு, சிலுவையானது மீட்பின் கருவியாயிற்று. மேலும் மரணம், துன்பம் மற்றும் இரத்தத்துடன் சேர்ந்து நமது மனதிற்கு மீட்பை நினைவுபடுத்துகின்ற அவசியமான சொற்களில் ஒன்றாக உருவாயிற்று. சிலுவையானது இனியும் இகழ்ச்சியின்

அடையாளமன்று; மாறாக, முதலில் கிறிஸ்துவிற்கும், பின்னர்க் கிறிஸ்தவர்களுக்கும் ஒரு சவாலும், மகிமைக்குரிய வழியுமாகும்.

II. இயேசு கிறிஸ்துவின் சிலுவை

1. சிலுவையின் இடறல்

''நாங்களோ சிலுவையில் அறையுண்ட ஒரு மெசியாவை அறிவிக்கிறோம். இது யூதர்களுக்கு இடறலாயுள்ளது. புறவினத்தாருக்கு மடமையாயுள்ளது'' (1 கொரி 1:23). இச்சொற்களில், மீட்பளிக்கும் சிலுவைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒவ்வொரு மனிதனின் தன்னியலாய் அறிவிக்கும் பதிலைப் பவுல் வெளிப்படுத்துகிறார். அடிமைகளுக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட தண்டனையாக (பலி 2:8), கொடூரமான தண்டனையாக மட்டுமின்றி, பழிகேடாகவும் உள்ள (எபி 12:2; 13:13) சிலுவை மரணத்தினால் கிரேக்க - உரோமை உலகிற்கு மீட்பு வரக்கூடுமா? கூடிய விரைவில் அகற்றவேண்டிய தீட்டு நிலையைத் தொடர்பு கொள்வதனாலேயே அளிக்கக்கூடிய இறந்த உடலின் மூலமாக யூதருக்கு மீட்பு வரக்கூடுமா? (யோசு 10:26-27; 2 சாமு 21:9; யோவா 19:31). இறைசாபத்தினுடைய குறியை ஏற்று, கழு மரத்தில் தொங்குகின்ற தண்டிக்கப்பட்ட மனிதனிடமிருந்து மீட்பு வரக்கூடுமா? (உப 21:22-23; கலா 3:13). கல்வாரியிலிருந்த சாட்சிகள், சிலுவையிலிருந்து அவரை இறங்கி வருமாறு அழைத்ததன் மூலம், சிலுவையில் அறையுண்டவரை எள்ளி நகையாடியிருக்கலாம் (மத் 27:39-44). கிறிஸ்துவின் சீடர்களைப் பொறுத்தவரையில், தங்களது பயங்கர எதிர்விளைவை முன்னுரைப்பதென்பது ஓர் எளிதான காரியமாகும். இயேசுவை மெசியா என்று அங்கீகரித்த பேதுருவால் அவரது பாடுகளையும் மரணத்தையும் பற்றிக் குறிப்பிடுவதைப் பொறுக்க முடியவில்லை (மத் 16:21; 17:220-23). அப்படியானால், சிலுவையில் அறையப்படுவதன் அருவருப்பு எவ்வளவு பெரியதாக இருந்திருக்கும்! மேலும் தனது பாடுகளுக்கு முந்தின இரவில், இதனால் அனைவரும் இடர்ப்படுவர்; அவரை விட்டு ஓடிப்போவார்கள் என்று இயேசு அறிவிக்கிறார் (மத் 26:31).

2. சிலுவையின் மறை பொருள்:

சிலுவையில் பிரசன்னமாயிருந்த ஒரு மறைவான மறைபொருளானது அதற்கு ஒரு புதிய பொருளை அளித்ததன் காரணமாக, இயேசுவும் அவருக்குப்பின் அவரது சீடர்களும், சிலுவையின் இடறலைக் குறைக்க முயலவில்லை. கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு முன்னர், தந்தையின் சித்தத்திற்கான தனது கீழ்ப்படிதலின் ஒரு பகுதியாக, சிலுவையானது அவசியமானதென இயேசு மட்டுமே வலியுறுத்தினார் (மத் 16:21). பெந்தகோஸ்தேவிற்குப் பின்னர், உயிர்த்த ஆண்டவரின் மகிமையால் ஒளியூட்டப் பெற்றவர்களாய்ச் சீடர்களே சிலுவையின் அவசியத்தைப்பற்றிப் போதித்து சிலுவையின் இடறலை இறைவனின் திட்டத்தினுடைய ஒரு பகுதியாகச் சரியாக நிலைப்படுத்தினர். மெசியாவானவர் சிலுவையில் அறையப்பட்டு (அ.ப. 2:23;4:10) அதிர்ச்சியூட்டும் வகையில் (உப. 21:23) மரத்தில் தொங்கினாரெனில் (அ.ப. 5:30; 10:39), அதற்குக் காரணம் அவருடைய சகோதரரின் பகைமையே. இறைவாக்கினுடைய தெளிவாக்கும் ஒளியில் இவ்வுண்மையானது கிறிஸ்துவைப் பற்றி எழுதப்பட்டதன் நிறைவேற்றம் என்னும் புதிய பரிணாமத்தை அடைகின்றது (13:29). இதன் காரணமாக, இயேசுவின் மரணம் பற்றிய நற்செய்தி விவரிப்புகள் சங்கீதக் குறிப்புகளால் நிறைந்துள்ளன (மத் 27:33-60; யோவா 19:24.28.36-37). எம்மாவுக்குச் செல்லும் சீடர்களுக்கு உயிர்த்த ஆண்டவர் விரிவாக விவரிப்பதுபோல இறைவாக்குகளின்படி ''மெசியா பாடுபட வேண்டும்'' (லூக் 24:25-26).

3. சிலுவையின் இறையியல்:

''மறைநூலில் உள்ளபடி கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்தார்'' என்னும் பண்டைய பாரம்பரியத்திற்குப் பவுல் வாரிசாக இருந்தார் (1 கொரி 15:3). சிலுவையே உண்மையான ஞானம் என்ற அவர் கண்டறிந்த அவரது இறையியல் சிந்தனைக்கான அடிப்படையை, இந்த மரபுண்மை அளித்தது; இதன் விளைவாக, சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவை மட்டுமே அறிய அவர்

விரும்பினார் (2:2). பழைய ஏற்பாட்டில் ஏனெனவே கூறப்பட்ட இறைவனுடைய திட்டத்தின் ஞானமானது (1:19-20) சிலுவையில் ஒளிர்கிறது; மனிதனுடைய வலிமையற்ற நிலையின் மூலமாக இறைவனுடைய வலிமையும் இதிலேயே தோன்றுகிறது (1:25). இந்த அடிப்படையான உள்ளுணர்வை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம், சிலுவையிலறைதல் பற்றிய விவரங்களிலும் பவுல் பொருள் காண்கிறார். நாம் சட்டத்தின் சாபத்தினின்று தப்பிப்பதற்கென, இயேசு சபிக்கப்பட்டவராக ''மரத்தில் தொங்கினார்'' (கலா 3:13). பாவ ஊனுடலின் சாயலில் சிலுவையில் வெளிப்படுத்தப்பட்ட அவரது உடலானது ''ஊனியல்பில் பாவத்தைத் தண்டிக்க'' இறைவனை அனுமதித்தது (உரோ 8:3). சட்டத்தின் தீர்ப்பானது நிறைவேற்றப்பட்ட அதே நேரத்தில் இறைவன் ''சிலுவையில் அதனை அறைந்து, தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோருடைய படைக்கலன்களைப் பறித்துக்கொண்டு அதனை ஒழித்துவிட்டார்'' (கொலோ 2:14-15). ''சிலுவையின் இரத்தத்தினால்'' இறைவன் அனைத்தையும் தம்மோடு ஒப்புரவாக்கினார் (கொலோ 1:20). இவ்வாறு பாவத்தினால் விளைந்த பழைய பிளவுகளை அவர் வென்றுவிட்டார். ஒரே உடலை உருவாக்குவதற்கென யூதருக்கும், புறவினத்தாருக்குமிடையே அவர் சமாதானத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தினார் (எபே 2:14-18). இவ்வாறு சிலுவையானது, பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டினுடைய இரு திட்டங்களுக்கிடையில் நிற்கிறது.

4. மகிமைக்கு உயர்த்தப்பெறும் சிலுவை: யோவானின் சிந்தனையில் சிலுவையானது துன்பம் மற்றும் இகழ்ச்சியைவிட உயரியதாக அதனுடைய மீட்பு நலந்தரும் விளைவுகளின் காரணமாக, இறைவனின் திட்டத்தில் பொருளுடையதாக உள்ளது. சிலுவையானது ஏற்கெனவே இறைவனின் மகிமையினுடைய முன்சுவையாகும். யோவானுக்கு முற்பட்ட பாரம்பரியம் எப்போதும் இயேசுவினுடைய பின்விளைவான மகிமையுடன் தொடர்புபடுத்திச் சிலுவையைப் பற்றிப் பேசியது. ஆனால், யோவானின் நோக்கில் சிலுவையிலேயே இயேசு வெற்றிவீரராக உள்ளார். இவ்வெற்றியைச் சுட்டிக்காட்டுவதற்கென, இதுவரை விண்ணகம் நோக்கி இயேசுவின் மாட்சிமையைக் குறிப்பிட்ட சொற்களை (அ.ப. 2:35; 5:31) யோவான் பயன்படுத்துகிறார். எனவே மனுமகன் ''புதிய பித்தளைப் பாம்பைப்போன்று'', மீட்பின் அடையாளமாக (3:14; எண் 21:4-9) ''உயர்த்தப்பட்டார்'' (யோவா 8:29; 12:32-33). யோவானின் பாடுகளின் விவரிப்பில் இயேசு மாட்சியுடன் சிலுவையை நோக்கிச் செல்கிறார். ''ஆவியை அளிப்பதன் மூலமும்'' (19:30) தனது பக்கத்திலிருந்து இரத்தமும் நீரும் வழிந்தோட அனுமதித்ததன் மூலமும் (19:34) சிலுவையில் அவர் திருச்சபையை உருவாக்குவதால், வெற்றிகரமாக அவர் சிலுவையில் ஏறுகிறார். விசுவாசமானது சிலுவையில் அறையுண்டவரை நோக்கித் திருப்பப்படுவதாலும், சிலுவையானது மீட்பின் உயிருள்ள அடையாளமாக விளங்குவதாலும், இனி முதல் ''ஊடுருவக் குத்தியவரையே நோக்க வேண்டும்'' (19:37). இதே முறையில் திருவெளிப்பாடானது இந்த மீட்பளிக்கும் மரத்தில் வாழ்வின் மரத்தையும், சிலுவை மரத்தில் வாழ்வின் மரத்தையும் காண்பதாய்த் தோன்றுகின்றது (திருவெளி 22:2.14.19).

III. கிறிஸ்தவனின் அடையாளமாகச் சிலுவை

1. கிறிஸ்துவின் சிலுவை:
''ஆண்டவர் சிலுவையிலறையப்பட்ட இடத்தில்'' இரண்டு சாட்சிகள் கொலை செய்யப்பட்டதன் வெளிப்பாட்டுடன் (திரு 11:8) திருவெளிப்பாடானது சீடர்களுடைய பங்கை அவர்களுடைய தலைவருடைய துடன் அடையாளப்படுத்துகிறது. ''எனக்குப் பின்வர விரும்பும் எவரும் தம்மையே மறுத்துத் தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்'' என்பதற்காகவே இயேசு அழைத்தார் (மத் 16:24). தான் சுமக்கின்ற சிலுவையானது உலகிற்கான மரணத்தின் அடையாளமாக இருப்பதால், சீடன் தனக்காக மட்டுமே இறக்கக்கூடாது. எல்லா

வித இயற்கைத் தொடர்புகளையும் முறித்து விட்டு (மத் 10:33-39), தான் தனது வாழ்வையே இழக்கவிருக்கின்ற துன்புறுத்தலின் முடிவை ஏற்றுக்கொண்டான் (மத் 23:34) என்பதன் அடையாளமாக இது உள்ளது. ஆயினும் அதே நேரத்தில் சிலுவையானது எதிர்பார்க்கப்பட்ட மகிமையின் அடையாளமாகவும் உள்ளது (யோவா 12:26).

2. சிலுவையிலறையப்பட்ட வாழ்வு: பவுலின் கருத்துப்படி கிறிஸ்துவின் சிலுவையானது சட்டம் மற்றும் விசுவாசத்தினுடைய இரு திட்டங்களைக் குறிப்பிடுகிறது. மேலும், கிறிஸ்தவனின் இதயத்தில் சிலுவையானது ஊனுடல் மற்றும் ஆவி என்னும் இரு உலகங்களின் எல்லைகளைக் குறிப்பிடுகிறது. சிலுவையில் மட்டுமே ஏற்புடைமையும், ஞானமும் உள்ளன. கிறிஸ்தவன் மனம் மாறுகிறான் என்றால் அதற்குக் காரணம் சிலுவையில் இயேசுகிறிஸ்து அவனது கண்களுக்குத் தோன்றுவதாகும் (கலா 3:1). அவன் சட்டத்தின் செயல்களால் இல்லாமல் சிலுவையில் அறையுண்டவரின் மீதான விசுவாசத்தினால் ஏற்புடையவனாகிறான். ஏனெனில் அவன் திருமுழுக்கில் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்படுவதால், இறைவனில் வாழ்வதற்காகவும் (கலா 2:19) உலகுடன் எவ்வித உறவும் இல்லாமலிருப்பதற்காகவும் (கலா 6:14), சட்டத்திற்கு இறந்தவனாகிறான். இவ்வாறு, அவன் தனது நம்பிக்கையைக் கிறிஸ்துவின் வல்லமையின்மீது மட்டுமே வைக்கிறான்; இல்லாவிடில், அவன் சிலுவையின் விரோதியாக இருப்பான் (பிலி 3:18).

3. கிறிஸ்தவரின் மகிமையாகிய சிலுவை: அனுதின கிறிஸ்தவ வாழ்வில், முழுவதும் பாவத்தினின்று சுதந்தரமாக இருப்பதற்காகப் ''பழைய மனிதன் சிலுவையில் அறையப்படுகிறான்'' (உரோ 6:6). அவரது தீர்ப்பு சிலுவையின் ஞானத்தால் மாற்றியமைக்கப்படுகிறது (1 கொரி 2). இந்த ஞானத்தின்படி, தாழ்ச்சியிலும் மரணம் வரையிலான - சிலுவை மரணம் வரையிலான - கீழ்ப்படிதலிலும் (பிலி 2:1-8) அவர் இயேசுவின்மாதிரியைப் பின்பற்றுகிறார். வாழ்வின் பொதுவான மாதிரிக்காக, ''நாம் நமது தவறுகளுக்கு மரித்து, நேர்மைக்காக வாழ்வதற்கென, நமது பாவங்களின் சுமையைத் தமது உடலில் ஏற்ற இயேசுவைச் சிலுவை மரத்தில் முன்மாதிரியாகக் காண வேண்டும்'' (1 பேதுரு 2:21-24). இறுதியாக, ஒருவன் தன்னியல்பாக இறைமகனை மீண்டும் சிலுவையில் அறைகின்ற பதிதத்தைக் கிறிஸ்தவன் வெறுக்க வேண்டும் (எபி 6:6). ''நானோ நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையிலன்றி வேறெதிலும் ஒருக்காலும் பெருமை பாராட்ட மாட்டேன்; அந்தச் சிலுவையின் வழியாகவே உலகம் எனக்கு அறையுண்டதாய் இருக்கிறது, நானும் உலகத்திற்கு அறையுண்டவனாய் இருக்கிறேன்'' என்னும் பவுலின் குரலொலியைப்போல அவனது நம்பிக்கைக்குரிய குரலொலியும் இருக்க வேண்டும் (கலா 6:14).

சிலுவையில் அறைதல் (CRUCIFIXION)

1. குற்றவாளியாகக் கருதப்படுபவரைச் சிலுவையில் ஆணிகளால் அறைந்தோ கயிறுகளால் கட்டியோ மரிக்கச் செய்யும் தண்டனையாகும் இது. தண்டனையாகச் சிலுவையில் அறைதல் பற்றிய முதற் சான்றுகள் பாரசீகர்களிடையே காணப்படுகின்றன. இது அசீரியர்களின் கழுவேற்றுமுறையிலிருந்து தோன்றியிருக்கலாம். இது பிற்காலத்தில் கிரேக்கர்களால் குறிப்பாகப் பெரிய அலக்சாந்தராலும் கார்தசீனியர்களாலும் பயன்படுத்தப்பட்டது. இவர்களிடமிருந்து உரோமையர் இத்தண்டனை முறையைப் பெற்றுக்கொண்டு அடிமைகளுக்கும், அந்நியர்களுக்கும் மட்டுமே அளித்தனர். இவ்வாறு இயேசு சிலுவையில் அறையப்படலாம். ஆனால் உரோமைக் குடிமகன் பவுல் சிலுவையில் அறையப்படமுடியாது. எப்பொழுதாவதுதான் சதிசெய்யும் குடிமகனுக்கு வழங்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இறைநிந்தைக்காகவோ சிலைவழிபாட்டுக்காகவோ தொங்கவிடப்பட்டாலும் (உப 21;23) சிலுவையில் அறைதல் கிரேக்கர் காலம் வரை பாலஸ்தீனத்தில் வழக்கில் இல்லை. தனது கிரேக்கமயமாக்கும் கோட்

பாட்டை எதிர்த்த யூதர்களைச் செலூக்கிய மன்னர் நான்காம் அந்தியோக்கு எப்பிப் பான் சிலுவையில் அறைந்து தண்டித்தார் (1 மக் 1:44-50). அசமோனிய மரபைச் சேர்ந்த அலக்சாந்தர் யன்னாயு பெத்தோமைச்சேர்ந்த எண்ணூறு பரிசேயக் கிளர்ச்சியாளர்களைச் சிலுவையில் அறைந்து கொன்றார். 3600 யூதர்களை உரோமையர் சிலுவையில் அறைந்து கொன்றதுதான் (கி.பி. 66) யூதர் களின் கிளர்ச்சியைத் தூண்டியது. இத்தண் டனை முறையில் பல யூதர்களும் கிறிஸ்த வர்களும் தங்கள் சமயப்பற்றுக்குச் சான்று கூறினர். கி.பி. 337-இல் கிறிஸ்துவின் மர ணம் பற்றிய கிறிஸ்தவர்களின் விசுவாசத் திற்கு மதிப்பளித்து கான்ஸ்டன்டைன் இப்பழக்கத்தை நீக்கி ஒழித்தார்.

2. சிலுவையின் அமைப்பு:

தொடக்கத்தில் இது ஒரு செங்குத்தான மரத்தூணாய் இருந்திருக்கவேண்டும். உரோ மையர் காலத்திற்குள் கழுமரத்தோடு ஒரு குறுக்கு விட்டம் சேர்க்கப்பட்டது. இது மரத்தின் உச்சியில் அல்லது சிறிது கீழாக இணைக்கப்பட்டது. பிற்காலத்திய கிரேக்கச் சிலுவை சம அளவுடைய இரு சட்டங்கள் இணைக்கப்பட்டதாக இருந்தது. பிற்காலத் தில் உரோமையர் X - வடிவமுடைய புனித அந்திரேயர் சிலுவையையும் பயன்படுத்தி னர். கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த, எருசலேமுக்கு அருகிலுள்ள ஒரு கல்லறை யின் சிதைவுகளிலிருந்து பல செய்திகள் அறியக்கிடக்கின்றன. சிலுவையில் அறை யப்பட்டவரின் இரு கால்களும் ஒரே ஆணி யால் ஊடுருவப்பட்டு, ஒரு சிறிய ஒலிவப் பலகையில் அறையப்பட்டன. இது கால்களை இணைத்து வைப்பதற்கு உதவியது. இந்த ஆணி செங்குத்தான மரத்தில் அறையப்பட வில்லை. கைகள் சமதளமான குறுக்குச் சட்டத்தில் ஆணிகளால் அறையப்பட்டன. இருப்பிட உயரத்திற்குச் சமதளப்பலகை செங்குத்தான மரத்தில் இணைக்கப்பட்டது. இது உடல் கீழே விழுந்துவிடாமல் தாங்கிக் கொள்ள உதவியது. ஆனால் வேதனையை நீடிக்கச்செய்தது.

3. மரண தண்டனையாகச் சிலுவையில் அறைதல் இருவகைக்கொடுமையைக் கொண்டிருந்தது. முதலாவது பகிரங்க அவ மானம்; இரண்டாவது உடல்சார்ந்த நீடித்த வேதனை.

அ. பகிரங்க அவமானம்:

பிறருக்கு எச்சரிக்கையாக இருக்கும்படி, தீர்ப்பிடப்பட்டவர் முழுச்சிலுவையை அல் லது குறுக்குச் சட்டத்தைப் பொதுச்சாலை கள் வழியாகக் கொலைக்களத்திற்குச் சுமந்து செல்ல வேண்டும். அங்கே அவரது ஆடை கள் அனைத்தும் களையப்படும். சிலுவை யில் அறையப்பட்டபின் தன் உடல் தேவை களைப்பற்றிக் கவலைப்படமுடியாது. அவ் வழியாகச் சென்றவர்கள் அவரைப்பார்த்து எள்ளி நகையாடி ஏளனம் செய்வதும் உண்டு.

ஆ. உடல் சார்ந்தவேதனை:

சிலுவையில் அறைதல் உடலின் முக்கிய பாகங்களைப் பாதிக்கவில்லை. குற்றவாளி யின் கைகளும் கால்களும் ஆணிகளால் அறையப்பட்டன. தோள்களையோ, உட லையோ மரத்தோடு கயிறுகளால் கட்டுவர். இதனால் அவர் அசையமுடியாது. வெப்பம் அல்லது குளிர், அல்லது பூச்சிகளின் கொடு மையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள முடியாது. சாவு மெதுவாகத்தான் வரும். ஒருவர் சாகுமுன் பல நாட்களுக்குச் சிலுவை யில் வேதனைப்படலாம். பெரும்பாலும் மூச்சுத்திணறலால் சிலுவையில் அறையப் பட்டவர் இறந்தார். தாகமும், பசியும் கொடு மையாக இருக்கும். உடலின் கனமும் பிடிப் பும் சொல்லொண்ணா வேதனையைக் கொடுக்கும். கடுங்காய்ச்சலும் உடல் நடுக்க மும் உடல் முழுவதையும் சித்திரவதை செய் யும். சிலசமயம் கொலைஞர்கள் சிலுவை யில் அறையப்பட்டவருடைய கால்களை முறித்துச் சாவை விரைவுபடுத்தினர். குற்ற வாளியை இன்னும் இழிவுபடுத்தவும் பிறரை எச்சரிக்கவும், குற்றவாளி முதலில் கசையால் அடிக்கப்படுவார். அப்போதே மரித்துப் போனவர்களும் உண்டு. பிறகு, சிலுவையில் அறையப்படும் இடத்திற்கு

அவரே குறுக்குச் சட்டத்தைச் சுமந்து செல்வார். அங்குக் குறுக்குச்சட்டம் செங்குத்தான மரத்தின்மேல் ஏற்றப்பட்டு இணைக்கப்படும். சிலசமயம் சிலுவையில் தொங்குபவரின் வேதனையைக் குறைக்க மருந்திட்ட பானம் அவருக்குக் கொடுக்கப்படலாம் (மத் 27:34; மாற் 15:23).

4. இயேசுவின் சிலுவை மரணம்:

நான்கு நற்செய்திகளும், இயேசு தமது மரணத்தை முன்னறிவித்தார் என்று காட்டுகின்றன. ஆனால் அம்மரணம் சிலுவையில் அறையப்படுவதால் வரும் என்றும் (மத் 20:19; 26:2) தம்மைப் பின்பற்றுபவர்களில் சிலருக்கும் அதே நிலைவரும் என்றும் இயேசு அறிந்திருந்தார் என்று மத்தேயு மட்டும்தான் கூறுகிறார்.

இயேசுவின் சிலுவை மரணம் மத் 27; மாற் 15; லூக் 23; யோவா 19 ஆகிய பகுதிகளில் விவரிக்கப்படுகிறது; புதிய ஏற்பாட்டில் மற்றும் பல இடங்களில் குறிக்கப்படுகிறது (அ.ப.2:36; 4:10; 1 கொரி 2:8; 2 கொரி 13:4; கலா 3:1; திருவெளி 11:8). இவற்றில் எதுவும் நாம் அறிய விரும்பும் அதன் விவரங்களைக் கொடுக்கவில்லை எனலாம். இயேசு கழுமரத்தில் மரித்தார் என்ற கூற்றைக்கூட (அ.ப. 5:30; 10:39) உருவகமாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். சிலுவையின் அமைப்பு கழுமரத்தை முன்னுணர்த்தியிருக்கலாம். இயேசு மரித்த கொல்கொதா எங்கு இருந்தது என்பது பற்றி ஐயப்பாடுகள் உண்டு. அது எருசலேமுக்கு இட்டுச்செல்லும் முக்கிய சாலைகளில் ஒன்றுக்கு அருகில் இருந்தது என்று கூறலாம். வேதனையைக் குறைக்கக்கூடிய பானத்தைக் குடிக்க இயேசு மறுத்துவிட்டார் (மத் 27:34; மாற் 15:23). அவரோடு வேறு இருவருக்கு அதே தண்டனை அளிக்கப்பட்டது. அவர்களில் ஒருவன், இயேசுவை ஏளனஞ்செய்தவர்களோடு சேர்ந்து கொண்டான் (மத் 27:44; மாற் 15:32; லூக் 23:39). இதனால் கடைசி நேரத்தில் ஆட்சியாளருடன் சேர்ந்து அவர்களின் தயவைப் பெறும் முயற்சியாக இருக்கலாம். இயேசு எக்குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டார் என்ற குற்றப்பட்டயம் அவரது சிலுவையின் மேல் வைக்கப்பட்டது. மற்ற இருவருக்கும் அப்படி வைக்கப்பட்டதாக ஒன்றும் கூறப்படவில்லை.

அடுத்த நாள் யூதர்களுக்குப் புனிதநாள் என்பதால், குற்றவாளிகள் தப்பியோடிவிடாமல் இருப்பதற்கு அவர்கள் கால்களை முதலில் முறித்தபின், மாலையில் அவர்கள் சிலுவையிலிருந்து அகற்றப்பட உரோமை அதிகாரிகள் அனுமதித்தனர் என்று நான்காம் நற்செய்தி கூறுகிறது. வீரர்கள் இயேசுவிடம் வந்தபோது, அவர் ஏற்கனவே இறந்துவிட்டிருந்தார் எனக்கண்டனர். இது ஒரு கேள்வியை எழுப்புகிறது? எப்படி அவர் இவ்வளவு விரைவில் மரித்தார்? அவரது விலா ஈட்டியால் திறக்கப்பட்டது என்று யோவான் மட்டும் கூறுகிறார். ஆனால் இது அவர் இறந்தபின் நடந்தது. அவர் இதயம் உடைந்து மரித்தார் என்பது யோவா 19:34-இல் வரும் ''இரத்தமும் நீரும் வெளிவந்தன'' என்பதால் தெரிகிறது. இது மருத்துவ முறையில் ஐயப்பாடுடைய விளக்கத்திற்குரியது. இது உடல்சார்ந்த கூற்றல்ல; இறையியல் நோக்கோடு கூறப்பட்டது என்று சிலர் கூறுவர். ஒருவேளை உரோமையரின் கசையடிகொடுக்கும் முறை இயேசுவின் மரணத்தை விரைவுபடுத்தியிருக்கலாம். இம்முறை மிகக் கொடுமையானது. சில வேளைகளில் அடிபடும்போதே இறந்துபோய்விடுவர். அரசுக்கு எதிராகச் சதிசெய்தவர் என்ற குற்றம் சாட்டப்பட்ட இயேசுவுக்கு இந்தக் கசையடி மிகவும் இரக்கமற்ற முறையில் நடந்திருக்க வேண்டும்.

இயேசு இறந்தபோது மீபௌதிக இருள் நாடெங்கும் சூழ்ந்ததாகவும் ஆலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது என்றும் ஒத்தமை நற்செய்திகள் கூறுகின்றன. ''நிலம் நடுங்கியது, பாறைகள் வெடித்தன, கல்லறைகள் திறக்கவே, துஞ்சிய பரிசுத்தர்களின் உடல்கள் பல எழுந்தன'' என்று மத்தேயு மட்டும் கூறுகிறார். யோவான் இவைபற்றி ஒன்றும் கூறவில்லை.

5. அடையாளப் பொருளில் சிலுவை மரணம்:

சிலுவை மரணம் இயேசுவுக்கும் பகிரங்க அவமானத்தைக் கொண்டுவந்தது. ''மரத்தில் தொங்குபவன் எவனும் சபிக்கப்பட்டவனே'' என்ற சாபத்திற்கு அவரை உள்ளாக்கியது (கலா 3:13; உப 21:33). இது யூதர்களைப் புதிய விசுவாசத்திற்கு மனந்திரும்பும் முயற்சிக்குப் பெரும் தடையாக இருந்தது. பழைய ஏற்பாட்டிலோ யூதப்பாரம்பரியத்திலோ இவ்வாறு சிலுவை மரணம் எய்துவார் என்பது பற்றிய சுட்டிக்காட்டல்கள் ஒன்றுமில்லை. பல யூதர்களுக்குக் கிறிஸ்தவர்களின் உரிமை அதிர்ச்சி அளிக்கும் இறை நிந்தனையாகும்.

தண்டனை என்ற முறையிலும் (கலா 3:13) அதோடு தொடர்புபடுத்தப்பட்ட குற்றம் என்ற அளவிலும் சிலுவையில் அறைதலால் வரும் அவமானம் முழுவதும் மடமையாகும் (1 கொரி 1:17-18). இது கிறிஸ்துவின் மரணம் மனுக்குலம் அனைத்திற்கும் பரிகாரமாகும் என்ற பொருளோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது (எபே 2:16; கொலோ 2:14). கிறிஸ்தவனுக்குச் சிலுவை மரணம் கிறிஸ்துவின் அன்புக்கும் ஆற்றலுக்கும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்; அவனுடைய ஆண்டவரோடு கொள்ளும் ஒன்றிப்புக்கு அடையாளமும் ஆகும். அவரது சீடராவதென்றால் ஒருவருடைய பழைய இயல்பையும் பாவ இயல்பையும் சிலுவையில் அறையவேண்டும் (உரோ 6:6; கலா 2:20; 5:24). அவரது சீடர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய தன்னையே மறுப்பதை, அதாவது தனது சொந்தத் தேவைகளையும் ஆசைகளையும் துறக்க ஆயத்தமாய் இருப்பதை (மத் 10:38; மாற் 8:34; லூக் 9:23) அடையாளமாகக் குறிக்கச் சிலுவைத்துன்பம் எடுத்துக் கூறப்படுகிறது. உருவகத்தை மாற்றிச் சிலுவை மரணத்தால் கடவுள்பற்றின்மை சாகடிக்கப்பட்டு விட்டது (கலா 6:14). ஆகவே கிறிஸ்துவில் மட்டுமே வாழ கிறிஸ்துவன் சுதந்தரம் உள்ளவனாக இருக்கிறான்.

சிலுவையின் மேல் குற்ற அறிக்கை (INSCRIPTION ON THE CROSS)

இயேசுவின் சிலுவையின்மேல் இருந்த அவர்மேல் சாட்டப்பட்ட குற்றம் எழுதப்பட்ட பலகை (மத் 27:37; மாற் 15:26; லூக் 23:38; யோவா 19:19). இதை மத்தேயுவும் மாற்கும் ''கொலை செய்வதற்கான காரணம்'' என்று குறிப்பிடுகின்றனர் (மத் 27:37; மாற் 15:26). ஆனால் யோவான் குற்ற அறிக்கை என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார். லூக்கா ''இவர் யூதரின் அரசன்'' என்று எழுதப் பட்டிருந்தது என்று வெறுமனே கூறுகிறார்.

நான்கு நற்செய்தியிலும் சிலுவைமேல் பொறிக்கப்பட்ட சொற்கள் வேறுபடுகின்றன. ஆனால் எல்லாவற்றிலும் 'யூதர்களின் அரசன்' என்ற வாக்கியம் காணப்படுகிறது. இதிலிருந்து இயேசு உரோமையர்களின் ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார் என்று தெரிகிறது. மேலும் உரோமை அதிகாரிகளுக்கு யூதர்களின் மேல் இருந்த அவமதிப்பையும் வெறுப்பையும் இதுகாட்டுகிறது. இயேசுவைச் சிலுவையில் அறைந்த இடம் நகருக்கு அருகில் இருந்ததால், யூதர் பலர் அவ்வறிக்கையைப் படித்து ஏளனம் செய்தனர் (யோவா 19:20-32). அவ்வறிக்கை எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருந்ததால் (யோவா 19:19-20) எல்லோரும் அதனைப் படித்தனர். யூதரின் தலைமைக் குருக்கள் பிலாத்துவிடம் சென்று, ''யூதரின் அரசன் என்று எழுத வேண்டாம் 'யூதரின் அரசன் நான்' என்று அவன் கூறியதாக எழுதும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் பிலாத்து அதற்கு மறுத்துவிட்டான்.

இக்காலச் சிலுவைகளின் மேல் இக்குற்றம் I.N.R.I. என்று அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கும். இது I[esus] N[azareneus] R[ex] I[udaeorum] (நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்) என்பதன் சுருக்க வடிவாகும்.

சிலைகள் (IDOLS)

1. சிலைகளிடமிருந்து விலகுதல்:

விவிலியமானது, ஒரு நிலையில், சிலைகளிடமிருந்து அடிக்கடி விலகிவருகின்ற இறைவனின் மக்களைப்பற்றிய கதையாகும். ஒரு நாள், ''மற்றத் தெய்வங்களுக்கு

ஊழியம் செய்து வந்த'' ஆபிரகாமை ஆண்டவர் தெரிந்தெடுத்தார் (யோசு 24:2-3; யூதி 5:6தொ). ஆனால் இம்முறிவானது எவ்வளவு தீவிரமானதாக இருந்தாலும், ஒட்டுமொத்தமாக ஒரே தடவையில் நிறைவேற்றப்பட்டுவிடவில்லை. ஆபிரகாமின் சந்ததியினர் எப்போதும் அதனை மீண்டும் நிகழ்த்த வேண்டும் (ஆதி 35:2தொ; யோசு 24:14-23). அவர்கள் தங்களது தேர்வை மீண்டும் மீண்டும் புதுப்பித்து, ''வீணானவற்றைத் தொடர்வதற்குப் பதிலாக'' அவர்கள் ஒரே இறைவனைப் பின்பற்ற வேண்டும் (எரே 2:2-5).

சிலை வழிபாடானது யாவே வழிபாட்டின் உள்ளார்ந்த செயல்பாட்டிலும் புகுந்துவிடலாம். மனிதன் மட்டுமே இறைவனுடைய உண்மையான சாயலாக இருப்பதன் காரணமாக (ஆதி 1:26-27) உருவங்களை உருவாக்கக் கூடாதெனப் பத்துக் கட்டளைகள் மூலம் இஸ்ராயேல் கற்றிருந்தது (யாத் 20:3தொ; உப 5:7தொ). உதாரணமாக, இறைவல்லமையை அடையாளப்படுத்த மனிதன் உண்டாக்குகின்ற காளையானது (யாத் 32; 1 அர 12:28; நீதி 17:18) இறைவனின் சினத்தையும் இறைவாக்கினர்களுடைய புண்படுத்துகின்ற வஞ்சப்புகழ்ச்சியையும் இஸ்ராயேல் தன் மீது வரவழைத்துக்கொள்ளும் (ஓசே 8:5; 13:2). போலித் தெய்வங்களின் சிலையானாலும் தமது சாயலைக்காட்டும் சிலையானாலும் எதுவானாலும் இறைவன் பிரமாணிக்கமின்மையைத் தண்டிக்கிறார் (உப 13). தம்மைக் கைவிடுபவர்கள் அல்லது கேலிப்பரிகாசம் புரிபவர்கள்மீது தேசிய துன்பங்களை அனுப்புவதன் மூலம் அவர் அவர்களைக் கைவிடுகிறார் (நீதி 2:11-15; 2 அர 17:7-12; எரே 32:28-35; எசே 16:20-23).

நாடுகடத்தப்படுதல் இந்த இறைவாக்கு வரலாற்றுக் காட்சியைக் கொடுமையான விதத்தில் உறுதிப்படுத்தும்போது, மக்கள் திருந்துகின்றனர். ஆனால், சிலை வழிபாட்டினரோ (சங் 31:7) அல்லது இறைவனை மறுதலிப்பவரோ மறைவதில்லை (சங் 10:4.11தொ). இறுதியாக மக்கபேயரின் காலத்தில் சிலைகளுக்குப் பணிவிடை புரிவதென்பது (1 மக் 1:43), புறவின மனிதப்பற்றுக் கோட்பாட்டுக்கு அடிபணிவதாகும். இது ஆண்டவர் தமது மக்களிடம் எதிர்பார்க்கின்ற விசுவாசத்திற்கு ஒவ்வாததாகும். சிலைகளையோ வேதசாட்சி மரணத்தையோ ஒன்றையே அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் (2 மக் 6:18-7:42; தானி 3).

புதிய ஏற்பாடு அதே சூழ்நிலையை விவரிக்கிறது. சிலைகளினின்று விலகி உண்மையான இறைவனை நேரக்கித் திரும்பிய பின்னர் (1 தெச 1:9), அன்றாட வாழ்வை ஊடுருவுகின்ற புறமதவழிபாட்டில் மீண்டும் ஈடுபடுமாறு விசுவாசிகள் அடிக்கடி சோதிக்கப்படுகின்றனர் (1 கொரி 10:25-30). அரசில் நுழைவதற்கென அவர்கள் சிலை வழிபாட்டினின்று விலகி ஓட வேண்டும் (1 கொரி 10:14; 2 கொரி 6:16; கலா 5:20; 1 யோவா 5:21; திருவெளி 21:8; 22:15). இயேசுவிற்கும் உலகிற்கும் இடையிலான கொடிய போராட்டத்தைத் தொடர்கின்ற திருச்சபையானது, ''விலங்கின் சாயலை'' வழிபடுதல் (திருவெளி 13:14; 16:2), ''பாழாக்கும் அருவருப்பை'' ஆலயத்தில் அமைப்பதை ஏற்றுக்கொள்ளல் (மத் 24:15; தானி 9:27) போன்ற சோதனைகள் நிறைந்த வரலாற்றைக் கொண்டுள்ளது.

II. சிலை வழிபாட்டின் பொருள்

இஸ்ராயேலானது இறைவனின் அழைப்பிற்குப் பிரமாணிக்கமாய்ப் பதிலளிக்க முயல்வதோடு நிறைவடையாமல், அதனைச் சோதித்த ''ஊமைச்சிலைகளின்'' இயல்பையும் சிந்தித்தது (1 கொரி 12:2). படிப்படியாக இஸ்ராயேலானது சிலைகளின் ஒன்றுமின்மையைத் துல்லியமான சொற்களில் வெளிப்படுத்தும்.

1. ''பிற கடவுள்கள்'':

எரேமியாவின் காலம்வரை நிலவிய இந்தச் சொற்றொடர் மூலம் இஸ்ராயேலானது யாவேயைத்தவிர பிற கடவுள்கள் இருத்தலையும் ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது.

பொதுப்பாணி யாவே வழிபாட்டில், கலந்து விட்ட, பெண்களுக்கெனச் சந்தேகத்திற்கிட மின்றி ஒதுக்கப்பட்ட ''குடும்பச் சிலைகள்'' (ஆதி 31:19-35; 1 சாமு 19:13-16) அல்லது வெண்கலப் பாம்பு (2 அர 18:4) போன்ற மற்றச் சமயங்களின் ஐயப்பாடுடைய ,எஞ்சிய வைகளைப் பற்றிய கேள்வியல்ல இது. மாறாக, வாக்களிக்கப்பட்ட நாட்டில் இஸ்ரா யேலர் நிலைப்படுத்தப்பட்டபோது அவர் கள் எதிர்கொண்ட கானானிய பாகால் தெய் வங்களைப்பற்றிய பிரச்சனையே இது. இந் தப் பாகால்களுக்கு எதிரான மரணப் போராட்டமாகும் இது. தனது தந்தை, பாகா லுக்கு ஒப்புக்கொடுத்த பீடத்திற்குப் பதிலாக யாவேயின் பீடத்தை மாற்றியமைத்த நீடித்த பெருமை கிதியோனுக்கு உரியதாகும் (நீதி 6:25-32). எனவே, இஸ்ராயேலானது பிற கடவுள்களைப்பற்றிப் பேசினாலும், யாவே மட்டுமே உண்மையான இறைவன் என் பதை அது சந்தேகிக்கவில்லை (யாத் 20:3-6; உப4:35). இவ்வாறுதான் இது மற்ற நம்பிக் கைகளை மாற்றி அமைக்கிறது (2 அர 5:17).

2. சிலைகளின் ஒன்றுமின்மை:

சிலைகளுக்கெதிரான மரணப் போராட்ட மானது தொடர்கிறது. ஆனால், சிலைகள் ஒன்றுமற்றவை என்பதை அறிந்து கொள்வ தற்கென, ஆண்டவரில் விசுவாசமுள்ள வரின் ஆவியில் இப்போது இது நிகழ்கிறது (சங் 81:10; 1 நாள் 16:26).

தனது வாழ்வு அபாயத்தில் இருந்தாலும், தகனப்பலிகளை உண்ண முடியாத கடவுள் களை எலியா கேலிப்பரிகாரம் செய்கிறார் (1 அர 18:18-40). சிலைகள் எதிர்காலத்தைப் பற்றிக்கூற இயலாமையால் அவை எதையும் அறிந்திருக்கவில்லை என்பதை நாடு கடத்தப் பட்டோர் தெளிவாகப் புரிந்து கொண்டனர் (எசா 48:5). அவைகளால் காப்பாற்றவும் முடியாது (45:20-21). ''நமக்குமுன் எந்தத் தெய்வமும் உருவாக்கப்படவில்லை, நமக் குப் பின் எதுவும் இருப்பதில்லை'' (43:10). இதுவே உண்மையான நிலையெனில், இதற் குக் காரணம் அவை உண்மையாக இல்லா மல் மனிதனுடைய கண்டுபிடிப்புகளாக மட் டுமே இருப்பதாகும். இறைவாக்கினர்கள், மரம், கல், அல்லது பொன்னாலான சிலை களுக்கு எதிராகத் தங்களது தாக்குதல்களைச் செய்தபோது (ஆமோ 5:26; ஓசே 8:4-6; எரே 10:3தொ; எசா 41:6-7; 44:9-20), உருவக விவரிப்பை மட்டுமே அவர்கள் பழிக்காமல் உண்மையான நெறிபிறழ்வைப் பழிக்கின்ற னர். படைத்தவரை வழிபடாமல், படைப் பானது தன்னுடைய படைப்பையே வழி படுகிறது.

இச்சிலை வழிபாட்டின் விளைவுகளை ஞான ஆகமம் வெளிக்கொணர்கிறது (ஞான 13-14). வாழ்வானவரை விட்டுவிடுவதைச் சுட்டிக்காட்டுவதனால், இது மரணத்தின் பலனாக உள்ளது. ஆனால் அதே நேரத்தில் இந்த நெறிபிறழ்வு நிலைக்கு ஒரு விளக்கத் தினை அது விசுவாசிக்கு அளிக்கிறது. இது இறந்தோர் அல்லது புகழ்பெற்ற மக்களை இறைமைப்படுத்துதல் (14:12-21), அல்லது மனிதனைத் தங்களுடைய படைப்பாள ரிடம் நடத்திச்செல்ல, குறிக்கப்பட்ட இயற் கைச் சக்திகளை வழிபடுதலாகும் (13:1-10).

சிலை வழிபாட்டினைப் பேய் வழிபாட் டுடன் இணைப்பதன் மூலம் பவுல் இந்தக் குற்றங்காணுதலைத் தொடர்கிறார். சிலை களுக்குப் பலியிடுவதென்பது பேய்களுக்குப் பலியிடுவதாகும் (1 கொரி 10:20-21). இறுதி யாக ஒரு பயங்கர குற்றச்சாட்டில் படைத்த வரை அவரது படைப்பில் அறிந்து கொள்வ தற்குப் பதிலாக, அவரது படைப்புகளின் பிரதிக்காக அழிவில்லா இறைவனின் மகி மையை மாற்றிய மனிதரின் உலகளாவிய பாவத்தை அவர் கண்டிக்கிறார். இதிலிருந்து எல்லா நிலைகளிலும் அவர்களின் வீழ்ச்சி தொடர்கிறது (உரோ 1:18-32).

3. சிலை வழிபாடு ஒரு நிலையான சோதனை:

சிலை வழிபாடானது ஒரே நேரத்தில் வென்றுவிடக்கூடிய மனப்பான்மையன்று. இது மாறுபட்ட வடிவங்களில் மீண்டும் வருகின்றது. ஆண்டவருக்குப் பணிபுரிவதை ஒருவன் விட்டுவிடும் போதெல்லாம் அவன்,

தன்னால் படைக்கப்பட்டவைகளுக்கு அடிமை யாகிறான். அப்படிப்பட்ட பொருள்கள்: பணம் (மத் 6:24), மது (தீத் 2:3), அயலாரின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆசை (கொலோ 3:5; எபே 5:5), அரசியல் வல்லமை (திரு வெளி 13:8), இன்பம், பொறாமை, வெறுப்பு (உரோ 6:19; தீத் 3:3), பாவம் (உரோ 6:6), சட்டத்தைப் பொருளளவில் கடைப்பிடித்தல் (கலா 4:8-9) ஆகியவை யாகும். இவையனைத்தும் மரணத்திற்கு நடத் திச் செல்லுகின்றன (பிலி 3:19); ஆனால் ஆவியின் கொடையோ வாழ்வாக உள்ளது (உரோ 6:21-22). சிலை வழிபாட்டை உரு வாக்குகின்ற இந்தக் குற்றங்களுக்குப் பின் னால், நமது நம்பிக்கைக்குரிய ஒரே இறை வனைப் பற்றிய அறியாமை மறைந்துள்ளது.

சிலைக்கல் (SACRED STONE)

பெரும்பாலும் எரி நட்சத்திரக் கல்லாக இருக்கலாம். வானத்திலிருந்து விழுந்ததால், இயற்கைக்கு அப்பால் தோன்றியதாக நம் பப்படுகிறது. இது ஆர்தமிஸ் கடவுளுக்கு அடையாளமாகக் கருதப்படுகிறது (அ.ப. 19:35).

சிலைத்தூண் கருவாலி மரம் (OAK OF THE PILLAR)

இது செக்கேமிலுள்ள புனித கருவாலி மரம். இந்த மரத்தடியில் செக்கேமில் இருந்த எல்லா மனிதரும் பெத்மில்லோ நகரின் எல்லாக் குடும்பங்களும் ஒன்றுகூடி அபிமெ லக்கைத் தம் அரசனாக்கினர் (நீதி 9:6). ஒருவேளை இந்த மரத்தடியிலே யாக்கோபு தன் மனைவிகளின் வேற்றுத் தெய்வங்களின் சிலைகளையும், அவர்களின் காதணிகளையும் புதைத்தார் எனலாம் (ஆதி 35:4). மேலும் யோசுவா, இஸ்ராயேல் மக்கள் சட்டத்திற்குத் தாங்கள் பணிந்து நடப்பதாகக் கொடுத்த வாக்கிற்குச் சாட்சியாக இந்த இடத்திலே ஒரு பெரிய கல்லை நாட்டினார் (யோசு 24:26).

சில்கி (SHILHI - வேல் எறிபவன், போர்வீரன்)

யூதாவின் அரசன் யோசபாதின் தாயாகிய அசுபாவின் தந்தை (1 அர 22:42; 2 நாள் 20:31).

சில்கிம் (SHILHIM - ஆயுதம் தாங்கிய)

யூதாவின் தெற்கே சிக்லாகு அருகில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:32). இதற்கு ஒத்தபகுதியாகிய யோசு 19:6-இல் இது சாரு கென் என்றழைக்கப்பட்டு, சிமியோனுக்குக் கொடுக்கப்பட்டதாக உள்ளது.

இது 1 நாள் 4:31-இல் சாரயிம் என்றழைக் கப்படுகிறது. இதைப் பெயேர்-செபாவுக்கு மேற்கில் 30 கி.மீ. தொலைவில் நகர் - பேசோரின் கரையிலுள்ள தேல் ஏல் - பாராக அடையாளம் காட்டலாம்.

சில்தாய் (ZILLETHAI - யாவே என் பாதுகாப்பு ஆவார்)

1. சிமயியின் மகன். பென்யமின் கோத்தி ரத்தில் ஒரு குடும்பமும் ஆகும் (1 நாள் 8:20).

2. இவர் சிக்லாகில் தாவீதோடுசேர்ந்து கொண்ட மனாசே கோத்திரத்தைச் சார்ந்த வர். தாவீதின் படையில் தலைவராகவும் இருந்தார் (1 நாள் 12:20).

சில்பா (ZILPHA - குட்டை மூக்குடைய)

சில்பா காது, ஆசேர் ஆகியவர்களின் தாய். இவள் லாபானால் தன் மகள் லேயாவுக்கு வேலைக்காரியாகக் கொடுக்கப்பட்டவள் (ஆதி 29:24; 26:18). மலடாகிவிட்ட லேயா இவளைத் தன் கணவனுக்கு, அதாவது யாக் கோபுக்கு, ''மனைவியாக''க் கொடுத்தாள் (ஆதி 30:9; 37:2). இவள் யாக்கோபுக்கு காது ஆசேர் என்னும் பிள்ளைகளைப் பெற்றாள் (ஆதி 30:19.12; 35:26).

சில்லா (SILLA - கிளை, ஒடக்கரை)

எருசலேம் நகருக்கு வெளியே அமைந் திருந்த சிறு பகுதி. இது மில்லோ வீட்டோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. இங்கு தான் யூதாவின் அரசன் யோவாசு கொல்லப் பட்டார் (2 அர 12:20). எபிரேய வாசகம் தெளிவாயில்லை.

சில்லா (ZILLAH - மறைப்பு, பாதுகாப்பு)

இவள் இலாமேக்கின் இரண்டாவது மனைவியும், துபால் - காயின், அவர் சகோ

தரி நாமா ஆகியவர்களின் தாயும் ஆவாள் (ஆதி 4:19-23).

சில்லு (DISCUS)

இரேக்கமயமாக்கும் பொதுவான முயற்சியில் மக்கபேயர் காலத்தில், யாசோன் என்ற தலைமைக்குரு யூதர்களுக்கு அறிமுகமாக்கிய ஒரு கிரேக்க விளையாட்டு. கிரேக்க உடற்பயிற்சிக் கூடங்களை நிறுவுவதற்கும் அதில் உடற்பயிற்சி செய்வதற்காக இளைஞர் குழுக்களை நிறுவுவதற்கும் கடவுள் பயமற்ற யாசோன் சிரிய நாட்டு அரசன் அந்தியோக்கு எப்பிபாணிடம் உத்தரவு பெற்றார் என்று 2 மக் 4:7-17 கூறுகின்றது. தலைமைக்குருவும் அவன் நண்பர்களும் கோவில் காரியங்களில் கவனத்தைச் செலுத்துவதைவிட இந்த விளையாட்டுகளில், சில்லு விளையாடுவதிலும், சேர்ந்து அதிகம் ஆர்வம் காட்டியதாகச் சொல்லப்படுகிறது.

இந்தச் சில்லு மரத்தாலோ, கல்லினாலோ, உலோகத்தினாலோ செய்யப்பட்ட வட்டமான மிகவும் பளுவான தகடாகும். இந்தச் சில்லை மிகவும் தூரமாக எறிவதில்தான் இந்த விளையாட்டு அடங்கியுள்ளது. இது சாதாரணமாக 100 அடி அதற்கும் மேலான தூரத்திற்கு வீசப்பட்டது. இதை எறியும் முறை, கிரேக்க சிற்பி மைரன் செதுக்கிய 'சில்லு எறிபவர்' சிலையில் காட்டப்படுகின்றது.

சில்லேம் (SHILLEM - ஈடு செய்யப்பட்ட)

நெப்தலியின் நான்காவது மகன் (ஆதி 46:24), சில்லேமியர் குலத்தின் மூதாதையர் (எண் 26:49). இவர் 1 நாள் 7:13-இல் சல்லூம் (7) என்று அழைக்கப்படுகிறார்.

சில்வானின் போதனைகள் (SILVANUS, TEACHINGS OF)

வட எகிப்தில் கி.பி. 1946-இல் கெனோபோஸ் கியோன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, பேதுரு, பவுல் ஆகியோரின் தோழனான சில்வான் எழுதியதாகக் கருதப்பட்ட ஞானவாதப் போலி நூலாகும்.

சில்வான் (SILVANUS)

காண்க. சீலா.

சிவந்தமேனி (RUDDY)

ஆணின் அழகைச் சித்தரிக்கும் ஒருசொல். இச்சொல் முந்தைய வாசகங்களில் ஒரு வேளை சிவப்பு மயிரை விவரிக்கலாம் (1 சாமு 16:12; 17:42; காண் ஆதி 25:25). பிற்கால வாசகங்களில் வலிமையுள்ள உடல் நலத்தைக் குறிக்கின்றது (உ.ச. 5:10; புல 4:7).

சிவு (ZIV - ஒளிமயமான)

சிவு என்பது இரண்டாவது எபிரேய மாதத்தின் முந்தைய பெயராகும். இது பிற்காலத்தில் இய்யார் என்று அழைக்கப்பட்டது. இது ஏப்ரல் - மே மாதங்களுக்கும் சித்திரை மாதத்துக்கும் இணையானது. சிவு மாதத்தில்தான் சாலமோன் ஆலயக்கட்டடப் பணியைத் தொடங்கி அடிக்கல் நாட்டினார் (1 அர 6:1.37).

சிறப்புப்பெயர் (SURNAME)

ஆண்டவரின் ஆசி வரும் நாளில் புறவினத்தார், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களோடு ஒன்றானவர்கள் என்பதைக் காட்டச் சிறப்புப் பெயர்களைச் சூடிக் கொள்வர் என்று எசா 44:5-இல் கூறப்படுகிறது. எசா 45:4-இல் கடவுள் சைரஸ் அரசனோடு பேசும்போது ''உனக்குச் சிறப்புப் பெயர் தருவோம்'' அதாவது, ''பெயரும் புகழும் வழங்கினோம்'' என்கிறார்.

புதிய ஏற்பாட்டில் நான்கு பேர் சிறப்புப் பெயர் பெற்றனர். சீமோன் பேதுரு என்று இயேசுவால் பெயரிடப்பட்டார்; அதாவது இயேசு அப்பெயரை அவருக்கு அளித்தார் (மாற் 3:16; மத் 16:18). செபதேயுவின் மக்களான யாக்கோபுக்கும் யோவானுக்கும் இடியின் மக்கள் என்று பொருள்படும் ''பொவனேர்கேசு'' என்று இயேசு பெயரிட்டார் (மாற் 3:17).

அ.ப. 1:23-இல் பர்சபா என்றழைக்கப்பட்ட யோசேப்பு, யுஸ்து என்று சிறப்புப் பெயர் சூட்டப்பட்டார். அ.ப. 4:36-இல் யோசேப்பு

என்பவர்க்குப் பர்னபா என்று அப்போஸ்தலர் களால் சிறப்புப் பெயர் சூட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தப் பெயராலேயே இவர் அப்போஸ்தலர் பணியின் மற்றப் பகுதிகளி லும், பவுலின் கடிதங்களிலும் அழைக்கப் படுகின்றார் (1 கொரி 9:6; கலா 2:1:9.13; கொலோ 4:10). இப்பெயருக்குப் பொருள் ''ஆறுதலின் புதல்வன்'' என்று அப்போஸ்த வர் பணி கூறுகிறது.

சிறிய ஆசியா (ASIA MINOR)

கருங்கடலுக்கும், மத்திய தரைக்கடலுக் கும் இடையிலுள்ள ஒரு தீப கற்பமாகும். துருக்கிய மொழியில் அனதோலு என் றழைக்கப்படும். அர்மேனிய மேட்டு நிலத்தைக் கிழக்கில் கொண்டது.

இதன் கடற்கரைப்பகுதிகளுக்கும், உள் பகுதிகளுக்கும் இடையே அதிக வேறுபாடு உண்டு. 1000 மீட்டர் உயரத்திலுள்ள பீடபூமி யைச் சுற்றி இரண்டு மலைத் தொடர்களைக் கொண்டது. கருங்கடல் ஓரத்தில் போந்து மலைகளும் மத்தியதரைக் கடலோரத்தில் தவுரசு, அமனோசு ஆகிய மலைகளும் உள் ளன. இந்த மேடுபள்ளமான பகுதியில் பாதை பெரிய மத்திய மேட்டுச் சமவெளி, சிலிசியாவின் தெற்குக் கடற்கரைச் சமவெளி ஆகிய இருசமவெளிகள் வழியாகச் செல்லு கிறது. சிலிசியாச் சமவெளி சிறிய ஆசியா வையும் சீரியாவையும் இணைக்கிறது. இப் பகுதியில் சிலிசியன் வாயில் வழியாகப், பழங்கால வாணிகச் சாலை ஓடுகிறது. இது தான் செருசு, பெரிய அலக்சாந்தர் ஆகியோ ரின் பெரிய நெடுஞ்சாலையாகும். இதன் வழியாகப் பவுலும் சீலாவும் பயணம் செய்தனர் (அ.ப. 15:40-41). சிறிய ஆசியாவின் மேற்குக் கரையில் பல இயற்கையான துறைமுகங்கள் உள்ளன. இங்குதான் பழங்காலக் கிரேக்கக் குடியிருப்புக்களும் புதிய ஏற்பாட்டுத் திருச் சபைகளும் இடம் பெற்றன (திருவெளி 2-3).

பழைய ஏற்பாட்டில் சிறிய ஆசியா இத்தி யர் பேரரசின் மையமாகத் திகழ்ந்தது. அதன் தலைநகர், இக்காலப் பொகஸ்கோயின் அரு கில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பவுலின், வேத போதகப் பயண காலத்தில், இத்தீபகற் பம், உரோமையரால் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை: ஆசியா, பித்தி னியா, போந்து, கலாத்தியா, கப்பதோக் கியா, லீக்கியா, சிலிசியா, ஆசியா என்ற சொல் (1 பேதுரு 1:1) முழுத்தீபகற்பத்தை விட ஆசியா மாகாணத்தையே குறிக்கிறது.

சிறிய கொம்பு (LITTLE HORN)

கொம்பு பொதுவாக ஆற்றலின், உதவி யின், வெற்றியின் மகிமையின் அடையாள மாகக் கருதப்பட்டது. தானி 7:8 தொ. 20. தொ; 8:8தொ-இல் வரும் இக்குறிப்பு செலூக்கிய மன்னன் அந்தியோக்கு எப்பிப் பானைக் குறிக்கிறது. இவர் யூதர்களைக் கொடுமைப்படுத்தியதும் ஆலயத்தைப் பங் கப்படுத்தியதும் நேர்மையான பலிகளை ஆலயத்தில் நிறைவேற்றுவதைத் தடை செய் ததும் மக்கபேயரின் கிளர்ச்சிக்கு இட்டுச் சென்றன.

சிறுத்தைப்புலி, வேங்கை (LEOPARD)

மிகக் கொடூரத்தன்மையும், எதிர்த்து நிற்க முடியாததுமான இந்த மிருகம் இந்த இருப தாம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்து இருந்திருக்கிறது. இந்த வகையைச் சார்ந்த ''சித்தா'' என்ற ஒருவகை சிறுத்தைப் புலியைக் கட்டுப்படுத்தி, பயிற்றுவித்து, வேட்டைக்குத் தயார் செய்யலாம். இது மிக வேகமாகச் செல்லக்கூடியது. விவிலிய உல கில் இவ்வகை மிருகம் நன்கு தெரிந்த ஒன்று (அ.ப. 1:8).

பழைய ஏற்பாட்டில் சிறுத்தைப் புலியின் புள்ளிகளைப் பற்றிய (எரே 13:23) குறிப்பு உள்ளது. எசாயா இறைவாக்கினர் அமைதி மிக்க எதிர்காலத்தில் புலி சிறு குழந்தையின் அருகில் உறங்கும் (எசா 11:6) என்று முன் னறிவிக்கிறார். லெபனோன், கெர்மோன் (எர் மோன்) ஆகியவை சிறுத்தைப் புலிகளின் உறைவிடமாகக் குறிப்பிடப்படுகின்றன (உ.ச. 4:8). இக்குறிப்புகளைத்தவிர, மற்ற இடங்களில், சிறுத்தை உருவகமாகவோ உலக இறுதிக்காலத்தைச் சேர்ந்த விலங்கா கவோ விவரிக்கப்படுகிறது.

ஓசே இறைவாக்கினர், இஸ்ராயேலைத் தண்டிக்க இருந்த கடவுளைச் சிறுத்தைப் புலிக்கு ஒப்பிட்டுள்ளார் (ஓசே 13:7). இஸ்ரா யேலுக்கு எதிராகக் காத்திருக்கும் எதிரியைப் பற்றிப் பேசுவதற்காகவும் இதே உருவகம் பயன்படுத்தப்பட்டுள்ளது (எரே 15:6). அப 1:8-இல் கல்தேயக் குதிரைகள் சிறுத்தைப் புலிகளைவிட வேகமானதாக வர்ணிக்கப் படுகின்றன. மேலும் தானி 7:6, திருவெளி 13:2 ஆகிய விவிலிய வாக்குகளிலும் இத்தகைய விலங்கு பற்றிய விவரிப்புகள் உள்ளன.

சிறுநீரகங்கள் (KIDNEYS)

உடலின் மற்ற உறுப்புக்களைக் குறிக்கும் சொற்களைப் போலவே, சிறுநீரகங்களும் சாதாரணமாகச் சிறுநீரகத்தைக் குறிப்பதாக வும், உருவகமாக வேறு பொருளைத் தருவ தாகவும் அமைகின்றன. மனித சிறுநீரகங் களைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் எபிரேய கிரேக்கச் சொற்கள் வழக்கமாக உருவக உள்ளர்த்தங்களைக் கொண்டதாக (எரே 12:2; திருவெளி 2:23) மனம், இதயம், உள்ளம், ஆன்மா, ஆகியவற்றைக் குறிப்ப தாக வருகின்றன. யோபு 16:13-இல் மட்டுமே அவ்வாறு வரவில்லை.

எசா 34:6-ஐத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளிலும் பலி ஒப்புக்கொடுக்கும் ஒழுங்கு முறைகளைப்பற்றிப் பேசும்போது விலங்கு களின் சிறுநீரகம் பற்றிக் குறிப்பிடப்படு கிறது. யாவேக்கு நன்றியின் அடையாளமாகக் குடல்களை மூடிய கொழுப்பு யாவையும், கல்லீரல் பையையும், இரு சிறுநீரகங்களை யும், அவற்றின் மேலேயுள்ள கொழுப்பை யும் பீடத்தின் மீது எரிக்க வேண்டும் எனக் கூறப்பட்டது (யாத் 29:13; லேவி 3:4.10.15). அக்காலத்தின் மக்களின் எண்ணத்தில் சிறுநீர கங்களின் நிறம், அடர்த்தியினால் அவை உயிரின் இருப்பிடமாகக் கருதப்பட்டது. அதன் விளைவாக, அவை இரத்தத்தோடு சேர்ந்து தெய்வத்திற்கு உரியதெனக் கருதி னர். பின்னர் இக்கருத்து ஓரளவு மாறி, விலங்குகளின் மிகச் சிறந்த பகுதியாகக் கருதப்பட்டது சிறுநீரகமாகும் என்றனர்.

சிறுநீரகங்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்த அளவுக்கதிகமான முக்கியத்துவம், சிறு நீரகமே மனித உளவியல் மற்றும் ஒழுக்க வாழ்விற்கு மையம் எனும் கருத் துக்கு இட்டுச் சென்றது. இவைகளோடு இதயத்தைத் தொடர்புபடுத்தி, அவையே மனித ஆளுமையின் உட்பகுதியென்றும், அத்தகைய இதயத்தின் சிந்தனைகளையும் மனத்தின் மறைபொருட்களையும் இறை வன் சோதிக்கிறவர் எனக் கூறுகிறது விவிலி யம் (சங் 7:9; 26:2; எரே 11:20; 17:10; 20:12; திருவெளி 2:23). துன்பம், கசப்புத்தன்மை, மகிழ்ச்சி முதலிய மனித உணர்வுகளுக்கும் இவையே காரணமென்றும் கூறப்பட்டன. சிறுநீரகங்களை ஒருவனின் ஒழுக்க நெறி யோடு தொடர்புபடுத்திப் பேசுபவையே மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின் றன. ஆனால் சிறுநீரகமே ஒருவனின் ஒழுக்க வாழ்விற்கு அடிப்படையென எபிரேயர் நம் பினர் என்று முடிவு செய்யுமளவுக்கு அதிக மான விவிலியப் பகுதிகள் இல்லையாத லால் நம்மால் இக்கருத்தை ஏற்க முடிய வில்லை.

சிறு பயறு (LENTILS)

இது சதைப்பிடிப்புடைய ஒரு பயறு வகை. இந்தப் பயறிலிருந்து யாக்கோபின் பயற்றங்கூழ் தயாரிக்கப்பட்டது (ஆதி 25:34). இது, இன்று அரேபியாவில் தயாரிக் கப்படும் ''முய்யெத்தெரா'' என்ற உண வினை ஒத்ததாகக் கருதப்படுகின்றது. இந்த உணவில் வெங்காயம், அரிசி, ஒலிவ எண் ணெய் மற்றும் இப்பயறு முதலிய பொருட் கள் சேர்க்கப்படுகின்றன. இவ்வுணவின் சிவப்புநிறம், சிவப்பு நிறமுடைய ஏதோ மோடு தொடர்பு படுத்தப்பட்டதாகத் தெரி கிறது (ஆதி 25:30).

தாவீது மகனயீம் என்ற இடத்திற்கு ஓடிச் செல்ல வேண்டியிருந்தபோது (2 சாமு 17:28), இந்தச் சிறுப்பயறையும் மற்ற உணவுப் பொருட்களுடன் சேர்த்து உண்டார். தாவீ தின் வலிமைமிக்க வீரர்களில் ஒருவரான சம்மாகு என்பவர் இலேகி என்ற இடத்துக் கருகில் சிறுபயறு நிறைந்த வயலில் பெலிஸ்

தியரைத் தனியாளாக வெற்றி கொண்டார் (2 சாமு 23: 11). எசேக்கியேல் இறைவாக்கினர், தனது கோதுமைக் கலவையில் இந்தச் சிறு பயறின் விதைகளையும் சேர்த்து ரொட்டி தயாரித்தார். இந்த அப்பம் பஞ்சத்தின் அடையாளமாகும் (எசே 4:9). இன்றும்கூட மேற்காசியாவில் குறிப்பாகத் தெற்கு எகிப்தில் வாழும் ஏழை மக்கள் இதைத் தங்களின் முக்கியமான உணவாக உண்டுவருகின்றனர்.

சிறைக்கூட மடல்கள் (PRISON LETTERS)

பவுல் சிறையில் இருந்தபோது எபேசியர், பிலிப்பியர், கொலோசியர், பிலமோன் ஆகியோருக்கு இந்த மடல்களை எழுதியதால் (எபே 3:1; பிலி 1:13-14; கொலோ 4:3; பில 1); இவை ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன. பாரம்பரியமாக இருந்த நான்கு மடல்களும் பவுல் உரோமையில் சிறை இருந்தபோது எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றன (அ.ப. 28; கி.பி. 61-63). ஆனால் இதற்கு முன்பே இரு ஆண்டுகளுக்கு அவர் செசரியாவில் சிறை இருந்திருக்கிறார் (23:33-26:32). சில குறிப்புகள் (20:18-19; 1 கொரி 15:32; 2 கொரி 1:8-10) இதற்கும் முன்பே பவுல் எபேசில் சிறையிருந்திருக்கலாம் என்று சுட்டுகின்றன. கொலோசியர் திருமுகம் ஒருபுறம் எபேசியர் திருமுகத்தோடும் மறுபுறம் பிலமோனுக்கு எழுதப்பட்ட திருமுகத்தோடும் கொண்டிருக்கும் தொடர்புகள் (இவையாவும் பவுலால்தான் எழுதப்பட்டவை என்று ஏற்றுக் கொண்டால்), இம்மூன்றிற்கும் ஒரே காலத்தைக் குறிக்கலாம் என்று சுட்டுகின்றன. சூழ்நிலை, மற்றும் மொழிநடையைப் பொறுத்த மட்டும், பிலிப்பியர் திருமுகம் முந்தைய திருமுகங்களோடு தொடர்புடையதாகத் தெரிகிறது (உரோமையர், 1-2 கொரிந்தியர், கலாத்தியர்). இக்காலப்பிரச்சினைக்கு ஒரு விடை, உரோமைச் சிறைவாசத்தில் அல்லாமல், எபேசில் இருந்திருக்கக்கூடிய சிறைவாசத்தின்போது பிலிப்பியர் திருமுகம் எழுதப்பட்டிருக்கலாம் என்று ஏற்றுக் கொள்வதாகும். திமொத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகமும் சிறையில் எழுதப்பட்டதுதான் (2 திமொ 1:8). ஆனால் இது திமொத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதல் திருமுகத்தோடும் தீத்துவுக்கு எழுதப்பட்ட திருமுகத்தோடும் நெருங்கிய தொடர்புடையதாகும்.

சிறைக்கூடம் (PRISON)

சட்டப்பூர்வமான சிறைத்தண்டனை பழங்காலச் சட்டங்களில் காணப்படவில்லை. முதன் முதலில் வேதாகமத்தில் பாரசீக ஆட்சிக்காலத்தில் (எஸ் 7:26) சிறைத்தண்டனை அல்லது குற்றவாளி கொடுமையாகக் கண்காணிக்கப்படும் ஓர் இடம் என்று குறிப்பு காணப்படுகிறது. லேவி 24:12; எண் 15:34 என்பவை தற்காலிகமாகக் காவலில் வைப்பதைக் குறிக்கின்றன.

அரசாட்சிக் காலத்தில் ஒருவன் ஆட்சிக்கோ, மக்களுக்கோ, நாட்டிற்கோ, அபாயத்தையோ, பயத்தையோ விளைவித்தால் அவன் சிறையில் அடைக்கப்படுவான் (1 அர 22:27; எரே 37:15; 2 நாள் 16:10; எரே 37:16; எசா 24:22; 1 அர 22:27). கொடிய சிறைத்தண்டனை என்பது ஓர் இருட்டான நிலவறையில் அடைக்கப்படுவதாகும். இலகுவான சிறைதண்டனை என்பது காவலர்கள் தங்கியிருக்கும் முற்றத்தில் அடைக்கப்படுவதாகும். இதில் குற்றவாளிகள் வெளியுலகத் தொடர்பில் இருந்து விலக்கப்படுவதில்லை (எரே 32:2; 33:1; 38:6; சங் 142:7; எசா 24:22).

இஸ்ராயேல் அல்லாதவர்களின் சிறை, எகிப்தின் அரச கைதிகள் என்ற குறிப்புகளும் காணப்படுகின்றன (ஆதி 39:20;40:3; 2 அர 17:4..) ஓசேயா, சனகெரிபு என்னும் அசீரிய அரசனால் சிறையில் அடைபட்டார். யோயாகின் சிறை உடை அணிந்து பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டார் (2 அர 25:27.29). செதேக்கியா பாபிலோனியச் சிறையிலும் (எரே 52:11) சிம்சோன் பெலிஸ்தியச் சிறையிலும் அடைக்கப்பட்டனர் (நீதி 16:21).

ஒருவன் தெரியாமல் கொலை செய்துவிட்டால் நகரத் தலைவர்கள் அவனை அடைக்கலம் நகரத்திற்கு அனுப்புவர். இதனால் அவன் குற்றம் மன்னிக்கப்படுகிறது.

இக்கருத்தைச் சிறைத் தண்டனைக்கு ஒப்பிடலாம் (எண் 35:25)

தீர்ப்புக்காகக் காத்திருக்கும் கைதிகள் அடைக்கப்படும் இடங்களைப் புதிய ஏற்பாடு கூறுகிறது (அ.ப. 5:21.23; 4:3; 5:18; மத் 5:25). சிறையில் அடைபடுவது ஒருவகைத் தண்டனையாகும் (அ.ப. 22:19; மத் 18:30). சிறு தவறுகளுக்குச் சிறையிலடைக்க உரோமை அதிகாரிகள் அதிகாரம் பெற்றிருந்தனர் (மத் 11:2; அ.ப. 16:26; மத் 14:10). சிறைக்கூடம் பல அறைகளைக் கொண்டிருக்கும். இவற்றில் வெளிச்சம் இல்லாதவை மிக மோசமாக இருக்கும் (அ.ப. 12:7; 16:24). சிறைச்சாலையில் அடைப்பதோடு கைதி சங்கிலியால் கட்டப்படுவதும் உண்டு (16:26).

சிறையிலிருந்த ஆன்மாக்கள் (SPIRITS IN PRISON)

இறைமகன் இயேசு உயிர்விட்ட பின், உயிர்ப்புக்கு முன் இந்த இடத்திற்குச் சென்றார் எனப் பேதுரு திருமுகம் கூறுகிறது (1 பேதுரு 3:19). இந்த ஆன்மாக்கள் கிறிஸ்துவுக்கும் முன் மரித்தவர்களாக இருக்கலாம் அல்லது ஆதி 6:1-7-இல் குறிக்கப்படும் வீழ்ச்சியுற்ற வானதூதர்களாக அல்லது இரு குழுவினரையும் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இந்த நிகழ்ச்சி இறைமகன் இயேசு உலகில் மரித்த அனைவரையும் மீட்டார் என்ற உண்மையைத் தெளிவாக்குகிறது.

சிற்றரசர்கள் (VASSALS)

அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் சிற்றரசர்கள். பல சமயங்களில், சிற்றரசர்கள் அரசனால் தோற்கடிக்கப்பட்டவர்களாவர். அரசனது அதிகாரத்துக்கு உட்பட்டு, தனது மக்களையே ஆளுவதற்கு ஆளுநராக வென்ற அரசனால் நியமிக்கப்பட்ட அரசர்கள் ஆவார்கள். இவர்கள் இளவரசர்கள் என்றும், ஊழியர்கள் என்றும், அடிமைகள் என்றும் குறிக்கப்படுகின்றனர். இவ்வாறு பதவியையும் ஆட்சியையும் இழப்பதைப்பற்றி புல 1:1 விவரிக்கிறது. சிற்றரசர்கள் அரசனுக்குக் கப்பம் கட்ட வேண்டி இருந்தாலும், அவர்களுக்கென்று மரியாதையும் மதிப்பும் இருந்தன. செல்வமும் கொண்டிருந்தனர்.

சிற்றாய் (SHITRAI - எழுதுபவன்)

சாரோனில் இருந்த தாவீதின் ஆட்டு மந்தைகளைக் கவனித்து வந்த அரச காப்பாளராகிய ஒரு சாரோனியர் (1 நாள் 27:29).

சிற்றுளி (HATCHET)

ஆலயத்திலுள்ள சிற்பவேலைமிக்க மரங்களைத் துண்டுபடுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒருவகையான கருவியாகும் (சங் 74:6). ஒருவேளை மரம் வெட்டும் சிறு கோடரி என்றும் சொல்லலாம்.

சினத்தின் உணவுப் படையல் (JEALOUSY, ORDEAL OF)

விபச்சாரத்தில் ஒரு பெண் ஈடுபட்டாள் எனச் சந்தேகம் கொண்ட பின் அது உண்மையா பொய்யா என நிரூபிக்கச் செய்யப்படும் சோதனை இது. அந்தப் பெண் கூடாரத்தின் புழுதியும் புனித நீரும் கலந்து குடிக்க வேண்டும். அதற்குமுன் தன் கையில் சினத்தின் உணவுப்படையலை ஏந்திக் கொண்டு சாபத்துக்குரிய ஆணையிட வேண்டும். இவற்றைச் செய்தபின் அவள் குற்றமுள்ளவளாய் இருந்தால் வயிறு வீங்கித் தொடைகள் அழுகி விடும். இல்லாவிடில் கருத்தரிக்கத் தக்கவளாக இருப்பாள் (எண் 5:12-38).

சினம், கோபம் (ANGER)

விவிலியத்தில் மனிதரின் சினத்திற்கும் கடவுளின் சினத்திற்கும் தன்மையிலும் இறையியல் பொருளிலும் பெரும் வித்தியாசம் உள்ளது. ஆனால் இரண்டிற்கும் ஒரே சொல்லே பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக ஒருவரின் மனம் ஒரு தவறினால் புண்படுத்தப்பட்டால் அந்தப் புண்பட்டவரின் மன உணர்ச்சியே கோபம் எனப்படுகிறது. ஆனால் இது பொறாமை, வெறுப்பு ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும். ஆனாலும் இவை சினத்தோடு தொடர்புடையன.

ஆதி 27:45-இல் கோபம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழங்கால எபி

ரேய உளவியல் முறைப்படி மூக்குதான் சினத்தின் இருப்பிடம் (பழ 14:29; எண் 11:20). சினம் என்ற சொல் பழைய ஏற்பாட்டில் கடவுளின் சினத்தைக் குறித்தது. 'எரித்தது', எரிக்கும் சினம் ஆகியவை மனிதனைக் குறித்தது (எண் 22:27; யோனா 4:1; எசா 7:4; யாத் 32:12; 2 அர 5:12; சங் 19:6). இது சூரியவெப்பத்தைக் குறிக்கவும், இரசம் பருகியதன் விளைவைக் குறிக்கவும் (ஓசே 7:5), பாம்பின் நஞ்சைக் குறிக்கவும் (உப 32:24) பயன்படுத்தப்பட்டது (எஸ்த 1:12; ஆமோ 1:11; எரே 15:17; 2 நாள் 26:19; 1 சாமு 1:6; யோபு 5:2). தேவசினத்தை மனித சினத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காகத் தேவ சினத்தைக் குறிக்கும் சில சொற்களோடு மற்றும் சில சொற்களும் சேர்க்கப்பட்டன.

சினம் என்பது மனிதனுக்குச் சாதாரணமாக எழக்கூடிய ஓர் உணர்ச்சி. காயீன் - ஆபேல் கதைத் தொடக்கத்திலேயே மனிதனுக்குச் சினம் என்ற உணர்ச்சி இருந்ததைப் படம் பிடித்துக் காட்டுகிறது (ஆதி 4:5.23-24). பிற்காலத்தில் ஒரு கட்டுப்பாடுள்ள சமூகத்தில் சினம் என்பதுவேண்டாத ஒன்று எனக்கருதப்பட்டது (சங் 36:8; பழ 14:29; 29:22; யோபு 18:4; 36:18). ஆனாலும் சினம் ஓர் மனித உணர்ச்சி என்பது மறக்கப்படவில்லை (மத் 22:1-10). எனினும் இது கண்டும் காணாமலும் விட்டுவிடக்கூடிய ஒரு பண்பல்ல (ஆதி 49:5-7; 1 சாமு 18:8-9; 19:9-10; 20:30-31; மத் 27:20-23; லூக் 4:28-29; அ.ப. 7:54-58). கோபம் வெறும் அழிவை மட்டுமல்ல ஆக்கத்தையும் உயர்வையும் தரக்கூடியது (மாற் 3:5; யோவா 2:13-21; லூக் 6:11; 19:45-46; மாற் 3:6;).

ஒருவனின் பக்தி மற்றும் விசுவாச உணர்வில் ஒருவன் கோபப்படுவது பழைய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாத்தான் இறைவாக்கினர் அரசரிடம் வந்த போது தாவீதுகோபத்தில் தன்னையே தீர்ப்பிடுகிறார் (2 சாமு 12:5.7.13). மோசே இஸ்ராயேலரின் பிரமாணிக்கமின்மை கண்டு கடுங் கோபம் கொள்கிறார் (யாத் 16:20). இறைவாக்கினரின் கோபம் இறைவனின் கோபம் எனக் கருதப்பட்டது (எசா 7:13; எரே 6:11; 15:17; ஆமோ 4:1-3; 1 சாமு 15:33).

புதிய ஏற்பாட்டிலும் இத்தகைய ஓர் கண்ணோட்டத்தைக் காண்கிறோம். பிறரின் நன்மைக்காகக் கோபம் கொள்வது நல்லது (உரோ 13:3-4; 2 கொரி 7:11; மத் 12:34; 15:7; 23:13-36; மாற் 3:5; 9:42; 10:14;யோவா 2:15;8:44). புதிய ஏற்பாட்டில் சினம் ஓர் மனித உணர்ச்சியே என்று ஏற்றுக் கொண்டாலும் ''சினம் கொள்வதால் கடவுளுக்கு ஏற்புடைய செயல்கள் விளைவதில்லை'' என்று யாக் 1:19-21-இல் கூறப்பட்டுள்ளது. ''சினம் கொண்டாலும் பாவத்திற்குள்ளாகாதீர்கள்'' என்று எபே 4:26-இலும் (சங் 4:4) கூறப்பட்டுள்ளது (3:8; 1 திமொ 2:8; தீத்து 1:7). சினம் கொள்வது மனித இயல்பேயானாலும் அது பாவத்திற்கு இட்டுச் செல்லக்கூடும் என எச்சரிக்கை விடுக்கிறார்.

''பழிவாங்குவது என் உரிமை நானே பதிலுக்குப் பதில் செய்வேன் என்கிறார் ஆண்டவர்'' என உரோ 12:19-இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது (எபி 10:30; லேவி 19:18; உப 32:35). இறைவனது கோபத்தின் கருவியாக அமையும் மனிதனே அக்கோபத்திற்குப் பலியாகக் கூடும் (2 அர 9:7; 10:11; ஓசே 1:4-5; எசா 10:5-6; 10:15). கடவுளின் கோபத்திற்குள்ளாகாமல் இருப்பவனுக்கு எதிராக இறுதி நாளில் தீர்ப்பிடப்பட மாட்டாது (உரோ 13:4; திருவெளி 18:1-19:3).

காண்க: கடுஞ்சினம்

சினா (ZINA)

சீசா என்ற பெயரின் மற்றொரு வடிவம்.

சினாபு (SHINAB - சந்திரக் கடவுளான) சீன் என் தந்தையாவார்

அதிமாவின் அரசன். ஆபிரகாம் காலத்தில் கெதர்ல - கோமருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த தென் பாலஸ்தீன அரசர்களில் ஒருவர் (ஆதி 14:2).

சினார் (SHINAR)

பாபிலோனியாவிற்கு ஒரு பெயர் (எசா 11:11). விவிலிய மரபுப்படி சினார் நாட்டிலுள்ள பாபேல், எரேக்கு, அக்காது என்னும் நகரங்களை நிம்ரோது ஆட்சி செய்தார் (ஆதி 10:10).

பழங்கால உருக்குதான் எரேக்கு என்றும், தற்பொழுது வார்கா என்றும் கருதப்படுகிறது. பாபேல் பாபிலோன் என்று கருதப்படுகிறது. அக்காது பழங்கால அக்காதே என்றும் கருதப்படுகிறது. ஆனால் அக்காது இருந்த இடத்தை அடையாளம் காட்டமுடியவில்லை. பாபிலோனுக்கும், பாக்தாதிற்கும் இடையே உள்ள பகுதியாக இருக்கலாம். சினார் நாடு பழங்காலச் சுமேர், அக்காது ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்திருக்கலாம். அதாவது இப்பொழுது இருக்கும் பாக்தாதிற்கும் சற்று வடக்கிலிருந்து நசிரியேவிற்குச் சற்று தெற்கு வரை உள்ள பகுதியாக இருந்திருக்கலாம்.

விவிலிய மரபுப்படி பாபேல் கோபுரம் சினாரில் கட்டப்பட்டது (ஆதி 11:2). சினார் அரசனாகக் கருதப்படும் அம்ராபல் ஆபிரகாமை எதிர்த்ததாக ஆதி 14:1.9.-இல் கூறப்படுகிறது. ''சினாரிலிருந்து தம்மக்களுள் அடிமைத்தனத்தில் எஞ்சி இருப்போரை ஆண்டவர் மீட்டுக் கொள்வார்'' என்ற இறைவாக்கு எசா 11:11-இல் உள்ளது. பாபிலோனின் இரண்டாம் நெபுகத்னேசர் எருசலேம் ஆலயத்தில் இருந்து கொள்ளையடித்த பொருட்களைச் சினாருக்குக் கொண்டு சென்றதாகத் தானி 1:2-இல் கொடுக்கப்பட்டுள்ளது. 'மரக்கால்' சினார் நாட்டிற்குக் கொண்டு போகப்பட்டதாகச் செக்கரியா காட்சி கண்டார் (செக் 5:11). பின்னது இரண்டிலும் சினார் பாபிலோனைக் குறிக்கிறது.

சின் பாலைவனம் (ZIN, WILDERNESS OF)

சின் பாலைவனம் இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டை நோக்கிப் பயணம் செய்த போது கடந்து சென்ற பாலைவனம் (எண் 13:21; 20:1; 27:14; 33:36; 34:3-4; உப 32:51; யோசு 15:1.3). இது காதேசு - பர்னேயாவில் உள்ளடங்கியது. ஏதோமுக்குக் கிழக்கு எல்லையில் உள்ளது. காதேசிலிருந்து மோசேயால் கானான் நாட்டை உளவு பார்த்து வரும்படி அனுப்பப்பட்டவர்கள், சின் பாலைவனத்திலிருந்து இரகோபுவரையிலும் உளவு பார்த்து வந்தனர் என்று எண் 13:27 கூறுகின்றது (உப 1:19-20). ''இஸ்ராயேல் மக்களாகிய சபையெல்லாம் முதல் மாதத்திலே சின் என்னும் பாலைவனத்தை அடைந்தபோது, அவர்கள் காதேசில் தங்கி இருக்கையிலே மிரியாம் இறந்து அவ்விடத்தில் புதைக்கப்பட்டாள்'' என்று எண் 20:1 குறிப்பிடுகின்றது. எண் 20:2-15 வாக்குவாதத் தண்ணீர் எனப்படும் மெரிபாவின் நீர் நிலைகள் பற்றிய நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது. இவற்றிலிருந்து சின் பாலைவனம் பாரானுக்கு வடக்கிலிருந்தது என்றும், காதேசு அங்குதான் இருந்தது என்றும் புலனாகிறது. எண் 27:12-14; உப 32:49-52 மோசே ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்து இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட நாட்டில் நுழையாமை என்னும் தண்டனை பெற்றது இவ்விடத்தில்தான் என்று கூறுகின்றன. இஸ்ராயேலர்கள் எசியோன் (எட்சியோன்) கெபேரிலிருந்து புறப்பட்டு, சின் பாலைவனத்தில்தான் முதன்முதலில் பாளையம் இறங்கினார்கள் என்று எண் 33:36 குறிப்பிடுகின்றது. இச்செய்திகளிலிருந்து 'சின்' பாலைவனமும், 'சீன்' பாலைவனமும் ஒன்று அல்ல என்பது தெளிவாகிறது. 'சீன்' பாலைவனம் சீனாய் மேட்டுப்பகுதியின் மேற்குப் பாகத்தில் இருந்திருக்க வேண்டும். ஆனால் 'சின்' பாலைவனம் பாரான் பாலைவனத்துக்கு வடக்கிலும், பக்கத்திலும் இருந்தது. காதேசு ஏதாவது ஒன்றில் இருந்திருக்கலாம். இது சாக்கடலை நோக்கியுள்ள யூதாவின் தென்கிழக்குப் பகுதிகளுள் ஒன்று.

தொல்பொருள் ஆய்வுகளின்படி, சின் பாலைவனமும் காதேசு பர்னேயாவும், இக்கால அயின் ஏல்-குடைபிராத்து, கோசைமா, முவெல்லே மற்றும் அயின் கதேயிசு ஆகிய பகுதிகள் அடங்கிய நிலப்பரப்பாக இருந்திருக்கலாம்.

சீ

சீகோர் (SHIHOR)

இது எகிப்துக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலுள்ள ஓர் ஓடை. எல்லையைக் குறிக்கும் ஓர் ஆறு அல்லது பல ஆறுகள் ஆகும். இது இஸ்ராயேலின் எல்லையாகும். எரேமியா ஆகமம் இதை நைல் நதியெனக் குறிப்பிடுகிறது (எரே 2:18). எசாயா 23:3 இப்பெயரால் எகிப்திலுள்ள ஓர் ஓடையை யும், இவ்வசனத்தின் இரண்டாம் பகுதி நைல் நதியையும் குறிக்கிறது. அனேகமாக இப்பெயர் நைல் நதியின் புபாஸ்தித்து அல் லது பெலுசியாக்கு கிளைகளைக் குறிக்க லாம் (யோசு 13:3; 1 நாள் 13:5; எசா 23:3).

சீகோர் - லிப்னாத்து (SHIHOR - LIBNATH)

ஆசேரின் தென் எல்லையில் உள்ள ஓர் இடம் (யோசு 19:26). சில சமயம் தோருக் குத் தெற்கில் 10 கி.மீ. தொலைவில் மத்திய தரைக்கடலுடன் சேருகின்ற முதலை ஆறு எனப்படும் நாகர் எஸ் - செராக்காக அடை யாளம் காட்டப்படுகிறது.

சீகோன் (SIHON - வேரோடு எடுத்தல்)

இவர் இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்தின் இடையில் கடக்க வேண்டி யிருந்த எமோரிய நாட்டு மன்னன் ஆவார். இவரது தலைநகர் கெஸ்போன் (எஸ்போன்) ஆகும் (எண் 21:21-30). இவரது அரசு சாக்கட லுக்குக் கிழக்கிலும் அர்னோன் ஆற்றுக்கு வடக்கிலும் பரவியிருந்தது. இஸ்ராயேலர் இவரது நாட்டைக் கடந்து செல்ல அனுமதி கேட்டபோது, இவர் மறுத்ததுமல்லாமல் படையெடுத்துப் போரிடவும் துணிந்தார். ஆனால் போரில் தோல்வியுற்று, தனது அரசை இஸ்ராயேலரிடம் பறிகொடுத்தார். அவரது அரசில் மோவாபியரின் எல்லைப் பகுதிகளும் இணைந்திருந்தன. அவையும் சீகோனை வெற்றி கொண்டதன் மூலமாக இஸ்ராயேலருக்குக் கிடைத்தன (எண் 21:21-23; உப 2:26-32; நீதி 11:19-21). சீகோ னின் அரசு ரூபனுக்கும், காதுவுக்கும் கொடுக்கப்பட்டதாக யோசுவா (13:21.27) ஆகமமும், இவர்களுடன் மனாசேக்கும் சேர்த்துக் கொடுக்கப்பட்டதாக எண்ணாகம மும் (32:33) கூறுகின்றன. இறைவனின் பராமரிக்கும் செயலின் ஒருபகுதியே இஸ்ரா யேலரின் இந்தவெற்றி என்று விவிலியத்தில் பல இடங்களிலும் எடுத்துரைக்கப்படுகின் றது (உப 1:4; யோசு 2:10; நெகே 9:22; சங் 135:11; 136:19; எரே 48:45; எண் 21:27-30). கெஸ்போன், ''சீகோனின் வீடு'' என்று மோவாபியருக்கு எதிரான இறைவாக்கில் குறிப்பிடப்படுகிறது (எரே 48:45).

சீசருடைய மன்றத்திற்கு முறையீடு (APPEAL TO CAESAR)

பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்ட பின், யூதர்கள் அவரைக் கொல்ல சதித் திட்டமிட்டதால், அவர் படைவீரர்களால் செசரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார். பெலிக்சால் சிறையிலடைக்கப்பட்டு விசா ரணைக்காகக் காத்திருந்தார். பெலிக்சுக்குப் பின் பெஸ்து ஆளுநராகப் பதவி ஏற்றார். அவர் பவுலை விசாரிக்க அழைத்தார். எருச லேமிலிருந்த யூதர்கள் அவருக்கெதிராய்க் குற்றம் சாட்டினர். பெஸ்து அவரிடம் நீ எருசலேம் சென்று இக்குற்றங்கள் பற்றி விசாரிக்க இசைவாயா என்று கேட்க (அ.ப. 25:9) பவுல் யூதர்கள் தன்னைக் கொன்றுவிடு வர் என்று அறிந்து, அங்குச் செல்லவிரும்ப வில்லை. ''சீசரின் மன்றத்திற்கே என் வழக்கு செல்ல வேண்டும்'' (25:11) என்றார். சாவுத்தண்டனைக்குரியது எதுவும் அவர் செய்யாததால் (25:25), பெஸ்து சீசரிடம் அனுப்புவதற்குக் குற்றம் எதுவும் காண வில்லை. எனவே அகிரிப்பாமுன் பவுல் அழைத்துவரப்பட்டார். ''இவ்வழக்கு சீசரி டம் செல்ல வேண்டுமென்று இவன் கூறா திருந்திருந்தால் இவனை விடுதலை செய்திருக் கலாம்'' (26:32) என்று அகிரிப்பா கூறினார். அப்போஸ்தலர்பணி நூல் பவுல் உரோ மைக்கு எடுத்துச் செல்லப்பட்டுச் சிறைவாசம் இருந்ததோடு முடிவடைகின்றது. ஆனால் விசாரணையின் விளைவு பற்றி எதுவும் கூறவில்லை.

பவுலின் உரோமைக் குடிமகன் (22:25 தொ) என்ற உரிமை அவர் தன்வழக்கைச் சீசர் மன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய உதவியது எனலாம். அப்போஸ்தலர் பணியில் குறிப்பிடப்படாவிடினும் பெரிய குற்றம் செய்தவர்களுக்கு இந்த உரிமையை அளிப்பது பழக்கம். பிளினி திரேசனுக்கு எழுதிய மடலில் பெரிய குற்றம் சாட்டப்பட்ட கிறிஸ்தவர்கள் உரோமைக் குடிமக்களாய் இருந்தால் அவர்களை உரோமைக்கு அனுப்புவதாகக் குறிப்பிடுகிறார். அவர்கள் முறையிட்டபின்தான் இப்படிச் செய்திருக்க வேண்டும்.

பவுல் சீசரிடம் முறையிட விரும்பினார். ஏனெனில் அவர் யூதச் சட்டத்தின்கீழ் விசாரிக்கப்பட விரும்பவில்லை. மேலும் உள்ளூர் உரோமை ஆளுநர்கள் அவருக்கெதிராய் எண்ணம் கொண்டிருந்தனர் என்று பவுல் கருதியிருக்கலாம். லூக்கா, யூதர்கள் கூறிய குற்றச்சாட்டுகளை ஆளுநர்கள் நம்பியதாக ஒருபோதும் குறிப்பிடவில்லை.

பவுல் மேல்முறையிட்டதன் முடிவு என்ன என்று அறியோம். ஒருவேளை குற்றம் சாட்டிய யூதர்கள் உரோமைக்கு வராததால் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனைக்குப்பின் பவுல் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம்.

சீசருடைய வீட்டைச் சேர்ந்தவர்கள் (CAESAR'S HOUSEHOLD)

சாதாரணமாக உரோமையிலும் மற்ற இடத்திலுமுள்ள அரச ஊழியர்களைச் (அடிமைகள், உரிமைக் குடிமக்கள்) சிறப்பாகக் குறிக்கும் ஒரு கூட்டுப்பெயர். பிலி 4:22-இல் பவுல் "சீருடைய வீட்டைச் சேர்ந்தவர்கள்" என்று கூறுகின்றார்; அதாவது அவரோடு சேர்ந்து வாழ்த்துக்கள் அனுப்பிய கிறிஸ்தவர்களில் சிலர் சீசருடைய வீட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பவுல் உரோமைக்கு வந்த பொழுது ''சீசருடைய வீட்டார்'' சிலரால் வாழ்த்தப்பட்டார். பிலி 4:22-இல் வரும் குறிப்பு, இத்திருமுகம் உரோமையிலிருந்து எழுதப்பட்டது என்று கருத ஆய்வாளர் சிலரைத் தூண்டியுள்ளது. ஆனால் அறுதியாக நிரூபிக்கவில்லை.

சீசர் (CAESAR)

யூலியு சீசரின் குடும்பப் பெயர்; இவருடைய தத்துப்பிள்ளையும், முதல் உரோமைப் பேரரசனுமான அகுஸ்துவினால் (கி.மு. 27-கி.பி. 14) எடுத்துக் கொள்ளப்பட்டது. இவருடைய வழிவந்த ஒவ்வொருவராலும் இப்பெயர் எடுத்துக் கொள்ளப்பட்டதால் இது ஒரு பட்டம் ஆனது. சீசர் அகுஸ்து என்ற பெயர் லூக் 2:1-இல் வருகிறது. மேலும் புதிய ஏற்பாட்டில் 27 மற்ற இடங்களிலும் தோன்றுகின்றது. இயேசு தன்னுடைய பொது வாழ்க்கையைத் தொடங்கிய பொழுது திபேரியு சீசர் (கி.பி. 14-37) ஆண்டு கொண்டிருந்தார் என லூக் 3:1 சொல்கின்றது. இந்தச் சீசர் பெயர்தான் மற்ற நற்செய்திப் பகுதிகளிலும் கூறப்படுகிறது (மாற் 12:14-17 இணை; லூக் 23:2; யோவா 19:12-15). அப்போஸ்தலர் பணியில் கிளாதியு (41-54) பட்டமில்லாமல் 11:20; 18:2-இல் சொல்லப்பட்டிருக்கிறார்; இவரே 17:70-இல் சொல்லப்பட்டிருக்கின்ற சீசர். ஆனால் இதற்குப் பின் வருகின்ற குறிப்புகள் (25:8 தொ; 26:32; 27:24; 28:19) அனேகமாக நீரோவைக் (54-68) குறிக்கலாம். பிலி 4:22-இல் உள்ள சீசர் கிளாதியுவா அல்லது நீரோவா என்று சொல்வது அந்த மடல் எழுதப்பட்ட தேதியைப் பொறுத்தது.

புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்படாத மற்ற சீசர்கள், முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கலிகுலா (33-41), கால்பா (68-69), ஒதோ (69) விட்டேலியு (69), வெஸ்பாசியன் (69-79), தீத்து (79-81) தொமிசியன் (81-96); நெர்வா (96-98), திரேசன் (98-117) ஆகியோராவர்.

சீசா (SHIZA - வணங்குதல்)

அதினாவின் தந்தை. ரூபன் இனத் தலைவர். தாவீதின் வலிமை மிக்க 'முப்பது' மனிதர்களில் இவரும் ஒருவர் (1 நாள் 11:42).

சீசா (ZIZA - ஏராளமான)

1. சீசா சிமியோன் இனத் தலைவராய் இருந்தார். இவரது மரபுக்கொடி ஐந்து தலைமுறைகளுக்குத் தரப்பட்டுள்ளது (1 நாள்

4:37). கெதோர் பகுதியை நோக்கிச் சிமியோனியர் தங்கள் ஆதிக்கத்தை விரிவாக்கிய போது இவரது குடும்பமும் பங்கு கொண்டது.

2. யூதாவின் அரசன் ரெகபயாமுக்கும் அவரது இரண்டாம் மனைவி மாக்காவுக்கும் பிறந்தவர் (2 நாள் 11:20).

சீசா (ZIZAH - ஏராளம்)

ஒரு கேர்சோமிய லேவியர். சிமயியின் இரண்டாவது மகன் (1 நாள் 23:11). 23:10-இல் இவர் சினா என்றழைக்கப்படுகிறார்.

சீச் ஏற்றம்(ZIZ, ASCENT OF)

சீசு என்பது யூதாவின் தென்புறத்திலுள்ள மலைக் கணவாயாகும். இது ஏன்—கேதிக்கு அதிகத் தூரத்தில் இல்லை (2 நாள் 20:16). யோசபாத்தின் காலத்தில் இதன் வழியாகத் தான் மோவாபியரும், அம்மோனியரும் மெயோனியரும் படையெடுத்து வந்தனர். இந்த வழியானது எருவேல் பாலைவனத்துக்கு அருகிலுள்ள ஒருபள்ளத்தாக்கிற்குச் செல்கிறது. இக்கருத்தை நோக்கும்போது, இது தெக்கோவாவுக்கு அருகில் இருந்தது என்பது புலனாகிறது. இதுவும், தெக்கோவாவின் தெற்கிலும் ஏன் கேதிக்கு வடக்கிலும் உள்ள வாடி காசாசா என்பதும் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அப்படியாயின் இதன் மூலப்பெயர் கசீசுவாக இருந்திருக்கலாம்.

சீடன் (DISCIPLE)

I. எவனொருவன் ஓர் ஆசிரியரின் பள்ளியில் சுதந்தரமாகச் சேர்ந்து அவரது கருத்துக்களில் பங்கு கொள்கிறானோ அவனே சீடன் எனப்படுவான். பழைய ஏற்பாட்டில் முற்றிலுமாய்க் காணப்படாத இச்சொல்லானது, விவிலிய மரபின் வளர்ச்சியாகப் பிற்கால யூதமத ஏடுகளில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. அவ்வாறே இச்சொல்லானது இயேசு அளித்த மூலப்பொருளுடன் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது.

II. பழைய ஏற்பாடு:

1. **இறைவாக்கினர் மற்றும் ஞானிகளின் சீடர்கள்:** காலங்காலமாக, எலியாவுடன் எலிசா தன்னைச் சேர்த்துக் கொள்வதையும் (1 அர 19:19 தொ), அல்லது எசாயாவை ஆர்வமிக்க சீடர்களின் குழு சூழ்ந்து கொண்டு அவரது சாட்சியத்தையும் வெளிப்பாட்டையும் பொறுப்பாகப் பெறுவதையும் (எசா 8:16) ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பெரும்பாலும் ஞானிகள் சீடர்கள் பலரைக் கொண்டிருந்தனர். அவர்களைத் தங்கள் "புதல்வர்கள்" என்றழைத்தனர் (பழ 1:8.10; 2:1; 3:1); பாரம்பரிய போதனையை அவர்களது மனதில் ஆழப் பதிய வைத்தனர். ஆனால், இறைவாக்கினரோ, ஞானிகளோ தங்களது படிப்பினையின் மூலம் இறைவனுடைய வார்த்தையின் இடத்தை அடையத் துணியவில்லை. குரு, சீடர் உறவு மரபை அடிப்படையாகக் கொண்டிராது, இறைவார்த்தையை மட்டுமே உடன்படிக்கையான அடிப்படையாகக் கொண்டிருந்தது.

2. **இறைவனின் சீடர்கள்:** அனைத்து ஞானத்திற்கும் ஊற்றாக இறைவார்த்தை இருப்பதால், மனித குருவுடன் இணைத்துக் கொள்ளாமல், இறைவனுக்குச் சீடனாக இருப்பதுவே உன்னதக் குறிக்கோளாகும். ஆட்தன்மைப்படுத்தப்பட்ட இறை ஞானமானது, தனக்குச் செவிமடுத்துத் தனது படிப்பினைகளைப் பின்பற்றுமாறு மனிதரை அழைக்கிறது (பழ 1:20 தொ; 8:4 தொ. 32தொ). இறுதி நாட்களில் இறைவன் தம்மையே இதயங்களின் தலைவராக அமைத்துக் கொள்வாரென இறுதிக்காலம் பற்றிய கூற்றுகள் அறிவிக்கின்றன: அவர்களுக்கு இனியும் உலகத் தலைவர்கள் தேவையில்லை (எரே 31:31-34), ஆனால் அவர்கள் யாவேயின் சீடர்களாக இருப்பர் (எசா 54:13). இறைக் கட்டளைகளைக் கற்பிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தாலும், யாவேயின் ஊழியர் (42:1.4) அனுதினமும் காலையில் திறந்த செவியுடன் காத்திருந்து, "கற்றோனின் நாவை"ப் பெறுகிறார் (50:4). இந்த இறைவாக்கிற்கு விசுவாசமிக்கவராய்ச் சங்கீத ஆசி

ரியர் தளர்ந்து போகாமல், ''ஆண்டவரே, எனக்குக் கற்பியும்'' என்று செபிக்கிறார் (சங் 119:12.26-27. 33-34; 25:4-9...).

3. யூத மதத்தில் ஆசிரியர்களும் சீடர்களும்: நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், சட்டமானது போதனையின் முதன்மையான பொருளாக விளங்கியது. இந்த அடிப்படை அமைப்பிற்குப் பொறுப்பான தலைவர்கள் ''சட்ட வல்லுநர்கள்'' என்று அழைக்கப்பட்டனர். ஆனால் இப்போது தாங்கள் விளக்கவுரை அளித்த இறைவனுடைய வார்த்தையின் அதிகாரத்தோடு சிறிது சிறிதாக அவர்களுடைய சொந்த அதிகாரமும் சேர்க்கப்பட்டது (மத் 23:2. 16-22), குறிப்பாகத் தங்கள் தலைவர்களிடமிருந்து தாங்கள் பெற்ற பாரம்பரியத்தை அளிக்கும்போது, இவ்வாறு நிகழ்கிறது. விவிலியக் காலத்திற்குப் பிற்பட்ட யூத மதமானது இப்போதனையின் (தால்மூது) அடிப்படையில் தன்னை ஒன்றுபடுத்தும். புதிய ஏற்பாட்டின் காலத்தில், தான் கமாலியேலின் சீடனாக இருந்ததைப் பவுல் நினைவு கூர்கிறார் (அ.ப. 22:3).

III. புதிய ஏற்பாடு

1. இயேசுவின் சீடர்கள்: மோசே (யோவா 9:28), திருமுழுக்கு யோவான் (மாற் 2:18; யோவா 1:35; அ.ப. 19:1 தொ), அல்லது பரிசேயர்கள் (மத் 22:11) ஆகியோரது சீடர்களைப்பற்றிச் சில நேரங்களில் குறிப்பிட்டதற்கு அப்பாற்பட்டு, புதிய ஏற்பாடானது சீடன் என்ற பெயரை, இயேசுவைத் தங்களது தலைவராக அங்கீகரித்தவர்களுக்கு மட்டுமே குறிப்பிடுகிறது. நற்செய்தி நூல்களில் பன்னிருவரும், இவ்வாறு முதலில் குறிப்பிடப்பட்டவர்களினின்று வந்தவர்களே (மத் 10:1; 12:1...). இந்த நெருங்கிய வட்டத்திற்கு அப்பாற்பட்டு, இயேசுவைப் பின்பற்றுகிறவர் (8:21), முதன்மையாகத் திருப்பணிக்கென இயேசு அனுப்பிய எழுபத்து இரண்டு பேரும் (லூக் 10:1) இப்பெயரைப் பெறுகின்றனர். இச்சீடர்கள் சந்தேகத்திற்கிடமின்றி எண்ணற்றவர்களாயிருந்தாலும் (லூக் 6:17; 19:37; யோவா 6:60), பலர் இயேசுவைவிட்டு அகன்று போயினர் (யோவா 6:66). தலைவராக உருவாவது போன்று ஒருவரும் நடிக்க முடியாது. ஒருவர் சீடர்களை உருவாக்குகிறாரெனில் (மத் 28:19; அ.ப. 14:21-22) அது தனக்காக இல்லாமல் கிறிஸ்துவிற்காகவே இருக்க வேண்டும். இவ்வாறு, அப்போஸ்தலர் பணியின் ஆறாம் அதிகாரம்முதல் ''சீடன்'' என்னும் எளிய பட்டப்பெயர், ஒருவன் தனது தொடக்க வாழ்வில் இயேசுவை அறிந்திருந்தாலும் இல்லாவிட்டாலும், சிறிது சிறிதாக ஒவ்வொரு விசுவாசியையும் குறிக்கப் பயன்படுகிறது (அ.ப. 6:1-2; 9:10-26...). இந்நோக்கில் விசுவாசிகள் பன்னிருவரைப் போன்றே இருக்கின்றனர் (யோவா 2:11; 8:31; 20:29).

2. பண்புகள்:- தமது காலத்து யூத வல்லுநர்களுடனான வெளிப்படையான ஒப்பீடுகள் எவ்வாறிருந்தாலும், தமது சீடர்களுக்கென இயேசு தனிப்பட்ட தேவைகளைக் குறிப்பிடுகின்றார்.

அ. அழைத்தல்:- இயேசுவின் சீடர்களாவதற்கு அறிவுத்திறனோ, ஒழுக்கத் தகுதிகளோ முக்கியமானவையல்ல. ஆனால் முக்கியமாக இருக்க வேண்டியது இயேசுவிடமிருந்தும் (மாற் 1:17-20; யோவா 1:38-50), அவருக்குப் பின்னணியில், இயேசுவிற்கு அவரது சீடர்களையும் அளிக்கின்ற தந்தையிடமிருந்தும் (யோவா 6:39; 10:29; 17:6. 12) வருகின்ற தொடக்க முயற்சியாகிய அழைப்பாகும்.

ஆ) கிறிஸ்துவுடனான தனிப்பட்ட நெருக்கம்: இயேசுவின் சீடனாவதற்கு உயர்ந்த திறமைமிக்க மனிதனாக இருப்பது அவசியமானதல்ல. உண்மையில் சீடனையும் தலைவனையும் இணைக்கின்ற உறவானது தனிப்பட்ட விதத்திலோ, முதன்மையான விதத்திலோ அறிவுத்திறன் அமைப்பைச் சார்ந்ததல்ல. ''என்னைப் பின்பற்றிவாரும்'' என்று அவர் சீடர்களிடம் கூறுகிறார். நற்செய்தி நூல்களில் ''பின்பற்றி வருதல்'' என்ற சொல்லானது எப்போதுமே இயேசுவினுடனான நெருக்கத்தையே குறிப்பிடுகின்றது (மத் 8:19..). இயேசுவைப் பின்பற்றுதல் என்பது பழமையுடனான உறவைத் துண்டிப்பதாகும்.

சலுகைக்குரிய சீடர்களெனில் பிறஉறவை முழுமையாக முறித்துக் கொள்வதாகும். இயேசுவைப் பின்பற்றுதல் என்பது அவரைப்போல நடப்பது, அவரது படிப்பினைகளுக்குச் செவிமடுப்பது, மற்றும் மீட்பரின் வாழ்வைப் போலத் தனது வாழ்வையும் அமைத்துக் கொள்வதாகும் (மாற் 8:34-35; 10:21. 42-45; யோவா 12:26). யூத வல்லுநர்களுடைய சீடர்கள் சட்ட ஒழுங்கில் கற்பிக்கப்பட்டு, தங்களது தலைவர்களிடமிருந்து விலகித் தாங்களாகவே போதிக்கக்கூடியவர்களாக இருந்தனர். இவர்களிடமிருந்து இயேசுவின் சீடர்கள் மாறுபட்டவர்களாக இருந்தனர். இயேசுவின் சீடர் கோட்பாட்டிற்காக இல்லாமல், ஒரு மனிதருக்குக் கட்டுப்பட்டவர். இனிமேல், தந்தை மற்றும் தாயைவிட உயரியவராக உள்ள அவரைவிட்டு அவன் பிரிந்து செல்ல முடியாது (மத் 10:37; லூக் 14:25-26).

இ. விதியும் தகுதியும்: எனவே, இயேசுவின் சீடன் தனது தலைவருடைய விதியிலேயே பங்கு பெறுமாறு அழைக்கப்படுகிறான். அவரது சிலுவையைச் சுமந்து (மாற் 8:34), அவரது கிண்ணத்தில் பருகி (மாற் 10:38-39), இறுதியாக அவரிடமிருந்து அரசைப்பெறவேண்டும் (மத் 19:28-29; லூக் 22:28தொ; யோவா 14:3). எனவே இக்காலம் முதல், ''என் சீடன் என்பதற்காக இவனுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவனும் கைம்மாறு பெறாமல் போகான்'' (மத் 10:42). மற்றொரு புறத்தே, ''இச்சிறியோரில் ஒருவனுக்கு இடராக இருப்பது'' பெரும் பாவமாகும் (மாற் 9:42).

3. இயேசுவின் சீடர்களும் இறைவனின் சீடர்களும்:-

இறைவனே தனது மகனின் மூலமாக மனிதரிடம் பேசுவதன் காரணமாகவே, இயேசுவின் சீடர்கள் யூத வல்லுநர்களுடைய சீடர்களினின்று வேறுபடுத்தப்படுகின்றனர். வல்லுநர்கள் சாதாரண மனிதப் பாரம்பரியங்களையே, சில நேரங்களில் இறைவனுடைய வார்த்தையையே வெறுமையாக்குகின்ற பாரம்பரியங்களையே அளித்துச் செல்கின்றனர் (மாற் 7:1 தொ). இயேசு தனது சீடர்களின் ஆன்மாக்களுக்கு அமைதியை வாக்களிக்கின்ற இறைஞானத்தின் மனித அவதாரமாக உள்ளார் (மத் 11:29). இயேசு பேசும்போது, பழைய ஏற்பாட்டின் இறைவாக்கு நிறைவேற்றப்படுகிறது. அவர்கள் செவிமடுத்துக் கேட்பது இறைவனையே. இவ்வாறு அனைவரும் ''இறைவனின் சீடர்களாக'' உருவாக முடியும் (யோவா 6:45).

சீட்டுப்போடுதல் (LOTS)

1. பழைய ஏற்பாடு:

பண்டைய உலகில் சீட்டுப்போடும் தேர்வு முறையானது, தரையில் சீட்டுகளைக் குலுக்கிப் போட்டு எடுத்தல் அல்லது கொள்கலத்தில் இடப்பட்ட சீட்டுகளிலிருந்து எடுத்தல் என்ற இரு வகைகளில் நடைபெற்றது (எஸ்த 3:7; யோவே 3:3; யோனா 7:7; நாகூ 3:10). பழைய ஏற்பாட்டில் இந்தக் குலுக்குத் தேர்வுமுறை கடைப்பிடிக்கப்பட்டதற்கான சான்றுகள் பல உள்ளன. புதிதாகக் கைப்பற்றப்பட்ட நிலங்களைக் குலமரபுக் குழுக்களுக்குப் பாகம் பிரித்து அளிக்கவும் (எண் 26:55; யோசு 14:42) பாவப்பரிகாரப் பலியில், தகுதியான வெள்ளாடு எது என்று கண்டு பிடிக்கவும் (லேவி 10:7-10) இத்தகைய முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இம்முறை கொண்டு சில சமயங்களில் அரசியல், தொழிலாளர் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டனர். இஸ்ராயேலின் முதல் அரசனும் இத்தகைய முறையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார் (1 சாமு 10;20-21). ஆலயத்தில் பணிபுரிந்த குருக்கள், பாடகர்கள், வாயிற்காப்போர் போன்றவர்களும் இதே முறையில்தான் வேலையிலமர்த்தப்பட்டனர் (1 நாள் 24:5; 25:8; 26:13). கோயிலுக்கு மரம் அளித்தல், எருசலேமில் மறுமுறை குடியேற்றம் அமைத்தல் முதலான அவசர காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் (நெகே 10:34), வலிமைமிக்க போட்டியாளர்களிடையேயான பிளவுகளைத் தீர்த்துவைக்கவும் இதேமுறை பயன்படுத்தப்பட்டது (பழ 18:18).

இந்தச் சீட்டுப்போடும் தேர்வு முறை, மாயவித்தையாகக் கருதப்படவில்லை (யோசு 18:6). ஏனென்றால், கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்து அவர் முன்னேதான் சீட்டுகள் குலுக்கிப் போடப்பட்டன. உப ஆகமத்தில், பலவிதமான பில்லிசூனிய பழக்கங்கள் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் இந்தச் சீட்டுப் போடும் முறை இடம் பெறவில்லை (உப 18:10-12). பழமொழி ஆகமத்தில் ''மடியிலுள்ள திருவுளச் சீட்டை ஒருவன் குலுக்கிப் போடலாம். ஆனால் திருவுளத் தீர்ப்பை வெளிப்படுத்துபவர் ஆண்டவரே'' (பழ 16:33) என்று கூறப்பட்டுள்ளது.

'சீட்டுக் குலுக்கல்' என்ற இந்தச் சொல், யோசுவா ஆகமத்தில்தான் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது (யோசு 17:14). இதில் நிலத்தினைப் பங்கீடு செய்வதற்காக இச்சொல் பயன்படுத்தப்பட்டது. ஆனால் பின்னர், பரம்பரை நிலச்சொத்துக்களைக் குறிப்பிடவும், முடிவுகளை வெளிப்படுத்தும் முறையிலும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (சங் 16:5-6; எசா 17:14; எரே 13:25; தானி 12:13). பண்டைய இஸ்ராயேலில் இருந்த குலுக்கல் முறையின் அமைப்பையும் தன்மையையும் நாம் அறிய முடியவில்லை.

II. ஊரிம் தும்மிம்

பழைய ஏற்பாட்டில் பின்பற்றப்பட்ட முறைகளில் இது மிக முக்கியமானது. குறிப்பிட்ட ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக 'ஆம்', 'இல்லை' என்று எழுதப்பட்ட அல்லது இவற்றின் பொருளை விளக்கும் அடையாளங்களைக் கொண்ட இரு சிறு பொருட்களைப் பயன்படுத்தினர். இவை, உலோகம் அல்லது கல்லாலான சிறிய பொருட்கள். இவற்றில் அடையாளங்கள் அமைக்கப்பட்டிருந்தன (யாத் 28:16; 29:5; லேவி 8:8).

இந்த முறையில் நடைபெற்ற முதல் விவிலிய நிகழ்ச்சியாகத் தாவீதின் நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது (1 சாமு 23:9-12; 30:7-8). பொதுவாக, எதிர்மறையான பதில் கிடைக்கவில்லை என்றாலும் இரண்டு நிகழ்ச்சிகள் எதிர்மறையான, பதிலைப் பெற்றவனவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன (1 சாமு 14:36-37; 28:6). இத்தகைய முறைக்குப் பல விவிலியக் குறிப்புகள் உள்ளன: 1 சாமு 14:18.41; 10:22-23; 23:2-3; 2 சாமு 2:1; 5:19. 23-24; நீதி 20:27; 1:1-2; 20:23; யாத் 28.30; லேவி 8:8; உப 33:8. இன்னும் பல உள்ளன.

III. புதிய ஏற்பாட்டில்:

பண்டைய யூத, புறச் சமயங்களிலும் இறைவனின் திருவுளத்தை அறிவதற்காகச் சீட்டுக் குலுக்கும் முறை பின்பற்றப்பட்டது. கிறிஸ்தவத்திலும் இந்த முறை ஓரளவிற்கு இருந்தது. கடவுளால் நமக்கெனக் குறிக்கப்பட்டவற்றையே குலுக்கல் முடிவு அறிவிக்கும் என்ற நம்பிக்கையில்தான், நமது இலக்கியத்தில் இந்தப் பழக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கடவுளின் திருவுளத்தை அறிதல் என்பது, கடவுள் நமக்காகக் குறிப்பிட்டுள்ளது எது என்பதை அறிவதேயாகும். இந்தத் திருவுளம், நிலம் போன்ற தொட்டு உணரக்கூடிய பொருட்களாகவோ, செயலாகவோ, பணியாகவோ, அலுவலாகவோ அல்லது மீட்பின் முழுமையில் பங்கு கொள்ளுதலாகவோ அமையலாம். இதில் முக்கிய கருத்து என்னவென்றால் குலுக்கு முறையில் எடுக்கப்படும் முடிவு, கடவுளிடமிருந்தே வருகின்றது என்ற நம்பிக்கைதான். கடவுளின் செயலினைப் புகழ்வதற்காக, புதிய ஏற்பாட்டில் மனிதனுடைய பங்கு சற்றுக் குறைவாகவே விளக்கப்பட்டுள்ளது.

IV. குலுக்கல்முறை:

பலவகை நிறங்களை அல்லது அடையாளங்களைக் கொண்ட கற்களை ஒரு கலத்தில் வைத்தார்கள். பின்னர், அவற்றில் ஒன்று தானாகக் குதித்து வெளியே விழும் வரை நன்கு குலுக்கினார்கள். கடவுளே இந்த முடிவை அளித்தார் என்பதைத் தெளிவாக்கவே இப்படிச் செய்தனர். மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்டதும் இவ்வாறுதான் (அ.ப. 1:26). இயேசு, 12 அப்போஸ்தலர்களைத் தேர்ந்து கொண்டது போலவே மத்தியாவை

யும் தேர்ந்து கொண்டார். யூதாசு தனது உரிமை வாழ்வை இழந்த பின்னர் அந்த இடத்தில் மத்தியா நியமிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் இவ்வகைப் பழக்கம் இருந்ததாக அப்போஸ்தலர் பணியில் குறிப்பு இல்லை. ஏனென்றால் பரிசுத்த ஆவி வருகை நிகழ்ச்சிக்குப் பின்னர், இறைவனின் திருவுளம், தூய ஆவியின் வழியாகவே அருளப்பட்டது என்று புனித லூக்கா கூறியுள்ளார்.

இயேசு இறந்தபின்னர், படைவீரர்கள் இயேசுவின் ஆடையை எடுத்துக் கொள்வதற்காகச் சீட்டுப் போட்டனர். இது இயேசுவை மனிதர்முன் ஏளனப்படுத்துவதாக அமைந்தது (மாற் 15:24=மத் 27:35=லூக் 23:34=யோவா 19:24). இங்குச் சீட்டுப்போடு தலை நிர்ணயிப்பவரையே சீட்டுப்போட்டு ஒழித்துக்கட்டுதலின் வழியாக இறைவனின் உரிமையை அபகரித்துக்கொள்ள மனிதன் துணிகிறான்.

சீதபேதி (DYSENTRY)

பெருங்குடல் புண்ணான வலிமிகுந்த நோய்; வயிற்றுக்கடுப்புடன் இரத்தமும் மலமும் வெளியேறும் (அ.ப. 28:8). கிருமிகளால் சீதபேதிகள் சாதாரணமாக வருபவை; இது கடுமையான வலியுள்ளதாகவோ, தீராத வியாதியாகவோ தொற்று நோயாகவோ அவ்வப்போது வருவதாகவோ இருக்கும்.

சீதே (SIDE)

இது பம்பிலியாக் கரையோரம் கடலில் பாய்ந்துள்ள நிலமுனைக் கோடியின் மீது அமைந்துள்ள துறைமுகம். இது சிசிலிய கடற்கொள்ளையர்களுக்கு முக்கியமான இடம். எஸ்கிஅடாலிய்யாவில் அழிவுற்ற பகுதிகளாக இது தென்படுகின்றது. இதில் இரண்டு துறைமுகங்கள் இருந்தன. மேலும் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களைச் சேர்த்துவைப்பதற்கு அடைக்கலம் தரக் கூடிய இடமாகவும் இருந்தது. சீரியாவின் மூன்றாம் மகா அந்தியோக்குக்கும் ரோடிசியர்களுக்கும் கடற்போர் நிகழ்வதற்குத் தகுந்த இடமாக இருந்தது. அங்கு, சீதேயில் இருந்து வந்த கப்பல்களும், அராடுஸ்சில் இருந்த வந்த கப்பல்களும் அந்தியோக்குவின் இடப் பக்கப் படையைச் சார்ந்திருந்தன. இது சைமியன் என்பவர்களுக்குக் காலனியாக இருந்தது. மேலும் உரோமைப் பேரரசின் ஆளுநர் கி.மு. 139-இல் யூதர்களை நன்கு உபசரிக்குமாறும், நாடுகடத்தப்பட்ட யூதர்களைச் சீமோன் மக்கபேயுவிடம் திருப்பி அனுப்புமாறும், எழுதிய கடிதத்தில் இதுவும் ஓர் இடமாகும் (1 மக் 14:23). ஏழாம் அந்தியோக்கு இங்குதான் வளர்க்கப்பட்டார். இங்குப் பல நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சீதோன் (SIDON - மீன் பிடிக்கிற)

இது பெய்ரூட்டுக்குத் தெற்கில் 45 கி.மீ. தொலைவிலும், தீர் நகருக்கு வடக்கில் 40 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள இக்காலச் சயிதா இருக்கும் இடத்தில் அமைந்திருந்த பெனிசிய நகர-நாடாகும். இந்த இடம் இன்னும் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. மத்திய தரைக்கடலுக்குள் புகும் ஒரு சிறிய குன்றின்மேல் அமைந்திருந்தது. இரண்டு கப்பல் துறைமுகங்களைக் கொண்டது. இதைச்சுற்றிப் பல சிறு தீவுகள் உள்ளன. நகருக்கு அப்பால் உள்நாட்டிலுள்ள சமவெளி விவசாயத்திற்கேற்ற செழிப்புமிக்கதாகும். ஆயினும் நகர மக்கள் தங்கள் வாழ்க்கைக்குக் கடல் வியாபாரத்தையே நம்பியிருந்தனர்.

சீதோன் அமர்னா ஏடுகளில் குறிக்கப்பட்டுள்ளது. இதுகடலுக்குள் கப்பல் செலுத்திய முதல் பெனிசிய நகரமாகும். கைக்சோசுகளை வெளியேற்றியபின் எகிப்திய 18-ஆவது 19-ஆவது அரச மரபுகள் தங்கள் ஆதிக்கத்தை வலியுறுத்தியபோது, சீதோன் எகிப்தியரின் ஆளுகைக்குட்பட்டது. கி.மு. 1200-ஐ ஒட்டி கடல் மக்களால் பெனிசிய வாழ்வு சிதறடிக்கப்படும் வரை, சீதோன் முதன்மையான பெனிசிய நகரமாய்த் திகழ்ந்தது. அதற்குப் பின் தீர் நகரம் முதன்மைபெற்றது. சீதோன் மீண்டும் கட்டப்பட்டு முக்கிய நகரங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. சீரிய, பாலஸ்தீனத்தி

லுள்ள பிற சிறிய நாடுகளைப்போல் சீதோனின் வரலாறு பேரரசுகளின் படையெடுப்பாலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கப்பத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இது அசீரியாவின் முதலாம் திகிலத்து-பிலேசருக்கும் (கி.மு. 1112-1074), இரண்டாம் அசூர் பானிப்பாலுக்கும் (883-859) மூன்றாம் சல்மனேசருக்கும் (858-824), மூன்றாம் அதாது - நிராரிக்கும் (810-783) கப்பம் கட்டியது. இந்நகர் சனகெரிபுக்கு (705-671) எதிராகக் கிளர்ச்சி செய்தது. அதற்குப் பதிலடியாக அவர் இந்நகரைக் கைப்பற்றி இதன் அரசனை விரட்டியடித்தார். இந்நகர் கி.மு. 677-இல் ஏசர்கத்தோனால் (680-669) அழிக்கப்பட்டது. ஆனால் எகிப்தியர் ஆளுகையில் 7-ஆவது நூற்றாண்டு முடிவில் இந்நகர் எழுச்சியுற்றது. விரைவில் பாபிலோனியப் பேரரசன் நெபுகத்னேசரால் கைப்பற்றப்பட்டது. பாரசீகர் காலத்தில் ஓரளவு தன்னாட்சி கொண்டிருந்தது. மூன்றாம் அர்த்தக்சஸ்தாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததன் விளைவாகக் கி.மு. 351-இல் நகர் எரியூட்டப்பெற்றது. பல சீதோனியர் உயிரிழந்தனர். கி.மு. 332-இல் பெரிய அலக்சாந்தரிடம் இந்நகர் சரண் அடைந்தது. செலூக்கிய, உரோமையர் காலத்தில் நகர் ஒரு வணிக மையமாகத் திகழ்ந்தது. சீதோன் சாயம் செய்யும் தொழிலுக்குப் புகழ் பெற்றிருந்தது. உலோகத் தொழிலும், நெய்தலும், கிரேக்கர் காலத்தில் கண்ணாடி செய்தலும் இங்குச் சிறப்புப் பெற்றிருந்தன.

நாடுகளின் பட்டியலில் சீதோன் கானானின்தலை மகனாகும் (ஆதி 10:15; 1 நாள் 1:13). இது கி.மு. இரண்டாயிரமாண்டுகளில் சீதோனின் தலைமைக்குச் சான்று பகர்கிறது. இது எல்லைக் குறிப்பாக அடிக்கடி கூறப்படுகிறது. கானான் நாட்டு எல்லையில் (ஆதி 10:15) செபுலோனின் விலாப்புறம் (49:13). ''பெரிய சீதோனில்'' ஆசேரின் எல்லை (யோசு 19:28). தாவீதின் அரசின் எல்லை (2 சாமு 24:6). வடகானானிய அரசர்களைச் சீதோன்வரை யோசுவா விரட்டியடித்தார் (யோசு 11:8). இலாயிசு, சாரபாத்து ஆகியவை சீதோனின் துணை நகரங்களாக இருந்தன (நீதி 18:28; 1 அர 17:9). இஸ்ராயேலர் குடியேறியபின்பும் சீதோன் கானானிய நகரமாகவே இருந்தது. (நீதி 1:31). பழைய ஏற்பாட்டில் சீதோன் அடிக்கடி தீரோடு சேர்த்துக் கூறப்படுகிறது. இது இரண்டிற்குமிடையேயுள்ள நெருங்கிய உறவைச் சுட்டுகிறது. அச்சுறுத்தும் இறைவாக்குகளில் சீதோன் தனியாகவோ பெரும்பாலும் தீரோடு சேர்த்தோ குறிப்பிடப்படுகிறது (எசா 23:2.4.12; எரே 47:4; எசே 28:20-23; செக் 9:2; யோவே 4:4). யாவேயின் கோபத்தின் கிண்ணத்தைப் பருகவேண்டிய நகரங்கள், அரசுகளில் ஒன்று சீதோன் ஆகும் (எரே 25:22). நெபுகத்னேசருக்கு எதிராகக் கிளர்ச்சியில் சேர்ந்து கொள்ளுமாறு செதேக்கியாவுக்குத் தூதுவர்களை அனுப்பிய நாடுகளில் சீதோனும் அடங்கும் (27:3). தீர் என்னும் உருவகக் கப்பல் சீதோனிய மாலுமிகளைக் கொண்டதாகும் (எசே 27:8). மக்கபேயர் காலத்திய போர்களில் சீதோனும் மற்ற நகரங்களும் கலிலேயா யூதர்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தின (1 மக் 5:15). பழைய ஏற்பாட்டில் பொதுவாகப் பெனிசியர்கள் சீதோனியர் என்றழைக்கப்படுகின்றனர் (உப 8:9; நீதி 10:21; 1 அர 5:6).

இயேசு தீர், சீதோன் பகுதிகளுக்குச் சென்றார் (மத் 15:21; மாற் 7:24.31). இது யூதப் பகுதிக்குப் புறம்பே இயேசு சென்றார் என்று சுட்டவில்லை. யூத, பெனிசியப் பகுதிகளின் எல்லையில் உலவினார் என்பதாகும். இயேசுவுக்குச் செவிமடுக்கவந்த தீர், சீதோன் மக்கள், அங்கு வாழ்ந்த யூதர்களே (மாற் 3:8; லூக் 6:17). கலிலேயா நகர்களில் செய்யப்பட்ட இயேசுவின் பணி தீர், சீதோனில் செய்யப்பட்டிருந்தால், அவர்கள் மனந்திரும்பியிருப்பர். ஆகவே அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளிக்கப்படும் (மத் 11:21 தொ; லூக் 10:13 தொ). அ.ப. 12;20 சீதோனிய மக்களுக்கும் ஏரோது அகிரிப்பாவுக்கும் இடையில் நடந்த சண்டையைச் சுட்டுகிறது. பெனிசிய நகரங்கள் அவரது ஆட்சிக்குட்பட்டிருந்தன. பவுல் உரோமைக்குப் பயணம் செய்தபோது அவரது கப்பல் தங்கிய முதல் இடம் சீதோன் ஆகும் (அ.ப. 27:3).

சிபா (ZIBA - செடி, இல்லை)

சவுல் மன்னனின் வீட்டு வேலைக்காரருள் இவரும் ஒருவர். சவுல் இறந்தபின் தாவீது மன்னர் சவுலின் வீட்டாரில் எஞ்சியவருக்கு இரக்கம் காட்டநினைத்துச் சிபாவை விசாரிக்க, சிபாவும் யோனத்தானின் மகன் மெபிபொசேத்து என்னும் முடவர் இருப்பதாகக் கூறினார். தாவீது மெபிபொசேத்தை அழைத்துச் சவுலின் சொத்தை அவருக்கு அளித்து, அந்தச் சொத்தையும் அவரையும் கண்காணிக்க சிபாவை நியமித்தார் (2 சாமு 9:2-12).

அப்சலோம் கலகம் செய்தபோது தாவீது எருசலேமை விட்டுச் சென்றார். அப்போது இந்தச் சிபா உணவுப்பொருட்களோடு தாவீதைச் சந்தித்து, மெபிபொசேத்து தாவீதிற்குத் துரோகம் செய்து விட்டாரெனக் கூறினார். எனவே தாவீது மெபிபொசேத்தின் உடைமைகளைச் சிபாவுக்குத் தருவதாக வாக்களித்தார் (2 சாமு 16:1-4). தாவீது வெற்றி பெற்றுத் திரும்புகையில் சிபா அவரைச் சந்தித்தார் (2 சாமு 19:18). மெபிபொசேத்து, சிபா கூறிய பழி உண்மையல்ல என்றும் தனக்குத் தாவீதைப் பின்பற்றி வர கழுதைகள் தரப்படவில்லையென்றும் கூறினார். ஆகவே தாவீது சொத்தைச் சிபாவும், மெபிபொசேத்தும் பாதிப்பாதி எடுத்துக் கொள்ளும்படி கட்டளையிட்டார் (19:24-29).

சிபு (ZIPH - ஆற்றொழுக்கான) - ஆள்

1. யூதா குலத்தைச் சேர்ந்த ஒரு காலேபியர் (1 நாள் 2:42).

2. எகலலேலின் மூத்தமகன். யூதா கோத்திரத்தில் ஒரு குடும்பம் அல்லது குலத்தின் பெயராகும் (1 நாள் 4:16).

சிபு (ZIPH - ஆற்றொழுக்கான) - இடம்

1. நெகேபு பகுதியிலுள்ள யூதாவின் நகரங்களில் ஒன்று (யோசு 15:24; காண்க 1 நாள் 2:47; 4:16). இது சாக்கடலின் தென்முனைக்கு மேற்கில் 40-50 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத்து எஸ் - செயிபே ஆக இருக்கலாம்.

2. மாவோன் மலைநாட்டுப் பகுதியிலுள்ள யூதாவின் நகரங்களில் ஒன்று (யோசு 15:55). கெபிரோனின் தென்கிழக்கில் சுமார் 6.5 கி.மீ. தொலைவிலுள்ள சிபு என்ற ஊரைப்பற்றி யுசேபியு கூறுகின்றார். சிபு பாலைவனத்தில் தாவீது, சவுலுக்குப் பயந்து தங்கி இருந்தார் (1 சாமு 23:14-15. 19;24:26; காண்க: சங் 54:2). இதே இடத்தில்தான் தாவீது சவுலின் உயிரை எடுக்காமல், தண்ணீர்ச் சாடியையும், ஈட்டியையும் எடுத்துக் கொண்டார் (1 சாமு 26:1 தொ). நாடு பிளவுபட்டபின் இந்நகரை ரெகபயாம் பலப்படுத்தினார் (2 நாள் 11:8).

சீமோன் (SHIMON - வீணான, கழிவுப் பொருள்)

யூதாவின் குலத்தில் ஒரு குடும்பம் (1 நாள் 4:20).

சீமோன் (SIMON - இறைவன் கேட்டருளினார்)

1. இரண்டாம் சீமோன் என்ற பெரிய குரு. இரண்டாம் ஒனியா என்பவரின் மகன்; மூன்றாம் ஒனியா மற்றும் யாசோன் என்பவர்களின் தந்தை. யூதேயா செலூக்கியர்களின் கீழ் இருந்தபோது யூதர்களின் தலைமைக் குரு. சீரா 50:1-21 பகுதியில் ஆலயத்தின் சீர்திருத்தத்திலும், ஆலய வழிபாட்டிலும் இவரது செயல்கள் போற்றப்பட்டுள்ளன. சுமார் கி.மு. 198-இல் இவர் இறந்திருக்க வேண்டும்.

2. சீமோன் மக்கபேயர் (1 மக் 2:3). காண்க: சீமோன் மக்கபேயர்.

3. ஓர் ஆலய மேற்பார்வையாளர். மூன்றாம் ஒனியா என்ற பெரிய குருவோடு கருத்துவேறுபாடு கொண்டு, எருசலேம் ஆலயக் கருவூலத்தில் வைத்திருந்த தனிநிதி பற்றி செலூக்கிய அரச அதிகாரிகளிடம் தெரிவித்தார் (2 மக் 3:4-6). இந்நிதியை அபகரித்துவர ஒரு செலூக்கியத் தூதுவன் அனுப்பப்பட்டான். இறைவன், ''தமது மாட்சியின் அடையாளத்தை வெளிக்காட்ட'', இத்தீச்செயல் தடுத்து நிறுத்தப்பட்டது

(3:7-40). பிறகு சீமோன் தான் செய்த செயல்களுக்கே ஓனியாவைக் குற்றம் சாட்ட முயற்சித்தார் (4:1-6).

4. இயேசுவின் சகோதரர்களில் ஒருவராகக் கருதப்படுபவர் (மாற் 6:3; மத் 13:55). இயேசுவின் உறவினர் என்பதுமேல். இவரை ஒரு சிலர் கிளோப்பாவின் மகன் சிமியோன் என்று கருதுகின்றனர். இவர் யாக்கோபுக்குப் பின் எருசலேம் திருச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றார் என்று கெசிப்பசு கூறுகின்றார்.

5. அப்போஸ்தலரான பேதுருவின் எபிரேயப் பெயரின் ஒரு வடிவம் (மத் 16:7 காண்க: பேதுரு.

6. பெத்தானியாவில் வாழ்ந்த இவர் இயேசுவை விருந்திற்கழைத்ததாக மாற்கு 14:3-9-இல் வருகிறது. இவரது வீட்டில் இயேசு மரியாவால் தைலம் பூசப்பட்டார். மரியாள், மார்த்தாள் இலாசர் இவர்களின் தந்தையாகவோ, மார்த்தாளின் கணவனாகவோ இருந்திருக்கலாம். இவரைப் பற்றித் தொழுநோயாளி சீமோன் என்று வருவதால் ஒருவேளை முன்னர்த் தொழுநோயாளியாயிருந்து இயேசுவால் குணம் பெற்றவராயிருக்கலாம். இந்நிகழ்ச்சியும் யோவா 12:1-8-இல் வருவதும் ஒரே நிகழ்ச்சியாக இருக்கலாம்.

7. இயேசுவின் சிலுவையைக் கொல்கொதாவுக்குச் சுமந்து செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டவர். இவர் வட ஆப்பிரிக்காவிலுள்ள சிரேனைக்கா மாவட்ட தலைநகரான சிரேனேயைச் சேர்ந்தவர் (மாற் 15:21; மத் 27:32; லூக் 23:26). இவர் வடஆப்பிரிக்காவில் வசித்தாலும் நீக்ரோவாக இருக்கமுடியாது. ஏனெனில் இயேசுவின் காலத்தில் யூதர்கள் பலரும் அப்பகுதிகளில் குடியேறி இருந்தனர். ஒருவேளை பாஸ்காவைக் கொண்டாட எருசலேமுக்கு வந்த யூதர்களில் ஒருவராயிருக்கலாம். இவருக்கு அலக்சாந்தர், ரூபு என்ற புதல்வர்கள் இருந்தனர் (மாற் 15:21). இவர்கள் ஆதித்திருச்சபையால் நன்கு அறியப்பட்டவர்களாக இருக்கலாம்.

8. இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர். இவர் தீவிரவாதி என்றழைக்கப்படுகிறார் (லூக் 6:15). மாற் 3:18; மத் 10:4-பகுதிகளில் கானானேயனான சீமோன் என்று அழைக்கப்படுகிறார். கானானேயன் என்றால் கானாவிலிருந்து வந்தவர் என்றோ, கானானியர் என்ற பொருளோ அல்ல. இந்த அரமேயச் சொல் தீவிரத்தன்மையையும் ஆர்வத்தையும் குறிக்கும். ஒரு வேளை, தீவிரவாதிகள் என்றழைக்கப்பட்ட உரோமை எதிர்ப்பாளர்கள் குழுவில் முன்பு இவர் ஒருவராக இருந்திருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் இவரைப்பற்றிய வேறு குறிப்பு இல்லை. இவரைச் சிலர் கிளோப்பாவின் மகன் சிமியோனாகக் கருதுகின்றனர். இவர் யாக்கோபுக்குப்பின் எருசலேம் திருச்சபைக்குத் தலைமை தாங்கியதாகக் கெசிப்பசு கூறுகிறார்.

9. இயேசுவை விருந்துக்கழைத்த பரிசேயர் (லூக் 7:36-50). இவர் வாழ்ந்த இடம் கலிலேயாவில் அதுவும் கப்பர்நகூமில் இருப்பதுபோல் தோன்றினாலும் அது சுட்டிக்காட்டப்படவில்லை. இயேசு இறைவாக்கினர் என்று கருதி (7:39) அவரோடு நீண்ட நேரம் உரையாடும் நோக்கோடு அவரை விருந்துக்கு இவர் அழைத்தார். இவனது ஆசை மேற்போக்கானது என்பதை விருந்தினர்களை உபசரிக்கும் முறைகளிலிருந்து தவறியவர் என்று கூறுவதன்மூலம் ஆசிரியர் உணர்த்துகின்றார் (7:44-46). இவரது இல்லத்தில்தான் ஒரு பாவியான பெண், இயேசுவுக்குத் தைலம்பூசி மன்னிப்பைப் பெற்றாள். பாவிகளிடம் இயேசு காட்டிய போக்கு சீமோனுக்கு வியப்பையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது. ஏனெனில் பாவிகள் தீண்டத்தகாதவர்கள் என்பது யூதர்களின் கருத்து. இரு கடனாளிகள் உவமை மூலமாக இயேசு சீமோனைக் கண்டித்து, பெண்ணின் அன்புச் செயலைப் போற்றுகிறார்.

10. இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதா இஸ்காரியோத்தின் தந்தை. இவர் சீமோன் இஸ்காரியோத்து என்று அழைக்கப்படுகிறார் (யோவா 6:71; 13:2.26).

11. அப்போஸ்தலர் பணியிலும் (8:9-24) பிற்காலக்கதைகளிலும் குறிக்கப்படும் சமாரிய மந்திரவாதி. காண்க: சீமோன்மாகு.

12. பேதுரு யோப்பாவில் தங்கியிருந்த போது தோல்பதனிடும் தொழிலைச் செய்து வந்த சீமோன் வீட்டில் தங்கியிருந்தார் (அ.ப. 9:43; 10:6.17.32). இவர் கிறிஸ்தவராக இருக்க வேண்டும். ஏனெனில் தோல்பதனிடும் தொழில் இறந்த உடல்களோடு தொடர்பானது என்பதால் யூதர்கள் இதனையும் இதனைச் செய்பவர்களையும் வெறுத்தனர் (லேவி 11:39-40). தோல்பதனிடுவோரைப் பரிசேயர் ஒதுக்கினாலும், கிறிஸ்தவத் தோழமை பரந்தமனதுடன் ஏற்றுக்கொண்டது.

சீமோன் மக்கபேயர் (SIMON MACCABEUS)

இவர் அசமோனியத் தலைவரும் யூதேயாவின் பெரிய குருவும் ஆவார் (கி.மு. 200-136). இவர் மத்தத்தியாவின் ஐந்து புதல்வர்களில் இரண்டாவது புதல்வராவார். ''தாசி'' அதாவது வலுவற்றவன் என்ற பட்டப் பெயர் இவருக்கு உண்டு (1 மக் 2:3). இவரது தந்தை யூதா மற்றும் யோனத்தான் ஆகிய இரு சகோதரர்களோடு சேர்ந்து, கி.மு. 168-க்குப்பின், நான்காம் அந்தியோக்கு எப்பிபானால் ஆட்சி செய்யப்பட்ட செலூக்கிய சீரியாவுக்கு எதிராக வெற்றிகரமாகச் சுதந்தரப் போர் நடத்தினார். மத்தத்தியா, தன் புதல்வர்களைப் பற்றிய சாட்சியில் (2:49தொ) ''இதோ உங்கள் சகோதரன் சீமோன் மிகவும் முன்மதியுள்ளவன். அவன் சொல்வதை எப்போதும் கேளுங்கள். அவன் உங்களுக்குத் தந்தைபோல் இருப்பானாக'' (2:65) என்று கூறுகிறார்.

கலிலேயாவிலுள்ள யூதர்களுக்கு உதவி செய்ய சீமோன் யூதாவால் அனுப்பப்பட்டார். செலூக்கியப் படைகளைப் பல சிறு சண்டைகளில் தோற்கடித்து இறுதியாகச் சீமோன் யூதர்களை அங்கிருந்து வெளியேற்றிக் கொணர்ந்தார். யூதாவுக்கு வாரிசாக யோனத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவருக்கு நெருங்கிய கூட்டாளியாகவும் அரசியல், போர்க்காரியங்களில் ஆலோசகராகவும் சீமோன் விளங்கினார். இருவரும் சேர்ந்து தங்கள் சகோதரன் யோவான் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கினர் (1:34-42) பாக்கிதின் சீரியப் படைகளுக்கு நழுவித் தப்பினார். பாக்கிது பெத்-பாசியைச் சுற்றி இட்டிருந்த முற்றுகையைச் சீமோன் நீக்கினார் (9:62-68). பல ஆண்டுகளுக்குப்பின் இரு சகோதரர்களும் பாக்கிதைத் தோற்கடித்து, அவரோடு உடன்படிக்கை செய்து கொண்டனர். இது செலூக்கியச் சார்புடைய யூதர்களுக்குப் பேரச்சம் அளித்தது (9:67-73).

நான்காம் அந்தியோக்குவால் யோனத்தான் பெரிய குருவாக உறுதிப்படுத்தப்பட்டு, ஆளுநராக நியமிக்கப்பட்டபின், கி.மு. 147-146-இல் 2-ஆம் தெமேத்திரியு நிக்காதோருக்கு எதிராக யூதேயா போராட வேண்டியிருந்தது. இதில் சீமோன் பெத்-சூரைக் கைப்பற்றிப் பலப்படுத்தினார். திடீரென்று தாக்கி யோப்பாவைக் கைப்பற்றி மத்திய தரைக்கடலுக்கு ஒருவழியை ஏற்படுத்தினார். பிறகு எருசலேமுக்கு வடமேற்கில் அதிதாவைக் கட்டினார். எருசலேமின் பாதுகாப்பைப் பலப்படுத்தினார் (1 மக் 12).

திரிபோவால் யோனத்தான் கைதியாக்கப்பட்டபின், சீமோன் யூதேயாவில் அரசியல் போர்க்காரியங்களில் தலைமை தாங்கினார் (1 மக் 13-16). பிணைக் கைதியாக இருந்த யோனத்தான் மற்றும் அவரது புதல்வர்களை மீட்க, பணம் அனுப்ப வேண்டியிருந்தது. அப்படி அனுப்பியும் அவர்கள் கொல்லப்பட்டனர். யோனத்தானின் உடலைப்பெற்று மோதினில் அவருக்கு ஒரு பெரிய கல்லறையைக்கட்டினார் சீமோன். இது இன்றும் எருசலேமுக்கு அருகில் காணப்படுகிறது.

அரியணைப் போராட்டத்தில் சீமோன் 2-ஆம் தெமேத்திரியுவை ஆதரித்தார். அதற்குப் பலனாக, வரிநீக்கத்தையும் செயல் அளவில் சுதந்தரத்தையும் யூதேயாவுக்குப் பெற்றார். இஃது ஓர் அரசியல் வெற்றியாகும் (1 மக் 13:36தொ). செலூக்கியக் காலக்கணிப்பில் 170-ஆம் ஆண்டாகிய இந்த ஆண்டிலிருந்து (கி.மு. 142-141) யூதர்கள் புதிய சகாப்

தத்தைத் தொடங்கினர். சீமோன் காசரைக் கைப்பற்றினார். எருசலேம் அரணிலிருந்து அந்நியப் படைகளை அகற்றினார். அவரது ஆட்சியில் பல தலைமுறைகளுக்குப்பின் முதல் தடவையாக நாட்டில் அமைதி நிலவியது. உரோமையரோடு அரசியல் உறவுகளைப் புதுப்பித்தார். அவர்களுடைய ஆதரவை அளிக்கும் மடல்கள் பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. சீமோனின் செயல்கள் வெண்கலத் தகட்டில் பொறிக்கப்பட்டன (14:27-48).

2-ஆம் தெமேத்திரியு பார்த்தியர்களால் கைதியாக்கப்பட்டபின் அரியணைக்கு உரிமை கொண்டாடிய 7-ஆம் அந்தியோக்கு, யூதர்களுக்கு அளிக்கப்பட்ட சுதந்தரத்தை விரும்பவில்லை. சீமோன் அவரது உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவு அளித்தாலும் அந்தியோக்கு யோப்பா காசரா போன்ற நகரங்களைச் சரண் அளித்து யூதர்கள் கப்பம்கட்ட வேண்டும் என்று கோரினார். சீமோன் மறுக்கவே ஒருபடை அனுப்பப்பட்டது. அதைச் சீமோன் தோற்கடித்தார். ஆனால் அவரது மருமகனால் நயவஞ்சகமாக அவரும் அவரது புதல்வர்களும் கொல்லப்பட்டனர். தலைமைப் பதவி அவரது மகன் யோவானுக்கு மாறியது.

சீமோன் அரச பட்டத்திற்கு உரிமை கோரவில்லை. ஏனெனில் அவர் தாவீது குலத்தைச் சேராதவர். ஆதலால், மக்கள் அதற்கு ஆதரவு அளிக்க மாட்டார்கள் என்று எண்ணியிருக்கக்கூடும். அவர் ''ஏலின் மக்களின் தலைவர்'' என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார் (14:28). அது போலவே பெரிய குருவின் பதவிக்கும் உரிமையுள்ளவர் அல்லர். இப்பிரச்சனை அசமோனிய ஆட்சிக் காலமுழுவதும் நீடித்தது எனலாம். ஆயினும் இப்பிரச்சனையைத் தீர்க்க ''ஓர் உண்மையான இறைவாக்கினர் தோன்றும் வரை'' (14:41) சீமோன் பெரிய குருவின் பதவியையும் வகித்தார்.

சீமோன் மாகு (SIMON MAGUS)

சமாரியாவில் வாழ்ந்த ஒரு மந்திரவாதி (அ.ப.8:9-24). மக்கள் ''மாபெரும் சக்தி எனும் கடவுளின் வல்லமை இவனே'' என்று கருதினர். இந்தப் பட்டம் இவர் ஒரு ஞானவாதக் குழுவுக்குத் தலைவராக இருந்திருக்கலாம் என்று சுட்டுகிறது. பிலிப்பு சமாரியாவில் நற்செய்தியைப் போதித்து அருஞ்செயல்கள் செய்ததைக் கண்டு இவர் மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றார். அப்போது பேதுருவையும் யோவானையும் எருசலேம் திருச்சபை சமாரியாவுக்கு அனுப்பி வைத்தது. அப்போஸ்தலர்கள் சமாரியக் கிறிஸ்தவர்கள்மேல் கைகளை விரிக்கவே அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். அப்போஸ்தலர்கள் செய்தது போலவே, சீமோன் தானும் பிறருக்குப் பரிசுத்த ஆவியை அளிக்கும் வரத்தைத் தருமாறு கோரி அப்போஸ்தலர்களுக்குப் பணம் கொடுக்க முன்வந்தார். பேதுரு சீமோனைக் கடுமையாகக் கடிந்து சபித்தார். இவருடைய பெயரிலிருந்துதான், புனித காரியங்களை வியாபாரப் பொருளாக்கும் போக்கு ''சிமோனியம்'' என்ற பெயர் பெறுகிறது.

பிற்கால நூல்களில், குறிப்பாக மறைசாட்சியான யுஸ்தின் மற்றும் இரனேயு ஆகியோரின் நூல்களில் சீமோன் ஞான வாதப் பிரிவினைச் சபையின் தந்தையெனக் குறிக்கப்படுகிறார். போலிக்கிளமந்து நூல்களிலும், பேதுருவின் பணி என்ற நூலிலும் பேதுருவுக்கும் சீமோனுக்கும் இடையே நடந்த போராட்டம் பற்றிய கதைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

சியா, சியாகா (SIA, SIAHA - கூட்டம்)

ஓர் ஆலய ஊழியர். இவரது சந்ததியினர் பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பினர் (எஸ் 2:44; நெகே 7:47).

சீயோர் (ZIOR - சிறிய)

சீயோர் கெபிரோன் மலைநாட்டிலுள்ள யூதாவின் நகரங்களில் ஒன்று (யோசு. 15:54). கெபிரோனுக்கு வடக்கு வடகிழக்கில் சுமார் 8 கி.மீ. தொலைவிலுள்ள பள்ளத்தாக்கிலுள்ள ''சியிர்'' என்ற நகரம் சீயோராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இங்

குள்ள கல்லில் குடையப்பட்ட கல்லறைகளி லிருந்து இங்கு மக்கள் வாழ்ந்ததாகத் தெரி கிறது. இங்குள்ள கல்லறைகளில் ஒன்று ஏசா வின் கல்லறையாகும் என்று பாரம்பரியம் கூறுகின்றது.

சீயோன் (SHION)

இசக்காரின் இனப்பகுதியிலுள்ள ஒரு நக ரம் (யோசு 19:19). இது இருந்ததாகப் பல இடங்கள் அடையாளம் காட்டப்படும். அவற்றில் ஒன்று தாபோர் மலைக்குத் தென் கிழக்கில் 22.5 கி.மீ. தொலைவிலுள்ள சீரிம் ஆகும்; மற்றது நாசரேத்துக்குக் கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள அயுன் எஸ் - சாயின் ஆகும்.

சீயோன் (ZION - நடு அரண், உட்கோட்டை)

சீயோன் என்பது இஸ்ராயேல் மக்கள் எருசலேமுக்கு வருமுன் இருந்த குன்றைக் குறிக்கின்றது. இப்பெயர் 'வறண்ட நிலம்' எனப் பொருள்படும் எபிரேயச் சொல்லி லிருந்து வந்தது என்று கருதப்படுகிறது (எசா 25:5; 32:2). இன்றையக் கருத்தின்படி, சீயோன் என்பது 'ஆறு' அல்லது 'ஓடை' என்று பொருள்படும் கூரியர் சொல்லிலிருந்து வந்த தாகக் கருதப்படுகிறது. 'சீயோன் கோட்டை' என்பது 'கீகோன்' நீரூற்றுக்கு நேர் மேலே இருந்த எபூசியர் கோட்டையாகும்.

சீயோன் என்னும் பெயர் முதன் முதலில் தாவீது ''சீயோனின் கோட்டையைக்'' கைப் பற்றினார் என வாக்கியத்தில் கூறப்படுகிறது (2 சாமு 5:6-10; 1 நாள் 1:49). இச்சொற் றொடர் தனிப்பட்டதொரு கோட்டையைக் குறிக்காமல் பாதுகாக்கப்பட்ட மலை உச்சிக ளைக் குறிக்கும். ஆனால் எருசலேமின் பழைய பெயரான உர்சலிம் அரணுக்கு வெளியே இருந்த குடியிருப்புகளையும் குறிக்கும். இதே பகுதிகள் எவ்வாறு, ''தாவீ தின் நகரம்'' என்ற சொற்றொடர் ''சீயோ னுக்கு''ப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டது என்பதையும், அரணுக்குள் உள்ள நகரத்தைக் குறித்தது என்பதையும் விளக்குகின்றன (1 அர 8:1; 2 நாள் 5:2). இந்த இரண்டு பகுதிகளும் தாவீதின் நகரத்திலிருந்து உடன் படிக்கைப் பேழை புதிதாகச் சாலமோனால் எருசலேமில் கட்டப்பட்ட ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்டதைப் பேசுகின்றன.

நகரிலிருந்து ஆலயத்திற்கு உடன்படிக் கைப்பேழை மாற்றப்பட்டதின் விளைவாகச் சீயோன் என்ற பெயர் ஆலயப்பகுதிக்கும் விரிவாக்கப்பட்டது. இதற்குச் சங்கீதங்கள் சான்று பகர்கின்றன. யாவே சீனாய் மலை மீது வாழ்வதாக மக்கள் கருதினர். சில பகுதிகள் அரசனைக் கடவுளோடு தொடர்பு படுத்துகின்றன (சங் 2:6; 132:13). ஆனால் பல சமயங்களில் யாவே மட்டுமே குறிப்பிடப் படுகின்றார் (சங் 48:2; 74:2; 84:7; எசா 18:7). திருப்பயணிகள் சீயோன் மலையில் ஏறி, கடவுள்முன் தங்களைப் பிரசன்னப் படுத்தினர் (சங் 84:5).

இறைவாக்கினர் நூல்களில், சீயோன் கட வுள் அருளின் அல்லது தண்டனையின் அடையாளமாக, அல்லது சமயத்தலைநகர மாகக் கருதப்பட்ட எருசலேமுக்குச் சமமா கப் பயன்படுத்தப்படுகின்றது (எசா 28:10; காண்க: உரோ 9:33; 1 பேதுரு 2:6). பல சமயங்களில் இவற்றில் காவிய இணைவுத் தன்மையைவிட வேறு எதுவும் இல்லை (சங் 51:18; எசா 10:12; 24:23; 31:4; 40:9; யோவே 3:16; மீக் 3:10.12). எருசலேமில் வாழ்ந்தவர்கள் அவர்களின் சுயநிறைவு இரு மாப்புக்காகச் சமாரியாவில் உள்ளவர்க ளோடு ஒப்பிடப்படுகின்றனர் (ஆமோ 6:4). சீயோனில் வாழ்ந்த மக்களைக் கடவுள் உற் சாகப்படுத்துகின்றார் (எசா 10:24). அடிமைத் தனத்தில் சென்றவர்கள் சீயோனுக்குத் திரும்பி வருவர் (எரே 3:14). 'சீயோன்', எருசலேமில் வாழ்ந்தவர்களுக்குப் பதிலாக ஒரு பொருட் பன்மொழியாகப் பயன்படுத் தப்பட்டது (சங் 97:8; எசா 1:27; 33:5). ''சீயோனின் புதல்வர்கள்'' (சங் 149:2; புல 4:2; யோவே 2:23) அல்லது ''சீயோன் மகளிர்'' (எசா 3:16; 4:4; எரே 4:31; 6:2; செக் 9:9; காண்க மத் 2:5; யோவா 12:15) ஆகிய சொற்கள் எருசலேமில் வாழ்ந்த இறைவ னின் அருள் பெற்ற அல்லது தண்டனை பெற்ற ஆண்களையும் பெண்களையும்

குறிக்கின்றது. சில சமயங்களில் ''சீயோன் மகளிர்'' என்பது ''பெண்களை'' மட்டும் குறிக்கின்றது (உ.ச.3:11; எசா 10:32; 16:1).

இறுதிக் காலத்தைப்பற்றிக் கூறும் நூல்களும் வெளிப்பாட்டு நூல்களும் மேற்கூறிய சமயப் பொருளிலேயே சீயோன் என்ற பெயரைப் பயன்படுத்துகின்றன. மெசியா சமூகத்தின் மாட்சிமை சீயோன் மலைமீது நிகழும். மெசியா, காலமுடிவில் அங்குத் தோன்றுவார். இங்கு, 'சீயோன்' ''வானக எருசலேமோடு'' ஒன்றிப்போகிறது (எசா 60:14; எபி 12:22; திருவெளி 14:1).

கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் 'சீயோன்' என்பது எருசலேம் இருந்த தென்மேற்கிலுள்ள குன்றிற்குக் கிறிஸ்தவர்களால் இடப்பட்ட பெயராகும். இதற்குக் காரணம், பெந்தகோஸ்தேயின்போது அப்போஸ்தலர்கள் கூடியிருந்த வீடு இப்பகுதியில்தான் இருந்தது என்று கருதப்பட்டது. எப்பிபானியு இங்கு ஓர் ஆலயம் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். கி.பி 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்குத் ''திருச்சபைகளுக்கெல்லாம் தாயாகிய பரிசுத்த சீயோன்'' என்ற பேராலயம் எழுப்பப்பட்டது.

1) 6-ஆம் நூற்றாண்டுக்கு முன் ஆண்டவரின் இறுதி இரவுணவு நிகழ்ந்த ''மேலறையும்'', பெந்தகோஸ்தே நிகழ்ந்த ''மேலறையும்'' ஒன்றாகக் கருதப்பட்டன. அதனால் பேராலயத்தில் நற்கருணை நிறுவனம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இதற்கு அருகில் மரியாள் மரித்த இடம் இருந்ததாக 7-ஆம் நூற்றாண்டுப் பாரம்பரியம் சுட்டிக் காட்டுகிறது. செஞ்சிலுவைப் போர்வீரர்கள் எருசலேமை வென்றபோது இவ்வாலயம் சிதைந்த நிலையில் இருந்தது.

2) இதற்குப் பதிலாக எழுப்பப்பட்ட மத்தியகாலக் கோயிலின் ஒருபகுதி இக்கால ''மரியாள் துயில் கொள்கிறாள்'' என்ற துறவற மடத்திற்குத் தென்கிழக்கில் இன்றும் இருக்கிறது. ''மேல் அறையின் கோவில்'' கி.பி 1524-இல் மசூதியாக மாற்றப்பட்டது. இங்கு முஸ்லீம்கள் தாவீதின் கல்லறை இருப்பதாக நம்புகின்றனர்.

தற்போது, தாவீதின் கல்லறை எனப்பாரம்பரியமாகக் கருதப்படும் இடத்தையும் இறுதி இரவுணவு மேல் அறையையும் கொண்டிருக்கும் பழைய எருசலேம் நகரின் தென்மேற்கு மலைப்பகுதி ''சீயோன் மலை'' என்றழைக்கப்படுகிறது. இப்பகுதியில் தாவீதின் மூல நகர் இருந்ததாக அடையாளம் காட்டும் யோசிப்பசுக்கு முன்பே, இந்தத் தென்மேற்கு மலைப்பகுதிக்குச் சீயோன் என்ற பெயர் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

சீயோன் மகள் (ZION, DAUGHTER OF)

'சீயோன் மகள்' என்பது எருசலேமையும் அதிலுள்ளவர்களையும் குறிக்க அடிக்கடி பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர். எபிரேயர்கள் ஒருவனுடைய குணங்களைக் 'குடும்ப உறவின்' மூலம் வெளிப்படுத்துவது வழக்கம். ''அந்நியனுடைய புதல்வர்கள்'' என்பது 'அந்நியர்களைக்' குறிக்கும் (எசா 60:10). இதன் உட்கருத்து பிள்ளைகள் 'பெற்றோர்களைப் போலவே இருப்பார்கள் அல்லது அப்பிள்ளைகள் இந்தப் பெற்றோருக்குப் பிறந்தவர்கள்' என்பதாகும். 'புதல்வியர்' என்பது 'பெண்களை' மட்டும் குறித்தாலும் 'சீயோனின் புதல்வியர்' என்பது 'ஒரு சமூகத்தையே குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

நகரங்கள், ஊர்கள், கிராமங்கள் ஆகியவை ''நாட்டின் புதல்வியர்'' என்று அழைக்கப்பட்டன. உதாரணம்; ''யூதாவின் புதல்வியர் (நகரங்கள்) (சங் 97:8), பெலிஸ்தியரின் புதல்வியர் (நகரங்கள், எசே 16:27). எனவே ''சீயோன் மகள்'' என்பது சீயோன் மலைமீது கட்டப்பட்ட எருசலேம் நகரம் ஆட்தன்மைப்படுத்தப்படுவதாகும். இதே கருத்தில்தான் இதுபழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது (2 அர 19:21; சங் 9:14; எசா 1:8; 10:32; 16:1; 37:22; 52:2; 62:11; எரே 4:31; 6:2. 23; புல 1:6; 2:1.4.8.10.13.18; 4:22; மீக் 1:13; 4:8.10.13; செக் 2:10; 9:9).

புதிய ஏற்பாட்டில் மத் 21:5; யோவா 12:15-இல் இயேசு எருசலேமில் நுழைந்த போது செக்கரியா இறைவாக்கினரின் வார்த்தைகள் மேற்கோள் காட்டப்படுகின்றன (செக் 9:9).

சிரகச்செடி (CUMININ)

விவிலிய நாடுகளில் இச்செடி அதிகமாகக் காணப்படவில்லை. ஆயினும் உணவுக்குச் சுவையூட்டப் பயன்பட்டது. எசாயா இறைவாக்கினர் உழவன் எவ்வாறு சிரகத்தைத் தெளித்துப் பின்னர் அறுவடை செய்கிறான் என விளக்குகிறார். கடவுளுடைய செயலும் இதைப் போன்றதே என்றும் கூறுகிறார் (எசா 28:23-29).

இறைமகன் இயேசு மறைநூல் அறிஞரையும், பரிசேயரையும், அவர்களது வெளிவேடத்திற்காகக் கடிந்து கொள்ளும்போது, அவர்கள் புதினா, சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பகுதி செலுத்துகிறார்கள் எனவும், ஆனால் திருச்சட்டத்தில் முக்கிய படிப்பினைகளான நீதி, இரக்கம், விசுவாசம் ஆகியவற்றை விட்டுவிட்டனரெனவும் கூறுகிறார் (மத் 23:23).

உப ஆகமம் 14:22-23 (லேவி 27:30) விளையும் தானியத்திலும், கொடி முந்திரிப்பழச் சாற்றிலும் எண்ணெயிலும் பத்திலொரு பாகத்தை இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்குக் காணிக்கையாய்த் தர வேண்டுமெனக் கூறுகிறது. இந்தத் தானிய வகையில் சிரகமும் அடங்கும் என மிஸ்னா விளக்குகிறது.

சீரழிந்த, சீர்கெட்ட (PERVERSE)

''கோணல்'', ''முறுக்கிய'', ''புரட்டான'', ''திரித்து'', ''வளைந்த'' போன்ற பல சொற்களின் பொருளை உணர்த்த இச்சொல் பயன்படுகிறது. இது, பெரும்பாலும் ஞான இலக்கியங்களில், நேர்மையான வழிக்கு எதிரான நேர்மையற்ற வழியைக் குறிக்கிறது. இதன் சிறப்புப்பண்புகள் மடமை, சிற்றின்பம், இறைவனது கட்டளைக்குக் கீழ்ப்படியாமை ஆகியவையாகும். உபாகமப்பாரம்பரியத்தில் வரும் ஆசிர், சாபம் என்ற பின்னணியில், இச்சொல் கீழ்ப்படியாமையால், இறைவனது கட்டளைகளை நேர் மாறான அல்லது வேறுபட்ட தொன்றாகப் புரட்டாகக் கூறுதலை, திரித்துக்கூறுதலைக் குறிக்கிறது. சீரழிந்த மனிதன் இறைவனது சட்டத்திற்கும் செயல்முறையான ஞானத்திற்கும் அதிலிருந்துவரும் ஒழுக்கமுறைக்கும் எதிராக வாழ்பவன் ஆவான்.

புதிய ஏற்பாட்டில் இச்சொல் பழைய ஏற்பாட்டு வழக்கையே உயர்த்துகிறது (மத் 17:17; லூக் 9:41; பிலி 2:15; காண் உப 32:5).

சீரா (SIRAH - முட்புதர்)

இந்த இடம் சீராவின் ஊற்று என்றழைக்கப்பட்டது. இந்த இடத்தில்தான் தாவீதரசரின் தளபதி யோவாபு, சவுலின் மகனிடம் தளபதியாயிருந்த அப்னேர் என்பவரை வஞ்சகமாக அழைத்துவந்து கெபிரோனில் கொலை செய்தார் (2 சாமு 3:26). யோசிப்பசின் கூற்றுப்படி இந்த இடம் கெபிரோனிலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ளது. இது இருந்ததாகக் கெபிரோனுக்கு அருகில் பல இடங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. இவற்றில் கெபிரோனுக்கு வடக்கிலுள்ள சீரெட் ஏல்-பெல்லாவும், கெபிரோனுக்கு வடமேற்கிலுள்ள அயின் சாராவும் அடங்கும்.

சீராக்கு (SIRACH)

இவர் பென்சீராக்கு (சீராக்கின் மகன்) என்றும் குறிக்கப்படுகிறார். விவிலியத்தில் உள்ள நூல்களில் திருச்சபை தனதுவழிபாட்டுக்கு அதிகமாகக் கையாள்வது சீராக்கு ஆகமப் பகுதிகளையே. எனவேதான் இதனைத் திருச்சபை நூல் என்றே அழைக்கின்றனர். இந்நூலில் 50:29-இல் பகுதியில் சீராக்கு மகனான இயேசு இந்நூலை எழுதியதாகக் குறிப்பு வருகிறது. வேறு எந்தப் பழைய ஏற்பாட்டு நூலுக்கும் இவ்வளவு தெளிவாக ஆசிரியர் குறிப்பிடப்படுவதில்லை. இந்நூல் எபிரேய விவிலியத்திலும் பிரிவினைச் சபைகளின் திருமுறைப்பட்டியலிலும் சேர்க்கப்படுவதில்லை. ஆனால் தொடக்ககாலத் திருச்சபை இந்நூலைப்பயன்படுத்தியுள்ளது; திரிதெந்தீன் பொதுச்சங்கத் திருமுறைப்பட்டியலில் இந்நூல் சேர்ந்ததாகும்.

சீராக்கு நூல் (SIRACH, BOOK OF)

1. முன்னுரை:- பழைய ஏற்பாட்டு ஞான நூல்களில் நீண்டதாகிய இந்நூல் பழமொழி நூலின் நடையில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரி யர் பழமொழி ஆசிரியரின் பிரமாணிக்க முள்ள சீடராக விளங்குகிறார். கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு பக்தி யுள்ள யூதன் எவற்றை விசுவாசித்தான், எப்படி வாழ்ந்தான் என்பதை இந்நூல் பிரதி பலிக்கிறது. ஆசிரியர் சட்டம் மற்றும் ஞானத்தின்பால் காட்டும் ஆர்வம் நம்மைக் கவரக்கூடியது.

2. நூலின் பெயர்:- இந்நூலுக்கு இரு பெயர் கள் உண்டு. ஒன்று ''எக்லேசியாஸ்டிக்கஸ்'' என்ற கிரேக்கப் பெயராகும். இச்சொல்லுக் குத் ''திருச்சபையில் வாசிக்கப்படுவது அல் லது பயன்படுவது'' என்பது பொருளாகும். அதாவது இந்நூல் ''திருச்சபையின் நூலா கும்.'' எப்படி இந்நூல் இந்தப் பெயரைப் பெற்றது என்பதை விளக்க முடியாது. ஒரு வேளை, யூத செபக்கூட வழிபாட்டிலும் திருச்சபையின் வழிபாட்டிலும் பெரிதும் பயன்பட்டதால், திருச்சபையின் போதக வாழ்வில் மிகச் சிறந்த நூலாகக் கருதப்பட் டிருக்கலாம். அல்லது கி.பி. முதலாம் நூற் றாண்டு முடிவில், யூதர்கள் தங்கள் திரு முறைப் பட்டியலிலிருந்து இந்நூலை நீக்கிய பின், அதைத் திருச்சபை தனது திருமுறைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதால், ''திருச் சபையின் நூலாக''க் கருதப்பட்டிருக்கலாம். தொடக்க காலத்தில் ''எக்லேசியாஸ்டிக்கஸ்'' என்ற பெயர் இரண்டாம் திருமுறைப்பட் டியலில் உள்ள எல்லா நூல்களையும் குறித் தது. ஆனால் காலப்போக்கில் இந்நூலை மட்டும் குறிக்கப்பயன்பட்டது. பழைய இலத்தீன் வாசகமும், வுல்காத்தா வாசகமும் இப்பெயரையே பயன்படுத்தின.

இந்நூலின் மற்றொரு பெயர், எபிரேயத் தில் ''பென்சிரா'' என்பதும் கிரேக்கத்தில் ''சீராக்கு'' என்பதுமாகும். இந்நூலைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தவர் தமது முன்னுரையில், இந்நூலின் ஆசிரியரை ''என் தாத்தா இயேசு'' என்று குறிப்பிடு கிறார். சீரா 50:29-இல் ''எருசலேம் வாழ் எலயாசரின் மகனான சீராக்கின் மைந்தர் இயேசு'' என்றும், 51:1-இல் ''சீராக்கின், மகன் இயேசுவின் மன்றாட்டு'' என்றும் ஆசிரி யர் குறிக்கப்படுகிறார். காலப்போக்கில் இந் நூலைப் ''பென் சீராக்கு'' (சீராக்கின் மக னின் நூல்) அல்லது வெறுமனே ''சீராக்கு நூல்'' என்று அழைப்பது மரபாகும். ஆசிரிய ரது குடும்பத்து மூதாதையராக, சீராக்கு யூதர் களிடையே புகழும் மதிப்பும் பெற்றுத் திகழ்ந்திருக்க வேண்டும். ஆகவே அவரது பெயரால் இந்நூல் அழைக்கப்படுகிறது என லாம்.

நாமும் இந்நூலைச் ''சீராக்கு நூல்'' என்றே அழைப்போம்.

3. ஆசிரியர்:- ஆசிரியரது பெயர் தெளிவா கக் கூறப்படுகிறது. நூலின் ஆசிரியர் ''சீராக் கின் மகன் இயேசு'' என்று கூறப்படுவது பற்றி (50:29; 51:1) முன்பே கூறியுள்ளோம். நூலின் கிரேக்க வாசகம் ''சீராக்கின் மகன் இயேசுவின் ஞானம்'' என்ற தலைப்பைக் கொண்டுள்ளது. ·50:27-இன் மற்றொரு கிரேக்க வாசகம் ''எருசலேம் வாசியான எலயாசர் மகன் சீராக்கின் மகன் இயேசு'' என்றும் அதே வாக்கின் எபிரேய வாசகம் ''எலியேசெர், சீராக் மகன் எலயாசர் மகன் இயேசுவின் மகனான சிமெயோன்'' என்றும் ஆசிரியரைக் குறிக்கின்றது. இவ் வாறு எபிரேய, கிரேக்க வாசகப் பிரதிகள் ஆசிரியர் பெயர் பற்றிய பிரச்சனையைச் சிறிது குழப்பி விட்டன. எலயாசர் மகன் சீராக் மகன் இயேசுதான் இந்நூலின் ஆசிரி யர் என்று இப்போது ஆய்வாளர்கள் கருத் தொற்றுமை கொண்டுள்ளனர். கத்தோலிக் கத் தமிழ் மொழிபெயர்ப்பு கிரேக்க வாசகத் தைப் பின்பற்றினாலும், இந்நூலின் ஆசிரி யரை வெறுமனே ''சீராக் மகன் இயேசு'' என்றும் நூலைச் ''சீராக்கின் நூல்'' என்றும் அழைக்கிறது.

ஆசிரியரைப் பற்றிய பல குறிப்புக்கள் நூலில் காணப்படுகின்றன. இவற்றின்படி ஆசிரியர் எருசலேமில் வாழ்ந்தவர் (50:27).

இளமை முதல் வேதாகமத்தைக் கவனமாகப் படித்து முதிர்ச்சி பெற்ற பக்தியுள்ள மாணவர் ஆவார். குறிப்பாகப் பழமொழி, சங்கீதங்கள், ஐந்நூல்கள் ஆகியவற்றில் சிறப்பான புலமை பெற்றிருந்தார். தமது மூதாதையரின் சமயத்துக்குப் பிரமாணிக்கமுள்ளவராய் இருந்தாலும், மற்றவற்றில் பரந்த மனப் போக்குடையவர். மதிப்போடு ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட வல்லுநராகவும், போதகராகவும் விளங்கினார். தான் விரும்பிய வேதாகமப் படிப்பில் ஈடுபடுவதற்குத் தேவையான செல்வமும், ஓய்வும் கொண்டிருந்தார்.

ஆசிரியர் அயல்நாடுகளில் பயணம் செய்துள்ளார் *(34:11)*. அந்நாடுகளில் பல காரியங்களைக் கற்றறிந்து அனுபவம் பெற்றவர். இப்பயணங்களில், சில சமயங்களில் ''உயிரிழக்க முதலாய்'' இருந்துள்ளார் *(34:12)*; மற்றும் பல ஆபத்துக்களையும் எதிர்கொண்டுள்ளார். அவற்றிலிருந்து தம்மைக் காப்பாற்றிய இறைவனுக்கு நன்றி கூறுகிறார் *(51:1-12)*. பண்பாடும், செல்வமும் மிக்கவர். சமூகத்தின் உயர் மட்டத்தில் உலவியவர். அரசவையில் பணிபுரிந்துள்ளார். மற்ற ஞானிகளைப் போல் இவரும் அயல் நாடுகளுக்குத் தூது சென்றிருக்கக்கூடும் *(39:4)*.

நகர வாழ்வில் அதிகப் பழக்கமுள்ளவர். பல தொழில்களையும் வேலைகளையும் அறிந்திருக்கிறார் *(19:38)*. இவர் நல்ல மனைவி மக்களைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்ததாகத் தெரிகிறது *(39:29 தொ)*. அவரது பிள்ளைகளை மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்த்திருக்க வேண்டும் *(7:24; 42:9)*. எருசலேமுக்கு வெளியே இருந்த அவரது சொத்துக்களைப் புத்திக் கூர்மையோடும், விவேகத்தோடும் பயன்படுத்தியதால், நகரில் சுதந்தரமாக வாழ முடிந்தது. அவரது நிலை கண்டு பொறாமை கொண்டவர்களும் உண்டு. ஆனால் அவர் தமது வீட்டைச் சீரும் சிறப்புமாக நடத்தத் தெரிந்தவர் *(6:7தொ; 9:29தொ; 30:29-33)*. அங்கு ஒட்டுண்ணி போன்று சுரண்டி வாழ்வோருக்கு இடம் அளிக்கவில்லை. ஆனால் ஏழைகளுக்கும் துன்பப்படுவோருக்கும் அவரது வீடு திறந்தே இருந்தது. அவர்களுக்கு முடிந்த போதெல்லாம் உதவினார் *(12:1)*.

வேதாகமத்தை ஆர்வத்தோடு படிப்பதில் தம்வாழ்வைச் செலவிட்டாலும், அவர் தனித்துத் துறவியாக வாழவில்லை. சமூக வாழ்வில் பெரிதும் ஈடுபட்டார். நண்பர்கள் தோழமையைப் பெரிதும் போற்றினார். விழாக்காலங்களைப் பாராட்டினார். இசையை விரும்பினார் *(32:5கொ)*. அரசியலிலும், பொறியியலிலும், மருத்துவத்திலும் அக்கறை காட்டியதாகத் தெரிகிறது. அழகியவை, நல்லவை யாவற்றிலும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் எதிலும் ஒரு மட்டுடையவர்; நடுநிலை கொண்டவர். இதைத் தமது போதகத்தில் முக்கிய கருத்தாகக் கொண்டவர். இவ்வுலக இன்பங்களை அனுபவித்தாலும், அவற்றில் மூழ்கித் தம்மையே இழக்கவில்லை. இதில் சட்டம் அவருக்கு வழிகாட்டியது. சட்டத்தின் தொடக்கம் இறையச்சமாகும். கிரேக்கப் பண்பாட்டின்பால் திறந்த மனதுடையவரானாலும் சட்டத்தைச் சிறிதும் கைவிடாதவர். அவர் சமயத்தால் ஒரு யூதர்; பண்பாட்டால் ஒரு கிரேக்கர் என்றாலும் மிகையாகாது.

சீராக்கு அளிக்கும் ஆலோசனைகள் மனிதச் செயல்களில் பலவற்றை உள்ளடக்குகின்றன. சமய, சமூகக் கடமைகளைப் பற்றிப் பேசுகிறார். இவற்றில் மேலானது ஞானத்தைத் தேடுவதாகும் *(14:20-15:8)*. இவற்றில் எல்லாம் ஒருவகை ஆதாயம் தேடும் போக்கைக் காட்டுகிறார் *(51:28.30)*.

சீராக்கு ஆசிரியர் இறுதித் தீர்ப்பு, சன்மானம், உடல் உயிர்ப்பு ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டதாகத் தெரியவில்லை. வழிபாட்டில் ஆர்வம் காட்டுகிறார். இவற்றில், அவர் பிற்காலச் சதுசேயர்களின் முன்னோடி எனலாம்.

முதிர்ந்த வயதில், ஆசிரியர், எருசலேமில் தங்கி ஒரு பள்ளியை நடத்தி, தமது நாட்டு இளைஞர்களுக்கு வேதாகமத்திலும் ஒழுக்கப் போதனையிலும் பயிற்சி அளித்து வந்

தார். அறிவு வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட யாவரும் இங்கு வரவேற்கப்பட்டனர். தமது வீட்டில் வந்து வாழ்க்கையை அனுபவிக்கு மாறு சீடர்களை அழைக்கிறார் (51:23). இவர்கள் ஞானமிக்கவர்களாகத் திகழ்ந்த தோடு, வாழ்வில் மேலான பதவிகளையும் வகித்தனர். இப்பள்ளியில் அறிவையும் ஞானத்தையும் தேடி மாணவர்கள் வந்து போகலாம். பணம் பெறாமலே அவர்களுக்கு அறிவு புகட்டினார் (51:33). ஆசிரியரே ஒரு பாடமாகத் திகழ்ந்தார். இளமை முதல் ஞானத்தைத் தேடிய ஆசிரியர், தாம் செய்தவற்றையே மாணவர்களும் செய்ய ஆலோசனை கூறுகிறார். ''ஞானிகள் யார் எனக் கண்டு அவர்களைப் பற்றிக் கொள். கடவுளைப்பற்றிய எல்லா உரைகளுக்கும் செவிசாய்ப்பதில் ஆர்வம் காட்டு; அறிவுக் கூர்மை கொண்ட பழமொழிகளைக் கேட்காமல் விட்டுவிடாதே. அறிவுக்கூர்மை படைத்தோரை நீ கண்டுவிட்டால் விரைவாக அவர்களிடம் செல்; உன் காலடிபட்டு அவர்களின் வீட்டு வாயிற்படிகள் தேயட்டும்'' (6:34-36). அவரது ஞானத்தின் முதன்மையான ஊற்று வேதாகமமாகும். ஆனால் அது மட்டும் போதாது. உலகம் பற்றிய அறிவாலும் இளைஞன் தனது மனதை விரிவுபடுத்த வேண்டும். இவ்வாறு, தமது சீடர்களுக்கு ஆசிரியர் தமது ஆழ்ந்த வேதாகம அறிவையும், அனுபவத்தால் கண்டுணர்ந்த செயல் முறை ஞானத்தையும் கற்றுக் கொடுத்தார் (முன்னுரை; 34:9-12; 38:24; 39:1-11; 51:23-25). நன்னெறியைத் தேடும் எல்லோருக்காகவும் உழைத்தார் (33:18; 50:29). அதன் விளைவாக, அறிந்து திட்டம் செய்யாமலே, இந்நூலைத் தொகுத்தார் (24:23-24). அப்போது அவர் நரை திரை மிகுந்த முதியவராய் இருந்திருக்க வேண்டும் (50:13).

ஆசிரியரது பேரனே இந்நூலைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்த்துள்ளார். ஆனால் அவர் பெயர் கொடுக்கப்படவில்லை. மொழி பெயர்ப்பாளர் அளிக்கும் முன்னுரை கத்தோலிக்கத் தமிழ் மொழி பெயர்ப்பில் காணப்படவில்லை. (இப்பகுதி திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாகக் கருதப்படுவதில்லை);

4. நூல் தோன்றிய காலம்:- பழைய ஏற்பாட்டு நூல்களிலேயே, துல்லியமாகக் காலம் குறிக்கக்கூடிய சில நூல்களில் இதுவும் ஒன்றாகும். இந்நூலைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்த ஆசிரியரது பேரன், தமது மொழிபெயர்ப்புக்கு அளிக்கும் முன்னுரையில் வரும் குறிப்புக்களைக் கொண்டு ஓரளவு துல்லியமாக இந்நூல் தோன்றிய காலத்தைக் கணிக்கலாம். இவர் எகிப்தை ''யூர்கெத்து' ஆண்ட (கி.மு. 170-116) காலத்தில் 38-ஆவது ஆண்டு அலக்சாந்திரியாவுக்குத் தாம் வந்ததாகக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து இவ்வரசன் ஏழாம் தாலமி ஃபிசிக்கோன் என்றும், மொழி பெயர்ப்பாளர் எகிப்துக்கு வந்தது கி.மு. 132-ஆம் ஆண்டு என்றும் கணிக்கப்படுகிறது. மொழி பெயர்ப்பாளர் எகிப்தில் இருந்த யூதர்களிடையே ஏற்கெனவே பல எபிரேய நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதைக் கண்டார். ஆகவே தமது தாத்தாவின் நூலையும், எபிரேய மொழி பேசாத யூதர்களின் நன்மைக்காகக் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்க முடிவு செய்து செயல்பட்டார். இவர் கி.மு. 132-க்குப் பின் தமது மொழி பெயர்ப்பு வேலையைத் தொடங்கியிருக்க வேண்டும். முன்னுரை கி.மு. 116-இலோ அதற்குப் பின்போ எழுதப்பட்டது என ஆய்வாளர்கள் சிலர் கருதுவர்.

50-ஆம் அதிகாரம் கி.மு. 220-195 க்கு இடைப்பட்ட காலத்தில் பெரிய குருவாக விளங்கிய இரண்டாம் சீமோனைப் பற்றிப் பேசுகிறது. இவர் அண்மையில்தான் இறந்திருக்க வேண்டும் என்ற உணர்வை நூல் உண்டாக்குகிறது. மேலும் யூத வரலாற்றில் போராட்ட மேகங்கள் தோன்றியிருந்தாலும் நான்காம் அந்தியோக்கு எப்பிபானின் கொடுமைகளும் (கி.மு. 168) மக்கபேயர்களின் புரட்சியும் ஏற்கனவே தொடங்கிவிட்டன என்பதற்கு இந்நூலில் எந்த அறிகுறியுமில்லை. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, கி.மு. 132 இலிருந்து இரண்டு தலைமுறை பின் சென்றால் அதாவது 50 அல்லது 60 ஆண்டுகள் பின் சென்றால், இந்நூல் தோன்றிய காலத்தை அடையலாம்.

இவ்வாறு, இந்நூல் கி.மு. 190 - 180க்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். காலப்போக்கில் சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இதுபற்றிப் பின்பு பார்ப்போம்.

5. வாசக வரலாறு:- இது சிக்கல் மிக்கதாகும். இந்நூல் எபிரேய மொழியில் எழுதப்பட்டது என்பது உறுதி. இந்த எபிரேய வாசகத்தைப் புனித எரோனிமு அறிந்திருக்கிறார். ஆனால் கி.பி. முதல் நூற்றாண்டு முடிவில் யூதர்களின் திருமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாததால், காலப்போக்கில் மறைந்து போயிற்று. ஆனால் சில இராபிகளின் நூல்களில், இந்நூலிலிருந்து பக்தியோடு எடுத்துக்காட்டுகள் தரப்படுகின்றன. திருச்சபையில் கிரேக்க மொழி வாசகம் பாரம்பரியமாயிற்று. இதிலிருந்து பழைய இலத்தீன் மொழி வாசகம் செய்யப்பட்டது. இந்நூலின் புனிதத் தன்மையை ஐயுற்றதால், எரோனிமு இந்நூலைப் புதிதாக மொழி பெயர்க்கவில்லை. ஆகவே பழைய இலத்தின் மொழி வாசகமே ''வுல்காத்தா'' வாசகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தக் கிரேக்க மொழி வழி இலத்தீன் மொழி பெயர்ப்பே சென்ற நூற்றாண்டு முடிவுவரையில் திருச்சபையின் வழக்கில் இருந்தது.

ஆனால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முடிவில் இந்நூலின் எபிரேய வாசகம் புத்துயிர் பெற்றது. கி.பி. 1896 - 1900-க்கு இடைப்பட்ட காலத்தில் கெய்ரோவிலுள்ள பழைய யூத செபக்கூடத்தை ஒட்டிய ''கெனிசியா'' வில் கண்டெடுக்கப்பட்ட ஏடுகளில், இந்நூலின் நான்கு பகுதிகள் அடங்கியிருந்தன. (''கெனிசிய'' என்பது பழைய, பழுதுபட்ட, பயன்படாத புனித ஏடுகளைச் சேர்த்து வைக்கும் இடமாகும்). இவை A, B, C, D என்று குறிக்கப்பட்டன. இவை எபிரேய வாசகத்தின் மூன்றில் இரண்டு பாகமாகும் என்று பிற்காலத்தில் கணிக்கப்பட்டன. இந்த ஏடுகள் கி.பி. 10 - 12-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததாகும் என்று கருதப்படுகின்றன. 1936-இல் இன்னும் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டது. 1956 - 60க்கிடையில் இன்னும் சில பகுதிகள் கிடைத்தன. 1963-இல் கும்ரான் குகைகளிலிருந்து இன்னும் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டது. இது கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இத்துடன் இந்நூலின் எபிரேய வாசக வரலாறு முடிகிறது எனலாம். இந்த ஏடுகள் நன்கு பாதுகாக்கப்படவில்லை.

இந்நூல் கிரேக்கம், சீரியாக்கு இலத்தீன் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவை ஒன்றையொன்று பாதித்துள்ளதாகத் தெரிகிறது. கிரேக்க மொழி பெயர்ப்பில் இரு வடிவங்கள் இருப்பது தெரியவருகிறது. ஒன்று மற்றதைவிட நீண்டது. குறுகிய வாசகத்தை முதல் வாசகம் என்றும், நீண்ட வாசகத்தை இரண்டாம் படி வாசகம் என்றும் அழைப்பது ஆய்வாளர்களிடையே மரபு. பின்னது முன்னதைவிட ஏறக்குறைய 150 வாக்குகளை அதிகமாகக் கொண்டுள்ளது. இந்தக் கூடுதலான பகுதிகள் சீராக்கு ஆசிரியருடையனவா என்பது பற்றி ஐயம் எழுந்துள்ளது. இவை பிற்காலத்தைச் சேர்ந்தவை என்று பலர் கருதுவர். இவை இறை ஏவுதல் பெற்றவை என்று கத்தோலிக்க அறிஞர் சிலர் ஏற்றுக்கொள்வதில்லை. இவை குறுகிய வாசகத்தில் காணப்படும் முடிவு காலம் பற்றிய வளர்ச்சியடையாத கருத்துக்களை நிறைவு செய்வனவாக அமைந்துள்ளன என்பர். இக்கருத்துக்கள் இறப்பின் போது வரும் தீர்ப்பு, வரும் உலக வாழ்வு, மனித ஆன்மாவின் அழியாமை, இறப்புக்குப் பின்வரும் இறுதித்தண்டனை, சன்மானம் போன்ற கருத்துக்களாகும் (6:23; 15:18; 16:22; 17:25; 18:22; 20:4; 24:26). 51-ஆம் அதிகாரமும் ஐயத்திற்குள்ளாகியுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட எபிரேயப் பகுதிகள், கிரேக்க வாசகத்திலிருந்து வேறுபடுகின்றன. இவற்றிலிருந்து நூலின் மூல எபிரேய வாசகத்தை மீண்டும் அமைக்கப் பல முயற்சிகள் நடந்துள்ளன. வெற்றிகிட்டியதாகத் தெரியவில்லை. கத்தோலிக்கத் தமிழ் வாசகம் நீண்ட கிரேக்க வாசகத்தைப் பின்பற்றுகிறது.

6. திருமுறைப்பட்டியலில் சீராக்கு நூல்:- இந்நூல் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. பாலஸ்தீனத்தில் தோன்றியது. பழைய யூத செபக் கூடங்களில் பக்தியோடு பயன்படுத்தப்பட்டது. பிற்கால யூத இலக்கியங்களில் எடுத்துக்காட்டாகப் பயன்பட்டுள்ளது. இவையெல்லாம் இந்நூல் மக்களால் பொதுவில் நல்ல முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதைச் சுட்டுகின்றன. ஆசிரியரே, தமது நூல் இறை ஏவுதல் பெற்றது என்று ஒரு வகையில் உரிமை கொண்டாடுகிறார் *(24:30-34; 39:6-11)*. ஆசிரியரது பேரனான கிரேக்க மொழி பெயர்ப்பாளரும் இதே உரிமை கோருகிறார். இந்நூலின் எபிரேய வாசகம் வழக்கிலிருந்து மறையும்வரை, அதைப் பிரதி எடுக்கும் முறை யூதர்களிடையே புனித நூல்களுக்குரியதாகும். இதைக் கும்ரான் குகைளில் கண்டெடுக்கப்பட்ட இந்நூலின் பகுதியில் பார்க்கிறோம். ஏடுகளில் காணப்படும் முறையும் சாதாரணமாய்த் திருமுறைப்பட்டியல் நூல்களுக்குரியதாகும். இவற்றிலிருந்து, யூதர்களில் சிலராவது இந்நூலை நெடுங்காலத்திற்குப் புனிதமானதாகக் கருதினர் என்று தெரிகிறது.

ஆயினும் கி.பி 90-ஐ ஒட்டி, யாம்னியாவில் நடந்த யூதப் பொதுக்கூட்டம் சீராக்கு நூலைத் தனது திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு இந்நூல் சமீபத்தில் தோன்றியது ஒரு காரணமாக இருக்கலாம். அதைவிட அக்கூட்டத்தில் பரிசேயர்கள் காட்டிய பிரிவினைப் போக்கே முக்கிய காரணமாகும். அக்காலத்தில் பரிசேயரது ஆதிக்கமே யூதர்களிடையே மேலோங்கி இருந்தது. இவர்களே யூதத்திருமுறைப்பட்டியலுக்குப் பொறுப்பானவர்கள். இவர்கள் சீராக்கு நூலில் சதுசேயர் கருத்துக்களையும் போக்கையும் கண்டனர். இந்நூல் பரிசேயருடைய இறையியலோடு ஒத்துப் போகவில்லை என்று கருதினர். சீராக்கு ஆசிரியர் சதுசேயர் அல்லர். அவரது காலத்தில் இப்படிப்பட்ட பிரிவினர் இருக்கவும் இல்லை. வழிபாட்டுச் சடங்கில் ஆர்வம், இறப்புக்குப் பின் வரும் வாழ்வுபற்றி அக்கறையின்மை, மெசியாக் கோட்பாட்டில் ஆர்வமின்மை போன்றவை பிற்காலத்தில் தோன்றிய சதுசேயருடைய கோட்பாடுகளாகும். இத்தகைய கருத்துக்கள் இந்நூலில் காணப்படுகின்றதாகத் தோன்றுகிறது. ஆகவே பரிசேயர்கள் தாங்கள் தொகுத்த திருமுறைப்பட்டியலிலிருந்து சீராக்கு நூலை நீக்கினர். இதற்குப் பின்வரும் யூத இராபிகளிடம் இந்நூலைப் பொறுத்த மட்டும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. சிலர் இந்நூல் புனிதமற்றது என்று ஒதுக்குவர். வேறுசிலர், இந்நூல் புனிதமானது என்று கருதி, இதிலிருந்து எடுத்துக்காட்டுக் கூறுவர்.

யூதப் பாரம்பரியத்தைப் பின்பற்றி கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலும் அதற்குப்பின்னும் தோன்றிய பிரிவினைக் கிறிஸ்துவச் சபைகள் இந்நூலைத் தங்கள் திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்வதில்லை.

இந்நூல் இறைஏவுதல் பெற்றது அன்று எனச் சில திருச்சபைத் தந்தையர் கருதியதாகத் தெரிகிறது. இருப்பினும், கிரேக்க மொழி விவிலியத்தைச் சேர்ந்தது என்ற அளவில் திருச்சபை . தொடக்கத்திலிருந்து இந்நூலைத் தனதாக ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம், இந்நூல் புதிய ஏற்பாட்டு நூல்களில் கொண்டிருக்கும் ஆதிக்கம் மட்டுமன்று, திருச்சபைத் தந்தையர் பலரும் இந்நூலிலிருந்து அடிக்கடி சான்று காட்டுவதும் ஆகும். இந்நூல் திருச்சபையில் வாசிக்கப்பட்டதாகக் கருதப்பட்டது என்பதற்கு அதன் ''எக்லேசியாஸ்டிக்கஸ்'' என்ற பெயர் சான்று கூறுகிறது. திருமுழுக்குப் பெறத் தங்களைத் தயாரிப்பவர்களுக்குப் போதனை அளிக்க இந்நூல் ஒரு கையேடாகப் பயன்பட்டது. பிரிவினைச் சகோதரர்களின் போக்கிற்கு எதிராகத் திரிதெந்தீன் பொதுச் சங்கம், இந்நூலைத் திருச்சபையின் திருமுறைப் பட்டியலில் ஏற்றுக்கொண்டு, இந்நூல் பற்றிய பிரச்சனையை முடிவு செய்தது.

7. வரலாற்றுப்பின்னிலையும் ஆசிரியரது நோக்கமும்:- கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், மேற்காசிய நாடுகளான பாலஸ்தீனம், சிரியா, பாபிலோன், பாரசீகம் முதலிய நாடு

களும் எகிப்தும்கூட கிரேக்கப்பண்பாட்டு மோகத்தால்பெரிதும் பாதிக்கப்பட்டன. மாமன்னன் அலக்சாந்தரது வெற்றிக்குப் பின், இப்பண்பாடு நகரங்களை மட்டுமன்று, நாட்டுப்புறங்களையும் பாதித்தது. இப்பண்பாடு தத்துவம், இலக்கியம், உடற் பயிற்சி விளையாட்டுக்கள் போன்றவற்றை மட்டுமன்று, பல தேவர்களைக் கொண்ட சமயத்தை உள்ளடக்கியது. இது யூதேயாவில் ஒரு பெரும்போராட்டத்தைத் தொடங்கியது. எபிரேய இறையொருமைக் கோட்பாட்டின் போதனையில் நிலைத்திருந்து மோசே சட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கும், அதே சமயம் கிரேக்கப் பண்பாட்டில் மோகம் கொண்டு புதிய பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதற்கும் இடையே ஒரு இடுக்கண் நிலை ஏற்பட்டது. அலக்சாந்திரியாவிலிருந்து ஆட்சி செய்த எகிப்தியத் தோலமிய அரசர்களின் கீழ் பாலஸ்தீனம் இருந்த மட்டும், இப்பிரச்சனை அவ்வளவு கடினமாய் இருக்கவில்லை. அது உச்சநிலை அடையவில்லை. எருசலேமைச் சுற்றிய பகுதிகள் வரிகட்டினால் போதும். ஆனால், அந்தியோக்கியாவிலிருந்து ஆட்சிசெய்த சீரிய செலூக்கிய அரசர்களின் பொறுப்பிற்குப் பாலஸ்தீனம் மாறியபோது, கிரேக்கப் பண்பாட்டில் மயங்கியவர்களுக்கும் பாரம்பரிய யூத அபிமானிகளுக்குமிடையே போராட்டம் படிப்படியாக - ஆனால் - உறுதியாக வளர்ந்து, உச்சநிலை அடைந்து கி.மு. 166-இல் மக்கபேயரின் எழுச்சியில் வெடித்தது. அது, யூதத்துவத்தின் அகப் புறச் சக்திகளுக்கு இடையே நடந்தபோராட்டம் மட்டுமன்று, யூதர்களிடையேயும் செல்வாக்குடையவர்கள் கிரேக்கச் சிலை வழிபாட்டுக்கு மனம் மாறினர். இது யூதர்களுக்கிடையே ஓர் உட்போராட்டத்தை உண்டாக்கியது. சீராக்குநூல் இப்போராட்டத்தின் தொடக்க காலத்தைப் பிரதிபலிக்கிறது. ஆசிரியர் யூத சமயக் கோட்பாடுகளைக் கைவிட்டவர்களைக் கண்டனம் செய்வதோடு (2:12-15), தம்மைப் போலவே வாசகர்களையும் தங்கள் மூதாதையரின் பாரம்பரியங்களுக்குப் பிரமாணிக்கமுள்ளவர்களாகக் கருதித் தம் நூலை எழுதுகிறார்.

கிரேக்கப் பண்பாட்டால் யூதர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், ஆண்டவருடைய வார்த்தைக்கு நிலையான முறையில் பணியும்படி ஆசிரியர் விடுக்கும் அழைப்பைப் புரிந்துகொள்ள வேண்டும் (2:15-18). பாவிகள்தான் ஒரே வேளையில் இரு சமயங்களைப் பின்பற்ற முயலுவர். இவர்களை ஆசிரியர் கண்டனம் செய்கிறார் (2:12). தவறான வழியில் செல்பவர்கள்தான், மனிதன் மிகச் சிறியவன், ஆகவே அவன் இறைவனது அக்கறைக்குரியவனாக இருக்க முடியாது என்று (16:17), தங்களை ஏமாற்றிக் கொள்வர். சூரியனைவிடப் பல்லாயிரம் தடவை பிரகாசமுடைய இறைவனின் கண்கள் எல்லாவற்றையும் கவனிக்கின்றன. பொறுமை இழக்கக்கூடாது (2:16). ''உன்னத ஆண்டவருடைய கட்டளையைக் கைவிடுபவர்களுக்கும்'' (41:11), தங்கள் தெய்வீக உரிமைச் சொத்தான உடன்படிக்கையைக் கண்டு வெட்கப்படுபவர்களுக்கும் (42:2) ஐயோ, கேடாம்! இறைவனுக்கு அஞ்சுபவன், எவ்வளவு தாழ்ந்தநிலையில் இருந்தாலும், உயர்குடியோரையும் செல்வந்தர்களையும், அரசர்களையும் விட மேலானவன் (10:23-27). ஆனால் சீராக்கு ஆசிரியர் கிரேக்கப் பண்பாடு பற்றி எத்தகைய திறனாய்வும் செய்யவில்லை. இறைஞானம் வேதாகமத்தில் தனிச் சிறப்பான முறையில் குடி கொண்டிருக்கிறது என்று ஏற்றுக்கொண்டனர். இந்த அடிப்படையில் எல்லாவற்றையும் மதிப்பீடு செய்கிறார்.

இந்த அடிப்படையில் கிரேக்கப் பண்பாட்டின் படையெடுப்பை ஆசிரியர் எதிர்த்தார். இப்படையெடுப்பால் ஏற்பட்ட சவாலுக்கு மறுப்பாக இந்நூலை யூதசமயத்துக்கு ஒரு காப்புரையாக எழுதினார். பாலஸ்தீனத்திலும், அயல்நாடுகளிலும் வாழ்ந்த யூதர்களுக்கும் நல்ல மனதுடைய புறவினத்தாருக்கும், உண்மையான ஞானம் இஸ்ராயேலில் உறைவிடம் கொண்டுள்ளது என்று காட்ட விழைகிறார். பாரம்பரிய எபிரேய ஞானத்தின் கருவூலத்தை வாசகர்களுக்கு எடுத்துக்காட்டவும், கிரேக்க அறிவியலில் புதினங்களைத் தேடாமல் தங்கள் பாரம்பரிய ஞானத்தி

லேயே நிறைவு கொள்ளலாம் என்று காட்ட வும், யூத சமயத்தையும் செயல்முறை ஞானத்தையும் ஒருங்கிணைத்து இந்நூலை ஒரு காப்புரையாக அமைக்கிறார்: இந்நூல், கிரேக்க மயமாக்கும் இயக்கத்தை எதிர்க்க - யூதர்களைப் பயிற்றுவிக்க - உதவியிருந் திருக்க வேண்டும், மக்கபேயர்களுக்கு முந்திய காலத்து யூதக்கோட்பாடுகளுக்கும் ஒழுக்க அமைப்புக்கும் ஒரு முக்கிய சாட்சியாகத் திகழ்கிறது.

8. இலக்கியப் பண்புகள்:- சீராக்கு ஆசிரி யர் காலத்தில் அரமேயிக் மொழி எபிரேய மொழியைப் பாதித்தது. ஆகையால் அரமே யிக்கின் பண்புகள் காணப்படுவதில் வியப் பில்லை. அவரது நடை, ஓரளவுக்குப் பிற ரைப் பின்பற்றுவதாகவும் மீண்டும் மீண்டும் கூறுவதாகவும் அமைந்துள்ளது. ஆனால் மொழிநடையின் தரம் சிறிதும் குறைந்து விடவில்லை. இந்நூல், தானியேல், எஸ்தர் போன்ற நூல்களின் மொழிநடையில் எழுதப் பட்டுள்ளது என்று மொழி ஆய்வு காட்டு கிறது. ஆசிரியர் தமது காலத்து எபிரேய மொழியில் எழுதினாலும், பிற்காலச் சங்கீதங் களுக்கும், பழமொழிநூலின் பிற்காலச் சேர்க் கைகளுக்கும் ஒத்தநடையில் எழுத வல்ல வர். அவர் யோபு நூலின் உன்னதக் கலைப் பண்பை அடையாவிட்டாலும், போத கத்தை உள்ளக்கிளர்ச்சிப் பாடல்களோடு இணைத்து, ஒழுக்கஇயல் கருத்துக்களை எடுத்துக் கூறுவதில் வரக்கூடிய அயர்ச்சி யைக் குறைக்கக் கூடியவர். அவருடைய முதுமொழிகள், பழமொழிநூலின் சிறந்த வாக்குகளோடு ஒப்பிடத்தக்கவை. இயற்கை யில் இறைவனது செயல்களைப் போற்றும் நேர்த்தியான பாடலை *(42:15-43:33)*, சங் 147-ஒடும் யோபு நூலில் வரும் பகுதிகளோ டும் ஒப்பிடலாம். பொதுவாகச் சங்கீதங்கள், பழமொழிநூல் ஆகிய நூல்களிலிருந்து ஆசிரி யர் தமது உந்துதலைப் பெறுவதாகத் தெரி கிறது. அதன் விளைவாக இந்நூலில் போதகப் பாடல், பக்திப்பாடல் ஆகிய வரிவடிவங் களைக் காணலாம்.

8.அ) போதகப்பாடல்கள்:- பழமொழி நூலில் முதுமொழிகள் தனித்தனியாக ஒன் றோடொன்று தொடர்பில்லாமல் அமைந் துள்ளன (பழ 10:1-22:16). இத்தகைய தனிக் கூற்றுகளை இந்நூலில் அரிதாகத்தான் காண முடியும். ஆசிரியர் தொடர்ச்சியான பாடல் வடிவைப் பயன்படுத்துகிறார். வழக்கமாகத் தமது கூற்றுக்களைத் தனித்தனியாகக் கூறாது, ஒரு முக்கிய கருத்தைச் சுற்றி ஒன் றோடொன்று இணைக்கிறார்; ஒரு கட்டுரை யைப்போல் அமைக்கிறார். பழமொழி நூலில் காணப்படும் யாப்பு அமைப்புச் களையே பயன்படுத்துகிறார். ஞாவத்தை மோசே சட்டத்தோடு ஒன்றாக்கினாலும் சட்ட ஒழுங்குகளைச் சட்ட நடையில் ஒரு போதும் எடுத்துக் கூறுவதில்லை.

8.ஆ) பக்திப்பாடல்கள்:- பழமொழி நூலில் காணப்படுவதுபோல், ஆட்தன்மை ஆக்கப் பெற்ற ஞானத்தின் மகிமை சங்கீத வடிவில் விவரிக்கப்படுகிறது *(1:1-21; 24:1-22;* மேலும் பழ. *8:1-3;* யோபு *28:12-28*-ஒடு ஒப்பிடுக). இது நாம் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கக்கூடியதே. எடுத்துக்காட்டான அறிவர் என்ற அளவில், ஆசிரியர், இறைவ னால் உந்தப்பட்டு, ஞானமிக்க ஒழுக்க போதனை அளிப்பதோடு, இறைவனுக்கு செபவடிவில் நன்றியும் கூறுகிறார் *(39:6-7)*. அவ்வப்போது, தங்களுக்கு நல்லவற்றை அளிக்கும் இறைவனுக்குப் போற்றுதல் அளிக் கும்படி வாசகர்களைத் தூண்டுகிறார். *51:1-12*-இல் தமது சொந்த நன்றியுரைப் பாடலைத் தருகிறார். இதைச் சங்கீதம் *18*-ஒடு ஒப்பிடலாம்.

ஆசிரியர், பாடகரும் மக்களும் மாறிமா றிப் பாடும் பாடல்களோடு கூடிய ஆலய வழிபாட்டைப் பெரிதும் போற்றுகிறார் *(50:18-21)*. பாடகர் குழுவை அமைத்தும், வாசகங்கள் இயற்றியும் இறைவழிபாட்டை அழகு செய்ததற்காகத் தாவீது மன்னனைப் புகழ்கிறார் *(47:11-12)*. கடந்த கால மூதாதை யர்க்கு அளிக்கும் புகழஞ்சலி *(44-49)* சங் 105-ஐப் பிரதிபலிக்கிறது. இதில் இறைவன் தாம் தேர்ந்து கொண்ட மக்களுக்காகப் பழங் காலத்தில் வியத்தகு செயல்களைப் புரிந்ததற் காக அவரைப் போற்றுகிறார். பெரியகுரு சீமோனைப் பற்றிய போற்றுரை *(50:1-26)* சங்கீதம் போன்ற மன்றாட்டோடு முடிகிறது

(50:24-26). போதகப் பாடல்களிலும் உள்ளக் கிளர்ச்சித் தொனி திடீரென்று வெளிப்படுகிறது *(சான்று: 23:19-20)*. சிலவற்றில் வருத்தம் தெரிவிக்கும் புலம்பல் தொனி மன்றாட்டாக வருகிறது *(14:18-21; 17:21-25; 18:7-8; 22:33)*. பக்திப் பாடல் எழுதுவதில் ஆசிரியருக்குள்ள ஆற்றலுக்கு மிகச் சிறந்த சான்றுகள், அவர் இறைவனது மகிமையைப் பாடும் போது காணப்படுகின்றன *(39:16-41; 42:15-43:37)*.

ஆசிரியர் தமது நோக்கத்தையும், அதை எடுத்துக் கூறும் முறையையும் பற்றி *24:30-34; 33:16-18; 39:12-16. 32-35; 50:27-29*-இல் சுட்டிக் காட்டுகிறார். சட்டம், மற்ற வேதாகம நூல்களைப் படித்தல், சொந்த அனுபவம், வாழ்க்கை பற்றிய ஆழ்ந்த சிந்தனை ஆகியவை வழியாக ஆண்டவரால் நிறை ஞானம் அளிக்கப்பட்ட ஆசிரியர், ''திராட்சைப்பழம் பறிப்போர் விட்டுப் போனதைப் பொறுக்கியவனைப்போல்'' *(33:16)* தமக்கு முந்திய அறிவர்களைப் பின்பற்றி, தாம் பெற்ற ஞானத்துக்கு நூல் வடிவம் கொடுக்க விழைகிறார். சிந்தனை ஆற்றல் பெற்றயாவரையும், தமது போதகத்தைச் சிந்தித்துக் கடைப்பிடிக்க அழைக்கிறார். கிரேக்கத்தில் மொழிபெயர்த்த அவரது பேரனும் நூலின் செயல்முறைப் போக்கையும், சட்டம் மனித வாழ்வுக்கு இறைவழி காட்டியாகும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

9. நூலின் திட்ட அமைப்பு:- இந்நூல் ஞானத்தைப் போற்றும் பாடல்களையும் ஒழுக்க இயல் பற்றிய ஒரு வகைக் கையேட்டையும் கொண்ட தொகுப்பாகும். இது கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பக்தியுள்ள ஒரு யூதன் விசுவாசித்தவற்றையும், செயல்பட்ட முறையையும் எடுத்துக் கூறுகிறது. ஆனால் நூலில் அறிவு சார்ந்த முறையில் எந்தக் குறிப்பிட்ட திட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. தலைப்புகள், எத்தகைய ஒழுங்கும் இல்லாமல் ஒன்றன் பின் ஒன்றாக வருகின்றன. சில தலைப்பு எத்தகைய வளர்ச்சியுமில்லாமல் இரண்டு அல்லது மூன்று தடவை விவரிக்கப்படுகின்றன. ஆகவே, இந்நூலை ஆசிரியர் ஒரே தடவையில் இயற்றியிருப்பாரா என்பது ஐயத்திற்குரியதாகும். சீராக்கு ஆசிரியர் ஒரு செமித்தியர், போதகர் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஆசிரியர் தம் போதகத் தொழிலைச் செய்து கொண்டே, இந்நூலைச் சிறிது சிறிதாக இயற்றியிருக்க வேண்டும். இறுதியில் எல்லாவற்றையும் சேர்த்துப் பதிப்பித்திருக்க வேண்டும். இந்நிலையில், சிலவற்றை மீண்டும் மீண்டும் கூறுதலையும், கூறவந்ததிலிருந்து விலகிப் பிறிதொன்றைக் கூறுதலையும் கண்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை.

இந்நூலுக்குத் தெளிவானதிட்டம் அளிக்கும் முயற்சிகள் வெற்றி அடையவில்லை என்று கூறலாம். நூலில் திட்டம் இல்லை என்று கூறவில்லை. ஆனால் அது ஆய்வாளர்களின் முயற்சிகளிலிருந்து நழுவிக் கொண்டே போகிறது. தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு நூலைத் திட்டம் செய்ய சிலர் முயன்றுள்ளனர். வேறு சிலர், பழமொழித் தொகுப்புகள் *(2:1-42:14)* இறைவனையும் மூதாதையர்களையும் போற்றுதல் *(42:15-50;29)* என இருபாகமாகப் பிரிப்பர். ஸ்பிக் என்பவர் இந்நூல் மோசேயின் ஐந்து சட்டநூலைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறார். இந்த அடிப்படையில் நூலை ஐந்து பாகமாகப் பிரிக்கலாம். ஒவ்வொருபாகமும் ஒத்த அமைப்பைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாகத்திலும் ஒரு முன்னுரை அல்லது அறிமுகம் உள்ளது *(1:3-30; 16:24-18:14; 24:1-34; 32:14-33:19; 42:15-43:33)*. இவை ஞானத்தையோ, படைப்பின் இறைவனையோ போற்றுகின்றன. முன்னுரையை அடுத்துச் செயல்முறைப் போதகத்தை எடுத்துக்கூறும் பழமொழித் தொகுப்புகள் அமைந்துள்ளன. இவற்றில் எத்தகைய திட்ட அமைப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. ஐந்து முன்னுரைகளையும் ஒப்பிடும்போது, அவற்றில் ஓர் இணையமைப்புத் தெரிகிறது. இவை ஞானத்தைப் பற்றியோ இறைவனைப் பற்றியோ தொடங்கி மனிதனுக்கு

அளிக்கப்பட்ட ஞானத்தை விவரிக்கின்றன. பின் ஆசிரியர் செயல்முறை ஆலோசனை களை எடுத்துக் கூறுகிறார். இவை ஆசிரியர் தமக்கே கூறிக்கொள்ளும் அறிவுரையா கவோ, பிரமாணிக்கத்திற்கோ நன்றியறித லுக்கோ விடும் அழைப்பாகவோ அமைகின் றன. மேலும் முன்னுரைகள் குறிப்பிடத்தக்க கருத்து இயக்கத்தைக் காட்டுகின்றன. ஆதி யாகம நூலைப்போல் சீராக்கு நூல் யாவை யும் அடக்கும் பண்பிலிருந்து, இஸ்ராயேல் தேர்ந்தெடுக்கப்படுதலாகிய தனிப்பண்புக் குப் போகிறது. முதல் முன்னுரையில் ஞானம் பரந்த அளவில் எல்லா உயிரினங் களுக்கும் (1:10.24), குறிப்பாக மக்கள் அனை வருக்கும் உரியதாகக் காட்டப்படுகிறது. இரண்டாவது முன்னுரை படைப்பவராகிய இறைவனைப் பற்றிய கொள்கையைத் திரட் டித் தருகிறது (16:24-18:14). மூன்றாவது முன்னுரையில் ஞானம் இஸ்ராயேலுக்கு, குறிப்பாகச் சீயோனுக்கு அளிக்கப்படுகிறது (அதி 24). நான்காவது முன்னுரை மோசே யின் சட்டத்தையும் வழிபாட்டையும் வலி யுறுத்துகிறது (38:18தொ). ஐந்தாவது முன் னுரை இறைவனது ஞானத்தையும் ஆற்ற லையும் எடுத்துக் கூறுகிறது (42:15தொ). இஸ்ராயேலின் தலைவர்களுக்குப் புகழஞ்சலி யைத் தொடங்கிவைக்கிறது. அதாவது நூலின் தொடக்கத்தில் யாவற்றையும் உள் ளடக்கும் நோக்குக் காணப்படுகிறது. போகப் போகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்மேல் கவனம் ஒருங்கு குவிக்கப்படுகிறது. இந்த மக்கள் இறை ஞானத்தின் உறைவிடமாகக் காட்டப் பெறுகின்றனர். இந்த அமைப்பு ஐந்நூல்கள் பற்றிய ஆசிரியரின் ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்துகின்றது. இந்தக் கருத்து வளர்ச்சி ஆதியாகமத்திற்கு ஒத்ததாக உள்ளது. ஆதியாகமம் உலகப் படைப் போடு தொடங்கி, படிப்படியாக மற்ற இனங்களை ஒதுக்கிவிட்டு யூதர்களின் பன் னிரண்டு குலத்தலைவர்களோடு, இவ்வாறு பன்னிரண்டு இனத்தவரோடு முடிகிறது (ஆதி 49:28). சீராக்கு நூல் முழுவதும் இந்தக் கருத்து வளர்ச்சியை ஒரே சீராக எடுத்துக் காட்டவில்லையென்றாலும் பற்பல காலங் களில் எழுதியவற்றை ஒன்று சேர்த்துப் பதிப் பித்தபோது, ஆசிரியர் முன்னுரைப் பகுதி களை எழுதி, சிதறிக் கிடந்த தமது போதகங் களுக்கு ஒருவகை ஒழுங்கு செய்திருக்கலாம். இந்த அடிப்படையில் இந்நூலை ஐந்து பாக மாகப் பிரித்துத் திட்டம் செய்யலாம். ஆனால் இதுதான் ஆசிரியரது கருத்தை உறுதியாகப் பிரதிபலிக்கிறது என்று நாம் கூறவில்லை

10. பொருளடக்கம்:

1. கிரேக்க மொழி பெயர்ப்பாளரது முன் னுரை.

2. முதல் பகுதி: ஞானத்தின் தன்மையும் செயலும் (1:1-16:23).

(அ) ஞானத்தைப் புகழ்தல் (1:1-4:10).
(ஆ) ஞானத்தின் சன்மானமும் ஒழுக்க முறையும் (4:1-6:17).
(இ) ஞானத்தின் பயிற்சி (6:18-14:19).
(ஈ) ஞானத்தைத் தேடுதல் (14:20).

3. இரண்டாம் பகுதி: இறைவனும் படைப்பும் மனிதனும் அவனது ஒழுக்கச் செயலும் (16:24-23:27).

(அ) படைப்பும் இறைவனும் (16:24-18:14).
(ஆ) பற்பல ஆலோசனைகள் (18:15-23:27).

4. மூன்றாம் பகுதி: குடும்ப, சமூக வாழ் வில் ஞானத்தின் செயல்கள் (24:1-32:13).

(அ) ஞானத்தைப் போற்றுதல் (24:1-34).
(ஆ) அறவுரைகள் (25:1-32:13).

5. நான்காம் பகுதி: ஒருவனுடைய வாழ் வின் சரியான நடத்தை (32:14-42:14).

(அ) மோயீசன் சட்டம் (32:14-33:19).
(ஆ) பல அறவுரைகள் (33:20-39:11).
(இ) உலகை இறைவன் ஆட்சி செய்தல் (39:12-42:14).

6. ஐந்தாம் பகுதி: இயற்கையிலும் இஸ்ரா யேல் வரலாற்றிலும் ஞானம் வெளிப்படுதல் (42:15-50:21).

(அ) படைப்பவராகிய இறைவனைப் போற்றுதல் (42:15-43:33).

(ஆ) மூதாதையரைப் போற்றுதல் (44:1-50:21).

7. முடிவுரை (50:22-29).

8. பிற்சேர்க்கை (51:1-30).

11. நூலின் போதகம்: இந்நூலில் ஆதிக்கம் செலுத்தும் ஒரே கருத்து இறை ஞானம் பற்றியதாகும். பழமொழி, யோபு, திருவுரையாளர் போன்ற நூல்களைப் போல் இந்நூலும் ஞானத்தைப் போற்றும் பல பாடல்களைக் கொண்டுள்ளது: 1:1-20; 4:11-19; 14:29-15:10; 51:13-29. இறைஞானம் பற்றிய விரிவான போதகத்தைத் தருகிறது. இறை ஞானம் என்னும் இறையுண்மையின் உள்ளார்ந்த தன்மை, அதன் புறத்தோற்றம், அது இயற்கையிலும் மனுக்குலத்திலும், இஸ்ராயேலின் வரலாற்றிலும், அதன் சமய, சமூக வாழ்விலும் பல்வேறு விதமாகச் செயல்படும் விதம் ஆகியவை இந்நூலுக்கு அடிப்படையாகின்றன. ''முன்னோர் எல்லாருடைய ஞானத்தைப்பற்றி''ப் (39:1) போதிக்கவும், அதை உய்த்துணரக் கற்றுக் கொடுக்கவும் அதன் அறிவை அளிக்கவும், எல்லாவற்றிற்கும் மேலாக அதைத் தெரியப்படுத்தவும், ஆசிரியர் தமது நூலை எழுதுகிறார் (காண்க 24:43-47; 33:16-18; 39:1-11; 50:29-31). ஆகவே இத்தலைப்பின் கீழ் ஆசிரியரது போதகத்தைச் சுருக்கமாக இங்குத் தருகிறோம்.

11.அ) இறைவனும் ஞானமும்: இறைவன் ஒருவரே - தன்மையாலே ஞானமுடையவர் (1:8). அவரோடு ஞானம் இருக்கிறது. அவரிடமிருந்து வேறுபடுத்தப்படும் போது ''எல்லா ஞானமும் ஆண்டவராகிய கடவுளிடமிருந்து உண்டாகி, அவருடன் என்றைக்கும் நித்தியமாக இருக்கிறது (1:1). இங்கே குறிக்கப்படும் நித்தியம் என்பதைத் தழுவிய பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது, மற்றப் படைக்கப்பட்டவற்றோடு ஒப்பிடும்போது, அவற்றிற்கெல்லாம் முந்தியே இருப்பது. ஏனெனில் உண்மையில் ஞானம் படைக்கப்பட்டதாகும் (1:4-9; 24:12). ஒரு தடவை படைக்கப்பட்டபின், அது என்றைக்கும் நிலைத்திருக்கிறது. ''தொடக்கத்திலும் உலகத்திற்கு முன்னும் நான் படைக்கப்பட்டேன்; எக்காலமும் இருப்பேன்'' (25:14). இறைவனிடமிருந்து வேறுபட்ட ஒன்றாக ஞானம் படைக்கப்படுதல், அவருடைய வார்த்தையால் நிகழ்கிறது. எல்லாவற்றையும் படைப்பிக்கும் வார்த்தை ''உன்னத கடவுளின் வாயினின்று புறப்படுகிறது'' (24:5). இதுவே, இதுவரை இறைவனோடு ஒன்றாயிருந்த ஞானத்தைப் புறநிலைப்படுத்துதலாகும். இனி ஞானம் இறைவனிடமிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. அது இறைவன் உலகோடு கொள்ளும் தொடர்பின் சாதனமாகிறது (42:15; 43:28). ஞானம் புறநிலையாக்கப்படும்போது, அது இயற்கையிலும், மனுக்குலத்தில் இஸ்ராயேலிலும் தன்னையே வெளிப்படுத்துகிறது. அது படைக்கும், வெளிப்படுத்தும் வார்த்தையாகத் தோன்றி, உலகிலும், மனுக்குலத்திலும் தனது செயலை ஆற்றுகிறது (39:14-26:37; 42:15; 43:5.11.14. 28).

11.ஆ) உலக முழுமையில் ஞானம்: ஆண்டவர் ஒருவரே இறைவன். ''அவர் அனைத்திலும் இருக்கிறார்'' (43:29). ''அவர்தம் படைப்புகளுக்கெல்லாம் மேலாக எல்லா வல்லமையும் உள்ளவராக இருக்கிறார்'' (43:30). ''அவர் இடைவிடாமல் அனைத்தையும் கண்டறிகிறார்'' (15:19). உலக முழுமையும் அவர் படைத்துள்ளார். அவற்றின் ஒவ்வொரு பகுதியும் ஒன்றோடு ஒன்று ஒருங்கிணைந்து செயல்பட அவற்றை இசைவிணைக்கத்துடன் நிலையாக ஒழுங்குபடுத்தியுள்ளார் (42:24). மனிதனுக்குப் புறம்பாக இவ்வுலகிற்கு மதிப்புண்டு (17:31). வானங்கள் இறைவனது மகிமையாலும் ஆற்றலாலும் நிறைந்துள்ளன. அவர் பாதாளத்தையும், மனித இதயத்தையும் சோதித்தறிகிறார். அவரது அழகின் பிரதிபலிப்பும், அவரது கலையாற்றலின் முத்திரையும், பூமியிலும், வானத்திலும், கடலிலும் நிறைந்துள்ள எண்ண முடியாத பொருட்களில் காணப்படுகின்றன. எதிர்க்க முடியாத அவரது ஆற்றல்

இவற்றையெல்லாம் சேர்த்துப் பிணைத்து இவற்றின் குறிக்கோளை நோக்கி இயங்கச் செய்கிறது. இவையெல்லாம் ஆண்டவரின் வெளிப்பாடாகும். இவற்றைச் சிறுமைமிக்க மனிதன் புரிந்து கொள்ள முடியாது. எடுத்துக்கூறவும் முடியாது. ஆகவே இறைவன் தொடக்கத்திலிருந்து, ஞானத்தை ''உண்டாக்கி, அறிவித்து வெளிப்படுத்தினார். ஏனென்றால் தமது எல்லாப் படைப்புகளிலும், உயிரினங்களிலும்... அதைப் பகிர்ந்திட்டார்'' (1:9-10). ஆகவே உலக முழுவதிலும் இறைவனது-படைக்கும், காத்து அளிக்கும் ஆற்றல் செயலின் சாதனமாக, ஞானம் தன்னைப் பற்றியே கூறிக்கொள்ளக்கூடும். இறைவன் விண்ணையும் மண்ணையும் படைக்கத் தொடங்கிய போது இறை ஆவி செய்தது போல் (ஆதி 1:1) ஞானம் ''மண்ணுலகம் முழுவதையும் மேகத்தைப் போல் மூடுகிறது... வான மண்டலங்களைத் தனியே சுற்றி வந்தது. பாதாளத்தின் ஆழத்தை ஊடுருவியது. கடலின் அலைகள் மேல் உலவியது, மண்ணுலகம் முழுவதிலும் நின்றது'' (24:6-9). ஒழுங்கமைப்போடு கூடிய வேறுபாடுகளும், குறிக்கோளுடனும் தளராததுமான ஆற்றலும், இறைவனது செயல்களின் மேல் ஞானம் பதிப்பிக்கும் முத்திரையின் பண்புகளாகும் (16:26-31). இயற்கையில் இறைவன் தம்மையே வெளிப்படுத்தியதை இஸ்ராயேல் அறிவர்கள் புரிந்து கொண்ட விதத்தை அறிய, படைப்பவர் பற்றிய பாடலைக் (42:15-43:37) கவனமாய் வாசித்துத் தியானிக்க வேண்டும். அதிலே ஆன்மீக உணர்வும் உயிர்பெற்று நிற்கின்றது. அச்சம், ஆராதனை மற்றும் எடுத்துக் கூறவிழையும் அன்பு, ஆகியவற்றின் துடிப்பையும் காணலாம். இன்னும் அளிக்கப்படாத ''வார்த்தையானவரை''த் தேடுதலையும் கண்டுணரலாம். ''ஆண்டவரை வாழ்த்தி, உங்களால் கூடுமான மட்டும் அவரைப் புகழுங்கள். அவர் எல்லாப் புகழ்ச்சிக்கும் மேலானவர்... அவரைப் பார்ப்பவன் யார்? அவரது இயல்பை எடுத்துரைப்பவன் யார்?'' (43;33-35).

11.இ) ஞானமும் மனுக்குலமும்: இறைவன்திட்டம் செய்த அளவின்படி ஞானம் எல்லா மனுக்குலத்தின்மூலம் மீதும் பொழியப்பட்டுள்ளது (1:10; 24:9-10). இறைவன் தம் சாயலாக மனிதனைப் படைத்தார். அவனை அறிவும் விழைவும் கொண்ட ஆன்மீகமானவனாகப் படைத்தார். படைக்கப்பட்ட பொருட்களின் மீது அவனுக்கு அதிகாரம் அளித்தார். அவனது நடத்தைக்கு வழிகாட்ட, அவனது மனச்சாட்சியில் ஒழுக்கச் சட்டத்தையும் அளித்தார் (17:1-12). அவன் மேல் சுமத்தப்பட்ட இந்த ஒழுக்கப் பொறுப்பு அவனுக்கு இயற்பண்பாக அருளப்பட்ட சுதந்தர உள்ளத்திற்கு இணையானதாகும். இறைவன் ஆதியில் மனிதனைப் படைத்து அவன் விருப்பத்தின்படியே நடக்க உரிமை கொடுத்தார். ஆனால் தம் கட்டளைகளையும் சட்டங்களையும் கொடுத்தார். கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும் அவருக்கு நித்தியத்திற்கும் விருப்பமாய் நடக்கவும் உனக்கு மனமுண்டானால், அவைகள் உன்னைக் காப்பாற்றும். அவர் நீரும் நெருப்பும் உன்முன்பாக வைத்தார். ''எது வேண்டுமோ, உன் கையை நீட்டு. மனிதனுக்கு முன்பாக வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும் உண்டு. அவன் எதைத் தேர்ந்து கொள்வானோ அதை அடைவான்'' (15:14-18). அவனுக்கு ஞானமே வழிகாட்டி.

11.ஈ) ஞானமும் இஸ்ராயேலும்: ஞானம் இறைவனிடமிருந்து உண்டாகி அவரோடு என்றைக்கும் நித்தியமாய் இருக்கிறது என்பது உண்மையானாலும், அது புறநிலைப் படுத்தப்படும்போது அது படைக்கும், வெளிப்படுத்தும் வார்த்தையாகி - உலகில் தனது அலுவலைச் செய்கிறது. இஸ்ராயேலுக்கு அந்த ஞானமும் வார்த்தையும் சட்டமாக உருவெடுக்கிறது. இறைவனின் ஞானம், - கடலைவிடப் பரந்ததும், மூலப் பாதாளத்தைவிட ஆழமானதுமான அளவிட முடியாத பெருங்கடலாகும் (24:29). ஏதேன் தோட்டத்தில் பாயும் நான்கு ஆறுகளுக்கொப்ப, ஞானத்தின் நீர் பொங்கி மோசேயின் சட்டத்துக்குள் வழிகிறது. அதன் விளைவாகச் சட்டம் தன்னுள்ளே உயிரளிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. அதன் ஒவ்வொரு ஒழுக்கச் சட்டமும் ஒவ்வொரு சடங்

குக் கட்டளையும் அந்த வல்லமைமிக்க ஆற்றிலிருந்து புறப்படும் கால்வாயாகும். ஒவ்வொரு பிரமாணிக்கமுள்ள சட்ட வல்லு நனும், மனுக்குல நன்மைக்காக அந்த உயி ரளிக்கும் நீரிலிருந்து அள்ளி அளிக்கும் உழவ ராவார் (24:32-47; மேலும் காண்க 1:33; 6:37; 15:1).

இஸ்ராயேலுக்கு ஞானம் வேதாகமத்தி லிருந்து, குறிப்பாகச் சட்ட நூல்கள் ஞான நூல்கள் இறைவாக்கினர் நூல்கள் - ஆகியவற் றிலிருந்து வருகிறது (39:1-3). இறைவனது வார்த்தைகளைக் கொண்ட ஏடு என்ற அள வில்மட்டும், வேதாகமம் தூண்டி எழுப்ப வும் போதிக்கவும் இல்லை. மூதாதையர் களோடு இறைவன் கொண்ட உறவுகளையும் உள்ளடக்கும் ஏடு என்ற அளவிலும், அவ ரது நோக்கத்திற்கேற்ப உருவெடுப்பதற்காக அவர்கள் தங்களையே சரண் அளித்ததையும் எடுத்துக் கூறுகின்றன என்ற அளவிலும் தூண்டுகிறது. இதை அதி. 44-50-இல் காண லாம். ஆகவே, வேதாகமத்தை ஆழ்ந்து படிக்க வேண்டும். இப்படிப்பு மற்றச் செயல்களைக் கைவிடக் கோருகிறது (38:25). புலமைபெறவும், சிந்தனை நிறைவு பெறவும், வேதாகமம் படிப்பதைத் தொழி லாகக் கொள்வதைவிட உயர்ந்தபடியுண்டு. அது இறைவனது மனதோடு மனித மனம் கொள்ளும் கூட்டுறவால் வரும் ஞானமா கும். சிந்தனையாளன் ஆழ்ந்து ஆராயும் ஆன்மீகச் சிந்தனையாளனாக வேண்டும். மனித ஆவி இறைவனது ஆவியில் மூழ்கி, அவரோடு ஆளாக உறவாடி, ஒன்றுபட்டுத் துய்க்க வேண்டும். அதற்காகத் ''தன்னைப் படைத்த கடவுள்பால் விழித்திருப்பதற்கா கத் தன் இதயத்தைக் கையளிப்பான். உன்னத ஆண்டவருடைய முன்னிலையில் மன்றாடு வான்... (அப்போது) மகத்தான ஆண்டவர் மனம் வைப்பாராயின் அறிவுடைமையால் அவனை நிரப்புவார். தமது ஞானத்தின் போகங்களை மழைபோல் வரவிடுவார். அவனும் தன் செபத்தில் ஆண்டவரைப் போற்றுவான். அவர் அவனுடைய எண்ணத் தையும் நெறியையும் நடத்துவார். அவன் மறைபொருட்களைச் சிந்தித்துப் பார்ப் பான். அவர் தமது போதகத்தின் நெறியை வெளிப்படுத்துவார். அவன் ஆண்டவர் உடன்படிக்கையின் கட்டளையில் மகிமை கொள்வான்'' (39:6-11) ''என்னை உண்பவர் கள் இன்னும் ஆவல் கொள்வார்கள். என்னை அருந்துகிறவர்கள் இன்னமும் தாக மாய் இருப்பார்கள்'' என்று ஞானம் கூறு கிறது (24:29).

11உ) ஞானமும் ஆலய வழிபாடும்: ''ஞானத் தின் தொடக்கம் தெய்வ பயம்'' என்ற கூற்றில் சமய பயமே குறிக்கப்படுகிறது. இப்பயம் பழைய ஏற்பாட்டிற்கு அடிப் படையானதாகும். இது இறைவன் முன் கொள்ள வேண்டிய மதிப்பச்சமாகும். இது இறைவன் மேலாண்மையுள்ளவர், வழிபடத் தக்கவர் என்ற உண்மையை மனிதனுக் குப் புகட்டுகிறது. இந்த மனஉறுதியை இறைவன்கோரும் வழிபாட்டைச் செய்வதா லும், ஒழுக்க வாழ்வில் அவரது திரு வுளத்தை நிறைவேற்றுவதாலும், இப்பயம் வெளிப்படுத்துகிறது. இந்த வழிபாடு இஸ் ராயேலுக்குச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட் டுள்ளது. இந்தப் பயம் இரு பொருளில் ''ஞானத்தின் தொடக்கமாகும்''. முதலில் இந்தச் சமய மனநிலை, ஞானம் வேரூன்றி ஆன்மாவில் வளர்ச்சி கொள்ளும் நிலையா கும். ''ஞானத்தின் அடிவேர் தெய்வ பயமா கும்'' (1:25). இரண்டாவது, ஞானம் தனது முடிவாகவும் (1:22) நிறைவாகவும் (1:20) உண்டாக்கும் மிகச் சிறந்த கனி, பலிகளும் பொதுச்செபங்களும் அடங்கிய, நிர்ணயிக் கப்பட்ட சடங்கு வழிபாட்டை முழு இதயத் தோடும் சரியான ஒழுக்க மனநிலையோடும் இறைவனுக்களித்தல் என்ற பொருளில், இறைவனுக்கு அஞ்சுதலாம். ஆலய வழி பாட்டுக்கு வணக்கமும் உற்சாகமும் காட்டு வதில், ஞான இலக்கிய ஆசிரியர்க ளிடையே, தனிச் சிறப்புடையவர் சிராக்கு ஆசிரி யர். இதற்குச் சான்றாக, ஆரோனையும் அவ ருக்கு இறைவனால் அளிக்கப்பட்ட குருத் துவத்தையும் ஆசிரியர் புகழ்கிறார் (45:7-27; மேலும் காண்க: 33:12); பெரியகுரு சீமோன் ''இஸ்ராயேலின் சபைக்குமுன்'' (50:15) ''அவ ரைச் சுற்றி அவர் சகோதரர் நிற்க'' (50:13)

பகிரங்கமாகப் பலி ஒப்புக் கொடுத்தலை உணர்ச்சி மிகுதியோடு விவரிக்கிறார் *(50:11-21)*. இந்த ஒப்பற்ற பணியைக் கொண்டிருப்பது இஸ்ராயேலை ஒரு குலமாக்குகிறது. குருத்துவ அபிடேக எண்ணெய், தூய கத்துச் சாம்பிராணிபோல், மனுக்குலத்துக்குள்ளே வழிபாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில்தான் ஒவ்வொரு இஸ்ராயேலனும் ''ஆண்டவருக்கு அஞ்ச வேண்டும்'' என்றும், குருக்களுக்குரிய பாகத்தைக் கொடுத்து அவர்களுக்கு வணக்கம் செய்ய வேண்டும் என்றும் அறவுரை கூறப்படுகிறது *(7:31 -34)*.

11.ஊ) ஞானமும் உள்ளார்ந்த வாழ்வும்:- புற வாழ்வில் ஞானமிக்க நடத்தை - எல்லா விவேகிகளுக்கும், அவன் இஸ்ராயேலனோ அல்லனோ, கிட்டக்கூடியது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிய இஸ்ராயேலரோ ஞானம் உறையும் வீடாகும். ஆகையால் அவர்களுக்கே உரிய பொறுக்கியெடுக்கப்பட்ட பலன் உண்டு *(24:12-16)*. அது, இறைவனை அன்பு செய்பவனுக்கு அளிக்கப்படும், இறைவனுடைய தனிச்சிறப்பான சலுகையாகும். இறைவனோடு அவன் கொள்ளும் நெருக்கமான உறவு; அவன் விரும்பும் தனிச்சிறப்பான கூருணர்ச்சி மென்மை, எவ்வளவு கடினமானாலும் அதை நிறைவேற்றும் மன உறுதி ஆகியவை இந்தச் சலுகையாகும். அதிலே சிறந்து விளங்க முயலுவான் *(1:9-10; 2:18. 19;34:19-20)*. இந்த உள்ளார்ந்த வாழ்வுக்கு வேண்டிய ஞானம் வேதாகமத்திலிருந்து கிடைக்கிறது *(39:1-3)*. ஏனெனில் வேதாகமம் தூண்டுகிறது, போதிக்கிறது. இறைவனது திருவுளத்துக்கேற்ப ஒருவனை உருவெடுக்கச் செய்கிறது.

இத்தகைய இனிய நெருக்கம் சோதனைகளால் சுத்திசெய்யப்படும்வரை அளிக்கப்படுவதில்லை. ''அது (ஞானம்) துன்பநேரத்தில் அவனோடு உலவுகிறது; அவனை ஆதியில் தேர்ந்து கொள்கிறது. பயத்தையும், அச்சத்தையும், சோதனையையும் அவன் மீது ஏவுகிறது; அவன் எண்ணங்களால் அவனைச் சோதித்து, அவன் தன் ஆன்மாவில் நம்பிக்கை கொள்ளும் வரையிலும் தன் போதனையினால் உண்டாகும் துன்பத்தில் அவனை வருத்துகின்றது; அவனை உறுதிப்படுத்தி அவனிடம் நேர் வழிசென்று அவனை மகிழ்விக்கும்'' *(4:18-20)*.

11.எ) ஞானமும் ஒழுக்க நடத்தையும்:- வழிபாடு அடிப்படையானது என்றாலும், ஒழுக்க வாழ்வு அதைவிட அடிப்படையானதாகும். சட்டம் இயல்பாகவே ஒழுக்கச் சட்டமாகும். புண்ணிய வாழ்வும் அதற்கேற்ற உள்ளார்ந்த மனநிலையும் அற்ற சடங்கு முறைகள் கடுமையாகக் கண்டனம் செய்யப்படுகின்றன *(7:8-10; 34:21-35:15)*. இந்த அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து, நூலில் பரவிக்கிடக்கும் பழமொழிகள் தோன்றுகின்றன. இதில் ''முன்னோர்கள்'', குறிப்பாகப் பழமொழிநூல் ஆசிரியர் பெரிதும் உழைத்துள்ளனர். அவர்களைப் பின்பற்றிச் சீராக்கு ஆசிரியர் ஒழுக்க வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் வளமுள்ளதாக்குகிறார் *(24:40-47; 33:16-19; 39:1-3)*.

மனிதனைத் தமது சாயலாகப் படைத்த இறைவன், அவனுக்கு வழிகாட்ட அவன் மனச்சாட்சியில் ஒழுக்கச் சட்டத்தைக் கொடுத்துள்ளார். அவனது நடத்தைக்கு அவனே பொறுப்பு *(15:14-18)*. பாவத்திற்கு இறைவன் பொறுப்பல்லர். தனது சுதந்தரத்தைப் பயன்படுத்தி, மனிதனே தன் பாவத்திற்குப் பொறுப்பாகிறான். அப்படியானால் இறைவனதுகொடையாகிய சுதந்தரத்தை மனிதன் தவறாகப் பயன்படுத்துவதற்குக் காரணமும் பொறுப்பும் எது? இது ''மனிதனது முதல் வீழ்ச்சிதான்'' என்று சீராக்கு கூறவில்லை. ஆதி 2-ஆம் அதிகாரம் பற்றிய அவரது பொழிப்புரை *(17:1-12)* இந்த ''முதல் வீழ்ச்சியைக்'' கூறவில்லை. *25:33*-இல் ''பெண்ணால் பாவம் பிறந்தது. அவளால் நாம் எல்லோரும் சாகிறோம்'' என்கிறார். இது பாவத் தோற்றத்தின் காலவரிசையைக் காட்டுகிறது. வாசகத்தில் குறிக்கப்படும் பாவம் ஏவாளுடையதாகும். அது அவளது பின் சந்ததியின் பாவங்களுக்குக் காரணமா

யிற்று என்று கூறவில்லை. ''முதல் வீழ்ச்சியின்'' விளைவுகள் பற்றி ஆதி 2:16-19-க்கு மேல், அதாவது, அதன் விளைவாக ஆதாமின் மக்கள் மேல் சுமத்தப்படும் துன்பச் சுமை, இறுதி விளைவான மரணம் ஆகியவற்றுக்குமேல் இந்நூல் அதிகம் கூறவில்லை (40:1-7).

11.ஏ) பாவம்: பாவத்திற்கு இருவடிவவேர்கள் இருப்பதாக ஆசிரியர் கருதுகிறார். முதலாவது, படைக்கப்பட்டவன் என்ற அளவில் மனிதனில் இயற்கையாகவே அமைந்துள்ள குறைபாடு. ''அனைத்தும் மனிதரில் இருப்பது கூடாத காரியம். ஏனெனில் மனிதனாய்ப் பிறந்தவன் அழியாதவன் அல்லன்... மனிதர் அனைவரும் தூசியும் சாம்பலுமாய் இருக்கிறார்கள்'' (17:29-31). இரண்டாவது, முன்னதைவிடத் தீய கூறு மனிதனிடம் உண்டு. அதாவது, தீமையின்பால் இயல்பாகக் கொண்டிருக்கும் நாட்டம் மனிதனிடம் உண்டு. இது ''கெடுதியானது'' (17:30; 18:10). ''வெறுக்கத்தக்க எண்ணம்'' (37:3), என்று பலவாறு குறிக்கப்படும். இதைக் குறிக்கும் எபிரேய அடிப்படைச் சொல் ''விருப்பம்'' என்று பொருள்படும் ''யேசெர்'' என்பதாகும் (15:4). கருத்தளவில் இச்சொல் சுதந்தர உள்ளத்தைக் குறிக்கும். அது இயற்கையாகவே நல்லது, ஒழுக்க அளவில் எச்சார்பும் அற்றது. ஆனால் நடைமுறையில் மனிதன் தன் சுதந்தர உள்ளத்தை, வழக்கமாகத் தவறான முறையில் பயன்படுத்துகிறான். ஆகவே செயல்முறையில் அது பழுதுபட்டதாகத் தோன்றுகிறது. அதைத் தவறாகப் பயன்படுத்துவது எவ்வளவு அதிகமாயுள்ளதென்றால், இராபிகளின் போதகம் ''யேசெர்'' என்ற சொல்லைத் தீயபொருளிலேயே, தீமையை நோக்கிய வலுவான நாட்டத்தை விவரிக்கவே, எப்போதும் பயன்படுத்தியுள்ளது. அதைக் கிறிஸ்தவர்கள், மனித இயல்பின் மேல் சென்மப் பாவத்தால் இழைக்கப்பட்ட காயங்கள் என்பர். சீராக்கு ஆசிரியர் அந்தத் தீய நாட்டத்தின் மூலத் தோற்றத்தை ஆராயவில்லை; விளக்கவில்லை. அது இருப்பதை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்கிறார். பாவத்திற்குக் காரணம் இறைவன் அல்லர், இறைவன் அளித்த நல்லதொன்றை மனிதன் தவறாகப் பயன்படுத்தியதன் விளைவே பாவமாகும். சுதந்தரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் மனிதனில் காணப்படும் குறைபாட்டிலிருந்தும், அதைவிட, மனிதவியல் அமைப்பிலேயே காணப்படும் ஒழுக்கச் சீர்கேட்டிலிருந்தும் தோன்றுகிறது. இப்படி விளக்குவதோடு ஆசிரியர் நிறைவு அடைகிறார். ஏன் இது ஒவ்வொரு மனிதனிடமும் காணப்படுகிறது என்பதை அவர் விளக்கவில்லை. வருந்தத்தக்க உண்மை என்னவென்றால் ''நாம் எல்லோரும் தண்டனைக்கு உரியவர்கள்'' (8:6; காண்க. 21:3; 27:11). ஒவ்வொருவனும் தனக்கே சாத்தான் (பேய்); அதாவது எதிராளி ஆவான். பாவி தன் ''எதிராளியைச் சபிக்கும்போது தன் ஆன்மாவையே சபித்துக் கொள்கிறான்'' (21:30). மனிதரின் பாவங்களுக்கு இறைவனைக் குற்றம் சாட்டக்கூடாது. ஏனெனில் ''அக்கிரமங்கள் அவருக்குத் தேவையில்லை. அநியாயம் அனைத்தையும் அவர் பகைக்கிறார்'' (15:12-13).

பாவம் தீமையானது. ஆனால் இறைவன் தீமையிலிருந்து பல வழிகளில் நன்மையைக் கொணர்கிறார். 1) பாவியின் பலவீனத்தன்மையே இறைவனில் இரக்கத்தை உண்டாக்க வல்லது (18:9-14). 2) பாவத்தைத் தவிர்க்க, சட்டத்தின் வழியாக இறைவன் வழிகாட்டுகிறார், உற்சாகப்படுத்துகிறார். சட்டத்தைக் கடைப்பிடிப்பது பாவத்தின் உந்துதல்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கத் திடம் அளிக்கிறது (21:12; 32:18-20; 32:27-33:3). 3) பாவநாட்டம் பற்றிய அறிவு செபிப்பதற்கு ஒரு வாய்ப்பாகும். செபம் பாவத்தை வெல்லவும், அதைத்தவிர்க்கவும் இறைவனது உதவியைப் பெற்றுத் தருகிறது (22:33-23:6). 4) சோதனையை வெல்வது தகுதிபெற ஒரு வாய்ப்பாகும் (31:8-11). இறுதியாக, 5) பாவம் செய்த பின் அதற்கு மனம் வருந்துதல் மனிதனை இறைவனிடம் நெருங்கி வரச் செய்கிறது. பரிகாரம் பாவத்தின் விளைவுகளை அகற்றுகிறது. ''அக்கிரமத்தினின்று அகன்றுபோவது ஆண்டவருக்கு விருப்பமானது. அநீதத்திலிருந்து விலகுவது பாவநிவாரணம்'' (35:5; காண்க. 17:28; 34:30-31).

11.ஐ) வினைப்பயன் கோட்பாடு: தீமைக்காகத் துக்கப்படவில்லையென்றால், இறைவன் அதைக் கவனித்துத் தண்டிப்பார். மனிதனது எல்லா எண்ணங்களையும் செயல்களையும், நன்மையானதையும் தீமையானதையும், மிக இரகசியமானதையும் கூட இறைவன் பார்க்கிறார். ஒவ்வொருவருடைய செயலுக்கேற்பத் தீர்ப்பிடுகிறார். நல்லவர்களுக்குச் சன்மானமும் தீயவர்களுக்குத் தண்டனையும் அளிக்கிறார் (16:11-15; காண்க 17:13; 23:25-27; 42:18-20). இந்த வினைப்பயன் கோட்பாடு பற்றி ஆசிரியர் பாரம்பரியப் போதகத்தை அசைக்க முடியாத முறையில் பின்பற்றுகிறார். இதைப் பொறுத்த மட்டும் இவர் ஒரு பழமை விரும்பி. யோபு, திருவுரையாளர் ஆகியவர்களைப் போல் ஐயுற்றதில்லை. வரும் உலக வாழ்வு பற்றிய புதுக் கருத்துகள் இருக்கக்கூடும் என்பதைக் கூட இவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. மனிதனுடைய தீமைக்கு அவனுடைய, இவ்வுலக வாழ்விலோ, தவறினால் அவனுடைய பிள்ளைகளின் வாழ்விலோ, உறுதியாகத் தண்டனை உண்டு. ஏனெனில் பாதாளமாகிய ''சேயோலில்'' தண்டனையோ சன்மானமோ இல்லை (9:16; 23:34-38; 41:8-14; 1:13; 30:4.6; 37:27-29; 41:11-13; 44:14-18).

11.ஒ) சேயோல்: அவருக்கு முந்திய பழைய ஏற்பாட்டு அறிவர்கள் சேயோலை விவரித்தவாறே, சீராக்கு ஆசிரியரும் அதைத் தெளிவற்ற நிழல் உலகமாக விவரிக்கிறார். அங்கே நீதிமான்கள், அக்கிரமிகளின் ஆவிகள் ஒரே நிலையில் உள்ளன. இந்நிலை சில இடங்களில் ''இளைப்பாற்றி'' என்று குறிப்பிடப்படுகிறது (22:11; 38:24). வேறு சில இடங்களில் ''நித்திய இளைப்பாற்றி'' என்றும் குறிப்பிடப்படுகிறது (30:17). ஆனால் இப்போது நாம் எடுத்துக் கொள்ளும் பொருளில் இது கூறப்படவில்லை. சாவோடு ஒருவனுடைய சொந்த வாழ்வில் எல்லாம் முடிவுக்கு வருகிறது. அவனுக்கு எஞ்சியதெல்லாம் ''கோபம், பொறாமை, கலகம், கலக்கம்'' (40:4) ஆகியவையே. வரும் உலக வாழ்வு பற்றிய மூல எபிரேயவாசகத்தில் காணப்படும் இந்த முதிர்ச்சி பெறாத கருத்தோடு ஒப்பிடும்போது விரிவாக்கப்பட்ட வாசகத்தில் குறிப்பிடத்தக்க முறையில் கொள்கை முன்னேற்றம் உள்ளது. இது பிற்காலச் சேர்க்கைகளின் விளைவாக இருக்கலாம்.

11.ஓ) ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானம்: ஞானம் வெறும் ''வார்த்தையாகவும்'' இறைவனது புறச் . செயல்களின் சாதனமாகவும் இருப்பதற்குமேல், அஃது ஓர் ஆள் என்று கூறலாமா? இதுபற்றி வாசகம் ஒரு வளர்ச்சியைக் காட்டுகிறது. 14:20-27-இலும் முன்னேற்றம் இல்லை. இது 15:1-8-ஒடு இணையும்போது ஞானத்தின் ஆட்தன்மை பொருளியலான பண்புகளைப் பெற்றாலும், உருவகத் தன்மையே ஆதிக்கம் செலுத்துகிறது. இதிலிருந்து, ஞானம் தன்னைப் பற்றியே பேசுவதாக விவரிப்பது ஒரு வளர்ச்சியாகும். 4:15-19-இலும் (எபிரேய வாசகத்திலும்) ஞானத்தின் பக்தனிடம் என்ன நிகழ்கிறது என்பதைப் பற்றி விவரிக்கப்படுகிறது. ஞானத்தின் ஆட்தன்மை அன்று. முக்கியமான பகுதி 24:1-22 ஆகும். இதில் ஞானம், தன்பெயரிலேயே, தனது தன்மை மற்றும் செயல்கள் பற்றி விவரித்துப் பேசுகிறது. இங்கு உருவகம் மட்டுமில்லை. கருத்து ஒருமையும் இருக்கிறது. இது இறைவன் தாம் படைத்த உலகிலும், உலகுக்கும் தம்மையே அளிப்பதாகும். இறைவனது கைவேலையாகிய இயற்கையிலும் அவரது சாயலாகிய மனிதனிலும் அவர் தம்மையே வெளிப்படுத்துதலான ஞானம் பிரசன்னமாக இருக்கிறது. வேதாகமங்களில் அவர் தம்மையே வெளிப்படுத்துதலான ஞானம் பிரசன்னமாக இருக்கிறது. வேதாகமங்களில் இறைவன் அளிக்கும் போதனையிலும், ஒவ்வொரு இதயத்திலும் அவர் பதித்திருக்கும் ஒழுக்கச் சட்டத்திலும் இறைவன் தம்மையே வெளிப்படுத்துதலான ஞானம் பிரசன்னமாக இருக்கிறது. அவர் அன்பு செய்பவர்களுக்கு இறைவன் தம்மையே உள்ளார்ந்த முறையில் அளிப்பதும் ஞானமே (4:10-14; 45:1; 46;13). அவர்கள் இறைவனுடைய அன்பர்கள் என்று அவர்கள் அறியச் செய்ய ஒளிவடிவிலும், அவரது அன்புக்கு அவர்களைச்

செபவடிவில் பதில் கூறச் செய்யவும், அவருக்குச் சேவை செய்து பதில் அன்பு காட்டச் செய்ய உந்துதல் வடிவிலும் அவர் அளிப்பது ஞானமே (1:10:2:19-20; 34:19-20). இவ்வாறு ஞானம் என்பது வெறும் கருத்தன்று, அல்லது இறைவனுடைய ஏதோ ஒரு பண்புமட்டுமன்று. அது பலவழிகளிலும் இறைவன் தம்மையே அளிப்பதாகும். இதை எடுத்துக்கூற ஞானம் ஆட்தன்மைப்படுத்தப்படுகிறது. ஆனால் ஓர் ஆளாக்கப்படவில்லை. இறைமையின் உள்ளார்ந்த தன்மையில் இறைவனோடு ஒன்றானதாக மனிதரை இறைப்பண்புடையவர்களாக மாற்ற வருவதாக ஞானம் விவரிக்கப்படவில்லை. அதற்கு இன்னும் காலம் முதிரவில்லை. ஆனால் வெளிப்பாட்டின் வளர்ச்சிமிக்க ஒளியில், இறைவன் மனிதர்களுக்கு என்ன செய்துள்ளார், அவர்களை எதற்கு அழைக்கிறார் என்பவை பற்றிய இந்த இறையூக்கம் பெற்ற சிந்தனைகள், விரைவில் சொல்லமுடியாத விதத்தில் நிறைவேறுதலை நிழல் படர்விப்பதாகவும், முன்னறிவிப்பதாகவும் அமைந்திருப்பதாகத் தோன்றுகின்றன. பழைய ஏற்பாட்டு ஞானிகள் இன்னும் ஒருபடி எடுத்து வைத்தால் புதிய ஏற்பாட்டில் நிற்பர். சீராக்கு மகன் ''இடியின் மகனான'' யோவானுக்குத் தனது எழுதுகோலை அளிப்பார்.

12. இக்காலத்திற்கு: ஞானி தன் மாணவர்களை, வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளையும் நம்பிக்கையோடு எதிர்கொள்ளத் தயாரிக்க வேண்டும். அவர்களுக்கு உண்மையான, உறுதியான மதிப்பீடுகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதையே இந்நூல் செய்கிறது. இந்நூலில் மனித சமூகத்தின் எல்லாக் கூறுகளையும் காணலாம். இவற்றையெல்லாம் பயன்படுத்தி, கடந்துபோகும் இவ்வுலகின் பொருட்களைக் கையாளுவதில் மிகுந்த மட்டுடைமையையும், விவேகத்தையும் கடைப்பிடிக்கத் தனது மாணவர்களைப் பயிற்றுவிக்கிறார் சீராக்கு ஆசிரியர். இதில் அவர் உண்மையான மனித இன நல விரும்பியாவார். பரிபக்குவமுடைய, வினைத்திட்பமுடைய, நகைச்சுவைமிக்க இந்த ஆசிரியர் உறுதியான புண்ணியவாழ்வில் தமது மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார். ஆகவேதான், யூதர்கள் ஓரளவு தங்கள் செபக்கூட வழிபாட்டிலும், திருச்சபை தனது வழிபாட்டிலும் இந்நூலைப் பயன்படுத்தியுள்ளன. திருச்சபையின் தந்தையரும் இந்நூலிலிருந்து பல எடுத்துக்காட்டுகள் கொடுக்கின்றனர். இக்காலக் கிறிஸ்தவர்களும் இந்த ஞானியின் பள்ளியில் பயின்று, ஒழுக்க வாழ்விலும் இறை அச்சத்திலும் ஞானத்திலும் வளர்ச்சியுற்று எப்போதும் பயன் பெறலாம்.

மேலும் இந்த ஞானி தனது போதகத்தில், நலம்பயக்கும் மனித இன நலம் தேடும் இயலோடு வெளிப்படுத்தப்பட்ட சமயத்தின் ஆழ்ந்த உண்மைகளையும் வியத்தகு முறையில் ஒன்றிணைக்கிறார். இதில் அவர் தமது காலஇறையியல் வல்லுநர்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமையவேண்டும். மனுக்குலத்திற்குச் சேவை செய்யும் ஆர்வத்தில் கிறிஸ்துவ சமய அடிப்படை உண்மைகளை ஐயுற்றோ, மறுத்தோ வெறும் சக்கைகளைத் தேடித் திரியும் போக்கு இப்போதுள்ள சில தான்தோன்றிஇறை இயல் வல்லுநர்களிடையே காணப்படுகிறது. இவர்கள் சீராக்கு ஆசிரியரைப் பின்பற்றினால் உண்மையிலேயே மேன்மை அடைவர். மனுக்குலத்திற்குச் சிறப்பான முறையில் சேவை செய்வர் என்பது உறுதி. அது உண்மையான இறை சேவையாகவும் அமைந்திருக்கும்.

சீரியக்கு (SYRIAC)

கிழக்கத்திய அரமேயிக்கு மொழியின் பிற்கால வடிவமாகும். இது கி.பி. முதல் நூற்றாண்டின் மத்தியில் வடமெசபொத்தாமியாவில் தோன்றியது. இது எதெஸ்லா நகருடன் (இக்கால உர்பா) தொடர்புபடுத்தப்படுகிறது. பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சீரியக்கு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதன் விளைவாக இம்மொழி ஓர் இலக்கிய மொழியாக மிகுந்த முக்கியத்துவம் பெற்றது.

அரமேயிக்கு மொழியிலிருந்து இம்மொழி தனது எழுத்துக்களைப் பெற்றது.

வலமிருந்து இடமாக எழுதப்பட்டது. இதன் நெடுங்கணக்கில் இருபத்திரண்டு மெய் யெழுத்துக்கள் உண்டு. இவை எபிரேய மொழியைப் போன்று வரிசைப்படுத்தப் பட்டன. உயிர் எழுத்து வடிவங்கள் 8-ஆம் நூற்றாண்டில் புகுத்தப்பட்டன. காண்க: அர மேயிக்கு

சீரியக்கு மொழிபெயர்ப்பு *(விவிலியத்தின்)* *(SYRIAC VERSION)*

I. *அரமேயிக்குமொழி,* எபிரேய மொழி யோடு நெருங்கிய உறவு கொண்ட ஒரு செமித்திய மொழியாகும். இந்த அரமேயிக் கின் ஒரு திரிபுமொழி சீரியக்கு மொழியா கும். குறிப்பாகக் கிழக்கத்திய அரமேயிக் கின் திரிபு மொழி சீரியக்கு மொழியாகும்.

இந்தச் சீரியக்கு மொழியைப் பழைய அர மேயம் பேசப்பட்ட இடங்களில், மக்கள் பயன்படுத்த ஆரம்பித்தனர். தற்கால இஸ்ரா யேல், யோர்தான், சீரியா, லெபனோன், துருக்கி, முதலிய நாடுகளில், கி.பி. முதல் நூற்றாண்டில் அரபிய மொழிதான் பேசப்பட் டிருக்கிறது. சீரியக்கு மறைந்துவிட்டது. தற் போது இந்தச் சீரியக்கு மொழி, சிலயிடங்க ளில் வழிபாட்டு மொழியாக மட்டும் பயன் படுத்தப்படுகிறது. கத்தோலிக்கத்தில் இலத் தீனைப் பயன்படுத்துவதைப் போலச் சில நாடுகளில் கிறித்துவ வழிபாட்டிற்கு இந்தச் சீரியக்கு மொழியை இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு இம்மொழியைப் பயன்படுத்தும் நாடுகள் மேற்காசிய நாடுக ளாகும். அங்கிருந்து தென் அமெரிக்காவி லும் வட அமெரிக்காவிலும், கிழக்கத்திய நாடுகளிலிருந்து குடியேறிய மக்கள் தங்கள் வழிபாடுகளில் சீரியக்கு மொழியைப் பயன் படுத்துகின்றனர். நமது இந்திய நாட்டில் கேரளாவில் சீரியன் கத்தோலிக்கர்கள், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் பாக, இந்தச் சீரியக்கு மொழியைத்தான் வழிபாட்டில் பயன்படுத்தினர். ஆனால் தற் போது தங்கள் தாய்மொழியாகிய மலையா ளத்தையே வழிபாட்டு மொழியாகப் பயன்படுத்துகின்றனர்.

விவிலியத்தின் மொழி பெயர்ப்புகளில் கிரேக்க மொழிபெயர்ப்பை அடுத்து, காலத் தால் முந்தி நிற்பது இந்தச் சீரியக்கு மொழி பெயர்ப்புதான். இங்குப் பழைய ஏற்பாட்டின் சீரியக்கு மொழி பெயர்ப்பு, புதிய ஏற்பாட்டின் சீரியக்கு மொழி பெயர்ப்பு என்று பிரித்துப் பார்ப்பது நல்லது.

II. *பழைய ஏற்பாட்டுச் சீரியக்கு மொழி பெயர்ப்பு*

1. *பெசிட்டா மொழிபெயர்ப்பு:-* பழைய ஏற்பாட்டுச் சீரியக்கு மொழி பெயர்ப்பில் முதலில் நிற்பது பெசிட்டா மொழி பெயர்ப் பாகும். பெசிட்டா என்றால் சீரியக்கு மொழியில் எளிமை அல்லது பொதுவானது என்பது பொருள். சாதாரண மக்களுக்காக எளிமையான மொழியில் இந்தப் பெசிட்டா பழைய ஏற்பாடு ஆக்கம் செய்யப்பட்டுள் ளது. இதில் பக்க ஓரக் குறிப்புகளோ, கீழ்க் குறிப்புகளோ கொடுக்கப்படவில்லை. இது அரமேயிக்கு மொழிபெயர்ப்பான தார்குமி லிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. சிலர் எபிரேய மூலத்திலிருந்தே இந்தச் சீரியக்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது என்று கூறுகிறார் கள். உதாரணமாக மெக்கன்சி என்ற அறிஞர். இப்பழைய ஏற்பாட்டுச் சீரியக்கு மொழி பெயர்ப்பு கி.பி. முதல் நூற்றாண்டில் அல்லது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இம்மொழி பெயர்ப்பில் பலர் பணியாற்றியிருக்கின்ற னர். இம்மொழிபெயர்ப்பை யூத கிறிஸ்தவ அறிஞர்கள் செய்திருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். இம்மொழி பெயர்ப்பில் பிரிவினைச் சகோதரர்கள் ஏற்றுக் கொள்ளாத துணைத்திருமுறை விவிலியப புத்தகங்களும் இடம் பெற்றுள்ளன. இம் மொழி பெயர்ப்பு பெரும்பாலும் எழுபது நூல் என்ற கிரேக்க மொழி பெயர்ப்புடன் ஒத்துப்போகிறது. ஆனால் மாசரேட்டிக்கு எபிரேய மூலத்துடன் அதிகமாக இணைந்து செல்வதில்லை. இந்நிலை, அனேகமாக இந் தப் பெசிட்டா பிற்காலத்தில் திருத்தப்பட் டிருப்பதால் உண்டாகியிருக்கலாம். இந்தச் சீரி

யக்கு பெசிட்டா மொழி பெயர்ப்பிலிருந்து தான் கி.பி. 442-ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓர் அருமையான பழஞ்சுவடி நமக்குக் கிடைத்திருக்கிறது. இதன் சிறப்பு என்னவென்றால், இச்சுவடியினுடைய காலம் தெளிவாக இதில் அறிந்து கொள்ளப்படுகிறது. இதைப் போன்று மற்றப் பழஞ்சுவடிகள், காலத்தை அறியத் தெளிவாகயில்லை.

2. பிலோக்சேனு பதிப்பு: ஒரே இயல்புக் கொள்கையினர் (மோனபிசைட் என்ற பதிதம்) பெசிட்டா மொழி பெயர்ப்பை மக்கள் விரும்பிப் பயன்படுத்தியதைப்பார்த்துப் பொறாமைப்பட்டனர். அந்தப் பெசிட்டா மொழி பெயர்ப்பிற்கு மாற்றாக வேறொரு மொழிபெயர்ப்பைத் தயாரிக்க ஏற்பாடு செய்தனர். மாப்புக் என்றவிடத்தின் ஆயரான பிலோக்சேனு என்பவர் போலிகார்ப்பு என்பவரை எழுபதுநூல் என்ற கிரேக்க விவிலியத்திலிருந்து சீரியக்கு மொழியில் ஆக்கம் செய்யப் பணித்தார். போலிகார்ப்பும் அப்போது ஒரு துணை ஆயர்; அவரும் அப்பணியை ஏற்று விவிலியத்தைச் சீரிய மொழியில் மொழிபெயர்த்தார். இது கி.பி. 508-இல் செய்து முடிக்கப்பட்டது. தற்போது இதில் நமக்குச் சில பழம் ஏட்டுத் துணுக்குகளே கிடைக்கின்றன. அவைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்தப் பிலோக்சேனு சீரியக்கு மொழிபெயர்ப்பு, லூசியன் என்பவர் திருத்தம் செய்த எழுபதுநூல் கிரேக்க மொழி பெயர்ப்பை அடிப்படையாக வைத்துச் செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

3. சீரிய பாலஸ்தீனிய பழைய ஏற்பாடு: பாலஸ்தீனத்தில் வாழ்ந்த மெல்கைட் கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாட்டில், கிரேக்க விவிலியத்தை வாசித்து வந்தனர். ஆனால் கிரேக்கம் மக்களுக்குத் தெரியாத மொழி. எனவே அரமேயிக்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டதுபோலவே கிரேக்க வாசகம் வாசிக்கப்பட, அதற்கு வாய்மொழி அளவில், மக்களின் தாய்மொழியில் , மொழிபெயர்ப்பு உடனே கொடுக்கப்பட்டு வந்தது. இந்த மெல்கைட் கிறிஸ்தவர்கள் பேசிய மொழி பாலஸ்தீனிய அரமேயிக்கு மொழி. இது சீரியக்கு மொழியைவிடச் சற்றுவேறுபட்டது. ஆனால் எழுதும் முறையில், ஒன்றானது.

இவ்வாறு வாய்மொழியாகக் கொடுக்கப்பட்டுவந்த மொழிபெயர்ப்பை நாளடைவில் புத்தகமாக எழுதிப் பதிப்பித்தனர். அப்பணியைக் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் செய்தனர். தற்போது நமக்குக் கிடைக்கும் பழம் ஏடுகளில், 42 முழு சங்கீதங்களும், மற்றும் மற்றச் சங்கீதங்களிலிருந்து ஒரு சில வசனங்களும் அடங்கிய ஒரு பழம் ஏட்டுத் தொகுப்பு மிக முக்கியமானது. இம்மொழிபெயர்ப்பு எழுபதுநூல் என்ற கிரேக்க விவிலியத்தை ஆதாரமாக வைத்துச் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. ஆனால் அறிஞர்கள் ஒருசிலர் இது, ஒரு பாலஸ்தீனிய அரமேயிக்கு மொழி பெயர்ப்பை ஆதாரமாக வைத்துச் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

4. சீரியக்கு ஆறுபடிவ பழைய ஏற்பாடு: சீரியக்கு விவிலிய மொழி பெயர்ப்பினைத் திருத்தி அமைக்க மூதாளர் முதலாம் அத்தனாசியு விரும்பினார். எனவே அலக்சாந்திரியா அருகிலுள்ள தெல்லா தெ மௌசலத் என்ற இடத்தின் ஆயராக விளங்கிய பவுல் என்பவரை, இப்பணியைச் செய்து தரும்படி பணித்தார். அவரும், ஓரிசன் தயாரித்த ஆறு படிவம் என்ற தொகுப்பு ஏட்டில், ஐந்தாவது பத்தியில் எழுதப்பட்டிருந்த, எழுபதுநூல் கிரேக்க மொழி பெயர்ப்பை எடுத்துக் கொண்டு, அதைச் சீரியக்கு மொழியில் மொழி பெயர்த்தார். இவ்வாறு மொழி பெயர்த்தபோது, ஓரிசன் கிரேக்க மொழி பெயர்ப்பில் கொடுத்திருந்த அத்தனை குறிப்புகளையும், குறியீடுகளையும் விட்டு விடாமல் சேர்த்துஅப்படியே மொழி பெயர்த்தார். ஓரிசன் ஏட்டின் பக்க ஓரங்களில் கொடுத்திருந்த, அக்குவிலாஸ், சிம்மாக்குஸ், தியோடிசியன் இவர்களின் மாற்றுப்பாடங்களையும் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். இப்பணியை கி.பி. 616-617-இல் செய்து முடித்தார்.

இந்த முக்கியமான மொழிபெயர்ப்பு நமக்கு அழியாமல் கிடைத்திருக்கிறது. ஏறக்

குறைய எல்லாப் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களுக்கும், இச்சிரியக்கு மொழி பெயர்ப்பின் பழம் ஏடுகள் நமக்குக் கிடைக்கின்றன. இவை தற்போது மிலானிலுள்ள, அம்புரோசியார் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பழம் ஏடு, முதன்முதலில் எழுதப்பட்ட சிரியக்கு மொழிபெயர்ப்பு ஏட்டிற்கு ஒரு நூற்றாண்டு மட்டும்தான் காலத்தால் பிந்தியதாகும். இதில் இறைவாக்கினர் புத்தகங்களும், கவிதைநடையில் உள்ள விவிலியப் புத்தகங்களும் இடம் பெறுகின்றன. இப்பழம் ஏடு புகைப்படம் எடுக்கப்பட்டு அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்தச் சிரியக்கு ஆறுபடிவ மொழி பெயர்ப்பு மிக முக்கியமானதாகும். ஏனென்றால் இதைக்கொண்டு கி.பி. 4-ஆம் நூற்றாண்டில், எழுபதுநூல் கிரேக்க மொழி பெயர்ப்பில் ஓரிசனால் செய்யப்பட்ட உண்மையான திருத்தங்களை நாம் கண்டுபிடிக்கலாம். இம்மொழி பெயர்ப்பில் தானியேல் ஆகமமும் அடங்கியிருக்கிறது. இதற்குமுன் எழுபதுநூல் கிரேக்க மொழிபெயர்ப்பில், தானியேல் ஆகமம் இடம் பெறவில்லை என்றே கருதப்பட்டது. ஆனால் இம்மொழி பெயர்ப்பு அக்கருத்து தவறு என்று எண்பிக்கிறது.

II. **புதிய ஏற்பாட்டின் சிரியக்கு மொழி பெயர்ப்புகள்:** மேலே பழைய ஏற்பாட்டிற்கு நாம் பார்த்த மொழி பெயர்ப்புகளிலேயே, சில மொழி பெயர்ப்புகளில் புதிய ஏற்பாடும் அடங்கும்.

1. பழைய சிரியக்கு மொழி பெயர்ப்பு: சிரியக்கு விவிலிய மொழிபெயர்ப்பில் மிகப் பழமையானது, புதிய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்பு என்று சொல்லலாம். சிரியக்கு மொழியில் விவிலிய மொழி பெயர்ப்பு புதிய ஏற்பாட்டிலிருந்துதான் ஆரம்பமாகியது போல் தெரிகிறது. இம்மொழி பெயர்ப்பு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நடந்திருக்கிறது. புதிய ஏற்பாட்டில் ஒரு சில பகுதிகள்தான் இப்போது மொழிஆக்கம் செய்யப்பட்டன. இப்போது செய்யப்பட்ட மொழிபெயர்ப்பின் படிவங்கள் இரண்டு பழம் ஏடுகளில் மட்டும்தான் நமக்குக் கிடைக்கின்றன. ஆனால் இப்பழம் ஏடுகள் இரண்டாம் நூற்றாண்டில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டதைத் தன்னில் கொண்டிருந்தாலும், இவை கி.பி. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவைதான். இவ்வேடுகளில் நான்கு நற்செய்திகளிலிருந்தும் வசனங்கள் சில காணப்படுகின்றன. இந்த ஏடுகளின் பெயர்கள் சீனாய் சிரியக்குச் சுவடி, குர்தோனிய சிரியக்குச் சுவடி என்பனவாகும். சீனாய் சிரியக்குச் சுவடி 1892-ஆம் ஆண்டு லுவிஸ் கிப்சன் என்ற ஆங்கிலேயப் பெண்மணியால் சீனாய் மலையிலிருக்கும் கத்தரின் மடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. குர்தோனிய சிரியக்குச் சுவடியை 1858-இல் குர்தோன் என்பவர் வெளியிட்டார். இதில் 80 பக்கமுள்ள நற்செய்தி வாசகப் பக்கங்கள் உள்ளன.

2. பெசிட்டா மொழிபெயர்ப்பில் புதிய ஏற்பாடு: பெசிட்டா பழைய ஏற்பாடு மொழிபெயர்ப்புடன், புதிய ஏற்பாடும் சேர்த்து மொழி பெயர்க்கப்பட்டது. இது செய்யப்பட்ட காலம் கி.பி.4-ஆம் நூற்றாண்டு. இதை ஒரு புதிய மொழிபெயர்ப்பு என்று சொல்ல முடியாது. இதற்குமுன் நிலவிய பழைய சிரியக்கு மொழிபெயர்ப்பைக் கிரேக்க மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தப்பட்டதாகும். இது எரோனிமு இலத்தீன் மொழியில் செய்த வுல்காத்தா என்ற மொழிபெயர்ப்பைப் போல, எல்லோருக்கும் உகந்த வகையில் செய்யப்பட்ட ஒரு நல்ல திருந்திய பதிப்பாகும். எதேசாவின் ஆயர் ரப்பூலா இந்தத் திருத்தத்தை கி.பி 411-435 ஆண்டுகளில் செய்ததாகக் கூறுவர். இதனை யாக்கோபைட் சபையினரும், நெஸ்டோரியன் சபையினரும் ஏற்றுக் கொண்டு பயன்படுத்தி வந்தனர். இம்மொழி பெயர்ப்பு கவனமுடன், பிழைகள் சேரா வண்ணம் ஏடுகளில் படி செய்யப்பட்டிருக்கிறது.

சிரியக்கு திருச்சபை, பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகம், யோவான் எழுதிய இரண்டாம் மூன்றாம் திருமுகங்கள், யூதா

எழுதிய திருமுகம், திருவெளிப்பாடு இவை களை அங்கீகரிக்காது. புதிய ஏற்பாட்டின் புத்தகங்களுக்குள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இந்த 5 புத்தகங்களும், சீரியக்கு பெசிட்டா மொழிபெயர்ப்பிலும் இடம் பெறவில்லை.

3. நான்கு வழியில்: ''தியாடெஸ்ஸாசா ரன்'' என்ற 4 நற்செய்திகளின் ஒருங்கமை வைத் தேசியன் என்பவர் தயாரித்தார். ''தியாடெஸ்ஸாசாரன்'' என்றால் கிரேக்க மொழியில் நான்கு வழியில் என்றுபொருள். எனவேதான் நான்கு வழியில் என்று இதற் குப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. கி.பி. 170-ஆம் ஆண்டு வாக்கில் கிழக்கத்திய நாடு களில் இப்புத்தகம் பரவலாகப் பயன்படுத்தப் பட்டது. ஆனால் நாளடைவில், இப்புத்த கத்தை எழுதிய தேசியன் தவறான கொள் கைகளைக் கொண்டவராகத் திருச்சபையால் கண்டுபிடிக்கப்பட்டார். எனவே இவர் தயா ரித்த இம்முக்கிய தொகுப்பையும் திருச்சபை மக்களிடமிருந்து வாங்கி அவைகளை அழித்து விட்டது. இதனால் அவர் தயாரித்த இப் புத்தகத்தின் பிரதிகள், பழஞ்சுவடிகள் வழி யாக நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. ஒரே ஒரு சிறிய துண்டுச் சுவடிமட்டும் கி.பி. 220-ஆம் ஆண்டைச் சார்ந்தது, நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்தச் தேசிய னின் நூலைப் பற்றிய குறிப்புகள், மற்ற இரண்டு முக்கிய இடங்களில் கிடைக்கின் றன. எப்பிரேம் என்பவர் தேசியன் எழு திய நான்கு வழியில் என்பதற்கு விளக்க வுரை எழுதியுள்ளார். அது நமக்குக் கிடைக் கிறது. இதில் தேசியனின் நான்குவழியில் என்ற நூலை நேராகப் பார்ப்பதைப் போலவே விளக்கங்கள் உள்ளன. அரபிய மொழியிலும் இந்தநான்கு நற்செய்திகளின் ஒருங்கமைவு ஒன்று சுாணப்படுகிறது. இது தேசியனின் ஒருங்கமைவின் மொழிபெயர்ப் பைப் போலக் காட்சியளிக்கிறது. ஏனென் றால் அரபிய மொழிபெயர்ப்பு சீரியக்கு பெசிட்டா மொழிபெயர்ப்பை ஒத்திருக் கிறது.

4. பிலோக்சேனு புதிய ஏற்பாடு: பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எவ்வாறு பிலோக் சேனு என்ற ஆயரின் உத்தரவால், போலி கார்ப்பு என்பவரால் எழுபதுநூல் கிரேக்க விவிலியத்திலிருந்து சீரியக்கு மொழியில் புதிதாக மொழி பெயர்க்கப்பட்டது என் பதை மேலே பார்த்தோம். இது பெசிட்டா என்ற சீரியக்கு மொழிபெயர்ப்பிற்கும் போட்டியாக மொழி பெயர்க்கப்பட்டது என்பதையும் பார்த்தோம். இப்போது அதே போலப் போலி காா்ப்பே, புதிய ஏற்பாட்டை யும், பெசிட்டா சீரியக்குமொழி பெயர்ப் பின் உதவியைக் கொண்டு திருத்தம் செய் தார். இங்கு, பெசிட்டா நீக்கியிருந்த 5 புத்தகங்களையும் (2 பேதுரு 2, 3, யோவான், யூதா, திருவெளி) சேர்த்து அமைத்திருக்கிறார்.

5. பாலஸ்தீனிய சீரியக்குப் புதிய ஏற் பாடு: மெல்கைட் கிறித்தவர்கள் எவ்வாறு கிழைய அரமேயத்தில் முதலில் வாய் மொழி யாகவும், பிறகு எழுத்தளவிலும் பழைய ஏற்பாட்டை ஆக்கம் செய்தார்கள் என்று பார்த்தோம். அவர்கள், புதிய ஏற்பாட்டை யும் தங்கள் மொழியில் ஆக்கம் செய்தார்கள். இம்மொழிபெயர்ப்பில், வழிபாட்டில் பயன்படுத்தப்பட்ட வாசகப் புத்தகங்களின் சில தாள்கள் மட்டுமே பழம் ஏடுகளாக நமக்குக் கிடைக்கின்றன. இம்மொழி பெயர்ப்பு பெசிட்டா புதிய ஏற்பாட்டின் பின்னணியில் செய்யப்பட்டிருக்க வேண் டும் என்பது தெளிவாகிறது. அதே சமயத் தில், பாலஸ்தீன நாட்டில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டுகளில் பயன்படுத்தப்பட்டு வந்த கிரேக்க ஏடுகளின் பின்னணியும் இதில் காணப்படுகிறது.

6. கெராக்லியாசீரியக்குப் புதிய ஏற் பாடு: மேலே நாம் கண்ட பிலோக்சேனு புதிய ஏற்பாடு, ஒரு நூற்றாண்டு கழித்துத் திருத்தப்பட வேண்டும் என்ற அவசியத்தைச் சிலர் உணர்ந்தனர். கெராக்லியாவைச் சேர்ந்த தாமஸ் என்பவர் புதிய ஏற்பாட்டின் திருத்தம் ஒன்றைச் சீரியக்கு மொழியில் வெளியிட்டார். இவர் வெளியிட்ட காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு. இத்திருத்தத்தில் பக்கங்களின் ஓரங்களில், மற்றக் கிரேக்கப்

பழம் ஏடுகளில் காணப்படும் மாறுபட்ட வசனங்களைக் கொடுக்கிறார்.

விவிலிய அறிஞர்களிடையே, இவர் புதிதாகத் திருத்தி மொழி பெயர்த்தாரா? அல்லது பழைய பிலோக்சேனு மொழி பெயர்ப்பில், பக்க ஓரக் குறிப்புகளை மட்டும் சேர்த்து வெளியிட்டாரா என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சீரிய - பெனிசிய இனம்

மாற் 7:26-இன்படி சிரிய - பெனிசிய இனப்பெண் (அல்லது புறச்சமயப் பெண்); இயேசு தீர், சீதோன் பகுதிகளில் பணி செய்த போது அவரைப் பற்றிக் கேள்வியுற்று அவரிடம் வந்தவள். இவளின் மகளிடமிருந்து இயேசு பேயை ஓட்டினார். இதற்கு ஒத்த பகுதியாகிய மத் 15:22-இல் இவள் ஒரு கானானியப் பெண் என்று கொடுக்கப்பட்டுள்ளது. சீரிய பெனிசியர்கள் தங்களைக் கானானியர் என்று அழைத்துக் கொள்வர். சீரிய பெனிசியா என்ற பெயர் இயேசுவின் காலத்தில் பெனிசியா (தீர், சீதோன் உட்பட) சீரியாவின் உரோமை மாநிலத்தில் இருந்தது என்பதைக் குறிக்கின்றது.

சீரியா, சீரியர் (SYRIA, SYRIANS)

இது ஒரு புவியியல் பெயர். பழங்காலத்தில் சீரியா என்பது வடக்கில் தவுரசு மலைகளாலும், வடகிழக்கில் யூப்பிரத்திசு நதியாலும், தெற்கில் பாலஸ்தீனத்தாலும், மேற்கில் மத்தியதரைக்கடலாலும் சூழப்பட்ட நிலப்பரப்பாகும். பழைய ஏற்பாட்டில் சீரியா அல்லது ஆராம் என்பது தென் கிழக்குச் சீரியாவில் தமஸ்குவை மையமாகக் கொண்ட அரமேய அரசைக் குறித்தது.

சீரியா பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. இதைக் கி.மு. 332-இல் பெரிய அலக்சாந்தர் கைப்பற்றினார். அவரது மரணம், அவருக்குப்பின் வந்தவாரிசு உரிமைப் போர்கள் ஆகியவற்றுக்குப்பின், சீரியா செலூக்கியப் பேரரசின் மையமாயிற்று. இப்பேரரசு வடசீரியாவில் ஒரோன்தசு ஆற்றின் கரையிலுள்ள அந்தியோக்கியாவைத் தலைநகராகக் கொண்டிருந்தது. கி.மு. 64-63-இல் பாம்பே இதைக் கைப்பற்றி ஓர் உரோமை மாகாணமாக்கினார். சீரியா மாகாணம் பார்த்தியரின் எல்லையில் அமைந்திருந்ததாலும், அதன் தலைநகரான அந்தியோக்கியா பேரரசின் மூன்றாவது மிகமுக்கிய நகரமாகக் கருதப்பட்டதாலும் சீரியா மாகாணம் உரோமைப் பேரரசின் முக்கிய மாகாணங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

சீரியாவின் பெரும்பகுதி கிராமப்புறத்தன்மையையே கொண்டிருந்தது. கிரேக்கக் கலாச்சாரத்தால் அதிகம் பாதிக்கப்படவில்லை. பொதுவாக மக்களில் பெரும்பகுதியினர் அரமேயிக்கு மொழியையே பேசினர். உரோமையர் காலத்தில் இம்மாகாணத்தோடு வேறுசிலபகுதிகளும் சேர்க்கப்பட்டன. கி.பி. 6-இலிருந்து 41 வரை இது யூதேயாவில் ஓர் உரோமையர் மாகாணமாக விளங்கிற்று. ஆனால் கி.பி. 44-க்குப்பின் யூதேயா ஆளுநன், சீரியா ஆளுநனுக்கடியில் செயல்படவேண்டியதாயிற்று. ஆகவே யூதேயா சீரியாவின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் சீரியா என்ற கிரேக்கச் சொல், உரோமை மாகாணத்தையும் (லூக் 2:2) சீரியா, பெனிசியா, பாலஸ்தீனியக் கடற்கரையையும் (அ.ப. 18:18.22; 20:3; 21:2-3) பாலஸ்தீனத்தையும், பாலஸ்தீனம், பெனிசியா மற்றும் சீரியா ஆகியவற்றுக் கிடையே உள்ள எல்லையடங்கிய பகுதியையும் (மத் 4:24) குறித்தது. சீரியா மாகாணம் ''சீரியா மற்றும் சிலிசியா'' என்றும் அழைக்கப்படலாம் (அ.ப. 15:23; கலா 1:21). எலிசாவின் சமகாலத்தவராகிய நாமான் என்ற தளபதி 2 அர 5:20-இன் எழுபதுநூல் வாசகத்தைப் பின்பற்றிச் சீரியன் என்றழைக்கப்படுகிறார் (லூக் 4:27).

சீர்த்தி (SYRTIS)

ஆப்பிரிக்காவின் வடகரையில் உள்ள இரண்டு ஆழமில்லாத வளைகுடாக்களின் கிரேக்கப் பெயர் (அ.ப. 27;17). பெரிய சீர்த்தி என்பது சிரேனைகாவுக்கு மேற்கில்

இப்பொழுது சிதிரா வளைகுடா என்று அழைக்கப்படுகிறது. அனேகமாக இதுதான் சீர்த்தி என்று இந்தப் பகுதியில் குறிப்பிடப் படுகிறது.

சிறிய சீர்த்தி இப்பொழுது காபெசு வளை குடா என்று அழைக்கப்படுகிறது. இங்கு மணல் திட்டுகளும், மறைந்த பாறைகளும் இருப்பதால் மாலுமிகள் இதற்குப் பயந்தனர்.

பவுல் லீக்கியாவிலுள்ள மீராவிலிருந்து பயணம் செய்த கப்பலின் மாலுமிகள், கிரேத்தாவைச் சுற்றி அவர்கள் எதிர்கொண்ட வடகிழக்குக் காற்று சீர்த்தி வளைகுடாவுக்குள் தள்ளிவிடுமோ என்று அஞ்சினர் (அ.ப.27:17).

சீர்வரிசை, திருமணப்பரிசு (DOWRY)

சாதாரணமாக, திருமணத்தின்பொழுது பெண் தன் கணவனிடம் கொண்டு வந்த சொத்து. பெண்ணின். திருமணத்திற்கு முன்பு, இது தந்தை மகளுக்குக் கொடுக்கும் பரிசாக இருந்திருக்கலாம். ஆனால் யாக்கோபின் மகள் தீனாவைத் தன்மகன் செக்கேமிற்குத் தருமாறு திருமணம் பேச கமோர் (ஆமோர்) வந்தபோது செக்கேம் ''திரும்ணப்பரிசாகக்'' கேட்பதையெல்லாம் தருவதாகச் சொன்னார் (ஆதி 34:12).

பழைய காலத்தில் தந்தை தன் மகளுக்கு ஒரு பெண் வேலைக்காரியை வரதட்சணையாகக் கொடுத்திருக்கலாம் (ஆதி 16:1; 24:61; 29:24.29). நீரூற்றுகளும் (யோசு 15:19) நகர்களும் (1 அர 9:16) சீர் வரிசையாகக் கொடுக்கப்படலாம்.

சீலா (SILAS - இறைவனிடம் கேள்)

இவர் எருசலேம் திருச்சபையின் செல்வாக்குள்ள உறுப்பினரும் இறைவாக்குரைப் பவருமாவார்; பவுல் மற்றும் பேதுருவின் அப்போஸ்தலத் தூதுகளில் பங்குபெற்றவர். அந்தியோக்கியாவில் பிரச்சனை எழுந்தபோது அப்போஸ்தலர்களின் பிரதிநிதிகளுள் ஒருவராக அங்குச் சென்றார். அதன்பிறகு இவர் பவுலின் நற்செய்தியறிவிப்புப் பணியில் இணைந்து உழைப்பதைக் காணலாம் (அ.ப. 15:22-35). பவுலின் இரண்டாவது பயணத்தில் மாற்குவுக்குப் பதிலாகச் சீலா அவருடன் சென்றார் (அ.ப. 15:36-41). இப்பயணத்தில் இக்கோனியா, கலாத்தியா, பிரிகியா, சீரியா, சிலிசியா நகரங்களுக்குச் சென்றார். பவுலுடன் அவரது சிறைவேதனையையும் பகிர்ந்து கொண்டார். சீலாவை அவர்கள் பிலிப்பியில் விடுவித்தார்கள். தெலோனிக்கே பெரோயா நகரங்களில் குழப்பம் ஏற்பட்டபோது உடனிருந்து பவுலைக் காத்தார் (அ.ப. 16:1-17:15). பவுல் பெரோயாவை விட்டுப் புறப்பட்டபோதுசீலா, திமொத்தேயுடன் தங்கிவிட்டுப் பின்னால் கொரிந்துவில் பவுலோடு சேர்ந்து கொண்டார் (அ.ப. 18:5).

1 தெச 1:1; 2 தெச 1:1; 2 கொரி 1:19 ஆகிய பகுதிகளில் உதவியாளராகக் கூறப்படும் சில்வான் என்பது சீலாவின் மறு பெயரே என்பதில் ஐயமில்லை. இவர் 1 பேதுரு 5:12-இலும் குறிப்பிடப்படுவதால் மறைவல்லுநர் சிலர் சீலா (சில்வான்) கடிதம் எழுத உதவுவதும், கொண்டு செல்வதும் மட்டுமல்ல, இவரே இக்கடிதத்தை எழுதியிருக்கவும் கூடும் என்று நம்புகின்றனர்.

சீலோ (SHILOH - ஏராளம், அமைதி)

இது அரசாட்சிக் காலத்திற்கு முந்திய இஸ்ராயேலரின் வழிபாட்டு மையமாகும். ''பெத்தேலுக்கு வடக்கே, லெபனோனுக்குத் தெற்கே, பெத்தேலிலிருந்து செக்கேமுக்குச் செல்லும் நெடுஞ்சாலையின் கிழக்கே இருக்கும்'' (நீதி 21:9) இந்தச் சீலோவின் சிதைவுகள் எருசலேமுக்கு வடக்கில் 30 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்துசெயிலூன் என்னுமிடத்தில் காணப்படுகின்றன.

கானான் நாடு இஸ்ராயேலர் இனங்களிடையே இறுதியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டு முன் பெட்டகம் இந்த இடத்தில் வைக்கப்பட்டதுடன் சீலோ இஸ்ராயேலரின் வழிபாட்டு மையமாயிற்று (யோசு 18:8.10; 19:51). யோர்தானுக்கு அப்பால் குடியேறிய இனத்தவர்கள் நாடு பகிர்ந்தளிக்கப்பட்ட

வுடன் மற்றொரு இடத்தில் பீடம் கட்டிய போது அவர்களுக்கு எதிராகப் போர்த்திட்டங்கள் தீட்டப்பட்டன (22:10-12). இது ஒன்றே சீலோவிலுள்ள புனிதத்தன்மை எவ்வளவு கண்டிப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டது என்று காட்ட வல்லது. எபனேசரில் உடன்படிக்கைப்பேழை பெலிஸ்தியரால் கைப்பற்றப்படும்வரை அது சீலோவிலேயே தங்கியிருந்தது (1 சாமு 4:3-4). சீலோ ஒரு முக்கியமான திருயாத்திரை மையமாயிற்று. அங்கு ஆண்டுதோறும் ஆண்டவருக்கு விழா நடைபெற்றது (நீதி 21:19; 1 சாமு 1:3; 2:14). பெலிஸ்தியரால் பெட்டகம் கைப்பற்றப்பட்ட பிறகு, மற்றும் சீலோவில் குருக்களாக இருந்த ஏலியும் அவருடைய புதல்வர்களும் இறந்தபிறகு, பெட்டகம் சீலோவுக்குத் திரும்பி வரவில்லை. அதோடு சீலோவின் முக்கியத்துவம் முடிவுக்கு வந்தது (4:12-22; சங் 78:60-61). தொல்பொருள் ஆய்வாளர்கள் சிலர் சீலோவைப் பெலிஸ்தியர் அழித்ததற்குச் சான்று காட்டுவர். இது ஒரு வேளை கி.பி. 1050-ஐ ஒட்டி ஏலியின் மரணத்துக்குப் பின் நடந்திருக்கலாம்.

பிற்காலத்தில் இறைவாக்கினர் அகியா சீலோவில் இறைவாக்குரைத்தார். ஆனால் இந்நகரம் .முந்தைய முக்கியத்துவத்தைக் கொண்டிருந்ததற்குச் சான்றுகள் இல்லை (1 அர 11:29-39; 14:12-16). ஆயினும் சில காலத்திற்குச் சமயத்திருயாத்திரையில் ஒரு தங்கும் இடமாகச் சீலோ தொடர்ந்து இருந்திருக்கலாம் (எரே 41:5). இந்த முந்தைய சமய வழிபாட்டு மையத்தின் அழிவை எருசலேம் மக்களுக்கு எரேமியா நினைவூட்டியது, அவர்களுக்கு வரவிருக்கும் அழிவின் முன் எச்சரிக்கையாகும் (எரே 7:12.14; 26:6.9).

சீலோ குருகுலம் நோபிலுள்ள திருத்தலத்தையும் பின்னர் எருசலேம் திருத்தலத்தையும் கண்காணித்து வந்தது. சாலமோன் மன்னன் அபியாத்தாரை நீக்கியவுடன் இக்குருகுலத்தின் பணி முடிவுக்கு வந்தது (1 அர 2:27).

சீலோவாகு (SHILOAH - சிற்றாறு)

எருசலேமில் உள்ள ஒரு குளமும் கட்டுக் கால்வாயும் ஆகும். சீலோவாம் நீர்த்திட்டத்தின் ஒரு பகுதியாகும் (எசா 8:6).

சீலோவாம் (SHILOAM - அனுப்பப்பட்டவர்)

சீலோவாமைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் எசா 8:6-இல் மட்டும் ஒரு குறிப்பு வருகிறது. அதன்படி இப்பெயர் ஒரு கால்வாயைக் குறித்து நிற்கிறது. இது கீகோன் ஊற்றோடு இணைக்கப்பட்டிருந்தது. எசேக்கியா கால்வாயைவிடப் பழமையானது. இதில் வரும் வெள்ளம் அசீரிய அரசனின் படையெடுப்புக்கு மாதிரியாகக் காட்டப் படுகிறது.

புதிய ஏற்பாட்டில் எருசலேமில் உள்ள ஒரு குளத்தின் பெயராக வருகிறது. இது பிற்காலத்தில் செயற்கையாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் கரையில் இயேசு பிறவிக் குருடன் ஒருவனைக் குணமாக்குகிறார் (யோவா 9:7). இங்கு நற்செய்தியாளரின் நோக்கம் குளத்தின் மீதன்று, குளத்திற்கு அனுப்புபவரான இயேசுவின் வல்லமையை வலியுறுத்த வேண்டுமென்பதுதான். இதற்கு அருகில் அல்லது இதனை அடுத்திருந்த பகுதியில் லூக் 13;4-இல் வரும் கோபுரம் இருந்திருக்கலாம்.

சீலோவியர் (SHILONITE)

1. இறைவாக்கினர் அகியாவைப் பற்றிக் குறிப்பிடும்போது ''சீலோவியர்'' அதாவது ''சிலோவைச் சார்ந்த அகியா'' என்று குறிக்கப்பட்டுள்ளது (1 அர 11:29).

2. அடிமைத்தனத்திினின்று திரும்பிய யூதக் குடும்பங்களில் ஒன்று (1 நாள் 9:5; நெகே 11:5). 1 நாள் 9:5-இல் கொடுக்கப்பட்டுள்ள குடும்ப அட்டவணைக்கும் நெகே 11:5-இல் உள்ளதற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. சீலோவியர் சீலோவிலிருந்து வந்தவர்கள் என்றால் அவர்களின் முன்னோர்கள் வட அரசிலிருந்து வந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு வேளை இருவாசகங்களிலும் இச்சொல் சேலாவியர் என்று உச்சரிக்கப்பட

லாம். இது சேலாவின் (2) சந்ததியினரைச் சுட்டும் (ஆதி 38:5; எண் 26:20).

சிவான் (SIVAN)

எபிரேய நாட்காட்டியில் மூன்றாவது மாதம் (மே - சூன், வைகாசி) (எஸ்த 8:9). வாரங்களின் விழா அல்லது ஐம்பதாம் நாள் விழா சிவான் மாதம் ஆறாம் நாள் கொண்டா டப்படும்.

சீனாய் (SINAI - புதருள்ள)

இஸ்ராயேலின் சமய வரலாற்றில் சகாப் தம் ஏற்படுத்தும் முக்கியத்துவமுடைய மலையாகும். இது கோரேபு (ஓரேபு) என் றும் அழைக்கப்படுகிறது. சீனாய் மலையில் மோசே இறைவனிடமிருந்து தனது அழைப் பைப் பெறுகிறார் (யாத் 3:1). இங்குதான் மோசே தனக்களிக்கப்பட்ட வெளிப்பாடு களைப் பெற்றார். இஸ்ராயேல் மக்கள் உடன் படிக்கையையும் சட்டத்தையும் பெற்றனர். யாத் 19:1-இலிருந்து எண் 10:11வரை நடந்த தாகக் கூறப்படும் நிகழ்ச்சிகள் இடம்பெறும் மலையும் பாலையுமாகும். இந்த மலையில் தான் எலியாவுக்கு அளிக்கப்பட்ட இறை யாற்றல் தோற்றம் நிகழ்ந்தது (1 அர 19:8). இது இஸ்ராயேல் விசுவாசத்திற்கு ஓர் இறை யியல் நங்கூரமாயிற்று (நீதி 5:5; நெகே 9:13; சங் 68:8.17). அப்போஸ்தலர் பணிநூலில் ஸ்தேவான் சீனாயில் மோசேயும் இஸ்ராயே லரும் பெற்றதைக் குறிப்பிடுகிறார் (அ.ப. 7:30.38); கலா 4:24-31-இல் பவுல், தான் எதிர்த்துப் போராடிய சட்டத்தால் வரும் ஏற்புடைமைக்குச் சீனாய் ஓர் அடையாள மாக இருப்பதைக் காண்கிறார் (எபி 12:18-29).

சீனாய் என்ற பெயர் யாவே பாரம்பரியத் தில் அபூர்வமாகத்தான் காணப்படுகிறது (யாத் 19:20.23; 34:2.4); பெரும்பாலும் குருக் கள் பாரம்பரியத்தில்தான் வருகிறது. எலோ கீம், உபாகமப் பாரம்பரியங்களில் இம் மலை கோரேபு (ஓரேபு) என்றழைக்கப்படு கிறது. காலத்தால் முந்திய ஒருபாடல் யாவே யைச் சீனாயோடு தொடர்புபடுத்திக்கூறு கிறது (நீதி 5:5). ஆனால் சீனாய் எங்கிருந்தது என்பதுபற்றி எச்செய்தியும் கூறவில்லை. நீதி 5:4-இல் யாவே சேயிர், ஏதோமிலிருந்து வருவதாகக் கூறப்படுகிறது. இது சீனாய் ஏதோமிலிருந்திருக்கலாம் என்று சுட்டு கிறது. அரசாட்சிக் காலத்தைச் சேர்ந்த மற் றொரு பாடல் சீனாய் மலையைச் சேயிர், பாரான் மற்றும் மெரிபத்து-காதேசுடன் தொடர்புபடுத்துகிறது (உப 33:2). ஐந்நூல் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட மற்றச் சுட்டல்களும் (நெகே 9:13; சங் 68:8; சீரா 48:7; அ.ப. 7:30) தெளிவில்லாத புவியியல் சொல்லான அரேபியாவில் சீனாய் இருப்பதாய்க் கூறுவதும் (கலா 4:24 தொ) சீனாய் எங்கிருந்தது என்பது பாலஸ் தீனத்தில் குடியேறிய காலத்தில்கூட இஸ்ரா யேலருக்குத் தெரிந்திருக்கவில்லை என்ற எண்ணத்தைத் தூண்டவல்லன. சீனாய் தெற்கே அமைந்துள்ளது. அதற்குமேல் ஒன் றும் கூறுவதற்கில்லை.

இஸ்ராயேலர் பாலையில், அலைந்து திரிந்ததை உறுதிப்படுத்தும் தொல்பொரு ளாய்வுச் சான்றுகள் இல்லாததால், இம் மலை எங்கிருந்தது என்று உறுதியாகக் கூற முடியாது. சீனாய் தீபகற்பத்தில் வட கடற் கரையையொட்டிய சில எகிப்தியச் சிதைவு களைத் தவிர, வெண்கலக் காலத்தைச் சேர்ந்த தொல்பொருள் சான்றுகள் இல்லை. பழைய ஏற்பாடு சீனாய்க்கு அருகில் பல இடங்க ளின் பெயர்களைக் கொடுக்கிறது (எண் 33:14-17). இவ்விடங்கள் எங்கிருந்தனென்று உறுதியாக ஒன்றும் கூற முடியாது. இவை யெல்லாம், சீனாய் எங்கிருந்தது என்பதுபற் றிப் பல கருதுகோள்களுக்கு இடந்தந்துள் ளன. இவை பொதுவாக அக்காபா வளை குடாவுக்குக் கிழக்கில், சீனாய் தீபகற்பத்தின் வடபகுதியிலோ, தென்பகுதியிலோ இருந் திருக்கலாம் என்று சுட்டுகின்றன.

யாத் 19:16-19 என்னும் பகுதி எரிமலைச் சூழ்நிலையைச் சுட்டுவதாக அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். இத்தகைய எரிமலை கள் அக்காபாவுக்குத் தென்கிழக்கில் காணப் படுவதால் அங்குச் சீனாய் மலை இருந்திருக் கலாம் என்று கருதுகின்றனர். இப்படியிருக்க

வேண்டியதில்லை. ஏனெனில் இறைவனின் அச்சம் தரும் பிரசன்னத்தை விவரிக்கக் குறிப்பாக இறையாற்றல் தோற்றத்தை விவரிக்கப் பழைய ஏற்பாடு அடிக்கடி இயற்கை சார்ந்த உருவகங்களைப் பயன்படுத்துகிறது. சீனாயில் மிதியானியர் இருந்ததாகக் கூறப்படுவது (3:1) அதிகமாகக் கூறவில்லை. ஏனெனில் இந்த நாடோடி மக்கள் இப்பகுதியில் எங்கும் காணப்பட்டனர்.

காதேசு - பர்னேயாவுக்கு அருகில் இஸ்ராயேலர் அமலேக்கியரைச் சந்தித்தனர் (எண் 14:43). இதைக் கருத்தில் கொண்டு அறிஞர்கள் சிலர், மோசே இஸ்ராயேலரை வடபகுதியில் சூர் பாலை வழியாக (யாத் 15:22) நடத்திச் சென்றிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். இதற்கு ஆதரவாகக் கடலிலிருந்து வந்த காடைகள் பற்றிய நிகழ்ச்சியையும் (எண் 11:31) மத்தியதரைக் கடலோரத்திலுள்ள பாலைவனச் சோலைகளையும் எடுத்துக் கூறுவர். ஆனால் காதேசிலிருந்து வெகு தூரத்தில் சீனாய் இருந்தது என்பது தெளிவு (33:16-36; உப 1:19). எகிப்திலிருந்து மலையை அடைய இஸ்ராயேலர் மூன்று மாதங்கள் எடுத்தனர் (யாத் 19:1-2).

கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து சீனாய் மலை, அத்தீபகற்பத்தின் தென்பகுதியில் இருப்பதாகப் பாரம்பரியமாகக் கருதப்பட்டு வருகிறது. இதன்படி இத்தீபகற்பம் முக்கோண வடிவமுடையது. தெற்கு வடக்காக 420 கி.மீ. நீளமும், வடக்குப் பகுதியில் 240 கி.மீ. அகலமும் உடையது. இது சூயெஸ் வளைகுடாவுக்கும் அக்காபா வளைகுடாவுக்கும் இடையில் அமைந்துள்ளது. வடக்கில் 24 கி.மீ. அகலத்திற்கு மணற்பரப்பு அமைந்துள்ளது. வடபகுதியிலிருந்து தெற்கு நோக்கி 240கி.மீ. தொலைவிற்கு ஒரு பாறை மேட்டுநிலம் உயர்கிறது. இதன் தெற்கில் கடுமையான பாறைகளைக் கொண்ட மலைத் தொடர்கள் உள்ளன. இந்தத் தீபகற்பம் முழுவதும் மிகவும் வறட்சியானது. சில பாலைவனச் சோலைகளைத் தவிர, செடி கொடிகளேயில்லை. இங்குப் பயணம் செய்வது கடினம். மலைத்தொடர்கள் 2700 மீட்டர் வரை உயர்ந்துள்ளன. சீனாய் மலை எபெல் மூசா (மோசேயின் மலை) என அடையாளம் காட்டப்படுகிறது. இதன் உயரம் 2285 மீட்டராகும். இதைச் சுற்றியுள்ள பகுதி யாத்திரை நிகழ்ச்சிகளுக்கு உகந்ததாய்ப் பரந்த சமவெளியைக் கொண்டுள்ளது (யாத் 19:1-2; எண் 33;15). சீனாய்ப் பாலைவனம் எர் - ராகா என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது எபெல் மூசாவுக்கு அருகிலுள்ளது. பரந்த பாலைவனத்தில் இம்மலைச்சரிவின் சிவப்புநிறப் பாறை முகடுகள் மிகுந்த அச்சத்தை எழுப்பக்கூடியன. இவையெல்லாம் இதுதான் சீனாய் மலை என்று கூற ஒருவரைத் தூண்டலாம். ஆனால் உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. எபிரேய அரசாட்சிக் காலத்திலேயே இம்மலை எங்கிருந்தது என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. இதன் அருகில் எகிப்திய செம்புச் சுரங்கங்கள் இருந்தன. இது இத்திரோ கேனியர் (கொல்லர்) என்று அழைக்கப்படுவதை (நீதி 1:16) விளக்கலாம். அவர் இந்தத் தாதுப்பொருளை வியாபாரத்தில் பயன்படுத்தியிருக்கலாம்.

தீபகற்பத்தின் தென்பகுதியில் சீனாய் மலை இருக்கிறது என்ற பாரம்பரிய அடிப்படையில் பைசாந்தியர் காலத்தில் இங்குப் பல துறவறமடாலய மையங்கள் தோன்றின. கி.பி. 527-இல் யூஸ்தினியன் இங்கு உயர்ந்த மதில்களையுடைய இப்போதுள்ள துறவற இல்லத்தைக் கட்டினார். இது 11-ஆம் நூற்றாண்டிலிருந்து புனித கத்தரீனாள் துறவற இல்லம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மடத்தில் அசாதாரண பல்வண்ண ஓவியங்களையும் வழிபாட்டு உருவங்களையும், கையெழுத்துப் பிரதி நூல் நிலையத்தையும் காணலாம்.

சீனாய்ச் சுவடி (CODEX SINAITICUS)

இது கி.பி. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்க விவிலியச் சுவடியாகும். இதனை எபிரேய முதல் எழுத்து ஆலப்பு என்ற குறி எழுத்தால் குறிப்பிடுவர். இச்சுவடி 1859-ஆம் ஆண்டு, சீனாய் மலையடிவாரத்தில் அமைந்துள்ள கத்தரீனாள் மடத்தில், கான்ஸ்டன்

டைன் போன் திசன்டோர்ப் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதில் புதிய ஏற்பாடு முழுவதும் காணப் படுகிறது. ஆனால் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் ஒரு சில பகுதிகளே நமக்குக் கிடைக்கின்றன எஸ் 9:9-க்கு முன்புள்ள பகுதிகள் அனைத்தும் சிதைந்துபோய் விட் டன. இத்தொகுப்பில் விவிலியப் புத்தகங்க ளுடன், பர்னபா எழுதிய திருமுகமும், எர் மஸ் ஆயர் என்பவர் எழுதியதில் ஒரு பகுதி யும் சேர்ந்து காணப்படுகின்றன. இப்பழம் ஏடு எழுபதுநூல் என்ற கிரேக்க மொழி பெயர்ப்பிற்கும் புதிய ஏற்பாட்டுக் கிரேக்கப் படிவத்திற்கும் சிறந்த சான்று தரும் ஏட்டுத் தொகுப்பாக விளங்குகிறது.

இச்சுவடித் தொகுப்பில் 346¹/₂ தாள்கள் அடங்கியுள்ளன. இத்தாள்கள் தோலால் செய்யப்பட்டவை. அதிலும் விலையுயர்ந்த, அனேகமாக மான் தோலைக் கொண்டு செய் யப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஒவ்வொரு தாளும் 15 அங்குல நீளம், 13¹/₂ அங்குல அகலம் என்ற அளவில் வெட்டப் பட்டுள்ளன. கவிதை நடையில் எழுதப்பட் டுள்ள விவிலியப் புத்தகங்கள், பக்கத்திற்கு 2 பத்திகள் வீதமும், மற்றப் புத்தகங்கள் பக்கத்திற்கு 4 பத்திகள் வீதமும் எழுதப்பட் டுள்ளன. இங்குப் பன்னிருபாக எழுத்துக் கள் என்ற எழுத்துமுறையைப் பயன்படுத்தி எழுதியுள்ளான். ஒருவரிக்கு எண்ணிக்கையில் 12 முதல் 14 வரை எழுத்துக்கள் எழுதப்பட் டுள்ளன.

புதிய ஏற்பாட்டின் நற்செய்திப்பகுதிகளுக் குப் பக்க ஓரங்களில் அதிகார, பத்திக் குறிப் புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இது யுசேபியு கி.பி. 260-இல் அல்லது 340-இல் நற்செய்தி களுக்குச் செய்து தந்த பிரிவுகளைப் பின்பற்றி யது தானா? என்பதுதெளிவாகத் தெரிய வில்லை.

இத்தொகுப்பு மூன்று எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதுதெளி வாகிறது. இம்மூன்று எழுத்தாளர்களும் வேறுபட்டதிறமை கொண்டவர்கள் என்ப தும், எழுதப்பட்டிருப்பதிலிருந்து புரிகிறது. இச்சுவடியைச் சீனாய் மடத்திலிருந்து பெற்ற திசன்டோர்ப் என்பவரே, இச்சுவடி கி.பி. நான்காம் நூற்றாண்டின் மத்திய காலத் தைச் சேர்ந்தது என்று குறிப்பிடுகிறார். இவ ரின் கருத்தினை அறிவியல் பூர்வமாகச் செய் யப்பட்ட ஆராய்ச்சிகளும் உறுதி செய்கின் றன. இப்பழம் ஏடு எழுதப்பட்டவுடன், அதிலே திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின் றன. இதன் பிறகும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரையிலும் அதில் பல பகுதிகள் திருத்தப் பட்டு அத்துடன் இணைப்புகள் சேர்க்கப்பட் டிருக்கின்றன என்பதும் இவ்வேட்டின் அமைப்பிலிருந்து தெரிகிறது.

திசன்டோர்ப் இச்சுவடியினைக் கண்டு பிடித்த நிகழ்ச்சியும் எழுதப்பட வேண்டிய ஒன்றாகும். 1844-ஆம் ஆண்டு திசன்டோர்ப் முதன்முதல் சீனாய் கத்தரீனாள் மடத்திற்குச் சென்றார். அங்கிருந்த நூலகத்தின் நடுவில், பழைய தாள்களைப் போடும் குப்பைத் தொட்டி ஒன்றிருந்தது. அதில் பழம் தோலே டுகள் கொட்டப்பட்டிருந்தன. அந்நூலகத் தைப் பராமரித்தவரிடம் திசன்டோர்ப் விசா ரித்தபோது, இதைப்போன்று உதவாத, கெட் டுப்போன பழந்தோல் சுவடிகள், பல கூடை கள் இதற்குமுன் எரிக்கப்பட்டுவிட்டன என்று தெரிவித்தார். அப்பழஞ் சுவடிகளை ஆராய்ந்தபோது, பழங்காலத்திய கிரேக்க விவிலியத்தின் தாள்கள் அங்குக் கிடக்கக் கண்டார் திசன்டோர்ப். அவரது கண்களை அவராலேயே நம்ப முடியவில்லை. விவிலி யத்தின் பழம் ஏடுகளைத் திரட்டும் அரிய பணியைச் செய்து வந்தவர் அவர். எனவே அப்பழந் தாள்களையெல்லாம் எடுத்துச் செல்ல அனுமதிகேட்டார். இவரின் ஆர்வத் தைப் பார்த்த அந்த முனிவர், இப்பழம் ஏடுகளின் மதிப்பை உடனே புரிந்து கொண்டு 43 தாட்களை மட்டும் திசன்டோர்ப் பிற்கு வழங்கினார். இந்தக் கிரேக்க விவிலி யம் அடங்கிய 43 தாட்களும் தற்போது லெய்ப்சிக் நகரிலுள்ள அரசு நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

விவிலியத்தின் பழம் ஏடுகள் சீனாய் கத்தரீ னாள் மடத்தில் நிறைந்திருப்பதைத் தெரிந்து

கொண்ட திசன்டோர்ப் 1853-ஆம் ஆண்டு மீண்டும் அங்குச் சென்றார். அங்குள்ள மற்றப் பழஞ் சுவடிகளைப்படிவம் எடுப்பதற்கா வது அனுமதி வேண்டும் என்று கேட்டார். அவர் முயற்சி ஒன்றும் பயனளிக்கவில்லை. கடைசியில் இம்முறையில், துடைத்துப் போடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு சிறிய பழந்தோல் தாள் மட்டும் தான் கிடைத்தது. அதில் ஆதிஆகமத்திலிருந்து 11 வரிகள் மட்டுமே எழுதப்பட்டிருந்தன.

மீண்டும் மூன்றாம் முறையாக 1859-ஆம் ஆண்டு திசன்டோர்ப் சீனாய் கத்தரீனாள் மடத்திற்குச் சென்றார். இம்முறையும் பயன விக்காது என்ற முறையில்தான் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. பிப்ரவரி 7-ஆம் தேதி கெய்ரோவிற்குப் புறப்படலாம் என்று முடிவு செய்து விட்டார். பிப்ரவரி 4-ஆம் தேதி மாலை, சாப்பாட்டுப் பணியை மடத் தில் கவனிக்கும் முனிவருடன், மாலையில் பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் உரையா டலின் முடிவில் தேனீர் அருந்த அழைத்தார் அந்த முனிவர். உணவரையில் நுழைந்ததும், ''நானும் எழுபதுநூலை வாசித்திருக்கிறேன்'' என்று அறையின் மூலையிலிருந்து, சுவடி மூட்டை ஒன்றைத் தூக்கி வந்தார். அது சிவப்பு நிறத் துணியால் சுற்றப்பட்டு கட்டப் பட்டிருந்து. அதை அவிழ்த்துப் பார்த்தார், திசன்டோர்ப். அதில் இவர் 1844-இல் எடுத் துச் சென்ற 43 தாள்களின் மற்றப்பகுதிகள் காணப்பட்டன. திசன்டோர்ப்பின் மகிழ்ச் சிக்கு எல்லையேயில்லை. இச்சுவடியைத் தன் அறையில் தனியாக வைத்து ஆரஅமரப் பார்க்க இதைக்கொடுத்துதவ வேண்டும் என்று கேட்டார் திசன்டோர்ப். அதைத் தன் அறைக்கு எடுத்துச் சென்று விரித்தபோது, ''என் கைகளில் விவிலியத் திரவியம் ஒன்று மின்னிச் சொலிப்பதை நான் உணர்ந்தேன்'' என்று அவரே இந்நிகழ்ச்சியைப் பற்றி எழுதி யிருக்கிறார். ஆனால் இச்சுவடிகளைத் தன் னுடன் அவர் எடுத்துச்செல்ல அனுமதிக்கப் படவில்லை.

பிறகு உருசிய மன்னன் அலக்சாந்தர்சார் வழியாக இப்பழஞ்சுவடிகளைப் பெற முயற்சி செய்தார். இவர் இச்சுவடிகளி லிருந்து படிவம் எடுப்பதற்காக, இச்சுவடிகள் உருசியாவுக்கு அனுப்பப்பட்டன. பிறகு இம்முனிவர்கள் 7000 ரூபிகள் வாங்கிக் கொண்டு உருசிய மன்னனுக்கே கொடுத்து விட்டனர். பிறகு இச்சுவடிகள் 1933 வரை தற்போதைய லெனின்கிராடு, முன்னாளின் பீட்டர்ஸ் பெர்கில் காப்பாற்றப்பட்டு வந் தன. பிறகு இதனை உருசிய அரசு பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலைக்காக அப்போதே ஒரு இலட்சம் பவுன்களுக்கு விற்றுவிட்டது. தற்போதுபிரிட்டிஷ் பொருட்காட்சி சாலை யில் இலண்டனில் இது பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதுதான் நமக்குக் கிடைத்திருக் கும் சீனாய்ப் பழஞ் சுவடியாகும்.

சீனிம் (SYENE - சந்தை)

எசே 29:10; 30:6-இல் குறிப்பிடப்பட் டுள்ள எகிப்தின் தெற்கு எல்லைப் பகுதியில் உள்ள ஓர் இடம். தற்பொழுது அசுவான் என்று அழைக்கப்படும் இக்கிராமம் நைல் நதியின் கிழக்குக் கரையில் முதலாம் நீர்வீழ்ச் சிக்குச் சற்று வடக்கே எகிப்தின் மேல் பகுதியில் அமைந்துள்ளது. இங்குக் கிடைக் கும் வெளிர் சிவப்புக் கற்கள் பண்டைய எகிப்தில் கட்டடங்கள் கட்டப் பயன்படுத் தப்பட்டன. இக்கற்களுக்காகச் சீனிம் வணிக நிலையமாக முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இது மிகவும் தொலைதூரத்தில் உள்ள ஊர் என்பதை எசா 49:12 குறிப்பிடுகின்றது. ''இதோ, இவர்கள் தொலைவிலிருந்து வருவார்கள். சிலர் வடக்கிலிருந்தும் சிலர் மேற்கிலிருந்தும் சிலர் சீனிம் நாட்டி லிருந்தும் வருவார்கள்.''

இது கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் யூதர் களின் இராணுவக் குடியிருப்பாக இருந்த 'எலிபென்டைன்' தீவிற்கு எதிரே உள்ளது.

சீனியர் (SINITES - களிமண்)

கானானியர் என்ற இனத்தவருள் சீனியர் என்பவரும் அடங்குவர் (ஆதி 10:7; 1 நாள் 1:15). ஒரு சிலர் லெபனோன் சரிவுகளில் இருந்த சின்னு என்ற நகரினர் இவ்வாறு

அழைக்கப்பட்டார்கள் என்றும், வேறு சிலர் வட பெனிசியாவில் உள்ள சியானு நகர மக்களே இவர்கள் என்றும் கூறுவர். இன்னும் இவர்களது பூர்வீகத்தைப் பற்றி நிலையான கருத்து உருவாக்கப்படவில்லை.

சீன்

இது எபிரேய நெடுங்கணக்கில் இருபத்தி ஒன்றாவதுஎழுத்தாகும். அகரவரிசைப் பாடல் சங் 119-இன் இருபத்தியொன்றாம் அடிக்குத் தலைப்பாக உள்ளது. இதன் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தோடு தொடங்குகிறது.

சீன் பாலைவனம் (SIN, WILDERNESS OF - *களிமண்)*

ஏலிமுக்கும் சீனாய்க்கும் இடையில் உள்ள பகுதி *'சீன்'* பாலைவனம் என்று விவிலியத்தில் (*யாத் 16:1; 17:1; எண் 33:11-12*) கூறப்பட்டாலும், *யாத் 17:1*-இல் சீன்பாலைவனத்திற்கும் சீனாய்க்கும் இடையில் இரபிதிம் என்ற இடம் இருப்பதாகவும், எண் *33:11-12*-இல் *'சீன்'*னுக்கும் இரபிதிமுக்கும் இடையில் இரு இடங்களில் இஸ்ராயேலர் தங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது.

இப்பாலைவனம் எங்கிருந்தது என்று உறுதியாகக் கூறமுடியாது. ஒருவேளை சீனாய்க்கு அருகில் இருந்திருக்கலாம். சீனாய் என்ற பெயர் ''*சீன்*'' என்பதிலிருந்து வந்திருக்கலாம். சீன் பாலைவனத்தில்தான் மன்னா முதலில் பொழியப்பட்டது.

''சின்'' என்பதற்கும் ''*சீன்*'' என்பதற்கும் உள்ள ஒற்றுமையினால் இடம் குழம்ப வாய்ப்புண்டு. மேலும் யூதாவுக்குத் தெற்கிலும் சீனாய்க்கு வடகிழக்கிலும் சின் என்று ஒரு பாலைவனம் உண்டு (*எண் 33:36*). இவ்விரு பெயர்களுக்கும் ஏற்பட்ட குழப்பம் சின்பாலைவனத்தைக் குறிப்பிட்ட இடத்தில் இருப்பதாகக் கூறவிடாமல் தடுக்கிறது. எனவேதான் சின் பாலைவனத்தின் அமைவிடத்தைப்பற்றி இன்னும் நிலையான கருத்து உருவாகவில்லை.

சு

சுக்காத்தியர், சுக்காவியர் (SUCATHITE)

யூதாவின் யகபேசில் குடியிருந்த எழுத்தர்களின் குடும்பங்களில் ஒன்று. இவர்கள் காலேபின் வழித்தோன்றல்களாகப் பட்டியலில் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் கேனியர்களாக அல்லது இரேக்காபியர்களாகக் கருதப்படுகின்றனர் (1 நாள் 2:55).

சுக்கான் (RUDDER)

கப்பல்கள், படகுகள் ஆகியவற்றின் போக்கைக் கட்டுப்படுத்தும் கருவி (அ.ப. 27:40; யாக் 3:4).

சுக்கிம், சுக்கியர் (SUKKIM)

எருசலேமைத் தாக்குவதற்காக எகிப்திய மன்னன் சிசாக்கு கொண்டு வந்த படையின் ஒரு பகுதி (2 நாள் 12:3). இவர்கள் லிபியா மரபில் தோன்றிய படைவீரர்களில் ஒரு வகுப்பினர் என்று கருதப்படுகின்றனர்.

சுக்கோத்து (SUCCOTH - கூடாரம்)

1. கிழக்குப் பாலஸ்தீனத்தில் யோர்தான் பள்ளத்தாக்கு அருகில் அமைந்துள்ள காதின் நகர்.

யாக்கோபு இந்த இடத்தில் வீடு கட்டி, தன் மந்தைகளுக்குக் கூடாரம் அமைத்ததால் இந்த இடத்திற்குச் சுக்கோத்து (கூடாரம்) என்று பெயர் இடப்பட்டதாகக் கூறப்படுகிறது (ஆதி 33:17). ஆனால் இது ஒரு பழைய கானானிய நகரம் என்றும், அறுவடைத்திருநாள் இங்கு நடைபெற்றதால் இப்பெயர் பெற்றது என்றும் கருதப்படுகிறது.

சீகோனுடைய அரசின் ஒரு பகுதியாக விளங்கியது; காதின் புதல்வர்களுக்கு அவர்களின் வம்சங்களின்படி சொந்தமாயிற்று (யோசு 13:27). கிதியோனும் அவனது படைவீரர்களும் மிதியானியரைத் துரத்திச் சென்றபோது சுக்கோத்து ஊராரிடம் களைப்பைப் போக்க உணவு கேட்டபோது அவ்வூரார் மறுத்தனர். கிதியோன் வெற்றி பெற்றுத் திரும்பும்போது சுக்கோத்து ஊர் மக்கட் தலைவர்களையும் மூப்பர்களையும் சித்திரவதை செய்து கொன்றார் (நீதி 8:5-9. 14-16).

சாலமோனின் ஆலயத்திற்கு வெண்கலப் பாத்திரங்கள் இங்குதான் வார்க்கப்பட்டன (1 அர 7:46; 2 நாள் 4:17). சங்கீதங்களில் சுக்கோத்துப் பள்ளத்தாக்கு பற்றி இரண்டு இடங்களில் வந்துள்ளன (சங் 60:6; 108:7). யாபோக்குக்கு வடக்கே .5 கி.மீ. தொலைவில் யோர்தானுக்குக் கிழக்கில் உள்ள தேல் தெயிர் - அல்லா என்பதுதான் சுக்கோத்து என்று பொதுவாக அடையாளம் காட்டப்படுகிறது. இது மிகச் செழிப்பான பகுதியாகும். இங்கு மத்திய வெண்கலக் காலத்திலிருந்தே மக்கள் குடியேறியுள்ளனர். வேறுசிலர் இவ்விடத்தைத் தேல் ஏல் - அக்சாவாக அடையாளம் காட்டுவர். இதுவும் செழிப்பான பகுதியாகும்.

2. ஓர் எகிப்திய நகர். யாத் 12:37; 13:20; எண் 35:5-6-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலைப் பயணம் மேற்கொண்ட போது வழியில் தங்கிய முதல் இடம். இங்கு இஸ்ராயேலின் தலைப்பேற்றாண்கள் அர்ப்பணிக்கப்பட்டனர் (யாத் 13:2.11-15). இது பொதுவாகத் தேல் ஏல் - முஸ்குத்தாவாக அடையாளம் காட்டப்படும். இவ்விடம் இஸ்ராயேலர் தங்களது விடுதலைப் பயணத்தைத் தொடங்கிய இடமாகிய இராமசேசுவிலிருந்து 52 கி.மீ. தொலைவிலுள்ளது.

சுக்கோத்து (SUKKOTH - கூடாரம்)

யூதத்துவத்தின் முப்பெரும் யாத்திரை விழாக்களில் ஒன்று காண்க: கூடாரவிழா, சேகரிப்பு விழா.

சுக்கோத்து - பெனோத்து (SUCCOTH -BENOTH - பெண்பிள்ளைகளின் கூடாரம்)

அசீரியர்களால் கி.மு. 722-க்குப் பிறகு பாபிலோனில் இருந்து சமாரியாவில் குடியேறியவர்கள் வழிபட்ட ஒரு தெய்வம் அல்லது

தெய்வங்கள் (2 அர 17:30). இந்தப் பாபிலோனியக்கடவுள் மார்துக்கின் துணைவியாகிய தெய்வம் சர்பனித்து என்று கருதப்படுகிறது. பொதுவாக இந்தப் பெண் தெய்வம் சீர்-பானித்து (விதை உண்டாக்குகிற) என்று அழைக்கப்படுகிறது. சுக்கோத்து என்ற பெயரை உள்ளடக்கியுள்ளதால் சனி தெய்வமாகிய பாபிலோனியச் சக்கூத்துவாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது (ஆமோ 5:26). பெயர் ''பெண் பிள்ளைகளின் கூடாரம்'' என்று பொருள்கொள்வதால், இது தெய்வத்தைக் குறிக்கவில்லை; வழிபாட்டு விபச்சாரிகளுக்குப் பாபிலோனியர் கட்டிய வீட்டைக் குறிக்கிறது என்றும் கூறலாம்.

சுங்கத்துறை (TAX OFFICE)

இயேசு மத்தேயுவை - லேவியை அழைத்த போது இது குறிப்பிடப்படுகிறது (மத் 9:9; மாற் 2:14; லூக் 5:27). இது வணிகப் பொருட்கள் மேல் விதிக்கப்பட்ட வரிகளைச் செலுத்தும் அலுவலகமாக இருக்கலாம்.

சுட்டிகள் (HEADBANDS)

அனேகமாகத் தங்கம் அல்லது வெள்ளியிலான தலை அணிகலன்களாக இருக்கலாம் (எசா 3:18-20).

சுண்டெலி (MOUSE)

கொறிக்கும் உயிரின வகையைச் சேர்ந்த எலிவகையில் ஒன்று. இவை தீட்டானவை. இவற்றை உண்ணக்கூடாது (லேவி 11:29). எசா 66:17 - இல் புற இன மக்களின் வழிபாடு குறிக்கப்படுகிறது. இதில் எலிகள், சுண்டெலிகள் உண்ணப்பட்டன. இறைவனால் அனுப்பப்பட்ட சுண்டெலிகளின் படையெடுப்பிற்குக் குற்ற நீக்குப் பலியின் ஒரு பகுதியாகப் பெலிஸ்தியர்கள் ஐந்து பொன் சுண்டெலிகளையும் உடன்படிக்கைப் பேழையோடு இஸ்ராயேலரிடம் அனுப்பினர் (1 சாமு 6:4-18).

சுண்ணாம்பு (LIME)

சுவரில் வெள்ளையடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும், சுண்ணாம்பு காரம் நிறைந்த மாவு. சுண்ணாம்புக் கற்களையும், சிப்பிகளையும் எரித்து இந்த மாவினைத் தயாரிப்பார்கள். பாலஸ்தீனச் சுண்ணாம்புக் கல், சுண்ணாம்புக் கரியாகவும், காரை செய்யும் கூட்டுப்பொருட்களில் மிக முக்கியமானதாகவும் இருந்தது. இது, சூடாக்கப்பட்ட உடனேயே சுண்ணாம்பாகும் தன்மை கொண்டது. எசா 33:12-இல் சுண்ணாம்பு அவமான அழிவின் அடையாளமாக எரிக்கப்படுவதோடு தொடர்புடையதாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்த விவிலிய வாக்கு, ''சுண்ணாம்பாக எரிக்கப்பட்டது'' அல்லது ''சுண்ணாம்பால் எரிக்கப்பட்டது' என்று இரு பொருள்களில் பயன்படுத்தப்படலாம். முதல் பொருளின் அடிப்படையில்தான் ஆமோ 2:1 விளக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், மோவாபு, ஏதோம் அரசனின் எலும்புகளைச் சுட்டுச் சாம்பலாக்கினான் என்று எழுதப்பட்டிருக்கின்றது.

இரண்டு விவிலிய வாக்குகளிலும், எலும்புகள் எரிக்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருப்பதால் இது சுண்ணாம்பு பாஸ்பேட்டாக இருக்கலாம். இந்தச்சொல் ஒரு சுண்ணாம்புச் சாந்தையும் குறிப்பிடுகின்றது (உப 27:2). சுண்ணாம்பு, சுவர், தரை, தொட்டி போன்றவற்றின்மேல் பூசப்படும் சாந்திலும் பயன்பட்டது. மற்றப் பல தேவைகளுக்காகவும் பயன்படும் வகையில், சூளையில், உடைத்த சுண்ணாம்புக் கற்கள் எரித்துத் தயாரிக்கப்படுகின்றன. வேகம் குறைந்த சுண்ணாம்பு, கம்பளித் துணிகளுக்கான சாயம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

சுண்ணாம்புக் கற்கள் (CHALKSTONES)

இவைகள் பாலஸ்தீனிய பாறைகளிலிருந்து எடுக்கப்பட்ட கற்களாகும். இக்கற்கள் யூதேயாவிற்குக் கிழக்கே உள்ள மலைக்குன்றுகளில் அதிக அளவிலும் இந்நாட்டிற்கு மேற்கிலும், வடக்கிலும் உள்ள குன்றுகளில் குறைந்த அளவிலும் காணப்படுகின்றன. இவைகள் மிருதுவானவைகளாகவும், அழிந்து போகக் கூடியவைகளாகவும், வறண்டுபோனவைகளாகவும் இருக்கின்றன. இவற்றில் எதுவும் வளர்வதில்லை. எசா 27:9-இல் ''சுண்ணாம்புக் கற்களை

உடைத்துத் தூள் தூளாக்குவதுபோல், அவர் அவர்களின் (இஸ்ராயேல் சிலைகளின்) பலி பீடக்கற்களுக்குச் செய்வார்'' என்று கூறப் பட்டுள்ள கூற்று இக்கற்களின் தன்மையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

சுத்த, அசுத்த உணவு (FOODS, CLEAN AND UNCLEAN)

சுத்தமான உணவு என்பது உண்ணலாம் என யூதச் சட்டம் அனுமதிக்கும் உணவு வகைகளாகும். அசுத்தமான உணவு என்பது உண்ணலாகாது என அச்சட்டம் தடுப்பவை யாகும். இவற்றின் முக்கிய பட்டியல் லேவி 11; உப 14-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

காண்க: தூய்மையானது, தூய்மையற்றது.

சுத்தியல், சம்மட்டி, கொட்டாப்புளி (HAMMER, MALLET)

விவிலிய காலத்தின் தொடக்கத்திலிருந்து கற்களால் செய்த சுத்தியல் வைத்துக் கையால் வேலையை மேற்கொண்டிருக்கின் றனர். வெண்கல காலத் தொடக்கத்தில் கையால் நன்கு பிடிப்பதற்கு ஏதுவாகக் கற்க ளில் துளையிடப்பட்டிருக்கிறது. மரம் அல் லது எலும்பினால் ஆன சுத்தியல் எல்லாக் காலங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. ஆனால் பாலஸ்தீனத்தில் உலோகத் தலையுடன் கூடிய சுத்தியல் அரிதாகக் காணப் படுகிறது; இதற்கு உலோகத் தட்டுப்பாடு காரணமாக இருக்கலாம். ஆகவே கற்கள் திருப்திகரமான பகரப்பொருளாகப் பயன் பட்டன. அதே நேரத்தில் வெட்டும் முனை யுடன் கூடிய கருவிகள், ஆயுதங்கள் ஆகிய வற்றிற்கு உலோகம் தேவைப்பட்டது.

இரும்பால் செய்யப்பட்ட சுத்தியல் 1 அர 6:7-இல் குறிக்கப்படுகிறது. இது கற்களைச் செதுக்குபவர்களாலும் இரும்புக் கொல்லர் களாலும் பயன்படுத்தப்பட்டது.

இக்கருவி நீதி 4:21; 5:26; எசா 44:12; எரே 23:29; 51:20; எசே 9:2; சீரா 38:28 ஆகிய பகுதிகளில் குறிக்கப்படுகிறது. இச்சொல் மரக் கொட்டாப்புளியையும் குறிக்கும். இத் தகைய கருவியைக் கொண்டுதான் யாவேல் சீசராவைக் கொன்றாள் (நீதி 5:26). இது கூடாரத்தின் முளைகளை அடிப்பதற்குப் பயன்பட்ட ஒரு கருவியாக இருக்கலாம் (4:21).

சுத்தேலகு (SHUTHELAH - முரண்பாடு, வேறு பாடு)

1. இவர் எப்பிராயிமின் முதல் மகனும் ஏரான் என்பவரின் தந்தையுமாவர். இவரது வழித்தோன்றல்கள் சுத்தேலகியர் என்று அழைக்கப்பட்டனர் (எண் 26:35-36; 1 நாள் 7:20).

2. எப்பிராயிமின் குலத்தைச் சேர்ந்த சாபாது வின் மகன் (1 நாள் 7:21). இவர் 1-இல் வருபவராகவோ அவருடைய வழித்தோன்ற லாகவோ இருக்கலாம்.

சுபவேல் (SHUBAEL)

செபுவேல் என்ற பெயரின் மற்றொரு வடிவம்.

சுப்பீம் (SHUPPIM - பாம்பு)

1. பென்யமின் குலத்தைச் சேர்ந்த ஈரின் இரு புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:12). சுப்பீம் மற்றும் குப்பிம் (உப்பிம்), ஆகி யவை பென்யமினின் ஒரு தலைமுறைப் பட்டியலில் வரும் செப்புபாம் மற்றும் கூப் பாம் (உபாம்) (எண் 26:39; ஆதி 46:21; 1 நாள் 8:5) என்பனவற்றின் மறுபெயர்களா கும். இவை குழப்பமிக்க மனாசேயின் பட்டி யலில் வருவது (1 நாள் 7:15) வாசகம் பழுதுபட்டதன் விளைவாகும்.

2. எருசலேமின் லேவிய வாயில் காவ லர்களில் ஒருவர். தாவீது காலத்தில் இவ்வே லைக்கு ஆட்களைப் பிரித்தெடுக்க சீட்டுப் போட்டதில் இவருக்குக் கோவிலின் மேற் குப் புற வாயிலும், மேட்டுப் பாதையை நோக்கிய சல்லகேத்து வாயிலும் விழுந்தன (1 நாள் 26:16).

சுமேர், சுமேரியா (SUMER, SUMERIA))

இது பிற்காலத்திலே பாபிலோனியா என அழைக்கப்பட்ட நாடு. யூப்பிரத்தீசு, திகிரிசு நதிக்கரையில் இக்காலப் பாக்தாதுக்கும் பார

சீக வளைகுடாவுக்கும் இடையில் அமைந் திருந்தது. இங்கு வளர்க்கப்பட்ட சுமேரிய நாகரீகம் மனித வரலாற்றிலே முதன் முதலாகத் தோன்றிய நாகரீகமாகும். சுமேரிய நாகரிகம் விவிலியத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இவர்தம் நாகரீகம் இஸ்ராயேலரைப் பெரிதும் பாதித்துள்ளது. சுமேரியர்கள் கி.மு. 3000-ஐ ஒட்டிப் பாரசீக வளைகுடா வழியாக மெசபொத்தாமியா வந்து சேர்ந்தனர்.

சுமேரியர்கள் சிற்பக் கலையையும், கட்டடக் கலையையும் வளர்த்தனர். அரண்களையும் எழுப்பி நகரங்களைக் காத்தனர். சுமேரிய கண்டுபிடிப்புகளில் முக்கியமானவை ஆப்பு வடிவ எழுத்துக்களாகும். சுமேரிய இலக்கியங்கள் பிற்காலத்தில் வளர்ந்தவை. சுமேரிய மொழி அவர்தம் எழுத்தர்களால் பாதுகாக்கப்பட்டது. இந்த இலக்கியங்கள் சரித்திர, ஞான, சமய சம்பந்த கருத்துக்களைக் கொண்டவை. சுமேரிய சமயமும் புராணங்களும் மெசபொத்தாமியாவில் வாழ்ந்த செமித்திய இனத்தவரின் சமய, புராணங்களைப் பெரிதும் பாதித்தன.

சுமேரிய மக்கள் மறுவாழ்வை நம்பினரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அவர்தம் கல்லறைகள் வியக்கத்தக்கவை.

சுமை, பளு (BURDEN)

இச்சொல் இயற்பொருளில் பாரமான பொருளைக் குறிக்கிறது. இச்சொல் உவமையாகவும் பயன்பட்டுள்ளது. இஸ்ராயேல் மக்கள் ஒரு பளுவெனவும் (எண் 11:11.17; உப 1:12), ஒரு தனிமனிதன் சுமையாவதும் (யோபு 7:20) உருவகமாகக் கூறப்பட்டுள்ளன.

சுரங்க வேலை / சுரங்கத்துறை - (MINING)

விவிலிய எபிரேய மொழியில், ''சுரங்கம்'' அல்லது ''சுரங்க வேலை'' என்பனவற்றைக் குறிப்பிடக்கூடிய வார்த்தை இல்லாததால், எபிரேயர்களின் வாழ்க்கையுடன் தொடர்பு இல்லாததாக இது கருதப்படுகிறது. யோபு நூல் 28:1-இல் வரும் சொல் வெள்ளி கிடைக்கக்கூடிய ஓர் இடத்தைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இச்சொல் ''விளை நிலம்'' என்ற பொருளையே கொண்டுள்ளது.

சுரங்கம் தோண்டும் செயலுக்கு யோபு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும். அதனால்தான் அவர் ''மக்கள் குடியிருப்புக்குத் தொலைவில் சுரங்கத்தைத் தோண்டுவர்'' (யோபு 28:4); ''எட்டினமட்டும் தோண்டி இருட்டிலும் மரண இருளிலும் கனிமப் பொருளைத் தேடுகிறான்'' (28:3) என்கிறார்.

1. செம்புச் சுரங்கம்: செம்பு உலோகப் பொருள் வாடி அராபிய ஓடையின் இரு பக்கங்களிலும் காணப்படுகின்றது. மண்ணியலின் அடிப்படையில், இங்குக் காணப்படும் உலோகம் சீனாய்த் தீபகற்பத்தில் உள்ள உலோகத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் சீனாய்ச் சுரங்கங்களிலிருந்துதான் எகிப்து தனக்கு வேண்டிய செம்பைப் பெற்றுக் கொண்டது. பிற்பட்ட காலத்தில்தான் அராபியச் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பட்டன (கி.மு. 2200-1800).

சீனாய்ச் சுரங்கங்கள் மீது எகிப்தியர் காட்டிய உற்சாகமே சேயிர் மலையில் குடியேறியவர்களையும் இந்தச் செயலில் ஈடுபட வைத்தது. பூனோன் குடிமக்கள் வேலை செய்த சுரங்கம் இப்போது உம்மெல் அமாத் என்று அழைக்கப்படுகிறது. இது சுமார் 9 கி.மீ. தென்கிழக்கே அமைந்துள்ளது. இந்தச் சுரங்கம், ''தூண்களின் தாய்'' என்ற பொருள் கொண்ட பெயரைத் தாங்கியுள்ளது. ஏனென்றால் இது, கூரைப் பகுதியைத் தாங்குவதற்காகப் பண்டைய சுரங்க வேலையாட்களால் விடப்பட்ட பாறைத் தூண்களைக் குறிப்பிடுகின்றது.

முதலாம் இரண்டாம் இரும்புக் காலத்தில் (கி.மு. 1200-600) அராபிய செம்பு அதிக அளவில் தோண்டி எடுக்கப்பட்டது. இந்தச் செம்பைத் தோண்டி எடுக்கும் செயலை முதலில் கேனிய மக்கள் செய்தனர். சுரங்கங்

களுக்கு அருகில் உள்ள செலா என்ற இடத்திலேயே அவர்கள் தங்கியிருந்தனர். இவர்களிடமிருந்தே எபிரேயர்கள் சுரங்கவேலையையும் உருக்கு வேலையையும் கற்றுக்கொண்டனர் என்பதில் சந்தேகமில்லை. எபிரேய மன்னராட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர், அராபியாவின் உலோகப் பொருட்களைக் கட்டுப்படுத்துவது, அக்காபா வளைகுடாவுக்குச் செல்ல வழி அமைத்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் ஏதோம் மன்னர்களுடன் எதிர்ப்பு உருவாகியது. யூதாவிற்கும் ஏதோமிற்குமிடையே போர்கள் நடந்தது (தாவீது காலம் தொடங்கி யோசபாத்து காலம் வரை மற்றும் அமாசியா காலம் முதல் ஆகாசு காலம் வரை).

வட அராபியாவில் மிக முக்கியமான சுரங்கமாகக் கருதப்பட்டது, கிர்பெட் -நகாஸ் என்ற இடத்தில் இருந்தது. இது சாக்கடலுக்குத் தெற்கே ஏறக்குறைய 26 கி.மீ. தொலைவில் இருந்தது. இது ஈர் - நகாசு என்ற இடமாக (1 நாள் 4:12) அடையாளம் காட்டப்படுகிறது. இதுவே செம்பு நகர் என்று அழைக்கப்படுகிறது. தென் அராபியாவின் பெரிய சுரங்கத்துறை, ''மெனே இயே'' என்ற இடத்தில் இருந்தது. இது அராபியாவின் மேற்குப்பகுதியில், வளைகுடாவிற்கு ஏறக்குறைய 35 கி.மீ. தொலைவில் அமைந்திருந்தது.

அராபியாவில் கடுமையான வெப்பமும், தண்ணீர் வறட்சியும் நிலவியதால், மழைக் காலங்களில்தான் சுரங்கத் தொழில் நடைபெற்றது. அடிமைத் தொழிலாளர்கள் இவ் வேலைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதற்குச் சுவர் சூழ்ந்த குடியிருப்புகள் ஆதாரங்களாக உள்ளன. இந்த ஆதாரங்கள் எபிரேய மன்னராட்சியின் காலத்தைச் சேர்ந்தவை. எனவே கேனிய மக்களிடம், அடிமைகளைப் பயன்படுத்துமளவிற்கு அரசியல் சக்தி இருந்ததா என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றாக உள்ளது.

2. இரும்புச் சுரங்கங்கள்: அராபிய சுரங்கங்களிலும், உருக்குப் பட்டறைகளிலும் காணப்படுகின்ற இரும்புக் கசடு போன்ற பல இரும்புத் துண்டுகள், இரும்புக் காலத்தில் அங்கு இரும்பும், செம்பும் தோண்டியெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக உள்ளன. ஆனால் இரும்புச் சுரங்கம் என்று குறிப்பிடும்படி எந்த இடமும் குறிப்பிடப்படவில்லை. பெத்திராவிற்குத் தென்கிழக்கில் ஏறக்குறைய 7. கி.மீ. தொலைவில் உள்ள வாடி யெஸ்சபிராவில் ஓரளவிற்கு இரும்புப் பொருட்கள் காணப்படுகின்றன. ஆனால் இது நபத்தேயர் காலம் வரை நடைபெற்றதாகத் தெரியவில்லை.

வடக்கு யோர்தான் பகுதியிலுள்ள அய்லூன் (கிலெயாது) என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உலைக்களங்கள் இடைக்காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் மகாரத் வார்தாவில் காணப்படும் இரும்புச் சுரங்கம் பண்டைக் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. பாசான் நாட்டு மன்னரான ஓகு, இரும்புப் படுக்கையைப் பயன்படுத்தியதாகப் பாரம்பரியம் உள்ளது (உப 3:11). இதன் மூலம், வடக்கு யோர்தானில், மோசேயின் காலத்திலோ அதற்கும் முன்னரோ இந்த இரும்புச் சுரங்கவேலை நடைபெற்றிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

உப ஆகமம் (3:11) எழுதப்பட்டபோது ஒரு மன்னனின் சிம்மாசனம், இராபாவில் இருந்த பெரும் கற்கால நினைவுச்சின்னத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

தாவீது அரசர் காலத்தில் ''இரும்பு மனிதன்'' என்ற பொருளுடைய பர்சில்லாய் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளதால் இது இரும்புத்தொழிலுக்கு ஆதாரமாக அமைகின்றது. உப ஆகமத்தில் வாக்களிக்கப்பட்ட நாட்டைப்பற்றிக் குறிப்பிடுகையில், ''அந்த நாட்டின் பாறைகள் அனைத்தும் இரும்பு, அதன் மலைகளிலிருந்து செம்பு வெட்டி எடுக்கலாம்'' (உப 8:9) என்று எழுதப்பட்டுள்ளது. எனவே இத்தகைய தொழில்கள் மோசேயின் காலத்திலும் நடந்துள்ளன என்று கருதப்படுகிறது.

சுருள், ஏட்டுச்சுருள் (ROLL, SCROLL)

தோல் அல்லது நாணல் தாளால் ஆன சுருள். எழுதுவதற்குப் பயன்பட்டது (எஸ் 6:1; எபி 10:7; எசா 8:1; 34:4).

சுரிசதாய் (ZURISHADDAI - சதாய் (வல்லமை மிக்கவர்) என்பாறையாவார்)

பாலைவனத்தில் சிமியோனின் கோத்திரத்துக்குத் தலைவராய் இருந்த செலுமியேலின் தந்தை ஆவார் (எண் 1:6; 2:12; 7:36. 41; 10:19). பாறையோடு தொடர்புபடுத்தி இறைவனைக்குறிக்கும் இச்சொல்லும் பிற சொற்களும் பாதுகாப்புக்கு இருப்பிடமான கடவுளை உருவகப்படுத்துதலாகும் (சங் 89:26).

சுவர், மதில் (WALLS)

பழைய ஏற்பாட்டில் சுவர்கள் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றன. திராட்சைத் தோட்டங்களுக்கும், வயலுக்கும் சுற்றுச் சுவர்கள் இருந்தன (எசா 5:5). இவை செதுக்காத கற்களால் கட்டப்பட்டவை. வீட்டின் மதில்கள் செதுக்காத கற்களாலும், மண் அல்லது செங்கற்களாலும் கட்டப்பட்டன. கரடு முரடான கற்களால் கட்டப்பட்ட நகரக் கோட்டைச் சுவர்கள் உயரமானவையாகவும் அதிக அகலமுடையவையாகவும் இருந்தன (யோசு 2:15; 6:5).

சுவர் அல்லது மதில்கள் பற்றிய புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள் சிலவே (அ.ப. 9:25; 2 கொரி 11:33; எபி 11:30; திருவெளி 21:12;...).

சுவர்க்கோழி (CRICKET)

இது சப்தமிடும் ஒருவகைப் பூச்சி (வெட்டுக்கிளி போன்றது). நான்கு காலால் நடமாடி, தரையிலே தத்திப்பாயும்படி மிக நெடிய பின்னங்காலை உடைய இந்தப்பூச்சிகளை மக்கள் உண்ணலாமென லேவியர் ஆகமம் கூறுகிறது (லேவி 11:22).

சுவர்ணரத்தினம் (CHRYSOLITE)

எருசலேம் மதில்களின் அடிக்கற்களில் இது ஏழாவது கல்லாகும் (திருவெளி 21:20). இது மஞ்சள் நிறத்தில் இருக்கலாம். மற்ற இடங்களில் இது மரகதக்கல் என்று மொழி பெயர்க்கப்படுகிறது (எசே 1:16;10:9). உருவகமாகவும் பயன்பட்டுள்ளது (உ.ச. 5:14; தானி 10:6).

சுவிகாரம் (ADOPTION)

1. கிறிஸ்து, தன்மையால், உள்ளார்ந்த பண்பில் இறைவனின் மகனாவார். இரண்டாந்தர, தழுவிய பொருளில் கிறிஸ்துவன் இறைவனின் மகனாவார். இக்கருத்தை உயிர்ச்சித்திரமான முறையில் எடுத்துக்கூறப் பயன்படுத்துவதில் சுவிகாரம் என்ற கருத்தின் இறையியல் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. இறைவன் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்ததால் அது இறைவனின் மகனாகிறது (ஓசே 11:1;...). திருமுழுக்காலும் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தாலும் கிறிஸ்துவன் இறைவனின் மகனாகிறான் (உரோ 8:15; கலா 4:6). அதனால் இறைவனை ''அப்பா! தந்தாய்!'' என்றழைக்கும் உரிமை பெறுகிறான். இந்த அழைப்பு, இயேசுவின் தனிச் சிறப்பான நிலையினால் (உரோ 1:4; பிலி 2:6தொ; கொலோ 1:15 தொ) அவரது வாயிலிருந்து முதலில் தோன்றுகிறது (மாற் 14:36).

2. பழைய ஏற்பாடு: பழங்கால மேற்காசியாவில், மரபுரிமையையும் சொத்துரிமையையும் உறுதிப்படுத்த சுவிகாரம் ஒரு முக்கிய சாதனமாக விளங்கியது. ஆதியாகமத்திலேயே இப்பழக்கம் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆபிரகாம் தனது அடிமையான தமஸ்கு நகர் எலியேசரைத் தன் இல்லத்திற்கு உரிமை மகனாகக் கருதுகிறார் (ஆதி 15:2தொ). பார்வோனின் மகள் மோசேயைத் தத்து எடுக்கிறாள் (யாத் 2:10). எஸ்தர் மொர்தக்காயால் மகளாக ஏற்றுக்கொள்ளப்படுகிறாள் (எஸ்த 2:7. 15). செம்கேமில் உடன்படிக்கை நிறுவப்பட்டபின் நாடு யாவேயின் உடைமையாய்க் கருதப்பட்டது. அவர் பன்னிரண்டு குலத்தவர்க்கும் அந்நாட்டைப் பகிர்ந்தளிக்கிறார். அப்பகுதிகளின் உரிமை விற்கப்படவோ மாற்றப்படவோ முடியாததால், கற்பனையான சுவிகாரமுறை இஸ்ரா

யேவில் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் இவ்வழக்கு செமித்தியப் பண்பாட்டில் இருந்தது பற்றிக் கம்முராபியின் சட்டமும் நூசி ஏடுகளும் சான்று பகர்கின்றன.

3. புதிய ஏற்பாடு: புதிய ஏற்பாட்டில் இக் கருத்து உரோ 8:15-இலும் (பிள்ளைகளாக்கும்), 8:23-இலும் (இறைமக்களாக்கப் படும்), 9:4-இலும் (கடவுளின் மக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள்), கலா 4:5-இலும் (இறைமக்களாய் இருப்பதால்), எபே 1:5-இலும் (நம்மைத் தம் பிள்ளைகளாக்கிக் கொள்ள) காணப்படுகிறது.

பவுல் இக்கருத்தைச் சட்ட உருவகமாகப் பயன்படுத்தி முக்கியமான இறையியல் போதனையை அளிக்கிறார். சுவிகாரம் பற்றிய உரோமையரின் சட்ட வழக்குகளை நன்கு அறிந்தவராய்ப் பவுல் இக்கருத்தை விரிவுபடுத்தி, விசுவாசத்தை ஏற்றுக்கொள்வது விசுவாசியைச் சுவிகாரப்பிள்ளையாக இறைவனின் குடும்பத்துக்குள் கொண்டு வருகிறது என்று காட்டுகிறார். இதனால் வரும் மகன் தன்மை, இரண்டாந்தர, தழுவிய பொருளில் புரிந்து கொள்ளப்படுகிறது. இந்த மகன்தன்மை, கிறிஸ்துவின் நேரடி மகன் தன்மையோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது. இது ஆன்மீக சுவிகாரமாகும். இது வீழ்ச்சியால் இழந்துபோன இறைவனோடு கொண்டிருந்த இயற்கையான குடும்ப உறவின் இடத்தை நிரப்புகிறது.

உரோ 8:15-இல் பயன்படும் உருவகம், கிறிஸ்துவப் பாணியில் வாழவேண்டிய பொறுப்பை விசுவாசிக்கு நினைவுபடுத்துகிறது. இந்த வாழ்வு கிறிஸ்துவோடு துன்புறுவதையும் உள்ளடக்கும் (8:17). உரோ 8:23 ''நம் உடல் விடுதலையாக்கப்படும் நாளை எதிர்நோக்கிய'' நிலையில் இறைமக்களாக்கப் படும் நாளை எதிர்நோக்குகிறது. இந்தச் சுவிகாரம் இன்னும் உண்மையாகவில்லை; அதை ஒரு வாக்குறுதியாகவே பவுல் கருதுவதாகத் தெரிகிறது. இந்த மகன் தன்மை, இரத்த உறவின் அடிப்படையில் வராமல், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டமுறையில் அருளப்படுகிறது என்பது உரோ 9:4.6-இல் தெளிவாகிறது. இப்பகுதி எல்லா இஸ்ராயேலரும் இறைவனின் சுவிகாரப்பிள்ளைகள் அல்லர் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

மற்ற இரு பகுதிகளில் சுவிகாரம் என்ற உருவகத்திற்குப் பவுல் பரந்த இறையியல் பணித்திட்டம் அளிக்கிறார். கிறிஸ்து, தமது மீட்புச்செயலால், விசுவாசி, இறைவனின் குடும்பத்துக்குள் சுவிகாரம் பெறுவதை உறுதிப்படுத்த வந்தார் என்பது பவுலின் கருத்து (கலா 4:5). அதன் விளைவாகப் பாவத்திற்கு அடிமையாயிருக்கும் நிலையை முடிவுக்குக் கொண்டுவருகிறார். விசுவாசியை இறையரசின் உரிமையாளனாக்குகிறார் (4:7).

விசுவாசி, இயேசு கிறிஸ்துவுக்குள் மகனாவதைச் செயல்படுத்துபவர் இறுதியில் இறைவனே என்ற கருத்தைப் பவுல் எதிரொலிக்கிறார் (எபே 1:5).

மற்றப் புதிய ஏற்பாட்டுக் கருத்துகளோடு தொடர்பு:- உரிமைச்சொத்து, பரிசுத்த ஆவி ஆகியவை பற்றிய பவுலின் கருத்துக்கள் சுவிகாரத்தோடு தொடர்புடையன (கொலோ 3:24; உரோ 8:16.23). யோவான் நற்செய்தியிலும், பேதுருவின் முதல் திருமுகத்திலும் வரும் புதுப்பிறப்பு என்ற கருத்தும் சுவிகாரத்தோடு தொடர்புடையது. காண்க: இறைவனின் பிள்ளைகள்.

சுவை, அனுபவம் (TASTE)

சுவைத்தல் என்பது சில நேரங்களில் உணவின் சத்தை உட்கொள்ளுதலால் (யோனா 3:7; கொலோ 2:21), ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா நிலைகளிலும் நமது அனுபவத்தின் தனிச்சுவையைப் பாராட்டுதலாகும் (2 சாமு 19:36). ஒழுக்க மதிப்பீடுகளைப் பகுத்தறிவதற்கும், இவ்வுலகிலும் மறு உலகிலும் நமது வாழ்வின் இன்பங்களாகிய மற்றும் கிறிஸ்துவையும் பற்றிய அறிவைச் சுவைப்பதற்கும், விவிலியம் இச் சொல்லைப் பயன்படுத்துகிறது.

1. பகுத்தறிதல்: சுவைத்தலானது செயலறிவு (1 சாமு 25:33), சாமர்த்தியம் (பழ

11:22), விவேகமான பதில் (பழ 26:16) முதலான ஞானத்தின் பல்வேறு வடிவங்களை உள்ளடக்கியுள்ளது. மீண்டும் எடுத்துக்கொள்ளவேண்டிய (யோபு 12;20) இறைவனின் இக்கொடை (சங் 119:66), வயது மற்றும் அனுபவத்தின் பலனாகவும் அதே நேரத்தில் உள்ளது (யோபு 12:11-12). மிகவும் செயற்பாடுடைய வாழ்வில் இது மனிதனுடைய நடத்தைக்குத் திசையளிக்கிறது (பழ 31:18). ஆயினும் நன்மை தீமையைப் பகுத்தறிதலாகிய இதன் உயர்ந்த வடிவமானது வெறுமனே ஒரு ஒழுக்க மதிப்பீடு அன்று; விசுவாசத்தின் அடிப்படையில் சமய மதிப்பீடாகவும் உள்ளது (சங் 119:66). இனியதாகக் கண்டறியப்படும் இறைவனின் வார்த்தை (எசே 3:3), மற்றும் அவரது கட்டளைகள் (சங் 119:16; உரோ 7:22) ஆகியவற்றின்பால் இது கொள்ளும் ஈர்ப்பினால் இது முழுமை பெறுகிறது.

2. சமய அனுபவம்: ஞானத்தின் பகுத்தறிதலுக்கு அப்பாற்பட்ட நிலையில், இறைவன் நம்மீது கொண்டுள்ள அன்பின் உயிருள்ள அனுபவத்தை நாம் கண்டடைகிறோம். இம்மைக்குரிய ஆசிகள் என்பவை, இறைவனின் சட்டத்திற்குக் கீழ்ப்படிகின்ற பழைய ஏற்பாட்டு நீதிமானின் மகிழ்ச்சிகளாகும் (நெகே 9:25; எசா 55:2). அவரது மன்னாவினுடைய முடிவற்ற பல்வேறு சுவைகளை அவன் அனுபவிக்கிறான் (ஞான 16:20-21). ஆண்டவர் எவ்வாறு நல்லவர் என்பதை அவன் அனுபவிக்கிறான் (சங் 34:9). தனது ஒரே செல்வத்தைப்போல அவன் அவருடன் ஒட்டிக்கொள்கிறான் (யோபு 22:26).

புதிய ஏற்பாட்டில், ஞானஸ்நானம் பெற்றவரின் முழு வாழ்வானது உயிர்த்த கிறிஸ்துவுடனான ஒன்றிப்பாகும். ஆனால், ஞானஸ்நானத்தைப் பெறுவதானது, தூய ஆவியில் பங்கு பெறுதல், விசுவாசத்தால் கிரகிக்கப்பட்ட நற்செய்தியின் வார்த்தை, புது உலகை ஏற்கனவே படைக்கின்ற இறைவனுடைய வல்லமையின் வெளிப்பாடுகள் (எபி 6:4-5) முதலிய மீட்பின் விண்ணக ஆசிகளை நோக்கி உறுதியாக நெருங்கி ஈர்க்கப்பட்டதன் சுவை மிக்க அனுபவத்தை உள்ளடக்குகிறது. இவை அனைத்தும் இறைவனுடைய நன்மைத்தனத்தினுடைய மிகமேலான அச்சாரமாகும் (1 பேதுரு 2:3). முடிவில்லா மரணத்தின் சுவையினின்று நம்மை விடுவிக்க (யோவா 8:52) இயேசு சுவைத்த மரணத்தின் கசப்பினின்று (எபி 2:9) இந்த இனிப்புச் சுவையானது நமக்கு வருகின்றது. இது நற்பேற்றினுடைய முன்சுவையாகும் (திருவெளி 2:17).

சுற்றுமதில் புற அரண் - (RAMPART)

நகரைச் சூழ்ந்துள்ள புற அரண். சாதாரணமாய் இது மண்ணால் ஆன உயர்ந்த மேடையாகும். இதனைக் குறிக்கும் எபிரேயச் சொல் புற அரணைக் குறிக்கிறதா அல்லது மதிலுக்கும் அரணுக்கும் இடையே அமைந்த அகழியைக் குறிக்கிறதா என்பது தெளிவாக இல்லை. பாலஸ்தீனத்தின் நகரங்களில் இத்தகைய பாதுகாப்பு முறை இருந்ததாகக் கூறப்படுகிறது (2 சாமு 20:15; 1 அர 21:23; சங் 48:13). எருசலேமின் வடபகுதி மட்டுமே இத்தகைய முறையில் பாதுகாக்கப்பட்டது. சுற்றுமதில் என்ற இச்சொல்லைப் பொதுவாக 'அரண்' அதாவதுபாதுகாப்புச் சுவர் என்ற முறையிலும் பொதுவாகப் பயன்படுத்தினர். தெபேசுக்கு (நாகூ 3:8) அல்லது தீருக்குக் (செக் 9:3) கடலே அரணாக அமைந்தது.

சூ

சூகா (SHUHAH - குழி, பள்ளம்)

யூதாவின் குலத்தைப் பற்றி விட்டுவிட்டுக் கொடுக்கப்பட்டுள்ள தலைமுறை அட்டவணையில் கெலூபின் சகோதரர் (1 நாள் 4:11).

சூகாம் (SHUHAM - கிணறு தோண்டுபவர்)

தாணின் புதல்வர். சூகாமிய வம்சத்தின் மூதாதையர். தாணுடைய குடும்பங்களின் பட்டியலில் இது ஒன்றுதான் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதி 46:23-இல் இப்பெயர் கூசிம் (ஹுசிம்) என்று உள்ளது.

சூகாயர் (SHUHITE)

யோபுவின் நண்பர்களில் ஒருவரான பில்தாதின் இனப்பெயர். இது, ஒருவேளை அவரைச் சூவாகின் சந்ததியினராகச் (1) சுட்டலாம் (யோபு 2:11; 8:1; 18:1; 25:1; 42:9).

சூசன்னா (SUSANNA - லீலி)

தானி 13-இல் வரும் கதையின் தலைவி பெயர். கதை பாபிலோனில் அமைகிறது. சூசன்னா, ஒரு நாடு கடத்தப்பட்ட யூதராகிய யோயாக்கிமின் அழகிய ஆனால் பிரமாணிக்கமுள்ள மனைவியாவாள். பாபிலோனில் உள்ள யூதர்களிடையே இரு முதியவர்கள் அவள்பால் காம இச்சை கொண்டனர். ஒரு நாள் அவள் குளித்துக் கொண்டிருந்த பொழுது அவளை அணுகித் தங்களுக்கு இணங்கும்படி கட்டாயப்படுத்தினர். இல்லையென்றால் அவள் மீது பொய்க்குற்றம் சாட்டப்போவதாக அச்சுறுத்தினர். அவள் இணங்க மறுக்கவே, அவர்கள் அவள் ஓர் இளைஞனோடு விபச்சாரம் செய்ததாகக் குற்றம் சாட்டினர். அவள் தான் குற்றம் அற்றவள் என்று எடுத்துக்கூறியும் மக்கள் கூட்டம் அவளைக் குற்றவாளி என்று தீர்ப்பிட்டு அவளுக்கு மரண தண்டனை விதித்தது. அவளைக் கூட்டிச் சென்றபோது, இறைவன் அவள் சார்பாகத் தானியேலைத் தூண்டிச் செயல்படச் செய்தார். மீண்டும் வழக்கு தானியேலால் விசாரிக்கப்பட்டது, தானியேல் இரு முதியவர்களையும் ஒருவர் மற்றவரது கூற்றை மறுத்துக் கூறச்செய்து, அவர்கள் பொய்க்குற்றம் சாட்டியுள்ளனர் என்று நிரூபித்தார். சூசன்னா விடுவிக்கப்பட்டு பொய்க் குற்றம் சாட்டிய இரு முதியவர்களும் மோசேயின் சட்டப்படி (உப 19:16-19) தீர்ப்பிடப்பட்டனர்.

இக்கதை உலகின் முதல் துப்பறியும் கதை என்றழைக்கப்பட்டுள்ளது. சில கதாபாத்திரங்களோடு, ஓர் உணர்ச்சிவசமான நிகழ்ச்சியைப்பற்றிக் கதை நன்கு எழுதப்பட்டுள்ளது. விவிலியத்திலேயே, கதை என்ற அளவிலே மிகக் கவர்ச்சிகரமானதொன்றாகும். நன்மை தீமையை வெல்லும் என்பதை எடுத்துக்காட்டும் சிறந்தகதையும், இறைவாக்கினர் தானியேல் தனது ஞானத்தை எடுத்துக்காட்டும் கதையும் ஆகும். தானியேல் நூலில் வரும் கதைகளைப் போல், இக்கதையும் இறைவனில் விசுவாசம் வைத்து அவருடைய சித்தப்படி வாழ்வோருக்கு நம்பிக்கை அளிக்கிறது. இக்கருத்தையொட்டி, இதில்வரும் முக்கியமானவர்களின் பெயர்களின் பொருள் குறிப்பிடத்தக்கது. சூசன்னா என்றால் லீலி என்று பொருள். இது குற்றமின்மையை உணர்த்துகிறது. தானியேல் என்றால் ''இறைவன் தீர்ப்பிட்டார்'' அல்லது ''இறைவன் எனது நடுவர்'' என்பது பொருள். இது இஸ்ராயேலின் தொடக்ககால இறைஆவி பெற்ற நீதிபதிகளைச் சுட்டிக்காட்டுகிறது. அறிஞர் சிலரின் கருத்துப்படி, இக்கதை துல்லியமான நோக்குடையது. சட்டமுறையில் நிகழக்கூடிய தவறுகளைச் சுட்டிக்காட்டும் ''மிட்ராசிக்'' கதையாகும் என்பர்.

இரு சாட்சிகளைத் தானியேல் விசாரிப்பது கி.மு.76-இல் அலக்சாந்தர் யன்னேயு மரித்தபின் வந்தகாலத்தில் யூத சனேத்ரினில் பரிசேயர்களின் வழக்கைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகிறது. அப்படியாயின் தானியேல் நூலுக்குப் பிற்சேர்க்கையாகக் கருதப்படும் இக்கதை கி.மு. முதல்நூற்றாண்டைச் சேர்ந்ததாகும் என்று கருத இடமிருக்கிறது.

இந்த அதிகாரம் (தானி 13) யூத எபிரேயர் விவிலியத்திலும், பிரிவினைச் சகோதரர்களின் விவிலியத்திலும் இடம் பெறுவதில்லை. எழுபது நூலிலும், வுல்காத்தாவிலும் நவீன உரோமைக் கத்தோலிக்க விவிலியத்திலும் தானியேல் நூலின் 13-ஆம் அதிகாரமாகச் சேர்க்கப்படுகிறது. தியோடோசியனின் கிரேக்க வாசகத்தில் முதல் அதிகாரத்தில் முன்சேர்க்கப்படுகிறது. புதிய பொதுத் தமிழ் மொழிபெயர்ப்பில் இக்கதை இணைத்துணை மறைநூல் பகுதியில் சேர்க்கப்படுகிறது.

மூலக்கதையில் தானியேல் இடம் பெற்றிருக்காமல் இருந்திருக்கலாம். இக்கதை தானியேல் நூலோடு சேர்க்கப்பட்டபின்புதான் தானியேல் கதையில் இடம் பெறுகிறார் என்று சிலர் கருதுவர். இக்கதைக்கு எபிரேய மூலம் இருந்திருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுவர். ஆனால் கதையின் முக்கிய கட்டத்தில் வரும் சொல்லாடல் இக்கருத்துக்கு மாறாக உள்ளது. ஏனெனில் இப்பண்பை மொழி பெயர்ப்பில் கொண்டுவருவது கடினமாகும். இது கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டது எனலாம்.

2. தங்கள் உடைமைகளைக் கொண்டு இயேசுவுக்கும் அவரது சீடர்களுக்கும் பணிவிடை செய்த பெண்களில் ஒருத்தி (லூக் 8:3).

சூசன்னாவின் நூல் (SUSANNA, BOOK OF)

தானி 13-இல் காணப்படும் கதை அடங்கிய பகுதி. யூத எபிரேய விவிலியத்திலும், பிரிவினைச் சகோதரர்களின் விவிலியத்திலும் இக்கதை இடம் பெறுவதில்லை. ஆனால் எழுபது நூலிலும், வுல்காத்தாவிலும், உரோமைக் கத்தோலிக்க விவிலியத்திலும் இடம் பெறுகிறது. புதிய பொதுத் தமிழ் மொழி பெயர்ப்பில் இணைத்துணை மறைநூல் பட்டியலில் இடம் பெறுகிறது. உலக இலக்கியத்தில் மிகச் சிறந்த சிறுகதைகளில் ஒன்றாகவும் உலகின் முதல் துப்பறியும் கதையாகவும் கருதப்படுகிறது.

காண்க: சூசன்னா - 1.

சூசான் (SUSA)

தென்மேற்கு ஈரானில் ஊலாய் ஆற்றுச் சமவெளியில் இக்கால ஆசாவுக்கு அருகிலுள்ள ஏலாமின் தலைநகராகும். பிற்காலத்தில் பாரசீகப் பேரரசின் குளிர்கால அரச இருப்பிடமாயிற்று.

பெரிய தாரியு சூசானில் தான் கட்டிய அரண்மனை பற்றி விரிவான விவரிப்புத்தருகிறார். முதலாம் அர்த்தக்சஸ்தா காலத்தில் (கி.மு. 465-425) அரண்மனைக் கட்டடங்கள் தீயால் அழிக்கப்பட்டன. ஆனால் 2-ஆம் அர்த்தக்சஸ்தா காலத்தில் (404-359) மீண்டும் கட்டப்பட்டன. சர்தைக்கும், இலுரிஸ்தான் மலைகள் வழியாக எக்பத்தானாவுக்கும், பெர்சப்பொலிக்கும் செல்லும் வியாபாரச் சாலைகளில் அமைந்திருந்த சூசான் வியாபார மையமாகச் சிறப்புப் பெற்று விளங்கியது. எஸ்தர் நூலில் கூறப்படும் நிகழ்ச்சிகள் நடந்த இடம் இந்தச் சூசான்தான் (எஸ்த 1:2). எருசலேம் மீண்டும் கட்டப்படுவதை எதிர்த்த சமாரிய மக்களில் சூசானிலிருந்து வந்த நாடுகடத்தப்பட்டவர்களும் இருந்தனர் (எஸ் 4:9-10). நெகேமியா, சூசானில் பாரசீக அரசன் அர்த்தக் சஸ்தாவுக்குப் பானம் பரிமாறுபவராக இருந்தார் (நெகே 1:1).

அக்கமேனியர் ஆட்சியில் சூசான் தன் பொற்காலத்தைக் கண்டது எனலாம். பெரிய அலக்சாந்தர் காலத்தில், அவரது அதிகாரிகள் 80 பேர் மற்றும் பத்தாயிரம் வீரர்களுக்கும் ஈரானியப் பெண்களுக்குமிடையில் ஒரு பெரிய கூட்டுத் திருமணம் இங்கு நடந்ததாகக் கூறப்படும். செலூக்கியர், பார்த்தியர் காலங்களில் சூசான், சிறப்புப்பெற்று விளங்கவில்லை. சசானிய அரசன் 2-ஆம் சாப்பூருக்கு எதிராகச் செய்த கிளர்ச்சியின் விளைவாகச் சூசான் அழிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் ஏரான்சாகர் - சாப்பூர் என்ற பெயரில் கட்டப்பட்டது. கி.பி. 638-ஐ ஒட்டி அரபியப்படையால் கைப்பற்றப்பட்டது. இன்று இது சில சிதைவுகளின் தொகுப்பாக விளங்குகிறது.

பரந்த அளவில் அகழ்வாய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இவை பாரசீக அரண்மனை,

அரண்கள், கலைவினைஞர்களின் பகுதி போன்ற பலவற்றைக் காட்டுகின்றன. மேலும் ஏலாமிய வரலாற்று இலக்கிய ஏடுகளையும் பழைய அக்காதியன், 3-ஆம் ஊர், பழைய பாபிலோனியன் ஏடுகளையும் கண்டெடுத்துள்ளனர். இவற்றில் கம்முராபியின் சட்டமும் அடங்கும். இந்த அகழ்வாய்வுகள் ஐயாயிரம் ஆண்டு வரலாற்றைச் சொல்லுகின்றன. இங்குக் கி.மு. 4-ஆம் ஆயிரமாண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதையும் காட்டுகின்றன.

மேதியா சூசானைக் கொண்டிருந்த காலத்தில், தானியேலின் ஒரு காட்சி அவரைச் சூசானுக்குக் கொண்டு சென்றது *(தானி 8:2)*. மகமதியப் பாரம்பரியம் இங்குத் தானியேலின் கல்லறை இருப்பதாக நம்புகிறது. இதைச் சியயிட்டு மகமதியர்கள் பக்தியோடு காத்து வருகின்றனர்.

சூசி - (SUSI - குதிரை, குதிரைக்காரன்)

மனோசேயின் குலத்தில் இருந்து கானான் நாட்டிற்கு உளவு பார்க்க அனுப்பப்பட்ட காத்தின் தந்தை *(எண் 13:11)*.

சூசிம் (ZUZIM)

யோர்தானுக்குக் கிழக்கில் காம் என்ற இடத்தில் வாழ்ந்த ஓர் இனத்தவரைக் குறிக்கும். இவர்கள், கெதர்லகோமர் யோர்தானின் அக்கரைப்பகுதி வழியாகச் சித்திம் பள்ளத்தாக்கிலிருந்தவர்களோடு போர்புரியச் சென்றபோது தோற்கடிக்கப்பட்டனர் *(ஆதி 14:5)*.

அறிஞர் சிலர் இவர்களை உப *2:20*-இல் வரும் சம்கம்மியரோடு ஒன்றாக்குகின்றனர்.

சூது (SUD)

பாரூ *1:4*-இன் படி இஃது ஓர் ஆறு. பாரூக்கு தனது நூலை எழுதியவுடன் அரசனான எக்கோனியா, பெரியோர், தலைவர்கள், மூப்பர்கள் முன்பாக, அவர்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு, சூது நதிப் பகுதியில் இருந்தபோது, அந்த நூலை வாசித்துக் காண்பித்தார். இந்த ஆறு வேறு எங்கும் குறிப்பிடப்படவில்லை. இது யூப்பிரத்தீசு நதியின் ஒரு கிளை அல்லது ஓடையாக இருக்கலாம். எவ்வாறெனினும், இது பாபிலோனில் அல்லது பாபிலோனுக்கு அருகில் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

சூபா (SUPHAH)

மோவாபில் அனேகமாக அர்னோன் ஆற்றின் பள்ளத்தாக்கில் உள்ள ஒருபகுதி *(எண் 21:14)*. இது வாகேபு பகுதியையும் உள்ளடக்கியது. இது மதேபாவுக்குத் தென் கிழக்கில் 6 கி.மீ. தொலைவிலும், அர்னோனுக்கு வடக்கில் 23 கி.மீ. தொலைவிலும் உள்ள கிர்பெத்து சூபாவோடும், உப *1:1*-இல் வரும் சூபுவோடும் தொடர்புபடுத்தப்படலாம். ஆனால் உறுதியாகக் கூறமுடியாது.

சூபு (SUPH - நாணல்)

மோசே இஸ்ராயேல் மக்களுக்கு உரை ஆற்றிய இட அமைப்பைக் குறிக்கும் ஒரு சொல் *(உப 1:1)*. இந்தஇடம் ''யோர்தானுக்கு அப்பால் சூபுவுக்குக் கிழக்கே அமைந்த அராபா பர்லைநிலத்தில்..'' என்று விவரிக்கப்படுகிறது. ஆனால் இந்த இடத்தைச் சரியாகக் குறிப்பிடமுடியவில்லை. எழுபதுநூலும் வுல்காத்தாவும் இதைசெங்கடல் என்று மொழி பெயர்க்கின்றன. இஃது ஓர் இடப்பெயர் என்றால் சூபாவாக *(எண் 21:14)* இருக்கலாம். இதை மதேபாவுக்குத் தென்கிழக்கில் 6 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து சூபாவாக அடையாளம் காட்டுவர். ஆனால் உறுதியாக ஒன்றும் கூறமுடியாது.

சூப்பு (ZUPH - தேன்கூடு) - ஆள்

சூப்பு, எல்கானா சாமுவேல் ஆகியவர்களின் முன்னோர் ஆவார் *(1 சாமு 1:1; 1 நாள் 6:26.35)*. சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்தில், இவர் எப்பிராயிம் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்றும் *(1 சாமு 1:1)*, நாளாகமம் முதல் புத்தகத்தில் லேவியர் *(1 நாள் 6:35)* என்றும் குறிப்பிடப்படுகிறார். இவர் லேவியராகவும், எப்பிராயிம் கோத்திரத்தைச் சேர்ந்தவராகவும் கருதப்படுகின்றார். 1 நாள் 6:26-இல் இவர் சோபாய் என்றழைக்கப்படுகிறார்.

சூப்பு - (ZUPH - தேன்கூடு) - இடம்

சவுலும், அவருடைய ஊழியர்களும் கழுதைகளைத் தேடிக்கொண்டு சூப்பு என்ற நாட்டிற்கு வந்ததாக 1 சாமு 9:5 குறிப்பிடுகின்றது. சாமுவேலின் தந்தையான எல்கானா, எப்பிராயிம் மலைநாட்டிலுள்ள இராமாத்தயிம் - சோப்பிம் என்ற ஊரிலிருந்து வந்தவரும் சூப்புவின் வம்சத்தவரும் ஆவார். இக்குடும்பம் இப்பகுதியில் தங்கியதால் அந்நாடு சூப்பு என்று அழைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இது இருந்தஇடம் தெளிவாகத் தெரியாவிட்டாலும் செக்கேமிலிருந்து 64 கி.மீ. தொலைவில் தென்மேற்கில் இருந்ததாகக் கருதப்படுகிறது.

சூமாவியர் (SHUMATHITE)

கிரியத்து - எயாரிமில் வாழ்ந்த காலேபியக் குடும்பங்களில் ஒன்று. கூரின் புதல்வனான சோபாலின் வழித்தோன்றல் (1 நாள் 2:53).

சூம்பிய கை (WITHERED HAND)

சூம்பிய கையன் ஒருவனை இயேசு குணப்படுத்துகிறார் (மத் 12:9-14; மாற் 3:1-6; லூக் 6:6-11). இந்நோயினைப் பற்றிய முழுவிவரம் நாம் அறிய முடியாததாகும். ஏனென்றால் இந்நோயினைப்பற்றிய வேறெந்தக் குறிப்பும் விவிலியத்தில் காணப்படுவதில்லை. லூக்கா, இயேசு குணமாக்கிய சூம்பின கை, வலக்கை எனக் குறிப்பிடுகிறார். இதைப்பற்றி எபிரேயருக்கு எழுதப்பட்ட போலி நற்செய்தி, சூம்பிய கையன் ஒரு கொத்தன் ஆவார்; எனவே அவருடைய தொழிலே அவருடைய கையால் பாதிக்கப்பட்டது எனக் கூறுகிறது.

சூரியேல் (ZURIEL - இறைவன் என் பாறை ஆவார்)

சூரியேல் மெராரி குடும்பத்தைச் சார்ந்த லேவியரும், அபிகயிலின் மகனும் ஆவார். பாலையில், இவர், தச்சுத் தொழிலைச் செய்தவர்களும், கூடாரத்தின் வடக்குப் பகுதியில் தங்கியிருந்தவர்களுமான மெராரியர்களுக்குத் தலைவராய் இருந்தார் (எண் 3:35).

சூரைச்செடி (BROOM - TREE)

பாலைவனத்தில் வளரக்கூடிய ஒரு குத்துச்செடி. இலைகள் அதிகம் இல்லாவிட்டாலும் அடர்த்தியாக வளரும் இது சிறிது நிழல் தரக்கூடியது. எலியா கோரேபு (ஒரேபு) மலைக்குச் செல்லும் வழியில் இதன் நிழலில் தங்கினார் (1 அர 19:4-5). இதன் வேர்களும், இலைகளும் எரிப்பதற்குப் பயன்பட்டன (யோபு 30:4; சங் 120:4). இச்செடியின் பெயரின் பொருள்கொண்ட இரித்மா என்று ஓர் இடம் உள்ளது (எண் 33:18-19). எசா 14:23-இல் வருகின்ற துடைப்பம் உவமையாகப் பயன்படுகிறது. ஒருவேளை இச்செடியிலிருந்து துடைப்பம் செய்யப்பட்டிருக்கலாம்.

இது தெற்குப் பாலஸ்தீனத்தின் வறண்ட பாலைவனப் பகுதிகளிலும் சீனாய்ப் பகுதிகளிலும் ஏராளமாக உள்ளன. யோபு 30:4-இல் ''அவர்களின் உணவு'' என்று சில வாசகங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இச்செடியின் வேர்கள் நாற்றமும் நச்சுத்தன்மையும் வாய்ந்தவை. எனவே தாவரவியல் வல்லுநர்கள் யோபு 30:4-இல் கூறப்பட்ட செடி வேறு ஒன்றாக இருக்கலாம் என எண்ணுகின்றனர்.

சூர் (SHUR) - சுவர்

பாலஸ்தீனத்திற்குத் தென் மேற்கேயும் எகிப்து நாட்டிற்குக் கிழக்கேயும் சீனாய்த் தீபகற்பத்திற்கு வடக்கேயும் அமைந்துள்ள ஒரு பாலை நிலப்பகுதியாகும். எபிரேயத்தில் இச்சொல்லுக்குச் சுவர் என்று பொருள் உண்டு. சில புவியியல் வல்லுநர்கள் இச்சொல் எகிப்தியர்கள் தங்கள் கிழக்கு எல்லையைப் பாதுகாப்பதற்காகக் கோட்டைகள் கட்டிய வரிசையைக் குறிக்கலாம் என்பர். எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ராயேலர் நாணல் கடலைக் கடந்தபின் இப்பகுதிக்குள் பயணம் செய்தனர் (யாத் 15:22; ஆதி 25:18; 1 சாமு 15:7). இது எண் 33:8-இல் ஏத்தாம் பாலைவனம் என்றழைக்கப்படுகிறது.

சாராளின் பணிப்பெண்ணான ஆகார் கோபம் கொண்டு சென்றபோது இறைவ

னின் தூதர் சூருக்குச் செல்லும் வழியிலுள்ள நீரூற்றுக்கருகில் கண்டார் (ஆதி 16:7). ஆபிர காம்கூட தன் வாழ்நாளில் காதேசுக்கும் சூருக்கும் இடையில் சிறிது காலம் வாழ்ந் திருந்ததாக அறிகிறோம் (ஆதி 20:1). இசுமயே லர் கெவிலாவிலிருந்து (அவிலா) சூர்வரைக் கும் வாழ்ந்து வந்தனர் (25:18). சவுல் அம லேக்கியரைக் கெவிலாவிலிருந்து சூர்வரை தோற்கடித்தார் (1 சாமு 15:7). தாவீதும் அவருடைய வீரர்களும் சூர்வரையுள்ள பல இனத்தவரைக் கொள்ளையடித்தனர் (27:8).

எகிப்தை நோக்கிய திசையைப் பொதுவா கச் சுட்டிக்காட்ட சூர் குறிக்கப்படுகிறது (ஆதி 20:1; 1 சாமு 27:8). ''சூருக்குச் செல் லும் வழி'' (ஆதி 16:7) கெபிரோன், (எபி ரோன்) பெயேர் செபாவிலிருந்து தென்மேற் காகச் சென்று எகிப்திய ஓடைக்கு அப்பால் சூரைக் கடந்து செல்லும் வியாபார வழியா கும்.

சூர் (SUR)

மத்தியதரைக் கடற்கரையில் அமைந்த சீரியாவின் ஒரு நகரமாகும். இது ஒலபெரி னேயுவிடம் சமாதானத் தூதுவர்களை அனுப்பியதாகக் கூறப்படுகிறது (யூதி 2:28). கர்மேல் மலைக்குத் தெற்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள தோர் என்னும் துறைமுக நகரமாக அடையாளம் காட்டப்படுகிறது.

சூர் (ZUR - பாறை)

1. சூர் மிதியானியத் தலைவனும், இஸ்ரா யேலனோடு கொல்லப்பட்ட கோசுபி என்ப வளின் தந்தையும் ஆவார் (எண் 25:15; 31:8; யோசு 13:21). இது சமயத்துக்கு எதிரான கிளர்ச்சி என்று இஸ்ராயேலர் மிதியானிய ரோடு போர்தொடுத்தனர். ஐந்து மிதியா னிய அரசர்களுள் ஒருவரான சூர் கொல்லப் பட்டார். எமோரியர்களின் அரசனான சீகோனை மோசே வென்ற போரில் சூர் கொல்லப்பட்டான் என்று யோசு 13:21 கூறு கிறது.

2. பென்யமின் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவர் எயியேலுக்கும் மாக்காவுக்கும் பிறந்த வர். சவுலின் தந்தையான கீசின் சகோதரனும் ஆவார் (1 நாள் 8:30; 9:36).

3. பழங்காலத்தில் 'கடவுள்' என்ற சொல் லைக் குறிக்க ஒரு பொருட் பன்மொழியா கும். இது பழைய ஏற்பாட்டில் 'பாறை' என்று மொழி பெயர்க்கப்பட்டது (உப 32:4; 2 சாமு 22:2-3; சங் 18:31.46; எசா 17:10). வடமேற்கு மெசபொத்தாமியாவில் மூதா தையர் மலைகளை ஒப்புமை கூறுவதற்கு அறிந்திருந்ததால் இச்சொல் கடவுளின் வல் லமை, நிலையான தன்மை, நம்பிக்கைக் குரிய தன்மை, என்றுமே குறையாத இரக்கம் ஆகியவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட் டது. இதே கருத்தில்தான் யாவே 'இஸ்ராயே லின் பாறை' என்று அழைக்கப்பட்டார்.

சூர்வாயில் (SURGATE)

1. எருசலேமின் வாயில்களில் ஒன்று (2 அரச 11:6). இது அத்தலியா கொலை செய் யப்பட்ட வரலாற்றில் குறிக்கப்படுகிறது. மற்றப்படி இதைப்பற்றி ஒன்றும் கூறப்பட வில்லை. ஒருவேளை இது அரச அரண் மனையிலிருந்து ஆலயத்திற்கு இட்டுச் சென் றிருக்கலாம். இதற்கு இணையான விவரிப்பில் (2 நாள் 23:5) இது அடித்தளவாயில் என் றழைக்கப்படுகிறது. இந்தச் சூர், சூஸ் (குதிரை) என்ற சொல்லின் பழுதுபட்ட வாசகமாக இருக்கலாம் (23:16).

சூலாமியர் (SHULAMMITE)

உன்னத சங்கீதம் அல்லது பேரின்பப் பாடலில் வரும் ஓர் இளம்பெண்ணின் இனப்பெயர் (உ.ச. 6:13). இச்சொல்லுக்குப் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அ) இச்சொல், மற்றப்படி அறியப்படாத சூலாம் என்ற ஊரிலிருந்து வந்தவள் என்று சுட்ட லாம். ஆ) மூலவடிவம் சூனாமியர் ஆகும் என்ற வாசகச்சான்று, இப்பெண்ணின் ஊர் சூனேம் ஆகும் என்று கட்டலாம். அப்படி யாயின் சூனாமியளான அபிசாகுவை இச் சொல் குறிக்கலாம் (1 அர 1:3). இ) மற் றொரு விளக்கப்படி, இச்சொல் சாலமோன் என்ற சொல்லின் பெண்வடிவாகும். சால மோனின் மனைவி ஒருத்திக்குக் கொடுக்கப்

பட்டதாகும் அல்லது ஈ) சாலேம் என்ற தெய்வத்தின் பெண் துணைக்குக் கொடுக்கப் பட்ட பெயராகும். உ) இசிதார் என்ற அசீரியத் தேவதையின் பெயராகும். ஊ) உண்மையி லேயே ஒரு குறிப்பிட்ட பெண்ணின் ஆட் பெயராகும்.

சூவா (SHUA - செல்வம்)

1. ஒரு கானானியர். யூதாவின் கானானிய மனைவியின் தந்தை (ஆதி 38:2.12; 1 நாள் 2:4).

2. கெபரின் (எபர்) மகள். ஆசேர் குலத் தைச் சேர்ந்தவர் (1 நாள் 7:32).

சூவாகு (SHUAH - குழி)

ஆபிரகாமுக்குக் கெத்தூராளிடம் பிறந்தவர் (ஆதி 25:2; 1 நாள் 1:32). இப்பெயர் அராபிய அல்லது அரமேய குலத்துடனும், பின்னால் ஊசு நாட்டின் அருகில் குடிபெயர்ந்த சூகா யர்களுடனும் தொடர்பு படுத்தப்படுகிறது. சூகாயரான பில்தாது (யோபு 2:11; 8:1; 18:1; 25:1; 42:9) இந்தக் குலத்தின் உறுப்பினர் ஆவார்.

சூகாயரின் நாடு, சில சமயம் அசீரியச் சூகூவோடு ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தச் சூகூ யூப்பிரத்தீசு நதியின் வலக்கரை யில் கர்க்கமிசுக்குத் தெற்கில் பலிக்கா, காபூர் ஆகிய ஆறுகளின் வாயில்களுக்கிடையில் அமைந்துள்ளது.

சூவாகு (SUAH - மிகப்பரந்த)

ஆசேரின் குலத்தில் சோபகுவின் மகன் (1 நாள் 7:36).

சூவார் (ZUAR - சிறிய, இளைய)

பாலைவனத்தில் இசக்காரின் தலைவ னாய் இருந்த நெத்தனியேலின் தந்தை ஆவார் (எண் 1:8; 2:5; 7:18.23; 10:15).

சூவால் (SHUAL - நரி) - ஆள்

ஆசேரின் குலத்தில் சோபகுவின் மகன் (1 நாள் 7:36).

சூவால் (SHUAL - நரி) - இடம்

மிக்மாசில் உள்ள பெலிஸ்தியப் பாளையத்தி லிருந்து புறப்பட்ட மூன்று பிரிவில் முதல் பிரிவு இந்த நாட்டிலுள்ள ஒபிராவை நோக் கிச் சென்றது (1 சாமு 13:17). சவுல் கழுதை யைத் தேடிச்சென்ற சாலீம் நாடும் இதுவும் ஒன்று என்று சிலர் கருதுகின்றனர் (9:4).

சூளை, உலைக்களம் (FURNACE)

பொருட்களைச் சுடுவதற்குச் செங்கல் லாலோ, கற்களாலோ செய்யப்பட்ட ஓர் அமைப்பாகும். இது அமைப்பிலும், பரும னிலும் பலவாறு வேறுபட்டது. இதைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட் டுள்ளன. இது உலோகங்களை உருக்குவதற் கும் (எசே 22:20) தங்கம், வெள்ளி போன்ற வற்றைப் புடமிடுவதற்கும் (பழ 17:3), செங் கற்களைச் சுடுவதற்கும் (ஆதி 19:20) பயன் படும். தானியேல் எறியப்பட்ட சூளை செங் கற் சூளையாக இருக்கலாம் (தானி 3:19-23). இப்படிப்பட்ட சூளைகள் மெகிதோவில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

மனிதன் தூய்மை பெறுவதைக் குறிக்கச் சூளை உருவகமாகப் பயன்படுத்தப்படு கிறது. எகிப்திய "இரும்புச் சூளை" (உப 4:20; 1 அர 8:51) எகிப்தில் எபிரேயர் அனுபவித்த தொடர்ந்த அடிமைத்தனத்தின் தொகுப்பு அனுபவத்தைக் குறிக்கிறது. இந்த அனுப வம் எபிரேயர்களை யாவேக்குப் பணிபுரி யும் மக்களாக மாற்றியது. பிற்காலத்தில் வாக்களிக்கப்பட்ட நாட்டில் அவரது மக்கள் அவரைக் கைவிட்டுப் புறக்கணித்தபோது இறைவன் அவர்களை மீண்டும் எருசலே முக்கு வர அனுமதிக்குமுன், ''துன்பம் எனும் உலையில்'' அதாவது நாடு கடத்த லால் (எசா 48:10) அவர்களைப் புடமிட்டுத் தூய்மைப்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் ''தீச்சூளை'' (மத் 13:42.50) இறைவனது இறுதிக்காலத் தீர்ப்பைக் குறிக்கிறது.

சூளை, காளவாய் (KILN)

இது பலவகைப்பொருட்களை உருவாக் கப் பயன்படுத்தப்பட்டது. எபிரேய மொழி யில் இச்சொல் வீட்டில் ரொட்டி சுடப்பயன்

படும் சிறு அடுப்பிலிருந்து, மட்பாண்டங்கள் (செய்வதற்கான) சுடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மிகப் பெரிய சூளைகள்வரை எல்லாவகை அடுப்புகளைக் குறிக்கப் பயன்பட்டது. எருசலேமின் மதில்சுவரின் ஒரு பகுதிக்குச் 'சூளைகளின் கோபுரம்' எனும் பெயர் இருந்தது (நெகே 3:11). மட்பாண்டம் செய்யும் தொழிலில் சூளைக்கு நெருப்பிடுவது மிகப் பெரிய தொழில். இது இரகசியமாக இருந்ததால், உருவகப் பேச்சுக்களில், மட்பாண்டத்தொழிலின் மற்றப் பகுதிகள் போல் பேசப்படவில்லை.

நாகூ 3:14; 2 சாமு 12:31-இல் ''செங்கல் சூளை வேலைகள்'' என்று கூறப்பட்டுள்ளது. இதைவிடச் ''செங்கல் அறுக்கும் வேலைகள்'' என்பது மேலான மொழிபெயர்ப்பாகும். பாலஸ்தீனத்தில் பயன்படுத்தப்பட்ட கற்கள் அனைத்துமே சூரிய ஒளியில் காயவைக்கப்பட்டவையே தவிர, சூளையில் சுடப்பட்டவை அல்ல.

ஆதி 19:28; யாத் 19:18 குறிப்பிடும், ''சூளையினின்று புகை புறப்படுவது போல'' என்பது கரியினால் ஏற்படுத்தப்பட்ட சூளையைக் குறிக்கலாம். இஸ்ராயேலரின் வரலாற்றில் இது சுண்ணாம்புக் காளவாயைக் குறிப்பதாகவும் இருக்கலாம்.

சூளைக்காவல் மாடம் அல்லது கோபுரம் (OVEN, TOWER OF THE)

எருசலேமிலுள்ள ஒரு கோபுரம். இது முதலில் ஊசியாவால் கட்டப்பட்டிருக்கலாம் (2 நாள் 26:9). நெகேமியாவின் காலத்தில் இந்தக் கோபுரம் புதுப்பிக்கப்பட்டது (நெகே 3:11; 12:38). இது எருசலேம் நகர் மதிலின் வடமேற்குப் பகுதியைக் காக்கப் பயன்பட்டது. மூலைவாயிலுக்கு அருகில் அமைந்திருந்தது. ஒருவேளை இதற்கு அருகில் அப்பம் சுடும் அடுப்புகள் அமைக்கப் பட்டிருந்ததால் இப்பெயர் இதற்கு வழங்கப் பட்டிருக்கலாம் (எரே 37:21).

சூறாவளி (WHIRLWIND)

மிகுந்த அழிவை ஏற்படுத்தும் வலிமை மிக்க புயல்காற்று. இது காற்றின் சுழல் தன்மையை எப்போதும் சுட்ட வேண்டும் என்பதில்லை. பொதுவாகப் புயல் அல்லது கடும்புயல் என்று மொழி பெயர்க்கப்படலாம். சுழல்புயல் பாலஸ்தீனத்தில் அரிதாகவே நிகழும். ஆனால் வலிமைமிக்க புயல் காற்று மழைக்காலத்தில் நிகழ்வதுண்டு. இக்காற்றின் சுழல்தன்மை சங் 77:18; எசா 5:28-இல் குறிக்கப்படுகிறது.

இத்தகைய புயல்கள் நெகேபு பகுதியோடு தொடர்புபடுத்தப்படுகிறது (எசா 21:11; செக் 9:14; யோபு 37:91). இது மனிதர்களையும் பதரையும் அடித்துச் செல்லவல்லது (யோபு 27:20; 2 அர 2:1-11). அதன் இரக்கமற்ற, மாற்றமுடியாததன்மையும் கடுமையின் நிறைவும் படையெடுத்து வரும் படைக்கும் (ஆமோ 1:14; அப 3:14) குறிப்பாகச் தேர்ச்சக்கரத்திற்கும் (எசா 5:28; எரே 34:13; எசா 66:15), பொதுவாக எந்தப் பேரழிவுக்கும் (பழ 1:27, ஒசே 8:7) சிறந்த அடையாளமாயிற்று. அதே காரணத்திற்காக, உருவக முறையிலும் (எசா 29:6; எரே 23:19; 30:23; ஆமோ 1:14; செக் 7:14; எரே 25:32) இயல்பான பொருளிலும் (சங் 83:15; நாகூ 1:3; செக் 9:14) தீர்ப்புக்காகச் சூறாவளியைப் பயன்படுத்துவதாக இறைவன் சித்தரிக்கப்படுகிறார். சிலசமயம் இறைமாட்சிக் காட்சிக்குச் சூறாவளி பின்னணியாகிறது. இறைவன் யோபுக்கும் எசேக்கியேலுக்கும் சூறாவளியில் தோன்றினார் (யோபு 38:1; 40:6; எசே 1:4). எலியாவைப் பூமியிலிருந்து எடுத்துக் கொள்ள இறைவன் சூறாவளியைப் பயன்படுத்துகிறார் (2 அர 2:1-11).

உ.ச. 3:6-இல்வரும் புகைத்தூண், யோவேல் 3:3-இல் வரும் புகைப்படலம் ஆகியவற்றில் சிற்றம் குறைந்த சூறாவளிக் கருத்துள்ளது. சங் 83:13-இல் சூறாவளிப் புழுதி அல்லது பதர் பொருளற்ற தன்மைக்கு அடையாளமாகும். இப்பகுதியில் சங்கீத ஆசிரியர் தன் எதிரிகளைப் பதராக்கும்படி இறைவனை வேண்டுகிறார். எசா 17:13-இல் இறைவனால் நாடுகள் ''புயல்காற்றுமுன் சிக்குண்ட புழுதிபோன்று துரத்தப்படுவார்கள்'' என்று கூறப்பட்டுள்ளது.

சூனி (SHUNI - ஓய்வில் உள்ள)

யாக்கோபின் பேரனும், காதின் மூன்றாம் மகனுமாவார். இவரது வழித்தோன்றல்கள் சூனியர் என்றழைக்கப்பட்டனர் (ஆதி 46:16; எண் 26:15).

சூனேம், சூனாமியர் (SHUNEM, SHUNAMMITE)

இந்த ஊர் இஸ்ரியேல் பள்ளத்தாக்கை மேல்நோக்கும் நெபிதாகியின் தென்மேற்குச் சரிவில் எனினுக்கு வடக்கில் 15 கி.மீ. தொலைவிலும் மெகிதோவிற்குக் கிழக்கிலும், நசரேத்திலிருந்து 11 கி.மீ. தொலைவிலும் உள்ள இன்றைய சோலேம் ஆக அடையாளம் காட்டப்படுகிறது. இந்நகரில் மத்திய வெண்கலக்காலத்திலிருந்து மத்திய காலம் வரை மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மூன்றாம் துத்துமோசு (கி.மு. 1490-1435) வென்ற நகர்களில் இதுவும் ஒன்றாகும். அமர்னா ஏடுகளின்படி கி.மு. 14-ஆம் நூற்றாண்டில் செக்கேமைச் சேர்ந்த இலபாயுவால் அழிக்கப்பட்டு, மெகிதோவின் பிரிதியாவால் மீண்டும் கட்டப்பட்டது. இஸ்ராயேலர் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றியபோது இந்த ஊர் முக்கியத்துவம் பெற்றதாக இருக்கவில்லை.

இஸ்ராயேலரில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் திருவுளச்சீட்டு போட்டு நாடுகளைப் பிரித்ததில் இசக்கார் குடும்பத்திற்கு நான்காம் சீட்டு விழுந்தது. அவர்களுக்குக் கிடைத்த நகரங்களில் ஒன்று சூனேம் ஆகும் (யோசு 19:18). இந்த இடத்தில்தான் பெலிஸ்தியர்கள் சவுலுடனான ஒரு போருக்கு முதன்முதலில் பாளையம் இறங்கினர். ஆனால் பிறகு அபேக்கு என்ற இடத்திற்கு மாற்றினர் (1 சாமு 28:4). இவ்வூரோடு இரு பெண்கள் தொடர்புபடுத்தப்படுகின்றனர். மூன்றாவது பெண்ணும் இவ்வூரிலிருந்து தோன்றியிருக்கலாம்.

தாவீதின் முதிர்ந்த வயதில் அவருக்குப் பணி செய்த பெண்ணாகிய அபிசாகு இவ்வூரைச் சேர்ந்தவள். அதோனியா இவளை மணந்து கொள்ள விரும்பி அதில் வெற்றி கொள்ளவில்லை (1 அர 1:13.15; 2:17-22). இந்நகரில் வாழ்ந்த ஒரு பெண்தான் எலிசா காலத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது அவருக்கு உணவும், உறைவிடமும் அளித்தவள். அவளின் மகனும் உயிர்ப்பிக்கப்பட்டான் (2 அர 4:8-37). பின்பு வரவிருக்கும் பஞ்சத்தைப் பற்றி எலிசா இவளை எச்சரித்தார். ஆகையால் இவள் தனது உடமைகளை விட்டுவிட்டுப் பெலிஸ்தியாவில் குடியேறினாள். அவள் திரும்பிவந்தபோது அவளது கணவனும் எலிசாவும் இறந்து போயிருந்தனர். ஆனால் எலிசாவின் ஊழியனது உதவியோடு தனது உடைமைகளைத் திரும்பப் பெற்றதால் (8:1-6). இவ்வூரைச் சேர்ந்த மூன்றாவது பெண் உ.ச. 6:13-இல் குறிக்கப்படும் சூலாமியப் பெண்ணாக இருக்கலாம்.

செ

செகரியா (SHEHARIAH - யாவே விடியல் ஆகிறார்)

இவர் பென்யமின் குலத்து எரோகாமின் மகன். இவர் எருசலேமில் வாழ்ந்தார்; தனது குலத்துக்குத் தலைவராய் விளங்கினார் (1 நாள் 8:26).

செகாக்கா (SECACAH - புதர்க்காடு)

யூதாவின் பாலைவனத்தில் இருந்த ஆறு நகரங்களுள் ஒன்று (யோசு 15:61). இங்குக் கிடைத்த மட்பாண்டங்களும் காப்பு அரண்களைப்பற்றிய குறிப்பும், சுவர்களும் இந்நகர் 'யோசபாது' என்னும் யூதா நாட்டு அரசனால் எழுப்பப்பட்டிருக்கலாம் என்று காட்டுகின்றன (2 நாள் 17:12). இந்நகரில் பிற்காலத்தில் வந்த 'ஊசியா' மன்னனும் சிலை வேலைப்பாடுகளைச் செய்திருக்கலாம் என்றும் தெரிகிறது (2 நாள் 26:10). சாக்கடலின் வடமேற்குக் கரைக்கருகில், ஆக்கோர் பள்ளத்தாக்கில் கிர்பெத்து-கும்ரானுக்குத் தென்மேற்கிலுள்ள கிர்பெத்து எஸ்-சம்ராவாக இது அடையாளம் காட்டப்படுகிறது.

செகுபு (SEGUB - உயர்த்தப்பட்ட, மகிமைப் படுத்தப்பட்ட)

1. கியேல் (ஈயேல்) என்பவனின் இளைய மகன். அரசன் ஆகாபு காலத்தில் எரிகோவைச் செகுபின் தந்தையான கியேல் மீண்டும் கட்டியெழுப்பினார். அவ்வாறு மீண்டும் கட்டப்பட்டபோது அடித்தளம் இடும் சடங்கில் கியேலின் இருபுதல்வர்களும் (அபிராம், செகுபு) பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டனர் (1 அர 16:34). இதனை அரசர் ஆகமத்தின் தொகுப்பாசிரியர் யோசுவாவின் வாக்கு நிறைவேறுவதற்காக இவ்வாறு நிகழ்ந்ததாகக் கூறுகிறார் (யோசு 6:26).

2. யூதாவின் வழிவந்த கெசிரோனின் (எட்சரோன்) மகன். இவருக்கு யாயீர் என்ற மகன் உண்டு (1 நாள் 2:21-22).

செக்கரியா (ZECHARIAH - யாவே நினைவு கூர்ந்தார்)

1. இவர் இஸ்ராயேலின் அரசர். இவர் ஏகூ வம்சத்தில் அரசனான எரொபவாம் மன்னனின் மகன். யூதாவின் அரசன் ஊசியாவின் (அசரியா) ஆட்சியின் 38-ஆம் ஆண்டில் எரொபவாமின் மகன் செக்கரியா சமாரியாவில் இஸ்ராயேலை ஆறுமாதம் ஆண்டபின் (கி.மு. 746) சல்லூம் என்பவரால் கொலை செய்யப்பட்டார் (2 அர 14:29; 15:8.11). ''உன் புதல்வர் நான்கு தலைமுறைகளுக்கு இஸ்ராயேலின் அரியணையில் வீற்றிருப்பர்'' என்று ஆண்டவர் ஏகூவுக்குக் கூறியது இவ்வாறு நிறைவேறியது (2 அர 15:12; 10:30).

2. இவர் எசேக்கியா அரசனின் தாயான அபியாவின் (அபி) தந்தை (2 அர 18:2; 2 நாள் 29:1).

3. ரூபன் குலத்திலிருந்த ஒரு குடும்பத் தலைவரின் பெயர் (1 நாள் 5:7).

4. மெசலேமியாவின் புதல்வனாகிய இவர், ஒரு லேவிய வாயிற்காவலராவார். இவர்கள் கோராகின் வழி வந்தவர்கள். இவர் ஆலயத்தின் வடக்கு வாயிலுக்குக் காவலனாக நியமிக்கப்பட்டார். விவேகமுள்ள ஆலோசகராகவும் விளங்கினார் (1 நாள் 26:2.14). மேலும் இவர் உடன்படிக்கைக் கூடார வாயிலையும் காவல்காத்தார் (1 நாள் 9:21).

5. பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர் அல்லது ஒரு குடும்பத்தின் பெயர் (1 நாள் 9:37). இவர் ஒருவேளை சவுலின் தந்தை கீசின் சகோதரராக இருக்கலாம். இதற்கு இணையாக உள்ள பட்டியல் இவரைச் செக்கேர் என (1 நாள் 8:31) அழைக்கிறது.

6. ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையை ஓபேது - ஏதோமின் வீட்டிலிருந்து சீயோனிற்குக் கொண்டுவருகையில் இசைமீட்டியவருள் இந்த லேவியர் சுரமண்டலம் வாசித்தவருள் ஒருவராவார் (1 நாள் 15:18.20). மேலும் இவர் உடன்படிக்கைப் பேழைக்கு முன் இசை வழிபாட்டுக்காக

நியமிக்கப்பட்டார். ஆலய இசைக்குழுவில் 2-ஆம் பிரிவைச் சேர்ந்தவர் (1 நாள் 16:5).

7. உடன்படிக்கைப் பேழையைச் சீயோனிற்குக் கொணர்கையில் பேழையின்முன் எக்காளம் முழங்கிய குருக்களில் இவரும் ஒருவர் (1 நாள் 15:24).

8. இந்த லேவியர் ஊசியேலின் வழி வந்தவராவார்; தாவீதுக்குச் சமகாலத்தவர் (1 நாள் 24:25).

9. தாவீது காலத்தில் மெராரியின் வழி வந்த லேவிய வாயிற்காவலர் (1 நாள் 26:11).

10. தாவீது ஆட்சிக்காலத்தில் மனாசே குலத்தலைவராகிய இவர் இத்தோவின் தந்தையாவார் (1 நாள் 27:21).

11. யோசபாது அரசன் யூதா நகர்களில் போதிக்கும் பொருட்டு அனுப்பிய மூப்பர்களின் ஐந்து பொதுநிலையினருள் இவரும் ஒருவர் (2 நாள் 17:7).

12. இவர் ஆசாபின் குலத்தில் உதித்த லேவியர். மேலும் இவர் யாகசியேலின் தந்தையாவார். இவர் யூதாவின் அரசனான யோசபாது, யோர்தானுக்கு அப்பாலுள்ள எதிரிகளோடு செய்யும் போரில் வெற்றி பெறுவார் என இறைவாக்குரைத்தார் (2 நாள் 20:14).

13. இவருடைய தந்தையாகிய யோசபாது அரசன் இவருக்கும் இவர் சகோதரருக்கும் சொத்துக்களையும், அரணுள்ள நகர்களையும் கொடுத்தார் (2 நாள் 21:2). ஆனால் தலைமகனான யோராம் அரியணை ஏறிய பின் தம் சகோதரர் அனைவரையும் கொன்றார்.

14. இவர் குரு யோயாதாவின் மகனாவார். இவர், யோவாசு அரசன் காலத்திலே ''நீங்கள் ஆண்டவரைப் புறக்கணித்ததால் ஆண்டவரும் உங்களைப் புறக்கணிப்பார்'' என இறைவாக்கு உரைத்தார். இதைக் கேட்டு மக்கள் அவருக்கு எதிராகச் சதி செய்து அரசனின் கட்டளைப்படி ஆண்டவனின் ஆலய முற்றத்தில் அவரைக் கல்லால் எறிந்தனர் (2 நாள் 24;20-21). இதனால் இந்தயோவாசு தன் உயிரைக் காப்பாற்றித் தன்னை அரசனாக்கிய செக்கரியாவின் தந்தை யோயாதாவுக்கு நன்றி கொன்றவனாவார் (2 நாள் 24:22; 22:10-24:19). இந்தக் கொலைப் பழிதீர்க்க, யோவாசின் இரு ஊழியர்கள் யோவாசைக் கொன்றனர் (24:22.25-26). கடவுளால் அனுப்பப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளாத அம்மக்களுக்குத் தண்டனை அண்மையில் உள்ளது என இயேசு கூறும்போது செக்கரியாவின் கொலையையும் குறிப்பிடுகிறார் (மத் 23:35; லூக் 11;51). இது இந்தச் செக்கரியாவை 29-இல் வரும் பெரக்கியாவின் மகன் இறைவாக்கினர் செக்கரியாவோடு குழப்புவதாகத் தெரிகிறது.

15. ஊசியா மன்னன் ஆட்சி ஆரம்பத்தில் இவர் ஊசியாவுக்கு ஒழுக்கத்தையும், தெய்வ பயத்தையும் கற்றுத் தந்தார் (2 நாள் 26:5).

16. அரசன் எசேக்கியா காலத்தில் ஆசாபின் புதல்வராகிய இவர் ஆலயத்தைத் தூய்மைப்படுத்துவதில் பங்கெடுத்த லேவியருள் ஒருவர் (2 நாள் 29:13).

17. இவர் ஒரு கோகாத்திய லேவியர். யோசியா அரசன் காலத்திலே நடந்த ஆலய செப்பனிடும் பணிகளை மேற்பார்க்க நியமிக்கப்பட்டார் (2 நாள் 34:12).

18. யோசியா அரசன் காலத்தில் மூன்று ஆலய மேற்பார்வையாளர்களில் இவரும் ஒருவர். இவர் குருக்களுக்குப் பாஸ்காப் பலிக்கென மிருகங்களை வழங்கினார் (2 நாள் 35:8)

19. பரோசின் சந்ததியைச் சேர்ந்த இவர் எஸ்ராவோடு அடிமைத் தனத்திலிருந்து திரும்பி வந்த ஒரு குடும்பத் தலைவராவார் (எஸ் 8:3).

20. பேபாயின் வழித்தோன்றலான இவர் எஸ்ராவோடு அடிமைத் தனத்திலிருந்து

திரும்பி வந்த ஒரு குடும்பத் தலைவராவார் (எஸ் 8:11).

21. எஸ்ராவோடு பாபிலோனியாவிலிருந்து திரும்பியவருள் குருக்கள், பொதுமக்களேயன்றி லேவியர் ஒருவரும் இல்லாததால், அவர் செக்கரியாவையும் மற்றவரையும் கசிப்பியாவிலுள்ள இத்தோவுக்கு அனுப்பி அழைத்துவர ஏற்பாடு செய்தார் (எஸ் 8:16).

22. ஏலாமின் வழித்தோன்றலான இவர் எஸ்ராவின் சீர்திருத்தத்தின்போது அந்நிய மனைவி மக்களைத் தள்ளிவிட்டார் (எஸ் 10:26).

23. இவர் எஸ்ரா, ஆண்டவரின் திருச்சட்டத்தைப் படிக்கும்போது அருகிலிருந்தார் (நெகே 8:4).

24. யூதாவின் புதல்வரான இவர் பெரேட்சின் குடும்பத்தில் பிறந்தவர். நாடுகடத்தலுக்குப்பின் எருசலேமில் குடியேறியவர் (நெகே 11:4).

25. சிலோனியரின் மகன் என்றழைக்கப்படும் இவர் யூதாவைச் சேர்ந்தவர்; நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் குடியேறினார் (நெகே 11:5).

26. மல்கியாவின் மகனான பஸ்கூரின் மகனாவார். இவர் (நெகே 11:12) ஒரு குரு.

27. நாடு கடத்தலுக்குப்பின் இத்தோவின் வழிவந்த ஒரு குரு குலத்தின் தலைவர் (நெகே 12:16). இவர் 31-இல் வருபவராக இருக்கலாம்.

28. இவர் ஆசாபின் வழிவந்தவர். எருசலேம் மதிலின் அர்ப்பணிப்புச் சடங்கிலே அதன்மேல் ஊர்வலமாகச் சென்ற ஒரு பிரிவு லேவியர்களுக்குத் தலைவராயிருந்தார் (நெகே 12:35).

29. இவர் எருசலேம் மதிலின் அர்ப்பணிப்புச் சடங்கிலே எக்காளம் முழங்கியவருள் ஒரு குரு (நெக 12:41).

30. இவர் எபரேக்கியா என்பவரின் மகன். பிரமாணிக்கமுள்ள சாட்சியான இவரையும் இன்னொருவரையும் எசாயா இறைவாக்கினர் ''மகேர் - சாலால் - காஸ் - பாஸ்'' என்ற வரைபலகையின் எழுத்துக்களுக்குச் சாட்சியாக எடுத்துக் கொண்டார் (எசா 8:2).

31. இறைவாக்கினரான இவர் 12 சிறிய இறைவாக்கினருள் ஒருவராவார் (செக் 1:1.7; 7:1.8). இவர் இத்தோவின் மகனாகவோ அவர் வழித்தோன்றியவராகவோ இருக்கலாம். இவர் இத்தோவின் மகனென எஸ் 5:1; 6:14 கூறுகிறது. நெகே 12:16-இல் இவர் இத்தோ வழி வந்தவரெனக் கூறப்பட்டுள்ளது. செக் 1:1 இத்தோவைச் செக்கரியாவின் முக்கியமான முன்னோராகக் கூறுகிறது. செக்கரியா தாரியு அரசனின் இரண்டாம் ஆட்சியாண்டிலே இறைவாக்குரைத்தார் (கி.மு. 520 - 518). இவர் செருபாபேல் காலத்தில் வாழ்ந்தவர். இவருடைய இறைவாக்கின் தொடக்க காலத்தில் ஆகாய் தன் இறுதிக் கட்டத்தை நெருங்கினார். இவர் ஆண்டவரின் ஆலயத்தைக்கட்டி எழுப்ப மக்களைத் தூண்டினார். மக்களிடையே நம்பிக்கையை எழுப்பினார் (எஸ் 5:1; 6:14). காண்க. செக்கரியாவின் நூல்.

32. மக்கபேயர்களுக்குத் தலைவராயிருந்த யோசேப்பு என்பவரின் தந்தை (1 மக் 5:18.56).

33. இவர் திருமுழுக்கு யோவானின் தந்தை. இயேசுவின் தாயாகிய மரியாவின் உறவினளான எலிசபெத்தின் கணவன் (லூக் 1:5-67; 3:2). இவர் அபியா வகுப்பைச் சார்ந்த நீதிமானான குரு ஆவார் (1 நாள் 24:7-19). தம் பிரிவின் முறை வந்தபோது செக்கரியா கடவுள் முன்னிலையில் குருத்துவப்பணி செய்துவருகையில், இறைவழிபாட்டு முறைமைப்படி ஆலயத்தினுள் சென்று தூபங்காட்ட அவருக்குச் சீட்டு விழுந்தது. அவர் தூபங்காட்டுகிற வேளையிலே ஆண்டவருடைய தூதர் தோன்றி அவர் வேண்டுதலின்படி அவருக்கு ஒரு மகனைத் தருவதாக

வாக்களித்தார். அவருக்கு 'யோவான்' எனப் பெயரிட வேண்டும்; அவர் தூய ஆவியினால் நிரப்பப்படுவார்; அவர் மக்களைக் கடவுளின் அரசிற்குத் தயார் செய்வார் எனவும் தூதர் அறிவித்தார். வயது முதிர்ந்தவர்களாக அவரும் அவரது மனைவியும் இருந்ததால் இப்புதுமை நிகழ அவர் அறிகுறி கேட்க, தூதரும் அறிகுறியாக இப்புதுமை நடக்கும்வரை அவரை ஊமையாக்கினார். அவர் வெளியே வந்து மக்களோடு பேச முடியாமல் இருந்ததைக் கண்ட மக்கள் அவர் ஏதோ காட்சி கண்டிருக்கவேண்டும் என அறிந்து கொண்டனர் (லூக் 1:8-23). குழந்தை பிறந்து அதற்கு விருத்தசேதனம் செய்ய நாள் வந்தபோது செக்கரியா தம் மனைவி கூறிய 'யோவான்' என்ற பெயரையே எழுதிக் காண்பிக்க மக்கள் வியப்படைந்தனர். அந்நேரமே அவரது வாய் திறக்க, நா கட்டவிழ, பேசத் தொடங்கிக் கடவுளைப் போற்றினார். மெசியா பற்றிய இஸ்ராயேலின் நம்பிக்கை நிறைவேறுவது பற்றி இறைவாக்குரைத்தார் (1:57-79).

செக்கரியாவின் திருநூல் - முதல் பாகம் (அதி 1-8). (ZECHARIA, BOOK OF; CHAP 1-8)

முன்னுரை: செக்கரியாவின் திருநூலில் இரு நூல்கள் உள்ளன என்பர். அதி 1-8 அடங்கிய பகுதியை முதலாம் செக்கரியா என்றும், அதி. 9-14 அடங்கிய பகுதியை இரண்டாம் செக்கரியா என்றும் அழைப்பர். முதலாம் செக்கரியா, செக்கரியா என்ற பெயருடைய இறைவாக்கினரின் உண்மையான இறைவாக்குகளைக் கொண்டுள்ளன. ஒரு வேளை, அறிவிப்பிற்குப் பின் அவருடைய சீடரில் ஒருவர் சேகரித்துப் பதிப்பித்திருக்கலாம். இரண்டாம் செக்கரியா பிற்காலத்தைச் சேர்ந்த வேறொரு ஆசிரியர் (கள்) எழுதிய நூலாகவும் இருக்கலாம். இப்படிப் பிரிப்பதற்கும் போதிய சான்றுகள் உள்ளன. அவை இரண்டாம் செக்கரியா நூலுக்கு அளிக்கப்படும் அறிமுகத்தில் கூறப்படும்.

2. பெயரும் வாழ்க்கையும்: ''செக்கரியா'' என்ற சொல்லுக்கு ''யாவே நினைவு கூர்ந்தார்'', ''யாவே கவனமாய் உள்ளார்'' என்றும் பொருள் கூறலாம். இவரைப் பற்றி ஒரு சிறிதே அறியமுடிகிறது. ''இத்தோவின் பேரன், பெரக்கியாவின் மகன்''தான் செக்கரியா என்று இந்நூல் கூறுகிறது (1:1-7). ''இத்தோவின் மகன் செக்கரியா,'' என்று எஸ்ரா திருநூல் குறிக்கிறது (எஸ் 5:1; 6:14). எசா 8:2-இல் ஒரு எபரேக்கியாவின் மகன் செக்கரியா குறிப்பிடப்படுகிறார். ''இத்தே'' ஓரிடத்தின் பெயராக நெகேமியாவில் குறிக்கப்படுகிறது (நெகே 12:16). ஒரு வேளை ''பெரக்கியாவின் மகன்'' என்பது தவறாக இடையில் செருகப்பட்டிருக்கலாம். ஆகவே செக்கரியாவின் மரபுக்கொடிபற்றி உறுதியாக எதையும் கூறுவதற்கில்லை. இவர் இத்தோவின் மகனாகவோ பேரனாகவோ இருந்திருக்க வேண்டும். இத்தோ நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய ஒரு குரு குலத்தலைவர் (நெகே 12:1-4.16); ஆகவே செக்கரியா குருகுலத்தைச் சேர்ந்த இறைவாக்கினர் ஆவார். இந்த உண்மையை அவர் ஆலயம் கட்டுவதில் காட்டும் அக்கறையும், குருத்துவம், வழிபாடு ஆகியவற்றை வலியுறுத்துவதும் விளக்குகிறது (3:1-10; 4:1-14; 6:9-15; 7:1-3; 8:19-19). மக்கள் மனத்தளர்ச்சியுற்றபோது ஆலயத்தைக் கட்டுவதைத் தொடர்ந்து நடத்த ஊக்குவிக்கிறார். குரு என்ற முறையில், அவருக்கு முன் வந்த இறைவாக்கினர்களின் கூற்றுக்களை நன்கு அறிந்து உணர்ந்து, தனது காலத்திற்கேற்ப மறுவிளக்கம் அளிக்கிறார். எசேக்கியேலைப்போல் இவரும் ஒரு குரு; இறைவாக்கினர்; காட்சியாளர் ஆவார். எசேக்கியேலைத் தழுவி இவர் இறைவாக்குரைப்பதாகத் தெரிகிறது.

3. எதற்காக: ஆகாயும் செக்கரியாவும் சம காலத்தவர்கள். ஆலயத்தை மீண்டும் கட்டி யெழுப்ப வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுக்காக உழைத்தவர்கள். ஆகவே ஆகாய்த் திருநூலுக்குக் கூறப்பட்ட வரலாற்றுப் பின்னணி செக்கரியாத் திருநூலுக்கும் பொருந்தும்.

நாடு கடத்தப்பட்ட காலத்தில் இறைவாக்கினர்கள் அளித்த நம்பிக்கை ஒளிவீசும் வாக்

குறுதிகள் பிற்கால இஸ்ராயேலர்களுக்கு ஓர் இடறலாயிற்று. பாரசீகப் பேரரசில் ஏற்பட்ட கலகங்கள் உலகில் இறையரசு தோன்றுவதற்குரிய நம்பிக்கையை அளித்தன. ஆனால் தாரியு பாரசீகப் பேரரசைப் பல போராட்டங்களுக்குப் பிறகு நிறுவினார். எங்கும் அமைதி நிலவியது (1:11). ஆனால் யூதா அதில் பங்கு கொண்டதாகத் தெரியவில்லை. இறையரசு நிறுவப்படவில்லை. மோசமான விளைச்சலால் மக்கள் அவதியுற்றனர் (8:10). மக்கள் தொகை குறைந்தது. அண்டை மக்கள் எதிர்த்தனர் (8-10). மக்கள் பாவக்கறையுள்ளவர்களாய் இருந்தனர் (3:4; 7:4-6). மீட்பு தள்ளிப் போடப்பட்டுள்ளதுபோல் தோன்றியது. மக்கள் பொறுமையிழந்தனர். மனந்தளர்ந்தனர். ஆலயம் கட்டுவதை நிறுத்தி வைத்தனர்.

இந்நிலையில் ஆகாய் தனது இறை வாக்குப் பணியைத் தொடங்குகிறார். மக்களை ஊக்குவித்து ஆலயம் கட்டுவதைத் தொடங்கச் செய்தார். ஆலயம் மீண்டும் கட்டுவதற்குச் சன்மானமாகப் பொருளாதாரச் செழிப்பை வாக்குரைத்தார். ஒரு மாதத்திற்குப் பிறகு மக்களிடையே முதல் உற்சாகம் குறைந்தபோது, ஆகாய் மக்களை மீண்டும் ஊக்குவித்து ஆலயம் கட்டும் பணியைத் தொடர்ந்து நடக்கச் செய்தார். இந்தச் சூழ்நிலையில் செக்கரியா தனது இறைவாக்குப் பணியைத் தொடங்குகிறார். தனது காட்சிகள் - இறைவாக்குகளால் ஏற்கனவே நடந்து கொண்டிருந்த பணியை மேலும் ஊக்குவிக்கிறார். ஆலயம் கட்டுவதற்குச் சன்மானமாக மெசியா வருகையை எடுத்துக் கூறி, மக்களின் நம்பிக்கைக்குப் புத்துயிர் அளிக்கிறார். இறைவனது மெசியாத் திட்டம் உடனே நிறைவேறும் என்று உறுதி அளிக்கிறார். மக்களைத் திடப்படுத்துகிறார். மக்களுக்கு நம்பிக்கை அளிப்பது இந்நூலின் முக்கிய செய்தியாகும்.

4. எப்போது: ''தாரியு அரசனது இரண்டாம் ஆட்சி ஆண்டின் எட்டாம் மாதத்தில்'' செக்கரியா தனது இறைவாக்குப் பணியைத் தொடங்கியதாக இந்நூல் கூறுகிறது (1:1); அதாவது கி.மு. 520 அக்டோபர்-நவம்பர் (நமது ஐப்பசி) மாதங்களில் ஆகாய் தனது இறுதி இறைவாக்கை அறிவித்ததற்கு ஒரு மாதம் முன்பு செக்கரியா தனது பணியைத் தொடங்கினார். ஆகாயின் இறைவாக்குப் பணி நான்கு மாதங்களுக்கு நடந்தது. செக்கரியாவின் பணி இரு ஆண்டுகளுக்கு நடந்தது. ''இவரது இறுதி இறைவாக்கு கி.மு. 518 நவம்பர் - திசம்பர் மாதங்களில் கூறப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது (7:1). ஆகவே செக்கரியாவின் பணி, ஆகாயின் பணிக்குப் பிந்தியது. இருவரும் ஒரு மாத காலத்திற்கு இணைந்து பணி புரிந்ததாகத் தெரிகிறது.

5. இலக்கியச் சிறப்பு: ''காட்சி இலக்கிய வரலாற்றில்'' முதலாம் செக்கரியா ஒரு சிறப்பிடம் வகிக்கிறது. இந்த இலக்கிய மரபு எசேக்கியேலில் தொடங்குகிறது; தானியேல் நூலில் முதிர்ச்சியடைகிறது. இரண்டுக்கும் இடைப்பட்ட பல இலக்கிய வரலாற்றுக்கு இந்நூல் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

முதலாம் செக்கரியா முதன்மையாக ஒரு ''காட்சியாளர்'' ஆவார். வார்த்தையைவிட காட்சியையே வெளிப்பாட்டுக்குரிய சாதனமாக இந்த இறைவாக்கினர் கருதுவதாகத் தெரிகிறது. யாவேயின் காட்சியைச் செக்கரியா பார்க்கிறார். அதைப் பிறரும் பார்க்க விரும்புகிறார். காட்சியை எடுத்துக்கூற வார்த்தைகள் அவசியம்; ஆனால் அவை இரண்டாம் பட்சமே. பொருட்களின் தோற்றத்திற்குப் பின்னுள்ள கருத்தை ஆழ்ந்து நோக்கி, அதைக் காட்சி வடிவில் இறைவாக்கினர் எடுத்துக் கூறுகிறார். இக்காட்சிகள் இறைவன் மட்டுமே அறிந்த மறைபொருள்களை வெளிப்படுத்தி வானதூதர்கள் வழியாக விளக்குகின்றன.

இக்காட்சிகள் ஒரு குறிப்பிட்ட திட்டத்தைக் கொண்டுள்ளன:- 1. சில உருவங்களை ''நான் பார்த்தேன்'' அல்லது அவர் காட்டினார். 2. வான தூதர் ஒருவர் காட்சியாளரிடம் வருகிறார். 3. இருவருக்குமிடையே நடக்கும் உரையாடல் செக்கரியாவுக்குக் காட்சியின் பொருளை விவரிக்கிறது. 4. விளக்கம்

அளிக்கப்படுகிறது. வாசகங்களுக்குப் பொருள் தெளிவாகிறது.

காட்சி இலக்கியப் பண்புகள் சிலவற்றை இந்நூலில் காண்கிறோம். காட்சி இலக்கிய ஆசிரியர்கள், ''முடிவுகாலக் காரியங்கள்'', வரலாற்றின் முடிவு இறைவனது இறுதி வெற்றி ஆகியவற்றில் ஆர்வம், அக்கறை கொள்கின்றனர். இப்பண்புக்கேற்ப மெசியா அரசு நிறுவப்படுதல் பற்றி செக்கரியா முதன்மையான அக்கறை கொள்கிறார்.

இந்நூலில் காணப்படும் மற்றொரு காட்சி இலக்கியப் பண்பு - மறை பொருள் மிக்க ''படமொழியைப்'' பயன்படுத்துவதாகும். இறைவாக்கினர் இரவில் மறைபொருள் மிக்க காட்சிகளைக் காண்கிறார். அவற்றின் இயற்கை மீறிய சக்தியால் ஆட்கொள்ளப் பட்டுச் சோர்வடைந்து துயில் கொள்கிறார்; ஆனால் புதுக்காட்சியால் எழுப்பப்படுகிறார். அவர் காணும் உருவங்கள் மாயமானவை; விசித்திரமான அடையாளப் பொருளுடையவை; இயல்பு மீறியவை; திகிலடைந்தவனின் குழப்பமிக்க கற்பனைப் படைப்பு போன்றவை. இத்தகைய காட்சிகள் ஏற்கனவே எசேக்கியேலில் காணப்பட்டாலும், இந்நூலில் சிறப்பிடம் பெறுகின்றன. காட்சிகள் பலவேறு உருவங்களை அபரிமிதமாகக் கொண்டுள்ளன. இக்காட்சிகளில், வானதூதர்கள், குதிரைப்படைகள், போர்த்தேர்கள், கொல்லர்கள், நாரையின் இறக்கைகளையுடைய பெண்கள் போன்ற உருவங்களின் கூட்டம் அதிகம். ஒவ்வொரு உருவமும் தனக்கே உரிய முக்கியத்துவத்தையும் பொருளையும் கொண்டு விளங்குகின்றன. நிறம், எண், உடை, உடலின் அங்கங்கள், விலங்குகள், பறவைகள் போன்ற எதுவும் அடையாளப் பொருளாக மாறலாம். இந்த அடையாளப் பொருட்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி உரைப்பதால், புதிரான, மாயமான சூழ்நிலை ஏற்படுகிறது; வாசகர்களுக்குத் திகைப்பு உண்டாகிறது. ஆனால் இத்தகைய உருவச் சித்தரிப்பை நவீன ஓவியர்கள் பெரிதும் விரும்புவர்.

இத்தகைய காட்சிகள் இஸ்ராயேலைச் சுற்றியிருந்தபிற மக்களிடையேயும் காணப்படுகின்றன. இவர்களில் சிலர், தங்கள் கடவுள்களின் புனித இடங்களில் உறங்கி, தெய்வ வெளிப்பாடுடைய கனவுகளைத் தேடினர். கனவுகளில் இறைவன் தோன்றும் கதைகள் யூதப் பாரம்பரியத்திலும் காணப்படுகின்றன (ஆதி 20:3; 20:10 தொ; 31:10 தொ; எண் 12:6-7). கனவுக்காட்சிப் பாரம்பரியத்தில் செக்கரியாவின் காட்சிகள் முக்கிய இடம் வகிக்கின்றன. இப்பாரம்பரியம் திருவெளிப்பாட்டு நூலில் உச்சநிலை அடைகிறது. இந்த இலக்கியம் பற்றித் தானியேல் திருநூலுக்கு அளிக்கும் அறிமுகத்தில் விரிவாக எடுத்துக் கூறப்படும்.

புதிரான மொழியும், இயற்கை மீறிய உருவங்கள் அமைப்பும் இறைவாக்குக்கு - மறைபொருள் சூழ்நிலையை அளிக்கின்றன. ஆகாயின் எளிய உரை நடைக்கு மாறாக, இந்நூல் வண்ணமிக்கது. அதன் வார்த்தைகள் ஆற்றல்மிக்க, தற்படைப்பாற்றலும் ஓவியத் தனிச்சிறப்பும் கொண்டவை. செக்கரியாவின் காட்சிகள் வெறும் கற்பனையாகச் சிதறுவதில்லை; ஆகாயின் அமைவடக்கமுள்ள சொற்களைப்போல், மக்களைச் செயலாற்றத் தூண்டவல்லன. வான்தூதர்களும் விளக்கம் அளிப்பவர்களும் தோன்றுவது -காட்சி இலக்கியப் பண்புகளில் ஒன்றாகும்.

இவ்வாறு காட்சி இலக்கிய ஆசிரியர்களுக்கும் செக்கரியாவுக்கும் ஒற்றுமைகள் இருந்தாலும், இவர்களிடையே ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. பாரசீகப் பேரரசு, ஆளுநன் செருபாபேல், பெரியகுரு ஏசுவா, எருசலேமில் இறையரசு நிறுவப்படுதல், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இறைவன் ஆற்றும் செயல்களைக் கொண்ட வரலாறு ஆகியவற்றில் செக்கரியா கவனம் செலுத்துகிறார். மற்ற இறை வாக்கினர்களைப் போல் வரலாற்றில் மனிதர்களின் வழியாக இறைவன் செயலாற்றுவதை வலியுறுத்துகிறார்.

மனப்போக்கிலும் மொழியிலும், ஆகாயைவிடச் செக்கரியா பல்திறப் புலமையுடையவர். பெரும் நம்பிக்கையும் தெளிவான உரையும் கலந்த அரிதான இணைப்பு இந்நூலில் காணப்படும். உள்ளம் தளர்ந்த மக்களுக்கு அவர்களது மெசியாக் கனவுகளை இறைவன் உறுதியாக நிறைவேற்றுவார் என்று உறுதியளிக்க வேண்டியிருந்தது. ஆகவே எதிர்காலம்பற்றிய கனவுகளை நயமிக்க காட்சியிலக்கிய நடையில் செக்கரியா எடுத்துக் கூறுவார் (1:7-6:8). வருங்காலக் கனவுகளைக் கருதி மக்கள் உடனடியாகச் செய்யவேண்டிய காரியங்களைக் கைவிடக் கூடாது (1:1-6). விதவைகளும் அநாதைகளும் வீடின்றி, உணவின்றி வாடும்போது, உண்ணாநோன்பு பற்றி மக்கள் கருத்தியலாக விவாதிக்கக்கூடாது (7:1-14). ஆகவே இரு வேறுபட்ட நடையில் ஆற்றலோடு பேசுகிறார். அவர் காட்சி இலக்கியத்தில் ஒரு கலைஞர். அதே சமயம் சீர்திருத்தம் செய்யும் இறைவாக்கினரும் ஆவார். ஒரே உரையில் இரண்டையும் இணைத்துக் கூறுவார். பல காட்சிகளில் வழிபடுவோரின் ஒழுக்கத் தூய்மையையும் வலியுறுத்துவார். பெரிய குரு சுத்தி செய்யப்படுதல் (அதி.3), மக்களின் பாவங்களை நீக்கும் சுருள், மரக்கால் (அதி.5) ஆகியவை அத்தகைய சான்றுகளாகும்.

மூலத்தில் செக்கரியா தனது காட்சிகள் பற்றிய நாட்குறிப்பைத் தயாரித்திருக்க வேண்டும். இவற்றோடு அவரது வாழ்க்கைக் குறிப்புகளையும் பிறவற்றையும் சேர்த்து, திருத்திஅமைத்து, பிற்காலப்பதிப்பாசிரியர்(கள்) .பதிப்பித்திருக்க வேண்டும்.

இந்நூலின் எபிரேய வாசகம் மிகவும் பழுதுபட்டுள்ளது. பிற்காலத்தவர் விளக்கக் குறிப்புகளைப் புகுத்தியுள்ளனர். பல வசனங்கள் இடம் பெயர்ந்துள்ளன. பழுதுபட்ட வாசகமும், காட்சி இலக்கிய நடையும் - இந்நூல் - விவிலியத்திலேயே மிகவும் புதிரான, தெளிவற்ற நூல் என்று கூறப் புனித எரோனிமுவைத் தூண்டியுள்ளன.

6. திட்ட அமைப்பு:

I. முன்னுரை:- மனந்திரும்புதலுக்கு அழைப்பு (1:1-6).

II. காட்சிகள் (1:7-6:8) எல்லாம் மெசியாவின் வருகையைப்பற்றிப் பேசுகின்றன. ஆலயம் மீண்டும் கட்டப்படுதல், நாடு கடத்தப்பட்டவர்கள் திரும்பி வருதல், சமூகம் சுத்தி செய்யப்படுதல், செழிப்படைதல் ஆகியவைபற்றிய எட்டுக் காட்சிகள்; சில, விரிவாகத் தரப்பட்டுள்ளன.

1. முதல் காட்சி (2:1-4); நான்கு குதிரை வீரர்கள்..

2. இரண்டாவது காட்சி (2:1-4); நான்கு கொம்புகளும் நான்கு கொல்லர்களும்.

3. மூன்றாவது காட்சி (2:5-17):

அ. அளக்கும் நூலோடு வானதூதர் (2:5-9).

ஆ. இரண்டாம் மூன்றாம் காட்சிகளின் விவரிப்பு, நாடு கடத்தப்பட்டவர்கள் திரும்ப அழைப்பு, புதிய எருசலேம் (2:10-17).

4. நான்காவது காட்சி (3:1-10); பெரியகுரு ஏசுவா.

5. ஐந்தாவது காட்சி (4:1-14);

அ. விளக்குத் தண்டு (4:1-3. 11-14).

ஆ. செருபாபேல் பற்றிய செய்தி (4:4-10).

6. ஆறாவது காட்சி (5:1-4); பறக்கும் சுருள்.

7. ஏழாவது காட்சி (5:5-11); மரக்காலுக்குள் பெண்.

8. எட்டாம் காட்சி (6:1-8); நான்கு தேர்கள்.

இக்காட்சிகளை 1-8, 2-3, 4-5, 6-7, என்ற வரிசையில் ஒழுங்கு படுத்தலாம்.

III. அ. செருபாபேல் முடி சூட்டப்பெறுதல் (6:9-15).

ஆ. உண்ணா நோன்பு பற்றிய கேள்வியும் பதிலும் (7:1-14).

இ. மெசியாக் காலமும் ஆசீர்களும் (8:1-23).

1. முக்கிய கருத்துக்கள்:

அ. இறைவனின் தன்மை: இந்த இறைவாக்கு நூல் நித்திய இறைவனை - எல்லாம் கடந்தவராகவும் நேர்மை மிக்கவராகவும் எல்லாம் வல்லவராகவும் வெளிப்படுத்துகிறது.

இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்ட காலத்திலும், அதற்குப் பின்னும் இறைவனின் எல்லாம் கடந்த தன்மை பற்றிய உணர்வு மக்களிடையே வளர்ச்சியடைகிறது. எசேக்கியேலைப் பின்பற்றிச் செக்கரியா இதை வலியுறுத்துகிறார். யாவே உலகிற்கெல்லாம் மேலாக உயர்த்தப்பட்டு விண்ணக அரியணை ஏறி, ''தூரத்திலிருக்கும் இறைவனாகக்'' கருதப்பட்டார். மனுக்குலத்திற்கு எட்டாதவரானார். பாவமிக்க மனிதரிடமிருந்து எவ்வளவு விலகியிருந்தார் என்றால், இறைவாக்கினர்கள்கூட இறைவனோடு நேரடித் தொடர்பு கொள்ளவில்லை. ஆமோசோடும், எரேமியாவோடும் நேரடியாகப் பேசிய இறைவன், இப்போது காட்சிகள், விளக்கமளிக்கும் வானதூதர் வழியாக மறைமுகமாகச் செக்கரியாவோடு தொடர்பு கொள்கிறார்; செயலாற்றுகிறார். இந்த வானகத் தூதர்கள் எல்லாம் கடந்த இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையே தூதுப் பணியாற்றுகின்றனர்.

இந்நூலில் வானதூதர் இயல் வளர்ச்சியடைகிறது. பிற்கால நூலாகிய தானியேல் திருநூலில் காணப்படுவதைவிட, இந்நூலில் வானதூதர் முக்கியமான இடம் வகிக்கின்றனர். இவர்கள் இறைவாக்கினருக்கு இறைவனது தூதர்களாகச் செயாற்றுகின்றனர். காட்சிகளை விளக்குகின்றனர். உலக காரியங்களை இறைவனுக்கு எடுத்துச் சொல்லுகின்றனர். பிறஇன உலகில், இறைவனது திட்டத்தைச் செயலாற்றும் கருவிகளாவர்; இஸ்ராயேலுக்காகப் பரிந்து பேசுகின்றனர். ''அவர்கள் அனைவரும் ஊழியம்செய்யும் ஆவிகள் அல்லவா? மீட்பை உரிமைப்பேறாகப் பெறுபவர்களுக்குப் பணிபுரிய அனுப்பப்பட்டவர்கள் அல்லவா?'' (எபி 1:14). அவர்களில் ஒருவனான சாத்தான், பழைய ஏற் [illegible] தோன்று

கிறான். ஆனால் பிற்கால நூல்களில் காணப்படுவது போல் (யோபு 1:6-12) சாத்தான் தன் தன்மையாலே தீயவனாகவோ, இறைவனது எதிரியாகவோ இங்குக் காட்டப்படவில்லை. இறைவனுக்குக் கட்டுப்பட்டு மனுக்குலத்தைக் குற்றம் சாட்டுபவனாகச் செயலாற்றுகிறான். வானக அவையில் வழக்குத் தொடர்பவனாக விளங்குகிறான். இக்கருத்தைப்பழைய ஏற்பாட்டின் பிற்கால நூல்களில் விரிவாகக் காண்போம். வான தூதர்கள், பேய்கள் பற்றிய இறையியல் வளர்ச்சி, இறைவனைத் தமது மக்களிடமிருந்து மிகவும் விலகிவிட்டவராகவும், எல்லாவற்றையும் கடந்தவராகவும் காட்டுகிறது. அவர் தமது மக்கள்பால் அக்கறை காட்ட, வான தூதர்களும் பேய்களும் இடையாளர்களாகச் செயலாற்றுகின்றனர்.

எல்லாம் கடந்த இறைவன் நேர்மையுள்ளவராக இருக்கிறார். தமது மக்களிடமிருந்து நேர்மையைக் கோருகிறார். முதலிலேயே மக்களை மனத்துக்கத்திற்கு அழைக்க செக்கரியாவுக்குக் கட்டளை வருகிறது. அவர்களது மூதாதையர்கள் இறைவாக்கினர்கள் விடாது வலியுறுத்திய எச்சரிக்கைகளைப் புறக்கணித்தனர்; மனந்திரும்ப மறுத்தனர்; அழிந்து போயினர். அவர்களது வழித்தோன்றல்கள் அதே பிழையைச் செய்யக்கூடாது. ''என்னிடம் திரும்பி வாருங்கள்; அப்போது நானும் உங்களிடம் திரும்புவேன்'' (1:3). ஆலயத்தைத் திரும்பக்கட்டுதலிலும் பலி வழிபாட்டைத் திரும்ப அமைத்தலிலும் மட்டும் செக்கரியா கருத்துக் கொள்ளவில்லை. முந்தைய இறைவாக்கினர்களைப் போல் செக்கரியாவும் ஒழுக்கம், கீழ்ப்படிதல், நேர்மையான வாழ்வு ஆகியவற்றிற்குப் பதிலாகப் புறச்சடங்குகள் அடங்கிய வழிபாட்டை இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதை நன்கு அறிந்திருந்தார். அதை உறுதியோடு போதித்தார். மக்களிடையே வாழும் இறைவன் அவர்களிடமிருந்து முழுத்தூய்மையைக் கோருகிறார். இதைப் பறக்கும் சுருள், மரக்காலுக்குள் பெண் ஆகிய காட்சிகள் எடுத்துக் காட்டுகின்றன (5:1-11). மக்களின் ஒழுக்கக்கேடுகளையும்

தவறுகளையும் செக்கரியா கண்டனம் செய்கிறார். எருசலேமை மாற்றி அமைத்தல் மக்களின் இதயத்தைத் தொடவேண்டும். பெரியகுருகூட முழுவதும் சுத்தி செய்யப்பட வேண்டும் *(3:1-10)*. ஆகாயைவிட இந்நூலில் ஒழுக்கவாழ்வு மிகவும் வலியுறுத்தப்படுகிறது. விதவைகளும் அநாதைகளும் வீடின்றி உணவின்றி வாடும்போது, மக்கள் உண்ணாநோன்புபற்றிக் கருத்தியலாக விவாதிப்பதில் பொருள் இல்லை. இறைவன் கோருவதெல்லாம், நீதி, அன்பு, இரக்கம் எளியவரைப் போற்றுதல், தீய எண்ணங்களற்ற தூய இதயம் ஆகிய உயர் பண்புகளேயாகும்.

எல்லாம் கடந்த நேர்மையுள்ள இறைவன் - எல்லாம் வல்லவரும் - ஆவார். அவர் வானகத்தில் மட்டுமின்று; பூமியின் மேலும் அதிகாரம் கொண்டுள்ளார். பூமியில் தமது திட்டத்தை உறுதியாக நிறைவேற்றுகிறார். அவர் வானகத்தில் ஏற்கெனவே தீர்மானித்தவற்றை எவ்வளவு பெரிய தடைகள் வந்தாலும், அவருடைய மனித ஊழியர்கள் பலவீனர்களாய்த் தோன்றினாலும் அவர் நிறைவேற்றுகிறார். மெசியா அரசு வெறும் மனித முயற்சியாலோ, பாரசீகப் பேரரசுக்கு எதிராகச் செய்யும் அரசியல் கிளர்ச்சிகளாலோ நிறுவப்படும் என்று செக்கரியாவோ, ஆகாயோ நம்பவில்லை. இறைவனது திட்டமிட்ட செயலாலும், மறைவான வலிமையாலும் செருபாபேலை எதிர் கொள்ளும் இடைஞ்சல்கள் நீக்கப்படும். ஆலயம் மீண்டும் கட்டும் வேலை பெரு மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே நிறைவேறும் *(4:6-9)*. முதல் ஆலயத்தைவிட புதிய ஆலயம் சிறியதாக இருந்தாலும் அது பெருமையுடையது. இறைவன் முன் கட்டடத்தின் பருமன் முக்கியத்துவம் உடையதன்று: சிறு தொடக்கம்தான் பெரும் விளைவுகளுக்கு இட்டுச் செல்லும். மக்கள் இறைவனின் திட்டத்திலும் வழிமுறைகளிலும், செயலாற்றலிலும் நம்பிக்கை வைக்க வேண்டும்.

ஆ. பிற போதனைகளின் சுருக்கம்: ஆலயம் கட்டுதல், அதன் வழிபாட்டை முறைப்படுத்துதல் ஆகியவற்றில் செக்கரியா அக்கறை காட்டினார். ஆலயம் இல்லாமல் யூதக் கோட்பாடு உயிர் வாழமுடியாது. ஏனெனில் ஆலயம் இறைவனது பிரசன்னத்தை அடையாளமாக உணர்த்திற்று. மெசியாக்காலம் வரும்வரை பெரும் மீட்புச் செயல்கள் தொடர்ந்து நடக்கும் என்பதற்கு உறுதி அளித்தது. எருசலேமுக்குத் தாமே ''அதைச் சுற்றிலும் நெருப்புச் சுவராய்'' இருப்பதாகவும் ''அதில் உறையும் மாட்சிமையாய்'' விளங்குவதாயும் இறைவன் அறிவிக்கிறார் *(2:9;2:15-17; 8:3)*.

இந்நூலில் வரும் முக்கிய கருத்துக்களில் ஒன்று மெசியாக் கோட்பாடு ஆகும். சீயோனைக் கொடுமைப்படுத்தும் நாடுகள் அழிவுறுதல் *(2:1-4.10-13)*, ஆலயத்தை மீண்டும் கட்டுதல் *(1:16)*, இறைவன் தமது நகருக்குள் வருதல் *(2:14; 8:3)*, நகரில் மக்கள் மீண்டும் குடியேறுதல் *(3:4-5)*. சிதறிப் போனவர்கள் திரும்புதல் *(6:15; 7:7-8)*, நாடுகள் மனந்திரும்புதல் *(2:15; 8:22-23)*, செழிப்பும் அமைதியும் *(3:15; 8:12)*, பாவத்தின் முடிவு *(3:9.5)* ஆகிய தலைப்புகள் மெசியாக் காலம் பற்றிய ஓவியக் காட்சிகளைத் தருகின்றன. செக்கரியா, செருபாபேலை மெசியாக்காலத்தைச் சேர்ந்தவராகக் காட்டுகிறார்; இவரையும் பெரிய குருவாகிய ஏசுவாவையும் மெசியாக் காலத் தலைவர்களாக்குகிறார்.

எசேக்கியேலைப்போல் செக்கரியாவும் குருத்துவ நிறுவனத்தை வலியுறுத்துகிறார். ஆலயத்தைப் பற்றிய அவரது அக்கறை, குருத்துவத்தை உயர்த்திக் காட்டத்தூண்டியது எனலாம். அஃதோடு தாவீது அரசமரபு முழுவதும் மறைந்து போவதற்கும் சாட்சியாக உள்ளார். செருபாபேலில் அரச குடும்பம் தற்காலிகமாக அமைக்கப்பட்டது. நாடு கடத்தலுக்குமுன் அரசன் ஆலயத்தையும் குருத்துவத்தையும் கட்டுப்படுத்தினார் *(1 அர 1-2:8)*. நாடு கடத்தலுக்குப்பின் தாவீதின் வழித்தோன்றல், பெரிய குருவோடு சேர்ந்து அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்கிறார். ஆளு

நன் அருகில் பெரியகுரு நிற்கிறார். வெப்பமும் ஒளியும் தருவதற்கு எண்ணெய் கொடுக்கும் இரு ஒலிவ மரங்களைப்போல் இருவரும் சேர்ந்து செயல் படுகின்றனர் *(4:1-3)*. செருபாபேலுக்கு முடிசூட்டப்படுகிறது *(4:6தொ)*. மெசியாப் பட்டங்கள் அளிக்கப்படுகின்றன *(3:8; 4:14; 6:11-13)*. ஆனால் இதற்குப்பின் வரலாற்றில் செருபாபேலை நாம் அறிய முடியவில்லை. தாவீது குடும்பத்தைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. ஆலயத்தின்மேல் செக்கரியா கொண்ட அக்கறை ஆட்சியை நிறைவுசெய்ய குருத்துவத்தின் வாரிசை உறுதிப்படுத்துகிறார். நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் செக்கரியா முதன்மையான இறைவாக்கினர் ஆவார். உண்ணா நோன்பு பற்றிய பிரச்சனை எழுந்தபோது இறைவாக்கினர் என்ற முறையிலேயே பதிலளிக்கிறார்.

ஆகாயைவிடத் தெளிவாகவும் விரிவாகவும் யாவருக்கும் மீட்பு உரியது என்றும் போதிக்கிறார். நாடு கடத்தலின் துன்பம், வேதனை பற்றிய நினைவு மக்களை வாட்டிய போது செக்கரியா, ''அந்நாளில் பிற இனத்தார் பலர் ஆண்டவரிடம் வந்து சேர்வார்கள்'' *(2:15)* என்று துணிவோடு அறிவிக்கிறார். மக்கள் ஆண்டவரை நாடவும், அவரது அருளை மன்றாடவும் எருசலேமுக்கு வருவார்கள் *(8;12-22)*.

8. செக்கரியாவும் விவிலியத்தின் பிறநூல்களும்: இந்நூல் விவிலியக் காட்சி இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம் வகிப்பதையும், எசேக்கியேலைத் தழுவியுள்ளதையும் ஏற்கனவே பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளோம். புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டுத் திருநூல் இந்நூலை விரும்பிப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. நான்கு குதிரை வீரர்கள் *(1:7 தொ—திருவெளி 6:1-8)*; பரிசுத்த நகரம் அளக்கப்படுதல் *(1:16-திருவெளி 11:1-2)*, இரு ஒலிவமரங்களும் விளக்குத்தண்டும் *(4:1-3. 11-14-திருவெளி 11:4-10)* ஆகியவை இவ்வுண்மையை நிறுவும் சான்றுகளாகும்.

9. இக்காலத்திற்கு: இறைவன் எல்லாவற்றின் மேலும் மேலாண்மை கொண்டுள்ளார். மனிதனிடமிருந்து கீழ்ப்படிதலையும் தூய்மையையும் உண்மையையும் எதிர்பார்க்கிறார். இவ்வுலகில் அவரது ஒளியாக நாம் விளங்க வேண்டுமென்றால் *(4:2-3; மத் 5:14-16; பிலி 2:15)*. நமது வாழ்விலிருந்து பாவம் அகற்றப்பட வேண்டும்; நாம் தூயவராக வேண்டும் *(3:3 தொ; 5:8-11)*. நமது வாழ்வு முழுவதும் உண்மையான வழிபாடாக வேண்டும்.

செக்கரியாவின் திருநூல் - 2-ஆம் பாகம் *(அதி 9-14)* (ZECHARIAH, BOOK OF, CHAP 9-14)

1. இந்நூல் பற்றிய குறிப்பு: பன்னிரண்டு குறுநூல் இறைவாக்கினர்களின் நூல்கள் அடங்கிய தொகுப்பு, பெயர் தெரியாத இறைவாக்கினர்களின் வாக்குகள் அடங்கிய மூன்று தொகுதிகளோடு முடிகிறது. இவை ''ஓர் இறைவாக்கு'' என்ற தலைப்போடு தொடங்குகின்றன *(செக் 9:1; 12:1; மலா 1:1)*. மூன்றாவது தொகுதி ஒரே ஆசிரியரின் முத்திரையைக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. ஆகவே அதைப்பற்றி அதற்குரிய அறிமுகத்தில் காண்க. குறுநூல் இறைவாக்கினர் நூல்களைப் பரிசுத்த எண்ணாகிய பன்னிரண்டாக்கப் பெயரில்லாத முதல் இரண்டு தொகுதிகளையும், அதற்கு முன் இருந்த செக்கரியாவின் திருநூலோடு சேர்த்து ஒரே நூலாக அமைத்தனர். அதுதான் இப்போதைய செக் *9-14* என்ற பகுதியாகும். இதை இறைவாக்கினர் செக்கரியா எழுதவில்லை. இது இப்போது எல்லா விவிலிய அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவாகும். ஆனால் இப்பகுதியை இரண்டாம் செக்கரியாவின் திருநூல் என்றழைப்பர்.

முதலாவது செக்கரியா நூலுக்கும் 2-ஆம் செக்கரியா நூலுக்குமிடையே பலவேறுபாடுகள் உண்டு. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

வரலாற்று நோக்கில், முதலாம் செக்கரியாவில் வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாக

உள்ளன. துல்லியமான நாட்குறிப்புகளை இப்பகுதி கொண்டுள்ளது. ஆலயம் மீண்டும் கட்டுதல், ஆளுநர் செருபாபேல், பெரிய குரு ஏசுவா ஆகியவற்றில் அக்கறை காட்டுகிறது. கி.மு. 520-இல் யூதர்களோடு தொடர்பு கொண்டிருந்த நாடுகள் நூலில் குறிக்கப்படுகின்றன. இவற்றிற்கு மாறாக, 2-ஆம் செக்கரியாவில், வரலாற்றுக் குறிப்புகள் இல்லை; இருந்தாலும் தெளிவாக இல்லை. நாட்குறிப்பே இல்லை. ஆலயம் மீண்டும் கட்டுதல் குறிக்கப்படவில்லை. செருபாபேல், ஏசுவா போன்று பெயர்கள் காணப்படவில்லை. கி.மு. 520-இல் யூதர்களுடன் தொடர்பு கொண்டிராத நாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் யூதாவில் நிலவிய நிலைபற்றிய குறிப்புகள் இல்லை.

சமய நோக்கில், முதலாம் செக்கரியாவில், எருசலேம், தாவீது அரசு புத்துயிர் பெறுதல், மெசியாக் கோட்பாடு - முதலிய சமயக் கருத்துகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இக்கருத்துக்குச் செயல் முறையான எடுத்துக் காட்டாகச் செருபாபேல் விளங்கினர்; 2-ஆம் செக்கரியாவில், மேற்கூறப்பட்ட கருத்துகள் சிறப்புப் பெறவில்லை. இதில் நாம் காணும் மெசியாக் கோட்பாடு கி.மு. 520-இல் நிலவியது அன்று. இதில் முடிவுகால இறையாட்சி பற்றிய பல வகைக் கனவுகளைக் காணலாம்.

இலக்கிய அடிப்படையில், முதலாம் செக்கரியாவின் வாக்குகள் உரைநடையில் உள்ளன. இதில் மீண்டும் மீண்டும் கூறுதலும், சுற்றி வளைத்துக் கூறுதலும் உண்டு. யார் இவ்வாக்குகளை அருளியது என்றும் கூறப்படுகிறது. இதற்கு மாறாக 2-ஆம் செக்கரியாவில் வரும் வாக்குகள் பாடல் வடிவில் உள்ளன; எளிய முறையில், நேரடியாகவே அமைந்துள்ளன; தொகுப்பு வடிவில் உள்ளன. யார் கூறியது என்ற குறிப்பு இல்லை. செக்கரியாவின் பெயரே காணப்படவில்லை. அதி. 12-14-இல் அடங்கிய பகுதி பொருள் அடக்கத்திலும், சொற்றொகுதியிலும் காட்சி இலக்கிய வகையைச் சேர்ந்ததாகும்.

இக்காரணங்களுக்காக, 2-ஆம் செக்கரியா முதலாம் செக்கரியாவிலிருந்து வேறுபட்டது என்றும், 2-ஆம் பகுதியைச் செக்கரியா எழுதவில்லை என்றும் கூறலாம்.

2. வரலாற்றுப் பின்னணியும் நூல் எழுதப் பட்ட காலமும்: இரண்டாம் எசாயா, பாரசீகப் பேரரசன் சைரசை ''ஆண்டவர் நியமித்த ஆயன்'' என்றும், ''அபிடேகம் பெற்றவன்'' என்றும் அழைக்கிறார். இவர் பாரசீகப் பேரரசை நிறுவினார். இது இருநூறு ஆண்டுகளுக்கு (கி.பி. 538-333) நீடித்தது. யூதா பாரசீக ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் ஆகாய் செக்கரியா, மூன்றாம் எசாயா, ஒபதியா, மலாக்கி, யோவேல் ஆகிய இறைவாக்கினர்கள் பணி செய்தனர். இவர்களுடைய இறைவாக்கு நூல்களிலும், எஸ்ரா, நெகேமியா நூல்களிலும் இருந்து நாம் அறிவதைத் தவிர, பாரசீகர் காலத்தில் யூதர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை; பாரசீகப் பேரரசிற்குட்பட்ட ஒரு சிறு நிலப்பரப்பாக யூதா இருந்தது.

பாரசீகப் பேரரசு தனது ஆட்சியை மேற்றிசையில் பரப்ப முயன்றபோது கிரேக்கர்களோடு போராட வேண்டியிருந்தது. இந்தப் போராட்டத்தின் முடிவில் (கி.மு. 333-331) மாமன்னன் அலக்சாந்தர் பாரசீகத்தைத் தோற்கடித்து, கிரேக்கப் பேரரசை நிறுவினார். அவர் தனது முப்பத்தி மூன்றாம் வயதில் இறந்தார். கிரேக்கப் பேரரசில் குழப்பங்களும் உள்நாட்டுப் போர்களும் நிகழ்ந்தன. அரசு பல பகுதிகளாகப் பிரிந்தது. இறுதியில் நான்கு தளபதிகள் மேலாண்மை பெற்று, நாட்டை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஆண்டனர். தோலமிலாகி என்பவர் எகிப்துக்கு ஆளுநன் ஆனார். எகிப்தின் ஆட்சிக்கு யூதா உட்பட்டது. கி.மு. 198-வரை எகிப்தியர் யூதாவை ஆண்டனர். கப்பம் கட்டினாலும், யூதர்கள் ஓர் அளவு சுயாட்சி பெற்றிருந்தனர். யூதரில் பலர் எகிப்தின் தலைநகராகிய அலக்சாந்திரியாவில் குடியேறினர். அங்குதான் எபிரேய விவிலியத்தின் கிரேக்க மொழி பெயர்ப்பான ''எழுபது நூல்'' தோன்றியது.

ஒரு வேளை, நான்காம் நூற்றாண்டில் அதாவது, மாமன்னன் அலக்சாந்தரின் வெற்றிகள், மரணம் ஆகியவற்றுக்குப்பின் பேரரசின் ஆட்சியைக் கைப்பற்ற நடந்த போராட்டத்திற்குப்பின், குறிப்பாகத் தோலமியர் யூதாவை ஆட்சி செய்த காலத்தில் 2-ஆம் செக்கரியாநூல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2-ஆம் செக்கரியா நூலின் காலம் பற்றிய முதல் ஆய்வுக்கட்டுரை, செக் 9-11 என்ற பகுதிக்குக் கி.மு. 721-க்கு முந்திய காலத்தைக் குறித்தது. ஏனெனில் வட இஸ்ராயேலைக் குறிக்க எப்பிராயிம் என்ற பெயரும், அசிரியா, எகிப்து ஆகிய நாடுகளும் குறிக்கப்பட்டுள்ளன (9:10.13; 10:6-7. 10-11). செக் 12-14 என்ற பகுதி யூதாவை மட்டும் குறிப்பிடுகிறது; யோசியாவின் மரணத்தையும் (கி.மு. 609) சுட்டிக்காட்டுகிறது (12:11). ஆகையால், இப்பகுதி கி.மு. 609-586-க்கு இடையிட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம் என்றனர். இக்கருத்துக்கு எதிராக, முடிவு கால இயல், காட்சி இலக்கிய நடையில் காணப்படும் செயற்கை முறையான தொல் சொற்களையும் நாம் கவனிக்க வேண்டும். எசா 19:23.25; 27:13-இல் வருவதுபோல், எகிப்து, அசிரியா ஆகிய பெயர்கள்ள அடையாளமாகவும், எடுத்துக்காட்டான பொருளிலும், ஆசிரியர் கையாண்டிருப்பதாகத் தெரிகிறது. அவை, தோலமியர், செலூக்கியர் அரசுகளைக் குறிக்கின்றன. தொல் சொற்கள் பழைய கருத்துக்களைக் கூறப் பயன்பட்டுள்ளன எனலாம். நாடு கடத்தல், சிதறிப் போதல் (9:11-12) ஆகியவை பற்றிய குறிப்புகளிலிருந்து, இப்பகுதி நாடு கடத்தலுக்குப் பின் தோன்றியிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.

கிரேக்கர்கள் பற்றிய குறிப்பு நூலில் உள்ளது (9:13). இது இந்நூல் இன்னும் பிற்காலத்தில் தோன்றியிருக்கலாம் என்பதைச் சுட்டுகிறது. 2-ஆம் செக்கரியாவின் முதற்பகுதியை (செக் 9-11) மாமன்னன் அலக்சாந்தரின் படையெடுப்புக்குப்பின் ஆசிரியர் எழுதியிருக்க வேண்டும். ஏனெனில் அதன் போக்கு அந்நியருக்கு ஆதரவு தருவதாக உள்ளது. இரண்டாம் பகுதியில் (செக் 12-14) யூதக் கோட்பாட்டைச் சேராத பண்பாடுகளுக்கு விரோதமான தீவிர எதிர்ப்பு காணப்படுகிறது. மேலும் இப்பகுதி யோவேலைத் தழுவி எழுதப்பட்டிருப்பதாகத் தோன்றுவதால், அதற்குப் பிந்தியதாகும். இரண்டாம் பகுதி கி.மு. 200-க்குச் சிறிது முந்தியதாக இருக்கலாம். ஏனெனில் சீராக்கு திருநூலின் ஆசிரியர், புனிதவேதாகமத்தின் இறைவாக்கினர் பகுதி நிறைவுறுவது போல், ''பன்னிரண்டு இறைவாக்கினர்களை'' வெளிப்படையாகக் குறிக்கிறார்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால் 2-ஆம் செக்கரியா நூல் கி.மு. 333-200-க்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம்.

3. ஆசிரியர்(கள்): இந்நூலின் ஆசிரியர் யார் என்றுகூற முடியாது. இந்நூல் முழுவதையும் ஒரே ஆசிரியர்தான் எழுதினார் என்றும் கூறமுடியாது. ஏனெனில் இந்நூலின் இரு பகுதிகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. முதல் பகுதி (செக் 9-11) ஓர் அளவு வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. சில வரலாற்றுக் குறிப்புகள் உருவக முறையில் உள்ளன. இவை யாரைக் குறிக்கின்றன என்றோ, எந்த நிகழ்ச்சியைச் சுட்டுகின்றன என்றோ தெளிவாக்க் கூறமுடியாது. ஆயினும், இப்பகுதியில் வரும் இறைவாக்குகள் குறிப்பிட்ட ஆட்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றியதாகும். இரண்டாம் பகுதி (செக் 12-14) காட்சி இலக்கியத் தன்மையுடையது. இப்பகுதி, தொலைவிலுள்ள வருங்காலம் - இறுதிநாட்கள், உலக நாடுகளின் இறுதி முடிவு ஆகியவற்றை விவரிக்கின்றது. இந்த இரு பகுதிகளையும், ஏன் ஒவ்வொரு பகுதியையுமே, ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் எழுதியிருக்கலாம் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. சான்றாக, இரண்டாம் பகுதியில் எருசலேமின் மேல் பிற இனத்தவர் செய்யும் தாக்குதல்கள் பற்றிய இரு வருணனைகள் உள்ளன (12:1-13:6; 14:1-21). இரு வருணனைகளையும் ஒரே

ஆசிரியர் எழுதியிருக்க முடியாது. முதல் பகுதியில் உள்ள ஆறு இறைவாக்குகளுக்கும், 2-ஆம் பகுதியிலுள்ள மூன்று இறைவாக்குகளுக்கும் பலர் ஆசிரியராக இருந்திருக்கலாம். இவர்கள் யாவரும் அலக்சாந்தருக்குப்பின், தோலமியர் பாலஸ்தீனத்தை ஆண்ட காலத்தில் வாழ்ந்திருக்கலாம். இந்த இறைவாக்குகளை ஒன்றிணைத்துப் பிற்காலப் பதிப்பாசிரியர்கள் இப்போதுள்ள நூலைப் படைத்திருக்க வேண்டும்.

4. இலக்கியச் சிறப்பு: 2-ஆம் செக்கரியா நூலின் பெரும்பகுதி பாடல் வடிவில் உள்ளது. நடை தெளிவாக உள்ளது; மொழி நேரடித் தன்மையுடையது; சொற்றொகுதிகள் எளியவை. காட்சிகள் குழப்பமில்லாதவை; தெளிவானவை; விவரங்கள் குறைவாயுள்ளன. இப்பகுதி காட்சி இலக்கிய வகையைச் சேர்ந்தது. இவ்வகை இலக்கியத்தின் உன்னத வடிவைச் செக் 14-இல் காணலாம்.

2-ஆம் செக்கரியா சுயமாக எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. ஆசிரியர், தனக்கு முன் சென்ற பாரம்பரியங்களிலிருந்து சுதந்தரமாக எடுத்துக் கையாளுகிறார்; எரேமியா, எசேக்கியேல், 2-ஆம் எசாயா, 3-ஆம் எசாயா, மலாக்கி, யோவேல் ஆகியோரின் வாக்குகளைச் சுட்டிக் காட்டுகிறார் அல்லது அவற்றிலிருந்து வாக்குகளை எடுத்துக் கையாளுகிறார். தொடக்ககாலத் திருச்சபையை இந்நூலின் முன்னறிவிப்புகள் பெரிதும் பாதித்துள்ளன. செக் 9:9= மத் 21:4தொ; யோவா 12:12-15; செக் 9:12 தொ=மத் 27:3-10; செக் 12:10=யோவா 19:37; செக் 13:7=மத் 26:31; மாற்கு 14:27).

இந்நூலின் எபிரேய வாசகம் பெரிதும் பழுதுபட்டுள்ளது. இது விளக்கவுரை ஆய்வாளர்களுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது.

5. நூலின் திட்ட அமைப்பு: 2-ஆம் செக்கரியாவை செக் 9-11; செக். 12-14 ஆக இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். இரண்டும் ''ஓர் இறைவாக்கு'' என்ற சொற்றொடரோடு தொடங்குகின்றன.

1. முதல் பகுதி (9:1-11:17):-

1. 9:1-8: ஆண்டவரின் படையெடுப்பு.

2. 9:9-10: வருங்கால மெசியா அரசன்.

3. 9:11-17: இஸ்ராயேலை மீண்டும் நிறுவுதல்.

4. 10:1-12: புதிய அமைப்பு.

5. 11:1-3: அந்நிய கொடியவர்களுக்காகக் கேலிப்புலம்பல்.

6. 11:4-17: ஆயர்கள் பற்றிய உருவகம்.

2. இரண்டாம் பகுதி (12:1-14:21):-

1. 12:1-9: எருசலேமின் வருங்கால மீட்பும் வளமும்.

2. 12:10-14: பெரும் புலம்பல்.

3. 13:1-6: பொய்மையின் முடிவு.

4. 13:7-9: வாள் பற்றிய பாடல்.

5. 14:1-21: இறுதிப்போர்; புதிய எருசலேம்.

6. செய்திகளின் சுருக்கம்: பாரசீகப் பேரரசு வீழ்ச்சியுற்றபோது, மக்களிடையே நம்பிக்கை வளர்ந்தது. கிரேக்க மாமன்னன் அலக்சாந்தரின் எரிநட்சத்திரம் போன்ற வெற்றிகள், மெசியாவின் நாள் வரும்போது இறைவன் என்ன செய்வார் என்பதை இறைவாக்கினருக்கு நினைவூட்டின. 2-ஆம் எசாயா சைரசுவின்பால் கொண்டிருந்தது போலவே, 2-ஆம் செக்கரியாவும் அலக்சாந்தர்பால் நம்பிக்கையுணர்வு கொண்டிருக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மேலும் உலகத்தின் மேலும் ஆட்சியை நிறுவ ஆண்டவரால் அபிடேகம் பெற்றவனாக இவனைக் கருதியிருக்கக்கூடும். அவ்வரசில் வெறுத்து ஒதுக்கப்பட்ட பெலிஸ்தியா கூட ''இறைவனுக்கு எஞ்சியதாய் ஆகும்: அது யூதாவின் குலங்களில் தலையாயது ஆகும்'' (9:7). பலிசெலுத்த எல்லோரும் எருசலேமுக்கு வருவர் (14:21). அதற்குமுன், அந்நியருக்கு எதிராக மிகக்கடுமையான போர் நிகழவிருப்பதை இறைவாக்கினர் எதிர்நோக்குகிறார் (செக் 12:14). இந்நூலில் விவரிக்கப்படும் இறுதிப் போராட்டம் யோவேலில் காணப்படுவது போன்றதே.

ஆனால் அஃதோடு ''வெட்டப்பட்டவர்'' இணைக்கப்படுகிறார். அவரதுமரணம் இறுதிப் போராட்டத்தில் மீட்புத் தன்மையுடையதாக உள்ளது. நல்லாயன் (11:4-16; 13:7-9), ''வெட்டப்பட்டவர்'' (12:10-14) ஆகியோரின் பெரும் துன்பங்களால் மக்கள் தூய்மை பெறுவர். இந்தப் பெரும் தலைவர்களோடு கொண்ட பந்தத்தால், அவர்களது வெற்றியிலும் பரிசுத்தத்திலும் மக்கள் பங்கு பெறுவர். துக்க நாளில் குருக்கள் அரச குடும்பத்தோடு சமநிலை கொண்டிருப்பர்; தாவீதின் குடும்பம் ஏழைகளோடு ஒன்றாகும். இவர்களுக்கு இறைவன் தமது அரசை வழங்குவார். இந்த அரசு சாந்தத்திலும் நீதியிலும் எளிமையிலும் அமையும் (9:9). சடங்கு வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட இறையரசு பற்றிய விவரிப்பு (அதி. 14) எசேக்கியேலை நமக்கு நினைவூட்டுகிறது. ஆனால் அதன் முன்னோக்கு பரந்ததாகும்.

ஆலயத்தைச் சுற்றி ஒரு சமூகம் அமைக்கப்படும். ஆலயம் உலகம் அனைத்திற்கும் சமய மையமாக அமையும். தாவீது மரபு புத்துயிர் பெறும் (12:7-13:1). தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள மெசியா (9:9-10) தொன்று தொட்டு வரும் அரச நம்பிக்கையையும் எளியோரின் எதிர்பார்ப்பையும் ஒன்றிணைத்து நிறைவேற்றுவார். பரிசுத்த வழிபாட்டிலிருந்து இறைவனது ஆசீர் நாடு முழுவதும் பரவும். மெசியாவின் ஆட்சி நித்திய கூடார விழாவாகவும், அபரிமிதமான அறுவடைக்கு மக்கள் அளிக்கும் தொடர் நன்றியறிதலாகவும் இருக்கும் (14:8-16).

7. **இக்காலத்திற்கு:** காலந்தோறும் கிறிஸ்தவர்கள் இந்த இறைவாக்கு நூலை வியப்போடும் நன்றியோடும் வாசித்துப் பயன் எய்தியுள்ளனர். இந்நூலிலே இறைமகனாம் இயேசு கிறிஸ்துவைக் கண்டு மகிழ்ந்துள்ளனர். அவரே வெற்றி வீரராய், சாந்தமும் தாழ்ச்சியும் மிக்கவராய் (9:9; மத் 21:4-5) வந்த மெசியா என்று அறிந்து விசுவசித்துள்ளனர். இந்நூல் குறிக்கும் ''வெட்டப்பட்டவரை'' அடையாளம் கண்டு அன்பு செய்துள்ளனர் (12:10; யோவா 19:37). அவரில், நாம் மீட்புப் பெற (1 பேதுரு 2:24-25) கொடுமையாக வெட்டப்பட்ட (13:7; மத் 26:31) நல்லாயனைக் கண்டு வழிபட்டு வந்துள்ளனர்.

இந்நூலில் எருசலேமைக் குறித்துக் கூறப்பட்டவையெல்லாம் இயேசுவுக்கும் பொருந்தும். அவருக்கும் இருளின் அரசனுக்கும் பயங்கரப் போராட்டம் நடந்திருக்கிறது; நடந்து கொண்டிருக்கிறது. இறுதியில் இந்தத் தீயவனை மெசியா வெல்வார். இப் போராட்டத்தில் வியப்பு மிக்க மகிழ்ச்சியாக மாறும் நம்ப முடியாத துன்பங்களை இறைவாக்கினர் விவரிக்கிறார். ''இறைவன் அன்பாய்'' இருக்கிறார் (1 யோவா 4:8) என்பது உண்மையானாலும்; அவரது அன்பு வலிமை மிக்கது; தூய்மையானது; தாம் தேர்ந்து கொண்டவர்களின் நித்திய வாழ்வைச் சிறு பாவமோ மகிழ்ச்சியின்மையோ கறைபடுத்தப் பொறுத்துக் கொள்ளார். அவரைப் போல் அவரது மக்களும் தூய்மையாய் இருப்பர்; அவர்களது வாழ்வில் மகிழ்ச்சி நிறைந்து வழிந்தோடும். அவர்களது வாழ்வு ''நித்திய கூடார விழாவாக'' அமைந்திருக்கும்.

செக்கரியாவின் பாடல் (BENEDICTUS)

லூக் 1:68 - 79-இல் காணப்படும், திருமுழுக்கு யோவானின் தந்தையான செக்கரியாவின் பாடல். மரியாளின் பாடல் போல் இதுவும் ஒரு சங்கீதம். பாலஸ்தீன ஆதிக் கிறிஸ்தவ குழுக்களால், பழைய ஏற்பாட்டுப் பாடல், மற்றும் இறைவாக்குப் பகுதிகளை இணைத்துப் பாடப்பட்டதாகும். இது மரியாளின் பாடலைவிட அதிகமாக மீட்பரைப் பற்றிக் கூறுகின்றது. தாவீதின் இல்லத்திலிருந்து புதிய தலைவர் எழுந்து வருவதை வருணிக்கின்றது. ஆதிகாலக் கிறிஸ்தவ பாரம்பரியத்தின்படி திருமுழுக்கு யோவான் கிறிஸ்துவின் வழியை ஆயத்தப்படுத்தும் முன்னோடி. மேற்காசியத் திருச்சபைகளிலும் இலத்தீன் திருச்சபையிலும் இந்தப் பாடல் காலை வழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்றது.

செக்கனியா (SHECANIAH - யாவே குடியேறி விட்டார், யாவேயோடு வாழ்பவர்)

1. நாடு கடத்தப்பட்ட யோயாக்கின் அரசன் மற்றும் செருபாபேலின் வழி வந்த தாவீதின் வழித்தோன்றல் (1 நாள் 3:21-22). நாடு கடத்தலிலிருந்து திரும்பிவந்த ஒரு குடும்பத்தின் தலைவர். செமாயா (10)வின் தந்தை.

2. தாவீது காலத்தில் குருக்களின் பத்தாவது பிரிவுக்குத் தலைமைக்குரு (1 நாள் 24:11).

3. எசேக்கியாவின் காலத்திலிருந்த ஒரு குரு. இவர் கோவில் காணிக்கையைத் தன் உடன் குருக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு உதவி செய்தவர் (2 நாள் 31:15).

4. யாகசியேலின் மகன் சத்தூவின் வழித்தோன்றல். இவர் நாடு கடத்தப்பட்டதிலிருந்து எஸ்ராவோடு யூதாவுக்குத் திரும்பியவர்களில் ஒருவர் (எஸ் 8:5).

5. எகியேலின் மகன் நாடு கடத்தப்பட்டு, பாபிலோனிலிருக்கும்போது புறவினப் பெண்ணை மணந்தவர்களில் இவரும் ஒருவர் (எஸ் 10:2-3). இவர்தான் ''நாடு கடத்தப்பட்டுத் திரும்பியவர்கள், புறவின மனைவிகளையும், மக்களையும் இஸ்ராயேல் மத்தியில் ஆண்டவரின் கட்டளைப்படி விட்டு விடட்டும்'' என எஸ்ராவுக்கு ஆலோசனை கூறியவர்.

6. செமாயாவின் தந்தை; வாயிற்காவலர். இவர் நெகேமியாவின் காலத்தில் எருசலேம் மதிற் சுவரை மீண்டும் கட்டியவர்களில் ஒருவர் (நெகே 3:29).

7. ஆரகுவின் தந்தை; அம்மோனியனான தோபியாவின் மாமனார் (நெகே 6:8). இவர் நெகேமியா எருசலேம் சுவரைப் பழுது பார்ப்பதைத் தடைசெய்ய முயன்றவர்.

8. இவர் நாடு கடத்தப்பட்டு, பாபிலோனிலிருந்து செருபாபேலுடன் திரும்பிய ஒரு குரு (நெகே 12:3; 1 நாள் 24:1). இவர் நெகே 10:4; 12:14-இல் சொல்லப்பட்டிருக்கும் செபன்யாவாக (3) இருக்கலாம்.

9. அற்றுசின் (கத்தூசு) (1) தந்தை. இவர் நாடு கடத்தப்பட்டதிலிருந்து எஸ்ராவோடு யூதாவுக்குத் திரும்பினார் (எஸ் 8:3). 1-இல் வருபவரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

செக்கினா (SHEKINAH - உறைதல், தங்குதல்)

இறைவன் மனுக்குலத்திடையே பிரசன்னமாய் இருப்பதைக் குறிக்கும் யூதராபிகளின் மங்கல வழக்காகும். காண்க. இறைவனின் பிரசன்னம் / திருமுன்.

செக்குந்து (SECUNDUS - இரண்டாவது)

இவர் தெசலோனிக்கே நகரவாசி; அரிஸ்தர்க்கின் தோழன். பவுல் எருசலேமுக்கு இறுதிப்பயணம் சென்றபோது வழித்துணையாகச் சென்றவர்களில் ஒருவர் (அ.ப. 20:4). இவர்கள் துரோவா வரைக்கும்தான் சென்றிருக்கலாம். இப்பயணத்தில் மாசிதோனியாவில் எருசலேமிலுள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்காகச் சேகரித்த உதவியைப் பவுலும் அவரது தோழர்களும் கொண்டு சென்றனர். இந்த உதவியைச் சேகரிப்பதில் செக்குந்து பவுலின் ஆட்களில் ஒருவரானதால் (1 கொரி 16:3-4; 2 கொரி 8:23) அவர் எருசலேமுக்கு முழுப்பயணம் செய்தார் எனலாம்.

செக்கேமின் கோட்டை (SHECHEM, TOWER OF)

அபிமெலக்கு தீயினால் அழித்த ஓர் இடமாகும். அவரது தாக்குதல் ஏல் - பெரீத்துவின் கோட்டையை அழித்தது. அதில் அதைப்பாதுகாத்த ஓராயிரம் மக்கள் மடிந்தனர் (நீதி 9:46-47).

முன்பு இந்தக் கோட்டை செக்கேம் நகருக்குக் கொஞ்சம் தொலைவிலிருந்தது என்று கருதப்பட்டது. ஏனெனில் நகரத்தின் அழிவைப் பற்றிக் கேட்டபின்புதான் மக்கள் இந்தக் கோபுரத்துக்குள் தஞ்சம் புகுந்தனர் என்று கூறப்பட்டுள்ளது (9:46). அனேகமாக இந்தக் கோபுரம் (மித்தால்) நகரத்தினுள்

இருந்திருக்கலாம். இங்குக் கோட்டை அரணுடைய ஏலின் கோவில் இருந்திருக்கலாம் (9:4.6). செக்கேமைச் சேர்ந்த அகழ்வாய்வு பருமனா உள்ள சுவர்களோடு கூடிய ஒரு பெருங்கட்டடத்தை வெளிக் கொணர்ந்துள்ளது. இது கோவில் கோட்டை மற்றும் கோபுரம் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

செக்கேம் (SHECHEM - தோள், கழுத்து, சரிவு) - ஆள்

1. இவர் கிவியரான (இவ்வியர்) காமோரின் (ஆமோர்) மகன். யாக்கோபின் மகள் தீனாவை இவர் கற்பழித்ததால், அவளது சகோதரர்கள் கிமியோன் மற்றும் லேவி ஆகியோர் இவரையும் இவரது நகரத்து ஆண்களையும் கொன்று பழி தீர்த்தனர் (ஆதி 34; யோசு 24:32; நீதி 9:28).

2. யோசேப்பு, மற்றும் அவரது முதல் மகனான மனாசேயின் வழித்தோன்றல்களில் ஒருவர் (எண் 26:31; யோசு 17:2). செக்கேமியர்கள் தங்களது பெயரைத் தங்களது குலத் தோன்றல் மூதாதையரான இவரிடமிருந்து பெற்றனர்.

3. மனாசே குலத்தைச் சேர்ந்த செமிதாவுக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார் (1 நாள் 7:19). இவரும் 2-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

செக்கேம் (SHECHEM - மலையின் தோள், கழுத்து, சரிவு) - இடம்

எப்பிராயிம் மலைப்பகுதியில் ஏபால் மலைக்கும் கெரிசிம் மலைக்கும் இடையில் அமைந்த கானானிய, இஸ்ராயேல் நகரம். இஸ்ராயேலரின் கூட்டாட்சியை நிறுவிய உடன்படிக்கைச் சடங்கு நடந்த இடம் (யோசு 24). எகிப்திய பன்னிரண்டாம் அரச மரபைச் சேர்ந்த பழிப்புரை வாசகம், அப்சு - அதாதால் ஆட்சி செய்யப்பட்ட நகரமாகச் செக்கேமைக் குறிப்பிடுகிறது. அமர்னா ஏடுகள் லபாயு என்ற அரசனின் நகரமாக இந்நகரைக் குறிப்பிடுகின்றன. இவர் அதைத் தன் ஆட்சிக்குட்பட்ட பல நகரங்களின் மையமாக ஆக்கினார்.

ஆபிரகாம், கானான் வந்து சேர்ந்தபின் செக்கேமிலுள்ள மோரேயின் கருவாலி மரத்தடியில் ஆண்டவருக்கு ஒரு பீடம் கட்டினார் (ஆதி 12:6-7). யாக்கோபு மெசபொத்தாமியாவின் பதான் - ஆராமிலிருந்து திரும்பி வந்தபின் செம்கேம் மக்களிடமிருந்து ஒரு நிலத்தை வாங்கி அங்குத் தனது கூடாரங்களை அமைத்தார் (33:18-19). ஆபிரகாமைப் போல் யாக்கோபும் செக்கேமில் ஒரு பீடம் கட்டினார் (33:20). இங்குதான் காமோரின் மகன் செக்கேம் (1) யாக்கோபின் மகள் தீனாவைக் கற்பழித்தான். இச்செயலைக் கண்ட அவளது சகோதரர்கள் சிமியோனும் லேவியும் பழிவாங்கினர் (ஆதி 34). யாக்கோபு தன் மனைவியர்களின் வீட்டுச் சிலைகளைச் செக்கேம் அருகிலுள்ள கருவாலி மரத்தடியில் புதைத்தார் (35:4). காமோரிடமிருந்து யாக்கோபு வாங்கிய அதே நிலத்திலே யோசேப்பின் எலும்புகள் புதைக்கப்பட்டன (யோசு 24:32; அ.ப. 17:16). செக்கேமில் நடந்த உடன்படிக்கைச் சடங்கின் ஒரு பகுதியாக ''ஆண்டவரின் திருத்தலத்தில் ஒரு கருவாலி மரத்தின் கீழ்'' யோசுவா ஒரு பெரும் கல்லை நாட்டினார் (யோசு 24:26).

மனாசே எப்பிராயிம் இனங்களுக்குரிய பகுதிகளுக்கிடையில் அமைந்திருந்த செக்கேம் (யோசு 17:7) ஒரு லேவியர் நகரமாகவும் தஞ்சமளிக்கும் நகரமாகவும் ஆயிற்று (20:7; 21:21). செக்கேமில் பாகால் - பெரீத்தின் (ஏல் - பெரீத்து) ஆலயம் ஒன்று இருந்தது (நீதி 9:4.46). கிதியோன் இறந்த பின், செக்கேம் மக்கள் கிதியோனின் மகன் அபிமெலக்கை அரசனாக்கி அவருக்கு இந்த ஆலயத்திலிருந்து எழுபது வெள்ளிக்காசுகளை அளித்தனர் (9:4). அபிமெலக்கின் ஆட்சிக்கு எதிராக அவர்கள் கிளர்ச்சி செய்த போது அவர் இந்நகரை அழித்தார் (9:45). செக்கேம் கோட்டையில் வாழ்ந்த மக்கள் இக்கோயிலுக்குள் அடைக்கலம் புகுந்தனர். அபிமெலக்கு இக்கோயிலுக்குத் தீ வைத்து அழித்தார் (9:46-49).

சாலமோன் மரணத்திற்குப்பிறகு ரெகபயாம், வடஇனத்தவரை யூதாவுடன் ஒன்றிணைந்து இருக்க அழைப்பதாக வடக்கில் செக்கேமில் தனது முடி சூட்டுதலை நடத்தினார் (1 அர 12; 2 நாள் 10). ஆனால் வட இனத்தவர் பிரிந்து போய் முதலாம் எரொபவாமைத் தங்கள் அரசனாகவும் செக்கேமைத் தங்கள் தலைநகரமாகவும் ஆக்கினர் (1 அர 12:20.25). வட தலைநகரம் திரட்சாவுக்கு மாற்றப்பட்ட பின்பும் செக்கேம் மாகாணத் தலைநகராக விளங்கியது. கி.மு. 722-இல் செக்கேம் அசீரியர்களால் அழிக்கப்பட்டது. பாபிலோனிய ஆளுநன் கெதல்யாவைக் கொன்றவர்களால் மிஸ்பாவில் கொல்லப்பட்டவர்களில் செக்கேமிலிருந்து வந்த திருயாத்திரீகர்களும் அடங்குவர் (எரே 41:5). நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய எஸ்ரா மற்றும் நெகேமியாவால் அமைக்கப்பட்ட சமூகங்களோடு செக்கேம் தொடர்புபடுத்திக் கூறப்படவில்லை. அலக்சாந்தர் காலத்தில் செக்கேம் சமாரியர்களின் நகரங்களில் முக்கியமாக விளங்கியதாகவும் யோவான் கிரிக்கானுவால் அழிக்கப்பட்டதாகவும் யோசிப்பசு கூறுகிறார்.

கி.பி. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து எருசலேமுக்கு வடக்கில் 64 கி.மீ. தொலைவிலும் நபுலுசுக்குக் கிழக்கில் 1 ½ கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள தேல் பலாத்துதான் செக்கேம் இருந்த இடமென்று அடையாளம் காட்டப்படுகிறது. கி.மு. 3600-க்கு முன்பே இங்குப் பல கிராமங்கள் தோன்றியிருந்ததாகத் தெரிகிறது. இரண்டாம் மத்திய வெண்கலக் காலத்தில் (1900 - 1540) குறிப்பாகக் கைக்சோசுகள் எகிப்தில் ஆண்ட காலத்தில் செக்கேம் ஒரு முக்கிய நகர - நாடாக விளங்கியது. 16-ஆம் நூற்றாண்டில் நகரம் பயங்கரமாக அழிக்கப்பட்டுள்ளது. 14 - ஆம் நூற்றாண்டில் மீளவும் முக்கியமான நகரநாடாகத் தலையெடுத்தது. இதற்கு அமர்னா ஏடுகள் சான்று பகர்கின்றன. இந்தக் குடியேற்றம் கி.மு. 1125-இல் அழிக்கப்பட்டதோடு, முடிவுக்கு வந்தது. ஒரு வேளை இந்த அழிவு அபிமெலக்கால் ஏற்பட்டதாக இருக்கலாம் (நீதி 9). நூறாண்டுகளுக்குப்பின் நகரம் மீளவும் கட்டியெழுப்பப்பட்டது. இந்நகரம் 722-இல் அசீரியர்களால் அழிக்கப்படும் வரை நீடித்தது. இரேக்கர் காலத்தில் இந்நகரம் சமாரியர்களால் மீண்டும் கட்டப்பட்டது. இது கெரிசீம் மலையிலுள்ள சமாரியர் கோவிலுடன் தொடர்புடையது. கி.மு. 107-இல் யோவான் கிரிக்கானுவால் அழிக்கப்பட்டபின் கைவிடப்பட்டது.

அகழ்வாராய்ச்சிகளில் பல கோவில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் முந்தியவை அரண்மனைப் புனிதத் தலங்களாகும். இவை ஆதியாகமத்தில் குறிக்கப்பட்டிருப்பது போன்று ஒரு மரத்தைச் சுற்றி எழுப்பப்பட்ட புனித இடங்களாக இருக்கலாம். பிறகு பலத்த கோட்டைகளைக் கொண்ட கோவில்கள் கட்டப்பட்டன. இவற்றில் யோசுவா நாட்டிய பெரும் கல்லைப் போன்ற தூண்களும் அடங்கும். செக்கேமிலுள்ள புனித இடங்கள் பற்றிய பாரம்பரியம் பழைய ஏற்பாட்டில் பிரதிபலிக்கிறது என்பது தெளிவு. இவை அமைந்த இடம் அரசியல் மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாறின.

செக்கேர் (ZECHER)

பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர். கிபயோன் வழிவந்தவர் (1 நாள் 8:31). காண்க: செக்கரியா - 5.

செக்கேல் (SHEKEL)

நிறுத்தலுக்கும் நாணயமாகவும் பயன்பட்ட ஓர் அளவையாகும். கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் நாணயம் அச்சடிக்கப்படத் தொடங்கும் வரை பண்டமாற்றாகப் பயன்பட்ட உலோகங்கள் நிறுக்கப்பட்டன. பாபிலோனியர் காலத்தில் செக்கேலின் எடை 8.3 கிராமிலிருந்து 16.7 கிராம் வரை வேறுபட்டது. செக்கேல் பற்றிய பழைய ஏற்பாட்டுப் பல குறிப்புகள் 11.4 கிராம் எடையுள்ள அளவையைக் குறிக்கின்றன. இதற்கு விதிவிலக்காக இதில் பாதி எடையுள்ள மேதிய நாணயம் நெகே 5:15; 10:32-இல் குறிக்கப்படுகிறது எனலாம். புதிய ஏற்பாட்டுக் காலத்

தில் ஒரு வெள்ளிச் செக்கேல் (வெள்ளிக் காசு மத் 26:15) 10 முதல் 15 கிராம் வரை எடை கொண்டிருந்தது. இது நான்கு திராக்குமாக்களுக்குச் சமம். யூதர்களின் முதல் கிளர்ச்சியின்போது (கி.மு. 66-70) ஒரு வெள்ளிச் செக்கேல் ஏறக்குறைய 14.27 கிராம் எடையுடையதாக இருந்தது.

செங்கடல் (RED SEA)

தெற்கில் பாவு ஏல் - மத்தேபு சலசந்தியிலிருந்து வடக்கில் சீனாய்த் தீபகற்பம் வரை பரவியும், வடகிழக்கு ஆப்பிரிக்காவை அராபியத் தீபகற்பத்திலிருந்து பிரிப்பதுமாக அமைந்துள்ள பரந்த நீர்ப் பரப்பை இப்பெயர் குறிக்கும். வடக்கில் இதன் கரைகள் மேற்கு சூயஸ் வளைகுடாவுக்குள்ளும் கிழக்கில் அக்காபா வளைகுடாவிற்குள்ளும் செல்லுகின்றன. பழங்காலக் கிரேக்க ஆசிரியர்கள் செங்கடல் என்ற பெயரை, அது உரிய விதத்தில் குறிக்கும் செங்கடலையும், அராபிய வளைகுடாவையும், இந்தியப் பெருங்கடலையும் குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர்.

பழைய ஏற்பாட்டில் யாம் சுப்பு'' என்ற பெயர் அக்காபா வளைகுடாவையும் (யாத் 23:1; எண் 21:4; உப 1:40; 1 அர 9:26; நீதி 11:6), சூயஸ் வளைகுடாவையும் (யாத் 10:19; 13:18; எண் 33:10-11) எகிப்தைவிட்டு வெளியேறியபோது இஸ்ராயேலர் கடந்த கடலையும் (யாத் 15:4.22; உப 11:4; யோசு 4:23; 24:6; நெகே 9:9; சங் 136: 13.15) குறிக்கப் பயன்பட்டுள்ளது. இஸ்ராயேலர் கடந்த கடல் எது என்பதுபற்றி அறிஞர்களுக்கிடையே கருத்தொற்றுமையில்லை எனலாம். இது கசப்பு ஏரிகளாகவும், மென்சலே ஏரியாகவும், சொர்போனி ஏரியாகவும், சூயஸ் வளைகுடாவாகவும் இருக்கலாம் என்று பலவாறு கருதுவர்.

''யாம் சுப்பு'' என்பதற்குப் பொருள் நாணல் கடல், புல் அல்லது கோரைக்கடல் என்று இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். இக்கருத்து சுப்பு என்ற சொல்லின் எகிப்திய வடிவம் நாணல், அல்லது கோரை என்று பொருள்படும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. இப்பொருளில் ''சுப்பு'' என்பது யாத் 2:3.5; எசா 19:6; யோனா 2.5-இல் பயன்பட்டுள்ளது. இராமேசேசு நகருக்கு அருகில் உள்ள நாணல் சதுப்பு நிலம் எகிப்திய வாசகங்களில் குறிக்கப்பட்டிருப்பதால், இதுதான் இஸ்ராயேலர் கடந்து சென்ற ''நாணல் சதுப்பு நிலம்'' என்ற நீர்ப்பரப்பு (எண் 33:5-8) என்று பலர் கருதுவர். ஆனால் ''நாணல் சதுப்பு நிலம்'' என்ற பெயர் தென் எகிப்தில் உள்ள பல சதுப்பு நிலங்களைக் குறிக்கும் பொதுப்பெயராகும்.

இக்கருத்தை மறுத்துக் கூறுபவர், ''யாம் சுப்பு'', என்ற பெயரில் வரும் சுப்பு என்ற சொல்லை 'முடிவு, அழிவு' என்ற பொருள்படும் ''சோப்பு'' என்ற எபிரேயச் சொல்லோடு தொடர்புபடுத்துகின்றனர். காலங்களுக்கு முந்திய மூலக்கடலையும் அதன் மேல் இறைவன் கொள்ளும் வெற்றியையும் விவரிக்கும்போது இச்சொல் பயன்பட்டிருக்கலாம் (யோனா 2:5) என்பது யாத்திரைக் கடலை ''யாம் சுப்பு'' என்று குறிக்க வழிகோலியிருக்கலாம். இத்தகைய பாதிப்பு யாத்திரையை விவரிப்பதில் மற்ற வழிகளிலும் காணப்படுகிறது (சங் 18:4-5-ஐ யாத் 15:4-5ஒடு ஒப்பிடுக). இப்பாதிப்புகள் எவ்வாறு இருந்தாலும், பழைய ஏற்பாட்டில் ''யாம் சுப்பு'' பயன்படும்போதெல்லாம் உலகின் முடிவில் உள்ள கடல் என்பதையே குறிக்கின்றது எனலாம். அதாவது தெற்கில் பாலஸ்தீனத்திற்கும் அராபியாவுக்கும் அப்பால் உள்ள பரந்த நீர்ப் பரப்பையே குறிக்கின்றது. இது பழைய ஏற்பாட்டில் ''சோப்பு'' என்பது; மற்ற இடங்களில் பயன்படுவதோடு ஒத்துப் போகிறது. இச்சொல் கால அல்லது இறுதிக்கால நோக்கைவிட இட நோக்கையே கொண்டுள்ளது.

யாத் 23:1; எண் 14:25; 21:4; உப 1:40; 2:1; நீதி 11:16; 1 அர 9:26; 2 நாள் 8:17 - ஆகிய பகுதியில் வரும் ''யாம் சுப்பு'' செங்கடலையே குறிக்கிறது. இதையும் யாத் 23:31 - இல் வரும் இஸ்ராயேல் நாட்டின் எல்லைகளைப் பற்றிய விவரிப்பையும்

சேர்த்து நோக்கும்போது ''யாம் சுப்பு'' உண்மையான செங்கடலையல்ல, அக்காபா வளைகுடாவையே குறிக்கிறது எனலாம். ஆனால் அக்காபா வளைகுடாவைச் செங்கடல் என்று அழைப்பது அவ்வளவு பொருத்தமுடையதன்று. ''யாம் சுப்பு'' என்ற பெயர் வரும் மற்றக் குறிப்புகள் யாவும் (யாத் 10:19; 13:18; 15:4. 22; எண் 33:10 தொ; உப 11:4; யோசு 2:10; 4:23; நெகே 9:9; சங் 106:7.9.22; 136:13.15) இஸ்ராயேல் கடந்து சென்ற நீர்ப் பரப்பையே குறிக்கின்றன. ஆனால் இது சூயஸ் வளைகுடா அன்று, சூயஸ் இடுக்கின் வடகரையில் மத்திய தரைக்கடலுக்கருகில் உள்ள ஏரிகளில் ஒன்றாக இருக்கலாம்.

செங்கல் (BRICKS)

கட்டடங்கள் கட்டுவதற்குப் பாலஸ்தீனம், எகிப்து, மெசபொத்தாமியா போன்ற பகுதிகளில் செங்கற்களே சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டன. எகிப்திலும், மெசபொத்தாமியாவிலும் களிமண் ஏராளமாகக் கிடைத்தது. பாலஸ்தீனத்தில் கற்களே அதிகம் காணப்பட்டன. கல்வேலை செய்பவர்கள் அதிகம் இல்லாமல் இருந்ததாலும், அதற்கான உலோகக் கருவிகள் இல்லாமல் இருந்ததாலும், செங்கற்கள் செய்வது முக்கியத்துவம் பெற்றிருந்தது. களிமண்ணைக் காலால் பிசைந்து அஃதோடு வைக்கோலையும் சேர்த்துச் செங்கற்கள் செய்தார்கள். சுட்ட செங்கற்கள் மெசபொத்தாமியாவில் அதிகம் காணப்பட்டன (ஆதி 11:3). இஸ்ராயேலர்கள் எகிப்தில் செங்கற்கள் செய்வதை அடிமைத் தொழிலாகக் கொண்டிருந்தார்கள் (யாத் 1:14; 5:6 தொ). எகிப்திலும், பாலஸ்தீனத்திலும் கற்கள் ஆடம்பரத்தின் அடையாளமாகக் கருதப்பட்டன (எசா 9:9). எனவே அவைகள் அரண்மனைகள் கட்டுவதற்கும், ஆலயங்கள் கட்டுவதற்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. கட்டடங்கள் தற்கால முறைகளில் கட்டப்படாததால், அடிக்கடி இடிந்து விழுந்துவிடும் அபாயம் இருந்தது (எசா 30:13; எசே 13:10 தொ). மரச் சட்டங்கள், கட்டடங்களில் குறுக்குத் தூண்களாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இவற்றில் நெருப்புப் பற்றி கொள்ளும் அபாயம் இருந்தது. ஈரத்தினால் செங்கற்கள் பாதிக்கப்பட்டன. அனேகமாக மழைபெய்த உடன் செங்கற்கள் கரைந்து வீடுகள் இடிந்துவிடும். எபிரேய நூற்களில் பாபேல் கோபுரத்தைக் கட்டியவர்கள்தான் (ஆதி 11:3) செங்கற்களைக் கண்டுபிடித்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. அசூர் — நசீர் — பல், சார்கோன், நெபுகத்னேசர் ஆகியோரின் கட்டடங்களில், பட வடிவங்களில் எனாமல் பூசப்பட்ட செங்கற்கள் காணப்படுகின்றன. ஆனால் இஸ்ராயேலில் இது காணப்படவில்லை.

இராபாவில் பிடிபட்ட அம்மோனியக் கைதிகளைத் தாவீது செங்கல் சூளை வேலையில் ஈடுபடச் செய்ததாக 2 சாமு 13:31 கூறுகிறது. நாகூ 3:14, ஒரு வேளை எகிப்தில் செங்கல் செய்யும் முறையைச் சித்தரிக்கலாம்.

செங்கிடாரி (RED HEIFER)

இறந்தவனைத் தொட்டதால் தீட்டுப்பட்டிருப்பவனது தீட்டை நீக்குவதற்குப் பயன்படும் "தீட்டகற்றும் நீரில்" கலப்பது இந்தச் செந்நிறமுள்ள கிடாரியின் சாம்பலாகும்.

இந்தச் செந்நிறமுள்ள கிடாரிபற்றி எண்ணாகமத்தைத் தவிர வேறு எங்கும் கூறப்படவில்லை. இச்செந்நிறக் கிடாரி வேறு எதற்கும் பயன்படாததாய் எந்தமாசு மறுவும் இன்றி பலிக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் (லேவி22:20-25; உப 17:1). இத்தகைய கிடாரி குருவிடம் கொண்டுவரப்பட வேண்டும். அவர் அதை எடுத்துப் பாளையத்திற்கு வெளியே கொண்டு சென்று அதனைக் கொல்ல வேண்டும் (எண் 19:2-3). பின்னர் அதன் இரத்தத்தில் தன்விரலைத் தோய்த்து உடன்படிக்கைக் கூடாரத்தின் முன்புறம் ஏழு முறை தெளிக்கக் கடவார் (19.4). இப்படி அது யாவேக்கு உரிய புனிதப் பொருளாகும். உண்மையில் இது பலியல்ல. ஏனெனில் அது எரிக்கப்படுவது பாளையத்திற்கு வெளியேதான். பலிபீடத்தில் அன்று. எல்லா இரத்தமும், மாட்டுச் சாணமும் கூட எரிக்கப்பட வேண்டும். இது பழைய ஏற்பாட்டிலே வித்தியாசமானதாக இருக்கிறது.

ஏனெனில் வழக்கமாக இரத்தம் அனைத்தும் வடித்து எடுக்கப்பட்டுப் பீடத்தில் தெளிக்கப் படுவதுதான் வழக்கம். குரு எரியும் கிடாரி யின் மேல் கேதுரு மரக்கட்டையையும், ஈசோப்பையும், சிவப்பு நூலையும் போடக் கடவார். இவை மூன்றும் தூய்மைப்படுத்தும் சடங்கில் இரண்டாந்தர முக்கிய பங்கு வகிக் கின்றன (எண் 19:10.17; எபி 9:13). இந்தச் சாம்பல் பாளையத்திற்கு வெளியே பத்திர மாகச் சேகரித்து வைக்கப்பட்டது (19:4). ஏனெனில் இறப்பினால் தீட்டுப்படுபவ னைத் தூய்மைப்படுத்த இது மீண்டும் பயன் படும் என்பதற்காக இவ்வாறு செய்யப்பட் டது.

ஒருவன் இறந்தவனுடன் ஏற்பட்ட தொடர்பால் தீட்டுப்பட்டால் இந்தச் சாம்ப லுடன் ஒரு பாத்திரத்தில் நீர் கலக்கப்பட்டு, ஈசோப்பினால் தீட்டுப்பட்டவன் மேலும் அந்த வீடு முழுவதும் தெளிக்கப்படவேண் டும். இது ''தீட்டகற்றும் அல்லது தீட்டுக் கழிக்கும் நீர்'' என அழைக்கப்படும். தீட்டுப் பட்டவன் ஏழுநாள் தூய்மையின்றி இருப்ப தால் மூன்றாம் நாளும் ஏழாம் நாளும் இது தெளிக்கப்பட வேண்டும்.

'பசு' என்பதற்குப் பயன்படும் சாதாரணச் சொல்லே எண் 19-இல் பயன்படுத்தப்படு கிறது. பின்னர் வரும் விளக்கங்களிலிருந்தும், பாகால் புராணத்தில் 'பசு', 'கிடாரி' என்பன மாறிமாறிப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதிலிருந்தும் 'கிடாரி' என்ற சொல்லை எடுத்துக் கொள்கின்றனர். புறவின மக்களிட மிருந்து செங்கிடாரிச் சடங்கை இஸ்ராயே லர் பெற்றிருக்கலாம்.

இஸ்ராயேலின் தொடக்க காலத்தி லிருந்தே 'கிடாரி' பலிப்பொருளாகப் பயன் படுத்தப்பட்டது (ஆதி 15:9; 1 சாமு 16:2); பெண் செம்மறிஆடுகளும், வெள்ளாடு களும் பாவப்பலிகளுக்குப் பயன்பட்டன (லேவி 4:28; 5:6, 14:10.13; எண் 6:14). சிவப்புநிறம், பழைய ஏற்பாட்டில் சுத்தி செய்ய மிகவும் பயன்பட்ட இரத்தத்தைச் சுட்டலாம். மண்ணின் நிறத்தையும் குறிக்க லாம். கிடாரி அழகின் அடையாளமாகவும் (எரே 46:20), பாலியலைக் குறிக்கவும் (50:11); பிடிவாதத்தைக் குறிக்கும் அடையாளமாக வும் (ஓசே 4:16) இருக்கின்றது.

அன்று புறவின மக்களின் பலிவழிபாடு, இறந்தவர்கள் வழிபாடு ஆகியவற்றில் கிடாரியைப் பலியிட்டனர். இவ்வழிபாடுகள் இஸ்ராயேலர்களுக்குத் தடை செய்யப்பட்டவை யாகும். ஆகவே இஸ்ராயேலர் செங் கிடாரிச் சடங்கை வேறுமுறையில் விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தீட்டுப் பட்டிருப்பது யாவேயின் புனிதத்துவத்தை அவமதிப்பது போலாகும். எனவே தீட்டுப் பட்டிருப்பது வரை அவனுக்கும் கடவுளுக்கு மிடையேயுள்ள உறவு பாதிக்கப்படுகிறது. தீட்டுப்பட்டிருப்பது குருக்களின் எண்ணப் படி பாவத்திற்குச் சமமானது. எனவே பாவப்பலியாகக் கிடாரி எரிக்கப்பட்டது (எண் 19:9.17). பொதுவாகப் பழைய ஏற்பாட் டில் நீர்தான் தூய்மைப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்தப்படும். ஆனால் இங்கு நீர் கிடாரியின் சாம்பலைச் சுமந்து செல்லும் ஒன்றாகவே பயன்படுகிறது. இதைத்தான் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் கிடாரி யின் சாம்பல் உடலைத் தூய்மைப்படுத்தி யது. கிறிஸ்துவின் இரத்தமோ நமது மனச் சான்றைத் தூய்மைப்படுத்துகிறது என்கிறார் ஆசிரியர் (எபி 9:13-14). இங்கே நீர் வாழ் வின் அடையாளமாகக் கருதப்படுகிறது. ஏனெனில் ஊற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீரில் கலக்க வேண்டும் என்று குறிப்பிடப் படுகிறது.

செங்கோல் (SCEPTER)

இது குறிப்பாக ஆயனின்கோல் (சங் 23:4; மீக் 7:14) என்றும் 'கோல்' என்றும் குறிக்கப் படும். இது போர்க்கருவியாகவும் பயன்பட லாம் (யாத் 21:24, மீக் 4:14). இஸ்ராயேலின் ஆயனாகிய யாவேயின் கோலையும் குறிக் கும்.

செங்கோல், அரசுரிமை அல்லது மற்ற அதிகாரத்தன்மையின் அடையாளமாக இருக்கும். இவ்வாறுதான் பழைய ஏற்பாட்

டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அரசர்களாலும் மற்ற ஆட்சியாளர்களாலும் கொண்டு செல்லப்படும் (ஆதி 49:10; எண் 24:17; சங் 2:9; 45:6; எசா 14:5; எசே 19:11. 14; ஆமோ 1:5.8). அனேகமாக ஆகுபெயராய் அரசனைக் குறித்துக் காட்டலாம். செங்கோலைக் குறிக்கும் ''சேபெத்'' என்ற எபிரேயச் சொல்லானது ஒரு குழுவைக் குறிக்கிறது. குழுத்தலைவர் தன் குழுவை, மற்றக் குழுவிலிருந்து வேறுபடுத்திக் காட்டச் செங்கோலைக் கொண்டு செல்வர். பழைய மேற்காசியக் கலை செங்கோலைக் கடவுளர்களும், மனிதர்களும் கொண்டு செல்வதாகச் சித்தரிக்கிறது. செங்கோலைப் போன்ற ஒரு பொருள் இஸ்ராயேல் அரசுரிமைச் சின்னங்களின் ஒரு பகுதியாகும் (ஆதி 49:10; சங் 45:6; 110:2; எசே 19:4). எகிப்து, மோவாபு தமஸ்கு, அஸ்கலோன் போன்ற அரசுகளின் தொடர்பில் இந்தச் செங்கோல் குறிப்பிடப் பட்டுள்ளது (எரே 48:17; ஆமோ 1:5.8; செக் 10:11). மாபெரும் அரசராகிய யாவேயின் செங்கோல், யூதா குலமாகும். இக்குலத்தைத் தாவீது பேரரசன் சேர்ந்தவராவார் (சங் 60:7; 108:8). இக்கருத்து, தாவீது அரச மரபு இறை அதிகாரத்தின் அரச நீட்டிப்பாகும் என்பதை உருவகமாகக் கூறுகிறது. செங்கோல் அரசனின் தாக்கும் அதிகாரத்தை உருவகப்படுத்துகிறது (எண் 24:17; சங் 125:3; எசா 14:5).

புதிய ஏற்பாட்டில் எபி 1:8-இல் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது சங் 45:6-இலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

செசரியா (CAESAREA)

கர்மேல் மலைக்குத் தெற்கே 37 கி.மீ. தொலைவில் பாலஸ்தீனக் கரையிலுள்ள ஒரு நகரம்.

இது முதலில் பெனிசிய நகரமாகவோ, கோட்டையாகவோ இருந்ததாகத் தோன்றுகிறது. இது ஸ்திராத்தோன் அல்லது ஸ்திராதோ கோபுரம் என்று அழைக்கப்பட்டது. இது இப்பெயர் கொண்ட சீதோன் நாட்டு அரசனால் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. மக்கபேயர் காலத்தில் கொடுங்கோலன் சோயிலசிடமிருந்து அலக்சாந்தர் யன்னாயு இதைக் கைப்பற்றினார் (கி.மு. 96). கி.மு. 63-இல் இந்த நகரம் பாம்பேயால் விடுவிக்கப்பட்ட பின்பு, அகுஸ்துவினால் பேரரசன் ஏரோதுக்குக் கொடுக்கப்பட்டது. சீசர் அகுஸ்துவின் பெருமைக்காக ஏரோது இந்நகரைச் செசரியா என்றும், துறைமுகத்தைச் செபஸ்தோஸ் (அகுஸ்து) என்றும் பெயரிட்டார். செசரியாவைத் திரும்பவும் கட்டும் இவருடைய பேராசையானது 12 ஆண்டுகள் கடந்தும் கி.மு. 10-இல்கூட கட்டுமானம் முடிக்கப்படவில்லை. கி.மு. 10-இல் பகட்டான விளையாட்டுப் போட்டிகளோடு இது திறக்கப்பட்டது. தன்னுடைய அரசிற்குப் பொருத்தமான ஒரு துறைமுகத்தை அமைக்கும் பொருட்டு ஏரோது இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். மீதி பாலஸ்தீனத்துடன் தொடர்பு கொள்ள இந்த இடம் மிகவும் சிறப்பானதாகும். ஆளுநர்களுக்கு அடியில் இவ்விடம் அவர்களுடைய ஆட்சிப் பீடமாகவும், பாலஸ்தீனத்தின் தலைநகரமாகவும் அமைந்தது. இது பிறமதத்தினர் நிறைந்த இடமாக இருந்திருந்தாலும் கணிசமான எண்ணிக்கையுள்ள யூதர்கள் இருந்தார்கள். கி.பி. 66-இல் யூதர்களுக்கும், புறவினத்தாருக்கும் இடையில் நடைபெற்ற குழப்பங்கள், உரோமைக்கு எதிராக யூதர்கள் செய்த போர்களின் தொடக்கமாக அமைந்தது. பிற்காலத்தில் இது ஆயர்களுடைய இருப்பிடமாகவும், ஓரிசன் (185-254), பம்பிலியு (240-309), யுசேபியு (260-340) ஆகியவர்களின் கல்வி மையங்களாகவும் இருந்தது.

இது இயற்கையான துறைமுகமாக இல்லாததால் ஏரோது 60 மீட்டர் அகலமுள்ள ஓர் அலைதாக்குக் கரை கட்டினார். கடற்கரையிலிருந்து 165 மீட்டருக்கு நீட்டி வைக்கப்பட்டுள்ள பெரிய பெரிய கற்களை இன்றும் காணலாம். இந்தத் துறைமுகத்தின் வாயிலில் பெரிய கட்டடங்களும் உரோமா, அகுஸ்து சிலைகளும் உள்ளன. இது கிரேக்க நகரத்தைப் போன்ற கட்டடங்களைக் கொண்டிருந்தது. ஒரு பகுதிமட்டும்தான் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது; கி.பி.4 அல்

லது 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் தியாக்கோன் பிலிப்பு போதித்த இடமாக இது முதன் முறையாகக் கூறப்படுகிறது (அ.ப. 8:40). அவர் தன் பணியின் மையமாக இவ்விடத்தைப் பயன் படுத்தினார். இங்குத் தங்கியிருந்த நூற்றுவர் தலைவனான கொர்னேலியுவைப் பேதுரு மனம் மாற்றினார் (10:1.24; 11:11). முதலாம் ஏரோது அகிரிப்பா இதைத் தன் உறைவிட மாக மாற்றினார். தீர், சீதோன் மக்களால் ஒரு கடவுளாக ஏற்றுக் கொள்ளப்பட்டபின் இங்குதான் அவர் இறந்தார் (12:19-23). பவுல் தர்சுக்குச் சென்ற பொழுது இதன் வழியாகக் கடந்துசென்றார் (9:30). தன்னுடைய இரண் டாவது, மூன்றாவது மறைபரப்பும் பயணங் களை முடித்துவிட்டுத் திரும்பும்பொழுது இவ்விடம் வழியாகச் சென்றார் (18:22;21:8). பவுல் கைது செய்யப்பட்ட பின்பு இங்குக் கொண்டுவரப்பட்டு, பெலிக்சு, பெஸ்து ஆகியோரின் முன்னணியில் கொண்டு செல் லப்பட்டார் (23:23; 25:12). இரண்டாம் அகி ரிப்பாவின் முன் தோன்றிய பின்பு பவுல் இங்குச் சிறைக்கைதியாக இருவருடங்கள் தங்கினார். பவுல் செசரியாவிலிருந்து உரோமைக்குக் கடற்பயணம் செய்தார் (24:13-27:2).

செசரியா பிலிப்பி (CAESAREA PHILIPPI)

கெர்மோன் (எர்மோன்) மலையின் தென் மேற்குச் சரிவில் உள்ள ஒரு நகரம்; விவிலி யத்தில் மத் 16:13; மாற் 8:27-இல் மட்டும் தான் இது குறிப்பிடப்படுகின்றது.

1. இடமும் விவரிப்பும்: இது பாலஸ்தீ னத்திலேயே மிகவும் அழகான, செழிப் புள்ள, நகரங்களுள் ஒன்றாகும். ஏனெனில் இது கடல் மட்டத்திலிருந்து 345 மீட்டர் உயரத்தில் மேல்தளத்தில் யோர்தான் பள் ளத்தாக்கின் வடமுனையை நோக்கிய வண் ணம் இருக்கின்றது. வடகிழக்குத் திசையில் 2800 மீட்டர் உயரமுள்ள கெர்மோன் மலை யுள்ளது. யோர்தான் ஊற்றுகளுள் ஒன்று தோன்றும் குகையிலிருந்து இவ்விடத்திற் குத் தண்ணீர் வருகின்றது. மேற்கிலுள்ள செழிப்பான நிலங்களைப் பாதுகாப்பதால் இது தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தக் குகைக் குள் உள்ள புனித இடத்தால் இந்த இடம் இன்னும் முக்கியத்துவம் பெறுகின்றது. இந் தப் புனிதஇடம் பூர்வீகமானது. ஏனெனில் கிரேக்கர்கள் இந்தக் குகையை ஒரு திருத் தலமாகப் பான், நிம்ப்ஸ் என்ற கடவுள் களுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்த இடமானது பல செமித்தியக் கடவுள்களுக்கு அனேகமாகப் பழைய ஏற்பாட்டுப் பாகால் - காது அல்லது பாகால் - கெர்மோன் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட இடமாக இருக்கலாம் (யோசு 11:17 தொ; நீதி 3:13; 1 நாள் 5:23). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் குகையும் ஊற்றும் பனேயோன் என்றும் அதைச் சேர்ந்த நகரமோ மாவட் டமோ பனேயா என்றும் அழைக்கப் பட்டன.

2. வரலாறு: பேரரசன் அந்தியோக்கு எகிப்தைத் தோற்கடித்த முக்கியமான போரின் (கி.மு. 200) இடமாகப் பனேயா தோன்றுகிறது. கி.மு. முதலாம் நூற்றாண் டில் இது செனோதோருசின் ஆட்சியின் பகுதியாக இருந்தது. ஆனால் கி.மு. 20-இல் அரசன் இறந்த பிறகு அகுஸ்து இதை ஏரோ துக்குக் கொடுத்தார். ஏரோது இங்கு வெள் ளைச் சலவைக்கற்களால் ஒரு கோவிலைக் கட்டி அகுஸ்துவிற்கு அர்ப்பணித்தார். கி.மு. 4-இல் ஏரோது இறந்தபிறகு, இது பிலிப்பின் ஆட்சியில் சேர்ந்தது. இவர் கி.பி. 34-வரை ஆண்டார். பிலிப்பு இதைப் பெரிதாக்கி, அழகுப்படுத்தித் திபேரியு சீசருடையவும், தன்னுடையவும் பெருமைக்காக இந்த இடத் திற்குச் செசரியா பிலிப்பு என்று பெயரிட் டார். பிறகு இந்த இடம் இரண்டாம் அகிரிப் பாவின் ஆட்சியின் கீழ் வந்தது (கி.பி. 50). இதை இவர் நீரோவின் பெருமைக்காக நீரோனியா என்று பெயரிட்டார். 66 முதல் 70 வரை நடந்த யூதப் போரில் தீத்து, வெஸ்பாசியன் படைகள் தங்கும் இடமாக இது சொல்லப்பட்டுள்ளது. உரோமையர், பைசாந்தியர் காலங்களிலும் சிலுவைப் போர்க்காலங்களிலும் இது தொடர்ந்து முக்

கியமான இடமாக இருந்தது. அதேயிடத்தி லுள்ள பானியா என்ற ஊரின் பெயரில் பூர்வீகப் பெயரான பனேயா இன்னும் ஒலிக் கிறது. பூர்வீக நகரத்தின் சில பொருட்கள் தான் இன்னும் இருக்கின்றன.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இது ஒரு முக்கியமான நகரமாகவும், கிரேக்க உரோ மைப் பண்பாட்டின் மையமாகவும் இருந் தது. அதிகமான பிறமத மக்கள் தொகை யைக் கொண்டிருந்தது. இந்தநகரம் சுற்றி யுள்ள பல இடங்களைக் கட்டுப்படுத்தி வந்தது. இது *மத் 16:13*-இல் ''பிலிப்புசெச ரியா நகர்ப்புறம்'' என்றும் *மாற் 8:27*-இல் ''பிலிப்பு செசரியாவைச் சார்ந்த ஊர்கள்'' என்றும் குறிப்பிடப்படுகிறது. இங்குதான் இயேசு ''மக்கள் தன்னை யாரென்று கூறு கிறார்கள்?'' என்று தன்னுடைய சீடர்களைக் கேட்க, பேதுரு ''நீரே கிறிஸ்து. கடவுளின் மகன்'' என்று பதிலளித்தார் (*மத் 16:13-16; மாற் 8:27-29*).

செதாது (ZEDAD - பக்கம்)

இது கானானின் வடக்கு எல்லை நாட்டில் உள்ள ஓரிடம் (*எண் 34:8; எசே 47:15*). இது பாம்மீரா, இரிப்லா சாலைக்கு வடக்கில் அமைந்துள்ள சாதாது நகரமாக அடையா ளம் காட்டப்படும். இது தமஸ்குவுக்கு வட கிழக்கில் 105 கி.மீ. தொலைவிலுள்ளது.

செதில் (மீன்) (SCALES)

இது விவிலியத்தில் பல எபிரேய, கிரேக் கச் சொற்களின் மொழிபெயர்ப்பாகும். இஸ் ராயேலருக்குச் செதிலும் சிறகும் (துடுப்பும்) உள்ள மீன்கள்தான் உணவாக உட்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தன (*லேவி 11:9-12; உப 14:9-10*). 'கேடயம்' என்று *யோபு 41:8*-இல் லேவியாத்தானின் செதில்கள் உரு வகமாகக் குறிக்கப்படுகின்றன. *அ.ப. 9:18*-இல் பவுல் பார்வைபெற்றதைக் கண் களிலிருந்து செதில் போன்றவை விழுந்தன என்று உருவகமாக விவரிக்கப்பட்டுள்ளது.

செதுக்கிய உருவம் அல்லது சிலை (GRAVEN IMAGE)

கல்லிலோ, உலோகத்திலோ, கட்டை யிலோ செதுக்கப்பட்ட உருவச்சிலையாகும் (*உப 27:15; நீதி 17:3-4; 2 நாள் 34:3; நாகூ 1:14*). இதுக்கும் வார்ப்புச் சிலைக்கும் வித்தி யாசமுண்டு. சிலை என்பதால் இரண்டும் எபிரேயர்களால் நிராகரிக்கப்பட்டன.

பண்டைய மேற்காசிய நாடுகளில் தெய் வங்களைக் குறித்துக் காட்டுவதற்குச் செதுக் கிய சிலைகள் பயன்படுத்தப்பட்டன. இது ஆதி ஆகமத்திலோ குல மூதாதையர்கள் மற்றும் அவர்கள் கானான் நாட்டில் செய்த பயணத்திலோ குறிக்கப்படவில்லை. ஆனால் *உப 7:5; 12:3*-இன்படி கானானியர் கள் இதைப் பயன்படுத்தினர். சிலைகள் செய்யக்கூடாது என்று பத்துக் கட்டளைகள் எபிரேயர்களைத் தடை செய்கிறது (*யாத் 20:4; உப 5:8*). அவர்கள் இத்தகைய உருவங் களை மிருகங்களாகவும், பறவைகளாகவும், மனிதர்களாகவும் செதுக்குதல் இங்குக் குறிக் கப்படுகிறது (*காண் உப 4:16*). ஐந்நூலின் பிற இடங்களிலும் இது கண்டனம் செய் யப்பட்டுள்ளது (*லேவி 26:1; உப 4:23.25; 27:15*); இறைவாக்கினர்களும் இதைக் கண்ட னம் செய்துள்ளனர் (*எசா 10:10; 21:9; 30:22; எரே 8:19; 10:14; 51:47; ஓசே 11:2; மீக் 1:7; 5:13; நாகூ 1:14; அப 2:18*). *நீதி 17:1-4*-இன்படி எப்பிராயிமின் மலைப்பகுதியில் வாழ்ந்த மீக்காவின் குடும்பத்திற்காக வெள் ளிச் சிலைகள் செதுக்கப்பட்டு ஆண்டவரின் வழிபாட்டில் அவை பயன்படுத்தப்பட்டதா கத் தெரியவருகின்றது. மரத்தாலும் செய்யப் பட்டு, பின் எரிக்கப்பட்டது என்பது *உப 7:5*-இல் தெரிய வருகின்றது. மனாசே இவ்வு ருவச் சிலைகள் செய்ததற்காகக் கண்டனம் செய்யப்படுகின்றார் (*2 நாள் 33:19; காண் 2 அர 21:7*). யோசியாவின் சீர்திருத்தத்தின் போது இவ்வுருவச் சிலைகள் அழிக்கப்பட் டன (*2 நாள் 34:4*).

செதுக்குதல் (CARVING, ENGRAVING)

யாத் 31:5; 35:33-இல் கற்களிலும், மரங்களி லும் உருவங்கள் செதுக்கப்பட்டன என்று கொடுக்கப்பட்டுள்ளதால் இந்தக் கலை யாத் திராகம காலத்திலேயே இஸ்ராயேலருக்குத் தெரிந்திருந்தது என்று சுட்டுகிறது. ஆனால் *2 சாமு 5:11*-இல் உள்ள கூற்று அரசர்கள்

காலத்தில்தான் இக்கலை, வளர்ந்தது என்பதைக் குறிக்கின்றது. இஸ்ராயேலின் பண்பாட்டு வளர்ச்சியுடன் செதுக்கும் கலையும் வளர்ச்சியடைந்தது எனலாம். இது பெனிசிய, எகிப்து, மெசபொத்தாமியக் கலைப் பாரம்பரியங்களால் பாதிக்கப்பட்டது.

செதுக்கப்பட்ட சிலைகளையும் அவைகளின் உற்பத்தியாளர்களையும் வசைபாடும் பகுதிகளைத்தவிர (லேவி 26:1; எண் 33:52; உப 4:28; எசா 40:18-20; 44:9-20; எரே 2:27; 10:10; எசே 8:10.12; 23:14; ஞான 13:13; 14:16) மரம், கல், உலோகம் ஆகியவற்றால் செய்யப்பட்ட பொருள்கள் பற்றி, பழைய ஏற்பாட்டில் வந்துள்ள மற்றக் குறிப்புகள் அனைத்தும் சாட்சிக் கூடாரத்தையும் (யாத் 31:5;35:33), எருசலேம் ஆலயத்தையும் சேர்ந்தவையாகும். வெண்கலத்தள்ளுவண்டிகளிலும் (1 அர 7:31. 36), ஒலிவ மரங்களிலும், சித்திம் கதவுகளிலும், கேதுரு மரங்களிலும் (1 அரச 6:18.29.32.35; எசே 41:17-20; சங் 74:6) உருவங்கள் செதுக்கப்பட்டன.

மணிக்கற்கள் (யாத் 28:9.11.21.35;...), தந்தம், உலோகம், கற்கள், மரம்' ஆகியன செதுக்கு வேலை செய்யப்பயன்பட்டன. அவற்றின்மீது உருவங்களும், எழுத்துக்களும் பொறிக்கப்பட்டன.

செதூர் (SETHUR - மறைத்து வைக்கப்பட்ட)

ஆசேர் வம்சத்தில் தோன்றிய மிக்கேலின் மகன். இவர் கானான் நாட்டின் வலிமையைக் கண்டறிய வேவுபார்க்கச் சென்றவர்களில் தன் வம்சத்தின் பிரதிநிதியாகச் சென்றவர் (எண் 13;13).

செதேக்கியா (ZEDEKIAH - யாவே (என்) நீதிநேர்மையாவார்)

1. கெனானாவின் மகனான இவர் ஒரு போலி இறைவாக்கினர். ஆகாபு அரசன் காலத்திய அரமேயர்களுக்கு எதிராக இராமோத்து கிலயாதில் அரசன் வெற்றிபெறுவார் என்று இவர் நாடகப் பாணியில் போலி இறைவாக்கு உரைத்தார் (1 அர 22:11-12; 2 நாள் 18:10-11.23). ஆனால் இம்லாவின் மகனான உண்மையான இறைவாக்கினரான மீக்காயா தோல்வியை முன்னறிவித்தார். அரசன் அவரைச் சிறையில் அடைத்துவிட்டு போருக்குச் சென்றார். போருக்குச் சென்ற அரசன் ஆண்டவர் வாக்கின்படி கொல்லப்பட்டார்.

2. இவர் யோசியாவின் மூன்றாவது மகனும் (1 நாள் 3:15) யோவகாசின் சகோதரனுமாவான். இவர் யோயாக்கினுக்குச் சிற்றப்பனும், அவருக்கு அடுத்தபடியாக யூதா நாட்டை ஆண்டவரும் யூதாவின் கடைசி மன்னருமாவார் (கி.மு. 597-587). இவருடைய மூலப்பெயர் மத்தனியா (1) ஆகும். பாபிலோனிய மன்னர் நெபுகத்னேசர் மத்தனியாவை யோயாக்கினுக்குப் பதிலாக அரசனாக்கி அவருக்குச் செதேக்கியா என்ற மறுபெயரை இட்டார் (2 அர 24:17-18; 2 நாள் 36:10). செதேக்கியாவும் அவரிடமிருந்த தலைவர்களும் பாவம் புரிந்ததனால் ஆண்டவர் கோபம் கொண்டார். அவர்களுக்கு வரப்போகிற தண்டனை பற்றி எரேமியா முன்னறிவித்தார் (எரே 24:8-10). செதேக்கியா பாபிலோனியருக்கு எதிராய்க் கிளம்பாமல் அவர்களுக்கு அடிபணிந்து வாழ்வதே நல்லது என அவர் உரைத்தார் (எரே 27). இதைக் கேட்காமல் செதேக்கியா பாபிலோனுக்கு எதிராய்க் கலகம் செய்தார். பாபிலோனியர் எருசலேமை முற்றுகையிட்டபோது அரசனைச் சரணடைய வேண்டினார் எரேமியா. மேலும் யூதர்கள் விடுதலை செய்த அடிமைகளை மீண்டும் அடிமைகளாக வைத்திருக்கக்கூடாது எனக் கண்டித்தார் (எரே 34). இவரது சொல்லைக் கேட்காவிட்டாலும் செதேக்கியா எரேமியாவை இறைவாக்கினராக மதித்து இறைவாக்கு சொல்லும்படி கேட்டார். இவரும் எதிரிகளை எதிர்த்து நீங்கள் போர் செய்தால் தோல்வியடைவீர்கள் என மொழிந்தார் (எரே 21). மேலும் அவர் எரேமியாவிடம் ஆள் அனுப்பி ஆண்டவரிடம் மக்களுக்காக மன்றாடக் கேட்டார் (எரே 37:3-4).

எரேமியா பென்யமின் நாடு செல்லக் கிளம்பியபோது அதன் வாயிற்காவலன்

இவர் நாட்டை விட்டுத் தப்பி ஓடுவதாக நினைத்து, அவரைப்பிடித்துச் சிறையில் அடைத்தான். மறுபடியும் அரசன் இறை வாக்கு கேட்க, அவருக்கு அழிவே வந்து சேரும் என இவர் கூறினார் (எரே 37:11-21). எரேமியா சரணடைவது நல்லது எனத் தொடர்ந்து போதித்தார். எனவே தலைவர் கள் அரசனிடம் இவரைக் கொல்லுமாறு வேண்டினர். இரத்தப்பழிக்கு அஞ்சி அரசன் இவரைப் பாழுங்கிணற்றில் தள்ளினார். பின் னர்த் தன் அடிமையொருவனின் சொல் கேட்டு இவரை விடுதலை செய்தார். மறு படியும், சரணடையலாமா என்று யோசித்த அரசன் பிறர் ஏளனம் செய்வார்களே எனப் பயந்து எரேமியா சொல் கேட்க மறுத்தார் (எரே 38). எருசலேம் முற்றுகையிடப்பட்ட பின் சில வீரருடன் பாலைவனத்திற்குச் செல்லும் வழியே செதேக்கியா தப்பி ஓடி னான். கல்தேயரின் படையினர் அவரைப் பின் தொடர்ந்து எரிக்கோ நகரின் சமவெளி யில் அவரைப் பிடித்தனர். மேலும் அவரை இரிப்லாவில் தங்கியிருந்த பாபிலோனிய அரசனிடம் கொண்டு வந்தனர். அவர் செதேக்கியாவுக்கு எதிராய்த் தீர்ப்பிட்டார். அவரது புதல்வரை அவரது கண்முன்னே வெட்டினார். மேலும் அவரது இரு கண் களையும் பிடுங்கியபின் விலங்கிட்டு அவ ரைப் பாபிலோன் நகருக்குக் கொண்டு சென் றார். அதன்பின் அவரைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. ஒருவேளை அங்கே மரித் திருக்கலாம்.

அவரின் எல்லாக் குடிகளும் அவரை முறையான அரசரென ஏற்றுக்கொள்ள வில்லை. ஏனெனில் அன்னிய ஆதிக்கத்தால் அவர் அரசுக்கு வந்தவராவார். இவ்வாறே எரேமியாவும் கருதியிருக்கலாம். ஏரேமியா யோயாக்கினைத் தாவீது மரபின் கடைசி அரசனாகக் கருதுவதாகத் தெரிகிறது. செதேக்கியா எரேமியாவோடு கொண்ட தொடர்பு அவர் விசுவாசி என்று காட்டு கிறது; ஆனால் நாட்டுப்பற்றுடைய தீவிரவாதி களை முழுமையும் அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

3. யூதாவின் அரசன் யோயாக்கிமின் மக னும், யோயாக்கினின் சகோதரனும் ஆவார் (1 நாள் 3:16; 2 நாள் 36:9-10).

4. நெகேமியா தலைமையில் ஏற்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு குரு (நெகே 10:1).

5. இறைவாக்கினர் எரேமியா காலத்தில் வாழ்ந்த இவர் மாசேயாவின் மகனாவார். இந்தச் செதேக்கியாவும் மற்றவரும் ஒழுக் கங்கெட்டு வாழ்ந்ததாகவும், பொய் இறை வாக்குக் கூறியதாகவும் எரேமியா குற்றம் சாட்டுகிறார். மேலும் பாபிலோனிய அரசன் நெபுகத்னேசர் அவர்களைக் கொல்வாரென வும் எரேமியா முன் மொழிந்தார் (எரே 29:21-23).

6. இவர் கனனியாவின் (அனனியா) மக னாவார். யூதாவின் அரசன் யோயாக்கிமின் அரசவை அதிகாரிகளில் இவரும் ஒருவர். இவர் எரேமியாவின் இறைவாக்குகளைப் பாரூக்கு ஏட்டுச் சுருளிலிருந்து வாசிப்ப தைக் கேட்டு, அதைப்பற்றி அரசனுக்குத் தெரிவித்தவர்களில் ஒருவர் (எரே 36:12).

செதேயூர் (SHEDEUR - சத்தாய் ஒளியானவர், நெருப்பானவர்)

இவர் எலிசூரின் (எலிட்சூர்) தந்தை. பாலைவனத்தில்ரூபன் கோத்திரத்தின் தலைவரா்க இருந்தார் (எண் 1:5; 2:10; 7:30.35; 10:18). இப்பெயரின் எழுத்துக்கள், 'வெளிச்சம்' அல்லது 'தீ' என்பதிலிருந்து வந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. பழைய ஏற்பாடு மேற்கோள்களைக் (சங் 36:9; எ 2:5) கருத்தில் கொண்டால் முதல் பொருள் (ஒளி) சாலச்சிறந்ததாகத் தெரிகிறது.

செத்தர் - போசனாய் (SHETHAR - BOZENAI)

''நதிக்கு அப்பால்'' பாலஸ்தீனம் உட்பட உள்ள மாநிலத்தின் பாரசீக அதிகாரி. எருச லேம் ஆலயம் மீண்டும் கட்டப்படுவதற்கு இடையூறு செய்தவர்களில் ஒருவர்.

ஆளுநர் தத்னாயிவும் இவ்வதிகாரியும் சேர்ந்து யூதர்கள் எருசலேம் ஆலயத்தை

மீண்டும் கட்டுவதற்கு அரசனின் அனுமதி பெறப்பட்டதா இல்லையா என்பது பற்றி அரசன் தாரியுவுக்குக் கடிதம் எழுதினார்கள். அரசன் அவ்வேலையை உதவி செய்து ஊக்கு விக்கும்படி இவர்களுக்கு ஆணை அனுப் பினான் (எஸ் 5:3-6:13).

செந்துறை (FAIR HAVENS)

கிரேத்தா தீவின் தென்கரையில் அமைந் திருந்த ஒரு துறைமுகம் (அ.ப. 27:8). ''காலோஸ் லிமியோனாஸ்' என்று இன்று அழைக்கப்படுகிற வித்தினோஸ் முனையின் கிழக்கு வளைகுடாதான் அந்தத் துறைமுகம் என்பதில் சந்தேகம் ஒன்றுமில்லை. நங்கூர மிட்டுத் தங்குமிடமான இது கிழக்கிற்கும், தென் கிழக்கிற்கும் இணைப்புப் பாதையாக உள்ளது. மேலும், மிகச்சிறிய தீவுகளால் இது ஓரளவு பாதுகாக்கப்படுகிறது. 1853 - இல் கப்பல் தலைவன் ஸ்பராத் என்பவர் துறைமுகத்தின் உயர்ந்த மலையில் பவு லுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட கோயில் ஒன்று இடிந்து கிடப்பதைக் கண்டார். குளிர் காலத்தில் கிழக்கு, தென்கிழக்குத் திசையி லிருந்து வளைகுடாவுக்குள் வீசும் காற்றால் துறைமுகம் பாதுகாப்பற்றும் இடைஞ்சல் நிறைந்ததாகவும் இருப்பதாக இந்தக் கப்பல் படை அதிகாரி கருதினார். அ.ப. 27:12-இல் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கருத்தோடு இவர் கூறுவது ஒத்துபோவதைக் காணலாம்.

செந்தூரியன் (CENTURION)

காண்க: நூற்றுவர் தலைவன்.

செந்நிறம், சிவப்பு (RED)

பூச்சிகள், தாவரங்கள், உலோகத் தாதுக் கள் இவற்றிலிருந்து அன்று வெவ்வேறு சிவப்பு வண்ணங்களைத் தயாரித்தனர். ஆனால் இயற்கைப் பொருள்களின் வண் ணத்தைக் குறிப்பதற்கே 'சிவப்பு' என்ற கிரேக்க, எபிரேயச் சொல்லைப் பயன்படுத்தி யுள்ளனர்.

பலம் பொருந்திய ஏசாவு பிறந்தபோது அவன் செந்நிறமாக இருந்ததான் என்று கூறப்படுகிறது (ஆதி 25:25). ஏதோமியர்கட் கும் அவர்கள் நிறத்தை வைத்தே பெயரிடப் பட்டுள்ளது. கூழின் நிறம் (ஆதி 25:30), திராட்சை இரசம் (பழ 23:31) பலியிடப் படும் கிடாரி (எண் 19:2) குதிரைகள் (செக் 1:8; 6:2) உடல்நலமுள்ள இளைஞனின் தோல் (உ.ச.5:10; புல 4:7) இவை அனைத் தும் செந்நிறமாக இருப்பதாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தொழுநோய் உள்ள தாகச் சந்தேகப்படக்கூடியவனின் உடம்பில் சிவப்புக்கலந்தவெண்மை மரு காணப்பட லாம் என்றும் (லேவி 13:19.24) அவனது உடை பச்சை அல்லது சிவப்பு நிறமாகக் காணப்படலாம் என்றும் (13:29) கூறப்படு கிறது. ஆட்டுக்கிடாய்த்தோல் (யாத் 25:5); போர்க்கேடயங்கள் (நாகூ 2:3) ஆகியவை செந்நிறமாக உள்ளன என்று கூறப்படுவது அவை செயற்கையாகத் தயாரிக்கப்பட் டவை என்பதைக் காட்டுகிறது. எசா 63:1-2-இல் ஏதோமையும் இறுதிக்கால வெற்றிவீரர் அணிந்திருக்கும் கருஞ்சிவப்பு ஆடையையும் வைத்து ஆசிரியர் சொல்லாடல் செய்கிறார்.

செந்நிறமும், இரத்தமும் சொல் இலக்க ணப்படி நெருங்கிய தொடர்புடையதால் நீர் செந்நிறமானால் அது இரத்தம் போல் ஆன தாக உருவகப்படுத்திக் கூறுவர் (2 அர 3:22). செந்நிறம் பாவத்தைக் குறிக்கும் அடையாள மாக எசா 1:18-இல் பயன்படுகிறது.

இயற்கையான செந்நிறத்தைக் குறிக்க வேறு பல எபிரேயச் சொற்கள் பயன்படுகின் றன. ஒருவன் அழுதபின் அவன் முகம் சிவகும் (யோபு 16:16); மது அருந்தியவ னின் கண்கள் சிவப்பாகவும், மயங்கிப் போனவையாகவும் இருக்கும் (ஆதி 49:12) என்று கூறப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் வானத்தின் நிறம் (மத் 16:2-3), காட்சிகளில் வரும் குதிரை (திரு வெளி 6:4), பறவை நாகம் (12:3) ஆகிய வற்றை விவரிக்க சிவப்பு நிறம் அல்லது நெருப்பு நிறம் பயன்படுகிறது.

செபக்கூடத்தலைவர் (RULER OF SYNAGOGUE)

செபக்கூடத்தின் தலைவர் அல்லது பொறுப்பாளர் செபக்கூடத்தில் நடக்கும் வழிபாட்டுக்கு வேண்டியவைகளை எல்லாம் கவனிக்கும் கடமையுள்ளவர். இந்த அலுவலைச் செய்துவந்த பலரைப் புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது.

அ) இயேசு உயிர்ப்பித்த பன்னிரண்டு வயதுப் பெண்ணின் தந்தையும் செபக் கூடத் தலைவருமான யாயீர் (மாற் 5:22-43). ஆனால் மத் 9:18 இவரை வெறுமனே தலைவர் என்றுமட்டும் குறிப்பிடுகிறது.

ஆ) இயேசு ஓய்வுநாளில் குணமளித்த போது கோபம் கொண்ட பெயர் குறிக்கப் படாத செபக்கூடத்தலைவர் (லூக் 13:10-17).

இ) பிசிதியாவைச் சேர்ந்த அந்தியோக்கியாவிலுள்ள செபக்கூடத்தில் பவுலும் அவரது தோழர்களும் பேச அனுமதித்தவர்கள் (அ.ப 13:14-15).

ஈ) கொரிந்தில் கிறிஸ்தவமறைக்கு மனந் திரும்பிய கிறிஸ்பு என்ற செபக்கூடத்தலைவர் (அ.ப. 18:8). கொரிந்தில் பவுலால் திருமுழுக்கு அளிக்கப்பட்ட கிறிஸ்பு இவராகத்தான் இருக்க வேண்டும் (1 கொரி 1:14).

உ) பவுலின் முதல் மறைபரப்புப் பயணத்தின்போது கொரிந்திலுள்ள ஆளுநன் கல்லியோவின் முன்னிலையில் இவர் அடிக்கப் பட்டார். ஆனால் அப்போஸ்தலர் பணி இத் தண்டனைக்குக் காரணம் கொடுக்கவில்லை. பவுல் ''சகோதரன்'' என்றழைக்கும் (1 கொரி 1:1) சொஸ்தேன் இவராக இருக்கலாம் என்று பலர் கருதுகின்றனர். இவரைக் கொரிந்து திருச்சபை நன்கு அறிந்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் தனது மனந் திருந்துதலுக்குப்பின் இவர் சிறிது காலத்திற்காவது எபேசுக்குச் சென்றிருந்திருக்க வேண்டும்.

செபக்கூடம் (SYNAGOGUE)

ஆலயத்துக்கு அடுத்தபடி யூதர்களின் சமய சமூக வாழ்வின் மையமாகத் திகழ்ந்தது செபக்கூடமாகும். செபக்கூடங்கள் எப்போது வழக்கில் வந்தன என்று அறுதியிட்டுக்கூற முடியாது. கி.மு. 587-இல் எருசலேம் ஆலயம் அழிக்கப்பட்டது. யூதர்கள் நாடு கடத்தப்பட்டுச் சிதறுண்டனர். ஆலயத்தை மையமாகக் கொண்டு வழிபாடு செய்தல் முடிந்துபோயிற்று. ஆனாலும் தங்களுடைய மத வழக்கங்களைக் கைவிடவில்லை யூதர்கள். தொடக்கத்தில் சிலர் தனிப்பட்டோரின் இல்லங்களில் கூடிச் செபித்தனர். பிறகு செபித்தலுக்கென விடுதிகள் கட்டினர். இவ்வாறு நாடு கடத்தப்பட்டுச் சிதறுண்ட யூதர்களிடையே செபக்கூடம் தோன்றியது. பின்னர் நிலையாக அவர்களிடையே வேரூன்றியது. இவ்வாறு பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபோது எஸ்ரா காலத்தில் செபக் கூடங்கள் தோன்றின என்று கூறலாம். அக் காலத்தில் செபக்கூடங்கள் யூதர்களுக்குள்ளே ஒற்றுமையையும் மதத்தூய்மையையும் காக்கவும், ஒருவருக்கொருவர் ஆறுதல் அளிக்கவும், உற்சாகப்படுத்தவும் பெரிதும் உதவின. விசுவாச வளர்ச்சிக்கும் வழிபாட்டு மலர்ச்சிக்கும் இன ஒற்றுமைக்கும் நிலைக்களங்களாய்த் திகழ்ந்தன. விடுதலை பெற்று எருசலேமுக்குத் திரும்பியபோது யூதர்கள் கூடி வாழ்ந்த இடங்களில் எல்லாம் செபக்கூடங்கள் எழுந்தன. பத்து யூத ஆடவர் போதும் ஒரு செபக்கூடம் அமைக்க. எருசலேமில் மட்டும் 480 செபக்கூடங்கள் இருந்ததாகத் தெரிகிறது. விடுதலை பெற்றவர்கள் அல்லது கிரேக்க நாட்டு யூதர்கள் என்ற பிரிவினருக்கென ஒரு தனிச் செபக்கூடம் எருசலேமில் இருந்ததாக அறிகிறோம் (அ.ப. 6:9). கப்பர்நாகுமில் புற இனத்தார் ஒருவர் கட்டிக் கொடுத்த செபக்கூடம் ஒன்று இருந்தது (லூக் 7:5). அந்தியோக்கியா, அலக்சாந்திரியா, உரோமை போன்ற நகரங்களில் பல செபக்கூடங்கள் இருந்தன.

நமக்குக் கிடைத்த ஆதாரங்களிலிருந்தும் புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்தும் கீழ்க் கண்டவாறு ஒரு செபக்கூடம் அமைந்திருக்க வேண்டும் என யூகிக்கலாம். சாதாரணமாக யூதர்கள் வாழும் பகுதியின் உயர்ந்த இடத்தில், எருசலேமை நோக்கிச் செபக்கூடம்

கட்டப்பட்டது. அது ஒரு நீண்ட சதுர மண்டபத்தையும் இரு பக்கமண்டபங்களையும் கொண்டது. பெரும்பாலும் முகப்பு மண்டபமும் முற்றமும் இருப்பதுண்டு. இங்கே சுத்தி செய்வதற்கெனக் கலங்களில் நீர் வைக்கப்பட்டிருக்கும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் செபக்கூடங்கள் அழகு செய்யப்படவில்லை. ஆனால் பிற்காலத்தில் பல அலங்காரங்கள் புகுத்தப்பட்டன. செபக்கூடத்தின் பிற்பகுதியில் திரைக்குப்பின் வேதநூல் சுருள்கள் கொண்ட பெட்டகம் வைக்கப்பட்டிருக்கும். அங்கேயே நோன்புகளையும் விடுமுறைகளையும் அறிவிக்கப் பயன்படும் கொம்புகளும் எக்காளங்களும் வைக்கப்பட்டிருந்தன. மண்டபத்தின் மத்தியில் ஒரு மேடை இருந்தது. அதன்மேல் ஒரு வாசிப்புத் தண்டும் ஏழு கிளை விளக்குத் தண்டும் உண்டு. இங்கிருந்து வேத நூல் பகுதிகள் வாசிக்கப்பட்டன. விரிவுரைகள் வழங்கப்பட்டன. பெட்டகத்திற்கும் மேடைக்கும் இடையிலுள்ள இடத்தில் மதிப்புக்குரியோர் அமர்வர். மேடையிலிருந்து வாயில்வரை மற்ற யூதர்கள் அமர்வர். ஆண்களும் பெண்களும் பிரிந்து அமர்வர். பிற்காலத்தில் பெண்களுக்கென மாடி கட்டப்பட்டது. செபக்கூடத்தின் இரு பக்கங்களிலும், தனிமையில் செபிக்கவும், படிக்கவும், கூட்டம் கூடவும், நீதி வழங்கவும், ஊழியர் தங்கவும் சிறுவர்களுக்கு மதபோதகம் அளிக்கவும் பல அறைகள் இருந்தன.

செபக்கூடம், எருசலேம் ஆலயத்தைப் போல், இறைவன் உறையும் இடமன்று. செபிக்கவும், சட்டத்தைப் படிக்கவும் குருக்கள் அல்லாதோர் தங்களுக்கென அமைத்துக் கொண்ட அமைப்பாகும். செபக்கூடத்தின் நிர்வாகத்தை மக்களின் மூப்பர்கள் கவனித்துக் கொண்டனர். இவர்களிலிருந்து ஒருவர் செபக்கூடத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், மூப்பர்களின் பெயரால் செபக்கூட நிர்வாகத்தையும், வழிபாட்டுப் பணியையும் கவனித்துக் கொண்டார் (லூக் 8:41; அ.ப. 18:8-17). இவர் ஒவ்வொருவருக்கும் உரிய பணியை அளித்தார். பாடுதல், வாசித்தல், விளக்கம் அளித்தல் போன்ற அலுவல்களுக்கு இவர் ஆட்களை நியமித்தார். விருந்தாய் வந்தோர்க்கு மிகுந்த மரியாதை அளிக்கப்பட்டது. இம்மரியாதை அப்போஸ்தலர்களுக்கு அவர்களின் வேதபோதகப் பயணத்தில் பெரிதும் உதவியது. செபக்கூடங்களில் சில காரியங்களில் நீதி வழங்கப்பட்டது. தண்டனைகளும் வழங்கப்பட்டன (மத் 23:34; மாற் 13:9; லூக் 21:12; 12:11; அ.ப. 9:2; 22:19; 26:111). சபையிலிருந்து பிரித்து வைத்தல், கசையடி கொடுத்தல் போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. இவற்றைச் செபக்கூடத்தலைவர் செயல்படுத்தினார்.

செபக்கூடம் கூடிச் செபிப்பதற்காக நிறுவப்பட்டது. அங்கு ஓய்வு நாட்களிலும், திருநாட்களிலும் வழிபாடு நடந்தது. வழிபாடு, செபம், வேதநூல் வாசகம், விளக்கவுரை அல்லதுபோதகம் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது. யூதர்களின் விசுவாச அறிக்கையாகிய ''சேமாவை''ச் (உப 6:4தொ) சொல்ல, வழிபாடு தொடங்கியது. அதன்பின் விசுவாசிகளுள் யாராவது ஒருவர் நீண்ட செபம் சொல்லுவார். செபக்கூடத் தொடக்க காலத்தில் இச்செபத்திற்குத் திட்டவட்டமான வடிவம் எதுவுமில்லை; சமயத்திற்கேற்பச் சொல்லப்பட்டது. ஆனால் காலப்போக்கில் இச்செபம் பதினெட்டு ஆசீர்களாகத் திட்டமான வடிவெடுத்தது. பின் வேதநூலின் முதல் ஐந்து நூல்களாகிய தோராவிலிருந்தும் இறைவாக்குரைஞர் நூல்களிலிருந்தும் சில பகுதிகள் வாசிக்கப்பட்டன. இவ்வாசகங்கள் யூதர்களின் வழிபாட்டு மொழியாகிய எபிரேய மொழியில் வாசிக்கப்பட்டன. பின் மக்களுக்குத் தெரிந்த மொழியில் அந்த வேதநூல் பகுதிகள் மொழி பெயர்க்கப்பட்டன. அதன்பின் செபக்கூடத் தலைவரோ, அவரது அழைப்பின் பேரில் சபையோரில் ஒருவரோ (அ.ப 3:15-42) வாசகங்களுக்கு விளக்கமாக ஒரு மறைப் பொழிவு ஆற்றுவர். சில சமயங்களில் சபையோரில் சிலர் தாங்களாகவே இப்பணியை விரும்பிக் கேட்டுச் செய்வதுமுண்டு (லூக் 4:16 தொ; அ.ப.13:5; 14:1). இவ்விதம் விளக்கவுரை கொடுப்போர் சட்டத்தையும் பாரம்பரியத்தையும் பற்றிய

நிறைந்த, ஆழ்ந்த அறிவு கொண்டிருக்க வேண்டும். ஆகவே இச்செயலை ஆற்ற மறைநூல் அறிஞர்கள் பெரிதும் பயன்பட்டனர். குருக்கள் இருந்தால் குருக்கள் அல்லது தலைவர் ஆசிர்கூற, செபக்கூட வழிபாடு முடிவடைந்தது. பிற்காலத்தில் இவ்வழிபாட்டில் சங்கீதங்களும் மற்றச் செபங்களும் சேர்க்கப்பட்டன. ''தோரா'' வாசகம் மூன்றாண்டுக்கு ஒருமுறை முழுவதும் முடியுமாறு பிரித்து அமைக்கப்பட்டிருந்தது. நமது குருக்கள் சொல்லும் கட்டளைச் செபத்தில் வரும் செபங்களும் வாசகங்களும் யூத செபக்கூட வழிபாட்டிலிருந்து தோன்றியிருக்கக்கூடும் என்று எண்ண இடம் இருக்கிறது. செபக்கூடத் தலைவரின் பதவியிலிருந்துதான் திருச்சபையில் ஆயர் பதவி ஏற்பட்டிருக்க வேண்டும் எனப் பலர் கருதுகின்றனர்.

செபக்கூடத்திற்குக் கிறிஸ்து தவறாது சென்று அங்கு நடந்த வழிபாட்டில் பங்கு பெற்றிருக்க வேண்டும். பலரறிய வாழ்ந்த போது, கிறிஸ்து செபக்கூடத்தில் பலதடவைகள் போதித்துள்ளார் (மத் 4:23; 9:35; 12:9; மாற் 1:39; 3:1; லூக் 4:15; 6:6; 13:10; யோவா 18:20). செபக்கூட வழிபாட்டில் வேதநூல் வாசகத்தின் பின்வரும் மறைப்பொழிவு, தமது நற்செய்தியைப் பறைசாற்ற அவருக்கு வாய்ப்பு அளித்தது (லூக் 4:16-21). கப்பர்நாகும் செபக்கூடத்தில் மற்றும் சில நிகழ்ச்சிகள் கிறிஸ்துவின் வாழ்வில் நடந்தன (மாற் 1:21தொ; யோவா 6:60).

கிறிஸ்தவ மறையின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும், அப்போஸ்தலர்களின் வேதபோதகப் பயணத்திலும் யூதர்களின் செபக்கூடம் சிறப்பான பங்கு பெறுகிறது. பவுல் தமாஸ்கு செபக்கூடத்தில்தான் தமதுவேத போதக அலுவலை முதல் முதலாகத் தொடங்கினார் (அ.ப. 9:20). பவுல் தமது வேதபோதகப் பயணங்களில் விருந்தினராகச் செபக்கூடங்களுக்குச் செல்வார். அங்கே அழைப்பின்பேரில் மறைபோதகம் செய்வார். இம்முறையைச் சைப்பிரசிலுள்ள சலாமியிலும் (அ.ப. 13:5), பிசிதியா நாட்டிலுள்ள அந்தியோக்கியாவிலும் (அ.ப. 13:14), இக்கோனியா நகரத்திலும் (அ.ப. 14:1), தெசலோனிக்கேயிலும் (அ.ப. 17:1), பெரோயாவிலும் (அ.ப. 17:10) கொரிந்திலும் (அ.ப. 18:4), எபேசிலும் (அ.ப. 19:8), மற்ற இடங்களிலும் பவுல் பின்பற்றினார். யூதர்களில் சிலர் அவரது போதகத்தை ஏற்றுக்கொண்டனர். அவர்களுக்கு மேலும் போதித்தார். ஆனால் பலதடவைகள், பெரும்பாலோர் அவரது போதகத்தை ஏற்க மறுத்துப் பூசல்களை உண்டாக்கினர். அவர்கள் தமது போதகத்தை ஏற்க மறுத்தபின் பவுல் புற இனத்தவரிடையே போதிக்கச் செல்வார். இம்முறையையே மற்ற அப்போஸ்தலர்களும் பின்பற்றியிருக்க வேண்டும்.

யூதர்களின் சமய சமூக வாழ்வில் செபக்கூடத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் நாம் நன்கு உணரவேண்டும். செபக்கூடம் சமய சமூக வாழ்வின் மையமாகத் திகழ்கிறது. இங்குதான் யூதர்கள் தாங்கள் ஒரு தனிப்பட்ட சமூகம் என்ற உணர்வைப் பெற்றனர். அவர்கள் ஒன்றித்து வாழவும், அவர்களது நாட்டுப்பற்றை வளர்க்கவும், பிறரை யூத மதத்தில் சேர்க்கவும் செபக்கூடம் பெரிதும் பயன்பட்டது. வழிபாட்டுமுறை இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு சிறிது மாறுபட்டாலும், அடிப்படை நோக்கும் போக்கும் எங்கும் ஒன்றேதான். தங்கள் சமூகத்துக்குள்ளே ஒருவர் மற்றொருவருக்கு உதவி செய்தனர்; உற்சாகப்படுத்தினர்; கண்காணித்தனர். சமூகத்தின் முக்கிய காரியங்கள் யாவும் செபக்கூடத்திலும் செபக்கூடத்தின் வழியாகவும் நடந்தன. எருசலேம் ஆலயம் அழிந்தவுடன், தங்களது நாட்டை யூதர்கள் இழந்துவிட்டாலும், அவர்கள் கூடிவாழச் செபக்கூடம் பெரிதும் உதவிற்று, ஆலயம் இல்லாவிட்டாலும், யூதர்கள் ஓர் இனமாக வாழலாம் என்பதை நிரூபித்தது. யூத மதம் ஒரு வேத விசுவாசமும், வாழ்க்கை வழியுமாகும் என்று காட்டிற்று. இன்று யூத இனம் நிலைத்துள்ளது என்றால் இச்செபக்கூடங்கள்தான் முக்கிய காரணம்.

செபதியா (ZEBADIAH - யாவேயின் கொடை)

1. பென்யமின் இனத்தைச் சேர்ந்த பெரீயாவின் வழித்தோன்றல் (1 நாள் 8:15).

2. பென்யமின் இனத்தைச் சேர்ந்த எல்பாகாவின் வழித்தோன்றல் (1 நாள் 8:17).

3. சிக்லாகில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட கெதோரைச் சேர்ந்த எரொகாமின் இரண்டு புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 12:7).

4. கோராகிய லேவியர் குடும்பத்தைச் சேர்ந்த சாலமோன் ஆலயத்தில் ஒரு வாயில் காப்போன் (1 நாள் 26:2). தாவீது அரசன், வருங்காலக் கோவிலுக்காகச் செய்த தயாரிப்புகளில் இப்பெயர் வாயில்காப்போரின் குழுவில் காணப்படுகின்றது (1 நாள் 23-36).

5. தாவீது அரசனின் படையின் 12 பிரிவுகளில் நான்காம் பிரிவின் தலைவர். இவன் யோவாபின் சகோதரனான அசாவேலின் மகன் (1 நாள் 27:7).

6. யூதாவின் நகரங்களில் திருச்சட்டத்தைப் போதிப்பதற்காக யோசபாத்தால் அனுப்பப்பட்ட 16 பேர் கொண்ட அமைப்பில் இருந்த 9 லேவியர்களில் ஒருவர் (2 நாள் 17:8; காண்க உப 6:6-9; 27:11-26; 31:9-13). இந்தக் கதை நாளாகமத்தில் மட்டும் தோன்றுகின்றது.

7. யூதா கோத்திரத்தில் மூத்தவர்; யோசபாத்து அரசனுக்கடுத்த எல்லாக் காரியங்களிலும் இவர் தலைமை வகித்தார். இசுமயேலின் மகன் (2 நாள் 19:11).

8. எஸ்ராவுடன் அடிமைத்தனையிலிருந்து நாடு திரும்பிய சாதாரணக் குடும்பங்களில் ஒன்றின் தலைவர். செபற்றியா குடும்பத்தைச் சேர்ந்த மிக்கேலின் மகன் (எஸ் 8:8).

9. அந்நிய திருமணங்களை ஒழிக்கும் எஸ்ராவின் சட்டப்படி அந்நிய மனைவியரையும், அவருடைய பிள்ளைகளையும் விட்டு விட்டவர்களின் பட்டியலில் உள்ள ஒரு குரு. இம்மேரின் வழித்தோன்றல் (எஸ் 10:20).

செபதேயு (ZEBEDEE - யாவேயின் கொடை, யாவேயின் பாகம்)

சலோமி வழியாக இவருக்கு அப்போஸ்தலர்களான யாக்கோபும் யோவானும் புதல்வர் ஆவர் (மாற் 1:19-20; 15:40; மத் 27:56). கப்பர்நாகுமில் மீன்பிடிக்கும் தொழிலில் இவரும் இவருடைய புதல்வர்களும் சீமோன், அந்திரேயா ஆகியவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர் (மாற் 1:16-20; லூக் 5:10). இவர் ஊழியர்களை வைத்திருந்தாலும் (மாற் 1:20), இவருடைய மனைவி இயேசுவிற்குப் பொருளுதவி செய்ததாலும் (மாற் 15:40-41; லூக் 8:2-3) இவர் சொத்துடையவராக இருந்தார் எனத் தோன்றுகிறது. இவர் இயேசுவை ஆர்வத்துடன் பின்பற்றியதாக நற்செய்திகள் கூறவில்லை; ஆயினும் இவருடைய புதல்வர்களும் மனைவியும் இயேசுவைப் பின்பற்றியதைத் தடைசெய்ததாகத் தெரியவில்லை.

கி.பி. 200-இல் கட்டப்பட்ட கப்பர்நாகும் செபக்கூடத்திலுள்ள ஒரு தூண் உள்ளது. இதைக் கட்டியவர் செபிதாவின் மகன் என்ற அரமேயக் குறிப்பு ஒன்று இதில் உள்ளது.

செபத்து (ZEPHATH - காவல் கோபுரம்)

இது அராது ஊருக்கு அருகே யூதாவின் தென்மேற்கில் உள்ள கானானிய நகரம். இங்கே யூதா இனத்தவரும் சிமியோன் இனத்தவரும் சேர்ந்து கானானியர்மேல் பாய்ந்து அவர்களது நகரை முழுவதும் அழித்தார்கள்; கொன்றார்கள்; அவ்வூருக்குக் கோர்மா (ஒர்மா) அல்லது சாபம் என்று பெயரிட்டார்கள் (நீதி 1:17).

செபம், வேண்டல் (PRAYER)

I. இஸ்ராயேல் வரலாற்றில் செபம் பழைய ஏற்பாட்டுச் செபங்களின் முக்கிய தன்மைகளில் ஒன்று கடவுளுடைய மீட்புத் திட்டத்திற்கும் அதற்குமுள்ள தொடர்பு ஆகும். ஒருவர் செபிக்கும்பொழுது தங்களுக்கு என்ன நேர்ந்ததோ என்ன நிகழ்

கிறதோ அதை மையமாக வைத்துச் செபித்தனர். இவ்வாறு தங்களுக்கு மீட்புக் கிடைக்குமென நம்பினர். இஸ்ராயேலர் செபத்தின் உட்பொருள் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டது. புனிதவரலாறு செபங்களினால் நிறைந்திருப்பதைப் பார்க்கிறோம். வரலாற்றின் மிக முக்கியமான கட்டங்களில், இறைத்திட்டத்தில் மக்களுக்கும் இறைவனுக்குமிடையே இடைநிலையாளர்களாகச் செயல்பட்டவர்கள் செபத்தினால் இறைவனது உதவியைப் பெற்றுத்தந்ததைப் பார்க்கிறோம். இவற்றில் சில எடுத்துக்காட்டுகளை மட்டும் தருகிறோம்.

1. மோசே: பழைய ஏற்பாட்டில் வருபவர்களில் செபத்தில் தலைசிறந்தவராக விளங்கியவர் மோசேதான். மன்றாட்டுத் தன்மையுள்ள அவரது செபம் இயேசுவின் செபத்தை முன் அறிவிக்கிறது எனலாம். அவருடைய இடைவிடாத வேண்டுதலினால்தான் கடவுள் இஸ்ராயேலரைக் காக்கின்றார் (யாத் 33:17). மோசே அவர்களிடமிருந்து விலகி நிற்கிறார் (33:14;33:16). அவரது செபிக்கும் முறை ஒரு நாடகம்போல மிக விறு விறுப்பாக அமைகிறது (32:32). ஒவ்வொரு வேண்டுதலுக்கு முன்னும் இறைவனோடு பெரிய விவாதமே நடத்துகிறார். கடவுளின் அன்பைச் சுட்டிக் காட்டி ''இந்த இனம் உமது மக்கள் என்பதைக் கருத்தில் கொள்ளும்'' (33:13; 32:11; எண் 11:12) என்றும் அவருடைய பிரமாணிக்கத்தையும், நீதியையும் நினைவூட்டி ''நீரே எம்மைக் கைவிட்டால் மற்றமக்கள் என்ன சொல்வார்கள்'' (யாத் 32:11-4) என்றும் கடவுளிடம் நினைவுபடுத்துகிறார். அவரைச் சுற்றியிருந்தவர்களின் நன்மைக்காக அவரை உருமாற்றிய இந்தச் செபம் மோசேயைச் செயல்பாட்டிற்கு அழைத்துச் செல்கிறது (யாத் 34:29-35). அதே நேரத்தில் மோசேயின் காலத்தில் செபம் தவறாகப் பயன்படுத்தப்படும் நிலைக்கும் சென்றது. அதாவது கடவுளைச் சோதிக்கும் அளவுக்குச் சென்றுவிட்டது. மெரீபாவில் அவர்கள் கடவுளைச் சோதித்தனர் (யாத் 16:7; சங் 78; 106:32). இங்குச் செபம் அருளின் அழைப்பாக இராமல் பேராசையாக மாறுகிறது. நீர் நாங்கள் விரும்பியதைச் செய்தால் உம்மை விசுவசிப்போம் என்று கூறுவதாக அமைகிறது (நீதி 6:11-17).

2. அரசர்களும் இறைவாக்கினர்களும்: மெசியாவைப்பற்றி நாத்தான் இறைவாக்குரைத்ததும் உடனே தாவீது அரசன் ''நீர் பேசியபடியே செய்யும்'' (2 சாமு 7:25) என்று செபிக்கிறார். ஆலயத்தை அர்ச்சித்து அதை வழிபாட்டுக்குரியதாகத் தொடங்கி வைத்தபோது எதிர்காலத் தலைமுறைகளையெல்லாம் தனது செபத்தில் சேர்க்கிறார் அரசர் சாலமோன் (1 அர 8:10-61). இவ்வாறு மக்களுக்காகச் செபிப்பது அரச கடமைகளில் ஒன்றாக இருந்தது.

ஆபிரகாம் மக்களுக்காகப் பரிந்து பேசியதால்தான் அவர் இறைவாக்கினர் என அழைக்கப்படத்தகுதி பெற்றார் (ஆதி 18:22-32; 20:7). இறைவாக்கினர் ஒவ்வொருவருமே செபிக்கும் மனிதர்களாய் இருந்தனர். எலியா (1 அர 18:36), சாமுவேல், ஆமோஸ் (ஆமோ 7:1-6), சிறப்பாக எரேமியா ஆகிய இவர்கள் முக்கியமாக மக்களுக்காகப் பரிந்து பேசுபவர்களாக இருந்தனர். ''மக்களுக்காகவும் புனித நகரத்துக்காகவும் வேண்டிக்கொள்பவராக'' எரேமியாவைப் பாரம்பரியம் காண்கிறது (2 மக் 15:14). இடையாளராக இருந்து பரிந்து பேசுதல் அவருக்கும் அந்தச் சமூகத்துக்குமிடையே உள்ள நெருங்கிய உறவை அவசியமாக்குகிறது. இத்தகைய புரிந்து கொள்ளலால்தான் எரேமியாவின் செபம் பெரிதும் அர்த்தமுள்ளதாகவும் மோசேயின் செபத்திற்கு இணையானதாகவும் அமைந்தது. சில நேரங்களில் மக்களின் மீட்புக்காகச் செபிக்கிறார் (எரே 10:23; 14:7தொ.14-22; 37:3;...); அவர்களுடைய துன்பங்களைத் தன்னுடையதாக்கிக் கொள்கிறார் (4:19; 8:18-23; 14:17-47). வேறுசில நேரங்களில் மக்களைப்பற்றி இறைவனிடம் புகார் செய்கிறார் (15:10; 12:1-5). அவர்களைப் பழிவாங்கவேண்டுமென்றுகூடக் கேட்கிறார் (15:15; 17:18; 18:19-23). பிறகு தனது விதியை நினைத்துத் தானே நொந்து கொள்கிறார் (29:7-18). இத்தகைய செபங்களுக்கும்,

சங்கீதங்களுக்கும் அதன் தன்மையினாலும், அர்த்தத்தினாலும் பலவிதங்களில் நெருங்கிய தொடர்பு உண்டு. எஸ்ராவும், நெகேமியாவும் தமக்காகவும், மக்களுக்காகவும் ஒரே நேரத்தில் செபிப்பதைப் பார்க்கிறோம் (எஸ் 9:6-15; நெகே 1:4-11). அதேபோல் மக்கபேயர்கள் செபிக்காமல் என்றுமே போரிடச் சென்றதில்லை (1 மக் 5:33; 11:71; 2 மக் 8:27; 15:20-28). ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட சொந்த செபம் நாடுகடத்தலுக்குப் பிற்பட்ட காலத்தில்தான் எழுகிறது (யோனா 2:3-10; தோபி 3:11-16; யூதி 9:2-14; எஸ்த 4:17). இத்தகைய செபங்கள் கதையோடு சேர்த்து வாசிக்குமாறு எழுதிவைக்கப்பட்டன. அவற்றிலிருந்து நாமே நமது செபத்தை உருவாக்கிக் கொள்ள திருச்சபை நம்மை உற்சாகப்படுத்துகிறது. ஆனால் சங்கீதங்களை ஒன்று சேர்த்தவர்கள் அதை முழுமையாகச் செபிக்கப் பயன்படுத்த வேண்டுமெனும் நோக்கத்துடன்தான் ஒன்று சேர்த்தனர். ஏனெனில் சங்கீதம் எல்லாக்காலங்களுக்கும் எல்லாருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. இஸ்ராயேலில் அதற்கொப்பான செபம் வேறு இல்லை.

II. சமூகத்தின் செபமாகிய சங்கீதம்: யாவேயின் அற்புதங்கள் (சங் 104), அவரது கட்டளைகள் (15:81), இறைவாக்குகள் (50), ஞானம் (சங் 37) அனைத்தும் சங்கீதத்தில் நிறைவு பெறுவதுபோல் அனைத்தையும் உள்ளடக்கும் செபமாகச் சங்கீதம் அமைகிறது. சங்கீதத்தை நமக்குத் தந்ததன் மூலம் நமது வாய்வழியாக எத்தகைய செபத்தை இறைவன் கேட்கவிரும்புகிறாரோ அதனை நமக்குத் தந்துள்ளார்.

1. சமூகத்தின் மற்றும் தனியாரின் செபம்: பல நேரங்களில் நாடே மகிழ்கிறது, நினைவு கூர்கிறது, புலம்புகிறது (சங் 44; 74; 77). ஆலயம்தான் சமூகம் முழுவதின் செபமையமாக இருந்திருக்கிறது (சங் 5:8; 28:2; 48:10). தங்கள் செபத்திற்கு நீதிமான்களைச் சாட்சியாக அழைக்கின்றனர் (சங் 119:63). அவர்களது செபம் கேட்கப்பட்டவுடன் நீதிமான்களுக்கு அது தெரிவிக்கப்படும் (சங் 22:23-எபி 2:12).

பல இடங்களில் ஒரேவகையிலான செப வடிவங்கள் இருந்தாலும் இவை வெறும் சூத்திரங்கள் அல்ல. தனிப்பட்ட மனிதர்களின் ஆழமான இறையனுபவத்திலிருந்து எழுந்தவைதான் இச்சங்கீதங்கள். இது தனியாள்களின் செபமாகவும், சமூகத்தின் செபமாகவும் இருக்கிறது என்பது அரசர்கட்கு முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து தெரிகிறது. ஏனெனில் அரசன் மேலானமுறையில் தனிமனிதனாக இருந்தாலும் அவன் வாழ்கின்ற சமூகத்தின் சிறப்பான அடையாளமாக இருக்கிறான். சங்கீதங்கள் தாவீதால் எழுதப்பட்டன என்று பரம்பரையாகக் கூறுவது சங்கீதத்திற்கும், தாவீதின் மகனான இயேசுவின் பரிந்து பேசும் செபத்திற்கும் உள்ள தொடர்பைச் சுட்டுகிறது.

2. துயரத்தின் செபம்: சங்கீதங்களின் செபம் வாழ்வின் வெவ்வேறு சூழல்களிலிருந்து எழுந்தவையாகும். தனிமையின் இனிமையை இச்செபங்களில் காணலாம் (சங் 55:7; 11:1). அதே நேரத்தில் சந்தையில் இருக்கும் சந்தடியையும் போரில் நடக்கும் கொடூரங்களையும் (சங் 55; 59; 22:13தொ), ஒரு செபநூலில் எதிர்பார்க்க முடியாத பல தன்மைகளையும் சங்கீதங்களில் காணலாம். ஒருவன் கடவுளைக் கூக்குரலிட்டு அழைக்கும்போது அனைத்தும் செயலற்று அவருடைய துணையற்று ஒன்றும் நடக்காது என்ற நிலையை அடையும்போது, ஒருவன் தன் உடல் ஆன்மா அனைத்து நிலைகளிலும் கடவுளின் துணையைத் தேடுகிறான். கூக்குரலிட்டு அழைக்கிறான் (69:4; 6:7; 22:2; 102:6). அவரே அனைத்துமாக இருக்க வேண்டுமென நினைக்கிறான் (சங் 63:2). உடல்படும் துன்பங்கள், பெறும் இன்பம் அனைத்தையும் சேர்த்து வாழ்வில் அவை வகிக்கும் பங்குபற்றி இச்செபங்கள் பேசுகின்றன (சங் 22:38). சங்கீத ஆசிரியர் நன்மைகளை மட்டும், அதுவும் கடவுளிடமிருந்துமட்டும் வர வேண்டும் என விரும்புகிறார் (சங் 4).

3. நம்பிக்கையின் செபம்: இத்தகைய சங்கீதங்கள் ஆண்டவர்மீது வைக்கும் அசைக்க முடியா நம்பிக்கையை எடுத்துரைக்கின்றன

(சங் 25:2; 55:24;...). இந்த நம்பிக்கை சிரிப்பிலிருந்து கண்ணீருக்கும், கண்ணீரிலிருந்து சிரிப்புக்கும் மாறிமாறிச் செல்வதைப் பார்க்கிறோம் (சங் 116:10; 23:4; 119:143). இது நன்றிசெலுத்துதலுக்கும் மன்றாடுதலுக்கும் இடையே ஒரு சம நிலையைத் தோற்றுவிக்கிறது. தான் கேட்டதைப் பெறுவதற்கு முன்னே ஒருவர் நன்றி கூறுகிறார் (சங் 140:14; 22:25தொ; காண் யோவா 11:41). வெறும் புகழ்ச்சிகளை மட்டுமே கொண்டுள்ள சங்கீதங்கள் இத்தகைய செபத் தொகுப்பில் ஒரு சிறப்பம்சமாகும். நெருப்புச் சூளையில் போடப்பட்ட மூன்று இளைஞர்கள் பாடும் பாடல் பொதுவான தன்மையுடையதாக உள்ளது.

4. உண்மையான நன்மையைத்தேடும் செபங்கள்: கடவுளிடமிருந்து நலன்களை எதிர்பார்க்கும் மனிதன் தன்னையே கடந்து கடவுளே நன்மை, அவரை அடைந்தால் நன்மையைப் பெற்றதற்குச் சமம் என்ற உணர்வைப் பெறவேண்டும். ஆண்டவரின் அருட்பார்வையில் வாழ்வதை நினைத்தும் அவரோடு இருப்பதையும் அவரது இல்லத்தில் வாழ்வதை நினைத்தும் தான் கொள்ளும் அளவற்ற மகிழ்ச்சியை ஒருவர் அறிக்கையிடுகிறார் (சங் 16; 23; 25:14; 65:5; 91; 119:33தொ). கடவுளே மனிதனைத் தனது அருகில் வரச் செய்வார் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான் இச்செபங்கள் எல்லாம் வந்தன என்று கூறமுடியாது. எனினும் அவரது கொடைகள் ஏற்கெனவே கிடைத்துவிட்டன என்ற நம்பிக்கையோடு செபித்தலைக் காண்கிறோம் (சங் 73:24தொ; 16). சங்கீதச் செபங்களால் உருவாக்கப்பட்டவரும் அவற்றைப் பெற்றுக்கொள்ள, ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பர். இதே சங்கீதங்களால் தன் அனுபவத்தை வெளிப்படுத்த முடியும்.

5. இயேசு சங்கீதங்களைக் கொண்டு செபித்தார்: கிறிஸ்துவின் வெளிப்பாடு சங்கீத ஆசிரியரின் நம்பிக்கைகளை வளப்படுத்துகிறது. அதே நேரத்தில் கிறிஸ்துவுக்குச் சங்கீதங்கள் செபமாகின்றன (மத் 26:30). அவற்றால் அவரும் அவரைச் சார்ந்தவர்களும் உருவாக்கப்படுகின்றனர். கிறிஸ்துவிடமிருந்து பக்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் எனும் ஆர்வம் இந்த அடிப்படைச் செபநூலை மறக்கச் செய்யுமா? (எபே 4:20).

II. இயேசு கற்றுத்தரும் செபம்: மனுவுருவான இறைவன் என்ற முறையில் மனிதர் இடைவிடாது மன்றாடுவதின் மத்தியில் அவர் இருக்கிறார். அதற்கு அவர் பதில் கொடுத்து நம்பிக்கை ஊட்டுகிறார். அதே நேரத்தில் அவர் போற்றுகிறார், உற்சாகமூட்டுகிறார். விசுவாசத்துக்கு அழைத்துச் செல்கிறார் (லூக் 7:9; மத் 9:22.29; 15:28). வாழ்வின் மையமாகச் செபம் திகழ்வதால் எப்படிச் செபிக்க வேண்டுமென்பதைக் கற்றுத்தருகிறார். ''ஆகவே நீங்கள் செபிக்கும்போது..'' (லூக் 11:2).

1. ஒத்தமை நற்செய்திகளில்: இறைவனாம் தந்தையே இந்தப் போதனையின் மையமாகத் திகழ்கிறார் (லூக் 11:2; மத் 6:9-13). இறைவனைத் தந்தையாக அழைப்பதால் சங்கீதங்கள் இறைவனுக்கும் மனிதருக்குமிடையே நெருக்கத்தை அதிகப்படுத்துகின்றன (சங் 27:10; 103:13; எசா 63:16; 64:7). அதே நேரத்தில் செபிப்பவரது மனநிலையையும் முழுவதுமாக ஆக்ரமிக்கிறது. இவ்வாறு அழைப்பதே ஒரு விசுவாசச் செயலாகும். இது ஒருவரை அன்பின் பாதையில் அழைத்துச் செல்கிறது. எனவே விவிலியச் செபத்தின் மையமாக இறைவனின் திட்டத்தை, அவரது விருப்பத்தை, அவரது நாமத்தை, அவரது அரசைக் (மத் 9:38)கொண்டிருக்கிறார் செபிப்பவர். அதே சமயம் தனக்கு உணவு அளிக்க வேண்டுமென்றும், இறைமகனோடு ஒப்புரவாவதன் வழியாகத் தந்தையோடு ஒப்புரவானபின் மன்னிப்பு வேண்டும் எனவும், வருங்காலச் சோதனைகளை மேற்கொள்ள அருளைக் கேட்கிறார்.

நமது செபம் கேட்கப்பட்டுவிட்டது என்ற உறுதிப்பாடுதான் செபத்தின் ஊற்றும் நிபந்தனையுமாகிறது (மத் 18:19; 21:22; லூக் 8:50).

இக்கருத்தை மாற்கு நற்செய்தியாளர் வெளிப்படையாகவே கூறுகிறார். ஒருவன் உள்ளத்தில் தயக்கம் எதுவும் இன்றித் தான் நினைத்தது நடக்கும் என நம்பினால் அது அவனுக்குக் கொடுக்கப்படும் (மாற் 11:23). ஆனால், தான் தந்தையிடம் கேட்பதால்தான் இந்த உறுதிப்பாடு கொண்டுள்ளான் (லூக் 11:13; மத் 7:11). உள்ளத்தை அறியும் தந்தை அனைத்தையும் கொடுப்பார் (மத் 6:6; 6:4.18). மீண்டும் மீண்டும் வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போவதாலோ மீண்டும் மீண்டும் செபிப்பதாலோ கேட்பது கிடைத்துவிடும் என எண்ணத்தேவை இல்லை (மத் 6:7). இப்படிச் செபிப்பது கடவுள் ஏதோ நம்மைவிட்டு வெகு தொலைவில் இருப்பதுபோல எண்ணத் தோன்றுகிறது (1 அர 18:26 தொ). மாறாக அவர் நமது தந்தை. அவர் அருகில் இருந்து அனைத்தையும் தருபவர். நாம் ஒருவரை ஒருவர் மன்னிக்கவும் (மாற் 11:25;மத் 6:14) சகோதரர்களாக ஒன்றிப்புக்காகச் செபிக்கவும் (மத் 18:19), நமது தவறுகளை எண்ணி மனம் வருந்திச் செபிக்க வேண்டுமெனவும் (லூக் 18:9-14) இயேசு கற்பிக்கிறார்.

மனம் தளராது, நம்பிக்கையிழக்காமல் தொடர்ந்து செபிக்க வேண்டும் (லூக் 18:1; 11:5-8) என்கிறார். நமது மனந்தளராமை, நமது இதயத்தின் விழிப்புணர்வு வெளிப்படுத்தப்படவேண்டும்! செபத்தின் அத்தியாவசியத்தன்மை இறுதிக்காலச் சூழ்நிலையில் போதிக்கப்படுகிறது (லூக் 18:1-7). அவரது பாடுகளால் அண்மையில் நெருக்கமாகக் கொண்டுவரப்படுகிறது. செபமில்லையேல் ஒருவன் நடக்கவேண்டிய நிகழ்ச்சிகளால் மூழ்கடிக்கப்படுவான் (லூக் 21:36). இதே போலத் தந்தையை நோக்கிய செபம் தீமை சோதனைகளில் விழவிடாதேயும் என்ற வேண்டுதலோடு முடிவடைகிறது.

2. யோவான், செபிக்கக் கற்றுக்கொடுப்பதை ஒரு புதிய ஒளியில் எடுத்துச் சொல்கிறார். மன்றாட்டிலிருந்து உண்மையான செபத்திற்கும், இறைவனின் கொடைகளிலிருந்து இறைவனையே சொத்தாக அடையும் விருப்பத்திற்கு ஒருவனை அழைத்துச் செல்லும் செபத்தைப்பற்றியும் யோவான் கூறி, எப்படி ஒருநிலையிலிருந்து மற்ற நிலையை எட்டிப்பிடிக்க வேண்டும் என்பதைத் தெளிவாக்குகிறார். இவ்வாறு அந்தச் சமாரியப் பெண் தனது சொந்த ஆசைகளிலிருந்து கடவுளின் கொடைகளுக்காக ஏங்கும் நிலை ஏற்படுகிறது (யோவா 4:10). எனவேதான் விசுவாசம் என்பது செபத்திற்குரிய நிபந்தனை மட்டுமல்ல அதன் விளைவும் ஆகிறது (யோவா 4:50.53; 11:25). விருப்பம் ஒரே சமயத்தில் கேட்கப்பட்டுத் தூய்மைப்படுத்தப்படுகிறது.

IV. இயேசுவின் செபம்:

1. அவரது செபமும், பணியும்: இயேசுவின் வாழ்வில் செபத்தின் முக்கியத்துவத்தை நற்செய்திகள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றன. அவர் பல நேரங்களில் மலைமீதிருந்து செபிக்கிறார் (மத் 14:23). தனியாக, தனிமையான இடத்தில் (லூக் 9:18), உலகமே அவரைத் தேடிக்கொண்டிருந்த போதும் செபித்துக் கொண்டிருந்தார் (மாற் 1:37). இது தந்தையோடு அவர் வைத்திருக்க விரும்பிய நெருங்கிய உறவிற்காக மட்டும்தான் என நினைத்தால் அதுதவறு. ஏனெனில் இதை அவர் தனது பணிக்காகவும் அப்போஸ்தலர்கட்குக் கல்வி புகட்டவும் பயன்படுத்தினார். இந்த இரண்டு கருத்துக்களும் லூக்கா நற்செய்தியில் நான்கு குறிப்புகளில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகின்றன. திருமுழுக்கின்போது (3:21), பன்னிருவரைத் தேர்ந்தெடுக்குமுன்பு (6:12), உருமாற்றத்தின்போது (9:29) 'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே' செபத்தைக் கற்றுக் கொடுக்கு முன்பு (11:1). அவரது நெருங்கிய நண்பர்களையெல்லாம் அவரை நோக்கி ஈர்த்தது அவரது இந்தச் செபம்தான். அதில் அவர்கள் இன்னும் அதிகமாக நெருங்கி வரச் செய்கிறார் (9:10). அது அவர்களைப் பற்றியதாகும். ஏனெனில் அவர் தம்முடையவர்களின் விசுவாசத்திற்காகவே செபிக்கிறார். அவரது செபத்திற்கும் பணிக்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பு அவர் 40 நாட்கள் பாலைவனத்தில் செபத்திலும் நோன்பி

லும் செலவழித்ததிலிருந்தே தெளிவாகிறது. இது மோசேயின் மாதிரியைப் பின்பற்றினா லும், அதையும் கடந்து நிற்கிறார் இயேசு. மோசேயைவிட இயேசு, சாத்தானின் கடவு ளைச் சோதிக்கும் வழிகளை அதிகம் வெற்றி கொள்வார் (மத் 4:7-உப 6:16). அவர் தனது பாடுகளுக்கு முன்பு நமது செபம் எத்தகைய தடைகளைக் கடந்து வரவேண்டும் என் பதை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறார்.

2. பாடுகளும் செபமும்: தனது முடிவை நெருங்கிக் கொண்டிருக்கும்போது, தன் னோடு சேர்ந்து தனக்காகச் செபிக்க வேண்டு மென ஒலிவ மலையில் இயேசு தன் சீடர் களைப் பார்த்துக் கேட்கிறார். இந்தநேரம் கிறிஸ்தவச் செபம் அனைத்தையும் சுருக்கித் தருகிறது: ''தந்தையே, உம்மால் எல்லாம் முடியும்''. அவரது தாழ்ச்சியைச் சோதிப்ப வன் சோதித்துத் தோல்வி அடைகிறான். ''என் விருப்பமன்று உமது விருப்பத்தின்படி ஆகட்டும்'' (மாற் 14:6).

3. அவரது செபமும் உயிர்ப்பும்: எல்லா எதிர்பார்ப்புகளையும் கடந்து அவர் செபம் கேட்கப்பட்டுவிட்டது. வானதூதர்களின் செய்தி உடனடியாக ஆறுதல் தருவதாக இருக்கிறது (லூக் 22:43). ஆனால் எபிரேய ருக்கு எழுதிய திருமுகம் மிகத் தெளிவாக இதனை எடுத்துக் கூறுகிறது: ''அவர் மண் ணுலகில் வாழ்ந்த காலத்தில் தன்னைச் சாவி னின்று காக்க வல்லவரிடம் உரத்த குரலெ ழுப்பிக் கண்ணீரோடும் அழுகையோடும் தனது மன்றாட்டுக்களைச் செலுத்தினார். அவரது பக்தியினால் அவரது செபம் கேட் கப்பட்டது'' (எபி 5:7). மனித மீட்பின் மையநிகழ்ச்சியான இயேசுவின் உயிர்ப்பு, மனிதனும் கடவுளுமானவரின் செபத்திற்கு இறைவன் கொடுத்த பதில் என்பது நமக்கு புதிய தெம்பைத் தருகிறது. ஏனெனில் மீட் பின் வரலாற்றில் மனிதனின் வேண்டுகோள் களுக்கு அவரே செவிமடுக்கிறார் (சங் 2:8).

4. இறுதி அறவுரை: மற்ற அனைத்து முக் கியமானவைகளோடும் முதலில் எப்படிச் செபிக்க வேண்டுமென்று கூறியவர், அவரே இப்போது செபிக்கிறார். கேட்பது கிடைக் கும் என்ற நம்பிக்கையைப் பொருத்தமட் டும் அவரதுபோதகம் ஒத்தமை நற்செய்திக ளின் போதனையோடு ஒத்துப்போகிறது. ஆனால் இங்கு 'என் பெயரால்' கேட்பதை யெல்லாம் என்ற ஒரு புதிய நிபந்தனையைப் புகுத்துகிறார் இயேசு. இக்கூறு ஒரு புதிய முன்னோக்கை அளிக்கிறது. ''என் பெயரால் கேட்பது'' என்பது அந்த மற்றொரு புதிய மனிதரோடு நாம் கொள்ளும் நெருங்கிய உறவையும், அவர் விரும்புவதையே நாமும் விரும்புவதுமாகிய இரு சிறப்பான அம்சங் களை இதில் வெளிப்படுத்துகின்றது. இவ் வாறு செபம் நாம் விரும்புவதைக் கேட்பது மட்டுமன்று, இயேசுவின் விருப்பப்படி கேட்பதுமாக இருக்கிறது. அவரது சித்தம் அவரது தூதாகும். இயேசு தந்தையோடு கொண்டிருந்த ஒன்றிப்பு அவர் அழைத்தவர் களிடையே உள்ள ஒன்றிப்புக்கு அடிப்படை யாக இருந்தது. ''நாம் (தந்தையாகிய நீர் என் னுள்ளும், நான் உம்முள்ளும்) ஒன்றாக இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக'' (யோவா 17:22). அவரின் பெயரில் இருப்பதும், அவர் விரும்புவதையே விரும்புவதுமே அவர் அளித்த கட்டளை களின்படி நடப்பதாகும். இவற்றில் முதன்மை யானது பிறர் அன்பைக்கோருகிறது. ஆகவே செபத்தில் பரவிநிற்பது பிறர் அன்பே. அதுவே செபத்தின் நிபந்தனையும் அதன் இறுதி விளைவுமாகும். எல்லாச் செபமும் கேட்கப்படுகிறது என்று ஒத்தமை நற்செய்தி கள் தொடர்ச்சியாக அறிவிப்பது, புதுப்பிக் கப்பட்ட இதயங்களுக்கெல்லாம் ''உருவகம் எதுவுமின்றி'' (யோவா 16:29) இங்கு உறு திப்படுகின்றது. இங்கு ஒரு புதிய சூழ்நிலை யைக் காண்கிறோம். இதில் ''ஆண்டவரின் திருப்பெயரைச் சொல்லி வேண்டுவோர் யாவரும் தப்பிப் பிழைப்பர்'' (யோவேல் 3:5=உரோ 10:13) என்பது நிறைவேறும். யாவேயின் நாள் பற்றிய வாக்குறுதிகள் நிறைவேறுகின்றன. இறுதி இராவுணவின் செபம் அனைவரும் ஆசையோடு எதிர் பார்த்த புதிய காலத்தைத் தொடங்கி வைக் கிறது. விண்ணக நலன்கள் எல்லாம் மண்ணக நலன்களோடு தொடர்புடையதாக இருக்

கிறது (ஓசே 2:23-25; எசா 30:19-23; செக் 8:12-15; ஆமோ 9:13). இவ்வாறு இயேசு வின் செபம் நமது செபத்தையெல்லாம் கடந்து நிற்கிறது. அரிதாகத்தான் ''நான் செபிக்கிறேன்'' என்கிறார். பொதுவாக, ''நான் கேட்கிறேன்'' என்றும், ஒருதடவை ''விரும்புகிறேன்'' என்றும் (யோவா 17:24) கூறுகிறார். இச்செபம் அவரது (நித்திய எபி 7:25) பரிந்துரைக்கும் மன்றாட்டை எடுத்துக் கூறுகிறது. இதுபாடுகளின் மற்றும் நற்கருணை இரவுணவின் உள்ளார்ந்த பொருளை வெளிப்படுத்துகிறது. ஏனெனில் நற்கருணை, அவரது கொள்கைகளில் இறைவனின் முழுப்பிரசன்னத்திற்கும் நிறைவான பரிமாற்றத்திற்கும் அச்சாரமாக உளது.

V. திருச்சபையின் செபம்:

1. சமூகம்: திருச்சபை வாழ்வின் தொடக்கம் இஸ்ராயேலரின் செபச் சூழ்நிலையில்தான் ஆரம்பிக்கின்றது. லூக்கா நற்செய்தி, அப்போஸ்தலர்கள் தொடர்ந்து இறைவனைப் புகழ்ந்து பாடிக்கொண்டிருப்பதாகக் கூறுவதோடு முடிவடைகிறது (லூக் 24:53). ஆறாவது மணி நேரத்தில் பேதுரு செபிப்பதாகவும் (அ.ப. 10:9); பேதுருவும் யோவானும் 9 மணி வேளையில் செபிக்கச் செல்வதாகவும் (3:1) கூறப்படுகிறது. தங்கள் கரங்களை வானத்தைநோக்கி உயர்த்திய வண்ணமும், சில நேரங்களில் நின்றுகொண்டும், முழந்தாள் படியிட்டும் செபித்தனர் (1 திமோ 2:8; அ.ப. 9:40). ''அனைவரும் ஒரே மனதாகக் கூடிச் செபித்தனர்'' (அ.ப. 1:14). பெந்தகோஸ்து நாளுக்காக அவர்கள் தங்களையே செபத்தினால் தயாரித்ததுபோலத் திருச்சபையின் ஒவ்வொரு முக்கியமான கட்டத்திலும் அவர்கள் செபித்துத் தங்களையும், இறைச்சமூகத்தையும் தயாரித்தனர். யூதாசுக்குப் பதிலாக வேறொருவரை நியமித்த போது (அ.ப. 1:24-26) ஏழு தியாக்கோன்களை நியமித்தபோது (6:6) இன்னும் பல நேரங்களில் செபத்தினால் தொடங்கிவைத்தனர். பேதுரு விடுதலை பெறுவதற்காகச் செபித்தனர் (4:24-30). பிலிப்புவால் திருமுழுக்குப் பெற்றவர்களுக்காகவும் செபித்தனர் (8:15). பேதுரு செபிப்பதையும் (9:40; 10:9) அதேபோல பவுல் செபிப்பதையும் (9:11; 13:3; 14:23; 20:36; 21:5) பார்க்கிறோம். விண்ணகத்தில் கூடியுள்ள திருச்சபையின் பாடல் எங்கும் எதிரொலிப்பதைத் தெளிவோடு கூறுகிறது (திருவெளி 5:6-14).

2. புனித பவுல்

(அ) போராட்டம்: எப்பொழுதும் செபியுங்கள் ''இடைவிடாது செபியுங்கள்'' (உரோ 1:10; எபே 6:18; 2 தெச 1:3.11; 2:13; பில 4; கொலோ 1:9) என்ற வார்த்தைகளால் செபம் என்பது என்ன என்று தெளிவாக வரையறுக்கிறார் பவுல். இரவும் பகலும் செபியுங்கள் என்றும் கூறுகிறார் (1 தெச 3:10; 1 திமொ 5:5). செபத்தை ஒரு போராட்டமாகப் பார்க்கிறார் (உரோ 15:30; கொலோ 4:12). கடவுள் நமது செபத்திற்கு எப்படி முழுமையாகச் செவிமடுக்கிறார் என்பதை மிக அழகாகக் குறிப்பிடுகிறார் (எபே 3:20). ''எனது உடலைவருத்திக் கொண்டிருக்கும் முள்ளை என்னிடமிருந்து அகற்றுமாறு மூன்று முறை மன்றாடினேன்'' (2 கொரி 12:8) என்கிறார்.

(ஆ) அப்போஸ்தலச் செபம்: மேலே குறிப்பிட்ட உதாரணம் தனித்தன்மை வாய்ந்தது. பொதுவாக அவருடைய செபம் எல்லாம் இறையரசு வளர வேண்டும் என்பதற்காகத்தான் இருக்கும். இதற்காகப் பல தேர்ந்த மான நடைமுறை ஆசைகளோடு செபிக்கிறார். எருசலேம் மீண்டும் வெற்றி கொள்ளப் படவேண்டும் (உரோ 15:30 தொ), சோதனைகள் முடிய வேண்டும் (2 கொரி 1:11), அவரது உரிமை வாழ்வுக்காகவும் (பில 22) இன்னும் பலவற்றிற்காகவும் செபிக்கிறார் (பிலி1:19; 1 தெச 5:25). மற்றவர்களும் இதற்காகச் செபிக்க வேண்டுமெனக் கேட்கிறார் (கொலோ 4:12). எப்பப்பிரா அவர்களுக்காகச் செபத்தில் போராடுவதைக் குறிப்பிடுகிறார். செபத்தைப் பொறுத்தமட்டில் அது பவுலின் எழுத்துக்களில் கிறிஸ்துவின் உடலோடு ஒன்றிக்கச் செய்யும் வழி என்பதே தெளிவாகிறது.

(இ) நன்றி கூறல்: வேண்டுதலுக்கும், போற்றுதலுக்கும் இடையேயுள்ள பாரம்

பரிய சமன்பாட்டைப் பவுலில் காண்கிறோம். ''செபங்கள், மன்றாட்டுக்கள், நன்றியறிதல் கள்'' என வரிசைப்படுத்துகிறார் (பிலி 4:6; 1 தெச 5:17; 1 திமொ 2:1). கலாத்தியருக்கும், கொரிந்தியருக்கும் எழுதிய மடலைத்தவிர மற்ற எல்லா மடல்களையும் அவர் நற்செய் தியை ஏற்றுக்கொண்ட அவர்களுக்காக இறைவனிடம் நன்றி செலுத்திவிட்டே தொடங்குகிறார். அவர்களில் இறைவனது அருள் நிறைவு பெற வேண்டும் என்று செபிப்பதாகக் கூறுகிறார் (பிலி 1:9). நன்றி கூறிச் செபித்தல் செபத்தின் மற்ற எல்லாக் கூறுகளையும் தன்னுள் ஈர்ப்பதாகத் தோன்று கிறது. இயேசு கிறிஸ்துவில் பெற்றுக் கொண்ட கொடையிலிருந்து தொடங்காமல் நாம் செபிக்க முடியாது. அதற்காக நன்றி கூறக் கூடியவர்களாக மாற வேண்டுகிறோம் (2 கொரி 9:11-15).

(ஈ) மகனின் ஆவியின் வழியாகச் செபித் தல்: நாம் செபிக்கும்பொழுது ஆவியானவர் நம்மில் செயலாற்றி நம்மை ''மூவொரு இறைவனோடு'' இணைப்பதை மிகத் தெளி வாகப் புதியதொரு ஒளியில் விளக்குகிறார் பவுல். எவ்வாறு வழிபாட்டிலே நாம் செபிக் கிறோமோ அதுபோலவே அவர் கிறிஸ்து வழியாகத் தன் செபத்தைத் தந்தையிடம் செலுத்துகிறார். அரிதாகத்தான் அவர் ''ஆண் டவரிடம்'' அதாவது இயேசுவிடம் செபத் தைச் சமர்ப்பிக்கிறார் (2 கொரி 12:8; எபே 5:19). நம்மைச் சுவிகார மக்களாக்கும் ஆவியே கிறிஸ்து வழியாகத் தந்தையிடம் நம்மைப் பேசச் செய்கிறார் (உரோ 8:15). அந்த ஆவியால்தான் இறைத்தந்தையை நாம் 'அப்பா' எனக் கூப்பிடுகிறோம். கடவுளை 'அப்பா' என அழைக்க யூதர்கள் துணியமாட் டார்கள். ஏனெனில் அது மண்ணில் நமது சாதாரணத் தந்தையர்களை நாம் அழைக்கப் பயன்படுத்தும் சொல். இந்தத் தயவு விண் ணிலிருந்துதான் வரக்கூடும். எனவே அந்த ஆவியின் துணையால்தான் நாம் ''அப்பா! தந்தாய்!'' எனத்துணிவோடு அவரை அழைக் கிறோம் (கலா 4:6; மாற் 14:36).

இவ்வாறு, மனுக்குலம் தனது செபத்தை எண்பிக்க உணரும் தேவை இறைமுன் முயற்சியால் ஊடுருவப்பட்டு, உண்மையி லேயே நிறைவடைகிறது. பிள்ளைக்குரிய மனப்பான்மையைவிட ஆழமாக மக னுரிமை நமது செபத்தின் மையமாக இருக் கிறது. செபிப்பது எப்படி என்று நாம் அறியாத நிலையில், ஆவியானவரே நம்மில் செபிக்கி றார் (உரோ 8:26). இறைவன் நமக்கு அளிக்க விரும்பும் கொடையின் ஆழத்தையும் அடைய உறுதியளிக்கிறார். இதுவே அன் பெனும் கொடையாகும். இதுவே செபத்தின் தொடக்கமும் முடிவும் ஆகும். இது ஏற் கெனவே பெற்றுக்கொண்ட (உரோ 5:5), இன் னும் வேண்டப்படும் (லூக் 11:13) அன்பின் ஆவியாவ.. அவரிலே நாம் ஒரு புதிய உல கைத் தேடுகிறோம். அந்த உலகிலே நமது செபம் கேட்கப்படுவது உறுதி. அதற்குப் புறம்பே, நமது செபம் புறவினத்தாரின் செபத்தைப் போன்றதுதான். அவரில் அனைத்துச் செபங்களும் விண்ணையும் மண்ணையும் ஒன்றிக்கச் செய்யும் முயற் சியை விரைவுபடுத்துகின்றன. ''ஆவியும் மணமகளும் 'வாரும்'.....ஆம். ஆண்டவரா கிய இயேசுவே வாரும்' என்று கூறுகின்றனர்'' (திருவெளி 22:17.20).

செபராது (SEPHARAD)

சிதறிப்போன யூதர்கள் தங்கிய இடமாக ஒப 20-இல் குறிக்கப்படும் இடமாகும். தர்கூம் செபராதை ஸ்பெயினோடு ஒன்று படுத்தியது. அதன் விளைவாக ஐபிரியன் யூதர்கள் இப்போது ''செபராதியர்'' என் றழைக்கப்படுகின்றனர்.

செபராது, சிறிய ஆசியாவில் லீதியா வின் தலைநகரான சர்தையாக அடையாளம் காட்டப்படுகிறது. மேதியப் பகுதியிலுள்ள சப்பர்தாவாக அடையாளம் காட்டப்பட லாம் என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. இவ்விடத்தில் கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே நாடு கடத்தப்பட்ட யூதர்கள் வாழ்ந்தனர்.

செபர்வயிம் (SEPHARVAIM)

சீரியாவிலோ மெசபொத்தாமியாவிலோ அமைந்திருந்த ஒரு நகரம். இன்று இதன்

அமைவிடத்தைப் பற்றிக் குறிப்பு இல்லை. சமாரியா நகரம் அசீரியர்களிடம் வீழ்ந்த போது அசீரிய அரசன் இரண்டாம் சார்கோன் இஸ்ராயேல் மக்களை நாடுகடத்திப் பல ஊர்களிலிருந்து மக்களை இஸ்ராயேலில் குடியேற்றினார் (கி.மு.722). அப்படிப்பட்ட ஊர்களில் இவ்வூரும் ஒன்று (2 அர 17:24; 18:34; 19:13; எசா 36:19; 37:13).

இந்நகரைச் சேர்ந்த மக்கள் தங்கள் தெய்வங்களாகிய அதிராம்-மெலக்குக்கும் அனாம்-மெலக்குக்கும் தங்கள் பிள்ளைகளைப் பலியிட்டு வந்தனர் என்று கூறப்படுகிறது (2 அர 17:31). இந்நகரின் பெயரைக் குறித்தும் அதன் அமைவிடத்தைக் குறித்தும் பல்வேறு கருத்துக்கள் நிலவியபோதும், எசேக்கியேல் குறிப்பிடும் சிபிராயிம் நகராகவே இருக்கவேண்டும் (எசே 47:16). இது கமாத்துக்கும் (ஆமாத்து) தமஸ்குவுக்கும் இடையில் உள்ளது.

செபற்றியா (SHEPHATIAH - யாவே நடுவர் ஆவார்)

1. கெபிரோனில் (எபிரோன்) தாவீதுக்கும், அபித்தாள் என்ற மனைவிக்கும் பிறந்த புதல்வர்களில் ஒருவர் (2 சாமு 3:4; 1 நாள் 3:3).

2. பென்யமின் குடும்பத்தினர்கள் நாடு கடத்தப்பட்டதற்குப்பின் எருசலேமில் குடியேறி வாழ்ந்தனர் (1 நாள் 9:8). இவர்களில் இவர் மெசுல்லாம் குடும்பத்தில் குலப் பெயர் மூதாதையர்.

3. இவர் ஒரு கரூபியர் (அருபியர்). சிக்லாகில் தாவீதுடன் சேர்ந்து கொண்ட பென்யமின் குலத்து வீரர்களில் இவரும் ஒருவர் (1 நாள் 12:5).

4. தாவீது ஆட்சிக் காலத்திலிருந்த சிமியோன் குலத்துத் தலைவன் மாக்காவின் மகன் (1 நாள் 27:16).

5. அரசன் யோசபாத்தின் மகன் (2 நாள் 21:2). இவரும் யோசபாத்தின் மற்றப் புதல்வர்களும் அவர்களுடைய சகோதரன் யோராமால், அவன் ஆட்சிக்கு வந்தபின் கொல்லப்பட்டனர்.

6. ஒரு குடும்பத்தின் முதல்வர். இவர் வழியில் தோன்றிய 372 பேர்கள் பாபிலோனியாவிலிருந்து செருபாபேலோடு திரும்பினர் (எஸ் 2:4; நெகே 7:9). மேலும் 81 பேர்கள் எஸ்ராவோடு திரும்பினர் (எஸ் 8:8).

7. சாலமோன் வேலையாட்களின் குடும்பத் தலைவன். பாபிலோனியாவிலிருந்து செருபாபேலுடன் திரும்பியவர் (எஸ் 2:57; நெகே 7:59).

8. யூதா குலத்து குடும்பத்தின் குலப்பெயர் மூதாதையர். பெரேட்சின் வழித்தோன்றல். நெகேமியாவின் காலத்தில் எருசலேமில் குடியிருந்தார்கள் (நெகே 11:4).

9. மத்தானின் மகனான ஓர் இளவரசன். நெபுகத்னேசர் எருசலேமை முற்றுகையிட்ட போது, நான்கு எகிப்திய கட்சியைச் சேர்ந்த அதிகாரிகள் செதேக்கியாவிடம் எரேமியாவைக் கொல்லப் பணித்திருந்தார்கள். ஏனென்றால் எரேமியாவின் இறைவாக்குகள் எருசலேமைப் பாதுகாத்தவர்களைத் தளர்ச்சியடையச் செய்தன. அவை நாட்டுக்குத் துரோகமானவையாயிருந்தன. இந்த நால்வரில் ஒருவர் செபற்றியா ஆவார். அவர்களை எதிர்க்க முடியாத காரணத்தினால் செதேக்கியா, எரேமியாவை அவர்களிடம் ஒப்படைத்தார். அவர்கள் எரேமியாவைச் சாகடிப்பதற்காகப் பாழுங் கிணற்றில் இறக்கி விட்டார்கள் (எரே 38:1 தொ).

செபன்யா (SHEBANIAH - ஆண்டவரால் வளர்ந்த)

1. தாவீதின் ஆட்சிக்காலத்தில் திருப்பேழை எருசலேமுக்குள் கொண்டு வரப்பட்ட போது கடவுளின் திருப்பேழைக்குமுன் எக்காளம் ஊதிக்கொண்டிருக்க நியமிக்கப்பட்ட குருக்களில் இவரும் ஒருவர் (1 நாள் 15:24).

2. எஸ்ரா சட்டத்தை வாசித்ததோடு தொடர்புடைய பொதுநோன்புக் காலத்தில்

இஸ்ராயேல் மக்களை வழிபாட்டில் வழி நடத்திய லேவியர்களில் இவரும் ஒருவர் (நெகே 9:4-5). இவர் எஸ்ராவின் தலைமையில் உடன்படிக்கைக்குக் கையொப்பமிட்ட லேவியர்களில் ஒருவராகவும் இருக்கலாம் (நெகே 10:10).

3. இவர் நாடு கடத்தப்பட்டதற்குப் பின் உள்ள காலத்திலுள்ள ஒரு குரு (நெகே 12:4). எஸ்ராவின் உடன்படிக்கைக்குக் கையெழுத் திட்டவர்களில் ஒரு பிரதிநிதி (நெகே 10:4). சில ஏடுகள் செபன்யா என்ற பெயர் செக்கனியா (8) என்ற பெயரின் தவறான வாசகமாக இருக்கக்கூடும். என்று சுட்டுகின்றன. (10:3).இவர் 12:14-இல் குறிக்கப்படும் குருக்கள் குடும்பத்தை நிறுவியவராக இருக்கலாம்.

4. நெகேமியாவின் தலைமையில் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மற்றொரு லேவியராவார் (நெகே 10:12). இவரும் 2-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

5. நெகேமியாவின் தலைமையில் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மற்றொரு லேவியராவார் (நெகே 10:12) இவரும் 2-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

செபா (SEBA)

கூசின் (அதாவது எத்தியோப்பியாவின்) மகன். ஆப்பிரிக்கா அல்லது எத்தியோப்பியாவுக்கு அருகிலுள்ள மேற்கு அரேபியாவின் பகுதியில் வாழ்ந்த மக்களின் இனப் பெயர் மூதாதையராக இருக்கலாம் (ஆதி 10:7;1 நாள் 1:9; சங் 72:10; எசா 43:3). ஒருவேளை செபா செபாயர்களின் இடமாகவோ (எசா 45:14) அரேபிய சேபாவிலுள்ள ஒரு குடியிருப்பாகவோ இருக்கலாம்.

செபாகு (ZEBAH - பலி)

தன்னுடைய சகோதரர்களைக் கொன்றதற்காகக் கிதியோன் பிடித்துக் கொன்ற இரு மிதியானிய அரசர்களில் ஒருவர் (நீதி 8:4-21; சங் 83:11).

செபாம் (SEBAM)

சிபிமா என்பதன் மற்றொரு பெயராகும். சீகோன் தோல்வியுற்றபின், ரூபன் உரிமை கொண்டாடிய மோவாபிய நகரம் (எண் 32:3).

செபாம் (SHEPHAM - காட்டுத்தனமான, அம்மணமான)

கானான் நாட்டை இஸ்ராயேலர் கொண்ட பின் கிழக்கு எல்லையின் விவரிப்பில் வரும் ஒருபெயர் (எண் 34:10-11). இது இருந்த இடமாகக் கெர்மோன் (எர்மோன்) மலைக்கு அருகிலும் யோர்தான் நதி தோன்றும் இடமுமாகக் கருதப்படும் அல்லது எதிர்-லெபனோனுக்கு வடக்கிலுள்ள ஒரோன்தோசு ஆற்றங்கரையிலுள்ள இரிப்லாவாகக் கருதப்படும். இஸ்ராயேலின் எல்லைகள் பற்றிய எசேக்கியேலின் விவரிப்பில் செபாம் விடப்பட்டுள்ளது (எசே 47:18).

செபாயர் (SABEANS - குடிகாரர்கள்)

செமித்திய மரபில் வந்த மக்கள். அரேபியத் தீபகற்பத்தில் தென்மேற்குப் பகுதியில் வசித்தனர். அவர்கள் நறுமணப்பொருட்களை, விலையுயர்ந்த மாணிக்கங்களை வியாபாரம் செய்து வந்தனர். அனேகமாகச் 'செபா' ஆப்பிரிக்காவிலிருந்த செபாயர்களின் குடியிருப்பின் பெயராக இருக்கலாம். செபாயர்கள் தங்கிய தென்மேற்கு அரேபியா இக்கால ஏமானாகும்.

செபாயர்கள் முதலில் தென்மேற்கு அரேபியாவில் குடியேறினர். பல்வேறு அரசியல் தொடர்பினால் அவர்களுடைய எல்லை விரிவடையலாயிற்று. இவர்கள் இருந்த பகுதி நல்ல வளமுடையதாக இருந்தது. அதிக முன்னேற்றம் கண்டது. பல அணைக்கட்டுகள், மதகுகள் கட்டினர். இது கிழக்கு எல்லைப் பகுதியில் இருந்ததால், மற்ற வட நாட்டுத் தொல்லை எதுவுமின்றிப் பாதுகாப்பாக இருந்தனர். எனவே செபாயர்கள் அமைதியோடும், பாதுகாப்போடும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். வெளிநாட்டுத் தர்க்கங்களின்றித் தங்களது நிலையிலும், பண்பாட்டிலும் வளர்ந்தனர்.

அன்றைய மேற்காசிய நாடுகளின், பொருளாதார வாழ்க்கையில் செபாயர்கள் முக்கிய இடம் வகித்தனர். தூபப் பொருட்கள், வெள்ளைப் போளம் போன்றவைகளை வியாபாரம் செய்ய இவர்கள் இருந்த பகுதி வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. இதனால் வணிகச் சாலைகளில் இவர்கள் ஆதிக்கம் செய்தனர். இந்தத் தொடர்பில்தான் இவர்களை விவிலிய ஆசிரியர்களுக்குத் தெரியும் (யோபு 6:19; சங் 72:10.15; எசா 60:6; எரே 6:20; எசே 27:22-23; 38:13). பல சமயங்களில் செபாயர்கள் இக்கால மோக்காவிற்கு அருகிலுள்ள மூசா, பாபு ஏல் மாண்டேபுக்கு அருகிலுள்ள ஒசிலிஸ் போன்ற துறைமுகங்களைத் தங்கள் கண்காணிப்பில் வைத்திருந்தனர். இந்தத் துறைமுகங்களிலிருந்துதான் இவர்கள், கிழக்கு ஆப்பிரிக்கா, சொக்கோத்ரா (இந்தியாவும் இருக்கலாம்) போன்ற நாடுகளுக்குக் கப்பல் வழியாக வியாபாரம் செய்து வந்தனர். இதன் விளைவாகத்தான் பொருளாதாரம் வளர்ச்சி கண்டு புகழ்பெற்ற எழுத்தாளர்களால் ''மகிழ்ச்சி மிக்க அரேபியா'' என்று வருணிக்கும் அளவுக்கு வளர்ந்தது.

பல தனிப்பட்ட ஆய்வாளர்கள் செபாயர்களின் நாகரீகம் பற்றி ஆய்வு நடத்தினர். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் சீட்சென் (1810), அர்னோ (1843), காலேவி (1869), கிளாசர் (நான்கு பயணங்கள் 1882-94), பல ஆயிரக்கணக்கான தென் அரேபியக் கல்வெட்டுக்களைப் பார்த்து எழுதிய பாக்ரி (1947) ஆகியோர் ஆவர். முதல் புதைபொருள் ஆராய்ச்சி (1928) ரத்ஜென்ஸ், வோன் விஸ்மான் போன்றோரால் குக்கா என்ற இடத்தில் நடத்தப்பட்டது. இது சானாவுக்கு 23 கி.மீ. வடக்கில் உள்ளது. அங்கே ஒரு சிறிய கோவிலைக் கண்டனர். மேலும் பல கண்டுபிடிக்கப்பட்டன. அதில் பழைய செபாயர்களின் தலைநகரான மாரிபுக்கு அருகிலுள்ள கராம் பில்கிஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய புதிய செய்திகள் கிடைக்கப்பெற்றும் செபாயர்களின் தொடக்க வரலாறு ஒரு புதிராகவே இருக்கிறது. தொடக்கச் செய்திகளடங்கிய ஆதியாகமம் சில செய்திகளைத்தான் தருகின்றது. ஆதி 10:7-இல் (1 நாள் 1:9) செபா, காமின் பரம்பரையில் கூசின் புதல்வராகக் குறிக்கப்பட்டுள்ளார். எனவே ஆசிரியர் மேற்கு வடமேற்கு மக்களோடு சேர்த்துச் செபாவைக் கருதுகிறார். அதே நேரத்தில் செபாவும், சேபாவும் ஒரே ஆள் இல்லை என்பது சங் 72:10-இன் மூலம் தெளிவாகிறது. செபா, கூசின் (நூபியா) புதல்வராக இருப்பதாலும், எசா 43:3-இன்படி, எகிப்தும் நூபியாவும் தொடர்பு கொண்டு இருப்பதாலும், செபா ஆப்பிரிக்காவில் இருக்கலாம் என எண்ணப்படுகிறது. மேலும் செபாவும் சாபாவும் ஒரே மாதிரிப் பெயர்களைக் கொண்டுள்ளதால் செபா, செபாயக் குடியிருப்பைக் குறிப்பதாக அமைகிறது. ஆனால் ஆதி 10:28 (1 நாள் 1:22)-இன்படி சேபாவும், பல தென் அரேபிய இனக்குடிகளும், சேமின் பரம்பரையாக உள்ளனர். இதனால் சேபா வடக்கு, வடகிழக்கு மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்று நம்பப்படுகிறது. ஆதி 25:3-இல் (=1 நாள் 1:32) உள்ள பெயர்ப்பட்டியல்படி, ஆபிரகாமின் மகன் யோக்சானின் வழித் தோன்றலாகச் சேபாயினர் உள்ளார். இதனால் சேபாவுக்கும் இஸ்ராயேலுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுள்ளது. இந்த எல்லா தொடக்கத் தலைமுறைக் குறிப்பீடுகளும், செபாயர்கள் மேற்காசிய மக்களோடும் ஆப்பிரிக்க மக்களோடும் தொடர்பு கொண்டுள்ளனர் என்று இஸ்ராயேலர் எண்ணினர் என்று சுட்டுகின்றன. இந்தப் பரந்த தொடர்புக்குச் செபாயர்களின் பழைய வியாபாரம் துணைநின்றது.

பல வருடங்களாக அறிஞர்கள் சாபாவின் காலம் பற்றி வாக்குவாதம் நடத்தினர். சிலர் இவர்கள் காலம் கி.மு. 8-ஆவதுநூற்றாண்டு முடிவில் என்றனர். மற்றும் சிலர் கி.மு. 5-ஆவது நூற்றாண்டுக்குப்பின் என்றனர். இறுதியில் காசர்கொலன் என்ற இடத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக, இரண்டாவது கருத்தே சரியானதென வலியுறுத்தப்பட்டது.

மொழி, புதைபொருள் ஆராய்ச்சிச் சான்றுகளின் படி, சேம் என்பவரின் மரபில்

வந்த மக்கள், தென் அரேபியாவில் கி.மு. இரண்டாவது ஆயிரம் ஆண்டுகளின் இடைப்பட்ட நூற்றாண்டுகளில் இடம் பெயர்ந்து வந்து குடியேறினர். இந்தக் குழுவில் உள்ளவர்கள்தான் சாபாவைத் தோற்றுவித்தார்கள் என்பது இன்னும் சந்தேகத்துக்குள்ளாகவே இருக்கிறது. கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் பாலைவனப் பயணம் இருந்தது; ஒட்டகங்கள் பயன்பட்டன. இது செபாயர்களால் ஊக்குவிக்கப்பட்டது, வணிகம் பெருகியது. இதனால் ஓர் இளவரசி 2400 கி.மீ. தொலைவிலுள்ள பாலஸ்தீனத்திற்குப் பயணம் மேற்கொள்ள முடிந்தது. அவள் சாலமோனைச் சந்தித்தது (1 அர 10:1-10.13; 2 நாள் 9:1-9. 12) வியாபார நோக்கத்திற்காகவும் இருக்கலாம். இது செபாயர்களுக்கும் இஸ்ராயேலர்களுக்கும் நல்ல பயன்களை அளித்தது.

9-ஆம் நூற்றாண்டு முதல் 5-ஆம் நூறாண்டு பாதிவரை சாபா முக்காரிப்புக்களால் ஆளப்பட்டது. 20 பேருக்கும் மேற்பட்டவர்கள் நாட்டை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து முறையே 9-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 675-வரையும், 675-முதல் 525 வரையும், 525 முதல் 450-வரையும் ஆண்டனர். முதல் குழுவில் சிலர் அசீரிய ஏடுகளில் குறிக்கப்படுகின்றனர். இரண்டாம் குழுவினர் பல கட்டடங்களைக் குறிப்பாக, சந்திரக் கடவுளுக்கு ஆலயங்களை எழுப்பியுள்ளனர். மூன்றாம் குழுவினரைப்பற்றி அதிகம் தெரியவில்லை. இக்காலத்தில் மெசாபொத்தாமியப் பண்பாட்டால், செபாயர் சித்திர, சிற்பக்கலைகள் பாதிக்கப்பட்டன. கி.மு. 450-இல் ஆண்ட இறுதி முக்காரிப்பு கிரிபில் வாட்டர் ''சாபாவின் அரசன்'' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பல கட்டடங்களைச் சாபாவில் கட்டினார். கி.பி. முதல் நூற்றாண்டில் கிரேக்க, உரோமச் சித்திரங்கள் கலைப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. மேலும் சில இறக்குமதி செய்யப்பட்ட பானைகளும் காணப்பட்டன.

கி.பி. முதல் நூற்றாண்டின் இடைப்பட்ட ஆண்டுகளில் சாபா மற்றும் தூ-ரயிதான் அரசர்களின் காலம் ஆரம்பித்தது. இக்காலம் போராட்டங்கள் நிறைந்ததாய் இருந்தது. சாபா வெற்றிகண்டது. சில கட்டடங்கள் கட்டப்பட்டன. இறுதியில் சாபாவின் அரசராக, அப்ரகா ஆண்டார். இவர் மாரிபு அணையைச் சீர் செய்தார். கி.பி. 575-இல் அபிசீனிய ஆதிக்கம் தொடங்கி 628-வரை நீடித்தது.

செபாரிம் (SHEBARIM - கல் சுரங்கம்)

இது ஆய் என்ற இடத்திற்கும் எரிகோவிற்கும் இடையில் உள்ள ஓர் இடம். ஆயைக் கைப்பற்றச் செய்த முயற்சியில் இஸ்ராயேலர் தோல்வியுற்றபின் ஆயின் மக்கள் இஸ்ராயேலரைச் செபாரிம் வரை துரத்திச் சென்றனர் (யோசு 7:5). செபாரிம் என்பது ஓர் இடப்பெயராய் இல்லாமல் ஓர் உண்மையான கல் சுரங்கத்தைக் குறிக்கலாம்.

செபார் (SEPHAR - எண்)

யோக்தானின் மக்களின் உறைவிடம். இவர்கள் ''மேசாவிலிருந்துகிழக்கே செபார் செல்லும் திசையில் இருந்த மலைநாடுவரை'' பரவியிருந்தனர் (ஆதி 10:30). முதலில் இந்நகரம் வட அரேபியாவில் இருப்பதாகவும் பிறகு இதே அரேபியாவில் தெற்குப் பகுதியில் இருப்பதாகவும் கருதப்பட்டு வந்தது. இதனைத்தவிர ஏமன் நாட்டின் உட்பகுதியில் உள்ள ஒரு நகரையும், மகரா கரைப் பகுதியில் உள்ள ஒருநகரையும் செபார் நகராக இருக்கலாம் என்றும் கூறுவர். ஆனால் இதனை உறுதியாக வலியுறுத்திக் கூற முடியாது. எபிரேய மொழியில் 'செபார்' என்றால் 'எல்லையோர நகரம்' என்று பொருள் உண்டு. எனவே ஆதியாகமத்தில் வரும் சொற்றொடர் இடப்பெயரைக் குறிப்பதில்லை என்று கொள்ளலாம். மாறாக எல்லையோரம் வரை பரவியிருந்தனர் என்று கொள்ளலாம். யோக்தானியர் தென் அரேபியச் சேமியர் ஆவர். கத்ராமாவுத்திலுள்ள சபாராகச் செபார் அடையாளம் காட்டப்படலாம்.

செபாற்று (SHEBAT)

இது எபிரேய நாட்காட்டியில் பதினோராம் மாதத்தின் பெயர் (செக் 1:7; 1 மக் 16:14). இது ''சாபாத்து'' என்ற அக்காதியப் பெயரின் ஒரு வடிவமாகும். இது நமது தை மாதத்திற்கு (சனவரி - பெப்ருவரி) இணையானது.

செபி, செபோ (SHEPHI, SHEPHO - வெறுமை யான, மலடான)

இவர் ஏதோமில் கோரிய (ஓரிய) துணை இனத்தின் மூதாதையர் ஆவார். இனத்தலை வர் சோபாலின் நான்காவது புதல்வர் (ஆதி 36:23; 1 நாள் 1:40).

செபிக்கும் இடம் (PRAYER, PLACE OF)

செபம் என்பது எந்த இடத்திலும் செய்ய லாம். சிறையில்கூடச் செய்யலாம் (அ.ப. 16:25); புயலில் அகப்பட்ட கப்பலிலும் செய்யலாம் (27:23.35). உப ஆகமப் பாரம் பரியம் எருசலேம் ஆலயத்தில் மட்டுமே செபிக்கவேண்டும் எனக்கூறியது. இதைத் தான் எசா 56:7-ஐ மேற்கோள்காட்டி இயேசு குறிப்பிடுகிறார். எல்லா மக்களுக்கும் அது செபவீடு (மத் 21:13). எருசலேமுக்கு வெளியே மக்கள் செபிக்கும்போது அவர்கள் அதை நோக்கியே செபிக்க வேண்டும் (தானி 6:10; சங் 5:7-இது யூதர்களின் செபநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது). பாஸ்காத் திருவிழா வின்போது அவர்கள் வீட்டிலேயே செபிக்க லாம். அப்போது அந்நியருக்கும் வீட்டில் இடம் கொடுக்கலாம் எ.கா. மேல்மாடி (மாற் 14: 14-15; தானி 6:10; அ.ப. 1:13). மேல்மாடி செபிக்கச் சிறந்த இடம். ஏனெ னில் ஒருவன் மற்ற ஈர்ப்புகள் இன்றித் தனிமையாகச் செபிக்க முடியும் என்று அக் காலத்தில் கருதினர் (அ.ப. 10:9; யூதி 8:5). தனிமையான மலைகளிலும் அமைதியான இயற்கைச் சூழ்நிலையிலும் இயேசு செபித் தார் (மத் 6:6; மாற் 1:35; லூக் 9:28; யோவா 1:48; 2 சாமு 15:32; 1 அர 18:42).

பழைய ஏற்பாட்டில் உயர்ந்த மலைகளும் சோலைகளும் பாகால் வழிபடும் இடம் எனக் கூறப்படுகிறது (உப 12:2; எரே 17:2; எசே 6:13). முறையான யூத செபத்திற்கு நீர் மிக அவசியம் (அப.16:13.6; யூதி 12:6-8). பிரச்சனையான சமயத்தில் தனிமையாகச் சென்று செபிப்பதுமோசேக்குத் தேவையான தாகப்பட்டது (யாத் 24:18; உப 9:25; 1 அர 19). திருமுழுக்கு யோவான் (லூக் 1:80), பவுல் (கலா 1:15-17), இயேசு ஆகியோருக் குத் தனிமையாகச் செபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அவர்கள் திரும்பவும் முடிவுகாணப் பிரச்சனைகளுக்கு நடுவே வந் தார்கள். திருமுழுக்கு யோவான் யோர்தா னைக் கடந்து போதிக்க மீண்டும் மக்க ளிடையே வந்தார். கும்ரான் துறவற மடம் இவ்வாறு தனிமையாகச் சென்று செபித்த தற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. செபக் கூடங்களிலும் இவர்கள் செபித்தனர். செபிக் கும் இடம் யூத செபக்கூடத்தையும் குறிக்க லாம் (அ.ப. 16:13; 1:14).

செபிதா (ZEBIOAH - கொடை)

ரூமாவைச் சேர்ந்த பெதாயாவின் மகளும், யூதாவின் அரசன் யோவாக்கிமின் தாயும் ஆவாள் (2 அர 23:36).

செபினா (ZEBINA - வாங்கப்பட்ட)

அந்நியப் பெண்களை மணந்த யூதர்களுள் ஒருவர். நெபோவின் வழித்தோன்றல். இவர் எஸ்ராவின் காலத்தில் வாழ்ந்தார் (எஸ் 10:43).

செபுபாம் (SHEPHUPHAM - பாம்பு)

பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர். ஆதி 46; எண் 26; 1 நாள் 7-8-போன்ற இடங்களில் பென்யமின் குலத்துத் தலைமுறை அட்ட வணைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவைக ளில் இப்பெயர் வெவ்வேறு முறைகளில் சொல்லப்பட்டுள்ளது. இப்பெயர் பென்யமி னின் மகன் என்ற முறையில் எண் 26:39-இல் மட்டுமே சொல்லப்பட்டாலும், 1 நாள் 8:5-இல் இருக்கும் செபுவான் இவராகவே இருக்க வாய்ப்புகள் பல இருக்கின்றன. ஆனால் இதில் பென்யமின் மகனாக அல்ல, வழித்தோன்றலாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் பென்யமின் குலத்துத் தலைமுறை அட்டவணைகள், இரட்டைப் பெயர்களைத் தருகின்றன. இவை செபுபாமின் சில அசைக ளைக் கொண்டுள்ளன: மும்பிம், குப்பிம் (உப்பிம்) (ஆதி 46:21) செபுபாம், கூப்பாம் (ஊபாம்) (எண் 26:39) சுப்பீம், குப்பிம் (உப்பிம்) (1 நாள் 7:12), செபுபான், கூராம் (ஊராம்) (1 நாள் 8:5). இந்தச் சில ஆராய்ச்சி கள் அறிஞர் சிலரைச் சூப்பாம் என்ற பெயரே ஆதி 46; எண் 26; 1 நாள் 8-இல்

ஏப்படும் பென்யமின் தலைமுறை அட்டவணையில் மூலப்பெயராக இருந்திருக்க வேண்டும் என்றும், இவர் பென்யமினின் மகனாகவோ பேரனாகவோ இருந்திருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யத் தூண்டியுள்ளன.

செபுபான் (SHEPHUPHAN)

பென்யமினின் பேரனும் பேலாவின் மகனுமாவார் (1 நாள் 8:5).

செபுலோன் (ZEBULUN - இளவரசன்)

யாக்கோபுவுக்கும் லேயாவுக்கும் பிறந்த ஆறாவது மகனும் யாக்கோபின் பத்தாவது மகனுமாவார் (ஆதி 30:19-20). இப்பெயர் இஸ்ராயேலின் புதல்வர்களின் பட்டியலில் காணப்படுகிறது (35:28; யாத் 1:3; 1 நாள் 2:1). செபுலோனின் குலம் ஆதி 26:14-இல் குறிக்கப்படுகிறது. பாலைவனக் கணக்கெடுப்பில் செபுலோனுக்கு எண் 1:30 தொ-இல் 57,400 பேரும், எண் 26:26-இல் 60,500 பேரும் ஒதுக்கப்படுகின்றனர்.

செபுலோன் குலமும், இசக்கார் குலமும் தொடர்புடையதாக இருந்தன. இவ்விரு கோத்திரங்களும் கர்மேல் மலைக்கு வடக்கில் தெற்குக் கலியேயாவிலும் எசுதிரலோன் சமவெளியிலும், கடற்கரைச் சமவெளி ஓரத்திலும் அருகருகே வாழ்ந்தது மட்டுமல்லாமல் (யோசு 19:10-16.17-27), இரண்டையும் சேர்த்தே மோசே ஆசீர்வதிக்கிறார் (உப 33:19). செபுலோனுக்குரிய பகுதி கலிலேயாப்பகுதியில் அமைந்திருந்தது. மேற்கில் ஆசேரோடும், கிழக்கில் நப்தலியோடும் தென்மேற்கில் மனாசேயோடும் தென்கிழக்கில் இசக்காரோடும் பொது எல்லைகளைக் கொண்டிருந்தது. இப்பகுதி இஸ்ரியேல் சமவெளி அல்லது அக்கோ சமவெளியின் ஒரு பகுதியைக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் அதன் முக்கிய பகுதி இஸ்ரியேலுக்கு வட ஓரத்திலுள்ள மலைப்பகுதியே ஆகும். இது செழிப்பான அடர்ந்த காடுகளைக் கொண்டிருந்தது. கானானிய குடியிருப்பு மையங்களிலிருந்து விலகியிருந்தது. ஆதி 49:13; உப 33:18 ஆகிய பகுதிகள் செபுலோன் கடற்கரைப்பகுதியில் வாழ்ந்ததாகவும், அதன் கப்பல்களோடு தொடர்பு கொண்டிருந்ததாகவும் சுட்டுகின்றன. ஆனால் அதற்குரிய பகுதியின் விவரிப்பு அது கடலோடு நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பளிக்கவில்லை. ஆனால் இக்குறிப்புகள், ஒரு காலத்திலாவது செபுலோன் மத்திய தரைக் கடல் வரை பரவியிருந்தது என்று சுட்டுகின்றன. செபுலோன் சில சமயம் இசக்காருடனும் (ஆதி 30:17-20; உப 33:18-19; நீதி 5:14-15; எசே 48:26.33) சிலசமயம் நப்தலியுடனும் (நீதி 4:6; 5:18; 6:35; சங் 68:27; எசா 8:23) தொடர்புபடுத்தப்படுகிறது.

செபுலோன் நப்தலியுடன் சேர்ந்து தெபோரா, பாராக்கு ஆகியோரின் தலைமையில் கானானியர்களுக்கு எதிராகவும் (நீதி 4:6.10; 5:18) கிதியோன் தலைமையில் மிதியானியர்களுக்கு எதிராகவும் (6:35) போராடியது. நீதிபதி ஏலோன் செபுலோனைச் சேர்ந்தவராவார் (12:11-12). சங் 68:27-இல் ஊர்வலத்தில் பங்கெடுக்கிறது. இறைவாக்கினர் யோனா, செபுலோனின் ஒரு நகரமான கத்-கேப்பேரைச் சேர்ந்தவராவார் (2 அர 14:25; யோசு 19:13). செபுலோனைச் சேர்ந்த லேவியர் நகரங்கள் 1 நாள் 6:48.62; யோசு 21:34 தொ-இல் குறிக்கப்படுகின்றன. செபுலோனும் நப்தலியும் அசீரியாவைச் சேர்ந்த 3-ஆம் திகிலத்து பிலேசரால் வெல்லப்பட்டதை எசாயா முன்னறிவித்தாலும் (எசா 8:23) அவற்றிற்கு மகிமை மிக்க எதிர்காலத்தையும் முன்னறிவிக்கிறார் (9:1). மத் 4:12-17, இந்த இறைவாக்கை, கலிலேயாவின் இயேசு செய்த பணியின் தொடக்கத்திற்குப் பொருத்திக் கூறுகிறது. இதைத்தவிர புதிய ஏற்பாட்டில் திருவெளி 7:8-இல் மட்டும்தான் செபுலோன் இசக்காருக்கு அடுத்த படியாக, வருகிறது. செபுலோன் என்ற பெயர் எகிப்தியப் பழிப்புரை வாசகங்களிலும் காணப்படுகிறது.

செபுவேல் (SHEBUEL - இறைவனின் கைதி)

1. இவர் கேர்சோமின் மகன். மோசேயின் வழிவந்தவர். கோவிலிலிருக்கும் ஒரு லேவியர். இவர் கோவில் வழிபாடுகளில் குருக்

களுக்கு உதவி செய்தவர். இந்தப் பணிப்பிரிவுகள் (1 நாள் 26:26-32) கி.மு. மூன்றாவது நூற்றாண்டு வழக்கத்தைப் பிரதிபலிக்கிறது. செபுவேல் கோவில் கருவூலத் தலைமைக் கண்காணிப்பாளனாய் இருந்தார் (26:24). இவர் 1 நாள் 24:20-இல் சுபவேல் என்று அழைக்கப்படுகிறார்.

2. தாவீதின் திருக்காட்சியாளரான ஏமானின் மகன் (1 நாள் 25:4). ஒரு லேவியர். இவர் கோவில் இசைக்குழுவின் பதின்மூன்றாம் பிரிவுக்குத் தலைவர் அல்லது மூதாதையர். 1 நாள் 25:20-இல் சுபவேல் என்றழைக்கப்படுகிறார்.

செபுனா (SHEBNA - இப்போது திரும்பிவாரும் ஓ யாவே!)

இவர் அரண்மனை நிர்வாகி அல்லது ஆளுநர்; பிற்காலத்தில் எசேக்கியா அரசனின் அவையில் செயலர் (2 அர 18:18தொ; எசா 36:3தொ). அரண்மனை ஆளுநர் என்ற முறையில் தனக்கு ஒரு பகட்டான கல்லறையைக் கட்டிக் கொண்டதற்காக எசாயாவால் சபிக்கப்பட்டார் (எசா 22:15-25).

அசீரிய மன்னன் சனகெரிபு கி.மு. 701-இல் யூதாவின் நகரங்களைக் கைப்பற்றி வந்தார். அப்போது எசேக்கியா மூன்று தூதுவர்களை ஒப்பந்த நோக்குடன் கலந்துரையாட அனுப்பினார். அவர்களில் ஒருவர் செபுனா ஆவார். இவர்கள் திரும்பிவந்து சனகெரிபு கூறியவற்றைக் கூறினர் (2 அர 18:37). பிறகு எசேக்கியா கோணி உடுத்தி ஆண்டவருடைய ஆலயத்தில் நுழைந்து, இறைவாக்கினர் எசாயாவிடம் ஆலோசனை கேட்டுவரும்படி இவர்களை அனுப்பினார் (19:1தொ). எசாயா, பிறநாட்டு அரசியலில் தலையிட வேண்டாம் என்று எச்சரித்த ஆண்டவருக்குச் செவிகொடுக்க மறுத்ததற்காக நகரத்திற்குப் பேரழிவு வருகிறது என இறைவாக்குரைத்தார் (எசா 37:21-22). ஆனால் அதே சமயத்தில் அசீரியர்களின் முற்றுகையின் தோல்வியையும் முன் கூறினார் (37:33 தொ). செபுனாவும் மற்ற அதிகாரிகளும் அசீரியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய ஆலோசனை கொடுத்ததற்காகக் கண்டனம் செய்யப்படுகின்றனர்.

அறிஞர் சிலர், எசா 22-இல் வரும் செபுனாவும், 36-37 அதிகாரங்களில் வரும் செபுனாவும் வெவ்வேறு ஆள் என்று கருதுகிறார்கள் (2 அர 18-19).

செபூல் (ZEBUL - குடியிருப்பு, உச்சி)

இவர் செக்கேம் நகரின் தலைவராவார். செபூல் எருபாகாலின் மகனான அபிமெலக்கிற்கு ஆள் அனுப்பி, ககாலும் அவன் சகோதரரும், அபிமெலக்கிற்கு எதிராகச் செய்த சதியைக் கூறி அவர்களை முறியடிக்கச் செய்தார் (நீதி 9:30-41).

எபேது மகன் ககால் தன் சகோதரர்களோடு செக்கேமுக்கு வந்ததும் அரசியலில் குழப்பம் ஏற்பட்டது. மேலும் அவன் தன்னையே அப்பகுதிக்குத் தலைவனாக நினைத்து, அபிமெலக்கிற்கு எதிராக அவதூறு பேசினார். இதையறிந்த அந்நகரின் தலைவன் செபூல் அபிமெலக்குக்கு இதைத் தெரிவித்து, படையுடன் வந்து ககாலைத்தாக்க ஆலோசனை தந்தார். அபிமெலக்கும் படையுடன் இரவில் வந்து வயல் வெளியில் பதுங்கினார். காலையில் ககாலையும் அவனது படையையும் முறியடித்தார். இதன் பின்னர் செபூல் ககாலையும், அவனைச் சேர்ந்தவரையும் செக்கேமை விட்டு விரட்டி அடித்தார்.

செபேர் (SHEBER - உடைத்தல்)

இவர் காலேபின் வைப்பாட்டி மாக்காவுக்குப் பிறந்தவர். தாவீதின் வழித்தோன்றல்களின் தலைமுறை அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளார் (1 நாள் 2:48).

செபேர் மலை (SHEPHER MOUNT - அழகான, ஒளிமயமான)

சீனாய் மலையிலிருந்து புறப்பட்டுப் பாலைவனத்தில் இஸ்ராயேலர்கள் பயணம் செய்யும்போது தங்கிய ஓர் இடமாகும் (எண் 33:23-24). இது இருக்கும் இடம் அறியப்படவில்லை.

செபேலா (SHEPHELAH - சமவெளி)

இது மலையடிவாரப் பகுதியாகும். பெலிஸ்தியச் சமவெளிக்கும் யூதேயாவின் மேட்டுப் பகுதிக்கும் இடையில் உள்ளது. பல பள்ளத்தாக்குகளால் பிரிக்கப்பட்டுள் ளது.

இம்மாவட்டத்தைக் குறிக்கும் இப்பெயர், எபிரேய மொழியிலுள்ள, பழைய ஏற்பாட் டில் இருபது முறை வந்துள்ளது. பிறமொழி களில் செப்பேலோ, தாழ்ந்தபகுதி, சமவெளி, மலைநாடு என்று பலவாறு மொழி பெயர்க் கப்பட்டுள்ளது.

யோசு 11:2.16-ஐத் தவிர, மற்ற மொழி பெயர்ப்புகள், யூதாவின் மேற்பகுதியில், 'இம்மலையடிவாரப் பகுதி உள்ளது' என்று குறிக்கின்றன. இதுபழைய ஏற்பாட்டில் 'நெகேபு' மற்றும் மலைப் பகுதியோடு சேர்ந்தே சொல்லப்படுவது இது யூதாவின் பெரிய புவியியல் பிரிவுகளில் ஒன்று என்பதைக் காட்டுகிறது (உப 17; யோசு 10:40; 12:8; 15:33; நீதி 1:9; எரே 17:26; 32:44; 33:13). செபேலா சில பகுதிகளோடு ஒப்பிடப்பட்டுப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது (2 நாள் 26:10; உப 1:7; 2 நாள் 28:18; ஒப 19). இந்த மேற்கோள்கள் இந்த இட முக்கியத்துவத் தைச் சுட்டிக்காட்டுகின்றன.

செபேலாவில் உள்ளதாகப் பழைய ஏற் பாட்டில் குறிக்கப்படும் நகரங்கள் (யோசு 15:3-42; 2 நாள் 28:18) இந்த மலையடிவார மாவட்டத்தில்தான் இருக்கின்றன என்று குறிப் பிடப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டு மேற் கோள்களின் மூலம் வடக்கே அய்யலோன் பள்ளத்தாக்கும், தெற்கே வாடி ஏல்-கெசியும் இந்த மாவட்டத்திற்கு எல்லையாக இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள லாம். வாடி குபெயிபாவிலுள்ள இலாக்கிசு தென் எல்லையிலுள்ள கோட்டையாகும். செபேலாவின் வடகோடியில் அதிதாநகரம் இருந்தது. அது அய்யலோன் பள்ளத்தாக் குக்கு வடக்கில் பாதுகாப்பாக அமைந்திருந் தது (1 மக் 12:38).

செபேலாவில் பல பள்ளத்தாக்குகள் இங்கு மங்குமாக நிறைந்து காணப்படுகின்றன. இவைகளில் பல இயற்கையான சாலைகள் உள்ளன. இவை வியாபாரத்திற்கும், நாடு பிடிப்பதற்கும் பயன்பட்டன. வடக்கி லிருந்து தெற்காக அய்யலோன், சோரேக்கு, ஏலா, செப்பத்தா போன்ற பள்ளத்தாக்குகள் உள்ளன (யோசு 10:12; நீதி 16:4; 1 சாமு 17:2; 2 நாள் 14:10).

செபேலா வேளாண்மையில் சிறந்து விளங்கியது. அங்குள்ள சிவப்பு மண் நல்ல விளைச்சலை உருவாக்கியது. சரிவுப் பகுதி யில், ஒலிவ, அத்தி மரங்கள் பல உண்டு. இறைவன், இம்மரங்களைப் போன்று அதிக மாய் அருளினார் என்று உருவகமாக 1 அர 10:27; 2 நாள் 1:15; 9:27; 1 நாள் 27:28-இல் சொல்லப்பட்டுள்ளது. இங்கே திராட்சையும் பரியிடப்பட்டது. சில இடங்களில் பெரும் மந்தைகளுக்கு வேண்டிய புல் வளர்ந்தது. பொதுவாக இப்பகுதி சுகமான, மிதமான தட்ப வெட்பமுடைய பகுதியாகும். இங்கு மங்குமாக நகரங்கள் அமைந்திருந்தன.

செபோ (ZEPHO - காவல் கோபுரம்)

இவர் ஏதோமியனான எலீப்பாசின் மூன் றாம் மகனாவார். ஏசாவின் பேரன் (1 நாள் 1:36: ஆதி 36:11).

செபோயிம் (ZEBOIIM)

பாவம் புரிந்த பள்ளத்தாக்கு நகரங்களில் ஒன்றான இது இறைவனால் மற்ற நகரங்க ளுடன் அழிக்கப்பட்டது (ஆதி 19:24-29). கானா னியர் நாட்டின் எல்லையாக இந்நகர் குறிப் பிடப்பட்டுள்ளது (10:19). ஏலாமியரின் அர சன் கெதர்லகோமர் மூன்று மேற்கத்திய அரசர்களுடன் சேர்ந்துகொண்டு இந்நகரை யும், இதனுடன் நான்கு நகரங்களையும் தாக்கினார். செபோயிம் அரசனான செமே பர் தன்னுடன் நான்கு அரசர்களைக்கூட்டுச் சேர்த்து, கெதர்லகோமர் கூட்டணியுடன் போரிட்டுத் தோற்றார்.

இந்நகரின் அழிவு 'பள்ளத்தாக்கு நகரங்க ளின் அழிவு' என்று கூறுகையில் மறைமுக மாக உணர்த்தப்பட்டுள்ளது (ஆதி 19:24-29). ஆண்டவர்தம் கோபத்தினால் செபோயிமும்

மற்ற நகரங்களும் அழிக்கப்பட்டன என்று மோசே கூறுகிறார் (உப 29:23). ஓசே இறைவாக்கினர் செபோயிமின் அழிவை இறைவனின் தீர்ப்புக்கு ஓர் உதாரணமாகத் தருகிறார் (ஓசே 11:8). இந்நகரும் அதிமாவும் இருமுறை இணைக்கப்பட்டிருப்பதால் செபோயிம் அதிமாவின் அருகில் அமைந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இந்த இடங்கள் தெற்குச் சாக்கடலின் அடியில் அமிழ்ந்து கிடக்கின்றன.

செபோயிம் (ZEBOIM)

1. பென்யமின் பகுதியில் உள்ள இந்தப் பள்ளத்தாக்கு மிக்மாசு நகருக்குத் தென்கிழக்கில் அமைந்திருந்தது. மேலும் இது மிக்மாசுக்கும் பாலைவனத்துக்கும் இடையில் யோர்தானைப் பார்த்தவாறு அமைந்துள்ளது (1 சாமு 13:17-18). இது வாடி ஏல்-கெல்தில் வந்து சேரும் தற்கால வாடி அபு தாபாவாக இருக்கலாம் என எண்ணப்படுகிறது.

2. அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த பென்யமின் புதல்வர்கள் குடியேறிய நகரங்களுள் இதுவும் ஒன்று (நெகே 11:34). இந்நகரானது கதீது (ஆதீது), நெபல்லாற்று, லோது, ஓனோ போன்ற நகரங்களுடன் குறிப்பிடப்பட்டிருப்பதால் வித்தாவுக்கு வடக்கில் கிர்பெத்து சபியேவாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

செபோன் (ZEPHON - *எதிர்பார்ப்பு*)

இவர் காதின் தலைமகனாவார். செபோனியரின் மூதாதையர் (எண் 26:15). ஆதி 46:16-இல் இவரது பெயர் சிபியோனாக உள்ளது.

செப்பனியா *(யாவே மறைத்துவைத்தார், யாவே புகலிடம் தந்தார்)*

1. இவர் எருசலேமில் ஒரு குரு. மாசேயாவின் மகன் (2 அர 25:18; எரே 21:1; 29:25-26). இவரையும், பஸ்கூரையும் செதேக்கியா மன்னன் எரேமியா இறைவாக்கினரிடம் தூதனுப்பினார். இறைவாக்கினர் யூதாவுக்காக மன்றாடவேண்டும் என்று அரசன் கேட்டிருந்தார். எரேமியா யூதா அரசன் எகிப்தியரைச் சார்ந்து, கல்தேயரோடு சண்டையிடுவதைக் கண்டித்தார் (எரே 21:1; 37:3). செமாயா பாபிலோனிலிருந்து கோயிலின் தலைவராயிருந்த செப்பனியாவுக்குக் கடிதம் எழுதி நாடு கடத்தப்பட்டவர்களுக்குச் செய்தி அனுப்பியதற்காக எரேமியாவைச் சிறையிடாததற்காகக் கண்டிக்கிறார். செப்பனியா பாபிலோனை எதிர்ப்பவராயினும் எரேமியாவைச் சிறையிலிடாமல் கடிதத்தை மட்டும் அவரிடம் வாசித்துக் காண்பிக்கிறார் (எரே 29:24-32). எருசலேம் முற்றுகையிடப்பட்டு வீழ்ந்தபின் தலைமக் குரு செராயாவும், உதவிக்குரு செப்பனியாவும் இரிப்லாவிலிருந்த பாபிலோனிய மன்னனிடம் அழைத்துச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர் (2 அர 25:18; எரே 52:24).

2. அடிமைத் தனத்திற்குப்பின் எடுக்கப்பட்ட பட்டியலில் இப்பெயர் உள்ளது. இவர் லேவியர்களான ஏமான் வழியிலும் கோகாத்தின் வழியிலும் வந்தவரெனக் கூறப்படுகிறது (1 நாள் 6:36).

3. கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் யூதாவில் வாழ்ந்த இறைவாக்கினர். கூசியின்மகன். இவரது மரபுக்கொடி நான்காம் தலைமுறை வரை செல்லுகிறது. இவர் யோசியா மன்னன் காலத்திலே வாழ்ந்தவர் (செப் 1:1). இவர் பன்னிரண்டு சிறிய இறைவாக்கினருள் ஒருவர். யோசியா அரசனின் தூரத்து உறவினரான இவர் எருசலேமில் வாழ்ந்து அங்கே இறைவாக்குரைத்தார் (செப் 1:4). காண்க. செப்பனியாவின் திருநூல்.

4. இவர் யோசியாவின் தந்தை. இந்த யோசியா பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களில் ஒருவர் (செக் 6:10.14).

செப்பனியாவின் திருநூல் (ZEPHANIAH, BOOK OF)

1. வாழ்க்கை வரலாறு: *''செப்பனியா'' என்ற சொல்லுக்கு 'யாவேயின் காவற்காரன்; யாவே காப்பாற்றுகிறார்'' ''யாவேயின் இரகசியங்கள்'' என்று பல்வேறு பொருள் கொள்ளலாம். இந்நூலின் தலைப்பில், செப்*

பனியாவின் மரபு, நான்கு தலைமுறைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இவ்விதம் மரபுக் கொடியை அளிப்பதில் இந்நூல் மற்ற இறைவாக்கினர் நூல்களிலிருந்து வேறுபடுகிறது. மற்ற நூல்கள், இறைவாக்கினர் தந்தையின் பெயருக்கு அப்பால் போவதில்லை. செப்பனியாவின் நான்காவது தலைமுறை, ''எசேக்கியாவின் கொள்ளுப்பேரன்'' என்றழைக்கப்படுகிறார். இது இப்பெயர்கொண்ட அரசனைத்தான் குறிக்கிறதென்றும், அதனால், செப்பனியா தாவீதுமரபைச் சார்ந்தவரென்றும், சிலர் கூறுவர். இவர் அரசரான எசேக்கியாவின் கொள்ளுப் பேரன் என்றால், பல காலவரையறை பிரச்சனைகள் எழும். மேலும் எசேக்கியா ஓர் அரசன் என்று குறிப்பிடப்படவில்லை. செப்பனியாவின் தந்தையின் பெயராக விளங்கும் 'கூசி' என்ற சொல், இவர் ஓர் எத்தியோப்பியர் என்பதைக் காட்டலாம். ஆகையால், செப்பனியா ஓர் எத்தியோப்பிய அடிமை; ஆலயத்தில் பணி புரிந்தவர் என்று சிலர் கூறுவர். இந்த ஐயத்தை நீக்கி அவர் யூதாவைச் சார்ந்தவர் தான் என்று காட்டவே, நான்காம் தலைமுறைவரை அவரது மரபுக்கொடி தரப்படுகிறது என்று சிலர் எடுத்துரைப்பார்.

செப்பனியா எருசலேமைப் பற்றிப் பல விபரங்களைக் கொடுக்கிறார் (செப் 1:4.10.11). நகரிலும் அரசவையிலும் நடந்தவைகளை, நன்கு அறிந்திருக்கிறார். இவை அனைத்தும் இவர் எருசலேமைச் சேர்ந்த உயர் குடி மகனாக இருந்திருக்க வேண்டும் என்ற உண்மையைச் சுட்டுகின்றன. நூலின் தலைப்பு, இவர் யோசியா காலத்தில் (கி.மு. 639-609) இறை வாக்குரைத்ததாகக் கூறுகிறது. 1:8-இல் தலைவர்களையும் அரச புதல்வர்களையும் தாக்குகிறார்; சிலை வழிபாட்டையும், பிற அந்நிய வழிபாடுகளையும் சாடுகிறார். ஆனால், அரசனைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. மேலும் யோசியா செய்த உபாகமச் சீர்திருத்தம் நூலில் குறிப்பிடப்படவில்லை. ஆகையால், இவரது பணி கி.மு. 621-க்கு முன் நடந்திருக்க வேண்டும்; அந்தச் சீர்திருத்தத்திற்கு முன்னோடியாக இருந்திருக்க வேண்டும். ஆகவே, இவரது பணி யோசியா இளைஞனாக இருந்தபோது, குறிப்பாக கி.மு. 640-630க்கு இடைப்பட்ட காலத்தில் நடந்திருக்க வேண்டுமென்று கருதலாம்.

இவற்றைத் தவிர, இவரைப்பற்றி வேறு ஒன்றும் கிடைத்திலது. இந்நூலிலிருந்து - இவர் கடுமையானவர், கண்டிப்பானவர் - என்று அறிகிறோம். ஆழ்ந்த சமயப்பற்று உடையவர்; அஞ்சாத துணிவுடையவர்; தீமையைக் கண்டபோதெல்லாம், எத்தகைய தயக்கமும் இன்றிக் கண்டனம் செய்யத் தவறாதவர்; ஆளும் வகுப்பினரின் பொறுப்பை எடுத்துக்கூறி, அவர்கள் அதற்கேற்பச் செயல்படத் தூண்டும் துணிவுள்ளவர்; எசாயா, மீக்காவுக்குப்பின் அடக்கி ஒடுக்கப்பட்ட இறைவாக்கு இயக்கத்தின் குரலை, மீண்டும் முதன் முறையாக முழங்கியவர். சிலர் செப்பனியாவின் பணிக்காலத்தை யோவாக்கிம் (கி.மு. 609-591) ஆட்சி செய்த காலத்தோடொப்பக் குறிப்பர். ஆனால், இப்போது யாரும் இதனைப் பொதுவாக ஏற்றுக் கொள்ள மாட்டார்.

சித்தியர்களது படையெடுப்பு, செப்பனியா இறைவாக்கு உரைக்க வாய்ப்பாயிற்று; சிறப்பாக 'யாவேயின் நாள்' பற்றிய அறிவிப்புக்கு ஒரு சந்தர்ப்பமாயிற்று என்று கூறுவர் சிலர். இப்படையெடுப்பு - உலகைத் தீர்ப்பிடல், யூதாவுக்கும் பிறநாடுகளுக்கும் வரவிருக்கும் பேரழிவு ஆகிய கருத்துகளைப் பற்றிய வரலாற்று விளக்கத்தினை அளிக்கலாம். ஆனால், சித்தியர் படையெடுப்பே வாதத்திற்குரிய ஒரு வரலாற்றுப் பிரச்சனையாகும். இப்படையெடுப்புப் பற்றி எத்தகைய குறிப்பும் இந்நூலில் காணப்படவில்லை. இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். யாவேயின் நாள், உலகம், மற்ற நாடுகளின் மேல் தீர்ப்பு ஆகிய கருத்துகள், இவருக்கு முந்திய இறைவாக்கினர் நூல்களில் காணப்படுகின்றன. ஆகையால், இவற்றை விளக்க, ஒரு தனிப்பட்ட வரலாற்று நிகழ்ச்சி அவசியமன்று. சித்தியர் படையெடுப்பைவிட, அவர் காலத்தில் பொதுவாக நிலவிய அரசியல் சூழல்கள்,

சமயக்கேடுகள், சமூக இழிவுகள் ஆகியவை யாவேயின் நாள் பற்றி அவருக்கு முந்திய இறைவாக்கினர்கள் போதித்தவைகளை மீண்டும் எடுத்துக் கூறச் செய்தன. இறை வாக்கினர் சமய, சமூகத் தீமைகளைத் தாக்கு கிறார். அசீரியர்களுக்குச் சார்பானவர்களைக் கண்டனம் செய்கிறார். இவையாவும் யோசி யாவின் தொடக்க காலத்தைப் பிரதிபலிக் கின்றன. இவர் யோசியாவின் தொடக்க காலத்தில், இறைவாக்கு உரைத்து, சீர்திருத் தம் செய்ய அவரைத் தூண்டியிருக்க வேண் டும்.

2. வரலாற்றுப் பின்னணி: கி.மு. 8-ஆம், 7-ஆம் நூற்றாண்டுகளில் அசீரியப் பேரரசு உன்னத நிலையில் விளங்கிற்று. அதன் சேனைகள், சென்ற இடமெல்லாம் இடுகா டாயிற்று. கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அசீ ரியா, வடஅரசாகிய இஸ்ராயேலை முழுவ தும் அழித்தது. யூதாவின் பெரும் பகுதியை யும் பாழ்படுத்தியது. அதன் அசுரப்பிடியி லிருந்து விடுதலை பெற எசேக்கியா செய்த முயற்சி தோல்வியுற்றது. நாற்பது நகரங்கள் அழிக்கப்பட்டன (2 அர 18:13தொ). யூதா கப்பம் கட்டும் அடிமை நிலையிலேயே தொடர்ந்து இருந்தது. எசேக்கியா கி.மு. 687-இல் மரித்தார். அவரது மகனான மனாசே சிறு வயதிலேயே அரசுக்கு வந்தார். இவர் அசீரியர்களை எதிர்ப்பதை முழுவதும் கைவிட்டு, தன்னையும் தன் நாட்டையும் அசீரியர் ஆட்சிக்கு அடிமைப்படுத்தினார் (22:1). மனிதக் கணிப்பில் இப்படி நடந்து கொள்வதைவிட, வேறு ஒன்றும் செய்வதற் கில்லை. இந்நிலையில் அசீரிய மன்னன் சனகெரிபு இறந்துவிட (கி.மு.681) அவரது மகன் ஏசர்கத்தோன் (கி.மு. 681) அரியணை ஏறினார். இவர் ஆற்றல் மிக்க தலைவனாக விளங்கினார். அசீரியாவுக்கு எதிராகக் கிளர்ச்சிகளைத் தூண்டிக் கொண்டிருந்த எகிப்தை வெற்றி கொண்டார்.

மனாசே யூதாவை நாற்பத்தைந்து ஆண்டளவு (கி.மு. 687-642) ஆட்சி செய்தார். இவர் யூதர்களின் அரசர்களிலெல்லாம் மிகக் கொடியவர். யூதாவின் வரலாற்றில் இவரது ஆட்சி ஓர் இருண்ட காலமாகும். சமய காரியங்களில் பதிதம் மிகுந்தது. மனாசே இறைவாக்கினர்களின் குரலை ஒடுக்கி, முழு வதுமே அடக்கி வைத்தார். அவர்கள் செயல் பட்டிருந்தாலும், அவர்கள் மறைமுகமா கவே செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதுபற்றி எத்தகைய சான்றும் கிடைக்க வில்லை. தனது தந்தை செய்த சமய சீர் திருத்தத்தைக் கைவிட்டார். எசாயா கண்டனம் செய்த ஆகாசு காலத்து நிலைக்கு நாட்டைத் திருப்பினார். ஆலயத்தை மையமாகக் கொண்ட சமயவழிபாட்டு முறை கைவிடப் பட்டது. எசேக்கியா தரைமட்டமாக்கிய பாகாலின் பீடங்களையும், வானத்திலுள்ள பொருட்களுக்கான பீடங்களையும், மேட்டு நிலங்களையும் மனாசே மீண்டும் எழுப்பி னார் (2 அர 21:3). அசீரிய நாட்டுக் கலாச்சா ரத்தையும், சமய முறைகளையும் புகுத்தி னார் (21:4). இனப்பெருக்க வழிபாடான சடங்கு விபச்சாரத்தைப் புகுத்தினார். தன் மகனையே பிற தேவதைகளுக்குப் பலியிட் டார். சகுனம் பார்த்தல் பெருகியது. யாவே யும், பிற தெய்வங்களும் ஒன்றாயினர். நன் மையும், தீமையும் ஒன்றாகக் கருதப்பட்டன (21:6). குற்றமில்லாதவர்களின் குருதியை மிகுதியாகச் சிந்தச் செய்து எருசலேம் நகரம் முழுவதிலும் ஓடச்செய்தார் மனாசே (21:18). யாவேயின் வழிபாடு முழுவதும் அழிக்கப் படவில்லை; கலப்படம் செய்யப்பட்டது. யாவே, பல தேவர்களில் ஒருவராக, வேண்டு மானால் முதல்வராகக் கருதப்பட்டார். யாவேயும் அவரது சட்டத்தின் தனித்தன்மை யும் செயலளவில் புறக்கணிக்கப்பட்டன. அதன் விளைவாக வன்முறையும், அநீதியும் பெருகின. யாவேயையும், இறைவாக்கினர் களின் செய்தியையும் புறக்கணித்தது அரச னுக்கோ, மக்களுக்கோ எந்தத் தீய விளைவு களையும் ஏற்படுத்துவதாகத் தோன்ற வில்லை. ஆகவே, தம் மக்கள் எப்படியிருந் தாலும் யாவேக்கு அக்கறையில்லை; யாவே ஒன்றும் செய்யமாட்டார்; அவரால் ஒன்றும் செய்யவும் முடியாது என்ற மெத்தன உணர்வு மக்களிடையே பெருகியது (1:12;3:1-2).

மனச்சாட்சியற்ற மனாசேக்குப்பின் அவன் மகன் ஆமோன் ஈராண்டளவு (கி.மு. 642-40) யூதாவை ஆண்டார். இவரும் தன் தந்தையின் கொள்கையையே பின்பற்றினார். இவர் அசீரியர்களுக்கு எதிரான கட்சியினரால் கொல்லப்பட்டார் (2 அர 21:14-24). செல்வாக்குடைய நிலக்கிழார்கள் ஆமோனின் எட்டு வயது மகனான யோசியாவை அரியணையில் அமர்த்தினர். யோசியாவின் தொடக்க காலம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. ஒரு வேளை, இக்காலத்தில் ஆட்சி, ஆலோசகர்களின் கையில் இருந்திருக்க வேண்டும். இவர்கள் சுதந்தரத்தை விரும்பினாலும், செயலளவில் அசீரியர்களோடு சார்பான போக்கையே கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. அசீரிய அடிமைத்தனத்திலிருந்து முழுவதும் விடுபடும் நேரம் இன்னும் வரவில்லை. யோசியாவின் தொடக்க காலத்தில், பொது வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் வேரூன்றி விட்ட தீமைகளைச் சீர்திருத்த எந்த முயற்சியும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இக்காலத்தில்தான் செப் 1:2-2:3 உரைக்கப்பட்டிருக்க வேண்டும். இக்காலத்தில்தான் எரோதோதசு என்ற கிரேக்க வரலாற்று ஆசிரியன் குறிப்பிடும் சித்தியர்களின் படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும். இவர்கள் குதிரைகளில் சவாரி செய்யும் நாடோடிகள். இவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் கொலையும், கொள்ளையும், அழிவும் நிகழ்ந்தன. இவர்கள் அசீரியப்பேரரசின் மேற்கு மாகாணங்களை எகிப்துவரை பாழ்படுத்தினர். இவர்கள் நிகழ்த்திய அழிவுபற்றிய அச்சம் பல நூற்றாண்டுகளுக்கு மக்களின் நினைவில் நின்றது.

3. யாருக்கு?: செப்பனியா காலத்தில் யூதாவில் நிலவிய தீமைகளுக்கு, இளவரசனான யோசியா பொறுப்பாளியன்று. இத்தீமைகளுக்குப் பொதுவாகப் பொறுப்பானவர்களை ஆறு வகையாகப் பிரித்துக் கண்டனம் செய்கிறார் இறைவாக்கினர். (அ) ஆளும் வகுப்பினரும், நீதிபதிகளும் - இவர்கள் மக்கள்மேல் ஆயர்களாக நியமிக்கப்பட்டனர்; ஆனால், பேராசைமிக்க ஓநாய்களாக நடந்து கொண்டனர். (ஆ) இறைவாக்குரைத்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள் - இவர்கள் முரட்டுத் தனமான துணிச்சலும் பற்றுறுதியின்மையும் உள்ளவர்கள். (இ) அர்ச்சகர்கள் - இவர்கள் பரிசுத்தமானவைகளைப் பாதுகாக்கவும் சட்டத்தை நிலைநிறுத்தவும் தவறி விட்டனர் (3:3-4). (ஈ) தங்களையே செல்வந்தராக்கிக் கொண்டனர் வணிகர்கள்; ஆகவே அவர்கள் முழுவதுமாக அகற்றப்படுவர் (1:10-11). (உ) இரு மனப் பற்றுடையவர்கள் - சிலர் யாவேயையும், பாகாலையும் ஒரே சமயத்தில் வழிபட்டனர். வேறு சிலர் யாவேயை மட்டும் ஏற்றுக் கொண்டனர். ஆனால், விண்பொருள்களுக்கெல்லாம் தூபம்காட்டினர். இன்னும் சிலர் இஸ்ராயேலின் யாவேக்கும் அம்மோனியர்களது கடவுளான மில்கோமுக்கும் வழிபாடு செய்தனர். (ஊ) யாவேயை முழுவதும் நிராகரித்தவர்கள் - இவர்களை, இறைவாக்கினர் வன்மையாகக் கண்டனர் செய்கிறார்.

இறைவாக்கினர் இருவகைத் தீமைகளை மிக வன்மையாகத் தாக்குகிறார். இதில் முதலாவது, இருமனப்பற்றுறுதியாகும். ஒரு சிறுபான்மையினரைத் தவிர, எல்லோரும், உண்மையான இறைவனையும், போலித் தேவர்களையும், வணங்கினர். இந்தக் கலப்புச் சமயத்திற்கு எதிராக ''நமக்கு முன் வேறே தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக'' (யாத் 20:3) என்ற முதல் கட்டளையை வலியுறுத்துகிறார். இறைவனை மட்டும் முழு இதயத்தோடு, தொழுது பணி செய்ய, மக்களை அழைக்கிறார் இறைவாக்கினர்.

செப்பனியா வன்மையாகக் கண்டிக்கும் மற்றொரு தீமை - பற்றுறுதி முழுவதுமேயில்லாதவர்களின் செயல் முறையான நாத்திகம். ஒருவேளை, எசாயா எழுப்பிய நம்பிக்கைகள் நிறைவேறக் காலம் தாழ்த்தப்பட்டமையால் அது யூதாவில் பலரைச் சமயப் பற்றற்றவர்களாகவும், ஐயம் கொண்டு குறை கூறுபவர்களாகவும் மாற்றியிருக்கலாம். அசீரியர்களது அடிமைத்தளை உடைக்கப்படவில்லை. தாவீது மரபைச் சேர்ந்த ''எடுத்துக்காட்டான அரசன்'' அவர்க

ளிடையே தோன்றி, நீதியோடும் அமைதியோடும் ஆளவில்லை. இறைவன் மக்களைத் தீமையிலிருந்து தடுக்கவோ, நன்மையில் நிலைபெற உதவி செய்யவோ இல்லை. அவர்களுக்கு எதிராகவோ, சார்பாகவோ ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, மனித காரியங்களில் மக்கள் அவரைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. செயல் அளவில், அவரைப் புறக்கணிக்கலாம் (செப் 1:12-13) என்று கருதினார்கள். எருசலேமின் மக்கள் நெடுங்காலமாகச் சொகுசாக வாழ்ந்து உழைக்க விரும்பாத சோம்பேறிகளாகவும், சுயதிருப்தியுடையவர்களாகவும், மெத்தனம் மிக்கவர்களாகவும் ஆனார்கள். இது இவர்களைச் சமய காரியங்களில் அக்கறையற்றவர்களாகவும், நாத்திகர்களாகவும் மாற்றியது. இதை, இறைவாக்கினர் வன்மையாகக் கண்டிக்கிறார்.

4. திட்டமும் பொருளடக்கமும்:-

I. *1:1 தலைப்பும் மரபுக்கொடியும்.*

II யூதாவின் மேல் யாவேயின் நாள் *(1:2-2:3).*

1:2-3 படைப்பு அனைத்தின் மேலும் தீர்ப்பு.
1:4-7- அந்நிய கடவுள்களுக்கு எதிராக.
1:8-9- அரசவைக்கு எதிராக.
1:10-11 - வணிகர்களுக்கு எதிராக.
1:12-13- விசுவாசம் அற்றவர்களுக்கு எதிராக.
*1:14-18-*யாவேயின் நாள்.
2:1-3- மனந்திரும்ப அழைப்பு.

III. பிற நாடுகளுக்கு எதிராக இறைவாக்குகள் *(2:4-15).*

2:4-7- பெலிஸ்தியர்களுக்கு எதிராக.
2:12- எத்தியோப்பியர்களுக்கு எதிராக.
2:13-15- அசீரியர்களுக்கு எதிராக.

IV எருசலேமுக்கு எதிராக இறைவாக்குகள் *(3:1-8).*

3:1-5- நகரும் தன் தலைவர்களும்.
3:6-8- பிறநாடுகள்மேல் தீர்ப்பு.

V வாக்குறுதிகள் *(3:9-20).*

3:9-10- புறவினத்தார் மனம் திரும்புதல்.
3:11-13- இஸ்ராயேலில் 'எஞ்சியோர்'.
3:14-17- மகிழ்ச்சிமிக்க இருபாடல்கள்.
3:18-20- நாடு கடத்தப்பட்டவர் வீடு திரும்புதல்.

5. சிறப்புக் கருத்துக்கள்:

அ) யாவேயின் நாள்: செப்பனியாவை ''யாவேயின் நாளின் இறைவாக்கினர்'' என்றழைப்பர். வருங்காலத்தில், உலக வரலாற்றில் உறுதியாகத் தலையிட்டு இறைவன் தமது எதிரிகளை வெல்வார் என, இஸ்ராயேலர் நம்பினர். இறைவனது இந்தத்தலையீடும், வெற்றியும் ''யாவேயின் நாள்'' எனக் குறிப்பிடப்பட்டது.

இக்கருத்து ஆமோசிலும் (5:18தொ) எசாயாவிலும் (2:7தொ) காணப்படுகிறது. இதைச் செப்பனியா விரிவுபடுத்துகிறார். அந்நாளின் வருகை உலகம் முழுவதிற்கும் பேரழிவைக் கொண்டு வரும். அந்நாளில் ''மண்ணுலகில் எதுவும் இராதவாறு அனைத்தையும் அழித்துவிடுவேன்; மனிதனையும் விலங்கையும் அழிப்பேன்; வானத்துப் பறவைகளையும், கடல் மீன்களையும் ஒழிப்பேன்; கொடியவர்களை இடறிவிழச் செய்வேன்; மனித இனம் மண்ணுலகில் இல்லாதவாறு அற்றுப்போகச் செய்வேன்'' (1:2-3). ''ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது'' (1:7); அது அண்மையில் விரைந்து வந்து கொண்டிருக்கிறது (1:14). ஆண்டவரது நாளின் ஆர்ப்பரிப்பு, மனக் கசப்பைத் தருகிறது. வீரனும் கலங்கி அழுகிறான். கடுஞ்சினத்தின் நாளாம் அந்நாள் மனத்துயரும் வேதனையும் மிகுந்தநாள். அந்நாள் - பேரழிவும் பெரு நாசமும் கொணரும் நாள்! இருட்டும் காரிருளும் சூழும் நாள்! கார்முகிலும் அடரிருளும் படரும் நாள் அந்நாள்! (1:14-15). ஆண்டவர் தலையிடும்போது - ஒழுங்குத் திட்டத்தின் மேல் குழப்பமும், ஒளியின் மேல் இருளும் வெற்றிகொள்ளும். பாதுகாக்கப்பட்ட நகர்கள் மேல், போரின் பயங்கர விளைவுகள் நிகழும்; அவற்றிலிருந்து தப்பிக்க முயலும் பாவிகள், குருடர்களைப்போல் தடுமாறுவர். அவர்களது குருதி புழுதி போல் கொட்டப்படும் (1:16-17); அவர்களைக் காப்பாற்ற யாருமிரார்.

யாவே விளக்கேந்தி எருசலேமைச் சோதிப்பார். தீயவர்களின் குடும்பம் எதுவும் அழிவிலிருந்து தப்பிக்க முடியாது (1:4-13; 3:1-8). இந்த அழிவிலிருந்து தப்பிக்க உண்மையான வழியையும் யாவே கற்றுக் கொடுக்கிறார் (2:1-3). இந்த அழிவுகள் இயற்கையைச் சார்ந்ததாக மட்டும் இரா. ''எக்காளமும், போர் முழக்கமும் கேட்கும் நாளாக'' இருக்கும் அந்த நாள் (1:17). சித்தியர் படையெடுப்பைச் செப்பனியா வெளிப் படையாகக் குறிக்கவில்லை. ஆனால், அதை ஆண்டவரின் நாளுக்கு ஒரு பயங்கர முன்னோடியாக அவர் கருதியிருக்கலாம். இந்த அழிவின் கருவிகளாக, அசீரியாவும், எகிப்தும் கருதப்படவில்லை. ஏனெனில், அவர்கள் மேலும் இந்தப் பேரழிவு வரும்.

இவ்வாறு யாவேயின் நாளை விவரிக்கும் போது, செப்பனியா எந்த ஒரு வரலாற்று நிகழ்ச்சியையும் சுட்டிக்காட்டவில்லை. கால வரையறையில்லாத நிகழ்ச்சித் தொடரை எண்ணத்தில் கொண்டிருந்திருக்க வேண்டும். இந்நிகழ்ச்சிகள் சித்தியர் படையெடுப்பாக இருக்கலாம். கி.மு. 581-இல் நிகழ்ந்த பாபிலோனியர் படையெடுப்பாய் இருக்கலாம். கி.பி. 70-இல் நடந்த உரோமையர் படையெடுப்பாக இருக்கலாம். இவையெல்லாம் யாவேயின் நாளின் தீர்ப்பாகும்; தண்டனையுமாகும். ஒவ்வொரு நூற்றாண்டிலும், நமது நூற்றாண்டிலும் கூட மக்கள் மேலும், நாடுகள் மேலும் வரும் பயங்கர அழிவுகளைக் காண்கிறோம். இவையெல்லாம் இறைவன் வரலாற்றில் தலையீடு செய்வதின் விளைவுகளாகும்; ஆண்டவரது நாளின் பல கட்டங்களாகும்; இவையெல்லாம் கால முடிவில் வரும் தீர்ப்பு நாளுக்கு இட்டுச் செல்கின்றன; இவையெல்லாம் ஆண்டவரது நாள் விரைவில் அணுகி வருகிறது என்று எச்சரிக்கின்றன; இந்நாளை உயிர்ச்சித்திரமாக விவரிக்கிறார் யோவான் (திருவெளி 20:11-12).

ஆ) எஞ்சியோர்: இந்நூலில் அழிவு மட்டும் அறிவிக்கப்படவில்லை; இருளில் ஒளி வீசும் நம்பிக்கைச் சுடரும் உண்டு. இந்த அழிவிலிருந்து ''எளியோர்'' தப்புவர். அதற்கு வழியுண்டு. இந்த எளியோரை, அடையாளம் காட்டுகிறார் செப்பனியா. யூதாவிலிருந்து, அகந்தை மிக்கவர் நீக்கப் படுவர்; மக்களின் பேச்சு, சுத்தி செய்யப்படும்; ஏழ்மையும் எளிமையும் உள்ளோர் விட்டு விடப்படுவர் (2:3; 3:11-13). இங்கு ஏழ்மை - ஆண்டவரில் தஞ்சம் காண்பதைக் குறிக்கிறது; உ... மையான ஆன்மீகப் போக்கை எடுத்துக் காட்டுகிறது. இவர்கள் நம்பிக்கையுள்ள எளிமையும், ஆன்மீக ஏழ்மையும் தாழ்ச்சியும் உள்ளவர்கள். இப்படிப்பட்டவர்கள் பேறு பெற்றவர்கள் என்று பிற்காலத்தில் இயேசு அறிவிப்பார் (மத் 5:3). இவர்களுக்கு இறைவன் மட்டுமே தேவை. அவரில் மட்டுமே நம்பிக்கை வைப்பர். உண்மையான அமைதியைத் தேடும் யாவர்க்கும் இந்தத் தாழ்ச்சி மிக்க நம்பிக்கையையும் நலனையும் இறைவன் அளிப்பார். இதே செய்தியைத்தான் இயேசுவும், தனது வாழ்க்கைக்கும் போதகத்திற்கும் அடிப்படையாகக் கொண்டிருந்தார் (லூக் 6:20; மத் 11:29).

இந்நூல் பொற்கால விவரிப்போடு முடிகிறது (செப் 3:14-20). இந்த வாக்குகள் ஆண்டவரது நாள் பற்றிய பயங்கர விவரிப்புக்கு ஈடுகட்டும் விதத்தில் அமைந்துள்ளன. ஏனெனில் சீற்றம் கொள்ளும் இறைவனே, இரக்கம் காட்டுகிறார். தீர்ப்பளிக்கும் ஆண்டவரே, மீட்பும் அளிக்கிறார். இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்படும். நாடு கடத்தப்பட்டோர் ஒன்று கூடுவர். பிற நாட்டவரிடையே இஸ்ராயேல், புகழ்ச்சியும் பெருமையும் பெறும் (3:18-20).

இ) இந்நூலில் வேறு பல இறையியல் கருத்துகளும் உண்டு. பிற இனத்தவர் மனந்திரும்புவர் (2:11). இவர்கள் யாவேயிடம் வந்து அவருக்குப் பணி புரிந்து வழிபாடு செய்வர் (3:9-10). எல்லோரும் மீட்கப் பெறுவர்.

6. செப்பனியாவும் விவிலியத்தின் பிறநூல்களும்: இந்நூல் தனது கருத்துகளில் ஆமோசோடும் எசாயாவோடும் கொண்டுள்ள

தொடர்பை ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளோம். ஓசேயாவின் ''திருமண அன்பு'' என்ற கருத்து இந்நூலில் உண்டு (3:14-18). அந்நாள் பற்றிய யோவேலின் விவரிப்புக்குத் தூண்டுதலாக அமைந்துள்ளது. மற்றபடி இந்நூல் விவிலியத்தின் பிறநூல்களை அவ்வளவு பாதிக்கவில்லை எனலாம். புதிய ஏற்பாட்டில், ஒரே ஒரு தரம் பயன்படுத்தப்படுகிறது (மத் 13:41-செப் 1:3).

ஆண்டவரது நாள்பற்றிய செப்பனியாவின் விவரிப்புதான் மரித்தோர். திருப்பலியில் முன்பு பயன்படுத்தப்பட்ட ''தேவ கோபத்தின் - நாள் அந்நாளே'', என்ற பாடலை இயற்ற தாமஸ் செலானோ என்பவரைத் தூண்டியது. சாமக்காவலன் விளக்கோடு தேடுவதுபோல் இறைவன் எருசலேம் வீதிகளைத் தேடுவதாக சித்தரிக்கப்படுகிறார் (செப் 1:12). இது ஆண்டவரது விளக்கை ஏந்திய மனிதனாகச் செப்பனியாவைச் சித்தரிக்க, கிறிஸ்துவ ஓவியர்களைத் தூண்டியது. இது அவரது ஆட்தன்மைக்கும் மனப்போக்குக்கும், பணிக்கும் செய்திக்கும் பொருத்தமானதே!

7. இக்காலத்திற்கு: இருமனப் பற்றுறுதியுடையவர்கள் பற்றிய செப்பனியாவின் விவரிப்பு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அப்பாற்பட்டது. எக்காலத்திற்கும் உரியது. உண்மையான ஒரே இறைவனை ஏற்றுக் கொள்பவர்கள், அவருக்கு உரிய இடத்தில், அவருக்கருகில் மற்றொருவரை அல்லது ஒரு பொருளை ஏற்றுக்கொள்ள அடிக்கடி சோதனைக்கு உட்படுகின்றனர். இக்காலத்தில் அது பாகாலோ மில்கோமோ அன்று. அது மற்றொரு ஆளாகவோ, குடும்பமாகவோ, பேராசையாகவோ, வெற்றி வெறியாகவோ இருக்கலாம். இச்சோதனையும் - சமயக் காரியங்களில் பற்றற்ற தன்மையும் அக்கறையின்மையும் - இக்காலச் சோதனைகளாகும். நேரடியான தாக்குதலைவிட இவற்றோடு போராடுவது வெகு கடினம். இக்கால அணுக்குண்டு அழிவுகள் யாவேயின் நாளை, நமக்கு நினைவுபடுத்தவில்லையா?

செப்பனியாவின் கடுமையான செய்தியும், அதற்கிணையான நம்பிக்கைச் செய்தியும் மந்த நிலையிலிருந்து நம்மை எழுப்ப வேண்டும்; பொறுமையில் நம்மை நிலை நிறுத்த வேண்டும். விசுவாசத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும்; நம்பிக்கைக்கு நம்மை உயர்த்த வேண்டும்.

செப்பனியாவின் வெளிப்பாடு (ZEPHANIAH, APOCALYPSE OF)

ஒரு யூதப் புனை பெயர் வாழ்க்கை வரலாறு; செப்பனியாவால் எழுதப்பட்டது என்று கூறப்படும். ஆனால் கி.மு. 100-க்கும் கி.பி. 175-க்கும் இடையில் ஒருவேளை கி.பி. 70-க்கு முன் எகிப்தில் எழுதப்பட்டது. இது மூலத்தில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. ஆனால் இப்போது இதன் இரு கோப்திக்குக் கையெழுத்துப் பிரதிகளின் துணுக்குகளே கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் அலக்சாந்திரியாவைச் சேர்ந்த இளமெந்துவின் நூலில் ஓரிடத்தில் எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது. பெரும்பகுதி தொலைந்துவிட்டாலும், கிடைத்திருக்கும் பகுதிகள், இந்த நூல் அக்காலத்திய மற்ற யூத வெளிப்பாட்டு நூல்களைப் போன்றதே என்று காட்டப்போதுமானவை. அதாவது காட்சியாளர் அண்டங்களுக்குள் பயணம் செய்கிறார். அப்பயணத்தில் அவர் விண்ணகத்தின் மகிமையையும் நரகத்தின் பயங்கரத்தையும் பார்க்கிறார். இந்நூலின் அடிப்படைப்போக்கு இறைத்தீர்ப்பின் கூறுகளைப் பற்றியதாகும். அவை, பாவிகள் தண்டிக்கப்படுவதைப் பற்றிய விவரிப்பு, நீதிமான்களின் மன்றாட்டின் தேவை, நேரம் இருக்கும் போதே மனத்துக்கம் கொள்ள அழைப்பு, இறைப்பற்றற்றவர்களின்மேல் இறைவனது சினம் வருவதன் உறுதி ஆகியவையாகும்.

செப்பாத்தா (ZEPHATHA - காவல் கோபுரம்)

இந்தப் பள்ளத்தாக்கு மாரேசா அருகில் உள்ளது. இங்கே ஆசா மன்னன் (913-873) எத்தியோப்பியனான செராகுவின் படையை முறியடித்தார் (2 நாள் 14:9-12). இந்தப் பள்ளத்தாக்கு பெய்த்கிப்ரினுக்கு வடகிழக்கில் 2.5. கி.மீ. தொலைவில் உள்ள சாபியே வாக இருக்கலாம்.

செமக்கியா (SEMACHIAH - யாவே வலிமை அளித்துள்ளார்)

ஒபேது - ஏதோம் வழிவந்த ஆலயத்தின் வாயில்களைக் காக்கும் லேவியக் காவலர்களில் ஒருவர் (1 நாள் 26:7).

செமரியா (SHEMARIAH - யாவே பாதுகாத்தார்)

1. சிக்லாகு என்னுமிடத்தில் தாவீதோடு சேர்ந்து கொண்ட பென்யமின் குலத்துப் படைவீரர்களில் ஒருவர் (1 நாள் 12:5).

2. யூதாவின் அரசன் ரெகபயாமுக்கும் அவர் மனைவி மக்லாத்துக்கும் பிறந்தமகன் (2 நாள் 11:19).

3. காரிமின் (ஆரிம்) மகன். இவர் எஸ்ராவின் சீர்திருத்தப்படி புறவின மனைவியையும் மக்களையும் நீக்கிவிட்டவர் (எஸ் 10:32).

4. பின்னுயின் மகன் (எஸ் 10:41). இவரும் புறவின் மனைவியை நீக்கிவிட்டார்.

செமேர் (ZEMER)

இது செமாரியர்களின் சொந்த ஊர். இந்த இடம் உருவாதுக்கும் திரிபோலிக்கும் இடையிலுள்ள சும்ராவாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. இதன் திறமை வாய்ந்த மாலுமிகள், தீரின் கப்பல்களில் பணிபுரிந்தனர் (எசே 27:8).

செமா (SHEMA - இறைவன் கேட்டருளினார்) - ஆள்

1. காலேபிய - எரகுமவேல் குடும்பங்களின் தலைமுறையில் யூதாவின் குலத்துப் பகுதியாக இப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. கெபிரோனின் (எபிரோன்) மகன். காலேபின் வழித்தோன்றல். இது ஒரு புவியியல் பெயராக இருக்கலாம். கெபிரோனுக்கு அருகிலுள்ள ஒரு நகராக இருக்கலாம். அனேகமாக எசுத்தமோவாக இருக்கலாம்.

2. ரூபன் குலத்தில் பிறந்தவர். யோவேலின் மகன் (1 நாள் 5:8). இவர் 5:4-இல் வரும் சிமயி அல்லது செமாயாவாக இருக்கலாம்.

3. பென்யமின் குலத்தினன்; அய்பலோனில் ஒரு குடும்பத் தலைவனாக இருந்தார் (1 நாள் 8:13). 1 நாள் 8:21-இல் இவர் 'சிமயி' என்று அழைக்கப்படுகிறார்.

4. இவருக்கு எவ்வித அடைமொழியும், தந்தை குறிப்பும் இல்லை. இவர் எஸ்ரா மக்கள் மத்தியில் சட்டம் வாசிக்கும்போது, அவரோடு நின்றவர் (நெகே 8:4).

செமா (SHEMA - இறைவன் கேட்டருளினார்) - இடம்

தென் யூதாவிலுள்ள ஒரு நகரம். பெயர் - செபாவோடு தொடர்புடையது (யோசு 15:26). இது சேபாவாக (1) இருக்கலாம்.

செமாகா (SHEMAAH)

அகியேசர், யோவாசு ஆகியோரின் தந்தை. சிக்லாகில் தாவீதோடு சேர்ந்து கொண்ட பென்யமின் வீரர்களில் இவர்களும் அடங்குவர் (1 நாள் 12:3).

செமாயா (SHEMAIAH - யாவே கேட்டருளினார்)

1. ரெகபயாம் ஆட்சிக்காலத்தில் உள்ள ஓர் இறைவாக்கினர். இவர் முதலாம் எரொபவாம் தலைமையில் வடக்கிலுள்ள பத்துக் குலங்களின் எதிர்த்தெழுதலை அடக்குவதற்காக அரசன் சண்டையிடுவதைத் தடுத்தார். யாவே கிளர்ச்சியை ஆதரித்ததால், கூடியிருந்த போர்வீரர்கள் இல்லங்களுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று (1 அர 12:22; 2 நாள் 11:2). ரெகபயாம் ஆட்சிக் காலம் முழுவதும், உள்நாட்டுக் கலகம் நடைபெற்றதால் (1 அர 14:30), செமாயாவும் அவரது செயல்களும் கற்பனையாகத் தோன்றலாம். 1 அர 12:24-க்குப்பிறகு உள்ள நீண்ட இடைச்செருகலில் எழுபது நூல் இறைவாக்கினர் அகியா, எரொபவாம் ஆகியோர் பற்றிய கதை சேர்கிறது (1 அர 11:29-39). இக்கதை செமாயாவுக்கு இறைவாக்குச் செயலாகச் சாற்றிக் கூறப்படுகிறது. இப்பெயர் 2 நாள் 12:5-8-இல் மீண்டும் வந்துள்ளது. இது 1 அர 14:25-28-இல் வரும் விவரிப்பைச் சிறிது விரிவாக்குகிறது. இதில் பார்வோன் சிசாக்கு

எருசலேமைத் தாக்கியபோது, செமாயா தனது தீர்ப்பையும் விடுதலையையும் அறிவிக்கும் இறைவாக்குகளைக் கூறுகிறார். யூதா யாவேக்கு எதிராகப் பாவம் செய்தது. ஆகவே யாவே, சிசாக்கு தாக்குவதை அனுமதித்தார். அரசனும் தலைவர்களும் மனம் வருந்தியபோது அவர்களின் துன்பத்தைக் குறைத்து அவர்களுக்கு அருள் வழங்கினார். ரெகபயாம் ஆட்சி வரலாற்றைக் கொண்ட நாளாகம நூலுக்குச் செமாயாவும் இத்தோவும் ஆசிரியர்கள் ஆவார்கள் என்று கருதப்பட்டது (2 நாள் 12:15).

2. தாவீது வழித்தோன்றல் அட்டவணையில் உள்ள செக்கனியாவின் ஆறு புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 3:21-22).

3. சிமியோன் குலத்துத் தலைவன் (1 நாள் 4:37).

4. ரூபன் வழிவந்தவரின் குடும்பத்திற்கு முதல்வர். யோவேலின் மகன் (1 நாள் 5:4). 5:18-இல் வரும் செமாவும் (2) இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

5. மெராரியின் வழித்தோன்றலான ஒரு லேவியர். இவர் நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் எருசலேமில் வாழ்ந்தவர்களில் ஒருவர் (1 நாள் 9:14; நெகே 11:15). நெகே 11:15-16-இன்படி நெகேமியா காலத்தில் இவர் கோவில் நிர்வாகத்தில் மேற்பார்வையாளர்களில் ஒருவராக இருந்தார். நெகே 11:15-18-ஆவது வசனங்களும் 1 நாள் 9:14-16 வசனங்களும் ஒரே மாதிரி உள்ளன. இவர் 11:15-18-இல் பூனியின் வழிதோன்றல் என்று தவறுதலாக அழைக்கப்படுகிறார்.

6. நாடு கடத்தப்பட்டதற்குப்பின், எருசலேமுக்குத் திரும்பிய ஒரு லேவியர். எதுத்தூனின் வழித்தோன்றல். ஒபதியாவின் தந்தை (1 நாள் 9:16). இவரும் நெகே 11:17-இல் குறிக்கப்பட்டிருக்கும் அபீதாவின் தந்தை சம்மூவாவும் (3) ஒரே ஆளாக இருக்கலாம்; பின்பு 11-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

7. லேவியர்கள் குடும்பத்திற்குத் தலைவர். எலிசாபானின் (எலிட்சாபான்) புதல்வர்களுக்கு முதல்வர். பேழையை ஒபேது - ஏதோமின் இல்லத்திலிருந்து சியோனுக்குக் கொண்டு வருவதில் (1 நாள் 15:1-16:3.43; 2 சாமு 6:12-19) இவரும் இவரது இருநூறு சகோதரர்களும், லேவியர்கள் மத்தியில் இருந்தார்கள். இந்த லேவியர்களிடம்தான் தாவீது பேழையை எடுத்துச்செல்லப் பொறுப்பாக ஒப்படைத்திருந்தார் (1 நாள் 15:8. 11-15).

8. இவர் ஒரு லேவியர். நெத்தனியேலின் மகன். ஒரு எழுத்தரும் கூட. இவர் குருக்களின் இருபத்து நான்கு பிரிவுகளையும், தாவீதின் லேவியர்கள் முறைப்படி (1 நாள் 23-26) சீட்டுப்போட்டு அவர்களின் கோவில் கடமைகளையும் (24:6) குறித்து வைத்தார்.

9. ஒரு லேவியர். ஓபேது - ஏதோமின் மூத்த மகன். வீரமிக்க புதல்வர்களுக்குத் தந்தை. இவர்கள் தாவீதின் கோவில் நியமனங்களில் வாயிற்காப்பாளர்கள் குழுவாக இருந்தனர் (1 நாள் 26:4.617).

10. ஒன்பது லேவியர்களில் ஒருவர் (உப 6:6-9). இவர்கள் பதினாறு பேர்கள் கொண்ட குழுவைச் சேர்ந்தவர்கள். அரசன் யோசபாத்தினால் யூதாவின் நகர்களுக்குச் சட்டம் கற்றுக் கொடுக்க அனுப்பப்பட்டவர்கள் (2 நாள் 17:8). இக்கதை நாளாகமத்தில் மட்டும் சொல்லப்பட்டுள்ளது.

11. எதுத்தூன் குடும்பத்து ஒரு லேவியர். இவர் எசேக்கியா ஆட்சிக்காலத்தில் கோவிலைச் சுத்தம் செய்வதில் ஆர்வமாக நின்ற பதினான்கு லேவியர்களில் ஒருவர் (2 நாள் 29:14). இவரும் 6-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

12. எசேக்கியா ஆட்சிக் காலத்தில் ஒரு குழு இருந்தது. முதல்கனிகள், தசமபாகம், காணிக்கைகளை லேவியர் மற்றும் குருக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது இதன் கடமையாகும். இவர் இதில் ஓர் உறுப்பினராவார். இக்குழுவில், லேவியர்கள் இருந்தார்கள். இதில் குருக்களும் இருந்திருக்கலாம். இது 2 நாள் 29-31-இல் விவரிக்கப்படுகிறது.

13. இவர் தலைமை லேவியர்களில் ஒருவர். இவர்கள் யோசியா காலத்தில் பாஸ்காப் பலிக்கெனக் காணிக்கை கொடுத்தவர்களில் ஒருவர் (2 நாள் 35:9).

14. அதோனிக்காமின் மகன். நாடு கடத்தப்பட்டு, பாபிலோனிலிருந்து எஸ்ராவோடு திரும்பிய ஒரு குடும்பத் தலைவராவார் (எஸ் 8:13).

15. இவர் ஒரு மக்கள் தலைவர். எஸ்ரா ஆலயத் திருப்பணிக்கென லேவியர்களை அனுப்பி வைக்குமாறு, கசிப்பியாவில் வாழ்ந்து வந்த இத்தோவைக் கேட்டு அனுப்பிய குழுவில் ஒருவர் (எஸ் 8:16).

16. இவர் காரிம் (ஆரிம்) வழித்தோன்றலாய்ப் பிறந்த ஒரு குரு. எஸ்ராவின் சீர்திருத்தப்படி, புறவின மனைவியை நீக்கிவிட்டவர்களில் ஒருவர் (எஸ் 10:21).

17. காரிம் (ஆரிம்) என்பவரின் மற்றொரு புதல்வர். இவரும் புறவின மனைவியை நீக்கிவிட்டார் (எஸ் 10:31).

18. கிழக்கு வாயிலின் காப்பாளர். எனவே ஒரு லேவியராக இருக்கலாம். செக்கனியாவின் மகன். இவர் நெகேமியாவின் காலத்தில் எருசலேம் சுவரின் ஒரு பகுதியைப் பழுதுபார்த்தார் (நெகே 3:29).

19. அனேகமாக ஓர் இறைவாக்கினர். மேலும் ஒரு குருவாகவும் இருக்கலாம். ஏனெனில் இவர் எளிதாக ஆலயத்துக்குள் செல்ல முடிந்தது. தெலாயாவின் மகன், மெகேற்றபேலின் வழித்தோன்றல். இவருக்குத் தோபியாவும், சன்பல்லாற்றும் கையூட்டுக் கொடுத்து, நேகேமியாவுக்கு அச்சமூட்டும் படி சொன்னார்கள். அதன்படி, இவர் நேகேமியாவிடம், ''உம்மைக் கொல்லத் தேடுகிறார்கள். ஆலயத்தில் நுழைந்து கதவுகளைப் பூட்டிக் கொண்டு இருப்போம் வாரும்'' என்று கூறி அழைத்தார் (நெகே 6:10-13). இதனால் நெகேமியாவின் பெயரைக்கெடுக்க முயன்றனர்.

20. நெகேமியாவின் காலத்தில் உடன் படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் ஒருவர் (நெகே 10:8:21). செருபாபேலுடன் திரும்பிய குருக்களில் ஒருவர் (நெகே 12:6).

21. யோயாக்கிம் காலத்தில் இருந்த குருக்களில் ஒருவர் (நெகே 12:34).

22. எருசலேம் சுவரை அர்ப்பணிக்கும் சடங்கில் பங்குபெற்ற யூதாவைச் சார்ந்த எருசலேம் மதில்மேல் ஏறியிருந்த ஒரு தலைவர் (நெகே 12:34).

23. செக்கரியாவின் (28) மூதாதையர். ஒரு லேவியராக இருக்கலாம். ஆசாபின் வழித்தோன்றல். எருசலேம் சுவர் அர்ப்பணச் சடங்கில் இசைக்கருவிகளை மீட்டியவர் (நெகே 12:35).

24. எருசலேம் சுவரை அர்ப்பணிக்கும் போது பங்கெடுத்த குருவின் புதல்வர்களில் ஒருவர். செக்கரியா (28)வின் உறவினர் (நெகே 12:36).

25. எருசலேம் சுவரை அர்ப்பணிக்கும் போது பங்கெடுத்த, நெகேமியாவோடு சேர்ந்த குழுவில் ஒரு குரு (நெகே 12:42).

26. இறைவாக்கினர் உரியாவின் தந்தை (எரே 26:20); அரசன் யோயாக்கிமின் காலத்தில் கொல்லப்பட்டார்.

27. பாபிலோனியாவின் ஒரு தலைவர். நெகலாம் குலத்தைச் சார்ந்தவர். இவர் நாடு கடத்தப்பட்டபோது ''மீண்டும் விடுதலை பெற்றுத் திரும்புவோம்'' என்று அறிவித்தவர்களில் ஒருவர். இவர் எரேமியா நாடு கடத்தப்பட்டவர்களுக்கு மடல் எழுதியதை எதிர்த்து எருசலேம் மக்களுக்கும் ஆலயத்தில் மேற்பார்வை பார்த்த செப்பனியா என்ற குருவுக்கும் கடிதம் எழுதினார். எரேமியாவைச் சிறைப்படுத்தக் கோரி ஒரு கடிதம் எழுதினார். எரேமியா இவரை ஒரு போலி இறைவாக்கினர் என்று கண்டனர் செய்து ''இவரும் இவரது வழிவருபவர்களும், விடுதலை பெற்றுத் திரும்பும்போது வாழமாட்

டார்கள்'' என்று முன்னுரைத்தார் (எரே 24:31-32).

28. தெலாயாவின் தந்தை. அரசன் யோயாக்கிமின் அவையில் ஓர் உயர் அதிகாரி (எரே 36:12).

செமாரயிம் (ZEMARAIM - இருமலை உச்சி, இரு ஆட்டுமயிர்)

1. இது பென்யமினின் வட எல்லைக்கு அருகில் இருந்தது (யோசு 18:22). இது பெத்தேலுக்கு வடகிழக்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள தற்கால இராஸ் - எஸ் - செய்மாராவாக இருக்கலாம்.

2. எப்பிராயிம் மலைநாட்டில் உள்ள ஒரு மலை (1 நாள் 13:4). இந்த இடத்திலே யூதாவின் அரசன் அபியா, எரொபவாமுக்கும் அவரது படைகளுக்கும் எதிராகப் பேசினார். அதன்பின் அவர்களைத் தோற்கடித்தார் (13:4-18).

செமாரியர் (ZEMARITES)

இவர்கள் லெபனோனின் வடக்கில் சீரியாவில் வாழ்ந்த கானானியர். இவர்கள் ஆதி 10:18; 1 நாள் 1:16-இல் மட்டும்தான் குறிப்பிடப்படுகின்றனர். மேலும் இவர்கள் அர்வாதியர், கமாத்தியரின் (ஆமாத்தியர்) சகோதரருமாவர். இவர்கள் லெபனோனுக்கு வடக்கில் அர்வாது, திரிபோலிக்கு இடையில் வாழ்ந்தனர். இந்த இடத்தில் தற்போது சும்ரா என்ற சிறிய ஊர் உள்ளது. இவர்களது நகரம் அசீரியா, அமர்னா ஏடுகளில் குறிக்கப்படுகின்றது.

செமிதா (SHEMIDA - அறிவுக் கூர்மையுடைய)

மனாசேயின் வழித்தோன்றல் பாலைவனத்தில் மோசேயால் இரண்டாவதாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கிலயாத்தைச் சேர்ந்தவர் (எண் 26:32; யோசு 17:2; 1 நாள் 7:19). அகியான், செக்கேம், லிக்கி மற்றும் அனியாம் ஆகியோரின் தந்தை. செமிதாயினரின் குலப்பெயர் மூதாதையராவர். யோசுவா நாட்டைப் பகிர்ந்தளித்த மனாசேயின் குடும்பங்களில் ஒன்று. சமாரியாவில் கண்டெடுக்கப்பட்ட பாண்டத்துண்டுகளில் இப்பெயர் காணப்படுகிறது.

செமியர் (SEMITES)

இச்சொல் இன அடிப்படையைவிட மொழி அடிப்படையில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் முதல்முதல் பயன்படுத்தப்பட்டது. நோவாவின் மக்களுள் ஒருவரான சேமின் வழித்தோன்றல்களாகக் கருதப்பட்டு (ஆதி 5:32) மேற்காசியாவில் வாழ்ந்த மக்களைக் குறிக்கப்பயன்பட்டது. சேமிய மொழிகள், கிழக்கு அல்லது வடகிழக்குச் சேமிய மொழிகள் (அக்காதிய, பாபிலோனிய மற்றும் அசீரிய மொழிகள்) வடமேற்குச் சேமிய மொழிகள் (அரமேயிக்கு, கானானிய, எபிலாயித்து, உகாரித்து, பெனிசிய, மற்றும் எபிரேய மொழிகள்), தெற்குச் சேமிய மொழிகள் (தென்கிழக்கு: பழைய தெற்கு அரபிக்கும், எத்தியோபிக்கு போன்ற நவீன வடிவங்களும்; தென்மேற்கு: அரபிக்கு) எனப் பாகுபாடு செய்யப்படுகின்றன.

செமிரமோத்து (SHEMIRAMOTH - உன்னதத்தின் பெயர், விண்ணகத்தின் பெயர்)

1. ஓபேது - ஏதோம் வீட்டிலிருந்து சியோனுக்கு உடன்படிக்கைப் பேழை கொண்டு செல்லப்படும்பொழுது இன்னிசை எழுப்ப, தாவீதால் நியமிக்கப்பட்டவர்களில் ஒரு லேவிய யாழிசைஞர்தான் செமிரமோத்து என்பவர் (1 நாள் 15:18.20). அதற்குப்பிறகு இவர்கள் பேழைக்குமுன் ஆண்டவரின் புகழ்பாடி வழிபட்டு வந்தனர் (16:5).

2. யூதாவின் நகரங்களுக்கு யோசபாத்தால் சட்டம் கற்றுக்கொடுக்க அனுப்பப்பட்டவர்களில் ஒரு லேவியர் (2 நாள் 17:8).

செமிரா (ZEMIRAH)

அடிமைத்தனத்திற்குப்பின் பென்யமின் குலத்தில் வாழ்ந்த பெக்கரின் புதல்வராவார் (1 நாள் 7:8).

செமுவேல் (SHEMUEL - இறைவனிட மிருந்து கேட்டது)

1. அம்மிகூதின் மகன். இவர் கானான் நாட்டைப் பிரித்தளிப்பதற்கு நியமிக்கப்பட்ட வர்களில் சிமியோன் குலத்துத் தலைவரா வார் (எண் 34:20).

2. தோலாவின் மகன். இசக்கார் குலத்துக் குடும்பத் தலைவர் (1 நாள் 7:2).

செமேபர் (SHEMEBER - உயர்ந்து பறத்தல்)

இவர் செபோயிமின் அரசன். சித்திம் பள் ளத்தாக்கில் கெதர்ல - கோமர் மற்றும் அவ ரது கூட்டணிக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்து போரிட்டுத் தோற்றுப்போன ஐந்து அரசர் களில் ஒருவர் (ஆதி 14:2).

செமேய் (SEMEIN)

இயேசுவின் மூதாதையரில் ஒருவர் (லூக் 3:26).

செமேர் (SHEMMER - காவல் காத்தல்)

1. சமாரியாவைக் கட்ட ஓம்ரி வாங்கிய மலையின் மூல உரிமையாளர் (1 அர 16:24). இது ஒரு இனத்தின் பெயராகவும் இருக்க லாம். இவ்விடத்தில் கட்டப்பட்ட நகர் இந்த இனத்தின் பெயரால் அழைக்கப்பட்டது.

2. எருசலேம் கோவிலில் இருந்த ஒரு மெராரிய லேவியப் பாடகரின் மூதாதையர்; மக்லியின் மகன் (1 நாள் 6:46).

3. ஆசேரின் தூரத்து வழித்தோன்றல் (1 நாள் 7:32). 7:34-இல் சோமேர் என்றழைக்கப் படுகிறார்.

செம்பு (COPPER)

இந்தப் பொருளைக் குறிக்கும் எபிரேயச் சொல் செம்பையோ, வெண்கலத்தையோ குறித்தாலும் மொழிபெயர்ப்புகள் இதைச் சாதாரணமாக வெண்கலமென்று குறிப்பிடு கின்றன.

தங்கம், இரும்புத்தாது ஆகியவைதவிர, மனிதனால் பயன்படுத்தப்பட்ட முதல், உலோகம் செம்பு ஆகும். முதலில் இது சாதாரண அணிகலன்கள் செய்யப் பயன்பட் டது. பிறகு கருவிகள் செய்யவும் பயன்பட் டது. இது மனிதனுடைய வரலாற்றையே மாற்றிவிட்டது. ஏனெனில் இதிலிருந்து சிற் பக்கலை ஆரம்பமானது.

பாலஸ்தீனத்தில் செம்பானது கி.மு. 34 அல்லது 33-ஆம் நூற்றாண்டுகளில் பயன் படுத்தப்பட்டது. இதனுடைய அழிவுகள் மெசர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. கி.மு. 30-லிருந்து 20-ஆம் நூற் றாண்டுகளைச் சேர்ந்த கோடரிகள் எரிகோ வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் செம்பு மிகவும் அரிதான பொருளாக இருந் தது என்று புதைபொருள் ஆராய்ச்சி கூறுகின் றது.

ஏறக்குறைய கி.மு. 20-ஆம் நூற்றாண்டி செம்பு அதிகமாகக் காணப்பட்டது. எமோரி யர்களின் படையெடுப்பினால் செம்பு அதிக ரித்ததென்று தோன்றுகின்றது. எரிகோவில் இவர்கள் விட்டுச் சென்றுள்ள பானைச் சித றல்கள் இதற்குச் சான்று கூறுகின்றன.

வெண்கலம் வந்த பிறகு கூட, செம்பு உபயோகப்படுத்தப்பட்டது. சைப்பிரசி லிருந்த செம்புச் சுரங்கங்கள் கீழ்த்திசை நாடு களுக்குத் தேவையான செம்பைக் கொடுத் தன. எசேக்கியேலின் காலத்தில் தீர் நாடா னது தர்சிசிலிருந்தும், யாவானிலிருந்தும், துபாலிலிருந்தும், மெசேக்கிலிருந்தும் செம்பை இறக்குமதிசெய்தது (எசே 27:12-13).

செம்புகம், கடல்நாரை (SEA GULL)

இது தோலால் இணைக்கப்பட்ட விரல் களுடைய பாதங்களைக் கொண்ட கடல் பறவை இனத்தைச் சேர்ந்தது. இந்தப் பற வைகள் மந்தையாகவும் அதிகச் சத்தம் எழுப் பிக் கொண்டும் இருக்கும். கடற்கரைகளி லும், நிலப்பகுதியிலுள்ள நீர் நிலைகளிலும் இவைகள் காணப்படும். மீன், கடற்கரை களில் காணப்படும் புழுக்கள், பூச்சிகள், பற வைகளின் முட்டைகள், இளம் பறவைகள் போன்றவை இவற்றின் உணவாகும். இஃது ஓர் அசுத்தமான பறவையாகக் கருதப்பட் டது. ஏனெனில் அழுகிய பிணம் போன்ற

இழி பொருட்களை இரையாகக் கொண்டது (லேவி 11:16; உப 14:15).

செம்மறி (LAMB)

பழைய ஏற்பாட்டில் 'செம்மறிஆடு' பலிப்பொருளுக்கான ஒன்றாகச் சடங்குகளைப் பற்றிக் கூறுகையில் யாத்திரை, எண், லேவியர் ஆகமங்களில் பல இடங்களில் கூறப்படுகிறது. செம்மறியாட்டின் கறி மென்மையானதெனக் கருதப்பட்டது (உப 32:14; ஆமோ 6:4). யாதுமறியா, குற்றமற்ற தன்மையின் அடையாளமாகச் செம்மறி கருதப்படுகிறது (எசா 53:7; எரே 11:19). உதவியற்ற நிலையில் உள்ளதன் அடையாளமாகவும் கூறப்படுகிறது (சங் 119:176; ஓசே 4:16). நாத்தானின் உவமையில் ஒரு குடும்பமே அந்த ஆட்டுக்குட்டியின்மேல் கொண்டிருந்த அன்பைக் காட்டுகிறார் (2 சாமு 12:3 தொ).

''உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறி இவரே'' என இயேசுவைத் திருமுழுக்கு யோவான் சுட்டிக்காட்டுகிறார் (யோவா 1:29.36). இந்தச் சிறப்புப்பட்டம் அ.ப. 8:32-இல் வரும் இயேசு யாவேயின் ஊழியன் (எசா-53:7) பட்டமும் யோவா 19:36-இல் பாஸ்குச் செம்மறி என்ற பட்டமும் இணைவதிலிருந்து தோன்றுகிறது. இத்தகைய கருத்துக்கள் திருமுழுக்கு யோவான் கூறியதிலிருந்து வந்தனவா, அல்லது ஆதிக் கிறிஸ்தவர்களின் சிந்தனையிலிருந்து எழுந்தனவா எனும் கேள்வி எழுகிறது. ''தலியா'' எனும் 'மூல அரமேயச் சொல்லுக்குச் செம்மறி, அடிமை எனும் இரண்டு பொருளும் உண்டு. அச்சொல்லின் தவறான மொழிபெயர்ப்பாக இருக்கலாம் இத் தலைப்பு என்பார் சிலர். தொடக்கத்தில் 'இதோ இறை ஊழியன்' (எசா 53:1தொ), என்றுதான் கூறியிருக்க வேண்டும். இயேசு பலியாகும் செம்மறியோடோ, பாஸ்காச் செம்மறியோடோ ஒப்பிடப்பட்டிருக்க வேண்டும் (1 பேதுரு 1:19).

திருவெளிப்பாட்டில் மட்டுமே இயேசுவைச் செம்மறியென 25 முறை குறிப்பிடுகின்றார். இதுபோல் புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் கூறப்படவில்லை. அவர் பலியாகத் தம்மையே அளித்தார் (திருவெளி 5:6.12; 13:8). அவரது உயிரளிக்கும், காக்கும் இரத்தம் (7:14; 12:11); இவை எல்லாவற்றிற்கும் மேலாக அரியணையில் வீற்றிருப்பவராகவும் உயர்த்தப்பட்டவராகவும் (6:16), போரில் வெற்றி பெற்றவராகவும் (17:14) வாழ்வோரின் நூலைக் கையில் கொண்ட நீதிபதியாகவும் காட்டப்படுகிறார் (13:8; 21:27). அவர் பலிப்பொருளாக்கித் தம்மையே அளிப்பதும், மகிமைப்படுத்தப்படுவதும், அவர் மீட்புக்காகத் தாமே இறந்து உயிர்ப்பதில் அடங்கியுள்ளது என்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இயேசுவை விசுவசிப்போர் ஆடுகள் ஆகவும் (யோவா 21:15), பேதுரு அவர்களின் மேய்ப்பன் ஆகவும் காட்டப்படுகின்றனர். பழைய ஏற்பாட்டில் மேய்ப்பனின் உருவம் பொதுவாக ஆள்பவரைக் குறிப்பதாகும்.

செயரியா (SHEARIAH)

பென்யமின் குலத்தைச் சேர்ந்த ஆசேலின் (ஆட்சேல்) ஆறு புதல்வர்களில் ஒருவர். சவுல் அரசனின் வழித்தோன்றல் (1 நாள் 8:38; 9:44).

செயலர் (SECRETARY)

நாடு கடத்தப்படும்முன் ஓர் அரசாங்க அதிகாரி. இவர் போர் அலுவல் (2 அர 25:19), பொருளாதாரக்காரியங்கள் (12:10-11), எழுத்தர் அலுவல் (1 நாள் 24:6; எரே 36:32) போன்ற பல அலுவல்களைச் செய்து வந்தார். பெரும்பாலும் செயலர்கள் உயர்மட்ட அதிகாரிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர் (2 சாமு 8:17; 20:25; 1 அர 4:3). எஸ்ராவின் காலத்திலும் அதற்குப்பின்னும் மோசேயின் சட்டத்தைப் போதிக்கத் தகுதி வாய்ந்தவர்களைக் குறிக்க இச்சொல் பயன்பட்டது (எஸ் 7:6.11; நெகே 8:1). இதற்கு இணையான கிரேக்கச் சொல் சட்டவல்லுநர், மறைநூல் அறிஞர் ஆகும் (சீரா 38:24). இச்சொல் புதிய ஏற்பாட்டில் பயன்பட்டுள்ளது. கடிதங்களை எழுதுவதற்குச் செயலர்கள் பயன்படுத்தப்பட்டனர்

என்பதற்கு உரோ 16:22; 1 பேதுரு 5:12 என்பன சான்று கூறுகின்றன.

செயல்தியேல் (SHEALTIEL - இறைவனிடம் கேட்டது)

இவர் எக்கோனியா அல்லது யோயாக் கின் என்ற யூதாவின் கடைசி அரசரின் மகன். செருபாபேலின் தந்தை (1 நாள் 3:17; எஸ் 3:2; 5:2; நெகே 12:1; ஆகா 1:1; 2:2; மத் 1:12). இவர் லூக் 3:27-இல் உள்ள நேரியின் மகன் அல்லர். எஸ் 3:2; நெகே 12:1; ஆகா 1:1 போன்ற எல்லா மேற்கோள்களும், செயல்தியேலின் மகன் செருபாபேல் என்று கூறுகின்றன. இவர் நாடு கடத்தப்பட்டதற் குப்பின் உள்ள யூதாவில் முதலாம் தாரியு என்ற பாரசீக அரசனின் கீழ் ஆளுநராக இருந்தார். 1 நாள் 3:17-19-இல் மட்டும் செயல்தியேல் செருபாபேலுக்குப் பெரி யப்பா என்று கூறப்படுகிறது. இப்பிரச்சனை பற்றிக் காண்க: செருபாபேல்.

செயார் - யாசுபு - (SHEAR - JASHUB - எஞ்சியவர் திரும்புவர்)

இது எசாயாவுக்கு முதலில் பிறந்த மக னுக்கு வைத்த அடையாளப் பெயர் (எசா 7:3). சீரிய - இஸ்ராயேல் இணைந்த படை யின் எஞ்சியோரே எருசலேமின் முற்றுகை யிலிருந்து வீடுதிரும்புவார் என்ற வாக்குறு தியை அடையாளமாக உணர்த்திற்று (எசா 7:4-9; 8:18). ஆனால் பொதுவாக இது ''நாடு கடத்தப்பட்டதிலிருந்து எஞ்சியோரே திரும் புவர்'' என்றும் ''ஆண்டவரிடம் எஞ்சி யோரே திரும்புவர்'' என்றும் பொருள் படும். சூழ்நிலை முன்னதைச் சுட்டுகிறது. எசாயாவின் ''எஞ்சியோர்'' பற்றிய கருத்து, தீர்ப்பையும், வாக்குறுதியையும் அளிக்கி றது. இது அவரது தொடக்க காலப் பணியின் போது எண்ணத்தில் உருவாகியிருக்கலாம். பிற்காலத்தில் இறுதிக்கால அழிவின்முன் இஸ்ராயேலுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி யாயிற்று (எசா 10:21-23; 11:11.16).

செயால் (SHEAL - கேட்டல், மன்றாட்டு)

நாடு கடத்தப்பட்டுத் திரும்பியவர்களில் இவரும் ஒருவர். எஸ்ரா காலத்தில் வாழ்ந்த வர். புறவின மனைவியை நீக்கிவிட கட் டாயப்படுத்தப்பட்டவர் (எஸ் 10:29).

செயிரா (SEIRAH - காடு நிறைந்த குன்று, மயிர் நிறைந்த)

விவிலியத்தில் வரும் குறிப்புகளை வைத் துச் செயிராவைப் பற்றி எதுவும் கூற இயல வில்லை. ஏகூது என்ற நீதிபதி மோவாபிய ரின் அரசனான 'எக்லோன்' என்பவனைக் கொன்றபின் இங்குத் தப்பி வந்ததாக நீதி 3:26 கூறுகிறது. இவ்விடம் பொதுவாக எப் பிராயிம் எல்லையில் இருந்ததாகக் கூறினா லும் (3:27) மோவாபின் எல்லையில் இருந்தி ருக்கவும் வாய்ப்புண்டு.

செயேபு (ZEEB - ஓநாய்)

எப்பிராயிமியர்களால் ஓரேபோடு பிடிக் கப்பட்ட மிதியானியத் தலைவர். அவர்கள் இவரை இவருடைய திராட்சை ஆலையில் கொன்றனர் (நீதி 7:24; 8:3). மிதியானியர் களின், குறிப்பாக ஓரேபு மற்றும் செயேபு ஆகியோரின் தோல்வி இஸ்ராயேலில் நெடுங்காலத்திற்கு நினைவு கூறப்பட்டது (சங் 83:11; எசா 9:4; 10:26).

செயேரா (SHEERAH - உறவினள்)

இவள் எப்பிராயிமுக்கு மகளாகவும், பெரீ யாவுக்குச் சகோதரியாகவும் இருக்கலாம் (அல்லது) எப்பிராயிமின் மகன் பெரீயா வுக்கு மகளாக இருக்கலாம். மாசரேட் டிக்கு வாசகத்தின்படி இவள் (அல்லது இவ ளது வழித்தோன்றல்) கீழ் பெத் - கோரோ னையும் மேல் பெத் - கோரோனையும் உசேன் சேராவையும் கட்டினாள் (1 நாள் 7:24).

செயோரிம் (SEORIM - தாடியுடைய)

தாவீதரசரின் காலத்தில் ஆலயத்தில் பணி யாற்றுவதற்கு வேண்டியவர்களைக் குலுக் குச்சீட்டுப் போட்டு, குருக்களை 24 பிரிவுகளா கப் பிரித்தனர். அதில் 4-ஆவது பிரிவைச் சேர்ந்தவர் சேயோரிம் ஆவார் (1 நாள் 24:8). இதன் மூலம் ஏற்பட்ட பிரிவுகள் கி.பி. 70 வரை நிலைத்திருந்தது.

செயோல் (SHEOL)

காண்க: இறந்தோரின் உறைவிடம்.

செரகியர் (ZERAHITE)

இது செராகு (4) என்பவனிடமிருந்து தோன்றிய இரு குடும்பங்களின் பெயர். இப்பெயர் கொண்ட குடும்பங்கள் சிமியோன் குலத்திலும் (எண் 26:13), யூதா குலத்திலும் (எண் 26:20; யோசு 7:17) இருந்தன. ஆக்கான் யூதாவின் செரகியருள் ஒருவர் (யோசு 7:17-18). தாவீதின் வலிமை வாய்ந்தவருள் ஊசாயியரான (ஊசாய்) சிபகாயும் நெற்றோபாயரான மகராயும் இந்தக் குடும்பத்திலே பிறந்தவர்கள் (1 நாள் 27:11.13).

செரகியா (ZERAHIAH - யாவே எழுந்துள்ளார், யாவே பிரகாசித்தார்)

1. குருவான இவர் ஊசியின் மகனும் மெரயோத்தின் தந்தையும் எலயாசரின் வழித்தோன்றலும் எஸ்ராவின் முன்னோரும் ஆவார் (1 நாள் 6:6.51; எஸ் 7:4).

2. இவர் எல்யகோவெனாய் தந்தையும் பகத்மோவாபு வழிவந்தவருமாவார். இந்த எல்யகோவெனாய் எஸ்ராவோடு அடிமைத்தனத்திலிருந்து யூதாவுக்குத் திரும்பியவருள் ஒருவர் (எஸ் 8:4).

செராகு (ZERAH - தலைவி, பெருமாட்டி)

யாக்கோபின் மகனான ஆசேரின் மகள். இவளுக்கு இம்னா, இசுவா, இஸ்வி, பெரீயா என்ற சகோதரர்கள் உண்டு (ஆதி 46:17). இவர்கள் அனைவரும் யாக்கோபுடன் எகிப்துக்குச் சென்றவர்கள். யூதப்பாரம்பரியத்தின்படி செராகு அசேரின் மகன்களுக்குச் சமமாகவே எண்ணப்பட்டாள். மோசே பாலைவனத்தில் எடுத்த குடிக்கணக்கில் இவளது பெயரைத் தனிக்குடியாகக் கணக்கிட்டார் (எண் 26:46). இதனால் யூத இராபிகள், இவள் வாழ்வில் ஏதேனும் அசாதாரண நிகழ்ச்சி நடந்திருக்கலாம்; எனவேதான் இவளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது என்று எண்ணினர். இதனால் இவளைக் குறித்துப் பற்பல கதைகள் உண்டாயின.

செராகு (ZERAH - விடியல், ஒளிக்கதிர் இறைவன் பிரகாசித்தார்)

1. இவர் ஏதோமின் ஒரு தலைவர். இவர் ஏசா, இசுமயேல் ஆகியவர் வழி வந்தவர் (ஆதி 36:13.17; 1 நாள் 1:37). ஏனெனில் இசுமயேலின் புதல்வி பாசமத்து வழியாக ஏசாவின் மகனான இரகுவேலின் மகன்.

2. ஏதோமின் இரண்டாவது அரசனான யோபாபின் தந்தையாவார் (ஆதி 36:33; 1 நாள் 1:44).

3. யூதாவுக்குத் தன் மருமகள் தாமார் வழியாகப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் இவரும் ஒருவர் (ஆதி 38:30; 46:12; யோசு 7:1. 18.24; 22:20; 1 நாள் 2:4.6; 9:6; நெகே 11:24). இவர் பிறப்பதற்குமுன், மருத்துவச்சி இவர் கையிலே கருஞ்சிவப்பு நூலைக்கட்டியதால் இவருக்குச் செராகு என்ற பெயர் வழங்கப்பட்டது (ஆதி 38:27-30). இவர் யூதாவின் கோத்திரத்திலே செராகியர் குடும்பத்தை நிறுவியவர் (எண் 26:20). இவர்கள் செராகின் புதல்வர்கள் என்றழைக்கப்பட்டனர் (1 நாள் 9:6; நெகே 11:24). இவருடைய வழித்தோன்றல்களின் பெயரும் கொடுக்கப்பட்டுள்ளது (1 நாள் 2:6). இவர் ஆக்கானின் முன்னோராவார் (யோசு 7:1.8.24; 22:20). இயேசு கிறிஸ்துவின் தலைமுறை அட்டவணையிலே இரட்டைக் குழந்தைகளான பெரேட்சு, செராகு ஆகியோரின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன (மத் 1:3).

4. இவர் சிமியோனின் மகனாவார் (1 நாள் 4:24). இவரது வழித்தோன்றல்கள் செரகியர் என்றழைக்கப்பட்டனர் (எண் 26:13). ஆதி 46:10; யாத் 6:15 ஆகிய இடங்களில் இவர் சோகார் என அழைக்கப்படுகிறார்.

5. லேவியரான இவர் கேர்சோமின் குடும்பத்தில் பிறந்தவர் (1 நாள் 6:21.41).

6. எத்தியோப்பியனான செராகு ஆசாவிற்கு எதிராகப் படையெடுத்து மாரேசா வரை வந்தார். அவர்களைத் தோற்கடித்த ஆசா கெரார் வரை துரத்திச் சென்றார் (2 நாள் 14:9-15).

செராபிம், செராபியர் (SERAPHIM - தீப்பிழம்பான, எரிகிறது)

ஆலயத்தில் எசாயா ஆண்டவரைக் கண்ட காட்சியில் வரும் ஆறு இறக்கைகளையும் மனிதக் குரலையும், கை, கால்களையும் கொண்ட உயிர்கள் (எசா 6:1-7).

இந்த உயிர்களின் பெயரின் பொருளை உறுதியாக அறிவதற்கில்லை. பாலைவனத்தில் யாவே தமக்கு எதிராக முணுமுணுத்த மக்களைத் தண்டிப்பதற்கு அனுப்பிய பாம்புகள் ''கொள்ளிவாய்'', அதாவது நச்சுப்பாம்புகள் என்றழைக்கப்படுகின்றன (எண் 1:6; உப 8:15). அதன்பின் ஏற்பட்ட பெருந்துன்பங்களிலிருந்து தங்களை விடுவிக்குமாறு மக்கள் வேண்டி, மோசே செய்துவைத்த ''கொள்ளிவாய்ப்'' (வெண்கலப்) பாம்பு (எண் 21:8) ஒரு வழிபாட்டுப் பொருளாகி, ''ஊசியா அரசன் இறந்த ஆண்டில்'' எசாயா தனது அழைப்பைப் பெற்றபோது, (ஒருவேளை ஆலயத்தில்) வழக்கில் இருந்தது (2 அர 18:4; எசா 6:1). எசா 14:29-இல் குறிக்கப்படும் ''பறவை நாகம்'' பாலைவன உயிர்களில் ஒன்றாகும். இது பழைய ஏற்பாட்டில் காணப்படுவதுபோல் பழங்கால நாட்டுப் பாடல்களிலும் இதிகாசங்களிலும் இடம் பெறுகின்றது.

எசாயாவின் காட்சியில் வரும் செராபிம்கள் இத்தகை பாலைவன உயிர்களோடு தொடர்பு படுத்தப்பட்டிருக்கலாம். இவர்களின் அலுவல் இறைவனுக்குப் பணிபுரிவதும் அவரது பரிசுத்தத்தை வழிபடுவதுமாகும். இதனால் இவர்கள் ஒருவகை வானதூதர்களாகக் கருதப்படுவர். இவர்கள் பெயர் 'கொள்ளிவாய்' அல்லது பாம்பு போன்ற தோற்றத்தைச் சுட்டும். இது, பீடத்திலிருந்து எடுக்கப்பட்ட நெருப்புப் பொறியால், செராபிம்களில் ஒன்று எசாயாவிடம் செய்யும் சுத்திகரச்சடங்கோடு தொடர்பு படுத்தப்பட்டிருக்கலாம்.

செராயா (SERAIAH - யாவே வெற்றிகொண்டார், மேற்கொண்டார்)

1. தாவீதரசர் தன் செல்வாக்கின் உச்சநிலையில் இருந்தபோது அவரிடம் செயலராகப் பணியாற்றியவர் (2 சாமு 8:17). இவர் ஓரிடத்தில் செவா என்றும் (2 சாமு 20:25), பிறிதொரு இடத்தில் சவுசா என்றும் (1 நாள் 18:16), வேறொரு இடத்தில் சீசா என்றும் (1 அர 4:3) அழைக்கப்படுகின்றார்.

2. பாபிலோனிய அரசன் நெபுகத்னேசர், கி.மு. 587/6-இல் எருசலேமை அழித்த போது அங்கு ஆலயத்தில் தலைமைக் குருவாக இருந்தவர். யூதாவின் அடிமைத்தனம் முழுமை பெறும் பொருட்டு, தலைமைக்குரு இரிப்லாவில் நெபுகத்னேசரிடம் ஒப்படைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் (2 அர 25:18; எரே 52:24). லேவி, சாதோக்கு வழிவந்த குருக்கள் பட்டியலில் இவரது பெயரும் உண்டு (1 நாள் 6:14). ஆனால் இங்கு இவர் அசரியாவின் மகன் என்றும் யோசதாக்கின் தந்தை என்றும் கூறப்பட்டுள்ளது. யோசதாக்கு சிறை செய்யப்பட்டாலும், இரிப்லாவில் தனது தந்தையின் முடிவை அடையவில்லை. ஆனால் நாடு கடத்தப்பட்டார். எஸ் 7:1-இல் எஸ்ரா செராயாவின் வழித்தோன்றல் என்று உரிமை கொண்டாடுகிறார். அவர் யோசதாக்கின் சகோதரனாக இருந்திருக்கலாம். ஆனால் யோசதாக்கு தலைச்சன் பிள்ளை என்பது தெளிவு. செராயா எசுவாவின் பாட்டனும் ஆவார் (1 நாள் 6:14; ஆகா 1:1).

3. நெற்றோபாவியரான தங்குமெத்தின் மகன். எருசலேம் வீழ்ச்சியுற்றபோதும் நாட்டில் தங்கியிருந்த யூதா நாட்டுச் சுதந்தரப் படைகளின் தலைவர்களுள் ஒருவர் (2 அர 25:23; எரே 40:8). நெபுகத்னேசர் தனது பிரதிநிதியாகக் கெதலயா என்பவரை நியமித்திருப்பதைக் கேள்வியுற்ற படைத்தலைவர்கள் கெதலயா விவேகத்தோடும் நேர்மையாயும் தங்களை நடத்துவார் என்று எண்ணித் தங்களுடைய வீரர்களோடு மிஸ்பாவில் கெதலயாவிடம் சரண் அடைந்தனர் (2 அர 25:24). ஆனால் அடுத்த ஆறு மாதங்களில் கெதலயா கொல்லப்பட்டதால் செராயாவும் மற்றப் படைத்தலைவர்களும் தங்கள் உயிரைக் காக்க எகிப்துக்கு ஓடிப்போனார்கள்.

4. கெனாசு என்பவரின் இரண்டாவது மகன். இவருக்கு ஒத்தினியேல் என்ற சகோதரனும் யோவாபு என்ற மகனும் உண்டு. யூதாவின் வழிவந்தவர்களில் இவரும் ஒருவர்.

5. சிமியோன் இனத்தில் ஒரு தலைவர். அசியேல் என்பவரின் மகன். இவருக்கு யோசிபியா என்ற மகனும் ஏகூ என்ற பேரனும் உண்டு. தன் இனத்திற்கு இவர் ஒரு தலைவர் (1 நாள் 4:35).

6. இவர் ஆளுநரான செருபாபேலோடும், பெரியகுருவான ஏசுவாவோடும் பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவர்களில் ஒருவர் (எஸ் 2:2). நெகே 7:7-இல் அசரியா (19) என்று குறிக்கப்படுகின்றார். இவரே 9-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம். காண்க 7.

7. நெகேமியா காலத்தில் கடவுளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களில் ஒருவர் (நெகே 10:2). நெகே 10-இல் வரும் குருக்களின் பெயர்கள் குருக்களின் குடும்பப்பெயராக இருக்கலாம். அப்படியாயின் 6-இல் குறிக்கப்படுபவரும் 9-இல் குறிக்கப்படுபவரும் இவரும் ஒருவரே.

8. நாடு கடத்தலுக்குப்பின் அமைக்கப்பட்ட யூதாவில், ஆலயத்தில் மேற்பார்த்த ஒரு குரு (நெகே 11:11). 1 நாள் 9:11-இல் அசரியா (8) என்றழைக்கப்படுகிறார்.

9. ஆளுநர் செருபாபேல் என்பவரோடும் தலைமக்குரு ஏசுவாவோடும் பாபிலோனிலிருந்து திரும்பிவந்த குருக்களில் ஒருவர் (நெகே 12:1). இவரது குடும்பத்தார் ஏசுவாவின் மகனும் வாரிசுமான யோயாகிமின் கீழ்ப்பணிபுரிந்தனர் (12:2). இவரும் 6-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம். காண்க 7.

10. நேரியாவின் புதல்வனும் எரேமியாவின் செயலரான பாரூக்கின் சகோதரனும் ஆவார் (எரே 32:12; 51:59). யூதாவின் அரசனான செதேக்கியா கி.மு. 594-இல் பாபிலோன் சென்றபோது அவருடன் சென்றவர். இவரது பணி அரசனுக்கு விடுதிப் பொறுப்பாளராக இருப்பதாகும் (எரே 51:59). இறைவாக்கினரான எரேமியா, செராயாவிடம் பாபிலோனுக்கு எதிரான வாக்குகளைக் கொண்ட சுருளைக்கொடுத்து, அவ்வாக்குகளைப் பாபிலோனில் வாசித்துவிட்டு, பாபிலோனுக்கு வரவிருக்கும் அழிவை வலியுறுத்தும் பொருட்டு அச்சுருளை யூப்பிரத்தீசில் எறிந்துவிடுமாறு கட்டளையிட்டார் (51:60-64)

11. இறைவாக்கினர் எரேமியா காலத்தில் யூதாவை ஆண்ட யோயாக்கிம் அரசனிடம் பணிபுரிந்தவரில் ஒருவர். கி.மு. 604-இல் எரேமியா யூதாவுக்கு எதிராக உள்ள கடவுளின் தீர்ப்பை அரசனுக்குமுன் வாசிக்கச் செய்த பின்பு, அவரையும் அவரது உதவியாளர் பாரூக்கையும் கைது செய்து செராயாவுக்கு உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் எரேமியாவும், பாரூக்கும் தப்பிவிட்டனர் (எரே 36:26). இவரது தந்தை பெயர் அசிரியேல் ஆகும்.

செரீ (ZERI - கட்டப்பட்ட, பால்சம்)

இவர் அடிமைத்தனத்திற்குப்பின் லேவிய எதுத்தூன் குடும்பத்தில் வாழ்ந்த ஓர் இசைக் கலைஞர். ஆலயத்தில் இசைப்பணி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு குழுவில் ஒருவர் (1 நாள் 25:3). 25:11-இல் இவர் இசரி (இட்சரி) என்றழைக்கப்படுகிறார்.

செருக்சு (XERXES)

1. முதலாம் செருக்சு: அக்கமேனிய வம்சத்தைச் சேர்ந்த ஒரு பாரசீக அரசன் (கி.மு. 486-465). இவர் முதலாம் தாரியுவுக்கும் பெரிய சைரசின் மகள் அத்தோசாவுக்கும் பிறந்த முதல் மகன். தாரியுவின் வாரிசு அமெஸ்திரிசின் கணவன். இவர் 486-இல் தன்னுடைய தந்தைக்குப் பிறகு அரசனானார்.

இவர் அரசனான முதல் ஆண்டுகளில் பல எதிர்ப்புகளையும் கிளர்ச்சிகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவர் பொய்க்

கடவுள்களை அழித்து மதச் சீர்திருத்தம் செய்தார்.

இவர் கிரேக்க நாட்டின் மீது படையெடுத்து முதலில் வெற்றி கண்டார்; ஆனால் 479-இல் திடீரென்று அயோனியாவில் தோல்வியுற்றார். இவர் சாகும்வரை (465) உள்நாட்டுக் குழப்பங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. ஆகவே மற்றக்காரியங்களில் கவனம் செலுத்த முடியவில்லை.

எஸ்தர் ஆகமத்திலுள்ள அகசவேர் மன்னன் இந்தச் செருக அரசன்தான் என்று கருதப்படுகிறார் (எஸ்த 1:1-2:1.16-17; எஸ் 4:5-7).

2. நாற்பத்தைந்து நாட்கள் ஆண்டவர் இரண்டாம் செருசு என்ற மன்னன் (424) முதலாம் அர்த்தக்சஸ்தா வாரிசு. அவரது சகோதரன் சோக்தியானுசால் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் 2-ஆம் தாரியு ஆட்சிக்கு வந்தார்.

செருபாபேல் (ZERUBBABEL - பாபிலோனில் (பிறந்த) பிள்ளைகள்)

இவர் தாவீதின் தோன்றலும் யூதாவின் அரசன் யோயாக்கினின் பேரனும் செயல்தியேலின் மகனுமாவார் (எஸ் 3:2; 5:2; நெகே 12:1; ஆகா 1:1; 2:2; மத் 1:12). இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் ஆலயம் மீண்டும் கட்டப்பட்டபோது யூதாவின் ஆளுநர் (1 நாள் 3:17; நெகே 12:47; ஆகா 1:1; 2:2). தாவீது வழியாக இயேசுவின் முன்னோர் (மத் 1:12-13; லூக் 3:27). 1 நாள் 3:17-19-இல் இவர் யோயாக்கினின் மற்றொரு மகனான பெதாயாவின் மகன் என்று குறிக்கப்படுகிறார். ஒருவேளை செயல்தியேல் பிள்ளையின்றி இறந்து, பெதாயா உடன்பிறந்தான் மணமுறைப்படி, செயல்தியேலின் விதவையை மணந்து, அவருக்குச் சந்ததியை ஏற்படுத்தியிருக்கலாம். செயல்தியேலும் பெதாயாவும் இருவருமே செருபாபேல் என்ற பெயருடைய புதல்வர்களைக் கொண்டிருந்திருக்கலாம் என்பது மற்றொரு கருத்தாகும்.

ஆகாய் செருபாபேலை யூதாவின் ஆளுநர் என்றழைக்கிறார் (ஆகா 1:1; 2:2.21). ஆனால் அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்கள்மேல் சேசுபட்சரை ஆளுநராகச் சைரசு நியமித்ததாகக் கூறப்படுகிறது (எஸ் 5:14; 1:8). செருபாபேல், சேசுபட்சர் ஆகிய இரு பெயர்களுமே பாபிலோனியப் பெயர்களாகும். இருவரும் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றனர் (எஸ் 3:2.8.10;5:16). இதனால் சிலர் இரு பெயரும் ஒரே ஆளைக் குறிக்கின்றன என்பர். ஆனால் சேசுபட்சர் செருபாபேலுக்கு முந்தியவராகவும் ஒருவேளை யோயாக்கினின் மகனும் செருபாபேலின் சிற்றப்பனுமான செனாட்சராக இருக்கலாம் (1 நாள் 3:18). காலவரிசை முறை தெளிவாக இல்லை. எஸ் 2-5-இல் குறிக்கப்படும் காலத்தைத் திருத்தி அமைக்கும் பல திட்டங்களும் யூதர்கள் யூதாவுக்கு இரு குழுவினராகத் திரும்பி வந்தனர் என்ற கருத்தை மேற்கொள்கின்றன. முதல் குழு சேசுபட்சர் தலைமையிலும், இரண்டாவது குழு செருபாபேல் தலைமையிலும் திரும்பி வந்தனர் (நெகே 7:12).

கி.மு. 520-இல் ஆலயம் மீண்டும் கட்டப்பட்டபோது செருபாபேல் ஆளுநராக இருந்தார். ஆகாயும் செக்கரியாவும் செருபாபேலுக்கு மெசியாவின் மகிமையை அளிக்கின்றனர். அவரே ஆண்டவரின் ''த்ளிர் எனப்படும் தொண்டன்'' (செக் 8:8; 6:12-13). உலகின் அரசுகளை இறைவன் வீழ்த்தியபின் செருபாபேல் அரசரின் ''அரச இலச்சினை'' ஆவார் (ஆகா 2:21-23).

நாட்டில் வாழ்ந்திருந்த மக்கள் ஆலயம் கட்டுவதில் பங்கெடுப்பதைச் செருபாபேல் மறுத்துவிட்டார். இது சாமாரியப்பதிதத்தில் நிறைவுபெற்ற பகைமையுணர்ச்சியைத் தூண்டியது (எஸ் 4:2 தொ). இவர் பெரிய குரு ஏசுவாவுக்குச் சம காலத்தவர்.

செருபாபேலின் ஆளுநர் ஆட்சி எப்படி முடிந்தது என்பது பற்றியும் அவர் என்ன ஆனார் என்பதுபற்றியும் ஒன்றும் அறிவதற்

கில்லை. செருபாபேலைச் சூழ்ந்தெழுந்த மக்களின் மெசியா பற்றிய ஆர்வத்தால் தூண்டப்பட்டு பாரசீகர்கள் செருபாபேலைக் கொன்றுபோட்டனர் என்பர் சிலர். ஆனால் இக்கூற்றுக்கு ஆதரவாகத் தெளிவான சான்றுகள் இல்லை.

செரூக்கு (SERUG - கிளை)

'சேம்' குலத்தில் தோன்றிய இரெயுவின் மகன். இவருக்கு 30-ஆம் வயதில் நாகோர் என்ற மகன் பிறந்தார். ஆகவே ஆபிரகாம், இயேசுவின் மூதாதையர். அதன்பிறகு 200 ஆண்டுகள் வாழ்ந்து பல புதல்வர்களையும், புதல்விகளையும் பெற்றார் (ஆதி 11:20-23; 1 நாள் 1:26, லூக் 3:35).

இப்பெயர் காரனுக்கு மேற்கே அமைந்துள்ள செரூக்கி என்ற நகர் மற்றும் மாவட்டத்தோடு அடையாளம் காட்டப்படுகிறது.

செரூயா (ZERUIAH - ஆண்டவனால் புண்பட்ட)

நாகசுவின் (2 சாமு 17:25) அல்லது ஈசாயின் மகள் (1 நாள் 2:16) என்றழைக்கப்படும் அபிகாயில் மற்றும் தாவீது ஆகியோரின் சகோதரி அல்லது; ஒன்றுவிட்ட சகோதரி ஆவாள்.

இவள் யோவாபு, அபிசாய், அசாவேல் என்பவர்களின் தாயாவாள். தாவீதின் நம்பிக்கைக்குரிய வீரர்களாக இம்மூவரும் அவர் தம் படையிலே தளபதிகளாகவும் இருந்தனர் (2 சாமு 2:18; 3:16; 18:2). இவர்கள் தங்களது தகப்பனோடு தொடர்பு படுத்தப் படாமல், தங்கள் தாயான செரூயாவுடனே தொடர்பு படுத்திக் கூறப்படுகின்றனர் (1 சாமு 26:6; 2 சாமு 2:13.18; 8:16). அவளது கணவன் இளமையில் மரித்ததோ, அந்நியராய் இருந்ததோ, அவள் அசாதாரணப் பெண்ணாய் விளங்கியதோ, வழித்தோன்றல்கள் தாயின் வரிசையைப் பின்பற்றிய பழக்கமோ இதற்குக் காரணமாக இருக்கலாம்.

தாவீது, செரூயாவின் புதல்வர்களைக் கட்டுப்படுத்துவதைக் கடினமாகக் கண்டார் (2 சாமு 3:39; 16:10; 19:22). ஏனெனில் அவர்கள் அவருக்கு மிகவும் பிரமாணிக்கமுள்ளவர்கள் ஆனாலும் அவர்கள் கடுமையாகவும், நம்பிக்கைக்கேடு செய்பவர்களாகவும் பழி வாங்கும் போக்குடையவர்களாகவும் இருந்தனர் (1 சாமு 26:8; 2 சாமு 3:27.30; 16:9; 18:5.14; 19:21).

செரூவா (ZERUAH - தொழுநோயுள்ள)

இவள் நெபாற்றின் மனைவியும் எரொபவாமின் தாயும் ஆவாள் (1 அர 11:26).

செரேசு (SHERESH - வேர்)

மனாசே குலத்து ஒரு குடும்பத்தைக் குறிக்கிறது. மனாசேயின் பேரனும், மாக்கிரின் மகனுமாவார் (1 நாள் 7:16).

செரேசு (ZERESH - தங்கமான)

ஆமானின் மனைவியான இவள் ஆமானுக்கு அறிவுரை கூறிவந்தாள். முதலாவதாக மொர்தக்காயைப் பழிவாங்கவும், பின்னர் ஆமான் தோல்வியுறுவது உறுதி என்றும் அவள் கூறினாள் (எஸ்த 5:14; 6:13).

செரேதா (ZEREDAH)

1. இது எரொபவாமின் சொந்த ஊர் (1 அர 11:26). இந்த இடத்திலிருந்துதான் எரொபவாம் சாலமோன் மன்னருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். இந்தச் செரேதா சமாரியாவின் மேற்கிலுள்ள அயின்செரிதா நீரூற்றில், வாடி தெயிர் பால்லுத்து ஆக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. மேலும் சில விளக்கவுரையாளர்கள் இந்தச் செரேதா செக்கேமுக்குத் தென்மேற்கில் 24 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கு வடமேற்கில் 34 கி.மீ. தொலைவிலும் உள்ள தெயிர் காசானேபாக இருக்குமெனக் கருதுகின்றனர்.

2. இது யோர்தான் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு நகரம் (2 நாள் 4:17). நீதி 7:22-இல் செரேரா என்ற பெயருக்குப் பதிலாகச் செரேதா என்ற பெயர்தான் இருக்கவேண்டும் என விளக்கவுரையாளர் பலர் கருதுகின்றனர்.

செரேது (SERED - அச்சம்)

குலமூதாதையர் செபுலோனின் மகன் (ஆதி 46:14; எண் 26:26). இவர் செரேது வீட்டாரின் குலமூதாதையத் தலைவர்.

செரேது (ZERED - ஜாரத் நீரோடை)

இஸ்ராயேல் மக்கள் இவ்வோடையைக் கடக்கும்போது தங்களுடைய 38 வருட வனாந்தர வாழ்க்கையை முடித்துக் கொண்டனர் (எண் 21:12; உப 2:13-4).

இது சாக்கடலின் தென்கிழக்கு நோக்கிப் பாயும் வாடி எல்-கேசாவாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. இந்த ஓடை 56 கி.மீ. நீளமுள்ளது. இது தன் கிளை ஓடைகள் மூலமாக எபெல் எஸ் சேராவின் வடபகுதி முழுவதையும் நிரப்புகிறது. திரேசன் சாலை வெண்கலக்கால வழியைப் பின்பற்றிச் செரேதை எல் - அய்நாபில் குறுக்கே கடக்கிறது.

மேலும் இந்த ஓடை ஏதோமின் வடக்கு எல்லையாகவும், மோவாபுக்குத் தெற்கு எல்லையாகவும் உள்ளது. எசா 15:7-இல் வரும் அராவீம் ஓடையும், இவ்வோடையும் ஒன்றாக இருக்கலாமென எண்ணப்படுகிறது. அராபா ஓடையும் (ஆமோ 6:14) இதுவாக இருக்கலாம்.

செரேத்து (ZERETH - பேரொளி)

இவர் யூதா குலத்தில் தோன்றியவர் கேலாவின் (எலயா) தலைமகன். இந்தக் கேலா அஸ்கூரின் மனைவியாவார் (1 நாள் 4:7).

செரேத்து - சாகார் (ZERETH - SHAHAR -விடியலின் பேரொளி)

மோவாபு பீடபூமியிலுள்ள இந்த ஊர் மோசேயால் ரூபனின் கோத்திரத்திற்குக் கொடுக்கப்பட்டது (யோசு 13:19). இது நவீன சாரத் ஆக இருக்குமெனக் கருதப்படுகிறது. இந்தச் சாரத் சாக்கடலின் கிழக்குக் கரையில், கால்லிர்ரோ வெந்நீரூற்றின் அருகே அமைந்துள்ளது.

செரேபியா (SHEREBIAH - யாவே பாலைவனச் சூட்டை அனுப்பியுள்ளார்)

1. மக்லியின் மகன். புத்திக் கூர்மையுள்ளவர். எஸ்ரா, யூதாவுக்குத் திரும்பியபோது கூடாரத்தில் தங்கிய காலத்தில், கோவில் பணி செய்தவர். அவரிடம்தான் புனிதப் பொருட்கள் கொடுக்கப்பட்டிருந்தன (எஸ் 8:8-24).

2. எஸ்ரா சட்டத்தை வெளிப்படையாக வாசித்தபோது அதில் கலந்து கொண்ட ஒரு லேவியர் (நெகே 8:7). மக்களுக்குச் சட்டத்தை விளக்கிக் காட்டியவர்களில் ஒருவர் (9:4-5). உடன்படிக்கை புதுப்பிக்கப்படும் போது, சாட்சியாக இருந்தார் (10:12).

3. நாடு கடத்தப்பட்டதிலிருந்து செருபாபேலுடன் திரும்பிய ஒரு லேவியர் (நெகே 12:8). இவர் லேவியர்களுக்குத் தலைவரானார் (12;24). 'நெகேமியா காலத்தைச் சேர வேண்டிய இப்பெயரானது, செருபாபேல் காலத்தில் தவறுதலாக இடம் பெற்றிருக்கிறது' என்று அறிஞர் சிலர் கருதுகிறார்கள்.

செரேரா (ZERERAH)

கிதியோன், மிதியானியரைத் தோற்கடித்த போது மிதியானியர் படை இந்தச் செரேரா வழியாக ஓடியது (நீதி 7:22). இது செரேதாவாக இருக்கவேண்டும் என்று விளக்கவுரையாளர் பலர் கருதுகின்றனர்.

சேரோர் (ZEROR - கூரியகல், தீக்கல்)

இவர் சவுல் மன்னனின் முன்னோர்; பெக்கோராத்தின் மகனும் அபியேலின் தந்தையுமாவார் (1 சாமு 9:1).

செரோன் (SERON)

யூதா மக்கபேயு இஸ்ராயேலின் தலைவனாக மாறியவுடன் அவரை அடக்கித் தன் பெயரை நிலைநாட்டுவதாகக் கூறிச்சென்ற சீரியப் படைத்தலைவனும் கூலே - சீரியாவின் ஆளுநரும் ஆவார். ஆனால் எருசலேமுக்கு வடமேற்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள பேத்து - கோரோன் ஏற்றத்தில் யூதா மக்கபேயுவால் தோற்கடிக்கப்பட்டார் (1 மக் 3:13.23). இத்தோல்வி, யூதாவின் போர் ஆதிக்கம் சீரியாவுக்கு ஒரு பெரிய ஆபத்தாகும் என்று காட்டியது.

செர்கியு பவுல் (SERGUIUS PAULUS)

கி.பி. 45-இல் பவுலும், பர்னபாவும் சைப்ரஸ் தீவிற்குச் செல்லுகையில் செர்கியு பவுல் ஆளுநராக இருந்தார். நல்லறிவு படைத்த அவ்வாளுநர் கடவுளின் வார்த்தையைக் கேட்க விரும்பியதைப் பார்யேசு அல்லது எலிமா என்னும் மந்திரவாதி தடுக்கவே அவன் குருடானான். நடந்ததைக் கண்ட ஆளுநனும் விசுவாசித்தார் (அ.ப. 13:7-12).

கி.பி. 168-இல் மற்றொரு செர்கியு பவுல் என்பவர் ஆளுநராக இருந்தாரென்று பழங் காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆனால் இதற்கு முன்னதாக இப்பெயரைக் கொண்ட ஆளுநர் இருந்ததாகத் தெரியவில்லை. இருப்பினும் ஒரு கல்வெட்டு செர்கியுபவுல், கிளாதியு காலத்திலே திபேரின் மேற்பார்வையாளராக இருந்தாரெனக் கூறுகிறது. அப்போஸ்தலர் பணியிலே குறிப்பிடப்பட்டிருப்பவர் இவராக இருக்கலாம்.

செலமோத்து (SHELOMOTH)

1. இவர் கேர்சோம் குலத்து லேவியர். சிமயியின் மகன். ஒரு குடும்பத்தலைவராக இருந்தார் (1 நாள் 23:9).

2. ஒரு கோகாத்திய வேியர். இசாரின் (இட்சகார்) மகன் (1 நாள் 24:22). இவர் 1 நாள் 23:18-இல் 'செலோமித்து' என்று அழைக்கப்படுகிறார்.

3. மோசேயின் மகன் எலியேசரின் வழித்தோன்றல்; ஒரு லேவியர். தாவீதின் ஆலய அதிகாரிகள் பிரிவில் (1 நாள் 23-26) செலோமோத்தும் அவரது சகோதரரும் சாமுவேல், சவுல், அப்னேர், தாவீது ஆகியோரின் போர்க்கொள்ளைப் பொருட்களிலிருந்து ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட பொருட்களுக்குப் பொறுப்பாளராக இருந்தனர் (1 நாள் 26:25-28).

செலா (SELA - பாறையான)

1. ஏதோமில் உப்புப்பள்ளத்தாக்கிலோ, அதன் அருகிலோ உள்ள பாதுகாப்பான நகரங்களுள் ஒன்று. நீதிபதிகளின் காலத்தில் எமோரியரின் எல்லையில் (நீதி 1:36) இருந்த ஒரு நகரம். இது யூதாவில் இருக்கக்கூடும். அதன் அமைவிடம் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. அறிஞர் சிலர் பெத்திராவாக இவ்விடத்தை அடையாளம் காட்டினாலும் இது சாக்கடலுக்கு அருகிலுள்ள அரபாவில் இருந்திருக்கலாம்.

2. இதனை அமசியா என்ற யூதா நாட்டு மன்னன் கைப்பற்றிய பிறகு, இதற்கு யோக்தவேல் என்று பெயரிட்டார் (2 அர 14:7). இதனைப்பற்றி உப்புப் பள்ளத்தாக்கு என்பதைத்தவிர விளக்கம் எதுவும் விவிலியத்தில் இல்லை. இந்நகரம் உம் ஏல் - பய்யாராவாக அடையாளம் காட்டப்படுகிறது. இந்நகரம் ஏதோம் நாட்டின் மேற்கு எல்லையிலும், தெற்கு எல்லையில் இருந்து சுமார் 32 கி.மீ. தொலைவிலும் காசாவிலிருந்து பாலைவனத்து மேட்டுச் சமவெளிக்குச் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. இது எரே 49:16; ஒப 3 பகுதிகளில் பேசப்படும் பாறை வெடிப்புகள் நிறைந்த பகுதியாக இருக்கலாம். ஏதோமில் நபத்தேயரின் நகரம் ஒன்றும் செலா என்ற பெயரில் இருக்கிறது.

3. மேவாபில் உள்ள ஓர் இடம். எசா 16:1-இல் அழிவைப் பற்றிப் பேசும்பொழுது தெளிவில்லாமல் குறிக்கப்படுகிறது. இதன் அமைவிடமும் தெரியவில்லை. ஒருவேளை பெத்திராவாக இருக்கலாம்.

4. இறைவனின் புகழைப்பாடும் தொலைவிலுள்ள இடங்களாகக் குறிக்கப்படுபவற்றில் ஒன்று (எசா 42:11). ஒருவேளை பெத்திராவைக் குறிக்கலாம்.

செலா (ZELA - விலா எழும்பு)

இது பென்யமினுடைய கோத்திரத்திற்குத் தரப்பட்ட நகரம் (யோசு 18:28). இந்த இடத்தில் கீசின் கல்லறை இருந்தது. இதில் சவுல் மற்றும் யோனத்தானின் எலும்புகள் இறுதியாக அடக்கம் செய்யப்பட்டன (2 சாமு 21:14). ஒரு வேளை இது சவுலின் வீடு இருந்த இடமாக இருந்திருக்கலாம். இது தற்போது எருசலேம், கிபயோனுக்கு நடுவில் இருக்கும் கிர்பெத்து சாலாவாக இருக்க

லாம் என்று அடையாளம் காட்டப் படுகிறது.

செலூக்கியா (SELEUCIA - செலூக்கினுடையது)

செலூக்கியப் பேரரசின் பல நகரங்களின் பெயர் இது. இவையெல்லாம் முதலாம் செலூக்கு நிக்காத்தோரால் நிறுவப்பட்டவை. விவிலியத்தைப் பொருத்த மட்டும் மிக முக்கியமான நகர் சீரியாவில் உள்ள செலூக்கியாவாகும். இது சீரியாவிலுள்ள அந்தியோக்கியாவின் கப்பல் துறைமுக நகரமாகும். இதுஅந்தியோவிலிருந்து 45 கிலோமீட்டர் தொலைவிலும், ஒரோன்தேசு ஆற்று முகவாயிலிருந்து வடக்கில் 6 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது. இது கி.மு. 3-ஆம் நூற்றாண்டின் மத்தியில் செலூக்குவால் நிறுவப்பட்டது. அரசியல் முறையில் இது பல தரம் கைமாறியிருக்கிறது. இது மூன்றாம் சீரியப்போரில் (கி.மு. 246.241) எகிப்தின் மூன்றாம் தோலமியால் கைப்பற்றப்பட்டது. 219-இல் இதை மூன்றாம் செலூக்கியா அந்தியோக்கு கைப்பற்றினார். 146-க்குப்பிறகு நான்காம் தோலமி பிலோமேத்தோர் பாலஸ்தீனத்தையும் சீரியாவையும் மீண்டும் கைப்பற்ற எடுத்த முயற்சியில் வீழ்ந்த நகரங்களில் செலூக்கியாவும் ஒன்றாகும் (1 மக் 11:8). ஆனால் மீண்டும் 138-இல் செலூக்கியர்களால் கைப்பற்றப்பட்டது. 63-இல் பாம்பே காலத்தில் ஒரு சுதந்தர நகராயிற்று. இந்தத் துறைமுகத்திலிருந்துதான், பவுலும் பர்னபாவும் யோவான் மாற்கும் தங்கள் முதல் மறைபரப்புப் பயணத்தில் புறப்பட்டுச் சென்றனர் (அ.ப. 13:4).

செலூக்கு (SELEUCUS)

சீரியாவின் நான்கு அரசர்களின் பெயர். செலூக்கிய அரசமரபைச் சேர்ந்தவர்கள்.

1. முதலாம் செலூக்கு நிக்காத்தோர்: மகா அலக்சாந்தரின் படைத்தளபதிகளில் முக்கியமானவர். அலக்சாந்தரின் மரணத்திற்குப்பின் சீரியாவுக்கு அரசரானவர். முதலில் பாபிலோனியா மட்டும்தான் இவருக்குக் கிடைத்தது (கி.மு.321). அதுவும் கி.மு. 316-இல் பிரிகியாவின் அந்திகோனு இவரைத் தோற்கடித்து நாட்டைவிட்டு விரட்டியதால் பறிக்கப்பட்டது. செலூக்கு எகிப்திய அரசனிடம் தஞ்சம் புகுந்து பிறகு அந்திகோனுவைத் தோற்கடித்துத் தனது அரசைத் திரும்பப் பெற்று செலூக்கிய அரச மரபுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த அரசமரபு கி.மு. 65-வரை நிலைத்திருந்தது.

கி.மு. 301-இல் இப்சுஸ் என்ற இடத்தில் நடந்த போரின் இறுதியில் சீரியாவும் சிறிய ஆசியாவும் இவரது ஆட்சியின் கீழ்வந்தன. இதன் பிறகு நடந்த நிகழ்ச்சிகள் முதலாம் மக்கபேயர் ஆகமத்தில் பேசப்படுகின்றன. கிரேக்கப் பண்பாட்டு மையங்களான அந்தியோக்கு, அபாமேயா, இலவோதிக்கேயா, ஏதேசா, பெரோயா, செலூக்கியா போன்ற நகரங்களை எழுப்பினார். அந்நகரங்களில் யூதர்கள் பலரைக் குடியுரிமை உள்ள மக்களாகக் குடியேற்றினார். இக்காலக் கட்டத்தில் அலக்சாந்தரின் அரசின் பெரும் பகுதி இவரது ஆட்சியில் இருந்தது. கி.மு. 282-இல் அலக்சாந்தரின் முழு அரசையும் தனது அதிகாரத்திற்கு மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது கொல்லப்பட்டார். இவர் முதலாம் செலூக்கு எனப்படுகிறார்.

2. இரண்டாம் செலூக்கு (கி.மு. 246-226): கல்லினிக்கு என்ற 2-ஆம் செலூக்கு சீரியாவின் இரண்டாம் அந்தியோக்குவின் மகன். இவரே தானியேல் ஆகமத்தில் பேசப்படுகிறார் (தானி 11:6-9). இவரதுகொடுமை மிக்க தாய் இலவோதிக்கேயாவைச் சேர்ந்தவர். இவள் எகிப்திய இளவரசி பெர்னிக்கியைக் கொன்றதால், எகிப்தியத் தோலமி யூர்கெத்து அரசன் இவருடன் போரிட்டு இவரை வெற்றி கொண்டார். இதன் விளைவாக அந்தியோக்கு நகரும் செலூக்கிய அரசின் பெரும்பகுதியும் எகிப்துடன் இணைந்தன. 2-ஆம் செலூக்கிய ஆட்சி அவர் குதிரையிலிருந்து விழுந்து இறந்தபோது முடிவுக்கு வந்தது.

3. மூன்றாம் செலூக்கு (கி.மு. 226-223): சோட்டேர் அல்லது செராவுனு என்றழைக்

கப்பட்ட இவர் 2-ஆம் செலூக்கின் மகனும் மகா அந்தியோக்குவின் சகோதரனும் ஆவார். இவர் சிறிய ஆசியாவில் அத்தாலு என்பவனை அடக்கச் சென்றபோது நடந்த போரில் இறந்தார். மூன்று ஆண்டுகள் மட்டுமே இவரது ஆட்சி நிலைத்தது.

4. நான்காம் செலூக்கு (கி.மு. 187-175): பிலோபாத்தோர் என்ற நான்காம் செலூக்கு மகா அந்தியோக்குவின் மகன். இவர் இரண்டாம் மக்கபேயர் ஆகமத்தில் எருசலேம் ஆலயத்தைக் கொள்ளையிடக் கெலியதோர் என்ற தளபதியை அனுப்பிய வர் என்று பேசப்படுகிறார் (2 மக் 3:7). தானியேல் ஆகமத்திலும் இவரைப் பற்றிய குறிப்பு வருகிறது (தானி 11:20). இவர் பதவியேற்ற காலத்தில் செலூக்கியாவின் செல்வாக்குக் குறைந்து உரோமையில் செல்வாக்கு வளர்ந்திருந்தது. நாட்டில் அமைதி நிலவும் பொருட்டு உரோமையுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி பெரும் நிதியை உரோமைக்குக் கட்ட வேண்டியிருந்தது. இறுதியில் இவரது தளபதியான கெலியதோர் இவரைக்கொன்று அரசைக் கைப்பற்றினாலும் இவரது சகோதரனே இவருக்கு வாரிசாக அரியணை ஏறினார். தளபதி கெலியதோர் தோல்வியடைந்தார்.

செலுமியேல் (SHELUMIEL - இறைவன் அமைதியாவார், இறைவனோடு அமைதி, இறைவன் என் நண்பன் ஆவார்)

சிமியோன் இனத்தலைவர். சுரிசதாயின் மகன். மோசேக்கு இனப் பிரதிநிதி (எண் 1:6; 2:12; 7:36.41; 10:19). இவர் பன்னிரண்டு கோத்திரத்துத் தலைவர்களில் ஒருவர். இவர் இஸ்ராயேலர் கணக்கெடுப்புக்கும், பாலைவனத்தில் நடந்த வேலைகளுக்கும் மோசேக்கு உதவி செய்த பன்னிரண்டு கோத்திரத் தலைவர்களில் ஒருவர்.

யூதி 8:1-இல் சொல்லப்பட்டிருக்கும் யூதித்தின் மூதாதையர் இவரேயாவார். அங்குச் சலாமியேல் என்றும் அவரது தந்தையின் பெயர் சரசதாய் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

செலேக்கு (ZELEK)

அம்மோனியனான இவர் தாவீதின் வலிமை வாய்ந்த முப்பது பேரில் ஒருவராவார் (2 சாமு 23:37; 1 நாள் 11:39).

செலேக (SHELESH - பலமுள்ள, மூன்று)

இவர் ஆசேரின் குலத்தில், தன் குடும்பத்திற்குத் தலைவராக இருந்தவர். இவர் ஏலேமின் புதல்வர் (1 நாள் 7:35).

செலேது (SELED - உயர்த்தப்பட்ட)

யூதாவின் வழிவந்த நாதாபுவின் முதல் மகன் (1 நாள் 2:30). ஒருவனது அழியா வாழ்வு அவனது வாரிசுகளால் அமைவதாகக் கருதப்பட்ட அக்காலத்தில் இவருக்கு மரணம் வரையிலும் குழந்தைகள் இல்லை. இது எபிரேய மக்களிடம் பெரும் சாபமாகக் கருதப்பட்டது.

செலேபு (SHELEPH - வெளிக் கொணரப்பட்ட)

யோக்தானின் மகன். சேமின் வழித்தோன்றல். எனவே அரேபிய இனத்தின் பெயராக உள்ளது (ஆதி 10:26; 1 நாள் 1:20). இப்பெயர் சுசர் - மாவேத்து (அட்சர் மாவேத்து) முன் குறிப்பிடப்பட்டிருப்பதால் இது தென் அரேபியாவில் இருந்திருப்பது தெளிவாகிறது. இந்த இனத்தவர் ஏமானில் வாழ்ந்திருக்கலாம்.

செலேமியா (SHELEMIAH - யாவே ஈடுசெய்துள்ளார், யாவே என் நிறைவாவார்)

1. ஒரு லேவியர் பரம்பரையில் பிறந்த கோராகியர். புனித இட வாயிற்காப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1 நாள் 26:14). இவர் 1 நாள் 26:1-இல் மெசலேமியா என்று அழைக்கப்பட்டுள்ளார்.

2. பின்னுயின் மகன். இவர் எஸ்ராவின் சீர்திருத்தப்படி புறவின மனைவியையும், மக்களையும் நீக்கிவிட்டார் (எஸ் 10:39).

3. பின்னுயின் இன்னொரு மகன். இவரும் எஸ்ராவின் சீர்திருத்தப்படி புறவின மனைவியையும், மக்களையும் நீக்கிவிட்டார் (எஸ் 10:41).

4. கனனியாவின் (அனனியா) தந்தை அல்லது மூதாதையர்; நெகேமியா காலத்தைச் சேர்ந்தவர் (நெகே 3:30).

5. ஒரு குரு. நெகேமியா கோவில் மகமையை லேவியர்களுக்குள் பிரித்துக் கொடுக்க மூன்று பேர்களை நியமித்தார். அவர்களில் இவரும் ஒருவர் (நெகே 13:13). இந்த நியமனங்கள், வழிபாட்டு நடைமுறைகளை மீண்டும் கொண்டு வருவதில் நெகேமியாவின் செயல்களில் ஒன்று. இவ்வாறு லேவியர்கள் கோவில் வழிபாடுகளில் தங்களையே அர்ப்பணித்துக் கொள்ள வழிவகுக்கப்பட்டது.

6. கூசியின் மகன். எகுதியின் மூதாதையர். எரேமியா காலத்தவர் (எரே 36:14).

7. அப்தயேலின் மகன். யோயாக்கிம் எரேமியாவின் இறைவாக்குச் சுருளை வாசித்த பின் எரேமியாவையும் பாருக்கையும் கைது செய்ய மூன்று பேரை அனுப்பினார். அவர்களில் இவரும் ஒருவர் (எரே 36:26).

8. எகுக்கல் (எரே 37:3) அல்லது யூக்காவின் (38:1) தந்தை.

9. கனனியாவின் (அனனியா) மகன் இரியாவின் (இரிய்யா) தந்தை. எரேமியா காலத்து மெய்க்காப்பாளர் (எரே 37:13).

செலோபுகாது (ZELOPHEHAD - அச்சத்திலிருந்து பாதுகாப்பு)

மனாசே வழித்தோன்றலும் கேப்பேரின் (எபர்) மகனுமான இவர் பாலைவனத்தில் புதல்வர்களின்றி இறந்தார் (எண் 26:33; 27:17; 36:2.6.6-11; யோசு 17:3; 1 நாள் 7:15). இவர் இறந்தவுடன் இவரது ஐந்து புதல்வியர்கள் மக்லா, நோவா, கொகிலா, (ஒகுலா), மில்கா, திரட்சா ஆகியோர் மோசேயிடம் சென்று பெண்களுக்கு மரபுரிமை தர வேண்டினர். மோசே மரபுரிமை வழங்கிச் செலோபுகாது விட்டுச் சென்ற சொத்துக்களுக்கும் அவர்கள் உரிமையாளராகும்படி செய்தார். இது ஒரு சட்ட முன்மாதிரியாயிற்று (எண் 27:1-11). இப்படிப்பட்ட புதல்வியர், குலமரபுச் சொத்தை வைத்துக் கொள்ள, அவர்கள் குலத்தினருக்குள்ளேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. இதனால் ஒரு குலம் அதன் சொத்தின் ஒரு பகுதியையும் இழக்கவில்லை (36:1-12). நாடு பங்கிடு செய்யப்பட்டபோது செலோபுகாதின் புதல்வியர், மனாசே பகுதியில் தங்கள் சொத்தைப் பெற்றனர் (யோசு 17:3-6).

செலோமித்து (SHELOMITH - அமைதியான)

இப்பெயர் சில இடங்களில் செலமோத்து என்ற பெயரோடு குழப்பப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக அ) ஒரே ஆள் 1 நாள் 23:18-இல் செலோமித்து என்றும், 1 நாள் 24:22-இல் செலயோத்து என்றும் குறிக்கப்பட்டுள்ளார். ஆ) 1 நாள் 26:25-28-இல் இரண்டு பெயர்களும் ஒரே ஆளுக்குச் சொல்லப்பட்டுள்ளது. நோத் என்பவர் பெயர் ஒரு ஆளுக்குப் பெயராக வந்தால் செலமோத்து என்பது சரியானது என்றும் செலோமித்து என்பது வாசகப் பிழை என்றும் கருத்து தெரிவிக்கிறார்.

1. ஒரு தாண் குலத்தினள். திப்ரியின் மகள். இஸ்ராயேலரோடு குடியிருந்த எகிப்திய ஆடவனால் தாயானவள். இவர்களுக்குப் பிறந்த பெயர் தெரியாத ஒருவன் பாளையத்திலே ஓர் இஸ்ராயேலனோடு சண்டையிட்டு, ஆண்டவருடைய பெயரையும், ஆண்டவரையும் பழித்துப் பேசினான். அவனைக் கல்லால் எறிந்து கொன்றனர் (லேவி 24:10-23).

2. செருபாபேலின் மகள் (1 நாள் 3:19).

3. கோகத்திய குலத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். இசாரின் (இட்சகார்) முதல் மகன் (1 நாள் 23:18). 1 நாள் 24:22-இல் செலமோத்து (2) என்று அழைக்கப்படுகிறார்.

4. ரெகபயாமுக்கும் அப்சலோமின் மகள் மக்காவுக்கும் பிறந்த மகன் (அல்லது) மகள் (2 நாள் 11:20).

5. யோசிபியாவின் மகன். பானியின் வழித்தோன்றல். பாபிலோனிலிருந்து எஸ்

ராவோடு திரும்பிய ஒரு குடும்பத்துத் தலைவன் (எஸ் 8:10).

செல்சகு (ZELZAH - நிழல், வேகமாய்ப் பாய்ந்து ஓடுதல்)

பென்யமின் எல்லையில் ராகேலின் கல்லறை அருகே இந்த இடம் உள்ளது. ஆண்டவர் சவுலை அரசனாக அபிடேகம் செய்ததற்குரிய முதல் அடையாளம் இங்கே நிகழ்ந்தது (1 சாமு 10:1-2). எங்கு செல்சகுமும் ராகேலின் கல்லறையும் இருந்தன என்பது சர்ச்சைக்குரியதாகும்.

செல்வம் (WEALTH)

I. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும், செல்வம், ஏழ்மை பற்றிய கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானதாகத் தோன்றுகின்றன. உண்மையில், கிறிஸ்து விண்ணரசு விலைமதிப்பில்லாச் சொத்து என்றும், அதைப்பெற அனைத்தையும் தியாகம் செய்தாலும் தகும் என்றும் கூறும்போது தான் மனிதனின் சொத்து, திரவியத்தின் உண்மையான தரம் தெரிகிறது. இவ்வுலகச் சொத்தும் செல்வமும் எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் அது விண்ணக செல்வத்திற்குத் தாழ்வுபட்டதே (மத் 13:44). இருப்பினும், கிறிஸ்து கடவுளிடமிருந்து கொடையாகப் பெறாத, கடவுளுக்குப் புறம்பாகப் பெற்ற செல்வம் வீணானது, ஆபத்தானது என்ற பழைய ஏற்பாட்டுக் கருத்தினை வலியுறுத்தவும் செய்கிறார். கடவுள் தாம் தேர்ந்தெடுத்தவர்களைத் தம் கொடைகளால் நிரப்புகிறார் என்ற இறைவனின் பழைய வாக்குறுதியைக் கிறிஸ்து மறுக்கவில்லை, அழிக்கவில்லை. மாறாக, அதனை நிறைவேற்றுகிறார். செல்வம் ஆபத்தானது, எனவே நற்செய்தியின்படி நிறைவாழ்வு வாழ, இதனை விட்டுவிட வேண்டும் என்பது செல்வம் தீயது என்பதற்காக அல்ல. ஆனால் கடவுள் மட்டுமே நன்மையானவர் (மத் 19:17); அவர் மட்டுமே நம் இதயம் களிக்கும் சொத்து என்று காட்டவே.

II. இறைவன் தாம் தேர்ந்து கொண்டோரைச் செல்வராக்குகிறார்.

1. செல்வம் நன்மை பயப்பதே: பழைய ஏற்பாட்டின் இறுதியாய் அமைந்த பகுதிகளில்கூட, கடவுளுக்குகந்தவர்கள் செல்வத்தால் நிரப்பப்படுவரென்று இஸ்ராயேலரின் வரலாறு போற்றிப்புகழ்கிறது. யோபு அவரது சோதனைகளுக்குப்பின், தாவீது, யோசபாத்து, எசேக்கியா போன்ற புனித அரசர்களின் வாழ்க்கைகள் இதற்குச் சான்று (2 நாள் 32:27தொ). கோமர் வாழ்ந்த கிரேக்க நாட்டில் போன்று, இஸ்ராயேலிலும் செல்வம் உயர்குலத்தின் அடையாளமாகக் கருதப்பட்டு வந்தது. கடவுள் யாரை அதிகம் அன்பு செய்கிறாரோ அவர்களைத் தம் செல்வக் கொடைகளால் நிரப்புகிறார் என்று நம்பினர். இதை ஆபிரகாம் (ஆதி 13:2), ஈசாக்கு (26:12), யாக்கோபு (30:43), இன்னும் அவர் வழிவந்தவர்கள் வாழ்விலும் தெளிவாகக் காண்கிறோம். எப்பிராயிமுக்கு உதவியாக வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, கொங்கைகளிலிருந்தும், கருப்பைகளிலிருந்தும் ஆசிர்பெறுகிறார் அவர் (ஆதி 49:25). யூதா, தன்னுடைய கண்கள் மதுவைவிட ஒளியுள்ளவை, பற்கள் பாலைவிட வெண்மையாக உள்ளனவென்று ஆண்டவரில் அகமகிழலாம் (49:12). யாவே இஸ்ராயேல் மக்களுக்கு வாக்களித்த பூமியில் அவர்களுக்கு எதுவுமே குறையிருக்காது (உப 8:7-10; 28:1-12).

இவ்வுலகச் செல்வமும் நல்லதே. ஏனென்றால், செல்வமிருந்தால் யாருடைய தயவையும் நாடாது சுதந்தரமாக வாழ முடியும். யாரிடமும் இரந்து பிச்சை கேட்க வேண்டியதில்லை (பழ 18:23). கடன் தந்தவனுக்கு அடிமையாயிருக்கும் நிர்ப்பந்தமில்லை (22:7); அது பல பயனுள்ள நண்பர்களை ஈட்டித் தருகிறது (சீரா 13:21). செல்வம் சேகரிப்பதென்றால், விடாமுயற்சி (பழ 10:4; 20:13), ஞானம் (24:4), இயல்பான வாய்மை (12:11), துணிவு (11:16), தன்னடக்கம் (21:17), போன்ற நல்ல மனிதப் பண்புகளை வளர்ப்பதும் அவசியமாயுள்ளது.

2. செல்வமே எல்லாமல்ல: செல்வம் நல்லது, நன்மைபயக்கிறது. ஆனால், இறைவ

ணிடமிருந்து பெறக்கூடிய முதன்மையான கொடையென்று கூறமுடியாது. உதாரணமாக, ஆன்ம அமைதி (பழ 15:16), நற்பெயர் (22:1) நற்சுகம் (சீரா 30:14), நீதி (பழ 16:8) போன்ற கொடைகள் செல்வத்தைவிடப் பன்மடங்கு உயர்வானவை; விரும்பத்தக்கவை. எனவே, செல்வத்தின் சிறப்பையும், அதனோடு அதன் குறைபாடுகளையும் உடனே காணமுடிகிறது. செல்வத்தை மட்டும் வைத்து எல்லாவற்றையும் வாங்கிவிட முடியாது. சாகாத்தன்மை (பழ 49:8), அன்பு (உ.ச. 8:7), போன்ற பலவற்றைச் செல்வத்தால் வாங்கிவிட முடியாது. செல்வத்தால் பல பயனற்ற கவலைகள் உருவாகின்றன: உதாரணமாக, பிறரை ஒட்டியே வாழும் நண்பர்களை உபசரிப்பதிலேயே தங்களை அலட்டிக் கொள்வதோடு (திருவுரை 5:10), வேண்டாத பல அன்னியர்களைத் தங்கள் சொத்துக்கு உரிமையாளராக்கித் தவிப்பர் (6:2). செல்வத்தைவிட ஞானத்தையும் அதன் ஊற்றையும் தேடுவது எப்போதும் அவசியமாகும் (1 அர 3:11;யோபு 28:15-19; ஞான 7:8-11). ஞானமே உண்மையான சொத்து; விலைமதிப்பில்லாப் பவளம்; அதைப்பற்றியே எல்லா அக்கறையும் கொள்ள வேண்டும் (பழ 2:4; 3:14; 8;11).

3. செல்வம் இறைவனின் கொடை: செல்வம் இறைவனின் தாராளத் தன்மைக்கு அடையாளமாய்த் திகழ்வது; இறைவன் தாம் தேர்ந்து கொண்டவர்களுக்குத் தயங்காது, தடுக்காது, தவறாமல் கொடுக்கும் வாழ்வு முழுமையின் ஓர் அறிகுறி. செல்வச் செழிப்பு, கடின உழைப்பின் உரிய பலனன்றோ? செல்வம், தேர்ச்சியின், வெற்றியின், மேன்மையின் சின்னமாய்த் திகழ்கிறது (சங் 37:19). மாறாக வறுமையோ தோல்வியின், அவமானத்தின் குறியாய் அமைகிறது (எரே 12:13). நீடிய வாழ்வு, நற்சுகம், மனிதர் மத்தியில் மதிப்பு மரியாதை ஆகியவற்றோடு செல்வம் வாழ்வில் அமைதியின் மற்றும் முழுமையின் ஒரு பாகமாக அமைகிறது. இறைவன் ஒருவரைத் தனக்குகந்தவராக்கிக் கொள்ளும்போது, அவரைத் தம் கொடைகளால் முழுதும் நிரப்புகிறார். அவர் கண்காணிப்பிலிருப்பவர்களுக்குக் குறையேதுமிராது (சங் 23:1;34:10). வனாந்தரத்தில் தம் மக்களுக்கு வயிறார உணவளித்தார் (யாத் 6:8-15; சங் 78:24-29). அதைவிடப் பன்மடங்கு வாக்களிக்கப்பட்ட நாட்டில் அளித்தார் (லேவி 26:9; 25:19; உப 11:15; நெகே 9:25). மனிதனைத் தன் இருப்பிடமாகிய ஆலயத்திற்கு அழைக்கும்போது அவன் பூரணத் திருப்தியடையும்வரை தம் கொடைகளை வழங்குகிறார் (சங் 23:5; 36:9); அத்தோடு மட்டுமல்லாது, தம் திருமுக தரிசனம் தந்து ஆனந்தக் கடலில் மூழ்கவைக்கிறார் (சங் 16:11). விழாக்களிலும், கொண்டாட்டங்களிலும், இஸ்ராயேல் மக்களிடம் நாம் காண்பது, அவர்கள் கடவுளின் பெருந்தன்மையை, தாராளத்தன்மையை இறைவன் கொடைகளில் கண்டறிந்து, பறைசாற்றுவதேயாகும் (உப 16:14தொ). தானமிடக் கூறும் கட்டளை, இறைவனின் தாராளத் தன்மையைக் கண்முன் நிறுத்தி அதன்படி, அவர்களும் தாராளமனதுடன் வாழத்தூண்ட எழுந்ததே. ''அனாதைகளுக்குத் தந்தையாயிரு.. நீ உன்னதரின் மகனாய்த் திகழ்வாய்'' (சீரா 4:10; யோபு 3:18).

4. கடவுள் நம்மைத் தமது செல்வத்தால் நிரப்புகிறார்: கடவுள் தம் மகனில் நம்மிடம் நிரப்பும் செல்வம் ''நாவன்மையும், அறிவும்'' (1 கொரி 1:5), ''அருளும் நன்மை''யுமாகும் (எபே 2:7). இச்சொத்து, இவ்வுலகச் சொத்துக்களிலிருந்து வேறுபட்டது. இவை நம் ஆன்ம பசியையோ (6:35) தாகத்தையோ (4:14) தீர்த்துவைக்க இயலா. இச்செல்வம் இறைவனின் அளவு கடந்த தெய்வீகத் தயவிலிருந்து, தாராளத்தன்மையிலிருந்து வருகிறது. எனவேதான் புனித பவுல் தங்கள் உலகப் பொருட்செல்வங்களைத் தாராளமாய் வழங்கக் கிறிஸ்துவர்களை அழைக்கிறார். ஏனென்றால் இவர்கள் தெய்வீக, ஆன்மீகக் கொடைகளால் நிரப்பப்பெற்றவர்கள் (2 கொரி 8:7). அதுமட்டுமன்று, இறைவன் ''எல்லா நன்மைகளால்'' (9:8) திரும்ப அளிப்பாரென்று உறுதியிட்டுக்கூறும்போது, பொருட்செல்வத்தையும் சேர்த்துத்தான் கூறுகின்றார். இந்தப் பொருட்செல்வம் அவர்

களுக்கு எப்போதும், எச்சந்தர்ப்பத்திலும், தேவையானதையெல்லாம் அளிக்கும்; அவர்களை எல்லா வகையிலும் செல்வ ராக்கும் (9:8.11) என்று கூறுகிறார்.

அப்பம் பல்கினபின் கூடைகள் நிறைய மீதமிருந்தவைகளைச் சேகரித்தனர் என்று நற்செய்தி வலியுறுத்துவது, எதார்த்தமாக அல்ல (மத் 14:20; 15:37; 16:9). கடவுளின் அருட்கொடை வழங்கும் முறையே இப் படித்தான். திருப்திப்படுத்தல் என்பது ஓர் ஆழ்ந்த கிறிஸ்துவ உண்மை. கிறிஸ்துவிடம் வருபவனுக்கு என்றுமே பசியோ (யோவா 6:35) தாகமோ (4:14) இராது. தாம் தேர்ந் தெடுத்தவர்களுக்கு, வேண்டியதற்கு மேலே கொடுக்கிறார் இறைவன். அவர்கள் வருத் தப்படுகிற, பொறாமைப்படுகிற அளவுக்கு விடுவதில்லை. நற்செய்தி எளிமை, தன் னைப்பற்றிய தாழ்வான எண்ணம், மறை முக வெறுப்பு இவைகளை நீக்குகிறது. இவ்வேழ்மையிலும், ஒரு கிறிஸ்துவன் உல கத்தையும்விட உயர்ந்த செல்வமுடையவன். மற்றவர்கள் பவுலைத் தரித்திரராகக் கருதும் போதும், அவர், தான் அனைத்தையும் கொண்டிருப்பதாகக் கூறுகிறார் (2 கொரி 6:10). மனிதன் விரும்பவேண்டிய உண்மை யான செல்வமில்லா நிலையில், தன்னைச் செல்வந்தனாகக் கருதுகிற மந்த புத்திக்காரன் பரிதாபத்துக்குரியவன் (திருவெளி 3:16). ஏழைகளும் துன்புறுத்தப்படுவோரும் பேறு பெற்றவர்கள். அப்படிப்பட்டவர்கள் உண் மையிலே செல்வந்தர்கள் (2:9).

III. செல்வம் விளைவிக்கும் மாயையும் ஆபத்தும்: இறைவன் தன் அன்பர்களைச் செல்வர்களாக்குகிறார் என்றால், உடனே எல் லாச் செல்வங்களும் அவருடைய ஆசீரின் விளைவு என்று கருதுதல் சரியல்ல. பழங் காலத்து மக்கள் தவறான முறையில் சேர்க்கப் பட்ட செல்வத்தைப்பற்றி நன்கு அறிந்திருந் தனர். அஃதோடு இப்படித் தவறான முறை யில் ஈட்டிய செல்வம் நீடிய பலன் தராதென் றும் பலனற்றதென்றும் உணர்ந்திருந்தனர் (பழ 21:6; 23:4தொ; ஓசே 12:9). கயவன் தீயவழியில் திரவியம் திரட்டினாலும், இறுதியில் அது நேர்மையானவர்களுக்கே உடைமை யாகும் (பழ 28:8). பலருக்கும் பயன்படாமுறையில் சிலரை மட்டுமே சிறப் புடன் வாழவைக்கும் சொத்து தவறான வகை யில் ஈட்டியதாகும். ''வீட்டோடு வீடு சேர்ப் பவர்களே, வயலோடு வயல் இணைத்துக் கொள்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! பிறருக்கு இடமில்லாது நீங்கள் மட்டும் தனித்து நாட்டில் வாழ்வீர்களோ?'' (எசா 5:8). அப்படிப்பட்டவர்களின்... வீடு முழுவ தும், கொள்ளையடித்த பொருட்களால் நிரப் பப்பட்டுள்ளது. இத்தீய வழிமூலம்தான் அவர்கள் பணக்காரர்களாகப் பலுகிப் பெருகு கின்றனர். அவர்கள் கொழுத்துத் தளதள வென்றிருக்கிறார்கள் (எரே 5:27 தொ).

கடவுள் தனக்குத் தேவையில்லை என்று மமதை கொண்டுள்ள செல்வந்தர்கள் கயவர்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் பொருட்செல்வமே அவர்களின் ஒரே பெருமை. அதையே தன் அரணாக அமைத் துக் கொள்கின்றனர் (பழ 10:15). இறைவன் மட்டுமே யாவற்றையும் வெல்லவல்ல ஒரே அரணாய், மதிலாய்த் திகழ வேண்டியவர் என்பதை மறந்துவிடுகின்றனர் (சங் 52:9). அளவிலா வெள்ளி, தங்கம்... எண்ணில்லாக் குதிரை, தேர் மலிந்து கிடக்கும் நாடு, மிக விரைவில் பொய்த் தேவதைகள் நிறைந்த நாடாகிவிடுகிறது (எசா 2:7தொ). ''தன் செல்வத்தை நம்பி வாழ்பவன் சருகென உதிர்வான்'' (பழ 11:28; காண் எரே 9:22). இறைக்கொடைகளே உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதற்குப் பதில் அதை மறுக் கும் சாதனமாக அல்லது சூழ்நிலையாக அமையலாம்; ''வளமான மேய்ச்சல் கிடைத்த படியால் அவர்கள் மனநிறைவுற்றார்கள்; மனநிறைவடைந்ததும் செருக்குற்று என்னை மறந்துபோனார்கள்'' (ஓசே 13:6; உப 8:12 தொ). இஸ்ராயேலர், இறைவன்தான் அவர் களின் அளவற்ற ஆசிருக்கு ஊற்று என்பதை அடிக்கடி மறந்தனர் (ஓசே 2). தன் காதலனா கிய கடவுளிடமிருந்து பெற்ற அணிகலன் களை வைத்தே இஸ்ராயேல் வேசி வாழ்க்கை நடத்துகிறாள் (எசே 16). செழிப் பான காலத்தில் பிரமாணிக்கமாயிருப்பது

கடினமாய் இருக்கிறது. ஏனென்றால் மனம் போன போக்கின்படி வாழும் சுலப வாழ்வு இதயத்தை மூடிவிடுகிறது (உப 31:20; 32:15; யோபு 15:27; சங் 73:4-9). மேலும் அரசன்கூட பொன்னையோ, செல்வத்தையோ நம்பாது (உப 17:17), ஆகூர் இறைமுன் வேண்டியது போல் செபித்தால், அவன் விவேகமுள்ளவன். ஆகூரின் மன்றாட்டு இதுவே; ''இறைவா எனக்குச் செல்வம் வேண்டாம்; வறுமையும் வேண்டாம். எனக்குத் தேவையான உணவை மட்டும் தந்தருளும். எனக்கு எல்லாம் இருந்தால், நான் 'உம்மை எனக்குத் தெரியாது' என்று மறுதலித்து ஆண்டவரைக் கண்டது யார்? என்று கேட்க நேரிடும். நான் வறுமையுற்றால் திருடனாகி என் கடவுளின் திருப்பெயருக்கு இழிவு வருவிக்க நேரிடும்'' (பழ 30:6-9).

புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாட்டின் செல்வம் பற்றிய கருத்துக் குவியலிலிருந்து தாராளமாய் வாரி எடுத்துக்கொள்கிறது. செல்வத்தின் தீமைக்கெதிராய் வெகுண்டெழுந்த இறைவாக்கினர்கள் போல், யாக்கோபும் செல்வத்திலே முழுத் திருப்தி கொள்பவர்களுக்கும் அவர்களின் மட்கிப்போன செல்வத்திற்கும் எதிராக வசைமாரி பொழிகிறார் (யாக் 5:1-5). ''இவ்வுலகில் செல்வம் படைத்தவர் இறுமாப்புக் கொள்ளவாகாது, நிலையில்லாச் செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல், நமது இன்பத்துக்காக எல்லாவற்றையும் தாராளமாக அளிக்கும் கடவுளில் மட்டுமே நம்பிக்கை வைக்கவேண்டும் (1 திமோ 6:17). செல்வத்தின் மமதை உலகிற்குச் சமம். பணத்தையும் பரமனையும், மனிதன் சமமாக விழைய முடியாது (1 யோவா 2:15 தொ).

IV. பணமா? பரமனா?:- 1) செல்வம் பற்றிய மனப்பான்மை, பழைய ஏற்பாட்டிலிருந்து நற்செய்திக்கு மாறுபடும் கருத்து சற்றுக் கொடூரமாகிறது. ''செல்வர்களே ஐயோ! உங்களுக்குக்கேடு. ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டீர்கள்'' (லூக் 6:24) என்ற கூற்று திரும்பிப் பெறமுடியாத கண்டனத் தொனியைக் கொண்டுள்ளது. இதன் முழுப்பொருளும், மலைப்பொழிவின் பேறுதன்மையையும், அதே நேரத்தில் அதன் சாபமும், உபாகமத்தில், சீரிய செக்கேம் காட்சியில் இஸ்ராயேலரின் பிரமாணிக்கம், பிரமாணிக்கமின்மைக்கேற்ப அமைந்த ஆசிர், சாபத்துடன் (உப 28) ஒப்பிடும்போது தான் தெரியவரும். இங்கேபோல் பழைய புதிய ஏற்பாட்டிற்கிடையேயுள்ள வேறுபாடு வேறெங்கும் அவ்வளவு துல்லியமாகத் தெரிவதில்லை.

விண்ணரசின் நற்செய்தி இறைவனின் முழுக் கொடையையும் இறைவனில் முழுமையான ஒன்றிப்பையும், தந்தையின் வீடு புகுதலையும் பறைசாற்றுகிறது. ஆனல் இவற்றையெல்லாம் பெற ஒருவன் தன்னிடமுள்ள எல்லாவற்றையும் கொடுக்க வேண்டும். மதிப்புமிக்க மாணிக்கத்தைப் பெற, விலைமதிப்பில்லாச் சொத்தைப்பெற, தன்னிடமுள்ள எல்லாவற்றையும் விற்க வேண்டும் (மத் 13:45 தொ). ஏனென்றால் ஒருவன் இரு தலைவர்களுக்குப் பணிசெய்ய முடியாது (மத் 6:24). பணம் இரக்கமில்லா எசமான்; நற்செய்தியின் வார்த்தையை நெருக்கிவிடும் (மத் 13:22). மிக முதன்மையானதை, இறைவனின் மேலாண்மையை மக்கள் மறக்கும்படி செய்கிறது (லூக் 12.15-21). நிறைவுடைமையை நோக்கிச் செல்லும் பயணத்தில் நல்ல மனதுடையவர்களையும் தடை செய்யும் (மத் 19:21தொ). எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டிய கோரிக்கை ஒரு வரம்பில்லாச் சட்டமாகும். இதில் விதிவிலக்கோ மட்டுப்படுத்துதலோ இல்லை எனத் தோன்றுகின்றது. ''உங்களில் தன் உடைமையெல்லாம் விட்டுவிடாத எவரும் என் சீடராய் இருக்க முடியாது'' (லூக் 14:33; காண் 12:33). இவ்வுலகில் தன்னுடைய செல்வத்தை (லூக் 16:25) அதன் சுக போகங்களைக் (லூக் 6:24) கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவன் விண்ணரசில் நுழைய முடியாது. ஊசியின் காதுவழியாக ஒட்டகம் நுழைவது கூட சுலபமாகும் (மத் 19:23தொ). ஏழைகளே நற்செய்தியைப்பெறத் தகுதி பெற்றவர்கள் (எசா 61:1=லூக் 4:18; 1:53). நமக்காகத்

தம்மையே ஏழையாக்கி, நம்மைத் தன் ''அளவில்லாச் செல்வங்களால்'' (எபே 3:8) செல்வந்தர்களாக்கினார் நம் ஆண்டவர் (2 கொரி 8:9).

2. ஏழைகளுக்குக் கொடுங்கள்: செல்வத்தைத் துறத்தல் என்றால் தன் உடைமையை, சொத்துரிமையை, விட்டுக் கொடுத்தல் என்பதல்ல. இயேசுவைப் பின்சென்றவர்களில் கூட, சிலர் நல்ல வசதிபடைத்தவர்களே. அரிமாத்தியா செல்வந்தர்தான். அவர் இயேசுவின் திருவுடலைத் தன் கல்லறையில் அடக்கம் செய்ய ஏற்றுக்கொண்டார் (மத் 27:57). செல்வத்தை ஓர் இடைஞ்சலாக நினைத்து உதறித் தள்ளிவிடவேண்டும் என நற்செய்தி விரும்பவில்லை. ஏழைகளோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே அதன் கோரிக்கை (மத் 9:21; லூக் 12:23; 19:8). ஆனால் ஒரு செல்வந்தன் தன் ''நேர்மையற்ற செல்வத்தால் (உலகின் எந்தச் சொத்துதான் அநீதியுடன் தொடர்பற்றுள்ளது?), நண்பர்களைச் சேகரித்துக் கொண்டால் கடவுள் கடினமான மீட்பு வழியைத் திறப்பார் என எதிர்பார்க்கலாம் (லூக் 16:9). ஒரு பணக்காரன் இருந்தான்: ஓர் ஏழை இலாசர் உடன் இருந்தான் என்பது அல்ல துர்மாதிரிகை. ஆனால் இலாசர் பணக்காரனுடைய மேசையிலிருந்து விழும் ரொட்டித் தூள்களுக்கு ஏங்கினான் (லூக் 16:21). அவனுக்கு அணு அளவும் கிடைக்கப் பெறாது மறுக்கப்பட்டான் என்பதே. பணக்காரனுக்கு ஏழையின்பால் பொறுப்புண்டு. கடவுளுக்குப் பணிந்து பணிபுரிபவன் தன் பணத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கிறான். ஆனால் பணத்திற்குப் பணிபுரிபவன் அதைத் தன்னோடு வைத்து அதிலே முழு நம்பிக்கை வைக்கிறான்.

உண்மையான செல்வம் என்பது தன்னோடு வைத்திருப்பது அன்று, பிறருக்குக் கொடுப்பதே என்று உறுதியாய்க் கூறலாம். இக்கொடுத்தல் கடவுளின் தாராளத் தன்மையை நம்பிச் செயல்படுகிறது. இது கொடுப்பவரையும், பெறுபவரையும், நன்றிப் பெருக்கில் இணைக்கிறது (2 கொரி 9:11). இவ்வாறு ஈவது ''பெறுவதைவிடக் கொடுத்தலே மேன்மையுடையது'' என்பதைச் செல்வந்தனைத் தன் அனுபவத்தில் உணரவைக்கிறது (அ.ப. 20:35).

செவா (SHEVA - வீண்பெருமை, தந்தை போன்ற)

1. தாவீதின் நிர்வாக அலுவலர்கள் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள செயலர். அரசாங்க ஆணைகள், அரசவைக் குறிப்புக்கள் முதலியவற்றை அதிகாரப்பூர்வ ஏட்டில் எழுதி வைக்கும் பொறுப்புடையவர் (2 சாமு 20:25). ஒவ்வொரு முறையும் இந்தச் செயலரின் பெயர் மாறுபடுகிறது: செராயா (2 சாமு 8:17), சவுசா (1 நாள் 18:16), சீசா (1 அர 4:3).

2. காலேபின் சந்ததியில் ஒரு குடும்பம் அல்லது ஒருவன். காலேபுவுக்கும் அவரது வைப்பாட்டி மாக்காவுக்கும் பிறந்தவர். மக்பேனாவையும் கிபயாவையும் நிறுவியவர் (1 நாள் 2:49).

செவ்வண்ணம் (VERMILION)

இது பலவாறாகப் பயன்பட்ட சிவப்பு மஞ்சள் களிமண்ணிலிருந்து பெறப்பட்ட ஒரு வகைக் கனிப்பொருளாகும். இது வீட்டிற்குச் சாயம் பூச மிகவும் சிறந்தபொருள். வீட்டின் உட்புறம் மீண்டும் புதுப்பிக்கும் வகையில் இந்தச் சாயம் பூசப்பட்டது. வீட்டின் வெளிப்புறத்திலும் நிலையாக இருக்க வேண்டிய இடங்களுக்கும் இந்தச் சாயம் களிமண்ணுடன் சேர்த்து அடிக்கப்பட்டது. யோயாக்கிம் நீதியை மறந்து, தன் வீட்டைச் செவ்வண்ணம் பூசி அழகுபடுத்தியதால் எரேமியா அவனைச் சாடுகின்றார் (எரே 22:14). கல்தேயா, பாபிலோனியர் ஆகியோருடன் வேசித்தனம் செய்த ஒகோலிபாவாக எருசலேம் சித்தரிக்கப்படுகிறது. இவள் சுவரில் சிவப்பாய்த் தீட்டப்பட்ட கல்தேய நாட்டு ஆண்களின் உருவங்களைக் கண்டாள் (எசே 23:14).

மரத்தால் செய்யப்பட்ட சிலைகள் செவ் வண்ணம் பூசப்பட்டன (ஞான 13:14). கிரேக்கர்கள் இதை மட்பாண்டத் தொழிலில் பயன்படுத்தினர். ஏதன்சு நகரத்தார் இதன் உற்பத்தியைத் தனியுடைமை ஆக்கிக் கொள்ள முயன்றனர்.

செவ்வந்திக்கல், சுகந்தி (AMETHYST)

கருஞ்சிவப்பு நிறத்தில் உள்ள உயர்ந்த வகைக் கற்களில் ஒன்று. இதனைச் செவ்வந் திக்கல் என்றும் குறிப்பிடுகின்றனர். இது தலைமைக் குருவின் மார்புப்பதக்கத்தில் இருக்கும் (யாத் 28:19; 39:112). புதிய எருச லேம் சுவர்களின் அடித்தளம் அமைப்பதில் இது பன்னிரண்டாவது கல்லாக வருகிறது. சுகந்தி என இதனைத் திருவெளிப்பாடு தமிழ்வாசகம் மொழி பெயர்க்கிறது (திரு வெளி 21:20). இவை எகிப்தில் காணப்படுவ தாகப் பிளினி குறிப்பிடுகிறார்.

செனா (SENAAH - முட்செடி நிறைந்த)

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு எருச லேமுக்குத் திரும்பி வந்த யூதர்களின் ஒரு குடும்பம் அல்லது இனத்தின் தலைவர் (எஸ் 2:35; நெக 7:28). இவர் நெகேமியா எருச லேம் நகர்ச்சுவரைப் பழுதுபார்த்தபோது மிகவும் உதவியாக இருந்தவர் (நெகே 3:3).

இவர்கள் எருசலேம் சுவரை மீண்டும் கட்டியதில் ஈடுபட்டவர்களான "அசுனாவா" வின் புதல்வர்களோடும் (நெகே 3:3), பென்யமின் குடும்பத்தைச் சேர்ந்த அசுனு வாவோடும் (1 நாள் 9:7; நெகே 11:9) தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். ஒரு வேளை இது ஓர் இடப்பெயராகவும் இருக்க லாம். செனா எரிகோவுக்கு வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால மக்தல் செனவாக அடையாளம் காட்டப்படுகிறது.

செனாட்சர் (SHENAZZAR - (சந்திரக்கடவுள்) சின் தந்தையைப் பாதுகாப்பாராக).

நாடு கடத்தப்பட்ட அரசன் யோயாக்கி னுக்கு நான்காவது புதல்வன் (1 நாள் 3:18). அனேகமாக இவர் சேசுபட்சராக இருக்க லாம் (எஸ் 1:8.11; 5:14.16).

செனான் (ZENAN - மந்தைவெளி)

யூதாவிலுள்ள இந்த ஊர் இலாக்கிசின் செபோலா மாவட்டத்தில் இருந்தது (யோசு 15:37). இதுவும் மீக் 1:11-இல் வரும் சானா னும் ஒன்றாக இருக்கலாம். இது தற்போ தைய ஆராக் எல்-கார்பா என்ற இடமாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

செனீர் (SENIR - பளபளப்பாயிருக்கும்)

இஸ்ராயேல் யோர்தானுக்கு இருபுறத்தி லும் இருந்த நாடுகளைப் பிடித்தபொழுது அப்பகுதிகளில் இருந்த கெர்மோன் (எர் மோன்) மலையை எமோரியர்கள் செனீர் என்று அழைத்தனர் (உப 3:9). ஆனால் உன்னத சங்கீதத்தின்படி (4:8) கெர்மோன், செனீர் ஆகிய இரண்டும் வெவ்வேறானவை யாகத் தெரிகிறது. இம்மலையில் கப்பல் கட்டுவதற்கான தேவதாரு மரங்கள் அதிக அளவில் கிடைத்தன (எசே 27:5).

செனே (SENEH - முட்புதர், கூரியபாறை)

சவுலின் ஆட்சிக்காலத்தில் பெலிஸ்தியர் கள் மிக்மாசு என்னுமிடத்தில் பாளையம் அமைத்திருந்தனர். சவுல் மகன் யோனத்தான் ஓர் இரவில் அங்குச் செல்லவிரும்பி மலை களைக் கடந்து செல்கின்றான். அவன் செல் லும் வழியில் உள்ள இரு செங்குத்தான பாறைகளில் ஒன்று செனே ஆகும் (1 சாமு 14:4). மற்றொன்று போட்சேசு ஆகும். இப் பெயர்கள் விவிலியத்தில் ஓரிடத்தில் மட் டும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவையிரண் டும் மிக்மாசுக்கும் கெபாவுக்கும் இடையில் வாடி எஸ் - சுவெய்னித்து வழியாகச் செல் லும் கணவாயின் இருபக்கத்திலும் உள்ளன. செனே, எருசலேமிலிருந்து வடக்கு - வட கிழக்கில் 10 கி.மீ. தொலைவில் ஓடையின் தென்பகுதியில் மிக்மாசுக்கு எதிரில் அமைந் திருந்தது. எஸ் 2:35; நெகே 7:38 பகுதிகளில் வரும் செனா நகரம் இப்பெயரின் அடிப் படையிலே தோன்றியிருக்க வேண்டும். பாபி லோனுக்கு நாடு கடத்தப்பட்டதிலிருந்து திரும்பிய யூதர்கள் குடியேறிய இடமாகவும், யூதாவில் அமைந்திருந்த நகரமாகவும் குறிக் கப்படுகிறது.

சே

சேகண்டி (மணி) (GONG)

அதிக ஒலி எழுப்பும் வெண்கலக் கருவி யாகும் (1 கொரி 13:1). ஒருவேளை ஆலய வழிபாட்டில் பயன்பட்ட இசைக்கருவிக ளில் ஒன்றாக இருக்கலாம்.

சேக்கு (SECU - வெளியே பார்க்கும் இடம்)

கிபயா என்ற இடத்துக்கும் இராமா என்ற இடத்துக்கும் இடையில் உள்ள சாலையில் அமைந்துள்ள ஒரு கிராமம். தாவீது சவுலுக் குப் பயந்து ஓடியபோது அவரது மறைவிடத் தைப் பற்றிய செய்தியைச் சவுல் இந்த இடத்தில்தான் கேட்டறிந்தார் (1 சாமு 19:22). பொதுவாக இதனைக் கிராமம் என்று கூறி னாலும் முக்கியத்துவம் வாய்ந்த பலரும் வந்து கூடுகின்ற பெரிய கிணறாகவோ, குன்றாகவோ இருக்கலாம் என்பதற்குக் குறிப்புகள் உள்ளன. இன்று இதன் அமைவி டத்தைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

சேசாக்கு (SHESHACH)

பாபிலோனைக் குறிக்கப்பயன்படும் குழூஉக் குறிப் பெயராகும் (எரே 25:26; 51:41).

சேசாய் (SHESHAI - இளவரசனுக்குரிய)

ஆனாக்கு என்பவரின் மூன்று புதல்வர் களில் ஒருவர். இஸ்ராயேல் ஒற்றர்கள் கானானை உளவு பார்த்தபோது, இவர்கள் கெபிரோனில் (எபிரோன்) வாழ்ந்து வந்த னர் (எண் 13:22; யோசு 15:14; நீதி 1:10). இவர் ஆனாக்கின் வழித்தோன்றலாக, அகிமான், தால்மாய் என்பவர்களோடு சேர்த்துச் சொல் லப்பட்டுள்ளார். காலேபு கெபிரோனைக் கைப்பற்றியபோது இவர்களைத் துரத்தி அடித்தார் (யோசு 15:14; நீதி 1:10.20). இப் பெயர் வேறு முழுப் பெயரின் சுருக்கமாக இருக்கலாம்.

சேசான் (SHESHAN - இளவரசன் போன்ற)

இவர் எரகுமவேல் என்பவரின் வழித் தோன்றலான குடும்பங்களின் தலைமுறை அட்டவணையிலுள்ள ஒரு குடும்பத் தலைவர் ஆவார். இவ்வட்டவணை யூதாவின் வழித் தோன்றல் அட்டவணைக்குள் காணப்படு கிறது (1 நாள் 2:31). சேசானுக்குப் புதல்வியர் கள் மட்டும் உண்டு. அவர்களில் ஒருத்தியை, எகிப்திய அடிமை யார்காவுக்குத் திருமணம் செய்து கொடுத்தார் (1 நாள் 2:34-35). 1 நாள் 2:34-41-இல் எலிசாமாவின் சந்ததி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது முன்னோ ரான சேசானும், எரகுமவேலின் சேசானும் ஒரே ஆளாக இருக்கலாம் என்று கருதப்படு கிறது. இது எலிசாமாவை யூதாவின் குலத் தில் சேர்க்கிறது.

சேசுபட்சர் (SHESHBAZZAR - சந்திரக் கடவுள்) சின் தந்தையைக் காப்பாற்றுவாராக

ஒரு பாபிலோனிய யூதனும் யூதாவின் இளவரசனும் ஆவார். இவரைப் பாரசீகப் பேரரசன் யூதா என்னும் பாரசீக மாகாணத் திற்கு ஆளுநராக நியமித்தார். சேசுபட்சர் ஆலயத்தைச் சேர்ந்த தங்க, வெள்ளிப்பாத்தி ரங்களை மீண்டும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார். ஆலயம் மீண்டும் கட்டப் படுவதைத் தொடங்கி வைத்தார் (எஸ் 1:8-11; 5:14-16). இவரைச் செருபாபேலோடு ஒருமைப்படுத்திக் குழப்பியுள்ளனர் சிலர். அனேகமாக இவர் செருபாபேலுக்கு முந்திய வராகவும், யூதாவின் அரசன் யோயாக்கி னின் (எக்கோனியா) மகன் சேனாட்சராகவும் இருக்கலாம் (1 நாள் 3:18).

சேணம் (SADDLE)

இது சவாரி செய்து ஓட்டுபவர் உட்காரும் ஆசனமாகும். விலங்கின் முதுகுப் பகுதியில் கட்டப்பட்டிருக்கும்.

விவிலிய உலகத்தில் பழமையான சவாரி செய்யப்பட்ட மிருகம் கழுதைகளாகும். இதன்மேல் உட்காரும் ஆசனமாக, ஒரு துணி அல்லது தோல் பயன்படுத்தப்பட்டது. துணியை இரட்டையாகப் போடுவது அல்லது மெத்தையைப்பயன்படுத்துவது தேவை என உணரப்பட்டது. இக்காலக்கருத்துப்படி சேணம் பழைய ஏற்பாட்டில் இல்லை எனலாம். இது கி.மு. நான்காவது நூற்றாண்டில், சித்தி

யாவில் உருவானது. பிறகு மத்தியதரைக் கடற்கரைப் பகுதிக்கு வந்தது. ஆனால் கிறிஸ் தவக்காலம்வரை முழுமையாக வளர்ச்சி யடையவில்லை.

இந்தச் சேணத்தைக் குறிக்கும் பெயர்ச் சொல் லேவி 15:9-இல் மட்டும் காணப்படு கிறது. இதன் வினைச்சொல் பழைய ஏற்பாட் டில், "கழுதைகளுக்குச் சேணம் கட்டுவதையே" குறிக்கிறது (ஆதி 22:3; எண் 22:21; 2 சாமு 17:23). அலங்காரமாகப் பயன்பட்ட சேணங்கள் எசே 27:20-இல் குறிக்கப்படு கின்றன. இது தெதான் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு தீரில் விற்கப்பட்டது.

சேத்தாம் (ZETHAM - ஒலிவ மரம்)

இலாதான் வழிவந்த கேர்சோமிய லேவி யர் (1 நாள் 23:8; 26:22).

சேத்தார் (SHETHAR - விண்மீன்)

அரசன் அகசவேருக்குப் பணிபுரிந்த ஏழு தலைமை ஆலோசகர்களில் ஒருவர்; அகச வேருக்கு அடுத்த இடத்தில் இருந்தவர் (எஸ்த 1:14).

இரண்டாவது அரமேயிக்கு தார்கூம் இவரை இந்தியாவிலிருந்து வந்தவராகக் காட்டுகிறது.

சேத்தார் (ZETHAR - கொல்பவன், வெற்றியா ளன்)

இவர் பாரசீக அரசனான அகசவேர் மன்ன னின் ஏவலர்களாயிருந்த ஏழு அண்ணகர் களில் ஒருவராவார் (எஸ்த 1:10).

சேத்தான் (ZETHAN - ஒலிவ மரங்களைக் கவனிப்பவர்)

இவர் பென்யமின் குடும்பத்தில் பிறந்தவர். பில்கானின் மகனும் எதியவேலின் வழித் தோன்றலுமாவார் (1 நாள் 7:10).

சேத்து (SETH - நியமிக்கப்பட்ட, கடவுளின் கொடை)

யாவே பாரம்பரியத்தின் குலமரபுப் பட்டி யலில் இவர் ஆதாம் - ஏவாளின் மூன்றாவது மகன் (ஆதி 4:25). ஆனால் பிற்காலத்தில் குருக்கள் பாரம்பரிய அட்டவணை காயின், ஆபேலைக் குறிக்காததால் சேத்து ஆதாமின் முதல் மகன் எனக் கருதப்படலாம் (5:3-8; 1 நாள் 1:17; சீரா 49:16-17; லூக் 3:38). சேத்தைப்பற்றிக் குருக்கள் பாரம்பரியம் சில குறிப்புகளையே கொடுக்கிறது.

இரண்டு பாரம்பரியங்களின் குலமரபுப் பட்டியல்களும் சேத்து, ஏனோசு, நோவா ஆகியோரைப் பொதுவாகக் கொண்டிருப்ப தாலும், பிற இணைப்பகுதிகளைக் கொண் டிருப்பதாலும், இரண்டும் முந்தைப் பாரம் பரியப் பட்டியலில் இரண்டு வாசகங்களாகும் என்று கருதலாம். ஆனால் இப்போதுள்ள யாவே பாரம்பரியத்தில் இறந்து போன ஆபேலுக்குப் பதிலாக இறைவன் ஏவா ளுக்கு அளித்த கருணை மிக்க கொடையாகத் தோன்றுகிறார் சேத்து. ''ஆபேலின் இடத் தில் இன்னொருவரைக் கடவுள் வைத்தருளி னார்'', என்று ஏவாள் கூறினாள் (ஆதி 4:25).

சேத்து ஏனோசின் தந்தையும் நோவாவின் மூதாதையரும் ஆவார் (ஆதி 4:6-7; 1 நாள் 1:1; லூக் 3:38). சீரா 49:16, சேத்தும் சேமும் மனிதர்களுள் மதிப்புக்குரியவர்கள் என்று கூறுகிறது.

சேத்து (SHETH - கலகத்தின் புதல்வர்கள், அகந்தையின் புதல்வர்கள்)

'சேத்தின் புதல்வர்கள்' என்பது (எண் 24:17) மேவாபியர்களைக் குறிக்கும் ஒரு சொற்றொடர். பிலயாமின் இறைவாக்கில் வரவிருக்கும் இஸ்ராயேல் அரசனால் இவர் கள் தோற்கடிக்கப்படுவார்கள் என்று முன் னறிவிக்கப்படுகிறது (எண் 24:15-19).

சேபா (SHEBA - ஆணையிடுதல்) - ஆள்

1. காம், கூசு ஆகியோரின் வழித்தோன் றல் (ஆதி 10:7; 1 நாள் 1:9). ஒரு வேளை சேபா என்ற இடத்தோடும் (2) தென் அராபியாவைச் சேர்ந்த செபாயர் (1) வணிகர்களோடும் தொடர்புபடுத்தப்பட வேண்டிய பெயராகும்.

2. சேமின் வழித்தோன்றல் (ஆதி 1:28; 1 நாள் 1:22). ஒருவேளை சேபா என்ற இடத்

தோடும் (2) செபாயர்களோடும் (2) தொடர்பு படுத்தப்படவேண்டிய பெயராகும்.

3. கெத்தூரா வழியாக ஆபிரகாமுக்குப் பேரன். ஒருவேளை ஒரு வட அராபிய இனத்தின் மூதாதையர் (ஆதி 25:3; 1 நாள் 1:32).

4. எப்பிராயிமின், மலைப்பகுதியில் வாழ்ந்த பென்யமின் குலத்தையும் பிக்ரியர் இனத்தையும் சேர்ந்தவர். தாவீதுக்கு எதிராக ஒரு கிளர்ச்சி செய்து தோல்வியுற்று அழிந்தார் (2 சாமு 20).

அப்சலோமின் கிளர்ச்சி அடக்கப்பட்ட பின் வந்த குழப்பமிக்க காலத்தில் அரசனுடைய இருமனப்பட்ட போக்கும் (2 சாமு 19:1 தொ) யூதாவுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையே நிலவிய காழ்ப்புணர்ச்சியும் (19:41-43) அப்சலோமுக்கு அபிடேகம் செய்ததால் ஏற்பட்ட ஆற்றல்மிக்க கிளர்ச்சியும் (19:8.10) மற்றுமொரு அரசியல் கொந்தளிப்புக்கு இட்டுச்சென்றன. தாவீதுக்கு எதிரான புதியதொரு கிளர்ச்சிக்குச் சேபா தீப்பொறி வைத்தார் (20:1-2). பென்யமின் குலத்தினர் என்ற முறையில் சவுலைச் சேர்ந்தவர்களின் ஆதரவைப் பெற்றார். தாவீதுக்கு எதிரி என்ற முறையில் இரண்டு அரச குடும்பங்களுக்கிடையில் நிலவிய ஆழ்ந்த வெறுப்பைக் காட்டும் கருவியானார்.

இந்த அரச குடும்பத்துக்குப் புறத்திலிருந்து தோன்றிய கிளர்ச்சியின் காரணத்தை உணர்ந்த தாவீது, புதிய படைத்தலைவரான அமாசாவை யூதாவில் மூன்று நாட்களில் படை திரட்டக் கட்டளையிட்டார். இதைச் செய்ய அமாசா தவறியபோது, அரச மெய்க்காப்பாளர் படைக்குத் தலைமை தாங்கிச் சேபாவைத் தாக்க அபிசாயிக்குக் கட்டளையிட்டார். தனது வாய்ப்புக்காகக் காத்திருந்த யோவாபு, தன் சகோதரன் அபிசாயோடு சேர்ந்து கொண்டார். வாய்ப்புக் கிடைத்த போது, யோவாபு தனது எதிரியான அமாசாவைக் கிபயோன் என்ற இடத்தில் கொன்றுவிட்டார். இதற்கிடையில் சேபா தனது இனத்தைச் சேர்ந்த பிக்கிரியர்களின் ஆதரவோடு பேத்து - மாக்காவின் ஆபல் என்னுமிடத்தில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டார் (2 சாமு 20:4-14). யோவாபு தாவீதின் படைக்குத் தலைமை தாங்கி, ஆபலை முற்றுகையிட்டார். ஆபலின் மக்கள் சேபாவின் தலையைவெட்டி, சுவருக்கு வெளியே எறிந்ததால், அந்நகரை அழிவிலிருந்து காப்பாற்றினர் (20:15-22).

5. காது இனத்தில் ஒரு குடும்பத்தைத் தோற்றுவித்தவர். பாசானில் வாழ்ந்தவர். அபிகயில் வழியாகத் தோன்றியவர். நாளாகம ஆசிரியரின்படி, யூதாவின் அரசனான யோத்தாம் மற்றும் இஸ்ராயேலின் அரசனான இரண்டாம் எரொபவாம் ஆகியோரின் காலத்தில் குலமரபுப்பட்டியல் ஏட்டில் இக்குடும்பம் சேர்க்கப்பட்டது (1 நாள் 5:13).

சேபா (SHEBA - ஆணையிடுதல்) - இடம்

1. சிமியோன் இனத்திற்குரிய பகுதியிலுள்ள ஒருநகரம் (யோசு 19:2). இப்பெயர் வரும் பகுதியில் நகரங்களின் எண்ணிக்கை பதின்மூன்று என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் பதினான்கு பெயர்கள் உள்ளன. இதை விளக்கிக் காட்ட, இப்பெயருக்கு முந்திய பெயராகிய பெயேர் - செபாவிலிருந்து எழுத்தர்கள் தவறாக இப்பெயரைச் சேர்த்துள்ளனர் என்பர் சிலர். இப்பெயர்ப் பட்டியலுக்கு இணையான யோசு 15:26-இல் வரும் செமாவும் இதுவும் ஒரே இடத்தைக் குறிக்கின்றன என்பர் வேறுசிலர். இப்பெயர் மாற்றம் எழுத்தர்களின் தவறுதலால் எளிதில் நிகழ்ந்திருக்கலாம்.

2. தென் அராபியாவையும் அதன் அருகிலுள்ள எத்தியோப்பியக் கடற்கரைப் பகுதியையும் சேர்ந்த செபாயர் (1) வணிகர்களின் பகுதியாகும். இவர்களிடமிருந்து இசுமயேலர்களும் மற்றவர்களும் ஆப்பிரிக்கா, இந்தியா, மற்றும் கிழக்கு நாடுகளிலிருந்து பெறப்பட்ட தங்கம், வாசனைப்பொருட்கள், மணிக்கல் போன்ற பலபொருட்களைப் பெற்றனர் (சங் 72:15; ஏச 60:6 எரே 6:20; எசே 27:22; 38:13). சாலமோனைப் பார்க்க

வந்த ''சேபாவின் அரசி'' (1 அர 10;2 நாள் 9) தென் அராபியாவைச் சேர்ந்த செபாயர்களின் ஒரு பகுதியையோ, வட அராபியாவைச் சேர்ந்த அவர்களின் ஒரு குடியிருப்பையோ ஆட்சி செய்திருக்கலாம். செல்வமிக்க அரசனோடு வியாபாரத் தொடர்பு வைத்துக் கொள்வதே அவளுடைய நோக்கம் என்பது தெளிவு. அரசனிடம் காட்டப் பல பொருட்களைக் கொண்டு வந்தாள் (1 அர 10:2). அரசனும் தனது சொத்துக்களைக் காட்டி அவளை வியக்க வைத்தார் (10:4.7).

சேபா நாட்டு அரசி (SHEBA, QUEEN OF)

இந்த அரசி சாலமோனின் அறிவுத் திறமையைக் கேட்டறிந்து, அவரைச் சோதிப்பதற்காகப் பல கடினமான கேள்விகளைக் கேட்க எண்ணி வந்தாள். அதன் பிறகுதான் அவளுக்குத் தான் கேட்டறிந்ததற்குமேல் அவர் அறிவு படைத்தவர் என்று தெரிந்தது. அவர் அரசனுக்குத் தங்கம், நறுமணப் பொருள்கள், விலையுயர்ந்த கற்கள் கொடுத்தாள். அதே நேரத்தில் இவளும் பரிசுகள் பல பெற்று, தனது பணியாட்களோடு சொந்த நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள் (1 அர 10:1-13). இந்தப் பொருள் மாற்றங்கள் உண்மையில் நடந்திருக்கும்' என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. சாலமோனின் பொருளாதார ஞானத்தில் வியாபாரப் போக்குவரத்து முக்கியமான ஒன்றாகும் (1 அர 9:26-28; 10:11-12.22-29). சாலமோனும் சேபா அரசியும் சந்தித்தது வியாபார சம்பந்தமாக இருக்கலாம். அப்படிப்பட்ட சந்திப்புகளில் விடுகதை விடுப்பதும், கதைகள் கூறுவதும், ஒரு கலாச்சார அங்கமாகும்.

யோசிப்பசு சேபாநாட்டு அரசியை எத்தியோப்பியாவோடு தொடர்புபடுத்துகிறார். அராபியக் கதைகள் சாலமோன் மணந்த அரசியைப் பற்றிப் பல விவரிப்புகளைக் கொடுக்கின்றன. செபாயர்கள் எத்தியோப்பியாவில் குடியிருப்புகளை நிறுவினர் என்பது உண்மை. ஆனால் அபிசீனிய அரச மரபுகள் சாலமோன், சேபா நாட்டு அரசி ஆகியோரின் நேரடி வழித்தோன்றல்கள் என்பது நிரூபிக்கமுடியாததாகும். இது அராபியர்களிடமிருந்து அபிசீனியர்களுக்குக் கிடைத்த பாரம்பரியமாகும்.

சேமா (SHEMA, THE)

உப 6:4-இல் ''இஸ்ராயேலே செவிகொடு!...'' என்று வரும் வாசகமானது யூதர்களின் விசுவாச அறிக்கையாக உள்ளது. அனேகமாக இந்த வாசகம் யோசியாவின் (640-609) காலத்தில் உருவானது. இது 6 எபிரேய வாக்குகளைக் கொண்டுள்ளது. பொதுவாக, யாவே தனித்தன்மையும், அவரைத் தவிர வேறு எவருமில்லாத தன்மையும் உள்ளவராகவும் (உப 4:39) யாவே அனைத்துமானவராகவும், மற்றப் பல தெய்வங்களாகப் பிரிக்க முடியாதவராகவும் உள்ளார் (எண் 25:2-3; நீதி 8:33; 9:4; 2 அர 1:2-3; 1 அர 16:31-32) என்பதை வலியுறுத்துகிறது.

யூதராபிகளின் மரபுப்படி 'சேமா' என்பது 6:4-ஆவது வசனத்தை மட்டும் கொண்டிருந்தது என்று சொல்லப்பட்டது. ஆனால் அதன் பிறகு, 6:5-9 வசனங்களும் இரண்டாவது பகுதியாக உப 11:13-21-ம், மூன்றாவது பகுதியாக எண் 15:37-41-ம் சேமாவோடு சேர்க்கப்பட்டன. முதல் பகுதியானது யாவேயை முழுவதும் அன்பு செய்வது, இந்த அன்பை அவரது கட்டளைகளை மனதில் பதிய வைத்து அவற்றைக் கடைப்பிடிப்பது ஆகிய இரு வேண்டுகோள்களைக் கொண்டுள்ளது. உப 11:13-21 இந்த வேண்டுகோளைக் கடைப்பிடித்தால் ஆசீர்வாதம் கிடைக்கும், தவிர்த்தால் சாபம் கிடைக்கும் என்பதைச் சொல்கிறது. எண் 15:37-41 சட்டத்தை நினைவூட்ட உதவியாகக் கட்டளைகளை ஒரே சொல்லில் அடக்கிச் சொல்கிறது (யாத் 20:2; உப 5:6). யூதராபிகளின் சட்டம் 'சேமாவை'க் காலையிலும் மாலையிலும் சொல்லும் பழைய வழக்கை நிறுவியது (உப 6:7- தூங்கும் வேளையிலும் விழித்திருக்கும் வேளையிலும்). யூதர்களின் இலக்கியம் இந்தச் சேமாவைப் பற்றிய பல தர்க்கங்களைக் கொண்டுள்ளது. இறையொருமைக்கோட்பாட்டறிக்கையும் யூதர்களின் மிக உன்னத விசுவாச அறிக்கையும் என்றளவில், இந்தச்

சேமா, காலந்தோறும், மறைசாட்சிகளின் அறைகூவலாகவும் யூதர்களின் அடையாள மாகவும் விளங்கிவந்துள்ளது.

இராபிகள் முதல் நூற்றாண்டிலே சட் டத்தை 600 கட்டளைகளாகப் பிரித்திருந்த னர். இவற்றில் எது பெரியது என்று அடிக் கடி தர்க்கித்தனர். இந்தச் சூழ்நிலையில்தான் இயேசுவிடம் ''பெரிய கட்டளை எது?'' என்று கேட்டனர் (மத் 22:34-40; மாற் 12:28-34). அவர் தாக்கமுடியாத சேமாவோடு லேவி 19:18-ஐயும் (உன்னைப் போல் பிற னையும் நேசி) சேர்த்துச் சொன்னார். இது மாற் 12:29-34-இல் முழுமையாகச் சொல்லப் பட்டுள்ளது.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை இந்தச் சேமா யூதர்களால் காலையும் மாலையும் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்வது, தோராவின் குறுகிய பாடமாகக் கருதப்பட்டது. இறைவன் ஒருமைப்பாட் டையும் அவரை அன்பு செய்யவேண்டும் என்ற கட்டளையையும் விசுவாச அறிக்கை யிடும் சேமாவின் முதல் இரு வசனங்களைத் தோராவின் அடிப்படைச் சுருக்கமாக இயேசு வும் ஆதித் திருச்சபையும் கருதியதற்குச் சான்றுகள் உள்ளன (மாற் 12:28-34; உரோ 3:30; 1 கொரி 8:4; யாக் 2:19; 1 யோவா 4:20).

சேம் (SHEM - பெயர், புகழ்)

நோவாவின் மூத்த மகன். நோவாவின் குடும்பத்தோடு பெட்டகத்துள் நுழைந்து பெரும் வெள்ளத்தில் தப்பியவர் (ஆதி 5:32; 6:10; 7:13; 9:18; 10:1; 11:10-11; 1 நாள் 1:4.17.24; லூக் 3:36). சேம் இஸ்ராயேலரு டையவும், செமித்திய மொழிபேசுபவர்களு டையவும் மூதாதையராகக் கருதப்படுகிறார் (ஆதி 10:21-31; 11:10-26; லூக் 3:36). நோவா குடிமயக்கத்தில் இருக்கும்போது எப்பேத் தோடு தன் தந்தைக்கு மதிப்புக் கொடுத்தார். இதனால் அவர் ஆசீர்வாதத்தைப் பெற்றார் (ஆதி 9:18-24). இந்த ஆசீர்வாதம் இஸ்ராயே லர்களின் மூதாதையருக்கு என்று இஸ்ராயே லர் மரபில் கூறப்படுகிறது (ஆதி 10:21-31; 11:10-26). யாவே பாரம்பரியப்படி சேம், ஏபேரின் சந்ததியாருக்கெல்லாம் தந்தையாக இருக்கிறார் (ஆதி 10:21). குருக்கள் பாரம்பரி யப்படி சேமும் அவரது இரண்டு சகோதரர்க ளும் தங்களது மனைவிகளோடு நோவா வோடு பெட்டகத்தில் சேர்ந்து கொண்டனர் (ஆதி 5:32; 6:10; 7:13-15). வெள்ளத்திற்குப் பிறகு, இவரது புதல்வர்கள் தங்கள் தந்தை யோடு தெய்வீக உடன்படிக்கையில் பங்கு கொண்டனர் (ஆதி 9:1-17). சேம் நூறு வயது நடக்கும்போது அர்ப்பகசாது என்பவரைப் பெற்றார். பிறகு 500 வருடங்களுக்குமேல் வாழ்ந்து ஏலாம், அசூர், லூது, ஆராம் (ஆதி 10:22; 1 நாள் 1:17) என்பவர்களைப் பெற்றார்.

சேயீர் (SEIR - மயிர்நிறைந்த, கரடுமுரடான) - ஆள்

கோரியரின் தொடக்க மூதாதையர். இந்தக் கோரியர்கள்தான் சேயிர் மலையில் முதன் முதல் குடியேறியவர்கள் (ஆதி 36:20-21; 1 நாள் 1:38; காண் ஆதி 14:6; உப 2:12.22).

சேயீர் (SEIR - மயிர்நிறைந்த, கரடுமுரடான) - இடம்

1. ஏதோமில் உள்ள முக்கியமான மலைப் பகுதி. இதன் வடபகுதி எபெல் - எஸ் -சேரா என்று இப்போது அழைக்கப்படும். கடல் மட்டத்தைவிட 1680 மீட்டர் உயரத்தில் உள்ள இம்மலைப்பகுதி மேற்கில் 'அக்காபா' வளைகுடா வரையிலும் பரவியுள்ளது. செயீர் என்ற பெயர் இப்பகுதி அடர்ந்த காடுகளைக் கொண்டிருந்தது என்பதி லிருந்து வருகிறது. இப்பகுதியில் முதலில் கோரியர்களும் பின்பு ஏதோமியர் என் றழைக்கப்பட்ட ஏசாவின் சந்ததியினர்களும் குடியேறினர் (ஆதி 14:6; 32:3; 36:8-9.20-21; உப 2:4-5. 12.22.29; யோசு 24:4; நீதி 5:4). பிற்காலத்தில் இஸ்ராயேலரின் ஆதிக்கத்திற் குட்பட்டது (எண் 24:18; 2 சாமு 8:14; 1 அர 11:15-16). சேயீர் ஏதோமியரைக் குறிக்கும் பட்டமாகவும் பயன்பட்டுள்ளது (எசா 21:11; எசே 35).

2. யூதாவின் வடபகுதியில் உள்ள செயீர் மலை (யோசு 15:10). இங்கு இஸ்ராயேலர் தெற்கிலிருந்து கானானுக்குள் நுழைய முற்

பட்டபோது நடந்த போரில் தோற்கடிக்கப் பட்டனர் (உப 1:44; எண் 14:45; 1 நாள் 4:42). பொதுவாக இக்காலச் சாரிஸ் என்பதாக அடையாளம் காட்டப்படுகிறது; ஒப்பிட்டுப் பேசப்படும். கிர்பாத்து - ஏயாரிமுக்குத் தென் மேற்கில் 4 கி.மீ. தொலைவிலும், எருசலே முக்கு மேற்கில் 14½ கி.மீ. தொலைவிலும், சாரிஸ் உள்ளது.

சேயுசு (ZEUS - யூப்பித்தர்)

இது கிரேக்கத் தெய்வங்களில் தலையான தெய்வம். இந்தத் தெய்வத்தின் செயல்களாக அவர்கள் கருதியவை பின்வருமாறு: சேயுசு மழைபொழிகிறார் அல்லது மழையைப் பெய்விக்கிறார். தட்பவெப்ப நிலைகள் இவர் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. பயங்கர இடிமின்னல்களை அனுப்புவார். மேலும் இவர் உலகத்தையெல்லாம் ஆளும் அரசர். இவர் எண்ணத்திற்கு மாறாக யாரும் செயல்பட முடியாது. மேலும் இவர் விருந் தோம்பலின் தெய்வம். இது கிரேக்கத் தெய் வங்களின் தன்னிகரில்லாத்தெய்வம்.

அந்தியோக்கு எப்பிபான் மன்னன் கெரி சிம் மலையில் சேயுசு சேனியோசுக்கு ஓர் ஆலயம் கட்டினார். மேலும் எருசலேமில் உள்ள ஆலயத்தைக் கிரேக்க மலைத் தெய்வ மான சேயுசு ஒலிப்பியசுக்கு அர்ப்பணிக்க வும் நினைத்தார் (2 மக் 6:2).

லிஸ்திரா நகரில் சேயுசுக்கு ஓர் ஆலயம் இருந்தது. எனவே பவுலும் பர்னபாவும் லிஸ்திராவுக்குச் சென்று போதித்தபோது மக்கட்கூட்டம் பவுலை எரிமாசு என்றும் பர்னபாவைச் சேயுசு எனவும் அழைத்தது (அ.ப. 14:8-18).

சேர் (ZER - தீக்கல்)

இது நெப்தலி நாட்டிலிருந்த அரண் சூழ்ந்த நகரமாகும் (யோசு 19:35). இதுவும் மாதோனும் (11:1;12:19) ஒன்றே என்று அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

சேலா (SELAH)

சங்கீதங்களில் எழுபத்தொரு முறை வரும் ஒரு சொல்லாகும் (உ.ம். சங் 9:16.20; 55:7.19; 67:1.4; 143:6; அப 3:3.9.13). இப்பாடல்களில் எப்போதும் வரிகளின் பின் குறிப்பாகச் சேர்க்கப்படுகின்றது. பெரும்பாலும் பொருள் பொதிந்த விதத்தில் வரிகளைப் பிரிக்கப்பயன்படுகிறது. நான்குமுறை சங்கீ தத்தின் முடிவில் வருகிறது. இது ஒரு இசைக் குறிப்பாக இருக்கலாம். இதன் பொருள் தெரியவில்லை. ஆயினும் ''தொனியை உயர்த்து'', ''தொடர்ந்துபாடு'', ''முழுத்தொனியுடன்'', ''சிறிது நிறுத்து'', ''உயர்த்து'', ''இடைஇசை'' என்று பலவாறு பொருள்கொடுக்க முயலப் பட்டுள்ளது.

சேலா (SHELAH - மன்றாடு)

1. இவர் சேமின் சந்ததியில் பிறந்தவர்; ஏபேருக்குத் தந்தை; அர்ப்பகசாதுவின் மகன் (ஆதி 10:24; 11:12-15; 1 நாள் 1:18.24). லூக் 3:35-36-இல் 'காயினாமின் மகன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. கானானியப்பெண் சூவாவிடம் பிறந்த யூதாவின் மூன்றாவதுமகன் (ஆதி 38:5.11.14.26; 46:12; 1 நாள் 2:3). செலானியர் களின் மூதாதையர் (எண் 26:20; 1 நாள் 4:21).

சேலா குளம் (SHELAH, POOL OF)

இது எருசலேம் அரச தோட்டத்திலுள்ள ஒரு நீர்த்தேக்கம் (நெகே 3:15). அனேகமாக அரச குளமாக (நெகே 2:14) அல்லது கீழ்க் குளமாக (எசா 22:9) இருக்கலாம். இக்குளத் திற்குக் கீகோனிலிருந்து, கிதரோனின் வலக் கரையிலுள்ள வாய்க்கால் வழியாகத் தண்ணீர் வரும். அசீரியாவின் அச்சுறுத்தலின்போது, இந்த வாய்க்கால் பாதுகாப்புக்காக மூடப் பட்டபோது, எசேக்கியாவின் சுரங்க வாய்க் கால் வழியாக வந்த தண்ணீரைத் தேக்குவதற் குப் பயன்பட்டது.

சேவல் (COCK)

சேவல் என்பது வீட்டுக்கோழியின் ஆண் இனத்தைக் குறிக்கும். பழ 30:31-இல் வருகின்ற 'பெருமிதத்துடன் நடக்கும் சேவல்' என்ற எபிரேய வாக்கியம் எதைக் குறிக்கிறது என் பது தெளிவாக இல்லை. யூதர்களின் அரமேய

மொழியில் இது 'வலிமை வாய்ந்த மல்ல னைக் குறிக்கலாம்.

மாற் 13:35-இல் மூன்றாம் சாமத்தில் அல்லது நள்ளிரவில் கோழி கூவியது என்று கூறப்படுகிறது. இச்செயல் இரவு நேரத்தை நான்கு சாமமாகப் பிரிக்கும் உரோமானிய வழக்கத்தைக் குறிக்கிறது (மூன்று சாமமாகப் பிரித்தல் யூதர்களின் பழக்கமாகும்). சேவல் பற்றி மற்றப் புதிய ஏற்பாட்டுக் குறிப்புக்களனைத்தும், பேதுரு இயேசுவை மறுதலிக்கும்பொழுது கோழி கூவியதாகக் காட்டப்படும் நிகழ்ச்சியோடு தொடர்புடையது (மத் 26:34...).

சேனா (ZENAS - சேயுசின்கொடை)

புனித பவுல் அப்பொல்லோவையும், வழக்கறிஞரான சேனாவையும் விரைவில் அனுப்பி வைக்குமாறு தீத்துவுக்கு எழுதுகிறார். கிறிஸ்தவனாகிய சேனா கிரேத்துத் தீவைச் சேர்ந்தவராகத் தெரிகிறது (தீத் 3:13).

பிந்தைய பாரம்பரியத்தின்படி இவர் பாலஸ்தீனத்திலுள்ள தியோஸ்போலியின் முதல் ஆயராவார். மேலும் இவர் தீத்துவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவரும் ஆவார்.

சேன் (SHEN - பல், கூரிய முனை)

பென்யமின் பகுதியில் மிஸ்பாவுக்கு அருகிலுள்ள ஓர் இடம். இந்த இடத்தில் பெலிஸ்தியர்கள்மேல் கொண்ட வெற்றியினை நினைவு கூறும் விதத்தில் சாமுவேல் ஒரு கல்லை நிறுத்தி ''ஆண்டவர் இதுவரை நமக்கு உதவி செய்தார்'' என்று கூறி அதற்கு ''எபனேசர்'' என்று பெயரிட்டார். (1 சாமு 7:12). இதுவும் எசன்னாவும் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

சை

***சைப்பிரசு** (CYPRUS)*

சிறிய ஆசியா கடற்கரையிலிருந்து 65 கிலோமீட்டர் தொலைவிலும், சீரியாவி லிருந்து 96 கிலோமீட்டர் தொலைவிலுமுள்ள ஒரு மத்திய தரைக்கடல் தீவு. வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்றுக் காலத்திலும் இது சீரியா, பாலஸ்தீன நாடுக ளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தது. இதன் பழங்காலப் பெயர் அலாசியா வாகும். பழைய ஏற்பாட்டில் இது எலிசா என்றழைக்கப்பட்டது.

கி.மு. 1800-க்கு முன்பே இதற்கும், எகிப்து, சீரியா, பாலஸ்தீனத்திற்கும் வாணிபத் தொடர்புகள் இருந்ததாகப் புதை பொருள் ஆராய்ச்சிகளும் ஏட்டுக் குறிப்புக ளும் கூறுகின்றன. மைசீனிய அரசோடு கூட இது நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.

இது செம்பு கிடைக்கும் ஒரு முக்கியமான இடமாக இருந்தது. இங்குதான் முதன்முத லில் செம்பு கண்டுபிடிக்கப்பட்டது என்று பிளினி சொல்கின்றார். இது செம்பை எகிப் தியர்களுக்கும் இத்தியர்களுக்கும் ஏற்றுமதி செய்தது.

அமர்னா காலத்தில் இது லூக்கு என்பவரால் கொள்ளையிடப்பட்டது. என்கோமிஎன்ற இடத்தில் செய்யப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிகளின்படி இது 'கடலின் மக்க ளால்' (பெலிஸ்தியர்கள்) தாக்கப்பட்டது என்று குறிப்பு ஒன்று சொல்கின்றது. ஆனால் இதற்கு வேறு ஆதாரங்கள் இல்லை.

கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் இது சுதந்தர மான நாடாக இருந்தது. 10-ஆம் நூற்றாண் டில் பெனிசியர்கள் இதை ஆண்டனர். 8-ஆம் நூற்றாண்டின் கடைசியிலும் 7-ஆம் நூற் றாண்டிலும் சார்கோன், சனகெரிபு, ஏசர்சுத் தோன் ஆட்சியின்கீழ் அசீரியர்கள் சைப்பி ரசை ஆண்டனர். அசீரியர்களின் ஆட்சி மறையவே சைப்பிரசில் எகிப்தியர்களின் ஆதிக்கம் வளர்ந்தது. இந்நாட்டு மக்கள், பாபிலோனுக்கு எதிராகச் சைரசுக்கு உதவி செய்தனர். அதற்குச் சன்மானமாகப் பாரசீக ஆளுநர்களுக்குப் பதிலாக, அவர்களுடைய அரசர்களாலேயே ஆளப்படும் உரிமை பெற் றனர்.

பாரசீகத்திற்கு எதிராக அயோனியா செய்த கிளர்ச்சியில் சைப்பிரசு கலந்து கொண்டு தோற்றது (கி.மு. 499-498). இசுஸ் (333) போருக்குப் பிறகு சைப்பிரசு அலக்சாந் தருடன் சேர்ந்து கொண்டது; கிரேக்க உல கின் ஒரு பகுதியானது. கி.மு. 294-58-வரை இது எகிப்திய ஆட்சியின்கீழ் இருந்தது. வெள்ளியையும், கப்பல் கட்ட மரங்களை யும், தானியங்களையும் தோலமியர்களுக் குக் கொடுத்து வந்தது. யூதர்கள் நல்லமுறை யில் நடத்தப்பட வேண்டும் என்று உரோமை அரசு கடிதம் எழுதிய பல இடங்க ளில் சைப்பிரசும் ஒன்று என்று 1 மக் 15:23 கூறுகின்றது.

கி.மு. 58-இல் நிர்வாக நோக்கத்திற்காகச் சைப்பிரசு உரோமையால் சிலிசியாவுடன் இணைக்கப்பட்டது. பிலோவின் குறிப்பு களிலிருந்தும், அப்போஸ்தலர் பணியில் காணப்படும் குறிப்புகளிலிருந்தும் இங்குக் கி.பி. முதல் நூற்றாண்டில் ஒரு பெரிய யூத சமூகம் இருந்ததாகத் தெரிகிறது. பர்னபா என்று அழைக்கப்பட்ட யோசேப்பு இந்தத் தீவைச் சேர்ந்த முதல் கிறிஸ்தவராவார் (அ.ப. 4:36). ஸ்தேவானின் மறைசாட்சி மரணத்திற்குப்பிறகு சிதறிச்சென்ற கிறிஸ்த வர்கள் சிலர் சைப்பிரசுக்குச் சென்று அங்கி ருந்த யூதர்களுக்குப் போதித்தனர்; அங்கிருந்து மனம் மாறியவர்கள் அந்தியோக்கியாவி லிருந்து கிரேக்கர்களுக்குப் போதித்தனர் (11:19-20). பவுலும் பர்னபாவும் சேர்ந்து சைப் பிரசில் போதித்தபோது இத்தீவின் முக்கிய இடங்களான சாலமி, பாப்போ ஆகிய இடங்களில் போதித்தனர். பாப்போவில் தான் இவர்கள் பார்யேசு என்ற மந்திரவாதி யைச் சந்தித்தனர் (13:4-12). பர்னபா மாற்கு வுடன் சேர்ந்து மறுபடியும் சைப்பிரசுத்

தீவிற்கு மறைப்பணி வேலையாகச் சென்றார் (15:39). பவுல் இருமுறை இந்தத் தீவைக் கடந்து சென்றிருந்தாலும் அங்குப் போதித்ததாகக் கூறப்படவில்லை (21:3; 27:4).

இத்தீவிலிருந்து யூதர்கள் கி.பி. 116-117-இல் உரோமைய ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இதனால் இவர்களில் சிலர் கொல்லப்பட்டனர்; சிலர் தீவிலிருந்து துரத்தப்பட்டனர். இது சைப்பிரசுத் தீவில் கிறிஸ்துவத்தின் வளர்ச்சியைப் பாதித்தது. கான்ஸ்டன்டைன் அரசரான பிறகுதான் கிறிஸ்துவ மதம் இத்தீவினரின் முக்கிய மதமானது.

சைரசு (CYRUS)

அக்கமேனிய அரச மரபையும், பாரசீகப் பேரரசையும் தோற்றுவித்தவரான ஒரு பாரசீக மன்னன். எரோதோத்தசின்படி இரண்டாம் சைரசு, முதலாம் கம்பிசேசின் மகனாவார். அக்கமேனசு சைரசு குடும்பத்தின் மூதாதையராவார். சைரசு அரசனான பல ஆண்டுகளுக்குப் பிறகு 550-இல் அஸ்தியாகெசுக்கு எதிராக எழுந்தார். தன்னுடைய சிற்றரசர்களாலேயே கைவிடப்பட்டு அஸ்தியாகெசு தோல்வியுற்றார். சைரசு எக்பத்தானாவைக் கைப்பற்றினார். மேதிய அரசர்களின் நாடுகளுக்குமேல் (அசீரியா, மெசபொத்தாமியா, சீரியா, அர்மீனியா, கப்பதோக்கியா) உள்ள தலைமையானது 'மாமன்னர்' சைரசை வந்தடைந்தது. அதைத் தொடர்ந்து லீதியாவின் அரசன் கிரோசுவை வென்று சர்தை, லீதியா, சிறிய ஆசியாவின் கையிலிருந்த கிரேக்க நகரங்களையும் கைப்பற்றினார். இவனுடைய அரசுக்குக் கிழக்கே ஒக்கஸ் ஆறும், மேற்கே எகியன் கடலும், எல்லையாக இருந்தன. கி.மு. 539-இல் நபோனிதையும் பாபிலோனையும் தாக்கி வெற்றிகண்டார். பிறகு சைரசு பல பட்டங்களுடன் (''உதேத்தின் அரசன் ... உதேத்தின் நான்கு முனைகளின் அரசன்'') தன்னைத் தானே அரசன் என்று பறைசாற்றிக் கொண்டார். மார்துக்குக் கடவுளை வழிபட ஆவன செய்தார். இடிந்து கிடந்த புனித நகரங்களை மீண்டும் கட்டுவித்து சிலைவழிபாட்டை ஆரம்பித்தார்.

பாபிலோனியாவின் வீழ்ச்சியினால் ''கடவுளால் அபிடேகம் செய்யப்பட்டவரான'' (எசா 45:1) சைரசின் அரசியல், இராணுவ வலிமையை எபிரேயர்கள் அறிந்து கொண்டார்கள். இதனால் கடவுளின் அரசும் இஸ்ராயேலின் மீட்பும் (எசா 4:28; காண்க அதிகாரங்கள் 35;40-55) நெருங்கிவிட்டன என்று இறைவாக்கினர்கள் நம்பினார்கள். சைரசு அரசனின் முதலாம் ஆண்டு ஆட்சியில் (கி.மு. 538), எருசலேம் ஆலயம் மீண்டும் கட்ட அரமேயிக்கில் கட்டளை (எஸ் 6:3-5) ஒன்றை வெளியிட்டார். இந்தக் கட்டளை இம்மன்னனின் ஞானத்தையும் மதசகிப்புத் தன்மைக் கோட்பாட்டையும் காட்டுகின்றது.

அவர் அரசி தோமிரிசை எதிர்த்துப் போரிடப் போவதற்கு முன்பு, தன்னுடைய மகன் கம்பிசேசை வாரிசாக்கிவிட்டுச் சென்றார். அப்போரில் அவர் இறந்தார் (529).

தானியேல் சைரசு ஆட்சியின் முதலாம் ஆண்டுவரை தன்னுடைய பதவியிலேயே இருந்தார் என்று (தானி 1:21) காட்டப்பட்டிருக்கிறது. தானியேலின் கடைசிக்காட்சி சைரசின் ஆட்சியின் மூன்றாம் ஆண்டு நடந்தது என்று காலம் குறிக்கப்படுகிறது (10:1). தானி 9:26-இல் ''கடவுளால் அபிடேகம் செய்யப்பட்டவராக''க் குறிக்கப்படுபவர் ஒருவேளை சைரசாக இருக்கலாம்.

சொ

சொஸ்தேன் (SOSTHENES)

1. கிறிஸ்புக்குப்பின் கொரிந்தில் செபக் கூடத் தலைவராக இருந்தவர். ஒரு கிறிஸ்தவர் (அ.ப.18:8.17). பவுலுக்கு எதிராக யூதர்கள் உரோமை ஆளுநன் கல்லியோமுன் புகார் கூறியபோது, அவர் அதனைக் கேட்க மறுத்து விட்டார். இதனால் ஆத்திரமடைந்த யூதர் கள் செபக்கூடத்தலைவனான சொஸ்தே னைப் பிடித்து அடித்தார்கள் (அ.ப.18:17). ஆளுநன் இதைக் கவனிக்கவில்லை. ஒரு வேளை தாங்கள் பவுல் ஒரு வேதவிரோதி என்று சாட்டிய குற்றத்திற்குத் தேவையான ஆதாரங்களைச் செபக்கூடத்தலைவன் என்ற முறையில் தந்திருக்க வேண்டும் என்று யூதர் கள் எதிர்பார்த்து ஏமாந்து இருக்கலாம்.

2. பவுலின் கிறிஸ்தவச் சகோதரன். எபே சில் பவுல் கொரிந்தியருக்கு முதல் திரு முகத்தை எழுதியபோது அவரோடு இருந்த வர். இவர் ஒருவர் மட்டும்தான் 1 கொரி 1:1-இல் பவுலின் தோழனாகக் குறிக்கப்படு கிறார். மற்றவர்கள் 16:17-19-இல் குறிக்கப் படுகின்றனர். இவரைக் கொரிந்தியர்கள் அறிந் திருக்க வேண்டும். ஒருவேளை அவர்களில் ஒருவராக இருக்கலாம். அப்படியாயின் இவ ரும் 1-இல் வருபவரும் ஒரே ஆளைக் குறிக் கின்றனர். ஒருவேளை பவுலைப்போல் இவ ரும் மனமாற்றம் அடைந்திருக்கலாம்.

சொத்து, செல்வம் (TREASURE)

சொத்து, செல்வம், ஒருவரது மொத்த உடைமையைக் குறிக்கும். பொதுவாக அச் செல்வம் வெள்ளியாகவோ, தங்கமா கவோ, மற்றும் எந்த உடைமையாகவோ இருக்கலாம் (ஆதி 43:23; எசா 30:6). பொது வாக நல்லவர்களிடம் செல்வம் கொழிக்கு மென்ற கருத்து ஞான ஆகமத்தில் காணப் படுகிறது. ஆனால் செல்வம் நல்வழியில் சேர்க்கப்படவேண்டும். இல்லையெனில் அது அழிவுறும் எனக்கூறுகிறது பழமொழி ஆகமம் (சங் 17:14; பழ 8:21; 15:6; 21:20; லூக் 16:25; பழ 10:2; 21:6). ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் கண்ணோட்டத் தின்படி இவ்வுலகச் செல்வம் நிலையற்ற தும், வீணானதும் ஆகும் (மத் 6:19; லூக் 12:23). இது ஒரு சிலைவழிபாடாக மாறி விடலாம் என்பது இயேசுவின் கருத்து (மத் 6:21; லூக் 12:20-21). எனவே இயேசு, இந்தச் செல்வத்தைக் கைவிட்டு விட்டு விண்ணகச் செல்வத்தை எதிர்நோக்கச் சொல்கிறார் (மத் 19:21; மாற் 10:21; லூக் 18:22). யோபு தனது துன்பத்தில், சாவைப் பெரும் செல்வமாகக் கருதிக் காத்திருக்கின்றார் (யோபு 3:21). ஓர் அரசனது சொத்தில், விலையுயர்ந்த கற்கள், தங்கம், வெள்ளி, நறுமணப்பொருட்கள், எண்ணெய், கால்நடைகள், படைக்கருவிகள் ஆகியவை அடங்கும் (2 அர 20:13 தொ; திருவுரை 2:8). இவற்றின் பட்டியல் 2 நாள் 32:27-29-இல் கொடுக்கப்பட்டுள்ளது. கோவில்களுக்கு அளிக்கப்பட்ட காணிக்கை கள் கோவில் சொத்தாகக் கருதப்பட்டன (நெகே 10:39).

உருவகமாக; இயற்கையின் சக்திகள் செல் வமாகக் கருதப்பட்டன (யோபு 38:22; சங் 135:7; எசா 45:3). ஞானம் ஒரு புதைந்திருக் கும் செல்வமாகும் (பழ 2:4). இஸ்ராயேல் இறைவனின் சொத்துடைமையாகும் (யாத் 19:5; சங் 135:4). மனிதன் விசுவாசத்தாலும் பிரமாணிக்கத்தாலும் மீட்பின் நற்சொத்துக் களை விண்ணில் சேர்த்துவைக்க வேண்டும் (மத் 6:20-21). நற்செய்தியைப் புனித பவுல் ஒரு செல்வமாகக் கருதுகிறார் (2 கொரி 4:7). கிறிஸ்துவில்தான் 'இறைவனின் ஞானமும் அறிவுமாகிய செல்வம் எல்லாம் மறைந்துள் ளது' (கொலோ 2:3). இந்த நித்தியச் செல்வங்களைக் கொண்டிருப்பது அரச செல்வங்களைக் கொண்டிருப்பதிலும் மேலானது (எபி 11:26). நல்லவர்கள் தங்கள் நல்ல இதயத்திலிருந்து மேலும் நல்ல வற்றை வெளிக்கொணர்வர் (லூக் 6:45).

ஒரு மன்னன் தான் போரில் கைப்பற்றிய அனைத்தையும் தனது அரச செல்வமாக எடுத்துக் கொள்கிறான் (எசா 39:6; 1 அர

14:26). அக்காலத்தில் கொள்ளையடித்துச் செல்வம் சேர்க்கும் பழக்கம் இருந்ததாகத் தெரிகிறது (1 அர 15:18; 2 அர 14:14; 24:11-13; 23:18). செல்வத்தைக் காப்பாற்றப் போதிய அக்கறை செலுத்தப்பட வேண்டும் என விவிலியம் கூறுகிறது (பழ 15:6). தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஏராளமான சொத்துக்களை அகழ்ந்தெடுத்துள்ளனர்.

சொபரேத்து (SOPHERETH - எழுதுபவன்)

இவர் பாபிலோனியாவிலிருந்து செருபாபேலோடு திரும்பிவந்த சாலமோன் ஊழியர்களின் மக்களில் ஒருவர் (நெகே 7:57). எஸ் 2:55-இல் இவர் அசோபரேத்து என்று அழைக்கப்படுகிறார்.

சொர்க்கம், இன்பவனம் (PARADISE)

இதனுடைய கிரேக்க மூலச்சொல்லான ''பாராதேயிசோஸ்'' என்பது ''தோட்டம்'' என்ற பொருளுடைய ''பர்தேஸ்'' என்ற பாரசீகச் சொல்லிலிருந்து வருவதாகத் தெரிகிறது. எழுபது நூல் மொழிபெயர்ப்பானது அதனுடைய சொற்பொருளிலும் (திருவுரை 2:5; உ.ச. 4:12) சமயப் பொருளிலும் இதனைப் பயன்படுத்துகிறது. இரண்டாவது பொருள் மட்டுமே இங்கு எடுத்துக் கூறப்படுகிறது.

1. இறைவனின் தோட்டம்: மேற்காசிய சமயங்களில், தெய்வங்களுடைய வாழ்வின் காட்சியானது, இவ்வுலகிலுள்ள வலிமை மிக்கோர் மற்றும் செல்வரின் வாழ்வினின்று தனது சாயல்களைப் பெறுகிறது. தோட்டங்களால் சூழப்பட்ட மாளிகைகளில் தெய்வங்கள் களிப்புற்றிருந்தனர்; அங்கே ''வாழ்வின் நீர்'' பாய்ந்தோடியது. மற்ற வியப்பூட்டும் மரங்களில் ''வாழ்வின் மரமானது'' செழிப்புற்றிருந்தது. தேவர்கள் ''வாழ்வின் மரத்தினுடைய'' கனியால் சத்தூட்டப்பெற்றனர். இவ்வுலகில் தெய்வங்களின் கோயில்கள் தங்களைச் சூழ்ந்துள்ள புனித தோட்டங்களுடன் இந்த மூல மாதிரியைப் பின்பற்றுகின்றன. இத்தகைய விவரிப்புகள், அவற்றில் பல தெய்வவழிபாட்டுச் சூழ்நிலையினின்று தூய்மைப்படுத்தப்பட்டவுடன், விவிலியத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. மனிதப் பண்புகளை இறைவனுக்குச் சாற்றிக்கூறும் வழக்கப்படி ''மென்காற்று வீசிய பொழுதினிலே தோட்டத்தில் ஆண்டவராகிய கடவுள் உலாவிக்கொண்டிருப்பதாக'' இறைவனைக் காட்டுவதில் எவ்விதத் தயக்கமுமில்லை (ஆதி 3:8). தோட்டமும் அதனிலுள்ள மரங்களும் மூதுரையாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றன. (ஆதி 13:10; எசே 31:8-9.16தொ).

2. சொர்க்கத்தை இழந்தது முதல் மீண்டும் பெற்றது வரை.

அ) இழந்த சொர்க்கம்: இறைவன் மனிதனைப் படைத்த நிலையினையும், உலகில் அவனை அமர்த்தியதன் நோக்கத்தையும் எடுத்துக்கூறும், புனித வரலாற்றை எடுத்துக் கூறுவதில், அதே உருவகமானது அறிமுகப் படுத்தப்படுகிறது. இறைவன் அவனுக்கென ஏதேனில் ஒரு தோட்டத்தை உருவாக்கினார் (ஆதி 2:8தொ; எசே 28:13). இத்தோட்டத்தில் மனிதனுடைய வாழ்வானது உழைப்பைக் கொண்டிருந்தாலும் (ஆதி 2:15), அதே நேரத்தில் எடுத்துக்காட்டான மகிழ்ச்சியின் பண்பையும் அது கொண்டிருந்தது. ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளில் இது, பொற்காலத்தின் இலக்கிய வர்ணனைகளின் பின்னோக்கிய நினைவாக உள்ளது; இறைவனுடனான நெருங்கிய அறிமுகம், தோட்டத்துக் கனிகளைத் தடையின்றிப் பயன்படுத்தல், விலங்குகளின் மீதான ஆளுகை (2:9-20), முதல் தம்பதியரின் ஒருங்கிணைந்த ஒன்றிப்பு (2:18.23தொ), வெட்கமின்மை குறிக்கும் ஒழுக்க மாசின்மை (2:25), மற்றும் பாவத்தின் விளைவாக உலகிற்கு வரவிருக்கின்ற மரணம் இல்லாமை (3:19) போன்றவைகளை இந்த விவரிப்பு கொண்டிருந்தது. ஆயினும், மனிதனுடைய சோதனையும் இந்தத் தொடக்கத் தோட்டத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இறைவன் அறிவின் மரத்தை அங்கே அமைத்தார். ஏவாளைச் சோதிக்க பாம்பு அங்கே வரும். மேலும், ஏதேனின் மகிழ்ச்சியான நிலையானது, நமது இன்றைய நிலையினுடைய துயரம் மற்றும் துன்பத்துடன் ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது. மனித

பாவத்தின் விளைவாகிய இந்நிலையானது இழந்த சொர்க்கத்தினுடைய மையக்கருத்துடன் இணைக்கப்படுகிறது (3:23).

ஆ) சொர்க்கத்தினுடைய வாக்குறுதி: மனிதன் தன்னுள் கொண்டுள்ள நம்பிக்கையானது பொய்யானதல்ல. அது அவனுடைய மூல அழைப்புடன் தொடர்புடையதாக உள்ளது. இரக்கமிக்க இறைபாலிப்பினால் அனைத்துப் புனித வரலாறும் மனிதனைப் பழைய நிலையில் அமர்த்துதலைத் தனது நோக்கமாகக் கொண்டிராவிட்டால், இந்த நம்பிக்கையானது என்றுமே அடைய முடியாததாகவே இருக்கும். இவ்வாறு பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடுவரை மீண்டும் அடையப்படும் சொர்க்கம் என்ற தலைப்பு தனது வேறுபட்ட அனைத்து நுட்ப வேறுபாடுகளுடன், புதிய புனிதநாடு மற்றும் புதிய படைப்பு ஆகியவற்றுடன் கலந்து, இறுதிக் காலத் தீர்க்க தரிசனங்களை ஊடுறுவுகிறது. இறைவனுடைய மக்களின் பாவங்கள் அவர்களது உலக உறைவிடத்தைப் பாழடைந்த இடமாக மாற்றினாலும் (எரே 4:23), இறுதி நாட்களில் இறைவன் அதனை ஓர் ஏதேன் தோட்டமாக மாற்றுவார் (எசே 36:35; எசா 51:3). இப்புது இன்பவனத்தில் உயிருள்ள நீரானது, இறைவன் உறையவிருக்கின்ற கோவிலிலிருந்து பொங்கி வழியும். கரையோரங்களில் வியத்தகு மரங்கள் வளரும். இம்மரங்கள் இறைவனின் மக்களுக்கு உணவையும், மருந்தையும் அளிக்கும் (எசே 47:12). வாழ்வின் மரத்திற்கான வழியானது மனிதனுக்கு மீண்டும் ஒருமுறை திறக்கப்படும் (திருவெளி 2:7; 22:2-ஐ ஆதி 3:24-உடன் ஒப்பிடுக). புனித வரலாற்றில் இறுதியில், மீண்டும் அமைக்கப்பட்ட இன்பவன வாழ்வானது, மூல ஏதேனுக்கு இணையான பண்புகளைக் கொண்டிருக்கும். பல்வேறு கூறுகளில் அவற்றைக் கடந்தும் செல்லும். இயற்கையில் அற்புதமான இனவிருத்தி இருக்கும் (ஓசே 2:23-24; ஆமோ 9:13; எரே 31:23-26; யோவே 4:18); மனிதரிடையே மட்டுமின்றி (எச 2:4) இயற்கை மற்றும் விலங்குகளுடன் எல்லாவற்றையும் உள்ளடக்கும் அமைதி நிலவும் (ஓசே 2:20; எசா 11:6-9; 65:25); கலப்பற்ற மகிழ்ச்சி இருக்கும் (எரே 31:13; எசா 35:10; 65:18..), மரணம் முதற்கொண்டு அனைத்துத் துன்பங்களும் அழிக்கப்படும் (எசா 35:5-6; 65:19...; 25:7 தொ; திருவெளி 20:14; 21:4). பழைய பாம்பு வெல்லப்படும் (திருவெளி 20:2-3.10); முடிவில்லா வாழ்விற்குள் புகலாம் (தானி 12:2; ஞான 5:15; திருவெளி 2:11; 3:5). பாவத்தினால் மனிதன் கீழ்ப்படுத்தப்பட்ட நிலைக்கு முரண்பட்ட நிலையில், இவ்வுருவங்கள் வெளிக்கொணர்கின்ற உண்மையானது, சோதனை பற்றிய எந்த எண்ணத்தையோ, வீழ்ச்சியின் வாய்ப்பையோ விலக்குகின்ற வேளையில், அவனது மூல நிலையின் பண்புகளைப் படம் பிடித்துக்காட்டுகிறது.

இ) மீண்டும் அடையப்பட்ட சொர்க்கத்தின் முன்சுவை: மீண்ட சொர்க்கமானது இறுதிக்கால மெய்மையாகும். இறைவனின் மக்கள் தங்களது வரலாற்று அனுபவத்தில் அதனுடைய மறைந்துபோகும் நிழலை மட்டுமே அறிந்துள்ளனர். ''பாலும் தேனும் பெருக்கெடுத்தோடும் நாட்டை'' உரிமையாக்குதல் என்பது இதற்கு ஓர் உதாரணம் (யாத் 3:17; உப 6:3). ஆயினும் அவர்களது ஆன்மீக அனுபவமானது மற்றொரு அமைப்பின் முன்சுவையை அவர்களுக்கு அளித்துள்ளது; ஏனெனில், அனைத்து ஞானத்திற்கும் ஊற்றாகிய தமது சட்டத்தை இறைவன் அவர்களுக்கு அளித்துள்ளார் (உப 4:5-6). ஆனால், ஞானமானது மகிழ்ச்சியைக் காப்பீடு செய்கின்ற ''வாழ்வின் மரமாக'' உள்ளது (பழ 3:18; சீரா 24:12-21). சட்டமானது, அதனைக் கடைப்பிடிக்கிற மனிதனில், ''இன்பவனத்தின் நதியைப்போலப்'' பெருக்கெடுத்தோடும் ஞானத்தை உருவாக்குகின்றது (சீரா 24:25தொ; ஆதி 2:10); அதனை மற்றவர்களுக்குக் கற்பிக்கின்ற ஞானி ''இன்பவனத்திற்கு நடத்திச்செல்லும் நீரூற்றுப்'' போன்றவன் (சீரா 24:30); அருளும் ஆண்டவர் மீதான பயமும் ஆசிரின் இன்பவனமாகும் (40:17.27). ஆகவே, ஞானத்தின் மூலம் இறைவன், இன்பவனத்தின் மகிழ்ச்சியின் முன்சுவையை மனிதனுக்கு அளிக்கிறார்.

புதிய ஏற்பாடானது இறைத்திட்டத்தினுடைய இறுதியான இரகசியத்தை வெளிப்

படுத்துகிறது. கிறிஸ்துவே ஞானத்தின் ஊற்று; அவரே ஞானமுமாய் உள்ளார் (1 கொரி 1:30). மனித இனமானது தனது இறுதிக்கால நிலையினை நோக்கிச்செல்ல வழியாக உள்ள புதிய ஆதாமும் இவரே (உரோ 5:14; 1 கொரி 15:45). தனது சோதனையின்போது, சாத்தானும் பேயுமாகிய பழைய பாம்பின் மீது அவர் பெருவெற்றிகொள்கிறார் (திருவெளி 20:2). தமது சோதனையின் காலத்தில், ஒருவித மீண்ட சொர்க்க நிலையில் அவர் ''கொடிய மிருகங்களுடன்'' வாழ்கிறார் (மாற் 1:13; ஆதி 1:26; 2:19-20). அது முதல் மரணமும் நோய்களும் வெல்லப்பட்டுவிட்டன என்பதை அவரது புதுமைகள் காட்டுகின்றன. அவரில் விசுவாசங்கொள்ளும் மனிதன் ''வாழ்வின் உணவு'' (யோவா 6:35), ''உயிருள்ள தண்ணீர்'' (4:14), ''முடிவில்லா வாழ்வு'' (5:24தொ), மற்றும் சுருக்கமாக, இப்போது திறக்கப்பட்டுள்ள இறுதிக்கால இன்பவனத்தின் கொடைகள் அனைத்தையும் கண்டடைகிறான்.

3. சொர்க்கம் நீதிமான்களின் உறைவிடம்: விவிலிய நூல்களில் இறுதிக்கால சொர்க்கம் பற்றிய விவரமானது கட்டுப்படுத்தப்பட்டதாகவும், படிப்படியாகத் தூய்மைப்படுத்தப்படுவதாகவும் உள்ளது. ஆயினும், திருமறைக்குள் ஏற்கப்படா நூல்கள் பெருமளவிற்கு இதனை மிகைப்படுத்தி, யூத விசுவாசத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகிறது (உம் ஏனோக்கின் நூல்). இறுதி நாட்களில், புனித நாட்டிற்கு மீண்டும் வருவதற்கு முன், தீர்ப்பின் நாள், உயிர்ப்பு மற்றும் எதிர்கால வாழ்விற்காகக் காத்திருப்பதற்கென, நீதிமான்கள் அனைவரும் இறைவனால் ஒன்று சேர்க்கப்படவிருக்கின்ற இடைக்கால உறைவிடமாகச் சொர்க்கம் உள்ளது. நல்ல கள்ளனுக்கு இயேசுவால் வாக்களிப்பட்ட வீடு இதுவே (லூக் 23:43). ஆனால் வாழ்வாகிய அவரது பிரசன்னத்தினால் இது ஏற்கனவே மாற்றப்பட்டுவிட்டது. ''நீ என்னோடு இருப்பாய்...''. புனித வரலாற்றின் இறுதியில் அளிக்கப்படவேண்டிய நற்பேற்றைப் பொறுத்தவரையில், தாம் மீட்ட பாவிகளுக்குக் கிடைத்தற்குரியதாக அதனை அமைப்பதற்காகத் தமது மரணத்தின் மூலம் அதனுள் முதலில் நுழைந்தவர் இயேசுவே.

4. சொர்க்கமும் விண்ணகமும்: இறைவனின் உறைவிடமாக இருப்பதால், சொர்க்கமானது இவ்வுலகிற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், விவிலிய மொழியானது இறை உறைவிடத்தை விண்ணகத்திலும் அமைக்கிறது. சில நேரங்களில் சொர்க்கமானது இறைவன் தங்கியுள்ள ''மேலான வானகத்துடனும்'' அடையாளம் காட்டப்படுகிறது. அவ்விடத்தில்தான் சொல்லுதற்கரிய உண்மைகளைப்பற்றிச் சிந்திக்க, பவுல் ஆவி வடிவில் கொண்டு செல்லப்பட்டார் (2 கொரி 12:4). கிறிஸ்தவத்தின் மொழியில் சொர்க்கம் என்ற சொல்லுக்கான சாதாரணப் பொருளும் இதுவே. ''வானதூதர்கள் உம்மைச் சொர்க்கத்திற்கு வழிநடத்துவார்களாக....'' (அடக்கச் சடங்கு). இப்போது முதல் சொர்க்கமானது ஆண்டவரில் இறக்கும் அனைவருக்கும் திறக்கப்பட்டுள்ளது.

சொறி, சொறிசிரங்கு (ERRUPTION, ITCH, SCURVY)

சொறிசிரங்கு அரிப்பை ஏற்படுத்தும் ஒரு நோய். இதுதொழுநோய் என்று ஐயமுற்றால், குரு நோயுற்றவனைப் பார்வையிடுவார். பின் அவனை அடைத்து வைப்பார். ஏழு நாட்களுக்குப்பின் அவனைச் சோதனை செய்வார். நோய் குறைந்தோ பரவாமலோ இருந்தால், அது வெறும் சொறிசிரங்குதான். ஆகவே அவன் தூய்மையானவன் என்று குரு அறிவிப்பார். பரவியிருந்தால், அது தொழுநோயாகும். ஆகையால் நோயுடையவன் தீட்டுடையவன் என்று குரு அறிவிப்பார் (உப 28:27; லேவி 13:6-8).

தொழுநோய் பீடிக்கப்பட்டதை அறிய தலையிலோ தாடையிலோ ஏற்படும் சொறி உதவும் (லேவி 13:30; 14:54). இந்நோயுடையவன் என்று சந்தேகிக்கப்பட்டவன் 14 நாட்களுக்குத் தனித்து வைக்கப்பட்டு, மீண்டும் குருவால் சோதிக்கப்படுவான்.

சொறியோ, சொறிசிரங்கோ உடைய விலங்குகள் பலியாக ஒப்புக் கொடுக்கப்படக்கூடாது (லேவி 22:22). இம்மாசுகள் உடையவர்கள் ஆண்டவரின் படையலைச் செலுத்த அருகில் வரக்கூடாது (லேவி 21:20).

சோ

சோ (SO)

இவர் அசீரியாவைச் சல்மனேசரும், இஸ்ராயேலை ஓசேயாவும் ஆண்டுவந்த காலத்தில் எகிப்தை ஆண்டுவந்தவர் ஆவார். அசிரிய நாட்டு மன்னனுக்கு எதிராக ஓசேயா மன்னன் சோவுடன் சேர்ந்து புரட்சித்திட்டம் தீட்டினார் (2 அர 17:4; கி.மு. 725). இறுதி வெற்றி சல்மனேசருக்குக் கிடைத்தது. ஓசேயா சிறைப்படுத்தப்பட்டார். சோ யார் என்று அடையாளம் காட்டுவது கடினம். இது, எகிப்திய ஆட்சியாளர்களை ஓசேயா சந்தித்த இடத்தின் பெயராக இருக்கலாம்.

சோகாம் (SHOHAM - மணிக்கல்வகை)

ஒரு லேவியர். மெராரியின் வழித்தோன்றல். யகசியாவின் மகன் (1 நாள் 24:27).

சோகார் (ZOHAR - பழுப்பு நிறமான)

1. இத்தியரான எப்ரோனின் தந்தை ஆவார் (ஆதி 23:8; 25:9). இவரிடமிருந்து ஆபிரகாம் மக்பேலாக் குகையை வாங்கினர்.

2. சிமியோனின் மகன் செரகுவின் (4) மற்றொரு பெயர் (ஆதி 46:10; யாத் 6:15).

சோகேத்து (ZOHETH - வலிமையான, கர்வமிக்க)

இசியின் மூத்த மகன். யூதா கோத்திரத்தில் ஒரு குடும்பம் அல்லது குலம் என்று கருதப்படுகிறது (1 நாள் 4:20).

சோக்கோ (SOCO / SOCOH - முட்புதரான இடம்)

இப்பெயரில் மொத்தம் 3 நகரங்கள் உள்ளன.

1. யூதா புதல்வரின் கோத்திரத்திற்குச் செபேலாப்பகுதியில் கிடைத்த நகரங்களுள் ஒன்று (யோசு 15:35). இங்குதான் பெலிஸ்தியர்கள் சவுலுக்கு எதிராகப் படையெடுத்து வந்தபோது பாளையம் இறங்கினர். இப்போரில்தான் தாவீது கோலியத்தை வென்றதின் மூலம் இஸ்ராயேல் வெற்றிகொண்டது (1 சாமு 17:1). சாலமோனின் மகன் ரெகபயாம் இந்நகரைப் பல அரண்களையுடையதாக மாற்றினார் (2 நாள் 11:7). யூதாவின் அரசன் ஆகாக காலத்தில் இந்நகர் பெலிஸ்தியர்களால் கொள்ளையடிக்கப்பட்டது (2 நாள் 28:18).

இந்த இடம் எருசலேமுக்கு மேற்கு - தென்மேற்கில் 28 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து அப்பாது என்று அடையாளம் காட்டப்படுகிறது. இப்பெயர், அருகிலுள்ள கிராமமாகிய கிர்பெத்து சுவெய்கேயினால் பாதுகாக்கப்பட்டுள்ளது.

2. யூதாவில் மலைநாட்டின் தென்பகுதியில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:48). இந்நகரின் தந்தை கெபர் (எபேர்) என்பவர் காலேபியர் தலைமுறைப்பட்டியலில் வருகிறார் (1 நாள் 4:18). இவர் இந்நகரை நிறுவியிருக்கலாம். இது பெயேர் செபாவுக்கு வடகிழக்கில் 25 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து சுவெய்கே என அடையாளம் காட்டப்படுகிறது. இது 1-இல் வரும் கிராமத்திலிருந்து வேறுபட்டது.

3. சாலமோன் மன்னனின் மூன்றாவது மாகாணத்தில் இருந்த ஓர் இடம். இதன் நிர்வாகி பென்-கெசது என்பவராவார் (1 அர 4:10). இந்நகரம் எகிப்திய ஏடுகளில் குறிக்கப்படுகிறது. சமாரியாவுக்கு வடமேற்கில் 16 கி.மீ. தொலைவிலும் சாரோன் சமவெளியிலுள்ள இக்காலத் துலுக்காரமிலிருந்து வடக்கில் சிறிது தூரத்திலுமுள்ள கிப்பெத்து சுவெய்கேத்து எர்-ராஸ் (தேல் எர் - ராஸ்) என்று அடையாளம் காட்டப்படுகிறது.

சோசிபத்தர் (SOSIPATER - தந்தை மீட்கப்பட்டார்)

1. யூதா மக்கபேயரின் படைத்தலைவர்களில் ஒருவர் (2 மக் 12:19-25). இவர் தன்னிடம் தோற்றுப் பிடிபட்ட திமோத்தேயு என்ற செலூக்கியப் படைத்தலைவனை அவரது வேண்டுகோளுக்கிணங்கி விடுவித்தார்.

2. பவுல் உரோமையருக்கு எழுதிய மடலில் வாழ்த்துக் கூறுபவர்களில் ஒருவர் (உரோ 16:21). பவுலின் உறவினராக அதாவது ஒரு யூதன் என்று குறிப்பிடப்படுகிறார். இப்பெயரின் மற்றொரு வடிவம் சோப்பத்தர் ஆகும் (அ.ப. 23:4). ஒருவேளை இருபெயரும் ஒரே ஆளைக் குறிக்கலாம்.

சோஸ்திராத்து (SOSTRATUS)

நான்காம் அந்தியோக்கு காலத்தில் எருசலேம் நகர அரணின் ஆளுநர் (2 மக் 4:28). மெனலாவு தன்னைத் தலைமைக் குருவாக நியமித்ததற்காக அரசனுக்குத் தருவதாக வாக்களித்திருந்த பணத்தைத் தரும்படி சோஸ்திராத்து வற்புறுத்திக் கேட்டும் அவரிடமிருந்து பணம் பெறமுடியவில்லை. ஆகவே, அரசன் இருவரையும் பதவியிலிருந்து நீக்கினார்.

சோதி (SODI - என் நம்பிக்கைக்கு உரியவர், யாவேயின் ஆலோசனையை அறிந்தவர்)

மோசே கானான் நாட்டின் வலிமையை அறிந்துவர, குலத்திற்கொருவராக அனுப்பியவர்களில் ஒருவரான காதியேலின் தந்தை. செபுலோன் குலத்தைச் சேர்ந்தவர் (எண் 13:10).

சோதிடன் (ASTROLOGER)

வருங்காலம் ஒரு மனிதனுக்கும் சமூகத்திற்கும் எப்படி இருக்கும் என்று அறிய விரும்பும் ஏக்கம் சோதிடவியலை ஊக்குவித்தது. பாபிலோனிலும் எகிப்திலும் உள்ள சோதிடர்கள் வானில் உலவும் கோள்களைத் துல்லியமாகப் பார்த்து, அவற்றின் அசைவுகள் மூலம் வருங்காலத்தில் பூமியில் என்ன நடக்கும் என்பதை முன்னறியலாம் என்று நம்பினர். பழங்கால இஸ்ராயேல் சோதிடத்தைப்பற்றி அறியவில்லை. பழைய ஏற்பாட்டில் இதைப்பற்றிக் காணப்படும் சில வாசகங்கள் இதுபாபிலோனியருக்கே உரிய பழக்கம் என்று சுட்டுகின்றன. எசாயா பாபிலோனில் உள்ள சோதிடர்களைப் பார்த்து, ''திட்டங்கள் தீட்டியே நீ சோர்வுற்றாய்; வான் வெளியைக் கணிப்போரும், விண்மீன்களை ஆய்வோரும், நிகழவிருப்பதை அமாவாசைகளில் உனக்கு முன்னுரைப்போரும், வந்து நின்று உன்னை விடுவிக்கட்டும்'' (எசா 47:13) என்கிறார். எரேமியா ''வானத்தில் தோன்றும் அடையாளங்களைக் கண்டு கலங்காதீர். வேற்றினத்தாரே அவற்றால் கலக்கமுறுவர்'' (எரே 10:2) என்று மக்களை எச்சரிக்கிறார் (காண்க தானி 2:7; 4:4; 5:7.11).

சோதோமின் கொடி முந்திரி (VINE OF SODOM)

நச்சுப்பழங்களைக்கொண்ட கசப்பான கொத்துக்களையுடைய திராட்சைக் கொடிக்கு மோசே இஸ்ராயேலை உப 32:32-இல் ஒப்பிடுகிறார். இது ஆரஞ்சு நிறத்தையுடையது என்று ஆசிரியர்கள் விவரிக்கின்றனர். அதன் உட்புறம் கருப்பாகவும் பொடிமயமாகவும் இருந்தமை ''பள்ளத்தாக்கின் நகரங்களின்'' அழிவைச் சுட்டுவதாகக் கருதப்பட்டது.

சோதோமியர் (SODOMITES)

ஆதி 18-19 பகுதிகளில் வரும் ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஒரே பாலினருக்குள் உடல் உறவு கொள்ளும் ஆண்களைக் குறிப்பதற்குச் சில மொழிபெயர்ப்புகளில் பயன்படும் சொல். சோதோமைச் சேர்ந்த ஆண்கள் லோத்தின் வீட்டின் முன் நின்றுகொண்டு அவ்வீட்டிற்கு வந்த இரு இளைஞர்களைத் தங்களிடம் கையளிக்குமாறு தீய எண்ணத்துடன் ''நாங்கள் அவர்களுடன் உறவுகொள்ளும்படி அவர்களை எங்களிடம் கொண்டுவா'' என்று கோருகின்றனர் (ஆதி 19:5). இவர்களது தீமை எடுத்துக்காட்டான பழமொழியாயிற்று (எசா 3:9; புல 4:6; 2 பேதுரு 2:7-10; யூதா 7). ஆனால் இச்சொல் வழிபாட்டு விலை ஆடவரைச் சுட்டுகிறதேயொழிய, சோதோமைப் பற்றிய குறிப்பைக் கொண்டிருக்கவில்லை என்பர் அறிஞர் சிலர்.

சோதோம் (SODOM - எரிகின்ற, அழிகின்ற)

யோர்தான் சாக்கடல் பள்ளத்தாக்கை ஒட்டிய சோதோம், கொமோரா, அதிமா, செபோயிம், சோவர் ஆகிய ஐந்து நகரங்களில் சோதோம் முதன்மையானது (ஆதி

10:19); அடிக்கடி குறிப்பிடப்படுவது; தனியாகப் பதினாறுதடவையும், மொத்தத்தில் முப்பத்தியாறு தடவையும் குறிப்பிடப்படுகிறது. ஆபிரகாமிடமிருந்து பிரிந்து சென்றபோது லோத்து இப்பகுதியைத் தேர்ந்து கொண்டார். அப்போது இப்பகுதி ''ஆண்டவரது தோட்டம் போலும் எகிப்து நாட்டைப் போலும் இருந்தது'' *(ஆதி 13:10)*. இப்பகுதியில் சுற்றித்திரிந்தபின் இறுதியாக லோத்து சோதோமுக்கு அருகில் கூடாரம் அமைத்து வாழ்ந்து வந்தார்.

இப்பகுதி அரசர்கள், தங்களை மெசபொத்தாமிய அரசர்களான கெதர்லகோமரும் அவரது கூட்டணியும் ஆட்சி செய்ததை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர்; தோற்கடிக்கப்பட்டனர். இப்போரில் கைதியாக்கப்பட்ட தன் சகோதரன் லோத்தை மீட்க, ஆபிரகாம் சோதோமுக்கு ஆதரவாகப் போரிட்டு லோத்தை மீட்டார் *(ஆதி 14)*.

சோதோம் மக்கள் ஆண்டவருக்கு எதிரான மிகக்கொடிய பாவிகளாக இருந்தனர். ஆகவே சோதோமையும் அதன் அண்டை நகரங்களையும் அழிக்கப்போவதாக ஆபிரகாமுக்கு ஆண்டவர் வெளிப்படுத்தினார் *(18:16-22)*. ஆபிரகாம் சோதோம் மக்களுக்காக ஆண்டவரிடம் பரிந்து பேசி மன்றாடினார். அந்நகரில் பத்து நீதிமான்கள்கூட காணப்படாமையால் அந்நகரை அழிக்க ஆண்டவர் உறுதி கொள்கிறார் *(18:23-33)*.

சோதோமை அடைந்த ஆண்டவரின் இரு தூதர்கள் அந்நகரின் நுழைவாயிலில் லோத்து உட்கார்ந்திருப்பதைக் கண்டனர் *(19:1)*. அவர் வீட்டில் அவர்கள் தங்கியிருந்தபோது, சோதோம் நகர மக்கள், விருந்தாளிகளோடு பாலின உறவுகொள்ளும்படி தங்களிடம் அவர்களை ஒப்படைக்கும்படி கோரினர். லோத்து விருந்தாளிகளைப் பாதுகாக்கும்படி, தன் புதல்விகளையே நகர மக்களிடம் கையளிப்பதாகக் கூறி மன்றாடினார். தூதுவர்கள் நகர மக்களைக் குருடராக்கி அவர்கள் செய்யவிருந்த தீச்செயலைத் தவிர்த்தனர் *(19:1-12)*. ஆண்டவர் அந்நகரை அழிக்கப் போவதை லோத்துக்கு வெளிப்படுத்தி, அவரையும் அவர் குடும்பத்தினரையும் சோதோமை விட்டு மலைப்பகுதியைநோக்கி ஓடிவிடத் தூண்டினர். ஆனால் லோத்து சோவர் நகருக்குச் செல்ல அனுமதி தரும்படி வேண்டினார். அதற்கு அனுமதி அளிக்கப்பட்டது *(19:12-23)*.

லோத்து சோவரை அடைந்தவுடன், ''ஆண்டவர் வானத்திலிருந்து சோதேம், கொமோரா நகரங்களின் மேல் கந்தகமும் நெருப்பும் பொழியச்செய்தார். அந்நகரங்களையும் அவற்றைச் சுற்றியிருந்த சமவெளி முழுவதையும் அழித்தார். நகரங்களில் வாழ்ந்த அனைவரையும், நிலத்தில் தளிர்த்தவற்றையும் அழித்தார்'' *(19:24-25)*. அடுத்த நாள் காலையில் கெபிரோனுக்கு அருகிலிருந்து ஆபிரகாம் இப்பகுதியைப் பார்த்தபோது ''சூளையின் புகைபோல் நிலப்பரப்பிலிருந்து புகை கிளம்பக்கண்டார்'' *(19:28)*. ஆண்டவர் ஆபிரகாமுக்காக லோத்தைக் காப்பாற்றினார் *(19:29)*.

சோதோம், கொமோரா நகரங்களின் அழிவு பற்றிய வரலாறு இஸ்ராயேல் பாரம்பரியத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தது. இவை இறைவன், தீர்ப்பிட்டு முழுவதும் அழிக்கப்படும் நகரங்களுக்கு எடுத்துக்காட்டாயின *(உப 29:22 தொ; ஞான 10:6; எசா 1:9; 13:19; எரே 20:16; 49:18; 50:40; புல 4:6; ஆமோ 4:11; செப் 2:9; லூக் 17:29; 2 பேதுரு 2:6; யூதா 7)*. சோதோமின் கொடிய பாவத்தன்மை மிக இழிவானதன்மைக்கு எடுத்துக்காட்டாயிற்று *(உப 32:32; எசா 1:10; 3:9; எரே 23:14; எசே 16:46-56; மத் 10:15; 11:23 தொ; லூக் 10:12; திருவெளி 11:8)*. ஆண்டவரின் தூதர்களிடம் சோதோம் மக்கள் தவறாக நடந்துகொள்ள முயன்றதைச் சுட்டிக்காட்டியே, இயேசு, தாமும் தம் சீடர்களும் போதித்ததைக் கேட்டுப் பயன்பெறாத நகரங்களுக்குத் தீர்வை நாளில் நேரிடுவதைப் போல் சோதோமுக்கு நேரிடுவது அவ்வளவு கடினமாய் இராது என்று கூறுகிறார் *(மத் 10:15; 11:23-24)*.

சோதோமின் அடிப்படைப் பாவம் ஒரே பாலினருக்குள் புணர்ச்சி என்ற கருத்து பழைய ஏற்பாட்டு வாசகங்களில் இல்லையெனலாம்; புதிய ஏற்பாட்டில் பிற்கால நூல்களில்தான் காணப்படுகிறது (யூதா 7; 2 பேதுரு 2:6-10). உப 23:17; 1 அர 14:24; 15:12; 22:46; 2 அர 23:7; 1 திமோ 1:10-ஆகிய பகுதிகளில் சோதோமியர் என்று மொழிபெயர்க்கப்படும் எபிரேய, கிரேக்கச் சொற்கள் ஆண் ஆணோடு புணர்ச்சி கொள்வதையே (வழிபாட்டு விலைஆடவரை) குறிக்கிறது. மொழிபெயர்ப்புகள் கூறுவதைப்போல் சோதோமைச் சுட்டும் கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

இக்கதை சில இலக்கிய, வரலாற்றுப் பிரச்சனைகளை எழுப்புகிறது. இந்நகரங்கள் இருந்த இடங்கள், ஏல் - லிசான் தீபகற்பத்தின் தெற்கில், சாக்கடலின் தென் விரிகுடாவால் மூடப்பட்டுள்ளது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் நிகழ்ச்சியுரை, இந்நகரங்கள் கடலால் மூடப்பட்டிருந்ததாக ஒருபோதும் சுட்டவில்லை. ''ஆண்டவரின் தோட்டம் போலும்'' என்று விவரிக்கப்படும் இப்பகுதி, சாக்கடல் இப்போதிருக்கும் நிலையோடு ஒத்துப்போகவில்லை. ஆய்வுகள் யோர்தான் பள்ளத்தாக்கில் வரலாற்றுக்கு முந்திய காலத்தில், மக்கள் நெருக்கமாகக் குடியேறியிருந்தனர் என்று காட்டுகின்றன. சாக்கடல்கரை ஒருபோதும் இப்படியிருந்ததில்லை. இந்நகரங்கள் எங்கேயிருந்தன என்பதுபற்றிக் குறிப்புகள் இல்லையென்று கருத வாய்ப்பு உண்டு.

பாரம்பரியமாக இந்நகரங்கள் இருந்த இடமாகச் சாக்கடலின் தென்பகுதியிலுள்ள சிதீம் பள்ளத்தாக்கு கருதப்பட்டது. இது ஒரு காலத்தில் பசுமைமிக்கதாகத் திகழ்ந்ததாகத் தெரிகிறது. இப்பகுதி கிழக்கிலிருந்தும் தென்கிழக்கிலிருந்தும் மேற்காக ஓடும் ஐந்து ஓடைகளிலிருந்தும் நீர் பெற்றது. இப்பகுதியில் நில நடுக்கங்கள் நடந்துள்ளன. நிலக்கரியும் நில எண்ணெய்ப் பொருட்களும் இயற்கையான எரிவாயுவும் நிறையக்கிடைக்கின்றன. இந்நகரங்களின் அழிவு நில அதிர்ச்சியும் எரிமலைக் கொதிப்பும் சேர்ந்த இயற்கை நிகழ்ச்சியாக இருந்திருக்கலாம். இயற்கையான எரிவாயுவும் நில எண்ணெய்ப் பொருள்களும் சேர்ந்து எரிதல் ''சூளையின் புகைபோல் நிலப்பரப்பிலிருந்து'' கிளம்பியிருக்க வேண்டும் (ஆதி 19:28). இதையே விசுவாசமிக்க விவிலிய ஆசிரியர் இறைவனது தீர்ப்பாகக் காணுகிறார்.

இக்கதை ஆபிரகாமின் கதையோடு ஓரளவு செயற்கையாகச் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்நிகழ்ச்சி ஆபிரகாமின் காலத்தில் நடந்தது என்று உறுதியாக நிறுவமுடியாது. இக்கதையில் பல நாடோடிப் பாடல் பண்புகள் காணப்படுகின்றன. இவை ஞாபகத்துணுக்குகளால் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது ஓர் இறையியல் நிகழ்ச்சியுரை என்பது உறுதி. இந்நகரங்களின் பாவங்களுக்கான இறைவனின் தீர்ப்பு என்று இந்த அழிவு விளக்கப்படுகிறது. தீயவர்களோடு வாழும் நீதிமான்களை அழிக்காதிருப்பதற்காக யாவே தீயவர்களையும் காப்பாற்றுகிறார். ஆனால் லோத்தையும் அவரது குடும்பத்தையும் தவிர சோதோமில் ஒரு நீதிமானுமில்லை. அழிவிற்கு முன் லோத்தும் அவரது குடும்பத்தாரும் நகரிலிருந்து வெளியேறச் செய்யப்படுகின்றனர். இங்கும், பெரு வெள்ளத்திலும் இறைவனது கோபத்திற்குக் காரணம் ஒன்றே.

இந்நிகழ்ச்சி நடந்திருக்கக்கூடிய காலத்தை யூகிக்க, பாப் எத்-தாரா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாண்டச் சிதறல்களைச் சுட்டிக்காட்டுவர். இந்த இடம் விழாக் கொண்டாடும் இடமாகும். இங்கு கி.மு. 2300-க்கும் 1900-க்கும் இடைப்பட்ட காலத்தில் திருப்பயணிகள் வந்து போயிருக்கின்றனர். இத்தகைய பயணங்கள் நின்றுபோவது சோதோம், கொமோரா நகரங்களின் அழிவோடு ஒத்துப்போகிறது. இந்நகரங்களிலிருந்து இப்பயணிகள் வந்திருக்கவேண்டும். இந்தக் குறிப்பு ஆபிரகாம் கி.மு. 19-ஆம் நூற்றாண்டில் அல்லது 20-ஆம் நூற்றாண்டின் முடிவில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருத இடமளிக்கிறது.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு குறிப்பு கி.பி. 325-இல் நடந்த நிசேயாப் பொதுச் சங்கத்தில் பங்கெடுத்தவர்களுள், சோதோமின் ஆயரான செர்வோஸ் என்ற ஒருவர் இருந்தார் என்று கூறுகிறது. இது ஓர் ஆயருக்கு வினோதமான பட்டமாகும். சாக் கடலின் மேற்குக் கரையில் சோதோம் மீண் டும் கட்டப்பட்டதா? அதே குறிப்பு ''அரா பிய சோதோமுக்கு'' அருகில் எங்கத்தி (ஏங் கேதி) இருந்ததாகக் கூறுகிறது. ஆனால் கி.பி. 381-இல் சோவாரின் ஆயர் இப்பகுதி யின் பிரதிநிதியாகத் திகழ்ந்தார்.

இக்கால இஸ்ராயேல்நாடு சோதோம் என்ற புதியநகரை எபெல்-சுதுமுக்கு வடக் கில் நிறுவியது. இதன் அருகில் 1953-இல் இஸ்ராயேலின் முதல் எண்ணெய்க் கிணறு தோண்டப்பட்டது. ஆகவே சோதோமுக்கு நிலஎண்ணெயோடு உள்ள தொடர்பு நாலா யிரம் ஆண்டுக்கால பழமையுடையதாகும்.

சோபகு (ZOPHAH)

ஆசேர் குலத்தின் ஆற்றல்மிக்க வீரரும் ஒரு குடும்பத்த தலைவரும் ஆவார் (1 நாள் 7:35-36).

சோபா (ZOBAH - கூடாரம் அடித்துத் தங்கு தல்)

சோபா லெபனோனுக்கும் எதிர் லெப னோனுக்கும் இடையில் இருந்த பள்ளத்தாக் கில் இருந்த எமோரியரின் நகரம். சவுல் சோபாவின் அரசனோடு போரிட்டார் என்று 1 சாமு 14:47 கூறுகிறது. தாவீது சோபாவின் மன்னனான அததேசரோடு போரிட்டார் (2 சாமு 8:3.5.9; காண்க 1 நாள் 18:3.5.9). அததேசரின் நகரங்களாகிய பெற்றகு, பேரோத்தா ஆகியவற்றிலிருந்து தாவீது மிக அதிகமான செம்பைக் கொண்டுவந்தார் என்று 2 சாமு 8:8 குறிப்பிடுகின்றது. இதன் பின் சோபா அம்மோனியரோடு ஒப்பந்தம் செய்து கொண்டது. அம்மோனியர் ஆராம் - பெத் - இரகோபு, ஆராம்-சோபா, மாக்கா ஆகியவற்றிலிருந்து வீரர்களை வாடகைக்கு அமர்த்தினர் என்று 2 சாமு 10:6 குறிப்பிடுகி றது (காண்க 1 நாள் 19:6). இவர்கள் எல்லாம் தாவீதின் படைத்தலைவரான யோவாபால் கொல்லப்பட்டனர். தாவீதின் ஆற்றல்மிக்க வீரர்களும் சோபாவைச் சேர்ந்த நாத்தானின் மகனான இகாலும் ஒருவராவார் (2 சாமு 23:26). சோபாவின் சிற்றரசர்களில் ஒருவ ரான இரசோன் சாலமோன் அரசரின் எதிரி ஆவார் (1 அர 11:23).

சோபாக்கு (SHOBACH, SHOPHACH - விரிவாக் குகிற)

தாவீதுக்கு எதிராகப் போர்தொடுத்த சோபாவின் அரசனான அததேசரின் படைத் தலைவன். இஸ்ராயேல் முதலாம் சீரிய - அம்மோனியப் போரில் தோல்வியுற்ற பிறகு அததேசர் இன்னும் பல அரமேயர் களைப் படையில் சேர்த்து அதற்குச் சோபாக் கைத் தலைவனாக்கித் தாவீதை எதிர்த்துப் போருக்கு அனுப்பினார் (1 நாள் 19:16-18). கேலாமில் (ஏலாம்) நடந்த போரில் தாவீது சீரியர்களை முழுவதுமாக அழித்து, அததேச ரின் ஆட்சிக்கு உட்பட்டவைகளைத் தங்கள் வசமாக்கினர். இப்போரில் சோபாக்கு இறந் தார் (2 சாமு 10:16-18).

சோபாபு - (பகையான)

1. காலேபின் புதல்வர்களில் ஒருவர்; அசுபா வழிப் பிறந்தவர் (1 நாள் 2:18).

2. எருசலேமில் தாவீதுக்குப் பத்சேபா மூலம் பிறந்த நான்கு புதல்வர்களில் ஒருவர் (2 சாமு 5:14; 1 நாள் 3:5; 14:4).

சோபாய் (SHOBAI - கைதிகளை நடத்திச் செல்பவர்)

பாபிலோனிய அடிமைத்தனத்தினின்று செருபாபேலோடு திரும்பிய வாயிற்காவல ரின் குடும்பங்களில் ஒன்று (எஸ் 2:42; நெகே 7:45).

சோபாய் (ZOPHAI)

எல்கானாவின் மகன். கோகாத்தியக் குடும் பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். சாமுவேலின் மூதாதையர் (1 நாள் 6:26). 6:35-இல் இவர் சூப்பு என்றழைக்கப்படுகிறார்.

சோபால் (SHOBAL - கூடை, ஒட்டம்)

1. சேயிரின் இரண்டாவது புதல்வன்; ஏதோமில் குடியிருந்த கோரியரின் தலைவன் (ஆதி 36:20.23.29; 1 நாள் 1:38.40).

2. யூதாவைச் சேர்ந்தவர் (1 நாள் 4:1-2). கூரின் மகன். கிரியத்து - எயாரிமில் வாழ்ந்த காலேபின் சந்ததியினருக்கு மூதாதையர் (1 நாள் 2:50.52).

சோபி (SHOBI - கைதி)

அம்மோனிய இளவரசன்; அரசன் நாகசின் மகன். அப்சலோமின் கலகத்தினால் தாவீது மகனயிம் என்ற இடத்தில் இருந்த போது லோதபார் ஊரரான அம்மியேலின் மகன் மாக்கிரோடும், ரோகலிம் ஊராரும் கிலயாதைச் சார்ந்தவருமான பர்சில்லாயோடும் சேர்ந்து சோபி தாவீதுக்கு உணவும் மற்றப் பொருட்களும் கொடுத்து உதவினார் (2 சாமு 17:27).

சோபியின் தந்தைக்குப் பிறகு அவனது சகோதரர் கானூன் (ஆனூன்) அம்மோனியர் நாட்டை ஆட்சி செய்தார். தாவீது அனுப்பிய தூதுவர்களைக் கானூன் அவமானப்படுத்தியதால் இருவருக்கும் போர் மூண்டது. தாவீது அம்மோனியரை அழித்து இரபாவைக் கைப்பற்றினார். கானூன் இடத்தில் சோபி தாவீதால் அரசனாக நியமிக்கப்பட்டார் (2 சாமு 17:27-29; காண் 2 சாமு 10-12; 1 நாள் 19-20:3).

சோபிம் (ZOPHIM - காவல்காரர்கள்)

இது சாக்கடலின் வடகிழக்கு எல்லைக்கு அருகிலுள்ள உயர்ந்த இடம். இங்குதான் பாலாக்கு இஸ்ராயேலரைச் சபிக்கும்படி, பிலயாமைக் கூட்டிக் கொண்டு போனார். ''பாலாக்கு பிஸ்காவின் கொடு முடியில் சோபிம் வயல்வெளிக்குக் கொண்டு போனார்'' (எண் 23:14). அனேகமாக இச்சொல் ஒரு தனிப்பட்ட இடத்தைக் குறிக்காது. எனவே இதை வெறுமனே ''காவற்காரர்களின் இடம்'' என்றழைக்கலாம். இது மோவாபின் வட சமவெளியில் உள்ளது.

சோபேக்கு (SHOBEK - வெற்றிவீரர்)

எஸ்ராவின் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள மக்கள் தலைவர்களுள் ஒருவர் (நெகே 10:24).

சோபேபா (ZOBEBAH - சோம்பலான)

யூதாவின் குலத்தைச் சேர்ந்த கோகவின் மகன் அல்லது ஒரு துணைப்பிரிவு (1 நாள் 4:8).

சோப்பத்தர் (SOPATER - தந்தை மீட்கப்பட்டார்)

இவர் பவுல் எருசலேமுக்குச் சென்ற இறுதிப்பயணத்தில் அவருடன் சென்ற துணையாளருள் ஒருவர் (அ.ப.20:4). இவர் பெரோயாவைச் சேர்ந்தவர்; பீருவின் மகன். இவர் எருசலேம் திருச்சபைக்கு நிதிக்காணிக்கையை எடுத்துச் செல்ல, திருச்சபைகளால் நியமிக்கப்பட்டவர்களுள் ஒருவராக இருக்கலாம் (1 கொரி 16:3-4). இவரும் சோசிபத்தரும் ஒரே ஆளாக இருக்கலாம் (உரோ 16:21).

சோப்பார் (ZOPHAR)

சோப்பார், யோபுவின் மூன்று நண்பர்களுள் நாமாயர் என்று அழைக்கப்பட்டவர் (யோபு 2:11; 11:1; 20:1; 42:9).

யோபு 11:1; 20:1-இல் தொடங்கும் இவரது 'ஆறுதல்' வார்த்தைகளில் ஒத்துணர்வு இல்லை. இவரது உரைகள் யோபுவின் துன்பத்தைப் புரிந்து கொண்டதாகக் காட்டவில்லை. மூன்றுநண்பர்களில் இவருக்குமட்டும் இரண்டு உரைகளே தரப்பட்டுள்ளன. ஆகவே அறிஞர்கள் சிலர் யோபுவின் உரையில் மூன்றாவது உரையைக் (27:13-23) காண முயல்கின்றனர்.

சோமேர் (SHOMER - காவல்காரன்)

1. யூதாவின் அரசனான யோவாசைக் கொன்ற அவனது பணியாளர்களில் ஒருவனான யோசபாத்தின் தாய் (2 அர 12:21; 2 நாள் 24:26).

2. ஆசேரின் குலத்தில் ஓர் இனத்தின் முன்னோர். கெபரின் (எபேர்) புதல்வர்களில்

ஒருவர் (1 நாள் 7:32). 7:34-இல் இவர் செமேர் (3) என்றும் அழைக்கப்படுகிறார்.

சோம்பலான, சோம்பேறி (SLOTHFULNESS, SLUGGARD)

''தட்டிக்கழித்தல்'', ''சோம்பேறியாக இரு'' போன்றவைகளின் எபிரேய மூலம். அடிக்கடி சோம்பேறி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (பழ 15:19; 19:24; 21:25; 22:12; 24:30-34; 26:13-15). ''சோம்பலான'', ''சோம்பேறித்தனம்'', ''சோம்பேறி'' போன்ற சொற்கள் பழைய ஏற்பாட்டில் ஞான இலக்கியத்தில் மட்டும் காணப்படுகின்றன. சோம்பேறித்தனம் முட்டாள்தனமாக புத்தியுடைய ஒருவன் அழிவு பயமுறுத்தும் போதும் ஒன்றும் நிகழாததுபோல இருப்பதை விவரிக்கின்றது (பழ 24:30-34). ஞான இலக்கியங்களில் சோம்பேறியை அறிவுள்ளவனுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ளது. அறிவுள்ளவன் கவனமாய்த் தன்னுடைய வாழ்க்கையை விவேகமுள்ள ஞானத்தைக் கொண்டு ''விழிப்படைந்த சுயநலத்துடன்'' திட்டமிடுவான். இந்த எதிர்மறைகள், இரண்டு எதிரான போக்குகளை எடுத்துக்கூறுகின்றன. பழமொழி ஒரு மனிதனுக்கு வாழ்க்கையின் இரண்டு வழிகள் திறந்துள்ளன என்பதைக் காட்டுகின்றது: ஞானத்தின் வழி, மடமையின் வழி. இஸ்ராயேலின் இந்தப் படிப்பினையானது மற்ற மேற்காசிய ஞான அமைப்புக்களைவிட அதிகமாகக் கோட்பாட்டுப் பாதிப்பினால் இப்படிப்பட்ட வளர்ச்சியடைந்தது. இந்தக் கோட்பாட்டின்படி கடவுளுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தால் அவர்களுக்குப் பொருட்செல்வமும் நீண்ட வாழ்க்கையும், கீழ்ப்படியாதவர்களுக்கு எல்லா நேரங்களிலும் துன்பமும் கிடைக்குமென்பதாகும். இப்படியாக இஸ்ராயேலில் சோம்பேறிகளின், முட்டாள்களின் வழிகள் அநீதி புரிந்தவர்களின் வழியாகும்; கடுமையான உழைப்புடைய, ஞானமுள்ளவர்களின் வழியானது, கடவுள்முன் நேர்மையுள்ளவர்களின் வழியாகும். சோம்பேறியின் சோம்பேறித்தனத்தில், அவன் வறட்டுச் சிரிப்புக்கு உள்ளாகும்போதுகூட, இறையியல் முக்கியத்துவம் உள்ளது. அவன் இறைவனது இகழ்ச்சிக்கு உரியவனாகிறான் (சங் 2:4). சோம்பேறியின் பகடிப்படத்தை பழ 10:26; 19:24; 21:25; 22:13; 26:14-இல் காணலாம்.

புதிய ஏற்பாட்டில் தெளிவான இதனுடைய எதிரொலியை மத் 25:26-இல் காண்கின்றோம். இங்கு ''கெட்ட ஊழியன், சோம்பேறி''; ''விசுவாசமுள்ள நல்ல ஊழியனுக்கு'' எதிராகக் காட்டப்பட்டிருக்கின்றான். அத்தியாயம் முழுவதிலும், ஞான இலக்கியத்தின் இரண்டு பாதைகளும் மேலோட்டமாகப் புதிய ஏற்பாட்டு இறுதிக்கால இயலுக்குப் பின்னணியாகிறது. முட்டாளின், சோம்பேறியின், அநீதிபுரிபவனின் வாழ்க்கையானது ''வெளி இருளில்'' கசப்பான புலம்பலில் முடிவடையும் (25:30); அதே நேரத்தில் ஞானம், அறிவாளியின் கடுமையான உழைப்பு, நேர்மை ஆகியவற்றின் வழி, மகிழ்ச்சியான இறுதிக்கால விருந்தில் பங்கு கொள்வதில் (25:10), தலைவனின் மகிழ்ச்சியில் (25:21.23), உலகம் தோன்றியதுமுதல் ஏற்பாடு செய்துள்ள அரசில் (25:34).... பங்கு கொள்வதில் முடிகிறது.

சோம்பல் (IDLENESS)

நேர்மையான கடமைகளைப் புறக்கணித்தல். பிறரது தாராளத் தன்மையையும் உழைப்பையும் சார்ந்திருத்தல். எபிரேய ஞான இலக்கியங்களின் ஒரு போதனை, சோம்பல் வறுமைக்கும் ஏழ்மைக்கும் இட்டுச் செல்லும் என்பதாகும் (பழ 19:15; திருவுரை 10:18; தோபி 4:13). மாண்புள்ள மனைவி ''தன் இல்லத்தின் அலுவல்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பாள்; உணவுக்காகப் பிறர் கையை எதிர்பார்த்துச் சோம்பியிருக்க மாட்டாள்'' (பழ 31:27).

பவுல் தெசலோனிக்கேயில், தான் அளித்த படிப்பினைக்கு ஏற்ப நடவாமல் சோம்பித் திரிபவர்களைக் கண்டிக்கிறார் (2 தெச 3:6-8). இவர்கள் பொறுப்புகளை ஒதுக்கிவிட்டு, எவ்வேலையையும் செய்யாமல், இங்கும் அங்கும் சோம்பித் திரிந்து, பிறர் வேலையில் தலையிட்டு, தங்களின் பிழைப்புக்கான தேவைகளைக் கடினமாக உழைக்கும் பிற

அன்பு மிக்க சகோதரர்களின் மேல் சுமத்துவர் (3:11). இவர்கள், உழைக்க மனமில்லாவிட்டால் உண்ணலாகாது (3:10). தெசலோனிக்கேயர்களிடையே இந்நிலை நீண்டகாலமாக இருந்திருப்பதாகத் தெரிகிறது. இது இறுதிக்காலத்தை எதிர்பார்த்ததின் விளைவு என்று வெறுமனே கூறிவிடமுடியாது.

சோம்பு (DILL)

இது சீரகத்துடன் சேர்ந்து வருவதால் இது உணவிற்குச் சுவையூட்டப் பயன்படுத்தப்பட்ட ஒருவகை விதை என்று தெரிகிறது (மத் 23:23). இதை உளுந்து என்றும் கூறுவர் (எசா 28:25.27). இது வாசனையாகவும் தவிட்டு நிறத்துடன், நீண்ட வட்ட வடிவத்திலுமுள்ள ஒரு விதை. இது சீரகத்தைப் போன்றதல்ல. இது உணவிற்கு வாசனை சேர்க்கப் பயன்படுத்தப்படுவதுடன் வாயுவைத் தடுக்கும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. மத் 23:23-இல் சொல்லியுள்ளது போல இதிலும் பத்தில் ஒரு பகுதியைக் கடவுளுக்குச் செலுத்த வேண்டியிருந்தது (காண்க உப 14:23). லூக் 11:42-இல் சோம்புக்குப் பதிலாகக் கறியிலை என்ற சொல் தமிழ் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மூலத்தில் இரண்டு வாசகங்களிலும் சோம்பு என்ற சொல்லே பயன்பட்டிருக்கலாம்.

சோரா (ZORAH - குளவி)

சோரா, வாடி எஸ் - சாரார் (விவிலிய செரேக்கு பள்ளத்தாக்கு) என்பதன் வடபகுதியில் பெத் சமேசுக்கு வடக்கில் 3 கி.மீ. தொலைவிலுள்ள சாராவாகும். சோரா முதலில் தாணுக்குச் சொந்தமாய் இருந்தது (யோசு 19:4; காண்க நீதி 13:2; 18:2). பிறகு யூதாவின் செப்பேலாவைச் சேர்ந்த நகரமாயிற்று (யோசு 15:33). சிம்சோனின் தந்தை மனோவாகு சோராவிலிருந்து வந்தவர் (நீதி 13:2). சிம்சோன் சோராவுக்கும் எசுத்தாவோலுக்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்கில் இருக்கையில் ஆண்டவரின் ஆவி அவர் மேல் இருப்பதை உணர்ந்தார் (நீதி 13:25). சிம்சோன் இறந்த பிறகு சோராவுக்கும் எசுத்தாவோலுக்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்கிலிருந்த அவனுடைய தந்தையின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார் (நீதி 16:31).

இஸ்ராயேல் மக்கள் வடக்கு நோக்கிச் சோராவிலிருந்தும் எசுத்தாவோலிலிருந்தும் வந்த தாண் கோத்திரத்து உளவாளிகள் இலாயிசின் ஒரு பகுதியை ஆராய்ந்தபின், அவர்களின் மக்களையும் இலாயிசுக்குக் கூட்டிக்கொண்டு போயினர். வழியில் மீக்கா தன் குருவாக நியமித்திருந்த ஒரு லேவியனைக் கடத்திக்கொண்டு போயினர். இலாயிசோடு போர் புரிந்தபின் மீக்காவிடமிருந்து எடுத்துச் சென்ற சிலைகளைத் தாணின் வழிபாட்டு இடத்தில் நிறுவினர்.

யூதா வம்சத்தவரைக் குறிப்பிடும் அட்டவணையில் சோரா குலத்தினர் கிரியத்து எயாரிமின் வம்சத்தார் என்று குறிப்பிடப்படுகின்றனர் (1 நாள் 2:53-54; 4:2; காண்க நீதி 18:2). ரெகபயாம் இதனைப் பலப்படுத்தினார் (1 நாள் 11:10). பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்கள் திரும்பி வந்து இங்குக் குடியேறினர் (நெகே 11:29).

சோராவியர் (ZORATHITES)

சோபாலின் வம்சத்தவர். இவர்கள் சோராவில் வாழ்ந்தனர் (1 நாள் 2:53).

சோரியர் (ZORITES)

யூதாவின் வழிவந்த சல்மாவின் வழித்தோன்றல்கள் (2 நாள் 2:45). இவர்கள் முன் வரியில் வரும் சோராவியரிலிருந்து வேறுபட்டவர்களாகத் தெரிகிறது.

சோரேக்கு (SOREK - திராட்சைத் தோட்டம், பொறுக்கி எடுக்கப்பட்ட திராட்சைப் பள்ளத்தாக்கு)

நீதிபதிகளில் ஒருவரான சிம்சோனின் மனைவி தெலீலா வாழ்ந்த இடம் சோரேக்குப் பள்ளத்தாக்கு என்ற இடமாகும் (நீதி 16:4). இது பெத் செமேசு என்பதனால் பாதுகாக்கப்பட்டது. கோட்டைகளுடன் கூடிய இந்நகரம் இஸ்ராயேல் - பெலிஸ்திய எல்லையில் அமைந்திருந்தது. முதலில் இஸ்ராயேல் வசமிருந்தாலும் நீதிபதிகள் காலத்

தில் பெலிஸ்தியர் ஆட்சியில் இருந்தது. இவ்வழியாகவே பெலிஸ்தியர் தாங்கள் கவர்ந்து சென்ற பெட்டகத்தை அனுப்பி வைத்தனர் (1 சாமு 4:12). பிற்காலத்தில் இவை யூதா அரசோடு இணைந்தன.

இப்பள்ளத்தாக்கு வாடி எஸ் - சரார் என்பதாக அடையாளம் காட்டப்படுகிறது. இது பெத் - செமேசின் சுற்று வட்டாரத்தி லிருந்து (எருசலேமுக்கு மேற்கு, தென்மேற் கில் 20 கி.மீ.) வடமேற்காக மத்திய தரைக் கடலைநோக்கி ஓடி அசோதுக்கும் தேல் அவீ வுக்கும் மத்தியில் கடலில் சேர்கிறது. ஓடை யின் வடகரையிலுள்ள கிர்பெத்து சுரிக்கு பழங்காலப் பெயரைத் தாங்கி நிற்கிறது. பழங்காலச் சோரேக்கு இருந்த இடமாக இருக்கலாம். யாப்பாவிலிருந்து எருசலேம் செல்லும் இக்கால இரயில்பாதை இந்த ஓடையைப் பின்பற்றுகிறது.

சோவா (SHOA - பலனுள்ள, செல்வமிக்க)

எசே 23:23-இல் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிடப்பட முடியாத ஒரு மக்கள் இனம். பாபிலோனியர், கல்தேயர், பெக்கோது ஆகி யோருடன் இவர்களும் யூதாவை எதிர்த் தெழுவர் என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவர் கள் கூலிப்படையினராக இருக்கலாம். ஒரு நாடோடி அரமேய இன்மாகிய சுத்துவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்.

சோவார் (ZOAR - சிறிய)

லோத்து வாழத் தேர்ந்துகொண்ட ''சம வெளி நகரங்களில்'' சோவாரும் ஒன்று (ஆதி 13:12; 19:29). இது மற்ற நான்கு நகரங்க ளோடு, நான்கு கீழ்த்திசை மன்னர்களால் தாக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டது (ஆதி 14:1-12). இங்கு 'பேலாவின்' அரசன் எனச் சோவாரின் அரசன் குறிப்பிடப்பட்டுள்ளார். 'பேலா' என்பது சோவாரின் அரசனின் பெய ராகவோ, சோவாரின் பழைய பெயராகவோ இருக்கலாம்.

ஆண்டவர் சோதோம், கொமோரா நகரங் களை அழிக்க எண்ணியபோது லோத்தும், அவருடைய குடும்பத்தாரும் காப்பாற்றப் பட்டனர் (ஆதி 18:20-19:17). லோத்து மலை களுக்குப் போய்ச் சேரமுடியாது என்று அஞ்சி அருகிலிருந்த ''சிற்றூருக்குச்'' சென் றார் (ஆதி 19:18-21). அவ்வூர் சோவார் என்று அழைக்கப்பட்டதாகப் பாரம்பரியம் கூறுகின் றது. இங்கும் தங்க அஞ்சி லோத்து மலை களுக்கு ஓடிப்போனார் (ஆதி 19:30). இங்கு தான் லோத்தின் மூலம் அவருடைய மூத்த மகளுக்கு 'மோவபு' பிறந்தார். இவ்வூர் மற்ற நகரங்களைப்போல் நெருப்பால் அழிக்கப் படவில்லை என்று கருதப்படுகிறது. ஏனெ னில் ஆண்டவர், ''அந்நகரை நாம் அழிக்க மாட்டோம்'' என்று கூறியிருந்தார் (ஆதி 19:21). இதை நாம் ஏற்றுக்கொண்டால், சோவார் சமவெளியில் இல்லை என்று கொள்ள வேண்டும். ஏனெனில் சமவெளியி லிருந்த ஊர்களை ஆண்டவர் அழித்துவிட் டார்.

இதைப் பற்றிப் பலகருத்துக்கள் இருந்தா லும், பிற்காலத்தில் சோவார் என்ற ஒரு நகரம் இருந்தது. ஆண்டவர் மோசேக்கு நெபோ மலைமீதிருந்து தென்னாடுகளை யும், சோவார் வரையிலும் காண்பித்தார் (உப 34:3). எசாயா. (கி.மு. 700) எரேமியா (கி.மு. 600) இவர்கள் காலத்திலும் சோவார் இருந்தது. மோவாபிலிருந்து அகதிகள் சோவாருக்கு வந்தனர். மோவாபின் அழி வின் அழுகுரல் சோவார் வரை கேட்டது (எசா 15:5; எரே 48:4.34).

யோசிப்பசு (கி.பி. 37-93) அரேபியாவி லுள்ள சோவாரைவைப் பற்றிக் குறிப்பிடு கின்றார். பின் சார் சான் மண்டேவியே அவருடைய நாட்களில் (கி.பி. 1322-56) சோவார் ஒரு குன்றின்மீது அமைந்திருந்ததா கக் குறிப்பிடுகின்றார். இது இருந்த இடத்தை உறுதியாகக் காட்டமுடியாது. ஆயினும் சாக்கடலுக்குத் தெற்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள செயில் ஏல்-குராகியின் (செரேது ஓடை) முகத்துவாரத்துக்கருகில் உள்ள இக்கால எஸ்-சாப்பியைச் சுற்றி அடையாளம் காட்டப்படும்.

சோவான் (ZOAN)

இது கெபிரோன் (எபிரோன்) அமைக்கப் பட்டபின் 7 ஆண்டுகள் கழித்து அமைக்கப் பட்ட எகிப்திய நகரமாகும் (எண் 13:22-23). சோவான் சமவெளியில் யாவே பல புதுமை கள் செய்ததாகக் கருதப்படுகிறது (சங் 78:12.43). சோவான் நகரத்தலைவர்கள் எசா 19:11.13-இல் எச்சரிக்கப்படுகின்றார்கள். இங்குப் பல அரசாங்க அதிகாரிகள் தங்கி இருந்தனர் (எசா 30:4). எசேக்கியேல் அதை எரித்துவிடுவதாக அச்சுறுத்துகிறார் (எசே 30:14). பல பெயர்களுள்ள ஓர் எகிப்திய நகரமாகும். இந்நகரம் அவாரிசு என்ற பெய ரில் கைக்சோஸ் அரசர்களின் இருப்பிடமாக வும், இஸ்ராயேலர் தங்கியிருந்த கோசேன் என்ற இடத்திற்கு அருகில் இருந்ததாகவும் கருதப்படுகிறது. 18-ஆம் அரசமரபைத் தோற்றுவித்த முதலாம் அக்மோசு அவா ரிசை அழித்தார். 19-ஆம் அரசமரபு வரையி லும் இங்கு மக்கள் வாழவில்லை. 19-ஆம் அரசமரபின் தூண் சாசனத்திலிருந்து இந்நக ரம் அது அமைக்கப்பட்ட 400-ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது என் பது தெரிகின்றது. தூணின் காலம் கி.மு. 1320-1310 என்று கணிக்கப்பட்டால் அவாரிசு நகரம் 1720-1710-இல் நிறுவப்பட்டதாகும். 19-ஆவது அரசமரபில் இந்நகரம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது. இதில் பெரும்பா லான வேலைகள் இண்டாம் இராமசேசால் செய்யப்பட்டன. இந்நகரத்திற்கு இராமசே சின் நகர் என்ற பொருளில் பி-இராமசேசு என்ற பெயர் இடப்பட்டது (யாத் 1:11). இந்நகரம் கி.மு. 1100-க்குப்பின் தானிசு என்று அழைக்கப்பட்டது. தானிசு 21-23,25-ஆவது அரச மரபுக் காலத்தில் அரச இருக்கையாக இருந்தது. அசீரிய மன்ன னான அசூர்பானிபால் என்பவனால் அழிக் கப்பட்டது (கி.மு. 668).

அறிஞர் பலர் வடகிழக்கு எகிப்தில் மென் சாலே ஏரிக்குத் தெற்கிலுள்ள சான் ஏல் - ஆகார் என்ற இடத்தில் தானிசு இருந்ததாகக் கருதுவர். மற்றவர்கள் அதே பகுதியில் குவான்தீர் என்ற இடத்தைச் சுட்டிக்காட்டு வர். பின்னது பாலஸ்தீன எல்லைக்கு வெகு அருகில் இருந்தது. இரு நாட்டிலும் ஆதிக் கம் செலுத்திய கைக்சோசுகளுக்கு இது வலிமை மிக்க இடமாகும். இதே சாதகமான புவியியல் அமைப்பு, தெபேசைவிட இந்த இடத்தைத் தன் அரச இருப்பிடமாகத் தேர்ந் தெடுக்க இரண்டாம் இராமசேசைத் தூண்டி யது. அகழ்வாய்வுகள் கைக்சோசின் கோட் டைகள், இராமசேசின் பெரும் கட்டடங்க ளின் சிதைவுகள், 400-வருடத் தூண் ஆகிய வற்றை வெளிக் கொணர்ந்துள்ளன. கைச் சோசுகளின் கடவுளான சேத்துக்கு 2-ஆம் இராமசேசு ஒரு பெரிய கோவில் கட்டினார். இக்கடவுளிடமிருந்து தங்கள் குடும்பம் வந்த தாக இவர் நம்பினார்.

சோற்றாய் (SOTAI)

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிவந்த சாலமோனின் ஊழியர்களில் ஒரு குடும்பத்தின் தலைவர் (எஸ் 2:5; நெகே 7:5).

ஸ்

ஸ்கேவா (SCEVA - பொருத்தப்பட்ட)

பவுலின் அருஞ்செயல்களைப் பார்த்துத் தாங்களும் இயேசுவின் பெயரைப் பயன் படுத்திப் பேயோட்டுவதில் யூதத்தலைமைக் குருக்களில் ஒருவரான ஸ்கேவாவும் அவரது ஏழு பிள்ளைகளும் ஈடுபட்டனர் (அ.ப. 19:11-20). பொல்லாத ஆவியால் பிடிக்கப் பட்டவன் இவர்களைத்தாக்க இவர்கள் ஆடையிழந்து ஓட வேண்டியதாயிற்று. இவர் களுக்கு நேர்ந்த கதியை எண்ணிய விசுவாசி கள் தங்கள் விசுவாசத்தை உறுதிசெய்து கொள்ள வேண்டியதாயிற்று. இயேசுவின் மேல் அவர் உயிருள்ள கடவுளின் ஒரே மகன் என்ற விசுவாசம் இல்லாமல் அவரது பெய ரைப் பயன்படுத்துபவர்கள் ஸ்கேவாவின் நிலையை அடைவர்.

ஸ்கூத்தோபோலி (SCYTHOPOLIS - சித்திய ரின் நகரம்)

பெத்சான் என்பதின் இரேக்கப்பெயர். இது எருசலேமுக்கு வடகிழக்கில் 120 கி.மீ. தொலைவிலுள்ள தெக்கப்போலியின் முக் கிய நகரம் (2 மக் 12:29-30).

காண்க: பெத்சான்

ஸ்தாக்கி (STACHYS - தானிய மணி)

உரோமையர் திருமுகத்தில் பவுலால் வாழ்த்துச் சொல்லப்பட்ட ஒரு கிறிஸ்தவன். ''என் அன்புள்ள'' என்ற அடைமொழியுடன் இவரைப்பவுல் குறிப்பிடுகின்றார் (உரோ 16:9).

ஸ்தேவானா (STEPHANAS - மகுடம் தாங்கிய வர், முடி தாங்கியவர்)

பவுலால், கொரிந்தில் திருமுழுக்கு கொடுக்கப்பட்ட சிலரில் ஒருவர். இவர் வீட்டார் அனைவரும் இவருடன் திருமுழுக் குப் பெற்றனர். இவர்களைப் பவுல் ''அக் காயா நாட்டின் முதற்கனி'' (1 கொரி 16:15) என்று குறிப்பிடுகின்றார்.

ஸ்தேவான், பொர்த்துனாத்து, அக்கா யிக்கு ஆகியோர் தன்னைப் பார்க்க வந்தது குறித்துப் பவுல் மகிழ்கின்றார். இவர்களின் நேர்மைக்காகவும், பணிக்காகவும் பவுல் இவர்களைப் பாராட்டுகின்றார். இவர்களின் தலைமையைப் பின்பற்றுமாறு கொரிந்திய மக்களுக்கு அறிவுறுத்துகின்றார் (1 கொரி 1:17-18).

அனேகமாக இவர்கள்தான் கொரிந்திய மக்கள் பவுலுக்கு எழுதிய மடலை அவ ரிடம் கொடுத்துவிட்டு (7:1), பவுல் கொரிந் திய திருச்சபைக்கு எழுதிய முதல் மடலைப் (1 கொரிந்தியர்) பெற்றுச் சென்றிருக்க வேண்டும். இவர்கள் திருச்சபையில் அதி கார பூர்வமாக எந்தப் பதவியும் வகித்தனரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இவர்களின் செயலும், குறிக்கப்பட் டிருக்கும் விதமும் தளப்பணிக்கு முதல் படி என்று கூறலாம்.

ஸ்தேவானின் வெளிப்பாடு (STEPHEN, REVELATION OF)

இந்தப் போலி வெளிப்பாட்டு நூல் பவு லின் வெளிப்பாடு, தோமையாரின் வெளிப் பாடு ஆகியவற்றுடன் செலேகியன் சட்டத் தால் கண்டனம் செய்யப்பட்டது. இதை ஸ்தேவான் எழுதியதாகக் கூறப்பட்டது. இந் நூல் ஸ்தேவான், நிக்கோதேம், கமாலியேல் ஆகியவர்களின் உடல் கண்டெடுக்கப்பட்ட தைப் பற்றியதாகும். எருசலேமுக்கு அருகி லுள்ள கபார்கமலா என்னும் ஊரைச் சார்ந்த லூசியன் (கி.பி. 415) என்ற குருவால் சொல் லப்பட்ட கதை என்று ஊகிக்கப்படுகிறது. இந்நூலை மணிக்கேயர்கள் போற்றிப் பயன் படுத்தியதாகச் சிக்கிடசு செனென்சிசு (கி.பி. 1593) கூறுகிறார். இந்நூல் இப்போது கிடைக்க வில்லை.

ஸ்தேவான் (STEPHEN - மணிமுடி, மலர் வளையம்)

தொடக்கத் திருச்சபையில் ''சீடர்களின் தொகை பெருகவே அவர்களிடையே கிரேக்க மொழி பேசுவோர், நாள்தோறும் நிகழும் அறப்பணியில், தங்கள் கைம்பெண்

கள் கவனிக்கப்படவில்லையென எபிரேய மொழி பேசுவோருக்கு எதிராக முறையிட்டனர்''. இக்குறையை நீக்க, அப்போஸ்தலர்களின் கட்டளைக்கிணங்கிச் சீடர்கள் தங்களிடையே ''நன்மதிப்புள்ளவர்களும் தேவ ஆவியும் ஞானமும் நிரம்பப் பெற்றவர்களுமான எழுவரைத் தேர்ந்தெடுத்து'' அப்போஸ்தலர்கள் முன்நிறுத்த, அவர்கள் செபம் செய்து இவ்வெழுவர்மேல் கைகளை விரித்து அறப்பணிக்காக இவர்களை நியமித்தனர் (அ.ப. 6:1-6). இவர்களில் முதலாவது குறிக்கப்படுபவர் ஸ்தேவான் ஆவார். இவர் மட்டுமே ''விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்து விளங்கியவர்'' என்று விவரிக்கப்படுகிறார் (6:5). மேலும் ஸ்தேவான் ''அருளும் ஆற்றலும் நிறைந்தவராய் மக்களிடையே மாபெரும் அற்புதங்களையும் அருங்குறிகளையும் செய்துவந்தார்'' (6:8) என்றும் விவரிக்கப்படுகிறார்.

ஸ்தேவானைப்பற்றிய செய்திகளை அப்போஸ்தலர் பணிநூலிலிருந்து மட்டுந்தான் பெறுகிறோம். மறைசாட்சி மரணத்தை முடியாகப்பெற்ற இவர் முதல் கிறிஸ்தவ மறைசாட்சியாக எடுத்துக்காட்டப்படுகிறார். ''முடி'' என்ற பொருளுடைய ஸ்தேவான் என்ற பெயர் அவருக்கு மிகவும் பொருத்தமே.

ஸ்தேவானின் வாழ்க்கைக் குறிப்புகள் அப்போஸ்தலர் பணிநூலில் அதிகம் கொடுக்கப்படவில்லை. இவர் கிரேக்க மொழி பேசும் யூதரா? எருசலேமில் தங்கியிருந்தாரா? யாரிடமிருந்து விசுவாசத்தில் போதனை பெற்றுக்கொண்டார்? என்பன போன்றவற்றைப்பற்றி எக்குறிப்பும் இல்லை. லூக்கா இவரைத் திருத்தொண்டர் (தியாக்கோன்) என்று குறிப்பிடவில்லை. திருத்தொண்டர்களின் தோற்றத்தை இங்கு லூக்கா விவரிக்கிறாரா? இந்த எழுவரும் திருத்தொண்டர்கள்தானா? இவர்கள் நியமிக்கப்படுவதற்கு அறப்பணி உடனடியான காரணமாகக் காட்டப்படுகிறது. இவர்கள் ஏற்கனவே சிறப்புமிக்க போதகர்களாக இருக்க, இவர்களுக்குக் கூடுதல் பணியாக அறப்பணி அளிக்கப்பட்டதா? என்பன போன்ற பல கேள்விகள் எழுகின்றன.

இந்த எழுவரும் அறப்பணியில் ஈடுபட்டனரா? ஸ்தேவானைப் பற்றிய விவரிப்பு இதுபற்றி அக்கறை காட்டவில்லை. இந்த எழுவரும் போதிக்கவும் செய்தனர். அதுவும் கிரேக்க மொழிபேசிய சிதறிக் கிடந்த யூதர்களிடம் மட்டும் போதித்தனர். இவர்கள்தான் ஸ்தேவானோடு தர்க்கித்தனர். சங்கத்தின் முன் ஸ்தேவானைக் குற்றம்சாட்டினர் (6:9தொ). அவர் ஆலயம் அழிக்கப்படுவதையும் சட்டம் மாற்றப்படுவதையும் முன்னறிவித்ததாகக் குற்றம் சாட்டினர் (அ.ப. 6:13 தொ). இவை பொய்க் குற்றமென்று கூற முடியாது. ஆலயம் அழிந்துபோகுமென்று இயேசுவே முன்னுரைத்திருந்தார். இரண்டாவது குற்றம், சட்டத்தின்பால் பவுல் கொண்டிருந்த மனப்போக்கை முன்பிரதிபலிக்கிறது. சங்கத்தின்முன் ஸ்தேவானின் உரை (7:2-53) மேலோட்டமாகத் தோன்றுவதைவிட மிகக் கலைத்திறமுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. அது யாவேயின் வெளிப்பாடுகளையும், மீட்புச் செயல்களையும் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கூறுகிறது. இவை யாவும் பாலஸ்தீனத்திற்கு வெளியே நிகழ்ந்தவையாகும்; பலிகளைப்பற்றிய ஆமோசின் கூற்றுகளைத் தருகிறது. பெட்டகத்தை யாவேயின் உறைவிடமாகக் குறிப்பிடுகிறது. சாலமோனின் ஆலயத்தைப்பற்றிய குறிப்போடு முடிகிறது. இது மூல மற்றும் உண்மையான சமயத்திலிருந்து தவறிப்போன நிகழ்ச்சியாக விவரிக்கப்படுகிறது. இதைப்பற்றி ஸ்தேவான் உயர்வாகக் கருதவில்லை (7:47-50). மாறாக நிலையான ஆலயத்தைவிட பாலையில் அலைந்து திரிந்த பெட்டகமே இறைவனது சித்தத்துக்கு உகந்தது என்று கருதியதாகத் தெரிகிறது (7:44-45). தனது முடிவுரையில் யூதர்கள் இறைவாக்கினர்களையும் இறுதியாக இயேசுவையும் கொன்றதாகவும், திருச்சட்டத்தைப் பின்பற்றவில்லை என்றும் குற்றம் சாட்டுகிறார்.

இந்த உரை, ஒருவேளை சிதறிக்கிடந்த யூதர்களிடையேயிருந்து மனந்திரும்பிய

கிறிஸ்தவர்களின் போதனைக்கு ஓர் எடுத்துக் காட்டாக இருக்கலாம். இப்போதகம் சட்டம், ஆலயம், பலிச்சடங்குகள், வாக்களிக்கப்பட்ட நாடு ஆகியவற்றிற்குத் தனிச்சிறப்பான பரிசுத்ததன்மை அளிக்க மறுத்துவிட்டது. இது இறைநிந்தனையாகத் தீர்ப்பிடப்பட்டு, ஸ்தேவான் சட்டப்படி (7:54-60; லேவி 24:16) கல்லால் எறிந்து கொல்லப்பட்டார். சவுலாகிய பவுல் இக்கொலைக்கு உடன்பட்டிருந்ததை லூக்கா குறிப்பிடுகிறார்.

பாலஸ்தீனிய, கிரேக்க யூதக் கிறிஸ்தவர்களுக்கிடையே ஏற்பட்ட வேறுபாடு, பொருட்களைப் பகிர்ந்தளிப்பதைவிட ஆழமானதாக இருந்திருக்கவேண்டும். யூதத்துவம் மற்றும் அதன் கடமைகள் பற்றிய திருச்சபையின் போக்குப்பற்றிப் புற இனக் கிறிஸ்தவர்களிடையே மட்டுமின்றி கிரேக்க மொழி பேசிய யூதக்கிறிஸ்தவர்களிடையேயும் ஏற்கெனவே கேள்விகள் எழுந்திருக்க வேண்டும். தீர்த்துவைக்க ஒரு தலைமுறை எடுத்ததும் பவுலின் இறையியலிலும், திருச்சபையும் மீட்பும் என்ற கருத்திலும் சுழலச்சாக விளங்கியதுமான இப்பிரச்சனை ஸ்தேவானின் உரையில் எடுத்துக்கூறப்பட்டு, பவுலைப் போலவே தீர்வு காணப்படுகிறது.

ஸ்தேவானின் விசாரணை, மரணம் மற்றும் அதன்பின் வந்த வேதகலாபனை ஆகியவை தொடக்கத் திருச்சபையில் முக்கிய மாற்றங்களைத் தூண்டின. வேதகலாபனை கிரேக்க மொழி பேசியவர்களை நோக்கியே செயல்பட்டது. ஆகவே அப்போஸ்தலர்கள் எருசலேமில் தங்கமுடிந்தது (8:1). ஆனால் இந்த நிகழ்ச்சிகள் எருசலேமுக்கு அப்பாலும், யூதர்களுக்கு அப்பால் சமாரியர்களுக்கும் (8:4-25), பின்பு புறவினத்தாருக்கும் (11:19-20) நற்செய்தியைப் பரப்ப இட்டுச் சென்றன. பவுல், ஸ்தேவானின் விசாரணையில் கிறிஸ்துவில் விசுவாசம் அறிவிக்கப்படுவதை முதலில் அறியவந்திருக்கலாம் (7:58; 8:1). அவர் முதலில் கிறிஸ்துவத்தைக் கொடுமைப்படுத்துபவராகவும் (8:3; 9:1), பின்பு ''புறவினத்தாரின் அப்போஸ்தலராகவும்'' (உரோ 11:13) மாறினார்.

ஸ்தேவானின் உரையும், மரணமும் மூன்று உண்மைகளை எடுத்துரைக்க லூக்காவுக்கு வாய்ப்பளிக்கின்றன. அவை: அ) திருச்சபை மறைசாட்சித் திருச்சபையாகும். ஆ) கிறிஸ்தவன் தனது விசுவாசத்திற்குச் சாட்சி பகரவேண்டும். மரணத்தாலும் சாட்சி பகர வேண்டும். இ) கிறிஸ்துவை நிராகரித்த இஸ்ராயேலை இறைவன் நிராகரித்துவிட்டார்.

இந்த நிகழ்ச்சியுரையில் திருச்சபை ஆலயத்தை மையமாகக் கொண்ட யூதத்துவத்தை இறுதியில் கைவிடுவதற்கு லூக்கா வழிவகுக்கிறார். யூதர்கள்தான் சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை என்று அவர்களையே குற்றம் சாட்டி, சட்டத்திற்குக் கிறிஸ்தவர்கள் அளிக்கும் விளக்கத்திற்கு இடம் வகுக்கிறார். அது உண்மையிலேயே இறைவனதுசட்டம்; ஆனால் யூதர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் அன்று.

ஸ்தேவானின் மரணம் இறைவெளிப்பாடாகிறது. ''வானம் திறந்து'', ''மனுமகன் கடவுளின் வலப் பக்கம் நிற்பதை'' வெளிப்படுத்துகிறது (7:56). அவர் ஸ்தேவானை ஏற்றுக்கொள்ள, அல்லது தமது அரசை நிறுவ வரத் தயாராக உள்ளார்.

கருத்தளவிலும் கடைப்பிடிப்பிலும் வளர்ந்து கொண்டிருந்த திருச்சபையோடு எந்த அளவுக்கு ஸ்தேவான் தொடர்பு கொண்டிருந்தார் என்று காட்டும் விதத்தில் லூக்கா ஸ்தேவானின் வரலாற்றுச் சூழ்நிலையில் அக்கறை கொள்ளவில்லை; ஆகவே இந்த விவரிப்பின் வரலாற்று மதிப்பீடு தர்க்கத்திற்குரியதாகும்.

ஸ்தோயிக்கர் (STOICS)

சைப்பிரசிலுள்ள சித்தியுமைச் சேர்ந்த பெனிசியரான சேனோவால் (கி.மு. 332 - 262) ஏதன்சில் நிறுவப்பட்ட தத்துவ இயல்

குழுவினராவர். சேனோ, ஏதன்சிலுள்ள அகோராவில் தூண்களையுடைய திறந்த வெளியில் போதித்துவந்தார். இவ்விடம் வண்ணம் தீட்டப்பட்ட முகமண்டபம் (கேபோய் இலே ஸ்தோவா) என்றழைக்கப்பட்டது. இப்பெயரிலிருந்து இந்தத் தத்துவம் பெயர் பெறுகின்றது. இத்தத்துவம் வெகுவிரைவாகப் பரவி கிரேக்க உலகமுழுவதும் ஆதிக்கம் செலுத்தியது.

சேனோவை அடுத்து, கிளையான்தசு (கி.மு. 303-232), சோலியின் கிறிசிப்புசு, உரோதில் பனேத்தியசு (185-109), உரோமையில் சிப்பியோ எமிலியனுஸ் (144), சிரியாவில் அப்பமேயின் போசிதேனுசு (135-51) முதலியோர் இத்தத்துவத்தின் விளக்கவுரையாளர்களாகத் திகழ்ந்தனர். தொடக்க கால ஸ்தோயிக்கர்களின் நூல்கள் அழிந்து போயின. சில துணுக்குகளே கிடைத்துள்ளன. பிற்கால ஆசிரியர்களின் நூல்களிலிருந்து இத்தத்துவத்தை அறிகிறோம். நீரோவின் ஆசிரியரான செனேக்கா, பவுலின் சமகாலத்தவரான எப்பிக்தேத்தஸ், பேரரசன் மாற்கு அவுரேலியன் போன்றோரின் நூல்களிலிருந்து இத்தத்துவத்தைப் பற்றி அறிகிறோம். இத்தத்துவத்தை அரசன், அடிமை, சிரியன், உரோமையன் என்று எந்த வேறுபாடும் இன்றி யாவரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் இது மனிதன் என்ற அளவில் மனிதனிடம் அக்கறை காட்டியது.

இத்தத்துவத்தின் அடிப்படைக்கோட்பாடு நன்னெறி ஒன்றே நன்மையானது. தீயநெறி ஒன்றே தீமையானது என்பதாகும். இன்பம், துன்பம், செல்வம், வறுமை, வெற்றி தோல்வி யாவற்றையும் சரிசமமாக நோக்கும் பரிபக்குவமனமுடையவரே ஞானியாவர். இவர் புறச் சூழ்நிலைகளின் மாற்றங்கள் தன்னைத் தாக்காத அளவுக்கு ஓர் அளவு உணர்ச்சியற்ற தன்மையை வளர்த்துக் கொள்வார். அப்போஸ்தலர் பவுலைப்போல், இவர் உண்மையிலேயே ''எந்நிலையிலும் போதும்'' என்ற மனத்தோடு வாழக்கற்றுக் கொண்டவர். தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட எதனிலிருந்தும் சுதந்தரம் கொண்டவர். வறுமையிலும் வளமையிலும் வாழத் தெரிந்தவர். எந்தச் சூழ்நிலையிலும் வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளக் கற்றுக் கொண்டவர் (பிலி 4:11-12).

நன்னெறி என்பது இயற்கையோடு இயைந்து வாழ்வதாகும். ஏனெனில் இயற்கை நம்மை நன்னெறிக்கு இட்டுச் செல்லுகிறது. அண்டத்தின் ஒவ்வொரு தனி நபரின் வாழ்வும் ஊழினால் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதனின் முழுச் சுதந்தரம் தனக்குக் குறிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்வதிலும், அண்டத்தை ஆளும் சித்தம் மற்றும் குறிக்கோளோடு தனது சித்தத்தை ஒன்றாக்குவதிலும் அடங்கியிருக்கிறது. ஆனால் இந்த ஊழ் குருடான, கொடிய விதியன்று. இது ஞானத்திலும் எல்லாருடைய நன்மைக்காகவும் தீர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இது இறைவனது சித்தத்தைப்போல் ''நல்லது, உகந்தது, சிறந்தது'' (உரோ 12:2). ஆனால் இந்தச் சித்தமும் குறிக்கோளும் ஆட்தன்மையுடையதாகக் கருதப்படவில்லை. செயூஸ் என்ற பெயர் ஓர் அளவு ஆட்தன்மைப் பொருளில் பயன்படுத்தப்பட்டாலும், இது ஆற்றலின் அடையாளமே. இது சடப்பொருள் தன்மையுடையது. என்றும் வாழும் தீயாக, படைக்கும் தீயாக, உண்டாக்கும் அறிவாக அண்டம் முழுவதையும் பரவி நிறைந்திருக்கிறது. மனிதனில் ஆன்மாவாக இருக்கிறது. ஆகவே மனிதனின் இயல்பான தன்மை அண்டத்தின் இயல்பான தன்மையோடு ஒன்றானது. இயற்கையோடு இயைந்து வாழ்வது என்பதற்கு ஒருவர் தம் தன்மையோடும், அண்டத்தின் தன்மையோடும் வாழ்வது என்று பொருள் கொடுக்கலாம். ஏனெனில் சிற்றண்டம் பேரண்டத்தோடு தொடர்பு கொண்டிருப்பதுபோல், மனிதன் அண்டத்தோடு தொடர்பு கொண்டுள்ளான். அதே வாழ்வின் நெருப்பான கோட்பாடு, சட்டம் மற்றும் அறிவு இரண்டையும் பரவி நிறைந்திருக்கிறது.

படைக்கும் தீ அல்லது உண்டாக்கும் அறிவு உலகின் ஆன்மாவாக உள்ளது. அதைச் செயூஸ் என்றும், மற்றும் பல பெயர்

களாலும் அழைக்கலாம். அது இயற்கையின் நல்லாற்றல் என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் அது உலகையும் அதில் உள்ளவற்றையும் அறிவாலும் ஞானத்தாலும் ஆட்சி செய்கிறது. இதற்குச் சான்றாக இயற்கையில் நிலவும் ஒழுங்கமைவாக அமைந்திருப்பதையும், செடி, விலங்குகளின் வாழ்வில் காணப்படும் முடிவை நோக்கிச் சாதனங்களை மாற்றி அமைக்கும் தன்மையையும், காரண காரியச் சட்டத்தையும், அண்டத்தின் பல்வகைப்பட்ட அழகையும், ஸ்தோயிக்கர் எடுத்துக்காட்டுவர். தன் பாகங்களில் எல்லாம் ஒருங்கமைவுகொண்ட இந்த மாபெரும் அமைப்பு தற்செயலாகத் தோன்றியது என்றோ தன்னறிவு நோக்கமில்லாமல் தோன்றியது என்றோ எண்ணுவது முட்டாள்தனமானதாகும். எல்லாவற்றையும்விட, மனிதனின் உன்னத ஆற்றல்கள், இந்த அமைப்பு அவனது நன்மைக்காக இருக்கின்றன என்றும் செயல்படுகிறது' என்றும் காட்டுகின்றன.

இந்தச் சமஉரிமை அமைப்பு கடவுள்களையும் மனிதர்களையும் உள்ளடக்கும் நகரமாகும். இது உலக முழுவதையும் உள்ளடக்குகிறது. ஸ்தோயிக்கர் இத்தகைய அமைப்பில் சேர்ந்தவராகத் தம்மைக் கருதி, எந்த ஒரு தனிப்பட்ட நாட்டையோ அரசையோ சேர்ந்தவராகக் கருதவும் அதில் வேரூன்றுவதுமில்லை. அவரது குடியரசு, கிரேக்க நகர அரசைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட பிளேட்டோ அல்லது அரிஸ்தாத்திலின் குடியரசன்று. அது எல்லா மனுக்குலத்தையும் உள்ளடக்கும், ஞானம் மற்றும் நீதியின் பேரரசாகும். ஞானி என்பவர் அண்டத்தின் குடிமகனாவார். ஏனெனில் எல்லாவற்றையும் ஆளும் இயற்கையின் நல்லாற்றல் மனிதனை அத்தினியன், ஸ்பார்தன், உரோமையன் என்றோ, செல்வந்தன், வறியவன் என்றோ, அடிமை, சுதந்தர குடிமகன் என்றோ கருதுவதில்லை; மனுக்குலம் முழுவதிலுமே அதில் உள்ள ஒவ்வொரு தனிநபர் மேலும் அக்கறை கொள்கிறது. இறைத்தீயின் சில பொறிகள் ஒவ்வொரு மனிதனிலும் அறிவின் உண்டாக்கும் வித்தாய் அமைந்துள்ளது. ஆகவே எல்லோரும் செயூசின் பிள்ளைகள். ஆகவே சகோதரர்களாவர். இவ்வாறு ஸ்தோயிக்கு தத்துவம் உரோமைச் சட்டத்தின் சிறப்புமிக்க அமைப்புக்குத் தயாரிப்பாகிறது. இச்சட்டத்திற்கு மேற்கத்திய நாடுகள் அனைத்தும் கடன்பட்டுள்ளன. இன்னும் மிகப் பொருள் பொதிந்த மட்டத்தில் கிறிஸ்துவத்தின் தனிநபர்த் தன்மைக்கும் உலகளாவிய தன்மைக்கும் அதன் சகோதரத் தன்மை என்னும் கருத்துக்கும், பொதுத் திருச்சபை என்ற கருத்துக்கும் உகந்த சிந்தனைப் போக்கையும் உண்டாக்கியது.

ஏதன்சில் பவுல் பேசியபோது அவருக்குச் செவிமடுத்தவர்களில் ஸ்தோயிக்குகளும் இருந்தனர். அப்போது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அராத்து என்ற ஸ்தோயிக்குப் புலவரிடமிருந்து பவுல் எடுத்துக்காட்டுக் கூறுகிறார் (அ.ப. 17:18). ஸ்தோயிக்குத் தத்துவத்தால் பவுல் பாதிக்கப்பட்டதாக அறிஞர் சிலர் கருதுவர். பரிபக்குவமனம் என்ற ஸ்தோயிக்குப் பண்பு பவுலின் திருமுகங்களில் பல இடங்களில் காணப்படுவதைப் பார்க்கலாம் (1 கொரி 7:17-20.24; 9; பிலி 4:11-12; 1 திமோ 6:6-8). இத்தத்துவத்தின் தர்க்கம் இலத்தீன் எழுத்தாளர்களிடையே குறிப்பாக மிலானைச் சேர்ந்த அம்புரோசியாரின் நூல்களில் காணக்கிடக்கிறது.

ஸ்பார்த்தா, ஸ்பார்த்தேயர் (SPARTA, SPARTANS)

பண்டைக் காலத்தில் தென் கிரீசில் இருந்த ஒரு முதன்மையான நகரம்; இலக்கோனியா பகுதியின் தலைநகர். இங்கு இலக்கதேமானியர்கள் குடியிருந்தனர். உரோமை ஆட்சியில் கிரேக்க நகரங்களில் இதற்கு மட்டுமே, மக்கபேயர் மாநிலம் போல, சுயஆட்சி வழங்கப்பட்டது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலேயே இங்கு யூதர்கள் வசித்து வந்தனர் என்று 2 மக் 5:9-இன்படி கருத இடமுண்டு. யாசோன் குரு ஸ்பார்த்தாவுக்கு (இலக்கதேமானியர்கள்) ஓடியபோது, யூதர்களும் ஸ்பார்த்தேயர்களும் சேர்ந்து பொதுவாகத் தோன்றினர் என்ற பழங்கதையைமட்டும் நம்பியிருக்கவில்லை; இரு மக்களுக்கும்

இடையே ஏற்கனவே தூது உறவையும் (1 மக் 12:7-8) அங்கு வாழ்ந்த யூதர்களின் ஆதரவையும் நம்பிச்சென்றார். செலூக்கியர்களுக்கு எதிரான தங்கள் போராட்டத்தில், அசமோனியர்கள் ஸ்பார்த்தேயர்களுடன் நட்புறவு கொண்டிருந்தனர் (12:2.5-23; 14:16.20-23).

ஸ்பெயின் (SPAIN)

தென்மேற்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு. உரோமையர் கைப்பற்றிய நாடுகளுள் ஒன்று. அங்கிருந்த பொன், வெள்ளிச் சுரங்கங்களை உரோமையர் தங்கள் வயப்படுத்தினர் (1 மக் 8:3). கி.மு. 197-இல் இது இரண்டு உரோமை மாநிலங்களாகவும், அகுஸ்துவின் காலத்தில் மூன்றாகவும் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டது.

ஸ்பெயினுக்குச் செல்ல பவுல் தீர்மானம் செய்தார் என்று உரோ 15:23.28 சுட்டுகிறது. இத்திட்டம் எப்போதாவது செயல்படுத்தப் பட்டதா என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

ஸ்லாவோனிக் வாசகங்கள் (SLAVONIC VERSIONS)

இன்னும் பழக்கத்திலிருக்கும் பழங்கால மொழிபெயர்ப்புகளுள், 9-ஆம் நூற்றாண்டில் சகோதரர்களான சிரில், மெத்தோதியு என்பவர்களால் செய்யப்பட்ட ஸ்லாவோனிக் மொழிபெயர்ப்பும் ஒன்றாகும்.

ஞா

ஞான இலக்கிய இயக்கம் (WISDOM LITERATURE MOVEMENT)

I. *பழைய ஏற்பாடு:*

*1. முன்னுரை:*எபிரேய இனத்தவர் தங்களது விவிலிய நூல்களைச் சட்டம், இறைவாக்கினர்கள், நூல்கள் என்று முப்பெரும் தொகுப்புக்களாகப் பிரிப்பர் என்பதை நாம் அறிவோம். இவற்றில் நூல்கள் என்ற தொகுப்பின் ஒரு பகுதியான ஞான இலக்கியங்களை நாம் அணுகும்போது, ஒரு புதிய உலகிற்குள் புகுகிறோம் என்ற உணர்விலிருந்து நாம் தப்ப முடியாது. மற்ற இரு தொகுப்புக்களிலும், யாத்திரை, உடன்படிக்கை போன்ற வரலாற்று, மற்றும், சமயக் கருத்துக்கள், நாம் எதிர் பார்க்காதபோதும் காணப்படும். இவற்றில் எங்கும் இஸ்ராயேல் ஓர் இனமாகத் தோன்றியதை எடுத்துக் காட்டும் இறைவனது ஆற்றல் மிக்க தலையீட்டின் எதிரொலியைக் கேட்கலாம். இஸ்ராயேல் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செய்த யாத்திரை ஒரு சமய நிகழ்ச்சி மட்டுமன்று, அது வரலாற்று நிகழ்ச்சியுமாகும். யாத்திரையின் விளைவாக யாவே இஸ்ராயேலின் இறைவன் ஆனார். இஸ்ராயேலர் சிறப்பான முறையில் யாவேயின் மக்களானார்கள். இஸ்ராயேலரின், சமய, வரலாற்று அனுபவ மைய நிகழ்ச்சியாகிய யாத்திரைபற்றிய ஆழ்ந்த உணர்வுக்குப் பழைய ஏற்பாட்டு நூல்கள் சான்று கூறும் முறை நமது கவனத்தைக் கவரத்தவறாது.

இத்தகைய கருத்துக்கள் விவிலியத்தின் ஒரு பகுதியில் காணப்படவில்லையெனில் அது நமக்கு வியப்பளிக்கலாம். அப்படிப் பட்டவைதான் விவிலியத்தில் வரும் ஞான இலக்கியங்கள். பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியங்களுள் புகும்போது, சமய உணர்வு குறைந்தே காணப்படுவதை உணர்கிறோம். வரலாற்று உணர்வு முழுவதுமே காணப்படவில்லை எனலாம். சிலை வழிபாட்டுக்கு எதிரான வசைமொழிகள் இல்லை. இறைவன், ஆலயம், இறைவழிபாடு, இறைமக்களின் கதி போன்ற கருத்துக்கள், பிற்கால ஞான இலக்கியங்களில் மட்டும்தான் ஓரளவு காணப்படுகின்றன. இறைவாக்கினர்கள், குருக்கள் ஆகியோரின் இறைவனை மையமாகக் கொண்ட உலக அமைப்பின் சுவடுகள் இங்குமங்குமாக அரிதாகக் காணப்படுகின்றன. இவற்றிற்கு மாறாக ஞான இலக்கியங்களில் மனிதனும் அவனது நல்வாழ்வும் முக்கியத்துவம் பெறுகின்றன. மையம் கொள்கின்றன. மனிதன், அவனது தன்மை, நடத்தை, நிறை குறைகள், அவனது வாழ்வை மேன்மைப்படுத்துபவை ஆகியவற்றை இந்நூல்கள் பேசுகின்றன. இவற்றில் ஒருவகை சமயப் பற்றற்ற போக்கு காணப்படுகிறது. இப்பண்புகள் ஞான நூல்களைப் பழைய ஏற்பாட்டின் மற்றப் பகுதிகளிலிருந்து வேறுபடுத்துகின்றன. மேலும் இந்நூல்களின் பொருளடக்கமும், நடையும் மற்றவற்றிலிருந்து இவற்றைப் பிரித்துக் காட்டுகின்றன. ஆயினும் இவையும் இஸ்ராயேலரின் ஒப்பற்ற சமய இலக்கியப் பாரம்பரியச் சொத்தைச் சேர்ந்தவையே ஆகும்.

இவ்வுண்மையை உய்த்துணர, இஸ்ராயேலரின் ஞான இலக்கிய இயக்கத்தின் பரந்த பின்னணி, அதன் வளர்ச்சி, தன்மை, நோக்கம், சிறப்புப் பண்புகள், ஞான ஆசிரியர்களின் போதக முறை, அவர்கள் போதித்த ஞானத்தின் தன்மை, பொருளடக்கம், அவர்கள் பயன்படுத்திய இலக்கிய வகைகள் ஆகியவை பற்றி நாம் அறிந்திருப்பது அவசியம். அப்போதுதான் இந்நூல்களின் மதிப்பை உணரவும் பாராட்டவும் முடியும். மேற்கூறப்பட்ட தலைப்புகள் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன.

2. இஸ்ராயேலரின் ஞான இயக்கத்தின் பின்னணி - பழங்கால மேற்காசியாவின் ஞான இலக்கிய இயக்கம்:

அ. ஞான இலக்கியங்களை உருவாக்குவதில் இஸ்ராயேலர் தனித்து நிற்கவுமில்லை;

காலத்தால் முந்தியவர்களும் அல்லர். பழங்கால மேற்காசியாவின் பொதுப் பாரம்பரியத்தில் அவர்கள் பங்கு கொண்டிருந்தனர். ஞான இலக்கிய இயக்கம் முதலில் புற இனமக்களிடையே தோன்றி வேரூன்றியிருந்ததாகத் தெரிகிறது. இஸ்ராயேலின் ஞான இலக்கியங்கள் தோன்றும் முன்பே, எகிப்து, அரேபியா, மெசபொத்தாமியா ஆகிய நாடுகளில் இத்தகைய இலக்கியங்கள் மிகவும் வளர்ச்சியுற்றிருந்தன என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. தொல்பொருள் ஆய்வுகளும் இம்முடிவுக்கு ஆதரவு தருகின்றன.

விவிலியமும் இம்முடிவுக்குச் சான்று கூறுகிறது. யூதப் பொதுச்சங்கத்தின் முன்பு ''மோசே எகிப்து நாட்டுக் கல்வி கேள்விகள் அனைத்தையும் கற்றுச் சொல்லிலும் செயலிலும் வல்லவராய்த் திகழ்ந்தார்'' (அ.ப. 7:22) என்று ஸ்தேவான் கூறும்போது, இக்கூற்று எகிப்தியரின் பெரும் ஞான இலக்கியங்களையே சுட்டிக் காட்டுகிறது. ''கீழை நாட்டார், எகிப்தியர் அனைவரின் ஞானத்தையும் விட, சாலமோனின் ஞானம் சிறந்து விளங்கிற்று. எசுராகியரான ஏத்தானிலும், ஏமான், கல்கோல், தர்தா என்ற மாகோலின் புதல்வர், மற்ற மனிதர் அனைவரையும்விட அவர் ஞானத்தில் சிறந்து விளங்கினார்'' (1 அர 5:10-11) என்று அரசர்கள் நூல் கூறுகிறது. இக்கூற்றில் அறிவிக்கப்படுபவர்கள் புற இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இக்கூற்று, எகிப்திய, கானானிய அரேபிய ஞானிகளை இஸ்ராயேலர் அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்று கூறுகிறது. யோபு நூலின் ஆசிரியர், தமது காவியத் தலைவனாக, ஓர் இஸ்ராயேலனை அல்லாது ஏதோமையோ, அரேபியாவையோ சேர்ந்த ஒரு ஞானியை அல்லது அறிவரைத் தேர்ந்தெடுக்கிறார். யோபுவின் நண்பர்களும் புறஇனத்தைச் சேர்ந்தவர்களே. தோபியா 4-இல் குறிப்பிடும் அகிக்கார், நாதாபு ஆகியோர் மெசபொத்தாமியாவைச் சேர்ந்தவர்களாவர். புற இன அறிவர்களைப் பற்றி விவிலியத்தில் காணப்படும் பிற குறிப்புக்களில் சில எரே 49:7; பாரூக் 3:22-23; ஒப 8;... இவையெல்லாம் பிற இன மக்களிடையே ஞான இலக்கிய இயக்கம் பரவியிருந்ததைச் சுட்டுகின்றன. இவ்விலக்கியங்களில் பல இஸ்ராயேலரின் ஞான இலக்கியங்களுக்கு வெகு முன்பு தோன்றியவையாகும். இது பற்றிப்பின்பு பார்ப்போம்.

ஞான இலக்கிய இயக்கம் அகில உலகப் பண்புடையது. இவ்வியக்கங்கள், அவை தோன்றிய நாடுகளுக்கு அப்பாலும் பரவி, அங்கெல்லாம் பாதிப்பை ஏற்படுத்தின. நாட்டு எல்லையோ, காலமோ, பண்பாடோ அவற்றை வரையறை செய்யவில்லை. ஒரு ஞானி அல்லது அறிவர் தமது காலத்தையும், பண்பாட்டுச் சூழ்நிலையையும் சேர்ந்தவர் என்பது தவிர்க்க முடியாது. எனினும் அவர் எடுத்துக் கொள்ளும் பிரச்சனைகள் மனிதர்களுக்குப் பொதுவானவை. அவை பற்றி அவர் எடுத்துக் கூறிய உட்கருத்துக்கள் மனிதர்கள் எங்கு எப்போது வாழ்ந்தாலும் எப்பண்பாட்டைச் சேர்ந்தவர்களானாலும், அவர்களுக்குப் பொருத்தமுடையவையாகும். ''யாவர்க்கும் உரியது'' என்ற இந்தப் பொதுமைப் பண்பு ஞான இலக்கியங்களுக்குச் சிறப்பு அளிப்பதாகும்.

பழங்கால மேற்காசிய அறிவர்கள் - ஆளும் வகுப்பினரிடையே, குறிப்பாக அமைச்சர்கள், ஆலோசகர்கள், செயலர்கள் போன்ற அரசவை அதிகாரிகளிடையே காணப்படுகின்றனர். இவர்கள் கல்விப் புலமை பெற்றுப் பண்பாட்டில் சிறந்து விளங்கினர். வாழ்க்கையில் தாம் கண்டுணர்ந்த, கேட்டறிந்த அனுபவ ஞானத்தைப் பிறருக்கு வழங்கினர். ஆட்சித் தொழிலில் வழிவகைகளைக் கற்றுக் கொடுத்தனர். வாழ்க்கையின் அடிப்படைப் பிரச்சனைகளைப் பற்றி வாதிட்டனர். காலப்போக்கில் இவற்றை நூல்களாகத் தொகுத்து எழுதி வைத்தனர். இந்நூல்கள் எகிப்தில் மேற்கோளுரைகளாகவும், போதகமாகவும், மெசபொத்தாமியாவில் கதைகளாகவும் உருவகங்களாகவும், கானான் பெனிசியா நாடுகளில் மேற்கோள் கூற்றுக்களாகவும் உவமைகளாகவும் வடிவெடுத்தன. இவை அறிவர்களின் மாணவர்களுக்காகவும், ஆட்சியில் பங்கு பெறுபவர்களின் பயனுக்காகவும் எழுதப்பட்டன. இவற்

றில் தனி மனிதனுடைய அன்றாடப் பிரச்சனைகள் பற்றிய கூற்றுக்களையும் காணலாம்.

இனி விவிலிய ஞான இலக்கியங்களுக்கு முன்னோடியாக விளங்கியதாக அல்லது அவற்றைப் பாதிப்பதாகக் கருதப்படும் எகிப்து, மெசபொத்தாமியா, கானான், பெனிசியா ஆகிய பழங்கால மேற்காசிய நாடுகளின் இலக்கியங்களைப் பற்றிச் சிறிது காண்போம்.

ஆ. எகிப்து: எகிப்திய பழங்கால வரலாற்றை வசதிக்காக, பழைய அரசு (கி.மு. 2850-2052), நடுக்கால அரசு (கி.மு.2052-1778), இடைக்காலம் (கி.மு. 1778-1610), புதிய அரசு (கி.மு. 1610-1085), பிற்காலம் (கி.மு. 1085-332), கிரேக்கர் காலம் (கி.மு. 332-30), என்று யூகமாகப் பிரிப்பது மரபு. தொடக்க காலத்திலிருந்து தோலாமியர்கள் காலம் வரையுள்ள காலத்தில் எகிப்தில் பல ஞான இலக்கியங்கள் தோன்றியுள்ளதாகத் தெரிகிறது. இவற்றில் ஏழு தொகுப்புகள் முழுமையாகவும், ஐந்து தொகுப்புகளில் சில பகுதிகளும் கிடைத்துள்ளன. மற்றொரு ஏழு தொகுப்புக்களின் தலைப்புகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவையாவும், ஞான இலக்கியங்கள் மக்களிடையே தன்னிச்சையாக எழுந்த படைப்புகளாகும் என்றும், பரவலாக மக்களிடையே பயன்பட்டன என்றும் காட்டுகின்றன.

எகிப்திய ஞான இலக்கியங்களில் பல வகையுண்டு. இவற்றில் சிறந்தவை போதக நூல்களாகும். இவை தந்தை மகனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் முறையில் அமைந்துள்ளன. தந்தை தன்மகனை வாழ்வின் கடமைகளுக்கும் அரசவை அலுவல்களுக்கும் தயாரிக்கும் குறிக்கோளைக் கொண்டுள்ளன இந்நூல்கள். எகிப்திய ஞானபோதகத்தின் மிகச்சிறப்பான அடிப்படைக் கொள்கை நீதி எனப் பொருள்படும் ''மாத்'' ஆகும். இது இறைவனால் நிறுவப்பட்ட அமைப்பு அல்லது உண்மையாகும். மனித வாழ்வு சிறப்புற, அது இந்த நீதியோடு ஒத்திருக்க வேண்டும். உணவு கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய முறை, மேலதிகாரிகளோடும், கீழ் உள்ளோரிடமும் நடந்து கொள்ளும் விதம், நட்பு, நேர்மை, நம்பத்தகுந்த தகுதி, சுறுசுறுப்பு, சுயகட்டுப்பாடு, தீய பெண்கள் முதலியவை பற்றிய பல ஆலோசனைகளும் எச்சரிக்கைகளும் இப்போதகங்களில் காணப்படுகின்றன. இவை தவிர அரசவையினர், அதிகாரிகள் ஆகியோருடைய நடத்தையை ஒழுங்குபடுத்தும் செயல் முறைநோக்கு சிறப்பிடம் பெறுகிறது. நல்ல உயர் அதிகாரிகள் எல்லா நற்பண்புகளிலும் மேன்மை பெற்றிருக்க வேண்டும். அறிவு வளர்ச்சி, நம்பிக்கைக்குரிய தன்மை, விவேகம், ஒழுக்கம், சுறுசுறுப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்க வேண்டும். இவற்றை எடுத்துக்கூறும் ஞான போதகத்தை இவர்கள் தங்களுடையதாக்கிக் கொள்ளவேண்டும். இயற்கையில் நிலவும் நீதியோடு ஒருங்கிணைந்து வாழ வேண்டும். இப்படி வாழ்வதே வெற்றி பெறுவதற்கு அடிப்படையும் சாதனமும் ஆகும். இதற்கு மாறானது குழப்பத்தையும், தோல்வியையும் உண்டாக்கும்.

எகிப்தில் ஞான இலக்கியங்களில் காலத்தால் முந்தியது ஓர் தெதெஃபின் (Hor-dedef) போதகமாகும். இது கி.மு. 27-ஆவது நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். பழைய அரசு காலத்தில், ப்டா-ஒடேப் (ptah-hotap) காகெம்னி (Kagemni) மெரிக்ரே (Merik-re) ஆகியோர் ஞான நூல்கள் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்திருப்பதாகத் தெரிகிறது. கி.மு. 2450-ஐ ஒட்டித் தோன்றிய ப்டா-ஒடேப்பின் போதகநூல் வாழ்க்கையில் வெற்றிகாண வழிகாட்டும் மேற்கோளுரைகளைப் பாடநூல் வடிவில் கொண்டுள்ளது. கி.மு. 2100-ஐ ஒட்டித் தோன்றிய மெரிக்ரே என்ற அரசனின் நூல் அரசன் தன் மகனுக்குக் கூறும் முறையில் வெற்றிகரமாக நல்லாட்சி செய்வது பற்றிய ஆலோசனைகளைக் கொண்டுள்ளது. நடு அரசகாலத்தில் டௌஃபியின் (Dauf) மகனான அக்கிடாய் (Akkitoy), அமென்-எம்-ஏட் (Amen-em-het) போன்றோர் ஞானபோதக நூல்களை எழுதியுள்ளதாகத் தெரிகிறது. புதிய அரசு காலத்தில், அன்னி

(Anni), அமென்-எம்-ஒப்பே (Amen-em-ope) போன்றோர் ஞானநூல்கள் எழுதினர். அமென்-எம்-ஒப்பேயின் ஞானபோதக நூல் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இந்நூல் பழ 22:17-24:22-இல் வரும் கூற்றுக்களோடு இணையாகவுள்ளது. இஸ்ராயேல் ஆசிரியரின் முப்பது கூற்றுக்கள் இந்நூலின் முப்பது அதிகாரங்களில் சிதறிக் கிடக்கின்றன. இஃது இரண்டு நூல்களுக்கும் பொதுவான ஒரு ஞான இலக்கியப்பாரம்பரியம் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. இக்காலத்தைச் சேர்ந்ததும், அமர்னா என்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்டதுமான தொகுப்புக்களில் காணப்படும் சில முதுமொழிகள், பழமொழிநூலில் வரும் சில பகுதிகளோடு ஒத்துள்ளன.

எகிப்திய ஞான ஏடுகளில் காணப்படும் இயற்கை உலகின் பொருட்கள், ஆள், இடம் பற்றிய திட்டமிட்ட பட்டியல்கள் சாலமோனின் பட்டியலுக்கு (1 அர 5:13) முன்னோடியாக அமைந்திருக்கலாம். மேலும், நீதிமானின் துன்பம் என்ற பிரச்சனை பற்றிய ''தற்கொலை பற்றிய தர்க்கம்'', ''சொல்லாற்றல் மிக்க குடியானவரின் எதிர்ப்பு'', போன்ற நடுக்கால அரசைச் சேர்ந்த நூல்களும் எகிப்தில் உண்டு. ஆனால் அவற்றில் காணப்படும் பொருளடக்கம் 'அத்தகைய தலைப்புகள் பற்றிய மெசபொத்தாமிய எபிரேய நூல்களில் காணப்படுவதற்கு ஒத்த கருத்தாழமும் கூர்மையும் உடையதன்று.

இ. மெசபொத்தாமியா: இப்பகுதியின் முதுமொழிகள், மேற்கோளுரைகள், கதைகள் ஆகியவை அடங்கிய ஞான போதகத் தொகுப்புகள் சுமேரியன், அக்காதிய மொழிகளில் காணப்படுகின்றன. இது அண்மைக் கால ஆய்வுகளின் விளைவாகும். அரசன் தன் மகனுக்குக் கூறும் ஆலோசனைகள் அடங்கிய ''சுருப்பாக்கின் போதனை'' என்ற நூல் அரசவையோடு தொடர்புடையதாகும். மற்றத் தொகுப்புக்கள் பொதுவாழ்வைப் பற்றியவையாகும். தோபியா நூலில் சுட்டிக் காட்டப்படும் ''அகிக்காரின் கதை'' மெசபொத்தாமியாவில் தோன்றிய ஒரு புகழ்பெற்ற ஞான பாரம்பரியக் கதையாகும். ''ஞானத்தின் ஆண்டவரைப் போற்றுவேன்' என்ற நூல் யோபு நூலோடும், ''அவல நம்பிக்கை பற்றிய உரையாடல்'' என்ற நூல் திருவுரையாளர் நூலோடும் ஒத்த கருத்தமைப்பைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பாபிலோனியாவைச் சேர்ந்த ''ஞானத்தின் ஆலோசனைகள்'' என்ற நூல் ஞானி தன் மகனை எச்சரிப்பதாக அமைந்துள்ளது. ''பாபிலோனிய இறைநூல்'' என்ற நூல் நீதிமானின் துன்பம் என்ற பிரச்சனையைப் பற்றிப் பேசுகிறது. ''துன்புறும் நீதிமானின் பாடல்'' உலக அமைப்பைப்பற்றிய ஒரு கண்ணோட்டமாகும். ''மனிதனும் அவனுடைய இறைவனும்'' யோபு நூலைப்போன்ற ஒரு புலம்பல் பாடலாகும்.

இந்த இலக்கியங்களில் படைக்கப்பட்ட பொருட்களிலே 'மீ' என்று அழைக்கப்படும் ஓர் இறை அமைப்பு மையக் கருத்தாக அமைகிறது. மெசபொத்தாமியா பகுதியில் நிலவிய சமூக, அரசியலின் நிலையற்ற தன்மையால், மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு பற்றிய ஐயமிக்க கேள்விகள் இந்த இலக்கியங்களில் எழுப்பப்படுகின்றன. இந்த மனப்போக்கை, யோபு நூல், திருவுரையாளர் நூல், ஆகூருக்கும் விசுவாசிக்குமிடையே ஓர் உரையாடல் (பழ 30:1-9) ஆகியவை பிரதிபலிக்கின்றன.

ஈ. கானான், பெனிசியா: எபிரேய ஞான இலக்கியங்களுக்குக் கானானியப் பின்னணி இருந்திருக்கக் கூடுமா என்பது பற்றிச் சிலர் ஆய்வு செய்துள்ளனர். இத்தகைய கருத்துக்கு ஆதரவான போதிய, உறுதியான சான்றுகள் இன்னும் கிடைக்கவில்லை. ஆயினும் உகாரித்து மொழியில் காணப்படும் இணையமைப்பு போன்ற இலக்கிய வடிவங்கள், சொற்றொகுதிகள், பழமொழி நூலில் பல இடங்களில் பிரதிபலிக்கின்றன. பழமொழி, யோபு ஆகிய நூல்களில் வரும் சில கவிதைகளில் கானானியப் பாதிப்பு காணப்படுகிறது. திருவுரையாளர் நூலுக்குப் பெனிசிய மூலமும் பின்னணியும் இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர் சிலர் கருதுவர்.

உ. இஸ்ராயேல் பாரம்பரியம்: பழங்கால மேற்காசிய ஞான இலக்கியங்களில் இறுதியாக இடம் பெறுவது இஸ்ராயேலின் ஞான இலக்கியங்களாகும். இஸ்ராயேலின் ஞான இலக்கியங்களில் காலத்தால் முந்திய பகுதிகள் எகிப்திய இலக்கியங்களோடும் பிந்தியவை மெசபொத்தாமிய இலக்கியங்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இஸ்ராயேல் தனக்குமுன் எகிப்து, மெசபொத்தாமியா, கானான், பெனிசியா ஆகிய நாடுகளில் தோன்றிய ஞான இலக்கியங்களை அறிந்திருக்கக்கூடும். அவற்றைத் தனது இலக்கியப் பாரம்பரியத்துள் ஏற்று, தனது விசுவாசத்திற்கும் இறையியல் கருத்துக்களுக்கும் ஏற்றவாறு பயன்படுத்தியிருக்கக்கூடும். புற இன நாடுகளிலிருந்து இஸ்ராயேல் ஏற்றுக்கொண்ட ஞான இலக்கியங்கள் ஒரு வகை மாற்றம் பெறுகின்றன என்பதை நாம் கவனிப்பது அவசியம். இஸ்ராயேலின் ஞான இலக்கிய இயக்கம் வடிவத்திலும் பொருளடக்கத்திலும், புற இன நாடுகளில் வழக்கில் இருந்தவற்றையே பின்பற்றுகிறது. முதுமொழிகள், மேற்கோளுரைகள், அரசன் மகனுக்குக் கூறுவது போன்ற அமைப்பு, பொதுவாகத் தந்தை மகனுக்குக் கூறுவது போன்ற அமைப்புகள் ஆகிய இலக்கிய யுக்திகள் புற இன இலக்கியங்களில் காணப்படுவது போன்றே இஸ்ராயேலரின் இலக்கியத்திலும் காணப்படுகின்றன. பொருளடக்கமும் அடிப்படையில் அதிகம் வேறுபடவில்லை. பொது வாழ்வில் எப்படி நடந்து கொள்வது, வாழ்வில் வெற்றிபெறுவது எப்படி, அதை நிறைவாக அனுபவிப்பது எப்படி என்பனவற்றைப் பற்றிய கூற்றுக்களில் அதிகம் வேறுபாடு இல்லை. ஆனால் தொனியிலும் அடிப்படை நோக்கிலும் புற இன இலக்கியத்திலிருந்து இஸ்ராயேலின் இலக்கியம் பெரிதும் வேறுபடுகிறது. புற இன ஞான இலக்கிய மரபு சமயச் சார்பற்ற ஒழுகலாற்றை உடையது. இதற்கு மாறாக, இஸ்ராயேலின் ஞான இலக்கிய மரபு சமயச் சார்புடைய ஒழுகலாற்றைக் கொண்டது. அது இறை அச்சத்தில் தொடங்கி அதிலேயே நிறைவு பெறுகிறது. இறையச்சமின்றி, அதாவது சமயச்சார்பின்றி, உண்மையான ஞானம் இல்லை என்பது இஸ்ராயேலரின் அடிப்படைக் கோட்பாடாகும்.

புற இன ஞான இலக்கியங்களை இஸ்ராயேல் ஏற்றுக்கொண்டபோது, பழங்கால மேற்காசியாவில் நிலவிய சட்டங்களுக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் மோசேயும், இசைப் பாடல்களுக்குத் தாவீதும் இஸ்ராயேலின் இசைவல்லுநர்களும், என்ன செய்தனரோ, அதையே இஸ்ராயேலின் ஞானிகள் தாங்கள் ஏற்றுக்கொண்ட புற இன இலக்கியப் பாரம்பரியத்துக்கும் செய்தனர். அதன் விளைவாக இஸ்ராயேலில் ஞான இலக்கியங்கள் எழுச்சியுற்றன. இஸ்ராயேலரின் விசுவாசத்தால் அவை வளர்ந்தன. உயிரூட்டப்பெற்றன. இது இயற்கைமேல் அருள் வாழ்வு அமைக்கப்படும் முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

3. இஸ்ராயேலில் ஞான இலக்கிய இயக்கம்: இஸ்ராயேலில் இந்த இயக்கம் அரசவையில் தோன்றியிருக்க வேண்டும். இப்படிக் கூறுவதால், பொதுப்பாணி ஞானம், செயல்முறை நோக்குகளின் தொகுப்புக்கள் பொது மக்களிடையே தோன்றியது என்பதை மறுக்கவில்லை. ஆனால் இந்த இயக்கத்திற்கு முன்றயான தூண்டுதல் அரசவையில் தோன்றியது. இப்படிப்பட்ட ஞான இலக்கியத் தோற்றத்தை எகிப்திய பாரம்பரியத்தில் காண்கிறோம். ஆட்சியமைப்பில் இஸ்ராயேலர் தங்கள் அண்டை நாடுகளைப் பின்பற்றினர் என்று 1 சாமு 8:5.20-இல் தெளிவாகக் காண்கிறோம். தாவீது, சாலமோன் காலத்தில் புதிய அரசியல் அமைப்பு இஸ்ராயேலில் புகுத்தப்பட்டபோது, ஆளும் வகுப்பினரும் அதிகாரிகள் குழுவினரும் நாட்டில் உருவெடுத்தனர். மக்கள் வாழ்வில் சிக்கல்களும் மிகுந்தன. ஆள்பவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியமாயிற்று. இதற்கும் எகிப்திய அமைப்பு ஒரு மாதிரியாக விளங்கிற்று. இப்பயிற்சிக்கு முதியோரின் அனுபவ ஆலோசனைகள் அவசியமாயின.

இவை தலைமுறை தலைமுறையாக வாய் மொழியாகக் கையாளப்பட்டுக் காலப்போக்கில் நூல்வடிவம் எடுத்தன. இவ்வாறு தாவீது தனது புதிய அரசியல் அமைப்புகளைக் கவனிக்க எகிப்திலிருந்து கொண்டு வந்த எழுத்தர்களோடு இஸ்ராயேலில் ஞான இயக்கம் தொடங்கியது எனலாம்.

இப்படித்.தொடங்கிய இயக்கம் சாலமோனின் ஆதரவில் வளர்ச்சியுற்றது. இவர் ஓர் எகிப்தியனிடமிருந்து கல்வி கற்றிருக்க வேண்டும். இவர் ஓர் எகிப்திய இளவரசியை மணந்ததாகத் தெரிகிறது (1 அர 3:1). ''கடவுள் சாலமோனுக்கு மிகுந்த ஞானத்தையும் கூர்மதியையும் கடற்கரை மணலைப்போல் பரந்த மனத்தையும் கொடுத்திருந்தார்'' என்றும், சாலமோன் ''3,000 பழமொழிகளையும் 1005 பாடல்களையும் எழுதினார்'' என்றும், மற்றும் பல ஞானக் கூற்றுக்களை மொழிந்தார் என்றும் அரசர்கள் நூல் கூறுகிறது (1 அர 5:9-13). ஒரே குழந்தைக்கு உரிமை கொண்டாடிய இரு பெண்களுக்குச் சாலமோன் அளித்த தீர்ப்புப் பற்றிய கதை இவரது ஞானத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும் (1 அரச 3:16-28). இவரது ஞானத்தைக் கேட்க எல்லா நாடுகளிலிருந்தும் மக்கள் வந்தனர் (5:14). சாலமோன் ஞானத்தில் சிறந்தவராகப் புகழ் பெற்றிருந்தார். ஆகவே, சட்ட நூலுக்கு மோசேயும் சங்கீதங்களுக்குத் தாவீதும் ஆசிரியர்களாகக் கருதப்பட்டதுபோல், இஸ்ராயேலின் ஞான இலக்கியங்களுக்குச் சாலமோன் ஆசிரியராகக் கருதப்படுவது பாரம்பரியமாயிற்று. சாலமோன் ஞான இலக்கிய இயக்கத்திற்குப் புரவலனாகவும், ஞானிகளுள் சிறந்த எடுத்துக்காட்டாகவும் கருதப்பட்டார். இவ்வாறு பழமொழி, திருவுரையாளர், ஞானம், உன்னத சங்கீதம் ஆகிய நூல்களுக்குச் சாலமோன் ஆசிரியர் ஆனார். பழமொழி நூல், லெமுயேல், ஆகூர் ஆகியோரின் கூற்றுக்களைக் கொண்டிருந்தாலும், நூல் முழுவதும் சாலமோனுடையதாகக் கருதப்பட்டது (பழ 1:1). இது ஒரு போலிக் குறிப்பு ஆனாலும், அவர் ஞான இயக்கத்தில் காட்டிய நிலையான ஈடுபாடு, பாரம்பரியம் அவருக்கு இப்படிப் பட்ட பெயரை அளிப்பதற்கு நேர்மையான அடிப்படையாயிற்று. உன்னத சங்கீத நூலுக்கும் சாலமோன்தான் ஆசிரியர் என்ற தலைப்பை நூல் கொண்டுள்ளது. திருவுரையாளர் நூலின் ஆசிரியர் தான் ''எருசலேமின் அரசரான தாவீதின் மகன்'' (திருவுரை 1:1) என்று கூறிக்கொள்கிறார். ஞான நூலின் ஆசிரியர் தன்னைச் சாலமோன் என்று குறிப்பிடுகிறார் (ஞானம் 6:23). இந்நூல்களின் ஆசிரியர்கள் பற்றி அந்தந்த நூல்களுக்குரிய கட்டுரைகளில் காணலாம்.

புனைபெயர்களையோ காலஞ்சென்ற பெரியவர்களின் பெயரையோ, ஒருவர் தம் நூலின் ஆசிரியர் பெயராகப் பயன்படுத்துவது, ஞானிகள் காலத்து வழக்கில் இருந்துள்ளது. இஃது ஓர் ஆசிரியர் தனது செய்தியின்பால் மக்கள் கவனத்தை ஈர்க்கவும், தனது நூலின் மதிப்பை வலியுறுத்தவும் பயன்படுத்திய ஒரு யுக்தியாகும். சாலமோன் ஞானிகளின் சிறந்த மாதிரியாக விளங்கினார். ஆகவே அவர் எழுதியதாக நூல்களுக்குச் சாற்றிக்கூறுவது இயல்பாக அமைந்தது. ஆசிரியத்தன்மை பற்றிய பழங்காலக் கருத்துக்கு இது ஒத்துப்போயிற்று. இதுபற்றி ஆர்.ஏ. எஃப். மெக்கென்சி கூறுவது கவனிக்கத்தக்கதாகும்: ''இஸ்ராயேல் பாரம்பரியத்தில் ஒரு நூல் புனிதமானது, இறை ஆவியின் தூண்டுதல் பெற்றது என்பதை உணர்த்த, பழங்காலத்துப் பெரும் பெயருடைய இறைவாக்கினர்கள், ஞானிகள் ஆகியோருடன் அந்நூல் தொடர்புபடுத்தப்பட்டது. ஏனெனில் இவர்கள் ஆவியால் பயன்படுத்தப்பட்ட கருவிகளாகச் செயலாற்றிப் புகழ்பெற்றவர்கள். இம்முறை ஓர் ஆழ்ந்த உண்மையை எடுத்துக்கூற யூதர்கள் பயன்படுத்திய மரபாகும். ஒரு புனித நூலைப் பெயரில்லாதுவிட அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில் அப்போது இறை ஏவுதல் பெற்றவர்கள் வழியாக அந்நூல் தோன்றியது என்பது காட்டப்படவில்லை''. இவ்வாறு ஐந்நூலை மோசேயும், சங்கீதங்களைத் தாவீதும், ஞானநூல்களைச் சாலமோனும் எழுதியதாகக் கூறுவதில் எந்த முரண்பாட்டையும் யூதர்கள் காணவில்லை.

ஆகவே ஞான நூல்களோடு சாலமோனைத் தொடர்புபடுத்தி மிகைப்படுத்திக் கூறுவதற்கு உறுதியான அடிப்படை இருந்திருக்க வேண்டும். இப்போதுள்ள ஞானநூல்களின் தொகுப்பில் சாலமோனின் பங்கு வரையறைக்குட்பட்டது. ஆனாலும் இஸ்ராயேலின் ஞான இயக்க வளர்ச்சியில் அவர் ஒரு முக்கிய இடத்தை வகித்திருக்க வேண்டும் என்பதை இவையெல்லாம் சுட்டுகின்றன. பழமொழி நூலின் பழம்பகுதிகளில் காணப்படும் மேற்கோளுரையில் சிலவாவது அவருடையன என்பதை ஐயுறக் காரணம் ஏதுமில்லை. ஆனால் மற்ற ஞானநூல்கள் சாலமோன் காலத்திற்கு மிகப் பிற்பட்டவையாகும். அவர் ஞான இலக்கியங்கள் செழிப்புற வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார் என்பது முக்கியமாகும். அவர் அகில உலகப் பரந்த நோக்குடையவர். அந்நிய சிந்தனைப் போக்குகளை ஏற்றுக் கொண்டார். அவர் எகிப்திய, பெனிசிய நாடுகளோடு கொண்ட உறவு வெறும் வணிகத்தன்மை மட்டும் உடையதன்று, அப்படி இருக்கவும் முடியாது. அவரது சிக்கல் மிக்க ஆட்சி முறைக்கு ஏற்ப அரச அலுவலர் அமைப்பைத் திருத்தி அமைக்க வேண்டியிருந்தது. இச்சூழ்நிலையில்தான் இஸ்ராயேலின் ஞான இலக்கிய இயக்கம் செழிப்புற்றது. இதைப் பிறநாட்டு நூல்கள் பாதித்தன. இதற்கு அமென் - எம் - ஒப்பேயின் போதகத்தின் தழுவலாகக் கருதப்படும் பழ 22:17-24:14 என்ற பகுதி சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். இத்தகைய பாதிப்பு எதிர்பார்க்கப்பட வேண்டியதொன்றேயாகும். பழங்கால மேற்காசிய ஞான இயக்கத்தில் இறுதியாக வந்த இஸ்ராயேல் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் விரைவில் இஸ்ராயேலின் ஞானிகள் இஸ்ராயேலுக்குரிய விதத்தில் இந்த இயக்கத்தை வளர்த்தனர். உயர்ந்த ஒழுக்க முறையில் மட்டுமன்று, இலக்கியங்களிலும் இவர்கள் தங்களது முன்னோடிகளையும் விரைவில் மிஞ்சினர்.

அரசர்கள் காலத்தில் இஸ்ராயேலின் ஞானிகள் சமயவளர்ச்சியில் முக்கிய இடம் பெற்றவர்களாக இருக்கவில்லை. இவ்வாறு எசா 29:14-இல் வரும் குறிப்பு கடுமையாக உள்ளது. ஆண்டவர் இஸ்ராயேலை அழிக்கும்போது அவர்களது ஞானமும் அழிந்து போகும். ஒருவேளை இந்த ஞானிகள் அரசனுக்குத் தவறான ஆலோசனை கூறியவர்களாக இருக்கலாம் (5:21; 44:25). ஆனால் எகிப்திய ஞானிகளுக்கு எதிரான எசாயாவின் கூற்றுக்கள் அச்சுறுத்துவதாக அமைந்துள்ளன (19:11-12).

அரசர்கள் காலத்தில் ஞானிகள் ஒரு தனிப்பட்ட குழுவினராகச் சிறிது சிறிதாக உருவெடுக்கின்றனர். அவர்கள் பள்ளிகள் நடத்துகின்றனர் (சீரா 57:1-36; பழ 7:1 தொ; 9:1 தொ). ஞானிகள் மக்களிடையே சிறிது சிறிதாக முக்கியத்துவம் பெறுகின்றனர். ஞானிகள் கைவினைஞர்களைவிட மேலானவர்கள் (சீரா 38:25-39;11). ஏனெனில் ஞானத்தை அடைவது அவர்களது அலுவலாகும். அரசவை அலுவல்களுக்கு எழுத்தர்கள், செயலர்கள் வேண்டியிருந்தனர். இவர்களிடையே ஞான போதகம் முறையாக மலர ஆரம்பித்தது. இவர்கள் முன்னோர்களின் கூற்றுக்களையும் போதகங்களையும் தொகுத்தனர். இத்தொகுப்புகள் வாய்மொழிப் போதகத்திற்குப் பயன்பட்டன. இவற்றைப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்விபுகட்டப் பயன்படுத்தினர் (பழ 1:8;4:1; 31:1; சீரா 3:1-2). ஞானிகள் தங்கள் பள்ளிகளில் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தபோது "தந்தை-மகன்" என்ற உறவைக் கடைப்பிடித்தனர். நாடு கடத்தலுக்கு முன் ஞானிகளது செயல்களைப் பற்றி, "யூதாவின் அரசனான எசேக்கியாவின் அவையினர் சேகரித்து வைத்த இவைகளும்கூட சாலமோனின் பழமொழிகளேயாம்" (பழ 25:1) என்ற தெளிவான சான்று ஒன்றுள்ளது. ஞானிகள் முதுமொழிகளைத் தொகுப்பவர்களாக மட்டும் இருக்கவில்லை; காலப்போக்கில் அவர்களே புதிய கூற்றுக்களை அமைத்தனர். சிறிதுசிறிதாக ஒரு தனிப்பட்ட குழுவினராக உருவெடுத்தனர். தாங்களே நூல்களையும் எழுதத் தொடங்கினர்.

இவ்வாறு ஞானிகளின் குழு, குருக்கள், இறைவாக்கினர் ஆகியோரின் பாரம்பரியங்களை எழுதிய குழுக்களிலிருந்து வேறுபட்டது. மக்களின் தலைவர்களைக் குருக்கள், ஞானிகள், இறைவாக்கினர்கள் என மூவகையினராக எரேமியா கவனமாக வேறுபடுத்துகிறார் (எரே 18:18). ஞானிகள் தங்களுக்கே உரிய ஈடுபாடுகளைக் கொண்டிருந்தனர். அவர்கள் வழிபாட்டு முறையில் குறிப்பிடத்தக்க வகையில் அக்கறை கொள்ளவில்லை. மக்களின் துன்ப நிலை அவர்களைப் பாதிக்கவில்லை. மக்களை ஒன்றிணைத்த பெரும் விசுவாச நம்பிக்கைகள் அவர்களிடம் எவ்வித உணர்ச்சிக் கிளர்ச்சியையும் தூண்டவில்லை. அவர்கள் பொதுவாக, சமூக, அரசியல் வாழ்வையும் நடைமுறைப் போக்கையும் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரிகிறது. எரேமியாவின் கூற்றுக்கள் அவர்களை எவ்விதத்திலும் போற்றுவதாக அமையவில்லை (எரே 8:9; 4:22; 9:23). ஞானிகள் சமயச் சார்பற்றவர்களாக, மனிதனையே மையமாகக் கொண்டு போதித்தனர்.

பாபிலோனுக்கு இஸ்ராயேலர் நாடுகடத்தப்பட்டனர். இந்நிகழ்ச்சியால் யாவேக்குப் பிரமாணிக்கமாய் இருப்பது ஒன்றே மீட்பளிக்க வல்லது என்ற இறைவாக்கினரின் செய்தி உண்மையென நிரூபிக்கப்பட்டது. மனிதனை மையமாகக் கொண்ட ஞானத்தின் பலவீனம் தெளிவாக வெளிப்பட்டது. நாடு கடத்தலுக்குப்பின் அரசு அழிந்தது. ஆலய வழிபாடு முடிந்தது. இறைவாக்கினர்களின் குரல் குறைந்து கொண்டு போயிற்று. திருத்தி அமைக்கப்பட்ட யூதசமூகத்தில் சமயக் கருத்துக்கள் முக்கியம் பெறவில்லை. தனி நபர்ப்பற்றும், ஒழுக்கமின்மையும் அதிகமாய்ப் பரவியிருந்தது. தன்னலம் தேடுதல், - செல்வர்கள் ஏழைகளைச் சுரண்டுவதற்கு இட்டுச் சென்றது. இந்த அவலநிலை - இஸ்ராயேலின் ஞானிகளும் பெரியவர்களும் ஆன்ம ஆய்வு செய்வதற்கு ஓர் அரிய வாய்ப்பளித்தது. இந்த அனுபவத்தால் மிகவும் பயன் அடைந்தவர்கள் ஞானிகள் குழுவினரே. ஏனெனில் இறை அச்சமின்றி மற்ற எல்லா மனித ஞானமும் பயனற்றது என்று அனுபவப்பூர்வமாக அறிந்து தெளிந்தனர் (பழ 1:7; 9:10). இப்பாடத்தை இவர்கள் நன்கு கற்றறிந்தது ஒரு பெரும்பேறாகும். ஏனெனில் நாடு கடத்தலுக்குப்பின் வந்த யூத சமூகத்தில் இவர்களே முக்கிய போதகர்களாகத் திகழ்ந்தனர்.

அரசை இழந்து, ஆலயம் அழிந்து, இறைவாக்கு மறைந்து கொண்டிருந்த இக்கட்டான காலத்தில், இஸ்ராயேலின் ஞான இலக்கிய இயக்கம் தன் பொற்காலத்தில் அடியெடுத்து வைக்கிறது. அரசவை அலுவலர்களைப் பயிற்றுவிக்கத் தோன்றிய ஞான இலக்கியம், இஸ்ராயேலில் அரசாட்சி இல்லாதபோது உச்சநிலை அடைகிறது. குருக்கள், இறைவாக்கினர்கள், ஞானிகள் ஆகிய மூன்று குழுவினரும் ஒன்றாக இணைகின்றனர். பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியங்கள் நூல்வடிவம் பெறுகின்றன. சாலமோன், லெமுயேல், ஆகூர், இன்னும் பல பெயர் தெரியாத ஞானிகள் ஆகியோரின் கூற்றுக்கள் ஒன்று சேர்க்கப்பட்டுப் பழமொழி நூலாக, கி.மு. 6-5-ஆம் நூற்றாண்டுகளில் வடிவெடுக்கின்றன. இக்காலத்தில் ஞானிகள் சமயப்பற்றுடையவர்களாகத் தோன்றுகின்றனர். பழமொழி நூலின் முன்னுரை (பழ 1-9) இறைவாக்கினர்களின் போதகத் தொனியைக் கொண்டிருக்கிறது. வினைப் பயன் தீர்ப்புப் பிரச்சனை பற்றிய இலக்கியம் யோபு நூலின் ஆசிரியரால் கி.மு. 6-5-ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கிவைக்கப்படுகிறது. இப்பிரச்சனையை கி.மு. 4-3-ஆம் நூற்றாண்டுகளில் திருவுரையாளர் நூலின் ஆசிரியர் தொடர்கிறார். கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீராக்கின் மகனான இயேசுவின் நீண்ட, விரிவான போதகம், யூத ஞான போதகத்திற்கு அடிப்படையாக அமைகிறது. சீராக் நூல் குருத்துவத்திற்கு மதிப்பளிக்கிறது. ஆசிரியர் பக்தியோடு வழிபடுபவராகத் தோன்றுகிறார் (சீரா 44-49). ஞானத்தையும் சட்டத்தையும் ஒன்றாக்குகிறார் (24:23-24). இதிலே ஞானிகளும் சட்ட வல்லுநர்களும் ஒன்றாகின்றனர். இந்நிலை நற்செய்திக்காலத்திலும் நீடிக்கிறது. கி.மு. முதலாம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றிய

சாலமோனின் ஞானம் என்ற நூல் மீட்புவர லாற்றை எடுத்துக்கூறுகிறது. வினைப்பயன் தீர்ப்புப்பற்றிய பிரச்சனைக்கு நல்லதோர் பதில் காண முனைகிறது. தோபியா, பாரூக், தானியேல் போன்ற நூல்களும் சங்கீதங்க ளில் சிலவும், ஞான இலக்கியங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன.

பழைய ஏற்பாட்டு ஞான நூல்களைப் புரிந்து கொள்ள இந்தத் தோற்ற வரலாறு ஓரளவு பயன்படும். ஆனால், அதன் முக்கி யத்துவத்தை மிகைப்படுத்தக் கூடாது. ஞான நூல்களில் வரும் கூற்றுக்கள் அரசவை அலு வல்களுக்கு மட்டும் பொருந்தும்படி வரை யறை செய்யப்பட்டவையன்று. இந்நூல்கள் இன்றைய வடிவில், நாடு கடத்தப்பட்ட பிற்காலத்தைச் சேர்ந்தவை. அப்போது அர சனோ, அரசவையோ இஸ்ரேயேலில் இருக்க வில்லை. ஞானக் கருத்து முழுவதும் சமயச் சார்புடையதாகத் தெரிகிறது (பழ 1-9). இந்த ஞானத்திற்குப் பல கோணங்கள் உண்டு. அவற்றைப் பின்பு பார்ப்போம்.

4. விவிலியத்தில் ஞான இலக்கிய நூல் கள்: விவிலியத்தில் ஞானத்தைப் பொதுக் கருத்தாகக் கொண்ட நூல்களை ஞான நூல் கள் என்றழைப்பது மரபு. எபிரேயப் பாரம் பரியமும், அதைப் பின்பற்றிக் கத்தோலிக்கப் பாரம்பரியமும், பழமொழி, யோபு, திரு வுரையாளர், சீராக், சாலமோனின் ஞானம், உன்னத சங்கீதம், சங்கீதங்கள் - ஆகிய ஏழு நூல்களையும் ஞான இலக்கியங் கள் என்று கருதி வந்தன. ஆனால் எந்த அடிப்படையில் இந்நூல்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டன என்று கூறுவது கடினம். ஏனெனில் இவையெல்லாம் ஒரே தன்மை யுடையன அல்ல. பொதுவாக, இந்நூல்கள் பெருமளவுக்குப் பழமொழி அல்லது முது மொழி நடையில் எழுதப்பட்டுள்ளன என லாம்.

ஞான இலக்கியத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகப் பழமொழி, சீராக் ஆகிய நூல்கள் அமைந்துள்ளன. தரத்தில் அடுத்து வருவது திருவுரையாளர் நூலாகும். இவை தனித்தனியான பொருட் செறிவுடைய கூற் றுக்களையோ, ஒரே குறிப்பிட்ட பொருள் கள் பற்றிய கூற்றுக்களின் தொகுப்பு களையோ கொண்டுள்ளன. யோபு நூல் முது மொழி நடையில் இல்லையென்றாலும், நீதி மானின் துன்பம் என்ற பிரச்சனை பற்றிய காவியமாக இருப்பதாலும், ஞானம் பற்றிய நீண்டதோர் பாடலைக் கொண்டிருப்பதா லும் (யோபு 28) ஞான இலக்கியங்களுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்படத் தகுதியுள்ள தாகக் கருதப்பட்டது. சாலமோனின் ஞான நூல் முதுமொழித் தன்மையைவிட, தத்துவ இயல் தன்மை கொண்டது; கிரேக்க மொழி யில் எழுதப்பட்டது.

இவற்றோடு சங்கீத நூலும், உன்னத சங் கீத நூலும், விவிலிய ஞான இலக்கியங்க ளோடு சேர்க்கப்படுவது மரபு. ஞானம் என்ற குறுகிய பொருளில், இவை ஞான இலக்கியங்கள் அன்று. சங்கீத நூலில் பல சங்கீதங்கள் ஞானத்தைப் பற்றியனவாகும். மேலும் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே யுள்ள உறவு பற்றிய உள்ளத்து எழுச்சிப் பாடல்களைக் கொண்டுள்ளது. ஆகவே இந் நூலும் ஞானநூல்களில் ஒன்றாகக் கருதப்பட் டிருக்கலாம். உன்னத சங்கீதம், ஆண்-பெண் உறவு பற்றிய அகப்பாடல் வகையைச் சேர்ந் தது. இந்நூலும் மனிதனது ''நல்வாழ்விற்கு'' ஏதோ ஒரு வகையில் உதவுகிறது என்றறிந்த யூத ஞானிகள், இதையும் ஞான இலக்கியத் தொகுப்போடு சேர்த்துப் பாதுகாத்தனர்.

ஆதி 1-11;37-50; யாத் 34:6-7; உபாகமம்; 2 சாமு 9-20; 1 அர 1-2 ஆகிய பகுதிகளும், ஆமோஸ், எசாயா, அபக்கூக்கு, யோனா, தானியேல், எஸ்தர், பாரூக், தோபியா ஆகிய நூல்களில் சிலபகுதிகளும், ஞான இலக்கியத் தன்மை கொண்டுள்ளனவாகத் தெரிகின்றன.

5. ஞான நூல்களின் ஆசிரியர்கள்: யோபு வின் பொறுமையும், திருவுரையாளரது துன்ப இயற்கைக்கோட்பாடும் சீராக்கின் மட்டுடைய மனப்போக்கும் - மக்களின் வழக்கில் பயன்படும் எடுத்துக்காட்டுகளாக மாறிவிட்டன. ஆனால் ஞான இலக்கிய

நூல்கள் தோன்றக் காரணமானவர்கள் எத்தகையவர்கள்? எரேமியாவின் காலத்திலேயே யூதத்தலைவர்களுள் ஞானிகள் குழுவினர் ஓர் அங்கம் வகிக்கின்றனர் (எரே 18:18). ஞானத்தைத் தேடுவதும், போதிப்பதும் இவர்களது அலுவலாகத் தெரிகிறது. ஆனால் இவர்களை வகைப்படுத்துவது ஆய்வாளர்களுக்கு ஒரு பிரச்சனையாகவே இருந்து வந்திருக்கிறது. இவர்களுக்கு ஆய்வறிவாளர்கள், மனித நலக் கோட்பாட்டாளர்கள், தனிநபர்ப் பற்றுடையவர்கள் எனப்பலவாறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒருவிதத்தில் இவையாவும் இவர்களுக்குப் பொருந்தும். மற்றொரு விதத்தில், இப்பெயர்களில் எதுவும் இவர்களுக்குப் பொருந்தாது. ஏனெனில் இவர்களது தன்மை இப்பெயர்கள் குறிப்பதை விடப் பெரியது. பெயர் கொடுத்து விவரிப்பது வசதியாக இருக்கலாம். ஆனால் இவர்களது தன்மையை இப்பெயர்கள் துல்லியமாக விவரிக்காதும் போகலாம்.

யூத குருக்கள் வழிபாட்டிலும் சட்டத்தை விளக்குவதிலும் ஈடுபட்டனர். ஆலயச்சூழ்நிலையில் உலவினர். இறைவாக்கினர்கள் இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையிலுள்ள உறவைப்பற்றி அக்கறை கொண்டனர். மக்களுக்கு இறைவனது திருவுளத்தை எடுத்துக்கூறினர். தூய்மைப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டுச் சூழ்நிலையில் உலவினர். மேற்கூறப்பட்ட இருபிரிவினருக்கும் மாறாக, ஞானிகள் ஆலயத்தைப்பற்றியோ வெளிப்பாட்டைப் பற்றியோ அதிகம் பேசவில்லை. இவர்கள் இவ்வுலகில் உறுதியாகக் காலூன்றியவர்கள். மற்ற மனிதர்களைப் போலவே சாரமற்ற வாழ்க்கைச் சூழ்நிலையில் உலவினர். இவர்கள் இஸ்ராயேலின் பள்ளி ஆசிரியர்கள், விவேகமிக்க ஆலோசகர்கள், அனுபவமிக்க முதியோர்கள், புலமைமிக்க எழுத்தாளர்கள் ஆவர். இவர்கள் வெளிப்பாட்டின் செய்திகளையும், அன்றாட அனுபவத்தின் பாடங்களையும் கூறுகூறாக்கித் தங்கள் மாணவர்களுக்கும் பிறருக்கும் சிறிது சிறிதாக எடுத்துக்கூறி அவர்களைப் பயிற்றுவித்தனர்.

போதிப்பதும், கண்டிப்பதும், திருத்துவதும் ஞானிகளின் பணியாகும். இவர்களது போதகத்தின் பொருளடக்கம் மனித நடத்தை முழுவதையும் உள்ளடக்கியது. வெளிப்பாடு, அறிவு, அனுபவம் ஆகியவற்றின் ஒளியில் - மனிதனை மனிதன் என்ற அளவில் ஆய்வு செய்து, தாங்கள் கண்ட உண்மைகளைப் பிறருக்கு எடுத்துக் கூறினர். இந்த அடிப்படையில் இவர்களைத் தத்துவ ஞானிகள் என்று கூறலாம். இறைவனையும், மனிதனையும் பற்றிய அறிவைப் பெறுவதற்குப் பெரும் மதிப்பளித்தனர். இந்த அடிப்படையில் இவர்களை ஆய்வறிவாளர்கள் அல்லது அறிவியல்வாதிகள் எனலாம். மனித வாழ்வின் நடத்தை முழுவதும் பற்றியும், மனித வாழ்வின் மனித இறைப்பண்புகளிலும் அக்கறை கொண்டனர். இந்த அடிப்படையில் இவர்கள் மனித நலக்கோட்பாட்டாளர்கள் ஆவர். பழைய ஏற்பாட்டில் இந்நூல்கள்தான் தனிநபர்களின் பிரச்சனைகளில் வெளிப்படையாக அக்கறை காட்டுகின்றன. பொதுவாக, இவற்றில் நாட்டுப்பற்று, மெசியா போன்ற கருத்துக்கள் காணப்படுவதில்லை. முக்கியமல்லாத சாதாரண மனிதனின் அன்றாட காரியங்களில் கவனம் செலுத்துகின்றன. வாழ்வு ஒரு முழுமையும் ஒருங்கிணைப்பும் கொண்டது என்றும் வலியுறுத்திக் கூறுகின்றன. இதில்தான் இந்நூல்களின் மதிப்பும் அடங்கியிருக்கிறது. இந்நூல்களின் ஆசிரியர்கள் தாங்களாகவே சிந்தித்துப் பல காரியங்களைப்பற்றித் தங்களது சொந்தக் கருத்துக்களைக் கொடுப்பதாகவும், இறைவெளிப்பாட்டின் அதிகாரத்தையோ, புலமைமிக்க முன்னோர்களின் அதிகாரத்தையோ, அரிதாகத்தான் பயன்படுத்துவதாகவும் தோன்றுகிறது. இந்த அடிப்படையில் இவர்கள் தனி நபர்ப்பற்றுடையவர்கள் என்று கூறலாம்.

ஆனால், இவர்கள் தத்துவ ஞானிகளைப் போல் பகுத்தறிவுக்கு மட்டும் முதன்மை அளிக்கவில்லை. அறிவியல்வாதிகளைப் போல் வெறும் அறிவை மட்டும் போற்றவில்லை. மனிதவாழ்வின் மாண்புகள் இவர்களுக்கு முக்கியம் வாய்ந்தவைதான். அதற்

காக மனிதனது ஆன்மீகப்பண்புகளை மறக்க வில்லை. மனித நடத்தையைப் பற்றித் தாங் கள் கூறுவதுதான் இறுதியானதுபோல் இவர் கள் போதித்தாலும், இறைவனது வார்த் தையே முதலும் முடிவுமாகும் என்று வலி யுறுத்துபவர்களில் முதன்மையானவர்கள். உண்மையில் இவர்களுக்கு ''இறை அச்சமே - ஞானத்தின் தொடக்கமாகும்''. எல்லாவற் றையும் இறைவனது மகிமைக்காகச் செய் யுங்கள் என்று போதித்தனர். அறிவை அறி வுக்காக மட்டும் தேடவில்லை; இறைப்பற் றுக்காகத் தேடினர். இறைகாரியங்களில் மட்டு மன்று, எல்லாவற்றிலும் மேன்மை அடை யும் கலையைத் தங்களுக்குச் செவிமடுப் போருக்குப் போதித்தனர். எல்லாம் இறைவ னிடமிருந்து வந்தன; மனிதன் வழியாக எல்லாம் இறைவனிடம் திரும்பிச் செல்ல வேண்டும் என்று உறுதியாக அறிந்திருந்த னர். சமயம் - மனிதனது வாழ்வு முழுவதி லும் ஈடுபாடு கொண்டிருந்தது. அது முழு அர்ப்பணத்தையும் கோரியது. தங்கள் மாண வர்கள் இந்த அர்ப்பணத்தைத் தங்களுடைய தாக்கி, அது அவர்களது வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் ஊடுருவி ஆட்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதே ஞானிகளின் குறிக்கோள் (பழ 1:2-6).

இக்குறிக்கோளை அடைய, ஞானிகள் தங் கள் வாழ்விலேயே, இறைவனைப் பற்றிய, எப்போதும் வளர்ச்சியுறும் அறிவையும் இறைவனது திருவுளத்தையும் தேடினர். திரு மறை நூலைக் கவனமாகப் படித்தனர் (சீராக் நூலின் முன்னுரையைக் காண்க). இறைவ னது படைப்பாகிய உலகமுழுமையிலும், குறிப்பாக அவரதுமிகச் சிறந்த படைப்பா கிய மனிதனின் அமைப்பிலும் காணப்படும் அவரது ஆற்றல், மகிமை ஆகியவற்றைத் தியானித்தனர். மனிதத்தன்மை, மற்றும் அவன் செயல்படும் முறை பற்றிய அனுப வத்திலிருந்தும் உலகிற்கு ஒரு வரைபடம் உண்டென்று அறிவுசார்ந்த முறையில் முடிவு செய்தனர். பலதலைமுறைகளாக அறிவர்களின் நன்கு சோதிக்கப்பட்ட அனுப வத்திலிருந்து வடித்தெடுத்த ஞானத்தைத் தொகுத்தனர். ஞானிகளைப் பற்றிச் சீராக்நூல் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார். ''ஞானி - முன்னோர் எல்லாருடைய ஞானத்தையும் தேடுவான் ... உவமைகளின் நுட்பங்களை ஊடுருவிக் காண்பான்... பழமொழிகளின் உட்பொருளைத் தேடுவான். உவமைகளில் பொதிந்துள்ள புதிர்களை எளிதில் புரிந்து கொள்வான். பெரியோர் நடுவே பணியில் அமர்வான். அயல்நாடுகளில் பயணம் செய் வான். மாண்புமிகு ஆண்டவர் விரும்பி னால்.. தமதுஞானத்தின் போதகங்களை மழைபோல் வரவிடுவார்... அவன் நெடுங் காலம் வாழ்ந்தால் ஆயிரம்பேரைவிடப் புகழ் பெறுவான். இறந்தாலும் அவனுக்கு மகிமை யுண்டு'' (சீரா 39:1-15).

ஞான ஆசிரியர்களின் பண்புகளில் - முத லாவது, அவர்கள் பட்டறிவு சார்ந்த ஞானம் பொதிந்த ஒப்புமைக் கூற்றுக்களைப் பயன் படுத்துவதாகும். ''மசால்'' எனப்படும் இந்த ஒப்புமைக் கூற்றுக்கள் உவமையாக, உருவக மாக, விடுகதைகளாக வடிவெடுக்கலாம்; பெரும்பாலும், பழமொழி அல்லது முது மொழி வடிவம் எடுக்கின்றன. இவை பாடல்வடிவும் சந்தமும் இணையமைப்பும் கொண்ட மேற்கோளுரைகளாகும் (இவை பற்றிப் பின்பு பார்ப்போம்). இக்கூற்றுக்கள் ஒழுக்க அமைப்பைப் பற்றியவையாகும். இவை உருவகமாகவும், சில இடங்களில் புதிரான முறையிலும், எடுத்துக் கூறப்படுவ தால் இவற்றைப் புரிந்து கொள்ள வாசகர் களிடம் ஆழ்ந்த சிந்தனை அவசியமாகும்.

இரண்டாவது, ஞானிகள் - அறிவு மற்றும் வெளிப்பாடு சார்ந்த ஒரு முறையிலும் உண் மைகளை எடுத்துக்கூறுவர். இவர்களது போதகம் யாவற்றையும் உள்ளடக்கியது. அதிகம் நாட்டுப்பற்றில்லாதது. இதில் இவர் களது போதகம், குருக்கள், இறைவாக்கினர் கள் ஆகியோருடைய போதங்களிலிருந்து வேறுபடுகிறது. இவர்களதுபோதகம் யூதர் களுக்கு மட்டுமன்றி, எல்லாருக்கும் உரியது. இவர்கள் அறிவுக்கும் அனுபவத்திற்கும் அதிக மதிப்பளித்து மனித நலத்தில் அக் கறை கொண்டதால், விவிலியத்தில் மனித

நலப்பற்றுடையவர்கள் என்று அழைக்கப் பட்டுள்ளனர் (ஞானம் 7:17-21).

மூன்றாவது, சமயம் வெறும் கோட்பாடன்று; அது ஒரு வாழ்க்கை முறையாகும் என்று ஞானிகள் வலியுறுத்தியுள்ளனர். இறைவனும் அவரது நேரடிச் சட்டமும், இயற்கை சார்ந்த சட்டமும், மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் புகுகின்றன என்று ஞானிகள் காட்டியுள்ளனர். சமயம் ஒரு தனிப்பட்ட காலத்திற்கோ, இடத்திற்கோ வரையறை செய்யப்பட வேண்டிய தொன்றன்று. அதுமனிதனை எல்லாக் காலத்தும் அவன் செய்யும் யாவற்றையும் பாதிக்க வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

ஞான ஆசிரியர்களின் கருத்துப்படி வெளிப்பாடு, பாரம்பரியம், இறைக் கொடை, அனுபவ அறிவு ஆகியவை ஞானத்தின் ஊற்றுக்களாக அமைகின்றன. போதகம், படிப்பு, பயிற்சி, சிந்தனை, தியானம், ஆலோசனை ஆகியவை ஞானத்தை அடையும் சாதனங்களாகும் (பழ 1:5; 12:15; 13:4; 19:20 தொ). ஞான ஆசிரியர்கள் மனிதர்களை ஞானி, மூடன் என இருவகையாகப் பிரிக்கின்றனர். இரண்டு வகையினருக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. இக்கருத்து உண்மைநிலைக்கு ஒத்ததன்று; இது ஒரு குறிக்கோளுடைய திட்ட அமைப்பாகும். ஞான இலக்கியங்களின்படி இருவகையினரும் ஒத்துப்போக முடியாத முறையில் பிரிந்து கிடக்கின்றனர். இளைஞன் தன்மையிலே அறிவிலியாவான். அவன் போதனையாலும், ஆலோசனையாலும் ஞானம் பெற வேண்டும். வயது முதிர்ச்சியோடு அவன் ஞானத்தைக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், அவன் நம்பிக்கையற்ற முறையில் மூடனாகிறான். மூடத்தனம் வாழ்வில் தோல்விக்கும் துன்பத்திற்கும் இட்டுச்செல்லும். ஞானத்தையும் வாழ்வில் வெற்றி பெறுவதையும் சமன்படுத்துவது - உண்மை வாழ்க்கைச் சூழ்நிலைக்கு எப்போதும் சரியாக இருப்பதில்லை. இது காலப்போக்கில் மாற்றிஅமைக்கப்பட வேண்டும்.

சுருக்கமாக, ஞான ஆசிரியர்கள் யார்? இவர்கள் தங்கள் செய்தியை ''மசால்''களாக அல்லது ஒப்புமைக் கூற்றுக்களாக எடுத்துக் கூறியவர்களாவர். சட்டம், இறைவாக்கினர்கள் ஆகியவற்றில் காணப்படும் இறை வெளிப்பாட்டிலிருந்தும் - படைக்கப்பட்ட உலகு, மனிதனது தன்மை, செயல், கதி ஆகியவை பற்றிய தியானம் மற்றும் அனுபவத்தாலும் கண்டு பிடித்தவற்றிலிருந்தும் - இவர்கள் கண்டறிந்த ஞானத்தைப் போற்றுதல், விவரித்தல், போதித்தல், ஆகிய நோக்கத்திற்காக எழுதியவர்கள். இவர்கள் தங்கள் மாணவர்களுக்குப் போதித்த செய்தியைப் புனித பவுலின் கூற்றில் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்; ''உண்மையானது எதுவோ, கண்ணியமானது எதுவோ, நீதி எதுவோ, இனியது எதுவோ, எதெல்லாம் நற்பண்புடையதோ, எதெல்லாம் புகழ்ச்சிக்குரியதோ, அவற்றையே மனதில் கொள்ளுங்கள். நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்ட போதனைகள், பெற்றுக் கொண்ட படிப்பினைகள், என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்க்கையில் நீங்கள் பார்த்தவை அனைத்தையும் கடைப்பிடியுங்கள்'' (பிலி 4:8-9). ''நீங்கள் உண்டாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாம் கடவுளின் மகிமைக்கெனச் செய்யுங்கள்'' (1 கொரி 10:31).

6. யூத ஞான ஆசிரியர்களின் ஞானம்

அ) : ஞானம் என்ற கருத்து மிகவும் சிக்கலானது; நழுவிப்போகும் தன்மையுடையது. அதைத் துல்லியமாக விளக்க முடியாது. ஞானத்தைக் குறிக்கும் ''ஹக்மா'' (Hakma) என்ற எபிரேயச் சொல் விவிலியத்தில் பல பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் கைவினைஞர்கள் (யாத் 28:3; 31:3-6; 35:10; 36:1), அழுவதைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் (எரே 9:17), மாலுமிகள் (சங் 107:27), பொதுவாக ஒரு தொழிலில் ஈடுபடுபவர்கள் காட்டும் ஆற்றலையும் திறனையும் நுட்பத்தையும் குறிக்கிறது (1 நாள் 22:15; 2 நாள் 26:7.12 தொ). பார்வோனின் கனவுகளுக்கு விளக்கம் அளிப்பதில் யோசேப்பு காட்டிய திறமை அவருக்கு ஞானி என்ற பட்டத்தைப் பெற்றுத்தந்தது

(ஆதி 41:39). அப்சலோமை எருசலேமுக்கு மீண்டும் வரவழைக்கச் செய்ய, தெக்கோவா வூர்ப் பெண்ணின் நடிப்பு ஞானத்தின் செயல் முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் (2 சாமு 14:1-23). தலைவர்கள் காட்டும் விவேகம் ஞானமாகக் கருதப்படுகிறது (உப 1:13.15; 34:9). உண்மைத் தாயைப் போலித் தாயிடமிருந்து வேறுபடுத்திக் கண்டுபிடிக்கக் குழந்தையை இரண்டாக வெட்டும்படி கட்டளையிட்டதில் மனித இதயங்களின் தன்மையைப் பற்றிய சாலமோனின் அறிவு, அப்பேரரசனது ஞானத்தை எடுத்துக்காட்டியது (1 அர 3:16-28). இவ்வரசனது அரசியல் மதிக்கூர்மையும் (1 அர 5:12), விடுகதைகளை விடுவிப்பதும் (10:1-4), இயற்கைப் பொருட்கள் பற்றிய உரையும் (4:33) இவரது ஞானத்திற்குச் சான்றாக அமைந்தன. ஞானி, அரசனுக்கு ஆலோசகராக இருக்கலாம் (எரே 50:35; பழ 31:1). கூர்மதியுடைய பெண்களும் ஞானிகளாகக் கருதப்பட்டனர் (2 சாமு 14:2; 20:16; நீதி 5:29). இந்த ஞானம் அறிவுத்திறன் சார்ந்தது; ஒழுக்கப்பண்பன்று. இது செயல் முறையானது; சமயப்பண்பன்று. அதிகம் போனால் இதுஒழுக்கச் சார்பற்றதாக இருக்கலாம் (2 சாமு 13:3; 1 அர 2:6).

ஞானம் யூகித்து ஆய்ந்து பெறும் அறிவன்று. அது முதன்மையான செயல் முறை அறிவாகும். ஞான இலக்கியங்களில் பெறும் அறிவுத்திறனைவிட ஒருவன் வாழ்வை ஒழுங்குபடுத்தும் திறனே ஞானமாகும். வாழ்க்கையில் வெற்றி பெறுபவன் ஞானியாவான். ஒருவன் தான் தனிச்சிறப்பான முறையில் அறிந்ததைச் செயல் முறையாகப் பயன்படுத்தி வெற்றி கொள்ளும் அறிவு அவனை ஞானியாக்குகிறது.

ஆ. ஞானம் பற்றிய எபிரேயக் கருத்துக்களைப் பின்வருமாறு பிரித்துக் காட்டலாம். ஞானத்தை மனித ஞானம், இறைஞானம் என்று பிரிக்கலாம். பழமொழி நூலின் காலத்தால் முந்திய பகுதிகள் சரியாக வாழ்வது பற்றிய அறிவை வலியுறுத்துகின்றன. இந்த ஞானம் ஆய்வுணர்வு, கூரிய நோக்கு, துறை நுட்பக்கூரறிவு, விவேகம் எனப் பல பெயர்கள் பெறும். ஆனால் உண்மையான ஞானத்தைச் சமயத்திலிருந்து பிரிக்க முடியாது. ஆகவே உண்மையான ஞானி சட்டத்தில் காணப்படும் இறைவனது திருவுளத்தை ஏற்றுக்கொள்வார். ஆகவே ஞான இலக்கியங்களில் சமயஞானம் அடிக்கடி வலியுறுத்தப் படுவதில் வியப்பொன்றுமில்லை. இந்த இறை ஞானம்தான் பழ 1-9-இல் எடுத்துக் கூறப்படுகிறது. அதன் சுருக்கம் ''இறை அச்சமே ஞானத்தின் தொடக்கம்'' என்ற மேற்கோளுரையில் தரப்படுகிறது (பழ 1:7; 9:10; 15:38; 30:3; யோபு 28:28; சீரா 1:16). இவ்வச்சம் - பய பக்தியோடும் பிள்ளைக்குரிய பணிவோடும் ஒன்றானதாகும். இதுவே ''ஞானத்தின் நிறைவு'' (சீரா 1:16); ''ஞானத்தின் உச்சி'' (1:18); ''ஞானத்தின் வேர்'' (1:20); செயல்முறையில் இதுசமயத்தைக் கடைப்பிடிப்பதாகும்.

இ. மனித ஞானத்தை அக ஞானம், புற ஞானம் எனப்பிரிக்கலாம். சமயத்தைக் கடைப்பிடிப்பது ஞானத்திற்கு இன்றியமையாததாகையால், வெளிப்படுத்தப்பட்ட மோசே சட்டத்தைக் கடைப்பிடிப்பது புற ஞானத்தின் முனைப்பான பண்பாகும். ஆனால் ஞான இலக்கியங்களில் பழங்காலப் பகுதிகள் சட்டத்தில், அதாவது எபிரேயருக்கே தனிச்சிறப்பான ஒன்றில் தங்கள் அடிப்படையையோ ஒழுக்க வாய்ப்பாடுகளையோ தேடவில்லை. இவை இடம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்கின்றன. மனித இதயம், வாழ்வு ஆகியவை பற்றிய உளவியல் கவனிப்பிலிருந்து இவை தங்களது போதகத்திற்கு முழுமையான, அறிவு சார்ந்த அடிப்படையை அமைத்துக் கொள்கின்றன. பிறவற்றிலிருந்து விலகிய தனித் தன்மையுடையதாயினும் இந்த ஞானம் வரையறைகளைக் கடந்து சென்று மனுக்குலம் முழுவதையும் அடைகிறது. ஆகவே அதன் பாடம் யாவருக்குமுரியதாகும்; மனுக்குலம் முழுவதற்கும் உரிய பொதுச் சொத்தாகும்.

ஆயினும் வெளிப்படுத்தப்பட்ட சட்டம், இறை ஞானத்தின் வெளிப்பாடாகும்.

ஆகவே சட்டமும் ஞானமும் ஒன்றாகக் கருதப்பட்டன. இதைச் சீராக் நூலிலும், பாரூக் 3:9-4:1-இலும் காணலாம். ஞானம் உன்னத இறைவனது வாயினின்று புறப்படு கிறது. மக்களிடையே ஓர் உறைவிடம் தேடு கிறது (சீரா 24:1-12). சீயோனில் உறைவிடம் பெற்று, சட்டநூலில் தன்னிறைவு மலர்ச்சி யைக் காண்கிறது (24:30-33). இப்படிச் சட் டத்தையும் ஞானத்தையும் ஒன்றாக்கும் போது, ஏற்கெனவே உபாகம நூலில் உள்ள கருத்தையே சீராக், பாரூக் நூல்கள் தெளி வாக வெளிக்கொணர்கின்றன. ''என் இறை வனாகிய ஆண்டவர் எனக்குக் கட்டளையிட்ட படியே நான் உங்களுக்குக் கட்டளைகளை யும் நீதி முறைகளையும் கற்பித்தேன்... நீங் கள் அவற்றை ஏற்றுக் கொள்வதோடல்லா மல், அவற்றின்படி நடந்து கொள்ள வேண் டும். இதுவே உங்கள் ஞானம்....(உப 4:5-6).

ஈ. அக ஞானத்தைக் கோட்பாட்டளவான ஞானம், செயல்முறை ஞானம் என இரு வகையாகப் பிரிக்கலாம். இயற்கை, மனிதன், இறைவன் ஆகியவை பற்றிய ஊக ஆய்வுக ளில் எபிரேயச் சிந்தனையாளர்கள் திளைத்த தாகத் தெரியவில்லை. அவர்களது சிந்தனை வளர்ச்சியில் ஊக ஆய்வு அரிதாகவே இடம் பெறுகிறது. திருவுரையாளர் நூல் செயல் முறை ஞானத்தைப் பிரித்துரைக்கிறது; வலி யுறுத்துகிறது. இந்நூல் பொருட் களின் இறுதிக்காரணத்தைத் தேடும் ஞானத்தை, குறிப்பாக இறைவன் உலகை ஆட்சி செய்வது பற்றிய இறுதி விளக்கத்தை அறிய விரும்பும் ஞானம் வீணானது என்று பறைசாற்றுகிறது (திருவுரை 1:12-18). யோபு நூலின் ஆசிரியர் ஓர் ஆழமிக்க இறையியல் பிரச்சனையை எழுப்புகிறார். அது உலகை ஆள்வதில் இறைபாலிப்பாகும் (யோபு 28:12-14). அதில் நீதிமான்களின் துன்பம் என்ற பிரச்சனை முக்கிய இடம் பெறுகிறது. ஆனால் இப்பிரச்சனைக்கு இறைவன் ஒரு வர் மட்டுமே நிறைவான பதிலைக் கொடுக்க முடியும் (28:23-24). இந்தப் பிரச்சனையைப் பொறுத்த மட்டும் மனிதன் செய்யக்கூடியது - ''இதோ! ஆண்டவரைப் பற்றிய அச்சமே ஞானம்; தீமையைவிட்டு விலகுவதே அறிவு'' (28:28) என்று சுருக்கமாக ஆசிரியர் கூறு கிறார். இப்பிரச்சனைகளுக்குப் பதில் காண்ப தில் நிறைவு காண்பதைவிட, இவற்றோடு எப்படி ஒத்து வாழ்வது என்பதில் ஞான ஆசிரியர்கள் அக்கறை கொள்கின்றனர். பிற ருடன் பழகும் விதம், வெற்றிக்கு வழிவகை கள், பகைமை, எதிர்ப்பு, தோல்வி ஆகியவற் றால் ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் விதம் ஆகியவை பற்றிய மேற் கோளுரைகளை இந்நூல்களில் பரவலாகக் காணலாம். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்வது என்பது பற்றிய அறிவில் செயல்முறை ஞானம் அடங்கி யிருக்கிறது. பெரும்பாலும் அறிவு சார்ந்த சுயநலம் இக்கூற்றுக்களில் காணப்படுகிறது.

ஆனால் பாரம்பரிய செயல்முறை ஞானம் சமயக் குறிக்கோளை நோக்கி அமைந்துள் ளது (பழ 1-9). எபிரேய ஞானிகளுக்குத் தொடக்கம் கேள்வியன்று; விசுவாசமேயா கும். எல்லாவற்றிற்கும் மேலானவரான, படைத்துக் காப்பவரான, ஆளுபவரான, எல் லாருக்கும் நடுவரான ஒருவரை - இறை வனை - விசுவாசத்தில் ஏற்றுக் கொள்கின்ற னர். முடிந்தமட்டும் இறைவனது வார்த்தை களையும் வழிவகைகளையும் அறிய முயல் வதும், அந்த அறிவைச் செயல்முறையில் பயன்படுத்துவதுமே ஞானமாகும். வாழ்க் கையிலும் நடத்தையிலும் எல்லாச் சிக்கல் மிக்க சூழ்நிலையிலும் இறைவனது திரு வுளத்தை நிறைவேற்றுவதே ஞானம்.

இதுவரை மனித ஞானத்தைப் பாகுபடுத் திப் பார்த்தோம். இனி இறைஞானத்தைப் பற்றிச் சிறிது பார்ப்போம். இதை இறைவ னுக்குப் பண்பாகச் சாற்றிக் கூறப்படும் ஞானம் - ஆட்தன்மைப்படுத்தப்படும் ஞானம் என இருவகையாகப் பகுக்கலாம்.

உ. இறைவனுக்குப் பண்பாகச் சாற்றிக் கூறப் படும் ஞானம்: இது, இயற்கையின் வியத்தகு அமைப்பிலும் (சங் 104:24; பழ 3:19-20; யோபு 28:12-18; ஞானம் 13:1-9), மனித நிகழ்ச்சிகளை முறைப்படுத்துவதிலும், பிரதி

பலிக்கிறது. ஞானம் மதிப்புமிக்கதொன்றாகையால், கடவுளர்கள் இதை ஏராளமாகக் கொண்டிருப்பதாகப் பழங்கால மேற்காசிய மக்கள் கருதினர். ஞானத்தைக் கொண்டே கடவுளர்கள் உலகைப்படைத்ததாகவும் ஆளுவதாகவும் நம்பினர். ஏல் என்ற கடவுள் எல்லாவற்றிற்கும் முன்பே ஞானத்தைப் படைத்ததாகவும், அந்த ஞானம் எல்லாக் காலத்திற்கும் நிலைத்திருப்பதாகவும், கி.மு. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உகாரித்து வாசகங்களில் காண்கிறோம்.

இஸ்ராயேலிலும் இதே கருத்துக்களைக் காண்கிறோம். இறைவனைப் போல் ஞானம் மிக்கவர் வேறொருவரும் இல்லை (யோபு 9:4-10; 12:13; 21:22). இறைவனில் மட்டுமே எல்லா ஞானமும் காணப்படுகிறது (யோபு 28:12-27; பாரூக் 3:15-18). ''இறைவனிடம் ஞானமும் வல்லமையும் உள்ளன. அறிவுக்கூர்மையும் அறிவும் அவருக்கே உரியன'' (யோபு 12:13). ''ஆண்டவரின் ஞானம் பெரியது; அவர் ஆற்றல் மிக்கவர்; அனைத்தையும் அவர் பார்க்கிறார்... மனிதனின் செயல்களனைத்தையும் அவர் அறிவார்'' (சீரா 15:18-19). ''உன்னதத்திலுள்ள வாக்கே ஞானத்தின் ஊற்று... ஞானத்தின் ஆணிவேர் யாருக்கு வெளிப்படுத்தப்பட்டது? அதன் நுணுக்கங்களை அறிந்தவர் யார்? ஞானத்தின் அறிவாற்றல் யாருக்குத் தெளிவாக்கப்பட்டது?...'' (1:5-8).

மேற்கூறப்பட்டவையிலிருந்து இஸ்ராயேலும் பழங்காலப் புறஇனமக்களும் ஞானத்தைப்பற்றி ஒரேவிதக் கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்றும், ஞானம் மேலான முறையில் செயல்முறை அறிவாகும், சிறப்பான முறையில் இறை உடைமையாகும் என்றும் தோன்றலாம். ஆனால் எது நன்மை எது தீமை என்பது பற்றி ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. புற இனக்கடவுளர்கள் நன்னெறிச் சார்பற்றவர்கள்; அமைதி குலைக்கும் முறையில் தன்னிச்சையானவர்கள். ஆகவே புற இன ஞானத்தை ஒழுக்க நெறி அமைப்போடு தொடர்பு இல்லாமலே சிந்தித்துப் பார்க்கலாம். இஸ்ராயேலில் அப்படிப்பட்ட ஞானத்தைச் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாது. நல்லவன் அல்லாதவன் எவனும், ஞானியாக இருக்க முடியாது. பாவத்தை விலக்கி, தீமையை வெறுக்காதவன் எவனும், ஞானியாக இருக்க முடியாது. ''பொல்லாங்கான பேச்சு என் நாவுக்கு அருவருப்பு... ஆணவத்தையும் இறுமாப்பையும் தீமையையும் உருட்டையும் புரட்டையும் நான் வெறுக்கிறேன்'' (பழ 8:7.13) என்று இஸ்ராயேலின் ஞானம் அறிவிக்கிறது. ''மூடர்கள் ஞானத்தை அடைய மாட்டார்கள். பாவிகள் அதைக் காண மாட்டார்கள். ஆணவத்தினின்று அது விலகி நிற்கும். பொய்யர் ஒருபோதும் அதை நினைத்துப் பாரார்'' தீமை பற்றிய அறிவாற்றல் உண்மையான ஞானமன்று; பாவிகளின் அறிவுரையில் அறிவுத்திறனில்லை..... அறிவுத்திறன் இருந்தும் திருச்சட்டத்தை மீறுவோரைவிட, அறிவுக் கூர்மை இல்லாது போயினும் இறையச்சம் கொண்டோர் மேலானோர்'' (19:22-24).

ஞானம், மேலான விதத்தில், ஆண்டவருக்கு அஞ்சுதலாகும். இறைவனை அறிந்து, அன்பு செய்து அவருக்குப் பணிசெய்யும் சமயமே - இந்த அச்சமாகும். இந்த அச்சத்தின் பெருமையைச் சீரா 1:9-18 விவரிக்கிறது. இந்த இறை அச்சத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளாதிருக்க அதே நூல் மேலும் விளக்குகிறது. ''ஆண்டவருக்கு அஞ்சுவோர் அவருடைய வாக்குகளைப் புறக்கணியார்; அவரிடம் அன்பு கொள்வோர் அவர்தம் வழிகளைக் கடைப்பிடிப்பர். ஆண்டவருக்கு அஞ்சுவோர் அவர்தம் விருப்பத்தையே தேடுவர்; அவரை அன்பு செய்வோர் அவர்தம் திருச்சட்டத்தில் நிறைவு அடைவார்'' (சீரா 2:15-16; காண்க.4:14; 7:29-30: ஞானம் 6:8; 7:22-28).

ஆகவே விவிலிய ஞான ஆசிரியர்களின் ஞானம் தோற்றத்தில்தான் புற இனத்தவரது ஞானத்தோடு ஒத்திருக்கிறது. அது இறைவனிடமிருந்து வருவதாலும் அவருடைய ஞானத்தைப் பிரதிபலிப்பதாலும், அது இறைவனை அறிந்து சிநேகிப்பதிலும், யாவற்றையும் அறிந்து சிநேகிப்பதிலும்

அடங்கி இருக்கிறது. அது எல்லாவற்றையும் இறைவனோடு தொடர்புபடுத்துவதால் புனிதமானது. இயற்கைக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் அது இறைவனிடமிருந்து மட்டுமே வரக்கூடியது (சீரா 1:1; பழ 2:16; ஞானம் 8:21). அது செயல்முறையானது, கொள்கையளவேயானதன்று. ஏனெனில் அறிவதால் மட்டும் ஒருவர் ஞானியாகி விடுவதில்லை. அறிந்ததைச் செய்வதால் ஒழிய அவர் ஞானியாக முடியாது. ஆகவே பாவியினுடைய அறிவு எவ்வளவு அதிகமானாலும் அவன் மடையனே. ஏனெனில் வாழ்க்கையிலும் நடத்தையிலுமிருந்து விலகிய அறிவு, ஞானமே ஆகாது; மடமையின் தெளிவான சான்றேயாகும். இறுதியாக, இறைவாக்கினர்களைப்போல் ஞான ஆசிரியர்கள் இறைவெளிப்பாட்டை நேரடியாகப் பெறவில்லை என்ற அளவில், அவர்கள் விவரிக்கும் ஞானம் இறைத்தன்மையைவிட மனிதப் பண்பையே அதிகம் கொண்டது. அது நேரடி வெளிப்பாட்டைவிட செயல்முறையான இறையியல் அறிவு முறையையே அடிப்படையாகக் கொண்டது.

ஆண்டவர்மீது அச்சமின்றி, ஞானமில்லை என்று மீண்டும் மீண்டும் ஞான ஆசிரியர்கள் வலியுறுத்துகின்றனர். அன்பாலும் பணிவாலும் சேவையாலும் ஒருவன் தன் வாழ்வை இறைவனோடு முறைப்படுத்துவதே, இந்த அச்சமாகும். இதுவே உண்மைச் சமயமும் ஆகும். ஆகவே இந்த ஆசிரியர்கள் அடிப்படையில், இயற்கை கடந்த ஞானத்தைப் பற்றியே பேசுகின்றனர். நன்றாக வாழும் கலை, வாழ்க்கைப் பிரச்சனைகளுக்குச் செயல்முறையான விடை காண்பது, அரசியல் மதிநுட்பம், கலை ஆற்றல், பொதுவான விவேகம் ஆகியவை பற்றியும், உணவு கொள்ளும்போது நடந்து கொள்ளும் விதம், பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிப்பது, பொது இடங்களில் நடந்து கொள்வது போன்ற காரியங்களைப் பற்றியும் இந்த ஆசிரியர்கள் பேசுகின்றனர். இது மனித ஞானமாகத் தோன்றலாம். ஆனால் இவையும் இறைஞானத்தின் கொடைகளே (காண்க. பழ 1:7; யோபு 28:28; திருவுரை 12:13-14; சீரா 1:9-18; 6:37; 15:1-10; 19:17-26; 39:1-11; சங் 119:97-104). இத்தகைய ஞானம் இறைவனது அருளால் புத்தொளிபெற்ற அறிவில் தங்குவதோடல்லாமல், உள்ளத்தை ஆட்கொள்கிறது. அதன் விளைவாக, இதைப் பெற்றவர் எல்லாவற்றையும் அவற்றின் இறுதிக் காரணத்தோடு தொடர்புபடுத்தி அறிவிக்கிறார்; அவற்றை அன்பு செய்கிறார்; அந்த அன்புக்கேற்ற விதத்தில் நடந்து கொள்கிறார். ஞானமும் பாவமும் ஒத்துப் போகா. இயற்கை கடந்த ஞானம் புனிதப்படுத்தும். அருளை அடைவதற்கு அல்லது இழப்பதற்கு ஏற்ப வந்தடைகிறது அல்லது நீங்கிப்போகிறது (காண்க. சீரா 1:22-29; 2:12-18; 19:17-20).

இறைஞானம் அல்லது படைக்கப்படாத ஞானம் இறைவனது பண்பாகும். இது வெளிப்பாட்டிலும், படைப்புச் செயல்களிலும் மனிதர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

ஊ. ஆட்தன்மைப்படுத்தப்படும் ஞானம்: ஞானத்தை இறைவனது பண்பாக விவரிப்பதோடு, ஞானிகள், சிலசமயங்களில், அது இறைவனிடமிருந்து வேறுபட்டதாக, அவரிடமிருந்து வருவதாக, அது தனக்கே உரிய பண்புகளைக் கொண்டிருப்பதாக, அதை ஆட்தன்மைப்படுத்துகின்றனர். இறைஞானத்தை ஆட்தன்மைப்படுத்துவது வாசகர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது; பல ஆய்வுகளையும் விவாதங்களையும் எழுப்பியுள்ளது. ஆகவே நாம் அதைப்பற்றிச் சிறிது தனிப்பட்ட முறையில் பார்ப்பது நன்று.

ஞான இலக்கியங்களில் ஞானத்தை ஆட்தன்மைப்படுத்துவது பல மட்டங்களில் காணப்படுகிறது. சில வாசகங்களில் ஆட்தன்மைப்படுத்துதல் எளிதாய் அமைந்துள்ளது (காண்க. பழ 1:20-23; சீரா 4:12-22; 15:1-6; ஞானம் 1:4-8; 6:13-23); மற்ற வாசகங்களில் மிகைப்படுத்தப்பட்டு உள்ளது (காண்க. பழ 8:22-31; 9:1-6; சீரா 24:1-29; ஞானம் 7:7-8:16). இந்த வாசகங்களைச் சரி

யான முறையில் புரிந்து கொள்ளப் பின்வரு பவற்றை நாம் கவனத்தில் கொள்வது நலம்.

1. இறைப்பண்புகளை ஆட்தன்மைப் படுத்துவது பழைய ஏற்பாட்டு வழக்காகும். இது ஞான இலக்கியங்களுக்கு மட்டும் உரிய தன்று, சங்கீதங்களிலும் இந்த வழக்கைக் காண்கின்றோம். சங் 85:10-13-இல் இறைவ னது பண்புகள் ஆட்தன்மைப்படுத்தப்படு கின்றன. சான்றாக, ''பேரன்பும் உண்மை யும் ஒன்றையொன்று சந்திக்கும்; நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்த மிடும்''; இதே முறையில், சங் 89:14-இல் ''நீதியும் நேர்மையும் உம் அரியணைக்கு அடித்தளம்; பேரன்பும் உண்மையும் உமக்கு முன்னே செல்லும்'' எனக் காண்கிறோம். இதே வழக்கை சங் 79:8; எசா 55:11; அப 3:5 போன்ற பகுதிகளில் காண்க.

2. இறைவனது பண்புகளிலேயே மேலான தாக ஞானம் கருதப்பட்டது. ஞான இலக் கியங்களில் ஞானத்தை ஆட்தன்மைப்படுத் துவதை மிகைப்படுத்தும் வாசகங்கள் பல உண்டு. இதற்குக்காரணம், ஞான ஆசிரியர்கள் இறைவனுடைய பண்புகளில் எல் லாம் மேலானதாக ஞானத்தைக் கருதியதே. அதைப் போதிய அளவு போற்ற முடியாது என்று அவர்கள் கருதியதாகத் தெரிகிறது. இது ஆட்தன்மைப்படுத்தாதபோதும் தெளி வாகக் காணப்படுகிறது (காண்க. பழ 21:2-24; சீரா 6:18-32). இப்படி ஞானத்திற்கு ஆட்தன்மை கொடுப்பதும் அதை உயர்வாக மதிப்பதும் இஸ்ராயேலில் மட்டுமன்று, மற் றப் பழங்கால மேற்காசிய இலக்கியங்களி லும் காணப்படுகிறது. கி.மு. 1400-ஐச் சேர்ந்த உகாரித்து இலக்கியங்களிலும் கி.மு. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசீரிய இலக் கியங்களிலும் இப்பண்பு மிகைப்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம்.

3. ஞானமிக்க ஆலோசகர்கள்பால், குறிப் பாக அரசனுடைய ஆலோசகர்கள்பால், பழங்கால மக்கள் காட்டியமதிப்பு: பழங் காலத்தில் ஒவ்வொரு அரசனுடைய அவையி லும் ஆலோசகர்கள் இருந்தனர். ஆலோசகர், புலமைமிக்க எழுத்தாளராகவோ, அனுப வம் பெற்ற முதல் அரசியல்வாதியாகவோ, சில சமயங்களில் அரசனின் தாயாகவோ இருக்கலாம். அவர் ஞானியாகக் கருதப்பட் டார். அவரது ஆலோசனை ஞானத்திற்குச் சமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பழங் கால மக்கள் நோக்கில், ஆலோசனைக்கும் ஞானத்திற்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டச் சில சான்று களை இங்குச் சுட்டிக்காட்டலாம். ''அவர் கள் புத்திகெட்ட மக்கள்; அவர்களிடம் விவேகம் சிறிதும் இல்லை. அவர்கள் ஞான மடைந்து இதனை உணர்ந்து தங்களுக்கு நிகழப்போவதை உய்த்துணர்ந்தால் எத் துணை நலம்!'' என்று உப 32:28-29-உம், ''தேமானில் ஞானம் அற்றுப்போயிற்றா? மதிநுட்பமுடையோரிடமிருந்து அறிவுரை ஒழிந்து போயிற்றா? அவர்களின் ஞானம் மறைந்து போயிற்றா?'' என்று எரே 49:7-உம் கூறுகின்றன. இக்கூற்றுக்களில் காணப்படும் இணையமைப்பு ஞானத்திற்கும் ஆலோ சனைக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டு கிறது. ஆலோசகர்கள், அவர்களுடைய ஆலோசனை ஆகியவற்றின் முக்கியத்துவம் விவிலியத்தில் பல இடங்களில் வலியுறுத் தப்படுகிறது. யாத் 18:19; 2 சாமு 15:12.34; 16:20; 17:7.14; 1 அர 1:11-14; 12:6-11; எசா 1:26; 3:1-3; 11:2; 16:3; 47:13; எரே 18:18; எசே 7:26; மீக் 4:9-12; யோபு 12:13; தானி5:7-16; எஸ் 4:5; 7:28; 10:3-இவை ஞானமிக்க ஆலோசனை மீட்பிற்கும் பாது காப்பிற்கும் வெற்றிக்கும் உத்தரவாதமாகும் என்று சுட்டுகின்றன. அது அதிகாரம் பெற்ற வரது தீர்மானமாகும். கொடிய விளைவுக ளின்றி அதைப்புறக்கணிக்க முடியாது. அர சவையில் எப்போதும் ஓர் ஆலோசகர் இருந் தார். அரசன் தீர்மானம் செய்வதில் அவர் உதவி செய்தார்.

4. இறுதியாக, ஞானிகள், தங்களுடைய மாணவர்களுக்கு ஞானத்தின் மேலான மதிப் பையும் முக்கியத்துவத்தையும் நாடகப்

பாணியில் எடுத்துக்காட்ட ஞானத்தை ஆட்தன்மைப்படுத்தினர். இதைக் குறிப்பாக பழமொழி நூலின் முன்னுரையில் காணலாம். ஆசிரியர் ''ஞானத்தையும் ஒழுக்கத்தையும் அறியவும், பிரித்தறியும் ஆற்றலை அளிக்கவும்....'' சாலமோனின் பழமொழிகளை எடுத்துக் கூறுவதாகத் தொடங்கி, ஞானத்தைப் பலவிதத்திலும் போற்றுகிறார் (பழ 1:1-9). இப்போற்றுரை ஞானத்தை ஆட்தன்மைப்படுத்துதலில் உச்ச நிலை அடைகிறது (8:22-31). பின்பு, ''பிள்ளைகளே எனக்குச் செவி கொடுங்கள்... என் வழிகளைப் பின்பற்றி... நற்பயிற்சி பெற்று ஞானத்தை அடையுங்கள். அதைப் புறக்கணியாதீர்கள்....'' (8:32-33) என்று முறையாக முடிக்கிறார்.

ஆட்தன்மைப்படுத்தும் வாசகங்களைக் கவனமாய் ஆய்வு செய்தோம் என்றால், அவற்றில் ஞானம் ஒரு தனிப்பட்ட முறையில் ஆட்தன்மைப்படுத்தப்படுவதைக் காண்போம். அதாவது ஞானம் இறைவனது ஆலோசகராகச் சித்தரிக்கப்படுகிறது. அரசன் தீர்மானம் செய்யுமுன்போ, செயலாற்றுமுன்போ, தெளிவிற்கும் ஆலோசனைக்கும் அவன் நாடும் முக்கியமான அரசவை அங்கத்தினர் ஆலோசகர் ஆவார். இறைவனே பேரரசன், அரசர்க்கெல்லாம் அரசர். ஞானமே அவரது ஆலோசகர். ஆட்தன்மைப்படுத்துதலின் வழியாக, ஞானிகள் சுட்டிக் காட்டுவதுபோல், இறைவனே தமது ஆலோசகரான ஞானத்தைக் கலந்து ஆலோசிக்காமல் செயலாற்றுவதில்லை என்றால், அதே இறை ஆலோசகரைக் கலந்து ஆலோசிக்காமல் செயல்படுவது மனிதனுக்கு மிகுந்த மதியீனமாகும்.

இந்த விளக்கத்திற்குப் பல கருத்துக்கள் வலிமை அளிக்கின்றன. முதலில் எபிரேயர் தங்கள் இறைவனை ஆலோசகர்களும் அவையினரும் புடைசூழ இவ்வுலக அரசனைப்போல் சித்தரித்தனர் என்பதற்கு விவிலியத்தில் பல சான்றுகள் உள்ளன: எசா 6:1-3; 1 அர 22:19-23; யோபு 1:6-7; சங் 89:7.

இரண்டாவது, வாசகங்களைக் கவனமாய் ஆராய்ந்தால், ஞானம் ஆலோசகர் என்ற முறையில் பேசுவதும் செயலாற்றுவதும் தெளிவாகும். அது வலிமைமிக்க மூத்த ஆலோசகராகத் தோன்றுகிறது. ''நானே ஞானம். நான் விவேகத்தை அருளுவேன். அறிவையும் சிந்திக்கும் ஆற்றலையும் அடையும் வழியைக் காட்டுவேன்.... திட்டம் இடுபவனும் நானே; இட்டதைச் செய்பவனும் நானே. உணர்வும் நானே; வலிமையும் எனதே. அரசர் ஆட்சி செலுத்துவது என்னால்'' (பழ 8:12-15) என்று ஞானம் கூறவல்லது. இறைவனது அரசவையில் ஞானம் ஒரு அங்கத்தினராகும். ''உன்னத இறைவனின் மன்றத்தில் திருவாய் மலர்ந்து பேசும்; அவரது படைத்திரள் முன்பாக மேன்மைப்படுத்தப்படும்'' (சீரா 24:2). இறைவனுக்கு ஞானம் பணிசெய்கிறது. ''புனித கூடாரத்தில் அவர் திருமுன் பணி செய்தேன். ஆதலால் சீயோனில் உறுதிப்படுத்தப்பட்டேன்'' (24:10).

மூன்றாவதாக, இறை ஆலோசகரான ஞானம் இறைவனுக்குக்கூட அவசியமாய் இருப்பதால், அது உடன் இல்லாமல் அவர் இருக்கக்கூடாது என்ற கருத்து வளர்ந்ததில் வியப்பொன்றுமில்லை. உண்மையிலேயே ஞானம் இறைவனுடைய படைப்பில் தலைப்பேறானதாக இருக்க வேண்டும். ''ஆண்டவர் தம் படைப்பின் தொடக்கத்திலேயே தொல்பழங்காலத்தில் எதையும் படைக்குமுன்னரே, நான் அவரது உடைமை'' (பழ 8:22). உலகத்தைப்படைக்கும்போது இறைவன் தமது சிற்பியும் ஆலோசகருமான ஞானத்தோடு கலந்து ஆலோசிக்கிறார். ''நான் அவர் அருகில் அவருடைய சிற்பியாயிருந்தேன்'' (8:30). இவ்வாறு ஞானத்தை ஆட்தன்மைப்படுத்துதலை அடுத்து, ஞானத்தைப் புறக்கணிக்காது, அதற்குச் செவி மடுத்து, ஞானிகளாகும்படி ஞானிகள் தங்களது பாடத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறுகின்றனர் (8:32-33).

இறுதியாக, பழ 8:22-31; சீரா 24; ஞானம் 7-8 ஆகிய பகுதிகளில் ஞானத்தை ஆட்தன்

மைப்படுத்துதல் எவ்வளவு உயிர்த்தன்மை வாய்ந்ததும், தனித்தன்மையுடையதுமாய் இருக்கிறது என்றால், ஞானம் மற்றொரு இறை ஆளாகவும், அவரிடமிருந்து புறப் பட்டு, அவரோடு சம - காலத்தவராயும் புனைந்து கூறப்படுவதாகத் தோன்றுகிறது. இதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. ஆனால் இவ்விதம் ஒரு எபிரேயர் புனைந்து கூறக்கூடும் என்று நாம் சிந்தித்துப் பார்க்க முடியாது. ஆசிரியர், தனது கூற்றுக்களி லிருந்து இறைவனில் இரு ஆட்கள் உள்ளனர் என்றும், அதனால் இரு கடவுள்கள் உள்ள னர் என்றும் வாசகர்கள் எடுத்துக் கொள்வார் கள் என்று சிறிது ஐயுற்றிருந்தாலும், அவர் இத்தகைய மொழியைப் பயன்படுத்தியிருக் கவே மாட்டார். மாறாக, அரசவையினரும் ஆலோசகர்களும் புடை சூழ ஒரு மனித அரசனைப் போல் இறைவனைக் கற்பனை செய்து, அவருக்கு மனிதப்பண்புகளைச் சாற் றிக்கூறுவது பழங்கால இஸ்ராயேல் மக்க ளுக்குப் பழக்கமானதாய் இருந்தது. ஞானத்தை இறைவனிடமிருந்து வேறுபட்ட தனியாளாக ஆட்தன்மைப்படுத்துதல் ஒரு சாதாரண மரபாக இருந்தது. இம்முறை பிற இன இலக்கியங்களிலும் காணப்படுகிறது. ஆகவே பல தேவர்கள் பதிதத் தன்மை தவிர்க்கப்படுகிறது. ஞானத்தை ஆட்தன் மைப் படுத்துவது எபிரேய மரபுக்கு ஏற் புடையதே.

எல்லாச்சான்றுகளும், குறிப்பாகக் கானா னிய, பெனிசிய போதக இலக்கியங்களோடு உள்ள ஒப்புமை ஆய்வும், பழ 8-9என்ற பகுதி காலத்தால் முந்தியது என்று சுட்டுகின் றன. ஆகவே சீராக், ஞானம் ஆகிய நூல்க ளில் வரும் ஆட்தன்மைப்படுத்தும் வாசகங் கள், பழமொழி ஆசிரியர் தொடங்கி வைத்த சிந்தனைப்போக்கின் வளர்ச்சி என்று விளக் கம் அளிப்பது மேலானது.

ஞான இலக்கிய ஆசிரியர்களின் காலத் தில், இந்த ஆட்தன்மைப்படுத்தும் வாசகங் களைத் தவறாகப் புரிந்து கொள்ளும் ஆபத்து இல்லையென்றாலும், பிற்காலத்தில், குறிப் பாக மூவொரு இறைவனின் இரண்டாம் ஆள் மனிதன் ஆனபின், இத்தகைய ஆபத்து இல்லை என்று கூற முடியாது. இந்த வாசகங் களில் ஆட்தன்மைப்படுத்துதல் எவ்வளவு வலுவுள்ளதாய் இருக்கிறதென்றால் ஞான ஆசிரியர்கள், மூவொரு இறைவனின் இரண் டாம் ஆள் இருப்பது பற்றிய மனித அவதா ரத்துக்கு முந்திய வெளிப்பாட்டைக் கூறுகின் றனர் என்று நம்பப் பலரை அது தூண்டியுள் ளது. ஞான ஆசிரியர்கள் இத்தகைய வெளிப் பாட்டைப் பெறவில்லை என்பது அறிவு சார்ந்த விளக்கமாகும். ஆனால் இறைவ னுடைய ஞானம் பற்றி அவர்கள் அளித்த அசாதாரண விவரிப்பு இறைவனில் தந்தை யிடமிருந்து மகன் தோன்றுவது பற்றிப் பிற் காலத்தில் புனித யோவான், புனித பவுல், திருச் சபையின் தந்தையர் ஆகியவர்கள் அளித்த விளக்கத்திற்குச் சிறந்த பின்னணியாக அமைந்தது. அவர்களுடைய கூற்றுக்களில் காணப்படும் சிந்தனைப் போக்கையும் பொருளையும், புதிய ஏற்பாட்டு வெளிப் பாட்டைப் பழைய ஏற்பாட்டு வாசகங்களில் புகுத்திப் புரிந்து கொள்வதைவிட, பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியப் பின்னணி யிலேயே துல்லியமாகப் புரிந்து கொள்ளலாம்.

இப்போது, இந்த ஆட்தன்மைப்படுத்து தலை உருவகமாக எடுத்துக் கொள்வது அறிஞரிடையே மரபாகும். ஞான இலக்கி யங்கள் எப்போதும் செயல்மறை நோக்கு டையன. அவை தத்துவ இயல் சார்ந்த ஊக ஆய்வுகள் அல்ல. இந்நூல்கள் தோன்றிய காலத்தில் நிலவிய பொதுச்சூழ்நிலையை யும், அவற்றில் காணப்படும் செய்முறை நோக்கையும், உருவகங்களையும், உயிர்ச்சித் திரக்காவிய நடையையும் மனதிற்கொண்டு, ஞான இலக்கியங்களுக்குப் பொருள் கூற வேண்டும். அப்போது இறையூக்கம் பெற்ற இந்நூல்களில் இறைவன் கூற விரும்பும் செய்தியைத் தவறாது புரிந்து கொள்வோம்.

7. சில இறையியல் கருத்துக்கள்

இனி ஞான இலக்கியங்களில் பொதுவா கக் காணப்படும் சில இறையியல் கருத்துக் களைப் பார்ப்போம்.

அ. ஞானத்தின் ஊற்று இறைவனே: ஞான இலக்கிய இயக்கத்தின் தொடக்கத்தில், ஞானம் மனிதனைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டது. மனிதனுக்குச் செல்வத்தைக் கொடுப்பதுபோல், இறைவன் அவனுக்கு ஞானத்தைக் கொடுக்கிறார். அவனை ஞானியாக்குகிறார். ஞானம் என்ற சொல் பல பொருட்களில் பயன்படுத்தப்பட்டது. விரும்பத்தகாத பல பண்புகளையும் ஞானம் என்ற கருத்து உள்ளடக்கியது. இது இறைவனுக்கு ஞானம் சாற்றிக் கூறப்படுவதைத் தடுத்திருக்க வேண்டும்.

காலப்போக்கில் ஞானம் இறைவனுக்குச் சாற்றிக் கூறப்படும் பண்பாக மாறுகிறது (யோபு 12:13; தானி 2:20). அது அவரது படைப்புச் செயலின் பண்பாகும் (சங் 104:24; யோபு 38:36; பழ 3:19). அதை அணுக முடியாத நிலை பல தடவை சுட்டிக்காட்டப்படுகிறது. ஞானத்தைத் தேடுமாறு ஞானிகள் தூண்டுவதை மனதில் கொண்டால், இது ஒரு முரண்பாடாகவே இருக்கிறது. யோபு 28-இன்படி ஞானத்தைப் படைப்பில் எங்கும் காணமுடியாது. இறைவன் ஒருவரே அதை அடையும் வழியை அறிவார் (28:23). அவர் ஒருவரே அதை முழுவதும் அறிவார். மனிதர்க்கு அளிக்கப்படும் ஒரே அறிகுறி ''இறை அச்சமே ஞானம்'' (28:28) என்பதே. திருவுரைநூல் மனிதன் ஞானத்தைக் கண்டு பிடிக்க முடியாது என்பதை ஏற்றுக் கொள்கிறது (திருவுரை 8:16-17). இதேபோல் பாரூக்-3, இறைவன் ஒருவரே ஞானத்தை அறிவார் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. பழைய ஏற்பாட்டு முடிவில் சீரா 1:5-7-இல் ஞானத்தின் எல்லாம் கடந்த மறைபொருளான தன்மை அறிவிக்கப்படுகிறது.

இவ்விதம் மனித மட்டத்திலிருந்து விலகிய தன்மைக்குக் காரணம், ஞானம் இறைத் தன்மையுடையது, அது ஒரு இறை உண்மையாகும் என்ற நம்பிக்கையாகும். ஞானம் நித்தியத்திலிருந்து இருக்கிறது; எக்காலத்திற்கும் நிலைத்திருக்கும் (பழ 8:22-26; சீரா 24:9). உன்னத இறைவனின் வாயிலிருந்து புறப்படுகிறது (சீரா 24:5). அது இறைவனுடைய வல்லமையின் ஆவியாகும். எல்லாம் வல்லவரது மகிமையொளியின் சுடராகும்...... அவரது நன்மைத்தனத்தின் சாயல் (ஞானம் 3:25-26). ஞானம் இறைவனிடமிருந்து புறப்படுவது மட்டுமல்லாமல், படைப்பில் அவரோடு ஒரு கைவினைஞனைப்போல் செயலாற்றுகிறது (பழ 8:27-31; 3:19-20; ஞானம் 9:9). அது உலகை இனிய முறையில் ஒழுங்குபடுத்துகிறது (ஞானம் 8:1); மனிதரோடு உறவு கொள்கிறது (பழ 8:31; சீரா 24:16). இஸ்ராயேலில் தன் உறைவிடத்தை அமைக்கக் கட்டளை பெறுகிறது (சீரா 24:13). இறைபாலிப்பு வரலாற்றை வழி நடத்தும்போது ஞானம் பலதடவை மனிதருக்குத் தூது சென்றுள்ளது. தீர்ப்பைப் பற்றி எச்சரிப்பதின் வழியாகவும், தனது உடைமைகளைப் பகிர்ந்து கொள்ளவும் தன்னோடு உணவு கொள்ளவும் அழைப்பதின் வழியாகவும் (பழ 8:1-21. 32:36; 9:4 தொ; சீரா 24:19-22), ஞானம் மனித காரியங்களில் கொண்டிருக்கும் அக்கறை எடுத்துக்கூறப்படுகிறது (பழ 1:10-32). ஞானம்தான் இறைவனது கொடைகளை மனிதர்க்குப் பகிர்ந்தளிக்கிறது (பழ 8:21; ஞானம் 7:11). ஞானம் ''நம்மைப் பயிற்றுவிக்கும் ஆவியாகும்'' (ஞானம் 1:5); பரிவு காட்டும் இறை ஆவியாகும் (1:6), ஞானம் மனிதரை மீட்கிறது (9:19). அதன் பணியில் எல்லாம் சிறந்தது மனிதரை இறைவனின் நண்பராக்குவதாகும் (7:27 தொ). சுருக்கமாக, இறைஞானம் விவரிக்கப்படும்முறை, இறையருளைப்பற்றிய புதிய ஏற்பாட்டுப் போதகத்திற்கு முன்னுரை போல் அமைந்திருக்கிறது. புதிய ஏற்பாட்டு ஒளியில், பழைய ஏற்பாட்டுக் கருத்து எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ஆ. ஞானமும் சட்டமும்: சீராக்நூல் ஞானத்தின் தோற்றத்தை விவரிப்பதோடு மோசேயின் சட்டத்தோடு ஞானத்தை ஒன்றாக்குகிறது (சீரா 24:22; பாரூக் 4:1). இதில் ஞானம் அதன் அகில உலக அரசவைத் தோற்றத்திலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது எனலாம். ஞானத்தையும்

சட்டத்தையும் ஒன்றாக்குவது எப்படி நிகழ்ந்தது? நாடு கடத்தலுக்குப்பின் வந்த யூத சமூகத்தின் வாழ்க்கை யூதச் சட்டத்தைச் சுற்றியே சுழன்றது. அது அவர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பாதித்தது. ஞானமும் இதே பண்பைக் கொண்டிருந்தது. ஆகவே இரண்டையும் ஒன்றாகக் கருதினர். ஆனால் இப்படி ஒன்றாக்குதல் ஒருதலைமுடிவே. ஏனெனில் ஞானிகளின் போதகம் சட்டத்தை மட்டும் கொண்டிருக்கவில்லை. இதற்குச் சீராக்கின் போதகமே சான்றாகும். அவரது பெரும்பாலான கூற்றுக்கள் சட்டத்தின் நேரடிப்போதகத்தோடு நெருக்கமில்லாத தொடர்பையே கொண்டுள்ளன. மேலும் பழ 8-இல் வரும் இறை ஞானக்கருத்தை அன்றாட வாழ்க்கைக்குரியதாகச் செய்யவேண்டிய அவசியம், இரண்டும் ஒன்றாகக் கருதப்படுவதற்கு மற்றொரு காரணமாயிற்று. சட்டத்தில் மக்கள் தங்கள் ஞானத்தைக் கண்டனர். உப 4:6-7 இந்த நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது.

இ. ஞானம் - ஒழுக்கவாழ்வு - செய்வினைப் பயன் - அழியாமை: ஞானத்திற்கும் புண்ணிய வாழ்வுக்குமிடையே உள்ள தொடர்பு தெளிவாக அடிக்கடி எடுத்துக் கூறப்படுகிறது. நீதிமானுக்கும் தீயோருக்குமிடையேயுள்ள வேறுபாடுகளை அறிய, பழ 10-ஆம் அதிகாரத்திலிருந்து வாசித்தாலே போதிய தெளிவு கிடைக்கும். இந்தச் சமயத் தொடர்பு, ஞான இலக்கிய இயக்கத்தின் தொடக்கத்திலேயே ஓரளவாவது ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அரசவைப் பயிற்சி ஒழுக்க மதிப்பீடுகளிலிருந்து பிரிந்திருக்க முடியாது. எகிப்திய அமென்-எம்-ஒப்பேயின் ஞான போதகமும் சில செயல்களை இறைவனது திருவுளத்தோடு தொடர்புபடுத்துகிறது. ஆனால் நாடுகடத்தலுக்கு முந்திய இஸ்ராயேலின் ஞான இலக்கியங்களைவிட, நாடு கடத்தலுக்குப்பின் தோன்றிய ஞான இலக்கியங்கள் ஞானத்தின் நல்லொழுக்கப் பண்புகளை வலியுறுத்துகின்றன.

இதற்குச் சிறந்த சான்று பழமொழிநூலின் முன் பகுதியாகும் (1-9). இப்பகுதி நாடு கடத்தலுக்குப்பின் எழுதப்பட்டதாகும். இதில் ''இறையச்சமே ஞானம்'' என்று எண்ணவும், ''நீதியையும், நியாயத்தையும், நேர்மையையும், நன்னெறி அனைத்தையும்'' கண்டு பிடிக்கவும் (2:9), ''முழு இதயத்துடன் ஆண்டவரில் நம்பிக்கை வைக்கவும்'' (3:5), ஞானி இளைஞர்களைத் தூண்டுகிறார். ஞானமுள்ளவனின் வெற்றி, அவன் செய்வதின் நல்ல விளைவில் மட்டும் அடங்கியிருக்கவில்லை; அது ''கடவுளுக்கும் மனிதனுக்கும் முன்பாக அருளையும் நல்லறிவையும்'' (3:4) பெறுவதில் அடங்கியிருக்கிறது. எல்லாவற்றையும் விட ஞானமே வாழ்வாகும் (8:35). இதே கருத்து உபாகமப் போதகர்களிடையேயும் காணப்படுகிறது, கீழ்ப்படிதல் வாழ்வையும், கீழ்ப்படியாமை சாவையும் கொண்டுவரும் (உப 30:15-20). கற்பனைகளுக்கும் சட்டங்களுக்கும் பிரமாணிக்கமாய் இருப்பவர்களுக்கு நீண்ட வாழ்வு உறுதியளிக்கப்படுகிறது (5:33). இந்தக் கற்பனைகள் யாவே கோட்பாட்டின் வழிபாட்டு, ஒழுக்க மேல்வரிச் சட்டங்களைக் கொண்ட ''தோரா'' அல்லது ஐந்நூலாகும். இச்சட்டத்தில் வெளிப்படையாக உள்ளடங்காத ஒரு பகுதியிருப்பதை ஞானிகள் உணர்ந்தனர். அது ஒழுக்க வாழ்வு பற்றிய உணர்வை எழுப்புதலும் அதுபற்றிய பயிற்சியுமாகும். சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் ஒருவனுக்கு எப்படிப் பயிற்சி அளிப்பது? மனித அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய தொடக்கப் பாடங்கள் இல்லையா? இந்தச் சூழ்நிலையில்தான் நோக்குந்திறன், அனுபவக்கூற்று ஆகியவற்றின் மதிப்பை ஞானிகள் கண்டுணர்ந்தனர். ஒழுக்கத் தீர்மானங்களை நேரடியாக உள்ளடக்காத இப்பகுதி பரந்தது. அன்றாட வாழ்வின் செயல்முறை விவரங்கள் ஒழுக்க வாழ்வின் ''கச்சா'ப் பொருட்களாகும். இவை பற்றி ஒருவன் காலப்போக்கில் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்படக்கூடும். இவ்வாற, தீயதோழர்கள் பற்றி ஒருவனது மதிப்பீடு எப்படியிருக்க வேண்டும்? பொறாமை ஒருவனுக்கு என்ன செய்கிறது? அகந்தை எந்த முடிவுக்கு இட்டுச் செல்

கிறது? விலைமாதரால் வரும் தீமையென்ன? (பழ 13:20; 14:30; 29:23; 23:26-28). மேலும் ஒழுக்க அமைப்பு, அனுபவத்தை எடுத்துக் காட்டும் என்று எதிர்பார்க்கலாமா? இவை போன்றவற்றிற்கு ஞானி பதில் அளிக்க முயல்கிறார். பல படிப்பினைகளை எடுத்துக் கூறுகிறார். இரக்கம் பயனளிக்கும்; அன்பின்மை ஒருவனை அழிக்கும் (பழ 11:7). சண்டை சச்சரவுகளை உடனே கட்டுப்படுத்த வேண்டும் (17:11). அந்த வருவாய் (19:2), பொய்ச் சாட்சி (25:18; காண்க. எசே 20:16), ஒருதலைத்தீர்ப்பு (பழ 24:23-24), பொய்யுரைத்தல், முகஸ்துதி (26:28) போன்ற தீய செயல்கள் கண்டனம் பெறுகின்றன. இவற்றிற்கு மாறாக, ஏழைகளுக்கு இரக்கம் (14:31), ஆண்டவருக்கு அஞ்சுதல் (19:23), ஆண்டவரில் நம்பிக்கை வைத்தல் (28:25) போன்றவை பற்றிய ஒழுக்க மேற்கோளுரைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

ஞானமுள்ள இளைஞனது வெற்றியும் செழிப்பும் உபாகமத்தால் வாக்களிக்கப்படும் ஆசீர்களுக்குச் சமமானதாகும் என்று ஞானிகள் கண்டுணர்ந்தனர். ஆகவே பழ 1-9-இன் ஆசிரியர் போதக அறிவுரை நடையைப் பின்பற்றுகிறார். இங்கும் வாழ்வு உறுதியளிக்கப்படுகிறது. தோராவைக் கடைப்பிடிப்பதற்கும் நல் வாழ்வு அளிக்கப்படுகிறது. சட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கும் ஞானத்தைத் தேடுவதற்கும் இடையேயுள்ள பொது உடன்பாட்டுக்கூறு நல்வாழ்வாகும். சட்டத்தைப்படிக்கும் ஞானி புகழ் பெறுகிறார் (சீரா 39:1-11). இவ்வாறு ஞானத்திற்கும் புண்ணிய வாழ்வுக்குமுள்ள தொடர்பு முழுமை பெறுகிறது. தோராவே ஞானமாகும் என்பது சீரா 24:22; பாரூக் 4:1-இன் வெளிப்படையான போதகமாகும்.

இஸ்ராயேல், எகிப்து ஆகிய நாடுகளின் ஞானிகளது போதகத்தில் காணப்படும் ''பயனீட்டுக்கருத்து'' கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். ஞான நூல்களை மேல் எழுந்தவாரியாகப் படிக்கும்போது தோன்றும் பயனீட்டுவாதம், அது பற்றிய இக்காலக் கருத்தைப் போன்றதாகும்.

உலகில் ஓர் இறையமைப்பு நிறுவப்பட்டிருக்கிறது என்பதை ஞானி காண்கிறார். அதற்கேற்பத் தனது கூற்றுக்களை அமைக்கிறார். சான்றாக, ''வேலை செய்யாத கை வறுமையை வருவிக்கும்; ஊக்கமுள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்'' (பழ 10:4). இந்த அமைப்பு எல்லாவற்றையும் உள்ளடக்கவில்லை என்பதை மற்றப் பழமொழிகள் காட்டுகின்றன. இவை இதில் உள்ளடங்கிய பிரச்சனையை ஞானி அறிந்திருப்பதைக் காட்டுகின்றன. சான்றாக ''ஏழையை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை இகழ்கிறான்; வறியவனுக்கு இரங்குகிறவன் அவரைப் போற்றுகிறான்'' (14:31). ஆகவே ஏழை எப்போதும் குறை கூறப்பட வேண்டியவன் அல்லன். இறையமைப்பு வெள்ளிடைமலை போல் தெளிவாக இருப்பதில்லை. யாவே மனிதனது கட்டுப்பாட்டிலிருந்து கடந்த நிலையில் இருப்பதுபோல், இந்த அமைப்பும் மனிதனது கட்டுப்பாட்டுக்கு அப்பால் மறைந்திருக்கிறது. ஆயினும் இந்த அமைப்பைக் கண்டுணர்ந்த அளவுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுமாறு தனது வாசகர்களை ஞானி தூண்டுகிறார். தனிப்பட்டோரின் சொந்தப் பாதுகாப்பு வலியுறுத்தப்படவில்லை. எனது மகிழ்ச்சியை எப்படிப் பாதுகாப்பது? அல்லது சாவிலிருந்து என்னையே எப்படிப் பாதுகாத்துக் கொள்வது? என்பதல்ல பிரச்சனை. உலகில் காணப்படும் அமைப்பை உணர்ந்து அதற்கேற்ப ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வை இப்போது இருப்பதைவிடச் சிறந்த முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று ஞானி தன் மாணவர்களைத் தூண்டுகிறார்.

ஞானத்தைத் தேடுவோர் அடையும் சன்மானம் வாழ்வே. ''நீதி நெறியில் வாழ்வு உண்டு'' (12:28). ஞானத்தையும் புண்ணியத்தையும் அடைவது ''வாழ்வு தரும் மரத்தோடும் (11:30; 13:12; 15:4), ''வாழ்வு தரும் பாதையோடும்'' (6:23; 15:24) ''வாழ்வின் ஊற்றோடும்'' (10:11; 16:22) தொடர்புபடுத்தப்படுகிறது. இக்கருத்துகளோடு மற்ற மதிப்பீடுகளும் சேர்க்கப்படுகின்றன. அவை, நீடிய

ஆயுள் (10:27), செல்வம், பெருங்குடும்பம், வெற்றி, செல்வாக்கு, கீர்த்தி போன்ற வாழ்க்கைச் சிறப்புகளாகும். இக்கருத்துக்களில் இறப்புக்குப்பின் ஒருவனது அழியாமை பற்றிய எக்கருத்தும் காணப்படுவதாகத் தெரியவில்லை. ஆயினும் வாழ்வு பற்றிய கருத்து வளர்ச்சியடையும் போக்குடையதாக உள்ளது.

ஆன்ம அழியாமைக் கோட்பாட்டின் வளர்ச்சி ஞான இலக்கியங்களோடு தனிப்பட்டமுறையில் தொடர்புடையது. யோபு, திருவுரையாளர் ஆகிய நூல்களில் இதுபற்றி கடக்கமுடியாத தடையைப் பழைய ஏற்பாட்டு ஞானிகள் அடைந்து விட்டனர். இறைவன் நல்லவர்களுக்குச் சன்மானமும் தீயோர்க்குத் தண்டனையும் அளிக்கிறார் என்று ஞானிகள் நிலையாகப் போதித்தனர். இதைப்பழமொழி நூலின் பிற்பகுதியில் எந்த அதிகாரத்திலும் காணலாம் (பழ 19:4; 11:5). இந்த நம்பிக்கையை எக்காலத்திற்கும் எல்லார்க்கும் பொருந்தியதாக ஏற்றுக்கொள்வது அவ்வளவு எளிதல்ல என்பதையும் ஞானிகள் நன்குணர்ந்திருந்தனர். தீயோர் செழிப்புறும் உண்மையை எதிர்கொள்ளும் போது, பொறாமை கொள்ளக்கூடாது என்று இவர்கள் ஆலோசனை கூறினர் (3:31; சங் 37). தீயோர்களுக்காகக் காத்திருக்கும் வீழ்ச்சியைச் சுட்டிக் காட்டினர். இறந்தபின் நல்லோரும் தீயோரும் செயோல் அல்லது கீழுலகில் உயிராற்றல் அற்ற வாழ்க்கை வாழ்ந்து, ஒரே நிலையையே கொண்டிருந்தனர் (திருவுரை 9:10). ஆகவே ஒருவன் தன் வினைப்பயனையும் இறைவனது நீதியையும் இரக்கத்தையும் இவ்வுலகிலேயே வாழ்ந்து அனுபவிக்க வேண்டும் என்று ஞானிகள் போதித்தனர். ஆனால் இந்த நன்னம்பிக்கை, வாழ்வின் கடின உண்மைகளால் எண்பிக்கப்படவில்லை. இதை யோபு, திருவுரையாளர் நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. நல்லோர் துன்பம் அடைதல், அவர்களுக்கு ''ஆண்டவர் அளிக்கும் பயிற்சியாகும்'' என்று விளக்கம் அளித்தனர். ஆகவே அதை அவமதிக்கக் கூடாது. ஏனெனில் ''ஆண்டவர் தாம் நேசிப்பவனைக் கண்டிக்கிறார்'' (பழ 3:11-12). வினைப்பயன் பிரச்சனைக்கு நிறைவான பதில் கிடைக்கவில்லை. ஆயினும் இத்தோல்வி, அழியாமைக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு இட்டுச்செல்கிறது. கீழுலகம் ஆண்டவர்முன் திறந்திருப்பதை இஸ்ராயேல் உணரத்தொடங்குகிறது (சங் 16:11). இறைவன் தமக்குப் பிரமாணிக்கமாய் இருப்பவர்களைக் கைவிடமாட்டார் (சங் 49:73). அழியாமை பற்றிய விசுவாச அறிவிப்பு தோன்றும்போது, அதை இஸ்ராயேல் தனக்கே உரிய விதத்தில் எடுத்துக்கூறுகிறது. அழியாமை மனித இயல்பின் குறிக்கோள் அன்று. ஆனால் ''நீதி அழியாது'' (ஞானம் 1:15; காண்க 3:1-4; 5:1-5). இந்த வாழ்வில் மனிதன் இறைவனோடு கொள்ளும் ஒன்றிப்பு அப்படியே என்றும் நீடிக்கும் (சங் 73).

8. இலக்கிய அமைப்புகள்:

அ. விவிலிய நூல்களின் முதல் ஆசிரியர் பரிசுத்த ஆவியானாலும், அவர் கூறும் உண்மைச்செய்திகள் மனித வடிவங்களில் நம்மை வந்தடைகின்றன. இதில் துணை ஆசிரியரான மனித ஆசிரியரும் அவர் பயன்படுத்தும் இலக்கிய வடிவங்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திலும், இடத்திலும், பண்பாட்டுச் சூழ்நிலையிலும் வரையறை செய்யப்படுகின்றன.

இறைவன் கூற விரும்பும் செய்தி மாறவில்லை. ஆனால் அது நம்மை வந்தடையும் வடிவங்கள், காலத்திற்கும் இடத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்றவாறு மாறும் தன்மையுடையன. விவிலிய நூல்கள் தோன்றிய சூழ்நிலையிலிருந்து வெகு தூரம் விலகியிருப்பவர்கள் இந்த வரம்புகளை நன்கு அறிந்திருப்பது அவசியம். இந்த வரம்புகளில் ஒன்று இலக்கிய வடிவமாகும். அதில் ஒன்று யாப்பு வடிவமாகும். இதுபற்றி முறையான ஆய்வு அவசியம். இந்த ஆய்வு தன்னிலே முடிவானதன்று; விவிலியச் செய்தியைப் புரிந்துகொள்ளவும், போற்றவும் ஒரு சாதனமே ஆகும்.

பழைய ஏற்பாட்டில் பெரும் பகுதி யாப்பு அமைப்பைக் கொண்டது; பாடல் வடிவம்

கொண்டது. இதுவே இவ்வடிவத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டவல்லது. உரை நடைப்பகுதியின் மொழி நேரடித்தொடர்பை முதன்மையாகக் கொண்டது. யாப்பு அமைப்பு யாவும் கடந்த அனுபவங்களை எடுத்துக்கூற ஏதுவானது. அது தன்னிச்சையாக வாய்மொழியாகப் படைக்கப்பட்டதாக இருக்கலாம். அல்லது தெளிவான இலக்கியப்படைப்பாக இருக்கலாம். மனித அனுபவத்தின் ஆழ்ந்த கூறுகளையும், இறையறிவின் உச்சநிலைகளையும் எடுத்துக்கூறவும், உரைநடையைவிட யாப்பமைப்பையே வாகனமாக எல்லா இன இலக்கியங்களிலும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பயன்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இது உரைநடையின் வரையறைகளைக் கடந்து செல்லும் ஆற்றல் மிக்கது. சில சமயங்களில், யாப்பமைப்பைப் பயன்படுத்துவது மனித சொற்களால் கூறமுடியாத ஒன்றைக்கூறும் முயற்சியாக இருக்கலாம். இவ்வமைப்போடு இசையும் சேரும்போது, யாப்பமைப்பின் வரை கடந்து செல்லும் பண்பு உச்சநிலை அடைகிறது எனலாம்.

இவ்வாறு விவிலியத்தில் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உறவையும் இறைவனுக்கு மனிதன் அளிக்கும் பதிலையும் சங்கீதநூல், மனித உள்ளத்தின் ஆழத்திலிருந்து தோன்றும் எழுச்சியாக எடுத்துக்கூறுகிறது. ஞானநூல்கள் மனித அனுபவத்தின் ஆழ்ந்த கூறுகளையும், மனிதருக்கு வழிகாட்டக்கூடிய மேற்கோள்களையும் எடுத்துரைக்கின்றன. இப்பாடல்கள் இறையியல் கோட்பாடுகளையும் விசுவாச அறிக்கைகளையும் எடுத்துக்கூறலாம்; அல்லது சாதாரண வாழ்வுக்குரிய மேற்கோள்களையும் கூறலாம்.

ஆ. இனிஎபிரேயப் பாடல்களுக்கு வருவோம். இஸ்ராயேலின் பாடல்கள் என்று சொல்லக்கூடியவை விவிலியத்தில் காணப்படுபவையே. புற இன மக்களிடையே காணப்படுபவை போன்று, எபிரேயர்களிடமும் தொடக்க கால இலக்கியம் பாடல் வடிவம் கொண்டது. உரைநடை நூல்களிலும் பாடல் பகுதிகள் காணப்படுகின்றன. இவையாவும் மிகப்பழமையானவை. இவற்றில் முக்கியமானவை; இலாமேக்கின் வாள் பற்றிய பாடல் (ஆதி 4:23-தொ); ஈசாக்கின் ஆசீர்கள் (27:27-29.39-40); யாக்கோபின் ஆசீர்கள் (49:1-27); மோசேயின் வெற்றிப்பாடல் (யாத் 15:1-18); கிணற்றுப் பாடல் (எண் 21:17-18); பிலயாமின் இறைவாக்கு (23:7-10.18-24; 24:3-9.15-24); மோசேயின் பாடல் (உப 32:1-43); இறக்கும் முன்பு மோசேயின் ஆசீர்கள் (33:2-29); சூரியனுக்கும் சந்திரனுக்கும் யோசுவாவின் கட்டளை (யோசு 10:12-13); தெபோராவின் பாடல் (நீதி 5:2-31); சிம்சோனின் விடுகதை (14:14-16) என்பன.பிற்கால நூல்களிலிருந்து பாடல் சான்றுகள்: அன்னாவின் செபம் (1 சாமு 2:1-10); தாவீதை இளம் பெண்கள் போற்றுதல் (18:7); சவுல், யோனத்தான் ஆகியோர் மரித்தபோது தாவீது பாடிய இரங்கற்பா (2 சாமு 1:19-27); அப்னேர்மேல் இரங்கற்பா (3:33-34); தாவீதின் பாடல் (22:2-51); தாவீதின் இறுதி வாக்குகள் (33:1-7); கூடாரத்தில் பெட்டகம் வைக்கப்பட்டபோது தாவீதின் பாடல் (1 நாள் 16:8-36) என்பனவாகும்.

இறைவாக்கு நூல்களில் பெரும்பாலானவை பாடல் வடிவில் உள்ளன. யோவேல், ஒபதியா, மீக்கா, அபக்கூக், செப்போனியா, மலாக்கி போன்ற நூல்கள் முழுவதும், எசாயா, ஒசேயா, செக்கரியா ஆகிய நூல்களில் பெரும்பகுதியும் மற்ற இறைவாக்கு நூல்களில் சில பகுதிகளும் பாடல் வடிவம் கொண்டவை. இவை சங்கீதங்களிலும் மற்றப்பாடல் நூல்களிலும் காணப்படும் யாப்பு வடிவங்களைக் கொண்டன.

ஞான இலக்கிய நூல்கள் பெரும்பாலும் யாப்பு அமைப்புக் கொண்டவை. யோபுநூல் கவிதையும் உரையாடலும் கொண்ட காவியமாகும். சங்கீதநூல் பக்திப் பாடல்களையும் செபங்களையும் கொண்டது. பழமொழி, சீராக் ஆகிய நூல் வேறுபட்ட நீளமுடைய யாப்பு அமைப்பைக் கொண்டவை. திருவுரையாளர் நூல் பாடலும் உரையாடலும் கலந்த சிந்தனைப் படைப்பாகும். உன்னத

சங்கீதம் உரைநடை கலந்த திருமண அகப் பாடலாகும். ஞானநூல் பாவடிவில் உள்ள சமய தத்துவ இயல் நூலாகும்.

கிரேக்க மொழியில் உள்ளது போன்றோ, நமது தமிழ்மொழியில் தொல்காப்பியம் உள்ளது போன்றோ, எந்த இலக்கண நூலும் எபிரேய மொழியில் இது வரை கிடைத்திலது. ஆகவே எபிரேய யாப்பின் புறவடிவங்களைத் துல்லியமாக நிர்ணயிப்பது கடினம். ஆயினும் சில யாப்புப் பண்புகளைப் பார்ப்போம்.

இ. ஞானநூல்களின் அடிப்படை இலக்கிய அமைப்பை ''மசால்'' என்ற எபிரேயச் சொல் குறிக்கிறது. இச்சொல்லின் பொருளை அறுதியிட்டுக் கூற முடியாது. ''ஒன்றைப்போல் ஆதல்'', ''ஒன்றோடு ஒத்திருத்தல்'' என்ற அடிப்பொருளுடைய வினைச் சொல்லிலிருந்து இச்சொல் வருவதாகத் தெரிகிறது. இது ''ஒப்புமை'', ''உவமை'' என்று பொருள்படும் பெயர்ச் சொல்லாகும். காலப் போக்கில் மேற்கோள் வாக்கு, பழமொழி, பொன்மொழி ஆகியவற்றைக் குறிக்கப் பயன்பட்டது. ஆனால் இது சிறு முதுமொழிகளை மட்டுமல்லாது நீண்ட கூற்றுக்களையும் குறிக்கவல்லது (பழ 1:10-19; யோபு 27:1; 29:1; சங் 49:4; 78:2); வசைப்பாடலையும் குறிக்கலாம் (எண் 21:27-30; எசா 14:4தொ; மீக் 2:4தொ; அப 2:6தொ); மறைபொருள் மிக்க இறைமொழிகளைக் குறிக்கலாம் (எண் 23:7.18); கேலிப் பொருளிலும் வசைப் பொருளிலும் பயன்பட்டுள்ளது (உப 28:37; சங் 44:15-16; 69:12; எசே 14:8; 17:2); ஒப்புமை அடிப்படைகொண்ட அறிவுரைகளையும், விடுகதைகளையும் குறிக்கலாம் (எசே 17:2; 21:5; 24:3); கலைப்பண்போடு அமைக்கப்பட்ட முதுமொழிகளையும், நன்னடத்தை மேற்கோளுரைகளையும் குறிக்கலாம் (1 சாமு 10:12; 24:14; எசே 12:22-23). இப்படிப் பல பொருள்களில் ''மசால்'' என்ற எபிரேயச் சொல் பயன்பட்டுள்ளது.

காலப்போக்கில் மசால் என்ற சொல்லின் பொருள் ஓரளவு வரையறை செய்யப்பட்ட, உருவகமும் யாப்பு அமைப்பும் கொண்ட, முதுமொழிப்பண்புடைய கூற்றுக்களாகவோ, அதிகாரப்பூர்வமான வாக்குகளாகவோ மசால் வடிவெடுத்தது (எண் 23:7-18; எசா 14:4-6); கருத்தைக் கவரும் ஒரு வாக்கையோ பொதுக் கூற்றையோ, மேற்கோளுரையையோ குறித்தது. பிற்காலத்தில் இது உவமையாகவோ, உருவகமாகவோ, போதகமாகவோ, வாதமாகவோ விரிவான வடிவம் எடுத்தது. மசால் என்ற சொல்லுக்குச் சரியான சொல்லைப் பிற மொழிகளில் காண்பது அரிது. இச்சொல்லை அதன் தெளிவின்மையையும் சேர்த்து, இக்கட்டுரையில் ''மேற்கோளுரை,'' ''பழமொழி,'' ''பொன்மொழி'' என்ற சொற்களால் குறிப்பிடுவோம்.

ஈ. பழமொழிவகை, இணையமைப்பு, சந்தம் ஆகிய பண்புகளைக் கொண்டுள்ளது. இவற்றோடு அடி என்ற பண்பையும் சேர்த்துக் கொள்ளலாம். இணையமைப்பு என்றால் என்ன? ஒரு வரியில் கருத்தைச் சமன்படுத்துதல் அல்லது கருத்தைச் சமமாகப் பகிர்ந்து அமைத்தலாகும். சிந்தனை அடிப்படையில் வரிகள் இணையமைப்போடு ஒன்றோடு ஒன்று சேர்க்கப்படுகின்றன. அதன் விளைவாக வரிகள் கருத்து அடிப்படையில் ஒத்துப்போகின்றன. இணையமைப்பு மூன்று வகைப்படும்.

1. நேர்நிலை இணையமைப்பு: இதிலே ஒரு வரியின் இரண்டாம்பகுதி முதல் பகுதியின் கருத்தை எதிரொலிக்கும். சொற்களில் மாற்றமிருக்கலாம்; கருத்து அடிப்படையில் மாற்றமில்லை. சான்று:

''என் இதயம் அக்களிக்கின்றது
என் உள்ளம் மகிழ்ந்து துள்ளுகின்றது''
(சங் 16:9).

''மக்களினங்களே அனைவரும் இதைக் கேளுங்கள்; மண்ணுலகில் வாழ்வோரே, யாவரும் செவி கொடுங்கள்'' (49:1). பிற சான்றுகள்: பழ 3:13-18; சங் 2:4; 37:1-2; 51:9.....

2. எதிர்நிலை இணையமைப்பு: இரண்டாவது பகுதியின் கருத்து முதல் பகுதியின் கருத்துக்கு நேர் எதிரானதாயும், ஆனால் கருத்தை நிறைவு செய்வதாயும், அமைந்திருக்கும். சான்று:

''நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார்;
பொல்லாரின் வழியோ அழிவைத்தரும்'' (சங் 1:6).
''ஞானமுள்ள மகன் தன் தந்தையை மகிழ்விப்பான்;
அறிவற்ற மகனோ தன் தாய்க்குத் துயரமளிப்பான்'' (பழ 10:1).

பிற சான்றுகள்: சங் 3:5-6; 20:8-9; பழ 16:28; 13:9;....

3. தொகுப்புநிலை இணையமைப்பு: இது தொடர் வளர்ச்சியுடையது. முதல் வரியில் வரும் கருத்து பின் வரும் வரிகளில் வளர்ச்சியுற்று நிறைவு பெறும். சான்றுகள்: சங் 1:2 தொ; 3:5-6; 19:8-19; பழ 26:3 தொ.

4. சில சமயங்களில் முதல் வரி மூன்றாவது வரியோடும், இரண்டாவது வரி நான்காவது வரியோடும் ஒத்துப்போகும் (சங் 127:1); சில இடங்களில் முதல் வரி நான்காம் வரியோடும், இரண்டாவது வரி மூன்றாவது வரியோடும் ஒத்துப்போகும் (சங் 137:5-6). இவ்வமைப்பு மூல எபிரேய அமைப்பைப் பின் பற்றிக் கூறப்படுகிறது. பின் இது தொடரில் முன்பின் முரண் நயமுடைய இணையமைப்பு என்றழைக்கப்படும்.

இவ்விதம் கருத்துக்களை இணைப்பது, ஐயப்பாடுடைய சொற்களுக்கும் தொடர்களுக்கும் விளக்கம் அளிக்க உதவுகிறது. சான்றாக,

''ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின;
அவரது சொல்லின் ஆற்றலால் வான் கோள்கள் எல்லாம் உருவாயின''

(சங் 33:6; காண்க. 88:11). சில இடங்களில் இப்படிப்பட்ட இணைப்பு, இரண்டு வரிகளும் சேர்ந்தே முழுப்பொருளை உணர்த்த வல்லன என்று காட்டுகிறது. இவ்வாறு, சங் 92:2. இறைவனது இரக்கத்தையும் பிரமாணிக்கத்தையும் இரவும் பகலும் போற்றும் என்று பொருள்கொடுக்கும் (காண்க 19:1-2; 42:9; ஆதி 49:27).

மேற்கூறப்பட்ட இணையமைப்புகளை விவிலியத்தில் அடிக்கடி காணலாம். இவை பாடல்களுக்கு அழகும் நயமும் கொடுக்கின்றன என்றால் மிகையாகாது. எபிரேய யாப்பு வடிவங்களில் இணையமைப்பும் சந்தமும் முக்கிய இடம் பெற்றிருந்தாலும் இணையமைப்பே மிகத்தெளிவாக அறிந்து கொள்ளப் படுகிறது. எபிரேயத்திலிருந்து பிறமொழிகளுக்கு மாற்றும்போது இணையமைப்பு எளிதில் பாதுகாக்கப்படுகிறது.

உ. சந்தம்: இது எபிரேயப் பாடல்களில் காணப்படும் ஒரு சிறப்புப் பண்பாகும். இது சிலமொழிகளில் காணப்படுவது போன்று அசைவுகளின் எண்ணிக்கைகளையோ, அளவைகளையோ அடிப்படையாகக் கொண்டதன்று; மாறாக ஒலி அழுத்தங்களை அடிப்படையாகக் கொண்டது. இதில் அழுத்தம் பெற்ற, அழுத்தம் பெறா ஒலி அசைகள் மாறி மாறி முறையாக வந்து ஒருவித நயத்தையும், இனிமையையும் உண்டு பண்ணும். ஒரு வரியில் வரும் சிறுபகுதிகள் ஒவ்வொன்றிலும் இரண்டு முதல் நான்கு அழுத்தம் பெற்ற ஒலி இசைகள் காணப்படலாம். இப்படிப்பட்ட இரண்டு அல்லது மூன்று சிறு பகுதிகள் சேர்ந்து ஒரு வரியாகும். இவற்றில் ஒலி அழுத்தக் கலப்பு 2+2, 3+3, 4+4, 2+3, 3+2, 4+3, 3+4,... என்று பலவாறு அமைந்திருக்கலாம். ஐந்து ஒலி அழுத்தங்கள் கொண்ட பகுதியில் மூன்றாவது அழுத்தத்திற்குப் பிறகு ஒரு நிறுத்தம் உண்டு. இது "கினா" (Qinah) என்றழைக்கப்படும். எரேமியாவின் புலம்பலில் இது அடிக்கடி பயன்படுவதால் இப்பெயர் பெற்றது. இந்த இடை நிறுத்தம் புலம்பல் தொனியை ஏற்படுத்தக் கூடியது.

எபிரேய ஆசிரியர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட ஒலி அழுத்த முறையையும் ஒரே

ரோகப் பின்பற்றியதில்லை. அவர்களது சிந்தனை எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு, ஒரே பாடலில் ஒலி அழுத்த முறைகள் மாறுபடுவதும் உண்டு. கவிஞர் தனது இலக்கியப்படைப்பில் எந்த ஒரு துல்லியமான ஒழுங்கு முறைகளாலும் கட்டுப்படுத்தப்பட்டவன் அல்லன் என்பதை நாம் மனதில் கொள்வது நன்று.

சுருக்கமாக எபிரேய யாப்பு இலக்கணம் அசையையோ, அளவையையோ அடிப்படையாகக் கொண்டதன்று. சந்தத்தை அதாவது ஒலி அழுத்தத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய ஒலி அழுத்தங்களைக் கொண்டிருக்கும். இரண்டு அல்லது மூன்று பகுதிகள் சேர்ந்து ஒரு வரியாக அமையும். இவை இணையமைப்பு முறையில் ஒன்று சேர்க்கப்படும். பல வரிகள் சேர்ந்து ஒரு அடியாகத் தொகுக்கப்படும்.

ஊ. அடி: எபிரேய யாப்பில் பொருள் அடிப்படையில் அடிகள் பிரிக்கப்படுகின்றன. வரிகள் இணையமைப்பைக் கொண்டிருப்பதுபோல், அடிகளும் அதே அமைப்பின் எதிரொலிப்பைக் கொண்டிருக்கும். அடிகளின் அமைப்பில் பல இலக்கிய யுக்திகள் காணப்படும். இவ்வாறு ஒவ்வொரு அடிக்குப் பின்னும் பல்லவி வரலாம் (சங் 42:5.11; 43:5). இந்த அடிப்படையில் 42-உம் 43-உம் சேர்ந்து ஒரே பாடலாகும். சில பாடல்களில் ஒரே சொல் அல்லது தொடர் ஒவ்வொரு வரியின் தொடக்கத்திலும் வரலாம் (13:1-3); அல்லது ஒவ்வொரு அடியின் முதலில் வரலாம் (118:10-12). வரிகளின் தொடக்கத்தில் ஒரு சொல்லும் முடிவில் மற்றொரு சொல்லும் மீண்டும் மீண்டும் வருவதுமுண்டு (118:2-4).

சில பாடல்களில் காணப்படும் அகர வரிசை அடிகளைப் பிரித்துக் காட்டும் (சங் 9;10; 25; 34; 37; 119; 145; பழ 31:1-31; சீரா 51:13-29; புலம்பல் 3:1-40). சில பாடல்களில் அடிகளின் முடிவில் ''சேலா'' என்ற சொல் காணப்படுகிறது. இச்சொல்லுக்குப் பொருள் தெரியவில்லை. இதுபற்றிச் சங்கீதம் அல்லது திருப்பாடல்கள் நூலுக்குரிய அறிமுகத்தில் கூறப்படும்.

எ. மேலும், எபிரேய ஆசிரியர்கள் தங்கள் நூல்களில், எளிய ஆனால், ஆற்றல் மிக்க சொற்றொகுதிகளையும், பலவகைச் சொல்லணிகளையும், இலக்கிய யுக்திகளையும் பயன்படுத்தியுள்ளனர். அதன் விளைவாகச் சமயசிந்தனையின் உன்னத உருவகங்களையும், ஆழ்ந்த உணர்ச்சி விவரிப்புத் தொகுப்புகளையும் விட்டுச் சென்றுள்ளனர். இந்நூல்களில் நாம் காணும் சில அணிகள்:

1. உவமை, ஒப்புமை அணி:- சங் 103:15; 129:6; யோபு 7:6; 9:25.27; 14:2.11.

2) உருவகம் அல்லது உள்ளடங்கிய ஒப்புமை:- சங் 18:4; 71:3; ஆதி 49:3-27.

3) தொடர் உருவகம்:- சங் 80; எசா 5:1-7; எசே 17:1-10; பழ 24:30-34.

4) ஆட்தன்மைப்படுத்துதல்:- சங் 19:5; எசா 44:23; 49:13; பழ 8:12-36; ஞானம் 8:2; யோபு 28:14.22.

5) உயர்வு நவிற்சி:- சங் 109:6-15. இதில் ஆசிரியர் கவிஞனின் ''நயமிக்க ஆவேசத்தோடு'' தனது எதிரி தண்டனை பெற வேண்டும் என்று மன்றாடுகிறார்.

6) வஞ்சப்புகழ்ச்சி:- எசா 5:22; 47:1.5.8-9.13-14; 14:9-20; ஆமோ 4:4-5.

7) சொல்லணி:- ஆமோ 5:5; 6:13; ஒசே 6:8-10; 12:12; எசா 5:7; 10:28-29; மீக் 1:8-16. ஒரு சான்று.

> ''அறம் விளையுமெனக் காத்திருந்தார்.
> விளைந்ததோ மறம்!
> முறைமை தழைக்குமெனப் பார்த்திருந்தார். எழுந்ததோ முறைப்பாடு!''
> (எசா 5:7).

ஞான இலக்கிய நூல்கள் பலவகை இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்துகின்றன. அவற்றில் சில போதகம், உரையாடல், பழமொழி, கற்பனைக்கதை என்பன. இவை ஒவ்வொன்றிலும் அடையாள மொழியான உருவகம் மிகுதியாகக் காணப்படுகிறது.

ஏ. இஸ்ராயேலின் ஞான நூல்களில் பெரும்பகுதி யாப்பு அமைப்பைக் கொண்டுள்ளது. யாப்பு அமைப்பில் காணப்படும் அகக்கூறுகளின் விளைவாக, பாடல்கள் வாசகர்களிடம் வெவ்வேறுபட்ட ஆழ்ந்த தர்க்கத்தை உண்டுபண்ணவல்லன. பழ 25:2 இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. வாசகர்களுக்கு வெவ்வேறுபட்ட பொருளைக் கொடுக்கவல்லது. ஆகவே வாழ்வோடும் அனுபவத்தோடும் கொள்ளும் உண்மையை எதிர்கொள்ளுதலை எடுத்துக்கூறுவதே ஞானநூல்களின் அலுவலாகும். ஞான இலக்கியங்கள் பயன்படுத்தும் செயல்முறைத் தன்மை கருத்தியலாலாக்கப்பட்ட வாழ்க்கை அனுபவமாகும். இவ்வாறு, வாழ்வின் பொருளற்ற தன்மைபற்றி யோபுவின் அனுபவம் ஒரு தனிநபரின் சொந்த உணர்ச்சிமிக்க காட்சியாகத் தொடங்குகிறது. ஆனால் நாடகப்பாணி காவிய அமைப்பால் ஒவ்வொரு மனித வாழ்வின் பொருளற்ற தன்மையின் பெரு மதிப்பீடாக, பொருள்நிலை மாற்றம் பெறுகிறது. ஆகவே ஞானம் அதன் முதன்மையான உணர்வுக் காட்சியில் அனுபவத்தைச் சேர்ந்ததும் தனிநபர்த்தன்மையுடையதுமாகும். ஆனால் அது எடுத்துக் கூறப்படும்போது மிகவும் மரபு ஒழுங்காக முறைப்படுத்தப்படுகிறது. ஆகவே ஞான நூல்களை அணுகும்போது மிக எச்சரிக்கையாக அணுக வேண்டும்.

9. **ஞான போதக முறையின் குறிக்கோள்:** செயல்முறையில் அறிவர்கள் மனித அனுபவங்களைப் பற்றிச் சிந்தித்தனர். அவைபற்றிய தங்களது மதிப்பீடுகளை, சமூக வாழ்வையும் தனிநபர் வாழ்வையும் வாழக்கூடிய தாக்கும் நோக்குடன், மரபுவழிச் செல்லவிட்டனர். அவர்களுடைய இந்த ''ஞானவாத முறை'' அனுபவத்தின் வரம்புகளுக்கு அப்பால் செல்லச் செய்தது. தெரிந்தவற்றின் வரம்புகளைக் கடந்து செல்ல உதவியது. அறிவு சார்ந்த முறையில் விளக்கம் தேடுவதும், அனுபவ உலகை முறைப்படுத்துவதும் அவர்களது படைப்புக்களைப் பிறவற்றிலிருந்து பிரித்துக் காட்டின.

''ஞான வாத முறை'' என்பது அனுபவத்திற்கும் பாரம்பரியத்திற்குமிடையே எதிர்ப்பாட்டை உண்டாக்கி அதிலிருந்து வாசகர் தாமே ஒருமுடிவுக்கு வருவதாகும். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு:

''எனக்கு வியப்பைத் தருவன மூன்று உண்டு;
நான்காவதைச் சிறிதேனும் அறியேன்
அவை வான்வெளியில் கழுகின் வழியும்
பாறையின்மேல் பாம்பின் வழியும்
நடுக்கடலில் மரக்கலத்தின் வழியும்
ஆண் மகனுக்குப் பெண்மீதுள்ள நாட்டமும் ஆகியவையே''

(பழ 30:18-19).

இதில் மனிதப்பலினத் தன்மையின் மறைபொருள் முனைப்பாக உள்ளது (வச. 19). மறைபொருள் மிக்க மற்றவற்றோடு ஒப்பிட்டு, ஒப்புமையை முடிக்காது விட்டுவிடுகிறார் ஆசிரியர். வாசகர்கள் தாங்களாகவே ஒப்புமை அமைத்துக் கொள்ளவும், அதன் விளைவாகத் தாங்களாகவே முடிவுகளை எடுத்துக் கொள்ளவும் தூண்டுகிறார். இயற்கையிலும் மனித வாழ்க்கையிலும் காணப்படும் அமைப்புகளையும் அவற்றின் அலுவல்களையும் சுட்டிக்காட்டி, வாசகர்கள் தங்கள் வாழ்க்கைக்கு உதவும் ஒரு கொள்கையை அமைத்துக் கொள்ளத் தூண்டுவதுவே ஞானிகளின் அலுவலாகும். ஆசிரியரின் மதிப்பீடுகளை வாசகர்கள் தங்களது சொந்தச் சிந்தனையின் தொடக்கமாக்கிக் கொள்வது அவசியம். ஞானக் கூற்றுக்கள் முழுவிளக்க விவரங்களுடன் கூறப்படுவது வெகு அபூர்வமே. இணையமைப்புக்களைப் பயன்படுத்தி வாசகர், தங்களது அறிவியல் மதிப்பீடுகளுக்கு ஏற்ப ஓர் அனுபவத்தை எதிர் கொள்ளச் செய்து, அவர்களது சிந்தனையைத் தூண்டுகிறார் ஞான ஆசிரியர். ஒரு காரியத்தைப் பற்றி இரு கோணங்களில் எடுத்துக் கூறுகிறார். பதில் கொடுப்பதைவிடச் சிந்தனையைத் தூண்டுவதே ஆசிரியரது நோக்கமாகும். காண்க. பழ 11:1தொ.

ஆகவே, முன்பே அமைக்கப்பட்ட துல்லிய கருத்தையோ, தீர்ப்பையோ எடுத்துக் கூறுவது ஞான இலக்கியத்தின் நோக்கமன்று.

ஓர் அனுபவத்தின் மதிப்பீட்டை எடுத்துக் கூறுவதே அதன் நோக்கம். அதிலே வாசகர் மந்தமாய் இருப்பதில்லை. உற்சாகத்தோடு ஈடுபடுகிறார். தான் வாழவேண்டிய மட்டத்தை நிர்ணயிக்கிறார். இது மனித உறவுகளுக்கு இட்டுச் செல்கிறது. இதுவும் ஒரு ஞான மதிப்பீடாகும். எப்படி வாழவேண்டும் என்பது அவரவர் பொறுப்பாகும்; சூழ்நிலைக்கேற்ப அவரவர் எடுக்க வேண்டிய தீர்மானமாகும் என்ற உண்மை இங்குப் பின்னணியாக அமைந்துள்ளது. இதில் வாசகரின் தன்னாட்சித் தன்மை முக்கியமானதாகும் என்று ஞானநூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்நூல்களில் முரண்தோற்றமுடைய மேற்கோள்கள் அருகருகே காணப்படுகின்றன. அவற்றிற்குத் தனது பதில் என்னவென்பதைத் தீர்மானிக்க வேண்டியது வாசகரின் கடமையாகும். திருவுரை 5:7-12 வாசகரின் தன்னாட்சித் தீர்மானக் கோட்பாட்டை ஓரளவு சுட்டிக் காட்டுகிறது.

ஞானிகள் மற்றவர்க்குக் கற்பிப்பது ஒரு போதும் ஒரு கருத்தைப் புகுத்துவதற்கன்று. மாணவர்கள், எந்தக் கருத்தையும் ஆசிரியரிடமிருந்து மந்தமாகப் பெற்றுக் கொள்ளக் கூடாது; ஆற்றலோடு அதில் ஈடுபடவேண்டும். மாணவர் தனக்கு அளிக்கப்படுபவற்றின் ஒப்பீட்டு முக்கியத்துவத்தை, தனது வாழ்க்கைச் சூழ்நிலையில் சொந்தமாக நிர்ணயித்து, அவற்றின் மதிப்பீடுகளைத் தீர்மானிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஆசிரியர் - மாணவன் உறவை - வெவ்வேறுபட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட ''சமன் செய்யப்பட்ட போட்டி'' - என்று விவரிக்கலாம்.

II. *புதிய ஏற்பாடு:*

1. முன்னுரை: புதிய ஏற்பாட்டில் ஞான இலக்கியநூல் என்று கூறுவதற்கு எதுவும் இல்லை. ஆனால் பழைய ஏற்பாட்டு ஞான இயக்கத்தின் ஒருவகைத் தொடர்ச்சியையும் நிறைவையும் புதிய ஏற்பாட்டில் காணலாம். யாக்கோபின் திருமுகம் ஞான இலக்கியப் பாரம்பரியத்தில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. எல்லாவற்றையும் விட, புதிய ஏற்பாட்டில் இயேசு ஞான ஆசிரியராகவும் இறை ஞானமாகவும் விவரிக்கப்படுகிறார். அவர் இறை ஞானமாய் இருப்பதால், அவர் ஞானத்தைப் பிறருக்குக் கொடையாக அளிக்கிறார் என்று புதிய ஏற்பாடு ஆசிரியர்கள் புரிந்து கொண்டனர் (1 கொரி 1:24.3). ஆகவே ஞானம்பற்றிப் பழைய ஏற்பாடு ஞானிகள் பயன்படுத்திய அதே சொற்களையே இயேசுவுக்கு இயல்பாகச் சாற்றிக் கூறுகின்றனர்.

2. புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாட்டுப் பாதிப்பு: மீட்பளிக்கும் கிறிஸ்துவின் செயலைப் பறைசாற்றும் பணித்திட்டத்தில் ஞானத்தின் அலுவல் என்ன? வரலாற்றுக் கண்ணோடு நோக்கினால் யூத ஞானம் புறத்திலிருந்து கிறிஸ்துவத்துக்குள் புகுந்து ஆதிக்கம் செலுத்தவில்லை. முதல் கிறிஸ்தவர்கள் யூதர்கள் என்ற முறையில் அதில் வளர்ந்தவர்கள்; திருச்சபைக்குள் தங்களோடு அதையும் கொண்டுவந்தனர்; அதைத் தங்கள் உரிமைச் சொத்தாகப் பாதுகாத்தனர் என்று அறியலாம். கிறிஸ்துவ விசுவாசத்தின் இறைவன் வேறு எவருமில்லை. அவர் இஸ்ராயேல் ஞானத்தின் இறைவனே; படைப்பவரான ஒரே இறைவனே. இந்த உறவுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு 1 தெச 1:9-10-இல் வரும் மறைபரப்புப் போதக வடிவமாகும். ஒரே உண்மையான, உயிருள்ள இறைவன் உயிரற்ற சிலைகளோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறார். இந்தப் பணித் திட்டத்திற்குள் கிறிஸ்துஇயல் செய்தி அறிமுகப்படுத்தப்படுகிறது. இவ்வாறு ஞானம் பழைய ஏற்பாடு, மற்றும் யூதத்திற்கும் தொடக்க கிறிஸ்துவத்திற்கும் ஓர் இணைப்பாகவும், தொடர்பாகவும் செயல்பட்டது.

புதிய ஏற்பாட்டில், பழைய ஏற்பாட்டு யூதப் பாதிப்பு அடிப்படைத் தன்மையுடையதாகும். ஞானம் என்ற சொல்லையும் கருத்தையும் விட, பழைய ஏற்பாட்டு இலக்கிய வடிவங்களும் பொருளடக்கமும், பிற்கால யூத ஞான இலக்கியங்களும் புதிய ஏற்பாட்டை அதிகம் பாதித்துள்ளன. இவற்றில், பழமொழி வடிவில் தொகுக்கப்பட்ட மேற்

கோள்களைப் பயன்படுத்தும் ஒழுக்க போதகம் (பழமொழி, சீராக், புதிய ஏற்பாட்டில் மலைப்பொழிவு: மத் 5-7; உரோ 12; யாக்கோபு), சுருக்கமான கூற்றுக்கள் (யாக்கோபு 2-3; எபி 3:2-18; 4:12-14; 6:1-3;...), நற்பண்புகளின் பட்டியல்கள் ஆகியவை அடங்கும். இவை சில சமயம், யூத ஞானத்தின் இருபொருளுண்மைக் கோட்பாட்டு வளர்ச்சிப் பாரம்பரியத்தில் கொடுக்கப்படுகின்றன (ஞானநூல்). ஆகவே இருவகைப் பட்டியல்களைக் காணலாம் (கலா 5:19-23; கொலோ 3:5-17). ஒரே உண்மையான இறைவனும் உயிரற்ற சிலைகளும் பற்றிய சில காப்புரைகளும் (1 கொரி 8:1-6; 1 தெச 1:9-10), உருவக எடுத்துக்காட்டு இயல் முறையில் விளக்குதலும் (1 கொரி 10; கலா 4:21-31; சிறப்பாக எபிரேயர்) குறிப்பிடத்தக்கவையாகும். ஞானம் ஆட்தன்மைபெறும் யூத ஞானப் பாடல் வகையைச் (பழ 8; ஞானம் 7:22தொ; சீரா 24; பாரூக் 3:9தொ; யோபு 28) சில புதிய ஏற்பாட்டுப் பாடல்கள் பின்பற்றுகின்றன (யோவா 1:1தொ; கொலோ 1:15 தொ; 1 கொரி 13).

பழைய ஏற்பாட்டு ஞானப் பாரம்பரியத்தின் அடிப்படைக் கருத்துக்கள்: இறைவன் ஞானமிக்கவர் (சீரா 1:8). ஞானம் அவருக்கே சொந்தமானது (தானி 2:20.23). அது அவருக்கு மட்டுமே ஏற்புடையதானது (ஞானம் 9:9). எல்லா ஞானமும் அவரிடமிருந்து வருகின்றது (சீரா 1:1). இறைவன் ஞானத்தைக் கொடுப்பதால் (தானி 2:20) ஒருவன் அதற்காக அவரிடம் மன்றாடலாம் (2 நாள் 1:10). இறைவன் மட்டுமே ஞானத்தை வெளிப்படுத்துவதால், மனிதர் அதை அடைய அவரிடம் செல்ல வழிகாண வேண்டும். இதைக் கற்பிக்க ஆசிரியர்களும் போதகமும் உண்டு. ஞானத்தின் தொடக்கம் இறையச்சமாகும் (பழ 1:7).

பழைய ஏற்பாட்டிலும், யூத ஞானத்திலும் மூன்று வகையான மெய்யுருப்படுத்தி உருவகமாக்கப்படும் ஞானம் உண்டு. இவை புதிய ஏற்பாட்டில் மீண்டும் காணப்படுகின்றன. அவை: (அ). கட்புலப்படாமல் மறைந்திருக்கும் ஞானம்: இதை அடையும் வழியை இறைவன் மட்டுமே அறிவார் (யோபு 28; பாரூக் 3:9). (ஆ). இறைவனுக்கு அருகிலுள்ள ஞானம் (பழ 8:22 தொ). இது இறைவனால் படைக்கப்பட்டது. உலகப் படைப்பில் இறைவனுக்கு உதவி செய்கிறது. இதனால் உலகம் செறிந்து கிடக்கிறது. இதைத் தேடி அடைபவர்கள் இதனால் ஒளி பெறுகின்றனர். இதன் ஆதிக்கத்துள் வாழ்கின்றனர். (இ). இது மறைந்துபோன ஞானம்: இது உலகில் ஒருமுறை தோன்றியது. இதை மனிதர் நிராகரித்துவிட்டனர். ஆகவே இது விண்ணகத்திற்குப் பின்வாங்கிவிட்டது. ஒரு காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் தோன்றும்.

3. புதிய ஏற்பாட்டில் "ஞானம்" என்ற சொல்: மத் 12:42; லூக் 11:31; (அ.ப. 7:22)-இல் ஞானம் என்ற சொல் சாலமோனது ஞானத்தைப் போற்ற, சமயச் சார்பற்ற பொருளில் பயன்பட்டுள்ளது. இதே பொருளில் இயேசுவின் ஞானமும் போற்றப்படுகிறது (மாற் 6:2; லூக் 2:40.52). இறைவனது ஞானம் லூக் 11:49; எபே 3:10 ஆகிய பகுதிகளிலும், இறைப்புகழ்ச்சி வாய்பாடுகளிலும் (உரோ 11:3; 16:27; திருவெளி 7:12) குறிப்பிடப்படுகிறது. இறை ஞானம் உலகிடம் பேசுகிறது (லூக் 11:49); தூதுவர்களை அனுப்புகிறது (மத் 23:34). உயிர்த்த கிறிஸ்துவின் ஞானம் போற்றப்படுகிறது (திருவெளி 5:12). அவரில் ஞானத்தின்செல்வம் எல்லாம் மறைந்திருக்கிறது (கொலோ 2:3).

விசுவாசி ஞானத்தை இறைவனது ஆவியிடமிருந்து கொடையாகப் பெறுகிறான் (எபே 1:8; கொலோ 1:9). ஆகவே அதை நாட முயல வேண்டும் (எபே 5:15; கொலோ 4:5). திருச்சபையில் ஞானத்தில் சிறந்தவர்கள் இருக்கின்றனர் (அ.ப. 6:3.10). ஞானம் திருச்சபையில் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் (எபே 3:10; கொலோ 1:28; யாக் 3:13). இறை ஞானமும், உலக ஞானமும் முரண்படுவது பற்றிய முக்கியமான ஆய்வுரை 1 கொரி 1-2; 8:18-19 (மேலும் 2 கொரி 1:12; கொலோ 2:23; யாக் 3:13-18; மத் 11:25) என்ற பகுதியில் காணப்படுகிறது.

ஞானம் ஆவியோடும் (அ.ப. 6:310; ஞானம் 1:5-3;7:7), ஆற்றலோடும் (திருவெளி 5:12; 7:12; யோபு 12:13) தொடர்புபடுத்தப் படுகிறது. ஞானத்தோடு ஒரு பொருள் பல சொற்களாகப் பயன்படுபவை: அறிவு (கொலோ 2:3; திருவுரை 1:17), உள்நோக்கு அல்லது அறிவுத்திறன் (கொலோ 1:9; எபே 1:8; தானி 2:21). ஆவியையும், ஆற்றலையும் இணைக்கும் ஞானம் மந்தமானதன்று; செயல்திறம் மிக்கதாகும்.

4. ஒத்தமை நற்செய்திகள்: புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவோடும், ஒத்தமை நற்செய்திகளில் காணப்படும் அவரது போதகத்தோடும் ஞானத்தின் வரலாறு தொடங்குகிறது எனலாம். ஒரு வேளை ஞானப் பாரம்பரியங்களிலிருந்து பழமொழிகள் இந்நூல்களில் புகுந்திருக்கலாம். ஆனால் இயேசுவே ஞான ஆசிரியர்களுள் தலை சிறந்தவர் என்று இந்நூல்கள் காட்ட விழைகின்றன.

இயேசு தமது வயதுக்கேற்ப ஞானத்தில் வளர்ந்தார் (லூக் 2:52). இளைஞனாக இருந்த போது அவர் காட்டிய அறிவு வளர்ச்சி வயதுக்கு மீறிய அறிவாற்றல் அன்று (லூக் 2:47). அவர் ஞானம் போதித்தலைத் தொழிலாகக் கொண்ட போதகராகத் தோன்றிய போது, அவரை முன்பு அறிந்தவர்கள், அவருக்கு எப்படி ஞானம் வந்தது என்று வியக்கின்றனர் (மத் 7:28; மாற் 6:2). இயேசு பயன்படுத்திய போதக முறைகள் இஸ்ராயேல் ஞானிகளின் முறைகளுக்கு ஒத்திருக்கின்றன. அவர் அதேவித இலக்கிய வடிவங்களையும், அதாவது மேற்கோள் கூற்றுகளையும், உவமைகளையும் பயன்படுத்துகிறார். அவர்களைப்போல் ஒழுக்க போதகத்தை அளிக்கிறார் (மத் 5-7). இத்தகைய ஞானத்தை ஞானிகளின் பள்ளிகளில் பயிலாமல் ஒருவர் பெற முடியாது. ஆகவே அவரது ஞானத்தைக் கண்டு வியக்கின்றனர்; மலைக்கின்றனர்.

ஞானிகளான சட்ட வல்லுநர்களிடமிருந்து இயேசுவைப் பற்றிய வெளிப்பாட்டை இறைவன் மறைத்துவிட்டார் (மத் 11:25; லூக் 10:21). இறைவாக்கினர்கள், ஞானிகள் பழைய ஏற்பாட்டில் இறைவனது தூதுவர்களாவர் (மத் 23:34). லூக் 11:49-இல் பேசும் இறை ஞானம் இறைவனே. இயேசு தமது சீடர்களுக்குப் ''பேச்சு வன்மையும் ஞானமும் அருளுவதாக'' (லூக் 21:15) வாக்களிக்கிறார். தனது செயல்களால் நிரூபிக்கப்படும் ஞானம் (மத் 11:19; லூக் 7:35), விளைவுகளால் சரியானது என்று காட்டப்படும் இறைவனது ஞானமே. ஒத்தமை நற்செய்திகள் இயேசுவை ஒரு ஞானியாக மட்டும் காட்டவில்லை (மாற் 6:2; மத் 12:42; லூக் 11:31). ''சாலமோனிலும் மேலானது இதோ இங்குள்ளது'' (மத் 12:42) என்ற கூற்று, சாலமோனுடைய ஞானத்தைவிட இயேசுவின் ஞானம் மேலானது, அதாவது இயேசு தலைசிறந்த ஞானி என்று காட்டுகிறது. சில இடங்களில் இயேசு ஞானத்தின் தூதுவராகவும் காட்டப்படுகிறார். இறுதியாக, மத்தேயுவால் இயேசுவும் ஞானமும் ஒன்றாக்கப்படுகின்றனர். ''இறை ஞானம் சரி என்று அதை ஏற்றுக்கொண்ட மக்கள் அனைவராலும் விளங்கிற்று'' (லூக் 7:35) என்று லூக்கா கூறும்போது ''இறை ஞானம் சரியென்று அதன் செயலால் விளங்கிற்று'' (மத் 11:19) என்று மத்தேயு கூறி, இயேசுவையும் ஞானத்தையும் ஒன்றாக்குகிறார். மத் 11:27-இல் இயேசுவே வெளிப்பாட்டின் பொருளடக்கம் என்று விவரிக்கப்படுகிறார். ஞானம் தன்னையே அறிவிக்கிறது. இதை யோவான் நற்செய்தியில் வரும் ''நான்...இருக்கிறேன்'' என்ற கூற்றுக்களில் காணலாம். இஃதோடு ''சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் உங்களை நான் இளைப்பாற்றுவேன். ஏனெனில் நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன்...'' (மத் 11:28-29) என்ற கூற்றையும் மத்தேயு சேர்க்கிறார். இது ஆன்மா இளைப்பாற ஞானம் விடுக்கும் அழைப்பாகும் (சீரா 51:23-30). ஞானம் எச்சரிப்பதாக லூக்கா கூறும்போது (லூக் 11:49-51), இயேசுவே அந்த எச்சரிக்கையைக் கூறுவதாக மத்தேயு கூறுகிறார் (மத் 23:34-36). இங்கும் மத்தேயு இயேசுவையும் ஞானத்தையும் ஒன்றாக்குகிறார். பேசுபவர் வரலாறு கடந்தவராவார்.

எருசலேமைப் பற்றிய புலம்பலிலும் (மத் 23:37-39; லூக் 13:34-35) இயேசு வரலாறு கடந்தவராகவே பேசுகிறார். இதில் இயேசு ஞானமாவார் என்ற அளவில் பேசுகிறார். நிராகரிக்கப்பட்ட ஞானம் மறைந்துவிடுதல், அது மீண்டும் தோன்றுதல் போன்ற கருத்துக் கள் இயேசுவின் மரணம், அவரது மகிமை மிக்க இரண்டாம் வருகை ஆகியவற்றோடு தொடர்புடையன.

5. பவுலின் திருமுகங்களில் ஞானம் என்ற கருத்து ஒரு சிறப்பிடம் வகிக்கிறது. இறை வன் ஒருவரே உண்மையான ஞானத்தைக் கொண்டுள்ளார். அது ஆழமிக்கது. அதை மனிதன் தேடி அடைய முடியாது (உரோ 11:33; 16:27). அது பல்வகைப்பட்டது (எபே 3:10). இங்கே குறிக்கப்படும் ஞானம் இறை வனது மீட்புத் திட்டமாகும்; அதன் வழியாக இறைவன் எல்லோர் மேலும் இரக்கம் காட்டு கிறார் (உரோ 11;32). ஞானம் நிறைந்த பேச்சு ஆவியின் கொடையாகும் (1 கொரி 12:8). ஞான ஆவி இறைவனால் கொடுக்கப் படுகிறது (எபே 1:17). கிறிஸ்துவ வெளிப் பாட்டை அறிவிக்கும் அப்போஸ்தலர்க ளால் ஞானம் போதிக்கப்படுகிறது (கொலோ 1:28). தனது போதகத்தில் உலக ஞானத்தை ஒரு சாதனமாகப் பயன்படுத்த பவுல் மறுத்து விடுகிறார் (2 கொரி 1:12). கிறிஸ்தவர்கள் ''முழு ஞானத்தோடு ஒருவ ருக்கொருவர் போதித்துக்'' கொள்ள வேண் டும் (கொலோ 3:16). ''திருச்சபையைச் சேரா தவர்களிடம் ஞானத்தோடு பழக'' வேண் டும் (4:5). கிறிஸ்தவர்கள் உண்மையான ஞானத்தைப் போலி ஞானத்திலிருந்து வேறு படுத்த வேண்டும் (2:23). அவர்கள் ''நன்மை செய்வதில் ஞானிகளாக'' இருக்க வேண்டும் (உரோ 16:19). இவ்வுலக ஞானத்தைக் கொண்டிருப்பவர்கள் ''தங்களை ஞானிகள் எனப் பிதற்றும் அவர்கள் வெறும் மடையர்'' ஆவர் (1:22). இங்கு ஞானம் என்ற சொல் தத்துவ இயல் அறிவைக் குறிக்கும் கலைச் சொல்லாகத் தெரிகிறது. இந்த ஞானிகள் படைப்பிலிருந்து தங்கள் அறிவைப் பயன் படுத்தி இறைவனது ஆற்றலையும் இறைத் தன்மையையும் அறிந்திருந்தனர். ஆனால் இறைவன் பற்றிய உண்மையை மூடி மறைத் தனர் (1:18-21).

கொரிந்தியர்கள் தங்கள் அறிவைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டனர் (1 கொரி 8:1-6). அதன் விளைவாகத் தங்கள் உரிமை பற்றியும் பெருமைபட்டுக் கொண்டனர் (6:12; 10:23). அவர்கள் உன்னத ஆண்டவரை மதித்தாலும் மீட்பின் வரலாற்றுச் சின்ன மான சிலுவையைப் புறக்கணித்தனர். இதற்கு எதிராக, உலக ஞானத்தையும் கொரிந்தியருடைய சமயச் சார்புடைய ஞானத் தையும் பவுல் வன்மையாகக் குறை கூறு கிறார். உலக ஞானம் பற்றிய பவுலின் ஆய்வு இறையியல் தன்மையுடையதாகும். இறைவ னையும் மீட்பையும் வரையறை செய்ய விழையும் ஞானத்தையுமே குறை கூறு கிறார். இது மனிதருடைய மகிமைக்கும், இறைவன்முன் பெருமைப்பட்டுக் கொள்ள வும் பயன்படலாம். இங்கே பவுல் போராடு வது விசுவாச மற்றவர்களின், மீட்பு இழந்து போனவர்களின் சுய பெருமையாகும். இந் தப் பெருமையை அழிக்க சிலுவையைப் பறைசாற்றுகிறார். ஏனெனில், கிரேக்கர் ஞானத்தையும் யூதர்கள் அடையாளங்களை யும் கோரினர். இருவரும் தங்களது அளவு கோலுக்குட்பட்ட வெளிப்பாட்டை எதிர் பார்த்தனர். பவுல் ஞானம் என்ற தலைப்பைக் கிறிஸ்து இயலைச் சேர்ந்ததாகக் கருதுகிறார். அவரது கிறிஸ்துவ ஞானம் கிறிஸ்துவே. அதுவும் சிலுவையில் அறையுண்ட கிறிஸ் துவே (1 கொரி 1:18.22-25; 2:2). இதுதான் கிறிஸ்துவனின் ஞானம். இது உலகிற்கு மடமையாகலாம். ஆனால் இது உலக ஞானத்தைச் சீர்குலைக்கிறது. மனிதர் இந்த ஞானத்தை நிராகரித்தாலும் இது பின்வாங்க வில்லை, உலக ஞானத்தை மடமையாக்கு கிறது. ஆகவே சிலுவையில் தவிர வேறெதி லும் இறைவனை அறிந்திருப்பதாக உரிமை கொள்வது வீணாகும். கிறிஸ்துவே இறைவ னின் ஞானமாவார் (1:24); இறைஞான

வெளிப்பாடும் ஆவார். ஞான பாரம்பரியங்கள் புரிந்து கொள்வதுபோல் (ஞானம் 13-15), இறைவனது உண்மைத் தன்மை பற்றிய போதகம் மட்டும் வெளிப்பாடன்று. உலகை மீட்கும் இறைவனது செயலும் வெளிப்பாடாகும் (2 கொரி 5:19).

ஞானத்தை மனிதன் தேடி அடைய முடியாது. அதை எடுத்துக்கூறச் சொல்லாற்றல் மிக்க பேச்சாளரின் ஞானம் வேண்டியதில்லை (1 கொரி 2:4). அது இறைவனில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஞானம், இரகசிய நோக்கம் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்; அதாவது சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் வழியாக மனுக்குலத்திற்கு அவர் அளிக்கும் மீட்புத் திட்டத்தின் வெளிப்பாடாகும் (2:7-10). ஆகவே இந்த ஞானத்தை அடைய இவ்வுலக ஞானிகள் மடையர்களாக வேண்டும். ஏனெனில் இவ்வுலக ஞானம் இறைவன் முன் மடமையாகும் (3:18 தொ). இறைஞானத்தில் செல்வம் எல்லாம் கிறிஸ்துவில் உள்ளது (கொலோ 2:3).

கொலோசியருக்கு எழுதிய திருமுகத்தில் பவுல் ஞானத்தைப் புரிந்து கொள்ளும் விதம் சிறிது வேறுபடுகிறது. ''நீங்கள் முழு ஞானத்தையும் தேவ ஆவிக்கேற்ற அறிவுத் திறனையும் அடைந்து இறைவனுடைய திருவுளத்தை உணரும் அறிவை நிறையப் பெறுமாறு மன்றாடுகிறோம்'' (கொலோ 1:9). பவுல் கிறிஸ்துவாகிய ஞானத்தைப் போதிக்கிறார். ''கிறிஸ்துவுக்குள் ஒவ்வொருவரையும் நிறைவுள்ளவராக்கும்படி ஒவ்வொருவருக்கும் அறிவு புகட்டி ஒவ்வொருவருக்கும் முழு ஞானத்தோடு போதித்து'' (1:28), கிறிஸ்துவில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார். ''கிறிஸ்துவே அந்த இறைபொருள். அவருள்ளே இறைவனின் ஞானமும் அறிவுமாகிய செல்வம் எல்லாம் மறைந்துள்ளன'' (2:3). இயேசுவே படைப்புக்களுக்கெல்லாம் தலைப்பேறானவர் (1:15; பழ 8:22-31). அவர் இறைமகிமையின் பிரதிபலிப்பாவார்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் வேதாகமத்தை ஞான பாரம்பரியத்தில் விளக்குகிறது. அதில் காணப்படும் கிறிஸ்து இயலின் விளைவாக இவ்விளக்கம் உலகு சார்ந்த பருமனைக் கொண்டிருக்கவில்லை.

6. யாக்கோபின் திருமுகம்: இது பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியங்களுக்கு மிக நெருங்கியதென்று கருதப்படக்கூடிய புதிய ஏற்பாட்டு நூலாகும். இம்மடல் கிறிஸ்தவர்கள் எதிர் கொள்ளும் சோதனைகளை விவரிப்பதோடு தொடங்குகிறது. இது பழ 3:12-இல் காணப்படும் ஞானியின் மனப்போக்கிற்கு ஒத்துள்ளது. பழ 2:3-6; சீரா 51:14; ஞானம் 9:4-இல் காணப்படுவது போல், ஞானமில்லாதவர்கள் அதை இறைவனிடமிருந்து கேட்டு அடையுமாறு தூண்டுகிறார் ஆசிரியர். 3:13-18-இல் உலகம் சார்ந்த, பேய்த்தன்மை வாய்ந்த ஞானத்தையும் ''விண்ணிலிருந்து வரும்'' உண்மையான ஞானத்தையும் ஒப்பிட்டு வேறுபடுத்துகிறார். உலக ஞானம் குழப்பத்தையும் கலகத்தையும் உண்டாக்கவல்லது. ஆனால் உண்மையான ஞானம் ''தூய்மையானது; அமைதியை நாடும்; பொறுமையைக் கடைப்பிடிக்கும்; இணக்கத்தை விரும்பும்; இரக்கமும் நற்செயல்களும் பெருகச் செய்யும்; நடுநிலை தவறாது; கள்ளமறியாது'' (யாக் 3:17). ''உங்களுள் ஞானமும் அறிவும் படைத்தவன் யாராவது இருந்தால், அவன் அவற்றைத் தனது நன்னடத்தையினால் எண்பிக்கட்டும்; அவன் செயல்கள் ஞானத்தால் விளையும் சாந்தத்தோடு விளங்கட்டும்'' (3:13). திருமுகம் முழுவதும் போதகத் தன்மையையும் அறவுரைத் தன்மையையும் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியங்களில் காணப்படுவதுபோல், யாக்கோபின் போதகத்தில் முழுக்க செயல் முறையான ஒழுக்க ஞானம் மிளிருகிறது.

7. திருவெளிப்பாட்டு நூல்: இதில் ஞானம் முடிவுகாலப் பண்புகளில் ஒன்றாகத் தோன்றுகிறது. ''பலியான செம்மறி-வல்லமையும், செல்வமும், ஞானமும், பலமும், மாட்சியும், மகிமையும்'' பெறுகிறார் (5:12; 7:12). பழைய ஏற்பாட்டில் யோசேப்பும் (ஆதி 40:8; 41:12-13) தானியேலும்

(தானி 2:19-30) கொண்டிருந்ததுபோல் ஞானம் அறிவுக் கூர்மையெனும் கொடையாகும். இந்த இருவரும் இறைவனது கொடையால் கனவுகளுக்குப் பொருள் அளிக்கும் ஞானம் பெற்றிருந்தனர்.

8. *யோவான்:* ஞானம் என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை, ஆயினும், இயேசுவே இறைவனின் ஞானம் என்ற உண்மையை யோவான் உணர்த்தும்முறை குறிப்பிடத்தக்கது. அவரது சிந்தனைப் போக்கு மறைநுட்பமானதாகும். நற்செய்தியின் முன்னுரையில், இயேசு பழைய ஏற்பாட்டு ஞானத்தோடு கொண்டுள்ள பல தொடர்புகள் சுட்டிக்காட்டும் முறையில் எடுத்துக் கூறப்படுகின்றன. இயேசு வார்த்தையானவர் என்று கூறும் போது நற்செய்தியாளர் பழைய ஏற்பாட்டு ஞானத்தை மறுசிந்தனை செய்கிறார். ''மனிதரிடையே தங்கி அவர்களை இறைவனின் நண்பர்களாக்கும் ஞானம்'' மனு உருவாதல் என்ற கருத்துக்கு அடித்தளம் ஆகிறது. யோவா 1:1-18-இல் வரும் கருத்துப்போக்கு பழைய ஏற்பாட்டில் ஆட்தன்மை பெற்ற ஞானத்தின் விவரிப்பைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது. ஞானம் இறைவனோடு நெருங்கியிருக்கிறது; படைப்பில் ஒரு அங்கம் வகிக்கிறது; மக்களிடையே குடிகொள்ளுகிறது; அவர்களுக்குக் கொடைகளை வழங்குகிறது என்ற வரிசையில் பழ 8: சீரா 24-இல் ஞானம் தன்னையே விவரிக்கிறது. இதே வரிசை முறை யோவான் நற்செய்தியின் முன்னுரையிலும் காணப்படுகிறது. வார்த்தை இறைவனோடு இருக்கிறார் (1:1); எல்லாம் வார்த்தையால் படைக்கப்படுகின்றன (1:3); வார்த்தை உலகிற்கு வந்தார் (1:9-14); அவர் இறைவனின் மக்களாகும் உரிமை, அருள் மற்றும் உண்மையைக் கொண்டு வந்தார் (1:12-18). ஆனால இரண்டிற்கும் அடிப்படையில் வேறுபாடு உண்டு. பழைய ஏற்பாட்டு ஞானம் உருவகமாக விவரிக்கப்படும்போது, நற்செய்தி உண்மை நிலையை விவரிக்கிறது.

யோவா 6-இல் வாழ்வின் அப்பம் பற்றிய அறவுரை பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களை நினைவுபடுத்துகிறது. அப்பம் பலுகுதல் அருஞ்செயலுக்கு இயேசு அளிக்கும் விளக்கம், ஞானம் 16:20-26இல் ''மன்னா'' அருஞ்செயலுக்கு விளக்கம் அளிப்பதையே நினைவுபடுத்துகிறது. இரண்டிலும் விண்ணிவிருந்து வரும் அப்பம், மேலிருந்து அனுப்பப்படும் இறைவார்த்தையே. அதை விசுவாசிகள் இறையூட்ட உணவாகப் பெறுகின்றனர். இது, விண்ணிலிருந்து வரும் அப்பத்தை வெறும் உடல் உணவாகப் புரிந்து கொள்வதிலிருந்து வேறுபடுத்துகிறது. மேலும் ஞானம் அளிக்கும் விருந்து (பழ 9; சீரா 24:18-21; 15:3) யோவானில் கிறிஸ்து அளிக்கும் உணவுக்கு நெருங்கிய தொடர்புடையதாகும். மேலும் கானாவூர் நிகழ்ச்சியுரையிலும் ஞானம் அளிக்கும் விருந்தின் அப்பமும் இரசமும் யோவானின் அடையாள இயலுக்குப் பின்னணியாகிறது.

இந்த நற்செய்தியில் வார்த்தையின் ஆற்றல் மரணம், உயிர்ப்பு, ஆவியை அனுப்புதல் உட்பட்ட இயேசுவின் வரலாற்றோடு ஒன்றாகிறது. இது ஞானத்தின் கிறிஸ்து இயல் மாற்றமாகும். அதாவது, இயேசுவின் செய்தியின் பொருளடக்கம் - இயேசுவும் அவர் தந்தையிடமிருந்து அனுப்பப்பட்டதும் - ஆகும்.

9. *முடிவுரை:* விவிலியத்தில் ஞானம் என்ற கருத்துபழைய ஏற்பாட்டு அறிவர்களிடையே தோன்றி, புதிய ஏற்பாட்டில் வளர்ச்சி பெற்று நிறைவு பெறுகிறது. பழைய ஏற்பாட்டில் உருவகமாக ஆட்தன்மைப்படுத்தப்படும் ஞானம், புதிய ஏற்பாட்டில் இறைமகன் இயேசு கிறிஸ்துவில் மனு உரு எடுத்து மனிதர்களிடையே தங்குகிறது. பழைய ஏற்பாட்டில் ஞானம் பற்றிக் கூறப்படுபவையெல்லாம் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. இது, பவுல் கிறிஸ்துவே 'கடவுளின் வல்லமையும் கடவுளின் ஞானமுமானவர்'' என்று கூறுவதில் உச்சநிலை அடைகிறது (1 கொரி 1:24). அவரே மனிதர்க்கு ஞானத்தின் ஊற்றாவார் (1:30). கிறிஸ்து ஒரே சமயத்தில் உலகில் தோன்றியுள்ள ஞானமும் மனிதரிடையே

பிரசன்னமாயிருக்கும் மனுமகனுமாவார் (மத் 11:19).

ஞானஸ்நானம் (BAPTISM)

காண்க: திருமுழுக்கு.

ஞானம் (WISDOM)

I. பழங்கால மேற்காசிய நாட்டுப் பண்பாடு களிலெல்லாம், ஞானத்தை நாடித் தேடும் முயற்சி காணக்கிடக்கிறது. எகிப்து, மெச பொத்தாமியா, சீனா, சப்பான், இந்தியா, போன்ற நாடுகளின் பழங்கால இலக்கியத் திலே ஞானத்தைப்பற்றிய தொகுப்புகள் பல இருப்பதை நாம் அறிவோம். கிரேக்க நாட் டில் ஞானிகள் ஏழுபேர் இருந்தனர் என்பது பாரம்பரியம். இந்த ஞானம் செயல் முறை யான நோக்கம் கொண்டது. தொடக்கத்தில் மனிதன் முன்மதியோடும் திறமையோடும் நடந்து, வாழ்க்கையில் எப்படி வெற்றி காண லாம் என்று விளக்குவதே இந்த ஞானத்தின் நோக்கம். இது உலகையும் மனிதனையும் நடைமுறையில் ஆராய்ந்தது; மனித நடத் தையையும் ஒழுக்கத்தையும் சீராக, பல வேளைகளில் சமயக் கண்ணோட்டத்தில், வகுத்து முறைப்படுத்தியது. இதன் விளை வாய், எகிப்து நாட்டுச் சட்டதிட்டங்களைப் போல், பாரத மண்ணிலும் குறள், மனு நியதிகள் போன்ற ஒழுக்க நெறிநூல்கள் அரும்பின. பிறகு, உலகு, மனிதன், இறை வன் என்பவற்றின் செம்பொருளை ஞானி கள் ஆராயத் தொடங்கினர். இப்படித்தான், கிரேக்க நாட்டில்போல, நம் நாட்டிலும் வேதங்கள் எனும் பக்திப் பாடல்களோடும் சமய ஒழுக்க ஆசாரங்களோடும், உபநிடதங் கள் எனும் தத்துவவியல் கருத்தோட்டங்க ளும் தோன்றி, இந்திய ஞானத்தின் முக்கிய கூறாக அமைந்துவிட்டன. அவ்வமயம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்றவை சிறுமுளைபோல் மட்டுமே இருந்தன; மெய் ஞானமே அக்கால நாகரீக மேம்பாடாய் விளங்கியது. பழங்கால மனித உலக வாழ்க்கை இயல் இதுவே.

விவிலிய வெளிப்பாட்டில், இறை வார்த்தை ஞானத்தின் உரு எடுக்கிறது. இது ஒரு முக்கிய நிகழ்ச்சி. ஆனால், இதன் பொருளைச் சரியாய் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வெளிப்பாடு வளர்ந்து ஒரு கட்டத்தில் மனித இன நலக் கோட்பாடாக மாற்றம் கொள்வதில்லை; மாறாக, இறை யூக்கம் பெற்ற இஞ்ஞானம், சிறந்தமனித ஞானம் அனைத்தையும் திரட்டித் தன்னோடு இணைத்துக் கொள்கிறது; ஆயினும் தன் தனி இயல்பை ஒருபோதும் இழப்ப தில்லை. பழைய ஏற்பாட்டிலேயே இவ் வுண்மை ஆங்குமங்கும் மின்னுகின்றது; புதிய ஏற்பாட்டிலோ இது தெளிவாய்ப் பளிச்சிடுகின்றது.

II. பழைய ஏற்பாடு

1. மனித ஞானம்: இறைவனுக்கேற்ற ஞானம்:

அ. இஸ்ரயேலரிடை ஞானம் விதைக்கப் படுகிறது: யோசேப்பு (ஆதி 41:39 தொ) மோசே (யாத் 2:10; காண். அ.ப. 7:21 தொ) என்பவர்களைத் தவிர்த்து, இஸ்ரயேலர் கானான் நாட்டில் வசிக்கத் தொடங்கு முன்பு, மேற்காசிய ஞானத்தோடு அவர் களுக்கு எவ்விதத் தொடர்பும் இருந்ததாகக் காணோம். பிறகும் அரசர்கள் காலத்தில் தான் மனித உலக வாழ்க்கை இயலாக அது அரும்புகிறது. சாலமோன்தான் இதற்குப் புதுமுகம் கொடுக்கிறார்: ''கீழை நாட்டினர் அனைவரின் ஞானத்தையும் எகிப் தியரின் எல்லாவகை ஞானத்தையும்விட, சாலமோனின் ஞானம் சிறந்து விளங்கிற்று'' (1 அர 5:10-34; காண். 10:6தொ. 23 தொ). அவரது ஆளுமைப் பண்பாடும், நல்லாட்சிக் கலையும் இங்குக் குறிப்பிடப்படுகின்றன. விசுவாசிகளுக்கு இது ஒரு புதிர் அன்று. சாலமோனின் வேண்டலைக் கேட்டு இறை வன் அவருக்கு அளித்த ஒரு கொடை இது என அவர்கள் உணர்கின்றனர் (1 அர 3:6-14). இது நன்னம்பிக்கையான பாராட்டாகும். இதன் எதிரொலி மற்ற இடங்களிலும் காணப்படுகிறது. அரசவை அறிஞர்கள் பல் வேறு முயற்சியால் தம் அறிவுத்திறன்களை வளர்த்துக் கொள்கின்றனர் (பழ 10-22; 25-29: மூலக் கருத்துக்கள்). ஆனால், யோசேப்பு போன்றோர் கடவுளிடமிருந்து ஞானக்

கொடையைப் பெற்றதால் சிறந்த முறையில் ஆட்சிசெய்தனர் எனத் திருநூல் வரலாற்று ஆசிரியர் அன்னாரைப் போற்றுகின்றனர் (ஆதி 41;47). இது போலவே, சாலமோனையும் உயர்த்திப் பேசுகின்றனர்.

ஆ. எத்தகைய ஞானம்: பல்வகை ஞானம் உள்ளது. ஆனால், இறைவனிடமிருந்து வருவதே உண்மையான ஞானம். ''நன்மை தீமையைப் பகுத்தறியக் கூடிய ஞானம் நிறைந்த உள்ளத்தைக்'' (1 அர 3:9) கடவுள் தான் அருள்பவர். ஆனால், ஆதிப்பெற்றோரைப்போல, மனிதர் அனைவரும் தம் சொந்த சக்தியாலேயே நன்மை தீமையை அறிந்து கொள்ளும் இந்தத் தெய்வீகப் பண்பை அபகரித்துக் கொள்ளச் (ஆதி 3:5 தொ) சோதிக்கப்படுகின்றனர். அலகையின் கபடக் கவர்ச்சியால் இப்போலி ஞானத்தைப் பலர் நாடுகின்றனர் (ஆதி 3:1). மனிதக் கண்ணோட்டத்தில் அனைத்தையும் தீர்ப்பிட்டு ஆண்டவரின் திருச்சட்டத்தைப் பொய்யாக்கும் மறைநூல் அறிஞரின் ஞானம் இத்தகையதே (எரே 8;8). வெறும் மனிதப் போக்கில் ஆலோசனை கூறும் அரசரவையின் ஞானமும் இத்தகையதே (காண். எசா 29:15 தொ). இந்த ஞானத்திற்கு எதிராய் இறைவாக்கினர் எழுகின்றனர். ''தங்கள் பார்வையில் ஞானிகள் என்றும் தங்கள் கணிப்பில் கூர்மதிவாய்ந்தவர்கள் என்றும் தங்களைத் தாங்களே கருதுபவர்களுக்கு ஐயோ கேடு!'' (எசா 5:21). இத்தகைய ஞானிகளின் ஞானத்தை இறைவன் திண்ணமாய் அழித்துவிடுவார் (29:14). ஆண்டவரின் வார்த்தையை ஏளனம் செய்துபுறக்கணித்த இவர்கள் வெட்கி வெருண்டு போவர்; திகைத்துத் திண்டாடுவர் (எரே 8:9). ஏனெனில், அந்தத் தேவ வார்த்தையே மெய்யான ஞானத்தின் ஒரே ஊற்று. தவறிப்போனவர்களும் தண்டனைக்குப்பிறகு இந்த ஞானத்தைக் கண்டுபிடிப்பார்கள் (எசா 29:24). தாவீதின் மகனாய் இறுதிக்காலத்தில் ஆள இருக்கும் அரசர் இந்த ஞானத்தின் நிறைவைப் பெற்றிருப்பார்; தம்மேல் தங்கியிருக்கும் யாவேயின் ஆவியிடமிருந்து இதைக் கொண்டிருப்பார் (11:2). இங்ஙனம், இறைவாக்கினர் போதனையில், தானே போதும் எனப் பசப்பும் வெறும் மனித அறிவு அறவே ஒதுக்கப்படுகிறது; கடவுளிடமிருந்து மட்டுமே மனிதனின் மீட்பு எதிர்பார்க்கப்படுகிறது.

இ. உண்மை ஞானம் நோக்கி: எருசலேமின் அழிவு இறைவாக்கினரின் எச்சரிக்கைகளை உறுதிப்படுத்துகிறது. அரசவை ஆலோசகரின் போலி ஞானம் நாட்டைப் பெரும் விபத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அவ்வமயம் தவறு எனும் மஞ்சு மறையவே, உண்மை ஞானஒளி இஸ்ராயேலரிடை பரவத் தொடங்குகிறது. இதற்கு அடிப்படையாக இறைச் சட்டம் இருக்கும்; இது இஸ்ரயேலரை மட்டும் ஞானிகளும் அறிவாளிகளுமாய் இருக்கச் செய்யும் (உப 4:6); தெய்வ பயம் ஞானத்தின் தொடக்கமும் நிறைவும் ஆகும் (பழ 9:10; சீரா 1:14-18; 19:18). இந்தச் சமய ஞான முன்னோக்கில், திருநூல் ஆசிரியர்கள் மனிதச் சிந்தனையில் விளைந்த நல்லவை அனைத்தையும் ஏற்றுத் தொகுத்துக் கொள்கின்றனர். நாடு கடத்தலுக்குப்பின் வரையப்பட்ட அல்லது வகுத்துத் தொகுக்கப்பட்ட ஞானம் பற்றிய இலக்கிய நூல்கள் இத்தகைய முயற்சியின் கனிகளாகும். ஆணவப் பாசாங்குகள் நீக்கப்படுகின்றன; மனிதப்பற்றுக் கோட்பாடு விசுவாச ஒளியில் பூத்துப் பொலிகிறது.

2. ஞானத்தின் வண்ணக் கூறுகள்:

அ. நன்கு வாழும் கலை: இயற்கைப் பொருள்களை விவிலிய ஞானி ஆர்வமுடன் ஆராய்கிறார் (1 அர 5:13); அவற்றைக் கண்டு வியப்பில் மூழ்குகிறார். அவற்றிலே எல்லாம் வல்ல இறைவனின் கரத்தைக் காண அவரது விசுவாசம் ஒளி வீசுகிறது (யோபு 36:22-37:18; 38-41; சீரா 42:15-43:33). ஆயினும், எதற்கும் மேலாக, உண்மையான மகிழ்வு பெறுவதற்கான வாழ்க்கை நெறியை அறிந்துகொள்ளத் தேடுகிறார். ஒவ்வொரு துறையிலும் சிறப்புறும் எவருமே ஞானி என அழைக்கப்பெறும் தகுதி பெறுகிறார் (எசா 40:20; எரே 9:16; 1 நாள் 22:15); நன்கு வாழும் கலையில் வல்லுநரே

மேலான முறையில் ஞானி ஆவர். தம்மைச் சூழும் உலகை மருட்சி எதுவுமின்றி இவர் ஊடுருவுகிறார்; அதன் குறைபாடுகளைத் தெளிவாய்க் காண்கிறார். ஆயினும் அவற்றை இவர் ஏற்பதில்லை (உ.ம். பழ *13:7; சீரா 13:21* தொ). உளவியல் அறிஞர் என்ற அளவில் அவர் மனித இதயத்தில் மறைந்திருப்பதை, மெய் மகிழ்ச்சியளிப்பது அல்லது துன்பம் தருவது எது என்பதை உணர்கிறார் (உ.ம்.பழ *13:12; 14:13;* திருவுரை *7:2-6*). ஆயினும், வெறும் பார்வையாளராய்ப் பிறரிடமிருந்து ஒதுங்கி விடுவதில்லை இவர். இயல்பாகவே ஆசிரியரான இவர், தம் சீடர்களுக்கு முன்மதி, ஆசையடக்கம், உழைப்பு, தாழ்ச்சி, சீரான பண்பு, பிரித்துணர்தல், வாக்கு நாணயம் முதலியன பற்றிய ஒழுங்குத் திட்டங்கள் வகுத்தளிக்கிறார். பத்துக் கட்டளைகள் எல்லாம் அவரது நடைமுறை ஆலோசனையில் திகழ்கின்றன.

உபாகமத்திலும் இறைவாக்குரைகளிலும் காணக்கிடக்கின்ற சமூக உணர்வு தானம் கொடுக்கவும் (*சீர 7:32* தொ; *தோபி 4:7-11*), நீதியை மதிக்கவும் (*பழ 11:1; 17:15*), ஏழைகளை நேசிக்கவும் (*பழ 14:31; 17:5; சீரா 4:1-10*) மக்களுக்கு அறவுரை கூறவும் இவரைத் தூண்டுகிறது. கூடியமட்டும் அனுபவத்தைச் சுட்டிக் காட்டித் தம் ஆலோசனைகள் சரியானவையே என வலியுறுத்துகிறார். எனினும் அவரது அடித்தளத்தூண்டுதல் அனுபவத்தைவிட உயர்ந்த விண்ணக ஊற்றிலிருந்து சுரக்கிறது. பல தடுமாற்ற முயற்சிகளுக்குப்பின் தாம் ஞானம் பெற்றதும் அதைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளப் பெரிதும் விரும்புகிறார் (*சீரா 51:13-20*). மனந்தளராது ஞானத்தின் செயல்முறைப் பயிற்சியில் நிலைத்திருந்து வெற்றி காணச் சீடர்களை அழைக்கிறார் (*சீரா 6:18-37*).

ஆ. வாழ்க்கை பற்றிய சிந்தனை: மனிதனது இயல்பு, திறன்கள் முதலியவை பற்றிய மெய்யியல் நுண்ணாய்வை இஸ்ரயேல் ஞானியிடம் நாம் எதிர்பார்த்தலாகாது. எனினும், தம் வாழ்க்கைச் சூழ்நிலைகளை அவர் முனைப்பாக உணர்கிறார்; தம் வாழ்க்கை நியதியையும் நோக்கத்தையும் கவனமாய் அலசிப் பார்க்கிறார். பொதுவாக, இறைவாக்கினர், இறைமக்களாம் இஸ்ரயேல் இனத்தாரின் நிலைமையை விளக்குவதில் முதன்மையாய்க் கவனம் செலுத்துகின்றனர்; தனி ஆள் பொறுப்பை வலியுறுத்தும் எசேக்கியேலின் இறைவாக்கு (*எசே 14:12-20; 18;33:10-20*) இதற்கு ஒரு விதிவிலக்காகவே உள்ளது. ஞானிகளோ, உடன்படிக்கை மக்களின் பொது நலத்தை மறந்துவிடவில்லை (*சீரா 44-50; 36:1-17; ஞான 10-12; 15-19*); எனினும், தனி ஆள் வாழ்க்கைபற்றி முதன்மையாக ஆர்வம் காட்டுகின்றனர். மனிதனின் உயர்வையும் (*சீரா 16:24-17:14*), இழிவையும் (*சீரா 40:1-11*), தனிமையையும் (*யோபு 6:11-30; 19:13-22*), துன்புறும்போதும் (*யோபு 7:16*), சாகும்போதும் (திருவுரை *3; சீரா 41:1-4*) அவன் படும் அவதியையும், இம்மை வாழ்க்கை தரும் வெறுமையையும் (*யோபு 14:1-12; 17;* திருவுரை *1:4-8; சீரா 18:8-14*) மறைந்தவராய் (*யோபு 23; 30:20-23*) அல்லது புதிர் போன்றவராய்த் தோன்றும் (*யோபு 10*) இறைவன் திருமுன் அவன் கொள்ளும் மன உலைவையும் ஞானிகள் நன்கு உணர்த்துகின்றனர். இம்முன்னோக்கில் சன்மானப் பிரச்சனை கருதப்படுகிறது; இல்லையென்றால் பரம்பரைக் கருத்துப்படி, நீதியே இல்லை என்ற முடிவு பெறும் (*யோபு 9:22-24; 21:7-26;* திருவுரை *7:15; 8:14; 9:2*தொ); ஆனால், ஏமாற்றம் அளிக்கும் இவ்வுலகச் சன்மானத்துக்கு அப்பால், உயிர்ப்பிலும் (*தானி 12:2*தொ) நித்திய வாழ்விலும் (*ஞான 5:15*) விசுவாச ஒளியில் இச்சிக்கலுக்குத் தீர்வுகாண நீண்டகால முயற்சி தேவைப்படும்.

இ. ஞானமும் வெளிப்பாடும்: தாம் தேவ தூண்டுதலால் உரைக்கிறோம் என்ற உணர்வோடு இறைவாக்கினர் கூறும் இறைவாக்கு வேறு; மனித அனுபவத்தையும் சிந்தனையையும் முக்கியமாய் வைத்துக் கற்பிக்கும் ஞானியின் போதனை வேறு. ஆயினும், திருநூல்களைத் தீரத் தியானித்துச் சிக்கல்களுக்குத் தாம் தெளிந்த தீர்வுகளையும் தம் போதனையோடு ஞானி இணைப்பதில்

வியப்பேதும் இல்லை (காண் சீரா 39:11 தொ). விரைவிலே, இறைவாக்கும் ஞானமும் வருங்கால மறைச்செய்திகளை வெளிப்படுத்த காட்சி இலக்கியப் பாணியில் இணைக்கப்பட்டன. தானியேல் இறை பேருண்மைகளை வெளிப்படுத்துவது (தானி 2:28 தொ. 47) வெறும் மனித அறிவால் அன்று (2:30), அவரில் தங்கும் இறை ஆசி அவருக்கு உயர் ஞானத்தை அருள்வதால்தான் (5:11.14). முன்னைய இஸ்ரயேலர் மரபில் ஏற்கெனவே சிறிது நாம் காண்பது போல (காண். ஆதி 41:38 தொ), பழைய ஏற்பாட்டுச் சமய ஞானம் இங்குச் சிறப்புப் பண்பு பெறுகிறது; இறை ஏவுதல் பெறும் ஞானி ஓர் இறைவாக்கினருக்குச் சமமாகத் தோன்றுகிறார்.

3. இறைவனின் ஞானம்:

அ. ஆட்தன்மைப்பட்ட ஞானம்: நாடு கடத்தலுக்குப்பின் வந்த ஆசிரியர்களிடையே ஞானம் சிறப்பிடம் பெறுகிறது; அதைத் தெளிவாய் முன்னணியில் வைக்கும் பொருட்டுப் பலர் அதற்கு ஆட்தன்மை கொடுத்து மகிழ்கின்றனர் (பழ 14:1). ஆவலோடு பலர் பின்தொடரும் அன்பினள் அவள் (சீரா 14:22தொ). தாங்கிக்காக்கும் தாய் அவள் (14:26). கவனித்துப் பேணும் மனைவி (15:2தொ). பரிவோடு வரவேற்று விருந்தளிக்கும் இல்லத் தலைவி அவள் (பழ 9:1-6. 13-18).

ஆ. இறை ஞானம்: ஞானத்தை இவ்விதம் ஒரு பெண்ணாக விவாதிப்பதை வெறும் உருவகமாக மட்டும் புரிந்து கொள்ளக் கூடாது. மனித ஞானம் இறைவனிடமிருந்து வருகிறது. அவர்தான் ஒப்புயர்வற்ற ஞானி ஆவர்; தாம் விரும்புவோர்க்கு ஞானத்தைப் பகிர்ந்தளிக்க வல்லவர். எனவே, இறைவனில் ஞானம், ஓர் ஊற்றாய் இருப்பதாகவும், அதிலிருந்து மனித ஞானமெல்லாம் சுரப்பதாகவும் திருநூல் ஆசிரியர் காண்கின்றனர். நித்தியத்திலிருந்து நித்தியத்துக்கும் இறைவனில் இஞ்ஞானம் நிலைத்திருக்கிறது (பழ 8:22-26; சீரா 24:9). உன்னதரின் திருவாயிலிருந்து இது அவரது மூச்சாக அல்லது வார்த்தையாகப் புறப்படுகிறது (சீரா 24:3). இது தேவ வல்லமையின் அனற்காற்று, எல்லாம் வல்லவரது மகிமையின் கொந்தளிப்பு, நித்திய ஒளியின் எதிரொளி, இறைச்செயலின் உருப்பளிங்கு, தேவ சிறப்பின் தனிச் சாயல் (ஞான 7:25 தொ). இது விண்ணகத்தில் வாழ்கிறது (சீரா 24:4); இறைவனோடு அரியணையில் அமர்ந்துள்ளது (ஞான 9:4); கடவுளோடு ஒன்றுபட்டு வாழ்கிறது (ஞான 8:3).

இ. ஞானத்தின் செயல்: ஞானம் செயலாற்றல் அற்றதொரு மூலம் அன்று. உலகில் கடவுள் செய்வது அனைத்தோடும் அது தொடர்பு கொண்டதாய் உள்ளது. படைப்பு தொடங்கும் போதிருந்தே இறைவன் திருமுன் ஞானம் விளையாடிக் கொண்டிருந்தது (பழ 8:27-31; காண் 3:19தொ; சீரா 24:5). அன்றிலிருந்து இன்று வரை இயலுலகை இனிதாய் அது ஒழுங்குபடுத்தி வருகிறது (ஞான 8:1). மீட்புவரலாறு முழுவதிலும் இறைவன் ஞானத்தையே தூதாய்ப் பன்முறை உலகுக்கு அனுப்பியுள்ளார். இஸ்ரயேலரிடையே, எருசலேமின் வாழ்வு தரும் மரம்போல அது வேரூன்றி வாழத் தொடங்குகிறது (சீரா 24:7-19); சட்ட வடிவிலே உணரக்கூடிய விதத்தில் காட்சி அளிக்கிறது (சீரா 24:23-34). அப்போதிருந்து மனுமக்களோடுகூட இருந்துமகிழ்கிறது (பழ 8:31; பாரூ 3:37 தொ); உலக வரலாற்றை வழி நடத்தும் இறைபராமரிப்பும் அதுவே (ஞான 10:1-11:4); மனிதருக்கு மீட்புத் தருவதாக உறுதியளிக்கிறது (ஞான 9:18). இறைவாக்கினர் போன்று, கவனமற்றவர்களைக் கண்டித்துத் தீர்ப்பிடுகிறது (பழ 1:20-33). தன் நலன்களால் பலனடையவும் (பழ 8:1-21.32-36), தான் இடும் விருந்தை அமர்ந்து உண்ணவும் (பழ 9:4 தொ; சீரா 24:19-22) பணிவிணக்கம் உள்ளோரை அழைக்கிறது. தம் ஆவியின் வழியாகச் செய்வதுபோல், தம் ஞானத்தின் வழியாகவும் இறைவன் செயலாற்றுகிறார் (காண். ஞான 9:17). எனவே, ஞானத்தைப் பெறுவதும் இறை ஆவிக்குப் பணிவதும் ஒன்றே. புதிய ஏற்பாட்டில் இருப்பதுபோல், ஞானம் இங்கு ஒரு தேவ ஆளாக இன்னும் காட்சி அளிக்கவில்லை; எனினும், ஒரே

கடவுளின் பேருண்மை அடி ஆழத்தைத் தொடுவதாய் உள்ளது; அவரைப்பற்றிய மிகத் துல்லிய வெளிப்பாட்டுக்குத் தயாரிக்கிறது.

ஈ. ஞானத்தின் கொடைகள்: இந்த ஞானம் மனிதருக்கு ஓர் ஈடிணையில்லாச் செல்வமாய் இருப்பதில் வியப்பொன்றுமில்லை (ஞான 7:7-14). ஞானமே இறைவனின் அருட் கொடை (8:21). எல்லா நலன்களையும் வழங்குவதும் அதுவே (பழ 8:21; ஞான 7:11); வாழவும் மகிழவும் (பழ 3:13-18; 8:32-36; சீரா 14:25-27), காப்புறுதியும் (பழ 3:21-26), அருளும் மாட்சியும் (4:6தொ), செல்வமும் நீதியும் (8:18தொ), பிற நற்பண்புகளும் (ஞான 8:7 தொ) ஞானம் தரும் கனிகளே. மனிதனோ அதைத் தன்வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ள மறுத்துவிட்டது எப்படி (8:2)? இஞ்ஞானம்தான் மனிதர்களைக் கடவுளின் நண்பர்களாக ஆக்குபவள் (7:27 தொ); அவளோடு நெருங்கிப் பழகுவதும் இறைவனோடு நெருங்கிப் பழகுவதும் ஒன்றே. புதிய ஏற்பாட்டிலே, இஞ்ஞானம் கிறிஸ்து திருமைந்தன், இறைவார்த்தை என்பதோடு ஒன்றாகக் கூறப்படும்போது, இந்தக் கோட்பாடு முழு வெளிப்பாட்டுக்குத் துல்லியமான தயாரிப்பாக அமைகிறது. கிறிஸ்துவோடு இணையும் மனிதன் தேவ ஞானத்தில் பங்கு பெறுகிறான்; கடவுளோடு நெருங்கிப் பழகுவதற்கு அறிமுகம் பெறுவதாய் உணர்கிறான்.

III. புதிய ஏற்பாடு

1. இயேசுவும் ஞானமும்.

அ. இயேசு: ஞானத்தின் ஆசிரியர்: தம்மோடு வாழ்ந்தவர்களுக்கு இயேசு பல் திறக்கூட்டொருமைக் கோணத்தில் தம்மை வெளிப்படுத்துகிறார். அவர் மனந்திரும்ப அழைக்கும் இறைவாக்கினர், ஆனால் எல்லா இறைவாக்கினரிலும் மேலானவர் (மத் 12:41); மெசியா, ஆனால் மனுமகனின் மாட்சியில் நுழையுமுன் பாடுகள் பல பட்டனுபவிக்க வேண்டிய யாவேயின் ஊழியன் (மாற் 8:29 தொ); ஆசிரியர், ஆனால்மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரத்தோடு போதிப்பவர் (மாற் 1:21தொ). பழைய ஏற்பாட்டு ஞானிகளைப்போல் பெரும்பாலும் இயேசு போதிப்பது கண்கூடு. பழமொழிகள், உவமைகள் போன்றவற்றை அவர்களின் பாணியில் இயேசுவும் கையாளுகிறார். அவர்களைப்போல இயேசுவும் வாழ்க்கை நெறிகளை அறுதியிட்டு வகுத்துக் கொடுக்கிறார் (காண். மத் 5-7). எனினும், மக்கள் ஏமாந்துவிடவில்லை. மாறாக அவரது இணையற்ற ஞானத்தையும் அதை உறுதிப்படுத்திய அவர் ஆற்றிய அருங்குறிகளையும் கண்டு மலைக்கின்றனர் (மாற் 6:2); குழந்தைப் பருவத்திலிருந்தே இயேசுவுக்கு இருந்த ஞானத்தை லூக்கா குறிப்பிடுகிறார் (லூக் 2:40.52). இயேசுவே தம் ஞானத்தைச் சுட்டிக் காட்டுகிறார்: ''தென்னாட்டு அரசி சாலமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். சாலமோனிலும் மேலானது இதோ இங்குள்ளது'' (மத் 12:42 இணை).

ஆ. இயேசு: கடவுளின் ஞானம்: இயேசு தம் பெயராலே தம்மவர்க்குச் செயலளவில் ஞானத்தை அருளுவதாக வாக்களிக்கிறார் (லூக் 21:15). விசுவாசமில்லாத மக்கள் அவரைத் தப்பாய்ப் புரிந்து கொள்கின்றனர். கடவுளுக்குப் பணிபவரோ அவரை உளமார ஏற்றுக் கொள்கின்றனர். எனவேதான் இயேசு வியப்பான முடிவு கூறுகிறார்: ''ஞானம் மெய் என்பதற்கு அதை ஏற்றுக் கொண்ட மக்களே'' (லூக் 7:35) அல்லது ''அதன் செயல்களே'' (மத் 11:19) சான்று. பழைய ஏற்பாட்டில் ஞானம் பேசுவது போல் இங்கு இயேசு பேசுவதால் அவரது மறையுண்மை இன்னும் ஆழம் பெறுகிறது: ''என்னிடம் வாருங்கள்.....'' (மத் 11:28 தொ; காண் சீரா 24:19); ''என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது, என்னில் விசுவாசம் கொள்பவனுக்கு என்றும் தாகமே இராது'' (யோவா 6:35; காண் 4:14; 7:37; எசா 55:1 தொ; பழ 9:1.6; சீரா 24:19-22). இயேசு வெறும் ஞானிகளில் ஒருவராயிருந்தால் இப்படியெல்லாம் கூறியிருக்க முடியாது. உண்மையில், திருமைந்தனின் ஆட்தன்மைப் பேருண்மை இவற்றில் மின்னுகிறது (காண் மத் 11:25 தொ. இணை). இந்தப் பேருண்

மையை அப்போஸ்தலர்கள் தம் திருமுகங்களில் தெளிவாய் விளக்குவதைக் காண்கிறோம். ''கடவுளின் ஞானமானவர்'' இயேசு என்கின்றனர் (1 கொரி 1:24.30). மனிதர்களுக்கு ஞானத்தை வழங்குபவர் என்பதனால் மட்டுமன்று, அவரே ஞானமாய் இருப்பதால் தான்; இறைத் தந்தையோடு காலத்திற்கு முன்பே என்றும் அவர் இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்ட, பல்லாண்டுகட்குமுன் தேவ ஞானத்தைப் பற்றி விவிலியம் கூறும் சொற்களையே பயன்படுத்துகின்றனர்: ''அவர் படைப்புகளுக்கெல்லாம் தலைப்பேறானவர்; அவரில் அனைத்தும் உண்டாயிற்று'' (கொலோ 1:15 தொ; காண் பழ 8:22-31); கடவுளது மாட்சிமையின் சுடரொளியாகவும் அவரது உள்ளியல்பின் சாயலாகவும் விளங்குபவர் இவர் (எபி 1:3; காண். ஞான 7:25தொ). இத்திருமைந்தன் தந்தையின் வார்த்தையாய் இருப்பதுபோல (யோவா 1:1தொ) அவருடைய ஞானமாகவும் இருக்கிறார். முற்காலத்தில், ஆள்மயமான இஞ்ஞானம் கடவுளில் மறைந்திருந்தார். ஆயினும் இயலுலகை அவரே ஆண்டார்; வரலாற்றை வழி நடத்தினார்; சட்டத்தின் வழியாகவும் ஞானிகளின் போதனை வழியாகவும் மறைமுகமாகத் தம்மை வெளிப்படுத்தினார். இக்காலத்திலோ, இயேசு கிறிஸ்துவில் நேரடியாக அவர் வெளியிடப்படுகிறார். ஆகவே, பழைய ஏற்பாட்டில் ஞானத்தைப் பற்றிப் பேசும் பாடப்பகுதிகள் எல்லாம் இயேசுவில் வரைநிலையான பொருளைப் பெறுகின்றன.

2. உலகின் ஞானமும் கிறிஸ்துவ ஞானமும்:

அ. உலகின் ஞானம் கண்டிக்கப்படுகிறது: ஞானம் ஒப்புயர்வற்ற முறையில் இயேசுவிலே வெளிப்பட்ட அக்காலத்தில் இறைவாக்கினர் ஏற்கனவே மக்களுக்கு முன்னுரைத்திருந்த நிகழ்ச்சிகளின் கோவை அப்படியே நடைபெறலாயிற்று. உயிருள்ள கடவுளை ஏற்காது மக்கள் தங்கள் வீணான சிந்தனைகளில் அறிவிழந்தனர்; தங்களை ஞானிகள் எனப்பிதற்றும் அவர்கள் கடைந்தெடுத்த மடையர்கள் ஆயினர் (உரோ 1:21 தொ; 1 கொரி 1:21); இந்த மடமையின் மூர்க்கத்தில் மாட்சிமைக்க ஆண்டவரையே சிலுவையில் அறைந்தனர் (1 கொரி 2:8). எனவே, கடவுள் இந்த ஞானிகளின் ஞானத்தை அழித்தார் (1 கொரி 1:19 தொ; 3:19 தொ). இந்த ஞானம் ''மண்ணுலகையே சார்ந்தது; கீழ்நாட்டத்தைப் பின்பற்றுவது; பேய்த் தன்மை வாய்ந்தது'' (யாக் 3:15). ஆகவே, சிலுவையில் மடமையாலேயே இவ்வுலகியல் ஞானத்தைத் தகர்த்து உலகை மீட்கக் கடவுள் திட்டமிட்டார் (1 கொரி 1:17-25). இங்ஙனம், மீட்பின் நற்செய்தி அறிவிக்கப்படும்போது, வெறும் மனித ஞானம், கலாஞ்சாரம், கவர்ச்சிச் சொற்கள் ஆகியவற்றிலிருந்து வரும் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, ஆவியானவரும் அவரது வல்லமையும் தரும் சிலுவை 'மடமை'யான உயர் ஞானத்தை மக்கள் ஏற்கக் கூடுமாய் ஆனது.

ஆ. மெய்யான ஞானம்: இப்படிப் புதிரான முறையில் மெய்ஞ்ஞானம் வெளியிடப்படுகிறது. ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் அதை மறைத்துச் சிறுவர்களுக்குத் தந்தை வெளிப்படுத்துகிறார் (மத் 11:25); ஆணவ ஞானிகளை நாணச் செய்ய, மடமை என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்துகொண்டார் (1 கொரி 1:27); தெய்வீக ஞானமாக அதை ஆக்கிக் கொண்டார் (3:18). இந்தக் கிறிஸ்துவ ஞானம், வெறும் மனித முயற்சியால் கிட்டாது; இறைத்தந்தை வெளிப்படுத்தினால்தான் கிட்டும் (மத் 11:25 தொ). தன்னிலே இது தெய்வீகமானது, மறைபொருள் செறிந்தது; மறைத்து வைக்கப்பட்டது; வெறும் மனித ஆற்றலால் அளந்தறியப்படாதது (1 கொரி 2:7தொ; உரோ 11:32 தொ; கொலோ 2:3); பிறகு மீட்பு வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்டது (எபே 3:10). எனினும், தேவ ஆவிக்குப் பணிவுடையவர்களே, அந்த ஆவியினால் மட்டுமே, இந்த ஞானத்தைப் பெறக்கூடும் (1 கொரி 2:10-16; 12:8; எபே 1:17).

3. கிறிஸ்துவ ஞானத்தின் கூறுகள்:

அ. ஞானமும் வெளிப்பாடும்: மேலே நாம் விவரித்த கிறிஸ்தவ ஞானம் யூதர்களின்

வெளிப்பாட்டோடு தெளிவான தொடர்பு கொண்டுள்ளது. முதல் நிலையில் அது ஒரு வாழ்க்கை நெறியன்று. மாறாக, இறைப் பேருண்மையின் வெளிப்பாடு அது (1 கொரி 2: 6 தொ). விசுவாசிகளுக்கு இறைவனிட மிருந்து பவுல் மன்றாடும் சமய அறிவின் உச்சகட்டம் அது (கொலோ 1:9). ''ஆவியா னவர் கற்பிக்கும் சொற்களால்'' (1 கொரி 2:13) விசுவாசிகள் ஒருவர் ஒருவருக்குப் போதித்துக் கொள்ளக்கூடிய தேவ அறிவு அது (கொலோ 3:16).

ஆ. ஞானமும் ஒழுக்க நெறியும்: ஆயினும், ஞானத்தின் ஒழுக்கக்கண்ணோட்டம் அறவே விட்டுவிடப்படவில்லை. மாறாக, பழைய ஏற்பாட்டில் தேவ ஞானம் காட்டிய வாழ்க்கை ஒழுங்குகள் எல்லாம், கடவுளின் ஞானமான கிறிஸ்து வெளிப்பாட்டு ஒளியில் முழுப்பொருள் பெறுகின்றன. அப்போஸ்தல ரது உழைப்பின் கனிகள் மட்டுமல்ல (1 கொரி 3:10; 2 பேதுரு 3:15); கிறிஸ்தவனின் அன்றாட அலுவல்களும்தான் (எபே 5:15; கொலோ 4:5). இக்கிறிஸ்தவ வாழ்வில், அறிவிலிகளை அல்ல, விவேகிகளான கன்னி யரை அனைவரும் கண்டு பாவிக்க வேண் டும் (மத் 25:1-12). பழங்கால ஞானிகளின் போதனை போய்விட்டது; புனித பவுல் தம் இறுதிமடல்களில் எடுத்துரைக்கும் நடை முறை ஒழுக்க ஆலோசனைகள் விசுவாசிக ளிடையே இடம் பெறுகின்றன. இது யாக் கோபு திருமுகத்தில் தெள்ளத் தெளிவாய்க் காட்டப்படுகிறது. இதில் அவர் விண்ணி லிருந்து வரும் மெய்ஞ்ஞானத்தைப் போலி ஞானத்திலிருந்து பிரித்துக் காட்டி விளக்கு கிறார் (யாக் 3:13-17). விண்ணிலிருந்து வரும் ஞானம் நிறைவு பெற்ற ஒழுக்க நெறியைச் சுட்டுகிறது. இந்த ஞானத்தின்படி அனைவ ரும் நடக்க முயல வேண்டும்; அதே சமயத் தில் இதைக் கொடையாக இடைவிடாது கடவுளிடம் கேட்டடைய வேண்டும் (யாக் 1:5).

இந்த முன்னோக்கில்தான் மனிதன் கண்ட ஈட்டங்கள், பண்புப் பேறுகள் எல்லாம் கிறிஸ்தவக் கருத்தோடும் வாழ்வோடும் இணங்கி முழுமை பெற முடிகிறது. பாவி யான மனிதன் கிறிஸ்துவில் மறுபிறப்பு அடைய விரும்பினால் அவன் தன் ஆணவ ஞானத்தையும் தன்னையுமே சிலுவையில் அறையுண்டு மடியவைக்க வேண்டும். அப் பொழுதே, அவனது மனித முயற்சி முழுவ தும் புதுப்பொருள் பெறும்; தூய ஆவியின் சுதந்தர நுகர்வில் தன் முழு நிறைவை எய்தி இன்புறுவான்.

த

தகசு (TAHASH - திமிங்கலம் போன்ற கடல் விலங்கு; வளை தோண்டிவாழும் கரடி)

நாகோர், இரயுமா ஆகியோரின் மூன்றாவது மகன் (ஆதி 22:24). தேல் ஏல்-அமர்னா கடிதங்களிலும் மூன்றாவது துத்மோசின் ஏடுகளிலும் தகசி என்ற இடப்பெயராக அடையாளம் காட்டப்படுகிறது. இது தமஸ்குவுக்கு வடக்கில் இருந்திருக்கலாம்.

தகபனகேசு (TAHPANHES - அரசனின் மனைவி) - ஆள்

தாவீது, சாலமோன் காலத்தில் எகிப்தை ஆட்சிசெய்த பெயர் தெரியாத பார்வோனின் மனைவி. இவளது சகோதரி ஏதோமிய அதாதின் மனைவியானாள். அதாது சாலமோனின் எதிரியாவான் (1 அர 11:19). 11:20-இன் படி, தகப்னகேசு தங்கையின் மகன் கெனுபத்தைத் தன் வீட்டில் வளர்த்து வந்தாள்.

தகபனகேசு (TAHPANHES - பனகேசு கோட்டை) - இடம்

கி.மு. 587 / 586-இல் எருசலேம் வீழ்ந்தபின், யூதாவின் ஆளுநன் கெதல்யா கொலை செய்யப்பட்டபின், யூதர்கள் சிலர் யோகனான் என்ற ஒருவரின் தலைமையில் இறைவாக்கினர் எரேமியாவையும் அவரது விருப்பத்திற்கு விரோதமாகக் கூட்டிக் கொண்டு தகபனகேசுக்கு ஓடிவிட்டனர் (எரே 43:5-7). அங்கு நெபுகத்னேசர் எகிப்தை வெற்றி கொள்வார் என்று இறைவாக்கு உரைத்தார். இது 567-இல் எகிப்தின் மேல் நெபுகத்னேசர் படையெடுத்ததைக் குறிக்கலாம். மேலும் எரேமியா அங்குக் குடியேறியிருந்த இஸ்ராயேலரை அவர்களின் சிலை வழிபாட்டுக்காகக் கண்டனம் செய்தார் (44:1-10). தன் பணியின் தொடக்கத்தில் எகிப்தியரிடமிருந்து 604-இல் யூதா பட்ட துன்பங்களைப் பற்றிப் பேசியபோது தகபனகேசைக் குறிப்பிடுகிறார் (2:16). எகிப்தின்மேல் வரவிருக்கும் இறைத்தண்டனையை முன்னறிவிக்கும் போது எசேக்கியேல் தகபனகேசைக் குறிப்பிடுகிறார் (எசே 30:18). தகபனகேசு கிரேக்கர்களால் தாப்னே என்று அழைக்கப்பட்டது.

இது, நைல்நதிக் கழிமுகப்பகுதியின் கிழக்கு எல்லையோரம் அமைந்திருந்த சயிது துறைமுகத்திற்குத் தென்-தென்கிழக்கில் 43 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத் தேல் தெப்னே யாக இருக்கலாம்.

தகரேயா (TAHREA)

மீக்காவின் மகன்; அரசன் சவுலின் வழி வந்தவர் (1 நாள் 9:41). 8:35-இல் இப்பெயரின் மாற்றுவடிவமாகத் தாரேயா என்ற பெயர் வருகிறது.

தக்கமோனியர் (TAHCHEMONITE)

தாவீதின் 'வல்லமையுள்ள மனிதர்களில் ஒருவரான யோசேபு பசபேத்தைக் குறிக்கும் இனப்பெயர் (2 சாமு 23:3). இது அக்கமோனியர் என்ற பெயரை எழுத்தர்கள் பிழையாக எழுதியதின் விளைவாக இருக்கலாம். அப்படியாயின் யோசேபு பசபேத்து என்பதும் ''அக்கமோனியர் யாசொபயாம்'' என்பதும் (1 நாள் 11:11) ஒரே ஆளையே குறிக்கலாம்.

தங்குமிடம் (LODGE)

பொதுவாக இந்தச் சொல் (லாட்ஜ்), தற்காலிகமாகத் தங்குமிடத்தைத் குறிக்கின்றது (யோசு 4:3.8; எசா 10:29; பில 22). உரோமை நகரில் புனித பவுல் தங்கிய இடம் ஏறக்குறைய நிரந்தரமானதாகக் (அ.ப. 28:23) கருதப் படுகிறது. எரேமியா இறைவாக்கினர் கூட பாவ மக்களைவிட்டு நிரந்தரமாக ஒதுங்கி வாழ ஓர் இடத்தை விரும்பியிருக்கக்கூடும் (எரே 9:11). நிரந்தரமாகத் தங்கும் இல்லங்களை வீடு என்ற வார்த்தையால் அழைக்கின்றோம்.

''வெள்ளரித் தோட்டக் குடிசை'' (எசா 1:8) அங்கு உழைத்த வேலையாட்கள் தங்கிய சிறு குடிசைகளைக் குறிக்கலாம். இந்தச் சொல் எசா 24:29-இல் குடிசை என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இது பாழான நிலைக்கு அடையாளமாகும்.

தங்குமெத்து (TANHUMETH - ஆறுதல்)

நெற்றோபா என்ற ஊரைச் சேர்ந்தவர். இவரது மகன் செராயா, இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்ட பிறகு அங்குச் செல்லாமல் தப்பி, பாபிலோனிய ஆளுநன் கெதல்யாவை ஆதரித்து வந்த ஐந்து படைத்தலைவர்களில் ஒருவர். ஆனால் சிறிது காலத்தில் கெதல்யா கொல்லப்பட்டதால் தனது உயிரைக் காத்துக்கொள்ள எகிப்துக்கு ஓடவேண்டியதாயிற்று (2 அர 25:23; எரே 40:8). இலாக்கிசில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரை ஒன்றில் இப்பெயர் காணப்படுகிது.

தசை நார் (SINEW)

யோபு 10:11; எசே 37:6. ஆகிய குறிப்புகள் ஊனையும் அதை மூடும் தோலோடு பிணைத்து உருவம் அளிக்கும் தசை நாளங்களையும் மற்றப் பிணைக்கும் பகுதிகளையும் குறிக்கின்றன.

எசா 48:4-இல் ''உன் கழுத்து இரும்புத் தசைநார்'' என்பது ''வணங்காக் கழுத்தை'' நினைவுபடுத்துகிறது (யாத் 32:9). மக்களின் முரண்டுத்தனத்தை உருவகமாகக் குறிக்கிறது.

யாபோக்கு ஆற்றின் அருகில், மனித உருவில் தோன்றிய இறைவனோடு யாக்கோபு மற்போரிட்டார். தொடைச்சந்து இடம் விலகுமாறு, இறைவன் யாக்கோபின் தொடைச் சந்தைத் தொட்டு யாக்கோபை வெற்றி கொண்டார் (ஆதி 32:25). இந்த விவரிப்பு தான் இஸ்ராயேலர் விலங்குகளின் தொடைச்சந்து தசைநாரை உண்ணாமைக்குக் காரணம் (32:32). இது மிஸ்னா விளக்கத்திலிருந்து வரும் தடையாகும். பக்தியுள்ள யூதர்கள் இன்று இதைக் கடைப்பிடிக்கின்றனர்.

தச்சர் (CARPENTER)

நுகத்தடிகளையும் கலப்பைகளையும், போரடிக்கப் பலகைகளையும், மேசைகளையும், படுக்கைகளையும், பெட்டிகளையும், சவப் பெட்டிகளையும், ஓடங்களையும், வீடுகளையும் செய்பவர். கோவிலிலும், செபக்கூடங்களிலும் வேலை செய்யும் ஒரு தொழிலாளி.

2 சாமு 5:11; 2 அர 12:11; 1 நாள் 14:1; 22:15; 2 நாள் 34:14; எசா 44:13; ஆகியவை இவரை மரவேலைப்பாடுகளோடு தொடர்பு படுத்துகின்றன.

புதிய ஏற்பாட்டுக் கிரேக்க மொழியில் இச்சொல் யோசப்புக்கும் (மத் 13:55) இயேசுவிற்கும் (மாற் 6:3) மட்டும்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு ஏர்களையும், நுகத்தடிகளையும் செய்தாரென்று வேதசாட்சி யூஸ்தீன் கூறுகின்றார். அனேகமாகக் கிரேக்க மொழியில் இச்சொல் 'கட்டுபவன்' என்ற பரந்த பொருளைக் கொண்டிருக்கலாம்.

தச்சன் கல்வீடுகளின் மேல் மாடிகளைக் கட்டினார். நுழைவாயிலில் பழுது பார்ப்பதும் செய்தார். எசா 44:13 தச்சரின் சில பொருட்களின் பட்டியலைக் கொடுக்கின்றது. நூல், கூராணி, உளி, மூலமட்டப் பலகை, கவராயம், பென்சில், இரம்பம், சுத்தி, கோடரி, துளைபோடும் கருவி ஆகியவை சில பொருட்கள். சிலைகள் பல கல்லால் செய்யப்பட்டன; பிற்காலத்தில் இரும்பாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்டன. இஸ்ராயேலர் நாடோடிகளாக இருந்ததால் இவர்கள் அனேகமாக இந்தக் கலையில் பின்தங்கியவர்களாக இருந்திருக்கலாம். ஆகவே தாவீதும், சாலமோனும் தீர் நாட்டுத் தச்சர்களை அழைத்துக் கோயிலையும், அரண்மனைகளையும் கட்டினார்கள் (2 சாமு 5:11; 1 அர 5-7). பிற்காலத்தில் உள்நாட்டுத் தச்சர்களே கோயில் சரிசெய்யும் அளவிற்குத் திறமை பெற்றார்கள் (2 எரே 12:11; 22:16). பணக்காரருடன், இவர்களும் அடிமைத் தளைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் (எரே 24:1). எஸ்ரா பெனிசியத்தச்சர்களை மறுபடியும் வரவழைத்தார் (எஸ் 3:7). பிற்காலப் பழைய ஏற்பாட்டுக் காலங்களில் தச்சர்களின் சங்கங்கள் இருந்தன (1 நாள் 4:14).

கிறிஸ்தவச் சித்திரக்கலை, யூதாவையும் தோமாவையும் மூலைமட்டத்தோடும், சிறிய யாக்கோபுவை இரம்பத்தோடும் சித்தரிக்கிறது.

தச்சர் யோசேப்பின் வரலாறு (JOSEPH, THE CARPENTER, HISTORY OF)

யோசேப்பை மகிமைப்படுத்தும் ஓர் எகிப்திய நூல். இது 4-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு தோன்றி இருக்க வாய்ப்பு இல்லை. மேலும், இது யாக்கோபின் மூல நற்செய்தி நூலுக்கு மிகவும் கடன்பட்டுள்ள ஒன்றாகும். இதன் நோக்கம் யோசேப்பின் வாழ்க்கை, இறப்பு இவரைப் பற்றிய இயேசுவின் புகழ்ச்சி ஆகியவற்றைக் கூறுவதாகும். இயேசு பிற்காலத்தில் ஒலிவ மலையில் தம் சீடர்களுக்கு இந்நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவதாக நூல் அமைந்திருக்கிறது. இதன் முழுமையான வாசகம் போகரிக்கு, அரபிக்கு மொழிகளில் பாதுகாக்கப்பட்டு உள்ளது. இவற்றிலிருந்து இலத்தீன் மொழிபெயர்ப்பு, பதினான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. இதைத் தவிர்த்து சகிதிக்கு வாசகத்தில் சில துணுக்குகளும் உண்டு. ''இருந்தாலும், என்னுடைய கன்னித் தாயே, நீரும்கூட மற்றவர்களைப் போல் அதே முடிவை எதிர் நோக்க வேண்டும்'' என்ற கூற்று இந்நூல் ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்தியது என்று சுட்டுகிறது. ஏனெனில் இந்நூற்றாண்டில் கன்னியின் விண்ணேற்றம் பற்றிய போதனை பரவத் தொடங்கியது.

தடுப்புப் பலகை (GEAR)

அ.ப. 27:17-இல் சொல்லப்பட்டிருப்பது. கப்பல் துறைசார்ந்த சொல். பொருள் தெளிவாக இல்லை. இச்சொல்லுக்குக் கப்பலின் பாய் என்றும், கயிறுகள், பாய்கள், கப்பி போன்ற கப்பல் சார்ந்த பொருட்கள் என்றும் நங்கூரம் என்றும் பொருள் கொள்ளலாம்.

தடி, குண்டாந்தடி, கைத்தண்டு (CLUB)

இஃது ஓர் ஆயுதமாகும். இது குண்டாந்தடி (யோபு 41:21) என்றும், குறுந்தடி (பழ 25:18) என்றும், சம்மட்டி (எரே 51:20) என்றும் பலவாறு குறிக்கப்படும்.

இயேசுவைப் பிடிப்பதற்காகக் கெத்சமனித் தோட்டத்திற்கு யூதாசுடன் வந்த மக்கள் கூட்டத்தினரால், வாள்களோடு கொண்டு வரப்பட்ட ஆயுதங்களில் தடியும் ஒன்றாகும் (மத் 26:47. 55; மாற் 14:43.48; லூக் 22:52).

தடை உத்தரவு (INTERDICT)

இது தடை செய்யும் சட்டத்தை உணர்த்தும் சட்டச்சொல் (தானி 6:7-9.12-14). இது, ''முப்பது நாள்வரையில் அரசரிடமன்றி வேறெந்தத் தெய்வத்திடமோ, மனிதரிடமோ யாதொரு விண்ணப்பமும் செய்கிறதைத்'' தடை செய்து தாரியு எழுத்து மூலம் வெளியிட்ட சட்டத்தைக் குறிக்கிறது. அரசன் மட்டுமே கடவுளாக, கடவுளின் ஒரே உண்மையான பிரதிநிதியாகக் கருதப்பட வேண்டும் என்பதே இச்சட்டத்தின் உட்பொருள். இத்தடையுத்தரவு எல்லாரையும் கட்டுப்படுத்தும். மேதியர், பாரசீகரின் சட்டங்களுக்கேற்ப மாறாதிருப்பதாகும் (தானி 6:8.12; எஸ்த 1:19; 8:8). இத்தகைய கட்டளை, செயல்படுத்த முடியாத ஒன்றாய் இருப்பதோடு, நாம் அறியும் அளவில் பாரசீக அரசர்களின் சமயக் கொள்கை முறைக்கு முழுவதுமே ஒத்துப்போகவில்லை. இது கிரேக்கர் காலத்து, சமயச் சூழ்நிலையைப் பிரதிபலிக்கலாம்.

தடைச்சுவர் (DIVIDING WALL)

ஏரோதின் கோவிலைப்பற்றிய விவரிப்பில் யோசிப்பஸ் மூன்று முழம் உயரமுள்ள ஒரு கற்சுவரைப்பற்றிக் குறிப்பிடுகிறார். அச்சுவரின் இடைவெளிகளில் கிரேக்க மற்றும் இலத்தீன் மொழி அறிவிப்புகள் காணப்பட்டன. அவை, புற இனத்தாரின் முற்றத்திலிருந்து உள்ளே நுழையக் கூடாதென எச்சரித்தன (3-ஆம் அந்தியோக்குவின் காலத்திற்குப் பின், கோவிலைக் காவல் புரியும் சலுகையை யூதர்கள் பெற்றனர்). 1871-ஆம் ஆண்டு 'கிளெர்மோன்ட் கான்னேயு'' என்பவர் அத்தகைய கிரேக்க அறிவிப்புடன் கூடிய கல்லினைக் கோவிலின் வடமுற்றத்தில் கண்டுபிடித்தார். 1935-ஆம் ஆண்டு ஆராமின் கிழக்குச் சரிவில் ஒரு சிறிய பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. யூதரல்லாத எவரும் தடைச்சுவருக்குள்ளோ, புனித தலத்தின் எல்லைக்குள்ளோ நுழையக்கூடாதென அந்த அறிவிப்பு எச்சரித்தது. மீறி நுழைந்து பிடிபட்ட

வர்கள் உடனடியாக மரணதண்டனை விதிக்கப்பட்டனர். எபே 2:14-இல் வரும் ''தடைச் சுவரென நின்ற பகைமையை இயேசு தன் ஊனுடலால் தகர்த்தெறிந்தார்'' எனும் குறிப்பு எருசலேம் ஆலயத்தில் உள்ள தடைச்சுவரைக் குறிப்பதாக விளக்கப்படுகிறது. ஆனால் இத்தகைய குறிப்பு எபேசியரால் புரிந்துகொள்ளக்கூடியது என்பது ஏற்க இயலாத ஒன்று.

தட்டு, தகடு (DISH, PLATE, PLATTER)

உணவுப்பொருட்களை வைத்திருப்பதற்கோ (பழ 19:24; 26:15; மத் 25:23; மாற் 14:20), சாம்பிராணி அல்லது உணவுக் காணிக்கைகளை ஒப்புக் கொடுக்கவோ (யாத் 25:29; 37:16; எண் 4:7; 7:13-14) பயன்படும் பாத்திரவகை.

உருவகமாக, மனாசேயின் பதிதத்திற்கு வினைப்பயன் தண்டனையாக ''ஒருவன் தட்டை உள்ளும் புறமும் துடைத்துத் தூய்மையாக்குவது போல (இறைவன்) எருசலேமைத் துடைத்துத் தூய்மையாக்கப் போவதாக" இறைவாக்கினர் அறிவிக்கிறார் (2 அர 21:13). ஒரு மனிதனின் உள்ளார்ந்த பண்புகளை வளர்ப்பதைப் புறக்கணித்து, ''கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள்'' என்று இயேசு பரிசேயர்களைக் கடிந்து கொள்கிறார் (லூக் 11:39; மத் 23:25-26).

வேதாகம மூலச் சொற்களில் தட்டு என்பதும் கிண்ணம் என்பதும் ஒரே பொருளையே உணர்த்தின. அதன் சூழ்நிலைகளைக் கொண்டே அதன் சரியான பொருளை நாம் கொள்ளவேண்டும். அதாவது அது எந்த இடத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கொண்டு பொருள் அறிய வேண்டும்.

தட்டு என்பதற்கு உலோகத்தகடு என்று பொருள் கூறலாம். தங்கத்தால் வார்க்கப்பட்ட தட்டுகள் யூத மதப் பெரிய குருவின் தலைப்பாகையில் பொருத்தப்பட்டிருந்தன (யாத் 28:36). கிளர்ச்சியாளர்களின் தூபக்கலசங்கள் தகடுகளாக்கப்பட்டுப் பீடத்தை மூடும் தகடுகளாகப் பயன்பட்டன (எண் 17:1-5). இது ஆரோன் வழித்தோன்றியிராதவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமைந்திருந்தது.

திருமுழுக்கு யோவானின் தலையை, ஒரு தட்டில் வைத்து எரோதியாளின் மகளுக்கு அளித்தார் ஏரோது (மத் 14:8,11). இந்தத் தட்டு தங்கத்தாலோ வெள்ளியாலோ செய்யப்பட்டிருக்க வேண்டும். மத் 23:25-26; லூக் 11:39-இல் குறிக்கப்படும் தட்டு மண்ணால் செய்யப்பட்டதாக இருக்கலாம்.

தட்டையான சட்டி (GRIDDLE)

சிறிது பள்ளமுடைய தடித்த மண் சட்டி (லேவி 2:5). தாவீதின் காலத்திற்குப் பிறகு, இரும்பு பொதுப் பழக்கத்திற்கு வந்தபோது, இரும்பாலான தட்டையான சட்டி செய்யப்பட்டது.

தண்ணீர் எடுப்பவர்கள் (DRAWERS OF WATER)

அடிமட்ட ஊழியர்களில் ஒரு குழுவினர். இத்தொழில் சாவுவரைக்கும் நீடிக்கலாம். இந்த அடிமைத் தொழிலை விரும்பியே, கிபயோனியர்களைப்போல எதிரிகளால் தோற்கடிக்கப்படுவதாலே ஏற்றுக்கொள்வர் (யோசு 9:21.23.27). பெண்டுகள் தண்ணீர் எடுப்பது அவர்களின் வீட்டு வேலைகளில் ஒன்று (ஆதி 24:11). இளைஞர்கள் தங்களுடைய மற்ற வேலைகளின் தொடர்பாகத் தண்ணீர் எடுப்பதும் உண்டு (ரூத் 2:9). இத்தொழிலின் தாழ்ந்த நிலை, உடன்படிக்கை மக்களின் பட்டியலில் கடைசியாகக் குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது (உப 29:10).

தண்ணீர் வாயில் (WATER GATE)

நெகேமியாவால் புதுப்பிக்கப்பட்ட எருசலேமின் கிழக்கேயுள்ள ஒரு வாயில் (நெகே 3:26; 12:37). இது அனேகமாகக் கிகோன் நீரூற்றுக்கு மேல் மதில் சுவருக்குள் கட்டப்பட்டது. இந்த வாயிலின் முற்றத்தில்தான் எஸ்ரா அங்கு கூடியிருந்த மக்களுக்குச் சட்டத்தை வாசித்துக் காட்டினார். இங்குதான் கூடாரத் திருவிழாவிற்குக் கூடாரங்கள்

போடப்பட்டன (நெகே 8:1.3.16). கோவி லின் தெற்கேயுள்ள வாயில்களில் இதுவும் ஒன்று என்று வல்லுநர்கள் கருதுகின்றார்கள்.

ததிமோர் (TADMOR - பனைமரம்)

சாலமோனால் பாலஸ்தீனத்திற்கு வடக்கே பாலைவனத்தில் கட்டப்பட்ட ஒரு நகர் (2 நள் 8:4). இதற்கு இணையான பகுதியாகிய 1 அர 9:18-இல் இது தாமார் என்று உள்ளது. ஆனால் இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் பொருள் ஒன்றே. இது சீரியா பாலைவனத்தில் உள்ள புகழ்பெற்ற பல்மைரா என்று கிரேக்கர்களால் அழைக்கப் பட்ட நகரத்துடன் ஒன்றாகக் கருதப்படு கிறது. இது தமஸ்குவிற்கு வடகிழக்கில் 215 கி.மீ. தொலைவிலும் யூப்பிரத்தீசுக்கு 120 கி.மீ.தொலைவிலும் உள்ள முக்கிய நகரமா கும். ஆனால் விவிலிய அறிஞர்கள் எல்லோ ரும் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. சிலர் இது யூதாவின் தென்கிழக்குப் பகுதியில் சாலமோனால் கட்டப்பட்ட ஒரு நகர் என்று கருதுகின்றனர். ஏனெனில் இது சாலமோ னால் பிடிக்கப்பட்ட அமத்சோபாவுக்குப் பின் கொடுக்கப்பட்டுள்ளது (2 நாள் 8:2-6). சாலமோன் மரணத்துக்குப் பின்னும் நாடு பிளவுபட்டபின்னும் அது அரமேயர்களிடம் கைவிடப்பட்டிருக்கலாம்.

ததேயு (THADDAEUS - நெஞ்சு, மார்பு)

இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலர்க ளில் ஒருவர். இவரும், யாக்கோபின் மக னான (அல்லது சகோதரனான) யூதாவும் (8) ஒரே ஆளாகக் கருதப்படுவர் (மத் 10:3; மாற் 3:18; காண்க. லூக் 6:16; யோவா 14:22; அ.ப. 1:13).

ததேயுவின் பணிகள் (THADDAEUS, ACTS OF)

இந்த நூல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இதில் பல ஏதேசின் கட்டுக் கதைகள் காணப்படுகின்றன. இது சீரியக்கு மொழியில் எழுதப்பட்ட ''அத்தே ஏடு'' போல அமைந்துள்ளது. இதில் ததேயுவின் புதுமைகள், மற்றும் இயேசுவுக்கும் அப்கார் என்ற ஏதேசின் மன்னனுக்கும் இடைப்பட்ட கடிதப் போக்குவரத்து கூறப்பட்டுள்ளது. மேலும் இயேசுவின் திருமுகம் பதிக்கப் பட்ட கைக்குட்டைபற்றிய ஒரு செய்தியும் காணப்படுகிறது.

தத்துக்கிளி, வெட்டுக்கிளி (GRASSHOPPER)

தத்துக்கிளி, வெட்டுக்கிளி இவ்விரண்டு சொற்களும் ஒன்றிற்குப் பதிலாக மற் றொன்று பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் வெட்டுக்கிளி கூட்டமாக வந்து அழிக்கும். தத்துக்கிளி தனித்து வாழ்வது; இடம் விட்டு இடம் பெயராது. அதன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், தத்துக் கிளி எல்லா வாழ்க்கைச் சூழ்நிலையிலும், தாவர இனங்களை அழிக்கின்றது (நீதி 6:5; 2 நாள் 7:13; திருவுரை 12:5; ஆமோஸ் 7:1-2; நாகூ 3:15). இது பல்வேறு உருவகங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. ''மண்ணில் வாழ் வோர் வெட்டுக்கிளிபோல்'' சிறுமையான வர் (எசா 40:22). அதேபோலவே இஸ்ரா யேல் ஒற்றர்களும் (எண் 13:34) ஆவர். தாக்கும் போர்க் குதிரைகள் வெட்டுக்கிளி கள் போன்றவையாகும் (யோபு 39:20). வெட்டுக்கிளியைப் போல் இஸ்ராயேலின் எதிரிகள் நிலத்தை வீணடிக்கின்றார்கள் (நீதி 6:5; எரே 46:23; ஆமோஸ் 7:1; நாகூ 3:15). நினிவே நகரத்தை அழித்தவர்கள் வெட்டுக் கிளிகளைப்போல் ஆவார்கள். எவ்வளவு விரைவில் வந்தனரோ அவ்வளவு விரைவில் திரும்பிச் சென்றனர். அவர்கள் மணலைப் போலும் விண்மீன்கள் போலும் எண்ணிக் கையற்றவர்கள் (நீதி 6:5; 7:12; எரே 46:23; நாகூ 3:15.17). உண்ணக்கூடிய நான்கு பூச்சிக ளில் தத்துக்கிளியும் வெட்டுக்கிளியும் சேர்க் கப்படுகின்றன (லேவி 11:22).

தத்னாய் (TATENAI - கொடை)

தாரியு மன்னன் காலத்தில் ஆற்றுக்கு அக் கரையில் பாரசீக ஆளுநராய் இருந்தார் (எஸ் 5:3.6; 6:6.13). தத்னாய் எருசலேம் மீண்டும் கட்டப்படுவதைப் பற்றி அரசன் தாரியுவி டம் கேட்டபோது, அரசன் அவ்வேலை யைத் தடை செய்யாதிருக்கும்படி கட்டளை யிட்டார் (கி.மு. 520).

தந்தம் (IVORY)

பழங்கால உலகத்தைப்போல விவிலியத்திலும், மூலப்பொருளான தந்தமும், தந்தப் பொருட்களும் சொத்துடைமையின், சுக போகத்தின் அடையாளமாக இருந்தன (ஆமோ 6:14); வியாபாரம் செய்யும் பொருளாகவும் (எசே 27:15; திருவெளி 18:12), சொத்தாகவும், கப்பம் கட்டப்படும் பொருள்களில் ஒன்றாகவும் அமைந்தன.

பல பெரிய பாலூட்டும் விலங்குகளின் பற்கள் அல்லது தந்தம் போன்ற பற்களும் பயன்படக் கூடுமானாலும் யானைத் தந்தமே மக்களால் அதிகம் விரும்பப்பட்டது. இது வட சிரியாவிலுள்ள மந்தைகளிலிருந்து அல்லது ஆப்பிரிக்கா, இந்தியா முதலிய நாடுகளிலிருந்து வியாபாரப் பொருளாகவும் பெறப் பட்டது (1 அர 10:22). நிறத்திற்கேற்றவாறு விலை பெற்றது. மரத்தைப் போன்ற அமைப்பும் கடினத்தன்மையும் கொண்டது. தந்தம் நுண்ணிய இழைவேலைகளில் பயன் பட்டது (எசே 27:6). பல அழகுப் பொருட்கள் செய்யப் பயன்பட்டது.

இஸ்ரயேலின் தந்தம் அரசரோடும் மேல் குலத்தாரோடும் சிறப்பாகத் தொடர்புபடுத்தப்படுகிறது. சாலமோன் தந்தத்தினால் பெரியதோர் அரியணை செய்து அதைப் பசும்பொன்னால் வேய்ந்தார் (1 அர 10:19). சிங்க உருவங்கள் கொண்ட இத்தகைய அரியணைகள் சமாரியாவிலும் நிம்ரூதிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆகாபு கட்டிய மாளிகையான ''தந்தவீடு'' (22:39; சங் 45:8; ஆமோ 3:15), வீட்டுப் பொருட்களிலும் கதவுகளிலும் தந்தஇழை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது ஆகியன அவரது ஆட்சியின் பகட்டைக் காட்டுகின்றன. சமாரியாவில் கண்டெடுக்கப்பட்ட கலைப்பொருட்கள், புனித மரங்கள், சன்னலில் ஒரு பெண், தண்ணீர் குடிக்கும் மான் போன்றவை எகிப்திய, சிரிய, பெனிசிய அடையாளங்களைக் கொண்டுள்ளன. இவை யாவும் சீதோனிய மருமகனுக்கு ஏற்ற அலங்காரங்களே (1 அர 16:31). ஆமோசின் கருத்துப்படி, இறைவனையும் ஏழைகளின் தேவைகளையும் புறக்கணித்து வாழும் சோம்பலான சொகுசு வாழ்க்கைக்குத் தந்தம் அடையாளமாகும் (ஆமோ 6:4; 2:6-8).

தந்தச் சிற்பங்கள் பாலஸ்தீனத்தில் மெகிதோவிலும் சமாரியாவிலும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. உன்னத சங்கீத ஆசிரியர் இரு உருவகங்களில் தந்தத்தைப் பயன்படுத்துகிறார். ''காதலனுடைய வயிறு (உடல்) யானைத் தந்தவேலைப்பாடு'' (உ.ச. 5:14). ''காதலியின் கழுத்து தந்தத்தாலான கொத்தளம் போன்றது'' (7:5).

தந்தை (FATHER)

ஒரு குடும்பத்தின் தந்தைக்கு மரியாதையும் கீழ்ப்படிதலும் காட்டப்பட்டன. அவரின் அதிகாரம் ஏற்றுக்கொள்ளப்படும் (ஆதி 22:2 அர 3:27). பிள்ளைகள் தங்கள் தாய் தந்தைக்குக் கீழ்ப்படியும்படி சட்டம் சொல்கிறது (யாத் 20:12; உப 5:16; சீரா 3:1-16). தந்தையைச் சபித்தால் அல்லது அடித்தால் அவன் சாவுத் தண்டனை பெறுவான் (யாத் 21:15.17). தந்தை மகளை அடிமையாக விற்கலாம் (21:7). தன் குடும்பத்தாரை அழிக்கத் தந்தைக்கு உரிமையுண்டு (உப 13:6-19). அந்தக் குடும்பத்தின் சமய ஒழுங்குகளுக்கும் வழிபாட்டிற்கும் விருத்தசேதனம் செய்வதற்கும் தந்தையே பொறுப்பு (ஆதி 17:27). பிள்ளைகளின் உடல் நலத்திற்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் தந்தைதான் பொறுப்பு (உப 1:31; யோபு 1:5; ஒசே 11:1-3). தந்தையே தன் மக்களுக்கு ஆசானும் மகிமையும் ஆவார் (பழ 1:8; 17:6). எனவே அவர் மதிக்கப்பட வேண்டும் (பழ 19:26; 30:11). தந்தை தன் மக்களை அன்பு செய்கிறார். அவர்கள் நல்லவர்கள் என்பதால் மகிழ்கிறார் (சங் 103:13; பழ 23:25; எரே 17:3). மரித்த மகனுக்காகத் தந்தை துக்கம் கொள்கிறார் (2 சாமு 18:33). ஏனெனில் தனது பெயர் நீடிக்க மகனை விட்டுச் செல்ல முடியவில்லை என்றறிவார் (சீரா 30:4).

தந்தை என்பது அந்தக் குடும்பத்தின் ஒரு மூதாதையரையோ, சொந்தத் தந்தையையோ குறிக்கும் (ஆதி 18:13; 32:9; 1 அர 15:11;

19:4; 2 அர 19:12). இஸ்ராயேல் முழுச் சமுதாயத்தின் மூதாதையரைக் கூட இந்தத் தந்தை என்ற சொல் குறிக்கும். ஆபிரகாம் ''எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தையாவாய்'' என வாக்களிக்கப்பட்டார் (ஆதி 17:4; உப 27:3; மாற் 11:10; லூக் 3:8; 16:24; யோவா 6:58; 7:22; உரோ 4:1; 1 கொரி 10:1; யாக் 2:21)

இறப்பைக் குறிப்பதற்கோ இறப்பிற்குப் பின்னும் மறுவுலகத்தில் தன் குடும்பம் தொடர்வதையோ குறிக்க, ''தன் மூதாதையரோடு துயில் கொண்டார்'', 'தன் மூதாதையரோடு சேர்க்கப்பட்டார்' என்ற தொடர்களைப் பயன்படுத்தினர் (1 அர 2:10; உப 31:16; 2 அர 22:20).

இது மரியாதையும் மதிப்பும் அளிக்கும் ஒரு பெயராகவும் கருதப்பட்டது. (நீதி 17:10; 18:19). எலிசா இறைவாக்கினரை அவரின் சீடர்கள் 'என் தந்தையே' என்று அழைத்தனர் (2 அர 2:12; 6:21; 13:14). தாவீது சவுலைத் தந்தை என்றழைத்தார் (1 சாமு 24:11; 2 அர 5:13; எசா 22:21). கிறிஸ்தவ சமூகத்தில் வயதான ஒருவரைத் தந்தை என அழைத்தனர் (1 யோவா 2:13). இந்த மதிப்புமிக்க பட்டம் இறைவனுக்கு மட்டுமே உரியது என்று மத்தேயு (23:9) நற்செய்தி கூறுகிறது.

இரேக்காபியரைத் தோற்றுவித்தவர் என்பதற்காகவும் இரேக்காபு தந்தை என அழைக்கப்பட்டார் (எரே 35:6). ஒரு தொழிலைத் தோற்றுவித்தவர், அத்தொழிலைக் கொண்டவர்களுக்குத் தந்தையெனக் கருதப்பட்டார் (ஆதி 4:20.21; 1 மக் 2:54). ஆபிரகாம் விசுவாசிகளின் தந்தையாவார் (உரோ 4:11.16-17). தந்தை என்பது இரக்கத்தை உணர்த்தலாம் (யோபு 29:16; 31:18; சங் 103:13).

இதன் இறையியல் கண்ணோட்டத்திற்கு விவிலியத்தின் இறைவன் என்ற தலைப்பின் கீழ்ப்பார்க்கவும். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தந்தை என்ற இந்தச் சொல் இறைவனின் இயல்புகளைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளது. சில நேரங்களில் கடவுளின் தனிப்பட்ட பெயரைக் குறிப்பதாகவும் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. அபியேல் என்பதை ''ஏல் என் தந்தை'' என மொழி பெயர்க்கலாம் (1 சாமு 9:1). ''என் தந்தையே நீதிபதி'', ''என் தந்தை அறிவார்'', ''என் தந்தை நன்மையே மிகுந்தவர்'' என்ற பொருள் கொண்ட பல பெயர்களை நாம் வேதாகமத்தில் காண்கிறோம்.

தந்தையர்களும் தந்தையும் (FATHERS AND FATHER)

I. ''தந்தையற்ற சகோதரத்துவத்தை'' உருவாக்க முயல்கின்ற உலகிற்கு, இறைவன் தன்மையாலே ஒரு தந்தையாவார் என்பதை விவிலியம் வெளிப்படுத்துகிறது. அன்பின் நிலையில் அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கான முறைகளைக் குடும்ப வாழ்விலின்று பெறுகின்ற உலகத் தந்தையர்கள் மற்றும் வாழ்க்கைத் துணைவர்களின் அனுபவங்களினின்று தொடங்கி, இந்த மனித உண்மைகளைப் புறவின மதமானது நெறி விலகிய முறையில் தனது தெய்வங்களுக்குச் சாற்றிக் கூறுவதற்கு மாறாகப் பழைய ஏற்பாடானது தந்தை மற்றும் வாழ்க்கைத் துணைவர்களின் உருவங்களின் மூலம் உயிருள்ள இறைவனின் அன்பு மற்றும் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது. புதிய ஏற்பாடு இவ்விரு உருவங்களையும் ஏற்றுக் கொண்டு, இயேசுவின் தனிப்பட்ட மகன் தன்மையை வெளிப்படுத்துவதன் மூலமும், அந்த மகன் தன்மையானது எல்லா மனிதரின் மீதும் கொண்டுள்ள இறைவனுடைய தந்தைத்தன்மையை ஏற்படுத்துகிறது என்னும் கேள்விப்படாக் கருத்தைச் சேர்ப்பதன் மூலமும், தந்தை பற்றிய கருத்தை நிறைவு படுத்துகிறது.

II. ஊன் சார்ந்த இனத்தின் தந்தையர்கள்

1. தலைவர் மற்றும் ஆண்டவர்: கிடை நிலையில் மக்களிடையே தந்தையே குடும்பத்தினுடைய போட்டியற்ற தலைவராவார். மனைவி அவரைத் தலைவராகவும் (ஆதி 20:3), கணவராகவும் (18:22) அங்கீகரிக்கிறாள். பிள்ளைகளின் கல்வி (சீரா 20:1-13), திருமண உடன்பாடுகள் (ஆதி 24:2 தொ; 28:1-2), சிறுமிகளின் சுதந்தரம் (யாத் 21:7),

மற்றும் பிள்ளைகளின் வாழ்வு (ஆதி 38:24; 42:37) ஆகிய அனைத்தும் அவரையே சார்ந்துள்ளன. தந்தையில் மொத்தக் குடும்பமும் தன் உருவெடுத்துள்ளது. அதனுடைய ஒன்றிப்பின் உறுதிப்பாடும் அவரே (32:11). இதன் விளைவாகக் குடும்பமானது ''தந்தையின் வீட்டார்'' என்றழைக்கப்பட்டது (34:19). ஒரு ஒப்புமையின் மூலமாக, வீடு என்ற சொல்லானது ஓர் இணைத்தையோ (செக் 12:12 தொ), மக்களின் முக்கிய பிரிவையோ (உ-ம் யோசேப்பின் வீட்டார்), அல்லது மொத்த மக்களையோ (உ-ம் இஸ்ராயேல் வீட்டார்) குறிப்பிடத்தொடங்கியவுடன், இக்குழுக்களுடைய தலைவரின் அதிகாரமானது, குடும்பத்தினுடைய தந்தையின் சாயலில் கருதப்பட்டது (எரே 35:18). பாபிலோனில் தாயகத்தின் தந்தையாக அரசன் இருந்தது போல், அரசராட்சிக்காலத்தில் அரசன் நாட்டின் ''தந்தையாக'' இருந்தான் (எசா 9:5). கல்வியாளர்கள் என்னும் அதிகாரத்தின் காரணமாகத் தந்தை என்ற பெயரானது குருக்கள் (நீதி 17:10; 18:19), அரச ஆலோசகர்கள் (ஆதி 45:8; எஸ்த 3:13-14; 8:12), இறைவாக்கினர்கள் (2 அர 2:12) மற்றும் ஞானிகள் (பழ 1:8; எசா 19:11) ஆகியோருக்குச் சாற்றிக் கூறப்பட்டது. தங்களுடைய இந்த ஆதிக்கத்தின் மூலம் உலகத் தந்தையர், இறைவனுடைய மீட்பைப் பெறவும், இறைவனைத் தனது தந்தையாக அறிந்து கொள்ளவும் இஸ்ராயேலைத் தயாரித்தனர்.

2. ஒரு சந்ததியின் முன்னோர்: நேர்மேலான நிலையில் தந்தையானவர் சந்ததியினரின் தலைவராகவும், சந்ததியுடனான இணைப்பாகவும் உள்ளார். இனத்தைப் பெருக்குவதன் மூலம், அவர் தன்னை நீடித்தவராக்குகிறார் (ஆதி 21:12; 48:16). குடும்பச் சொத்துக்கள் தனது வாரிசுகளுக்குச் செல்லும் என்பதை உறுதிப்படுத்துவதால் தனது சந்ததியின் தொடர்ச்சியில் பங்கு கொள்கிறார் (15:2-3). மகனின்றி ஒருவன் இறந்தால், இறைவனால் தண்டிக்கப்பட்டதாக அவன் கருதப்பட்டான் (எண் 3:4; 27:3-4).

சந்ததியின் தலைமையில் இனத்தின் வருங்காலமானது ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட அமைப்பில் மிகச் சிறப்பான தந்தையாக முன்னோர் இருந்தனர். காமின் மகன் மீதான சாபமானது, சேமின் பிள்ளைகளுக்குக் கானானியரைக் கீழ்ப்படுத்துவதையும் கொண்டிருந்தது போல, இஸ்ராயேலின் உயர்வானது ஆபிரகாமின் தேர்விலும் ஆசியிலும் ஏற்கனவே அடங்கியிருந்தது (ஆதி 9:20-27; 12:2). ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடைய வாழ்வின் நிலைகள் கணக்கற்ற சந்ததியினர் மற்றும் வளமான நாடு என்னும் உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஏனெனில் வாக்குறுதிகளினின்று விலக்கப்பட்ட லோத்து, இசுமாயேல் மற்றும் எசா ஆகியோரின் வரலாற்றினுள் அயல் மக்களின் வரலாறு எழுதப்பட்டதுபோல, இஸ்ராயேலின் வரலாறானது அவர்களுடைய வாழ்வின் சிக்கலான, புரியாத விவரங்களில் எழுதப்பட்டிருந்தது (ஆதி 19:30-38; 21:12-13; 36:1). அதே முறையில் ஒவ்வொரு இனமும் அதே பெயருடைய முன்னோருக்கு, மரபுக் கூட்டங்களிலான அதனுடைய இடத்தின் பொறுப்பை ஒப்படைத்தது (ஆதி 49:4). தலைமுறைப்பட்டியல்கள் இரத்த உறவினின்று வேறுபட்ட அல்லது சிக்கலான உறவுமுறைகளை வெளிப்படுத்தும்போது (ஆதி 10), தந்தையரின் வரிசையை முறைப்படுத்தி, வருங்காலத்தையும், அவர்களது சந்ததியினரின் உரிமைகளையும் உள்ளடக்கிய முன்னோரின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தின. புனித மரபுகளின் தலைமுறைப்பட்டியல்கள் (ஆதி 5; 11) ஆதாமிற்கும் குலமுதாதையருக்குமிடையே ஒரு தொடர்ச்சியைக் காட்டுவதன் மூலம் இறைத் தேர்வு மற்றும் மீட்புடனான உறவில், குறிப்பிடத்தக்க வகையில் சந்ததிகளின் வரிசையை அமைக்கின்றன.

III. ஆன்மீக இனத்தின் தந்தையர்: தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் சிறப்பான தந்தையராக மூதாதையர் இருந்தாலும் இந்நிலையானது அவர்களது உடல் சார்ந்த தந்தைமுறையின் காரணமாக இல்லாமல் இனக் கருத்துகளுக்கு அப்பாற்பட்டு, அவர்களது விசுவாசத்தைப் பின்பற்றுகிற அனைவராலும் பெறப்படுகின்ற வாக்குறுதிகளால்

அடையப்படுகின்றது. ஊனுடலின்படியான அவர்களது தந்தை நிலையானது (உரோ 4:1) ஆபிரகாமின் தேர்வுமுதல் இயேசுவின் மாட்சிமைவரை இடைவிடாமல் செயல்புரிகின்ற இறைவனின் மீட்புத்திட்டத்தினுடைய நீடித்தநிலை மற்றும் ஒழுங்கு முறையினைச் சார்ந்துள்ள ஆன்மீக உலகளாவிய தந்தை நிலையின் தற்காலிக நிலையாக மட்டுமே உள்ளது (யாத் 3:15; அ.ப. 3:13). இத்தகைய ஆன்மீகத் தந்தை நிலையின் இறையியலாராகப் பவுல் இருந்தாலும், இந்தக் கருத்து பழைய ஏற்பாட்டிலேயே தயாரிக்கப்பட்டுவிட்டது.

1. இனத்தைக் கடந்து செல்லும் முதன்மை: நன்மன மற்றும் தீமையிலான கூட்டுணர்வின் எண்ணமானது ஆழப்படுத்தப்படும் அளவிற்கு, முன்னோருடைய தந்தை நிலையின் ஆன்மிகப் பண்பானது வளர்கின்ற முக்கியத்துவம் அடைகின்றது. ஒவ்வொரு தலைமுறையிலும் வளர்ச்சியடைகின்ற தந்தையரின் முன்னோர் நிலையானது மூதாதையரையோ, இரண்டாம் நூற்றாண்டில் புகழப்பட்ட முன்னோரையோ மட்டும் கொண்டிராமல் (சீரா 44-50; 1 மக் 2:51-61), சில கிளர்ச்சியாளர்களையும் கொண்டிருந்தது. இனப்பெயர் முன்னோராகிய யாக்கோபுவையே, சில இறைவாக்கினர்கள், கிளர்ச்சியாளர்களின் வரிசையில் முதல் நிலைப்படுத்தினர் (ஓசே 12:3 தொ; எசா 43:27). ஆனால் இந்தக் கிளர்ச்சியாளர்கள் தங்களோடு ஒருவராகக் கருதப்பட்ட தங்களது சந்ததியினரைத் தங்களுடைய கீழ்ப்படியாமையிலும் தண்டனையிலும் ஈடுபடுத்தினர் (யாத் 20:5; எரே 32:18; பாரு 3:4-5; புல 5:7; எசா 65:6-7; தானி 9:16). உடலியல் தந்தை நிலையின்படி தாங்கள் தந்தையராக இருப்பதன் காரணமாக, அசலான ஒழுக்க முறைத் தந்தை நிலையின் மூலம், தங்களது தவறுகளுக்கும் அல்லது அத்தவறுகள் விளைவிக்கும் தண்டனைகளுக்கும் தங்களது சந்ததியினரும் வாரிசுகளாவதாக அவர்கள் எண்ணினர். வெகுமதிபற்றிய தன்னியக்க எண்ணத்தினுடைய வெறுமை பற்றி எரேமியா அறிவிக்க (எரே 31:29-30), நெருங்கிவிட்டதென எசேக்கியேல் பறை சாற்றுகிறார் (எசே 18). ஒவ்வொருவனுடைய பாவத்திற்கேற்பத் தண்டனை வழங்கப்படும்.

நாடு கடத்தப்பட்டதில் தொடங்கி, நன்மைத் தனத்தின் வரிசையில் கூட்டொருமைப்பாட்டினை நோக்கி, ஓர் ஒத்த வளர்ச்சியானது உருவாக்கப்படுகிறது. ஆபிரகாம் மற்றும் யாக்கோபுவினுடைய உரிமைச் சொத்தானது பகைவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டபோது (எசே 33:24), அவர்கள் தங்களது சந்ததியை மறந்து விட்டதாகத் தோன்றிய தருணத்தில் (எசா 63:16) செயல்பட்டது போல, தனது மக்களின் ஒரே தந்தையாக இறைவன் எப்போதுமே தெளிவாகத் தோன்றியதில்லை. சோதனையின் இடையில் ''பண்புள்ள இஸ்ராயேலானது'' வடிவமைக்கப்பட்டது என்பதே இதற்குக் காரணம். இந்த இஸ்ராயேலுக்கு ஊனியல்பின்படியான ஆபிரகாமின் அனைத்துப் பிள்ளைகளும் உரியவராகாமல் நீதி மற்றும் நம்பிக்கை மீதான ஆபிராகாமின் தேடுதலைப் பின்பற்றுபவரை மட்டுமே கொண்டுள்ளது (எசா 51:1 தொ). மேலும் தந்தையர் மற்றும் தாயார் ஆகியோருடைய வரிசைப்படி, இஸ்ராயேல் இனமானதுதொடக்கத்திலிருந்தே தூய்மையற்றதாக இருக்கவில்லையா (எசே 16:3)? புறவினச் சந்ததிகளுடன் தனது இனத்தின் ஒரு சிலர் கொண்டிருந்த தொடர்புகளை நாளாகம ஆசிரியரே ஏற்கவில்லையா (1 நாள் 2:18-55)? வாக்குறுதிகளின் மக்களோடு மதம் மாறியவர் இணைந்திருக்கக்கூடிய வாய்ப்பைப்பற்றி இறைவாக்கினர்களே போதிக்கவில்லையா (எசா 56:3-8; 2 நாள் 6:32-33)? தேசிய கிளர்ச்சிகளுக்கு மேற்பட்ட ஆபிரகாம் மற்றும் பெரிய முன்னோருடைய நலந்தரும் தந்தை நிலையானது இனத்தினாலன்றி விசுவாசத்தினால் மெய்யாக்கப்படும் காலம் வெகு தொலைவில் இருக்கவில்லை.

2. நாட்டிலிருந்து உலகம் நோக்கி: முன்னோருடைய தந்தை நிலையானது ஆன்மீகமானதாகக் கருதப்படும் அளவிற்கு, அது உலகளாவியதாகவும் உருவாயிற்று. ஆபிரகாமைப் பொறுத்தவரை இது தெளிவாகச்

சுட்டிக்காட்டப்படுகிறது. குருக்கள் பாரம்பரியப்படி அவரது பெயரானது மக்கள் திரளுக்கு . அதாவது எண்ணற்ற மக்களுக்குத் தந்தை என்று பொருள்படும் (ஆதி 17:5). ''பூமியிலுள்ள இனமெல்லாம் உன் வழியாய் ஆசீர்வதிக்கப்படும்'' என்னும் ஆதி 12:3-இன் வாக்குறுதியானது கிரேக்க மொழிபெயர்ப்பில் ''உன்னில் ஆசீர்வதிக்கப்படும்'' என்று மாற்றப்படுகிறது (சீரா 44:21; அ.ப. 3:25; கலா 3:8). தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தை மகிமைப்படுத்துவதற்குப் பதிலாக, அனைத்து நாடுகளும் ஒருநாள் ஆபிரகாமின் ஆசியில் பங்கு பெறுமென எழுபது நூல் மொழிபெயர்ப்பு பரிந்துரைக்கிறது.

இனத்தை முழுமையானதாக்கும் எதிர்ப்போக்கினால் அடிக்கடி மறுசமன்படுத்தப்படுகின்ற (எஸ் 9:2) இந்த உலகளாவிய போக்குகள் திருமுழுக்கு யோவானாலும் இயேசுவாலும் முடிக்கப் பெற்றன. ''இக்கற்களிலிருந்து ஆபிரகாமுக்கு மக்களை எழுப்பக் கடவுள் வல்லவர்'' என்று யோவான் கூறுகின்றார் (மத் 3:9). இயேசுவைப் பொறுத்தவரை; மீட்பிற்குத் தேவையானதாக ஆபிரகாமுடனான மகனுறவு இருக்கிறதெனின், அது அதனை உருவாக்குகின்ற உறுப்பினர் தன்மையன்று; மாறாக அது மனமாற்றம் (லூக் 9:9), மூதாதையரின் செயல்களைப் பின்பற்றுதல் அதாவது விசுவாசத்தைப் பின்பற்றுதல் (யோவா 8:33, 39-49) ஆகியவற்றில் அடங்கியுள்ளது. புறவினத்தாருக்கான அழைப்பின் மூலம் இறைவன், தந்தையருக்கு விசுவாசிகளின் ஆன்மீக சந்ததியை எழுப்புவார் என்பதைப் புரிந்து கொள்ளுமாறு கிறிஸ்துபோதிக்கிறார் (மத் 9:11).

3. முன்னுரைத்தலினின்று உண்மையான நிறைவேற்றம் வரை; இயேசுவின் அறிவிப்புக்கு விரைவான நிறைவேற்றத்தை அளித்தன் மூலம், திருச்சபையின் வாழ்வானது, யூதத்தன்மைப் படுத்துபவர்களால் ஏற்பட்ட இடுக்கண் நிலையால் தூண்டப்பட்ட புறவினத்தாரின் ஆசிரியரை (1 திமொ 2:7), அதேமையக் கருத்துக்களை விரிவாக்க அனுமதிக்கிறது. பவுலைப் பொருத்தமட்டும் ''முன்னோரை முன்னிட்டு'' (உரோ 11:28) ''ஊனுடலின் படியான'' (1 கொரி 10:18) இஸ்ராயேலின் உறுப்பினர்கள், தங்களுக்களிக்கப்பட்ட வாக்குறுதிகளின் சிறப்பின் காரணமாக (அ.ப. 13:17. 32-33), மீட்பிற்கான அழைப்பில் ஒரு முதன்மை நிலையைக் (உரோ 1:16; அ.ப. 3:26) கொண்டிருந்தனர். ஆயினும் வாக்குறுதிகளுடைய உயர்ந்த மரபுரிமைமீது பலர் நம்பிக்கை வைக்க மறுத்து அதன் விளைவாக இசுமயேல் போன்ற அடிமைகளாகத் தங்களை ஆக்கிக்கொண்டனர் (கலா 4:25). ஆனால் ''இறைவனுடைய இஸ்ராயேலின்'' மையத்தில் (கலா 6:16), யூதருக்கும் புறவினத்தாருக்குமிடையே எவ்வித வேறுபாடுமில்லை (எபே 3:6). விருத்தசேதனம் செய்யப்பட்டாலும் இல்லாவிடினும், நம் அனைவருடைய தந்தையாகிய ஆபிரகாமின் விசுவாசத்திற்குரியவர்கள் என்று கோருவதன் மூலம், அனைவரும் மூதாதையரின் பிள்ளைகளாகவும், ஆபிரகாமுக்கும் அவரது தலைமுறையினருக்கும் வாக்களிக்கப்பட்ட ஆசிகளின் பயனாளர்களாகவும் ஆகிறோம் (கலா 3:7 தொ; உரோ 4:11-18). திருமுழுக்கின்போது, வாக்குறுதியின்படி ஆபிரகாமின் பிள்ளைகளுடைய புதிய ஆன்மீக இனம் உருவாகிறது (கலா 3:27). இந்த இனத்தினுடைய முதல் பிரதிநிதிகள் தங்களைத் ''தந்தையர்'' . என்று அழைத்துக்கொள்ளத் தயங்கவில்லை (2 பேதுரு 3:4).

IV. தந்தையருடைய இறைவனின் தந்தை நிலை

1. தந்தையரிடமிருந்து தந்தைக்கு; மனிதனுடைய தந்தைநிலை பற்றிய கருத்தின் முன்னேற்றமான ஆன்மீகமானது, இறைவனுடைய தந்தைத்தன்மை பற்றிய கருத்தின் வெளிப்பாட்டினை இயன்றதாக்கியது. நாடு கடத்தப்பட்ட காலத்தில் மூதாதையரின் தந்தைத்தன்மை செயல்படாததாகத் தோன்றியதெனில், ஆண்டவருடைய தந்தைத்தன்மையின் நிலையான தன்மையைப் போற்றிப் புகழ்வதற்கான ஒரு வாய்ப்பாக அது இருந்தது (எசா 63:16). இத்தகைய முரண்பாட்டிற்கும் அப்பாற்பட்டு, தந்தைத் தன்மை ஒரே நேரத்தில் இறைவனுக்கும்

குலமுன்னோருக்கும் சாற்றிக் கூறப்படலாம். இந்நிலையானது குருக்கள் பாரம்பரியத்திலிருந்தும் தோன்றியது. இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டு (ஆதி 1:27), தனது சாயலாக மற்றவர்களை உருவாக்கும் (5:1தொ) ஆதாமை மரபுமுறைப்பட்டியலின் முதல்வராக்குவதன் மூலம் முன்னோரின் வரிசையானது இறைவனைநோக்கிச் செல்கிறதெனச் சுட்டிக்காட்டப்பட்டது. பிற்காலத்தில் லூக்காவும் இதனையே செய்கிறார் (லூக் 3:23-35). பவுலைப் பொறுத்தவரை, அனைத்துத் தந்தைத் தன்மையும் (ஒரு முன்னோரினின்று இறங்கி வருதல்) தனது வாழ்வு மற்றும் மதிப்பினை உயர் தந்தையாகிய இறைவனிடமிருந்தே பெறுகிறது (எபே 3:14-15). இவ்வாறு, மனிதத் தந்தையருக்கும் இறைவனுக்குமிடையே ஓர் ஒப்புமை நிலவுகிறது. இது தந்தை என்ற பெயரை இறைவனுக்குச் சாற்றிக்கூற அனுமதிக்கிறது. மேலும் இந்த இறைத் தந்தைத்தன்மை மட்டுமே மனிதத் தந்தைத்தன்மைகளுக்கு மீட்பின் திட்டத்தில் அவர்களது முழுப்பொருளையும் அளிக்கின்றது.

2. இறைத் தந்தைத் தன்மையின் விஞ்சிய நிலை: ஒப்புமையின் மூலம் வினவும் முறையானது, இறைவனைத் தனது தந்தையாக அழைக்க இஸ்ராயேலை நடத்திச் செல்லவில்லை. மாறாக, அது ஒரு வாழ்த்து அனுபவமாகும்; அயல் மக்களுக்கு எதிரான எதிர்ச் செயலாகவும் இருக்கலாம்.

அனைத்துப் பண்டைய நாடுகளும் இறைவனைத் தங்களது தந்தை என்று அழைத்தன. செமித்தியரிடையே இத்தகை வழக்கமானது அவர்களது வரலாற்றில் வெகுகாலத்திற்குப் பின்னோக்கிச் செல்லுகிறது. இறைவனுடைய தந்தைப் பண்பானது காப்பாளர், ஆண்டவர் மற்றும் அடிக்கடி, படைப்பாளர் முதலிய பண்புகளைக் கொண்டிருந்தது. உகாரித்து நூல்களில் (கி.மு. 16-ஆம் நூற்றாண்டு முதல் கானானிய தெய்வக்குழுவின் மேலான தெய்வங்கள் மற்றும் மனிதர் மீதான அவரது ஆதிக்கம் எடுத்துக் கூறப்பட்டது. குல மூதாதையருடைய இறைவனின் பெயராகவும் இருந்த ஏல் என்ற பெயரானது (ஆதி 46:3) மூலத்தில் ''செயிக்''குக்குச் சிறப்புப்பெயராக இருந்தது. இது அவரது இனம் எனச் சில நேரங்களில் அழைக்கப்பட்டதன் மீதான அவரது அதிகாரத்தை இது சுட்டிக் காட்டுகிறது.

இந்த மூலப் பொருளின்படி, இறைத் தந்தைத்தன்மையின் கருத்து விவிலியத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், பழைய ஏற்பாட்டினால் நிராகரிக்கப்பட்ட மற்றொரு பொருளும் நிலவியது. எகிப்திய ''மின்'' னிற்கு ஒத்ததாக உள்ள, காளை மாட்டின் சாயலில் அமைந்த பெனிசிய ஏலானது தனது துணையைச் சினைப்படுத்தி, மற்றத் தெய்வங்களை ஈன்றெடுத்தது. பெண் தெய்வத்துடனான தனது ஒன்றிப்பைச் சடங்கு முறையில் பின்பற்றுவதனால் ஏலின் மகனாகிய பாகால், மனிதத் தம்பதிகள், விலங்குகள் மற்றும் மண் ஆகியவற்றை மிகுதியாக இனப்பெருக்கம் செய்தலில் சிறப்புற்று விளங்கினார். ஆனால் யாவே தனித்துவமிக்கவராய் உள்ளார். அவர் பாலினச் செயலையோ, பெண் துணையையோ, ஊனியல் பொருளில் மகனையோ கொண்டிருக்கவில்லை. சில நேரங்களில் கவிஞர்கள், வானதூதர்களையும் (உப 32:8; சங் 29:1; 89:7; யோபு 1:6), இளவரசர்கள் மற்றும் நீதிபதிகள் (சங் 82:1.6) ஆகியவர்களையும் ''இறைவனின் புதல்வர்கள்'' என்று கூறுவார்களாயின், அவர்களது சீரோ பெனிசிய ஆதாரங்கள், மற்றும் எவ்வித உடல் சார்ந்த தந்தை நிலையும் சாற்றிக் கூறப்படாத இறைவனுக்கு இந்தச் சாதாரண படைப்புகளை உட்படுத்த அவர்கள் கையாண்டவழியின் அடையாளமாக இது உள்ளது. யாவே இனப்பெருக்கத்தை உண்டு பண்ணுபவரெனில் (உப 32:6), அது தெளிவானவகையில், ஒழுக்கப் பொருளில் மட்டுமே. ஏனெனில், அவர் தெய்வங்களின் தந்தையாகவும், பெண் தெய்வத்தின் கணவராகவும் இல்லாமல், ஒரே நேரத்தில் (உருவகப் பொருளில்) தனது மக்களின் தந்தையாகவும் வாழ்க்கைத் துணையாளராகவும் உள்ளார் (ஓசே, எரேமியா). படைத்தவர் என்ற முறையில் அவர்

தந்தையாக இருந்தாலும் (எசா 64:7; மலா 2:10; ஆதி 2:7; 5:1 தொ), பாபிலோனியப் புராணங்களில் உள்ளது போன்று, இயல்பு கடந்த இறை மரபுகளின் மூலமாக அல்ல. இறுதியாகத் ''தானியம் முளைக்கச்செய்து அதை மிகுதியாய் விளையச் செய்யும்'' (எசே 36:29) இறைவன், சினைப்படுத்தும் பாகாலுடனும், இறைவாக்கினரை அச்சப் படுத்தியவைது சிற்றின்பச் சடங்குகளின் மந்திரத் துடனும் எதையும் பொதுவாகக் கொண் டிருக்கவில்லை. பாகால் தன்னைப் பின்பற்று கிறவர்களால் வேண்டப்படுகிற வழியில் தானும் வேண்டப்பட இறைவன் விரும்ப வில்லை (எரே 2:27). தங்களுடைய அயலா ரில் வலிமையாக இருந்த இறைத்தந்தைத் தன்மைக் கருத்தைப் பாலினப் பண்புகளி லிருந்து தூய்மைப்படுத்தவும், இறைவனுக் குச் சாற்றிக் கூறத்தக்க குடும்பத்தலைவர்கள் மற்றும் முன்னோரைப்பற்றிய சமூகச் சொற் றொடரின் மதிப்புமிக்க பண்புகளை மீட்டுக் கொள்ளவும் இஸ்ராயேலின் தலைவர்கள் விரும்பினரென அனைத்தும் சுட்டிக்காட்டு கின்றன.

3. இஸ்ராயேலின் தந்தையாகிய யாவே: தொடக்கத்தில், குறிப்பாக குழுத்தன்மை மற்றும் வரலாற்று முன்னோக்கில் இறைத் தந்தைத் தன்மை எண்ணம் உருவாக்கப்பட் டது. யாத்திரைக் காலத்தில் இஸ்ராயேலின் காப்பாளராகவும், உணவளிப்பவராகவும் அதன் தலைவராகவும் காட்டியபோது, இறைவன் இஸ்ராயேலின் தந்தையாக வெளிப்படுத்தப்பட்டார். இதன் அடிப் படையான கருத்து கீழ்ப்படிதலையும் நம்பிக்கையையும் கோருகின்ற நலஞ்செய் கிற மேலாண்மையாகும் (யாத் 4:22; எண் 11:12; உப 14:1; எசா 1:2 தொ; 30:1.9; எரே 3:14). ஓசேயாவும் எரேமியாவும் இந்த எண் ணத்தைக் கொண்டிருந்தனர். மேலும் யாவே யின் அளவற்ற பரிவை வலியுறுத்துவதன் மூலம் அதனை வளமிக்கதாக்கினர் (ஓசே 11:3-4.8-9; எரே 3:19; 31:20). நாடுகடத்தப் படுதலின் தொடக்கத்தில், இறைத் தேர்வின் மீது உருவாக்கப்பட்ட இறைவனுடைய தந் தைத் தன்மைப்பற்றிய அதே கருத்தே தொடர்ந்து பயன்படுத்தப்பட்டாலும் (எசா 45:10-11; 63:16; 64:7-8; தோபி 13:4; மலா 1:6; 3:17), மோசேயின் புகழ்ச்சிக்கீதம் கவி கரித்தலின் கருத்தைச் சேர்ந்தாலும் (உப 32:10), சில குறிப்பிட்ட சங்கீத ஆசிரியர்களும் (சங் 27:10; 103:13), சில ஞானிகளும் (பழ 3:12; சீரா 23: 1-4; ஞான 2:13-18; 5:5) ஒவ்வொரு நீதிமானையும் இறைவனின் மகனாக, அதா வது, அவரது பரிவுமிக்க பாதுகாப்பிற்கு உரியவராகக் கருதினர். மேலும், ''என் தந் தையே உதவியாவார்'' என்று பொருள்படும் அபியேசர் (யோசு 17:2) போன்ற பழைய இறைப்பொருள் பெயர்கள் தனி நபர்களுக்குச் சுட்டப்படுவது முழுவதும் புதியதொன் றல்ல.

4. அரசரின் தந்தையாகிய யாவே: தாவீ தின் காலம் முதல், யாவேயின் தந்தைத் தன்மை குறிப்பாக அரசர்களால் உரிமை கொண்டாடப்பட்டது. (2 சாமு 7:14-15; சங் 2:7; 89:27-28;110:3). அரசனின் மூலமாக, அவர் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற முழு நாட்டிற்கும் இறை ஆதரவு சென்றடைந்தது. பண்டைய மேற்காசிய அரசர்கள் அனைவ ரும் அவர்களுடைய இறைவனின் சுவீ கரிக்கப்பட்ட பிள்ளைகளாகவே கருதப்பட்ட னர். ''நீரே எம் மகன்'' என்னும் சங் 2:7-இன் சொற்கள், அப்படியே பாபிலோனிய சுவீ கார வாய்பாட்டில் காணப்படுகின்றன. ஆனால், இஸ்ராயேலுக்கு அப்பாற்பட்ட இடங்களில் தெய்வங்களுடைய கோரிக்கை கள், மேஷா நினைவுத்தூணில் கண்டுள்ள படி கோமேசிடம் கோரப்படுவதுபோல, வழக்கமாக மனம்போனபோக்கில் நிலையற் றவையாகவே இருந்தன (2 அர 3). எகிப்தில் இறைவன், ஊனியல்பின்படியான தந்தையா வார். ஆனால் இதற்கு முரண்பட்ட வகை யில், யாவே ஊனுடலின் அமைப்பைக் கடந்து சென்று அரசர்களுடைய ஒழுக்க முறைமையை உறுதிப்படுத்தினார் (2 சாமு 7:14).

அரசமகன் தன்மை பற்றிய இப்பகுதிகள், யூதாவின் அரசர்களுடைய வரிசையின் மூலம் தெளிவான முறையில் மெசியாவை

ஏற்கெனவே சித்தரித்துக்காட்டும் அளவிற்கு இயேசுவினுடைய தனித்தன்மைமிக்க மகன் தன்மையின் வெளிப்பாட்டிற்குத் தயாரித்தன. ஒவ்வொரு படைப்பிற்கும் முன் செல்லும் இறைவனின் மகனாக ஆட்தன்மைப் படுத்தப் பட்ட ஞானத்தின் விவரிப்பின் மூலம் (பழ 8), நாடு கடத்தப்பட்டதற்குப் பின், வெளிப்பாட்டிற்குப் புதியதொரு அணுகு முறை அளிக்கப்படுகிறது. இந்த ஞானம், இறைவாக்கினர் நாத்தானின் இறைவாக்கு முதல், தாவீதின் அரச மரபு வழியுரிமை வரை, அதைச் சேர்ந்த நம்பிக்கையைத் தன்னிலே சுருக்கமாகக் கொண்டுள்ளது.

V. இயேசு தந்தையை வெளிப்படுத்துகிறார்: கிறிஸ்தவ சகாப்தத்தின் வருகையுடன், இறைவன் தனது மக்களுக்கும், தன்னில் விசுவாசம் கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் தந்தையாக உள்ளார் என்பதை இஸ்ராயேல் நன்கு அறிந்திருந்தது. கிரேக்கர்கள் இச்சொல்லைப் பயன்படுத்திய முறைக்கு அஞ்சியதால், வெளிப்பாட்டு இலக்கியங்களில் ''தந்தை'' என்ற சொல் அரிதாகத்தான் காணப்படுகிறது. ஆனால் ராபிகளின் நூல்களில் ''வானகத்திலுள்ள எம் தந்தாய்'' (மத் 6:9) என்ற அதே வாய்பாடு காணப்படுகிறது. அவர்கள் நூல்களில் ''தந்தை'' என்ற பெயர் அடிக்கடி காணப்படுகிறது.

இறைவுனுடைய தந்தைத் தன்மை பற்றிய யூத சிந்தனையில் மிகச் சிறந்தவற்றை இயேசு நிறைவுபடுத்தினார். ''தூய இதயத்தோரின்'' சமுதாயத்தினால் உருவாகும் உண்மையான இஸ்ராயேலையும் (சங் 73:1) ''இறைவனது பிள்ளைகளின் சந்ததியையும்'' (73:15) சங்கீதத்திலுள்ள ஏழை மனிதன் காண்கிறது போன்று, ''சிறியவர்களாக'' (மத் 11:25) உருவாகிய ஒரு சமுதாயத்தையும் பற்றி இயேசுவும் கனவு கண்டார் (''எம் தந்தாய்'' என்று கூற வேண்டுமேயொழிய ''என்தந்தாய்'' என்று கூறக்கூடாது). இந்தச் சிறியவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் இறைவனின் மகனாக இருப்பதால், தந்தை அவர்களுக்குத் தனது இரகசியங்களை வெளிப்படுத்துகிறார் (மத் 6:4.6.18). பிற்கால யூத சிந்தனையானது அடைந்த உலகளாவிய தன்மைக்கும் அப்பாற் சென்று, புதியதொன்றை அவர் எடுத்துக் கூறுகிறார். இந்த யூத சிந்தனை இறைவனுடைய தந்தைத் தன்மையோடு படைத்தவரின் பண்பை இணைத்தாலும், அனைத்து மனிதருக்கும் இறைவனே தந்தை மற்றும் அனைத்து மனிதரும் சகோதரர்களே (எசா 64:7 மலா 2:10) என்னும் முடிவிற்கு அது இன்னும் வரவில்லை. மேலும், ''இறைவன் எல்லா உயிருக்கும் இரக்கம் காட்டுகிறார்'' (சீரா 16:13) என்று கருதப்பட்டாலும், இறைவனுடைய பிள்ளைகள், இஸ்ராயேலின் நீதிமான்கள் மட்டுமே அவ்விரக்கத்தின் முழு விளைவை அடைந்தனர் என்ற தகுதியும் பொதுவாகச் சேர்க்கப்பட்டது (ஞான 12:19-22; 2 மக் 6:13-16). தந்தைக்குரிய அன்பினால் தூண்டப்பட்ட யாவேயிடமிருந்து வரும் திருத்தம் பற்றிய (பழ 3:11-12; எபி 12:5-3) உப ஆகமக் கருத்தானது (உப 8:5) செயலளவில் இவர்களுக்கு மட்டுமே பொருந்தியதாகும். ஆனால் இயேசுவைப் பொறுத்தவரை, இதற்கு மாறுபட்ட வகையில் ''சிறியோரின்'' சமுதாயம் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுகின்ற (மத் 21:31 தொ) திருந்திய யூதருக்கு மட்டுமே இன்னும் வரையறை செய்யப்பட்டிருந்தாலும், ''அரசின்பிள்ளைகளின்'' இடத்தைப்பெறும் (மத் 8:12) புறவினத்தாரையும் தன்னுள் கொண்டிருந்தது (மத் 25:32 தொ).

உரிமையால் ஏற்கெனவே அனைவருக்கும் திறக்கப்பட்ட இந்தப் புதிய இஸ்ராயேலுக்குத் தேவையான பொருட்களையும் (மத் 6:26. 32; 7:11), எல்லாவற்றிற்கும் மேலாக தூய ஆவியையும் அளித்து (லூக் 11:13), தனது மென்மையான இரக்கத்தின் எல்லையற்ற அளவையும் தந்தை காட்டினார் (லூக் 15:11-32). இதற்கு அவசியமான ஒரே செயல் என்னவெனில், இந்தத் தனித்துவமிக்க தந்தைத் தன்மையை ஒருவன் தாழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு (மத் 23:9), அவரது உலகளாவிய அன்பு (5:44-45), மன்னிக்கும் தன்மை (18:33; 6:14-15), இரக்கம் (லூக் 6:36; லேவி 19:2) மற்றும் நிறைவுடைமை (மத் 5:48)

ஆகியவற்றைப் பின்பற்றுகின்ற வேளையில், அவரில் நம்பிக்கை கொண்டு (6:25-34), அவருக்குக் கீழ்ப்படிந்தவாறு தனது தந்தையிடம் செபிக்கின்ற குழந்தையைப்போல் வாழ வேண்டும் (7:7-11). தந்தையைப் பின்பற்றுகின்ற கருத்தானது புதியதாக இல்லாவிடினும் (லூக் 6:36 தார்கூம் நூலில் மீண்டும் காணப்படுகிறது), ஒருவர் மற்றவரை மன்னிப்பது மற்றும் பகைவருக்கும் அன்பு ஆகியவற்றை இந்தப் பின்பற்றுதலில் வலியுறுத்துவதானது புதிதாக உள்ளது. மன்னிக்கும்போதும், அன்பு செய்யும்போதும் இறைவன் தந்தையாய் இருக்கும் அளவுக்கு, மற்றவற்றில் இறைவன் என்றுமே தந்தையாக இருப்பதில்லை. அவ்வாறே, நமது சகோதரரிடமும் அதே முறையில் நடந்துகொள்ளும்போது நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கும் அளவுக்கு மற்றப்பொழுதில் இருப்பதில்லை.

VI. இயேசுவின் தந்தை:

1. ஒரே மகனின் தந்தையாக இறைவன் இயேசுவால் வெளிப்படுத்தப்படுகிறார்: ''என் தந்தை'' (மத் 7:21; 11:27; லூக் 2:49; 22:29) என்பதை ''உங்கள் தந்தையினின்று'' வேறுபடுத்துவதன் மூலமும் (மத் 5:45; 6:1; 7:11; லூக் 12:32), தனித்துவமிக்க அன்பு செய்யப்பட்ட (மாற் 12:6; 1:11; 9:7) மகனாகத் தன்னையே நெறிப்படுத்துவதன் மூலமும் (மாற் 13:32), தனிப்பட்ட பொருளில் இறைவனே தனது தந்தை என்பதை இயேசு வெளிப்படுத்துகிறார். குறிப்பாகத் தந்தைமட்டுமே வெளிப்படுத்தக்கூடிய தந்தையின் அனைத்து இரகசியங்களையும் முழுமையாக அறியும் அளவிற்கு, இருவரிடையிலும் உள்ள ஒன்றிப்பின் உணர்வினை வெளிப்படுத்துவதன் மூலமும் இது நடைபெறுகிறது (மத் 11:25 தொ). தந்தை மற்றும் மகன் என்ற சொற்களின் மிக உயர்ந்த பொருளானது (இயேசுவால் சாதாரணமாகத் தவிர்க்கப்பட்ட ''இறைமகன்'' என்பதில் உள்ளதாகிலும்) தன்னிலேயே வெளிப்படையானதாகவும், அவருக்குச் செவிமடுப்போரால் உணரப்படக்கூடியதாகவும் இருக்கவில்லை (லூக் 4:41-இல் இறைமகன் என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது). ஆனால் அப்பொருள் ''மனுமகன்'' என்ற பெயரின் பொருளாலும், மனித அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட அதிகாரத்தைக் கோரிய உரிமையின் மூலமாகவும் உறுதிப்படுத்தப்படுகிறது. அப்பா என்று கூறி இயேசு தனது தந்தையை நோக்கி உரைக்கின்ற செபமும் (மாற் 14:36) இதனை உறுதிப்படுத்துகிறது. இந்த நெருக்கத்திற்கு இயேசுவிற்கு முன் வேறு உதாரணமே இல்லை; இணையற்ற உறவையும் அது வெளிப்படுத்துகிறது.

2. தந்தைத்தன்மையின் நித்திய செயலில்: இச்செயல் இறைவன் தமக்கே இணையானவரை அளித்துக் கொள்கிறார். ''நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையைப்'' பற்றி (உரோ 15:6; 2 கொரி 1:3; 11:31; எபே 1:3; 1 பேதுரு 1:3) ஒத்தமை நற்செய்தியாளர்கள் கூறியதைத் தொடக்ககால இறையியல் வல்லுநர்கள் வெளிப்படையாக்குகின்றனர். தந்தை என்னும் பெயராலேயே அவர்கள் அவரை அடிக்கடி குறிப்பிடுகின்றனர். கடவுளே என்று சாதாரணமாகக் கூறும்போதெல்லாம் அவரைப்பற்றியே அவர்கள் எண்ணுகின்றனர் (2 கொரி 13:13). தந்தை மற்றும் மகனுடைய உறவுகளை மீட்பில் செயலாற்றுபவர்களாகப் பவுல் எடுத்துக் கூறுகிறார். ஆயினும், சுவிகரிக்கப்பட்ட பிள்ளைகளுடன் இறைவனின் முறையான மகனை அவர் ஒப்பிட்டுப் பேசும்போதும் (உரோ 8:15.29.32), படைப்புச் செயலையே ''அன்பார்ந்த மகனுக்குச் சாற்றிக் கூறும்'' போதும் (கொலோ 1:13.15 தொ), இறைவனில் மிக உயர்ந்த மற்றும் நித்திய தந்தைத் தன்மையின் ஓர் மறையுண்மை உள்ளது என்பதை இது ஏற்றுக்கொள்கிறது.

யோவான் இதற்கு மேலும் செல்கிறார். ஈன்றெடுக்கப்பட்ட ஒரேயொருவர் அதாவது ஒரே அன்புக்குரிய மகன் என்று அவர் இயேசுவை அழைக்கிறார் (யோவா 1:14.18; 3:16.18; 1 யோவா 4:9). இந்த மகன் தன்மைக்கு ஏற்றவாறு தந்தைத் தன்மையின் தனித்துவப்பண்பை அவர் வலியுறுத்துகிறார் (யோவா 20:17). தந்தை மகனிடம்

நிறைவேற்றுமாறு அளித்த புதுமையான செயல்களால் வெளிப்படுத்தப்பட்ட (5:36) விருப்பங்கள் (5:30) மற்றும் செயல்பாடு களின் (5:17-20) முழுமையான ஒன்றிப்பு, ஒருவர்க்கொருவர் கொள்ளும் உள்ளுறை வியல்பு (10:38; 14:10-11; 17:21) அறிவு மற்றும் அன்பினால் ஒருவர்க்கொருவர் கொண் டிருந்த நெருக்கம் (5:20.23; 10:15; 14:31; 17:25 தொ), அவ்ர்கள் ஒருவர்க்கொருவரை மகி மைப்படுத்துதல் (12:28; 13:31-32; 17:1.4-5) ஆகியவை தந்தை மகனுக்குள் உள்ள தனித் துவ உறவை வலியுறுத்துகின்றன. செயல் மட்டத்திலிருந்து மெய் (இருத்தல்) மட்டத் திற்குக் கடந்து சென்று, இறைவனுடனான சமநிலை பற்றிய இயேசுவின் அறிவிப்பை யூதர்கள் புரிந்து கொண்டனர் (5:17-18; 10:33; 19:7). அவர்களது நிலை சரியே. இறைவன் உண்மையாகவே இயேசுவினுடைய சொந் தத் தந்தையே. ஆபிரகாமிற்கு முன்பே இயேசு (8:57-58) ''தந்தையின் அணைப்பில்'' வாழ்ந்தார் (யோவா 1:18; 1 யோவா 1:1 தொ).

3. தனது மனுவுரு நிலையில், மகன் தந் தைக்குக் கீழ்ப்படிந்தவராக உள்ளார்: மகன் என்ற தகுதியானது இயேசுவைத் தந்தை யாகிய இறைவனுக்குச் சமமானவராக ஆக்கி னாலும், கிறிஸ்துவின் கருத்துப்படியும் (மத் 26:39; 11:26-27; 24:36) புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களின் கருத்துப்படியும், தம் முடைய தந்தைக்குரிய தனியுரிமைகளைப் பெற்றிருப்பதில் தந்தை எவ்விதத்திலும் குறைந்தவரல்லர். தொடக்க காலப் போதனை யும் (அ.ப. 2:24) பவுலும் (1 தெச 1:10; 2 கொரி 4:14) இயேசுவின் உயிர்ப்பைத் தந்தைக்கே சாற்றிக்கூறினார். மீட்பைப் பொறுத்தவரை முன்முயற்சியைத் தந்தையே கொண்டுள்ளார். கிறிஸ்தவரையோ (2 தெச 2:13-14) அப்போஸ்தலரையோ (கலா 1:15-16) தேர்ந்தெடுத்து அழைப்பவர் அவரே. நேர்மைப்படுத்துபவரும் அவரே (உரோ 3:25.30; 8:30). இயேசு ஓர் அவசியமான இடையாளர் மட்டுமே. தந்தை அவரை அனுப்புகிறார் (கலா 4:4; உரோ 8:3); அவ ரைக் கையளிக்கிறார் (உரோ 8:32); செய்வ தற்கு ஒரு பணியையும் (யோவா 17:4) பேசுவதற்குச் சொற்களையும் (12:49), மீட்ப தற்கு மனிதரையும் (6:39-40) அளிக்கிறார். அனைத்திற்கும் தொடக்கமும் முடிவும் தந் தையே (1 கொரி 8:6). அவரைச் சார்ந்து செயல்படுகின்ற மகன் (யோவா 5:19; 14:10; 15:10) காலத்தின் இறுதியில் தமது தலைவ ராகிய இறைவனிடம் (1 கொரி 11:3) அடி பணிவார் (15:28).

VII. கிறிஸ்தவரின் தந்தை: இயல்பாகவே இயேசு இறைவனின் பிள்ளையாக இருப்ப தன் காரணமாகவே, இறைவனின் பிள்ளைக ளாவதற்கு மனிதர்கள் வல்லமை கொண் டுள்ளனர் (யோவா 1:12). ஒத்தமை நற்செய்தி களின் கிறிஸ்து, தன்னைத் தனக்குரியவர்க ளுடன் ஒன்று படுத்துவதன் மூலமாகவும் (மத் 18:5; 25:40), தன்னை அவர்களது சகோ தரனாக அழைப்பதன் மூலமாகவும் (28:10), ஒரு நேரத்தில் ''பிள்ளைகள்'' என்னும் பொதுப்பெயரின் கீழ், தன்னை அவர்க ளுடன் அடையாளப்படுத்துவதன் மூலமாக வும் (17:26) இந்தக் கருத்துப்பற்றி முதலில் ஒளிவீசச் செய்தார். ஆனால், பவுலின் மூல மாகவே நிறை ஒளி நமக்குக் கிடைக்கிறது. கிறிஸ்துவில் நம்மை ஒருயிராக்குகின்ற திரு முழுக்கு விசுவாசத்தின் மூலமாக (கலா 3:26 தொ) இறைவன் நம்மை அடிமைத்தனத்தி னின்று விடுவித்து, பிள்ளைகளாகச் சுவீகரித் தார் என்று நமக்குக் கூறுபவர் பவுலே (கலா 4:5 தொ; உரோ 8:14-17; எபே 1:5). தனது சகோதரர்களுடன் தந்தையின் உரிமைச் சொத்தில் பங்கு அளிக்கின்ற மூத்த மகன் கிறிஸ்துவே (உரோ 8:17.29; கொலோ 1:18). இச்சுவிகாரத்தின் உள்ளார்ந்த செயலாளராக இருக்கின்ற காரணத்தால் ஆவியே அதன் சாட்சியாகவும் உள்ளார். ஆவியானவர் நம் மைக் கிறிஸ்துவுக்கு ஒத்தவர்களாக்கிக் கிறிஸ்துவினுடைய ''அப்பா'' என்னும் அதே செபத்தை (கலா 4:6; உரோ 8:14தொ. 29) நம்மில் தூண்டுவதன் மூலம், அவர் சுவிகரித் தலுக்குச் சான்று பகர்கிறார். உயிர்ப்பின் காலம் முதல், ''வானகத்திலுள்ள எங்கள் தந்தையே'' என்ற செபத்தினை உச்சரிப்பதன் மூலம், இறைவன் தனது ஒரே மகனைத்

தழுவுகின்ற அதே அன்பினால் அன்பு செய்யப்படும் உணர்வைத் திருச்சபையானது எடுத்துக்கூறுகிறது (1 யோவா 3:1). கிறிஸ்துவைப் போன்று ''தந்தையே'' என்று மட்டுமே நாம் கூறுமாறு செய்வதன் மூலம் (லூக் 11:2), லூக்கா சந்தேகத்திற்கிடமின்றித் தூண்டுவதும் இதுவே.

செபத்தில் வெளிப்படுத்தப்பட்ட நமது மகனுக்குரிய வாழ்வானது, சகோதர அன்பினாலும் வெளிப்படுத்தப்படுகிறது. நமது தந்தையை நாம் அன்பு செய்தால், அவரது பிள்ளைகளாகிய நமது சகோதரர்களையும் அன்பு செய்வதினின்று நாம் தவற முடியாது. ''தந்தைக்கு அன்பு செய்பவன், தந்தை பெற்ற மகனுக்கும் அன்பு செய்கிறான்'' (1 யோவா 5:11).

தந்தையின் குடும்பத்தார், வீட்டார் (FATHER'S HOUSE)

பழைய ஏற்பாட்டில் யோசேப்பு தன் சகோதரர்களோடு பேசும்போது இச்சொல் பயன்படுகிறது (ஆதி 46:31; 50:22). தந்தையின் இல்லம் என்பது வெறும் வீட்டை மட்டும் குறிக்காது. மாறாகத் தன் சொந்த சமூகத்தையே, குடும்பத்தாரையே அதன் சமூக - உளவியல் பொருளில் குறிக்கும். யோசேப்பு இந்த இடத்தில் தன் சகோதரர்கள் அவர்களின் மனைவி மக்கள், வேலையாட்கள் எல்லோரையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறார். நீதி 11:2 இலும் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பங்காளிகளையோ சொந்த குடும்பத்தையோ குறிக்கும். இது கணக்கெடுப்பிற்குப் பயன்பட்டது. இச்சொல் பெரும்பாலும் பன்மையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது (எண் 1:2; 1 நாள் 4:38; 5:13 தொ; 7:2.7; 23:11; எஸ் 2:59; 10:16; நெகே 7:61).

புதிய ஏற்பாட்டில் தந்தையின் இல்லம் என்பது எருசலேம் தேவாலயத்தைக் குறிக்கிறது (யோவா 2:16; அ.ப. 7:47.49). இயேசுவின் பெற்றோர் அவரைத் தேடியபோது 'என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டும் என்பதை அறியீர்களோ'' என்று இயேசு சொன்னார் (லூக் 2:49). யோவான் நற்செய்தியின்படி இச்சொற்றொடர் விண்ணகத்தை அதாவது கடவுளின் உறைவிடத்தையே குறிக்கும் (யோவா 14:2).

தபத்து (TABBATH - புகழ்பெற்ற)

யோர்தானுக்குக் கிழக்கே கிதியோன் மிதியானியர்களைத் தபத்துவரை துரத்திச் சென்று அவர்களை இசிரியேல் சமவெளியில் அழித்தார் (நீதி 7:22). இது ஆபல் மெகோலாவுக்கு அருகில் இருந்தது. இது படைகளை ஒன்றுகூட்டி நிறுத்துவதற்கு வசதியான இடமாகக் கர்க்கோர் பகுதியில் இருந்திருக்க வேண்டும் (8:10). இங்கிருந்துதான் கிதியோன் அவர்களை இரண்டாம் முறையாகத் தோற்கடித்துவிட்டுத் திரும்பினார் (8:13). ஆகவே, இது கிழக்குக் கிலயாது மலைப்பகுதியில் இருந்திருக்க வேண்டும். அப்படி இருந்ததால் தோல்வியுற்ற வீரர்கள் பின்வாங்கி ஒன்று கூடுவதற்கு உதவியாக இருந்திருக்க வேண்டும். யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கிலும் வாடி குப்ரின்சேயேக்கு வடக்கிலும் கிலயாது சரிவிலுமுள்ள ர்ாசு அபு தபத்தாக இருக்கலாம்.

தபசேத்து (DABBESHETH - கூனல்)

செபுலோனின் ஒரு எல்லை நகரம். இது இருந்த இடம் துல்லியமாகத் தெரியவில்லை என்றாலும் வாசகச் சூழ்நிலை இது யோக்னயாம் என்ற இடத்திற்கு அருகில் இருந்திருக்கலாம் என்றும், அது தேல் எஸ்-செம்மானாய் இருக்கலாம் என்றும் சுட்டுகிறது.

தபரிம்மோன் (TABRIMMON - ரிம்மோன் (கடவுள்) நல்லவர்)

தமஸ்குவின் அரசனான முதலாம் பெனதாதுவின் தந்தை (2 அர 5:18). எசியோனின் மகன் (1 அர 15:18). அனேகமாகப் பெனதாதுக்குமுன் தமஸ்குவைத் தபரிம்மோன் ஆட்சி செய்திருக்க வேண்டும். இவரைப்பற்றி வேறு ஒன்றும் விவிலியத்தில் கொடுக்கப் படவில்லை.

தபராத்து (DABERATH - மேய்ச்சல் நிலம், புல்தரை)

இசக்காருக்கும் செபுலோனுக்கும் இடையில் உள்ள எல்லையில் (யோசு 19:13) அமைந்த இசக்காருக்குச் சொந்தமான ஒரு லேவியர் நகரம் இது. நாடுபங்கீடு செய்யப்பட்டபின் கேர்சேனியருக்கு இறைவனால் கொடுக்கப்பட்டது (யோசு 21:28; 1 நாள் 6:72). யோசு 19:20-இல்வரும் இரபீத்து என்ற இடம் இந்த ஊரையே குறிக்கலாம். தாபோர் மலைக்கு மேற்கேயுள்ள தெபுரியேதான் இவ்விடம் என்று கருதப்படுகிறது.

தபாயோத்து (TABBAOTH - முத்திரை மோதிரம்)

நாடு கடத்தலிலிருந்து திரும்பிய ஆலய ஊழியர்களின் அல்லது நெத்தினிமியர்களின் ஒரு குடும்பத்தின் தலைவர் (எஸ் 2:43; நெகே 7:46).

தப்பறை (HERESY)

1. பிளவு மற்றும் தப்பறை: இவ்விரு சொற்களும் கிறிஸ்தவ மக்களுக்குள் கடுமையான மற்றும் தொடர்ந்திருக்கின்ற பிரிவினையைச் சுட்டுகின்றன. இவை இரண்டும் இரு வேறுபட்ட மட்டத்தில் உள்ளன. பிளவு என்பது படிமரபுக்கூட்டமைப்பின் சூழலில் ஏற்படும் முறிவாகும். ஆனால், தப்பறையோ விசுவாசத்தின் சூழலிலேயே முறிவை ஏற்படுத்துகின்றது.

பழைய ஏற்பாட்டில் விசுவாசத்தினுடைய அறிவு பூர்வ உட்பொருளானது குறிப்பிட்ட அளவுடையதாகவும், தப்பறைக்கு இடமளிக்கச் சிறிதளவே செயல்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. இஸ்ராயேலின் சோதனையானது, துல்லிய கோட்பாட்டின் அமைப்பினின்று விருப்பப்படி தேர்ந்தெடுப்பதாக இல்லாமல், ''பிற தெய்வங்களைப் பின்பற்றுவதாகவே'' இருந்தது (உப 13:3). இது தப்பறை என்பதை விடக் கொள்கை மாறுதல் அல்லது சிலை வழிபாடு எனப்பட்டது. மக்களைத் தவறான பாதைக்கு நடத்திச் சென்றவர்களும், அவர்களைப் பின்சென்றவர்களும், ஒரே இறைவனும் இஸ்ராயேலின் மீட்பருமான யாவேயிடமிருந்து தங்களைத் துண்டித்துக் கொண்டனர். ஆனால், புனித மக்களின் ஒன்றிப்பில் பிளவை ஏற்படுத்தவில்லை. அவர்களிடமிருந்து துண்டித்து விடுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர் (உப 13:6).

''தப்பறை'' என்ற சொல்லின் துல்லியமான பொருள் உணர்வானது, புதிய ஏற்பாட்டின் சில குறிப்பிட்ட பிற்கால நூல்களில் மட்டுமே தோன்றுகிறது (2 பேதுரு 2:1; தீத் 3:10). பவுலைப் பொறுத்தவரை, 1 கொரி 11:18-இனுடைய பிரிவினைகள், 11:18-இனுடைய பிளவுகளிலிருந்து அரிதாகவே வேறுபட்டவையாக உள்ளன. சமுதாயத்திற்குள்ளிருக்கும் பிளவுகள், தமக்கேயுரிய தனிப்பட்ட கருத்துக்களுடன், உண்மையான எதிர்க்குழுக்களாக உருவாவதற்கு நாட்டம் கொள்கின்றன. யூதமதத்தில் சதுசேயர் (அ.ப. 5:17), பரிசேயர் (15:5; 26:5) மற்றும் நசரேயர் (24:5.14; 28:22) என்ற அளவிலும், கிரேக்க உலகில் சொற்கோப்புக்கலைப் பள்ளிகளிலும் அவர்கள் இருந்தனர்.

கோட்பாட்டுத் தவற்றின் இக்கருத்தில் திருச்சபையானது இரு மாறுபட்ட சூழ்நிலைகளுடன் நன்கு அறிமுகமானதாக உள்ளது. முதலாவதாக, அதனுடைய ஒற்றுமையானது யூதமயமாக்கும், பிரச்சினையால் அச்சுறுத்தப்பட்டது. பிற்காலத்தில், குறிப்பிட்ட மக்கள் கிறிஸ்துவிலான விசுவாசத்தினின்று தங்களையே துண்டித்துக் கொண்டனர் (1 யோவா 4:3). ''உண்மையில் இவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள் அல்லர்' (2:19). கப்பர்நாகுமில் இயேசுவை விசுவசிக்க மறுத்து (யோவா 6:36.64) அவரை விட்டு விலகிச் சென்ற (6:66) சீடரைப் போன்றவர்களே இவர்கள்.

2. யூத மயமாக்கும் பிரச்சினை: திருச்சபைக்குள் புறவினத்தாரை அனுமதித்தது வெகுவிரைவில், யூதக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து பின்பற்றி வந்த யூத நடைமுறைகளுடைய மதிப்பீடுமீது வினாக்களுக்கு இடமளித்தது. கிறிஸ்தவத்திற்கு வருகின்ற

புறவின மனமாறியவர்களின்மீது அவற்றைச் சுமத்துவதானது மீட்பிற்கு அவை அவசிய மானவையெனக் கருதப்படும். யூதமயமாக்க விரும்பியவர்கள் கோரியது உண்மையில் இந்நிலையே (அ.ப. 15:1). ஆனால், பவுலைப் பொருத்தமட்டும், இக்கோரிக்கை கிறிஸ்துவைப் பொருளவற்றவராக்கி, சிலுவையினின்று அதனுடைய மொத்த மதிப்பையும் நீக்கிவிடுகிறது. சட்டத்தில் நீதியை நாடுவதென்பது, கிறிஸ்துவோடு முறிவுற்று, அருளினின்று விழுவதாகப் பொருள்படும் (கலா 5:1-6). திருச்சபையானது பிளவினால் அச்சுறுத்தப்பட்டது. எவ்வாறாயினும் புறவினக் கிறிஸ்தவர்களின் சுதந்தரம் பற்றி (2:4; 5:1) யூதக் கிறிஸ்தவ உடன்பாட்டையும், எல்லாவற்றிற்கும் மேலாக ''யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகியோருடைய'' உடன்பாட்டைப் பெறவும் (2:9) பவுல் விரும்பினார். கி.பி. 48-இல் எருசலேம் சங்கத்தில் அவர் அதனைப் பெற்றார் (அ.ப. 15; கலா 2:1-10). அதைப் பெறாமலிருந்தால், ''இதுவரை அவர் உழைத்த உழைப்பும் வீணாகும்'' (கலா 2:2). அதாவது, அப்போஸ்தலிக்க வெளிப்பாடானது தன்னையே முரண்படுத்தியிருக்கும் (எபே 3:3-5). ''நீங்கள் பெற்றுக்கொண்ட நற்செய்தியினின்று வேறானதொன்றை எவனாவது உங்களுக்கு அறிவித்தால், அவன் சபிக்கப்படுக'' (கலா 1:9).

3. தொடக்க நிலையிலுள்ள தப்பறைகள்: *பவுலின் செய்தியானது கிரேக்க ஞானத்தையும் குறை கூறுவதாயிருந்தது. இந்த ஞானத்துடனான கொரிந்தியரின் மோகமானது, கோட்பாட்டுச் சிக்கல்களையும் கொண்டிருந்தது. மற்றவர்கள் பல்வேறுபட்ட அலைந்து திரியும் மெய்யியலாரின் குழுக்களினின்று தேர்ந்தெடுப்பது போலக் கொரிந்தியர்களும் பவுல், அப்பொல்லோ மற்றும் கேபா ஆகியோரினின்று தேர்ந்து கொள்ள முடியும் என்று எண்ணியிருந்தனர். மேலும், எல்லா அப்போஸ்தலர்களும் பயன்படுத்திய ''சிலுவையின் மொழிக்கு'' அவர்கள் காதுகேளாதோராக இருந்தனர் (1 கொரி 1:17-18). இல்லாவிடில் இறந்தோரின் உயிர்ப்பைப்பற்றி விவாதிக்கலாயினர். இவ்வாறாகத் தங்களது விசுவாசத்தின் அத்யாவசிய உட்பொருளாகிய இயேசுவின் உயிர்ப்பின் மீதான போதனையையும் விசுவாசத்தையும் வெறுமையாக்கினர் (15:2. 11-16).*

பிற்காலத்தில் கிறிஸ்துவில் முதன்மை பற்றிய கொலோசையரின் விசுவாசத்தை அச்சுறுத்தவும் (கொலோ 2:8-15; எபே 4:14-15), அவர்களை மீண்டும் இருளின் ஆட்சிக்குக் கொண்டு செல்லவும் (கொலோ 2:17) யூத யூகங்கள், கிரேக்கக் கருத்துக்களுடன் ஒன்று சேர்ந்தன.

அப்போஸ்தலிக்கக் காலத்தின் இறுதி ஆண்டுகளில், முரண்பட்ட யூதர் அல்லது புறவினத்தாரிடமிருந்து பெறப்பட்ட ஞானவாதத்திற்கு முற்பட்ட கருத்துக்களின் அபாயமானது (1 திமொ 1:3-7.19-20; 4:1-11; 6:3-5; 2 திமொ 2:14-26; 3:6-9; 4:3-4; தீத் 1:9-16; யூதா; 2 பேதுரு 2; 3:3-7; திருவெளி 2:2.6.14-15.20-25) மிகவும் நெருக்குவதாக இருந்தது. ''ஊனுடல் எடுத்து வந்த'' இறைமகன் இயேசுவே என்பதைச் (1 யோவா 2:22-23; 4:2-3; 2 யோவா 7) சில ''போலி இறைவாக்கினர்கள்'' (1 யோவா 4:1) மறுக்கவும் செய்தனர்.

விவாதங்களுக்கும் பிளவுகளுக்கும் இடமளிக்கின்ற இந்தப் பிறழ்தல்கள் (1 திமொ 6:3தொ; தீத் 3:9; யூதா 19), கொரிந்திலாயினும் (1 கொரி 4:18-19), கொலோசையிலாயினும் (கொலோ 2:18), அல்லது வேறெவ்விடத்திலாயினும் (1 திமொ 6:4; 2 திமொ 3:4), திருச்சபை முழுவதிலும் ஒருமித்தவாறு போதிக்கப்படுகின்ற கோட்பாட்டிற்கு அடிபணிய மறுக்கின்றவர்களுடைய கடினமான செருக்கினின்று விளைகின்றது (உரோ 6:17; 1 கொரி 15:11; 1 திமொ 6:3; 2 பேதுரு 2:21). இவர்கள் தமேக்கேயுரிய ஊகங்களால் அதனை முன்னேற்ற விரும்புவதன் மூலம் அதனை மாற்றுகின்றனர் (2 யோவா 9). எனவே, அவர்களில் மிகவும் அபாயகரமானவர்கள், புறம்பாக்கப்படுகின்றனர் (தீத் 3:10; 1 திமொ 1:20; யூதா 23; 2 யோவா 10).

சேதப்படுத்தப்படாத விசுவாசமானது எவ்வளவு மதிப்பு மிக்கது என்பதைப் போலிப்

போதகரைக் குறித்த புதிய ஏற்பாட்டின் கடுமையானது காட்டுகிறது (2 திமொ 1:19; 2 திமொ 3:8). இந்நிலையானது, அப்போஸ்தலரிடமிருந்து பெறப்பட்ட நலமிக்க போதனையை அச்சுறுத்துகின்ற தவறுகளின்மீது வெற்றி கொண்டுள்ள திருச்சபையுடன் நம்மை உறுதியாகப் பிணைக்கிறது (2 திமொ 1:13-14.

தப்புவாகு (TAPPUAH - ஆப்பிள் மரம், தின் கனி தரும் மர வகை) - ஆள்

காலேபு இனத்தைச் சேர்ந்த எபிரோனில் தோன்றியவர் (1 நாள் 2:43). இவரது பெயரிலேயே தப்புவாகு நகரம் தோன்றியிருக்க வேண்டும். இப்பெயர் ஒரு வேளை பெத் தப்புவாகு என்ற ஊரைக் குறிக்கலாம் (யோசு 15:53).

தப்புவாகு (TAPPUAH) - இடம்

1. ஏதோமின் எல்லை ஓரமான சமவெளிப் பகுதியில் செபேலா அருகில் யூதாவின் புதல்வர்களுக்குக் கிடைத்த ஊர்களில் தப்புவாகும் ஒன்று (யோசு 15:34). இதனைத் தெளிவாகக் குறிப்பிட விரும்பிய யூதர்கள் இதனைச் செபேலா தப்புவாகு என்று அழைத்தனர். ஏனெனில் பெத் - தப்புவாகு (யோசு 15:53) என்ற ஓர் இடமும் அன்று இருந்தது. இந்தச் செபேலா தப்புவாகு எங்கு இருந்தது என்று கூற முடியாது. ஆயினும் இது பெத்லகேமுக்கு மேற்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள பெயிட் நெட்டிப் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

2. எப்பிராயிமின் வட எல்லையில் உள்ள ஒரு வடகானானிய நகரம் (யோசு 16:8). யோசுவாவின் தலைமையில் இஸ்ராயேலர் இதைத் தோற்கடித்தனர் (12:17). இது ஏன் - தப்புவாகுவோடு தொடர்பு படுத்தப்பட்டு, மனாசேயின் தென் எல்லையில் இருந்த எப்பிராயிமுக்கும், அதைச் சுற்றியுள்ள பகுதி மனாசேக்கும் குறிக்கப்பட்டிருந்தது (17:1-8). இது இக்காலச் செயிக் அபு சராது என்று அடையாளம் காட்டப்படுகிறது. இதுவும் திப்சாகு (2)வும் ஒன்றே என்று கருதப்படுகிறது (2 அர 15:16). இந்த இடம் இஸ்ராயேல் அரசன் மெனகேமால் கடுமையாகத் தாக்கப்பட்டது. அதே வரிசையில் திரட்சாவும் குறிக்கப்படுவதால், இது ஒரு வேளை எப்பிராயிமின் தப்புவாகுவைக் குறிக்கலாம்.

தமஸ்கு (DAMASCUS)

சீரியா (ஆராம்) நாட்டின் ஒரு நகரம். எதிர் லெபனோன் மலையின் கிழக்குச் சரிவுகளில், தென்மேற்கில் எர்மோன் மலைகளையும் கொண்டு இன்றைய சீரியாவின் தலைநகரமான தமஸ்கு அமைந்துள்ளது.

தமஸ்கு நிலப்பரப்பானது ஆறுகளாலும், கால்வாய்களாலும், நீர்பாய்ச்சப்படுகின்ற ஒரு பாலைவனச் சோலை. எதிர்லெபனோன் புறப்படும் அபானா ஆற்றின் கரையில் தமஸ்கு அமைந்துள்ளது. நகருக்குத் தெற்கே பர்பார் ஆறு கிழக்கு நோக்கி ஓடுகிறது. பழங்காலம் தொட்டே வணிகத்திலும், சமயங்களிலும் தமஸ்கு ஒரு முக்கியமான இடத்தை வகித்திருந்தது. ஏனெனில் இது வெகுகாலத்திற்கு முன்பிருந்தே இராணுவ, வணிகச் சாலைகள் சந்திக்கும் இடமாக இருந்தது.

தமஸ்கு பழைய ஏற்பாட்டில் பலமுறை சொல்லப்பட்டுள்ளது; அப்பொழுது இது அரமேயருடைய (சீரியா) அரசின் தலைநகரமாக இருந்தது (காண்க. ஆதி 14:15; 15:12; 1 அர 11:24; 15:18; 19:15; 20:34; 2 அர 8:7.9; 14:28; 16:10-12; எசா 7:8).

மூன்றாம் துட்மோசின் குறிப்புகளில் (கி.மு. 16-ஆம் நூற்றாண்டு) இப்பெயர் முதன்முதல் தோன்றுகிறது. தமஸ்குவிற்கு அருகில் இருந்த இடங்களில் பல முக்கிய தேல்கள் (மண்மேடுகள்) இருக்கின்றன; அவற்றில் பழைய நகரங்களின் அழிவுகள் புதைந்து இருக்கின்றன. பழைய காலத்தில் (உ-ம். 2000-1500) இங்குப் பல குடியிருப்பு மையங்கள் இருந்தன என்று தெரிகிறது. ஆனால் இன்றைய தமஸ்குதான் முக்கிய மையமா, இல்லையா என்பது தெரியவில்லை. அபானா ஆற்றின் வளமிக்க பகுதியில் அமைந்திருந்த தமஸ்குப்பகுதிக்குக் கிழக்கில் பெருமளவும் வறண்ட பகுதி

இருந்தது. அங்கிருந்து எதிரிகள் பல தடவை படையெடுத்திருக்கின்றனர். ஆகவே பாது காப்பு அரண்கள் அவசியமாயிற்று. தமஸ்கு விற்கு ஏறக்குறைய 15 கி.மீ. கிழக்கே அபானா ஆற்றின் கரையில் நன்கு பாதுகாக் கப்பட்ட கோட்டை நகரம் இருந்தது. இவ் வாறு பல கோட்டைகளின் சிதைவுகளைக் காணலாம். அமர்னா காலத்தில் தமஸ்குவா னது எமோரிய அரசின் முக்கியமான மைய மாக இருந்தது. எகிப்திய ஆதிக்கத்தை நீக்கு வதற்காக இதனுடைய அரசர் மிகவும் பாடு பட்டதாகத் தோன்றுகின்றது. அக்காலத்தில் தமஸ்குவிற்கும் மைசேனியன் அரசிற்கும் தொடர்பு இருந்ததென்று அங்குக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மைசேனியன் மட்பாண் டங்கள் சொல்கின்றன. கி.மு. ஏறக்குறைய இரண்டாம் ஆயிரமாண்டு முடிவில் தமஸ்கு முக்கியமான அரமேய அரசின் தலைநகர மாக இருந்தது. அசீரியாவோடு போட்டி யிடும் அளவிற்குத் தமஸ்கு வலிமைவாய்ந்த தாக இருந்தது. ஏறக்குறைய கி.மு. 1200-இல் அரமேயர்கள் இதைக் கைப்பற்றினர். ஒன் றித்த, மற்றும் பிளவுபட்ட எபிரேய அரசாட் சிக்காலத்தில் தமஸ்கு எருசலேமிற்கும் சமாரியாவிற்கும் எதிரியாக இருந்தது.

2 அர 5:12-இல் யோர்தான் ஆற்றில் நாமான் தன் உடம்பைக் கழுவச் செல்லக் கேட்டபோது, அவர் தமஸ்குவின் ஆறுகள் இஸ்ராயேலரின் ஆறுகளைவிட மேலா னவை என்று எலிசாவிற்குப் பதில் அளித்ததி லிருந்து இது தெரிகிறது. தாவீது தமஸ் குவை வென்று அதைக் கப்பம் கட்டவைத் தார் (2 சாமு 8:5-6; 1 நாள் 18:5 தொ). சாலமோனின் ஆட்சிக் காலத்தில் ஆராம் - சோபாவைச் சேர்ந்த இரசோன் இதை வென்று தன்னை இஸ்ராயேலிலிருந்து விடு வித்துக் கொண்டார் (1 அர 4:23தொ). தமஸ்கு வைச் சேர்ந்த தபரிம்மோன் யூதநாட்டு அபியா முடன் கூட்டுச் சேர்ந்து இஸ்ராயேலை எதிர்த்தான் (1 அர 15:19). தபரிம்மோனின் மகன் முதலாம் பெனதாது முதலில் இஸ்ரா யேல் நாட்டுப் பாசாவுடன் கூட்டுச்சேர்ந்து, பின்பு யூதாநாட்டு ஆசாவுடன் கூட்டுச் சேர்ந் தான் (1 அர 15:18 தொ). இரண்டாம் பெனதாதும் அவர் மகன் அததேசரும் இஸ் ராயேல் அரசனான ஆகாபுக்கு எதிராகப் போர்செய்து, இராமோத்துகிலயாத்தில் அவ ரைக் கொன்றனர் (கி.மு. 853; 1 அர 22); மூன்றாம் பெனதாது இரண்டு ஆண்டுகள் ஆண்டபின் அசாவேலால் கொல்லப்பட்டார் (843-797; 2 அர 3:7-15); பிறகு 4-ஆம் பெனதாது அரசனானார். இவர் ஏறக்குறைய இஸ்ராயேல் முழுவதையும் வென்று சமாரியா வையும் முற்றுகையிட்டார் (2 அர 6:24 தொ). எலிசாவின் தலையீட்டால் இந்த முற்றுகை நீக்கப்பட்டது. இஸ்ராயேல் அரச னான இரண்டாம் எரொபவாமால் இஸ்ரா யேல் மீட்கப்பட்டது (2 அர 14:28).

இதற்கிடையில் தமஸ்கு அசீரியாவை எதிர்த்துச் சண்டைபோட வேண்டியிருந்தது. தமஸ்கு தன்னுடைய நிலைமையைக் காத் துக்கொள்ள வேண்டுமென்றால் மேற்கில் அசீரியா வெற்றி பெறுவதைத் தடுக்க வேண்டி யிருந்தது. இதுதொடர்பான சீரிய - எப்பி ராயிமியப் போர் முக்கியமானதாகும் (734). இதில் தமஸ்கு அரசன் ரெசினும், இஸ்ரா யேல் அரசன் பெக்காவும் ஒன்று சேர்ந்து யூதா நாட்டு அரசன் ஆகாசை அசீரியாவுக்கு எதிரான கூட்டணியில் சேர்க்க ஆகாசுக்கு எதிராய்ப் போரிட்டனர். எசாயா ஆகாசை எச்சரித்தார்; இருந்தாலும் அவர் அசீரியா வையே நம்பினார். இந்தப் போரின் விளை வாக ஆசீரியர் தமஸ்குவை 733 / 32-இல் கைப்பற்றி எசாயா முன்னறிவித்திருந்தது போல ரெசினைக் கொன்றனர் (எசா 7:4 தொ; 8:1 தொ; 17:1 தொ; 2 அர 16:9). இந்த நிகழ்ச்சிகளின் விளைவாகத் தமஸ்குவின் வளர்ச்சி குன்றியது. பிறகு அசீரியர்கள், பாபிலோனியர்கள், பாரசீகர்கள், கடைசி யாக அலக்சாந்தர் இதைக் கைப்பற்றினார். உரோமைச் சட்டப்படி தமஸ்கு சுதந்தர நபத் தேய அரசின் தலைநகரமானது (கி.மு. 85). இதனுடைய அரசன் 3-ஆம் அரேத்தா ஆவான். கி.மு. 65-இல் உரோமையர் சீரியாவை வென்றனர். தமஸ்கு நபத்தேய ஆளுநரின் ஆட்சியின் கீழ் வந்தது. பவுல் தமஸ்குவிற்குச் சென்ற பொழுது (அ.ப. 9:2 தொ) இது நான்காம் அரேத்தாவால் ஆளப்பட்டு வந்தது.

அந்தக் காலத்தில் அங்கு அதிகமான யூதர்களும் கிறிஸ்தவர்களின் குழுவும் இருந்தனர் (அ.ப. 9:2; 22:5-6.10-11; 26:12). உரோமைப் பேரரசனான திரேசன் இதை உரோமை மாகாணமான சீரியாவுடன் இணைத்துவிட்டார்.

அதற்குப் பின் வந்த நூற்றாண்டுகளில் இது கிறிஸ்தவ மயமாக்கப்பட்டது. புகழ் வாய்ந்த திருமுழுக்கு யோவான் ஆலயம் மாமன்னன் தியோடோசியனால் ஆரம்பிக்கப்பட்டு ஆர்கடியசால் முடிக்கப்பட்டது. இது, பழங்கால மேற்குச் செமித்திய புயல் தெய்வமான அதாது என்ற கடவுளின் முந்தைய கோவில் இருந்த இடத்தில் கட்டப்பட்டது.

தமஸ்கு நகர உடன்படிக்கை அல்லது ஏடு (DAMASCUS, COVENANT OF)

இது யூத சமூகத்தில் பிரிந்த சகோதரர்களுக்கு வழங்கப்படும் ஒரு சுருக்கமான பெயர். இந்தப் பிரிவினர் அவர்களின் நூல்களின் ஒரு பகுதியான "சாதோக்கிய ஏடுகள்" என்றழைக்கப்படும் ஏடுகளிலிருந்து அறியப்படுகின்றனர். இந்தச் சுவடிகளில் இந்தச் சமூகத்தினர் தங்களையே "தமஸ்கு நகரத்தில் செய்த புதிய உடன்படிக்கை" என்று அழைத்துக் கொள்கின்றனர். இயேசு வாழ்ந்த சமயத்தில் இது தழைத்து வளர்ந்தது. இது எஸ்ஸேனியர் குழுவைச் சேர்ந்த சமூகமாகும்.

கும்ரானுக்கு அருகே உள்ள நான்காம் ஆறாம் குகைகளிலே இச்சுவடிகளின் சில பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கே கண்டெடுக்கப்பட்ட சாக்கடல் சுவடிகளிலும் இச்சமூகத்தினரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

தமஸ்கு வாயில் (DAMASCUS GATE)

எருசலேமின் நவீன பழையநகரத்தின் வடசுவரிலுள்ள முக்கியமான வாயில். சுலைமான் மக்னிபிசன்ட் என்பவரால் கி.பி. 1530 - 1539-இல் இது அமைக்கப்பட்டது. இது முக்கிய தென் - வட வீதிகளுக்கு இட்டுச் செல்கிறது. இந்த வழியாகத்தான் பவுல் தமஸ்கு புறப்பட்டுச் சென்றார் என்ற ஆதிக் கிறிஸ்தவப் பாரம்பரியத்திலிருந்து (அ.ப. 9) இந்த வாயில் இதன் பெயரைப் பெறுகிறது. இதன் அரபியப்பெயர் பாப் ஏல்-அமுது (தூண் வாயில்) ஆகும். அராபியர்கள் இந் நகரைக் கி.பி. 638-இல் கைப்பற்றியபோது அதிரியானால் கட்டப்பட்ட தூண் அங்கு இருந்ததை இப்பெயர் சுட்டுகிறது. இத்தூண் இன்றும் நிற்கிறது.

தம்மூசு (TAMMUZ - பற்றுறுதியான மகன்)

சுமேரியர்களின் கடவுள்களில் ஒருவர். இவர் மீனவராகவோ மேய்ப்பவராகவோ தோன்றி, தெய்வத்தன்மை அடைந்தவர் என்று நம்பினர். இக்கடவுள் இறந்து உயிர்த்ததன் மூலம் வாழ்வின் பலநிலைகளை உணர்த்தியதாக ஏற்றுக் கொள்கின்றனர். வாழ்வுக்கும், குழந்தைச் செல்வத்திற்கும் காவலனாகக் கருதப்பட்ட இக்கடவுளின் முன் பெண்கள் அழுது வேண்டுவதாக எசே 8:14-இல் வருகிறது.

இந்த வசந்தகால விவசாயக் கடவுள் கில்காமிஸ் இதிகாசத்திலிருந்து அறியப்படுகிறார். காதல் தெய்வமாகிய இஸ்தாரின் காதலன். ஆனால் இவள் தனதுகாதலனுக்குத் துரோகம் செய்தாள். இந்தத் துரோகத்தின் நினைவு நாளில் ஆண்டின் நான்காம் மாதம் இக்கடவுளுக்காக அழுது புலம்புவார். இம்மாதம் இக்கடவுளின் பெயரால் அழைக்கப்பட்டது. இந்தப் புலம்பல் சடங்கை எருசலேம் பெண்கள் ஆறாம் மாதம் ஐந்தாம் நாளில் கொண்டாடியதாக எசேக்கியேல் கூறுகிறார் (எசே 8:14).

இந்த வழிபாடு, சீரியாவில் அதோசின் வழிபாடாகவும், கிரீசில் பெர்செப்போன் மற்றும் தியோனிசியஸ் வழிபாடாகவும், எகிப்தில் ஒசிரிஸ் வழிபாடாகவும் கொண்டாடப்பட்டது.

தயிர், வெண்ணெய் (CURDS)

மேற்காசிய நாடுகளில் தயிர் அன்றாட உணவாகும். ஆபிரகாம், தம்மைக் காண வந்த மூன்று மனிதருக்குத் தயிரை மாமிசத்

துடன் அளித்தார் (ஆதி 18:8). எபேரின் மனைவி யாவேல், சேராவிற்குத் தயிர் கொணர்ந்தாள் (நீதி 5:25). இந்தத்தயிரும் மற்ற உணவுகளும் தாவீதுக்கு மகனயிமில் அவர் தங்கியிருந்தபோது தரப்பட்டன (2 சாமு 17:29). தீயவனைப் பற்றி யோபு ஆகம ஆசிரியர் கூறுகிறார் ''தேன், வெண்ணெய் ஆறுகளில் அவன் இன்பம் காணான்'' (யோபு 20:17). மேலும் இம்மானுவேலின் உணவு வெண்ணெயும், தேனும் என எசாயா கூறும்பொழுது, 'சாதாரண நாடோடி மக்களின் உணவை இம்மானுவேல் உண்பார்'. எனக் குறிப்பிடுகிறார் (எசா 7:15).

தராலா (TARALAH - சுற்றிச் செல்லும்)

பென்யமின் இனத்திற்குக் கிடைத்த நகரங்களில் ஒன்று (யோசு 18:27). விவிலியத்தில் வரும் குறிப்புகளைக் கொண்டு ஆராய்ந்தால் இது எருசலேமுக்கு வடமேற்கே உள்ள மலை நாட்டில் இருந்திருக்க வேண்டும் (18:25-28). தேல் ஏல்-புல் (கிபயா) அருகில் குறிக்கப்படும் கிர்பெத் இர்காவாக இருக்கலாம்.

தர்க்கோன் (DARKON - சிதறடிப்பவர், முரடன், கடுமையானவர்)

செருபாபேலுடன் அடிமைத்தனத்திலிருந்து நாடு திரும்பிய ''சாலமோன் ஊழியர்களின் புதல்வர்களின்'' குடும்பங்களில் ஒன்றின் தலைவர் (எஸ் 2:56; நெகே 7:58).

தர்சிசு (TARSHISH - பாறையான, இளம் பச்சையான மணிக்கல்) - ஆள்

1. ''யாவானின் புதல்வர்களில்'' ஒருவர் (ஆதி 10:4; 1 நாள் 1:7).

2. பென்யமின் இனத்தைச் சேர்ந்தவர்; பில்கானின் புதல்வர் (1 நாள் 7:10).

3. அகசுவேர் மன்னனுக்கு ''மிக நெருக்கமானவர்களும்'', ''பொறுப்பில் முதன்மை பெற்றோருமான'' ஏழு தலைவர்களுள் ஒருவர் (எஸ்த 1:14).

தர்சிசு (TARSHISH - பாறையான, இளம் பச்சையான மணிக்கல்) - இடம்

பெனிசிய மொழியிலிருந்து வந்த இந்தச் சொல்லுக்கு உலோகங்களை மெருகேற்றுதல், உருக்கிப் புதிதாகச் செய்தல் என்ற பொருள் உண்டு. இச்சொல்லிலக்கணம் தர்சிசை அடையாளம் காட்ட உதவலாம். இங்கு முக்கியத் தொழில் உலோக வேலையாக இருப்பதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். இதனைப்பற்றி விவிலியத்தில் பல இடங்களில் குறிப்பு வருகிறது. நாடுகளைப் பற்றிய பட்டியலில் யாப்பேத்தின் வழி வந்தவரும் யாவானின் மகனும் ஆவார் தர்சிசு (1 நாள் 1:7; ஆதி 10:4) என்றுள்ளது. தீர் நகரத்திற்கு எதிரான இறைவாக்குகளில் ''தர்சிசின் மகளே'' என்று எசாயா விளிக்கின்றார் (எசா 23:10); தீர் மக்களைத் தர்சிக்கு ஓடி விடுமாறு கூறுகிறார் (20:6). எசா 66:19-இல் பூற்று மற்றும் லூதுவோடும் தர்சிசு குறிக்கப்படுகிறது. தர்சிசு நகர வணிகர்களைப் பற்றி எசேக்கியேல் பேசுகிறார் (எசே 38:13). அதன் வாணிபப் பொருட்களாக வெள்ளி, வெள்ளீயம், காரீயம் ஆகிய பொருட்கள் குறிக்கப்படுகின்றன (எசே 27:12; எசே 10:9), சங் 72:10, தர்சிசையும் தீவுகளையும் மெசிய அரசரை வழிபட அழைக்கிறது. செங்கடலில் தர்சிசுக்குச் செல்லும் கப்பல்கள் என்ற கருத்து (2 நாள் 20:36தொ) ''தர்சிசுக் கப்பல்'' என்ற சொற்றொடரைத் தவறாகப் புரிந்து கொள்வதால் வருவதாகும். யோனா தர்சிசுக்குச் செய்த பயணத்திலும் இதே தவறு மறைந்து நிற்கிறது (யோனா 1:3; 4:2). இப்பெயர் ''தர்சிசிலிருந்து கப்பல்கள்'' என்று மற்ற இடங்களிலும் காணப்படுகிறது (1 அர 10:22; 22:49; 2 நாள் 9:21; சங் 48:8; எசா 2:16; 23:1-4; 60:9; .எசே 27:25; யோனா 1:3).

பொதுவாக இந்நகரை அட்லாண்டிக் கரையோரம் உள்ள தர்த்தேசாஸ் என்ற ஸ்பெயின் துறைமுகத்தோடு இணைத்துக் கூறுவர். இப்பெயர் அசிரிய ஏசர்கத்தோன் வாசகங்களிலும் சர்தீனியாவில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெனிசிய ஏடுகளிலும் காணப்படுகிறது. ஸ்பெயினில் இ காலத்தில் பெனிசியக் குடியிருப்புகள் இருந்திருக்க முடியாது. ஆகவே தர்சிசை ஸ்பெயின் துறைமுகமாக அடையாளம் காட்டுவதை அறிஞர் பலர் ஏற்கார். அவர்

கள் ''சுத்திகரிப்பு நிலையம்'' என்ற பொதுப் பொருளைத் தர்சிசு என்ற பெயருக்கு அளிக் கின்றனர். உலோகப் பொருட்கள் தோண் டப்பட்டு உருக்கப்பட்ட சர்தீனியாவிலுள்ள பல பெனிசியக் குடியிருப்புகளுக்குத் தர்சிசு என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம். ''தர்சிசுக் கப்பல்'' என்பதற்குப் பெரிய, வலிமையாகக் கட்டப்பட்டு ஸ்பெயினுக்கு நீண்ட பயணம் செய்ய வல்லதான கப்பல் என்று பொருள் கொள்ளப்பட்டது. விவி லிய சுட்டிக்காட்டல்களிலிருந்து இது ஒரு பெரிய கப்பலாகும். ஆனால் இது ஒரு ''சுத்திகரிப்புக் கப்பலாகும்''. உருக்கப்பட்ட உலோகங்களான கனமான பொருட்களை ஏற்றிச் செல்ல ஏதுவாகக் கட்டப்பட்டது. இப் பெயரை விவிலியம் பயன்படுத்தும் முறை, பல சுத்திகரிப்பு நிலையங்களில் ஒன்றுக்கு முதன்மை அளிக்கப்பட்டு அதற்குத் தர்சிசு என்று பெயர் கொடுக்கப்பட்டதைச் சுட்டு கிறது. ஆனால் அதன் பொருளையும், இருந்த இடத்தையும் நிர்ணயிப்பது முடியாத ஒன்றா கும்.

இந்தக் கற்பனையான இடம் பெரும் செல்வமிக்கதாகக் கருதப்படுகிறது (எரே 10:9; எசே 27:12; 38:13). தனது செல்வத்திற் குக் கடல் வணிகத்தைப் பெரிதும் நம்பி யிருந்த தீர் ''தர்சிசின் மகள்'' என்றழைக்கப் படலாம் (எசா 23:10).

இறுதிக் காலச் சூழ்நிலையில் (சங் 48:7; எசா 2:16) ''தர்சிசின் - கப்பல்கள்'' வியாபா ரக் கப்பல்கள் அல்ல; இறைமக்களின் எதிரி களின் போர்க்கப்பல்கள் ஆகும். அவை எசா 66:9-இல் சிதறிக் கிடக்கும் இஸ்ராயேலர் களை எருசலேமுக்குக் கொண்டுவரும் கப் பல்களாகின்றன. எசா 66:19-20 தர்சிசிலிருந் தும் மற்ற, தூர நாடுகளிலிருந்தும் சிதறிக் கிடந்த இஸ்ராயேலர் திரும்பி வருவதை முன்னோக்குகிறது.

தர்சு (TARSUS)

சிறிய ஆசியாவில் இருந்த ஒரு நகரம். புறவின அப்போஸ்தலரான பவுல் பிறந்த ஊர் (அ.ப. 22:3). அவர் எருசலேமில் தங்க முடியாத நிலை வந்தபோது இந்நகருக்கே அவரை அனுப்பி வைத்தார்கள் (9:30). அதன் பிறகு பர்னபா அவரை அழைக்கும் வரை அங்கேயே தங்கியிருந்தார் (11:25). ஒரு முறை பவுல் தனது ஊரைப் பற்றிப் பேசும் போது ''புகழிலே குறைவற்ற தர்சு நகரினன்'' என்று கூறுகிறார் (21:39). இந்நகரம் மிகப் பழம் பெரும் நகரமாகும். இதனைப் பற்றி மூன்றாம் சல்மனேசர் (கி.மு. 858-824) காலத்திலிருந்தே குறிப்புகள் உள்ளன. ஆனால் விரிவான குறிப்புகள் இல்லை. அசீரியர், பாபிலோனியர், பாரசீகர் காலத் தில் இதன் வரலாறு தெளிவற்றதாக இருக் கிறது. இரண்டாம் மக்கபேயர் நூல் இந்நகர மக்கள் 4-ஆம் அந்தியோக்கு எப்பிபான் மன்னனுக்கு எதிராகப் புரட்சி செய்ததைக் கூறுகிறது (2 மக் 4:30).

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தர்சு ஒரு பெரிய, செழிப்பான துறைமுகமும் வியாபார மையமுமாகும். துருக்கியின் தென்கிழக்குக் கடற்கரையில் தர்சு மலையடிவாரத்தில் இருந்து 32 கி.மீ. தொலைவில் சினிது ஆற்றின் கரையில், அதன் துறைமுகமாய் ஆற்றின் வாயில் அமைந்திருந்தது. பழங் காலத்தில் நகர் வரைக்கும் கப்பல்கள் செல்ல லாம். ஆனால் காலப்போக்கில் ஆறு மண் மேவிப்போயிற்று. தர்சுவிலிருந்து சாலை கள் சிறிய ஆசியாவுக்குச் சென்றன. மாற்கு அந்தோனி என்ற உரோமைத் தளபதியால் சுதந்தரமாக மாறியது. அதன் சலுகைகள் அகுஸ்துவால் உறுதிப்படுத்தப்பட்டு விரி வாக்கப்பட்டன. இந்நகரிலிருந்த (பள்ளி கள்) கல்விச்சாலைகள் அறிஞர் பலரை உரு வாக்கிய பெருமை கொண்டவை. அதன் ஸ்தோயிக்குத் தத்துவப் பள்ளிகள் தனிச் சிறப்புக் கொண்டிருந்தன. இந்நகரம் பல் வேறு கொள்கைகளின் மையமாக விளங்கிய தால் பவுலும் சிறந்த தெளிவான அறிவு வளர்ச்சியைப் பெற முடிந்தது.

தர்தா (DARDA - ஞானமுத்து)

யூதாவின் மகனான செராகுவின் புதல்வர் களுள் ஒருவர் (1 நாள் 2:6). இங்குத் தாரா என்று குறிக்கப்படுகிறார். சாலமோனுக்கு

அடுத்து ஞானத்தில் சிறந்தவர் (1 அர 5:11). பழங்கால இசைவல்லுநர்களில் இவரும் ஒருவராகச் சேர்க்கப்பட்டுள்ளார்; இவர் ''மகோலின் புதல்வர்களுள்'' ஒருவர் என்று அதாவது ''இசைவல்லுநர்களின் குழுவில் ஒருவர்'' என்றழைக்கப்படுகிறார்.

தர்த்தாக்கு (TARTAK)

கி.மு. 722-க்குப் பிறகு சமாரியாவில் குடியேறிய அவ்வாயர்களால் வழிபடப்பட்ட ஒரு தெய்வம் (2 அர 17:31). உண்மையில் இப்பெயரில் எந்தத் தெய்வமும் அவ்வட்டாரங்களில் இல்லை. ஆனால் சீரியாவிலும் மெசபொத்தாமியாவிலும் அரமேயர்கள் ''அத்தார் காத்திஸ்'' என்ற ஒரு தெய்வத்தை வணங்கினர். அது காலப்போக்கில் தர்த்தாக்கு என்று மாறியிருக்கலாம். இக்கடவுள் சீரியாவில் குழந்தைச் செல்வத்தினை அளிக்கும் கடவுளாக வணங்கப்பட்டது.

தர்த்தான் (TARTAN - படைத்தலைவர்)

அசீரியப் படையில் இருந்த ஒரு படைத் தலைவனுக்கு அளிக்கப்பட்ட உயர்ந்த பட்டம். இது 'அதாத் - நிராரி' என்பவர் காலத்தில் முதன் முதல் குறிக்கப்படுகிறது (கி.மு. 911-891). பழைய ஏற்பாடு இப்பட்டங்களையுடையவர்கள் இருவரைக் குறிக்கிறது: ஒருவர் அசுதோதை அழிக்க இரண்டாம் சார்கோனால் அனுப்பப்பட்டவர் (எசா 20:1; கி.மு. 711). மற்றவர், சனகெரிபுவால் யூதாவின் அரசன் எசேக்கியாவிடம் அனுப்பப்பட்டவர் (2 அர 18:17). இவ்விருவருடைய சொந்தப் பெயர்கள் கொடுக்கப்படவில்லை. அசீரியப் படைகள் இடம், வலம் என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு தர்த்தான் இருந்தார்.

''தலீத்தா கூம்'' (TALITHA CUMI - சிறுமியே எழுந்திரு)

யாயிரின் மகளை இயேசு உயிர்ப்பித்த போது பயன்படுத்திய அரமேய வார்த்தைகளாக மாற் 5:41-இல் வருகிறது. வியக்கத்தகு நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அதனைப் பார்ப்பவர்கள் வேறுமொழிச் சொற்களைக் கேட்பதில் ஆர்வம் காட்டுவார்கள். மந்திர தந்திர வித்தைகளில் பார்ப்பவருக்கும் கேட்பவருக்கும் புரியாத மொழிகளைப் பேசுவது எங்கும் உள்ள பழக்கம். அதைப்போலவே படிப்பவர்களைக் கவர்வதற்காக மாற்கு அரமேயச் சொற்களை அப்படியே கையாண்டிருக்கலாம். அல்லது இது போன்ற வியக்கத்தக்க நிகழ்ச்சிகளில் இயேசுவின் சொற்களை அப்படியே தர மாற்கு விரும்பியிருக்கலாம். இதற்குச் ''சிறுமியே நான் உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திரு'' என்று பொருளாகும்.

தலை (HEAD)

I. விவிலியத்தில் நேரடியாகவும் உருவகமாகவும் தலை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படைப் பொருள் உடலின் மேலுள்ள பாகம். அது மனிதனுடையதாகவோ (ஆதி 48:14), அல்லது விலங்குகளுடையதாகவோ (யாத் 12:9) இருக்கலாம். பரந்த கண்ணோட்டத்தில் இது எந்தப் பொருளின் மேல்பகுதியாகவும் இருக்கலாம். எடுத்துக்காட்டாகக் கோபுரம் (ஆதி 11:4), விளக்குத்தண்டு (செக் 4:2), மலைகள் (எசா 2:2), அல்லது மரங்கள் (2 சாமு 5:24). இந்த எல்லா எடுத்துக்காட்டுகளிலும் உச்சி என்ற சொல்லால் இது மொழி பெயர்க்கப்படுகிறது. இன்னும் ஏதாவது ஒன்றின் தொடக்கத்தைக் குறிக்கவும் இச்சொல் பயன்பட்டுள்ளது. ஆறுகள் (ஆதி 2:10), தெருக்கள் (எசே 16:25), கால அளவுகள் (யாத் 12:2; நீதி 7:19; எசே 40:1).

தலை என்ற சொல் விவிலியத்தில் அறிவோடு தொடர்புபடுத்துவதில்லை. தொடக்ககால எபிரேயர்கள் மூளையின் செயல்பாட்டை அறியாதிருந்தனர். ஆகவே அறிவின் சக்தி இருதயத்தில் இருக்கிறதாக நம்பியிருக்கிறார்கள்.

கிரேக்க உலகம் அறியாத, விவிலியத்திற்கே உரிய சொல் வழக்கில் ஒரு குடும்பத்தை அல்லது சமூகத்தை நடத்திச் செல்லும் முதல்வரைக் (யாத் 6:14; உப 35:5) குறிக்கத் தலை என்ற சொல் பயன்பட்டது. இதன் விளைவாக அதிகார வலிமை மற்றும்

அதிகாரப் பிறப்பிடத்தை இச்சொல் குறித்தது எனப்படுகிறது. எபே 5:23 இவ்வாறு திருமணத்தில் கணவன் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான்.

II. கிறிஸ்துவின் தன்மையைப் பற்றி எடுத்துக்கூறும் பவுலின் மடல்களில் தலை என்ற சொல் பன்முறை பயன்படுவதால், இச்சொல் நம் கவனத்தை ஈர்க்கிறது. இயேசு கிறிஸ்துவின் மாட்சியைச் சிறப்புறக் கூறுவதற்குப் புனித பவுல் இச்சொல்லின் பல்வகையான பொருள்களையும், இவ்வுருவகத்தின் பல்விதமான வேறுபாடுகளையும் அஞ்சாது கையாளுகிறார்.

1. கிறிஸ்து தலைமையான மூலைக்கல்: ''ரோஸ்'' என்ற எபிரேயச் சொல்லும், 'கெஃபாலே' என்ற கிரேக்கச் சொல்லும் சாதாரணமாக ஒரு மனிதனின் தலை அல்லது விலங்கின் தலையைச் சுட்டும். அத்துடன் இது மனிதர்களின் மகிழ்ச்சி, துன்பம், கேலி போன்ற போக்குகளையும் உணர்ச்சிகளையும் காட்டும். இந்தச் சொல்லை உருவக வடிவில் பயன்படுத்தும் பொழுது, உயிரற்ற உலகிலுள்ள பொருளில் முதலில் தோன்றும் பகுதிக்கு இச்சொல் பயன்படுகிறது: சாலையின் ஆரம்பம் (எசே 16:25); ஆண்டின் தொடக்கம் (யாத் 12:2; நீதி 7:19; எசே 40:1); கட்டடத்தின் முகப்பு, அல்லது ஒரு பொருளின் மிகச் சிறந்த அல்லது உயர்ந்த பகுதிக்கு இச்சொல் பயன்படுகிறது. ஒரு மரத்தின் மேல்நுனி, மலையின் உச்சி, அல்லது பழங்கால நினைவுச் சின்னத்தின் சிகரம் (ஆதி 11:4; 4:7). இந்தக் கடைசிக் கருத்தில்தான் சங் 118:22 வசனம் பயன்படுத்தும் உருவகத்தை நாம் அறிய முடிகிறது. ''கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று''. இந்த உருவகத்தைப் புதிய ஏற்பாடு ஆசிரியர்கள் எடுத்து அதைக் கிறிஸ்துவுக்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றனர். புதிய ஆலயத்திற்கு மகுடமாகவும், உறுதி குலையா வலிமையாகவும் இருப்பவரன்றோ கிறிஸ்து (மத் 21:42; அ.ப. 4:11; 1 பேதுரு 2:7; பெ 2:20)? ஆனாலும் ஆசிரியர்கள் ஒருசிலர் மூலைக்கல்லாகிய கிறிஸ்துவை, முழுக்கட்டடத்திற்கும் அடித்தளமாகவுள்ள அடிக்கல்லாகக் கொள்வதையே விரும்புகின்றனர்.

2. கிறிஸ்து படைப்பு முழுவதற்கும் தலைவர்: தலை என்ற சொல்லுக்கு மற்றொரு உருவகப்பொருளும் உண்டு. இது மற்றவர்களுக்கு முன்னால் தலைமையேற்று நடக்கும் மனிதர்களைக் குறிக்கும் (காண். தலைக்கு வால் எதிரானது. உப 28:1.43 தொ; எசா 9:14); இச்சொல் இன்னும் சிறப்பாகத் தலைவர்களைக் குறிக்கும் (யாத் 6:14; 1 சாமு 15:17; யோபு 29:25; தானி 7:6; திருவெளி 12:3). இந்தக் கருத்தைக் கொரிந்தியருக்கு எழுதிய மடலில் காணலாம் (1 கொரி 11:3). ''ஆணுக்குத் தலையாயிருப்பவர் கிறிஸ்து; பெண்ணுக்குத் தலையாயிருப்பவன் ஆண், கிறிஸ்துவுக்குத் தலையாயிருப்பவர் கடவுள்''. கிறிஸ்துவைத் தலையாக உருவகம் செய்யும் இடங்களிலெல்லாம், அவரது தன்னிகரில்லாத் தலைமைப் பண்பையே பவுல் குறிப்பிடுகின்றார் என்பதில் சிறிதும் ஐயமில்லை (1 கொரி 11:3; கொலோ 2:10; காண் எபே 1:10-22).

3. கிறிஸ்து திருச்சபையின் தலை: கிறிஸ்து திருச்சபையின் தலை என்று பவுல் கூறும்போது (கொலோ 1:18; 2:9; எபே 1:22 தொ; 4:15), அவரது கருத்தில் தலை என்பது மற்ற உறுப்புக்களோடு இன்னொரு உறுப்பாவதில்லை. தலைதான், உயிரின் மூலத்தானமும் உடலின் வளர்ச்சிக்கு நிலைக்களமும் ஆகும் (கொலோ 2:19; எபே 4:15 தொ). இந்தக் கருத்து பவுல் திருச்சபையைப் பற்றிச் செய்த சிந்தனையின் வளர்ச்சியாகும். உண்மையில் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தின்படி திருமுழுக்கு, நற்கருணை இவற்றின் வழியாகத் திருச்சபை கிறிஸ்துவின் உடலாக ஆகும் அளவிற்கு நெருங்கிய உறவு பெறுகிறது. ஆனால் இந்த உறவில் கிறிஸ்துவுக்கும் அவருடன் இணைந்திருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஓர் ஆழ்ந்த வேறுபாடும் இருக்கிறது. கிறிஸ்து தம்முடைய முழு நிறைவையும் அடைந்த திருச்சபைக்கு உயிர் அளிக்கும் வேலையைத் தொடர்ந்து செய்கிறார். ஆனால் கிறிஸ்தவர்

கள் அவரிடமிருந்தே எல்லாவற்றையும் பெறுகின்றனர். ஒரு வேளை இந்த வேறு பாட்டைக் கருதியே எபேசியருக்கு எழுதிய மடலில் அவர் கிறிஸ்துவைத் திருச்சபையின் மணமகனாகவும் காண்கிறார் எனலாம் (எபே 5:23).

4. இந்தக் கருத்துக்களின் தொடர்பு: கிறிஸ்து புதிய ஆலயத்தின் மூலைக்கல், அண்டங்களின் தலைவர், திருச்சபை என்ற உடலின் தலை என்ற உருவகங்களை எல்லாம் பவுல் பல தடவை ஒன்றிணைத்துக் காட்டியுள்ளார். மிகப் பழமையான முதல் உருவகமும் (அ.ப. 4:11; மத் 21:31), மூன்றாவது உருவகமும் எபேசியருக்கு எழுதிய மடலில் பொருத்திக் காட்டப்பட்டுள்ளன (ஆலயத்தைப் பற்றிய எபே 2:20 வசனத்தின் விளக்கத்திற்கும், உடலைப்பற்றிய எபே 4:16 வசனத்தின் விளக்கத்திற்கும் பயன்படுத்திய சொற்களில் ஒப்புமை உண்டு. இறுதி வசனமும் 12-ம் பயன்படுத்தும் தொடரமைப்பையும் காண்க). இறுதியாக, கிறிஸ்துவைத் திருச்சபையின் தலைவராகவும், அண்டங்களின் தலைவராகவும் பவுல் காண்பது ஒரு தற்செயலான செயலன்று. நாம் முன்பு பார்த்தபடி, இந்த இரண்டு கருத்துக்களுக்கும் வேறுபாடுண்டு. திருச்சபை படைப்பு முழுமையின் ஒரு பகுதிதான் என்றாலும் கிறிஸ்துவின் உடல் என்ற பெயராலும், அவரின் துணைவி என்ற பெயராலும் போற்றப்படும் சிறப்பு திருச்சபைக்குத்தான் உண்டு. படைப்பு முழுவதும் திருச்சபையோடு ஒன்றித்து, அத்துடன் கிறிஸ்துவின் உடலாக மாறி, தூய மணப்பெண்ணைப்போலவும், தூய ஆலயத்தைப் போலவும், மாறவும் கிறிஸ்துவினுடைய அதிகாரத்திற்குப் பணிந்திருக்கவும் வேண்டும். ஏனென்றால் கிறிஸ்துதான் எல்லாவற்றையும் தமக்குக் கீழ் ஒன்று சேர்த்தார் (எபே 1:10). அவர் எல்லாவற்றையும் தூய்மைப்படுத்தி வாழ்வளிக்கவும், இந்தப் புனித ஆலயத்தைத் தம் வழியாக இணைத்து ஒன்றுபடுத்தவும் விரும்புகிறார்.

தலைச்சீரா, தலைக்கவசம் (HELMET)

போரில் பாதுகாப்புக்காகத் தலையில் அணியப்பட்ட தலைஅணி. இதுபோர் வீரர்களுக்குத் தோலாலும் (2 நாள் 26:14; எரே 16:4; எசே 23:24; 27:10; 28:5), அரசர்களுக்கும் பெரும் வீரர்களுக்கும் வெண்கலத்தாலும் (1 சாமு 17:5,28) செய்யப்பட்டது. இது, கன்னத்தையும் காதுகளையும் மறைக்கின்ற நீண்ட தொங்கல் கொண்ட தொப்பியாகும் (எபே 6:17; 1 தெச 5:8). சீரிய - இத்திய தலைச்சீராவைப்போல் அல்லாமல், அசீரியத் தலைச்சீரா மேல் நோக்கிக் கூர்மையாக இருக்கும்.

அடையாள முறையில், யாவே ''விடுதலையைத் தலைச் சீராவாகக்'' கொண்டுள்ளார் (எசா 59:17). கிறிஸ்தவனின் படைக்கலன்களில் ஒன்று ''மீட்பாகிய தலைச் சீரா'' வாகும் (எபே 6:77). ''மீட்பின் நம்பிக்கை'' அவரது தலைச்சீராவாகும் (1 தெச 5:8). சங் 66:7; 108:8-இல் எப்பிராயிம் ''யாவேயின் தலைச் சீராவாகக்'' கூறப்படுகிறது.

தலைப்பேறு (FIRST-BORN)

தலைப்பேறு என்பது முதன்முதலில் ஒரு தாய்க்குப்பிறக்கும் பிள்ளை. பழங்கால, செமித்தியர்கள் தங்களின் முதல் பிள்ளை கடவுளுக்குச் சொந்தமானது என்றும் அதைக் கடவுளுக்குப் பலியிட வேண்டும் என்றும் நம்பினர். இந்தத் தலைச்சன் பிள்ளை ஒரு சமூகத்தில் தனி அதிகாரம், புனிதத்துவம், மதிப்பு, பொறுப்பு ஆகியவற்றைப் பெற்றான். உருவகமாகத் தலைச்சன் பிள்ளை என்பது இஸ்ராயேல் மக்களையும், அரசனையும், மெசியாவையும், புதிய ஏற்பாட்டில் இயேசுவையும் குறிக்கும்.

1. தலைப்பேற்றின் உரிமை: பழைய ஏற்பாட்டில் மூத்த மகனைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது (ஆதி 10:15; 22:21; யாத் 6:14; எண் 3:2; ஆதி 44:12; 1 சாமு 17:28). தலைப்பேற்றுக்குத் தனி மதிப்பு அளிக்கப்பட்டது. தந்தைக்கு அடுத்து அக்குடும்பத்தின் தலைவன் அதன் மூத்த மகனே. அக்குடும்பத்தின் வளர்ச்சிக்கு அவனே பொறுப்பு (ஆதி 43:33; 37:22). தந்தையின் ஆசீர்வாதத்தைப் பெறும் உரிமை தலைச்சனுக்கே உரியது (ஆதி 27:1-4. 35-37); குடும்ப உரிமைச் சொத்தில் இருபங்கு பெற்றான்

(உப 21:77). கமுராபி சட்டத்திலும் அசீரியச் சட்டத்திலும் இதுபோலவே கூறப்பட்டுள்ளது. எலிசா எலியாவிடமிருந்து இதே உரிமை கேட்கிறார் (2 அர 2:9). இவ்வழக்கத்தைப் புறக்கணித்து இளையவனுக்கு அளிப்பது தந்தையின் சலுகையாக இருக்கலாம். ஈசாக்கு (ஆதி 17:19-21); எப்பிராயிம் (48:13-20); அரசன் என்ற அளவில் சாலமோன் (1 அர 1:32-37; 2 சாமு 3:3; 2 நாள் 21:81); குலத்தலைவன் என்ற அளவில் சிம்ரி (1 நாள் 26:10). ஆனால் இது வழக்கமுறை கடந்தது. பிற்கால உபாகமச் சட்டம் இதைத் தடுத்தது (உப 21:15-17). உடன் பிறந்தான் திருமண முறையில் முதல் பிள்ளை இறந்து போன சகோதரனது வாரிசாகக் கருதப்பட்டது. பெண் பிள்ளைகளுள் தலைப்பேறு என்பது மூத்தவள் என்பதை மட்டுமே குறிக்கிறது (ஆதி 19:31.33.37; 1 சாமு 14:49; ஆதி 29:26).

2. **தலைப்பேற்றை அர்ப்பணித்தல்:** கானானியர்களோடு தொடர்பு கொள்ளும்முன்பே தலைச்சன் பிள்ளைகள் கடவுளுக்குச் சொந்தம் என இஸ்ராயேலர் கருதினர் (யாத் 22:30; 34:19-20). வசந்தகாலத் திருநாளின்போது வீட்டில் வளர்க்கும் விலங்குகளின் தலைச்சன் கன்றுகள் கடவுளுக்குப் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டன. அவ்வாறு பலியளிப்பதால் இறை ஆசீர்வாதம் அந்த இனத்தை விருத்தி அடையச்செய்யும் என நம்பினர். இதற்கும் பாலைவனத்தில் அவர்கள் அளித்த பலிக்கும் பிற்காலப் பாஸ்காப்பலிக்கும் தொடர்பு உண்டு எனக் கருதினர் (யாத் 3:18; 5:3; 8:27; 34:18-20. 25-26). காலப்போக்கில் முதற்பலனை ஒப்புக்கொடுத்தலுக்கு யாத்திரை விசுவாசம் பின்னணியாயிற்று (யாத் 13:14-15; உப 15:19-20). தொடக்க காலத்தில் ஆட்டு மந்தையின் முதற் கன்றுகள் அந்தந்தப் பலிபீடத்தில் பலியிடப்பட, பின் அனைவரும் அந்த உணவில் பங்கு கொண்டனர் (யாத் 22:29-30). ஆனால் ஒரு கழுதையின் முதற் கன்றை ஓர் ஆட்டுக்குட்டியைக் கொடுத்து மீட்க வேண்டும். இல்லையென்றால் அதன் கழுத்தை முறித்துவிட வேண்டும் (யாத் 13:11-13). உபாகமச் சட்டப்படி இவ்வாறு பலியிடப்படும் மிருகம் மாசு மருவற்றதாக இருக்க வேண்டும் (உப 15:19-23). குருக்களின் சட்டப்படி பலிப் பொருள் குருக்களுக்குச் சொந்தமாயிற்று. தூயதல்லாத மிருகங்கள் விலை செலுத்தி மீட்டுக் கொள்ளப்படும் (எண் 18:15-18; லேவி 27:26).

3. **மனித பலி:** முதலில் தலைச்சன் பிள்ளைகள் எவ்வாறு பலியாகச் செலுத்தப்பட்டனர் என்பது பற்றிய குறிப்பு விரிவாக இல்லை. சில இடங்களில் மனிதபலிகள் இருந்ததென்றும், பின் கைவிடப்பட்டதாகவும் அறிஞர்கள் கருதுகின்றனர் (ஆதி 22:2-3; நீதி 11:34-39; 2 சாமு 21:9; எசே 20:26; யாத் 13:13). சில இடங்களில் மனிதரின் தலைச்சன் பிள்ளைகளுக்குப் பதில் ஓர் ஆட்டுக்குட்டியைப் பலியிடலாம் எனக் கூறப்பட்டுள்ளது (யாத் 13:13.15; 34:20). ஆனால் ஆகாசு, மனாசே அரசர்கள் காலத்தில் மனிதபலி இருந்திருக்கிறது (2 அர 16:3; 2 நாள் 28:3; 2 நாள் 33:6; 2 அர 17:31; எசே 16:21; மீக் 6:7). இன்னோம் பள்ளத்தாக்கில் ஒரு புனித இடத்தில் மோலேக்குச் சிசுக்கள் பலியிடப்பட்டன (2 நாள் 28:3; எரே 7:31). அஸ்திவாரங்களுக்கும் மதில்சுவர்களுக்கும் மனிதபலியிடப்பட்டது சில சான்றுகளில் இருந்து தெரிகிறது (2 அர 3:27; 1 அர 16:34). இறை இறைவாக்கினர்கள் மனிதபலிகளை வன்மையாகக் கண்டித்தனர் (எரே 7:30-34; 19:4-9; எசே 16:20.27). இப்பலியால் இறைவன்முன் எந்தவிதப் பரிகார மதிப்பும் இல்லையென்றும் (மீக் 6:7), இது நாட்டை வீழ்ச்சியுறச் செய்யும் என்றும் வலியுறுத்தினர் (எரே 44:4.22).

4. **உருவகப் பொருள்:** ஒருவருடைய குணத்தையும், வலிமையையும் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது (யோவு 18:13; எசா 14:30). இச்சொல் ஒரு நெருங்கிய தொடர்பையும் அதிகாரத்தையும் மேலாண்மையையும் குறிக்கும். இந்தப் பொருளில் தான் இஸ்ராயேல் மக்கள் கடவுளின் தலைச்சன் பிள்ளைகள் எனப்பட்டனர் (யாத் 4:22). தாவீதின் வாரிசு மேலான அரசனாகக் கருதப்

பட்டார் (சங் 89:27). இது மெசியாவைக் குறிப்பதாக இராபிகள் விளக்கம் அளித்தனர்.

5. தலைப்பேறான இயேசு: புதிய ஏற்பாட்டில் இது இயேசுவைக் குறிக்க வேண்டும். மரியாளின் தலைச்சன்பிள்ளை இயேசு (மத் 1:25; லூக் 2:7). இயேசுவுக்குப்பின் மரியாளுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை என்பதை விட இயேசு பிறப்பதற்கு முன் அவள் கன்னியாய் இருந்தாள் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது. இச்சொல் இயேசுவுக்குச் சாற்றிக் கூறப்படும்போது இதன் மூலம் இயேசுவுக்கும் கடவுளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை இது காட்டுகிறது (எபி 1:6 கடவுளின் தலைப்பேறான மகன்).

மற்றவர்களைவிட உயர்ந்தவராகவும் அவர்களோடு ஒன்றித்தவராகவும், புது வாழ்வளிப்பவராகவும் இயேசு இங்கே கூறப்படுகிறார் (கொலோ 1:18; திருவெளி 1:5; 1 கொரி 15:20; உரோ 8:29; கொலோ 1:15). மகன் என்ற வார்த்தையால் (யோவா 1:34:49) ''ஒரே மகன்' என்பதால் (யோவா 1:14.18; 3:16.18) உள்ள ஒரு தனிப்பட்ட உறவு விளக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் எபி 11:28-இல் மட்டும் இச்சொல் வரலாற்று நிகழ்ச்சியான யாத்திராகம நிகழ்ச்சிகளைக் குறிக்கிறது. ''தலைப்பேறானவர்களின் திருச்சபை'' (எபி 12:23) என்பது இறந்த விசுவாசிகளின் கூட்டத்தைக் குறிக்கும். இவர்கள் கடவுளோடு ஒரு தனி உறவு கொண்டு தலைப்பேற்றுப் புதல்வர்களைப்போல் விளங்குகிறார்கள். இதுவே மீட்பின் ஆசிர்வாதம். இது நம்மை இறைவனின் தலைப்பேறான இயேசுவோடு உடன் உரிமையாளர்கள் ஆக்குகிறது.

தலைப்பாகை (TURBAN)

இது ஏறக்குறைய ஐந்து விதமாக மொழிபெயர்க்கப்படுகிறது.

1. எகிப்திய தலைப்பாகையை இது குறிக்கும். ஆண்களால் தலையைச் சுற்றி அழகுக்காகத் துணியால் அணியப்படுவதாகும். இது துக்க காலங்களில் அணியப்பட மாட்டாது (எசே 24:17.23). இது குருக்களின் தலையணி ஆகும் (எசே 44:18). பெண்களின் தலை அலங்காரமாகும் (எசா 3:20; யாத் 39:28). எசா 61:3.9-இல் உருவகமாக அழகுமாலை, மலர்மாலை ஆகியவற்றைக் குறிக்கப் பயன் பட்டுள்ளது.

2. இது மகுடத்தையும் குறிக்கும். இது குருக்களாலும். அரசர்களாலும் அணியப்பட்டது (செக் 3:5; சீரா 11:5; 40:4; 47:6). இது நீதியையும் (யோபு 29:14), மீட்கப்பட்டோரையும் (எசா 62:3) உருவகமாகக் குறிக்கும்.

3. இது தலைமைக்குருவால் மட்டும் அணியப்பட்ட தலையணியைக் குறித்தது (யாத் 28:4.37.39; 29:6; 39:28.31; லேவி 8:9; 16:4). இஃதோடு ''ஆண்டவருக்கு அர்ப்பணம்'' என்று பொறிக்கப்பட்ட பட்டம் தொங்கணியாக இணைக்கப்பட்டது (யாத் 28:36-39; 29:6; 39:30; லேவி 8:9; சீரா 45:12).

4. இது தொங்கணிகொண்ட குல்லாயையும் குறிக்கும் (எசே 23:15). இது கல்தேயர்களால் அணியப்பட்டது.

5. இதுவும் ஒருவிதத் தலையணியாகும்; குருக்களால் அணியப்பட்டது (யூதி 4:15; சீரா 45:12). இது வெற்றிவாகை சூடியவர்களுக்கு அளிக்கப்பட்ட தலை வட்டத்தையும் குறித்தது.

தலைமேல் கரம் வைத்தல் (IMPOSITION OF HANDS)

பேசும் வார்த்தைகளோடு கைகளால் செய்யப்படும் அடையாளச் செயல்கள் சேரும் போது பேசப்படும் செய்தி மிகவும் வளம் பெறுகிறது. இது ஒருவனுடைய ஆற்றலை (யாத் 14:31· சங் 19:2) ஏன் கடவுளுடைய வல்லமையையும் குறிக்கச் செய்யலாம் (1 அர 18:46; எசா 8:11; எசே 1:3; 3:22). ஒருவரின் தலைமேல் கை வைப்பது என்பது ஏதோ வாழ்த்துவதற்காகக் கையை மேலே தூக்குவது மட்டுமன்று (லேவி 9:22; லூக் 24:50); அதற்கும் மேலாக உண்மையில் அது

மற்றவரைத் தொட்டு அவருக்குத் தன்னையே பகிர்ந்தளிப்பது ஆகும்.

I. பழைய ஏற்பாடு:

1. ஆசீர்வதித்தலின் அடையாளம்: *வாழ்த்தி, தலைமேல் கரம் வைக்கும்போது, அது ஒரு வார்த்தையோடு நின்றுவிடாது ஒரு பெரும் செயலாகவும் ஆகி நிற்கிறது. இந்த முறையில் யாக்கோபுவும் தான் வழிமுறையாக ஆபிரகாம், ஈசாக் இவர்கள் மூலமாகப் பெற்ற அரும் பெரும் ஆசிரைத் தன் குடும்ப வழிநிற்போர் அனைவருக்கும் அளிக்கிறார். ''மண்ணுலகில் இவர்கள் பெருந்திரளாகப் பலுகுவார்களாக'' (ஆதி 48:13-16).*

2. திருநிலைப்படுத்தலின் அடையாளம்: *கடவுள் ஒருவரைத் தேர்ந்து தனிப்படுத்தியிருப்பதையும், கடவுள் ஆட்கொண்டிருப்பதையும், சில காரியங்களைச் செய்வதற்காக அவருக்கு அதிகாரத்தையும், வல்லமையையும் கொடுத்திருப்பதையும் சிரமேல் கைவைப்பது குறிக்கிறது. லேவியர் குலத்தினர் இவ்வாறாகப் புனித காணிக்கையாக ஏற்படுத்தப்பட்டனர் (எண் 8:10). மேலும் ஞானத்தின் ஆவியானவர் யோசுவாவைத் தேர்ந்து முழு அதிகாரத்தோடு மக்களை ஆட்சி செய்ய (உப 34:9; எண் 27:15-23) அவரை ஏற்படுத்தினார்.*

3. அடையாள உறுதி செய்தலின் அடையாளம்: *கைகளை விரிக்கும்போது பலியைச் செலுத்துபவருக்கும் பலிப்பொருளுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுகிறது. பலிப்பொருள் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டதில் பலியை அளிப்பவருடைய உள்ளத்தில் எழும் - நன்றியுணர்ச்சி, பாவத்தினால் ஏற்படும் துக்கம், கடவுள் வணக்கம் போன்ற - இயல்புகளைத் தாங்கி நிற்கிறது. இதையே பரிகாரப்பலி (லேவி 1:4), நல்லுறவு அல்லது ஒன்றிப்புப்பலி (3:2), பாவங்களை நீக்கும் பலி (4:4) முதலானவைகளிலும் லேவியர்களைத் திருநிலைப்படுத்தப்பட்ட போதும் (எண் 8:16) காண்கிறோம். ஆனால் 'பரிகார நாளில்' பாவத்தைத் தாங்கிய ஆடு ஒன்று விரட்டப் பெறும் சடங்கில் மட்டும் பலிப்பொருளை அர்ப்பணிப்பது கிடையாது. அன்று கைகளை அந்த ஆட்டின் மீது விரிக்கும்போது இஸ்ரேல் தன்னுடைய பாவங்களை அதன் மீது சுமத்துவதாகவும், அவ்வாறு செய்யப்படும்போது அந்த ஆடு பாவங்களைத் தரித்துத் தூய்மை அற்று இருக்கும் நிலை அடைவதாகவும் கருதப் படுவதால் கடவுளுக்குப் பலி செலுத்த ஏற்றதாக இல்லாமல் அது காட்டுக்குள் விரட்டப் படுகிறது (லேவி 16:21தொ).*

II. புதிய ஏற்பாடு:

1. இயேசுவின் வாழ்க்கையில்: *ஆசீர்வதிக்கும் முறையில் இயேசு தம் கைகளைச் சிறு குழந்தைகளின் மேல் வைக்கிறார் (மாற் 10:16); தாம் ஏழைகளுக்கெனக் கொடுத்துள்ள பேற்றை (மத் 5:3) அவர்களுக்கு அளித்து, அதன் விளைவாகத் தமது சொந்த செபத்தின் பரிசைத் தமது தந்தையிடமிருந்து பெற்றுத் தருகிறார் (19:13). விடுதலையின் அடையாளமாகக் கைகள் விரிக்கப்பட்டன. இச்சைகையால் இயேசு நோயுற்றோரைச் சுகப்படுத்தினார். கூன் விழுந்து நின்றவளிடம்: ''அம்மா, உம் நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்'' என்று கூறித் தம் கைகளை அவள் மீது வைக்க, அவளும் தலைநிமிர முடிந்தது (லூக் 13:13). பெத்சாய்தாவில் பார்வையற்ற குருடனுக்குச் செய்யப் பட்டதும் (மாற் 8:23 தொ), மாலை நேரத்தில் குணப்படுத்தப்பட்டவர்களுக்குச் செய்யப்பட்டதும் இந்த முறையே (லூக் 4:40).*

2. திருச்சபையின் வாழ்வில்: *உயிர்த்தெழுந்தவரின் வாக்குப்படி, சீடர்கள் ''உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க அவர்கள் குணமடைவர்'' (மாற் 16:18). இத்தகைய சைகை வழியாகவே அனனியா, மனந்திரும்பிய பவுல் (அ.ப. 9:12) திரும்பவும் பார்வை பெறச் செய்தார்; பவுலும் பின்னர் மால்டாவின் தலைவரைக் (28:8) குணப்படுத்தியதும் இவ்வாறே. இந்த முறை விடுதலையின் அடையாளமாக இருந்ததோடு இந்தச் சைகை திருநிலைப்படுத்துதலின் அடையாளமாகவும் விளங்கியது. இதன் மூலமே இறை அருள், முக்கியமாக பரிசுத்த ஆவி*

யின் கொடைகள் அருளப்பட்டன: பேதுருவும் யோவானும் அதுவரை பரிசுத்த ஆவியைப் பெற்றிராத சமாரியர் மேல் கரங்களை விரித்து அளித்தனர் (8:17). பவுலும் எபேசில் உள்ள மக்களுக்கும் இதையே செய்தார் (19:6). மந்திரவாதியான சீமோன் அவர்கள் கைகளை விரித்துச் செய்த இந்த சைகையின் ஆற்றலைப் பார்த்து எவ்வளவு பிரமை பிடித்துவிட்டான் என்றால், இந்த ஆற்றலை விலை கொடுத்து வாங்கவும் எண்ணினான் (8:18 தொ). அக்காலத்திலிருந்தே இந்தச் சைகை ஆற்றலுள்ள இறை உண்மையைத் தாங்கி நிற்கும் காணக்கூடிய அடையாளமாக விளங்கியது.

இதே சைகையின் மூலம் திருச்சபை எந்தக் குறிப்பிட்ட அலுவல்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட தெளிவான தூதுக்கு ஏற்ற ஆன்மீக அருளை வழங்கி வருகிறது. அப்போஸ்தலர்களால் நியமிக்கப்பட்டு தனிநிலைப்படுத்தப்பட்ட எழுவருக்கும் (6:6), பவுல், பர்னபா இவர்களுக்குப் போதக அலுவலை வழங்கும் பொருட்டும், செய்த சைகையும் இதுவே (13:3). பவுல் பின், திமொத்தேயுவுக்கு இதையே செய்தார் (2 திமொ 1:6தொ; 1 திமொ 4:14). திமொத்தேயுவும், தான் தேர்ந்தெடுத்த போதக அலுவலர்களுக்கும் இதே சைகையினைக் கையாள்கிறார் (1 திமொ 5:22). இதே விதமாக இன்றும் திருச்சபை கைகளை உயர்த்தித் தலைமேல் வைத்து, தனிப்பட்டவிதமான வார்த்தைகளை மொழிந்து ஆவியின் கொடைகளை வழங்கி வருகிறது.

தலைமை ஏற்போர் (PRINCIPALITIES)

பன்மையில் பயன்பட்டுள்ளது. வானதூதர்களின் ஒழுங்கமைந்த அண்ட சக்திகளைக் குறிக்கிறது (உரோ 8:38). வானதூதர்களோடு குறிப்பாகத் தொடர்பு படுத்தப்படுவதால் ''தலைமை ஏற்போர்'' ஆவிகளின் தனிக் குழு ஒன்று என்று கருதப்படுகிறது. இவர்கள் கிறிஸ்துவின் மீட்புக்கு இடைஞ்சலாகவோ தடைகளாகவோ செயல்படுபவர்களாக இருக்கலாம். இதற்குப் பின்னணியான கருத்து இதிகாசத் தன்மையுடையது; முழுவதும் தெளிவாக இல்லை. இதற்கொத்த பட்டியலில் (எபே 1:21; கொலோ 1:16) பவுலின் கருத்து தெளிவாக உள்ளது. உலகின் எந்தச் சக்தியும் இறைவனின் அன்பை அழிக்க முடியாது. அது எல்லாத் தீய சக்திகளினும் உயர்ந்தது; மேலானது.

தலைமைக் குருவின் மார்புப்பட்டை (BREAST PIECE OF THE HIGH PRIEST)

ஒரு பை அல்லது ஆடை போன்ற அழகிய பொருள். தலைமைக் குருவின் மார்பு உறை. மிகச் சிறந்த இழையால் தயாரிக்கப்பட்டு, பல வர்ணங்கள் கொடுக்கப்பட்டது (யாத் 28:15). அதை மடித்தால் இரட்டைச் சதுரமாக அமைந்தது. ஒவ்வொரு பக்கமும் ஒன்பது அங்குலத்தைக் கொண்டிருந்தது. அதுநான்கு தங்க வளையங்களால் அவரது ஏபோதுடன் இணைக்கப்பட்டது. வெளிச் சதுரத்தில் நான்கு வரிசைகளில் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் இஸ்ரேயேலின் ஒரு கோத்திரத்தின் பெயரைக் கொண்டு, வரிசைக்கு மூன்று கற்கள் தொங்கவிடப்பட்டன.

இந்த மார்பு உறை இரட்டைநோக்கம் கொண்டது. இது ஊரிம் தும்மிமுக்கு ஓர் உறையாக அமைந்தது. ஆகையால் தீர்ப்புக் கூறும் மார்புப்பட்டை என்றும் அழைக்கப்பட்டது (யாத் 28:15.29-30). இவ்வாறு கடவுளின் தீர்ப்பு மனிதனுக்குத் தெளிவாக்கப்பட்டது. இதற்கு மேலாகத் தலைமைக் குருவை இஸ்ராயேலின் பிரதிநிதியாக மாற்றியது. மார்பு உறையை ஒரு நினைவுச் சின்னமாகக் காட்டி, தலைமைக் குரு இஸ்ராயேலிய மக்களை யாவேயின் முன்னிலைக்குக் கொண்டு வந்தார்.

தலைமுறை, மூதாதையர் பட்டியல் (GENERATION)

1. ஒரு மனிதனின் பிறப்பிலிருந்து அவனது மகன் வரைக்கும் உள்ள காலமாகும். குழுப்பொருளில் அக்காலத்தில் வாழ்கின்ற மக்களனைவரும் என்று பழைய ஏற்பாட்டில் பொருள்படும் (சங் 24:6; 49:20; 73:15; 84:11; 112:2; எரே 2:31). புதிய ஏற்பாடும்

பொதுவாக இதே பொருளில் பயன்படுத்து கின்றது.

2. பன்மையில், குடும்பத்தில் அடுத்தடுத்துப் பிறக்கின்ற பிறப்புகள் (ஆதி 2:4; 5:1), பொதுவாகக் குடும்பங்கள், வழித்தோன்றல்கள், தலைமுறைகள் என்று சொல்லப்படு கின்றன.

3. ஈன்றெடுத்தல் மற்றும் பெருகச்செய்தல், என்ற பொருள் தொடங்கி தலைமுறை என்ற சொல்லானது மனிதரை அவர்களிலேயே ஒன்றுபடுத்துகின்ற கூட்டொருமைப்பாட்டை வெளிப்படுத்த முயல்கிறது. இந்த ஒருமைப்பாடானது ஒரே காலத்தில் வாழ்பவர்களைக் குழுவாய் ஒன்று சேர்க்கலாம். ஆனால் எபிரேயச் சொல்லானது இந்தச் சமூகப் பொருளுக்கு வரலாற்றுப் பூர்வமான நுட்ப வேறுபாட்டைச் சேர்க்கிறது. ஒரே குடும்பம் அல்லது இனத்திலிருந்து வந்தவர்களின் ஒற்றுமையே இது. இச்சொல்லினாலும், தலைமுறைப்பட்டியல்களைப் பயன்படுத்துவதினாலும் விவிலியமானது ஆதாமிலிருந்து கிறிஸ்து வரை, காலத்தின் இறுதி வரையும்கூட, ஆசீரில் அல்லது பாவத்தில் மனிதரின் ஒருமைப்பாட்டை வலியுறுத்த விரும்புகிறது.

4. இனத்தின் சமுதாயம்: ஒவ்வொரு மனிதனும் ஒரு தலைமுறையில் பிறக்கிறான். தலைமுறை அட்டவணைகள் குறிப்பிடுவது இதுவே (ஆதி 5:1; 11:10; 1 நாள் 1-9). தனது முன்னோருக்கு அளிக்கப்பட்ட ஆசீர்களையும் இறை வாக்குறுதிகளையும் அவன் உரிமையாக்கிக் கொள்கிறான். ஆபிரகாமின் மகனும், ஆதாமின் மகனுமாகிய இயேசு கிறிஸ்துவைப் பொருத்தமட்டும், வாக்குறுதிகளும் ஆசீர்களும் அவரில் நிறைவேறுகின்றன (மத் 1:1-17). இந்தத் தலைமுறைகள் வரலாற்றை உருவாக்குகின்றன. இதன் விளைவாக இவை மனிதரின் செயல்களால் நிரப்பப்பட வேண்டிய சாதாரண வெறுமையான வரைச் சட்டமாக மட்டும் இருப்பதில்லை. அவை இறைவனையும் அவரது செயல்களையும் பாடி (சங் 145:4), இயேசுவின் அன்னையைப் போற்றிப் புகழ வேண்டும் (லூக் 1:48).

5. சுதந்தர ஒருமைப்பாடு. மனிதன் ஆசீர்களை மட்டுமின்றி, முந்தைய தலைமுறைகளின் பாவத்தையும் உரிமையாகப் பெறுகிறான் (மத் 23:35-36). தனது காலத்தவரில் (மத் 12:39; 17:17) குறிப்பாக விரியன் பாம்புக் குட்டிகள் என்று தான் குறிப்பிட்ட பரிசேயரில் (மத் 12:34; 23:33) ''கேடுகெட்ட தாறுமாறான தலைமுறை'' இருப்பதை (உப 32:5) இயேசு கண்டு கொள்கிறார். அது அலகையைத் தனது தந்தையாகக் கொண்டுள்ளது (யோவா 8:44-47). அதனுடைய இதயத்தின் கடினத்தன்மையானது இறைவனுடைய வெறுப்பையும் சினத்தையும் தூண்டுகிறது (எபி 3:7-19; சங் 95:8-11). பாவங்களை மன்னிப்பதற்கெனக் கிறிஸ்து ஆவியை அனுப்பி விட்டதால் இச்சந்ததியைச் சேர்ந்தவராக இருப்பது இனியும் அழிவிற்குரியதல்ல. இறைமகனில் விசுவசித்து, இறைவனது பிள்ளைகளாகப் பிறக்கின்றவர்கள் அடங்கிய (யோவா 11:12-13; 1 யோவா 5:1) தேர்ந்தெடுக்கப்பட்ட சந்ததியாக இருக்கலாம் (1 பேதுரு 2:9; எசா 43:20). ஒருவன் இதனின்று காப்பாற்றப்பட்டு (அ.ப. 2:40), விசுவாசியாகிய ஆபிரகாமின் சந்ததிக்கு உரியவராகலாம் (உரோ 4:11-12). எனவே, இரு தலைமுறைகள் அல்லது இரு உலகங்கள் உள்ளன. இவை ஒன்றோடு ஒன்று தொடர்பற்றவை அல்ல. ''நெறிகெட்ட சீரழிந்த தலைமுறையினரிடையே குற்றமின்றி மாசற்றவர்களாய்க் கடவுளின் குழந்தைகளெனத் திகழ்வதும், வாழ்வைப்பற்றிய வார்த்தைகளை வழங்க, உலகில் சுடர்விடும் விண்மீன்களெனத் துலங்குவதும்'' கிறிஸ்தவரின் கடமையாக உள்ளது (பிலி 2:15; லூக் 16:8).

தலையணை (PILLOW)

தலைக்குத் தாங்கலாக வைக்கப்படும் பல்வேறு பொருட்களைக் குறிப்பிடும் ஒரு சொல்.

யாக்கோபு தலையணையாக உபயோகித்த கல்லானது (ஆதி 28:11) நினைவுத் தூணாக

நாட்டிவைப்பதற்கு (28:18) மிகப் பெரியதாக இருந்திருக்கவேண்டும். இயேசு தூங்குவதற்கு உபயோகித்த தலையணையானது படகில் விரிக்கப்பட்டிருந்த மெத்தையாகவோ பாயாகவோ இருக்கலாம் (மாற் 4:38).

தலைவர் (CHIEF)

தலைவர் என்பது குடும்பத்தலைவர், குலத்தலைவர் அல்லது கோத்திரத்துத் தலைவரைக் குறிக்கிறது (ஆதி 36:15; யாத் 15:15; 1 நாளா 1:51; செக் 12:5). 1 மக் 10:65-இல் படைத்தலைவர் என்பது படைத்தள முதல்வர் என்று வழங்கப்படுகிறது.

தல்போன் (DALPHON - விரைவான, தந்திரமான)

யூதர்களால் கொல்லப்பட்ட ஆமானின் பத்துப் புதல்வருள் ஒருவன் (எஸ்த 9:7).

தல்மனுத்தா (DALMANUTHA)

கலிலேயாக் கடலின் மேற்குக் கரையில் இருந்த இடம். இது இக்கரையில் எங்கு இருந்தது என்று தெரியவில்லை (மாற் 8:10).

சிறந்த சில கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் இந்தச் சொல் காணப்படுகின்றது. நாலாயிரம் பேருக்கு உணவளித்த பின்பு, இயேசு தன்னுடைய சீடருடன் தல்மனுத்தாப் பகுதிக்குச் சென்றார் என்று சொல்லப்பட்டுள்ளது. சில கையெழுத்துப் பிரதிகள் இதேயிடத்தில் மகதான் அல்லது மக்தலா இருந்தது என்று சொல்கின்றன (மத் 15:39). இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினம்.

தல்மனுத்தா, மக்தலா அல்லது மகதான் என்பவை ஒரே இடத்தின் பெயர்களாகவோ, அதே பகுதியிலுள்ள ஒரு இடத்திற்குள்ள இரண்டு பெயர்களாகவோ, இரு இடங்களின் பெயர்களாகவோ இருக்கலாம். தல்மனுத்தா மிகவும் அறியப்படாத ஊராக இருந்திருக்கலாம். இக்குறிப்பில் மட்டும் எஞ்சியிருக்கலாம்.

தல்மாத்தியா (DALMATIA)

அதிரியாட்டிக் கடலின் வட கிழக்குக் கரையில் அமைந்திருந்த இல்லிரிக்கும் என்ற உரோமை மாகாணத்தின் தென்பகுதியாகும். கிரேத்தாவில் தன் பணியை முடித்த பின்பு தீத்து இந்தப் பகுதிக்குச் சென்றார் (2 திமொ 4:10).

தல்மாய் (TALMAI - வீரமிக்க)

1. மோசே கானான் நாட்டை வேவு பார்த்து வர ஆட்களை அனுப்பியபோது, அவர்கள் எபிரோனில் தங்கிய நேரத்தில் ஆனாக்கையும் அவனது மூன்று புதல்வர்களில் ஒருவனான தல்மாயையும் பற்றி அறிகின்றனர். பிற்காலத்தில் நடந்த போரில் ஆனாக்கின் புதல்வர்கள் மூவரும் காலேபினால் அங்கிருந்து துரத்தப்பட்டனர் (எண் 13:22; யோசு 15:14; நீதி 1:20).

2. கெசூர் பகுதியை ஆண்ட மன்னனின் பெயர். இவனது மகள் மாக்காவின் மூலமாகவே தாவீதுக்கு அழகுள்ள அப்சலோம் பிறந்தான் (2 சாமு 3:3; 13:37; 1 நாள் 3:2). இந்த அப்சலோம்தான் தனது சகோதரியைக் கெடுத்ததற்காக அம்னோன் என்ற தாவீதின் முதல் மகனைக் கொன்றுவிட்டு நாட்டை விட்டுக் கெசூரிலுள்ள தன் தாத்தாவிடம் ஓடினான். கெசூர் கலிலேயாக் கடலுக்கு வடகிழக்கிலிருந்த ஒரு சிறிய அரமேய அரசாகும்.

தல்மோன் (TALMON - ஒளிமயம்)

பாபிலோனிருந்து நாடு திரும்பியவர்களில் இவரும் ஒருவர். செருபாபேலால் சீர்திருத்தப்பட்ட ஆலயத்தின் வாயிலைக் காக்கும் தலைமைக் காவலர் நால்வரில் ஒருவர்; லேவியர் (1 நாள் 9:17; எஸ் 2:42; நெகே 7:45; 11:19; 12:25).

தவளை (FROG)

பழைய ஏற்பாட்டில் தவளையைக் குறிக்கின்ற பகுதிகளெல்லாம், யாத்திரையில் இரண்டாவது கொள்ளைநோயில் வரும் தவளைகளையே சுட்டுகின்றன (யாத் 8:2-13). திருவெளி 16:13 ''பறவை நாகத்தின் வாயினின்றும், விலங்கின் வாயினின்றும் போலித் தீர்க்கதரிசிகளின் வாயினின்றும் தவளை வடிவில் மூன்று அசுத்த ஆவிகள்

வெளிவரக் கண்டேன்'' என்று சொல்வது, லேவி 11:10-இல் ''கடல்களும் ஆறுகளு மாகிய நீர்நிலைகளில் செறிந்திருக்கும் உயி ரினங்களில், துடுப்பும் செதில்களும் அற்றவை உங்களுக்கு அருவருப்பு'' என்று சொல்லப் பட்டிருப்பதைப் பிரதிபலிக்கிறது. மகப் பேற்றில் பெண்களுக்கு உதவிய ''எகக்டு'' என்ற எகிப்திய தேவதையுடன் தவளை (அல்லது தேரை) பாரம்பரியமாகத் தொடர்பு படுத்தப்பட்டபடியால், தவளையின் தரம் இன்னும் குறைந்தது.

தவறு, பிழை (ERROR)

1. தவறு என்பது அறியாமைக்கு ஈடான தன்று. கிரேக்கர்கள் குறிப்பிடுவது போல, அறிவாளியின் தேடலிலோ தவறான கணிப்பு களிலோ இருப்பதன்று. ஏமாற்றுச் சூழ் நிலைகளால் உருவாக்கப்பட்ட தப்பெண்ணத் திற்கோ (ஆதி 20:2-7; ஞான 13:6-9), தீமை யையும் நேர்மையின்மையையும் உருவாக்கு கின்ற கவனக்குறைவிற்கோ (லேவி 4:2.13.22.27) தாழ்த்தப்படக்கூடியதன்று. இது எல்லாவற்றிற்கும் மேலாகப் பிரமாணிக்கமின் மையும் உண்மையை நிராகரிப்பதுமாகும். அலைந்து திரிதலானது அதன் விளைவாக வும் தண்டனையாகவும் இருக்கும். நாடோடி யான காயின் (ஆதி 4:12); அலைந்துதிரிந்த இஸ்ராயேல் (ஓசே 9:17); மந்தைக்குள் மீண் டும் கொண்டு சேர்க்கப்பட வேண்டிய (லூக் 15:4-7; 1 பேதுரு 2:25) ஆயனில்லா ஆடுகள் (எசா 13:15; 56:6. எசே 24:16).

2. பழைய ஏற்பாடு: தவறானது குருடாக் கும் கீழ்ப்படியாமையின் சமயச் சூழ்நிலை யில் குறிப்பிடப்பட வேண்டும். தவறு என் பது ''ஆண்டவரால் குறிக்கப்பட்ட பாதையி னின்று விலகி நீண்ட தொலைவு செல்வ தாகும்''(உப 13:6.11). இஸ்ராயேலின் சமயமறுப் போடு இணைக்கப்பட்டு, தவறானது சிலை வழிபாட்டிற்கு நடத்திச் சென்று (ஆமோ 2:4; எசா 44:20; ஞான 12:24), பொதுவாக யாவே யைப் புறக்கணிப்பதிலிருந்து விளை கிறது (ஞான 5:6). இதன் விளைவாக நேர்மை யாளர் மட்டுமே உறுதியுடன் நடக்கின்றனர் (சங் 26:1.3; 37:23.31). இறைவனில் விசுவாச மற்றோர் அலைந்து திரிய விடப்படுகின்ற னர் (எசா 63:17; பழ 12:26). அவர்கள் மனந்திரும்பாதபடிக்கு (பாரூ 4:28; எசே 33:12) அவர்களைத் தவறுக்குக் கைவிட்டு விடுதல் மூலம் (எசே 14:6-11; யோபு 12:24) அவர்களை அலைந்து திரியவிட்டுவிடு கிறார். இல்லாவிடின் அதனைப் பெரிதாக்கு கின்ற இதயத்தின் கடினத்தன்மையுடன் தவ றானது விரைவாகப் பலுகிப்பெருகுகிறது (ஞான 14:22-31): மக்களின் தலைவர்களா கிய (எசா 9:15) லேவியர் (எசே 44:10-13) போலி இறைவாக்கினர்கள் (ஓசே 4:5; எசா 30:10-11; எரே 23:9-40; புல 4:13 தொ; மீக் 3:5; எசே 13:8.10.18) ஆகியோர் இந்த வளர்ச் சிக்கு முக்கிய பொறுப்பாளர்கள் ஆவர். இறுதிக்காலங்களில் பேய்த்தனமான தவறை இது அறிவிக்கிறது (தானி 11:33 தொ).

3. புதிய ஏற்பாடு: இறைவாக்கினரால் அறிவிக்கப்பட்ட இறுதிக்காலத் தவறானது, தன்னிலையே உண்மையாக உள்ள இயேசு கிறிஸ்துவினுடைய தொடர்பில், அதனுடைய உச்ச கட்டத்தை அடைகிறது. (யோவா 14:6).

தனது காலத்தவருடைய தவறுகளை இயேசு கண்டனம் செய்கிறார் (மத் 22:29). அப்போஸ்தலர்கள் விசுவாசிகளை, அதற் கெதிரான பாதுகாப்பாக எச்சரிக்கின்றனர் (1 கொரி 6:9; 15:33). ஆனால், ஆண்டவரும் (மத் 27:63-64; யோவா 7:12.47) அவரது சீடர்களும் (2 கொரி 6:8) தங்களது முறையில் போலிகளெனப் பழிக்கப்படுவர். இவ் வாறே, குருடராகுமாறு தங்களை விட்டு விட்ட பரிசேயரும் (யோவா 9:41), இறைவ னின் ஞானத்தை அறிந்திருந்தால் மாட்சிமை மிக்க ஆண்டவரைச் சிலுவையில் அறைந் திருக்காமல் இருந்திருக்கக்கூடிய இவ்வுலகின் தலைவர்களும் (1 கொரி 2:8) இவ்வாறே ஏமாற்றப்படுகின்றனர்.

ஆனாலும், உண்மைக்கு முன்னர்ச் சோதிக் கப்பட்டாலும், தவறானது பாவிகளிடையே செயல்திறன் மிக்கதாக உள்ளது. ''அதே நேரத்தில் அது அவர்களை ஏமாற்றுபவர்க

ளாகவும் ஆக்குகிறது (2 திமொ 3:13). இவ்வாறு, (1 திமொ 1:14; 2 பேதுரு 2:1 தொ) மனிதர்களின் தந்திரத்திலும் (எபே 4:14; தீத் 1:14) போலி ஆசிரியர்களாலும் பரப்பப்பட்ட கதைகளை நம்பாதிருக்கக் கவனமாயிருக்க அவசியம் ஏற்படுகிறது (யாக் 1:16; 1 யோவா 2:26 தொ). இக்கதைகளைப் பிற்கால யூதத்துவம் தவறின், வீழ்ச்சியடைந்த தூதர்களின் தலைமையில் விட்டுவிட்டது. மேலும், உண்மையினின்று தொலைவிற்கு அலைந்து திரிகின்ற பாவியை மீட்டுக் கொண்டு வருவது ஒவ்வொருவருடைய கடமையுமாகும் (யாக் 5:20).

காலத்தின் இறுதியை முன்னோக்கிய நிலையில், போலிப் போதகரால் ஏமாற்றப்படுவதற்கு எதிராக இயேசு தனது விசுவாசிகளை முன்னெச்சரித்தார் (மத் 24:5.11.24 இணை). உண்மையில் தவறின் இந்த எழுச்சி (1 யோவா 4:6) இந்தப் ''பக்தியின்மையின் மறை பொருளானது'' (2 தெச 2:7), காலமுடிவுவரை வளர்ந்து கொண்டேயிருக்கிறது (2 பேதுரு 2:15-16; திருவெளி 20:8). அப்போது எதிர்க் கிறிஸ்துவினுடையதும் (2 யோவா 7) அவனைத்தூண்டும் (2 தெச 2:9தொ) சாத்தானுடையதும், உலகனைத்தையும் வஞ்சிக்கும் பேயினுடையதுமான (திருவெளி 12:9) தவறின் உண்மையான தோற்றத்தைத் தவறு வெளிக்காட்டும். ஆனால், இறுதியில் மிருகம், போலி இறைவாக்கினர் மற்றும் பேய் ஆகிய அனைவரும் எரிகின்ற கடலில் எறியப்படுவர் (19:20; 20:3.10).

தளம், தரை (PAVEMENT, FLOOR)

இது பல பொருளைக் கொண்டது.

1. சூசாவிலுள்ள அரண்மனை வெண்ணீலக் கற்கள், முத்துக்கள், விலைமதிப்பற்ற கற்கள் ஆகியவை பதிக்கப்பெற்ற பல்வண்ண ஒட்டுத்தளத்தைக் கொண்டிருந்தது (எஸ்த 1:6). எசேக்கியேலின் கோவிலின் பிரகாரத்தைச் சுற்றிலும் கல்லால் அமைக்கப்பட்ட கீழ்த்தள நடைமேடை இருந்தது (எசே 40:17-18). எரேமியா சில கற்களைத் தகபனகேசில் இருக்கும் அரண்மனை வாயில் தளத்தின் காரையில் மறைத்து வைத்தார் (எரே 43:9). ஓர் இறை மகிமைக் காட்சியில், கடவுளின் காலடியில் இருந்த தளம் நீலக்கல்லினால் செய்யப்பட்டிருந்தது (யாத் 24:10; எசே 1:26).

பிலாத்து 'கல்தளம்' என்னும் இடத்திலிருந்த நீதியிருக்கை மீது அமர்ந்தார் (எபிரேய மொழியில் கபத்தா; யோவா 19:13). அது பிலாத்துவின் தலைமை நிலையத்திலுள்ள முற்றமாகும். தற்சமயம் சீயோன் சகோதரிகளின் மடத்தின் அடியில் இருக்கும் உரோமைத்தளம் இது என்று கருதப்படுகின்றது. இந்தத் தளமும், பாதாளக் கட்டடங்களும் அந்தோனியாக் கோட்டையைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

2. கட்டடத்தின் கீழ்த்தளம் அல்லது தரை. சாலமோனின் கோயில் கீழ்த்தளம் முதல் மேல் மச்சுவரை கேதுரு பலகைகளால் மூடப்பட்டிருந்ததாகவும் (1 அர 6:55), ஆலயத்தின் பிற்பகுதியிலும் முற்பகுதியிலும் தளம் பொன்னால் மூடப்பட்டதாகவும் (6:30) சித்தரிக்கப்படுகின்றன. சாட்சியக் கூடாரத்தின் தரையிலிருக்கும் புழுதி தனிப்பட்ட சிறப்புத்தன்மையைப் பெற்றிருப்பதாகக் கருதப்பட்டது (எண் 5:17). ஆமோ 9:3-இல் கடலின் அடித்தளத்தைக் குறிப்பிட இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

3. சூட்டடிப்புக் களம்: திறந்தவெளிப் பாறை அல்லது காற்றுவெளியில் செம்மைப் படுத்தப்பட்ட நிலம். தானியங்களை அடித்து, தூற்றிப் பதர் நீக்க உதவும் களம்.

தறி ஓடு கட்டை (SHUTTLE)

நெசவாளியினால் தறியில் நூலைப் பாவுகளின் இருபுறமும் செலுத்துவதற்காகப் பயன்படுத்தும் கருவியை ஓடுகட்டை என்று அழைக்கின்றார்கள் (யோபு 7:6). வாழ்வின் நிலையற்றதன்மையையும் நம்பிக்கையற்ற தன்மையையும் எடுத்துக்கூற, யோபு தறி ஓடுகட்டையை உருவகமாகப் பயன்படுத்துகிறார்.

தற்கொலை (SUICIDE)

பழைய ஏற்பாட்டில் இச்சொல் காணப் படவில்லை. ஆனால் பல தற்கொலை நிகழ்ச் சிகள் விவரிக்கப்படுகின்றன. சவுலும் அவரது ஆயுதம் தாங்குவோனும் தற்கொலை செய்து கொண்டனர் (1 சாமு 31:4-5). அகித்தோபல் நான்று கொண்டு மடிந்தார் (2 சாமு 17:23). சிம்ரி தீக்குளித்துத் தன் உயிரை மாய்த்துக் கொண்டார் (1 அர 16:18).

புதிய ஏற்பாட்டில் யுதாசு மட்டுமே தற் கொலை செய்கிறார் (மத் 27:5). அ.ப. 16:27-28-இல் பவுல் ஒரு தற்கொலையைத் தடுக்கிறார். தற்கொலை பற்றிய மற்றக் கூற்றுக்கள் உரோ 14:7-9; 1 கொரி 6:19; எபே 5:29 ஆகியவையாகும். பிற்காலத்தில் இராபிகளின் போதகம் தற்கொலையை இறைவனுக்கு எதிரான செயலாகக் கண்டனம் செய்கிறது.

விவிலியம் தற்கொலையை நேரடியாகத் தடைசெய்யாவிட்டாலும், அது மறைமுகமாக இச்செயலைக் கண்டிக்கிறது என்பது தெளிவு. உயிரை அளிப்பவரும் எடுப்பவரும் இறைவனே (யோபு 1:21). ஆறாம் கற்பனையும் மனித இரத்தத்தைச் சிந்துவது பற்றிய ஒழுங்குகளும் (ஆதி 9:5-6) இதே கருத்தைக் கூறுகின்றன.

தனிமை (SOLITUDE)

தந்தை, மகன், ஆவியாக, அன்பின் அளவு கடந்த பலனுண்டமையாக உள்ள இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட நிலையில் மனிதன், இறைவனுடனும், தன்னைச் சுற்றியுள்ளோருடனும் ஒன்றுபட்டு வாழ வேண்டும். இதன் மூலமாக அவன் பலனைக் கொண்டு வருகிறான். இப்படிப்பட்ட நிலையில் தனிமையானது தன்னிலேயே, பாவத்தினின்று வருகின்ற தீமையாக உள்ளது. ஆயினும் இயேசு கிறிஸ்துவினுடைய மீட்பின் தனிமையுடன் இணைக்கப்பட்டால், தோழமை மற்றும் பலனளிப்பின் ஊற்றாக இது உருவாகிறது.

I. மனிதனின் தனிமை.

1. "மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று" (ஆதி 2:18): இறைவனைப் பொறுத்த மட்டில் தனிமையானது ஒரு தீமையாகும். ஏழைகள், அன்னியர், விதவை மற்றும் அநாதைகள் ஆகியோரை அது கொடியோரின் இரக்கத்திற்கு உட்படுத்துகிறது (எசா 1:17.23). இவர்கள் சிறப்பான பாதுகாப்பைப் பெறவேண்டுமென இறைவன் கோருகின்றார் (யாத் 22:21 தொ). அவர்களைக் காப்பவர்களைத் தமது மகன்களாகக் கருதி, தாயைவிட அதிகமாக அவர்களைக் காத்து ஆதரிக்கிறார் (சீரா 4:10). மனித ஆதரவாளர் இல்லாத நிலையில், இந்த ஏழை மக்களின் பழிதீர்ப்பவராக இறைவன் இருப்பார் (பழ 23:10-11; சங் 146:9). தனிமையானது மலட்டுத் தன்மையுடன் உள்ள பெண்களையும் பழித்துரைக்க வழி செய்கிறது. கன்னிமையின் பொருளை வெளிப்படுத்தக் காத்திருக்கும் வேளையில் லேவியருடைய சட்டத்தினால் இப்பழியைத் தீர்க்க பெண்ணுக்கு ஆறுதலளிக்க அவரே தலையிடுகிறார் (1 சாமு 2:5; சங் 113:9; எசா 51:2). தனிமையின் சோதனையானது, இறைவனிலான முழுமையான நம்பிக்கைக்கான அழைப்பாகும் (எஸ்த 4:17).

2. பாவி தனிமையாய் இருக்க வேண்டுமென இறைவன் விரும்புகிறார்: தனிமையானது மனிதனுக்கு அவனது பாவநிலையையும் வெளிப்படுத்துகிறது. பின்னர் அது மனந்திரும்புதலுக்கான அழைப்பாக உருவாகிறது. நோய், துன்பம் மற்றும் காலத்திற்கு முந்தைய மரணம் ஆகியவற்றின் அனுபவம் கற்பிப்பது இதுவே. மனித சமுதாயத்தினின்று ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையில் (யோபு 19:3-22), மகிழ்ச்சியற்ற மனிதன் தான் பாவ நிலையில் இருப்பதை உணர்கிறான். பாவியைத் தனிமைக்கு விட்டுவிடுவதை இறைவன் மற்றொரு வழியிலும் வெளிப்படுத்துகிறார். அவர் தனது பிரமாணிக்கமற்ற மனைவியை விட்டுவிடுகிறார் (ஓசே 2:5;3:3). இஸ்ராயேல் மலட்டுத் தன்மையுடையது என்பதை எரேமியா தனது மணமாகாத வாழ்வின் மூலம் குறிப்பிட்டுக்

காட்ட வேண்டும் (எரே 16:2; 15:17). இறுதி யாகத் தனிமையைத் தாக்குவதன் மூலம் இறைவன் மட்டுமே அதனின்று மனிதரைக் காக்க முடியும் என்பதை நாடு கடத்தப்பட்ட தானது தெளிவுபடுத்துகிறது.

II. தனிமையினின்று தோழமைக்கு.

1. இயேசு கிறிஸ்துவால் ஏற்றுக்கொள்ளப் பட்ட தனிமை: இம்மானுவேலின் மூலமாக (''கடவுள் நம்மோடு'', எசா 7:14) மீண்டும் ஒருமுறை அவருடன் தோழமை காண்பதற் கென இறைவன் தனது ஒரே மகனை மனித ருக்கு அளித்தார் (யோவா 3:16). ஆனால், பாவத்தின் தனிமையினின்று மனுகுலத்தை விடுவிக்க, இயேசுவே இத்தனிமையை, சிறப்பாகப் பாவம் நிறைந்த இஸ்ராயேலின் தனிமையைத் தன்மீது ஏற்றுக்கொண்டார். பகைவனை வெல்ல அவர் பாலைவனத்திற் குச் சென்றார் (மத் 4:1-11; 14:23). அவர் தனிமையில் செபித்தார் (மாற் 1:35.45; லூக் 9:18; 1 அர 19:10). இறுதியாக, அவரது செபத்தில் பங்கேற்கத் தயாராக இல்லாமை யால் உறங்குகின்ற சீடர்களையும், கெத்சமனி யில் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந் தது (மாற் 14:32-41). மரணத்தின் துன்பத்தை அவராகவே ஏற்றுக்கொண்டார். இறைவ னும் அவரைக் கைவிட்டு விட்டதாகத் தெரி கிறது (மத் 27:46). உண்மையில் அவர் தனியாக இருக்கவில்லை. தந்தை எப்போதுமே அவருட னிருந்தார் (யோவா 8:16.29; 16:32). நிலத் தில் விழுகின்ற கோதுமை மணியைப் போன்று, அவர் தனியாக இருக்காமல் பல னளித்தார் (யோவா 12:24). ''சிதறிக்கிடந்த கடவுளின் மக்களை அவர் ஒன்று சேர்த்து'' (11:52), ''அனைவரையும் தன்பால் ஈர்த்துக் கொள்கிறார்'' (12:32). இதுவே தோழமை யின் வெற்றி.

2. அனைவருடனும் இருப்பதற்காக இயேசு கிறிஸ்துவுடன் மட்டும்: ''தன்னுடன் இருப்பதற்காகத்'' தனது சீடர்களை அழைத்த நேரத்தில் (மற் 3:14), மெசியா இனத்தவரை ஒன்று சேர்ப்பதானது இயேசுவால் தொடங் கப்பட்டது.

தொலைந்துபோன, தனிமையான ஆட் டைத்தேடி அவர் வந்தார் (லூக் 15:4). தனது சீடர்கள் (மாற் 4:10; 6:2) மற்றும் பாவம் புரிந்த பெண் (யோவா 4:27; 8:9) ஆகியோருட னான தனது தனிப்பட்ட உரையாடல் களால், நொருங்கிப் போன சமுதாயத்தை அவர் மீண்டும் உருவாக்கினார். அவர் கேட் கின்ற அன்பானது, ஒரே இறைவனாகிய யாவே கட்டளையிட்ட அன்பைப் போன்று (உப 6:4; நெகே 9:6) தனித்துவமிக்கது, மற்றும் மற்றவற்றைவிட உயர்வானது (லூக் 14:26).

தன்னுடைய துணைவரும் ஆண்டவரு மானவரைப் போன்று திருச்சபையானது உல கில் தன்னைத் தனிமையாகக் காண்கிறது. திருச்சபையானது இந்த உலகத்தைச் சேர்ந்த தன்று (யோவா 17:16). இதனின்று வேறு பட்ட திருச்சபையானது பாலைவனத்திற்குத் தப்பியோட வேண்டும் (திருவெளி 12:6). ஆனால், அதற்குப் பின்னர் எவ்வித உண்மை யான தனிமையும் இனி இல்லை; கிறிஸ்து தனது சீடர்களைத் ''திக்கற்றவர்களாக விட்டு விடவில்லை'' (யோவா 14:18). நெருங்கிய வர்களின் மரணமானது நம்மீது சுமத்துகின்ற தனிமையை வென்று, ''நாம் அவர்களோடு ஒன்றாய்... ஆண்டவரோடு எப்போதும் இருக்கின்ற நாளில்'' (1 தெச 4:17) இவ்வாறு விடப்பட மாட்டோம்.

தன்னடக்கம் (SELF CONTROL)

இது விவிலியத்தில் வரும் பல சொற் களின் மொழிபெயர்ப்பாகும். ''தன்னடக்க மில்லாத மனிதன் அரண் அழிந்த காவல் இல்லாத பட்டணம்'' (பழ 25:28). இப்பழ மொழியானது ஒரு நகரத்தைப் பற்றியது. அதனுடைய மதில்கள், பகைவர்களிட மிருந்து பாதுகாக்கும்படியாக இல்லாமல் அழிக்கப்பட்டுவிட்டன. அதேபோல் உணர்வு சக்திகளின் பிறப்பிடமாகிய தனது ஆவியின்மேல் கட்டுப்பாடு களைக் கொண்டிராதவனுடைய வாழ்க் கையும் ஆகும். தன்னுடைய கோபத்தையும் காம உணர்வுகளையும் மற்றும் ஆட்தன் மையை அழிக்கும் மற்றக் கட்டுப்பாடற்ற

உணர்ச்சிகளையும் பாதுகாக்காவிட்டால், அவை அவனுக்கு இடறலாக அமையும். பழ 16:32 ஒரு நேர்நிலையான நோக்கைக் கொடுக்கின்றது. ''வலிமை உடையவனை விடப் பொறுமையுடையவனே மேலாவான். ஊரை அடக்குகிறவனை விடத் தன்னை அடக்குகிறவனே சிறந்தவன்''. தன்னடக்கம் என்ற நற்குணம் கிரேக்கர்களுக்கு மிகவும் பிடித்தமானது. பழைய ஏற்பாட்டில் இதைப் பற்றி ஞான இலக்கியங்களில் மட்டும் குறிப்பிடப் பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டிலே ''தன்னடக்கம்'' கிரேக்க மொழியின் இரண்டு சொற்கள் குழுவிலிருந்து வருகின்ற வார்த்தைகளுக்கு மொழிபெயர்ப்பாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஒரு குழுச் சொற்கள் விவேகம் என்ற சொல்லால் தமிழில் மொழிபெயர்க் கப்பட்டுள்ளன (2 திமொ 1:7). பிளேட்டோ காலத்திலிருந்து, ஞானம், திடம், நீதி ஆகிய வற்றோடு விவேகமும் எல்லாக் கிரேக்க ஒழுக்கமுறைச் சிந்தனைகளுக்கும் பொதுவான நற்பண்பாகும். மூலத்தில் கிறுக்குத் தன்மைக்கு எதிராக அறிவுத் தெளிவையும், பின்பு மட்டுடைமையையும், நல்லறிவையும் குறித்தது. இப்பண்பைக் கொண்டிருப்பவர் அறிவுத் தெளிவு கொண்டிருப்பர் (மாற் 5:15; அ.ப. 26:25; 2 கொரி 5:13). சமநிலையோடும் மட்டுமிதத்தோடும் இருப்பர் (தீத் 2:12; 1 பேதுரு 4:7). விவேகமுள்ளவர்களாக இருப்பர் (1 திமொ 2:9.15; தீத் 2:2-5). நேர்மையான தன்மதிப்புள்ளவராக இருப்பர் (உரோ 12:3).

மற்றொரு சொற்குழுவில் சிற்றின்ப இச்சைகளை அடக்குதல் (1 கொரி 7:9), பந்தயத்தில் ஓடுபவர்கள் எல்லா வகையிலும் தங்களை ஒடுக்கிக் கொள்ளுதல் (9:5), பாவத்தை எதிர்த்துநிற்றல் (அ.ப. 24:25; கலா 5:23; தீத் 1:8; 2 பேதுரு 1:6) ஆகிய சூழ்நிலையில் தன்னடக்கம் என்ற பொருளில் சொற்கள் பயன்பட்டுள்ளன.

தன்னா (DANNAH - அரண், தீர்ப்பிடுதல்)

தெபீர் மலை மாவட்டத்திலுள்ள யூதாவின் ஊர் (யோசு 15:49). அனேகமாக இது தெபிர்-எஸ்-செமஸ் அல்லது சிம்யாவாக இருக்கலாம்.

தன்னை மறுத்தல் (SELF-DENIAL)

இந்தக் கருத்தைப் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் காணலாம். பொதுவாக, இச்சொல் தன்னை நிராகரித்தல், சுய வெறுப்பு, உயர்ந்த நோக்கத்திற்காக, - இலட்சியத்திற்காக, ஒரு சில சுய ஆசைகளை, விருப்பங்களைத் தியாகம் செய்வதைக் குறிக்கின்றது. பழைய ஏற்பாட்டைவிடப் புதிய ஏற்பாட்டில் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. இங்குக் கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாக இருப்பதற்காகத் தன்னையே மறுப்பதாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

1. பழைய ஏற்பாட்டுப் **பின்னணியில்:** பழைய ஏற்பாட்டில் ஓரளவு தன்னை மறுத்தல் பற்றிய வடிவங்கள் உள்ளன. ஒழுக்கக் கட்டுப்பாடுகள், உரிய கட்டுப்பாடுகள், தடைகள் போன்ற வகைகளைக் காணலாம்.

தன்னை மறுத்தல் என்பது மிகத் தெளிவாக ஒரு குறிக்கோளாகப் பழைய ஏற்பாட்டின் மையச் சிந்தனையில் குறிப்பிடப்படவில்லை. இஸ்ராயேலின் அழைப்பில் நாட்டினுடைய தேவையைவிடக் கடவுளுடைய குறிக்கோள்தான் முக்கியமானது என்பதில் இக்கருத்து உள்ளடங்கியுள்ளது (எசா 42:1-8; 52:13-53:12). அதேபோல், தன்னை மறுப்பது ஒரு சில தனி நபர்களின் வாழ்க்கையிலே கட்டாயமாக அமைந்து விடுகின்றது. அவர்கள் தங்களுடைய அழைத்தலின் காரணமாகத் தங்களுடைய ஆசைகளைத் தவிர்க்க வேண்டியிருக்கும் (உ-ம் மோசே யாத் 1-8; எரேமிய எரே 1:4-10; 15:15-18; ஆமோஸ் ஆமோ 3:8).

2. தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் பக்தியில்: புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள ஒரு சில பக்திமுயற்சிகளான உண்ணா நோன்பு, பிறர் சிநேகச் செயல், தன்னைக் கட்டுப்படுத்துதல் போன்றவைகளை ஓரளவு தன் மறுப்புச் செயல்கள் என்று விவரிக் கலாம் (மத் 4:1-11; லூக் 4:1-13; அ.ப. 13:3; 14:23; 1 கொரி 7:5; 9:27; 1 திமொ 2:9; 1 பேதுரு 2:3-4). இந்த மாதிரியான கடைப்பிடிப்புகள் அனைத்தும் சாதாரணப் பக்தியின் அல்லது

தன்னடக்கத்தின் செயல்களாகக் கருதப்பட்டன; இவை அதிகமாக வலியுறுத்தப்படுவதில்லை. புதிய ஏற்பாட்டில் மலைப் பொழிவிலே, தன் மறுப்புச் செயல்களுக்கு மேலும் இன்னொரு பருமன் சேர்க்கப்படுகின்றது. அதாவது பிச்சையிடும் போதும், நோன்பு பின்பற்றும் போதும், இவற்றை மறைவாகவும், பகட்டில்லாமலும் செய்ய வேண்டும் (மத் 6:1-4. 16-18). இன்னும் புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்துவினுடைய அன்பானது உதாரணமாகக் காட்டப்படும்போது கிறிஸ்துவ வாழ்வும், பக்தியும் சூழ்ந்த தன்மறுப்பு, பொருள் பெறுகின்றது (மத் 20:25-28; மாற் 10:42-45; லூக் 22:25-27; யோவா 13:12-17; 2 கொரி 8:9; எபே 5:1-2; பிலி 2:5-11; 1 பேதுரு 2:21-23).

3. புதிய ஏற்பாட்டில் வேர்நிலையான தன் மறுப்பு: இதனுடைய வலுவான, தெளிவான அறிவிப்பு அதன் வேர் நிலையான, தனித்தன்மை மிக்க புதிய ஏற்பாட்டுப் பொருளில், இயேசுவின் கூற்றிலே காணப்படுகிறது: ''எனக்குப்பின் வரவிரும்பும் எவரும் தம்மையே மறுத்துத் தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்'' (மாற் 8:34; மத் 16:24; லூக் 9:23).

அ) இயேசுவின் போதனையில்: இயேசுவின் போதனையில் வேர்நிலையான தன் மறுப்பு மிகத் தெளிவாக உள்ளது. இது இயேசுவைப் பின்பற்றுவதற்காக ஒருவன் தன்னையே முழுவதும் நிராகரித்தலாகும். மாற் 8:34-35இல் (மத் 16:24-25; லூக் 9:23-24; யோவா 12:25-26) நேர்மறையான, எதிர்மறையான தன்மறுப்புப் பற்றிய புதிய ஏற்பாட்டுக் கருத்தில், நேர்நிலையான மற்றும் எதிர்நிலையான கூறுகள் தோன்றுகின்றன. எதிர்நிலைப் பொருளில் தன் மறுப்பு என்பது ஒருவன் தன்னுடைய வாழ்வு, சொத்து, சுகம், வீடு அனைத்தையும் நிராகரிப்பதைக் குறிக்கிறது (மத் 19:16-30; மாற் 10:17-31; லூக் 18:18-30; மத் 10:37-38; லூக் 14:26-27). நேர்நிலைப் பொருளில் தன் மறுப்பு என்பது இயேசுவுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணிப்பதில் முதல் படியாகும். ஆகவே தன் மறுப்பு என்பது தன்னிலே முடிவான செயலன்று. மாறாக, இது கிறிஸ்துவைப் பின்பற்றும் படிமுறையிலே நிகழும் தன்னை நிராகரித்தலாகும். மூன்று நற்செய்திகளும் (ஒத்தமை நற்செய்திகள்) தன்மறுப்பைப் பற்றிய இயேசுவின் பொன்மொழியை, அவருடைய துன்பத்தையும் மரணத்தையும் முதல் முறையாக முன்னறிவிக்கும் சூழ்நிலையில் எடுத்துக் கூறுகின்றன என்பது பொருள் பொதிந்ததாகும். இச்சூழ்நிலையில் நோக்கினால் கிறிஸ்தவ தன் மறுப்பு கிறிஸ்துவின் சிலுவையில் பங்கு கொள்ளுதலாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

ஆ) பவுலின் சிந்தனையில்: தன்மறுப்பு என்ற கருத்து பவுலின் கடிதங்களில் குறிப்பிடப்படாவிட்டாலும், கிறிஸ்தவ வாழ்வு என்பது தன்னையே அளிக்கும் பலியாகும் என்பதை உணர்ந்திருந்தார் (உரோ 12:1). பவுலின் தனி வாழ்வைப் பொறுத்தவரையில், அவருடைய போதனையின் மையமாக அமைந்தது யாதெனில், அவரைப் பொறுத்தவரையில் ''கிறிஸ்துவை அறிந்து கொள்ளுதலின் பொருட்டு மற்றவை அனைத்தும் குப்பை எனக் கருதுகின்றேன்'' என்கிறார் (பிலி 3:7-11). கிறிஸ்துவினுடைய செயல்களிலிருந்து கிறிஸ்துவ வாழ்வைப் பவுல் பிரித்துப் பார்ப்பதில்லை. பவுலைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவ வாழ்க்கையின் நோக்கமும், ஆற்றலும் கிறிஸ்துவுடன் மரித்து, அவருடன் உயிர்த்தெழுதலில்தான் அடங்கியுள்ளது (உரோ 6). இந்த ஆன்மீக ஒழுக்க வளர்ச்சியான படிமுறையில் கிறிஸ்துவினுடைய மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்கு கொள்வதென்பது கிறிஸ்துவின் வழியாகப் புதுவாழ்வு நமக்கு உளதாகும் பொருட்டு நம்முடைய பழைய மனிதனைத் துறத்தலாகும் (உரோ 6:6-11; கலா 2:20; எபே 4:20-24; கொலோ 3:5-11).

தா

தாகத்து (TAHATH - கீழுள்ள, தாழ்மையான)- ஆள்

1. லேவியின் மூன்று புதல்வர்களில் ஒருவனான கோகாத்தின் குடும்பத்தலைமுறை அட்டவணையில் உள்ள ஒரு பெயர் (1 நாள் 6:24.37). இறைவாக்கினர் சாமுவேலின் மூதாதையருள் ஒருவர். ஏமானின் லேவியப் பாரம்பரியத்தைக் கூறும் பட்டியலிலும் இப் பெயர் இடம் பெற்றுள்ளது (6:37).

2. எப்பிராயிமின் குடும்பத்தின் ஒரு முன்னோர் இனப்பெயர்; பெரேதின் மகன் (1 நாள் 7:20).

3. எப்பிராயிமின் மற்றொரு குடும்பத்தின் இனப்பெயர் முன்னோர்; எலயாதாவின் மகன் (1 நாள் 7:20).

தாகத்து (TAHATH) - இடம்

யாத்திரைப் பயணத்தில் இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் தங்கிய ஓர் இடத்தின் பெயர் (எண் 33:26-27). இது எங்கு இருந்தது என்று தெரியவில்லை.

தாகான் (TAHAN - கூடாரம்)

எப்பிராயிமின் மூன்றாவது மகன்; தாகானியக் குடும்பத்தின் தலைவன் (எண் 26:35). 1 நாள் 7:20-29-இல் கொடுக்கப்பட்டுள்ள எப்பிராயிமின் தலைமுறை அட்டவணையில் எப்பிராயிமின் மூன்றாவது மகனாகத் தாகத்தும், தாகான் பின்னால் வரும் சந்ததியாகவும் கொடுக்கப்பட்டுள்ளது (7:25).

தாகோன் (DAGON - மீன், தானியம்)

பெலிஸ்தியரோடு தொடர்புள்ள கடவுள் (1 சாமு 31:10; 1 நாள் 10:10). இதற்குக் காசாவிலும் (நீதி 16:23), அசுதோதிலும் (1 சாமு 5:2-7) கோவில்கள் இருந்தன. சிம்சோன் பிடிபட்டபின், பெலிஸ்தியர் காசாவிலிருந்த தாகோன் கோவிலில் பலிகள் செலுத்தினர். இக் கோவிலைத்தான் சிம்சோன் அழித்திருக்க வேண்டும் (யோசு 16:23-30). உடன்படிக்கைப் பேழை கைப்பற்றப்பட்டபின், பெலிஸ்தியர் அதை அசுதோதிலுள்ள தாகோன் கோவிலில் அதன் சிலைக்கு அருகில் வைத்தனர். அது பேழையின் முன்பு இருமுறை முகம் குப்புற தரையில் விழுந்து கிடந்தது. இரண்டாம் முறை அதன் தலையும் இருகைகளும் துண்டிக்கப்பட்டு, வாயிற்படியில் கிடந்தன (1 சாமு 5:2-7). அசுதோதில் தாகோனின் கோவில் அசமோனியா காலத்திலும் இருந்தது. யூதா மக்கபேயரின் சகோதரனான யோனத்தானால் இது கி.மு. 147-இல் அழிக்கப்பட்டது (1 மக் 10:83-84). பெலிஸ்தியரின் படையெடுப்பிற்கு வெகு முன்னரே மேற்காசியாவில் இருந்த செமித்தியர்களால் தாகோன் வழிபடப்பட்டது. இராஸ் சமராவில் இதனுடைய வழிபாடு நன்கு வேரூன்றியிருந்தது. இங்குத் தாகோனின் கோவில் பாகாலுக்குப் போட்டியாக நின்றது. இந்த இரண்டு கோவில்களும் ஏறக்குறைய கி.மு. 2000 ஆண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

இராஸ் சம்ராவின் இதிகாசக் கதையில் பாகால் ''தாகோனின் மகன்'' என்று சொல்லப்பட்டுள்ளது. செமித்திய மொழியில் தானியங்களைக் குறிக்கும் பெயருக்கும், தாகோனுக்கும் உறுதியாகத் தொடர்பு இருந்திருக்கின்றது.

வானம் பூமி இவற்றின் மகனும், எல்லாவற்றிற்கும் மேலான கடவுளுமான ஏலுடன் தாகோன் இருந்தார் என்று இராஸ் சம்ரா ஏடுகளில் சொல்லப்பட்டுள்ளது. இதிலிருந்து தாகோன் பாகாலைவிட மேலான கடவுள் என்று தெரிகிறது. இவரது தாவரக் கடவுள் என்ற பணி கி.மு. 1500-ஐ ஒட்டிப் பாகாலுக்கு மாற்றப்பட்டது. ஆயினும் தாகோன் இராஸ் சம்ராவில் தனித்து வழிபடப்பட்டார். அவருக்கெனத் தனிப்பட்ட காணிக்கைகள் அளிக்கப்பட்டன. கானானிய கடவுள் தொகுப்பின் தலைவரான ஏலுக்கு அடுத்தபடியாக மேன்மை வகித்தார்.

பாலஸ்தீனத்தில் தாகோனின் மற்ற வழி பாட்டு மையங்கள்: யூதா எல்லையில் இருந்த பெத்-தாகோன் (யோசு 15:41); சனகெரிபின் ஆட்சிக் குறிப்புகளில் யாப்பாவுடன் சொல்லப்பட்டுள்ள பித் தகானா; ஆசேரிலிருந்த பெத்-தாகோன் (யோசு 19:27); நப்லூசுக்குக் கிழக்கேயும் முக்கென சமவெளியின் கிழக்கு எல்லையிலும் இருந்த பெயித் தாயான்.

தாசி (THASSI - ஆர்வமுள்ள)

மத்தத்தியாவின் ஐந்து புதல்வர்களில் ஒருவரான சீமோனின் சிறப்புப் பெயராகும் (1 மக் 2:3). இவரது சகோதரர் யோனத்தான் தோலமியர்களால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டபின், இவர் யூத சுதந்தரத்துக்காக அரசனோடு பேச்சு வார்த்தை நடத்தி, உடன்படிக்கை செய்து, அசமோனிய அரச மரபை நிறுவினார்.

தாடி (BEARD)

நீண்ட தாடி வைத்துக் கொள்வது எபிரேய வழக்கம். தொழு நோயாளிகளைத் தவிர (லேவி 14:9) மற்றவர்கள் தாடியை நீக்குவது, எபிரேய வழக்கப்படி இழிவான செயல் ஆகும் (2 சாமு 10:4-5). பழைய மேற்காசிய நாட்டுப்படங்களில் செமித்திய மக்களுக்குத் தாடி இருப்பதைக் காணலாம். உரோமையர்களும் எகிப்தியர்களும் முழுவதும் சவரம் செய்து கொள்ளப்பட்ட முகத்துடனே இருக்க விரும்பினார்கள். ஆனாலும் பலர் எகிப்திய மன்னர்கள் போலத் தாடிகளை வைத்துக் கொண்டார்கள். எபிரேயர்களுக்குத் தாடியை மழிப்பது தண்டனைக்குரிய காரியமாகக் கருதப்பட்டது (லேவி 19:27). குருக்கள் தாடியை எடுக்கக்கூடாது என்றாலும், வரப்போகும் அழிவின் நினைவாக எசேக்கியேல் இறைவாக்கினர் மட்டும் தலை முடியையும், தாடியையும் வெட்டி விடப் பணிக்கப்பட்டார் (எசே 5:1). 1 சாமு 17:35-இல் தாவீது, ஒரு சிங்கம் அல்லது கரடியின் தாடியைப் பிடித்து, அதைத் கொல்வதாகக் கூறப்படுகிறது. யோவாபு, ஆமாசாவின் தாடியை வலக்கரத்தால் பற்றி அவரை முத்தமிடப் போனான் (2 சாமு 20:9). ஆக்கிசு மீது ஏற்பட்ட பயத்தால் தாவீதின் தாடிவழியாக உமிழ்நீர் ஓடிக்கொண்டிருந்தது (1 சாமு 21:13). தலை முடியையோ, தாடியையோ பிய்த்துக் கொள்வது கோபம் அல்லது வருத்தத்தின் அடையாளம் (எஸ் 9:3). தாடியை மழிப்பது பயங்கரமான அழிவின் அடையாளம் (எசா 7:20; 15:2; எரே 41:5; 48:37). விலையுயர்ந்த எண்ணெயால் தாடிக்குத் தைலம் பூசுவது குறித்து ஆரோனின் தாடியைப் பற்றிய ஒரு செய்தியில் கூறப்படுகிறது (சங் 133:27). ஆனால், இதே நிகழ்ச்சி யாத் 30:22-30; லேவி 8:30 ஆகியவற்றில் ஆரோனோடு தொடர்புடைய ஒரு குருத்துவ சடங்குமுறையாக்கிக் காட்டப்படுகிறது.

தாடை, தாடை எலும்பு (JAW, JAWBONE)

வாய் அமைப்பின் எலும்பு அமைப்பு. சிம்சோன் கழுதையின் தாடை எலும்பைப் பெலிஸ்தியருக்கு எதிராக ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தினார் (நீதி 15:15-17). அதனால் இது நிகழ்ந்த இடம் தாடை எலும்புக் குன்று என்று பொருள்படும் இராமத்துலெகி என்று பெயர் பெற்றது.

உருவகமாகவும் அடிக்கடியும் குறிப்பாக எதிரியைக் கட்டுப்படுத்துவதைக் குறிக்கவும் பயன்படுகிறது (எசா 30:28). ஓசே 11:4-இல் ''அவர்கள் கழுத்தின்மேல் (தாடையின் மேல்) இருந்த நுகத்தை அகற்றினேன்'' என்று இறைவன் கூறுகிறார்.

தாடையாகக் குறிக்கும் எபிரேயச் சொல்லை ''கன்னம்'' என்றும் மொழி பெயர்க்கலாம். இவை ஒன்றையொன்று மருவிப் பயன்படுவதை யோபு 4:12; எசே 29:4; 38:4-இல் காணலாம்.

தாண் (DAN - அவர் (இறைவன்) தீர்ப்பிடுகிறார்) - ஆள்

1. யாக்கோபின் ஐந்தாவது புதல்வர். 'தாண்' கோத்திரத்தின் குலப்பெயர் மூதாதையாவார். இவர் ராகேலின் பணிப் பெண்ணான பில்காவுக்குப் பிறந்ததால் (ஆதி 30:1-6) நப்தலியின் உடன் பிறந்தவர் ஆவார்; ஆகவே பட்டியல்களில் எப்போதும்

அவருடன் சேர்த்துக் குறிக்கப்படுகிறார் (ஆதி 35:25; 46:23; யாந் 1:4).

முதலில் 'தாண்' பென்யமினுக்குக் கிழக்குப் பகுதியில் குடியேற முயற்சி செய்தார். நீதி 1:34-35-இல் குறிக்கப்பட்டுள்ளதுபோல் சிலர் அய்யலோன், ஹர்கரேசு, சாலபிம் ஆகிய பகுதிகளை வெல்ல முடியவில்லை. ஆகவே செபேலாவில் குடியேற முயன்றனர். அங்கும் அதிகநாட்கள் நீடிக்க முடியவில்லை. எமோரியர்கள் இவர்கள் சமவெளிக்கு வருவதைத் தடைசெய்தது மட்டுமல்லாமல், மலைப்பகுதிகளிலே தங்கியிருக்கக் கட்டாயப்படுத்தினர். கானானியர் தங்கியிருந்த பகுதிக்குள் தாணியர் அதிகமாகப் புகுந்துவிட்டதாகத் தெரிகிறது. தாணைச் சேர்ந்த சிம்சோனின் கதை இஃதோடு ஒத்துப்போகிறது (நீதி 13:2 தொ). அவருடைய தீரச்செயல்கள் மகனேதாணில் தொடங்குகிறது (13:25). இவை அவரைப் பெலிஸ்தியப் பகுதிக்குள்ளும் இட்டு செல்கின்றன. ஆகவே இவர்கள் ஒரு பாதுகாக்கப்பட்ட பாளையத்தை மட்டும் கொண்டிருந்தனர்; ஒரு குடியிருப்பை இவர்கள் கொண்டிருக்கவில்லை. இந்தப் பாளையம் சோரா, எசுத்தாவோல் என்ற இரண்டு கானானிய நகரங்களுக்கிடையில் இருந்தது. யோசு 19:40-46-இல் வரும் நகரங்களில் வரும் பட்டியல் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும். இது தாணின் வரலாற்றுக்குப் பெரிதும் உதவவில்லை.

நீதி 17-18-இல் 'தாண்' புதிய குடியிருப்பைத் தேடிச் சென்றார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது நம்பத்தகுந்ததாகும். தாண் இனத்தவர் யோர்தான் மூலம் வரை சென்றனர். அங்கு இலாயிசு என்ற நகரை அமைத்தார்கள் (நீதி 18:7.28). அதன்பகுதி அவர்களது நோக்கத்திற்கு ஏற்றதாய் இருந்தது. இதைத் தங்கள் குல மூதாதையரின் பெயரான 'தாண்' என்ற பெயரால் அழைத்தார்கள் (யோசு 19:47; நீதி 18:29). இது முதலில் 600 மக்களைமட்டும் கொண்டிருந்தது (நீதி 18:11). தாண் இனம் சிறியதாகும்.

தெபோராவின் பாடலில் தாண் இனம் கண்டிக்கப்படுகிறது. ஏனெனில் அவர்கள் இஸ்ராயேலின் பொதுக்காரியத்தில் அக்கறை காட்டவில்லை; அந்நியரைப்போல் நடந்துகொண்டனர் (நீதி 5:17). யாக்கோபின் ஆசிர்வாதத்திலும் (ஆதி 49:16) தாணைக் காண்கின்றோம். உப 33:22-இல் மோசேயின் ஆசிர்வாதத்தில் தாண் வடக்கில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அனேகமாகத் தாண் தமஸ்குவிற்குச் சென்று வந்து கொண்டிருந்த வியாபாரிகளைத் தாக்கி சூறையாடினர்.

வெவ்வேறு வம்சவழிப்பட்டியல்களில் தாணின் இடம் வேறுபடுகின்றது. குருக்கள் பாரம்பரியத்தில் கடைசியிலிருந்து மூன்றாவது இடத்தைக் கொண்டுள்ளது (எண் 1:38-39; 2:25-26; 7:66-71; 10:25; 26:42-43). தாண் எண் 1:12; 13:12 ஆகிய இடங்களில் குறிக்கப்படுகிறது. இடப்பங்கீட்டுப் பட்டியலில் பென்யமினுக்கு அடுத்தபடியாகத் தாண் நான்காம் இடத்தில் குறிக்கப்படுகிறது (34:22). லேவியர் நகர்ப்பட்டியலில் தாண், பென்யமின் மற்றும் எப்பிராயிமுக்கு அடுத்து ஐந்தாவது இடத்தைப் பெறுகிறது (யோசு 21:5.23-24; 1 நாள் 6:61.69). ஏபால் மலையில் சாபத்தைக் கூறும் குழுவின் இறுதியில் தாண் குறிக்கப்படுகிறது (உப 27:13). எசே 48:1-இல் தாணின் வடபகுதி குறிக்கப்படுகிறது. கிழக்கிலுள்ள மூன்றாவது வாயில் தாண்வாயில் என்றழைக்கப்படுகிறது. நாளாகமத்தில் ஓர் இடத்தில் நப்தலியோடு சேர்த்தும் (1 நாள் 12:36), மற்றொரு இடத்தில் அதிலிருந்து பிரித்தும் (2:2) கூறப்படுகிறது. தாண் குலம் இஸ்ராயேல் வரலாற்றில் முக்கிய பாகம் கொள்ளவில்லை. இருவர் குறிப்பிடத்தக்கவர்கள். ஒருவர் பெட்டகத்தைக் கட்டுவதில் பெட்சலேலுக்கு உதவி செய்த ஒகோலியாபு ஆவர் (யாத் 31:6; 35:34; 38:23). மற்றவர் ஊராம் அபி என்பவர். இவரும் தீரைச் சேர்ந்த ஒரு கலைஞர். ஆனால் தாணியப் பெண்ணின் மகன் (2 நாள் 2:13; 1 அர 7:13-14-இன்படி இவர் நப்தலியப் பெண்ணின் மகனாவார்). லேவி 24:11-இல் குறிக்கப்படும் இறை நிந்தனை செய்பவன், தாண் வழியில் தாணைச் சேர்ந்தவர். திருவெளி 7:4-8 தாண் இனத்தைச் சேர்க்கவில்லை. ஒருவேளை அரசன் எரொபவாம் காலத்தில் தாண் சிலை வழிபாட்டை ஊக்குவித்தது காரணமாய் இருக்கலாம் (1 அர 12:29).

தாண் (DAN) - இடம்

1. தாண் கோத்திரத்தார் குடிபெயர்ந்து சென்ற பாலஸ்தீனத்தின் வடகோடியில் உள்ள நகரம். இது எர்மோன் மலையடிவாரத்திற்குத் தெற்கேயும், யோர்தான் நதியின் முக்கியமான கிளை நதிகளுள் ஒன்றான நார் லெத்தான் என்ற நதியின் மூலத்திலுமுள்ள தேல் ஏல் - காதி (நீதிபதியின் மேடு) என்று அடையாளம் காட்டப்படுகிறது. ஊலே சமவெளியைப் பார்த்தவண்ணம் தீரையும் தமஸ்குவையும் இணைக்கும் வணிகச் சாலையைப் பாதுகாக்கிறது.

இந்த மண்மேடு சதுர - அமைப்பில் 450-540 மீட்டர் நீளமானது. இதன் கிழக்கு முனையானது மேற்கு முனையைவிட உயர்ந்துள்ளது. இங்குப் புதைபொருள் ஆராய்ச்சி நடைபெறவில்லை. ஆனால் இங்கு மக்கள் வெண்கலக்காலத்திலும் (கி.மு. 3000-1200) இரண்டாம் இரும்புக் காலத்திலும் (900-600) வாழ்ந்ததாக மேல் மட்ட ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. நீதி 18:7.14.27.29-இன் படியும் துட்மோசின் பட்டியல்படியும், கானானியர்காலத்தில் இந்த நகரமானது இலாயிசு என்று அழைக்கப்பட்டது. இப்பெயரின் மாறுபட்ட வடிவம் இலசேம் யோசு 19:47-இல் உள்ளது. அனேகமாகப் பெலிஸ்தியரின் தாக்குதலினால் தாண் கோத்திரத்தார் தங்களுடைய நாட்டை விட்டுவிட்டு, வடக்குக்குக் குடிபெயர்ந்து சென்று இலாயிசைக் கைப்பற்றி அதற்குத் தாண் என்று பெயரிட்டிருக்கலாம் (நீதி 18). நாட்டைப் பிரித்தபிறகு எரொபவாம் பொற்கன்றுக்குட்டியோடு புனித இடம் அமைத்த இரு இடங்களில் தாணும் ஒன்றாகும் (1 அர 12:29); ஏகூவின் சமயப் புரட்சியிலிருந்து இந்தப்பீடம் தப்பியது (2 அர 10:29). கி.மு. 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இது இஸ்ராயேலின் வடக்கு நகரங்களில் ஒன்றாக இருந்தது; யூதாவின் அரசனான ஆசாவின் தூண்டுதலால் தமஸ்குவின் அரசனான பெனதாது இதைக் கைப்பற்றிக் கொண்டான் (1 அர 15:20; 2 நாள் 16:4). இஸ்ராயேலின் வடகோடி முனையைக் குறிப்பதற்காகத் ''தாணிலிருந்து பெயேர் செபாவரை'' என்ற சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி வருகின்றது.

2. மெக்காவுக்கும் மெதினாவுக்கும் இடையிலுள்ள ஒரு நகரமாகவோ மக்களாகவோ இருக்கலாம். இத்துடன் தீர் மக்கள் வியாபாரம் செய்தனர் (எசே 27:19).

தாதி, செவிலித்தாய் (NURSE)

ஒரு குழந்தைக்குப் பாலூட்ட அல்லது அதைக் கவனித்துக் கொள்ள வேலைக்கு அமர்த்தப்படும் பெண். பொதுவாக இஸ்ராயேல் பெண்கள் தங்கள் குழந்தைகளைத் தாங்களே பாலூட்டிக் கவனித்துக் கொண்டனர் (ஆதி 21:7; யாத் 2:7; 1 சாமு 1:23; 1 அர 3:21; உ.ச. 8:1; 2 மக் 7:27). இக்காலத்தைவிட முற்காலத்தில் நீண்ட காலத்திற்கு, மூன்று ஆண்டுகள்வரைகூட, இவ்வாறு குழந்தைகளைக் கவனித்துக் கொண்டனர் (1 சாமு 1:22-24). பால் குடி நிறுத்தல் ஒரு பெரிய குடும்ப விழாவாகக் கொண்டாடப்பட்டது (ஆதி 21:8). எருசலேம் பாபிலோனுக்கு வீழ்ச்சியுற்றபோது, அங்குப் பால்கொடுக்க யாரும் இல்லை (புல 4:4; யோவேல் 2:16).

சிலசமயங்களில் தாதிகள் நியமிக்கப்பட்டனர். இப்பெண்களுக்குக் குடும்பத்தில் நிலையான இடமும் மதிப்பும் உண்டு (ஆதி 24:59; 2 அர 11:2). மோசேயின் தாய் பார்வோனின் மகளால் மோசேக்குத் தாதியாக அமர்த்தப்பட்டாள் (யாத் 2:7-9). ரெபேக்காவின் பணிப்பெண்ணாகிய தெபோரா, பாலூட்டும் காலம் முடிந்தபின்னும் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்தாள் (ஆதி35:8). யோனத்தான் குடும்பத்தில் ஐந்து வயது மெபிபோசேத்தைத் தாதி கவனித்து வந்தாள் (2 சாமு 4:4). ஒருவேளை நகோமி தனது பேரனுக்குத் தாதியாக இருந்திருக்கலாம் (ரூத் 4:16). பெரும்பாலும் தாதிகள் வீட்டின் பணிப்பெண்ணாக இருந்திருப்பதாகத் தெரிகிறது (எசா 49:23-24; 2 அர 11:2; 2 நாள் 22:11). சிலசமயம் ஆண் காப்பாளர்கள் (பெரும்பாலும் அண்ணகர்கள்) தாதிகளாகக் கருதப்பட்டனர் (2 அர 10:1.5). ஆகவே இவ்வாறு இஸ்ராயேல் மக்களுக்கு மோசே ''தாயாகக்''

கருதப்படுவது இயற்கையானதே (எண் 11:12). பவுல் தன்னைத் தெசலோனிக்கேயர் களுக்குத் தாதியாகக் கருதுகிறார் (1 தெச 2:7). இந்த இருவரின் ஒப்புமை இறைமக்களுக்கு அளித்த தொடக்கக் கவனிப்பையும் அதன் மென்மையையும் குறிக்கலாம்.

தாத்தமா (DATHEMA)

கிலயாதிலுள்ள ஒரு கோட்டை. யூதர்கள் இதில் தஞ்சம் புகுந்திருந்தனர். ஏனெனில் சிரியர்களால் யூதர்கள் இதில் முற்றுகையிடப் பட்டிருந்தனர். இதிலிருந்து மக்கபேயுவால் விடுவிக்கப்பட்டார்கள் (1 மக் 5:9). இது இன்றைய இ்ரெம்தெ அல்லது தாமேயாக இருக்கலாம்.

தாத்தான் (DATHAN - பலமிக்க, நீரூற்று சார்ந்த)

மோசேயின் அதிகாரத்திற்கு எதிராகத் தன்னுடைய சகோதரனான அபிரா (1)முடன் சேர்ந்து கிளர்ச்சி செய்தார்; ரூபன் கோத்திரத் தாரான எலியாபுவின் மகன் (எண் 16:1.12.24-25.27; 26:9; உப 11:6; சங் 106:17; சீரா 45:18).

மோசேயின் தலைமைக்கு எதிராகப் பாலை வனத்தில் இஸ்ராயேலரிடையே எழுந்த இரண்டு கிளர்ச்சிகள் எண் 16-இல் பின்னிப் பிணைந்துள்ளன. இதில் ஒன்று, மோசே யுடையவும் ஆரோனுடையவும் மத உரிமை களுக்கு எதிராகக் கோராகுவால் செய்யப்பட்டது; மற்றொன்று, மோசே மக்கள் மேல் கொண்டிருந்த அரச அதிகாரத்திற்கு எதிராகத் தாத்தானும் அபிராமும் செய்தது (எண் 16:1-2. 12-15.25-26.27-34). மோசே யாவே யிடம் முறையிட அவர் மோசேயின் அதிகாரத் திற்குச் சான்று பகர்ந்தார். இறைச்செயலின் விளைவாகத் தாத்தானும் அபிராமும், அவர் கள் குடும்பங்களும் சொத்துக்களும் நிலத் தால் விழுங்கப்பட்டு அழிக்கப்பட்டன. இஸ்ராயேல் சமுதாயத்தில் அதிகார அமைப்பு களுக்கு எதிராக எழும் சவால்கள் யாவேக்கு எதிராகச் செய்யும் நேரடிக் கிளர்ச்சிகள் என் றும், இந்தச் சவால்களைச் சந்திக்க யாவே 'ஏதாவது புதுமையைச் செய்கின்றார்'' (எண் 16:30) என்றும் இதிலிருந்து தெரிகிறது.

எண் 26:9-இல் உள்ள வம்ச வரலாற்றில் தாத்தானும், அபிராமும் சொல்லப்பட்டுள்ள னர். இவர்களுடைய கிளர்ச்சி உப 11:6; சங் 100:17-இல் சொல்லப்பட்டுள்ளது.

தாபத்து (TAPHATH - சொட்டு)

சாலமோன் அரசனின் மகள். இவளது கணவன் சாலமோன் மன்னனின் நாபத்தோர் பகுதியை நிர்வகித்து வந்த பென் அபின தாபு ஆவார் (1 அர 4:11).

தாபினே (DAPHNE - வாகைமரம்)

அந்தியோக்கியாவிற்கு அருகிலுள்ள அழகு வாய்ந்த சிறப்பான ஓர் இடம். அப்பொல் லோவின் ஆலயத்திற்கும் புகலிடப்பாது காப்பு உரிமைக்கும் பெயர் போனது. முந் தைய பெரியகுரு ஒனியாக மக்கபேயர் காலத்தில் இங்கு வந்து அடைக்கலம் புகுந் தார்; இங்கிருந்து அவரைக் கபடமாய் வெளி வரச் செய்து கொன்றனர் (2 மக் 4:33).

தாபேரா (TABERAH - நெருப்பான, எரிகின் றன)

இஸ்ராயேலர் தங்கள் யாத்திரைப் பயணத் தில் தங்கிய இடங்களில் ஒன்று. இங்கு மக்கள் தங்கள் இன்னல்களைப் பற்றி முறை யிட்டு, கடவுளைக் கோபம் கொள்ளச் செய்த னர். அவர் நெருப்பை அனுப்பியதால் பாளையத்தின் ஒரு பகுதி அழிந்தது (எண் 11:1-2). ''எனவே அந்த இடத்துக்குத் தாபேரோ என்று பெயராயிற்று; ஏனெனில் ஆண்டவரின் நெருப்பு அவர்களிடையே எரிந்தது'' (11:3).

உப 9:22-இல் இஸ்ராயேல் மக்கள் ஆண்ட வருக்குக் கோபம் உண்டாக்கிய இடங்க ளாகக் கொடுக்கப்பட்டுள்ளதில் இதுவும் ஒன் றாகும். எண் 33-இல் இஸ்ராயேல் மக்கள் தங்கிய இடங்களின் பட்டியலில் இவ்விடம் விடப்பட்டுள்ளது. இந்த இடம் எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை.

தாபேல் (TABEEL - இறைவன் நல்லவர், ஒன்றுக்கும் உதவாத)

1. சமாரியாவில் உள்ள ஓர் அரமேயன்; யூதர்கள் எருசலேமை மீண்டும் கட்டுவதைத் தடுத்து நிறுத்தக்கோரி முதலாம் அர்த்தக்சஸ் தாவுக்கு (கி.மு. 465-424) மனு எழுதியவர் களில் ஒருவர் (எஸ் 4:7).

2. ஓர் அரமேயன். தமஸ்குவின் அரசன் ரெசினும் இஸ்ராயேலின் அரசன் பெக்காவும் கூட்டுச்சேர்ந்து தாவீதுகுல அரசனாக நியமிக் கப்பட்ட ஆகாசுக்குப் பதிலாகத் தங்களின் கைப்பாவை அரசனாக நியமிக்கப்பட விரும்பப்பட்டவனின் தந்தை (எசா 7:6). இதனால் யூதா அசீரியாவின் எதிர்க்கூட்டணி யில் சேர்க்கப்பட திட்டம் செய்யப்பட்டது. தாபேலின் மகன் அனேகமாக ஒரு சீரியனாக இருந்ததால் யூதா தமஸ்குவின் பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

அக்காலத்தில் அசீரிய வாசகத்தில் காணப் படும் பெத் தப்-ஏல் என்ற இடம் அம்மோ னுக்கும் கிலயாதுக்கும் வடகிழக்கில் இருந் தது. ''தாபேலின் மகன்'' என்ற சொல் சீரிய இளவரசிக்குப் பிறந்த யூதா இனத்தினனையும் இந்த ஊரில் பிறந்த அல்லது வாழ்ந்தவனை யும் குறித்தது. ''ஒன்றுக்கும் உதவாத'' என்ற இழிபொருளில் இச்சொல்லை யூதமரபு வாச கம் ''தபேயால்'' என்று உச்சரித்தது.

தாபோரிலுள்ள கருவாலிமரம் (TABOR, OAK OF)

பெத்தேலுக்கு அருகில் உள்ள ஓர் இடம். பெத்தேல் திருத்தலத்திற்குச் செல்லும் மூவ ரைச் சவுல் சந்திக்க வேண்டிய இடம். சவுலின் பணிபற்றி இது சாமுவேல் அளித்த இரண்டாவது அறிகுறி (1 சாமு 10:3). இந்த மரத்தின் சரியான இடம் தெரியவில்லை.

தாபோர் (TABOR) - இடம்

செபுலோனின் நிலப்பகுதியில் உள்ள ஒரு லேவிய நகரம் (1 நாள் 6:77). இதற்கு இணையான பட்டியலாகிய யோசு 21:34-35-இல் இப்பெயர் காணப்பட வில்லை. ஏதாவது ஒன்று அல்லது இரண்டு வாசகமுமே பிழையாக இருக்கலாம். நாளா கமம் சரியாக இருந்தால் தாபோர் என்ற இடம் தாபோர் மலையில் அல்லது அதற்கு அருகில் இருந்திருக்க வேண்டும். இது கிசிலோத் தாபோர் என்ற இடமாக இருக்கலாம் (யோசு 19:12).

தாபோர் மலை (TABOR, MOUNT)

இஸ்ரியேல் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு சிறிய மலை அல்லது குன்று. இஸ்ராயே லின் நீதிபதிகளுடனும், கிறிஸ்துவ மரபுட னும் முக்கிய தொடர்பு உடையது.

இது தற்பொழுது அராபிய மொழியில் யெபெல் எத்-தோர் என்று அழைக்கப்படு கிறது. இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் வட கிழக்கு ஓரத்திலும், நசரேத்திற்குக் கிழக்கு தென்கிழக்கே சுமார் 9 கி.மீ. தொலைவிலும் இம்மலை அமைந்துள்ளது. இஸ்ரியேல் பள் ளத்தாக்கிலிருந்து இம்மலை மிகவும் செங் குத்தாக உயர்ந்து மேலே இலேசாக வளைந்து குவிமாடமான உச்சி அமைப்புக் கொண்டுள்ளது. உச்சியில் செவ்வக வடிவ தளம் உள்ளது. இம்மலை 562 மீட்டர் உயர முள்ளது. ஆயினும் இதன் பக்கங்கள் செங் குத்தாயிருப்பதும், இது தனித்து நிற்பதும் இதற்குப் பிரம்மாண்டமான தோற்றம் அளிக் கிறது. இதனால் கர்மேல், எர்மோன் ஆகிய மலைகளுடன் ஒப்பிடப்படுகிறது (சங் 89:12; எரே 46:18). இதன் உச்சியிலிருந்து பள்ளத்தாக்கு முழுவதின் கண்கவர் காட்சி யைக் காணலாம். இஸ்ரியேலுக்கும் கலிலே யக் கடலுக்கும் செல்லும் கிழக்கு-மேற்குச் சாலையிலும், பெத்சானுக்கும் தமஸ்குவிற் கும் செல்லும் வடக்கு-தெற்குச் சாலையி லும் இம்மலை ஆதிக்கம் செலுத்துகிறது.

உப 33:19; ஓசே 5:1-இல் குறிக்கப்படும் மலை தாபோர் மலையென்றால் தொடக்கத் தில் இது பாகால் வழிபாட்டு மையமாக இருந்திருக்கலாம். பன்னிரண்டு கோத்திரங் களுக்கிடையே நாட்டைப் பங்கிடு செய்யும் சூழ்நிலையில் இம்மலை முதலில் குறிக்கப் படுகிறது.

இது இசக்கார், நப்தலி, செபுலோன் ஆகிய நிலப்பகுதிகள் சந்திக்கும் இடத்தில் உள்ளது (யோசு 19:12.22.34). ஆகவே பாராக்கு, நப்தலி, செபுலோன் மக்களுடன் சேர்ந்து சீசராவைத் தாக்க இந்த இடத்தைப் பயன்படுத்தினார் (நீதி 4:6-14). இங்குதான் மிதியானிய அரசர்கள் செபாகுவும் சல்முன்னாவும் கிதியோனின் சகோதரர்களைக் கொன்றார்கள் (8:18). மூன்றாம் அந்தியோக்கு இம்மலையில் ஒரு கோட்டையை கி.மு. 218-இல் கட்டினான். யோசிப்பஸ் அதன் உச்சியைச் சுற்றிச் சுவர் அமைத்ததாக உரிமை கொண்டாடுகிறார்.

மரபுகளின்படி இயேசுவிற்கு உருமாற்றம் நிகழ்ந்தது இங்குதான் என்பதால் இம்மலை மிகவும் மதிக்கப்படுகிறது. ஆனால், உருமாற்றம் எங்கு நிகழ்ந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை; நற்செய்தியில் அந்த இடத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை (மத் 17:1-8; மாற் 9:2-8; லூக் 9:28-36). பொதுப்பாரம்பரியத்தின் அடிப்படையில் பேரரசன் கான்ஸ்டான்டின் தாயாகிய கேலேனா இம்மலைமேல் ஓர் ஆலயத்தைக் கி.பி. 326-இல் கட்டினாள். பின் 7-ஆம் நூற்றாண்டளவில் இயேசு, மோசே, எலியா ஆகிய மூவருக்கும் மூன்று திருத்தலங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதன்பின் துறவியர் மடங்களும், ஆலயங்களும் எழுப்பப்பட்டன. இவையெல்லாம் சலாடின் என்பவரால் 1187-இல் அழிக்கப்பட்டன. இவரின் சகோதரர் இங்கு ஒரு கோட்டையை 1212-இல் எழுப்பினார். 13-ஆம் நூற்றாண்டில் இதுவும் அழிக்கப்பட்டு, 6 நூற்றாண்டுகளாக எதுவுமில்லாமல் இருந்தது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிரேக்கத் திருச்சபையால் ஓர் ஆலயமும், துறவியர் மடமும் கட்டப்பட்டன. பழைய சீரிய பாணியில் இலத்தீன் மரபுப் பேராலயம் ஒன்றும் மலை உச்சியில் கட்டப்பட்டது.

தாமரி (DAMARIS - பசுங்கன்று)

ஏதன்சு நகரில் அரயொப்பாகுவில் பவுலின் உரையைக் கேட்டு, தியோனிசியு என்பவருடன் கிறிஸ்துவமறையைத் தழுவிய ஒரு பெண் (அ.ப. 17:34). இதுவரை அறியப்படாத தாமரி என்ற இப்பெயர் பொதுவாக வழங்கப்பட்ட தாமலி என்பதன் மறுவடிவமாக இருக்கலாம். மதிப்புமிக்க பெண்களைப்பற்றி லூக்காவிற்குத் தெரிந்திருந்தும், தாமரியைப் பற்றிஅதிகம் சொல்லவில்லை (அ.ப.13:50; 17:12). இவள் தியோனிசியுனின் மனைவி என்று கிரிசோஸ்தோம் தவறாகச் சொல்கின்றார்.

தாமரை (LOTUS)

இந்தச்சொல், பலவிதமான தாவரங்களைக் குறிக்கும் பொதுவான பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இது பொதுவாகச் சிசிபுசு தாமரை என அடையாளம் காட்டப்படுகிறது. ஆனால் இது முட்புதர்ச்செடியாகவோ, குறைந்த உயரமுள்ள செடியாகவோ வரட்சியான இடங்களில் வளர்வது. இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, யோபு 40:21-22-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்ணீர்ப் பின்னணியுடன் இதைத் தொடர்புபடுத்த இயலாது.

யோபு நூலில் வரும் பெகிமோத்து என்ற விலங்கு என்ன என்ற கேள்விக்குப் பதில் அளிப்பதைப் பொருத்து இச்சொல்லின் பொருளும் விவிலியப் பின்னணியின் அடிப்படையில், எகிப்தில் காணப்பட்ட நிம்பேயா தாமரை எனப்படும். தண்ணீர் லீலிச் செடி பொருத்தமுடையதாகும். ஆனால் இதன் நிழலில் ஒரு பெரிய விலங்கு தன்னை மறைத்துக் கொள்ள முடியாது.

தாமார் (TAMAR - பேரீந்த மரம்) - ஆள்

1. யூதா தன் மகன் ஏருக்கு மணமுடித்த கானானியப் பெண். 'ஏர்' இறந்ததால், அன்றிருந்த வழக்கப்படி அவனது சகோதரன் ஓனான் அவளை மணமுடித்தான். அவன் செய்த தவறினால் இறந்தான். இதனைக் கண்ட யூதா தனது இறுதி மகன் சேலாவையும் தாமாரின் சேர்க்கை அழித்துவிடும் என்று பயந்து சேலாவின் வயதைக் காரணம் காட்டி அவளை அவளது வீட்டுக்கு அனுப்பி விடுகின்றார். சேலா பெரியவனான

பிறகும் யூதா காலம் தாழ்த்தவே, தாமார் ஒரு வேசியைப்போல் வேடமணிந்து யூதா வுடன் சேர்ந்து கருவுறுகிறாள். அவளை அறி யாத யூதா அவளுக்கெதிராக வழக்கு தொடுக் கும் பொழுது அவள் தனது கருவுக்குக் காரணம் யூதாவே என்று நிரூபித்ததால் தனது தவறை யூதா ஏற்று அவளையும் ஏற்றுக் கொள்கின்றார். அவளுக்குப் பெரேட்சு, செரகு என்று இரு குழந்தைகள் பிறந்தன (ஆதி 38:1-30; 1 நாள் 2:4). இவளைப்பற்றி இஸ்ராயேலில் நிலவிவரும் விளக்கக் கதை களில் யூதாவும் இவளும் இணைந்ததுகூட இறைவனின் தூண்டுதல்தான் என்று கூறப் பட்டுள்ளது. இவளது மூத்த மகன் பெரேட்சு தாவீதினுடையவும் இயேசுவினுடையவும் மூதாதையர் ஆகிறார். இவள் இயேசுவின் தலைமுறை அட்டவணையிலும் (மத் 1:3), 'ரூத்' ஆசிர்வதிக்கப்பட்டபொழுதும் குறிப் பிடப்படுகின்றாள் (ரூத் 4:12).

2. தாவீதரசருக்கும், மாக்காளுக்கும் பிறந் தவள். அப்சலோமின் சகோதரி. இவள் தாவீ தின் மற்றொரு மகனான அம்னோன் என்பவ னால் கற்பழிக்கப்பட்டாள். அம்னோன், அப்சலோமால் கொலை செய்யப்படுகின் றான் (2 சாமு 13:1-29; 1 நாள் 3:9).

3. அப்சலோமின் ஒரே மகள். தனது மகள், தன் தங்கை தாமாரைப் போல அழகாயிருந்த தாலும், அவளது நினைவாகவும் அதே பெய ரைச் சூட்டுகின்றார் (2 சாமு 14:27). எழுபது நூலின்படியும் சிலபழைய இலத்தீன் வாச கங்களின்படியும் இவள் ரெகபயாமின் மனைவியாகி அபியாத்தாரைப் பெற்றாள். இது சரியென்றால் இவளும் 1 அர 15:2; 2 நாள் 11:20-22-இல் வரும் மாக்காளும் (4) ஒருவரே.

தாமார் (TAMAR) - இடம்

1. சாலமோன் அரசனால் கட்டப்பட்ட நகரம் (1 அர 9:18; 2 நாள் 8:4). சிலர் இதனை 2-இல் கூறப்படும் நகரம் என்றே கூறுவர்.

2. தென்கிழக்கு யூதாவில், சாக்கடலின் தென்கரையில் இருந்த ஒரு நகரம் (எசே 47:19; 48:28). எசேக்கியேலின் காட்சியில் இது இஸ்ராயேலின் தென் எல்லையில் கிழக்குக் கோடியில் அமைந்திருந்தது; சால மோன் காலத்தில் இஸ்ராயேல் ஏதோம் எல் லையில், கோட்டை கொத்தளங்கள் நிறைந்த நகராய் விளங்கியது. ஏதோமியர் தோற்கடிக் கப்பட்ட பிறகு இந்நகர் சாலமோனுக்குக் கனிப்பொருள் கிடங்காகப் பயன்பட்டிருக்க லாம். ஏதோம் சுதந்தரமடைந்த பிறகு இந் நகரம் எல்லைகளைப் பாதுகாக்கச் சிறந்த பாதுகாப்புத் திட்டங்களுடன் சீர்திருத்தப் பட்டது. இது கச்சோன் தாமாராக (அச்சோன் தாமார்) இருக்கலாம். இது எங்கு இருந்தது என்று ஒன்றும் கூறுவதற்கில்லை. சிலர் இது எருசலேமிலிருந்து 88 கி.மீ. தொலைவில் இருந்தது என்பர். இது அராபாவுக்கு மேற் குப்பக்கத்திலுள்ள கசர் எய்யெகெனியா என் றும், சாக்கடலுக்குத் தென்மேற்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள அயின் ஏல் - அருஸ் என்றும், சாக்கடலுக்குத் தெற்கிலுள்ள ஏல்- கெரியா என்றும், சாக்கடலுக்குத் தென்மேற் கில் 32 கி.மீ. தொலைவிலுள்ள அயின் கோசோபு என்றும் பலவாறு அடையாளம் காட்டுவர்.

தாயகம், தாய்நாடு (FATHERLAND)

I. தாயகம் என்பது ஒரு மக்களுடைய அனுபவத்தின் அத்தியாவசியமான அனுப வங்களில் ஒன்றாகும். பழைய ஏற்பாட்டு மக்களுக்குத் தாயகமானது அவர்களது விசு வாசத்திலும் நம்பிக்கையிலும் முக்கிய இடத் தைக் கொண்டிருந்தது. ஆயினும், பழைய ஏற்பாட்டின் தாயகமானது இறைவனின் வெளிப்பாட்டில் ஒரு தயாரிப்பு நிலை யாகவே இருந்தது. ஏனெனில், அனைத்து மனிதருக்கும் குறிக்கப்பட்ட மற்றொரு தாயகத்தை இறைவன் இறுதியில் வெளிப் படுத்தினார்.

II. பழைய ஏற்பாடு:

1. தாயகம் பற்றிய அனுபவம்: இறைவ னுடைய மக்களின் வரலாறானது இடம் பெய ருதலுடன் தொடங்குகிறது. ஆபிரகாம் தனது தாயகத்தை விட்டு, தான் ஏதுமறிந்திராத வேறு நாட்டிற்குச் செல்ல வேண்டி இருந்தது (ஆதி 12:1-2). ஆனால், அவரது இனத்தின்

புதிய அமைப்பானது நிறைவேறுதல் தாமதப்படுத்தப்பட்டது. கானானில் தங்கியிருந்த காலத்தில், குல மூதாதையர் அந்நியராகவும் வேற்று நாட்டினராகவும் இருந்தனர் (ஆதி 23:4; எபி 11:13). நாட்டின் உரிமையானது அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது (ஆதி 12:7). ஆனால் இன்னும் அளிக்கப்படவில்லை. மேலும், அவர்கள் இடைப்பட்ட காலத்தில் தங்கியிருந்த எகிப்தும் அவர்களுக்கு விநோதமான நாடாகவே இருந்தது (15:13). யாத்திரை மற்றும் சீனாய் உடன்படிக்கைக்குப் பின்னரே இறைவனின் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு, கானான் அவர்களது சொந்த நாடாக, முழுமையான அளவில் சமயப் பொருளைக் கொண்ட நாடாக ஆயிற்று. அது இறைவனின் கொடையாக மட்டும் பெறப்படவில்லை; அது அவர்களுடைய மூதாதையரின் கல்லறைகளை மட்டுமே கொண்டிருக்கவில்லை (ஆதி 47:30; 50:5; நெகே 2:3-5); ஆனால், இறைவனும் அதனைத் தமது உறைவிடமான பேழைக்கான புனித இடமாகவும், பிறகு எருசலேமின் ஆலயமாகவும் கொண்டிருந்தார் என்ற உண்மையானது, அதன் மேல் ஒரு புனித மதிப்பை அளிக்கின்றது. இத்தகைய அனைத்துத் தலைப்புகளுக்கும் கீழ், விசுவாசத்துடன் இணைக்கப்பட்டதாக இது தோன்றுகிறது.

2. இடம் பெயர்க்கப்படும் அனுபவம்: ஆனால் இஸ்ராயேலனாது இதற்கு எதிரிடையான அனுபவத்தினாலும் துன்புற்றது. இந்த அன்பு செய்யப்பட்ட தாயகத்தை இரட்டைத் தேசிய துன்ப நிகழ்ச்சியானது இறுதியாகப் பாழாக்கியது. அதே நேரத்தில் மக்கள் அதனின்று நீண்ட தொலைவிற்கு இடம் மாற்றப்பட்டனர்; பெயர்த்தெறியப்படும் அனுபவத்தினால் துன்புற வேண்டியிருந்தது. நாடு கடத்தப்படலானது மட்டுமே தாயகத்துடனான யூதர்களின் நெருக்கத்தை மேலும் வலிமைப்படுத்தியது (சங் 137:1-6); அதனுடைய துன்பங்களைக் கண்டு அழுது புலம்பினர் (புலம்பல் ஆகமம்). இந்தப் பெரிய அழிவின் காரணமானது, நாட்டு மக்களின் பெரிய பாவமே; அதன் மீதான இறைவனது எடுத்துக்காட்டான தண்டனையே இது என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர் (புல 1:8. 18-19; எசா 64:4...; நெகே 9:29தொ). சோதனை நீடித்த காலம் வரை, தாழ்த்தப்பட்ட தொலைவிலுள்ள தாயகமானது அவர்களது செபத்திலும் (நெகே 9:36-37), அவர்களது அக்கறைகளிலும் (2:3), எதிர்காலத்திற்கான அவர்களது நம்பிக்கைகளிலும் (தோபி 13:9-17; பாரு 4:30-5:9) மைய இடத்தை வகித்தது. பழைய அமைப்புகளுடன் பற்றுக் கொண்ட நிலையில், அவற்றை உயிர்ப்பிக்க அவர்கள் இடைவிடாமல் உழைத்தனர்; ஓரளவிற்கு அதில் வெற்றியும் கண்டனர். ஆனால் அதே நேரத்தில் இறைவாக்கினருடைய வாக்குகளில் வருங்காலத் தாயகத்தின் உருமாறிய உருவத்தை அவர்கள் கண்டுணர்ந்தனர். இந்தப் புதிய புனிதநாடும் மற்றும் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்ட நாட்டின் மையமான புதிய எருசலேமும் மீண்டும் அமைக்கப்படும் இன்பவனத்தின் பண்புகளைப் பெறுகின்றன. இவ்வாறு தாயகமானது யூதருக்கு, மற்ற அனைத்து மனித தாயகங்களுக்கும் ஒத்ததாக உள்ள செயல்பாடான உண்மையாகவும், தனது தூய்மை மற்றும் மாட்சிமையுடன் எல்லாவித தேசிய கருத்தாய்வுகளையும் பாதிக்கின்ற மாதிரியான கருத்தாகவும் உள்ளது. இதனில் அனைத்து மனிதக் கனவுகளும் மணி உரு எடுக்கின்றன. அதே காலத்தைய உரோமைப் பேரரசின் கருத்தைப் போன்று பல நாட்டவராக இல்லாமல், இஸ்ராயேலின் அழைப்பின் மூலம் அது உலகளாவிய நிலையை நோக்கிச் செல்கிறது. ஆபிரகாமில் உலகின் அனைத்துக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் (ஆதி 12:3); மற்றும் சீயோனானது அனைத்துத் தாய் நாடுகளுக்கும் தாயாக வேண்டும் (சங் 87).

III. புதிய ஏற்பாடு:

1. இயேசுவும் அவரது தாயகமும்: இயேசு முழுமையான மனிதனாக இருப்பதற்காக அவரும் தாயக அனுபவத்தைப் பெற வேண்டியிருந்தது. ஏதோ ஒருநாடு அவருடையதாக இல்லாமல், அவரது தந்தை அவரது மக்களுக்கு உரிமைச் சொத்தாக அளித்த

நாடே அவருடைய நாடாகும். தனது உயிரின் ஒவ்வொரு இழையாலும் தம் தாயகத்தை அவர் அன்பு செய்தார். அதன்பால் கொண்ட தூது அவருக்கு ஒரு புதிய நாடகத்திற்கு வாய்ப்பளித்தது. அதை மேலும் தூண்டியது. கடந்த காலத்தில் இறைவாக்கினரின் குரலை இஸ்ராயேல் புறக்கணித்தது போல, யூத தாயகமானது அதனுடைய உண்மையான அழைப்பை அதற்கு வெளிப்படுத்துபவரை உண்மையாகவே பழிக்கிறது. தனது தந்தையின் ஊராகிய நாசரேத்தில் இயேசு நிராகரிக்கப்படுகிறார்; எந்த இறைவாக்கினரும் தனது சொந்த நாட்டில் மதிக்கப்படுவதில்லை (மத் 13:54-47; யோவா 4:44). நாட்டின் தலைநகராகிய எருசலேமில் தான் மரணமடையப் போவதை இயேசு அறிந்திருந்தார் (லூக் 13:33). இறைவனது வருகையின் காலத்தை அறிந்து கொள்வதற்குத் தவறிய நகருக்காகவும் அவர் அழுதார் (லூக் 19:41; 13:34-35). இறைவன் தன்னிடம் எதிர்பார்த்ததை நிறைவேற்றாததன் காரணமாக, யூதர்களுடைய இவ்வுலகத் தாயகமானது, சீர்படுத்த முடியாத அளவில் சிதைவை நோக்கிச் செல்கிறது. குறிப்பிட்ட காலம் வரை மீட்பின்திட்டப்படி அதற்கு அளிக்கப்பட்டிருந்த பணியை இறைவன் எடுத்துவிட்டார் என்பதை அனைத்துக் கண்களும் பார்க்கும்படியாக ஒரு புதிய பேரழிவானது அடையாளமாக இருக்கும் (மாற் 12:14-19; லூக் 19:43-44; 21:20-23).

2. புதிய தாயகம்: குறிப்பிட்ட இக்காலக் கருதுகோள்கள் செய்ய முயல்வதுபோலப் புதிய மக்களாகிய திருச்சபையானது, மண்ணுலகத் தாயகத்தினுள் கூட்டிணைப்பை அடக்கப்போவதில்லை. குடும்ப அன்பினைத் தொடர்வதுடன், தாயக அன்பும் கிறிஸ்தவனின் கடமையாக என்றும் நிலைத்திருக்கும். இவ்வாறு, யூதக் கிறிஸ்தவர்கள் இயேசுவைப்போன்று இஸ்ராயேலின் தாயகத்துடன் நெருங்கிய பற்றுக் கொண்டிருந்தனர். மற்றொரு மட்டத்தில், தனது பிறப்பின் காரணமாகக் கொண்டிருந்த உரோமைக் குடியுரிமையைப் பவுல் மீண்டும் நிலைநாட்டுகிறார் (அ.ப. 22:27-28). ஆனால் இஸ்ராயேலின் தாயகமானது, இனி ஒருபோதும் அதன் புனிதப் பண்பைக் கொண்டிருக்கவில்லை; மாற்றப்பட்டுவிட்டது. இஸ்ராயேலர்கள் மண்ணுலக எருசலேமின் பிள்ளைகளாக இருந்ததுபோலத் திருச்சபையானது நம்மைப் பிள்ளைகளாகக் கொண்ட மேலுலக எருசலேமாகும் (கலா 4:26). இவ்வழியாகப் புதிய தாயகத்தின் அனுபவத்தில் அனைத்து மனிதரும் பங்கு பெறலாம். முற்காலத்தில் புறவினத்தார் இஸ்ராயேலின் நகருக்கு அந்நியராக இருந்தனர் (எபே 2:12); ஆனால் இப்போது, புனிதர்களுடன் உடன் குடியுரிமையுள்ளவர்களாக இருக்கும் சிறப்பினை யூதருடன் அவர்கள் பங்கேற்கின்றனர் (2:19). இவ்வாறு, உண்மையான தாயகமாகிய விண்ணகத்திற்கு, மண்ணுலகத் தாயகங்களினின்று தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேலானது, பொருளுடைய ஆனால் தற்காலிகமான உருவமாக மட்டுமே இருந்தது. நீடித்த உறைவிடம் எதுவும் நமக்கு இங்கில்லை. மேலும் வரவிருப்பதையே நாம் நாடுகிறோம் (எபி 13:14). முற்காலங்களில் குலமூதாதையருக்கென இறைவன் தயாரித்த தாயகம் இதுவே. அவர்களும் ஏற்கெனவே கானான் நாட்டிற்கு அப்பாற்பட்டு, தங்களுடைய முழு விசுவாசத்துடன் இந்த மேலான தாயகத்திற்காகக் காத்திருந்தனர் (எபி 11:14 தொ). அவர்கள் செய்ததுபோலவே அனைத்துமனிதரும் செய்து, தங்களது குடும்பங்களுடன் அவர்கள் வேரூன்றியிருந்த உலகின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட இடத்தைப் பார்த்து, அவர்களுடன் தாங்கள் என்றென்றும் வாழவிருக்கின்ற புதிய தாயகத்தைக் காண வேண்டும்.

தாயத்து (AMULETS)

தீய ஆவிகளினின்று ஒருவன் காப்பாற்றப்படுவதற்காக அணிந்துகொள்ளும் ஒரு சமய அடையாளப் பொருளாகும். இதனைத் தாயத்து என அழைக்கின்றனர். இதனைக் குறிக்கும் எபிரேய வார்த்தை எதுவும் இல்லை. பாலஸ்தீனத்தில் எடுக்கப்பட்ட 'தாயத்துகள்' பல எகிப்தினின்று தோன்றியவையாகவும், இஸ்ராயேலர் தங்கிவாழ்ந்த காலத்திற்கு முந்தியவையாகவும் தோன்றினாலும், ஒரு சில பாலஸ்தீனத்திலே தயாரானவையாக உள்ளன.

இத்தகைய தாயத்துகள் அதிகமாகக் கல்லறைகளிலே காணப்பட்டன. எகிப்திய தாயத்துகளில் மிகவும் பிரசித்தி பெற்றவை முட்டை வடிவில் அமைந்த முத்திரை போன்றவையாகும். இதன் தட்டையான அடிப்பகுதிகளில் தெய்வ உருவங்களும், புராணக் கதைகளின் காட்சிகளும் வரையப்பட்டிருந்தன. சிறு சிறு தெய்வ உருவங்களும் குறியீடுகளும் பொறிக்கப்பட்டிருந்தன. இத்தகைய தாயத்துகளை ஒரு கயிற்றில் கோர்த்துக் கட்டினர்.

பொதுவாகப் பழைய ஏற்பாடு இது பற்றிக் குறிப்பிடவில்லை. இவற்றை மனிதர்களும், விலங்குகளும் கழுத்தில் அணிந்த குளிசங்கள் எனவும் (நீதி 8:21); நறுமணச் சிமிழ்கள் எனவும் (எசா 3:20) இது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனைச் சீட்டுப்பட்டம் எனவும் (யாத் 13:16; மத் 23:5), கதவு நிலைகளில் வைக்கும் அடையாளப் பொருள் எனவும் கூறுகின்றனர் (உப 6:9).

புதிய ஏற்பாட்டில் இதனை நேரடியாக மறுத்துக் கூறாவிடினும், இதனை மறைமுகமாகவேனும் ஏற்றுக் கொண்டனர் எனத் தெரிகிறது (அ.ப. 19:12). அதே நேரத்தில் இயேசுவின் பெயரும் ஆற்றலுமே அனைத்திற்கும் மேலான சக்தி வாய்ந்ததெனக் கூறியதால் (எபே:21; பிலி 2:9; 4:13) இத்தகைய அடையாளப் பொருட்கள் மாயவித்தைகளில் ஒன்றாக எண்ணப்பட்டன (அ.ப. 19:18-19). அவற்றைப் பயன்படுத்துதல், மாயவித்தை, மாயவித்தைக்காரரோடு சேர்த்து (அ.ப. 8:9-24; 13:6-12; 19:13-6) சூனியமாகவும் மறைமுகமான சிலைவழிபாடாகவும் எதிர்க்கப்பட்டது (கலா 5:20; யோவா 18:30; 1 பேதுரு 2:12; 4:15; திருவெளி 9:20-21).

தாய், அன்னை (MOTHER)

உயிரளிப்பவர் என்ற நிலையில் மனிதருடைய பொதுவான வாழ்விலும், மீட்பு வரலாற்றிலும் தாய் சிறப்பான இடத்தை வகிக்கிறார்.

I. ***மனிதரின் தாய்:*** உயிரளிப்பவர் கண்டிப்பாக அன்பு செய்யப்பட வேண்டும். ஆனால், அவளுக்குக் காட்டப்படும் அன்பு, இயேசுவின் முன்னுதாரணத்தைப் பின்பற்றிச் சில நேரங்களில் பலியாக்கும் அளவிற்கு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

1. இனப்பெருக்கத்திற்கான அழைப்பு: தனது மனைவியை ஏவாள் என்று அழைப்பதன் மூலம் ''வாழ்வோர்க்கெல்லாம் தாயாக'' இருக்கும்படியான அவளது அழைப்பை ஆதாம் குறிப்பிடுகிறார் (ஆதி 3:20). சாதகமில்லாத சூழ்நிலைகளிலும் இந்த அழைத்தல் எவ்வாறு நிறைவேறுகிறது என்பதை ஆதியாகமம் நமக்கு எடுத்துரைக்கிறது. இவ்வாறு, சாராள் ஒரு தந்திரத்தைக் கையாள வேண்டியிருந்தது (16:1-2); லோத்தின் புதல்விகள் முறையாகாப் புணர்ச்சிக்கு உட்படுகின்றனர் (19:30-38); ராகேல் மிரட்டலைக் கையாள்கிறாள்: ''நீர் எனக்குப் பிள்ளைகளைத் தாரும். இல்லையேல் செத்துப் போவேன்'' எனத் தன் கணவனிடம் அவள் முறையிடுகிறாள். ஆனால் இறைவனுடைய இடத்தில் தன்னை நிறுத்திக் கொள்ள முடியாதென்பதை யாக்கோபு கூற வேண்டியுள்ளது (30:1-2). தாயாக வேண்டும் என்ற தவிர்க்க முடியாத ஆசையினைப் பெண்ணின் இதயத்தில் ஏற்படுத்தியவர் இறைவன் மட்டுமே. தாயின் உதரத்தைத் திறந்து மூடுபவர் அவரே. மலட்டுத் தன்மையை அவர் மட்டுமே வெற்றி கொள்ள இயலும் (1 சாமு 1:2-2:5).

2. இல்லத்தின் தாய்: தாயான பின்னர், ஒரு பெண் பெருமகிழ்ச்சி அடைகிறார். தனது முதல் குழந்தையினுடைய பிறப்பின் போது ஏவாள் அக்களிக்கிறார்: ''ஆண்டவர் அருளால் ஆண்மகன் ஒருவனை நான் பெற்றுள்ளேன்'' (ஆதி4:1). காயினுடைய புகழானது நீடித்திருக்கச் செய்யக்கூடிய மகிழ்ச்சியாக அது இருந்தது. அவ்வாறே தனது பிறப்பின் போதான சாராளின் சிரிப்பை ஈசாக்கு என்ற பெயரும் (ஆத 21:6), மற்றொரு குழந்தையைப் பெறுவது பற்றி ராகேல் கொண்டிருந்த நம்பிக்கையை

யோசேப்பு என்ற பெயரும் (30:24) நினைவு கூர்கின்றன. தனது தாய்மையின் மூலமாக ஒரு பெண், வாழ்வின் வரலாற்றில் நுழைவது மட்டுமின்றித் தனது துணைவரின் நெருங்கிய உறவையும் ஏற்படுத்துகிறாள் (ஆதி 29:34). இறுதியாகத் தங்களது தந்தையைப்போலத் தாயையும் பிள்ளைகள் மதிக்க வேண்டுமெனப் பத்துக் கட்டளைகள் அறிவிக்கின்றன (யாத் 20:12). இதைச் செய்யத் தவறுவதானது அதே தண்டனையை அளிக்கின்றது (யாத் 21:17; 20:9; உப 21:18-21). தங்களது முறையின்போது ஞானநூல்கள், ஒருவன் தனது தாயை மதிக்க வேண்டிய கடமையை வலியுறுத்தி (பழ 19:26; 20:20; 23:22; சீரா 3:1-16), ஒருவன் அவளது அறிவுரைக்குச் செவிமடுத்துப் பின்பற்ற வேண்டும் என்பதையும் கூறுகிறது (பழ 1:8).

3. அரசனின் தாய்: அரசனுடைய தாயின்மீது ஒரு சிறப்பான பங்கானது சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆளும் அரசன் முன்னிலையில் அவனது மனைவியிலிருந்து வேறுபட்டு, தாய் மட்டுமே சிறப்பான மரியாதையை அனுபவிக்கின்றார். பத்சேபா (1 அர 2:19) அல்லது ஆசா அரசனின் தாய் போன்று (1 அர 15:13; 2 நாள் 15:16) அவளுக்கு ''அரச அன்னை'' என்ற உயர்பதவி அளிக்கப்பட்டு மதிக்கப்படுகிறார். இச்செயல்பாடானது, அரச மெசியா பணித்திட்டத்தில் தாய்மையின் தோற்றத்தைத் தெளிவுபடுத்தலாம். பக்தி உள்ளவரிடையே ''நமது அன்னை'' யாக உருவாகியுள்ள இயேசுவினுடைய தாயின் பங்கைச் சுட்டிக்காட்டுவதைக் கண்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை.

4. தாய்மையின் ஆழ்ந்த பொருள்: கிறிஸ்துவின் வருகையுடன் மகனுக்குரிய பயபக்திக் கடமையானது ஒடுக்கப்படாமல் நிறைவேற்றப்படுகிறது. அப்போஸ்தலிக்க போதனையானது இதனைத் தெளிவாகக் காத்து வருகிறது (கொலோ 3:20-21; எபே 6:1-4). வீணான சடங்கு சாக்குப் போக்குகளின் கீழ் இதனை ஒதுக்குகின்ற பரிசேயருக்கு எதிராக இயேசு உரத்துக் கண்டிக்கிறார் (மத் 15:14-9). ஆயினும் அதுமுதல், இறைவன்பால் கொண்டிருக்கும் பக்தியின்மூலம் இதனை நிறைவேற்றுவதில், மகனுக்குரிய பக்தியைக் கடந்து செல்வது எவ்வாறு என்பதை நாம் அறிய வேண்டும். ''மகனை அவனது தாயிடமிருந்து பிரிக்க'' அவர் வந்துள்ளார் (மத் 10:35). அவரின் பொருட்டுத்தனது தந்தையையும் தாயையும் விட்டுவிடுகிறவனுக்கு அவர் நூறு மடங்கு வாக்களிக்கிறார் (மத் 19:29). அவருக்கு ஏற்புடையவனாயிருக்க ஒருவன் தனது தந்தையையும் தாயையும் ''வெறுக்கக்கூடியவனாக'' இருக்க வேண்டும் (லூக் 14:26). அதாவது தனது பெற்றோரைவிட இயேசுவை அதிகமாய் அன்பு செய்ய வேண்டும் (மத் 10:37).

தாயோடு கொண்டுள்ள பிணைப்புகளைப் பலியாக்கும் எடுத்துக்காட்டை இயேசுவே அளிக்கிறார். பன்னிரண்டு வயதில், ஆலயத்தில் தனது தாயின் முன்னிலையில், தனது தந்தையின் பணியில் இருக்க வேண்டிய உரிமையைப்பற்றிக் கூறுகிறார் (லூக் 2:49-50). கானாவில், இறுதியாகத் தனது தாய் கேட்டதை அவர் அளித்தார் என்றாலும் அவரில் அவள் இனித் தலையிடக்கூடாது என்பதை அவள் புரிந்து கொள்ள வைக்கிறார். ஏனெனில், அவரது பொதுப்பணியின் நேரம் தொடங்கிவிட்டது, அல்லது அவரது சிலுவையின் நேரம் இன்னும் வரவில்லை என்பதே அதற்கான காரணமாகும் (யோவா 2:4). ஆனால் இயேசு தன்னுடைய தாயைச் சற்றுத் தொலைவிலேயே வைத்திருந்தாரெனில், மரியாளின் உண்மையான சிறப்பை அவர் புறக்கணித்துவிட்டார் என்று பொருளன்று. அதற்கு மாறாக அவள் காட்டுகின்ற விசுவாசத்தில் அவர் அதனைச் சுட்டிக்காட்டுகிறார். ''யார் என் தாய், மற்றும் யார் என் சகோதரர்?'' தனது கரத்தினால் அவர் தன் சீடரைச் சுட்டிக்காட்டுகிறார் (மத் 12:48 தொ). மரியாளின் இயல்பான தாய்மையைப் போற்றும் பெண்ணுக்கு, அவளுடைய மேலான பற்றுறுதி அவள் ஆண்டவருடைய வார்த்தைக்குச் செவி மடுத்து, அதனைச் செயல்படுத்துவதில் அடங்கியிருக்கிறது என்று அவர் மறைமுகமாகக் குறிப்பிடுகி

றார் (லூக் 11:27-28). சிலுவையின் உயரத்தினின்று தான் அன்பு செய்தவரை நோக்கி ''இதோ உன் தாய்'' (யோவா 19:26-27) என்று கூறும்போது ஆன்மீக அமைப்பில் இத்தாய்மையைத் தனது சீடர்கள் அனைவருக்கும் அவர் விரிவுபடுத்துகிறார்.

II. *மீட்பின் வரலாற்றில் தாய்:* தாயின் சிறப்பியல்புகள் உருவக வடிவில், இறைத்தன்மை அல்லது மெசியா அமைப்பின் உண்மை, அல்லது மீண்டும் திருச்சபையின் வளமை ஆகியவற்றை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.

1. இறை கனிவும் ஞானமும்: இறைவனில் எத்தகைய வாழ்வின் முழுமை இருக்கிறதெனில் இஸ்ராயேல் அவருக்குத் தந்தை மற்றும் தாய் முதலிய பெயர்களை அளிக்கின்றது. இறைவனுடைய இரக்கமிக்க கனிவை வெளிப்படுத்த, தாய்மை உணர்வுகளைச் சுட்டிக்காட்டி, ஒரு பெண் தனது பிள்ளைகளுக்காக உணர்கின்ற உள்ளுணர்ச்சியை இறைவனுக்குச் சாற்றிக் கூறுகிறது (சங் 25:6; 11:5). இறைவன் ஒரு தாயைப் போல நம்மைத் தேற்றுகிறார் (எசா 66:13). தாய் தனது வயிற்றுப் பிள்ளையை மறந்தாலும், அவர் இஸ்ராயேலவை என்றுமே மறக்க மாட்டார் (49:15). எருசலேமின் பிள்ளைகளை ஒன்று சேர்க்க இயேசு கொண்டிருந்த ஆர்வத்தினைப்போன்று அது இருக்கும் (லூக் 13:34).

அவரது திட்டங்களை நிறைவேற்றுமாறு பணிக்கப்பட்ட இறைவனின் வார்த்தையாகிய ஞானமானது (ஞான 18:14-15), அவரது வாயினின்று வெளிப்படும்போது (சீரா 24:3) ஒரு தாயாக அவரது பிள்ளைகளுடன் உறவு கொள்கிறது (பழ 8-9). அது அவர்களுக்குத் தனது போதனைகளைப் பரிந்துரைக்கிறது: அறிதலின் அப்பத்தை அவர்களுக்கு ஊட்டுகிறது, மற்றும் அருந்துவதற்கு நீரினை அளிக்கின்றது (சீரா 15:2-3). அவரது பங்கை நிறைவேற்றுகின்ற இயேசுவை அறிந்து கொள்வதன் மூலம் அவரது பிள்ளைகள் அவருக்குச் சான்று அளிப்பர் (லூக் 7:35). ''என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது; ஏனெனில் விசுவாசங்கொள்பவனுக்கு என்றுமே தாகம் இராது'' (யோவா 6:35; 8:47).

2. மெசியாவின் தாய்: பாம்பின் தலையை நசுக்கவிருக்கின்ற வாரிசினைக் கொண்டிருக்கிற பெண் ஒருதாய் (ஆதி 3:15) என்பதை மூல நற்செய்தி ஏற்கெனவே அறிவிக்கிறது. பின்னர் மலட்டுத்தன்மையின் மீதுவெற்றி கொள்பவராக இறைவன் காணப்படுகின்ற விவரிப்புகளில் மூதாதையருக்கு வாரிசை அளித்த பெண்கள் தொலைவினின்று கன்னித்தாயை முன்னடையாளம் காட்டுகின்றனர். கன்னி கருத் தங்குதலானது இம்மானுவேல் பற்றியும் (எசா 7:14), அவருக்கு பிறப்பளிக்க வேண்டியவளைப்பற்றியும் (மீக் 5:2) இறைவாக்கினர்கள் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுதலாகும். எது எப்படியிருந்தாலும், நற்செய்தியாளர்கள் இறைவாக்கின் நிறைவேறுதலை இயேசு கிறிஸ்துவில் கண்டுணர்ந்தனர் (மத் 1;23; லூக் 1:35-36).

3. மக்களின் தாய்: மற்ற எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு எருசலேமே தாய்-நகராக உள்ளது (2 சாமு 20:19). அதில் குடியிருப்போர் அதனிடமிருந்தே ஊட்டத்தையும் பாதுகாப்பையும் கொண்டனர். அதனிடமிருந்து சிறப்பாக நீதியும், ஆண்டவரைப்பற்றிய அறிவும் பெறப்படுகின்றன. ''ஆயிரம் ஆயிரமாக நீ பெருகுவாய்'' என்று வாழ்த்துப் பெற்ற ரெபேக்காளைப் போன்று (ஆதி 24:69), எருசலேம் அனைத்து மக்களுக்கும் அவர்கள் இஸ்ராயேலரோ, புறவினத்தாரோ, யாவராயினும் அனைத்து மக்களுக்கும் தாயாக உருவாகும். ''சீயோனைக் குறித்து 'இன்னின்னான் அதிலே பிறந்தான்' என்று சொல்லப்படும்'' (சங் 87:6); அதன் துணைவரால் நீக்கப்பட்ட தண்டனைக்குப்பின்னர், வியப்பில் ஆழ்ந்து அவளைப் புதியநோக்கில் பார்ப்பவர், ''பிள்ளை பெறாத மலடியே மகிழ்ந்துபாடு. ஏனெனில் கைவிடப்பட்டவனின் பிள்ளைகள், கணவனோடு வாழ்பவளின் பிள்ளைகளைவிட ஏராளமானவர்கள்'' (எசா 54:1; கலா 4:22-30). அவளை நோக்கி உலக மக்கள்

அனைவரும் ''தங்களுடைய புறாக்கூண்டை நோக்கிச் செல்லும் புறாக்களைப்போலச் செல்வர்'' (எசா 2:1-5; 60:1-8).

ஆனால் கிறிஸ்துவை மறுதலிப்பதில் தன்னிலேயே பின்வாங்கும் எருசலேம், இந்த ஆன்மீகத் தாய்மைக்குப் பற்றுறுதியற்றவளாக ஆனாள் (லூக் 19:41-44). அவளுடைய பிள்ளைகள் அவளைப் பழிக்க, அவளை நோக்கித் திரும்பக் கூடியவர்களாயிருப்பர் (ஓசே 2:4). இதன காரணமாகவே, உண்மையாகவே நமது தாயாக உள்ளதும், வானகத்திலிருந்தும், இறைவனிடமிருந்தும் வருவதுமான (திருவெளி 21:2) மற்றொரு எருசலேமினால் அவள் அகற்றப்படுவாள் (கலா 4:26). இப்புதிய நகர் திருச்சபையே. இறைவனுடைய பிள்ளைகளின் வாழ்விற்காக, அவள் தனது பிள்ளைகளை ஈன்றெடுக்கிறாள். அது மேலும் தனிப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவ சமுதயமுமாகும் (2 யோவா 1). அது கிறிஸ்துவிற்கு அவரது உடலின் முழுமையை அளித்து, ஆன்மீக இஸ்ராயேலுக்குள் அனைத்து மக்களையும் ஒன்று சேர்ப்பதற்கெனக் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாய்மையில் பங்குபெற்று, இந்தப் பலருடைமையின் கருவிகளாக அப்போஸ்தலர் உள்ளனர். துன்பத்தின் மூலம் வருவது போல் அது மகிழ்ச்சியானதாகவும் உள்ளது (யோவா 16:20 தொ). குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்போல் கிறிஸ்து அவர்களில் உருவாக்கப்படும்வரை மறுபடியும் தான் அவர்களுக்காக வேதனையுறுவதாகப் பவுல் கலாத்தியருக்குக் கூறுகின்றார் (கலா 4:19). தனது பிள்ளைகளுக்கு ஊட்டமளிக்கின்ற தாயைப்போன்று, அவர்களைத் தான் பேணி வளர்த்துத் தன்னை முழுவதுமே அவர்களுக்குக் கையளிக்க ஆவலாய் இருப்பதாகத் தெசலோனிக்கேயருக்கு நினைவுபடுத்துகிறார் (1 தெச 2:7-9). ஆனால், இந்தத் தாய்மை நிலையானது, இடைவிடாமல் குழந்தை பிறப்பின் துன்பத்திலும் மகிழ்ச்சியிலும் இருக்கக்கூடிய பெண்ணின் மூலமாக மட்டுமே செல்லக்கூடியதாக இருக்கும். வாழ்வோரின் தாயாகிய ஏவாள் முதல், விசுவாசிகளின் தாயாகிய திருச்சபை வரை, இயேசுவின் தாயாகிய நமது தாய் மரியாள் மூலம் (திருவெளி 12), மற்றத் தாய்மாரும் இவ்வுருவத்தின் பின்னால் நிற்கின்றனர்.

தாரியு (DARIUS - நன்மையை நிலைநிறுத்துபவர்)

1. பேரரசனான முதலாம் தாரியு (கி.மு. 522-486). பாரசீகத்தின் அரசியல் குழப்பத்தின்போது இரண்டாம் காம்பிசெஸ் (529-522) காலமானான். தாரியு, தன்னுடைய ஆறு சிநேகிதர்களின் உதவியால் ஆட்சி பீடத்திற்கு முயற்சி செய்து கொண்டிருந்த கவுமாதாவையும் மற்றக் கிளர்ச்சிக்காரர்களையும் தோற்கடித்து, ஆட்சியை ஒன்று படுத்தி அரசனானார். இவருடைய மற்றப் போர்களால் இவருடைய அரசு வடக்கில் சோக்தியானா வரையிலும், மேற்கில் லிபியா வரையிலும், வடமேற்கில் திராசியாவிலிருந்து கிழக்கில் இந்தியாவரையிலும் (சிந்து) பரவியது. தான் இறப்பதற்குப் (486) பல ஆண்டுகளுக்கு முன்பே தாரியு தன் மகன் செருக்சவை வாரிசாக்கினார்.

இவருடைய சமய, ஒழுக்கக் கொள்கைகள் இரு அரச கட்டளைகளிலிருந்து தெரிய வருகிறது. முதலாவது அப்பொல்லோ கோவிலின் அலுவலர்களிடமிருந்து வரி வாங்கக்கூடாது; அவர்கள் விவசாயம் செய்யக் கட்டாயப்படுத்தப்படக்கூடாது; இரண்டாவது, எருசலேம் கோவில் கட்டப்படுவதற்கான தடைகளை நீக்கி அது மீண்டும் கட்டப்பட உத்தரவிட்டார் (எஸ் 6:6-12; கா 1:1-2).

''பாரசீக அரசன் தாரியு'' (எஸ் 4:5.24; 6:1), ''பாரசீகனான தாரியு'' (நெகே 12:22) ஆகிய சொற்றொடர்கள் முதலாம் தாரியுவைக் குறிக்கின்றன. தானி 5:31; 6:1:25; 11:1; 9:1-இல் உள்ள தாரியு இவரைக் குறிப்பிடவில்லை.

2. நோதுஸ் என்று அழைக்கப்பட்ட இரண்டாம் தாரியு முதலாம் அர்த்தக்சஸ்தாவின் மகனாவார் (கி.மு. 423-404). இவ

ருடைய அரசின் மேற்கு எல்லை ஏதன்சு வரை சென்றது.

3. யூஸ்தினியனின் கருத்துப்படி, மூன்றாம் தாரியு (கி.மு. 336-330) கண்டோம்மானுசு என்று அழைக்கப்பட்டார். மாசிதோனியாவைச் சேர்ந்த அலக்சாந்தரால் பலமுறை தோற்கடிக்கப்பட்டு, கடைசியில் பெகஸ் என்பாரால் கொல்லப்பட்டார். அலக்சாந்தருக்கு எதிராக இவர் நடத்திய போராட்டம் 1 மக் 1:1-8-இலும் பாரசீகத்தின் நான்காம் அரசன் பற்றிய தானி 11:2-இலும் குறிக்கப்பட்டுள்ளது.

தாரியு மேதியன் *(DARIUS, THE MEDE)*

பெல்சாட்சருக்கு அடுத்தும் சைரசுக்கு முன்பும் ஆண்ட ஒரு பாபிலோனிய அரசன் (தானி 11:1). இவர் தானியேலின் நூலில் மட்டும் குறிக்கப்பட்டுள்ளார். இவர் அரசனான பொழுது 62 வயதினர். இவர் தன்னுடைய அரசை 120 பகுதிகளாகப் (சத்திராபு) பிரித்து அவற்றிற்கு மூன்று தலைவர்களை நியமித்தார். அவர்களில் தானியேலும் ஒருவர். இவர் பற்றிய வரலாற்றுச் சிக்கல்களைத் தானியேல் நூலுக்குரிய கட்டுரையில் காண்க.

தாரேயே *(TAREA - வளைந்த)*

அரசன் சவுலின் வழி வந்தவர். சவுல் மகன் யோனத்தானுக்குப் பிறந்த மெரிபாகாலின் பேரன். இவரது தந்தை 'மீக்கா' என்பவர் (1 நாள் 8:34-35). இதன் மாற்றுப் பெயர் தகரேயா (1 நாள் 9:41) ஆகும்.

தார்கும் *(TARGUM - விவிலியத்தின் அரமேய மொழி பெயர்ப்பு)*

அரமேய மொழியில் தார்கும் என்றால் மொழிபெயர்ப்பு என்றே பொருள். கி.மு. 587-இல் பாபிலோனியர்கள் பாலஸ்தீனத்தைப் பிடித்தனர். இஸ்ராயேல் மக்களைப் பாபிலோனியாவிற்கு அடிமைகளாகக் கடத்தினர். அங்கு கி.மு. 537 வரை இஸ்ராயேல் மக்கள் அடிமைகளாக வாழ்ந்தார்கள். அப்போது அவர்கள் அந்நாட்டின் ஆட்சி மொழியான அரமேயத்தைப் பேசி வாழ வேண்டியிருந்தது. இதனால் தங்களின் சொந்த மொழியை மறக்க ஆரம்பித்தனர். பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து, தங்கள் சொந்த நாடு திரும்பியபோது அவர்களுக்குப் பிரச்சனை ஒன்று கிளம்பியது. இப்பிரச்சனை, செபக்கூடத்தில் நடத்துகின்ற வழிபாடு பற்றியது. வழிபாட்டில் வாசகங்கள் எபிரேய மொழியில் வாசிக்கப்பட்டன. ஆனால் மக்களால் எபிரேய வாசகங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே மொழிபெயர்ப்பாளர் ஒருவர், எபிரேய வசனங்களை அரமேயத்தில் மொழிபெயர்க்க நியமிக்கப்பட்டார். எபிரேய வசனம் வாசிக்கப்பட, இவர் அரமேய மொழியில் வாசகத்தின் கருத்துச் சுருக்கத்தைத் தருவார். இவ்வாறு, தான் கேட்டவுடன் மொழிபெயர்க்க வேண்டியிருந்த காரணத்தால், இம்மொழி பெயர்ப்பு சரியானதாக அமைய வாய்ப்பில்லை. ஆனால் முக்கியமான விவிலியப் பகுதிகளுக்குக் கவனமாகவும், விளக்கமாகவும், பாரம்பரிய கருத்துக்களை உள்ளடக்கியும் மொழியாக்கம் செய்தனர்.

பின்னர் இந்த வாய்மொழி மொழிபெயர்ப்பு எழுத்தில் பதிவு செய்யப்பட்டது. தற்போது ஏறக்குறைய பழைய ஏற்பாட்டின் எல்லாப் புத்தகங்களுக்கும் இந்த அரமேய மொழிப்பெயர்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இம்மொழி பெயர்ப்பில் பொதுவாக நாம் காணும் அமைப்புமுறைகள் இவைகளாகும். (1) இறைவனுடைய பெயர் தோன்றுகின்ற இடங்களில் ''மெம்றா'' அதாவது வார்த்தை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். (2) இறைவனுக்கு மனிதப் பண்பேற்றிக் கூறப்படும் பகுதிகளை விட்டுவிடுகிறார்கள் அல்லது அதை மாற்றியமைத்துக் கூறுகிறார்கள். (3) சில இடங்களில் விவிலியப் பகுதிகளை விளக்கிக்கூற, சில சிறிய கதைகள் ஆங்காங்கே சேர்த்துக் கூறப்பட்டுள்ளன.

இந்த அரமேய மொழி பெயர்ப்புகள் பலயிடங்களில் பெருகிவந்தன. விவிலியத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலும் எவ்வாறு அவை அரமே

யத்தில் மொழிபெயர்க்கப்பட்டன என்று காணலாம்.

(1) ஐந்நூல்: பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்நூல்களுக்கு மூன்றுவித அரமேய மொழி பெயர்ப்புகளை நாம் காண முடிகிறது. இவைகளில் மிகவும் பழமையானது பாலஸ்தீன ஐந்நூல் தார்கும் என்பதாகும். 1956-ஆம் ஆண்டு உரோமையில் கண்டுபிடிக்கப்பட்ட நியோபட்டி ஏட்டுத் தொகுப்பில் பாலஸ்தீன ஐந்நூல் தார்கும் முழுவதும் அடங்கியிருக்கிறது. இதற்குமுன் ஏட்டுத்துணுக்குகள்தான் கிடைத்திருந்தன. இந்தப் பாலஸ்தீன ஐந்நூல் அரமேய மொழிபெயர்ப்பில், அரமேய மொழி, அதன் தனிநடையுடன் எழுதப்பட்டது. இப்பாபிலோனிய ஐந்நூல் கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஐந்நூலின் இரண்டாவது அரமேய மொழி பெயர்ப்பு, எருசலேம் தார்கும் ஆகும். இதனைப் போலியான யோனத்தான் அரமேய மொழிபெயர்ப்பு என்றும் கூறுவார்கள். பாலஸ்தீன அரமேய மொழி பெயர்ப்பைத் போலவே மொழி நடையிலும், இறையியல் கருத்துக்களிலும் இது ஒத்திருக்கிறது. ஆனால் வானதூதர், பேய் இவர்களைப்பற்றி இன்னும் அதிகமாக விளக்கம் கொடுத்துக் கூறியிருக்கின்றனர். ஐந்நூலில் காணப்படும் மூன்றாவது அரமேய மொழிபெயர்ப்பு, ஒங்கேலோஸ் தார்குமாகும். இதுதான் அதிகார பூர்வமாகச் செபக்கூடங்களில் பயன்படுத்தப்பட்ட அரமேய ஐந்நூல் மொழி பெயர்ப்பு. இது கி.பி. இரண்டாவது அல்லது மூன்றாவது நூற்றாண்டிலே தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இம் மொழிபெயர்ப்பு, மேலே கூறப்பட்ட பாலஸ்தீன அரமேய மொழி பெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இது பாபிலோனிய மொழிபெயர்ப்பின் துணை கொண்டு மீண்டும் திருத்தப்பட்டிருக்கிறது. இம்மொழிபெயர்ப்பு வார்த்தைக்கு வார்த்தை விட்டுவிடாமல் கவனமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. யூதர்களை விடுத்த மற்றச் செய்திகளைத் தரும் போது மிகக் கவனமாக இம்மொழி பெயர்ப்பு செயல்படுகிறது. இது தனது மொழி பெயர்ப்பிற்கு ஆதாரமாக மாசரேட்டிக்கு எபிரேய விவிலியத்தைத்தான் பயன் படுத்தியிருக்கிறது. ஆதி49:10; எண் 24:17 இப் பகுதிகளை மெசியாவின் கருத்துக்களை மனதில் வைத்துமொழி பெயர்த்திருக்கிறது.

இங்குச் சமாரியர் தார்குமையும் குறிப்பிட வேண்டும். சமாரிய ஐந்நூலும் (எபிரேய மொழியில் எழுதப்பட்டது) அரமேய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. இது சமாரியர்களால் மட்டும் பயன்படுத்தப்பட்டது. இது யூதர்களால் செய்யப்பட்ட அரமேய மொழி பெயர்ப்பைவிடச் சற்று மாறுபட்டது. வார்த்தைக்கு வார்த்தையாக மொழி பெயர்ப்பு அமையாமல், சற்றுச் சுதந்தரமாக, மொழி நடைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆக்கம் செய்திருக்கிறார்கள்.

2. இறைவாக்கினர் ஏடுகள்: இறைவாக்கினர் ஏடுகளைப் பொருத்தவரை, அதிகாரபூர்வமான அரமேய மொழி பெயர்ப்பாக விளங்கியது உசியல் மகனான யோனத்தானின் அரமேய மொழி பெயர்ப்பாகும். ஒங்கேலோஸ் அரமேய மொழி பெயர்ப்பைப் போல, இம் மொழிபெயர்ப்பு பாலஸ்தீனத்தில் ஆரம்பமானாலும், பாபிலோனியாவில் தான் இது செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இது முந்தைய இறைவாக்கினர் நூல்களை (யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2 அரசர்) மொழி நடைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்திருக்கிறது. ஆனால் பிந்தைய இறைவாக்கினர் நூல்களைச் சொல்லின் நேர் பொருள் சார்ந்த முறையில் அரமேய ஆக்கம் செய்துள்ளது. மெசியாவைப் பற்றிய கருத்துக்களை மனதில் வைத்தே பல பகுதிகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. உ.ம். எசா 53.

3. ஞான ஆகம நூல்கள்: இப்பகுதியில் எல்லா நூல்களுக்கும் ஒன்று அல்லது பல அரமேய மொழி பெயர்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் எஸ்ரா, நெகேமியா, தானியேல் ஆகிய நூல்கள் இதில் மொழிபெயர்க்கப்படவில்லை. இப்பகுதிப் புத்தகங்களின் அரமேய மொழி பெயர்ப்புகளில் எந்த முறையிலும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை

காணப்படவில்லை. மொழி நடையிலோ, பொருள் நடையிலோ நூலுக்குநூல் ஒற்றுமையில்லை. சில மொழி பெயர்ப் புகள், விவிலிய விளக்கங்களைப்போல் விளங்குகின்றன.

இப்பகுதி நூல்களுக்குத் தற்போது நமக்குக் கிடைக்கும் அரமேய மொழிபெயர்ப்புகள் அனைத்தும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்தவை. இப்பகுதியி லிருந்த நூல்கள், காலத்தால் பிற்பட்டு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டதாலோ என்னவோ, இவைகள் செபக்கூடங் களிலோ, பள்ளிகளிலோ பயன்படுத்தத் தடையிருக்கிறது.

தற்போது இந்த அரமேய மொழி பெயர்ப்பு களைப் பற்றி ஆழ்ந்து தெரிந்து கொள்ள அறிஞர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஏனென்றால் 1930-ஆம் ஆண்டு கெய்ரோ நகரில் செபக்கூட பக்க அறையில், கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சில அரமேய ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதற்கு முன் கி.பி. 10-ஆம் அல்லது 11-ஆம் நூற் றாண்டைச் சார்ந்த அரமேய மொழி பெயர்ப்பு ஏடுகளும்தான் கிடைத்திருந்தன. இதையடுத்து 1956 ஆம் ஆண்டு வத்திக்கான் நூலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நியோ பட்டி ஏட்டுத் தொகுப்பிலும் ஐந்நூலின் அரமேய மொழிபெயர்ப்பு முழுவதுமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கடுத்து கும் ரான் குகைகளிலும் அரமேய மொழி பெயர்ப்பு விவிலிய ஏடுகள் கண்டுபிடிக்கப்பட் டன. குறிப்பாக 11-ஆம் குகையில் கண்டு பிடிக்கப்பட்ட நீண்ட யோபு ஆகம வசனங்க ளைக் கொண்ட பழம் ஏடு முக்கியம் வாய்ந் ததாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் இவை கி.மு. முதல் நூற்றாண்டிலேயே எழு தப்பட்டவை. இது, கி.மு. முதல் நூற்றாண் டிலேயே அரமேய மொழிபெயர்ப்பு பரவ லாக இருந்திருக்கிறது என்பதை நிரூபித்துக் காண்பிக்கின்றது.

இந்த அரமேய மொழிபெயர்ப்பின் புதிய கண்டுபிடிப்புகள், இயேசுவின் காலத்தி லும், அதையடுத்து அவரின் சீடர்களின் காலத்திலும், யூதமறையின் கோட்பாடுகள் எப்படியிருந்தன என்பதைப் புரிந்து கொள்ளப் பெரிதும் துணை செய்கின்றன. அரமேய மொழிபெயர்ப்புகள் செபக்கூடங்களி லிருந்து உருவாகியதால், பொது மக் களின் நம்பிக்கைக் கோட்பாடுகளின் அள வையும் தெரிந்து கொள்ள மிகவும் இவை துணை செய்யும். சாதாரண மக்களின் பக்தி விசுவாச நிலைதான் அவர்கள் பின்பற்றிய மறையின் உண்மை நிலையை எடை போட் டுக் காட்டக் கூடியவையாகும்.

இவ்வாறு அரமேய மொழிபெயர்ப்பு கிறிஸ்துவம் தோன்றிய காலத்தை ஒட்டிச் செய்யப்பட்டிருப்பதால், புதிய ஏற்பாட்டின் முக்கிய கருத்துக்களையும், புதிய ஏற்பாட் டின் மொழி அமைப்பு மற்றும் விளக்கங் களையும் அறிந்துகொள்ள, அரமேய மொழி பெயர்ப்பு ஆதாரமாக அமைகிறது. இன்னும் அரமேய மொழியைப் பற்றியும், அரமேய மொழிபெயர்ப்பில் காணப்படும் விவிலிய விளக்க முறைகள் பற்றியும், யூத வழிபாட்டு முறைபற்றியும், ஆழ்ந்து ஆராயப்படுமேயா யின், நாம் புதிய ஏற்பாட்டைப் புரிந்து கொள்ள, இவை மிகத்துணை செய்யும் என் பதில் ஐயமில்லை.

தாலத்து (DALETH)

இது எபிரேய நெடுங்கணக்கில் நான்கா வது எழுத்தாகும். அகரவரிசைச் சங்கீதம் 119-இல் நான்காவது பகுதிக்குத் தலைப்பாக உள்ளது. அப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்துடன் தொடங்குகிறது.

தாலந்து (TALENT)

மெசபொத்தாமியா, கானான், இஸ்ரா யேல் நாடுகளில் பயன்படுத்தப்பட்ட ஒரு தரமான பெரிய எடையைக் குறிக்கின்றது. அதன் எடை வேறுபட்டிருந்தது. விவிலியப் பகுதிகளில் அதன் எடையைச் சுமார் 34.27 கிராமாகக் கொள்ளலாம். பிறகு இச்சொல் நாணயத்தைக் குறிக்கப் பயன்பட்டது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில், தாலந்து நாணயம் 6000 திராக்குமாக்களுக்குச் சமமாகப் பயன் படுத்தப்பட்டது.

தாலந்து உவமை (TALENT, PARABLE OF)

இந்த உவமை (*மத் 25:14-30*) இறைவனின் வருகைக்கு நாம் எவ்வாறு தயார் செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. இந்த உவமையிலே வரும் தலைவன் இறை மகன் இயேசுவைச் சித்தரிக்கிறார். ஊழியர்கள் இயேசுவின் சீடர்களையும், விசுவாசிகளையும், தொலைநாடு வான்வீட்டையும் குறிக்கின்றன. தாலந்து, பரிசுத்த ஆவியின் வருகையால் சீடர்கள் பெற்ற ஆன்மீகக் கொடைகளைக் குறிப்பிடுகிறது. இறுதி நாளில் சிலர் அதிகமும், சிலர் குறைவாகவும் தங்கள் கொடைகளைப் பெருக்கியிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் திறமைக்கேற்ப முடிந்த அளவு முயற்சி செய்து இதைச் செய்ய வேண்டும்.

தால்மூது (TALMUD - போதனைகளின் விளக்கங்கள்)

தால்மூது என்பது எபிரேயச்சொல். இச்சொல் லமாத் என்ற எபிரேய வினைச்சொல்லிலிருந்து வருகிறது. லமாத் என்றால் கற்றல் என்பது பொருள். லமாத் என்ற வார்த்தையிலிருந்து பிறந்த தால்மூது என்பதற்குப் பொருள் போதனைகள் என்பதாகும். இங்கு இந்தத் தால்மூது என்ற வார்த்தை ஒரு புத்தகத் தொகுப்பைக் குறிக்கிறது. இப்புத்தகத் தொகுப்பில் மக்களின் சட்டங்களையும், அதன் விளக்கங்களையும், அதைப் பற்றிய கதைகளையும், இன்னும் இஸ்ராயேல் மக்களின் அனுபவத்தில் வெளிவந்த ஞான மொழிகளையும் நாம் காணமுடிகிறது. இது பிறந்து வளர்ந்த விளக்கங்களைக் கீழே காண்போம்.

1. ***வாய்மொழி வழியாக வழங்கி வந்த சட்டங்கள் புத்தகங்களாகப் பதிப்பிக்கப்பட்டன:*** இறைவன் மோசேக்குத் தெய்வ சட்டங்களை வெளிப்படுத்தினார். அவைகளில் ஒருசில பகுதிகள் மட்டுந்தான் விவிலியப் புத்தகங்களில் எழுதப்பட்டன. மற்றவை மோசே முதல் வாய்மொழிப் பாரம்பரியமாக மக்களிடையே வழங்கிவந்தன. நடைமுறை வாழ்வில், அச்சட்டங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளாயின. இந்த வழிவழி வாய்மொழிச் சட்டங்களை இறைவாக்கினர்களும், போதகர்களும், மக்களுக்கு அடிக்கடி நினைவூட்டி அறிவித்தனர். ஆனால் பல நேரங்களில், பள்ளிகளிலும் செபக்கூடங்களிலும், போதகர்கள் இவைகளை விளக்கும்போது அவர்களின் விளக்கங்களில் ஒன்றுக்கொன்று மாறுபாடுகள் காணப்பட்டன. இதனிடையே மக்கள், எழுதப்படாத வாய்மொழி விளக்கங்களை மனப்பாடம் செய்து கொண்டனர். இதைத் தம் பிள்ளைகளுக்கும், பின் சந்ததியினருக்கும் சொல்லிக் கொடுத்தனர். இதனிடையில், இந்த வாய்மொழி வழியாக வழங்கிவந்த சட்டங்களும் அதன் விளக்கங்களும் எண்ணிக்கையில்லாமல் பெருகின. இவையெல்லாம் ஒவ்வொருவரும் மனனம் செய்து கொள்வது ஆகக் கூடிய செயலல்ல. எனவே பாரம்பரியத்தின் வழியாகத் தங்களுக்குக் கிடைத்த இந்த ஞானச் செல்வங்களைத் தொகுத்து, எழுத்திலே பதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லையென்றால் இவைகள் காப்பாற்றப்படாமல் தொலைந்துபோகும் என்ற ஆபத்திருந்தன. இவ்வாறு, இஸ்ராயேல் மக்கள் விவிலியத்தை அடுத்து, தங்கள் மறையில் வழங்கிய அத்தனை செய்திகளையும் ஒரு புத்தகமாகத் தொகுத்தார்கள். அத்தொகுப்புதான் தால்மூதாக மாறியது.

2. ***வாய்மொழி வழியாக வந்த சட்டங்கள் செய்து வந்த பணிகள்:*** இந்த வாய்மொழி வழியாக வழங்கிவந்த சட்டங்கள், இரண்டு விதத்தில் மக்களுக்கு உதவி வந்தன. முதன் முதலாக, விவிலியத்தில் எழுதப்பட்ட சட்டங்களுக்கு விளக்கங்கள் கொடுத்தன. எனவே இந்த வாய்மொழி விளக்கங்கள் மக்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் அவர்கள் சட்டங்களைப் பின்பற்றுவதுமிகக் கடினம். உதாரணமாக இந்த வாய்மொழிப் பாரம்பரியம்தான் வேலை என்பது என்ன என்பது பற்றி விளக்கம் கொடுக்கிறது. இந்த விளக்கம் இருந்தால்தான் ஓய்வுநாளில் வேலை செய்யக்கூடாது என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

இரண்டாவதாக, இவ்வாய்மொழிச் சட்ட விளக்கங்கள், மாறுபட்ட சூழ்நிலைகளில்

எவ்வாறு சட்டங்கள் புரிந்துகொள்ளப் பட வேண்டும், அனுசரிக்கப்படவேண்டும் என் பதையும் தெரிவிக்கின்றன. இந்த விளக்கங்கள் இல்லையெனில், எழுதப்பட்டிருக்கும் சட் டங்கள் நடைமுறைக்கு ஒவ்வாததாக மாறி விடும்.

இந்த வாய்மொழி விளக்கங்கள், கால ஓட்டத்தில் அறிஞர் பலர் கொடுத்துவந்த பொருள் விளக்கங்களையும் தன்னுள் கொண்டிருந்தன. இவ்வறிஞர்கள் கருத்து விளக்கங்கள் சட்டங்களின் அரண், கோட் டைகள் என அழைக்கப்பட்டன.

3. தால்மூதின் முன்னோடிகள்: நாம் மேற் கண்ட வாய்மொழிப் பாரம்பரியம் இரண்டு வகைகளில் தவழ்ந்து வந்தது என்று சொல்ல லாம். ஒன்று மிட்ராஸ் என்ற வாழ்க்கை விளக்கமும், மிஸ்னா என்ற ஒப்பிக்கும் முறையுமாகும். மிட்ராஸ் என்ற எபிரேய வார்த்தை தராஸ் என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. தராஸ் என்றால் தேடுதல் என்று பொருள். இந்த மிட்ராஸ் என்பது விவிலிய வசனங்கள் வழியாக நடைமுறை வாழ்க் கைக்கு விளக்கமளிப்பதாகும். இம்முறை, நாம் தற்போதுபின்பற்றுகிற முறையைவிடச் சற்று வேறுபட்டதாகும். இவர்களின் முறைப்படி வாழ்க்கைக்குப் பயன்படும் கருத்துக்களை, விவிலிய வாக்கியங்களி லிருந்து எடுத்துக் கூறுவார்கள். இதற்கு அப்புத் தகம் எந்தச் சூழ்நிலையில், யாருக்காக, எத் தகைய பொருளைத் தந்து எழுதப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் விளக்கம் கொடுக்காமல், குறிப்பிட்ட வார்த்தையோ வாக்கியமோ அவர்களின் அன்றைய நிலைக்கு என்ன பயனுள்ள பொருளைத் தருகிறது என்பதைப் பற்றித்தான் கவனிப் பார்கள். இதில் நிறைய தங்களின் சொந்தக் கற்பனைகளைக் கலந்து விளக்குவார்கள்.

இந்த மிட்ராஸ் என்ற வாழ்க்கை விளக் கத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று அலாக்கா என்பது. இவ்வார்த்தையில் பயன் படுத்துகின்ற அலாக் என்ற எபிரேய வார்த் தையின் பொருள் நட என்பதாகும். எனவே வாழ்க்கையில் எவ்வாறு நடக்க வேண்டு மென்று, சட்டங்களை விளக்கிக் கூறுதல் இவ்வகையைச் சார்ந்தது. அடுத்தமுறை அக் கதா என்று அழைக்கப்படுகிறது. அக்கதா என்றால் நிகழ்ச்சியுரை என்று பொருள். சட்டத்தைச் சாராத விவிலியப்பகுதிகள் அல் லது பக்தி வாழ்க்கையைச் சார்ந்திருந்த விவி லியப்பகுதிகள் வரும்போது கொடுக்கப் பட்ட விளக்கங்களை அக்கதா என்றழைத் தார்கள்.

இந்த மிட்ராஸ் என்ற விவிலிய விளக்கங் களை அளிக்கும்முறை எஸ்ராவின் காலத்தி லேயே தொடங்கியிருக்கிறது. கி.மு. 444-ஆம் ஆண்டில் எஸ்ரா மக்களைக் கூட்டிய போது, அக்கூட்டத்தில், சட்டப்புத்தகம் அரியணை ஏற்றப்பட்டு, அதன்பிறகு அதி லிருந்து வாக்கங்கள் வாசிக்கப்பட்டன. அதன் பிறகு அதன் விளக்கமும் தரப்பட்டது. எஸ் ராவிற்குப் பிறகு சோபரிம் என்ற எழுத்தாளர் களாலும் இம்முறை பின்பற்றப்பட்டது. சோபர் என்றால் எபிரேய மொழியில் புத்த கம் என்பது பொருள்.

இந்த எஸ்ராவைப் பின்பற்றிய எழுத்தாளர் கள் என்பவர்கள் கி.மு. 270-வரை வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குப் பிறகு ஐந்து பெயர் போன இரட்டையர்கள், மக்களின் மத்தி யில், இந்த விவிலிய விளக்கப் பணியைச் செய்து வந்தார்கள். இந்த ஐந்து இரட்டையர் களில் மிகவும் புகழ் வாய்ந்தவர்கள் கி.மு. முதல் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சமாய் என்பவரும் இல்லல் என்பருமாவர்.

இந்தப் பெயர் போன 5 இரட்டையர்களை யும் சுகோத் என்று எபிரேயமொழியில் அழைக்கிறார்கள். சுகோத் என்றால் சோடி என்பது பொருள். இந்த இரட்டையர்களின் காலத்தில், விவிலியத்தில் விளக்கம் கூறுவ தில் ஒரு புதுமுறை தோன்றியது. இம்முறை பழைய மிட்ராஸ் முறையைவிடச் சற்று வேறுபட்டது. மிட்ராஸ் முறையில், விவிலி யம் முதலில் படிக்கப்பட்டுப் பிறகு விளக் கம் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது இப்புதிய முறையில் விவிலியம் வாசிக்கப் படாமலேயே வாய்மொழி வழியாக வந்த

பாரம்பரிய விளக்கங்கள் மட்டும் மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டன. இம்முறையினால் விளக்கம் அளிக்கிற ஆசிரியர்களுக்கு ஒரு புதிய வசதி உண்டாகிறது. இதில் தங்களுக்குத் தேவைப்படும், பயன்படும் தலைப்புகளில் மக்களுக்கு முறைப்படப் போதித்தனர். விவிலியம் வாசிக்கப்பட்டு விளக்கம் கொடுக்கப்பட வேண்டுமென்றால், விவிலியத்தில் வரும் தலைப்புகளில் தான் பேச முடியும். ஆனால் இப்போது தங்களின் எண்ணப்படி கோவையாக, தேவைப்படும் கருத்துக்களை மக்களுக்குக் கற்றுக் கொடுக்க வாய்ப்பு உண்டானது. அதே சமயத்தில் வாய்மொழிப் பாரம்பரியக் கருத்துக்களை மட்டும் கூறும்போது, அதனோடு தொடர்புடைய விவிலிய வசனங்களும் மக்களுக்குக் கூறப்பட்டன. இந்தப் புதிய முறைக்கும் எதிர்ப்பு இருந்தது. குறிப்பாகச் சதுசேயர்கள், விவிலியத்தின் எழுதப்பட்ட வசனங்களை வைத்துக்கொண்டு, வாய்மொழிப் பாரம்பரியக் கருத்துக்கள் சரியில்லாதவையென எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்கள்.

இப்புதிய முறையில், மக்கள் வழக்கமாக மனப்பாடம் செய்திருந்த விவிலிய வசனங்களும் பயன்படுத்தப்படவில்லை. வாய்மொழிப் பாரம்பரிய விளக்கங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். இந்த வாய்மொழி விளக்கங்கள் மக்கள் மனதில் வைக்க, கற்றுக்கொள்ள ஒரு புதிய யுக்தி கையாளப்பட்டது. அதுதான் மக்களை வாய்மொழி விளக்கங்களை மீண்டும் மீண்டும் ஒப்பிக்கச் செய்தலாகும். இவ்வாறு ஒப்பித்தல்தான் எபிரேயத்தில் ''மிஸ்னா'' என்றும், அரமேயத்தில் ''தேனா'' என்றும் அழைக்கப்பட்டது. மேற்கண்ட மிஸ்னா என்பதற்கும் தேனா என்பதற்கும் திருப்பிக் கூறுதல் என்றுதான் பொருள்.

இப்புதிய முறையான மிஸ்னா, மக்களால் பின்பற்றப்பட்டாலும் மிட்ராஸ் என்ற பழைய முறையும் பயன்படுத்தப்பட்டு வந்தது. மிட்ராசில் உள்ள அலாக்கா (நடைமுறை) அக்கதா (நிகழ்ச்சியுரை) இரண்டும் பயன்படுத்தப்பட்டன. சொல்லப்போனால் மிட்ராஸ், மிஸ்னா என்ற இரண்டு வகை விவிலிய விளக்க முறைகளுமே, இந்த இரண்டாம் நிலையில் பயன்படுத்தப்பட்டு வந்தன.

3. ஆ. மிஷ்னாவின் எழுத்துப்படிவம்: காலப் போக்கில் இவ்வாய்மொழி ஒப்பித்தல் எழுத்துவடிவம் பெற ஆரம்பித்தது. நடைமுறை வாழ்க்கைக்கு உகந்த அலாக்கா மிஸ்னாதான் முதலில் எழுத்துருவம் பெற்றது. கி.மு. 50-ஆம் ஆண்டிலேயே, சமாய், இல்லல் ஆகியவர்கள் வாழ்ந்த காலத்தில் எழுதி உருவமைக்கப்பட்ட சில மிஸ்னா பாடல்கள் இருந்திருக்கின்றன. இதற்கடுத்து நிறைய வாய்மொழி விவிலிய விளக்கத் தொகுப்புகள் (மிஸ்னா) எழுத்துருவம் பெற்றிருக்கின்றன. இவைகளில் முக்கியமானது இராபி அகிபா செய்த தொகுப்பு ஏடுகளாகும். இராபி அகிபா கி.பி. 135-ஆம் ஆண்டில் வீரமரணம் அடைந்தார். அதிரியான் வேதகலாபனையில் கொல்லப்பட்டார். இராபி அகிபா எழுதிவைத்த விளக்கங்களைத் தொடர்ந்து, அகிபாவின் சீடர் இராபிமேயிர் என்பவர் தொடர்ந்து வாய்மொழி விவிலிய விளக்கங்களை எழுதித் தொகுக்கும் பணியைச் செய்தார். இவர் கி.பி. 110-175 ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவ்வாறு இராபி மேயிர் எழுதிவைத்த மிஸ்னா தொகுப்புதான், அவரைத் தொடர்ந்து செய்யப்பட்ட முக்கியமான மற்றொரு மிஸ்னா தொகுப்பிற்கு அடிப்படையானது. அந்த முக்கியமான வாய்மொழி விவிலிய விளக்கத் தொகுப்பைச் செய்தவர் இராபி யூதா என்பவர். இவர் கி.பி. 135 முதல் 217 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவர்தான் இராபிகளின் தனிச் சிறப்பான தனித்த இராபி என்று அழைக்கப்பட்டார். இவர் இஸ்ராயேல் மக்கள் வழிவந்த வாய்மொழி விளக்கங்களையெல்லாம் ஒன்று திரட்டி எழுதினார். இவர் எஸ்ராவின் காலத்தையடுத்து வாழ்ந்த எழுத்தாளர்கள், அடுத்துத் தொடர்ந்த ஐந்த பெரும் இரட்டையர்கள், இன்னும் இவர்களையடுத்து வந்த காலத்திலும் இருந்த சட்ட விளக்கங்கள்

அனைத்தையும் தொகுத்து எழுதினார். இதில் இஸ்ராயேல் மக்களின் பல வாழ்க்கை நிலைகள், தொழில்கள், பணிகள் இவை களையெல்லாம் தொட்டுக் காண்பித்து எழுது கிறார். ஆக எஸ்ராவின் காலத்தையடுத்து, கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையிலும் நிலவி வந்த வாய்மொழி விளக்கங்களையெல்லாம் மிகச் சிறந்த முறையில் தொகுத்திருக்கிறார் இராபி யூதா.

இந்த முக்கிய தொகுப்பு, மக்களாலும் மற்ற அறிஞர்களாலும் வெகுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது வாசிப்பதற் கும், ஆராய்ச்சி செய்வதற்கும், போதிப்பதற் கும் அடிப்படை சட்டநூலாகப் பல நூற்றாண்டு களுக்குப் பயன்படுத்தப்பட்டது. இதனைப் பாலஸ்தீனத்திலும், பாபிலோனியாவிலும் பயன்படுத்தினர்.

இராபி யூதா இப்பெரிய பணியைச் செய் தாலும், இன்னும் இதில் அடங்காதவை நிறைய இருந்தன. இவர் தன் கருத்திற்கு ஒவ்வாத பல விளக்கங்களைத் தொகுக்காமல் விட்டுவிட்டிருக்கிறார். சொல்லப்போனால் இராபி யூதாவின் தொகுப்பு ஒருபாகம் என்று மட்டும்தான் கூறலாம்.

இராபி யூதாவிற்கு எதிரான கொள்கை களைக் கொண்டிருந்தவர்கள் இராபி யூதா வேண்டுமென்றே விட்டுவிட்ட பல பகுதி களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட் டார்கள். உதாரணமாகக் கப்பாரா, இராபி கிய்யா, இராபி கோசய்யா முதலானோர்.

இதையடுத்துப் பேச்சாளர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள், சில பிற்சேர்க்கை களைப் பற்றி விவாதிப்பதில் முக்கியத்துவம் காட்டினார்கள். இவர்களை அரமேய மொழியில், ''அமோராயிம்'' என்று அழைத் தனர். அமோராயிம் என்றால் பேச்சாளர்கள் என்றே பொருள். இவர்கள் புறத்தே சார்ந் தவை என்பவைகளைப் பற்றியும் துணைச் சேர்க்கை என்பவைகளைப் பற்றியும் கிடைத்த விளக்கங்களையெல்லாம் தொகுத்து எழுதினர். மேற்கூறப்பட்ட புறத்தே சார்ந்தவை என்பதனை அரமேய மொழியில் ''பரித்தா'' என்று அழைக்கிறார் கள். துணைச்சேர்க்கை என்பதனைத் ''தொசப்த்தா'' என்றும் பெயரிட்டுக் கூறுகிறார்கள். இந்தப் பேச்சாளர்களின் பள்ளிகள் பாலஸ்தீனத்திலும், பாபிலோனி யாவிலும் செயல்பட்டன.

இப்பேச்சாளர்கள், வாய்மொழிப் பாரம்பரி யங்கள் எழுத்தளவில் தொகுக்கப்பட்டதி லிருந்து கி.பி. 5-ஆம் நூற்றாண்டுவரை, இயங்கிச் செயல்பட்டிருக்கிறார்கள். இப் பேச்சாளர்கள், வாய்மொழிப் பாரம்பரிய விவிலிய விளக்கங்களை மேலும் விளக்கிக் கூறினர். புரியாதவைகளைப் பற்றித் தெளிவு படுத்தினர். அவைகளின் உட்பொருளை வெளிக் கொணர்ந்து காட்டினர். பல விளக் கங்களினிடையில், வேறுபாடுகள், முரண் பாடுகள் காணப்பட்டால் அவைகளை நேர் செய்து காட்டி அவை சரியானவையென விளக்கிக் கூறினர். அத்துடன் நடைமுறை வாழ்வில், சட்டங்கள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று அவ்வப்போதுவிளக்கம் கூறினர். மாறிய சூழ்நிலையில், புதிய நடை முறை ஒழுங்குகளைப் புனித சட்டங்களின் ஒளியில் மக்களுக்குக் கொடுத்தனர்.

இவ்வாறு இந்தப் பேச்சாளர்கள் செய்து வந்த, கொடுத்து வந்த விளக்கங்களும் தொகுக்கப்பட்டன. இவை அரமேய மொழி யில் ''கெமாரா'' என்று அழைக்கப்பட்டன. கெமாரா என்றால் முழுமை என்று பொருள். இராபி யூதா தொகுத்தவையும், பேச்சாளர் கள் செய்த நிறைவுத் தொகுப்பும்தான் தால்மூது என்ற வடிவைப் பெற்றது.

4. மிஸ்னா, தால்மூது இவைகளின் உட்பிரி வுகள்: இந்த மிஸ்னாவும், தால்மூதும் ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதற்கு எபிரேயத்தில் 'செதாரிம்'' என்று பெயர். இந்த ஆறு பிரிவுகளும், தனித் தனியாகப் பல கட்டுரைப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கட்டு ரைகள் எபிரேயத்தில் ''மசக்தோத்'' என்று அழைக்கப்படுகின்றன. இத்தகைய ஆய்வுக் கட்டுரைகள் 63 உள்ளன. இந்த ஆய்வுக் கட்

டுரை ஒவ்வொன்றும் பல அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரங்களுக்கு எபிரேயத்தில் ''பெராகிம்'' என்று பெயர். தால்மூதில் காணப்படும் ஆறு பெரும் பகுதிகள் கீழ்வருபவை:

1. விவசாயத்தைச் சார்ந்த சட்டங்கள். இதற்கு எபிரேயத்தில் ''செராயிம்'' என்று பெயரிடப்பட்டுள்ளது. செராயிம் என்றால் விதைகள் என்று பொருள்.

2. ஓய்வு நாள், விழாக்கள், நோன்பு இவைகளைப் பற்றிய சட்டங்கள். இதற்கு எபிரேயத்தில் ''மேயெத்'' என்று பெயர். மேயெத் என்றால் குறிக்கப்பட்ட காலங்கள் என்பது பொருள்.

3. திருமணம், விவாகரத்து இவைகளைச் சார்ந்த சட்டங்கள். இதை எபிரேயத்தில் ''நஸிம்'' என்று பெயரிட்டுள்ளார்கள். நஸிம் என்றால் பெண்கள் என்று பொருள்.

4. குற்றவியல் பொது வாழ்க்கை சார்ந்த சட்டங்கள். இதை ''நெசிக்கின்'' என்று எபிரேயத்தில் அழைக்கிறார்கள். நெசிக்கின் என்றால் இழப்பீடு என்று பொருள்.

5. ஆலயத்தைச் சார்ந்தவைபற்றியும், பலிகள் பற்றியுமாகிய சட்டங்கள். இதனைக் ''கொதாசிம்'' என்று எபிரேயத்தில் கூறுகிறார்கள். கொதாசிம் என்றால் புனிதப் படுத்தப்பட்ட பொருள்கள் என்பது பொருள்.

6. தீட்டினைப் பற்றிக் கூறும் சட்டங்கள். இதற்கு எபிரேயத்தில் ''தோபோரோத்'' என்று பெயர். தொபோரோத் என்றால் சுத்தம் என்று பொருள்.

5. அலாக்காவும் அக்கதாவும்: இப்பிரிவுகள் இவ்வாறு இருப்பினும் வழக்கமாகக் காணப்படுகின்ற நடைமுறை வாழ்வில் எப்படிச் சட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பதும் (அலாக்கா), கதையுடன் கூறப்படும் விவிலிய விளக்கங்களும் (மிட்ராஸ்), நிகழ்ச்சியரையென்று நடைமுறை வாழ்வினை விடுத்து, பக்திவாழ்க்கை போன்றவை சார்ந்த சட்ட விளக்கங்களும் (அக்கதா) இந்தத் தால்மூது தொகுப்பில் அடுத்தடுத்துக் காணப்படுகின்றன. இந்தத் தால்மூது தொகுப்பில் மக்கள் வாழ்வின் எல்லா நிலைகளுக்கும் விளக்கம் தரப்படுகின்றது. மக்களின் வாழ்வு எவ்வாறு ஒழுக்கவியலிலும், மறை சார்ந்தும் அமைய வேண்டும் என்பதற்கு வேண்டிய எல்லா வழித்துணைக் குறிப்புகளையும் நாம் காணமுடிகிறது. அக்கதா என்பதில் கீழ்க்காண்பவைகள் நிறைந்த அளவில் இடம் பெற்றுள்ளன; நீதி நெறிமுறைகளைப் பற்றிய சிந்தனைகள், மறையுரைகள், நறுக்காக உண்மையைக் கூறும் துண்டு வசனங்கள், பழமொழிகள், இயல்கடந்த ஆராய்வுகள், இஸ்ராயேல் மக்களின் பழைய வரலாற்றைச் சார்ந்த கதைகள், வருங்காலத்தைப் பற்றிய முன் எண்ணங்கள், கணிதவியல், மருத்துவவியல், வானவியல், உயிரியல், உடலியல் போன்ற அறிவியல் துறையில் அவர்கள் கொண்டிருந்த கருத்துக்கள், இவைகள் எல்லாம் அக்கதா பகுதியில் நிறைந்து காணப்படுகின்றன.

தால்மூது இவ்வளவு விளக்கங்களையும் அளித்ததன் நோக்கம், மக்களின் எண்ணங்களை அலாக்கா கூறும் நெறிமுறை வழிகளுக்கு உயர்த்துவதுதான். மக்கள் மனஉறுதி பெற்று நீதி நெறியில் வாழத் துணை செய்வது தான் இந்தத் தால்மூது தொகுக்கப்பட்டதன் நோக்கமாக விளங்குகிறது.

6. தால்மூதின் இரண்டு பதிப்புகள்: இராபி யூதா செய்த தொகுப்புதான் தால்மூதாக அமைந்தது என்று மேலே பார்த்தோம். ஆனால் காலப்போக்கில் இரண்டு இடங்களை மையமாகக் கொண்டு, இரண்டுவிதத் தால்மூதுகள் பழக்கத்தில் இருந்துவந்துள்ளன. ஒன்று பாலஸ்தீனத் தால்மூது; மற்றொன்று பாபிலோனியத் தால்மூது என்பதாகும். இவையிரண்டிற்குமிடையே பலவிதங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மொழி நடையில், கூறும் விதத்தில், அணுகுமுறையில், பொருளடக்கத்திலும் நிறையவே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எனவே இவையிரண்டும், அடிப்படை யிலேயே வேறுபட்ட தொகுப்புகளைப் பின் பற்றியிருக்க வேண்டும் என்ற சந்தேகம் கூட ஏற்படச் செய்கிறது. இதற்கு விளக்கமாக ஒரு சாரார் இவ்வாறு கூறுகின்றார்கள். இராபி யூதா முதலில் ஒரு தால்மூது தொகுப் பைத் தயாரித்தார். பிறகு அவரே அத் தொகுப்பினைத் திருத்தி வெளியிட்டார். எனவே இரண்டு தொகுப்புகள் அப்போதிருந்தன. பாலஸ்தீனத்தில் ஒரு தொகுப்பு பின்பற்றப் பட்டது என்று விளக்கம் கூறுவர். இருப்பி னும் எவ்வாறு இரண்டுவித வேறுபட்ட தொகுப்புகள் தோன்றின என்பதற்கு இன் னும் சரியான விடையை அறிஞர்களால் காண முடியவில்லை. ஆனால் இவ்வித வேறுபட்ட தொகுப்புகள் முதலிலேயே இருந்திருக்கிறது என்பதற்கு வேண்டிய பல சான்றுகளைப் பாபிலோனியத் தால்மூதில் நாம் காணலாம்.

அ. பாலஸ்தீனிய தால்மூது: இதை எருச லேம் தால்மூது என்றும் அழைப்பார்கள். இந்த வாய்மொழிச் சட்டவிளக்கங்கள், செச ரியா, திபேரியா என்பன இங்குச் செயல்பட்ட பள்ளிகளாலும், எழுத்தாளர் என்று அழைக் கப்பட்ட ஒரு பிரிவினராலும் தொகுக்கப் பட்டன. எனவே இதனைப் பாலஸ்தீனியத் தால்மூது என்பதுதான் பொருத்தமாகும்.

இந்தத் தால்மூது தொகுப்பு, அவசரத்தில் செய்யப்பட்டிருக்கிறது. இத்தொகுப்பின் மொழிநடையிலிருந்தும் அமைப்பிலிருந் தும் இது தெளிவாகத் தெரிகிறது. கி.பி. 3-ஆம், 4-ஆம் நூற்றாண்டுகளில் உரோமைய ரின் கீழ், இஸ்ராயேல் மக்கள் மிகவும் வாதனைக்குள்ளானார்கள். எனவேதான் இத் தொகுப்பு அவசரக் கோலத்தில் எழுதப்பட் டிருக்கிறது. இதனால்தான் இத்தொகுப்பு முழுமையானதாக இல்லை. தொடர்பான அமைப்பும், கூட்டொருமையும், தெளிவும் ஆழமுடைமையும் இதில் காணப்பட வில்லை. துணைச் சேர்க்கையென்ற கெமாரா என்பதுமுதல் நான்கு பகுதிகள் மட்டும்தான் இப்பாலஸ்தீனத் தால்மூதில் **காணப்படுகின்றன**. கடைசி இரண்டு பெரும்பகுதிகளான ஆலயத்தையும் பலி யையும் பற்றிய பகுதிக்கும், தீட்டுகளைப் பற்றிய பகுதிக்கும், துணைச் சேர்க்கைகள் காணப்படவில்லை.

1907-இல் சாலமன் பிரிவேன்டர் என்பவர், பாலஸ்தீனத் தால்மூதின் ஐந்தாவது பகுதி யைக் (அதாவது ஆலயம் பலிகள் இவை களைச் சார்ந்தது) கண்டுபிடித்து வெளியிட் டார். ஆனால் அதற்குப் பின் நடந்த ஆராய்ச்சி கள், அவர் கண்டுபிடித்தது பாலஸ்தீனத் தால்மூது இல்லை என்பதை நிரூபித்தன. பாலஸ்தீனத் தால்மூது, சுவடிகளின் தொகுப்பு என்ற அளவில் பாபிலோனியத் தால்மூதைவிடச் சிறியதுதான். பாபிலோனியத் தால்மூதைவிடப் பாலஸ்தீனத் தால்மூது மூன்றில் ஒருபங்கு சிறியது என்று கூறலாம். அத்துடன் இது பே ,சுத்திய அரமேய மொழி யில் அமைந்திருக்கிறது.

இப்பாலஸ்தீனத் தால்மூது இராபி நப் பாகா மகன் யோகனான் என்பவரால் தொகுக்கப்பட்டது என்பது மரபுவழிச் செய்தி யாகும். இவர் இறந்த வருடம் கி.பி. 279. இவர் பெயர்போன இராபி யூதாவின் சீடர். இவர், இவர் காலத்திலிருந்த மற்ற இராபி களைவிட அறிவுத் திறமையில் சிறந்து விளங் கினார். இவர் திபேரியா நகரில் ஒரு பள் ளியை அமைத்தார். அதுதான் பாலஸ்தீனத் திலேயே கல்விகற்க சிறந்த பள்ளியாய் விளங்கியது. இப்பள்ளிதான் பாலஸ்தீனத் தால்மூது தொகுத்து எழுதப்படுவதற்குப் பாசறையாகப் பயன்பட்டது.

ஆனால் பாலஸ்தீனத் தால்மூதில் இராபி யோகனானின் காலத்திற்குப் பிந்திய குறிப்பு களையும் நாம் பார்க்க முடிகிறது. இதற் குக் காரணம் என்னவென்றால், இராபியோக னான், பாலஸ்தீனத் தால்மூது தொகுப்புப் பணியை ஆரம்பித்து வைத்தார். இது தொடர்ந்து செய்யப்பட்டது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான், தற் போது நமக்குக் கிடைக்கும் தால்மூதின் அமைப்பு நிறைவு பெற்றது. இதே நேரத்தில் தான் திபேரியாவிலிருந்த பள்ளியை மூடி விடும் நிலையேற்பட்டது.

பாலஸ்தீனத் தால்மூது, பாபிலோனியத் தால்மூதின் துணைத்தொகுப்பு என்றே கருதப்படுகிறது. ஏனென்றால், பாபிலோனியத் தால்மூதில்தான், பின்னால் உண்டான அத்தனைச் சட்டங்களும் தொகுக்கப்பட்டுக் காணப்படுகின்றன. ஆனால் பாலஸ்தீனத் தால்மூது, வாழ்க்கையில் சட்டங்கள் எம்முறையில் இடம் பெறுகின்றன என்ற அலாக்கா பகுதிக்கு, உண்மையான விளக்கங்களை நமக்குத் தருகிறது. எவ்வாறு இந்த விளக்கம் அப்போது நிலவி வந்ததோ, அப்படியே அவைகளை நமக்குப் பாலஸ்தீனத் தால்மூது தருகிறது. இதில் காணப்படும் நிகழ்ச்சி விரிவுரையெனப்படும் அக்கதாவும் நமக்குப் பயனுள்ளதாக விளங்குகிறது. இந்த அக்கதா இத்தொகுப்பின் ஆறில் ஒரு பங்கைப் பெற்றிருக்கிறது. இஸ்ராயேல் மக்கள் எவ்வாறு ஒருவருக்கொருவர் உறவு கொண்டு வாழ்ந்தனர் என்பதைப் பற்றியும் புறவினத்தார் மற்றும் வெளிநாடுகளுடன் எப்படித் தொடர்பு கொண்டு வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்களை இது நமக்குத் தருகிறது. இந்த அக்கதா காலத்தால் பழமையான காரணத்தால், வரலாற்றுப் பூர்வமான செய்திகளையும் நாம் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது.

ஆ. பாபிலோனியத் தால்மூது: இந்தப் பாபிலோனிய வாய்மொழிவழி சட்டவிளக்கங்கள் (தால்மூது) கிழக்கத்திய அரமேய மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. இராபி யூதா தொகுத்த மிஸ்னாவைப் பற்றிப் பாபிலோனியாவில் செய்யப்பட்ட வாக்குவாதங்களையும் விளக்கங்களையும்தான், இந்தப் பாபிலோனியத் தால்மூதில் நாம் காண்கின்றோம். இதில் நிகழ்ச்சி விரிவுரை என்றழைக்கப்படும் அக்கதாப் பகுதிகள் அதிகமான இடத்தைப் பெறுகின்றன. இத்தொகுப்பின் மொத்த அளவில் மூன்றில் ஒருபகுதி இந்த அக்கதாவால் நிரம்பியிருக்கிறது. இந்த அக்கதா, இஸ்ராயேல் மக்களின் சமூக சமய வாழ்வினை நன்கு நமக்குப் படம்பிடித்துக் காண்பிக்கிறது.

இவ்வாறு பாபிலோனியத் தால்மூது, பாலஸ்தீனத் தால்மூது என்ற தனித்த தொகுப்புகள் காணப்பட்டாலும், இந்த இரண்டு தொகுப்புகளினிடையில் பரிமாற்றமிருந்திருக்கிறது. பாலஸ்தீன எழுத்தாளர்கள் கூறிய கருத்துகளுக்குப் பாபிலோனியாவில் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தனர். இவ்வாறு வந்த பாலஸ்தீனக் கருத்துக்களைத் தொகுத்து, அதனைத் துணை இணைப்பாகத் தங்களின் பாபிலோனியத் தால்மூதில் சேர்த்தனர்.

இந்தப் பாபிலோனியத் தால்மூது தொகுப்பிற்குக் காரண கர்த்தாவாகக் கருதப்படுபவர் ''அப்பா அரிக்கா'' என்பவராவர். இவர் உயரமானவர். எனவே இவர் உயர்ந்தோன் என்றே அழைக்கப்பட்டார். இவர் பாபிலோனியாவில் பிறந்தவர். ஆனால் பாலஸ்தீனத்தில் சில ஆண்டுகள் தங்கி, பெயர் போன இராபி யூதாவிடம் கல்வி பயின்றார். கி.பி. 219-ஆம் ஆண்டு பாபிலோனியாவிற்குத் திரும்பினார். அங்கு யூப்பிரத்தீசு நதிக்கரையில் அமைந்திருந்த சூரா என்றவிடத்தில் பள்ளியொன்று நிறுவினார். இதில் தான் இராபி யூதாவிடம் கற்ற மிஸ்னா என்ற வாய்மொழிச் சட்டவிளக்கங்களை மாணவர்களுக்குக் கற்றுத் தந்தார். ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவ்விடத்தில் கல்வி பயின்றனர். இவருடைய புகழ் பரவியது. இவர் ஆசிரியர்களிலே சிறந்த ஆசிரியர் என்ற பெயரைப் பெற்றார். இவர் கி.பி. 247-ஆம் ஆண்டு இறந்தார்.

அப்பா அரிக்காவின் காலத்திலே பணிபுரிந்த மற்றொரு முக்கியமானவர் மேர் சாமுவேல் என்பவர். இவரும் அப்பா அரிக்காவைப்போலப் பாலஸ்தீனத்திற்குச் சென்று, இராபி யூதாவிடம் கல்வி கற்றவர். இவர் பாலஸ்தீனத்திலிருந்து பாபிலோனியாவிற்குத் திரும்பி வந்து நெகார்தேயா என்றவிடத்தில் ஒரு பள்ளியை ஆரம்பித்தார். இவர் குற்றவியல் அல்லாத சமுதாய வாழ்வைச் சார்ந்த சட்டங்களில் மிகவும் தேர்ச்சியடைந்தவர். இந்தத் துறையில் இவர் கூறிய முடிவுகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்

டன. இவரே ''நாட்டின் சட்டங்களே உண்மையான சட்டங்கள்'' என்ற அடிக்கடி எல்லோராலும் பயன்படுத்தப்பட்ட வாக்கியத்தை உருவாக்கியவர், இவ்வாறு யூதசமுதாயத்தில், சமுதாயச் சட்டங்களை உருவாக்குவதற்கு இவர் மிகவும் துணை நின்றார். இவர் இறந்த வருடம் கி.பி. 254.

இதற்கடுத்துப் பாபிலோனியாவில், தால்மூது வளர்ச்சியால் தங்கள் முத்திரையைப் பதித்தவர்கள் அப்பாயே (280-338) என்பவரும் இராபா (299-352) என்பவரும் ஆவார்கள். இவர்கள் இருவரும் எழுத்தாளர்கள் (அமோராயிம்) என்ற வரிசையைச் சார்ந்தவர்கள். இருவரும் இரண்டு பள்ளிகளின் முதல்வர்கள். அப்பாயே ''பும் தெதித்தா'' என்ற இடத்தில் பள்ளியை நிறுவினார். இராபா ''மெக்கூசா'' என்றவிடத்தில் பள்ளியை நிறுவினார். இராபா நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படும் விளக்கங்களைத் தரும் அலாக்கா என்ற முறையை எதிர்த்தவர். இந்த இரு அறிஞர்களின் கருத்துக்கள் எல்லாம் தொகுக்கப்பட்டு இணைச் சேர்க்கையாகப் பாபிலோனியத் தால்மூதில் சேர்க்கப்பட்டன.

இந்த இரண்டு அறிஞர்களின் காலத்திற்குப் பிறகும், தால்மூதைப் பற்றிய கருத்துக்கள் விளக்கங்கள் எல்லாம் பெருகி வந்தன. ஒவ்வொரு தலைமுறையிலும், அவர்களுக்கு முன்பாக விளங்கிய விளக்கங்களைப் பற்றிய விவாதங்களும், தர்க்கங்களும், தொடர்ந்து நடந்து வந்தன. மேற்கண்ட பாபிலோனியத் தால்மூது வளர்ச்சியெல்லாம் வாய்மொழி அளவிலே மக்களிடையே தவழ்ந்து வந்தன. ஆனால் இவையெல்லாம் கணக்கில்லாமல் பெரும் அளவில் பெருகி வந்தன.

இந்நிலையில் பரவலாக, ஒழுங்கில்லாமல் சிதறிக் கிடந்தவைகள் அனைத்தையும் ஒழுங்கு படுத்தி ஒருமுகப் படுத்த வேண்டியிருந்தது. இந்த ஒழுங்குபடுத்தும் பணியை ''இரபு ஆசி'' என்பவர் ஆரம்பித்தார். இவர் நாம் மேலே பார்த்த அப்பா அரிக்கா ஏற்படுத்திய பள்ளியில் 23-ஆவது வயதில் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்குப் பணியாற்றியவர். இவர் இந்த ஒழுங்குபடுத்தித் திருத்தும் பணியில் 52 வருடங்கள் கடினமாக உழைத்தார். இவ்வாறு இவர் அரும்பாடுபட்டு உழைத்துத் தொகுத்ததுதான் பாபிலோனியத் தால்மூதிற்கு அடிப்படை ஆதாரமாக அமைந்தது. இரபு ஆசி இறந்த ஆண்டு கி.பி. 427.

இரபு ஆசியின் காலத்திற்குப் பிறகு அவரின் சீடர்கள் அவரது பணியைத் தொடர்ந்து செய்தார்கள். இரபு ஆசியின் காலத்திற்குப் பிறகு சிறப்பான முறையில் பணியாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் குனானின் மகனான இரபினா என்பவர். இவர் இரண்டாம் இரபினா என்றும் அழைக்கப்பட்டார். இவர் முக்கியமாக, இரபு ஆசியின் காலத்திற்குப் பிறகு வெளிவந்த வாய்மொழிச்சட்ட விளக்கங்களைத் தொகுத்து வைத்தார். இரபினாவின் காலத்துடன் எழுத்தாளர்களின் (அமோராயிம்) காலம் முடிவடைகிறது என்று சொல்லலாம். இரபினா தீவிரமாக இவ்வாறு சட்டவிளக்கங்களைத் தொகுத்த ஆண்டுகள் கி.பி. 488 முதல் 499 வரை. இவ்வாறு இரபினாவின் காலத்தில்தான் தால்மூது வளர்ச்சியின் கடைசி நிலையை அடைந்தது என்று சொல்லலாம். இவ்வாறு ஒரு முழு நிலை எய்திய தால்மூதிற்குக் கடைசியாகக் கொடுக்கப்பட வேண்டிய திருத்தங்களைச் சிந்தனையாளர்கள் என்ற ''சபோராயிம்'' என்பவர்கள் செய்தார்கள். சபோர் என்றால் அரமேய மொழியில் சிந்தனை என்று பொருள். இச்சிந்தனையாளர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஆறாம் நூற்றாண்டின் இடைக் காலம் வரை தீவிரமாக இயங்கி வந்தார்கள். இவர்கள் உண்மையிலே சிந்தித்துப் பார்த்து, தேவையில்லாதவைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு, தால்மூதின் கடைசி வடிவத்தைச் சீரமைத்தார்கள்.

7. தால்மூது கொடுத்த தாக்கங்கள்: தால்மூது, பலவிடங்களில் பரவிவந்த யூத மக்களுக்கு அவர்களின் சட்டங்களை நினை

ஊட்டி, அவர்களை மறைநெறியில் வாழச் செய்த உயிரூட்டும் அடிப்படை ஊக்க சக்தி யாக விளங்கியிருக்கிறது. யூதமக்கள் பல எதிர்ப்புகளையும் கொடுமைகளையும், அழிவு களையும் சந்தித்தபோது அவர்களுக்கு ஆறுதல் தரும் குணமருந்தாக இத்தால்மூது விளங்கியது. தலைமுறை தலைமுறையாக யூத சமுதாயம் இத்தால்மூதைப் படித்துத் தங்கள் மறைநெறியில் நிலைத்து நின்றிருக் கின்றனர். பெலிக்ஸ் பெர்லஸ் என்பவர் தால்மூதின் சிறப்பைப்பற்றிக் கீழ்க்கண்ட வாறு கூறுகிறார். ''தால்மூது யூதமக்க ளுக்கு வரலாற்றில் கிடைத்த ஒரு புதுமை. இப்புதுமை உலகில் சிதறிக் கிடந்த யூத மக்களுக்கு உயிர் நீராகக் கொடுக்கப்பட்டது. அவர்கள் எதிர்ப்பையும் துரோகங்களையும் சந்தித்தபோது இது அவர்களை அழிய விடா மல் தடுத்தது. யூத மக்கள் அனைவரும் ஒரே குணம் கொண்டு வளர, ஒரே அச்சினை எல்லா யூதர்கள் மேலும் இது பதித்தது. இதுவே இந்நாள் வரையிலும், பல சூழ் நிலைகளை யூதர்கள் சந்தித்தாலும், அவர் களைத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது'' என வர்ணிக்கின்றார். இத்தால்மூது யூதர் களுக்கு மட்டுமல்ல உலக நாகரீக வளர்ச் சிக்கே பெரிதும் உதவியுள்ளது. இத்தால்மூது வழங்கிய அறிவொழுக்க ஒளிச்சுடர்கள், மத்திய நூற்றாண்டுகளில் மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. இது தந்த ஒளியில்தான் பல புதுமைப் புரட்சிகள் நடந்தன. அத னுடைய தாக்கம் இன்றும் நமது நாகரீகத்தின் வளர்ச்சியில் காணப்படுகிறது.

8. **தால்மூது எரிக்கப்படல்:** வரலாற்றில் வளர்ந்துவந்த வாய்மொழிச் சட்ட விளக்கங் களுக்கு ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புகள் இருந்தன. அதாவது தால்மூது எழுதப்படுவ தற்கு முன்பே இதனைப் பயன்படுத்த, கற் பிக்க, கற்றுக் கொள்ளத் தடைகள் இருந்தன. உதாரணமாகக் கி.பி. 117-138-இல் வாழ்ந்த அதிரியான் என்பவர், 139-161-இல் வாழ்ந்த அந்தோனினுஸ் பயஸ் என்பவர், இன்னும் பாரசீக அரசர்களான இரண்டாம் யாஸ்டே கர்ட் (438-57), பெரோஸ் (459-84) இவர்க ளெல்லாம் யூதச் சட்டங்களைப் படிக்கவே கூடாதென்று தடைவிதித்தனர். அதைத் தொடர்ந்த மத்திய நூற்றாண்டுகளில் பல நேரங்களில் தால்மூது புத்தகங்கள் எரிக்கப் பட்டன. அப்புத்தகங்களைப் படிப்பவர்கள் ஆங்காங்கே தண்டனைக்குள்ளாகினர்.

பல நேரங்களில், யூத மறையிலிருந்து கிறிஸ்துவ மறையைத் தழுவியவர்களும், இந்தத் தால்மூது புத்தகங்களைப்பற்றித் தவறான கருத்துக்களைக் கூறக்கேட்ட கிறித்துவ மதத் தலைவர்களும் இத்தால்மூது புத்தகங்களை அழிக்கவும் எரிக்கவும் தடைசெய்யவும் தலைப்பட்டனர். உதாரணமாக நிக்கோ லாஸ் தோனின் என்பவர், யூத மறையி லிருந்து கிறித்துவ மறைக்கு மாறினார். அவர் தால்மூதிற்கு எதிராக 23 பத்திகள் கொண்ட ஒரு குற்ற அறிக்கையைத் தயார் செய்து வெளியிட்டார். இதன் எதிரொலியாக, இரண்டாம் கிரகோரியார் என்னும் பாப்பு தால்மூது ஏடுகளையெல்லாம் கைப்பற்றக் கட்டளையிட்டார். இதனால் 1242-ஆம் ஆண்டு, பாரீஸ் நகரில் 24 வண்டிகள் நிரம் பிய தால்மூது ஏடுகள் சேர்த்து எரிக்கப்பட் டன. இதனைத் தொடர்ந்த நூற்றாண்டுகளி லும் இத்தகைய கொடுமைகளுக்குத் தால் மூது உள்ளாயிற்று. ஆனால் 1453-1522 ஆண்டு களில் வாழ்ந்த நெக்லின் என்பவர்தான் இத்தகைய கொடுமைகளை நிறுத்தும்படி குரல் கொடுத்தார். இயேசுவின் நெருங்கிய உறவினர்களால் எழுதப்பட்ட இப்புத்தகங் களை எரிப்பதும் அழிப்பதும் எவ்விதத்தில் நீதியாகும் என்று கண்டனம் செய்தார். அதிலிருந்து, தால்மூதைத் தாக்கி வந்த எதிர்ப்புகள் குறைந்தன.

பாபிலோனியத் தால்மூதும் மத்திய நூற் றாண்டுகளில், கிறித்துவத்தின் கெடுபிடி களுக்கு உள்ளாகியது. தால்மூது நூல்கள் தணிக்கை செய்யப்பட்டன. கிறித்துவ மறைக்கு எதிராகத் தால்மூதில் தோன்றுபவை களையெல்லாம் அழித்துவிட உத்திரவிடப் பட்டது. இதனால் யூதர்களே, திருச் சபைக்கு எதிராகப் பொருள்தரும் வசனங் களை, அழித்துவிட்டு வெளியிட்டார்கள். ஆனால் பிற்காலத்தில், இவ்வாறு அழிக்கப்

பட்ட வசனங்களைமட்டும் சேர்த்து ஒரு புத்தகத் தொகுப்பாக வெளியிட்டனர். அவைகளில் முக்கியமான புத்தகம் ''செப்ர் செஸ்ரோநோத் சா-சாஸ்'' என்ற பெயரைக் கொண்ட புத்தகமாகும். மேற்கூறப்பட்ட தலைப்பின்பொருள், தால்மூதில் இடையில் விடப்பட்டவைகளின் புத்தகம் என்பது.

*9. **இன்றைய சூழ்நிலையில் தால்மூதிற்குக் காணப்படும் எதிர்ப்புகள்:*** யூதர்களின் எதிரிகள், பல நேரங்களில் அவர்கள்மேல் பழி சுமத்த, தால்மூதைக் கருவியாகப் பயன்படுத்துவார்கள். அவர்கள் இந்தத் தால்மூதின் போதனைகள்தான், இஸ்ராயேல் மக்களைத் தீய வழிகளுக்குச் செல்ல உற்சாகப் படுத்துகின்றன என்று மேற்கோள் காட்டிக் கூறுவர். குறிப்பாக இந்தத் தால்மூது புத்தகத்தின் தூண்டுதலால்தான் இஸ்ராயேல் அல்லாதாரை, இஸ்ராயேல் மக்கள் புறக்கணிக்கிறார்கள், கொலை செய்கிறார்கள், அவர்களைக் கொள்ளையடிக்கிறார்கள், கற்பழிக்கிறார்கள் என்று அவதூறு பேசி, தால்மூதைப்பற்றிக் குறைப்படுத்துவர். ஆனால் உண்மையை அறிந்த, யூத, யூதரல்லாத அறிஞர்கள் மேற்கண்ட குற்றச்சாட்டுகள் தவறானவையென எளிதாக நிரூபித்துக் காண்பிப்பர். தால்மூதைப் பற்றி மேற்கண்ட முறையில் குற்றம் கண்டுபிடித்தவர்கள், தால்மூதைச் சரியாகப் படிக்காமல், வேண்டுமென்றே தவறான விளக்கத்தைத் தருவதால் அல்லது திரிபுபட்ட விளக்கங்களைத் தருவதால் தான் தவறான முடிவுகளில் இறங்கினார்கள் என்பது தெளிவு. இத்தால்மூது அண்மையில் பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. இது இதனை நன்கு புரிந்து கொள்வதற்கும், இதனைப் பற்றிய தவறான எண்ணங்களை அகற்றுவதற்கும் மிக உதவி செய்தது.

*10. **அச்சிலே தால்மூது:*** பழம் ஏடுகள் என்ற அளவில் பாபிலோனியத் தால்மூதைச் சேர்ந்த ஒரே ஒரு பழம் ஏடுதான் நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தப் பழம் ஏட்டின் பெயர் மூனிக் பழம் ஏடு என்பதாகும். இது 1343-ஆம் ஆண்டு எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் கெர்மன் எல். ஸ்டார்க் என்பவர் அதனை 1912-ஆம் ஆண்டு தொகுத்துப் பதிப்பித்தார். இந்தத்தால்மூது, அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டபின் அச்சிடப்பட்டது. வெனிஸ் நகரைச் சேர்ந்த தானியல் போம்பர்க் பாலஸ்தீனத் தால்மூதையும், பாபிலோனியத் தால்மூதையும் அச்சிட்டு வெளியிட்டார். 1522-23-இல் பாலஸ்தீனத் தால்மூது அச்சிடப்பட்டது. 1520-24-இல் பாபிலோனியத் தால்மூது அச்சிடப்பட்டது. இதன்பிறகு, பல துறைகளில் இவ்விரண்டு தால்மூதுகளும் அச்சிட்டு வெளியிடப்பட்டன. இவைகளில் மிகவும் முக்கியமானது, சிறந்த முறையில் செய்யப்பட்டது, வில்னா ரோம் என்பவரால் 1886-இல் செய்யப்பட்ட பதிப்பாகும். இவர் பாபிலோனியத் தால்மூதை மட்டும் அச்சிட்டு வெளியிட்டார். அதன்பிறகு அதே பதிப்பு பலமுறை, பல திருத்தங்களுடனும், புதிய சேர்க்கைகளுடனும் வெளியிடப்பட்டது. அண்மையில் அமெரிக்காவில் இதே பதிப்பு போட்டோ பதிவுமுறையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

*11. **தால்மூதின் விளக்கவுரைகள்:*** தால்மூதைப் புரிந்துகொள்வது எளிதல்ல. ஏனென்றால் இதில் ஒரு தனிப்பட்ட மொழிநடை காணப்படுகிறது. சுருக்கமாகவும் அதே சமயத்தில் சூசகமாகவும் பலயிடங்களில் வாசகங்கள் அமைந்துள்ளன. இதில் புள்ளி, அறைப்புள்ளி போன்ற எவ்விதக் குறிப்புகளும் கொடுக்கப்படவில்லை. எனவே, இதைத் தெரிந்தவர்கள் விளக்கம் கொடுக்காமல், பிறர் புரிந்துகொள்ள முடியாது. அதே நேரத்தில், இந்தத் தால்மூதிற்கு விளக்கவுரைகள் நிறையவே நமக்குக் கிடைக்கின்றன. எழுதப்பட்ட தால்மூது விளக்கவுரைகளில் மிகவும் பழமையானது குசியல் மகன் கனானல் என்பவர் தயாரித்ததாகும். இவர் தால்மூது முழுவதற்குமே விளக்கவுரை எழுதியிருக்கிறார். இவர் 1050-இல் இறந்தார். இவர் தயாரித்த இப்பெரிய விளக்கவுரையில் ஒரு சில பகுதிகளே தற்போது நமக்குக் கிடைக்கின்றன.

எழுதப்பட்ட தால்மூது விளக்கவுரைகளில் மிகவும் பெயர் போனது திராயஸ் ராசி

என்றவிடத்தைச் சார்ந்த இராபி சாலமோன் இட்சாக்கி என்பவர் தயாரித்ததாகும். தால்மூது வசனங்களுக்கு அருகிலேயே இவர் எழுதிய விளக்கங்களும் சேர்த்து அச்சிடப் பட்டுள்ளன. இராபி சாலமோன் இட்சாக்கி வாழ்ந்த ஆண்டுகள் 1040 முதல் 1105 வரையி லாகும்.

இதற்கிடையில் பிரான்சு நாட்டில் 12-ஆம் 13-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இராபிகள் ஒரு நேர்த்தியான விளக்கவுரையைத் தயாரித் தனர். இவர்கள் தயாரித்த தால்மூது விளக்க வுரைக்குப்பெயர் ''தொசபோத்'' என்பதாகும். தொசபோத் என்றால் இணைச்சேர்க்கை என் பது பொருள். இவர்கள் எழுதிய விளக்க வுரை மிகவும் விரிவானது. ஆராய்ச்சி நோக் குடன் எழுதப்பட்டது. ஒப்புவமை காட்டி விளக்கமாக எழுதப்பட்டது.

இதற்கு மேலும் மிகச் சிறந்த விளக்கவுரை களும் எழுதப்பட்டன. உதாரணமாக, சாமு வேல் எடல்ஸ் என்பவர் 1612-ஆம் ஆண்டு ''மார்சா'' என்ற மிக நுணுக்கமான விளக்க வுரையை எழுதினார். ஒவ்வொரு வசனத்தை யும் நன்குபிரித்துக்காட்டி விளக்கம் எழுதி யுள்ளார். இதையடுத்து 1619-ஆம் ஆண்டு லப்லினைச் சார்ந்த கெதல்ய மகன் மேயிர் என்பவர் ''மகரம்'' என்ற விளக்கவுரைத் தொகுப்பினைத் தயாரித்தார். இது தெளி வாக அமைந்திருக்கிறது. இதனால் பலரும் இவ்விளக்கவுரையை விரும்பிப் பயன் படுத்துகின்றனர்.

எருசலேம் தால்மூதிற்கு இருவர் விளக்க வுரை தயாரித்தனர். 1743-ஆம் ஆண்டு தாவீது பிரேன்க்கல் ஒரு விளக்கவுரையை எருச லேம் தால்மூதிற்கு எழுதினார். 1750-ஆம் ஆண்டு மோசஸ் மார்கோலியோத் என்பவர் ''பெனே மோசே'' என்ற விளக்கவுரையை அதே எருசலேம் தால்மூதிற்கு எழுதினார்.

அண்மைக் காலத்திலும் தற்கால அறி ஞர்கள், தால்மூதிற்கு விளக்கவுரை எழுதுவ தில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்க ளில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய வர் லூயிஸ் கின்ஸ்பர்க் என்பவர். இவர் பாலஸ்தீனத் தால்மூதின் விளக்கவுரை என்று மூன்று பாகங்களில் எழுதியிருக் கிறார். அவர் இவ்விளக்கவுரையைச் செய்து முடித்த ஆண்டு 1941. இதுதான் தால்மூதின் அலாக்கா பகுதிக்கு மிகச் சிறந்த விளக்க வுரை என்று எல்லோரும் புகழ்ந்து ஏற்றுக் கொள்கிறார்கள்.

12. யூதர்களின் கல்விமுறையில் தால்மூது: தால்மூது யூதர்களின் வாழ்க்கையில் இரண் டறக் கலந்திருந்தது. எனவே அவர்களின் கல்வி முறையிலும் இத்தால்மூது முக்கிய இடம் பிடித்திருந்தது என்பதில் வியப்பொன்று மில்லை. தால்மூது பள்ளிகளில் முக்கியப் பாடங்களில் ஒன்றாக நிறுவப்பட்டது. ஆரம் பப்பள்ளி முதலே தால்மூது பிள்ளைகளுக் குச் சொல்லித்தரப்பட்டது. இக்கல்வி மேல் நிலைப் பள்ளிகளிலும் தொடர்ந்தது. மேல் நிலைக் கல்வியை ''யெசிவா'' என்றழைக் கிறார்கள். இதில் மாணவர்கள் தால்மூது வச னங்களைப் பிரித்துப் பார்த்து விளக்கம் காணும் முறையைக் கற்றுக் கொள்கிறார்கள். இம்முறையைப் ''பில்புல்'' என்று அழைக் கிறார்கள்.

மத்திய நூற்றாண்டுகளிலும் தால்மூது, யூதர்கல்வி முறையில் தொடர்ந்து முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

ஆனால் யூதர்கள் குறுகிய வட்டத்திற்குள் நில்லாமல் பரந்த மனப்பான்மை கொண்டு நாகரிகத்தில் வளர வேண்டும் என்ற சிந்தனை கள் மக்கள் மத்தியில் உண்டாக ஆரம் பித்தன. இதனால் தால்மூதிற்குக் கொடுக்கப் பட்ட தனியிடத்தைக் குறைத்து, அதனுடைய விடத்தில் மற்றப் பாடங்களை அறிமுகப் படுத்த ஆரம்பித்தனர். இருப்பினும் தால்மூது யூதர்களின் கல்விமுறையில் தனித்த இடத் தைப் பெற்றிருந்தது.

சிறுவர்களுக்குத் தால்மூதில் காணப்பட்ட கதைகள் கூறப்பட்டன. நிகழ்ச்சியுரை என் றழைக்கப்பட்ட அக்கதா பிள்ளைகளின் மன தில் சிறந்த ஒழுக்கமுறையைத் தோற்றுவித் தது; யூத மரபுகளில் அவர்கள் நிலைத்து நிற்க அடிப்படை மனநிலையை அவர்களிடம் உண்டாக்கியது.

இன்றைய நாளிலும் தால்மூதைப் பற்றி மறந்திருந்தவர்கள்கூட, அதில் ஆர்வம் காட்டிக் கற்க முன் வருகின்றனர். யூதப் பள்ளிகளில் தால்மூது மறைக்கல்விப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. பெரியோர்களும் தனிக்குழுக்களாகச் சேர்ந்து தால்மூதைத் தாங்களே கற்று வருகின்றனர். இப்பழக்கம் பெருகி வருகிறது. லப்லினைச் சேர்ந்த இராபி மேயிர் சப்பிரோ என்பவர் ஒரு புது முறையை 1929-இல் ஆரம்பித்தார். தினக்கவடி என்ற ''தாப்யோமி'' தால்மூது வாசகத் தாளை அறிமுகப்படுத்தினார். இதனைப் பல யூதர்கள் தின வாசகங்களாக எடுத்துக் கொண்டு வாசித்துப் பயனடைகின்றனர். இவ்வாறு தால்மூது யூத மறையைக் கட்டிக் காக்கும் முக்கிய ஆதாரம் என யூதர்கள் கருதி அதனைக் கற்கவும் பயிலவும் முன் வருகின்றனர். அத்துடன் யூத கலாச்சாரத்திற்கே அது ஒரு வழி காட்டி என்றும் பெருமிதம் கொள்கின்றனர்.

13. தற்போதும் தால்மூதின் பணி: தால்மூது உண்டான காலத்திலிருந்து நாம் வெகுவாகத் தள்ளியிருந்தாலும், விவிலியத்தையடுத்து, தால்மூது யூதர்களுக்கு முக்கிய வழி காட்டும் ஆதாரமாக விளங்குகிறது. அவர்களுடைய ஒழுக்கவியலுக்கும், பக்தி வாழ்க்கைக்கும் இது ஒளிதீபமாக விளங்குகிறது. தால்மூதில் காணப்படும் பலசட்ட விளக்கங்கள், இன்றைக்கு ஒவ்வாதவையாகத் தோன்றலாம். ஆனால் யூதர்களின் வாழ்க்கை முறை, தால்மூது தருகிற போதனைகளிலும் ஒழுங்குமுறைகளிலும்தான் கட்டப்பட்டிருக்கிறது. யூதர்களின் வழிபாடுகள், விழாக்கள், திருமணச்சட்டங்கள், இவைகள் எல்லாம் தால்மூது காட்டும் முறையிலேயே செய்யப்படுகின்றன. இன்னும் யூதர்களின் தனிப்பட்ட குணங்களாகக் கருதப்படும், இரக்கம், தாராளம், குடும்பப் பாசம், அகிம்சை, வல்லந்தம் மேல் வெறுப்பு ஆகியவைகளுக்கும் உள் உந்துதலாக இருந்து, யூதர்களிடம் இவைகளை வெளிப்பட செய்வது இந்தத் தால்மூதுதான்.

புதியநாடாக, பல ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்திருக்கும் இஸ்ராயேல் அரசும், தால்மூதின் போதனைகளுக்கு முக்கியம் அளித்து அதனைப் போற்றுகிறது. அவர்களிடையே பல காலம் அரசாட்சி இல்லாததால், அரசாட்சி தொடர்பான பல தால்மூது சட்டங்கள் பயன்படுத்தப்படாமல், பொருளற்று நின்றன. முக்கியமாக நீதிமன்றம், விவசாயம் போன்ற துறைகள். ஆனால் தாங்கள் பெற்றிருக்கின்ற புதிய அரசில், மறைந்து நின்ற தால்மூது சட்டங்களையெல்லாம் மெதுவாக அறிமுகப்படுத்தி வருகின்றனர். இன்னும் தங்கள் சமுதாயத்தைப் புதிய முறையில் கட்டி எழுப்பமுயலும் இன்றைய தலைமுறையும் தால்மூதின் விளக்கங்களையே, தங்களுக்கு வழிகாட்டும் பாதையாகக் கொண்டு, அதை அடிக்கடி உற்று நோக்குகின்றனர்.

தாவீதின் நகர் (DAVID, CITY OF)

தாவீது பன்னிரண்டு குலத்தவர்களுக்கும் அரசனானபின்பு அவர் கைப்பற்றிய எபூசியருடைய கோட்டை நகரத்துக்கு அளிக்கப்பட்ட பெயராகும் இது. ஆகவே தாவீதின் நகரமும் சீயோன் கோட்டையும் ஒரு பொருள் பல சொல்லாகப் பயன்படுகிறது *(2 சாமு 5:7.9; 1 நாள் 11:5.7; 1 அர 8:11; 2 நாள் 5:2)*. இது பிற்காலத்தில் எருசலேம் என்றழைக்கப்பட்டது.

யோசுவா எருசலேம் அரசனை வெற்றி கொண்டாலும் எருசலேம் நகரத்தைக் கைப்பற்றவில்லை *(யோசு 10:1-41)*. இஸ்ராயேலர் பிற்காலத்தில் எபூசின் ஒரு பகுதியையோ சுற்று வட்டாரத்தையோ கைப்பற்றினாலும் *(நீதி 1:8)*, எபூசியர் தாவீது காலம் வரை அங்கே தங்கியிருந்தனர் *(நீதி 1:21; யோசு 15:63; நீதி 19:10; 2 சாமு 5:6)*. எருசலேம் பன்னிரண்டு குலத்தவர் எவருக்கும் சொந்தமில்லை என்பதாலும் அது மையப் பகுதியில் அமைந்திருந்ததாலும், தாவீது தனது ஒன்றித்த அரசுக்கு எருசலேமைத் தலைநகராகத் தேர்ந்தெடுத்தது அவரது அரசியல் அறிவுக்கூர்மையை எடுத்துக் காட்டுகிறது.

அகழ்வாய்வுகள் நகரின் எல்லையை நிர்ணயிக்கின்றன. இது இக்காலப் பழைய நகருக்குத் தெற்கில் தீரோப்பியன், கிதரோன்

பள்ளத்தாக்குகளுக்கிடையில் அடங்கிய ஒபேல் மலை முகடாகும். ஏறக்குறைய கி.மு. 1300-ஐ ஒட்டி, மலைமுகட்டின் கிழக்குச் சரிவிலுள்ள நகர்ப்பகுதி சமதளப்படுத்தப்பட்டது. கிழக்குச் சுவரின் ஒரு பகுதி 10-ஆம் நூற்றாண்டில், ஒருவேளை தாவீதால் பழுது பார்க்கப்பட்டது (2 சாமு 5:9; 1 நாள் 11:8). தாவீது நகரின் பெரும்பகுதி பிற்காலத்தில் குறிப்பாக அதிரியான் காலத்தில் (கி.பி. 135), கல்வெட்டி எடுத்தலால் அழிக்கப் பட்டு விட்டாலும், சில கட்டடங்களும் கல்லறைப் பகுதியும் எஞ்சியுள்ளன. இங்கு யூதாவின் அரசர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் (1 அர 2:10; 11:43; 14:31; நெகே 3:16).

தாவீதின் நகரை அடையாளம் காட்டுவது இப்போது அவ்வளவு கடினமன்று. இது திரோப்பியன் பள்ளத்தாக்கு, கிதரோன் பள்ளத்தாக்கு சிலோவாம் குளமும் தோட்டமும் சூழ்ந்த முக்கோண மலையாகும் (2 நாள் 32:20). கிகோன் நீரூற்றிலிருந்து மக்கள் நீர் எடுக்கும் குடை கால்வாய் வழியாகச் சென்று திடீரென்று தாக்கித் தாவீது நகரைக் கைப்பற்றினார் (2 சாமு 5:7-8). தாவீது தனது மாளிகையை நகரின் எல்லைக்குள்ளேயே அமைத்தார். அவர்காலத்திலும் அதற்குப் பின்னும், பல பாதுகாப்பு அரண்க்ள் குறிப்பாக வடக்குப் பகுதியில் கட்டப்பட்டன.

எருசலேம் அதன் மூல எல்லைகளைக் கடந்து வளர்ந்த பின்னும் தாவீதின் நகர் தனக்கே உரிய அடையாளத்தைக் கொண்டிருந்தது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் நகரை மீண்டும் கட்டுதல் மற்றும் சுவர்களை அர்ப்பணம் செய்தல் பற்றிய நெகேமியாவின் விவரிப்பு பல பகுதிகளைக் குறிக்கிறது. அவற்றில் சில: ஊருணிவாயில் (நெகே 2:14; 3:15; 12:37); தாவீது நகரிலிருந்து கீழே செல்லும் படிகள் (3:15; 12:37); தாவீதின் கல்லறை (3:16); தாவீதின் அரண்மனை (12:37); படைவீரரின் பாசறை (3:16); தண்ணீர் வாயில் (3:26; 13:37). அகழ்வாய்வுகளில் இவற்றில் பல அடையாளம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. தாவீது நகரின் வட எல்லை அடையாளம் காணமுடியவில்லை. திரோப்பியன் பள்ளத்தாக்கை நோக்கிய மேற்கிலுள்ள அரண் செய்யப்பட்ட வாயில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தாவீது காலத்து நகர் 12 ஏக்கர் பரப்பையும் 2000 குடிமக்களையும் கொண்டதாகும். சாலமோன் ஆலயமலையை உள்ளடக்கி வடக்கில் விரிவு படுத்தினார். அப்போது அதன் பரப்பளவு 32 ஏக்கராகும். எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எசேக்கியா வடக்கிலும் மேற்கில் திரோப்பியன் பள்ளத்தாக்கைக் கடந்தும் நகரை விரிவாக்கினார். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தில் சாலமோன் காலத்திய பரப்பளவுக்கு நகர் சுருங்கியது.

பல முக்கிய நிலத்தடிக் கால்வாய்கள் கிகோன் ஊற்றிலிருந்து நகருக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் நீரைக் கொண்டு வந்தன. அவற்றில் ஒன்று பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலோவாம் குடை கால்வாயாகும். ஒரு வேளை இது சாலமோனால் அமைக்கப்பட்டு கி.மு. 586-இல் பாபிலோனியர் நகரை அழித்தபோது அடைக்கப்பட்டதாக இருக்கலாம். மற்றது எசேக்கியாவின் குடை கால்வாயாகும். இவற்றிற்கெல்லாம் முந்தியது, வாரன் கரங்க வழிக்கம்பம் என்றழைக்கப்படுவதாகும். இது செங்குத்தாகக் கிழக்குச் சுவருக்குள் நீரைக் கொண்டுவர உதவியது. போர்க்காலத்திலும் சமாதான காலத்திலும் இது நகருக்கு நீரை அளித்தது. இது கி.பி. முதலாம் நூற்றாண்டுவரை பயன் பட்டிருக்கிறது. இதன் வழியாக வந்துதான் தாவீது எபூசியரைத் திடீரென்று தாக்கியிருக்க வேண்டும் (2 சாமு 5:8).

யோசிப்பஸ், காலப்போக்கில் நகரின் வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளாமல், தான் அறிந்திருந்த முழு எருசலேமையும் தாவீது நகரம் என்று பொதுவாகக் கூறுகிறார். இதன் விளைவாகத் திரோப்பியனுக்கு மேற்கிலுள்ள உயர்ந்த குன்றைத் ''தாவீதின் கோட்டையெனக்'' குழப்புகிறார். இந்தக்குன்று சமய அடையாளப் பொருளின் காரணமாகக் கிறிஸ்தவ சீயோனாகக் கருதப்படுகிறது.

தாவீது நகரின் படிகள் (STAIRS OF THE CITY OF DAVID)

கற்களாலான படிக்கட்டுகளைப் பற்றி, நெகேமியாவில் எருசலேம் நகர் திரும்பக் கட்டப்படுதலைப் பற்றிய விவரிப்பில், ஒரு குறிப்பு காணப்படுகின்றது (நெகே 12:37). இது நெகே 3:15-இல் ''தாவீதின் ஊரி லிருந்து கீழே செல்லும் படிகள்'' என்று குறிக் கப்படுகிறது. இது அரசர்களின் கல்லறை களுக்கருகில் தாவீதுநகரின் தென் பக்கத்தை நோக்கி அமைந்திருந்தது.

தொல்பொருள் ஆராய்ச்சி கிதரோன், திரோப்பியன் ஆகிய பள்ளத்தாக்குகளுக் கிடையே இத்தகு படிக்கட்டு வரிசை இருப் பதைத் தெரிவிக்கின்றது. இது நகரின் கோட் டையின் கிழக்குப்புறத்தை நோக்கி, ஒரு வேளை ஊருணி வாயிலைநோக்கி அமைந் திருக்கலாம்.

தாவீது (DAVID - அன்பு செய்யப்பட்டவன்)

1. **முன்னுரை:** கி.மு. 1000-962 வரை இஸ் ராயேலை ஆண்ட இஸ்ராயேலின் இரண் டாம் அரசரே தாவீது. எல்கானான் என்ற பெயர் கொண்ட இவர் இஸ்ராயேலின் அரச னானபோது சூட்டிக்கொண்ட சிறப்புப் பெயராகும் தாவீது என்பது என்று சிலர் கருதுகின்றனர் (2 சாமு 21:20). பெத்லகே மைச் சேர்ந்த ஈசாயின் மகனான தாவீது சவுலையடுத்து இஸ்ராயேலின் அரசன் ஆனார். ரூத் ஆகமத்தில் உள்ள தலைமுறை அட்டவணை (ரூத் 4:1-8 தொ) ஈசாயை இராம், அம்மினதாபு, நகுசோன், சல்மோன், போவாசு ஆகியவர்களின் வழியாகப் பெரேட்சோடு தொடர்புபடுத்திப் பேசுகிறது. பெரேட்சு யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆனால் இத்தலைமுறை அட்டவணை செயற்கையாக உருவாக்கப்பட்டது என்றும் தாவீதின் குடும்பம் இஸ்ராயேல் அல்லாத தோற்றம் உடையது என்ற கருத்தும் நிலவு கிறது.

2. **பெயரும் மூலமும்:** தாவீது என்ற பெய ரின் மூலச்சொல் அன்பு என்னும் பொருள் படும் சொல்லிலிருந்து வருகிறது. இப்பெய ருக்கு ''அன்பு செய்யப்பட்டவர்'' அதாவது ''இறைவனால் அன்பு செய்யப்பட்டவர்'' என்று பொருள் கொடுக்கலாம் (2 நாள் 20:37). ''படைத்தலைவர்'' என்ற பொருளில் ''தாவீதும்'' என்ற சொல் மாரி வாசகங்களில் பலதடவை காணப்படுகிறது. ''தாவீதும்'', தாவீது என்ற இருசொற்களும் , தொடர் புடையன என்று முன்பு கருதப்பட்டன. அவ் விதத் தொடர்பு எதுவும் இல்லையென்றே கருத வேண்டும். தாவீது என்ற சொல் பழைய ஏற்பாட்டில் எண்ணூறுக்கு மேற் பட்ட தடவையும் புதிய ஏற்பாட்டில் எழு பது தடவைக்கு மேலும் காணப்படுகிறது.

தாவீது வாழ்க்கை வரலாற்றுக்கு முக்கிய மூலங்கள் 1,2 சாமுவேலின் நூல்களும், 1 அர 1-2 என்ற பகுதியும், இவற்றிற்கு இணையான தும் பொருள் பொதிந்த சேர்க்கைகளும் விலக்கல்களும் கொண்ட 1 நாள் 11-29 என்ற பகுதியுமாகும். சாமுவேல் நூல்களிலும் அர சர்கள் நூல்களிலும் காணப்படும் செய்திகள் தாவீதின் காலத்திற்கு ஒத்தவையாகும். குறிப் பாக 2 சாமு 9-20-இல் வரும் அரசவைக் குறிப்புகள் பழைய ஏற்பாட்டிலேயே மிகவும் உண்மையான வரலாற்றுத் தன்மையுடையன.

3. **வரலாறு:** தாவீதைப் பற்றிய முதல் குறிப்பு 1 சாமு 16:1-13 ஈசாயின் எட்டு மைந்தர்களில் எல்லோரிலும் இளமையான தாவீதே யாவேயின் தேர்ந்தெடுக்கப்பட்டவ ராகச் சாமுவேல் இறைவாக்கினரால் அபி டேகம் செய்யப்பட்டதாகக் கூறுகிறது. மற்ற நீதிபதிகள், இறைவாக்கினர்கள் போலத் தாவீதும் இறைவனால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரே; ஆள்வதற்குரிய தனிப்பண்பினைப் பெற்றவரே என்பதை மேலே கூறிய நிகழ்ச்சி உறுதிப்படுத்துகிறது. இதற்குப் பின்வரும் நிகழ்ச்சிகளில் தாவீது ஓர் இளம் இசைக்கலைஞனாகச் சவுலுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார் (1 சாமு 16:14); மேலும் கோலியத்து எனும் இராட்சசனை வெட்டி வீழ்த்தும் ஓர் இளம் மாவீரனாகக் காட்டப்படுகிறார் (1 சாமு 17:1). இவ்விரு நிகழ்ச்சிகளும் ஒன்றோடொன்று தொடர் பற்ற வெவ்வேறு நிகழ்ச்சிகளாகும். இசைக்

கலைஞன் என்ற அளவில் தாவீது சவுலுக்குப் பணியாளர் ஆகிறார். கோலியத்தைக் கொன்றவன் என்ற அளவில் புகழ்பெற்ற போர் வீரராகத் திகழ்கிறார். 1 சாமு 18:20 தாவீது சவுலின் அரசவையில் இருக்கும் போது நடந்தவை பற்றிக் குறிப்பிடுகிறது. ஏனெனில் இரண்டிலும் முதல் தடவையாகத் தாவீது சவுலிடம் அறிமுகப்படுத்தப்படுகிறார். அவர் கோலியத்தைக் கொன்று பெயர் பெற்றவுடன் சவுல் அவர் மேல் பொறாமை கொண்டு கொல்ல முயற்சிக்கிறார் (1 சாமு 18:10 தொ; 19:9 தொ). தாவீதுக்குச் சவுலின் மகள் மீக்கால் திருமணம் செய்து தரப்படுகிறாள். மேராபு என்ற மூத்த மகளைத் தருவதாகக் கூறிப் பின்னர் சவுல் மீக்காலையே தருகிறார். இதற்கு விலையாக ஒரு வீரச் செயல் செய்ய வேண்டியிருந்தது. பெலிஸ்தியர்களோடு மேற்கொள்ளும் போரில் தாவீது இறந்து விடுவார் என்று (1 சாமு 18:25 தொ) சவுல் எதிர்பார்த்தார். ஆனால் எல்லாவற்றிலும் தாவீது வெற்றிவீரராய் எழுந்து வந்தார். சவுலின் மூத்த மகனும், சவுலின் வாரிசுமான யோனத்தான் தாவீதின் நெருங்கிய நண்பனாகி விட்டதால் தன் தந்தையின் கோபத்தினின்று தாவீதைத் தப்புவிக்கிறார் (1 சாமு 19:1 தொ); மீண்டும் சவுல் தாவீதின் மீது அதிகம் கோபம் கொள்ளவே தாவீது தன் மனைவி மீக்காலின் உதவியோடு தப்பி ஓட வேண்டியதாகி விட்டது (19:11 தொ). தங்களுடைய அரச மரபுக்குப் பதிலாக வேறொரு அரச மரபை நிறுவ வேண்டிய ஊழ் உடையவனுக்குச் சவுலின் குடும்பத்தினரே உதவி செய்கின்றனர் (20:3தொ). யோனத்தான் தாவீதுக்காகச் சவுலிடம் பரிந்து பேசியது பயன் அளிக்காததால் தாவீது நாடோடியாக அலைய வேண்டியதாயிற்று. தாவீது அரச ஆதரவு பெறுதல், புகழ் அடைதல், சவுலின் வெறுப்பைப் பெறுதல், நாடோடியாகத்திரிதல் ஆகிய நிகழ்ச்சியின் வரிசை போதிய மட்டும் தெளிவாக உள்ளன. ஆனாலும் இவை ஒன்றையொன்று சாராத தனித்தனி நிகழ்ச்சிகளாகவும் சில சமயம் இரட்டிப்பு நிகழ்ச்சியுடையதாகவும் உள்ளன. எடுத்துக்காட்டாக நேரடிச் சந்திப்பு அபாயமிக்கதும் முடியாததுமாக இருந்ததால் அம்பு அடையாளம் ஒப்புக் கொள்ளப்பட்டது என்று 1 சாமு 20:35 தொ கூறுகிறது. ஆனால் இப்போதுள்ள வாசகத்தில் இந்த இரங்கத்தக்க சந்திப்பு விவரிக்கப்படுகிறது. ஆகையால் இது அம்பு அடையாள விவரிப்போடு தொடர்புடையதாகத் தெரியவில்லை.

தாவீது தப்பி ஓடியபின் ஒரு கொள்ளைக் காரனாக அலைந்து திரிந்தார் (1 சாமு 21-31) என்று பழைய விவரிப்பு வெளிப்படையாகக் கூறுகிறது. இது தாவீதின் புனிதத்தை மாசுபடுத்திவிடுமோ என்ற அச்சத்தில், இப்படி வெளிப்படையாகக் கூற இன்றைய அறிஞருள் சிலர் தயங்குவர். முதலில் தாவீது நோபு எனப்படும் வழிபாட்டு மையத்திற்கு ஓடிச் சென்று அங்கு அகிமெலக்கு என்ற குருவிடமிருந்து உணவும் ஆயுத உதவியும் பெறுகிறார். இஸ்ராயேலரின் எதிரியான பெலிஸ்தியரிடம் பணிசெய்ய முயற்சிக்கிறார். ஆனால் அவர்கள் இஸ்ராயேலரின் இந்தப் பெரும்வீரனை நம்பத்தயாராக இருக்கவில்லை. ஆகவே தாவீது யூதாவின் பாலைவனத்திற்கு ஓடவேண்டியிருந்தது. அங்கே அதுல்லாம் என்ற குகையில் சவுலை வெறுத்த அதிருப்தியாளர்கள், கிளர்ச்சியாளர்கள், கடன்பட்டோர் போன்ற 400 பேரைச் சேர்த்து ஒரு சிறு படையாக உருவாக்கினார். இவர்களே பின்னப் போர் செய்தலைத் தொழிலாகக் கொண்டு தாவீதின் வாழ்க்கை முழுவதும் அவருக்குத் துணையாக நின்ற குழுவின் கருவாக அமைந்தனர். மோவாபு நாட்டிற்குத் தம் பெற்றோரை அனுப்பி, அவர்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தினார் (1 சாமு 22:3 தொ); இதை வைத்துத்தான் இன்றைய அறிஞர் சிலர் தாவீதின் குடும்பத் தோற்றம் இஸ்ராயேலைச் சார்ந்தது அன்று என்று கருதுகின்றனர்.

அகிமெலக்கின் உதவியை நாடிய தாவீது சவுலுக்குத் தன்மேலுள்ள வெறுப்பை வெளிக்காட்டவில்லை. தோயேகு, அகிமெலக்கு செய்ததைச் சவுலிடம் கூறிய உடன் நோபிலுள்ள எல்லாக் குருக்களையும் வெட்டி வீழ்த்தக் கட்டளையிட்டார். அபியாத்தார் மட்டும் எபோதை எடுத்துக்கொண்டு யூதேயா

பாலை வனத்தில் இருந்த தாவீதிடம் தப்பி ஓடினார். யூதாவின் பாலைவனத்தில் சவுல் தாவீதைத் துரத்திச் சென்றார். கெயிலா மற்றும் சீபு ஆகிய இடத்தினர் சவுலிடம் தாவீதைக் காட்டிக் கொடுக்க முன் வந்தனர் (1 சாமு 23:10 தொ. 19 தொ). இரண்டு சமயங்களில் குகையில் தாவீதின் கையில் சவுல் சிக்கினார். ஆனால் தாவீது சவுலின் உயிரைக்காத்துத் தப்பவிடுகிறார் (1 சாமு 24:4தொ; 26:2 தொ). ஆனால் இரண்டு விவரிப்புகளும் ஒரே நிகழ்ச்சியின் இருவேறு வடிவங்களாக இருக்கலாம். இரு முறையும் சவுல் தான் செய்வது தவறு என்று ஏற்று, தாவீதுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்புகிறார். ஆனால் சமாதானம் செய்து கொள்ளவில்லை. இந்த நிகழ்ச்சிகளில் வரும் தாவீதின் பெருந்தன்மையைப் பின் வரும் விவரிப்புகள் அறிந்திருப்பதாகத் தெரிய வில்லை. நாபால் - அபிகாயிலின் கதை தாவீதின் கொள்ளைக்கார வாழ்வுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகிறது. இக்காலத்தில் தாவீதும் அவரது கூட்டத்தினரும் பல செல்வந்தர்களுக்குப் பாதுகாப்பு அளித்து அதற்குப்பதிலான கூலியைப் பணமாகக் கட்டாயமாக வசூலித்தனர். அப்படிப்பட்ட செல்வந்தர்களில் கர்மேலைச் சேர்ந்த நாபாலும் ஒருவர். தாவீது அளித்த பாதுகாப்பை நாபால் ஏற்க மறுத்தபோது தாவீது நாபாலையும் அவரது சொத்துக்கள் அனைத்தையும் அழித்து விடத் தயாரானார். இதை அறிந்த நாபாலின் மனைவி அபிகாயில், தன் விவேகத்தால் அழிவை நடவாதிருக்கச் செய்தார். இச்செய்தியை அறிந்த அதிர்ச்சியில் நாபால் இறந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. பின்பு தாவீது அபிகாயிலை மணந்து கொண்டார். அபிகாயில் தன் கணவனது சொத்துக்களைத் தாவீதிடம் கொண்டு வந்தளித்தாள். ஆனால் வரலாற்று ஆசிரியர்கள் அபிகாயிலை ஐயத்தோடே நோக்குவர்.

காத்தைச் சேர்ந்த ஆக்கிசிடம் கூலிப்படை வீரனாகச் சேர்ந்து (1 சாமு 27:1) தனது பணிக்காகச் 'சிக்லாகு' எனுமிடத்தைத் தாவீது பெற்றார். ஏன் இந்த இடம் தொடக்க காலம் தொட்டே அரசருக்குரிய சொந்த உடைமையாக இருந்தது என்பதை இந் நிகழ்ச்சி விளக்குகிறது. தாவீது பாலைவனத்தில் அலைந்து திரிந்த மக்களைக் கொள்ளையிட்டு வந்தார். இச்செயல்களை யூதாவின் மீது தாக்குதல்களாகத் தனது பெலிஸ்திய அதிகாரிகளிடம் விளக்கம் தந்தார். இந்த இஸ்ராயேல் வீரர் தன் மக்களையே கொள்ளையிட்டார் என்ற கருத்தை எபிரேயப் பாரம்பரியம் ஏற்க எப்போதும் மறுத்தது. ஆனால் நாபால் கதையில் இதையேதான் தாவீது செய்தார். பெலிஸ்தியரின் பணியில் இருந்தபோது இதை அவரால் தவிர்த்திருக்க முடியாது என்பது தெளிவு. மேலும் பெலிஸ்தியர்களின் படையைச் சவுலுக்கு எதிராகக் கொண்டு செல்ல வேண்டிய இடுக்கண் நிலையைத்தான் தாவீது எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆக்கிச தாவீதையும் அவரது வீரர்களையும் தன் படையில் சேர்த்துக் கொள்ள விரும்பினார். ஆனால் மற்றப் பெலிஸ்தியர்கள் தாவீதை இன்னும் நம்பவில்லை. ஆகவே அவர் திரும்பிப்போக வேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்கிடையில் தனது ஊராகிய சிக்லாகை அமலேக்கியர்கள் தாக்கியதாகக் கேள்விப்பட்டு அதனைக் காக்க அவர்களைத் துரத்திச் சென்று கைதிகளையும் கொள்ளைப் பொருட்களையும் திரும்பக் கைப்பற்றுகிறார். போரில் பங்கெடுப்போருக்கும், படையின் மூலதனத்தைக் காப்பவருக்கும் கொள்ளைப் பொருட்கள் சமமாகப் பங்கிடப்பட வேண்டும் என்று தாவீது கட்டளையிட்டதாக இக்கதை கூறுகிறது (1 சாமு 30:24 தொ). பெலிஸ்தியருக்கும், இஸ்ராயேலுக்கும் நடந்த போரில் சவுலும் அவரது மகன்களும் கொல்லப்பட்டனர். தாவீது இப்போரில் கலந்து கொண்டிருந்தால் இடையிலே பெலிஸ்தியருக்கு எதிராகத் திரும்பியிருக்க வேண்டும். இல்லையேல் அவரை இஸ்ராயேலின் காவலராக நிச்சயம் காட்டியிருக்க முடியாது. ஆனால் அவர் போரில் கலந்து கொள்ள அவசியம் ஏற்படவில்லை.

இதற்குப்பின் ஏற்பட்ட குழப்பத்தில் தாவீது, நடக்கும் நிகழ்ச்சிகள் தன்னை வழி நடத்தும் என விட்டுவிட்டார். சவுலின்

இறப்பை ஒரு நல்ல செய்தியாக அவர் ஏற்க மறுத்துவிட்டார் (2 சாமு 1:13 தொ). யூதாவிலிருந்து வந்தவர்கள் கேட்டுக் கொண்டதின் படி எபிரோனில் இருந்துகொண்டு யூதாவின் அரசனானார் (2 சாமு 2:4 தொ). சவுலின் மகனாகிய இசுபகாலை (2 சாமு 2:8 தொ) தாவீது சிறிது சிறிதாக வெற்றி கொண்டார். இசுபகாலால் அவமதிக்கப்பட்ட அப்னேர் இஸ்ராயேலரின் ஆதரவைத் தாவீதுக்கு அளிக்க முடிவெடுத்ததோடு சவுலின் அரசு அழிந்தது எனலாம். தாவீது இத்துரோகத்தை ஏற்றார். அதேநேரத்தில் இசுபகால் இரண்டு கொள்ளைக் கூட்டத் தலைவர்களால் கொல்லப்பட்ட போது (2 சாமு 4:5 தொ) தாவீது அவர்களைத் தண்டித்தார். முடிவில் தாவீது ஒருவரே இஸ்ராயேலின் அரசை ஏற்கத் தகுதியானவர் என்ற நிலையில் எல்லாக் கோத்திரத்தாரும் அவரை அரசராக ஏற்றுக் கொண்டனர் (2 சாமு 5:1 தொ).

தாவீது மேற்கொண்ட நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானது பெலிஸ்தியர்களைத் தோற்கடித்ததும் எருசலேமைக் கைப்பற்றியதுமாகும். இந்த இரு நிகழ்ச்சிகள் பற்றிய எஞ்சிய ஏடுகள் நிறைவானவையன்று. இரண்டையும் காலவரையில் வரிசைப்படுத்துவது முடியாத காரியமாகும். அவை நடந்த காலமோ தெளிவாக இல்லை. எருசலேம் அரசர் தங்குமிடமாக இருந்ததில் பல நல்ல அம்சங்கள் இருந்தன. இது இயற்கையிலே பாதுகாப்பான இடம் மட்டுமன்று; பொதுவான ஓர் இடத்தில் இருந்தது. இது இஸ்ராயேலலைச் சேர்ந்ததன்று; தாவீதின் யூதா இனத்தையும் சேர்ந்ததன்று. யூதா, பென்யமின் இனத்தவர்களுக்குரிய இடங்களின் இடையில் இருந்தது. பெலிஸ்தியர்களோடு நடந்த போர் பற்றிச் சில துணுக்குகளில் மட்டும் குறிப்பிடப்படுகிறது (2 சாமு 5:17 தொ; 21:15 தொ). இதற்குப் பின் வந்த இஸ்ராயேல் வரலாற்றிலிருந்து பெலிஸ்தியர்கள் இதன்பின் இஸ்ராயேலரை மேற்கொள்ளுமளவுக்குப் பெரும் படையாகத் திகழவில்லையெனத் தெரிகிறது. தாவீது எப்படி வெற்றி கொண்டார் என்பதைத் தெளிவாகக் கூற முடியாவிடினும், இஸ்ராயேலர் பெலிஸ்தியரைவிட எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருந்திருக்கலாம். அவர்களை வழிநடத்தத் தகுந்த தலைமை ஒன்றும் போர்க்கலங்களும் போர்த்தந்திரமும் தேவைப்பட்டன. அவற்றைத் தாவீது அளித்தார். பெலிஸ்தியர் வெற்றி கொள்ளப்பட்டனர்.

தாவீது எருசலேமை அரசன் தங்குமிடமாக மட்டுமன்று (2 சாமு 5: 11 தொ) சமய வழிபாட்டு மையமாகவும் இஸ்ராயேலரனைவரும் வந்து கூடுமிடமாகவும் ஆக்கினார் (2 சாமு 5:11). இதுவரை கண்டுகொள்ளப்படாமல் இருந்த இஸ்ராயேலரின் ஒற்றுமையின் சின்னமான உன்படிக்கையின் பேழையைத் தலைநகருக்குக் கொண்டு வந்தார். உடன்படிக்கையின் பேழை எருசலேமுக்குள் எடுத்து வரப்பட்டபோது தாவீது அதன்முன் நடனமாடியது ஒரு அரசனுக்குரிய முறையன்று என்று மீக்கால் கண்டித்ததற்காக அவளுடன் வாழ்வு முழுவதும் எந்த உறவும் தாவீது வைத்துக் கொள்ளவில்லை (2 சாமு 6:20 தொ).

தாவீது உடன்படிக்கையின் பேழை வைக்கப்படுவதற்கு ஏற்றதொரு கோவிலைக்கட்ட விரும்பினார் (2 சாமு 7:1 தொ) என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. ஆனால் அவர் கோவில் கட்ட வேண்டுமென்பது கடவுளின் திட்டமன்று என்று நாத்தான் உரைத்தார். அதே நேரத்தில் தாவீதின் அரியணை என்றென்றும் நிலைக்கும் என முன்னறிவிக்கிறார் (2 சா 7:8-16). இந்த இறைவாக்கு சங் 89:20 தொ-இல் நீண்டதாகப் பாதுக்காக்கப்பட்டுள்ளது. இதுவே தாவீதுக்கும் அவரது மரபின் மெசியாப்பண்பிற்கும் அடிப்படையாயிற்று. இது பிற்காலத்தில் இஸ்ராயேலை முழுமையாக இறுதியில் விடுவிக்கும் மீட்பர் தாவீதின் குலத்தினின்று எழுவார் என்ற விசுவாசமாக உருவானது. இது காலப் போக்கில் இயேசு கிறிஸ்துவின் மீட்புச் செயலில் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த விசுவாசத்திற்கு அடிப்படையாயிற்று (உரோ 1:3).

தாவீதின் பிற போர்களைப் பற்றி 2 சாமு 8:1 தொ; 10:1-19; 12:26-31 ஆகியவற்றில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இச்சிறு

குறிப்புகளிலிருந்து ஒரு சிறிய இஸ்ராயேலின் பேரரசைத் தாவீது உருவாக்கினார் என்பது தெளிவாகிறது. எகிப்திலும், மெசபொத்தாமியாவிலும் பலவீனமான அரசுகள் இருந்ததால் தாவீதுக்கு இது எளிதில் முடிகின்ற காரியமாக இருந்தது. தாவீது மோவாபியர்களை வெற்றிகொண்டார் (2 சாமு 8:2). முன்னர் நட்புறவு கொண்டிருந்தவர்களோடு ஏன் போர் புரிந்தார் என்றால், ஒருவேளை அரசு மாற்றமும் அதன் விளைவாகக் கருத்து மாற்றமும் ஏற்பட்டிருக்கலாம். மேலும் ஏதோம், தமஸ்கு, ஆராமிய அரசுகளைக் கைப்பற்றித் திரை செலுத்தவைத்தார். ஏதோமியரும், அம்மோனியரும் கட்டாய வேலை செய்யுமாறு வற்புறுத்தப்பட்டனர். சீரியாவிலுள்ள ஆமாத்தின் அரசனான தோயியுடன் உடன்படிக்கை செய்து கொண்டார் தாவீது.

தாவீதின் வாழ்க்கை பற்றிய முழுமையான ஒரு சான்று அல்லது வரலாறு 2 சாமு 9-20 அதிகாரங்களில் வரும் ''குடும்ப வரலாற்றில்'' காணப்படுகிறது. இப்பகுதி தாவீதின் வாழ்க்கையை நேரடியாகக் கண்ட ஒருவரால் எழுதப்பட்டிருக்க வேண்டும். தாவீது எல்லா நிலைகளிலும் சிறப்புற்றிருந்த நேரத்தில்தான் உரியாவின் மனைவியான பத்சேபாவோடு விபச்சாரக் குற்றம் செய்தார். அதனைச் சரிப்படுத்த உரியாவைக் கொலைசெய்யச் செய்தார். செய்த இப்பாவத்திற்காக நாத்தான் அவரைக் கண்டித்தார். அதைத் தொடர்ந்து தாவீதுக்கு வந்தவை எல்லாம் பெருந் தோல்விகளே. பத்சேபாவினால் தாவீதுக்குப் பிறந்த குழந்தை இறந்தது. அம்னோன் தன் சகோதரி தாமாருடன் உறவு கொண்டார் (2 சாமு 13:1 தொ); தன் சகோதரியைக் கெடுத்த அம்னோனை அப்சலோம் கொன்றார் (2 சாமு 13:21 தொ). அப்சலோம் தன் தந்தைக்கு எதிராகவே எழுந்தான். எனவே தாவீது எருசலேமை விட்டுத்தப்பி ஓட வேண்டியதாகிவிட்டது. எபிரோனுக்கு அருகே வாழ்ந்த இஸ்ராயேல் அல்லாத ஒரு சிலரே இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவு அளித்தனரேயொழிய இஸ்ராயேல் மக்கள் அனைவரும் ஆதரவு அளிக்கவில்லை. எனவே யோர்தானுக்குக் கிழக்கே தனக்கு ஆதரவு தந்த உண்மையுள்ள போர் வீரர்களை ஒன்று சேர்த்தார் தாவீது. கிளர்ச்சியை ஒடுக்கியபோது அப்சலோமைக் கொல்ல வேண்டாமென்று கூறியும் அவன் கொல்லப்பட்டான். இந்தக் கிளர்ச்சி பற்றிய விவரிப்போடு பென்யமின் குலத்தைச் சேர்ந்த சேபா பென் பிக்ரி தலைமையில் வடஇனத்தவர் சிலர் கிளர்ச்சி செய்த விவரிப்பும் கொடுக்கப்படுகிறது (2 சாமு 20:1 தொ). இந்த இரண்டு கிளர்ச்சிகளும் தாவீதின் அரசாட்சியும் பேரரசும் மக்களிடையே நிலவிய உள்ளார்ந்த ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்று காட்டுகின்றன. அவரது மகன் சாலமோனின் மரணத்துக்குப் பின்வந்த நிகழ்ச்சிகளும் இதையே வலியுறுத்துகின்றன.

தாவீதின் ஆட்சியில் நிகழ்ந்த வேறுசில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பற்றி 2 சாமு 24-இல் ஒரு எபிரேய மரபு வழிவந்தவையாகக் காண்கிறோம். தாவீது தன் ஆட்சியின் எப்பகுதியில் கணக்கெடுப்பு நடத்தினார் என்பது தெரியவில்லை. வரிகள், போர்ச் சேவை, கட்டாய வேலை ஆகியவற்றை நிர்ணயிக்க இக்கணக்கெடுப்பு பயன்பட்டதால் மக்கள் இதை விரும்பவில்லை. மேலும் கணக்கெடுப்பு என்பது கடவுள் ஒருவனுக்கு அளித்துள்ள நலன்களுக்கு எதிராகத் தன்னைப் பெருமை பாராட்டிக் கொள்வதாகக் கருதினர் இஸ்ராயேல் மக்கள். இதனால் கடவுள் அவரைத் தண்டித்தார் எனவும் அதனால் பஞ்சம், கொள்ளைநோய் முதலியன அவரது நாட்டைப் பெரிதும் பாதித்தன எனவும் கூறப்படுகிறது.

1 அர 1:1 தொ-இல் தாவீது மிகவும் முன்னதாகவே வயோதிகத்தை அடைந்துவிட்டதாகவும், ஆனால் அவரது ஒத்த வயதினர்களான நாத்தான், யோவாபு ஆகியோர் மிகுந்தபலம் பொருந்தியவர்களாக இருக்கின்றனர் எனவும் தெரிகிறது. அதோனியா தாவீதின் மகன்களிலே மூத்தவன். தன்னையே அரசன் போலக் காட்டிக்கொள்ள ஆரம்பித்தான். ஆனால் தாவீது பத்சேபாவுக்கு வாக்களித்ததின்படி சாலமோனை அர

சராக அறிவிக்கிறார். இதனால் அதோனியா வின் முடிசூட்டு விழா தடைபடுகிறது. தாவீது தன் இறுதிவிருப்பமாக யோவாபு, சிமயி ஆகியோரைப் பழிவாங்க வேண்டுமென்று சாலமோனிடம் கூறுகிறார் (1 அர 2;1 தொ).

4. நாளாகமம்: இந்நூல் தாவீது பற்றிக்கூற வருவது சாமுவேல், மற்றும் அரசர்கள் நூல் கள் ஆகிய மூலத்திலிருந்து எடுக்கப்பட்ட வையே. தாவீதிடமிருந்த விரும்பத்தகாத சிலவற்றை நீக்கிவிடுகிறது. தாவீதின் கொள் ளைக்கார வாழ்வு, பத்சேபாவுடன் விபச்சா ரம், உரியாவைக் கொலை செய்தல், குடும் பக் குழப்பங்கள் போன்றவற்றை நீக்கிவிடு கிறது. ஆலயம் கட்டுவதற்கும், அதன் வழி பாட்டுக்கும் தாவீது தயார் செய்தது பற்றிய சில செய்திகளைச் சேர்க்கிறது (1 நாள் 22:1-28:21). குறிப்பாக அவர் லேவியபாடற் குழுவையும் லேவியர் பணிகளையும் உரு வாக்கியது பற்றியும் கூறுகிறது. நாளாகமம் தாவீது கோவிலைக்கட்டாததற்குக் காரணம் அதிக இரத்தம் சிந்திய (போரின்மூலம்) ஒரு மனிதரால் தனது புனித ஆலயம் கட்டப்படு வதைக் கடவுள் விரும்பவில்லை எனக் கூறு கிறது (1 நாள் 22:8 தொ); ஆனால் இத்தகைய தொரு விளக்கம் 2 சாமு 7-இல் காணப்பட வில்லை. ஆலயம் கட்ட எவ்வளவு தூரம் திட்டம் வகுத்தார், மற்றும் பொருட்களைச் சேகரித்தார் தாவீது என்பதை அறுதியிட்டு நாளாகமம் குறிப்பிடவில்லை.

5. மதிப்பீடு: அங்குமிங்குமாகச் சிதறிக் கிடக்கும் ஒரு சில செய்திகளைக் கொண்டு தாவீது எப்படிப்பட்ட மனிதர் என்ற மிகத் தெளிவான, நேர்மையான ஓர் உருவத்தை நாம் தரமுடியாது; மதிப்பீடும் செய்ய முடி யாது. அதே நேரத்தில் அவர், சங்கீதம் காட்டுவதுபோல் (சங் 73), மிக மிகப் பக்தி யான மனிதர் என்று கூறுவதும் தவறு. ஏனெனில் ஒரு சில சங்கீதங்கள் தவிர அவர் அதிகம் எழுதியிருக்க முடியாது. பல இடங் களில் விவரிக்கப்படும் பக்தி தாவீதுக்குப் பொருந்துமானாலும், மற்றவற்றில் வரும் பக்தி இந்த இச்சைமிக்க, கொந்தளிப்புமிக்க வீரனும், கொள்ளைக் கூட்டத் தலைவனு மான தாவீதின்வரையில் பொருத்தமாக இல்லை. மேலும் பல சங்கீதங்களில் கோபம் கொண்டெழும் ஒரு போர் வீரனின் எண்ணங்களே காணப்படுகின்றன. சிறு வயதி லிருந்தே சண்டையிடுதல், பழிவாங்குதல் போன்றவற்றில் சர்வ சாதாரணமாகப் பழ கிய தாவீது ஏனைய கானானிய, மெசபொத் தாமியர்களைப்போல மனித உயிருக்கு எவ் வித மதிப்பும் கொடுப்பதாகத் தெரிய வில்லை. அவர் கோபம் அதிகம் கொண் டிருந்தவராக மட்டுமல்ல, பழிவாங்கும் உணர்ச்சி, ஒரு முறை பார்த்தவுடனே உரியா வின் மனைவியை எடுத்துக் கொள்ளத்தூண் டிய காம உணர்ச்சி, என அவர் பற்றிக் கூறும் நிகழ்ச்சிகள் அவரது பல்வேறுபட்ட உணர்ச்சி களின் வெளிப்பாடாக உள்ளன. அன்றைய மேற்காசிய பண்பாட்டின்படி எண்ணிக்கை யில்லா வைப்பாட்டிகளைத் தாவீதும் கொண்டிருந்தார். ஆனால் அவரது நண்பர் கள் என்று கூறியவர்கள் தொடக்க காலம் தொட்டு இறுதிவரை அவருக்கு மிகவும் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தனர் என் பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதே அளவு அவர்களிடம் தாவீது விசுவாசத் துடன் நடந்து கொண்டாரா என்பது கேள் விக்குரியது. பெலிஸ்தியர்களின் படையில் பணியாற்றியபோது தனது மக்களுக்கு நிச்ச யம் அவர் சார்புடையவராக இருந்திருக்க முடியாது.

ஒரு சாதாரண ஆடு மேய்ப்பவன் நிலையி லிருந்து அரசனாவது என்றால் அது உண்மை யிலே வியக்கத்தக்க நிகழ்ச்சிதான். சூழ் நிலை சந்தர்ப்பங்கள் உண்மையிலேயே அவ ருக்குத் துணையாக அமைந்தன. ஆயினும் தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து, தனக் குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்ட அவரது அரசியல் ஞானத்தைப் புகழாதிருக்க முடியாது. மேலும் தனது அர சியல் அறிவால் இஸ்ராயேல் முழுவதையும் ஒருங்கிணைத்த பெருமை அவருக்கு உரிய தாகும். ஆனால் அந்த ஒற்றுமை நெடுங் காலம் நீடிக்கச் செய்ய ஓர் அடிப்படையை அமைக்க அவராலோ மற்ற எவராலே கண்டு பிடிக்க முடியவில்லை.

தாவீதின் சமயம் அவரது ஒழுக்க வாழ்வோடு இணைந்ததாகும். இரண்டும் ஓர் எளிய, பேராசைமிக்க வீராவேசமிக்க எந்த மனிதனும் பின்பற்றுவது போன்றே இருந்தது. யாவே தன் பக்கம் உள்ளார்; தானும் யாவே பக்கம் இருக்கிறோம்; ஏனெனில் அவரது மக்களுக்காகப் போராடுவது யாவேக்காகப் போராடுவதாகும் என்பதை உறுதியாக நம்பினார். இதைத்தவிர இறைவன் தன்னிடமிருந்து வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை என்று உணர்ந்தார். இந்த இறைவனது கோரிக்கைகளுக்கு என்றும் விசுவாசமுள்ளவராய் இருந்தார்.

தாவீது பற்றிய மிகத் தெளிவான ஒரு வரலாற்று மதிப்பீடு இருக்க வேண்டும். ஏனெனில் எபிரேய மரபில் அவர் இலட்சிய அரசனாகக் காட்டப்படுகிறார். ஆனால் உண்மையிலே சமய அளவிலோ, ஒழுக்க நிலையிலோ, வெற்றியின் அளவிலோ தலைசிறந்த அரசன் என்று கூறமுடியாது. பின்னர் ஏன் அவ்வாறு கூறப்படுகிறார். இதற்கு முன்னோ, அவருக்குப் பின்னோ வந்த எந்த அரசரும் செய்யாத அளவு ஓர் அரசனிடம் எதிர்பார்க்கப்பட்டவற்றைச் செய்தார். இஸ்ராயேல் முழுவதையும் ஒருங்கிணைத்து ''யூதாவின் அரியனை என்றால் அது தாவீதின் அரியணை'' எனுமளவுக்குத் தன் புகழை நிலைநாட்டினார். மேலும் அவர் கொண்ட வெற்றிகளின் காரணமாக வெகுகாலமாக இருந்த பகைவரின் பயம் இஸ்ராயேலருக்கு அற்றுப்போயிற்று. இவ்வாறு அவர் செய்த அளவு வேறு யாரும் சாதிக்கவில்லையாதலால் அவர் இலட்சிய அரசராகக் காட்டப்படுகிறார்.

நாத்தானின் இறைவாக்கில் தாவீதின் அரியணை என்றென்றும் நிலைக்கும் என்று வாக்குறுதி அளிக்கப்படுகிறது. ஆனால் காலப்போக்கில் அது சிறிது சிறிதாக அழிந்து போனது. எனவே தாவீது போன்ற ஒருவர், ஏன் தாவீதை விட மேலான ஒருவர், யாவேயின் அரசை மிகவும் நிலையாக இவ்வுலகில் நிறுவ வருவார் என்ற நம்பிக்கை சிறிது சிறிதாக வளரவாரம்பித்தது.

6. புதிய ஏற்பாட்டில் தாவீது பற்றி வரும் இடங்களிலெல்லாம் ''தாவீதின் மகன்'', ''தாவீதின் வித்து'' என இயேசுவைக் குறிப்பிடுவதாக வருகிறது. பவுல் இயேசுவைத் தாவீதின் வழிவந்தவராகக் காண்பதில் ஒரு நியாயம் இருக்கிறது (உரோ 1:3; 2 திமொ 2:8); ஏனெனில் இயேசுவின் மெசியாத்தன்மையில் அவரது அரச பரம்பரை ஒரு முக்கிய பங்கு வகிப்பதாக அன்றைய திருச்சபை கருதியது. இவ்வாறு இயேசுவை அழைப்பதற்குக் காரணம் மெசியா தாவீதின் மகனாக இருப்பார் என்பது யூதர்களின் உறுதியான நம்பிக்கை (மத 22:45; மாற் 12: 35; லூக் 20:41; யோவா 7:42). அதாவது தாவீதின் மகன் என்று கூறும் எவரும், அதாவது அவரது வழிவந்தவர் எவரும் மெசியா என்றழைக்கத் தகுதியுள்ளவரே என்ற பொருளையே இது உள்ளடக்குகிறது. அதனால் தான் இயேசு பலரைக் குணப்படுத்திய போதும், குருத்து ஞாயிறன்றும் அவரைத் தாவீதின் மகனென்று மக்கள் அழைத்தனர் (மத் 21:9-15).

ஒத்தமை நற்செய்திகள் இயேசு தாவீதைக் குறிப்பது பற்றிய இரு நிகழ்ச்சிகளைத் தருகின்றன. ஒன்று, தாவீது பிரசன்ன அப்பத்தை உண்டதைச் சுட்டிக்காட்டி, தம் சீடர்கள் ஓய்வு நாளில் கதிர்களைக் கொய்து தின்றதை நேர்மைப்படுத்துகிறார் (மத் 12:1-8 இணை). மற்றது மக்கள் மெசியாவைத் தாவீதின் மகன் என்றழைத்தபோது (மத் 9:27 இணை; 15:22 இணை), தாவீது மெசியாவை ஆண்டவர் என்று ஏன் அழைக்கிறார் என்று மக்களைக் கேட்கிறார் (மத் 22:42-45 இணை; சங் 110:1). மத்தேயுவும், லூக்காவும் இயேசுவின் தலைமுறைப்பட்டியலைத் தாவீது வரைக்கும் பின் கொண்டு செல்கின்றனர் (மத் 1:1.17; லூக் 3:31). இயேசு தாவீதின் அரியணையில் அமர்வார் என்று வானதூதர் மரியாளுக்கு அறிவித்ததை லூக்கா எடுத்துக் கூறுகிறார் (லூக் 1:32). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்களின் பட்டியலில் தாவீதைக் குறிக்கின்றது (எபி 11:32).

தாழ்ச்சி *(HUMILITY)*

*1. **தாழ்ச்சியும் அதன் படிவங்களும்:*** திரு நூலில் தாழ்ச்சி என்பது முதலிடத்தில் வீண் ஆடம்பரத்திற்கு எதிரான தன்னடக்கத் தையே குறிக்கிறது. எவ்வித முட்டாள்தன மான போலித்தனமுமின்றி, தன்னடக்கம் உள்ளவன் தன்னையே ஒரு அறிவாளியெனக் கருதுவதில்லை *(பழ 3:7; உரோ 12:3.16; சங் 131:1).* தற்பெருமைக்கெதிரான தாழ்ச் சியே இன்னும் ஒருபடி உயர்ந்தது. மும் முறையும் புனிதமான, எல்லா வல்லமையும் நிறைந்தவர் முன், படைக்கப்பட்டவனும் பாவம் நிறைந்தவனுமான ஒருவன் கொண் டுள்ள மனப்பான்மையே இத்தாழ்ச்சியா கும். தாழ்ச்சியுள்ளவன் தன்னிடமுள்ள எல் லாமே இறைவனிடமிருந்து பெற்றவை என்ற உண்மையை உணர்கிறான் *(1 கொரி 4:7).* தான் ஒரு பயனற்ற ஊழியனென்றும் *(லூக் 17:10),* தான் பாவி என்பதைத் தவிர *(எசா 6:3 தொ; லூக் 5:8)* வேறு எந்த மதிப்பும் இல்லாதவன் *(ஆதி 6:3)* என்றும் கருதுகிறான். தம் அருளைப் பெறச் சிறந்த மனதுடைய *(யாக் 4:6-பழ 3:34)* இத்தகைய தாழ்ச்சியுள்ளவனை இறைவன் மகிமைப் படுத்துவார் *(1 சாமு 2:7 தொ; பழ 15:33).*

எவ்வித ஒப்புமைக்கும் அப்பாற்பட்ட ஆழமான தாழ்ச்சியே இயேசுவினுடையது; நம்மை மீட்கத் தம்மையே அவர் வெறுமை யாக்கினார்; தம் சீடர்களை அவர்தம் சகோத ரர்களுக்கு அன்புடன் பணிபுரிய அழைக் கிறார் *(லூக் 22:26 தொ).* இத்தகைய தம் சீடர் அனைவரின் செயலால் இறைவன் மகிமைப் படுத்தப்படுவார் *(1 பேதுரு 4:10 தொ).*

2. **இறை மக்களின் தாழ்ச்சி:** தம்மைக் காத்துவந்த இறைவனின் எல்லாம் வல்ல சக்தியை அறிந்து அனுபவித்ததின்மூலம் தொடக்கத்தில் இஸ்ராயேல் மக்கள் தாழ்ச்சி யைக் கற்றனர்; அனைத்துக்கும் மேலான இறைவனாக அவரை மட்டுமே ஏற்றுக் கொண்டனர். இறைவனின் செயல்களை வழிபாட்டில் நினைவுபடுத்துவதின் மூலம் இவ்வனுபவத்தை இஸ்ராயேல் மக்கள் உயி ரூட்டமுள்ளதாக வைத்திருந்தனர். தாழ்ச்சி யைப் பயிற்றும் பள்ளியாக இவ்வழிபாடு அமைந்திருந்தது. தான் பெற்ற அனைத்திற் கும் இறைவனுக்குக் கடமைப்பட்ட மன் னன் தாவீது, இறைவனை மகிமைப்படுத்தப் *(சங் 103)* பேழைக்குமுன் நடனமாடிச் சென் றார் *(2 சாமு 6:16.22).* இறைவனைப் போற்றி யும், நன்றி செலுத்தியும், இஸ்ராயேல் மக் கள் தாவீது மன்னனின் தாழ்ச்சியைத் தம் வாழ்வில் பின்பற்றினர்.

போரில் தோல்வியுற்றும் நாடு கடத்தப் பட்டும் கிடைத்த அனுபவத்திலிருந்து கூட் டாகவும், நோயால் வருத்தப்பட்டபோதும் ஏழைகள் ஒடுக்கப்பட்டபோதும் தனித்தனி யேயும் தம் வறிய நிலையை உணர்ந்தனர். இந்த அவலமான அனுபவங்கள் மனிதன் தன்னிலே பலவீனன் என்பதையும், இறைவ னைப் பிரிந்து பாவி படும் அவல நிலையை யும் அவர்கள் கண்டுணரும்படி செய்தன. எனவே மனத்துக்கமுள்ள இதயத்துடன் இறைவனை நோக்குகிறான் மனிதன் *(சங் 51:19).* மேலும் அவன் எல்லாவற்றிலும் இறைவனையே நாடி, நம்பிக்கையுடன் கூடிய, கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்ட தாழ்ச்சியுடன் இறைவனை நோக் குகின்றான்; சங்கீதங்களில் காணும் வேண்டு தல்களை இறைவனிடம் எழுப்பத் *(சங் 25; 106; 103; 131)* தூண்டியதும் இத்தாழ்ச்சியே தான். இறைவனைப் புகழ்வோரும், தம்மை மீட்கும்படி அவரைக் கெஞ்சி மன்றாடுவோ ரும் ''வறியர்'' *(சங் 22:25.27; 34:7; 69:33 தொ)* என்று அனேக இடங்களில் அழைக்கப் பட்டனர். *(''வறியவர்'' என்ற)* இச்சொல் தொடக்கத்தில் அவல நிலையுடைய சமூகத் தினர் என்றே பொருள்படுகிறது. ஆனால் செப்பனியா ஆகமத்தில் மதசார்புடைய பொருள் பெறுகிறது: ''இறைவனைத் தேடு வது தாழ்ச்சியாகிய வறுமையைத் தேடுவதா கும்'' *(செப் 2:3).* யாவேயின் நாளுக்குப்பின் *(இறைவன் தண்டனையிலிருந்து)* ''எஞ்சிய'' இறை மக்கள் ''தாழ்ச்சியும் வறுமையும்'' *(செப் 3:12; மத் 11:29; எபே 4:2)* உடையோ ராய் விளங்குவர்.

பழைய ஏற்பாட்டில் மோசேயும், மிகமிகத் தாழ்ச்சியுடையோராய் எண்ணாகமத்தில்

குறிப்பிடப்பட்டோரும் *(எண் 12:3)*, மரண மட்டும் தாழ்ச்சியுடனும் கீழ்ப்படிதலுடனும் இருந்து இறைவனின் திட்டத்தை நிறைவுறச் செய்த மறைபொருள்மிக்க ஊழியனும் *(எசா 53:4-10)*, இந்தத் தாழ்ச்சியின் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். நாடு கடத்தப்பட்டிருந்த நாட்கள் முடிந்து தம் நாடு திரும்பிய பின், இறை வாக்கினரும், இறைவழி உணர்ந்தோரும் (ஞானிகள்) தாழ்ச்சியைப் போதிப்பார்கள். தாழ்ச்சியான உள்ளத்தையும் மனத்துக்கமுள்ள இதயத்தையும் உடையவனிடம் இறைவன் வாழ்கிறார் *(எசா 57:15; 66:2)*. தெய்வ பயமும், வளமும், புகழும், வாழ்வும் தாழ்ச்சியின் விளைவுகளாம் *(பழ 22:4)*. ''எவ்வளவு உயர்ந்து விளங்குகிறாயோ அவ்வளவு உன்னையே தாழ்த்தினால்தான் இறைவனது ஆதரவைப் பெறுவாய்'' *(சீரா 3:18; காண். தானி 3:39-* ஒப்புக்கொடுத்தல் மன்றாட்டு ''தாழ்ச்சியான உளத்துடனே''). இறுதியாக வந்த இறைவாக்கினர் உரைத்ததுபோல மெசியா ஒரு தாழ்ச்சியுடைய மன்னனாக இருப்பார். கழுதைமேல் ஏற்றப்பட்டு, சீயோனுள் நுழைவார் *(செக் 9:9)*. உண்மையாகவே ''தாழ்ச்சியுடையோரின் இறைவனே'' படைப்புக்கெல்லாம் அரசர், இஸ்ராயேல் மக்களின் இறைவன்.

3. இறை மகனின் தாழ்ச்சி: செக்கரியாவால் அறிவிக்கப்பட்ட இயேசு, தாழ்ச்சியுள்ள மெசியா *(மத் 21:5)*. பேறுபெற்றோராகத் தன்னால் பறைசாற்றப்பட்ட தாழ்ச்சியுடையோரின் மெசியாவே இவர் *(மத் 5:4=சங் 37:11*; கிரேக்கத்தில் ''பிரவ்ஸ்'' - கடவுளுக்குப் பணிந்து நடந்ததால் பொறுமையும் பரிவும் உள்ளவனாக ஆக்கப்பட்ட தாழ்ச்சியுள்ளவன்). குழந்தைகளை ஆசீர்வதித்து அவர்களையே எடுத்துக்காட்டாகவும் தருகிறார் இயேசு *(மாற் 10:15 தொ)*. இத்தகைய சிறியவர்களுக்கே இறைவன் தம்மை வெளிப்படுத்தினார்; இத்தகையோர் மட்டுமே இறையரசில் நுழைய முடியும் *(மத் 11:25; 28:3 தொ)*; இத்தகையோராக மாறவேண்டுமாயின் தாழ்ச்சியும் சாந்தகுணமும் நிறைந்த ஆசிரியரான இயேசுவின் பள்ளியில் சேர வேண்டும் *(மத் 11:29)*; ஆனால் இத்தலைவர் ஒரு மனிதர் மட்டுமல்லர்; பாவிகளை மீட்க வந்த, அவர்களைப் போலவே உடலேற்றுப் பிறந்த ஆண்டவர் *(உரோ 8:3)*. தம் புகழை அறவே தேடாமல் *(யோவா 8:50)*, தம் சீடர்களின் பாதங்களைக் கழுவுமளவுக்குத் தம்மையே தாழ்த்துகிறார் *(13:14 தொ)*. இறைவனுக்கு இணையானவரெனினும் நம் மீட்பிற்காகச் சிலுவையிலே மரணமடையும் அளவுக்குத் தம்மையே வெறுமையாக்கினார் *(பிலி 2:6 தொ; மாற் 10:45; காண் ஏசா 53)*. அவரால் நமக்கு அருளப்பட்ட திரு வெளிப்பாட்டில் நமக்கெல்லாம் காரணமான தேவ வல்லமை வெளிப்படுத்தப்பட்டது மின்றி நமக்கு மீட்பு வழங்கும் இறையன்பும் வெளிப்படுத்தப்பட்டது *(லூக் 19:10)*.

இத்தாழ்ச்சியே (''கிறிஸ்துவின் அடையாளம்'' என்று புனித அகுஸ்தீன் குறிப்பிட்டார்) இறைமகனின் தாழ்ச்சி, அன்பு வடிவான தாழ்ச்சி. புதுக் கட்டளையாம் அன்பை வாழ்வில் கடைப்பிடிக்க இப் ''புதுவகைத்'' தாழ்ச்சியை மேற்கொள்ள வேண்டும் *(எபே 4:2;1பேதுரு 3:8 தொ*; ''எங்கெல்லாம் தாழ்ச்சி உண்டோ அங்கெல்லாம் அன்பு உண்டு'' என்றார் புனித அகுஸ்தீன்). ''ஒருவரோடு ஒருவர் பழகுகையில் மனத்தாழ்ச்சியை ஆடையாக அணிந்து கொள்ளுபவர்'' *(1 பேதுரு 5:5; கொலோ 3:12)* பிறர் தேவைகளைத் தேடுகின்றனர்; இறுதி இடத்தையே தமக்கென எடுத்துக் கொள்கின்றனர் *(பிலி 2:3தொ; 1 கொரி 13:4 தொ)*. தேவ ஆவி விளைவிக்கும் பலன்கள் தொகுப்பில் விசுவாசத்துடன் தாழ்ச்சியையும் கூடவே குறிப்பிடுகிறார் புனித பவுல் *(கலா 5:22தொ)*. இவ்விரு மனப்போக்கும் (இவை இரண்டுமே மோசேயின் சிறப்புக்கூறுகளாக சீராக் 45:4 கூறுகிறது) உண்மையிலேயே ஒன்றோடொன்று தொடர்புடையன; ஏனென்றால் இறைவன்முன் திறந்த மனத்துடனிருக்கும் நிலையையும், இறையருளுக்கும் தேவ வார்த்தைக்கும் நம்பிக்கையுடன் கீழ்ப்படியும் நிலையையுமே இவ்விரண்டும் காட்டுகின்றன.

4. தாழ்ச்சியுடையோரில் இறைவனின் செயல்: தாழ்ச்சியுடையோரை மதித்து, அவர்தம் விருப்பத்திற்கிணங்குகிறார் இறைவன் (சங் 138:6; 113:6தொ). தம் வலுவின்மையிலே மட்டும் பெருமைப்பட்டு (2 கொரி 12:9), வல்லமை மிக்க இறையருளுக்குத் தம்மையே தாராளமாக அளிக்கிறார்கள் இவர்கள். இத்தகையோரில் இறையருளும் வீண்போவதில்லை (1 கொரி 15:10). தாழ்ச்சியுடையோன் தன் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெறுகின்றான் (லூக் 18:14). உலகம் பொருட்படுத்தாத இத்தகையோரின் வழியாகவே எல்லாம் வல்ல இறைவனது ஞானத்தை வெளிப்படுத்துவது இறைவனது விருப்பமாகிறது (1 கொரி 1:25.28 தொ). ஆண்டவர் தமது வழியைத் தயார் செய்ய அனுப்பியவரின் தாழ்ச்சியை நாம் எண்ணிப் பார்க்கலாம்; தனக்குப்பின் வருபவருக்கு இடத்தைக் கொடுத்துவிட்டுப் பின்வாங்குவது ஒன்றே அவரது எண்ணமாயிருந்தது (யோவா 1:27; 3:28 தொ). ஆண்டவரது அடிமையாக மட்டும் இருக்க விழையும் தாழ்ச்சி நிறைந்த ஒரு கன்னியை நம் ஆண்டவரும் தம் மகனுமான இயேசுவுக்குத் தாயாக்கினார் இறைவன் (லூக் 1:38.43).

எல்லா வல்லமையும் அருளும் நிறைந்த இறைவன் அனுப்பும் துன்பங்களைச் சாந்தமுடன் ஏற்போரையும், மரித்த இயேசுவின் பாடுகளில் பங்கேற்போரையும் இறைவன், தாம் குறித்த வேளையில், இயேசுவை உயர்த்தியதுபோல உயர்த்துவார்; இவர்களும் இறை மகனின் மகிமையில் பங்கு பெறுவர் (மத் 23:13; உரோ 8:17; பிலி 2:9 தொ; 1 பேதுரு 5:6-10). தாழ்ச்சியுடைய அனைவருடனும் சேர்ந்து, இவர்களில் அரும் செயல்கள் விளைவித்த ஆண்டவரது அன்பையும் புனிதத்தையும் இவர்கள் என்றென்றும் பாடுவர் (லூக் 1:46-53; திருவெளி 4:8-11; 5:11-14).

பழைய ஏற்பாட்டில், தேவ வார்த்தையானவர், படைத்தவரும் மீட்பருமான இறைவனுக்குத் தாழ்ச்சியுடன் பணிந்துபோகும் பாதையில் மனிதனை நடத்தினார். புதிய ஏற்பாட்டில் தாழ்ச்சியின் சிகரத்தையே அடைய, மனிதனை வழிநடத்த, கடவுளின் வார்த்தை மனிதனானார்; மனிதரில் இறைவனுக்குப் பணிசெய்யவும், இறைவனைப் புகழவும் அதே வேளை மனிதனைக் காக்கவும் தன்னையே தாழ்த்துகின்ற அன்பே தாழ்ச்சியின் சிகரமாகும்.

தாற்றுக்கோல் (GOAD)

ஆடு மாடுகளை விரட்டுவதற்கும், சிறப்பாக மாடுகள் உழும்போது விரட்டுவதற்கும் பயன்படுத்தப்படும் கூரியமுனையுடைய கோல். சில சமயங்களில் தாற்றுக்கோல் முனையில் ஆணி முடுக்கப்பட்டிருந்தது (1 சாமு 13:21). கலப்பையின் கொழுவிலிருந்து சேற்றைச் சுத்தப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது. சம்கார் பெலிஸ்தியரில் அறுநூறு பேர்களைக் கலப்பைக் கொழுவால் கொன்றார் (நீதி 3:31). தாவீது காலம் வரைக்கும் பெலிஸ்தியர்களே இரும்பின் மேல் தனிஆதிக்கம் கொண்டிருந்தனர்.

'தாற்றுக்கோல்' உருவக அணியிலும் பயன்படுத்தப்படுகின்றது (திருவுரை 12:11). 'தாற்றுக்கோலை உதைப்பது உனக்குத்தான் துன்பம்' எனப் பவுல் கேட்ட கூற்று, மிகுந்த ஆற்றல் கொண்ட ஒன்றை எதிர்ப்பது வீண் என்னும் பொருள் கொண்ட கிரேக்கப் பழமொழியைச் சுட்டிக் காட்டுகின்றது (அ.ப. 26:14).

தானத்து சீலோ (TAANATH - SHILOH - சீலோவுக்கு வழி)

எப்பிராயிமின் வடகிழக்கு எல்லையில் மிக்மத்தாத்துக்கும் யானோவாகுக்கும் இடையே உள்ள ஒரு கிராமம் (யோசு 16:6). செக்கேமிற்குத் தென்கிழக்கில் ஒரு மலையில் சுமார் 11 கி.மீ. தொலைவில் நப்லூசுக்குத் தென்கிழக்கில் உள்ள, இக்காலக் கிர்பெத்து தானா ஏல்-போக்காவாக இருக்கலாம். இது பழங்காலத்தில் ஒரு கோட்டை அரணாகப் பயன்பட்டிருக்கலாம்.

தானாக முளைத்து வளரும் விதை - உவமை (மாற் 4:26-29)

வயலிலே ஒருவன் விதைக்கும் விதை தானாக முளைத்து விளைகின்றது. இதே போன்று இறையரசு வளர்ச்சியின் பலவகை நிலைகளைக் கடந்து முதிர்ச்சி அடைகின்றது. ஆனால் இதனிடையே விதைத்தவர் தன் பணியைச் செய்து வருகிறார். எனவே இவ்வுலகப் பணிகளை நாம் தொடர்ந்து ஆற்றுவதுஇறையரசின் வருகையைத் தடை செய்யாது.மேலும் இவ்வுவமையை வேறு விதமாகவும் விளக்கலாம். விதை இறைவனால் உள்ளங்களில் விதைக்கப்பட்ட அவரது வார்த்தை. விதையாகிய வார்த்தை வளர்ந்து இறையரசின் வருகைக்கு விசுவாசிகளைத் தயார் செய்கின்றது.

தானாக்கு (TAANACH)

இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் தெற்கு ஓரத்தில் மெகிதோவுக்குத் தென்கிழக்கில் 8 கி.மீ. தொலைவில் முக்கிய வணிகச் சாலையில் அமைந்திருந்த ஒரு நகர். இது முற்காலத்தில் ஒரு கானானிய நகரம். பிற்காலத்தில் இஸ்ராயேலின் ஒரு லேவியர் நகரமாயிற்று.

கி.மு. மூன்றாம் ஆயிரமாண்டுக் காலத்திலேயே மக்கள் இங்கு வாழ்ந்து வந்தனர். இது எகிப்திய பார்வோன் மூன்றாம் துத்மோசின் 15-ஆம் நூற்றாண்டு ஏடுகளில் முதல் முதல் குறிக்கப்படுகிறது. மெகிதாவோடு சேர்ந்து இதுவும் இஸ்ராயேலர் நாட்டைக் கைப்பற்றுவதை வலிமையாக எதிர்த்தது. இதன் அரசன் யோசுவாவால் தோற்கடிக்கப்பட்டார் (யோசு 12:21). இந்நகரம் இசக்கார் மற்றும் ஆசேர் ஆகிய இனத்தவர்களுக்குரிய பகுதியில் இருந்தாலும் மனாசேக்குக் குறிக்கப்பட்டது (17:11); ஒரு லேவியர் நகரமாகக் குறிக்கப்பட்டது (21:25). ஆயினும் இது கானானிய ஆட்சியிலேயே இருந்தது (நீதி 1:27). தெபோராவும் பாராக்கும் வடகானானியர்களுக்கு எதிராக நடத்திய போரில் தானாக்கு ஒரு மையமாக விளங்கியது (5:19). ஒருவேளை இப்போரின் விளைவாக இஸ்ராயேலர் தானாக்கைச் சேர்ந்த கானானியர்களைக் கட்டாய வேலைக்கு உட்படுத்தியிருக்கலாம் (1:28). சாலமோன் காலத்து ஐந்தாவது நிர்வாகப்பிரிவில் இது ஒரு முக்கிய நகரமாகும். இப்பிரிவில் மெகிதோவும் பெத்சானும் உள்ளடங்கும் (1 அர 4:12). கி.மு. 918-ஐ ஒட்டி, சாலமோன் ஆட்சிக்குப்பின், பார்வோன் சிசாக்கால் இந்நகரம் அழிக்கப்பட்டது.

தேல்-தா-தானாக்கு என்ற மண் மேட்டில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள், கி.மு. 1468-இல் துத்மோசாலும், 1125-இல் யோசுவாவாலும், 918-இல் சிசாக்காலும் கட்டப்பட்ட பகுதிகளையும் மற்றக் கட்டடங்களையும் வெளிக்கொணர்ந்துள்ளன. கி.மு. 1450-ஐ ஒட்டிய பதிமூன்று அக்காதியன் மண்தட்டு ஏடுகள் இங்குக் கலப்பின மக்கள் வாழ்ந்ததற்குச் சான்று கூறுகின்றன. இஸ்ராயேலர் இப்பகுதியைக் கைப்பற்றிய காலத்திலிருந்து பல வழிபாட்டுப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தானியம் (GRAINS)

பாலஸ்தீன வரலாற்றில் தொடக்கத்திலிருந்தே தானியங்கள் முதலில் சமவெளியிலும், பின்னர் மலைப்பகுதியிலும் பயிர் செய்யப்பட்டன. இவற்றில் கோதுமை, வாற்கோதுமை, தினை, சாமை முதலியன அடங்கும் (எசா 28:25; எசே 4:9). குலமூதாதையர்களுக்கு முன்பே பாலஸ்தீனத்தில் தானியங்கள் பயிர் செய்யப்பட்டன. ஆனால் அவர்கள் விவசாயிகள் அல்லர். ஈசாக்கு மட்டும்தான் பயிரிட்டதாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 26:12). இஸ்ராயேலர் பாலஸ்தீனத்தில் குடியேறியபோது அவர்களுக்கு முந்தியிருந்தவர்களிடமிருந்து பயிர் செய்தலைக் கற்றுக் கொண்டனர் (உப 8:8). ''தானியம், திராட்சைரசம்'' என்ற சொற்கள் நிலத்தில் செய்யப்படும் விவசாயம் முழுவதையும் குறிக்க உருவகமாகப் பயன்பட்டுள்ளன (ஆதி 27:28; உப 7:13).

இப்பகுதியில் விளைந்த தானியங்கள் பல விதங்களில் பயன்பட்டன. பலவிதமாக அவற்றைத் தயாரிக்கலாம். கோதுமையைப் பறித்துப் பச்சையாகவே உண்ணலாம் (உப

23:25; மத் 12:1). அதை நெருப்பில் வாட்டி உதிர்த்து உண்ணலாம் (லேவி 2:14; 23:14; 1 சாமு 17:17). கோதுமையில் பெரும்பகுதி மாவாக அரைத்து அப்பம் செய்து உண்ணப் பட்டது. இது உணவு வழக்கில் முக்கிய மானது மட்டுமன்று; புனித தலத்திற்குக் கொண்டு வரப்பட்ட பலிப்பொருட்களிலும் ஒன்றாகும். வாற்கோதுமை, பெரும்பாலும் பச்சையாக இருக்கும்போதே அறுவடை செய்யப்பட்டு விலங்குகளுக்கு உணவாயிற்று. முற்றிய வாற்கோதுமை குதிரைகளுக்கு உணவாயிற்று (1 அர 4:28). அப்பம் செய்யும் மாவாகக் கோதுமை வாற்கோதுமையை விட அதிகம் பயன்பட்டது. ஆனால் அப்பம் செய்வதற்கு வாற்கோதுமை பயன்பட்டது பற்றி விவிலியத்தில் பல குறிப்புகள் உள் ளன (ரூத் 3:15; 2 சாமு 17:28; யோவா 6:9).

தானியேல் (DANIEL - இறைவன் எனது நடுவர், இறைவன் நீதிவழங்குகிறார் அல் லது ஆட்சி செய்கிறார்) - ஆள்

1. தாவீதின் இரண்டாம் மகன். அபிகாயில் வழியாகப் பிறந்தவர் (1 நாள் 3:1). ஆனால் இவர் 2 சாமு 3:3-இல் கிலயாபு என்றழைக்கப் படுகிறார். இவரைப்பற்றி வேறொன்றும் கூறப்படாதது இவர் இளம் வயதிலேயே இறந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது.

2. இத்தாமர் வீட்டைச் சேர்ந்த ஒரு குரு. நாடு கடத்தலிலிருந்து எஸ்ராவோடு நாடு திரும்பியவர் (எஸ் 8:2). நெகேமியாவின் தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக் கையில் கையொப்பம் இட்டவர்களில் ஒரு வராவார் (நெகே 10:6). இவர் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.

3. எசேக்கியேல் தமது நூலில் நோவா, யோபு ஆகியோரோடு சேர்த்து ஒரு தானியே லைக் குறிப்பிடுகிறார் (எசே 14:14.20; 28:3). இப்பெயரைச் சிலவாசகங்கள் தானெல் என்று குறிப்பிடுகின்றன. இவர் அசாதாரண நேர்மையும் ஞானமும் மிக்கவார். இம்மூவ ரும் பெரு வெள்ளத்திற்கு முந்திய நீதிமான்க ளாகத் தெரிகிறது. இங்குக் குறிக்கப்படும் தானியேல் எசேக்கியேல் காலத்தவராக இருக்க முடியாது. ஒருவேளை இராஸ்-ஸம்ராவில் கண்டுபிடிக்கப்பட்ட உகாரித்து ஏடுகளில் காணப்படும் ''அக்ட்'' என்பவ ரைப்பற்றிய கதைகளில் வரும் தானெல் என்ற அரசனோடு ஏதாவது ஒருவகையில் தொடர்புடையவராக இருக்கக் கூடும். இந்த ஏடுகள் கி.மு. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந் தவை. இந்தத் தானெல் நீதிமானும் ஞானி யும் ஆவார். இவர் விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் சார்பாக நீதிவழங்கியவர் என்று கூறப்படுகிறது. இதன் எதிரொலி யைச் சூசன்னா கதையில் காணலாம் (தானி 13). தன்னை ஞானி என்று கருதிஅகந்தை கொண்ட தீர் நகரை, ''தானியேலைவிட நீ அறிவாளிதான்'' என்று இறைவன் எள்ளி நகைப்பதாக எசேக்கியேல் கூறுகிறார் (எசே 28:3). இந்தப் பெனீசிய - கானானியப் பாரம்பரியம், யூதர்களின் யூபிலிநூல் தானி யேலை ஏனோக்கின் மாமனாராகக் குறிப் பிடுவதை ஒரு வேளை விளக்கலாம்.

4. ஒரு நூலுக்குப் பெயர் வழங்கிஅதன் கதைத் தலைவராக விளங்குபவர். எசேக்கி யேல் குறிக்கும் புராணத்தலைவனான தானி யேலோடு, தானியேல் நூலின் கதைத்தலை வரைக் குழப்பக்கூடாது. இவர் ஓர் இறை வாக்கினர் அல்லது காட்சியாளர். இஸ்ராயே லின் மேல்குலத்தைச் சேர்ந்தவர். இவர் யூதாவின் அரசனான யோயாக்கிமின் மூன் றாம் ஆண்டு (கி.மு. 605), பாபிலோனிய மன்னன் நெபுகத்னேசரால் கைதியாக்கப் பட்டு, பாபிலோனுக்குக் கொண்டு செல்லப் பட்டவர் (தானி 1:2;2 அர 24:14-17; 2 நாள் 36:6 தொ). வரலாற்று ஆசிரியர் யோசிபஸ், தானியேல் யூதாவின் கடைசி அரசரான செதேக்கியாவின் அரச குடும்பத்தைச் சேர்ந் தவர் என்று கூறுகிறார். நாடு கடத்தப்பட்ட வேறு சில யூத இளைஞர்களோடு சேர்ந்து பாபிலோனிய அரசவையில் பணிபுரிவதற் காகக் கல்விபெற்றார். அப்போது அவருக் குப் பெல்தசாட்சர் என்ற பெயர் கொடுக்கப் பட்டது (தானி 1:1-7). அப்போது தனது எபிரேய சமயத்துக்குப் பிரமாணிக்கமாக உள்ளார். இவரோடு சேர்ந்து மூன்று யூத

இளைஞர்கள் உணவு பற்றிய தங்கள் சமய ஒழுங்குகளுக்குப் பற்றுறுதியாக உள்ளனர். கனவுகளுக்கும் காட்சிகளுக்கும் விளக்கம் அளிப்பதில் தானியேலின் தனித்திறமை அவருக்குப் பாபிலோனியப் பேரரசில் உயர் பதவி அளிக்கிறது. பாபிலோனிய மாகாணத்திற்கு ஆளுநராகிறார். நெபுகத்னேசரின் ஆட்சிக் காலத்தில் ஞானிகளுக்குத் தலைவராக நியமிக்கப்படுகிறார் (2:48) பெல்தசாட்சர் காலத்தில் பேரரசின் மூன்றாம் நிலையில் ஆட்சியாளராகிறார் (5:29). பாபிலோனியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் வந்த சைரஸ் என்ற பாரசீக அரசன் காலத்திலும் தானியேல் உயர்வாக மதிக்கப்படுகிறார் (1:21). இந்த அரசனின் மூன்றாம் ஆண்டுவரை (கி.மு. 536-535) தானியேல் நாடு கடத்தப்பட்ட நிலையிலேயே இருந்தார். முதலாம் தாரியுவின் காலத்தில் பேரரசின் 120 பிரிவுகளில் மூன்றில் ஒரு பகுதிக்குத் தலைவராக விளங்கினார் (6:2-3). இவ்வாறு பாபிலோனியப் பேரரசின் இறுதி அரசர்கள் காலத்திலும் மேதிய - பாரசீகப் பேரரசின் முதல் அரசர்கள் காலத்திலும், அதாவது கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் தானியேல் பாபிலோனில் வாழ்ந்தார் என்று நூலிலிருந்து அறிகிறோம்.

நூலில் தானியேல் தனது மூதாதையரின் சமயத்துக்குப் பிரமாணிக்கமுள்ள யூத இளைஞனாகவும், இறைவனுடைய அருளால் மெசபொத்தாமியாவின் அறிவர்களையெல்லாம்விட ஞானமிக்கவாராகவும் தோன்றுகிறார். இந்தஞான, சமய, நேர்மை சேர்ந்த ஒன்றிப்பு வெளிப்பாட்டுக் காட்சிகளைப் பெற அவரைத் தகுதியுள்ளவராக்குகிறது. நூலின் கதைத்தலைவனான தானியேல் இறைவனில் அசைக்கமுடியாத விசுவாசமும், கொடுமைகளுக்கு முன் மேலான இரக்கமும் கொண்டவர். இந்தச் சிறப்பான பண்புகள் பழைய புராணத்தலைவரான தானெவிடம் காணப்பட்டதாக அறிவதற்கில்லை. இவற்றை நூலின் ஆசிரியர் தன் கதைத் தலைவனுக்கு உரியதாகக் காட்டுகிறார்.

தானியேல் நூல் (DANIEL, BOOK OF)

1. *முன்னுரை:* கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் நான்காம் அந்தியோக்கு எப்பிபான் என்ற கிரேக்க அரசன் யூதர்களை அவர்களது சமயத்தின் பொருட்டுக் கொடுமைப்படுத்தினான். அப்போது ஒரு பெயர் தெரியாத யூதர், தானியேல் என்ற புனை பெயரில் ஒரு விநோதமான, மனதைக்கலக்கும் நூலை எழுதினார். இந்நூல் விநோதமானது. ஏனெனில், இந்நூல் மிட்ராஸ், வெளிப்பாடு ஆகிய சிக்கலான இலக்கிய வடிவங்களில் எழுதப்பட்டுள்ளது. இந்த இலக்கிய வடிவங்கள் நமது பண்பாட்டிற்கு மாறானவை. இதுவும் நூல் கற்பிக்கும் போதனையும் நமக்கு மனக் கலக்கம் அளிக்கலாம்.

2. *பெயரும் கதைத்தலைவரும்;* காண்க. தானியேல் (4) - ஆள்.

3. *நூலின் பிரிவுகள்:* வசதிக்காக, இவ்விடத்தில் நூலின் பிரிவுகளைப் பற்றிய குறிப்பைத் தருகிறோம். கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் உள்ள தானியேல் நூலை, அது இருக்கும் வ்டிவில் மூன்று பாகமாகப் பிரிக்கலாம்.

முதல் பாகம்: அதி 1-6. இப்பகுதி தானியேலின் ஆறு தீரச் செயல்களைக் கொண்ட நிகழ்ச்சியுரையாகும்.

இரண்டாம் பாகம்: அதி 7-12. இப்பகுதி வெளிப்பாட்டு இறைவாக்குக் காட்சிகள் நான்கினைக் கொண்டதாகும்.

மூன்றாம் பாகம்: அதி 13-14. இப்பகுதி தானியேலின் தீரச் செயல்கள் பற்றிய கூடுதல் நிகழ்ச்சியுரைகளைக் கொண்டது.

இந்நூல் மூன்று மொழிகளில் காணப்படும் வாசகங்களின் தொகுப்பாகும். எபிரேய மொழியில் 1:1-2:3; 8:1-12:27; அரமேயிக் மொழியில் 2:4-3:23; 3:91(24)-7:28; கிரேக்க மொழியில் 3:24-45; 3:46-90; 13-14. எபிரேய விவிலியம் எபிரேய அரமேயிக்கு மொழிகளில் உள்ள பகுதிகளை மட்டும் கொண்டுள்

ளது. எழுபது நூல், தியோடோசியன் வாசகம், வுல்காத்தா வாசகம் ஆகியவை மூன்று மொழிகளிலும் உள்ள பகுதிகளைக் கொண்டுள்ளன. இந்த மொழிப் பிரச்சினையைப் பின்பு பார்ப்போம்.

4. வரலாற்றுப்பின்னணி: இந்நூலின் இலக்கியத் தன்மையையும் செய்தியையும் புரிந்துகொள்ள, நூலின் வரலாற்றுப் பின்னணியை அறிந்திருப்பது அவசியமாகும். கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அசீரியர்கள் வட இஸ்ராயேலாகிய சமாரியாவை வென்று அதைத் தங்கள் பேரரசின் ஒரு மாநிலமாக்கினர். கி.மு.7-ஆம் நூற்றாண்டின் முடிவில் மேதியா அரசனான சையக்கரஸ் என்பவனோடு சேர்ந்து பாபிலோனிய நாபோபோலசார் அசீரியப் பேரரசை முழுவதும் அழித்துப் புதிய பாபிலோனியப் பேரரசை நிறுவினான். இந்த அரச மரபில் வந்த நெபுகத்னேசர் தனது அரசை விரிவாக்கினான். கி.மு. 587-இல் யூதாவை வென்று தன் ஆட்சிக்குள் சேர்த்துக் கொண்டான். அவனுக்குப்பின் வந்த மன்னர்கள் பாபிலோனிய அதிகாரத்தைப் படிப்படியாகச் சீர்கெட விட்டுவிட்டனர். இந்நிலையில் ஏற்கெனவே மேதியாவை வென்று விட்ட பாரசீக அரசனான பெரிய சைரஸ் கி.மு. 539-இல் பாபிலோனியப் பேரரசை அதன் கடைசி அரசன் நாபோனித்து மற்றும் அவன் மகன் பேல்சாட்சர் ஆகியோரிடமிருந்து கைப்பற்றினான். இதற்குப்பின் பாரசீகர்கள் பழங்கால மேற்காசியாவை நெடுங்காலத்திற்கு ஆட்சி செய்தனர். இந்த மரபில் முதலாம் தாரியு (கி.மு. 522-486) சிறந்து விளங்கினான். கி.மு. 331-இல் அலக்சாந்தர் மேற்காசியாவில் கிரேக்க அதிகாரத்தை நிறுவினார். கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீனம் எகிப்திய அலக்சாந்திரியாவைத் தலைநகராகக் கொண்ட கிரேக்க அரச மரபைச் சேர்ந்த தோலமியர்களால் ஆட்சி செய்யப்பட்டது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் சிரியாவிலுள்ள அந்தியோக்கியாவைத் தலைநகராகக் கொண்ட செலூக்கிய மரபினால் பாலஸ்தீனம் ஆட்சி செய்யப்பட்டது.

நெபுகத்னேசர் யூதாவை வென்றபோது உயிர்தப்பிய யூதர்களில் பெரும்பாலோர் கி.மு. 597-582-க்கு இடையில் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டனர். கி.மு. 539-க்குப்பின் யூதர்கள் தங்கள் தாயகம் திரும்ப சைரஸ் அனுமதித்தான். பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்களின் எண்ணிக்கை மெதுவாக ஆனால் உறுதியாக வளர்ந்தது. பாரசீகர், தோலமியர் ஆகியோரின் ஆட்சியில் யூதர்கள் வரையறைக்குட்பட்ட அரசியல் சுயாட்சியும் முழுச்சமய சுதந்தரமும் கொண்டிருந்தனர். ஆனால் செலூக்கிய மரபைச் சேர்ந்த நான்காம் அந்தியோக்கு எப்பிபான் என்ற அரசன் அரசியல், கலாச்சாரக் காரணங்களுக்கிடையே பாலஸ்தீனத்தைக் கிரேக்க மயமாக்க முற்பட்டான். இதற்காக யூதர்கள் தங்கள் மூதாதையரின் சமயத்தைக் கைவிடவும் புறஇன வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கவும் அவர்களைக் கட்டாயப்படுத்தினான்; கொடுமைப்படுத்தினான்; பலரைக் கொன்று குவித்தான். இதன் விளைவு அவனது அரசுக்கு எதிராக யூதர்களிடையே ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி எழுந்தது. இதுபற்றி மக்கபேயர்கள் நூல்களில் வாசித்தறியலாம். இக்காலத்தில் யூத சமயத்திற்கும் புற இன மதங்களுக்கும் இடையே நடந்த போராட்டமே தானியேல் நூலின் வரலாற்று, அரசியல், சமயப் பின்னணியாகும். இப்போராட்டத்தை இறைவன் வெகுகாலமாக முன்னறிந்திருந்ததாகவும், அவரது சொல்லால் அது அனுமதிக்கப்பட்டதாகவும் தானியேல் நூல் காட்டுகிறது. பிறஇனச் சமயங்களைவிட இஸ்ராயேலின் சமயத்தின் மேன்மையையும், 'அரசர்களை' விலக்கி மாற்று அரசர்களை நிலைநிறுத்துபவருமான (தானி 2:21) இஸ்ராயேலின் இறைவனே வரலாற்றின் உண்மையான ஆண்டவர் என்றும், இறுதியில் எல்லாவற்றையும் உள்ளடக்கும் அவரது அரசைப் பூமியில் நிறுவுவார் என்றும் எடுத்துக் கூறுகிறது.

5. திருமுறைப் பட்டியலில் தானியேல் நூல்: எபிரேய விவிலியம் ''நூல்கள்'' என்ற தனது மூன்றாம் தொகுப்பில் எஸ்தர், எஸ்ரா ஆகிய நூல்களுக்கிடையில் தானியேல்

நூலைக் கொண்டுள்ளது. எழுபதுநூல், தியோடோசியன், வுல்காத்தா வாசகங்கள் இந்நூலை இறைவாக்கினர் தொகுப்பில் எசேக்கியேலுக்குப் பின் கொண்டுள்ளன. எபிரேயப் பாரம்பரியப்படி இறைவாக்கி னர், நூல்களைத் தொகுப்பது கி.மு. 200-ஐ ஒட்டி இறுதி செய்யப்பட்டதாகத் தெரி கிறது. தானியேல் நூல் இத்தொகுப்பில் இடம் பெறாமை, இத்தொகுப்பு செய்யப்பட்ட போது இந்நூல் எழுதப்பட்டு மக்களால் இறையூக்கம் பெற்றதாக ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்று காட்டுகிறது. இக்கருத்துக் குத் தால்மூது பாரம்பரியமும் ஆதரவு அளிக் கிறது. கி.பி. 90-ஐ ஒட்டி யாம்னியாவில் நடந்த யூதப் பொதுக்கூட்டம், ''நூல்கள்'' என்ற மூன்றாம் தொகுப்பை உறுதி செய்வ தில்தான் அக்கறை கொண்டதாகத் தெரி கிறது. கி.மு. 180-ஐ ஒட்டித் தோன்றிய சீராக் நூல் தானியேலை அறிந்திருக்கவில்லை. ஆனால் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் மத்தி யில் தோன்றிய மக்கபேயர் நூல் தானியேல் நூலிலிருந்து எடுத்துக் காட்டிக்கூறுகிறது (1 மக் 2:59-60). இவற்றிலிருந்து தானியேல் நூல் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றி, யூத மக்களிடையே திருமுறை நூல்களைச் சேர்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதன் விளைவாக எபிரேயப் பாரம்பரியம் நூல்கள் என்ற தொகுப்பில் தானியேல் நூலைச் சேர்த்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இந்நூல் உலக முடிவின் காலத்தைக் கணிக்க முயல்வதாலும், பிற் கால யூதர்கள் வெளிப்பாட்டு இலக்கியங்கள் பால் காட்டிய எதிர்ப்பு மனப்பான்மையா லும், யூதர்கள் இந்நூலைப்பற்றி அவ்வளவு ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை. இதற்கு மாறாகக் கிறிஸ்துவ பாரம்பரியம் இந்நூலின் இறை ஏவுதல் தன்மை, இறை வாக்குத்தன்மை, மதிப்பீடு ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளத் தயங்கியதில்லை.

எழுபது நூல்களுக்குக் காரணமான அலக் சாந்திரியா யூதர்கள் விவிலிய நூல்கள் தோன் றியதாகக் கருதப்பட்ட காலம், இலக்கிய வடிவம் ஆகிய அடிப்படையில் தங்கள் திருமுறைப்பட்டியலை வரிசைப்படுத்தினர். அதற்கேற்றபடி திருமுறைநூல்களின் வரிசை யைத் திருத்தி அமைத்தனர். அதன் விளைவு தானியேல் நூல் இறைவாக்கினர் நூல்கள் தொகுப்பில் இடம் பெற்றது. இதையே கிறிஸ்துவ பாரம்பரியம் ஏற்றுக்கொண் டது. தியோடோசியன், வுல்காத்தா வாசகங் கள் இப்பாரம்பரியத்தை ஏற்று, தானியேல் நூலை இறைவாக்கினர் நூல்கள் தொகுப்பில் ஏற்றுக் கொண்டன. இனி இரண்டு பாரம்பரி யங்களுக்குமான வாசக வேறுபாட்டைப் பார்ப்போம்.

6. உப பகுதிகள்: கிரேக்க, வுல்காத்தா வாசகங்கள், எபிரேய, அரமேயிக்கு வாசகத் தில் காணப்படாத சில பகுதிகளை அதிக மாகக் கொண்டுள்ளன. இவை அசரியாவின் செபம் (தானி 3:24-45), உரைநடையை இடை யுரையாக முன்கொண்ட மூன்று இளைஞர் கள் போற்றுரைப் பாடல் (3:46-90), சூசன்னா வின் கதை (அதி.13), பெல்தேவதையின் பூசாரிகள், நாகப்பாம்பு பற்றிய கதைகள் (அதி.14) ஆகிய பகுதிகளாகும். இவற்றில் எதுவும் மூலநூலைச் சேர்ந்ததாகத் தெரிய வில்லை. ஆனால் செமித்தியத் தோற்றம் கொண்டவையாகத் தெரிகிறது.

தொடக்ககாலத்தில் தானியேல் நூல் இரண்டுக்கு மேற்பட்ட வடிவங்களில் மக்க ளிடையே பழக்கத்தில் இருந்ததாகக் கருத இடமிருக்கிறது. தானியேலைப் பற்றி எந்த விவிலியப் பாரம்பரியத்திலும் காணப் படும் கதைகளைவிட, அதிகமாகக் கதைகள் இருந்ததாகக் கும்ரான் குகைகளில் கண்டெடுக்கப் பட்ட கையெழுத்துப் பிரதிகளிலிருந்து அறி கிறோம். தானி 3:22-28-ஐப்பற்றிய கும்ரான் வாசகம் எபிரேய வாசகத்துக்குச் சரியானதாக வும், எதுவும் விட்டுவிடப்படவில்லை என் றும் காட்டுகிறது. ஆகவே இக்கூடுதல் பகுதி கள் தனிப்பகுதிகளாக, கிரேக்க மொழி பேசிய யூதர்களிடையே தானியேல் பற்றிய பாரம்பரியங்களாக வழக்கில் இருந்திருக்க வேண்டும். இவற்றைக் கிரேக்க யூதர்கள், சூழ்நிலைக்குப் பொருத்தமுடையதாக இவை காணப்படும் இடங்களில் சேர்த் திருக்க வேண்டும் என்று கருதலாம். தொடக்க

காலத்திருச்சபை விவிலியத்தை அதன் கிரேக்க வடிவில் தனது திருமுறைப்பட்டிய லில் ஏற்றுக் கொண்டதால், கத்தோலிக்கத் திருச்சபை இந்தக் கூடுதல் பகுதிகளையும் இறையூக்கம் பெற்றனவாக ஏற்றுக் கொண் டது.

7. மொழிப் பிரச்சினை: ஒரே நூலில் இரு மொழிகளில் வாசகங்கள் கலந்து காணப்படு கின்றன. இது யூத இலக்கியங்களுக்குப் புறம் பானதன்று. இதற்குக் கும்ரான் ஏடுகளில் சான்று காணலாம். ஆயினும் தானியேலின் மூல நூலில் காணப்படும் எபிரேய, அரமே யிக் மொழிக்கலப்பு இன்னும் விடுவிக்கப் படாத பிரச்சினையே ஆகும். நூலை அக்கதா மிட்ராஸ் (அதி.1-6), வெளிப்பாடு (அதி 7-12) என இரு பாகங்களாகப் பிரித்தால் மொழி வேறுபாடு ஓரளவே இப்பிரிவுக்கு ஒத்துள்ளது. ஏனெனில் மிட்ராஸ் பகுதி 1:1-24 எபிரேயத்திலும், 2:4-6:29 அரமேயிக்கி லும், வெளிப்பாட்டுப்பகுதி அதி.7 அரமே யிக்கிலும், அதி.8-12 எபிரேயத்திலும் உள் ளன. இப்பிரச்சினையை விடுவிக்கப்பல முயற்சிகள் நடந்துள்ளன. அ) நிகழ்ச்சி யுரைப் பகுதிகள் அரமேயிக்கிலும் காட்சிப் பகுதிகள் எபிரேயத்திலும் எழுதப்பட்டுத் தனித்தனித் தொகுப்புகளாக வழக்கில் ஏற் கெனவே இருந்திருக்க வேண்டும். பிற்காலப் பதிப்பாசிரியர், முதல் கதையை எபிரேயத்தி லும், முதற் காட்சியை அரமேயிக்கிலும் மொழி பெயர்த்து இரண்டு தொகுப்புக் களையும் சேர்த்துப் பதிப்பித்திருக்க வேண் டும். ஆ) நூல் முழுவதும் எபிரேய மொழி யில்தான் எழுதப்பட்டது. ஆனால் அதி.2-7 என்ற பகுதி தவறிப்போனதால் அதை ஈடு செய்ய அதன் அரமேயிக்கு மொழிபெயர்ப்பு இங்குச் சேர்க்கப்பட்டது. இ) ஒருவேளை 9:4-20-இல் வரும் செபத்தைத் தவிர நூலில் மற்றப் பகுதிகள் அனைத்தும் அரமேயிக்கில் எழுதப்பட்டு, யூதர் திருமுறைப்பட்டிய லில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நாட்டுப்பற் றுக் காரணமாகவும் தொடக்கமும் பின்பகுதி யும் எபிரேயத்தில் மொழி பெயர்க்கப்பட் டிருக்கலாம். இக்கருதுகோள், தவறான மொழிபெயர்ப்பாகவும் கடினமாகவும் அமைந்துள்ள பகுதிகளை விளக்க உதவி யாக உள்ளதாகத் தெரிகிறது. ஈ) அதி.8-12-இல் வரும் காட்சிகளின் ஆசிரியர் ஐந்து கதைகளும் (அதி.2-6) ஒரு காட்சியும் (அதி.7) அடங்கிய முன் தொகுப்புக்கு ஒரு முன்னுரை (அதி.1) அமைத்து, பின்பு அதை எபிரேயத்தில் மொழிபெயர்த்திருக்க வேண் டும். சரளமான ஓட்டத்திற்காக இரண்டா வது கதையின் முதல் சில வரிகளையும் (2:1-4) எபிரேயத்தில் மொழி பெயர்த்திருக்க வேண்டும். இந்நூலின் முன் வரலாறு,தோற் றம், மொழிப் பிரச்சினை ஆகியவை சிக்க லானவை. விடை காண்பது எளிதன்று. பொதுவாக ஏற்றுக் கொள்ளத்தக்க விளக் கத்தை ஆய்வாளர்களால் காண இயல வில்லை.

உபதிருமுறைப் பகுதிகளான கூடுதல் பகுதி கள் கிரேக்க மொழியில் மட்டும் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றிற்குச் செமித்திய அடிப்படை இருந்திருக்கலாம்.

8. வாசகங்களும் பதிப்புக்களும்: தானி யேலின் எபிரேய அரமேயிக்கு வாசகத்தைப் பொறுத்தமட்டும், காலத்தால் முந்திய சான்று கும்ரான் முதல் குகையில் கண் டெடுக்கப்பட்ட துணுக்குகளாகும். இவை கி.மு. 50-க்கும் கி.பி. 50-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகும். ஒரு சில வேறுபாடுகளைத் தவிர அவை பெருமள வில் எபிரேய விவிலியத்தோடு ஒத்துப் போகின்றன. இது கி.மு. முதலாம் நூற்றாண் டிலேயே இந்நூல் நிலையான வாசகவடிவம் எடுத்திருக்க வேண்டும் எனச் சுட்டுகிறது. ஆனால் கும்ரான் சான்றுகள் துணுக்குகளா கவே உள்ளன. மற்றப் பகுதிகளில் எபிரேய - அரமேயிக்கு வாசகம் பழுதுபட்டுள்ளது; வேறுபாடுகள் உள்ளன. இவை எபிரேய விவிலியப் பாரம்பரியத்தில் காணப்படாத வைகளிலிருந்தோ விளக்கவுரை வாசகங்களி லிருந்தோ ஏற்பட்டிருக்கலாம். எபிரேய விவிலியத்தில் காணப்படும் தெளிவின்மை புரிந்து கொள்ளக்கூடியதாகவே உள்ளது. ஏனெனில் ஏற்கெனவே இருந்த பாரம்பரியங் களைச் சேர்த்து மூல நூலை, கி.மு. 166-ஐ

ஒட்டி ஓர் ஆசிரியர் தொகுத்திருப்பதாகத் தெரிகிறது. அதற்குப்பின்னும் மறுபதிப்பு வேலை தொடர்ந்து நடந்து, நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் இந்நூல் இறுதி வடிவம் எடுத்திருக்க வேண்டும்.

கிரேக்க வாசகத்தைப் பொறுத்தமட்டும், எழுபது நூல் வாசகம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலேயே தோன்றியிருக்க வேண்டும். இப்பாரம்பரியத்தின் ஒரு கையெழுத்துப் பிரதி தான் கிடைத்துள்ளது. இது சுற்றி வளைத்துக் கூறும் தன்மையுடையது. விரிவாக்கும் தன்மையுடையது. இதனால் இவ்வாசகத்தை ஒதுக்கி விட்டு, தியோடோசியன் வாசகத்தைத் தொடக்க காலத் திருச்சபையும் திருச்சபைத் தந்தையரும் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இதிலிருந்து, எழுபதுநூல் வாசகத்தைத் தவிர, எபிரேய வாசகத்துக்குப் பிரமாணிக்கமான மற்றக் கிரேக்க மொழி பெயர்ப்புகளும் இருந்தன எனத் தெரிகிறது. இவற்றின் திருந்திய வடிவமே கி.பி 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தியோடோசியன் வாசகமாகும். இது புதிய மொழிபெயர்ப்பன்று. இது திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வுல்காத்தா - இலத்தீன் வாசகம், எபிரேய அரமேயிக்கு வாசகத்திலிருந்து எரோனிமுவால் மொழி பெயர்க்கப்பட்டது. இது எபிரேய விவிலியத்தோடு ஒன்றாயிராவிட்டாலும் அஃதோடு நெருங்கிய தொடர்புடையது. முதல் பகுதியில் சில இடங்களில் தியோடோசியன் வாசகத்தை எரோனிமு பின்பற்றுகிறார். உபதிருமுறைப் பகுதிகளைத் தியோடோசியன் வாசகத்திலிருந்து மொழி பெயர்க்கிறார்.

9. ஆசிரியரும் காலமும்: அண்மைக்காலம் வரை, யூத கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் தானியேல் நூலை உண்மையான இறைவாக்குகளைக் கொண்ட ஒரு வரலாற்று நூலாகவும், நூலின் கதைத்தலைவரும் கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவருமான தானியேல் இந்நூலை எழுதியதாகவும் கருதி வந்துள்ளன. இக்கருத்துக்கு நூலும் ஓரளவு இடம் அளித்திருப்பதாகத் தெரிகிறது; கி.மு 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்தேயச் சூழ்நிலை பற்றிய பல குறிப்புகள் நூலில் காணப்படுகின்றன. அவை, மாய வித்தைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், அரண்மனையில் மேல்குடி இளைஞர்கள் பயிற்சி பெறுதல், அரசர்களின் அர்ப்பணிக்கப்பட்ட பெரும் சிலைகள், தீச்சூளையாலும் சிங்கங்களாலும் தண்டித்தல், ஆப்பு வடிவ ஏடுகளோடு சில பெயர்களும் (பெல்தசாட்சர், சதிரக்கு, மேசாக்கு, ஆபதுநெகோ 1:7) சில விவரிப்புகளும் (இறக்கையுடைய விலங்குகள் 7:4, தூரா சமவெளி, 3:1) கொண்டிருக்கும் ஒற்றுமை ஆகியவையாகும். நூலில் காணப்படும் இருமொழி வாசகங்கள், எபிரேயர்கள் தாங்கள் நாடு கடத்தப்பட்ட நாட்டில் அரமேயிக் மொழிக்கு மாற்றியமைத்ததற்குச் சான்று கூறுவதாக உள்ளது. நூலில் காணப்படும் ஒற்றுமை, அதி.1-7-க்கும் அதி 8-12க்கும் உள்ள இணையமைப்புத்தன்மை, காட்சிகளிலும் கோட்பாடுகளிலும் காணப்படும் வளர்ச்சியும் முன்னேற்றமும், சொற்களிலும் நடையிலும் காணப்படும் ஒத்ததன்மை ஆகிய யாவும், உபதிருமுறைப்பகுதிகள் உட்பட்ட முழு நூலுக்கும் கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தானியேலே ஆசிரியர் ஆவார் என்று சுட்டுவதாக உள்ளன. கிரேக்க மொழிப்பகுதிகள் மொழி பெயர்ப்பாகவும் முரண்பாடுகள் சுற்றி வளைத்தும் விளக்கப்பட்டன. இந்தப் பாரம்பரியச் சான்றுகள் யாவும் வலிமையுடையன அல்ல; கோட்பாடு அடிப்படை கொண்டவையுமல்ல. இவை யாவும் நாம் கொண்டிருக்கும் வடிவில் நூல் தோன்றிய காலத்தையோ ஆசிரியரையோ பற்றி அதிகம் கூறவில்லை. கதையில் வரும் தலைவரைப் பற்றியே கூறுகின்றன. இப்பாரம்பரியத்தை இப்போது வெகு சிலரே ஏற்றுக்கொள்வர்.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலேயே இப்பாரம்பரியத்துக்கு மாறான கருத்து கூறப்பட்டது. இதன்படி 4-ஆம் அந்தியோக்கு எப்பிபான் காலத்தில் (கி.மு. 175-165) பெயர் தெரியாத ஒருவரால் எழுதப்பட்டதாகும் இந்நூல். இக்கருத்து விரைவில் மறைந்து போய் கி.பி.

17-ஆம் நூற்றாண்டில் உயிர் பெற்றது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து இது தானியேல் நூல் பற்றிய பொதுக் கருத்தாக மாறியது. ஆனால் பல வடிவம் எடுத்தது.

தானியேல் நூல் பிற்காலத்தில் தோன்றியது என்பதற்குக் கூறப்படும் காரணங்கள் பலவும், ஒருமுகப்படுத்தும் தன்மையுள்ளன வாக உள்ளன. அவற்றில் சில: 1) எபிரேய விவிலியத்தில் அதன் மூன்றாம் தொகுப்பான ''நூல்களில்'' தானியேல் காணப்படுகிறது. இது, திருமுறைப்பட்டியலில் இறைவாக்கு நூல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவு செய்தபோது தானியேல் நூல் இன்னும் எழுதப்பட்டிருக்கவில்லை என்றும் பிற்காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் சுட்டுகிறது. 2) மக்கபேயர் காலத்திற்குமுன் தானியேலையும் அவரது செயல்களையும் இறைவாக்குகளையும் பற்றி எதுவும் அறியப்பட்டதாகத் தெரியவில்லை. 1 மக் 2:59-60-இல் தானியேல் நூல் எடுத்துக் கூறப்படுகிறது. முதலாம் மக்கபேயர் கி.மு. 100-ஐ ஒட்டி எழுதப்பட்டதாகும். ஏனோக்கிலிருந்து ஒனியாசின் மகன் சீமோன் என்ற பெரிய குருவரை இஸ்ராயேலின் பெரியோர்களைப் போற்றும், கி.மு. 180-ஐ ஒட்டி எழுதப்பட்ட சீராக் நூல் தானியேலைக் குறிக்கவேயில்லை. இது தானியேல் நூல் கி.மு. 180-க்குமுன் எழுதப்படவில்லை என்று காட்டுகிறது.

3) நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேய மொழி நெகேமியா காலத்திற்கும் மிகப் பிந்தியதாகும்; அரமேயிக் மொழி கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தியதாகும். இந்நூலில் 15 பாரசீகச் சொற்களும் 2 கிரேக்கச் சொற்களும் பயன்பட்டுள்ளன. இவை இந்நூல் பாரசீகர் காலத்திலோ கிரேக்கர் காலத்திலோ இறுதிவடிவம் எடுத்திருக்கலாம் என்று சுட்டுகின்றன. சமயச் கருத்துக்களை எடுத்துக்கூறும் சொற்கள் நாடு கடத்தலுக்கு மிகப்பிந்தியவையாகும். 9:2-20-இல் தவிர, மற்றப் பகுதியில் இறைவன் யாவே என்றழைக்கப்படவில்லை. மாறாக இடவாகு பெயராக ''வானம்'' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறார். ''நிமித்திகர்கள்'' என்ற பொருளில் ''கல்தேயர்கள்'' என்ற சொல் பயன்பட்டுள்ளது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில்தான் இச்சொல் இப்பொருள் பெற்றது.

4) நூலில் பல வரலாற்றுத் தவறுகள் காணப்படுகின்றன. இவை இந்நூலின் ஆசிரியர் கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கமுடியாது என்று காட்டுகின்றன. புதிய பாபிலோனியர் காலத்து வரலாறு பற்றிய ஆசிரியரது அறிவு குறைவானதே. அதுவும் பல தவறுகள் கொண்டதாகத் தெரிகிறது. ஆசிரியர் புதிய பாபிலோனியர்களின் காலம் பற்றிய தெளிவில்லாத வாய்மொழிப் பாரம்பரியங்களைச் சார்ந்து எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு யோயாக்கிமின் மூன்றாம் ஆண்டு (கி.மு. 605) எருசலேமின் முற்றுகையும் நாடு கடத்தலும் நிகழ்ந்ததாக தானி 1:1-இல் குறிக்கப்படுகின்றன. இதற்கு வரலாற்றில் சான்று இல்லை. அதி.5-இல் பெல்சாட்சர், நெபுகத்னேசரின் மகன் என்றும் பாபிலோனின் கடைசி அரசன் என்றும் குறிக்கப் பெறுகின்றான். ஆனால் நாபோனித்து என்பவன்தான் பாபிலோனின் கடைசி அரசனாவான். இவனது மகனே பெல்சாட்சராவான். தகப்பனோடு கூட்டுப் பகர ஆட்சியாளனாக இருந்தான் என்று அறிகிறோம். இவனுக்கும் நெபுகத்னேசருக்கும் எந்த இரத்த உறவும் இருந்ததில்லை. மற்றப் பாபிலோனிய அரசர்களை ஆசிரியர் அறிந்திருப்பதாகக் காட்டவில்லை. பெல்சாட்சருக்குப்பின் மேதியாவைச் சேர்ந்த தாரியு ஆட்சிக்கு வந்ததாகக் குறிக்கப்படுகிறது. இவன் யார் என்பது பற்றி வரலாற்றில் வேறொன்றும் தெரியவில்லை. நாபோனித்தின் ஆட்சிக்குப் பின் சைரஸ் ஆட்சி தொடங்கியதாகப் பாபிலோனிய ஏடுகள் காட்டுகின்றன. இவ்வாறு நூலில் காணப்படும் வரலாற்றுத் தவறுகளைக் கூறிக்கொண்டே போகலாம். இவை நூலின் ஆசிரியர் கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்ற கருத்துக்கு முரணாக உள்ளன.

5) தானி 11-இல் வரும் காட்சிகள் பற்றிய ஆய்வுகள் 4-ஆம் அந்தியோக்கு எப்பிபான்

எகிப்தின் மேல் படையெடுத்த கி.மு. 167-க்கும் அவன் மரித்த 164-க்கும் இடைப் பட்ட காலம் பற்றி ஆசிரியர் அளிக்கும் செய்திகள் ஓரளவு துல்லியமாக உள்ளதைக் காட்டுகின்றன. 167-இல் அந்தியோக்கு ஆல யத்தைப் பங்கப்படுத்தியதும் அவன் செய்த கொடுமைகளும் விரிவாக உள்ளன (9:27; 11:30-35). ஆனால் அத்தகைய கொடியவ னுக்கு உறுதியாக வந்திருக்க வேண்டிய கொடிய முடிவைப்பற்றி நூல் பொது வாகவே குறிக்கிறது. இது இந்நூல் எழுதப் பட்டபோது அவன் ஏற்கெனவே இறந்திருக்க வில்லை என்று காட்டுகிறது. ஆகவே அவன் மரிக்குமுன்னே, அதாவது 166 அல்லது 165-இல் எழுதப்பட்டிருக்கலாம்.

இவ்வாறு ஆசிரியரது வரலாற்று நோக்கம் பாபிலோனிய அரசர்களின் காலத்து நிகழ்ச்சி கள் பற்றித் தெளிவற்றதாகவும், ஆனால் செலூக்கிய மரபுற்றித் தெளிவுள்ளதாகவும் இருக்கிறது. இது இந்நூல் தோன்றிய காலம் கிரேக்கர் காலமாகும் என்று சுட்டுகிறது.

6) இளவரசியின் திருமணம் (11:17), வெற்றிபெறாத அரசியல் உடன்பாடுகள் (11:8) போன்ற ஏராளமான வரலாற்று விவ ரங்களைக் கொண்டிருக்கும் தானியேலின் காட்சிகள் முந்திய இறைவாக்கினர்கள் நடையிலிருந்து முழுவதும் வேறுபடுகின் றன. இத்தகைய சிறு விவரங்கள் இறை வெளிப்பாட்டின் பொருளாக இருந்திருக் குமா என்பது ஐயத்திற்குரியது, பொருத்தமற்ற தாகவும் இருக்கலாம். ஆனால் இந்நூலின் இலக்கிய வடிவம் இறைவாக்கு இலக் கியத்தைவிட கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் நிலவிய வெளிப்பாட்டு இலக்கியத்திற்கு நெருங்கியதாகும்.

7) போதிக்கப்படும் கோட்பாடுகளான வானதூதர் இயல், தூதர்களின் பெயர்கள், அலுவல்கள் பற்றிய அக்கறை, உயிர்ப்பு, தீர்ப்பு, வருங்கால வாழ்வு ஆகியவை கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் இந்நூல் தோன்றிய தாகச் சுட்டுகின்றன.

இக்காரணங்களுக்காகத் தானியேல் நூல் மக்கபேயர் காலத்தைச் சேர்ந்தது என்றும், கி.மு. 166-ஐ ஒட்டி எழுதப்பட்டதாகவும் இப்போது பொதுவாக ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த அடிப்படை யில்தான், நூலின் பொருளை நன்குணர, நூலுக்கு விளக்கம் கூற வேண்டும்.

10. நூல் தோன்றிய வரலாறு: தானி 2-6-ஐப் பொறுத்தமட்டும் இப்பகுதி நாடு கடத்தப் பட்ட காலத்து, முக்கியமான நாபோனித் ஆட்சியின், பழம் பாரம்பரியங்களை அடிப் படையாகக் கொண்டது என்று விவிலியத் துக்குப் புறம்பான சான்றுகளிலிருந்து தெரி கிறது. இப்பாரம்பரியங்கள் பாபிலோனில் வாழ்ந்த யூதர்களிடையே தோன்றி வளர்ந் திருக்க வேண்டும். இவர்கள் நாபோனித்தின் ஆட்சியில் தங்கள் நிலையையும் தொடர்பு களையும் நன்கு மனதில் பதித்துக் கொண் டிருக்க வேண்டும். நூலின் இந்த மூலத்தோற் றம் தானி 2-6-இல் காணப்படும் வலுவான பாபிலோனியப் பண்பை விளக்கவல் லது. பிற்காலத்தில் இப்பாரம்பரியங்கள் பாலஸ்தீனத்திற்கு எடுத்துச் செல்லப்பட் டிருக்க வேண்டும். கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்துக்குத் திரும்பிய யூதர்கள் தானி 2-6-இல் வரும் பாரம்பரியங்களைக் கொண்டு வந்திருக்கலாம். பிற்கால ஆசிரியர் ஒருவர், ஒருவேளை தானி 7-12-க்குக் காரணமான ஆசிரியர், இப்பாரம்பரியங்களை ஏற்று மறு பதிப்புச் செய்து நூல் முழுவதுக்கும் ஒற் றுமை அளித்திருக்க வேண்டும். இவர்தான் விவிலியத்தில் குறிக்கப்படாத நாபோனித் தின் பெயரை அகற்றி, நன்கு அறியப்பட்ட நெபுகத்னேசரின் பெயரைப் புகுத்தியிருக்க வேண்டும்; நிகழ்ச்சியுரைப் பகுதிக்குத் தானி யேலைத் தலைவனாக ஆக்கியிருக்க வேண் டும். தானி 7-12-ஐ எழுதிய மக்கபேயர் காலத்து ஆசிரியர்தான், தானி 1-6-இலும் நூல் முழுவதும் காணப்படும் காலவரைத் திட்டத்திற்குப் பொறுப்பாவார். இதே ஆசிரி யர்தான் தானி 1-6-இல் வரும் முற்கால நிகழ்ச்சியுரைகளை மீண்டும் பதிப்புச் செய்து, அவர் காலத்தில் நிலவிய சில கருத்துக்களையும் சொற்றொடர்களையும் சேர்த்திருக்க வேண்டும்.

தானி 7-12 மக்கபேயர் காலத்தைச் சேர்ந்த தாகும். இப்பகுதியின் ஆசிரியர் தமது காட்சிக்குப் பாபிலோனில் தோன்றிய பாரம்பரியங்களை முன்னுரையாக அமைத்தார். இவற்றில் சில நாபோனித்தின் ஆட்சியின் நிகழ்ச்சிகளோடு நெருங்கிய தொடர்புடையன. ஆசிரியர் முந்திய பாரம்பரியங்களை மீண்டும் பதிப்பு வேலை செய்து, நூலுக்கு ஓரளவு ஒற்றுமை அளிக்கிறார். அப்படிச் செய்யும்போதும் அவற்றின் மூலத்தோற்றத்தின் எல்லாச் சுவடிகளையும் நீக்கிவிடவில்லை. ஆனால் நூல் முழுவதற்கும் ஒரு கற்பனையான காலவரைத் திட்டத்தை அளித்தார். இக்கருத்து தானியேல் நூலில் காணப்படும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்; விவிலியத்துக்குப் புறம்பான ஏட்டுச் சான்றும் கொண்டதாகும். தானி 2-6க்கு உண்மையான வரலாற்று அடிப்படை என்ன என்று இப்போதுள்ள ஆய்வுகளிலிருந்து அதிகம் கூற முடியாது. இப்பிரச்சினைக்கு வருங்காலத்திய கண்டுபிடிப்புகளும் ஆய்வுகளும் தெளிவு அளிக்கலாம்.

11. **நூலின் ஒற்றுமை:** இந்நூலுக்கு ஆசிரியர் எத்தனை பேர்? ஒருவரா, பலரா? சமய நோக்கிலும் ஆர்வத்திலும் படிப்பினை நோக்கிலும் நூல்முழுவதும் ஒருமுகத் தன்மை கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பலர் எழுதியிருந்தால் அவர்கள் யாவரும் ஒரே சிந்தனைப் போக்கைக் கொண்டிருக்க வேண்டும். ஒரே ஆசிரியர்தான் நூலை எழுதினார் என்றால், முதல் பகுதியில் வரும் கதைகளுக்குப் பழைய எழுதப்பட்ட மூலங்கள் பயன்பட்டிருப்பதை விளக்குவது கடினம்.

எபிரேய விவிலிய வாசகத்தைக் கதைகள் (அதி.1-6), காட்சிகள் (அதி.7-12) என இரு பாகங்களாகப் பிரிக்கலாம். கதைகள் உயிர்ச் சித்திரமானவை; எளிய பண்புகளுடையவை; மனிதாபிமானப் பண்புடையவை. காட்சிகள் சிக்கலானவை, தெளிவில்லாதவை; வெளிப்பாட்டுத் தன்மையுடையவை. மேலும் நூலின் சில பகுதிகள் படர்க்கையிலும் சில பகுதிகள் தன்மை ஒருமையிலும் உள்ளன. சில பகுதிகள் எபிரேயத்திலும், சில பகுதிகள் அரமேயிக்கிலும் உள்ளன. இவற்றைக் கவனத்தில் கொண்டு இந்நூல் ஒரு கலப்பு இலக்கியம் என்று ஆய்வாளர்கள் கருதினார்கள் என்றால் நாம் வியப்படைய வேண்டியதில்லை. ஆனால், இவர்கள் இந்நூலைப்பிரிக்கும் விதமும் அதற்கு அளிக்கும் காரணங்களும் நம்மை மலைக்கச் செய்யும். இவற்றிற்குப் போதிய அடிப்படையிருப்பதாகத் தெரியவில்லை.

நூலைக் கதைகள், காட்சிகள் என்று பிரிப்பதும், அரமேயிக், எபிரேயப் பகுதிகளாகப் பிரிப்பதும், படர்க்கை தன்மை நிலையில் பிரிப்பதும் ஒன்றோடொன்று ஒத்துப் பொருந்தவில்லை. இது, இந்நூல் ஒரே ஆசிரியரின் வேலைப்பாடு என்று ஏற்றுக்கொள்ளத் தூண்டுகிறது என்று அறிஞர் சிலர் கூறுவர். இந்த ஒரே ஆசிரியர் தமது முறையையும் நடையையும் மாற்றியிருக்கலாம் என்றாலும் ஒருமைப்பாடுடைய இலக்கியத்தைப் படைத்துள்ளார். கதைப்பகுதிகள் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் கொடுமைப்படுத்தப்பட்ட யூதர்களுக்குப் பொருள் பொதிந்த பொருத்தமுடையனவாகும்; இதைக் கருத்தில் கொண்ட சூழ்நிலைக்குப் பொருத்தமாக அமைந்துள்ளன. இரண்டாம் கதையின் செய்தியும் முதல் காட்சியின் செய்தியும் ஒரே தன்மையுடையன என்பது எல்லா ஆய்வாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். ஆகவே கதைகளும் காட்சிகளும் மிக நெருக்கமாகவும் உறுதியாகவும் பிணைக்கப்பட்டுள்ளன. மேலும் காட்சிகள் அந்தியோக்குவின் கொடுமைகளைப் பற்றியதாகும். இவை யாவும் நூலின் ஒற்றுமையைச் சுட்டுகின்றன. தானியேல் என்ற பெயரைச் சுற்றிப் பல பாரம்பரியங்கள் இருந்திருக்க வேண்டும். இவை பாபிலோனியச் சூழ்நிலையில் தோன்றியிருக்கலாம். ஆனால் நூலில் பயன்பட்டிருக்கும் கதைகளை ஒரே ஆசிரியரே தேர்ந்தெடுத்து, அவற்றை முழுவதும் திருத்தி அமைத்துத் தாம் மனதில் கொண்டிருந்த குறிப்பிட்ட நோக்கை வெளிப்படுத்துகிறார். இவரே காட்சிகளுக்கும் ஆசிரியராவார். ஆகவே நாம் கொண்டிருக்கும்

வடிவில் தானியேல் நூல் ஒரே ஆசிரியரால் ஒரு குறிக்கோளுடன் திருத்தியமைக்கப் பட்டுப் பதிப்பிக்கப்பட்ட ஒற்றுமையுடைய நூலாகும்.

12. ஆசிரியரது நோக்கம்: *நாம் கொண் டிருக்கும் வடிவில் தானியேல் நூல் மக்கபேயர் காலத்தில் தோன்றியதாகும். அப்போது அந் தியோக்கு யூதத்துவத்தை முழுவதும் அழிக்க முயன்று கொண்டிருந்தான். உண்மையான சமயத்தின் பழக்கங்களைக் கடைப்பிடித் தால் சித்திரவதையும், சாவும் காத்திருந்தன (1 மக் 1:60-64; 2 மக் 6-9). வேதநூல்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன (1 மக் 1:56 தொ). சமயத்தின் பொருட்டுக் கொடுமைகள் தொடங்குவதற்கு முன்பே பல யூதர்களுடைய விசுவாசம் தளர்ச்சியுற் றிருந்தது (1 மக் 1:11). கிரேக்கப் புறமதத்துடன் நெருங்கிய தொடர்புடைய, கிரேக்கர்களின் உயர்வாகத் தோன்றிய உலகம் சார்ந்த, கலாச் சாரத்தால் பல யூதர்கள் ஈர்க்கப்பட்டிருந்த னர். மோசேயின் சட்டத்தைக் கைவிட்டு அந்தியோக்குவின் சமயத்தை ஏற்றுக் கொள்ள, பலர் இரத்தம் சிந்தி மரணம் வரை கொடுமைப்படுத்தப்பட்டனர். அவன் ஆட்சி யில் அனுபவித்த கொடுமைகள் இறைவ னது பராமரிப்பு இருப்பதுபற்றிப் பலரை ஐயுறச் செய்திருக்க வேண்டும். இந்நிலை யில், ஆசிரியர் தமது காலத்துச் சகயூதர்கள் தங்கள் மூதாதையரின் சமயத்திற்குப் பிரமா ணிக்கமாய் இருக்க உற்சாகப்படுத்துவதை யும், மறை சாட்சிகளுக்கு ஆறுதல் அளிப்ப தையும், அவர்களது விசுவாசத்தை உறுதிப் படுத்துவதையும் முதன்மையான நோக்க மாகக் கொண்டு இந்நூலை எழுதினார். இதற் காக முந்திய காலத்து யூதர்களின் மாதிரியை எடுத்துக் கூறுகிறார். இவர்கள் தங்கள் சமயத் துக்குப் பிரமாணிக்கமாய் இருந்ததால், தங்கள் விசுவாசத்திற்காகப் புறமதத்தினராலும் மதிக்கப்பட்டனர். முதல் பகுதி முழுவதும் (அதி.1-6) இறைவன் மனித காரியங்களில் கொண்டிருக்கும் ஆதிக்கத்தையும், இஸ்ரா யேல்பால் அவர் காட்டும் தனிச்சிறப்பான பராமரிப்பையும் வலியுறுத்துகின்றது. ஆல யத்தின் பரிசுத்த பாத்திரங்களைப் பங்கப் படுத்தியவர்களை இறைவன் எப்படித் தண் டித்தார் என்று ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார் (5:2-23). இது அந்தியோக்குவுக்குக் காத்திருக் கும் அவல கதியை மக்களுக்கு நினைவு படுத்தியது (1 மக் 1:21-23; 6:12 தொ). இரண் டாவது பகுதியில் (அதி. 7-12) இத்துன்ப மிக்க வரலாறு முழுவதும் எப்படி இறைவ னால் முன்னோக்கப்பட்டிருந்தது என்றும், இதே இறைவன் யூதர்களைக் கொடுமைப் படுத்தியவர்களை அழிப்பார் என்றும், அவ ருக்குப் பிரமாணிக்கமாய் இருப்பவர்கள் மேல் தமது முடிவில்லாத மகிமையைப் பொழிவார், இறையரசை நிறுவுவார் என் றும் காட்டுகிறார்.*

இவ்வாறு பிறமதத்தினரின் வெறும் ஞானத்தைவிட இஸ்ராயேலரின் இறை ஞானத்தின் மேன்மையை எடுத்துக் காட்டவும், தமது மக்களைக் கொடுமைப்படுத்துபவர் களிடமிருந்து காப்பாற்றக்கூடிய, காப்பாற் றும் இறைவனது அளவில்லாத ஆற்றலை எடுத்துக் காட்டவும் ஆசிரியர் அக்கறை காட்டுகிறார். அவருடைய காலத்து மக்க ளுக்கு மட்டுமின்றி, எல்லாக்கால மக்களுக் கும் ஆசிரியர் அளிக்கும் நிலையான, மதிப் பீட்டுச் செய்தி, இறைவனே வரலாற்றின் ஆண்டவர், அவர் நாடுகளின் எழுச்சிகளை யும் - வீழ்ச்சிகளையும், எல்லா மனிதர்கள் மேலும் தமது யாவும் கடந்த யாவும் உள் ளாக்கும் ஆட்சியை நிறுவுவதற்குத் தயாரிப் பாகப் பயன்படுத்துகிறார் என்பதே.

13. இலக்கிய வடிவங்கள்: *ஆசிரியர் தமது நோக்கை எடுத்துக் கூறுவதற்கு, நமது காலத் திற்கு விநோதமான, இரு இலக்கிய வடிவங் களைப் பயன்படுத்துகிறார். அக்கதா மிட் ராஸ், வெளிப்பாடு ஆகிய இந்த இரு இலக் கிய வடிவங்களைப் பயன்படுத்துகிறார்.*

அதி 1-6; 13-14-இல் அக்கதா மிட்ராஸ் இலக்கியம் பயன்பட்டுள்ளது. இது உண்மையான வரலாற்றை அடிப்படையாகக் கொண்டோ, கொள்ளாமலோ, ஓர் ஒழுக்க போதகத்தைப் படிப்பிக்கச் சுதந்தரமாகக் கதை வடிவில் எடுத்துக் கூறப்படும் நிகழ்ச்சி

யுரையாகும். தானியேலின் திரச்செயல்கள் பற்றிய கதைகள் இத்தன்மையுடையன. இவற்றைக் கண்டிப்பான வரலாற்று நிகழ்ச்சி களாக எடுத்துக் கொள்ள முடியாது. ஆசிரி யர் வரலாறு எழுதும் நோக்கம் கொண் டிருக்கவில்லை என்பது இப்போது ஆய்வுகளி லிருந்து தெளிவாகிறது. இந்த அளவில் அவர் வாலாற்றுத் துல்லியமற்ற கூற்றுக் களைக் கூறினால், அவர் தவறு செய்து விட்ட தாக அவரைக் குற்றம் கூற முடியாது. இக் கதைகளில் வரும் தானியேல் என்ற ஆள் வரலாற்றைச் சேர்ந்தவர்தானா அல்லது யூத நாட்டுப் பாடல்களின் படைப்பா என்பது பற்றி ஒன்றும் உறுதியாகக் கூற முடியாது. ஏனெனில் தானியேலைச் சுற்றிப் பொதுப் பாணிக் கதைகள் பல படிப்படியாக எழுந் திருந்தன. இவற்றை ஆசிரியர் பயன்படுத்தி யிருப்பதாகத் தெரிகிறது. இறையூக்கம் பெற்று எழுதும் ஆசிரியருக்கும் அவரது வாசகர் களுக்கும் தானியேல் வரலாற்று ஆளா இல் லையா என்பது அவ்வளவு முக்கியமுடைய தன்று. ஏனெனில் தானியேல் வரலாற்று ஆளாய் இருந்தாலும், அவர் வாய்மொழிப் பாரம்பரியத்திலும் நூல் தோன்றிய வரலாற்றி லும் மறைந்து போயிருப்பார். நூலில் காணப்படும் தானியேல் கட்டுக்கதைப் பண் புடையவரே. ஏனெனில் பாபிலோன் ஆட் சிச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, செலூக் கிய ஆட்சிக்காலம் பற்றி ஒரு ''மாதிரி வரலாற்றை'' ஆசிரியர் படைக்கிறார். இதன் வழியாகத் தாம் விரும்பிய ஆன்மிகச் செய் தியை வலியுறுத்துகிறார். இது போன்றே நாபோனித்துக்குப் பதிலாக நெபுகத்னேசரை யும் கோப்பிரியவுக்குப் பதிலாக மேதிய னான தாரியுவையும் ஆசிரியர் பயன்படுத்து வது அவருக்கு முக்கியத்துவமிக்க மாற்றமா கத் தோன்றவில்லை. அவரது முக்கிய நோக் கம் அந்தியோக்கு எப்பிபானின் ஆட்சியில் கொடுமைப்படுத்தப்பட்ட யூதர்களுக்குத் தெளிவும், ஆறுதலும் அளித்து அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகும். இந்த நோக்கை அக்கதா மிட்ராஸ் இலக்கிய வடிவில் ஆசிரியர் எய்துகிறார்.

நூலின் இரண்டாம் பகுதி (அதி. 7-12) வெளிப்பாட்டு இலக்கிய வடிவைச் சேர்ந்த தாகும். இவ்வடிவ ஆசிரியர்கள் நற்காலம் பற்றிய இறைவனது வாக்குறுதிகள் உறுதி யாக நிறைவேறும் என்ற விசுவாசத்திலும், அவரது எல்லாவற்றையும் உள்ளடக்கும் பராமரிப்பில் கொண்டிருந்த நம்பிக்கையி லும் வேரூன்றியவர்கள். இதைத் தங்கள் காலத்தில் வழக்கில் இருந்த இலக்கிய வடி வில் எடுத்துக் கூறுகின்றனர். இதன் விளை வாகத் தங்கள் காலமக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தினர். அவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டபோது, இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்க ஊக்கு வித்தனர். இப்பகுதி வெளிப்பாட்டு இலக்கியத்தின் வளர்ச்சியடைந்த எடுத்துக் காட்டாகும். இப்பகுதி விசித்திரமான காட் சிகள், வானதூதர் வழியாக வரும் மறை பொருள் மிக்க வெளிப்பாடுகள் ஆகியவற் றைக் கொண்டது. இது கடந்தகால வரலாறு, நிகழ்கால வரலாறு, மெசியா அரசு நிறுவப் படுதல் ஆகியவற்றை அடையாள முறை யில் எடுத்துக்கூறுகிறது. இந்த இலக்கிய வடிவம் வெகுதூரத்தில் உள்ள காலத்தைச் சேர்ந்த ஒருவரை இந்த வெளிப்பாட்டைப் பெறுபவராகப் பயன்படுத்துவதால், ஆசிரி யருக்கு முந்திய கடந்தகால நிகழ்ச்சிகள் வருங்கால நிகழ்ச்சிகளாகக் காட்டப்பட முடிகிறது. இந்த முறை ஒரு ''பக்தி மிக்க மோசடியாக'' நமக்குத் தோன்றலாம். இது நமது காலத்து அளவு முறைகளில் தீர்ப்பிடு வதின் விளைவாகும். ஆனால் ஆசிரியர் தமது காலத்து அளவு முறைகளுக்கு நேர்மை குன்றாது செயல்படுகிறார். அவர் தமது செய்தியைப் படைக்கவில்லை. இதை வெளிப்பாட்டு இலக்கியப் பாரம்பரியத்தி லிருந்து பெற்றார். இப்பாரம்பரியத்தைத் தான் படைத்த கதாபாத்திரமாகிய தானியேல் வழி யாக அளிக்கிறார். ஆசிரியர் யார், கருத்துக் கள் யாருடையவை போன்றவற்றால் தடை செய்யப்படாமல், தமது செய்தியை மிகவும் தேவைப்பட்டவர்களுக்கு அளிக்கிறார். ஆனால் இச்செய்தியை, அவர் முன்னறி வித்த உலக முடிவு காலம் வரும்வரை, எல்லாக்காலத்தையும் சேர்ந்த இறை மக்க ளின் விசுவாசத்திற்கு உறுதுணையாக இருக்கு மென்று சிறிதாவது ஊகித்து இருப்பாரா?

பரந்த பொருளில் இந்த இலக்கிய வடிவத்தை ஒருவகை இறைவாக்கு இலக்கியமாகக் கருதலாம். ஏனெனில் இது இறைவனது பெயரால் அவரது நோக்கில் வரலாற்று விளக்கம் அளிக்கிறது.

மிட்ராஸ், வெளிப்பாட்டு இலக்கிய வடிவங்கள் அந்தியோக்கு கொடுமைப்படுத்திய காலத்தில் யூதமக்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தன. ஆசிரியர் தமது போதகத்தை நேரடியாகப் போதித்திருந்தால், அது அவருக்கும் பிறருக்கும் பெரும் கொடுமைகளைக் கொண்டு வந்திருக்கும். இந்த இலக்கிய வடிவங்களில் மறைமுகமாகப் போதித்த போது, அது அந்தியோக்குவின் அதிகாரிகளின் கவனத்திலிருந்து தப்பியது எனலாம்.

14. **காலவரைத் திட்டம்:** நூலில் வரும் குறிப்புகளிலிருந்து பின்வருமாறு காலவரைத்திட்டம் செய்யலாம். கி.மு.

605-562: நெபுகத்னேசரின் ஆட்சிக்காலம். அவனது ஆட்சியின் முதலாம் ஆண்டு தானியேல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுகிறார். வெளிப்பாட்டு இலக்கியத்தின் தந்தை யென அழைக்கப்படும் எசேக்கியேல் செயலாற்றிய காலம்.

550-540: வெளிப்பாட்டு இலக்கியத்தின் இடைப்பட்ட வடிவமான உப எசாயாவின் (எசா 24-27) ஆசிரியர் செயலாற்றிய காலம்.

555-539: பாபிலோனின் கடைசிஅரசனான நாபோனித்தும் அவன் மகன் பெல்சாட்சரும் ஆட்சிசெய்த பாபிலோனியப் பேரரசின் இறுதி ஆண்டுகள்.

539-530: பெரிய சைரசும் பாரசீகப் பேரரசும் (539-331).

522-485: பாரசீகப் பேரரசின் மூன்றாம் மன்னன் முதலாம் தாரியு.

520-350: வெளிப்பாட்டு இலக்கியத்தின் இடைக்காலக் கட்டத்தில், செக்கரியா, யோவேல் செயலாற்றிய காலம்.

336-323: அலக்சாந்தர் 331-இல் பாரசீகத்தை வென்றான். 323-இல் அவனது மரணத்துக்குப்பின் அவனது தளபதிகளுக்குள் அரசு பகிர்ந்து கொள்ளப்படுகிறது. செலூக்கு, செலூக்கிய அரசமரபைத் தோற்றுவிக்கிறான் (305-163).

175-164: யூதர்களைக் கொடுமைப் படுத்திய 4-ஆம் அந்தியோக்கு எப்பிபான் எதிர்க் கிறிஸ்துவுக்கு மாதிரி.

170-170: பெரிய குரு ஓனியாஸ் கொல்லப் படுதல்.

170-164: மக்கபேயர் காலத்தில் அந்தியோக்கு யூதர்களைக் கொடுமைப்படுத்திய ''ஆண்டுகளின் வாரம்.'' இது 170-இல் ஓனியாஸ் கொல்லப்படுவதில் தொடங்கி 164-இல் யூதா மக்கபேயரால் ஆலயம் மீண்டும் அர்ப்பணிக்கப்படுதலோடு முடிகிறது.

167-164: 167-இல் ஆலயம் பங்கப்படுத்தப் படுதலோடு தொடங்கும் ''ஆண்டுகளின் அரைவாரம்.'' இக்காலத்தில் அந்தியோக்கு ஆலயத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்தான். அங்குப் ''பாழாக்கும் சின்னத்தை'' அமைத்தான். ஆலயத்தில் பலிகளும் காணிக்கைகளும் நின்று விட்டிருந்தன. இக்காலத்தில்தான் தானியேல்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

15. **நூலின் திட்டம்:**

I. பாபிலோனில் தானியேல், அவரது தோழர்கள் ஆகியோரின் வீரச்செயல்கள் (1:1-6:28).

1) 1:1-21: நெபுகத்னேசரின் அவையில் எபிரேய இளைஞர்கள்; உணவுச் சோதனை.

2) 2:1-59: கலப்புச் சிலைபற்றி நெபுகத்னேசரின் கனவும், விளக்கமும்.

3) 3:1-97: பொற்சிலையும் தீச்சூளையில் தானியேலின் தோழர்களும்.

3:1-23: பொற்சிலையை வழிபட எபிரேய இளைஞர்கள் மறுத்தலும், தண்டனையும்,

3:23-45: தீச்சூளையில் அசரியாவின் செபம்.

3:46-90: தீச்சூளையில் மூவரின் போற்றுரைப் பாடல்

3:91-97: அரசன் அருஞ்செயலை ஏற்றுக் கொள்ளுதல்.

4) 3:98-4:39: மரம்பற்றிய கனவும் விளக்க மும். அரசன் பைத்தியம் பிடித்துக் குணமாகு தல்.

5) 5:1-31: பெல்சாட்சரின் விருந்தும் சுவ ரில் எழுதிய கரமும்.

6) 6:1-28: சிங்கக்குகையில் தானியேல்

II. தானியேல் கண்ட வெளிப்பாட்டுக் காட்சி கள் (7:1-12:13).

1) 7:1-28: நான்கு விலங்குகள், மனுமகன் பற்றிய கனவுக் காட்சி.

2) 8:1-27: செம்மறிக்கடாவும், வெள்ளாட் டுக் கடாவும்' பற்றிய காட்சியும், கபிரியேல் தூதரின் விளக்கமும்.

3) 9:1-27: எழுபது வாரங்கள் பற்றிய இறைவாக்கும் விளக்கமும்.

4) 10:1-12:13: மாபெரும் காட்சி.

10:1-19: பட்டாடை உடுத்திய மனிதனின் காட்சியும் தூதரின் செய்தியும்.

10:20-11:1: இறைவாக்கு முன்னுரை.

11:2-20: மன்னர்களுக்குள் போராட்டம்

11:21-39: ஈனனின் எழுச்சி.

11:40-12:13: முடிவு காலம்.

III. தானியேலின் மற்ற வீரச்செயல்கள் (13:1-14:43).

1) 13:1-64: கற்புடைய சூசன்னாவும் தானி யேலின் தீர்ப்பும்.

2) 14:1-22: தானியேலும் பெல்தெய்வத் தின் பூசாரிகளும்.

3) 14:23-43: தானியேல் நாகப்பாம்பைக் கொன்றதும் சிங்க்ங்களிடையே வாழ்ந்ததும்.

16. நூலின் பொருளடக்கச் சுருக்கமும் குறிப்புகளும்: 1. முதல் பாகம்: இப்பகுதி மிட்ராஸ் இலக்கிய அமைப்பில் உள்ளது. அதிகாரம் 1: நெபுகத்னேசரின் அவையில் எபிரேய இளைஞர்கள்.

கி.மு. 605-இல் நாடுகடத்தப்பட்டு, பாபி லோனிய மன்னன் நெபுகத்னேசரின் அவை யில் பணிசெய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட யூத மேல்குடி இளைஞனாகத் தானியேல் அறி முகம் செய்யப்படுகிறார். அவரோடு சேர்ந்து அனனியா, மிசாவேல், அசரியா ஆகிய மூன்று யூத இளைஞர்களும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இந்த நான்குபேருக்கும் அரசவை யில் பெல்தசாட்சர், சதிரக்கு , மேசாக்கு, ஆபதுநெகோ என்ற பெயர்கள் கொடுக்கப்படு கின்றன. இவர்கள் அசுத்த உணவை மறுத்த னர். ஆனால் அரசனது சிறப்புணவை உண்டு வந்த இளைஞர் அனைவரையும்விட இவர் கள் முகப்பொலிவோடும் உடற்கட்டோடும் காணப்பட்டனர். இப்பகுதி தானியேல் அர சவையில் உயர்பதவிக்கு உயர்ந்ததை மட்டும் விவரிக்கவில்லை. கி.மு. 2-ஆம் நூற்றாண் டில் கிரேக்கச் சூழ்நிலையில் வாழ்ந்த யூதர் களுக்கு, முழுவதும் புறமதச் சூழ்நிலையில் உணவு பற்றிய யூதச்சட்டங்களைக் கடைப் பிடித்த இந்த நான்கு இளைஞர்களையும் ஓர் எடுத்துக்காட்டாக அளிக்கிறது. இது அந்தி யோக்குவின் சட்டத்தால் தடை செய்யப் பட்ட மக்கபேயர் காலத்து யூதர்களைத் தூய்மை பற்றிய ஒழுங்குகளைக் கடைப் பிடிக்க உற்சாகப்படுத்தியது. இப்பகுதி *1 மக் 1:41-40; 2 மக் 5:6:7*-ஒடு ஒத்துப்போகிறது.

அதிகாரம் 2: கலப்புச் சிலைபற்றிய கன வும் விளக்கமும். நெபுகத்னேசர் கனவில் ஒரு பெரிய சிலையைக் கண்டான். அதன் தலை பசும் பொன்னாலும், மார்பும் புயங்க ளும் வெள்ளியாலும், வயிறும் தொடைக ளும் வெண்கலத்தாலும், கால்கள் இரும்பி னாலும் களிமண்ணாலும் செய்யப்பட்டிருந் தன. அரசன் பார்த்துக்கொண்டிருக்கும்- போது, மனிதக் கை படாத மலையிலிருந்து பெருங்கல் பெயர்ந்து உருண்டு வந்து சிலையை மோதி அதைத் தூள்தூளாக நொறுக்கிப் பொடியாக்கியது. அப்பொடி யைக் காற்று அடித்துக்கொண்டு போய்விட் டது. ஆனால் அந்தக்கல் பெரிய மலையாகி உலகம் முழுவதையும் நிரப்பிற்று. பாபிலோ னிய ஞானிகளாலும் இக்கனவுக்கு விளக்கம் அளிக்க முடியவில்லை. ஆனால் சிலையின் வெவ்வேறு பாகங்கள் அடையாளமாக நான்கு பழங்காலப் பேரரககளைக் குறிப்ப தாகத் தானியேல் கனவுக்கு விளக்கம் அளிக் கிறார். இந்த அரசுகளில் பசும்பொன்னால் குறிக்கப்படும் முதல் அரசு நெபுகத்னேசரின்

அரசாகும். மற்ற அரசுகளைத் தானியேல் விளக்கவில்லை. அவை மேதிய, பாரசீக இரேக்க - சீரியப் பேரரசுகளைக் குறிப்பன வாகப் பொதுவாக விளக்கம் அளிக்கப்படும். ''மனிதக் கை படாது பெயர்ந்து மலை யிலிருந்து உருண்டு வந்த கல்'' இறைவ னுடைய மெசியா அரசாகும். இது மனிதரால் ஏற்படுத்தப்பட்டதன்று; என்றுமே அழி யாது. மற்ற அரசுகளையெல்லாம் நொறுக்கி அவற்றிற்கு முடிவுகட்டும்; அவற்றின் இடத்தைநிரப்பும்.

அதிகாரம் 3: பொற்சிலை வழிபாடும் தீச் சூளையில் எபிரேய இளைஞர்களும்: தானி யேல் இக்கதையில் இடம் பெறவில்லை. நெபுகத்னேசர் ஒரு பெரிய பொற்சிலையைச் செய்து தூரா என்னும் சமவெளியில் நாட்டி வைத்தான். இசைக்கருவிகள் ஒலிக்கத் தொடங்க, அவனது குடிமக்கள் அனைவ ரும் அச்சிலையை வணங்கக் கட்டளையிட் டான். தானியேலின் மற்ற மூன்று தோழர்க ளும் இக்கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்து விடுகின்றனர். ஆனால் ஆண்டவரின் தூதரது துணையால் தீச்சுவாலை அவர்களைத் தொடவில்லை. இந்த அருஞ்செயலைக் கண்ட அரசன் உறுதிப்பட்டு, இஸ்ராயேலின் இறைவனது மீட்கும் ஆற்றலை ஏற்றுக் கொள்கிறான். மூன்று இளைஞர்களையும் பெருமைப்படுத்தி உயர்பதவி அளித்தான். இவ்வாறு மறை சாட்சி ஆர்வமும் இறைவ னில் முழு நம்பிக்கையும் கொண்ட இளை ஞர்கள் இறைவனால் காப்பாற்றப் பெற்ற னர்; சன்மானம் பெற்றனர்.

தங்களது விசுவாசத்தின் பொருட்டு இத் தகைய சோதனைக்குக் கிரேக்கர்களால் உட் படுத்தப்பட்ட மக்கபேயர் காலத்து யூதர் களுக்கு இக்கதை உற்சாகமும் உறுதியும் அளிக்கும் மாதிரி ஆயிற்று. இறைவனது பாதுகாப்பு அவர்களுக்கு எப்போதும் உண்டு என்று உறுதி அளித்தது. கிரேக்கக் கடவுள்களை வணங்காதிருக்க ஊக்கமூட்டி யது (1 மக் 1:44-63; 2:15-18; 2 மக் 6-7).

அசரியாவின் செபமும் (2:24-45), மூன்று இளைஞர்களின் போற்றுரைப்பாடலும் (2:46-90) இரேக்க விவிலியத்திலும் அதைச் சார்ந்த மொழிபெயர்ப்புகளிலும் பாதுகாக் கப்பட்டுள்ளன; எபிரேயத்திலும் பிரி வினைச் சகோதரர்களின் விவிலியத்திலும் காணப்படுவதில்லை. கத்தோலிக்கத் திருச் சபை இவற்றை இறையூக்கம் பெற்றனவாக ஏற்றுக்கொள்கிறது.

அதிகாரம் 4: மரம் பற்றின கனவும் அரச னது பைத்தியமும்: நெபுகத்னேசர் ஓர் உயர்ந்த பசுமையான மரத்தைக் கனவில் கண்டான். அது வெட்டப்பட்டது. அதன் வேர்கள் நிறைந்த அடிமரம் இரும்பும் வெண்கலமுமான சங்கிலியால் கட்டப்பட் டது. ஏழு ஆண்டுகளுக்குப்பின் அது மீண் டும் வளரும். தானியேல் இக்கனவுக்கு, நெபுகத்னேசர் பைத்தியம் பிடித்துத் துன்புற்றபின் குணமாவான் என்றும், இக்கனவு அவனுக்கு அளிக்கப்பட்ட எச்சரிக்கையா கும் என்றும் விளக்கம் அளித்தார். அதன்படி அரசன் பைத்தியம் பிடித்து ஏழு ஆண்டுக ளுக்கு மாட்டைப்போல் வாழ்ந்தபின் குண மானான். தானியேலின் இறைவனே உண்மை யான இறைவன் என்று ஏற்றுக் கொண் டான். நெபுகத்னேசர் இறுமாப்பு பைத்தியத் தால் கண்டிக்கப்படும் இக்கதை, வரலாறு பற்றிய இறைவாக்குப் போதகத்தின் ஒரு முக்கிய கோட்பாட்டை விளக்குகிறது. அது அரசர்களின் அதிகாரமும் வல்லமையும் இறைவனிடமிருந்தே வருகின்றன; அவை அவருக்கே சாற்றிக்கூறப்பட வேண்டும் என் பதாகும். ''மனிதர்களின் அரசை உன்னத மானவரே ஆளுகிறார் என்பதையும் தாம் விரும்பியவர்களுக்கே அதனைத் தந்தருளு வார் என்பதையும், மனிதருள் தாழ்ந்தவர் களையே அதற்குத் தலைவர்களாக்குகின்றார் என்பதையும் உயிர்கள் அனைத்தும் அறியும் படி இவ்வாறு விதிக்கப்பட்டது'' (4:14). ''விண்ணக இறைவனே உலகை ஆள்கிறார் என்பதை நீர் உணர்ந்தவுடன், அரசுரிமை மீண்டும் உமக்குக் கிடைக்கும்..... நல்லறத் தைப் பேணித் தீச்செயல்கள் நீங்குக. ஒடுக் கப்பட்டோர்க்கு இரக்கம் காட்டி உம் பாவக் கறைகளைப் போக்கிக்கொள்க. ஒருவேளை உமது மன நிம்மதி நீடிப்பதற்கு இது வழி யாகலாம்'' (4:23-24).

இக்கதை அந்தியோக்கு காலத்தோடு குறிப்பிடத்தக்க முறையில் ஒத்துப்போகிறது. அவனுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினான். இறைவனால் தண்டிக்கப்பட்டான் (2 மக் 7:5 தொ). இக்கதை மக்கபேயர் காலத்து யூதமக்கள் இறைவனது பராமரிப்பில் கொண்டிருந்த நம்பிக்கையைத் தூண்டி உறுதிப்படுத்தியது.

நெபுகத்னேசருக்கு இப்படிப் பைத்தியம் பிடித்ததாய் வரலாற்றில் சான்றுகள் இல்லை. ஆனால் இது நடக்கக்கூடாத ஒன்றன்று என்பது அறிஞர்கள் கருத்து. கும்ரானில் கண்டுபிடிக்கப்பட்ட கும்ரானியத் துணுக்குகளில் ஒன்று நாபோனித்தைப் பற்றி இத்தகைய கதை ஒன்றைக் கூறுகிறது. இவன் கி.மு. 558-539-இல் அராபியா பாலைவனத்தில் தேமாவில் ஏழு ஆண்டுகள் மறைந்து வாழ்ந்ததாகத் தெரிகிறது. இக்கதையில், பெயர்களில் குழப்பம் இருக்கிறது அல்லது ஆசிரியர் யாரும் அறியாத நாபோனித்தின் பெயரை நீக்கிவிட்டு, புகழ்பெற்ற நெபுகத்னேசரைப் பாபிலோனிய அரசர்களில் ஓர் எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

அதிகாரம் 5: பெல்சாட்சரின் விருந்தும் சுவரில் எழுதிய கரமும்: தானியேல் நூல்படி பாபிலோனியாவின் கடைசி அரசனான பெல்சாட்சர் ஒரு பெரும் விருந்தளித்தான். அதில் அவனும் அவனது விருந்தாளிகளும் எருசலேம் ஆலயத்துப் பரிசுத்தக் கலங்களைப் பங்கப்படுத்தினர். திடீரென்று அரண்மனைக் கூடத்துச் சுவரில் மனிதக் கைவிரல்கள் தோன்றி எழுதத் தொடங்கின. அரசன் அஞ்சினான். நாட்டின் மாயவித்தைக்காரர்களுக்கும் கல்தேயர்களுக்கும் சோதிடர்களுக்கும் இக்காட்சியின் உட்பொருளை விளக்க முடியவில்லை. அரசன்முன் கொண்டுவரப்பட்ட தானியேல், எழுதப்பட்ட சொற்களை ''மேனே தேக்கேல் பார்சின்'' என்று வாசித்து ''மேனே - இறைவனே உமது அரசின் நாட்களை எண்ணி வரையறுத்து அதனை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டார்; தேக்கேல் - நீர் தராசில் நிறுக்கப்பட்டீர், எடையில் மிகவும் குறைந்துள்ளீர்; பார்சின் - உமது அரசு பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பாரசீகருக்கும் கொடுக்கப்பட்டது'' என்று விளக்கம் அளித்தார் (5:25-28). அன்று இரவே பெல்சாட்சர் கொல்லப்பட்டான். பாரசீகர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இக்கதையும் முன்னதைப்போல், வரலாறு பற்றிய இறைவாக்குப் போகத்தை விளக்குகிறது. இறைவன் அளித்த அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அகந்தை மிக்கவர்களிடமிருந்து அதிகாரத்தையும் மகிமையையும் எடுத்துவிட்டு, அவர்களை இறைவன் தண்டிக்கிறார் (5:17-23). அவர் தமது மக்களுக்குப் பகையான சக்திகளின் வீழ்ச்சியை முன்னறிவித்து அதைச் செயல்படுத்துகிறார் என்று கதை கற்பிக்கிறது. மக்கபேயர் காலத்தில் அந்தியோக்குவின் தெய்வ நிந்தனையான அகந்தைமிக்க வரலாற்றோடு இக்கதை ஒத்துப்போகிறது. அவனால் கொடுமைப்படுத்தப்பட்ட யூதவிசுவாசிகள், அரசு அவனிடமிருந்து எடுக்கப்பட்டு அவன் அழிந்து போவான் என்று உறுதி கொள்ளலாம்.

அதிகாரம் 6: சிங்கக் குகையிலே தானியேல்: தானியேல் செல்வாக்கை அழிக்கும் பொருட்டு, பொறாமைகொண்ட பாபிலோனிய அரசியல்வாதிகள் முப்பது நாட்களுக்கு அரசனைத்தவிர வேறு ஒருவரிடமும் மன்றாடுவது சட்ட விரோதமாகும் என்று தாரியு அரசனை ஆணையிடச் செய்தனர். எதிர்பார்த்ததுபோல் தானியேல் இக்கட்டளையை மீறினார். தமது வழக்கப்படி நாடோறும் மூன்று வேளை இறைவனை மன்றாடிப் புகழ்ந்தார். கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனையாகச் சிங்கங்களின் குகையில் போடப்பட்டார். இறைவன் சிங்கங்களிடமிருந்து தானியேலைக் காப்பாற்றினார். இதைக் கண்டுணர்ந்த அரசன், தானியேலைக் குற்றம் சாட்டிய வஞ்சகர்களை, அவர்கள் குடும்பத்தோடு சிங்கங்களின் குகையில் போட, அவையும் அவர்களைக் கொன்று தின்றன. அரசன் இஸ்ராயேலின் இறைவனைப் போற்றினார்.

இக்கதை இறைவன் தமக்குப் பிரமாணிக்க மாக இருப்பவர்களைக் காப்பாற்றுகிறார் என்று காட்டுகிறது. மக்கபேயர் காலத்தில் யாவேக்கு வழிபாடு செய்யக்கூடாது என்று யூதர்களுக்கு அந்தியோக்கு கட்டளை இட்டிருந்தான். அப்போது அவர்கள் தங்களது சமயக் கடமைகளைத் தொடர்ந்து செய்ய விசுவாசிகளைத் தூண்டி உற்சாகப்படுத்துவது இக்கதையின் நோக்கமாகும்.

II. *இரண்டாம் பகுதி (அதி. 7-12):* இப்பகுதி வெளிப்பாட்டு நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் முக்கிய கருத்து மெசியா அரசின் வருகையாகும். ஆசிரியரது கருத்துப்படி இவ்வரசு சீரியர்களின் கொடுமைக் காலத்தின் முடிவில் தோன்றும். இப்பகுதியில் காணப்படும் செய்தியே அதி. 2-இன் சாரமாகும். நெபுகத்னேசரின் கனவில் கண்ட சிலையின் நான்கு உலோகங்களும், அதி. 7-இல் வரும் நான்கு விலங்குகளும் நான்கு பேரரசுகளைக் குறிக்கின்றன. மலையிலிருந்து பெயர்க்கப்பட்ட கல் மெசியா அரசைக் குறிக்கிறது. முந்தைய அரசுகளை மெசியா அரசு அழித்து அவற்றின் இடத்தை நிரப்பும். இந்தக் கல்லுக்கு இணையான வேறுபட்ட அடையாளங்களால் இப்பகுதி புனிதர்களின் அரசை உணர்த்துகிறது.

ஒரே செய்தியைப் பல்வேறுபட்ட காட்சிகளில் மீண்டும் மீண்டும் கூறுவது வெளிப்பாட்டு இலக்கியத்தின் ஒரு பண்பாகும். இப்பகுதியில் வரும் காட்சிகள் வேறுபட்டவை. ஒன்றையொன்று சாராதவை. ஆனால் ஒவ்வொன்றும் அதே கருத்தின் வெவ்வேறு கூறுகளை அழுத்திக் கூறுகிறது. இவ்வாறு அதி.7 இவ்வுலக அரசுகளுக்கும் அவற்றை அகற்றி அவற்றிற்குப் பதிலாக நிறுவப்படும் இறைவன் அரசுக்கும் இடையேயுள்ள எதிர்பார்ப்பைப்பற்றிக் கவனம் செலுத்துகிறது. அதி. 8 கொடுங்கோலன் அந்தியோக்குவின் கொடுமைகளையும் மரணத்தையும் விவரிக்கிறது. அதி. 9 மெசியா அரசு வரும் காலத்தில் கவனம் செலுத்துகிறது. அதி. 10-12 செலூக்கிய மரபின் வரலாற்றையும் அந்தியோக்கு யூதர்களைக் கொடுமைப்படுத்தியதையும் விரிவாக விவரிக்கிறது. அதி. 12 கொடுமைப்படுத்தப்பட்ட மறைசாட்சிகளுக்கு உயிர்ப்பு உண்டு என்றும், முடிவில்லாத வாழ்வு உண்டு என்றும் உறுதி அளிக்கிறது.

இப்பகுதி நான்கு காட்சிகளைக் கொண்டது. முதல் காட்சியில் தானியேல் படர்க்கையில் அறிமுகம் செய்யப்பட்டு தன்மை ஒருமையில் தம் அனுபவத்தை எடுத்துக்கூறுகிறார். மற்ற மூன்று காட்சிகளில் தன்மை ஒருமையிலேயே எழுதுகிறார். ஆனால் மூன்றாம் காட்சியின் தொடக்கத்தில் படர்க்கையில் சுருக்கமாகக் குறிக்கப்படுகிறார். இவ்வாறு படர்க்கையிலிருந்து தன்மை ஒருமைக்கு மாறுவது முனைப்பற்ற முறையில் பெரும் திறமையோடு செய்யப்படுகிறது. இது கவனிக்கத் தக்கது. இனிக் காட்சிகளுக்கு வருவோம்.

அதிகாரம் 7: நான்கு விலங்குகள், மனுமகன் பற்றிய கனவுக்காட்சி: நான்கு பெரிய விலங்குகள் கடலில் இருந்து மேலெழும்பின. நான்காவது விலங்குக்குப் பத்துக் கொம்புகள் இருந்தன. இவற்றில் மூன்று பிடுங்கப்பட்டு அவற்றின் இடத்தில் ஒரு சிறிய கொம்பு எழும்பிற்று. இந்தக் கொம்பில் மனிதக் கண்களைப்போல் கண்களும் பெருமை பேசும் வாயும் இருந்தன. இந்த விவரிப்புக்குப்பின் இறையாற்றல் தோற்ற தீர்ப்புக்காட்சி வருகிறது. விலங்குகள் கொல்லப்படுகின்றன. அதை அடுத்து மனுமகனால் அடையாளமாகக் குறிக்கப்படும் ஐந்தாம் அரசு இறைவனால் நிறுவப்படுகிறது. காட்சியின் விளக்கத்தில் சிறிய கொம்பு குறிக்கும் கடைசி அரசன் பரிசுத்தர்களை ''ஒரு காலம், இரு காலம், அரைக்காலம்'' அதாவது மூன்றரை ஆண்டுகளுக்குத் துன்புறுத்துவான். அவனது அரசு அழிக்கப்பட்டு இறையரசு நிறுவப்படும். இந்த அரசு உன்னதரின், பரிசுத்தர்களின் இனத்தாருக்குக் கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

ஆசிரியர் பயன்படுத்தும் அடையாள மொழி பற்றிப் பின்வருபவை பொதுவாக

ஏற்றுக் கொள்ளப்படும். நான்கு விலங்குகள், 2-ஆம் அதிகாரத்தில் வருவதுபோல் பாபிலோனியா, மேதியா, பாரசீகம், கிரேக்க - சீரியா அரசுகள்ளையும், அரசர்களையும் குறிக்கின்றன. ''என்றும் வாழ்ந்தவர்'' என்ற சொற்றொடர் இறைவனைக் குறிக்கும். ''மனுமகன் போன்றவர்'' என்ற சொற்றொடரால் ஆசிரியர் உன்னதரின் புனிதர்கள் குழுவையும், குழுவின் தலைவரான மெசியாவையும் குறிக்கிறார் (யூத கிறிஸ்தவப் பாரம்பரியங்களைக் காண்க: மத் 24:30; 26:64; மாற் 14:62; லூக் 9:26; திருவெளி 1:7; 14:14). விரிவாக விவரிக்கப்படும் நான்காவது அரசைக் குறிக்கும் பத்துக் கொம்புகளைக் கொண்டிருக்கும் விலங்கு செலூக்கிய அரச மரபின் பத்து அரசர்களைக் குறிக்கின்றது. சிறிய கொம்பு அந்தியோக்கைக் குறிக்கிறது. இவன் ''இறைவன் காட்சி'' என்ற பொருளில் ''எப்பிபானெஸ்'' என்று தன்னையே அழைத்துக் கொண்டான். ஆனால் அவனது எதிரிகள் . ''பைத்தியம்'' என்ற பொருளில் ''எப்பிமானெஸ்'' என்று அவனை அழைத்து நகைத்தனர். இவன் தன்னை ஒரு கடவுளாகப் பாவித்துச் செயல்பட்டான். ''அவன் உன்னதமானவருக்கு எதிரான சொற்களைப் பேசுவான், அவரது புனிதர்களைத் துன்புறுத்துவான். வழிபாட்டுக் காலங்களையும் திருச்சட்டத்தையும் மாற்ற நினைப்பான்'' (7:25). இவனைப்பற்றிய விவரிப்புகளுக்கு 1 மக் 1:24.41-51; 2 மக் 5:21; 9:4.7-11; தானி 2:42-43; 8:9-14.23-25; 11:21-45; 12:11-12 ஆகிய பகுதிகளைக் காண்க.

ஆசிரியர் புனிதர்களின் அரசை உலக அரசுகளுக்கு எதிரானதாகக் காட்டுகிறார் என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். புனிதர்களின் அரசு, மனுமகனைப் போன்று, மேலிருந்து வருவது, முடிவில்லாதது, யாவற்றையும் உள்ளடக்குவது. உலக அரசுகளோ விலங்குகளைப் போன்றவை, கடலிலிருந்து அதாவது கீழிருந்து வருபவை, காலவரையறைக்குட்பட்டவை.

அதிகாரம் 8: இந்த இரண்டாவது காட்சி செம்மறிக்கடா, வெள்ளாட்டுக்கடா பற்றியதாகும். அதி.7-இல் வரும் கருத்தை மீண்டும் கூறிச் சிறிய கொம்பு குறிக்கும் அந்தியோக்கு உன்னதமானவரின் புனிதர்களுக்குச் செய்த கொடுமைகளை விவரிக்கிறது.

தானியேல் சம அளவற்ற இரு கொம்புடைய ஒரு செம்மறிக் கடாவைக் காண்கிறார். அது நான்கு திசைகளிலும் வெற்றியோடு முன்னேறிப் பெருமிதம் கொண்டிருந்தது. கண்களுக்கிடையில் விந்தையான கொம்பைக் கொண்டிருந்த வெள்ளாட்டுக் கடா திடீரென்று செம்மறிக்கடாவைத்தாக்கி வெல்கிறது. பெருமிதம் கொண்டு திரிகிறது. அதன் ஒரே கொம்பு முறிக்கப்பட, அந்த இடத்தில் நான்கு கொம்புகள் தோன்றி மற்றவற்றைப் பாதிக்கும் விதத்தில் பெரிதாக வளர்கிறது. ''அது வான் படைகளைத் தொடுமளவிற்கு உயர்ந்து வளர்ந்தது. விண்மீன் திரள்களுள் சிலவற்றையும் தரையில் வீழ்த்தி மிதித்துப் போட்டது.மேலும் வான் படைகளின் தலைவரையே எதிர்த்துத் தன்னையே உயர்த்திக் கொண்டது. இடையறாது செலுத்தப்பட்ட தகனப்பலியையும் அவரிடமிருந்து பறித்துக் கொண்டு அவரது திருத்தலத்தையும் அழித்துப்போட்டது'' (8:10-11). இதன் கொடுமைகள் ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகளுக்கு நீடித்தன. இறுதியில் மனிதன் எவனும் தலையிடாமலே அழிந்து போயிற்று. இக்காட்சிக்குக் கபிரியேல் தூதர் விளக்கம் அளிக்கிறார்.

இக்காட்சிக்குப் பொதுவாகக் கூறப்படும் விளக்கம். செம்மறிக்கடா மேதியா, பாரசீக அரசைக் குறிக்கிறது. வெள்ளாட்டுக்கடா கிரேக்க அரசையும் அதன் விநோதமான கொம்பு அலக்சாந்தரையும், நான்கு கொம்புகள் அவனுக்குப் பின்வந்த அரசுகளையும் குறிக்கின்றன. அவற்றில் ஒன்று செலூக்கிய அரசமரபையும் சிறிய கொம்பு அந்தியோக்கையும் குறிக்கின்றன. இவன் மக்கபேயர் காலத்தில் பிரமாணிக்கமுள்ள யூதவிசுவாசிகளைக் கொடுமைப்படுத்தினான். ஆலயத்தில் பலிகள் செலுத்தப்படுவதைத் தடைசெய்தான். திடீரென்று அழிந்து போனான். இந்தக் கொடுமைகள் நிகழும் காலம் ''இரண்

டாயிரத்து முந்நூறு மாலையும் காலையும்,'' அதாவது 1150 நாட்கள் நீடிக்கும் என்று குறிக்கப்படுகிறது. இது 7:25-இல் வரும் காலத்தை ஒத்ததாகும். இந்தக் காலவேறு பாடுகளுக்கு எந்த உட்பொருளும் இல்லை எனலாம்; மக்கபேயர் காலத்துப் போராட்டத்தோடு ஒத்துப் போகச் செய்யும் திருத்தமே ஆகும்.

அதிகாரம் 9: எழுபது வாரங்கள் பற்றிய இறைவாக்கும் விளக்கமும்: இது பழைய ஏற்பாட்டிலேயே புகழ்பெற்ற பகுதிகளில் ஒன்றாகும்.

பாபிலோனிய ஆதிக்கத்தின் எழுபது ஆண்டுகள் பற்றி எரேமியா முன்னறிவித்ததைப் பற்றி (எரே 25:12; 29:20; 31:38) தானியேல் வியந்து தெளிவிற்காக மன்றாடுகிறார் (தானி 9:1-19). 9:4-19-இல் வரும் செபத்தில் தானியேல் தம்முடையவும் தம் இனத்தவராகிய இஸ்ராயேல் மக்களுடையவும் பாவங்களை அறிக்கையிட்டு, எருசலேம் மீண்டும் அமைக்கப்படுவதற்காக மன்றாடுகிறார். இச்செபம் அது வரும் சூழ்நிலையில் முழுவதும் பொருத்தமாயில்லை. மேலும் நூலின் மற்றப் பகுதிகளை விட உயர்ந்த எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ளது. இது காலத்தால் முந்தியதாகவும் மூல நூலில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாகவும் இருக்கலாம்.

கபிரியேல் தூதன் தோன்றிய எழுபது ஆண்டுகளை ஆண்டுகளின் எழுபது வாரங்களாக விளக்குகிறார். யூகமாக எண்களைக் கையாண்டு, ஆசிரியர் அதி. 7-8-இல் வரும் மெசியாக் கருத்தை மீண்டும் கூறி, ஆண்டுகளின் கடைசி வாரத்தில் கவனம் செலுத்துகிறார். இது அந்தியோக்கு கொடுமைகளைச் செய்த காலமாகும். அதன் முடிவில் மெசியாக்காலம் தோன்றும். அப்போது இறைவாக்குகள் நிறைவேறும். 9:25-26-இல் வரும் காலக்கணிப்பை விளக்கும் பல்வேறு ஆய்வாளர்கள் மக்கபேயர் காலத்தோடோ, புதிய ஏற்பாட்டுக் காலத்தோடோ ஒத்துப் போகச் செய்ய முயன்று குழப்பம் செய்துள்ளனர்.

இந்தக் குழப்பமிக்க கணிப்புக்களைத் தவிர்த்துப் பின்வருமாறு பொதுவாகப் புரிந்து கொள்ளலாம். எழுபது ஆண்டுகள் ஆண்டுகளின் எழுபது வாரங்களைக் குறிக்கிறது என்றும், வாரங்களின் இறுதியில் மிகவும் இக்கட்டான கட்டத்தில் தாம் இருக்கிறார் என்றும், முடிவு அருகில் இருக்கிறது என்றும் தானியேல் கபிரியேலிடமிருந்து அறிகிறார். எரேமியாவில் வரும் எழுபது ஆண்டுகள் முழு எண்ணைக் குறித்தது. வரையறை படாத காலத்தைக் குறிக்கிறது. அது ஒரு நபரின் ஆயுளாகும். ஆகவே அப்போது வாழ்ந்த எவரும் பாபிலோனில் ஆதிக்கத்தின் முடிவைக்காண உயிரோடு இருக்கமாட்டார்கள். ஏழு ஆண்டுகள் அடங்கிய எழுபது வாரங்கள் இன்னும் நீண்ட, வரையறைப் படாத காலத்தைக் குறிக்கிறது. துல்லியமான காலத்தை அன்று, எத்தகைய கணிப்பிலும் பாபிலோனிய ஆட்சி தொடங்கியதிலிருந்து (கி.மு. 605) 490 ஆண்டுகள் என்ற தொடரை மக்கபேயர் காலத்தோடோ, புதிய ஏற்பாட்டுக் காலத்தோடோ ஒத்துப்போகச் செய்ய முடியாது. 9:25-இல் எழுபது வாரங்களின் தொடக்கம் எருசலேம் கட்டப்பட அனுமதி அளிக்கும் கட்டளையிலிருந்து (கி.மு.537) கணிக்கப்படுகிறது. இதன்படி 490-ஆவது ஆண்டு கி.மு. 47-இல் முடியும். இந்த ஆண்டுக்கு எந்தப் பொருளும் அளிக்க முடியாது. எருசலேமின் வீழ்ச்சிக்கும் ஆசிரியரது காலத்திற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் எண்ணிக்கை பற்றி ஆசிரியருக்கு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை.

அதிகாரம் 10-12: இந்த நான்காம் காட்சி நாடுகளிடையே நடந்த போராட்டம் பற்றிய மாபெரும் காட்சியாகும். இப்பகுதியை ஒரே தொகுப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். 10:1-11:1 நாடுகளின் கதியின் மேல் தலைமை தாங்கும் தூதர்களுக்கிடையே நடக்கும் தர்க்கம் விவரிக்கப்படுகிறது. 11:2-45 பாரசீகப் பேரரசிலிருந்து அலக்சாந்தர் அவனது வாரிசுகள் வழியாகச் செலூக்கிய அரசின் நான்காம் அந்தியோக்கு யூதர்களைக் கொடுமைப்படுத்தியது வரையுள்ள இஸ்ரேயாலின் வரலாறு கூறப்படுகிறது.

12:1-13 கொடுமைகளின் முடிவுவரை நிலைத்திருப்பவர்களுக்குக் காத்திருக்கும் உயிர்ப்பு, முடிவில்லாத வாழ்வு ஆகிய சன்மானத்தை விவரிக்கிறது.

அதிகாரம் 11: நிகழ்காலத்திலுள்ள ஒருவர் கடந்த காலத்தவராகத் தம்மைப் பாவித்து நடந்து விட்ட நிகழ்ச்சிகளையும் நிகழ்கால நிகழ்ச்சிகளையும் பற்றி இறைவாக்குரைக்கும் முறை இங்குப் பயன்பட்டுள்ளது. இது பழைய ஏற்பாட்டிலேயே வேறெங்கும் காணப்படாத முறையாகும். இஃது ஓர் இலக்கிய யுக்தியாகும். இவ்வதிகாரம் ஒரு மாபெரும் வரலாற்றுப் படத்தை விவரிக்கிறது. அக்காலம் பற்றிய பிற வரலாறுகளிலிருந்து, ஆசிரியர் பெயர் கொடுக்காத, ஆனால் வாசகத்தில் குறிக்கப்படும் ஆட்களையும் நிகழ்ச்சிகளையும் அடையாளம் காண்பது எளிது.

சைரசுக்குப்பின் நான்கு பாரசீக அரசர்கள் வரலாற்று மேடையில் தோன்றுகின்றனர். அதன் கடைசி அரசனாகிய முதலாம் செருக்குப்பின் அலக்சாந்தரும் அவன் வழித் தோன்றல்களும் தோன்றுகின்றனர். பின்பு ''தென்திசை மன்னர்களுக்கும்'' வடதிசை மன்னர்களுக்குமிடையே நடக்கும் போராட்டம் விவரிக்கப்படுகிறது. தோலமியர்கள் எகிப்தில் ஆட்சி செய்தனர். ''தென்திசை மன்னன்'' *(11:5)* முதலாம் தோலமியாவான் *(304-285)*. ''அவனுடைய படைத்தலைவர்களுள் ஒருவன்'' முதலாம் செலூக்கு ஆவான் *(305-281)*. இவன் செலூக்கிய அரச மரபை நிறுவினான். இந்த மரபின் அரசர்கள் ''வடதிசை மன்னர்கள்'' என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அந்தியோக்கியாவிலிருந்து ஆட்சி செய்தனர். இரண்டாம் தோலமியின் மகள் பெர்னிக்கி. இரண்டாம் அந்தியோக்கை *(261-246)* மணந்தபோது இரண்டு அரசுகளும் நட்பு நாடுகளாகின்றன. அவளுடைய வேர்களிலிருந்து தோன்றிய ஒரு தளிர் தான் *(11:7)* மூன்றாம் தோலமியாவான் *(246-221)*. மூன்றாம் அந்தியோக்கு பெரும் போர்கள் செய்தான். அவனது திமிர் அவனையே அழிக்கும்படி, அவனது திமிரை அடக்குவான் கொர்னேலியு சிப்பியோ என்ற உரோமைப் ''படைத்தலைவன்''. இவன் மூன்றாம் அந்தியோக்கை 189-இல் மக்னேசியம் என்ற இடத்தில் தோற்கடித்து அவனது போர்களை முடிவுக்குக் கொண்டு வருவான் *(11:10-19)*. *11:20* நான்காம் செலூக்கை பற்றிப் பேசுகிறது *1:1-45*-இல் நான்காம் அந்தியோக்கின் ஆட்சி மூன்றாம் ஓனியாசோடும் *(11:22; 2 மக் 4:33-38)* உரோமையரோடும் தொடர்புபடுத்தி விவரிக்கப்படுகிறது. போபிலியஸ் லேன்ஸ் என்ற உரோமையன், 168-இல் நான்காம் அந்தியோக்கை எகிப்திலிருந்து வெளியேறும்படி கட்டளையிட்டான் *(11:30)*. இப்பகுதி கிரேக்க கலாச்சாரத்தின்பால் யூதர்கள் காட்டிய பதிதத்தையும் *(11:32; 1 மக் 1:11-15.43)*, *167-164*-இல் நடந்த கொடுமைகளையும் *(11:32-35)* ''பாழாக்கும் அருவருப்பையும்'' *(11:31; 9:27; 12:11; 1 மக் 1:58)* விவரிக்கிறது. *11:40-45*-இல் குறிக்கப்படும் நிகழ்ச்சிகள் பற்றி விவிலியத்துக்குப் புறம்பான ஏட்டுச் சான்றுகள் இல்லை.

அதிகாரம் 12: இதில் தொலைக்காட்சி முன்னோக்கைக் கொடுக்காமல் ஆசிரியர் ஒரு காட்சியை விட்டுச் சென்றிருக்கிறார். இதில் இம்மைக்குரிய விடுதலையும் முடிவு கால உறுதிகளும் பின்னப்பட்டிருக்கின்றன.

பெருந்துன்பமிக்க காலமுடிவில், மரித்தோரில் சிலர் முடிவில்லாத வாழ்வுக்கும் சிலர் தண்டனைக்கும் உயிர்த்தெழுவர். இது நல்லோரும் தீயோரும் உயிர்த்தெழுதல் பற்றிய விசுவாசத்தைப் பழைய ஏற்பாட்டிலேயே ஐயந்திரிபு அற்ற முறையில் எடுத்துக்கூறும் காலத்தால் முந்திய கூற்றாகும் *(2 மக் 7:9-14. 22-36; 12:43-46)*. முடிவுக்காலம் அண்மையில் உள்ளதுபோலத் தோன்றுகிறது. ஆனால் அது எப்போது வரும் என்று தானியேல் கேட்க, ''குறிப்பிட்ட நாள்வரையில் இந்தச் சொற்கள் மறைக்கப்பட்டு முத்திரையிடப்பட்டிருக்கும்'' *(11:9)* என்று பதில் கிடைக்கிறது. அது அவருக்கு வெளிப்படுத்தப்பட முடியாது. பரிசுத்த இடம் பங்கப்படுத்தப்படும் காலம் மீண்டும் ஒருமுறை *1290*

நாட்களாகும் என்றும்'', 1335 நாள்வரை காத்திருப்பவனே நற்பேறு பெற்றவன் (11:11-12) என்றும் கூறப்படுகிறது. இந்த எண்ணிக்கை வேறுபாட்டிற்கு இதுவரை ஒரு நல்ல விளக்கம் அளிக்கப்படவில்லை. இரண்டும் புற இனத்தாரின் கட்டுப்பாட்டில் ஆலயம் இருந்த ''ஒரு காலம், இரு காலம், அரைக்காலம்'' அதாவது மூன்றரை ஆண்டைக்குறிக்கலாம். இக்காலத்தின் முடிவில் ஆசிரியர் எதனை எதிர்பார்த்தார் என்றும் நிர்ணயிக்க முடியாது.

இதுவரை பார்த்துள்ள பகுதிகளில் முதல் நான்கு கதைகள் நெபுகத்னேசரின் ஆட்சியிலும், ஐந்தாவது கதை பெல்சாட்சரின் ஆட்சியிலும், ஆறாவது கதை மேதியா, தாரியுவின் காலத்திலும் நடைபெறுகின்றன. முதல் காட்சி பெல்சாட்சரின் முதலாம் ஆண்டிலும், இரண்டாவது காட்சிஅவனது மூன்றாம் ஆண்டிலும், மூன்றாம்,காட்சி மேதியா, தாரியுவின் முதலாம் ஆண்டிலும் நிகழ்கின்றன. இவ்வாறு கனவுகளும் காட்சிகளும் காலவரை அமைப்புக் கொண்டுள்ளன. ஆனால் கதைகள் முடியுமுன்பே காட்சிகள் தொடங்கி விடுகின்றன.

III. மூன்றாம் பாகம் (அதி. 13-14): தானியேலின் கூடுதலான தீரச் செயல்கள் மிட்ராஸ் இலக்கிய அமைப்புடையது.

அதிகாரம் 13: சூசன்னாவின் கதை மறைசாட்சித் தன்மையுடையது. பாவம் செய்வதை விட, சாவதைத் தேர்ந்தெடுக்கிறாள் பாபிலோனில் வாழ்ந்த சூசன்னா என்ற யூதப் பெண். இரு காமுகக் கிழ நடுவர்கள் அவள் மீது விபச்சாரக் குற்றம் சாட்டுகின்றனர்; தீர்ப்பிடுகின்றனர். இறைவனால் தூண்டப்பட்டு தானியேல் அவர்களை எதிர் மறைச் சான்றுகளில் சிக்க வைத்துச் சூசன்னாவை விடுவித்துக் காப்பாற்றுகிறார். முதியவர்களோடு நடக்கும் உரையாடலில் இரு மரங்களின் கிரேக்கப் பெயர்களிடையே சிலேடை அணி அடங்கியிருக்கிறது (13:54-55.58-59). இக்கதை தானியேலின் ஞானத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். அதி.1-6-இல் வரும் கதைகளைப்போல் இக்கதையும் வரலாற்றுக் கருவைக் கொண்டிருக்கிறது எனலாம். அது அந்தியோக்கு கொடுமைப்படுத்திய காலத்தில் இறைவனது சட்டத்தை மீறுவதைவிட, சாவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று விசுவாசிகளுக்குப் போதிக்க மிட்ராஸ் முறைப்படி விவரிக்கப் படுகிறது (1 மக் 1:41-50.60-64; 2 மக் 6-7). முதியவர்கள் சூசன்னாவைக் கெடுக்க முயல்வதை வலியுறுத்திக்கூறுவது யாசோன் போன்றவர்களின் பொல்லாத மாதிரியை ஈடுசெய்யும் நோக்கம் கொண்டதாகும் (2 மக். 3-4).

அதிகாரம் 14: பெல் தேவதையின் பூசாரிகளும் நாகப்பாம்பும்: பெல் தேவதைகளின் உருவத்தின்முன் வைக்கப்படும் உணவும், பானமும் அதன் பூசாரிகளால் இரகசியமாக உண்ணப்படுகின்றன என்று தானியேல் நிரூபிக்கிறார் (14:1-22). பாபிலோனில் வணங்கப்பட்ட ஒரு நாகப்பாம்பைத் தானியேல் கொன்றுவிடுகிறார். அதற்குத் தண்டனையாகத் தானியேல் சிங்கக்குகையில் எறியப்படுகிறார். அங்குப் பாலஸ்தீனத்திலிருந்து தூதரால் தூக்கி வரப்பட்ட அபக்கூக்கு என்ற இறைவாக்கினரால் உணவு அளிக்கப்பெறுகிறார். சிங்கங்களிடமிருந்து தானியேல் தப்பிய உண்மை, இஸ்ராயேலின் இறைவனே உண்மையான இறைவன் என்று அறிக்கையிட மன்னன் சைரசைக் கட்டாயப்படுத்துகிறது. இந்த மிட்ராஸ் கதைகள் அதி. 1-6-இல் வருவது போல் புறமதத்தின் சிறுபிள்ளைத்தனமான மடமைமேல் உண்மையான சமயம் கொண்டிருக்கும் உயர்மேன்மையை எடுத்துக் காட்டுவதற்காகக் கூறப்படுகின்றன. இத்தகைய போதகம் மக்கபேயர்கள் காலத்தில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது. ஏனெனில் பல யூதர்கள் புறஇனக் கிரேக்கப் பண்பாட்டின் மாயத் தோற்றத்தால் பெரிதும் ஈர்க்கப் பட்டனர்; பாதிக்கப்பட்டனர் (1 மக் 1:11-15; 4:10-17). இவர்களுக்கு இக்கதைகள் நல்வழி காட்டின.

17. இறையியல் போதனைகள்

அ) வரலாற்று இயல் நூல்: *இந்நூல் இறைவனதுபராமரிப்பு நிகழ்ச்சிகள் பற்றிய அக்*

கதா மிட்ராஸ் விளக்கவுரையும் வெளிப் பாட்டு எடுத்துக்காட்டும் அடங்கியதாகும்; வரலாறு பற்றிய சமயதத்துவமும் கொண்ட தாகும். இந்த உயரிய நோக்கம் நூலில் மெசியாக் கோட்பாடு பெறும் உறுதியான அழுத்தத்தில் மனிதவுரு எடுக்கிறது. இக் கோட்பாடு இறைவன் இறுதியில் வெற்றி பெறுவார் என்பதில்கொண்டுள்ள நம்பிக்கை யினால் உறுதி கொள்கிறது. சுருக்கமாகத் தானியேலின் செய்தி கடந்தகால, எதிர்கால எதிர்ப்புகளை நிகழ்கால நிகழ்ச்சிகளில் பிரதி பலிக்கச் செய்கிறது; அவற்றைத் தொகுத் தளிக்கிறது.

ஒரு நீண்ட பாரம்பரியத்தின் முடிவில் தானியேலின் போதகம் தோன்றுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் உலகப் பேரரசுகளுக்குமிடையேயுள்ள எதிர்ப்பில் இறைவனுக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்டத்தை உறுதிப்படுத்தி இந்த எதிர்ப் புகளின் நீண்ட தொடரில் கவனம் செலுத்து கிறது. இவற்றைத் தொடக்கத்திலிருந்து (ஆதாம், மனுகுலம், பபேல்கோபுரம் கட் டியவர்கள் ஆகியோரின் கிளர்ச்சிகள்) அசீரி யர்கள் படையெடுப்பு, ஆதிக்கம் (மூன்றாம் திகிலத்து பிலேசர், ஐந்தாம் சல்மனேசர் சனகெரிபு), பாபிலோனிய ஆதிக்கம் (நபோ போலசார், நெபுகத்னேசர்) வரை உள்ள வரலாறு அடையாளப்படுத்துகிறது அல்லது விவரிக்கிறது. தானியேலின் போதகம், இறைவன் தமது மக்களைத் தண்டிக்க புற இன மக்களைப் பயன்படுத்திய போதும் கூட (எசா 10:5-9.27-34; 14:24-27; எரே 50-51; எசா 13-14) புற இனத்தவர் அழிவது உறுதி, இஸ்ராயேலார் வெற்றி பெறுவது உறுதி (எசா 10:20-27; 41:8-20; எசே 36-37) என்ற இஸ்ராயேலரின் விளக்கத்தை எதிரொலிக்கி றது. இறைவாக்கினர்கள் பயன்படுத்திய பல கருத்துக்கள் தானியேல் நூலில் மீண்டும் வருகின்றன. எசேக்கியேல் (38:15-18), யோவேல் (4:2.9-14)-இல், இறைமக்கள் இறு திச் சோதனைகளை எதிர்நோக்குகின்றனர். நாடுகளை இறைவன் தீர்ப்பிடும் கருத்து பல இறைவாக்கினர்களுக்குப் பொதுவானதா கும் (ஆமோ 1-2; எசா 14-27; செப் 1-2; எரே 12:14; 25:15; எசே 25-32; யோவே 4:1-17). இறந்தோரின் உயிர்ப்பு எசாயாவிலும் (26:19), எசேக்கியாவிலும் (37:11-14) குழப்ப மான முறையில் கூறப்பட்டுள்ளது. வெட் டப்பட்ட மரம், சிங்கங்கள், சிறுத்தை, செம் மறிக்கடா, வெள்ளாட்டுக்கடா போன்ற தானியேலுக்குப் பிரியமான உருவகங்கள் பழங்கால நூல்களிலும் இடம் பெறுகின்றன (ஒசே 13:17-18; எசா 15:9; எரே 5:6; 49:19; 50:17; செக் 10:3). மலையிலிருந்து பெயர்க்கப்பட்டுச் சிலையைத் தாக்கி நொறுக்கும் கல் (தானி 2:44-45) எசாயாவி லும் (17:10; 26:4; 32:2), உபாகமத்திலும் (32:4-15) குறிக்கப்படும் கல்லாகிய யாவே இல்லையா? தானியேல்நூல் ஆசிரியர், கடந்த காலத்திலிருந்து இவற்றையெல்லாம் தொகுத்துச் சேர்த்து, அவற்றை விரிவாக்கித் தமது நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்துகி றார். அதன் விளைவு அவருக்கே உரிய ஓர் ஒப்பற்ற நூலாகும். இந்த இறைவாக்கு வர லாற்றின் போதகம் கருத்துச் செழிப்பு மிக்க தாகும். இதில் நிகழ்காலச் சூழ்நிலை கடந்த காலப் பல சூழ்நிலைகளால் ஆதரவு பெறுகி றது. அதனால் வருங்காலம் எப்படியிருக்கும் என்று முன்னறிவிப்பதை நோக்கி நூல் இயங்குகிறது. இந்த வரலாற்று இயலின் முக்கிய மையக்கருத்து இறைவனே வர லாற்று நாயகனவார் என்பதாகும்.

ஆ) வரலாற்று நாயகனான இறைவன்: இறைவனே வரலாற்றின் தலைவன் என்ற மையக் கருத்தைச் சுற்றி நூல் அமைந்துள் ளது. இப்போதகத்தை ஆசிரியர் முந்தைய இறைவாக்கினர்களிடமிருந்து எடுத்தே பயன்படுத்துகிறார். எசா 17:3-6-இல் இறை வன் உலகின்மேல் அமைதியாய் அரியணை வீற்றிருப்பதாயும், தமக்கே உரிய நேரத்தில் அதன் காரியங்களில் தலையிடத் தயாராக இருப்பதாயும் சித்தரிக்கப்படுகிறார். மனித னது எந்த முயற்சியும் அவரதுதிட்டத்தை மாற்றாது. குயவன் களிமண்ணைப் பயன் படுத்துவதுபோல் இஸ்ராயேலின் கதியையும் புறஇனத்தாரின் கதியையும் கட்டுக்குள் கொண்டிருக்கிறார் என்று எரேமியா போதித்தார் (18:1-12). அவர் தமது விருப்பம்

போல் நாடுகளைக் கட்டி நிலைநாட்டுகிறார் (18:7 தொ). அவர்களின் பாவங்களைப் பாகு பாடற்ற முறையில் தண்டிக்கிறார் (25:15 தொ). தானியேல்நூல் ஆசிரியர் இந்தப் போத கத்தைப் பொதுப்பாணிக் கதைகள், காட்சி கள் வழியாகக் கொடுமைப்படுத்தப்பட்ட தமது கால சகசமயத்தவர்களுக்கு மீண்டும் போதிக்கிறார்.

இறைவனது அரசு வருங்காலத்தை மட் டும் சார்ந்ததன்று. அது எப்போதும் மனிதர் கள் காரியங்களில் செயலாற்றுகிறது. அவர் உயிருள்ள இறைவன் (தானி 6:26). அரசர் களுக்கெல்லாம் ஆண்டவர் (2:47). அரசுகளை வீழ்த்தி வேற்று அரசுகளை ஏற்படுத்துகிறவ ரும் அவரே (2:21). அவரது அரசு முடிவில் லாதது. அவரது வல்லமை என்றென்றும் உளது [3:100(33)]. மனித ஆட்சியாளர்கள் அவரது வல்லமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் அதை ஏற்கமறுக்கும் போது, நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து அவர் களது அகந்தையை வீழ்த்தி அவர்களுக்குப் பாடம் கற்பிக்கிறார். நெபுகத்னேசர் அவரது வல்லமையை ஏற்றுக் கொண்டான். ஆகவே அவனதுஅரசின் மேன்மைக்கான அவனது சீரும் சிறப்பும் அவனுக்கு மீண்டும் கிடைத் தன (4:31-31). ஆனால் அவனது வழித்தோன் றலான பெல்சாட்சரின் இறை நிந்தனையான நடத்தை அவனது அரசமரபின் அழிவுக்கு இட்டுச் செல்கிறது (தானி 5). மனித காரியங் களில் இறைவன் ஒருவரே தலைவராவார். அவரது திருவுளத்தை அறிய வழிவகைகள் இல்லாமல் அவர் மனுகுலத்தை விட்டுவிட வில்லை. அதைப் புறமதச் சோதிடர்களால் கண்டுபிடிக்க முடியாது. அவரது தேர்ந்தெடுக் கப்பட்ட மக்களில் சிலருக்கு அளிக்கப் படும் வெளிப்பாட்டால் அதை அறிய முடி யும். நிகழ்ச்சிகளின் உட்பொருள் பற்றிய பிரச்சனை எழும்போது புறமத மந்திரவாதி கள் திறனற்றவர்களாகி விடுகின்றனர் (2:7-10). ''மனிதர்களின் அரசை, உன்னதமா னவரே ஆள்கின்றார். தாம் விரும்பிய வர்க்கே அதனைத் தந்தருள்வார்'' (4:22.29). கடந்த காலத்தில் இஸ்ராயேலில் பிரமாணிக் கமாய் இருந்த மறைசாட்சிகளுக்கு அவர் காட்டிய பராமரிப்பு (தானி 1-6) இம்மக்க ளின் இறுதி மேன்மைக்கு உத்திரவாத மாகும். ஆயினும் மனுகுலம் படிப்படியாகச் சீரழிவதாயும் இறைவனுக்குக் காட்டும் எதிர்ப்பில் மேலும் மேலும் பலமாய் வளர் வதையும் ஆசிரியர் காண்கிறார் (தானி 2:7). ஒரு வேளை ஆசிரியர் மனதில் கொண் டிருந்த பேரரசுகள் பாபிலோனிய, மேதிய, பாரசீக, கிரேக்கப் பேரரசுகளாக இருக்க லாம். இவற்றை வரலாற்றில் வெறும் வரிசையாக வரும் அரசுகளாகக் கருதுவதை விட, மனித அரசுகளின் அடையாளமாகப் பயன்படுத்துவதில் ஆசிரியர் அக்கறை கொள்கிறார். மனிதக் கொடுநோக்கும் திமி ரும் கிரேக்கப் பேரரசைச் சார்ந்த 4-ஆம் அந்தியோக்குவில் உச்சநிலை அடைகின் றன. இக்கொடியவன், தானே கடவுள்போல் செயலாற்றினான். உண்மையான இறைவ னது வழிபாட்டை அகற்றித் தனது வழிபாட் டைப் புகுத்தினான். இறைவனின் புனிதர் களைக் கொடுமைப்படுத்தினான் (7:25). நூலின் வெளிப்பாட்டுப் பகுதிகள், இவற்றை யெல்லாம் இறைவன் முன்னறிந்திருந் தார் எனக்காட்டுகின்றன. இறுதியாக மனித அரசர்கள் இறைவனைச் சேர்ந்ததையெல் லாம் எதிர்க்கும் அளவுக்குத் தகாத வழிச் செல்லும்போது இறைவன் வரலாற்றில் தலையிடுகிறார். ஒரு வீறார்ந்த காட்சியில் (7:9-10; காண்க. 2:44 தொ) உலக அரசர்கள் தீர்ப்பிடப்படுவதையும் ''மனுமகனைப் போன்ற ஒருவரால்'' இறையரசு தொடங்கி வைக்கப்படுவதையும் காண்கிறோம். மனி தர்கள்மேல் ஆட்சி என்பது இறைவனுக்கு உரிமையானதாகும் [3:100(33)]. அது மிக உன்னதரின் புனிதர்களில் அதாவது தேர்ந்தெடுக் கப்பட்ட மக்களில் இவ்வுலகில் உண்மை யாகிறது. இந்த அரசு எல்லாவற்றையும் உள் ளடக்கியதாகும்; முடிவில்லாதது. எல்லா மக்களும் இனத்தாரும் மொழியினரும் இறைவனுக்குப் பணிந்து ஊழியம் செய்வர் (7:14-27). இவ்வாறு நூல்முழுவதுமே இறை வனுடைய யாவும் கடந்த தன்மை, வல் லமை ஆகியவை பற்றிய வீறார்ந்த அறிக்கை யாகும். இக்கருத்து நூல் முழுவதும் ஆதிக் கம் செலுத்துகிறது. கொடுமைப்படுத்தப் பட்ட யூதர்களுக்கு ஆறுதலின் ஊற்றான நம்பிக்கைச் செய்தியாக விளங்கியது.

இ) மெசியாக் கோட்பாடு: பூமியில் உள்ள எல்லாவற்றையும் உள்ளடக்கும் இறைவனது இந்த முடிவில்லாத ஆட்சி மெசியா அரசாகும். மனித உதவியின்றியே இவ்வரசு இறைவனால் தொடங்கி வைக்கப் படுகிறது. மெசியா என்ற ஒருதனி ஆளைப் பற்றி ஒன்றும் கூறப்படாமை நமக்கு வியப்பு அளிக்கலாம். ''மனுமகன் போன்ற ஒருவர்தான்'' (7:13) இங்குக் குறிக்கப்படும் மெசியா என்று சிலர் கருதியுள்ளனர். ஆனால் இச்சொற்றொடர் ''உன்னதமானவ ரின் புனிதர்கள்'' அல்லது பக்தியுள்ள இஸ் ராயேலரைக் கொண்ட இறைவனது அரசை அடையாளமாக உணர்த்துகிறது. நூலில் காணப்படும் மெசியாக் கோட்பாடு ஆட்தன் மையற்றது; குழுத்தன்மையுடையது. இறை யரசு ஏற்படுவதைப் பற்றியே ஆசிரியர் கவ னம் செலுத்துகிறார். இந்த அரசை ஆளும் தாவீதின் மகனைப்பற்றி ஒன்றும் கூற வில்லை. இதில் நாடு கடத்தப்பட்டுத் திரும் பிய காலத்தில் - பாரசீகர், இரேக்கர்கள் காலத்தில் - இஸ்ராயேலில் நிலவிய மெசியா பற்றிய பொதுப்போதகத்தோடு ஆசிரியர் ஒத்துப்போகிறார். மெசியா என்ற தனிஆளை விட இறைவன் தமது மக்களுக்குத் தயாரித் திருக்கும் மகிமைமிக்க வருங்காலம் யூத சமய போதகத்திற்கு எப்போதும் மையக் கருத்தாகும். பாரம்பரிய மெசியா போதகத் தைப் பற்றிப் பேசும் எசாயாகூட புதிய தாவீது மரபு அரசனைக் குறிக்காமல் இவ்வரசைப் பற்றிப் பேசுகிறார் (எசா 2:2-4; 31:1தொ- உடன் 1:25-28-ஐ ஒப்பிடுக). தாவீது வீட் டைச் சேர்ந்த வரலாற்று அரசர்களின் நடத் தையால் ஏற்பட்ட ஏமாற்றம், எரேமியா, எசேக்கியேல் போன்ற இறைவாக்கினர்களை யாவேயின் புதிய அரசில் கவனம் செலுத்த இட்டுச் சென்றது. இதுவே எசாயாவுக்குப் பின் நாடு கடத்தப்பட்டுப் பின்வந்த சில இறைவாக்கினர்களுக்கும் பொருந்தும். தானியேல் நூல் எழுதப்பட்ட காலத்திற்குப் பின்புதான் உலகில் இறைவனது புதிய அர சில் மெசியா என்ற தனி ஆளைப்பற்றி யூதர்கள் கவனம் செலுத்தினர். தானியேல் நூலில் காணப்படும் மெசியாக் கோட்பாடு இஸ்ராயேலின் நம்பிக்கையை, அது புதிய ஏற்பாட்டில் நிறைவாக உண்மையாகுமுன், அதன் இறுதிக் கட்டத்திற்குக் கொண்டு வரு கிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குள் மெசியாவின் பாகம் பற்றிய விசுவாசம் நன்கு வேரூன்றிவிட்டது. இது யூதர் நூல்களி லிருந்தும் புதிய ஏற்பாட்டிலிருந்தும் தெளிவா கிறது. இதற்காகத் தானியேலின் போதகம் முக்கியம் குறைந்தது என்று கூறவில்லை. உண்மையில் இந்த அரசின் இயற்கை கடந்த தன்மை, இதன் விண்ணகத்தோற்றம், எல் லாம் உள் அடக்கும் தன்மை, இதன் முடி வில்லாமை ஆகியவற்றை வலியுறுத்துவ தில் இந்நூலின் மெசியா போதகம் உச்ச நிலை அடைகிறது எனலாம். ''வானத்தின் மேகங்களின் மீது மனுமகனைப் போன்ற ஒருவர்'' (7:13) நேரடியாகத் தனிநபர் மெசி யாவைக் குறிக்கவில்லையானாலும் விரை வில் இச்சொல் அப்பொருளைப் பெற இருந் தது. இறைவாக்குகள் உண்மையானபோது, தனிநபரான மெசியாவால் அரசு தொடங்கப் படுகிறது. அவர் தாவீதின் மகனாய் இருந்த தோடு உண்மையான இறைமகனாகவும் இருந்தார்.

ஈ. உயிர்ப்பும் வருங்கால வாழ்வும்: ஆசிரி யரது காட்சியில் இறைவனது அரசு அந்தி யோக்குவின் அழிவிற்குப் பின் தொடங்கி வைக்கப்படுகிறது (7:11-14.25-27; 8:25 தொ; 9:26 தொ). ஆனால் 11:40-இல் அந்தியோக்கு வின் மரணத்தை விவரித்த பின், இந்த அரசின் தொடக்கத்தைக் குறிக்க ஆசிரியர் தவறிவிடுவது விநோதமாகத் தோன்றலாம். இதற்குப் பதிலாக இறைவனது மக்கள் இது வரை அனுபவித்த துன்பங்களையும்விட அதிகக் கடுமையான துன்பங்கள் அனுபவிக் கும் காலத்தை விவரிக்கத் தொடங்குகிறார். இந்தப் புதிய இடுக்கண்மிக்க காலத்தில் முடிவில்லாத வாழ்வுக்காகக் குறிக்கப்பட்ட நீதிமான்கள் மீட்கப்படுவர் (12:1). இவர் களும் முந்திய தலைமுறைகளைச் சேர்ந்த நீதிமான்களும் மரணத்தின் பிடியிலிருந்து உயிர்த்தெழுந்து முடிவில்லா வாழ்வு பெறு வர். வானத்து விண்மீன்களைப் போல் ஒளி வீசித் திகழ்வர். தீயவர்கள் வெட்கத்திற்கும் முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர் (12:2-3.13). இங்கு, இதுவரை பழைய ஏற் பாட்டிலேயே காணப்படாத அளவு உடல் உயர்ப்புப் பற்றித் தெளிவான யூத போதனை யைக் காண்கிறோம். இது விசுவாசத் தொகுப்புக்கு இந்நூல் அளிக்கும் முக்கிய பங்காகும். இந்த விசுவாசம் எபிரேய விவி லியத்திலேயே தனித்தன்மையுடையதாகும்.

ஆன்மாவின் அழியாமைக் கோட்பாட்டை விட இதுசெமித்திய மனப்போக்குக்கு மிக வும் பொருளுடையது. இது ''சேயோலில்'' வாழும் நிழல்வாழ்வு என்னும் போதகத்தி லிருந்து யூதர்களுக்கு விடுதலை அளித்தது. இந்த விசுவாசம் அந்தியோக்கு கொடுமைப் படுத்திய காலத்தில் (2 மக் 7) இறை சாட்சிகளைக் காத்து உற்சாகப்படுத்தியது; வெற்றிமிக்க நம்பிக்கையோடு மறை சாட்சி மரணத்தை எதிர்கொள்ளத் துணிவு அளித் தது. ஆனால் தானி 12:1-3.13-இல் காண்கின்ற படி உயிர்ப்புப்பற்றிய கோட்பாடு, பிற்காலப் போதகம் அளிக்கும் தெளிவைக் கொண் டிருக்கவில்லை. ஏனெனில் உயிர்ப்புக்குப் பின் வரும் வாழ்வு விண்ணகத்திலா பூமி யிலா என்று வாசகம் தெளிவாகக் கூற வில்லை. மேலும் இஸ்ராயேலில் சிலரது உயிர்ப்பை மட்டும் ஆசிரியர் குறிப்பிடு கிறார். புற இனத்தாரின் உயிர்ப்பைப்பற்றி அவர் அக்கறை கொள்ளவில்லை. மேலும் நீதிமான்களின் உயிர்ப்பைமட்டும் ஆசிரியர் கருத்தில் கொண்டிருக்கலாம் (2:1-3). இவ் விதம்தான் இவ்வாசகத்தைச் சாலமோனின் சங் கீதங்கள் என்ற யூதநூல் புரிந்து கொண்டதா கத் தெரிகிறது. இந்த முக்கிய கூறுகளைப் பிற்கால வெளிப்பாடுகள் நிறைவுசெய்யும். யூதர்களுக்கும் புற இனத்தார்க்கும், நல் லோர்க்கும் தீயோர்க்கும் உயிர்ப்பு பொது வானதாகும் என்று இந்தப் பிற்கால வெளிப் பாடுகள் காட்டும்.

உ. முடிவின் காலமும் நேரமும்: ஆசிரியர் கூறும் காலக்கணிப்பு இறைவனது அரசு உடனடியாக வரவேண்டியதொன்றாகும் என்ற உணர்வை ஏற்படுத்தலாம் (7:25-27; 9:24-27; 12:6 தொ. 11தொ). உண்மையில் ஆலயப் பலிகள் தடைசெய்யப்பட்டதி லிருந்து மூன்றரை ஆண்டு முடிவில் அரசு வருவதாக ஆசிரியர் இறைவாக்கு உரைக்கி றார். இந்த வாக்கு அக்கால யூதர்களுக்கு மகிமைமிக்க உறுதியும் நம்பிக்கையும் அளிக்கும் செய்தியைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இக்காலம் பற்றிய ஆசிரி யரது கேள்விக்குக் ''குறிக்கப்பட்ட நாள் வரையில் இந்தச் சொற்கள் மறைக்கப்பட்டு முத்திரையிடப்பட்டிருக்கும்'' (12:9) என்று பதில் கிடைக்கிறது. வெளிப்பாட்டுக் காட்சி யாளர் இறைவாக்குகளும் அந்தியோக்கு வின் வீழ்ச்சியும் ஒருசேர நிகழும் என எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அது நிறை வேறுதலின் துல்லியமான காலம் அவருக்கு வெளிப்படுத்தப்படவில்லை. இப்படிப் பட்ட தொலையணிமை முன்னோக்கு இன்மை இறைவாக்குரைத்தலுக்குப் பொது வான பண்பாகும். நிறைவேறுதல் பற்றிய துல்லியமான நேரம் ஒரு போதும் வெளிப் படுத்தப்படுவதில்லை. இறைவனது பெரும் பாலான இறைவாக்குகளில் இறைப் பயிற்சியிய லின் கூறு இருப்பதே இதற்குக் காரணமாகத் தோன்றுகிறது. மனிதனது மீட்புப் பற்றிய இறைத்திட்டத்தில் இறைவாக்குகள் ஒரு பகுதி யாகும். அவை நிறைவேறும்போது அவற் றிற்கு மனிதன் அளிக்கும் பதிலும் கணிப்பில் எடுத்துக் கொள்ளப்படுகிறது (எரே 18:1-2). இறைவனுக்கு ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாளைப் போன்றதாகும் (2 பேதுரு 3:8). இறைவாக்கு நிறைவேறும் நாளையோ நாழிகையையோ அவர் யாருக்கும் வெளிப்படுத்துவதில்லை (மாற் 13:32; மத் 24:36; அ.ப. 1:7).

ஊ) வானதூதர்கள்: இறைவனது திரு வுளத்தை மனிதர்களுக்கு வெளிப்படுத்தும் அவரது பணியாளர்களாக வானதூதர்களுக் குப் பொருள் பொதிந்த பாகத்தை அளிப்ப தில் தானியேல் முந்திய விவிலிய நூல் களைக் கடந்து செல்லுகிறது. இந்நூலில் வான தூதர்கள் அடிக்கடி குறிக்கப்படுகின்றனர். பல்லாயிரம் பேர் இறைவனது அரியணை யைச் சூழ்ந்து நின்று அவருக்குப் பணிபுரிய வும் (7:10) அவரது சட்டத்தை நிறைவேற்ற வும் (4:13:17) தயாராக உள்ளனர். கபிரியேல் தூதர் தானியேலுக்கு இறைவனது செய்திக ளைக் கொண்டு வருகிறார் (9:21 தொ; 10:4 தொ); அவருக்குக் காட்சிகளின் பொருளை விளக்குகிறார் (8:6; 9:21). தீச்சூளையில் இளைஞர்களையும் (3:28) சிங்கக் குகையில் தானியேலையும் (6:2) வானதூதர்கள் காப் பாற்றுகின்றனர். தூதர் மிக்கேல் இஸ்ராயே லின் தலைமைக் காவலராகத் திகழ்கிறார் (10:13.21; 12:1). புறஇன நாடுகளும் இறை வன்முன் தங்களுக்காகப் பரிந்துபேசப் பாது காவலரான தூதர்களைக் கொண்டுள்ளன. தானியேல் நூலில் காணப்படும் இந்த வான தூதர் இயல், யூதராபிகளின் நூல்களிலும் தொடக்க காலக் கிறிஸ்துவ இலக்கியங்களி லும் காணப்படும் மிகவும் வளர்ச்சியடைந்த வானதூதர் இயலுக்கு வழி கோலுகிறது.

18. புதிய ஏற்பாட்டில் தானியேல் நூல்: தானியேல் புதிய ஏற்பாட்டில் ஒரே ஒருதரம் எடுத்துக் கூறப்படுகிறது. ''பாழாக்கும் அருவருப்பு'' இயேசுவின் வெளிப்பாட்டுரையில் குறிக்கப்படுகிறது (மத் 24:15; மாற் 13:14). தானி 12:2-இலிருந்து எடுக்கப்பட்ட சொற்களில் மரித்தோர் உயிர்ப்பு மத் 25:46-இல் விவரிக்கப்படுகிறது. எல்லாவற்றிலும் முக்கியமான குறிப்பு தானி 7:13-ஐ இயேசு தமக்கே சாற்றி யூதப்பொதுச்சங்கத்தின் முன் அறிவித்ததும் (மத் 26:64; மாற் 15:62;லூக் 23:69) இயேசு தம்மையே ''மனுமகன்'' என்று விரும்பி அழைத்துக் கொண்டதுமாகும்.

19. இக்காலத்திற்கு: ஒரு நூல் திருமுறை நூலாகக் கருதப்பட வேண்டுமென்றால், அது எழுதப்பட்ட காலத்திற்கு மட்டுமன்று, எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாக இருக்க வேண்டும். இது தானியேல் நூலுக்கு மிகவும் பொருந்தும். பிரமாணிக்கமின்மையா, சாவா என்ற இறுதிச் சவாலை மக்கள் எதிர் கொள்ளும்போதெல்லாம் துணிவைக் கோரும் இந்நூலின் கோரிக்கை தக்க பதிலைப் பெறும். ஆனால் இடுக்கண் மிக்க காலத்தில் துணிவு, தங்கள் வாழ்வில் சிறுசிறு காரியங்களுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பவர்களுக்குத்தான் வரும். தானியேல் நூல் இடுக்கண் மிக்க காலத்திற்கு உரிய நூல் மட்டுமன்று, சாதாரண காலத்திற்குரிய ஒரு பயிற்சி நூலும் ஆகும். இந்நூலின் நோக்கம், கடந்த கால இறைவாக்குகளில் விசுவாசம் கொள்ளவும், அவை நிறைவேறும் என்று துன்பங்கள் நடுவிலும் எதிர்பார்த்துப் பொறுமையாக நிலைத்திருக்கவும் விசுவாசிகளை உற்சாகப்படுத்துவதாகும். இறைவனது ஆட்சி யாவும் கடந்தது. அவர் எப்போதும் வெற்றி பெறுவார். தீயோர் அழிவர். இறையரசு நிறுவப்படும். அதில் நீதிமான்கள் முடிவில்லா வாழ்வு பெறுவர் என்று இந்நூல் உறுதிஅளித்தது. இவ்வாறு இறைவனுக்கு எப்போதும் பிரமாணிக்கமாய் இருக்க மக்கபேயர் காலத்து யூதர்களுக்கு இந்நூல் பயிற்சி அளித்தது. இப்பயிற்சி எக்காலத்துக்கும் பொருந்தியதாகும்.

இந்நூலில் கூறப்படும் கோட்பாடுகள் அந்தியோக்குவின் காலத்திற்கு மட்டுமன்று, இக்காலத்திற்கும் பொருத்தமுடையதாகும். இந்நூலுக்கு இணையான புதிய ஏற்பாட்டுத் திருவெளிப்பாட்டு நூலைப்போல் இந்நூலின் செய்தியும் நிலையானதாகும். காலமும் இறைவனால் படைக்கப்பட்ட பொருளே. எல்லா வரலாற்று நிகழ்ச்சிகள்மேலும் இறைவன் தலைமை தாங்குகிறார். மனித காரியங்களை ஆட்சி செய்கிறார். தீமையை வெல்கிறார். தமது மக்களை அவர்கள் இறுதிக் கதிக்கு இட்டுச் செல்கிறார். இப்போதகத்தை மனுகுலம் ஒருபோதும் மறந்துவிடமுடியாது. இவையாவும், தானியேலுக்கு இருந்தது போல, நமக்கும் மறைபொருளாக இருக்கலாம். ஆனால் இவை ''குறிப்பிட்ட நாளில்'' உறுதியாக நிறைவேறும். அதுவரை தானியேலைப்போல் நாமும் நிறைவேறுதலுக்காகக் காத்திருக்க வேண்டும். இறைவனில் விசுவாசம் என்ன என்பதுபற்றிய வீறார்ந்த விளக்கமாகும் இந்நூல்.

உடல் உயிர்ப்பு, முடிவில்லா வாழ்வு ஆகியவை பற்றிய கிறிஸ்துவ நிறைவான போதகத்தோடு ஒப்பிடும்போது தானியேவில் வரும் போதகம் குறையுள்ளதாகத் தெரியலாம். ஆனால் திருமுறைநூல்களில் வேறெந்த நூலும் தானியேல் நூலைப்போல், ''இம்மை வாழ்வுக்கு மட்டும் நாம் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்தவர்களாயிருந்தால், எல்லாரையும்விட நாம் இரங்குதற்குரியர் ஆவோம்'' என்ற பவுலின் கூற்றின் (1 கொரி 15:19) உண்மையை வெளிக்கொணரவில்லை. ஏனெனில் தனது குறுகிய வாழ்வே தன் ஊழி முழுவதையும் உள்ளடக்குகிறது என்று எண்ணும் மனிதனின் வருந்தத்தக்க நிலையை இந்நூல் நினைவுபடுத்துகிறது.

தானியேல் நூல் ஆசிரியர் உலக முடிவின் காலத்தைக் கணிப்பதில் மிகவும் தவறினார் என்று கூறலாம். இந்த விவிலியக்கணிதம், முடிவு காலக் கணிப்பு ஆகிய அயர்ச்சிதரும் காரியத்தை முயன்று தோல்வி கண்டார். இது தவறான பாதையென்று கண்டார். இது திருச்சபைக்கு முக்கியம் வாய்ந்ததாகும். அவரது தோல்வியும் திருமறைப் போதகத்தின் ஓர் அங்கமாகும். இது ''அந்நாளோ நாழிகையோ ஒருவனுக்கும் தெரியாது; தந்தைக்குத் தெரியுமேயன்றி வானதூதருக்கும் மகனுக்கும்கூட தெரியாது'' என்ற இயேசுவின் எச்சரிக்கையை (மாற் 13:32) நமக்கெல்லாம் நினைவுபடுத்தி நிற்கின்றது.

தி

திகிலத் - பிலேசர் [(TIGLATH - PILESSER -எசாரா (ஆலய) மகனில் என் நம்பிக்கை (உள்ளது)].

மூன்றாம் திகிலத் - பிலேசர் அசீரிய அரசனும், பூல் என்ற பெயரில் பாபிலோனிய அரசனும் ஆவார் (கி.மு. 745-727). இவர் மூன்றாம் அதாது-நிராரியின் மகனும், ஐந்தாம் சல்மனேசரின் தந்தையும் ஆவார்.

இவர் ஆட்சிசெய்த அரச குடும்பத்தைச் சேர்ந்தவரல்லர். இவர் பதவியேற்பதற்கு முன் அசீரிய ஆதிக்கம் பல திறமையற்ற அரசர்களால் வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்தது. இவர் பதவி ஏற்றதிலிருந்து ஆட்சி செய்வதில் தன்மை முழுவதும் ஈடு படுத்திக் கொண்டார். அசீரியர்களின் பேரரசை உண்மையில் தொடங்கிவைத்தவர் இவரேயாவார். இந்த ஆட்சி இவரது இறப் பிற்குப்பின் 100 ஆண்டுகளுக்கு நீடித்தது. இவர் பாபிலோனியாவிலுள்ள அரமேய இனத்தைக் கைப்பற்றி, பாபிலோனியாவுக் கும் தன்னை அரசனாக்கிக் கொண்டார். இவ்வாறு பாபிலோனியாவையும், அசீரி யாவையும் ஒன்றாக்கும் இவரது முயற் சியை, இவருக்குப் பின் வந்த அரசர்களும் பின்பற்றினர். இவர் பாபிலோனிய மக்க ளைத் தனது பேரரசின் மற்றப் பகுதிகளுக்குக் குடியேற்றினார். இப்படிச் செய்து எல்லோ ரையும் ஒற்றுமைப்படுத்தி ஒரே அசீரியப் பேரரசை உருவாக்க முயற்சித்தார். அர்மோ னியாவிலுள்ள ஆபத்தான உரார்து அரசைக் கைப்பற்றச் செய்த இவரது முயற்சி வெற்றி பெறவில்லை. ஆனால் அதே நேரத்தில் சீரியா, பாலஸ்தீனத்தில் வெற்றி கண்டார். கி.மு. 734-இல் கலிலேயா மற்றும் கிலயா தைக் கைப்பற்றி அவற்றை ஒரு மாநிலமாக அசீரியப் பேரரசுடன் இணைத்துக் கொண் டார். கி.மு. 732-இல் இவர் தமஸ்குவைக் கைப்பற்றித் தரைமட்டமாக்கினார். இப் பகுதி அசீரியப் பேரரசின் ஒரு மாநிலமாக்கப் பட்டது. சிரியா, பாலஸ்தீனத்தைச் சேர்ந்த மற்ற அரசர்கள் இவருக்குச் சரணடைந்து கப்பம் கட்டி வந்தனர்.

இவர் கலிலேயா, கிலயாதைக் கைப்பற்றி யது 2 அர 15:29; 1 நாள் 5:6. 26-இல் குறிக்கப்படுகிறது. ஆகாசு இவருக்குக் கப் பம் கட்டினார்; மேலும் தமஸ்கு, இஸ்ரா யேல் ஆகியவற்றிற்கு எதிராகத் தன் நாட்டுப் பாதுகாப்புக்காக இவரோடு கூட்டுச் சேர்ந்து கொள்ளக் கேட்டார் (2 அர 16:7-9; 2 நாள் 28:20). இச்செயலானது இறைவாக்கினர் எசா யாவால் கண்டிக்கப்பட்டது (7:10-14). திகி லத் - பிலேசர் தமஸ்குவைக் கைப்பற்றிய தும் ஆகாசு தமஸ்குவுக்குச் சென்று தனது பணிவைக் காட்டினார் (2 அர 16:10). 2 அர 15:19; 1 நாள் 5:26-இல் இவர் பூல் என்று அழைக்கப்படுகிறார். இஸ்ராயேலின் மென கேம் இவருக்குக் கப்பம் செலுத்தினார் (2 அர 15:19).

திகிலத் - பில்னேசர் (TIGLATH - PILNESSER)

இது திகிலத் - பிலேசரின் மற்றொரு பெயர் (1 நாள் 5:6; 2 நாள் 28:20).

திகைப்பு, திகில், வியப்பு,மலைப்பு (ASTO-NISHMENT, AMAZEMENT)

விவிலியத்தில் வியப்பு என்பது இறை வன் வரலாற்றில் செயல்படும்போது மனி தன் காட்டும் உணர்வாகும். பழைய ஏற்பாட் டில், இறைவன் இஸ்ராயேல் மீதோ அயல் நாடுகளின் மீதோ தீர்ப்பிடும்போது இவ் வுணர்வு எழுப்பப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் கூற்றாலோ செயலாலோ இவ் வுணர்வு எழுகின்றது. ஒரே ஒருதரம் இவ் வுணர்வு உயிரற்ற பொருள்களுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது: ''விண்ணின் தூண்கள் அதிர் கின்றன; அவர் அதட்டலில் அதிர்ச்சியடை கின்றன'' (யோபு 26:11).

எபிரேய, கிரேக்க மொழிகளில் இவ் வுணர்வைக் குறிக்கும் மூலச்சொல் பலவாறாக மொழி பெயர்க்கப்படுகிறது (உப 28:37; லேவி 26:32; 1 அர 9:8; 2 நாள் 7:21; 29:8; எரே 8:21; 25:11.18; 28:37; 44:22; மத் 7:28; மாற் 5:42; 10:24; லூக் 5:9).

பழைய ஏற்பாட்டில் இந்த வியப்புணர்வு திகைப்பு, திகில், மலைப்பு, பயம் போன்ற உணர்வுகளையும் உள்ளடக்கும். யாவே தமது ஆலயத்தின்மீதும் தம் மக்கள் மீதும் கூறும் தீர்ப்புப் போன்ற எதிர்பாராத செயல்கள் இவ்வுணர்வைத் தூண்டலாம் (1 அர 9:8-2 நாள் 7:21). இதில் இரு கூறுகள் உண்டு. இறைவனுடைய ஆற்றல் மற்றும் மேலாண்மை கண்டு வியப்புறுதல்; இத்தகைய இறைவன் தாம் உடன்படிக்கை செய்து கொண்ட மக்களைத் தண்டிப்பது கண்டு திகைத்தல் (எரே 8:21; எசே 4:16; 12:19). இவ்வுணர்வு மறுவுலகைச் சார்ந்தவையாலும் மனிதனால் புரிந்து கொள்ள முடியாத இறைவனுடைய செயலாலும், இறைவனது நோக்கம் கடந்த காலத்திற்கு மாறுபட்ட விதத்தில் வெளிப்படும்போதும் எழக்கூடும். இவ்வாறு பழைய ஏற்பாட்டில் இவ்வுணர்வு அச்சத்தையும் கொண்டுள்ளது. இவ்வாறு தெரியாதவற்றையும் புனிதமானவற்றையும் காணும்போது இவ்வுணர்வு எழக்கூடும். மேலும், தீர்ப்பினால் யாவேயால் சந்திக்கப்படுபவனும் (எரே 25:9; 42:18; 52:37; எசே 5:15), ஒளி மற்றும் வாழ்வோரின் உலகிலிருந்து புறம்பாக்கப்படுபவனும் தூய்மையற்றவனும், தன்னைச் சுற்றியுள்ளோரையெல்லாம் தீட்டுப்படுத்துபவனும் (உப 28:37; 2 நாள் 29:8; எரே 29:18; 44:12; 51:41) பேரச்சத்திற்கு உள்ளாகிறான்.

புதிய ஏற்பாட்டில் இவ்வுணர்வு இயேசுவால் எழுப்பப்படுகிறது. இதில் எதிர்பார்க்காத ஒன்றை எதிர்கொள்வதால் எழும் மலைப்பும் திகைப்பும் உள்ளடங்கும். (மத் 13:54; மாற் 10:24-27; லூக் 2:47; 4:32). ஆண்டவரது அதிகாரத்தைக் கண்டு மக்கள் வியப்புறுகின்றனர் (மத் 7:28; 22:33; மாற் 7:37). இதிலே அச்சக்கூறும் உண்டு. இவ்வாறு, மிகுதியான மீன்பாட்டைக் கண்டு திகைப்புற்ற பேதுரு, ''ஆண்டவரே, நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்'' என்று அரற்றுகிறார்.

ஆயினும் புதிய ஏற்பாட்டில், இவ்வுணர்வு அச்சத்தை மட்டுமின்றி கவர்ச்சியையும் ஈர்ப்பையும் உள்ளடக்குகிறது. இயேசு மக்கள் கூட்டத்தைக் கவர்ந்தது கண்ட தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் அவரைக் கொல்லத் தேடினர் (மாற் 11:18). பவுல் அளித்த ஆண்டவரின் போதனையைக் கேட்டு மலைத்துப்போன ஆளுநன் செருகியு பவுல் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொள்கிறான். இறைவன்முன் எழும் அச்சம் அன்பாலும் விசுவாசத்தின் பணிவாலும் மேற்கொள்ளப்படுகிறது.

திக்கிக்கு (TYCHICUS - நற்பேறுடைய)

இவரைப்பற்றிப் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் குறிப்புகள் உள்ளன (அ.ப. 20:4; எபே 6:21; கொலோ 4:7; 2 திமொ 4:12; தீத் 3:12).

இவர் பவுலுக்கு ''அன்புள்ள சகோதரர்'' என்றும், ''ஆண்டவருக்கு நம்பிக்கைக்குரிய பணியாளர்'' என்றும் (எபே 6:21), ''அவர் நம்பிக்கைக்குரிய பணியாளர், ஆண்டவர் பணியில் என் (பவுலின்) உடனுழைப்பாளர்'' (கொலோ 4:7) என்றும் விவரிக்கப்படுகிறார். இவரும் ஒனேசிமுவும் பவுலின் மடலைக் கொலோசேயர்களுக்கு எடுத்துச் சென்றனர். இருவரும், உரோமையில் சிறைப்பட்டிருந்த பவுலைப் பற்றிய செய்திகளை எல்லாம் அவர்களுக்கு அறிவித்தார்கள் எனலாம்.

அ.ப. 20:4-இல் திக்கிக்கும் துரோபிமும் ஆசியாவைச் சேர்ந்தவர்கள் என்றும், பவுலின் மூன்றாம் மறைபரப்புப் பணியின் முடிவில் அவருக்கு வழித்துணையாய்த் துரோவாவுக்குச் சென்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது. இவரைப்பற்றி வேறு குறிப்பு அப்போஸ்தலர் பணிநூலில் இல்லை என்றாலும் பவுலோடு பயணம் செய்த ''நாங்கள்'' என்பதில் இவரும் ஒருவராக இருக்கலாம். 2 திமொ 4:12, பவுல் திக்கிக்குவை எபேசுக்கு அனுப்புவதாகக் கூறுகிறது. ஆனால் எப்போது எங்கிருந்து அனுப்பினர் என்று குறிப்பிடவில்லை. தீத் 3:12, திக்கிக்கு, தீத்துவுக்குப்

பதிலாகக் கிரேத்தாவில் பணி செய்யத் தகுதியுடையவர் என்று சுட்டுகிறது. ஆனால் இம்மடல் எப்போது, எங்கிருந்து எழுதப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை. 2 கொரி 8:22-இல்வரும் பெயர் குறிக்கப்படாத ''வேறொரு சகோதரர்''திக்கிக்குவாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். இவர் பிற்காலத்தில் கொலொப்போனில் ஆயராக இருந்து மறைசாட்சியாக மரித்தார் என்று பாரம்பரியம் கூறுவதும் யூகங்களை அடிப்படையாகக் கொண்டதே.

திக்ரீசு (TIGRIS)

இது மேற்காசியாவிலுள்ள பெரிய நதிகளில் ஒன்று. விவிலியப் பாரம்பரியப்படி இன்பவனமாகிய ஏதேன் தோட்டத்தில் பாய்ந்து கொண்டிருந்த நான்கு ஆறுகளில் ஒன்று. ''இது அசீரியாவிற்குக் கிழக்கே ஓடுகின்றது'' (ஆதி 2:14). தானியேல் நூலின்படி, இறைவாக்கினர் தானியேல் இந்த நதியின் கரையில்தான் தனது முக்கிய காட்சியைக் கண்டார் (தானி 10:4).

இந்நதி தியார்பெக்கிரின் வடமேற்குப் பகுதியில் அர்மேனியாவில் தொடங்கி, தென்கிழக்காக ஓடி, மோசூல், தெக்ரித், சமசரா, பக்தாத், குர்-ஏல்-அமாரா ஆகிய இடங்களைக்கடந்து பாஸ்ராவுக்கு வடக்கில் ஓடி, யூப்பிரத்திசுவில் கலந்து சாத்-ஏல்-அரபு நதியாக உருவெடுத்துப் பாரசிக வளைகுடாவில் விழுகிறது. இதன் முக்கிய கிளைநதிகள் மேல், கீழ்சாபு, அதெயிம் மற்றும் தியாலா ஆகும். இவை மோசூலுக்கும் பக்தாத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் திக்ரீசுடன் சேருகின்றன. அமாராவுக்குத் தெற்கில் கெர்கா வந்து சேர்கிறது. திக்ரீசின் கரைகளில் பல முக்கிய நகரங்கள் இருந்திருக்கின்றன. மோசூலுக்கு எதிர்க்கரையில் அசீரியப் பேரரசின் தலைநகரான நினிவேயின் சிதைவுகள் உள்ளன. இன்னும் தெற்கில் மேற்குக் கரையில் பழங்கால அசூர் இருந்த இடமாகிய கலாத் செர்காத் உள்ளது. இது அசூர் என்ற தெய்வத்தின் வழிபாட்டு மையமாகத் திகழ்ந்தது. இன்னும் தெற்கில் பக்தாத் பகுதியில் ஒபிஸ் அமைந்திருந்தது. இது புதிய பாபிலோனியாவிலும் பிற்காலத்திலும் வணிகமையமாகத் திகழ்ந்தது. கிழக்குக் கரையில் சல்மான் பாக் என்ற இடத்தில் பார்த்தியர்களின் மற்றும் சசானியர்களின் தலை நகரமான ஸ்தெசிபோன் இருந்தது.

திக்லா (DIKLAH - பனை மரத்தோட்டம்)

யோக்தானின் மகன். ஆகவே அரேபிய இடத்தைக் குறிக்கலாம் (ஆதி 10:27; 1 நாள் 1:21). இது ஒரு பாலைவனச் சோலையாக இருந்திருக்கலாம். இது வாடி சிர்கானின் தென்முனையிலுள்ள பிரோக்கோபியசின் பொய்னிக்கோன் என்ற இடத்தில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

திக்வா (TIKVAH - நம்பிக்கை)

1. இறைவாக்கினி உல்தாவின் மாமனார். இவள் யோசியா அரசன் காலத்தில் இறைவாக்கு உரைத்தாள் (2 அர 22:14; 2 நாள் 34:22).

2. யாகிசியாவின் தந்தை. இவர் புறவினமனைவியரை நீக்கிவிடும் திட்டத்தை எதிர்த்தவர் (எஸ் 10:15).

திசகாபு (DIZAHAB - தங்கமுள்ள பகுதி)

அராபாவிற்குத் தென் கிழக்கே உள்ள ஓர் இடம். மோசே இஸ்ராயேல் மக்களுக்கு இறுதியாகப் பேசிய இடம் என்று சொல்லப்படும் பல இடங்களில் ஒன்று (உப 1:1). இது இருந்த இடம் தற்போது தெரியவில்லை.

திசபே (TISHEBE)

இது எலியாவின் சொந்த ஊரின் பெயராகும். இவரது தந்தை, குலம் பற்றி எக்குறிப்பும் இல்லை. ஆனால் எலியா திசபேயர் என்று ஆறுமுறை குறிக்கப்படுகிறார் (1 அர 17:1; 21:17.28; 2 அர 1:3.8; 9:36). இவர் கிலயாதில் வாழ்ந்து வந்தார் (1 அர 17:1). திசபேயை அடையாளம் காட்ட, பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவைகளின் விளைவு தெளிவாக இல்லை. பாரம்பரியம் இவ்விடம் யோர்தானுக்குக் கிழக்கில் 14 கி.மீ. தொலைவிலும் வாடி யாபிசுக்குச் சிறிது தொலைவில் உள்ள லிஸ்திப்பு என்ற

இடத்திலும் இருந்ததாகக் கூறுகிறது. இது உண்மையா என்பது ஐயத்திற்குரியது. எலியா ஒரு இஸ்ராயேலரா என்பதே ஐயத் திற்குரியதாகும். காண்க: எலியா.

திசாத்தி / இட்சாதே (TZADDI, SADE)

எபிரேய நெடுங்கணக்கில் பதினெட்டா வது எழுத்து. அகரவரிசைச் சங்கீதமாகிய 119-இல் 18-ஆம் பகுதிக்கு இவ்வெழுத்து தலைப்பாக உள்ளது. இப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இவ்வெழுத்தோடு தொடங்குகிறது.

திசிபே (THISBE)

வடக்குக் கலிலேயாவிலுள்ள ஓர் இடம் (தோபி1:2). இந்த இடத்திலிருந்துதான் தோபியா அசீரியர்களால் சிறைப்படுத்தப் பட்டார் (2 அர 15:29; 17:6). இந்த இடத்தை அடையாளம் காட்ட முடியவில்லை. தோபியா நூலின்படி, கெதேசு நப்தலிக்குத் தெற்கிலும் ஆசேருக்கு (காசோர்) வடக்கி லும் இருந்ததாகத் தெரிகிறது. சீனாயிக்கு வாசகம் இவ்விடம் போகோருக்கு வடக்கில் இருந்ததாகத் தெரிவிக்கிறது. எபிரேய, அரமே யிக்கு வாசகங்கள் இவ்விடத்தைக் குறிக்க வில்லை. வுல்காத்தா வாசகம் செபெத்து என்ற இடத்தைக் குறிக்கிறது (காண்க: யோசு 19: 37-39; 20:7; 1 மக் 11:63).

திசை நிர்ணயித்தல் (ORIENTATION)

1. திசைப்படுத்தும் அமைப்புகள்: திசை யறி சுருவி கண்டுபிடிக்கப்படுமுன் உள்ள நீண்ட வரலாற்றில் திசையை நிர்ணயிக்க பலமுறைகள் பயன்பட்டன. அவை அடிப் படைத் திசைகள், தல புவியியல், சூரியன், துருவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன. எபிரேய மக் கள் முதல் மூன்றையும் நன்கு அறிந்திருந்த னர். இவற்றில் எது தொன்மையானது என்று கூற முடியாது. ஆனால் ஒன்றுக்கு ஒன்றாக மாற்றிப் பயன்படுத்தினர். இவற்றில் அடிப் ப்டையான கருத்து இட அமைப்பாகும்.

2. விவிலியத்தில் திசை நிர்ணயம்: எபிரே யர்கள் உலகை நான்கு பகுதிகளாகப் பிரித்து அவற்றை ''உலகின் நாற்புறம்'' என்றும் (எசா 11:12), ''நான்கு மூலைகள்'' என்றும் (திருவெளி 7:1), ''நான்கு திசைகள்'' என் றும் (20:8), ''நான்கு காற்றுகள்'' என்றும் (எசே 37:9) விவரித்தனர். மற்றச் செமித்திய மக்களைப்போல் எபிரேயரும் சூரியன் உதய மாகும் திசையை அடிப்படைத் திசையாகக் கொண்டு மற்றத்திசைகளுக்குப் பெயரிட்ட னர். கிழக்குத்திசையை ''முற்பகுதி'' என் றும், ''உதய இடம்'' என்றும், மேற்குத் திசையைப் ''பிற்பகுதி'' என்றும் (யோவே 2:20), வடக்குத் திசையை ''இடது'' என்றும் (ஆதி 14:15), தெற்குத் திசையை ''வலது'' என்றும் (1 சாமு 23:24) அழைத்தனர். இடைப்பட்ட திசைகளின் பெயர் காணப் படவில்லை.

கிழக்குத் திசையைத் தவிர, மற்றத் திசை கள் இடங்களைக் கொண்டும் குறிக்கப்பட் டன. இவ்வாறு வடக்குத் திசை மலையை வைத்தும், தெற்குத்திசை ''வறட்சி நில மென்றும்'' மேற்குத் திசை ''கடல்'' என்றும் அழைக்கப்பட்டன (காண்க. எரே 4:6 தொ; யோவே 2:20, உப 33:23; யோபு 37:17; எசே 40:24).

திஸ்மஸ் (DISMAS, DYSMAS)

லூக் 23:39-43-இல் வரும் மனம்வருந்திய நல்ல கள்ளனின் பெயராகும். இப்பெயர் போலி நற்செய்திக் கதைகளில் வருகிறது. இக்கதைகளில் இவர் குழந்தை இயேசுவுக் குச் செய்த நற்செயலால் விண்ணரசில் நுழை யும் பேறு பற்றி வாக்குறுதி பெற்றார் என்று கூறப்படுகிறது. பிற்காலத்தில், கிரேக்க, இலத்தீன் தந்தையர்களின் கவனத்தை இவர் ஈர்த்தார். இவர் புனிதராக்கப்பட்டு, புனித லாத்ரோ என்ற பெயரில் இவருக்கு விழாக் கள் கொண்டாடப்பட்டன.

திஸ்ரீ (TISHRI)

இது ஒரு பாபிலோனியப் பெயராகும். இது எபிரேய நாட்காட்டியில் சமூக ஆண் டின் ஏழாம் மாதமும் சமய ஆண்டின் முதல் மாதமும் ஆகும். இது செப்டம்பர், அக்டோ பர், புரட்டாசி மாதங்களுக்கு இணையா

வது. இது விழாக்களின் மாதம் என்றழைக் கப்பட்டது. இம்மாதத்தில் புத்தாண்டு தினமும், பரிகார நாளும், கூடார விழாவும் கொண்டாடப்பட்டன.

திட நம்பிக்கை (CONFIDENCE)

வாழ்க்கையில் வரும் வேலைப்பளுவை யும், ஆபத்துக்களையும், இன்னல்களையும் இடுக்கண்களையும் மேற்கொள்ள ஒரு மனி தனுக்கு, நம்பகமாய்ச் சார்வுறக் கூடிய ஒரு துணையும், அடைக்கலம் தரக்கூடிய ஒரு புகலிடமும் மிகத் தேவை. தொல்லைக ளிடையே மனந்தளராது முயலவும், குறிக் கோளை அடையலாம் எனும் உறுதியைக் கைவிடாது முன்னேறவும் நமக்குத் திடநம் பிக்கை வேண்டும். ஆனால், எங்கே இந்நம் பிக்கை ஊன்றியிருக்க வேண்டும்?

1. இறைவன்பால் திடநம்பிக்கையும் விசுவா சமும்: தொடக்கத்திலிருந்தே மனிதனுக்கு இப்பிரச்சினை இருந்து வந்துள்ளது. இதற்கு இறைவனே பதிலளித்துள்ளார். நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண் ணாதே என இறைவன் மனிதனுக்குக் கட்டளை யிட்டபோது, நன்மை தீமை எனத் தீர்ப் பிடுபவர் கடவுள் ஒருவரே என்று அவர் மேல் மனிதன் முழு நம்பிக்கை வைக்க அழைக்கப்பட்டான் (ஆதி 2:17). கடவுளின் வார்த்தையை ஏற்பது மேலான ஞானத்தைத் தேர்ந்துகொள்வது, அதாவது தன் சொந்த விவேகத்திலே ஊன்றி நில்லாமல் மனிதன் தன் முழு இருதயத்துடனே ஆண்டவர் ஞானத்தில் நம்பிக்கை வைப்பதாகும் (பழ 3:5); இறை வார்த்தையை விசுவசிப்பது விண்ணையும் மண்ணையும் அனைத்தை யும் படைத்த எல்லாம் வல்லவர்மேல் நம் பிக்கை வைப்பதாகும் (ஆதி 1:1; சங் 115: 3.15). எனவே, படைப்புகளைக் கண்டு மனிதன் அஞ்ச வேண்டியதில்லை; மாறாக, அவற்றைத் தனக்கு அடிபணிய வைப்பதே அவனுக்கு ஒப்படைக்கப்பட்ட அலுவலா கும் (ஆதி 1:28).

ஆனால், ஆணும் பெண்ணும் ஒரு படைப் புப் பொருளிலே தம் நம்பிக்கையை வைக்க விழைந்தனர்; இத்தகைய நம்பிக்கை பொய் யானது எனத் தம் அனுபவ வாயிலாய்க் கற்றறிந்தனர் (ஆதி 3:4 தொ; யோவா 8:44; திருவெளி 12:9). இருவரும் வெற்று நம்பிக் கையின் விளைவைச் சுவைத்தனர்; இறை வன் முன்னிலையில் பயமும் பிறர் முன் னிலையில் வெட்கமும் கொண்டனர். பெண் ணின் பேறுகாலமும் நிலத்தின் விளைச்ச லும் நிறைவேதனையாயும், கடும் உழைப் பின் பயனாயும் ஆகின. முடிவில் அவர்கள் சாகவே சாவார்கள் (ஆதி 3:19.16-19).

''கடவுளே பார்த்துக் கொள்வார் மகனே'' என்று கூறித் தம் ஒரே மகனைப் பலியிடக் கையோங்கிய ஆபிரகாமின் திட நம்பிக்கை ஒரு நல்ல மாதிரி (ஆதி 22:8-14; எபி 11:17). ஆயினும், இதிலிருந்து இஸ்ரயேலர் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. தங்களை அடி மைத் தனத்திலிருந்து மீட்ட எல்லாம் வல்ல இறைவன் தமது மேலோ, சொந்த மக்களாக இருக்கும்படி மனமுவந்து அழைத்த அவரது அன்பின் மேலோ (உபா 32:6.10 தொ) அவர்கள் ஊன்றி நிற்கவில்லை. மாறாக, பாலைவனத்தில் உலகிய ஆதாரம் எதுவு மின்றி அவதியுற்றபோது (யாத் 16:3), எகிப் திய அடிமைத்தனத்துக்காக மீண்டும் ஏங்கி னர்; ஆண்டவருக்கு எதிராக முணுமுணுத்த னர். வரலாறு முழுவதிலுமே இஸ்ரயேல் தன் கடவுள்பால் சார்ந்திருக்க மறுத்துவிட் டது (எசா 30:15); மாறாக, 'பொய்கள்' எனவும் (எரே 13:25) 'இல்லாதவை' எனவும் (எசா 59:4; காண் சங் 115:8) இறைவாக்கினர் கடிந்துரைத்த சிலைகள்பால் நம்பிக்கை வைக்க முன்வந்தனர். செல்வத்திலோ (பழ 11:28; சங் 49:6 தொ), இயற்கை வலுவிலோ (சங் 61:10), உலகத் தலைவர்களிலோ (சங் 118:8 தொ; 146:3) நம்பிக்கை வைப்பது மடமை என ஞானிகள் வலியுறுத்துகின்ற னர். தன் மனவலிமையில் ஊன்றி நம்பிக்கை யாய் இருக்கிறவன் மதியீனன் (பழ 28:26); ''மனிதனில் நம்பிக்கை வைப்பவன்... சபிக் கப்படுவான்.. ஆண்டவரில் நம்பிக்கை வைப்பவன் பேறுபெற்றவன்'' (எரே 17:5.7).

இயேசுவும் இதே ஒழுக்க விதியைப் பின் பற்றுவதின் தேவையை வலியுறுத்துகிறார். பிற அதிபர்கள், த்லைவர்களை உதறிவிட்டு, தம் வல்லமை, ஞானம், தந்தைக்குரிய அன்பு என்பவற்றால் நம் நிபந்தனையற்ற நம்பிக்கைக்கு முழுதும் உரித்தானவரான இறைவனை எதற்கும் மேலாய்த் தேர்ந்து கொண்டு சார்ந்து நிற்கும்படி இயேசு நினைவுறுத்துவதிலிருந்து இது தெளிவாகிறது (மத் 6:24-34). நம் சொந்த நீதியில் நம்பிக்கை கொள்ளாமல் (லூக் 8:9.14) இறையரசின் நீதியை நாம் தேட வேண்டும் (மத் 5:20; 6:33); விசுவசிப்பவனுக்கு மட்டுமே இறைவன் அளிக்கும் இந்த நீதியை அவரிடமிருந்தே நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் (பிலி 3:4-9).

2. திடநம்பிக்கையும் பணிவுள்ள செபமும்: விசுவாசத்தில் வேரூன்றி இறைவன் பால் ஒருவர் கொள்ளும் இத்திடநம்பிக்கை அவரவர் தாழ்ச்சிக்கேற்ப உறுதி பெற்றிருக்கும். இப்படி நம்பிக்கைகொள்ள இவ்வுலகை ஆட்டி வைக்கத்தேடும் தீயோனின் சக்திகளை நாம் மறுக்கத் தேவையில்லை (மத் 4:8தொ; 1 யோவா 5:19); நாம் பாவிகள் என்பதை மறக்கவும் தேவையில்லை. எல்லா மனிதரும் மீட்புப் பெற வேண்டும் என விரும்பும் படைப்பவரின் பேரிரக்கத்தையும் பேராற்றலையும் (1 திமொ 2:4) நாம் ஏற்று, இயேசு கிறிஸ்துவில் நாமும் கடவுளின் பிள்ளைகளாய் (எபே 1:3 தொ) ஆக வேண்டும் என்பதுதான் முக்கியம்.

தளராத திடநம்பிக்கைக்கு மறக்கவொண்ணா எடுத்துக்காட்டாக யூதித்து நங்கை விளங்குகிறாள் (யூதி 8:11-17; 13:19); இழிந்தோரைத் தாங்கும் இறைவனாகவும் மடிந்தோரை மீட்கும் மீட்பராகவும் கடவுளின் கையைப் பற்றி நின்றாள்; மனமுருகி வேண்டினாள் (9:11). தாழ்ச்சிக்கும் திடநம்பிக்கைக்கும் உள்ள இந்த இணைபிரியா இணைப்பு, எவ்விதப் பாதுகாப்புமின்றிப் பயங்கர ஆபத்தில் திண்டாடும்போதும் இதய பூர்வமாய் இறைவனை நம்பும் சூசன்னா போன்ற எளிய மனத்தோர் செபத்தில் வெளிக் காட்டப்படுகிறது (தானி 13:25). சங்கீதத்தில் காணக்கிடக்கின்ற நம்பிக்கை விண்ணப்பங்கள் அளவிலா வேதனையில் (சங் 130:1) எழுபவையே. ''நானோ ஏழை; எளியவன்; என் தலைவர் என் மீது அக்கறை கொண்டுள்ளார்'' (சங் 40:17); ''உமது பேரன்பில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்'' (சங் 13:5); ''ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோரை அவரது பேரன்பு சூழ்ந்து நிற்கும்'' (சங் 32:10); ''ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறுபெற்றோர்'' (சங் 2:12). நூற்றி முப்பதாம் சங்கீதம் முழுவதுமே தாழ்மையுள்ள இத்திட நம்பிக்கையின் தனி வெளிப்பாடே. இக்கருத்துக்கு இயேசு நிறைவளித்துப் புதுமெருகிடுகிறார்.

கடவுளின் கொடைகளைக் குழந்தையைப் போல மனந்திறந்து பெற்றுக் கொள்ளச் சீடரை இயேசு அழைக்கிறார் (மாற் 10:15). நீதியும் மீட்பும் உட்பட (லூக் 7:50; 18:13 தொ) விண்ணகத் தந்தையிடம் நாம் வேண்டுவது எதுவும் நமக்குக் கிட்டும் என்பது உறுதி (லூக் 11:9-13 இணை). படைப்பின் மேல் முதலில் மனிதனுக்கு இருந்த ஆற்றலை இத்தகைய செபம் அவனுக்கு மீண்டும் அளிக்கிறது (மாற் 11:22 தொ; காண் ஞான 16:24). ஆயினும், இறைமக்கள் கொண்டிருக்கும் குழந்தைக்குரிய இத்திட நம்பிக்கை பற்றி இறையிலிமக்கள் அவர்களை ஏளனம் செய்வர், போட்டு வாட்டுவர். இது இறைமக்கள் எதிர்பார்க்க வேண்டிய தொன்றே. இதுவே இயேசுவின் அனுபவமாயும் இருந்தது (மத் 27:43; காண். ஞான 2:18). தம் பலியை நிறைவேற்றிச் சாகும் போதும் திடநம்பிக்கையின் பெரு முழக்கம் தானே அவரது உள்ளத்திலும் உதட்டிலும் ஒலித்தது (லூக் 23:46).

3. தளராத மகிழ்வு தரும் நம்பிக்கை: இத்தகைய பற்றுறுதி அன்புச் செயலால் தீயோனின் சக்திகளை எல்லாம் இயேசு வென்றார்; மனிதர் அனைவரையும் தம்பால் ஈர்த்தார் (யோவா 12:31தொ; 16:33). இவர்களின் திடநம்பிக்கையைத் தோற்றுவித்ததோடு, இந்த நம்பிக்கைக்கு அசைக்கொணா ஆதார

மும் அளித்தார். இவ்வண்ணம், திடநம்பிக்கை கொண்ட சீடன் இறைவனின் பிரமாணிக்கத்திற்கு நல்ல சாட்சியாக விளங்குகிறான்; தன் அலுவலை இறையருள் நிறைவுபடுத்தும் என நாளும் உறுதியாய் உள்ளான் (அ.ப. 20:32; 2 தெச 3:3தொ; பிலி 1:6; 1 கொரி 1:7 தொ). மிக நெருக்கடியான வேளைகளிலும் புனித பவுல் இத்திட நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார் (கலா 5:10). இது முழுச் சுவாதீனத்தோடு கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றும் தளராத் துணிவை அவருக்கு அளித்தது (1 தெச 2:2; அ.ப. 28:31). ஆதிக் கிறிஸ்தவர்கள் இப்பற்றுறுதியின் நிறை சாட்சிகளாய் இருந்தனர். இவ்விதச் சாட்சிகளாய் அவர்களை ஆக்கியது அவர்களின் திட நம்பிக்கையும் உளமார்ந்த செபமுமே (அ.ப. 4:24-31).

நிறை அன்பு உறுதிப்பாட்டுக்கு இவ்விதத் தளராத நம்பிக்கை தேவைப்படுகிறது (எபி 3:14); தொடக்கத்தில் கிறிஸ்துவுக்குச் சாட்சி கூறுபவர்களுக்கு மகிழ்வு தரும் மகிமையையும் துணிவையும் அளிக்கிறது (3:6). இயேசுவின் இரத்தப் பலி திறந்து வைத்த பாதையின் வழியாக (10:19), இறை அருளின் அரியணையைத் தாம் அணுகிச் செல்வதாக அவர்கள் உணர்கிறார்கள் (4:16). ''கடவுளே எமக்குத் துணை, அஞ்சோம்'' என வீரத்தோடு முழங்குகின்றனர் (13:6). இறை அன்பிலிருந்து எந்தப் படைப்புப் பொருளும் தம்மைப் பிரிக்க முடியாது என்பது அவர்களின் துணிபு (உரோ 8:38 தொ). ஏனெனில், கடவுள் அவர்களை முதலில் அருள்நிலை அடையச் செய்தார்; பிறகு தம் அன்பை அவர்களின் உள்ளங்களில் பொழியவைத்து, வேதனைகளில் பெருமையும், இக்கட்டுகளில் மனத் திண்மையும் அவர்கள் கொள்ளச் செய்தார் (உரோ 5:1-5). எனவே, அவர்கள் தங்கள் நன்மைக்காகத் தங்களோடு கடவுள் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என உறுதிப்பாடு கொள்கின்றனர் (உரோ 8:28).

கிறிஸ்தவ கடமைகளில் நெறிபிறழாது பற்றுறுதி கொண்டிருக்கத் தேவையான இத்திடநம்பிக்கை இத்தகைய பற்றுறுதியால் மேன்மேலும் நன்கு திடம் பெறுகிறது. இவ்விதம்விடாது கிறிஸ்துவின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பது திரு அன்புக்குச் சான்று (யோவா 15:10); அதே வேளையில் இத்திரு அன்பு இந்த நம்பிக்கைக்குப் புதுப் பொலிவும் முழு நிறைவும் அளிக்கிறது. இந்த அன்பில் நிலைத்திருப்பவர் மட்டுமே, நடுவராகக் கிறிஸ்து வரும் அப்பெருநாளில் முழு நம்பிக்கை கொண்டிருப்பர்; நிறை அன்பு அச்சத்தை அகற்றுமன்றோ! (1 யோவா 2:28; 4:16 தொ). இங்ஙனம், திரு அன்பில் நிலைத்திருக்கும் கிறிஸ்தவன், ''என் செபத்தைக் கடவுள் கேட்கிறார்; என் துன்பம் இன்பமாய் மாறிவிடும்; இம் மகிழ்ச்சி இறைமகன் இயேசுவின் மகிழ்ச்சியே; எனவே, எவரும் அதை என்னிடமிருந்து பறித்துவிடமாட்டான்'' (யோவா 16:20 தொ; 17: 13) எனத் திட நம்பிக்கை கொண்டு வாழ்வான்.

திதாகே (DIDACHE)

திருச்சபையின் மிகத் தொன்மையான எழுத்து வடிவில் உள்ள சான்று இந்நூல். இது நற்செய்தி அறிவிப்பு, வழிபாடு, பணி ஆகியவை பற்றிய வழிகாட்டுதல்களைத் தருகின்றது. 'பன்னிரு சீடர்களின் போதனை' என்பதே இந்நூலின் தலைப்பு ஆகும். அதில் 'நற்செய்தி அறியாதோருக்கெனப் பன்னிரு அப்போஸ்தலர் அளித்த ஆண்டவரின் போதனை எனும் உபதலைப்பு காணப்பட்டது. அப்போதிருந்த ஒரே கையெழுத்துப் பிரதி 1056-இல் மறுபதிப்புச் செய்யப்பட்டது. இத்தலைப்புகள் எல்லாம் இந்தக் கையெழுத்துப் பிரதியில் காணப்படுபவையாகும். இப்பிரதி 1873-இல் கண்டுபிடிக்கப்பட்டு, பத்து ஆண்டுகளுக்குப்பின் பதிப்பிக்கப்பட்டது. இந்தக் கையெழுத்துப் பிரதியுடன் பர்னபாவின் கடிதம் எனப்படும் நூலும் உரோமை நகர் கிளமந்துவின் கடிதம் எனக்கூறப்படும் நூலும் காணப்பட்டன. ''பன்னிரு அப்போஸ்தலர்களின் போதனை'' என்று யுசேபியு குறிப்பிடுவது இந்தத் திதாகேதான் என்பதில் ஐயமில்லை. இது, புதிய ஏற்பாட்டுத் திருமுறை சேராத நூல்களில் ஒன்றாக இதனை ஏற்றுக் கொள்வதிலிருந்தே தெரி

கிறது. அலக்சாந்திரியா நகரத்து கிளமந்துதான் முதன்முதலில் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். ஆனால் இந்நூல் எழுதப்பட்ட காலம் பற்றி அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய எந்த ஒரு முடிவுக்கும் இதுவரை யாரும் வரவில்லை.

மற்றத் திருச்சபை ஒழுங்குகளைப்போலத் 'திதாகே'யில் உள்ளவையும் பல மூலங்களி லிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டவை யாகவே தோன்றுகின்றன. நூலின் உட்பகுதி யில் உள்ள முக்கிய பொருள்களும், அதை எழுதியவர்களின் காலமும், நூலைத் தொகுத்தவர்களின் காலமும் வேறுவேறாக இருக்கலாம். ஆனால் நூலின் பலபகுதிகள் அப்போஸ்தலர் காலத்திலிருந்தே வருகின் றன என்று ஆய்வாளர் பலர் ஏற்றுக்கொள்வர். முதல் ஆறு அதிகாரங்களில் உள்ள ஒழுக்கம் பற்றிய ஒழுங்குகள் இதைத்தான் சுட்டுகின் றன. அதாவது 'வாழ்வுக்கும்' 'சாவுக்கும்' இட்டுச் செல்லும் வழிகள்பற்றிக் குறிப்பிடு வது.

யூத வழக்கப்படி வாய்மொழிப் போதனை யாயினும் சரி, எழுத்துவடிவப் போதனை யாயினும் சரி, வாழ்வின் வழி, சாவின் வழிபற் றிப் பேசுவது 'ஞான உபதேசம்' கற்பிக்கும் வழியாகும் (உ.ம். சங் 1:6; பழ 4:18-19; எரே 21:8). புறவினத்தவர்களை மனந்திருப்ப இந்த முறையை அன்றைய கிறிஸ்தவ போதகர்கள் பின்பற்றியிருக்க வேண்டும்.

அனைத்தும் எல்லாவற்றிற்கும் பொது வான (ஒரு கிறிஸ்தவ) அல்லது யூதமூலத்தி லிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். 'இரு வழிகள்' பற்றி சங் 37:11 (மத் 5:5) கூறுவதை திதாகே 3:7-இல் ''சாந்தமுள்ளோர் விண்ணர சைப் பெற்றுக் கொள்வர்'' என்று கூறுகிறது. இதனை ஏற்றுக்கொள்வதில் எந்த யூதனுக் கும் எவ்விதத் தடையும் இருக்காது. அதே நேரத்தில் மத் 5:39-44; லூக் 6:30-33; 1 பேதுரு 2:11 ஆகியவற்றினின்று எடுக்கப்பட்டது போலத்தோன்றும் பகுதிகளையும் இதற் கிடையே செருகியுள்ளதால் ''ஆண்டவரின் சுமையை முழுமையாக ஏற்றுக் கொள்ப வனே நிறைவடைவான்'' என்பது போன்று வருவதால் இதனை ஏற்கத் தயங்குகின்றனர்.

இந்த இருவழிகள் பற்றிய போதனை திருமுழுக்குப் பெறுவதற்குமுன் அவர் களுக்கு அளிக்கப்படும் போதனையாக இருந் தது. எனவேதான் 7-8-ஆம் அதிகாரங்கள் தந்தை, மகன், பரிசுத்த ஆவியின் பெயரால் ஓடும் குளிர்ந்த நீரில் திருமுழுக்கு அளிக்க வேண்டும் என்றும், திருமுழுக்குக்குமுன் ஒன்று அல்லது இரண்டு நாள்களுக்கு உண் ணாநோன்பு இருக்க வேண்டும் என்றும், ஒரு நாளில் மூன்றுமுறை ''ஆண்டவர் கற்பித்த'' செபத்தைச் சொல்ல வேண்டுமென்றும் குறிப்பிடுகிறது.

9-10-ஆம் அதிகாரங்கள் திருச்சபையின் பொது உணவுக்கு முன்னும், பின்னும் சொல்லப்படும் நன்றிச் செபங்களாகும். திரு முழுக்குப் பெறாதவர்கள் இந்த நன்றி வழி பாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இது 'அன்புணவாகத் தான்' இருக்க வேண்டுமேயொழிய ஆண்ட வரின் உணவாக இருக்க முடியாது எனக் கருதுகின்றனர். ஏனெனில் இந்நன்றிச்செபங் களில் இறுதி உணவைக் குறிப்பிடும் ஒரு சொல்லோ, அப்பம், கிண்ணம் பற்றியோ எதுவும் கூறப்படவில்லை. ஆண்டவரின் உடல், இரத்தம் பற்றியும் குறிப்பு இல்லை.

11-13-ஆம் அதிகாரங்கள் உண்மை இறை வாக்கினர் யார், போலி இறைவாக்கினர் யார் என்பதைக் கண்டறியும் முறை பற்றிக் குறிப்பிடுகின்றன. ஏனெனில் அன்று பலர் ஆன்மீகக் கொடைகளைத் தங்கள் சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். எனவேதான் இதுபற்றிப் பேசப் பட்டிருக்கிறது.

14-15-ஆம் அதிகாரங்கள் ஆண்டவரின் நாளில் நற்கருணைக் கொண்டாட்டத்தைப் பற்றியும், ''ஆயர்கள், தியாக்கோன்கள்'' ஆகியோரை நியமிப்பது பற்றியும் கூறு கின்றன. நற்கருணை ஒரு பலியாகப் பார்க்கப் படுகிறது. மலா 1:11.14 நற்கருணையில் நிறை வுறுவதாகக் கூறப்படுகிறது. பாவங்களை

அறிக்கையிடுதலின் அவசியத்தையும், அதற்குப் பின்னேதான் நற்கருணையில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

இறுதியாக 16-ஆம் அதிகாரத்தில் வெளிப்பாட்டு நடையில் ஆண்டவர் வரும் நாளைக் குறித்துச் சில அறிவுரைகள் கூறப்படுகின்றன. இந்த இறுதியுரையைத் திதாகேயின் ஆசிரியர் மத் 24; 1 தெச 4:16; 2 தெச 2:9 ஆகியவற்றினின்று எடுத்திருக்க வேண்டும். இது திருச்சபையின் மரபுப்படி வந்தது அன்று. மாறாக ஓர் இடைச் செருகல் என்பதே சரி.

இவ்வாறு திருச்சபையின் மிகப் பழமையான நூலாக இருக்கும் திதாகே திருச்சபை வரலாற்றில் பல உண்மைகளை நிரூபிக்கும் சான்றாக இன்றும் திகழ்கிறது.

திதால் (JIDAL)

இவர் கெதர்லகோமர் மன்னனோடு கூட்டணி செய்து கொண்ட ஓர் அரசன் (ஆதி 14:1.9). இவர் கோயிம் என்ற நாட்டின் அரசனாக இருந்ததாகக் கருதப்படுகின்றது. திதால் என்ற சொல் 'துதாலியா' என்ற பெயர் மருவி வந்ததாகக் கருதப்படுகின்றது. ஏனென்றால் இத்திய மன்னர்கள் பலர் இப்பெயர்களைக் கொண்டவராக இருந்திருக்கின்றனர். காலத்தைப் பொருத்தமட்டும் முதலாம் துதாலியா பற்றிய (கி.மு. 1700-1650) வரலாற்றுக் குறிப்புகள் ஆதி 12:1-12-ஒடு ஒத்துப் போகின்றன. ஆயினும் இவ்விதம் அடையாளம் காட்டுவது உறுதியாக இல்லை.

திதிமு (DIDYMUS - இரட்டையர்)

அப்போஸ்தலர் தோமாவின் மறுபெயர் (யோவா 11:16; 20:24; 21:2). இப்பெயர் இவருக்குக் கிரேக்க மொழி பேசிய கிறிஸ்தவர்களுக்கிடையே பயன்பட்டிருக்கலாம். புல்தாள் ஏடுகளில் இச்சொல் பன்மையில் இரட்டையர் என்ற பொருளில் ஒரு பொதுச் சொல்லாகவும், குறிப்பிட்ட ஓர் ஆளின் பெயராகவும் தோன்றுகிறது. காண்க: தோமா.

திதிராக்குமா (DIDRACHMA - இருதிராக்குமாக்கள்)

இரண்டு திராக்குமாக்கள் மதிப்புள்ள ஒரு கிரேக்க நாணயம். இது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வெளியிடப்படவில்லை. இது ஒவ்வொரு யூதனும் ஒவ்வொரு ஆண்டும் ஆலயத்திற்குச் செலுத்த வேண்டிய வரியைக் குறித்தது. ஆகவே இந்த வரி வெறுமனே திதிராக்குமா என்றழைக்கப்பட்டது (மத் 17:24). இதைச் சில மொழி பெயர்ப்புகள் அரைச் செக்கேல் என்று மொழி பெயர்க்கின்றன. ஏனெனில் இதன் மதிப்பு அரைச் செக்கேலுக்குச் சமமாகும்.

தித்தியு (TITIUS)

காண்க: யுஸ்து (2) (அ.ப. 18:7).

திபேரியா (TIBERIAS)

இது கலிலேயாக் கடலின் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள நகரம். தற்போது ஏல்-தபாரியே என்று அழைக்கப்படுகிறது. ஏரிக்கு அருகில் குன்றுகள் பல உள்ளன. இந்நகரம் ஏரோது அந்திபாவால் நிறுவப்பட்டது. அதைத் தனது ஆட்சியின் தலைமை நகராக அமைத்துக் கொண்டார். திபேரியு சீசர் மன்னனது பெருமைக்காக இந்நகருக்குத் திபேரியா என்ற பெயரிடப்பட்டது. இந்த இடம் முன்னால் புதைக்கும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது. எனவே தூய்மையற்றதாகக் கருதப்பட்டது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இந்நகரில் முழுவதும் புறவினத்து மக்கள் வசித்து வந்ததாகத் தெரிகிறது. இந்நகரம் யோவா 6:23-இலும் (திபேரியாக் கடல்) குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு இந்நகரத்தில் நுழைந்ததாகச் சொல்லப்படவில்லை. எனவே, விளக்கவுரையாளர்கள் இயேசு அங்குப் போகவில்லை என்றே பொதுவாகக் கருதுகிறார்கள். இந்த நகரம் ஏரிப் பகுதியில் பெரிய முக்கிய நகரமாகும்.

திபேரியாக் கடல் (TIBERIAS, SEA OF)

காண்க: கலிலேயாக் கடல்.

திபேரியு (TIBERIUS)

திபேரியு கிளாதியு நீரோ கி.மு. 42-இல் பிறந்தார். உரோமைப் பேரரசன் அகுஸ்து

வுக்குப்பின் பதவிக்கு வந்தவர். உரோமைப் பேரரசாக கி.பி. 14-37வரை இருந்தார். இவருடைய தாய் லீவியா, தந்தை திபேரியுவை விவாகரத்து செய்து விட்டு அகுஸ்துவைத் திருமணம் செய்து கொண்டாள். திருமுழுக்கு யோவான் திபேரியுவின் ஆட்சியில் பதினைந்தாவது ஆண்டில் தன்பணியைத் தொடங்கினார் என்று லூக்காஸ் நற்செய்தி குறிப்பிடுகிறது (லூக் 3:1). இது கி.பி. 28-ஆகஸ்டு மாதத்திற்கும், கி.பி 29 ஆகஸ்டு மாதத்திற்கும் இடைப்பட்ட காலமாகும். இதுதான் இயேசுவின் கால கட்டத்தை அறியப் பயன்படுகிறது. அந்தியோக்கியாவில் பலவகைப்பட்ட ஆண்டுக் கணிப்பு முறைகள் பயன்பட்டன. அப்படி நடந்த அந்தியோக்கியாவில், லூக்கா தன் நற்செய்தியை எழுதியிருந்தால், இந்தக் கணிப்பு முறை அவரைப் பாதித்திருக்கும். எனவே கி.பி 27-அக்டோபர் 1, கி.பி. 28 செப்டம்பர் 30, என்ற முறையில் நாட்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியிருக்கலாம். திபேரியு பாலஸ்தீனத்தில் நேரடியாகச் செயல் ஆற்றியதாகக் குறிக்கப்படவில்லை. இவர் ஆட்சிக்காலத்தில், எதிர்ப்புக் கிளர்ச்சிகள் பல நடந்தன. இவர் இத்தாலியாவில், தெய்வீக மதிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக நாட்டு அரச பற்றை அதிகரிக்கும் பொருட்டு, அகுஸ்துவை வழிபட ஊக்குவித்தார். இவர் யூதச்சட்டம் இத்தாலியாவில் கடைப்பிடிக்கப்படுவதைத் தடை செய்தார்; யூதர் பலரை நாடு கடத்தினார். இவர் காப்ரியில் கி.பி 37, மார்ச் 16-இல் இறந்து விட்டார்.

லூக்கா நற்செய்தியில் ஒரு முறை இவர் குறிப்பிடப்பட்டுள்ளார் (3:1). மேலும் நற்செய்திகளில் வரும், சீசரைப் பற்றிய குறிப்புகள் இவரை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன (மத் 22:17-21; மாற் 12:14-17; லூக் 20:22-25; 23:2; யோவா 19:12-15). ஒத்தமை நற்செய்திகள் குறிப்பிடும் தெனாரியு என்ற வரிப்பணம் இவரது உருவத்தையும் பெயரையும் கொண்டிருந்திருக்கலாம்.

திப்காத்து (TIBHATH - கொல்லுகின்ற)

சிரியாவிலுள்ள ஓர் இடம். இங்கிருந்து, ஒரு வெற்றிக்குப்பின், தாவீது பெரும் கொள்ளைப் பொருட்களை எடுத்துச் சென்றார் (1 நாள் 18:18). இணைப்பகுதியில் இது பெற்றகு என்றழைக்கப்படுகிறது (2 சாமு 8:8). இது தெபகு என்பதோடு தொடர்பு படுத்தப்படலாம் (ஆதி 22:24). இது பெக்கப் பகுதியில் இருந்ததாகக் கருதப்பட்டாலும், இது இருந்த இடத்தை அறிவதற்கில்லை.

திப்சாகு (TIPSAH - குறுக்கே செல்லும்)

பழைய ஏற்பாட்டில் இந்த இடம் இரண்டு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வேளை இவை, இரண்டு தனிப்பட்ட இடங்களைக் குறிக்கலாம்.

1. சாலமோனுடைய ஆட்சிப் பகுதி எல்லையில் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஒரு நகரம் (1 அர 4:24). இது யூப்பிரத்தீசுவின் மேற்கு எல்லையில் இருந்த முக்கியமான நகரம். அங்கு, தெற்கிலிருந்து கிழக்குப்புறமாக இந்நதி ஓடுகிறது. இந்நகரம் தபஸ்குவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது ஒரு வணிக மையமாகும். இது செலூக்கியர் காலத்தில் அம்பிபோலி என்றும், இப்போது திபேசு என்றும் அழைக்கப்படுகிறது.

2. 2 அர 15:16-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் திப்சாகு சமாரியாவிலுள்ள திரட்சாவுக்கு அருகிலுள்ள ஓர் இடமாகும். இது தப்புவாகு என்ற பெயரின் மொழிச் சிதைவாக இருக்கலாம். தப்புவாகு என்ற இடம் எருசலேமுக்கு வடக்கில் 48 கி.மீ. தொலைவில் உள்ளது. சில மொழிபெயர்ப்புகள் இதைத் தப்புவாகு என்றே மொழி பெயர்க்கின்றன.

திப்ரி (DIBRI - சொற்பெருக்கான)

தாண் இனத்தைச் சேர்ந்த செலோமித்துவின் தந்தை. இவரது பேரன், பாலைவனத்தின் இறைவனின் பெயரைப் பழித்துக் கூறியதற்காகக் கல்லால் எறிந்து கொல்லப்பட்டான் (லேவி 24:1.14). பழித்துரைத்தவன் பெயர் குறிக்கப்படவில்லை. ஆனால் அவன் இஸ்ராயேலியத் தாய்க்கும் எகிப்தியத் தகப்பனுக்கும் பிறந்தவன் என்பது நினைவு கூறப்படுகிறது.

திப்லயிம் (DIBLAIM - இரு திராட்சை அடைகள்)

இவர் விலைமகளும் இறைவாக்கினர் ஓசேயின் மனைவியுமான கோமேரின் தந்தை ஆவார் (ஓசே 1:3). இப்பெயருக்கு உருவகப் பொருள் கொடுக்க முயன்றுள்ளனர். அதாவது ''திராட்சை அடைகளின் மகள் கோமேர்''. இது அவளது விபச்சாரத்தைச் சுட்டலாம். ஏனெனில் பழங்கால இனப்பெருக்க வழிபாட்டில் திராட்சை அடைகள் பயன்பட்டன.

திப்னி (TIBNI - அறியும்)

பாகசாவின் குறுகிய ஆட்சியின் வீழ்ச்சிக்குப்பின் அரச அரியணைக்குப் போட்டியிட்ட 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்று தளபதிகளில் ஒருவர். நாட்டில் மூன்று ஆண்டுகளுக்கு உள்நாட்டுப்போர்கள் நிகழ்ந்தன. இதில் ஓம்ரி சிம்ரியைத் தோற்கடித்தார். சிம்ரியின் தற்கொலைக்குப்பின் (கி.மு. 882; 1 அர 16:21), வட அரசின் பாதி திப்னிக்கு ஆதரவு அளித்தது. ஆனால் ஓம்ரி இவரைக் கொன்றார். திப்னியின் இறப்போடு உள்நாட்டுப் போர்கள் முடிவுக்கு வந்தன (16:22). இவர் கினேத்துவின் மகனாவார்.

திமிங்கிலம் (WHALE)

சிறு மீன்களை உணவாக உண்டு வாழும் ஒருவகை இராட்சச மீன். இது பாலூட்டி வகையைச் சேர்ந்தது. இது மத் 12:4--இல் குறிக்கப்படுகிறது. இது யோனா 2:1-இல் வரும் ''பெரிய மீனோடும்'' ஆதி 1:21; யோபு 7:12-இல் வரும் ''கடல் பெருநாகத்தோடும்,'' எசே 32:2-இல் வரும் ''நீர் வாழ் பெரு விலங்கோடும்'' இணைத்துக் கருதப்படுகிறது. இந்தப் பெரியமீன் இறைவாக்கினர் யோனாவை விழுங்கி மூன்று நாட்களுக்குப் பின் கரை சேர்த்தது.

இது முப்பது அடிக்குமேல் வளரக்கூடிய சுறாமீன் போன்ற உண்மையான மீனைக் குறிக்கலாம். இது திமிங்கிலம், டால்பின் போன்றவற்றைக் குறிக்கலாம். மத்திய தரைக்கடலிலும், அரபியக் கடலிலும் செங்கடலிலும் கூன் திமிங்கிலங்கள், துடுப்புத் திமிங்கிலங்கள் போன்றவை வாழ்ந்திருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

திமினா (TIMNAH - குறிக்கப்பட்ட பகுதி)

1. செபேலா பகுதியில் யூதாவின் வடக்கு எல்லையில் பெத்செமேசுக்கு அருகிலுள்ள ஒரு நகரம் (யோசு 15:10). இது தாண் இனத்திற்குரியது (19:43).

சிம்சோன் காலத்தில் திமினாவில் பெலிஸ்தியர்கள் ஆதிக்கம் கொண்டிருந்தனர். இது தெலீலாவின் சொந்த ஊர் (நீதி 14:1-2). திமினாவிற்காக யூதாவும் பெலிஸ்தியர்களும் தொடர்ந்து போர் செய்தனர் (2 நாள் 28:18). ஊசியா (கி.மு. 783-742) பெலிஸ்தியரிடமிருந்து திமினாவைக் கைப்பற்றினார் (28:17). 701-இல் சனகெரிபு (705-681) இதனை, மற்ற நகரங்களோடு கைப்பற்றினார்.

2. மாவோன் மாகாணத்தில் யூதாவுக்குரிய ஒரு கிராமம் (யோசு 15:57). ஆதி 38:12-14-இல் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளில் குறிக்கப்படுவது இதுவாக இருக்கலாம். இது எபிரோனுக்குத் தென்கிழக்கில் இருந்திருக்கலாம்.

3. கி.மு. 160-இல் செலூக்கியத் தளபதி பாக்கிதுவால் வலுப்படுத்தப்பட்ட, யூதாவிலுள்ள ஒரு நகரம் (1 மக் 9:50). மலைப்பகுதியில் அமைந்துள்ள இந்த இடம் பெத்தேலுக்கு வடமேற்கில் 14 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் திப்னேயாக அடையாளம் காட்டப்படலாம்.

திமேயு (TIMAEUS - மதிப்பு வாய்ந்த)

எரிகோவில் இயேசு குணப்படுத்திய குருடனான பர்த்திமேயுவின் தந்தை (மாற் 10:46).

திமொத்தேயு (TIMOTHY - இறைவனை மதிக்கிறவர்)

1. ஓர் அம்மோனிய படைத்தலைவர். இவர் கி.மு. 164-ஐ ஒட்டி யூதா மக்கபேயுவையும் அவரைச் சார்ந்தவர்களையும் எதிர்த்தார். பிறகு யூதாவால் பலமுறை தோற்கடிக்

கப்பட்டார் (1 மக் 5:6 தொ; 2 மக் 8:3 தொ; 9:3 தொ; 10:24 தொ; 12:2 தொ).

2. திமொத்தேயு பவுலுக்கு உண்மையான சீடனாகவும் நம்பிக்கைக்குரிய தோழனாகவும் இருந்து பணி புரிந்தவர். லிக்கவோனியாவிலுள்ள லிஸ்திராவைச் சேர்ந்தவர். இவரது தந்தை ஒரு கிரேக்க இனத்தவர்; தாய் யூத கிறிஸ்தவப்பெண். 2 திமொ 1:5-இன்படி இவரது தாயின் பெயர் யூனிக்கியாகும். லோயி என்ற இவரது பாட்டிதான் முதலில் கிறிஸ்தவ மறையைத் தழுவினார். ஏறத்தாழ கி.பி. 47-இல் பவுல் தனது முதல் மறைபரப்புப் பயணத்தில் லிஸ்திராவுக்கு வந்தபோது திமொத்தேயுவை மனந்திருப்பியிருக்க வேண்டும் (1 திமொ 1:1). இவரது தாய் யூதப் பெண்ணாய் இருந்ததாலும், யூதர்களின் பொருட்டும் திமொத்தேயு விருத்தசேதனம் செய்து கொள்ளப்பவுல் அனுமதித்தார் (அ.ப. 16:1-3). பவுல் தனது இரண்டாம் மறைபரப்புப் பயணத்தில் திமொத்தேயுவையும் அழைத்துச் சென்றார். பெரோயாவில் சீலாவோடு திமொத்தேயு தங்கிவிட்டார். அப்போது பவுல் அந்நகரை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று (17:4தொ). அதன் பிறகு பவுல் கொரிந்துவில் போதித்துக் கொண்டிருந்தபோது திமொத்தேயு அவருடன் சேர்ந்து கொள்கிறார். மூன்றாம் மறைபரப்புப் பயணத்திற்கு முன்பு எரஸ்துவுடன் திமொத்தேயு மாசிதோனியாவுக்கு அனுப்பப்படுகிறார் (19:22). அதன்பிறகு மூன்றாவது பயணம் முடிந்து திரும்பும்போது பவுலோடு பயணம் செய்த குழுவில் திமொத்தேயு இருந்தார் (20:4).

பவுலின் பல திருமுகங்களின் தொடக்க வாழ்த்துரையில் திமொத்தேயு பவுலோடு தொடர்புபடுத்தப்படுகிறார் (2 கொரி 1:1; பிலி 1:1; கொலோ 1:1; 1 தெச 1:1; 2 தெச 1:1; பில 1). உரோ 16:2-இல் வரும் இறுதி வாழ்த்துரையிலும் குறிப்பிடப்படுகிறார். கொரிந்தியருக்கு முதலாம் திருமுகம் எழுதுவதற்கு முன்பாகக் கொரிந்துவில் பிரச்சனைகளை ஆய்ந்து வருவதற்காக இவரைப் பவுல் கொரிந்துவுக்கு அனுப்பினார் (1 கொரி 4:17). மேலும் திருமுகம் எழுதியதற்குப்பின்னும் இவரை அங்கு அனுப்ப ஒரு திட்டம் இருந்ததாகத் தெரிகிறது (16:10). ''திமொத்தேயு வழியாகவும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது'' என்று பவுல் கொரிந்தியருக்குச் சுட்டிக் காட்டுகிறார் (2 கொரி 1:19). பிலிப்பியருக்குத் திருமுகம் எழுதும் முன்பு, திமொத்தேயுவை அங்கு அனுப்ப ஒரு திட்டம் இருந்தது (பிலி 2:19). தெசலோனிக்கேயருக்கு முதலாம் திருமுகம் எழுதும் முன்பு, சில காரியங்களை அறிந்துவர, திமொத்தேயு தெசலோனிக்கேவுக்குச் சென்றார் (1 தெச 3:2.6). திமொத்தேயு சிறைப்பட்டு விடுதலை செய்யப்பட்டது எபி 13:23-இல் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தக் குறிப்புகள் எல்லாம் திமொத்தேயு பவுலின் நெருங்கிய நண்பனும், நம்பிக்கைக்குரிய தோழனும் உடன் உழைப்பாளியும் ஆக இருந்தார் என்று காட்டுகின்றன.

திமொத்தேயுவுக்குத் திருமுகங்கள் (1,2 TIMOTHY, LETTERS TO)

1. திமொத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் எழுதப்பெற்ற திருமுகங்கள் பொருள், இறையியல், நடை, நோக்கம் ஆகியவற்றில் ஒரே தன்மையும் சிந்தனைப்போக்கும் உடையவை. இவற்றை அப்போஸ்தலரான பவுல் எழுதியதாகப் பாரம்பரியம் கருதி வந்துள்ளது. பவுலின் திருமுகங்களில் இம்மூன்று மட்டுமே தலத்திருச்சபைகளுக்குப் பொறுப்பாக இருந்த தனிநபர்களுக்கு எழுதப்பட்டுள்ளன. அதேபோது, பவுலின் மற்றத்திருமுகங்களிலிருந்து இவை வேறுபடுகின்றன. ஆகவே இவற்றை ஒரு தனித்தொகுப்பாகக் கருதி 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இவற்றை ''மேய்ப்புப்பணித் திருமுகங்கள்'' என்றழைப்பது மரபு. இவற்றிற்கு இப்பெயர் பொருத்தமே. ஏனெனில் இத்திருமுகங்கள் திருச்சபையின் வளர்ச்சியில் அக்கறையும் ஈடுபாடும் உள்ள ஒரு ஆயரால் (பவுல்) பிற ஆயர்களுக்கு எழுதப்பட்டுள்ளன.

2. இந்நூல்கள் பற்றிப் பல பிரச்சினைகள் உண்டு. இவற்றைப் பவுல்தான் எழுதினாரா, இவை எப்போது, எங்கே எழுதப்பட்டன,

இவற்றிற்கும் பவுலின் மற்றத் திருமுகங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் ஆகியவை பற்றி ''மேய்ப்புப் பணித்திருமுகங்கள்'' என்ற தலைப்பின் கீழ்க்காண்க.

3. திமொத்தேயுவின் வாழ்க்கை வரலாறு: காண்க: திமொத்தேயு.

4. திட்டம்:

I. முதல் திருமுகம்:-

1. முன்னுரையும் வாழ்த்துரையும் (1:1-2).

2. போலிப் போதகர்கள் (1:3-20).

3. திருச்சபையில் வழிபாடும் தலைமையும் (2:1-3:13).

4. திருமுகத்தின் நோக்கமும் இறையியல் முன்நோக்கும் (3:14-4:10).

5. திருச்சபையின் வெவ்வேறு குழுக்களுக்குப் போதனை (4:11-6:2).

6. திருமுகத்தின் தொகுப்பு (6:3-16).

7. செல்வத்தைப்பற்றிய சிந்தனை (6:17-19).

8. இறுதி அறவுரையும் வாழ்த்தும் (6:20-21).

II. இரண்டாம் திருமுகம்:-

1. முன்னுரை: வாழ்த்துரையும் நன்றியும் (1:1-5).

2. அறவுரைகள் (1:6-2:13).

3. உண்மையான போதகமும் பொய்யான போதகமும் (2:14-4:8).

4. முடிவுரை: இறுதியுரையும் வாழ்த்தும் (4:9-22).

5. முக்கிய கருத்துக்கள்: முதல் திருமுகத்தில் ஆசிரியர் போலிப் போதகர்களைப் பற்றி எச்சரிக்கிறார். இவர்கள் மோசேயின் சட்டத்தில் வல்லுநர்கள் என்று சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றுகின்றனர். உலகை அடியோடு வெறுக்க வேண்டும். திருமணங்கள், சில உணவுவகைகள் தடை செய்யப்பட்டன. இவற்றையெல்லாம் தங்கள் சொந்த ஆதாயத்திற்காகவே இவர்கள் செய்கின்றனர். ஆகவே இவர்கள் மட்டில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் (1 திமொ 1:3-20; 4:1-11; 6:20-21).

மேலும் திருச்சபைத்தலைவர்களுக்குரிய தகுதிகளும் பொறுப்பும் விவரிக்கப்படுகின்றன. ஒழுக்கமும் கட்டுப்பாடும் திருச்சபைத் தலைவர்களுக்குத் தேவையென அறிவுறுத்தப்படுகின்றன (2-3; 4:12-6:3). பொதுச் செபத்தின் அவசியமும் வலியுறுத்தப்படுகிறது. அக்கால சமூகத்திற்கு ஏற்றாற்போல், பெண்கள் எவ்வாறு அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் விதவைகள் கவனிக்கப்பட வேண்டும் என்றும் போதிக்கப்படுகின்றன.

இரண்டாம் திருமுகத்தில், தனது சிறைவாசத்தைப்பற்றியும் தனக்கு வரப்போகும் முடிவைப்பற்றியும் பவுல் பேசுகிறார். இதிலேயும் போலிப் போதகங்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி வலியுறுத்துகிறார் (2 திமொ 2:14-4:8). திமொத்தேயுவின் கடமைகளையும் உரிமைகளையும் எடுத்துக் கூறுகிறார் (1:6-2:13).

திம்னத் - கெரேசு, திம்னத் - செரா (TIMNATH - HERES, TIMNATH - SERAH - சூரியனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பகுதி, விடப்பட்ட பகுதி)

இது யோசுவாவுக்குக் குறிக்கப்பட்ட உரிமை நிலமும் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடமுமாகும். நீதி 2:9-இன்படி, யோசுவா ''காகசு மலைக்கு வடக்கே எப்பிராயிம் மலைநாட்டில் அவரது உரிமை நிலத்தின் எல்லையிலிருந்த திம்னத்-கெரேசில்'' அடக்கம் செய்யப்பட்டார். யோசு 19:30; 24:30-இல் இவ்விடம் திம்னத் - செரா என்று கூறப்படுகிறது. திம்னத் - கெரேசு என்ற சொல் ''சூரியனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பகுதி'' என்ற பொருள் அடிப்படையில், காலத்தால் முந்திய பெயராகும் எனக் கொள்ளலாம். மேலும் இது சூரிய வழிபாட்டு இடமும் ஆகும். இராபிகள் பாரம்பரியம், இப்பெயரை யோசுவா கதிரவனை அசையாது நிற்கச் செய்ததோடு (யோசு 10:13) தொடர்புபடுத்துகிறது. மேலும் யோசுவாவின் கல்லறை சூரியன் அடையாளத்தைக் கொண்டிருந்தது என்று கூறுகிறது. சூரிய வழிப்பாட்டுக் கறையை அகற்று

வதற்காக இவ்விடத்தின் பெயரைத் திம்னத் செரா என்று மாற்றினர் என்று ஒரு விளக்கம் கூறும். நாடு பங்கீடு செய்யப்பட்டபிறகு ''விடப்பட்ட பகுதியை'' யோசுவாவுக்கு உரிமைச் சொத்தாக அளித்ததைக் குறிக்கும் திம்னத் செரா என்ற பெயரும் பொருத்த முடையதே.

இவ்விடம் செக்கேமுக்குத் தென்மேற்கில் 27 கி.மீ தொலைவிலும் எருசலேமுக்கு வடக்கு வடமேற்கில் 28 கி.மீ. தொலைவிலும் உள்ள கிர்பெத் திப்னே என்று அடையாளம் காட்டப்படுகிறது. சமாரியர் பாரம்பரியம் செக்கேமுக்குத் தென்மேற்கில் 14 கி.மீ. தொலைவிலுள்ள கெபர் காரிசில் யோசுவாவின் கல்லறை இருந்ததாகக் கூறுகிறது. ஆனால் இது பிற்காலப்பாரம்பரியமாகும். இதற்குத் தொல்பொருள் சான்று இல்லை. யுசேபியுவும் எரோனிமுவும் இவ்விடத்தைத் தம்னா என்றும், அவர்கள் காலத்தில் அங்கு யோசுவாவின் கல்லறை இருந்ததாகவும் கூறுகின்றனர். இது ஒருவேளை 1 மக் 9:10-இல் வரும் திம்னாத்தா என்பதுதான் திம்னத்-கெரேசு என்பதைச் சுட்டலாம்.

திம்னா (DIMNAH - சாணம்)

மெராரியருக்குரிய ஒரு லேவியர் நகரம். இது செபுலோனில் அமைந்திருந்தது (யோசு 21:35). இந்நகரம் ரிம்மோனாகவோ (19:13) ரிம்மோனோவாகவே (1 நாள் 6:77) இருக்கலாம்.

திம்னா (TIMNA - குறிப்பிட்ட பகுதி)

1. ஏசாவின் மகன் எலீப்பாசின் வைப்பாட்டி. அமலேக்கின் தாயும் லோத்தானின் சகோதரியும் ஆவாள் (ஆதி 36:12.22; 1 நாள் 1:39).

2. ஏதோமின் ஓர் இனத்தலைவர் (ஆதி 36:40; 1 நாள் 1:51).

3. ஏசாவின் வழித்தோன்றலும் எலீப்பாசின் மகனுமாவார் (1 நாள் 1:36). 2-இல் குறிக்கப்படுபவரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம். இப்பெயர் ஏதோமிய இனத்தில் ஒரு குலப்பெயர் மூதாதையரை அல்லது ஒரு நிலப்பகுதியைக் குறிக்கலாம்.

இயத்திரா (THYATIRA)

லீதியாப் பகுதியில், இக்கால இஸ்மிருக்கு (சிமிர்ன) வட கிழக்கில் 80 கி.மீ. தொலைவிலும் பெர்கமாவுக்குக் (பெர்கமு) கிழக்கு வட கிழக்கில் 60 கி.மீ. தொலைவிலும் ஆகியன் கடற்கரையிலிருந்து 70 கி.மீ. தொலைவிலும் இருந்த ஒரு நகரமாகும். அதன் இக்காலப்பெயர் ஆகிசார் ஆகும்.

முந்தையக் குடியிருப்பு இருந்த இடத்தில் தியத்திரா முதலாம் செலூக்குவால் மீண்டும் நிறுவப்பட்டது. இது வணிக, தொழில்மையமாக மாறியது. இரத்தாம்பரத்துக்கும் மற்றத் தொழில்களுக்கும் பெயர் பெற்றுத் திகழ்ந்தது. உரோமையர் காலத்தில் இது பெர்கமு, இலவோதிக்கேய ஆகிய இடங்களை இணைக்கும் உரோமையர் சாலையில் முக்கிய இடமாக விளங்கியது. தொழில் குழுக்கள் ஏதாவது ஒரு தேவதைக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தன; நகரத்தின் சமூக, அரசியல் வாழ்விலும் முக்கிய பங்கு எடுத்தன. பிலிப்பியில் பவுல் மதமாற்றியவர்களுள் முதல் நபர் தியத்தீராவைச் சேர்ந்த லீதியா ஆவாள். இவள் இரத்தம்பரத்தொழில் செய்பவள் (அ.ப. 16:14). திருவெளிப்பாட்டில் குறிக்கப்படும் ஏழுசபைகளில் ஒன்று தியத்திராவாகும் (திருவெளி 1:11; 2:18-29). இச்சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தில், ஆண்டவர் தன்னை ''எரிதல்போலச் சுடர்விடும் கண்களும் வெண்கலம் போன்ற பாதங்களும் உடைய இறைமகன்'' என்று விவரிக்கிறார். இது அங்கு நிலவிய உலோகத் தொழிலைச் சுட்டுகிறது என்று கருதப்படுகிறது. அந்நகரத் திருச்சபையைப் போற்றுகிறார். ஆனால் ''இறைவாக்குரைப்பதாகக் கூறிக்கொண்டு, என் ஊழியர்களை ஏமாற்றி, அவர்கள் விபச்சாரம் செய்யவும், சிலைகளுக்குப் படைக்கப்பட்டதை உண்ணவும் போதித்து வரும்'' ஈசபேலை விட்டுவைத்திருப்பதாக இச்சபையைக் குறை கூறுகிறார். இப்பெயர் ஒரு பெண்ணுக்கு அளிக்கப்பட்ட அடையாளப் பெயராகும் (2:20-21.24; 1 அர 16:31).

தியோக்னேத்துவுக்கு எழுதப்பட்ட கடிதம் (DIOGNETUS, LETTER TO)

கிறிஸ்தவ மறைக்கு ஆதரவான வாதங்களைக் கொண்ட ஒரு கிறிஸ்தவக் காப்புரை இலக்கியமாகும் இது. இது சொற்கவர்ச்சி உடைய ஆனால் செயற்கையான மொழி நடையில் எழுதப்பட்டுள்ளது. கி.பி 3-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே இது எழுதப் பட்டிருக்கும் எனக் கருதுகின்றனர்.

இது வழக்கமாக அப்போஸ்தோலிக்கத் தந்தையர்களின் நூல்கள் தொகுப்பில் சேர்க் கப்படுகிறது. ஆனால் இதன் நோக்கமும், இலக்கியத் தன்மையும் இது தொடக்ககாலக் காப்புரை இலக்கியங்களைச் சேரும் எனச் சுட்டுகின்றன. யார் எழுதினார், யாருக்கு எழுதப்பட்டது என்பது ஒருவரும் அறியாத புதிர். பழங்காலத் திருச்சபையில் இந்நூல் எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தியதற்குச் சான்று இல்லை.

உடலுக்கு எப்படி ஆன்மா உள்ளதோ அதுபோல் கிறிஸ்தவர்கள் உலகிற்கு உள்ள னர் என்ற அவரின் உவமானத்தால் இவரின் நூல் எங்கும் பரவியது. இதில் மொத்தம் உள்ள 12 அதிகாரங்களில் கடைசி இரண்டு வேறு ஒருவரால் எழுதப்பட்டது என்றும், அவர் யார் என்று அறியப்படவில்லை என்றும் கூறப்படுகின்றன.

தியோஸ்கொரிந்தியு (DIOSCORINTHIUS)

2 மக் 11:21-இன்படி கி.மு. 165-164-இல் லீசியா யூதர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிக்கப்படும் மாதத்தின் பெயர். யோசிப் பசின் கருத்துப்படி இது யூதர்களின் மர்கேஸ்வான் மாதத்திற்கு (நவம்பர்-திசம்பர், கார்த்திகை) இணையானதாகும்.

தியோத்திரபு (DIOTREPHES - சேயுகவால் ஊட்டமூட்டப்பட்ட)

தொடக்ககாலக் கிறிஸ்தவர்களில் ஒருவர். 3 யோவா 9-இல் வரும் கூற்று இவருக்குப் பெருமை தருவதாக இல்லை. இவர் தன்னையே தலைவனாக்கிக் கொள்ள விரும்பி, ''மூப்பரின்'' அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள வில்லை.

தியோனிசியா (DIONYSIA)

தியோனிகஸ் (DIONYSUS) தெய்வத்திற்கு எடுக்கப்படும் ஒரு திருவிழா. குளிர்காலத் திற்குப்பின் தொடங்கும் வசந்தகால வாழ் வைக் குறிக்க இத்திருவிழாக் கொண்டாடப் படுகிறது. வசந்த காலத்தில் மந்திர சக்தியால் அவர்கள் வளமடைவர் என்று நம்பினர். எனவே இத்திருவிழாவிற்குமுன் குடிவெறி, காம இச்சைகள், மனிதமிருக பலிகள் முதலி யன பழக்கத்தில் இருந்தன. பின்னர், கூறுபோட்ட மனித / மிருக உடல்களைப் புதைத்தனர்.

அத்திக்காவில் தியோனிசியா திருவிழா சிறிய அளவில் டிசம்பர் மாதம் கிராமங் களில் கொண்டாடப்பட்டது. பெரிய திருவிழா நகரங்களில் கொண்டாடப்பட்டது. அப்போது நாடகங்கள் பல நடைபெறும். மக்களும் பச்சைநிற, பளபளப்பான இலைகள் அணிந்தவராய்ப் பவனியாகச் செல்வர். கொலோ கூவே-சீரியாவில் இவ் விழாவைப் புகுத்தியபோது மன்னன் அந்தி யோக்கு எப்பிபான் யூதர்களும் இப்பவனி யில் சேர்ந்து கொள்ள வேண்டுமெனக் கட் டாயப்படுத்தினான் (2 மக் 6:7).

தியோனிசியு (DIONYSIUS)

இவர், ஏதன்சிலுள்ள அரயோப்பாகுவில் பவுல் பேசியபின் மனந்திரும்பிய சிலரில் ஒருவராவார் (அ.ப. 17:34). இவர் அவ் விடத்து அரசில் ஓர் அங்கத்தினர் என்று லூக்கா சுட்டிக்காட்டுகிறார். யூசேபியுவின் கருத்துப்படி, தியோனிசியு ஏதன்சின் முதல் ஆயராக இருந்திருக்கலாம். ஒரு சீரிய ஆசிரி யரால் எழுதப்பட்ட (கி.பி. 500), போலி அரயோப்பாகியரான தியோனிசியு என்பவ ரின் மறைபொருள்-புதிய-பிளேட்டோ தத் துவ நூல் ஏதன்சின் தியோனிசியுவால் எழு தப்பட்டதாகக் கருதப்பட்டது.

தியோனிசு (DIONYSUS)

ஒரு கிரேக்க விவசாயத் தேவதை. இது, குறிப்பாக, திராட்சைக் கொடி வியேர்கொடி ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தப்படு கிறது. இதன் மற்றொரு பெயர் பாக்குஸ் ஆகும். கிரேக்க இதிகாசங்களில் இத் தேவதை ஆண்டுதோறும் மரித்து உயிர் பெறுவதாகச் சித்தரிக்கப்படுகிறது. இந்த விழா தியோனிசியா என்றழைக்கப்பட்டது.

கிரேக்க மயமாக்குதலை யூதர்களிடையே புகுத்திய அந்தியோக்கு எப்பிபான், இத் தேவதையின் விழாவில் தலையில் லியோ இலை வளையம் அணிந்து பவனியில் பங் கெடுக்குமாறு யூதர்களைக் கட்டாயப்படுத்தி னான் (2 மக் 6:7). அவனுடைய தளபதி நிக்கனோர், எருசலேம் ஆலயத்தை அழித்து, அதன்மேல் தியோனிசுக்குக் கோவில் கட் டப்போவதாக எருசலேம் குருக்களை அச் சுறுத்தி, யூதா மக்கபேயுவைத் தன்னிடம் ஒப் படைக்குமாறு கட்டாயப்படுத்தினான் (14:33).

திரக்கோனித்தி (TRACHONITIS - கரடுமுர டான பகுதி)

இது யோர்தானை அடுத்து வடக்கிலுள்ள ஒரு மாவட்டம். திருமுழுக்கு யோவானின் பணித்தொடக்கத்தைக் குறிக்க இப்பகுதி குறிக்கப்படுகிறது. அப்போது ஏரோது அந் திப்பாவின் ''உடன்பிறப்பான பிலிப்பு இத் துரேயா, திரக்கோனித்திப் பகுதிக்கு ... குறு நில மன்னனாக இருந்தான்'' (லூக் 3:1). இது தமஸ்குவுக்குத் தெற்கில் 40 கி.மீ. தொலை விலும், மேற்கில் கலானித்தியையும், வடகிழக் கில் எர்மோன் மலையடிவாரத்தில் உலாத்தா வையும் பனேயாவையும் கொண்டிருந்தது.

பிலிப்பு இப்பகுதியை 40 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் இறந்தபின் (கி.பி-34), இப்பகுதி உரோமைப் பேரரசின் சிரிய மாகாணத்தோடு சேர்க்கப்பட்டது. கி.பி. 37-இல் கலிகுலாப் பேரரசனால் முத லாம் ஏரோது அகிரிப்பாவுக்குக் கொடுக்கப் பட்டது. இவர் கி.பி. 44வரை இங்கு ஆட்சி செய்தார். பின்பு 53-வரை உரோமையரின் நேரடி நிர்வாகத்தில் இருந்தது; அதன்பின் 100-வரையில் 2-ஆம் ஏரோது அகிரிப்பா இங்கு ஆட்சி செய்தார். பின், உரோமை அதிகாரிகளின் கீழ் இருந்தது. 106-இல் ஓர் உரோமை மாகாணமாயிற்று. இப்பகுதி திரே சன் ஆட்சியில் (98-117) மிகவும் சிறப்புற் றிருந்தது.

திரட்சா (TIRZAH - இன்பம், அழகு) - ஆள்

மனாசே இனத்தைச் சேர்ந்த செலோபுகா தின் ஐந்து புதல்வியர்களுள் ஒருத்தி. சகோ தரர்கள் இல்லாத இவர்கள் மரபுவழிச் சொத் தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டனர் (எண் 26:33; 27:1-11; 36:10-12; யோசு 17:3-6).

திரட்சா (TIRZAH - இன்பம், அழகு) - இடம்

இது ஒரு கானானிய நகரம். யோசுவா வால் கைப்பற்றப்பட்ட நகரங்களின் பட்டிய லில் இது சேர்க்கப்பட்டுள்ளது (யோசு 12:24). எரொபவாம் (1 அர 14:17), பாகசா (15:21.33; 16:6), ஏலா (16:89), சிம்ரி (16:15) ஆகியோரின் காலத்தில், இஸ்ராயேல் அரசர் களின் இருப்பிடமாக இது விளங்கியது. திரட்சா ஓம்ரியால் முற்றுகையிடப்பட்டது 16:17). இது ஓம்ரிக்கு அரசாட்சியின் இருப்பிட மாக ஆறு வருடத்திற்கு இருந்தது. பிறகு தலைநகர் சமாரியாவிற்கு மாற்றப்பட்டது (16:23). மெனகேம் திரட்சாவிலிருந்து வந்தவ ராவார் (2 அர 15:14). தப்புவாகு ஆட்சிப்பகு தியில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (15:16). உ.ச.6:4-இல் ''என் அன்பே, நீ திரட்சாவைப் போல் அழகுள்ளவள்'' என்று காதலி வர்ணிக்கப்படுகிறாள்.

திரட்சா தேல் ஏல்-பாரவோடு அடையா ளம் காட்டப்படுகிறது. இது நப்லுசிலிருந்து வடகிழக்கே 11 கி.மீ. தொலைவில் உள்ளது. புதைபொருள் ஆராய்ச்சிகள் நடைபெற்றுள் ளன. இந்த இடத்தில் கற்காலத்தில் குடியேறி யுள்ளனர். பிறகு தொடக்க வெண்கலக் காலமுதல் மத்திய வெண்கலக் காலம் முடிய யாரும் இங்குக் குடியிருக்கவில்லை. பிறகு தொடக்ககால இஸ்ராயேலர் காலத்தில் மீண் டும் குடியேறினர். கி.பி 9-ஆம் நூற்றாண்டு இறுதியில் திரும்பவும் கைவிடப்பட்டது. தேல் ஏல் - பாரதான் திரட்சாவாக இருந்

தால், யோசுவாவின் பட்டியலில் இடம் பெறுவது, கால முரண்பாடாக இருக்கும். அங்கு ஓர் 'அரண்மனை' உள்ளது. இது முதலாம் எரொபவாமின் கட்டடமாக இருக் கலாம். ஓம்ரியால் புதுப்பிக்கப்பட்டது. இவ்விடம்தான் திரட்சா என்று உறுதியாகக் கூறும் அளவுக்கு எதுவும் காணப்பட வில்லை. ஆனால் அறிஞர் பலர் இப்படி யிருக்கலாம் என்று பொதுவாக ஏற்றுக் கொள்வர்.

திரன்னு (TYRANUS - முழு ஆட்சியுடையவர்)

பவுல், எதிர்ப்பின் காரணமாக, செபக் கூடத்தில் போதிப்பதை நிறுத்தி, திரன்னு என்பவரின் கல்விக்கூடத்தில் போதித்து வந் தார் (அ.ப. 19:9).

திராக்கா (TIRHAKAH)

கி.மு. 720-ஐ ஒட்டி எகிப்து பல சிறு நாடுகளாகப் பிளவுபட்டுப்போனது. எத்தி யோப்பிய அரசனான பியான்கி வடக்கி லிருந்து வந்து, எகிப்தைவென்று ஒற்றுமைப் படுத்தி எகிப்தின் 25-ஆவது அரசமரபைத் தொடங்கி வைத்தார். இவரது மூன்றாவது வாரிசு திராக்கா அல்லது தகராக்கா ஆவார் (689-664). சனகெரிபுக்கு எதிராக எசேக்கியா செய்த கிளர்ச்சியில் திராக்கா அவருக்கு ஆத ரவு அளித்ததாக விவிலியம் கூறுகிறது (2 அர 19:9; எசா 37:9). இதை, ஆசீரியா அல்லது பாபிலோனுக்கு எதிராக எகிப்தைச் சார்ந் திருப்பதின் பயனின்மைக்கு ஓர் எடுத்துக்காட் டாக விவிலியம் விவரிக்கிறது. சனகெரிபு வின் மரணத்துக்குப்பின் திராக்கா பார் வோன் என்ற அளவில், அசீரியர்களோடு போரிட்டு சனகெரிபுவின் மகன் ஏசர்கத்தோ னிடம் தோல்வியுற்றார் (671). தனது தலை நகரை இழந்தார். அதனை மீளவும் கைப் பற்றும் முயற்சியில் மீளவும் 667-இல் அசீரியர்களிடம் தோல்வியுற்றார்.

சூடானில் நடந்த தொல்பொருள் ஆய்வு கள் திராக்காவின் ஆட்சிக்காலம் பற்றிய பல செய்திகளை அளித்துள்ளன.

திராக்கு (THRACE)

திராக்கு என்பது தான்யூபு நதிக்குத் தெற் கில் உள்ள ஒரு பகுதி. இது போஸ்போராஸ், கருங்கடலுக்கு மேற்கில் உள்ளது. மேலும் கிழக்கு மாசிதோனியா, ஆகியன்கடல், எலெஸ் போந்து, பிரபோந்து ஆகியவற் றிற்கு வடக்கில் உள்ளது; நெஸ்து அல்லது ஸ்திரிமேன் ஆற்றுக்குக் கிழக்கில் உள்ளது. உரோமையர்கள் இந்தப் பகுதியை இரண்டு பகுதிகளாகப் பிரித்தனர். கேமுஸ் மலை களின் வடக்குப்பகுதி மேசியா என்றும், தெற் குப் பகுதி திராக்கு என்றும் அழைக்கப் பட்டன. உரோமையர்களின் கண்காணிப் பிற்குப் பிறகு திராக்கு இரண்டு நூற்றாண்டு களாக வளர்ச்சியடைந்தது. கிளாதியு சுமார் கி.பி. 46-இல் இதை ஒரு மாநிலமாக உருவாக்கினார். இங்கு வாழ்ந்த மக்கள், வீரமுள்ளவர்களாக, போர்புரியக் கூடிய மக் களாக இருந்தனர். இதனால் பல வெளி நாட்டு, ஆட்சியாளர்களுக்குக் கூலிப் போர் வீரர்களாகிப் பணி செய்தார்கள். 2. மக் 12:35-இன்படி கோர்கியா கி.மு. 163-இல் யூதா மக்கபேயரோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கும் போது, திராக்குவைச் சேர்ந்த ஒரு குதிரைவீரன் கோர்கியாவுக்கு உதவி செய்து ஆபத்திலிருந்து காப் பாற்றினான்.

திராக்குமா, பொன், பொற்காசு (D.RIC OF GOLD, DRACHMA)

8.424 கிராம் எடையுள்ள ஒரு பாரசீக தங்க நாணயம். இதுதான் விவிலியத்தில் குறிப் பிடப்பட்டுள்ள முதல் நாணயம். அநேகமாக தாரிக் என்பது தாரியு அதாவது பாரசீக மாமன்னன் தாரியு என்ற பெயரிலிருந்துதான் வந்திருக்க வேண்டும். இப்பெயர் ''தாரக் மானா'' என்ற இன்னும் பழமை வாய்ந்த அசீரிய மூலத்திலிருந்தும் வந்திருக்க வாய்ப்பு உண்டு. பாரசீகர் காலத்தில் ஒவ் வொரு பொற்காசும் ''தாரிக்'' என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஏனெனில் சைரஸ் (எஸ் 2:69; 8:27; நெகே 7:70-72), தாவீது (1 நாள் 29:7) ஆகியோர் காலத்தில் ஏற்கெனவே இப்பெயர் பயன்பட்டுள்ளது. ஆனால் இது கால மயக்கமாக முன்பே பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

கிரேக்க நாட்டில் இது 4.3 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளி நாணயமாகப் பயன்பட்டது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இது உரோமை நாணயமான தெனாரியுடன் சமமாக்கப்பட்டது. இது கிரேக்கர்களால் திராக்குமா என்று அழைக்கப்பட்டது. இச்சொல். ''வெள்ளிக்காசு'' என்று மொழி பெயர்க்கப்படுகிறது (லூக் 15:8-9).

திராசு (TIRAS - ஏங்குகின்ற)

நாடுகளின் பட்டியல்படி இவர் யாபேத்தின் ஒரு மகனாவார் (ஆதி 10:2; 1 நாள் 1:5). இவரது வழித்தோன்றல்கள் கடல் மக்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் ஆகியன், கிழக்கு மத்தியதரைக் கடல்களில் கடல் கொள்ளைக் கூட்டத்தினராகத் திரிந்தனர். கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் எகிப்தைக் கைப்பற்றிய கடல் மக்களுள் ஒரு கூட்டமாகக் கருதப்படுகின்றனர்.

திராட்சைக்கொடி, முந்திரிக்கொடி, திராட்சைத் தோட்டம் (VINE, VINEYARD)

1. திராட்சைக்கொடி: பாலஸ்தீனத்தில் விளையும் ஒலிவ, அத்திமரங்களைப்போலத் திராட்சையும் ஒன்றாகும். யோத்தாம் கூறும் கதையில் இந்த மூன்றும் ஒன்றுசேரக் கூறப்பட்டுள்ளன (நீதி 9:8-13). மற்ற இடங்களில் இவை நாட்டின் விளைச்சலைக் குறிக்கும் (காண்க. யோசு 24:13; 1 சாமு 8:14; 2 அர 5:26; எரே 5:17; 40:10; எரே 2:12). விவிலியக் காலத்தில் திராட்சைத்தோட்டம் ஒன்றுதான் பலருக்கு வாழ்க்கைக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் பொருளாக இருந்தது. எனவே தான் நாபோத்து ஆகாகக்குத் தன் திராட்சைத் தோட்டத்தைத் தர மறுக்கிறார்.

1. திராட்சை வளர்ப்பின் பழமை: யாவே பாரம்பரியத்தின்படி நோவா திராட்சை வளர்ப்பின் தந்தை என்று அழைக்கப்படுகிறார் (ஆதி 9:20). எகிப்தில் முடியாட்சி வரும் முன்பே திராட்சை பயிரிடப்பட்டது. பழைய பேரரசில் உள்ள இராணுவ சாசனங்கள் பாலஸ்தீனத்தின் திராட்சைகளைப் பற்றிப் பேசுகின்றன. நோவாவின் கதைப்படி, திராட்சை அர்மேனியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் கருதப்பட்டாலும், ஒவ்வொரு பகுதியிலும் இருந்திருக்கும் திராட்சை பயிரிடல் மிகப்பழமையான விவசாயமாகும்.

2. திராட்சை பயிரிடுதல்: எசாயா திராட்சை பயிரிடுவதைப்பற்றித் தெளிவாக விளக்கிக் கூறுகின்றார் (எசா 5:6).

அ) இடம்: பாலஸ்தீனத்தின் தட்பவெப்ப நிலை இதற்கு ஏற்றதாக உள்ளது. போதுமான வெப்பமும், மழையும் கிடைக்கின்றன. சாதாரணமாக, திராட்சைத் தோட்டங்கள் குன்றுகளின் மேல் அமைக்கப்பட்டன (சங் 80:10; எசா 5:1; எரே 3:15; ஆமோ 9:13). சில சமயங்களில் குறிப்பாகப் பெலிஸ்தியர் சமவெளிகளில் சம நிலங்களும் பயன்படுத்தப்பட்டன. திராட்சைத் தோட்டங்கள் பெரும்பாலும் திறந்த வெளியில் இருந்தாலும், நாபோத்தின் திராட்சைத் தோட்டம் ஆகாசின் அரண்மனைக்கு அருகில் இருந்தது போல (1 அர 21), வீட்டிற்கு அருகில் இருப்பதும் உண்டு.

ஆ. நிலத்தைப் பண்படுத்துதல்: திராட்சை பயிரிடப்படுமுன் நிலம் நன்றாகப் பண்படுத்தப்பட வேண்டும். பெரிய கற்கள் நீக்கப்பட்டு நிலம் நன்றாக உழப்பட்டது. மேலும் திராட்சைத் தோட்டத்தைக் குள்ளநரிகளிடமிருந்து பாதுகாக்க அதைச் சுற்றிலும் கற்சுவர் அமைக்கப்பட்டது (உ.ச. 2:15); காட்டுப்பன்றிகள் கள்வர்கள் (எரே 49:9) இவர்களிடமிருந்தும் பாதுகாக்க வேலி அமைக்கப்பட்டது. ஒவ்வொரு திராட்சைத் தோட்டத்திலும் ஒரு காவல் கோபுரம் இருந்தது (எசா 5:2). பழங்காலத்தில் திராட்சையைக் கண்காணிப்பவர்கள் இந்தக் கோபுரத்தில் வாழ்ந்தனர். இந்தக் கோபுரத்தின் அடிப்பகுதி பழம் பிழியும் ஆலையாகப் பயன்பட்டது.

இ. திராட்சை நடுதல்: வழக்கமாகத் திராட்சைகள் 8 முதல் 10 அடிவரை இடைவெளி விட்டு வரிசையாக நடப்படும். கொடிகள் தரையில் படர்ந்திருந்தாலும், திராட்சைக்குலைகள் கவையான குச்சிகளில் தாங்கப்பட்டன. சில சமயங்களில் திராட்சை அருகிலுள்ள மரங்

கள் மேல் படரவிடப்படும். இதனால் ஒருவன் திராட்சையின் கீழ் அமர முடியும் (1 அர 4:25). செயற்கையான குறுக்குக்கம்பிப் பின்னல் உரோமையர் காலத்தில்தான் உருவாக்கப்பட்டது.

ஈ. கவாத்துச் செய்தல்: திராட்சைக் கொடிகள் மலர்ந்து, காய்த்தது. கண்காணிப்போன் தேவையில்லாத கொடிகளை வெட்டிவிடுவான் (எசா 18:5; யோவா 15:2). இதனால் மற்றக் கிளைகள் சத்து முழுவதையும் பெற்று நல்ல கனிதரும்.

உ. திராட்சைப் பழங்களின் அறுவடை: ஜுலை மாதத்தின் ஆரம்பத்திலேயே திராட்சைக் கொடிகள் பழுக்க ஆரம்பித்துவிட்டாலும், உண்மையான அறுவடை ஆகஸ்டு அல்லது செப்டம்பர் வரை நடைபெறாது. முதலில் பழுக்கும் பழங்கள் புளிப்பாக இருப்பதால் பற்கள் கூசும் (எரே 31:19-30; எசே 18:2). முழுவதும் பழுத்தபழங்களை மக்கள் உண்டனர்; உலரவைத்து அடைகள் தயாரித்தனர்; அவற்றை வேகவைத்துத் தேங்கூழ் தயாரித்தனர்; அல்லது திராட்சைரசம் பிழிந்தனர்.

3. திராட்சைத் தோட்டத்தின் பயன்கள்: பெரும்பாலான திராட்சைத் தோட்டங்கள் நிலச் சொந்தக்காரர்களாலோ கூலி ஆட்களாலோ பயிரிடப்பட்டது (மத் 20:1-6). பெரிய நிலக்கிழார்கள் தம் நிலங்களைக் குத்தகைக்கு விடுவதும் வழக்கத்திலிருந்தது (உ.ச. 8:11; மத் 21:33-43). நிலவுடைமையாளர் விளைச்சலில் தன் பங்கைப் பெறுவார் (மத் 21:34). பழைய ஏற்பாட்டில் திராட்சைத் தோட்டத்தைப்பற்றிப் பல சட்டங்கள் இருந்தன. நிலச்சொந்தக்காரர் தன் தோட்டத்தை இரண்டு முறை அறுவடை செய்யக்கூடாது. மறைந்திருக்கும் பழங்கள் வெளிநாட்டவருக்கும், விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் (லேவி 19:10; உப 24:21) விடப்பட வேண்டும். திராட்சைத் தோட்டங்கள் ஓய்வு ஆண்டில் தரிசாக விடப்பட வேண்டும் (யாத் 23:10-11; லேவி 25:3-5). மற்றப் பயிர்கள் அதில் இடப்படக்கூடாது (உப 22:9). இரண்டாவதாகக் கூறப்படும் சட்டம், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை என்பது, அத்திமரம் வைத்திருந்தவன் அந்த இடத்தில் திராட்சை பயிரிடுவதிலிருந்து புலனாகிறது (லூக் 13:6). திராட்சைத் தோட்டங்கள் பயிரிட்டவன் இராணுவச் சேவையிலிருந்து விடுதலையளிக்கப்பட்டான் (உப 20:6).

4. திராட்சை, திராட்சைத்தோட்டம் - விவிலிய உருவகம்

அ. பழைய ஏற்பாடு: திராட்சையும், திராட்சைத் தோட்டமும் இஸ்ராயேலுக்கு உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. அது எகிப்திலிருந்து கடவுளால் கொண்டுவரப்பட்டு நடப்பட்டது (சங் 80:8-13). அது தேர்ந்தெடுக்கப்பட்ட திராட்சையாய் இருந்தும் காட்டுத் திராட்சையாக மாறியது (எரே 2:21; எசா 5:1-7; ஓசே 10:1). திராட்சையின் கிளைகள் எரிக்க மட்டுமே பயன்படுவது போல, எருசலேம் வாழ் மக்கள் அழிக்கப்படுவர் (எசே 15; காண்க: 19:14). இதைப் போலவே ஒரு தனிமனிதனும் திராட்சையோடு ஒப்பிடப்படலாம். எசேக்கியேல் தன் உருவகக் கதையில் பெரிய கழுகு ஒன்று நெபுகத்னேசர் நாட்டின் விதைகளுள் ஒன்றை (செதேக்கியா எசே 17:1-8) எடுத்து விதைத்தது. அது திராட்சைக் கொடியைப் போலப் படர்ந்து பரவியது.

இயற்கையாகவே திராட்சையும், திராட்சைத் தோட்டங்களும் அதிக அளவில் இருப்பது கடவுளின் அருளாகக் கருதப்பட்டது. கைவிடப்பட்ட இஸ்ராயேலுக்குத் திராட்சைத் தோட்டங்கள் அருளப்படும் (ஓசே 2:15). இறுதிக் காலத்தில் திராட்சை புதுமையாகக் கனி கொடுக்கும். பாரூக் வெளிப்பாட்டின்படி ஒவ்வொரு திராட்சையும் 1000 கிளைகளையும், ஒவ்வொரு கிளையும் 1000 குலைகளையும், ஒவ்வொரு குலையும் 1000 பழங்களையும் கொண்டிருக்கும் (29:5). பாலைவனத்தில் திராட்சைக் குலைகளைக் கண்டாற்போல் கடவுள் இஸ்ராயேலைக் கண்டார் (ஓசே 9:10).

ஆ. புதிய ஏற்பாடு: இயேசு தன்னுடைய உவமைகளில் திராட்சைத் தோட்டங்களைக் குறிப்பிடுகின்றார். அவர் வானக அரசை ஒரு திராட்சைத் தோட்டத்திற்கு ஒப்பிடுகின்றார். அதன் உரிமையாளர், வேலையாட்களை அமர்த்துகின்றார். சிலர் நாள் முழுவதும் உழைத்தாலும், மற்றும் சிலர் சிலமணி நேரமே உழைத்தாலும் அனைவருக்கும் ஒரே கூலி கொடுக்கப்படுகின்றது *(மத் 20:16)*. விண்ணகத்தில் நுழைபவர்கள், முதலில் தன் தந்தையின் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்ய மறுத்துப்பின் சென்ற மகனுக்கு ஒப்பிடப்படுகின்றனர் *(மத் 21:28-32)*. யூதர்கள், நிலச் சொந்தக்காரரின் (கடவுள்) மகனைக் (இயேசு) கொன்ற கொடிய குத்தகைக்காரர்களோடு ஒப்பிடப்படுகின்றனர் *(மத் 21:33-43; மாற் 12:1-11; லூக் 20:9-17)*.

மேலும் இயேசு தன்னையே உண்மையான திராட்சைக் கொடியாகவும், தன் தந்தையைக் கண்காணிப்பவனாகவும் உருவகப் படுத்துகின்றார் *(யோவா 15:1-11)*.

II. **இறையியல் சிந்தனை:** சாகுபடி செய்யப்படும் பயிர்களில் சிலவற்றிற்கு மற்றவற்றை விட அதிகமான கவனிப்புத் தேவைப்படுகிறது. பருவங்களின் மாறுதலுக்கேற்ப அவற்றைப் பேணிக்காக்க வேண்டும். திராட்சைக் கொடி நிறைந்த பாலஸ்தீன நாடு நிலத்தின் விளைச்சலைப் பெற்றுத் துய்க்கும்படி அழைக்கிறது. மேலும், வரவிருக்கும் செல்வக் கொழிப்பு நிறைந்த பலனை எதிர் நோக்கி உழைக்கவும் அதே வேளையில் தங்களது உழைப்புக்குப் பலன் அளிப்பது இறைவனின் கனிந்த இரக்கமே என்பதை மனதில் கொள்ளும்படியும் கூறுகிறது. திராட்சைக் கொடியில் ஒரு மறைபொருளும் தேங்கிக் கிடக்கிறது. அதாவது, திராட்சைக் கனியைத் தவிர, கொடிக்கு எவ்வித மதிப்புமில்லை. குலைகளைக் கொய்த பின்னர் அக்கொடி எதற்குமே உதவாததாகிறது *(எசே 15:2-5)*. கனிதராத கொடியோ நெருப்பிலே எரிக்கப்படுவதற்கே தகுதியானது *(யோவா 15:6)*. திராட்சைப் பழமானது ''தேவர்களுக்கும் மனிதர்களுக்கும்'' *(நீதி 9:13)* இன்பவிருந்தாகிறது. திராட்சைக் கொடி மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்றால் *(சங் 104:15)* அதனுடைய மகிழ்வூட்டும் கனியானது கடவுளின் கரத்திலிருந்தே வருகிறது - இதுதான் திராட்சைக் கொடியில் அடங்கியிருக்கும் சித்தாந்தம், மறைபொருள்.

1. திராட்சை, ***மனிதனுக்கோர் இன்பம்:*** நீதிநெறி நின்ற நோவா, இனிமேல் சாபமிட மாட்டேன் என்று கடவுள் கூறிய பூமியில் திராட்சையைப் பயிரிடுகிறார் *(ஆதி 8:21; 9:20)*. திராட்சைத் தோட்டங்களின் செழுமை, ஆதாமின் பாவத்தினால் கடவுளின் ஆசி முற்றும் அழிந்துவிடவில்லை என்பதன் அறிகுறியாக விளங்குகிறது *(ஆதி 5:29)*. கடவுள் தம் உறுதிமொழிக்கேற்ப தம் மக்களுக்குத் திராட்சை வளமிக்க செழுமையான பூமியை வழங்குகிறார் *(எண் 13:23தொ; உப 8:8)*. ஆனால், ஏழைகளைக் கொடுமைப்படுத்துவோரும் *(ஆமோ 5:11)*, யாவேயிடத்து உண்மைப் பற்றின்றியிருப்போரும் *(செப் 1:13)*, திராட்சைக்கொடிநல்கும் திராட்சைரசத்தைக் குடிக்க மாட்டார்கள் *(உப 28:30.39)*. ஏனென்றால் திராட்சைக் கொடியானது விட்டில் பூச்சிகளால் அழிக்கப்பட்டுவிடும் *(யோவே 1:7)*; அல்லது களைகளால் அழிக்கப்பட்டுவிடும்.

தன்கீழுள்ள குடிமக்களுக்குள்ள திராட்சையைத் தனக்கெனக் கைப்பற்றிக் கொள்ளும் அரசன் கொடிய அநீதி புரிகிறான் *(1 அர 21:1-16)* என்று சாமுவேல் முன் மொழிந்திருக்கிறார் *(1 சாமு 8:14 தொ)*. ஆனால் அரசன் நல்லவனாக உள்ளபோது குடிமகன் ஒவ்வொருவனும் அமைதியோடு வாழ்கிறான்; திராட்சை நிலமும், அத்திமரங்களும் அவனுக்கு உடைமைகளாகவிருக்கும் *(1 அர 5:5; 1 மக் 14:12)*; இத்தகைய செல்வநிலைதான் மெசியாவின் காலத்தில் நிலவும் *(மீக் 4:4; செப் 3:10)*; அப்போது திராட்சை வளம் பெருகிப் பொங்கும் *(ஆமோ 9:14; செப் 8:12)*. கொடிவகையான திராட்சை ஞானத்திற்கும் *(சீரா 24:17)*, அறநெறியாளனின் மனைவிக்கும் *(சங் 128:3)* உவமையாக எடுத்

தாளப்பட்டிருக்கிறது. மேலும், உன்னத சங்கீதத்தில் தலைவனும் தலைவியும் பாடும் காதல் பாடங்களில் காதலின் அடையாளமாக அமைகிறது (உ.ச. 6:11; 7:13; 2:13.15; காண் 1:14).

2. இஸ்ராயேல் இறைவனிடம் பற்று நீக்கிய திராட்சைக்கொடி: இஸ்ராயேல் இனத்தின் தலைவர் இறைவன், தம் மக்களான திராட்சைக் கொடியை நட்டு, கண்காணிப்பவர் அவரே. இஸ்ராயேல் நல்ல பலன் தரும் ஒரு திராட்சைக்கொடி; ஆனால் அது தனக்கு வளமையைத் தரும் தன் வாழ்க்கைத் துணைவரான இறைவனை அசட்டை செய்து அவருடைய உடன்படிக்கையை மறந்துவிட்டு, மற்றவர்களுக்கே கீழ்ப்பணிந்து நன்றி கூறுகிறது என்று ஓசே கூறுகிறார் (ஓசே 10:1; 3:1). கடவுள் தம் திராட்சைக் கொடியை விரும்புகிறார்; அதைப் பரிவோடு பாதுகாத்து வருகிறார்; ஆனால் அக்கொடியோ கடவுள் எதிர்பார்த்திருந்த அறவொழுக்கமென்னும் கனிகளைத் தராமல், இரத்தத்தைக் கொட்டியிருக்கிறது; எனவே அவர் அக்கொடியை அழிப்போரின் கைகளில் விட்டுவிடப்போகிறார் என்று எசாயா கூறுகிறார் (எசா 5:2-7). இஸ்ராயேல் இறைவனால் தனித்த முறையில் விரும்பி நடப்பட்ட கொடி; ஆனால் அதுவோ காலப்போக்கில் அழிந்து நாசமாகிவிட்டது; பலன்தாராத பதராகிவிட்டது (எரே 2:21; 8:13). எனவே அது வேரோடு பிடுங்கப்பட்டு அழிவுறும் என்று எரேமியா கூறுகிறார் (எரே 5:10; 12:10). கடவுளிடம் இஸ்ராயேல் இனம் பற்றிழந்துவிட்டது என்பதைக் குறிப்பிடுகையிலும் (எசே 19:10-14; 15:6 தொ), அரசனொருவன் தான் ஏற்றுக்கொண்ட உடன்படிக்கைக்கு நம்பிக்கைத் துரோகியாகிவிட்டான் (எசே 17:5-19) என்று குறிப்பிடுகையிலும் வளமானதாக இருந்தும் காய்ந்துபோய் எரிக்கப்பட்ட திராட்சைக் கொடியை உருவகமாக எசேக்கியேல் பயன்படுத்துகிறார்.

ஒருநாள் வரும்; அப்போது திராட்சைக் கொடியெல்லாம் கடவுளின் நுண்ணிய கண்காணிப்பில் செழிப்புற்று வளரும் (எசா 27:12தொ). கடவுளின் நிலைபெற்ற அன்பை முன்னிருத்தி, எகிப்து நாட்டிலிருந்து எடுத்து வந்து, தம் சொந்தநாட்டில் நட்ட திராட்சைக் கொடியான தம்மைக் கடவுள் அழித்து விடாமல் தொடர்ந்து பாதுகாக்க வேண்டுமென இஸ்ராயேல் மக்கள் வேண்டிக் கொள்கிறார்கள். இனிமேல் இக்கொடியானது அவருக்கு விசுவாசமாக நடந்துகொள்ளும் (சங் 80:8-17); இருப்பினும் இஸ்ராயேல் மக்கள் தங்கள் வாக்குறுதிக்கு உண்மையாக நடந்து கொள்வார்கள் என்று கூறமுடியாது. எசாயா கூறியிருக்கும் உவமையையே எடுத்தாளும் இயேசு, கடவுள் இன்னும் தம் திராட்சைக் கொடியான இஸ்ராயேலிடமிருந்து பலனை எதிர்பார்த்திருக்கிறார் என்று அம்மக்களின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுகிறார். கடவுள் அனுப்பிய இறைவாக்கினர்களுக்குச் செவிமடுப்பதை விடுத்து, தோட்டத்துப் பொறுப்பாளர்கள் அவர்களைக் கொடுமைப் படுத்தினர் (மாற் 12:1-2); இறுதியில் தம் அன்பின் சிகரமாகக் கடவுள் தம் சொந்த மகனையே அனுப்புகிறார் (12:6). இத்தகைய ஒப்பிலா அன்பையும் அவமதித்து, மக்கள் தலைவர்கள் மகனையே கொன்று, பெரும் துரோகம் புரிகிறார்கள். எனவே, அவர்கள் தம் குற்றத்திற்காகத் தண்டிக்கப் படுவர்; அதே வேளையில் மகனின் மரணம் கடவுளின் திருத்திட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைக்கிறது. இப்போது, திராட்சைத் தோட்டமானது பொறுப்புள்ள ஊழியர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது; முடிவில் அது மிகுந்த பலனளிக்கும் (12:7தொ; மத் 21:41 தொ).

இத்தகைய பொறுப்புள்ள ஊழியர் யாவர்? கொள்கையளவில் இங்கு வாதம் புரிவது வீணானது. இத்தகையோர் யாவரென அவர்களுடைய ஆக்கப்பணியிலிருந்தும் அது விளைக்கும் பலனிலிருந்தும்தான் அறிய முடியும் (மத் 21:28-32). திராட்சைத் தோட்டத்தின் பலனையெல்லாம் ஒன்று சேர்க்கும் பொருட்டு, கடவுள் தம் ஊழியர்களை எல்லாம் ஒன்று கூட்டுவார். இவர்கள் காலைப் பொழுதிலிருந்து வேலை செய்ய வந்தவர்களோ, முடியும் தறுவாயில்

கூலிக்கு வேலை செய்ய வந்தவர்களோ -எப்படியிருந்தாலும் இவர்களனைவர்க்கும் ஒரேவிதமாகவே ஊதியம் வழங்கப்படும். மனிதனெவனும் தனக்கு இவ்வளவு வேண்டுமென உரிமைபாராட்ட முடியாது; மாறாக, இவ்வாறு தரப்படும் ஊதியம் இறைவன் தாமே மனமுவந்து வழங்கும் தாராளப்பண்பின் கொடையாகும் (மத் 20:1-15).

*3. **உண்மையான திராட்சைக்கொடி - கடவுவின் மகிமை, மகிழ்ச்சி:*** இஸ்ராயேல் இனம் கடவுளுக்கு எதை அளிக்க முடியாமல் போய்விட்டதோ அதைக் கிறிஸ்து அவருக்கு அளித்தார். கிறிஸ்துதான் உண்மையான திராட்சைக் கொடி; அது விளைக்கும் கனிதான் முறையானதென அழைக்கும் தகுதி பெற்றுள்ளது. அவர்தான் உண்மையான இஸ்ராயேல்; இறைத்தந்தை அதை நட்டு, அக்கறையோடு பாதுகாத்து, பக்குவமாய் பருவத்தில் கிளைதறித்து, பேரளவு பலன் தரும்படிஅமைத்தார் (யோவா 15:1தொ; மத் 15:13). இவர் தம் உயிரையே அளித்தார். தன் குருதியை அன்பின் சின்னமாகக் கொட்டினார். இவ்வழியாக உண்மையான பலன் தந்தார் (யோவா 15:9.13; காண் 10:10தொ.17). திராட்சைக் கனியிலிருந்து செய்யப்படும் திராட்சை இரசமானது நற்கருணை மறை பொருளில் கிறிஸ்து சிந்திய இரத்தத்தின் அறிகுறியாக அமைகிறது; இக்குருதியில் தான் புதிய உடன்படிக்கை முத்திரையிடப் பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் அன்பில் பங்கு பெறவும், அவரில் ஒன்றித்திணையவும் திராட்சை இரசம் ஒரு சாதனமாக அமைகிறது (மத் 26:27தொ; காண் யோவா 6:56; 15:4 தொ).

கிறிஸ்துவே திராட்சைக் கொடி; நாம் அதன் கிளைகள். அவர் உடல்; நாமெல்லாம் அவருடைய உறுப்புகள். உண்மையான திராட்சைக் கொடி என்பது அவருடைய திருச்சபைக்கும் பொருந்தும். அத்தகைய ஒன்றிப்பு இல்லாமலிருந்தால் நம்மால் ஒன்றுமே செய்யவியலாது. உண்மையான திராட்சைக் கொடியான கிறிஸ்துதான் கனி தரமுடியும்; அவர் விளைக்கும் கனிதான் தோட்டத்து உரிமையாளரான விண்ணகத்தந்தைக்கு மகிமை தரக்கூடும். கிறிஸ்துவில் இணைந்திராவிடில் நாம் தறிக்கப்பட்ட கிளைகளாய் உயிர்ச்சத்தின்றி, பயனற்றதாய்த் தூர எறியப்படுவோம். கனிதராத கிளையானது நெருப்பிலிடப்படுவதற்கே தகுதியானது (யோவா 15:4தொ). எல்லா மனிதனும் இத்தகையதோர் உறவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறான். இது, தந்தையும் மகனும் தாமே விழைந்து விடுக்கும் அன்பின் அழைப்பு. கிறிஸ்துதான் தம் கிளைகளான சீடர்களைத் தெரிந்து கொள்ளுகிறார்; அவர்களாக அவரைத் தெரிந்து கொள்வதில்லை (15:16). இத்தகைய ஒன்றிப்பால் மனிதன் உண்மையான திராட்சைக் கொடியின் பிரியாத ஒரு கிளையாக இணைந்துவிடுகிறான். அவ்வாறு ஏற்படும் ஒன்றிப்பால் உயிர்பெற்று, தந்தை மகன் அன்பிலே உறவுபெற்று, தந்தைக்குப் புகழ்விளைக்கும் கனி கொடுக்கிறான். இவ்வாறு, கிறிஸ்துவைப்போலத் தந்தைக்குப் புகழ் விளைக்கும் பணியில் ஈடுபட்டு, கிறிஸ்துவின் உண்மை மகிழ்வில் கலக்கிறான் (15:8-11). திராட்சைக் கொடியானது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையே நிலவும் ஒன்றிப்பின் மறைபொருள் மேன்மையையும் அதனால் எழும் அழியாது நிலைபெற்ற செழிப்பு, மகிழ்ச்சி இவற்றையும் குறிக்கும் சின்னமாக விளங்குகிறது (காண் 17:23).

திராட்சைத் தோட்டத் தொழிலாளர்கள் (LABOURER OF THE VINEGARD)

விண்ணரசிலே முதலானோர் பலர் கடைசியாவர்; கடைசியானோர் பலர் முதலாவர் என்பதை விளக்க இந்த உவமையை இயேசு கூறுகிறார் (மத் 20:1-6). வீட்டுத்தலைவன் கடவுள், முடிவில்லா வாழ்வை அளிப்பவர். உலகமே திராட்சைத் தோட்டம். இயேசுவே அதன் கண்காணிப்பாளன். ஆண்டவனுக்காக அனைத்தையும் துறப்பவரின் சன்மானம், அவர் முதலில் துறந்தாலும் இறுதியில் துறந்தாலும், ஒன்றே. நீதிக்கு அப்பால் செல்லக்கூடியது இறைவனது அருள். இறைவன் பெருந்தன்மை மிக்கவர். அதிகம் கொடுக்க அவருக்கு அதிகாரம் உண்டு.

திராட்சைப்பழ அடை (RAISIN - CAKES)

உலர்ந்த திராட்சையைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவே திராட்சை அடை. ஏனெனில் இவ்வாறுதயாரிக்கப்படும் உணவு எளிதில் கெட்டுப்போகாது; பயணத்திற்கும் ஏற்றது. எனவே படைகளுக்கும் மிகவும் பயன்படும் (*2 சாமு 6:19; 16:1; காண். 1 சாமு 25:18; 30:12; 1 நாள் 12:40*). இது ஒரு விழாக்கால உணவாகும் (*எசா 16:7*). இது இனப்பெருக்க வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் (*உ.ச. 2:5; ஒசே 3:1; எரே 7:18; 44:19*).

திராட்சைப் பழரசம் (WINE)

புனித நாட்டில் திராட்சைரசம், கோதுமை மற்றும் எண்ணெய் முதலியன அன்றாட உணவின் மூலப்பொருட்களாகும் (*உப 8:8; 11:14; 1 நாள் 12:41*). ''மனிதனின் இதயத்தைக் களிப்பூட்டுகின்ற'' தனிப்பட்ட இயல்பைத் திராட்சைரசம் கொண்டுள்ளது (*சங் 104:15; நீதி 9:13*). எனவே, மெசயா விருந்தின் பொருட்களில் இதுவும் ஒன்று. கிறிஸ்துவின் அன்பாகிய மகிழ்ச்சியின் ஊற்றுக்கு விசுவசிப்போர் செல்கின்ற நற்கருணை உணவின் முதன்மையான உறுப்பாகவும் இது உள்ளது.

I. மேற்காசியாவில் திராட்சைப் பழரசம்

1. பண்டைக் காலந்தொட்டே பாலஸ்தீனமும், சீரியாவும் நல்ல திராட்சைரசத்திற்குப் பிரசித்தி பெற்றவை. சின்னுகே என்பவர், ''நீரைவிட திராட்சைரசமே அங்கு மிகுந்திருந்தது'' எனக் குறிப்பிடுகிறார். இது ஒரு நல்ல பொருளாகக் கருதப்பட்டது (*சீரா 29:25-26*). பேரிச்சை மற்றும் மாதுளை போன்ற பழரசங்கள் தயாரிக்கப்பட்டாலும் திராட்சைப் பழரசமே பாலஸ்தீனத்தில் முதன்மையானது. உரோமையர்கள் காலத்தில் திராட்சை ரசத்துடன் நீர் சேர்த்துப் பருகும் பழக்கம் இருந்தது. இப்படிப்பட்ட கலப்பு இரசம் மிகவும் இனிமையானது என மக்கபேயர் ஆகமம் கூறுகிறது (*2 மக் 15:39*). ஆனால் இப்படிப்பட்ட கலப்பு சரியானதாகக் கருதப்படவில்லை (*எசா 1:22*). ஆனால் திராட்சைரசம் நறுமணப் பொருட்களுடன் கலக்கப்பட்டு மிகவும் சிறப்பான இரசம் என அழைக்கப்பட்டது (*பழ 9:25; உ.ச. 8:2*). திராட்சைரசம் மீரையுடன் கலக்கப்பட்டு மயக்க மருந்தாகப் பயன்படுத்தப்பட்டது (*மத் 27:34; மாற் 15:23*). யூதாவின் எபிரோன் பகுதியும், யோர்தானுக்கப்பால் உள்ள சிபிமா பகுதியும் சிறப்பான இரசத்திற்குப் பேர் பெற்றவை. சீரியாவின் இரசம் உலகப்புகழ் பெற்றதாகும்.

2. *திராட்சைரசம் தயாரிக்கும் முறை:* திராட்சைக் குலைகள் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்பட்டு, வெய்யிலில் சிறிது உலரவைக்கப்படுகின்றன (*உப 16:13*). பெரிய தொட்டிகளில் உலர்ந்த பழங்கள் இடப்பட்டு, கால்களால் மிதிக்கப்படுகின்றன. பழங்கள் மிதிக்கப்படும் தொட்டி, அதற்கு அருகிலுள்ள மற்றொரு தொட்டியை விட உயரத்தில் அதிகமாயும், அத்தொட்டியுடன் சிறு வாய்க்காலால் இணைக்கப்பட்டதாயும் இருக்கும். பிழியப்பட்ட இரசம் உயரம் குறைந்த தொட்டியில் நிரப்பப்படும். திராட்சைரசம் பிழியும்போது பலர் பணிபுரிவர். மகிழ்ச்சியில் நிரம்பிய அவர்கள் பாட்டுக்களைப்பாடி மகிழ்வதும் உண்டு (*நெகே 13:15; யோபு 24:11; எசா 16:10*). பின்பு சாடிகளில் இரசம் நிரப்பப்பட்டு, புளிப்பேறுவதற்காகச் சிறிது காலம் வைக்கப்படும். இவை தோல் துருத்திகளில் நிரப்பிவைக்கப்படும். புதிய இரசம் புதிய தோல் துருத்திகளிலேயே ஊற்றிவைக்கப்படும் (*மத் 9:17; மாற் 2:22; லூக் 5:37-38*). இரசம் மக்களால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. திருவிழாக்களில் மட்டுமல்லாமல் அனைத்து விருந்துகளிலும், உணவோடு இரசம் பரிமாறப்பட்டது. திராட்சைரசம் ஒவ்வொருமுறை பந்தியில் பரிமாறப்படுவதற்குமுன்னும் வடிகட்டி, தூய்மைப்படுத்தப்பட்டது (*மத் 23:24*). பழைய இரசமே மிகவும் இனிமையானது (*சீரா 9:10; லூக் 5:39*). இரசம் மருந்தாகப் பயன்பட்டது (*2 சாமு 16:2; 1 திமொ 5:23*). இரசம் பலிகளில் பயன்படுத்தப்பட்டது (*உப 32:37-38; எசா 57:6; 65:11; எரே 7:18; 19:13*). இரசம் இரத்தமாகக் கருதப்பட்டு, பலிபீடத்தினடியில் ஊற்றப்பட்டது (*சீரா 50:15*).

II. அன்றாட வாழ்வில் திராட்சைரசம்

1. சமய சார்பற்ற வாழ்வில்: யாவே பாரம்பரியம், மதுக் கலாச்சாரக் கண்டுபிடிப்பை. நோவாவிற்குச் சாற்றிக்கூறி, திராட்சைரசத்தின் விளைவுகளால் அவர் ஆச்சரியப்படுவதைக் காட்டுகிறது (ஆதி 9:20-21). இவ்வாறு இந்தப்பாரம்பரியம் ஒரே சமயத்தில் திராட்சைரசத்தின் பலன்களையும் ஆபத்துகளையும் சுட்டிக்காட்டுகிறது. வளமையின் அடையாளமான திராட்சைரசமானது (ஆதி 49:22-12; பழ 3:10), விவேகத்தோடு உபயோகிக்கப்படின் வாழ்வை மகிழ்வானதாக்கக்கூடிய உடைமையாக இருக்கும் (சீரா 32:6; 40:20). இந்த விவேகம் ஞான இலக்கியத்தில் அடிக்கடி புகழப்படுகின்ற நடுநிலை உணர்வின் ஒரு பகுதியாகும். தெளிவான விளக்கமானது (2 மக் 15:39) பென் சீராவின் மூதுரையாகும்: ''அளவோடு குடிக்கப்பட்ட மது மனிதருக்குத் தகுந்த வாழ்வு'' (சீரா 31:32). நிதானத்திற்கான ஆலோசனைகள் மேய்ப்புப்பணித் திருமுகங்களில் ஏராளமாக உள்ளன (1 திமொ 3:3.8; தீத் 2:3). திராட்சைரசத்தின் விவேகமான உபயோகமும் அங்குப் பரிந்துரைக்கப்படுகிறது (1 திமொ 5:23). அவப்பெயர் வரக்கூடும் என்ற அபாயநிலையிலும் இயேசு திராட்சை இரசத்தைப் பருகினார் (மத் 11:19). அளவான நிலையினின்று விலகுகின்ற மனிதன், பல்வேறு ஆபத்துகளுக்கு உட்படக் கூடியவனாக உள்ளான். குடிப்பதில் அதிக ஆர்வமுடைய தலைவர்களுக்கு எதிராக இறைவாக்கினர்கள் வன்மையாகப் பழித்துரைக்கின்றனர்; ஏனெனில் இவர்கள் இறைவனையும், ஏய்க்கப்பட்டுத் தீமைக்கு உட்படுத்தப்பட்ட மக்களுக்கான தங்களுடைய உண்மையான பொறுப்புகளையும் மறந்து விடுகின்றனர் (ஆமோ 2:8; ஓசே 7:5; எசா 5:11-12; 28:1; 56:12). ஞானிகள் மிதமிஞ்சிய குடியின் தனிப்பட்ட விளைவுகளின் மீதே அதிக கவனம் செலுத்துகின்றனர். இங்குக் குடிகாரன் வறுமை (பழ 21:17), வன்முறை (சீரா 31:30-31), தீயவொழுக்கம் (19:2), பேச்சுச் சிதைவு (பழ 22:30-35) ஆகியவற்றிற்கு உள்ளாகிறான். குடிமயக்கமானது ஒழுக்கக்கேடான வாழ்க்கைக்கு நடத்திச் சென்று, கிறிஸ்தவனில் ஆவியின் வாழ்வைச் சிதைப்பதாகப் பவுல் வலியுறுத்துகிறார் (எபே 5:18).

2. வழிபாட்டு வாழ்வில்:- நிலத்தின் எல்லாப் பொருட்களையும் போன்று திராட்சைரசமும் இறைவனிடமிருந்து வருவதன் காரணமாகப் பலியிலும் ஓர் இடத்தை அது கொண்டுள்ளது. சீலோவிலுள்ள பழைய இறைத்தலத்தில், திராட்சை இரசக் காணிக்கைகளும் கொண்டு வரப்படுகின்றன (1 சாமு 1:24). பலியின் நேரத்தில் குறிக்கப்பட்ட பானங்களைப் பொழிய இவை பயன்பட்டன (ஓசே 9:4; யாத் 29:40; எண் 15:5.10). திராட்சைரசமானது குருக்களுக்கு அளிக்கப்பட்ட முதற்கனிகளில் ஒரு பகுதியாகவும் இருந்தது (உப 18:4; எண் 18:12; 2 நாள் 31:5). முதற்கனிகளின் முந்தைய சடங்கிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய புதிய உடன்படிக்கைப் பலியிலும் இறுதியாக ஒரு பங்கைக் கொண்டிருக்கும்.

மற்றொரு புறம், சமய குறிக்கோளானது திராட்சைரசத்தினின்று விலகியிருக்குமாறு சிலரைத்தூண்டுகிறது. குருக்கள் தங்களது பணியை நிறைவேற்றும்போது இதனின்று விலகியிருக்க வேண்டும். ஏனெனில், போதித்தல் மற்றும் தீர்ப்பிடுதல் முதலான குருத்துவப் பணிகளுக்கு முழுமையான சுய கட்டுப்பாடு தேவையாக உள்ளது (எசே 42:21-23; லேவி 10:9-10). திராட்சை இரசத்தினின்று விலகியிருப்பதானது, திராட்சை இரசம் இல்லாமல் இஸ்ராயேலானது துறவற நிலையில் தனது இறைவனை நோக்கி நெருங்கிய பாலைவனக் காலத்தின் நினைவாகவும் உள்ளது (உப 29:5). கானான் நாட்டில் குடியேறியதற்கு நீண்ட காலத்திற்குப் பின்னர் இரேக்காபியர் திராட்சைரசத்தைக் குடிக்காமலிருப்பதன் மூலம் தங்களுடைய நாடோடி நாட்களின் பழக்கத்தைப் பாதுகாக்க விரும்பினர் (எரே 35:6-11). நாசரேயர்கள், இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுவதன் அடையாளமாக எல்லாவகைக் கனிரசங்களையும் பருகுவதைத் தவிர்த்தனர் (ஆமோ 2:12). இவ்வாறாக, தனது பிறப்பிற்கு முன்னரே சிம்சோன், ஆண்டவரது கட்டளைப்

படி அர்ப்பணிக்கப்பட்டார் (நீதி 13:4-5). சாமுவேல் (1 சாமு 1:11) மற்றும் திருமுழுக்கு யோவான் (லூக் 1:15; 7:33) ஆகியோருடைய உதாரணங்கள் ஒரே தன்மையுடையவையே. குருத்துவ சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போலத் தற்காலிக உறுதிப்பாட்டின் மூலமாகவும் ஒருவன் நாசரேயனாக இருக்கலாம் (எண் 6:3-20). இப்பழக்கமானது யூத கிறிஸ்தவ சமுதாயத்தில் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது (அ.ப. 21:23-24). நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட யூத மதத்தில்தோன்றுவதுபோலப் புறவினத்தாருடனான எவ்வித உடன்பாட்டின் அபாயத்தையும் ஒதுக்குவதற்காகத் திராட்சைரசத்தை விட்டுவிடுமாறு விசுவாசிகளும் அடிக்கடி வலியுறுத்தப்பட்டனர் (தானி 1:8; யூதி 10:5). தனிமையானது, முற்றும் துறத்தலுக்கான அடையாளமாகச் சில கிறிஸ்தவர்கள் இதை முற்றும் நீக்கி விடுவதாகத் தெரிகிறது (1 திமொ 5:23). ஆனால் இது விவேகத்தோடும் அன்பினாலும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் (உரோ 14:21; 1 கொரி 10:31).

III. *திராட்சைரசத்தின் அடையாளவியல்:*

1. சமய சார்பற்ற நிலையின்படி, திராட்சைரசமானது வாழ்வில் இனிமையான அனைத்திற்கும் அடையாளமாய் உள்ளது. நட்பு (சீரா 9:10), மனித அன்பு (உ.ச. 1:4; 4:10) மற்றும் பொதுவாக மண்ணுலகில் அனுபவிக்கின்ற எல்லா மகிழ்ச்சி, அவற்றுடன் சார்ந்தவை ஆகிய அனைத்தும் இதில் அடங்கியுள்ளன (திருவுரை 10:19; செக் 10:7; யூதி 12:13; யோபு 1:18). திராட்சைரசமானது சிலை வழிபாட்டுச் சடங்குகளின் நலந்தராத குடிமயக்கத்தையும் (எரே 51:7; திருவெளி 18:3), ஞானத்தினுடைய சீடனின் மகிழ்ச்சியையும் நினைவிற்குக் கொண்டு வரலாம் (பழ 9:2).

2. சமயபார்வையில், திராட்சைரசத்தின் அடையாளவியலானது இறுதிக்காலப் பின்னணியில் தோன்றுகிறது.

அ) பழைய ஏற்பாட்டில், திராட்சைரசத்தின் இழப்பைப்பற்றிப் பேசுவதன் மூலம் கீழ்ப்படியா மக்களுக்கெதிரான பெரும் தண்டனைகளை இறைவன் அறிவிக்கிறார் (ஆமோ 5:11; மீக் 6:15; செப் 1:13; உப 28:39). அந்த நேரத்தில் பருகக்கூடிய ஒரே திராட்சை இரசமானது திகைப்பூட்டும் கிண்ணமாகிய இறைசினத்தின் திராட்சைரசமாகும் (எசா 51:17; திருவெளி 14:8; 16:19). அதே நேரத்தில் இறைவாக்கினர்களின் ஆறுதலை முன்னறிவிக்கும் வாக்குகளில் காணப்படுவது போல, தனது விசுவாசிகளுக்கு இறைவன் வாக்களிக்கின்ற மகிழ்ச்சி, பெரும் மிகுதியான திராட்சைரசத்தின் வடிவில் வெளிப்படுத்தப்படுகிறது (ஆமோ 9:14; ஓசே 2:24; எரே 31:12; எசா 25:6; யோவே 2:19; செக் 9:17).

ஆ. புதிய ஏற்பாட்டில் ''புது திராட்சை இரசமானது'' மெசியா காலங்களின் அடையாளமாக உள்ளது. தன்னில் அமைக்கப்பட்டுள்ள புதிய உடன்படிக்கையானது பழைய தோல் துருத்திகளைக் கிழிக்கின்ற புது திராட்சைரசமாகும் என இயேசு பறைசாற்றுகிறார் (மாற் 2:22). கானா புதுமை பற்றிய யோவானின் வர்ணனையிலும் அதே கருத்து தோன்றுகிறது. இதுவரை எதிர்பார்க்கப்பட்ட நல்ல இரசமாகிய திருமண இரசமானது கிறிஸ்துவினுடைய அன்பின் கொடையாக உள்ளது. மெசியாவின் வருகையால் மகிழ்ச்சியின் அடையாளமானது உண்மையாக உருவாகிறது (யோவா 2:10; 4:23; 5:25). புதிய திராட்சைரசம் என்ற சொல்லானது, தனது தந்தையின் அரசில் தனது விசுவாசிகளுக்கென இயேசு குறித்து வைத்துள்ள இறுதிக்கால விருந்தின் நினைவூட்டுதலாக மத் 26:29-இல் மீண்டும் காணப்படுகிறது. இதுவே மெசியா காலத்தின் முழுநிறைவாக இருக்கும். நற்கருணையை ஏற்படுத்துவதன் விவரிப்பின் பின்னணியில் இருப்பதன் காரணமாக, திராட்சைரசம் பற்றிக் குறிப்பிடுவதானது வெறும் அடையாளமாக மட்டுமே இருப்பதில்லை.தந்தையின் அரசில் புதிய திராட்சைரசத்தைப் பருகுவதற்கு முன், தனது வாழ்நாள் முழுவதும் கிறிஸ்தவன், ஆண்டவரால் சிந்தப்பட்ட இரத்தமாக மாறிய திராட்சைரசத்தையே குடிப்பான் (1 கொரி 10:16).

எனவே கிறிஸ்தவனைப் பொறுத்த மட்டில் திராட்சைரசத்தின் உபயோகமானது, நன்றி யுரைத்தலுக்கான காரணமாக மட்டுமில் லாமல் (கொலோ 3:17; 2:20-22), மீட்பு மற்றும் முடிவற்ற மகிழ்ச்சியின் ஊற்றாக உள்ள பலியை நினைவு படுத்துவதற்கான வாய்ப்பாகவும் உள்ளது (1 கொரி 11:25-26).

திராட்சை மதுவும் தோல் துருத்திகளும்

(மத் 9:17; மாற் 2:22; லூக் 5:37-38). புது திராட்சை மதுவை எவ்வாறு பழஞ்சித்தைகளில் ஊற்றி வைக்க இயலாதோ அதே போலப் பழைய எண்ணங்களையும் புதிய எண்ணங்களையும் இணைக்க முடியாது. இயேசுவின் நற்செய்தி யும் யூதச்சட்டமும் ஒன்றாய்ச் செல்ல இய லாது. இயேசு தனது போதனையோடு யூத மதத்தையும் இணைக்க விரும்பவில்லை. மோசேக்குக் கொடுக்கப்பட்ட சட்டங்கள் எவ்வளவு புதுமை வாய்ந்ததோ அதே போலப் புதுமை நிறைந்ததே இயேசுவின் போதனைகள். யூத மதம் இயேசுவின் நற் செய்தி இப்படித்தான் இருக்க வேண்டும் என வரையறுக்கக் கூடாது. கிறிஸ்தவ மதத்தை யூதமதத்தோடு ஒட்டி வைக்க முடி யாது. ஏனெனில் இது புதுமையானது.

திராயர் (TIRATHITES)

இவர்கள் யாகபேசில் குடியிருந்த கேனிய ரைச்சேர்ந்த எழுத்தர்கள் (1 நாள் 2:55).

திரித்துவம் (TRINITY)

இது தந்தை, மகன், தூய ஆவி ஒன்றாக இருப்பதைக் குறிக்கிறது. விவிலியத்தில் இந்தச்சொல் இல்லாவிட்டாலும், புதிய ஏற் பாட்டுப் போதனைகளிலிருந்து இது தொகுக் கப்படுகிறது. பவுல் ஆவி, ஆண்டவர், கட வுள் என்பவற்றை இணைத்துப் பேசுகிறார் (1 கொரி 12:4-6; எபே 4:4-6). புதிய ஏற் பாட்டின் திரித்துவ உண்மைக்குப் பழைய ஏற் பாட்டு ஞானம், ஆண்டவரின் ஆவி பற்றிய உண்மைகள் பயன்பட்டன (பழ 8:22 தொ; யோவா 1:1 தொ; கொலோ 1:1தொ; எபி 1:2-3). இவ்வுண்மையை எடுத்துக்கூறும் பிற வாசகங்கள்: மத் 28:19-இல் வரும் திரு முழுக்கு வாசகம்; தந்தையையும் மகனையும் இணைத்துக்கூறும் மத் 11:27= லூக் 10:22; ''மனுமகனுக்கும்'', ''பரிசுத்த ஆவிக்கும்'' இடையேயுள்ள இணைத்தன்மை (மத் 12:32=லூக் 12:10). காண்க: மூவொரு இறை வன்.

திரிபேனா, திரிபோசா (TRYPHAENA, TRYPOSA - இன்பமாய் வாழ்தல்)

உரோ 16:12-இல் பவுலிடமிருந்து வாழ்த் துப்பெறும் இரு கிறிஸ்தவப் பெண்கள். பவுல், இவர்கள் ''ஆண்டவருக்குள் உழைப் பவர்கள்'' என்று கூறுகிறார். இரு பெயர்கள் ஒரே கிரேக்க அடிச்சொல்லிலிருந்து வருவ தால் இருவரும் சகோதரிகளாகவோ இரட் டைச் சகோதரிகளாகவோ இருக்கலாம். இரு பெயர்களும் கிரேக்க, இலத்தீன் மூலங்களில் காணப்படுகின்றன. புல்தாள் ஏடுகள் திரி பேனா ஒரு யூதப்பெண் என்று குறிப்பிடுகின் றன. பவுல் மற்றும் தேக்கிலா ஆகியோரின் பணிநூலில் நூல் தலைவியான தேக்கிலா வின் அன்பை நாடிய அரசியின் பெயர் திரிபேனாவாகும்.

திரிபோ (TRYPO)

அலக்சாந்தர் பாலாசு என்ற செலூக்கிய மன்னனின் தளபதி. அடுத்த மன்னன் இரண் டாம் தெமேத்திரியுவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். பாலாசின் மகன் 6-ஆம் அந்தி யோக்குவுக்கும், பின்பு தனக்கும் சீரிய அரி யணைக்கு உரிமை கோரினார். இவரது உண்மையான பெயர் தியோதோத்து என்பதாகும். மேன்மையான அல்லது சொகுசான என்று பொருள்படும் திரிபோ ஓர் அடைமொழியாக இருக்கலாம்.

சிறுவன் அந்தியோக்குக்குக் காப்பாள னாகி, திரிபோ சிறுவனை அரசன் என்று அறிக்கையிட்டார். இதில் இரண்டாம் தெமேத்திரியுவால் நீக்கப்பட்டபோர் வீரர் களின் ஆதரவைப் பெற்றார் (1 மக் 11:38-40. 54-56). இவர் யூதேயாவிலிருந்த அசமோனி யர்களின் ஆதரவையும் பெற்றார். இதற்கு ஈடாக யோனத்தானின் தலைமைக்குரு பத வியை உறுதிப்படுத்தினார். சீமோனைத் தீரின் ஏணிமுதல் எகிப்துவரையிலுள்ள கடற்

கரைச் சமவெளிக்கு ஆளுநராக நியமித்தார் (11:57-59). யோனத்தானின் பலம் ஆபத்தான தாகத் தோன்றியபோது (11:67-74) யோனத் தானையும் அரச சிறுவனையும் ஒழித்துக் கட்ட சூழ்ச்சி செய்தார் (12:39-40). பெத்-சானிலிருந்த யோனத்தானின் படைகளை முறியடிக்க முடியாததால், அவரைத் தந்திர மாய்த் தோலமேயிக்கு வரவழைத்துச் சிறை யில் அடைத்தார் (12:40-48). கைதியாக இருந்த யோனத்தானையும் கூட்டிக்கொண்டு, யூதே யாவை ஆக்கிரமிக்கத் தொடங்கினார் (13:12). தலைமைக்குரு யோனத்தானை விடுவிக்க பிணைத்தொகையையும், அவரது இரு புதல் வர்களைப் பிணைக்கைதியாகவும் கோரி னர். சீமோனும் இதற்கு இணங்கி, அப் படியே செய்தார்; ஆனால் தனது வாக்குறு தியை மீறி யோனத்தானைப் பாஸ்கமா என்ற இடத்தில் கொன்றார் (13:22-23). இதனால், 2-ஆம் தெமேத்திரியுவுக்கு ஆதரவு அளித்து, சீமோன் திரிபோவைத் தோற்கடித் தார் (13:25-26). திரிபோ அரச சிறுவனைக் கொன்று (12:31-32), தன்னையே அரசன் என்று அறிவித்து மூன்று ஆண்டுகள் ஆட்சிசெய்தார் (கி.மு. 142-138). தெமேத்திரி யுவுக்கு அளித்த ஆதரவால், யூதர்களுக்குச் செயலளவில் சுதந்தரம் கிடைத்தது (13:34-42). தெமேத்திரியு பார்தியர்களால் பிடிக்கப்பட்டபின் (14:2-3; கி.மு. 140-139), அவரது சகோதரன் 7-ஆம் அந்தியோக்கு செலூக்கிய அரியணையைக் கைப்பற்றி, திரிபோவை விரட்டியடித்தார் (14:11-14.25. 37-39). ஸ்திரபோவின் கூற்றுப்படி, திரிபோ அபமேலாவில் தன்னையே அழித்துக் கொண்டார்.

திரிப்பொலி (TRIPOLIS - மூன்று நகரங்கள்)

பெனிசிய கடற்கரையிலிருந்த ஒரு துறை முக நகர். இன்று தரபுலுசு ஏல்-சாம் என் றழைக்கப்படுகிறது. ஏல்-மீனா தீபகற்பத்தில் பெய்ரூட்டுக்கு வடகிழக்கில் 70 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஒருவேளை கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டிருக் கலாம். சீதோன், தீர், ஆராது ஆகியவையடங் கிய பெனிசியக் கூட்டாட்சியின் தலைநக ராகத் திரிப்பொலியில் மக்கள் குடியேறினர். ஒவ்வொரு குழுவும் மூன்றில் ஒரு பகுதியில் குடியேறியது. ஆகவே இப்பெயர் பெற்றது. செலூக்கியர், உரோமையர் காலத்தில் சிறப் புப்பெற்று விளங்கியது. உரோமையில் கி.மு. 176-இலிருந்து பிணைக்கைதியாக இருந்த முதலாம் தெமேத்திரியு சோத்தேர் 161-இல் உரோமையிலிருந்து தப்பித் திரிப் பொலி வழியாகச் சீரியாவை அடைந்தார் (2 மக் 14:1; 1 மக் 7:1-இல் இந்த இடம் பெயரில்லாது ''கடல் அருகிலுள்ள நகர்'' என்று குறிப்பிடப்படுகிறது). பின் 5-ஆம் அந்தியோக்கு யூபாத்தோர், அவருடைய தோழமை ஆட்சியாளர் லீசியாவையும் வென்று தனது அரச உரிமையைப் பெற்றார். கி.மு. 111-வரை செலுக்கியர் ஆட்சியில் இருந்தது திரிப்பொலி. பின் எகிப்தில் தோலமியரால் ஒரு மாகாணமாக மேம்படுத்தப் பட்டது. இங்குக் கி.மு. 189-188-ஐ ஒட்டிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு ஏரோது உடற்பயிற்சிக் களம் ஒன்றை அமைத்தார். பேதுருவே இங்குத் திருச் சபையை நிறுவியதாகப் பாரம்பரியம் கூறு கிறது. கி.பி. 325-க்குப்பின் இங்கிருந்த ஆயர் களின் பெயர்ப்பட்டியல் தெரியவந்துள்ளது.

திரிப்யூன் (TRIBUNE)

600-க்கு மேற்பட்ட வீரர்களைக் கொண்ட படைப்பிரிவுக்குரிய உரோமை இராணுவ அதிகாரி. பவுல் எருசலேமுக்குச் சென்ற போது (அ.ப. 21-25), இத்தகைய அதிகாரி எருசலேமில் இருந்தார். இயேசுவைப் பிடித் துக்கட்டிக் கூட்டிச்சென்ற படைத்தலைவ னும் இத்தகைய அதிகாரியே.

திருஉறைவிடம் (TALERNACLE)

1. சீனாய் மலையில் இறைவனிடமிருந்து கட்டளை பெற்று இஸ்ராயேலர் செய்த தூக் கிச் செல்லக்கூடிய ஓர் அமைப்பு. அவர்கள் பாலைவனத்தில் பயணம் செய்தபோது, இவ்வமைப்பில் இறைவன் அவர்களிடையே குடியிருந்தார். இது ''சாட்சியத் திரு உறைவிடம்'' என்றும் அழைக்கப்பட்டது (யாத் 30:21). இது பேழையில் வைக்கப்பட்

டிருந்த பத்துக் கட்டளைகள் கொண்ட இரு கற்பலகைகளையும் சுட்டியது *(31:18; காண்க: 25:16.21-22)*. திருஉறைவிடம் அடிக்கடி ''சந்திப்புக்கூடாரம்'' என்றும் அழைக்கப்பட்டது *(27:21; காண்க:40:2-'' சந்திப்புக் கூடாரத்தின் திருஉறைவிடம்'')*. இங்கே இறைவன் மோசேயைச் சந்தித்து அவருடன் பேசுவார். திருஉறைவிடமும் அதன் முற்றமும் சிறியதாக இருந்தன; ஆகவே இறைவனும் மக்களும் சந்தித்துப் பேசுவதற்குப் போதியதன்று. அறிஞர்சிலர், யாத்திரைநூலில் வரும் திருஉறைவிட விவரிப்பு பிற்காலத்து எருசலேம் ஆலயத்தை மனதில் வைத்துப் பின்னோக்கி விவரிக்கப்பட்டது என்றும், பாலைவனத்தில் பயணப்பட்ட அமைப்பு யாத் 33:7-11-இல் வருவது போன்று எளிய அமைப்பை உடையதாகும் என்றும் கருதுகின்றனர்.

2. அமைப்பு: திருஉறைவிடத்திற்குரிய மாதிரியை இறைவன் மோசேக்குக் காட்டினார் *(யாத் 25:9; அ.ப. 7:44; எபி 8:5)*. அதற்கு வேண்டிய பொருட்களை இஸ்ராயேலர் சுயமாக விரும்பிக் காணிக்கையாகக் கொடுக்க *(யாத் 25:1-7; 35:4-9.20-29)*, பெட்சவேலும் ஒகோலியாபுவும் தங்கள் உதவியாளர்களுடன் சேர்ந்து திருஉறைவிடத்தைச் செய்தனர் *(31:1-11; 36:1)*. யாத்திரை தொடங்கி ஓராண்டு முடிவிலும் *(40:2.17)*, சீனாய் மலை சேர்ந்த ஒன்பது மாதங்களுக்குப் பின்னும் வேலை செய்து முடிக்கப்பட்டது *(காண் 19:1)*.

திருஉறைவிடம்



1. திருத்தூயகம், 2. சாட்சியப்பேழை, 3. தூயகம், 4. தூபப்பீடம், 5. திருமுன் அப்ப மேசை, 6. விளக்குத்தண்டு 7. தகனப்பலிபீடம், 8. நீர்த்தொட்டி, 9. முற்றம், 10.11. நுழைவாயில்.

திரு உறைவிடம் ஒரு முற்றத்தையும் அதன் நடுவில் திருஉறைவிடம் என்று சரியாக அழைக்கப்பட்ட சிறிய அமைப்பையும் கொண்டிருந்தது. பின்னது தூயகம், திருத்தூயகம் என்று இருபகுதியாகப் பிரிக்கப் பட்டிருந்தது. திருஉறைவிடம் என்றழைக்கப்பட்ட சிறிய அமைப்பு, ''இருபத்தெட்டு முழம் நீளமும், நான்கு முழம் அகலமும் கொண்ட பத்துத்திரைகளால்'' ஆனது *(யாத் 26)*. இவைகள் துணிவளையங்களால் இணைக்கப்பட்டு செங்குத்தாக அமைக்கப் பட்ட சித்தீம் மரச்சட்டத்திலிருந்து பொன் கொக்கிகளால் தொங்கவிடப்படும். திரு உறைவிடத்தின் மேல் வெள்ளாட்டு உரோமத்தால் செய்த திரை மூடியிருக்கும். தூயகத்திற்கும் திருத்தூயகத்திற்குமிடையில் கெருபுகள் கலைத்திறனுடன் அமைக்கப்பட்ட திரை தொங்கும். திருத்தூயகம் 4.5மீட்டர் கனசதுர அமைப்பாகவும். தூயகம் 9 மீட்டர் நீளமும் 4.5 மீட்டர் அகலமும் 4.5 மீட்டர் உயரமும்

கொண்டதாகும். திருத்தூயகத்தில் உடன் படிக்கை அல்லது சாட்சியப் பேழையிருந்தது. அதன்மேல் இரக்க இருக்கை அமைந்திருக்கும். தூயகத்தில் தூபப்பீடமும், அதன்முன் வடக்கில் பிரசன்ன அப்பமேசையும் (25:23-30), தெற்கில் விளக்குத் தண்டும் (25:31-40) இருந்தன. தூயகம் முற்றத்திலிருந்து திரையால் பிரிக்கப்பட்டிருந்தது. உள்திருஉறைவிடம் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருந்தது.

முற்றம் 44.5 மீட்டர் நீளமும், 22.5 மீட்டர் அகலமும் கொண்டது. அதைச்சுற்றி 2.5 மீட்டர் உயரமுடைய 60 தூண்கள் வேலியாக அமைந்திருந்தன (27:9-18). முற்றத்தில், உள் திரு உறைவிடத்தின் முன் கிழக்கில் தகனப் பலிபீடமும் (27:1-8), வெண்கல நீர்த்தொட்டியும் (30:17-21) இருந்தன. முற்றத்தின் கிழக்குப்பக்கத்தின் நடுவில் ஒருதிரை தொங்க விடப்பட்டது. இது நுழைவாயிலாகப் பயன்பட்டது (40:33). இத்தகைய திரை மற்றத் தூண்களிலும் தொங்கின.

ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும்போது, திருஉறைவிடமும் அதன் பொருட்களும் மாட்டு வண்டிகளில் எடுத்துச் செல்லப்பட்டன. ஆனால், அதன் பொருட்கள் சித்தீம் மரத்தண்டுகளுடன் பொருத்தப்பட்டு லேவியர்களால் தூக்கிச் செல்லப்படும் (யாத் 25:12-15.26-28; 27:6-7; 30:4-5; எண் 4:1-15; 7:6-9). சாட்சியப் பேழையைத் தூக்கிச் செல்லப் பயன்படும் தண்டுகள், பேழையின் பக்கத்திலிருக்கும் வளையங்களில் எப்போதும் இருக்கும். திருஉறைவிடத்துப் பொருட்களைத் தூக்கிச்சென்ற லேவியர்கள் அவற்றைத் தொடக்கூடாது (4:15; 2 சாமு 6:2-7).

2. வரலாறு: பாலைவனப் பயணங்களுக்குப்பின் திருஉறைவிடம் சீலோவில் வைக்கப்பட்டது. காலப்போக்கில் அங்கு ஒரு நிலையான ஆலயம் கட்டப்பட்டு அதில் திருஉறைவிடம் வைக்கப்பட்டது (1 சாமு 1:9; 3:3). பெலிஸ்தியர்கள் போரில் பேழையைக் கைப்பற்றியபின் இந்த ஆலயம் அழிக்கப்பட்டதாகத் தெரிகிறது (4:1-11; சங் 78:60-64; எரே 7:12-15). ஆயினும் ஒரு குரு சீலோவில் தொடர்ந்து பணிபுரிந்தார் (1 சாமு 14:3). திருஉறைவிடம் நோபுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் (21:1-9). பிற்பாடு கிபயோனில் அது வைக்கப்பட்டது (1 நாள் 16:39; 21:29; 2 நாள் 1:3-6). சாலமோன் தான் கட்டிய எருசலேம் ஆலயத்தில் திருஉறைவிடத்தைக் கொண்டு சென்று, வைத்தார் (1 அர 8:4).

3. பொருள்: திருஉறைவிடம் யாவேயின் உறைவிடமாகும்; அவருடைய மக்களிடையே அவரது திருமுன் தங்கிய இடமாகும் (யாத் 2:58). மக்களிடையே இறைவனின் திருமுன் உறைந்தாலும், திருஉறைவிடம் மூடியிருந்ததால், மக்கள் அவரை, முழுதும் அணுக முடியவில்லை. திருஉறைவிடத்தின்மேல் ஆண்டவரின் மாட்சிமையின் மேல் இறங்கி வர இறைவன் மக்களிடையே பிரசன்னமாவார் (40:34-35). இதற்குக் குருக்களும் பலிகளும் தேவைப்படும் (யாத் 28-29; 29:45).

திரு உறைவிடம், இறைவன் மனுக்குலத்துடன் உறைவது தற்காலிகமாக மட்டுமின்றி, நிலையாக அமையவிருக்கும் காலத்தை முன்னுணர்த்தியது. இக்குறிக்கோளை நோக்கிய மிகப்பெரிய குருவாகிய கிறிஸ்துவின் செயலின் மாதிரிகைகளாக குருத்துவமும் பலிகளும் கருதப்படுகின்றன (எபி 8-9). கிறிஸ்துவின் இவ்வுலகப்பணியைத் திரு உறைவிடம் முன்னுருவமாக உணர்த்துகின்றது. ''அவர் மனிதன் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்'' (யோவா 1:14). மேலும் திருஉறைவிடம் இறைவனின் உறைவிடமான விண்ணகத்தை எடுத்துக் காட்டும் உலகச் சாயலாக இருக்கிறது (எபி 8:5; காண் 9:24; திருவெளி 11:19). இப்பொருளில், விண்ணும் மண்ணும் சந்தித்து முடிவில்லாக் காலத்திற்கும் இறைவன் தம் மக்களிடையே வாழும் காலத்தைச் சுட்டுகிறது (திருவெளி 21:3).

திருச்சட்ட அறிஞர் (LAWYER)

சட்டங்களை, சிறப்பாக மோசேயின் சட்டங்களைத் தெளிவாக, நுணுக்கமாகக் கற்றறிந்தவர்.

'சட்ட அறிஞர்' என்ற பொருளைத் தருகின்ற இரேக்கச் சொல்லானது லூக்கா நற்செய்தியில் ஆறு முறையும், தீத்துவுக்கு எழுதிய திருமுகத்தில் இரண்டு முறையும், மத்தேயு நற்செய்தியில் ஒரு முறையும். இடம் பெறுவதைத் தவிர, புதிய ஏற்பாட்டில் வேறு எந்த இடத்திலும் இடம் பெறவில்லை. பவுல் தீத்துவுக்கு எழுதிய மடலில் (3:9) இச்சொல்லானது சட்டத்தைப் பற்றிய வாக்கு வாதங்களில் மூழ்கியிருப்பவரைக் குறிக்கும் உரிசொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த உரிச்சொல் சேனாவைக் குறிக்கிறது (3:13).

மத்தேயு நற்செய்தி 22:35-இலும் மாற்கு நற்செய்தி 12:28இலும் இச்சொல்லானது மறைநூல் அறிஞரைக் குறிக்கிறது. 'சட்ட அறிஞர்' என்ற வார்த்தை புறவினத்தார் அறிந்த ஒரு சொல்லாகையால் லூக்கா மறை நூல் அறிஞர் என்ற சொல்லைத் தவிர்த்து 'சட்டஅறிஞர்' என்ற சொல்லை விரும்பித் தேர்ந்தெடுத்திருக்கலாம். லூக்கா நற்செய்தி 10:25-ஐத்தவிர, இந்நற்செய்தியில் மற்ற இடங்களில் இவ்வார்த்தையானது இழிவான பொருளைக் கொண்டிருக்கிறது. இயேசு ஓய்வுநாளில் நோயாளிகளைக் குணமாக்குவதைக் குறைகூறியவர் அல்லது எதிர்த்துப் பேசியவர்கள் கூட்டத்தில் திருச்சட்ட அறிஞர்கள் இருக்கின்றனர் (லூக் 14:3). அவர்கள் யோவான் தந்த திருமுழுக்கினை வெறுத்து ஒதுக்கியதால், கடவுளுடைய திட்டத்தைத் தங்களைப் பொறுத்தமட்டில் வீணாக்கினார்கள் (7:30). அவர்கள் நீதியைத் தவிர்த்து விடுகின்றனர். தாங்க முடியாத சுமையை மக்கள் மேல் சுமத்துகிறார்கள். மற்றவர்களுக்கு உதவ மறுக்கின்றனர் (11:45-46). அவர்கள் உண்மையான அறிவினைப் பெற மறுக்கின்றனர். அதைப் பெற விரும்புகிறவர்களையும் தடுக்கின்றனர் (11:52). இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் இயேசுவின் வாயிலிருந்து வந்தவை. ஆனால் லூக் 11:45-இல் மட்டும் இயேசு அவர்களை அவமானப்படுத்துவதாக ஒரு சட்டவல்லுநர் முறையிடுகின்றார்.

திருச்சபை (CHURCH)

I. திருச்சபையானது விசுவாசத்திலும் வழிபாட்டிலும் இணைக்கப்பட்ட உலகிலுள்ள சமூகமென மனிதரால் நன்கு வரையறுக்கப்பட்ட திருச்சபையின் மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்டு, இக்காலத்தவர்கள் பலர் செல்லவில்லை. ஆனால் திருமறைநூல் விசுவாசத்தை முன்னிருத்தி, முன்னர் இறைவனில் மறைந்திருந்து, இப்போது வெளிப்படுத்தப்பட்டு, ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டு விட்ட மறைபொருளாகத் திருச்சபையை விவரிக்கிறது (எபே 1:9-10; உரோ 16:25-26). பாவிகளாயிருந்தாலும், அன்பின் வாயிலாகிய கிறிஸ்துவினுடைய உடலின் விரிவாக்கமாக இருப்பதால், மீட்பின் உறுதிமொழியைக் கொண்டுள்ள மக்களின் மறைபொருளாக இது உள்ளது. ''இறைவனுடைய மகிமையின் புகழ்ச்சிக்காக'' (எபே 1:14) ஒளி, மன்னிப்பு, அருள் ஆகியவற்றை மனிதன் கண்டடையக்கூடிய மனித — இறை அமைப்பின் மறைபொருளாகும் இது. இந்த முற்றிலும் புதிய அமைப்பிற்குக் கிரேக்க மொழி பேசும் முதல் கிறிஸ்தவர்கள் ''எக்லேசிய'' (சபை) என்னும் விவிலியப்பெயரை அளித்தனர். இச்சொல்லானது இஸ்ராயேலுக்கும் கிறிஸ்தவ மக்களுக்கும் இடையிலான தொடர்ச்சியைச் சுட்டிக்காட்டுவதாகவும், அதே நேரத்தில் ஒரு புதிய பொருளை ஏற்பதற்குத் தகுதியானதாகவும் உள்ளது.

II. சொல்லின் உட்பொருள்: திருச்சபையென மொழி பெயர்க்கப்படும் ''எக்லேசியா'' என்ற சொல், கிரேக்க உலகில், அரசியல் சக்தியாக மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறது. இந்தச் சமயம் சாராத பொருள், பவுல் திருச்சபையில் ஒன்றித்துள்ள கிறிஸ்தவ சபையின் அக்கால நடைமுறையைப் பற்றிப் பேசும்போது (அ.ப. 19:32.39 தொ) இச்சொல்லின் சமயப் பொருளைப் பாதிப்பதாகத் தெரிகிறது.

இதற்கு மாறாக, எழுபது நூலில், திருச்சபை என்னும் சொல், சமயச் செயலுக்காக, பெரும்பாலும் வழிபாட்டுக்காகக் கூட்டப்படும் கூட்டத்தை விவரிக்கிறது (உப 23; 1

அர 8; சங் 22:26). இது ஓரேபிலும் (உப 4:10), மோவாபிலும் (31:30), வாக்களிக்கப் பட்ட நாட்டிலும் (நீதி 8:35; 20:2) கூட்டத் தைக் குறிக்க உபாகமப் பாரம்பரியம் பயன் படுத்தும் ''ககால்'' என்ற எபிரேயச் சொல் லோடு ஒத்துப்போகிறது. அரசர்களின் காலத் திலும் அல்லது நாடு கடத்தப்பட்ட பின்னும் இஸ்ராயேலின் வழிபாட்டுக் கூட்டத்தை விவரிக்க நாளாகமப் பாரம்பரியமும் இச் சொல்லையே பயன்படுத்துகிறது (1 நாள் 28:2; நெகே 8:2). ஆனால் எப்போதும் எக்லேசியா என்ற சொல் ககால் என்ற சொல்லைக் குறித்தாலும், ககால் என்ற சொல் சில இடங்களில், பிற சொற்களாலும், குறிப்பாகச் ''சினகோகே'' (செபக்கூடம்) என்ற சொல்லாலும் குறிக்கப்படுகிறது (எண் 16:3; 20:4; உப 5:22). திருச்சபை மற்றும் செபக்கூடம், பெரும்பாலும் ஒரு பொருள் பல சொல்லாகும் (யாக் 2:2). திருச்சபை என்ற சொல் தங்களைக் குறிப்பதாகவும், செபக்கூடம் பிடிமுரண்டான யூதர்களைக் குறிப்பதாகவும் கிறிஸ்தவர்கள் கருதத் தொடங்கும்வரை இரு சொற்களும் பொரு ளில் ஒன்றுக்கொன்று எதிரானவையல்ல. ககால், எக்லேசியா என்ற சொல்லின் ஒலி யசையாலும், சொல் இலக்கணத்தாலும் பாதிக்கப்பட்டு, எழுபதுநூல் திருச்சபை என்ற சொல்லைத் தேர்ந்து கொண்டது. எக்லேசியா என்ற சொல், 'நான் அழைக் கிறேன் அல்லது நான் கூட்டுகிறேன்' என்று பொருள்படும் எக்கலேயா என்ற சொல்லி லிருந்து வருகிறது. இது இறைவனின் மக்க ளாகிய இஸ்ராயேல், இறை முன்முயற்சி யால் கூட்டப்படும் மக்கள் கூட்டமாகும் என்பதைச் சுட்டுகிறது.

பழைய இறைமக்களின் தொடர்ச்சியான இறைவனின் புதிய மக்களை நிறுவிய போது, சமயக் கூட்டத்தைக் குறிக்கும் விவி லியப் பெயரை இயேசு பயன்படுத்துவது இயல்பானதே. இப்பெயர் மத் 16:18-இல் எக்லேசியா என்ற சொல்லால் மொழி பெயர்க்கப்படுகிறது. ''பாலைவனத் திருக் கூட்டத்தால்'' (அ.ப. 7:38) முன் உணர்த்தப் பட்டு, இறைவனின் புதிய மக்களாக உணர்ந்த (1 பேதுரு 2:10) முதல் கிறிஸ்தவத் தலைமுறை, தன்னை ''இறைவனின் இஸ் ராயேல்'' (கலா 6:16; திருவெளி 7:4; யாக் 1:1; பிலி 3:3) என்று சுட்டிக்காட்டத் தகுதி வாய்ந்த விவிலியச் சொல்லைப் பயன்படுத் தியது. மேலும் இச்சொல் இறுதிக் காலத்தின் ''பரிசுத்த சபையாக'' உருவாக, முதலில் யூதர்களுக்கும், பின்னப் புறவினத்தாருக்கும் எதிர்ப்பலன் கருதாது கிறிஸ்துவில் இறைவன் அளித்த அழைப்பையும் உள்ளடக்கியுள்ளது.

III. திருச்சபைக்கான தயாரிப்பும் அதன் முழுமையும்: சிதறிய பிள்ளைகளை மீண்டும் ஒன்று சேர்ப்பதற்காக இறைவன் நீண்டகாலம் தயாரித்தார் (யோவா 11:52). திருச்சபை யென்பது இயேசுகிறிஸ்துவிலான மீட்பின் வாரிசுகளாகிய மனிதரின் சமுதாயமாகும் (அ.ப. 2:47). ''மீட்புப்பெறும் நமக்கு....'' என்று பவுல் எழுதுகிறார் (1 கொரி 1:18). மீட்பின் இறைத்திட்டமானது, இந்தச் சமுதா யத்தில் உச்சநிலை அடைவதாயினும், ''உல கைப் படைப்பதற்கு முன்னரே உருவாக்கப் பட்டு'' (எபே 1:4), ஆபிரகாமிலிருந்து ஏன், ஆதாமினுடைய தோற்றத்தின் முதற் கொண்டே மனிதரிடையில் கோடிட்டுக் காட்டப்பட்டது.

1. முதல் படைப்பும் புதுப்படைப்பும்: ஆதி யிலிருந்தே, இறைவனுடன் எளிதாக வாழ்ந்த போதே (ஆதி 3:8), மனிதன் சமூக அமைப் புக்கும் (1:27; 2:18) இனப் பெருக்கத்திற்கும் (1:28) அழைக்கப்பட்டான். ஆனால் பாவமா னது இறைத்திட்டத்தைக் குறுக்கிட்டுத் தடை செய்கிறது. இறைவனுடன் வாழ்வதற்கு அழைக்கப்பட்ட மக்களுக்குத் தலைவனாக, இருப்பதற்குப் பதிலாக, பகைமையால் பிளவு பட்ட (4:8;6:11), தற்பெருமையால் சிதறிய (11:8-9), தன்னைப் படைத்தவரிடமிருந்தே விலகி ஒடுகின்ற (3:8;4:14) மனித இனத்திற் குத் தந்தையாக ஆதாம் உள்ளார். ஆகவே இறைவனுடனான நட்புறவை மீட்டளிக்கக் கூடிய (உரோ 5:12...), மனித இனம் ஒன்று படுத்தப்பட்டு (யோவா 11:52) அதனுடைய உறுப்பினர்கள் ஒப்புரவாகக்கூடிய (எபே

2:15-18) புதுப்படைப்பைத் தொடங்க (2 கொரி 5:17-18; கலா 6:15) ஒரு புதிய ஆதாம் தேவைப்படுகிறார் (1 கொரி 15:45; கொலோ 3:10-11). இஸ்ராயேலால் தயாரிக்கப்படும் திருச்சபையானது இப்படிப்பட்டதாக இருக்கும். பாவமானது தனது விளைவுகளை வெளிப்படுத்துகின்ற உலகினுடைய உலகளாவிய வரலாற்றில் விவிலியமானது, ஆபிரகாம் மற்றும் அவரது வழித்தோன்றல்களின் வரலாற்றை அமைக்கின்றது. ஆபிரகாமின் உண்மை மக்களாகிய திருச்சபை (உரோ 4:11-12) உலகில் தன்னை இடைப்புகுத்த வேண்டும்; மேலும் பாவம், அதன் முரண்பாடுகள் மற்றும் பாவத்தினால் விளைகின்ற மரணம் ஆகியவற்றிற்கான பதிலாக அங்கு இருக்க வேண்டுமென விவிலியமானது காட்டுகிறது. பாவத்தினுடைய பரவலான விரிவாக்கத்திற்குப் பிறகு, புதிய படைப்பின் தொடக்கத்தில், ஒரு நீதிமான் இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டது பற்றிய எடுத்துக்காட்டைப் பெருவெள்ளப் பாரம்பரியங்கள் ஏற்கனவே இஸ்ராயேலுக்கு அளித்திருந்தன. நோவாவின் தலைமுறையினருக்கு நீரின் மூலமாக அளிக்கப்பட்ட உலகளாவிய மீட்பானது, மற்றொரு விதத்தில் செல்வாக்குடையதாய் உள்ள திருமுழுக்கினால் கிறிஸ்து கொண்டு வருகின்ற மீட்பின் உருவமாக உள்ளது (1 பேதுரு 3:20-21).

2. பழைய மற்றும் புதிய இஸ்ராயேல்: உடன்படிக்கையால் முத்திரையிடப்பட்ட (ஆதி 15:18) ஆபிரகாமின் தேர்வானது, இறைவனின் மக்களை அமைக்கின்ற உறுதியான செயல்முறையைத் தொடங்குகிறது. தானே தொடக்கமாக உள்ள இந்த இனத்தினின்று கிறிஸ்து வருவார். அவர் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவார் (கலா 3:16). விசுவாசியாகிய ஆபிரகாமின் உண்மையான ஆன்மீக சந்ததியினரான மக்களை அவர் தோற்றுவிப்பார் (மத் 3:9; யோவா 8:40; கலா 4:21-31; உரோ 2:28-29; 4:16; 9:6 தொ). விசுவாசத்தின் வழியாக இயேசு கிறிஸ்துவின் திருச்சபையில் நுழைவதன் மூலம், ஆபிரகாமில் அனைத்து இனங்களும் ஆசீர்வதிக்கப்படும் (கலா 3:8-9; ஆதி 12:3; சங் 47:10).

குலத்தந்தையருடைய ஊன் வழிச் சந்ததியாகிய இஸ்ராயேலுக்கும் திருச்சபைக்கும் இடையில் முறிவும் தொடர்ச்சியும் உள்ளன. அவ்வாறே புதிய ஏற்பாடானது இறைவனுடைய புதிய மக்களுக்குப் பழையதன் பெயர்களைச் சாற்றிக்கூறினாலும், மாற்றப்பட்ட அல்லது வேறுபட்ட பொருளில் கூறுகிறது. இவையிரண்டும் சபைகளாகும். ஆனால் இச்சொல்லானது, பழைய ஏற்பாட்டில் அறியப்படாத, கிறிஸ்துவினுடைய உடலின் மறைபொருளை இப்போது உணர்த்துகிறது (எபே 1:22-23). இதனுடைய இறை வழிபாடானது முற்றிலும் ஆன்மீகமானது (உரோ 12:1). திருச்சபையானது இஸ்ராயேலாக இருந்தாலும் இயலுணர்விலில்லாமல் (1 கொரி 10:18) ஆன்மீக உணர்வில் இறைவனது இஸ்ராயேலாக உள்ளது (கலா 6:16). இது வாங்கப்பட்ட மக்களாகும்; கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டது (அ.ப. 20:28; 1 பேதுரு 2:9-10; எபே 1:14); மேலும் புறவினத்தாரிடையினின்று தேர்ந்து கொள்ளப்பட்டதாகும் (அ.ப. 15:14). இது இனி மேலும் வேசித்தனமான துணைவியாக இல்லாமல் (ஓசே; எரே 2-3; எசே 16), எவ்விதக் குறைபாடுமற்ற மணமகளாக உள்ளாள் (எபே 5:27); இனியும் கட்டுத்திராட்சைக் கொடியாக இல்லாமல் (எரே 2:21), கனி தரக்கூடிய திராட்சைக்கொடியாகும் (யோவா 15:1-8). இதுவே "புனித எஞ்சியோர்" (எசா 4:2). ஒரே முறையில் ஒன்றாக அழைக்கப்பட்டுப் (எரே 23:3) பின்னர் சிதறப்படும் மந்தையைப் போலன்றி (செக் 13:7தொ), தன்னையே பலியாக்கி உயிர்த்தெழுந்த மேய்ப்பனின் கடைசி மந்தையாகும் (யோவா 10). இதுவே அடிமைத்தனத்தினின்று விடுபட்ட (கலா 4:21 தொ) விண்ணிலிருந்து வரும் எருசலேம்; இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் மக்களாகும் (எரே 31:31தொ; எசே 37:26 தொ). ஆயினும் புதிய உடன்படிக்கையானது, எல்லா இனங்களுக்கும் இடையீட்டாளராக உள்ள (எசா 42:6) கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்டுள்ளது (மத் 26:28; எபி 9:12 தொ; 10:16). திருச்சபையின் உடன்படிக்கையினுடைய பட்டய

மானது, இனியும் வாழ்வளிக்க இயலாத மோசேயின் சட்டமன்று (கலா 3:21). இதயத்தில் பொறிக்கப்பட்ட (எரே 31:33-34; எசே 36:27; 1 யோவா 2:27) ஆவியின் சட்டமாக உள்ளது (உரோ 8:2). தானியேலால் அறிவிக்கப்பட்டு, நாளாகம ஆசிரியர் விவரிக்கும் தாவீது சபையால் முன் குறிக்கப்பட்ட புனிதர்களின் அரசாகும். இது இனியும் ஒரு நாட்டின் பொருளாதார நலனுக்கு மட்டுமான ஒரு அமைப்பாக இல்லை (யோவா 18:36); ஆனால், எங்கும் காணக் கூடிய வாழ்வின் ஊற்றாக, காண முடியாததன் ஆன்மீக உந்துதலாக, மரணமானது அழிக்கப்பட்ட முடிவில்லா அரசாக உள்ளது (1 கொரி 15:25-26; திருவெளி 20:14). இறுதியாக, கிறிஸ்துவின் உயிர்த்த உடல் புதிய இறைத் திட்டத்தின் ஆலயமாக உள்ளது (யோவா 2:21-22). இது மனித கரங்களால் உருவாக்கப்பட்டதோ (மாற் 14:58), அழிக்கப்படக் கூடியதோ அன்று (மத் 16:18). திருச்சபையானது கிறிஸ்துவின் உடலாக இருப்பதால், இது புதிய ஆலயமாகவும் உள்ளது (2 கொரி 6:16; எபே 2:21; 1 பேதுரு 2:5). இது பழையதைவிட மேன்மையானது; யாவராலும் அணுகக்கூடியது; இது திருமுன்னின் மற்றும் வழிபாட்டின் இடமாக உள்ளது (மாற் 11:17).

IV. திருச்சபைக்கு இயேசு அடித்தளமிடுதல்: பழைய ஏற்பாடானது திருச்சபைக்காகத் தயாரித்து அதனை முன் குறித்துக் காட்டுகிறது. இயேசு திருச்சபையை வெளிப்படுத்தி, அதை நிறுவுகிறார்.

1. திருச்சபையின் பல்வேறு கட்டங்கள்: இயேசுவின் நோக்கம் விண்ணக அரசு பற்றிய அறிவிப்பில் வெளிப்படுகிறது. இப்பணித்திட்டத்தில், பல்வேறு உறுப்புகள் எப்போதும் வேறுபடுத்தப்பட முடியாத இறைவாக்கு மொழியில், அரசின் விண்ணக வடிவத்திற்குமுன் (மத் 13:43; 25:31-46) மெதுவான, மண்ணக வளர்ச்சி ஏற்படும் (13:31-32) என அவர் வெளிப்படுத்துகிறார். அறுவடைக்காக எதிர்நோக்கியிருக்கும் காலத்தில் தீயவனால் விதைக்கப்பட்ட பாவத்தின் களையும் நற்கதிருடன் சேர்ந்து வளர வேண்டும் (13:24-30.36-43). மண்ணுலகக் காலத்தினை இரண்டு நிலைகள் குறித்துக்காட்டும். முதலாவதானது இயேசுவின் இறப்போடு முடியும் வாழ்வாகும். தனது போதனையாலும், சாத்தானின் மீதான தனது செயலினாலும், மெசியா சமுதாயத்தை உருவாக்குவதனாலும் பிரசன்னமாயிருக்கும்படி, அவர் தம் அரசை உருவாக்குகிறார் (மத் 12:28; லூக் 17:21). இரண்டாவது நிலையானது, துல்லியமான பொருளில் திருச்சபையின் காலமாகும் (மத் 16:18). திருச்சபையின் காலத்தை மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் தொடங்கிவைக்கின்றன. முதலாவது, இயேசுவின்பலியானது, நிறைவான வழிபாட்டில் ஆர்வமாக உள்ள (காண்க. மலா 3:1-5) புதிய உடன்படிக்கையின் இச்சமுதாயத்தை அமைத்தல் (மத் 26:28). யோசியாவின் காலத்தில் எரேமியா வழிபாட்டின் இத்தூய முறையை எதிர்பார்த்தார் (2 அர 33); ஆனால், இறுதிக் கால எதிர்காலத்திற்கு இதனை மாற்றியமைத்தார் (எரே 31). கும்ரான் மற்றும் தமஸ்குவில் இருந்த குழுக்கள், தூய வழிபாட்டைத் தாங்கள் குறித்துக் காட்டுவதாக நம்பின. இரண்டாவதாக இருப்பது அவரது உயிர்ப்பு. அதற்குப் பின்னர் மீண்டும் ஒரு முறை தனது சிதறிய மந்தையை அவர் கலிலேயாவில் ஒன்றாகக் கூட்டுவார் (மாற் 14:27-28). இறுதியாக, யூத மக்களின் இடத்தைத் திருச்சபை ஏற்றுக் கொள்வதன் அடையாளமாகவும், இறுதித் தீர்ப்பிற்கான முற்செயலாகவும் உள்ள எருசலேமின் அழிவாகும் (மத் 23:37 தொ; லூக் 21:24).

2. சீடர்களுடைய அழைப்பும் பயிற்சியும்: தனது மனித வாழ்வின்போது இயேசு, சீடர்களைக்கூட்டி அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார். அவர்களுக்கு அரசின் மறைபொருளை வெளிப்படுத்துகிறார் (மத் 13:10-17 இணை). அவர்களே, இறைவாக்கினர்களால் அறிவிக்கப்பட்ட, நல்ல மேய்ப்பருடைய (யோவா 10) ''சிறு மந்தை'' (லூக் 13:32); மற்றும் புனிதர்களுடைய அரசு (தானி 7:18-22). இயேசு இக்குழு தனது மரணத்திற்குப் பிறகு தொடர்ந்து இருந்து பெருகு

வதை எதிர்நோக்கியவராய், அதன் வருங் கால நிலையினுடைய பரந்த வரைபடத்தை அளிக்கிறார். தன்னைப் பின்பற்றுபவர்களுடைய துன்பங்களைப்பற்றிய தனது இறைவாக்குகளையும் (மத் 10:17-25; யோவா 15:18...), நீதிமான்களையும் பாவிகளையும் இணைக்கும் தனது உவமைகளையும் (மத் 22:11-12; 13:24-30.36-43.47-50) தனது மண்ணுலக வாழ்வின் காலத்தைக் கடந்து நோக்குமாறு அவர் அளிக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, பன்னிருவருக்கான அவரது அறிவுரைகள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தைக் குறிப்பிடுகின்றன.

அ) பன்னிருவர்:- புதிய இஸ்ராயேலின் கருவாகவும் தலைவர்களாகவும் இருக்கக் கூடியவர்களாக, தனது சீடர்களினின்று பன்னிரு நெருக்கமானவர்களை இயேசு தேர்ந்தெடுக்கிறார் (மாற் 3:13-19 இணை; மத் 19:28 இணை). அவர்களுக்குத் திருமுழுக்குச் சடங்கு (யோவா 4:2), போதித்தல், அசுத்த ஆவிகளுடனும் நோய்களுடனும் போராடுதல் (மாற் 6:7-13) ஆகியவை அடங்கிய பயிற்சி அளிக்கிறார். முதலிடத்தைக் கொள்வதற்குப் பதிலாகப் பணிவிடை புரியத் தயாராதல் (மாற் (9:35), காணாமல் போன செம்மறிக்கு முக்கியத்துவம் தருதல் (மத் 10:6), தவிர்க்கப்படமுடியாத துன்பங்களுக்குப் பயப்படாமை (10:17...), பொதுச் செபத்திற்காக அவரின் பெயரால் ஒன்று கூடுதல் (18:19-20), ஒருவரையொருவர் மன்னித்தல் (18:21-35) மற்றும் எவ்வித இணங்கச்செய்யும் முயற்சியில்லாமல் சபையினின்று வெளிப்படையான பாவிகளை விலக்காமை (18:15-18) ஆகியவற்றை அவர் அவர்களுக்குக் கற்பிக்கிறார். காலத்தின் இறுதி வரையில், தனது வாழ்வின் ஒழுக்க முறையைக் காண, திருச்சபையானது பன்னிருவரின் இந்த அனுபவத்தையே ஆய்வு செய்ய வேண்டும்.

ஆ) பன்னிருவரின் உலகளாவிய பணி: அப்போஸ்தலர்களின் தொடக்கப் பணிக்காலமானது இஸ்ராயேலின் எல்லைப்பகுதிகளை மீறவில்லை (மத் 10:5-6). இயேசுவின் உயிர்ப்பிற்குப் பின்னரே, எல்லா நாடுகளுக்கும் போதித்து, திருமுழுக்கு அளிக்குமாறு அவர்கள் கட்டளையிடப்படுவர் (மத் 25:19). ஆனால், தனது மரணத்திற்கு முன்னரே, புறவினத்தாரும் அரசிற்குள் நுழைய முடியுமென இயேசு அறிவிக்கிறார். கிறிஸ்துவால் ஒன்றுசேர்க்கப்பட மறுத்ததினால் (மத் 23:37), முதலுரிமை கொண்டிருந்த அரசின் மக்களாகிய (மத் 8:12) யூதர்கள், தங்களுடைய இவ்வுரிமை எடுக்கப்பட்டு விடுவதைக் காண்பர் (மத் 21:43). தற்காலிகமாக நீக்கப்பட்ட யூதர்களுடைய இடத்தில் (மத் 23:39; உரோ 11:11-32), இயேசுவில் விசுவசித்து மனந்திரும்பிய பாவிகளுடைய யூத உட்கூருவுடன் (மத் 21:3 தொ), சம அளவில் (மத்.20:1-16) புறவினத்தார் நுழைவர் (மத் 8:11-12; லூக் 14:21-24; யோவா 10:16).

இவ்வாறு, இவ்வுலகைச் சாராத முதல் உண்மையான அரசாகிய திருச்சபையானது (யோவா 18:36), பழைய ஏற்பாட்டின் மிகத் துணிச்சலான உலகளாவிய இறைவாக்குகளை நிறைவேற்றிக் கடந்து செல்லும் (உ-ம். யோனா; எசா 19:16-25; 49:1-6). இஸ்ராயேலின் மண்ணுலக வெற்றியுடன் எவ்வழியிலும் இயேசு திருச்சபையை இணைக்கவில்லை. அதில் அவருக்கு அக்கறையில்லை. மக்கள் திரளுக்கும் (யோவா 6:15-66) பன்னிருவருக்கும்கூட (அ.ப. 1:6) இது ஒரு கடினமான படிப்பினையாகும். பெந்தகோஸ்தேவிற்குப் பின்னரே அவர்கள் இதனை நன்கு அறிந்து கொள்வர். ஆயினும் தங்களது நாட்டிற்கு எதிரான எதிர்செயலாகப் பன்னிருவரும் தங்களது உலகளாவிய பணியை அமைக்க முயல மாட்டார்கள். அரச அதிகாரிகளிடம் பற்றுறுதி காட்ட அவர்கள் போதிப்பர் (உரோ 13:1...; 1 பேதுரு 1:13-14). ''சீசருடையதைச் சீசருக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்'' (மத் 22:21) என்னும் கிறிஸ்துவின் சொற்களில், திருச்சபை - நாடு என்பவற்றின் உறவிற்கான விதிமுறையை அவர்கள் கண்டுணர்வர். நாட்டின் நேரிய தேவைகளுக்காகத் தேவைப்படும் வரிகளும் மற்ற அனைத்தும் பேரரசருக்கு உரியவையாகும் (உரோ 13:6-7); மற்ற

அனைத்தும், அதாவது நமது முழுமையும், கடவுளுக்குரியது. ஏனெனில், திருச்சபையால் போதிக்கப்பட்ட இறைவனின் மாட்சிமை மிக்க உரிமையே சீசரின் உரிமையைப் படைத்து, அதைக்கடந்து சென்று, அதைத் தீர்ப்பிடுகிறது (உரோ 13:1).

இ) பன்னிருவரின் அதிகாரம்: தலைவர்களுக்கு, அதிகாரம் தேவை. இயேசு பன்னிருவருக்கும் அதனை வாக்களிக்கிறார். திருச்சபை நிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துகிற பாறை பேதுருவே. விண்ணக நகரின் கதவுகளைத் திறந்து மூடுபவரும், ஒழுங்குச் செயல்முறை மற்றும் போதிக்கும் அதிகாரம் (மத் 16:18 தொ; காண்க; லூக் 22:32; யோவா 21) ஆகியவற்றைச் செயல்படுத்துபவருமாகிய பேதுரு மேற்பார்வையாளரின் பொறுப்பைக் கொண்டிருக்கிறார்.ஆண்டவரின் இரவுணவை அப்போஸ்தலர்கள் மீண்டும் நிறைவேற்ற வேண்டும் (லூக் 22:19). இதற்கு மேல், மனிதரின் மனசாட்சியின்மீது தீர்ப்பிடக்கூடிய ''கட்டுதலும் அவிழ்த்தலுமாகிய'' அதே அதிகாரத்தை அவர்கள் கொண்டுள்ளனர் (மத் 18:18; யோவா 20:22-23). இயேசு கிறிஸ்துவைப் படைத்தவராகவும் ஆண்டவராகவும் கொண்டுள்ள திருச்சபையின் இயல்பை இப்பகுதிகள் ஏற்கனவே வெளிப்படுத்துகின்றன. இவ்வுலகில் இறைவனின் அரசைத் தொடங்கி, ஒழுங்குபடுத்தப்பட்ட, காணக்கூடிய சமூகமாக அது இருக்கும். அது பாறையின்மீது கட்டப்பட்டுள்ளது. அப்போஸ்தலிக்க அதிகாரத்தைச் செயல்படுத்துவதன் மூலமும், நற்கருணையின் மூலமும் அது கிறிஸ்துவின் பிரசன்னத்தை நீடித்திருக்கச் செய்கின்றது. அது நரகத்தை வென்று, அதனுடைய பலியுயிர்களைக் கைப்பற்றும். இவ்வாறு திருச்சபையானது வாழ்விற்கும் இரக்கத்திற்கும் ஊற்றாக உள்ளது.

இயேசுவின் எண்ணத்தில் திருச்சபையின் பணியானது உலகுள்ள வரை நீடித்திருக்கும். இப்பணிக்காக அளிக்கப்பட்ட காணக்கூடிய அமைப்புக்கும் மற்றும் அதிகாரத்திற்கும் இது பொருந்தும். அப்போஸ்தலிக்க அலுவலின் பெரும்பகுதியானது பிறருக்கு அளிக்கப்பட முடியாது என்பது உண்மையே. இயேசுவின் வாழ்வுக் காலத்திலும், அவரது உயிர்ப்பிற்குப் பின்னரும், அவரது சாட்சிகள் என்ற அளவில் அப்போஸ்தலருடைய இடமானது வரலாற்றில் தனித்துவமிக்கதாகும். ஆனால், உயிர்ப்பிற்குப் பின்னர் போதித்து, திருமுழுக்கு அளித்து, வழிநடத்துமாறு பதினொருவருக்கும் கட்டளையிடும்போதும், உலக முடிவு வரை அவர்களோடிருப்பதாக வாக்களிக்கும்போதும் (மத் 28:20), அப்போஸ்தலர்களின் மரணத்திற்குப் பிற்பட்ட காலம் உட்பட அனைத்து வருங்கால சந்ததிகள் முழுவதிலும், இந்த அதிகாரத்தின் நிலையான தன்மையைக் காணுமாறு அவர் அவர்களை அனுமதிக்கிறார். இவ்வாறாக, ஆதித்திருச்சபையானது இவ்வதிகாரத்தைப் புரிந்து கொள்கிறது. கைகளை விரிப்பதன் மூலம் இப்பணிக்கென அப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அபிடேகம் செய்யப்பட்ட தலைவர்கள் மூலமாக அப்போஸ்தலிக்க அதிகாரம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் (2 திமோ 1:6). இந்நாளிலும், இயேசுவின் இவ்வார்த்தைகளைத் தவிர்த்து வேறு ஆதாரத்தைத் திருச்சபையின் ஆயர் அதிகாரம் கொண்டிருக்கவில்லை.

V. திருச்சபையின் பிறப்பும் வாழ்வும்:

1. பாஸ்காவும் பெந்தகோஸ்தேவும்: கிறிஸ்து இவ்வுலகினின்று தந்தையிடம் கடந்து சென்ற அவரது பாஸ்காவில் திருச்சபை பிறந்தது (யோவா 13:1). கிறிஸ்து கல்லறையினின்று வெளிவந்து, வாழ்வளிக்கும் ஆவியாக உருவாவதுடன் (1 கொரி 15:45), ஒரு புதிய மனித இனம் (எபே 2:15; கலா 6:15), புதிய படைப்பு எழுகிறது. ஆதாம் உறங்கும்போது அவரது விலாவினின்று பழைய ஏவாள் வந்தது போல, கிறிஸ்துவினுடைய மரண உறக்கத்தின்போது அவரது விலாவினின்று புதிய ஏவாளாகிய திருச்சபை பிறந்ததெனத் திருச்சபைத் தந்தையர் அடிக்கடி கூறியுள்ளனர். இரத்தமும் நீரும் முதலில் கிறிஸ்துவின் பலியையும், திருச்சபையை இயங்கச்செய்கின்ற ஆவியையும் அடையாளப்படுத்தியபின்,

திருச்சபைக்கு உயிரளிக்கும் திருமுழுக்கையும் மற்றும் நற்கருணை ஆகியவற்றின் அருட்சாதனங்களையும் குறிப்பிடுவது யோவானுக்கு உண்மையாயின், ஈட்டியில் குத்தப்பட்டதன் விளைவுகளைப் பற்றிய (யோவா 19:34-35) யோவானின் சான்றானது இக் கருத்தைப் பரிந்துரைக்கிறது.

ஆவியைப் பரவலாகப் பொழிந்து (அ.ப. 2:33), உயிர்த்த கிறிஸ்துவின் (எழுப்பப் பட்ட, எபே 5:14) உடலாக இருக்கும்போது மட்டுமே திருச்சபைச் சமூகம் வாழ்கிறது. இறைவனுடைய புது மக்களின் தலைவர்களாக (எசே 37:9) அவர் இறுதியாக மீண்டும் ஒன்று கூட்டியுள்ள சீடர்கள் மீது (மாற் 14:27), புத்துயிரூட்டும் ஆவியை இயேசு ''ஊதும்'' (யோவா 20:22; ஆதி 1:2) உயிர்த்த நாளில் இந்த ஆவியைப் பொழிதலானது தொடங்குகிறது (யோவா 20:22). ஆனால், அருங்கொடைகளின் பெரும்பொழிவான பெந்தகோஸ்தேவானது (அ.ப. 2:4), பன்னிருவருடைய சாட்சியத்தைக் குறித்தும் (1:8), உலகிற்குப் பரந்த அளவில் திருச்சபையின் வெளிப்பாடாகவும் நிகழ்கிறது. இந்நாளானது அதற்கு அதிகாரபூர்வ பிறந்த நாளினைப் போன்றது. தூய ஆவியால் கருத்தரிக்கப்பட்டு (லூக் 1:35), மெசியா பணியின் தொடக்கத்தில் ஆவியால் அபிடேகம் செய்யப்பட்ட இயேசுவின் அனுபவத்தையும் (அ.ப. 10:38; மத் 3:16), கைகளை விரிப்பதன் மூலம் ஆவியின் கொடையையும், திருமுழுக்கில் அவரது பணியின் முத்திரையையும் பெறும் ஒவ்வொரு கிறிஸ்தவனின் அனுபவத்தையும் (அ.ப. 8:17; 2:38), பெந்தகோஸ்தேவானது ஓரளவு ஒத்துள்ளது.

2. திருச்சபை பரவுதல்: பெந்தகோஸ்தேவிற்குப் பின்னர்த் திருச்சபையானது வேகமாக வளர்கிறது. அதில் சேர்வதானது முதலில், உயிர்த்த ஆண்டவரும் கிறிஸ்துவுமான (அ.ப. 2:36), தலைவரும் மீட்பருமான (5:31) இயேசுவில் விசுவாசத்தைத் தோற்றுவிக்கிற (2:44; 4:32) அப்போஸ்தலர்களின் வார்த்தையை ஏற்றுக் கொள்வதில் அடங்கியுள்ளது (2:41). பின்னர், நீரால் திருமுழுக்குப் பெறுவதன் மூலமும் (2:41), ஆவியையும் அவரது கொடைகளையும் பொழிகின்ற கைகளை விரித்தலினாலும் (8:16-17; 19:6) அது நிறைவுபெறுகிறது. லூக்காவின் கூற்றுப்படி (அ.ப. 2:42), உயிருள்ள உறுப்பினர் தகுதிக்கு நான்கு படிவ பிரமாணிக்கம் தேவையாக உள்ளது. மீட்பின் செய்தியை அறிவித்ததனால் தோற்றுவிக்கப்பட்ட முதல் விசுவாசத்தை ஆழப்படுத்துகின்ற அப்போஸ்தலர்களுடைய போதனைக்குப் பற்றுறுதி, சகோதர ஒன்றிப்பு, அப்பத்தைப் பிட்டுப் பங்குகொள்ளுதல், மற்றும் பொதுமன்றாட்டு ஆகியவற்றின் மீதான பற்றுறுதி என்பனவே இவை. குறிப்பாக அப்பத்தைப் பிட்டுப் பங்குகொள்ளுதலில், அதாவது நற்கருணை உணவின் மூலம் (1 கொரி 11:20.24), ஒரே மனமானது (அ.ப. 2:46) படைக்கப்படுகிறது. இதில் வெகு அண்மையில் பன்னிருவருடன் உண்டு குடித்து உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னமானது உணரப்படுகிறது (10:41). இங்கு அவரது பலியானது பறைசாற்றப்பட்டு, அவரது வருகைக்கான நம்பிக்கையானது உயிருள்ளதாக அமைந்திருக்கிறது (1 கொரி 11:26).

எருசலேமில் ஆவியின் ஒன்றிப்பானது, கும்ரானில் கடமையாக இருந்ததை நினைவுறுத்தும் விதமாக, இவ்வுலகப் பொருட்களை விரும்பிப் பொதுமைப்படுத்தும் உறவிற்குத் தூண்டுமளவிற்குச் செல்கிறது (அ.ப. 4:32-35; எபி 13:16). ஆனால், லூக்காவே இப்படத்தில் காணப்பட்ட சில கறைகளை எடுத்துக்கூறுகிறார் (அ.ப. 5:2; 6:1). அப்போஸ்தலர்களுடைய அதிகாரத்தின் கீழ் விசுவாசிகள் குழுவாக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவிடமிருந்துபெற்ற முதன்மைப் பதவியை அவர்களுடன் சேர்ந்து செயல்படுத்துவதன்மூலம், பேதுரு தலைமை தாங்குகிறார் (1:13-14). மூப்பர்களின் சபையானது அப்போஸ்தலர்களின் அதிகாரத்தில் கீழ்ப்படியான பங்கைக் கொண்டுள்ளது (15:2); அவர்கள் புறப்பட்டுச்சென்ற பின்னர், உள்நாட்டுத் திருச்சபையின் தலைவராக உருவாகின்ற யாக்கோபின் அதிகாரத்தில் அது பங்கு கொள்கிறது (21:18). ஸ்தேவானையும்

பிலிப்புவையும் உள்ளடக்கிய, ஆவியால் நிரப்பப்பட்ட எழுவர், கிரேக்க மொழி பேசிய கிறிஸ்தவர்களுடைய பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகின்றனர் (6:1-6).

ஆவியால் நிரப்பப்பட்ட இம்மனிதர்களுடைய, குறிப்பாக ஸ்தேவானுடைய பயமற்ற தன்மையானது அவர்கள் சிதறிப்போவதற்குக் காரணமாக உள்ளது (அ.ப. 8:1.4). இச்சிதறிப்போதலானது யூதேயாவிலிருந்து (8:1; 9:31-43) அந்தியோக்கியாவுக்கும் (11:19-25), அந்தியோக்கியாவிலிருந்து ''உலகின் எல்லைகள் வரைக்கும்'' (அ.ப. 1:8; உரோ 10:18; கொலோ 1:23) அல்லது உரோமை வரைக்குமாகிலும் (அ.ப. 28:16-31) திருச்சபை பரவுவதற்குக் காரணமாகிறது. யூதரிடமிருந்து பவுல் சந்திக்கின்ற எதிர்ப்புகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தறிக்கப்பட்ட அடிமரத்துடன், புறவினக் காட்டு இனத்தை ஒட்ட வைக்க வழிவகுக்கின்றன (உரோ 11:11-18). ஆனால் பவுலோ, கொர்னேலியுவிற்குத் திருமுழுக்கு அளித்தபோது யூதர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சில அதிகப்படியான சலுகைகளால் முரண்படுத்தப்படாத ஒரு தீர்மானமான செயலைச் செய்த பேதுருவோ (கலா 2:11-14), யூதக் கிறிஸ்தவர்களால் இன்னமும் கடைபிடிக்கப்படுகின்ற யூதப் பழக்கங்களுக்கு உட்படுமாறு, திருச்சபையில் நுழையும் புறவினத்தாரை அனுமதிக்கவில்லை (அ.ப. 10:14; 15:29).

3. **திருச்சபையின் உண்மை வடிவம்:** இவ்வாறாக யூத இனத்தோடு ஒப்பிடுகையில் திருச்சபையின் உண்மை வடிவம் மெய்ப்பிக்கப்பட்டு அதனுடைய கத்தோலிக்கத்தன்மை (பொதுத்தன்மை) எய்தப்படுகிறது; கிறிஸ்துவிடமிருந்து பெறப்பட்ட மறைபரப்புக் கட்டளையானது செயலாக்கப்படுகிறது. தாங்கள் ஒரே சமுதாயத்தின் அணுக்கள் என்பதை அனைத்துச் சமுதாயங்களும் அறிந்திருப்பதால், அதனுடைய ஒற்றுமையானது இடங்கள் மற்றும் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்களுக்கான மூல நிலையிலிருந்து புறவினக் கிறிஸ்தவ கூட்டங்கள் வரையிலான இந்த விவிலிய உலகின் விரிவாக்கம், எருசலேம் கிறிஸ்தவர்களுக்காகப் பவுல் வழியாக மனமாறியவர்கள் சேகரித்த நன்கொடைகள் (2 கொரி 8:7-24), எந்த ஒழுங்குமுறைக் கூறையும் தீர்மானிக்குமாறு திருச்சபையிடம் கோரும் பழக்கம் (1 கொரி 11:16; 14:33), ஒருவருக்கொருவர் மீதான ஆர்வம் மற்றும் அக்கறை (அ.ப. 15:12; 21:20; 1 தெச 1:7தொ; 2:14; 2 தெச 1:4), மற்றும் வாழ்த்துக்கள் (1 கொரி 16:19-20; உரோ 16:6; பிலி 3:2-3) முதலிய இவையனைத்தும் திருச்சபையின் உண்மையான விழிப்புணர்வை வருணிக்கின்ற அடையாளங்களாகும்.

VI. **திருச்சபையின் மீதான கிறிஸ்தவ சிந்தனை:**

1. கிறிஸ்துவிலான மீட்பினுடைய சமுதாயக்கூறுகள் அனைத்தும் திருச்சபையின் ஆர்வத்திற்குமுரியவை. ஆயினும், பவுல் மட்டுமே தனக்காக, தனது பெயரில் இந்த மறைபொருளை ஆராயும் இறை ஏவுதலுக்குட்பட்ட ஒரே ஆசிரியராவார். தனது தமஸ்குக் காட்சியில், கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலான மறைபொருளை, ஒப்புமையின் வெளிப்பாட்டினை அங்கே, அப்போதே கண்டார் (அ.ப. 9:4-5). அனுபவத்தினால் கிளர்ந்தெழுந்த சிந்தனையானது இந்த முதல் உள்ளுணர்வை மேலும் வளரச்செய்கிறது. உண்மையில் திருச்சபையைக் கட்டியெழுப்புகையில், அதனுடைய எல்லாப் பரிணாமங்களையும் பவுல் கண்டுபிடிக்கிறார். முதலாவதாக, கிறிஸ்துவுடனும் ஒருவரோடொருவருடனும் உள்ள உடன்பாட்டைத் திருமுழுக்குச் சடங்கின்மூலம் மாற்றுவதும், ஆவியானவர் தனது அருங்கொடைகளால் கிட்டத்தட்ட அனுபவபூர்வமான முறையில் தெளிவானதாக மாற்றுவதுமான உயிர்நாடியான ஒன்றிப்பைப்பற்றி அவர் சிந்திக்கிறார். தங்களது கட்டியெழுப்புதல் மற்றும் ஒன்றுபடுத்தும் பங்கினின்று கொடைகளைத் திசை திருப்பும் கொரிந்தியருக்கும், இந்த அடிப்படையான கருத்தை அவர் நினைவுபடுத்துகின்றார். ''நாம் அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாக ஞானஸ்நானம்

பெற்றோம்'' (1 கொரி 12:13). எனவே, திருச்சபையை உருவாக்குகின்ற திருமுழுக்குப் பெற்றவர்கள், கிறிஸ்துவினுடைய இந்த ஒரே உடலின் உறுப்பினர்களாக உள்ளனர். நற்கருணை அப்பமானது உயிருள்ள தொடர்பின் பிணைப்பாக உள்ளது (1 கொரி 10:17). கிறிஸ்து பிரிக்கப்படக்கூடியவர் போல, நான் கேபாவை, அப்பல்லோவை, அல்லது பவுலைப் பின்பற்றுவேன் என்று கூறுவதை, திருமுழுக்கு மற்றும் விசுவாசத்தினுடைய ஒன்றிப்பானது எவருக்கும் இயலாததாக்குகிறது (1 கொரி 1:12-13; 3:4). இந்த ஒன்றிப்பை வெளிப்படுத்தி நிலைப்படுத்துவதற்கென, எருசலேமிலுள்ள புனிதருக்காகப் பவுல் ஒரு தண்டலுக்கு ஏற்பாடு செய்கிறார் (1 கொரி 16:1-4; 2 கொரி 8-9; உரோ 15:26-27).

சிறிதுகாலத்திற்குப் பின்னர், கொலோசையில் அவர் எதிர்கொள்ள வேண்டிய சிறைவாசமும் அண்டம் பற்றிய ஊகங்களும், உடனடியான முக்கிய பிரச்சனைகளினின்று பவுலின் கவனத்தை ஈர்க்கின்றன. அவரது எல்லைகளை விரிவுபடுத்துவதில் இரண்டுமே பங்கு பெறுகின்றன. புறவினத்தாருடைய அப்போஸ்தலரின் நோக்கில் அவர் காண்கின்ற மொத்த இறைத் திட்டமானது (கலா 2:8-9; உரோ 15:20), எல்லா மகிமையோடும் மிளிர்கிறது (எபே 1). இனிமேல் ''எக்லேசியா'' என்பது முன்பு இருந்தது போன்று இங்கோ அங்கோ உள்ள தலச்சபையன்று (ஒருவேளை 1 கொரி 12:28; 15:9; கலா 1:13 ஆகிய பகுதிகள் தவிர). அது அதனுடைய அகலத்திலும் உலகளாவிய நிலையிலும், கிறிஸ்துவின் உடலாகும்; யூதருக்கும் புறவினத்தாருக்குமிடையே ஒப்புரவை ஏற்படுத்தி நிறைவான ஒரே மனிதனை உருவாக்கும் இடமாகும் (கொலோ 1:18-24; எபே 1:23; 5:23 தொ; 4:13). இந்த அடிப்படைக் கருத்தின் மீது திருச்சபையின் தலையாகிய கிறிஸ்துவின் உருவத்தைப்பவுல் மேலும் அமைக்கிறார். கிறிஸ்து தனது திருச்சபையினின்று வேறுபட்டவராக இருந்தாலும், அது அவர் தனது தலை என்ற அளவில் அவருடன் ஒன்றிணைந்துள்ளது (எபே 1:22-23; கொலோ 1:18). இதில் திருச்சபையானது, தூதர்களின் ஆற்றல் நிலையில் பங்கேற்கிறது (கொலோ 2:10). எல்லாவற்றிற்கும் மேலாகத் திருச்சபையானது தனது வாழ்வு, இணைப்புத்திறம், மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் ஊற்று என்ற அளவில் கிறிஸ்துவுடன் ஒன்றுபட்டுள்ளது (கொலோ 2:19; எபே 4:15-16). முழுமையில்லாத உடலானது தனது தலையாக உள்ள மகிமைமிக்க கிறிஸ்துவை நோக்கி வளர்கிறது (4:15). கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும், அப்போஸ்தலர்களையும் இறைவாக்கினர்களையும் அடித்தளமாகவும் கொண்டு கட்டப்பட்ட கோயிலின் உருவம் அடிக்கடி (எபே 2:20-21), உடல் என்ற கருத்துக்குள் இடை புகுகிறது. கட்டடமானது வளர்ந்து (எபே 2:21) உடலும் கட்டப்படுகிறது (4:12.16). எபே 5:22-32-இல் உடல் மற்றும் தலை என்ற கருத்துக்கள் மணமகள் பற்றிய விவிலிய உருவத்துடன் ஒன்றுபடுகின்றன. திருச்சபையின் தலைவராகிய இயேசுவே திருச்சபையை அன்புக்குரியவளாகக் காதலித்த மீட்பருமாவார் (2 கொரி 11:2). திருமுழுக்கு வழியாகப் புனிதப்படுத்துதல் மற்றும் தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றை அதற்கு அளிக்கவும், தனக்கு முன்னர் அதை ஒளி மிக்கதாகக் கொண்டு வரவும், அதனைத் தனது மணமகளாக ஏற்கவும் அவர் தன்னையே பலியாக்குகிறார். இறுதியாகப் பவுலின் கூற்றுப்படி திருச்சபையை விவரிக்கும் மற்றொரு கருத்தும், முன் குறிப்பிட்ட கருத்துகளோடு இணைகிறது. அவர் இறைவனாகவும் (கொலோ 2:9), அவரது உடலுக்குள் கொணரப்பட்ட மனிதரின் மீட்பராகவும் (எபே), அண்டச்சக்திகளால் ஆளப்படும் முழு உலகின் தலைமையாகவும் (கொலோ 1:19-20) உள்ள காரணத்தினால், கிறிஸ்துவில் தங்கியுள்ள இம்முழுமையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியாகத் திருச்சபை உள்ளது. அதுவே முழுமை என்றும் அழைக்கப்படலாம். ஏனெனில் கிறிஸ்து அதனை நிரப்புகிறார்; மற்றும் தனது முன்னேற்ற வளர்ச்சியால் அவரது உடலை முழுமையாக்குவதன் மூலம், திருச்சபை அவரை நிரப்புகிறது (எபே 4:13). இவை அனைத்தினுடைய தொடக்கமும்

முடிவுமாக இருப்பது இறைவனுடைய முழுமையே (3:19).

2. இச்சொல்லை உபயோகிக்காமலே யோவான், திருச்சபையின் ஆழ்ந்த இறையியலை நயமாகப் புகுத்துகிறார். மணமகள் (யோவா 3:29), மந்தை (10:1-16), மற்றும் திராட்சைக்கொடி (15:1-17) போன்ற விவிலிய உருவகங்கள் நேரடியாக விவரிக்கின்ற இறைவனுடைய புதிய மக்களை, புதிய யாத்திரை பற்றிய அவரது சுட்டிக்காட்டல்கள் மனதிற்குக் கொண்டு வருகின்றன. உலகினின்று தனியே பிரித்தமைக்கப்பட்ட சீடர்களின் சிறு குழுவானது (15:19; 1:39.42-43) புதிய மக்களைக் கருவிலேயே உருவாக்குகிறது. இச்சீடர்களின் குழு திருச்சபையாக மாறுவது, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்பினால் விளைகிறது. யூதர், சமாரியர் மற்றும் கிரேக்கர் ஆகியோரிடையே எவ்வித வேறுபாடுமின்றி ஒரே மந்தையாக்க (10:16; 12:20.32; 4:21 தொ. 30-42), ''சிதறியவர்களை ஒன்று சேர்க்க,'' கிறிஸ்து இறந்தார் (11:52).

தன்னைப் பின்செல்பவர்களுக்கு (16:7; 7:39), குறிப்பாகப் பாவங்களை மன்னிக்கும் பொறுப்புடைய தனது பிரதிநிதிகளுக்கு (20:21-22) ஆவியை அளிப்பதற்கென அவர் தனது தந்தையிடம் செல்கிறார். கிறிஸ்து விதைத்ததன் விளைச்சலைத் திருச்சபையானது அறுவடை செய்து (4:38) அதன்மூலம் கிறிஸ்துவின் பணியைப் பரவச் செய்யும் (20:21). மனுவுருவான வார்த்தையைத் தொட்டவரும் (1 யோவா 1:1), பிலிப்பினால் மனம் மாறியவர்களுக்கு ஆவியை அளித்தவருமான (அ.ப. 14-17; இதை லூக் 9:45 உடன் ஒப்பிடுக) யோவான் இதற்குச் சான்றுபகரும் நிலையில் உள்ளார். ஆனால், உள்ளார்ந்த மனநிலை மற்றும் விருப்பத்தேர்வின் மூலமாகத் திருச்சபையின் உள்வாழ்விற்கு யோவான் ஈர்க்கப்பட்டுள்ளார். பேதுருவின் கோலின் கீழ், திருச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்க்கப்படுகின்றனர் (21). திராட்சைக் கொடியாகிய கிறிஸ்துவுடனான ஒன்றிப்பினின்று வாழ்வின் ஊற்றுக்களைப் பெறுகின்றனர். இந்த இணைப்பானது திருமுழுக்கிலும் (3:5) நற்கருணையிலும் (6) உண்மையாக்கப்படுகிறது. ஆவியின் இயக்கத்திற்குக் கீழ், கிறிஸ்துவின் வார்த்தைகளை அவர்கள் ஒன்றாகத் தியானிக்கின்றனர் (14:26); ஒருவர்க்கொருவர் காட்டும் அன்பின் மூலமாக (13:33-35), கடவுள் அவர்களிடம் எதிர்பார்க்கின்ற கனியை அவர்கள் அளிக்கின்றனர் (15:12.16-17). இவை அனைத்தின் மூலமாகத் திருச்சபையானது, அனைத்திலும் பிரசன்னமாகியுள்ள இறை ஆட்களின் ஒன்றிப்பைத் தனது ஆதாரமாகவும் மாதிரியாகவும் கொண்டுள்ள தனது ஒன்றிப்பைக் காட்டுகிறது (17). அடக்குமுறைகளுக்குப் பழக்கப்பட்ட நிலையில் (15:18-16:4), உலகம் மற்றும் அதனுடைய அரசன் மீதான வெற்றியானது ஏற்கனவே நிகழ்ந்துவிட்டதன் காரணமாக, வெற்றிகரமான நம்பிக்கையுடன் திருச்சபையானது அடக்குமுறையை எதிர்கொள்கிறது (16:33).

கடைசிக் கருத்தானது திருவெளிப்பாட்டில் மையமாக உள்ளது. அங்குத் திருச்சபையானது அடுத்தடுத்துப் புனித நகராகவும் (திருவெளி 11:1-3), நாட்கள் எண்ணப்பட்டாலும் புனிதர்களைக் கொடுமைப்படுத்தும் மிருகத்தை (புறவினப் பேரரசு) உபயோகிக்கின்ற பறவை நாகத்துடன் (சாத்தான்) போராடும் பெண் (திருவெளி - 12) என்றும், பின்னர்ப் பொதுவிடத்தில் மிருகமானது இரண்டு இறைவாக்கினர் - சாட்சிகளைக் கொன்றாலும், உண்மையான விசுவாசிகளின் ஒரு பகுதியினர் பாதுகாக்கப்படுகின்ற ஆலயம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் (11:1-13) என்றும் விவரிக்கப்படுகிறது. திருச்சபையினுடைய மண்ணுலக வெற்றியின் காலமாக இராத, 20-ஆம் அதிகாரத்தில் வரும் ஆயிரம் ஆண்டானது, உள்ளார்ந்த, ஆன்மீகப் புதுப்பித்தலை (20:6 மற்றும் 5:10-ஐ ஒப்பிடுக. மற்றும் எசே 37:10=திருவெளி 11:11) அல்லது பொதுத்தீர்ப்பிற்கு முன்னரே மறைசாட்சிகளின் மகிழ்ச்சியை விவரிக்கவில்லையா? எல்லா நிகழ்ச்சிகளிலும், எல்லாவற்றிற்கும் மேலாகப் புதிய எருசலேமாகிய விண்ணகத்தின்மீது திருச்சபையானது நாட்டம் கொண்டுள்ளது (3:13; 21:1-8; 21:9-22:5).

''ஆவியானவரும் மணமகளும் 'வாரும்' என்கின்றனர்'' (22:17).

விண்ணக வாழ்வில், இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்ட அனைத்தும் நிறை வேற்றப்படும்போது பாவமும் (எசா 35:8; திருவெளி 21:27), துன்பம் மற்றும் மரணமும் (திருவெளி 21:4; எசா 25:8; 65:19) முழுமை யாக அகற்றப்படும். பின்னர், பெந்தகோஸ் தேவை எதிர்மறையாக ஏற்கனவே கொண் டுள்ள பாபேலின் சிதறிய நிலையானது இறுதிப் பதிலைப்பெறும் (எசா 66:18; திரு வெளி 7:9-10). பின்னர்தான் தருக்கு மிக்க பேரரசுகள், ''சாத்தானின் செபக்கூடங்கள்'' ஆகியவை மறைந்துவிடும் (திருவெளி 2:9; 3:9). ''மனிதருடனான இறைவனின் உறை விடமான'' (21:3) ''புதிய உலகம்'' (21:5) மட்டுமே இருக்கும்.

VII. இறையியல் தொகுப்பு: திருச்சபை யானது இறைவனால் படைக்கப்பட்டு, கிறிஸ் துவால் கட்டியெழுப்பப்பட்டு, ஆவியின் உறைவிடமாக உள்ளது (1 கொரி 3:16; எபே 2:22). இத்தகைய திருச்சபையானது ''தூய ஆவியின் மூலமாக இயேசுவால் தேர்ந் தெடுக்கப்பட்ட ''அப்போஸ்தலர்களான'' (அ.ப.1:2) மனிதர்களிடமும், பின்னர்க் கைகளை விரிப்பதன் மூலம் ஆளுவதற்கான கொடையைப் பெறுகிறவர்களிடமும் ஒப்படைக்கப்படுகிறது (1 திமொ 4:14; 2 திமொ 1:6).

''உண்மைக்குத் தூணும் அடிப்படையு மாக உள்ளதும்'' (1 திமொ 3:15), அப்போஸ் தலரிடமிருந்து பெறப்பட்ட 'நற்போதனை யின் தொகுப்பை'' என்றென்றும் பாதுகாக் கத் தகுதியுடையதுமான (2 திமொ 1:13-14) திருச்சபையை ஆவியானவர் (யோவா 16:13) வழி நடத்துகிறார். விசுவாசத்தின் தொகுப் பைப் பாதுகாக்கும் இந்த அதிகாரம் அதனைத் தெளிவுபடுத்தித் தவறின்றி வெளிப்படுத்து கின்ற அதிகாரமாகும். நற்செய்தியால் கிறிஸ் துவின் உடலாக உருவாக்கப்பட்டு (எபே 3:6), ஒரே திருமுழுக்கினால் பிறந்து (4:5), ஒரே அப்பத்தினால் ஊட்டப்பட்டு (1 கொரி 10:17), திருச்சபையானது ஒரே இறைவனும் தந்தையுமானவரின் பிள்ளைகளை (எபே 4:6) ஒரே மக்களாக ஒன்று சேர்க்கிறது (கலா 3:28). திருச்சபையானது மனித பிளவுகளை அகற்றி யூதர் மற்றும் புறவினத்தார் (எபே 2:14தொ), நாகரிகமானவர் மற்றும் காட்டு மிராண்டிகள், தலைவர்கள் மற்றும் அடிமை கள், ஆண்கள் மற்றும் பெண்கள் (1 கொரி 12:13; கொலோ 3:11; கலா 3:28) ஆகிய அனைவரையும் ஒரே மக்களாக ஒன்றிணைக் கிறது. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கூறப்படு வதுபோல இந்த ஒன்றிப்பானது பொதுமைப் பண்புடையதாகும். திருச்சபையானது எல்லா மனித பிரிவினைகளையும் ஒப்புர வாக்கவும் (அ.ப. 10:13), எல்லாக் கலாச்சாரங் களுக்கும் ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளவும் (1 கொரி 9:20 தொ), மொத்த உலகையும் அரவணைக்கவும் (மத் 28:19) அமைக்கப்பட் டுள்ளது.

தனது தலைமையிலும் அமைப்பிலும் மட்டு மின்றி, திருமுழுக்கினால் புனிதப்படுத்தப் பட்ட தனது உறுப்பினர்களிலும் திருச்சபை யானது புனிதமாக உள்ளது (எபே 5:26 தொ). திருச்சபையிலும் பாவிகள் உள்ளனர் (1 கொரி 5:12); ஆனால் அவர்கள் தங்க ளுடைய பாவங்களுக்கும் ''புனிதர்களின்'' கூட்டத்திற்குள் நுழைவதற்கான கோரிக்கை களுக்குமிடையே அலைக்கழிக்கப்படுகின்ற நபர்களாக உள்ளனர் (அ.ப. 9:13). திருச் சபையானது அவர்களைத் திருப்பி அனுப்பா மல், கிறிஸ்துவைப் போன்று அவர்களுக்கு மன்னிப்பையும் தூய்மைப்படுத்தலையும் அளிக்கிறது (யோவா 20:23; யாக் 5:15-16; 1 யோவா 1:9). தீய களையானது அறுவடை யாளரின் வருகைக்கு முன்பே எப்போதும் கோதுமையாக மாறக்கூடும் (மத் 13:30). திருச்சபையானது தன்னிலேயே ஒரு முடி வாக இல்லாமல், அதற்கெனக் கிறிஸ்துவின் மறு வருகையானது மாற்றியமைக்கக்கூடிய குறிப்பிட்ட அரசிற்கு நடத்திச்செல்கிறது. தீட்டுப்பட்ட எப்பொருளும் இந்த அரசிற்குள் நுழையாது (திருவெளி 21:27; 22:15). விண் ணக எருசலேமாக மாற்றப்பட வேண்டும் என்னும் திருச்சபையின் ஆர்வத்தை அடக்கு முறைகள் வேகப்படுத்துகின்றன.

திருச்சபையினுடைய விசுவாசம், நம்பிக்கை, மற்றும் அன்பினுடைய முழுமையான மாதிரியாக இருப்பவர் மரியாள். கல்வாரியிலும் (யோவா 19:25), ''மேலறையிலும்'' (அ.ப. 1:14) அவள் திருச்சபையின் பிறப்பிற்குச் சான்று பகர்கின்றாள். பவுல், திருச்சபையின்பால் ஆழ்ந்த (1 கொரி 4:15; கலா 4:19) மற்றும் செயல்முறையான, அன்பினால் நிரப்பப்பட்டுள்ளார். அனைத்துச் திருச்சபைகளைப்பற்றிய கவலையாலும் (2 கொரி 11:28), அவரது பெரும் பாடுகளால் சிலுவையின் கனிகளைப் பகிர்ந்தளிக்க உள்ள ஆர்வத்தாலும் (1 கொரி 4:9-13; 2 கொரி 1:5-9) பற்றி எரிகிறார். இவ்வாறு, ''திருச்சபையாகிய தம் உடலின் பொருட்டுக் கிறிஸ்து பட வேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதைத் தன் உடலில் அவர் நிறைவாக்குகிறார்'' (கொலோ 1:24). ''திருச்சபையின் பணியாளன்'' (1:25) என்ற நிலையில் அவரது வாழ்வானது, குறிப்பாக, அப்போஸ்தலிக்கப் பணியைத் தொடர்கின்றவர்களுக்கு ஒரு மாதிரியாக உள்ளது.

தலைவர்கள் மட்டுமின்றி, கிறிஸ்தவ மக்களின் அனைத்து உறுப்பினர்களும் தங்களது அருங்கொடைகளைப் பயன்படுத்தித் திருச்சபைக்கு ஊழியம் புரிய அழைக்கப்படுகின்றனர். அன்பின் கனிகளால் நிரப்பப்பட்ட கிளைகளைப்போலத் திராட்சைக் கொடியில் வாழ அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். விசுவாசத்தின் பலியினாலும் (பிலி 2:17), ஆவிக்கேற்ற தூய வாழ்வினாலும் (உரோ 12:1; 1 கொரி 6:19; பிலி 3:3) தங்களது குருத்துவத்திற்கு உகந்தவர்களாக இருக்குமாறு கோரப்படுகின்றனர் (1 பேதுரு 2:5). சபையின் வழிபாட்டில் கிறிஸ்தவர் தீவிரமாய்ப் பங்கேற்க வேண்டும். கன்னிமை எனும் குறிப்பிட்ட கொடையைப் பெற்றிருப்பின், ஆண்டவரை மட்டுமே அவன் பற்றிக்கொள்ள வேண்டும். மணமானவராயின், கிறிஸ்துவிற்கும் அவரது திருச்சபைக்கும் இடையிலான இணைப்பின் மாதிரியில் இல்லற வாழ்வை அமைக்க வேண்டும் (எபே 5:21-33). இயேசுவால் ''வளமிக்க மணமகள்'' (1:25) என அன்பு செய்யப்பட்டதும், ஒவ்வொரு மனிதனாலும் ''அன்னை'' என்று அழைக்கப்படுவதுமான (சங் 86:5; கலா 4:26) புனித நகரானது நம்முடைய மகனுக்குரிய அன்பிற்குத் தகுதியுடையதாகும். ஆயினும், அதனைக் கட்டியெழுப்புகின்ற அளவில்தான் நாம் அதனை அன்பு செய்கின்றோம்.

திருச்சபைத் தந்தையர்கள் (FATHERS OF THE CHURCH)

இது கிறிஸ்துவத்தின் முதல் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆயர்களையும் திருச்சபை அதிகாரிகளையும் குறிக்கும். இவர்கள் பாரம்பரியப் போதகத்திற்குக் காட்டிய பற்றுறுதிக்கும் தங்கள் தூய எடுத்துக் காட்டான வாழ்வுக்கும் புகழ் பெற்றிருந்தனர். இவர்களுடைய நூல்கள், கிறிஸ்தவப் போதகம் பற்றிய தர்க்கங்களில் அதிகாரமுடையவையாயின. இக்குழுவில் அப்போஸ்தோலிக்கத் தந்தையர்கள் அடங்குவர். நிசேயாப் பொதுச் சங்கத்திற்கு முன் வாழ்ந்த மறைசாட்சியான யுஸ்தீன், அத்தெனகோரஸ், இரேனேயு, தெர்துல்லியன், அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமெந்து போன்ற காப்புரையாளர்களும், உருவக முறையில் எழுதியவர்களும், மறைமெய்மையாளர்களும் ஓரிசன்போன்ற விவிலிய ஆய்வாளர்களும் அடங்குவர். நிசேயாச் சங்கத்திற்குப்பின் வந்தவர்களில் நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த மறை உண்மைக் கோட்பாட்டாளர்கள், விளக்கவுரையாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள், மற்றும் போதகர்கள் ஆகியவர்களும் திருச்சபைத் தந்தையர்கள் என்றழைக்கப்பட்டனர். கிரேக்க ஆசிரியர்களிடையே அத்தனேசியு, நீசாவின் கிரகோரி, நசியானுவின் கிரகோரி, யோவான் கிறிசோஸ்தோம் ஆகியோரும், இலத்தீன் ஆசிரியர்களிடையே அம்புரோசு, எரோனிமு, அகுஸ்தீன் ஆகியோரும் சிறப்புப்பெற்று விளங்குகின்றனர். அறிஞர் சிலர் 9-ஆம் நூற்றாண்டில் ''ஸ்கோலாஸ்திசம்'' எழுச்சிபெறுவதற்கு முந்திய திருச்சபை எழுத்தாளர்களையும் திருச்சபைத்தந்தையருள் உள்ளடக்கினாலும், மேற்குத் திருச்சபையில் பெரிய கிரகோரியோடும் (540-604),

கிழக்குத் திருச்சபையில் தமஸ்குவின்யோவா னோடும் (675-749) திருச்சபைத் தந்தையர் களின் காலம் முடிந்துவிட்டது என்று பொது வாகக் கருதப்படும்.

திருச்சபையின் ஆட்சிமுறை (CHURCH GOVERNMENT)

கிறிஸ்துவின் திருச்சபை எவ்வாறு ஆட்சி செய்யப்பட வேண்டும் என்பது பற்றிப் புதிய ஏற்பாடு அரிதாகத்தான் குறிப்பிடு கிறது. மூப்பர்கள், தியாக்கோன்கள், ஆயர்கள் என்ற பதவியாளர்களைக் குறிப்பிடும் பவுல் கூட, தன் இறுதித்திருமுகங்களில்தான் இவர் களைக் குறிப்பிடுகிறார் (1 திமொ, தீத்து). இதன் விளைவாகக் கிறிஸ்தவர்கள் இந்தச் சிறப்புப் பதவிகளின் எண்ணிக்கை, அவற் றிடையேயுள்ள உறவு ஆகியவைபற்றிப் பெரிதும் வேறுபடுகின்றனர்.

இயேசு தன்னுடைய சீடர்களில் பன்னிரு வரை அப்போஸ்தலர்களாக நியமித்தார். தனது விண்ணேற்றத்திற்குமுன் தனது நற் செய்தியைப் போதிக்கும் பொறுப்பை இவர் களிடம் ஒப்படைத்தார் (அ.ப. 1:8; மத் 28:16-20). இவ்வுலகில் இயேசு செய்த பணி யின் நேரடிச் சாட்சிகளான இவர்கள், தங்கள் செய்திக்கு ஆதரவாக இயேசுவின் அதிகா ரம் அளிக்கும் சொற்களையும் பயன்படுத்தி னர். யூதாசின் மரணத்துக்குப்பின், அவருக் குப் பதிலாகப் பதினொருவரும் மத்தியா வைத் தேர்ந்தெடுத்தனர் (அ.ப. 1:26). காலப் போக்கில் பவுலின் அதிகாரத்தையும் ஏற்றுக் கொண்டனர் (கலா 1:11 தொ). அப்போஸ்த லப் பணிநூல் பேதுரு (அ.ப. 2-12), பவுல் (13-28), ஆகியோருடைய் பணியையும், ஓரளவு யோவானின் பணியையும் (3:14.11; 8:14) எடுத்துக் கூறுகிறது.

ஏழைகள் மற்றும் விதவைகளின் கவனிப்பு உள்ளடங்கிய அவர்கள் பணி சுமையாகித் தடையாகியபோது, அவர்கள் எழுவரைத் தேர்ந்தெடுத்து, கிரேக்க விதவைகளைக் கவ னிக்கும் பொறுப்பை இவர்களிடம் ஒப்ப டைத்தனர் (அ.ப. 6:1-6). இவர்கள் தியாக் கோன்களுக்கு (திருத்தொண்டர்கள்) முன் னோடியாக இருந்திருக்கலாம். ஆனால் இவர்களில் பிலிப்பு நற்செய்தியாளராகவும் (8:5. 26 தொ.40), ஸ்தேவான் காப்புரையாள ராகவும் விளங்குகின்றனர் (அதி 7).

சில காலத்திற்குப்பின் . ஆதித்திருச்சபை ஆயர்கள் (மேற் பார்வையாளர்கள்), மூப்பர் கள், திருத்தொண்டர்கள் ஆகிய பதவிகளை நிறுவியது. ஆயர்கள் தலத்திருச்சபைகளின் பணியாளர்கள் ஆவர். இவர்கள் மூப்பர்க ளோடு சம அதிகாரம் கொண்டிருந்தனர். அ.ப. 20:17-இன்படி, பவுல் மூப்பர்களை எபேசியத்திருச்சபையின் ஆளும் குழுவாகக் கருதியதாகத் தெரிகிறது. எழுவரின் தேர்வுக் குப்பின் விரைவில் மூப்பர்கள் தோன்றுகின் றனர். அந்தியோக்கியாவிலும் (11:30), பவுலின் முதல் மறைபரப்புப் பயணத்தின் முடிவில் கலாத்தியத் திருச்சபைகளிலும் மூப்பர்கள் நியமிக்கப்படுகின்றனர் (14:23). பிலிப்பியில் தியாக்கோன்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிகிறது. ஏனெனில் பவுல் பிலிப்பி யர்களுக்கு வாழ்த்துக் கூறும்போது இவர் களைக் குறிப்பிடுகிறார் (பலி 1:1); ஆனால் ஆயர்கள், மூப்பர்களைப் போல் இவர்கள் அவ்வளவு அதிகாரம் கொண்டிருக்க வில்லை.

தனது முதல் சிறைவாச காலத்தை யொட்டி, பவுல் இந்த மூன்று பதவிகளை யும் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் இவற் றைப்பற்றி விரிவாகக் கூறவில்லை. திருச் சபை ஆட்சிமுறை பற்றிய கொரிந்தியருக்கு அளித்த அறவுரையில் பவுல், ஆன்மீகக் கொடைகளைப் பயன்படுத்த அப்போஸ்த லர், இறைவாக்கினர், போதகர், புதுமை செய்வோர்,நோய்களைக் குணமாக்குவோர், பிறர் சேவை செய்வோர், ஆளுபவர்கள், பரவசப் பேச்சாளர்கள் ஆகியபதவிகளை வரிசைப்படுத்துகிறார் (1 கொரி 12:28). அன்பே ஆன்மீகக் கொடைகளில் மிகப் பெரியது என்று பவுல் கருதுகிறார் (1 கொரி 13). ஆகவே கொரிந்துத் திருச்சபையின் அருங்கொடையாளர்களின் அதிகாரத்தைக் குறைப்பதாகத் தோன்றுகிறது. எபேசிய ருக்கு எழுதிய திருமுகத்திலும் இத்தகைய

தொரு பட்டியலைப் பவுல் தருகிறார் (எபே 4:11). திருச்சபை ஆட்சி முறை பற்றிய பவுலின் கருத்து எதுவானாலும், கிறிஸ்துவே எல்லாருக்கும் உண்மையான தலைவர் என்பதை உறுதியாக எடுத்துக் கூறுகிறார் (1:22; 5:23-24).

சில நூற்றாண்டுகளுக்குள்ளேயே தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் திருச்சபையில் வலுவான, மையமாக்கப்பட்ட, படிமர புடைய அதிகார அமைப்பைக் காண்கின்ற னர். இது மேற்குத் திருச்சபையில் காலப் போக்கில் பாப்புவின் முதன்மையில் உச்ச நிலையடைகிறது அவர் உலகில் கிறிஸ்து வின் பிரதிநிதி ஆவார். பிரிவினைச் சகோத ரர்கள், திருச்சபை ஆட்சிமுறைபற்றி வேறு பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், பாப்புவின் அதிகாரம் பற்றிய உரோமைக் கத்தோலிக்கத் திருச்சபை கொண்டாடிய உரி மையை ஏற்க மறுப்பர்.

திருத்தூயகம் (HOLY OF HOLIES)

திரு உறைவிடத்தின் உள் அறையைக் குறிக்கும் சொல்லாகும் (யாத் 26:34). திரு உறைவிடத்தின் மற்றப் பகுதிகளிலிருந்து இது ஒரு திண்ணிய திரையால் பிரிக்கப்பட்டிருந் தது. இந்த அறையில் சாட்சிப் பேழையும் அதன்மேல் இரக்க இருக்கையும் இருந்தன.

இந்த அறை 9 x 9 x 9 மீட்டர் கொண்ட தாகும். செருபாபேல், ஏரோது ஆகியோர் கட்டிய ஆலயங்களில், திருத்தூயகம் வெறுமை யாகவே இருந்தது; எப்போதும் இருள் மண்டியதாகவும் இருந்தது. ஆண்டிற்கு ஒரு முறை ''பரிகார நாளில்'' பெரிய குரு பலிப் பொருள்களின் இரத்தம் தாங்கித் தூபப்பீடத்தி லிருந்து தூபத்தோடும் இவ்விடத்திற்குள் சென்று, இரத்தத்தைத் தெளித்துவிட்டு வரு வார். பிறர் இவ்வறைக்குள் புகுந்தறியார் (லேவி 16). இவ்வறையைப் பிற பகுதிகளி லிருந்து பிரித்த திரைதான் இயேசு மரித்த போது கிழிந்த திரையாகும் (லூக் 23:45). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் திருத்தூயகம் கிறிஸ்து கொண்டு வந்த மீட் பின் அடையாளமாகும் (எபி 9:11-28; 10:19-20).

திருத்தொண்டர் (DEACON - வேலைக்கா ரன், பணியாள், சேவகன்)

அப்போஸ்தலிக்க காலத்திலிருந்து, திருச் சபையில் உள்ள பணியாளர்களின் பெரிய பதவிகளில் ஒன்றின் பெயர். கிரேக்க மொழி பேசிய விதவைகளுக்கு அறப்பணி புரிவ தில் பன்னிருவருக்குத் துணைபுரிய எழுவ ரைத் தேர்ந்தெடுத்து அபிடேகம் செய்ததைப் பற்றிய விவரிப்பைக் கூறும் அ.ப. 6:1-6-உடன் இப்பதவி நிறுவப்பட்டது தொடர்பு படுத் தப்படுகிறது. அப்போஸ்தலர் பணியின் ஆசி ரியர் இவர்களுக்குத் 'திருத்தொண்டர்' என் னும் பெயர்ச்சொல்லைக் குறிப்பிடாமல், மேசையில் பரிமாறும் அவர்களது பணி யைக் குறிப்பிடும் வினைச்சொல்லைப் பயன்படுத்துகிறார். 'திருத்தொண்டர்' என் னும் சொல் இந்நூலில் குறிக்கப்பட வில்லை; ஆனால், எழுவரில் ஒருவரான பிலிப்பு, நற்செய்திப் போதகர் என்று அழைக்கப்படுகின்றார் (அ.ப. 21:8).

பிலிப்புவிலுள்ள மொத்த திருச்சபை யுடன் 'மேற்பார்வையாளர், திருப்பணியாளர்' (பிலி 1:1) ஆகியோரையும் வாழ்த்தும் குறிப்பு, இப்பதவியைப் பற்றிக் குறிப்பிடு கிறது. பவுலுக்குப் பிலிப்பியரால் அனுப்பப் பட்ட பொருளுதவிக்கு நன்றியறிதலாய் இக்கடிதம் எழுதப்படுவதால், அவரது தேவைக்கெனப் பொருளைச் சேகரித்து, அனுப்பி வைக்கும் பணியை மேற்கொண்ட பணியாளர்களைத் தனது நன்றியறிதலில் நினைவு கூர்வது நியாயமே. மற்றப்படி, இச் சொல் பவுலால் தன்னுடன் போதித்தலில் பணிபுரிபவர்களாயும், உதவியாளர்களாயும் உள்ள திமொத்தேயு (1 தெச 3:2; 1 திமொ 4:6), திக்கிக்கு (கொலோ 4:7; எபே 6:21), எப்பப்பிரா (கொலோ 1:7) ஆகியோரைப் பற்றி விவரிக்கப் பயன்படுகிறது. பவுல் இச்சொல்லைத் தனது பணியைப் பற்றி (1 கொரி 3:5; 2 கொரி 3:6; 6:4; 11:15.23; கொலோ 1:23.25; எபே 3:7), கிறிஸ்து வின் பணியைப் பற்றி (உரோ 15:8; கலா 2:17), அல்லது ஆளும் அதிகாரிகளின் பணியைப் பற்றி (உரோ 13:4) வர்ணிக் கப் பயன்படுத்துகின்றார்.

அப்போஸ்தலிக்க காலத்திற்குப்பின்னர், இலக்கியத்தில் திருப்பணியாளரைப்பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன. திருச்சபையின் ஆளுகைக்குரிய பணியில் அவர்களது தரமும், செயல்களும் தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளன: இவற்றின்படி, அபிடேகம் செய்யப்பட்ட பணியில் ஆயர்கள், மூப்பர்களை அடுத்த மூன்றாவது நிலையைத் திருத்தொண்டர்கள் பெற்றிருந்தனர். ஆயரால் அபிடேகம் செய்யப்பட்டு, அவரது திருவழிபாடு மற்றும் மேய்ப்புப் பணிகளுக்குத் துணை நின்றதால், ஆயரின் துணையாளராக இவர்கள் இருந்தனர்.

நற்கருணைச் சடங்கில் திருத்தொண்டர்கள் மக்களின் காணிக்கைகளைப் பெற்றும், நற்கருணை வழங்குவதில் துணை புரிந்தும் செயல்பட்டனர். பிற்காலத்தில், நற்கருணைக் கூட்டத்தில், நற்செய்தி வாசிக்கும் தனி உரிமையைத் திருத்தொண்டர்கள் பெற்றனர். அவர்கள் வெளியே சென்று, நோயாளிகள், ஏழைகள், தேவையுள்ளோர் குறிப்பாக விதவைகள், அநாதைகள் மற்றும் சிறைப்பட்டோரைச் சந்தித்தனர். ஆயரிடம் அவர்களது தேவைகளை எடுத்துச்சொல்லி திருச்சபையின் உதவியை அவர்களுக்கு எடுத்துச் சென்றனர். மறைசாட்சி யுஸ்தீனின் கூற்றுப்படி இவர்கள் தவிர்க்க இயலாத நிலையால் நற்கருணைச் சடங்கிற்கு வர இயலாதவர்களுக்கு நற்கருணையைக் கொண்டு சென்றனர். இத்தகைய செயல்களின் ஒளியில் 1 திமொ 3:8-13-இல் குறிப்பிடப்பட்டுள்ள திருப்பணியாளருக்கான குணங்களின் வரைமுறைகள் தகுதியாக உள்ளன. ஏனெனில், மக்களுடனான இவரது பல்வேறு சந்திப்புகளும், திருச்சபையின் காணிக்கைப் பொருட்களின் பொறுப்பும் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் வதந்தி, ஆசை, பழி மற்றும் இச்சை போன்ற பல சோதனைகளுக்கும் இடம் கொடுத்தன.

திருப்பணியாளரைப்பற்றிய மூல முன்மாதிரியை யூத மற்றும் புற இனத்தாரின் அடிப்படைகளில் தேடும் முயற்சிகள் ஓரளவே வெற்றிகரமாக அமைந்தன. கிறிஸ்தவ திருப்பணியாளருக்கும், யூத செபக்கூடத் தலைவருக்கு வழிபாட்டுச் சடங்குகளில் மட்டுமே உதவிசெய்தவர்க்கும் இடையே சில ஒற்றுமைகள் உள்ளன; மேய்ப்புப் பணியிலும், மற்றச் செயல்களிலும் இருவரும் மாறுபட்டு உள்ளனர். எழுபது நூலிலும், சிறந்த கிரேக்க ஆசிரியரிடையிலும் 'திருப்பணியாளன்' என்னும் சொல் ஊழியன், தூதன், நாட்டு அதிகாரி என்னும் சமயசார்பற்ற பொருளைக் கொண்டுள்ளது. யோசிபசு மற்றும் எப்பிக்தேத்து ஆகியோர் இச்சொல்லைக் 'கடவுளின் ஊழியன்' என்ற பொருளில் சில முறை பயன்படுத்தியுள்ளனர். பல புறவினத்தாருடைய ஏடுகள், 'திருப்பணியாளர்' என்னும் சொல்லுக்குக் குறிப்பிட்ட, தனிப்பட்ட பொருள் எதையும் தராமல், தங்களது அதிகாரிகளில் ஒருவராகக் குறிப்பிடுகின்றன. பெரும்பாலான முறைகளில், இச்சொல் ''பையன்கள்'' மற்றும் ''சமையல்காரர்'' ஆகியோருடன் இணைத்துக் கூறப்படுவது, ஏவலாளிகள் மற்றும் கீழான ஊழியர்கள் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.

திருச்சபையின் திருத்தொண்டர் பணியானது ஐயத்திற்கிடமின்றி, திருச்சபையின் பொதுவாழ்வில் ஏற்பட்ட குறிப்பிட்ட தேவைகளுக்காகவே தோன்றியது. ''பணிவிடை பெற அன்று, பணிவிடை புரியவே வந்தேன்'' (மாற் 10:45) என்று கூறிய கிறிஸ்துவே இதன் தூண்டுதலாக அமைந்தார். தொண்டு மற்றும் பரிமாறுதல், குறிப்பாக மேசையில் பரிமாறுதல் என்னும் எண்ணம், கிறிஸ்து மற்றும் அவருக்குப் பின்னர் அவரது சீடர்களின் பணி ஆகியவற்றைப் பற்றிய போதனையிலேயே அமைந்துள்ளது (மத் 25:44; லூக் 12:37; யோவா 12:26, மற்றும் குறிப்பாக மத் 20:26-28; 23:11; மாற் 9:35; 10:43; லூக் 22:26-27). இத்தகைய முறையில், திருத்தொண்டர் பணியே திருச்சபையின் அனைத்துப் பணிகளுக்கும் அடிப்படையாகும்.

திருநிலைப்படுத்துதல் (CONSECRATE)

புனித பதவிக்காக ஒருவரை (யாத் 29:33; லேவி 16:32) அல்லது புனித காரியங்களுக்காக ஒரு பொருளை (2 நாள் 31:6; எசே

43:26) அர்ப்பணித்தல், ஒதுக்கி வைத்தல், பிரித்துவைத்தல். பெரும்பாலும் இச்சொல் இறைவழிபாட்டோடு தொடர்புடையது. இதனால் ஆளோ பொருளோ புனிதத்தை பெறுகின்றனர். இதைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. காண்க: புனிதப்படுத்துதல்.

திருப்பணிப்பெண் (DEACONESS)

இச்சொல் உரோ 16:1-இல் ''தியாக்கோனோஸ்'' என்னும் சொல்லை மொழி பெயர்க்கப்பயன்படுகிறது; பவுல் பெயிபாவைக் கெங்கிரேயாவில் இருக்கும் திருச்சபைக்குத் திருப்பணி புரிபவளாகக் குறிப்பிடுகிறார். புதிய ஏற்பாட்டில் எப்பகுதியும், இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பணியினைக் குறிப்பிடவில்லை. ஆனால் இக்குறிப்பின் மூலம், இத்தகைய பணி ஏற்படுத்தப்பட்டிருந்ததாக பொதுவாய் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இப்பகுதியில், இச்சொல்லானது ஒரு குறிப்பிட்ட பொருளையோ, பணி என்பதன் பொதுவான பொருளையோ குறிப்பிடுவதாக உறுதியாகத் தீர்மானிக்க முடியாது. இப்பிரச்சனை பிலி 1:1-இல் குறிப்பிடப்பட்டுள்ள திருப்பணியாளர் பிரச்சனையைப் போன்றதே. திருப்பணியாளரின் குணநலன்களைப் பற்றி விவரிக்கும்போது 1 திமொ 3:11-இல் பெண்களைப்பற்றிக் குறிப்பிடுவது பெரிய குழப்பத்தை உண்டு பண்ணுகிறது. இப்பகுதி, திருப்பணியாளரின் மனைவிகளைப்பற்றி மட்டுமே குறிப்பிட்டிருக்கலாம்; ஆனால்,. சில விளக்கவுரையாளர்கள் இதனைப் பெண் திருப்பணியாளருக்கான ஆதாரமாய் எடுத்துக் கொள்கின்றனர். 1 திமொ 5:9-10 குறிப்பிடுவதுபோலப் பெண் திருப்பணியாளருக்கும் விதவைகளுக்கும் உள்ள உறவும் குழப்பமாகவே உள்ளது.

2-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இத்தகைய பதவி இருந்ததாக 112-இல் பித்தினியாவின் ஆளுநனாக இருந்த இளைய 'பிளினி' என்பவர் பேரரசர் திரேசனுக்குக் கிறிஸ்தவர்களைப்பற்றி ஆராய்ந்து அளித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பணியாளர்கள் எனக் கூறப்பட்ட இரு கிறிஸ்தவ அடிமைகளைத் தான் துன்பத்திற்கு உட்படுத்தியதாக, பிளினி கூறுகின்றார். 2, 3-ஆம் நூற்றாண்டுக் கிறிஸ்தவ இலக்கியங்களில், பெண் திருப்பணியாளர்களைப் பற்றிய குறிப்புகள் அரிதாகவே உள்ளன. 3-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த ''திதாஸ்காலியா'' என்னும் சிரிய நூல் அவர்களது பணியைப்பற்றிச் சுருக்கமாக விவரிக்கின்றது: அ) பெண்களின் திருமுழுக்கிலும், முக்கியமாக எண்ணெய் பூசுவதிலும் உதவி செய்தல், ஆ) விசுவசிக்கும் பெண்களுக்குள்ள பிற சமயத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளுக்குச் செல்வது, நோயாளிகளைச் சந்திப்பது, தேவையான செயல்களில் அவர்களுக்குப் பணிபுரிவது, மற்றும் நோயினின்று குணமாகிறவர்களைக் குளிப்பாட்டுவது.

இதைப்பற்றிய குறிப்புகள் 4, 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருச்சபையின் கட்டளைகள் மற்றும் சங்கத்தீர்மானங்களிலிருந்து கிடைக்கின்றன. இப்பதவி, உரோமைத் திருச்சபையில் இருந்ததாகத் தெரியவில்லை.

திருப்பயணம் (PILGRIMAGE)

I. பெரும்பாலான சமயங்களில் வழக்கிலிருந்ததாகும் திருப்பயணங்கள். இது விவிலியத் தொகுப்பு ஏற்படுமுன்பே மிகவும் பரவி இருந்ததாகும். திருப்பயணம் என்றால் என்ன? விசுவாசிகளின் செல்கையாகும். இது ஓரிடத்தை அணுகிச் செல்வதாகும். இந்த இடங்கள் இறைவெளிப்பாட்டாலோ ஒரு சமயப் பெரியவரின் செயலாலோ புனிதப்பட்டதாக இருக்கும். தங்களின் செபங்களைச் சமர்ப்பிக்கச் சாதகமான சூழ்நிலையிலும் இடங்களிலும் இதைச் செய்தனர். புனித இடத்திற்குப் போகுமுன் தூய்மை பெறுவது அவசியம். எனவே அதற்கும் தயாரிப்புகள் இருந்தன. பெரிய கூட்டத்தினில் இப்பயணம் முடிவாகிறது என்றாலும் ஒரு விசுவாசி குறிப்பிட்ட சமயக் குழுவைச் சார்ந்தவன் என்பதையும் சுட்டிக் காட்டும். எனவே வழிபாட்டுச் சூழலில் திருப்பயணம் என்பது கடவுளைத் தேடுவது, அவரைச் சந்திப்பது என்பதாகும்.

II. பழைய ஏற்பாடு

1. பழங்காலப் புனித இடங்களுக்கு: உப ஆகம மறுமலர்ச்சியாகப் புனித இடங்களை ஒன்றாகக் குறைக்க யோசுவா எடுத்த முயற்சிக்குமுன் இஸ்ராயேலில் பல இடங்கள் இருந்ததாகச் சான்றுகள் உள்ளன. இவைகள் புனித வரலாற்றோடு இணைந்தவை. இதில்தான் தங்கள் கடவுளைத் தேடி மக்கள் வந்தனர்.

குலமூதாதையர்களின் வரலாறு ஒரு உண்மையான திருப்பயணம் பற்றியே குறிக்கிறது (ஆதி 35:1-7). ஆபிரகாமுக்கு (12:6தொ செக்கேமிலும்; 18:1, மம்ரேயிலும்), ஈசாக்கிற்கு (26:24 பெயேர் செபாவிலும்) மற்றும் யாக்கோபிற்கு (28:12; 35:9 பெத்தேலிலும்; 32:31 பெனியேலிலும்) ஏற்பட்ட இறைக் காட்சிகளின் விவரிப்பில், கானானியர்களின் புனித இடங்களை இஸ்ராயேல் பின்பற்றியதைச் சட்ட முறையாக நூலாசிரியர்கள் ஆக்குகின்றனர். ஏனெனில் குல மூதாதைகளும் இவ்விடங்களைப் பயன்படுத்தியிருந்தனர். இவை தோற்ற முறையில் எப்படி இருந்தன என்றுகூட விளக்குகின்றனர். இவற்றின் பீடங்கள் (12:17 தொ; 13:4; 26:25; 33:20), தூண்கள் (28:18), புனித மரங்கள் (12:6; 18:1; 21:33)... பிற்காலத் திருப்பயணியர்களின் சடங்கு முறை நடந்த விதத்திற்கு அவர்கள் அடிப்படை அமைத்துத் தந்தனர். வெவ்வேறு தலைப்புகளில் யாவேயின் திருப்பெயரை அழைப்பது (12:8; 13:4; 21:33; 33:20), எண்ணெய் வார்த்தல் (28:18; 35:14). தூய்மைப்படுத்துதல் (35:2தொ), தசமபாக வரிகள் (14:20; 28:22).

வேறுபட்ட முக்கியத்துவமுடைய புனித இடங்களில் சமய சார்புள்ள பேரவைகளும், எனவே திருப்பயணங்களும் தொடர்ந்து நெடுங்காலம் 'நிகழ்ந்ததுபற்றி நமக்குச் சான்று உள்ளது. செக்கேம் (யோசு 24:25; நீதி 9:6; 1 அர 12:1-9), பெத்தேல் (1 சாமு 10:3 என்பது திருப்பயணிகள் இங்கே வந்தனர் என்று காட்டுகிறது; 1 அர 12:29 தொ; ஆமோ 5:5; 7:13), பெயேர்செபா (ஆமோ 5:5), ஒபிரா (நீதி 6:24),சோரா (13:19 தொ) ஆகியவை இவ்விடங்களில் சிலவாகும். இங்கே யாவேயின் தூதர்கள் தோன்றிய நினைவைக் கொண்டாடினர். பேழை வைக்கப்பட்டிருந்த ஒரு புனித இடம் சீலோவில் இருந்தது. இங்கு ஒவ்வொரு ஆண்டும் யாவேயின் பெயரால் ஒரு விழா கொண்டாடப்பட்டது (நீதி 21:19). எல்கானாவும் அவரது மனைவியரும் ''சென்றுவரும்'' திருவிழா இதுவாக ஒருவேளை இருக்கலாம் (1 சாமு 1:3). மிஸ்பாவில் (1 சாமு 7:5 தொ), கில்காலில் (11:15), கிபயோனில் (1 அர 3:4), தாணில் (12:29) கூடிய பேரவை பற்றியும் தகவல் உண்டு. பேழையைத் தாவீது எருசலேமுக்குக் கொண்டு வந்ததிலிருந்தும் (2 சாமு 6) சாலமோன் ஆலயத்தை எழுப்பியதிலிருந்தும் (1 அர 5-8) எருசலேம் நோக்கிய திருப்பயணங்கள் அதிகம் முக்கியத்துவம் பெற்றன (12:27).

ஆண்டிற்கு மூன்று முறை ஆண்டவர் யாவேயின் திருமுன் ஆண்கள் யாவரும் செல்ல வேண்டும் என்று உடன்படிக்கை ஒழுங்குகள் (யாத் 34:18-23; யாத் 23:14.17) ஏற்படுத்திய கட்டளை நீண்ட காலமாய்ப் பழக்கத்தில் இருந்தது. விழாக்களின்போது வெவ்வேறு திருத்தலங்களில் இந்தக் கடமை அனுசரிக்கப்பட்டது.

2. தனித்தன்மையுடைய புனிதஇடத்தை நோக்கி: எசேக்கியாவால் தொடங்கிவைக்கப்பட்டு, - யோசியாவால் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தம் தலத்தின் புனிதங்களை ஒழித்தது (2 அர 18:4.22; 2 நாள் 29-31). பாஸ்காக் கொண்டாட்டம் (2 அர 23; 2 நாள் 35), இரு திருவிழாக்களான வாரவிழா, கூடார விழா (உப 16:1-17) ஆகியவை எருசலேமில்தான் கொண்டாடப்படவேண்டும் என்று நிர்ணயித்தது. இவ்வாறு இறைமக்களை ஒன்றுகூட்டவும், தல சிலை வழிபாடுகளிலிருந்து காக்கவும் வழியேற்பட்டது. யோசுவா இறந்த வேளை இச்சீர்திருத்தம் ஒரு கேள்வியாக ஆன போதிலும், நாடுகடத்தப்பட்டுத் திரும்பியதிலிருந்து எருசலேமின் ஆலயம் மட்டும்தான் திருப்பயணத் தலமாக மாறியது. இங்குப் பாலஸ்தீன நாடு முழுவதி

லிருந்தும் திருப்பயணிகள் வந்தனர், சிதறிப்போய்ப் பரவிக் கிடந்தவர்களும் இங்கு ஒன்று கூடினர். ''ஏற்றச் சங்கீதங்கள்'' (120-134) பயணிகளின் செபங்களையும் மனநிலைகளையும் வருணிக்கின்றன: கடவுளின் திருத்தலத்தின் மேலுள்ள அவர்களின் பிடிப்பு, புனித நகரத்தின் மேலுள்ள அவர்கள் பற்று, அவர்களின் விசுவாசம், வழிபாடு, வழிபாட்டுப் பேரவை மூலம் ஏற்படும் ஆழ்ந்த இறைமக்களின் தோழமை, தோன்றும் மகிழ்ச்சி - போன்றவற்றைக் காண்கிறோம். இந்த அனுபவத்தின் மூலம் இஸ்ராயேல் குலத்தில் இறுதிக்கால நம்பிக்கை உண்டாவதையும் காண்கிறோம். திருப்பயணத்தின் வாயிலாய் மீட்பின் நாள் புலர்வது, புற இனத்தவரும் இறைமக்களும் ஒன்றுபடுவது (எசா 2:2-5; 60;66:18-21; மீக் 7:12; செக் 14:16-19 தோபி 13:11) ஆகியவையே இறுதிக்கால நம்பிக்கையின் கூறுகளாகும்.

III. புதிய ஏற்பாடு: புதிதாக எதுவும் சொல்வதாகத் தெரியவில்லை என்றே முதலில் தோன்றுகிறது. பன்னிரு வயதில் சட்டத்தின்படி தன் பெற்றோருடன் இயேசு எருசலேமுக்குப் போகிறார் (லூக் 2:41 தொ). தனது போதனைக் காலத்திலும் பற்பல விழாக்களுக்காகத் தொடர்ந்து அங்கே போகிறார் (யோவா 2:13; 5:1; 7:14; 10:22தொ; 12:12). இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து ஐம்பதாம் நாள் திருப்பயணம் மேற்கொள்ள பவுல் முடிவெடுக்கிறார் (அ.ப. 20:16; 24:11).

ஆலயத்தின் அழிவை இயேசு முன்னுரைக்கிறார் (மாற் 13:2 இணை). இஸ்ராயேல் மறுப்பு திருச்சபைக்கும் யூத மதத்திற்கும் பிளவு ஏற்படுத்துகிறது. மேலும் இயேசுவின் உயிர்ப்பினால் அவருடைய மகிமையான உடல் புதிய ஆலயமாக மாறுகிறது: இப்போதிருந்து அது விசுவாசிகளின் வழிபாட்டு மையமாகவும் ஆகிறது. இனிமேல் வேறெங்கிலுமில்லை (யோவா 2:19-21; 4:21-23). இனிமேல் இறுதிக்கால உண்மையான திருப்பயணம், இறைமக்களின் வாழ்க்கைதான் (2 கொரி 5:6 தொ; எபி 13:14). ஆண்டவர் இயேசுவின் தலைமையில் இத்திருப்பயணம் ஒரு புறப்பாடாகும்; விடுதலைப்பயணமாகும் (அ.ப. 3:15; 5:31; எபி 2:10). சீயோன் மலை, வானக எருசலேம், வானத்தில் பெயர் பெற்றிருக்கப்பட்டுள்ள தலைப்பேறானவர்களின் திருக்கூட்டம் (எபி 12:22தொ), ''கடவுளாகிய ஆண்டவரும் செம்மறியும்'' ஆகிய ஆலயம் (திருவெளி 21:22-26) ஆகிய ஆன்மீக உண்மைகள் இதனுடைய குறிக்கோளாக இருக்கும்.

திருச்சபை வரலாற்றோடு மிகவும் ஒன்றித்திருப்பதால், கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்க்கையோடும், புனிதர்களின் வாழ்வில் அவரது வெளிப்பாட்டோடும் சேர்ந்த இடங்களுக்குத் திருப்பயணம் செய்வதை மறுப்பதில்லை. கிறிஸ்து செயலாற்றிய இவ்விடங்களில் கூடும் இக்கூட்டங்களை, விசுவாசிகளுக்கு விசுவாசத்திலும் செபத்திலும் அவர்களின் தோழமையைக் காட்ட ஒரு வாய்ப்பாகத் திருச்சபை கருதுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவின் தலைமையில் அவரை நோக்கிச் செய்யும் பயணத்தை விசுவாசிகளுக்கு நினைவூட்ட இந்த வாய்ப்பைத் திருச்சபை பயன்படுத்துகிறது.

திருப்பாடல்கள், சங்கீதநூல் (PSALMS, BOOK OF)

1. முன்னுரை: தொடக்க காலமுதல், இறைவனுடைய மக்களாகிய இஸ்ராயேல் பாடுவதில் சிறந்து விளங்கியதாகத் தெரிகிறது. மகிழ்ச்சியாக இருக்கும்போதும் (யாத் 15:1-21), துன்ப வேளையிலும் (2 சாமு 1:17-27) பாடியிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டின் பெரும் பாடல்களில் பல, மக்களிடையே ஆற்றல் பெற்ற சிறு குழுவினரால் பாடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆன்மீகப் பாடல்களை இயற்றிய முன்னோடியான ஆசிரியர்களுள் தாவீது மன்னன் சிறப்பிடம் வகிக்கிறார். இப்பாடல்கள் காலப்போக்கில், ஒரே நூலாகத் தொகுக்கப்பட்டு, நாம் கொண்டிருக்கும் சங்கீதநூல் அல்லது திருப்பாடல்கள் நூல் தோன்றியது. அதே சமயம் இத்தொகுப்பைச் சேராத வேறு

பல சங்கீதங்கள், விவிலியத்தின் வேறு பகுதிகளில் காணப்படுகின்றன என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

2. பெயர்: விவிலியத்தில் மனவெழுச்சியை எடுத்துக்கூறும் 150 பாடல்களைக் கொண்ட தொகுப்பைச் சங்கீதநூல் என்றழைக்கிறோம். புதிய பொது மொழிபெயர்ப்பில் திருப்பாடல்கள் நூல் என்றழைக்கிறோம். இப்பெயரோ வேறு எந்தப் பெயருமோ இந்நூலை முழுவதும் விளக்கும் முறையில் அமையவில்லை. இத்தகைய பாடல்கள் ''நரம்பிசைக்கருவிகளுடன் பாடப்படும் பாடல்கள்'' என்று பொருள்படும் ''மிசுமோர்'' என்ற பெயரால் எபிரேய மொழியில் அழைக்கப்பட்டன. இப்பெயர் இத்தொகுப்பின் 57 பாடல்களுக்குத் தலைப்பாய் அமைந்துள்ளது. இச்சொல்லை எழுபது நூல் ''ப்சால்மோஸ்'' என்று கிரேக்கத்தில் மொழிபெயர்த்தது. இந்த 150 பாடல்கள் அடங்கிய தொகுப்பை எபிரேய விவிலியம் ''போற்றுரைப் பாடல்கள்'' அல்லது ''புகழ்ப்பாக்கள்'' என்று பொருள்படும் ''தெகில்லீம்'' என்ற பன்மைப் பெயரால் அழைத்தது. இப்பெயர் நூல் முழுவதற்கும் பொருந்தியதன்று. ஏனெனில், போற்றுரைகள், புகழுரைகளைத் தவிர, பிற இலக்கிய வகைப்பாடல்களும் இந்நூலில் உண்டு. செபம், மன்றாட்டு என்று பொருள்தரும் ''தொபில்போத்'' என்ற பெயரும் இந்நூலின் பெயராய் ஒரு காலத்தில் வழக்கில் இருந்துள்ளது. இப்பெயரும் இந்நூலை முழுவதும் விவரிக்கவில்லை. இந்நூலின் பொருளடக்கத்தை விவரிக்கும் முறையில் இந்நூலுக்கு ஒரு பெயர் அளிப்பது கடினமாகும். வசதியை முன்னிட்டு, தமிழில் இப்போது வழக்கிலுள்ள சங்கீதங்கள் என்ற பொதுப் பெயராலேயே இந்நூலை இக்கட்டுரையில் குறிப்பிடுவோம்.

3. வாசகங்களும் எண்ணிக்கை முறையும்: கி.மு 12-3-ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் பலகட்டங்களில், பல்வேறு சூழ்நிலைகளில் தோன்றிய பாடல்களின் கதம்பத் தொகுப்பாகும் இந்நூல். இதன் எபிரேய வாசகம் பல பாடல்களில் மிகவும் பழுதுபட்டுள்ளது, இதை நிவர்த்தி செய்ய நவீன மொழிபெயர்ப்பாளர்கள் பழங்காலத்து மொழி பெயர்ப்புகளையும் யூகத்தையும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இந்நூலில் எழுபது நூலின் கிரேக்க மொழிபெயர்ப்பும் பலவாறு பழுதுபட்டிருக்கிறது. ஆனால் பழங்கால மொழிபெயர்ப்புகளில் இது முக்கியமானதாகும். எபிரேய, கிரேக்க வாசகங்களுக்கிடையே பல இடங்களில் மலைப்புத் தரக்கூடிய வேறுபாடுகள் உண்டு. எழுபதுநூல் வாசகத்தைப் பின்பற்றி பல இலத்தீன் மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டன. இவற்றில் ஒன்றைப் புனித எரோனிமு திருத்தி அமைத்துச் சங்கீதநூலுக்கு ''வுல்காத்தா'' வாசகத்தை அமைத்தார். மேற்கூறப்பட்ட இலத்தீன் மொழிபெயர்ப்புகள் இந்நூல் பற்றிய வாசகத் திறனாய்வுக்கு மட்டுமல்லாது, திருச்சபை ஆசிரியர்களிடையேயும் நமது வழிபாட்டிலும் முக்கியத்துவம் உடையன. புனித எரோனிமு, எபிரேயத்திலிருந்து நேரடியாக இலத்தீனில் இந்நூலை மொழிபெயர்த்தார். ஆனால் அது வுல்காத்தா வாசகத்தில் இடம் பெறவில்லை. ஆனால் அவர் காலத்திலிருந்து எபிரேய வாசகத்திற்கு ஒரு முக்கிய சாட்சியாக உள்ளது. காலப்போக்கில் பல இலத்தீன் மொழிபெயர்ப்புகள் எழுந்தன. இறுதியாக 1945-இல் 12-ஆம் பாப்பு பத்திநாதரின் அங்கீகாரத்தில் வத்திக்கான் புதிய மொழிபெயர்ப்பைச் செய்து பதிப்பித்தது.

இந்த வாசகம் சில ஆண்டுகளுக்குத் திருச்சபைக்கட்டளைச் செபத்தில் பயன்பட்டது. 23-ஆம் அருளப்பர் மீண்டும் வுல்காத்தா வாசகம் கட்டளைச் செபத்தில் பயன்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். 6-ஆம் பவுல் கட்டளையின்படி வுல்காத்தா வாசகம் திருந்திய பதிப்பாய்ப் பதிப்பிக்கப்பட்டு, கட்டளைச் செபத்தில் பயன்படுகிறது.

எபிரேய விவிலியம் சட்டம், இறைவாக்கினர்கள், நூல்கள் என்று முப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்றாவதான நூல்கள் என்ற

தொகுப்பில் முதலாவதாகச் சங்கீத நூல் அமைந்துள்ளது. எழுபது நூலிலும், வுல்காத்தா வாசகத்திலும் ''ஞான நூல்கள்'' அல்லது ''போதக நூல்கள்'' என்ற தொகுப் போடு இந்நூல் சேர்க்கப்பட்டு, அதில் இரண்டாவது நூலாக இடம் பெறுகிறது. இது அவ்வளவு பொருத்தமுடையது அன்று.

சங்கீதங்களை எண்ணுவதில் எபிரேய, கிரேக்கப் பாரம்பரியங்களிடையே வேறு பாடு உண்டு. இது, சில சங்கீதங்களின் ஒற்றுமை பற்றிய வேறுபட்டபழங்காலப் பாரம்பரியங்களின் விளைவாகும். எபிரேய முறையைப் பிரிவினைச் சகோதரர்களின் மொழிபெயர்ப்புகள் பின்பற்றுகின்றன. எழு பது நூல் முறையைக் கத்தோலிக்க மொழி பெயர்ப்புகள் பின்பற்றி வந்துள்ளன. நமது வழிபாட்டு வாசகங்களில் இம்முறையே பின்பற்றப்படுகிறது. சமீபகாலத்தில் கத்தோ லிக்க மொழிபெயர்ப்புகள் இரண்டு முறை களையும் குறிக்கும் வழக்கத்தைப் பின்பற்று கின்றன.

இரண்டு முறைகளுக்குமிடையேயுள்ள வேறுபாட்டைப் பின்வரும் திட்டம் தெளி வாக்கும்.

எபிரேய முறை	எழுபதுநூல், வுல்காத்தா முறை
1—8	1—8
9+10	9
11—113	10—112
114+115	113
116	114+115
117-146	116—145
147	146+147
148—150	148—150

பொதுவாக 9-ஆம் சங்கீதத்திற்குப் பிறகு எபிரேய முறை எண், எழுபதுநூல் முறை எண்ணை விட ஒன்று அதிகமாக உள்ளது. இப்போது எபிரேய எண்ணிக்கை முறை யையே பயன்படுத்துகின்றனர்.

4. ஆசிரியர்(கள்): இந்தச் சங்கீத நூலுக்கு ஆசிரியர்(கள்) யார்? என்று உறுதியாகக் கூற முடியாது. எபிரேய வாசகத்தில் 116 சங்கீதங் களுக்கும் எழுபது நூல் வாசகத்தில் 125 சங்கீதங்களுக்கும் தலைப்புகள் உண்டு. பிற வற்றை ''அநாமதேயச் சங்கீதங்கள்'' என்று நகைச்சுவையாக அழைப்பதுண்டு. சங்கீதத் தலைப்புக்களில் தாவீது, கோராகு, மோசே, சாலமோன் போன்ற பெயர்கள் வருகின்றன. ஆசிரியர்களின் முழுப்பட்டியலையும் கொடுப்பது முடியாத காரியம். தனிச் சங்கி தங்களின் பொருளடக்கத்தைவைத்து அவற் றின் ஆசிரியரை அடையாளம் காட்டலாம் என்பதும் இயலுவதாகத் தெரியவில்லை. இப்போது தனிப்பட்ட சங்கீதங்களின் ஆசிரி யரை அடையாளம் காட்ட முயல்வது ஆய் வாளர்களது கவனத்தைக் கவர்ந்துள்ளது.

இந்த ஆய்வில் இரு பிரச்சனைகள் உண்டு. தலைப்புகளில் வரும் பெயர்கள் தனிப்பட்ட சங்கீதங்களின் ஆசிரியரை அடையாளம் காட்டச் சிறிது உதவுகின்றன எனலாம். இப்பெயர்கள் இச்சங்கீதங்களுக்கு இவர்கள்தான் ஆசிரியர் என்று காட்டுகின்ற னவா? அல்லது அவர்களோடு தொடர்பு டைய மற்றொரு பொருளைச் சுட்டுகின்ற னவா? இதற்குப் பதில் கூறுவதைப் பொறுத்து அடுத்த கேள்வி எழலாம். இத் தலைப்புகள் ஆசிரியரைக் குறிக்கின்றன என் றால், இப்பாரம்பரியம் நம்பத்தகுந்ததா? அல்லது இவை பிற்காலத்தில் சேர்க்கப்பட் டதால் ஐயப்பாடு உடையனவா?

இக்கேள்விகளுக்கு விடையளிக்க பெயர் களுடன் வரும் ''லாமெட்'' (lamed) என்னும் வேற்றுமை உருபால் ஏற்படும் பொருள் வேறுபாடுகளை அறிந்திருப்பது அவசியம். இதுபற்றி தலைப்புகள், - குறிப்புகள் என்ற தலைப்பின்கீழ் பிறகு பார்ப்போம். இதன் படி, ''லெதாவீத்'' என்பதற்குத் ''தாவீதால் இயற்றப்பட்டது'' என்ற பொருளைத் தவிர, தாவீதின் தொகுப்பைச் சேர்ந்தது; தாவீதுக்கு அர்ப்பணிக்கப்பட்டது; தாவீதின் வீட்டா ருக்கு அதாவது தாவீது பாரம்பரிய அரசர் களுக்குரியது; தாவீதைப் பற்றியது என்பன போன்ற பல பொருள் கூறலாம். இந்த ''லெ'' வேற்றுமை உருபு அப்பெயர் கொண் டவர்தான் அந்தச் சங்கீதத்தை இயற்றினார் என்று உணர்த்த வேண்டியதில்லை. அப்படிப்

பொருள் கொடுக்கவுமில்லை. அதை மறுக்கவும் இல்லை.

இருப்பினும் தாவீது பெயரைத் தலைப்பாகக் கொண்ட சில சங்கீதங்களுக்காவது அவர் ஆசிரியராக இருக்க வேண்டும் என்று சிலர் கூறுவர். இதற்கு ஆதரவாக அராபிக் போன்ற மற்ற செமித்திய மொழிகளில் இதே மரபு வழக்கு பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பர். ஆனால் உகாரித்து வாசகங்களில் இந்த ''லெ'' உருபு பாடலைப் பற்றியது, பாடல் தொகுப்பைச் சேர்ந்தது என்ற பொருளில் பயன்பட்டுள்ளது. ஆகையால் தாவீதுதான் இச்சில சங்கீதங்களுக்கும் ஆசிரியர் என்று உறுதியாகக் கூறவும் முடியாது, மறுக்கவும் முடியாது.

இனி, தாவீதையும் சங்கீத நூலையும் தொடர்புபடுத்தும் பாரம்பரியங்களைப் பார்ப்போம். வரலாற்று, இறைவாக்கு நிகழ்ச்சியுரைகளில், தாவீது சங்கீதங்களோடும் இசையாசோடும் தொடர்புபடுத்தப்படுகிறார். முதலாம் சாமுவேல் நூலில் தாவீது, ''யாழிசைஞன்'', அவருக்கு ''யாழ்மீட்டத்தெரியும்,'' ''தீய ஆவி சவுலைப் பிடிக்கும்போதெல்லாம் தாவீது யாழ் எடுத்து மீட்டுவான்''. (1 சாமு 16:16-23) என்ற குறிப்புக்கள் உள்ளன. இரண்டாம் சாமுவேல் நூலில், தாவீதின் புலம்பல் பாடல் (2 சாமு 1:17-27), இரு நன்றிப் பாடல்கள் (2 சாமு 22; 1 நாள் 16:8-36), தாவீதின் இறுதி உயில் (2 சாமு 23:3-7) ஆகியவையும், தாவீது ''இஸ்ராயேலின் இனிமையான பாடகர்'' (23:1) என்ற குறிப்பும் இடம் பெறுகின்றன. அவரின் இசைக் கருவி செய்யும் ஆற்றல் ஆமோ 6:5-இல் சுட்டிக் காட்டப்படுகிறது. அவர் பாடகர்களையும், இசையமைப்பாளர்களையும் நியமித்து இறைவழிபாட்டில் அவர்களது அலுவலை நிர்ணயித்தார் என்றும் கூறப்படுகிறது (1 நாள் 15:16-24; 16:7-35). பிற்காலத்தில் இசையும் வழிபாடும் தாவீதின் கட்டளைப்படி நடப்பதாகக் குறிப்பிடப்படுகின்றன (எஸ் 3:10; நெகே 12:24). 2 சாமு 22-இல் வரும் நன்றிப்பாடல் ஏறத்தாழ முழுவதும் சங் 17-இல் அமைந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டில், '' தாவீது சங்கீதங்களின் ஆசிரியர்'' என்று இயேசு சுட்டுகிறார் (மத் 22:43-44; மாற் 12:35-36; லூக் 20:42-43). அப்போஸ்தலர் பாரம்பரியமும் இதே கருத்தைப் பிரதிபலிக்கிறது (அ.ப. 1:16-20; 2:25-34; 4:25). பவுலும் தனது திருமுகங்களில் சங்கீதங்களின் ஆசிரியராகத் தாவீதைக் குறிக்கிறார் (உரோ 4:6;11:9; எபி 4:7). இந்தப் புதிய ஏற்பாட்டுக் கூற்றுக்களைத் தாவீதுதான் சங்கீதங்களுக்கு ஆசிரியர் என்று நிரூபிப்பதாக எடுத்துக் காட்ட முடியாது. ஏனெனில் அவை அக்காலப் பாரம்பரியத்தையே பிரதிபலிக்கின்றன. தொடக்கத்திலிருந்து யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் இந்நூலுக்குத் தாவீதுதான் ஆசிரியர் என்று கருதி வந்துள்ளன. மேலும் இந்நூலுக்குத் ''தாவீதின் சங்கீதங்கள்'' என்ற பெயரையே வழங்கின.

ஆகவே ''லெ'' என்ற வேற்றுமை உருபு பெயர்களுடன் வரும்போது பல பொருள் கொடுக்கவல்லது. இதில் ஒன்று, அப்பெயர் கொண்டவர்தான் அச்சங்கீதத்தை இயற்றியவர் என்று சுட்டலாம். யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள், தாவீதுதான் சங்கீதங்களுக்கு ஆசிரியர் என்று கருதி வந்துள்ளன. இந்தக் கருத்தை ஆசிரியத்தன்மை பற்றிய நமது காலக் கருத்துப்படி எடுத்துக் கொள்ள முடியாது. ஐந்நூலை மோசேயும் ஞானநூல்களைச் சாலமோனும் எழுதியதாகப் பொதுவாகக் கூறுவதுபோல், சங்கீதங்களைத் தாவீது எழுதினார் என்பது பொதுப் பாரம்பரியமாகும். இவற்றிலிருந்து சங்கீத நூலில் தாவீதோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ள சில அல்லது பல சங்கீதங்களுக்கு அவர் ஆசிரியராக இருந்திருக்கலாம் என்று கருதலாம்.

இதையே சங்கீத நூலில் வரும் மற்ற ஆட்களின் பெயர்களுக்கும் கூறலாம். அப்பெயர்களுடையவர்கள் பற்றிய விவிலியக் குறிப்புகளைப் பிறகு பார்ப்போம். பெரும்பாலான சங்கீதங்களின் ஆசிரியர்கள் ஆள், பெயர் அறியப்படாதவர்கள். இவர்களைப் பற்றி எதுவும் உறுதியாகக் கூறமுடியாது. பல சங்கீதங்களின் தோற்றம் இஸ்ராயேலின் வழிபாட்டுச் சூழ்நிலையில் காணப்பட

வேண்டும். அவற்றின் ஆசிரியர்களை ஆலய ஊழியர்களிடையே காண முயலவேண்டும். அவர்களது பெயர்கள் பிற்காலத்தவர்க்குக் கிடைக்கவில்லை. இவ்வாறு பல ஆசிரியர்களாலும் இசை வல்லுநர்களாலும் பல்வேறு காலங்களில் தோன்றிய பாடல்களின் தொகுப்பாகும் சங்கீதநூல். ஆசிரியர்களைப் பற்றிய துல்லியமான விவரங்கள் இல்லாமை, சங்கீதங்களைப் புரிந்து கொள்வதற்குத் தடையாக இருக்க வேண்டியதில்லை. சங்கீதங்கள் மனிதனுக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள உறவைப் பாடுகின்றன. இந்த உறவு காலத்துக்கு அப்பாற்பட்டது. எல்லாருக்கும் எல்லாக் காலங்களுக்கும் உரியது.

5. காலம்:சங்கீத நூலின் ஆசிரியர்களைப் பற்றிய ஆய்வு கடினமென்றால், அது தோன்றிய காலத்தைக் கணிப்பது அதைவிடக் கடினமானது. தாவீதின் வாழ்வோடு சங்கீதங்களைத் தொடர்புபடுத்தும் தலைப்புக்களும் குறிப்புக்களும் பல உள்ளன: சங் 3;7; 18; 34; 51; 52; 54; 56; 57; 59; 60; 63; 142. இவை சங்கீதங்களைத் தாவீதுக்குச் சாற்றிக் கூறிய பிற்காலத்தில் புகுத்தப்பட்டவை. ஆகவே இவற்றிற்கு வரலாற்று மதிப்பு இல்லை. இவை சங்கீதங்களின் காலத்தைக் கணிக்க எந்த உதவியும் தரக்கூடியவை அன்று. இவை சங்கீதங்களுக்கு வரலாற்று விளக்கம் அளிக்கும் முதல் முயற்சியாகும் எனக் கொள்ளலாம்.

சங்கீத நூலின் காலத்தைக் கணிப்பதில், ஆய்வாளர்களின் முன்கருத்துக்கள் அவர்களது ஆய்வுகளைப் பெரிதும் பாதித்துள்ளன. வெல்கவுசன் போன்றவர்கள் இந்நூலின் பெரும்பகுதி மக்கபேயர் காலத்தில் (கி.மு. 200-150) தோன்றியது என்பர். ஆனால் இரு ஏற்பாடுகளுக்கும் இடையிட்ட காலத்திய இலக்கியங்களின் ஆய்வும், குறிப்பாகக் கும்ரான் குகைகளில் கண்டெடுக்கப்பட்ட இலக்கிய ஏடுகளின் ஆய்வும் சங்கீதங்கள் வடிவத்திலும் நடையிலும் பொருளடக்கத்திலும் இக்காலத்தைச் சேர்ந்தவை அன்று என்று காட்டுகின்றன. ஆகவே இக்கருத்துக்கு இப்போது மதிப்பில்லை. வேறுசிலர், காலத்தை எளிதாக நிர்ணயிக்கக்கூடிய பிறநூல்களோடு, சங்கீதங்கள் கொண்டுள்ள இலக்கிய, இறையியல் தொடர்புகளை ஆராய்ந்து, சங்கீத நூலுக்குக் காலம் கணிக்க முயன்றுள்ளனர். இதிலும் பல சிக்கல்கள் உண்டு. ஏனெனில் சங்கீதங்கள் நெடுங்காலமாய் வளர்ச்சியுற்றவை; மாற்றி அமைக்கப்பட்டவை. தனிப்பட்டோர் பாடல்கள் குழுவினுடையதாகவும், தனிநபரின் மன்றாட்டுகள் பொதுவழிபாட்டுப் பாடல்களையும், புனித இடங்களுக்குரிய பாடல்கள் எருசலேம் ஆலயத்தில் பாடப்படுவதாகவும், அரச சங்கீதங்கள் மெசியாப் பாடல்களாகவும், வரலாற்றுப்பாடல்கள் இறுதிக்கால முன்னோக்குடையவையாகவும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளனவாகத் தெரிகின்றன. காலம் கடந்து போனவை மாற்றி அமைக்கப்பட்டு, இந்நூல் தொகுக்கப் பட்ட காலத்திற்குரியனவாகவும், வருங்கால முன்னோக்குடையவையாகவும் மாற்றப்பட்டுள்ளனவாகவும் தெரிகின்றன. இன்னும் சிலர் பழங்காலச் செமித்திய, கானானிய மொழிகளை ஆய்வு செய்து சங்கீதங்களின் மூலவடிவத்தைக் காணவும் காலத்தைக் கணிக்கவும் முயன்றுள்ளனர்.

பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பாகிய எழுபது நூல் கி.மு. 250-ஐ ஒட்டியதாகும். இந்நூலின் எபிரேய கிரேக்க வாசகங்களிடையே பல வேறுபாடுகள் உள்ளன. இவை எபிரேய மூலத்தையும் செமித்திய மொழி மரபுகளையும் சரியான முறையில் கிரேக்க மொழி பெயர்ப்பாளர்கள் அறியாததால் ஏற்பட்டனவாகத் தெரிகின்றன். இவ்விதம் புரியாத நிலையை உண்டாக்க இரண்டு வாசகங்களுக்குமிடையே நீண்ட காலம் இடையிட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

ஆய்வாளர்களின் கருத்துக்களையெல்லாம் கவனத்தில் கொண்டு இந்நூல் தோன்றிய காலக்கணிப்பைப் பின் வருமாறு சுருக்கமாகக் கூறலாம். சங்கீத நூலின் பல பாடல்கள் பாபிலோன் அடிமைத் தனத்துக்கு (கி.மு. 587) முற்பட்டவை. இவற்றில் சில தாவீது அரசன் காலத்தில் (கி.மு. 1000-960)

தோன்றியிருக்க வேண்டும். அவர்தான் அவற்றை இயற்றினார் என்று கருதப்படுமள வுக்கு அவரோடு நெருங்கிய தொடர்புடை யனவாய் இருந்திருக்க வேண்டும். அல்போ ரிஸ் என்பவர் சங் 29 கானானியப் பாடலின் மாற்று அமைப்பாகும் என்றும், இதுதான் முழுச் சங்கீத நூலிலும் காலத்தால் முந்தியது என்றும் கருதுகிறார். நூலின் பல சங்கீதங் கள், குறிப்பாக அரச சங்கீதங்கள் அரசாட்சிக் காலத்தில் தோன்றியவையாகும். ஆனால் அவற்றின் பொருளடக்கம் தெளிவில்லாத பொதுத் தன்மையுடையது. ஆகவே இவற் றின் காலத்தைப் பரந்த அளவில்தான் சுட்டிக் காட்ட முடியும். யாவேயின் அரச மாண்புப் பாடல்கள் முந்தைய சங்கீதங்களையும் இரண்டாம் எசாயாவையும் எதிரொலிக்கின் றன. ஆகவே இவை நாடு கடத்தப்பட்ட காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். இது போலவே, எருசலேம் அழிவையும், நாடு கடத்தலையும் பற்றிய சங் 137-உம், நாடுகடத் தலிலிருந்து திரும்பியது பற்றிய சங் 126-உம் இக்காலத்தைச் சேர்ந்தனவாகும். அதன்பின் வந்த காலம், சங்கீத வளர்ச்சியில் செழிப்பான வசந்த காலமாகத் தோன்றுகிறது. இக்காலத் தில் திரும்ப அமைக்கப்பட்ட ஆலயத்தில் வழிபாடு புத்தெழுச்சி கொண்டு விளங்கி யது. ஆலயப் பாடகர்களின் நிலை உயர்த்தப் பட்டு,அவர்கள் லேவியர்களோடு ஒன்றாக் கப்பட்டனர். இக்காலத்தில் பல சங்கீதங்கள் தோன்றியதாகத்தெரிகிறது. இவ்வாறு இஸ் ராயேலின் தொடக்க காலத்திலேயே தோன்றி, தாவீது மன்னன் காலத்தில் புத்துயிர் பெற்ற இந்தச் சங்கீதஇயக்கம் வெகுகாலத்திற்கு, ஏறக்குறைய 700 ஆண்டுகளுக்கு நீடித்தது. இது எப்போது முடிவுற்றது என்று உறுதி யாகக் கூற முடியாது.

''சங்கீத நூல், நாடு கடத்தப்பட்ட போதும் அதற்குப் பின்னும் இயற்றப்பட்ட பாடல் களோடு, காலத்தால் முந்திய பழைய, மிகப் பழைய பாடல்களையும் கொண்டுள்ளது என்று பொதுப்படையாகக் கூறுவதோடு நாம் நிறைவடைய வேண்டும்'' என்று சங் கீத நூலின் காலக்கணிப்புப் பற்றி எயிஸ் ஃபெல்ட் என்பவர் கூறுவதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இஸ்ராயேல் பாபிலோ னுக்கு நாடு கடத்தப்பட்டது அதன் வர லாற்றை இரு பகுதிகளாகப் பிரிக்கும் ஒரு வரைகோட்டு நிகழ்ச்சியாகும். இதை வைத்து ஆய்வாளர்கள் சங்கீதங்களைப் பிரிப்பர். அதன்படி சங்7; 11; 19; 20; 28; 29; 41; 42; 43; 46; 49; 51; 67; 77; 98; 100; 107; 143 ஆகியவை, நாடு கடத்தலுக்குமுன் தோன்றியவையாகும். சங். 1; 8; 18; 22; 24; 30; 31; 32; 33; 36; 45; 47; 65; 73; 74; 76; 78; 84; 85; 89; 95; 96; 97; 99; 101; 102; 105; 106; 110; 114; 115; 117; 118; 121; 122; 124; 125; 127; 131; 134; 135; 142; 144; 145; 148; 149; 150 ஆகியவை நாடு கடத்தப்பட்ட போதும் அதற்குப் பின்னும் தோன்றியவை யாகும்; இதில் ஆய்வாளர்களிடையே கருத் தொற்றுமை உள்ளது.ஆனால் சங். 2; 4; 16; 50; 59; 71; 75; 79; 81; 82; 88; 92; 109 ஆகியவற்றை ஆய்வாளர்கள் தங்கள் முன் கருத்துகளுக்கேற்ப, நாடு கடத்தலுக்கு முன்னோ, பின்னோ தோன்றியது என்று கூறுவர்.

6. தலைப்புகளும் குறிப்புகளும்: இப் பகுதி, எபிரேய சங்கீத நூலுக்கும் சில மொழி பெயர்ப்புகளுக்கும் தேவையானதாகும். பல மொழி பெயர்ப்புகளில் இந்தத் தலைப்புக ளும் குறிப்புகளும் மொழிபெயர்க்கப்படுவ தில்லை.

எபிரேயத்தில் 116 சங்கீதங்களுக்கும் எழு பது நூலில் 125 சங்கீதங்களுக்கும் தலைப்பு கள் உள்ளன. பல இடங்களில் இத்தலைப்பு கள் சங்கீதங்களோடு ஒன்றிணைந்த பகுதியா கத் தெரியவில்லை. இவை பிற்காலப் பதிப் பாசிரியரால் சேர்க்கப்பட்டவையாக இருக்க லாம். இவை தனிப்பட்ட சங்கீதங்களின் மூலப்பொருளையும், சூழ்நிலையையும் அறிய உதவுவதைவிட, சங்கீதநூலில் அந்தத் தனிச் சங்கீதங்களின் பாகம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள ஓரளவு உதவு கின்றன. தற்சமயம் சங்கீதநூல் ஆய்வில், இத்தலைப்புகள் அவ்வளவு முக்கியத்துவம் பெறுவதில்லை. மோவின்கெல் போன்ற வர்கள், இவை ''மிட்ராசிக்'' அதாவது

''விளக்கக்கதை'' தன்மையுடையன என்று ஒதுக்குவர். ஆயினும், இவை சங்கீதங் களைப் பற்றிய பிற்கால ஆய்வின் முதல் முயற்சிகளை எடுத்துக் காட்டுகின்றன.

சங்கீத நூலுக்குப் புறம்பேயுள்ள விவிலியப் பாடல்களுக்கும் தலைப்புகள் உண்டு. சான்று : தாவீதின் நன்றிக்கீதம் (2 சாமு 22:1); எசேக்கியாவின் நன்றிக்கீதம் (எசா 38:9); வரலாற்றுத் தலைப்பு கொண்ட அபக்கூக் கின் கீதம் (அப 3:1.19). இசைக் குறிப் புடைய கீதங்களும் உண்டு. இவை, இக்கீதங் கள் இயற்றப்பட்டபோது இத்தலைப்புகள் சேர்க்கப்பட்டு, பின் முழுத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று சுட்டுகின் றன. அதுபோலவே சங்கீதங்களின் தலைப்பு களும், இயற்றப்பட்ட காலங்களிலிருந்தே வழக்கில் இருந்திருக்க வேண்டும். இப்படிப் பட்ட தலைப்புகளைப் புதிய ஏற்பாட்டிலும் காணலாம் (மத் 12:35; அ.ப. 2:25.35). இத்தலைப்புகள் இறை ஏவுதல் பெற்றவை என்று இப்போது ஏற்றுக் கொள்ளப்படுவ தில்லை.

இத்தலைப்புகள் கிறிஸ்துவத்திற்கு முன்பே, யூதப்பாரம்பரியத்தால் புகுத்தப் பட்டு வழக்கில் இருந்திருக்க வேண்டும். தொடக்க மொழிபெயர்ப்புகளில் இத் தலைப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின் றன. ஆனால் மொழிபெயர்ப்பாளர்கள் இத் தலைப்புகளில் பலவற்றைப் புரிந்து கொண்ட தாகத் தெரியவில்லை. கி.மு. 250-ஐ ஒட் டிய கிரேக்க மொழி பெயர்ப்பாகிய எழுபது நூல் இவற்றைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே இத்தலைப்புகள் இம்மொழி பெயர்ப்புக் காலத்திற்கும் முந்திய தாக இருக்க வேண்டும் என்று ஆய்வாளர் சிலர் கருதுவர். இப்படியும் இருக்கலாம்; அல்லது மொழிபெயர்ப்பாளர்கள் யூதவழி பாடு, இசை ஆகியவற்றைப் போதிய அளவு அறிந்திருக்கவில்லையென்றோ, இத்தலைப் புகளுக்குச் சமமான கிரேக்கச் சொற்கள் கிடைக்கவில்லையென்றோ காரணம் கூற லாம்.

பொதுவாக இத்தலைப்புகளும் குறிப்புக ளும் ஐந்து வகை விவரங்களைத் தருகின் றன. அ) பல சங்கீதங்கள் ஒரு தனி நப ரோடோ குழுவோடோ தொடர்பு கொண் டுள்ளன. தாவீது என்ற பெயர், எபிரேய நூலில் 73 தடவையும் கிரேக்க மொழி பெயர்ப்பில் 82 தடவையும் வருகிறது. சங்கீத நூலில் வரும் மற்றப் பெயர்கள், சாலமோன் (72; 127), மோசே (90), ஆசாபு (12 தடவை) எசுராகியரான ஏமான் (83), ஏத்தான் (89) கோராகின் புதல்வர்கள் (11 தடவை), இசை இயக்குநர் (50-க்கும் மேல்).

இப்பெயர்களுக்கு முன் ''லாமெட்'' (La-med) என்ற வேற்றுமை உருபு சேர்க்கப்படு கிறது. சங்கீதங்களின் ஆசிரியத்தன்மையைப் புரிந்துகொள்ள இந்த வேற்றுமை உருபால் ஏற்படும் பொருள் வேறுபாடுகளை அறிந் திருப்பது அவசியம். இந்த உருபு பலபொருள் கொடுக்கக் கூடியது. சூழ்நிலையை வைத் துத்தான் உறுதியாகப் பொருள் கூற முடியும். ஆனால் சங்கீதங்களின் சூழ்நிலைகள் பொது வாகத் தெளிவில்லாதவை. ஆகவே அவற்றை மட்டும் வைத்து, ஐயப்பாடுகளை நீக்க முடியாது. ஏனெனில் இத்தலைப்புகள் பெரும்பாலும் குறிப்புகளாக அல்லது பதிப் பாசிரியரின் ஒருவகை மரபுச் சொற்களாக உள்ளன. ஆகவே சங்கீதங்களைப் பொறுத்த மட்டும் இலக்கணம், சூழ்நிலை ஆகியவற் றுள் ஐயப்பாடுகள் உள்ளன.

இந்த ''லாமெட்'' உருபு தமிழில் ஐ, ஆல், கு, இன், அது போன்ற வேற்றுமை உருபு களைக் குறிக்க வல்லது. இவ்வாறு, ''லெ தாவீது'' (Le David) என்ற சொல் தாவீதால், தாவீதுக்கு, தாவீதின், தாவீதினது, தாவீதி னுடைய, தாவீதைப் பற்றி என்று பலவாறு பொருள் கொடுக்கவல்லது. இவ்வாறு பிற பெயர்களுக்கும் கூறலாம். ஆகையால் இந்த உருபு எப்போதும் பாடலை இயற்றிய ஆசிரி யரைக் குறிக்கிறது என்று கூறுவது கடினம். இதுபற்றி ஏற்கனவே கூறியுள்ளோம்.

ஆ. சில தலைப்புகளும் குறிப்புகளும் வர லாற்றுக் குறிப்புகளைக் கொடுக்கின்றன.

இவை பெரும்பாலும் தாவீதோடு தொடர்புடையன. இவற்றின் கருத்து தாவீதுக்குப் பொருந்தியதாக உள்ளது *(3; 7; 18; 34; 51; 52; 56; 57; 59; 60; 63; 142)*.

இ. இசை, இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகள்: 'Lamme nasseah' என்ற எபிரேயச் சொல் தாவீதின் பெயருக்குப் பின்னும் இசைக் குறிப்புக்கு முன்னும் அடிக்கடி தலைப்புகளில் வருகிறது (55 தடவை). இச்சொல்லுக்குப் பொருள் என்ன? உறுதியாக ஒன்றும் கூற முடியாது. கிரேக்க, வுல்காத்தா பதிப்புகள் இதை ''முடிவுரை'' என்று மொழி பெயர்க்கின்றன. பிற மொழிபெயர்ப்புகளில் இது பெரும்பாலும் ''பாடகர்குழு இயக்குநர்'' என்று மொழிபெயர்க்கப்படுகிறது. ஒரு வேளை, இது மற்றொரு மூலத் தொகுப்பைக் குறிக்கலாம்.

சில குறிப்புகள் இசைக்கருவியைக் குறிக்கின்றன. இவ்வாறு, ''நெகினோத்'' (Neghinoth=String) என்ற சொல் நரம்பிசைக் கருவியைக் குறிக்கலாம் *(4; 6; 54; 55; 67; 76)*. காத்தினுடைய யாழ் (harp) (8; 81; 84). ''நெகிலோத்'' (nehiloth=wind) என்பன குழலிசைக் கருவிகளைக் குறிக்கலாம் *(5)*.

சில தலைப்புகள் மக்களிடையே பரவலாக இருந்த மெட்டுகளைக் குறிப்பதாகத் தெரிகின்றன. இது, நாம் சில சமயம் ''காற்றினிலே வரும் கீதம் என்ற மெட்டில்'' என்று குறிப்பது போன்றது. இவ்வாறு ''அழிக்காதே'' (Do not destroy 57; 58; 59; 75), ''காலைப் பெண்மான்'' (The hind of the dawn 22), ''தொலைவிலுள்ள தேவதாரு மரத்தில் வாழும் மௌன மாடப்புறா'' (The dove of on far-off terelinth 56), ''மகனுக்காக உயிரைக் கொடு'' (Muthu-labben 9), ''காத்து நகர்ப் பண்'' (The Gittith, 81; 84), ''லீலிமலர்கள்'' (Lilies, 45; 69), ''சான்று பகர் லீலி மலர்'' (The lilly of the Testimony=shushan eduth 60) போன்ற தலைப்புகள் சமூக வாழ்வில் பயன்பட்ட மெட்டுகளைக் குறிக்கும் பெயர்களாக இருக்கலாம்.

ஈ. 1) சில தலைப்புகள் பாடல் வகையை விவரிப்பதாகத் தோன்றுகின்றன. Sir (=Song, பாடல்). இசையோடு பாடப்பட்டது. ஒரு வேளை சடங்குப் பொருளை உணர்த்தலாம். வழிபாட்டில் பயன்பட்டிருக்கலாம் *(30)*.

Mizmor (=இசைத்துக்கொண்டு; *57 தடவை*). இதை எழுபதுநூல் ப்சால்மோஸ் என்று மொழிபெயர்க்கிறது. நரம்பிசைக் கருவிகளுடன் பாடப்படுவது.

Maskil (=*அறப்பாடல்? 13 தடவை*). போதகப் பாடலைக் குறிக்கலாம். ஆனால் போதகம் இல்லாத சங்கீதங்களிலும் காணப்படுகிறது. கலைப்பண்போடு இயற்றப்பட்ட பாடலைக் குறிக்கலாம்.

Siggayon (=*புலம்பல்? 7*) புலம்பல் பாடலைக் குறிக்கலாம்.

Tephilla *(செபம், மன்றாட்டு; 5 தடவை; 17; 86; 90; 102)*. செபத்தையோ மன்றாட்டையோ குறிக்கலாம்.

Tehillah (போற்றுரை, திருப்பாடல்; *145*). புகழ் அல்லது துதிப் பாடலைக் குறிக்கலாம். இச்சொல்லின் எபிரேயப் பன்மை, ஆண்பால் சொல் (Tehillim) சங்கீதநூல் முழுவதையும் குறிக்க எபிரேயத்தில் பயன்படுகிறது.

Miktan *(= கழுவாய்ப்பாடல்? 6 தடவை)*. பொருள் தெரியவில்லை. பரிகாரத் தபசுப் பாடல் அல்லது இரகசிய மன்றாட்டு என்று பொருள்கூற சிலர் முயன்றுள்ளனர் *(சங் 56; 57; 58; 59; 60; 74)*.

2) சில வழிபாட்டுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. சான்று: ஆலய அர்ப்பணம் *(30)*, ஓய்வுநாள் *(92)*, நினைவுகூர்தல் *(38; 70; 100;* இவை ஆலயத்தில் நடந்த குறிப்பிட்ட வழிபாட்டுச் சடங்குகளைக் குறிக்கலாம்). இவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையாகத் தெரிகின்றன.

உ) இவைதவிர, பல புதிரான சொற்கள் வருகின்றன. அவற்றில் ஒன்று Sela என்பதாகும். இச்சொல் தலைப்பில் வரவில்லை. சங்கீதங்களின் இடையிலும் முடிவிலும் வரு

கிறது. சில சங்கீதங்களில் ஒன்று முதல் நான்கு தடவை கூட வருகிறது. இது 39 சங்கீதங்களில் 71 தடவை வருகிறது. இதன் பொருள் என்ன என்று தெரியவில்லை. ஒருவேளை, வழிபாட்டுக் குறிப்பாகவோ இசைக் குறிப்பாகவோ இருக்கலாம். இதை எழுபது நூல் ''சிறிது நிறுத்து'' என்று மொழி பெயர்க்கிறது. வுல்காத்தா போன்ற பதிப்புகள் இதைவிட்டு விடுகின்றன. எரோனிமு, இது ''என்றென்றும் ஆமென்'' என்று பொருள் படுவதாகக் கருதினார். இதற்குப் பிற்கால யூத நூல்கள் ஆதரவு தருகின்றன. சில மொழிபெயர்ப்புகள் Sela என்ற சொல்லை அப்படியே பயன்படுத்துகின்றன. சொல்லிலக்கணப்படி, இச்சொல் உயர்த்துதலைக் குறிப்பதாகத் தெரிகிறது. தொனியை உயர்த்துதல், கைகளை உயர்த்துதல், உள்ளத்தை உயர்த்துதல் என்று பலவாறு பொருள் கூறப்பட்டுள்ளது. எதுவும் உறுதியான ஆதாரம் கொண்டதன்று.

மேலும், Mahalat (= நோயின் துயரில்? 53;88), Alamoth (= இளமகளிர், 46), Mut Labhen (9) போன்ற பல புதிரான தலைப்புகள் சங்கீதங்களில் காணப்படுகின்றன. இவை, ஒருவேளை மெட்டுகளைக் குறிக்கலாம்.

ஊ) மூல எபிரேய நூலுக்கும், அதன் மொழிபெயர்ப்புகளுக்குமிடையே, இத் தலைப்புகளிலும் குறிப்புகளிலும் காணப்படும் வேறுபாடுகள், இவைபற்றிய பாரம்பரியம் உறுதியானதல்ல என்று காட்டுகின்றன. இவை இறை ஏவுதல் பெற்றவையா? இல்லை என்பதே இக்கால அறிஞரது முடிவு. இவை சங்கீதங்களை இயற்றிய ஆசிரியர்களது வேலைப்பாடன்று. பிற்காலப் பதிப்பாசிரியர்கள் இவற்றைச் சேர்த்திருக்கலாம். 1910-ஆம் ஆண்டு பாப்புவின் விவிலியக் குழுவின் அறிக்கை இவை மூலத்தொகுப்பைச் சேர்ந்தவை என்று வலியுறுத்தவில்லை. இவை பாரம்பரியத்தைச் சேர்ந்தவை என்ற அளவில் மதிப்புடையவை.

7. சங்கீத நூலும் பிறஇனப் பாதிப்பும்: கடந்த ஒரு நூற்றாண்டாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எமோரிய, அக்காதிய, உகாரித்து, எகிப்து ஆகிய மேற்காசிய நாட்டுப் பழங்கால இலக்கியங்கள், சங்கீதங்களின் வாழ்க்கைச் சூழ்நிலை, இலக்கிய வடிவம், யாப்பு அளவு, சொற்றொகுதி ஆகியவற்றைப் புரிந்து கொள்ள மிகுந்த ஒளி அளிக்கின்றன. இலக்கிய வடிவங்களில் மெசபொத்தாமியாவிற்கும் இஸ்ராயேலுக்கும் இணைவுத் தன்மை உள்ளது. நான்காம் அமென் ஒட்டாப் சூரியனைப் பாடிய பாடலுக்கும், சங் 104க்குமிடையேயுள்ள ஒற்றுமை வெகுகாலமாக அறியப்பட்ட தொன்றாகும். சங்கீதநூல் எகிப்திய மன்றாட்டுக்களோடு கொண்டிருக்கும் ஒற்றுமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பழங்கால உகாரித்து கதைகளுக்கும் சங்கீதங்களுக்கும் உள்ள உறவு இப்போது தெரியவந்துள்ளது. கானானியர் இலக்கியம் வழியாக, உகாரித்து இலக்கியம் சங்கீதங்களைப் பாதித்திருப்பதாகத் தெரிகிறது. இதற்கு சங் 29; 69 தெளிவான சான்றுகளாகக் கருதப்படுகின்றன. அதேபோது இரு இலக்கியங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளையும் மறந்துவிடக்கூடாது. உகாரித்து ஏடுகளோடு சங்கீதநூல், பாடல் அமைப்பிலும் சொற்றொகுதியிலும் அதிக ஒற்றுமை கொண்டுள்ளது. ஆனால் உகாரித்தில் சங்கீதங்கள் இல்லை.

பழைய ஏற்பாட்டுச் சங்கீதம், மேற்காசியாவுக்குப் பொதுவான பரந்த சமய வழிபாட்டு இலக்கிய அமைப்பைக் கொண்டுள்ளது. மெசபொத்தாமியா, இஸ்ராயேல் புலம்பல்களுக்கிடையே பொதுவான அடிப்படை அமைப்புகளுள்ளன. அவை, அ) தெய்வத்தை அழைத்தல், ஆ) பலவகைத் தீமைகள் பற்றிய முறையீடு செய்தல், இ) விடுதலை பெற மன்றாடுதல், பாவத்திற்கும் துன்பத்திற்கும் உறவு இருக்கும் அளவுக்கு, மன்னிப்பு வேண்டுதல், ஈ) பலி ஒப்புக்கொடுப்பதாக நேர்ச்சி செய்தல் ஆகியவையாகும். சொற்றொகுதியில் ஒற்றுமை, சேயோல், விலக்குகள், திரும்பிய முகம், பெயர்கள் பட்டியல் முறையில் வருதல், மீண்டும் மீண்டும் ஒரே விதமாய்க் கூறுதல் போன்ற பண்புகளை அக்காதிய மன்றாட்டுகளில் கண்டுள்ளனர்

ஆய்வாளர்கள். இறைவனோடு நெருங்கிய உறவுகொள்ளும் தன்மை பாபிலோனிய மன்றாட்டுக்களில் இல்லை. மனிதர்கள் தேவர்களின் அடிமைகளாவர். பாபிலோனிய படைப்புக்கதை கூறுவதுபோல், தேவர்களுக்கு அடிமை வேலை செய்ய மனிதர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

இலக்கிய ஒப்பியலிலுள்ள எல்லாப் பிரச்சனைகளைப் போல, சங்கீதங்கள் பிற இன இலக்கியங்களால் பாதிக்கப்படும் பிரச்சனை வெறும் ஒற்றுமையால் தடம் பிறழக்கூடாது. ஒரு சொல் எப்போதும் ஒரே பொருளைக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஏனெனில் அது பயன்படும் குறிப்பிட்ட பண்பாட்டாலும் சமயச் சூழ்நிலையாலும் பாதிக்கப்படுகிறது. பொதுச் சொற்றொகுதியிலும் சிந்தனைப் போக்கிலும் இணைவுத் தன்மை இருப்பதால், இஸ்ராயேல் பிற மேற்காசியச் சமயங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை மறந்துவிடக்கூடாது. ஒற்றுமைத் தோற்றத்தால், இஸ்ராயேல், பிறஇன மொழிகளிலிருந்து இலக்கியப் பண்புகளை அப்படியே எடுத்துக் கையாண்டது என்று கூற வேண்டியதில்லை. இதைவிட, தனது அண்டை மக்களுக்குப் பொதுவான இலக்கியத்தில் இஸ்ராயேலும் பங்கு கொண்டது என்று கூறுவதே சரியாகும். அப்போதும், இஸ்ராயேல் தனது ஆற்றலுக்கும் சமயத்திற்கும் ஒத்தவற்றையே ஏற்றுக்கொண்டது. இலக்கிய ஒற்றுமை இருந்தாலும், சங்கீதங்களில் இஸ்ராயேலின் தனித்தன்மையுடைய விசுவாசம் தெளிவாக வெளிப்படுகிறது.

8. சங்கீதங்கள் தொகுக்கப்பட்ட வரலாறு: நமது வழிபாடுகளில் பல பாடல்களைப் பயன்படுத்துகிறோம். இப்பாடல்கள் அடங்கிய நூல்கள் உண்டு. இவை, பெரும்பாலும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்ட பாடல்களை மட்டும் கொண்டிருப்பதில்லை. இவை பலரால் இயற்றப்பட்டவை; சிலவற்றிற்கு நீண்டவரலாறும் இருக்கலாம்; பல்வேறுபட்ட பின்னணிகளையுடையனவாக இருக்கும். காலப்போக்கில் இவை மாற்றமடைந்திருக்கலாம். ஒரு காலக் கட்டத்தில், ஒருபதிப்பாசிரியர் இவற்றைத் தொகுத்து ஒரே நூலாக வெளியிட்டிருக்கலாம். சங்கீத நூலுக்கும் இத்தகைய வரலாறு உள்ளது எனலாம். இந்நூல் பலரால், வேறுபட்ட காலங்களிலும் சூழ்நிலைகளிலும் பல்வேறு நோக்கங்களோடும் இயற்றப்பட்ட பாடல்களைக் கொண்டுள்ளது. காலப்போக்கில், இப்பாடல்கள் ஒரே நூலாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலின் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்தின் சுவட்டையும் அறிவது முடியாத காரியமாகும். ஆயினும் சங்கீதங்கள் இயற்றப்பட்டதற்கும், அவை இறுதித் தொகுப்பாக்கப்பட்டதற்கும் இடையில் நடந்த சமய, இலக்கிய வேலைப் பாடுகளின் குறிகள் காணப்படுகின்றன. இவற்றைக் கண்டறிய முயல்வது, சங்கீதங்களின் பொருளைப் புரிந்து கொள்ள, பெரும் உதவியாக இருக்கும்.

சங்கீத நூல் தோன்றிய வரலாற்றில் நான்கு கட்டங்களைக் காண முயலலாம். அ) தனிப்பட்ட சங்கீதங்கள் தோன்றுகின்றன. ஆ) சில சங்கீதங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு, சிறு சிறு தொகுப்புகள் உருவெடுக்கின்றன. இ) சிறு தொகுப்புகள் பெரியவையாக வடிவெடுக்கின்றன. ஈ) இவற்றைத் தொகுத்தும், வேறு சில தனிப்பாடல்களைச் சேர்த்தும், இறுதிப் பதிப்பாசிரியர், நாம் கொண்டிருக்கும் அமைப்பில், சங்கீத நூலுக்கு வடிவம் அளிக்கிறார்.

சங்கீத நூலின் தோற்றத்தில் பல தொகுப்புகள் இருந்தன என்பதற்கு நூலில் காணப்படும் இரட்டிப்பு வாசகங்கள் சான்றாக உள்ளன: சங் 14=சங் 53; சங் 40:13-17=சங் 70; சங் 57:7-11+60:5-12=சங் 108; சங் 18=2 சாமு 22. இச்சான்றுகள், தொடக்கத்தில் சில சங்கீதங்கள் தனித் தொகுப்பாய் இருந்திருக்கலாம் என்றும், சிறு தொகுப்புகள் பெரும் தொகுப்புகளாக இணைக்கப்பட்டபோது, சில இரட்டிப்பு வாசகங்கள் தவிர்க்க முடியாததாயின என்றும் காட்டுகின்றன.

சில சங்கீதங்களில் காணப்படும் தலைப்புகள், அச்சங்கீதங்கள் தோன்றிய விதம்பற்றி

எதையும் உறுதியாகக் கூறவில்லையென்றாலும், அவை தொகுக்கப்பட்ட விதத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. இத்தலைப்புகள், சில சங்கீதங்களை ஆட்கள் சிலரோடு தொடர்பு படுத்துகின்றன அல்லது இலக்கிய வகைகளைச் சுட்டிக் காட்டுகின்றன. இவை, சங்கீத நூல் இறுதி வடிவம் எடுப்பதற்கு முன்பே, சில தொடக்கத் தொகுப்புகள் இருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன.

இவ்வாறு சில சங்கீதங்களின் தலைப்புகள், தனிப்பட்ட ஆசிரியர்களின் பெயரால் சில சங்கீதங்கள் ஏற்கெனவே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் எனச் சுட்டுகின்றன. இவ்வாறு, தாவீதின் பெயரால் மூன்று தொகுப்புகள் உள்ளன. சங் 3-41; 51-70 138-144. இவை தாவீதின் எல்லாச் சங்கீதங்களையும் கொண்டிருக்கின்றன என்றோ அவருடைய சங்கீதங்களை மட்டுமே கொண்டிருக்கின்றன என்றோ காட்டவில்லை. ஏனெனில் சங் 33;67 இத்தொகுப்புகளைச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. இவற்றைச் சேராத, சங் 107-109 போன்ற சங்கீதங்கள் கொண்ட சிறு தொகுப்புகள் இருந்திருக்கலாம். மற்றவை இத்தொகுப்புகளைச் சேர்ந்தவையாயினும், இப்போது தனித்து நிற்கின்றன. இறையியல், வழிபாட்டுக் காரணங்களுக்காக, இவற்றைப் பதிப்பாசிரியர் வேறொரு இடத்திற்கு மாற்றியிருக்கலாம். இத்தொகுப்புகள் காலத்தால் முந்தியவையாய் இருந்து காலப்போக்கில் தாவீது இயற்றியதாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். இவை அரசாட்சியின் தொடக்க காலத்திலேயே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். தாவீது இயற்றியதாக எபிரேய வாசகத்தில் 73 சங்கீதங்களும், எழுபதுநூல் வாசகத்தில் 84 சங்கீதங்களும் உள்ளன.

ஆசாபு என்பவர் லேவியர் குலத்தைச் சேர்ந்த ஓர் இசையாளர். தாவீது காலத்தில் வழிபாட்டு இசையில் தலைமை வகித்தவர் (1 நாள் 15:17-19; 16:4-5). அவரது வழித்தோன்றல்கள் இந்த இசைப்பாரம்பரியத்தைத் தொடர்ந்து காத்ததாகத் தெரிகிறது (எஸ் 3:10). இவர் இயற்றியதாக 12 சங்கீதங்கள் (சங் 50; 73-83) உள்ளன. இவற்றோடு சங் 50 பின்பு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

கோராகின் புதல்வர்கள் ஆலயவழிபாட்டு இசையில் ஈடுபாடுள்ள லேவியர்கள் (1 நாள் 6:22). இவர்கள், சங் 42-48; 84-87; ஆகிய இரு தொகுப்புகளுக்குக் காரணமானவர்களாய்த் தோன்றுகின்றனர். இவற்றிலும் சங் 43;86 இத்தொகுப்புகளைச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. மேலும் ஏத்தான் என்பவர் சங் 89-ஐயும் எதுத்தூன் என்பவர் சங் 39; 62:77 ஆகியவற்றையும், மோசே சங் 90-ஐயும், சாலமோன் சங் 72; 127-ஐயும் இயற்றியதாகத் தெரிகிறது. இவர்களில் சிலர் ஆலயப்பாடல் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம்.

மற்றச் சங்கீதங்கள் பொருள் அடிப்படையில் தொகுக்கப்பட்டதாகத் தெரிகிறது. சான்றாக, 1. ஏற்றப்பாடல்கள். சங் 120-134. இவற்றைத் ''திருப்பயணிகளின் பாடல்'' என்றும் அழைப்பதுண்டு. இவை இஸ்ராயேலின் பெரும் விழாக்களின்போதோ அவற்றிற்கு முந்தியோ, குறிப்பாகக் கூடாரவிழாவின் போது பயன்பட்டிருக்கலாம். 2. ''போற்றுரை'' என்று பொருள்படும் ''ஹல்லேல்'' சங்கீதங்கள் என்ற, சங் 113-118; 145-150 இரு தொகுப்புகள் உள்ளன. முன்னது ''எகிப்திய ஹல்லேல்'' என்றழைக்கப்படும்; இது பாஸ்கு விழாவோடு தொடர்புடையது. பின்னது பொது வழிபாட்டில் பயன்பட்டது. 3. மேலும் சங். 104-106; 111-117; 145-150 ஆகியவை அல்லேலூயா சங்கீதங்கள் என்றழைக்கப்படும். 4. மேலும், எபிரேய வாசகத்தில் 39 சங்கீதங்களும், எழுபது நூல் வாசகத்தில் 19 சங்கீதங்களும் , தலைப்பில்லாமல் உள்ளன. இவற்றை ராபிகள் ''அநாதைச் சங்கீதங்கள்'' என்று அழைத்தனர். சில சங்கீதங்கள் தொடக்ககாலச் சிறுதொகுப்புகளைச் சேர்ந்தவையா அல்லது இறுதிப் பதிப்பாசிரியரால் வெறுமனே ஒன்று சேர்க்கப்பட்டவையா என்று கூறுவது கடினம்.

சங்கீத நூல் வளர்ச்சியில் அடுத்த கட்டத்தை நிர்ணயிப்பது மிகவும் கடினமாகும். சில சிறு தொகுப்புகள் ஒன்று சேர்க்கப்பட்டுப் பெரிய தொகுப்பாக அமைந்திருக்கலாம். இக்கட்டத்தைச் சேர்ந்த ஒரே ஒரு உதவியான சான்று உள்ளது. அது இறைவனது பெயர்களைப் பயன்படுத்தும் விதமாகும். சங் 1-41-இல் இறைவனது சொந்தப் பெயராகிய யாவே அடிக்கடியும் (272 தடவை) அவரைக் குறிக்கும் எலோகீம் என்ற பொதுப்பெயர் சில இடங்களில் மட்டும் (15 தடவை) பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மாறாக சங் 41-82-இல் யாவே என்ற பெயர் 43 தடவையும் எலோகீம் என்ற பெயர் 200 தடவையும் வருகின்றன. மீதிப்பகுதியாகிய சங் 84-150-இல் யாவே என்ற பெயர் அடிக்கடியும், எலோகீம் என்ற பெயர் சிலதடவையுமே வருகின்றன. இந்த விவரம், எலோகீம் என்ற பெயர் அதிகம் பயன்படுத்தப்படும் ''எலோகீம் சங்கீத நூல்'' (சங் 41-82) இருந்திருக்க வேண்டும் என்ற கருத்துக்கு அடிப்படையாகிறது. இது சிறுதொகுப்புகள் சேர்ந்து பெரிய தொகுப்புகள் அமைக்கப்பட்ட மூன்றாவது கட்டத்தைச் சுட்டுவதாகத் தெரிகிறது. இது கருத்தியலானது ஆனாலும், உறுதியான அடிப்படை கொண்டது. இக்கட்டம் பற்றிய சான்றுகளிலிருந்து ''எலோகீம் சங்கீத நூலை''த் தொகுத்தவர், தன் சொந்த விருப்பதற்திற்காக அன்று, யாவே என்ற இறைவனுடைய சொந்தப் பெயர் ஒரளவு தயக்கத்தோடு பயன்பட்ட காலத்தில், இத் தொகுப்பை ஆலய வழிபாட்டுக்காகத் தொகுத்திருக்க வேண்டும். (யூதத்தின் பிற்கால வழிபாட்டில் யாவே என்ற பெயர் சாதாரணமாய்ப் பயன்படுத்தப்படவில்லை. பரிகார நாள் கொண்டாட்டத்தின் முக்கிய கட்டத்தில் பெரிய குருவால் மட்டும் பயன்படுத்தப்பட்டது). இக்காலத்தில், தொகுப்பாசிரியர், யாவே என்ற பெயரை எலோகீம் என்ற பெயராக வேண்டுமென்றே மாற்றி, சங்கீதங்களை ஆலய வழிபாட்டிற்கு ஏற்றதாகத் தொகுத்திருக்க வேண்டும். இவ்வாறு முந்தையச் சிறுதொகுப்புகளாகிய கோராகுவின் புதல்வர்களின் தொகுப்பு (42-49), ஆசாபுவின் தொகுப்பு (50; 73; 83), தாவீதின் தொகுப்பு (50-65; 68-72), பிற சங்கீதங்கள் (66;67) ஆகியவை ஒன்று சேர்க்கப்பட்டு எலோகீம் சங்கீத நூல் தோன்றியிருக்க வேண்டும்.

''எலோகீம் சங்கீத நூல்'' இருந்திருக்கக் கூடும் என்று அறிவுசார்ந்த முறையில் உறுதியாகக் கூற முடிந்தாலும், இது போன்ற பிற பெரிய தொகுப்புகள் தோன்றினவா இல்லையா என்று உறுதியாகக் கூற முடியாது. போதிய சான்றுகள் இன்மையால், அடுத்த கட்டமாக, சங்கீத நூல், நாம் கொண்டிருக்கும் வடிவில், தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம். இறுதிப் பதிப்பாசிரியர்கள், பல தொகுப்புகளையும் ஒன்று சேர்த்து, தொடக்கத்தில் எந்தத் தொகுப்பையும் சேராத சில சங்கீதங்களையும் சேர்த்து, இஸ்ராயேலின் சங்கீத நூலை அமைத்திருக்க வேண்டும். சங் 1, ஒரு வேளை சங் 2-ஆவதும் நூல் முழுவதற்கும் முன்னுரையாக வைக்கப்பட்டன எனலாம். சங் 150, ஏற்கனவே கல்லேல் சங்கீதத் தொகுப்பைச் சேர்ந்ததாயினும், முழு நூலுக்கும் உகந்த முடிவுரையாக அமைந்தது.

சங்கீதங்களை வரிசைப்படுத்துவதில் எந்த ஒரு குறிப்பிட்ட திட்டமும் இருப்பதாய்த் தெரியவில்லை. சில சமயம், ஒரு பாடலை அடுத்து இன்னொரு பாடல் ஏன் அங்கு அமைந்துள்ளது என்பதற்குக் காரணம் காட்ட முடியும். இவ்வாறு சங் 3-ஐக் காலை மன்றாட்டு என்றும், சங். 4-ஐ மாலை மன்றாட்டு என்றும் அழைப்பது மரபு. இவ்வாறு அடுத்தடுத்து வைக்கப்பட்டிருப்பதில் ஒரு பொருத்தம் இருந்திருக்க வேண்டும். மூல தாவீதுதொகுப்பை அமைத்தவர் இதைச் செய்தாரா அல்லது சங்கீத நூல் பதிப்பாசிரியர் செய்தாரா என்று உறுதி செய்வது கடினம்.

சங்கீதங்களைத் தொகுக்கும் வேலை எப்போது முடிவு பெற்றது என்று துல்லியமாகக் கூற முடியாது. சங்கீதங்கள், இஸ்ராயேலின் அரசாட்சிக் காலம் தொடங்கி, நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலம் வரையிலுள்ள

காலத்தைச் சேர்ந்தவையாகும். ஒருவேளை, நாம் கொண்டிருக்கும் வடிவில் பெருமளவும் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் சங்கீத நூல் வடிவெடுத்திருக்க வேண்டும். இது பற்றி, சங்கீதங்கள் தோன்றிய காலம் என்ற தலைப் பின் கீழ் ஏற்கனவே கூறியுள்ளோம்.

9. **வழிபாட்டுச் சூழ்நிலை:** சங்கீதங்கள் பற்றிய வடிவத்திறன் ஆய்வின் பயன், பல சங்கீதங்களுக்கு வழிபாடு வாழ்க்கைப் பின் னணியாக அமைந்திருக்கிறது என்ற முடிவா கும். அதாவது பெரும்பாலான சங்கீதங்கள் இலக்கியமாகத் தோன்றவில்லை. வழிபாட் டுக்காக இயற்றப்பட்டவையாகும். இச்சங் கீதங்கள் வழிபாட்டில் பயன்பட்டது மட்டு மின்றி, வழிபாட்டைப் பின்னணியாகக் கொண்ட வாழ்க்கைச் சூழ்நிலையில் தோன் றின. இக்கருத்து சங்கீதங்கள் பற்றிய இக் கால விரிவுரைகளுக்கு அடிப்படையாகப் பயன்படுகிறது.

இந்த வழிபாட்டுச் சூழ்நிலை, இஸ்ரா யேல், வரலாற்றின் தொடக்க வழிபாட்டி லிருந்து நாடு கடத்தலுக்குப்பின் இரண்டாம் எருசலேம் ஆலயத்தில் வளர்ச்சியுற்றிருந்த வழிபாடுவரை உள்ளடக்கும். புகழ்ப்பாக் கள், சமூகப் புலம்பல்கள், சீயோன் பற்றிய கீதங்கள் ஆகியவை சமூக வழிபாட்டைச் சேர்ந்தவையாகும். இவற்றிற்கு ஐயமற, வழி பாடு வாழ்க்கைச் சூழ்நிலையாக அமை கிறது. இவ்வாறு 55 சங்கீதங்கள் அமைந்துள் ளன. மற்றச் சங்கீதங்களைப் பற்றி இப்படிப் பட்ட கருத்தொற்றுமை ஆய்வாளர்க ளிடையே இல்லை. பொதுவாக, 40 சங்கீதங்கள் தனியாரின் புலம்பல்கள் என்று கருதப் படும். இதையும் மோவின்கெல் பத்தாகக் குறைக்கிறார். இவரது கருத்துப்படி, மற்ற 30 சமூகப் புலம்பல்களாகும்; ஆகவே வழி பாட்டைச் சேர்ந்தவையாகும். போதக அல் லது ஞான சங்கீதங்கள் (37; 49; 111; 112; 127; 129; 133), வரலாறு பற்றிய சில சங்கீதங் கள் (78; 105; 106) ஆகியவை வழிபாட்டைச் சேர்ந்தவை என்று பெரும்பாலான ஆய்வா ளர்கள் ஏற்றுக்கொள்வர்.

சங்கீதங்களின் வழிபாட்டுப் பின்னணியை வலியுறுத்தும் ஆய்வாளர்கள் இவ்வழிபாட் டின் மையமாகச் சில விழாக்களைச் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வாறு ''அரச சங்கீதங் கள்'' இறைவனால் நியமிக்கப்பட்ட அரசன் அபிடேகம் பெற்று அரியணை ஏறும் விழாவை மையமாகக் கொண்டுள்ளன என்று குன்கெல் கருதுகிறார். இந்த இறைவ னால் நியமிக்கப்பட்ட அரசமைப்பு, யாவற் றின் மேலும் அரசனாக யாவே அரியணை ஏறும் கருத்துக்கு இட்டுச் சென்றது. அவ் விழா ஒரு புது வருட விழாவாகக் கொண்டா டப்பட்டது என்று மோவின்கெல் கருது கிறார். இவரது கருத்துப்படி, சங்கீத நூலின் மூன்றில் ஒரு பகுதி இவ்வகையைச் சேர்ந்த தாகும். இப்பகுதியோடு சங் 47; 99 போன்ற பவனிப்பாடல்களையும் சேர்த்தார். இவ ரைப் பின்பற்றி, ட்ரிஜ்வெர்ஸ் (Drijvers) என்ப வர், சில பவனிச் சங்கீதங்களுக்கு அப்பவனி களின் முழு விவரிப்பையும் கொடுக்க முயன்றுள்ளார்.

கிராவுஸ் (Kraus) என்பவர் 2 சாமு 6;1 அரச 8, ஆகிய வாசகங்களை அடிப்படையாகக் கொண்டு, சங்கீதங்களின் வழிபாட்டுப் பின் னணி ''அரச சீயோன் விழா''வாகும் என் றார். இவ்விழா, அரியணை ஏறுவதன்று; இறைவன் தாவீது மரபையும், தமது உறை விடமாக எருசலேமைத் தேர்ந்தெடுத்ததை யும் நினைவு கூறுவதாகும். இதில் பெட்ட கம் சிறப்பிடம் பெற்றது. பெட்டகத்தைப் பவனியாக எடுத்து வருவது இவ்விழாவின் முக்கிய சடங்காகும். நாடு கடத்தலுக்குப் பின், இக்கருத்து சிறிது மாற்றி அமைக்கப் பெற்றது. யாவேயின் அரசதன்மையும் உப இசையாசில் வலியுறுத்தப்படுதலின் விளை வாக, யாவே நுழைதல் என்ற கருத்தும் இவ்விழாவில் முக்கியம் பெற்றன. யாவே, தமது மக்களை வழிநடத்தி எருசலேமுக்குள் நுழைந்து அங்கு அரியணை ஏறுகிறார். இது தான் அரியணை ஏற்றச் சங்கீதங்களுக்கு வாழ்க்கைச் சூழ் நிலையாகும்.

வெய்செர் (Weiser) என்பவர், சங்கீதங் களின் வழிபாட்டுச் சூழ்நிலை, உடன்

படிக்கை புதுப்பிக்கப்படும் ஆண்டு நிறைவு விழாவாகும் என்றார். இஸ்ராயேல் வரலாற்றிலும், சங்கீதங்களிலும் உடன்படிக்கை கொண்டிருக்கும் முக்கியத்துவம் இக்கருத்துக்கு அடிப்படையாயிற்று. இவரது கருத்துப்படி, யாத்திரை ஆகம, உடன்படிக்கை நிகழ்ச்சியில் இறையாற்றல் தோற்றம் முக்கியத்துவம் பெறுவது போல், வழிபாட்டுச் சடங்கின் மையமும் இறையாற்றல் தோற்றமே ஆகும்; விசுவாசிக்கு இறைவன் தம்மை வெளிப்படுத்துதல் ஆகும். உடன்படிக்கையையும் அதன் விளைவையும் வழிபாட்டு முறையில் மீண்டும் செயலாக்கம் செய்வதில் சங்கீத ஆசிரியர் யாவேயை எதிர் கொள்கிறார். இக்கருத்து மற்றப் பல சங்கீதங்களை விளக்கவில்லை. ஆகவே சங்கீத நூல் முழுவதற்கும் திறவு கோலாக அமைய முடியாது.

இக்கருத்துக்கள் எல்லாம் கருதுகோள் தன்மையுடையன. இவ்விழாக்கள் இருந்தனவா என்பதற்கு இஸ்ராயேலின் வழிபாட்டுப் பாரம்பரியத்தில் போதிய சான்றுகள் இல்லை. பெரும்பாலான சங்கீதங்கள் வழிபாட்டில் தோன்றின. அவை வாழ்க்கைச் சூழ்நிலையைக் கொண்டவை. இவற்றைச் சேராத ''ஆன்மீக'' சங்கீதங்களும் உண்டு. இவை தனிநபர்களின் தேவைகளால் எழுந்தவையாகும். ஆனால் இவையும், நாடு கடத்தலுக்குப்பின், இரண்டாம் ஆலய வழிபாட்டுச் சடங்கின் ஒரு பகுதியாயின.

*10. **நூலின் திட்டம்:*** காலப்போக்கில், யூத கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் இந்நூலைப் பலவாறு பகுத்துள்ளன. முதலில் இறைவனது பெயரை அடிப்படையாகக் கொண்டு நூலைப் பகுத்துள்ளதாகத் தெரிகிறது. இவ்வாறு, இறைவனை யாவே என்ற பெயரால் பெரும்பாலும் குறிக்கும் சங் *3-41* என்ற பகுதி முதற்பாகமாகும். இறைவனை எலோகீம் என்ற பெயரால் குறிக்கும் சங் *42-83* என்ற பகுதி இரண்டாம் பாகமாகும். மூன்றாம் பாகமாகிய சங் *84-150* என்ற பகுதி யாவே என்ற பெயரையே இறைவனைக் குறிக்க அதிகம் பயன்படுத்துகிறது. இது பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம். ஆயினும் இரண்டு பெயர்களும் சில இடங்களில் காரண காரியம் இன்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் நாம் மறக்கக் கூடாது. இவ்விதம் நூலைப் பிரிப்பது காலப்போக்கில் விவிலிய ஆய்வாளர்களால் கைவிடப்பட்டு விட்டது.

அடுத்து, பதிப்பாசிரியரே நூலில் ஒரு வகைத் திட்டத்தைக் கையாண்டுள்ளதாகத் தெரிகிறது. சில பாடல்களின் முடிவில் போற்றுரை வசனங்கள் உள்ளன. இவற்றைச் சிறப்பாக *41:13; 72:18-19; 89:52; 105:48; 150:6*-இல் காணலாம். ஒருவேளை சங் *150* நூல் முழுவதற்கும் உரிய போற்றுரை முடிவாக அமைந்திருக்கலாம். இந்த உள்ளமைப்பைக் கருத்தில் கொண்டு பதிப்பாசிரியர் இந்நூலை *1-41; 42-72; 73-89; 90-106; 107-150* என ஐந்து பாகமாகப் பிரித்துள்ளதாகத் தெரிகிறது. பதிப்பாசிரியர்தான் இந்தப் போற்றுரை வசனங்களைப் புகுத்தினாரா அல்லது போற்றுரை வசனங்கள் இருந்ததால் அவர் நூலை ஐந்து பாகமாகப் பிரித்தாரா என்று உறுதியாகக் கூற முடியாது. பின்னது ஒருவேளை உண்மையாக இருக்கலாம். ஏனெனில் ஒவ்வொரு பாகமும் நிறைவுடையது எனக் கருதப்போதிய உட்சான்றுகள் இல்லை. இந்தப் போற்றுரை வசனங்கள் முதலில் அந்தந்தச் சங்கீதங்களுக்கு முடிவுரையாக அமைகின்றன. அவை இருந்ததின் அடிப்படையில் நூல் ஐந்து பாகமாகப் பிரிக்கப்பட்டிருந்தால் மோசேயின் ஐந்நூலுக்கும் சங்கீத நூலின் ஐந்து பாகங்களுக்கும் உள்ள ஒப்புமை, அவ்வாறே நிர்ணயிக்க பதிப்பாசிரியரைத் தூண்டியிருக்க வேண்டும். ஆயினும் இந்த ஒப்புமை எண்ணிக்கையோடு முடிந்து விடுகிறது. ஏனெனில் இரண்டு நூல்களுக்குமிடையே உறுதியான, உள்ளார்ந்த ஒப்புமையோ, இணையமைப்போ இருப்பதாகத் தெரியவில்லை. யூத ராபிகளும் திருச்சபைத்தந்தையரும் இந்தப் பாக முறையை விரும்பி ஏற்றதாகத் தெரிகிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை, இப்பகுப்பு முறையே விவிலிய ஆய்வு முறையில் பெரிதும் பயன்பட்டது. இம்முறையான பகுப்

பில், ஒரு பாகம் மற்றதிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது என்று கூற முடியாது. எந்த உட்காரணத்திற்காக இவ்விதம் பிரிக்கப்படு கின்றன என்று காட்டுவது கடினம். இத்த கைய பிரிவுகள் செயற்கையாகப் புகுத்தப் படுவதாகத் தெரிகிறது. இம்முறையும் இப் போது ஆய்வாளர்களால் அதிகம் பயன் படுத்தப்படுவதில்லை.

மூன்றாவது முறை வடிவத் திறனாய்வு முறையிலிருந்து அண்மையில் தோன்றிய தாகும். இதைக் ஹெர்மான் குன்கெல் (Herman gunkel 1862-1932) விரிவான முறையில் விளக்கினார். இவர் சங்கீதங்களை இலக்கிய வடிவங்களுக்கேற்ப வகைப்படுத்தினார். இந்த முறையை இக்கால விவிலிய ஆய்வா ளர்கள் ஏதாவது ஒரு வடிவில் பின்பற்றுகின் றனர். இம்முறையை ஆய்வாளர்கள் சிலர் மேலும் நயப்படுத்தினர். இவர்களது கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, சங்கீதங்களை வகைப்படுத்த மூன்று ஒப்பளவு களை எடுத்துக் கூறலாம். அவை:

1. **இலக்கிய வடிவு:** ஒத்த இலக்கிய நடை யையும் அமைப்பையும் கொண்ட சங்கீதங் களை ஒரு குழுவாகத் தொகுத்தல்.

2. **பொருளடக்கம்:** கருத்து, மனநிலை ஒற்றுமை.

3. **ஒத்த வரலாற்று, வாழ்க்கைச் சூழ்நிலை** - இச்சூழ்நிலை வழிபாடாகும். இதுபற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம்.

சங்கீதங்களை வகைப்படுத்துவதில் இம் மூன்றையும் ஒருசேரக் கருத்தில் கொள்ள வேண்டும். ஏதாவது ஒன்று மட்டும் போதாது. குறிப்பாக ஒத்த பொருளடக்கத்தை யுடைய சங்கீதங்களை வகைப்படுத்துவ தில் இந்த மூன்று ஒப்பளவுகளும் சேர்ந்து அமைய வேண்டும். சான்றாக, வரலாற்றுக் கருத்தை விளக்கும் சங்கீதங்கள் எல்லாம் ஒரே வகையைச் சேர்ந்தவையாக இருக்க வேண்டியதில்லை. ஆகவே விரிவுரையாளர் கள், சங்கீதங்களை வகைப்படுத்தும்போது, பொருளடக்கத்தை மட்டுமன்று, அவை தோன்றிய சூழ்நிலையையும் இலக்கிய வடி வையும் ஆய்வு செய்ய வேண்டும். உண்மை யில் பின்னவை இரண்டும் ஒரு சங்கீதத்தின் பொருளடக்கத்தையும் பொருளையும் உறுதி செய்யப் பெரிதும் பயன்படும்.

இந்த ஒப்பளவுகளின் அடிப்படையில் ஒவ்வொரு சங்கீதமும் ஒரு தனிப்பட்ட இலக்கிய அமைப்பையும் பொருளடக்கத் தையும் கொண்டுள்ளது. அதாவது சங்கீதங் கள் திட்டமிட்ட இலக்கிய வடிவங்களைக் கொண்டுள்ளன. இவை இறைவனைப் பார்த்துக் கொட்டும் வெறும் உணர்ச்சிப் பெருக்கல்ல. இதை ஒரே தன்மையுடைய மொழியமைப்பு தெளிவாக்கும். இவை ஏற் கெனவே இருந்த அமைப்புகளைப் பின்பற்று கின்றன. ஒவ்வொரு சங்கீதமும் ஒரு குறிப் பிட்ட வாழ்க்கைச் சூழ்நிலையிலிருந்து தோன்றுகின்றன. ஆனால் இந்தச் சூழ் நிலையை நிர்ணயிப்பது அவ்வளவு எளி தன்று. சில சங்கீதங்கள் பலவகையும் சேர்ந்த கலப்பு அமைப்பைக் கொண்டுள்ளன (சங் 89:102). சிலவற்றை வகைப்படுத்துவது மிகக் கடினம்.

இம்முறையைப் பின்பற்றி, குன்கெல் என் பவர் சங்கீதங்களை 10 வகையாகவும், டூர்னே (Tournay) என்பவர் 4 வகையாகவும், வோர்டென் (Worden) என்பவர் 2 வகையாக வும் வகைப்படுத்தினார்கள். இந்த ஆய்வு முறையைப் பின்பற்றி நாம் பின்வருமாறு சங்கீதங்களை வகைப்படுத்துவோம். அதே. போல் ஒவ்வொரு வகையின் சங்கீத அமைப்பையும், இறையியல் பின்னணியை யும் சிறிதுபார்ப்போம்.

11. சங்கீதங்களின் வகைகள்

I **இறைபுகழ் அல்லது போற்றுரைப் பாடல் கள்:** இறைவனையும் அவரைச் சார்ந்தவற்றை யும் புகழ்ந்துபாடுதல். இந்த வகையில் *8; 19; 29; 33; 46; 48; 76; 84; 87; 93; 96; 100; 103-104; 110; 113-114; 117; 121 135; 136; 145-150* ஆகிய சங்கீதங்கள் அடங்கும். (குறிப்பு: இவ்வாறு சங்கீதங்களின் எண்களைத் தரும் போது, அந்த வகையைச் சேர்ந்த முழுப்பட்

டியலையும் தரவில்லை. இவை தோராய மாகவும், எடுத்துக்காட்டாகவுமே தரப்படு கின்றன. ஏனெனில் இத்தகைய கருத்துக்கள் பிற வகைகளைச் சேர்ந்த சங்கீதங்களிலும் காணப்படுகின்றன).

அமைப்பு:

1. முன்னுரை: ஒவ்வொரு சங்கீதமும் இறைவனைப் போற்றிப் புகழ அழைப்ப தோடு தொடங்குகிறது.

2. நடுப்பகுதி: புகழ்வதற்குரிய கார ணத்தை எடுத்துக் கூறுகிறது. இக்காரணங் கள், அ) பொதுவாக இயற்கையில், குறிப் பாக, படைப்புச் செயலில் காணப்படும் இறைவனது வியப்பு மிக்க செயல்கள்; ஆ) மனித வரலாற்றில், குறிப்பாக, இறைவ னது மக்களின் மீட்பு வரலாற்றில் அவரது அருஞ்செயல்கள்; இ) இறைவனது அரச மாண்புகள்; ஈ) சீயோனின் சிறப்பு இயல்பு கள். இப்பகுதி ''ஏனெனில்...'' என்ற சொல் லோடு தொடங்கும். இப்பகுதியில் பழைய ஏற்பாட்டு இறையியலின் வளமான சுரங்கத் தைக் காணலாம். இறைவன் முன்னிலை யிலோ, படர்க்கையிலோ அழைக்கப்படுகி றார்.

3. முடிவுரை: முன்னுரையில் வந்த அழைப்பு மீண்டும் கூறப்படும் அல்லது ஒரு மன்றாட்டோ ஆசியுரையோ வாக்குறு தியோ கூறப்படும்.

சில சங்கீதங்கள் முழுவதுமே அழைப் பாக அமைந்து விடுவதுண்டு. நீதிமான்கள், இஸ்ராயேலர், புற இனத்தார், பாடும் குழு வினர் ஆகியோர் அழைக்கப்படுகின்றனர். இதில் அவர்கள் செய்ய வேண்டிய சைகை யும், பயன்படும் இசைக்கருவியும் குறிப் பிடப்படுகின்றன. வழிபாடே பொதுவான வாழ்க்கைச் சூழ்நிலையாகும். இதுவும் பாட லிலேயே குறிக்கப்படும் (100:4). வழிபாட் டில் பங்கு பெறுவோரின் முக்கிய செயல் கள், இலயத்தோடு கைதட்டுதல் (47:1); கைகளை மேலே உயர்த்துதல் (28:2; 77:2; 134:2; 141:2); தலை வணங்குதல் (5:7; 95:6); மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்தல் (98:4); வாழ்த்தொலி எழுப்புதல் ஆகியவையாகும் (1 அர 1:39 தொ; 2 நாள் 23:11-13). முக்கிய வாழ்த்தொலி அல்லேலூயா (யாவேயைப் போற்றுங்கள் 146-150), ஆமென் (41:13; 89:52; 106:48) என்று கூறிஆரவாரம் செய்த லாகும்.

மோவின்கெல் என்பவர் செய்ந்நன்றிப் பாடல்களையும் இறைபுகழ்ப்பாடல் களோடு சேர்ப்பார். இவர் எபிரேய மொழி யில் நன்றி என்ற சொல்லே இல்லை என்றும் கூறுவார். இவரது கருத்துப்படி, புகழ்ப் பாடல்கள் விசுவாச அறிக்கைகள், விவரிப்புப் போற்றுரைகள் என இருவகைப்படும். இவ ரது இக்கருத்துக்கள் அறிஞரால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. புறஇன மக்களிடையேயும் இத்தகைய புகழ்ப்பாக் கள் காணப்படுகின்றன. இவற்றில் ஆமொன், ரே, அக்கெனதோன், ஆதோன், ஓசைரிஸ் ஆகிய தேவர்களுக்குப் பாடப் படும் பாடல்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவை அமைப்பிலும் பொருளடக்கத்திலும் சங்கீதங்களோடு ஒத்ததன்மையுடையன. பழைய ஏற்பாட்டில் சங்கீத நூலுக்குப் புறம்பே மிரியாமின் பாடல் (யாத் 15), தெபோராவின் பாடல் (நீதி 5) முதலியவை இத்தகைய புகழ்ப்பாடல் வகையைச் சேர்ந்த வையே.

இந்தப் புகழ்ப்பாடல்களை மூன்றுவகை யாகப் பிரிக்கலாம்.

அ) இறை புகழ்ப்பாடல்கள்: இப்பிரிவில் 8; 19; 33; 100; 103; 104; 110; 113. 114; 117; 135 136; 146-150 ஆகிய சங்கீதங்கள் அடங் கும். இவை, பொதுவில் இறைவனது மகி மையை நினைந்து உள்ளமுருகிப் பாடப்படு பவை. இவ்வடிவம் இஸ்ராயேலின் வரலாற் றின் தொடக்கத்திலேயே தோன்றியது என்ப தற்கு மிரியாமின் பாடல் (யாத் 15), தெபோ ராவின் பாடல் (நீதி 5) ஆகியவை சான்றாகத் திகழ்கின்றன.

இறைவனது மாண்பு அவரது செயல் களில் குறிப்பாக, அவரது மீட்பு இடையீட் டில் வெளிப்படுகிறது. கடந்த காலம்பற்றிய

நினைவு மக்களின் நடப்பு வாழ்வோடு ஒன்றிய வழிபாடாகிறது. இறைவனது கடந்த கால மீட்புச் செயல்களை வழிபாட்டில் நினைவாக்கம் செய்து மக்கள் அனுபவம் பெறுகின்றனர். முந்தைய தலைமுறை களுக்கு இறைவன் செய்த அருஞ்செயல்களை வழிபாட்டில் கொண்டாடி, தாங்களும் அவற்றின் பயனை அனுபவிப்பதாக உணர்ந் தனர். இம்முறையில்தான் வழிபாட்டில் யாத்திரை அனுபவத்தைக் கொண்டாடினர். வழிபாட்டில் தாங்கள் உடன்படிக்கையின் மக்கள் என்று உணர்ந்தனர். தங்கள் முன் னோரை மீட்ட இறைவன், இப்போது தங்களையும் மீட்கிறார் என்று உணர்ந்தனர்.

யாவேயை மீட்பின் இறைவனாகக் கண்ட இஸ்ராயேலர், அவரைப் படைப்பின் ஆண்டவ ராகவும் கண்டு, அவரைப் படைப்பில் போற்றினர். இந்தப் புகழ்ப்பாக்கள் மீட்பி லும், படைப்பிலும், இரண்டிலும் இறைவ னைப் போற்றுகின்றன.

திருச்சபை தன்வழிபாட்டில் இச்சங்கீதங் களைப் பயன்படுத்தும்போது, இஸ்ராயேல ரது நோக்கையே கொண்டுள்ளது. ஆனால் இறைவன் கிறிஸ்துவில் செய்தவற்றைப் போற்றுகின்றது. கிறிஸ்துவே இறைவன்; அவரே படைப்பவர் (யோவா 1:3; கொலோ 1:16); அவரே மீட்பவர்; நமது உடன் படிக்கை. நம்மைப் பாவ அடிமைத் தனத்தி லிருந்து மீட்ட கிறிஸ்துவைப் போற்று கிறோம்; அவரிடம் மன்றாடுகிறோம்.

ஆ) யாவேயின் அரசமாண்பைப் போற் றும் பாடல்கள்: இப்பிரிவில் 47; 93; 96 97; 98; 99; ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவற் றோடு சங் 95; 100-ஐயும் சேர்க்கலாம். யாவற் றின்மேலும் யாவே ஆட்சி செய்கிறார் என்று இவை கொண்டாடுகின்றன. இவை நடை யில் இறைவாக்குகளுக்கு ஒத்தவை.

இறைவன் இஸ்ராயேலின் அரசர் என்ற கருத்து, இஸ்ராயேலின் தொடக்க காலத்தி லிருந்தே காணப்படுகிறது (யாத் 15:18; எண் 23:21; உப 33:5; நீதி 8:22; 1 சாமு 8:7; 12:12). இறைவன் தம் மக்களிடையே உடன்படிக் கைப் பெட்டகத்தின் மேல், குறிப்பாகக் கெருபீம்களுக்கு இடையிலோ அவற்றின் மேலோ, அரியணையில் அமர்ந்திருக்கிறார் (18:10; 80:1; 99:1; தானி 3:55). பெட்டகம் அவரது கால்மணை என்றழைக்கப்படுகிறது (99:5; 132:7).

இஸ்ராயேலர் யாவேயின் அரசமாண் பைத் தங்கள் வழிபாட்டில் கொண்டாடினர். முக்காலத்திலும் அவர்தான் தங்கள் அரசர் என்று வழிபாட்டில் பறைசாற்றினர். அவர் களது அரசர்கள் ஆண்ட காலத்திலும், அரசு இழந்த காலத்திலும் தங்களது உண்மையான அரசன் யாவேதான் என்று நம்பினர். அதே இறைவன் தங்களை இப்போது ஆளுகிறார் (48:2.3.8; 97:10; 98:1; 99:1) என்றும், கடந்த கால உடன்படிக்கையை இப்போதும் தங்க ளிடையே செயல்படுத்துகிறார் என்றும் நம் பினர். ஒவ்வொரு தலைமுறையினரும் அதில் சுதந்தர உணர்வோடு பங்கெடுக்கின் றனர் என்று கருதினர். இவ்வரசு எதிர் காலத் திலும் தொடர்ந்து இருக்குமென்று எதிர் பார்த்தனர். இவ்வரசு எதிர்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கும்.இறைவன் தம்மை உலகிற்கெல்லாம் அரசராக வெளிப் படுத்தும் நாளில் நிறைவு பெற்றுத் திகழும் (எசா 9:1-6; 11:1-9). இந்த வழிபாட்டுப் பின்னணியில்தான் யாவேயின் அரசமாண் புச் சங்கீதங்களின் வாழ்க்கைச் சூழ்நிலை யைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த வாழ்க்கைச் சூழ்நிலை, யாவே அரி யணை ஏறும் புதுவருடச் சடங்காகும் என் றும், இது பாபிலோனில் மர்டாக் தேவதை யின் அரியணை ஏற்பு விழாவை மாதிரி யாகக் கொண்டது என்றும் மோவின்கெல் கருதுகிறார். ஆனால் இப்படிப்பட்ட விழா இஸ்ராயேலின் வழிபாட்டில் இருந்ததாக நிரூபிக்க முடியாது. இக்கருத்து ஒரு கருதுகோளே. வேறு சிலர், எதிர்காலத்தில் யாவற்றின்மேலும் இறைவன் ஆட்சி செய்ய விருப்பதைக் கொண்டாடுகின்றன இந்தச் சங்கீதங்கள்; ஆகவே இவை இறுதிக் காலக் கூறுடையவை என்பர்.

இவர்கள் கருத்து எதுவாயினும், இச்சங்கீதங்கள் யாவேயை அரசராகக் கொண்டாடுகின்றன. தமது படைப்பாற்றலால் இறைவன் அரசராக விளங்குகிறார். இது இதிகாசப் போர் விவரிப்பால் எடுத்துக் காட்டப்படுகிறது. அவர் மூலக் குழப்பத்தை வெற்றி கொள்கிறார் (93:1-4;95:5; 98:7-8). யாத்திரை நிகழ்ச்சிகளால் இஸ்ராயேலின் அரசராகிறார். அவரே அவர்களை மீட்டவர் (95:6-7; 99:4-8; 100:3). யாவேயின் அரசாட்சி படைப்பில் வேரூன்றியிருப்பதால், அவர் இஸ்ராயேலுக்கு மட்டுமன்று, உலக முழுமைக்கும் அரசராவார். ஆகவே ''மற்ற எல்லாத் தேவர்களுக்கு மேலும்'' யாவேயைப் போற்ற எல்லா நாடுகளும் அழைக்கப்படுகின்றன. இவை நேரடியாக முடிவு காலத்தைப் பற்றிய சங்கீதங்கள் இல்லையென்றாலும், நாடுகள் மேல் யாவேயின் ஆட்சியும் தீர்ப்பும் நிறைவேறும் காலத்தை எதிர்பார்ப்பதால், வருங்காலத்தை நோக்கியுள்ளன எனலாம்.

இச்சங்கீதங்களைப் பயன்படுத்தும் புதிய உடன்படிக்கை மக்கள், யாவேயின் அரசு கிறிஸ்துவில் நிறைவு பெறுகிறது என்றும், கிறிஸ்துவே இறைமக்களின் அரசர் என்றும், அவர் அளிக்கும் மீட்புதான் மனிதரை முடிவில்லாத காலத்திற்கும் வாழ வைக்கும் என்றும் நம்புகின்றனர்.

இ) சீயோனைப் போற்றும் பாடல்கள்: இப்பகுதியில் 24; 46; 48; 76; 84; 87; 122 ஆகிய சங்கீதங்கள் அடங்கும். சீயோன் மலை யாவே உறையும் இடம் என்பதாலும், அவருடைய மக்களது ஒரே ஒரு திருயாத்திரைத் தலம் ஆனதாலும் போற்றிப் பாடப்படுகிறது. இச்சங்கீதங்கள் முடிவு கால இயல் தொனி கொண்டுள்ளன.

தாவீது எருசலேமிலுள்ள செபுசேயர் கோட்டையைக் கைப்பற்றியபோது, முதலில் அதைத் தனது தலைநகராக்கினார். பின்பு, அங்கே பெட்டகத்தைக் கொண்டு வந்து நிறுவி, அதை ஒரு புனிதத்தலமாக்கினார். அங்கு, சாலமோன் ஆலயத்தைக் கட்டிய போது, அது அரசின் சமய மையமாக உறுதியாக நிறுவப்பட்டது. அது யாவே தேர்ந்து கொண்ட இடமாகும் (78:68 தொ; 68:17). பிற்காலத்தில் சீயோன் மட்டுமே சனகெரிபின் தாக்குதலுக்குத் தப்பியது. இது சீயோனை வெல்ல முடியாது என்ற நம்பிக்கையை ஒரு விசுவாச சத்தியமாக்கியது. இந்த மூட நம்பிக்கையைத் தகர்க்க எரேமியா எவ்வளவோ முயற்சி செய்தார். ஆனால் வெற்றியடையவில்லை (எரே 7:4-7). நெபுகத்னேசர் சீயோனை அழித்து, இறைவாக்கினரது சொற்கள் வெற்றுச் சொற்கள் அல்ல என்று காட்டினான். நாடு கடத்தப்பட்டபோது, அழிந்துபோன சீயோன் மெசியா பற்றிய நம்பிக்கையின் மையமாகத் திகழ்ந்தது (எசா 60;66;செக் 8). இரண்டாவது ஆலயம் கட்டப்பட்டபோது, எசேக்கியேலின் கருத்துப்படி கட்டப்படவில்லையானாலும் அவருடைய போதகச் சூழ்நிலையில் கட்டப்பட்டது; வருங்காலத்தை எதிர்நோக்கியது; எல்லா மனிதருக்கும் ஆன்மீகத் தலைநகரமாக புதிய எருசலேம் விளங்கும்.

சீயோனைப் பற்றிப்பாடும் இச்சங்கீதங்கள் நாடு கடத்தலுக்கு முன்பும் பின்பும் தோன்றியிருக்க வேண்டும். இது எருசலேமை நோக்கித் திருப்பயணம் செய்தவர்களின் பாடலாக அமைந்திருக்க வேண்டும். சட்டநூல் பாங்கு ஐம்பதாம் நாள் விழா, கூடாரவிழா ஆகியவை எருசலேமுக்குத் திருயாத்திரைசெல்லும் விழாக்கள் என்று கூறியது (யாத் 34:23; உப 16:16). வயது வந்த ஆண்கள் இந்த யாத்திரைகளுக்குச் செல்ல வேண்டும். ஆனால் வழக்கில், எருசலேமிலிருந்து தூரத்தில் வாழ்ந்த யூதர்கள் ஏதாவது ஒரு விழாவுக்குத் திருப்பயணம் செய்தனர். சிதறிக்கிடந்த யூதர்கள், தங்கள் வாழ்வில் இத்திருப்பயணம் செல்ல ஒரு வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பெரும் பேறாகக் கருதினர்.

இச்சங்கீதங்களில் சிலவற்றிற்குக் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலையைச் சுட்டிக் காட்டலாம். சங் 24 தாவீது ஆடம்பரமாகப் பெட்டகத்தை எருசலேமுக்குள் கொண்டு

வந்த போது பாடப்பட்டிருக்க வேண்டும். கி.மு. 701 அல்லது 688-இல் சீயோன் சன கெரிபிடமிருந்து காப்பாற்றப்பட்டபோது சங் 46; 48; 76 பாடப்பட்டதாகத் தெரிகிறது. மற்ற மூன்றிற்கும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்ட முடியாவிட்டாலும் சங் 84 யாவேயின் உறைவிடமும் வழிபாட்டின் மையமுமான ஆலயத்தைப் போற்றுகிறது. சங் 87 கருத்தியலாக சீயோனை மனுக்குலத் தின் ஆன்மீக மையமாக எதிர் நோக்குகிறது. சங் 122 ஒரு திருப்பயணப் பாடல் என்பது தெளிவு.

இஸ்ராயேலர் சீயோன்பால் கொண் டிருந்த பாச உணர்வை 48:2; 84:2.10; 122:1 போன்ற வாசகங்களிலிருந்து அறியலாம். புதிய ஏற்பாட்டிலும் எருசலேம் முக்கியத் துவம் கொண்டுள்ளது. இதை லூக்கா நற் செய்தியிலும் அப்போஸ்தலர் பணியிலும் காணலாம். கிறிஸ்துவின் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாம் எருசலேமை மைய மாக வைத்தே நிகழ்கின்றன. ஆதித்திருச் சபை சீயோனை ஒரு முன்னோடியாகக் கருதியது. விண்ணகச் சீயோனை நோக்கி இயங்கியது. இச்சங்கீதங்களைப் பாடிய போது இஸ்ராயேலர் எருசலேமின்பால் எத்தகைய விசுவாசமும் நம்பிக்கையும் மிக்க பாசம், அன்பு கொண்டிருந்தனரோ, அதே உணர்வை இன்றும் திருச்சபையின்பால் நம் மிடம் இச்சங்கீதங்கள் தூண்ட வேண்டும்.

II. **புலம்பல் அல்லது வேண்டுதல்:** இவ் வகை புகழ்ப்பாக்களிலிருந்து வேறுபட்டது. இச்சங்கீதங்கள் இறைவனுடைய மாண்பு களைக் கொண்டாடுவதில்லை; புகழ்வ தில்லை; மாறாக இறைவனை நோக்கி நேர டியாக முறையிட்டு விடுதலை வேண்டுகின் றன.

இச்சங்கீதங்களின் பொது அமைப்பு: அ) முன்னுரை: இறைவனை நோக்கிக் கூவிஅழைத்தல். ஆ) நடுப்பகுதி: இறைவ னது ஆதரவைஅடைய வேண்டி, பாடுவோ ரின் துன்பநிலை விவரிக்கப்படுதல். இது பெரும்பாலும் மரபுமுறை உருவகங்களால் விவரிக்கப்படும். ஆகவே இச்சங்கீதங்களின் வரலாற்றுச் சூழ்நிலையை எடுத்துக் கூறுவது கடினம். இ) விடுதலை வேண்டுதல். ஈ) வேண்டுவோரின் கோரிக்கை நிறைவேறி விட்டது என்ற நம்பிக்கையை எடுத்துக்கூறு தல்.

புலம்பல் சங்கீதங்களைத் தனிநபர் புலம் பல், சமூகப் புலம்பல் என்று இரு வகை யாகப் பிரிக்கலாம்.

1) **தனிநபர்ப் புலம்பல் பாடல்கள்:** நூலிலே அதிகமாகக் காணப்படுபவை. ஏறக்குறைய நூலின் நான்கில் ஒரு பகுதி இவ்வகையைச் சேர்ந்ததாகும். இவை வழிபாட்டில் தோன்றிய தாகத் தெரியவில்லை. தனிநபர்களின் துன்ப நிலையால் தூண்டப்பட்டு எழுந் தவை. ஆனால் காலப்போக்கில் வழிபாட் டுத் தன்மையும் சமூகத் தன்மையும் பெறு கின்றன. 5; 6; 7; 13; 17; 22; 25; 26; 28; 31; 35; 36; 38; 39; 42; 43; 51; 54; 55; 56; 57; 59; 61; 63; 64; 69; 70; 71; 86; 88; 102; 109; 120; 130; 141; 142; 143; ஆகிய சங்கீதங்கள் இப்பகுதியில் அடங்கும்.

இறைவனை உதவிக்கு அழைக்கும் முன் னுரை உதவி கேட்டலையோ, மன்றாட் டையோ நம்பிக்கையையோ எடுத்துக் கூறும். இறைவனுக்கு ''என் இறைவா,'' ''என் பாறையே'' போன்ற பல இடுபெயர் கள் கொடுக்கப்படும். சில சங்கீதங்களில் இம்முன்னுரை பல வரிகளுக்கு நீடிக்கும்.

முக்கிய நடுப்பகுதியில் வேண்டுவோரின் துன்பநிலை விவரிக்கப்படும். இதை மூன்று வகையாகப் பிரிக்கலாம். **அ) சாவினால் வரும் உடனடி இடுக்கண்:** இஸ்ராயேலர் நீண்ட வாழ்வை ஒரு பெரும் ஆசிராகக் கருதினர். ஆகவே, அகால மரணத் தைக் கண்டு அஞ்சினர் (102:24). இதற்கு எசேக்கியாவின் பாடல் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும் (எசா 38:10-12). இதற்குக் கார ணம் பழைய ஏற்பாட்டில், கி.மு. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன், மரித்த பின் வாழ்வு பற்றித் தெளிவில்லாத, நிறைவில்லாத கருத்து நிலவியதேயாகும். மரித்தோரின்

இல்லமாகிய ''சேயோல்'' பூமிக்கு அடியிலிருந்த பாதாளமாகும் (22; 30; 69:15 தொ). அங்கு மௌனமும் இருளும் மறதியும் நிலவியது (88:12). மரித்தோர், ஆவியாக அயர்ச்சி மிக்க வாழ்வைக் கொண்டிருந்தனர். வாழ்வு விரும்பத்தக்கது எனச் சுட்டக் கூடிய எதுவும் அங்கு இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனோடு கொள்ளும் தோழமையிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர் (88:5). அங்கே இறைவன் போற்றப்படுவதில்லை (88:10-13). அவருக்கு யாரும் நன்றி கூறுவதில்லை. மரண இடுக்கணை விவரிக்கும் ஆசிரியர், தான் பாதாளத்தில் புகவிருப்பதாகவும், அங்கே ஏற்கெனவே இருப்பதாகவும் (69:15; 88:4), அதே போல் நன்றிகூறும்போது சாவிலிருந்து மீண்டு விட்டதாகவும் (30:3) மிகைப்படுத்திக் கூறுவார். இச்சங்கீதங்களில் ஆன்மா குறிக்கப்படும்போது, அது உடலிலிருந்து பிரிந்துவிட்ட ஆன்மாவை மட்டுமன்று முழு ஆளையும் குறிக்கிறது. ''என் ஆன்மா சேயோலுக்குச் செல்கிறது'' என்பதை ''நான் சேயோலுக்குச் செல்கிறேன்'' என்று பொருள் கொள்ள வேண்டும் (86.13; காண்க. 16:10; 30:3).

ஆ) உடல் நோய்கள்:-

நோய்கள் பற்றி பழைய ஏற்பாட்டு மக்கள் என்ன கருதினர் என்பதைச் சங்கீதங்கள் தெளிவாகக் கூறுகின்றன. யாவே நோயைக் கொடுக்கிறார், அவரேதான் அதைக் குணமாக்குகிறார். மற்றக் காரணங்கள் இரண்டாம் தரப் பின்னணியிலே உள்ளவையே (38:3; 69:27; 102:11; எசா 38:12; 29:2), பெரும்பாலும் பாவங்களுக்குத் தண்டனையாகவே யாவே நோய்களை அனுப்புகிறார் (38:4; 42:5). இச்சங்கீதங்களில் சில இடங்களில் நோய்கள் உயிர்ச்சித்திரமாக விவரிக்கப்படுவதைக் காணலாம் (39; 101; எசா 38:14). சில சமயம் விரோதிகள் ஒருவன் மேல் ஆதிக்கம் கொள்ள நோய்கள் வாய்ப்பளிக்கின்றன (35:13-15; 41:6.9). இப்பாடல்களில் மூவகை எதிரிகளைக் காண்கிறோம். 1) நோயை, மறைக்கப்பட்ட குற்றத்திற்குரிய தண்டனையாகக் கருதும் நண்பர்களும் உறவினரும் (38:12; யோபு; யோவா 9:2). இப்படிக் கருதுவதால் நண்பர்களும் எதிரிகளாகின்றனர். 2) நோய்வாய்ப்பட்டோரின் புண்ணிய வாழ்வை எள்ளி நகையாடும் இறை பக்தி அற்றோரும், இறை நிந்தனை செய்வோரும் ஆவர் (69:10-12). இவர்கள் யாவேக்கும் அவரது பராமரிப்புக்கும் ' எதிரானவர்கள். 3) நோய்வாய்ப்பட்டுள்ளவரின் ஒன்றும் இயலாத நிலையைப் பயன்படுத்திக் கொள்ளும் முந்தைய விரோதிகள். யாவே பாவங்களுக்குத் தண்டனையாக நோயை அனுப்பியுள்ளதால், தங்கள் குற்றச்சாட்டு உண்மையானதே என்று கொக்கரிப்பவர்கள் (31:12-13; 35:15-16; 69:27; 109:22-25).

இ) பொய்க் குற்றச்சாட்டுகள்:-

இஸ்ராயேலரிடையே வழக்காடுதல் வெகு சாதாரணமாய் இருந்தது. அதே போல் நீதி வழங்குவதிலும் ஊழல் மிகுந்திருந்தது. இங்குச் செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு தெளிவாகக் காணப்பட்டது. பெரும்பாலும் செல்வந்தர்கள் ஏழைகளைக் கொடுமைப்படுத்தினர் —(காண்க. 2 சாமு 12; 1 அர 20; தானி 13; எசா 1:23; 5:7; 11:3 தொ. ஆமோ 5; 12; எரே 5:26; 22:3). கிறிஸ்துவின் காலத்திலும் இந்நிலை மாறுபட்டதாகத் தெரியவில்லை (லூக் 18:2-5). ஆகவே பொய்ச் சாட்சியத்திற்கும், அநீதியான தீர்ப்புக்கும் எதிராகச் சட்டங்கள் வேண்டியிருந்தன (உப 19:18-20; யாத் 21; 23). ''பழிக்குப் பழி'' என்ற நியதி கடைப்பிடிக்கப்பட்டது. பொதுவாக நகர வாயிலின் அருகில் வழக்காடுதல் நிகழ்ந்தது. ஆகவே ''வாயிலின் முன்'' என்ற சொற்றொடர் ''நீதிமன்றத்தின் முன்'' என்ற பொருளும் பெறும். நீதி வழங்குதல் சில சமயம் அரச மன்றத்திலும் நிகழும் (122:5). நீதி வழங்குமுன் இரு கட்சியினரும் கேட்கப்பட வேண்டும். விடுவிப்புக்குப் பெரும்பான்மை ஒப்புமை அவசியமாகும் (127:5). சாட்சியமில்லாத போது, ஒருவன் யாவேயின் பெயரால் சத்தியம் செய்யலாம் (7:4-6). ஏனெனில் யாவேயே மேலான சாட்சியாவார் (109:31). பொய்ச் சாட்சி கூறுபவர்களும் பொய்க்குற்றம் கூறுபவர்களும் பல உருவகங்களால் விவரிக்கப்படுகின்றனர். அவற்

றில் சில: வேடர்கள் (7:15; 35:7; 57:6; 64:7; 140:5); கொள்ளைக்காரர்கள் (17:9-12; 56:6); சிங்கங்கள் (7:2; 17:12; 57:4); ஓநாய்கள் (59:14 தொ); பாம்புகள் (58:4 தொ)..... ஆலயத்தி லும் நீதிவழங்கப்படலாம். ஒரு குற்றச்சாட் டைச் சட்டத்தால் நிர்ணயிக்க முடியாத போது, குற்றம் சாட்டப்பட்டவன், குருவின் முன் தனது வழக்கைச் சமர்ப்பித்துத் தீர்ப்புகள் பெறுவான்.

விடுதலை வேண்டுதலில் இறைவன் தலையிட வேண்டும் என்று கோரப்படும். இந்தத் தூண்டு காரணங்களாக, யாவேயின் பிரமாணிக்கமும், கடந்த காலத்தில் அவர் ஆற்றிய மீட்புச்செயல்களும், வேண்டு வோரின் குற்றமற்றதன்மையும் எடுத்துக் கூறப்படும். சில சமயம், துன்புறுவோர் தனது குற்றத்தை ஏற்று மன்னிப்புக் கோரியும், தனது ஒன்றும் இயலாத நிலையை எடுத்துக்கூறியும் இறைவனது உதவியை வேண்டுவார்.

ஈ. சாபம் கூறும் சங்கீதங்கள்: விடுதலை வேண்டுதலில் சில சமயம் விரோதிகளுக்கு எதிராகச் சாபம் கூறப்படும் (35:1-5; 55:15; 59:13; 69:27-28; 109:7; 140:10). இச்சாப மன்றாட்டு, பழிக்குப்பழி என்ற நியதியைப் பின்பற்றுகின்றது (யாத் 21:24-25: லேவி 24:17-22; உப 19:16-19). இம்முறை புதிய ஏற்பாட்டுப் போதகத்திற்கு எதிரானது (மத் 5:39.43-48). ஆனால் இச்சாபங்களை மீட்பு வரலாற்றின் கால அமைப்புக்கேற்ற சூழ்நிலையில் புரிந்து கொள்ள வேண்டும்.

புலம்பல் சங்கீதங்களில் அடிக்கடி குறிக் கப்படும், சபிக்கப்படும், ''விரோதி'' யார் என்பது பற்றி, பல கருத்துக்கள் கூறப்பட் டுள்ளன. இந்த விரோதிகள், சங்கீத ஆசிரி யரை அவதூறு கூறி நீதி மன்றத்திற்கு முன் கொண்டு வருபவர்கள், மாயவித்தைக்காரர் கள் போன்றவர்களே. எந்த ஒரு கருத்தும் இந்த விரோதி யார் என்பதை முழுமையாக விளக்கவில்லை எனலாம். இந்த விரோதி கள் திட்டம் செய்யப்பட்ட எடுத்துக்காட்டான வர்களாகத் தெரிகிறது. இவர்கள் சங்கீத ஆசிரியரின் சொந்த அனுபவத்தையும் ஒழுக்க மதிப்பீட்டையும் சேர்ந்தவர்கள் அல் லர். இவர்கள் இறைபயம் அற்றவர்கள். ஆகவே இறைவனுடைய விரோதிகள். இச் சாபங்கள் இவர்களுக்கு எதிராகச் சொல்லப் படும் திட்டமிட்ட எடுத்துக்காட்டான வழி பாட்டு வேண்டுகோளாகும். ஆசிரியரது சொந்த முறையில் பழிவாங்கும் கூற்றல்ல. ஆகவே இச்சாபங்கள், இறைவன்பால் ஆசிரி யர் கொண்டுள்ள பிரமாணிக்கத்தின் மறு புறமாகும் (139:19-24). குழந்தைகளைக் கல் லில் அடித்துக் கொல்லுதல் (137:9) போன்ற கூற்றுகளைப் பழைய மேற்காசியாவில் நிலவிய அர்ப்பணப் போர்ச் சூழ்நிலையில் புரிந்து கொள்ள வேண்டும். சங் 109:6.19-இல் வரும் சாபங்கள் ஒருவேளை, சங்கீத ஆசிரியரால் கூறப்பட்டதல்ல, விரோதி யால் கூறப்பட்டதாகும். பழைய ஏற் பாட்டு ஒழுக்க இயல், புதிய ஏற்பாட்டு ஒழுக்க இயலுக்கு ஒத்ததாய் இல்லாவிடி னும், வாசகர் பழைய ஏற்பாட்டு ஆசிரியரது முன்னோக்கை ஓரளவு ஒத்துணர்வோடு நோக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தச் சாபச் சங்கீதங்களின் முதன்மைக் குறிக்கோள் எதிரி அழிய வேண்டும் என்ப தன்று, வரவிருக்கும் துன்பம் நீங்க வேண் டும் என்பதுதான். அவர்களைப் பொறுத்த மட்டும் இறைவனது நீதி எதிரிகள்பாலும் வெளிப்படவேண்டும் என்று மன்றாடுவதில் தவறில்லை. பயன்படும் சொற்கள் ஏற்றுக் கொள்ள கடினமாக இருக்கலாம். இஸ்ராயே லின் விசுவாச வளர்ச்சியின் பயிற்சி நிலை யில் இவற்றை நோக்க வேண்டும். சிலர் இச்சாப மன்றாட்டுகள் ஆன்ம எதிரி களுக்கு எதிரானது என்று கருதுவர். இப் பொருளில் இச்சங்கீதங்களைச் செபிப்பதில் தவறு ஒன்றுமில்லை.

இந்தப் புலம்பல் சங்கீதங்களில், இறை வன் மன்றாடுபவரைக் காப்பாற்றுவார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையும் எடுத்துக் கூறப் படும். இது மீட்பு வரலாற்று அனுபவத்தின் விளைவாகும். இந்த நம்பிக்கை வேண்டு வோரின் ஆழ்ந்த, தளராத விசுவாசத்தைக்

காட்டுகிறது. இறைவன் தலையிடவேண்டும் என்பதற்குரிய தூண்டு காரணங்களில் இந்த நம்பிக்கையும் ஒன்றாக எடுத்துக்கூறப் படும். இது பற்றி, நம்பிக்கைச் சங்கீதங்கள் என்ற தலைப்பின்கீழ் மேலும் கூறுவோம்.

சிலசமயம், நன்றிப் பலி செலுத்துவதாக நேர்ச்சியும் எடுத்துக் கூறப்படும். இச்சங்கீதங்கள் வழிபாட்டில் பயன்படுத்தப் பட்டால், நம்பிக்கைக் கூற்று, இறைக்கூற்றுக்குப் பின் கூறப்பட்டது. சில சங்கீதங்களில் *(6:8-10; 31:23; 56:10-13)* இந்தநம்பிக்கை உயிர்ச்சித்திரமாக எடுத்துக் கூறப்படும் முறை, ஒருவர் தன் துன்பத்திலிருந்து விடுதலை அடைந்த பின்னரோ, குருவோ பிறரோ இறைக்கூற்று அளித்த பின்னரோ கூறப்பட்டதாகத் தெரிகிறது.

இச்சங்கீதங்களைப் புரிந்துகொள்ள, இறைவனுக்கு மனிதப்பண்புகளைச் சாற்றிக் கூறும் விவிலிய மரபையும் மனதில் கொள்ள வேண்டும். இஸ்ராயேலர் யாவேயை ஒரு தத்துவக் கோட்பாடாகக் கருதவில்லை. அவர்கள் தங்கள் சொந்த வாழ்விலும் மீட்பு வரலாற்றிலும் கண்ட உயிருள்ள இறைவனாவார் யாவே. ஆகவே ஒரு மனிதன் மற்றொரு மனிதனை அணுகுவதுபோல், இறைவனை அண்டிப் போவார்கள். இதில் ஒருவகை வியப்பளிக்கும் நெருக்கம் உண்டு. இதை மோசே *(எண் 11:11-14)*, யோசுவா *(யோசு 7:7-9)* எலியா *(1 அர 17:20)* எரேமியா *(எரே 15:17 தொ; 20:7)* ஆகியோர் யாவேயோடு உரையாடிய முறையில் காணலாம். ஆனால் அதேபோது இறைவனது யாவும் கடந்த தன்மை மறக்கப்படுவதில்லை. இறைவனைக் குறிக்க எந்த உருவமும் பயன்படுத்தக் கூடாது என்பது இதற்குச் சான்றாக உள்ளது. இறைவனுக்கு மனிதப் பண்புகளைச் சாற்றிக் கூறுவது இஸ்ராயேலர் இறைவன் பால் கொண்டிருந்த விசுவாசத்தின் சிறப்பியல்பாகும். அவர் உயிருள்ளவர், மனிதரோடு அந்நியோன்னிய உறவு கொண்டவர். ஆகவே அவரிடம் இஸ்ராயேலர் உருக்கமாக வேண்டுவர்; வேண்டுதலை வலியுறுத்துவர்.

இந்தத் தனிநபர்ப் புலம்பல் சங்கீதங்கள் சமூகப் புலம்பல்களே என்று சிலர் கூறுவர். இவர்கள் கருத்துப்படி, இச்சங்கீதங்களில் வரும் ''நான்'', ''என்'' என்ற சொற்கள் குழுத்தன்மையுடையன. மக்கள் பெயரால் அரசன் வேண்டுகிறான். சமூகமே உருவகமாகத் தனி நபராகக் குறிக்கப்படுகிறது. தனிநபருடைய உணர்ச்சிகளையோ மன்றாட்டுகளையோ எந்தச் சங்கீதமும் எடுத்துக் கூறவில்லை; எடுத்துக்கூறும் நோக்கமும் கொண்டிருக்கவில்லை. எல்லாச் சங்கீதங்களும் சமூக வழிபாட்டுப் பாடல்களே. இவ்வாறு ஆய்வாளர்கள் ஒரு தலைப்பட்சமாகக் கூறி வந்துள்ளனர். ஆனால் இப்போது இக்கருத்துகளுக்கு மதிப்பில்லை. இக்கருத்து சரியானதன்று. ஏனெனில் இச்சங்கீதங்களில் அரசனைப் பற்றிய குறிப்பே இல்லை. மேலும் இவற்றில் தனிநபர்த் தன்மை மிகவும் அழுத்தம் பெறுகிறது. இவற்றில் சில, பிற்காலத்தில் நாட்டுப் புலம்பலாயின என்பது உண்மையே. இவை பிற்காலத்தில் சமூக வழிபாட்டில் பயன்பட்டன என்பதும், அதனால் இவை சங்கீத நூலில் இடம் பெற்றன என்பதும் உண்மையே. இருப்பினும் ''நான்'' ''என்'' போன்ற சொற்கள் தனிநபரையே குறித்தன. இச்சங்கீதங்கள் தனிநபர்களுக்காக அல்லது தனிநபர்களால், அவர்களுடைய தேவையை நிறைவு செய்யும் விதத்தில் இயற்றப்பட்டன. இவற்றில் காணப்படும் விசுவாசம் தனிநபரின் சொந்த விசுவாசம் ஆகும். அது அவரது உள்ளத்திலிருந்து பிளிறுகிறது. காலப்போக்கில் இச்சங்கீதங்கள் வழிபாட்டில் புகுந்து, சங்கீத நூலில் இடம் பெற்றபோது சமூகப்பண்பை ஏற்றன. அப்போதும் தனிநபர்ப் பண்பை இழந்துவிடவில்லை.

2. சமூகப் புலம்பல் பாடல்கள்: இதில் *12; 44; 58; 60; 74; 77; 79; 80; 82; 83; 85; 90; 94; 106; 108; 123; 126; 134* ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவையும் தனிநபர்ப் புலம்பலைப் போன்ற அமைப்பைக் கொண்டுள்ளன. ஆனால் துன்பங்கள் பற்றிய விவரிப்பு நாடு முழுவதையும் தழுவியதாகும். இத் துன்பங்கள் போரில் தோல்வி, ஆலயம்

திட்டுப்படுதல், அது அழிக்கப்படுதல், பஞ்சம், பிணி, கொள்ளை நோய் முதலியவை யாகும். இவற்றால் அவதியுற்ற மக்கள் தங்கள் இறைவனைநோக்கி, கதறி அழுது, விடுதலை அளிக்குமாறு மன்றாடினர்.

இறைவன் தலையிட்டு விடுதலை அளிக்க வேண்டியதற்குக் காரணங்களாக, அவருடைய உடன்படிக்கையையும் பிரமாணிக்கத்தை யும் எடுத்துக் காட்டுவார்கள். அவர் தமது பெயரின் பொருட்டே தலையிட வேண்டும் என்று மன்றாடுவர். அவர் தமதுமக்கள் வரலாற்றில் கடந்தகாலத்தில் தலையிட்டுக் காத்ததுபோல், இப்போதும் தலையிட்டு, அரியன செய்து தங்களைக் காக்க வேண்டும் என்று மன்றாடுவர். இவற்றில் எல்லாம், தாங்கள் அவரது மக்கள் ஆகவே, தங்களைக் காக்க வேண்டியது அவரது பொறுப்பாகும் என்று இறைவனுக்கு நினைவுறுத்துவர்.

இச்சங்கீதங்களின் வாழ்க்கைப் பின்னணி செபநாளும், தபசு நாளும் ஆகும். நாட்டுக்கு இடுக்கண் ஏற்பட்டபோது, இத்தகைய நாட்கள் கட்டளையிடப்பட்டன. குறிப்பிட்ட நாளில், மக்கள் ஆலயத்தில் கூடுவர் *(1 அர 8:33-40; 2 நாள் 30:9; 1 மக் 4:37-40)*; விழாக் கொண்டாடுவதற்கல்ல; கோணிஆடை அணிந்து, சாம்பல்பூசி, தபசு செய்வதற்காகும் *(1 சாமு 7:6; 1 மக் 3:47)*. இத்தகைய சடங்கை யோவேல் விவரித்துள்ளார் *(யோவே 1:13-20; 2:15-16)*. மோசே *(எண் 11:11-15)*, யோசுவா *(யோசு 7:7-9)*, யோசபாது *(2 நாள் 20:6-12)*, எஸ்ரா *(எஸ் 9:6-15; நெகே 9:6-37)*, நெகேமியா *(நெகே 1:5-11)* போன்ற பொதுத்தலைவர்களின் பொதுமன்றாட்டுகள் இத்தகைய பொதுச்சடங்குச் சூழ்நிலையில் நடந்தவையே. சங் *74;137* ஆகியவை எரேமியாவால் எழுதப்பட்டவை என்று கூறுவது மரபு. இவை கி.மு. 587-இல் எருசலேம் அழிக்கப்பட்டதைப் பிரதிபலிக்கின்றன. சங் *85* நாடுகடத்தப்பட்டு நாடு திரும்பிய மக்களின் மனநிலையை எடுத்துக் கூறுகின்றன. சங் *106* நாட்டின் பொதுப் பாவநிலை பற்றிய அறிக்கையாகும்.

தனிநபர்ப் புலம்பலில் காணப்படும் நம்பிக்கை, நன்றி உணர்வுகள் சமூகப் புலம்பலிலும் காணப்படுகின்றன. இஸ்ராயேல் மக்களிடையே தனியார் நலம் குறைந்து குழு நலமே முதன்மை கொண்டிருந்தது என்பதற்கு இச்சங்கீதங்கள் சான்றாய் உள்ளன. இறைவனுக்கு மனிதப் பண்புகளைச் சாற்றிக்கூறும் மரபு இவற்றிலும் காணப்படும். இது சில சமயம், வேண்டுதலைக் கட்டளையாகவும் மாற்றக்கூடும் *(44:23)*.

III. **நம்பிக்கைச் சங்கீதங்கள்:** இவை புலம்பல் அல்லது மன்றாடுதல் வகையைச் சேர்ந்தவையே. ஆயினும் இவை இஸ்ராயேல் மக்கள் இறைவன்பால் கொண்டிருந்த நம்பிக்கையை வலியுறுத்தி, அதற்கு முக்கியத்துவம் அளிப்பதால், வசதிக்காக இச்சங்கீதங்களைத் தனியாகப் பிரித்துக் காட்டலாம்.

அ) தனியார் நம்பிக்கைப் பாடல்கள்: இதில் *3; 4; 11; 16; 23; 28; 62; 121; 132* ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவற்றில், தனிநபர் என்ற அளவில் ஓர் இஸ்ராயேலன் இறைவன்பால் கொண்டிருந்த ஆழ்ந்த, அசைக்க முடியாத நம்பிக்கை வெளிப்படுகிறது. ஆண்டவர் அவனது தலைவர், ஆயன் *(23:1)*; தாயும் தந்தையுமாவார் *(27:1-10)*; தாயினும் மிக்க அன்புடன் காப்பவர் *(131:2)*. அவர் உறங்குவதுமில்லை; அயர்வதுமில்லை; ஓய்வதுமில்லை *(121:3-4)*. எப்போதும் இஸ்ராயேலரைக் காப்பவர் *(121:8)*. அவரே ''எனது ஒளி'', ''எனது மீட்பு'' *(27:1)*, ''அரணும் அடைக்கலமும்.'' ''அவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்'' *(121:2)*. இவை போன்ற நம்பிக்கை உணர்வுமிக்க சொற்கள் இச்சங்கீதங்களில் நிறைந்து காணப்படும்.

ஆ) சமூக நம்பிக்கைப் பாடல்கள்: இதில் *115; 125; 129* ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவை துன்ப வேளையில் இறைவன் தலையிட்டுக்காக்க வேண்டும் என்று மன்றாடுகின்றன. இவற்றில், தங்களோடு உடன்படிக்கை செய்த இறைவன் தங்களைக் கைவிட மாட்டார் என்ற இஸ்ராயேல

ருடைய குழு நம்பிக்கை பரந்து காணப் படுகிறது.

IV. நன்றிக் கீதங்கள்: இவை புலம்பல் பாடல்களுக்கு நேர்மாறானவை. இவை, அடைந்த நன்மைக்கு நன்றிகூறுகின்றன. இவை நன்றிப் பலியோடு தொடர்புடையவை. இந்த வழிபாட்டுச் சூழ்நிலைதான் இவற்றிற்குப் பின்னணியாகும். மோவின் கெல் என்பவர், இஸ்ராயேல் இலக்கியத்தில் ''நன்றி கூறுதல்'' என்பதற்கு எபிரேயச் சொல்லே இல்லை. ஆகவே இச்சங்கீதங்கள் உண்மையில் புகழ்ப்பாக்களே என்பார். எது வாயினும், இவற்றில், இறைவனிடமிருந்து பெற்ற நன்மைக்கு நன்றி கூறுதலே முதன்மை பெறுகிறது. மக்கள் நன்றி கூறி இறைவனைப் புகழ்கின்றனர். ஆகவே இச் சங்கீதங்களைப் பிரித்துக் காட்டுவது சரியே.

அமைப்பு 1. முன்னுரை: நன்றிகூறி இறைவனைப் போற்றுதலோடு சங்கீதம் தொடங்குகிறது. இவ்வகையில் புகழ்ப்பாக்களை ஒத்திருக்கிறது.

2. முக்கிய பகுதி: அனுபவித்த இடுக்கணும், விடுதலையும் விவரிக்கப்படுகின்றன. இடுக்கண் புலம்பல் நடையில் எடுத்துக் கூறப்படுகிறது.

3. அறிக்கை: யாவேதான் விடுதலை அளித்தார் என்று அறிவிக்கப்படும். சூழநிற்போருக்குப் போதகமும் அளிக்கப்படும். நேர்ச்சிக் கடன் நிறைவேற்றப்படும்.

4. முடிவுரை: புகழ்ப்பாக்களைப் போல், முன்னுரை மீண்டும் எடுத்துக் கூறப்படும்.

இச்சங்கீதங்களையும் தனியார் செய்ந் நன்றிக் கீதங்கள், சமூக செய்ந்நன்றிக் கீதங்கள் எனப் பிரிக்கலாம்.

அ. தனியார் செய்ந்நன்றிக் கீதங்கள்: இதில் *9; 10; 30; 31; 34; 41; 92; 107; 115; 138* ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவை தனி இஸ்ராயேலன் தான் அடைந்த நன்மைக்கு இறைவனுக்கு நன்றிகூறும் பாடல்களாகும்.

இவற்றை ஆய்வு செய்தால், நன்றி செலுத்தும் சடங்கின் விவரிப்பையும் காணலாம். துன்பத்திலிருந்து விடுபட்டவர் தன் உற்றார் உறவினருடன், நேர்ச்சிப் பலியைக் கையிலேந்தி இறைவன் உறையும் ஆலயம் நோக்கி, அவரது புகழ் பாடிச் செல்வார். ஆலய வாயிலின் முன் நின்று இறைவனைப் போற்றுவார் *(9:14)*. ஆலய வாயிற் காப்பாளரிடம் கதவைத் திறக்கும்படி கேட்பார் *(118:19)*. அவர்கள் பதில் கூறித் திறக்க *(118:20)*, ஆலயத்தினுள் செல்வார் *(138:2)*. அவரைக் குருக்கள் எதிர் கொள்வார்கள். தனது உற்றார் உறவினரையும், வழிபட வந்தோரையும் அழைத்து, தனக்கு இறைவன் செய்த நன்மையை விவரிப்பார். இதில் கோட்பாட்டு விளக்கமும் அமைந்திருக்கும். பின், நேர்ச்சிக் காணிக்கையை நன்றிப் பலியாக ஒப்புக் கொடுப்பார். பின் உறவினரோடும் பிறரோடும் சேர்ந்து நன்றியுரை கூறிவிருந்துண்பார் *(23:5)*. இத்தகைய விவரிப்பைச் சங் *118*-இல் காணலாம்.

இந்நன்றிச் சடங்கு ஆலயத்தில் நிகழ்ந்த போது, அது தனிநபரின் பக்தி முயற்சியாக மட்டும் கருதப்படவில்லை. மேலும், இச் சடங்கு ஒரு தனிநபராலோ, தனி நபருக்காக மட்டுமோ நடக்கவில்லை. அது காலப் போக்கில் சமூகச் சடங்காக மாறி, அதற்குரிய சடங்கு முறையில் நிறைவேற்றப் பட்டது. இதைச் சங் *107*-இல் காணலாம். இச்சடங்கிற்கு ஒரு பெரிய விழாவைப் பயன்படுத்தினர்; குறிப்பாக மகிழ்ச்சிமிக்க கூடாரவிழா இதற்குப் பயன்பட்டது. ஆகையால் ஒரேநாளில் பலர் இச்சடங்கை நிறைவேற்றியிருக்கலாம். இவர்களை, அவர்கள் பெற்ற நன்மையின் தன்மைக்கேற்ப குழுவாகப் பிரித்து நன்றிச் சடங்கை நிறைவேற்றுவர். சங் *107* நான்கு குழுவினரைக் குறிப்பிடுகிறது. பயணிகள் *(107:4-9)*, கைதிகள் *(107; 10-16)*, நோயால் நலிவுற்றோர் *(107:17-22)*, மாலுமிகள் *(107:23-32)*. பல நாடுகளிலிருந்து வழிபட வந்திருந்த மக்களைத் தங்களோடு சேர்ந்து இறைவனது இரக்கத்திற்கு நன்றிகூற அழைப்பதோடு சங்கீதம் தொடங்குகிறது *(107:1-3)*. பின் ஒவ்வொரு குழுவினருக்கும்

உரிய முக்கிய பகுதிகள் வருகின்றன. நான்கும் ஒரேவித அமைப்பைக் கொண்டுள்ளன. முதலில் அவர்களது துன்பம் விவரிக்கப்படுகிறது. பின் ''அவர்கள் ஆண்டவரை நோக்கிக் கூவி அழைத்தனர். அவர் அவர்களைத் துன்பத்திலிருந்து விடுவித்தார்'' என்று கூறப்படுகிறது (107:6.13:19.28). அவர்களது விடுவிப்பு அறிவிக்கப்பட்டபின், ஒவ்வொரு குழுவினரும் இறைவனுக்கு நன்றிகூறத் தூண்டப்படுகின்றனர். ''ஆண்டவருடைய இரக்கத்தை நினைத்து அவருக்கு நன்றி செலுத்துவார்களாக. மனு மக்களுக்கு அவர் செய்த வியத்தகு செயல்களை நினைத்துக் கொள்வார்களாக'' (107:8.15.21.31). இறைவன் மனிதருக்குச் செய்யும் நன்மைகள் பற்றிய பொது விவரிப்புடன் (107:33 தொ) சடங்கு முடிகிறது.

மூலத்தில் இத்தகைய சடங்குகளின் விளைவே இந்த நன்றிக்கீதங்களாகும். தொடக்கத்தில், தனிநபர்ச் சடங்காக இருந்தவை, காலப்போக்கில் சமூகச் சடங்காக மாறின. அதற்கேற்ப இச்சங்கீதங்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கிய வடிவம் எடுத்தன. இவை ஆலயத்தில் நடந்த குறிப்பிட்ட சடங்கையே மையமாக வைத்து இயற்றப்பட்டன. முன்பு விவரித்த முறையிலேயே எல்லா நன்றிக்கீதங்களும் தோன்றியிருக்க வேண்டிய அவசியமில்லை. சில சங்கீதங்கள் தனிநபரின் சுயமான உள்ளக்கிளர்ச்சியாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் சங்கீத நூலில் சேர்க்கப்பட்டபின் அவை சமூகச் செபமாக மாறின. அந்த முறையில்தான் கிறிஸ்தவ வழிபாட்டிலும் அவை பயன்படுகின்றன.

இத்தகைய நன்றிப் பாடல்களை விவிலியத்தின் பிற பகுதிகளிலும் காணலாம். பழைய ஏற்பாட்டில் அன்னாவின் பாடல் (1 சாமு 2:1-10), யோனாவின் பாடல் (யோனா 2:3-10), புதிய ஏற்பாட்டில் மரியாளின் பாடல் (லூக் 1:46-55), செக்கரியாவின் பாடல் (லூக் 1:67-79) முதலியவை நன்றிச்சங்கீதங்கள் பாரம்பரியத்தில் தோன்றியவையே.

ஆ. சமூக செய்ந்நன்றிச் சங்கீதங்கள்: *இதில் 65; 66; 67; 68; 117; 124 ஆகிய சங்கீதங்கள் அடங்கும். தனியாரின் நன்றிக்கீதங்கள், காலப்போக்கில் சமூக வடிவம் எடுத்தன என்று மேலே குறிப்பிட்டோம். ஆனால் சமூக வடிவமாகவே தோன்றிய நன்றிக்கீதங்களும் உண்டு. இவை நாடுதழுவிய அளவில் அடைந்தநன்மைக்காக, நாடுவெற்றி பெற்றதற்காகவோ, நாட்டை எதிர் நோக்கிய உடனடி இடுக்கணிலிருந்து கிடைத்த விடுதலைக்காகவோ இறைவனுக்கு நன்றி கூறுகின்றன (65; 124; 129). சில, மிகுதியாகக் கிடைத்த விலங்கினப் பெருக்கத்திற்காகவும் அறுவடைக்காகவும் நன்றி கூறுகின்றன (65; 67). இவற்றிற்குப் பின்னணியாக உள்ள வழிபாட்டுச் சடங்கு மேலே விவரிக்கப்பட்ட தனிநபருக்குரிய சடங்கை ஒத்ததே. இச்சடங்கு முறை 65; 66; 67; 68; 118 ஆகிய சங்கீதங்களில் விரவிக் கிடக்கிறது. இச்சடங்கு முறை ஆண்டுதோறும் கொண்டாடப்பட்ட விழாவாக இருக்கலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப்பின் வந்தசிறப்பு விழாவாக இருக்கலாம். இவ்விழா ''ஆண்டவர் குறித்தநாளில்'' (118:24) கொண்டாடப்பட்டது. அது ''நன்றியின் நாள்'' என்றழைக்கப்பட்டது.*

இஸ்ராயேலர், தனிநபர் என்ற அளவிலும், நாடு என்ற அளவிலும் இறைவனது நன்மைத்தனத்தை ஏற்று அவர் செய்த நன்மைகளுக்காக நன்றிகூறிப் போற்றினர். இத்தகைய உணர்வுகளையுடைய இச்சங்கீதங்கள் புதிய ஏற்பாட்டிலும் புதிய இஸ்ராயேலாகிய திருச்சபையிலும் மதிப்பிற்குரிய இடம் பெற்றதில் வியப்பில்லை.

V. அரச சங்கீதங்கள்: *சீயோன், யாவேயின் அரசமாண்பு ஆகியவை பற்றிய சங்கீதங்களில் முடிவு கால இயல் பண்பு உள்ளமையைச் சுட்டிக் காட்டினோம். இதிலே சங்கீத நூல் இறைவாக்குத் தன்மை கொண்டுள்ளது. இச்சங்கீதங்கள் முன்னறிவித்த, யாவும் புதுப்பிக்கப்படும் காலம் மெசியாவின் காலமாகும். இப்போது மெசியாவைச் சிறப்பான முறையில் முன்னோக்காகக்*

கொண்ட சங்கீதங்களைப் பற்றிக் கூறப் போகிறோம். இவை அரச சங்கீதங்கள் என்று அழைக்கப்படும். இவை யாவேயின் அரச மாண்புச் சங்கீதங்களிலிருந்து வேறுபட்டவை; யாவேயின் ஊழியனும் பிரதிநிதியுமான அரசனைப் பற்றியவை. இப்பகுதியில் 2; 18; 20; 21; 44; 61; 72; 89; 101; 110; 132; 144 ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவற்றிற்கு எந்தத் தனிச்சிறப்பான அமைப்புமில்லை. இவை, உண்மையில் புகழ்பாக்கள், மன்றாட்டுகள், நன்றிப்பாடல்கள். ஆனால் இவற்றில் அரசனுக்கு அளிக்கப்படும் இடம் இவற்றிற்கு ஒரு தனிச் சிறப்புத் தன்மையை அளிக்கிறது. ஆகவே இவை அரச சங்கீதங்கள் என்றழைக்கப்படுகின்றன.

இவற்றின் மையக் கருத்துகள்:1) அரசனுக்கு அளிக்கப்பட்ட இறை மொழிகள் (2; 110); 2) அரசனுக்காக மன்றாடுதல் (20; 61; 72; 84); 3) அரசன் அடைந்த நன்மைக்காக நன்றி கூறுதல் (21); 4) அரசனுடைய மன்றாட்டுப் பாடல் (18; 28; 63; 101; 144); 5) அரச ஊர்வலம் பற்றிய பாடல் (132); 6) அரச திருமணம் பற்றிய பாடல் (45).

இஸ்ராயேல் சமூகத்தில் அரசர் ஒரு சிறப்பிடம் வகித்தார். இறைவனால் இயற்கைக்கு மேற்பட்ட முடிவுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தலைவனாகத் திகழ்ந்தார் அரசர். இறைவனால் ''தேர்ந்தெடுக்கப்பட்டு'' (1 நாள் 28:5), அபிடேகம் செய்யப்பட்டு, அவரிடமிருந்து அரசுரிமை பெறுகிறார் அரசர். அதேபோது அவர் மக்களின் பிரதிநிதியாகவும் உள்ளார். அவர் இறைவனது திட்டத்தில் ஒரு கருவியாவார் (யாத் 15:18; எண் 23:21; 1 சாமு 8:7; 12:12; 1 அர 22:19). வாக்குறுதிகளிலும் வரலாற்றின் இயற்கைக்கு மேற்பட்ட தன்மையிலும் அவர் பங்கு கொள்கிறார். அந்த வரலாற்றை உருவாக்குவதில் முக்கிய இடம் கொள்கிறார். இறைவனது பிரதிநிதியாக ஆட்சி புரிவதால், அவரது ஆட்சிபீடம் ''ஆண்டவரின் அரியணை'' என்றழைக்கப்படும் (1 நாள் 28:5). இவ்வரசு இறைவனுடையதானதால், அது என்றும் முடிவில்லாமல் நிலைத்திருக்கும் (சங் 21:4-5). எல்லாவற்றையும்விட, அரசர் இறை ஆதரவும் வாக்குறுதியும் பெற்ற தாவீது மரபின் பிரதிநிதியாவார். ஆகவே இஸ்ராயேல் மக்கள் தங்கள் அரசர்களிடம் பெரு மதிப்புக் கொண்டிருந்தனர். ஆகவே அரசன் இறைவனது அருளால் முறைப்படி ஆட்சிக்கு வருதல், அரசனது மகிமை, வெற்றி, நீதிமுறை, மரபு வழி, அரியணை ஏறும் நிகழ்ச்சி, திருமணம் ஆகியவற்றைப் பாடிமகிழ்ந்தனர். அதேபோது அரசனுக்காக இறைவனிடம் மன்றாடவும் தவறவில்லை. இப்பாடல்களை ஆலயத்திலோ, அரச மாளிகைகளிலோ பாடினர்.

இச்சங்கீதங்களுக்கு, தாவீதுக்கு நாத்தான் வழியாக அளிக்கப்பட்ட வாக்குறுதியின் ஒளியில் (2 சாமு 7:4-29), பொருள் கொள்ள வேண்டும். இச்சங்கீதங்கள் அனைத்தும், அன்று இஸ்ராயேலை ஆண்ட அரசர்களைப் பற்றிப் பாடப்பட்டாலும், இவை அவ்வரசர்களையும் கடந்து, தாவீதின் தனிச்சிறப்பான ஒரு மகனைச் சுட்டுகின்றன. இவர் வரவிருப்பவர், இவரில் இறைவன் மகிழ்ச்சி கொள்வார். தமது மீட்பு வேலையைச் செய்ய இவரை நியமிப்பார். இவர் ஈடு இணையற்ற முறையில் அபிடேகம் பெற்றவர்; மெசியா ஆவார். தாவீதின் மகனான மெசியா பற்றிய இறைவாக்குகளில் நாத்தானது இறைவாக்கு (2 சாமு 7) முதலாவதாகும். இது தாவீதின் அரசமரபு உறுதியாக நிலைத்திருக்கும் என்ற வாக்குறுதியை அளித்தது. இப்பொருளில் தான் சங் 89:29-38; 132:11-12 அமைந்துள்ளன. இப்பொருளில்தான் பிற்காலத்தில் அ.ப. 2:30 கிறிஸ்துவுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. ஆகவே இச்சங்கீதங்கள் மெசியாத் தன்மையுடையன. இப்பொருளில்தான் நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னும், இச்சங்கீதங்கள் தொகுக்கப்பட்டு வழிபாட்டில் பயன்பட்டன.

இஸ்ராயேல் அரசர்களில் பலர் நெறி தவறியவர்கள்; யாவேக்குப் பிரமாணிக்கம் அற்றவர்கள். கி.மு. 587-இல் பாபிலோனியர் எருசலேமையும் நாட்டையும் அழித்தனர். தாவீதின் அரச மரபு அழிந்தது. இந்நிலையில் அரசனைப் பற்றிப் பாடுவதிலும் அவ

னுக்காக மன்றாடுவதிலும் பொருளே யில்லை. ஆனால், மக்கள் அப்படிச் செய்த னர் என்றால் அவர்கள் உலக அரசனைக் கடந்த மற்றொருவரை மனதில் கொண் டிருக்க வேண்டும். எருசலேமின் ஊழி, அர சாட்சி ஆகியவைபற்றி உபாகம வரலாற்று ஆசிரியர் அரசுராகமங்களில் கண்டனம் செய்த பின்னும் இச்சங்கீதங்கள் பாதுகாக்கப்பட்டுப் பயன்பட்டன. மாறிய நிலைக்கேற்ப இவற்றிலே சில மாற்றங்கள் செய்யப்பட் டன. இச் சங்கீதங்கள் ''ஆன்மீகமாக்கப்பட் டன''. இச்சங்கீதங்களுக்கு மெசியாப் பொருள் அளிக்கப்பட்டது. முடிவு காலத்தை நோக்கிப் புரிந்துகொள்ளப்பட் டன. அரசனும் மெசியாவும் ஒன்றாக்கப்பட் டனர் (2; 17; 20; 21; 45; 72; 101; 110; 132). இப்பின்னணியில்தான் இறைவாக்கினர்கள் வரவிருக்கும் மாட்சிமைமிக்க அரசர் ஒருவ ரைப்பற்றி முன்னறிவித்தனர் (எசா 9:1-7; 11:1-9; ஆமோ 9:11; எசே 34:23-24). பாபி லோனிய அடிமைக்காலத்திலும் இஸ்ராயே லர் இவ்வரச மெசியாவையே எதிர்நோக்கி நம்பிக்கையுடன் வாழ்ந்தனர். முடிவு காலத் தில் வரவிருக்கும் இந்த மெசியாவுக்கு ஆன் மீகப் பண்புகளை அளித்துக் கற்பனை செய்த னர். அதேபோது அவரால் நிறுவப்படவிருக் கும் உலகியல் அரசையும் எதிர்பார்த்தனர் (தானி 7:13-14).

இச்சங்கீதங்கள் இந்த அரச மெசியா பற்றிய கருத்தையும் நம்பிக்கையையும் முடிவுகாலத் தன்மையுடன் விவரித்தன. ஆகவே இவை மறைந்து போகவில்லை; இரண்டாம் ஆலய வழிபாட்டில் பயன்பட்டன. இவை எப்படி வரலாற்றுப் பொருத்தத்தையும் கடந்து நின் றன என்பதைப் புரிந்து பாராட்டுவது முக்கியமாகும். இக்குறிப்பு சங்கீத நூலின் பிறபகுதிகளுக்கும் பொருந்தும்.

சங் 2:72; 110-இல் மெசியாத்தன்மை தெளி வாக உள்ளது. இது மற்றச் சங்கீதங்களை விட சங் 110-இல் மிகச்சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகிறது. அரச திருமணம் பற்றிய சங் 45-கூட, இறைவாக்கினர்களுக்கு மிக விருப்பமான திருமண உருவக முறையே; புதிய இஸ்ராயேலுக்கும் மெசியாவுக்கு மிடையேயுள்ள உறவை விளக்கப் பயன்பட் டது. இம்முறையில்தான் எபி 1:8-இல் சங் 45 கிறிஸ்துவுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. இந்த மரபைப் பின்பற்றி அரச சங்கீதங்க ளைச் சேராத 8; 16; 22; 35; 40; 41; 68; 102; 118; 120 ஆகிய சங்கீதங்களுக்கும் மெசியாப் பின்னணியில் புதிய ஏற்பாடும், ஆதிக் கிறிஸ்தவப் பாரம்பரியமும் பொருள் கொள் கின்றன. இவ்விதமே யாவேயின் மாண்பு பற்றிய சங்கீதங்களுக்கும் கிறிஸ்துவின் அரச மாண்புகள் சாற்றிக் கூறப்படுகின்றன. இவ் விதம் பொருள் அளிப்பது உடனடியான இயற்பொருளைக் கடந்து சென்றாலும், இது முறையானதே. ஏனெனில் இறைமகன் உல கிற்கு வரும்வரை சங்கீதங்கள் தூண்டி எழுப் பிய நம்பிக்கைகள் முழுவதும் செயல்பட வில்லை; செயல்படவும் முடியாது. அவரே தான் அவற்றின் நிறைவு. இறைமகனான இயேசு கிறிஸ்துவே யாவேயின் ஊழியர், அரசர், இறைவனால் நிலைநாட்டப்பட்ட வர், அபிடேகம் செய்யப்பட்டவர், மெசியா, மெல்கிசதேக்கின் முறைப்படி குரு, அர சர்க்கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல் லாம் ஆண்டவர் (திருவெளி 17:14). இவ் வுலகை ஆளும் உரிமை இம்மெசியாவுக்கே உரியது. அவர் என்றென்றும் ஆட்சி செலுத்து வார் (திருவெளி 11:15).

அரச சங்கீதங்கள் காலத்தால் முந்தியவை யாக இருக்கலாம். இவை இஸ்ராயேலின் அரசாட்சிக் காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். இவற்றின் வாழ்க்கைச் சூழ் நிலை அரசவை மன்றமாகும். ஆகவேதான் அரசவை மொழிப்பண்பையும் சடங்கு முறைகளையும் பிரதிபலிக்கின்றன. சில அரச சங்கீதங்களில் (2; 45; 72; 110) அரசன் எக்காலத்திற்கும் ஆள்வார்; அவரது அரசு உலகெல்லாம் பரவியதாக இருக்கும்; அதில் நீதியும், நேர்மையும், அமைதியும் மிளிரும் ஆகியவை போன்ற கருத்துக் கள் மிகைப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரி கிறது. பலவாறு வரையறை செய்யப்பட்ட ஆட்சியையுடைய இஸ்ராயேல் போன்ற சிறிய நாட்டில் இத்தகைய கூற்றுக்களை

விளக்குவது கடினம். இவை, மேற்காசிய பிறஇன அரசவை இலக்கிய நடையின் பாதிப்பால் வரும் விளைவாகும். ஆனால் அவற்றை அப்படியே கடன் வாங்கவில்லை.

ஆனால் 2 சாமு 7-இல் வரும் தாவீது அரச மரபு பற்றிய நாத்தானின் இறைவாக்கு ஒளியில், இக்கருத்துக்கள் பொருளுடையன, பொருத்தமுடையன. இந்த இறைவாக்கால் இறைவன் தாவீது அரசமரபுக்கு முடிவில்லா ஆட்சியை வாக்களித்தார். தாவீது அரச மரபுக்கு இறைவன் திட்டம் செய்திருந்த குறிக்கோளை எடுத்துக்கூற, உலக அரசுகளின் மகிமைகள் பற்றிய விவரிப்பைப் பயன்படுத்தலாம். இதன் விளைவாக, இஸ்ராயேலில் அரச மெசியாக் கோட்பாடு தோன்றி வளர்ந்தது. ஆட்சி செய்யும் அரசன்பற்றிய இக்கருத்துக்களை அரச சங்கீதங்களும் பல இறைவாக்குகளும் எடுத்துக் கூறுகின்றன. அரசன் தனக்காக ஆளவில்லை. பெரும் பேற்றினையுடைய மரபின் ஒரு நபராக, இறைத்திட்டத்தின் கருவியாக ஆளுகின்றான். ஆகவே அவனது ஆற்றலையும் மகிமையையும் அதிகமாக மிகைப்படுத்த முடியாது. ஏனெனில் அவற்றிற்கு யாவேயே உத்திரவாதம் அளிக்கிறார். யாவே தாவீது மரபோடு முடிவில்லா உடன்படிக்கை செய்துள்ளார். அரசன் இந்த மரபைச் சேர்ந்தவன். அவன் வழியாக இறையரசு செயல்படும். இவ்விதம், அரச-மெசியாப் பொருளில் இச்சங்கீதங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

VI. போதகப் பாடல்கள்: சில சங்கீதங்கள் ஏதாவது ஒரு விதத்தில் மக்களுக்குப் போதகம் அளிக்கும் தன்மை கொண்டுள்ளன. யாவேயின் பணியில் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளை எடுத்துக் கூறுகின்றன. இவற்றை ஞான போதகப் பாடல்கள், வரலாற்றுப் பாடல்கள், இறைவாக்குப் பாடல்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

அ. ஞானபோதகப் பாடல்கள்: இதில் 1; 37; 49; 73; 91; 112; 119; 127; 128; 133; 139; ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவை பொருளடக்கத்திலும், இலக்கிய நடையிலும் ஞான இலக்கியத் தொகுப்பை ஒத்தவையாகும். இவை ஞான இலக்கிய இயக்கத்திலிருந்து தோன்றியிருக்க வேண்டும். இவற்றிற்கு இஸ்ராயேல் ஞானிகளே பொறுப்பாளர்கள் என்ற கருத்து இப்போது ஆய்வாளர்களிடையே ஏற்றுக் கொள்ளப்படும்.

ஞானபோதகச் சங்கீதங்கள் இவைதான் என்று சுட்டிக்காட்டுவது சுலபமன்று. ஏனெனில் ஞான இலக்கியத்திற்கு எந்த ஒரு வடிவமும் சிறப்பானதன்று. ஆகவே பொருளடக்கத்தையும் இலக்கியப் பண்பையும் சேர்த்து மனதில் கொண்டு இத்தொகுப்பைக் கவனிக்க வேண்டும். பொருளடக்கத்தைப் பொறுத்தமட்டும் வினைப்பயன் கோட்பாடு, இறைப்பயம், நல்லோர் தீயோர் வேறுபாடு, பொறுப்புடைமை, சுறுசுறுப்பான உழைப்பு போன்ற செயல் முறையான அறிவுரைகள் முதலிய கருத்துக்கள் காணப்படவேண்டும். இவை இச்சங்கீதங்களில் காணப்படுகின்றன. இலக்கியப் பண்புகளைப் பொறுத்தமட்டும் இணையமைப்புகள், ஒப்புமைகள், எச்சரிக்கைகள், அகர வரிசை அமைப்புகள், எண்வரிசைக் கூற்றுகள், பேறுடைமைக் கூற்றுகள், இதைவிட அது மேல்-போன்ற கூற்றுகள், தந்தை மகனுக்கு அறிவுரை புகட்டும் கூற்றுகள் ஆகியவை போன்ற அமைப்புகள் காணப்பட வேண்டும். இவை சில சங்கீதங்களில் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் மேலே கொடுக்கப்பட்டவை தவிர 32; 34; 111; 129; 133 ஆகிய சங்கீதங்களையும் ஞானபோதகச் சங்கீதங்களில் சேர்க்கலாம்.

இவற்றில் சங் 1; 112; 127 ஆகியவை தெளிவான ஞான போதகப்பாடல்களாகும். 32; 37; 73 ஆகிய சங்கீதங்கள் நன்றிப்பாடல் தன்மையுடையன. சங் 119 திருச்சட்டம் பற்றிய பாடலாகும். இது எல்லா இலக்கியப் பண்புகளையும் ஒருங்கே கொண்டுள்ளது. இவை தவிர, சில புலம்பல்பாடல்களிலும் (25;31), நன்றிப்பாடல்களிலும் (40;92) ஞான போதகப் பண்புகள் காணப்படுகின்றன. பின்னதில் யாவேயை ஏற்றுக்கொள்வது போதகமாக மாறுகிறது.

ஞான இலக்கியத்தின் முக்கியமான பிரச்சனை வினைப்பயன் கோட்பாடாகும். இதன்படி இவ்வுலகிலேயே, இவ்வாழ்விலேயே, நல்லோர், சன்மானம் பெறுவர்; தீயோர் தண்டனை பெறுவர் என்றும் பாரம்பரியப் போதகம் கூறியது. பெரும்பாலான ஞான இலக்கியங்கள் இதைவாழ்வின் நியதியாக ஏற்றுக் கொண்டன. யோபு, திருவுரையாளர் போன்றவர்கள் இப்போதகம் வாழ்க்கை நடப்புக்குத் தக்கதாக இல்லை என்று கண்டுணர்ந்தனர். சில ஞான நூல்களே இப்பிரச்சனைக்குரிய உண்மையான பதிலைக் கண்டதாகத் தெரிகிறது.

இதே முறையில் ஞானபோதகச் சங்கீதங்களையும் பகுக்கலாம். பெரும்பாலான ஞானபோதகச் சங்கீதங்கள் பாரம்பரிய போதகத்தை ஏற்றுக்கொண்டன. வாழ்க்கையில் நிலவும் முரண்பாட்டை விளக்கவில்லை. நல்லோர் துன்புறுதல், தீயோர் செழிப்புறுதல் ஆகியவைகளுக்கிடையேயுள்ள முரண்பாட்டை நன்குணர்ந்து இறைவன் தீயோரைத் தண்டித்தும் நல்லோர்க்கு நன்மை செய்தும் சமன்பாட்டை நிறுவும்படி சில வேண்டுகின்றன. இன்னும் சில, இப்பிரச்சனைக்கு இறுதியான விடுப்பை நோக்கி ஒருபடி எடுத்து வைக்கின்றன. இவை தீயோரது செழிப்பையும் நிறைவையும் பற்றி ஐயம் எழுப்பி, துன்பங்களை அனுபவித்தாலும் இறைவனையும் அவரால் ஏற்புடைமையையும் கொண்டிருப்பதுவே நல்லோரின் உண்மையான நன்மையாகும் என்று வலியுறுத்துகின்றன. இறுதியாக இவற்றில் 37; 49; 73 ஆகிய மூன்று சங்கீதங்கள், இப்பிரச்சனைக்கு மிக நெருங்கிய பதிலைச் சுட்டிக் காட்டுகின்றன; வினைப்பயன் இவ்வுலகம் சார்ந்த நன்மைகளைக் கொண்டிருப்பதாலோ, கொண்டிருக்காமையினாலோ அடங்கியதன்று; அது மறுவுலக வாழ்வைச் சார்ந்தது என்று சுட்டிக்காட்டுகின்றன.

இச்சங்கீதங்கள் ஞானபோதக வடிவில் அமைக்கப்பட்ட மன்றாட்டுகள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஆ. வரலாற்றுப் பாடல்கள்: இதில் 78; 105 ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை. இவை, இஸ்ராயேல் வரலாற்றில் இறைவன் செய்த அருஞ்செயல்களையும் நன்மைகளையும் வரலாற்றுக் கண்ணோடு போதகமாக எடுத்துக்கூறி, யாவேயிடம் பிரமாணிக்கமாக இருக்க, மக்களைத் தூண்டுகின்றன. இவற்றில் புகழுரையும் நன்றியுரையும் ஞான இலக்கியப் பண்புகளும் காணப்படலாம். வசதிக்காக இவற்றை ஒரு தனிப் பிரிவாகத் தொகுத்துள்ளோம். வரலாற்றுப் பண்புகள் 135; 136; 110; 114 ஆகிய புகழ்ப்பாக்களிலும் காணப்படுகின்றன. ஆகவே சிலர் இவற்றையும் இப்பிரிவில் சேர்ப்பர்.

இவற்றின் வழிபாட்டு வாழ்க்கைச் சூழ்நிலை எது என்று உறுதியாகக் கூறமுடியாது. ஒருவேளை முப்பெரும் விழாக்களில் ஒன்றாக இருக்கலாம். இவை படிப்பிக்கும் அறவுரை: இஸ்ராயேல் மக்களுக்காகவும் அவர்கள் வரலாற்றிலும் இறைவன் பல அரும்பெருஞ்செயல்கள் புரிந்துள்ளார். அவற்றை மறந்துவிடக் கூடாது. அவரிடம் தளராத நம்பிக்கை கொண்டு, அவரது கட்டளைகளைப் பிரமாணிக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அப்படி நடந்துகொண்டால் அவர் தம் தலையீட்டால் இப்போது அனுபவிக்கும் துன்பங்களிலிருந்தும் அவர்களை விடுவிப்பார்.

இ. இறைவாக்குப் பாடல்கள்: இதில் 14; 50; 52; 53; 75; 81; 95 ஆகிய சங்கீதங்கள் அடங்கும். இவற்றில் இறைவாக்குப் பண்புகளும் கருத்துக்களும் காணப்படுகின்றன. இவை இஸ்ராயேல் மக்களுக்கு இறைவனது திட்டத்தையும் திருவுளத்தையும் எடுத்துக் கூறுகின்றன. அவர்களது எழுச்சியையும் வீழ்ச்சியையும் முன்னறிவிக்கின்றன. இறுதிக்காலத்தில் நல்லோரும் தீயோரும் எப்படி தீர்வையிடப்படுவர் என்றும் எடுத்துரைக்கின்றன. இறைவாக்கு வடிவில் இப்போதகங்கள் அளிக்கப்படுகின்றன.

தனியார் புலம்பல்பாடல்களில், அவர்கள் துன்பத்திலிருந்து விடுதலை பெற்றபின்

கூறும் நம்பிக்கையும் நன்றியும் எவ்வளவு உறுதியாக எடுத்தியம்பப் படுகின்றன வெனில், அவை குருவோ சூழநிற்போரில் ஒரு வரோ இறைவாக்குக் கூறிய பின் கூறப் பட்டனவாக இருக்கலாம் என்று முன்பே சுட்டிக் காட்டியுள்ளோம். இந்த அடிப்படை யில் இப்பிரிவில் 2; 82; 85; 110 ஆகிய சங்கீதங்களையும் சிலர் சேர்ப்பர்.

VII. **வழிபாட்டுப் பாடல்கள்:** இதில் 15; 24; 134 ஆகிய சங்கீதங்கள் அடங்கும். சிலர் இவற்றோடு 78; 81; 95; 105; 106 ஆகிய சங்கீதங்களையும் சேர்ப்பர். இவற்றில் வழி பாட்டுச் சடங்கு விவரிப்புகள் பரவிக்கிடக் கின்றமையால் இவை இப்பெயர் பெறுகின் றன.

சங் 15; 24 ஆகிய இரண்டும் ஆலயத்துள் செல்ல ஒருவன் கொண்டிருக்க வேண்டிய மனநிலையையும் தகுதியையும் விவரிக்கின் றன (காண்க எசா 33:14-16; மீக் 6:8). இவற்றைத் ''தோரா வழிபாடு'' என்று குன் கெல் அழைக்கிறார். 78; 81; 95; 105; 106 ஆகிய சங்கீதங்கள் உபாகமத்தோடு (உப 5-11) நெருங்கிய தொடர்புடையனவாகவும் ஒரு தனிவழிபாட்டை விவரிப்பனவாகவும் தோன்றுகின்றன. உபாகம நூலில் மூன்று கருத்துக்கள் மீண்டும் மீண்டும் வருகின்றன. அவை: 1. சட்டங்களையும் நியதிகளையும் கடைப்பிடித்தல் (உப.5:1; 6:1-9). 2. யாவே யின் உண்மையான வழி பாட்டமைப்புக்குப் பிரமாணிக்கமாக இருக்க எச்சரிக்கை (உப 6:10-16; 8:11-18)...). இந்த எச்சரிக்கைகளைக் கடைப்பிடித்தால் வெற்றி பெறுதல், இனப் பெருக்கம் ஆகிய வாக்குறுதிகளும் (உப 6:18-19; 7:12-15.16-24; 8:7-10;...), தவறினால் அச்சுறுத்தல்களும் (உப 4:26-29; 8:19-20;...) கூறப்படுகின்றன. 3. யாத்திரை நிகழ்ச்சியை நினைவு கூர்தல் (உப 6:6-9; 11:18-21;...).

மேலே குறிப்பிட்ட சங்கீதங்கள் இக்கருத் துக்களைக் கொண்டிருப்பதோடு, இவற் றிற்குச் செயல்முறையான வடிவம் கொடுக் கும் வழிபாட்டுச் சடங்குகளைப் பிரதிபலிக் கின்றன. இவை யாவேயைப் போற்றும் அழைப்புடன் தொடங்குகின்றன (11:1-4; 95:1-2). பின் உபாகமக் கருத்துகள் வருகின் றன. 1. சட்டங்களையும் கட்டளைகளையும் மனதில் வை (81:4-5; 78:5-8; 105:8-11). 2. நினைவுகூரும் அறவுரை (81:7 தொ; 105). 3. எச்சரிக்கை (81:8-12; 95:8-11; 106). 4. வாக் குறுதிகள் (81:13-16). இச்சங்கீதங்களால் சுட் டிக்காட்டப்படும் வழிபாடு, யாத்திரை நிகழ்ச்சியையும் உடன்படிக்கையையும் மக் கள் நினைவு கூர வேண்டும் என்ற உபாகமக் கட்டளையை (உப 27:33; யோசு 8:24) நிறைவேற்றின. செயல்முறையில் இது பெரிய விழாக்காலங்களில் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.

VIII. **படிக்கீதங்கள்:** சங் 121; 123; 126; 133; 134 ஆகியவை நாடு கடத்தப்பட்டுத் திரும் பிய பிற்காலத்திய மன்றாட்டுகள் அடங் கிய சிறு தொகுப்பாகும். இவை பெரிய தொகுப்புகளோடு சேர்க்கப்படலாம் என்றா லும், இவற்றை ஒரு தனித் தொகுப்பாகக் கருதுவது நன்று. சங் 121 இறைவனுடைய தொடர்ச்சியான அன்புமிக்க பாதுகாப்பை விவரிக்கிறது. சங் 123 தாழ்ச்சியோடு இறை வனது இரக்கத்தை எதிர்பார்க்கிறது. சங் 126 மீண்டும் நாடு அமைக்கப்படுவதில் அடங்கி யுள்ள வியப்பையும் ஆழ்ந்த மகிழ்ச்சியை யும் அழகாக எடுத்துரைக்கிறது. சங் 133, நாடுதிரும்பிய மக்களிடையே நிலவிய ஒருங்கிணைந்த உறவைப் பிரதிபலிக்கின் றது. சங் 134, இத்தொகுப்பை நிறைவு செய்யும் விதத்தில், இறைவனை அவரது திருத்தலத்தில் இரவு முழுவதும் போற்றுமாறு குருக்களையும் லேவியர்களையும் அழைக் கிறது.

இச்சங்கீதங்களுக்குப் பல விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. அவற்றில் சில: 1. பாபிலோனிலிருந்து அகதிகள் நாடுதிரும் பியபோது பாடிய பாடல்கள். 2. ஆலயத்தில் இஸ்ராயேல் முற்றத்திற்குச் செல்ல பதி னைந்துபடிகளில் ஏறும்போது லேவியர் பாடியவை. 3. படிஇணைவுத்தன்மையுடை யவை. அதாவது ஓர் அடி அடுத்த அடி யுடன் தூண்டு சொல்லால் ஏணி அல்லது படி

கள்போல் இணைக்கப்படுதல். சான்றாக, 121:3-4.7-8. 4. பெரும் விழாக்களுக்குத் திருப்பயணிகள் எருசலேமை நோக்கிச் சென்ற போது பாடிய பாடல்கள். மற்ற வற்றை விட இத்தொகுப்புக்குப் பொருந் திய விளக்கமாகும். ஆகவே இவற்றை ஏற் றப்பாடல்கள் என்றும் அழைப்பதுண்டு.

XI. குறிப்பு: இப்பிரிவுகள் ஒன்றை யொன்று விலக்கும் தன்மையுடையவை அல்ல. ஒன்றோடொன்று கலந்த கலப்புச் சங் கீதங்கள் பல உண்டு. சிலவற்றில் நம்பிக்கை மன்றாட்டுக்கு அடுத்துப் புலம்பலும் (27;31) அல்லது புலம்பலை அடுத்து நன்றியுரையும் (28;57). சங் 89 புகழ்பாடியபின் இறைவாக் குக் கூறிப் புலம்பலோடு முடிகிறது. சங் 119 முழுவதும் சட்டம் பற்றியது ஆனாலும், அதிலே தனியார் புலம்பலையும் ஞான போதகக் கருத்துக்களையும் காணலாம். சில நன்றியுரைப்பாடல்களில் ஞான இலக்கியக் கருத்துக்களையும் காணலாம். இது உள்ள எழுச்சியை எடுத்துக்கூறும் பாடலுக்கு ஒவ் வாத கருத்துக்களும் சில சங்கீதங்களில் காணக்கிடக்கின்றன என்பதைச் சுட்டுகிறது. சங்கீதங்களின் இந்தக் கலப்புத் தன்மையை மனதில் கொள்வது நல்லது.

12. இறையியல்: சங்கீத நூலில் காணப் படும் இறையியலைத் தொகுத்துக் கூறுவது கடினமானதாகும். ஏனெனில் இந்நூல் பல நூற்றாண்டுகளில் தோன்றிய உள்ள எழுச்சிப் பாடல்களைக் கொண்டுள்ளது. புகழுரை யாகவோ புலம்பலாகவோ ஒருவன் தனது உள்ளத்தைத் திறந்து கொட்டும்போது, அவன் கோட்பாடுகளை விளக்குவதில்லை. ஆனால் அவனது வாழ்க்கையை நடப்பிக் கும் கோட்பாடுகள் பின்னணியாக நிற்க லாம். இந்நூல் இறைவாக்கு நூல் தொகுப் பையோ ஞானநூல் தொகுப்பையோ போன்ற தன்று. ஆகவே அவற்றில் காணப்படுவது போல் சங்கீத நூலில்திட்டமிட்ட பழைய ஏற்பாட்டு இறையியலை எதிர்பார்க் கக்கூடாது. ஆனால் இந்நூலில் இறை வாக்கு, ஞானநூல் பண்புகள் இல்லை என்று கூறவில்லை.

சங்கீதநூல், உள்ள எழுச்சிப் பாடல் வடிவி லுள்ளது. பழைய ஏற்பாட்டு விசுவாசச் சுருக்கமாக அமைந்துள்ளது. அதேசமயம், பழைய ஏற்பாடு மட்டும்தான் இந்நூலுக்குப் போதிய விளக்கவுரையாக உள்ளது. இந் நூலில் பழைய ஏற்பாட்டுக் கருத்துத் தலைப்பு கள் மறைமுகமாகக் காணப்படுகின்றன; முன் கொள்ளப்படுகின்றன. அவற்றை இந் நூல் வழிபாட்டு முறையில் எடுத்துக்கூறு கிறது; அவற்றை இறையியல், தத்துவ இயல் கூற்றுக்களாகத் தரவில்லை; யாவேயோடு கொண்டிருந்த உறவின் அனுபவ அறிவை எடுத்துக் கூறுகிறது. இறைவன் அளித்த வெளிப்பாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அளிக்கும் பதிலாக அமைந்தபாடல் களையும் மன்றாட்டுக்களையும் கொண்டுள் ளது. அவற்றையும் வழிபாட்டில் அனுப வித்த வடிவில் கொடுக்கின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் இறைவ னோடு கொண்டிருந்த உறவுக்கு அடிப்படை யாகவும் பணிச்சட்டமுமாக அமைவது உடன்படிக்கையாகும். இறைவனைப் பற் றிய அவர்களது அனுபவ அறிவும் உடன் படிக்கையில் வேரூன்றியதாகும். இறைவ னுக்குச் செபப் போற்றுரை வடிவிலோ, ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழ்நிலையிலோ அவர்கள் பதில் அளிக்கின்றனர். இப்படிப் பதில் அளிக்க உடன்படிக்கை அவர்களுக்கு உரிமை அளிக்கிறது. இந்தப் பரந்தபொரு ளில் சங்கீதங்கள் உடன்படிக்கையின் மையக் கருத்தோடு தொடர்புடையன. தேர்ந் தெடுக்கப்பட்ட மக்களின் அன்றாட வாழ் வின் எல்லாக் கூறுகளிலும் உடன்படிக்கை ஆதிக்கம் செலுத்தியதால், சங்கீதங்களில் தோன்றாத மனிதவாழ்க்கைக் கூறு இல்லை யெனலாம்.

இவ்வாறு சங்கீதநூல் முடிசூட்டுதல் போன்ற நாட்டு நிகழ்ச்சியை எடுத்துக் கூற லாம் (2); தனியாரின் சொந்த மன்றாட்டைப் பிரதிபலிக்கலாம் (3); இடி புயலில் இறைவ னைப் போற்றலாம் (29); அவருடைய படைப்பில் காணப்படும் வியப்புக்குரியவை களில் அவரைப் போற்றலாம் (104);

அவரது மீட்புச் செயல்களை அறிக்கையிடலாம்; குறிப்பிட்ட சமய விழாக்களைக் கொண்டாடலாம் (113-118); அல்லது வாழ்வின் தனிப்பட்ட அல்லது பொதுவான கூறுகளை எடுத்துக் கூறலாம். இவற்றில் எல்லாம் சங்கீதங்கள் பொதுப்பணி இறையியலை அதன் மேலான பொருளில் கொண்டுள்ளன. இந்நூல் புலமை சார்ந்தவர்களுக்கு மட்டும் புரியும் கருத்தியலான இறையியலையோ தத்துவ இயலையோ கொண்டிருக்கவில்லை. இறைவனோடு உறவுகொண்டு வாழ்ந்த அனுபவத்திலிருந்து வரும் இறை அனுபவத்தை அல்லது இறையறிவைக் கொண்டுள்ளது.

சங்கீதங்களில் காணப்படும் இறையியல் பொதுப்பாணித் தன்மையுடையது என்று கூறியதால், அதன் பொருள் பொதிந்த தன்மையையோ முக்கியத்துவத்தையோ குறைத்துக் கூறவில்லை. பொதுப்பாணி இறையியல் இறையியலின்மேலான வடிவமாகும். ஏனெனில் இறைவனைப் பற்றிய அறிவு எல்லா மனிதர்களுக்கும் வெளிபட்டதொன்று என்றால், அது எல்லாராலும் புரிந்து கொள்ளக் கூடியதாக்வும் எடுத்துக் கூறக்கூடியதாகவும் இருக்க வேண்டும். சங்கீதநூல் இப்பொதுப்பாணி இறையியலை உள்ளடக்கிப் போதிப்பதோடு, அதை எல்லாரும் பயன்படுத்தவும் வாய்ப்பளிக்கிறது. சங்கீதநூலைத் தொடக்கமுதல் இன்றுவரை யூத, கிறிஸ்தவ வழிபாடு உயிருள்ள விதத்தில் பயன்படுத்தி வருவதே இதற்குச் சான்றாகும்.

சங்கீதநூல் நீண்ட கால வரலாறு உடையது. அதை விளக்கிக் கூறும்போது அதில் காணப்படும் இறையியலை வெவ்வேறு மட்டங்களில் வேறுபடுத்திப் புரிந்து கொள்ள முயல வேண்டும். நூலை முழுமையாக எடுத்துக் கொண்டாலும் அல்லது தனிப்பட்ட சங்கீதங்களை எடுத்துக் கொண்டாலும் அவற்றின் நீண்ட வரலாறு, அவற்றின் இறையியல் பொருளையும், பொருத்தமுடைமையையும் மாற்றியமைக்கும் தன்மையுடையது. சான்றாக இரண்டாம் சங்கீதம், தொடக்கத்தில் தாவீது அரசனின் அல்லது அவரது மரபைச் சேர்ந்த ஓர் அரசனின் முடிசூட்டும் விழாவின்போது பாடப்பட்ட அரசசங்கீதமாகும். நாம் கொண்டிருக்கும் வடிவில் சங்கீதநூலில் இச்சங்கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது இதன்பொருள் மாறிவிட்டது எனலாம். ஏனெனில் அப்போது தாவீது அரசமரபு எருசலேமில் ஆட்சி செய்யவில்லை. அந்நிலையில் இவ்வுலகு சார்ந்த அரசனது முடிசூட்டு விழாவைப் பாடுவதில் பொருள் இல்லை. அப்போது வழிபாட்டுச் சூழ்நிலையில் மெசியாவைப் பற்றிய பாடலாக இச்சங்கீதம் மாறுகிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இச்சங்கீதம் மாறுகிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இச்சங்கீதம் மெசியாவைப்பற்றியதாகக் கருதப்படுகிறது. இவ்வாறு இதன் பொருள், பயன்படுதல் ஆகியவற்றிலுள்ள வளர்ச்சி, இதன் மற்றொரு பருமனைச் சுட்டுகிறது. மேலும் சங்கீதங்களின் சொற்களின் வடிவம் மாறவில்லை. ஆனால் காலப்போக்கில் அவற்றின் பொருளும் அலுவலும் மாறிவிட்டன. இதன் விளைவாக இச்சங்கீதத்தின் இறையியலில் மாற்றம் இருக்கிறது, குறைந்தது வளர்ச்சியாவது இருக்கிறது. இதன் மூலவடிவில், தாவீதுமரபு அரசர்களோடு இறைவன் கொண்ட உறவின் இறையியல் பற்றியதாகும். அந்த இறையியல், சங்கீத விளக்கவுரை வரலாற்றில், காலப்போக்கில் மெசியாவைப்பற்றிய நிறை இறையியலாக மலர்ந்தது. பிற்கால நிலை ஒரு புதிய இறையியல் அன்று. மாறாக, தொடக்கால இறையியல் கருவின் வளர்ச்சியும் விளக்கமும் ஆகும்.

சங்கீத இறையியலில் வேறுபட்ட மட்டங்கள் உண்டு என்று ஏற்றுக் கொண்டால், ஒரு முக்கிய விளைவு எழுகிறது. ஒரு சங்கீதத்தை முழுவதும் அறிந்து கொள்ள வேண்டுமென்றால், அதன் தொடக்ககாலப் பொருளையும் இறையியலையும் நிர்ணயிக்க முயற்சிக்க வேண்டும். இது எப்போதும் எல்லாச் சங்கீதங்களுக்கும் செய்யக் கூடியதன்று. பின்பு, அதன் இறையியல் வளர்ச்சியைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு சங் 2, தொடக்க காலத்தில் மெசியா பற்றியதன்று.

முதலில் இஃது ஓர் அரச சங்கீதமாகும். பிற்காலத்தில் மெசியா பற்றிய சங்கீதமாக மாற்றியமைக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் இது தெளிவாக உள்ளது. ஆகவே தொடக்க காலச் சூழ்நிலையில் சங்கீதங்களின் பொருளைக் காணக் கவனமாய் முயல வேண்டும். அப்போதுதான் அவற்றின் பிற்கால இறையியல் வளர்ச்சியைப் புரிந்து பாராட்ட முடியும். அப்படிச் செய்தால், இக்காலத்திற்கும் அவற்றின் பொருத்தமுடைமையைக் கண்டுணர்ந்து, அவற்றின் இறையியல் நோக்கை விசுவாசி தன்னுடையதாக்கிக் கொள்ள வாய்ப்பு உண்டு.

இனி இறையியல் கருத்துகளுக்கு வருவோம். இவை காலப் போக்கில் வளர்ச்சியுற்றவையாகும்.

1) ஆண்டவராகிய ஒருவரே இறைவன்: விண்ணையும் மண்ணையும் படைத்த யாவே ஒருவரே உண்மையான இறைவன். அவரைத் தவிர வேறு ஓர் இறைவனே கிடையாது. இந்த அசைக்கமுடியாத விசுவாசம் சங்கீதநூல் முழுவதும் விரவிக்கிடக்கிறது (18:31; 83:18; 114:10-11). இதுவே இஸ்ராயேலர் மற்றும் கிறிஸ்தவ விசுவாசத்தின் மையம். இந்தத் தொடர்ச்சியான பாரம்பரியம் பழங்கால மக்களிடையே, இஸ்ராயேலர்களிடம் மட்டுமே காணப்படும் ஒரு தனிச்சிறப்பான பண்பாகும்.

2) யாவே ஒருவரே உயிருள்ள இறைவன்: பிற இனத்தவர் தெய்வங்களாகக் கருதுபவைகள் இறைவன் அல்ல. அவை அவர்களுடைய கைவேலைப்பாடாகும். அவை உயிரற்றவை (114: 12-15; 135: 15-17). பிற இனத் தேவதைகள் உயிரற்றவைகளாக இருக்கும் போது, இஸ்ராயேலர் தங்கள் இறைவனாகிய யாவேயை ''உயிருள்ளவரும்'', ''உயிரளிப்பவருமாகக்'' கண்டனர் (84:2; 42:2; 36:9; 85:4). அவை யாவேக்கு ஒப்பாக முடியாது (86:8). அவர்முன் அவை நிலையற்றவை, வெறுமையானவை (90:1-6). அவருக்கே அவை பணிகின்றன (95:3; 135:5). ஆகவே இந்த ஒரே ஒரு இறைவனாகிய யாவேக்கு மட்டும் வழிபாடு செலுத்த வேண்டும் என்று பிற இனத்தாருக்கும் இஸ்ராயேலர் அழைப்பு விடுக்கின்றனர் (22:27; 24:1).

3) வரலாற்றின் ஆண்டவர்: இஸ்ராயேலர் தங்கள் வரலாற்றிலேயே இறைவனைக் கண்டு அனுபவித்து வழிபட்டனர். தாங்கள் வாழ்வதும், தங்கள் எதிரிகள் அழிவதும் இறைவனது திருவுளத்தாலேயே என்று அனுபவத்தால் அறிந்தனர் (44:1-4). ஆகவே வரலாற்றில் காணப்படும் வெற்றி தோல்விகளும் அமைப்புகளும் இறைவனாலேயே அமைக்கப்பட்டவை என்று உறுதியாக நம்பினர். சிறப்பாக, அவர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்றது யாவேயின் அருள்மிக்க இடையீட்டாலேயே என்பதை சங் 105; 106 இல் வரலாற்றுப் பாணியில் எடுத்துக் கூறிப் பறைசாற்றுகின்றனர்.

4) இயற்கையின் ஆண்டவர்: நீரின் மேல் ஆண்டவர் கொள்ளும் வெற்றியையும், படைப்புப் பற்றிய மற்ற இதிகாசக் கதைகளையும் விவரிக்கும் அரியணை ஏற்றச் சங்கீதங்களை ஆராய்ந்தால், இந்த உண்மை புரியும் (74:13-14; 89:10-15). அவரது படைப்பாற்றல் ஓர் இடத்தில் அவரது வார்த்தையாகவும் (147:15) மற்றோர் இடத்தில் அவருடைய ஆவியாகவும் (104:30), வேறோர் இடத்தில் அவருடைய வார்த்தையும் ஆவியுமாகவும் (33:6) விவரிக்கப்படுகிறது. யாவும் யாவேயால் படைக்கப்பட்டன; யாவும் அவருடையன (24:1;8:3.7.8; 95:4-5). ஆகவே படைப்பு முழுவதும் அவருக்கு அடிபணிந்து நிற்கின்றது. அவர், படைப்பின் எப்பொருளாலும் உருவமாக்கப்பட முடியாது. ஏனெனில் அவை யாவும் அவருடைய படைப்புகள். யாவற்றிலும் அவர் உள்ளார். ஆனால் அவற்றில் எதுவும் அவராவதில்லை. அவர் யாவற்றிற்கும் உயிர் அளிக்கிறார்; பொருள் அளிக்கிறார்; அடிக்காரணமாகிறார். ஆனால் அவர் அவை யாவற்றையும் கடந்தவர். இது இறைவனுக்கு எந்த உருவமும் செய்யக்கூடாது என்ற ஆழ்ந்தவிசுவாசமாகவும் கோட்பாடாகவும் வடிவெடுக்கிறது.

5) மீட்பளிக்கும் இறைவன்: படைக்கும் இறைவனே மீட்பரும் ஆவார். இரண்டு கருத்துக்களும் சங்கீதங்களில் நெருங்கியவை, முக்கியமானவை (104:10-18; 147:19-20). இறைவன் மீட்பராவர் என்ற விசுவாசத்தை இஸ்ராயேலர் தங்களது யாத்திரை, வாக்களிக்கப்பட்ட நாட்டை வென்று ஆட்கொள்ளுதல் ஆகிய வரலாற்று நிகழ்ச்சிகளில் அனுபவ வாயிலாகக் கற்றுக்கொண்டனர். இந்த அனுபவத்தைத் தங்கள் வழிபாட்டில் நாடகப்பாணியில் எடுத்துக்கூறினர். புகழ்ப்பாக்களில் இறைவன் ஆற்றல் உள்ளவராகவும் மீட்பராகவும் காட்சி அளிக்கிறார். இவற்றில் அவரது உடன்படிக்கை அன்பும், வாக்குறுதிகளுக்குக் காட்டும் பிரமாணிக்கமும், எல்லாம் அறியும் பண்பும், எல்லாம் செய்யக்கூடிய ஆற்றலும் வெளிப்படுகின்றன. புலம்பல் பாடல்கள் தனியாருடையதாகவோ, சமூகத்தினுடையதாகவோ இருக்கலாம். இவற்றிலும் இறைவன், இஸ்ராயேலின் விடுதலை வீரராகவும், இரக்கமும் மன்னிப்பும் மிக்கவராகவும், தமது வாக்குறுதி பிறழாதவராகவும் தோன்றுகிறார். இஸ்ராயேலின் மீட்பராகிய இறைவனே, பாவத்திற்கு மன்னிப்புப் பெற ஏங்கும் தனி நபருக்கும், இறக்கும் ஆபத்தில் இருப்பவருக்கும் விரோதியால் அவதூறு கூறப்பட்டு சூழ்ச்சிகளால் சூழப்படுவோர்க்கும் மீட்பராக இருக்கிறார். அவர் ஒருவரிடம் மட்டும் அவர்கள் நம்பிக்கையோடு உதவிக்குத் திரும்பக்கூடும். குழந்தைக்குரிய நம்பிக்கையோடும் நச்சரிப்போடும் அவர்கள் மீட்பளிக்கும் ஆண்டவரிடம் திரும்புகின்றனர். ஆகவே புலம்பல் பாடல்களில் இறையியல் வெளிப்படுவதைக் கண்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை.

6) இரங்கும் இறைவன்: தங்களை இறைவன் மீட்டார் என்று விசுவாசித்த இஸ்ராயேலர் அவரது இரங்கும் தன்மையைப் போற்றிப்பாடினர். இவர் "இரக்கமும் தயவும் நிறைந்தவர், சினம் கொள்ளத் தாமதிப்பவர், அன்பும் பிரமணிக்கமும் நிறைந்தவர்" (யாத் 34:6) என்ற கருத்து சங்கீதங்களில் நிறைவாக வெளிப்படுவதைக் காண்கிறோம் (86:5; 103:8; 145:8-9; 136:3). சங் 136-இல் அடிக்கொருமுறை "அவரதுஇரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது" என்று இறைவனைப் போற்றுதல் இஸ்ராயேலின் நம்பிக்கை விளம்பலாகும். இந்த நம்பிக்கையால் உந்தப்பட்டு, இறைவனிடம் கேள்வி தொடுக்கவும் இஸ்ராயேலர் அஞ்சவில்லை. "ஆண்டவரே! எதுவரை? (80:4), எத்தனை நாள்? (74:9), எவ்வளவு காலம்? (131:1-2), ஏன்? (22:1), எங்கே? (42:3), உமது பழைய ஆதரவு எங்கே?" (89:50;) போன்ற கேள்விகளும் "செவிசாயும்" (142:6), "உமது பார்வையைத் திருப்பிக் கொள்ளாதேயும்" (143:7), "எழும்புவீராக!" (7:6) போன்ற வேண்டுகோள்களும் இறைவனது இரக்கத்தில் இஸ்ராயேலர் கொண்டிருந்த நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றன.

இறைவன் பற்றிய இந்த அறிவையெல்லாம் இஸ்ராயேலர் வரலாற்று அனுபவத்திலிருந்து பெற்றனர். ஆகவே அவருக்கு மனிதப் பண்புகளைச் சாற்றிக் கூறும் முறையைக் கடைப்பிடித்தனர். இம்முறை பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம்.

7) மனிதர்பால் அக்கறை கொள்ளும் இறைவன்: இரக்கமிக்க இந்த ஒரே இறைவன் மனுக்குலத்தின் மீது அக்கறை கொள்கிறார். மேலும் மனிதரைத் தமது நண்பர்களாக இருக்க அழைக்கிறார். இக்கருத்தும் சங்கீதங்களில் பல இடங்களில் காணப்படுகிறது. இதுவும், பழங்கால இலக்கியங்களிலேயே இஸ்ராயேலுக்கே உரியதொன்றாகும் (5:8; 117:2).

8) ஆகவே இறைவனுக்கு நன்றி கூறுதலும் அவரைப் போற்றுதலும் மனிதனுக்கு மிக இயல்பான காரியமாகும் (67:2-5; 106:1). ஏனெனில் அவரே உலகின் அரசர், படைப்பின் ஆண்டவர். அவரது அரசமாண்பும் நமது போற்றுரையும் நெருங்கிய தொடர்புடையன (96-99). சிறப்பாக அவரது மக்களாகிய இஸ்ராயேலர் அவரைப் போற்றவும் அவருக்கு நன்றி செலுத்தவும் அழைக்கப்படுகின்றனர் (115;118).

9) இறைவனது எதிரிகள்: இவ்விதம் உன்னத நிலைக்கு அழைக்கப்பட்டாலும், பலர் இதை ஏற்றுக் கொள்வதில்லை. சிலர் அதை விரும்பாது வெறுத்து ஒதுக்கக் கூடும். இவர்களே இறைவனின் எதிரிகள் ஆவர். ஆகவே அவர்கள் சங்கீத ஆசிரியரின் எதிரிகளாகவும் ஆகின்றனர் (83:3; 139:20-22). அவர்களே ''தீயோர்'', ''அறிவிலிகள்'' (14:1; 37:9).

10) நல்லோர்: இதற்கு மாறாகச் சங்கீத ஆசிரியர் இறைவனை ''உறுதியாகப் பற்றிக் கொள்வார்'' (63:8; 73:28; 91:14); அவரை அன்பு செய்வார் (18:1); அவரது சட்டத்தை அன்பு செய்வார் (119); அதன் விளைவாக நீதிமான்கள், நல்லவர்கள் (12:1), எளியோர் (9:12) ஆகியோரில் ஒருவராக எண்ணப்படுவார்.

11) தீர்ப்பிடும் இறைவன்: இரக்கமுள்ள இறைவனே உலகைத் தீர்ப்பிடவும் செய்கிறார். நீதிமான்களுக்குச் சன்மானமும், தீயோருக்குத் தண்டனையும் வழங்குகிறார். இறைவனுடைய இந்தத் தீர்ப்பை ஆசிரியர் தன்னுடையதாக்கிக் கொள்கிறார். ஆகவே, இறைவனுடைய எதிரிகள் ஆசிரியருடைய எதிரிகளாகின்றனர். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார். அவர்களுக்கு எதிராகச் சாபம் இடுகிறார் (137:8-9; 109:6-20).

12) பாவம்: ஆசிரியர் இறைவனை நிராகரித்தால், அது இறைவனுக்கு எதிரான குற்றமாகும், பாவம் ஆகும். ஆசிரியர் தனது பாவங்களை ஏற்று மன்னிப்புக் கோருகிறார் (32;38). இறைவன் மன்னிக்கத் தயாராக இருக்கிறார் என்ற நம்பிக்கை ஆசிரியரிடம் ஆழமாக வேரூன்றியுள்ளது (32:1; 51:3-11). ஆசிரியர் இறைவனை முழுமையாக நம்புகிறார். ஏனெனில் இறைவனே அவரது ''பாறை'', ''அடைக்கலம்'', ''ஆயன்'' (18;23). ஆசிரியர் கூவியழைக்க இறைவன், ''தமது திருப்பெயரின் பொருட்டு'' (23:3) செவிசாய்ப்பார். சங்கீதங்களில் காணப்படும் இக்கருத்துகள் ''மன்றாட்டுகளுக்கு'' அடிப்படையாகின்றன. இக்கருத்துகள் நூல் முழுவதும் காணப்படுகின்றன.

13) நல்லோர், தீயோர், பாவம், சுய நேர்மை ஆகிய உண்மைகளைப் பொறுத்த மட்டும் ஆசிரியர் தனது காலத்து மனிதர்களோடு கொண்ட உறவில் எழுந்த உணர்ச்சிப் போக்கையே பிரதிபலிக்கிறார். பிறர் நீதிமான்களாகவும் தாழ்ச்சியுள்ளவர்களாயும் இருக்கும்போது அவர்களை ஆசிரியர் விரும்புகிறார், அன்பு செய்கிறார். அவர்கள் ''கொடுமைப்படுத்துபவர்களாயும்'', ''பொய்யர்களாகவும்'' இருக்கும்போது அவர்களை வெறுத்து ஒதுக்குகிறார். இந்த இருகோடித்தன்மைப் போக்கைக் கண்டு நாம் அதிர்ச்சி கொள்ளலாம். இப்போக்கைக் கிறிஸ்துவின் மலைப்பொழிவோடு ஒப்பிட்டு, குறைத்து மதிப்பீடு செய்யலாம். இத்தகைய போக்கு ஒத்துணர்வு கொண்டதன்று. அவசியமானதும் அன்று. இஸ்ராயேலர் அறிந்திருந்ததெல்லாம் இவ்வுலகு மட்டும்தான். அதில் இறைவனது நீதி வெளிப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பியதை நாம் பாராட்ட வேண்டும். ஆசிரியர் தீமை இறைவனுக்கு எதிரானது என்று கருதுகிறார். ஆகவே அது தண்டனை பெறத் தகுதி பெற்றது என்று அவர் எதிர்பார்த்ததில் தவறில்லை. தீயோர்கள், கடவுள் பற்றற்றவர்கள், இறைவனது எதிரிகள். ஆகவே ஆசிரியருடைய எதிரிகளாகவும் மாறுகின்றனர் (139:21-22). ஆகவே வழிபாட்டில் அவர்களுக்கு எதிராகக் கூறப்படும் இறைநீதியைப் பெறத் தகுதியுள்ளவர்களே. ஆகவே இச்சாபங்கள் தனிப்பட்டோருடைய சொந்தப் பழிவாங்குதலை எடுத்துக் கூறுவதாக எடுத்துக் கொள்வதை விட, இறைவன்பால் ஆசிரியர் கொண்ட பிரமாணிக்கத்தை எடுத்துக் கூறுவதாகவும், அவற்றை இறைவனது எதிரிகளுக்கு மாறாகக் கூறப்பட்ட வழிபாட்டுக் கண்டனமாகவும் புரிந்து கொள்ள வேண்டும். ''பாறையில் குழந்தைகளை அறைந்து கொல்லுதல்'' (137:9) போன்ற கூற்றுக்களை நாம் தவறாகப் புரிந்து கொள்கிறோம். இது அக்காலப்போரில் சாதாரணமாய் நிகழ்வதாகும். எக்காலத்திலும், போர் ஒருபோதும் மனிதத்தன்மை கொண்டதன்று.

இதே இருகோடித்தன்மை, தனது குற்றமற்ற தன்மையை எடுத்துக் கூறுபவரையும்

மன்னிப்புக்கோரும் பாவியையும் நீதிமான் என்றோ பிரமாணிக்கமுள்ளவர் என்றோ ஆசிரியர் விவரிப்பதிலும் காணப்படுகிறது. சங்கீதங்களில் காணப்படும் சுயநேர்மைத் தொனி நமக்கு வியப்பளிக்கலாம். சில சங் கீதங்களில், பாடுபவர் தனது குற்றமற்ற தன் மையை எடுத்துக் கூறுவது மிகவும் வலி யுறுத்தப்படுகிறது (117:3-5; 18:21-25). சில இடங்களில், யாவே தலையிட வேண்டும் என்பதற்குத் தூண்டுகாரணமாக, இந்தச் சுய நேர்மையே எடுத்துக் கூறப்படுகிறது (59:4). சங் 26-இல், ஆசிரியர் தன் குற்றமற்ற தன் மையை வலியுறுத்துகிறார். அதே சமயம் பரம்பரையாகத் தவ சங்கீதங்கள் எனப் படும் 6;32; 33; 51; 102; 130; 143 ஆகிய ஏழு சங்கீதங்களில் பாவங்களை ஏற்று மன்னிப் புக் கோருதல் தெளிவாக உள்ளது. சில இடங்களில் தகுதியற்றதன்மையும் பாவ முடைமையும் தெளிவாக எடுத்துக் கூறப் படுகின்றன (25:7; 39:9;)... ஒரே சங்கீதத்தில் குற்றமற்ற தன்மையும் குற்ற உணர்வும் ஒரு சேரக் கூறப்படுகின்றன (32:5.10-11; 51:3.15).

இந்த முரண்பாட்டை உளவியல் முறை யில் விளக்க முயலுவதற்குப் பதிலாக, நடை முறைத் தன்மையாக ஏற்றுக் கொள்வது நன்று. இந்நிலை, பிரிவினைச் சகோதரர்க ளின் ஒரே சமயத்தில் நீதிமானாயும் பாவியா யும் இருக்கும் கோட்பாட்டிலிருந்து வேறு பட்டது. நீதிமான் தனது மனச்சாட்சியில் எந்தச் சுமையும் இல்லாதவன் அல்லன். அவன் ஆலயத்தில் யாவேயை அணுக அனு மதிக்கப்பட்டவன் (15). அப்போது அவன் தனது குற்றத்தை அறிக்கையிடலாம். இருப் பினும் அவனது நீதித் தன்மையே ஆண்டவ ரிடம் பேசுவதற்கு உரிமை அளிக்கிறது, அவனது குற்றமற்ற தன்மையின் அறிக்கை அவன் ஆண்டவரைச் சேர்ந்தவனாக அவரை அணுக உரிமை அளிக்கிறது. இந்த அறிக்கை அவனது சுயநேர்மையை எடுத்துக் கூறு கிறது என்பதைவிட, அவனது பிரமாணிக் கத்தை எடுத்துக் காட்டுகிறது என்பது மேல். அவனது அறிக்கை வழிபாட்டுச் சூழ்நிலை யில் அறிவிக்கப்பட்டதாகும். இறைவனுக்கு அஞ்சும் நீதிமான் தன் குற்றத்தையும் அறிக்கை யிடுவான்.

14) மரணமும் மறு உலக வாழ்வும்: பழைய ஏற்பாட்டு மனிதர்களுக்கு மிகக் கொடிய ஆபத்து மரணமாகும். ஏனெனில் அஃதோடு அவர்களுக்கு எல்லாம் முடிவுக்கு வந்தது. தொடக்க காலச் சங்கீதங்களில், இஸ்ராயேலர் மரித்தபின் உயிர்ப்பிலும் மறு உலக வாழ்விலும் நம்பிக்கை கொண்டிருக்க வில்லை. மரித்தபின் சேயோல் அல்லது பாதாள உலகில் அவர்கள் எதிர் பார்த்தது உருவமற்ற, உணர்ச்சியற்ற, இறைவனோடு உறவற்ற வாழ்வாகும். ஆகவே இறைவன் அளித்த ஆசீர்களோடு சேர்ந்த இவ்வுலக வாழ்வை அவர்கள் நேசிக்காமல் இருக்க முடியவில்லை. இந்த ஆசீர்கள் இறைவ னைக் கொண்டிருப்பதின் அடையாளமாக வும் விளைவாகவும் கருதப்பட்டன. மரணத் துக்குப்பின் வந்த சேயோலில் இவை யாவும் அழிந்து போகின்றன. ''மரணமடைந்தவர்க ளுள் யார் உம்மைப் போற்றுவார்?'' (6:5). வாழ்வில் இறைவனது ஆசீர் இல்லாத போது, பாவிகள் வெற்றி பெற்று, நல்லோர் தோல்வியுறும்போது (உமக்கு நன்றி கூறுவது யார்?), தீயோரைப் பார்த்துப் பொறாமை கொள்வோரை ஞானி எச்சரிக்கிறார் (38). சங் 73-இல் ஆசிரியர் தான் தோல்வியுற்றதை உள்ளத்தை உருக்கும் விதத்தில் எடுத்துக் கூறினாலும், ''அவரது பாகமாகிய இறை வன்'' அவரை ''மகிமையில்'' ஏற்றுக் கொள் வார் என்ற உறுதியில் அவரது விசுவாசம் இறுதியாக வெற்றி பெறுகிறது.

ஆனால் மறு உலக வாழ்வு பற்றிய கருத்து, காலப்போக்கில் வளர்ச்சியுற்று, பிற் காலச் சங்கீதங்களில் ''இறைவனோடு வாழும்'' மறு உலக வாழ்வு பற்றியதாக மாறுகிறது. வாழ்வு (15:11; 21:4; 27:13; 56:13), சந்ததி (37:37; 109:13), இறைவன் அளிக்கும் விருந்து (23:5; 22:26), இறைவ னது மாட்சிமையைக் காணும் காட்சி (17:15; 21:6; 27:13) ஆகிய கருத்துக்கள் இறுதிக்கால எதிர் நோக்கு உள்ளவை; மறு உலக வாழ்வு முன்னோக்குடையவை. இவை இறைவ னோடு கொள்ளும் மறு உலக வாழ்வுபற்றிய நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றன.

15) இஸ்ராயேல் இறைவனுடைய சொந்த உடைமை:இஸ்ராயேலர் தங்களைப் பொறுத்தமட்டும் இரு சிறப்பான கருத்துக் களைக் கொண்டிருந்தனர். முதலாவது, இறை வன் இஸ்ராயேலைத் தமது ''சொந்த உடை மையாகச்'' (135:4) சிறப்பான முறையில் தேர்ந்து கொண்டுள்ளார் என்பதாகும். மேலும் தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு அளிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார். அவர்களிடையே சீயோனில் வாழ்கிறார் (74:2; 132:13). ஆகவே அவர் சீயோனில் உறையும் ஆலயத்தை ஆசிரியர் அன்பு செய் கிறார். அதை நோக்கித் திருயாத்திரை செல் கிறார் (74; 84; 122; 24:6). ஆலயம் இருக்கிறது என்பதே இறுதி ஆய்வில், வழிபாடு தோன்று வதற்குக் காரணமாகும்; இச்சங்கீதங்களின் வாழ்க்கைச் சூழ்நிலையாகும். இங்கு யாவே யின் மீட்பளிக்கும் பரிவன்புமிக்க செயல் களைச் செபலாங்கம் செய்து மீண்டும் வாழ்ந்து அனுபவித்தனர் இஸ்ராயேலர். இறைவன் அளித்த வாக்குறுதிகள் எல்லாம் பாதுக்காக் கப்பட்டன. இவை ஆலயத்தோடு தொடர் புள்ள பக்தி, மக்களின் விசுவாசத்தை உயிருள்ள தாகக் காப்பாற்றின. மேலும் இறைவ னால் நிறுவப்பட்ட தாவீது மரபு ஆட்சி, இறைவனது அருளின் அடையாளமாகும். ஆகவே அதற்கு ஆசிரியர் பிரமாணிக்கமாக இருக்கிறார் (89; 132).

இவையாவும் இறுதிக் கால முன்னோக் குடையவையாகும். ஆசிரியரின் அன்றாட வாழ்வில் இறைவனது திருமுன்னை எடுத் துக்காட்டின. காலப்போக்கில் இக்கருத்து கள் வளர்ச்சியுற்று, தாவீதின் மகனும் இறை வனின் இஸ்ராயேலுமாகிய கிறிஸ்தவ னுக்குச் சீயோன் கிறிஸ்துவின் திருச்சபையை அடையாளமாக (கலா 6:16) எடுத்துக் காட்டி யது.

16) இஸ்ராயேலின் அழைப்பு: இஸ்ராயே லர் தங்களைப் பற்றிக் கொண்டிருந்த இரண் டாவது சிறப்புக் கருத்து, காலப்போக்கில் மனுக்குலம் முழுவதையும் ஒரே இறைவ னின் வழிபாட்டுக்குக் கொண்டு வர இஸ்ரா யேல் அழைக்கப்பட்டிருக்கிறது என்ப தாகும். இது உருவகமாகச் ''சீயோன் மலை'' என்ற கருத்தில் உள்ளடங்கியுள்ளது. முன் கூறப்பட்டசீயோன் கருத்திலிருந்து வளர்ச்சி யுறும் எல்லாருக்கும் மீட்பு உரியது என்ற கருத்து சங் 87-இல் ஆற்றலோடு எடுத்துக் கூறப்படுகிறது. இக்கருத்து தாவீது அரி யணை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. அபிடேகம் செய்யப்பட்ட அரச னுக்கும் மெசியாவிற்கும் அபிடேகம் செய் யப்பட்ட தாவீது முன் மாதிரியாகிறார். மெசியா உலகம் முழுவதையும் ஆள்வார் (2;110; சிறப்பாக 72; 102:25-26). இது மெசியா வின் காலமாகும். அதன் நிறைவு கிறிஸ்து வின் வருகையோடு தொடங்குகிறது. அதன் இறுதி நிறைவை நோக்கித் தொடர்ந்து முன் செல்லுகிறது. இதுவே மனுக்குலம் அனைத் திற்கும் உரிய தனது அழைப்பின் நிறைவேறு தலை இஸ்ராயேல் முன்னோக்குதலாகும். இவ்வாறு மெசியாக் கருத்தும் இறுதிக் காலத்தன்மையுடையது. இறைவன் சீயோனை விடுவிக்கும் இறுதிக்காலத்தை முன்னோக்குகிறது (69:36-37). அங்கே அவர் என்றென்றும் அரசாளுவார் (146:10).

சுருக்கமாகக் கூறினால், சங்கீத நூலின் இறையியல், மிக உன்னதராகிய யாவேயின் மேல் கொண்ட நம்பிக்கையின், சார்புடைமை யின், இறையியலாகும். அது, இஸ்ராயே லர் தங்கள் வரலாற்றில் மட்டுமின்றி, தனிப் பட்டோர் வாழ்விலும் அனுபவித்த அவரது மீட்புச் செயல்களையும் அன்பு இரக்கத்தை யும் வழிபாட்டில் நினைவு கூர்தலில் வளர்ச் சியடைந்தது; வாழ்ந்து அனுபவிக்கப்பட் டது.

13. சங்கீத நூலும் திருச்சபையும்: சங்கீத நூல் பழைய ஏற்பாட்டு மக்களின் செப நூலாகும். அவற்றிலே இறைவன், தமது மக்கள் தம்மிடம் கொண்டிருக்க வேண்டிய உறவு முறைகளையும், பேசும்போது பயன் படுத்த வேண்டிய சொற்களையும் இறை ஏவுத லின் வழியாகத் தருகிறார். கிறிஸ்துவும், அவரது தாயும், அப்போஸ்தலர்களும், ஆதிக் கிறிஸ்தவ மறை சாட்சிகளும் இந்நூலைத் தங்களது செப நூலாகவும் ஏற்றுப் பயன்

படுத்தியுள்ளனர். கிறிஸ்து இந்நூலைச் செபமாகவும் மேற்கோளாகவும் கையாண்டுள்ளார் (லூக் 23:46=சங் 32:5; யோவா 12:27=சங் 6:3; மத் 21:42=சங் 119:22-23; மத் 21:16=சங் 8:2). புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் இந்நூலைப் பலமுறை (111 முறை) பயன்படுத்தியுள்ளனர்.

திருச்சபை தொடக்கத்திலிருந்து இந்நூலைத் தனது செபநூலாக ஏற்றுக் கொண்டுள்ளது. ஆதி மறைசாட்சிகளும், திருச்சபையின் தந்தையரும் இந்நூலைச் செபமாகவும், காப்புரையாகவும் நிரூபணச் சான்றுகளாகவும் பயன்படுத்தியுள்ளனர். இந்நூலுக்கு முழுக்க முழுக்க இயேசுவின் பின்னணியில் விளக்கம் கொடுத்துள்ளனர். திருச்சபை இந்நூலைப் பரந்த அளவில் தனது வழிபாட்டில் பயன்படுத்தியுள்ளது. தாய்த் திருச்சபை தனது குருக்களுக்கும் துறவியருக்கும் பணிக்கும் கட்டளைச் செபத்திலும் திருப்பலியிலும் சங்கீதங்கள் கொண்டிருக்கும் சிறப்பிடத்தையும் முக்கியத்துவத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். பொருள் மிக்க இப்பாடல்களை, அருள் அளிக்கும் இவ்விலக்கியத்தைத் திருச்சபை தனதாக்கி அவற்றின் பக்தியிலும் இலக்கிய இனிமையிலும் திளைத்துள்ளது.

இப்படிப் பயன்படுத்தியபோது திருச்சபை இந்நூலின் அடிப்படை மனநிலையைச் சிறிதும் மாற்றவில்லை. ஏனெனில் சங்கீத ஆசிரியர்கள் காலத்திய நிகழ்ச்சிகளாலும் சொந்த அனுபவத்தாலும் உந்தப் பட்டு அவர்கள் உள்ளத்தில் எழுந்தபோற்றுரை, மன்றாட்டு, நன்றியுரை, அச்சம், நம்பிக்கை, விசுவாசம் ஆகிய உணர்ச்சிகள் எல்லா மனிதர்களுக்கும் எக்காலத்திற்கும் பொருந்தியதாகும். இச்சங்கீதங்கள் இறைவன்பால் கொண்டிருக்க வேண்டிய மனநிலையை எடுத்துக் கூறுகின்றன. இவற்றில் பக்தியுள்ள கிறிஸ்தவன், இறைவன், அவரது பெருமை, மகிமை, நன்மை, மனிதர்பால் அவர் கொண்டிருக்கும் அக்கறை ஆகியவை கலைப்பண்புடைய வடிவில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறான். அதே போது தனது விசுவாசம், கவலைகள், பாவத் தன்மை, தனது உறுதியான ஒரே மீட்பரான இறைவன்பால் தன் உள்ளத்தில் எழும் நன்றியறிதல், போற்றுரை ஆகியவையும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறான். இச்சங்கீதங்களில் ஒவ்வொருவனும் தனது உள்ளத்தையே காண்கிறான். திருச்சபை தன் துன்புறுவோரின் பெயரால் புலம்பல் பாக்களையும், மகிழ்ச்சியுறுவோரின் பெயரால் நன்றிப்பாடல்களையும் தொடர்ந்து செபிக்கிறது.

இந்நூலின் சொற்களைக்கூட திருச்சபை மாற்றவில்லை; ஆனால், அவற்றின் பொருளை வளமுள்ளதாக்குகிறது; ஆழமுள்ளதாக்குகிறது; கிறிஸ்துவை விளக்கும், அவரில் நிறைவுபெறும் நூலாக இந்நூலைத்திருச்சபை பாவிக்கிறது. புதிய ஏற்பாட்டு விசுவாசி, இறைவன் தமது தன்மையின் உள்ளார்ந்த மறை உண்மைகளை வெளிப்படுத்தியதற்காகவும், தமது மகனின் குருதியால் மனிதரை மீட்பதற்காகவும், பரிசுத்த ஆவியால் மக்களை நிரப்பியதற்காகவும், இந்நூலைப் பயன்படுத்தி அவரைப் போற்றுகிறான். ஆகவே ஒவ்வொரு சங்கீதத்தையும் ''பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமையுண்டாவதாக'' என்ற போற்றுரையோடு முடிக்கிறான். இந்நூல் கிறிஸ்துவ வாழ்வுக்கு, இறைவனது அளவு கடந்த அன்பையும் யாவற்றையும் பாதிக்கும் பாவத்தின் தன்மையையும் கனாகனத்தையும், விசுவாசிக்கு வாக்களிக்கப்படும் மறை உண்மையையும் போதித்துள்ளது. இந்தப் பின்னணியில் இச்சங்கீதங்களின் மன்றாட்டுகள் உருக்கமிக்கதாகின்றன; பொருள் பொதிந்ததாகின்றன. சங்கீத ஆசிரியர்கள் போற்றிப்பாடிய நம்பிக்கை நிறைவேறி விட்டது; மெசியா வந்துவிட்டார். எல்லா நாடுகளின் மேலும் ஆட்சிசெய்யும் அவர் யாவரும் தம்மைப் போற்றுமாறு அழைக்கிறார். திருச்சபை இப்போற்றுரையை இச்சங்கீதங்களின் வழியாகத் தொடர்ந்து செலுத்துகிறது. நாமும் தாய்த் திருச்சபையோடு சேர்ந்து இச்சங்கீதங்கள் வாயிலாக நமதுமீட்பர் இயேசுவைப் போற்றிப் பயன்பெறுவோம். திருச்சபை முழு

மைக் கிறிஸ்துவின் பெயரால் இச்சங்கீதங்களைப் பாடிச் செபிக்கின்றது. நாமும் திருச்சபையின் தலையாகிய கிறிஸ்துவின் பெயரால், திருச்சபையோடு சேர்ந்து, தந்தையாம் இறைவனை இச்சங்கீதங்களில் பாடி மகிழ்வோம்.

14. சங்கீதங்களைப் படிக்க ஒருபயனுள்ள முறை:

1. முதலில் எடுத்துக் கொள்ள விரும்பும் சங்கீதம் முழுவதையும் நிறுத்திக் கவனமாய் வாசிக்க வேண்டும்.

2. அடுத்து அச்சங்கீதம் தோன்றிய காலத்திய பழங்கால இஸ்ராயேலின் சமய-சமூகப் பின்னணியையும், காலப்போக்கில் இஸ்ராயேலின் வாழ்விலும் வழிபாட்டிலும் அச்சங்கீதம் அடைந்த மாற்றங்களையும் முடிந்த மட்டும் அறிய முயல வேண்டும்.

3. அச்சங்கீதத்தின் இலக்கிய வடிவம் மற்றும் அமைப்பையும் அறிய வேண்டும்.

4. சங்கீதத்தை மீண்டும் வாசித்து, விவிலியத்திலும், அச்சங்கீதம் தோன்றிய சூழ்நிலையிலும் இறைவனது வார்த்தையை ஆழ்ந்து அனுபவித்தல் வேண்டும்.

5. பின்பு, அச்சங்கீதத்தில் வரும் முக்கிய சொற்கள், தொடர்கள், அவற்றோடு தொடர்புடைய மற்ற முக்கிய அல்லது கடினமான விவரங்களைக் கவனமாய் அறிதல். மேலும் விவிலியத்தின் மற்றப் பகுதிகளோடு உள்ள தொடர்புக் குறிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்தல். இது சங்கீதமும் முக்கிய சொற்களும் பரந்த விவிலிய இறையியலால் வளம் பெற்றுள்ளதை உய்த்துணர உதவும்.

6. இன்று, பொது வழிபாட்டிலும் தனிப்பட்ட பக்தி முயற்சிகளிலும், சமய ஒழுக்கப் பிரச்சனைகளிலும், அச்சங்கீதம் எழுப்பக் கூடிய தாக்கத்தைச் சிந்தித்துப் பார்த்தல். இது, அச்சங்கீதம் இக்காலத்திலும் நமக்கு எப்படிப் பொருத்தமுடையது என்றும், நமது தேவைகளையும் ஆர்வங்களையும் நிறைவு செய்ய உதவுகிறது என்றும் உணர உதவி செய்யும்.

7. மீளவும் கவனமாய்ச் செபமுறையில் சங்கீதத்தை வாசித்து அனுபவித்தல். அப்போது சங்கீதம் உண்மையாகவே செபமாக மாறும்; பயனுள்ளதாகும்.

திருமணம் (MARRIAGE)

I. *பழைய ஏற்பாடு:*

1. படைத்து ஆள்பவரின் திட்டத்தில் திருமணம்: உலகப் படைப்புப்பற்றிய வருணனைகள் இரண்டுமே, திருமணம் என்ற நிறுவனத்திற்கு அடிப்படையிடும் காட்சியுடன் முடிகின்றன. ''யாவே பாரம்பரிய வருணனை''யில் (ஆதி 2) இறைவனின் நோக்கம் பின்வரும் சொற்களில் தெளிவாக்கப்படுகிறது: ''மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதன்று; ஆதலால் அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்'' (ஆதி 2:18). எல்லாக் கால்நடைகளுக்கும் மேம்பட்டவனாய் இருப்பதால் (2:19 தொ), மனிதன் ''தன் எலும்புகளின் எலும்பும் தன்தசையின் தசையுமாக'' இருக்கிறவளிடத்தில் தவிர (2:21 தொ), வேறு துணையைக் கண்டுகொள்ளக் கூடவில்லை. எனவே அத்தகைய துணையை இறைவன் மனிதனுக்கெனப் படைத்துள்ளார்; இதன் பொருட்டுத்தான், அவன் தன் தந்தையையும் தாயையும் விட்டுப் பிரிந்து, அன்பினால் தன் துணைவியோடு ஒன்றுகிறான்; இருவரும் ''ஒரே உடலாய்'' ஆகின்றனர் (2:24). ஒருவருக்கொருவர் அன்பு செய்து உறுதுணையாயிருக்கும்படி இரு மனிதப் பிறவிகளை இறைவன் அழைக்கின்றார். எனவே அவ்விருவரின் மாமிச (உடல்) இணைப்பில் பாலினப்பண்பு தன் பொருளைக் கண்டு கொள்கிறது. தொடக்ககாலத்துப் பகுபடா நிலையில் பாலினப்பண்பு வெட்க உணர்ச்சியை அறியாதிருந்தது (2:25); பாவத்திற்குப் பின்னரோ அது தொல்லைக்கு வாய்ப்பளிக்கும் (3:7); இனித் தம்பதிகள் இருவரின் வாழ்வு துன்பதுயரங்களாலும், உணர்ச்சி வயப்பட்ட அல்லது விஞ்சி நிற்கும் சோதனைகளாலும் அலைக்கழிக்கப்படும் (3:16). இவ்வாறெல்லாம் இருந்துங்கூட, ''உயிர் உள்ளோர் எல்லோருக்கும் தாயானவள்'' (3:20) என்பவளுக்கு மகப்பேறு இறைவனின் நிரந்தர ஆசியாக நீடிக்

கும் (4:1.25தொ). படைப்புப்பற்றிய குருக் கள் பாரம்பரிய வருணனையில் (ஆதி 1), வியப்புத்தரும் விளக்கங்கள் குறைந்துள் ளன. பூமியின்மீது ஆட்சி செலுத்தவும், பலு கிப்பெருகி அதை நிரப்பவும் வேண்டு மென்று, இறைவனின் சாயலாகப் படைக் கப்பட்ட மனிதன் எனப்படுகிறவன் உண்மை யில் தம்பதிகள் இருவருமாவர் (1:26 தொ). இங்குப் பாலினப் பண்பின் நோக் கமே இனப்பெருக்கம் எனத் தோன்றுகிறது; படைத்த எல்லாவற்றையும்போல் இந்த நோக்கமும் மிகச் சிறந்த தொன்றாகும் (1:31). இவ்வாறு, பாவம் மனித குலத்தைக் கறைப்படுத்துவதற்கு முன்னரே, திருமண ஏற்பாடுபற்றிய இறைவனின் சீரிய குறிக் கோள் வலியுறுத்தப்படுகிறது.

2. இறை மக்களிடையே திருமணம்: இறைவன் தம் மக்களுக்குத் தமது திருச்சட்டத் தைக் கொடுத்து, அவர்களுக்கு அறிவு புகட் டும் பொறுப்பை மேற்கொள்ளும்போது திரு மண ஏற்பாடு மேற்குறிப்பிட்ட பண்டைக் காலத்து உயர்ந்த குறிக்கோளுடையதாய்க் காணப்படுவதில்லை. மேலும், மக்களின் முரட்டுத்தனத்தின் பொருட்டு நேர்ந்த தேவைகளுக்கென்று திருச்சட்டம் நடை முறையில் ஓரளவு மாற்றியமைக்கப்படுகிறது (மத் 19:8). குழந்தைப்பேறு திருமணத்தின் மூலமுதலான பயனாகக் கருதப்பட, மற் றனைத்தும் அப்பயனுக்குக் கீழ்ப்பட்டதாகின் றன. இவ்வாறு, திருமணத்தின் இந்த நோக் கம் உறுதியானது எனினும், ஆதி 1-2-இல் கண்டுள்ள திருமண மூலமாதிரிக்கு மிகவும் ஒவ்வாத மூதாதையர் வழிவந்த வழக்கங்க ளின் அறிகுறிகளைத் திருமண நிறுவனம் காப்பாற்றியுள்ளது.

அ. தம்பதிகளின் அன்பும் சமுதாயக் கட் டுப்பாடும்: விவிலியத்தின் பண்டைய வாச கங்களில் கோடிட்டு வற்புறுத்தப்படும் ஒரு போக்கின்படி, தனி மனிதரின் நலனைவிட சமுதாயத்தின் நலன் முக்கியத்துவமுள்ளது. எனவே சமுதாயம் தனி மனிதர் மீது தன் சட்டதிட்டங்களையும் தேவைகளையும் சுமத்துகிறது. பெற்றோர் தம் பிள்ளை களைக் கலந்து கொள்ளாமலே அவர்களின் திருமணத்தை ஏற்பாடு செய்கின்றனர் (ஆதி 24:2தொ; 29:23; தோபி 6:13). ஒரு குலத்தவர் தங்களிடையே நெருங்கிய உறவினர்களுக் குள் திருமணம் நிகழ்வதற்குத் தடை செய் கின்றனர் (லேவி 18:6-19); அவ்வாறே தங் கள் இனத்திற்குப் புறம்பே திருமணம் நிகழ் வதற்கும் தடை செய்கின்றனர் (உப 7:1-3; எஸ் 9). குலவழித்தோன்றல்கள் அற்றுப் போகலாகாது என்பதற்காக, ஒரு சில ஆண் - பெண் உறவுகள் தேவையென்று கட்டளை யிடப்படுகின்றது; எடுத்துக்காட்டாக, மக்களில்லாத விதவை தனக்கு மிக நெருங் கிய உறவுடையானோடு கூடலாம் (Levirate) என்ற வழக்காற்று முறை (உப 25:5-10; ஆதி 38:13-15; ரூத் 2:20). இவ்வாறெல்லாம் இருப் பினும், கட்டுப்பாட்டின் இத்தகைய வெளித் தோற்றங்களினூடே, அன்பு தன்னியல்பாய் இயங்குவதாயும் முற்றிலும் உயிர்த்துடிப்புள்ள தாயும் உள்ளது. சிலவேளைகளில் சுமத்தப் பட்ட திருமண ஒன்றிப்புக்கு உள்ளம் உடன் படுகிறது (ஆதி 24:62-67; ரூத் 3:10). சில வேளைகளில், ஒருவர் ஒருவரைத் தேர்ந்து கொண்டு, ஓர் ஆணும் பெண்ணும் கூடுகின் றனர் (ஆதி 29:15-20; 1 சாமு 18:20-26; 25:40தொ). சிலவேளைகளில், பெற்றோரின் விருப்பத்திற்கு எதிராகவும் நடக்கிறது (ஆதி 26:34தொ; நீதி 14:1-10). ஆழ்ந்த அன்பால் ஒன்று கூட்டப்பெற்ற குடும்பங்களும் காணப்படுகின்றன (1 சாமு 1:8); தம்பதிக ளுள் ஒருவர் இறந்த பின்னரும்கூட மற்றவர் தாமே விரும்பி பற்று மாறா உறுதிப்பாட்டு டன் (பிரமாணிக்கத்தோடு) வாழ்கின்றார் (யூதி 16:26). பெண்ணின் குடும்பத்திற்குப் பரிசம் வழங்கப்படுகிறது (ஆதி 34:12; யாத் 22:15தொ). கணவன் மனைவியின் எசமான் என்றும் சொந்தக்காரன் என்றும் உரிமை பாராட்டுகிறான். இவ்வாறெல்லாம் இருந் துங்கூட, மனைவி விலைக்கு வாங்கி விற் கும் ஒரு பண்டம்தான் என எளிதில் கூறிவிட முடியாது. ஏனெனில் மனைவி பொறுப்புக் களை மேற்கொள்ளக் கூடியவளாகவும், திரு மண வாழ்வின் வெற்றிக்கும் கணவனின் நற்பெயருக்கும் பங்களித்து உதவக்கூடியவ ளாகவும் காணப்படுகிறாள் (பழ 31:10-31).

இன்னும் கட்டுப்பாட்டினைத் தவிர்த்து, உணர்ச்சிவயப்பட்ட உரையாடலில் ஈடுபட்டிருக்கும் சுதந்தரமான தலைமகன் தலைமகளின் அன்பை உன்னத சங்கீதம் அறிமுகப் படுத்துகிறது. இவ்வாறு அறிமுகப்படுத்தப் பெறுவது ஓர் உருவகந்தான் என்றாலும், அந்த உருவகம் இறைவனின் அன்பையும் அவர்தம் மக்களின் அன்பையும் குறிப்பது என்றாலும், உன்னத சங்கீதம் எனும் நூல் தன் காலத்து மக்கள் மனித அன்பு பற்றிக் கொண்டிருந்த மனப்பான்மையையும், பயன்படுத்திய சொற்களையும் கொண்டு அன்பைப்பற்றிப். பேசுகிறது (உ.ச. 1:12-16; 6:3-8:4 காண்).

ஆ. பன்மனை மணமுறையும் ஒருமனை மணமுறையும்: இனப்பெருக்கம் பற்றிய குறிக்கோளும், பெருஞ் செல்வாக்குடைய குடும்பம் வேண்டுமென்ற அக்கறையும்கூடி மிகப்பல குழந்தைகளுக்காக அவா கொள்ளத் தூண்டுகின்றன (நீதி 8:30; 12:9; 2 அர 10:1 காண்); இப்போக்கு இயல்பாகவே பன்மனை மணமுறைப் பழக்கத்திற்கு வழி காட்டுகிறது. ''யாவே . பாரம்பரியத்தில், மேல்வரிச்சட்டம் ஒருமனை மணமுறையே'' (ஆதி 2:18-24); இந்த மரபுபற்றியே ஆசிரியர், பன்மனை மணமுறைத் தொடக்கத்திற்குக் காட்டுமிராண்டியான இலாமேக்கு செய்த முயற்சி ஒரு காரணம் என்று குறிப்பிடும் போது, அந்த மணமுறையைக் கண்டிக்கிறார் (4:19). எனினும், பழைய ஏற்பாட்டில் எங்கணும் இருமனைவியரைக் கொள்ளும் பழக்கம் (1 சாமு 1:2; தவிர, உப 21: 15 காண்), அல்லது வைப்பாட்டிகளோடும் அடிமைப் பெண்களோடும் கூடிவாழும் பழக்கம் காணப்படுகிறது (ஆதி 16:2; 30:3; யாத் 21:7-11; நீதி 19:1; உப 21:10-14). அரசர்கள் காதலாசையின் பொருட்டும் (2 சாமு 11:2...), அரசியல் நோக்கங்களுக்காகவும் (1 அர 3:1) பெரும் எண்ணிக்கையில் மண ஒப்பந்தங்கள் செய்கின்றார்கள். இவ்வாறு பரந்தகன்ற அந்தப்புரங்கள் தோன்றலாயின (1 அர 11:3; 2 நாள் 13:21). அங்கெல்லாம் உண்மையான அன்பு இயலாததாயிற்று (எஸ் 2:12-17 காண்).

எனினும், கணவன் மனைவியரிடையே தனிப்பட்ட பற்று என்பது எந்த வகையிலும் அரிதன்று. இதற்கு ஈசாக்கு (ஆதி 25:19-28), யோசேப்பு (ஆதி 41:50) ஆகியோர் தொடங்கி, யூதித் (யூதி 8:2-8), இரு தோபியாக்கள் (தோபி 11:5-15) ஆகியோர் ஈறாகச் சான்று பகர்வர். இவ்வரிசையில் எசேக்கியேலும் (எசே 24:15-18), யோபும் (யோபு 2:9...) உள்ளடங்குவர். பழைய ஏற்பாட்டில் ஞான ஆகமங்கள் எனப்படுபவை ஒருமனைக் குடும்பத்தின் மகிழ்ச்சியையும் தொல்லைகளையும் நினைப்பூட்டுகின்றன (பழ 5:15-20; 18:22; 19:13; திருவுரை 9:9; சீரா 25:17-26:18). உன்னத சங்கீதத்தில் கண்டுள்ள தலைமகன் தலைமகளின் அன்பு பாகுபாடு அற்றது என்பது வெள்ளிடைமலை. இவையனைத்தும் அறநெறிவாழ்வில் நிகழ்ந்த படிப்படியான உண்மை வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த வளர்ச்சியின்படி, புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குள் யூத திருமணங்களுக்கான நடைமுறை விதி ஒருமனை மணமுறை என்றாகிவிடும்.

இ. திருமணத்தின் நிலைபிறழாமையும் தம்பதிகளின் அன்புறுதியும் (பிரமாணிக்கமும்): திரும்பவும், வழித்தோன்றல் பற்றிய கவலைதான் மலட்டுத் தன்மைக்காக மனைவியை விலக்கிவிடும் பழக்கத்தைப் புகுத்தக் கூடுமாகிறது; ஆனால் பன்மனை மணமுறை, இந்தச் சிக்கலைத் தீர்க்க இடங் கொடுக்கும் (ஆதி 16). மணமுறிவை ஒழுங்கு படுத்துவதில் திருச்சட்டம், எந்தக் 'குறைபாட்டிற்காக' ஒருவன் தன் மனைவியை விலக்கி விடலாம் என்பதை நன்கு வரையறுப்பதில்லை (உப 24:1தொ). எனினும் நாடுகடத்தப்பட்ட காலத்திற்குப்பின்னர், அறிஞர்கள் 'இளமைக்காலத்து மனைவிக்கு' அன்புறுதி கொண்டிருத்தல் பற்றிப் பாடுகின்றார்கள் (பழ 5:15-19). கணவன் மனைவியரின் நிலை பிறழாமையைப் புகழ்ந்து பேசுகிறார்கள் (சீரா 36:27 தொ). இறைவாக்கினர் மலாக்கியா திருமண உடன்படிக்கையை (berith) இறைவனுக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையில் உள்ள உடன்படிக்கையோடு (berith) ஒப்பிட்டு இறைவன், ''மணமுறிவை

வெறுக்கிறார்'' என்று கூட வற்புறுத்திக் கூறுகிறார் (மலா 2:14 தொ). இவ்வாறு மணவாழ்வு மிகச் சிரமமான குறிக்கோளை நோக்கி முன்னேறினாலும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில்கூட, யூதமதம் மணமுறிவு நிகழக்கூடியதொன்று என ஒப்புக் கொள்ளும்; அறிஞர்களும் மணமுறிவைச் சரி என்று மெய்ப்பிக்கக்கூடிய காரணங்கள் பற்றி ஆய்வு நடத்துவார்கள் (மத் 19:3 காண்). கணவன் மனைவியரின் விசுவாசத்தை (பிரமாணிக்கத்தை)ப் பொறுத்தளவில், விபசாரம் செய்த எந்த ஒரு மனைவியும் அவளோடு விபசாரம் செய்தவனும் கொலைத்தண்டனைக்கு ஆளாவார்கள். இந்த வழக்கம் (ஆதி 38:24) பின்னர், எழுதிய சட்டத்தின் ஆதரவு பெறலாயிற்று (உப 22:22; லேவி 20:10). ஆனால் இவ்வாறு விபசாரம் செய்யலாகாது (யாத் 20:14) என்ற தடையுத்தரவு கணவனின் உரிமைகளை மதிப்பதற்கு முதலில் கருத்தாயுள்ளது; ஏனெனில், கணவன் மணமாகாத பெண்களோடும் பரத்தையரோடும் உறவு கொள்வதை எதுவும் சம்பிரதாயப்படி தடை செய்வதற்கில்லை; இத்தகைய உறவுகளுக்குப் பன்மனை மணமுறைப் பழக்கம் மிக எளிதில் இடங்கொடுக்கலாயிற்று. எனினும், ஒரு மனை மணமுறையைப் பெரிதுபடுத்தும் போக்கு வலுப்படுவதுபோல, விபசாரத்தைத் தடை செய்யும் போக்கும் வலுப்படுகிறது; விபசாரம் கணவனுக்கும் தடைசெய்யப்படுகிறது (யோபு 31:9; சீரா 9:5.8.9;41:22தொ). இந்த வரம்புகளுக்குள், விபசாரப் பழக்கம் இறைவாக்கினர்களால் கடுமையாகக் கண்டனம் செய்யப்படுகிறது (எசே 18:6); இக்காரியத்தில் குற்றவாளி தாவீது அரசராகவே இருப்பினும், அவரும் கண்டனத்திற்கு ஆளாகிறார் (2 சாமு 12). தவிர, அறிவாளிகள், சுற்றித்திரிகிற பெண் தரக்கூடிய மயக்கங்களைப்பற்றி விழிப்பாயிருக்கும்படி இளைஞர்களை எச்சரித்து (பழ 5:1-6; 7:6-27; சீரா 26:12-15), திருமணவாழ்வில் பிரமாணிக்கமாய் இருப்பதற்கு அவர்களைப் பக்குவப் படுத்தப் பார்க்கிறார்கள்.

ஈ. **திருமணத்தைப் பற்றிய சமயக் குறிக்கோள்:** திருமணம் முந்த முந்தச் சமுதாய ஒழுங்கு முறையைச் சார்ந்ததாயினும், அது பற்றிய பண்டைய உரைகள் திருமணச் சமயச்சடங்குமுறைகள் பற்றிக் குறிப்பாகக் கூடப் பேசாவிடினும், ஒவ்வொரு இஸ்ராயேலனும் நன்கு அறிந்திருந்தது என்னவென்றால், வாழ்க்கைத் துணையைத் தேர்ந்து கொள்வதில் இறைவன் அவனுக்கு வழிகாட்டுகிறார் என்பதும் (ஆதி 24:42-52), திருமணத்தை ஒழுங்குபடுத்தும் நீதிநெறிகளை இறைவன் உடன்படிக்கையைச் சார்ந்தனவாகக் கருதுகிறார் என்பதுமாகும் (உ-ம். லேவி 18). இஸ்ராயேலரின் அடிப்படைச் சட்டமான பத்துக்கட்டளை, திருமண நிறுவனம் புனிதமானது என்பதற்குச் சான்றுறுதி கூறுகிறது (யாத் 20:14; தவிர பழ 2:17 காண்க). தாயகம் நீத்த வாழ்வுக்குப் பின்னர், தோபியாக ஆகமம் இறைவனால் ஆயத்தம் செய்யப்பெற்ற குடும்பத்தைப்பற்றி உயர்ந்ததொரு ஆன்மீக விளக்கம் தருகிறது (தோபி 3:16); குடும்பம் கடவுள் திருமுன் விசுவாசத்திலும் செபத்திலும் நிறுவப்படுகிறது (7:11; 8:4-9); குடும்பம் ஆதியாகமம் வரைந்துள்ள மாதிரியைப் பின்பற்றுவதாகும் (8:6; தவிர ஆதி 2:18 காண்க); குடும்பம் திருச்சட்டத்தைப் பற்றுறுதியுடன் நாள்தோறும் கடைப்பிடித்து, பாதுகாப்புப் பெறுவதாகும் (14:1.8-13). திருமணத்தைப்பற்றிய விவிலியக் குறிக்கோள் இந்த உயர்தளத்தை வந்தடைந்தும், மோசேயின் சட்டம் தற்காலிகமாக இடங்கொடுத்த குறைபாடுகளை மேற்கொண்டுவிட்டது.

3. **திருமணப்பழக்கம்:** விவிலியம் திருமணப் பழக்கத்தை இரு பிரிவுகளாகப்பிரிக்கின்றது. அ. மண உறுதி எடுத்தல். ஆ. திருமணம்.

அ. **மண உறுதி எடுத்தல் அல்லது நிச்சயம் செய்தல்:** விவிலியத்தில் நிச்சயம் செய்த பெண்கள் மனைவி என்றும் (ஆதி 29:21; உப 22:23-24; மத் 1:18.20), நிச்சயம் செய்யப்பட்ட ஆண்கள் கணவன் என்றும் (யோவே 1:8; மத் 1:9) அழைக்கப்பட்டிருக்கின்றனர். விவிலியம் முறிவுபட்ட நிச்சயதார்த்தத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால் கமுராபி சட்டத்

தில் நிச்சயதார்த்தம் செய்த பிறகு ஆண் நிச்சயதார்த்தத்தை முறிவுபடச் செய்தால் கொடுக்க வேண்டிய பொருள் (Dowry) கொடுக்கப்பட மாட்டாது. ஆனால் நிச்சய தார்த்தம் பெண்வீட்டார் பக்கம் முறிவுபடச் செய்தால் இருமடங்குப் பொருளை ஆண்வீட் டாருக்கு அளிக்க வேண்டும். விவிலியத்தில் யோசேப்பு மணமுறிவுச் சீட்டுக்கொடுத்து மரியாளை மறைமுகமாக விலக்கிவிட எண் ணினார் (மத் 1:19).

கடவுள் இஸ்ராயேல் மக்கள் மீது கொண்ட அன்பும் பிரமாணிக்கமும் ஓசே 2:14.20-இல் நிச்சயதார்த்த உறவாக உருவகப் படுத்தப்படுகிறது. நிச்சயதார்த்தம் செய்யும் முறையை இப்போது காணலாம்.

1. மணப்பெண்ணைத் தேர்ந்தெடுத்தல்: வழக்கமாக ஆணின் பெற்றோர்தான் மகனுக்குத் தேவையான பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணத்திற்குத் தயார் செய்வர். உ.ம். ஆகார் இசுமயேலுக்கும் (ஆதி 21:21), யூதா ஏர்க்கும் பெண் பார்த்தனர் (ஆதி 38:6). சில சமயங்களில் பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த பெண்ணைப் பார்த்துப் பெற் றோரிடம் கூறினால் அவர்கள் திருமணத்திற் குத் தயார் செய்வார்கள். உதாரணமாக செக்கேம் (ஆதி 34:4,8); சிம்சோன் (நீதி 14:2). ஏசாவைப் போன்று (ஆதி 26:34.35), பெற் றோர்களுக்கு விரோதமாகத் திருமணம் செய்து கொள்பவர்கள் வெகு சொற்பமே. பெண்களின் விருப்பத்தைச் சில சமயம் கேட் பார்கள். ரெபேக்காள் விருப்பம் கேட்கப்பட் டது (ஆதி 24:58). வழக்கமாக, பெற்றோர் களே பிள்ளைக்குரிய மணமகளைத் தேர்ந் தெடுப்பர் (உ-ம்) நகோமி (ரூத் 3:1.2); சவுல் (1 சாமு 8:21).

2) சீதனம் அல்லது பரிசம் பரிமாறிக் கொள்ளல்: மூன்று வகையான சீதனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அ) திருமணப்பரிசு அல்லது பரிசம் (ஆதி 34:12; யாத் 22:17; 1 சாமு 18:25). யாக்கோபு ராகேலை மண முடிக்க ஏழு ஆண்டுகள் வேலை செய்தார் (ஆதி 24:53). மோசே தன் மாமனாரின் ஆட்டு மந்தைகளைக் கவனித்துவந்தார் (யாத் 3:1). இவ்வாறு ஆண் வீட்டார் பெண்வீட்டாருக் குப் பரிசம் அளித்து நிச்சயதார்த்தத்தை உறுதி செய்தார்கள். ஆசிரியர்கள் சிலரின் கருத்துப்படி பெண்ணுக்குரிய மதிப்பைப் பரிசமாகக் கொடுத்து வாங்கிக் கொள் கின்றார்கள்; ஆனால் அடிமையாக அன்று.

ஆ) சீதனம்: இது மணப்பெண்ணுக்கோ மணமகனுக்கோ பெண்வீட்டார் கொடுப் பது. இது சில நேரங்களில் அடிமைகளாகக் கூட இருக்கலாம் (ஆதி 24:59.61; 29:24); நிலமாக இருக்கலாம் (நீதி 1:15; 1 அர 9:16); அல்லது மற்றவகைப் பொருட்களாக இருக் கலாம் (தோபி 8:21).

இ) மணமகளுக்கு மணமகன் அளிக்கும் பரிசு. இது நகையாக அல்லது ஆடையாக இருக்கலாம் (ஆதி 24:53).

ஆ. திருமணச் சடங்குகள்: கீழே கூறப் போகும் சடங்குகள் அனைத்தும் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. ஆனால் எல்லா வற்றையும் அவர்கள் சரியாகக் கடைப்பிடித் தார்களா என்பது தெரியவில்லை.

1) மணவாளர்களின் உடைகள்: மணமகள் பொன்னிழை ஆடையை அணிந்திருந்தாள் (சங் 45:14.15); அணிகலன்கள் அணிந்திருந் தாள்; போர்வை போர்த்தியிருந்தாள் (எரே 2:32); முக்காடிட்டு முகத்தை மூடியிருந்தாள் (ஆதி 24:65). மணவாளன் மாலை அணிந் திருந்தான். இயேசு மணமகளாகக் கொள்ளும் திருச்சபை தூயஆடை அணிந்தவளாய்க் காணப்பட்டாள் (எபே 5:27; திருவெளி 19:8; 21:2) என்று உருவகமாகக் கூறப் பட்டுள்ளது.

2) தோழிகளும், நண்பர்களும்: சங் 45:14-இல் இளவரசி இளம் தோழியர்களால் இளவரசனிடம் அழைத்துவரப்படுவதாகக் காண்கின்றோம். கண்டிப்பாக மணமகனுக் கும் நண்பர்கள் இருந்திருப்பார்கள் (நீதி 14:11). கணவனின் தோழனாக வந்திருந்த ஒருவனைத் தன் கணவனாகத் தேர்ந்து கொண்டாள் என்று நீதி 14:20; 15:2-இல் பார்க்கின்றோம்.

3) ஊர்வலம் வருதல்: திருமணம் குறிக்கப்பட்ட அன்றுமாலை மணமகன் தன் தோழர்களுடன் ஊர்வலமாக மணமகள் வீட்டிற்கு அழைத்துவரப்படுவான். இரவு உணவை அங்குதான் உண்பார்கள். புதிய ஏற்பாட்டில் பத்துக்கன்னியர்கள் மணவாளன் வருகைக்காகக் காத்திருக்கும் நிகழ்ச்சி (மத் 25:1-13) இதை உறுதி செய்கின்றது. அரசர்களின் திருமணங்களில் மட்டும் பெண், கணவன் வீட்டில் இரவு உணவு அருந்துவாள் (சங் 45:14தொ; மத் 22:1-14: யோவா 2:9தொ). ஆடல் பாடலுடன் ஊர்வலம் செல்லும்.

4) திருமணம்: திருமணம் பொதுவாக மணமகன் வீட்டில் (மத் 22:1-10; யோவா 2:9), இரவில் (மத் 22:13; 25:6) நடைபெறும். உற்றார் உறவினர் இதில் பங்கு கொள்வர். பந்தியில் இரசம் பரிமாறுவர் (யோவா 2:3). பந்தி மேற்பார்வையாளன் அனைத்தையும் கவனிப்பான் (2:9.10). திருமண அழைப்பை ஏற்க மறுப்பது அவர்களை அவமானப்படுத்துவது போலாகும் (மத் 22:7). விருந்தினர்கள் அனைவரும் திருமண உடை அணிய வேண்டும் (மத் 22:11.12). சில முக்கிய சந்தர்ப்பங்களில் திருமணம் மணமகள் வீட்டில் நடைபெறும் (ஆதி 29:22;தோபி 8:19).

5) மணமகளை மூடுதல் அல்லதுபோர்த்துதல்: பழைய ஏற்பாட்டில் இரு இடங்களில் (ரூத் 3:9; எசே 16:8) மணமகன் மணமகளைத் தனது போர்வையால் போர்த்துவதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவெனில் என்றும் அவளை அவன் பாதுகாப்பான் என்பதாகும். ஜே. எய்ஸ்லர் தனது புத்தகத்தில் மணமகன் மகமகளை ஒருவிதத் தனிப்போர்வையால் போர்த்துவதாகவும், அப்போது மணமகன் ''இன்றுமுதல், என்னைத்தவிர வேறுஎவரும் உன்மீது போர்வை விரிக்கக்கூடாது'' என்று கூறுவதாகவும் எழுதியுள்ளார்.

6) ஆசிர்வதித்தல்: பெற்றோர்களும், நண்பர்களும் மணமக்களை வாழ்த்துவார்கள் (ஆதி 24:60; ரூத் 4:11; தோபி 7:13).

7) ஒப்பந்தம்: மணமக்கள் விசுவாச உடன்படிக்கை கொடுப்பார்கள் (பழ 2:17; எசே 16:8; மலா 2:14). தோபி 7:14-இன்படி பெண்ணின் தந்தை திருமண உடன்படிக்கை தயாரித்து மணமகனிடமும் பெற்றோரிடமும் கையொப்பம் வாங்குவார்.

8) மணவறை: மணவறை என்பது மணமக்களுக்காக அலங்கரிக்கப்பட்ட இடம் (தோபி 7:18). இங்கேதான் மணமகனும் மணமகளும் அமர்ந்து கொண்டிருப்பார்கள்.

9) முதல் இரவு: மணமகளும், மணமகனும் பெற்றோர்களால் அல்லது தோழர் தோழிகளால் அழைத்துச் செல்லப்படுவார்கள். மணமக்கள் தனிஅறையில் விடப்படுவார்கள். அவர்கள் இருவரும் ஒன்றுகூடுமுன் இருவரும் கடவுளிடம் மன்றாடுவார்கள் (தோபி 8:4).

10) கன்னிமையை நிரூபித்தல்: இரத்தம் படிந்த பெண்ணின் உள்சட்டையைக் கணவனுக்கு நிரூபணமாகக் காட்ட வேண்டும் (உப 22:13-21).

11) விழாக்கோலம்: திருமண விழா ஒரு வாரம் (ஆதி 29:27;) அல்லது இரண்டு வாரம் நீடிக்கும் (தோபி 8:20). பாடல்கள் வாசிக்கப்படும். சங்கீதங்கள் பாடப்படும். மணமக்கள் மகிழ்ச்சியாக நாட்களைக் கழிப்பார்கள்.

4. தடைசெய்யப்பட்ட திருமணங்கள்: திருமணத்திற்கான தடைகள் லேவி 18;20:17-21; உப 27:20-23-இல் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ''மனைவி உயிருடனிருக்க, அவளுக்குச் சக கிழத்தியாக, அவள் சகோதரியை மணம்புரிந்து உடலுறவு கொள்ளாதே (லேவி 18:18). இதிலிருந்து முதல் மனைவி இறந்ததும் அவளுடைய சகோதரியை இரண்டாம் முறையாக மணக்கலாம். ஆபிரகாம் (ஆதி 20:12), யாக்கோபு (ஆதி 29:21-30) ஆகியோர் செய்த திருமணங்கள் பிறகு நீக்கப்பட்டன. கொரிந்து திருச்சபையில் காணப்பட்ட தவறு என்னவென்றால் தந்தையின் இரண்டாவது மனைவியிடம், முதல் தாயின் பிள்ளை உறவுகொள்வது. இது பவுலால் கண்டிக்கப்பட்டது.

5. சட்டங்கள்: திருமணமான ஒருவன் குழந்தையின்றி இறந்தால் அவனுடைய சகோதரன் அவளை மணந்து கொள்வான். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தை முதல் கணவனுடைய வாரிசாகக் கருதப்படும் (ஆதி 38:8-10).

''ஒருவன் தன் சகோதரன் மனைவியோடு உடலுறவு கொண்டால், அது ஒழுக்கக்கேடு; அவன் தன் சகோதரனை இழிவுபடுத்தி னான் ''(லேவி 20:21). எனவேதான் திரு முழுக்கு யோவான் பிலிப்புவின் மனைவி ஏரோ தியாளை வைத்திருந்த ஏரோதைச் சாடுகின் றார் (மத் 14:3.4). புதிய ஏற்பாட்டில் லேவிய ரின் சட்டங்களை நன்கு கற்ற சதுசேயர்கள் உயிர்ப்பு பற்றி விவாதிக்கும்போது இச்சட் டங்களைக் கொணர்கின்றனர் (மத் 22:23 தொ).

6. விவாகரத்து, மணமுறிவு: இயேசு மத் 19:80-இல் ''உங்கள் முரட்டுத்தனத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக் கிட மோசே அனுமதி அளித்தார்'' என்று கூறுகின்றார்.

ஒரு மனிதன் தன் மனைவியை விபசாரி யென்று தவறாகக் கணக்கிடும் பொழுதும், மனிதன் மற்றொரு பெண்ணோடு உறவு கொண்டபிறகு அவளுடைய தந்தை அவளை மணக்க வற்புறுத்தும் பொழுதும் விவாகரத்து செல்லுபடியாகாது (உப 22:28.29; யாத் 22:16.17).

வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு வரும் பொழுது மணந்த இஸ்ராயேல் அல்லாத புற வினத்துப் பெண்களையும் (எஸ் 9;19;நெகே 13:23தொ), யூதப் பெண்கள் நீங்கலான புற வினத்துப் பெண்களையும் விவாகரத்து செய் வது செல்லும் (மலா 21:10-16).

II. புதிய ஏற்பாடு: திருமணத்தைப்பற்றிய புதிய ஏற்பாட்டுக் கருத்து, புதிரான இயேசு வின் வாழ்க்கையினாலேயே வார்க்கப்பெற் றுள்ளது: ''பெண்ணிடமிருந்து பிறந்தவரான'' (கலா 4:4; தவிர, லூக் 11:27 காண்) இயேசு, பழைய ஏற்பாடு நெடுகிலும் ஆயத்தம் செய் யப் பெற்றிருந்த குடும்பத்தை ஒத்த ஒரு குடும்பத்தைத் தமது நசரேத்து வாழ்வினால் (லூக் 2:51...) திருநிலைப்படுத்தினார். ஆனால், அவரே கன்னித்தாயிடமிருந்து தோன்றி, கன்னிமையில் வாழ்ந்து, திரு மணத்திற்கும் மேலான தகுதிபெற்ற ஒரு நிலைக்குச் சான்று பகர்கின்றார்.

1. கிறிஸ்துவும் திருமணமும்:

அ. புதிய சட்டம்: இயேசு மோசேயின் கட்டளைக்கும் அப்பால் சென்று, ஆதியாக மத்தில் கண்டுள்ள படைப்புத் திட்டத்தினை வெளிப்படையாகக் குறிப்பிட்டு, திருமணத் தின் தனிப்பட்ட பண்பினையும் அதன் முறிவு படாத் தன்மையையும் உறுதிப்படுத்து கிறார் (மத் 19:1-9); கடவுள் தாமே ஆணை யும் பெண்ணையும் இணைத்து, அவர்கள் தன்னுரிமையாக ஒருவர் ஒருவரைத் தேர்ந்து கொள்வதற்கு, அம்மணமக்களுக்கும் அப் பாற்பட்ட ஒரு திருநிலை வழங்குகின்றார். கடவுள் திருமுன் அவர்கள் ''ஒரே உடலாய்'' இருக்கிறார்கள்; மனைவியை விலக்கி விட லாம் என்று 'முரட்டுத்தனத்தின் பொருட்டு' அனுமதித்ததும்கூட இறையரசில் விலக்கப் படவேண்டும்; ஏனெனில், அவ்வரசில் தொடக்கத்திலிருந்த முழு நிறைவினுக்கு உலகம் திரும்பிவருகிறது. ''கெட்ட நடத் தைக்காக'' (மத் 19:9) என்று குறிப்பிடப் பெறும் விதிவிலக்கு குறிப்பாக மண முறிவுக்கு ஓர் ஆதாரம் என நிச்சயமாகச் சொல்வதற் கில்லை (மாற் 10:11;லூக் 16:18; 1 கொரி 7: 10தொ...காண்); இந்த விதிவிலக்கு கவனம் செலுத்துவது, முறைகேடாகக் கொண்டிருக் கும் வாழ்க்கைத் துணையை விலக்கிவிடுதல் பற்றியதாக இருக்கலாம்; அல்லது அடுத்து வேறொரு திருமணம் செய்யக்கூடாத வகை யில் கணவன் மனைவி பிரிந்து செல்லுதல் பற்றியதாக இருக்கலாம். இதனால்தான் சீடர்கள் புதிய சட்டத்தின் கடுமையைக் கண்டு திகிலுறுகிறார்கள்: ''கணவன் மனைவி யின் நிலை இப்படியென்றால், மணந்து கொள்ளாதிருப்பதே நலம்'' (மத் 19:10).

இவ்வாறு அடிப்படை விதிகளை வலி யுறுத்துவது, பாவம் செய்த மனிதர்களுக்கு

இரக்கம் இல்லை என்பதாகாது. பல வேளைகளில் இயேசு விபசாரர்களையோ, அன்பின் முழு நிறைவினின்றும் நெறி பிறழ்ந்தவர்களையோ எதிர்ப்படுகின்றார் (லூக் 7:37; யோவா 4:18; 8:3தொ; தவிர, மத் 21:31 தொ... காண்). அவர் அவர்களை வரவேற்கின்றார். அவ்வாறு செய்வது, அவர்களின் நடத்தையை ஏற்றுக் கொள்வதற்காக அன்று; மாறாக அவர்களை மனந்திருப்புதலுக்கும் மன்னிப்புப் பெறுதலுக்கும் இட்டுச் செல்வதற்காகவே. இவ்வாறு மனந்திரும்புதலும் மன்னிப்புப் பெறுதலும், கடைப்பிடிக்கத் தவறிய குறிக்கோளின் தகைமைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

ஆ. திருமணம் என்னும் திருவருட் சாதனம்: திருமண நிறுவனம் தொடக்கத்தில் கொண்டிருந்த முழு நிறைவினை மனிதனின் பாவம் மங்கலாக்கியிருந்தது. இயேசு அந்த முழு நிறைவினுக்குத் திருமணத்தைத் திரும்பக் கொணர்ந்து மன நிறைவு கொள்ளக் காணோம். அவர் திருமணத்திற்கு ஒரு புதிய அடித்தளத்தை அமைக்கிறார். அந்த அடித்தளம் இறையரசில் திருமணத்திற்குச் சமயத் தொடர்புள்ள புதியதொரு தனிச்சிறப்பு வழங்குகிறது. தமது சொந்த இரத்தத்தில் நிறுவும் புதிய உடன்படிக்கையால் (மத் 26:28), அவரே திருச்சபையின் மணமகனாகிறார். அவ்வாறே திருமுழுக்கிலிருந்து பரிசுத்த ஆவியின் ஆலயங்களாகும் கிறிஸ்துவர்களைப் பொறுத்தளவில் (1 கொரி 6:19) திருமணத்தில் ''அடங்கியுள்ள மறையுண்மை பெரிது. இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும்...'' (எபே 5:32). திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பதும், கிறிஸ்து திருச்சபைக்கு மீட்பளிக்கும் அன்பு செய்து, அதற்காகத் தம்மையே கையளித்து அதை விடுவித்ததும் முறையே கணவன் 'மனைவியர் பின்பற்றவேண்டிய உயிருள்ள விதியாகின்றன. அவர்களால் இவ்விதியைப் பின்பற்ற முடியும்; ஏனெனில் மீட்பளிக்கும் அருள் அவர்களின் அன்பையே ஆட்கொண்டு அந்த அன்புக்குரிய குறிக்கோளை வகுத்தளிக்கிறது (5:21-33). மனிதனுக்குரிய பாலினப் பண்பின் இயல்பான தேவைகளை விவேகத்துடன் பொருட்படுத்த வேண்டும் (1 கொரி 7:1-6). இப்பொழுது, புனிதமான பொருள் ஒன்று அந்தப் பாலினப் பண்பினைத் தனக்குள் ஏற்று, அதை உருமாற்றுகிறது.

2. திருமணமும் கன்னிமையும்: ஆதியாகமம் 2:19 ''மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதன்று'' என்று கூறும். இயேசு நிறுவிய இறையரசில் புதியதொரு குறிக்கோள் தோன்றுகிறது. அந்த அரசை முன்னிட்டு மனிதர் ''தம்மைத்தாமே அண்ணகராக்கிக்'' கொள்கின்றனர் (மத் 19:11 தொ). இதுவே கிறிஸ்துவக்கன்னிமையின் புதிராகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இறைமக்களை நீடித்திருக்கச் செய்யும் வண்ணம் இனப்பெருக்கம் முதற் கடமையாக இருந்தது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக் காலத்தில் திருமணம் எடுபடும் (மத் 22:30இணை). இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இரு வாழ்க்கை முறைகள் திருச்சபையில் உடனிருக்கின்றன: ''கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும்'' மறையுண்மையினால் உருமாற்றம் பெற்றுள்ள திருமணம்; திருநிலைப்படுத்தப் பெற்றுள்ள மணமாகாதநிலை என்பன. இந்நிலை மணமான நிலையைவிட நல்லது எனப் பவுல் கருதுகிறார் (1 கொரி 7:8.25-28). இவ்வாறு, திருமணத்தைக் குறைத்து மதிப்பிடுதல் என்பதல்ல நோக்கம் (7:1 காண்); மாறாக, கிறிஸ்துவன் ஒவ்வொருவருவனும் தன் திருமுழுக்கினால் ஏற்கெனவே பங்குகொள்ளும் திருமண மறையுண்மையினை முழுமையாக ஏற்று வாழ்வதென்பதே நோக்கம் (2 கொரி 11:2). ஆண்டவர் ஒருவரை மட்டும் மகிழ்விக்க வேண்டுமென்று மனச் சிதைவின்றி அவரிடம் பற்றுக் கொண்டிருப்பவர் (1 கொரி 7:32-35) சான்று பகர்வது யாதெனில், திருமண நிறுவனம் தொடர்பு கொண்டுள்ள நிகழ்கால உலகத்தின் அமைப்பு தனது முடிவை நோக்கிக் கடந்து செல்கிறது என்பதாகும் (7:31). ஐயத்துக்கிடமின்றி இந்தக் கண்ணோட்டத்தில்தான் பவுல், ''மனைவி உள்ளவர்களும் மனைவி இல்லாதவர்

களைப்போல் இருக்கட்டும்'' (7:29) என்றும், கைம்பெண்கள் மீண்டும் திருமணம் செய்ய வேண்டாம் (7:40) என்றும் விருப்பம் தெரிவிக்கிறார். ஆனால், இறுதியில் இவையனைத்தும் ஆண்டவரைப் பொறுத்ததாகும். கிறிஸ்துவின் மறையுடலில் பல்வேறு அழைத்தல்கள், ஒன்றையொன்று நிறைவு செய்யும் அழைத்தல்கள் உண்டு. மற்றத் துறைகளில்போலவே இத்துறையிலும், ''கடவுள் தரும் தனிப்பட்ட வரத்தை ஒவ்வொருவனும் கொண்டிருக்கிறான்; ஒருவனுக்கு ஒரு வகையான வரமும், வேறொருவனுக்கு வேறு வகையான வரமும் கிடைக்கிறது'' (7:7; தவிர, மத் 19:11 காண்க).

திருமுகம் (EPISTLE, LETTER)

1. தொலைவினால் பிரிக்கப்பட்ட நபர்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தப் பயன்படும் சாதனமாகும் கடிதம் அல்லது மடல். இது எழுதப்பட்ட செய்தியாகும். பெரும்பாலும் நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள், அறிமுகமானவர்களுக்கிடையே பரிமாறிக் கொள்ளப்படும் எழுதப்பட்ட செய்தியாகும். இப்படிப்பட்ட கடிதங்கள் வரலாற்றிலே அதிகம் கிடைத்துள்ளன. இவை வணிகம், ஆட்சிமுறை, சட்ட ஏடுகள், அரசியல் அறிக்கைகள் முதலியவற்றையும் உள்ளடக்கும்.

இவற்றிலிருந்து வேறுபட்டு நிற்பது அரசாங்கக் கடிதங்கள், அதிகாரபூர்வமான கடிதங்கள், அரச ஆணைகள் முதலியவையாகும். இவை எழுதப்பட்ட தூதுச் செய்திகள்; ஆணைகளாகும். இப்படிப்பட்ட கடிதங்கள் பல எகிப்திலும், மெசபொத்தாமியாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட கடிதங்கள் அல்லது அவற்றில் சில பகுதிகள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன (உ-ம் 2 சாமு 11:15; 1 அர 5:2-6; 21:9-10; 2 நாள் 2:11-16; எஸ் 4:11-12; 7:12-26; நெகே 6:6-7; எரே 29; 1 மக் 10-15). இப்பகுதிகளோடு சில சமயங்களில் இக்கடிதங்களின் சுருக்கமும் கொடுக்கப்படலாம் (உ-ம். 2 அர 20:12; நெகே 2:7-8; 6:17:19; எஸ்த 3:12-13; 8:4-11; 9:20-32; யூதி 4:6-7; 1 மக் 1:41-42.44-50). இவ்வகைக் கடிதங்கள், செய்திக்கு ஏற்றவாறு வரலாற்றுச் சூழ்நிலைகளையும் கற்பனையாகக் கொண்டிருக்கலாம். புதிய ஏற்பாட்டில் ''திருமுகங்கள்'' அல்லது ''நிரூபம்'' என்றழைக்கப்படும் தொகுப்பைத்தவிர, ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு யோவான் எழுதிய கடிதங்களும் (திருவெளி 1:4-8; 2-3), அ.ப.15:23-29; 23:26-30-இல் காணப்படும் கடிதங்களும் உண்டு.

கிரேக்க, உரோமை உலகில் கடித வடிவம் கொண்ட ஆற்றல்மிக்க பேச்சுக்களும், தத்துவ இயல் கட்டுரைகளும், அரசியல் கட்டுரைகளும் பதிப்பிக்கப்பட்டன. இவை பலரும் வாசித்துப் பயன்பெறும் நோக்கைக் கொண்டவை. இவற்றில் சிறப்புப் பெற்றவை கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிசேரோ என்பவரின் கடிதங்களாகும். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் மற்றத் திருச்சபைத் தலைவர்கள், பொது, தளத்திருச்சபைகளுக்கு எழுதிய கடிதங்களைத் தமிழில் முன்பு நிரூபம் என்றும் இப்போது திருகம் என்றும் அழைக்கிறோம். இக்கடிதங்கள் அத்தலைவர்களின் எண்ணங்களைத் தூதாக எடுத்துச் சென்றன. அவர்களை அத்திருச்சபைகளில் ஒரு விதத்தில் பிரசன்னப் படுத்தின.

2. கடிதங்கள் எழுதுவதற்கு எழுத்தர்கள் பயன்படுத்தப்பட்டனர். எழுதப்பட்ட ஏட்டுச்சுருள் சுருட்டப்பட்டு, இரகசியத்தைக் காப்பாற்ற முத்திரையிடப்பட்டது. இம்முத்திரை இரகசியத்தைக் காப்பதோடு அதிகாரத்தையும் சுட்டியது (1 அர 21:8; எஸ்த 3:12; 8:8).

இப்படி முத்திரையிடப்பட்ட கடிதங்கள், நடந்துசெல்லும் தூதுவர்கள் வழியாகவோ, புரவிகள், ஒட்டகங்கள் மீது அமர்ந்து செல்லும் விரைவு அஞ்சலர் வழியாகவோ குறிப்பிட்ட இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன (எஸ்த 3:13; 8:10). அக்காலத்திலிருந்த அஞ்சல் அமைப்பு பெரியநாடுகள், பேரரசுகளின் ஆட்சித் தேவைகளை மட்டும்

தான் நிறைவு செய்தன (2 நாள் 30:6.10;எஸ்த 3:13.15; 8:10.14; 1 மக் 1:44). தனிநபர்களுக்கு அப்படிப்பட்ட அமைப்பு இருக்கவில்லை. வசதி வாய்ந்த செல்வந்தர்கள் தங்களுக் கெனச் சொந்த அமைப்புகளை வைத்துக் கொண்டனர். பவுல் தன் திருமுகங்களைத் தன் உடன் ஊழியர்கள் வழியாக அனுப்பி னார். இவர்களும் தளத்திருச்சபையை ஓரளவு அறிந்திருந்தனர் (பிலி 2:25-30; கொலோ 4:7-9; காண். எபே 6:21-22).

3. வடிவமும் நடையும்: கடிதங்கள் பல, எழுதுதலைத் தொழிலாகக் கொண்ட எழுத் தர்களால் எழுதப்பட்டதால், கடிதத்தின் பொருளடக்கம், மரபாலும், சூழ்நிலைக் கேற்றவாறும் ஒரு குறிப்பிட்ட வடிவம் எடுத்தது. பழங்காலக் கடிதங்கள், குறிப்பா கக் கிரேக்க மொழிக் கடிதங்கள் முன்னுரை, முக்கிய பகுதி, முடிவுரை என்ற பொது வடிவம் எடுத்தன (2 நாள் 2:11-16; எஸ் 4:11.17; 5:7; 7:12-26; எஸ்த 13:1-7; 1 மக் 10:18-20; 2 மக் 1:1-2:18). கிரேக்க, அரமேயக் கடிதங்கள் சில, நலம் விசாரிப்பையும் கொண்டிருந்தன.

புதிய ஏற்பாட்டுத் திருமுகங்கள் குறிப் பாக, பவுலினுடையவை, கிரேக்க வடிவங்க ளால் வரையறுக்கப் பெறவில்லையாயி னும், ஓரளவு அவற்றாலும் யூத மரபுகளா லும் பாதிக்கப்பட்டுள்ளன. பவுல் பயன் படுத்திய வடிவம், திருச்சபையின் கொள்கை களையும், போதகத்தையும் அறவுரைகளை யும் அளிக்கும் தனிப்பட்ட வடிவமாகியது. பவுலின் கடிதங்களும், அவருடைய ஆதிக் கத்தால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவக் கடிதங்க ளும், கிரேக்க முறையைப் பின்பற்றி முன் னுரையோடு தொடங்கின. இதில் வாழ்த்து ரைகளும், சிலவற்றில் கடிதத்தின் நோக்க மும் எடுத்துக் கூறப்படும் (உரோ 1:1-7; கலா 1:1-5; 1 தெச 1:1; தீத் 1:1-4; பில 1-3; யாக் 1:1; 1 பேதுரு 1:1-2; 2பேதுரு 1:1-2; 2 யோவா 1:1-3; யூதா 1:1-2; திருவெளி 1:4-5). இஃதோடு எழுதுபவரின் பெயரும், சிலசமயம் உடன் ஊழியரின்பெயரும், யாருக்குக் கடிதம் எழு தப் படுகிறதோ அவரின் பெயரும் கொடுக் கப்படுகின்றன. கடிதம் அனுப்புபவருக்கும் அதைப் பெறுபவருக்குமிடையே உள்ள உற வும், சில சமயங்களில் கொடுக்கப்படுகிறது. ''மகிழ்ச்சியாயிருங்கள்'' என்ற கிரேக்க வாழ்த்துரையைப் பவுல் ஒருபோதும் பயன் படுத்துவதில்லை. அதற்கு மாறாக, ''சமாதா னம்'' என்று எபிரேய வாழ்த்துரையைக் (சாலோம்) குறிக்கும் ''அருள், சமாதானம்'' என்ற வாழ்த்துரையைப் பயன்படுத்துகிறார். இவ்வாறு வாழ்த்துரை ஆசிராக மாறுகிறது. சில சமயம் ''நம் தந்தையாகிய கடவுளிட மிருந்தும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிட மிருந்தும்'' போன்ற கூற்றுக்களும் சேர்க் கப்படும்.

கிரேக்கக் கடிதங்கள், சில சமயம், முன் னுரைக்குப்பின் கடவுளுக்கு நன்றிகூறும் பகுதியைக் கொண்டிருக்கும் (2 மக் 1:11-17). பவுலின் கடிதங்களும் அவை போன்றவை யும் சாதாரணமான நன்றியுரையைக் கொண் டுள்ளன. சில சமயங்களில் கடிதம் பெறுப வர்க்கான மன்றாட்டும் அமையும் (1 கொரி 1:4-9; எபே 1:15-23; பிலி 1:3-11; 2 தெச 1:3-12; 2:13-14; 1 திமொ 1:3-7); யூத வழிபாட்டுக்கொத்த இறை போற்றுரை அமையும் (2 கொரி 1:3-4; எபே 1:3-14; 1 பேதுரு 1:3-5); அல்லது மகிழ்ச்சியை எடுத் துக்கூறும் (2 யோவா 4; 3 யோவா 3-4). சாதாரணமாகப் பவுலின் நன்றியுரை, கடிதம் பெறுபவரின் பிரமாணிக்கத்தில் கவனம் செலுத்தும்; கடிதத்தில் காணப்படும் அக்கறை களைப் பிரதிபலிக்கும். இதற்கு மாறாக கலா 1:6-இல் வரும் கூற்று கவனிக்கத்தக்க தாகும்.

இந்தக் கிறிஸ்தவ கடிதங்களில் முக்கிய பகுதிகளைத் தொடங்கும் முன்னும் ஒரு பகுதி யிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்லும் போதும் பின்வரும் சொற்றொடர்கள் காணப்படுகின்றன: ''சகோதரர்களே நான் உங்களைக் கேட்டுக் கொள்வது'' (உரோ 15:30; 16:17; 1 கொரி 1:10; 2 கொரி 10:1; 1 பேதுரு 2:11); ''உங்களுக்கு நாங்கள் சொல்ல விரும்புவது'' (2 தெச 2:1; 2 யோவா 5); ''...இருப்பதாக எங்கும் பேச்சு'' (1 கொரி

5:1) ''இப்பொழுது... குறித்துப் பேசுகிறேன்'' (1 கொரி 7:1; 8:1; 12:1; 16:;1); ''சகோதரர்களே... நினைவுறுத்தவிழைகிறேன்'' (1 கொரி 15:1; 2 பேதுரு 1:12; யூதா 5); ''உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்'' (2 கொரி 8:1; பிலி 1:12); ''.... என்பது உங்களுக்குத் தெரியும்'' (1 தெச 2:1; 2 திமொ 1:15) எனவும் மடலைமுடிக்கும் முறையில் ''சகோதரர்களே, இறுதியாக...'' (2 கொரி 13:11; எபே 6:10; பிலி3:1; 4:8; 1 தெச 4:1) எனவும் வரும். சில சமயம், போதகப் பகுதியிலிருந்து அறவுரைப் பகுதிக்குச் செல்லும்போது போற்றுரைப்பகுதி குறுக்கிடும் (உரோ 11:36-12:1; எபே 3:21-4:1; 1 தெச 3:11-4:1). பவுலின் கடிதங்களில் காணப்படும் மற்றொரு பண்பு ''அப்போஸ்தல பிரசன்னத்தைப் பற்றிய குறிப்புகளாகும். இதிலே பவுல் தனது பயணத்திட்டங்களையும், கடிதம் பெறுபவரைச் சந்திக்க விரும்பும் நோக்கத்தையும், அவரோடு பவுல் கடந்தகாலத்தில் கொண்டிருந்த தொடர்புகள், அவரோடு வருங்காலத்தில் கொண்டிருக்க விரும்பும் உறவு ஆகியவை பற்றிய குறிப்புகளையும் காணலாம் (1 கொரி 4:17-21; 16:5-12; பிலி 2:19-30; 1 தெச 2:17-3:11; பில 22; எபி 13:19).

சபைகளைத் தன் பயணப்பணியோடு இணைக்கும் கூறாகப் பவுல் கடிதங்களை முடிக்கும் கிரேக்க முறையைப் பயன்படுத்துகிறார்; இதிலே பிறரிடமிருந்து வாழ்த்துரை கூறுகிறார்; பிறருக்கு வாழ்த்துரை கூறச் செய்கிறார் (உரோ 16:3-16. 21-23; 2 கொரி 13:12-13; கொலோ 4:10-15.18; தீத் 3:15; 1 பேதுரு 5:13-14;3 யோவா 15). இக்கிறிஸ்தவ கடிதங்களின் முடிவுரையில் இறுதி அறவுரை (உரோ 16:17-20; 1 கொரி 16:13-18; 2 கொரி 13:11; எபி 13:22), ஆசீர்கள் (1 கொரி 16:23; கலா 6:16.18; எபே 6:23-24; 2 தெச 3:16.18), இறை போற்றுரைகள் (உரோ 16:25-27; எபி 13:20-21; 1 பேதுரு 5:11; யூதா 24-25) ஆகியவையும் காணப்படும்.

பவுல் தனது திருமுகங்களில் பலவகையான நடையைப் பயன்படுத்துகிறார். இடை இடையே கிறிஸ்தவர் பாடல்களும், விசுவாச அறிக்கைகளும் இடைப்புகும் (உரோ 1:3-4; 1 கொரி 15:3-7; 16:22; கொலோ 1:15-20; 1 திமொ 3:16). இத்தகைய பகுதிகள் கிறிஸ்தவச்சிந்தனை உலகிற்கு அமைப்பு அளித்தன. கடிதம் எழுதுபவர்களுக்கும் அதைப் பெறுபவர்க்கும் இணைப்பை உண்டாக்கின.

தொடக்ககாலக் கிறிஸ்தவ நூல்களில் சில பாரம்பரியமாகத் திருமுகங்கள் என்றழைக்கப்பட்டாலும், இவை ஓரளவே கடித அமைப்பைக் கொண்டுள்ளன. இவை சமய அறவுரைகளாகும். இவற்றிற்கு முன்னோடியாக எரேமியாவின் கடிதங்களும் (எரே 29), எலியாவின் கடிதமும் (2 நாள் 21:12-15) அமைந்துள்ளன. இவை கடித வடிவத்தில் இருப்பதைவிட இறைவாக்கு வடிவில் உள்ளன. முன்னுரையைத் தவிர (திருவெளி 1:4-5) ஏழு சபைகளுக்குரிய கடிதங்களில் (திருவெளி 2-3) கடித வடிவமேயில்லை. தூரத்திலுள்ள மக்கள் சபைக்காக, கிறிஸ்தவ சமய அறவுரைகள் கடித வடிவில் எழுதப்படுவது சாதாரணமாக இருந்தது (காண். எபிரேயர், யாக்கோபு, எபேசியர்). பொதுவாக தொடக்ககாலக் கிறிஸ்தவ கடிதங்களில் சமய அறவுரைப் பண்புகள் மிகுந்து காணப்படுகின்றன.

திருமுழுக்கு (BAPTISM)

'மூழ்குவித்தல், கழுவுதல்' எனப்பொருள்படும் 'பேப்டைன், பேப்டிசைன்' என்ற சொல்லுக்குத் தமிழாக்கமாகத் 'திருமுழுக்கு' என்ற சொல் பயன்படுகிறது. எனவே திருமுழுக்கு மூழ்குவித்தலை அல்லது கழுவுதலைக் குறிப்பதாகும். சமயங்களைப்பற்றிய வரலாற்றில் மிகவும் அடிக்கடி கண்டுள்ளது போல, துப்புரவாக்குவதற்கும் உயிரளிப்பதற்கும் அடையாளமாகத் தண்ணீரை உருவகமாய்ப் பயன்படுத்தியிருக்கிறார்கள்; எனவே, புறச் சமயச் சடங்குமுறைகளில் தண்ணீர் இவ்வாறு இடம் பெற்றிருப்பது எதிர்பாராத ஒன்று அல்ல. தண்ணீர் பயன்படுத்தப்படும் புறச்சமயச் சடங்குமுறைகள் கிறிஸ்துவ திருவருட்சாதனத்தை (திருமுழுக்கினை)ப் பலவாறு ஒத்திருப்பது முற்றிலும்

புறத் தோற்றத்தில் மட்டுமே; இவ்வாறு புறத் தோற்றத்தில் ஒத்திருப்பது இவைகளின் மிக உள்ளார்ந்த இயல்புகளை அடிப்படையாகக் கொண்டதன்று. எனவே, திருமுழுக்கினுக்கு ஒத்தவைகளை முதன்முதலாகப் பழைய ஏற்பாடு, யூதமக்களின் கோட்பாடுகள், யோவானின் திருமுழுக்கு ஆகியவற்றில் தேட வேண்டும்.

I. பழைய ஏற்பாடும் யூதர் சமயமும்

1. நீரின் துப்புரவாக்கும் தனியியல்பு பழைய ஏற்பாட்டிலே மிகத் தெளிவாகக் காணப்படுகிறது: இத்தனியியல்பு புனித வரலாற்றின் நிகழ்ச்சிகள் பலவற்றில் வெளிப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் திருமுழுக்கின் முன்னடையாளங்களாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக, பெருவெள்ளம் (*1 பேதுரு 3:20தொ காண்*), அல்லது செங்கடலைக் கடந்து சென்றது (*1 கொரி 10:1தொ காண்*). நீட்டுப்பட்ட பலப்பல காரியங்களில், திருச்சட்டம் சடங்கு முறைப்படி கழுவுதலை விதிக்கிறது. இவ்வாறு கழுவுதல் தூய்மைப்படுத்தி, வழிபாட்டுக்கான தகுதியளிக்கிறது (*எண் 19:2-10; உப 23;10தொ*). பாவத்தினின்று தூய்மைப்படுத்தும் தண்ணீர் தாராளமாய்ப் பொழியப்படும் என்று இறைவாக்கினர்கள் வெளிப்படையாக அறிவிக்கின்றார்கள் (*செக் 13:1*). எசேக்கியேல், இவ்வாறு இறுதிக்காலத்தில் தூய்மைப்படுத்துவதை இறைவனின் ஆவியானவரின் கொடையோடு இணைக்கின்றார் (*எசே 36:24-28; தவிர, சங் 51:10 தொ. காண்*).

2. நாடு திரும்பியபின் யூதர் சமயம்: சடங்கு முறை சார்ந்த கழுவுதல்களை எண்ணிக்கையில் பெருக்குகின்றது. இத்தகைய கழுவுதல்கள் மட்டுமீறிய சில்லறை நுணுக்கங்களாகி, நற்செய்திக் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்களிடையில், வெற்று ஆசாரம் என்ற கண்டனத்திற்குத் தப்பவில்லை (*மாற் 7:1-5 இணை*). சடங்கு முறைப்படி கழுவும் பழக்கங்கள், உள்ளம் தூய்மையாக்கப்படுவதற்கு அடையாளமாக இருந்தன. புதிய ஏற்பாட்டை நெருங்கிய காலத்தில் இராபிகள் (போதகர்கள்) எனப்படுவோர் யூத மறையைத் தழுவிய புறவினத்தாருக்குத் திருமுழுக்கு அளிக்கின்றனர்; இவ்வாறு திருமுழுக்குப் பெற்றவர் யூத மக்களோடு இணைந்தனர் (*மத் 23:15 காண்*). இத்திருமுழுக்கு விருத்தசேதனத்தைப்போலவே அத்துணை அவசியமானதென்று சிலர் கருதுவதாகக் கூடத் தோன்றுகிறது.

யோசிப்பசின் கூற்றுப்படி, எஸ்லேனியர் எனப்படுவோரிடையிலும், தமஸ்கு, கும்ரான் குழுவினரிடையிலும் சடங்கு முறை சார்ந்த குறிப்புகள் வழக்கமானவை. எனினும், இத்தகைய குறிப்பு (புதியதொரு வாழ்வுக்கு) புகுமுகச் சடங்குமுறை அன்று. ஏனெனில் நீண்ட காலச் சோதனைக்குப் பின்னரே ஒருவர் புகுமுகச்சடங்கினுக்கு ஏற்றுக்கொள்ளப்படுவார். அச்சோதனைக் காலத்தின் நோக்கம், மனந்திரும்பியவரின் நேர்மையை வெளிப்படுத்தலாகும். சடங்கு முறைக்குறிப்பு நாள்தோறும் நிகழ்வதாகும். ஒருவர் தூய வாழ்வு நடத்தும்படி எடுக்கும் முயற்சியையும், புனிதப்படுத்தும் அருளைப் பெறும்படி அவர் கொண்டுள்ள அவாவினையும் அக்குறிப்பு வெளிப்படுத்துகிறது. அக்குறிப்பில் ஒருவர் தம்மையே தண்ணீரில் மூழ்குவிக்கிறார். ஆனால், யோவான் முன்னிலையில் மனத்துக்கம் கொண்டு தோன்றுகிறவர்கள் அவர் கையினின்று திருமுழுக்குப் பெறுவார்கள். அத்திருமுழுக்கையும் ஒரே முறைதான் பெறுவார்கள்.

II. யோவான் அளித்த திருமுழுக்கு:

யோவான் அளித்த திருமுழுக்கினை, யூத மறையைத் தழுவிய புறவினத்தாருக்கு அளிக்கப்பட்ட திருமுழுக்கினுக்கு ஒப்பிடலாம். பிந்திய திருமுழுக்கு ஒருவரை இஸ்ராயேல் மக்களுள் புகுத்துவித்தது. யோவான் அளித்த திருமுழுக்கு ஆபிரகாமின் உண்மை வழித் தோன்றல்களோடும் (*மத் 3:8 இணை*), இஸ்ராயேலில் எஞ்சினோரோடும் ஒருவகையான இணைப்பைத் தோற்றுவிக்கிறது. இனி, இந்த இணைப்புப் பெற்றவர்கள் இறைவனின் கடுஞ்சினத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாவர். யோவானின் திரு

முழுக்கு, பாவிகளுக்கும் யூதமறையைத் தழுவிய புறவினத்தாருக்கும் மட்டுமன்று; யூத மக்கள் அனைவருக்கும் என்று வழங்கப்படுகிறது. அத்திருமுழுக்கு தனித்தன்மை வாய்ந்தது. அது பாலைவனத்தில், பாவமன்னிப்படையும்படி மனந்திரும்பியவர்களுக்கு அளிக்கப்படுகிறது (மாற் 1:4 இணை). அத்திருமுழுக்கு, ஒருவர் தாம் செய்த பாவங்களை உண்மையென்று ஒப்புக் கொள்வதையும், உறுதியாக மனந்திரும்புவதற்கு அவர் எடுக்கும் முயற்சியையும் குறிப்பாக உணர்த்துகிறது. இத்தகைய முயற்சியைத் திருமுழுக்கின் சடங்குமுறை வெளிப்படுத்துவதாய் இருக்க வேண்டும் (மத் 3:6தொ). யோவான் அறநெறித் தூய்மையை வற்புறுத்துகிறார்; மற்றப்படி, ஆயக்காரர்களோ படைவீரர்களோ தங்கள் அலுவல்களைக் கைவிடும்படி அவர் கோருவதில்லை (லூக் 3:10-14).

யோவானின் திருமுழுக்கு அப்பொழுதைக்கான சமய நடைமுறையை மட்டும் நிறுவுகிறது. யோவான் நீரால் திருமுழுக்கு அளிக்கிறார். அத்திருமுழுக்கு, பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும் மெசியா காலத்தில் அளிக்கப்படவிருக்கும் திருமுழுக்கினுக்கு ஆயத்தமாகும் (மத் 3:11 இணை; அ.ப. 1:5;11:16; 19:3 தொ). பிந்திய இந்தத் திருமுழுக்கு ஒப்புயர்வற்ற தூய்மையாகும் (சங் 51 காண்); புதிய உலகினைத் தொடங்கி வைக்கும். அந்த ஒப்புயர்வற்ற தூய்மையின் தோற்றம் இங்குத் தீர்ப்புப்பற்றிய காட்சியோடு குழம்பியதாகக் காணப்படுகிறது. உண்மையில், மகிமைப்படுத்தப்பெற்ற மெசியா அனுப்பும் ஆவி எனும் கொடை தீர்ப்பினின்று தன்னை வேறுபடுத்திக் கொள்ளப் போகின்றது (லூக் 3:16 தொ இணை).

III. இயேசு பெற்ற திருமுழுக்கு:

1. யோவானிடம் திருமுழுக்கு பெறும்படி தம்மையே அவர்முன் நிறுத்தி, இயேசு தம் தந்தையின் திருவுளத்திற்குச் சரணடைகிறார் (மத் 3:14தொ). இவ்வாறு பாவிகளின் வரிசையில் பணிவாக இடம் மேற்கொள்கிறார். கடவுளின் செம்மறி என இயேசு உலகின் பாவங்களைத் தம்மேல் சுமந்து கொள்கிறார் (யோவா 1:29.36). யோர்தானில் இயேசு பெற்ற திருமுழுக்கு, அவர் தம் ''சாவில்'' பெறவிருந்த திருமுழுக்கினை அறிவித்து, அதை ஆயத்தம் செய்கிறது (லூக் 12:50; மாற் 10:38). இவ்வாறு இயேசு வெளிப்படையாக நடத்திய வாழ்க்கை இரு திருமுழுக்குகளுக்குள் உள்ளடங்குகிறது. நற்செய்தியாளரான யோவான் கூற விரும்புவதும் இதுதான். எப்பொழுதெனில், இயேசுவின் குத்தித் திறக்கப்பட்ட விலாவிலிருந்து இரத்தமும் நீரும் வெளிவந்தன என்றும் (யோவா 19:34 தொ), தேவ ஆவி, நீர், இரத்தம் ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன என்றும் (1 யோவா 5:6-8) நற்செய்தி அருளப்பர் தெரிவிக்கும்போதாகும்.

2. யோவான் கையால் இயேசு பெற்ற திருமுழுக்கு, புறாவடிவில் பரிசுத்த ஆவி இறங்கிவந்ததாலும், ''இவரே என் அன்பார்ந்தமகன்'' என வானகத் தந்தை தம்மோடு இயேசு கொண்டுள்ள தெய்வீக மகவுத் தொடர்பினை வெளிப்படையாக அறிவித்ததாலும் சிறப்படைகிறது. ஆவியானவர் இயேசுவின்மேல் வருகை தந்தது, இயேசுவைப் பதவியில் அமர்த்தவாகும். இவ்வாறு அமர்த்தல் இறைவாக்குகளுக்கு இணக்கமாய் உள்ளது (எசா 11:2; 42:1; 61:1). அதேபொழுது, ஆவியானவர் இயேசுவின்மேல் வருகை தந்தது, பெந்தகோஸ்தே (ஐம்பதாம் நாள்) விழாவையும் பறைசாற்றுகிறது. அந்த விழா பரிசுத்த ஆவியால் திருமுழுக்குப் பெறுதலைத் தொடங்கிவைக்கும். இத்தகைய திருமுழுக்கு திருச்சபைக்கும் (அ.ப. 1:5; 11:16), திருச்சபையில் நுழைபவர் அனைவருக்கும் (எபே 5:25-32; தீத் 3:5தொ) கிடைக்கும். வானகத் தந்தை இயேசுவைத் தம் திருமகனாக அங்கீகரித்தல், விசுவாசிகள் அத்தந்தையோடு சுவிகார மகவுத் தொடர்பு கொள்வதை அறிவிக்கிறது. இந்தச் சுவிகார மகவுத்தொடர்பு இயேசுவின் மகவுத் தொடர்பில் பங்கு பெறுவதும், கொடையாக அளிக்கப்பெற்ற ஆவியானவரின் செயல்விளைவுமாகும் (கலா 4:6). உண்மை

யில் இயேசு, ''சாவினால் பெறும் திரு முழுக்கு'' அவரை உயிர்ப்புக்கு இட்டுச் செல்ல வேண்டும். உயிர்க்கும்போது இயேசு ஆவியை நிறைவாகப் பெறுவார். அதனால், மகிமைப்படுத்தப்பட்ட அவ ருடைய மனித இயல்பு ''உயிர்தரும் ஆவி'' *(1 கொரி 15:45)*யாக அமைக்கப்படும். அந்த ஆவி இயேசுவில் விசுவாசம் கொள்கிறவர் களுக்கு ஆவியைப் பகிர்ந்தளிக்கும்.

IV. கிறிஸ்துவத்திருமுழுக்கு:

1. நீராலும் ஆவியாலும் பெறும் திரு முழுக்கு: யோவான் ஆவியாலும் நெருப்பா லும் கொடுக்கப்படும் திருமுழுக்கினை முன் னறிவித்தார் *(மத் 3:11)*. ஆவி எனப்படுவது வாக்களிக்கப்பட்ட மெசியா காலத்துக் கொடையாகும். நெருப்பு எனப்படுவது தீர்ப்பு ஆகும். இத்தீர்ப்பு இயேசுவின் வருகை யிலேயே நிறைவேறிடத் தொடங்கிவிடு கிறது *(யோவா 3:13-21; 5:22-25; 9:39)*. மெசியா காலத்துக் கொடையும் தீர்ப்பும் இயேசுவின் திருமுழுக்கில் தொடங்குகின் றன. இயேசுவின் திருமுழுக்கு, அவரில் விசுவாசங் கொள்கிறவர்களின் திருமுழுக் கினுக்கு ஒரு முன்னடையாளம். பவுல், இஸ் ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்து சென்ற தில் கிறிஸ்துவத் திருமுழுக்கு முன்னறிவிக் கப்படுவதாகக் காண்கிறார்; செங்கடலைக் கடந்து சென்றது இஸ்ராயேல் மக்களை அடிமை வாழ்வினின்று விடுவிக்கிறது *(1 கொரி 10:1தொ)*. கிறிஸ்துவத் திருமுழுக்கு பெந்தகோஸ்தே விழாவன்று பயன் அளிப்ப தாய் நடைமுறைக்கு வரத் தொடங்கு கிறது; ஒரு விதத்தில் பெந்தகோஸ்தே விழா திருச்சபை ஆவியாலும், நெருப்பாலும் திரு முழுக்குப் பெறும் விழாவாகும். இவ்வாறு திருச்சபை திருமுழுக்குப் பெற்றதும், வியத் தகு இத்திருமுழுக்கு நிகழ்ச்சியால் கவர்ந் திழுக்கப்பெற்ற மக்கள் கூட்டத்திற்குப் பேதுரு போதிக்கிறார். மக்கள் மனத் துக்க உணர்வுடன் திருமுழுக்குப் பெற்று, பாவ மன்னிப்பையும் பரிசுத்த ஆவியாகிய கொடையையும் பெற்றுக் கொள்ள வேண் டும் என்று அறிவுறுத்துகிறார். உண்மையில் அப்பொழுது உடனடியாக அங்கு நடப்ப தும் இதுதான் *(அ.ப. 2:38-41)*. பேதுருவின் இத்தகைய நடவடிக்கைக்குக் காரணம், யோவா *3:3*தொ அறிவிப்பது போன்று ஒரு கட்டளை கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டு, அவருடைய உயிர்ப்புக்குப் பின்னர்த் தெளி வான உருப்பெற்றிருக்கலாம் *(மத் 28;19; மாற் 16;16)*. வழக்கமாகத் திருமுழுக்கு என் பது தண்ணீரில் முழுவதுமான மூழ்குவித்த லைக் குறிக்கும் *(அ.ப. 8:38 காண்)*; அல்லது மூழ்குவித்தல் கூடாதபோது (கிறிஸ்துவ மறையின் மிகப்பழங்கால ஆவணச் சான்றுக ளில் ஒன்றான) திதாக்கே *7:3*-இல் கண்டுள்ளது போல, திருமுழுக்குப் பெறுவோரின் தலைமீது தண்ணீர் தெளிப்பதையாவது குறிக்கும். திருமுழுக்கினை அடுத்துத் தலை மேல் கரம் வைக்கும் சடங்கு நடைபெறு கிறது. அப்போது பரிசுத்த ஆவியாம் திருக் கொடை நிறைவாக வழங்கப்படுகிறது *(அ.ப. 8:15தொ; 19:6)*.

புனித பவுல் திருமுழுக்குப்பற்றிய கோட் பாட்டு விளக்கத்தை வளர்த்து நிறைவு செய் கிறார். இந்தக் கோட்பாட்டு விளக்கம் நம் ஆண்டவரின் போதனையினின்றும் *(மாற் 10:38)*, திருச்சபையின் பழக்கத்தினின்றும் *(உரோ 6:3)*, படிப்படியாக உருப்பெற்ற தாகும். கிறிஸ்துவின் பெயரால் அளிக்கப்படும் திருமுழுக்கு *(1 கொரி 1:13)*, திருமுழுக்குப் பெறுகிறவனை நம் ஆண்டவரின் இறப்போ டும் புதைக்கப்படுதலோடும் உயிர்த்தெழுத லோடும் இணைக்கிறது *(உரோ 8:3தொ; கொலோ 2:12)*. தண்ணீரில் மூழ்குவித்தல் கிறிஸ்துவின் இறப்பையும், புதைக்கப்படுதலை யும் குறித்துக்காட்டுகிறது. தண்ணீரி னின்று வெளிவருதல், கிறிஸ்துவோடு இணைந்து உயிர்த்தெழுவதற்கு அடையாளமா யிருக்கிறது. திருமுழுக்கு, பாவத்திற்கு உடல் ஒரு கருவியாய் இருப்பதைப் பொறுத் தளவில் அந்த உடலை அழித்து *(உரோ 6:9.13)*, கிறிஸ்துவுக்குள் கடவுளின் வாழ் வில் பங்களிக்கிறது *(6:11)*.

பாவத்திற்குச் சாவதும், வாழ்வாம் கொடையைப் பெறுதலும் இணைபிரியா தவை; தூய நீரினால் கழுவுதல், அதேபொழுது,

கிறிஸ்துவின் இரத்தத்தால் தெளிக்கப் படுதலாகும். கிறிஸ்துவின் இரத்தம் ஆபேலின் இரத்தத்தைவிட மேலான முறையில் கூக்குரலிடுகிறது (எபி 12:24; 1 பேதுரு 1:2). கிறிஸ்து கல்வாரியில் அனைவருக்கும் உரியனவாகத் தேடித்தந்த பேறுகளில் பயனுறுதியுடன் பங்கு பற்றுதலாகும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும், அஃதோடு அடிப் படையில் அவருடைய விண்ணக மகிமையிலும்கூட இணைதலுமாகும் (எபே 2:5தொ). எனவே, திருமுழுக்கு பாஸ்காத் திருவருட் சாதனமாகும்; கிறிஸ்துவின் பாஸ்காவோடு ஒன்றித்து உறவு கொள்ளுதலாகும். திருமுழுக்குப் பெற்றவர் பாவத்திற்குச் செத்தவர்; கிறிஸ்துவுக்குள் கடவுளுக்காக வாழ்கின்றவர் (உரோ 6:11); · கிறிஸ்துவின் அதே வாழ்வை வாழ்கிறவராவார் (கலா 2:20; பிலி 1:21). இவ்வாறு, கண்டடையும் பொருள் நிலை மாற்றம் அடிப்படையானது. அந்த மாற்றம், மனிதன் தன்பழைய இயல்பினைக் களைந்துஅழித்துவிட்டு, புதிய இயல்பினை அணிந்து கொள்வதிலும் (உரோ 6:6; கொலோ 3:9; எபே 4:24), கடவுளின் சாயலில் புதிய படைப்பாவதிலும் (கலா 6:15) அடங்கும்.

இதைப் போன்றதும் ஆனால் இதைவிடச் சுருக்கமானதுமான, திருமுழுக்குப் பற்றிய கோட்பாட்டு விளக்கத்தினை 1 பேதுரு 3:18-21-இல் கண்டு கொள்ளலாம். இப்பகுதி நோவா பெரும்வெள்ளத்தினைக் கடந்து சென்றதில் கிறிஸ்தவன் திருமுழுக்கு நீரால் கடந்து செல்வதை முன்னடையாளமாகக் காண்கிறது. கிறிஸ்து உயிர்த்தெழுந்ததின் காரணமாக, கிறிஸ்தவன் சுதந்தர நிலைக்குக் கடந்து செல்கிறான்.

2. திருமுழுக்குப் பெற்றவரும் தேவ ஆட்களும்: இயேசு கிறிஸ்துவின் பெயராலோ, ஆண்டவராகிய இயேசுவின் பெயராலோ (அ.ப. 2:38; 8:16; 10:48; 19:5; 1 கொரி 6:11) கொடுக்கப்பட்ட திருமுழுக்கு என்பது, திருமுழுக்குப் பெற்றவர் கிறிஸ்துவுக்கு உடைமையாகிறார் என்றும், அவர் மனத்துள் கிறிஸ்துவோடு இணைக்கப்படுகிறார் என்றும் உணர்த்துகிறது (கலா 3:27; உரோ 13:14). திருமுழுக்குப் பெறுகிறவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குள்ளும் (கலா 3:28) மகிமைப்படுத்தப்பட்ட அவருடைய உடலுக்குள்ளும் (1 கொரி 12:13; எபே 4:4தொ) ஒருவராகி, தங்களுக்குள்ளும் ஒன்றுபடுகின்றனர்; இந்த நேரத்திலிருந்து அவர்கள் தொடர்ந்து கிறிஸ்துவோடு ஒரே ஆவி ஆகிறார்கள் (1 கொரி 6:17).

கிறிஸ்து பெயரால் திருமுழுக்கு என்பது, கிறிஸ்து மட்டும் குறிப்பிடப்பட்டஒரு வாய்பாடு பயன்படுத்தப்பட்டதைக் கருத்தில் கொண்டிருக்கலாம் என்று தெளிவாகிறது. பிற்காலத்தில் செல்வாக்குப் பெற்ற, தனிமுதல் மூவரான கடவுளைக் குறிப்பிடும் வாய்பாடு மத் 28:19-ஆம் வாக்கியத்திலிருந்து உருவாகிறது. இந்த வாய்பாடு மிகச் சிறந்த வகையில் உணர்த்தும் உண்மையாதெனில், திருமுழுக்குப் பெறுகிறவர் திருமகனோடு இணைந்து, அதே நேரத்தில் மற்ற இரு ஆட்களோடும் ஒன்றுபடுகிறார் என்பதாகும். உண்மையில் விசுவாசி ஒருவர், ஆண்டவராகிய இயேசுவின் பெயராலும் கடவுளின் ஆவியின் வழியாகவும் திருமுழுக்குப் பெறுகிறார் (1 கொரி 6:11). அவர் ஆவியின் ஆலயமாகவும் (1 கொரி 6:19), தந்தையின் சுவிகாரப் பிள்ளையாகவும் (கலா 4:5தொ) கிறிஸ்துவின் சகோதரரும் உடன் உரிமையாளருமாகிறார்; கிறிஸ்துவின் வாழ்வோடு மிக நெருங்கி வாழ்ந்து, அவருடைய மகிமையின் பங்கு பெறுவதற்கு என்று முன்குறிக்கப்படுகிறார் ·(உரோ 8:2.9.17.30; எபே 2:6).

3. மனந்திரும்புதலும், திருமுழுக்கினுக்குத் தேவையான விசுவாசமும்: ஒருவர் திருமுழுக்குப் பெறத் தேவையானது, அவர் நற்செய்திப் போதனையைக் கேட்டு, இயேசு கிறிஸ்துவில் தமது விசுவாசத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இந்த விசுவாசத்தில் தலையாயதும், விசுவாசத்தின் மற்றப் பிரிவுக்கூறுகளை உள்ளடக்கி, அவைகளைச் சுருக்கிக் கூறுவதுமான கொள்கை: கிறிஸ்துவின் உயிர்ப்பு (உரோ

10:9). எனினும், திருமுழுக்கினுக்கு முன்னரே பரிசுத்த ஆவி அளிக்கப்படும்பொழுது, யார்மீது கொண்ட விசுவாசம் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம் (அ.ப. *10:44-48).* இன்னும், குடும்பத்தின் தந்தை கொண்டுள்ள விசுவாசம் அவரைச்சார்ந்த அனைவருக்கும் செல்லக்கூடியதாகத் தோன்றுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, கொர்னேலியுவும், பிலிப்பு நகரத்துச் சிறைக்காவலனும் உள்ளனர் (அ.ப. 10:47; 16:33). ஆனால், கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வது என்பது, நற்செய்திப் போதனைமீது கொள்ளும் உள்ளப்பற்றுதல் மட்டுமன்று; அந்த விசுவாசம் முழுமையாக மனந்திரும்புதலையும், அனைத்தும் உட்பட, கிறிஸ்துவுக்கு உரிமையாதலையும் உள்ளடக்குகிறது. இந்நிலையில் கிறிஸ்து, ஒருவரின் முழு வாழ்வினையும் உருமாற்றுகின்றார். இத்தகைய விசுவாசம் இயல்பாகவே திருமுழுக்கு வேண்டுமென்று கேட்பதற்கு இட்டுச் செல்கிறது; திருமுழுக்கு விசுவாசத்தின் (விசுவாசத்தை அறிக்கையிடும்) திருவருட்சாதனமாகும். திருமுழுக்குப் பெறுவதில் விசுவாசம் தன்னிறைவு அடைகிறது. பவுல் விசுவாசத்தையும் திருமுழுக்கையும் ஒருபோதும் துண்டுபடுத்துவதில்லை. இன்னும், அவர் விசுவாசத்தினாலே இறைவனுக்கு ஏற்புடையவராகிறோம் என்று சொல்கிறார். அவ்வாறு அவர் சொல்வது, திருச்சட்டம் விதித்திருக்கும் செயல்களால் இறைவனுக்கு ஏற்புடையவராகிறோம் என்று வாதிடுகிறவர்களுக்கு எதிராகத்தான். இவ்வண்ணம் வாதிடுகிறவர்கள், புற இனத்தார் கிறிஸ்தவர்களாகுமுன்னர் யூதரின் பழக்க வழக்கச் சடங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்தும் யூதக் கிறிஸ்தவர்களாவர். விசுவாச அறிக்கையினை நிறைவு செய்வது திருமுழுக்கு என்பதனைப் பவுல் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாக எப்போதும் கருதுகிறார் (கலா 3:26தொ காண்). அப்போஸ்தலர்களின் போதனை தமக்குத் தெளிவாகக்காட்டும் இறைவனின் அழைப்புக்கு ஒருவர் விசுவாசத்தினால் மறுமொழி தருகிறார் (உரோ 10:14 தொ). மேலும், இவ்வாறு தரும் விசுவாச மறுமொழி அதன் செயலாகும் (எபே 2:8). திருமுழுக்கில் பரிசுத்த ஆவி விசுவாசியைத் தம் உடைமையாக்குகிறார்; திருச்சபை எனும் உடலோடு அவரை ஒன்றுபடுத்துகிறார்; கடவுளின் அரசில் அவர் நுழைந்துவிட்டதாக அவருக்கு உறுதியளிக்கிறார்.

எனவே, திருமுழுக்கு என்ற திருவருட்சாதனம் மாயவித்தை சார்ந்த வகையில் செயல்புரிவதில்லை என்பது முற்றிலும் தெளிவுபடுகிறது. திருமுழுக்கினுக்குத் தேவைப்படுவது முழுமையான மனந்திருப்புதல். இந்த மனந்திரும்புதல், அசைக்க முடியாத பற்றுறுதி கொண்ட மனநிலையில் புதியதொரு வாழ்வினைத் தொடங்குவதாய் இருக்க வேண்டும்.

4. திருமுழுக்குப் பெற்றவரிடம் தேவைப்படும் பற்றுறுதி: திருமுழுக்கின்போது கிடைக்கப்பெறும் ஆன்மீக நிலைமாற்றத்தின் பயன்நிறைவு பிறவகைகளிலும் வற்புறுத்தப்படுகிறது. திருமுழுக்கினுக்கு ஆயத்தம் செய்கிறவரைப் பொறுத்தளவில், இந்த ஆன்மீக நிலைமாற்றம் நீரினாலும் பரிசுத்த ஆவியினாலும் புதிதாகப் பிறப்பது என்றும் (யோவா 3:5), புதுப் பிறப்பைத் தரும் முழுக்கு என்றும், பரிசுத்த ஆவி அளிக்கும் புத்துயிர் என்றும் (தீத் 3:5), உள்ளத்தின் மீது இடப்படும் முத்திரை என்றும் (2 கொரி 1:22; எபே 1:13;4:30), ஒளி பெற்று, பாவ இருளினின்று கிறிஸ்து எனும் ஒளிக்குள் புகுதல் என்றும் (எபே 5:8-14; எபி 6:4), இறைமக்கள் சமுதாயத்தின் உறுப்பினராய் இணைக்கும் புதிய விருத்தசேதனம் (கொலோ 2:11; தவிர, எபே 2:11-22) என்றும் பொருள்படும். இவையனைத்தும் கடவுளின் மகனாய் இருக்கும் நிலையில் சுருக்கமாய் அடங்கிவிடுகின்றன (1 யோவா 3:1). கடவுளின் மகன் என்பது ஒப்பற்ற உயர்நிலையாகும். கடவுளின் மகனாய் இருப்பது, புதிய நிலையானதொரு தன்மையன்று. மாறாக, கடவுளின் மகனாய் இருப்பது, இயக்க ஆற்றல் உள்ள ஒரு நிலைமையில், ஓர் உயர் வாழ்க்கை நிலையில் நுழைவு பெறுவதாகும்; இந்நிலையிலிருந்து கிறிஸ்தவன் ஒரு

போதும் வீழ்ந்திடலாகாது. எனவே, பாவத்திற்குச் சாவதும், கடவுளுக்காக வாழ்வதும் தொடர்ந்து மேலும் மேலும் செயலூக்கமுடையதாய் இருப்பதற்கு, இடைவிடாமல் முயற்சி செய்ய வேண்டும் (உரோ 6:12 தொ). இவ்வாறு முயற்சி செய்யும்போது, சில வேளைகளில் இயேசுவின் பாடுகளில் இணைந்திருப்பது வற்புறுத்தப்படும்; சில வேளைகளில் அவரது உயிர்ப்பில் இணைந்திருப்பது வற்புறுத்தப்படும். பாடுகள், உயிர்ப்பு என்ற இந்த இரு பண்புக்கூறுகளும் ஒரே பாஸ்கா மறைபொருளைக் குறிப்பிட்டு, கூறுபடுத்த முடியாதபடி பிணைந்துள்ளன. திருமுழுக்குப் பெற்றவர் தம் முயற்சிகளாலும் நிறைவான பற்றுறுதியாலும் கிறிஸ்துவின் கடத்தலோடு (பாஸ்காவோடு) ஒன்றுபட்டவராய்க் கிறிஸ்துவின் மகிமைமிக்க அரசில் நுழையவும் (கொலோ 1:12 தொ), வானக உரிமைப்பேற்றினை உடைமையாக்கிக் கொள்ளவும் ஆயத்தம் செய்கிறார்; அந்த உரிமைப்பேற்றின் முதற்கனிகளைத் திருமுழுக்குப் பெற்றவர் இம்மையில் கொடையாம் ஆவியானவரின் உடைமையாகப் பெற்றிருக்கிறார் (2 கொரி 1:22; எபே 1:14).

திருமுழுக்கு யோவான் (JOHN, THE BAPTIST)

இயேசுவிற்கான சாட்சி என்ற அளவில் யோவான் ஓர் இறைவாக்கினரைவிட மேம்பட்டவராக உள்ளார் (லூக் 7:26 இணை). ஆண்டவருக்கு முன் செல்கின்ற தூதுவராக (லூக் 1:76; மத் 11:10; மலா 3:1), அவர் நற்செய்தியைத் தொடங்கி வைக்கிறார் (அ.ப.1:22; மாற் 1:1-4). ''திருச்சட்டமும் இறைவாக்கினர்களும் அவரது காலம் வரை தான். அதுமுதல் கடவுளின் அரசைப்பற்றிய நற்செய்தி அறிவிக்கப்படுகிறது'' (லூக் 16:16 இணை). இணையற்ற இறைவாக்கினராக, ஆண்டவரது பாதைகளை அவர் ஆயத்தம் செய்கிறார் (மத் 11:11; மாற் 1:3). ஆண்டவருக்கு அவர் முன்னோடியாகவும் (அ.ப. 13:24-25), சாட்சியாகவும் (யோவா 1:6-7) இருந்தார்.

1. முன்னோடியும் அவரது திருமுழுக்கும்: அக்காலம் வரை குழந்தைப்பேறு இல்லாமலிருந்த ஒரு தாய்க்குப் பிறப்பதற்கு முன்னரே, இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுத் தூய ஆவியால் நிறைந்திருந்தார் (லூக் 1:7.15 காண்க: நீதி 13:2-5; 1 சாமு 1:5.11). புதிய எலியா என்று முன்குறிக்கப்பட்ட யோவான் (லூக் 1:16-17), தனது உடையினாலும், இளம் வயது முதல் பாலைவனத்தில் வாழ்ந்த (லூக் 1:80) தவ வாழ்வினாலும் அவரை நினைவுபடுத்துகிறார். கும்ரான் குழுவினர் போன்றவர்களால் அவர் பயிற்றுவிக்கப்பட்டாரா? எவ்வாறாயினும், லூக்காவினால் கவனமாகக் குறிப்பிடப்பட்டவாறு (3:1-2) இஸ்ராயேலுக்கான அவரது வெளிப்பாட்டின் காலம் இறுதியாக வருகிறது. சீடர்களால் சூழப்பட்ட குருவாக யோவான் தோன்றுகிறார் (யோவா 1:35). அவர்களுக்கு நோன்பிருந்து செபிக்குமாறு கற்பிக்கிறார் (மாற் 2:18;லூக் 5:33; 11:1). அவரது வலிமைமிக்க குரலானது யூதேயாவைக் கலக்குகின்றது. பாவங்களை அறிக்கையிட்டுச் சடங்குமுறை முழுக்கால் குறிக்கப்படும் மனந்திரும்புதலைப் போதிக்கிறார். இந்த மனந்திரும்புதல் வாழ்வைப் புதிப்பிப்பதற்கு அழைக்கிறது (மாற் 1:4-5). ஏனெனில், தாழ்ச்சியுடையவர்களுக்காக அவர் அளிக்கும் சட்டங்களைக் கொண்ட (லூக் 3:10-14) நீதியைக் கடைப்பிடிக்காமல் (மத் 3:8-9இணை) ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பதில் எவ்விதப் பயனுமில்லை (மத் 3:5-9).

ஆனால், பரிசேயரும், சட்ட வல்லுநர்களும் அவரை விசுவாசிக்கவில்லை; சிலர் அவரைப் பேய் பிடித்தவராக நடத்தினர் (மத் 21:32; மாற் 11:30 தொ; லூக் 7:30-33). இவ்வாறு அவர்கள் அவரிடம் வரும்போது, நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படுமென அவர் எச்சரிக்கிறார் (மத் 3:10 இணை). ஏரோது அரசனுடைய விபசாரத்தைக் கண்டித்ததனால் சிறையிலடைக்கப்பட்டு, இறுதியாகக் கொல்லப்படுகிறார் (மத் 14:3-12; லூக் 3:19-20; 9:9). அவருடைய ஆர்வத்தின் காரணமாகப் பெருமளவில் எதிர்பார்க்கப்பட்ட புதிய எலியாவாக உள்ளார். மெசியாவின்

வருகைக்காக இவரே மக்களைத் தயாரிக்க வேண்டும் (மத் 11:14). ஆனால், அவர் அறிந்து கொள்ளப்படவில்லை. அவரது சாட்சியமும் மனுமகனின் பாடுகளைத் தடுக்காது (மாற் 9:11தொ).

2. ஒளியின் சாட்சியும், மணமகனின் தோழனும்: யோவானின் சாட்சியமானது முதன் முதலாகத் தன்னைச் சாதாரண முன்னோடி என்று அறிவிப்பதில் அடங்கியுள்ளது. அவர் மெசியா அல்லவா என்று மக்கட் கூட்டம் அவரைக் கேட்கிறது (லூக் 3:15). ஓர் அதிகார பூர்வமான வினாவிற்குத் தனக்கு முன்னால் உள்ள, தான் முன்செல்கின்றவருடைய காலணிகளை அவிழ்க்கவும்தான் தகுதியற்றவன் என அவர் பதிலளிக்கிறார் (யோவா 1:19-30; லூக் 3:16-17 இணை). ஆவியிலும் (மாற் 1:8) நெருப்பிலும் (மத் 3:11-12) திருமுழுக்கு அளிக்கவிருக்கின்ற, வரவிருப்பவர் இயேசுவே. அவர் மீதே திருமுழுக்கிற்குப் பின்னர் ஆவியானவர் இறங்கி வந்தார் (யோவா 1:31-34).

உலகின் பாவங்களைப் போக்குகின்ற இறைவனின் செம்மறி என்று அறிவிப்பதின் மூலம் (யோவா 1:29) கிறிஸ்து தனது கரங்களால் ஏன் திருமுழுக்குப் பெறவேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாததுபோல், எவ்வாறு கிறிஸ்து பாவத்தைப் போக்குவார் என்பதை அவர் முன்னோக்கவில்லை (மத் 3:13தொ). பாவத்தைப் போக்குவதற்கு, யோவானுடைய திருமுழுக்கை ஓர் உருவமாகக் கொண்ட, அவரது பாடுகளின் திருமுழுக்கினை இயேசு பெற வேண்டியிருக்கும் (மாற் 10:38;லூக் 12:50). பாவிகளை விலக்குவதன் மூலமாக இல்லாமல், அவர்களின் பாவங்களைத் தானே சுமந்து அவர்களை ஏற்புடையவர்களாக ஆக்குவதன் மூலம் (எசா 53:7-8,11-12), இயேசு அனைத்து நீதியையும் நிறைவேற்றுவார் (மத் 3:15). பாடுகளுக்கு முன்னர், நீதியின் பணியாளரை எதிர்பார்த்திருந்த யோவானையும் அவரது சீடர்களையும் இயேசுவின் நடத்தை வியப்புறச் செய்கிறது. கிறிஸ்து தான் நிறைவேற்றுகின்ற மீட்பின் இறைவாக்குகளை அவர்களுக்கு நினைவுபடுத்தி, இடறல்பட வேண்டாமென அவர்களுக்கு வலியுறுத்துகிறார் (மத் 11:2-6இணை; காண்க: எசா 61:1).

ஆனால், யோவானின் சீடர்களில் சிலர், இயேசுவிற்குச் சீடராக மாட்டார்கள். திருமுழுக்காளரின் பிரிவிற்கும், ஆதித் திருச்சபைக்குமிடையே வாதங்கள் இருந்ததற்கான சான்றுகள், நற்செய்திகளில் உள்ளன (மாற் 2:18). கிறிஸ்துவினுடைய முன்மேன்மையைக் காட்டுவதற்கென, திருச்சபையானது யோவானது சான்றையே பயன்படுத்த வேண்டியுள்ளது (யோவா 1:15). மணமகனின் உண்மையான நண்பன் மற்றும் அவரது தோற்றத்தின்போது மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டவர் என்ற நிலையில், யோவான் தன்னையே இயேசுவின்முன் தாழ்த்திக் கொள்கிறார் (3:27-30). தனது சொற்களால், தனது சீடரையும் இயேசுவைப் பின் செல்லுமாறு அழைக்கிறார் (1:35 தொ). இதற்குப் பதிலாக இயேசு, ஒளிவீசி எரியும் விளக்கு (5:35) மற்றும் பெண்களிடமிருந்து பிறந்த இறைவாக்கினருள் உயர்ந்தவர் (மத் 11:11) என்று அவரது சாட்சியத்தை மகிமைப்படுத்துகிறார். ஆனால், விண்ணகத்தில் மிகச்சிறியவர், யோவானிலும் உயர்ந்தவரென அவர் தொடர்ந்து கூறுகிறார். அவர் இறைவாக்கினருடைய அருங்கொடையைவிட, அரசினுடைய பிள்ளைகளின் அருளையே விரும்புகிறார். ஆனால் அதே சமயத்தில் யோவானுடைய புனிதத்தையும் அவர் குறைத்துவிடுவதில்லை.

மணமகனுடைய இந்தத் தாழ்ச்சிமிகு நண்பனுடைய மகிமையானது, யோவானை ஊனுடலான வாக்குடன் இணைக்கின்ற நான்காம் நற்செய்தியின் முன்னுரைப்பாடலில் பறைசாற்றப்படுகிறது. ''யோவான் ஒளி அல்லர். மாறாக ஒளியைக்குறித்துச் சான்று பகரவந்தவர்.'' இந்த முன்னுரைப்பாடல் திருச்சபையுடனும் யோவானைத் தொடர்புபடுத்துகிறது. ''அனைவரும் தம் வழியாக நம்புமாறு ஒளியைக் குறித்துச் சான்றுபகர வந்தார்'' (யோவா 1:7-8).

திருமுன்னிலை அப்பம் (BREAD OF PRESENCE, SHOWBREAD)

எப்போதும் தம்முன் வைக்க வேண்டும் என்று யாவே கோரிய ''திருமுன்னிலை அப்பமாகும்'' (யாத் 25:30;லேவி 24:5-9). இவை, ஒவ்வொன்றும் ''மரக்காலில் பத்தில் இரண்டு பங்கு மெல்லிய மாவிலே செய்யப்பட்ட'', பன்னிரண்டு அப்பங்களாகும் (245), இவற்றைத் தூயகத்தின் வடபுறத்திலிருந்த பசும்பொன் மேசையில் ஆறு அப்பங்கள் கொண்ட இரு வரிசையாக வைக்க வேண்டும் (யாத் 26:35). இவை பிற்காலத்தில் ''காட்டும் அப்பம்'' என்றும், ''திருமுன் அடுக்கும் அப்பங்கள்'' (1 நாள் 9:32; 2 நாள் 13:11; 29:18) என்றும் அழைக்கப்பட்டன. இவற்றைக் குறிக்க ''தூய அப்பம்'' (1 சாமு 21:5) ''கடவுளின் அப்பம்'' (லேவி 21:6) என்ற பெயர்களும் பயன்பட்டன. இஸ்ராயேல், தனக்கு அன்றாட அப்பத்தை அளிப்பவர் கடவுளே என்பதை ஏற்றுக் கொள்வதை இந்த அப்பங்கள் அடையாளமாக உணர்த்தின. மேலும் இந்தப் பன்னிரண்டு அப்பங்களும் பன்னிரு கோத்திரங்களையும் இறைவன் முன் பிரசன்னப்படுத்தின எனலாம் (காண்க. யாத் 24:4; லேவி 25:2-9).

நினைவுச் சின்னமாக அளிக்கப்படும் இந்த அப்பங்களின் ஒவ்வொரு வரிசை மேலும் உப்பைக் கலந்த (காண்க. லேவி 2:13) வாசனைப்பொடி நிறைந்த கிண்ணம் ஒன்று வைக்கப்பட வேண்டும். அப்பங்கள் மாற்றப்படும்போது, அப்பத்திற்கு மாறாக இப்பொடி தகனப்பலியாக எரிக்கப்படும் (லேவி 24:7). இந்த அப்பங்கள் தனிப்பட்ட வடிவில், தனிப்பட்ட அடுப்புகளில் கோகாத்தியர்களால் செய்யப்பட்டது. இவர்கள் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் புது அப்பங்களைக் கொண்டு வந்து அடுக்கினர் (1 நாள் 9:32; காண் 23:29; 2 நாள் 13:11). பழைய அப்பங்கள் குருக்களுக்குக் கொடுக்கப்பட்டன. அவர்கள் அவற்றைத் தூயகத்துள்ளேயே உண்டனர் (லேவி 24:9; காண். 1 சாமு 21:4-7; மத் 12:4; மாற் 2:26; லூக் 6:4).

இந்த அப்பங்கள் வைக்கப்பட்ட மேசை சித்திம் மரத்தால் செய்யப்பட்டது; 90 செ.மீ நீளமும் 47 செ.மீ. அகலமும் 70 செ.மீ. உயரமும் உடையது. அது பசும்பொன்னால் பொதியப்பட்டது; சுற்றிலும் பொன் தோரணம் தொங்கும்; மேலும் கை அகல அளவில் சுற்றுச்சட்டம் அமைக்கப்பட்டு, அதிலிருந்தும் பொன் தோரணம் தொங்கும். நான்கு மூலைக் கால்களில் நன்கு பொன் வளையங்கள் பொருத்தப்பட்டிருக்கும். மேசையைத் தூக்கிச் செல்லும் தண்டுகளைத் தாங்க இவை பயன்பட்டன (யாத் 25:23-30; 37:10-16). சாலமோன் இப்படிப்பட்ட பத்து மேசைகளைச் செய்ததாகத் தெரிகிறது (2 நாள் 4:8). ஆனால் ஒருநேரத்தில் ஒன்றுதான் பயன்பட்டது (காண். 1 அர 7:48; 1 நாள் 28:16; 2 நாள் 4:19).

பழம் மேற்காசியாவில், குறிப்பாக பாபிலோனியர், எகிப்தியர், இத்தியர்களிடையே, இப்படி ஒழுங்காக அப்பங்கள் ஒப்புக்கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது. யூதாவின் மக்கள் பாபிலோனியத் தேவதையாகிய இஸ்தார் எனப்படும் ''விண்ணக அரசிக்கு'' மாவடைகள் ஒப்புக்கொடுப்பதை எரேமியா வன்மையாகக் கண்டனம் செய்கிறார் (எரே 7:19;44:15-19; காண். எசா 65:11).

திரும்புதல் (RETURN)

இது நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலர், மெசபொத்தாமியாவிலிருந்து திரும்பிவந்து பாலஸ்தீனத்தில் குடியேறிய காலத்தைக் குறிக்கும்.

திருவருகை (ADVENT)

இது ஆண்டவரின் வருகையை அல்லது ஆண்டவரின் இரண்டாம் வருகையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல். இதைத்தான் திருவழிபாட்டு ஆண்டிலே கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு முன் உள்ள 4 வாரங்களைத் திருவருகைக்காலம் என்கிறோம். ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி நம்மைத் தயாரிக்கத் தூண்டுகிறது இக்காலம் (காண். இரண்டாம்வருகை).

திருவுரையாளர் (PREACHER, ECCLESIASTES)

''வீண், முற்றிலும் வீண் என்றுரைக்கிறார் திருவுரையாளர். வீண், முற்றிலும் வீண், எல்லாமே வீண். மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு உழைக்கிறான். அவன் உழைப்பினால் பெறும் பயன் என்ன?'' (திருவுரை 1:2-3). இதுதான் இந்நூலின் தலைப்பு. இதைச் சுற்றியே இந்நூல் சுழல்கிறது. ஆசிரியருடைய சிந்தனைகள் புதிர்மிக்கனவாய் உள்ளன. அவரது மாறுபடும் மனநிலைகள் முன்னறிவிக்க முடியாதவை. ஆகவே, இந்நூலை ''ஐயவாதத்தின் சாரம்'' என்று சிலரும், ''பக்தியின் சாரம்'' என்று வேறு சிலரும் கூறியிருப்பதைக் கண்டு வியப்புற வேண்டியதில்லை. அன்றாட வாழ்க்கையின்முன் அடிபட்டுப் போகும் மனிதர்களின் சிறுசிறு முயற்சிகளையோ, வெறுமையான கூற்றுகளையோ, ஆசிரியர் தாக்கியிருந்தால் அது ஒருவரையும் பாதிக்காது. ஆனால் பக்தியுள்ளோர் போற்றிய சட்டத்தையே ஐயுறுகிறார். அறிவர்கள் போதித்த பாரம்பரியப் போதகமாகிய நீதியையும் ஞானத்தையும் தேடுவதையே தாக்குகிறார். இது வாசகர்களின் மன அமைதியைக் கெடுக்க வல்லது. ஆயினும் இந்நூல் பழங்கால மேற்காசிய இலக்கியங்களிலேயே மிகவும் அதிக எடுத்துக்காட்டாகப் பயன்படும் வாக்குகளைக் கொண்ட நூலாகத் திகழ்கிறது. யோபு நூல் நீதிமானின் துன்பம் என்ற பிரச்சனையோடு போராடியது என்றால், இந்நூல் மனிதனது மகிழ்ச்சி என்ற பிரச்சனையோடு போராடுகிறது. இரண்டு நூல்களும் எடுத்துக்கொண்ட பிரச்சனைகளுக்கு விடை காணவில்லை. ஆயினும் அரிய பாடங்களைக் கற்பிக்கின்றன.

2. பெயர்: எபிரேயத்தில் இந்நூல் ''கோகெலேத்'' (Qoheleth) என்றழைக்கப்படுகிறது. இச்சொல்லுக்கு அடிப்படையாக இரு எபிரேயச் சொற்களைச் சுட்டிக்காட்டலாம். முதற்சொல், ''ககால்'' (Qahal) என்பதாகும். இச்சொல்லுக்கு இஸ்ராயேல் மக்களது சபை அல்லது கூட்டம் என்று பொருள் கூறலாம். ''கோகெலேத்'' என்ற சொல் ஒரு பெண்பால் வினையெச்சப் பெயராகும். இச்சொல் முதலில் ஒரு அலுவலைக் குறிக்கிறது. பின்பு அத்தொழிலையுடைய பதவியையும், அப்பதவியைக் கொண்டிருப்பவரையும் குறிக்கலாம். இந்த அடிப்படையில் இச்சொல்லுக்குச் சபையை நடத்துபவர், சபையில் பேசுபவர், போதகர் அல்லது திருவுரையாளர் என்று பொருள் கூறலாம்.

இப்பெயர் ஏற்கெனவே கிரேக்க மொழிபெயர்ப்பாளர்களைத் திகைப்புறச் செய்துள்ளது. அவர்களும் இப்பெயரைத் திருச்சபை என்று பொருள்படும் ''எக்லேசியா'' (Ecclesia) என்ற சொல்லோடு தொடர்புடைய ''எக்லேசியாஸ்டெஸ்'' (Ecclesiastes) என்ற தெளிவில்லாத கிரேக்கச் சொல்லால் மொழிபெயர்த்து, இச்சொல்லின் புதிர்த்தன்மையை அதிகப்படுத்தியுள்ளனர். ''எலேசியாஸ்டெஸ்'' என்ற சொல் கிரேக்க இலக்கியத்தில் மிக அபூர்வமானது. இச்சொல் ஒரு சபையின் அங்கத்தினரையோ அச்சபையைக் கூட்டுபவரையோ குறித்தது. கிரேக்கப் பெயரைப் பின்பற்றி புனித எரோனிமு இலத்தீன் மொழியில் எழுத்துப் பெயர்ப்புச் செய்தார். அவரைப் பின்பற்றி, லூத்தர் இந்நூலைப் ''போதகர்'' என்று அழைத்தார். இதைப் பின்பற்றி தமிழில் பிரிவினைச் சகோதரர்கள் இந்நூலைப் ''போதகர் நூல்'' என்றும், கத்தோலிக்கர்கள் ''சங்கத் திருவுரை நூல்'' என்றும் அழைத்தனர். பொது மொழிபெயர்ப்பில் ''திருவுரையாளர்'' என்றழைக்கப்படுகிறது.

''கோகெலேத்'' என்ற சொல், ''க்ல'' (Qhl) என்ற மற்றொரு எபிரேயச் சொல்லிலிருந்து வருவதாகக் கருதுவர் சிலர். இச்சொல்லின் அடிப்படையில், ''கோகெலேத்'' என்ற சொல்லுக்கு ''வாதம் இடும் இயல்புடையவர்'', ''வணங்காக் கழுத்துடையவர்'', அல்லது ''விடாப்பிடியாளர்'' என்று பொருள் கூறலாம். இதன்படி ''கோகெலேத்'' என்பவர் ஒரு வாதிடும் இயல்புடைய அறிவாளி. இவர் எல்லாவற்றையும் தாக்கி, ஆய்வு செய்து, அவற்றின் அடித்தளம் வரை போகக் கூடியவர். இதற்கு அவருக்கு ஒருசபை வேண்டியதில்லை. ஒருதனிப்பட்ட ஆய்

வின் விளைவாகவோ, ஒரு சிறிய குழுவின ரோடு சேர்ந்தோ தமது நூலை ஆசிரியர் படைக்கலாம். ஒரு வேளை இப்பொருள் இந்நூலின் தன்மையை விளக்கலாம். இத்தகைய நூல் தோன்றியதே யாவற்றையும் ஐயத்துடன் கேள்வி கேட்கும் போக்குடைய காலத்தைச் சுட்டுகிறது.

''திருவுரையாளன் (Qoheleth) ஆகிய நான்....'' *(1:12)* என்ற வாசகத்தைக் கொண்டு, ''கோகெலேத்'' என்பதை ஓர் ஆளின் பெயர் என்று சிலர் கருதுவது சரியாகத் தெரியவில்லை.

3. ஆசிரியர்: இந்நூலை எழுதிய ஆசிரியரைப்பற்றி அதிகம் கூற முடியாது. நூலின் தொடக்கத்தில் ''தாவீதின் மகனும் எருசலேம் அரசனுமான திருவுரையாளர்'' *(1:1)* என்றும், ''திருவுரையாளனாகிய நான் எருசலேமில் இஸ்ராயேலின் அரசனாக இருந்தேன்'' *(1:12)* என்றும் ஆசிரியர் குறிக்கப்படுகிறார். இக்குறிப்புகள் இஸ்ராயேலின் மிகச் சிறந்த ஞானியாகிய சாலமோனைச் சுட்டுவதாகத் தெரிகிறது. சில மொழி பெயர்ப்புக்களில் சாலமோன் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. சாலமோன் வாழ்ந்தகாலத்தையும், இந்நூல் தோன்றியதாகக் கருதப்படும் காலத்தையும் மனதில் கொண்டால், சாலமோனுக்கு இந்நூலைச் சாற்றிக் கூறுவது ஒவ்வாது என்பதுதெளிவு. பிற்கால நூற்களை முற்காலப் பெரியார்களுக்குச் சாற்றிக் கூறும் இஸ்ராயேல் மரபு பற்றி ஏற்கனவே போதியமட்டும் கூறியுள்ளோம். இவ்வாறு கூறுவது ஒரு இலக்கிய யுக்தியே தவிர வேறன்று.

ஆசிரியரைப் பற்றிய நேரடியான குறிப்பு நூலின் முடிவுரையில் *(12:9-10)*; வருகிறது. ஆனால் இந்த விவரிப்பு எல்லா ஞானிகளுக்கும் பொருந்தும். ஆசிரியர் தமது ஆசைகளையும், இச்சைகளையும் அனுபவித்து நிறைவு கொள்ளப் போதிய செல்வம் படைத்தவராகத் தெரிகிறது. அவர் பெரிதும் பயணம் செய்திருக்கிறார்; கல்வி கேள்விகளில் நன்கு பயிற்சி பெற்றுள்ளார்; கலையிலும் கருத்துக் கொண்டிருக்கிறார்; வாழ்க்கையின் கூறுகள் எல்லாவற்றையும் சோதித்து அறிந்திருக்கிறார். அவர் காட்டும் நகரப்பண்பும், கலப்புக் கலாச்சாரப் போக்கும் ஆலயம் பற்றிய சிறு குறிப்புக்களும் *(5:1-5)* ஆசிரியர் கலாச்சார மையங்களில், ஒருவேளை எருசலேமில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று காட்டுகின்றன. அவர் தமது முதிர்ந்த வயதில் இந்நூலை எழுதியிருக்க வேண்டும்; இளமையின் மகிழ்ச்சி பற்றியும் முதியவயதின் தொந்தரவுகளைப் பற்றியும் உணர்ச்சியோடு பேசுகிறார்.

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு இஸ்ராயேல் திரும்பிய பிற்காலத்தைச் சேர்ந்தவரும், வாழ்க்கையை முடிந்த மட்டும் துய்த்து அறிந்தவரும், உலக காரியங்களில் அனுபவ மிக்கவருமான ஓர் இஸ்ராயேல் ஞானி உலகம், வாழ்க்கை ஆகியவை பற்றிய தமது சொந்த அனுபவச் சிந்தனைகளைச் சாலமோன் பெயரால் தொகுத்துத் தமது நூலை அமைத்துள்ளார். இவ்வாறு கடந்தகால அரசன் வாயிலிருந்து வருவதாக ஒரு ஞானி தமது சொந்த சிந்தனைகளை நூலாக அமைப்பது எகிப்திலும் பழைய ஏற்பாட்டிலும் காணப்படும் மரபாகும். ''ஞானமுள்ளவர்களின் சொற்கள் ஆயனின் கோல்போல் வழி நடத்தும். தொகுத்துவைத்த முதுமொழிகள் பசுமரத்தாணிபோல உள்ளத்தில் பதியும்'' *(12:11)* என்ற கூற்று இந்நூலின் ஆசிரியருக்கு மிகவும் பொருந்தும். இது, ஒரு வேளை, இந்நூல் பற்றிய பதிப்பாசிரியரின் சொந்த கருத்தாக இருக்கலாம்.

4. நூல் தோன்றிய காலம்: இந்நூல் உலகத்தைப் பற்றி அயர்ச்சியடைந்த தத்துவ கருத்துக்களைக் கொண்டுள்ளது. இந்நிலை பழைய ஏற்பாட்டு இலக்கிய வளர்ச்சியின் இறுதிக்கட்டத்தில்தான் நிகழ்ந்திருக்கக் கூடும். மேலும் இந்நூல் புறஇனக் கருத்துக்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலை ஏற்பட, யூததுவவும் தன்னுள்ளே வளர்ச்சியடைந்து, இத்தகைய் புறப்பாதிப்பை ஏற்கத் தயாராக இருந்திருக்க வேண்டும். இத்தகைய காலம் நாடு கடத்தலுக்கு மிகப் பிந்திய

தாக இருக்கலாம். ஆனால், நூல் தோன்றிய காலத்தைத் துல்லியமாகக் கணிப்பது அவ்வளவு சுலபமன்று.

இந்நூலில் காணப்படும் பாரசீகச் சொற்றொகுதியை அடிப்படையாகக் கொண்டு, இந்நூல் கி.மு. 500-ஐ ஒட்டித் தோன்றியிருக்கலாம் என்று சிலரும், கி.மு. 4-3-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியிருக்கலாம் என்று வேறு சிலரும் கூறியுள்ளனர்.

இந்நூலில் அதிகமாக அரமேயிக்குப் பண்புகள் காணப்படுவதை அடிப்படையாகக் கொண்டு, இந்நூல் அரமேயிக்கு மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது என்றும் சிலர் கருதுவர். இதை, இந்நூலைத் தொகுத்தவர் அரமேயிக்கு மொழி பேசப்பட்ட பகுதியில் வாழ்ந்திருக்கலாம் ஆகவே, அவரது சொற்றொகுதியில் அரமேயிக்குப் பண்புகள் புகுந்திருக்கலாம் என்று விளக்கலாம். நூலில் காணப்படும் மறைமுகச் சான்றுகள், காலக்கணிப்புக்கு ஒரு சிறிது உதவி செய்வதாகத் தெரிகிறது. ''வயது சென்ற அறிவுரை கேளாத முட்டாள் அரசன்'' (4:13) இரண்டாம் அந்தியோக்கு என்பவன் ஆவான் என்றும், ''சிறையில் கைதியாயிருந்தவன் அரியணை ஏறியதுமுண்டு'' என்பது (4:14) மூன்றாம் அந்தியோக்கு ஆவான் என்றும் அடையாளம் காட்டப்படும். இவற்றிலிருந்து, திருவுரையாளர் மூன்றாம் அந்தியோக்குவின் காலத்தைச் சேர்ந்தவர் என்றும் ஆகவே, இந்நூல் கி.மு. 200-ஐ ஒட்டித் தோன்றியிருக்க வேண்டும் என்றும் சிலர் கருதுவர்.

கி.மு. 180-ஐ ஒட்டித் தோன்றிய சீராக் நூல் திருவுரையாளர் நூலை அறிந்து பயன்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. சீரா 5:3-ஐத் திருவுரை 3:15-ஒடும், சீரா 13:25ஐத் திருவுரை 8:1-ஒடும், சீரா 40:11-ஐத் திருவுரை 12:7-ஒடும் ஒப்பிடுக. கும்ரான் குகைகளில் கண்டெடுக்கப்பட்ட இந்நூலின் துணுக்குகள், இந்நூல் ஏற்கெனவே கி.மு. 150-இல் வழக்கிலிருந்துள்ளது என்பதைச் சுட்டுகின்றன.

நூலின் சிந்தனைப் போக்கும் இந்நூல் தோன்றிய காலத்தைக் குறிக்க உதவுகிறது. அந்தியோக்கு எப்பிபானின் (கி.மு. 175-160) சமயக் கொள்கையின் விளைவாக யூதர்கள் தங்கள் சமயத்தில் ஆர்வம் கொண்டனர்; பெரும் பற்றுக் கொண்டனர். இப்போக்குக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட இந்நூல் இக்காலத்திலும் இதற்குப் பின்னும் தோன்றியிருக்க முடியாது. இந்நூலை யூதர்கள் மரியாதையோடு ஏற்றுக் கொண்டனர் என்றால், கிரேக்க மயமாக்கும் இயக்கத்திற்கு எதிராகப் போராட்டம் தொடங்குமுன் இந்நூல் தோன்றியிருக்க வேண்டும். மேலும் ஆசிரியர் மரித்தோர் உயிர்ப்புப் பற்றிய விசுவாசத்தை அறிந்திருப்பதாய்த் தெரியவில்லை. ஆகவே இந்நூல் மக்கபேயர் காலத்திற்கு முந்தியதாக இருக்க வேண்டும். நூலில் காணப்படும் கிரேக்கப் பண்புகள் இந்நூல் அலக்சாந்தர் காலத்திற்கு முந்தியதாக இருக்க முடியாது என்பதை உணர்த்துகின்றன. மேற்கூறப்பட்டவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இந்நூல் கி.மு. 250-200க்கு இடையிட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம் என்று கூறலாம்.

எங்கு இந்நூல் தோன்றியது என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆசிரியர் எகிப்தைப் பற்றிய அறிவைக் காட்டுகிறார். ஆகவே இந்நூல் எகிப்தில், குறிப்பாக அலக்சாந்திரியாவில் தோன்றியிருக்கக்கூடும் என்பர் சிலர். (ஆனால் இதற்கு வேண்டிய அயல் பாதிப்புக்குப் போதிய சான்றுகள் இல்லை). வேறுசிலர், இந்நூல் கீழ்த்திசையில் சிதறிக் கிடந்த யூதர்களிடையே தோன்றியது என்பர். நூலில் காணப்படும் எருசலேம், ஆலயம், பலிகள், நேர்ச்சிகள், பாலஸ்தீன நாட்டுச் செடிகொடிகள் ஆகியவை பற்றிய குறிப்புகள், இந்நூல் பாலஸ்தீனத்தில் தோன்றியிருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன - என்று பெரும்பான்மையான ஆய்வாளர்கள் இப்போது ஏற்றுக்கொள்வர்.

5. அயல்பாதிப்பு: இந்நூல் அயல் இலக்கியங்களால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கருதுவர் சிலர். அப்படியானால் எந்த அளவுக்கு இந்தப் பாதிப்பு ஏற்பட்டது என்றும், அப்பாதிப்பை யூதத் தத்துவத்துக்குள்ளே விளக்க முடியுமா என்றும் பார்க்க வேண்டும்.

பாபிலோனியாவைச் சேர்ந்த ''தலைவனுக்கும் அடிமைக்குமிடையே அவநம்பிக்கை நிறைந்த உரையாடல்'' (Pessimistic Dialogue between Master and Slave) என்ற நூலும், எகிப்தைச் சேர்ந்த அமெனம் - எட் தன் மகனுக்குக் கூறும் அறிவுரை என்னும் நூலும் திருவுரையாளர் நூலுக்கு ஒத்ததாக உள்ளன என்பர். தாகூது என்ற அறிஞர் பெனிசிய - கானானிய பாதிப்பை வலியுறுத்துவார். மற்ற எபிரேய ஞான இலக்கியங்கள், பிற இன இலக்கியங்களை ஓரளவு தழுவியிருப்பது போல், இந்நூலும் அவற்றில் சிலவற்றை ஒத்திருக்கலாம்.

இந்த அயல்பாதிப்புக்களில் முக்கியமானது கிரேக்கக் கலாச்சாரப் பாதிப்பாகும். நூல் தோன்றிய காலம் கிரேக்கக் கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்ட தோலமியர்கள் ஆதிக்கம் செலுத்திய காலமாகும்.

(குறிப்பு: - கி.மு. 323 - 30 - க்கு இடையிட்ட காலத்தில் எகிப்தை ஆட்சி செய்த கிரேக்க அரச மரபைத் தோலமியர்கள் என்று அழைப்பது மரபு. மாமன்னன் அலக்சாந்தருடைய தளபதிகளில் ஒருவனான தோலமி என்பவனால் இந்த அரச மரபு நிறுவப்பட்டது. கி.மு. 301 - 198 - க்கு இடையிட்ட காலத்தில் தோலமியர் பாலஸ்தீனத்தை ஆட்சி செய்தனர். தோலமியர்களுக்கும் யூதர்களுக்குமிடையே பொதுவாக, சுமுகமான உறவு நிலவியதாகத் தெரிகிறது. இக்காலத்தில் எகிப்தில் பல யூதக் குடியிருப்புக்கள் தோன்றின. கிரேக்கப்பண்பாடு இக் குடியிருப்புக்களைப் பெரிதும் பாதித்தது. குறிப்பாக அலக்சாந்திரியாவில் அமைந்திருந்த செழிப்பான யூத சமூகத்தினரிடையே பழைய ஏற்பாடு கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. பல யூத இலக்கியங்கள் கிரேக்க மொழியில் தோன்றின). அப்போது பரவிக் கொண்டிருந்த இந்தக் கிரேக்கக் கலாச்சாரத்தின் பாதிப்பிலிருந்து யூத நூல்கள் தப்பித்து இருக்க முடியாது. ஆனால் இது அடிப்படையில் பாதிப்பு ஏற்படுத்தவில்லை எனலாம். ஏனெனில், ஆசிரியர் கிரேக்கச் சிந்தனைப்போக்கில் எழுதினாலும், அடிப்படையில் ஒரு யூதனாகவே இருக்கிறார்.

6. திருமுறைப் பட்டியலில் திருவுரையாளர் நூல்: இந்நூல் யூதபக்திக்கு ஒத்ததாய் இருப்பதாகத் தெரியவில்லை. யூத இராபிகளின் பாரம்பரியப்படி இந்நூலில் காணப்படும் அவநம்பிக்கையும், முரண்பாடுகளும் இந்நூல் யூதத்திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்குத் தடையாக இருந்துள்ளன. இராபி கில்லெல் போன்றவர்கள் இந்நூல் பரிசுத்தமானது என்று கூறியுள்ளனர். பிறர் இதை மறுத்துள்ளனர். இந்நூல் ஞானத்தைப் பற்றிப் பேசவில்லை. சாலமோன் இந்நூலை இயற்றியிருந்தால், இதில் இறைவன் பேசவில்லை; சாலமோன் தமது தனிக்கூற்றுகளைக் கூறுகிறார் என்றனர். கி.பி. 100-ஐ ஒட்டி யாம்னியாவில் நடந்த யூதக் கூட்டத்தில்தான் இந்நூல் திருமுறைப்பட்டியலில் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கு இந்நூலைச் சாலமோன் இயற்றினார் என்ற பாரம்பரியம் பெரிதும் உதவியது எனலாம்.

யூதர்களிடையே விழாக்காலத்தில் வாசிக்கப்பட்ட ஐந்து நூல்களில் இதுவும் ஒன்றாகும். இது கூடாரவிழாவின் மூன்றாம் நாள் வாசிக்கப்பட்டது. வாழ்வின் மகிழ்ச்சியின் நிலையாமையை எடுத்துக் கூறி மக்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தது இந்நூல்.

திருச்சபை தொடக்கத்திலிருந்து இந்நூலைத் தனது திருமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொண்டது. ஆனால் இந்நூலுக்குத் திருச்சபைத் தந்தையரில் யாரும் விளக்கவுரை எழுதியதாகத் தெரியவில்லை.

7. இலக்கியச் சிறப்பு: நூலின்பெரும் பகுதி உரைநடையில் அமைந்துள்ளது. ஆசிரியர் தமது நடையிலும் சிந்தனைப் போக்கிலும் எந்த முன் மாதிரியையும் பின்பற்றியதாகத் தெரியவில்லை. ஆனால் நூலில் பல இலக்கிய வடிவங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில, ஞானக்கூற்றுகள் (9:17-10:20), மேற்கோள்கள், அறவுரைகள், எச்சரிக்கைகள், ''இதைவிட அதுமேல்'' என்று அமைந்துள்ள கூற்றுகள் ஆகியவையாகும். சில பகுதிகள் தன்மை ஒருமையில்

அமைந்துள்ளன (1:12-17; 2:1-23). சில, சிந்தனைத் தொடர்களாக உள்ளன. பல,முன் அமர்ந்திருப்போரைப் பார்த்துக் கூறும் அறவுரையாக அமைந்துள்ளன (4:17-5:6; 7:8-8:8; 11:1-6). 2:1-11.12-18; 3:1-8; 9:9-12:8 போன்ற பகுதிகள் தனித்து நிற்பதாய்த் தோன்றுகின்றன. பிற பகுதிகளைப் பிரித்துக்காட்டுவது அவ்வளவு சுலபமன்று.

ஆசிரியர் பழமொழிகளைப் பயன்படுத்தும் விதம் குறிப்பிடத்தக்கதாகும். பழமொழிகள் வாழ்க்கை அனுபவத்திலிருந்து பொது உண்மைகளை எடுத்துக் கூறுகின்றன; ஆனால் அவை எப்போதும், எல்லாருக்கும் பொருந்தியதாக இருக்க வேண்டியதில்லை. சான்றாக, ''தூரயிருந்தால் சேர உறவு'', ''கண்டால் காமாட்சிநாயகன், காணாவிட்டால் கபோதிநாயகன்'' என்ற நம்நாட்டு இரு பழமொழிகளை ஒப்பிடுக. பழமொழிகளின் ஒப்புமை சார்ந்த மதிப்பீட்டை, இந்நூலின் ஆசிரியரைப்போல், வேறு எவரும் நன்கு உணர்ந்து பயன்படுத்தியதில்லை. ஆசிரியர் ஒரு பழமொழியின் பொருளை மற்றொரு பழமொழியால் மட்டுப்படுத்துவார். இவ்வாறு ஓர் இடத்தில் ''இன்று உயிரோடு வாழ்கிறவர்களின் நிலைமையைவிட ஏற்கெனவே மாண்டு மறைந்து போனவர்களின் நிலைமையே மேலானது என்றேன்'' (4:2) என்று கூறும் ஆசிரியர் மற்றொரு இடத்தில் ''செத்துப்போன சிங்கத்தைவிட உயிருள்ள நாயே மேல்'' (9:4) என்று கூறிமுன்னைய கூற்றின் துர்நம்பிக்கையை மட்டுப்படுத்துவார். ''சிரிப்பதைவிட, துயரமே நல்லது'' (7:3) என்று கூறும் ஆசிரியர் மற்றொரு இடத்தில் மகிழ்வதைப் போற்றுகிறார் (8:15). இப்படிக் கூறிக் கொண்டே போகலாம். இச்சான்றுகளிலிருந்து ஆசிரியர் தன்னையே மறுத்துக்கூறுகிறார் என்று நாம் கருதினால், அது தவறாகும். வாழ்வின் மதிப்பீட்டை ஆழ்ந்து கூர்மையாய் நோக்குகிறார் என்பதே கருத்தாகும். சிலருக்கு வாழ்வு ஒரு பெரும் சுமையாக இருக்கலாம். மற்றவர்களுக்கு அது எளிதாக இருக்கலாம். இந்த அனுபவத்தை ஆசிரியர் நன்கு அறிவார். ஆனால் ஒருவர் வாழ்வில் தேடும் நன்மைக்கும், அதைத் தேடுவதில் காட்டும் முயற்சிக்கும் எவ்விதச் சமன்பாடும் இருப்பதில்லை. நன்மை மனிதனது ஏக்கத்திற்கேற்ற விதமுறையில் இருப்பதில்லை. நேர் முரணாகத் தோன்றும் கூற்றுகளை அருகருகே வைத்து, வாசகரே சிந்தித்து ஒரு விடையைக் காணட்டும் என்று விட்டு விடுகிறார்.

இந்நூல், தர்க்கிக்கும் பிரச்சனையைப் பொறுத்து மட்டுமன்று, அப்பிரச்சனை பற்றிய பல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் முறையிலும், யோபு நூலைப் பிரதிபலிக்கிறது. ஆனால் கருத்துக்களை எடுத்துக் கூறப் பல நபர்களைக் கொண்ட உரையாடலை ஆசிரியர் பயன்படுத்தவில்லை. வகையுறப் பேசும்முறையைப் பயன்படுத்தித் தனியுரையில் தமது கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார். ஒருபோது, பாரம்பரிய ஞானக்கருத்துக்களை எடுத்துக் கூறுவார்; மறுபோது, தாம் எழுப்பும் கேள்விகளுக்கு எப்படிப் பரம்பரை ஞானபோதகம் தகுந்த விளக்கம் அளிக்கவில்லை என்று காட்டுவார். பின் தமது சொந்த மதிப்பீட்டை எடுத்துக் கூறுவார். இதில் ஆசிரியர் தம்மோடே உரையாடுகிறார் எனலாம். இதில் ஆசிரியர் இயல்பாக உள்ளார் (4:9-12;7:1-14;9:4-6). இம்முறையில் காணப்படும் நூலின் நெருக்கமில்லாத அமைப்பு-பழமொழி நூலைப் பிரதிபலிக்கிறது.

8. **நூலின் ஒற்றுமை:** நூலில் வேண்டுமென்று விரும்பி அமைக்கப்பட்ட ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. சிலர் கருத்தில் முரண்பாடு காண முயன்றுள்ளனர் (4:2-ஐ 9:4 ஒடும், 4:5-ஐ 4:6-ஒடும், 7:4ஐ 8:15-ஒடும் ஒப்பிடுக). இவற்றைப் புரிந்து கொள்வது பற்றி முன்பே கூறியுள்ளோம். சில பகுதிகள் படர்க்கையில் எழுதப்பட்டுள்ளன (1:2; 7:27; 12:8; 12:9-14). நூலின் பெரும் பகுதி உரையாடலில் உள்ளது. ஆனால் சில பாடல் பகுதிகள் புகுத்தப்பட்டுள்ளன. இவை நூலின் பொதுச் செய்தியை மாற்றி அமைப்பதாகத் தெரிகிறது (4:9-12; 4:17-5:6; 7:1-12.18.22;10; 12:2-6). சில வாசகங்

கள் (*3:17;7:18; 8:5;12:12-14*) ஐயத்திற்குரியவை ஆகின்றன. ஏனெனில் இவை, பாரம்பரியத்துக்கு எதிரான ஆசிரியருடைய கருத்துக்களை ஒன்றுமின்மையாக்குவது போல் தோன்றுகின்றன.

நூலில் காணப்படும் பாரம்பரியக் கருத்துக்களைக் கூறும் பகுதிகளுக்கும், நூலில் விரவிக் கிடக்கும் துர்நம்பிக்கைக் கருத்துக்களுக்கும் ஒன்றியைந்த தன்மை இல்லை என்பது தெளிவாக உள்ளது. ஆசிரியர், பாரம்பரியச் சமய, ஒழுக்கமுறைகள் பற்றிப் ''பதித'' முறையில் கேள்விகள் எழுப்புகிறார். நூலின் மொழிநடையிலும் பல தனித்தன்மைகள் உண்டு. மேற்கூறிய காரணங்களுக்காக, இந்நூல் ஒரே ஆசிரியர் எழுதியநூல் அன்று; பலரால் இயற்றப்பெற்ற பகுதிகள் அடங்கிய தொகுப்பாகும் என்று ஆய்வாளர் சிலர், கருதுவர். இந்த அடிப்படையில், ஓர் ஆய்வாளர், இந்நூலில் எட்டு ஆசிரியர்களைக் காண்கிறார். மற்றொருவர், இந்நூலின் முக்கால் பகுதியைத் திருவுரையாளரும், பிற பகுதிகளை அவரது சீடர்களும் எழுதினர் என்பார். நூலில் காணப்படும் கடுமையான துர்நம்பிக்கையைச் சமன்படுத்தும் பொருட்டுப் பாரம்பரிய ஞானக்கருத்துக்களை (*2:14; 4:5-6; 6:10; 7:5-6; 7:26; 8:1-2; 11:4-6*) ஒரு பக்தியுள்ள யூதர் பிற்காலத்தில் நூலில் இடையிடையே புகுத்தினார் என்று சிலர் கருதுவர். இப்பகுதிகள் இருந்தும், ஆசிரியரின் ''பதிதத்தன்மை'' நூலில் தெளிவாக உள்ளது என்பதை நாம் காணத் தவறக்கூடாது. ஆசிரியரே இவற்றைக் கூறியிருந்தால், இவற்றைத் தர்க்கத்திற்குரிய வாசகமாகவோ, எடுத்துக்காட்டாகவோ பயன்படுத்துகிறார். ஏனெனில் சில இடங்களில் இவற்றை மறுக்கிறார் என்றும் சிலர் விளக்குவர்.

இந்நூலின் ஒற்றுமையை மறுப்பதைவிட, இதில் ஒற்றுமையில்லை என்று நிறுவுவது கடினம் என்று ஓர் ஆய்வாளர் கூறுவார். தொடக்க வரி (*1:1*), முடிவுரை (*12:9-14*), ஒருவேளை ''போதகர் கூறுகிறார்'' என்ற சொற்றொடர் (*1:2;7:27;12:8*) ஆகிய பகுதிகளைத் தவிர பிற பகுதிகளை ஒரே ஆசிரியர் எழுதினார் என்று இப்போது ஆய்வாளர்கள் பொதுவாக ஏற்றுக் கொள்வர். அண்மையில் நடைபெற்றுள்ள, இந்நூல் பற்றிய உளவியல், வரலாற்று நோக்கு ஆய்வுகள் இக்கருத்துக்கு ஆதரவு தருவதாகத் தெரிகிறது.

இயற்கையில் காணப்படும் ஞானம், நற்பெயர், மனித ஆசைகள், வெற்றிகள் ஆகியவற்றின் வீண்தன்மை பற்றி, கருத்துக்கள் நெருக்கமில்லாத முறையில் ஒரு மையவட்ட வடிவங்களில், மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன. ஆசிரியர் இந்நூலை ஒரே தொடராக எழுதியதாகத் தெரியவில்லை. அவ்வப்போது தமக்குத் தோன்றிய கருத்துக்களைக் குறித்துவைத்தார் என்று தோன்றுகிறது. ஒருவேளை, மாணவர்கள் தங்கள் ஆசானது சிறந்தகருத்துக்களைத் தொகுத்து எழுதியிருக்கலாம். நூலை ஒரே ஆசிரியரின் நாட்குறிப்பேடாக ஏற்றுப்புரிந்து கொள்வது நன்று.

நூலை ஒரே தொகுப்பாக ஏற்று, விளக்கம் அளிப்பது இப்போது ஆய்வாளர்களிடையே நிலவும் போக்காகும். சிலர் நூலில் திட்டம் உள்ளது என்று காட்ட முயன்றுள்ளனர். வேறு சிலர் நூலைத் திருத்தி அமைக்க முயன்றுள்ளனர். இவை தேவையற்ற முயற்சிகளாகும். ஏனெனில் ஆசிரியர் ஏதாவது ஒரு கருத்தை அது வரும் குறிப்பிட்ட இடத்தில் ஏன் வைக்கிறார் என்று தெளிவுபடுத்த எக்காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. நூலில் வரும் கருத்துத் தொகுப்புக்களை எந்த முறையிலும் வரிசைப்படுத்தலாம். ஏனெனில் அவை நெருக்கமில்லாத ஒரு நாட்குறிப்பேடு போல் அமைந்துள்ளன (*1:2-11;3:1-8;7:1-8...*).

9. திட்டம்: மேற்கூறியவற்றிலிருந்து, இந்நூலில் ஒரு தெளிவான திட்டத்தைத் தேடுவது வீண் முயற்சியாகும்; ஆயினும் ஆய்வாளர்கள் நூலை, *3, 6, 8, 12, 23, 37* பகுதிகளாகப் பிரித்துக்காட்ட முயன்றுள்ளனர் என்பதை நாம் அறிந்திருப்பது நன்று. நாம் இங்கு, வசதிக்காகப் பின்வருமாறு நூலைப் பகுக்கலாம்:

I. தலைப்பும் (1:1) முக்கிய கருத்தும் (1:2-3).

II. மனித முயற்சிகள் வீணானவை (1:4-2:26).

III. மனித வாழ்வில், வாழ்வும் சாவும் (3:1-22).

IV. மனிதத் தன்மையற்ற போக்கும், இறைவன்பால் கவனமின்மையும் (4:1-5:6).

V. செல்வத்தின் மாயை (5:7-7:12).

VI. மனித வாழ்வில் முறைகேடுகள் (7:13-9:10).

VII. வளத்தின் ஒவ்வாமை (9:11-12:8).

VIII. முடிவுரை (12:9-14).

10. முக்கிய கருத்துக்கள்: ''ஞானமுள்ளவர்களின் சொற்கள் ஆயனின் கோல் போல் வழிநடத்தும்'' (12:11) என்று நூலின் முடிவுரை கூறுகிறது. இக்கூற்று திருவுரையாளர் கூற்றுகளுக்கு மிகப் பொருந்தும். ஏனெனில் அவை ஆன்மாவை வேதனைக்குள்ளாக்குகின்றன; மனதைச் சஞ்சலப்படுத்துகின்றன; இதயத்தை அமைதி இழக்கச் செய்கின்றன; சுயநிறைவுடையோரை நிலைகுலையச் செய்கின்றன; மரபு விரும்பிகளை அதிர்ச்சியுறச் செய்கின்றன; ஞானிகளைக் கூட மனக் குழப்பமடையச் செய்கின்றன. இந்நூலை வாசிக்குமுன் ''இவையனைத்தையும் தொகுத்து முடிவுரையாக ஒன்று கூறுகிறேன். கடவுளுக்கு அஞ்சிநட, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படி. மனிதன் படைக்கப்பட்ட நோக்கம் இதுவே. நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும், மறைவான செயலுக்குங்கூட, அது நல்லதோ தீயதோ எதுவாயினும், அனைத்திற்கும் கடவுளே தீர்ப்பு வழங்குவார்''. (12:13-14) என்ற வாக்குகளையும், 5:1-6; 7:18; 8:12-13; 12:1 போன்ற ஆசிரியரது மற்றும் சில வாக்குகளையும் நாம் மனதில் கொண்டிருந்தோமென்றால், பலர் திருவுரையாளரைத் தவறாகப் புரிந்து கொண்டதுபோல், நாமும் அவரைத் தவறாகப் புரிந்து கொள்ள மாட்டோம். காலப் போக்கில் சமயப் பற்றற்றவர், இன்பம் விரும்பி, துர்நம்பிக்கைவாதி, காலத்தால் முந்திய தற்கால இயல்வாதி (Existentialist) போன்ற பல பெயர்கள் திருவுரையாளருக்குச் சூட்டப்பட்டுள்ளன. ஆனால் நூலில் நாம் காண்பது: அவர் இறைவனது அருள் பாலிப்பை விசுவாசிக்கிறார் (3:11.14.15; 8:17; 11:5); இறை ஞானத்தைப் புகழ்கிறார் (7:2.20; 9:13-18); இறைத்தீர்ப்பை எதிர்பார்க்கிறார் (3:17; 11:9; 12:13-14). சுருங்கச்சொன்னால் அவர் ஒரு புடைத்தெடுக்கப்பட்ட விசுவாசியாவார். ஆகவே மேற்கூறப்பட்ட பெயர்கள் எதுவும் அவருக்குப் பொருந்தாது. ஆசிரியரையும் அவரது நூலையும் புரிந்து கொள்ள இவற்றை நினைவில் கொண்டிருப்பது நன்று.

மற்றொன்றையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது திருவுரையாளரது உண்மை, நேர்மை ஆகும். அவர் உலகைக் கவனிக்கிறார். அதுபற்றித் தமது கருத்துக்களை நேரடியாக எடுத்துக் கூறுகிறார். அவர் வாழ்ந்த காலம் செழிப்பின்றி இருந்திருக்கலாம். அதன் விளைவாக அவரது போக்கில் துன்பப் போக்கும், துர்நம்பிக்கையும் காணப்படலாம். ஆனால் தாம் கூறுவதில் நேர்மைமிக்கவராக இருக்கிறார். தாம் பார்த்ததை அப்படியே சித்தரிக்கிறார். வாழ்வின் இன்ப துன்பங்களில் மறைந்திருக்கும் பொருள்ளைக் காண முயலுகிறார். அவர் நுனிப்புல்மேயும் தன்மையுடையவர் அல்லர். வாசகர்களை எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தயாரிக்கிறார்.

அ. இறைவனின் பண்புகள்: திருவுரையாளரது போதகத்திற்கு இறைவனில் விசுவாசம் அடிப்படையாகும். இறைவனைக் குறிக்கும் ''எலோகிம்'' (Elohim) என்ற சொல் நூலில் 41 தடவை வருகிறது. இறைவனைப் படைப்பவர் என்றழைக்கிறார் (12:1). உலகில் உள்ள யாவும் இறைவனால் படைக்கப்பட்டவை ஆகும் (11:5). அவர் யாவும் வல்லவர் (3:11; 6:10;7:4; 8:17). அவரே வாழ்வைஅளிக்கிறார் (5:18; 8:15; 9:9). அதை

எடுத்துக் கொள்கிறார் (12:7). வாழ்வில் செழிப்பையும் (5:19;6:2) இன்பத்தையும் (2:24. 26; 3:13; 5:18) கொடுக்கிறார். யாவற்றையும் ஆய்ந்தறியும் ஆவலையும் கொடுப்பவர் அவரே (1:3; 3:11). அவர் மேலாண்மையுடையவர்; அவரது செயல்களை நாம் புரிந்து கொள்ள முடியாவிடினும், அவை நிறைவானவை (3:14; 5:1; 6:10; 7:13.14; 8:17; 9:1). அவர் ஞானம் மிக்கவர். ஏனெனில் அவர் கடந்த காலத்தையும் (3:15) வருங்காலத்தையும் (6:10) அறிந்திருக்கிறார். அவர் செய்வதையெல்லாம் நன்றாகச் செய்கிறார் (3:11.14). அவர் பரிசுத்தர். மனிதன் நேர்மையோடு அவருக்குப் பணி செய்ய விரும்புகிறார் (4:17; 5:1.3. 5-6; 7:18; 12:13). நீதிமான்கள், ஞானிகள்மேல் தனிப்பட்ட அக்கறை கொள்கிறார் (9:1.7). மனிதனது உழைப்பை ஆசீர்வதிக்கிறார் (2:24-25; 3:13). அவர் நீதியுள்ளவர். அவர் மனிதனுக்குக் கடினமான கடமையைக் கொடுத்திருந்தாலும் (1:13; 3:10) நல்லோருக்கு ஞானத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறார் (2:26; 8:12); அவர்களைத் தீமையிலிருந்து விடுவிக்கிறார் (7:26). இதற்கு நேர் எதிராக தீயவர்களை நடத்துகிறார் (2:26; 7:26; 8:13). தண்டனை அளிப்பதில் காலம் தாழ்த்தினாலும் (8:11), நல்லோரையும் தீயோரையும் தீர்ப்பிடுபவர் அவரே (3:17). ஒருநாள் எல்லா மனிதர்களின் செயல்களையும் தீர்ப்பிடுவார் (11:9; 12:14).

இறைவன் பின்வாங்கியவராக, மனிதரோடு நெருங்கிய தொடர்பற்றவராகத் தோன்றுகிறார் (5:1-2). இது விவிலியப் போதகத்திற்கு மாறானதாகும். இறைவனது மறையுண்மையை ஆராய முடியாது (11:5). இறைவன் தூரத்திலிருப்பவரும், மௌன மிக்கவரும் மட்டுமல்லர்; விட்டுக்கொடாதவரும் கூட (7:13; 3:14). அவர் தீர்மானிக்கிறார்; .மாறுவதில்லை. மனித காரியங்களில் கவலையற்றவராக இறைவன் தோன்றுகிறார். இதுவும் விவிலியப் போதகத்திற்கு மாறானது. அவர்முன் மனிதன் அதிகம் பேசக்கூடாது, மாறாக அவருக்குச் செவிமடுக்க வேண்டும் (5:1-2); நேர்ச்சியை நிறைவேற்ற வேண்டும் (5:5-6; 12:13).

ஆ. மனிதன்: மற்ற ஞான நூல்களைப் போல், திருவுரையாளர் நூலும் மனித வாழ்வையும் அதையொட்டிய பிரச்சனைகளையும் பற்றிப் பேசுகிறது. இறைவன் மனிதனை நேர்மையுள்ளவனாகப் படைத்துள்ளார் (7:30). மேலும் அவரிடமிருந்து மனிதன் பல காரியங்களைப் பெற்றுள்ளான் (5:17-18). இறைவனுக்கு வணக்கம் செலுத்துவதே மனிதனதுகடமை (3:14). ஆனால் மனிதன் பாவியாவான் (7:21). உலகில் ''நன்னெறியாளனும் தீ நெறியாளனும், நல்லவனும் கெட்டவனும், சுத்தனும் அசுத்தனுமாக (9:2) இருக்கின்றனர். இறுதியில், ''இறைவன் தம் பார்வைக்கு நல்லவனாய் இருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும்'' (2:26) அளிக்கிறார்.

சமூக அமைப்பைப் பொறுத்தமட்டும் உலகில் அரசர்களும் ஊழியர்களும் (10:17), ஒடுக்குகிறவர்களும் ஒடுக்கப்படுவோரும் (4:1;5:7), செல்வம் உடையோரும் வேலையாட்களும் (5:11) இருக்கின்றனர். ஆனால் ஞானம் செல்வர்களின் உரிமைச் சொத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை (4:13; 9:15). உழைப்பும் தோழமைக் கூட்டுறவும் (10:8; 4:9-12) வாழ்வில் முக்கியமானவையாகும். சில சமயங்களில் கோபம் கொள்ளும் அதிகாரிகள்முன் பணிந்து போவதே மேலானது (10:4-7). மகிழ்ச்சியைப் பொறுத்தமட்டும், சிலர் தங்களுக்குக் கிடைத்ததைக் கொண்டு நிறைவடைந்து இன்பம் அடைகின்றனர் (5:18). ஆனால் பலர் நிறைவடைவதில்லை (5:9). ஏனெனில் அவர்களது ஆசைக்கு முடிவேயில்லை (1:13; 2:1-3; 8:11;...). ஆகையால் எல்லாம் விழல் என்ற உணர்வு அவர்களைக் கொடுமைப்படுத்துகிறது (1:2. 14;2:1.11.15).

எல்லோருக்கும் சாவே முடிவாகும் (3:19). அப்போது எவனும் ''செய்த உழைப்பினால் உண்டான பொருள் ஒன்றையும் கையில் எடுத்துக்கொண்டு போவதில்லை'' (3:15). ஒவ்வொருவரும் தனது செயல்களுக்குக் கணக்கு கொடுக்கவேண்டும் (3:17).

இ. ஞானம்: ஞானம், ஞானி என்ற சொற்கள் இந்நூலில் 44 தடவை காணப்படுகின்றன என்பது கவனிக்கத்தக்கது. இறைவன் மனிதனுக்கு ஞானத்தை அளிக்கிறார் (2:26; 7:25). ஆனால் அதை மனிதன் உழைப்பாலும் (1:1;7) கவனிப்பாலும் (8:16) வளர்த்து நிறைவு செய்ய வேண்டும். ஞானத்திற்கும் இன்பத்திற்கும் நெருங்கிய உறவு இருகிறது. ஞானம் மனிதனது முகத்தை ஒளிர்விக்கிறது (8:1); அவனை வலியவனாக்குகிறது (7:12-20; 9:16); அவனை நீதிநெறியில் நடத்துகிறது (10:3). பிறரோடு கொள்ளும் உறவில் உதவி செய்கிறது (9:17; 10:17). ஞானி அகந்தைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்த, அவனது ஞானம் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் காண முடியாது என்றும் (8:17) தீமையிலிருந்து காக்காது என்றும் (9:4), சாவிலிருந்து காப்பாற்றாது என்றும் (2:15-16) எச்சரிக்கிறார் ஆசிரியர். ஆனால், ஞானி நீதியுள்ளவனாகவும், நல்லவனாகவும் இருப்பதால் (2:26; 8:12-13) இறைவனது பாதுகாப்பைக் கொண்டிருப்பான் (9:1). மூடனதுநிலை இதற்கு நேர் எதிரானது. மூடன் இருளில் நடக்கிறான் (2:14); தவறிப் போகிறான் (10:2-3); தனது ஆற்றல்களைச் சிதறடிக்கிறான் (7:4-6; 9:17); சோம்பேறியாகிறான் (4:5), இறைவனுக்குத் துரோகம் செய்கிறான் (7:17). இறைவன் அவனிடம் விருப்பம் கொள்வதில்லை (5:3).

ஈ. திருவுரையாளரின் ஒழுக்கவியல்: இந்நூல் ஒருதெளிவான ஒழுக்க இயலைத் தரவில்லை. ஆயினும் ஒரு வாழ்க்கை முறையையும் சமூக மனப்போக்கையும் எடுத்துக் கூறுகிறது. அவற்றை மூன்று நல்லறிவுப் பாடங்களாகக் கருதலாம்.

முதல்பாடம்: எதிலும் அளவுக்கு மிஞ்சிப் போகக்கூடாது. அது நேர்மையானாலும், ஞானமானாலும், அவற்றில் மட்டுடைமை வேண்டும் (7:16-17:21). ஏனெனில் ''நன்மை செய்து, பாவம் செய்யாத நீதிமான் இவ்வுலகில் இல்லை" (7:21). இந்த மட்டுடைமையைக் கடைப்பிடிக்காவிடில் ஒருவன் மூடனாவான். எதிலும் அளவு வேண்டும். இந்த மட்டுடைமைக் கருத்து காலம் கடந்த பண்புடையது.

இரண்டாம் பாடம்: ''கடவுள் நியமித்திருக்கிற கடந்துபோகும் நாட்களிலும், நிலையற்ற ஆயுட்காலத்திலும்'' ஒருவன் வாழ்க்கையை நன்கு அனுபவிக்க வேண்டும். இக்கருத்து ஏழுதடவை நூலில் நெடுகிலும் காணப்படுகிறது (2:24-25; 3:12-13; 3:22; 5:18-6:2;8:15; 9:9; 11:8-9). உலக இன்பங்களை அனுபவிக்கும்போது, அவை ''கடவுள் தந்த வரம்;'' ஆகவே, அனுமதிக்கப்பட்டவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மூன்றாவது பாடம்: ஆசிரியர் 3:19-21-இல் மனிதர்களையும் விலங்குகளையும் ஒப்பிடுகிறார். இரு குழுவினருக்கும் நேரும் இறுதிக் கதியையும் எடுத்துக் கூறுகிறார். 4:1-6-இல் உலகில் நிலவும் காட்டு நிலையையும், கொடுமைகளையும் விவரிக்கிறார். இவை பொறாமையாலும், போட்டி மனப்பான்மையாலும் ஏற்படுகின்றன. இந்த அவல நிலைக்குத் தனிமை ஒரு பதில் அன்று; தனிமை வெற்றிக்கு அளிக்கும் அதிகமான விலையாகும். தனிமையில் வாழ்பவன் வாழ்வின் இன்பங்களையெல்லாம் இழந்து விடுகிறான். தனித்து வாழ்தலும் வீணாகும். ''தனிமனிதனாய் இருப்பவன் விழுந்தால் அவன்நிலை வருந்தத்தக்கது. ஏனெனில், அவனைத் தூக்கிவிட எவருமில்லை''.

மனிதர் ஒருவர்க்கொருவர் உதவி செய்ய வேண்டும். இதுவே ஆசிரியர் இந்நூலில் அளிக்கும் பாடங்களில் மிகச் சிறந்தது. மக்கள் ஆதாயத்திற்கும், இன்ப நலத்திற்கும், தொடர்ந்து வாழ்வதற்கும், ஒன்று கூடி வாழ வேண்டும். ''தனி மனிதனாய் இருப்பதை விட இருவராய் இருப்பதுமேல். ஏனெனில், அவர்கள் சேர்ந்து உழைப்பதால் அவர்களுக்கு மிகுந்த பலன் கிடைக்கும்'' (4:9). மேலும் ''இரண்டு பேராய்ப் படுத்துக் கொண்டிருந்தால் ஒருவனுக்கொருவன் சூடுண்டாக்குவான்..... முப்புரிக் கயிறு அறுவதுகடினம்'' (4:11-12).

உ. பாரம்பரியப் போதகத்திற்கு எதிராக: இந்நூல் யூத ஞான இலக்கியங்களின் அடிப்படைப் போதகத்தைக் கடுமையாக விமர்சிக்கிறது. முந்தைய ஞானிகள் இயற்கையையும் மனிதர்களையும் பாகுபடுத்துவதில் சில குறிப்பிட்ட உறுதியான நிலைகளைக் கொண்டிருந்தனர். புண்ணியம் சன்மானத்திற்கும், தீமை தண்டனைக்கும் விதிவிலக்கின்றி இட்டுச் செல்லும் என்ற வினைப்பயன் கோட்பாட்டை உறுதியாக நம்பினர். இப்போதகத்தைப் பிற்காலத்தில் ஆற்றல் மிக்க சீராக்குகூட ஏற்றுக்கொள்வார். பாரம்பரியத்தை விரும்புவோருக்கு இப்போதகம் அனேக தரம், ஒருவகை ஆன்மீக போதையைத் தரக்கூடியது. ஆனால் இப்போதகம் அன்றாட வாழ்க்கை நடப்புக்கு ஒத்ததாய் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, யோபுநூல் பாரம்பரியப் போதகத்தின் பற்றாக்குறைத் தன்மையை எடுத்துக் காட்டியது. ஆனால் யோபுநூலில் கதைத்தலைவன் விசுவாசம் இழக்கவில்லை. யோபு நூலில் ஆசிரியர் நீதிமானின் துன்பம் என்ற பிரச்சனையோடு போராடினார். இந்நூலில், நீதிமான் மகிழ்ச்சியாய் இருக்க வேணடும் என்ற பாரம்பரியப் போதகத்தைத் திருவுரையாளர் தாக்கித் தகர்க்கிறார். ஒருவன் நீதிமானாய் இருந்து, அவன்விரும்பியதையெல்லாம் அடைந்திருந்தாலும், அவன் மனநிறைவடைவதில்லை; அடையவும் முடியாது. ஏனெனில் எல்லாம் வீணானது, ஒன்றுமில்லாதது. இவ்வாறு ஆசிரியர், பாரம்பரியப் போதகத்தின் பற்றாக்குறைத் தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் அவர் விசுவாசம் இழக்கவில்லை.

ஆகவே திருவுரையாளரும் இன்பம், துன்பம் என்ற பிரச்சனைக்கு நிறைவான பதிலைக் காணவில்லை. மனிதன் தனது சொந்த ஆற்றலால் நிலையான மகிழ்ச்சி மிக்க வாழ்வை அமைத்துக்கொள்ள முடியாது என்று கண்டுணர்வதில் இந்நூலின் கருத்தாழம் அடங்கியிருக்கிறது. மனிதனது ஞானமும் புண்ணியமும் கூட அவனது பிரச்சனைகளை விடுவிக்கவோ, உலகில் மறைபொருள் மிக்க முறையில் பரவி நிலவும் தீமையை வெற்றி கொள்ளவோ முடியாது. இது பிரச்சனைக்கு எதிர்நிலைப் பதிலாகத் தோன்றலாம். இஃது ஓர் அளவு மன உலைவைத் தரலாம். யோபு நூலைப்போல் இந்நூலின் மதிப்பீடும் விடை கூறுவதைவிட, கேள்வி எழுப்புவதில் அடங்கியிருக்கிறது; நன்மை - தீமை என்னும் மறை உண்மையை நாம் அறிய முடியாது என்று வலியுறுத்துகிறது; இந்த நன்மை - தீமைப் போராட்டம் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்று உறுதியாகக் கூறுகிறது. இச்செய்தி தனது உண்மைத் தன்மையையோ, பொருத்தமுடைமையையோ இழந்து விடவில்லை. இப்பிரச்னைக்கு விடைகாண எபிரேய விசுவாசம் காத்திருக்க வேண்டும்.

திருவுரையாளர், மற்ற ஞானிகளிலிருந்து பெரிதும் வேறுபட்டவர். இறைவனது அருள்பாலிப்பைப் பற்றி இயந்திரத் தன்மைப் போக்கைக் கொண்டிருந்த பாரம்பரியப் போதகங்கள் நன்மை நல்ல வாழ்வையும், தீமை தண்டனையையும் அளிக்கின்றன என்று விதிவிலக்கில்லாமல் போதித்தன. இறைவனுடைய வழிகள் கணிக்க முடியாதவை என்று கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும் (பழ 20:24; 21:30), மனித உள்நோக்குகளால் அமைக்கப்பட்ட குறுகிய வட்டத்திற்குள் இறைவனையும், அவரது சுதந்தர உரிமைகளையும் வரையறை செய்ய முயன்றன. இதை ஏற்க மறுத்து விடுகிறார் திருவுரையாளர். துல்லிய கணக்கு வைத்துக் கொண்டு, ஒவ்வொருவனுடைய நல்ல, தீய செயல்களுக்கேற்ப வாழ்வையும் சாவையும், மகிழ்ச்சியையும் துன்பத்தையும் கொடுக்கும் கணக்கர் அல்லர் இறைவன். அவர் எவ்வழியிலும் மனிதனுக்குப் பதில் சொல்ல வேண்டியவர் அல்லர். இறைவனை வரையறை செய்ய முடியாது. அவரைக் கட்டாயப் படுத்த முடியாது. "ஒருவன் அல்லும் பகலும் கண் விழித்திருந்து பார்த்தாலும் கடவுளின் செயலை அவனால் புரிந்து கொள்ள இயலாது. அவன் எத்துணை முயன்றாலும் அவனால் அதைக் கண்டு கொள்ள இயலாது. ஞானமுள்ளவர்கள் அது தங்களுக்குத் தெரியும் என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால்

அவர்களுக்கு அதுதெரியாது'' (8:17). இதுவே யோபு நூலின் இறுதி நிலையு மாகும். ஆனால் திருவுரையாளர், ஒருபடி முன் னேறுகிறார். வாழ்வின் குறிக்கோள் இவ் வுலக மகிழ்ச்சிதான் என்பதை எதிர்க்கிறார். வெறும் மகிழ்ச்சியைத் தேடுவது வாழ் வாகாது. மகிழ்ச்சி மனிதனது உரிமையன்று. இறைவனது கரத்திலிருந்து வரும் எதையும் ஏற்றுக்கொள்வதே அவனது கடமையாகும் (7:14-15). ஆசிரியர் தமது பிரச்சனைக்கு விடை காணவில்லை. ஆனால் போலி விடைகளைத் தாக்கித்தகர்த்து, வழியைத் தூய் மைப்படுத்துகிறார். வாழ்வின் உண்மை நிலையை எதிர்கொள்ளுமாறு வாசகர் களைக் கட்டாயப்படுத்துகிறார். திருவுரை யாளர் நற்செய்தியின் வாயிலை அடைய வில்லை. ''எளியோர் பேறு பெற்றோர்'' என்பதைப் புரிந்து கொள்ளுமுன் ''செல்வந் தர் பேறுபெற்றோர்'' என்பது பொய்யாகும் என்பதை அறிந்துகொள்வது வெகு அவசிய மாகும். இதையே திருவுரையாளர் செய் கிறார்.

இந்நூலில் காணப்படும் பல கூற்றுகள் (2:24 தொ; 3:12 தொ; 8:15; 9:7 தொ; 11:9 தொ) இன்ப இயல்வாதத்தை எடுத்துக் கூறுவ தாகத் தோன்றுகின்றன. ஆகவே திருவுரை யாளர் ஓர் இன்பவிரும்பி என்று குற்றம் சாட்டியுள்ளனர். இது இன்பம் பற்றிய பல பழைய ஏற்பாட்டுக் கூற்றுகளின் பொரு ளைக் காணத்தவறியதால் ஏற்படும் தவறா கும். உண்மையில் ஆசிரியர் இன்பவிரும்பி அல்லர். ஆனால் அவர் ஒரு கிறிஸ்துவத் துறவியும் அல்லர்; மாறாக இவ்வுலக வாழ் வின் இன்பங்கள் யாவற்றையும் இறைவ னுடைய கொடையாகக் கருதுபவர் (2:24; 3:13; 5:18; 9:7). சாலமோனை இன்பப் பிரியனாகக் காட்டும் பாரம்பரியத்தைப் பிரதி பலிக்கும் 2:1 தொ என்ற பகுதியில் இன் பியல் வாதத்துக்கு எதிராக அடைமொழி ஏதுமற்ற விதத்தில் வாதிப்பது கவனிக்கத்தக்க தாகும். அன்றாட வாழ்வின் இன்பங்களை இறைவனே அளிக்கிறார். அவற்றை அனுப விப்பது மனிதனுக்கு இறைவன் அளித்த வரமாகும். அதற்கு மேல் அனுபவிக்க உழைப்பது ''வீண் வேலையும், வீண் நாட்ட மும் ஆகும்'' என்று உறுதிகொண்டவர் ஆசிரி யர். இன்பங்களைத் தவறாக அனுபவிப்ப தைக் கண்டனம் செய்கிறார் (2:1 தொ; 11:8-10). இறைவன் அளிக்கும் இன்பங் களை, அவை எதுவானாலும், ஏற்பதுவே மனித னுடைய கடமையாகும். இக்கருத்துக்கள் நூலில் பன்னிரண்டு தடவை வருகின்றன. இன்பம் பற்றிய ஆசிரியரது கருத்து நூலில் காணப்படும் துர் நம்பிக்கையை மட்டுப் படுத்தும் நோக்கம் கொண்டதாகும்.

ஊ. எல்லாம் வீண்: ஒருவகை ஐயவாத மும், உலக இன்பங்கள்பால் கொண்ட அயர்ச்சிப் போக்கும் நூல் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. ''எல்லாம் வீண்'' என்ற சொற் றொடர் நூலில் 20 தடவை வருகிறது. மனித னது முயற்சிகள் எல்லாம் வீணானவை; பொருளற்றவை; பயனற்றவை. எல்லாம் பொருள் அற்ற முறையில் மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன (2:1-11). சூரியன் முகத்தே நடப்பது எதுவுமே புதியதன்று.

''எல்லாம் வீண்'' என்ற தலைப்பை விடாப்பிடியாக ஆசிரியர் தொடர்கிறார்; மனிதன் தன் வாழ்வில் அக்கறை கொள்ளக் கூடிய செல்வம், இன்பம், வேலை, ஆறுதல், குடும்பம், உறவுகள், வழிபாடு, வியாபா ரம், பெண்கள், பிரமாணிக்கம், விவேகம், நேர்மை, ஞானம் போன்ற எல்லாவற்றை யும் சோதித்து அறிகிறார். இவற்றில் எதுவும் இறுதி மதிப்பீட்டைக் கொடுக்கவில்லை. எதுவும் நீடிக்கக்கூடிய, நிலையான மன நிறைவை அளிப்பதில்லை. இவற்றில் சிறந்த ஞானம்கூட சாவோடு அழிந்துபோகி றது. ஞானியும் மூடனும் சமமாகக் கல்லறை யில் முடிகின்றனர். ஆகவே எல்லாம் வீணா னது; ஒன்றுமில்லாதது; வீண் நாட்டமும் ஆகும். இவ்வாறு இத்தலைப்பைத் தொடர் வதில் ஒரு வித ஆவேச இன்பம் காண்கிறார் ஆசிரியர் என்று கூறலாம். அதனால் உலகின் பால் ஒருவித அயர்ச்சிகொள்கிறார்.

வாழ்க்கை - தன்மையாலே துடிப்புடை யது. அதைப்பாடம் செய்துவைக்க முடி

யாது. ஆகவே தமது தலைப்பைப் பற்றி, தமது நீண்ட பரந்த அனுபவம் எனும் உருப்பெருக்குக் கண்ணாடி வழியாக, பல கோணங்களில் ஆசிரியர் நோக்குகிறார்; பல மனநிலைகளில் சிந்திக்கிறார். வாழ்வில் எதுவும் மனநிறைவு அளிக்கக் கூடியதன்று. வாழ்க்கைநடப்பு, இதயத்தின் ஏக்கங்களுக்கு ஒத்ததாயில்லை. மனிதனின் ஆசைகள், அனுபவத்தின் கடின உண்மைகளால் எப்போதும் குறுக்கிடப்பட்டுக் கெடுக்கப்படுகின்றன. அவனது இதயத்திலுள்ள "காலமற்ற தன்மை" அவனது வாழ்நாட்களின் வரையறையால் ஏமாற்றப்படுகிறது. எல்லாவற்றிற்கும் குறிப்பிட்ட காலம் உண்டு. மரிப்பதற்குரிய நேரம், அவனது நம்பிக்கைகளுக்கெல்லாம் சாவு மணி அடிக்கிறது.

ஆசிரியர் தமது தலைப்பை விடாப்பிடியாக, இரக்கமற்ற முறையில் பின்பற்றுவது ஒருவகை அமைதியின்மையையும், பயங்கரச் சோர்வையும் அயர்வையும் ஏற்படுத்துகிறது. உள்ளத்தை அறுக்கக்கூடிய விதத்தில் வாழ்வின் வெறுமையை வலியுறுத்துகிறது. இந்த முழு இருளிலிருந்து தப்பிக்க ''விசுவாசத் தாவுதல்'' ஒன்றே ஆசிரியருக்கு எஞ்சியுள்ளது.

திருவுரையாளரின் உள்ளத்தில் எழக்கூடிய எந்த விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் ஒன்றுமில்லாது அழிக்கக்கூடிய துர்நம்பிக்கைக்கு இரு வரையறைகள் உண்டு. ஒருபுறம் வாழ்க்கை குறுகியதாகவும் பொருளற்றதாகவும் இருப்பதால், வாழ்வு என்னும் ''இச்சிறு விளக்கு நீடிக்கும் வரை'' அதை உறுதியோடு அனுபவிக்கத் தமக்கும் பிறருக்கும் அழைப்பு விடுக்கிறார். இந்த அழைப்பு வெறுமையான அவநம்பிக்கையில் மூழ்கிப் போகாமல் ஆசிரியரைக் காப்பாற்றுகிறது (9:1-10). மறுபுறம், எது எப்படியிருந்தாலும் தாம் இறைவனிடம் கொண்ட விசுவாசத்தை இழக்கவில்லை (2:24; 3:11.13.14). முன்னதில், வாழ்வின் நிலையாமையும் பொருளற்றதன்மையும், அதைக் கொச்சையாகவோ நயத்தோடோ அனுபவிக்கத் தூண்டுவதாக உணரும் எண்ணம், உலகெங்கும் காணப்படும் ஒன்றாகும். பின்னது யூதப் பாரம்பரியத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இவ்வாறு இந்நூல், உலகோடு அயர்ச்சி கொண்ட அக்கறையின்மைக்கும் இறைவனில் கொண்டுள்ள யூத விசுவாசத்திற்குமிடையே நடக்கும் போராட்டமாக அமைந்துள்ளது. இப்போராட்டத்தில் இறைவனில் கொண்ட யூத விசுவாசம் முழுவதும் அழிந்து போவதில்லை. ஆயினும் அது, விசுவாசியை அழுத்தும் அனுபவத்தையும், குழப்ப மனப்போக்கையும் வெல்வதற்கு ஆற்றல் அளிக்கவுமில்லை.

ஆசிரியர் காலத்தில் யூதர்களிடையே வருங்கால வாழ்வு பற்றிய விசுவாசம் இல்லாதது அவரிடம் துர்நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. வாழ்வின் மறைபொருளின் ஆழத்தை அதன் இறுதி மதிப்பீட்டின் நோக்கில் அளக்க முயலுகிறார். 'எது நிலையானது, நீடிக்கக்கூடியது, உறுதியானது?' என்று தேடுகிறார். ஆனால் அதைக் காணத் தவறிவிட்டார். ஆயினும் இந்நூல் வாழ்வின் கடினமான, தப்பிக்க முடியாத உண்மைகளை உறுதியுடன் மதிப்பீடு செய்கிறது. ''ஒரு மனிதன் உலகையெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அவனுக்கு என்ன பயன்?'' (மத் 16:26) என்ற கிறிஸ்துவின் கேள்விக்கு ''ஒன்றுமில்லை'' என்று எதிரொலிப்புடன் பதில் கூற வாசகர்களைத் தயாரிக்கிறது. ஒருவகையில் நூல், தான் எழுப்பும் பிரச்சனைக்குப் பதிலாக வருங்கால வாழ்வு பற்றிய விசுவாசத்தை வற்புறுத்துமாறு கோருகிறது. அந்த விசுவாசத்தை மறைமுகமாக எண்பிக்கிறது. இந்த விசுவாசத்தை உறுதியாகக் கூறமுடியாமை பாரம்பரியத்தின் குறையாகும். அந்த ஞானத்தை ஆசிரியர் விமர்சிப்பது சரியே. இவ்வுலக வாழ்விலேயே வினைப்பயன் பெறும் பாரம்பரியப் போதகம், பற்றாக் குறையானது என்று தயக்கமின்றித் தகர்க்கிறார். இறுதியான நிலையான மகிழ்ச்சியடைய, மனித வாழ்வில் எந்த ஆற்றல் மூலமும் முடியாது எனக் காண்கிறார். இப்படி உணர்வது ஒரு பெரிய முன்னேற்றமாகும்.

உண்மையிலேயே இந்தப் படியைத் தாண்டி னால் ஒழிய வருங்கால வாழ்வின் தேவை உண்மையானது என்று உணரவே முடியாது.

ஆசிரியர், நோக்கத்தாலும், அனுபவத் தாலும், மனிதக் குறிக்கோள்களில் பயனே இல்லை என்பதைவிட அவற்றில் நிலை யான நன்மையின் நிறைவு இல்லை என்று கண்டறிந்தார். நிலையான இன்பத்திற்காக, விண் வீட்டிற்காக மனித இதயம் ஏங்குவதை மறக்க முடியாத தெளிவோடு உணர்ந்து எடுத்துக்கூறிய நீடித்த பெருமை திருவுரை யாளருக்கு உரியதாகும். வருங்கால வாழ் வின் தன்மை பற்றி ஆசிரியர் அறிந்திருந் தால், புனித அகுஸ்தினாரைப்போல் ''ஆண் டவரே, உம்மில் இளைப்பாறும் வரை எங் கள் இதயம் அமைதியற்று இருக்கிறது'' என்று கூறியிருப்பார். ஆனால், அகுஸ்தினா ருக்கு அளிக்கப்பட்டதுபோல் இந்த ''அமைதி யற்ற இதயத்திற்கு'' இன்னும் வெளிப் பாடு அளிக்கப்படவில்லை. ஆகவே தன் இதயத்தின் ''காலமின்மையும்'', உண்மை யான நிறைவுக்கான ஏக்கமும், அவரது ஆசை களின் நிறைவும், இறைவனின் காலமின் மையிலும், அடித்தளமற்ற ஆழத்திலும் மூழ்கி நிறைவு பெறும் என்று ஆசிரியர் அறிந்திருக்கவில்லை. அதற்கு யூத விசுவா சம் இன்னும் காத்திருக்க வேண்டும்.

இறுதியாக, ஆசிரியர் துர்நம்பிக்கைவாதி யல்லர். ஆனால் துர்நம்பிக்கை பற்றி எழுதிய சிந்தனையாளர். ஏனெனில் அவர் படைப் பில் மகிழ்ச்சி கொள்கிறார் (11:7). மனித னின் இறுதி முடிவான இறைவனின் முன் னறிவில் நம்பிக்கை கொண்டு உள்ளார் (6:10; 12:7). மனிதனால் கண்டுபிடிக்க முடியாவிட் டாலும், இறைவன் உலகிற்கு ஒரு திட்டம் கொண்டிருக்கிறார் என்று அறிந்திருக்கிறார். அவர் ஓர் உண்மைவாதி. யோபு திறந்து காட்டிய இருண்ட புதிர் நெறியில் மேலும் ஆழமாக மூழ்கி எழுகிறார். அவரும் ஒரு வழி கண்டுபிடிக்க வீணான முயற்சி செய்தா லும், இறைவனில் கொண்டுள்ள விசுவா சத்தை நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட முறை யில் பற்றிக் கொள்கிறார். நீதியுள்ள இறைவ னில் விசுவாசம் கொண்ட, அவரது அருள் பாலிப்பில் உறுதியான நம்பிக்கை கொண்ட சமய வாதி ஆவார். அநீதியும், மடமையும் துன்பமும், சாவும் அவரது விசுவாசத்திற்கு ஆபத்து விளைவிக்கவில்லை. பதிப்பாசிரிய ரால் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாகக் கரு தப்படும் முடிவுரை (12:13-14) ஆசிரியரது ஆழ்ந்த மன உறுதியைப் பிரதிபலிக்கிறது. ''கடவுளுக்கு அஞ்சிநட! அவருடைய கட்ட ளைகளுக்குக் கீழ்ப்படி! மனிதன் படைக்கப் பட்டநோக்கம் இதுவே. நாம் செய்யும் ஒவ் வொரு செயலுக்கும், மறைவான செயலுக் குங்கூட, அது நல்லதோ தீயதோ, எதுவாயி னும் அனைத்திற்கும் கடவுளே தீர்ப்பு வழங் குவார்!''

11. இக்காலத்திற்கு: எக்காலத்திற்கும் திரு வுரையாளர் அளிக்கும் அடிப்படைச்செய்தி கடினமானாலும் எளியது. இவ்வுலகும், இவ்வாழ்வும் அதன் இன்பங்களும், வியப்பு களும் மனிதனின் அமைதியற்ற இத யத்தை நிறைவுபடுத்தமுடியாது. யோபு மனித துன்பத்தில் அக்கறை கொள்வது போல், திருவுரையாளர் அடிமட்டத்தில் மனிதனின் மகிழ்ச்சி பற்றி அக்கறை கொள் கிறார். இந்த உலகில் எந்த நிலையான, உறுதியான, பாதுகாப்பான இன்பத்தையும் அவரால் காண முடியவில்லை. மனிதன் உலகையெல்லாம் அடைந்தாலும், எல்லாச் செல்வங்களையும் கொண்டிருந்தாலும், அவனது ஆசைகளையெல்லாம் அனுபவிக்க முடிந்தாலும், அப்போது கூட அவன் நிறைவு அடையமாட்டான். அவன் முழுமை யான மகிழ்ச்சி அடையமாட்டான். அவ னது ஆசைகளையும், ஏக்கங்களையும் எது வும் நிறைவு செய்ய முடியாது. இவற்றை ஆசிரியர் உறுதியாக எடுத்துக் கூறுகிறார்.

ஆகவே திருவுரையாளர் வருங்கால வாழ்வு பற்றிய வெளிப்பாட்டைக் கோரு கிறார். ஆனால் அந்த வெளிப்பாடு, கிறிஸ்து வுக்கு முந்திய இரு நூற்றாண்டுகளில்தான், தானியேல் (12:2-3), 2-ஆம் மக்கபேயர் (6-7), ஞான நூல் (2-5) ஆகிய நூல்களிலும், நற்செய்தியிலும் யூதர்களுக்குக் கொடுக்கப்

படும். ஆகவே விடை காணமுடியாத தமது பிரச்சனைக்கும், தமதுநிறைவு அடையாத ஏக்கங்களுக்கும் விடை காணாது, நூலின் முடிவில் வரும் ''இவையனைத்தையும் தொகுத்து முடிவுரையாக ஒன்று கூறு கிறேன்: கடவுளுக்கு அஞ்சிநட; அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படி. மனிதன் படைக்கப்பட்ட நோக்கம் இதுவே'' (12:13) என்ற விசுவாசப் பிரமாணத்தோடு தற்சமயத் திற்கு நிறைவு கொள்ள வாசகர்களைத் தூண்டுகிறார்.

ஏற்புடைமைக்கு இது போதுமானது. ஏனெனில் ''நான் என் தந்தையின் கட்டளை களைக் கடைப்பிடித்து அவருடைய அன் பில் நிலைத்திருப்பதுபோல் நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன் பில்நிலைத்திருப்பீர்கள்'' என்று இயேசுவே கூறியுள்ளார். ஆனால் திருவுரையாளரது வேதனையுற்ற இதயத்திற்கு இது போதுமான தன்று; இறுதியான வார்த்தையுமன்று. அவர் கேட்டு மகிழ்ந்திருக்கக்கூடிய இறுதி வார்த்தை கிறிஸ்துவினுடையதே: ''என் தந் தையின் இல்லத்திலே உறைவிடங்கள் பல உள்ளன. இல்லாதிருந்தால் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஏனெனில் உங்களுக்கு ஓரிடம் ஏற்பாடு செய்யப் போகிறேன். நான் போய் உங்களுக்கு ஓரிடம் ஏற்பாடு செய்த பின், திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர் கள்'' (யோவா 14:2-3).

திருவெளிப்பாடு நூல் (REVELATION, BOOK OF)

1. இது விவிலியத்தின், மற்றும் புதிய ஏற்பாட்டின் கடைசி நூலாகும். முன்பு காட்சி யாகமம் என்றும் அழைக்கப்பட்டது. காட்சி இலக்கிய அல்லது வெளிப்பாட்டு இலக்கிய மொழியிலும் நடையிலும் எழுதப் பட்டுள்ள ஒரே புதிய ஏற்பாட்டு நூல்.

2. ஆசிரியர்: இந்நூல் ஆசிரியர் நான்கு இடங்களில் தன்னை யோவான் என்று அறி முகப்படுத்துகிறார் (திருவெளி 1:1.4.9; 22:8). தன்னைக் கிறிஸ்துவின் ''அடியான்'' என்றும், ஆசியத்திருச்சபைகளின் ''உங்கள் சகோதரன்'' என்றும் கூறுகிறார் (1:1.9). இவரே அப் போஸ்தலரான யோவான் என்றும், நான் காம் நற்செய்திக்கும் யோவானின் மூன்று திருமுகங்களுக்கும் ஆசிரியராவார் என்றும் இரண்டாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவப் பாரம் பரியம் ஏற்றுக் கொண்டது. உரோமையைச் சேர்ந்த மறைசாட்சி யூஸ்தின் (கி.பி 155), இரேனியு (175) ஆகியோர் இக்கருத்தைக் கொண்டிருந்தனர். இதைப்பின்பற்றி, இப் போலித்து, தேர்துல்லியன், ஓரிசன் என்பவர் களும் இதே கருத்துக் கொண்டிருந்தனர். லூக்கா நற்செய்திக்கு எழுதிய மார்சிய னுடைய முன்னுரையும் இதற்குச் சான்றுகூறும்.

இக்கருத்துக்கு மாறான கருத்து மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்தது. காயு என்ற உரோமைக்-குரு, திருவெளிப்பாடு நூல், செரிந்து என்ற பதிதன் கபடமாக எழுதிய நூலாகும்; ஏனெனில் ''ஆயிர மாண்டு நற்காலம்'' பற்றிய கருத்துகளைக் கொண்டிருக்கிறது என்று கூறினார். சாலமின் எப்பிபானியு என்பவர் (கி.பி. 315-403) மற்ற அப்போஸ்தல நூல்களுக்கு மாறான கூற்றுக் களைக் கொண்டிருக்கிறது என்ற அடிப் படையில், திருவெளிப்பாட்டு நூலைச் செரிந்து எழுதியதாக ''மோந்தனிசத்தைச்'' சேர்ந்த ஒரு குழுவினர் கூறியதாக எழுதிவைத்துள் ளார். திருவெளிப்பாட்டு நூலுக்கு அப் போஸ்தலர் யோவான்தான் ஆசிரியர் என்ற கருத்தை மிகவும் எதிர்த்தவர் அலக்சாந்திரிய ஆயரான தெனிசு என்பவராவார் (264). இந்நூல் இறைஏவுதல் பெற்ற ஒரு புனிதரால் எழுதப்பட்டிருக்கலாம்; ஆனால் அப்போஸ் தலரான யோவானால் அன்று. ஏனெனில் நடையிலும் இறையியல் அழுத்தத்திலும் இந்நூல் யோவானின் பிறநூல்களிலிருந்து வேறுபடுகிறது என்றார். மேலும்,யோவான் என்ற பெயர் விசுவாசிகளிடையே வழக்கி லிருந்த ஒரு சாதாரணப்பெயர். ஆகையால் ஆசிரியரை அடையாளம் காட்டுவது கூடிய தன்று என்றார். பப்பியஸ் (130) ஆண்டவ ரைப்பற்றிய தனது சிந்தனைத் தொடரில்

அப்போஸ்தலரான யோவான், ''மூப்பரான யோவான்'' என்று இருவரைக் குறிப்பிடு கிறார். இந்த இருவரில் ஒருவர் திருவெளிப் பாட்டு நூலுக்கும் மற்றவர் பிற யோவான் நூல்களுக்கும் பொறுப்பாவர் அல்லது அப் போஸ்தலரின் மற்றொரு சீடர் இந்நூல்களை எழுதியிருக்கலாம் என்ற கருத்துத் தோன்றி யது. இப்பிரச்சனையில் யூசேபியு தயக்கம் காட்டினாலும் தெனிசின் கருத்தை ஏற்றுக் கொள்கிறார். இவர் கூற்றுப்படி, முதல் நூற் றாண்டின் இறுதியில், யோவான் என்ற பெயர் கொண்ட ஒரு கிறிஸ்தவரை அப் போஸ்தலரான யோவான் எபேசுக்கு ஆய ராக நியமித்தார். இது, நூல் ஆசிரியரின் பெயர், அதிகாரம், சிறிய ஆசியாவின் சமயச் சூழ்நிலை ஆகியவற்றை விளக்க உதவலாம். எருசலேமைச் சேர்ந்த சிரில், நாசியான்சென் னைச் சேர்ந்த கிரகோரி ஆகியோர் திரு வெளிப்பாட்டுநூலை இறைஏவுதல் பெற்ற நூலாக ஏற்றுக் கொள்ளவில்லை. கிறிசோஸ் தோம் இந்நூலைக் குறிப்பிடவில்லை. சீரி யக்கு வாசகத்தில் இந்நூல் காணப்பட வில்லை.

மேலும், இப்பிரச்சனை மேலும் சிக்கலா கிறது. செபதேயுவின் மகனான யோவான் சிறிய ஆசியாவிற்குச் சென்று அங்கு கி.பி. 95-வரை வாழ்ந்தார் என்று உறுதியாகக் கூற முடியாது. செபதேயுவின் மகனான யோவான், அநேகமாக 70-க்கு முன்பே மறை சாட்சியாக மரித்தார் என்ற ஒரு பாரம்பரியம் இருக்கிறது. இஃதோடு இப்போது நான்காம் நற்செய்தியை அப்போஸ்தலரான யோவான் தான் எழுதினாரா என்ற பிரச்சனை எழுந் துள்ளது. இது பற்றிப் பல கருதுகோள்கள் தோன்றியுள்ளன. இவையும் பிரச்சனையை மேலும் சிக்கலாக்குகின்றன.

திருவெளிப்பாட்டுநூலை அப்போஸ்தல ரான யோவான்தான் எழுதினார் என்ற தொடக்ககாலத் திருச்சபையின் ஒரே சீரான பாரம்பரியத்திற்குமுன் இந்த எதிர்ப்புக்கருத் துகள் ஒரு துளியே என்று கூறலாம். இந்த எதிர்ப்புக்கருத்துகள் எதிர்மாறான பாரம் பரியத்தை அடிப்படையாகக் கொண்டவை யன்று; மாறாக விளக்கவுரை, நடை, கோட் பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

இனி, திருவெளிப்பாட்டு நூலுக்கு அப் போஸ்தலரான யோவான்தான் ஆசிரியர் என்ற கருத்துக்கு எதிர்ப்பாளர்களின் காரணங் களையும் அவற்றிற்குச் சார்பாளர்கள் அளிக்கும் பதிலையும் சுருக்கமாகக் காண் போம். அ) ஆசிரியர் தன்னை வெறுமனே கிறிஸ்துவின் அடியார் என்று மட்டும் குறிப் பிடுகிறார். இவர் அப்போஸ்தலர்களையும் இறைவாக்கினர்களையும் வேறுபடுத்தினா லும், தான் ஒரு அப்போஸ்தலர், கிறிஸ்து வின் சீடர் அல்லது ஓர் இறைவாக்கினர் என்று உரிமை கொண்டாடவில்லை.

பதில்: திருவெளி *18:20; 21:14*-இல் திருச் சபையில் அப்போஸ்தலர்களின் முக்கிய இடம் குறிக்கப்படுகிறது. அவர்களில் தன்னை ஆசிரியர் உள்ளடக்கவில்லை. ஆனால் பவுல் *1* கொரி *12;28;* எபே *4:11*-இல் இதையே செய்கிறார். மற்ற இடங்களில் பவுல் தனது அப்போஸ்தலர்த் தன்மையை வலியுறுத்துகிறார். உ-ம் *1* கொரி *15:9.* இந்நூல் ஆசிரியர் திருச்சபை அமைப்பைப் பரந்தவிதத்திலேயே விவரிக்கிறார்.

ஆ. இந்நூலை யோவானின் மற்ற நூல் களோடு ஒப்பிடுகையில், நடையிலும் கிரேக்கச் சொற்களிலும் பலத்த வேறுபாடு கள் காணப்படுகின்றன. இந்த வேறுபாடு கள் எவ்வளவு வலுவானவையென்றால், இவைகளை எழுத வெவ்வேறு செயலர்கள் அல் லது எழுத்தர்கள் பயன்பட்டது, அல்லது கால வேறுபாடு ஆகியவற்றால் விளக்க முயல்வது அவ்வளவு முனைப்பாக இல்லை.

பதில்: ஆசிரியர் வெளிப்பாட்டு அல்லது காட்சி இலக்கிய வடிவத்தைப் பயன்படுத்து கிறார். அதற்கேற்றவாறு நடையும் சொற் றொகுதியும் இலக்கணமும் மாறுபடுகின்றன. ஆனால் இதுவோ, ''தேவ ஆவியால் என்னை ஆட்கொண்டது'' என்பதோ இலக் கண மற்றும் மொழியுருவக் கோளாறுகளை விளக்கவில்லை. வெளிப்பாட்டு நூலின்

இலக்கணம் பலவகையில் கோயினே மொழியிலிருந்து வேறுபடுகிறது. விவரங்களில் ஒழுங்கின்மை காணப்பட்டாலும், நூலை முழுமையாக நோக்கும்போது கவரத்தக்க ஒழுங்கமைவு காணப்படுகிறது.

இ. நற்செய்தியில் காணப்படும் சில முக்கிய கருத்துக்கள் இந்நூலில் காணப்படவில்லை. சில கருத்துகளில் காணப்படும் ஒற்றுமை இரண்டும் சார்ந்துள்ள முந்தைய கிறிஸ்தவப் பாரம்பரியத்தாலோ சுதந்தரமான யூதப்பாரம்பரியத்தாலோ விளக்கப்படலாம்.

பதில்: நற்செய்தியில் காணப்படும் ஒளி, இருள், உண்மை போன்ற முக்கிய கருத்துக்கள் இந்நூலில் காணப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் இரண்டுக்கும் பொதுவான கருத்துக்கள் பலவுள்ளன: திராட்சைக்கொடி, ஆயன், செம்மறி, மணமகள், வாழ்வின் நீர், வெற்றிவீரரான கிறிஸ்து, வார்த்தையான கிறிஸ்து போன்றவை. திருவெளி 1:7-இலும் யோவா 19:37-இலிலும் செக் 23:10 என்ற வாசகம் பயன்பட்டுள்ளது. வலுவான புறச்சான்றுகளின் பாரம்பரியத்தையும் உள்ளார்ந்த சிக்கல்களையும் சேர்த்துக் கவனத்தில் கொண்டு, திருவெளிப்பாடும் யோவானின் மற்ற நூல்களும் அப்போஸ்தலரான யோவானின் ஆதிக்கத்தில் தோன்றியவை என்று ஏற்றுக்கொள்வது அறிவு சார்ந்ததாகும். இது ஐந்நூலுக்கு மோசே ஆசிரியர் என்ற கூற்றுக்கு ஒத்ததாகும். ஐந்நூலின் இறுதிப்பதிப்புக்குக் காலத்தால் நெருங்கியிருப்பதைவிட அப்போஸ்தலரான யோவான் அவரை ஆசிரியராகக் கொண்ட நூல்களுக்குக் காலத்தால் மிக நெருங்கியவர்.

இந்நூலுக்கு ஆசிரியர் யார் என்ற பிரச்சனையைப் பெரும்பாலான அறிஞர்கள் முடிவு காணாக் கேள்வியாகவே விட்டுவிட விரும்பி வாசகச் சான்றிலிருந்து இந்நூலின் ஆசிரியர் யோவான் என்ற பெயருடைய யூத-கிறிஸ்தவ இறைவாக்கினர் ஆவார் என்றும் மற்றப்படி இவரைப்பற்றி வேறொன்றும் தெரியாது என்றும் கூறுவர். நூலின் அதிகாரம் வாசகத்தின் ஆக்கத்தன்மையிலும், திருச்சபையால் தனது திருமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது என்பதிலும் அடங்கியிருக்கிறது.

3. திருமுறைப்பட்டியலில்: ஆசிரியர் யார் என்பதும் புனித நூல்களின் பட்டியலில் ஏற்றுக் கொள்ளப்படுவதும் வெவ்வேறான பிரச்சனைகளாகும். திருவெளிப்பாட்டுநூல், கிழக்கத்திய திருச்சபையை விட மேற்குத் திருச்சபையால் அதிகத் தயாராக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டில், நூலில் காணப்படும் ''ஆயிரமாண்டு நற்காலம்'' பற்றிய கொள்கைக்காக சிறிய ஆசியாவைச் சேர்ந்த அறிவியல்வாதியான ''அலோகி'' என்பவர் இந்நூலை நிராகரித்தார். அலக்சாந்திரியாவின் தெனிசு, யூசேபியு ஆகியோர் இந்நூலுக்கு அப்போஸ்தலர் யோவான் ஆசிரியராவார் என்று ஏற்றுக் கொள்ள மறுத்தனர். நான்காம் நூற்றாண்டைச்சேர்ந்த அத்தனாசியு என்பவர் அப்போஸ்தலரான யோவான்தான் இந்நூலுக்கு ஆசிரியர் என்பதை வெகுவாக ஆதரித்தார். இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்று மேற்கில் கார்த்தேசில் நடந்த மூன்றாம் சங்கத்திலும் (397), கிழக்கில் கான்ஸ்தாந்தில் நடந்த சங்கத்திலும் (680) ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வப்போது, இங்கு மங்குமாகக் கருத்துவேறுபாடுகள் தோன்றினாலும் திருச்சபை ஒரேசீராக இந்நூல் திருமுறைப் பட்டியலைச் சேர்ந்ததாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. திருறைப்பட்டியலைப் பற்றிய திரிதெந்தின் சங்கச் சட்டம் இதற்கு முடிவுகண்டது.

4. இலக்கியப்பண்புகள்: புதிய ஏற்பாட்டிலே திருவெளிப்பாட்டுநூல் தனித்தன்மையுடையது. நற்செய்திகளும் அப்போஸ்தலப் பணிநூலும், பெரும்பகுதி உண்மையான நிகழ்ச்சியுரைகளைக் கொண்டவை. திருமுகங்கள் உரைநடையில் விளக்கவுரைகளையும் அறவுரைகளையும் கொண்டுள்ளன. திருவெளிப்பாடு இவற்றிலிருந்து வேறுபாட்டு ஒரு தனிப்பட்ட உரைநடையில் உள்ளது; சாதாரணமாய் மனித உயிர்கள்

காணாத அசாதாரணக் காட்சிகளையும், கேளாத குரலொலிகளையும் கொண்டுள்ளது. இது புதிய ஏற்பாட்டில் தனித்தன்மையுடையதாயினும், பழங்கால உலகில் அத்தகையதன்று. இத்தகைய வாசகங்கள் பழைய ஏற்பாட்டிலும் மற்ற யூத இலக்கியங்களிலும், கிறிஸ்தவத் திருமுறை சாராத இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இந்நூல் தன்மையால் வெளிப்பாட்டு இலக்கியத்தைச் சேர்ந்தது. ஆனால் அஃதேபோது இறைவாக்குகளோடும், கடித வடிவங்களோடும், நாடக வடிவத்தோடும் அடையாளவியலோடும் தொடர்புடையது.

அ. வெளிப்பாட்டு இலக்கியம் நீண்ட வரலாற்றையுடையது. இதுபற்றி வெளிப்பாட்டு இலக்கியம் என்ற தலைப்பின்கீழ் வாசித்தறியலாம். இங்குச் சுருக்கமாகத் தருகிறோம்.

1) பொதுவாக: இந்த இலக்கியம் உலக வரலாற்றுப் போக்கை உருவகமாக விளக்கும் யூகச் சிந்தனைகளாகும். இது உலக முடிவையும் வெளிப்படுத்துகிறது. இது, இறப்பு, தீர்ப்பு, சன்மானம், தண்டனை ஆகிய இறுதிக்காரியங்கள் பற்றிய வளர்ச்சியடைந்துள்ள இறுதிக்கால இறையியலைக் கொண்டுள்ள சமயங்களில் காணப்படுகிறது. இந்த யூகச்சிந்தனைகள் இந்தியாவிலிருந்து இரானிய சமயச் சிந்தையைப் பாதித்து, பின் பழைய ஏற்பாட்டையும் பாதித்துள்ளதாகத் தெரிகிறது. எசேக்கியேலின் இறைவாக்கு நூல், நாடு கடத்தப்பட்ட காலத்தில், பாபிலோனுக்கு அருகில் எழுதப்பட்டது. எசாயாவின் சிலபகுதிகள் நாடு கடத்தப்பட்ட காலத்திலும் அதற்குப்பின்னும் எழுதப்பட்டன என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2) யூதத்துவத்தில்: இத்தகைய இலக்கியங்கள் கி.மு. 200 - கி.பி. 100-க்கு இடைப்பட்ட காலத்தில் வெகுவாக வளர்ந்தன. இந்த இலக்கியங்கள் இரு யுகங்களை விவரிக்கின்றன. வரலாறு இறைவனுடைய கைகளில் உள்ளது. மற்றும் அவரது திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமென்றாலும் முதலாம் யுகத்தில் தீய சக்திகள் கட்டுக்கடங்காத விதத்தில் செயல்படுகின்றன. இரண்டாவது யுகமாகிய புதிய யுகத்தில் மெசியா வந்து அவரது அரசை நிறுவுவார். ஆழ்ந்த விசுவாசங்கொண்ட யூதன் இறைவனுடைய வாக்குறுதிகள் நிறைவேறவில்லை என்பதை நன்கு உணர்ந்திருந்தார். இறைவாக்குரைத்தல் முடிந்துவிட்டது; அதாவது இறைவனிடமிருந்து உண்மையான, அதிகாரபூர்வமான செய்திகள் இல்லை *(1 மக் 4:46; 9:27; 14:41)*. பல நூற்றாண்டுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பாபிலோன், பாரசீகம், கிரேக்கம், எகிப்து, சிரியா, உரோமை ஆகிய அந்நியர்களின் ஆட்சியின் கீழ் வாடினர். ஆனால் வெளிப்பாட்டு நூல்கள் மகிழ்ச்சிமிக்க மெசியாவின் வருங்காலத்திற்கு மக்களின் கவனத்தைச் செலுத்தச் செய்தன. இறைவன் தம் வாக்குறுதிகளுக்குப் பற்றுறுதியாக இருக்க வேண்டும். வெளிப்பாட்டுநூல்கள், இறைவனது பற்றுறுதியில் கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசத்தில் வேரூன்றியவையாகும். கருத்துகளும் உருவகங்களும் பழைய ஏற்பாட்டிலிருந்தே எடுத்துக் கையாளப்பட்டன. ஆசிரியர்கள் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளை அவற்றின் சொற்பொருளில் எடுத்துக் கொள்கின்றனர். வெளிப்பாட்டு இலக்கியம் இறைவாக்கின் தொடர்ச்சியாகக் கருதப்படலாம். இரண்டையும் தெளிவாகப் பிரித்துக்காட்டுவது கடினம். இவ்விலக்கியத்தின் ஒரு பண்பு கனவுகளிலும் காட்சிகளிலும் செய்தித் தொடர்பு கொள்வது. அடையாள எண்கள் பயன்படுகின்றன. காட்சிகள் தெளிவில்லாமல் விவரிக்கப்படுகின்றன. எப்போதும் இந்நூல்களின் குறிக்கோள் ஆறுதல் அளிப்பதும் உற்சாகப்படுத்துவதுமாகும். அண்ட அதிர்வுகள் இறைவாக்குப் பண்புகளைச் சேர்ந்தவை. இவற்றை வெளிப்பாட்டு இலக்கியம் எடுத்துக் கையாளுகிறது. இஃது ஓர் இலக்கிய வகைதான். அது கூற விரும்புவது, ஒரு யூகம் முடிவுக்கு வருகிறது அல்லது மற்றொரு யூகம் தொடங்குகிறது; அல்லது இரண்டும் சேர்ந்து நடக்கின்றன என்பது தான்.

வெளிப்பாட்டு இலக்கியம் வரலாற்றுச் சூழ்நிலையிலிருந்து தோன்றுகிறது. அதனின்று அதைப்பிரிக்க முடியாது. வரலாற்றை வெளிப்பாட்டு இலக்கியம் பயன் படுத்துவது பற்றி மூன்று கருத்துகளை நாம் கவனிக்க வேண்டும் (அ) பயன்பட்டுள்ள பொருள்கள் எந்த அளவிற்கு உண்மையான வரலாற்றைச் சேர்ந்தவை? (ஆ) எந்த அடிப் படையில் நிகழ்ச்சிகள் தேர்ந்தெடுக்கப்படு கின்றன, வகுக்கப்படுகின்றன? (இ) எந்த விதத்தில் நிகழ்ச்சிகள் மாற்றிஅமைக்கப்பட் டுள்ளன?

விவிலிய வெளிப்பாட்டு இலக்கியத்தில் காட்சிகள் இலக்கியக் கற்பனையாக இருக்க லாம். இதனால் உண்மையின் தவறின்மை பாதிக்கப்படவில்லை. இறைவனால் அளிக் கப்படும் வெளிப்பாடு ஒருபுறம். அதைஎடுத் துக்கூறும் முறை மற்றொரு புறமாகும். வெளிப்பாட்டுச் செய்தியில் உள்ள உண்மை இரண்டாந்தரச் சூழ்நிலைகளால் அவை உண்மையானவையோ,· கற்பனையான வையோ பாதிக்கப்படுவதில்லை.

3) திருவெளிப்பாட்டு நூல்: ''இது இயேசு கிறிஸ்து அருளிய வெளிப்பாடு....'' என்று தொடங்குகிறது. இக்கூற்று, இறைவன், இயேசுகிறிஸ்து, யோவான், இந்த வாசகம் ஆகியவர் வழியாக விண்ணகம் மற்றும் மண்ணகம், கடந்த நிகழ்கின்ற மற்றும் வரும் காலங்கள் ஆகியவை பற்றிய இரகசியங் களைத் திறந்து காட்டுகிறார்; வெளிப்படுத்து கிறார் என்ற கருத்தைக் கூறுகிறது. திரு வெளிப்பாட்டு நூல் யூத வெளிப்பாட்டு இலக் கிய மரபில் எழுதப்பட்டுள்ளது. இவ்விலக் கியப் பண்புகளில் பலவற்றை இந்நூலில் தெளிவாகக் காணலாம்.

ஆ. இறைவாக்கு வடிவம்: இந்நூல் தன் னையே இறைவாக்கு என்று அழைத்துக் கொள்கிறது (1:3; 22:7.10.18-19). ஆசிரிய ரான யோவான் தன்னை ஓர் இறைவாக்கினர் என்று கூறிக்கொள்ளவில்லை. ஆனால் மறைமுகமாகச் சுட்டிக்காட்டப்படுகிறார். யோவானுக்குக் காட்சிகளைக் காட்டும் இடையாளராக இருக்கும் வானதூதர் ''இறை வாக்கினரான உன் சகோதரர்கள்'' என்று குறிப்பிடுகிறார் (22:9). மற்றொரு இடத்தில் ''நீ மீண்டும் இறைவாக்குரைக்க வேண்டும்'' என்று யோவானிடம் கூறப்படுகிறது (10:11). தொடக்காலத் திருச்சபையில் இறை வாக்குரைத்தல் ஒருமுக்கியமான நிகழ்ச்சியா கும் (1 கொரி 11:2-16; 14:1-40; மத் 7:22; 10:41; அ.ப. 21:9; 1 திமொ 1:18; 4:14). ஆகவே தொடக்க காலக் கிறிஸ்தவ இறை வாக்குரைத்தலின் பின்னணியில் இந்நூலைப் புரிந்து கொள்ள வேண்டும். நூலின் பெரும் பகுதி வெளிப்பாட்டு இலக்கிய வடிவில் இருந்தாலும், அதில் இறைவாக்கு வடிவம் கொண்ட பல பகுதிகள் உள்ளன.

இ. கடித வடிவம்: நூலின் தொடக்கம் படர்க்கையில் அமைந்துள்ளது (1:1-3). ஆனால் நூலின் பெரும்பகுதி தன்மை ஒருமையிலேயே அமைந்துள்ளது. படர்க்கையி லிருந்து தன்மைக்கு மாறும்போது கடிதப் பண்புகள் புகுகின்றன (1:4). 1:4-5 என்ற பகுதி பழங்கால மாதிரிக் கடிதத்தின் கூறு களைக் (அனுப்புபவர், பெறுபவர், வாழ்த் துரை) கொண்டுள்ளது. சிலசமயம் வாழ்த்துரை யில் நன்றியுரையோ ஆசீரோ சேர்க்கப் படும். இந்நூலில் வாழ்த்துரையையடுத்துப் போற்றுரை வருகிறது. இதுஒருவகை வழி பாட்டுக் கூறாக இருக்கலாம். இந்த முன் னுரை கலா 1:3-5-இல் வரும் வாழ்த்துரை மற்றும் போற்றுரைக்கு ஒத்ததாக உள்ளது.

போற்றுரையை அடுத்துக் கடிதத்தின் முக் கிய பகுதி வரும் மரபிற்கு மாறாக, இந்நூலில் இரு தனிப்பட்ட இறைவாக்குகளும் (1:7.8), பின்பு யோவானுக்கு இயேசுவின் வெளிப் பாடு பற்றிய அறிக்கையும் வருகிறது (1:9-3:22); அதன்பின் பிறகாட்சிகளும் கேட் டல்களும் (4:1-22:5) சில தனிக்கூற்றுகளும் (22:6-20) வருகின்றன. நூல் ஓர் ஆசீரோடு முடிகிறது. இது சாதாரணமாய் ஒரு கடி தத்தை முடிக்கும் மாதிரிமுறையாகும். ஆகவே கடிதம், திருவெளிப்பாட்டின் இலக் கிய வகையை நிர்ணயிக்கவில்லை. அத னால் இந்நூல் மூடப்பட்டிருக்கும் ஓர் உறை போன்றதே.

இவ்வடிவத்தை ஆசிரியர் ஏன் பயன்படுத்தினார்? ஒருவேளை அப்படிப்பட்ட அவசியம் ஏற்பட்டிருக்கலாம். மேற்குச் சிறிய ஆசியாவிலுள்ள சபைகளோடு நேரடியாகப் பேசி வந்த ஆசிரியர், பத்மு தீவுக்குநாடு கடத்தப்பட்ட பின்பு எழுத்து மூலமாகத் தான் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது எனலாம். ஒருவேளை அதிகாரபூர்வமான கிறிஸ்தவர் தலைவர்கள் கடிதங்கள் - திருமுகங்கள் - வழியாகத்தான் சபைகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம். ஒருவேளை யூத அல்லது உரோமை மாதிரிகளைப் பின்பற்றி, பவுல் இத்தகைய முறையை நிறுவியிருக்கலாம். இக்னாசியு, போலிக்கார்பு போன்ற திருச்சபைத்தந்தையர்கள் இந்தக் கடித அல்லது திருமுகத்தொடர்பு முறையைப் பின்பற்றியுள்ளனர். கடித வடிவும் வெளிப்பாட்டு வடிவும் சேர்ந்த பிற நூல்களும் கிடைத்துள்ளன.

ஈ. நாடகம் ஓர் இலக்கியமாகும். அதில் ஆசிரியர் காண்பவர்கள் முன்னே தனது பாத்திரங்களை உயிருள்ளவர்களாக நடமாடச் செய்கிறார். திருவெளிப்பாடு உண்மையில் ஒரு நாடக இலக்கியம் அன்று. அதிலே ஆசிரியர் தானே நிகழ்ச்சிகளை விவரிக்கிறார். ஆனால் இந்நூல் நாடகத்தோடு, குறிப்பாக, துன்பியல் நாடகத்தோடு தொடர்பு கொண்டுள்ளது. துன்பியல் நாடகத்தைப் போன்று, திருவெளிப்பாட்டின் பொருள் வீறார்ந்தது; பெரியது. கிரேக்கத் துன்பியல் நாடகத்திற்கு ஒத்தவாறு யோவான் தன் நூலை அமைக்கிறார். விண்ணகத்தையும் வரவிருப்பவைகளையும் விவரிக்கும் போது, யோவான் குழுக்களும் தனிநபர்களும் நேரடியாகப் பேசிக்கொள்வதாக அமைக்கிறார். இப்படிப் பேசப்படுபவை சில சமயங்களில் பாடல்களாகும் (5:8-10; 15:3-4). பெரும்பாலும் இப்பேச்சுக்கள் காட்சியில் கூறப்படும் நிகழ்ச்சிகளைப்பற்றி விளக்கம் அளிக்கின்றன (2:10-12; 16:5-7; 18:10. 16-17. 18-19). மகிழ்ச்சிக்கு அழைப்பு 18:20; 19:6-8-இல் காணப்படுகிறது. இவற்றில் எல்லாம் ஆசிரியர் கிரேக்கத் துன்பியல் நாடக அமைப்பை ஓரளவு பின்பற்றுவதாகத் தெரிகிறது. இந்த இலக்கியத்தின் நோக்கம் பயம், இரக்கம் ஆகியவற்றால் உணர்ச்சிகளைத் தூய்மைப்படுத்துதலாகும். திருவெளிப்பாடு அச்சத்தைத் தூண்டுகிறது. உலகில் விசுவாசி எதிர்கொள்ளும் ஆபத்துக்களைத் தெளிவுபடுத்துகிறது; வலியுறுத்துகிறது; பிரமாணிக்கமற்றவர்களுக்கு வரும் உலகில் காத்திருக்கும் பயங்கர விளைவுகளையும் சித்திரிக்கிறது.

இந்த நூலில் காணப்படும் நாடகப் பண்பை மேடை சார்ந்ததாகப் புரிந்து கொள்ளக்கூடாது. இந்த நிகழ்ச்சியில் கிறிஸ்தவர் வெறும் பார்வையாளர் அல்லர். அவர் பங்கு பெறுகிறார். அவர் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவரானதால், உறுதி பெற்ற கிறிஸ்தவன் இந்த நாடகத்தில் செயலாற்ற வேண்டும்; சொந்தமாகத் துன்புற வேண்டும். இப்போது நடந்து கொண்டிருக்கும் நாடகத்தில் அவரும் ஈடுபட்டிருக்கிறார். கிறிஸ்து மீண்டும் வரும்வரை இந்நாடகம் தொடர்ந்து கொண்டிருக்கும்.

உ. இரட்டிப்பு உரைகள், நிகழ்ச்சிகள்: ஏறக்குறைய எல்லாக் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் இருமுறை கூறப்படுகின்றன. நூற்று நாற்பத்திநாலாயிரம் (7:2-8; 14:1-5); விண்ணக மக்கள் (7:9-17; 15:2-5); 16 வாதைகள் (அதி. 8-9); ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் கொண்ட மிருகம் (13:1.8; 17:3.8); ஏழுதலைகளும் பத்துக்கொம்புகளும் அடையாளப்பொருள் (17:12-14.16-17); பாபிலோனின் வீழ்ச்சி அறிவிக்கப்படுதல் (14:8; 18:2-3); வீழ்ச்சியுற்ற நகரத்தைப்பற்றிய இரங்கற்பா (18:9-19; 18:22.23); அந்தவீழ்ச்சியின்போது மகிழ்ச்சி ஆரவாரம் (19:1-5; 18:20; 16:5-7); புற இன நாடுகளுக்கு எதிரான இறுதிக்காலப் போராட்டம் (19:11-20; 20:7-10); இறுதித் தீர்ப்பு (20:12.13); வருங்காலப் புதிய எருசலேம் (21:1-8; 21:9-22:5); தீயோர் நிராகரிக்கப்படுதல் (21:8-22:15); அதி 4-9 என்ற பகுதிக்கும் அதி 12-19 என்ற பகுதிக்குமிடையே இணைவுத்தன்மையுள்ளது; இவையாவும் விளக்கப்பட வேண்டும்.

ஆட்களும் பொருட்களும், ஏற்கனவே போதியமட்டும் விளக்கப்பட்டு விட்டாலும் முதல் தடவையாக வருவதுபோல் தோன்று கின்றன; ஒரு மிருகம் (13:1; 17:3.4); ஒரு செம்மறி (அதி. 5;14:1); பளிங்கு அல்லது கண்ணாடிக்கடல் (4:6; 15:2); இறைவனின் அரியணை (அதி 4-5; 21:11). இவற்றோடு சில முரண்பாடுகளும் உண்டு. 1) ஏழாவது எக்காளம் மூன்றாவது அழிவை அறிவிக் கிறது. ஆனால் அது நிகழவில்லை (11:14-18). 2) பெரிய வேசியின்மேல் தீர்ப்பு அறிவிக் கப்படுகிறது. ஆனால் அதன்பின் வருவது மிருகம் பற்றிய விவரிப்பாகும் (அதி 17). 3) மிருகத்தின் தலைகள் பேரரசர்களையும் (17:10), ஏழு குன்றுகளையும் (17:9) அடை யாளமாக உணர்த்துகின்றன. மிருகம் உரோமைப் பேரரசை அடையாளப்படுத்து கிறது; ஆகவே உயிருள்ளதாக இருக்கிறது (13:1.3.8). ஆயினும் ஏற்கெனவே மரித்து விட்ட பேரரசன் நீரோவையும் அடையாளப் படுத்துகிறது (17:8; 13:18). 4) கடலும் பாதாள மும் தாங்கள் அடைத்திருந்த இறந்தோரை வெளியேற்றும் முன்னரே (20:13), இறந்தோர் ஒன்று கூட்டப்பெற்றுத் தீர்ப்பிடப்படுகின்ற னர் (20:12). இந்த முரண்பாடுகள் விளக்கம் கோருகின்றன.

சூழ்நிலைக்குப் புறம்பான பகுதிகள் உள் ளன. 18:14 திடீரென்று படர்க்கையிலிருந்து முன்னிலைக்கு மாறுகிறது. 18:21-24-இல் வச. 21-ம் 24-ம் சேர்ந்து போக வேண்டும்; ஆனால் வச 22-23-ஆல் பிரிக்கப்படுகின்றன.

இந்தக் காரணங்களுக்காக இந்நூலின் இறைவாக்குப்பகுதியான அதி 4-22-இல் இரண்டு வெளிப்பாட்டுப் பகுதிகள் உள் ளன. மூலத்தில் இரண்டும் தனித்தனி யானவை; ஒரே வாசகமாக இணைக்கப்பட்டுள் ளன என்று கருத அறிஞர்களைத் தூண்டியுள் ளன. இரண்டும் அதே இலக்கியப் பண்புக ளுடையவை. ஒரே ஆசிரியரையும் கொண் டிருந்திருக்கலாம். ஆனால் வெவ்வேறு காலங் களில் எழுதப்பட்டவையாகும். இந்த இரு வெளிப்பாடுகளை வரையறை செய்வதில் சிலர் ஈடுபட்டுள்ளனர். வேறுசிலர் திரு வெளிப்பாட்டுநூல் கிறிஸ்தவ மயமாக்கப்பட்ட யூதநூலை அடிப்படையாகக் கொண்டது என்பர். இன்னும் சிலர் யூதத் தோற்றமுடைய இரண்டு அல்லது மூன்று வெளிப்பாடுகளை ஒரு கிறிஸ்தவர் பொருத்தமில்லாமல் இணைத்திருக்கிறார் என்பர். இப்போது ஆய் வாளர்கள் நூல்முழுவதும் காணப்படும் நடையில் உள்ள ஒற்றுமையை ஏற்றுக்கொள் வர். இவர்கள் இந்நூலுக்கு ஒரே பதிப்பாசிரி யரை ஏற்றுக் கொள்வர். இவர் தனக்கு முன் இருந்தவற்றைத் தன்நடையில் கிரகித்து, வேறுபட்ட மூலங்களில் காணப்பட்ட வேறு பாடுகளை அகற்ற முயற்சி செய்யாமல், அப்படியே பதிப்பித்துள்ளார் என்பர்.

உஊ. அடையாளங்களும் எண்களும்: நூலில் வரும் காட்சிகள் கருத்தை அடிப்படை யாகக் கொண்டன; அறிவுத்தன்மையுடை யன; காணக்கூடியன; கற்பனை செய்யக்கூடிய தல்ல. ஏழுதலைகளில் பத்துக் கொம்பு களைப் பகிர்ந்தமைப்பது எப்படி? அதி. 4-5-இல் வரும் பெரும் காட்சிகளில் என்றும் செயலாற்றும் இறைவனின் யாவும் கடந்த தன்மையும், வெற்றிவீரரான கிறிஸ்து வின் நித்திய மன்றாட்டும் எடுத்துக் கூறப் படுகின்றன. கிறிஸ்துவில் யாவும் ஒன்றிக் கப்படுகின்றன. அண்ட நிகழ்ச்சிகள் ஒரு யுகத்திற்குச் சாவுமணி அடித்து, மற்றொன் றைத் தொடங்கி வைக்கின்றன.

கண்கள் அறிவைக்குறித்தன. அதிகமான கண்கள் அறிவின் நிறைவைக்குறித்தன. கொம்பு ஆற்றலையும் அதிகாரத்தையும் நீண்ட ஆடை குருத்துவத்தையும், முடி அரச தன்மையையும், வெண்ணிறம் மகிழ்ச்சியை யும் தூய்மையையும் வெற்றியையும் குறித் தன. எண்கள்கூட அடையாளப் பொருளில் பயன்பட்டுள்ளன. நான்கு: மண்ணுலகின் நான்குமூலைகளிலும் நின்ற வானதூதர் நால் வர் (7:1); யூப்பிரத்திசு என்னும் பேராற்றி னருகே கட்டுண்டிருந்த தூதர் நால்வர் (9:14); மண்ணகத்தின் நான்கு திசைகள் (20:8); நான்கு உயிர்கள் (4:6). இந்த எண் அண்ட அமைப்போடு தொடர்புடையது. பன் னிரண்டு: மூலத்தில் இந்த எண் விண்மீன்கள்

பற்றிய சமயங்களோடு தொடர்புடையது. ஆனால் விவிலியத்தில் இப்பொருளில்லை. இவ்வெண் நிறைவின் அடையாளம் *(12:1)*: பன்னிரு இனத்தைக் குறிக்கும் *(14:1-5;* இறைவனின் மக்களின் எண்ணிக்கை *12 x 12 x 1000)*; நகரத்தின் பன்னிரு வாயில்களும் பன்னிரு விலையுயர்ந்த கற்களும் *(21: 12.14.21)*; 12000 ஸ்தேதிய நீளமும் அதே அகலமும் கொண்ட எருசலேம் சதுக்கம் *(21:16)*. இந்த எண் முழுமை பற்றிய கருத்தைச் சிறிது கொண்டுள்ளது. இந்நூலில் அடிக்கடி காணப்படுவது ஏழு என்ற எண்ணாகும்: ஏழுசபைகள் *(1:4:11)*; ஏழு ஆவிகள் *(1:4; 4:5; 5:6)*; ஏழு விளக்குகள் *(1:12.20;2:1)*; ஏழு விண்மீன்கள் *(1:16.20)*; ஏழு முத்திரைகள் *(5:1)*; ஏழு வானதூதர் கைகளிலுள்ள ஏழு எக்காளங்கள் *(8:2)*; ஏழு இடிகள் *(10:3)*; ஏழு கிண்ணங்களில் ஏழு வாதைகள் *(15:1.7;16:1)*. பழங்கால உலகில் ஏழு என்ற எண் நிறைவுடைமையை அடையாளமாக உணர்த்திற்று. பாபிலோன் சோதிடத்தில் ஏழு விண்மீன்கள் தேவதைகளாக வணங்கப்பட்டன. இவை அண்டத்தின் போக்கைக் கட்டுப்படுத்தியதாகக் கருதப்பட்டன. பாபிலோனும் அதன் சோதிடமும் எண்கள் பற்றிய அடையாளவியல் தோற்றத்திற்குத் தூர காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் அவர்களின் யூகங்கள் விவிலிய ஆசிரியர்களின் எண்ணப்போக்கில் இடம் பெறவில்லை. விண் கோள்கள் இறைவனுடைய படைப்புக்களே என்று யூதர்கள் கருதினர். மூன்றரை என்ற எண் துன்பம், மற்றும் வேத கலாபனைக்காலத்தைக் குறிக்கும்.

5. **காலமும் இடமும்:** இது ஒரு சிக்கலான பிரச்சனை. ஆசிரியர் பற்றிய கருதுகோள்களால் இப்பிரச்சனை மேலும் சிக்கலாக்கப்பட்டிருக்கிறது. கீழ்வருவது உண்மைக்கு நெருங்கியதாக இருக்கலாம் என்று கருதுகிறோம்.

யோவான் கிறிஸ்தவ மறைக்காகத் தான் சிறைப்பட்டிருந்த பத்மு தீவிலோ *(1:9)*, விடுதலையான பின் பிற்காலத்தில் எபேசிலோ இந்நூலை எழுதியிருக்க வேண்டும். அவர் சிறைப்பட்டிருந்த காலத்துத் துன்பமும், நூல்முழுவதும் விரவிக்கிடக்கும் மறைக்காகத் துன்புறும் சூழ்நிலையும் *(2:10.13; 3:10; 6:9; 17:6; 18:24; 19:2)*, மறைக்கு எதிராக நீரோ எழுப்பிய (கி.பி. 64-67) துன்ப காலத்தையோ (கி.பி. 64-67), தொமிசியன் காலத்தையோ (கி.பி. 95) சுட்டுகின்றன. அறிஞர் சிலர் முந்தைய காலக்கட்டத்திற்குச் சார்பாகப் பேசுகின்றனர். அறிஞரில் பலர் தொடக்க காலத்திருச்சபைத் தந்தையர்களின் பாரம்பரியத்தை ஏற்று, தொமிசியன் காலத்தில்தான் இந்நூல் தோன்றியது என்பர். *13:4*-இல் குறிக்கப்படும் பேரரசன் வழிபாடு நீரோவின் காலத்திற்குப்பின்தான் பொதுப் பழக்கமாயிற்று. அதி. *2-3*-இல் விவரிக்கப்படும் சபைகளின் இழிநிலையும் பின்னையக் கணிப்புக்கு ஆதரவாகக் கருதப்படுகிறது.

6. **அமைப்பும் திட்டமும்:** ஒவ்வொரு ஆய்வாளர்களின் கருதுகோள்களுக்கேற்ப இது மாறுபடும். கீழ்வரும் திட்டம் ஆசிரியரின் இலக்கிய அமைப்பு, தொகுத்துரைத்தல், ஏழு என்ற எண் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டது.

I. முன்னுரை *(1:1-3)*.

II. நாடகமுகப்பு *(1:4-8)*

III. அங்கம் 1:உலகில் திருச்சபை *(1:9-3:22)*.
- *1:9-20* : பின்னணி.
- *2:1-3:22* : ஏழுசபைகளுக்குச் செய்தி.

IV. அங்கம் 2:வரலாற்றில் இறைவனது நோக்கம் *(4:1-8)*.
- *4:1-5:14* : பின்னணி.
- *6:1-8:1* : ஏழு முத்திரைகள்.

V. அங்கம் 3: துன்புறும் திருச்சபை *(8:2-11:18)*.
- *8:2-6* : பின்னணி.
- *8:7-11:19* : ஏழு எக்காளங்கள்.

VI. அங்கம் 4: திருச்சபையின் மீட்பு *(11:19-15:4)*.
- *11:19* : பின்னணி
- *12:1-15:4* : ஏழு காட்சிகள்.

VII. அங்கம் 5: வேதனையுறும் உலகம் (15:5-16:21).

15:5-16:1 : பின்னணி.

16:2-21 : ஏழு கிண்ணங்கள்.

VIII. அங்கம் 6: உலகம் தீர்ப்பிடப்படுதல் (17:1-20:3).

17:1-2 : பின்னணி.

17:3-20 : ஏழு வாதைகள்.

IX. அங்கம் 7: ஆயிரமாண்டு நற்காலம் (20:4-22:5).

20:4-10 : பின்னணி.

20:11-22:5: இறைவனின் ஏழுவடிவத் திட்டம் நிறைவேறுதல்

X முடிவுரை (22:6-20).

XI. இறுதி ஆசீர் (22:21).

7. **விளக்கமுறையும் நோக்கமும்:** திருவெளிப்பாட்டு நூல் வெறுமனே அப்போஸ்தலிக்கச் செய்திதான். ஆனால் திருச்சபைக்கு ஒரு வரலாற்று இறையியல் அளிக்கும் நோக்கோடு இச்செய்தி வெளிப்பாட்டு இலக்கியத்தில் எழுதப்பட்டது. இதன் அடிப்படைச் செய்தி உயிர்த்த கிறிஸ்துவை நாசரேத்து ஊர் இயேசுவாகக் கண்டுணர்ந்து, அவரை இந்த உலக வரலாற்றின் ஆண்டவராக ஏற்றுக் கொள்வதாகும். மகிமையோடு ஆட்சிசெய்யும் கிறிஸ்து தனக்குத் தெளிவு அளித்துள்ளார் என்ற ஆசிரியரது விசுவாச உறுதிப்பாட்டில் தொடங்குகிறது இந்நூலின் விளக்கம். பெறப்படும் வெளிப்பாடே முக்கியமானது. அடையாளங்களும் எண்களும் பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் யூதப்பொருளில் விளக்கப்படலாம். இயேசு துன்பங்களின் வழியாகத் தீய சக்திகளின் மேல் வெற்றி கொண்டதுபோல், விசுவாசியும் செய்ய வேண்டும். இது மிக அவசியமாகும். ''மெசியா இப்பாடுகளைப்பட்டன்றோ மகிமையடைய வேண்டும்?'' (லூக் 24:26). ''என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள்; உங்களையும் துன்புறுத்துவார்கள்'' (யோவா 15:20). ஆகவே போராட்டம் தற்செயலான தன்று; எதிர்பார்க்காது நடப்பதன்று. முழுவதும் இணைக்க முடியாத இரு சக்திகளுக்கிடையே நடைபெறும் போராட்டமாகும். ''ஏன் அஞ்ச வேண்டும்?'' என்று காட்சியாளர் கேட்கிறார். ஏனெனில் கிறிஸ்து ஏற்கெனவே வென்று விட்டார். இந்த வெற்றிதான் விசுவாசிகளின் பலத்தின் ஊற்று. இதையே அவர்கள் தொடர்ந்து நோக்கிச் செயல் ஆற்ற வேண்டும்.

திருவெளிப்பாடு, புதிய ஏற்பாட்டு ஒளியில் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளை விளக்குகிறது. பழைய ஏற்பாட்டிலிருந்து சுட்டுதல்கள் கொண்டிராத ஒருவாக்கைத் திருவெளிப்பாட்டில் காண்பதுஅரிது. இந்நூல் தொகுப்பு நடையில் எழுதப்பட்டுள்ளது. அதாவது பழைய ஏற்பாட்டுச் சொற்களையும் தொடர்களையும் வாக்கியத்தின் அமைப்பிலேயே புகுத்திக் கையாள்வதாகும். இப்படிப்பட்ட சுட்டிக்காட்டல்கள் இந்நூலில் மிக அதிகமாக உள்ளன. இத்தகைய நடை ஓரளவு விளக்கத் தன்மையை உள்ளடக்கும். ஆகவே திருவெளிப்பாட்டு நூலைப் புரிந்து கொள்வதற்கு அதில்வரும் பழைய ஏற்பாட்டுச் சுட்டிக்காட்டல்களை அறிந்திருப்பதும் அவற்றைக் காட்சியாளர் பயன்படுத்தும் முறையை அறிந்திருப்பதும் மிக அவசியமாகும்.

''ககால் யாவே'' யாகிய பழைய ஏற்பாட்டு இறைமக்கள் இறைவனின் திருச்சபையை முன் உருவகப்படுத்தினர். சிலுவையில் அறையுண்டு உயிர்த்த கிறிஸ்து, மீட்பரும் நீதிபதியும் ஆகிய கிறிஸ்துவாகிய மூல நற்செய்தியை அமைக்கும் அந்த வரலாற்று மற்றும் இறையியல் உண்மைகளால் இறைமக்கள் இறைவனின் திருச்சபையாக ஆகின்றனர் (அதி-12). மெசியாவின், செம்மறியின் வெற்றி இஸ்ராயேலின் வெற்றியாகும். இதை நோக்கி இஸ்ராயேல் இயங்கியது. காலத்தில் நடந்ததும் அதேபோது உண்மையான காலம் கடந்ததுமாகிய இந்த வெற்றியே மனுகுலத்தின் சமய வரலாற்றிற்குத் திறவுகோலாகும். ஆகவே இது இறைவாக்குப் பகுதியின் தொடக்கத்தில் (அதி 4-5) அமைக்கப்படுகிறது. இறை மக்களின் துன்பங்கள் திருச்சபையின் துன்பங்களை உருவ

கப்படுத்துகின்றன. இது அதி.4-9-க்கும் அதி. 12-19-க்கும் இடையிலுள்ள இணைவுத் தன்மையை விளக்கலாம். இவற்றிற்கு ஆசிரியர், தன் அண்மை சேய்மைக்காலப் பின்னணிக் கேற்ப, வண்ணம் பூசுகிறார். மெசியாவின் துன்பங்களுக்கிடையில் திருச்சபை பிறக்கிறது. அவர் வந்து வெற்றியடைந்துவிட்டாலும், இத்துன்பங்கள் அவர் வரும்வரை தொடரும்.

ஆனால் திருவெளிப்பாட்டுநூல் உலகத்தினுடையவோ திருச்சபையினுடையவோ இறைவாக்கு வரைபடம் அன்று. அஃது ஒரு யுகத்தின் முடிவையும் மற்றொன்றின் தொடக்கத்தையும் பற்றிப் பேசுகிறது. தனது மனுவுரு எடுத்தல், பாடுகள், உயிர்ப்பு வழியாகக் கிறிஸ்து வெற்றி பெற்று விட்டார். புதிய யுகம் தொடங்கிவிட்டது. ஆனால் தொடக்கம்தான் கொண்டுள்ளது; தன் நிறைவை அடைந்துவிடவில்லை. இதுதான் இந்நூலிலும் புதிய ஏற்பாட்டிலும் காணப்படும் இடுக்கண் நிலை. விசுவாசி வெற்றி நிலையில் கிறிஸ்துவோடு ஒன்றித்து வாழ்கிறார். ஆனால் அந்த வெற்றியின் நிறைவை அடைந்து விடவில்லை. அவர்கள் இன்னும் துன்பப்பட வேண்டும். கிறிஸ்து வரும்வரை இந்நிலையே நீடிக்கும். இதுவே வரலாறு பற்றிய கிறிஸ்தவ தத்துவ இயல் அல்லது இறையியலாகும். தீமையின் சக்திகள் இறைவனுக்கு எதிராக எழுந்துகொண்டேயிருக்கும். ஏனெனில் இறைவன் இறைவனாக இருக்கிறார்; தீமை தீமையாகவே இருக்கிறது. திருவெளிப்பாட்டுநூல், காலம் கடந்த தன்மையைக் கொண்டிருந்தாலும், காலத்திற்குள் கட்டுப்பட்டுள்ளது. அது எழுதப்பட்ட காலத்திய நிகழ்ச்சியோடு தொடர்பில்லாமல் இல்லை. இவற்றிலிருந்து ஆசிரியர் பல உந்துதல்களைப் பெற்றார். பாலஸ்தீனப் போர் அப்போதுதான் முடிந்திருந்தது. எருசலேம் ஆலயம் அழிக்கப்பட்டுவிட்டது. யூதர்கள் சிதறிப்போயினர். இறைவனின் புதிய மக்கள் துன்புறுத்தப்பட்டனர். விசுவாசிகளுக்கு ஆறுதலும் உற்சாகமும் வேண்டியிருந்தது. இந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையில்தான் இந்நூலின் காலமில்லாச்செய்தி எழுதப்பட்டது. ''ஆயினும் தைரியமாக இருங்கள்; நான் உலகை வென்றுவிட்டேன்'' (யோவா 16:33). இந்த மனநிலையில் விசுவாசிகள் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் நோக்க வேண்டும்.

8. இறையியல் கருத்துகள்:

அ. இறைவன்: இந்நூலில் காணப்படும் இறைவன் பழைய ஏற்பாட்டின் யாவும் கடந்த இறைவனே! ''ஆண்டவராகிய கடவுள்''; அகரமும் னகரமும் ஆனவர் (திருவெளி 1:8); என்றும் இருப்பவர்; எல்லாம் வல்லவர். இந்த உண்மைகள் மீளவும் அதி.4-இல் அடையாள முறையில் எடுத்துக் கூறப்படுகின்றன. அதில் அவரது புனிதம் மும்முறை அறிவிக்கப்படுகிறது. அவர் அனைத்தையும் படைத்தவர் (4:11); புதிய படைப்பின் ஊற்று (21:5); அவரே வரலாற்று நாயகன். மக்கள் மனந்திரும்பும்படியாக வாதைகளை அனுமதிப்பவரும் அவரே 9:20). பாபிலோனைத் தீர்ப்பிடுபவரும் (18:1.8), எல்லாரையும் தீர்ப்பிடுபவரும் அவரே. தொடக்கமும் முடிவும் அவரே (21:6). தமது பிள்ளைகளுக்கு வாழ்வின் ஊற்றிலிருந்து நீர் அளிப்பவரும் அவரே (21:6-7). செம்மறியுடன் சேர்ந்து அவரே புதிய ஆலயம். இறுதிக்கால அரசின் நிறைவில் ஒளியும் அவரே.

ஆ. கிறிஸ்து: கிறிஸ்து மெசியாபற்றிய இறைவாக்குகளின் நிறைவேறுதலாக, யூதா குலத்தின் சிங்கமாக (5:5), தாவீதின் வேரும் வழித்தோன்றலுமாக (21:16) எடுத்துக் காட்டப்படுகிறார். சங் 2:9-இல் முன்கூறப்பட்டபடி அவர்வந்து, இருப்புக்கோல் கொண்டு தம் மக்களுக்கு ஆயனாக இருப்பார் (2:27; 12:5;19:15). அவர் ''விரைவாகவே வருகிறார்'' (3:11; 22:7). ''அவரை ஊடுருவக் குத்தினவர்களும் காண்பார்கள்'' (1:7). ஆகவே தானியேலின் மனுமகன் போன்று ஊனும் இரத்தமும் உள்ள மனிதனாக வருவார் (1:12தொ). ஆயினும் அவர் மற்ற மனிதரைப் போல் வெறும் மனிதனல்லர். கடவுளுக்கே உரிய பண்புகள் அவருக்குக் கொடுக்கப்படுகின்றன. தந்தையைப் போன்று அவர் அகர

மும் னகரமும், முதலும் கடைசியும், தொடக்கமும் முடிவும் ஆவார் (1:17; 2:8; 22:13). அவரே ''அரசர்க்கெல்லாம் அரசர்; ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர்'' (17:14; 19:16). அவர் என்றென்றும் வாழ்பவர் (1:18); எல்லாம் அறிபவர் (2:23). அவரது முதல் வருகையில், மக்களைப்பாவத்திலிருந்து மீட்கும் பொருட்டுத் தன் இரத்தத்தைப் பலியாகச் சிந்தினார் (2:8; 5:9-14; 7:14; 12:11). அவர் மரித்து உயிர்த்தெழுந்தார் (1:5). பலியிடப்பட்ட உயிருள்ள செம்மறிஎன்ற அளவில் அரியணைமுன் அவரது பிரசன்னமே அவரது மன்றாட்டாகும் (5:6.9; 13:8). இறந்தோரிலிருந்து எழுந்தவருள் தலைப்பேறானவர் என்ற அளவில்அவர், அரியணைமுன் (3:21; 7:17; 21:1.3) விசுவாசிகளை உயிர்ப்புக்குக் கொண்டு வருவார். ஏனெனில் அவர் வைத்திருக்கும் வாழ்வு நூலில் எழுதப்பட்டிருப்பவர்கள் மட்டுமே புதிய எருசலேமில் நுழைய முடியும் (21:27). இங்கு, தந்தையோடு சேர்ந்து செம்மறியே புதுநகரத்தின் பீடம், ஒளி அளிக்கும் விளக்கு, நித்திய பேறு ஆவார் (21:22-23). அவரே நீதிபதி. இந்த வாழ்வுக்குள் புக அனுமதி அவரது தீர்ப்பைப் பொறுத்தது (19:11; 14:1). இறைவனுடைய வார்த்தையாகிய அவர் நம்பிக்கைக் குரியவர்; உண்மையானவர் (19:11.14). அதாவது இறைவன் தம் வாக்குறுதிகளுக்குக் காட்டும் பற்றுறுதியின் நிறைவான எடுத்துக் காட்டாவார்.

இ. தூய ஆவி: தூய ஆவி, திருச்சபையில் செயலாற்றும் இறைவனுடைய ஆவியின் நிறைவாகிய ஏழு ஆவிகளால் எடுத்துக் காட்டப்படுகிறார் (1:4; 3:1; 4:5). ஏழு ஆவிகள் இறைவன் அரியணைமுன் இருக்கின்றனர் (1:4). இவர்கள் இறைவனுடைய ஏழு ஆவிகளாவார் (4:5). ஏழு ஆவிகளை யுடையவர் பேசுகிறார் (3:1). செம்மறிக்கு ஏழு கொம்புகளும் ஏழு கண்களும் இருக்கின்றன. மண்ணுலகெங்கும் அனுப்பப்பட்ட கடவுளின் ஏழு ஆவிகளே அக்கண்கள் (5:6). ஏழு ஆவிகளான பரிசுத்த ஆவி இறைவனுடையவும் செம்மறியினுடையவும் ஆகும். ''நான் தந்தையிடமிருந்து உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவர் தந்தையிடமிருந்து வரும் உண்மையின் ஆவியானவர். அவர் வந்து என்னைப் பற்றிச் சாட்சியம் கூறுவார்'' (யோவா 15:26) என்ற கூற்றை நாம் நினைவுகூர வேண்டும். இவற்றில் தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் வரும் ஆவிக்கு அடித்தளம் இருக்கிறது. கடிதங்களின் முடிவில் ஏழு சபைகள் ஒவ்வொன்றோடும் பேசுபவர் ஆவியானவரே. புனிதர்களோடு சேர்ந்து ஆவியானவர் இரண்டாம் வருகைக்காக வேண்டுகிறார்.

ஈ. திருச்சபை: இறைவனின் புதிய மக்களாகிய திருச்சபையின் பிறப்பு திருவெளி 12-இன் உச்ச நிலையாகும். திருச்சபை பழைய ஏற்பாட்டு இறைமக்களின் இடைவிடாத தொடர்ச்சியாகக் காட்டப்படுகிறது. அது ''அரசகுலக் குருக்களால்'' ஆனது (1:6;5:10); செம்மறியின் இரத்தத்தால் உருவெடுக்கிறது. அது உலகத்தில் இருந்தாலும் அதைச் சார்ந்ததன்று. இறந்தவர்கள், சிறப்பாக மறைசாட்சிகள், பூமியிலுள்ள துன்புறும் சகோதரர்களோடு ஒன்றித்திருக்கின்றனர் (6:9-11; 19:2). கிறிஸ்துவோடு திருச்சபை கொண்டிருக்கும் உறவு பாரம்பரிய விவிலியத் திருமண உருவகத்தால் எடுத்துக் கூறப்படுகிறது (19:7; 21:2.9). திருச்சபையில் கிறிஸ்து எப்போதும் செயலாற்றுகிறார் (1:13-16); அதை எப்போதும் வழிநடத்துகிறார். திருச்சபையோடு அவர் கொண்டிருக்கும் ஒன்றிப்பு இரண்டாம் வருகையின் மகிழ்ச்சியில் தனது நிறைவை எய்தும்.

உ. இறுதிக்கால இயல்: யூதத்துவத்திற்கு இறுதிக்காலச்செயல் வருங்காலத்தில் வருவதாகும். இதற்கு மாறாக, கிறிஸ்துவத்திற்கு அது கிறிஸ்து நிகழ்ச்சியில் நடந்துவிட்டது. இது வரலாற்றில் இறைவனின் உறுதியான, இறுதியான இடையீடாகும். இறுதிக்காலம் தொடங்கிவிட்டது. ஆனால் இன்னும் முடியவில்லை. கடைசியான இறுதிக்கால மகிமையின் பங்குக்கும் (20:6; 21:1-4), இந்த வாழ்வில் கிறிஸ்துவையும் சாத்தானையும் எதிர்கொள்ளும்போது எடுக்கும் தீர்மானத்திற்கும் இடையே நேரடித் தொடர்பு உண்டு.

திருவெளிப்பாட்டு நூலில் காணப்படும் இறுதிக்கால இயல் புதிய எருசலேமாகிய சமூகப்பண்பும், தனிநபர்த் தன்மையும் உடையது (21:6; 14:1).

ஊ. தீர்ப்பு: இது நல்லோர்க்கும் தீயோருக்கும் உரியதாகும். ஏழு கடிதங்கள் வெற்றி பெறுபவர்க்கு இறைவாழ்வில் பங்கு உண்டு என்று உறுதியளிக்கின்றன (2:1-3:22). இதை அடைய கிறிஸ்தவன் மட்டுடையவனாக, அடக்கமுடையவனாக, விழிப்புடையவனாக இருக்க வேண்டும் (3:2-4). சன்மானம் மெசியா நிறைவேறுதலாக விவரிக்கப்படுகிறது (அதி. 21-22). ஆனால் சாத்தானோடு சேர்ந்து கொண்டவர்களுக்குக் கடுமையான தீர்ப்புக் காத்திருக்கிறது. இறுதிக்கால இறப்பு உள்ளது. இது இறைவனிடமிருந்து பிரிந்திருக்கும் உறுதியான நிலையாகும் (2:11; 20:6; 21:8).

எ. வழிபாடு: இந்நூலின் தொடக்கமும் முடிவும் வழிபாட்டுச் சூழ்நிலையில் அமைந்துள்ளன. கிறிஸ்தவ வாழ்த்துரையான ''அருள்'' தொடக்கத்தில் 1:4-இலும் முடிவில் 21:22-இலும். வருகிறது. பவுலின் வாழ்த்துரை வாய்பாடு மருவி வந்திருக்கிறது எனலாம். நூல் முழுவதும் வழிபாட்டுக் குறிப்புகள் விரவிக்கிடக்கின்றன. யாத்திரை நிகழ்ச்சி இஸ்ராயேலின் வழிபாட்டில் மையம் வகித்தது. அதில் ஆபிரகாமின் மக்கள் இறைமக்களாயினர் (சங் 78; 80; 104; 105; 114; 136). திருச்சபையின் வழிபாட்டில், அதைத் திருச்சபையாக்கிய கிறிஸ்துவின் மீட்புச் செயல் மையம் வகிப்பது இயல்பே. இது பாடல்வடிவில் நூல் முழுவதும் காணப்படுகிறது (1:4-8; 4:8.11; 5:9-14; 7:9-17; 11:15-18; 12:10-12; 15:2-4; 19:1-8). ''அது உண்மை'', ''அப்படியே ஆகட்டும்'' என்று பொருள்படும் ஆமென் என்று கூறி சமூகம் 1:7;5:14; 7:12; 19:4; 22:20-இல் வரும் உணர்வுகளைத் தன்னுடையதாக்கிக் கொண்டது. இறைவனைப் போற்றும் ''அல்லேலூயா'' 19:1.3.4.6-இல் எழுகின்றது. கிறிஸ்து தம் இரத்தத்தினால் நம்மை மீட்டார் என்ற விசுவாசம் பற்றிய நிலையானவிசுவாச வாய்பாடு மீண்டும் மீண்டும் வருகிறது. ''ஆமென். ஆண்டவராகிய இயேசுவே வாரும்'' (22:20) என்பது சமூகம் தன் பணியைத் தொடங்கும்போது எழுப்பும் அறைகூவலாகும். உலகில் துன்புறும், வழிபடும் திருச்சபையின் வழிபாட்டுச் செபம் விண்ணக வழிபாட்டில் புகுத்தப்படுகிறது (4:11; 5:9). இரண்டு வழிபாடுகளும் பிணைந்துள்ளன. அதி.5-இல் காணப்படுவதுபோல் இரண்டும் அண்டப்பண்புடையவை. 21:22-22:5-இல் வரும் விவரிப்பு கூடாரவிழா வழிபாட்டைச் சுட்டுவதாகத் தெரிகிறது. இந்த விழாவின் மாலையில் ஆலய முற்றம் மிகவும் ஒளிமயமாக்கப்பட்டது. ஒவ்வொன்றும் நான்கு பொன் கிண்ணங்கள் கொண்ட பொன் கிளை விளக்குத்தண்டுகள் ஒளி அளித்தன. கைகளில் தீப்பந்தம் ஏந்தி, பக்தியுள்ளோர் நடனம் ஆடினர். எக்காளமும் இசைக்கருவிகளும் முழங்கின. சங் 120-34 பாடப்பட்டன. காலையில் சீலோவாம் குளத்திலிருந்து ஊர்வலம் வந்தது. குளத்திலிருந்து நீர் ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பீடத்தின்மேல் ஊற்றப்பட்டது. தேரல் பலியும் நடந்தது. ஆனால் புதிய எருசலேமில் இறைவனும் செம்மறியுமே ஆலயம் ஆவர். இறைவனே ஒளி; செம்மறி விளக்காவார். இஸ்ராயேல் மட்டுமன்று, எல்லா மக்களும் வழிபட வருவர். சீலோவாமிலிருந்து நீர் கொண்டு வரப்படுவதில்லை. இறைவன் மற்றும் செம்மறியின் அரியணையிலிருந்து தோன்றி நீர் நகரவீதிகளில் ஓடுகிறது. சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்கள், வழிபாட்டுப் பதில்கள், பாடல்கள் ஆகியவை இந்நூலில் சில பகுதிகள் சமூக வழிபாட்டுக் கூடத்தில் வாசிக்கப்பட வேண்டியவை எனச் சுட்டுகின்றன.

9. இக்காலத்திற்கு: திருவெளிப்பாட்டு நூலின் மொழி மறைபொருள்தன்மையுடையது. ஆகவே பலரும் பலவாறு இந்நூலுக்கு விளக்கம் அளிக்க முயன்றுள்ளனர். இந்நூலிலே வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் காண முயன்றுள்ளனர். இதைக் கொண்டு வருங்காலத்தை முன்னுரைக்கவும் முயன்றுள்ளனர். திருச்சபையைப் பிளவு

படுத்தி இழிவு படுத்தியவர்கள் கூடத் தங்களுக்குச் சாதகமாகச் சில பகுதிகளை இந்நூலிலிருந்து எடுத்துக்கூறுவர். இவற்றில் இந்நூலின் முக்கியத்துவம் அடங்கவில்லை எனலாம். கி.மு. முதலாம் நூற்றாண்டு வரலாற்றுச் சூழ்நிலை இந்நூல் தோன்றத் தூண்டுதலாக அமைந்திருக்கலாம். ஆனால் இந்நூலின் நிலையான செய்தி: இறைவன் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் தீய சக்திகளுக்கும் இடையே போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும்; இறுதியில் இறைச்சக்திகள் உறுதியாக வெற்றிபெறும் என்பதாகும். தலைமுறை தலைமுறையாக விசுவாசிகளுக்கு, சிறப்பாகத் தங்கள் கிறிஸ்தவ மறைக்காகத் துன்பங்களையோ மரணத்தையோ எதிர்கொள்ளும்போது இந்நூல் ஆறுதல் அளித்திருக்கிறது, உற்சாகமூட்டியிருக்கிறது. தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்திருக்கிறது. சிறப்பான ஆற்றல் மிக்க விதத்திலே, திருச்சபையிலும் உலகிலும் இறைவன் முழுமையாக ஆட்சிசெய்கிறார். அவர் இறுதியில் உறுதியாக வெற்றி கொள்வார் என்ற உண்மையை மக்களுக்கு எடுத்துக்கூற இந்நூல் பயன்பட்டுள்ளது. இதுவே இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் இந்நூலின் பயனாகும்.

திரை (CURTAIN, SCREEN)

கூடாரம் செய்யப்பயன்பட்டது. விவிலியத்தில் பெரும்பாலான இடங்களில், திரை கூடாரத்துடன் சேர்த்தே குறிப்பிடப்படுகிறது. மேலும் திரையும் கூடாரமும் ஒன்றாகவே கருதப்பட்டது (உ.ச. 1:5; எசா 54:2; எரே 4:20; 10:20; 49:29; அப 3:7).

சாட்சியப் பேழையைக் கொண்டிருந்த உள் திருஉறைவிடம் பத்துத் திரைகளால் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு திரையும் இருபத்தெட்டு முழநீளமும் நான்கு முழ அகலமும் கொண்டிருந்தது (யாத் 26:2).

மூன்று திரைகள் சிறப்புப் பெறுகின்றன. முதலாவது திரை திருத்தூயகத்தைத் தூயகத்திலிருந்த பிரித்த திரையாகும். இது மிக விலையுயர்ந்த பொருட்களால் செய்யப்பட்டிருக்கும். இது நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு நிற நூலாலும் முறுக்கேற்றி நெய்த மெல்லிய நாற்பட்டாலும் நெய்யப்பட்டு, கலைத்திறனுடன் அமைக்கப்பட்ட கெருபுகளைக் கொண்டிருக்கும் (25:31). இது இறைவனின் உறைவிடத்தை மறைக்கும் திரையாகும் (35:12; 40:21). பரிகார நாளில் இத்திரைமுன் இரத்தம் தெளிக்கப்பட்டது.

இரண்டாவது திரை தூயகத்தின் முன் தொங்கியது. இதுவும் மேற்கூறப்பட்ட திரையைப் போலவே நெய்யப்பட்டிருந்தது. ஆனால் கெருபுகளைக் கொண்டிருக்கவில்லை (யாத் 26:36). மூன்றாவது திரை முற்றத்தின் நுழைவாயிலில் தொங்கியது. இதுவும் அதே விலையுயர்ந்த பொருட்களால் நெய்யப்பட்டது; இருபது முழ நீளமும் ஐந்து முழ உயரமும் கொண்டது (38:18).

கூடாரத்திரை வான்வெளிக்கு உருவகமாகப் பயன்பட்டுள்ளது. "வான் வெளியைத் திரைச்சீலையென விரித்துக் குடியிருக்கும் கூடாரம் போல் அமைப்பவரும் அவரே" (எசா 40:22; காண் சங் 104:2). புதிய ஏற்பாட்டில் திரையென்றால் அது திருத்தூயகத்தின் தொங்கிய "ஆலயத்திரைதான்" (மத் 27:51; மாற் 15:38; லூக் 23:45). இத்திரை எபி 6:19; 9:3-இல் குறிப்பிடப்படுகிறது. எபி 10:20-இல் இயேசுவின் உடலைக்குறிக்கும் உருவகமாக இத்திரை பயன்படுகிறது. இதன் வழியாகத்தான் விசுவாசிகள் இறைவனது திருமுன் நுழைய முடியும். காண்க. ஆலயத்திரை.

திரோப்பியன் (TYROPOEON)

இது, தாவீதுநகர் அமைந்திருந்த ஓபேல் மலையை மேற்கு மலையிலிருந்து பிரித்துத் தெற்கு வடக்காக ஓடிய சிறிய பள்ளத்தாக்கின் கிரேக்கப் பெயராகும். இன்று இது ஏல்-வாத் என்றழைக்கப்படுகிறது. காலப் போக்கில் குப்பைகூளங்களால் நிரப்பப்பட்டு இன்று ஒரு சிறு பள்ளமாக உள்ளது. ஏரோது காலத்தில் ஆலயத்தை மேற்கு மலையினுடன் இணைக்கும் இரு பாலங்கள் இருந்திருக்கலாம்.

திர்கனா (TIRHANAH - சலுகை)

இவர் காலேபுக்கு அவர் வைப்பாட்டி மாக்கா வழியாகப் பிறந்தவர். ஒருவேளை, காலேபின் குடும்பங்களில் ஒரு துணைக் குடும்பமாக இருக்கலாம் (1 நாள் 2:48).

திலயான் (DILEAN - வெள்ளரிக்காய்)

இலாக்கீசைச் சேர்ந்த செபேலா மாவட்டத்தின் யூதாவிலுள்ள ஓர் ஊர் (யோசு 15:38). இது இருந்த இடம்பற்றிக் கருத்தொற்றுமையில்லை.

திறவுகோல் (KEY)

சாதாரணமாக, சாவி என்றால் பூட்டைத் திறக்கவோ பூட்டவோ பயன்படுத்தப்படும் ஒரு கருவி; உருவகமாகக் கூறப்போனால் உள் செல்வதையோ, வெளியே வருவதையோ கட்டுப்படுத்தும் ஒன்று. புதிய ஏற்பாட்டில் இறுதிக் காலத்தில் கடவுள் தரும் அதிகாரம், வலிமை இவற்றின் அடையாளமாகப் பயன்படுத்தப்படுகிறது. இயேசு மெசியாவாக இருந்து தாவீது அரசின் மனிதர்களை ஏற்றுக்கொள்ளவோ, வெளியேற்றவோ அதிகாரம் பெறுகிறார் (திருவெளி 3:7). இறந்து உயிர்த்தவர் எனும் முறையில் சாவின் மீதும், நரகத்தின்மீதும் அதிகாரம் கொண்டுள்ளார் (1:18). பாதாளத்திலிருந்து கொள்ளை நோய்களைத் திறந்து விடத் திறவுகோல் பயன்படுத்தப்படுகிறது (20:1). இறை அரசில் நுழைவதற்கான ஞானத்தின் திறவு கோலை மறைநூலறிஞர்கள் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது (லூக் 11:52; காண் மத் 23:13). பேதுருவுக்கும் திருச்சபைக்கும் விண்ணகத்தின் திறவு கோல்கள் தரப்பட்டன. இது கட்டுவதற்கும், விடுவிப்பதற்குமான அதிகாரத்தைக் குறிக்கிறது (மத் 16:18-19). வாயில்கள் திறந்தேயிருக்கின்றன என்பது கடவுளின் மன்னிப்பை எவரும் பெறலாம்; அதற்குத் தடையே இல்லை என்பதையும், அவரதுகுடும்பத்தில் எப்பொழுதும் இணையலாம் என்பதையும் காட்டுகிறது (திருவெளி 21:25; 22:14). இவ்வாறு அடையாள முறையில் பயன்படுத்தியுள்ளதற்கு முன்னமேயே மேற்காசிய நாட்டு மரபில் இத்தகைய முறையில் பயன்படுத்தியுள்ளனர்.

திறவுகோல்களின் அதிகாரம் (POWERS OF KEYS)

''விண்ணரசின் திறவுகோல்களை நான் உம்மிடம் தருவேன். மண்ணுலகில் நீர் தடை செய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீர் அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்'' என்று கூறி இயேசு பேதுருவிடம் ஒப்படைத்த அதிகாரமாகும் (மத் 16:19). ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் உண்மையில் உரிமையாளரான மெசியாவாகிய இயேசு ஒப்படைத்த அரசுக்கும் அதிகாரத்திற்கும் அடையாளமாகும் திறவுகோல்கள் (காண். திருவெளி 3:7). திறவுகோல்களின் அதிகாரம் இறைவீடு முழுவதன் மேலும் உள்ளதாகும். இது முதன்மையாக உள்நுழைய அனுமதிக்கும் அதிகாரமாகும். இது புறம்பாக்கும் அதிகாரத்தையும் உள்ளடக்குகிறது.

இயேசு நற்செய்தியையும் பாவமன்னிப்பையும் போதிக்கும் போது (மாற் 2:10), இறையரசின் வாயில்களை யாவருக்கும் திறந்து விடுகிறார். ஆனால் இதற்கு மாறாகப் பரிசேயர்கள் ''மக்கள் நுழையாதவாறு அவர்கள் முன்பாக விண்ணக வாயிலை அடைத்துவிடுகிறார்கள்'' (மத் 23:13). இந்தக் ''குருட்டு வழிகாட்டிகளுக்கு''த் தனது தெய்வீக ஆற்றலை அளிக்காது, இயேசு பேதுருவுக்கு அளிக்கிறார். இது இயேசு செய்வது போல் செய்யும் ஆற்றலாகும். அதாவது அருளும் தீர்ப்பும் அடங்கிய நற்செய்தியைப் போதிப்பதும், பாவங்களை மன்னிப்பதும், இவ்வாறு திருச்சபையாகிய இறைவனுடைய புதிய மக்களை ஒன்று கூட்டுவதும் ஆகும் (மத் 16:18). உண்மையில் திறவுகோல்களின் அதிகாரம் ''கட்டவும் அவிழ்க்கவும்'' எல்லா அப்போஸ்தலர்களுக்கும் அளிக்கப்பட்ட அதிகாரத்திலிருந்து தன்மையால் வேறுபட்டதன்று. ஆனால் திருச்சபை பேதுருவின் மேல் கட்டப்பட்டிருப்பதால் திறவுகோல்களின் அதிகாரம் பேதுருவுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. இரண்டு கூற்றுகளும் பன்னிருவரில் பேதுருவின் முதன்மையை எடுத்துக்கூறுகின்றன.

தினை (MILLET)

உணவிற்காகப் பயிர் செய்யப்படும் புல் விதைகளில் மிகச் சிறியது. இதன் மாவிலிருந்து மிக எளிமையான ரொட்டி செய்யப்பட்டது. சாதாரணமாக இந்த மாவு மற்றத் தானியங்களின் மாவுடன் சேர்க்கப்பட்டது. எசேக்கியேல் இறைவாக்கினர், எருசலேமின் முற்றுகையை முன்னறிவித்தபோது அதன் அடையாள அப்பமாகக் குறிப்பிடப்பட்ட ரொட்டி செய்வதற்குப் பயன்பட்ட தானியங்களுள் தினையும் ஒன்றாகும் (எசே 4:9). இது தினை மனித உணவாவதுஅசாதாரணம் என்று உணர்த்துகிறது. முற்றுகை உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்தியது என்று சுட்டிக் காட்டுகிறது (4:16).

தின்காபா (DINHABAH)

ஏதோம் நாட்டு அரசன் பேலா அரசாண்ட நகரங்களுள் ஒன்று. இவர் பேகோரின் மகனாவார் (ஆதி 36:32; 1 நாள் 1:43). இந்நகரம் எங்கே இருந்ததுஎன்பது பற்றிக் கருத்தொற்றுமையில்லை.

தீ

தீ, நெருப்பு (FIRE)

1. ஆபிரகாமை இறைவன் தேர்ந்து கொண்டதிலிருந்து, இறைவன் தம் மக்களோடு கொண்ட உறவு பற்றிய வரலாற்றில் நெருப்பின் அடையாளம் தெளிவாகக் காணப்படுகிறது (ஆதி 15:17). இந்த விவிலிய வெளிப்பாடு நெருப்பைத் தெய்வீகப் படுத்தும் சமயங்களிலிருந்து வேறுபட்டதாகும். பழங்கால மக்களோடு சேர்ந்து இஸ்ராயேலரும் நான்கு மூலப் பொருட்களை (பூதம்) ஏற்றுக்கொண்டனர். ஆனால் அதன் சமயத்தில் தீ ஓர் அடையாளம் மட்டுமே. அதைக் கடந்து மனிதன் இறைவனைக் காண வேண்டும். தனிப்பட்ட மனிதனோடு கொள்ளும் தொடர்பில் எப்போதும் இறைவன் தன்னை ''நெருப்பு வடிவில் வெளிப் படுத்துகிறார். ஆயினும் தீ இறைத்தன்மையை உணர்த்தும் அடையாளம் மட்டுமன்று. சில சமயம், அது மூச்சு, நீர், காற்று ஆகிய எதிர்மறை அடையாளங்களோடும் தொடர்புபடுத்தப்படுகிறது; அல்லது தன்னை ஒளியாகவும் மாற்றிக்கொள்கிறது.

II. பழைய ஏற்பாடு:

1. இறை மகிமைக்காட்சிகள்:

அ. பாலைவனத்தில் மக்களின் அடிப்படை அனுபவம்: இதில் தீ முதன்மையாக இறைவனின் மகிமையை வெளிப்படுத்தவில்லை; அவரது தூய்மையை, புனிதத்தை வெளிப்படுத்துகிறது. இப்புனிதம் மனிதனை ஈர்க்கவல்லது; எனினும் அச்சம் விளைவிக்கக் கூடியது. ஒரேபு மலையில் நெருப்பில் எரிந்து கொண்டிருந்தாலும் தீய்ந்து போகாத முட்புதரால் மோசே ஈர்க்கப்படுகிறார். இறைவனால் அழைக்கப் பட்டுத் தூய்மைப்படுத்தப்பட்டால் ஒழிய, மோசே அப்புதரை அணுக முடியாது என்று இறைவனின் குரல் கூறுகிறது (யாத் 3:2 தொ). சீனாய் மலையில், அதனைச் சூழ்ந்திருந்தாலும் அதை அழிக்காத தீயிலிருந்து புகை எழுகிறது (19:18). மக்கள் பயந்து நடுங்கினாலும், அம்மலையை அணுக அனுமதிக்கப்படாவிட்டாலும், தம்மை வெளிப்படுத்தும் இறைவன்முன் ஏறிச் செல்ல மோசே அழைக்கப்படுகிறார். ஆகவே, ''அழிக்கும் நெருப்பாக'' இறைவன் தம்மை வெளிப்படுத்தும்போது, தம்மைச் சுற்றியுள்ளவற்றையெல்லாம் இறைவன் அழிப்பதில்லை. ஏனெனில் தீ தூய்மைப்படுத்துபவர்களை அவர் அழைக்கிறார்.

அதே இடத்தில் நிகழும் மற்ற அனுபவங்கள் நெருப்பின் அடையாளப்பொருளை நன்குணர உதவுகின்றன. தீக்கொத்த பேரார்வமுடைய இறைவாக்கினர் எலியா சீனாயில் யாவேயின் பிரசன்னத்தைத் தேடுகிறார் (சீரா 48:1). புயலையும் நில நடுக்கத்தையும் அடுத்து நெருப்பைக் காண்கிறார். ஆனால் ''தீயிலும் ஆண்டவர் இருக்கவில்லை.'' ''மெல்லிய ஒலி'' அல்லது தென்றல் எனும் மற்றொரு அடையாளம் இறைவன் கடந்து செல்வதை வெளிப்படுத்துகிறது (1 அர 19:12). பிற்பாடு எலியா நெருப்புத்தேரில் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்படும் போது, இறைவனது சந்திப்பை எடுத்துக் கூறும் பல அடையாளங்களில் நெருப்பு ஒன்றாக மட்டுமே பயன்படுகிறது (2 அர 2:11).

ஆ. இறைவாக்குப் பாரம்பரியம்: இது நெருப்பு அடையாளத்தைச் சமய அடையாளச் சூழ்நிலையிலேயே பயன்படுத்துகிறது. எசாயா தனது அழைப்பை ஏற்கும் காட்சியில் கோவில் முழுவதும் புகையால் நிறைந்திருக்கக் கண்டார். ''ஐயோ, நான் அழிந்தேன். ஏனெனில்.... படைத்திரளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே'' என்று அஞ்சுகிறார். இறைக்காட்சி முடிந்து வெளிவரும்போது தன் உதடுகள் பீடத்திலிருந்து வந்த நெருப்புப் பொறியால் தூய்மையாக்கப்பட்டுள்ளதை உணர்கிறார் (எசா 6); எசேக்கியேல் தன் தொடக்கக்காட்சியில், ''மின்னலடிக்கும் பெருமேகத்தையும் அதனைச் சுற்றிச் சுடர் வீசும் தீப்பிழம்பையும்''

காண்கிறார். அதிலிருந்து மனித சாய லுக்கு ஒப்பான ஓர் உருவம் தோன்றுகிறது. இத்தோற்றம் சீனாயின் இறைமகிமைக் காட்சியை விட, யாத்திரைக் காலத்து ஒளிரும் மேகத்தையே நினைவுபடுத்துகிறது (எசே 1). தானியேலுக்கு அளிக்கப்பட்ட வெளிப் பாட்டில் இறைவனது பிரசன்னத்திற்கு நெருப்பே பின்னணியாக அமைந்துள்ளது (தானி 7:10). ஆனால் அது தீர்ப்பை வருணிக்கும்போது சிறப்பான இடம் வகிக் கிறது (7:11).

இ. உபாகம மற்றும் குருக்கள் பாரம்பரி யங்கள்: பாலைவனத்தில் நிகழ்ந்த இறை மகிமைக் காட்சிகளுக்கு அளிக்கும் விளக்கத் தில் தீயெனும் அடையாளத்தின் இரட் டைப்பொருளை வெளிப்படுத்துகின்றன. ஒன்று உயிருள்ள இறைவனின் வெளிப் பாடு; மற்றது தூய்மைமிக்க இறைவன் கோரும் தூய்மை. தம்மை உருவங்களால் சித்தரிக்கக்கூடாது என்பதை இஸ்ராயேல ருக்கு உணர்த்த இறைவன் தீ நடுவிலிருந்து அவர்களிடம் பேசினார் (உப 4:12; 5:4.22.24); சட்டப் பலகைகளை அளித்தார் (9:10). ஆனால் மனிதரை அச்சுறுத்தி (5:5) அழிக்கும் நெருப்பு என்ற கருத்தும் (5:25; 18:16) இங்கு உள்ளது. சாவின்றி இறைபிர சன்னத்தை அணுக முடியும் என்று இறைவ னால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் மட் டுமே உறுதியாக அறிவர் (4:33). இந்த நிலையை அடைந்தபின், இயற்கையின் மூலப்பொருளோடு இறைவனைக் குழப் பும் ஆபத்தின்றி, இஸ்ராயேலர் இறை வனை ''அழிக்கும் நெருப்பாக'' எண்ணிப் பார்க்க முடியும் (4:24; 6:15). இச்சொற்கள், இறைவனது பொறாத தன்மை என்ற கருத்தை விவரிக்கும் மற்றொரு விதம் மட்டுமேயாகும் (யாத் 20:5; 34:14; உப 5:9; 6:15). பாவத்தின்முன் இறைவனது விட்டுக்கொடாத தன்மையைத் தீ அடையாள மாக உணர்த்துகிறது. தீ தான் எதிர்கொள் வதை எல்லாம் அழிக்கிறதுபோல் இறை வன் கடின இதயத்தையுடைய பாவிக்குச் செய்கிறார். ஆனால் தாம் தேர்ந்து கொண்ட மக்களிடம் வேறுமுறையில் செயலாற்று கிறார். ஆனால் தாம் அணுகும் யாரையும் அவர் மாற்றி அமைக்க வேண்டிய விதத்தில் எப்போதும் செயலாற்றுகிறார்.

2. வரலாற்றில்:

அ. நெருப்பினால் பலி: இறைவன் அழிக்கும் நெருப்பாவார் என்ற கருத்துக்கு ஒத்த எடுத்துக்காட்டு வழிபாட்டில் வரும் தகனப்பலியில் காணப்படுகிறது. ஒரு வேளை, முழுத்தூய்மை பெற வேண்டும் விருப்பத்தாலும், இதைவிட, இவ்வழியால் திரும்பப் பெற முடியாத காணிக்கையை அளிக்க வேண்டும் விருப்பத்தாலும், இஸ் ராயேல் தகனப்பலியை ஒப்புக் கொடுத் திருக்க வேண்டும். விண்ணகத்தை நோக்கி, புகையெழுப்பி முழுவதும் எரிக்கப்பட்ட பலி இவ்விருப்பத்தை வெளிப்படுத்தியது. இங்கு நெருப்பு ஓர் அடையாளம் மட் டுமே. அது எந்தச் சடங்கையும் புனிதப் படுத்தவில்லை. தலைப்பேற்றினைத் தீயால் எறிப்பது தடை செய்யப்பட்டிருந்தது. (லேவி 18:21; காண். ஆதி 22:7). ஆனால் இந்த அடையாள மதிப்பு அதிகாரபூர்வ மான வழிபாட்டில் அவ்வளவு முக்கியத்துவ முடையதன்று. பீடத்தின்மேல் எப்போதும் நெருப்பும் எரிந்து கொண்டிருக்க வேண் டும் (லேவி 6:2-6). ஆண்டவர் கட்ட ளைக்கு எதிராக நெருப்பைக் கொண்டுவரத் துணிந்தவர்கள்மேல் சாபம் இருந்தது (9:24-10:2). ஆபிரகாம் (ஆதி 15:17), கிதி யோன் (நீதி 6:21), தாவீது (1 நாள் 21:26), சாலமோன் (2 நாள் 7:1தொ), தேங்கிநின்ற நீர் புதிய அணையாத தீயாக (2 மக் 1:18-23) வியத்தகு முறையில் மாற வேண்டும் என்று எதிர்பார்த்திருந்த எலியா (1 அர 8:38) ஆகியோரின் புகழ்பெற்ற பலி களுக்குப்பின் இறைவன் புதுமையான விதத் தில் தலையிடவில்லையா? ஆகவே தீயின் வழியாக இறைவன் மனிதனுடைய பலியை ஏற்றுக் கொள்கிறார். அவனோடு செய்யும் வழிபாட்டு உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளிக்கிறார்.

ஆ. இறைவாக்கினரும் தீயும்: மக்கள் விரும்பி பலிகளை ஒப்புக் கொடுத்தாலும்,

சீனாய் மலைத்தீயைப் பார்க்க விரும்ப வில்லை. ஆனால் இதற்கிடையில் தெய்வீ கத் தீ இறைவாக்கினர்கள் வழியாக மக்க ளிடையே இறங்கிவருகிறது. இப்படிவருவது பெரும்பாலும், தூய்மைப்படுத்தியோ தண் டித்தோ இறைவனது புனிதத்திற்காகப் பழி வாங்கவோதான். மோசே தெய்வீகத்தீயால் தனது முகத்தில் வீசிய ஒளியை முக்காடு போட்டு மறைத்துக் கொண்டார் (யாத் 34:29 தொ). முன்பு எகிப்தியர்மேல் செய்தது போல் (9:23), மோசே பொற்கன்று என்ற ''பாவத்தைத்'' தீயால் எரிக்கிறார் (உப 9:21). கிளர்ச்சியாளர் மேல் தீயால் பழி வாங்குகிறார் (எண் 16:35). மோசேயைப் பின்பற்றி, எலியா அகந்தையுள்ளவர்களை முழுவதும் அழிக்க, வானின்று இறங்கி வரும் நெருப்பையும் மின்னலையும் பயன் படுத்துகிறார் (2 அர 1:10-14). இதில் ''தீப்பந்தம்போல் அவருடைய வாக்குப் பற்றியெரிந்தது'' (சீரா 48:1).

நூல்பெற்ற இறைவாக்கினர்கள், இறைவ னது கடுஞ்சினத்தைத் தீயென விவரிக்கின்ற னர். இதனால் இறைவன் இறைப்பற்றற்றவர் களைத் தண்டிக்கிறார் (ஆமோ 1:4-2:5). தோபேத்தில் நடக்கும் கானானிய வழிபாடு களை நினைவுபடுத்தும் அசுர தகனப்பலி யில் நெருப்பால் பாவநாடுகளைத் தீர்த்துக் கட்டுவார் (எசா 30:27-33). தீமையே தீயா கும் நிலையில் இஸ்ராயேலின் காடுகளில் எரிகின்ற காட்டுத்தீ உச்சநிலை அடைகிறது (9:17தொ; காண். எரே 15:14; 17:4.27). ஆனால் இத்தீயின் நோக்கம் அழிப்பதுமட்டு மன்று. அது தூய்மைப்படுத்தவும் செய் கிறது. அழியாமல் இறைவனை அணுகும் இறைவாக்கினர் உயிரோடு இருப்பதுவே இதற்குச் சான்று. இஸ்ராயேலில் எஞ்சி யோர் ''நெருப்பிலிருந்து இழுக்கப்பட்ட கொள்ளிக்கட்டை போல்வர்'' (ஆமோ 4:11). நெருப்புப்பொறியால் தூய்மைப் படுத்தப்பட்ட உதடுகளையுடைய எசாயா எவ்விதத் துன்பமுமின்றி இறைவார்த்தை யைப் போதிக்கத் தொடங்கினார் (எசா 6:6). எரேமியாவின் இதயத்தில் இறைவனது வார்த்தை ''பற்றியெரியும் தீபோல் இருக் கிறது.'' அதை அவரால் அடக்கி வைக்க முடியவில்லை (எரே 20:9). எரேமியா மக்களைத் சோதித்தறிய கட்டளைபெற்ற உலைக்களம் ஆகிறார் (6:27-30). ''என் சொல் தீயைப் போன்றது அல்லவா?'' என்று கூறிய இறைவனின் பேச்சாளன் ஆவார் (23:29). இதே முறையில் இறுதி நாளில் மக்களின் தலைவர்கள் ''வைக்கோல் கட்டுகளுக்குள் தீப்பந்தம் போலாகி (செக் 12:6), தாங்களே இறைத்தீர்ப்பைச் செயல் படுத்த வேண்டும்.

இ. ஞானமும் பக்தியும்: இந்தச் சமய அனுபவத்தால் தனிப்பட்டவர்களே நன்மை பெறுகின்றனர். நாடு கடத்தப்படுதலின் சாரமான துன்பமெனும் உலைக்களம் பற்றி (எசா 48:10) எசாயா ஏற்கனவே கூறியிருந் தார். ஆகவே ஞானிகள் மனிதன் பெறும் தண்டனைகளைத் தீயின் விளைவுகளுக்கு ஒப்பிடுகின்றனர். பாலைவனத்தில் நிகழ்ந்த துன்பியல் கிளர்ச்சியைப்போலவும் எலியா வின் நெருப்பால் அழிந்தவர்களைப்போலவும் யோபு உள்ளார் (யோபு 1:16; 15:34; 22:20). அவர் நெருப்பையும் பேரழிவு உண்டாக்கும் தண்ணீரையும் அனுபவிக்கிறார் (20:26.28). ஆனால் தீயின் அச்சுறுத்தும் பண்போடு, அதன் சுத்திசெய்யும், மாற்றியமைக்கும் பண்பும் உள்ளது. அவமானம் அல்லது துன்பம் என்னும் உலைக்களம் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களைச் சோதிக்கிறது (சீரா 2:5; காண். தானி 3). யாவற்றையும் வெல்லும் ஆர்வத்தின் அடையாளமாகிறது தீ. ''அன்பு'' யாவேயின் தீக்கொழுந்தாகும்; பெருங் கடலும் அதை அழிக்க முடியாது (உ.ச. 8:6 தொ). இங்கே தீ மற்றும் நீர் என்ற இரு அடையாளங்கள் ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன. தீ வெற்றி பெறுகிறது.

3. காலத்தின் இறுதியில்: கடினமன துடைய பாவியின்மேல் தீர்ப்பின் தீ விழும் போது கழுவாயற்ற தண்டனையாக, கடுஞ் சினத்தின் தீயாக ஆகிறது. ஆனால் இந்தத் தீ இனி ஒருபோதும் தூய்மையற்ற கறைகளை அழிக்க முடியாது; ஆனாலும் தனலை எரிக்கிறது. இவ்வாறு இறைத்தீயால் சுத்தி

யாக்கப்பட மறுக்கும் படைப்பின் உயிர் அதனால் எரிக்கப்படுகிறது என்று வெளிப்பாடு காட்டுகிறது. சோதோம் கொமோரா அழிவைப்பற்றிக்கூறும் பாரம்பரியத்தில் இருப்பதைவிட (ஆதி 19:24) இதில் அதிகம் உள்ளது. கேகன்னாவில் நடந்த இறைநிந்தனையான சடங்குகளில் தொடங்கி (லேவி 18:21; 2 அர 16:3; 21:6; எரே 7:31; 19:5 தொ), தீயெனும் இறைவாக்கு உருவகம் (எசா 29:6; 30:27-33; 31:9) மற்றும் உலோகம் உருக்குதல் ஆகியவற்றை ஆழப்படுத்துதலின் வழியாகத் தீயெனும் இறுதிக்காலத் தீர்ப்பை விவரிக்கும் (எசா 66:15 தொ) எடுத்துக்காட்டை நோக்கி ஒரு முன்னேற்றம் உள்ளது. இது கனிமப் பொருளைச் சோதிக்கும் தீயாகும் (செக் 13:9). யாவேயின் நாள் உருக்காலையில் உள்ள தீயைப் போன்றிருக்கும் (மலா 3:19). எருசலேம் தொடங்கி (எசே 10:2; எசா 29:6) உலக முழுமையும் எரித்து விழுங்கும் (செப் 1:18; 3:8). ஏனெனில், ''தீரின் நடுவினின்று வரும் நெருப்பைப்போல்'' (எசே 28:18) இத்தீ உள்ளிருந்தே எரியும். கிளர்ச்சிசெய்த மனிதர்களின் இறந்த உடலினுள் ''அரிக்கும் புழு சாவதில்லை; அவர்களை எரிக்கும் நெருப்பு அணைந்து போவதில்லை'' (எசா 66:24; காண். மாற் 9:48). ''தீர்ப்பு நாளில்.... அவர் நெருப்பையும் புழுக்களையும் அவர்கள் உடல்மீது அனுப்புவார். அதனால் அவர்கள் என்றென்றும் உழன்று வேதனைப்படுவர்'' (யூதி 16:21). ஆனால் இங்கு அடையாளம்பற்றி ஓரளவு இருபொருள் மயக்கம் காணப்படுகிறது. இறைப்பற்றற்றவர்கள் உள்ளார்ந்த நெருப்புக்கும் புழுக்களுக்கும் ஒப்படைக்கப்படும்போது (சிரா 7:17), அத்தீயிலிருந்து தப்புபவர்கள் நெருப்புச் சுவரால் சூழப்பட்டிருப்பதைக் காண்பர். இவர்களுக்கு இத்தீ யாவேயே ஆவார் (எசா 4:4 தொ; செக் 2:9). தூய்மைப்படுத்தப்பட்டபின் யாக்கோபும் இஸ்ராயேலும் நெருப்பாய் இருப்பர் (ஒப 18). ஏனெனில், அவர்கள் இறைவனின் வாழ்வில் பங்கு பெறுவர்.

III. **புதிய ஏற்பாடு:** கிறிஸ்துவின் வருகையோடு இறுதிக்காலம் தொடங்கிவிட்டது. ஆனால் காலத்தின் முடிவு இன்னும் வரவில்லை. புதிய ஏற்பாட்டில் தீ தனது பாரம்பரிய இறுதிக்காலப் பொருளைக் கொண்டுள்ளது. ஆனால் அது உணர்த்தும் சமய உண்மை திருச்சபையின் காலத்தில் ஏற்கெனவே செயல்படத் தொடங்கி விட்டது.

அ. இயேசு: அவர் முறத்தைக் கையில் கொண்டு பதரைப் பிரித்தெடுத்து அதை அணையா நெருப்பில் சுட்டெரிப்பவராகவும் (மத் 3:12), தூய ஆவிஎன்னும் நெருப்பால் திருமுழுக்குக் கொடுப்பவராகவும் (3:11) அறிவிக்கப்பட்டாலும், அவர் நடுவர் அலுவலை முழுவதும் நிராகரிக்கிறார். பழைய ஏற்பாட்டுப் பாரம்பரிய மொழியைப் பயன்படுத்தி, தமக்குச் செவி மடுப்பவர்களைத் தீர்ப்புத்தீயை எதிர்பார்த்திருக்கச் செய்கிறார். கேகன்னாவின் நெருப்புப்பற்றியும் (எரிநரகம்) (5:22), பலனளிக்காத கிளைகளும் (13:40; காண் 7:19) திராட்சைக் கிளைகளும் (யோவா 15:6) போடப்பட்டு எரிக்கப்படும் நெருப்புப் பற்றியும் பேசுகிறார். அது அணைக்க முடியாத நெருப்பாக இருக்கும் (மாற் 9:43 தொ). அங்கே ''அவர்களைத் தின்னும் புழு சாகாது; நெருப்பும் அவியாது'' (9:48). அவர்கள் தீச்சூளையில் தள்ளப்படுவார் (மத் 13:42.50). இக்கருத்துகள் பழைய ஏற்பாட்டுக் கருத்துகளையே பகிரங்கமாக எதிரொலிக்கின்றன (காண். 17:29).

ஆ. முதல் கிறிஸ்தவர்கள், பல சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றியமைத்துக் கூறியபோதும், இதே மொழியைப் பயன்படுத்தினர். பவுல் காலத்தின் முடிவை விவரிக்க இதைப்பயன்படுத்தினார் (2 தெச 1:8). பூச்சிகளால் அரிக்கப்பட்டு, துருப்பிடித்து நெருப்பில் போடப்படும் செல்வத்தை விவரிக்கிறார் யாக்கோபு (யாக் 5:3). கிளர்ச்சியாளர்களை விழுங்கப்போகும் கோபக்கனலைப்பற்றி எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் பேசுகிறது (எபி 10:27). விண்ணையும் மண்ணையும் அழித்து மறைந்துபோகச் செய்யும் நெருப்பை நாம் கற்பனை செய்து

பார்க்கலாம் (2 பேதுரு 3:7.12). இந்த இறுதிக்கால நெருப்பில் விசுவாசம் புடமிடப்பட வேண்டும் (1 பேதுரு 11:7). அப்போஸ்தலப் பணியும் (1 கொரி 3:15), கிறிஸ்தவனின் வாழ்வும் வேதகலாபனையால் சோதிக்கப்பட வேண்டும் (1 பேதுரு 4:112-17).

இ. திருவெளிப்பாட்டுநூல், இறைமகிமைக்காட்சியில் வரும் தீ, தீர்ப்பின் தீ என்ற இரு கூறுகளையும் கொண்டுள்ளது. மனுமகன் எரிதழல்போல் சுடர்விடும் கண்களோடு தோன்றி காட்சியில் ஆதிக்கம் செலுத்துகிறார் (திருவெளி 1:14; 19:12). ஒருபுறம், நெருப்போடு கலந்த கண்ணாடிக் கடலில் இறைமகிமைக் காட்சியைக் காண்கிறோம் (15:2). மறுபுறம் இரண்டாவது சாவாகிய (20:14-15) பேய்களுக்குரிய கந்தக நெருப்புக்கடலில் (20:10) தண்டனையையும் பார்க்கிறோம்.

2. திருச்சபையின் காலத்தில்:

அ. இயேசு புதிய யுகத்தைத் தொடங்கி வைத்தார். திருமுழுக்கு யோவான் எதிர்பார்த்த அளவுக்கு உடனடியாகச் செயலாற்றவில்லை. இது யோவானைத் தன் விசுவாசத்தையே ஐயுறச்செய்தது (மத் 11:2-6). வரவேற்க மறுத்த சமாரியர்கள்மேல் தீ வந்து அவர்களை அழிக்குமாறு செய்ய விரும்பிய ''இடியின் மக்களால்'' இயேசு எதிர்க்கப்படுகிறார் (லூக் 9:54தொ). இவ்வுலக வாழ்வின்போது இயேசு பழிவாங்கும் தீயின் கருவியாக இல்லாவிடினும் யோவான் முன்னறிவித்ததைத் தமக்கே உரிய முறையில் நிறைவேற்றுகிறார். ''மண்ணுலகில் தீவைக்க வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். ஆயினும் நான் பெற வேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு....'' (லூக் 12:49 தொ) என்று தமது சமதளப்பொழிவில் கூறும்போது இதைச்செய்கிறார். இவ்வாக்கை விளக்குவது கடினம். இயேசுவின் மரணம் ஆவியாலும் நெருப்பினாலுமான அவரது திருமுழுக்கில்லையா?

ஆ. அப்போதிருந்து கிறிஸ்துவின் பலியின் பயனாக, உலகைப் பற்றியெரியச் செய்யும் இத்தீயினால் திருச்சபை வாழ்ந்து வந்திருக்கிறது. உயிர்த்தவர் பேசியதைக் கேட்ட எம்மாவுக்குச் சென்ற பயணிகளின் இதயத்தில் இத்தீபற்றி எரிந்தது (லூக் 24:32). பெந்தகோஸ்தே நாளில் ஒன்றுகூடியிருந்த சீடர்கள் மீதும் இது இறங்கிவந்தது (அ.ப. 2:3). விண்ணிலிருந்து வந்த இந்தத்தீ தீர்ப்பின் தீயன்று. இது இறைமகிமைக்காட்சியின் தீயாகும். இது ஆவியிலும் தீயிலுமான திருமுழுக்கைச் செயல்படுத்தும் (1:5). இப்போது தீ ஆவிக்கு அடையாளமாகிறது. ஆவியே அன்பு என்று வெளிப்படையாகக் கூறப்படாவிடினும் பெந்தகோஸ்தே நாளின் விவரிப்பு, ஆவியினுடையதாகிய அதே செய்தியை எல்லா நாடுகளுக்கும் பரப்ப வேண்டியவர்களை மாற்றி அமைப்பதுவே அவரது தூதும் பணியும் என்று காட்டுகிறது.

கிறிஸ்தவ வாழ்வு வழிபாட்டுத்தீயின் அடையாளமாகவும் எடுத்துக்காட்டப்படுகிறது. இத்தீ சீனாய் மலைத்தீயன்று (எபி 12:18). மாறாக இறைவனுக்கு ஏற்புடைய வழிபாட்டில் நமது வாழ்வாகிய தகனப் பலியைச் சுட்டெரிக்கும் தீயாகும் (12:29). ஒவ்வொரு நொடியும் இறைவனது பொறாமையை வழிபாட்டு அர்ப்பணமாக மாற்றுவ்தால் இத்தீ சுட்டெரிக்கும் தீயாகத் தொடர்ந்து செயலாற்றுகிறது. ஆவியின் தீயைப் பெற்றுள்ளவர்களுக்கு, இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தூரம், மனிதனின் ஆழத்திலே பிரசன்னமாயிருக்கும் இறைவனாலேயே அகற்றப்படுகிறது. ''பலிப்பொருள் உப்பால் தூய்மையாக்கப்படுவதுபோல்'', தீர்ப்பின் தீ மற்றும் ஆவியின் தீயால் ''தூய்மையாக்கப்படும்போது'' விசுவாசி பிரமாணிக்கமுள்ளவனாகிறான் (மாற் 9:49) என்ற புதிரான கூற்றுக்கு ஒருவேளை இது பொருளாக இருக்கலாம். ''எனக்கு நெருங்கியுள்ளவன் நெருப்பிற்கு நெருங்கியுள்ளான். எனக்குத் தூரத்தில் உள்ளவன் அரசிலிருந்து தூர விலகியுள்ளான்'' என்று இயேசு கூறியதாக ஓரிசன் கூறுகிறார்.

தீக்கோழி; நெருப்புக்கோழி (OSTRICH)

ஒரு பெரிய, விரைவாக ஓடக்கூடிய பறவை. பழைய ஏற்பாட்டில் இது உண்ணத் தகாத அசுத்தப் பறவையாகக் கருதப்பட்டது (லேவி 11:16; உப 14:15). இது பெரும்பாலும் பாலை நிலங்களில் வறண்ட பகுதிகளில் வாழ்ந்து வந்தது (எசா 13:21; 34:13; 43:20; எரே 50:39). ஆகவே ''பாலைவனத் தின் மகள்'' என்று அழைக்கப்பட்டது. இதனுடைய துயர்தருகிற கூவல் பாலை வனப் பகுதிகளுக்குப் பொருத்தமுடையதாக இருப்பதுபோல் தோன்றும் (மீக் 1:8). இது ஏறக்குறைய 130 கி.மீ. வேகத்தில் ஓடக்கூடி யது (காண். யோபு 39:13). கி.பி. 19-ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதிவரை சீரியன் பாலை வனத்திலும், அந்நாட்டின் தென்பகுதியிலும் சாதாரணமாகக் காணப்பட்டது. ஆனால் இப்போது ஆப்பிரிக்காவின் பாலைவனப் பகுதிகளில் மட்டும் காணப்படுகிறது.

இப்பெயருக்குப் ''பேராசையின் மகள்'' என்று மற்றொரு சொல்லிலக்கணப் பொருள் கொடுக்கப்படும். இதற்கு அதன் பழக்கங் கள் காரணமாகலாம். இப்பறவை எல்லா வற்றையும் தின்னக்கூடியது. எல்லா வகைப்புல், செடிகள், பழங்கள், பாம்பு, பல்லி, சிறு விலங்குகள் போன்ற விழுங்கக் கூடிய யாவற்றையும் உண்ணக்கூடியது. அதன் உணவில் மற்ற விலங்குகளும் உள்ளடங்குவதுதான், ஒருவேளை இப் பறவை எபிரேயர்களால் அசுத்தப் பறவை யாகக் கருதப்பட்டதற்குக் காரணமாகலாம். பழம் மேற்காசியாவின் மக்களில் பெரும் பாலோர் உணவுக்காக இப்பறவையை வேட்டையாடினர். அசீரியச் சித்திரங்களில் தீக்கோழி வேட்டை பல முறை இடம் பெறுகிறது.

இப்பறவை தன் முட்டைகளை மணலில் இடும். அதைச் சூரிய ஒளிசூடுபடுத்தும். முட்டைகளின் ஓடு கடினமான்தாயினும், இந்தப்பழக்கம் எபிரேயர்களுக்குக் கைவிட் டோடுதலுக்கு அடையாளமாயிற்று (புல 4:3; யோபு 39:14-17). இப்பறவை மடமைக் கும், அக்கறையற்ற நிலைக்கும், பாழ்பட்ட நிலைக்கும் அடையாளமாகும்.

தீசான் (DISHAN - மலைவெள்ளாடு, மான்வகை)

சேயிர் என்பவரின் ஏழாவது மகன் (ஆதி 36:21; 1 நாள் 1:38). ஊசு மற்றும் ஆரான் ஆகியோரின் தந்தை (ஆதி 36:30; 1 நாள் 1:42). ஏதோம் நாட்டிலுள்ள கோரியர்களின் (ஓரியர்) தலைவர்களில் ஒருவர்.

தீசோன் (DISHON - வெள்ளாடு)

1. சேயிர் என்பவரின் ஐந்தாவது மகன் (ஆதி 36:21; 1 நாள் 1:38). ஏதோம் நாட்டிலுள்ள கோரியர்கள் (ஓரியர்) தலை வர்களில் ஒருவர் (ஆதி 36:26.30; 1 நாள் 1:41).

2. கோரியர் தலைவரான சேயிரின் பேர னும், அனாவின் மகனும் (ஆதி 36:25; 1 நாள் 1:41), ஏசாவின் மனைவியான (ஆதி 36:1-2) ஒகோலிபாமாவின் சகோதரனும் (36:25) ஆவார்.

தீட்சியர் (TIZITE)

தாவீதின் வலிமைமிக்க வீரர்களில் ஒருவ ரான யோகாவுக்கு இந்த அடைமொழி கொடுக்கப்படுகிறது (1 நாள் 11:45). இது ஓர் இடத்தின் பெயரிலிருந்து வந்திருக்க லாம். இவ்விடம் பற்றி ஒன்றும் அறிவதற் கில்லை.

தீட்டுக்கழிக்கும் தண்ணீர் (WATER OF IMPURITY)

இறந்த பிணத்தைத் தொட்டதால் ஏற்படும் தீட்டைக் கழிக்கும் தண்ணீர் என்று எண் 19-இல் கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட் டில் மற்ற இடங்களில் இறந்த பிணத்தைத் தொட்டதால் ஏற்படும் தீட்டைப் (லேவி 5:2; 11:8.24-38; 21:1-4.10-11; எண் 5:2; 9:6-7.10-11; 31:19-24) பற்றிக் குறிப்பிடும் போது இது குறிப்பிடப்படவில்லை. மேலும் நசரேயர்களுக்கான சிறப்பான சடங்கில் இது பயன்படுத்தப்படவில்லை (எண் 6:6-12).

நுகம் ஏற்றப்படாத, மாசில்லாத சிவப்புக் கிடாரி கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட

பின் பாளையத்திற்கு வெளியில் கேதுரு மரங்களோடும், ஈசோப்போடும், இரு முறை சாயம் தோய்ந்த நூலோடும் எரிக்கப் பட வேண்டும் (எண் 19:1-6). இந்தச் சாம்பல் தண்ணீரில் கரைக்கப்பட்டுத் தீட் டுக் கழிக்கும் தண்ணீர் தயாரிக்கப்பட்டது (19:7). பின் அது இறப்பு நேர்ந்தவீட்டிலும், இறந்த பிணத்தையோ, எலும்பையோ தொட்டவன் மீதும் தெளிக்கப்பட்டது (19:18). மூன்றாவது, ஏழாவது நாளில் இவ்வாறு செய்யத்தவறினால் அவன் இஸ் ராயேலிலிருந்து தள்ளி வைக்கப்படுவான் (19:11.13.20). இறப்புச்சடங்கில் பங்கு கொண்டவர்கள் மாலைவரை தீட்டுப்பட்ட வர்கள் (19:7-8. 10.21) ஆனார்கள்.

இத்தீர்த்தத்தைத் தயாரிக்கப் பயன்பட்ட பொருட்கள் குறிப்பிடத்தக்கவை. கிடாரி, பாலினப்பெருக்கத்தைக் குறிக்கும் பழங் கால அடையாளமாகும். நூல் மற்றும் விலங்கின் சிவப்பு நிறம் இரத்தத்தைச் சுட்டிற்று. கேதுருமரம் நீண்ட காலம் வாழ்ந்தது. இறப்பினால் உண்டான தீட் டைப் போக்க உதவும் வாழ்வை அடையாளமாக உணர்த்தும் பொருட்களின் கலவையான ''உயிருள்ள நீர்'' ஆற்றல் வாய்ந்தது எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

மதியானியர்களிடமிருந்து கொள்ளை யடித்த பொருட்களைச் சுத்தப்படுத்த தீட்டுக் கழிக்கும் தண்ணீரை இஸ்ராயேலர் பயன்படுத்தினர் (எண் 31:23).

தீட்டுப்படுத்துதல் (DEFILE)

இது ஒழுக்கமுறையில் அல்லது சடங்கு முறையில் அசுத்தமாதலாகும், கறைபடுத லாம் (லேவி 11:43; எண் 5:3; மாற் 7:5.18; யூதா 8; திருவெளி 14:4).

தீத்து (TITUS)

1. யூதர்களுக்கு லீசியா அளித்த சலுகை களுக்கு இணக்கம் அளிக்கும் கடிதத்துடன் கி.மு. 165-இல் யூதேயாவுக்கு அனுப்பப் பட்ட இரு உரோமைத் தூதுவர்களில் ஒருவர் தீத்து மானியு என்பராவார் (2 மக் 11:34).

2. தித்தியு யூஸ்துவின் மற்றொரு பெயர் தீத்து யூஸ்து ஆகும். இவர் கொரிந்தியக் குடிமகனாவார். இவரது வீடு செபக்கூடத் திற்கு அருகில் இருந்தது (அ.ப. 18:7). செபக்கூடத்தில் பவுலுக்கும் மற்றக் கொரிந் தியக் கிறிஸ்துவர்களுக்கும் எதிர்ப்பு ஏற்பட்டபோது, இவர் அவர்களைத் தன் வீட்டில் வரவேற்றார்.

3. பவுலின் தோழனான தீத்து: இவர் பவுலின் சீடரும் உடன் உழைப்பாளியும் ஆவார். இவரைப்பற்றி அப்போஸ்தலர் பணிநூல் ஒன்றும் குறிப்பிடவில்லை. இதற் குக் காரணம் இவர் லூக்காவின் உறவினர் என்று விளக்கம் காட்டுவர் (காண்க: 2 கொரி 8:18-19. 22-23). ஆனால் கலாத்தியர், 2-ஆம் கொரிந்தியர், 2 திமொத்தேயு, தீத்து ஆகியோருக்குப் பவுல் எழுதிய திருமுகங் களிலிருந்து தீத்துவைப்பற்றி அதிகம் அறிகிறோம்.

தீத்து ஒரு கிரேக்கர்; அதாவது, புறவினத் தைச் சேர்ந்தவர். பவுலும் பர்னபாவும் எருசலேம் சங்கத்திற்குச் சென்றபோது (கி.பி. 49) தீத்துவும் அவர்களுடன் உடன் சென்றார் (கலா 2:1.3). இச்சங்கத்தில் தர்க்கிக்கப்பட்ட ஓர் அடிப்படைப்பொருள் புறவினக் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் பெற வேண்டுமா என்பதாகும். பவுலின் கருத்துப்படி, தீத்து விருத்தசேதனம் பெறும் படி கட்டாயப்படுத்தப்படவில்லை என்பது எருசலேம் சங்கத் தீர்மானங்களில் முக்கிய மானதொன்றாகும் (2:3). கொரிந்தியத் திருச் சபைக் கண்காணிப்பில், தீத்து பவுலுக்குப் பெரிதும் உதவினார். கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய முதலாம், இரண்டாம் திருமுகங்களுக்கிடையில், (ஒருவேளை 2 கொரி 2:4; 7:8-இல் குறிக்கப்படும் கடிதத் துடன்) கொரிந்துக்குப் பவுலின் தூதுவராகச் சென்று, அங்கு நிலவிய சிக்கலான நிலை யைத் தீர்த்துவைக்க உதவினார். பவுல் தீத்துவைத் துரோவாவில் எதிர்பார்த்தார் (2 கொரி 2:13). ஆனால் எல்லாம் சரியாயிற்று என்ற நற்செய்தியோடு தீத்து மாசிதோனியா வில் பவுலைச் சந்தித்து அவருக்குப்

பெரும் மகிழ்ச்சிதந்தார் (7:6). இந்த அனுப வத்தின் அடிப்படையில், எருசலேம் திருச் சபைக்காகப் புறவினத்திருச்சபைகளில் எடுக் கப்பட்ட காணிக்கையை மேற்பார்க்க பவுல் தீத்துவைக் கொரிந்துக்கு அனுப்பினார். இப்பணியைத் தீத்துதான் முன்பு கொரிந்தில் தொடங்கிவைத்தார் (8:6. 16 தொ). ஆனால் 2 கொரி 10-13 என்ற பகுதி பிற்பாடு எழுதப்பட்ட மடலின் ஒருபகுதி என்று கரு தப்பட்டால், பவுலுக்கும் கொரிந்துத் திருச் சபைக்குமிடையே உள்ள உறவு மீளவும் மோசமாகியதாகத் தெரிகிறது. பவுல், ''நான் உங்களுக்காகச் செய்யும் தொண்டில் என் உடனுழைப்பாளி'' என்று தீத்துவை அழைக்கிறார் (8:23). மேலும் தீத்து கொரிந் தியரிடமிருந்து எவ்வித ஆதாயத்தையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதற்காக பவுல் அவரைப் புகழ்கிறார் (12:18).

தீத் 1:5-இன்படி, கிரேத்தாத் தீவில் தவறுகளைச் சீர்படுத்தி மூப்பர்களை ஏற் படுத்தவும் அங்குள்ள திருச்சபையை அமைக் கவும் பவுல் தீத்துவை அங்கு விட்டுச் சென்றார். தீத்துவுக்கு எழுதப்பட்ட திரு முகம் முழுவதிலும், பவுல் தன் உடனூழிய ரான தீத்துவின்பால் கொண்ட உயர்மதிப்பு மிளிர்கிறது. பவுல், ''நம் இருவருக்கும் பொதுவான விசுவாச வாழ்வில் என் உண்மை மகனான உமக்கு'' என்று தீத்துவை அழைத்து, திருமுகத்தைத் தொடங்குகிறார் (1:4). 2 திமொ 4:10-இல் வரும் சொந்தக் குறிப்பில், தீத்து தல்மாத்தியா என்ற மற்றொரு பணித்தளத்திற்குச் சென் றிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

4. தீத்து பிலேவியு வெஸ்பாசியானு, பேரரசன் வெஸ்பாசியானுஷுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர். இவர் கி.பி. 39-இல் பிறந்தார். இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் போரிடக் கற்றுக் கொண்டார். அதன் பிறகு தன் தந்தையோடு 66-இல் யூதர்களின் கிளர்ச்சியை அடக்குவதில் பங்கு கொண்டார். கி.பி. 67-இல் தன் தந்தை உரோமையில் பேரரசரானபின் தீத்து 70-இல் யூதப்போரை வெற்றியுடன் முடித் தார்; 79-இல் ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சிக்காலம், குறுகியதாக இருந்தாலும், இவர்க்கு பின் வந்த சகோதரர் தொமிசிய னோடு ஒப்பிடும்போது முக்கியமானவரா கக் கருதப்படுகிறார்; மக்களுக்குப் பல நன்மைகள் செய்தார். இவர் 81-இல் இறக் கும்போது ஆட்சி மன்றத்தால் தெய்வமாகக் கருதப்பட்டார்.

5. சில போலிநூல்களால் நல்ல கள்வ னுக்குக் (லூக் 23:39-43) கொடுக்கப்பட்ட பெயர். காண்க. திஸ்மசு.

தீத்துவின் மடல் (TITUS, EPISTLE OF)

அயர்ச்சி தரக்கூடிய போலிநூல். இது பவுலின் உடனுழைப்பாளியான தீத்துவால் எழுதப்பட்டது என்று கருதப்பட்டது. இதன், கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, இலத்தீன் கையெழுத்துப் பிரதிதான் கிடைத்துள்ளது. இந்நூலின் நோக்கம் கன் னிமை வாழ்வைப் போற்றுவதும், ஆணும் பெண்ணும் உடலுறவின்றிச் சேர்ந்து வாழும் ''ஆன்மீகத் திருமணத்தைக்'' கண்ட னம் செய்வதுமாகும். விவிலியமும், அந்தி ரேயா, பேதுரு மற்றும் யோவான் போன் றோரின் பணிபற்றிய துறவுத்தன்மை யுடைய போலிநூல்களும் இந்நூலுக்கு ஆதார மாக இருந்திருக்கலாம். இதன் தோற்றம் தெளிவாக இல்லை. ஆனால் ஒருவேளை 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, ஸ்பெயி னைச் சேர்ந்த துறவுக் குழுவால் எழுதப்பட் டிருக்கலாம்.

தீத்துவுக்குத் திருமுகம் (TITUS, LETTER TO)

1. மேய்ப்புப்பணித் திருமுகங்களில் ஒன்று தீத்துவுக்கு எழுதப்பட்டதாகும். மற்ற இரண்டும் திமொத்தேயுவுக்கு எழுதப் பட்டவையாகும். இவை ஒத்த தன்மை கொண்டிருப்பதால் ஒரே தொகுப்பாகக் கருதப்படும். இது பற்றி மேய்ப்புப்பணித் திருமுகங்கள், திமொத்தேயுவுக்குத் திரு முகங்கள் என்ற தலைப்புகளில் வாசித்தறிக. இங்கு, தீத்துவுக்கு எழுதப்பட்ட திருமுகம் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

2. தீத்துவின் வாழ்க்கை வரலாறு: காண்க. தீத்து (3).

3. வரிசை, காலம், இடம்: தீத்துவுக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் காணப்படும் தலைப்புகளே திமொத்தேயுவுக்கு எழுதப் பட்ட முதலாம் திருமுகத்தில் விரிவாக எழுதப்பட்டுள்ளதால், தீத்து திருமுகம் காலத்தால் முந்தியதாக இருக்க வேண்டும். இரண்டாம் திமொத்தேயு ஆன்மீக இறுதி உயிலாகவும் ஏற்பாடாகவும் உள்ளதாலும், பவுலின் உடனடியாக வரவிருக்கும் மர ணத்தை முன்னறிவிப்பதாலும் (2 திமொ 4:6-8), இது இறுதியானதாக இருக்கலாம். ஆகவே மேய்ப்புப் பணித் திருமுகங்களைத் தீத்து, முதலாம் திமொத்தேயு, இண்டாம் திமொத்தேயு என்ற முறையில் வரிசைப் படுத்தலாம்.

இத்திருமுகங்களுக்குப் பவுல்தான் ஆசிரி யர் என்ற பிரச்சனைக்கு அளிக்கும் விடைக் கேற்ப, இந்நூல் எழுதப்பட்ட காலத்தை கி.பி. 60-க்கும் 100-க்கும் இடையே குறிக்கலாம்.

இத்திருமுகங்கள் ஆசியன் பகுதியில், குறிப்பாக சிறிய ஆசியா பகுதியிலுள்ள திருச்சபை பற்றியவையாகையால் இவை இப்பகுதிகளில், குறிப்பாக எபேசில், தோன்றியிருக்கலாம் என்று அறிஞர் கருது வர்.

இப்பிரச்சனைகள் பற்றி மேய்ப்புப் பணித்திருமுகங்கள் என்ற தலைப்பில் காண்க.

4. நூலின் திட்டம்:

I. வாழ்த்துரை (1:1-4).

II. திருச்சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்து தல் (1:5-9).

III. போலிப் போதனையும், உண்மையான போதனையும் (1:10-3:7).

1. போலிப் போதகர்களின் தன்மை (1:10-16).

2. உண்மையான போதகர்கள் கற்பிக்க வேண்டியவை (2:1-3:7).

2:1-15: திருச்சபையில் கிறிஸ்தவக் கடமை கள்.

3:1-7: சமூகத்தில் கிறிஸ்தவக் கடமைகள்.

IV. போலிப் போதகர் பற்றி எச்சரிக்கை. சண்டை சச்சரவுகள் தவிர்க்கப்பட வேண் டும் (3:8-11).

V. இறுதியுரையும் வாழ்த்தும் (3:12-15).

5. செய்திச்சுருக்கம்: இத்திருமுகம் திருச் சபை அமைப்பை முதன்மையாகக் கருத் தில் கொண்டது. கிரேத்தாவில், திருச் சபையை அமைக்கும்படி தீத்துவைப் பவுல் விட்டுச் சென்றார். மூப்பர் குழு கவன மாய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் (தீத் 1:5-9); அதன் அதிகாரம் ஏற்றுக்கொள்ளப் பட வேண்டும்; வழிபாட்டுக் காரியங்களில் அதன் அறவுரை கடைப்பிடிக்கப்பட வேண் டும் (2:1-3:8) என்று பவுல் அறிவுறுத்து கிறார். திருச்சபையையும் அதன் விசுவாசத் தையும் அழிக்க பதிதர்கள் அச்சுறுத்தும் சூழ்நிலையில் இப்போதனைகளைக் கடைப்பிடிப்பது மிக அவசியமாகும். மற்ற வற்றிற்குக் காண்க: மேய்ப்புப் பணித்திரு முகங்கள்.

தீபத்து (DIPHATH)

எப்பேத்தின் மகன் கோமேரின், மகன் (1 நாள் 1:6). இவர் ஆதி 10:3-இல் இரிபாத்து என்றழைக்கப்படுகிறார்.

தீபோன் (DIBON - அழிக்கிற, தேய்கிற)

1. மோவாபு நாட்டின் ஒரு நகரமான இந்தத் தீபோன் சாக்கடலுக்குக் கிழக்கே 20 கி.மீ. தொலைவிலும், ஆர்னோன் நதிக்கு வடக்கே 5 கி.மீ. தொலைவிற்குள்ளும் அமைந்துள்ளது. இன்று இது தீபான் எனப்படுகிறது. யுசேபியுவுக்கு இது அமைந்த இடம் தெரிந்தாலும் பாலைவனத் தில் இப்பெயரைக் குறித்திருக்கிறார்.

மோவாபியரிடமிருந்து எமோரிய அரச னான சீகோனால் எடுத்துக்கொள்ளப்பட் டது (எண் 21:26-30). அவரிடமிருந்து இஸ்ராயேலர் இதைக் கைப்பற்றி ரூபன், காது ஆகிய இரு கோத்திரங்களும் இது தமக்குரிய பகுதி என உரிமை கொண்டாடி னர் (எண் 32:3). காதுகோத்திரத்தால் காவல் செய்யப்பட்டது (எண் 32:3.34); ஒரு காலத்

தில் இது திபோன் காது என்றுகூட அழைக்கப்பட்டது (எண் 33:45-46; யோசு 13:9.17). இது மோவாபிய அரசன் எக்லோனால் கைப்பற்றப்பட்டு (நீதி 3:12-14), ஒருவேளை ஏகூதாலும் (3:15-30), உறுதியாகத் தாவீதாலும் (2 சாமு 8:2) விடுவிக்கப் பட்டது. எசா 15:2; எரே 48:18.22 ஆகியவை எழுதப்பட்டபோது திபோன் மீண்டும் மோவாபியரின் கைக்கு மாறியது. மேசாவின் மோவாபிய கல்லில் குறிக்கப்பட்டுள்ள மேசாவின் தலைநகரமான ''காரா'' இந்த இடத்தில் இருந்திருக்க வேண்டுமென்ற முடிவுக்குச் சிலர் வருகின்றனர். மோவாபிய அரசன் தனது வெற்றியின் நினைவாகத் தலைநகருக்கு வேறுபெயர் கொடுத்திருக்கலாம் என்பதால் அப்பெயர் இக்கல்லில் காணப்படவில்லை. ஆயினும் திபோன் என்ற பழைய பெயரே அதற்கு நிலைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியை அகழ்ந்தெடுத்தபொழுது ஐந்து நகர வாயில் சுவர்களைக் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் எதற்கும் குறிப்பிட்ட காலத்தைச் சுட்டிக் காட்டமுடியாது. நபத்தேயக் கட்டடங்களின் அடிப்படைகளும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோமைக் கட்டடங்களின் சிதைவுகளும், பைசாந்திய ஆலயமும் இங்குக் காணப்படுகின்றன. மோவாபியக் கட்டடங்கள் இருந்ததற்கான அறிகுறிகள் இல்லையெனினும் 'மேசா அரசன்' காலத்து மட்பாண்டங்கள் (கி.மு. 9-ஆம் நூற்றாண்டு) கிடைத்துள்ளன. நகரச்சுவர்களும், மக்கள் வாழ்ந்ததற்கான அறிகுறிகளும் இரும்புக்காலத்தைச் சுட்டுகின்றன.

2. எருசலேமுக்கு வெளியே யூதர்கள் குடியேறிய நகர்களின் வரிசையில் நெகேபிலுள்ள ஓர் ஊர். எஸ்ரோனுக்கும் எக்கபுசேலுக்கும் (எக்கபட்சவேல்) இடையில் இருந்தது (நெகே 11:25). இதுவும் திமோனாவும் ஒன்றே (யோசு 15:22).

திபோன் - காது (DIBON - GAD)

திபோனின் மற்றொரு பெயர் (யோசு 33:45-46).

தீப்பந்தம் (TORCH)

நீண்ட கழியின் ஒருமுனையில் எரியும் பொருள் சுற்றப்பட்டு, நெய்யில் நனைக்கப் பட்டு, பின்பு கொளுத்தப்படும். இதன் ஒளியும், நீண்ட கழியும், தீப்பந்தம் என்ற பெயர் வரக் காரணமாகின்றன. கடவுள், தான் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்ட தன் குறிப்பாக, துண்டான பலிப்பொருளின் நடுவில் தீப்பிழம்பு வடிவில் கடந்து செல்கிறார் (ஆதி 15:17. எரே 34:18). தீப்பந்தங்களைத் தந்திரமாகப் பயன்படுத்தி இதியோன் வெற்றி வாகை சூடுகின்றார். (நீதி 7:16 தொ). யோபு நூலில் லேவியாத்தானைப் பற்றிய பாடலில் தீப்பிழம்பைப் பற்றிய சிறப்பான வரிகள் இரண்டு உண்டு. ''அதன் வாயினின்று புறப்படுவது தீப் பிழம்பு; அங்கிருந்து பறப்பது நெருப்புப் பொறிகளே'' (யோபு 41:11). எசா 62:1-இல் ''சீயோனின் வெற்றி வைகறை ஒளியெனவும், அதன் மீட்பு சுடர் விளக்கெனவும் வெளிப்படும்வரை, அதனை முன்னிட்டு மவுனமாயிரேன்'' என்று இறைவாக்கினர் உறுதியளிக்கிறார். புதிய ஏற்பாட்டில் இயேசுவைப் பிடிக்க காவலர்கள் விளக்குகளோடும் பந்தங்களோடும் வருவது கூறப்படுகிறது (யோவா 18:3).

தீமை, தீயவை (EVIL)

1. எபிரேய, கிரேக்க மொழிகளில் இக் கருத்து செயல் முறையானதையும் குணத்தையும் குறிக்கும் வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இக்கருத்தை விவரிக்க மூல மொழிகளிலும், மொழி பெயர்ப்புகளிலும் பல சொற்கள் பயன்பட்டுள்ளன. ஒரு பொருள் பயனற்றதாகவும் அழிவுக்குரியதாகவும் இருந்தாலும் (2 அர 2:19; பழ 20:14; 25:19; எரே 24:2; மத் 6:23; 7:7), விரும்பத்தகாததாயும், அசிங்கமாகவும், துயரம் தருவதாகவும் இருந்தாலும் (ஆதி 21:11-12; 28:8; 41:19-20; நெகே 2:3; திருவுரை 7:3), நோவு தருவதாயும் தீங்கு செய்வதாயும் இருந்தாலும் (ஆதி 26:29; 31:7; உப 26:6; 28:35; 1 சாமு 18:10; 2 சாமு 12:18; பழ 11:15; திருவெளி 16:2), அதன் தோற்றத்தையோ விளைவையோ வைத்து அது தீயதாகக் கருதப்பட்டது.

பழைய ஏற்பாட்டில், துயரம் (ஆதி 44:34), தீங்கு (லேவி 26:6; உப 7:15) துன்பம் (திருவுரை 6:2), கொடுமை (1 சாமு 12:17; 1 அர 1:52; எசே 3:19), அவதூறு (எண் 13:32; யோபு 15:35; பழ 21:27; சங் 140:8) ஆகியவற்றை உணர்த்துபவை தீமை யானதாகக் கருதப்பட்டன. புதிய ஏற்பாட்டில் தீமை என்பதைக் குறிக்க ''காகோஸ்'', ''பொனேரோஸ்'' ஆகிய சொற்கள் பயன் படுகின்றன. இச்சை, காமம், தீய ஆசைகள் (உரோ 6:12; 2 திமொ 2:22; 1 பேதுரு 1:14), அநீதி, கொடுமை (1 கொரி 13:6) கெடுமதி, தீயநோக்கு (மத் 22:18), தீமை செய்வது (மாற் 3:4) ஆகியவை தீமை என்ற கருத்தால் குறிக்கப்படுகின்றன.

II. பழைய ஏற்பாட்டுப்போதனை: இறைவனைப் புறக்கணித்தல் (2 நாள் 12:14), உடன்படிக்கையை மீறுதல் (உப 17:2), யாவேக்கு அஞ்சாமை (யோபு 1:1) ஆகியவற்றைத் தீமை என்று குறிப்பிட்டாலும், விவிலிய ஆசிரியர்கள் மனிதர் தன் உடன் சகோதரர்களுக்குச் செய்யும் மனிதத் தீமையின்மீதும் கவனம் செலுத்துகின்றனர். நன்மை தீமைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை நன்கு உணர்ந்தவர்களாய், அவர்கள் தீமையை இறைவனுடைய சட்டத்தை நிராகரித்தலாக, ஆன்மீக சிலைவழிபாடு (உப 4:25; 1 அர 11:6; 2 அர 21:2 - ஆண்டவருக்கு எதிராகத் தீயதைச் செய்து) மற்றும் தனிப் பட்டவர்களின் (2 சாமு 12:9; சங் 34:13) சமூகத்தின் (உப 19:19; 22:21) உரிமைகளைக் கடைப்பிடிக்காமை என்ற பொருளில் விவரிக்கின்றனர். இஸ்ராயேலர் இவ்வுலகைச் சார்ந்த ஓர் அரசனை விரும்புவதும் கூட தீமையாகக் கருதப்பட்டது (1 சாமு 12:19), ஏனெனில் அது இறையாட்சியை மறுப்பதாகும்.

பலதரப்பட்ட தீய செயல்களைச் செய்பவர்கள் தீயவர்களாக விவரிக்கப்படுகின்றனர் (2 அர 21:6. 9.11; எரே 3:5; 5:28; 7:26). ஆனால் அவர்கள் நல்லவற்றைச் செய்ய அதாவது இறைவனுக்கும் அயலாருக்கும் அன்புகாட்டத் தூண்டப்படுகின்றனர். உபாகம ஆசிரியர் ''உன் நடுவிலிருந்து தீமையை அகற்றுவாய்'' என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார் (உப 13:5; 17:7.12; 19:19). இதே எச்சரிக்கையைப் பிற்கால இறைவாக்கினர்களும் எதிரொலிக்கின்றனர் (எசா 1:16; எரே 18; எசே 33:11). அவர்கள் அறைகூவல் வீண்போகவில்லை. ஏனெனில் அவர்களால் நன்மை செய்ய முடியும். இதைப் பழைய ஏற்பாட்டுத் தலைவர்களில் சிலர் செய்து காட்டியுள்ளனர் (யோசேப்பு ஆதி 44:4; தாவீது 1 சாமு 25:21). உகந்த சூழ்நிலை இன்மை ஒருவனுடைய பொறுப்பை நீக்கிவிடவில்லை. எரொபவாமின் தீய பாதிப்பிற்கு உட்பட்டிருந்தாலும், மெனகேம் (2 அர 15:18), பெக்ககியா (15:24), பெக்கா (15:28) ஆகிய அரசர்கள் அவர்களின் தகாத நடத்தைக்குப் பொறுப்பாக்கப்படுகின்றனர்.

விவிலிய ஆசிரியர்கள் போராடிய பிரச்சனை ஒன்றுண்டு. அது, தீயவர்கள் செழிப்புற்றுத் திகழ்வதாய்த் தோன்றும்போது நீதிமான் துன்புறுகிறான். அவர்கள் ஒழுக்கச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் பயனே இல்லை போல் தோன்றுகிறது. எடுத்துக் காட்டாக, யோபு எடுத்துக்காட்டாகவும் நேர்மையோடு வாழ்ந்தாலும் பெரிதும் துன்புறுகிறார் (யோபு 16:11; 30:26). இப் பிரச்னைக்குப் பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் மூன்று முறையில் பதிலிறுக்க முயல்கின்றனர். 1) மனித தீமையை நன்மையாக மாற்றுகிறார் இறைவன். யோசேப்பு அவரது சகோதரர்களின் தீய எண்ணத்தால் எகிப்தில் அநீதியாகத் துன்புற்றபோது, இறைவன் பசியெனும் துன்பத்திலிருந்து அவரது குடும்பத்தைக் காப்பாற்ற அவரைப் பயன் படுத்துகிறார் (ஆதி 50:15-22). 2) இறைவன் நீதிமானைச் சோதித்தறிய தீமையைப் பயன் படுத்துகிறார். பொறுக்க முடியாத அளவுக்கு யோபு துன்புற்றார். இறுதியில் நீதிமான் என்று அறிவிக்கப்படுகிறார் (யோபு 42:7தொ). 3) தீமை அதிக நாட்கள் நீடிப்பதில்லை (சங் 37:16-17; பழ 10:29; 11:19; 17:13). ஏனெனில் மனிதனது நல்ல தீய செயல்களை இறைவன் தீர்ப்பிடுகிறார்

(திருவுரை 12:14). மனிதனுடைய செயல்களில் இறைவனுடைய கரம் எப்போதும் எளிதாகக் கண்டுணரப்படுவதில்லை என்பதைச் சங்கீத ஆசிரியர்களின் ஐயப்பாடுடைய ஏக்கங்களில் காணலாம். ''உன் கண்ணாலேயே நீர் காண்பீர்; பொல்லார்க்குக் கிடைக்கும் தண்டனையை நீரே பார்ப்பீர்'' (சங் 91:8) என்று வெற்றி முழக்கம் செய்கிறார். ஆனால் ''அப்படியானால் நான் என் உள்ளத்தை மாசற்றதாய் வைத்துக் கொண்டது வீண்தானா? குற்றமற்றவனாய் என் கைகளைக் கழுவிக் கொண்டதும் வீண்தானா?'' என்று புலம்புகிறார். ஏனெனில் ''பொல்லாதவர்கள் என்றும் வளமுடன் வாழ்ந்து செல்வத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர்'' (சங் 73:12-13).

மனித தீமையில் இறைவனை ஈடுபடுத்த விவிலிய ஆசிரியர்கள் விரும்புவதேயில்லை. ஏனெனில் அவர் ''பொல்லாங்கைப் பார்த்து மகிழும் இறைவன் இல்லை; அவர் முன்னிலையில் தீமைக்கு இடமில்லை" (சங் 5:4). மேலும் அவர் தம் மக்களை ஆதரிக்கின்றார் (ஓசே 7:15; சங் 97:10). இருப்பினும் உடல்சார்ந்த துன்பங்களை இறைவனே அனுப்புவதாக விளக்குகின்றனர். இப்படிச் செய்வது நீதிமான்களைச் சோதித்தறிய மட்டுமன்று; பொல்லாதவர்களைத் தண்டிப்பதற்கும் ஆகும். ''இந்தக் கெட்ட தலைமுறையின் மனிதருள் எவனும்'' கானான் நாட்டிற்குள் நுழையப் போவதில்லை என்று இறைவன் தமது மக்களைத் தண்டிக்கிறார் (எண் 14:22-24; உப 1:34-36). கடவுள் அபிமெலக்கிற்கும் செக்கேம் மக்களுக்குமிடையில் கடும் பகையை மூட்டுகிறார் (நீதி 9:23). ஆண்டவர் அனுப்பிய தீய ஆவி சவுலை ஆட்கொள்கிறது (1 சாமு 16:4-16; 18:10). யூதாவின் சிலை வழிபாட்டின் காரணமாக அவர்கள் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட இறைவன் அனுமதிக்கிறார் (எஸ் 9:13; காண்க: எரே 11:17; 18:1-10). தம்பால் காட்டிய பிரமாணிக்கமின்மைக்காகத் தம் மக்களை இறைவன் தண்டிக்கும்போது, அவர் தமது மனதை மாற்றிக்கொள்ளச் செய்யக்கூடும். மோசேயும் எரேமியாவும் இதில் வெற்றியும் கண்டனர் (யாத் 32:12-14; எரே 26:3; காண்க: யோனா 3:10). நாடு கடத்தப்பட்ட காலத்து இறைவாக்கினரான எசேக்கியேல் நேர்மையற்ற பெற்றோரின் குற்றங்களுக்காக நேர்மையுள்ளவர்கள் துன்புற மாட்டார்கள் என்றும் தீயவன் தண்டனை பெறுவதை விட அவன் மனந்திருந்துதலையே இறைவன் விரும்புகிறார் என்றும் கூறி அவநம்பிக்கை மிக்க நாடு கடத்தப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறார் (எசே 18).

II. புதிய ஏற்பாடு: இயேசு துன்பங்களையும் சோதனைகளையும் தமது வாழ்விலே அனுபவித்திருந்தார். ''தீயோனிடமிருந்து (அல்லது தீமையிலிருந்து) எங்களை விடுவியும்'' என்று இறைவனைப் பார்த்து மன்றாடுமாறு இயேசு தம் சீடர்களுக்குக் கற்பிக்கிறார் (மத் 6:13). இந்தத் தீயோன் ஒருவேளை சாத்தானைக் குறிக்கலாம் (13:19; 1 யோவா 2:13-14). பழங்காலத்து இறைவாக்கினர்களைப் போன்று இயேசுவும் ஒழுக்கத் தீமையின் இடம் இதயம் என்று சுட்டிக்காட்டி, நல்லவை செய்வோரையும் தீமை செய்வோரையும் வேறுபடுத்திக் காட்டுகிறார் (மத் 12:34-35). இறைவன், ''நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவன் உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பொழியச் செய்கிறார்'' என்று மத்தேயுவின் மலைப்பொழிவில் இயேசு கூறும்போது (மத் 5:45), யோவானின் நற்செய்தி நன்மை செய்வோர் மட்டுமே முடிவில்லா வாழ்வைப் பெறுவர் என்றும் தீமை செய்வோர் தீர்ப்புப் பெறுவர் என்றும் வலியுறுத்திக்கூறி இருவரையும் வேறுபடுத்துகிறது (யோவா 5:29; காண்க. 3:19-21).

தீமை பற்றிய பவுலின் உரைகள் மிகவும் விரிவாக உள்ளன. உண்மைக்குப் பணிபவர்களையும் பணியாதவர்களையும் வேறுபடுத்தி, ''தீமை சூழ்வதில் திறமைவாய்ந்தவரான'' (உரோ 1:30), ''இயற்கை சார்ந்த

மனிதன்'' மேல் பெரும் துன்பங்கள் வந்து விழும் (2:8-9) என்று பவுல் அறிவிக்கிறார். இதற்கு மாறாக, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள், தீமையின்பால் உள்ள நாட்டங்களை ஒழித்து விடும்படியும் (கொலோ 1:21; 3:5), தீமையைப் பொறுத்து நன்மையைச் செய்யும்படியும் (உரோ 12:9) தூண்டப்படுகின்றனர்; பழிக்குப்பழி வாங் காது நன்மை செய்யும்படி எச்சரிக்கப்படு கின்றனர் (12:17.21; 16:19; 1 கொரி 14:20). விரும்பும் நன்மையைச் செய்ய முடியா மைக்கும் விரும்பாத தீமையைச் செய்வதற் கும் இடையிலுள்ள முரண்பாட்டைத் தன் வாழ்விலேயே அனுபவித்துணர்ந்த பவுல் (உரோ 7:19.21), அதே அனுபவத்தை யுடைய விசுவாசிகளுக்குப் போதிக்கும் போது, பழைய ஏற்பாட்டு மாதிரிகளி லிருந்து தனது வலிமையைப் பெறுகிறார் (1 கொரி 14:20).

யாக்கோபும் பேதுருவும் ஒழுக்கத்தீமை யோடு போராடும் மனுக்குலம் பற்றி இதே விதக் கருத்துக்களைக் கூறுகின்றனர். ''இறை வன் தீமைபுரியச் சோதிக்கப்படுபவர் அல்லர்; ஒருவரையும் அவர் சோதிப்பது மில்லை'' (யாக் 1:13) என்றும், ''ஓயாமல் தொல்லைப்படுத்தும்'' (3:6.8) நாவை எவரா லும் அடக்க முடிவதில்லை என்றும் யாக்கோபு கூறுகிறார். உரிமையடைந்தவர்க ளின் சுதந்தரத்தைத் தீவினை செய்வதற்குப் போர்வையாகப் பயன்படுத்தக்கூடாது என் றும் (1 பேதுரு 2:16), தீமைக்குத் தீமை செய்யாதிருக்கும்படியும் (3:9), தீமையி னின்று விலகி நன்மை செய்யும்படியும் (3:10-12; சங் 34:12-16) விசுவாசிகளைப் பேதுரு எச்சரிக்கிறார்.

IV. இறையியல் சிந்தனை: இரு கேள்வி கள் எழுகின்றன. முதலாவது உலகையும் மனித உயிர்களையும் நல்லவையாகப் படைத்த இறைவன் (ஆதி 1:31), தீயன செய்யும் நாட்டமுடைய மனிதர்களை எப் படிப் படைத்திருக்க முடியும். கருத்தியல்படி இறையொருமைக் கோட்பாடு தீமை யென்ற உண்மைக்கு இடம் தருவதில்லை (ஏனெனில் இறையொருமைக் கோட்பாடு இருமெய்மைவாதத்தையும் தீமையை உண் டாக்கும் இரண்டாம் தெய்வத்தையும் ஏற் றுக் கொள்வதில்லை). முதல் ஆண், பெண் ஆகியோரின் கீழ்ப்படியாமையால் ஒழுக்கத் தீமை உண்டாகியது என்று ஆதி 3 கூறுகிறது. மற்ற விவிலியப் பகுதிகள் பாவத்திற்கு வாய்ப்பளித்த பாம்பைத் தீமை யின் தலைவனான சாத்தானோடும், தொடர்பு படுத்துகின்றன. சாத்தானோடு இறைவன் கொண்டுள்ள போராட்டத்தின் பரந்தசூழ் நிலையில் மனித பாவத்தையும் தீமையையும் கவனத்தில் கொள்கின்றன.

இரண்டாவது, தமது மகன் இயேசு வழியாகச் சாவையும், கொள்கையளவில் சாத்தானையும் வென்றுவிட்ட இறைவன், ஏன் தீமை பரவலாகவும் மூர்க்கத்தனமுள்ள தாகவும் சாத்தான் ஆற்றல் மிக்கதாகவும் இருக்க அனுமதிக்கிறார். இது காலந் தோறும் விசுவாசிகள் எதிர்கொள்ளும் பிரச் சனையாகும். இறைவன் நன்மையும் ஆற்ற லும் மிக்கவராய் இருக்கும்போது, ஒழுக் கத் தீமையெனும் சுவருக்குப்பின் தம்மை மறைத்துக் கொள்வதுபோல் தோன்றுவது ஏன்? புதிய ஏற்பாடு இறுதிவிடையாக, இயேசுவின் இரண்டாம் வருகையைச் சுட் டிக்காட்டுகிறது. அப்போது நல்லோர் தங் களுக்குரிய சன்மானத்தைப் பெறுவர்; தீயோர் தாங்கள் தேடிக்கொண்ட தண்ட னையைப் பெறுவர் (மத் 24:36 தொ; 25:31-46).

நன்மை நிறைந்த இறைவன் இருத்தல் தீமையைப் புறம்பாக்குகிறது, மற்றும் தீமை பரவலாக இருப்பது, நன்மை நிறைந்த இறைவனின் பிரசன்னத்தை அகற்றுகிறது என்ற கருத்தியலான கூற்றுகளை விவிலி யம் ஏற்றுக் கொள்வதில்லை. அதன் விசு வாசம் எவ்வளவு முரண்பாடானதாகத் தோன்றினாலும் தீமை செய்யக்கூடியதான மனுக்குலத்தையே இறைவன் படைத்தார் மற்றும், விசுவாசிகளின் ஆழ்ந்த துன்பங்க ளிலும் சோதனைகளிலும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கிறார் என்பனவே வேதாக

மம் அறிவிக்கும் விசுவாசம். காண்க. நன்மை; நன்மையும் தீமையும்; பாவம்.

திமோனா (DIMONAH - சாணக்குவியல்)

ஏதோமுக்கு அருகில் நெகேபிலுள்ள ஒரு நகர். யூதாவுக்குக் குறிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்ததாகும். பெயேர் செபாவை மைய மாக வைத்து கின், மற்றும் அதாதாதோடு குறிக்கப்படுகிறது (யோசு 15:21-32). இது வும் தீபோனும் (1) ஒரே இடமாக இருக்கலாம். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் யூதர்கள் இங்கு மீண்டும் குடியேறினர் (நெகே 11:25). இந்தத் திமோனாவை கி.பி. 1955-இல் பெயேர் செபாவுக்குத் தென்கிழக்கில் 29 கி.மீ. தொலைவில் நிறுவப்பட்ட இக்காலத் திமோனாவுடன் குழப்பிவிடக்கூடாது.

திமோன் (DIMON - சிவப்பான)

ஒரு மோவாபிய நகரம் (எசா 15:9). சாக்கடல் சுருள்கள்ளப் பின்பற்றி சில வாசகங்கள் திமோனுக்குப் பதிலாகத் தீபோன் என்று கொண்டுள்ளன. இரத்தத்தைக் குறிக்கும் சொல்லை வைத்துச் சொல்லாடும் நோக்கத்துடன் தீபோன் என்பது வேண்டு மென்றே திமோன் என்ற மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்பர். அப்படியாயின் ''தீபோன் நீர்நிலைகள்'' அர்னானைக் குறிக் கும். இந்த வாசகத்தை ஏற்க மறுப்பவர்கள், அ) தீபோன் ஏற்கெனவே 15:2-இல் குறிக் கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் வேறு எந்த இடமும் இரண்டு முறை குறிக்கப்படவில்லையென்றும், ஆ) தீபோன் பெரிய ஆற்றங்கரையில் இல்லை; தூரத் திலும் உயரத்திலும் அது அர்னோனுக் குத் தொலைவிலுள்ளது; 15:9 ''தீபோன் நீர்நிலைகளைப்'' பற்றிக் குறிப்பிடுகிறது என்றும் சுட்டிக்காட்டுவர்.

இவ்விடம் மத்மேனாகவும் சுட்டிக்காட் டப்படலாம் (எரே 48:2). அப்படியாயின் இராப்பாவுக்கு வடமேற்கில் 4 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து திம்னேயா வாக இருக்கலாம்.

திமோன் (TIMON - மதிப்பிற்குரிய)

தொடக்கத் திருச்சபையில் கிரேக்க மொழி பேசிய கைம்பெண்களுக்குரிய அறப்பணியில் அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்ய, திருச்சபையால் தேர்ந்தெடுக் கப்பட்ட எழுவரில் ஒருவர் (அ.ப. 6:5). இவரது கிரேக்கப்பெயர், இவர் சிதறிக் கிடந்த கிரேக்க மொழி பேசிய யூதர்க ளிடையே வளர்ந்திருக்கலாம் என்று சுட்ட வல்லது.

தீய ஆவிகள் (EVIL SPIRITS)

I. தீங்கு விளைவிக்கும் ஆன்மீக உயிர்க ளாகிய தீய ஆவிகளின் தோற்றமானது, சிறிது சிறிதாகவே வெளிப்பாட்டில் வெளிச் சத்திற்கு வருகிறது. தொடக்கத்தில், சாத்தா னுடைய மறைபொருளுடன் தொடர்பு படுத்தாமலேயே, பொதுப்பாணி நம்பிக்கைகளி னின்று சில கூறுகளை விவிலியப்பகுதிகள் பயன்படுத்தின. முடிவில், வளர்ச்சி யடைந்த முழுமையான கருத்து, சாத்தானிட மிருந்தும் அவனது துணையாளர்களிட மிருந்தும் மனிதரை விடுவிப்பதற்கென, இவ்வுல கிற்கு வந்த கிறிஸ்துவின் மறைபொருள் ஒளியின் பொருளைக் கொண்டுள்ளது.

II. பழைய ஏற்பாடு.

1. விசுவாசத்தின் தோற்றங்கள்: பண் டைய மேற்காசிய மக்கள் மனிதனைத் தாக்குகின்ற தீமைகளின் பின்னணியில் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான தெளிவற்ற சக்திகளுக்கு ஆட் தன்மை அளித்தனர். பாபிலோனிய சமய மானது வளர்ச்சியடைந்த பேய் இயலைக் கொண்டிருந்தது. மந்திரத்திற்குட்பட்ட நபர் கள், பொருட்கள் மற்றும் இடங்களை விடுவிப்பதற்கென, பல பேயோட்டும் சடங் குகள் அங்குச் செயல்படுத்தப்பட்டன. ஒவ் வொரு நோயும் தீய ஆவியின் செயலாகக் கருதப்பட்டதால் இந்த அடிப்படை மந்திரச் சடங்குகள், மருத்துவத்தில் ஒரு முக்கிய பங்கு வகித்தன.

பழைய ஏற்பாடானது தொடக்கத்தி லிருந்தே இவ்வகையான உயிர்கள் இருத்தலை

யும் அவற்றின் செயலையும் அங்கீகரித்திருந்தது. காட்டாடுகள் (எசா 13:21; 34:14), கூளிகள் (34:14) முதலிய கொடிய மிருகங்களுடன் கலந்துள்ள அமைதி கலைந்த தோற்றங்களுடனான சிதைவுகள் மற்றும் கைவிடப்பட்ட இடங்கள் நிறைந்த நாடோடிப் பாடல்களைப் பயன்படுத்துகிறது. பாபிலோன் (எசா. 13), ஏதோம் நாடு (எசா 34) போன்ற சபிக்கப்பட்ட பகுதிகளை அது அவைகளுக்கு அர்ப்பணிக்கிறது. இஸ்ராயேலின் பாவங்களைச் சுமந்த வெள்ளாட்டுக்கிடாய் பேயாகிய அசாசேலுக்கு அளிப்பதைப் பாவப்பரிகார நாள் சடங்கானது விவரிக்கிறது (லேவி 16:10). அவ்வாறே தீய ஆவிகள் நோயாளியைச் சூழ்ந்து கொண்டு, அவனை வேதனைக்குட்படுத்துகின்றன. தொடக்கத்தில் கொள்ளை நோய் (சங் 91:6; அப 3:5), காய்ச்சல் (உப 32:24; அப 3:5) முதலிய தீமைகள் இறைவன் அனுப்பிய வாதைகளாகக் கருதப்பட்டன. சவுலின்மீது தீய ஆவியையும் (1 சாமு 16:14-15. 23; 18:10; 19:9), எகிப்தின் மீதுதனது அழிக்கும் தூதரையும், அசீரியப் படையின்மீது எருசலேமையும் அனுப்புவது போல (யாத் 12:23; 2 சாமு 24:16; 2 அர 19:35), குற்றமுள்ளோர் மீது அவர் வாதைகளை அனுப்புகிறார்.

ஆனால் நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர் வானதூதர் உலகிற்கும் பேய்த்தனமான உலகிற்குமிடையே தெளிவான வேறுபாடு இருந்தது. தீய சக்திகள் மனிதனை வேதனைக்குட்படுத்துகின்றன (தோபி 6:8); மற்றும் வானதூதர்கள் அவற்றை எதிர்கொள்ளும் பணியைக் கொண்டுள்ளனர் (தோபி 8:3) என்பதைத் தோபியா நூல் அறிந்துள்ளது. ஆனால் கொலை புரியும் மிக மோசமான பேயினைக் குறிப்பிட, அசுமதேயு (தோபி 3:8; 6:14) என்னும் பெயரை அளிப்பதற்கெனப் பாரசீக நாடோடிப்பாடல்களைப் பயன்படுத்தத் தயங்கவில்லை. வானதூதர்களைப் போன்றே தீய ஆவிகள் இருப்பதையும் செயல்படுவதையும் பற்றி உறுதியாக அறிந்திருந்த பழைய ஏற்பாடு, நீண்ட காலம்வரை, அவற்றினுடைய இயல்பு மற்றும் அவை இறைவனுடன் கொண்டுள்ள உறவு ஆகியவை பற்றிய தெளிவற்ற கருத்தையே கொண்டிருந்தது என்பது தெளிவு.

2. இறைத்தன்மை அளிக்கப்பட்ட தீய ஆவிகள்: கீழ்த்தரமான ஆவிகளுக்குப் பலி வழிபாடு அளிப்பதன் மூலம் அவற்றைத் தன் வயப்படுத்த விரும்புதல், அதாவது அவற்றைத் தெய்வங்களாக்குவதான சோதனையானது புறவினத்தாருக்கு எப்போதும் இருந்திருக்கிறது. இச்சோதனையினின்று இஸ்ராயேலும் தப்பவில்லை. தன்னைப் படைத்தவரை விட்டுவிட்டு அது ''பிற தெய்வங்களை'' நோக்கித் திரும்பியது (உப 13:3.7.14); அதாவது, மனிதப்பலிகளை அளிக்கும் அளவிற்குத் (சங் 106:37) தீய ஆவிகளை நோக்கித் திரும்பியது (உப 32:17). இஸ்ராயேலர் தடைசெய்யப்பட்ட தொழுகைமேடுகளில் தங்கியிருந்த (2 நாள் 11:15) பேய்களுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டார்கள் (லேவி 17:7). கிரேக்க விவிலிய மொழிபெயர்ப்பாளர்கள், புறவினத்தாரின் தெய்வங்களைத் தீய ஆவிகளுடன் ஒப்புமைப்படுத்தி (சங் 95:5; பாரூ 4:7), மூல எபிரேயமானது அவற்றைப்பற்றிப் பேசாத இடங்களிலும் அவற்றை அறிமுகப்படுத்தி (சங் 90:7; எசா 13:21; 65:3), சிலை வழிபாட்டினுடைய பேய் சம்பந்தப்பட்ட விளக்கத்தினை முறைப்படுத்தினர். இவ்வாறு, தீய ஆவிகளின் உலகமானது இறைவனுக்கெதிராகப் போட்டியிடும் உலகாக உருவாயிற்று.

3. சாத்தானின் படை: பிற்காலத்தில் யூத சிந்தனையானது இவ்வுலகைத் திட்டத்தோடு முறைப்படுத்துகிறது. தீய ஆவிகள், வீழ்ச்சியடைந்த வானதூதர்களாகவும், சாத்தானின் துணையாளர்களாக உருவாகிய உடந்தையாளர்களாகவும் கருதப்படுகின்றனர். அவற்றின் வீழ்ச்சியை நினைவிற்குக் கொண்டுவர சில சமயங்களில் விண்மீன்கள் போர் பற்றிய புராண உருவகமும் (எசா 14:12), கடலை உருவகப்படுத்துகின்ற மிருகங்களுக்கும் யாவேக்கும் இடையிலான தொடக்ககாலப் போர் உருவகமும்

பயன்படுகின்றன. சில சமயங்களில் தெய்வத்தின் பிள்ளைகள், இவ்வுலகப் பெண்களிடம் காதல் வயப்படுவது பற்றிய மரபுகளும் தோன்றுகின்றன (ஆதி 6:1தொ; 2 பேதுரு 2:4). மற்றும் சில பகுதிகளில், இறைவனுக்கெதிரான அடாத கிளர்ச்சியில் ஈடுபடும் தீய ஆவிகளை நாம் காண்கிறோம் (எசா 14:13-14; எசே 28:2). எவ்வாறெனினும், தற்பெருமையும், காமமும் கொண்ட தூய்மையற்ற ஆவிகளாக, தீய ஆவிகள் தோன்றுகின்றன. அவை மனிதனை வேதனைக்குட்படுத்தி, தீமைக்கு நடத்திச்செல்ல முயல்கின்றன. அவற்றை எதிர்கொள்ள, பேயோட்டுதல் மேற்கொள்ளப்படுகிறது (தோபி 6:8;8:2-3; மத் 12:27). இந்தப் பேயோட்டுதல்கள் முன்னைப் பாபிலோனில் இருந்ததுபோல மாய மந்திரங்களாக இல்லாமல், வசை மொழியாக உள்ளன. இறைவனுடைய பெயரின் வல்லமையை நோக்கி வேண்டுகோள் விடுக்கப்பட்டால், சாத்தானையும் அவனது தோழர்களையும் இறைவன் அடக்குவாரென நம்பப்படுகிறது (செக் 3:2; யூதா 9). மேலும், மிக்கேலும் அவரது வானகப் படையினரும் தீய ஆவிகளுடன் இடைவிடாப்போரில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் மிக்கேல் மனிதருடைய உதவிக்கு வருவார் என்பதும் தெரியவருகின்றன (தானி 10:13).

III. புதிய ஏற்பாடு:

1. இயேசு, சாத்தான் மீதும் அவனது ஆவிகள் மீதும் வெற்றி கொண்டவர்.

இயேசுவின் வாழ்வும் செயல்களும், மனிதனுடைய மீட்பினைப் பணயமாகக் கொண்டுள்ள இரு உலகங்களுக்கு இடையிலான இந்தப் போராட்டத்தின் பின்னணியில் இடம் பெறுகின்றன. இயேசு நேரிடையாகச் சாத்தானை எதிர்கொண்டு, அவன்மீது வெற்றி கொள்கிறார் (மத் 4:11 இணை; யோவா 12:31). பாவ மனுக்குலத்தின் மீது வல்லமை கொண்டுள்ள தீய ஆவிகளையும் அவர் எதிர்கொண்டு, அவற்றினுடைய ஆட்சிப்பரப்பிற்குள்ளேயே அவற்றை அழிக்கிறார்.

கப்பர்நாகும் செபக்கூடத்திலுள்ள பேய் பிடித்தவன் (மாற் 1:23-27), கெரசாவிலுள்ள பேய் பிடித்தவன் (மாற் 5:1-20), சீரோபெனீசியப் பெண்ணின் மகள் (மாற் 7:25-30) மற்றும் வலிப்புடைய மகன் (மாற் 9:14-29), ஊமைப்பேய் பிடித்தவன் (மத் 12:22 தொ) மற்றும் மக்தலேன் மரியாள் (லூக் 8:2) முதலான பேய் பிடித்தோரைப்பற்றிய சம்பவங்களின் பொருள் இதுவே. பெரும்பாலான நிகழ்ச்சிகளில் பேய் பிடித்தலும், நோயும் ஒன்றோடொன்று கலந்துள்ளன (மத் 17:15.18). இதன் விளைவாகச் சில நேரங்களில் பேய் பிடித்தோரைக் குணமாக்குபவராகவும் (லூக் 6:18; 7:21), சில நேரங்களில் தீய ஆவிகளை விரட்டுபவராகவும் (மாற் 1:34-39) இயேசு குறிப்பிடப்படுகிறார். தெளிவாகக் காணப்படும் பேய் பிடித்ததுபற்றிய சம்பவங்களின்மீது எவ்வித சந்தேகமும் படாமல் (மாற் 1:23-24; 5:6), இந்நாளில் உளவியலுக்கு உட்படுத்தப்படும் நிலைகளை அந்நாளைய எண்ணப்படி, நேரடியாகத் தீய ஆவிகளுக்கே சாற்றிக்கூறும் கருத்தை மனதில் கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒவ்வொரு நோயும், மனிதனின் மேலான சாத்தானுடைய வல்லமையின் அடையாளம் என்பதை மனதில் கொள்ள வேண்டும் (லூக் 13:11).

நோயினை எதிர் கொள்ளும்போது, இயேசு சாத்தானையே எதிர்கொள்கிறார். அதைக் குணப்படுத்தும்போதுஅவர் சாத்தான்மீது வெற்றி கொள்கிறார். இவ்வுலகின் தலைவர்களாகத் தாங்கள் அமர்த்தப்பட்டுள்ளதாக, தீய ஆவிகள் எண்ணின. இயேசு அவற்றை அழிக்க வந்தார் (மாற் 1:24). தீய ஆவிகளின்மீது அவர் காட்டுகின்ற அதிகாரத்தின் காரணமாக, மக்கள் திரள் ஆச்சரியப்படுகிறது (மத் 12:23; லூக் 4:35 தொ). ''பேய்த்தலைவனாகிய பெயல் செபூபுலை கொண்டு இவன் பேய்களை ஓட்டுகிறான்'' என்று அவரது விரோதிகள் அவரைப் பழித்தனர் (மாற் 3:22). ''அசுத்த ஆவி அவரைப் பிடித்திருக்கவில்லையா?'' (மாற் 3:30 யோவா 7:20;

8:48-49.52; 10:20-21). ஆனால், இயேசு உண்மையான விளக்கத்தை அளிக்கிறார். அவர் கடவுளின் ஆவியைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறார். கடவுளின் அரசு வந்துள்ளது என்பதை அது நிரூபிக்கிறது *(மத் 12:25-28).* சாத்தான் தன்னை மட்டுமே வலியவனென எண்ணினான்; ஆனால், அவனைவிட வலியவரால் அவன் இடம் மாற்றப்பட்டான் *(மத் 12:29).*

அதுமுதல், பேயோட்டுதல்கள் இயேசுவின் பெயரால் நடைபெறும் *(மத் 7:22; மாற் 9:38-39).* சீடர்களை அவர்களது போதகப் பணிக்கென அனுப்பும்போது, தீய ஆவிகளின் மீதான தனது வல்லமையினையே அவர் அவர்களுக்கு அளிக்கிறார் *(மாற் 7:7.13 இணை).* சாத்தானுடைய வீழ்ச்சிக்குத் தெளிவான சான்றாக, தீய ஆவிகள் தங்களுக்குக் கட்டுப்படுகின்றன என்பதைக் கண்டுணர்கின்றனர் *(லூக் 10:17-20).* நூற்றாண்டுகள் தோறும் புதுமைகளுடன் இணைந்த பேய்களை ஓட்டுதலானது, நற்செய்தியைப் போதித்தலுடன் இணைந்த அடையாளங்களில் ஒன்றாக இருக்கும் *(மாற் 16:17).*

2. திருச்சபையின் போர்: உண்மையில், பேய் பிடித்தவர்கள் விடுதலை அடைவது அப்போஸ்தலர் பணியில் மீண்டும் தோன்றுகிறது *(அ.ப. 8:7; 9:11-17).* ஆயினும், இயேசுவின் தூதர்களுக்கும் தீய ஆவிகளின் தூதர்களுக்கும் இடையில் நிகழும் போராட்டம், அப்போஸ்தலர் பணியில் வேறு வடிவங்களை ஏற்கிறது: மந்திரம் மற்றும் எல்லாவிதமான மூட நம்பிக்கைகளுக்கும் எதிரான போராட்டம் *(அ.ப. 13:8 தொ; 19:18-19)* மற்றும் குறி சொல்ல ஏவும் ஆவிகளில் நம்பிக்கை *(16:16),* தீய ஆவிகளை ஆராதித்து *(9:20)* அவற்றின் பீடத்திற்கு மனிதரை வரவேற்கின்ற சிலைவழிபாட்டிற்கெதிரான *(1 கொரி 10:20-21)* போராட்டம்; போலி ஞானத்திற்கும் *(யாக் 3:15),* எல்லா, காலங்களிலும் ஏமாற்றக் கூடிய பேய் பற்றிய, கோட்பாடுகளுக்கும் *(1 திமொ 4:1),* மிருகத்தின் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் *(திருவெளி 16:13-14),* ஏமாற்றும் வியத்தகு செயல் செய்கிறவர்களுக்கும், எதிரான போராட்டம். நற்செய்தியின் முன்னேற்றத்தை எதிர்க்கும் ஒவ்வொரு மனித செயலின் பின்னணியிலும் சாத்தானும் அவனது உதவியாளர்களும் உள்ளனர். அப்போஸ்தலருடைய சோதனைகளும் சாத்தானின் தூதருக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன *(2 கொரி 12:7).* ஆனால், தூய ஆவியின் துணையால், ஆவிகளை வேறுபடுத்துவதெவ்வாறு என்பதை இப்போது அறிந்துள்ளனர் மனிதர்கள் *(1 கொரி 12:10).* அவர்கள் பேயினுடைய உலகின் ஏமாற்றத்தக்க கவர்ச்சியால் ஏமாற்றப்படுவதற்கு இனியும் தங்களை அனுமதிப்பதில்லை *(1 கொரி 12:தொ).* இயேசுவில் இருந்ததைப் போன்று, திருச்சபையானது மரணம்வரை போரில் ஈடுபட்டு, வெல்ல முடியாத நம்பிக்கையில் உறுதியாக உள்ளது. ஏற்கனவே வெற்றி கொள்ளப்பட்ட சாத்தான், இப்போது வரைக்குட்பட்ட வல்லமையை மட்டுமே கொண்டுள்ளது. அவனும், அவனது துணையாளர்களும் அழிந்து போவதைக் காலத்தின் இறுதியானது கண்டிப்பாகக் காணும் *(திருவெளி 20:1 தொ. 7-10).*

தீயோன் (EVIL ONE, THE)

சாத்தானைக் குறிக்கும் ஒரு மரபுச்சொல். இந்தச்சொல், புதிய ஏற்பாட்டில் பல முறை காணப்படுகின்றது *(மத் 13:19, யோவா 17:15; எபே 6:16; 1 யோவா 2:13-14; 5:18-19).* பழைய ஏற்பாட்டில் *'நோய்', 'தீமை',* போன்ற சொற்கள் இருந்தாலும், இச்சொல்லுக்குச் சரிநிகரான சொல் இல்லை. புதிய ஏற்பாட்டுப்பொருள் மத் *13:19*-இல் தெளிவாகிறது. இதே கருத்துள்ள பகுதிகள் மாற் *4:15;* லூக் *8:12*-இலும் காணப்படுகின்றன.

மத் 5:37; 6:13; லூக் 11:4; 2 தெச 3:3 போன்ற பகுதிகள் கேள்விக்குரிய பகுதிகளாக உள்ளன. மேலும் மத் *6:13*-இல் உள்ள ஆண்டவர் கற்பித்த செபத்தின் இறுதி வேண்டுகோளோடு கேள்வி விவாதிக்கப்

படுகிறது. சில விளக்கவுரைகள் உயர்திணைப் பொருளில் ''தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்'' என்று கொண்டுள்ளன. வேறு சில விளக்கவுரைகள், அஃறிணைப்பொருளில், நிகழ்கால மற்றும் இறுதிக்காலத்தில் வரும் தீமையைக் குறிக்கும் விதத்தில் ''தீமையிலிருந்து எங்களைவிடுவியும்'' என்று கொண்டுள்ளன.

தீரியா (TIRIA)

யூதாவின் இனத்தைச்சேர்ந்த எகலலேலின் மகன் (1 நாள் 4:16).

தீரின் ஏணி (LADDER OF TYRE)

தீரின் ஏணி என்பது தாலமாய்க்கு 20 கி.மீ. வடக்காக உள்ள ஒரு மலையாகும். கலிலேயாவின் மலைகள், கர்மேல் மலை ஆகியற்றை விட, இது உயர்ந்தது என்று யோசிப்பஸ் கூறுகிறார். இக்கூற்றின் விளைவாக அறிஞர் பலர், இது 300 மீட்டர் உயர்ந்தது என்றும் அக்ரா சமவெளியின் வடக்கு வரம்பு என்றும் கூறுகின்றனர். ராஸ் ஏல் - அபியாது, ராஸ் ஏன் - நகூரா, ராஸ் ஏல் - முசெயிரிபே ஆகிய மூன்று மலைகளும் கடலின் பக்கம் படிக்கட்டுப் போன்ற அமைப்பை உருவாக்குகின்றன. வானத்தைப் பின்னணியாகக் கொண்டு தென்புறமிருந்து நோக்கினால் இவ்வமைப்பு தீர் நாட்டுக்கு ஏறிச் செல்லப் பயன்படும் ஏணி போலத் தோன்றும். யோசிப்பஸ் தீரின் ஏணி கர்மேல் மலையை விட உயர்ந்தது என்று கூறுகிறார். ஆனால் கர்மேல் மலைகள் இதைவிட உயர்ந்தவை (540 மீட்டர்). பல கருத்துகள் இருந்தாலும், இந்த ஏணி அமைப்பானது, 6-ஆம் அந்தியோக்கு அரசனால் சீமோன் மக்கபேயு தலைவனாக நியமிக்கப்பட்ட பகுதியின் வடக்கு எல்லையாக இருந்தது (1 மக் 11:59; கி.மு. 145).

தீர் (TYRE)

இது பெனீசியாவின் தெற்குக் கோடியிலிருந்த ஒரு நகரம். இங்கே கப்பல் போக்குவரத்தும் வியாபாரமும் சிறப்பாக நடைபெற்றன.

தீர் நகர் ஒரு சிறு தீவிலே அமைந்திருந்தது. ஈராம் மன்னர் இந்நகரை நாட்டுடன் இணைத்தார். தீர்நகர் கி.மு. 28-ஆம் நூற்றாண்டிலே நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. மற்ற, பெனீசிய அரசுகளைப் போன்று தீர் அரசன் அபிமில்கியும் எகிப்துநாட்டுப் பார்வோனுடன் உடன்படிக்கை செய்திருந்தார். எகிப்தியர்களின் பலம் குன்றிய காலத்திலே தீர் சுதந்தரம் பெற்று மற்ற, பெனீசிய நகரங்களுக்குள் முதன்மையானதாக விளங்கியது.

சாலமோன் மன்னர் தீர் நகரத் தொழில் நிபுணர்களைத் தம் கட்டட வேலைக்குப் பயன்படுத்தினார். இஸ்ராயேல் நாட்டின் எல்லை தீர் நகரம் வரை பரவியிருந்தது (2 சாமு 24:7). தீரின் அரசனாகிய ஈராம் தாவீதிடம் அரண்மனை கட்டுவதற்குத் தூதர்களையும், கேதுரு மரங்களையும், தச்சர்களையும், கொத்தனார்களையும் அனுப்பி வைத்தார் (2 சாமு 8:11; 1 நாள் 14:1). மேலும் ஈராம் சாலமோனுக்கும் கேதுரு மரங்களை அனுப்பி வைத்தார் (1 அர 5; 1 நாள் 22:4; 2 நாள் 2:3-18). இவற்றிற்கு விலையாக சாலமோன் கோதுமை, எண்ணெய் ஆகியவற்றை அனுப்பிவைத்தார். ஆகாபு அரசன் (875-852) தீர் அரசன் எத்பாகலின் மகள் ஈசபேலை மணந்து கொண்டார் (1 அர 16:31). இவளும், இவள் மகளும் யூதாவின் அரசன் யோராமை மணந்து கொண்டவளுமான அத்தலியாவும் பெனீசிய வழிபாட்டை இஸ்ராயேல், யூதா நாட்டில் புகுத்த முனைந்தனர். தீர் நகரின் செல்வமும் கர்வமும் விவிலிய ஆசிரியர்களின் பழித்துரைக்கும் அதன் அழிவைப் பற்றிய முன்னறிவிப்புக்கும் ஆளாக்கின (எசா 23:1-17; எரே 25:22; 27:3; 47:4; எசே 26:2-29:18; யோவே 3:4-8). வரலாற்றிலே பலமுறை படையெடுப்புகளைத் தாங்கிய தீர்நாடு இறுதியாக அலக்சாந்தர் மன்னனால் முறியடிக்கப்பட்டது. இதன் பின் கிரேக்க நாகரிகம் தீர் நகரிலே பரவியது; வியாபாரமும் தொழிலும் பெருகின; சுதந்தரமும் பெற்றது; பின்னர், உரோமையர் ஆளுகைக்கு உட்பட்டது. மக்கபேயர்

நூல்களில் தீர் நகரம் குறிப்பிடப்படுகின்றது (1 மக் 11:59; 2 மக் 4:18). புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் இந்நகரம் பற்றிய குறிப்புகள் வருகின்றன (மத் 11:21-22; லூக் 10:13-14; அ.ப. 12:20). இயேசு தீர் நகரின் பக்கம் சென்றார் (மத் 15:21; மாற் 7:24.31). அவரது போதனையைக் கேட்க தீரிலிருந்து மக்கள் வந்தனர் (மாற் 3:8; லூக் 6:17). பவுல் காலத்திலே தீரில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தனர். தனது கப்பல் சரக்குகளை இறக்கிக் கொண்டிருந்தபோது பவுல் தீரில் ஏழு நாட்கள் தங்கினார் (அ.ப. 21:3-7). உரோமையர் ஆட்சியிலே தீர் தொழில் வணிப மையமாக விளங்கியது. கி.பி 636-இல் தீர் அரேபியரால் கைப்பற்றப்பட்டது. இன்று தீர், சூர் என்றழைக்கப்படும் சிறு ஊராக விளங்குகிறது.

தீர்ப்பின் நாள் – (DAY OF JUDGEMENT)

பிற்காலத்திய யூதமதத்திலும், புதிய ஏற்பாட்டிலும், பழைய மற்றும் புதிய ஊழிக்காலங்களுக்கிடையிலுள்ள இறுதி நாடகத்தின் பிரிக்கும் காட்சியாகும். இது கடவுளின் நேர்மையான தீர்ப்பை அனைத்து மனிதர்மேலும் கொண்டுவருகிறது. உலக வாழ்வில் அவ்வப்போது ஏற்படும் இயற்கையான நிகழ்ச்சிகள் மற்றும் வரலாற்று வளர்ச்சிகள், இறைவனது தண்டனை அல்லது மீட்பின் செயல்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், இவை இறுதித் தீர்ப்பின் ஆரம்பக் கட்டங்களேயாகும். இறுதி நாளின் தீர்ப்பு என்பது வாழ்வோரையும் இறந்தோரையும் சார்ந்து அமையும், கடவுளால் அல்லது அவரது அதிகாரபூர்வமாய் நியமிக்கப்பட்ட பிரதிநிதியால் செயல்படுத்தப்படும் உலகளாவிய நியாயச் செயல் ஆகும்.

பெரிதும் வளர்ச்சியடைந்த வெளிப்பாட்டு இயல் எதிர்பார்ப்புகள் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை; காணப்படுபவையும் சுருக்கமான குறிப்புகளாகவே உள்ளன. கடவுளுடைய இறுதிக் குறுக்கீடானது, அவரது செயலின் நியாயத்தைக் குறிக்குமாறு, இங்குமங்கும் சட்ட முறைகளில் விளக்கப்படுகிறது. கடவுள் நாடுகளுடனோ, இஸ்ராயேலுடனோ சட்ட முறையான போராட்டம் ஒன்றைக் கொண்டுள்ளார். அவரே வாதி, சாட்சி மற்றும் நீதிபதி ஆகியவற்றின் மொத்த உருவம் (எசா 1:2.18; 3:3தொ; 51:5; 66:15-16; எரே 2; ஒசே 4:1; 5:1.5.9; 12:3; மீக் 1:2; 6:1; செப் 3:8; மலா 3:5; சங் 50; 76; 82; 96; 98). ஆயினும், குறிப்பிடப்பட்டுள்ள 'நாள்' (ஆண்டவரின்நாள்) என்னும் சொல்லின் விளக்கவுரையில், இறைவன் (தன்னுடையவரின் மீட்பிற்காக) தனது பகைவரின் மீது கொண்டுவரும் இயற்கையின் இடையூறுகள் மற்றும் போரின் பயங்கரங்கள் முதலியவையே பெரிதும் நிரம்பியுள்ளன. யோவேல் 3-4-இல் உள்ள நாடுகளுடனான இறைவனது இறுதிக் கால விவாதத்தின் விவரிப்பானது சட்டச் சொற்களால் பெருமளவு நிறைந்துள்ளது. உ.ம்:

''வேற்றினத்தார் அனைவரும்
 கிளர்ந் தெழட்டும்;
கிளர்ந்தெழுந்து யோசபாது
 பள்ளத்தாக்கிற்கு வந்து சேரட்டும்;
ஏனெனில், சுற்றுப்புறத்து
 வேற்றினத்தார் அனைவருக்கும்,
தீர்ப்பு வழங்க நான் அங்கே
 அமர்ந்திருப்பேன்'' (யோவே 4:12).

மேலும்,
''திரள்திரளாய் மக்கட்கூட்டம்
தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கில்
 திரண்டிருக்கிறது
ஏனெனில் தீர்ப்பு வழங்கும்
 பள்ளத்தாக்கில்
ஆண்டவரின் நாள் நெருங்கிவிட்டது''
(யோவே 4:14).

இறந்தோர் உயிர்த்தெழுவர் என்னும் கருத்தைக் கொண்டுள்ள ஒவ்வொரு தனி மனிதருக்குமான தனித்தீர்ப்பு என்னும் கருத்து அக்காலத்தில் இன்னும் வளர்ச்சியடையவில்லை. இக்கருத்து முதன் முதலில் தானி 12:1-3-இல் காணப்படுகிறது. ''இறந்து போய் மண்புழுதியில் உறங்குகிற அனைவருள்ளும் பலர் விழித்தெழுவர்; அவருள் சிலர்

முடிவில்லா வாழ்வுபெறுவர்; வேறு சிலரோ வெட்கத்திற்கும் முடிவில்லா இழிவுக்கும் உள்ளாவர்'' (தானி 12:2).

தீர்ப்பு (JUDGEMENT)

I. உயிருள்ளோர் மற்றும் மரித்தோரின் நீதிபதியாகக் கிறிஸ்து மீண்டும் வருவதை எதிர் நோக்கியிருப்பது, கிறிஸ்தவ விசுவாச அறிக்கையின் ஒரு பகுதியாக உள்ளது. தனது செயல்களுக்குக் கணக்களிக்க ஒவ்வொரு மனிதனும் அவர்முன் தோன்றுவர். இத்தகைய கருத்தானது சமய வரலாற்றில் அசாதாரணமான ஒன்றன்று. ''இறந்தோரின் தீர்ப்புப்''பற்றி எகிப்தும் கிரேக்கமும் கூட அறிந்திருந்தன. இறுதிநாளில் கிறிஸ்துவின் தீர்ப்புப் பற்றி புதிய ஏற்பாட்டுக் கருத்தை அதனுடைய முந்தைய வளர்ச்சியின் பின்னணியில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இறைவனின் தீர்ப்பானது ஏற்கனவே பழைய ஏற்பாட்டில் விசுவாசத்தின் ஒரு தலைப்பாக உள்ளது. வரலாறு அதற்குப் பல செயல்முறையான எடுத்துக்காட்டுகளை அளித்துள்ளது; இறுதிக்கால இயலானது அதனுடைய மகிமை மிக்க நிறைவேறுதலை வெளிப்படுத்துகிறது.

II. பழைய ஏற்பாடு:

1. இச்சொல்லின் வேரான ''சாபாத்'' சாதாரணமாக, தீர்ப்பைக் குறிப்பிட்டாலும், தனது மக்களை வழி நடத்துகின்ற ஆளுநரைக்குறிக்கும் ''சோபேத்'' என்ற சொல்லின் பரந்த பொருளையும் கொடுக்கவல்லது (தானி 9:12). கார்த்தேசின் ''சுபேத்தேங்கள்'' இத்தகையவர்களே. நாட்டைக் கைப்பற்றிய காலம் முதல் அரசர்களின் காலம் வரையிலான இஸ்ராயேலின் நீதிபதிகளும் (விடுதலை வீரர்களும்) இத்தகையானவர்களே (நீதி 2:16). எல்லா ஆளுநர்களுடைய முக்கிய கடமைகளில் ஒன்று, சமூகத்தில் நீதியானது நீடித்திருப்பதற்கென நீதிமன்றங்களில் நேரிய தீர்ப்புகளை அளிப்பதாகும். ஆளுநர்கள் ஒவ்வொரு குழுவினுடைய உரிமைகளையும் பகுத்து, அவசியமானபோது, குற்றம் புரிந்தோரைத் தண்டிப்பதன் மூலம் சரியான அமைப்பை மீண்டும் ஏற்படுத்தவும் அவர்கள் கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டும். இந்தத் தீர்ப்பிடும் பணியானது, மோசே மற்றும் அவருக்குத் துணைபுரிந்த முதியோர் (யாத் 18:13-16), சாமுவேல் (1 சாமு 7:16-17; 8:3), அரசர்கள் (2 சாமு 15:1-6; 1 அர 3:16-28), சில உள்ளூர் நடுவர்கள், மற்றும் குறிப்பாகச் சில குருக்கள் (உப 16:18 தொ; 17:8-13) ஆகியோரால் செயல் படுத்தப்பட்டது. செயல் முறையிலோ, விதிமுறைகள் விதிக்கப்பட்டிருந்தாலும் தீமைகள் அரிதாகவே எப்போதும் தீர்க்கப்பட்டன; ஒவ்வொரு மனிதனுடைய உரிமைகளும் எப்போதும் மதிக்கப்படவில்லை. மேலும், நீதியானது துல்லியமாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. ஆனால், மெசியா அரசரின் சித்திரத்திலிருந்தும் (சங் 71:1-2; எசா 11:3-4; எரே 23:5), இறுதிக்கால மக்களின் விவரிப்பிலிருந்தும் (எசா 1:17,26) எப்போதுமே மறையாத கருத்தியலான மாதிரி இதுவே. புனித ஆசிரியர்கள் இறைவனுடைய தீர்ப்பைப் பற்றிப் பேசும்போது, இந்த மனித அனுபவத்தினாலே தூண்டப்படுகின்றனர்.

2. வரலாற்றில் இறைவனுடைய தீர்ப்பு:

அ) இறைவனுடைய தீர்ப்பின் மீதான விசுவாசம் எப்போதுமே ஐயத்திற்கு உட்பட்டதில்லை. ஆண்டவர் உலகையும் குறிப்பாக மனிதரையும் ஆள்கிறார். அவரது வார்த்தையானது சட்டத்தைத் தீர்மானித்து, நீதியின் விதிகளை அமைக்கின்றது. நீதிமான்களையும் பாவிகளையும் முழுமையாய் அறிந்தவராய், அவர் ''நேர்மையோடு தீர்ப்பிடுகிறார்; உள்ளுணர்வுகளையும் இதய சிந்தனைகளையும் சோதித்தறிகிறார்'' (எரே 11:20; 17:10). நிகழ்ச்சிகளின் மீது அவர் ஆதிக்கம் செலுத்துவதனால், இறுதியில் நீதிமான்கள் தங்களுடைய துன்பங்களினின்று தப்பிக்கவும், தீயோர் தண்டிக்கப்படவும் கூடிய வகையில் அவற்றை வடிவமைப்பதில் இறைவன் தவற முடியாது. (ஆதி 18:23 தொ). நீதியைச் செயல்படுத்துபவர் மற்றும் தீங்குகளைச் சரிப்படுத்துபவர் என்ற முறையில், தன்னிச்சையாக அவருடன் தொடர்பு கொள்கிறோம் (ஆதி 16:5;

31:49; 1 சாமு 24:16; எரே 11:20). மேலாண்மை மிக்க நீதிபதி என்ற முறையில் அவரது செயலின் முக்கிய கருத்து இதுவே. பழி தீர்க்குமாறு ஒருவன் தனது நிலைன்ய அவரிடம் ஒப்படைக்கும்போது, மீறப்பட்ட உரிமையைச் சரி செய்து பழி வாங்குவதற்காக மட்டுமன்று. சில சங்கீதங்கள் பிறரால் துன்புறும் நீதிமான்கள் இறைவனுக்கு விடுக்கும் வேண்டுதல்களைக் கொண்டுள்ளன (சங் 9:20; 26:1; 35:1.24; 43:1). அவர் முழு உலகையும் தீர்ப்பிடுவதன் காரணமாகச் சில நேரங்களில் அவை அவரைப் புகழ்கின்றன (1 சாமு 2:10; சங் 67:5). மற்ற நேரங்களில், மனித நீதிபதிகளின் அநீதியினின்று காக்குமாறு அவரை வற்புறுத்துகின்றன (சங் 82).

ஆ. வரலாறு எல்லா மக்களும் மனிதரும் உட்பட்டுள்ள இறைத்தீர்ப்பிற்கான உறுதியான எடுத்துக்காட்டுகளை, விசுவாசிக்கு அளிக்கின்றது. யாத்திரையின்போது இறைவன் எகிப்தைத் தண்டித்தாரென்பது, தான் விடுவிக்க விரும்பிய இஸ்ராயேலைக் கொடுமைப்படுத்தியவரைத் தண்டித்தாரெனப் பொருள்படும் (ஆதி 15:14; ஞான 11:10). இறைசினத்தின் தெளிவான சான்றுகளாக உள்ள பாலைவனத்தில் இஸ்ராயேலர் அனுபவித்த தண்டனைகள் அனைத்தும், விசுவாசமற்ற மக்களுக்கு எதிரான நீதிமுறையான தண்டனைகளாகும். கானான் நாட்டை இஸ்ராயேலர் கைப்பற்றியபோது கானானியரை அழித்ததானது, இறைத் தீர்ப்பினுடைய கொடூரம் மற்றும் மட்டுடைமை, ஆகியவற்றை எடுத்துக்காட்டும் மற்றொரு எடுத்துக்காட்டாகும் (ஞான 12:10-22). பழைய வரலாற்றின் ஆய்வானது, பாவச்சந்ததியின்மேல் விழுகின்ற அனைத்துத் துன்பங்களினுடைய அடித்தளத்தில், இறைநீதிபதியின் தீர்ப்பு ஒன்று இருப்பதைக் காட்டுகிறது. சோதோம் (ஆதி 15:20; 19:13), பெருவெள்ளம் (ஆதி 7:13), முதல் பாவம் (ஆதி 3:14-19) ஆகியவற்றின் அழிவுகளைப் பொருத்தமட்டும் இது உண்மையாகும். எனவே, வரவிருக்கும் உலகிலில்லாமல், இன்றைய வரலாற்றிலேயே, மனுக்குலத்தின் மீது தொங்குகின்ற நிலையான எச்சரிக்கையாக இறைவனது தீர்ப்பு அமைந்திருக்கிறது. எந்தப் பாவியும் இதனின்று தப்ப முடியாது.

3. இறுதிக்காலத் தீர்ப்பு

அ) தீய முன்னறிகுறியான தீர்ப்பிற்கான அழைப்பு மற்றும் அதனுடைய உடனடி வருகையின் அறிவிப்பு ஆகியவை, அடிப்படையான இறைவாக்கு மையக்கருத்துக்களின் ஒரு பகுதியாகும். இறைவன் தனது மக்களுடன் வழக்காடத் தொடங்கியுள்ளார். அவர் அவர்களைத் தனது தீர்ப்பு மன்றத்திற்கு வரவழைத்துச் செயல்படுத்தப்போகும் ஒரு தண்டனையை அறிவிக்கின்றார் (எசா 3:13 தொ). இக்கருத்தானது தண்டனை பற்றிய அனைத்து இறைவாக்குகளையும் உள்ளடக்குகிறது (எசா 1:24-25; 5:5-6). ஆமோசின் காலம் முதல், பயங்கரத்தின் கூறுகளைச் சேர்ப்பதன் மூலம், யாவேயின் நாளின் எதிர்பார்ப்பை மாற்றியமைக்கின்றது (ஆமோ 5:18 தொ). பிரமாணிக்கமற்ற துணைவியாகிய இஸ்ராயேலானது, விபச்சாரச் சட்டத்தின்படி தீர்ப்பிடப்படும் (எசே 16:35; 23:24). அதனுடைய பிள்ளைகள் அவர்களுடைய நடத்தை மற்றும் செயல்களுக்கேற்பத் தீர்ப்பிடப்படுவர் (36:19). இந்த முன்னோக்கு அடக்கமானதாகத் தோன்றிடின், தமது தீர்ப்பை நிறைவேற்றும்போது இறைவன் நீதிமான்களையும் பாவிகளையும் வேறுபடுத்துவார் என்பதை மறக்கக்கூடாது. பாவிகளைத் தண்டிப்பதன் நோக்கமானது நீதிமான்களை மீட்பதாகும் (எசே 34:17-22). எனவே அவரது மக்களில், நீதிமான்களில் எஞ்சியோர் தீர்ப்பினின்று தப்பிப்பர். மேலும், இறைவனது தண்டனைகள் இஸ்ராயேலை மட்டும் நோக்கி இருக்க மாட்டா. ஆமோஸ் (ஆமோ 1:3-2:3) மற்றும் எசேக்கியேலின் (எசே.25:1-17) கண்டிப்பான நீதிமுறையில் காணப்படுவது போல அனைத்து மக்களும் அவற்றிற்கு உட்பட்டுள்ளனர். நாடுகள் மேல்வரும் இத்தீர்ப்பைப் பரந்த வடிவில் எரேமியா சித்தரிக்கிறார் (எரே 25:30-38). எதிர்காலப் பேரழிவுகள் பற்றிய இறைவாக்கு

களின் பின்னணியில், வரலாற்று நிகழ்ச்சிகளின் எதிர்பார்ப்பு அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சிகள் அனுபவத்தின் அளவில், பாவத்தின்பால் இறைவன் கொள்ளும் வெறுப்பை உணர்த்துகின்றன. இவற்றில் மிக முக்கியமானவையாக இருப்பவை, எருசலேமின் அழிவும், இஸ்ராயேலர் சிதறிப் போதலுமாகும்.

ஆ) வெளிப்பாட்டு இலக்கிய முறையைப் பயன்படுத்தும் நாடு கடத்தப்பட்டதற்குப் பிற்பட்ட கால இறைவாக்கினர்களின், மீட்புப்பற்றிய இறைவாக்குகளில் அவசியமான முன்னுரையாக இருப்பது இறுதித் தீர்ப்புப்பற்றிய இறைவாக்காகும். இந்த இறைவாக்கானது, உலக முழுவதின் பாவிகளையும், இறைவன் மற்றும் அவரது மக்களை நோக்கிய அனைத்துப் பகைமைகளையும் உள்ளடக்குகிறது. இறைவன் உலகை நெருப்பினால் தீர்ப்பிடவுள்ளார் (எசா 66:16). யோசபாது பள்ளத்தாக்கில் அவர் அனைவரையும் ஒன்று சேர்ப்பார் (இறைவன் - நீதிபதி). இறுதிக்கால அறுவடை செய்யும் மற்றும் திராட்சைப்பழங்களைப் பிழியும் காலம் இதுவே (யோவே 4:12தொ). காலத்திற்கு ஒரு முடிவை அளித்து, மனுமகனுடைய முடிவில்லா ஆட்சியைத் தொடங்கி வைக்கிற இத்தீர்ப்பினைத் தானியேல் நூல் உருவகச் சொற்களால் விவரிக்கிறது (தானி 7:9-12.26). இறுதிக்காலங்கள் உலகம் மற்றும் வரலாறு ஆகியவற்றைக் கடந்து செல்லுகிறது. நீதிமான்களும் அநீதியானவர்களும் கணக்களிப்பதற்கெனச் சேர்ந்து தோன்றுகின்றனர் என்று ஞானநூல் விவரிக்கிறது (ஞான 4:20-5:23). ஆனால், நீதிமான்கள் இறைவனால் பாதுகாக்கப்படுவதன் காரணமாக, அப்போது பாவிகள் மட்டுமே பயப்பட வேண்டும் (4:15-16; 3:1-9). மனுமகனுடைய அரசில், உன்னதமானவருடைய புனிதர்கள் பங்கு பெறுவர் (தானி 7:27). இவ்வாறு, வரலாற்றுப்போக்கில் தனிப்பட்டவர்களையும் நாடுகளையும் பாதிக்கின்ற தனிப்பட்ட தீர்ப்புகளில் மட்டும், பாவ மனித இனத்தின் மீதான இறைவனுடைய தண்டனையானது நிறைவேறுவதில்லை. ஆண்டவரது நாள் வரும்போது தீர்ப்பினை உருவாக்குகின்ற இறுதிப் போராட்டத்தில் வரலாறு முடிவுறும்.

இ) நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப் பிற்பட்ட சங்கீதங்களை வாசிக்கும்போது, இந்த இறைவாக்கு முன்னோக்கை மனதில் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். இறைவனும் நீதிபதியுமானவரிடம் சமர்ப்பிக்கும் அவர்களது வேண்டுகோளானது இறுதித்தீர்ப்பின் காலத்தை விரைவுபடுத்தும் முயற்சியாகவே அடிக்கடி தோன்றுகிறது "உலகின் நீதிபதியே எழுந்தருளும்; செருக்குள்ளோர்களுக்கு உரிய தண்டனையை அளியும்" (சங் 9:2). ஏழைகளுக்கும் துன்புறுவோருக்கும் இறைவன் நீதியளிப்பார் என்று உறுதி கொண்டு (சங் 140:3-4), இந்தப் பகிரங்க விசாரணையின் மகிமையைச் சங்கீத ஆசிரியர்கள் முன்னதாகவே பாடுகின்றனர் (சங் 75:2-11; 96:12-13; 98:7தொ). எனவே, பக்தியற்றவர்களுக்குப் பலியானவர்களும், புறவினத்தார்க்கு அடிமையானவர்களுமான இஸ்ராயேலர் நம்பிக்கையுடன் தீர்ப்பை எதிர்நோக்கியுள்ளார். ஆயினும், இது ஒரு வெல்லமுடியாத முன்னோக்காகவே உள்ளது. "தண்டனைத் தீர்ப்புக்கு உம் அடியானை இழுக்காதேயும். ஏனெனில், உயிர் வாழ்வோர் எவரும் உமது திருமுன் நீதிமான் இல்லை" (சங் 142:2). ஒவ்வொரு மனிதனும் பாவியே. இறைவனுடனான சந்திப்பினை எவ்வாறு பயமின்றி அவன் சிந்திக்க முடியும்? இறைவனுடைய இரக்கமின்றி, யாரால், தீர்ப்பினின்று தப்பிக்க முடியும்?

III. புதிய ஏற்பாடு:

1. இயேசுவின் காலத்தில், இறுதிக்காலப் பொருளில் புரிந்து கொள்ளப்பட்ட இறைவனுடைய தீர்ப்பின் எதிர்பார்ப்பானது, அதனுடைய செயல்முறையான விவரிப்பு முறையானதாகவும் ஒன்றிணைந்ததாகவும் இல்லாவிடினும், நன்கு நிறுவப்பட்டிருந்தது. தனக்குச் செவி மடுப்பவர்களை வரவிருக்கும் தண்டனையை எடுத்துக்கூறி

அச்சுறுத்தி, மனந்திரும்புதலின் அடையாளமாகத் தனது திருமுழுக்கினைப் பெறுமாறு வலியுறுத்தும் போது, திருமுழுக்கு யோவான் இத்தீர்ப்பை எடுத்துக் கூறுவதாக நற்செய்தியின் தொடக்கம் காட்டுகிறது (மத் 3:7-12 இணை). உலகில் இயேசு தோன்றிய தருணத்திலிருந்து இறுதிக்காலங்கள் தொடங்கிவிட்டபடியால், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் போதனை, தீர்ப்பைப்பற்றி மேற்கூறப்பட்ட கருத்துகளுக்கு நெருங்கியுள்ளதாயினும், சில முக்கிய மாற்றங்களைச் செய்கிறது. இறுதிக்காலத் தீர்ப்பானது முழுமையாக நிறைவேற்றப்பட கிறிஸ்துவின் மகிமை மிக்க வருகைக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தாலும், ஏற்கனவே இங்கு பிரசன்னமாகவுள்ளது.

2. தீர்ப்புப் பற்றிய நற்செய்தி விவரிப்பு:

அ) ஒத்தமை நற்செய்திகளில்: தனது போதனையில் இயேசு, இறுதித் தீர்ப்புப் பற்றி அடிக்கடி குறிப்பிடுகிறார். அப்போது அனைத்து மனிதரும் தங்களுடைய வாழ்வைப்பற்றிய கணக்கு அளிக்க வேண்டும் (மத் 25:14-30). வெளிவேட மறைநூல் அறிஞர்கள் (மாற் 12:40), இயேசுவின் போதனைக்குச் செவிமடுக்காத கலிலேயாக் கடலைச்சுற்றியுள்ள நகரங்கள் (மத் 11:20-24), அவரது போதனையால் மனந்திருந்தாத விசுவாசமற்ற தலைமுறைகள் (12:39-42) மற்றும் அவரது பிரதிநிதிகளை ஏற்காத நகரங்கள் (10:14-15) ஆகியவற்றிற்குப் பயங்கர தண்டனை காத்திருக்கிறது. அவை பெறும் தீர்ப்போடு ஒப்பிடும்போது சோதோம், கொமோரா-வின் மீதான தீர்ப்பு ஒன்றுமற்றதாக இருக்கும்; நரகத் தீர்ப்பினில் அவர்கள் துன்புறுவர் (23:33). இந்த எச்சரிக்கைகள் இறைவனுடைய தீர்ப்பின் முக்கிய நோக்கமாகிய, நற்செய்தியின்பால் மனிதனின் மனப்பான்மையை முனைப்பாக எடுத்துக்காட்டுகின்றன. தனது அயலான்பால் மனிதனின் மனப்பான்மையும் அவ்வாறே முக்கியமானது. மோசேயின் சட்டத்தில், ஒவ்வொரு கொலையாளியும் மனித தீர்ப்பிற்கு உட்பட்டுள்ளான். நற்செய்தியின் சட்டப்படி, ஒருவன் கொலையை விட மிகக் குறைவான குற்றத்திற்கு உட்பட்டிருந்தாலும், நரக ஆபத்தில் உள்ளான் (மத் 5:21-22). ஒவ்வொரு அவதூறான சொல்லுக்கும் கணக்குக் கொடுக்கப்பட வேண்டும் (12:34-30). தனது அயலாரைத் தீர்ப்பிட்டவாறே ஒவ்வொருவரும் தீர்ப்பிடப்படுவர் (7:1-5). மனுமகன் தீர்ப்பளிக்கும் காட்சியின் விவரிப்பு (25:31-46), ஒருவருக்கொருவர் காட்டிய அன்பு அல்லது அக்கறையின்மைக்கேற்ப மனிதர் இறை அரசிற்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் அல்லது முடிவில்லாத் தண்டனைக்குக் கையளிக்கப்படுவதையும் காட்டுகிறது.

மற்ற எல்லாவற்றையும்விட இறைத் தீர்ப்பை அழைக்கின்ற குற்றம் ஒன்று உண்டு. மனிதனின் விசுவாசமின்மையானது, நீதித் தீர்ப்பின் போலிக்காட்சியில் தனது உச்சியை அடைகின்ற இயேசுவின் பாடுகள் மற்றும் மரண தண்டனையே அது (மாற் 14:63; லூக் 24:20; அ.ப. 13:28). இந்த அநீதியான விசாரணையின்போது, நீதியுடன் தீர்ப்பிடக்கூடியவரிடம் இயேசு தன்னையே கையளிக்கிறார் (1 பேதுரு 2:23). மீண்டும் அவரை உயிர்த்தெழச்செய்தன் மூலம், அவருக்குரியதாக உள்ளதை இறைவன் மீண்டும் அவருக்கு அளிக்கிறார். ஆனால், அந்த அநீதியான தண்டனை நிறைவேற்றப்படுதல், பாவ மனுக்குலத்திற்கு எதிரான இறைவனுடைய தண்டனையைத் தன்னுடன் கொண்டு வந்துவிட்டது. மத்தேயுவின் விவரிப்பில் இயேசுவின் மரணத்தினுடைய விவரமானது, பழைய ஏற்பாட்டு இறுதிக்கால இயலில் உள்ள தீர்ப்புப் பற்றிய பாரம்பரிய விவரத்துடன் ஒத்திருப்பது சுட்டிக்காட்டப்படுகிறது (மத் 27:45.51 தொ). எனவே, இயேசுவின் மரணமானது உலகின் மீதான தீர்ப்பின் நேரமாகும். பின்வரும் வரலாறானது இறுதிநாள் வரையிலும் இத்தீர்ப்பை வெளிப்படுத்துவதை விட வேறெதையும் செய்வதில்லை. இயேசுவினுடைய சான்றின்படி, தீர்ப்பானது, குற்றத்தில் முதன்மையானவர்களாக உள்ள ''யூதேயாவில் இருப்போரை'' முதலில் பாதிக்கும் (24:15 தொ). ஆனால் அது,

நீதிபதியாக வரவிருக்கும் மனுமகனின் இறுதி வருகையினுடைய பீடிகையாகவும் அடையாளமாகவும் மட்டுமே இருக்கும் (24:29 தொ). உலகத்தினுடைய பாவத்தின் பலிப்பொருளாகத் தண்டிக்கப்பட்டவரே, பாவ உலகின்மீது கடுமையான கண்டனத்தை அறிவிப்பார்.

ஆ. யோவானின் நற்செய்தி: இயேசுவின் காலமாகிய வரலாற்றின் மையத்தில் இடம் கொண்டுள்ள இத்தீர்ப்பை வலியுறுத்தும் இறையியலை விரிவாக்குகிறது இந்நற்செய்தி. மனுமகனாகிய இயேசுவை இறுதி நாளில் நீதிபதியாகத் தந்தையே ஏற்படுத்தியுள்ளார் என்ற உண்மையை யோவான் அறியாமலில்லை (யோவா 26-30). ஆனால் உண்மையில் தந்தை மகனை உலகிற்கு அனுப்பிய தருணத்திலிருந்தே தீர்ப்பானது பிரசன்னமாகியுள்ளது. அவர் உலகைத் தீர்ப்பிட அனுப்பப்படவில்லை; மாறாக, அதனைக் காக்கவே வந்தார் (3:17; 8:15-16). ஆனால், இயேசுவின்பால் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் மனப்பான்மைக்கேற்ப, தீர்ப்பானது உடனடியாகப் பிரசன்னமாகியுள்ளது. விசுவசிப்பவன் எவனும் தீர்ப்பிடப்பட மாட்டான். விசுவசிக்காதவன் ஒளியை மறுப்பதன் காரணமாக ஏற்கனவே தீர்ப்பிடப்பட்டு விட்டான் (3:18 தொ). எனவே தீர்ப்பானது, இறைத்தீர்ப்பு என்பதைவிட, மனித இதயங்களில் மறைந்திருப்பவைகளின் வெளிப்பாடு என்பதே மேல். தீய செயல் புரிவோர் ஒளியைவிட இருளையே தேர்ந்து கொள்வர் (3:19-20). தங்களுடைய தெளிவான காட்சியால் தற்பெருமை கொள்கின்ற இந்தத் தன்னிறைவான மனிதரே தங்களைக் குருடாக்கிக் கொள்ளுமாறு அனுமதிப்பது மட்டுமே இறைவனின் செயலாக உள்ளது. ஆனால், உண்மையில் செயல்படுவதன் மூலம், அவர்கள் ஒளிக்கு வருவதற்கென (3:21) மற்றவர்களுடைய கண்களைக் குணமாக்க இயேசு வருகிறார் (9:39). மனித இதயங்களில் ஏற்கனவே பிரசன்னமாகியுள்ள இப்பிரிவினை, இறுதித்தீர்ப்பானது யாவரும் பார்க்க வெளிப்படுத்தும்.

இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தினுடைய பொருளைப் பொறுத்தமட்டில் யோவான் எவ்விதத்திலும் கவனக் குறைவுள்ளவராக இல்லை. அவரது நூலில், அவரது மீட்புப்பணிக்கு அளிக்கப்பட்ட அதே அளவானது அவரது பாடுகளுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. சாத்தான் மற்றும் தீய உலகின் கருவிகளாக உள்ள யூதர்களை ''நீதியுடன் தீர்ப்பிடுமாறு'' செய்ய வீணாக முயல்கிறார் (7:24). உண்மையில், மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட அவர் பிலாத்துவிடம் கையளிக்கப்படுவார் (19:12-16). சிலுவையில் உயர்த்தப்படுவது மனுமகனுடைய மாட்சிமை மிக்க மறு வருகையை ஒரு வகையில் முன்னுரைப்பது போன்று, இயேசுவின் மரணமானது உலகின் தீர்ப்பையும், சாத்தானுடைய தோல்வியையும் முன்னடையாளமாக உணர்த்தும் (12:31. தனது மரணம் தொடங்கி, தனது விசுவாசிகளுக்கு ஆவியை அனுப்ப அவரால் முடியும். உலகின் அரசன் ஏற்கனவே தீர்ப்பிடப்பட்டு விட்டார். அதாவது தண்டிக்கப்பட்டுவிட்டார் என்ற உண்மைக்குச் சான்று பகர்வதன் மூலம் ஆவியானவர் உலகை நிலையாகத் திகைப்பூட்டுவார் (16:8.11). இவ்வழியாகவே இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்ட இறுதிக்காலத் தீர்ப்பானது நிறைவேற்றப்படுகிறது. கிறிஸ்துவின் காலம் முதல், தீர்ப்பானது தொடர்ந்து பிரசன்னமாகியுள்ள, நிறைவேற்றப்பட்ட உண்மையாகும். அதன் இறுதி முழுநிறைவு மட்டுமே இனி எதிர்பார்க்கப்படுகிறது.

2 அப்போஸ்தலிக்கப் போதனையில் தீர்ப்பு

அ. அப்போஸ்தலர் பணியிலிருந்து திருவெளிப்பாடுநூல் வரை உள்ள அனைத்து நூல்களிலும் மறையுரைகளில் காணப்படும் அப்போஸ்தலப் போதனையின் அனைத்துச் சான்றுகளும், மனமாற்றத்திற்கான அழைப்புடன் கூடிய தீர்ப்பினுடைய அறிவிப்பிற்கு முக்கிய இடத்தை அளிக்கின்றன. இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்த கிறிஸ்துவின் மூலமாக உலகின் தீர்ப்பிற்கென இறைவன் ஒரு நாளைக் குறித்துள்ளார் (அ.ப. 17:31; 24:25; 1 பேதுரு 4:5; எபி.6:2). மனமாற்றத்திற்குப்

பின்னரும் இந்தத் தீர்ப்பு தொடர்ந்து உடனடியாக வரும் தன்மை (யாக் 3:9: ''நடுவர் வாசலிலே நிற்கிறார்'') முறையான மனப்பான்மையைக் கட்டளையிடுகிறது. ஏனெனில், தீர்ப்பானது தீமை புரிவோருக்கு விரிவாக்கப்படுவதற்கு முன்னர், இறைவனுடைய இல்லத்தினின்று தொடங்கும் (1 பேதுரு 4:17). இறைவன் ஆளைப்பார்த்துத் தீர்ப்புக் கூறுவதில்லை. அவரது செயல்களுக்கேற்பத் தீர்ப்பிடுவார் (1 பேதுரு 1:17; உரோ 2:6). இது பாவிகளை நடுங்கவைக்க வேண்டிய அச்சமூட்டும் முன்னோக்காகும் (எபி 10:27-31; உரோ 2:12). மணமாகாமல் கலவிமுறையில் ஈடுபடுவோரும், விபச்சாரம் புரிவோரும், பயங்கர தண்டனைக்கு உட்படுத்தப்படுவர் (எபி 13:4). பக்தியற்ற போலி போதகர்கள், வீழ்ச்சியுற்ற வான தூதர்கள் (2 பேதுரு 2:4-10), கொடிய தலைமை அதிகாரிகள் (1 திமொ 3:6), விதவை நிலையைக் கடைப்பிடிக்காத நேர்மையற்ற விதவைகள் (5:12) முதலியோர் தீமையின் பக்கம் சார்ந்தவராவர். சினத்தின் நாளில், இறைவனுடைய நேரிய தண்டனையானது வெளிப்படுத்தப்படும் (உரோ 2:5). மனிதருடைய மறைவானசெயல்களையும் இறைவன் தீர்ப்பிடுவதால் (2:16; 1 கொரி 4:4), ஓடி விடுவதென்பது இயலாத ஒன்று (உரோ 2:3). அப்போது உயிர்வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நடுவராய் இருக்கக் கூடியவர் கிறிஸ்துவே (2 திமொ 4:1; உரோ 2:16; திருவெளி 19:11). திருவெளிப்பாட்டு நூல் இறுதித்தீர்ப்புப் பற்றி, பயங்கர காட்சியை விவரிக்கிறது (திருவெளி 20:12-13; 11:18; 16:5...). இதனுடைய வரலாற்றுப் பிடிகை இறைவனுடைய பகை நகராகிய பாபிலோனின் தீர்ப்பில் காணப்படுகிறது (14:8; 17:1; 18:2-24). தங்களது நிலையைத் தீர்ப்பிடும்படியான வேதசாட்சிகளில் வேண்டுதலுக்குப் பதிலளிக்கும் விதமாக (6:9-10; 18:20), தனது ஊழியர்களின் இரத்தத்திற்காக இறைவன் பாபிலோனைப் பழி வாங்குவார் (19:2). இறுதியாக, காலத்தின் முடிவில் தங்களது செயல்களின் மதிப்பை நிரூபிப்பதற்கென அனைத்து மனிதரும் நெருப்பிற்கு உட்படுத்தப்படுவர் (1 கொரி 4:5; 2 பேதுரு 3:7). இந்தச் சோதனையின் விதிமுறை என்னவாக இருக்கும்? அதனை அறிந்திருப்பதாக உரிமை கொள்வோர்க்குரிய விதிமுறையானது மோசேயின் சட்டமாகும் (உரோ 2:12). மோசேயின் சட்டத்தை அறியாதவர்கள் இயற்கையின் சட்டத்தால் தீர்ப்பிடப்படுவர் (2:14-15). ஆனால், நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் விடுதலையாக்கும் சட்டத்தால் தீர்ப்பிடப்படுவர் (யாக் 2:12). தனது அயலாரைத் தீர்ப்பிட்டவர்களுக்குத் துரதிருஷ்டம் காத்திருக்கிறது (உரோ 2:1 தொ.) ஏனெனில், மற்றவரைத் தீர்ப்பிட்ட அதே கடுமையான அளவையினால், அவனும் தீர்ப்பிடப்படுவான் (14:10 தொ; யாக் 2:13; 4:1தொ; 5:12).

ஆ) இறுதித்தீர்ப்புப் பற்றிய இவ்விவரங்களின் உருவ அமைப்பிற்கு இடம் ஒதுக்க வேண்டும். ஆனால் மிக முக்கிய வினாவானது, தீர்ப்பு விவரிக்கப்பட்டிருக்கும் முறையில், அதிலிருந்து யார் தப்பிக்க முடியும் என்பதாகும். யார் மீட்கப்படுவர்? இறைவனின் சீற்றமானது அனைத்து மனுக்குலத்தையும் நோக்கித் திருப்பப்பட்டுள்ளதாக வரலாறு வெளிப்படுத்துகிறது. அவர் முன்னிலையில் மாசற்றவர் எவருமில்லை (உரோ 3:10-20; 1:18). முதல் மனிதனுடைய வீழ்ச்சியின் விளைவாகப் பாவம் உலகில் நுழைந்த நாள்முதல் தண்டனைக்குத் தகுதியுடையவராக அனைத்து மனிதரும் தீர்ப்பிடப்பட்டுள்ளனர் (5:16.18). தனது சொந்தத் தகுதிகளால் மட்டுமே எவரும் தப்பிக்க இயலாது. ஆனால் ஊனுடலெடுத்த இறைமகனாகிய இயேசு, நமது பாவங்களின் விளைவாக இறந்தபோது, நம்மைப் பாவத்தின் நுகத்தடியினின்று விடுவிக்க, இறைவன் ஊனுடலின் பாவத்தைத் தீர்ப்பிட்டார் (8:3). இப்போது, இறைவனுடைய நீதியானது வெளிப்படுத்தப்படுகிறது. இது தண்டிக்கின்ற நீதியல்ல; மாறாக, ஏற்புடைமையையும் மீட்பையும் கொண்டு வருகின்ற நீதியாகும் (3:21). எல்லா மனிதரும் தீர்ப்பிற்கு உரியவராயினும், இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டால் மட்டுமே,

பலன் கருதாது நேர்மைப்படுத்தப்படுவர் (3:24 தொ). இனிமேல் அவர்கள் தண்டனைக்குரியவர்களல்லர் (8:1). அவர்களை இறைவனே ஏற்புடையவராக ஆக்கினால், யார் அவர்களைத் தண்டிக்க முடியும்? (8:34) பழைய சட்டத்தில் மோசேயின் பணியானது தண்டிக்கின்ற ஒன்றாய் இருந்தது; ஆனால், நற்செய்தியினுடைய ஊழியர்களுடைய பணியோ அருள் (2 கொரி 3:9) மற்றும் ஒப்புரவினுடைய (5:19 தொ) ஒன்றாகும். தீர்ப்பின் நாளில் நமது நம்பிக்கையானது (1 யோவா 4:17), கிறிஸ்துவில் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் அன்பினின்று வருகிறது. ஆகவே நாம் எதற்கும் அச்சப்பட வேண்டியதில்லை. தீர்ப்பின் அச்சுறுத்தலானது இப்போது தீயோர்மீது மட்டுமே உள்ளது. இயேசு தீர்ப்பிலிருந்து நம்மை விடுவிக்கவே வந்துள்ளார்.

தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கு (DECISION, VALLEY OF)

எருசலேமை அழிக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்த புறவின நாடுகளின் மேல் யாவேயின் தீர்ப்பு வழங்கப்படும் இடமாகும். (யோவே 4:14; காண்க: எசே 39-39; செப் 3:8). இது யோவேல் நூலில் வருகின்ற பெயர்; யோசபாது பள்ளத்தாக்கின் மறுபெயர். யோசபாது என்பதற்கு ''யாவே தீர்ப்பிடுகிறார்'' என்பது பொருள். கிதரோன் பள்ளத்தாக்குதான் இத்தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கு என்பது பாரம்பரியக் கருத்தாகும்:

திலோன் (TILON - கொடை)

யூதா இனத்தைச் சேர்ந்த சீமோனின் மகன் (1 நாள் 4:20).

தீவிரவாதி (ZEALOT)

1. இந்தச் சொல், தற்போது குறிப்பாக, மிகவும் தீவிரமான, போரிடும் தன்மையுடைய கிளர்ச்சியாளர்களைக் குறிக்கும். விவிலியத்தில் வெளிநாட்டினருக்கு எதிராக, குறிப்பாக உரோமையர்களின் ஆட்சிக்கு எதிராகப் போராடிய குழுவினரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இது இன்னும் பரந்த பொருளைக் கொண்டதாக இருக்கின்றது. இந்தச் சொல் லூக் 6:15; அ.ப 1:13-இல் சீமோன் பேதுருவிலிருந்து, கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்களில் ஒருவரான தீவிரவாதி எனப்படும் சீமோனை வேறுபடுத்திக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அரமேயிக் மொழியில் உள்ள ''கன் அனா'' என்ற சொல் ''கானானேயன் சீமோன்'' என்று மத் 10:4; மாற் 3:18-இல் கட்டிக் காத்து வரப்படுகின்றது. இவர்கள் தங்களையே இறைவனுடைய கையில் ஒப்படைத்து, இறைவனுடைய நீதிக்கும், சிலைவழிபாட்டிற்கு எதிரான தீர்ப்புக்கும், பதிதப் போதனைக்கும், இறைவனுடைய விருப்பத்திற்கு எதிராக அவருடைய சட்டங்கள் மாற்றப் படும்போதும் இவை அனைத்திற்கும் எதிராக நின்று கடவுளுக்காகப் போராடுவதற்காகத் தங்களையே அர்ப்பணித்தவர்கள் ஆவர். கடவுளுடைய பெயரை வீணாகச் சொல்பவன் தப்பிக்கவே முடியாது. ஏனெனில் ஆயிரமாயிரம் பேர் அவனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தின் தீவிரவாதிகள் தங்களுடைய மூதாதையர்களின் சட்ட நிறுவனத்திற்குக் கடுமையான காவல் புரிந்து வருபவர்கள்; அதற்குத் தீங்கு இழைப்பவர்களிடம் இரக்கமற்ற முறையில் நடந்து கொள்வார்கள். இயேசு பணம் மாற்றுபவர்களை ஆலயத்திலிருந்து விரட்டி அடித்த போது அப்போஸ்தலர்கள் அவர் தீவிரவாதிபோல நடந்து கொண்டதாக நினைத்தார்கள் (யோவா 2:17; சங் 69:9). பவுல் திருச்சபையைத் துன்புறுத்தியது சட்டத்தின் மீது அவருக்கு இருந்த ஆர்வத்தில் வேரூன்றி இருந்தது.

2. அடிமைத்தனத்திற்குப் பிறகு இருந்த யூதத்துவத்தில்: அடிமைத்தனத்திற்குப் பிறகு வாழ்ந்த யூத பாரம்பரியத்தின் தீவிர ஆர்வத்தின் முன்னோடிகளாகச் சீமோன், லேவி, பினகாசு, எலியா போன்றவர்கள் திகழ்ந்தனர். இது குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். பினகாசு, லேவியின் வழி வந்த ஒரு குரு. எலியா, பினகாசின் பிரதி

என்று இராபிகளின் பாரம்பரியம் அடையாளம் காட்டுகின்றது.

அ. சிமியோனும் லேவியும்: இவர்கள் யாகோபின் புதல்வர்கள். தீனா என்ற தங்களுடைய சகோதரியைச் செக்கேமைச் சேர்ந்த ஒருவன் கற்பழித்து விட்டதற்காக, அவ்வூரைச் சேர்ந்த பலருடைய தலைகளைச் சீவிவிட்டனர் (ஆதி 34:4 தொ). ஏறக் குறைய கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் நடந்த இந்தக் கதையை மனத்திற் கொண்டு இஸ்ராயேலர்கள் புறவினத்தாருடன் திருமணம் செய்து கொள்வதைத் தடுப்பதற்கான முயற்சிகள் செய்தனர். ''இதிலிருந்து இஸ்ராயேலின் மகளிர் தீட்டுப் படுத்தப்படக்கூடாது; செக்கேமைச் சேர்ந்த எல்லா மனிதர்களும் வாளால் மடிவார்கள் என்று வானகத்தில் தீர்ப்பாகி விட்டது. ஏனெனில் இஸ்ராயேலுக்கு அவமானத்தை உண்டு பண்ணி விட்டார்கள். கடவுள் அவர்களை யாக்கோபின் புதல்வர்களின் கையில் அகப்படுமாறு செய்து, அவர்களுடைய தலைகள் வெட்டப்படுமாறு செய்தார். மேலும் இஸ்ராயேலில் எந்தக் கன்னியும் மாசுபடுத்தப்படக் கூடாது என்று அவர்கள் வழியாக ஆண்டவர் ஆணையும் இட்டார். இஸ்ராயேலில் எவனாவது தன்னுடைய மகளைப் புறவினத்தாருக்குக் கொடுக்க முன் வந்தால் அவன் சாவது நிச்சயம். அவனைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும். ஏனெனில் இஸ்ராயேலுக்கு அவன் அவமானத்தைக் கொணர்ந்திருக்கிறான். அந்தப் பெண் நெருப்பைக் கொண்டு எரிக்கப்பட வேண்டும். ஏனெனில் தன் தந்தையின் வீட்டிற்கு அவமானத்தைக் கொடுத்துவிட்டாள். இஸ்ராயேலிலிருந்து அவளை அடியோடு அழித்துவிட வேண்டும். விபச்சாரியோ, அசுத்தமான பெண்ணோ இஸ்ராயேலில் இருக்கக் கூடாது. ஏனெனில் இஸ்ராயேல் கடவுளுக்குப் புனிதமானது எனப்படும். அதை மாசு படுத்துகின்ற ஒவ்வொருவனும் சாவானாக. அவனைக் கல்லால் எறிந்து கொல்வார்களாக. ஏனெனில் அவன் தன்னுடைய விதையை மோலக்கிற்குக் கொடுத்துவிட்டான்.... பாருங்கள்! செக்கேமைச் சேர்ந்தவர்கள் யாகோபின் இரு புதல்வர்களின் கையில் அகப்பட்டுக் கொடுமைப்படுத்தப் பட்டு வெட்டப்பட்டார்கள்! லேவியின் இனம் குருத்துவத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. அவருடைய ''வித்து'' இஸ்ராயேலுக்கு எதிராக எழுந்தவர்கள் மீது நீதியும், தீர்ப்பும், பழிதீர்த்தலும் வழங்குவதில் ஆர்வம் கொண்டிருந்தார். தன்னுடைய வாழ்நாளில் அவன் செய்தநேர்மையான செயல்கள் அனைத்தும், ஆயிரம் ஆண்டுகள் வரைக்கும் எழுதிவைக்கப்பட்டிருக்கும். அது அவனுக்கும் அவனுடைய சந்ததியாருக்கும் வரும்'' என்று யூபிலிநூல் கூறுகிறது.

மற்றொரு வட்டாரத்தில் லேவிக்குப் பதிலாகச் சிமியோனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பக்தியுள்ள கைம்பெண்ணான யூதித் பின்வருமாறு மன்றாடுகின்றாள்: ''என்தந்தை சிமியோனின் கடவுளான ஆண்டவரே! கெட்ட ஆசையால் உந்தப்பட்டு ஒரு கன்னிப் பெண்ணைக் கற்பழித்த புறவினத்தாரைப் பழிவாங்கும் பொருட்டு, சிமியோனுக்கு நீர் ஒரு வாளைக் கொடுத்தீர்! அஃதோடு ஆர்வத்துடன் உம் பக்கம் நின்ற உம் ஊழியர்களுக்கு அப்புறவினத்தாரின் மனைவியரைக் கொள்ளைப் பொருளாகவும், அவர்கள் புதல்வியரை அடிமைகளாகவும், அவர்களது சொத்தையெல்லாம் சொந்தமாகவும் தந்தருளினீர். அதுபோலக் கைம்பெண்ணான எனக்கு நீர் உதவி செய்ய வர வேண்டும் என்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன். முந்தையவற்றைச் செய்து முடித்தவர் நீரே! ஒன்றுக்குப்பின் ஒன்றாகத் திட்டமிட்டவரும் நீரே! உம் திட்டங்களே நிறைவேறி வந்துள்ளன'' (யூதி 9:2-4).

ஆ. பினகாசு: ''அக்காலத்தில் சித்திமிலே தங்கியிருந்த இஸ்ராயேலர் மோவாபியரின் புதல்வியரோடு விபசாரம் செய்யத் தொடங்கினர்... இதோ! எல்லோரும் பார்க்க ஓர் இஸ்ராயேலன் மிதியானியப் பெண்ணான ஒரு வேசியின் வீட்டிலே நுழைந்தான். குருவாகிய ஆரோன் புதல்வன்

எலயாசருடைய மகனான பினகாசு அதைக் கண்டு, நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு கட்டாரியைக் கையில் ஏந்தி, விபசாரம் நடக்கும் வீட்டில் அவனைப் பின் தொடர்ந்து போய், அவனையும் அந்தப் பெண்ணை யும் மறைவிடத்திலே குத்திக் கொன்று விட்டான். அதனாலே இஸ்ராயேலர் மீது விழுந்திருந்த வாதை நீங்கிப் போயிற்று'' (எண் 25:1-8).

இச்செயலின் தீவிரவாத இறையியலை விளக்கும் பகுதி உடனடியாகத் தரப்படு கிறது. அப்போது ஆண்டவர் மோசேயை நோக்கி,.... ''நாமே நமது கடுங்கோபத்தில் இஸ்ராயேல் மக்களை வேரறுக்க இருக்கை யிலே.... பினகாசு நம்மை அப்படிச் செய்ய விடாமல், தானே அவர்கள் மேல் கோபங் கொண்டவனாய் அவர்களைக் கண்டித்ததே நல்லது. அவன் தன் பக்தி வைராக்கியத் தினால் இஸ்ராயேலர் மேல் நமக்கு உண் டான கோபத்தைத் தணித்தான். ஆதலால் இதோ நமது உடன்படிக்கையின் சமாதா னத்தை நாம் அவனுக்கு அளித்துள்ளோம். அவன் தன் கடவுளுக்காகப் பக்தி வைராக்கியம் காண்பித்து இஸ்ராயேல் மக்களுடைய துரோகத்திற்குப் பரிகாரம் செய்தமையால் அவனுக்கும் அவனுக்குப் பின் அவன் சந்ததிக்கும் நித்திய குருப்பட் டத்துக்குரிய உடன்படிக்கையை நிறுவுகின் றோம்'' (எண் 25:10-13) என்றார். தீவிர ஆர்வம் என்ற கருத்தானது, கடவுளைப் பொருத்தவரையில் அவரது சினம் தணிப்ப தற்காகச் செய்யும் செயல் அல்லது பாவத் திற்காகச் செய்யும் பரிகாரத்தைக் குறிக்கின் றது. இல்லாவிட்டால் தீவிரவாதிகளின் வெறித்தனத்தையும், கொடூரத்தையும் விளக்குவது கடினம். பினகாசு எல்லோருக் கும் முன் மாதிரியான ஒரு தீவிரவாதி. மக்கபேயர்களுக்கு முந்திய காலத்தில், சீராக்கு நூல் ஆசிரியர் என்பவர், மோசே, ஆரோன் ஆகியவர்களைப் போற்றிப் புகழ்ந்த பின் பின் வருமாறு எழுதுகின்றார்:

''எலயாசர் மகன் பினகாசு என்பவர் தெய்வபயத்தில் ஆரோனைக் கண்டொழு கினமையால், மகிமையில் மூன்றாவதாக உயர்ந்திருக்கிறார். அவர் மக்களின் மரியாதை யில் நின்றார். இஸ்ராயேலுக்காக அவர் காண்பித்த ஆன்மீக நற்குணத்தாலும் சுறு சுறுப்பாலும் கடவுளுக்கு விருப்பமானவரா னார். ஆதலால் கடவுள் அவருடன் சமா தான உடன்படிக்கை செய்து கொண்டார்; குருத்துவத்தின் பெருமை அவருக்கும் அவர் சந்ததியாருக்கும் எப்போதும் இருக் கும்படி, குருக்களுடையவும் மக்களுடைய வும் தலைவராக அவரை நிறுவினார்'' (சீரா 45:23-24).

முதல் மக்கபேயர் நூலில் ''பினகாசு கடவுள்பால் மிக்க பற்றுக் கொண்டிருந்தமை யால்'' மத்தத்தியா, அவர்களுடைய மக்கள் ஆகியவர்களின் முதுபெரும் தந்தையாக அழைக்கப்பட்டார் (1 மக் 2:54). சங் 106-பினகாசு மோவாபியர்களின் தெய்வங் களுக்குப் படைக்கப்பட்ட காணிக்கைகளை உண்ணுவதைப் பற்றிய தவறான கருத்திற்கு எதிராகச் செயல்பட்டதைக் குறிக்கிறது.

''பினகாசு கொதித்தெழுந்து தலையிட்டதால்
கொள்ளை நோய் நீங்கிற்று.
இதனால் தலைமுறை தலைமுறையாக
என்றென்றும்
அவரது செயல் நீதியாகக் கருதப்பட்டது''
(சங் 106:30-31).

முதல் மக்கபேயர் நூல் ஆசிரியர், நாடு முழுவதும் செலூக்கியர்களுக்கு எதிராகக் கிளர்தெழுந்ததின் பின்னணியான தீவிர ஆர்வம் பற்றிய இறையியல் பினகாசு என்பவரின் பாரம்பரியத்தில் வேரூன்றி இருக்கின்றது என்னும் பொருள்பட விளக்கி னார். ''மோதேயின் நகரத்திற்கு ஓடிப் போனவர்களைப் பலியிடவும், தூபம் ஏந்த வும், கடவுள் கட்டளையை மீறவும் கட்டாயப் படுத்தி அந்தியோக்கு அரசனால் அனுப் பப்பட்டவர்கள் அவ்விடம் வந்தார்கள்..... ஆனால் மத்தத்தியா பதிலளித்துச் சொன் னார். எங்கள் முன்னோரின் வழக்கத்தை விட்டுவிட முடியாது.... உடனே அரசன் கட்டளைப்படி மோதேயின் நகரத்துப் பீடத் தின் மேல் சிலைகளுக்குப் பலியிட யூதன்

ஒருவன் எல்லாருக்கும் முன்பாக வந்தான். மத்தத்தியா அதைப் பார்த்து மனம் கசிந்தார். அவர் உடம்பு துடித்தது. கட்டளையின் ஒழுங்குப்படி கோபம் மூண்டு, அவன் மேல் பாய்ந்து, பீடத்தின் மீதே அவனைக் கொன்றார். அந்தியோக்குவால் அனுப்பப் பட்டு, பலியிடும்படி வற்புறுத்தின மனிதனை யும் அதே நேரத்தில் கொன்று பீடத்தை யும் இடித்துத் தள்ளினார். சாலுவின் மகன் சிம்ரி என்பவனுக்குப் பினகாசு செய்தது போல, தாமும் கட்டளையின் பால் கொண்ட ஆர்வத்தால் தூண்டப்பட்டார்.... மத்தத்தியா உரத்த சத்தமாய்.... உடன்படிக் கைக் கட்டளைக்குப் பிரமாணிக்கமுள்ள வன் எவனோ அவன் என் பின்னால் வரக்கடவான் என்று சொல்லி அவரும், அவர் புதல்வரும் தங்கள் சொத்துகளை விட்டுவிட்டு மலைகளுக்கு ஓடிப்போனார் கள்.'' (1 மக் 2:15-28). இதற்குப்பிறகு செலூக்கிய அதிகாரத்திற்குப் புறம்பே வெளி யில் வாழ்ந்து வந்தார்கள். புறவினத்தார்கள் தங்களை எதிர்த்ததினால் வழிப்பறிகளில் ஈடுபட்டு வாழத் தொடங்கிவிட்டார்கள். இப்படியாகப் பிற்காலத்தில் தோன்றிய, முக் கிய உரோமை ஆட்சியை எதிர்த்து வரி செலுத்த மறுத்து வழிப்பறிக் கொள்ளைக்காரர் களாக வாழ்ந்த தீவிரவாதிகளுக்கு மாதிரி யாக அமைந்தார்கள். இவர்களில் ஒரு குழுவைத்தான் நாம் தீவிரவாதிகள் என்று அழைக்கின்றோம். இவர்களுடைய வர லாறு இவர்கள் கி.பி. 66-70-இல் நடந்த சண்டையில் இவர்கள் பங்கு பெற்றார்கள் என்பதைத் தவிர அதிகம் நமக்குத் தெரியாது.

இ. எலியா: எலியா பாகாலின் எல்லா இறைவாக்கினர்களையும் கொல்லும்படி கட்டளையிட்டார் (1 அர 18:40; 19:10-14). இதைப் பிற்கால இஸ்ராயேலர்களின் பாரம் பரியத்தில் ''ஆர்வமிக்க செயலான'' என்று பொருள் கொள்ளப்பட்டது. ''எலியா கட வுள் கட்டளை மேல் ஆர்வம் கொண்டிருந்த தால் விண்ணில் சேர்க்கப்பட்டார்'' (1 மக் 2:58). இந்த எலியாவைப் பற்றிய பாரம்பரி யம் ஆர்வத்தின் அமைதிப்படுத்துகிற சக்தியை, அவருடைய மெசியா பணியுடன் தொடர்புபடுத்திக் காட்டுகிறது (மலா 3:223-24). ''ஓ, எலியாவே! உம்முடைய வியத்தகு செயல்களில், நீர் எத்துணை மாட் சிக்குரியவர்! உமக்கு இணையாய் யார் பெருமை பாராட்டக்கூடும்? தீச்சூறாவளி யில், நெருப்புக்குதிரைகள் பூட்டிய தேரில் நீர் எடுத்துக் கொள்ளப் பெற்றீர். ஆண்டவ ருடைய சினம் சீற்றமாய் மாறுமுன் அதைத் தணிப்பதற்கும் தந்தையின் உள்ளத்தை மகனை நோக்கித் திருப்புவதற்கும் யாக்கோ பின் குலங்களைத் திரும்ப நிலைநிறுத்துவ தற்கும் குறித்த காலத்தில் நீர் கண்டிப்பீர்'' (சீரா 48:4.9-10), என எழுதப்பட்டுள்ளது.

2. தீவிரவாதி எனப்படும் சீமோன்: தீவிர வாதி எனப்படும் சீமோனுடன் இராபி களுக்கு முந்திய யூத இலக்கியங்களில் இன்னும் ஓர் இடத்தில், ''தீவிரவாதி'' எனப்படும் சொல் 4-ஆம் மக்கபேயர் நூலில் ''தீவிரவாதியான பினகாசு'' என்று குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (18:12). தீவிரவாதி எனப்படும் சீமோன் இயேசுவின் சீடராகு முன் பினகாசு - மக்கபேயர்களின் பாரம்பரி யத்தில் சட்டத்திற்காகத் தீவிர ஆர்வத்துடன் வாழ்ந்த குழுவில் ஓர் உறுப்பினராக இருந்திருக்கலாம். கி.பி. முதல் நூற் றாண்டில் இந்தக் குழுவிலிருந்து ஏராள மான குழுக்கள் உருவெடுத்ததாகச் சொல்லப் படுகின்றது, மேலும் அவர்கள் பாலஸ்தீனத் தில் தீவிரமாகச் செயல்பட்டதாகவும் சொல் லப்படுகின்றது. இந்தக் குழுக்கள், பாம்பே யின் காலத்திலிருந்து தேசிய அளவில் உரோமையருக்கு எதிர்ப்பு அளிக்கும் ஒரு சக்தியாக உருவெடுத்தது.

3. பவுல்:கிறிஸ்தவராக மாறுவதற்கு முன் பவுல், சட்டத்தின் பால் கொண்ட ஆர்வத் தின் இறையியலால் தூண்டப்பட் டார் எனலாம். இந்தத் தீவிர ஆர்வம் பற்றிய யூதக் கூற்றுகளிலிருந்தும், பவுலின் வாழ்வு பற்றிய ஆய்விலிருந்தும் இந்த இயக்கம் பற்றிய முக்கிய உட்கருத்தை நாம் பெற முடியும். பவுல் கலாத்தியர்களுக்குப் பின்வருமாறு எழுதினார். ''ஒரு காலத்தில்

நான் யூத மறையைப் பின்பற்றிய பொழுது, என்ன செய்து வந்தேன் என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். கடவுளின் திருச் சபையை எவ்வளவோ துன்புறுத்தி ஒழிக்க முயன்றேன். முன்னோர் பரம்பரையில் ஆர்வம் மிக்கவனாய் என் இனத்தவருள் என் வயதினர் பலரினும் மேலாக யூத மறை ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினேன்'' (கலா 1:13-14). மற்றொருபகுதியில் பவுல் தான் திருச்சபையைக் கொடுமைப்படுத்தியதை இந்த ஆர்வத்தோடு நேரடியாக இணைக் கிறார். ''அதன் மேல் எனக்கு இருந்த ஆர்வத்தால் திருச்சபையைத் துன்புறுத்தி னேன்'' (பிலி 3:6). பவுல் ஒரு பரிசேயர் (3:5). ஆனால் பவுல் தீவிரமான முறை யிலே அதிகமான பொறுப்புகளைத் தன் மேல் ஏற்றுக் கொண்டதினால், பரிசே யனை விட அதிகமான தகுதிகளையுடையவ ராக இருந்தார். மேற்குறிப்பிடப்பட்டுள்ள பவுலின் சுயசரிதை விவரிப்புக்கு அப் போஸ்தலர் பணியில் உள்ள செய்தித் தொகுப்புக்கள் ஆதரவு அளிக்கின்றன. அப் போஸ்தலர் பணியில் உள்ள குறிப்பின்படி, பவுல் கடைசியாக எருசலேமுக்கு வந்த போது, சட்டத்தின் தீவிரவாதிகளான ஆயி ரம் யூதர்களைப் பற்றி எச்சரிக்கப்பட்டார். இவர்கள் அவரைக் கொன்று போடுவதாக அச்சுறுத்தினர். ஏனெனில் பவுல் சிதறிக் கிடந்த யூதர்களை மோசேயின் சட்டத்திற்கு எதிராக நடக்கும்படி உற்சாகப்படுத்தியதாகக் குற்றம் சாட்டினார் (அ.ப. 21:20-21). பிறகு ஒரு கொடூரமான கும்பல் ஆலயத்தில் பிடித்து இழுத்து வந்து, அவரை அடித்த னர். கும்பல் எந்த விதமான விசாரணையும் இல்லாமல், அவரைக் கொல்ல வேண்டு மென்று முடிவு செய்தது. ஆனால் உரோ மைப் படைவீரர்கள் இதில் தலை யிட்டனர் (21:27.36). அங்கே பவுல் கூட்டத்திற்குப் போதிக்கத் தொடங்கி னார். இதில் பின்வருமாறு கூறினார்: ''நான் ஒரு யூதன்,.... கமாலியேலின் பாதத்தண்டை அமர்ந்து, நம் முன்னோரின் சட்டத்தை மிக நுணுக்கமாகக் கற்றேன். இன்று நீங்கள் அனைவரும் கடவுள்மேல் ஆர்வம் கொண் டுள்ளதுபோல நானும் கொண்டிருந்தேன்'' (22:3). தனது மனமாற்றத்துக்குப்பின் கடவு ளுடன் மனம் விட்டுப் பேசியபோது பவுல் ''உம்மீது விசுவாசம் கொண்டவர்களைச் சிறைப்படுத்தினேன். செபக்கூடந்தோறும் சென்று அவர்களைச் சாட்டையால் அடித் தேன்'' (22:19) என்றார். ''சட்டத்தின்பால் தீவிர ஆர்வம்'' கொண்டவர்கள் நாற்பது பேர் தாங்கள் பவுலைக் கொல்லச் செய்த முயற்சி தோல்வி அடைந்த மறுநாள், பவுலைக் கொல்லும் முயற்சியைத் தொடர, சபதம் எடுத்துக் கொண்டனர் (23:12-14). இந்த நிகழ்ச்சியானது பவுலை 21:38-இல் குறிப்பிட்டுள்ள விசாரணைக்கு இட்டுச் சென்றது. சட்டத்தின்பால் தீவிர ஆர்வம் பற்றிய இறையியல் குறித்த பவுலின் தீர்ப்பு, சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஏற்புடைமை பற்றிய தர்க்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. ''சகோதரர்களே, அவர்கள் மீட்படைய வேண்டுமென்றே, என் உள்ளம் தவிக்கின்றது. அதற்காகவே நான் கடவுளிடம் மன்றாடுகிறேன். கடவுள் மேல் அவர்களுக்கு அன்பார்வம் உண்டு என்பதற்கு நான் சாட்சி சொல்ல முடியும். ஆனால் அந்த ஆர்வம் உண்மையான அறிவுக்கு ஏற்றதாயில்லை. கடவுளின் திரு அருட் செயல்முறையை அவர்கள் அறிந்து கொள்ளாமல் அருள் பெறுவதற்குத் தங்கள் முறையையே நிலை நாட்டத் தேடினார்கள். ஆகவே கடவுளுடைய அருட் செயல் முறைக்குத் தங்களை உட்படுத்தவில்லை. ஏனெனில் கிறிஸ்துவே திருச்சட்டத்தின் முடிவும் நிறைவும்; ஆகவே விசுவசிக்கும் எவனும் இறைவனுக்கு ஏற்புடையவனா வான்'' (உரோ 10:1-4). பவுலை அறிந்து கொள்வதற்கு, அவர் மிகவும் கடுமையான சட்ட திட்டங்களை மிகவும் நுணுக்கமாகப் பின்பற்றி வந்த யூதப் பின்னணியிலிருந்து வந்தவர் என்பதை மனதில் கொள்வது அவசியம். ஏற்புடைமை பற்றிய இவரது கருத்தைப் புரிந்து கொள்வதற்கு, சட்டத் தைப் பற்றிய யூத இறையியலை நாம் தெரிந்திருக்க வேண்டும்.

4. முடிவுரை: இந்த ஆர்வம் பற்றிய இறையியல், ஒரே கடவுளை வழிபட்ட

இஸ்ராயேலர்களின் வழிபாட்டு முறையி லிருந்து உருவெடுத்தது என்பது தீவிரவாதி களுக்கு இலட்சியமாக அமைந்துவிட்டது. ''நானே உங்கள் ஆண்டவர். நான் சகித்துக் கொள்ள மாட்டேன்.'' மேலும், ''உங் களுக்கு வேறு கடவுள்கள் இல்லை''. இஸ்ரா யேல் புனிதமான மக்களாகும், அவர்கள் புனிதமுள்ளவர்களாக இருக்க கடவுள் சட்ட திட்டங்களை வழங்கினார். இஸ்ரா யேல் தங்களுடைய பதிதத்தால் கடவு ளுடைய பொறாமையைத் தூண்டியபோது ஆண்டவருடைய கோபம் அவர்கள் மேல் பொழியப்பட்டது. தீவிரவாதிகளின் தணிக் கும் செயல் நோய்த் தடுப்புத்தன்மை கொண் டது. அறுவை மருத்துவர் புற்றுநோய் உறுப்புக்களை வெட்டியெடுப்பது போல், தீவிரவாதிகள் பதிதர்களை வாள் கொண்டு அகற்றினர். உடன்படிக்கையின் ஆண்டவரிட மிருந்து அவர்களுடைய ஆர்வம் சட்ட திட்டங்களுக்கு மாறியது, மக்கபேயர் காலத்தில் நடந்தது என்று உறுதியாகக் கூறலாம். இம்மாற்றம் இரேக்க உரோமை யர்கள் காலத்தில் நிலவிய தீவிரவாதத்திற்கு அடிப்படையாக அமைந்தது. தீவிரவாதி சட்டங்களுக்குக் கடுமையான பொருள் அளிப்பவர்; ''இஸ்ராயேலன் கடவுளு டைய சட்டதிட்டங்கள் மேல் ஆர்வமுள்ள வர்'' (அ.ப. 22:4); அதற்காக உயிரையும் கொடுக்கத் தயங்காதவர்; பிறரைக் கொல்ல வும் தயாராக இருந்தவர். கி.பி. 70-க்கும் 135-க்கும் இடையில் நடந்த வீழ்ச்சிக்குப் பிறகு, யூத ஆன்மீகத் தலைவர்கள் தீவிர ஆர்வம் பற்றிய இறையியலைப் படிப்படி யாக வரையறை செய்தனர். இராபிகளின் யூதத்துவத்தில் தீவிர ஆர்வத்தின் இடத்தைச் ''சாலோம்'' (சமாதானம்) எடுத்துக்கொண் டது. இஸ்ராலேயர் புறவினத்தாரிடம் கொண்ட உறவில் இந்தச் சமாதானம் இறையியல் ஆதிக்கம் செலுத்தியது.

புதிய ஏற்பாட்டில் புதிய இறையியலுக்கு ஒத்த விதத்தில் ஆர்வம் திசை திருப்பம் பெற்றது (காண்க. 1 கொரி 14:12; தீத் 2:14; 1 பேதுரு 3:13; திருவெளி 3:19).

தீவு (ISLAND, ISLE)

விவிலியத்தில் மத்திய தரைக்கடலில் உள்ள தீவுகளைக் குறிப்பதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. சங் 71:10-இல் தீவுகளின் அரசன் எபிரேய அரசனுக்குத் திரை செலுத்துவான் எனும் நம்பிக்கை காட்டப் பட்டுள்ளது. எசா 40:15-இன்படி இறைவ னின் சக்தி தீவுகளையும் கடந்து நிற்கிறது. இதே கருத்து எசே 26:18-இல் காணப்படி னும், அது மத்தியதரைக்கடல் தீவுகளை விட பெனீசியக் கடற்கரைப் பகுதிகளையே குறிக்க வேண்டும். எசா 42:15-இல் இறுதிக் காலம் பற்றிய உருவகத்தில் ''ஆறுகளை யெல்லாம் தீவுகளாக மாற்றுவேன்'' எனக் கடவுள் கூறுகிறார். ஆனால் இது 'வறண்ட நிலங்களாக்குவேன்' என்றே இருக்க வேண் டும் எனப் பலர் கருத்துத் தெரிவிக் கின்றனர்.

புதிய ஏற்பாட்டில் மத்திய தரைக் கடல் தீவுகளைப்பற்றித் தெளிவாகப் பெயருடன் குறிப்பிடப்படுகிறது. அவை: சைப்பிரசுத் தீவு (அ.ப. 13:4.6); கவுதா (27:16); மால்தாத் தீவு (28:1). இவையெல்லாம் தீவுகள் எனக் குறிப்பிடப்படாவிடினும் பவுலின் பயணத் தில் தொடர்பு கொண்ட கிரேத்தாத்தீவு, ரோதுத் தீவு, கோசுத் தீவு போன்ற தீவுகள் பற்றிப் பேசப்படுவதைக் காண்கிறோம்.

எபிரேய மூலச்சொல் 'தீவு' என்ற பொருளை விட, கடற்கரையை ஒட்டியுள்ள நிலங்களையும், ஊர்களையும் குறிப்பதாக உள் ளது. ஒரு சில இடங்களில் இச்சொல் தீவு என்பதையும், ஒரு சில இடங்களில் கடற் கரைகளை அல்லது அதையொட்டியுள்ள நிலங் களைக் குறிப்பதாகவும் உள்ளது.

தீவேஸ் (DIVES - செல்வம்)

செல்வரும் 'இலாசரும் என்ற இயேசுவின் உவமையில் (லூக் 16:19-31), இது செல்வ ரின் பெயராகக் கருதப்பட்டது. வுல்காத்தா மொழிபெயர்ப்பு ''ஒரு செல்வர்'' என்று கொண்டுள்ளது. இதன் விளைவாக, இந்தப் பெயர் அறியப்படாத மனிதனுக்குத் தீவேஸ் என்பது பெயராயிற்று. கி.பி. மூன்றாம்

நூற்றாண்டில் இவருக்கு நினேவே, பினேயு போன்ற பெயர்கள் கொடுக்கப்பட்டன.

தீனா (DINAH - தீர்ப்பு)

யாக்கோபு - லேயா ஆகியவர்களின் மகள் (ஆதி 30:21; 46:15). ஆதி 34-இல் மட்டுமே தீனாவைப் பற்றிய நிகழ்ச்சி வருகிறது. இவ்வியரான ஆமோரின் (காமோர்) மகனாகிய, செக்கேம் என்ற பெய ருடையவன், செக்கேம்பகுதியில் தீனாவைக் கற்பழித்தான். செக்கேம் தீனாவை மண முடிக்க விரும்பினான். எனவே ஆமோரும், நகரத்தார் அனைவரும் யாக்கோபுவையும் அவரது புதல்வர்களையும் திருமணத்திற்கு இணங்கக் கேட்டுக் கொண்டனர். அதன் மூலம் அவர்களுக்கிடையே சமூக - வாணிக உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்பினர். இதையெல்லாம் கேள்விப் பட்ட யாக்கோபின் புதல்வர்கள் சினம் கொண்டனர். முக்கியமாக, தீனாவின் சொந் தச் சகோதரர்களான சிமியோன், லேவி இருவரும் கடுஞ்சினம் கொண்டனர். எனி னும் செக்கேமியர்கள் விருத்தசேதனம் செய்து கொண்டால் தங்கள் சகோதரியை மணம் முடித்துக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டனர். செக்கேம் நகர ஆண்கள் விருத்தசேதனம் செய்து கொண்டனர். இத னைப் பயன்படுத்தி லேவியும், சிமியோ னும் செக்கேம் நகருக்குள் புகுந்து எல்லா ஆண்மக்களையும் வெட்டிப் போட்டனர். ஆமோரையும் செக்கேமையும் கொன்று போட்டனர். அதன்பின் அவர்கள் நகரைக் கொள்ளையிட்டனர். இதற்காக யாக்கோபு அவர்களைக் கடிந்து கொண்டார். ஏனெ னில் அவர்களது செயலால் தனக்கு இனிப் பாதுகாப்பு இல்லையென அஞ்சினார் (ஆதி 49:5-7).

இந்நிகழ்ச்சியானது அரசாட்சி தோன்றுவ தற்குமுன் செக்கேம் - எபிரேய மக்களின் உறவை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் இந்நிகழ்ச்சியின் உண்மை வடிவம் பற்றிப் பல கருத்துகள் உள்ளன. ஒரு தனிப்பட்ட நபராகவோ, ஓர் இனமாகவோ இந்நிகழ்ச்சி யில் தீனாவின் பங்கு தெளிவற்றதாக உள்ளது.

தீனாவியர் (DINAITES)

எருசலேம் ஆலயத்தைத் திரும்பக் கட்டக் கூடாதென்று அர்த்தக்சஸ்தா மன்னனுக்குக் கடிதம் அனுப்பிய (எஸ் 4:8-23) இரகூம் என்பவனைச் சார்ந்தவர்களில் இக்குழுவும் ஒன்று (எஸ் 4:9). இச்சொல் ஓர் இனத்தைக் குறிக்கும் பெயரன்று; மாறாகப் பதவிப் பட்டமாகும். இவர்களைப் பற்றிய குறிப்பு கள் அரமேயிக்குப் புல்தாள் ஏடுகளில் அடிக்கடி காணப்படுகின்றன. எரோதோத சும் யோசிப்பசும், இவர்களைப்பற்றிக் கூறுகின்றனர்.

தீனி (PROVENDER)

வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளுக்கு உணவாகப் புல், மற்றத் தானிய வகைகளான கொள்ளு, தினை, கம்பு, பார்லி, சோளம் ஆகியவற்றைக் கொடுப்பது வழக்கம். களத் தில் அடிக்கப்பட்ட வைக்கோல் பதர் ஆகியவற்றையும் விலங்குகளுக்கு உண்ணக் கொடுப்பர். விலங்குகளுக்கு அளிக்கப் பட்ட ''சுவையூட்டப்பட்ட தீனி'' ஆண்ட வர் தம் மக்களுக்கு வழங்கும் ஆசீரின் ஓர் அடையாளமாகும்.

து

துக்கம், துயரம் (SORROW)

பழைய ஏற்பாட்டில் துக்கத்தைக் குறிக்கப் பல சொற்கள் பயன்பட்டுள்ளன. மகிழ்ச்சி மற்றும் துக்கம் ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளில், அதுவும் அவற்றின் இறையியல் பொருளில், அக்கறை செலுத்தப்படுகிறது.

மனித துன்பம் பற்றிய உள்ளத்தைப் பெரிதும் வருத்தும் விவரிப்பு 2 சாமு 1:19 தொ; 18-இல் காணப்படுகிறது. தொடக்க காலத்தில் இஸ்ராயேலர் மரணத்தைப்பற்றி அவ்வளவு துக்கம் கொண்டதாகத் தெரியவில்லை; மாறாக, அகால மரணம் அல்லது கொடிய மரணம், அல்லது குடும்ப உறவில் மகிழ்ச்சியில்லாத மரணம் பற்றித் துக்கம் கொண்டனர் (ஆதி 42:38; 44:29தொ; 46:30). மனித வாழ்வில் மகிழ்ச்சியும் துக்கமும் பின்னிப்பிணைந்துள்ளன என்பதை ஞான ஆசிரியர்கள் நன்கு அறிந்திருந்தனர் (பழ 4). ஒருவனுடைய சொந்தமடமையாலோ (10:1), மற்றொருவனுடைய மடமையாலோ (23:29) துக்கம் வருகிறது. பிற்காலத்தைச் சேர்ந்த, எதிலும் கெடுதலையே காணும் மனப்பான்மை (யோபு 7:1-10; திருவுரை 1:18; 7:3; காண் சங் 90:10), பழைய ஏற்பாட்டிலோ ஞான இலக்கிய இயக்கத்திலோ (காண் ஞான 20:21தொ; 38:18 தொ) ஒரு பொதுவான பண்பன்று.

மனிதவாழ்வில் துக்கம் ஓர் அங்கமானாலும், அது இறைவனுடைய அமைப்பைச் சேர்ந்ததன்று. அது மனிதனின் பாவத்தன்மையோடு தொடர்புடையது (ஆதி 8:16-17; சங் 16:4). அது பெரும்பாலும் தண்டிக்கும் நோக்கத்தோடு (2 சாமு 7:14; 2 நாள் 6:24-31; காண். ஓசே 3:3-5; ஆமோ 4:6-12; எபி 12:3-11), இறைவனது சினத்தின் விளைவாக வருகிறது (சங் 88:7-9; புல 1:1-12; எசே 23:33-35). இறுதியில், விசுவாசிகளுக்குப் (சங் 13;31; 107:39-43) புதிய யுகத்தில் (எசா 51:11; காண். 25:8; எரே 31:1-17; திருவெளி 21:4) இறைவனாலேயே அது நீக்கப்படும்.

யாவேயின் முன் மனவருத்தத்தை எடுத்துக்காட்டும் வழிபாட்டுச் சடங்குகள் இழவுத்துக்கம் கொண்டாடும் முறையில் அமைந்துள்ளன (யோசு 7:6; 1 அர 21:27; நெகே 9:1). இத்தகைய ''அதிகாரபூர்வமாகத்'' துக்கம் கொண்டாடுதலை இறைவாக்கினர்கள் கடுமையாகச் சாடுகின்றனர் (எசா 58:5; ஓசே 5:15-6:4; ஆமோ 4:6-12). அவர்கள், உண்மையான கீழ்ப்படிதலை விளைவிக்கும் (எசா 58:6-7; ஓசே 6:6) உண்மையான மனந்திரும்புதலைக் கோருகின்றனர் (யோவே 2:12-13).

புதிய ஏற்பாட்டில் துக்கத்தைக் குறிக்கும் சொல் பொதுவில் வலி, துன்பம் என்ற பொருளிலும் (எபி 12:11; 1 பேதுரு 2:19) ''உள்ளார்ந்த கடுந்துயர்'' என்ற பொருளிலும் (லூக் 22:25;யோவா 16:6.20; உரோ 9:2) வருகிறது. ''துக்கமிக்க மனிதன்'' என்ற அளவில் (காண்க: மத் 26:37; மாற் 14:34; லூக் 19:41; 22:44; யோவா 11:35), எசா 52:13-53:12-இல் வரும் யாவேயின் ஊழியனை இயேசு நம் மனக்கண்முன் கொணர்கிறார் (மத் 8:17; லூக் 22:37; 1 பேதுரு 2:24-25).

உலகிலிருந்தாலும் அதைச் சாராத (யோவா 15:19) கிறிஸ்தவ சமூகத்தின் இடுக்கண்நிலை 2 கொரி 7:8-12-இலும், வேறுவிதத்தில் யோவா 16:1-22-இலும் பிரதிபலிக்கிறது. 2 கொரி 7:8-12-இல், ஒருவன் தன் கீழ்ப்படியாமையை உணர்ந்து கொள்ளும் துக்கம் ''கடவுளின் திருவுளத்திற்கேற்ற துயரம்'' எனப்படுகிறது. இது மனமாற்றத்தை ஏற்படுத்துகிறது; மீட்புக்கு இட்டுச்செல்கிறது. ''இவ்வுலகுக்கடுத்த துயரமோ - அதாவது இவ்வுலக ஆசைகள் நிறைவேறாததால் எழும் குற்ற உணர்வும் கவலையும் - சாவுக்கு இட்டுச் செல்கிறது. யோவா 16-இல் இயேசு இவ்வுலகத்தை

விட்டுச் செல்வதைக்கண்டு உலகம் மகிழும். ஏனெனில் அது அவரை வெறுக்கிறது (16:20; காண். 15:3). ஆனால் சீடர்கள் ''அழுவார்கள், புலம்புவார்கள்''. அவர் பிரிந்து செல்வதால் மட்டுமன்று (16:6). உலகத்தால் அவர்கள் மேல் வரவிருக்கும் வெறுப்பு மற்றும் துன்புறுத்துதலால் அவர்கள் துயரம் கொள்வர் (15:18-20). ஆனால் அவர் அவர்களை மீண்டும் காணும்போது (16:22; காண். திருவெளி 21:3-4) அவர்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் (யோவா 16:20).

துடுப்பு, துடுப்புப்படகு (OAR, GALLEY))

துடுப்பு, நுனி சிறிது குழியாக்கப்பட்ட சதுரவடிவமுடைய நீண்ட மரக்கட்டையாகும். இது படகுகளைச் செலுத்தப் பயன்பட்டது. காலப்போக்கில் இதன் வடிவம் மேன்மைப்படுத்தப்பட்டு, நெம்புகோல் ஆதார அமைப்பில் பயன்பட்டது.

துடுப்புப்பற்றிய விவிலியக் குறிப்புகள் துடுப்புப்படகுடன் சேர்ந்து வருகின்றன (எசா 33:21; எசே 27:6.8.26.29). துடுப்புப் படகு, தாழ்ந்த குறுகிய அமைப்புடையது; துடுப்புகளால் இயக்கப்பட்டது; போர்களில் பெரும்பாலும் பயன்பட்டது. எசா 33 பிற்காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டால், இங்குக் குறிக்கப்படும் படகுகள் கிரேக்கக் கப்பல்படையில் பயன்பட்ட படகுகளாக இருக்கலாம். கிறிஸ்தவ சகாப்தத்திற்குமுன் படகுகள் ஒரு தள வரிசைத் துடுப்புகளையே கொண்டிருந்தன. பிற்காலத்தில், இவை இரண்டு, மூன்று தளவரிசைத் துடுப்புகளைக் கொண்டிருந்தன.

காண்க: கப்பல்களும் கப்பலோட்டுதலும்.

துட்மோசு (THUT-MOSE - சந்திரக்கடவுள் பிறந்திருக்கிறார்)

எகிப்திய வரலாற்றில் 18-ஆவது அரச மரபைச் சேர்ந்த நான்குபேர் இப்பெயரைக் கொண்டுள்ளனர். இவர்களில் முக்கியமானவர் மூன்றாவது துட்மோசு ஆவார் (கி.மு. 1504-1450). இவர் இருபத்திரண்டு ஆண்டுகள் ஆண்டார். இவரது ஆட்சியில் எகிப்து புகழ்பெற்று விளங்கியது. இவர் பதினேழு போர்களை நடத்தினார். கி.மு. 1482-இல் மெகிதோவைக் கைப்பற்றினார்; எகிப்தியப் பேரரசை ஆசியாவிலும் பரவச்செய்தார்.

துணியால் சுற்றிப் பொதிதல் (SWADDLE)

முதலில் இது புதிதாகப் பிறந்த குழந்தையைத் துணிகளில் பொதிந்து வைத்தலைக் குறிக்கும் (லூக் 2:7; எசே 16:4). இது குழந்தையின் புற உறுப்புகளை நேராக வளரச் செய்ய உதவியது என்று கருதப்பட்டது. இப்பழக்கம் விவிலியக் காலம் முழுவதும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் எசே 30:21-இல் வரும் எபிரேயச் சொல் ஒடிந்துபோன கைக்குக் கட்டுப் போடுவதைக் குறிக்கிறது. யோபு 38:9-இல் வரும் ''பொதியும் துணி'' கடலின் மேல் எழும் மேகங்களை உருவகமாக உணர்த்துகின்றது.

துணைக்கலங்கள் (FURNITURE))

திருஉறைவிடத்திலுள்ள அனைத்துப் பொருள்களையும் குறிக்க இச்சொல் பயன்பட்டுள்ளது (யாத் 25:9; 31:7; 40:9). அதாவது, சாட்சியப் பேழையையும் அதன் மேலமைந்த இரக்கத்தின் இருக்கையையும் தவிர்த்து, திருமுன் அப்பமேசை (யாத் 31:8), விளக்குத்தண்டு (31:8; 35:14), தகனப்பலிபீடம் (31:9) ஆகியவற்றையும் அவற்றோடு சேர்ந்த பொருட்களையும் இச்சொல் குறிக்கிறது.

ஆலயத்தில் பயன்பட்ட தட்டுமுட்டுப் பொருட்களையும் (1 நாள் 9:29), வீட்டுப் பொருள்களையும் (நெகே 13:8), எபிரேய மூலச்சொல் குறிக்கிறது.

துணைச்சட்டப் பாரம்பரிய வரலாறு (DENTERONOMIC HISTORY)

இதை உபாகமப் பராம்பரிய வரலாறு என்றும் குறிப்பிடுவோம். துணைச்சட்ட நூல் (உபாகமம்) தொடங்கி 2 அரசர்கள் முடியவுள்ள விவிலிய நூல்களில் அடங்கிய வரலாற்றை இப்பெயரால் குறிப்பிடுகிறோம். இவ்வரலாறு, உபாகமமூலத்தின் ஆசிரியரான ஒருவராலோ பலராலோ

தொகுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது என்று ஆய்வாள அறிஞர்கள் பலர் கருதுவர்.

இவர்கள் மதிப்பீட்டின்படி இந்த வரலாறு, மூலத்தில் பல்வகையான தனித் தனிப் பகுதிகளைக் கொண்டுள்ளது. இப்பகுதிகள் சட்டத் தொகுப்புகள், நீதிபதிகள் பற்றிய நிகழ்ச்சியுரைகள், 2 சாமு 9—1 அர 2 என்ற பகுதியில் காணப்படும் ''அரசவை வரலாறு'', எலியா, எலிசா ஆகியோரின் பகுதிகள் முதலியவற்றை உள்ளடக்கும். இவையும் சிறு சிறு பாரம்பரியங்களின் தொகுப்பாக இருக்கலாம். மோசேயின் உடன்படிக்கையின் கோரிக்கைகளை உள்ளடக்கிய சட்ட நூல் ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டு (கி.மு. 622 - 2 அர 22-23; 2 நாள் 34-35), இந்நூலால் உந்தப்பட்டு, யூதாவின் அரசன் யோசியா தொடங்கிய சீர்திருத்தத்திற்கு ஆதரவாகவும் அதை மேம்படச்செய்யவும், மேற்கூறப்பட்ட பகுதிகள் தொகுக்கப்பட்டுப் பதிப்பு வடிவம் அளிக்கப்பட்டன. இத்தொகுப்பு இஸ்ராயேல் வரலாற்றில் காணப்படும் சமயபோதனையை வலியுறுத்துகிறது. மோசேயின் சட்டத்திற்குக் காட்டப்படும் பிரமாணிக்கத்திற்கேற்றவாறு நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளிப்பது இத்தொகுப்பின் சிறப்புப் பண்பாகும். இப்பண்பு யூதா மற்றும் இஸ்ராயேலின் அரசர்களின் நடத்தையின் விளைவாக (1 அர 15:26.30; 2 அர 15:3-5) சமாரியாவின் வீழ்ச்சி மற்றும் யூதாவின் நற்காலம், அவலநிலை ஆகியவைபற்றிய மதிப்பீட்டில் தெளிவாகத் தெரிகிறது. இஸ்ராயேல் பாவம் செய்ய, அதற்குத் தண்டனையாக இறைவன் கொடுமைப்படுத்துபவர்களை அனுப்புகிறார்; மக்கள் மனமாற்றம் கொள்கின்றனர்; இறைவன் நீதிபதிகளை அனுப்பி மக்களுக்கு விடுதலை அளிக்கிறார் என்ற அமைப்புடைய நீதிபதிகள் பற்றிய நிகழ்ச்சியுரைகளிலும் இப்பண்பைக் காணலாம்.

இலக்கியம் அல்லது மூலங்கள் பற்றிய திறன் ஆய்வு அளிக்கும் சவால்களை ஒதுக்கிவிட்டு, உபாகம வரலாற்றின் அடிப்படைக் கருதுகோளை விவிலிய அறிஞர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்வர். ஆயினும் நூல்களில் காணப்படும் இலக்கிய, வரலாற்று மற்றும் இறையியல் வேறுபாடுகள், வரலாற்று வரம்புகள் மற்றும் இப்பாரம்பரிய வரலாற்றின் வளர்ச்சிக் கட்டங்கள் ஆகியவைபற்றி வேறுபட்ட விளக்கங்களை அளிக்க அறிஞர்களைத்தூண்டியுள்ளன. கருத்தொற்றுமையில்லையாயினும், சமீப கால ஆய்வுகள் இவ்வாரலாற்றுத் தொகுப்பில் மூன்று கட்டங்களைச் சுட்டிக் காட்டுகின்றன. அ) கி.மு. 8-ஆம் நூற்றாண்டு முடிவு அல்லது 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துணைச்சட்டநூல் பதிப்பிக்கப்படுதல். இது, சமாரியாவின் வீழ்ச்சிக்குப்பிறகு (722) வட அரசிலிருந்து எருசலேமுக்கு வந்த, ஒருவேளை லேவியரான அகதி ஒருவரால் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆ) துணைச்சட்டம் முதல் 2 அரசர்கள் முடியவுள்ள தொகுப்பை யோசியாவின் சீர்திருத்தத்தின் பின்னணியில் பதிப்பித்தல். இது கி.மு. 620-ஐ ஒட்டி, யூதாவின் அரசவையைச் சேர்ந்த ஒருவரால், எருசலேமின் வீழ்ச்சிக்கு முன் செய்யப்பட்டிருக்கலாம். இ) கி.மு. 587-இல் எருசலேம் வீழ்ச்சியடைந்தபின் (2 அர 23:26) விவிலிய வரலாற்றில் சேர்க்கப்படுவதற்காக இப்பகுதி மீண்டும் பதிப்பிக்கப்படுதல். ஒருவேளை இது பாபிலோனில் நடந்திருக்கலாம்.

துணைச்சட்டநூல், உபாகமம் (DEUTERONOMY, BOOK OF)

1 பெயர்: இந்நூல், எபிரேயத்தில் ''இவை (மோசேயின்) சொற்கள்'' என்று பொருள்படும் பெயரால் அழைக்கப்பட்டது. இப்பெயர் பொருத்தமுடையதே. ஏனெனில் இந்நூல் மோசேயின் தூண்டுதல் கொண்ட அரசியல், சமய, சமூக அமைப்புகள் பற்றிய சட்டங்களைக் கொண்டுள்ளது. எபிரேய உபாகமம் 17:18-இல்வரும் ''சட்டத்தின் நகல்'' என்று பொருள்படும் ''மிஷ்னா ஹட்டாரா'' என்ற சொற்றொடரைக் கிரேக்கத்தில் தவறாக மொழிபெயர்த்து, எழுபதுநூல் இந்நூலை ''இரண்டாவது சட்டம்'' என்றழைத்தது. இப்பெயர்

தவறானாலும், இந்நூலின் அடிப்படைப் பிரச்சனையைச் சுட்டுகிறது. மோவாபில் அறிக்கையிடப்பட்ட சட்டத்திற்கும் சீனாயில் அறிக்கையிடப்பட்ட மூலச்சட்டத்திற்கும் இடையேயுள்ள உறவுபற்றிய பிரச்சனையாகும் இது. தமிழில் இந்நூலை நாம் உபாகமம் அல்லது துணைச்சட்டநூல் என்று அழைக்கிறோம்.

II. *நூல் தோன்றிய வரலாறு:* நாம் கொண்டிருக்கும் வடிவில், உபாகமம், யோசியாவின் காலத்திய (கி.மு. 640 - 609) சமயச் சீர்திருத்தத்தோடு தொடர்புடையது என்று இப்போது பொதுவாக அறிஞர் ஏற்றுக்கொள்வர். 2-ஆம் அரசராகமத்தில் ஒரு வரலாற்று நிகழ்ச்சி வருகிறது. ஆலய ஊழியர்களுக்குக் கூலி கொடுக்க ஆலயக் கருவூலத்திலிருந்து பணம் எடுக்கும்போது, பெரிய குருவாகிய இலிகியா இதுவரை அறியப்படாத ஒரு ''சட்டநூலைக்'' கண்டெடுக்கிறார். இச்சட்டநூலைப்பின்பற்றி யோசியா ஒரு சமயச் சீர்திருத்தத்தைத் தொடங்குகிறார் (2 அர 22:3-13). இந்தச் சட்டநூல்தான் உபாகமமாகும்; அதன் மூலப் பகுதியாகும் என்ற கருதுகோளை வெளியிட்டனர் டிபெட், வெல்ஹாசன் போன்ற அறிஞர்கள். இதற்கு அவர்கள் காட்டிய காரணம், ஆலயத்தில் இச்சட்டநூல் கண்டெடுக்கப்பட்டபின் நடந்த சமயச் சீர்திருத்தத்திற்கும் உபாகமச் சட்டத்திற்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமையாகும். உப 12-ஆம் அதிகாரத்தில் கூறப்படுவதற்கு ஏற்ப வழிபாட்டை மையப்படுத்துவதும் ஒரே வழிபாட்டுப் புனித இடத்தை அழுத்திக் கூறுவதும் யோசியா செய்த மறைச் சீர்திருத்தத்தின் சிறப்புடைமையாகும் (உப 22:1-7; 2 அர 23:8 தொ). ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட சட்டநூல், யோசியா செய்த சீர்திருத்தம் மேலாண்மையுடையதும் முறையானதும் உண்மையானதும் ஆகும் என்று காட்டச் செய்யப்பட்ட ''பக்திமிகுந்த மோசடி''யாகும் என்று டிபெட், வெல்ஹாசன் போன்ற அறிஞர்கள் கருதினர். இவர்கள் இந்த அடிப்படையில் இந்நூல் தோன்றிய காலத்தை ஓர் அளவு துல்லியமாக வரையறுத்தனர். இக்கருத்துகளையும் போக்கையும் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. பெரும்பாலோர் உபாகமத்தை எசேக்கியா ஆட்சியில் அல்லது மனாசேயின் இருண்ட காலத்தில் ஏற்கனவே நடந்த முன்னைய சீர்திருத்தத்தின் திட்டமாகக் கருதினர். இந்நூல் கி.மு. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். இந்நூல் எரேமியாவின் ஆகமத்தோடு கொண்டிருக்கும் மொழிநடை உறவு இதை உறுதிப்படுத்துகிறது. உபாகமத்தில் காணப்படும் சொற்களும் கருத்துக்களும் ஓசேயா, எரேமியா ஆகமங்களில் காணப்படுகின்றன. இருப்பினும் இக்காலவரையறைக்குக் கடந்தசில ஆண்டுகளாக எதிர்ப்பு வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்நூல் தோன்றிய காலம் கி.மு. 7.ஆம் நூற்றாண்டு என்று கூறும்போது இக்காலத்தில்தான் இந்நூல் முழுவதும் புதிதாகப் படைக்கப்பட்டதாகக் கருதக்கூடாது. இதன் மூலம் பாரம்பரியம் மோசேயின் காலம்வரை செல்கிறது. இஸ்ராயேலர் தங்கள் நூல்களைத்திருத்தி அமைத்தல், மீண்டும் விளக்கம் அளித்தல் ஆகியவற்றுடன் ஏற்கெனவே இருப்பவற்றோடு பிற காலச் சமய, சமூகத் தேவைகளுக்கேற்பப் பல பிற்சேர்க்கைகள் செய்வதும் வழக்கம். இவ்வழியைப் பின்பற்றி, உபாகமம் தனக்கே உரிய நடையையும், போக்கையும் அழுத்தத்தையும் 7-ஆம் நூற்றாண்டுப் பதிப்பிலிருந்து பெறுகிறது எனலாம். இஃது ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே இஸ்ராயேலின் வட அரசில் எழுத்து வடிவம் எடுத்திருக்கலாம்.

இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் அமைக்கப்பட வேண்டிய அரசை வரையறை செய்யும் கற்பனைச் செயல் திட்டத்தை இந்நூலில் காணச் சிலர் விரும்புகின்றனர். சிலர் நாடுகடத்தல் முடிந்த காலத்தில் இந்நூல் தோன்றியதாகக் கூறுவர். வேறு சிலர் இந்நூலில் உண்மையான பழமைமிக்க கருத்துக்களும் பொருட்களும் காணப்படுவதைக் கருத்தில் கொண்டு, இந்நூல் எழுதப்பட்டகாலத்தை மிக முன்தள்ளிப் போடுவர். இவர்களில் சிலர் சாமுவேலின் காலத்தையும், சிலர்

யோசு 24-இல் விவரிக்கப்படும் செக்கேம் உடன்படிக்கைக் காலத்தையும் இந்நூலுக்கு அளிப்பர். இன்னும் சிலர் இஃது உண்மை யான மோசேயின் சட்டத் தொகுப்பாகும் என்றும், இதை மன்னராட்சிக்குச் செயல் திட்டமாக சாமுவேல் தொகுத்தார் என்றும் கூறுவர்.

மேற்கூறப்பட்ட பலவகைப்பட்ட கருத் துக்களையும் நூலில் காணப்படும் பல வகைச் செய்திகளையும் கருத்தில் கொண்டு தொகுத்துப் பார்த்தால், உபாகமம், நூல்வடி வம் எடுக்கப் பலகாலம் எடுத்தது எனலாம். இஸ்ராயேலின் தொடக்க காலத்திலிருந்து நாடு கடத்தப்பட்டுத்திரும்பிய காலம்வரை இந்நூல் வடிவெடுத்தது எனலாம். இவ் விடத்தில், ஐந்நூலில் காணப்படும் நான்கு பெரும் பாரம்பரியங்களைப்பற்றி நாம் ஏற்கெனவே கூறியவற்றை மனதில் கொள் வது நன்று. இந்நூல் வட அரசில் வாய் மொழிப் பாரம்பரியமாகத் தோன்றி, காலப் போக்கில் எழுத்து வடிவம் எடுத்திருக்க வேண்டும். சமாரியாவின் வீழ்ச்சிக்குப்பின் (கி.மு. 722) தென்னரசில் பெரிதும் வளர்ந் திருக்க வேண்டும். யூதேயாவைச் சேர்ந்த ஒருவரால் பதிப்பிக்கப்பட்டிருக்க வேண் டும். செக்கேம் புனித இடத்தைச் சேர்ந்த லேவியர் குழு இப்பாரம்பரியத்தைப் பாது காத்துவந்தது என்று கருத இடமிருக்கிறது. உபாகமக் குழுவாலும் எரேமியா போன்ற வர்களாலும் வளர்க்கப்பட்டு, ஒரு நூற் றாண்டுக்குப் பின்வந்த யோசியாவின் சீர் திருத்தத்திற்கு அடிப்படையாக அமைந் திருக்க வேண்டும். இக்கருத்துக்கு வடிவத் திறன் ஆய்வும், மற்ற ஆராய்ச்சிகளும் உறுதி அளிக்கின்றன. எனவே இந்நூலை வட அரசைச் சார்ந்த எலோகிம் பாரம்பரியத்தைச் சேர்ந்த நூலாகக் கருதலாம். இந்நூல் கி.மு. 6-ஆம் நூற்றாண்டு நடுவில் இறுதி வடிவம் எடுத்திருக்கலாம். ஏனெனில் உபாகமப் பாரம்பரிய வரலாறு கி.மு. 562-இல் அவீல் மெரோதக்கு பாபிலோனில் அரியணை ஏறும்வரை நீளுகிறது (2 அர 25:27).

III. உபாகமச் சீர்திருத்தம்: யோசியா மன் னன் காலத்தில் (கி.மு. 640-609) இஸ்ராயே லில் நடைபெற்ற மறைச்சீர்திருத்தம் உபாக மச் சீர்திருத்தம் என்ற பெயர் பெறுகிறது. ஏனெனில் இச்சீர்திருத்தம் உபாகம மனப் போக்கை உடையது. இச்சீர்திருத்தம்பற்றி இரு வாசகங்கள் உண்டு. 2 அர 22:1-23:27; 2 நாள் 34:1-35:19. இரண்டிற்கும் வேறுபாடு கள் உண்டு. ஆயினும் சீர்திருத்தத்தில் சிறப்புக் கருத்துக்கள் தெளிவாயுள்ளன. இச்சீர்திருத்தம் யூதேயாவிலிருந்தும், எருச லேமிலிருந்தும் தொடங்கியது. இதில் சிறப் பானவை: 1) மெசப்பொத்தாமியாவில் தோன்றி இஸ்ராயேலில் புகுந்து அவர்களை இழிவுபடுத்திய, பலவகையான கதிரவன், விண்மீன் வழிபாட்டை யூதமக்களிட மிருந்து ஒழித்தலாகும் (2 அர 23:4-5.11-12). 2) யூதமக்களிடமிருந்து, புகுந்து விட்ட கானானியர்களின் புறமத வழிபாட்டுச் சடங்குகளையும் பழக்க வழக்கங்களையும் அறவே நீக்குதலாகும் (2 அர 23:6-7.10.13-14). குறிசொல்லுதல், மாயவித்தை செய்தல் ஆகிய பழக்கங்களை அடக்கி அழிப்பதா கும் (2 அர 23:24). யோசியா இச்சீர்திருத் தத்தை வடவரசு வழிபாட்டு இடங்களிலும் புகுத்தினார். சமாரியாவிலுள்ள புனித இடங்களையும் சிறப்பாகப் பெத்தேலை யும் (23:15), வடகலிலேயா வரையுள்ள புனித இடங்களையும் தகர்த்து அழித்தார் (2 நாள் 34:6). எருசலேமிலேயே பொது வழிபாட்டை வரையறை செய்யும் பொருட்டு, நாடு முழுவதுமுள்ள யாவே வழிபாட்டு இடங்களை மூடினார். குருக் கள் அனைவரையும் எருசலேமுக்குக் கொண்டு வந்து சேர்த்தார் (2 அர 23:9).

இரண்டு விவரிப்புக்களையும் ஒப்பிடும் போது நிகழ்ச்சிகளின் காலவரையறையில் வேறுபாடு தெரிகிறது. இரண்டையும் ஒத் துப்போகச் செய்வது முடியாதகாரியம் என் றாலும், நிகழ்ச்சிகளின் வரிசையை ஓர் அளவு அறிவுக்கேற்ற விதத்தில் திருத்தி யமைக்கலாம். யோசியாசின் ஆட்சியின் 18-ஆவது ஆண்டில் சட்டநூல் கண்டுபிடிக்கப் பட்ட பின்தான் (22:3-8) முழுச் சீர்திருத்த மும் தொடங்கியது என்பது நடந்திருக்கக் கூடியதன்று. ஆலய மராமத்து வேலை

நடந்தபோது சட்டநூல் கண்டெடுக்கப்பட்டது என்பது இரண்டாம் நாளாகம விவரிப்போடு ஒத்துப் போகிறது. இஃது ஏற்கெனவே சீர்திருத்தம் தொடங்கி நடந்து கொண்டிருந்தது என்பதைக் காட்டுகிறது. 2 நாள் 34:3 சுட்டிக்காட்டுவதின்படி இச் சீர்திருத்தம் யோசியா ஆட்சியின் 8-ஆவது ஆண்டு தொடங்கியிருக்க வேண்டும். இஃது அசீரிய மன்னன் அசூர்பானிப்பால் (கி.மு. 627) இறப்பதற்குச் சிறிது காலத்திற்கு முந்தியதாகும்.யோசியா அசீரியரின் வளர்ந்து கொண்டிருந்த பலவீனத்தை ஊகித்தறிகிறார். யூதேயாவிலும் புத்துயிர் பெற்ற விடுதலை எழுச்சி தெளிவாக வெளிப்படத் தொடங்கியது.யோசியாவின் முதற்செயல் அந்நிய வழிபாடுகளைச் சிறப்பாக அசீரியாவில் தோன்றிய வழிபாடுகளை அகற்றுவதாகும். யோசியா ஆட்சியின் 12-ஆவதுஆண்டில் (கி.மு. 629;2 நாள் 34:37) அசீரியர்களின் பலவீனம் உறுதியாகத் தெளிவாகிறது. யூதர்களிடையே விடுதலை இயக்கம் ஊக்கம் பெறுகிறது. மறைச் சீர்திருத்தத்தின் ஓர் அங்கமாகிய புனித இடங்களைத் தூய்மைப்படுத்துதல் வட அரசுக்கும் நீடிக்கிறது. யோசியா ஆட்சியின் 18-ஆம் ஆண்டில், சீர்திருத்தத்தின் ஒருபகுதியாக ஆலயம் செப்பனிடப்படுகிறது. அப்போது சட்டநூல் கண்டெடுக்கப்படுகிறது (2 அர 22:3-8; 2 நாள் 34:8-14). அதன் கட்டளைகளைப் பின்பற்றுதல் சீர்திருத்தத்தின் இறுதிக்கட்டத்திற்கு இட்டுச் செல்கிறது.

இந்தச் சீர்திருத்தத்திற்கு அசீரியர்களின் பலவீனமும், யூதர்களின் விடுதலை எழுச்சியும் காரணம் அல்ல; ஒரு வாய்ப்பாக அமைந்தன. யூதேயாவின் அரசனான எசேக்கியாவின் காலத்திலிருந்து (கி.மு. 715-687) யூதேயாவில் இத்தகைய சமயச் சீர்திருத்தத்தை ஆதரிக்கும் குழுவினர் இருந்து வந்திருக்கின்றனர். ஆயினும் மனாசேயின் காலத்தில் இவர்களின் குரல் மக்களிடையே எடுபடவில்லை. ஆனால் யோசியாவின் காலத்தில் இவர்களுடைய ஆதிக்கம் உயர்ந்தது; செயல்பட்டது. அரசியல் காரணங்கள் வாய்ப்பாக அமைய, சமயத்தேவைகள் யோசியாவின் மறைச்சீர்திருத்தத்திற்குக் காரணங்களாயின.

இச்சீர்திருத்தத்திற்கு வழிகாட்டியாகக் கண்டெடுக்கப்பட்ட நூல் எது என்று யோசியாசின் சீர்திருத்த விவரிப்பில் அடையாளம் எதுவும் தரப்படவில்லை. இந்நூல் உபாகமம்தான் என்று விவிலிய அறிஞர் புனித எரோனிமு கூறினார். கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து, அறிஞர்கள் சிலர் நாம் கொண்டிருக்கும் உபாகமநூல் யோசியாவின் சீர்திருத்தத்தின் விளைவாகும்; அதற்குத் தூண்டு காரணம் அன்று, என்று கூறத் தலைப்பட்டனர். இப்போது பெரும்பாலான அறிஞர்கள், நம்மிடமுள்ள உபாகமத்தின் நடுப்பகுதிதான் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட நூலாகும் என்று பொதுவாக ஏற்றுக் கொள்வர்.

அந்நிய வழிபாட்டு முறைகள் யாவற்றையும் அழிக்குமாறு உபாகமம் கட்டளையிட்டது (உப 12:1-3). சிலை வழிபாடு தலையாய பாவமாகும் (13:2-12). இந்த முறையற்ற வழிபாட்டிற்கு ஆதரவு அளிக்கும் நகரங்களை அழித்துவிட இந்நூல் கட்டளையிட்டது (13:13-19). சுற்றுப் புறத்திலுள்ள யாவேயின் புனித இடங்களை அகற்றி, ஒரே மையப் புனித இடத்தை அமைக்க 12:4-14; 16:5-7 தூண்டியது எனலாம். நாட்டின் பிற இடங்களில் வாழ்ந்த லேவியரும் குருக்களும் தங்க வசதி செய்து கொடுக்கப்பட்டது (2 அர 23:9). இது உப 18:1-8-இல் வரும் படிப்பினைக்கு ஒத்ததாயிருக்கிறது. உபாகமத்தின் மையம் யோசியா தொடங்கிவைத்த சீர்திருத்தத்தோடு இணையாயுள்ளது. யோசியாவின் சீர்திருத்தம் எசேக்கியாவின் சீர்திருத்தத்திற்கு நெருங்கிய விதத்தில் ஒத்ததாயுள்ளது. எசேக்கியாவின் சீர்திருத்தம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தியது; யூதேயாவில் எப்பிராயிம் மனாசே காலம் வரையிலுள்ள பிறதேவதைப் பீடங்களை அழித்தது (2 அர 18:4; 2 நாள் 29:3-31:1). யோசியா தொடங்கிவைத்த சீர்திருத்தம் எசேக்கியாவின் சீர்திருத்தத்

தைப் போன்றதே, அதன் வளர்ச்சியே இது என்று கூறுவது சாலப்பொருந்தும். இத்தகைய சட்டங்கள் யோசியாவின் காலத்திற்கு முன்பே எழுதப்பட்டிருந்தன என்று நாம் தெளிவாக ஏற்றுக்கொள்ளலாம். இதன்படி உபாகமத்தின் பெரும்பகுதி யோசியாவின் காலத்திற்கு முன்பே எழுதப்பட்டிருக்கலாம்.

யோசியாவின் சீர்திருத்தம் ஓர் அளவுடைய வெற்றியே பெற்றது. எருசலேம் ஒரே புனித இடமாயிற்று; யூதர்கள் வழிபாட்டின் மையமாகியது. ஓர் அளவிற்குப் புறமதச் சிலை வழிபாடும் அழிக்கப்பட்டது. பின் வந்த அரசர்கள் இச்சீர்திருத்தத்தைக் கடைப்பிடிக்கவில்லை. பிறமறைப் பழக்கங்கள் மீண்டும் தோன்றத் தொடங்கின (எரே 7:16-18; 11:9-13). யோசியாவின் சீர்திருத்தத்தின் ஒரு சிறப்பான விளைவு, எழுத்து வடிவத்தில் மேலாண்மை உரிமையோடு அறிவிக்கப்பட்ட சட்டம் ஆகும். இது பிற்காலத்தில் யூத சமயத்தையும், வழிபாட்டையும், சமூகத்தையும் அரசியலையும் வரையறுக்கும் கொள்கையாக மாறியது.

IV. திட்டமும் பிரிவுகளும்: இந்நூலை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அ) மோசேயின் முதல் அறவுரை *(1:1-4:43).*

1:1-5	: அறவுரைக்கு முன்னுரை.
1:6-18	: நாட்டைக் கைப்பற்றக் கட்டளை, தலைவர்களை நியமித்தல்.
1:19-46	: காதேசில் தங்கியது.
2:1-25	: ஏதோம்,மோவாபு, அம்மோன் வழியாகப் பயணம்.
2:26-3:11	: எஸ்போன், பாசான் ஆகியவற்றைக் கைப்பற்றுதல்.
3:12-22	: யோர்தானுக்குக் கிழக்கில் குடியேறுதல்.
3:23-29	: மோசேயின் செபம்.
4:1-14	: இஸ்ராயேலர் அனைவருக்கும் சட்டத்தைப் பறைசாற்றுவதற்கு முன்னுரை.
4:15-31	: பத்துக் கற்பனை; முதல் பகுதிக்கு விளக்கவுரை.
4:32-40	: உடன்படிக்கை வழியாக இஸ்ராயேலின் தனிச்சிறப்பான அழைப்பு.
4:41-43	: புனித இடங்களைக் கொண்ட நகர்கள்.

இஸ்ராயேலர் ஒரேபு மலையிலிருந்து பெத்பேகோர் மலைக்குச் செய்த திருப்பயணத்தை மோசே பின்னோக்காக எடுத்துக் கூறுகிறார். இப்படிக் கூறுவது பல தடவை நடந்திருக்க வேண்டும். முந்தையரின் அனுபவம் ஒவ்வொரு தலைமுறையிலும் முழு இஸ்ராயேலரின் அனுபவமாகும். ஒரு தலைமுறை அடுத்து வரும் தலைமுறைக்கு இந்த அனுபவத்தைக் கையளிக்க வேண்டும். வருங்கால மக்களும் இவ்வனுபவத்தைத் துய்த்துணர வேண்டும். *4:1-40:* இது இந்நூலின் மிக அழகிய பகுதியாகும். இஃது இறைவன் தன் மக்கள்பால் கொண்டுள்ள அன்புநிறை அக்கறைபற்றிய அழகிய சொல்லாற்றல் வாய்ந்த உரையாகும்.

ஆ) மோசேயின் இரண்டாம் அறவுரை *(4:44-11:32).*

4:44-49	: அறவுரைக்கு முன்னுரை.
5:1-22	: ''பத்து வார்த்தைகள்!''.
5:23-33	: சட்டத்தைப் பறைசாற்ற மோசே நியமிக்கப்படுதல்.
6:1-19	: உரிமை நாட்டில் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருக்கக் கோரிக்கை.
6:20-25	: பாஸ்கு விழா மறையுரை.
7:1-16	: பிற இனத்தார் அடியோடு அழிக்கப்பட வேண்டும் என்ற கட்டளை கானானில் செயல்பட வேண்டும்.
7:17-26	: வெற்றிபெற யாவேயிடம் நம்பிக்கை வேண்டும்.
8:1-20	: நினைவாக்கம் கோருதல்.
9:1-7	: நாட்டைக் கைப்பற்றுதல் யாவேயின் அலுவலாகும்.

9:8-29 : ஓரேபில் நடந்த பதிதம் நினைவுபடுத்தப்படுகிறது.
10:1-11 : உடன்படிக்கை புதுப்பிக்கப் படுதல்.
10:12-11:7 : உடன்படிக்கை வாழ்வு.
11:8-25 : உடன்படிக்கை நிறைவுறு தலுக்குக் குறிக்கோளாகவும் நோக்கமாகவும் நாடு பற்றிய வாக்குறுதி அளிக்கப் படுகிறது.
11:26-32 : ஆசீரையோ, சாபத்தையோ இஸ்ராயேலர் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இப்பகுதி சட்ட நூலுக்கு முன்னுரையாக அமைகிறது. மீண்டும் மீண்டும் அறவுரை கூறி, நாட்டின் வாழ்வும், நலமும் செழிப்பும் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் அடங்கியிருக்கிறது என்று மோசே விளக்குகிறார். 6:4-9 மிகப்பெரிய கற்பனையாகும். யாவேயை அன்பு செய்வதே சட்டத்தின் சாரமாகும்; உயிர் மையமானதுமாகும். இஃதோடு உப 11:13-21-உம் எண் 15-உம் சேர்த்து ஒவ்வோர் இஸ்ராயேலனும் நாளுக்கு இருமுறை சொல்ல வேண்டும். 10:12-22 உபாகமச் செய்தியின் சிறப்பான சுருக்கமாகும்; இரண்டாம் அறவுரையின் உச்ச நிலையுமாகும். இறைவன் கோருவது இவையே. இவை வழிபாட்டுணர்ச்சியுள்ள அன்பும் சேவையும், முழுக்கீழ்ப்படிதல், இறைவனது வழிக்கேற்ப வாழ்வை இசைந்திருக்கச் செய்தல் ஆகியவை. சமய அடிப்படை பற்றி இதைவிடச் சிறந்த உரையை நாம் காண்பது அரிது.

இ. உபாகமச் சட்டம் (12:1-26:19).

12:1-14 : வழிபடும் இடம்.
12:15-28 : ஊன்பற்றிய ஒழுங்குகள்.
12:29-32 : உறுதிமொழி அளிக்கப் பட்ட நாட்டில் சிலைவழி பாடு பற்றி எச்சரிக்கை.
13:1-18 : சிலைவழிபாடு (தொடர்ச்சி).
14:1-21 : பிறமத வழக்கங்களையும் உணவுகளையும் சடங்கு களையும் தடை செய்யும் சட்டம்.
14:22-29 : வரிகள்.
15:1-18 : ஓய்வுநாள் விடுதலை.
15:19-23 : பலிக்காகத் தலைப்பேறுகள் ஒதுக்கப்படுதல்.
16:1-17 : மூன்று திருப்பயண விழாக்கள்.
16:18-22 : இறையாட்சிச் சமூகத்தில் பலவிதப்பணியாளர்கள்.
17:1-7 : வழிபாட்டு முறை.
17:8-20 : நீதிபதிகளும் அரசர்களும்.
18:1-8 : குருக்கள் - லேவியர்.
18:9-22 : இறைவாக்கினர்.
19:1-13 : அடைக்கல நகரங்கள்.
19:14-21 : எல்லைகள், சாட்சிகள்.
20:1-20 : புனிதப்போர்.
21:1-9 : கொலை.
21:10-14 : போரில் பிடிபட்ட பெண்கள்.
21:15-23 : மூன்று ஐயவாதச் சட்டங்கள்.
22:1-12 : மனிதாபிமான நீதிச் சட்டங்கள்.
22:13-30 : பாலின ஒழுங்குகள்.
23:1-9 : பொதுச் சபையிலிருந்து விலக்கப்பட வேண்டியவர்கள்.
23:10-14 : பாளையத் தூய்மை.
23:15-25 : பலவகைச் சட்டங்கள்.
24:1-4 : ஒரே பெண்ணோடு மறுமணம் செய்யத்தடை.
25:5-25:4 : தாழ்த்தப்பட்ட இனத்தினர் சார்பாகச் சட்டங்கள்.
25:5-10 : லேவியர் திருமணச்சட்டம்.
25:11-19 : பலவகைச் சட்டங்கள்.
26:1-19 : முதற் பலன் காணிக்கை.

இப்பகுதி உபாகமத்தின் மையமாகும். இதுதான் யோசியாவின் காலத்தில் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட சட்டநூலாக இருக்கலாம். இது சமயவழிபாடு, நாட்டின் சமய நிறுவனங்கள், குடும்பவாழ்வு, தனிப்

பட்டோரது ஒழுக்க வாழ்வு முதலியவை பற்றிய சட்டங்களைக் கொண்டுள்ளது. இப்பகுதிக்கு *26:16-19* தகுந்த முடிவுரையாக அமைகிறது. இறைவனுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள நெருங்கிய ஆள்தன்மையான உறவே உடன்படிக்கையின் சாரமாகும். இவ்வுறவே, சட்டத்திற்கும் அதன் விதிகளுக்கும் அளிக்கப்படும் கீழ்ப்படிதலுக்கு அடிப்படையாகும்; தூண்டுகோலாகும்; காரணமாகும். நடையும், போக்கும், தொனியும் இப்பகுதி உடன்படிக்கை புதுப்பிக்கப்படும் சடங்கின் ஒரு பகுதியுமாகும் என்று கட்ட வல்லன.

ஈ) உபாகமச் சட்டத்தின் முடிவுரை மோசேயின் அறவுரை (27:1-28:68).

27:1-15	: நினைவுத்தூண்.
27:16-55	: சாபங்கள்.
28:1-68	: கீழ்ப்படிதலின் நலன்கள், ஆசீர்களும் சாபங்களும்.

சட்டத்திற்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்று இஸ்ராயேலின் பெரியோர்கள் சூழ, மோசே மக்களுக்கு அறவுரை கூறுகிறார். யாவேக்குக் கீழ்ப்படிவோர் ஆசீர் பெறுவர்; கீழ்ப்படியாதவர்கள் சாபம் பெறுவர்.

உ) மோசேயின் மூன்றாம் அறவுரை (29:1-30:20).

29:1-15	: மோவாபில் இஸ்ராயேலர் - இறைவன் உடன் படிக்கை.
29:16-55	: சிலை வழிபாட்டுக்கு எதிராக எச்சரிக்கை. பிரமாணிக்கமின்மைக்குத் தண்டனை.
30:1-10	: மனந்திரும்புவோருக்கு இரக்கம்.
30:11-14	: இறைக்கட்டளை தெளிவாகவுள்ளது.
30:15-20	: இஸ்ராயேலின்முன் தேர்வு; வாழ்வு - சாவு; நன்மை -தீமை.

இப்பகுதி இரண்டாம் அறவுரைக்கு ஒரு பிற்சேர்க்கையாகும். உடன்படிக்கையை மனமுவந்து ஏற்று அதைக்கடைப்பிடிக்க வேண்டும் என்று மக்களுக்குக் கூறப்படும் அறவுரையாகும். சட்டத்தின் உடன்படிக்கைத் தன்மை அழுத்திக் கூறப்படுகிறது. உடன்படிக்கை புதுப்பித்தல் சடங்கு இவ்வறவுரைக்கு வாய்ப்பாகவும் பின்னிலையாகவும் அமைகிறது.

ஊ) முடிவுரை: மோசேயின் இறுதிநாட்கள் (31:1-34:12).

31:1-8	: யோசுவா தலைவராக நியமனம் பெறுதல்.
31:9-13	: சட்டம் வாசிக்கப்படுதல்.
31:14-15	: மோசேயும் யோசுவாவும் இறைவன் திருமுன்.
31:16-22	: மோசேயின் பாடலுக்கு முன்னுரை.
31:23	: யோசுவாவுக்குக் கட்டளை.
31:24-29	: சட்டம் வாசிக்கப்படுதல்.
31:30-32:44	: மோசேயின் பாடல்.
32:45-52	: மோசேயின் பாடலுக்கும் சட்டத்திற்கும் முடிவுரை.
33:1-29	: மோசே ஒவ்வோர் இனத்தவரையும் ஆசீர்வதித்தல்.
34:1-12	: மோசேயின் இறப்பு -யோசுவா தலைமை ஏற்றல்.

மோசேயின் பாடல் இஸ்ராயேல் வரலாறு பற்றிய உள்ளக்கிளர்ச்சியூட்டும் இறையியல் விளக்கமாகும். இது நீதிபதிகளின் காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம்; இறைவன் இஸ்ராயேல்பால் நடந்து கொண்ட விதத்திற்குக் காரணம் காட்டி விளக்குகிறது. இறுதியில் இறைவன் இஸ்ராயேலின் எதிரிகள்மீது வெற்றிகொள்வார் என்று அறிவிக்கப்படுகிறது. இறுதி அதிகாரம் குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. அதில் யாவே, எலோகீம், குருக்கள், உபாகமப் பாரம்பரியங்கள் கலந்திருக்கின்றன. இஃது எண்ணாகமத்திற்குத் தகுந்த முடிவுரையாக அமைந்திருக்கலாம். ஆனால் நாம் கொண்டிருக்கும் வடிவில் இது

யோசுவா ஆகமத்திற்கு முன்னுரையாகவும் அமைகிறது. உபாகமம் மோசேயைப் போற்றுவதோடு முடிகிறது. அவர் இறைவனது அன்பர் ஆவார்; மக்களின் தலைவர் ஆவார்; மிகப் பெரிய இறைவாக்கினர் ஆவார்.

V. சிறப்புக்கருத்துக்கள்

1) உபாகமமும் யாத்திரையாகமமும்: உபாகமம் நீண்ட சட்டத்தொகுப்பையும் சட்டம் பற்றிய அறவுரைகளையும் கொண்டுள்ளது. ''சட்டத்தின் நகல்'' என்ற பொருளுள்ள எபிரேயச் சொற்களைத் தவறாக மொழிபெயர்த்து இந்நூலை ''இரண்டாம் சட்டம்'' என்று எழுபதுநூல் அழைத்தது என்று கூறினோம். இந்நூல் யாத்திரையாகமத்தோடு கொண்டுள்ள அமைப்பு ஒற்றுமையை நோக்கும்போது இப்பெயர் சரியானதென்றே நினைக்கச் செய்கிறது.

யாத்திரையாகமம்

1-18:	: எகிப்திலிருந்து சீனாய்க்குப் பயணம்.
19:1-20:21	: உடன்படிக்கையும் பத்துக் கற்பனையும்.
20:22-23:33	: உடன்படிக்கை நூல்.
24.	: முடிவுரை.
32-34	: ஆரோனின் பதிதம். மோசேயின் பரிந்துரை. மன்றாட்டு. உடன்படிக்கை புதுப்பிக்கப் படுதல்.

உபாகமம்

1:1-4:43	: சீனாயிலிருந்து மோவாபுக்குப் பயணம்.
4:44-5:22	: உடன்படிக்கையும் பத்துக் கற்பனையும்.
12-26	: உபாகமச் சட்டநூல்.
27-28	: முடிவுரை.
9:7-10:5	: ஆரோனின் பதிதம். மோசேயின் பரிந்துரை. மன்றாட்டு. பத்துக்கற்பனை மீண்டும் எழுதப்படுதல்.

இருநூல்களுக்குமிடையே தெளிவான, வெளிப்படையான வேறுபாடுகள் உள. யாத்திரை ஆகமத்தில் இறைவனது பேச்சு ஆதிக்கம் செலுத்துகிறது; யாவே பேசுகிறார். அதை மோசே மக்களுக்கு எடுத்துக் கூறுகிறார். மாறாக உபாகமத்தில் பொதுமக்களுக்கு மோசே அளிக்கும் பொது அறிவுரைகள் ஆதிக்கம் செலுத்துகின்றன *(1:1; 4:44; 5:1; 27:1; 29:1; 31:1-30; 33:1). 9:7-10:5;* அதி. *27* ஆகிய பகுதிகளில் சில மாற்றிவைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இரண்டு நூல்களுக்கும் உள்ள அடிப்படை ஒற்றுமை ஒரு பொதுத்திட்ட அமைப்பை அளிக்கிறது. உடன்படிக்கையும் அது வழிபாட்டுச் சூழ்நிலையில் புதுப்பிக்கப்படுதலும் இந்நூல்களில் உள்ள அடிப்படை ஒற்றுமையாகும்.

உபாகமநூலின் அமைப்புப்பற்றி நினைக்கும்போது, அதன் பொருத்தமுடைய முன்னுரையும் முடிவுரையும் நமது கவனத்தையும் ஈர்க்கத்தவறா. இந்நூலின் சட்டங்கள் மோசேயின் அறவுரைப் பணித்திட்டத்துள் புகுத்தப்பட்டு மோசேயின் மேலாண்மை பெற்ற நூலாகத் திகழ்கிறது.

2) இறையியல்: சட்டம்பற்றிய அறவுரைகளைப் பெரும் பகுதியாகக் கொண்ட இந்நூல் பழைய ஏற்பாட்டிலேயே இறையியல் மிக்கதாகும். இவ்விறையியலின் மையமும் அடிப்படையும் இஸ்ராயேலுக்கும் இறைவனுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையாகும்.

யாவே இஸ்ராயேலின் ஒரே இறைவன். அவர் அருளும் ஆற்றலும் மிக்கவர். ஒரே இறைவன் கோட்பாடு ''ஆண்டவரே கடவுள் அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை'' *(4:35)* என்ற உரையில் தெளிவாகத் தரப்படுகிறது.

இறைவன் இஸ்ராயேலைத் தன்னுரிமையாக, அன்போடு தேர்ந்தெடுக்கிறார். அவர்களை எகிப்திலிருந்து விடுதலைசெய்து, பாலைவழியாக இட்டுச்சென்று, விரைவில் கானானை உரிமைச் சொத்தாக அவர்களுக்கு அளிக்கவிருக்கிறார். இதனை உடன்

படிக்கை வெளிப்படுத்துகிறது (உப 7:8; 28:6). இவ்விதம் இறைவன் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்தலுக்கு அவர்களின் எண்ணிக்கையோ, தகுதியோ காரணமன்று; அவர்கள் பால் அவர் கொண்ட அருள்நிறைந்த அன்பே காரணமாகும். இக்கருத்து பல உரைகளில் காணப்படுகின்றது (7:6-8; 4:37; 10:15). சட்டம், இந்தத் தேர்தலுக்கு இஸ்ராயேல் அளிக்கும் அன்புமிக்க பதிலாகும் (6:5-9; 11:1; 19:9). சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் இறைவனுக்கு இஸ்ராயேல் அன்புச்சேவை செய்கிறது. அப்பணிக்குப் பரிசாக நலமும் வளர்ச்சியும் செழிப்பும் இறை ஆசீர்களும் உறுதியாக இஸ்ராயேலை வந்தடைகின்றன (11:26-38; 28:15-69). மாறாக, கீழ்ப்படியாமை தண்டனையையே அளிக்கும். கீழ்ப்படியாமை, தண்டனை, மன்றாட்டு, விடுதலை ஆகிய நான்கு சொற்களும் அடிக்கடி உபாகமத்தில் காணப்படுகின்றன; வரலாறு பற்றிய உபாகமத்தீர்ப்புக்கு அடிப்படையாகின்றன. இதை நீதி 2:11-19 என்ற பகுதி சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது.

உபாகமம் உடன்படிக்கையையும் அதன் அடிப்படையில் வாழும் வாழ்வையும் பற்றிய நிறைவான முதிர்ந்த கருத்துக்களைத் தருகின்றது. இந்த உடன்படிக்கைச் சமூகத்தினரிடமிருந்து கோரப்படும் ஒழுக்கத்தை, மேற்கூறப்பட்ட இறையியலுக்கேற்ப நாம் அறிய முயல வேண்டும். உடன்படிக்கையில் இறைவன் தாம் தெரிந்து கொண்ட மக்களுக்குத் தம்மையே வெளிப்படுத்துகிறார்; தம்மையே அவர்களுக்கு அளிக்கிறார். அதற்கு மனிதன் இறைவனுக்கு அளிக்கும் பதில் சட்டத்தைக் கடைப்பிடிக்கும் ஒழுக்க வாழ்வாகும். இது தூய்மைபெற்ற சமயச் சடங்கிலும், உயர்ந்த சமூக ஒழுக்க வாழ்விலும் அடங்கும். இறைவனுக்குப் பயப்பட வேண்டும் என்று உபாகமம் அடிக்கடி கற்பிக்கிறது. இப்பயம், கிலியாலோ திகிலாலோ ஏற்படுவதன்று; தங்களுக்கு இறைவன் செய்தவற்றிற்குக் காட்டும் அன்பின், நன்றியின் விளைவாக, இறைவன் ஆற்றல்முன் எழும் பணிவு மிக்க மரியாதையாகும். இதன் அடிப்படைப்போக்கு இறையன்பு பற்றிய மிகப் பெரிய கட்டளையில் வெளிப்படுகிறது (6:4-9). இதிலிருந்து, யூதர்கள் நாள்தோறும் இருமுறை சொல்லும் ''சேமா''வின் உன்னதவாசகம் உருவெடுக்கிறது, இக்கட்டளையைப் பெரியதும் முதலாவதுமான கற்பனை என்று இயேசு கூறுகிறார்.

இஸ்ராயேலர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்; புனித மக்கள்; அவருடைய மரபுரிமைச் சொத்தாவர் (4:20); அவருக்கே உரிய உடைமையாவர் (7:6; 14:2); அவருக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட மக்களாவர். இதை அவர்கள் ஒரு போதும் மறந்து விடக்கூடாது. ஆகையால் பிறமக்களின் சமயப் பழக்கவழக்கங்களிலிருந்து இஸ்ராயேல் பிரிந்திருக்க வேண்டும் என்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது (7:25; 12:29-31; 18:9; 20:16-18). பிறமக்களின் தூய்மையற்ற சடங்குகளால் கறைபடுதலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். இதற்காக வழிபாட்டை மையப்படுத்தலில் அக்கறை செலுத்தப்படுகிறது.

இஸ்ராயேலர்களுக்கு அளிக்கப்படவிருக்கும் நாட்டில் வாழ்வோரை இறைவன் அழித்து விடுவார் என்ற உறுதிமொழி அழுத்திக் கூறப்படுகிறது. இந்தப் ''பரிசுத்தப் போர்'' என்ற கருத்தில் யாவேயே போரிட்டு எதிரிகளை அழிப்பார் என்று இஸ்ராயேலர் கருதினர். போர்வீரர்கள் இறைவனுக்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். போர்வீரர்களின் எண்ணிக்கை தலையாயதன்று. ஏனெனில் இப்போரில் இறைவனே தானைத்தலைவர். இப் ''புனிதப்போரின்'' கொள்கை 7:16-26; 9:1-5; 31:3-8 ஆகிய பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்போர் பற்றிய ஒழுங்குகளை 25;26;27-ஆம் அதிகாரங்களில் காணலாம். இப்போது இஸ்ராயேலர் பிறமதப் பழக்கங்களிலிருந்து காக்கப்படுதலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இறையியல் அடிப்படையில், உபாகமத்தில் வரும் சட்டங்களையும், ஒழுங்குகளையும் புரிந்து கொள்ள வேண்டும். சமயக்கடமைகள், ஒழுக்கக் கடமைகள், சமூகக் கடமைகள் ஆகியவைப் பற்றிய பல காரியங்களை இச்சட்டங்கள் ஒழுங்குபடுத்துகின்றன. தசம பாகத்தையும், மற்றக் காணிக்கைகளையும் செலுத்தியும், 16-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்படும் முப்பெரும் விழாக்களைக் கொண்டாடியும், தூய கருத்துடைய முறையான புனித வழிபாட்டுச் சடங்குகளாலும் இஸ்ராயேலர் இறைவனை வழிபட வேண்டும். நீதிமன்றங்களில் நீதியைக் கடைப்பிடிப்பதாலும், வணிகத்தில் நேர்மையைக் கடைப்பிடிப்பதாலும், நல்ல குடும்ப வாழ்வாலும் இறைவனை வழிபட வேண்டும். அந்நியரிடமும், சமூகத்தில் அவப்பெயருடையவர்களிடமும் சலுகை குறைந்தவர்களிடமும் மக்கள் தாராளமாயும் அன்பாயுமிருக்க வேண்டும் என்பது அடிக்கடி எடுத்துக் கூறப்படுகிறது (1:16; 10:19; 24:4; 27:19). இவற்றில் ஆமோஸ், ஓசே போன்றவர்களின் போதகம் எதிரொலிக்கிறது. ஆனால் சிலை வழிப்பாட்டையுடைய கானானியர்கள் அடியோடு அழிக்கப்பட வேண்டும். பதிதர்களுக்கு அடைக்கலம் அளிக்கும் நகரங்களும் ஆள், பொருளோடு முழுவதும் அழிக்கப்பட வேண்டும் (13:6). இவற்றில் சமயப்பற்று, நாட்டுரிமைப் பற்று ஆகிய உணர்ச்சிகள் சிறப்பிக்கப் படுகின்றன (31-32). பழி வாங்குதல் பற்றிய படிப்பினையிலும் நாட்டின் ஒற்றுமையே சிறப்பிக்கப்படுகிறது.

நாட்டின் வருங்கால வளர்ச்சியும் செழிப்பும் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதைப் பொறுத்திருப்பதால் (5:26; 11:21) பெற்றோர் குழந்தைகளுக்குச் சட்டத்தைக் கற்பிக்க வேண்டும் என்று (6:2-7; 11;29; 31:13) இந்நூலில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப் படுகிறது.

உபாகமத்தின் செய்தியைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம். அன்பும் நேர்மையும் சேர்ந்து செயல்படுகின்றன. இறைவனை அன்பு செய்வது, தன் அயலானை அன்பு செய்து நீதியோடும் நேர்மையோடும் நடத்தலாகும். இறைவன் ஒருவரே. அவரே உயிருள்ள இறைவன். அவர் கற்களால் அல்லது மரத்தால் செய்யப்பட்ட சிலை அல்லர். அவர் பொறா உள்ளம் படைத்தவர். அவரின் மக்கள் அவரிடமிருந்து விலகிச்செல்லும்போது, அவர் வாளா இருக்கமாட்டார். அவர் அன்புடையவர்; தம் மக்கள் மீது வியத்தகுமுறையில் அருளிரக்கம் காட்டுபவர். மக்களும் அவரது ஆற்றலையும் உன்னதத்தையும் ஏற்று அவருக்கு அஞ்சி மரியாதை செலுத்த வேண்டும்; வணக்கம் செலுத்த வேண்டும்; அன்பு செய்ய வேண்டும்; அவருக்கு ஆழ்ந்த, ஆள்தன்மையான பற்றுதலையும் முழுமையான பிரமாணிக்கத்தையும் அளிக்க வேண்டும்.

உபாகமம், யாத்திரை நிகழ்ச்சிகள் பற்றிய ''இறையூக்கம் பெற்ற விளக்கவுரை'' எனலாம். இது அந்நிகழ்ச்சிகளின் பொருளைக் காட்டுகிறது. யூதர்கள் இவ்வகை இலக்கியத்தைப் புரிந்து கொண்டபடி இது வரலாற்று இலக்கியத்தின் மிகத் தூய்மையான வடிவமாகும் என்று கூறலாம். வெறுமனே நிகழ்ச்சிகளையும் நாட்குறிப்புகளையும் தரும் வரலாற்று இலக்கியத்தில் யூதர்கள் அக்கறை கொள்ளவில்லை. அவர்களுக்கு வரலாற்று இலக்கியம் நிகழ்ச்சிகளின் பொருளை விளக்க வல்லதாக இருக்க வேண்டும். இதை நாம் வரலாறு பற்றிய இறையியல் என்போம் (உப 4:1-40).

3) சட்டம்: இந்நூலில் வரும் சட்டங்களில் பெரும்பாலானவை, பழம் மேற்காசியாவிற்குப் பொதுவான சட்டங்களைச் சார்ந்தனவாகும். விவிலிய ஆசிரியர்கள் அவற்றை ஏற்று அவற்றின் தொனியை உயர்த்தி, ஆன்மீகப் பண்பளித்து, அக்கால மற்றச் சட்டத்தொகுப்புகளுக்கு மேலானதாக இந்நூலை அமைத்தனர். அதன் நீதி பற்றிய கருத்து, நமக்குக் கொடுமையானதாகத் தோன்றலாம். ஆனால் அக்கால மரபோடு ஒப்பிடும் போது, இக்கருத்து இரக்கமிக்க

தாகும். எபிரேயச் சட்டத்தின் ஒரு சிறப்பான பண்பு எளியோருக்கும், பாதுகாப்பு அற்றோருக்கும், விதவைகளுக்கும், அநாதைகளுக்கும் அது காட்டும் அக்கறையாகும். பெண்களின் மேன்மை அதில் அழுத்திக் கூறப்படுகிறது.

உடன்படிக்கை ஊக்கம் பெற்ற இச்சட்டத் தொகுப்பு அதிகாரத்தோடு மக்கள் மேல் சுமத்தப்படவில்லை. யாத்திரை யாகமத்தில் காணப்படுவதுபோல் நேரடிக் கட்டளைகள் இந்நூலில் இல்லை எனலாம். மாறாக, நாட்டின் நலனுக்காகவும் அவர்களின் சொந்த நன்மைக்காகவும் அவர்கள் சட்டத்திற்குப் பணிய வேண்டும் என்று அவர்களைத் தூண்டுகிறது; இணங்கச் செய்கிறது. அஃது உன் வாயிலும் உன் இதயத்திலும் உள்ளது *(30:11.14)*.

4) மோசேயின் இறுதி நாட்கள் - இறப்பு: தனது இறப்புக்குமுன் யாக்கோபு தன் மக்களை ஆசீர்வதித்ததுபோல் மோசே பன்னிரு குலத்தவரையும் ஆசீர்வதிக்கிறார். மோசேயின் பாட்லையும் ஆசீர்களையும், நாம் கொண்டிருக்கும் வடிவில், பிற்காலக் கவி எழுதியிருக்கலாம். மோசே எழுதியதாகக் கருதப்படும் ஐந்நூலுக்கும் அதன் வரலாற்று இறையியலுக்கும் தகுதியான முடிவுரையாக இவை அமைகின்றன.

பன்னிரு குலத்தவரையும் உடன்படிக்கை இறைவனின் ஒரே மக்களாக்கி அவர்களை இறைவன் உறுதிமொழி அளித்த நாட்டிற்கு இட்டுச் செல்லும் மாபெரும் அலுவல் மோசேக்கு அளிக்கப்பட்டது. ஆனால் இப்பெரும் அலுவலை நிறைவேற்ற மோசேயால் முடியவில்லை. இறைவன் காட்ட, நெபோ மலையின் பிஸ்கா கொடுமுடியிலிருந்து, மோசே கானானைக் காண்கிறார் *(உப 34)*. கானானில் கால் வைக்காமலே, யோர்தானுக்குக் கிழக்கிலே இறந்து போகிறார். இறைவனே அவரை அடக்கம் செய்கிறார். அவரை அடக்கம் செய்த இடத்தை ஒருவரும் அறியார். இவ்வாறு வாழ்நாள் எல்லாம் அந்நிய நாட்டிலே வாழ்ந்த ஒரு பெரும் வாழ்வு அந்நிய நாட்டிலேயே முடிகிறது.

ஆனால் மோசேயைப் போன்ற ஒரு தலைவரை உலக வரலாற்றில் காண்பது அரிது. நாடோடி மக்களான பன்னிரண்டு குலத்தவரை ஒரு நாட்டினராக, ஓர் இனமாக அமைத்த பெருமையுடையவர். பழங்கால மேற்காசிய சீர்திருத்தவாதிகளைப் போலச் சட்டம் அளிப்பதிலும் பெயர் பெற்றவர். இச்சட்டம் பல நூற்றாண்டுகளுக்கு மக்களின் வாழ்க்கை இலயத்தை வரையறுக்க வல்லது; வரையறுத்து வருகிறது. மோசே ஓர் இறைவாக்கினர் என்பதே அவருக்குப் பெருமை தருவதாகும். இறைவன், யாவே என்ற தமது சொந்தப் பெயரை மோசேக்கு வெளிப்படுத்தினார். மோசே, இறைவனோடு நண்பனைப்போல் நேருக்கு நேர் பேசும் பேறும் சலுகையும் பெற்றவர். இறைவனின் கட்டளையை ஏற்று அவருக்கும் மக்களுக்குமிடையே ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தியவர். மோசேயின் உண்மையான பெருமையும் மகிமையும் அரசியலில் அன்று, நாட்டுக் காரியங்களில் அன்று, சட்டக் காரியங்களில் அன்று, மறையைச் சார்ந்த காரியங்களில் அடங்கியிருக்கிறது. அவர் இன மரபு வரலாறு கடந்த ஒரு மாபெரும் சமயத் தலைவராவார். இறைவனின் புனிதத்திற்குள்ளே நுழைகிறார். எக்காலத்துக்கும் எக்கால மக்களுக்கும் உரியவர். மீட்பு வரலாற்றில் அவர் ஒரு திட்டம் செய்யப்பட்ட கட்டமாவார். அதே சமயம் வரவிருக்கும் மாபெரும் உறுதி மொழியின் ஓர் ஒப்பற்ற அடையாளமும் ஆவார். ''என் கடவுளாகிய ஆண்டவர் உன் இனத்தினின்றும் உன் சகோதரர்களிடத்தினின்றும் என்னைப் போல இறைவாக்கினரை உனக்காக ஏற்படுத்துவார். நீ அவருக்குச் செவி கொடுப்பாயாக'' *(உப 18:15)*.

VI உபாகமமும் புதிய ஏற்பாடும்: உபாகமத்தைப் போல் எந்தப் பழைய ஏற்பாட்டு நூலும் புதிய ஏற்பாட்டில் அவ்வளவு எடுத்துக் காட்டப்படவோ, சுட்டிக்காட்டப்படவோ இல்லை எனலாம். புதிய ஏற்பாட்

டில் உபாகமம் ஏறத்தாழ 32 தடவை எடுத்துக் கூறப்படுகிறது; 112 முறைகள் சுட்டிக் காட்டப்படுகிறது. மத்தேயுவிலும் எபிரேய ருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலும் இந் நூலின் செல்வாக்கும் ஆதிக்கமும் மிகுந்துள் ளது எனலாம். இயேசுவின் தூதை இந்நூல் ஒளிபெறச் செய்கிறது. ''சோதனைக்காட்சி'' யில் மும்முறை இந்நூலிலிருந்து எடுத்துக் கூறி (உப 8:3; 6:16; 6:13) இயேசு சாத்தானுக்குப் பதிலிறுக்கிறார் (மத் 4:4-10). முதலாவது பெரும் கட்டளை உப 6:5- இலிருந்து எடுத்துக் கூறப்படுகிறது (மத் 22:37; மாற் 12:29-30). இயேசு, உப 18:15-இல் வரும் மோசேயைப் போன்ற இறைவாக்கின ராகக் காட்டப் பெறுகிறார் (யோவா 1:21; அ.ப. 3:22; எபி 3:1-11). பின்வரும் ஒப்பியல் உபாகமத்தின் சிறப்பை எடுத்துக் காட்டும். உபாகமத்தையும் இயேசுவின் இறுதியுரையையும் சிறிது விரிவாக ஒப்பிட விரும்புகிறோம்.

உபாகமம் ஒரு மாபெரும் பிரியாவிடை அறவுரையாகும். இவ்வுரை, யோவான் நற்செய்தியில் வரும் இயேசுவின் இறுதி உரைக்கு ஒரு முன் எடுத்துக்காட்டாக அமைகிறது. இரு உரைகளையும் அமைக் கும் சூழ்நிலைகள் ஒத்திருக்கின்றன. 1) இரண்டும் பிரியாவிடை அறவுரைகளாகும். யாரை அன்பு செய்தார்களோ, யாருக்கு வழிகாட்டினரோ, அவர்களிடமிருந்து பிரிய விருக்கும் தலைவர்கள் இறுதி உரை ஆற்றுகின்றனர் 2) தங்கள் தலைவர்களை இழக்கவிருக்கும் இரு குழுவினரின் எதிர் கால நிலையும் ஒத்துள்ளது. இஸ்ராயேலர் கானானில் குடியேறி, யாவேயின் தேர்ந் தெடுக்கப்பட்ட மக்களாகத் தங்களை அமைத் துக் கொள்ள விருக்கின்றனர். இயேசுவின் சீடர்கள் அவருடைய நிலையான சமூகமாக மாறவிருக்கின்றனர். 3) இரு குழுவினருக் கும், தங்கள் எதிரிகளுக்கு மாறாகத் தொடங்கவிருக்கும் போராட்டத்தில் ஆறுத லும் உற்சாகமும் தேவையாகின்றன. 4) தங் கள் சமூக அமைப்பின் அடிப்படையாக, தங்களுக்குள்ளே நடந்து கொள்ளும் முறை பற்றியும், எதிரிகளோடு நடந்து கொள்ளும் முறை பற்றியும், இரு குழுவினருக்கும் படிப்பினையும், எச்சரிக்கையும் தேவை யாகின்றன. இப்புற ஒற்றுமையைவிட, உள்ளார்ந்த கருத்து ஒற்றுமையில் மிகுந்த நெருக்கம் உள்ளது.

VII. முடிவுரை: இறைவன் இஸ்ராயேலை அழைத்தார். அதில் முதல் பகுதி மோசேயை அழைத்ததாகும். மோசேயை இறைவன் முதலில் எவ்விடத்தில் அழைத் தாரோ, அங்கேயே இஸ்ராயேலர் இறைவ னோடு உடன்படிக்கை செய்து கொள்ளு கின்றனர். அடிமைத் துன்பத்திலிருந்து ஓர் இனமக்களை விடுதலைக்கும் வாக்குறுதி அளிக்கப்பட்ட நாட்டிற்கும் இட்டுச் செல்லு தல் மோசேயின் சிறப்பான அலுவலாகும். ஆனால் எல்லா மக்களுக்கும் மீட்பின் கால்வாயாய் இருப்பது இஸ்ராயேலின் சிறப்பு அலுவலாகும். இவ்வலுவல் சீனாய் உடன்படிக்கையில் எடுத்துக்கூறப்படுகிறது. இவ்வலுவலும், இவ்வுடன்படிக்கையும் எவ்வாறு சட்டத்தில் செயல்படுகிறது என்று நாம் புரிந்துகொள்ள முயல வேண் டும். மக்களின் வாழ்விலும், தனிப்பட்டோ ரின் வாழ்விலும் சட்டம் எவ்விடம் வகிக் கிறது, எப்படிச் செயல்படுகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். சட்டம் ஒரு வாழ்க்கை வழியாகும். அதைக் கவனமாய்க் கடைப்பிடித்தல் இறைவனுடைய அரு ளைப் பெற்றுத்தரும். இதை உபாகமம் எடுத்துக் காட்டுகிறது. இது நற்செய்தியில், கிறிஸ்துவில் நிறைவெய்துகிறது.

துணையாளர், பரிந்துரைப்பவர் (PARACLETE)

இச்சொல்லைக் குறிக்கும் ''பாராக்லே டோஸ்'' என்ற கிரேக்கச் சொல்லானது யோவானின் இலக்கியச் சொற்றொகுதி யைச் சேர்ந்ததாகும். இச்சொல் ஒருபொரு ளின் இயல்பைவிட அதன் செயல்முறை யினைக் குறிப்பிடுகிறது. ''சார்பாகப்பேச அழைக்கப்பட்டவர்'', துணையாளர், பரிந்து பேசுபவர், மற்றும் ஆதரவாளர் என்று பலவாறு இச்சொல்லுக்குப் பொருள் கூறலாம். இவர் தனது செயலைச் சுறுசுறுப்

பாக நிறைவேற்றுபவர். (போலிச் சொல்லிணக்க முறையில் பெறப்படும் ஆறுதல் அளிப்பவர், தேற்றுகிறவர் என்ற பொருள்களுக்குப் புதிய ஏற்பாடு சான்று அளிக்கவில்லை). விண்ணகத்தில் நமது சார்பாக, தந்தையுடன்பரிந்து பேசுபவராக உள்ள இயேசு கிறிஸ்து இந்த அலுவலை ஏற்றுப் பாவிகளின் சார்பாகப் பரிந்து பேசுகிறார் (1 யோவா 2:1). இந்த அலுவலை, இயேசுவின் பிரசன்னத்தை உண்மையாக்குகிற தூய ஆவியானவரும் கொண்டிருக்கிறார். ஏனெனில் அவர் இவ்வுலகில் விசுவாசிகளுக்கு இயேசுவை வெளிப்படுத்துபவராகவும், காப்பாளராகவும் உள்ளார் (யோவா 14:16-17.26-27; 15:26-27; 16:7-11.13தொ).

1. தூய ஆவி, இயேசுவின் பிரசன்னம்: துணையாளரின் வருகையானது, மனிதரிடையிலான இறைவனுடைய பிரசன்னத்தின் வரலாற்றில் ஒரு புதிய நிலையைக் குறிக்கின்ற இயேசுவின் பிரிவுடன் இணைக்கப்படுகின்றது (யோவா 16:7). இறுதி இராவுணவிற்குப் பிற்பட்ட போதனையில், காலத்தின் இறுதியில் மட்டுமின்றி (14:3) உயிர்த்தபின் அளிக்கவிருக்கும் காட்சிகளிலும் தாம் வருவதாக (14:18 தொ;16: 16-19) இயேசு அறிவிக்கிறார். உயிர்த்தவரின் காட்சியானது சீடரை மகிழ்ச்சியில் மூழ்கடிக்கிறது (16:22). ஆயினும், அவரைப் பின் செல்பவர்களிடையிலான அவரது பிரசன்னமானது இனிப் புலன்களால் உணரக்கூடிய இயல்பினதாக இல்லாமல் ஆன்மீக இயல்பினதாக இருக்கும். அச்சமயம்வரை அவரைப் பின்பற்றியவர்களிடையே அவர் தங்கியிருந்தார் (14:25). இப்போது அவரது பெயரில் (14:26), இயேசுவே அனுப்பவிருக்கின்ற (15:26; 16:7) மற்றொரு துணையாளரை அவரது செபத்தால், தந்தை அவர்களுக்கு அளிப்பார் (14:16). இயேசுவிற்கு வேறுபட்டவராக இருந்தாலும், ஆவியானவர் இயேசுவின் பிரசன்னத்தை முழுமைக்குக் கொண்டு வருகிறார். இயேசுவைப் போன்று, அவர் அவர்களில் உள்ளார் (14:17; 17:23); இயேசுவைப் போன்று, அவர் விசுவாசிகளுடன் தங்குகிறார் (14:17.25). ஆனால், தந்தையின் உறைவிடத்தில் இயேசு தயாரிப்பதற்கெனச் சென்றுள்ள இடங்களை இவர் முன்னறிவிப்பதால் (14:2-3), இப்பிரசன்னம் முடிவுற்றதாக உள்ளது (14:16; மத் 28:20). இவரே உண்மையின் ஆவி (யோவா 14:17; 16:13); பொய்களின் தந்தைக்கு எதிராக (8:44) இயேசு உள்ள உண்மையின் ஆவி (14:16); இனித் தந்தையின் வழிபாட்டைச் சிறப்பிக்கின்ற உண்மையின் ஆவி (4:23-24). தூயவராகிய இயேசு (6:69) தனது திருநிலைப்பாட்டின் மூலம் (17:19) அவர்களுக்கு அளிப்பதற்கென வெகுமதியாகப் பெற்ற (20:22; 7:39) தூய ஆவி இவரே (14:26). இவர் அவர்களைத் திருநிலைப்படுத்துவதன் மூலம் (17:17) இவ்வுலகைச் சாராதவர்களாக்குகிறார் (17:16). தன்னை வெறுக்கின்ற உலகிற்கு (7:7; 15:18-19) இயேசு தன்னை வெளிப்படுத்தாதது போன்று (14:21-22), ஆவியானவரும் உலகினால் வரவேற்கப்படவில்லை (14:17).

2. உண்மையின் ஆவி, திருச்சபையின் உயிருள்ள நினைவு: சீடர்களின் சமுதாயத்தில் துணையாளர் செயல்திறன் மிக்க பிரசன்னத்தைக் கொண்டுள்ளார். அவர் இயேசுவை மகிமைப்படுத்த வேண்டும் (16:14). முதலாவதாக அவரது படிப்பினையை மெய்யாக்க வேண்டும். ''அவர் உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார்; நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் நினைவூட்டுவார்'' (14:20). இயேசு எப்போதும் தந்தையுடன் இணைந்து தனது பணியை நிறைவேற்றியதுபோன்று, இந்த அறிவுறுத்தலும் நினைவூட்டலும் இயேசுவுடனான நெருங்கிய இணைப்பில் நிறைவேற்றப்படுகின்றன. தந்தையின் கொடைகளை இயேசு பகிர்ந்தளிப்பது போன்று (16:15; 17:10), ஆவியானவர் ''எனக்குள்ளதிலிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார்'' (16:14-15). இயேசு கூறியவற்றையெல்லாம் நினைவிற்குக் கொண்டு வருவார். ஏனெனில் ''அவர் தன்னைப்பற்றிப் பேசமாட்டார்; ஆனால், தான் கேட்பது அனைத்தையும் அவர் பேசுவார்''. இவ்வாறு இயேசு

அனைத்தையும் தனது தந்தையிடமிருந்தே பெற்றார் (5:30; 8:40; 15:15). மேலும் அவரது போதனை அவருடையதன்று (8:28; 12:49-50; 14:10). இயேசுவைக் காண்பது தந்தையைக் காண்பது போன்று (14:9), அபிடேகம் பெறுதல் அனைத்தைப்பற்றியும் கற்பிக்கின்றது (1 யோவா 2:27). அதாவது, ஆவியானவர் ''அனைத்து உண்மைக்கும்'' நடத்திச் செல்கிறார் (யோவா 16:13). உயிர்ப்பின் ஒளியில் அவர் பழைய நிகழ்ச்சிகளை மீண்டும் பிரசன்னப்படுத்துகிறார் (2:22; 7:39; 11:51-52; 12:16; 13:7). இதன் மூலமாக அவர் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்கிறார் (15:26). அவர் வழியாக, அவரோடு சாட்சியம் பகருமாறு அவர் சீடர்களுக்கும் ஆற்றல் அளிக்கிறார் (15:27).

3. **உண்மையின் ஆவி, இயேசுவின் காப்பாளர்:** தேற்றரவாளர் தவறுக்கு எதிரான ஓர் உண்மையை வெளிப்படுத்துவதோடு நில்லாமல், உலகினுடைய பொய்க்கு எதிரான உண்மையையும் எண்பிக்கிறார். அவரே உண்மையின் ஆவி. அவரது சீடர்களுக்கு நடுவில் இயேசுவிற்கு எதிராக உலகம் நடத்துகின்ற நடவடிக்கைகளில், அவர் கிறிஸ்துவுக்குச் சாட்சியம் பகர்கின்றார். ஒத்தமை நற்செய்திப் பாரம்பரியத்தில், அரசர்களுடைய விசாரணைக்குழுவிற்கு (மாற் 13:11) முன்னால் நிறுத்தப்பட்ட சீடர்களுக்கு ஆதரவாக அவர் இருந்தாலும் யோவானில் இயேசுவின் காப்பாளராக அவர் உள்ளார். தனது உலக வாழ்வில் இயேசு இருந்தது போன்று, குற்றஞ்சாட்டப்பட்டவர்களாயிருந்தாலும், சீடர்கள் தங்களது நடுவர்களுக்கே நடுவர்களாகின்றனர் (யோவா 5:19-47). துணையாளர் உலகினை மூன்று நிலைகளில் கண்டனம் செய்கிறார் (16:8-11): இயேசுவை பொறுத்தவரை விசுவாசமின்மை பாவம் என்பதால் பாவத்தைக் கண்டனம் செய்கிறார்; தனது தந்தையின் பணியில் மகிமைப்படுத்தப்பட்ட இயேசுவின் பக்கம் நீதி இருப்பதால், நீதிபற்றி உலகம் கொண்டுள்ள கருத்தைத் தவறானது எனக் காட்டுவார். இவ்வுலகின் தலைவனுக்கு எதிராகத் தண்டனைத் தீர்ப்பானது ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டதால் தீர்ப்பு என்ன என்று காட்டுவார். இவ்வாறு, விசுவாசி ஏற்றுச் செவிமடுக்கின்ற துணையாளரின் காரணமாக, அவனது இதயத்தில் ஓர் உறுதிப்பாடு நிலவுகிறது. உலகன்று, இயேசுவே நேர்மையானவர்; எனவே, அவனும் தனது தலைவரை விசுவசிப்பதும் அவருக்காகத் துன்புறுவதும் சரியே. அவருடன் சேர்ந்து அவன் ஏற்கனவே உலகையும் பேயையும் வென்றவனாக உள்ளான் (16:33).

துண்டு (TOWEL)

இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவிய பின்னர், துண்டு கொண்டு அவர்களது பாதங்களைத் துடைத்தார் (யோவா 13:4-5). இஃது ஓர் இழிவான செயலன்று; மாறாகத் தாழ்ச்சி நிறைந்த செயலாகும்.

துப்பும் எச்சில் (PURSLANE)

இச்சொல் ''சுவையற்றது உப்பின்றி உண்ணப்படுமா? துப்பும் எச்சிலில் சுவை இருக்குமா''? என்ற யோபுவின் கூற்றில் மட்டும் (யோபு 6:6) ஒரே ஒரு தரம் வருகிறது. இறைவன்முன் தன் இயலாமையும் தன் சொற்களின் பயனின்மையும் கூறுகிறார்.

துரு (RUST)

துரு என்ற சொல் விவிலியத்தில், உலோகங்களோடு சேர்த்தே சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக, 'துருப்பிடித்து வீணாதலைக்' குறிக்கும். இது பயிர்களுக்கு வரும் ஒரு நோயைப் போன்றது. பானையின் அல்லது கொப்பரையின் துரு, எருசலேமின் இழிவுக்கும், ஒழுக்கங்கெட்ட தனத்திற்கும் அடையாளமாகிறது. மீண்டும் மீண்டும் சூடுபடுத்தினாலும் ''அதன் திண்மையான துரு அகலவேயில்லை'' (எசே 24:1-13). புதிய ஏற்பாட்டில், விண்ணுலகில் செல்வத்தைச் சேமித்துவைக்கும்படி கூறும் சூழ்நிலையில் துரு என்ற சொல் பயன்படுகிறது (மத் 6:19-20). இதே கருத்தைப்பின்பற்றி யாக் 5:3 இவ்வுலகப் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன என்றும்,

இந்தத் துருவே பணக்காரர்களுக்கு எதிரான சாட்சியாகும் என்றும் கூறுகிறது.

துருசில்லா (DRUSILLA - பனியால் நீரூட்டப் பட்ட)

முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மூன்றாவதும் கடைசியுமான மகளும் 2-ஆம் ஏரோது அகிரிப்பாவின் சகோதரியும் (கி.பி. 38-79) ஆவாள். சிறிய ஆசியாவிலுள்ள கொம்மாசெனேயின் இளவரசனான எப்பிபானுக்கு இவளை மணம் முடிக்க இருந்தது. ஆனால் அவர் விருத்த சேதனம் பெற்று யூத மதத்தைத் தழுவ மறுத்ததால் இத்திருமணம் நடைபெறவில்லை. அவளது சகோதரன் அவளைச் சீரியாவில் எமேசா நகரின் அரசன் அசீசுக்கு மணம் செய்து வைத்தான்.

மணம் முடித்து ஓர் ஆண்டுக்குப்பின், இந்த அழகிய துருசில்லா அவளது கணவனை மணவிலக்குச் செய்து ஏற்கெனவே மணவிலக்குச் செய்த தன்னை மணக்குமாறு உரோமை ஆளுநன் பெலிக்சு விடுத்த காதலை ஏற்றுக்கொண்டாள். நாற்பத்திரண்டாம் வயதில், பெலிக்சுக்குப் பிறந்த மகன் அகிரிப்பாவோடு வெசுவியஸ் மலையின் தீப்பிழம்பில் மடிந்து போனாள் (கி.பி. 79).

பவுல் செசரியாவில் தங்கியதைப் பற்றிய விவரிப்பில் லூக்கா துருசில்லாவையும் பெலிக்சையும் குறிப்பிடுகிறார் (அ.ப. 24:24-27). அதிலே இவள் யூதப்பெண் என்று குறிப்பிடப்படுகிறாள். ''கிறிஸ்து இயேசுவின் மேல் கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தைக் குறித்து'' பவுல் பேச, துருசில்லாவும் பெலிக்சும் கேட்டனர் (24:24). ஒரு பாரம்பரியப்படி, இவள் தான் பவுலைப் பேச அழைக்கும்படி தூண்டியவள்.

துருத்திகள் (BELLOWS)

துருத்தி கண்டுபிடிக்கப்பட்டதையும், அதன் வளர்ச்சியையும் பல்வேறு நிலைகளில் விளக்கலாம். 1) மனித நுரையீரலில் இருந்து வரும் காற்று முதலில் தீயை ஊதப்பயன்படுத்தப்படுகிறது. 2) இரண்டாம் நிலையில், ஊதும் காற்றை ஒருமுகப் படுத்த மூங்கில், உலோகம் போன்றவற்றால் ஆன குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. 3) மூன்றாம் நிலையில் மனித நுரையீரல் காற்றைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, காற்றை ஊதுவதற்குக் குழாய்களோடு சேர்ந்த ஒரு சிறிய சாதனம் பயன்படுகிறது. இத்தகைய துருத்திகள் புதிய அரசின் காலம் வரை (கி.மு.1550) எகிப்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பெனிகாசான் எனுமிடத்தில் உள்ள ஒரு கல்லறையில் காணப்பட்ட ஓவியத்தில் ஒரு கழுதையின் முதுகில் இருக்கும் இரண்டு பொருட்கள், தற்காலத்தில் பயன்படுத்தப்படும் கைத்துருத்திகளைப் போன்றே உள்ளன. எகிப்தில் புதிய அரசின்காலத்தில் கால்களினால் இயக்கப்படக்கூடிய துருத்திகள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாகப் புதிய அரசில் இரட்டைத் துருத்திகள் பயன்பட்டனவாகத் தெரிகின்றன. துருத்திகள், மூங்கில், உலோகம் அல்லது களிமண்ணினாலான குழாய்களோடு இணைக்கப்பட்டு, நெருப்பு எரியும் இடத்தோடு இணைக்கப்பட்டிருக்கும். இரண்டு துருத்திகளையும், இயக்குபவர் ஒவ்வொரு காலாகத் தூக்கி அழுத்த, காற்று நெருப்பை எரியச்செய்யும், அழுத்தப்பட்ட துருத்தி மீண்டும் காற்றை உள்ளே ஏற்கும்படியாக ஒவ்வொரு துருத்தியையும் இழுத்துவிட கயிறுகள் இணைக்கப்பட்டிருக்கும்.

பெத்-செமேசு என்னுமிடத்தில் உலோகப் பொருட்கள் செய்யும் நிறுவனத்தோடு தொடர்புடைய களிமண்ணால் ஆன பல குழாய்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எரே 6:29-இல் துருத்தி என்பது ஓர் இயந்திர சாதனத்தைச் சுட்டுகிறது. ஆனால் பிற இடங்களில் இது தெளிவாக்கப்படவில்லை (யோபு 20:26; 41:21; எசா 54:14; எசே 22:20-21; காண்க. சீரா 43:4).

நெருப்பில் புடமிடப்படுதல் யாவேயின் தீர்ப்புக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது (எசே 22:20-21 காண்க. யோபு 41:21).

துரும்பு (MOTE, SPECK)

இது, காய்ந்த மரத்துகள், வைக்கோல் தூசி, கம்பளத்தூசி ஆகியவற்றைக் குறிக்கும். துரும்பையும் மரக்கட்டையையும் ஒப்பிட்டு வேறுபடுத்தி, பிறரைத் தீர்ப்பிடக் கூடாது எனப் போதிக்கிறார் இயேசு (மத் 7:3-5; லூக் 6:41-42). பிறர் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க முயலுமுன் ஒருவன் தன் கண்ணிலேயே உள்ள மரக்கட்டையை அகற்ற வேண்டும். அதன்பின், பிறர் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க அவனுக்குத் தெளிவாகக் கண்தெரியும்.

துரோகில்லியும் (TROGYLLIUM - பழந்துறை முகம்)

சிறிய ஆசியாக் கடற்கரையில் அமைந்துள்ள தீபகற்ப மலையான மைகாலேமலையின், சாமுவை நோக்கிஅமைந்துள்ள நில முனை. அ.ப. 20:15-இன்படி பவுலின் குழுவினரை ஏற்றிச்சென்ற கப்பல் சாமுவை அடைந்தது. ஆனால் இந்த நிலமுனைக்கும் தீவுக்கும் இடையிலுள்ள சலசந்தியில் கப்பலைச் செலுத்துவது ஒரு பிரச்சனையானதால், துரோக்கில்லியுமில் தங்க வேண்டியதாயிற்று. பின்பு அங்கிருந்து மிலேத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

துரோபிம் (TROPHIMUS - ஊட்டம் பெற்ற)

இவர் பவுல் இறுதியாக எருசலேமுக்குச் சென்றபோது அவரோடு சென்றவர்களில் ஒருவராவர். ஆசியாவின் எபேசைச் சேர்ந்த இவரோடு, திக்கிக்குவும் உடன் சென்றார் (அ.ப. 20:4-6). இவர் புறவினத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர். சிறிய ஆசியா, மாசிதோனியா, கிரீசு ஆகிய இடங்களிலுள்ள திருச்சபைகளில் எருசலேம் திருச்சபைக்காக எடுத்த காணிக்கைகளைக் கொண்டு சென்ற இருவரில் ஒருவர்.

எருசலேமில் பவுலுடன் இவரைக்கண்ட யூதர்கள் சிலர் பவுல் இவரையும் புறவினத்தார் செல்லக்கூடாத ஆலயப்பகுதிகளுக்குள் அழைத்துச் சென்றிருக்கலாம் என்று முடிவு செய்து பவுல் ஆலயத்தின் புனிதத்தைக் கெடுத்து விட்டார் என்று குற்றம் சாட்டினர். இஃது ஒரு கலகத்திற்கு இட்டுச் சென்று, பவுல் கைதியானதில் முடிந்தது (21:27-33).

''துரோபிம் நோயுற்றிருந்ததால் மிலேத்துவில் அவரை விட்டு வந்தேன்'' என்று பவுல் 2 திமொ 4:20-இல் கூறுகிறார். இக்கூற்றுக்கும், அப்போஸ்தலர் பணிநூல் விவரிப்புக்கும் (அ.ப. 21:29) முரண்பாடு தெரிகிறது. ஆனால் பவுல் உரோமைச் சிறையிலிருந்து விடுதலையடைந்து, துரோபிமோடு சேர்ந்து மீளவும் தனது மறைபரப்புப் பணியைத் தொடர்ந்து நடத்தினார் என்பதற்கு 2 திமொ 4:20 ஒரு சான்றாகும் என்று பலர் கருதுகின்றனர்.

துரோவா (TROAS)

சிறிய ஆசியாவின் வடகிழக்கில், ஆகியன் கடற்கரையில், மைசியாவிலுள்ள ஒரு துறைமுக நகரம். இது பழங்காலத் திராய் என்ற நகருக்குத் தென்-தென்கிழக்கில் 25 கி.மீ. தொலைவில் அமைந்திருந்தது. இது திராய் என்ற பெயரிலிருந்து துரோவா என்ற பெயரைப் பெற்றிருக்கலாம்.

இந்நகரம் பெரிய அலக்சாந்தருக்குப்பின் வந்தவர்களில் ஒருவரான அந்திகோனு என்பவரால் சுமார் கி.மு. 310-இல் நிறுவப்பட்டு அந்திகோனியா துரோவா என்று பெயரிடப்பட்டது. இதனை மேம்படுத்திய லிசிமாக்கு இதற்கு அலக்சாந்திரியா துரோவா என்று பெயரிட்டார். இந்நகர் சிறிது காலம் செலூக்கிய அரசர்களின் உறைவிடமாகவும், சிறிதுகாலம் சுதந்தர நகரமாகவும் விளங்கியது. கி.மு. 133-ஐ ஒட்டி இது உரோமை அரசோடு இணைந்தது. அகுஸ்து ஆட்சிக்காலத்தில் ஓர் உரோமைக் குடியிருப்பாக மாறியது.

பவுல் தனது மறைபரப்புப் பயணங்களில் குறைந்தது மூன்று முறையாகிலும் துரோவாவுக்குச் சென்றிருக்கவேண்டும். இங்குதான் பித்தினியாவுக்குச் செல்லாமல் ஆவியால் தடுக்கப்பட்டு, தாம் கண்ட காட்சியில் மாசிதோனியா நாட்டுக்கு அழைக்கப்படுவதாக உணர்ந்தார் (அ.ப. 16:7-11). ''நாங்கள்''

என்ற பகுதி 16:10-இல் தொடங்குவதால், இப்போது லூக்கா பவுலோடு சேர்ந்திருக்க வேண்டும். துரோவாவுக்குப் பவுல் மீண்டும் வந்தபோது அங்கு நற்செய்தியை அறிவிக்க நல்ல வாய்ப்பு இருப்பதைக் கண்டார். ஆயினும் கொரிந்துத் திருச்சபையைப்பற்றிய செய்திகளைத் தீத்துவிடமிருந்து அறியும் நம்பிக்கையில் மாசிதோனியாவுக்குச் சென்றார் (2 கொரி 2:12-13). மாசிதோனியாவில் தனது பணியை முடித்துக் கொண்டபின், எருசலேமை நோக்கித் தனது இறுதிப்பயணத்தைத் தொடரும்முன், பவுல் ஏழு நாட்களுக்குத் துரோவாவில் தங்கினார் (அ.ப. 20:5-12). அப்போதோ அதற்குப் பின்னரோ, துரோவாவில் போர்வை, நூல்கள், மற்றும் தோல் சுருள்களை விட்டுச் சென்றிருக்கவேண்டும் (2 திமொ 4:13).

துலாக்கோல் (Balance)

நாகரீகம் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த காலத்தில் முதலில் துலாக்கோல் அல்லது தராசு எடை பார்க்கப் பயன்பட்டது. இரண்டு உலோகத் தட்டுகள் ஒருகோலின் கோடிகளிலிருந்து கயிறுகளால் தொங்க விடப்பட்டன. கோல், நடுவில் கட்டப்பட்ட கயிற்றில் தொங்கும். பிற்காலத்தில்தான் கோலின் மையம் ஒரு செங்குத்தான மரத்தில் தொங்கவிடப்பட்டது. மேற்காசியாவில் உரோமையர் வருமுன் சம இளையுடைய துலாக்கோல்கள் வழக்கில் இருந்தன. ஆனால் நெம்புகோல் அடிப்படையில் அளவுகளைக் கூறும் எடை பார்க்கும் கருவி இல்லை. ஆனால் பிற்காலத்தில் கீழ்ப்பக்கமாகத் தூக்கு நூல் போடப்பட்டது. இப்படிப்பட்ட துலாக்கோல் எகிப்திய ஓவியங்களில் காணப்படுகின்றன.

தூக்குநூல் செங்குத்தாக நிற்கும் பொழுது இருதட்டிலும் உள்ள பொருட்கள் சமமாக இருப்பது தெளிவாகத் தெரியும். எகிப்தியர்கள் பண்ட மாற்றுகையில் இதைப் பயன்படுத்தினர். இறந்தபிறகு தீர்ப்பு வழங்க கடவுள்களும் இதைப் பயன்படுத்துவதாக மக்கள் நம்பினர். மத்திய அரச காலத்தில் ''விவசாயியின் கதையில்'' வேண்டுதல் செலுத்துபவன் தராசைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுகிறான். ''நீதான் தராசு. உன் நாக்குதான் தூக்கு நூல் துண்டு. உன் இதயம் எடை. உன் இரண்டு உதடுகளும்தான் கோல்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எகிப்தில் தராசு பயன்படுத்தப்பட்டது போன்று அவ்வளவு அதிகமாக மெசபொத்தாமியாவில் பயன்படவில்லை. கைத்தராசு மக்களை ஏமாற்ற வாய்ப்பாக இருந்தது. கானான் நாட்டில் இஸ்ராயேல் மக்கள் வருமுன் தராசு இருந்தது. உகாரித்து வாசகங்களில் ஒரு குடும்பம் இவ்வேலையைச் செய்ததாகக் காணப்படுகின்றது. தந்தை கோலையும், தாய் தட்டுகளையும், சகோதரர்கள் உலோக வார்ப்புக் கட்டிகளையும், சகோதரிகள் எடையையும் பார்த்து வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. விவிலியத்தில் நீதியுள்ள தராசு பயன்படுத்தப்படவேண்டும் என்றும், ஏமாற்றும் தராசு கண்டனத்துக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

சீரா 28:25; 42:4-இல் துலாக்கோலும் எடைக்கற்களும் குறிக்கப்படுகின்றன. ஏழு முத்திரை விவரிப்பில் மூன்றாவது முத்திரையை உடைத்தபோது தோன்றிய கரு நிறக்குதிரைமேல் ஏறியிருந்தவருடைய கையில் துலாக்கோல் ஒன்று இருந்தது (திருவெளி 6:5).

துறைமுகம் (HARBOUR, HAVEN)

பெரும்பாலும் கப்பலோட்டும் பொருளில் பயன்பட்டுள்ளது. இது கப்பல்களை நங்கூரம் பாய்ச்சிப் பாதுகாப்பாக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கிறது (ஆதி 49:13; சங் 107:30).

பவுல் உரோமைக்குச் செய்த பயணத்தில் ஒரு துறைமுகம் குறிக்கப்படுகிறது. இதன் பெயர் செந்துறை (அ.ப. 27:8) ஆகும். இங்கிருந்து பயணத்தைத் தொடர்வது விபத்துக்குரியது என்று பவுல் எச்சரித்தும், கப்பல்தலைவன் பயணத்தைத் தொடர்ந்து கிரேத்தாவிலுள்ள பெனிக்க துறைமுகத்தை அடைந்து, அங்கு மாரிக்காலத்தைக் கழிக்க எண்ணினான். அதன் விளைவு

அனைவரும் பெரும் விபத்துக்குள்ளானார்கள். பின்பு மால்தாத் தீவை அடைந்தார்கள் (அ.ப. 27:9-28:1).

துன்பப்பாதை (VIA DOLOROSA)

இயேசு தமது சிலுவை மரணத்துக்கு நடத்தப்பட்டுச் சென்றபோது, எருசலேம் வீதிகளின் வழியாக அவர் சென்றதாகப் பாரம்பரியமாகக் கருதப்படும் பாதை. இப்பாதை பிலாத்துவால் இயேசு தீர்ப்பிடப்பட்ட இடமாகப் பாரம்பரியமாகக் கருதப்படும் இடத்தில் தொடங்கி புனிதக்கல்லறைக் கோவிலில் உள்ள இயேசுவின் கல்லறையோடு முடிகிறது. திருப்பயணிகளின் நன்மைக்காக, இப்பாதையில் 14 நிலைகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. ''இதோ மனிதன்'' வளைவுக்கு அருகில் இருநிலைகள் துன்பப்பாதையைத் தொடங்கி வைக்கின்றன. ஏழுநிலைகள் நகர வீதிகளில் அமைந்துள்ளன. ஐந்துநிலைகள் புனிதக்கல்லறைக் கோவிலுக்குள் அமைந்துள்ளன.

கிறிஸ்துவின் பாடுகளின் வழியில் பக்தியோடு செபித்துக்கொண்டு செல்லும் வழக்கம் பைசாந்தியர் திருச்சபைக்காலத்தில் தொடங்கியதாகத் தெரிகிறது. இதுபற்றிய கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த குறிப்புகள் கிடைத்துள்ளன. காலப்போக்கில் இப்பக்தி முயற்சி வளர்ச்சியடைந்துள்ளது. துன்பப்பாதை உரோமை ஆளுநனின் மாளிகையில் தொடங்கியதா, அந்தோனியாக்கோட்டையில் தொடங்கியதா என்பது பற்றி எளிதில் தீர்க்கப்பட முடியாத பிரச்சனை உண்டு.

இப்போது கடைப்பிடிக்கப்படும் துன்பப்பாதை 18-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. ஆனால் அதில் 10 நிலைகளே இருந்தன. இவை 19-ஆம் நூற்றாண்டில் 14 நிலைகளாக அமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. இப்போது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் எருசலேமில் உள்ள பிரான்சிக்கு சபையினர் மாலை 3 மணி அளவில் தொடங்கி இப்பக்தி முயற்சியை நடத்துகின்றனர். திருப்பயணிகள் பக்தியோடு அதில் கலந்து செபித்துக்கொண்டு, கிறிஸ்து சிலுவை சுமந்து சென்ற துன்பப்பாதையில் செல்கின்றனர்.

துன்பம் (SUFFERING)

I. ''துன்புறுத்தப்படும்போது, இடுக்கணுறும்போது... நான் மனநிறைவோடு இருக்கின்றேன்'' (2 கொரி 12,10) என்று பவுல் மனந்திரும்பிய கொரிந்தியருக்கு எழுதத் துணிகின்றார். கிறிஸ்தவன் மனிதரின் துன்பங்களிலே பெருமைகாணும் தத்துவ ஞானி அல்லன். ''தம் முன்னே வைத்திருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, நிந்தையைப் பொருட்படுத்தாமல், சிலுவையைத் தாங்கி'' நம் ''விசுவாசத்தைத் தொடங்கிவைத்தவரின்'' சீடன் (எபி 12:2). இயேசுகிறிஸ்துவின் ஒளியிலேயே எல்லாத் துன்பங்களையும் கிறிஸ்தவன் நோக்குகின்றான். ''இறைவனால் அபிடேகம் பெற்றவர்கள் படவேண்டிய நிந்தையை, எகிப்தின் கருவூலங்களிலும் மேலான செல்வமாகக் கருதிய'' (எபி 11:26) மோசேயின் துன்பங்களில் அவன் ஆண்டவரின் பாடுகளைக் காண்கிறான்.

ஆனால் கிறிஸ்துவில் துன்பம் பெறும் புதுப்பொருள் என்ன? பழைய ஏற்பாட்டில் அடிக்கடி சாபமாகக் கருதப்பட்ட துன்பம் புதிய ஏற்பாட்டில் பெரும் பேறாக மாறியது எவ்வாறு? ''எனக்கு வரும் வேதனையிலெல்லாம் என் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது'' (2 கொரி 7:4; காண் 8:2) என்று பவுல் கூறத்துணிந்தது எப்படி? விசுவாசம் உணர்ச்சியற்றதா? அல்லது துன்பத்தை இன்பமாகக் காணும் கலங்கிய நோக்கம் உடையதா?

II. பழைய ஏற்பாடு

1. துன்பத்திலிருந்து தப்பமுடியாது: வேதாகமம் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவதில்லை; அதை ஆழ்ந்த அனுதாபத்தோடு நோக்குகின்றது. அதே வேளையில் துன்பம் என்னும் தீமை இல்லாத ஓர் உலகம் இருந்திருக்கலாம் என்றும் அது கருதுவதாகத் தெரிகிறது.

அ. துன்பத்தின் கூக்குரல்: துயரங்கள், தோல்விகள், பேரிழப்புக்கள் இவற்றின் காரணமாக எழும் கூக்குரல்களும் முறையீடுகளும் புலம்பல்களும் வேதாகமத்தில் நிறைந்திருக்கின்றன. பெருமூச்சுகள் அடிக்கடி தோன்றிப் 'புலம்பல்' என்ற ஒரு தனி இலக்கியத்திற்கே வழிவகுத்திருக்கின்றன. மக்கள் பெரும்பாலும் இறைவனிடமே முறையிடுகின்றார்கள். உணவுக்காக மக்கள் பார்வோனிடம் கெஞ்சுவதும் (ஆதி 41:55), கொடுங்கோலருக்கு எதிராக இறைவாக்கினர் முறையிடுவதும் உண்மைதான். ஆனால் எகிப்தில் அடிமைகள் இறைவனிடமே முறையிடுகின்றனர் (யாத் 2:23). இஸ்ராயேல் மக்கள் யாவேயை நோக்கிக் கூக்குரலிடுகின்றார்கள் (14:10; நீதி 3:9). துன்பத்தின் குமுறல்கள் சங்கீதங்களில் நிறைந்திருக்கின்றன. தொடர்ந்து ஒலிக்கின்ற இத்துன்பக்கதறல்கள் மரணத்தின்முன் கிறிஸ்துவின் ''கண்ணீரும் பலத்த குரலும்'' (எபி 5:7) வரை நீடிக்கின்றன.

ஆ. துன்பம் இருந்திருக்கக்கூடாத ஒரு தீமை என்ற உணர்வே அதைப்பற்றிய மதிப்பீடுகளுக்கு அடிப்படை. துன்பத்திற்கு ஆளாகாதவர் ஒருவரும் இல்லை என்பது உண்மைதான்! ''பெண்ணிடம் பிறந்த மனிதனுக்கு வாழ்நாளோ குறைவு; வருத்தமோ நிறைவு!'' (யோபு 14:1; சாண். சீரா 40:1-9). அதனால் தவிர்க்க முடியாததென்று துன்பத்தை மனிதன் ஏற்றுக்கொள்வதில்லை. ஞானமும் சுகமும் ஒன்றுக்கொன்று இணைந்தவை (பழ 3:8; 4:22; 14:30); சுகம் இறைவனின் கொடை (சீரா 31:20). அதற்காக மனிதன் அவரைப்போற்றுகின்றான் (சீரா 17:28); அவரை மன்றாடுகின்றான் (யோபு 5:8; 8:5தொ; சங் 107:19). பல சங்கீதங்கள் நோயுற்றோர் சுகம் வேண்டும் மன்றாட்டுகள் ஆகும் (சங் 6; 38; 41; 88). வேதாகமம் துன்பத்தைத் துய்த்து மகிழ்வதில்லை. மருத்துவர்களை அது புகழ்கின்றது (சீரா 38:1-15); வரவிருக்கும் மெசியாவின் காலத்தை நோயுற்றோர் சுகமும் (எசா 33:24) இறந்தோர் உயிர்ப்பும் (26:19; 29:18; 61:2) பெறும் காலமாகக் காண்கின்றது. குணமாக்குதல் யாவே (19:22; 57:18), மெசியா (53:4 தொ) என்பவர்களின் அலுவல்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. பாலையில் உயர்த்தப்பட்ட வெண்கலப் பாம்பு (எண் 21:6-9) மெசியாவின் அறிகுறி ஆகவில்லையா? (யோவா 3:14). பஞ்சம், பொருட்சேதம், வறட்சி, துக்கம், போர், அடிமைத்தளை, அகதி நிலை என்றவாறு தனி நபர்களையோ நாடுகளையோ பீடிக்கும் துன்பங்கள் அனைத்திலிருந்தும் மெசியா விடுதலை அளிப்பார் என எதிர்நோக்கியிருக்கின்றனர். தவத்தின் பொருட்டோ, பவுலின் கருத்தைப் பின்பற்றியோ துன்பத்தை விரும்பி ஏற்கும் பண்பு பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை.

2. துன்பம் ஒரு முட்டுக்கட்டை: இந்த மறுக்கமுடியாத அனுபவமாகிய துன்பத்தைப் புரிந்துகொள்ள வேதாகமம், தன்னைச் சுற்றியுள்ள மற்ற மதங்களைப்போல், பல்வேறு கடவுளருக்குள்ளே சச்சரவையோ இருபொருள் வாதத்தையோ நாடவில்லை. பாபிலோனில் அகதிகளாய், பேரிடர்களினால் கடல் போன்ற துன்பத்தில் ஆழ்ந்த போது (புல 2:13) யாவே தன்னைவிட வலியவர் ஒருவரிடம் தோற்றிருப்பாரோ என்ற பெருஞ்சோதனை தோன்றியது உண்மைதான். யாவேதான் உண்மையான இறைவன் என்று கூறும் இறைவாக்கினர்கூட துன்பங்களுக்கு அவர் பொறுப்பல்லர் என்று தட்டிக்கழிக்காமல், துன்பங்களுக்கும் அவரே காரணம் என்று வலியுறுத்துகின்றார்கள். ''நான் ஒளியை உண்டாக்குகிறேன்; இருளைப் படைக்கிறேன். நல்வாழ்வை அமைப்பவன் நான்! தீமையைப்படைப்பவனும் நானே!'' (எசா 45:7; காண். 63:3-6). ஆமோசின் துணிகரமான வாக்கை இஸ்ராயேல் என்றும் மறக்காது. ''ஆண்டவர் அனுப்பவில்லையெனில், நகருக்குத் தீமை தானாக வந்திடுமோ?'' (ஆமோ 3:6; காண் யாத் 8:12-28; எசா 7:18). இப்படிப்பட்ட நம்பிக்கை சிலரிடையே ஒரு வெறுப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது. உலகிலே துன்பத்தைக் காணும் விசுவாசமற்ற தீயவர் சிலர்,

''கடவுள் இல்லை'' (சங் 10:4; 14:1) அல்லது ''இறைவனுக்கு எப்படித் தெரியும்? உன்னதர்க்கு அறிவு இருக்கிறதா?'' என்று கூறத் துணிகின்றனர். யோபின் மனைவி ''கடவுளைப் பழித்து மடிவது தானே'' (யோபு 2:9) என்று அறிவுறுத்துகின்றாள்.

இன்பத்தைப்போல் துன்பமும் இறைவனுக்கு முற்றும் கீழ்ப்பட்டிருந்தாலும், இறைவனுடைய நேரான தலையீட்டைத் தவிர்த்துத் துன்பத்திற்கு வேறு காரணங்களைக் காண முயல்கின்றனர். காயங்களை இயற்கைச் சக்திகள் வருவிக்கலாம் (ஆதி 34:25; யோசு 5:8; 2 சாமு 4:4). முதுமையில் நோய்கள் இயல்பானவை (ஆதி 27:1; 48:10). உலகிலே மனிதனுக்கு எதிரான தீயசக்திகள் உள்ளன. சாபத்தினின்றும் சாத்தானிடமிருந்தும் இவை தோன்றுகின்றன. பாவம் துன்பத்திற்குக் காரணமாகிறது (பழ 13:8; எசா 3:11; சீரா 7:1). ஆகவே துன்பங்களுக்கெல்லாம் முதற்காரணமாக ஒரு பாவத்தைத் தேடும் போக்கு காணப்படுகிறது (ஆதி 12:17 தொ; 42:21; யோசு 7:6-13). யோபின் நண்பர்களுக்கு இதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. உலகத்தின் துன்பத்திற்கெல்லாம் ஊற்றாக இருப்பது முதற்பாவம் என்றுதான் கூறவேண்டும் (ஆதி 3:14-19).

முன்னறிவிப்பின்றி வரைமுறை கடந்து பலதரப்பட்டவர்களையும் பீடிக்கும் சாவு மனிதருக்குப் பெரும் துக்கத்தை வருவிக்கின்றது (யோபு 21:28-33; பழ 11:4; ஆமோ 5:19). அதைவிட அதிர்ச்சி தருவது நல்லவர்கள் இறக்க, தீயவர்கள் நெடுங்காலம் வாழ்வது (திருவுரை 7:15; எரே 12:தொ). இதையெல்லாம் காணும்பொழுது இவ்வுலகில் நீதிக்கு இடமுண்டா என்ற ஐயப்பாடு எழுவது இயல்பே (அப 2:1-24; மலா 2:17; 3:15; சங் 37;73).

எப்படியும் துன்பம் விளைவிக்கும் இயற்கை, எதிர்பாரா விபத்து (யாத் 21:13), மனித வாழ்வின் நிலையற்ற தன்மை (யோபு 4:1தொ; காண் 4:17), பாவத்தின் பயங்கர விளைவுகள், சாபம் (ஆதி 3:14; 2 சாமு 16:5), சாத்தான் ஆகிய இவையனைத்துமே இறைவனின் வல்லமைக்கு உட்பட்டவையே ஆகும். ஆகவே இறைவனே காரணமாகச் செயலாற்ற வேண்டுவது அவசியமாகிறது. ஆகவே இறைவனைப்பற்றிய ஐயப்பாடுகள் எழுகின்றன. நல்லோரின் துன்பமும் தீயோரின் மகிழ்ச்சியும் இறைவாக்கினருக்குக்கூடப் புரியவில்லை (எரே 12:1-6; 1:13; 3:14-18). துன்புறுத்தப்படும் நல்லோர் இறைவன் தங்களை மறந்துவிட்டார் என்று எண்ணுவதில் வியப்பில்லை (சங் 13:2; 31:13; 44:10-18). யோபு இறைவனுக்கு எதிராக முறையிட்டு அவரைப் பதில்கூற அழைக்கின்றார் (யோபு 13:22; 23:7). திருப்பாடல் அல்லது சங்கீத ஆசிரியர் ஒருவரும் நாட்டுக்கு நேர்ந்த நீதியற்ற துன்பங்களின் பொருட்டு அவ்வாறே செய்கின்றார் (சங் 44:10-27). ஆனால் துன்பங்களின் கொடுமை அளவிறந்தபோதுகூட இஸ்ராயேல் மக்கள் மனச்சோர்வு அடைந்ததில்லை. யோபு வரலாற்றின் ஆசிரியர் நம்பிக்கை இழந்த மனநிலையிலே தன் நூலை முடிக்கவில்லை. சோர்வே உருவான திருவுரை ஆசிரியர், எது எப்படியிருந்தாலும் வாழ்வு இன்பமயமாயிருக்கட்டும் என்று கூறுகின்றார் (திருவுரை 3:2.24; 9:7-10; 11:7-10). மனந்தளர்ந்த, மனம் வருந்தும் இறைவாக்கினர்கூட நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அறவே இழந்து விடுவதில்லை (எரே 9:16-23). வெற்றிகரமான உயிர்ப்பின் முன்னுணர்வு மறைமுகமாக முன்கூட்டியே வேதாகமம் முழுவதும் நிலவுகிறது என்று கூறலாம் (ஆதி 22; சங் 22; 49; 73; எசா 53; உரோ 4:18-21).

3. துன்பம் ஒரு மறைபொருள்: துன்பத்தால் மனந்தளர்ந்தாலும் விசுவாசத்தால் உந்தப்பட்டு இறைவாக்கினரும் ஞானிகளும் படிப்படியாகத் துன்பத்தின் ''மறைபொருளை'' (சங் 73:17) உணர்கின்றார்கள். உலோகத்தின் மாசுகளை நீக்கும் நெருப்பைப்போலத் துன்பம் தூய்மைப்படுத்துகின்றது (எரே 9:6; சங் 65:10). தந்தை தன்

மக்களைத் திருத்துவதற்காகத் தண்டிப்பது போல் துன்பம் நன்னெறிபயிற்றுகின்றது (உப 8:5; பழ 3:11 தொ; 2 நாள் 32:26-31). உடனுக்குடன் கிடைக்கும் தண்டனை யாகிய துன்பத்தில் இறைவனுடைய கரு ணையே வெளிப்படுகின்றது (2 மக் 6:12-17; 7:31-38). நமது சிற்றறிவுக்குப் புரியாத இறைத்திட்டத்தின் வெளிப்பாட்டைத் துன் பத்திலே அவர்கள் காணுகின்றார்கள் (யோபு 42:1-6; காண் . 38:2). யோபுவிற்குமுன் யோசேப்பு இத்தத்துவத்தைத் தன் சகோ தரருக்கு விளக்குகின்றார் (ஆதி 50:20). எதிர்பாராத முறையில் இளமையிலே உயிர் துறக்கும் ஞானியைச் சாவு பாவத்தினின்று காப்பாற்றுகின்றது (ஞான 4:17-20). இந்த அடிப்படையிலேயே மலடிகளும் அண்ணக ரும் பேறுபெற்றவர் என்று பழைய ஏற் பாடு கூறுகின்றது (ஞான 3:13 தொ). துன்பங்களும் துன்புறுத்தப்படுதலும் பாவப் பரிகாரமாகவும் இருக்கலாம் (எசா 40:2).

தனது ஊழியர்களுள் தலைசிறந்தவருக் கென இறைவன் வகுக்கும் ஓர் உயர்ந்த சோதனையாகத் துன்பம் இறைத்திட்டத்தில் இடம் பெறுவதை விசுவாசம் உணர்கின் றது. இவ்வாறு ஆபிரகாம் (ஆதி 22), யோபு (1:11; 2:5), தோபியா (12:13) ஆகியவர்களுக் குத் தான் எவ்வளவு பெரியவர், தன் பொருட்டு அவர்கள் எவ்வளவு துன்புற லாம் என்று இறைவன் காட்டுகின்றார். எரேமியாகூட எதிர்ப்பைவிட்டு மீண்டும் மனந்திரும்புவது இதனால்தான் (எரே 15:10-19).

இறுதியாகத் துன்பம் மீட்புக்கும் மன் றாட்டுக்கும் பயன்படுகின்றது. மோசே இதற்கு எடுத்துக்காட்டு. அவர் துக்கம் ததும்பச் செபிப்பதுமட்டுமன்றி (யாத் 17:11தொ; எண் 11:தொ) குற்றம் செய்த மக்களை மீட்கத் தன் வாழ்வையே பலியாக்கு கின்றார் (32:30-33). மோசேயும் அதிகத் துன்பத்திற்காளான எரேமியா போன்ற இறைவாக்கினர்களும் (எரே 8:18.21; 11:19; 15:18) யாவேயின் ஊழியனுக்கு மாதிரியாக இருக்கின்றார்கள்.

யாவேயின் ஊழியனுடைய துன்பங் களுக்கு அளவோ, எல்லையோ இல்லை. துன்பம் எவ்வளவு தூரம் அவரைச் சாடி அவரது உருவை நிர்மூலமாக்கியிருக்கின்றது என்றால் அவரைக் காணுகின்றவர்கள் அனு தாபத்திற்குப் பதில் பீதியும் அவநம்பிக்கை யும் அடைகின்றார்கள் (எசா 52:14 தொ; 53:3). அவருடைய வாழ்வில் துன்பம் ஒரு எதிர்பாரா விபத்தோ, விரைவில் கடந்து போகும் ஒரு துக்கவேளையோ அன்று. அவருடைய அன்றாட வாழ்வே துன்பந் தான். அதுவே அவரை அடையாளம் காட்டும் குறி. ''துன்பத்தின் மனிதன்'' அவர்! (எசா 53:3). மிகப்பெரியதொரு குற்றத்திற்குரியது என்று அல்லது தூய்மை யான இறைவன் அளிக்கும் எடுத்துக்காட் டான தண்டனை என்று இத்துன்பங்களை விளக்கலாம் (53:4). கேட்டறியாத அளவுக் குப் பெரிய குற்றம் உண்டென்பது உண்மைதான்! ஆனால் குற்றம் அவருடைய தன்று, நம்முடையது! நம் அனைவருடை யது! (53:6). அவர் குற்றமற்றவர். இதை விடத் திகைப்பூட்டக்கூடிய சூழ்நிலை வேறென்ன வேண்டும்?

ஆனால் இதில்தான் மறைபொருள் அடங்கி இருக்கின்றது; இறைத்திட்டம் நிறைவேறுகின்றது (53:10). பாவமற்றவர் ''பாவிகளுக்காகப் பரிந்து பேசுகின்றார்'' (53:12). அவருடைய பரிந்துரை வெறும் இதய எழுச்சிமட்டுமன்று. ''பாவப்பரிகார மாகும் அவருடைய உயிர்!'' (53:10). பாவிக ளோடு ஒருவராகி அவர்கள் குற்றங்களைத் தானே ஏற்றுக்கொள்கின்றார். திகைப்பு வியப்பாக மாறுகின்றது. யாவேயினுடைய ''ஆற்றல்'' வெளிப்படுகின்றது (53:1). உல கிலுள்ள எல்லாப் பாவமும் துன்பமும் அவர்மேல் சுமத்தப்படுகின்றன! கீழ்ப்படித லோடு அவற்றை ஏற்று அனைவருக்கும் சுகத்தையும் அமைதியையும் பெற்றுத் தரு கின்றார் (53:5).

II. புதிய ஏற்பாடு

1. இயேசுவும் மனிதரின் துன்பமும்: இயேசு, துன்புறும் ஊழியனின் உருவாக, துன்புறும் மனிதனாகப் பிறக்கின்றார். மனிதரின் துன்

பங்கள் அவர் உள்ளத்தைத் தொடுகின்றன. துன்புறுவோரைக் காணும்பொழுது அவர் நெஞ்சம் தெய்வீகக் கருணையால் உருகு கின்றது (மத் 9:36; 14:14; 15:32). அவர் இருந்திருந்தால் இலாசர் இறந்திருக்கமாட்டான் என்று மார்த்தாளும் மரியாளும் அவருக்கு ஞாபகமூட்டுகின்றனர் (யோவா 11:21.32). இயேசுவே இக்கருத்தைப் பன்னிரு வருக்கு மறைமுகமாகத் தெரிவிக்கின்றார் (11:14). அவர் அன்பு இத்தகையதென்றால் ஏன் இந்தப் புதிர்! ''அவன்மேல் இவருக்கு எத்துணை அன்பு, பாருங்கள்!... இவர் அவன் சாகாமலிருக்கச் செய்ய இயலவில்லையா?'' (11:36 தொ).

அ. துன்பத்தை வெல்கின்றவர் இயேசு கிறிஸ்து: அவருடைய இறுதி வெற்றியின் முன்னோடிகளாகவும், மெசியா அலுவலின் அறிகுறிகளாகவும் (மத் 11:4; காண் லூக் 4:18தொ) சுகமளித்தல், உயிர்ப்பித்தல் போன்ற புதுமைகள் விளங்குகின்றன. பன்னிருவர் செய்த புதுமைகளில் இயேசு சாத்தானின் வீழ்ச்சியைக் காண்கின்றார். ''நம் பிணிகளைத் தாங்கிக்கொண்ட, நம் துன்பங்களைச் சுமந்த'' (எசா 53:4) ஊழியனைப்பற்றிய இறைவாக்கை அந்நோய்களையெல்லாம் குணப்படுத்தி மெய்ப்பிக்கின்றார் (மத் 8:17). தனது பெயரால் நோய்களைக் குணமாக்கும் ஆற்றலைத் தன் சீடருக்கு அளிக்கின்றார் (மாற் 16:18). அழகிய வாயிலுக்கு வெளியே நோயுற்றவன் ஒருவன் குணமானது திருச்சபையின் தொடக்க காலத்தில் அதற்கு ஓர் உத்தரவாதமாக விளங்கியது (அ.ப. 3:1-10).

ஆ. துன்பத்தைப் பேறுடையதாக்கும் இயேசு கிறிஸ்து: துன்பத்தையோ தான் வெற்றிகொள்ள வந்த (எபி 3:14) மரணத்தையோ இயேசு இவ்வுலகிலிருந்து போக்கவில்லை. நோய் அல்லது விபத்துக்கும் பாவத்துக்கும், இயல்பான தொடர்புண்டு என்று அவர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் (லூக் 13:2 தொ. யோவா 9,3), ஏதேன் தோட்டச் சாபத்தின் விளைவுகளை அவர் தடுக்கவில்லை. ஏனெனில் இந்த விளைவுகளை மகிழ்ச்சியாய் மாற்ற அவரால் இயலும். அவர் துன்பத்தைப் போக்கவில்லை; ஆறுதல் அளிக்கின்றார் (மத் 5:5). அவர் கண்ணீரை அகற்றவில்லை; தன் வழியிலே சிலருடைய கண்ணீரை மட்டும் துடைக்கின்றார் (லூக் 7:13; 8:52). இச்செயல்கள் எல்லோருடைய முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து (எசா 25:8; திருவெளி 7:17; 21:4), இறைவன் தன் பிள்ளைகளோடு இணையப்போகும் மகிழ்ச்சியின் குறிகளே ஆகும். துன்பம் ஆசிராகலாம். ஏனெனில் அது இறையரசை வரவேற்க மனிதனைத் தயாரிக்கிறது; ''இறைவனின் அருஞ்செயல்களையும்'' (யோவா 9,3), இறைவனுடையவும் அவரது மகனுடையவும் மகிமையையும் (11:4) வெளிப்படுத்த வாய்ப்பளிக்கிறது.

2. மனுமகனின் துன்பங்கள்: இயேசு துன்பத்தை நன்குணர்ந்தவர் (எசா 53:3). விரியன் பாம்புக் குட்டிகளைப்போல் (மத்.12,34; 23,33) தன்னை விசுவசிக்க மறுக்கும் ''பற்றுறுதி இல்லாத, சீரழிந்த'' (மத் 17:17) மக்கள் கூட்டத்தைக் கண்டு அவர் துன்புறுகின்றார். தன்னுடைய மக்களே தன்னைக் கண்டுகொள்ளாததும் அவருக்குத் துன்பமூட்டுகின்றது (யோவா 1:11). எருசலேமுக்கு முன் அவர் அழுகின்றார் (லூக் 19:41; காண் மத் 23:37). தன் பாடுகளைநினைத்து அவர் கலக்கமடைகின்றார் (யோவா 12:27). அத்துன்பம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரமாகிறது; வேதனையாகிறது; கடுந்துயரும் பயமும் கலந்து போர்க்களமாகின்றது அவர் உள்ளம் (மாற் 14:33தொ; லூக் 22:44). காட்டிக் கொடுக்கப்பட்டதிலிருந்து இறைவனால் கைவிடப்படும் வரை (மத் 27:46) மனிதனுக்கு என்னென்ன துன்பம் நேரமுடியுமோ அவை அனைத்தும் அவர் பாடுகளாய்ப்பரிணமிக்கின்றது. இத்துன்ப உச்சநிலையோடு தன் உயிரையே பாவப்பரிகாரமாக அளிக்கும் (மத் 20:28) கிறிஸ்துவின் மீட்புப் பலி இணைகின்றது. இதற்காகவே தந்தையின் திட்டத்தின்படி அவர் உலகிற்கு அனுப்பப்பட்டார் (அ.ப. 3:18). இயேசு அன்போடும் (யோவா 14:31; 15:13) கீழ்ப்

படிதலோடும் (எபி 3:7-8) இத்திட்டத்திற்குப் பணிகின்றார். 'அவர் துன்புற வேண்டும்' என்ற தொடரில் துன்பத்தோடு எப்போதும் தொடர்புடைய 'வேண்டும்' என்ற சொல் அவரது வாழ்க்கை இரகசியத்தை வெளிப் படுத்துகின்றது. பேதுருவும் மற்றச் சீடர்களும் புரியாது இடர்ப்பட்டதையும் பொருட்படுத் தாது இயேசு தன் பாடுகளை முன்னறிவித்த போது இச்சொல்லை அடிக்கடி பயன்படுத்து கின்றார் (லூக் 17:25; காண் மாற் 8:31 தொ; மத் 17:22தொ; லூக் 9:42-45). ஆனால் மீட்பளிக்கும் பாடுகள் மகனின் மகிமையை வெளிப்படுத்துகின்றன (யோவா 17:1; 12:31தொ); ''அவரைச் சுற்றிச் சிதறிக்கிடந்த கடவுளின் மக்களை ஒன்றாய்ச் சேர்க்கின்றன'' (11:52). இவ்வுலக வாழ்க்கையில் ''சோதிக்கப்பட்டவர் களுக்கு உதவி செய்த'' (எபி 2:18) அவர் தீர்ப்பு நாளில் மகிமையோடு வரும்போது இவ்வுலகில் துன்பப் படுவோரோடெல் லாம் ஒன்றிக்க ஆசிக்கின்றார் (மத் 25:35-40).

3. சீடரின் துன்பங்கள்: உயிர்ப்பின் வெற் றிக்குப்பின் சாவும் துன்பமும் இனி இல்லை என்ற பொய்த் தோற்றம் கிறிஸ்த வர்களை அச்சுறுத்துகிறது. வாழ்வின் பயங் கர உண்மைகள் அவர்களது விசுவாசத்தின் உறுதியைக் குலைக்கின்றன (காண் 1 தெச 4:13). உயிர்ப்பு நற்செய்தியின் போதனையை உறுதிப்படுத்துகிறதே அன்றி அகற்றவில்லை. பேறுகளின் கருத்து அனுதினச் சிலுவை யின் தேவைகள் (லூக் 9:23) ஆகியவை யெல்லாம் ஆண்டவருடைய பாஸ்கா மறை யுண்மையின் ஒளியில் புத்துயிர் பெறுகின் றன; அவசரத்தன்மை பெறுகின்றன. அவ ருடைய சொந்தத்தாயே துயரத்திலிருந்து விடு தலை பெறவில்லையென்றால் (லூக் 2:35), ஆண்டவரே துன்பங்கள் துன்புறுத்தப்படு தல்கள் வழியாகத்தான் மகிமையடைய வேண்டுமென்றால் (24:26) சீடர்களும் அதே வழியைத்தான் பின்பற்ற வேண்டும் (யோவா 15:20; மத் 10:24). மெசியாவின் காலம் சோதனைகளின் காலமாகும் (மத் 24:8; அ.ப. 14:22; 1 திமொ 4:1).

அ. கிறிஸ்துவோடு துன்புறுதல்: கிறிஸ்த வன் வாழும்பொழுது, அவனல்லன் ஆனால் கிறிஸ்துவே அவனில் வாழ்வதுபோல (கலா 2:20), கிறிஸ்தவனின் துன்பங்கள் அவனில் கிறிஸ்துவின் துன்பங்களாகும் (2 கொரி 1:5). கிறிஸ்தவனின் உடல்கூட கிறிஸ்துவுக்குச் சொந்தம். அவன் துன்பத் தால் கிறிஸ்துவின் உருவைப் பெறுகின் றான் (பிலி 3:10). கிறிஸ்து ''மகனாயிருந் தும் பாடுகளினால் கீழ்ப்படிதலைநேரில் துய்த்துயர்ந்தது போல'' (எபி 5:8), நாமும் நம் ''விசுவாசத்தைத் தொடங்கி வைத்தவ ரும்... சிலுவையைத் தாங்கியவருமான இயேசுவின்மேல் கண்களைப் பதியவைத்து நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடும் ஓடவேண்டும்'' (எபி 12:1தொ). துன்புறும் மனிதரோடு கிறிஸ்து ஒன்றுகின்றார். அவருடைய சீடருக்கும் அதே ஒழுங்குதான் (1 கொரி12;26; உரோ 12:15; 2 கொரி 1:7).

ஆ. கிறிஸ்துவோடு மகிமை பெற: நாம் அவரோடு துன்புறுவது அவரோடு மகிமை பெறுவதற்காகத்தான் (உரோ 8:17). ''இயேசு வின் வாழ்வு (நம்) உடலில் வெளிப்படும் படி, போகும் இடமெல்லாம் இயேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கின் றோம்'' (2 கொரி 4:10). ''நாம் கிறிஸ்து வில் விசுவாசம் கொள்வதற்கு மட்டுமன்று, அவருக்காகத் துன்பங்களை ஏற்பதற்கும் இறையருள் நமக்கு அளிக்கப்பட்டது'' (பிலி 1:29; காண். அ.ப. 9:16; 2 கொரி 11:23-27). கிறிஸ்துவோடு படும் துன்பத்தி லிருந்து, இறந்தபிறகு ''அளவிடமுடியாத நித்திய மாட்சி ஒப்புயர்வற்ற வகையில்'' தோன்றுவது மட்டுமன்று (2 கொரி 4:17; காண் அ.ப. 14:21), இன்றிலிருந்தே மகிழ் வும் ஊற்றெடுக்கின்றது (2 கொரி 7:4: காண் 1:5-7). ''இயேசுவின் பெயருக்காகத் தாங்கள் இழிவுபடத் தக்கவர்களாய்க் கருதப்பட்டது பற்றி'' (அ.ப. 5:41) அப்போஸ்தலர் எருச லேமில் பெற்ற மகிழ்ச்சியில் முதல் அனுப வம் பெறுகின்றனர். ''இறைமாட்சிமையும் கடவுளுடைய ஆவியும்'' தங்கள்மீது தங்க, ''கிறிஸ்துவின்பாடுகளில் பங்குகொள்ள''

பேதுரு அழைக்கிறார் (1 பேதுரு 4:13 தொ). ''திருச்சபையாகிய தம் உடலின் பொருட்டு கிறிஸ்து பட வேண்டிய வேதனை களில் இன்னும் குறைவாயிருப்பதைத்'' தன் உடலில் நிறைவாக்க ''தான் படும் துன்பங் களில்'' பவுல் மகிழ்ச்சி கொள்கிறார் (கொலோ 1:24).

துன்புறுத்தல், துன்புறுத்தப்படுதல் (PERSECUTION)

I. இறைவனுடைய மக்கள் தங்களுடைய வரலாறு முழுவதும் துன்புறும் அனுபவத் தைப் பெறுகின்றனர். அது இறைமகனை யும் விடவில்லை. உலகை மீட்க வந்த அவர், அதனால் வெறுக்கப்பட்டுப் (யோவா 3:17; 15:18) பாடுகளை அனுபவிக்கிறார் (மத் 23:31-32). இறுதியாக அது அவ ருடைய சீடர்களுக்கு உரியதாகும். ''என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள்; உங்களையும் துன்புறுத்துவார்கள்'' (யோவா 15:20).

துன்பத்தின் மறைபொருளுடன் இணைக் கப்பட்டிருந்தாலும் துன்புறுத்தலானது அத னின்று வேறுபட்டுள்ளது. துன்பம் ஒரு பிரச்சனை! ஏனெனில் அது அனைத்து மனிதரையும், நீதிமான்களையும் பாதிக் கிறது. நீதிமான்கள் என்ற ஒரே காரணத்திற் காகத் துன்புறுத்தலானது நீதிமான்களைத் தாக்கும்போது, பிரச்சனையானது கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. அதனுடைய தோற்றத் தின் காரணமாகத் துன்புறுத்தலானது மற்றக் கொடுமைகளினின்று வேறுபடுத்தப் படுகின்றது. துன்பங்களின் மூலமாகப் பாவியைத் தூய்மைப்படுத்தவும், துன்புறுத்த லின் மூலமான அன்பின் திட்டத்தில் நீதிமானைச் சோதிக்கவும் இறைவன் விரும்பு கிறார். தீய மனிதன் இத்திட்டத்தை எதிர்க்கவும், இறைவனிடமிருந்து மனித னைப் பிரிக்கவும் முயல்கிறான். ஆயினும், அனைத்துத் துன்பங்களையும் போன்றே துன்புறுத்தலானது இறைவனால் பயன் படுத்தப்படுகின்றது. ''மகிமையின் ஆண்ட வரைச் சிலுவையில் அறைந்ததில் இவ்வுல கின் தலைவர்கள்'' அவரது ஞானத்தின் கருவிகளை அறிந்து கொள்ளவில்லை (1 கொரி 2:6 தொ). துன்புறுத்தப்பட்ட நீதி மான் (அ.ப. 3:14) என்றென்றைக்கும் உலகை வென்றுவிட்டார் (யோவா 16:33). துன்புறுத்தப்படுவது உறுதியான நிலையில் (2 திமொ 3:12), அவரது சீடர்கள் அக்களிக் கின்றனர் (மத் 5:11-12). அவர்கள், துன் புறுத்தும் உலகைச் சேர்ந்தவர்கள் அல்லர் (யோவா 15:19); மாறாக, அனைத்துத் துன்புறுத்தல்களின் மீதும் வெற்றி கொள் ளும் நாளில் ஆண்டவராகிய இயேசு மகிமைப்படுத்தப்படவிருக்கும் எண்ணற்ற வர்களோடு சேர்ந்தவர்கள் (2 தெச 1:4-12) என்பதற்கான அடையாளமே அது.

II. துன்புறுத்தலின் மறைபொருள்:

1. பழைய ஏற்பாடு: எகிப்தில் தங்கியிருந் தது முதல் (யாத் 1:8-14) உரோமை ஆதிக்கம் வரை, அனைத்துப் புனித மக்க ளும் புறவினத்தாரின் கடுமையான எதிர்ப்பை அனுபவிக்க வேண்டியிருந்தது. அதே நேரத்தில், பல்வேறு உட்பிரச்சனை களையும் அவர்கள் அனுபவித்தனர் (சங் 44:10-17; 79:1-4; 80:5தொ). ஆண்டவர் மீதான தங்களுடைய அன்பு மற்றும் அவ ரது வார்த்தையின் மீதான பற்றுறுதி ஆகிய வற்றின் காரணமாகத் தலைவர்கள், அரசர் கள் மற்றும் குறிப்பாக இறைவாக்கினர் முதலிய பெரியவர்களும் அடிக்கடி துன் புறுத்தப்பட்டனர். மோசே தன்னுடைய மக்க ளாலேயே புறக்கணிக்கப்பட்டு (யாத் 2:14; அ.ப. 7:27,35) அவர்களது முறையீடுகளால் அடிக்கடி தொல்லைக்குள்ளானார் (யாத் 5:21; 14:11-12; 15:24; 16:3..., எசே 20:13.21; சங் 78:17-42). தாவீது (1 சாமு 19-24), எலியா (1 அர 19), ஆமோஸ் (மோ 7:10-17), எரேமியா (எரே 11:18-12:6; 26:37-38), மக்கபேய வேதசாட்சிகள் (2 மக் 6-7; 1 மக் 1:57-64; தானி 11:33-35) முதலானோரும் துரத்தப்படுகின்றனர். தனது பணியினின்று பிரிக்கப்பட முடியாதவை யாக இத்துன்புறுத்தல்கள் எரேமியா விற்குத் தோன்றுகின்றன. இவற்றின் வழி யாகவே ஊழியனும் இறைவனின் திட்டத் தைச் செய்து முடிக்கிறார் (எசா 53:10). அவ்வாறே, அவர்களுடைய, எதிர்ப்பு மற்

றும் பற்றுறுதியுடன் சேர்ந்து நீதிமான்களின் துன்புறுத்தலானது தீர்வையின் நாளையும், அரசின் வருகையையும் தயாரித்து வருகிறதெனத், தானியேல் நூல் காட்டுகிறது (தானி 7:25 தொ; 8:24-25; 11:32-35). இறுதியாக, ஞான ஆகமமானது அனைத்துத் துன்புறுத்தலின் ஆழ்ந்த நோக்கத்தையும் வெளிக்கொணர்கிறது. நீதிமான் ஓர் ''உயிருள்ள தொல்லையாய்'' இருப்பதால், இறைப்பற்றற்றவர்கள், நீதிமானை வெறுக்கின்றனர் (ஞான 2:12). ஆனால் அதே நேரத்தில் தாங்கள் ஏளனமாய்க் கருதுகின்ற இறைவனுக்கு அவன் ஒரு சாட்சியாக உள்ளான் (2:16-20). பேய்க்கு உரியவனாதலால் துன்புறுத்துவோன் அவாது சாட்சியாளர் வழியாக இறைவனைத் தாக்குகிறான். இறுதிநாளில், நீதிமானின் மீட்பு துன்புறுத்துவோனின் விசுவாசமின்மையைத் தீர்ப்பிடும் (3:7-10;5:1-6).

2. இயேசு: யாருக்காக அனுப்பப்பட்டார்களோ அவர்களாலேயே அநியாயமாகக் கொடுமைப்படுத்தப்பட்ட இத்தகைய துன்புறுவோரின் வரிசையைத் துன்புறுத்தப்பட்ட இயேசு நிறைவுபடுத்தி, முடிசூட்டுகிறார். அவரைத் தண்டிப்பதன் மூலம் இஸ்ராயேலின் தலைவர்கள் தங்களுடைய தந்தையரின் குற்றங்களின் அளவை மிகுதியாக்கி, இறைவாக்கினரைக் கொன்றவர்களுடைய பிள்ளைகள் உண்மையில் தாங்களே என்பதற்குச் சான்று பகர்கின்றனர் (மத் 23:31-32). ஆனால் கிறிஸ்துவின் அனைத்துத் துன்பங்களைப்போலவே இந்தத் துன்புறுத்தலானது, அவரது பணியை முழுமையாக நிறைவேற்றுவதற்கும், மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அவசியமாக உள்ளது.

3. சீடர்கள்: தங்களுடைய தலைவருடையதைத் தவிர வேறெந்த நடத்துமுறைக்கும் சீடர்கள் உரிமை கோர முடியாது. அவரது மாதிரியைப் பின்பற்றி, அவரைப்போலவும், அவரது காரணமாகவும், அவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர் (யோவா 15:20; 16:1தொ). அவர்கள் அவருடைய கிண்ணத்தைப் பருகி, அவருடைய திருமுழுக்கைப் பெற வேண்டும் (மாற் 10:39). அவர்களில் தனது துன்புறுத்தலை இயேசு மீண்டும் வாழ்கிறார் (அ.ப. 9:4-5; காண்க: கொலோ 1:24). இது அவர்களுக்கு ஓர் அருளாகவும் (பிலி1:29), அதன் விளைவாக மகிழ்ச்சியின் ஊற்றாகவும் உள்ளது (1 பேதுரு 4:12 தொ).

முன்னர் ''இயல்பு முறைப்படி பிறந்தவன் தேவ ஆவியின் ஆற்றலால் பிறந்தவனைத் துன்புறுத்தியது போன்று'' (கலா 4:29), முதலில் யூதர்கள் அவர்களைக் கொடுமைப்படுத்துகின்றனர் (அ.ப. 4:1; ...; 5:17... ; 8:1...; 13:50). தன்னுடையவராலேயே இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டது போன்று (யோவா 13:18; 18:35; எபிரே 12:6), சீடர்களும் தங்களுடைய குடும்பத்தவராலேயே துன்புறுத்தப்படுவர் (மத் 10:34 தொ). இது சூழ்நிலைகளின் சாதாரண ஒப்புமையை விட உயர்வானது. ''ஆண்டவராகிய இயேசுவையும் இறைவாக்கினரையும் மரணத்திற்கு உட்படுத்திய நம்மைத் துன்புறுத்திய யூதர்கள், இவ்வாறாகத் தங்களுடைய பாவங்களின் அளவை எல்லாக் காலத்திற்குமாக நிரப்புகின்றனர்'' (1 தெச 2:15-16).

புறவினத்தாரும் இயேசுவின் சீடர்களைத் துரத்துவர். புதிய பாபிலோனாகிய உரோமை, புனிதர்கள் மற்றும் இயேசுவின் சாட்சிகளுடைய இரத்தத்தைக் குடித்து வெறிகொள்ளும் (திருவெளி 17:6). ''பக்தியோடு கிறிஸ்துவில் வாழவிரும்புவோர் அனைவரும் துன்புறுத்தப்படுவர்'' என்பது உண்மையே (2 திமொ 3:12).

4. பிரச்சனையின் அடிப்படை:

அ) இறைவனின் நண்பர்களைத் துன்புறுத்துவதானது, சாத்தானும் தீய சக்திகளும் இறைவன் மற்றும் அவரது ஊழியனுக்கு எதிராகச் செயல்படுத்தும் பல நூறு ஆண்டு காலப் போரின் ஒரு தோற்றமேயாகும். பாம்பின் தலையை நசுக்குவதுடன் இப்போர் முடிகின்றது. பாவத்தின் தோற்றம் முதற்கொண்டு (ஆதி 3) திருவெளிப்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள இறுதிப் போராட்

டங்கள்வரை, பறவை நாகமானது பெண்ணையும் அவளது தலைமுறையினரையும் துரத்திச்செல்கிறது (திருவெளி 12; 17:19). இப்போரானது அனைத்து வரலாற்றிற்கும் பரவியிருந்தாலும், காலம் செல்லச்செல்ல அதிகமாக்கப்படுகிறது. இயேசுவின் பாடுகளின்போது அது தனது உச்சகட்டத்தை அடைகிறது. பின்னர், அதே நேரத்தில், இருளினுடைய அரசனின் நேரமும் இயேசுவின் நேரமும், அதாவது அவரின் மரணம் மற்றும் மாட்சிமையின் நேரமும் (லூக் 22:53; யோவா 12:23; 17:1) நிகழ்கின்றன. திருச்சபையில், கிறிஸ்து மற்றும் அவருக்குரியோரின் உறுதியான வெற்றியினுடைய அடையாளம் மற்றும் நிபந்தனையாகத் துன்புறுத்தல்கள் உள்ளன. இவ்வகையில் அவை இறுதிக்காலப் பொருளைக் கொண்டுள்ளன. ஏனெனில், அவை தீர்ப்பிற்கும் (1 பேதுரு 4:17தொ) அரசினுடைய முழுமையான அமைப்பிற்கும் ஒரு முன்னுரையாக உள்ளன. ''பெருந் துன்பத்துடன்'' அவை இணைக்கப்பட்டுள்ளன (மாற் 13:9-13. 14-20). மேலும், உலகின் முடிவிற்குப் பீடிகையாக இருந்து, புதிய யுகத்தின் பிறப்பை வரையறைப்படுத்துகின்றன (திருவெளி 7:13-17).

சோதனையில் விசுவாசமுள்ளவர்களாக இருந்த துன்புறுத்தப்பட்டோர் (திருவெளி 7:14), அத்தருணம் முதல் வென்றடக்குபவர்களாகவும், மகிழ்ச்சியில் அளவற்றவர்களாகவும் இருந்தால், அவர்களது மகிமையானது, துன்புறுத்தியவர்களுடைய தண்டனையின் கொடூரத்தன்மையை அவர்கள் மறந்துவிடச் செய்யக்கூடாது. பாவிகளுக்கு எதிராக இப்போது முதல் வெளிப்படுத்துகிற இறைவனின் சினமானது (உரோ 1:18), காலத்தின் முடிவில் கொடுமையான பாவிகள், குறிப்பாகத் துன்புறுத்தியவர்கள்மேல், விழும் (1 தெச 2:16; 2 தெச1:5-8; திருவெளி 6:9 தொ; 11:17-18; 16:5-6; 19:2). அவர்களது அவல முடிவானது அந்தியோக்கு எப்பிபானின் முடிவில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது (2 மக் 9; தானி 7:11; 8:25; 11:45). ஏரோது அகிரிப்பாவின் முடிவிலும் அது மீண்டும் நிகழ்ந்துள்ளது (அ.ப. 12:21 தொ). இறுதிக்காலத் தண்டனைகளாக இத்துன்புறுத்தல்களின் இணைப்பானது, திராட்சைத் தோட்டக் கொலைகாரர்கள் (மத் 21;33-46) மற்றும் மணவிருந்து (22:1-14) உவமைகளில் வலியுறுத்தப்படுகிறது. திராட்சைத் தோட்டத் தொழிலாளர்களின் கடைசிக் குற்றம் மற்றும் கடைசி ஊழியர்கள் அனுபவித்த தீய நடத்துமுறை முதலியன கொடுமையின் வரிசையில் ஒன்று சேர்ந்து, தலைவர் அல்லது அரசருடைய கோபத்தைக் கட்டவிழ்த்து விட்டன. ''பரிசுத்தருடைய இரத்தத்தையும், இறைவாக்கினருடைய இரத்தத்தையும் மக்கள் சிந்தியதால், நீர் அவர்களுக்கு இரத்தத்தையே குடிக்கக் கொடுத்தீர். இது அவர்களுக்குத் தகுந்த தண்டனையே'' (திருவெளி 16:6; 19:2).

III. துன்புறுத்தலை எதிர்கொள்ளும் கிறிஸ்தவன்: துன்புறுத்தலின் மறைபொருளை ஊடுருவிச்செல்கின்ற விசுவாசத்தை உடைய விசுவாசி, மகிழ்ச்சியுடன் அவ்விசுவாசத்தைப் பற்றுகின்ற சக்தியைத் தனது நம்பிக்கையில் கண்டடைகிறான். பழைய ஏற்பாடு இத்தகைய மனப்பான்மையின் மாதிரிகளை அவனுக்கு ஏற்கனவே அளித்துள்ளது. இயேசு தனது எடுத்துக்காட்டினாலும், அறிவுரைகளினாலும் தனது முழு நிறைவை அதற்கு அளிக்கிறார்.

1. மாதிரிகள்: துன்புறுத்தலை எதிர்கொள்ளும்போது, பழைய ஏற்பாட்டு நீதிமான்கள் அனைவரும், நம்பிக்கையிலான பொறுமை மற்றும் துணிவான பற்றுறுதி போன்ற மனப்பான்மையைத் தழுவியிருந்தனர். விசுவாசமிக்கவராகவும், செபிப்பவராகவும் உள்ள துன்புறுத்தப்பட்ட நீதிமானின் மாதிரியாக எரேமியா உள்ளார். அவரது ''அறிவிப்புகள்'' சோகமான புலம்பல்களாக இருப்பதுபோல் பற்றுறுதியின் உறுதியான கூற்றுகளுமாகும். என்ன நிகழ்ந்தாலும் தன்னைப் பாதுகாக்கவும், காப்பாற்றவும் ஆண்டவர் தன்னோடு உள்ளார் என்பதை அவர் அறிந்திருந்தார் (எரே 1:8.19).

துன்புறும் ஊழியனும் (எசா 52-53), துன்புறுத்தப்பட்ட சங்கித ஆசிரியர்களும் இந்த அனுபவத்தை நன்கு உணர்ந்திருந்தனர். ''ஆண்டவரே, என்னைத் துன்புறுத்துவோர் அனைவரிடமிருந்தும் என்னைக் காப்பாற்றித் தப்புவியும்'' (சங் 7:1). இத்தகைய துயரம் மற்றும் நம்பிக்கை மிகுந்த கூக்குரலானது சங்கீதங்கள் முழுவதும் காணப்படுகிறது. பகைவனுக்கெதிரான சாபங்கள் (சங் 35; 55; 69; 70; 109) அல்லது இறை பழிக்கான வேண்டுகோள்கள் (எரே 11:20; 15:15; 17:18) ஆகியவற்றுடன் பெரும்பாலும் இணைந்த நிலையில் இத்தகைய செபமானது, பற்றுறுதியான இறைவன் தன்னுடையவர்க்கு அளிக்கின்ற மீட்பின் உறுதிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது (சங் 31:6; காண் 23:4; 91:15).

துன்புறுத்தப்பட்ட இயேசு தன்னுடனிருக்கும் தனது தந்தையில் நம்பிக்கை கொண்டதோடு மட்டுமின்றி (மத் 26:53; யோவா 16:32), தன்னைத் துன்புறுத்தியவர்களுக்காகவும் செபிக்கிறார் (லூக் 23:34). எவ்விதத் துன்புறுத்தலையும் தாங்குகின்ற அன்பின் மிகமேலான எடுத்துக்காட்டை அவர் தனது சீடர்களுக்கு அளித்தார் (1 கொரி 13:7).

துன்புறுத்தல்களை எதிர்கொண்ட அப்போஸ்தலரும் முதல் கிறிஸ்தவர்களும், நற்செய்தியை அறிவிக்க இயலக்கூடியவர்களாக இருப்பதற்கெனத் தைரியமாக இருக்கச் செபிக்கின்றனர் (அ.ப. 4:29; 12:5). மேலும் அவர்கள் நம்பிக்கையையும் உறுதியையும் காட்டுகின்றனர் (அ.ப. 4:13.31; 28:31; பிலி 1:20). தங்களது தலைவரைப் போன்று துன்புறுத்தல்களின் நடுவிலும் பொறுமையுள்ளவர்களாகத் திகழ்கின்றனர் (2 தெச 1:4). அவரைப்போன்று, தங்களைக் கொடுமைப்படுத்துவோரை மன்னிக்குமாறு இறைவனிடம் கேட்கின்றனர் (அ.ப. 7:60).

2. இயேசுவின் அறிவுரைகள்: அவர் அவர்களுக்கு அளித்துள்ள எடுத்துக்காட்டின் மனப்பான்மையுடன் இந்த அறிவுரைகள் ஒத்துப்போகின்றன. அவரைப் போன்று, சீடர் தன்னைத் துன்புறுத்துகிறவர்களுக்காகச் செபிக்க வேண்டும் (மத் 5:44; உரோ 12:14). அவர் துன்புறுத்தலைத் துணிவோடு தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். முன்பின் பாராது துடுக்குத்தனமாய் இருக்கக்கூடாது. ஒருநகரில் அவரைத் துன்புறுத்தினால் வேறொரு நகருக்கு ஓடிப்போக வேண்டும் (மத் 10:23; அ.ப. 13:50-51). சிறைப்படுத்தப்பட்டு, அடிக்கப்பட்டு, மரணத்திற்கு உட்படுத்தப்படுவதை அவர்கள் எதிர்பார்க்க வேண்டும் (மத் 10:16-39; யோவா 16:1-4). இத்தகைய நிலையை எதிர்கொள்ளும்போது அவர் அஞ்சக்கூடாது. அவரது தலைவர் உலகை வென்றுவிட்டார் (யோவா 16:33). இறுதியாக, அவர் அழைக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட விசுவாசமுள்ள தன்னுடையவர்களுடன், இறைப்பற்றற்ற துன்புறுத்துவோரை வெற்றி கொள்வார் (திருவெளி 17:14). சீடனுடைய பகைவர்கள் அவரது ஆன்மாவிற்கு ஒன்றுமே செய்ய முடியாது (மத் 10:28-31). நடுவர் மன்றங்களுக்குமுன் அவர் இழுத்துச் செல்லப்படும்போது இறைவனின் ஆவியானவர் அவருக்குத் துணை புரிவார். விசாரணையின்போது தனது காப்புரைபற்றி அவன் கவலைப்படத்தேவையில்லை (மத் 10:19-20). ஆயினும், துன்புறுத்தலானது ஓர் ஆய்வு, ஒரு சோதனையாக இருப்பதால், விழிப்பாயிருந்து செபிப்பது எப்போதுமே அவசியமாகும். மனம் ஆர்வமுடையதாக இருந்தாலும், உடல் வலுவற்றதாகும் (மத் 26:41 இணை).

இயேசுவின் அறிவுரைகளைப் பவுல் விரிவுபடுத்துகிறார். கிறிஸ்துவின் அன்பினின்று துன்புறுத்தல், வாள் முதலிய எதுவுமே நம்மைப் பிரிக்க முடியாதென அவர் நமக்குக் கூறுகிறார் (உரோ 8:35). மொத்தத்தில், விசுவாசமுள்ளவனாகவும் நிலையானவனாகவும், மகிழ்ச்சியானவனாகவும் தன்னை ஆக்குகின்ற நம்பிக்கையில் சீடன் துன்புறுத்தலை எதிர்கொள்கிறார் (உரோ 12:12; 2 தெச 1:4; காண். மத் 13:21 இணை). தனது நம்பிக்கையை

யாரில் வைத்தோமென அவருக்குத் தெரியும் (2 திமொ 1:12). பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் எண்ணற்ற வேதசாட்சிகளால் சூழப்பட்டு, ''பாவிகளுக்காகத் தனக்கெதிரான குற்றச்சாட்டிற்கு அடிபணிந்த'' கிறிஸ்துவின் மீது பார்வையைப் பதித்த நிலையில், சோர்வின்றி நீடித்த ஆற்றலுடன் அவர் முடிவை நோக்கி ஓடுகிறார் (எபி 11:1-12:3).

3. மகிழ்ச்சி: நம்பிக்கையின் மகிழ்ச்சியானது இவ்வாறு அனுபவித்த துன்புறுத்தலின் விளைவாகும். ''என் பொருட்டுப்பிறர் உங்களை வசைகூறித் துன்புறுத்தும் போது... நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்!'' (மத் 5:11-12). ''வேதனையால் பொறுமையும், பொறுமையால் மனத்திண்மையும், மனத்திண்மையால் நம்பிக்கையும் விளையும். அந்த நம்பிக்கையோ பொய்க்காது என்பதை அறிந்து, அவ்வேதனையால் மகிமைப்படுத்தப்படும்'' கிறிஸ்தவனில் இயேசுவின் இவ்வாக்குறுதியானது நிறைவேறுகிறது (உரோ 5:3தொ; யாக் 1:2 தொ). அவருக்கு வரும் ''வேதனையில் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது'' (2 கொரி 7:4; 12:10; கொலோ 1:24; காண்க அ.ப. 5:41; எபி 10:34). வேதனையில் ஆறுதலானது (2 கொரி 1:3-10) ஆவியின் கனியாகவும் (1 தெச 1:6; அ.ப. 13:52; காண்க: கலா 5:22), அதே நேரத்தில் அரசினுடைய பிரசன்னத்தின் அடையாளமாகவும் உள்ளது.

பயங்கரச் சோதனைகளின் காலத்தில் எழுதப்பட்டு, திருச்சபையினுடைய வாழ்வைப் பிரதிபலிக்கும் திருவெளிப்பாட்டு நூல், இயேசுவினுடைய வெற்றியையும் அரசு நிறுவப்படுவதையும் உறுதியளித்து, துன்புறுத்தப்பட்டவர்களின் இதயங்களில் இந்த மகிழ்ச்சியான நம்பிக்கையை ஊட்டுகிறது. அனைத்துத் திருச்சபைக்குமாகச் சேர்த்து ஒவ்வொருவருக்கும் பின்வரும் வார்த்தைகளை உயிர்த்த ஆண்டவர் உரைக்கிறார்: ''உனக்கு வரப்போகும் துன்பங்களுக்கு அஞ்ச வேண்டாம். இதோ, அலகை உங்களுள் சிலரைச் சிறையில் தள்ளிச் சோதனைக்கு உட்படுத்தப்போகிறது. பத்து நாள் வேதனையுறுவீர்கள். சாவதாயினும் விசுவாசத்தில் நிலைத்திரு! வாழ்வை உனக்கு நான் வெற்றிவாகையாய்ச் சூட்டுவேன்'' (திருவெளி 2:10).

தூ

தூக்கு நூல் (PLUMB LINE)

தூக்கு நூல் என்பது ஒரு நீண்ட நூல். இதன் ஒரு முனையில் ஈயக்குண்டு அல்லது உலோக எடை இணைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு நூலோடு எடை இணைக்கப் பட்ட இக்கருவி சுவர்கள் நேராக இருக்கின் றனவா என்பதைச் சோதிக்கப் பயன் படுத்தப்படுகிறது.

அக்காதிய மொழி மூல வார்த்தையை ஆராய்ந்தால் இவ்வார்த்தைக்கு நூல் அல் லது தூக்கு நூல் குண்டு என இரு பொருள்கள் கொள்ளலாம். ஆமோ 7:7-8-இல் இது குறிப்பிடப்பட்டுள்ளது. கடவுள் தூக்கு நூற்குண்டைக் கையில் பிடித்தவராய்ச் சுவர் அருகே நிற்பவராகக் காட்சி காண்கிறார் ஆமோஸ். சுவர் இஸ்ரா யேல் மக்களாக உருவகப்படுத்தப்படுகிறது. அவற்றை அளவுநூல்வைத்து அளப்பது போல் இஸ்ராயேல் மக்களைக் கடவுள் சோதிக்கிறார் என்று ஆமோஸ் கூறுகிறார். இஸ்ராயேல் ஆகிய சுவர் சரியாகத்தான் கட்டப்பட்டிருந்தது; ஆனால் இப்போது நேர்தவறிவிட்டது; ஆகவே அழிக்கப்படும்.

அழிவைப் பற்றிக்கூறும்போது இச்சொற் கள் பயன்படுத்தப்பட்டுள்ளன (2 அர 21:13; எசா 34:11).

மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களிலும் இச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நீதியும் நேர்மையுந்தான் தூக்குநூலும், குண்டுமாகும் (எசா 28:17).

தூக்கு மரணம் (HANGING)

பகிரங்கப் பகைவர்கள், குற்றவாளிகள், போன்றோர் கொல்லப்பட்டபின், மேலும் இழிவுபடுத்தப்படுவதற்காக அல்லது பகி ரங்க எச்சரிக்கையாகத் தூக்கிலிடப்படுவர் (ஆதி 40:19; யோசு 8:29; 10:26; 2 சாமு 4:12). விவிலியச் சட்டம் தூக்கிலிடுதலை ஒரு மரண தண்டனையாக ஏற்றுக்கொள்ள வில்லை. ஆயினும் அவனது பிணம் இறக்கப்பட்டு அதே நாளில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை யோடு அதை அனுமதிக்கிறது (உப 21:22-23). ஏனெனில் தூக்கிலிடப்பட்ட மனிதன் நாட்டைத் தீட்டுப்படுத்துகிறான். மேலும் அது இறைவனுக்கு அவமான மாகும். ஏனெனில் அவன் இறைவனின் சாயலானவன்.

இதற்கு மாறாக எகிப்தியர் (ஆதி 40:19), பெலிஸ்தியர் (1 சாமு 31:10), தாவீது (2 சாமு 21:10-14) ஆகியோர் பிணத்தை நீண்ட காலத்திற்குத் தொங்கவிட்டனர்.

தூக்கிலிடுதல், உப 21:23-ஐ இயேசுவுக் குச் சாற்றிக்கூறுவது ஆகியவை பற்றி அ.ப. 5:30; 10:39; கலா 3:13-இல் காண்க. ஒருவன் தன்னையே தூக்கிலிட்டுக் கொள்தல் அதா வது தற்கொலை, இருமுறை குறிக்கப்படு கிறது (2 சாமு 17:23; மத் 27:5).

தூசி, பதர் (CHAFF)

தானியங்களைத் தூற்றும்பொழுது காற்றி னால் அடித்துச் செல்லப்படும் சிறிய உலர்ந்த பொருளாகும். அழிக்கப்படுகின்ற பயனற்றவற்றை அல்லது தீமையைக் குறிக்க, உருவகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது (யோபு 21:18; சங் 1:4; 35:5; எசா 17:13; 29:5; 41:15; ஓசே 13:3; செப் 2:2; மத் 3:12).

தூண்கள் (PILLARS)

சாதாரணமாகக் குலமுதுதலைவர்கள் காலத்தில் நினைவுச் சின்னமாக நடப்பட்ட கற்களைத் தூண்கள் குறிக்கின்றன (ஆதி 28:18; 31:42-52; 35:14.20; யாத் 24:4; 2 சாமு 18:18). இத்தகைய நினைவுத்தூண்கள் இறைவனது பிரசன்னத்தை எடுத்துக்காட்டப் பயன்பட்டன (ஆதி 28:22). இவை நடப் பட்ட இடங்கள் புனித இடங்களாகப் பாரம்பரியத்தில் இடம் பெற்றன (28:19; 31:13; 35:15). இஸ்ராயேலின் வடவரசில்

தூண்கள் வழிபாட்டு நிலையங்களின் ஒரு பகுதியாயின (ஓசே 3:4; 10:1-2). இவை எகிப்தில் பிற்கால யூத வழிபாட்டு மைய மும் ஆகின (எசா 19:19).

தூண் என்பதைக் குறிக்கும் எபிரேயச் சொல் கானானியத் தேவர்களைக் குறிக்க அமைக்கப்பட்ட கற்களையும் குறித்தது (காண். யாத் 23:24; லேவி 26:1; 1 அர 14:23; 2 நாள் 33:1). இக்கற்கள் செப்பமற்ற சிலைகளாகவும், பாகாலோடு தொடர் புடையவையாகவும் கருதப்பட்டிருக்கலாம் (2 அர 3:2; 10:26-27). பெண் தேவதை களைக் குறிக்கும் அசெரிம்களோடு (உ.ம் யாத் 34:13; 1 அர 14:23; 2 அர 17:10; மீக் 5:13-14) சேர்த்து இத்தூண்கள் அமைக் கப்படுவது, இவை இலிங்கப் பொருளை உணர்த்தலாம் என்று சுட்டுகின்றன.

கலைப்பண்புடைய தூண்களும் குறிக்கப் படுகின்றன (உ.ம். யாத் 38; 1 அர 7; எசே 26:1). எகிப்திலிருந்து பாலைவனம் வழியாய் இஸ்ராயேலர் பயணம் செய்த போது அவர்களோடு பயணம் செய்த மேகத்தூண், நெருப்புத்தூண் ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும் (யாத் 13:17-22).

புதிய ஏற்பாட்டில் ''உண்மைக்குத் தூணும் அடிப்படையும்'' (1 திமொ 3:15) ஆகிய திருச்சபையையும், முக்கிய திருச்சபைத் தலைவர்களையும் (கலா 2:9), விண்ணக ஆலயத்தில் நிலையாக நிறுவப்படுபவர் களையும் (திருவெளி 3:12) குறிக்கத் தூண் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தூண்டில் (FISH HOOK)

சாதாரண மீன் தூண்டிலைக் குறிக்கிறது. இதைக்குறிக்க எபிரேய மொழியில் பல சொற்கள் பயன்பட்டுள்ளன (எசா 19:8; அப 1:15; ஆமோ 4:2; மத் 17:27). யோபு 40:24-இல் தூண்டில் பெகிமோத்தின் மூக் கைத் துளைக்கப் பயன்படும் கொக்கி என்று விவரிக்கப்படுகிறது. இது அந்த விலங்கைப் பிடிக்கப் போதுமானதன்று.

தூண்வரிசைவாயில் (PARBAR)

ஆலயத்தின் முக்கிய கட்டடத்திற்கு மேற் கில், அதாவது பின்னால், அமைந்திருந்த ஒரு கட்டட அமைப்பை இச்சொல் குறிக் கிறது (1 நாள் 26:18). இது எசே 41:12-இல் குறிக்கப்படும் கட்டடத்தோடு ஒத்துப் போகிறது. ஆனால் இது எதற்காகப் பயன் பட்டது என்பது தெளிவாக இல்லை. இது கூரையில்லாத இடமாகவும், கி.மு. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து (?) பலிகளின் கழிவுப் பொருட்களைச் சேர்த்து வைப்பதற்குப் பயன்பட்டதாகவும் கருதப்படுகிறது. இந்த இடத்தை 2 அர 23:11-இல் குறிக்கப்படும் இடத்தோடு தொடர்புபடுத்தலாம். பின்னது மனாசே காலத்திலிருந்து சூரிய கடவுளின் வழிபாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட குதிரை கள் வைக்கப்பட்டிருந்த இடமாக இருந்தது. அப்போதுகூரை வேயப்பட்டிருந்தது. இதை யோசியா அகற்றினார்.

தூதாயிச் செடி (MANDRAKE)

இது மத்தியதரைக் கடற்கரைப் பகுதிக ளில், குறிப்பாகச் சீரியா, பாலஸ்தீனத்தில் சாதாரணமாகக் காணப்படும் ஒரு பூண்டு அல்லது சிறு செடி வகையைச் சேர்ந்தது. இது அடிமரம் அல்லது தண்டு இல்லாத செடி; முட்டை வடிவ இலைகளையும் கருஞ்சிவப்புப் பூக்களையும் கொண்டது. இதன் பழங்கள் மே மாதத்தில் நல்ல மஞ்சள் நிறத்தில் பழுத்திருக்கும் (ஆதி 30:14; கோதுமை அறுவடைக் காலத்தில்). அதன் பழங்களும் கவடுபட்டசதைப்பிடிப் பான வேர்களும் சேர்ந்து மனித உடலைப் போன்று தோன்றும். இவை காம இச்சைக ளைத் தூண்டவும் கற்பம் தரிக்கவும் பாரம் பரியமாகப் பயன்பட்டதாகத் தெரிகிறது ஆதி 30:14 தொ-இல் வரும் கதை பண்பாடு வளர்ச்சியுறாத காலத்தைப் பிரதிபலிக்கி றது. இதில் இச்செடியின் பழம் ''பாலுணர் வுக் கனி'' என்றழைக்கப்படுகிறது.

இதன் மணம் பலருக்கு வெறுக்கத்தக்க தாயினும், உ.ச. 7:14 (காதற்கனி), அது மணம் கமழுகின்றது என்று கூறுகிறது.

தூதுப்பணி (MISSION)

I. இறைத்திருப்பணிபற்றிய கருத்து கிறிஸ்தவரல்லாத சமயங்களுக்கு முற்றிலும் புதிய ஒன்றன்று. கிரேக்கப் புறவினத்தாரிடம் இவ்வெண்ணத்தை ஓரளவிற்குச் சந்திக்க லாம். எப்பிக்தேத்து என்பவர் தன்னை ஓர் எடுத்துக்காட்டாகத் தெய்வங்களால் அனுப்பப்பட்ட தூதுவர், பார்வையாளர், தெய்வங்களின் முன்னறிவிப்பாளர் எனக் கருதினார். தனது படிப்பினை மற்றும் சாட்சியத்தின் மூலம் மனிதனில் இறைப் பொறியைப் புதுப்பிப்பது, விண்ணகத்தி லிருந்து தனக்கு அளிக்கப்பட்ட திருப்பணி யெனக் கருதினார். அதே முறையில் மெர்க் குரியின் சமயச்சடங்கிலும், தனது மன்றாட் டின் மூலம் மனித இனம் இறைவனால் காப்பாற்றப்படுவதற்காக, தகுதியுடையோருக் கான ஒருவழிகாட்டியாகத் தன்னையே அர்ப்பணிக்க அதில் பயிற்சி பெறுபவர் அழைக்கப்பெறுகிறார். ஆனால் விவிலிய வெளிப்பாட்டில் தூதுப்பணி என்ற கருத்து வேறுபட்ட அமைப்புகளைக் கொண்டுள் ளது. இது மீட்பின் வரலாற்றுடன் முற்றி லும் தொடர்புடையதாகும்; ஒவ்வொரு தனிப்பட்ட நிகழ்ச்சியிலும் தெளிவாக வெளிப்படுகின்ற இறைவனின் நேர்முறை யான அழைப்பைக் கொண்டுள்ளது. இது தொகுப்புக் குழுக்களுக்கும் தனிப்பட்டவை களுக்கும் பொருந்தும். முன்குறித்தல் மற்றும் அழைப்பு ஆகிய கருத்துகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட நிலையில் அனுப் புதல் என்னும் வினைச்சொல்லை அடிப் படையாகக் கொண்ட சொற்றொகுதியில் வெளிப்படுத்தப்படுகின்றது.

II பழைய ஏற்பாடு

1. **இறைவனின் தூதுவர்கள்:**

அ. மோசேயை முதலாவதாகக் கொண்ட இறைவாக்கினர்களின் அழைப்பில்தான் (காண்க: எரே 7:25), இறைத்தூதுப்பணி என்ற கருத்து நன்கு கிரகிக்கப்படுகிறது.

''நான் உன்னை அனுப்புகிறேன்...'' என்ற சொற்றொடர் மொத்த இறைவாக்கு அழைப்பின் மையத்தில் உள்ளது (காண்க: யாத் 3:10; எரே 1:7; எசே 2:3-4; 3:4-5). இறைவனின் அழைப்பிற்கு ஒவ்வொரு வரும் தனது தனிப்பட்ட மனநிலைக்கேற்பப் பதிலளிக்கின்றனர். எசாயா தன்னையே அளிக்கிறார். ''இதோ, நானிருக்கிறேன்! அடி யேனை அனுப்பும்'' (எசா 6:8). எரேமியா மறுக்கிறார் (எரே 1:6). மோசே தனது பணியை நம்பிக்கைக்குரியதாக்க ஓர் அடை யாளம் கேட்கிறார் (யாத் 3:11 தொ); மறுக்க முயல்கிறார் (4:13), கசப்பாக முறையிடு கிறார் (5:22). அனைவரும் இறுதியில் கீழ்ப் படிகின்றனர் (காண்க: ஆமோ 7:14-15). யோனா இதற்கு விதிவிலக்காவார்.அவர் தனது தூதுப்பணியை ஏற்க மறுத்து, நாடுக ளுடைய மீட்பைக் கண்டு இடர்ப்படுகிறார் (யோனா 1:1 தொ). இறைவனிடமிருந்து பெறப்பட்ட தனிப்பட்ட தூதுப்பணி பற் றிய இந்த உணர்வானது உண்மையான இறைவாக்கினரின் அத்தியாவசியமான தனிக் கூறாகும். எரேமியா எதிர்த்துப் போராடிய, இறைவனால் அனுப்பப்படாத ஆனால் ''இறைவனின் வார்த்தை'' என்று கூறித் திரிந்த போலி இறைவாக்கினரிடமிருந்து இப்பண்பு அவரை வேறுபடுத்திக் காட்டு கிறது (எரே 14:14-15; 23:21.32; 28:15; 29:9). சற்றுப்பரந்த அளவில், இறைவனுடைய மக்களில் வரலாற்றில் நற்பங்கு வகித்த அனைவரையும் இறைத்தூதுப்பணி பெற்ற வர்கள் என்று கூறலாம். ஆனால், அதே போன்ற தூதுப்பணிகள் உள்ளதை அறிந்து கொள்வதற்கு, இறைவாக்கினரின் சான்றும் தேவையாக உள்ளது.

ஆ. இறைத் தூதுவர்களின் அனைத்துத் தூதுப்பணிகளும் மீட்புத்திட்டத்துடன் தொடர்புள்ளவையாகும். அவற்றின் பெரும்பகுதி இஸ்ராயேல் மக்களுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. ஆனால், அதிலும் பரந்த வேறுபாடுகளுக்கு இடமுண்டு. இறைவாக்கினர்கள் மக்க ளுடைய இதயங்களை மாற்ற, தண்டனை அல்லது வாக்குறுதிகளை அறிவிக்க அனுப் பப்படுகின்றனர். அவர்களுடைய பங்கா னது, மனிதருக்குக் கொண்டு வருவதற்கென அவர்களிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்

பட்டுள்ள இறைவனுடைய வார்த்தையுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது. மற்றத் தூதுப் பணிகள், இஸ்ராயேலின் வரலாற்று ஊழின்மீது நேரடியாக அக்கறை கொண்டுள்ளன. யாக்கோபின் பிள்ளைகளுக்கு எகிப்தில் ஒரு வரவேற்பைத் தயாரிக்க யோசேப்பு அனுப்பப்படுகிறார் (ஆதி 45:5). மோசே, அவர்களை மீட்டு நடத்திச்செல்ல அனுப்பப்படுகிறார் (யாத் 3:10; 7:16; சங் 105:26). யோசுவா; நீதிபதிகள், தாவீது, நாடு கடத்தப்பட்ட பின்னர் யூதேயாவை மீண்டும் கட்டியெழுப்பியோர், மக்கபேயர் கிளர்ச்சியின் தலைவர்கள் முதலிய இறைவனுடைய மக்களின் தலைவர்கள் மற்றும் விடுதலையாளர்களுக்கும் இதே நிலை பொருந்தும். புனித வரலாற்று ஆசிரியர்கள் வெளிப்படையாகத் தூதுப்பணியைப் பற்றிப் பேசாவிட்டாலும் அவர்கள் வழியாக இறைவனது மீட்பு தன்னுடைய இலக்கை நோக்கி நகர்வதன் காரணமாக அவர்களை இறைத் தூதுவர்களாக வெளிப்படையாகவே கருதுகின்றனர். புறவினத்தாரும் கூட இதில் நற்பங்கு வகிக்கலாம். இவ்வாறு நேர்மையற்ற இஸ்ராயேலைத் தண்டிக்க அசீரியாவும் (எசா 10:6), பாபிலோனைக் கைப்பற்றி யூதரை விடுவிக்க சைரசும் (எசா 43:14; 48:14-15) அனுப்பப்படுகின்றனர். புனித வரலாறானது முடிவாக ஒரே முடிவிற்கு நடத்திச் செல்கின்ற இத்தகைய தனிப்பட்ட தூதுப்பணிகளின் பல்வேறு குறுக்குநெடுக்கான முறைகளால் அமைக்கப்பட்டுள்ளது.

2. இஸ்ராயேலின் தூதுப்பணி:

அ. தூதுப்பணிக்கும் அழைப்பிற்கும் இடையில் எப்போதும் உள்ள தொடர்பைக் கவனித்தோமாயின், இஸ்ராயேல் மக்களுடைய தூதுப்பணி என்று ஒன்று உள்ளது. அதுபற்றி நாம் பேச வேண்டும் என்று உணர்வோம். இஸ்ராயேலின் அழைப்பானது இறைவனுடைய திட்டத்தில் அதனுடைய தூதுப்பணியை விளக்குகிறது. எல்லா நாடுகளினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேலானது அர்ப்பணிக்கப்பட்ட மக்களினம்; ஆண்டவருடைய ஊழியம் ஒப்படைக்கப்பட்ட குருத்துவக் கூட்டம் (யாத் 19:5-6). மற்ற நாடுகளின் பெயரால் இஸ்ராயேலானது இப்பங்கை நிறைவு செய்கிறது என்று கூறப்படவில்லை. ஆயினும் வளர்கின்ற வெளிப்பாட்டிற்கு ஒத்தநிலையில், ஒரே இறைவனுடைய வழிபாட்டில் பங்கு பெறுவதற்காக அனைத்து நாடுகளும் இஸ்ராயேலுடன் சேருகின்ற காலத்தை இறைவாக்குக் கூற்றுகள் முன்னதாகவே காண்கின்றன (எசா 2:1தொ; 19:21-25; 45:20-25; 60). அப்போது இஸ்ராயேலானது அனைத்து மனுக்குலத்திற்கும் வழிகாட்டும் விளக்காக உருவாகுமாறு அழைக்கப்படுகிறது.மேலும், இஸ்ராயேலானது மீட்புத் திட்டத்தின் பொறுப்பாளராக இருக்கிறதென்றால் அத்திட்டத்தில் மற்ற மக்களையும் பங்கேற்க ஒன்று சேர்க்கின்ற தூதுப்பணியும் அதற்குண்டு. ஆபிரகாமின் அழைப்பு முதல், இந்த மூலக் கருத்து அதில் உள்ளது (ஆதி 12:3). இறைவெளிப்பாடானது வளர்ச்சியுற்ற நிலையில் இறை நோக்கத்தை வெளிப்படுத்தும்போது, அது மிகத்துல்லியமானதாக உருவாகிறது.

ஆ. நாடு கடத்தப்படுதல் முதற்கொண்டு, இத்தூதுப்பணிபற்றிய இஸ்ராயேலின் தெளிவான உணர்வு அறியப்படுகிறது. தூதர் என்ற அளவில் ஆண்டவரால் அனுப்பப்பட்ட ஆண்டவரின் ஊழியன் தான் என்பதை அது அறிந்துள்ளது (எசா 42:19). இஸ்ராயேலானது புறவினத்தாருக்கான இறைவனின் சாட்சியாக உள்ளது. ஒரே உண்மையான இறைவன் அவரே என்பதை அவர்கள் அறியச்செய்யவும் (43:10.12; 44:8), சட்டத்தினுடைய அழியாத ஒளியை உலகிற்கு அளிப்பதையும் (ஞான 18:4) இஸ்ராயேல் தனது கடமையாகக் கொண்டுள்ளது. நாட்டின் அழைப்பானது இங்குச் சமய உலகளாவிய தன்மைக்கு விரிவாகிறது. இனிமேலும், புறவினத்தாரின்மீது ஆதிக்கம் செலுத்துவது பற்றிய பிரச்சனை இல்லாமல் (சங் 47:4), மாறாக அவர்களை மனமாற்றுவதான கடமையே நிலவுகின்றது. இவ்வாறு, இறைவனுடைய மக்கள் பிறரை மனம்மாறச் செய்து தங்களுடன் சேர்த்துக் கொள்கின்றனர் (எசா 56:3.6-7). இறை ஏவுதல் பெற்ற

நூல்களில் ஒரு புதிய போக்குப் பரவி நிற்கிறது. புறவினத்தாரைப் பயனடைகிறவர் களாகக்கொண்ட இறைவாக்குத் தூதுப் பணியை யோனாவின் நூல் காட்டுகிறது. பழமொழிநூலில், இறை ஞானத்தின் தூது வர்கள், அதன் விருந்திற்கு அனைத்து மனித இனங்களையும் வெளிப்படையாகவே அழைக்கின்றனர் (பழ 9:3 தொ). இறுதி யாக இஸ்ராயேல், தூதுப்பணி மக்களாக உருவாகிறது. குறிப்பாகப் புனித நூல்கள் கிரேக்க மொழியில் மொழிபெயர்க் கப்பட்ட அலக்சாந்திரியாவில், இஸ்ராயேல் தூதுரை மக்களாக விளங்குகிறது.

3. புதிய ஏற்பாட்டிற்குப் பீடிகை:

அ. இறைத்தூதுப்பணியின் மையக்கருத் தானது புதிய ஏற்பாட்டிற்கென வெளிப் படையாகத் தயாரிக்கின்ற இறைவாக்கு இறுதிக்கால இயலில் மீண்டும் காணப்படு கிறது. ''மக்களின் உடன்படிக்கை மற்றும் நாடுகளின் ஒளி'' (எசா 42:6-7; 49:5-6) என்று ஆண்டவரால் குறிப்பிடப்படுகின்ற ஊழிய ரின் பணியாக இது உள்ளது. ''எளியோ ருக்கு நற்செய்தி அறிவிக்க'' ஆண்டவர் அனுப்பிய மறைபொருளான இறைவாக்கின ரின் தூதுப்பணியே இது (எசா 61:1-2). அவர் இறைவனுக்கு முன்னால் வழியைத் தயாரிக்கின்ற (மலா 3:1) புதிரான தூதுவர் ஆவார்; புதிய எலியா ஆவார் (3:23). தங்களுடைய சகோதரருக்கு ஆண்டவ ருடைய மகிமையைக் காட்ட விரும்புகிற மனம் மாறிய புறவினத்தாரின் தூதுப்பணி யாகும் அது (எசா 66:19-20). இந்த இறைவாக்குகள் எவ்வாறு நிறைவேறும் என்பதைப் புதிய ஏற்பாடு காட்டும்.

ஆ. சுருக்கமாக, வாக்கு, ஞானம் மற்றும் ஆவிபற்றிய இறையியலானது வியப்பூட் டும் வழியில் இந்த இறை உண்மைகளை ஆட்தன்மைப்படுத்தி அவைகளின் தூதுப் பணி பற்றிப் பேசத் தயங்குவதில்லை. இவ்வுலகில் தமது சித்தத்தை நிறைவேற்று வதற்கென இறைவன் தனது வாக்கை அனுப்புகிறார் (எசா 55:11; சங் 107:20; 147:15; ஞான 18:14 தொ). கடின உழைப் பில் மனிதனுக்குத் துணைபுரிவதற்கென அவர் தனது ஞானத்தை அனுப்புகிறார் (ஞான 9:10). உலகின் முகத்தைப் புதுப்பிப்ப தற்காகவும் (சங் 104:30; காண்க: எசே 37:9-10), மனிதர் தமது சித்தத்தை அறியச் செய்வதற்காகவும் (ஞான 9:17) அவர் தனது ஆவியை அனுப்புகிறார். இந்தக் கூற்றுக ளும் புதிய ஏற்பாட்டிற்கு ஒரு பீடிகையாக உள்ளன. தனது வார்த்தையாகவும் ஞான மாகவும் உள்ள இறைமகனுடைய தூதுப் பணியை விளக்கவும் திருச்சபையில் அவரது தூய ஆவியின் தூதுப் பணியைத் தெளிவாக்க வும் அவை புதிய ஏற்பாட்டில் பயன்படுத் தப்படும்.

II. புதிய ஏற்பாடு

1. இறைமகனுடைய தூதுப்பணி:

அ. மலாக்கியாவினால் முன்னுரைக்கப் பட்ட புதிய எலியாவும், இறைவாக்கினரில் இறுதியானவரும், மிகப்பெரியவரும், இறைத் தூதருமான திருமுழுக்குயோவானுக்குப் பின்னர் (மத் 11:9-14), இறைவனுடைய ஒப்புயர்வற்றத் தூதுவராகவும், எசாயா நூலில் கூறப்பட்டவருமாக இயேசு மனித ரிடையே பணி செய்யத் தொடங்குகிறார் (லூக் 4:17-21; காண் எசா 61:1-2). கொலை கார திராட்சைத் தோட்டக் குத்தகைக்காரர் உவமையானது இறைவாக்கினரின் தூதுப் பணியோடுஅவரது தூதுப்பணி கொண்டுள்ள தொடர்ச்சியைக் குறைத்துக் காட்டினாலும், அதே நேரத்தில் இரண்டிற்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாட்டையும் சுட்டிக்காட்டு கிறது. தனது ஊழியர்களை அனுப்பிய பின்னர், குடும்பத்தலைவர் தனது மக னையே அனுப்புகிறார் (மாற் 12:2-6இணை). இதன் காரணமாகவே தூதுவரை ஏற்பது அல்லது புறக்கணிப்பதன் மூலம் அவரை அனுப்பியவரையே ஏற்கவோ, புறக்கணிக் கவோ செய்கிறோம் (லூக் 9:43; 10:16). அதாவது, அனைத்தையும் தனது தூதுவ ரிடம் அளித்த தந்தையையே புறக்கணிக் கிறோம் (மத் 11:27). தந்தைக்கும் மகனுக்கும் இடையிலுள்ள மறைபொருளான உறவு முறையினை ஓரளவாயினும் காணுமாறு நம்மை அனுமதிக்கின்ற இறைத் தூதுப்பணி

பற்றிய இந்த உணர்வானது தனிச்சிறப்பான சொற்றொடர்களில் வெளிப்படுத்தப்படுகிறது: நற்செய்தியை அறிவிக்கவும் (மாற் 1:3 இணை), திருச்சட்டத்தையும் இறைவாக்குகளையும் நிறைவேற்றவும் (மத் 5:17), உலகின் மீது தீயைக் கொணரவும் (லூக் 12:49), சமாதானத்தையல்ல, வாளைக் கொண்டு வரவும் (மத் 10:34), நீதிமான்களையல்ல பாவிகளை அழைக்கவும் (மாற் 2:17 இணை), தொலைந்து போனதைத் தேடிக் காப்பாற்றவும் (லூக் 19:10), பணி புரிந்து தனது உயிரைப் பரிகாரமாக அளிக்கவும் (மாற் 10:45 இணை), ''நான் அனுப்பப்பட்டேன்...''; ''நான் வந்தேன்''; ''மனுமகன் வந்துள்ளார்'' ஆகியவை அச்சொற்றொடர்களில் சிலவாகும். இயேசுவால் நிறைவேற்றப்பட்ட மீட்புப்பணியின் இந்த அனைத்துக் கூறுகளும் கலிலேயாப் போதனை முதல் சிலுவைப்பலி வரையிலான, தந்தையிடமிருந்து அவர் பெற்ற தூதுப்பணியுடன் ஒன்றுபட்டுள்ளன. ஆயினும் தந்தையின் திட்டத்தில் இத்தூதுப் பணியானது குறிப்பிட்ட பரப்பையே கொண்டுள்ளது. இஸ்ராயேல் குலத்தாருள் காணாமல் போன ஆடுகளாய் இருப்போரிடமே இயேசு அனுப்பப்பட்டார் (மத் 15:24). தங்களுடைய மனமாற்றத்தில், உலகின் எல்லா நாடுகளுக்கும் முன்பாக இறைவனுக்கும் அவரது ஆட்சிக்கும் சான்று பகர்கின்ற இஸ்ராயேலின் தெய்வீகத் தூதுப்பணியைப் பற்றி, அவர்கள் உணர வேண்டும்.

ஆ. நான்காவது நற்செய்தியில் தந்தை மகனை அனுப்புவதென்பது போதனைகள் முழுவதிலும் நிலையான பல்லவி போன்று வருகிறது (40 முறை. உ-ம் 3:7; 10:36; 17:18). ஏனெனில், இயேசுவின் ஒரே ஆவல் ''தன்னை அனுப்பினவருடைய சித்தத்தைச் செய்வதும்'' (4:34; 6:38தொ), அவரது பணியைச் செய்து முடிப்பதும் (9:4), அவரிடமிருந்து கேட்டவற்றையே பேசுவதுமாகும் (8:26). இருவருக்குமிடையே வாழ்வொன்றிப்பு எவ்வளவுக்கு இருக்கிறதென்றால் (6:57; 8:6.29), ஒருவன் இயேசுவின்பால் கொள்ளும் மனப்பான்மையே இறைவன்பால் கொள்ள வேண்டிய மனப்பான்மையாகும் (5:23; 12:44-45; 14:24; 15:21-24). அவரது பணியின் நிறைவாகிய பாடுகளைப் பொறுத்தவரை தன்னை அனுப்பினவரிடம் திரும்பிச் செல்லுதலாக இயேசு அவற்றைக் காண்கிறார் (7:33;16:5; 17:11). மனிதரிடம் அவர் கோருகின்ற விசுவாசமானது, தனது தூதுப்பணியின் மீதான விசுவாசமாகும் (11:42; 17:8.21.23.25). இது அனுப்பப்பட்டவராக மகன்மீதும் (6:29) அனுப்பியவராகத் தந்தையின்மீதும் (5:24; 17:3) ஒரே சமயத்தில் கொள்கின்ற விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. இவ்வுலகில் மகனுடைய தூதுப்பணியின் மூலமாக இறைவனுடைய நெருங்கிய மறைபொருளின் ஓர் உயிர்நிலையான கூறு மனிதருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. தனது மகனை அனுப்பியதன் மூலமாக ஒரே உண்மையான இறைவன் (உப 6:4; காண்க: யோவா 17:3) தன்னையே தந்தையாக வெளிப்படுத்துகிறார்.

இ. அப்போஸ்தலிக்க நூல்கள் மகனுடைய இத்தூதுப்பணிக்கு மைய இடத்தை அளிப்பதைக் கண்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை. காலம் நிறைவுற்ற போது நம்மை மீட்டு, நம்மீது மகனுக்குரிய சுவிகாரத்தை அளிப்பதற்காக இறைவன் தனது மகனை அனுப்பினார் (கலா 4:4; உரோ 8:15). நாம் அவர் மூலமாக வாழ்வதற்கென மீட்பராகவும், நமது பாவங்களுக்குப் பரிகாரமாகவும், இறைவன் தனது மகனை உலகிற்கு அனுப்பினார். நம்மீதான அவரது அன்பின் முடிவான எண்பித்தல் இத்தகையதாகும் (1 யோவா 4:9-10-14). இவ்வாறு இயேசு மற்றெல்லாரையும் விட உயர்ந்த தூதுவராகவும் (யோவா 9:7), நமது விசுவாச அறிக்கையின் அப்போஸ்தலராகவும் உள்ளார் (எபி 3:1).

2. மகனுடைய தூதுவர்கள்:

அ. இயேசுவின் தூதுப்பணியானது அவரது தூதுவர்களால் தொடரப்படுகிறது. இதன் காரணமாகவே பன்னிருவரும் அப்

போஸ்தலர் என்னும் பெயரைத் தாங்கியுள்ளனர். தான் உலகில் இருக்கின்ற காலத்திலேயே, சொந்தத் தூதுப்பணியின் குறிக்கோளாகிய நற்செய்தியைப் போதிப்பதற்கும், குணப்படுத்துவதற்கும் (லூக் 9:1 இணை), இயேசு தனக்கு முன்னதாக அவர்களை, ஏற்கனவே அனுப்பிக் கொண்டிருக்கின்றார் (லூக் 10:1). அவர்கள் அறுவடை செய்ய தலைவரால் அனுப்பப்பட்ட ஊழியர்கள் (மத் 9:30 இணை; காண்க: யோவா 4:38). தனது மகனின் மணவிருந்திற்காக விருந்தினரை அழைக்க அரசரால் அனுப்பப்பட்ட ஊழியர்கள் அவர்கள் (மத் 22:3 இணை). தங்களை எதிர்நோக்கியுள்ளவைகளைப் பற்றி எவ்விதப் பொய்க்கருத்துகளையும் அவர்கள் கொண்டிருத்தலாகாது. தூதுவன் அனுப்பியவரைவிட உயர்ந்தவனல்லன் (யோவா 13:16). தலைவன் நடத்தப்படும் விதத்திலேயே ஊழியனும் நடத்தப்படுவான் (மத் 10:24-25). ''ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதுபோல்'' அவர்களை இயேசு அனுப்புகிறார் (மத் 10:16 இணை). ''சீரழிந்த தலைமுறை'' (17:17) தன் தூதர்களைத் துன்புறுத்திக் கொல்லும் என்று அவர் அறிந்திருந்தார் (23:34 இணை). ஆனால், அவர்களுக்குச் செய்யப்பட்டது அவருக்கும், இறுதியாகத் தந்தைக்கும் செய்யப்படும். ''உங்களுக்குச் செவி சாய்ப்பவன் எனக்குச் செவிசாய்க்கிறான். உங்களைப் புறக்கணிப்பவன் என்னைப் புறக்கணிக்கிறான். என்னைப் புறக்கணிப்பவனோ என்னை அனுப்பினவரையே புறக்கணிக்கிறான்'' (லூக் 10:16). ''நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்பவன் என்னை ஏற்றுக்கொள்கிறான். என்னை ஏற்றுக் கொள்பவனோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறான்'' (யோவா 13:20). உண்மையில் அப்போஸ்தலருடைய தூதுப்பணியானது இயேசுவினுடைய பணியுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. ''என் தந்தை என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன்'' (யோவா 20:21). உயிர்த்த இயேசுவின் காட்சிகளின்போது பன்னிருவரையும் ''சொல்லுங்கள்...'' என்று கூறி, இறுதியாக அனுப்புவதனுடைய ஆழமான பொருளுக்கு இவ்வார்த்தையானது ஒளி அளிக்கிறது''. நற்செய்தியை அறிவிக்கவும் (மாற் 16:15), எல்லா இனத்தாரையும் சீடராக்கவும் (மத் 28:19), எங்கும் அவரது சாட்சிகளாக இருக்கவும் (அ.ப. 1:8) அவர்கள் உண்மையாகவே செல்வர். இவ்வாறு, அவரது அப்போஸ்தலர் மற்றும் திருச்சபையின் தூதுப்பணி வாயிலாக, மகனுடைய தூதுப்பணியானது எல்லா மனிதரையும் சென்றடையும்.

ஆ. பவுலின் அழைப்பை விவரிக்கும்போது அப்போஸ்தலர் பணிநூல் இவ்வொளியிலேயே புரிந்துகொள்ளப்பட வேண்டும். இறைவாக்கு அழைப்பின் பாரம்பரியச் சொற்றொடரைப் பயன்படுத்தி, உயிர்த்த இயேசு, ''புறப்படு! ஏனெனில், தொலைவிலுள்ள புறவினத்தாரிடம் உன்னை அனுப்பப்போகிறேன்'' என்று தன்னால் தேர்ந்து கொள்ளப்பட்ட கருவியிடம் கூறுகிறார் (அ.ப. 22:21). புறவினத்தாருக்கான இத்தூதுப் பணியானது நேர் வரிசையில் ஆண்டவருடைய ஊழியனின் பணிவரை பின்னோக்கிச் செல்கிறது (அ.ப. 26:17; காண்க: எசா 42:7.16). ஏனெனில், ஊழியன் இயேசுவின் உருவில் வந்தார். ''இஸ்ராயேலின் காணாமல் போன ஆடுகள் போன்றவர்களுக்கு'' மட்டும் (மத் 15:24) அவர் வெளிப்படுத்திய மீட்புச் செய்தியை இயேசுவின் தூதுவர்கள் எல்லா இனத்தாருக்கும் கொண்டு வருகின்றனர். அப்போஸ்தலர் என்னும் தனது பட்டத்தை மெய்ப்பிக்க, தமஸ்கு செல்லும் வழியில் தான் பெற்ற துத்தூதுப்பணியையே பவுல் அடிக்கடி குறிப்பிடுகின்றார் (1 கொரி 15:8-9; கலா 1:12). அதன் உலகளாவிய தன்மை பற்றி உறுதி கொண்டு, புறவினத்தாரிடமிருந்தும் விசுவாசத்தின் கீழ்ப்படிதலைப் பெறுவதற்கென (உரோ 1:5), பவுல் நற்செய்தியைப் புறவினத்தாருக்கும் கொண்டு சென்றார். நற்செய்தியினுடைய அனைத்துத் தூதர்களின் தூதுப் பணியானது உயிர்நிலையானது என, அவர் கண்டார் (10:14-15). மனிதருடைய இதயங்களில் கிறிஸ்துவினுடைய

வார்த்தையின் மீது விசுவாசத்தைப் பிறப் பிக்கச் செய்தது அவரது உழைப்பே அல்லவா? (10:17). அப்போஸ்தலருடைய சொந்தத் தூதுப்பணிக்கு அப்பாற்பட்டு, மொத்தத் திருச்சபையின் தூதுப்பணி அலுவல் இருக்கிறது. அதன் வழியாகத் திருச் சபை மகனுடைய தூதுப்பணியில் ஒன்றித் துள்ளது.

3. தூய ஆவியின் தூதுப்பணி:

அ. தங்களுடைய தூதுப்பணி அலுவலை முழுமையாகச் செய்து முடிக்க அப்போஸ்தலரும் நற்செய்தியின் போதகர்களும் தங்களுக்குரிய வழிமுறைகளிலேயே விடப்பட்டு விடவில்லை. தூய ஆவியினுடைய வல்லமையின் மூலமாக அவர்கள் தங்களது பணியைச் செய்து முடிக்கின்றனர். ஆவியினுடைய பங்கினைத் துல்லியமாக விளக்க, தூதுப்பணிஎன்ற சொல்லின் முழுப்பொருவில் அதைப்பற்றிப் பேசுவது மீண்டும் மிகஅவசியமாகிறது. இறுதி உணவிற்குப் பிற்பட்ட அறவுரையில் தனது எதிர்கால வருகையை வெளிக் கொணர்ந்த நிலையில், இயேசு அதனைப் பின்வருமாறு விவரிக்கிறார்: ''தந்தை என் பெயரால் அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியான துணையாளரும் உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார்'' (யோவா 14:26). ''நான் தந்தையிடமிருந்து உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வந்து என்னைப்பற்றிச் சாட்சியம் கூறுவார்'' (காண்க: 15:26; 16:2). எனவே, ஆவியை அனுப்புவதில் தந்தையும் மகனும் ஒன்றுபட்டுச் செயல்படுகின்றனர். லூக்கா இயேசுவின் செயலை வலியுறுத்துகிறார். ஆனால் தந்தையின் பங்கோ இறைவாக்கின் சான்றுப்படி, அவர் செய்த உறுதிமொழியில் முதன்மையாக, அடங்கியுள்ளது. ''என் தந்தை வாக்களித்ததை நான் உங்களுக்கு அனுப்பப்போகிறேன்'' என்கிறார் இயேசு (லூக் 24:49; காண்க: அ.ப. 1:4; எசே 36:27; யோவே 3:1-2).

ஆ. திருச்சபையைப் போன்று நீடிக்கக்கூடிய ஆவியினுடைய தூதுப்பணியின் தொடக்க வெளிப்பாடாகிய பெந்தக்கோஸ்தே நிகழ்ச்சியின் பொருள் இதுவேயாகும். பன்னிருவரையும் இயேசுவின் சாட்சிகளாக்குகிறார் (அ.ப. 1:8). தங்களுடைய தூதுக் கடமைகளை அவர்கள் முழுமையாக நிறைவேற்றத் துணை புரிவதற்கென, அவர் அவர்களுக்கு அளிக்கப்பட்டார் (யோவா 20:21-22). அதுமுதல் அவர்கள், அவரில் நற்செய்தியைப் போதிப்பர் (1 பேதுரு 1:12). அவர்களுக்குப்பின் மற்றப் பிற்காலப் போதகர்களும் போதிப்பர். தனது தூதுப் பணிச்செயலை நிறைவேற்றுவதற்கெனத் திருச்சபை வார்த்தையைப் போதிக்கும் போதெல்லாம், ஆவியின் தூதுப்பணியானது இவ்வாறாக, திருச்சபையின் மறை பொருளிலேயே உள்ளார்ந்த பண்பாயிருக்கிறது. ஆவியின் தூதுப்பணியானது மனிதரைப் புனிதப்படுத்துவதன் அடிப்படையிலும் காணப்படுகின்றது. ''அப்பா! பிதாவே...'' (கலா 4:6) என்று குரலெழுப்பும் தனது மகனுடைய ஆவியை இறைவன் அவர்களது இதயத்தினுள் அனுப்புவதனாலேயே, திருமுழுக்கின்போது அவர்கள் மகனுக்குரிய சுவிகாரத்தைப் பெறுகின்றனர். ஆவியின் தூதுப்பணியானது அங்குக் கிறிஸ்தவ அனுபவத்தின் பொருளாகிறது. இவ்வாறாக, இறைத் தலைமையின் மறை பொருளானது வெளிப்படுகிறது. இறைவனுடைய வார்த்தையும் ஞானமும் ஆகிய மகனுக்குப் பின்னர் ஆவியானவர், தனது முறையில், மனித வரலாற்றில் புகும் இறை ஆளாக வெளிப்படுத்தப்படுகிறார். இவர் மனிதர்களை இறைமகனின் சாயலாக உள்ளார்ந்த முறையில் மாற்றி அமைக்கிறார்.

தூதுவர் (MESSENGER, AMBASSADOR, ENVOY, HERALD)

தூதுவன் செய்தியை எடுத்துச் செல்பவன். இவன் தனிப்பட்ட நபருடைய செய்தியையோ (ஆதி 32:3.6; எண் 24:12; 1 அர 12:2), பொதுச் செய்தியையோ (எண் 20:14; உப 2:26; நீதி 6:35; 1 சாமு 16:19; 2 சாமு 2:5;, 2 அர 16:7) சுமந்து செல்வான். இவன் வெற்றியோடு திரும்பும் அரசனின் வருகையை அல்லது பொதுச் சட்டங்களை அறிவிப்பவன்.

கடவுளால், செய்தி சொல்ல மக்களிடம் அனுப்பப்பட்ட, இறைவாக்கினரைக் குறிக்கும் இச்சொல் பயன்படுத்தப்படலாம் (*2 நாள் 36:15-16; எசா 42:19; 44:26; ஆகா 1:13*). இச்சொல் ஆண்டவரின் குருவையும் குறிக்க லாம் (*திருவுரை 5:6; மலா 2:7*). இவர் ஆண்டவர் நாளின் வருகையை அறிவிப்பார் (*மலா 3:1*). ''அரசனின் சீற்றம் மரண தூதுவன்'' என்று கூறப் படுகிறது (*பழ 16:14*). பழைய ஏற் பாட்டுப் பகுதிகளில் கடவுளிடமிருந்து மனிதரிடம் வரும் ''வானதூதரைக்'' குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் 'ஆங்கேலோஸ்' என்ற கிரேக்கச் சொல் 'தூதுவன்' என்று பொருள் படும். புறவினத்தாரின் இலக்கியங்களில் இச்சொல் தேவர்களின் தூதுவர்களைக் குறிக் கின்றது. தூதுவர் வழியை ஆயத்தப்படுத்த அனுப்பப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர் (*ஆதி 32:14; யூதி 1:11; 1 மக் 1:44; லூக் 7:24; 9:52*). மெசியாவின் முன்னோடியும் தூதுவர் என்று குறிப்பிடப்படுகின்றார் (*மத் 11:10; மாற் 1:2; லூக் 7:27; காண்க: 3:1*). மீண்டும் புதிய ஏற்பாட்டில் 'அப்போஸ் தோலோஸ்' என்னும் கிரேக்கச் சொல் தூது வரைக் குறிக்கின்றது. எனவே இச்சொல் அப்போஸ்தலரையும், இறைவாக்கினர் களையும் குறிக்கப் பயன்பட்டது. ஏனெனில் இவர்கள் விண்ணக அரசரிடமிருந்து பெற்ற செய்தியைக் கொண்டு வருகின்றனர் அல்லது அறிவிக்கின்றனர் (*லூக் 14:32; யோவா 13:16; 2 கொரி 5:20; 8:23; எபே 6:20; 2:25*). உருவகமாக இச்சொல் போதகர்களை யும் குறிக்கும் (*1 திமொ 2:7, 2 திமொ 1:11; 2 பேதுரு 2:5*).

தூபக்கலசம் (CENSER)

அகப்பை அல்லது மண் அகற்றும் கருவி போன்ற ஓர் அமைப்பு. அதிலே தீக்கங்கு களை வைத்துச் சாம்பிராணியைத் தூவி, புகையெழுப்பித் தூபம் காட்டப்படும். (*லேவி 10:1; எண் 16:6; 2 நாள் 26:19; எசே 8:11*). இது சில சமயம் நெருப்புத்தட்டு என்றழைக்கப்பட்டது. திரு உறை விடத்தைச் சேர்ந்த துணைக்கலன்களில் இதுவும் ஒன்றாகும். இது வெண்கலத்திலோ (*யாத் 27:3*) பொன்னிலோ (*1 அர 7:50*) செய்யப்பட்டிருக்கும்.

மோசேக்கு எதிரான கோராகுவின் கிளர்ச்சி (*எண் 16*), உசியா தொழுநோயாளி யாகியது (*2 நாள் 26*), எசேக்கியேலின் ஆலயத்தில் ''அருவருக்கத்தக்க காட்சி'' (*எசே 8*) ஆகியவை பற்றிய விவரிப்புகள், ஆலய வழிபாட்டில் தூபம் காட்டும் பணி ஆரோனின் குருத்துவத்துக்குரியது என்றும் இச்சலுகையை ஆரோனியக் குருக்கள் கவன மாய்ப் பாதுகாத்து வந்தனர் என்றும் காட்டு கின்றன. பரிகார நாளில் சுத்தி செய்யும் சடங்கில் தூபக்கலசம் சிறப்பிடம் பெறு கிறது (*லேவி 16:12-14*).

திருவெளிப்பாட்டு நூலில் தூபக்கலசம் தூபம் காட்டுவதற்கும் மண்ணை எரிப்பதற் கும் பயன்படுகிறது (*திருவெளி 8:3.5*).

தூபப்பாத்திரம் (INCENSE DISH)

திரு உறைவிடத்தையும் (*எண் 7:14.20...*) ஆலயத்தையும் (*1அர 7:50*) சேர்ந்த துணைக் கலன்களின் பட்டியலில் தூபப்பாத்திரங்கள் பல சேர்க்கப்படுகின்றன. இவை திருமுன் அப்ப மேசையோடு தொடர்புபடுத்தப்படு கின்றன. இவை தூயபொன்னால் செய் யப்பட்டிருக்க வேண்டும். தூயகச் செக்கே லின்படி ஒவ்வொன்றும் பத்துச்செக்கேல் பொன்னால் செய்யப்பட்ட பன்னிரண்டு தூபம் நிறைந்த பொன் பாத்திரங்கள் இருந்தன (*எண் 7:86*). இவை சாலமோனின் ஆலயம் பற்றிய விவரிப்பிலும் (*1 அர 7:50; 2 நாள் 4:22*), யோசியா ஆலயத்தைப் பழுதுபார்த்த விவரிப்பிலும் (*2 நாள் 24:14*), கி.மு. 586-இல் கொள்ளைப் பொருளாகப் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் பட்டியலிலும் (*2 அர 25:14; எரே 52:18-19*) குறிக்கப்படுகின்றன.

தூபப்பீடம் (INCENSE ALTAR)

சாட்சிப் பேழைக்கு முன்னால் திருத்தூய கத்திரையின் முன்னால் தூயகத்தில் அமைக்

கப்பட்டிருந்த பீடமாகும். இதன் விவரிப்பை யாத் 30:1-10-இல் காண்க. இது சாலமோனின் ஆலயத்தில் ''பொன்பலி பீடம்'' என்று குறிக்கப்படுகிறது (1 அர 7:48). எசே 41-இல் வரும் புதிய ஆலயத் துணைக்கலன்கள் பற்றிய விவரிப்பில் தூபப்பீடம் இடம் பெறவில்லை. முறையான வழிபாட்டைச்சேர்ந்த தூபப்பீடம் பற்றிய விவரிப்பை 1 மக் 1:23; 4:49-என்ற பகுதிகள் கொடுக்கின்றன.

தூபால் (TUBAL - குழப்பம்)

நோவாவின் பேரனும் எப்பேத்தின் மகனுமாவார் (ஆதி 10:2; 1 நாள் 1:5). அவருடைய வழித்தோன்றல்கள் அடங்கிய மக்களின் இனப்பெயராகவும் இது பயன்பட்டுள்ளது (எசே 33:26). இவர்கள் கருங்கடலுக்குத் தென் கிழக்கில் வாழ்ந்திருக்க வேண்டும். இப்பெயர், மோசேக்கு என்ற பெயரோடு (எசே 27:13; 32:26; 38:2-3; 39:1) அல்லது சிறிய ஆசியாவின் மற்ற நாடுகளோடு (எசா 66:19) சேர்த்துக் கூறப்படுகிறது. எசே 27:13-இல் இவர்கள் தீருக்கு அடிமைகளையும் வெண்கலப் பாத்திரங்களையும் வியாபாரப் பொருளாகக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் மகோகு நாட்டின் கோகுக்கு அடிமைகளாக இருந்ததாக எசே 38:2-3; 39:1 கூறுகிறது. இவர்கள் வெகுதூரத்தில் இருந்தவர்களாகவும் அதிகம் அறியப்படாதவர்களாகவும் இருந்ததால், இப்பெயர்கள் இறைவன் மற்றும் அவருடைய மக்களின் எதிரிகளைக் குறிக்கப் பொதுவாகப் பயன்பட்டிருக்கலாம் (காண். சங் 120:5).

தூபால் - காயீன் (TUBAL - CAIN -குழப்பத்தில் ஆர்வமுள்ளவன், கொல்லனாகிய தூபால்)

இலாமேக்குக்குச் சில்லா வழியாகப் பிறந்த மகன். காயீனின் வழித்தோன்றல் (ஆதி 4:22). ''இவர் வெண்கலத்தாலும் இரும்பாலும் எல்லாவிதமான கருவிகள் செய்யும் கொல்லன் ஆனார்'' (4:22). கலாச்சார வளர்ச்சிக்காலத்தில் இவர் வாழ்ந்ததாகத் தெரிகிறது (4:20-21). கலாச்சாரத்தில் வளர வளர மனுக்குலம் பாவத்திலும் வளர்ந்தது என்ற ஆதி 1-11-இல் காணப்படும் யாவே பாரம்பரியத்தின் பொதுக்கருத்தை எடுத்துக் கூற இப்பகுதி பயன்படுகிறது. ஏனெனில் தூர்பால் - காயீன் கொலைகாரனான காயீனைப் பின்னோக்குகிறார் (4:1-17). இலாமேக்கின் பண்பற்ற தற்புகழை முன்னோக்குகிறார் (4:23-24).

தூமா (DUMAH - மௌனம்) - ஆள்

1. இசுமயேலின் மகனும் ஓர் அராபிய இனத்தின் முன்னோரும் ஆவார் (ஆதி 25:14; 1 நாள் 1:30). அராபியாவில் இப்பெயரைக் கொண்ட இடங்கள் பல உள்ளன. அவற்றில் விவிலியக் குறிப்புகளோடு ஒத்துப்போகக் கூடிய ஓர் இடம் தூமாத் அல்-கந்தால் ஆகும். இது இப்போது ஏல்-யோஃபு என்றழைக்கப்படுகிறது. இது அக்காபா வளைகுடாமுனைக்கும் பாரசீக வளைகுடாவுக்கும் ஏறக்குறைய மத்தியில் அமைந்துள்ள ஒரு பாலைவனச் சோலையாகும்.

2. எசா 21:11-இல் வரும் ஒரு பெயராகும். இது ஏதோமைக் குறிக்கும் மறைபொருளான பெயராக இருக்கலாம். இது சேயீர் பற்றிய கூற்றுக்கு அடுத்து வருவதால், இது ஏதோமைக் குறிக்கலாம் என்று கருதப்படுகிறது. எழுபது நூல் வாசகம் ஏதோம் என்றே கொண்டுள்ளது. மௌனம் என்ற பொருளுடைய தூமா என்ற பெயர் இரவின் மற்றும் மரணத்தின் மௌனத்தைச் சுட்டிக் காட்டுகிறது என்பர். புதிரான இக்கூற்று எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை.

தூமா (DUMAH -மௌனம்) - இடம்

யூதாவின் மலைப்பகுதியிலுள்ள ஒரு நகரம் (யோசு 15:52). இது எபிரோனுக்குத் தென்மேற்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத் தெயீர் எத்-தோமே என்று அடையாளம் காட்டப்படுகிறது.

தூய ஆவி (HOLY SPIRIT)

காண்க: இறை ஆவி.

தூயகம் (HOLY PLACE)

உள் திருஉறைவிடம் திருத்தூயகம், தூயகம் என்று பிரிக்கப்பட்டிருந்தது. தூய

கம் முன் பகுதியாகும். இரண்டு பகுதி களுக்கிடையில் ''நீலம், கருஞ்சிவப்பு, சிவப்புநிற நூலாலும் முறுக்கேற்றி நெய்த மெல்லிய நார்ப்பட்டாலும் செய்யப்பட்ட திரை'' தொங்கி, இரண்டையும் பிரித்தது. அதில் கெருபிம்கள் கலைத்திறனுடன் அமைக்கப்பட்டிருக்கும் *(யாத் 26:31-33).*

தூயகம் 9 மீட்டர் நீளமும் 4.5 மீட்டர் அகலமும் உயரமும் கொண்டது. இங்குத் திருமுன் அப்பமேசையும் விளக்குத் தண் டும் இருந்தன. இங்குதான் குருக்கள் தங்களது அன்றாடப் பணிகளைச் செய்தனர் *(28:29; 29:31; 38:24; 40:9; லேவி 6:9.19-20; 10:4.17-18).*

தூய கோலம் (HOLY ARRAY)

இது சரியான உடை அமைப்பைச் சுட்டிக்காட்டும் சொல். சங் 29:2 இறைவன் தூய மாட்சியில் தோன்றுவதாக விவரிக் கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு மற்ற இடங்களில் இச்சொல் பயன்பட்டுள் ளது. விழாச் சீருடை அணிந்து, தூய கோலத்துடன் இறைவனை வழிபட மக்கள் அழைக்கப்படுகின்றனர் *(1 நாள் 16:29; 2 நாள் 20:21; சங் 29:2; 96:9).*

தூயவர் (HOLY ONE, THE)

இஸ்ராயேலின் இறைவணாகிய யாவேக்கு அளிக்கப்பட்ட ஒரு பட்டம். இவர் இஸ்ராயேலின் தூயவர் என்றும் அழைக்கப்படுகிறார். இப்பெயர் யாவே யின் பிரிந்து வேறுபட்டிருக்கும் தன்மை மற்றும் தனித்தன்மை ஆகியவற்றை மட்டு மின்றி, இஸ்ராயேல் மக்களோடு கொண் டிருந்த சிறப்பான உறவையும் உணர்த்திற்று *(காண். 19:6; லேவி 19:2).* இப்பெயர் எசாயாவிலும் *(1:4; 5:19.24; 10:7.20; 40:25; 41:14.16.20; 43:3.14-15),* அதே காலத்து மற்றப் பகுதிகளிலும் *(2 அர 19:22; சங் 71:22; 78:41; எரே 50:29)* வருகிறது. புதிய ஏற்பாட்டில் இப்பெயர் மெசியாவுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது *(மாற் 1:24; அ.ப. 3:14; காண் 1 யோவா 2:20).*

தூய்மை, மாசின்மை (PURE)

I. தூய்மை, பண்டையச் சமயங்களில் ஒரு பொதுவான கருத்தாகும். அது புனிதப் பொருட்களை அணுகுவதற்குத் தேவையான நிலையாகும். ஒழுக்கங்கெட்ட தன்மைக்கு எதிரான ஒழுக்க குணத்தை இது உள் ளுணர்த்தினாலும், இது ஒழுக்கச் செயல்களா லன்றி, சடங்கின் மூலமாகவே பெறப்படு கிறது. எவ்வித ஒழுக்கப் பொறுப்பினையும் கருத்தில் கொள்ளாமல், பொருள் சார்ந்த தொடர்புகளின் மூலமாக இது இழக்கப்படு கிறது. சாதாரணச் சூழ்நிலைகளில், இப்பண் டைய கருத்து வலிமைபெறலாம். ஆனால், இது மாறுபட்ட சிந்தனைகளின் பின்னணி யில் மாறுபட்ட விதமாகச் செயல்படுகிறது. விவிலியத்தில் காணப்படும் சமய நம்பிக்கை யானது அனைத்தையும் நல்லதெனக் காண்கிறது. எனவே, தூய்மை பற்றிய கருத்து உள்ளார்ந்ததாகவும், ஒழுக்கத் தன்மையுடையதாகவும் வளர்ச்சியடையும் போக்குடையது. கிறிஸ்துவில் அது உச்ச நிலை அடைகிறது. கிறிஸ்துவே தனது வாக்கிலும் பலியிலும் தூய்மையின் தனித் தன்மையுடைய மூலம் அடங்கியிருப்பதாக வெளிப்படுத்துகின்றார்.

II. பழைய ஏற்பாடு

1. வழிபாட்டுச் சடங்கின் தூய்மை

அ. புனித சமுதாயத்தின் வாழ்வில்: ஒழுக்க நடத்தையுடன் நேரடி உறவு இல்லாத நிலையில், வழிபாட்டுச் சடங்கிலும் அல் லது புனிதச் சமுதாயத்திற்குட்பட்ட சாதா ரண அன்றாடத் தொடர்புகளிலும் பங்கு கொள்வதற்கான சட்ட முறையான நிற னைத் தூய்மையானது உறுதிப்படுத்துகிறது. லேவி 11-16-இல் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்த இந்தச் சிக்கலான கருத்து பழைய ஏற்பாடு முழுவதிலும் தோன்று கிறது.

இது உடல் சுத்தத்தையும் தன்னுள் கொண்டுள்ளது; அதாவது இழிவானது *(மலம், உப 23:13 தொ),* நோயானது *(தொழுநோயாளர்கள், லேவி 13-14; 2 அர 7:3),* அல்லது நாற்றமெடுப்பது (சடலங்கள்,

எண் 19:11-14; 2 அர 23:13-14) ஆகியவற்றை அகற்றுதலாகும். ஆயினும், பெரும்பாலும் பண்டைய ஒதுக்கி வைக்கும் பழக்கத்திலிருந்து பெறப்பட்ட, சுத்த மற்றும் அசுத்த விலங்குகளுக்கு இடையிலான வேறுபாடானது (லேவி 11) சுகாதாரச் சூழ்நிலைகளால் மட்டுமே விளக்கப்பட முடியாது (லேவி 11).

சடங்குமுறைத் தூய்மையானது புறவினத்தாருக்கெதிரான ஒரு பாதுகாப்பைக் கொடுத்தது. கானான் நாடானது புறவினத்தாரின் பிரசன்னத்தினால் கறைப் படுத்தப்பட்டிருந்தது. போரின் கொள்ளைப்பொருட்கள் அழிக்கப்படுவதற்கென ஒதுக்கி வைக்கப்பட்டன (யோசு 6:24 தொ). அறுவடையின் முதல் மூன்று ஆண்டுகளில் நிலத்தின் கனிகளும் உண்ணப்படாமல் விலக்கப்பட வேண்டும் (லேவி 19:23 தொ). பன்றிகள் முதலிய சில குறிப்பிட்ட விலங்குகள் தூய்மையற்றவையாகக் கருதப்பட்டன (லேவி 11:7). ஏனெனில், புறவினத்தார் தங்களுடைய சமயச்சடங்குச் செயல்களில் இந்த விலங்குகளை இணைத்திருந்தனர் (எசா 66:3).

புனிதமானதாகக் கருதப்பட்ட ஒவ்வொன்றினுடைய உபயோகத்தையும் கலாச்சாரத் தூய்மையானது கட்டுப்படுத்தியிருந்தது. வழிபாட்டுடன் தொடர்புடைய அனைத்தும் மேலான முறையில், தூய்மையாக இருக்க வேண்டியிருந்தது. அனுமதியின்றி அவற்றை அணுகவும் முடியாது (லேவி 21:22; 1 சாமு 21:5). இதற்கும் அப்பாற்பட்டு, அச்சமூட்டுகின்ற தொற்றக் கூடிய வல்லமையினை உடையனவோ என்னும் அளவில், புனிதமானவையும் தூய்மையற்றவையும் சம அளவில் தீண்டத் தகாதவையாக இருந்தன (யாத் 29:37; எண் 19). ஆசீரின் ஊற்று என்ற அளவில், உயிர் நிலையான சக்திகள் புனிதமானவையாகக் கருதப்பட்டதால், பாலின ஆற்றல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்க முறையில் பயன் படுத்தப்பட்ட போதும் கூட, அவற்றால் சில வகை தூய்மையின்மை பற்றிக்கொள்ளப் பட்டதாகக் கருதப்பட்டது (லேவி 12:15).

ஆ. தூய்மைப் படுத்தும் சடங்குமுறைகள்: பெரும்பாலான அசுத்தங்கள், அல்லது தீட்டுகள் தாங்களாகவே மறையாத நிலையில் (லேவி 11:24-25), உடல் அல்லது உடைகள் முதலியவற்றை நீரால் சுத்தப்படுத்துதல் (யாத் 19:10; லேவி 17:15-16), பரிகாரப்பலிகள் (லேவி 12:6-7) முதலியவற்றால் நீக்கப்பட்டன. தூய்மைப்படுத்தலின் மிகச் சிறந்த விழாவாகிய பரிகார நாளில் தீட்டுகளாலும், அனைத்து மக்களின் பாவங்களாலும் சுமத்தப்பட்டதன் அடையாளமாக ஒரு வெள்ளாட்டுக்கிடாயைப் பாலைவனத்திற்கு ஓட்டி விடுதலிலும் இது நிகழ்ந்தது (லேவி 16).

இ. புனித சமுதாயத்திற்கு மரியாதை: தூய்மை பற்றி இன்னும் பெருமளவு, பருப்பொருள் சார்ந்த கருத்தின் அடிப்படையில், உடலும் ஆன்மாவும் பிரிக்கப்படவியலாத அளவில் மனிதன் உருவாக்கப்பட்டுள்ளான். எனவே அவனது சமயச்செயல்கள், ஆன்மீகத் தன்மையுடையவையாயினும், ஊனுடல் தன்மை கொண்டதாகவே இருக்கின்றன என்ற கருத்து உள்ளது. இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டு தன்னுடைய வாழ்வின் இயல்பான நிலையைக் கடந்து செல்ல விருப்பமுடைய சமுதாயத்தில், ஒருவன் எதையும் உண்பதில்லை; எல்லாவற்றையும் தொடுவதில்லை; அல்லது பிறப்பு சார்ந்த உரிமைகளைத் தாறுமாறாக உபயோகிப்பதில்லை. தொடக்கத்தில் தன்னியலாக இருந்திருக்கக்கூடிய இந்தப் பல் வேறுபட்ட கட்டுப்பாடுகள் இரட்டை விளைவைக் கொண்டிருந்தன. சுற்றுப்புறப் புறவினத்தாருடைய அனைத்துத் தூய்மைக் கேடுகளினின்று ஒரே இறைவன் கோட்பாட்டின் மீதான விசுவாசத்தை அவை காத்தன. மேலும், இறைவனுக்கான கீழ்ப்படிதலில், ஓர் உண்மையான ஒழுக்கக் கட்டுப்பாட்டை அது உருவாக்கியது. இவ்வழியாக, இறைவனுடைய உண்மையான ஆன்மீகக் கோரிக்கைகள் படிப்படியாக வெளிப் படுத்தப்பட்டன.

2. ஒழுக்கத் தூய்மைபற்றிய கருத்தை நோக்கி

அ. இறைவாக்கினர்கள்: உட்புறத் தூய்மையை எடுத்துக்காட்டாவிடில் கழுவுதலோ, பலிகளோ தம்மிலே எவ்விதத் தகுதியையும் கொண்டிருப்பதில்லை என இறைவாக்கினர்கள் அடிக்கடி பறைசாற்றினர் (எசா 1:15 தொ; 29:13; ஓசே 6:6; ஆமோ 4:1-5;எரே 7:21 தொ). வழிபாட்டுக் கூறு அதற்கேற்ப மறையவில்லை (எசா 52:11). ஆனால், மனிதனைக் கறைபடுத்துகின்ற உண்மையான தூய்மையின்மை அதனுடைய அடிப்படை ஊற்றாகிய பாவத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. சட்ட முறையான அசுத்தங்கள் வெளிக்கூறுகள் மட்டுமேயாகும் (யாத் 36:17-18). இறைவன் மட்டுமே தூய்மையாக்கக்கூடிய, தன்மையாலேயே அசுத்தமானது ஒன்று மனதில் உண்டு (எசா 6:5 தொ). உதடுகள், இதயம் மற்றும் முழு ஆளின் அடிப்படைத் தூய்மையாக்குதலானது, மெசியா உறுதிமொழிகவின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது: ''நான் தூயநீரை உங்கள்மேல் தெளிப்பேன்; நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள்'' (எசே 36:25; காண்க: செப் 3:9; எசா 35:8; 52:2).

ஆ. ஞான மெய்யியலார்: இவர்கள், இறைவனைத் திருப்திப்படுத்தத் தேவையான நிபந்தனையாகக் கைகள், இதயம், முகம் மற்றும் செபத்தினுடைய தூய்மையைக் கோருகின்றனர் (யோபு 11:4.14.15; 16:17; 22:30); இவ்வாறாக, குறைகூற முடியாத ஒழுக்க நடத்தையைக் கோருகின்றனர். இறைவன் முன்னிலையில் மனிதனுடைய அடிப்படைத் தூய்மையின்மையைப் பற்றி ஞான மெய்யியலார் உணர்ந்திருந்தனர் (பழ 20:9; யோபு 9:30-31). ஒருவர் தன்னைத் தூய்மையானவரென நம்புவது வரம்பு மீறியதாகும் (யோபு 4:17). ஆயினும், தூய்மையினுடைய ஒழுக்க அடிப்படையை ஏற்படுத்த, ஞானி முன் வருகிறார். தொடக்கத்தில் தூய்மையின் பாலினக்கூறு வலியுறுத்தப்படுகின்றது. புறவினத்தார் தரக்குறைவான தூய்மையின்மையில் ஈடுபடும்போது (ஞான 14:24) சாரா தன்னைத் தூய்மையான நிலையில் வைத்திருக்கிறாள் (தோபி 3:14).

இ. சங்கீத ஆசிரியர்கள்: இவர்களில் ஒழுக்கத்தூய்மை பற்றிய அக்கறை மேலும் மேலும் வலியுறுத்தப்படுவதை இவர்களின் கலாச்சாரப் பின்னணியில் காண்கிறோம். இறைவனுடைய அன்பானது இதயத்தின் தூய்மையை நோக்கித் திரும்புகிறது (சங் 73:1). புனித இடத்திற்குள் புகுந்து நிற்கும் உரிமை, கறைபடாத கைகளும், மாசற்ற மனமும் உடைய மனிதனுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது (சங் 24:4). நீதியைப் பின்பற்றுகிறவனுடைய கறைபடாக் கரங்களை இறைவன் நிரப்புகிறார் (சங் 18:21.25). அவர் மட்டுமே இத்தூய்மையை அளிக்க முடியுமாதலால் இதயத்தினுடைய தூய்மைக்கான செபமானது இறைவனை நோக்கிச் செய்யப்படுகிறது. இறைவனிடமிருந்து மட்டுமே வேண்டுபவர் எதிர்பார்க்கின்ற தூய்மையின் ஒழுக்க விளைவினை சங் 51 - வெளிப்படுத்துகின்றது. ''என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும்... ஈசோப்பினால் என் பாவத்தைப் போக்கியருளும். நான் தூய்மையாவேன்'' (51:2.7). மேலும், எசேக்கியேலின் பாரம்பரியத்தைக் காத்து (எசே 36:25 தொ), பழைய ஏற்பாட்டு மரபிற்கு முடிசூட்டும் விதத்தில் ''தூயதோர் உள்ளத்தை இறைவா, என்னுள்ளே படைத்தருளும்'' (சங் 51:10) என வேண்டுவோன் கதறுகிறான். இச்செபம் ஏற்கனவே, எவ்வளவு ஆன்மீகமானதாக இருக்கிறதென்றால், அது இருக்கும் வடிவிலேயே புதிய ஏற்பாட்டின் விசுவாசி அதனைப் பயன்படுத்தலாம்.

III. புதிய ஏற்பாடு

1. நற்செய்தி நூல்களில் தூய்மை:

அ. தூய்மை பற்றிய செயல்முறைகள் இயேசுவின் காலத்தைய யூத இனத்திலும் இருந்தன. மீண்டும் மீண்டும் கழுவுதல்கள் (மாற் 7:3-4), மிகக்கவனமாகக் கழுவுதல் (மத் 23:25), தூய்மையின்மையைப் பரப்புகின்ற பாவிகள் (மாற் 2:15 தொ) மற்றும் சிறப்பாக, கவனக்குறைவினால் ஏற்படும்

தீட்டினை விலக்குவதற்கெனக் கல்லறைகள் (மத் 23:27) ஆகியவற்றினின்று விலகியிருத் தல் முதலான தூய்மைக்கான பொருள் சார்ந்த நிபந்தனைகளை வலியுறுத்துவதன் மூலம், சட்ட ஆசாரமுறை சட்டத்தையும் கடந்து செல்கிறது.

ஆ. சட்ட முறையான, தூய்மையின் சில விதிகளைக் கடைப்பிடிப்பதில் இயேசு கவன மாக உள்ளார் (மாற் 1:43-44). சட்டத்துடன் சேர்க்கப்பட்ட நடைமுறைகளில் அதிகப் படியானவற்றை மட்டும் அவர் முதன் முதலாகக் கண்டிப்பதாகத் தெரிகிறது (மாற் 7:6-13). ஆயினும், உண்மையான தூய்மை யானது உள்ளார்ந்ததென அவர் இறுதியாக அறிவிக்கிறார் (மாற் 7:14-23 இணை). ''புறத்தேயிருந்து மனிதனுக்குள்ளே சென்று அவனை மாசுபடுத்தக்கூடியது ஒன்று மில்லை. மனிதனுள்ளிருந்து வெளிவரு வதே அவனை மாசு படுத்தும்''. இந்தப் பொருளில்தான், தீய ஆவிகள் ''அசுத்த ஆவிகள்'' என்று அழைக்கப்படலாம் (மாற் 1:23; லூக் 9:42). இயேசுவின் விடுவிக்கும் கோட்பாடு எவ்வளவு புதியதாய் இருந்த தெனின், அதனைப் புரிந்து கொள்வதில் சீடர்கள் மிக மந்தமாகவே இருந்தனர்.

இ. விசுவாசம் மற்றும் அன்பினுடைய எளிமையில் அவருக்குத் தங்களையே அர்ப் பணிப்பவர்களுக்கும் ''இதயத்தில் தூய்மை யானவர்களுக்கும்'' இயேசு தனது தனிப் பட்ட நட்பைப் பொழிகின்றார் (மத் 5:8). இனிமேல், எருசலேம் ஆலயத்திலில்லா மல், அவரது அரசிலேயே இறைவனைக் காணவும், அவர் முன் பிரசன்னப்படுத்த வும், ஒழுக்கத் தூய்மையும் போதுமான தன்று. மனித வாழ்வில் ஆண்டவருடைய செயல் திறன்மிக்க பிரசன்னமே தேவையான தாகும். அப்போதுதான் மனிதன் அடிப் படையிலேயே தூய்மையாக உள்ளான். ''நான் உங்களுக்குக் கூறிய வார்த்தையால் நீங்கள் ஏற்கனவே தூய்மையாக இருக்கிறீர் கள்'' என்று இயேசு இவ்வாறாகத் தனது அப்போஸ்தலர்களிடம் கூறுகிறார் (யோவா 15:3). மேலும் தெளிவாக, ''குளித்து விட்டவன் தன் பாதங்களை மட்டும் கழுவினால் போதும்; மற்றப்படி அவன் முழுவதும் தூய்மையாயிருக்கிறான். நீங்க ளும் தூய்மையாயிருக்கிறீர்கள்'' (யோவா 13:10).

2. அப்போஸ்தலிக்கப் போதனை

அ. தூய்மைக்கும் தூய்மையின்மைக்கும் இடையிலான பிரிவிற்கு அப்பால்: யூத கிறிஸ்தவ சமுதாயங்கள், தூய்மையின் செயல் முறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்க லாயின. கிறிஸ்துவின் போதனையினின்று மூவகை முடிவினை வெளிக்கொணர பேதுரு வுக்கு இறை தலையீடு அவசியமாயிருந் தது. அசுத்த உணவு என்று எதுவும் இனி இல்லை (அ.ப. 10:15; 11:9); விருத்தசேத னம் செய்யப்படாதவர்கள் இனித் தீட்டுபட் டவர்கள் அல்லர் (10:28); இனி விசுவாசத் தின் மூலமாக மட்டுமே இறைவன், புற வினத்தாரின் இதயங்களைத் தூய்மையாக்குவார் (15:9). தன் பங்கிற்குப் பவுல், இயேசுவின் போதனையை ஆதாரமாய்க் கொண்டு (காண் மாற் 7) கிறிஸ்தவனுக்குத் ''தன்னிலேயே அசுத்தமானது எதுவும் இல்லை'' (உரோ 14:14) என்று நேரடியாகவே அறிவிக்கிறார். பழைய சட்டத்தின் ஆட்சி கடந்துவிட்ட நிலையில், தூய்மை பற்றிய கடைப்பிடிப்பு கள் ''வலுவற்ற வறுமை மிக்க உலக பூதங்களாக'' உருவாகின்றன. இவற்றி லிருந்து கிறிஸ்து நன்மை விடுவித்துள்ளார். (கலா 4:3.9; கொலோ 2:16-23). அவரது உயிர்த்த உடலானது புதிய உலகின் வித்தாக இருப்பதால், ''உண்மைப் பொருளானது கிறிஸ்துவின் உடல்தான்'' (கொலோ 2:17).

ஆ. உள்மனிதனைத் தூய்மைப்படுத்த முடியாத சடங்குகளுக்குப் பதிலாக முழுத் திறமை மிக்கதான தனது பலியைக் கிறிஸ்து ஏற்படுத்தியுள்ளார் (எபி 9;10). இயேசுவின் இரத்தம் பாவங்களினின்று நம்மைத் தூய் மைப்படுத்தியதால் (1 யோவா 1:7.9), ''செம்மறியின் இரத்தத்தில் தங்களுடைய ஆடைகளைத் தோய்த்து வெண்மையாக்கிக் கொண்டவர்களிடையே'' நமது இடத்தை ஏற்க, நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்

(திருவெளி 7:14). இந்த அடிப்படைத் தூய்மைப் படுத்தப்படுதலானது, சிலுவையி னின்று தனது திறனைப் பெறுகின்ற திரு முழுக்குச் சடங்கில் உண்மையாக்கப்படுகின் றது. திருவார்த்தையாலும் முழுக்கினாலும் திருச்சபையைத் தூயதாக்கிப் பரிசுத்தமாக்குவ தற்குக் கிறிஸ்து தம்மையே கையளித்தார் (எபே 5:27). பழைய செயல்முறைகள் வெளித்தூய்மையை மட்டுமே உருவாக்குவ தால், திருமுழுக்கின் நீரானது, இறந்தோரிட மிருந்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து வோடு, நம்மை இணைக்கும்போது, எல் லாக் கறையினின்றும் நம்மை விடுவிக்கின் றது (1 பேதுரு 3:21-22). கிறிஸ்துவின் மூலமாக நம்மைத் தனது பிள்ளைகளாக்கிய இறைவனின் மீதான நம்பிக்கையால் நாம் உண்மையிலேயே தூய்மையாக்கப்பட்டுள் ளோம் (1 யோவா 3:3).

இ. சடங்குமுறை மட்டத்திலிருந்து உள் ளார்ந்த மீட்பு மட்டத்திற்கு மாற்றம்: இது, கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதல் திருமுகத்தில் குறிப்பிடத்தக்க அளவில் வெளிப்படுத்தப்படுகிறது. இதில் தங்களு டைய வாழ்வினின்று பழைய புளிப்பு மாவை வெறியேற்றிவிட்டுத் தூய்மை மற்றும் உண்மையின் புளியாத அப்பத்தி னால் அதனை மாற்றியமைக்குமாறு பவுல் கிறிஸ்தவர்களை அழைக்கிறார் (1 கொரி 5:8; காண்க: யாக் 4:8). இவ்வாறு, தனது புனிதத்துவத்தின் பணியை அடைவதற் கென, ஆன்மா மற்றும் உடலினுடைய ஒவ்வொரு கறையினின்றும் கிறிஸ்தவன் தன்னைத் தூய்மையாக்கிக்கொள்ள வேண் டும் (2 கொரி 7:1). இத்தூய்மையின் ஒழுக்கக்கூறு மேய்ப்புப்பணித் திருமுகங்க ளில் அதிகமாக விவரிக்கப்பட்டுள்ளது. மீண்டும் உருவாக்கப்பட்ட இதயங்களின் காணவியலா அமைப்பைத் தவிர்த்து வேறெதுவும் இறைவன் முன்னிலையில் கணக்கிடப்பட முடியாதாகையால் (காண் 1 திமொ 4:4), ''தூய உள்ளத்தோருக்கு எல்லாம் தூயவையே'' (தீத் 1:15). கிறிஸ் தவ அன்பானது தூய இதயம், நல்ல மனச்சாட்சி, மற்றும் நேர்மையான விசுவா சம் ஆகியவற்றினின்று துள்ளி வருகிறது (1 திமொ 1:5; காண் 5:22). குற்றமற்ற மனச்சாட்சியுடன் கடவுளுக்குப் பணிவிடை புரிய முடிந்ததற்காகப் பவுல் ஆண்டவ ருக்கு நன்றி கூறுகிறார் (2 திமொ 1:3). அதே போன்று, நீதி, விசுவாசம், அன்பு மற்றும் சமாதானம் முதலியன வெளிப்படு கின்ற தூய இதயத்தை அவரும் தனது சீடர்களிடம் கோருகின்றார் (2 திமொ 2:22; காண்க 1 திமொ 3:9).

இறுதியாக, நன்னெறியில் பழிகூற முடி யாத வாழ்வு வாழ, கிறிஸ்தவனை ஆவியிலான புதிய வழிபாட்டிற்கான அவ னது அர்ப்பணிப்பே அனுமதிக்கிறது. தூய்மை யின்மையின் எதிர்நிலையானது புனிதத் தன்மையாகும் (1 தெச 4:7-8; உரோ 6:19). பழைய ஏற்பாடு ஏற்கனவே மதிக்கின்ற ஒழுக்கத்தூய்மையானது எப்போதுமே கோரப்படும் (பிலி 4:8). ஆனால் அதன் உண்மையான மதிப்பு, இறுதி நாளிலான கிறிஸ்துவின் வருகையின்போது, அவரை எதிர்கொள்ள அது இட்டுச் செல்வதில் அடங்கியுள்ளது (பிலி 1:10).

தூய்மையான, தூய்மையற்ற, (சுத்த - அசுத்த) (CLEAN AND UNCLEAN)

I. இஸ்ராயேலின் வழிபாடு மற்றும் சமயவாழ்வு, பிற செமித்திய மக்களைப் போன்று (திருஉறைவிடம் போன்ற) புனித இடங்களையும், (குருக்கள் போன்ற) புனித மனிதர்களையும், (ஓய்வுநாள், பரி கார நாட்கள் போன்ற) புனித காலங்களை யும், (பலி, காணிக்கைகள், சுத்திகரங்கள் போன்ற) புனிதச் செயல்களையும் மைய மாகக் கொண்டு விளங்கின. இறைவழிபா டும், அதுகோரிய சடங்குத் தூய்மையும், ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளை மீறுவ தும் குறிப்பிடத்தக்க முறையில் ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகின்றன. மேலும் சடங் குத் தூய்மை, இறுதியில், உடல்சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த தூய்மையோடு பிணைக் கப்பட்டுள்ளது. சமூகத்தின் தூய்மையைப் பேணவும், அதன் விளைவாக இறை வனுக்கு மகிழ்ச்சியுண்டாக்கவும், இஸ்ராயே

லர் சில விலங்குகளை உண்பது பற்றியும் (லேவி 11:1-38.41; காண்க: உப 14:3-20), குழந்தை பிறப்புப்பற்றியும் (லேவி 12:1-18), தொழுநோய் பற்றியும் (13:1-14:47), சில உடல்சார்ந்த கசிவுகளைப் பற்றியும் (15:1-33), செத்த உடலைப்பற்றியும் (11:39-40) கைப்பற்றப்பட்ட கொள்ளைப் பொருட்கள் பற்றியும் (எண் 31:23-24) சரியான எச்சரிக்கை கொண்டிருந்தனர்.

II. சொற்கள்: தூய்மையான - தூய்மையற்ற, சுத்த - அசுத்த, புனித - தீட்டுப்பட்ட, சமயம் சார்ந்த - சமயம் சாராதவை என்பன பற்றிய கருத்துகள் விவிலியத்தில் பல சொற்களால் குறிக்கப்படுகின்றன. இவையெல்லாம் சரியான வழிபாட்டு முறையோடு தொடர்புடையவை. சொற்கள் கருத்துகளை அவ்வளவு விளக்கவில்லை; அவை பயன்பட்டிருக்கும் சூழ்நிலையிலிருந்து பொருள் பெறுகின்றன. லேவி 11-15-ஐ மேல் எழுந்தவாரியாக வாசித்தாலே, இஸ்ராயேலர் உடல்சார்ந்த அசுத்தத்தை ஆன்மீகத் தூய்மையற்றதிலிருந்து அவ்வளவு துல்லியமாக வேறுபடுத்தவில்லை என்பது தெரியும். தூய்மையானது - தூய்மையற்றது பற்றிய வழிபாட்டுச் சட்டங்களில் உடல் சார்ந்த அசுத்தம் இரண்டாந்தர முக்கியமே வகித்தது. சடங்கு முறைப்படி தூய்மையற்றவர்கள், அவர்கள் உடல்சார்ந்த முறையில் சுத்தமாயிருந்தாலும், வழிபாட்டுச் சடங்குகளில் பங்கெடுக்கத் தடை செய்யப்பட்டிருந்தனர். மீண்டும் அவர்கள் வழிபாட்டுச் சடங்குகளில் பங்கு பெற, சில சுத்திகரச்சடங்குகளைச் செய்ய வேண்டும் (லேவி 11:24-25. 28.39-40; அதி 14). பொருட்கள்கூட தூய்மையற்றவை ஆகக்கூடும் (லேவி 13:47 தொ; 14:43). இச்சொற்கள், புதிய ஏற்பாட்டில் சொற்பமாகவே பயன்பட்டாலும், அவை சடங்கு, உடல்சார்ந்த மற்றும், ஒழுக்கம் சார்ந்த தூய்மையான - தூய்மையற்ற பழைய ஏற்பாட்டுக் கருத்துகளை எதிரொலிக்கின்றன.

III. தூய்மையானவை - தூய்மையற்றவை பற்றிய கட்டளைகள் சட்டத்தை வீட்டுக்குள்ளும் புகுத்துகின்றன எனலாம். இச்சட்டம் வாழ்வின் ஒவ்வோர் அலுவலையும் பாதித்தது. இவை இஸ்ராயேலுக்கு மட்டும் உரியவை அன்று. பழம் மேற்காசிய சமயங்களிடையே பெரும்பாலும் காணப்படுபவையாகும்.

அ. வழிபாட்டுத் தூய்மையின்மை: இக்கருத்துக்கள் வழிபாட்டுச் சூழ்நிலையில் முதலில் தோன்றி வளர்ச்சியடைந்தன எனலாம். தூய்மையற்றன யாவும் வழிபாட்டில் இடம் பெறலாகா. இஃது ஆட்களுக்கும் பொருட்களுக்கும் பொருந்தும். ஆட்களும் பொருட்களும் தூய்மையானவை தூய்மையற்றவை எனவும், பலிச்சடங்கில் பங்கெடுக்கத் தகுதியுடையவர், தகுதியில்லாதவர் எனவும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். பலி செலுத்த முடியாமையாகிய தூய்மையின்மையில் பல படிகள் உண்டு. மிகக் குறைந்த அளவுத் தூய்மையின்மை ஒருவரை அந்நாளில் மட்டும் புனித இடத்தின் புறமுற்றத்துக்குள் நுழைவதைத் தடுத்தது. இத்தூய்மையின்மை உடம்பைக் கழுவுவதால் அல்லது ஆடைகளைத் துவைப்பதால் நீக்கப்படலாம். வழிபாட்டுத் தூய்மையின்மை ஒருவாரம், இரண்டுவாரம் அல்லது பல நாட்கள்வரை நீடிக்கலாம். இத்தூய்மையின்மை ஒரு வாரத்திற்குமேல் நீடித்தால் அதை நீக்கும் சடங்கில் பலி செலுத்துதல் இடம் பெறும்.

ஆ. இந்த வழிபாட்டுத் தூய்மையின்மையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: 1. இறந்த உடல் சார்ந்தது: இறந்த விலங்கின் உடலைத்தொட்டவன் அன்று மாலை வரை தூய்மையற்றவனாக இருந்தான் (லேவி 11:39). இதை நீக்க அவன் தன் ஆடையைத் துவைத்தால் போதுமானது (11:40). இறந்த மனித உடலால் உண்டாகும் தூய்மையின்மை, அதைத் தொட்டவரையும் அது கிடந்த வீட்டையும் வீட்டில் வசித்தோரையும், வீட்டிலுள்ள பொருட்கள் அனைத்தையும் ஏழு நாட்களுக்குத் தூய்மையற்றதாக்கியது. இவற்றைத் தூய்மையாக்க வெறுமனே கழுவினால் மட்டும் போதாது.

என் 19:11-இன்படிஇறந்த உடலைத் தொட்டவன் ஏழு நாட்களுக்குத் தூய்மையற்றவனாக, தொழு நோயாளியைப் போன்று பாளையத்துக்குப் புறம்பே (5:2-3) வசிக்க வேண்டும். அவன் மூன்றாவது ஏழாவது நாட்களில் குளிக்க வேண்டும். பின் தூய்மையாக, செங்கிடாரியின் சாம்பல் கலந்த நீரால் தெளிக்கப்பட வேண்டும். யூதர்கள் பாலைவனத்தில் பயணம் செய்த காலத்தில் சுமை சுமக்காத செங்கிடாரி, தனிச்சடங்கோடு கொல்லப்பட்டு, கேதுருக் கட்டை, ஈசோப்பு, கருஞ்சிவப்புநூல் ஆகியவற்றோடு, முழுவதும் எரிக்கப்பட்டது. இந்தச் சாம்பல் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, தூய்மையற்றவற்றைத் தூய்மையாக்க, லேவியர் குறிப்பிட்ட சடங்குகளில் தண்ணீரோடு கலந்து தெளிக்கப்பட்டது (19:17).

2. தொழுநோய் சார்ந்தவை: இந்நோயுடையவன் இதில் வாடும்வரைத் தூய்மையற்றவனாகக் கருதப்பட்டான். அவன் துக்க ஆடை அணிய வேண்டும். பாளையத்துக்கு அல்லது நகருக்குப் புறம்பே மனித சமூகத்துக்கு அப்பால் வாழவேண்டும். தன்னை மக்கள் நெருங்கும்போது, தான் அசுத்தன் என்று உரக்கக்கூறி எச்சரிக்க வேண்டும். அவன் குணமானால், குருக்கள் மட்டுமே அவன் குணமானவன் என்று தீர்ப்பளிக்கக் கூடும். அவனுக்குச் சிக்கல் மிக்க சுத்திகரச் சடங்கு செய்ய வேண்டும் (லேவி 13-14). அவன் தங்கியிருந்த இடமும் ஆடைகளும் கூட, தொழுநோய்த் தூய்மையின்மை உடையனவாகக் கருதப்பட்டன.

3. பிறப்பு, பலினம் சார்ந்தவை (லேவி 12): ஆணிடமோ, பெண்ணிடமோ ஒரு நாள் வரை நீடிக்கக்கூடிய சட்டத்தூய்மையின்மையை உண்டாக்கக்கூடிய இயற்கை நிலையோ செயலோ இத்தூய்மையின்மையை உண்டாக்கின. இத்தூய்மையின்மையை உடையவர் எதைத் தொட்டாலும் அது தூய்மை இழந்ததாகக் கருதப்பட்டது. மூலநிலை நீங்கியபின் ஏழு நாட்களுக்குப் பின் அதுதூய்மையாயிற்று. குளித்தல், கழுவுதல் போன்ற சடங்காலோ, தகனப் பலியாலோ, பாவப்பரிகாரப் பலியாலோ இத்தூய்மையின்மை நீக்கப்பட்டது. உடல்நல நோக்கோ ஒழுக்க நோக்கோ மிக மறைமுகமாகத்தான் இச்சடங்கில் இடம் பெறுகின்றன. தன்னியல்பான இரவுப்புறக்கசிவும், கணவன் மனைவியரது முறையான புணர்ச்சியும்கூட ஒருநாள் வரைக்கும் தூய்மையின்மையை உண்டாக்கக்கூடும் (லேவி 15:16; உப 23:11). மாதவிலக்கு ஒரு பெண்ணை ஏழு நாட்களுக்குத் தூய்மையற்றவளாக்கியது (லேவி 15:19-24). இக்காலத்தில் அவள் தன் கணவனுடன் புணர்ச்சி கொள்ளக்கூடாது.

பிறப்பு சார்ந்த தூய்மையின்மையை, ஏதேன் தோட்டத்தில் ஏவாளின் மேல் சுமத்தப்பட்ட சாபத்தின் பின்னணியில் புரிந்து கொள்ளலாம். பாவத்தின் விளைவாக மனுக்குலத்தின் மேல் இறைவன் அளித்த சாபத்தோடு பிறப்பைப் பழைய ஏற்பாடு தொடர்புபடுத்துகிறது. யோபுவும் (யோபு 14:4) தாவீதும் (சங் 51:5) இதைச் சுட்டுவதாகத் தெரிகிறது. பெற்ற பிள்ளை ஆண்குழந்தையானால் 40 நாட்களுக்கும், பெண் குழந்தையானால் 80 நாட்களுக்கும் தாய் தூய்மை இழந்தவளாகக் கருதப்பட்டாள். இத்தூய்மையின்மை தகனப்பலியாலோ, பாவப்பலியாலோ நீக்கப்பட்டது. பலிப்பொருள் ஒரு செம்மறியும் ஒரு புறாவும் ஆகும். ஏழையானால் இருபுறாக்களாகும் (லேவி 12:8; லூக் 2:24).

இவ்வொழுங்குகள் திருமணம், பிறப்பு ஆகியவை பற்றிய வெறுப்பால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல. ஏனெனில் பெருங்குடும்பம் ஒரு மேலான ஆசிராகவும், மலட்டுத்தன்மை ஓர் அவமானமாகவும் இறைத் தண்டனையாகவும் கருதப்பட்டன. ஆனால் இவ்வொழுங்குகளுக்குப் போதிய விளக்கம் அளிப்பது கடினம்.

இ) விலங்குகளை உண்பது பற்றியவை (லேவி 11; உப14): சில விலங்குகளையும் அவற்றால் செய்யப்பட்ட பொருட்களையும்

தொடுவதோ, உண்பதோ ஓர் இஸ்ராயேலனைத் தூய்மையற்றவனாக்கக் கூடும். ஆகவே உணவுபற்றிப் பல ஒழுங்குகள் உள்ளன. பழைய ஏற்பாட்டில் தூய்மையானவை தூய்மையற்றவை என்று விலங்குகளைப் பிரித்தல், புற அடையாளங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். நான்கு கால் விலங்குகளில் அசைபோடுவனவும், பிளந்த குளம்புகளையுடையனவும் தூய்மையானவையாகும். நீரில் வாழ்பவைகளில் செதில்கள் உள்ளவையும், சிறகுகளை உடையவையும் தூய்மையானவையாகும். ஒட்டகம், கழுதை, பன்றி, வளை தோண்டி வாழும் கரடி, குழிமுயல் போன்றவை தூய்மையற்றவையாகும். ஐந்நூலில் பன்றிக்கறியை உண்பதைத் தடுத்துத் தனிப்பட்ட முறையில் வலியுறுத்திக் கூறப்படவில்லை. ஆயினும் பிற்காலத்தில் இது மோசேயின் சட்டத்திற்குப் பிரமாணிக்கமின்மையின் மூடக் கொள்கையாகவும் இஸ்ராயேலின் மறையிலிருந்து விலகுவதற்குச் சமானமாகவும் மாறியது (எசா 65:4; 63:3.17; 2 மக் 6:18 தொ; தானி 1:8.12; அ.ப. 10:12). ''பறப்பனவற்றுள் நான்கு காலால் நடமாடும் ஊர்வன யாவும் உங்களுக்கு அருவருப்பு. ஆயினும் நான்கு காலால் நடமாடியும் தரையில் தத்திப்பாயும்படி நெடிய பின்னங்கால்கள் உடையனவற்றை உண்ணலாம்'' (லேவி 11:20-21).

தூய்மையான விலங்குகள் முறையான விதத்தில் கொல்லப்பட வேண்டும். இயற்கையான காரணங்களால் மரிக்கும் விலங்குகளையும் (உப 14:21), கிழிக்கப்பட்டவைகளையும் (லேவி 17:15) உண்ணக் கூடாது. இரத்தத்தோடு இறைச்சியை உண்ணக்கூடாது (ஆதி 9:3-4; லேவி 17:11தொ; உப 12:23). குட்டியை அதன் தாய்ப்பாலில் வேகவைக்கக்கூடாது (யாத் 23:19; 34:26, உப 14:21).

இவ்வொழுங்குகளை மீறுபவன் பெறும் தூய்மையின்மையை நீக்குவது எப்படி என்று தெளிவாகக் கூறப்படவில்லை. லேவி 11:40; 17:15 ''அவன் தன் ஆடைகளைத் துவைத்து, தண்ணீரில் மூழ்குவான்; மாலைமட்டும் தீட்டாயிருப்பான்'' என்று கூறுகின்றன. இது சுத்திகரம் அன்றே நடந்தது என்று சுட்டுகிறது.

இவ்வொழுங்குகளின் காரணத்தைப்பற்றி ஒன்றையும் உறுதியாகக் கூற முடியாது. பிறமதப் பலிவழிபாட்டில் இவ்விலங்குகள் பயன்பட்டதும், இவற்றில் பல பெருந்தீனி உண்பதும், சில வெறுக்கத்தக்க தோற்றம் கொண்டிருப்பதும் காரணங்களாக இருக்கலாம். இப்படி விலக்கப்படுவதற்கு அறிவு சார்ந்த காரணம் எதுவும் கொடுக்க முடியாது. தங்களைச் சுற்றியிருந்த மக்களிடமிருந்து இப்பழக்க வழக்கங்களை ஏற்றுத் தங்களது தேவைகளுக்கேற்ப மாற்றி அமைத்து, அவற்றிற்குச் சமய அடிப்படையும் தபசு மனப்பான்மையும் அளித்துத் தனதாக்கிக் கொண்டது இஸ்ராயேல் எனலாம்.

IV. **தூய்மை - தூய்மையின்மை - புனிதம்:** மேற்கூறியவற்றிலிருந்து, தூய்மை - தூய்மையின்மை என்பன உடல் நலத்தோடோ ஒழுக்கத்தோடோ சேர்ந்த கருத்தல்ல என்பது தெளிவாகும். ஒருபுறம் தூய்மையின்மை மறைபொருளான, பொல்லாங்கான ஒன்றை உணர்த்தி அதை எப்படியாவது தவிர்க்க வேண்டும் என உணர்த்திற்று. ஆகையால் தூய்மையற்றவை கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டவையாகும்; ஒதுக்கி வைக்கப்பட்டவையாகும். இதன்படி, ஓர் ஆள், ஒரு விலங்கு, ஒருபொருள், ஏன் ஒரு செயல் கூட, தூய்மையற்றதாகக் கருதப்படலாம். இப்பொருளை உணர்த்தும் சொற்கள் விவிலியத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன.

மறுபுறம் தூய்மை - தூய்மையின்மை என்பவை மனிதனின் பிறப்பு, வாழ்வு, இறப்பைச் சார்ந்த கருத்தாக இருந்தன எனத் தெரிகிறது. இத்தூய்மை இழந்தால் அவர்களிடமிருந்து யாவே தம் முகத்தைத் திருப்பிக் கொள்வார். ''நான் அவர்களின் தீட்டுக்கும் குற்றங்களுக்கும் ஏற்றபடி அவர்களை

நடத்தி என் முகத்தை அவர்களிடமிருந்து திருப்பிக் கொண்டேன்'' (எசே 39:24). இப்போக்கு புனிதமிக்க யாவேக்கு அவர்கள் அளிக்கும் பதிலின் விளைவாகும் ''தூயோராய் இருங்கள். ஏனெனில் நான் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்! தூயவர்!'' (லேவி 19:2). தூய்மை இங்குப் புனிதத்தை உணர்த்திற்று. ஆயினும் சில வேளைகளில் தூய்மையின்மையும் புனிதமும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிகிறது. செமித்திய மொழிகளில் இரண்டையும் குறிக்க ஒரே மூலச் சொல்லே பயன்படுகிறது. இது புனிதத்தையும் குறிக்கிறது; வெறுக்கத்தக்கதையும் குறிக்க வல்லது. புனிதமானது தொடக்கூடாததாகும் (லேவி 11:31-34; 15:4-12.20-28). ஆகையால் குரு, வழிபாட்டு வேலை முடிந்தவுடன், திருச்சடங்கு ஆடைகளைக் களைந்துவிட்டு, வேறு உடைகள் அணிய வேண்டும் (எசே 44:19;யாத் 28:43). செங்கிடாரி போன்ற திருப்பொருளைத் தொட்டால் (எண் 19:1-10) ஒருவன் தூய்மையற்றவனாகிறான். இரத்தம் தெளிக்கும் குரு தூய்மையற்றவராவார். ஆகவே புனிதமான இறைவனை அணுகும்முன் குளிக்க வேண்டும்; கழுவ வேண்டும். தூய்மையின்மையை நீக்குதல் அர்ச்சித்தல் அல்லது தூய்மையாக்குதல் என்றழைக்கப்பட்டது (யோசு 3:5; 1 சாமு 16:15). தூய்மையாய் இருத்தலும் புனிதமாய் இருத்தலும் ஒன்றல்ல. தூய்மை புனிதத்திற்கு ஒருநிபந்தனையும் முன் தேவையுமாகும். புனிதரான இறைவனை அணுகுதற்குத் தகுதிஅளிக்கும் நேரடி ஆற்றலாகும். புனிதரான இறைவன் தூய்மையின்மையைப் பொறுத்துக் கொள்ளார். இக்கருத்து, பழைய ஏற்பாட்டில் தூய்மை பற்றிய ஒழுங்குகள் மறைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டன என்று காட்டும்.

யாவே பொறாதவர். மற்றெந்தத் தேவர்களையும் பொறுத்துக் கொள்ளார். பிற தேவர்களை வணங்குவதால் யாவேயின் மக்கள் தூய்மையற்றவராகின்றனர் (எரே 2:7-23; ஒசே 6:10). சோதிடம் பார்த்தலும் (லேவி 19:31), இறந்த உடலில் நெற்றிக்கு மேல் மயிரைச் சிறைத்தலும் (உப 14:1), அயல்நாடுகள் பிற தேவர்களை வணங்குவதால் அந்நாடுகளும் (ஆமோ 7:17; எசா 52:1), அவற்றிலிருந்து வரும் உணவு உட்பட்ட பொருள்களும் தூய்மையற்றவையாகும் (ஒசே 9:3; தானி 1:5-16). ஆகையால் கானானியர்களின் புனித இடங்களும் அவற்றின் பொருள்களும் முழுவதும் அழிக்கப்பட வேண்டும் (எண் 31:20-24). பாபிலோனியாவிலிருந்து திரும்பிய யூதர்கள் தங்களைச் சுத்தி செய்தனர் (எஸ் 6:20-22). அந்நியரால் தீட்டுப்பட்ட எருசலேமின் சுவர்கள் கூடச் சுத்தி செய்யப்பட்டன (நெகே 12:30). பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய காலத்துப் பழக்கவழக்கங்களிலிருந்து சடங்குத்தூய்மை பற்றிய ஒழுங்குகளின் மையம், இறைவனுக்காகப் பிற மக்களிடமிருந்து பிரிந்திருக்கும் புனிதம் பற்றிய இறையியல் கருத்தாகும் என்று அறிகிறோம். புதிய ஏற்பாட்டுக் காலத்தில், பாஸ்குக் காலத்தில் அந்நியருடன் பழகுவதும் தீட்டாகும் எனக்கருதினர் (யோவா 18:28).

V. புறத்தூய்மை - அகத்தூய்மை: ஏற்கெனவே பழம் மேற்காசிய மக்களிடையே இருந்த தூய்மை - தூய்மையின்மை என்ற கருத்தை எடுத்து, அவற்றை இஸ்ராயேலர் தாங்கள் யாவேயிடம் கொண்டிருந்த விசுவாசத்திற்கேற்ப மாற்றி அமைத்து, மோசே அவற்றை மறைசார்ந்த கட்டளையாக்குகிறார். அவருக்குப் பின்வந்த குருக்கள் பாரம்பரிய ஆசிரியர்கள் இதே அடிப்படையில் இக்கட்டளைகளை வளர்த்துப் பேணிக் காத்தனர்.

இக்கட்டளைகளைக் கடைப்பிடிப்பது இறைமக்களின் புனிதத்திற்கு அடையாளமாகக் கருதப்பட்டது (லேவி 11:44). இஸ்ராயேலின் ஒரே இறைத்தன்மைக் கோட்பாட்டைக் காக்க இஃது உதவியது. ஏனெனில் இதனால் மற்ற மறைகளிலிருந்து இஸ்ராயேலர் பிரிக்கப்பட்டனர் (தானி 1:8-12; தோபி 1:10-12). மேலும் தூய்மை பற்றிய ஒழுங்குகள் இறைவனுடைய கட்டளைகளாகக்

கருதப்பட்டதால், அவற்றைக் கடைப்பிடிப்பது ஒழுக்கத்தையும் வளர்த்தது. இது சிலவேளைகளில் எலியேசரின் மறைசாட்சி மரணம் போன்ற (2 மக் 16:18-31) வீரச் செயல்களுக்கும் இட்டுச்சென்றது. ஆயினும் வெறும் ஆசரக் கண்டிப்பு, சடங்குத் தூய்மையை மிகைப்படுத்துவது போன்ற கேடுகள் எப்போதும் இருந்தன. நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப்பின் சுத்திகரச் சடங்கு வழக்கங்களைத் தவறாகப் பயன்படுத்துபவரை இறைவாக்கினர்கள் இடித்துக் கூறியுள்ளனர். ''வாய்ச்சொல்லால் இம்மக்கள் என்னை அணுகுகின்றனர்; உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர்; அவர்கள் உள்ளமோ என்னைவிட்டுத் தொலைவில் இருக்கிறது; அவர்களது இறையச்சம் மனனம் செய்த வெறும் மனித கட்டளைகளைச் சார்ந்ததே!'' (எசா 29:13). மனிதனைக் கறைபடுத்தும் உண்மையான தூய்மையின்மை பாவமாகும் என்பதை எசேக்கியேல் வலியுறுத்திக் கூறுகிறார் (எசே 36:17-20). இக்கறையை இறைவன் மட்டுமே தூய்மையாக்க முடியும் (எசா 6:5-7). புறத்தோடு அகத்தையும் சேர்த்து முழு ஆளையும் தூய்மையாக்குதல் மெசியாவின் வாக்குறுதிகளோடு வருவதாகும். ''நான் தூய நீரை உங்கள் மேல் தெளிப்பேன். நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள். உங்கள் எல்லாச் சிலை வழிபாட்டுத் தீட்டையும் அகற்றுவேன். நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருளுவேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலிலிருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு தசையாலான இதயத்தைப் பொறுத்துவேன். என் ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். என் நியமங்களைக் கடைப்பிடிக்கவும் என் நீதித் தீர்ப்புகளைக் கவனமாய்ச் செயல்படுத்தவும் செய்வேன்'' (எசே 36:25-27; செப் 3:9; எசா 35:8; 52:1).

சங்கீத ஆசிரியர்களும் ஒழுக்கத் தூய்மையைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். ''தூய உள்ளத்தினருக்கு ஆண்டவர் எவ்வளவோ நல்லவர்!'' (சங் 73:1). பாவமில்லாததோர், தூய இதயத்தோர் ஆண்டவரை அணுகலாம் (24:4). ஒவ்வொருவனுக்கும் அவனது நீதிக்கேற்ப இறைவன் பரிசு அளிக்கிறார் (18:21-25). மற்ற சங்கீதங்களை விட 51-ஆம் சங்கீதம் தூய்மை பற்றிய இஸ்ராயேலின் கருத்து, சடங்குத் தூய்மையிலிருந்து ஒழுக்கத் தூய்மைக்கு வளர்ந்துள்ளதற்குச் சான்று பகர்கிறது. ''என் பாவங்களைப் பாராதபடி உம் முகத்தை மறைத்துக் கொள்ளும். என்பாவக்கறைகளை எல்லாம் துடைத்து விடும்.... உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும். தன்னார்வ மனம் தந்து என்னைத் தாங்கியருளும்!'' (51:10.12). ஞானநூல்களின் ஆசிரியர்கள் அகத்தூய்மையை அழுத்திக் கூறுகின்றனர் (யோபு 14:4-14; 16:17). இறைவன்முன் மனிதன் அடிப்படையிலேயே தூய்மையற்றவன் (பழ 20:9; யோபு 9:30.31). அவரால் மட்டும் அவன் தூய்மையடைய முடியும்.

VI. *புதிய ஏற்பாட்டில்:* நாடு கடத்தப்பட்டபின், யூத சமயத்தில் ஒழுக்கத்தூய்மையும் சட்ட ஆசாரத்தூய்மையும் அடுத்தடுத்து காணப்படுகின்றன. இப்போக்கு கிறிஸ்துவின் காலத்திலும் காணப்படுகிறது. புறச் சடங்குகளைக் கடைப்பிடித்தல் அழுத்திக் கூறப்படுகிறது. சான்றுகள்: மீண்டும் மீண்டும் கழுவுதல் (மாற் 7:3-8); கிண்ணங்களைக் கழுவுதல் (மத் 23:25); பாவிகளோடு பழகுவதைத் தவிர்த்தல் (மாற் 2:15-16). இயேசு இவற்றில் சிலவற்றைக் கடைப்பிடித்திருப்பதாகத் தெரிகிறது (1:43-44); ஆனால் இவற்றை மிகைப்படுத்திக் கூறுவதைக் கண்டிக்கிறார் (7:6-13). மனிதனைத் தூய்மையற்றவனாக்குவது ஒழுக்கமின்மை தான், சடங்குகளின் குறைவன்று. அவனே அவனது நடத்தைக்குப் பொறுப்பாவான். ''நான் சொல்வதை அனைவரும் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள். வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக்கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும்'' (மாற் 7:14-15; மத் 15:11; இணை; காண்க: அ.ப. 15:29; உரோ 15:14-17). இப்பொரு

ளில் பேய்கள் தூய்மையற்ற அல்லது அசுத்த அரூபிகள் என்றழைக்கப்படலாம் (மத் 10:1; மாற் 1:23-27; லூக் 4:33-36).

எல்லாப் பாவங்களிலிருந்தும் ஓடவேண்டிய கிறிஸ்தவனின் கடமையைப் புதிய ஏற்பாடு நீக்கவில்லை. ஆனால் அது கிறிஸ்துவின் வல்லமை மிக்க செயல்களை எடுத்துக்காட்டுகிறது. கிறிஸ்து தீட்டுடையவரானார். சான்றாக, அவர் செத்தவர்களைத் தொடுகிறார் (லூக் 7:11-12; 8:54); இரத்தப் போக்குடைய பெண்ணைத் தொடுகிறார் (மத் 9:20-22; மாற் 5:25-34; லூக் 8:44-45); பாவிகளோடு பழகுகிறார்; பாவத்தின் தூய்மையின்மையைத் தன்மேலே ஏற்றுக் கொண்டு, ஒப்புரவினால் மனிதரை மீட்டார் (காண்க. 1 கொரி 15:54; கலா 3:13). உலகின் பாவத்தைப் போக்கும் செம்மறியாக (யோவா 1:29), இறைவனையும் மனுக்குலத்தையும் பிரித்த தடைச்சுவரைத் தகர்த்தெறிந்தார் (எபே 2:14-16).

உணவுபற்றிய யூத ஒழுங்குகளை இயேசு அடியோடு அகற்றவில்லை. ஆதித்திருச்சபை இவற்றைச் சிறிது சிறிதாக, துன்ப மிக்க அனுபவத்தோடு, அகற்ற வேண்டியிருந்தது (அ.ப. 10:11-14;15:28-29; கலா 2:11-17; உரோ 14:14; கொலோ 2:20-22). ஆதித்திருச்சபை உணவுபற்றிய ஒழுங்குகளை அடியோடு அகற்றியபோது, யூதநாடு முழுவதும் வீழ்ச்சியடைந்திருந்தது. இறையரசாகிய திருச்சபை நாடுகளின் பிரிவுகளைக் கடந்து, எல்லா மக்களுக்கும் இறையரசைப் போதிக்கும் பெரும்பணியில் ஈடுபட்டிருந்தது.

தூய இதயத்தோர் இறைவனை அணுக முடியும் (மத் 5:8). இறைவனைப் பார்ப்பது, அவர் திருமுன் வருவது, இறையரசுக்குள் நுழைவது ஆகியவற்றுக்கு ஒழுக்கத் தூய்மை மட்டும் போதாது. ஒருவனது உள்ளத்திலே இறைவனே குடிகொள்வது இன்றியமையாததாகும். அப்போதுதான் மனிதன் அடிப்படையிலேயே நிறை தூய்மையுடையவனாவான்; புனிதன் ஆவான் (யோவா 13:10; 15:3).

தூய்மையானதை இழிவுபடுத்துதல் (PROFANE)

தூய்மையானவற்றையும் புனிதமானவற்றையும் இழிவுபடுத்துதல், தீட்டுப்படுத்துதல், மாசுபடுத்துதலாம்.

கடவுளின் தூயகம் (லேவி 21:12; அ.ப. 24:6), பீடம் (யாத் 20:5), பலிகள் (லேவி 22:15), குருக்கள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் (லேவி 21:4), ஓய்வுநாள் (எசா 56:6), உடன்படிக்கை (மலா 2:10), அரசன் (சங் 89:39) ஆகிய இஸ்ராயேலின் புனித நிறுவனங்கள், அவற்றை வழிநடத்த இறைவன் அளித்த சட்டங்களைப் புறக்கணிப்பதால், இழிவுபடுத்தப்படலாம், தீட்டுப்படுத்தப்படலாம், மாசுபடுத்தப்படலாம். இத்தகையவற்றில் மிகக் கொடுமையானது. ஒரு புனிதப் பொருளைத் தூய்மையற்றவையோடு தொடர்பு கொள்ளச் செய்வதாகும். தூயவரான இறைவன் தமது மக்களைத்தூயவராக இருக்கும்படி கட்டளையிடுவதால், தூய்மையானவற்றை இழிவுபடுத்துதல் இறைவனுடைய புனிதத்தையே தாக்குவதாகும். அவரது திருப்பெயரை இழிவுபடுத்துதலாகும் (லேவி 21:6; எசே 22:26; ஆமோ 2:7). சிலைவழிபாடு (எசே 20:39), சிசுப்பலி (லேவி 18:21), சமூக ஒழுக்கக்கேடு (லேவி 19:11-12) ஆகியவை வெகுவாக வெறுப்பைத் தருகின்றவையாகும். இறைவனது பெயரை இழிவுபடுத்துவதற்குரிய தண்டனைகள் புனிதம் இழப்பது (எசே 24:21), அந்நியரால் அடிமையாக்கப்படுதல் (7:24), முடிவாக சாவு (18:32) ஆகியவையாகும்.

தூரா (DURA - வட்டம், சுற்றுச்சுவர்)

பாபிலோன் மாநிலத்திலிருந்த ஒரு சமவெளி. இங்கு நெபுகத்னேசர் ஒரு பொற்சிலையை வைத்து எல்லா மக்களும் அதை வணங்கக் கட்டளையிட்டார் (தானி 3:1). இது இருந்ததாகப் பல இடங்கள் அடையாளம் காட்டப்படுகின்றன. காபோரும் யூப்பிரத்தீசு ஆறும் சந்திக்கும் இடமாகிய தூரா யுரோப்போஸ் என்ற இடமாக இருக்கலாம்; அல்லது சித்தகெனே மாநிலத்திலுள்ள அப்பொல்லோனியாவுக்கு அருகிலுள்ள இடமாக இருக்கலாம். ஒருவேளை பாபிலோ

னுக்குச் சற்றுத் தெற்கேயுள்ள தூலுல் தூரா வாக இருக்கலாம். ''சுவர் சூழ்ந்த'' என்ற பொருளுடைய தூரா என்ற சொல் மெச பொத்தாமியாவிலுள்ள பல இடங்களுக்குப் பொருந்தும். ஆகையால் தூரா இருந்தஇடம் தெளிவாக இல்லை.

தூற்றிப் பிரித்தல் (WINNOWING)

வெட்டப்பட்ட தாள்களிலிருந்து அடித் துப் பிரிக்கப்பட்ட தானியமும் பதரும் சேர்ந்த தொகுப்பைக் காற்றில் முறத்தால் தூக்கிஎறிந்து தானியத்தையும் பதரையும் பிரிக்கும் முறையாகும். தானியம் ஒரு குவியலாகத் தரையில் விழும். பதர் காற் றில் அடித்துக் கொண்டு செல்லப்படும். இது போரடிக்கும் களத்தில் நடந்தது. காற்று அடிக்கும் பிற்பகலிலோ மாலை யிலோ இது நடந்தது (1 ரூத் 3:2).

மெசியா மக்களைப் பிரித்தெடுப் பதற்கு உருவகமாக இச்செயல் பயன்பட் டிருக்கிறது (மத் 3:2). தீமையின் அழிவை உருவகமாகக் கூற இச்சொல் பயன்பட்டுள் ளது (காண்க: எரே 15:7; 51:2).


முதுபெரும் தந்தையர் காலத்து
விவிலிய உலகு
(கி. மு. 2000 – 1000)
ஆபிரகாமின் அழைப்பும் பயணமும்
காஸ்பியன் கடல்
மத்தியதரைக்கடல்
செங்கடல்
பாரசீக வளைகுடா
இத்தியார்
கோமேர்
அரராத்து
தோகருமா
கர்க்கமிசு
ஆரான்
மெசபொத்தாமியா
நினிவே
அசீரியா
காலாகு
அசூர்
யூப்பிரத்தீசு நதி
மாரி
திகிரிசு நதி
அக்காது
பாபிலோனியா
பாபிலோன்
ஊர்
ஏலாம்
மதாய்
அலெப்போ
உகாரித்து
அமாது
பிபுலோசு
சீரியா
ததிமோர்
சீதோன்
தமஸ்கு
ஆசோர்
மெகிதோ
அம்மோன்
செக்கேம்
பெத்தேல்
ஆயி
சோவான்
சாலேம்
கொரார்
எபிரோன்
மம்ரே
லோத்து
பெயேர்-செபா
ஏதோம்
கெலியோப்பொலி
பிரமிடுகள்
லிபியா
சீனாய்
மிதியான்
தேதான்
அரேபியா
பாலைவனம்
குஷ்
0 100 200 300 400 500
கி. மீ.


இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணம்
0 20 40 60 80 100


கானான் நாடு
(இஸ்ராயேலின் 12 கோத்திரங்கள் வாழ்ந்த நிலப்பகுதிகள்)
0 5 10 20 40
சீரியா
தமஸ்கு
சீதோன்
சீதோனியர்
தீர்
தாண்
ஆக்கோ
காசோர்
மேரோம் ஏரி
பாசான்
கோலான்
கார்மேல் மலை
தாபோர் மலை
அபேக்கு
தோர்
தானாக்கு
பேத்சான்
தோத்தான்
எபால் மலை
கெரிசிம் மலை
செக்கேம்
யோர்தான் நதி
இராமோத்து
சுக்கோத்து
எமோரியர்
பெருங்கடல்
யோப்பா
சீலோ
யாசேர்
இரபா
எக்ரோன்
பெத்தேல்
ஆயி
எரிகோ
இராமா
எருசலேம்
பெத்லகேம்
நெபோ மலை
அசோத்து
காசா
எபிரோன்
சீப்பு
தெபீர்
பெசேர்
அரேபியர்
பெயேர் செபா
அரோயர்
மோவாபியர்
இரகொபோத்து
தாமார்
ஏதோம்
1. ரூபன்
2. சிமியோன்
3. மனாசே
4. யூதா
5. தான்
6. நப்தலி
7. காது
8. ஆசேர்
9. இசக்கார்
10. செபுலோன்
11. எப்பிராயீம்
12. பென்யாமின்


தாவீது-சலமோனின் பேரரசு
(கி.மு. 1000-930)
சைப்ரஸ்
ஆர்வாது
பெருங்கடல்
பெலிஸ்தியா
இஸ்ராயேல்
யூதா
மோவாபு
ஏதோம்
அம்மோன்
சோபா
எருசலேம்
செக்கேம்
கேப்பேர்
யோப்பா
தோர்
அக்கோ
தீர்
தேமான்
அரேபிய பாலைவனம்
கிமீ.


பாலஸ்தீன் நாடு
(இயேசுவின் காலத்தில்)
Scale: 1 1,700,000
0 5 10 15 20
வ
சீதோன்
லெபனோன் மலை
சரெப்தா
தீர்
பெனிக்கியா
இத்துரேயா
அபிலேன்
தமஸ்கு
எர்மோன் மலை
சீரியா
பிலிப்புச் செசரியா
தாண்
திரக்கோனித்து
கொராசின்
பெத்து சயிதா
கப்பர் நகூம்
கானாவூர்
மகதலா
தொலமாய்
கலிலேயா
கலிலேயாக் கடல்
கர்மேல் மலை
திபேரியா
நாசரேத்து
தாபோர் மலை
காதாரா
நயீன்
சலேம்
தெக்காப்பொலி
மத்தியதரைக்கடல்
செசரியா
சமாரியா
ஐனோன்
நதி
சமாரியா
ஏபால் மலை
கெரிசிம் மலை
சிக்கார்
செக்கேம்
யாக்கோபின் கிணறு
யோர்தான்
அப்பொல்லோனியா
கெராசா
அந்திப்பத்திரி
யோப்பா
அரிமத்தியா
பெத்து பாரா
பெத்தேல்
எப்பிராயிம்
இலிதா
பிலதெல்பியா
எரிகோ
ஒலிவ மலை
பெரயா
எம்மாவு
எருசலேம்
கும்ரான்
அயின் கெரேம்
பெத்து பாகே
பெத்தானியா
எசிபோன்
அசோத்து
அசுக்கலோன்
யூதேயா
பெத்திலகேம்
யூதேயாவின் பாலைநிலம்
சாக்கடல்
காசா
கெபிரோன்
பெயேர்-செபா
இதுமேயா


பெத்து சயிதா குளம்
இயேசு தீர்ப்பிடப்படுதல்
பிலாத்து அரண்மனை (அந்தோனியா)
போதித்தல்
ஆலயம்
வியாபாரிகளைத் துரத்துதல்
அரச முற்றம்
கெதுசமனித் தோட்டம் (இயேசு பிடிபடுதல்)
ஏரோது அந்திப்பாவின் அரண்மனை
கொல்கொத்தா
சிலுவை சுமந்து செல்லல்
கயபாவிடம்
இயேசு ஆலோசனைக் குழுவின் முன்னிலையில்
கயபா அரண்மனை
பேதுரு மறுதலித்தல்
கெதுசமனித்
இரத்த நிலம் (குயவன் நிலம்)
இன்னோம் பள்ளத்தாக்கு
ஒலிவ மலை
எருசலேம் —
பாடுகளின் பாதை
மீட்டர்
0 50 100 150
1
2
3
4
5
6
7
8
9


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
கருங்கடல்
மத்தியதரைக் கடல்
இத்தாலியா
தல்மாத்தியா
அதிரியாக் கடல்
தாசியா
மோசியா
திராக்கே
மக்கதோனியா
ஆசியா
சீரியா
எகிப்து
லிபியா
கிரேத்து
மால்த்தா
சிசிலி
சைப்பிரஸ்
பம்பிலியா
0 100 200 300


புனித பவுலின் தூதுரைப் பயணங்கள்
இரண்டாம் பயணம் கி.பி. 49—52 (அப். பணி 15:39—18:22)
மூன்றாம் பயணம் கி.பி. 53—57 (அப். பணி 18:22—21:16)
கருங்கடல்
மத்தியதரைக் கடல்
கிரேத்து
சைப்பிரஸ்
எகிப்து
மக்கதோனியா
பம்பிலியா
0 100 200 300

ஆசிரியரது பிற நூல்கள்

விவிலிய அறிமுக நூல்கள்

1.	"தோரா" அல்லது "ஐந்நூல்"	(ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்)
2.	வரலாற்று நாயகன்	(யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2, அரசர்கள், 1,2 நாள், எஸ்ரா, நெகேமியா, 1,2, மக்கபேயர்கள்)
3.	இஸ்ராயேலின் காவலர்கள் – I	(பொது முன்னுரை, ஆமோஸ் ஒசேயா, மீக்கா)
4.	இஸ்ராயேலின் காவலர்கள் – II	(எசாயா, செப்பனியா, நாகூம், அபக்கூக்கு, எரேமியா, எசேக்கியேல், ஆகாய், செக்கரியா, ஒதியா, மாலக்கி, யோவேல்)
5.	ஞான நூல்கள்	(யோபு, பழமொழி, சங்கீதங்கள், திருவுரை, உன்னத சங்கீதம், ஞானநூல், சீராக்கு)
6.	சில கதைகளும் காட்சிகளும்	(யோனா, ரூத்து, தோபியா, எஸ்தர், புலம்பல், பாரூக்கு, தானியேல், யூதித்து)
7.	நான்கு வடிவ நற்செய்திகள்	(மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகள்)
8.	புனித பவுலின் திருமுகங்கள் – I	(பவுலின் வாழ்க்கை வரலாறு, மற்றும் 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 & 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன் ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்கள்)
9.	புனித பவுலின் திருமுகங்கள் – II	(2–ஆம் தெசலோனிக்கர், கொலோசையர், எபேசியர், தீத்து, 1–ஆம், 2–ஆம் திமொத்தேயு ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்களும், பவுலின் இறைபியலும்)

விளக்கவுரை நூல்

10.	லூக்காவின் நற்செய்தி	(அருள்வாக்கு மன்றப்பதிப்பு)
11.	விவிலியச் சித்திரக் கதைகள்	**பழைய ஏற்பாடு:** (காயின் ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சிம்சோன் ரூத்து, சாமுவேல், சவுல், தாவீது, அரசன் தாவீது)
12.	விவிலியக் களஞ்சியம் – I	**புதிய ஏற்பாடு:**
13.	விவிலியக் களஞ்சியம் – II	
14.	விவிலியக் களஞ்சியம் – III	
15.	விவிலியக் களஞ்சியம் – IV	
16.	விவிலியக் களஞ்சியம் – V	

தயாரிப்பில் உள்ளவை :

1. விவிலியச் சித்திரக் கதைகள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)

கிடைக்குமிடம்

தியான ஆசிரமம்

13, மாதா கோவில் தெரு, சென்னை – 600 028.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

"தியாகு"

விவிலியக் களஞ்சியம்

IV

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்

சென்னை - 28

விவிலியக் களஞ்சியம்

IV

தெ, தே, தொ, தோ,
ந, நா, நி, நீ, நு, நூ, நெ, நே, நை, நொ, நோ,
ப, பா, பி, பீ, பு, பூ, பெ, பே, பை, பொ, போ

பதிப்பாசிரியர்
"தியாகு"

விவிலிய அறிமுகம்
தியான ஆசிரமம்
சென்னை - 28.

முதல் பதிப்பு : அக்டோபர், 1994
மறு பதிப்பு : அக்டோபர், 1998
மறு பதிப்பு : நவம்பர், 2003
மறு பதிப்பு : ஜுன், 2006
மறு பதிப்பு : ஜுன், 2012

Nihil Obstat
P.C. Thomas.

Imprimatur
+M.Arockiasamy,
Archbishop of Madurai.

விலை : ரூ **300/-**

நூல் கிடைக்கும் இடங்கள்

தியான ஆசிரமம்

சென்னை - 28.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

அச்சிட்டோர் : ஹைடெக் ஆப்செட் (பி) லிட், எண்: 11, சீனிவாசா நகர் மெயின் ரோடு, கோயம்பேடு, சென்னை -107. போன் ✆ : 2479 3339.

அர்ப்பணம்

இறைவனின் வார்த்தையைத் தம் இதயத்தில் ஏற்று, வார்த்தையாம் இறைவனைத் தம் உதரத்தில் வளர்த்து, மனுவுருவான வார்த்தையை உலகிற்கு அளித்த இறைவனின் அன்னையாம் மரியாளுக்கு, அன்பு கலந்த அர்ப்பணம்.

முன்னுரை

விவிலியக் களஞ்சியத் தொகுப்பின் நான்காம் பாகத்தைத் தமிழ்கூர் நல்லுலகிற்கு அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். தமிழ்க் கிறிஸ்தவர்கள் முதல் மூன்று பாகங்களுக்கு அளித்த ஆர்வமிக்க வரவேற்பு, இம்முயற்சியைத் தொடர்ந்து செய்து இந்த நான்காம் பாகத்தை வெளிக் கொணரப் பெரிதும் உற்சாக மூட்டியது. இவ் வரவேற்பு அளித்த அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றி.

ஆள், இடம் ஆகியவற்றின் பெயர்களின் மூல எபிரேய, கிரேக்க உச்சரிப்புகள் தமிழ் இலக்கண மரபுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றோடு இப்பெயர்கள் புதிய பொதுமொழிபெயர்ப்பில் வரும் வடிவில் அடைப்புக் குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. சங்கீதங்களின் எண்கள் எபிரேய முறையில் தரப்பட்டுள்ளன. இறையில் கட்டுரைகளில் பெரும்பகுதி Xavier Leon-Dufour-இன் Dictionary of Biblical Theology என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டுள்ளன.

இனி, நன்றி நவிலுதல் என்ற இனிய கடமைக்கு வருகிறேன். தமிழ்க் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் முதல் முயற்சியான இத்தொகுப்பு- பலர் சேர்ந்த கூட்டு முயற்சியாகும். இவர்கள் பல கட்டுரைகளின் பொருட்களையும் செய்திகளையும் தொகுத்துத் தருவதில் பெரிதும் உதவியுள்ளனர். இவர்கள் அனைவரின் பெயர்ப் பட்டியல் பின்பு தரப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

இத்தொகுப்பைத் திட்டம் செய்த காலத்தில், அறிவுரை கூறியும் உற்சாகப்படுத்தியும் பொருள் உதவி நல்கியும் ஊக்கமளித்த மேதகு கர்தினால் சைமன் D. லூர்துசாமி ஆண்டகை அவர்களுக்கு எனது உளம்கனிந்த நன்றி உரியதாகும். தயாரிப்புக் காலத்தில் பொருள் உதவிசெய்த Adam Sehall Von Bell E.V.Koln, பதிப்பித்தலுக்குப் பொருள் உதவி செய்த MISSIO. Munchen ஆகிய இரு நிறுவனத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றி. இவர்களின் உதவியின்றி இந்நூலை இவ்வளவு மலிவாகக் கொணர்ந்திருக்க முடியாது.

முதல் மூன்று பாகங்களுக்கு அணிந்துரை வழங்கிய, தமிழ்நாடு விவிலிய ஆணைக் குழுத்தலைவர், மதுரைப் பேராயர் மேதகு M.ஆரோக்கியசாமி ஆண்டகையே இப்பகுதிக்கும் அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும், Nihil Obstat அளித்துள்ள அருட்தந்தை P.C. தாமஸ் அடிகளார்க்கும், இப்பாகத்தின் தயாரிப்பில் நெடுகலும் பிரதிகளைத் திருத்தியும் பலவாறு உதவி செய்தும் வந்துள்ள தமிழாசிரியர் ப. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கும் சிறப்பான முறையில் நன்றி கூறுகிறேன். இம் முயற்சியில் எனக்கு ஊக்கமளித்த இயேசு சபை மதுரை மாநில முன்னாள் தலைவர் அருட்தந்தை மைக்கில் செயராசு அடிகளார்க்கும், தயாரிப்புக் காலத்தில் எங்கள் குழு தங்குவதற்கு இடமளித்து, விருந்தோம்பி நல்லுதவிகள் செய்த திருச்சிராப்பள்ளி, புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியினருக்கும், அன்போடு பராமரித்து உதவிசெய்த எனது இல்லங்களாகிய லோயோலாக் கல்லூரி, தியான ஆசிரமம் ஆகியவற்றின் இயேசுசபைச் சகோதரர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. வரைபடங்கள் கொடுத்துதவிய திண்டிவனம், தமிழ்நாடு முப்பணி நிலையத்தாருக்கும் எனது மனமுவந்த நன்றி. அச்சு அமைத்த Savithri Laser Printer. Hi-Tech offset Private Ltd. சென்னை, ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இறைவார்த்தையை நன்குணர்ந்து, அன்பு செய்து, அதன்படி வாழ்வதற்கு இந்த விவிலியக் களஞ்சியம் பெரிதும் துணை செய்யும் என்று நம்புகிறேன். இக்களஞ்சியத்தைத் தயாரிப்பதில் நெடுகலும் ஊக்கமும் உரமும் அளித்து வழிநடத்தி வரும் இறைவன் திருவருள் துணைக்குச் சிரம்தாழ்த்தி நன்றியுடன் வணக்கம் செலுத்துகிறேன். இப்பாகமும் இதற்குப் பின்வரும் நூல்களும் விவிலிய அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கையில் இப்பகுதியை வெளியிடுகிறேன்.

– "தியாகு"

விவிலியக் களஞ்சியம்
அணிந்துரை

விவிலியக் களஞ்சியத்தின் நான்காம் தொகுதி வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

இதில் 'தெ' தொடங்கி 'தௌ' வரையுள்ள தலைப்புகள், 'ந' தொடங்கி 'நோ' வரையுள்ள தலைப்புகள், 'ப' தொடங்கி 'போ' வரையுள்ள தலைப்புகள் இடம் பெறுகின்றன. ஆள்களின் சிறப்புப் பெயர்களும் இடங்களின் சிறப்புப்பெயர்களும் விளக்கப்படுகின்றன. திருச்சபை விதிமுறைப்படி சேர்க்கப்பெற்ற நூல்களுக்கும், அவ்வாறு சேர்க்கப்படாத இணை நூல்களுக்கும் இதில் அறிமுகக் கட்டுரைகள் உள்ளன. பொதுப்பெயர்கள் பற்றிய கட்டுரைகளும், விவிலிய இறையியல் பற்றிய கட்டுரைகளும் இக்களஞ்சியத்திற்கு அழகு சேர்க்கின்றன.

850-க்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட இத்தொகுதி, உண்மையில் ஒரு களஞ்சியம், ஒரு கருவூலம். இதினின்று புதியனவும் பழையனவும் எடுக்கலாம் (மத் 13:52). புதியன புது மகிழ்ச்சி கொடுக்கும்; பழையன புது விளக்கம் பெற்றுப் புது எழுச்சி அளிக்கும்.

இக்களஞ்சியத் தொகுப்பின் ஆதிமூலமும் ஆசிரியருமான அருள்தந்தை சந்தியாகு சுவாமிகளை மனமாறப் பாராட்டுகிறேன். அவர் விவிலியத்துக்கு ஆற்றும் விழுமிய பணி மேலும் மேலும் சிறப்புறுக என வாழ்த்துகிறேன்.

+ ம. ஆரோக்கியசாமி,
மதுரைப் பேராயர்,
தமிழ்நாடு விவிலிய ஆணைக்குழுத் தலைவர்.

இந்நூலைத் தயாரிப்பதில் உடன் உழைத்தவர்கள்

1. அந்தோணிசாமி A.
2. அமலதாசு A.
3. அமலநாதன்
4. அமல்ராஜ் P.T.
5. அருள்சாமி S.
6. ஆரோக்கியசாமி C.
7. ஆரோக்கிய நாதன் P.
8. ஆன்ரு டிரோஸ்
9. இஞ்ஞாசி G.
10. இருதயராஜ் A.
11. இதயன் A.
12. உபால்டு M.
13. கருணைதாஸ்
14. சந்தனசாமி
15. சந்தியாகு A.
16. சந்தியாகு M.
17. சார்லஸ் குமார் N.A.
18. சுந்தரம் U.
19. சூசை ஆரோக்கியசாமி
20. சூசை செபஸ்டியன்
21. செபஸ்திராஜ்
22. சேவியர் இளங்கோ
23. ஜான்சன் ராஜ் S.
24. ஜெயபாலன்
25. ஜெரால்டு S.
26. ஜேம்ஸ் ரொசாரியோ B.
27. ஜோ லாரன்ஸ்
28. ஜோசப் I.M.
29. ஜோசப் லயனல் S.
30. ஜோனாஸ் N.
31. ஞானப்பிரகாசம் F.
32. தீஸ்மஸ் P.
33. பால்ராஜ் B.
34. பீட்டர் சகாயராஜ்
35. பிரான்சீஸ் M.
36. மரிய அருள்
37. மரிய தாஸ் I.
38. ரொசாரியோ கோமஸ்
39. லூர்து Y.A.
40. லூர்து சாமி A.
41. லூர்துராஜ் G.G.
42. வின்சென்ட் G.

விவிலியத் திருநூல் பட்டியலும் சுருக்கக் குறிப்பும்

I. பழைய ஏற்பாடு

1. ஆதி ஆகமம் (தொடக்கநூல்) ஆதி
2. யாத்திராகமம் (விடுதலைப் பயணநூல்) யாத்
3. லேவியராகமம் (திருப்பணியாளர் நூல்) லேவி
4. எண்ணாகமம் (எண்ணிக்கை நூல்) எண்
5. உப ஆகமம் (துணைச்சட்டநூல்) உப
6. யோசுவா ஆகமம் யோசு
7. நீதிபதிகள் ஆகமம் (விடுதலைத் தலைவர்கள் நூல்) நீதி
8. ரூத்து ஆகமம் ரூத்
9. 1 சாமுவேல் ஆகமம் 1 சாமு
10. 2 சாமுவேல் ஆகமம் 2 சாமு
11. 1 அரசர்கள் ஆகமம் 1 அர
12. 2 அரசர்கள் ஆகமம் 2 அர
13. 1 நாள் ஆகமம் (1 ஆட்சிக் குறிப்பேடு) 1 நாள்
14. 2 நாள் ஆகமம் (2 ஆட்சிக் குறிப்பேடு) 2 நாள்
15. எஸ்ரா ஆகமம் எஸ்
16. நெகேமியா ஆகமம் நெகே
17. தோபியா ஆகமம் தோபி
18. யூதித்து ஆகமம் யூதி
19. எஸ்தர் ஆகமம் எஸ்த
20. யோபு ஆகமம் யோபு
21. சங்கீதங்கள் (திருப்பாடல்கள்) சங்
22. பழமொழி ஆகமம் (நீதி மொழிகள்) பழ
23. திருவுரையாளர் ஆகமம் திருவுரை
24. உன்னத சங்கீதம் (பேரின்பப் பாடல்) உ.சு.
25. ஞான ஆகமம் ஞான
26. சீராக்கு ஆகமம் சீரா
27. எசாயா ஆகமம் எசா
28. எரேமியா ஆகமம் எரே
29. புலம்பல் ஆகமம் புல
30. பாரூக்கு ஆகமம் பாரூ
31. எசேக்கியேல் ஆகமம் எசே
32. தானியேல் ஆகமம் தானி
33. ஓசேயா ஆகமம் ஓசே
34. யோவேல் ஆகமம் யோவே
35. ஆமோஸ் ஆகமம் ஆமோ
36. ஒபதியா ஆகமம் ஒப
37. யோனா ஆகமம் யோனா
38. மீக்கா ஆகமம் மீக்
39. நாகூம் ஆகமம் நாகூ
40. அபக்கூக் ஆகமம் அப
41. செப்பானியா ஆகமம் செப்
42. ஆகாய் ஆகமம் ஆகா
43. செக்கரியா ஆகமம் செக்
44. மலாக்கி ஆகமம் மலா
45. 1 மக்கபேயர் ஆகமம் 1 மக்
46. 2 மக்கபேயர் ஆகமம் 2 மக்

II. புதிய ஏற்பாடு

47. மத்தேயு நற்செய்தி மத்
48. மாற்கு நற்செய்தி மாற்
49. லூக்கா நற்செய்தி லூக்
50. யோவான் நற்செய்தி யோவா
51. அப்போஸ்தலர் பணிநூல் (திருத்தூதுவர் நூல்) அ.ப.
52. உரோமையர் உரோ
53. 1 கொரிந்தியர் 1 கொரி
54. 2 கொரிந்தியர் 2 கொரி
55. கலாத்தியர் கலா
56. எபேசியர் எபே
57. பிலிப்பியர் பிலி
58. கொலோசியர் கொலோ
59. 1 தெசலோனிக்கேயர் 1 தெச
60. 2 தெசலோனிக்கேயர் 2 தெச
61. 1 திமொத்தேயு 1 திமொ
62. 2 திமொத்தேயு 2 திமொ
63. தீத்து தீத்
64. பிலமோன் பில
65. எபிரேயர் எபி
66. யாக்கோபு யாக்
67. 1 பேதுரு 1 பேதுரு
68. 2 பேதுரு 2 பேதுரு
69. 1 யோவான் 1 யோவா
70. 2 யோவான் 2 யோவா
71. 3 யோவான் 3 யோவா
72. யூதா யூதா
73. திருவெளிப்பாடு திருவெளி

துணை நின்ற நூல்கள்

Anderson G.N. : A CritiDefcal Introduction to the O.T.
A History and Religion of Israel.
The Living Word of the O.T.

A New Catholic Commentary on Holy Scripture.

Bright J : A History of Israel.

Claus Schedl : History of the O.T.

Danielou J : The Lord of History

Daniel-Rops : Sacred History

Edman Jacob : God, the Lord of History

Elis P.F. : The Men and Message of the O.T.

Grelot P : Introduction to the Bible

Harry Thomas Frank : Discovering the Biblical World

Helmer Ringgren : Israelite Religion

James Hastings : Dictionary of the Bible

Leon-Dufour X : Dictionary of the Bibical Theology

Louis Hartman : Encyclopedic Dictionary of the Bible

Mc Kenzie J.L : Dictionary of the Bible

Moriarty F.L : Introducing the O.T.

Osmund Lewry O.P. : Introducting the O.T.

Robert A & Feuillet A : Introduction to the Bible

Robert A & Tricot A : Guide to the Bible

The Eerdmans Bible Dictionary

The Harper's Dictionary of the Bible

The Interpreter's Dictionary of the Bible 5 Vols

The Jerome Biblical Commentary

The Jerusalem Bible

Weather head : A Guide to the Bible

Willaim P. Baber : Everyone in the Bible

"தியாகு" : விவிலிய அறிமுகம் (10 பாகங்கள்)

தெ

தெகாவியர் (DEHAVITES)

எருசலேம் ஆலயத்தைத் திரும்பக் கட்டக் கூடாதென்று சமாரியர்கள் அர்த்தக்சஸ்தாவுக்கு அனுப்பிய கடிதத்தில் இக்குழுவும் கையொப்பமிட்டது. இவர்கள் கஸ்பியன் கடலின் பக்கமுள்ள தாயோய் என்ற பாரசீக இனத்தைச் சேர்ந்த மக்களாக இருக்கலாம்.

தெகின்னா (TEHINNAH - இரக்கம், மன்றாட்டு)

இவர் காலேபு வழியாக யூதா இனத்தைச் சேர்ந்தவர்; எஸ்தோனின் மகன்; ஈர்னகாசு நகரை நிறுவியவர் (1 நாள் 4:12)

தெகுவேல் (DEUEL - இறைவனின் அறிவு)

இவர் பாலைவனத்தில் காது இனத்தின் தலைவரான எல்யாசாபுவின் தந்தையாவார் (எண் 1:14; 7:42.47; 10:20). எண் 2:14-இல் இவர் ரெயுவேல் என்றழைக்கப்படுகிறார். இது எபிரேய மெய்யெழுத்துக்களிடையேயுள்ள குழப்பத்தின் விளைவாக இருக்கலாம்.

தெக்கப்பொலி (DECAPOLIS - பத்து நகர்கள்)

பெரிய அலக்சாந்தர் இறந்தபின் (கி.மு. 323), அவருடைய மாதிரியைப் பின்பற்றி, அவருடைய படைத்தலைவர்கள் மேற்காசியாவில் பல கிரேக்க நகரங்களை நிறுவினர். அப்படிப் பாலஸ்தீனத்தில் அமைக்கப்பட்ட பத்துக் கிரேக்க நகர்களின் கூட்டமைப்பாகும் தெக்கப்பொலி அலக்சாந்தர் இன்னேயு (கி. மு. 103 - 76) இவற்றைக் கைப்பற்றினார். பல ஆண்டுகளுக்கு இவை யூத ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. கி. மு. 63-இல் உரோமைத் தளபதி பாம்பே இவற்றிற்குச் சுதந்தரம் அளித்தார். இவை சீரியா மாகாணத்தில் உரோமை ஆளுநனின் அதிகாரத்தில் இருந்தன. யூதேயாவிலிருந்து வரும் யூத ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த இந்நகர்களில் உரோமையர் கிரேக்கக் கலாச்சாரத்தை ஊக்கப்படுத்தினர். இந்நகர்கள் கொள்ளையர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இந்தக் கூட்டமைப்பைப் பயன்படுத்தின.

பிளினி கொடுக்கும் பட்டியலுக்கும் தோலமியின் பட்டியலுக்கும் வேறுபாடு இருந்தாலும், இப்பத்து நகரங்களின் பெயர்களைத் தோராயமாகக் கொடுக்கலாம். 1. கலிலேயாக் கடலின் கிழக்குக்கரையில் இருந்த இப்போ; 2. கலிலேயாக் கடலுக்குத் தென்கிழக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள காதாரா; 3. யோர்தானுக்கு அருகில் யாபோக்கு ஓடைக்கும் கலிலேயாக்கடலுக்கும் இடையிலுள்ள பெல்லா; 4. யார்முக்கு ஓடைக்கு அருகிலுள்ள அபிலா; 5. கிலயாது மலைகளில் யாபோக்கு ஓடைக்கு வடக்கேயுள்ள கெராசா (இக்கால எராஸ்); 6. யாபோக்கு ஓடையின் மூலத்திலுள்ள பிலதெல்பியா. இதுதான் தெற்குக்கோடியிலுள்ள நகரமாகும். பழைய ஏற்பாட்டு இரபா ஆகும்; 7. கலிலேயாக்கடலுக்குக் கிழக்கில் யார்முக்கு ஓடைக்கு மிக அருகிலுள்ள தியோன்; 8. சீரியாப் பாலைவனத்துக்கருகில் கிழக்குக்கோடி நகரமான கனாத்தா; 9. தியோனுக்கு வடகிழக்கிலுள்ள இராபானா; 10. ஸ்கூத்தாப்பொலி (விவிலிய பேத்சான்). இது ஒன்றுதான் யோர்தானுக்கு மேற்கில் இருந்தது. அகுஸ்துவின் அனுமதியோடு, பெரிய ஏரோது, இப்போ, காதாரா, கனாத்தா ஆகிய நகரங்களைத் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டார். ஆனால் அவரது மரணத்துக்குப்பின், இவை முந்தைய கிரேக்க அமைப்புக்குள் சேர்க்கப்பட்டன.

தெக்கப்பொலி என்ற பெயர் பத்து நகரங்களைக் குறித்தாலும், பதினான்கு நகரங்கள் இருந்ததாகத் தெரிகிறது. இவற்றில் தமஸ்கு, ஒரு காலத்திற்கு ஒரு முக்கியமான கூட்டாளியாகும். உரோமை அரேபிய மாகாணம் நிறுவப்பட்டபோது, அஃதோடு பிலதெல்பியாவும் காதாராவும் சேர்க்கப்பட்டன. அதனால் கூட்டமைப்பு பலவீனப்பட்டது. மூலக் கூட்டமைப்பின் தலைநகரான காதாராவின் இடத்தைத் தமஸ்கும் ஸ்கூத்தாப்பொலியும் எடுத்துக்கொண்டன.

புதிய ஏற்பாட்டில் தெக்கப்பொலி மூன்று முறை குறிக்கப்படுகின்றது. மத்தேயுவின் கூற்றுப்படி, "கலிலேயா, தெக்கப்பொலி, எருசலேம், யூதேயா, யோர்தானின் அக்கரைப் பகுதி ஆகிய இடங்களிலிருந்து வந்த மக்கள் பெருந்திரளாய் இயேசுவைப் பின்பற்றினர்" (மத் 4:25). இம்மக்கள் திரள் யூதர்களும் சேர்ந்த கலப்பின மக்களைக் குறிக்கலாம். கெரசேனர் பகுதியில் குணமான பேய் பிடித்தவர் நற்செய்தியை "தெக்கப்பொலி நாட்டில் முழங்கிவந்தார்" என்று மாற்கும் (மாற் 5:20), தனது நகரத்தில் முழங்கினார் என்று லூக்காவும் (லூக் 8:39) கூறுகின்றனர். காது கேளாத ஒருவரைக் குணமாக்குமுன் இயேசு தெக்கப்பொலிப் பகுதிவழியாகச் சென்றதாக மாற்கு கூறுகிறார் (மாற் 7:31). இவ்வழிக்குத் தடயம் காணமுடியவில்லை.

தெக்கோவா (TEKOA - கோட்டை)

யூதாவின் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ள, விவசாயத்தை முக்கியமாகக் கொண்ட நகரம். இது பெத்லகேமுக்குத் தெற்கில் 9 கி.மீ. தொலைவிலும் எருசலேமுக்கத் தெற்கில் 16 கி. மீ. தொலைவிலும் உள்ள இக்காலக் கிர்பெத்துக்கு என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

இது காலேபைச் சார்ந்த அஸ்கூரால் நிறுவப்பட்டது (1 நாள் 2:24). இதற்குக் கிழக்கே இதே பெயருடைய பாலைவனப் பகுதியிருந்தது (1 மக் 9:33). தாவீதையும் அப்சலோமையும் சமாதானப்படுத்திச் சேர்த்துவைக்க தெக்கோவாவிலிருந்து ஒரு விவேகமுள்ள பெண்ணை வரவழைத்தார் யோவாபு (2 சாமு 14:2). தாவீதின் வலிமை மிக்க வீரர்களில் ஒருவரான, இக்கேசின் மகனான ஈரா இந்த ஊரைச் சேர்ந்தவர் (23:36; 1 நாள் 11:28; 27:9). நாடு பிளவுபட்டபின், சீசாக்கின் படையெடுப்புக்குப்பிறகு, ரெகபயாமும் (2 நாள் 11:6) யோசபாத்தும் (20:20) இந்த ஊரைப் பலப்படுத்தினர். இஃது இறைவாக்கினர் ஆமோசின் சொந்த ஊராகும் (ஆமோ 1:1). நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், இவ்வூரைச் சேர்ந்த சிலர் எருசலேம் சுவர்களை மீண்டும் கட்டுவதில் ஈடுபட்டனர் (நெகே 3:5.27).

சிலுவைப்போர்க்காலத்தில் தெக்கோவா புனிதக் கல்லறையின் மானியமாயிருந்தது. கி.பி. 1138-இல் துருக்கியர்கள் இவ்வூரை அழித்தனர். இன்றுவரை ஆளற்ற பாழ்வெளியாக உள்ளது.

தெசலோனிக்கே (THESSALONICA)

மாசிதோனியாவில் ஒரு முக்கியமான நகரம். தற்போது "சலோனிக்கா" என்றழைக்கப்படுகிறது.

இந்நகரம் சலோனிக்க வளைகுடாவில் அமைந்துள்ளது. இது "கால்சிதிஸ்" என்ற தீபகற்பத்தின் மேற்குப்பகுதியில் உள்ளது. ஆதிகாலந்தொட்டே மாசிதோனியாவின் முக்கியமான துறைமுகமாக விளங்கியுள்ளது. இந்நகரம் காசாண்டரால் நிறுவப்பட்டது. இவர், தனது மனைவியும் பிலிப்புவின் புதல்வியுமான, மகா அலக்சாந்தரின் சகோதரியுமான தெசலோனிக்கேயின் பெயரையே இந்நகருக்கு இட்டார். இது கி.மு. 316 அல்லது 315-இல் நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அங்குக் குடியேறியவர்கள், அப்பகுதியில் காசாண்டரால் அழிக்கப்பட்ட இருபத்து ஆறு கிராமத்து மக்களேயாவர்.

கி.மு. 167-இல் மாசிதோனியா நாடு, நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டபோது, தெசலோனிக்கே, இரண்டாவது மாவட்டத்திற்குத் தலைநகராக இருந்தது. அப்போது அது ஸ்திரிமோன், நதியிலிருந்து ஆக்சியு நதி வரை பரவியிருந்தது. கி.மு. 148-இல் மாசிதோனியா, உரோமையர்களின் மாநிலமாகியது. அப்போது தெசலோனிக்கே, முக்கிய நகரமாகவும், உரோமை நிர்வாகத்திற்கு இருப்பிடமாகவும் அமைந்திருந்தது. உரோமையர்களின் ஆட்சியில், இது சுதந்தர நகராக ஆக்கப்பட்டது. ஸ்தராபோ காலத்தில் மாசிதோனியா நகர்களில் இது புகழ்வாய்ந்ததாயும், மக்கள் தொகை மிக்கதாகவும் இருந்தது. அதன்பிறகு, பேரரசன் மூன்றாம் கோர்தியன் (கி. பி. 238-44) காலத்தில் தெசலோனிக்கேவுக்கு "நெயோகோ ரோஸ்" என்ற பட்டம் சூட்டப்பட்டது. இது கோவிலில் நடக்கும் அரச வழிபாட்டு முறையைக் குறிக்கிறது. தீசியஸ்

காலத்தில் (கி. பி. 250) இஃது ஓர் உரோமைக் காலனியாக ஆக்கப்பட்டது.

தெசலோனிக்கே நகரைச் சுற்றி ஒரு மதிற்சுவர் உண்டு. அதன் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகள் இன்னும் இருக்கின்றன. எக்னேசியன் சாலை, தென்கிழக்கிலிருந்து வடமேற்காகச் செல்கிறது. இப்பாதை வார்தார் வீதி என்று பிறகு அழைக்கப்பட்டது. இச்சாலையில் இரண்டு உரோமையர்களின் வளைவுகள் உண்டு. மேற்கு நுழைவுப்பாதையில் உள்ளது வார்தார் வாயில் என்றழைக்கப்பட்டது. இது 1817-இல் அழிக்கப்பட்டது. கிழக்கு மதிற்சுவருக்கு அருகில் கலேரியு வளைவு, கி.பி. 297-இல் பாரசீகர்களின் வெற்றியைக் கொண்டாடக் கட்டப்பட்டது. இந்தக் கிழக்கு வளைவுக்கு வடக்கில், வட்ட வடிவ உரோமையர்களின் கட்டடம் ஒன்று இருந்தது. அது, பிறகு புனித ஜார்ஜ் கோவிலாக மாறியது. இந்த நகரின் மையத்தில் பேரவை மன்றம் ஒன்று இருந்தது. வார்தார் வாயிலிருந்த ஒரு கல்வெட்டுப் பொறிப்பு இப்போது, இங்கிலாந்து பொருட்காட்சி சாலையில் உள்ளது. அஃதோடு பல பொறிப்புகள் தெசலோனிக்கேயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம், அதிகாரிகளை "நகராட்சிக் குழுவினர்" என்று குறிப்பிடுகின்றன. வார்தார் வாயில் பொறிப்புகள் கி.மு. 30-இலிருந்து கி.பி. 143 வரை உள்ள காலக் கட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். ஒரு கல்வெட்டுப் பொறிப்பு அகுஸ்து காலத்தைச் சேர்ந்ததாகும். வேறு ஒன்று கிளாதியு காலத்தைச் சேர்ந்தது. இது சிறப்பு வாய்ந்த ஒன்று. ஏனென்றால் அ.ப. 17:6-இல் காணப்படும் "நகராட்சிக் குழுவினர்" என்ற பட்டம் தெசலோனிக்கே நகர் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

பவுல் தனது இரண்டாம் மறைபரப்புப்பயணத்தில் தெசலோனிக்கே நகருக்குச் சென்றார் (அ.ப. 17:1-10). அப்போது இந்நகரில் பல இனமக்கள் வாழ்ந்து வந்தனர். யூதமக்கள் பவுலைக் கடுமையாக எதிர்த்தனர். (17:5-10). தன் உழைப்பால் தெசலோனிக்கேயில் உருவான கிறிஸ்தவச் சமூகத்திற்குப் பவுல் இருதிருமுகங்கள் எழுதினார். பவுல், தனது மூன்றாவது பயணத்தின்போது இந்நகருக்கும் சென்றிருக்கலாம் (காண்க. 20:1-2).

தெசலோனிக்கேயருக்குத் திருமுகம் - I (THESSALONIANS - I, LETTER TO THE

1. அப்போஸ்தலர் பவுல், அவரது தோழர்களாகிய சில்வான் மற்றும் திமொத்தேயு ஆகியோர், தாங்கள் சிறிது காலத்திற்கு முன்பு தெசலோனிக்கேயில் நிறுவிய திருச்சபைக்கு எழுதிய மடலாகும் இது. இப்போது இந்நூல் புதிய ஏற்பாட்டின் திருமுறைப்பட்டியலில் 13-ஆவது இடத்தைக் கொண்டுள்ளது. நமக்குக் கிடைத்திருக்கும் பவுலின் திருமுகங்களிலேயே காலத்தால் மிக முந்தியதாக இது கருதப்படுகிறது.

பவுலின் பிற திருமுகங்களோடு ஒப்பிடும்போது இதில் இறையியல் கோட்பாட்டுக் கருத்துகள் அதிகம் இல்லைபோல் தோன்றலாம். ஆனால் விசுவாசத்தின் பொது அடிப்படையாகக் கருதப்படும் செழிப்பான பல கருத்துகள் சேர்ந்த கோட்பாட்டுத் தொகுப்பு அமைந்துள்ளது. இவற்றில் ஆண்டவர் இயேசு விண்ணக மகிமையோடு மீண்டும் வருவதை எதிர்பார்க்கும் கருத்து ஆதிக்கம் செலுத்துகிறது; நமது கவனத்தை ஈர்க்கிறது. அப்போஸ்தலரின் ஆட்தன்மையையும் பண்புகளையும் கவர்ச்சிகரமான ஒளியில் வெளிப்படுத்தும் அவரது மனித அக்கறையைப் போதகத்திலும் அறவுரைகளிலும் வெளிக்கொணர்கிறது. தொடக்க காலத்திருச் சபையின் மகிழ்ச்சி, மனவுறுதி, ஒருவர்க்கொருவர் அன்பு காட்டுதல், வருங்காலப் பேறுபற்றிய உறுதியான நம்பிக்கை ஆகியவை பற்றிய உயிர்ச்சித்திரமான விவரிப்புகளையும் இந்நூலில் காணலாம். தர்க்கவாதம் இன்மை புதியவிசுவாசத்தின் நேரடிக் கூறுகளைத் தெளிவாக, சுருக்கமாக வெளிக்கொணர ஏதுவாகிறது.

2. தெசலோனிக்கே நகர்: காண்க. தெசலோனிக்கே.

3. தெசலோனிக்கேயும் அப்போஸ்தலர் பணியும் மடலின் சூழ்நிலையும்:

இங்குச் சில மாதங்களுக்கு முன்புதான், ஒருவேளை சில வாரங்களுக்கு முன்புதான், திருச்சபை பவுல் மற்றும் அவரது இரு தோழர்களாலும் நிறுவப்பட்டிருக்க வேண்டும். அதற்குமுன் மாசிதோனியாவில் பிலிப்பு என்ற நகரில் தங்கள் மறைபரப்புப் பணியைத் தொடங்கி அங்கு, பிரமாணிக்கமுள்ள விசுவாசிகளின் குழுவை நிறுவினர்; ஆனால், மக்களால் தாக்கப்பட்டனர்; நடுவர்களால் சாட்டையாலும் தடியாலும் அடிக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர் (அ.ப. 16:22-24; காண்க. 1 தெச 2:2). ஆனால் இவற்றால் இம்மூவரும் மாசிதோணியாவில் செய்த பணியில் தளர்ச்சியடையவில்லை; உற்சாகம் குன்றவில்லை; சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபின், மாகாணத்தின் பிற பகுதிகளுக்கும் சென்று பணிசெய்ய ஆர்வம் கொண்டு, அப்பகுதியின் தலைநகரான தெசலோனிக்கேயிக்கு வந்தடைந்தனர்.

இங்குப் பல இன மக்கள் வாழ்ந்தனர். அவர்களில் யூதர்களும் அடங்குவர். வழக்கம்போல் யூதச் செபக் கூடம் அப்போஸ்தலர்களுக்கும் போதிக்க வாய்ப்பளித்தது. இங்கு யூதர்கள் மட்டுமன்று, யூத மதத்தால் ஈர்க்கப் பெற்று, அதன் புனித நூல்களை அறிந்த "பக்தியுள்ள கிரேக்கர்கள்" சிலரும் கூடுவர். இந்தப் புறவினத்தாரிடையே நற்செய்திப்போதகம் விசுவாசத்தைத் தூண்டி எழச்செய்தது. யூத மதத்திலிருந்து மனந்திரும்பியவர்கள் சிலர். புறவினத்தாரிடையே நற்செய்தியாளர்கள் அடைந்த வெற்றி, யூத சமூகத்திடையே பொறாமையை உண்டாக்கியது; கடும் எதிர்ப்பை எழுப்பியது. இதுபற்றி அ.ப. 17:6-9-இல் வாசித்தறியலாம். இந்த எதிர்ப்பின் விளைவாகப் பவுலும் அவரது தோழர்களும் இரவோடு இரவாக ஊரைவிட்டுச் செல்ல வேண்டியிருந்தது.

அப்போஸ்தலர் பணிநூல் அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயில் மூன்று வாரங்கள் தான் பணி செய்தனர் என்ற கருத்தைக் கொடுக்கிறது. அப்போது அவர்கள் செபக்கூடத்தில்தான் போதித்தனர். அதன் விளைவாக "யூதர்களும் யூதமறையைத் தழுவிய திரளான கிரேக்கர்களும் பெருங்குடி மகளிரும்" (17:4) மனந்திரும்பினர். ஆனால் இந்தத் திருச்சபை பற்றிய பவுலின் சொந்தக் குறிப்புகள், இப்பணி போதிய அளவு நீண்ட காலத்திற்கு நடந்திருக்க வேண்டும் என்றும் அதன் விளைவாகப் புறவின மக்களிலிருந்து நேரடியாக மனந்திரும்பியவர்கள் அடங்கிய திருச்சபை நிறுவப்பட்டது என்றும் சுட்டுகின்றன (1 தெச 5:12-14). அப்போஸ்தலர் பணி நூலில் வரும் "பக்தியுள்ள கிரேக்கர்கள்" என்பது "உண்மையும் உயிருமுள்ள கடவுளுக்கு ஊழியம் செய்வதற்காக... தெய்வங்களின் சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பினீர்கள்" (1:9) என்ற கூற்றோடு ஒத்துப் போகவில்லை எனலாம். இவை அப்போஸ்தலர்கள் செபக்கூடத்துக்கு வெளியே சென்று பொது இடங்களிலும் போதித்திருக்க வேண்டும் எனச்சுட்டுகின்றன. இப்பணிக்குப்பின் இத்திருச்சபையின்பால் அப்போஸ்தலர்கள் காட்டிய மேய்ப்புப்பணி அக்கறையும் (2:9-12), மனந் திரும்பியவர்களுடன் அவர்கள் கொண்டிருந்த அன்பும் பாசமும் (2:8; 3:6-10), இப்பணி மூன்று வாரங்களுக்கும் அதிகமான காலத்திற்கு நடந்திருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன. மேலும் தெசலோனிக்கேயில் கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட துன்பங்கள் பற்றிய குறிப்புகள், இவை யூத மதத்தினரிடமிருந்து வந்தன என்று சுட்டவில்லை. மாறாக அவர்களினத்தாரிடமிருந்து வந்ததாகத் தெரிகிறது. யூதேயாவில்தான் யூதர்களால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர்; மாசி தோனியாவில் அன்று (2:14).

அப்போஸ்தலர் பணிநூல் நிகழ்ச்சியுரையின் ஒரு பகுதியையே விவரிக்கிறது எனலாம். செபக்கூடத்தில் அடைந்த தொடக்க வெற்றிக்குப்பின், அப்போஸ்தலர்கள் நேரடியாகப் புறவினத்தாரிடம் போதித்திருக்க வேண்டும். அதன் விளைவாகப் பலர் "சிலைகளிலிருந்து கடவுளிடம் திரும்பியிருக்க வேண்டும்." இவர்கள் தங்களினத்தைச் சேர்ந்த விசுவசியாத மற்றவர்களால் துன்புறுத்தப்பட்டிருக்க வேண்டும் (காண்க. 3:3-4). இதற்கு யூதர்களின் தூண்டுதல் தேவையாய் இருந்திருக்க வேண்டியதில்லை.

அப்போஸ்தலர் பணிநூல் யூதர்களின் பாகத்தை மிகைப்படுத்தியுள்ளது என்று கருத இடமிருக்கிறது. யூதர்களின் எதிர்ப்பால் தெசலோனிக்கே திருச்சபை பாதிக்கப்பட்டது என்று கருத இத்திருமுகத்தில் ஆதாரம் இல்லை எனலாம்.

தங்களுடைய சீடர்கள் பிறருடைய கொடுமையால் மேலும் துன்புறுதலைத் தடுக்க மூன்று நற்செய்தியாளர்களும் இரவோடு இரவாக நகரைவிட்டு ஓட வேண்டியிருந்தது. ஆனால், தெசலோனிக்கே திருச்சபையோ சிறிது காலத்திற்கு முன்புதான் தோன்றியது. பிறரால் பெரிதும் துன்புறுத்தப்பட்டது. அங்கு அனுபவமிக்க தலைவர்கள் இல்லை. ஆகவே அதன் நலன் பற்றி அப்போஸ்தலர்கள் பெரிதும் கவலைப்பட்டனர். ஆகவே, அங்குத் திரும்பி வர முயற்சித்தனர். "சிறிது காலம் உங்களைவிட்டுப் பிரிந்து தவித்தோம்... உங்கள் முகத்தைப் பார்க்க மிக்க ஆவலாய் ஏங்கி இருந்தோம். உங்களிடம் வரவிரும்பினோம். அதுவும் பல தடவைகளில் நான் உங்களிடம் வர எண்ணங்கொண்டேன். ஆனால், சாத்தான் எங்களைத் தடுத்துவிட்டான்" (2:17-18) என்று பவுல் கூறுகிறார்.

அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயிலிருந்து பெரோயாவுக்குச் சென்று தங்கள் பணியின் தொடக்கத்தில் பெரிதும் வெற்றி கண்டனர். ஆனால், தெசலோனிக்கேயில் எதிர்த்தவர்களே இங்கும் தோன்றி எதிர்ப்பைத் தூண்டினர். சிறிது காலத்திற்குத் தனது இருதோழர்களைப் பெரோயாவில் விட்டு விட்டு, பவுல் ஏதன்சுக்கு ஓட வேண்டியிருந்தது (அ.ப. 17:10-15). சிறிது காலத்திற்குப் பின் அவ்விருவரும் ஏதன்சில் பவுலோடு சேர்ந்து கொண்டனர். ஆனால் தெசலோனிக்கே திருச்சபையைப் பற்றிய கவலை அதிகமாகவே, துணிவோடு ஒரு முடிவு எடுத்தனர். அதன்படி திமொத்தேயு அங்குச் சென்று, அத்திருசபைக்கு அறிவுரை கூறி அதை உறுதிப்படுத்த வேண்டும் (1 தெச 3:1-5). இதற்கிடையில் பவுல் கொரிந்துக்குச் சென்று தங்கினார். அங்கு திமொத்தேயு பவுலுடன் சேர்ந்து கொண்டார் (அ.ப. 18:5).

திமொத்தேயு திரும்பி வந்து செய்தி அறிவித்த சிறிது காலத்திற்குள் இத்திருமுகம் எழுதப்பட்டது. புற இனத்தாரிடமிருந்து பகைமையை எதிர்கொண்டாலும், தெசலோனிக்கே திருச்சபை உறுதியாக உள்ளது என்பதை அறிந்ததால், துயரக்குறைவும் மகிழ்ச்சியும் இம்மடலில் மிளிர்கிறன. அவர்கள் காட்டிய விசுவாசத்திற்காகவும் மன உறுதிக்காகவும் அப்போஸ்தலர்கள் இறைவனுக்கு நன்றி கூறுகிறார்கள் (1:2-3). அவர்கள் விசுவாசத்தினால் ஆற்றிய செயல்களையும் அன்பினால் மேற்கொண்ட உழைப்பையும் நினைவு கூர்கின்றனர். அவர்கள் அனுபவித்த துன்பங்களே இறைவன் அவர்களிடையே ஆற்றலோடு செயலாற்றுவதைக் காட்டுகின்றன. அவர்கள்பால் அப்போஸ்தலர்கள் கொண்டுள்ள அக்கறையையும், திமொத்தேயு கொண்டுவந்த செய்தியால் அடைந்த மகிழ்ச்சியையும் நூல் எடுத்துக்கூறுகிறது (3:6-8.11-13).

இந்தச் சொந்த நினைவுகூர்தலும், மகிழ்ச்சியும், உறுதியும் திருமுகத்தின் முதல் பகுதியான மூன்று அதிகாரங்களில் அடங்கியுள்ளன. மீதிப்பகுதி, திமொத்தேயு கொண்டு வந்த செய்தியின் விளைவாக அவர்களுக்கு வேண்டிய ஒழுக்கப் போதனைகளை எடுத்துக்கூறுகிறது (அதி 4-5). இதில் வெளிப்பாட்டுத் தன்மையுடைய ஒரு பகுதியும் உள்ளடங்கும் (4:13-18). இது ஆண்டவர் வருகைக்கு முன் மரித்த விசுவாசிகள் ஆண்டவரது வருகையின் மகிழ்ச்சியிலும் மகிமையிலும் பங்கெடுக்கத் தவறிவிடுவார்களோ? என்ற இரு பிரச்சனைகளுக்குப் பதிலாக அமைந்துள்ளது. இத்திருமுகம் இரண்டாம் பிரச்சினைக்கு அளிக்கும் பதில் தெசலோனிக்கேயரைத் திருப்திப்படுத்தி அச்சத்தைப் போக்கியது. ஆனால் முதல் பிரச்சினைக்கு அளித்த பதில் அவர்களைத் திருப்திப்படுத்தவில்லை. ஆகவே, பவுல் இரண்டாம் திருமுகம் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இரண்டாம் பகுதி (அதி 4-5) திமொத்தேயுவினுடைய தூதின் விளைவாக அமைந்துள்ளது. சிலரது கருத்துப்படி, தெசலோனிக்கேயர்

களிடமிருந்து திமொத்தேயு கடிதம் கொண்டு வந்திருக்க வேண்டும். அதிலே அவர்கள் சில அதிகாரபூர்வமான விளக்கங்கள் கேட்டிருக்க வேண்டும் என்பர். ஆனால் இவைபற்றிய எக்குறிப்பும் திருமுகத்தில் காணப்படவில்லை.

4. ஆசிரியர்:

இத்திருமுகத்தைப் பவுல்தான் எழுதினார் என்பதுபற்றி, இந்நூற்றாண்டின் செர்மனி நாட்டைச்சேர்ந்த அறிஞர் சிலரைத் தவிர, இப்போது யாரும் ஐயுறுவதில்லை. புறச்சான்றாக அதிகமில்லை. கி.பி. 200-ஐ ஒட்டி எழுதப்பட்ட தாகக் கருதப்படும் செஸ்டர் பேட்டி என்ற கையெழுத்துப் பிரதியில் இத்திருமுகத்தின் துணுக்குகள் காணப்படுகின்றன. மார்சியனுடைய (கி.பி. 140) திருமுறைப்பட்டியலிலும், மற்ற எல்லாத் திருமுறைப்பட்டியல்களிலும், எல்லாப் பழம் வாசகங்களிலும் இத்திருமுகம் இடம்பெறுகிறது. இரேனேயு (கி.பி. 180) இந்நூலைப் பெயர் சொல்லிக் குறிப்பிடுகிறார். அவரைப் பின்பற்றி எண்ணற்ற ஆசிரியர்கள் இந்நூலைக் குறிப்பிடுகின்றனர். தொடக்க காலத்திருச்சபைத் தந்தையர்கள் இதிலிருந்து எடுத்துக்காட்டுகள் தந்துள்ளனர். வாசகத்தைப் பொருத்தமட்டும் சில வேறுபாடுகளைத் தவிர, நாம் கொண்டிருக்கும் வடிவில் இத்திருமுகம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து எல்லா விவிலிய ஏடுகளிலும் காணப்படுகிறது. ஆகவே இத்திருமுகத்தைப் பவுல்தான் எழுதினார் என்பதன் உண்மைத் தன்மையை ஐயுற இடமில்லை.

ஆயினும் இத்திருமுகத்தைப் பவுலின் பெயரால் மற்றொருவர் எழுதியிருக்கலாம் என்று கருதுபவர்கள், இந்நூலில் இறையியல் கோட்பாட்டுத் தொகுப்பு அதிகமில்லை என்பதை ஒரு காரணமாகச் சுட்டிக்காட்டுவர். ஆனால் இதுவே, இந்நூலைப் பவுல்தான் எழுதினார் என்பதற்கு ஒரு வலுவான சான்றாகக் கருதப்படும். போலி ஆசிரியர்கள் இம்மடலால் அதிகம் பயன்பெறப் போவதில்லை. இதில் எந்த இறையியல் ஆதாயமும் இல்லை.

வாழ்த்துகளிலும் குறிப்புகளிலும் காணப்படும் இயல்பான மனந்திறந்த மனவெழுச்சி, இஃது ஓர் உண்மையான கடிதம், செயற்கை முறையான இறையியல் கட்டுரை அன்று என்று காட்டப்போது மானதாகும். ஆண்டவர் வருகை தாமதப்படுத்தப் பட்டதால் ஏற்படும் ஏமாற்றத்தால் மங்காத, இறுதிக்கால எதிர்பார்ப்புகள் பற்றிய உயிர்ச்சித் திரமான விவரிப்புகள் கிறிஸ்தவத் தூதின் முதல் தலைமுறையை ஐயமறச் சுட்டுகின்றன. பவுலின் பெயரால், அவரது மரணத்துக்குப்பின், எழுதியிருக்கக்கூடிய ஆசிரியர் "உயிருடனிருக்கும் நாம், ஆண்டவரின் வருகை வரையில் உயிரோடு எஞ்சி நிற்கும் நாம்" (1 தெச 4:15) என்று பவுலையும் சேர்த்து எழுதியிருக்க மாட்டார். பவுலின் திருமுகங்களை இறையியல் கோட்பாட்டுக் கட்டுரைகளாகத் தவறாகக் கருதினால் ஒழிய, இறையியல் கோட்பாடுகள் அதிகமின்மை இக்கடிதத்தைப் பவுல்தான் எழுதினார் என்பதற்கு மறுப்பாக அமையவில்லை. சொற்றொகுதியிலோ, நடையிலோ இந்நூல் பிற திருமுகங்களிலிருந்து வேறுபடுவதும் மறுப்பாக அமையவில்லை.

இத்திருமுகத்தில் சில்வான் (சீலா), திமொத்தேயு ஆகியோரின் பங்கு என்ன? வெறுமனே மரியாதைக்காக மட்டும் இவர்களுடைய பெயர்களைப் பவுல் சேர்க்கிறாரா? சில பகுதி களைத்தவிர (2:18;3:15; 5:27) நூல் முழுவதும் தன்மைப்பன்மையில் உள்ளது. இருவரும் தொடக்க காலத்திருச்சபையில் முக்கியம் வாய்ந்தவர்கள் (திமொத்தேயு – பிலி 2:22; அ.ப. 16:1-3; 1 தெச 3: 1-6; சில்வான் அல்லது சீலா – அ.ப. 15:22-18:5). ஆகவே வயதில் இளைய வர்களோ, முதியவர்களோ, யாவரும் மறைபரப்புப் பணியில் தோழர்களாகப் பங்குகொண்டனர் என்ற பவுலின் உணர்வை இந்தப்பன்மைத்தன்மை காட்டுகிறது. ஒரு பொதுப்பணியில் ஈடுபட்ட உண்மையான கூட்டாளிகள் அடங்கிய குழுவின் ஓர் அங்கத்தினன் என்ற முறையில் பவுல் இத்திருமுகத்தை எழுதுகிறார். மடலின் தன்மை இயல்பானதாகவும் ஆர்வமிக்கதாகவும் உள்ளது. ஆகவே, இது மூவரும் ஒருங்கமைந்து தர்க்கித்து இந்நூலை எழுதினார்கள் என்று சுட்டவில்லை.

5. **நூலில் ஒற்றுமை:** இந்நூலில் ஒற்றுமை யுள்ளதா என்பது இந்நூற்றாண்டில் எழுப்பப்படும் பிரச்சினை. இந்நூல் இரு கடிதங்களைக் கொண்ட தொகுப்பாகும் என்பர் சிலர். அதி 1-3; அதி 4-5 அடங்கிய இரு கடிதங்களாகப் பிரிப்பர். இவற்றில் முதல் பகுதி- திமொத்தேயுவின் பாதிப்பாலும் இரண்டாம் பகுதி- சில்வானின் பாதிப்பாலும் எழுதப்பட்டவை என்பர். வேறுசிலர் 1:1-2:12; 4:2-5:28 என்ற பகுதிகள் முதல் கடிதத்தையும், 2:13-4:1 என்ற பகுதி இரண்டாம் கடிதத்தையும் சேர்ந்தது என்பர். இக்கருத்துக்குச் செர்மனிநாட்டு அறிஞர் சிலரே ஆதரவு தருவர். பொதுவாக இந்நூல் ஒரே மடலாக ஏற்றுக் கொள்ளப்படும்.

மற்றும் சிலர் 2:13-16 என்ற பகுதி, இடைச் செருகல் ஆகும் என்று கருதுகிறார்கள். இக் கருத்துக்கு ஆதாரமாக, இப்பகுதியில் காணப்படும் கடுமையான யூத எதிர்ப்புப்போக்கையும் 2:12-ஐ அடுத்து 2:17 இயல்பாக அமைவதாகத் தெரிவதையும் காரணம் காட்டுவர். இப்பகுதி யையும் பவுலே எழுதினார் என்று கூறுபவர்கள் இடைச்செருகல் கருத்துக்கு ஆதரவான காரணங்கள் இறையியல் மற்றும் கருத்தியல் அடிப்படை கொண்டவை, வரலாற்று மற்றும் இலக்கிய அடிப்படை கொண்டவை அல்ல என்று கூறுவர்.

இதே போன்று, 5:1-11 என்ற பகுதியும் ஓர் இடைச்செருகலாகும். மேலும் இப்பகுதி 4:13-18 என்ற பகுதியின் இரட்டிப்பு வாசகமாகத் தோன்றுகிறது என்பர். இது சிலரது கருத்தேயாகும். இவ்வாதம் நடை, சொற்றொகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

6. **இடமும் காலமும்:** கொரிந்துக்குப் பவுல் சென்ற முதல் மறைபரப்புப் பயணத்திற்குக் காலம் குறிப்பதைப் பொருத்துத்தான் இத்திருமுகம் எழுதப்பட்ட காலத்தைக் குறிக்கமுடியும். ஏனெனில், ஏதன்சிலிருந்து திமொத்தேயு தெசலோனிக்கேக்குச் சென்றார் என்றால் (1 தெச 3:1), அவர் திரும்பிவந்து ஏதன்சிலோ கொரிந்துப் பணித்தொடக்கத்திலோ பவுலோடும் சில்வானுட னும் சேர்ந்திருக்க வேண்டும். இந்தப்பணி யின்போது அக்காயாவின் ஆளுநர் கல்லி யோவின்முன் விசாரணைக்குப் பவுல் கொண்டு வரப்பட்டார் (அ.ப. 18:12-17). கல்லியோ கி.பி. 51-52-இல் பதவி வகித்தார். ஆகவே அப்போஸ்தலர் பணிநூல் அடிப்படையில் இத்திருமுகம் 50 அல்லது 51-இல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இத்திருமுகம் பிற்காலத்தில் எழுதப்பட்டது என்று கருதுபவர்கள் கூறும் காரணங்கள்: அ) பவுலைப்பற்றிய குற்றச்சாட்டுகள் கொரிந்தி யருக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகத்தில் வருபவை போன்றுள்ளன; ஆ) ஒரு திருமுகம் பெறுவதற்குத் தெசலோனிக்கேயில் நிறுவப்பட்ட திருச்சபை வளர்ச்சியடைவதற்குப் போதிய காலம் வேண்டும்; இ) 1 தெச3:1 திமொத்தேயு ஏதன்சில் இருந்தாகச் சுட்டுகிறது. ஆனால் அ.ப. 17-18 இதுபற்றி ஒன்றும் கூறவில்லை. ஆகையால் இத்திருமுகம் பிற்காலத்தில், ஒருவேளை மூன்றாம் மறைபரப்புப் பயணத்தின்போது எழுதப்பட்டிருக் கலாம். இக்கருத்துக்குப் பதிலாக, அ) குற்றச் சாட்டுகள் ஒத்தவையாயினும், அவை வெவ்வேறு மக்கள் குழுக்களால் கூறப்பட்டுள்ளன; ஆ) வளர்ச்சிக்கு வேண்டிய காலம் நிச்சயமற்றது; அதை முன்னறிவிக்க முடியாது; மேலும் தெசலோனிக்கேயில் திருச்சபை நிறுவப்பட்டது பற்றிய நினைவு தம் மனதில் பசுமையாய் இருப்பதுபோல் பவுல் இத்திருமுகத்தை எழுதுகிறார்; இ) ஒன்று கூறப்படவில்லை என்பது அதை மறுப்பதற்குச் சமமானதன்று, என்று கூறுவர்.

மேலே கூறியவற்றை மனதில் கொண்டு, இத்திருமுகம் கொரிந்து நகரில், கி.பி. 50-51-இல் எழுதப்பட்டது என்று கூறலாம்.

7. நூலின் திட்டம்:

I. முன்னுரையும் வாழ்த்தும் (1:1).
II. நன்றிகூறல் (1:2-3:13).
அ) முதற்காலம் (1:2-2:12).
- 1:2-10 : நன்றியுரை.
- 2:1-12 : அப்போஸ்தலரின் பணி.
- 2:13-16 : விசுவாசிகளின் பதில்

ஆ) இரண்டாம் காலம் : திமொத்தேயுவின் தூது (2:17-3:13).

2:16-20 : அப்போஸ்தலர்களின் அக்கறை.
3:1-5 : திமொத்தேயுவை அனுப்பிய தன் நோக்கம்.
3:6-10 : திமொத்தேயுவின் அறிக்கை.
3:11-13 : நன்றியுரையும் மன்றாட்டும்.

III அறவுரை (4:1-12).

4:1-8 : கற்பு.
4:9-12 : பிறர் அன்பு.

IV இறுதிக்கால இயல் (4:13-5:11).

அ) ஆண்டவரின் வருகை (4:13-18).

ஆ) ஆண்டவரின் நாள் (5:1-11).

5:1-3 : எச்சரிக்கை
5:4-11 : ஊக்குவித்தலும் அறவுரையும்.

V இறுதி அறவுரைகள் (5:12-22).

VI முடிவுரை: ஆசீரும் வாழ்த்தும் (5:23-28).

8. இறையியல் கருத்துக்கள்: இத்திருமுகம் ஓர் இறையியல் கோட்பாட்டுக் கட்டுரையன்று. தற்செயலாகத்தான் கிறிஸ்தவ விசுவாசக் கோட்பாடுகள் குறிக்கப்படுகின்றன. ஆயினும் இந்தத் தற்செயலான குறிப்புகள்கூட அப்போஸ்தலர்கள் காலத்திய போதகத்தின் வளமையையும், தொடக்க காலத்தில் மனந் திரும்பியவர்களுக்கு அளிக்கப்பட்ட போதகத்தின் சுருக்கத்தையும் சுட்டிக்காட்டப் போதுமானவை யாகும்.

அ) இறைவனும் விசுவாசிகளும்: தெசலோனிக் கேயர்கள், தங்கள் மனந் திரும்பியபோது, “உண்மையும் உயிருமுள்ள கடவுளுக்கு ஊழியம் செய்வதற்காகச் சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பினார்கள்” (1:9). அவர், அவர் களுடைய “தந்தையாவார்” (1:1.3; 2:11). அவரே அவர்களைத் தேர்ந்துகொண்டார் (1:4). தமது அரசுக்கும் மாட்சிமைக்கும் அவர்களை அழைத் துள்ளார் (2:12). கடவுள் அவர்களைச் சினத்திற்கு ஆளாகும்படி ஏற்படுத்தவில்லை. "நம் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக மீட்பு அடையவே ஏற்படுத்தியுள்ளார்" (5:9). இப்போது அவர்களின் வாழ்வு முழுவதையும் ஆள விரும்புகிறார். “மனிதருக்கு அல்ல, எங்கள் உள்ளங்களை உய்த்துணரும் கடவுளுக்கு உகந்தவர்களாக இருக்கவே" (2:4) அப்போஸ் தலர்கள் பேராவல் கொண்டிருப்பதுபோல், “கடவுளுக்கு ஏற்க வாழ்வதே” புதிதாக மனந் திரும் பியவர்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும் (2:12). அப்போஸ்தலர்கள் போதிக்கும் செய்தி இறைவனே அவர்களை நம்பி ஒப்படைத்ததாகும் (2:4). அது “கடவுளின் நற்செய்தியாகும்” (2:2). அது விசுவாசிகளுள் ஆற்றலோடு செயலாற்றும். “கடவுளின் வார்த்தையாகும்” (2:13). விசுவாசிகள் “கடவுளால் அன்பு செய்யப்படும் சகோதரர்கள்” ஆவர் (1:4). ஒருவர்க்கொருவர் அன்புகாட்டக் கடவுளே அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார் (4:9): அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளிக்கிறார் (4:8).

ஆ) கிறிஸ்துவும் விசுவாசிகளும்: இவ்வாறு இறைவனை மையமாகக் கொண்ட அப்போஸ்தலரின் போதகம், அதே சமயம் கிறிஸ்துவையும் மையமாகக் கொண்டுள்ளது. ஏனெனில் கடவுளின் பெயரோடு கிறிஸ்துவின் பெயரையும் சேர்த்தே கூறுகிறார். திருச்சபை “தந்தையாகிய கடவுளுக்குள்ளும் ஆண்டவராகிய கிறிஸ்துவுக்குள்ளும் வாழ்கின்றது” (1:1). அப்போஸ்தலப் போதகம் “கடவுளின் வார்த்தை” என்றும் “கடவுளின் நற்செய்தி” என்றும் அழைக்கப்படும்போது, அது “ஆண்டவரின் வார்த்தை” என்றும் (1:8), “கிறிஸ்துவின் நற்செய்தி” என்றும் (3:2) அழைக்கப்படுகிறது. கடவுள் யாரை நம்பி நற்செய்தியை ஒப்படைத்துள்ளாரோ (2:4) அவர்களே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் ஆவர் (2:6). "நம் கடவுளும் தந்தையுமானவரும், நம் ஆண்டவராகிய இயேசுவும்" என்று சேர்த்துச் செபிக்கப்படுகிறார்கள் (3:11). கடவுள் நமக்குக் குறித்துவைத்துள்ள மீட்பைக் “கிறிஸ்து வழியாகவே” நாம் அடையவேண்டும் (5:9). “கிறிஸ்துவிலும்”, “கிறிஸ்துவின் வழியாகவும்”, கிறிஸ்தவர்கள் மரிக்கின்றனர். இறந்தோரிட மிருந்து உயிர்த்தெழுந்து, அவர்களுடைய ஆண்டவரோடு எப்போதும் இருப்பதற்கும் உறுதிபெற்றுள்ளனர் (4:14.16-18). “இயேசு

கிறிஸ்துவில்தான்" இறைவன் தமது திருவுளத்தை வெளிப்படுத்துகிறார் (5:18). நாம் "அவரோடு வாழும் பொருட்டு இயேசுவே நமக்காக இறந்தார்" (5:9-10). "நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து", "கிறிஸ்து இயேசு", "நமது ஆண்டவர் இயேசு", என்றும், சில சமயம் "கிறிஸ்து", "இயேசு" என்றும், பெரும்பாலும் வெறுமனே "ஆண்டவர்" என்றும் இயேசுவுக்குப் பல பெயர்களையும் பட்டங் களையும் அளிக்கிறார் பவுல். இறந்தோரினின்று இறைவன் உயிர்ப்பித்த இந்த இயேசுவே இறைமகன் ஆவார். இவரே "வரப்போகும் சினத்தினின்று நம்மை மீட்பவர்" (1:10). விண்ணி னின்று இவரது வருகைக்காகக் கிறிஸ்தவர்கள் காத்திருக்கின்றனர். இவர் விசுவாசிகளின் முழுமையான பற்றுறுதியைக் கோருகிறார். அப்போஸ்தலர்களின் கட்டளைகளும் போதகமும் "ஆண்டவர் இயேசுவில்" அளிக்கப்படுகின்றன (4:1தொ). இவரே தவறு செய்தவர்களைத் தண்டிக்கிறார் (4:6). விசுவாசிகளின் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவை இறைவன் திருமுன் இயேசுவை நோக்கிச் செயல்படுகின்றன (1:3). ஆண்டவரோடு நாம் சேர்ந்து வாழவேண்டும் மேலும் அவரோடு எப்போதும் இருக்க வேண்டும் என்பதே நமக்கு அளிக்கப்படும் மேலான உறுதியும் நமதுபேராவலும் ஆகும் (5:10; 4:17). இவற்றில் திட்டம் செய்யப்பட்ட கிறிஸ்து இயல் கருத்துகள் இல்லையென்றாலும், கிறிஸ்துவின் ஆட்தன்மை மற்றும் செயல்கள் பற்றிய மிக வளர்ச்சியடைந்த பலகோணக் கோட்பாட்டை இவற்றில் காணலாம். இவற்றில் பவுலுக்கே சிறப்பாக உரிய இறையியல் கருத்துகள் இல்லை யெனலாம். அவர் இறையியல் கட்டுரை எழுதவில்லை; தொடக்க காலத் திருச்சபையினுடைய விசுவாசத்தின் பொதுக்கூறுகளையே பயன்படுத்துகிறார்.

இ) இறுதிக்காலம் பற்றிய போதனை:

ஆண்டவர் இயேசுவின் வருகை: இத்திருமுகத்தில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய இறையியல் கருத்து-இறுதிக்காலம் பற்றியதாகும். இது திருச்சபையின் தொடக்க காலப் போதகத்தைப் பிரதிபலிக்கிறது. இதற்கு, பழைய ஏற்பாட்டு "ஆண்டவரின் நாள்" என்ற கருத்து அடிப்படையானதாகும். இக்கருத்தை அச்சுறுத்தும் பொருளில் முதலில் ஆமோஸ் எடுத்துக்கூறினார் (ஆமோ 5:18-20). இது காலப்போக்கில் அச்சுறுத்தல் மட்டுப்படுத்தப்பட்டு இறைவாக்கினர் நூல்களில் வளர்ச்சியடைந்தது (செப் 1:14-15). இஃது இறுதித் தீர்ப்பின் நாளாகும்; "வரப்போகும் சினத்தின்" நாளாகும் (1தெச 1:10). இது "திருடன் நள்ளிரவில் வருவதுபோல்" வரும் (5:2; காண்க. மத் 24:43-44). இவற்றில் இயேசுவின் சொற்களையே பவுல் பிரதிபலிக்கிறார். "எல்லாம் அமைதி, ஆபத்து ஒன்றுமில்லை" என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்குத் திடீரென்று அழிவைக் கொண்டு வரும் (1 தெச 5:3). இந்த அச்சுறுத்தும் பின்னணியில் இயேசு ஒருவரே மீட்பின் நம்பிக்கையாவார். ஏனெனில் அவரே "வரப்போகும் சினத்தினின்று நம்மை மீட்பவர்" (1:10). கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களுக்குச் "சினத்தின் நாள்", ஒளியின் மற்றும் மீட்பின் நாளாகும். "நீங்கள் அனைவரும் ஒளியின் மக்கள், பகலின் மக்கள்" (5:5). "கடவுள் நம்மைத் தம் சினத்திற்கு ஆளாகும்படி ஏற்படுத்தவில்லை; நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக மீட்பு அடையவே ஏற்படுத்தினார்" (5:9). "நம் ஆண்டவராகிய இயேசு தம்முடைய பரிசுத்தர்கள் அனைவரோடும் வரும் நாளாகும்" (3:13).

"வருகை" என்ற பொருளுடைய "பருசியா" என்ற சொல்லின் முதன்மையான பொருள் வெறுமனே பிரசன்னமாகும். ஆனால், அஃது ஏற்கெனவே பழம் ஆசிரியர்களின் "வந்து சேர்தல்" என்ற பொருளில் பயன்பட்டுள்ளது; குறிப்பாக, ஒரு தேவதையின் அல்லது அரசனின் வருகையைக் குறித்தது. கிரேக்கர் காலத்தில் பேரரசன், அரசன், தளபதி அல்லது உயர் அதிகாரி அதிகார பூர்வமான வருகை தருவதைக் குறிக்கும் கலைச் சொல்லாகப் பயன்பட்டது. இத்தகையவர்களைத் தகுந்த முறையில் வரவேற்க முன்னேற்பாடுகளும் பணச்செலவும் செய்யப்பட்டன. இவர்கள் வரும்போது, நகர மக்கள் ஆரவாரமாய்ப் பவனி சென்று, நகர வாயிலில் வரவேற்பர். அங்கு அரசன் அல்லது

பேரரசன் அல்லது உயர் அதிகாரி நகரத்தின் தகுதிவாய்ந்த குடிமக்களுக்குச் சன்மானமும் பட்டமும் வழங்குவார். எங்கும் பகட்டும் மகிழ்ச்சியும் மிளிரும்.

இயேசுவின் வருகையை எண்ணும்போது, பவுல் இத்தகைய சூழ்நிலையைத்தான் மனதில் கொண்டுள்ளார். இயேசு விண்ணேற்றமாகி விட்டதால், அவரது வருகை விண்ணிலிருந்து இறங்கிவருவதாக இருக்கவேண்டும் என்றால், அவர்கள் "வான் வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ள வேண்டும்" (4:16-17). "அதிதூதரின் குரலொலியும் கடவுளின் எக்காளமும் அடையாளமாக முழங்குதல்" கூட கிரேக்க வரவேற்கும் முறையைச் சேர்ந்ததே ஆகும். இஃது இறங்கிவரும் அரசரின் விண்ணகப் படைகள் நெருங்கி வருவதைச் சுட்டுகிறது. இதில் கிரேக்க உருவகமும் எபிரேயரின் வெளிப்பாட்டு உருவகமும் அசாதாரண முறையில் இணைந்துள்ளன. இவ்வுருவங்களின் அடையாளப் பொருள்களை வருங்கால நம்பிக்கையின் உண்மையோடு துல்லியமாகப் பொருத்திக் கூற முடியாது போகலாம். ஆனால் விவரிப்பு முழுவதிலும் வெற்றியும் மகிழ்ச்சியும் மிளிர்கிறன. "ஆண்டவரோடு எப்போதும் இருப்போம்"(4:17) என்ற பொருள் பொதிந்த மேலான உறுதி அளிக்கப்படுகின்றது.

"ஆண்டவரின் வருகை" (4:13-18) மற்றும் "ஆண்டவரின் நாள்" (5:1-11) பற்றிய பவுலின் கூற்றுகள் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் இறுதிக்கால எதிர்பார்ப்புகளைக் கூறுகின்றன. இவை அடிக்கடி பலவாறு தர்க்கிக்கப்படும் தலைப்புகளாகும். ஆனால் இவை கூறப்படும் வெளிப்பாட்டு இலக்கிய நடை அடையாளத் தன்மையுடையது. ஆனால், அடையாளத்திற்கும் உணர்த்தும் உண்மைக்கும் அதிக இடைவெளியுள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே இறுதிக்காலத்தில் நடக்கப்போவதை அப்படியே பவுலின் கூற்றுகள் விவரிப்பதாகச் சொற்பொருளில் எடுத்துக்கொள்ள முடியாது. ஆயினும் பழமைவாதிகளும் அடிப்படைவாதிகளும் இவ்விவரிப்புகளை அவற்றின் சொற்பொருளில் எடுத்துக்கொண்டு தாங்களும் அவதிப்படுகின்றனர்; பிறரையும் அவலப்படுத்துகின்றனர்; இவற்றில் எச்சரிக்கையும் விவேகமும் மிகவும் அவசியம்.

ஈ) பிற கருத்துக்கள்: கிறிஸ்துவின் மீட்பு வேலை, அவரது உயிர்ப்பு, அவரோடு நித்திய வாழ்வுக்கு விசுவாசிகள் அனைவரின் உயிர்ப்பு ஆகியவற்றோடு, பரிசுத்த ஆவி வழியாகப் புனிதமாதல், அருள் ஆகிய கருத்துகளும் காணப்படுகின்றன. கிறிஸ்தவ ஒழுக்க மரபுச்சட்டம் ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. உழைப்பின் முக்கியம், சோம்பலைத் தவிர்த்துத் தனக்கு வேண்டியதைத் தானே உழைத்துத் தேடிக்கொள்ளுதல் ஆகியவை சிறப்பு முக்கியம் பெறுகின்றன. கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியின் ஆலயம் ஆவார்கள். ஆகவே கெட்ட நடத்தை, காம இச்சைகளைக் குறிப்பாகத் தவிர்க்க வேண்டும். 1 தெச 5:12-14-இல் திருச்சபை அமைப்புப் பற்றிய சில குறிப்புகள் உள்ளன. இவற்றிற்குப் பெயர்கள் கொடுக்கப்படாவிட்டாலும் முன்பு கலாத்தியாவில் நிறுவப்பட்ட திருச்சபை அமைப்பை ஒத்திருக்கின்றன (அ.ப. 14:22). விசுவாசிகள் இவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

9. நூலின் முக்கியத்துவம்: புதிய ஏற்பாட்டு நூல்களில் இத்திருமுகம் காலத்தால் முந்தியதாகும். இது அப்போஸ்தலிக்கப் பாரம்பரியக் கருத்துக்களை, குறிப்பாக விசுவாச வாய்பாடுகளைப் (1:9-10; 4:14; 5:10) பயன்படுத்துகிறது. ஆகவே இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்கும் புதிய ஏற்பாட்டின் நூல்கள் எழுதப்படுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் (கி.பி. 30-50) போதிக்கப்பட்ட நற்செய்திக்குச் சான்றாக உள்ளது. இத்திருமுகம், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்குத் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் அளித்த பொருளுக்கு இலக்கியச் சான்றாக உள்ளது.

இலக்கிய நோக்கில், கிறிஸ்தவ இலக்கியம் பற்றி நமக்குக் கிடைத்திருக்கும் மிகப் பழைய ஏடு என்ற அளவில் மதிப்புமிக்கதாகும். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்ப்புக்குப்பின், வரலாறு, சமூகம்,

சமயம் போன்ற பல கூறுகள் கிறிஸ்தவர்களுக்கே சிறப்பாக உரிய இலக்கியம் வளர்ச்சியடையத் தடையாக இருந்தன. இக்கூறுகள் கடிதங்கள் எழுதுவதைத் தடை செய்யவில்லை. இக்கடிதங்கள் எழுதப்பட்டவை என்ற அளவில் இலக்கியமாகக் கருதப்படலாம். கலைப்பண்போடு எழுதப்பட்டவையென்ற அளவில் இவை இலக்கியமல்ல. சிலர் இத்திருமுகத்தைக் கிறிஸ்தவ இலக்கியத்தின் சோதனை முன்முயற்சி என்று கருதுவர். சிலர் இதை விளக்கவுரைக் கடிதம் என்று கருதுவர். அதைவிட இந்நூலை, கிரேக்க மரபுப்படி ஒருவர் மற்றொருவருக்கு எழுதும் சொந்தக் கடிதமாக நோக்குவது மேல். ஏனெனில் அதன் பொருளடக்கம் தன்மையால் நற்செய்தியானாலும், அதன் அடிப்படை அமைப்பு அக்காலத்தில் நிலவிய சொந்தக் கடிதத் தன்மையுடையது. ஆகவே, இதை ஒருவர் மற்றவர்க்கு எழுதிய சொந்தக் கடிதமாக, அதாவது தன்மையால் ஒரு தொடர்புச் சாதனமாக, வாசித்தலே சிறந்தது.

தெசலோனிக்கேயருக்குத் திருமுகம் - II (THESSALONIANS - II, LETTER TO THE)

I. **முன்னுரை:** பவுலும் மற்றும் அவருடைய நற்செய்திப்பணியில் தோழர்களான சில்வானும் (சீலா) திமொத்தேயுவும் சேர்ந்து எழுதிய அல்லது அவர்கள் பெயரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் ஒரு திருமுகம். இது தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்டதாகக் கருதப்படும். புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலில் பதினான்காம் இடத்தைக் கொண்டுள்ளது. இவர்கள்தாம் இத்திருமுகத்தை எழுதினார்களா என்பது பற்றி 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து சிலர் ஐயம் எழுப்பினர்.

தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதல் திருமுகத்தில் காணப்படும் அன்பார்வமும், வெற்றிப்பெருமிதமும் இரண்டாவது திருமுகத்தில் அவ்வளவாகக் காணப்படவில்லை எனலாம். இதில் ஓர் அடக்கமான தொனி தெளிவாக உள்ளது. இரண்டு திருமுகங்களிலும் இறுதிக்கால இயல் கருத்தே முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் முதல் மடலில் காணப்படும் ஆண்டவரின் நாள் விசுவாசிகளுக்குக் கொண்டுவரும் மகிழ்ச்சி, மகிமை ஆகியவற்றிற்குப் பதிலாக, இரண்டாவது மடலில் இறைப்பற்றற்றோர்க்கு வரவிருக்கும் அச்சுறுத்தும் தீர்ப்பு வலியுறுத்தப்படுகிறது. இப்போக்கு முதல் மடலுக்கு நேர்மாறானதாகத் தோன்றுகிறது. முதல் மடலில் கற்பிக்கப்பட்ட ஆண்டவரின் வருகை பற்றிய உயிர்ச்சித்திரமான எதிர்பார்ப்பு நிகழுமுன் சில காரியங்கள் நிகழவேண்டும்; அருஞ்செயல் மற்றும் ஏமாற்றுதல் ஆகிய சாத்தானின் ஆற்றலோடு அக்கிரமி எனப்படும் எதிர்க்கிறிஸ்துவின் வருகையில் உலகைச் சார்ந்த தீய சக்திகள் உச்சநிலை அடையவேண்டும். இக்கருத்து இந்நூலில் முக்கியத்துவம் பெறுகிறது; இது விளக்கவுரையாளர்களுக்கு ஒரு சவாலாகவும் அமைந்துள்ளது.

II. **ஆசிரியர்:** இந்நூலைப் பவுலும் அவரது இருதோழர்களுந்தான் எழுதினார்கள் என்று அறிஞர் பலர் ஏற்றுக்கொண்டாலும், இதை ஐயுற்றுப் பிரச்சனை எழுப்புபவர்களும் உண்டு.

அ) புறச்சான்றுகள்: கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த திருச்சபைத் தந்தையர்களான போலிக்காா்ப்பும், இக்னேசியுவும் இந்நூலிலிருந்து மேற்கோள்கள் காட்டியுள்ளனர். மார்சியனுடைய (140) திருமுறைப் பட்டியலிலும் இந்நூல் இடம் பெற்றுள்ளது. இரேனியு (130-200) இந்நூல் பவுலால் எழுதப்பெற்றது என்று ஏற்றுக்கொள்கிறார். மூராத்தோரியின் திருமுறை நூல் தொகுப்பிலும் (200) இந்நூல் இடம் பெறுகிறது. பின்வரும் புதிய ஏற்பாட்டுத் திருமுறைப் பட்டியல்களில் எல்லாம் பவுல் எழுதிய திருமுகங்கள் தொகுப்பில் இந்நூல் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆ) மாற்றுக்கருத்தும் பதிலும்: கி.பி. 1801-இலிருந்து, இந்நூல் பவுலால்தான் எழுதப்பட்டது என்ற கருத்துக்கு மறுப்புகள் கூறப்பட்டுள்ளன. இந்நூல் முதல் திருமுகத்தோடு கொண்டிருக்கும் ஒற்றுமை வேற்றுமைகள் அடிப்படையில்

இம்மறுப்பு எழுகிறது. முதல் நூல் இல்லையென்றால், இத்தகைய மறுப்புக்கருத்தே தோன்றியிருக்காது எனலாம்.

1) "ஆண்டவரின் நாள் வந்துவிட்டது என யாராவது தேவ ஆவியின் வாக்காகவோ, திருவுரையாகவோ, நாங்கள் எழுதிய கடிதத்தின் செய்தியாகவோ சொன்னால், நீங்கள் உடனே நிலைகுலைந்து மனங்கலங்க வேண்டாம். எவனும் உங்களை எவ்வாறேனும் ஏமாற்ற விடாதீர்கள்" (2:2-3) என்று ஆசிரியர் தெசலோனிக்கேயர்களை எச்சரிக்கிறார். மேலும் "இவ்வாழ்த்து, பவுலாகிய நான் என் கைப்பட எழுதியது. என் கடிதம் ஒவ்வொன்றுக்கும் இதுவே அடையாளம். நான் எழுதுவது இப்படித்தான்" (3:17) என்று நூலில் கூறப்பட்டவற்றின் உண்மைக்கு உத்திரவாதம் அளிக்கிறார். இத்தகைய குறிப்புகள் 1 கொரி 16:21-24; கலா 6:11-18-இலும் காணப்படுகின்றன. ஆனால் இவற்றில் ஆர்வமிக்க செய்திகளையும் சேர்க்கிறார். ஆனால் 2 தெச 3:17-இல் ஆசிரியர் நூலில் காணப்படும் பாரம்பரியங்கள் (காண்க. 2:2.15; 3:6) உண்மையானவை என்று உறுதிப்படுத்த வெறுமனே தனது கையொப்பத்தால் உத்திரவாதம் அளிக்கிறார். இது பவுலின் முறைக்கு முரணானது. ஆகவே, பவுலின் அதிகாரத்தைப் பயன்படுத்தி வேறொருவர், பிற்காலத்தில் இந்நூலை எழுதியிருக்கவேண்டும் என்பர் சிலர். போலிப் போதகர்கள் பவுலின் பெயரால் தவறான போதகத்தை மக்களுக்கு அளித்து அவர்களை மனக்கலக்கம் கொள்ளச் செய்தார்களா? ஏதோ ஒரு போலி ஆசிரியர், தமது மடல் உண்மையாகவே பவுல் எழுதியதுதான் என்று உறுதிகூறும் ஏமாற்றுவித்தையைப் பயன்படுத்தினாரா? இது நமக்குத் திகைப்புண்டாக்கலாம். இத்தகைய நூலைத் தொடக்க காலத்திருச்சபை ஏற்றுக்கொண்டது என்பதும் இத்திகைப்பை மேலும் அதிகப்படுத்தலாம். "அடையாளம்" பற்றிய குறிப்பு (3:17) பவுல் எழுதியதாக உலவி வந்திருக்கக்கூடிய போலி மடல்கள் பற்றிய வதந்திகளை அகற்றும் நோக்கத்தோடு சேர்க்கப்பட்டதாக இருக்கலாம்.

2) இரண்டு திருமுகங்களிலும் காணப்படும் இறுதிக்கால வருகை பற்றிய வேறுபாடுகள் ஒரு பிரச்சினையாக அமைகிறது. முதல் திருமுகம் ஆண்டவரின் வருகை விரைவில் நிகழப்போகிறது என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. 1 தெச 4:13-5:11 ஆண்டவருடைய வருகையை விவரிக்கிறது. அவ்வருகை "திருடன் நள்ளிரவில் வருவதுபோல்" எதிர்பாராத நேரத்தில் நிகழும். ஆகவே விசுவாசிகள் விழிப்பாய் இருக்க வேண்டும்; ஆயத்தமாய் இருக்கவேண்டும். 2 தெச 2:1-12, ஆண்டவரின் வருகைக்குமுன் என்ன அடையாளங்கள் தோன்றும் என்று கூறுகிறது. இந்த அடையாளங்கள் "இறைவனை எதிர்க்கும் கிளர்ச்சி நிகழ வேண்டும். அக்கிரமமே உருவான மனிதன், அழிவுற வேண்டியவன் வெளிப்படவேண்டும்;" அவன் சாத்தானின் வல்லமையோடு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் முதலியனவாகும். இரு திருமுகங்களிலும் வரும் ஆண்டவரின் வருகையைப்பற்றி எத்தகைய போதகத்தைப் (2:3) பவுல் தெசலோனிக்கேயர்களுக்கு அளித்திருந்தார் என்ற பின்னணியில் இக்கூற்றுகளைப் புரிந்துகொள்ள முயலவேண்டும். ஆசிரியரே "உங்களோடிருந்தபோது இவற்றையெல்லாம் நான் உங்களுக்குக் கூறிவந்தேன்; உங்களுக்கு நினைவு இல்லையா?" (2:5) என்று கேட்கிறார். இரண்டு பகுதிகளும் வெளிப்பாட்டு இலக்கிய முறையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் சில வேறுபாடுகளைக் கண்டால் வியப்படைய வேண்டியதில்லை.

ஒரு நிகழ்ச்சி திடீரென்று, எதிர்பாராத நேரத்தில் நிகழும் என்பதும், அதை உணர்த்தவல்ல முன்னடையாளங்களும் நிகழும் என்பதும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல; ஒன்றை மற்றது மறுத்துக்கூற வேண்டியதில்லை. நற்செய்திப் பாரம்பரியங்களே இதற்கு வழிவகுக்கின்றன (மத் 24 இணை). அதே சமயம் எப்போதும் ஆயத்தமாகவும் விழிப்போடும் இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை விடப்படுகிறது. ஏனெனில், "உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது... நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்"

(24:42.44). ஆகையால் ஆண்டவர் வருகை பற்றி இருதிருமுகங்களுக்கிடையில் காணப்படுவதாகத் தோன்றும் வேறுபாடு, பவுல்தான் இந்நூலுக்கு ஆசிரியர் என்பதற்கு மறுப்பாக அமைய வேண்டியதில்லை.

3) இரண்டு திருமுகங்களுக்கிடையே இலக்கிய அமைப்பு, கட்டுக்கோப்பு, நடை, பொருள் ஆகியவற்றில் எவ்வளவு ஒற்றுமை காணப்படுகிறது என்றால், இரண்டாம் திருமுகத்தை எழுதியபோது ஆசிரியர் முதல் திருமுகத்தைத் தம்முன் வைத்துக்கொண்டு அதைச் சார்ந்து எழுதுவதாக ஓர் உணர்வு ஏற்படலாம்.ஒரு குறுகிய காலத்திற்குள், அதிகமானால் சில வாரங்களுக்குள், அதே ஆசிரியர் ஒரே தன்மையுடைய இரு மடல்களை அதே சபைக்கு எழுதியிருக்கக்கூடுமா என்பதுதான் முக்கியப்பிரச்சனை. இதற்குச் சுலபமாய்த் தீர்வு காண முடியாது. இந்நூல் தோன்றிய சூழ்நிலைபற்றி நாம் இப்போது அறிந்திருப்பதைவிட அதிக அறிவு வேண்டும் என்பர்.

இரண்டாம் திருமுகம் பவுலால் எழுதப்பட்டது என்று ஏற்றுக்கொண்டால் இதன் உண்மைத் தன்மைக்கு மறுப்பாகக் கூறப்படுபவை முதலாம் திருமுகத்திற்குப் பொருந்தும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இருதிருமுகங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமையைக் கருத்தில் கொள்ளும்போது, இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகளையும் கவனிக்கத் தவறக்கூடாது. இரண்டாவது மடல் முதல் மடலைச் சார்ந்திருக்கும்போதும் சில வேற்றுமைகளையும், தனக்கே உரிய சிறப்பு அழுத்தத்தையும் கொண்டுள்ளது. முதல் மடலில் கூறப்பட்ட செய்திகளை எடுத்துக் கூறும்போதும் அவைகளைத் தன்மயமாக்கிப் புதிய கோணத்தில் கூறுகிறது.

இம்மடலை வெகு குறுகிய காலத்திற்குள் பவுல் எழுதியிருப்பார் என்பதை உளவியல்படி ஏற்கமுடியாது என்று கூறுபவர்கள், அதற்கேற்ற காரணங்களைக் காட்டவில்லை. பவுலின் பெயரால் வேறொருவர் இம்மடலை எழுதியிருந்தால், ஏன் அப்படி எழுத வேண்டும்? அப்படி எழுதியிருந்தாலும், ஏன், முதல் திருமுகத்தைச் சார்ந்து எழுத வேண்டும்? பவுல் உயிரோடு இருக்கும்போதே, அவரைச் சார்ந்து வேறொருவர் எழுதிய மடலைப் பவுலினுடையது என்று மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்களா? இவையெல்லாம் உரிய பதிலைக் கோருகின்றன.

பவுல் இறுதிக்காலம் பற்றிப் பலவற்றைத் தெசலோனிக்கேயர்களுக்கு நேரடியாகப் போதித்திருக்கவேண்டும். இவையும், முதல் திருமுகத்தில் கூறப்பட்டவையும் அவர்களிடையே சில ஐயப்பாடுகளை எழுப்பியிருக்க வேண்டும்; அன்றாட வாழ்வில் சில முறைகேடுகள் புக வாய்ப்பாக இருக்கவேண்டும். இவற்றை நீக்கும் நோக்கோடு, முதல் திருமுகம் எழுதிய குறுகிய காலத்திற்குள் இத்திருமுகத்தைப் பவுல் எழுதியிருக்கவேண்டும். அப்படி எழுதும்போது முதல் திருமுகத்தில் கூறியவற்றை அவர்களுக்கு நினைவுபடுத்தி, மேலும் விளக்கமளித்து எழுதியிருக்க வேண்டும். இம்முறை அவசியமென்று பவுல் கருதியிருக்கலாம். "எழுதினதையே மீண்டும் எழுதுவது எனக்குத் தொல்லையில்லை. உங்களுக்கு நல்லதுதான்" (பிலி 3:1) என்று பவுல் கூறுவதை நாம் நினைவில் கொள்வது நல்லது.

சில தனிசொற்றொடர்களைத் தவிர, நூலின் நடைமுழுவதும் பவுலினுடையதே. தம் உடனுழியர்களான சில்வான் (சீலா), திமொத்தேயு ஆகியோரை மனதில்கொண்டு, மடலைத் தன்மைப்பன்மையிலேயே எழுதுகிறார்.

III. நூல் தோன்றிய சூழ்நிலையும் நோக்கமும் காலமும் இடமும்:

1) **சூழ்நிலை:** பவுலுக்கும் அவரது சபைகளுக்குமிடையே நிலவிய செய்தித் தொடர்பு பற்றி நாம் அதிகம் அறியாமையால் பல பிரச்சினைகள் எழுகின்றன. திமொத்தேயு கொண்டு வந்த செய்தியின் அடிப்படையில் பவுல் கொரிந்திலிருந்து கி.பி. 50-51-இல் தெசலோனிக்கே திருச்சபைக்குத் தம் முதல் திருமுகத்தை எழுதினார் எனலாம் (1 தெச 3:1-8).

அத்திருமுகம் எவ்வாறு அனுப்பப்பட்டது என்பது பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இரண்டாம் திருமுகம் எழுதப்படுவதற்கு முன், முதல்திருமுகம் தெசலோனிக்கேயர்களைச் சென்றடைந்து விட்டதா? என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் முதல் திருமுகத்திற்குப்பின், ஏதோ ஒருவழியில், அத்திருச்சபையின் நிலைபற்றி அதிகமான செய்திகள் வந்திருக்கவேண்டும். இச்செய்திகளுக்குப் பதிலாகப் பவுல் இரண்டாம் மடலை எழுதியிருக்க வேண்டும். தெசலோனிக்கேயர்கள் அனுபவித்த துன்பங்களின் கடுமை இம்மடலில் மகிழ்ச்சியையும் வெற்றிப்பெருமிதத்தையும் மட்டுப்படுத்தியது எனலாம். இப்படிக் கொடுமைப்படுத்துபவர்கள்மேல், ஆண்டவரது வருகையில் இறைவன் அளிக்கப்போகும் பயங்கரத் தண்டனையை வலியுறுத்திக் கூறுகிறது இந்த மடல்.

முதல் திருமுகத்தில் ஆண்டவரின் நாள் எப்போது வரும்? அவ்வருகைக்கு முன் மரித்தவர்களின் நிலை என்ன? என்ற இரு பிரச்சினைக்களுக்குப் பவுல் பதில் அளிக்கிறார். பின்னதற்கு அளித்த பதில் தெசலோனிக்கேயர்களுக்குத் திருப்தி அளித்தது. ஆனால் முதல் பிரச்சனைக்கு அளித்த பதில் அவ்வளவு திருப்தி அளிக்கவில்லைபோல் தோன்றுகிறது. சிலர் ஆண்டவரின் நாள் ஏற்கெனவே வந்துவிட்டது என்று ஏற்றுக்கொண்டு, அதனால் "நிலைகுலைந்து மனங் கலங்கியுள்ளனர்" என்ற செய்தி (2 தெச 2;1-2) பவுலுக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆண்டவரின் நாளுக்கு முன் நிகழவேண்டிய பல நிகழ்ச்சிகள் பற்றிய தமது முந்தைய நேரடிப் போதனையின் சிலவற்றை அவர்களுக்கு நினைவுபடுத்தி, மேற்கூறப்பட்ட தவறை நீக்க முயலுகிறார். இத்தவறான கருத்துகளால், சிலர் "இங்குமங்கும் சோம்பித்திரிந்து, பிறர் வேலையில் தலையிட்டு", சபைக்குப் பாரமாக இருந்தனர். இதைப் பவுல் கடுமையாக நோக்குகிறார். "உழைக்க மனமில்லாதவன் எவனும் உண்ணலாகாது" என்று கூறுகிறார். ஆண்டவர் வரும்வரை, எல்லோரும் தங்கள் அன்றாடக் கடமைகளை அமைதியோடு செய்ய வேண்டும் என்று போதிக்கிறார். இந்தச் சூழ்நிலையில் இத்திருமுகம் தோன்றியது எனலாம்.

2. **நோக்கம்:** தெசலோனிக்கேயர் பற்றிய இரண்டாம் செய்திக்குப் பதிலாக இவ்வாறு எழுதப்பட்ட இந்த இரண்டாம் திருமுகம் மூன்று நோக்கங்களைக் கொண்டது. அ) கடுமையாகத் துன்புறுத்தப்பட்டபோதும் விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்று தெசலோனிக்கேயர்களை உற்சாகப் படுத்துதல். ஆ) ஆண்டவரது நாள் பற்றிய தவறான கருத்துகளைத் திருத்துதல்; ஏனெனில் அதற்குமுன் நிகழவேண்டியவை இன்னும் நிறைவேறவில்லை. இ) சோம்பித்திரிந்து பிறர் வேலையில் தலையிடுபவர்களைக் கடுமையாக, ஆனால் அன்போடு, கண்டித்து, அவர்கள் அன்றாடக் கடமைகளை அமைதியோடு செய்ய வேண்டும் என்று அறவுரை கூறுதல்.

3) **காலமும் இடமும்:** எப்போது இத்திருமுகம் எழுதப்பட்டது என்று துல்லியமாகக் கணிக்கமுடியாது. ஆனால் முதல் திருமுகத்திற்குப்பின் சிறிது காலத்திற்குள், அதாவது கி.பி. 50-51-இல் எழுதப்பட்டிருக்கலாம். இரு திருமுகங்களிலும் காணப்படும் தெசலோனிக்கே திருச்சபையின் நிலைகள் அதிகம் வேறுபடவில்லை. இரண்டுக்குமிடையேயுள்ள இலக்கிய ஒற்றுமை, இரண்டிற்கும் இடைவெளி அதிகம் இருந்திருக்க முடியாது என்று காட்டுகிறது. பவுல், சில்வான் (சீலா), திமொத்தேயு ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து இருக்கின்றனர் என்பது அவர்கள் கொரிந்து நகரில் பணிசெய்த காலத்தின் தொடக்கத்தில் அந்நகரிலிருந்தே இந்நூலை எழுதியிருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. இதற்குப்பின் அப்போஸ்தலர் பணிநூலிலும் பவுலின் திருமுகங்களிலும் சில்வான் (சீலா) காணப்படுவதில்லை.

பவுலின் பெயரால் ஒரு போலி ஆசிரியர் இந்நூலை எழுதினார் என்பவர்கள், இந்நூல் தோன்றிய காலத்தையும் இடத்தையும் பொருத்தமட்டும் பல கருதுகோள்களைத் தருவர்.

இவர்களின் கருத்துபடி, கி.பி. 50-100க்கு இடைப்பட்ட காலத்தில், குறிப்பாக முதல் நூற்றாண்டின் இறுதியில், இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம். இந்நூல் பெரோயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கோ பிலிப்பியில் உள்ள கிறிஸ்தவர்களுக்கோ எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதுவர்.

IV. நூலின் திட்டம்:

1. முன்னுரை: வாழ்த்துரை (1:1-2).

2. துன்புறுத்தப்படும் சோதனை, தீர்ப்பில் ஆண்டவரின் மகிமைக்கு இட்டுச் செல்கிறது (1:3-12).

1:3-10 : நன்றிகூறுதல்

1:1-12 : மன்றாட்டு.

3. ஆண்டவரின் வருகையைச் சரியான முறையில் புரிந்து கொள்ளுதல் (2:1-17).

2:1-15 : ஆண்டவர் வருகைக்குமுன் அடையாளங்கள்; ஏமாற்றுதலின் மேல் ஆண்டவரின் வெற்றி.

2:16-17 : உறுதிப்படுத்த மன்றாட்டு.

4. வேண்டுகோளும் அறவுரையும் (3:1-5.6-15).

5. முடிவுரை : இறுதி வாழ்த்துரை (3:16-18).

V. இறையியல் கருத்துக்கள்:

இறுதிக்கால இயல்: இந்நூலின் முக்கிய கருத்தான இறுதிக்கால இயல் 2:1-11-இல் அடங்கியுள்ளது. முன் கூறியதுபோல், பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் இரு பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்கிறார். ஆண்டவரின் நாளுக்கு முன்பே இறந்தவர்களும் அவரது வருகையின் மகிழ்ச்சி மற்றும் மகிமையில் பங்கு பெறுவர் என்ற பதிலால் திருப்தியடைந்த தெசலோனிக்கேயர்கள், அவர் எப்போது வருவார் என்பதுபற்றிய பதிலால் திருப்தியடையவில்லை. முதல் திருமுகத்தில், ஆண்டவர் திருடனைப்போல் எதிர்பாராத நேரத்தில் வருவார்; ஆகவே, விசுவாசிகள் எப்போதும் விழிப்போடு தயாராக இருக்க வேண்டும் என்று பவுல் கூறியிருந்தார். இதை அவ்வருகை உடனடியாக நிகழப்போகிறது என்று தெசலோனிக்கேயர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். மேலும் சிலர் ஆண்டவரின் நாள் ஏற்கெனவே நிகழ்ந்து விட்டது என்று போதித்திருக்க வேண்டும் (2:2). இதன் விளைவாகச் சிலர் அன்றாடக் கடமைகளில் ஈடுபடாமல் சோம்பித்திரிந்து செயல்முறைப் பிரச்சினைகளை ஏற்படுத்தினர். இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய, இறுதிக்காலம் பற்றித் தாம் ஏற்கெனவே போதித்திருந்தவைகளை அவர்களுக்கு நினைவுபடுத்தி, அவற்றிலிருந்து சிலவற்றை மட்டும் வெளிப்பாட்டு இலக்கிய முறையில் எடுத்துக்கூறுகிறார். இவை யூத வெளிப்பாட்டு இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்டு, நற்செய்திக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்ட தொடக்க கால அப்போஸ்தலிக்கப் போதனையாக இருக்கலாம்.

ஆண்டவரின் நாள் வருமுன் "இறைவனை எதிர்க்கும் கிளர்ச்சி நிகழவேண்டும். அக்கிரமமே உருவான மனிதன், அழிவுற வேண்டியவன் வெளிப்பட வேண்டும். இவன் இறைவனுக்கு எதிரி"... கடவுளுடைய ஆலயத்தில் அமர்ந்து தன்னைக் கடவுளெனக் காட்டிக்கொள்ளும் அளவுக்குத் துணிவான் (2:1-11). இதுவே, ஏற்கெனவே மறைவாகச் செயலாற்றிவரும் தீமையின், அக்கிரமத்தின் மறைபொருளான ஆற்றலின் இறுதியான வெளிப்பாடாகும். இத்தீமையின் வெளிப்பாட்டைத் தடைசெய்யும் ஏதோ ஒன்றைப்பற்றி அல்லது ஏதோ ஓர் ஆளைப்பற்றித் தெசலோனிக்கேயர்கள் அறிந்திருப்பதுபோல் பவுல் எழுதுகிறார் (2:6-7). இந்தச் சக்தி அல்லது ஆள், அக்கிரமி வெளிப்படக் குறிக்கப்பட்ட காலம்வரை தீய சக்தியைக் கட்டுப்படுத்தும். பின்பு சாத்தானின் வல்லமையோடு அக்கிரமி வெளிப்படுவான். போலி அருங்குறிகளையும் அற்புதங்களையும் செய்து மக்களை ஏமாற்றுவான். அதன் பின்புதான் ஆண்டவர் வருவார். "தம்வாயின் ஆவியால் அவனை அழித்துவிடுவார்... தம் பிரசன்னத்தால் அவனைத் தொலைத்துவிடுவார்" (2:8). அக்கிரமியால் ஏமாற்றப்பட்டவர்கள் தங்களுக்கு மீட்பைத்தரவல்ல உண்மையின்மீது அன்புகொள்ள மறுத்தனர். இவர்கள் யாவரும்

தீர்ப்புக்கு உள்ளாவார்கள் (2:9-10).

இத்தகைய நிலை தெசலோனிக்கேய விசுவாசிகளுக்கு ஏற்படாது. ஏனெனில், "பரிசுத்தமாக்கும் ஆவியாலும் உண்மையின் மீதுள்ள விசுவாசத்தாலும் நீங்கள் மீட்பு அடைவதற்கென்று கடவுள் உங்களைத் தொடக்கமுதல் தேர்ந்து கொண்டார். இதற்காகவே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை நீங்கள் பெற்றுக்கொள்ளும்படி, நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக இறைவன் உங்களை அழைத்துள்ளார்" (2:13-14) என்று அவர்களுக்குப் பவுல் உறுதியளிக்கிறார். இப்படிப் போதிக்கும்போது பவுல் அதிகாரபூர்வமான பாரம்பரியத்தையே தருவதாகத் தெரிகிறது.

இவ்விவரிப்பில் கிளர்ச்சி, அக்கிரமி, தடைசெய்வது அல்லது தடை செய்பவன் ஆகிய மூன்று கருத்துகளுக்குப் பலரும் பலவாறு விளக்கம் அளித்துள்ளனர். முதல் இரண்டு கருத்துகளுக்குரிய அடிப்படையை யூத வெளிப்பாட்டு இலக்கியங்களில் நாம் காணலாம். மூன்றாவது கருத்துக்கு இணையான எதையும் நாம் காண முடிவதில்லை. பவுல் தம் வாசகர்களுக்குப் புரியும் மொழியிலேயே எழுதுவதாகத் தெரிகிறது. ஏனெனில் இவைபற்றி அவர்களுக்கு ஏற்கெனவே போதித்திருந்தார் (2:5). நமக்கு அப்போதகத்தின் சாரம் கிடைத்திராதபடியால், இக்கருத்துகளைப் புரிந்துகொள்வது கடினமாகிறது. ஆகையால் பலரும் தங்களது கருதுகோள்களுக்கு ஏற்றவாறு பலவாறு பொருள் கொடுக்க முனைந்துள்ளனர்.

கிளர்ச்சி என்ற கருத்து சங் 2; எசே 38-39-ஐ அடிப்படையாகக் கொண்டதாகத் தெரிகிறது. ஆனால், எந்த வரலாற்று நிகழ்ச்சியை அல்லது சூழ்நிலையைக் குறிக்கிறது என்று ஒன்றும் கூற முடியாது. அக்கிரமி என்ற கருத்துக்கு முன்மாதிரி தானி 11:36-37-இல் வரும் அந்தியோக்கு எப்பிபான் ஆவான். யோவான் திருமுகங்களில் காணப்படும் "எதிர்க்கிறிஸ்து" என்ற சொல், இத்திருமுகத்தில் பயன்படுத்தப்படவில்லை யாயினும், அந்த உருவத்தின் எல்லாப்பண்புகளும் இந்நூலில் காணப்படுகின்றன. ஆனால் இந்த ஆள் யார்? இச்சொல்லைக் குழுப்பொருளில் எடுத்துக்கொள்வதா? அல்லது தனிநபரைக் குறிப்பாக எடுத்துக்கொள்வதா? திருச்சபையைப் பிளவுபடுத்தி அதன் ஒற்றுமையைப் பங்கப்படுத்தியவர்கள்கூட, இச்சொல்லைத் திருச்சபைக்கும் அதன் தலைவர்களுக்கும் சாற்றிக் கூறத் தயங்கியதில்லை. பேரழிவுகளை முன்னறிவிக்கும் குழுவினர் வரலாற்றில் ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்குச் சாற்றிக் கூறி மக்களை அச்சுறுத்துவர். இஃது இவர்கள் பவுலின் கருத்துகளை அடிப்படையிலேயே தவறாகப் புரிந்து கொள்வதின் விளைவாகும். பொதுவாகத் திருச்சபைக்கும் நற்செய்திக்கும் எதிராக உள்ளவர்களைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்துவது மரபாக இருந்து வந்திருக்கிறது. தடை செய்பவன் அல்லது தடை செய்வதுபற்றிப் பலவாறு விளக்கம் அளிக்கப்பட்டாலும், எதையும் உறுதியாகக் கூறமுடியாது.

பவுல் ஏற்கெனவே பழைய ஏற்பாட்டு யூத வழக்கிலிருந்த சொற்றொடர்களையே பயன் படுத்துகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கி.பி. முதல் நூற்றாண்டு யூத இலக்கியங்களில் மெசியா வருவதுபற்றிய கருத்துகள் முக்கியம் பெறுகின்றன. அவ்வருகைக்குமுன், மக்களின் பெரும்பதிதம் நிகழவேண்டும் என்ற கருத்தும் காணப்படுகிறது. இந்நூலில் வரும் சொற்றொடர்கள் மத் 24-இலும் வருகின்றன. ஆனால் அப்போது இக்காலத்தில் நாம் கொண்டிருக்கும் வடிவில் மத்தேயு எழுதிய நற்செய்தி இன்னும் உருவெடுக்கவில்லை. ஆகையால், பவுலுக்கும் மத்தேயுவுக்கும் பொதுவான முந்தைய அப்போஸ்தலிக்கப் பாரம்பரியம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இப்பாரம்பரியம் யூத வெளிப்பாட்டு இலக்கிய அடிப்படையில் அமைந்திருந்தது என்று கருதப்படுகிறது.

இத்திருமுகத்தில் தர்க்கிக்கப்படும் பிரச்சினை இறுதிக்காலம் பற்றிய யூதச் சிந்தனையில்

புகுத்தப்பட்ட ஒரு புதிய கூறால் எழுகிறது. இப்புதிய கூறு இழிவாக இறக்கவந்த இயேசுவின் வருகையாகும். வெற்றியோடும் மகிமையோடும் வந்து இறுதிக்காலத்தைத் தொடங்கி வைக்க வரும் மெசியாவை யூதர்கள் எதிர்பார்த்தனர். இதற்கு மாறாக, இயேசுவின் வருகை இறுதிக்காலத்தைத் தொடங்கி வைத்தது உண்மைதான்; ஆனால், வெற்றியோடும் மகிமையோடும் வருவது எதிர்காலத்தில் நிகழவேண்டியதாகும். யூதச் சிந்தனையில், இறுதிக்காலம் ஒன்றனபின் ஒன்றாக நிகழும் தொடர்நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது. இவை எவ்வளவு விரைவில் நிகழுமென்றால் அவற்றையெல்லாம் சேர்த்து ஒரே தொகுப்பு நிகழ்ச்சியாகக் கருதலாம். இவற்றில் சில தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் இயேசுவின் இறுதிக்காலம் தொடங்கப்பட்டபின், அதன் நிறைவேற்றம் வெகுவாகத் தாமதப் படுத்தப்பட மாட்டாது என்று கிறிஸ்தவர்கள் எதிர்பார்ப்பது இயல்பே. ஆகவே, சிலர் ஆண்டவரின் உடனடியான வருகையை எதிர்நோக்கினர். அதன் விளைவாக, சில செயல்முறையான பிரச்சினைகளும் எழுந்தன.

இதில் உண்மையானதும் முக்கியமானதும் ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி ஆயத்தமாகக் கிறிஸ்தவ வாழ்வை அமைப்பதாகும். இந்த வருகை, தீர்ப்பின் நாள் பற்றிய யூதவெளிப்பட்டு உருவங்களில் கூறப்பட்டதுபோல் அமையலாம்; அல்லது, மரணத்தில் ஒவ்வொரு நபரும் ஆண்டவரைச் சந்திப்பதாக அமையலாம். இந்த எதிர்பார்ப்புமிக்க ஆயத்தநிலையை முதலாம் திருமுகம் வலியுறுத்துகிறது. ஆனால் இக்கருத்து ஆண்டவரது வருகைக்காக வெறுமனே காத்திருந்து சோம்பியிருக்கும் நிலைக்கு இட்டுச் சென்று விடக்கூடாது என்று எச்சரிப்பதற்காக இரண்டாம் திருமுகத்தில் கிறிஸ்தவன் தனது அன்றாடக் கடமைகளைத் தொடர்ந்து செய்து வாழவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அப்போதனையின் சுருக்கம், ஒருவன் வெறுமனே உட்கார்ந்து காத்திருக்கும் அளவுக்கு ஆண்டவரின் நாள் அவ்வளவு நெருங்கியதன்று என்பதாகும். இதற்கு ஆதரவாக, அந்நாளுக்கு முன் நடக்க வேண்டிய நிகழ்ச்சிகளாகக் கருதப்பட்ட பொதுப்பாணிக் கருத்துகளிலிருந்து சிலவற்றைப் பவுல் எடுத்துக் கூறுகிறார்.

இதில் இறையியல் வளர்ச்சியுண்டு. இது குறிப்பாக, கிறிஸ்தவ வாழ்வின் முடிவுபற்றிக் கூறுகிறது; ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகையால் (ஏமாற்றுபவர்களும் ஏமாற்றப்பட்டு மனந்திரும்பாதவர்களும் அடங்கிய) தீயவர்களுக்கு எதிரான - இறுதித் தீர்ப்பையும், விசுவாசிகளின் இறுதிப் பாதுகாப்பையும் பற்றிப்பேசுகிறது. இவ்வளர்ச்சி பாரம் பரியத்தையே பின்பற்றுவதாகத் தெரிகிறது. விசுவாசத்தைச் சரியானமுறையில் புரிந்து கொள்ளும்பொருட்டு (1:10; 2:2) சிற்சில செய்திகளையும், அன்றாட வாழ்வில் கொள்ள வேண்டிய நன்னம்பிக்கையையும் (2:16-17) பற்றிப்பேசுகிறது.

தெசாவு (DESSAU)

யூதேயாவிலுள்ள ஒரு நகரம். இவ்விடத்தில் நிக்கானோருக்கும் யூதர்களுக்கும் போர் நடந்தது (2 மக் 14:16).

தெதான் (DEDAN - தாழ்வான)

அரேபியாவின் வடமேற்குப் பகுதியில் வாழ்ந்த வணிகம் செய்யும் ஒரு கூட்டத்தார். இவர்கள் கைபார், ஏல்-உலா, ஏல்-கிசிர் ஆகிய பகுதிகளில் வாழ்ந்திருக்கலாம். இவை தெயிமாவிற்கு அதிக தொலைவில் இருந்திருக்கலாம். ஏனெனில் தெயிமாவின் மேற்குப்பகுதியில் காணப்படும் அழிவுச்சின்னங்கள் தெயிதான் அழிவுச்சின்னங்கள் என்றே கூறப்படுகின்றன. இவர்கள் கூசு என்பவரின் மகனான இரகமாவின் சந்ததி என்றும் (ஆதி 10:7; 1 நாள் 1:9), அல்லது ஆபிரகாம்-கெற்றூரா ஆகியவர்களின் மகனான யோக்சான் என்பவரின் வழித்தோன்றல்கள் என்றும் (ஆதி 25:3; 1 நாள் 1:32) விவிலியத்தில் விவரிக்கப்படுகின்றனர். இவ்விரண்டும் விவிலியப் பகுதிகளிலும் தெதான், சேபா ஆகியோர் சகோதரர்கள் என்றே எண்ணப்படுகின்றனர்.

எனவே இம்மக்கள் ஒருவேளை கலப்பினமாக இருக்கலாமென்றும், ஒருசமயம் இவர்கள் அரேபியாத் தீபகற்பத்தில் பரந்த ஆதிக்கம் செலுத்தியவர்களென்றும் தெரிகிறது.

தெதான் நாட்டு வணிகக் கூட்டங்களைப் பற்றி இறைவாக்கினர்கள் கூறியுள்ளனர் (எசா 21:13; எசே 38:13). எசாயாப் பகுதியில் இவ்வணிகக் கூட்டங்களும், தேமா நாட்டு வணிகக் கூட்டங்களும் அவர்களுக்கு வடக்கே உள்ள கேதார் நாட்டு அகதிகளுக்கு உதவவேண்டுமென்று அழைக்கப்படுகிறார்கள். தெதான் நாட்டினர் தீருக்குக் குதிரைச் சேணங்களைக் கொடுத்ததாக நாம் எசே 27:20-இல் வாசிக்கிறோம். 27:15-இல் வரும் தெதான் மக்கள் என்பது ரோதேயியர் என்றிருக்க வேண்டும். ஏதோம் நாட்டுக்கு எதிராக இறைவன் தீர்ப்பிடுவது பற்றிக் கூறும்போது இரு இடங்களில் தெதான் மக்களைப்பற்றி வருகிறது (எரே 49:8; எசே 25:13). ஏதோமிய மக்கள் தென்கிழக்கில் பரவாதிருந்ததால், இக்குறிப்பு தெதானியர் குடியிருப்பைக் குறிக்கலாம்.

தெத்து (TETH)

எபிரேய நெடுங்கணக்கில் ஒன்பதாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இல் ஒன்பதாம் பகுதிக்குத் தலைப்பாக உள்ளது. இப்பகுதியில் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தோடு தொடங்குகிறது.

தெபகு (**TEBAH** - கொலைவதை செய்தல்)

நாகோருக்கும் அவரது வைப்பாட்டி இரயுமாவுக்கும் பிறந்த மூத்த மகன் (ஆதி 22:24). இவரது பெயர் பெற்றகு (2 சாமு 8:8), திப்கத்து (1 நாள் 18:8) ஆகிய இடங்களின் பெயர்களோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

தெபலியா (TEBALIAH - யாவே தூய்மைப்படுத்தினார்)

மெராரியின் வம்சவழியில் ஓசாவின் மூன்றாவது மகன். கோவில் வாயிலைக் காக்கும் பணியில் ஓசாவிற்கு மேற்கு வாயிலும் மேட்டுப்பாதை நோக்கிய சல்லகேத்துவாயிலும் குறிக்கப்பட்ட இடங்களாகும் (1 நாள் 26:11,16).

தெபீர் (DEBIR - பின்பகுதி, தூரக்கிராமம்) -ஆள்

எருசலேமுக்குத் தென்மேற்கிலுள்ள எக்லோனின் அரசன் (யோசு 10:3). அதோனிசெதேக்கின் தலைமையிலான எமோரியக் கூட்டணியைச் சேர்ந்த ஐந்து அரசர்களில் ஒருவர். இவர்கள் யோசுவாவின் படையெடுப்பு முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தித்தென் பாலஸ்தீனத்தைக் கைப்பற்ற முயன்றனர்.

தெபீர் (DEBIR - பின்பகுதி, தூரக்கிராமம்)

- இடம்

1. நெகேபிலுள்ள, தென் யூதா மலை நாட்டில், எபிரோனுக்கு அருகிலுள்ள ஒரு முக்கியமான கானானிய நகரம் (யோசு 10:38; 12:13). இது கிரியத்து சேபேர் (15-15) என்றும் கிரியத்து சன்னா (15:49) என்றும் அழைக்கப்படும்.

வாக்களிக்கப்பட்ட நாட்டில் இஸ்ராயேலர் நுழைந்தபோது, தெபீரில் ஆனாக்கியர்கள் வாழ்ந்து வந்தனர் (11:21). யோசுவா, நகரைக் கைப்பற்றி, அதையும் அதில் வாழ்ந்த மக்களையும் அழித்தார் (10:38-39). ஆனால் எல்லா ஆனாக்கியரும் அழிக்கப்படவில்லை போல் தோன்றுகிறது. ஒருவேளை எஞ்சிய ஆனாக்கியரால் திரும்பவும் கைப்பற்றப்பட்டிருக்கலாம். நீதிபதிகள் காலத்தில், காலேபின் சகோதரரான ஒத்னியேல் என்பவரால் இந்நகர் மீண்டும் கைப்பற்றிப் பட்டது என்று நிகழ்ச்சியுரை கூறுகிறது (15:15-17; காண்க. நீதி 1:11-13). இந்நகர் லேவியக்குரிய நகரமாகும் என்பதுதான் இதுபற்றிய கடைசிக் குறிப்பாகும் (யோசு 21:15; 1 நாள் 6:58).

இந்நகரம் இருந்த இடமாகச் செபேலாவின் கிழக்கு ஓரத்திலுள்ள தேல் பெயித் மிர்சிம் அடையாளம் காட்டப்படும். இதைவிடக் கிர்பெத் ராபூது என்ற இடம் பொருத்தமானதாகத் தெரிகிறது. இஃது எபிரோனுக்குத் தென் மேற்கில் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு நடந்த அகழ்வாய்வுகள் இக்கருத்துக்கு ஆதரவு

தருவதாகத் தெரிகிறது. இங்கு வெண்கலக் காலத் தொடக்கத்திலேயே (கி.பி. 23-22-ஆம் நூற்றாண்டுகள்) மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. அப்போது இங்கு எகிப்து ஆதிக்கம் செலுத்தியது. மத்திய வெண்கலக் காலத்தில் ஹைக்சோசியர் இந்நகரை அழித்து மீண்டும் கட்டியெழுப்பியதாகத் தெரிகிறது. இஸ்ராயேலர் பாலஸ்தீனத்தில் புகுந்தபோது, யோசுவா இந்நகரை முழுவதும் அழித்தார். அதன் அழிவு ஒரு மீட்டர் உயரச் சாம்பலை விட்டுச்சென்றுள்ளது. பெலிஸ்தியர்களால் இந்நகர் கட்டப்பட்டு, அவர்களாலேயே அழிக்கப்பட்டது (1 சாமு 4). தாவீது இதை ஒரு பாதுகாப்புமிக்க நகரமாகக் கட்டி எழுப்பினார். கி.மு. 918-இல் சிசாக்கால் அழிக்கப்பட்டது (1 அர 14;25-28; 2 நாள் 12:9 தொ).

ஆசாவின் காலத்தில் (கி.மு. 913-873) இந்நகர் மீண்டும் கட்டப்பட்டது (காண்க. 1 அர 15:23: 2 நாள் 14:6-7). கி.மு. 701-இல் சனகெரிபுவால் அழிக்கப்பட்டது. மீண்டும் கட்டப்பட்டு கி.மு. 587-இல் நெபுகத்னேசரால் அழிக்கப்பட்டது. மீண்டும் இந்நகர் கட்டப்படவில்லை.

2. கிலயாதின் கிழக்குப்பகுதியில் இருந்த ஓர் இடம் (யோசு 13:26). ஒருவேளை இது, மகனயிம் அருகிலுள்ள லோதபாராக இருக்கலாம்.

3. யூதாவின் வட எல்லையிலுள்ள ஓர் இடம் (யோசு 15:7). இஃது எருசலேமுக்குக் கிழக்கும், வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள தோக்ரெட் எத்-தெபர் என்ற இடமாக இருக்கலாம்.

தெபேசு (THEBES - ஆமோனின் நகர்)

இது பழங்கால எகிப்தில் ஒரு பெரிய நகர். வட எகிப்தில் இக்கால லூக்சோர், கர்னாக்கு இருக்கும் இடத்தில் இஃது அமைந்திருந்தது. இது பழம் அரசமரபில் முதன் முதல் தோன்றுகிறது. 11-ஆவது, 12-ஆவது, மற்றும் 18-ஆவது அரச மரபுகளில் தெபேசு அரசு நகரமாய்த் திகழ்ந்தது. இவ்வூரைச் சேர்ந்தவரின் தலைமையின் கீழ்தான் எகிப்தியர் ஹைக்சோசுகளை விரட்டியடித்தனர். இந்த அரசு மரபுகள் காலத்தில், பழம் எகிப்து மிகச்சிறந்து விளங்கியது. 25-ஆவது அரசமரபில் தெபேசு கடைசிமுறையாக அரச நகராய்த் திகழ்ந்தது. கி.மு. 633-இல், அசீரியாவின் அசூர்பானிப்பால் இதைக் கைப்பற்றி அழித்தார். இதை நாகூ 3:8 குறிப்பிடுகிறது. தெபேசுவைவிட நினிவே பெரியதோ என்று இறைவாக்கினர் கேட்கிறார். தெபேசில் உள்ள "கடல் அரணையும் தண்ணீர் மதிலை"யும் குறிப்பிடுகிறார். இது நைல் நதிநீரைக் குறிக்கலாம். ஏனெனில், நைல் நதிக்கரையில் இந்நகரம் அமைந்திருந்தது. மேலும், இந்நகரம் அகழிகளையும் கொண்டிருந்திருக்கலாம். எரே 46:25; எசே 30:14-16 ஆகிய பகுதிகள் இந்நகரை அச்சுறுத்துகின்றன. இங்கு நடந்துள்ள பரந்த அகழ்வாய்வுகள் பல கோயில்களையும், அரச, அரசிகள் சவக்கிடங்குகளையும் வெளிக்கொணர்ந்துள்ளன.

தெபேத்து (TEBETH)

எபிரேய ஆண்டுக் கணிப்பில் பத்தாவது மாதம் (திசம்பர் - சனவரி, மார்கழி). இந்த மாதத்தில்தான் எஸ்தர் அகசவேர் மாளிகைக்கு அழைத்துச்செல்லப்பட்டு. (எஸ்த 2:16) அரசியாக முடிசூட்டப்பட்டாள். கி.மு. 587-586-இல் நிகழ்ந்த எருசலேமின் வீழ்ச்சிக்குப்பிறகு, நெபுகத்னேசர் நகரின் முற்றுகையைத் தொடங்கிய நாளான (காண்க. 2 அர 25:1), தெபேத்து மாதத்தின் பத்தாம் நாள் ஆண்டுதோறும் யூதர்கள் நோன்பு இருந்தனர் (காண்க. செக் 8:19).

தெபோரா (DEBORAH - தேனீ)

1. பெத்துவேலின் மகள் ரபேக்கா பாலஸ்தீனத்திலுள்ள தனது புதிய வீட்டிற்குச் சென்றபோது, அவளுடன் உடன்சென்ற தாதி (ஆதி 24;59). இவள் பெத்தேலில் இறந்தாள். அங்கு ஒரு கருவாலி மரத்தடியில் அடக்கம் செய்யப்பட்டாள். எனவே அவ்விடத்திற்கு " அல்லோன் - பாகூத்து" (அழுகையின் கருவாலிமரம்) என்னும் பெயர் வழங்கலாயிற்று (35:8).

2. இஸ்ராயேலின் நான்காவது நீதிபதி அல்லது விடுதலைவீரர். இசக்காரைச் சேர்ந்தவள். இலப்பிதோத்தின் மனைவி (நீதி 4:4). இறை

ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுச் செயல்பட்டதால் (6:34; 11:29; 14:6) இவள் ஓர் " இறைவாக்கினி" என்றழைக்கப்படுகிறாள் (4:4). இவள் இராமாவுக்கும், பெத்தேலுக்கும் இடையிலுள்ள எப்பிரயிமின் பகுதியில், "தெபோராவின் பேரீச்ச மரத்தின்'' அடியில் அமர்ந்து தீர்ப்பு வழங்கிவந்தாள் (4:5).

யாவேக்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்ற சமய ஒற்றுமைக் கருத்தின் அடிப்படையில் சிதறிக்கிடந்த இஸ்ராயேல் மக்களைத் தூண்டியெழுப்ப ஆற்றல்படைத்தவள். இந்தச் சமய ஒற்றுமை இஸ்ராயேல் நாடு நிறுவப்படுவதற்கும் தொடர்ந்து இருப்பதற்கும் மிக முக்கியமானதொன்றாகும்.

கி.மு. 1200-ஐ ஒட்டி இஸ்ராயேலர் யாபீன் என்பவரால் கொடுமைப்படுத்தப்பட்டனர். தெபோரா, அபினோவாமின் மகனான பாரக்கை அழைத்து யாபீனின் படைத்தலைவனான *சீசரா*வுடன் போரிடுமாறு, யாவேயின் பெயரால் கட்டளையிட்டாள், பாராக்கின் விருப்பத்திற்கு இணங்கி அவருடன் செல்வதாக ஒப்புக்கொண்டாள். ஆனால் அப்போர் பாராக்குக்குப் பெருமை தராது. ஏனெனில், ஆண்டவர் ஒரு பெண்ணிடம் *சீசரா*வைக் கையளிப்பார் என்றும் எச்சரித்தாள் (4:6-10). யாவேயின் உதவியால் இஸ்ராயேலர் வெற்றிகொண்டனர். ஆனால் கேனியரான எபேரின் மனைவி யாயேல் *சீசரா*வைக் கொன்றாள் (4:12-22).

இந்த நிகழ்ச்சியைத் "தெபோராவின் வெற்றிப்பாடல்" (5:2-31) விவரிக்கின்றது. இது கி.மு. 12- ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெற்றிப்பாடலாகும். இந்தப் போருக்குப்பின், கவிகளால் எழுதப்பட்டிருக்க வேண்டும். இது பழைய ஏற்பாட்டில் மிகப்பழங்கால இலக்கியப்பகுதிகளில் ஒன்றாகும்; பல வரலாற்றுச் சுட்டிக்காட்டல்களைக் கொண்டுள்ளது; மிகப் பழங்கால எபிரேய இலக்கண வழக்குகளையும் கொண்டுள்ளது. இப்பாடலிலிருந்து, எபிரேய இனத்தவர் தனித்தனியாகவே வாழ்ந்து வந்தனர்; அவர்களிடையே ஒற்றுமையில்லை என அறியலாம். அப்போது, சமவெளியையும் வியாபாரச் சாலைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்த கானானியர்களோடு போர்புரிய வேண்டியிருந்தது. ஆகவே, சில இனத்தவர் ஒன்றுகூடிச் செயல்பட்டனர் (5:6.13-18). இப்பாடல் போரில் கிடைத்த வெற்றியைக் கொண்டாடினாலும் இஸ்ராயேலரின் போர்க்கடவுளாகிய யாவேயிடம் அவர்கள் கொண்டிருந்த மனப்பான்மையை இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது (5:4.20-21). இதே நிகழ்ச்சியை 4:2-24 என்ற பகுதி, உரை நடையில் விவரிக்கிறது.

3. தோபியாவின் பாட்டி (தோபி 1:8). தோபியாவின் தந்தை இறந்தபின், இவள் அவரை வளர்த்தாள். தோபியாவின் பக்தியிலிருந்து, இவள் தன் பேரனை இஸ்ராயேலின் சமயபக்தியில் கவனமாய் வளர்த்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

தெபோன் (TEPHON)

பாக்கிது என்ற சீரியத் தளபதியால் பலப்படுத்தப்பட்ட ஒரு நகரம் (1 மக் 9:50). இது தப்புவாகு (யோசு 17:7), நெற்றோபா அல்லது தெக்கோவா ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தெமகு (TEMAH - மகிழ்ச்சி)

பாபிலோனியாவில் இருந்து, செருபாபேலோடு நாடு திரும்பிய ஆலய ஊழியர்களில் ஒரு குழுவின் இனப்பெயர் முதியவர் (எஸ் 2:53; நெகே 7:55).

தெமேத்திரியு (DEMETRIUS - மீட்பவர், பாதுகாப்பவர்)

1. அந்திகோனுஸ் என்பவரின் மகனாகிய தெமேத்திரியு போலிகிராத்து 283-இல் இறந்தார். இவர் முதலாம் தோலமியால் கி.மு. 312-இல் காசாவில் தோற்கடிக்கப்பட்டார்.

2. முதலாம் தெமேத்திரியு சோத்தேர் சீரிய அரசனாக கி.மு. 162-151-இல் ஆட்சி செய்தவர். மூன்றாம் அந்தியோக்குக்குப் பிறகு நான்காம் செலூக்கு சீரியாவில் அரசனானபோது அவரது

மகன் முதலாம் தெமேத்திரியு பிணைக்கைதியாக 4-ஆம் அந்தியோக்குக்குப் பதிலாக உரோமைக்கு அனுப்பப்பட்டார். செலூக்கு, கொலை செய்யப்பட்டதால் 4-ஆம் அந்தியோக்கு எப்பிபான் அந்த இடத்தில் அரசனானார். ஆனால் தெமேத்திரியு விடுவிக்கப்படவில்லை. 4-ஆம் அந்தியோக்கின் இறப்பை அறிந்த தெமேத்திரியு தம்மை விடுவிக்குமாறு கேட்டார். ஆனால் உரோமை மேல்சபை உத்தரவு மறுத்துவிட்டது. ஆனால் அவரே போலிபியு என்பவரின் உதவியுடன் கி.மு. 162-இல் தப்பி ஓடிவிட்டார். பின், தெமேத்திரியு அந்தியோக்கின் மகனான 5-ஆம் அந்தியோக்கு யூபேட்டரையும், லீசியாவையும் கொன்று தம்மையே சீரியாவின் அரசனாக அறிவித்துக் கொண்டார் (1 மக் 7:1-4). ஆல்கிமு எனும் தலைமைக்கு யூதா மக்கபேயுவுக்கு எதிராகத் தெமேத்திரியுவின் முன் குற்றம் சாட்டினார். இதனால் யூதர்கள்மேல் பழிவாங்க ஆயுதந்தாங்கிப் போர்தொடுக்க பாக்கிதுவை அனுப்பினார்.

யூதா மக்கபேயு உரோமையுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி உரோமை, தெமேத்திரியு யூதர்களுக்கு எதிராகச் செய்த கொடுமைகளை நிறுத்துமாறு எச்சரிக்கை விடுத்தது. இரண்டாவது முறையாக நிக்கானோரின் தலைமையில் யூதர்களைப் பூண்டோடு அழிக்க, பெரும் படையொன்றை அனுப்பினான் தெமேத்திரியு (1 மக் 7:26); ஆனால் நிக்கானோரின் படை படுதோல்வியடைந்தது. இந்தத்தோல்வியை அறிந்த தெமேத்திரியு மீண்டும் பாக்கிது, தலைமைக்குரு ஆல்கிமு இருவரையும் யூதர்களை அழிக்குமாறு அனுப்பினார். இம்முறை யூதா மக்கபேயு தோல்வியுற்றார் (1 மக் 9:1).

அலக்சாந்தர் பாலா, தெமேத்திரியுவுடன் போரிட்டுக் கொண்டிருந்தபொழுது, யோனத்தானுடன் சமாதானம் செய்து கொள்ள ஒரு மடல் அனுப்பினார் தெமேத்திரியு. இதை அறிந்த அலக்சாந்தர் யோனத்தானைத் தலைமைக் குருவாக்கினார். இதனால் தெமேத்திரியு அளித்த பல வாக்குறுதிகளை நம்பாமல், யோனத்தான் அவனுக்கு ஆதரவு தர மறுத்தார்; அலக்சாந்தர் பாலாவுக்கு ஆதரவு அளித்தார். முடிவில் தெமேத்திரியுவுக்கும் அலக்சாந்தர் பாலாவுக்கும் நடந்த போரில் தெமேத்திரியு படுதோல்வியுற்று கி.மு. 151-இல் கொல்லப்பட்டார் (1 மக் 10:50).

3. இரண்டாம் தெமேத்திரியு நிக்காத்தோர் (கி.பி. 146-130) முதலாம் தெமேத்திரியுவின் மைந்தன். இவன் கிரேத்தாவிலிருந்து சீரியாவுக்கு வந்தான். இதனால் அலக்சாந்தர் பாலா நிம்மதி இழந்தான். பின் தெமேத்திரியு அப்பொல்லோனியு என்பவரை யூதர்கள்மேல் வெற்றி கொள்வதற்காக ஆளுநராக்கினார். ஆனால் அவனை யோனத்தானும் சீமோனும் தோற்கடித்தனர். கி.மு. 147-146-இல் 4-ஆம் தோலமி பிலமேத்தரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தால் தெமேத்திரியு சீரியாவின் அரசன் ஆனார் (1 மக் 11).

யோனத்தான் எருசலேமின் மேல்கொண்ட முற்றுகையை நீக்காததால் தலைமைக்குரு பதவியை அவருக்கு உறுதிப்படுத்தினார் தெமேத்திரியு. மீண்டும் அவர் முற்றுகையைத் தொடர்ந்தாலும் 'அரசனின் நண்பர்' எனும் பட்டத்தையும் அவருக்கு அளித்துத் தனது தந்தை முதலாம் தெமேத்திரியு அவருக்குக் கொடுத்த அனைத்துச் சலுகைகளையும் மீண்டும் உறுதிப்படுத்தினான்.

தமது நாட்டில் அமைதி நிலவுவதைக் கண்ட தெமேத்திரியு தனது படைவீரர்களை விடுவித்தார். ஆனால் அவரது கொடுங்கோன்மையை அறிந்த மக்கள் அவருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். எருசலேமில் உள்ள சீரியப் படைப்பிரிவை எடுத்துவிடுவதாக வாக்களித்து அதற்குப்பதிலாகச் சீரியாவைச் சேர்ந்த திரிபோவுக்கு எதிரான போரில் உதவுமாறு யோனத்தானைக் கேட்டார். ஆனால் அவன் தனது வார்த்தையைக் காக்கவில்லை. அதே நேரத்தில் யோனத்தான் நாட்டின் பெரும் பகுதியைத் தனது பலத்தின் கீழ் வைத்திருந்தார். இச்சூழலில் திரிபோ யோனத்தானைக் கொன்று, அலக்சாந்தர் பாலாவின் சிறு குழந்தையை

அரசனாக அறிவித்தார்.

திரிபோவும், தெமேத்திரியுவும் போரிட்டுக் கொண்டிருக்கும்பொழுது அசமோனியரான சீமோன் யூதாவை விடுதலை பெற்ற நாடாக அறிவிக்குமாறு கோரினார். அதற்குச் சம்மதித்த 2-ஆம் தெமேத்திரியு அதனை உறுதிப்படுத்தி மடல் ஒன்று அனுப்பினார். பின் மேதியாவிற்குச் சென்று திரிபோவுக்கு எதிரான போரில் தமக்கு உதவுமாறு வற்புறுத்தினார். அங்குப் பிடிக்கப்பட்டு எச்சரிக்கைக் காட்சிப்பொருளாக்கப்பட்டார். ஆனால் ஆர்சாசெசு என்ற பாரசீக மன்னரால் நன்முறையில் நடத்தப்பட்டார். அவனது சகோதரியையும் மணந்துகொண்டார். தெமேத்திரியு பாரசீகத்தில் சிறைப்பட்டிருந்தபோது உரோமை அதிகாரம் திரிபோவையும் ஏற்றுக் கொள்ளவில்லை. தெமேத்திரியுவின் சகோதரனும் அரசனாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இவ்வாறு செலூக்கிய வம்சத்திலே ஒரு பெரும் குழப்பம் ஏற்பட்டது.

4. மூன்றாம் தெமேத்திரியு யுசேரு. இவர் அந்தியோக்கு கிரிபோவின் மகன். இவர் கி.மு. 88-இல் அலக்சாந்தர் இயன்னே என்பவருக்கு எதிராகப் பரிசேயர்களை ஆதரித்தார். ஆனால் பின்னர், பரிசேயர் தங்கள் சொந்த அரசனை ஆதரிக்க வேண்டுமெனும் எண்ணத்துடன் இவரை விட்டு இயன்னே பக்கம் சேர்ந்தனர்.

5. அலக்சாந்திரிய யூத வரலாற்று ஆசிரியரான இவர் விவிலிய நாட்கணக்கைக் கொண்டு இஸ்ராயேலின் தொன்மையைக் காட்ட விழைந்தவர். யோசிப்பஸ் இவரை ஒரு புறவினத்தாராகக் கருதுகிறார். இவரது படைப்புக்களின் ஒரு சில பகுதிகளே எஞ்சியுள்ளன. அதுவும் யோசிப்பஸ் மேற்கோள் காட்டுவதிலிருந்துதான் அதுபற்றித் தெரியவருகிறது.

6. தெமேத்திரியு பாலெரும் என்னும் இவர் அலக்சாந்திரியாவில் உள்ள நூலகத்தின் தலைமைப் பொறுப்பாளர் என்பது அரித்தேயாவின் மடலிலிருந்து தெரியவருகிறது. 2-ஆம் தோலமியைத் தூண்டி விவிலியத்தின் மொழிபெயர்ப்பை அருங்காட்சியகத்தில் சேர்க்குமாறு வழிசெய்தார்.

7. எபேசு நகரைச் சேர்ந்த வெள்ளி ஆபரணம் செய்யும் இவர் பவுலுக்கு எதிராகக் கலகத்தைத் தூண்டிவிட்டார். ஏனெனில் அவரது தொழில் பாதிக்கப்பட்டது. பவுலின் கிறிஸ்துவப் போதனை நகரத் தேவதையான ஆர்தெமிசின் வெள்ளிச்சிலை விற்பனைக்கு எதிரானது எனத் தூண்டி விட்டார் (அ.ப. 19:24.38).

8. மூப்பர்களுள் ஒருவராகிய யோவானின் நம்பிக்கையைப் பெற்ற திருச்சபைத் தலைவர்களுள் ஒருவர் தெமேத்திரியு (3 யோவா 12).

தெமொபோன் (DEMOPHON)

மக்கபேயர் காலத்தில் வாழ்ந்த, பாலஸ்தீன மாவட்டங்களில் ஓர் ஆளுநர். இவரும் இவரோடிருந்து மற்ற ஆளுநர்களான திமொத்தேயு, அப்போல்லோனியு, எரோனிமு என்பவர்களும் மக்களை "அமைதியிலும், சமாதானத்திலும் வாழவிடாதவர்கள்" (2 மக் 12:2).

தெயுதா (THEUDAS)

ஒரு யூதக்கிளர்ச்சியாளர். இவர் தாம் ஒரு மெசியா என்று உரிமை கொண்டாடினார். இவர் தமது கட்சியில் ஏறத்தாழ நானூறு பேரைச் சேர்த்துக்கொண்டார். இவர் கொல்லப்பட்டார். இவரைப் பின்பற்றிய அனைவரும் சிதறிப்போயினர் (அ.ப. 5:36). இந்த நிகழ்ச்சி, கி.பி. 6-இல் கலிலேயனான யூதா (9) செய்த கிளர்ச்சிக்குமுன் (5:37). நடந்தது. தெயுதாவின் பெரிய ஏரோதின் மரணத்துக்குப்பின் (கி.மு. 4) நிகழ்ந்த குழப்பங்களின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

யோசிப்பசின் கூற்றுப்படி தெயுதா தாம் ஓர் இறைவாக்கினர் என்று உரிமை கொண்டாடினார். தங்களது உடைமைகளோடு பலரை யோர்தான் நதிக்கு வரச்செய்தார். அங்கு, யோசு 4-இல் நடந்ததுபோல், தமது தெய்வீக ஆற்றலைக்காட்டும் பொருட்டுத் தமது சொல்லால் யோர்தான் ஆற்றை இரண்டாகப் பிரித்து

அவர்களை அக்கரைக்கு இட்டுச் செல்வதாகக் கூறினார். ஆனால் பிடிபட்டுக் கொல்லப்பட்டார். அவரது தலை ஓர் எச்சரிக்கையாக எருசலேமுக்கு அனுப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சி குஸ்பியு பாதியு ஆளுநராக இருந்த காலத்தில் நடந்ததாகக் (கி.பி. 44-46) கணிக்கப்படுகிறது.

கமாலியேலின் பேச்சில் வரும் தெயுதா பற்றிய நிகழ்ச்சியை லூக்கா காலமயக்கமாக இங்குப் புகுத்தியுள்ளார் என்பர் சிலர். கமாலியேலின் பேச்சு, குஸ்பியு பாதியு ஆட்சிக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்திருக்கலாம். ஆயினும் அப்போஸ்தலர் பணிநூலில் வரும் நிகழ்ச்சி முந்தைய ஒரு தெயுதாவைப் பற்றியதாக இருக்கலாம். இவரைப்பற்றி வேறொன்றும் அறிவதற்கில்லை என்பர் வேறு சிலர்.

தெயோதோசியன் (THEODOTION)

கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் விவிலியத்தைக் கிரேக்கத்தில் மொழிபெயர்த்தவர். இவரது பூர்வீகத்தைப்பற்றி உறுதியாக எதுவும் கூறமுடியவில்லை. இவரது மொழிபெயர்ப்பு சிறப்புடன் அமைந்திருந்ததால் பெரும்பாலோர் இதனைப் பின்பற்றினர். புதிய ஏற்பாட்டில் கிரேக்க மொழியில், பழைய ஏற்பாட்டு வாசகங்களை மேற்கோள்காட்ட இம்மொழி பெயர்ப்பையே பயன்படுத்தினர்.

தெயோதோசியுவின் உரை (DISCOURSE OF THEODOSIUS)

இது மரியாளின் விண்ணேற்பைப் பற்றிய பண்டைக்காலக் கோப்திக்கு (போகைரிக்கு) வாசகமாகும்.

தெயோதோத்து (THEODOTUS)

நிக்கானோர் என்பவரால் யூதா மக்கபேயிடம் அமைதியினை நிலைநாட்ட அனுப்பப்பட்ட சமாதானத் தூதுவர்களில் ஒருவர் (2 மக் 14:19). இச்சொல்லுக்கு 'நட்பை ஏற்படுத்தவும், பெறவும், அளிக்கவும்' என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது (2மக் 14:19).

தெயோபில் THEOPHILUS – கடவுளின் அன்பன்)

இவருக்கு லூக்கா தமது நற்செய்திநூலையும், அப்போஸ்தலர் பணிநூலையும் அர்ப்பணிக்கிறார் (லூக் 1:3; அ.ப. 1:1). இவர் லூக்காவின் நண்பராக இருக்கலாம் என்றும் புறவினக் கிறிஸ்தவர்களுள் ஒருவர் என்றும் அறிஞர் சிலர் கூறுகின்றனர். வேறுசிலர் இது தனிப்பட்டவரின் பெயர் கிடையாது; மாறாக, கடவுளிடம் அன்பு கொண்ட அனைவரையும் குறிப்பிட லூக்கா இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறார் என்றும் கூறுகின்றனர்.

தெரசேயா (THRASEAS)

இவர் 2 மக் 3:5-இல் அப்பொல்லோனியுவின் தந்தை என்று குறிக்கப்படுகிறார். சில வாசகங்கள் இச்சொல்லைத் தர்சு என்ற இடப்பெயராக மொழி பெயர்த்துள்ளன.

தெராகு (TERAH – சந்திரன், சோம்பேறி) – இடம்

சேமின் வழித்தோன்றல் நாகோரின் மகன். ஆபிரகாம், நாகோர், ஆரான் ஆகியோரின் தந்தை (ஆதி 11:24-27;1 நாள் 1:26; லூக் 3:34).

இப்பெயர் வடமெசபொத்தாமியாவில் பாலி ஆற்றின் கரையிலுள்ள ஓர் ஊரோடு தொடர்புடையதாகும். அவர் அந்த இடத்திலிருந்து தம் பெயரைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்குத் தம் பெயரை அளித்திருக்க வேண்டும்.

குருக்கள் பாரம்பரியப்படி, தென் பாபி லோனியாவிலுள்ள ஊர் என்ற கல்தேய இடம் தெராகுவின் சொந்த ஊராகும். ஆபிரகாம், சாரா, லோத்து ஆகியோரை அழைத்துக்கொண்டு தெராகு கானானுக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆனால் காரானை அடைந்து அங்குத் தங்கி வாழ்ந்து அங்கேயே இறந்தார் (ஆதி 11:31-32). ஆனால் யாவே பாரம்பரியப்படி, குலமுதியவர்களை ஆராம் - நகராயிமில் வாழ்ந்து வந்தனர் (ஆதி 24;27:43; 38:10; 29:1-14; 31:46-49. 51-53; உப 26:5).

யோசு 24:2-இன்படி, தெராகு "நதிக்கு அப்பால் வாழ்ந்தபோது மற்றத் தெய்வங்களுக்கு" ஊழியம் செய்தார். ஊரும் காரானும் சந்திரக் கடவுளான சீன் வழிபாட்டுக்குப் பெயர் போனவை ஆகவே

தெராகு இந்த வழிபாட்டோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளார்.

தெராகு (TERAH சந்திரன், சோம்பேறி) – இடம்

இஸ்ராயேலர் பாலைவனத்தில் பயணம் செய்தபோது தங்கிய இடங்களில் ஒன்று (எண் 33:27-38). இஃது எங்கிருந்தது என்று அறிவதற்கில்லை.

தெராபிம் (TERAPHIM)

இச்சொல் பன்மையில் பயன்பட்டாலும் ஒன்றையோ, அதிகமான குடும்பச் சிலைகளையோ குறிக்கிறது. ஆதி 31:19.34-35– இன்படி இக்குடும்பச்சிலைகள் சிறியனவாகவும் தூக்கிச் செல்லக்கூடியவையாகவும் இருந்தன. இவற்றை எளிதில் திருடி, மறைத்து வைக்கலாம். அவை லாபானின் குடும்பக்கடவுள்கள் ஆகும். சொத்துரிமை உடையவர்களுக்குத்தான் குடும்பக் கடவுள் சிலைகள் உரியன.

1 சாமு 19:13–இல் குறிக்கப்படும் சிலை மனித உருவிலும், மனித உயரத்திலும் இருந்தது. இது தாவீது மற்றும் மீக்கால் வீட்டில் இருந்தது. நீதிபதிகள் காலத்தில் தெராபிம்கள் வழிபாட்டில் இஸ்ராயேலர்களால் பயன்படுத்தப்பட்டன (நீதி 17:5; 18:14.17.20). பிற்காலத்தில் இந்த வழக்கம் கண்டனம் செய்யப்படுகிறது (1 சாமு 15:23;2 அர 23:24; ஓசே 3:4-5). பாபிலோனில் சோதிடம் பார்க்க இவற்றைப் பயன்படுத்தியதாக எசேக்கியேல் (21:21) கூறுகிறார். பொய் முன்னறிவிப்புகளுக்கு இவை பயன்படுவதாகச் செக்கரியா (10:2) குறிப்பிடுகிறார்.

தெருபை (DERBE – கொட்டுதல்)

தென் சிறிய ஆசியாவின் நடுப்பகுதியில் ஒரு நகரம். அனத்தோலியாவின் நடுவில் உள்ள மேட்டுநிலமான லிக்கவோனியா மாவட்டத்தில் உள்ளது. அனத்தோலியாவில் இக்கோனியா என்ற பெரிய நகரம் உள்ளது. இக்கோனியாவோ பிரிகியாவைச் சார்ந்தது. ஆனால் தெருபையும் லிஸ்திராவும் லிக்கோனியா மொழிபேசும் (அ.ப. 14:11) மக்களைக்கொண்டது. தெருபையைப் பற்றி அறிய சிறிதளவு வாய்ப்பே உள்ளது. சிறிய ஆசியாவில் கிரேக்க ஆதிக்கம் மிகுந்திருந்தபோது இந்நகரிலும் கிரேக்க ஆதிக்கம் நுழைந்தது எனலாம். லிஸ்திரா, லாராண்டாவை ஆட்சி செய்த அந்திபாத்தர் என்ற தலைவன் முதல் நூற்றாண்டில் தெருபையில் தங்கியிருந்தான். இவர் சீச்செரோடு நெருங்கிப் பழகினான் என்று சிலர் கூறுகின்றனர்; மற்றும் சிலர் அவனை ஒரு கொள்ளைக்காரன் என்கின்றனர். கலாத்தியாவின் அரசன் அமின்தாஸ் அந்திபாத்தரைத் தோற்கடித்துத் தெருபையைக் கைப்பற்றினான். கி.மு. 25-இல் அமின்தாஸ் இறந்தபின் தெருபையைப் பல நாட்டு மன்னர்கள் ஆண்டனர். முதலில் தெருபை கலாத்தியாவில் உள்ள உரோமை மாகாணத்துக்கு அடங்கியிருந்தது. ஆனால் கி.பி. முதல் நூற்றாண்டில் இப்பகுதி சிலிசியாவின் அரசன் 4-ஆம் அந்தியோக்கு என்பவனின் கீழ் சிறிது காலம் இருந்தது. எனவே இவர் பேரரசன் கிளாதியு பெயரைச் சிறப்பிக்கும் பொருட்டு இந்நகருக்கு ஒரு சிறப்புப்பட்டம் இட்டார். எனவே கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாணயங்களில் இந்நகரின் பெயர் கிளாதியா தெருபை என்றுள்ளது.

தெருபையின் முக்கியத்துவம் அப்போஸ்தலப் பணிநூல்மூலம் நமக்குத் தெரிகிறது. பவுல் இரண்டுமுறை இந்நகருக்குச் சென்றிருக்கிறார். தனது முதல் மறைபரப்புப் பயணத்தில் (அ.ப. 14:6.20) இந்நகருக்குச் சென்று சீடர்கள் பலரை ஏற்படுத்தியிருக்கிறார். பின்னர், இரண்டாவது பயணத்தில் சிலிசியாவிலிருந்து லிஸ்திராவுக்கு வரும்போது தெருபை வழியாகப்பயணம் செய்திருக்கிறார் (16:1). பவுலின் சீடர்களுள் ஒருவரான காயுதெருபை நகரைச் சேர்ந்தவர். பவுல், கொரிந்திலிருந்து மாசிதோனியா, ஆசியா நாடுகளுக்குச் சென்றபோது இவரும் உடன்சென்றார் (20:4).

தெருபையின், உண்மையான இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது கடினம்தான்; லாராண்டா காரமான் நகருக்கு வடக்கு–வடகிழக்கே சுமார் 24 கி.மீ. தொலைவில் உள்ள கெர்த்தி-குயுக்கு என்ற சிறிய குன்றின் பக்கம்

இருந்திருக்கலாம் என்பது ஒரு கருத்து. காரணம் இவ்விடத்தில் கி.பி. 157–இல் தெருபை மக்களால் அந்தோனினுபயஸ் என்பவருக்கு ஏற்படுத்தப்பட்ட நினைவுச்சின்னம் ஒன்றுள்ளது. இரும்புக்காலம் தொட்டே இவ்விடத்தில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். உரோமை, கிரேக்கர் காலத்திலும் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் இடைக்காலத்தில் இது புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது.

தெரேசு (TERESH – விருப்பம், கண்டிப்பான)

அகசவேர் மன்னனின் தனி அறையைக் காத்துநின்ற இரு அண்ணகர்களில் ஒருவன். மற்றவன் பிகதான். இவர்கள் இருவரும் மன்னனைக் கொல்ல சதித்திட்டம் தீட்டிய போது, அது மொர்தக்காய் என்ற பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர் மூலமாக மன்னனுக்குத் தெரியவருகிறது. உடனே இரு அண்ணகரும் தூக்கிலிடப்படுகின்றனர் (எஸ்த 2:21–23). இதன்மூலம் மொர்தக்காயின் செல்வாக்கு நாட்டில் பரவுகிறது. இதற்கு உதவியவள் மொர்தக்காயின் சகோதரனின் மகள் எஸ்தர் (6:2).

தெர்த்தியு (TERTIUS – மூன்றாவது)

பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தை அவர் வாய்மொழியாகக் கூற அதனை எழுதியவர் தெர்த்தியு. பொதுவாகப் பவுல் திருமுகங்களில் ஒருசில பகுதிகளை மட்டுமே எழுதுவார். மற்றவைகளை அவர் கூற அவரது உதவியாளர்கள் எழுதினர் (1 கொரி 16:21; கலா 6:11; கொலோ 4:18; 2 தெச 3:17). அவருக்குப் பல உதவியாளர்கள் இருந்தாலும் தெர்த்தியுவின் பெயர் மட்டுமே தெரியவருகிறது (உரோ 16:22). இதில் தெர்த்தியு தமது வாழ்த்துதல்களையும் சேர்த்து எழுதியுள்ளார்.

தெர்த்துல்லு (TERTULLUS)

பெலிக்சு என்ற உரோமை ஆளுநரின் முன் பவுல்மீது குற்றம் சாட்டிய வழக்கறிஞன். இவன் முதலில் ஆளுநனுக்கு முகஸ்துதி கூறியபின் "இவன் ஒரு பெரும் தொல்லை. யூதர்களிடையே உலகெங்கும் கலகம் மூட்டுகிறவன். நசரேயருடைய கட்சியில் ஒரு தலைவன் எனக்கண்டோம். கோயிலைக் கூட இவன்மாசுபடுத்த முயன்றான்" என்று பவுலைப்பற்றிக் குற்றம் சாட்டினான் (அ.ப. 24:2–8). சில கையெழுத்துப் பிரதிகளில் 'எங்கள் சட்டப்படி இவனைத் தண்டிக்க நினைத்தோம். ஆனால் லீசியா என்ற ஆளுநன் தடுத்து இவனை இங்கு அனுப்பிவிட்டான்' என்று இவன் கூறுவதாக வந்துள்ளதை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இவன் யூதன் என்று கூறலாம். மற்றப்படி இவன் உரோமையனா, கிரேக்கனா, யூதனா என்று முடிவாகக் கூறமுடியாது. ஒருவேளை வழக்குகளில் வாதாடுவதற்கென்று சட்டங்களைப் படித்த பொதுவழக்கறிஞனாக இருக்கலாம்.

தெலகு (TELAH – முறிவு)

எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவர். இவருக்குத் தகான் என்ற புதல்வன் உண்டு. யோசுவாவின் மூதாதையர் ஆவார் (1 நாள் 7:25).

தெலாசார் (TEL-ASSAR – அசூரின் மலை, குன்று)

வடமெசபொத்தாமியாவில் அரமேயர்கள் தங்கியிருந்த இடம். சனகெரிபுவுக்கு முன்பிருந்த அசீரிய மன்னர்களால் கைப்பற்றப்பட்ட இடம். எசேக்கியா மன்னனுக்கு அசீரிய அதிகாரி அளித்த செய்தியில் குறிக்கப்படும் அசீரியப்படையால் அழிக்கப்பட்ட நகர்களில் ஒன்று. இஃது "ஏதேன் மக்கள்" வாழ்ந்த இடம் என்று குறிக்கப்படுகிறது (2 அர 19:12; எசா 37:12).

மேதியாவில் எக்பத்தானவுக்கு அருகிலுள்ள அசீரிய நகரமான தில்–அசூலி என்று அடையாளம் காட்டப்படலாம்.

தெலாயா DELAIAH யாவேயால் விடுவிக்கப்பட்ட)

1. தாவீதின் வழித்தோன்றல்களில் ஒருவராகிய எலியோவெனாயின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 3:24).

2. ஆரோனின் வழித்தோன்றல். தாவீது காலத்தில் குருக்களின் இருபத்தி மூன்றாம் பிரிவின் தலைவர் (1 நாள் 24:18).

3. தங்களது யூதத் தலைமுறையை நிரூபிக்க

முடியாத நாடுகடத்தப்பட்டவர்கள் அடங்கிய ஒரு குழுவின் மூதாதையர். இவர்கள் தங்கள் யூத மரபுரிமையைப் பெறமுடியவில்லை (எஸ் 2:60; நெகே 7:62).

4. மெகேற்றபேலின் மகனும் செமாயாவின் தந்தையும் ஆவார். நெகேமியா ஆலயத்தை மீண்டும் கட்டியதற்காக அவரைக் கொல்லத் தேடியவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக ஆலயத்துள் ஒளிந்து கொள்ளும்படி அவருக்கு ஆலோசனை கூறியவர். இச்செயலால் நெகேமியாவின் பெயரைக்கெடுக்க முயன்றார். ஆனால் நெகேமியா இந்த ஆலோசனைக்கு இணங்க மறுத்துவிட்டார் (நெகே 6:10-11).

5. செமாயாவின் மகன் (எரே 36:12). எரேமியாவின் இறைவாக்குச் சுருளை எரிக்க வேண்டாம் என்று அரசன் யோயாகிமை வேண்டிக்கொண்ட மூன்று தலைவர்களுள் ஒருவர் (36:25).

தெலாயிம் (TELAIM - செம்மறிகள்)

தென்கோடியில் இருக்கும் ஏதோமின் எல்லை ஓரமாக யூதாவின் கோத்திரத்திற்குக்கிடைத்த நகரங்களில் ஒன்று. இஃது அமலேக்கியரின் எல்லை ஓரமாக அமைந்திருந்தது. இங்குதான் சவுல் அமலேக்கியருக்கு எதிராகத்தன் படைகளைத் திரட்டினார் (1 சாமு 15:4). ஒருசிலர் இது பெயேர் செபாவுக்குத் தென்கிழக்கு 20 கி.மீ.தொலைவில் இருந்திருக்கலாம் என்று கூறினாலும் இதன் அமைவிடம் பற்றித் தெளிவான கருத்து இல்லை. தேலேம் (யோசு 15:24) என்ற ஊரும் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

சீப் (ரிவுக்கு அருகிலுள்ள கிர்பெத் உம் எஸ்-சலேபே இதற்கு அடையாளம் காட்டப்படுகிறது.

தெலீலா (DELILAH- அழகுள்ள, காதல் நாடகமாடுபவள்)

சேரேக்குப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து வந்த இந்தப் பெண்ணைச் சிம்சோன் காதலித்தார். இவள் பெலிஸ்திய இனத்தைச் சேர்ந்தவளாகவோ பணத்திற்காகத் தங்களைக் கொடுமைப் படுத்தியவர்களிடம் தன்னை விற்றுவிட்ட யூதப் பெண்ணாகவோ இருக்கலாம். தான் இனத்தைச் சேர்ந்த சிம்சோன் பெலிஸ்தியர்களைப் பழிவாங்கியதைக் கண்ட அவர்கள், தெலீலாவுக்குப் பெரும் பணம் கொடுத்து, சிம்சோனின் பலம் எதில் இருக்கிறது என்று அறிந்து வர அவளைக் கேட்டுக்கொண்டனர். அவளை மூன்று முறை ஏமாற்றியபின், சிம்சோன் தனது பலம் அதுவரை வெட்டப்படாத தன் முடியில் உள்ளது என்று உண்மையைக் கூறினார். தன்னை நம்பிய சிம்சோனைத் தெலீலா பெலிஸ்தியர்களிடம் காட்டிக் கொடுத்துத் துரோகம் செய்தாள். பெலிஸ்தியர் சிம்சோனைச் சிறைப்பிடித்துத் துன்புறுத்தினர் (நீதி 16:4-22).

தெல் - அபீபு (TEL ABIB - தானியக்குவியல், வெள்ளக்குன்று)

பாபிலோனியாவில் ஒரு குன்றின்மேல் அமைந்த நகரம். இங்கு, நாடுகடத்தப்பட்ட எசேக்கியேலும், மற்றும் யூதர்கள் சிலரும் வாழ்ந்து வந்தனர் (எசே 3:15). இது கெபார் ஓடைக்கு அருகில் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் துல்லியமாக இடம் சுட்ட முடியவில்லை.

தெல் -ஏல் - அமர்னா (TEL-EL-AMARNA)

இது பார்வோன் 4-ஆம் அமனோபோசின் (அக்கெனத்தோன் - கி.மு. 1377-1358) நகரான அக்கெதாத்தோனுக்கு வழங்கப்பட்ட பெயர். இது கெய்ரோவிற்கும் லுக்சோருக்கும் இடையில், நைல்நதியின் வலக் கரையில் அமைந்துள்ளது. இங்கு நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் பல கடிதப் போக்கு வரத்துகளை எடுத்துரைக்கின்றன. இந்தக் கடிதங்கள் யாத்திரை நிகழ்ச்சி வரலாற்றுக்கு முக்கியம் வாய்ந்தவை. இவை அக்காதிய மொழியில் சித்திர எழுத்துக்களால் எழுதப்பட்டவை. இவை கானானிய மொழிப் பண்புகளைப் பெற்றிருந்தன. எபிரேயர்கள் கானானிய மொழியை ஒருசில மாற்றங்களுடன் பின்பற்றினர் என்பது தெளிவு. மேலும் இக்கடிதங்கள் எபிரேயர் கானானில் குடியேறும்போது நிலவிய அரசியல் சூழ் நிலையையும் தருகின்றன. கி.மு. 1600-1500-

இல் எகிப்து, சீரியா, கானான் போன்றவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தியது. ஆனால் 4–ஆம் அமனோபோசின் காலத்திலே இவ்வாதிக்கம் தளர்ந்தது. குறுநில மன்னர்கள் குழப்பம் விளைவித்தனர். இந்தச் சூழ்நிலை எபிரேயர்கள் கானானில் வந்து குடியேறச் சாதகமாய் அமைந்தது.

காண்க: அமர்ணாவின் கடிதங்கள்

தெல் மெலாகு (TEL - MELAH – உப்புக் குன்று, மலை)

பாபிலோனியாவில் இருந்த ஒருநகரம். இங்கிருந்து வந்தவர்களும் தெலாசார் மக்களைப் போலவே தங்களது தலைமுறைப்பட்டியலை நிரூபிக்க முடியாததால் ஆலயப் பணியில் இருந்து நீக்கப்பட்டனர் (எஸ் 2:59; நெகே 7:61). இஃது இருந்த இடம் தெரிய வில்லை. உப்பு விதைக்கப்பட்டு (காண்க. நீதி 4:45) ஏற்கெனவே அழிக்கப்பட்ட இடத்தில் இஸ்ராயேலர் குடியேறியிருக்கலாம். இது பாரசீக வளைகுடாவிலுள்ள உப்பளத்திலுள்ள தோலமியின் தெல்மா என்ற ஊராக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

தெல்லர்சா (TEL - HARSHA – செவிடரின் குன்று)

பாபிலோனியாவில் இருந்த ஓர் இடம். இங்கிருந்து திரும்பி வந்தவர்கள் தங்கள் தலைமுறைப்பட்டியலை நிரூபிக்க முடியாததால் ஆலயப் பணிகளிலிருந்து நீக்கப்பட்டனர் (எஸ் 2:59; நெகே 7:61). இந்த இடம் எங்கிருந்தது என்று அடையாளம் காட்ட முடியாது. ஒருவேளை ஏற்கெனவே அழிந்துபோன ஒருநகரம் இருந்த இடத்தில், நாடுகடத்தப்பட்ட இஸ்ராயேலர் ஒரு குடியிருப்பை அமைத்திருக்க வேண்டும்.

தெற்குத்திசை (SOUTH)

இஸ்ராயேலர் சூரியன் உதயமாகும் திசையை நோக்கி நின்று தங்கள் திசைகளைக் கணித்தனர். இதன்படி தென்திசையைக் குறிக்க "வலப்பக்கம், வலக்கரம், தெற்கு" என்ற சொற்களைப் பயன்படுத்தினர். யூதாவின் தென்பகுதியாகிய நெகேபு என்ற பெயரும் தென்திசையைக்குறித்தது. தானி 11–இல் வரும் "தென்திசை மன்னன்" எகிப்தைச் சேர்ந்த தோலமிய அரசர்கள் பலரைக்குறிக்கும். புதிய ஏற்பாட்டில் தென்திசையைக் குறிக்கும் சொற்கள் (அ.ப. 8:26) "நண்பகல்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். "தென்னாட்டு அரசி" (மத் 12:42; லூக் 11:31) சேபா நாட்டு அரசியைக் குறிக்கும் (காண்க. 1 அர 10:1–10).

தெனாரியுஸ் (DENARIUS)

இது உரோமையரின் வெள்ளிக்காசு. கி.மு. 268 முதல் செப்திமு செர்வு காலம் வரை இந்த வெள்ளிக்காசு பயன்படுத்தப்பட்டது. இது 3.8 கிராம் எடையுள்ளது. புதிய ஏற்பாட்டிலே பலமுறை இந்த நாணயம் குறிப்பிடப் பட்டுள்ளது. இது வேலையாளின் ஒரு நாள் கூலியாகும் (மத் 20:2.7 - 10.13).

தென்திசை விண்மீன் குழுக்கள் (CHAMBER OF THE SOUTH)

வடமீன்குழு மற்றும் மிருக சீரிடத்தோடு, யோபு 9:9–இல் குறிக்கப்படும் விண்மீன் குழுக்களாகும். இதற்குப் பல விண்மீன்களை அடையாளம் காட்டியுள்ளனர் அறிஞர்கள். வேறுசிலர், இச்சொற்றொடர் விண்மீன்களைக் குறிக்கவில்லை; மாறாக, ஒரு மாடத்தின் பின்பகுதியைப் போன்ற தென்திசை ஆகாயத்திலுள்ள வெற்றிடத்தைக் குறிக்கிறது என்றும், சுழல்காற்று தோன்றும் கிடங்கு (37:9)என்றும் அடையாளம் காட்டியுள்ளனர்.

தே

தேக்கிலா மற்றும் பவுலின் பணிகள் (THE-CLA, ACT OF PAUL AND)

இது கத்தோலிக்கத் திருமறையால் ஏற்றுக்கொள்ளப்படாத 'பவுலின் பணிகள்' என்னும் நூலின் ஒருபாகம். இதில் தேக்கிலா என்ற பவுலின் பெண் சீடரின் வரலாறு மற்றும் புதுமைகள் கூறப்படுகின்றன. இந்தத் தேக்கிலா ஒரு கிரேக்கக் கன்னிகை. இவள் பவுலின் அறிவுரையால் கவரப்பட்டுக் கிறிஸ்துவ மறையைத் தழுவுகிறாள். பின்பு பற்பல கேடுகளினின்று வியத்தகுமுறையில் தப்புகிறாள். இப்பகுதியில்தான் பவுலைப்பற்றிய ஆள்தோற்றம் வருணிக்கப்படுகின்றது. இப்புத்தகத்தின் விளைவாகத் தேக்கிலா ஆதித்திருச் சபையில் ஒரு கன்னிகையாகக் கருதப்பட்டாள். காண்க: பவுலின் பணிகள்.

தேசியனின் நற்செய்தி ஒருங்கமைவு (DIA-TESSARON OF TATIAN)

தேசியனால் தயாரிக்கப்பட்ட நான்கு நற்செய்திகளின் ஒருங்கமைவு ஆகும். பழைய சீரியக்கு மொழியில் தயாரிக்கப்பட்டது. கி.பி. 170-ஆண்டு வாக்கில் மேற்காசிய நாடுகளில் இந்நூல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் நாளடைவில் இந்நூலைத் தயாரித்த தேசியன் தவறான கொள்கைகளைக் கொண்டவராகத் திருச்சபையால் கண்டு பிடிக்கப்பட்டார். எனவே இவர் தயாரித்த இம்முக்கிய நற்செய்தி ஒருங்கமைவைத் திருச்சபை மக்களிடமிருந்து வாங்கி அழித்துவிட்டது. இதனால் தேசியன் தயாரித்த இந்நூலின் பிரதிகள், பழஞ்சுவடிகள் வழியாக நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. கி.பி. 220-ஆம் ஆண்டைச் சார்ந்த ஒரே ஒரு சிறிய துண்டுச் சுவடி மட்டும் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்தத் தேசியனின் நூலைப்பற்றிய குறிப்புகள், மற்ற இரு முக்கிய இடங்களில் கிடைத்துள்ளன. எப்பிரேம் என்பவர் தேசியன் தயாரித்த நற்செய்தி ஒருங்கமைவு நூலுக்கு எழுதிய விளக்கவுரை நமக்குக் கிடைத்திருக்கிறது. இதில் தேசியனின் ஒருங்கமைவை நேராகப் பார்ப்பதைப் போலவே விளக்கங்கள் உள்ளன. அராபிய மொழியிலும் இந்நான்கு நற்செய்திகளின் ஒருங்கமைவு ஒன்று காணப்படுகிறது. இது தேசியனின் ஒருங்கமைவின் மொழிபெயர்ப்பைப் போலக் காட்சியளிக்கிறது. ஏனென்றால் அராபிய மொழிபெயர்ப்பு சீரியக்கு பெசிட்டா மொழிபெயர்ப்பை ஒத்திருக்கிறது.

தேடுதல் (SEEK)

" மனிதன் எத்துணை முயன்றாலும், அவனால் அதை (கடவுளின் செயலை)க் கண்டுகொள்ள இயலாது" (திருவெளி 8:17); ஆனால், இயேசுவோ "தேடுவோர் கண்டடைகின்றனர்" என்று அறிவிக்கிறார் (மத் 7:8). அனைத்து மனித அங்கலாய்ப்பிற்குப் பின்னும் இறைவனைக் காணத் தேடுதல் உள்ளது. ஆனால், இத்தேடுதலானது அடிக்கடி தோல்வியடைவதால், சரிப்படுத்தப்பட வேண்டும். பின்னர், மனிதன் இறைவனைத் தேடும் முயற்சி, முதலில் இறைவன் மனிதனைத் தேடுகிறார் என்ற உண்மையில் வேரூன்றியுள்ளது என்பதைக் கண்டுபிடிக்கிறான்.

I. இறைவனைத் தேடுதல்: வழிபாட்டு முறையினின்று உள்ளார்ந்த தேடுதல் வரை:

மூலத்தில் யாவேயைத் தேடுதல் அல்லது அவரது வாக்கைத் தேடுவதென்பது, இறைவனுடன் ஆலோசிப்பது என்று பொருள் படும். ஒரு முக்கிய தீர்மானத்திற்கு முன்னர் (1 அர 22:5-8), ஒரு வழக்கைத் தீர்ப்பிட (யாத் 8:15-16), அல்லது ஓர் இடுக்கணான சூழ்நிலையில் வழிகாண (2 சாமு 21:1; 2 அர 3:11:8:8; 22:18), ஒருவன் சந்திப்பின் கூடாரத்திற்கு (யாத் 33:7) அல்லது கோவிலுக்குச் சென்று (உப 12:5), சாதாரணமாகக் குரு (எண் 5:11) அல்லது இறைவாக்கினர் மூலமாக ஆண்டவரிடம் ஆலோசனை கேட்கிறான் (யாத் 18:15; 1 அர 22:7; எண் 23:3).

இத்தகைய முறையானது மூடநம்பிக்கையான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒருவனது

செயல்களில் ஆண்டவரை ஈடுபடுத்துவதாக இருக்கலாம். ஆனால், இது இறைவன்பால் கொண்ட அன்பின் தன்னலமற்ற எடுத்துக்காட்டாகவும் இருக்கலாம் என விவிலிய மொழி காட்டுகிறது. இறைவனைத் தேடுகின்ற மனிதன் "ஆண்டவரது இல்லத்தில் தன் வாழ்நாள் எல்லாம் குடியிருக்கவே" அதாவது, "ஆண்டவரது இனிய அழகைக் காணவும்", "அவரது முகத்தை நாடவும்" எதிர்பார்க்கிறான் (சங் 27:4.8). புனித இடத்தின் வழிபாட்டில் பங்கேற்பது சந்தேகத்திற்கிடமின்றி இடம் பெறுகிறது (சங் 24:6; செக் 8:21). ஆனால் வழிபாட்டினுடைய மகத்துவம் மற்றும் உணர்ச்சியில், பிரமாணிக்கமுள்ள இஸ்ராயேலன் "ஆண்டவருடைய நலன்களைத் காணத்" தேடுகிறான் (சங் 27:13). இறைவனுடைய பிரசன்னத்தில் இருக்க விரும்பும் இந்த ஆசையானது நாடு கடத்தப்பட்டவரைப் பாபிலோனிலிருந்து மீண்டும் கொண்டுவந்து (எரே 50:4), ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப அவர்களைத் தூண்டுகிறது (1 நாள் 22:19;28:8-9). இறுதியாக, இறைவனைத் தேடுவதென்பது முறையான வழிபாட்டை அளித்து, போலித் தெய்வங்களை அழிப்பதாகும் (உப 4:29). இஸ்ராயேலரின் அரசர்களைத் தீர்ப்பிடுவதில் நாளாகம ஆசிரியரின் விதிமுறை இதுவேயாகும் (2 நாள் 14:3; 31:21).

இறைவாக்கினர்கள் தொடர்ந்து போதிப்பது போன்று, போலித்தெய்வங்களை நிராகரித்தல் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். நீதி மற்றும் நேர்மைக்கான கவனமுள்ள தேடுதலின்றி இறைவனைத்தேடுதல், மெய்யானதாக இருக்கமுடியாது. "நம்மைத் தேடுங்கள், நீங்கள் வாழ்வீர்கள்; ஆனால், பெத்தேலைத் தேடாதீர்கள்" என்னும் சமன்பாட்டை ஆமோஸ் அமைக்கிறார் (ஆமோ 5:4-5). மேலும் "நன்மையை நாடுங்கள், தீமையைத் தேடாதீர்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வீர்கள்;... தீமையை வெறுத்து, நன்மையை நாடுங்கள்; நகர்வாயிலில் நீதியை நிலைநாட்டுங்கள்' (ஆமோ 5:14-15). அவ்வாறே "நீதியை நீங்கள் விதைத்துக் கொள்ளுங்கள், ஏனெனில், ஆண்டவரைத் தேடுங்காலம் நெருங்கி வந்து விட்டது" என்று ஓசேயா வலியுறுத்துகிறார் (ஓசே 10:12; செப் 2:3). "ஆண்டவரைக் காண ஒருவன் அவரைத் தேடுவானாகில்", "கொடியவன் தன் வழிமுறைகளையும் தீயவன் தன் எண்ணங்களையும் விட்டுவிடுவது" அவசியமாகும் (எசா 55:6). ஒருவன் "தனது முழு இதயத்தோடும்" ஆண்டவரைத் தேட வேண்டும் (உப 4:29; எரே 29:13). இதை இயேசு மாற்றவில்லை. "அனைத்திற்கும் மேலாக இறைவனுடைய ஆட்சியையும் நீதியையும் நாடுங்கள்" (மத் 6:33).

II. உண்மையான மற்றும் போலியான தேடுதல்: இஸ்ராயேலிலும் இறைவனைத் தேடுவதில் சில வழி விலகிப்போதல்கள் இருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களில் சிலர் போலித் தெய்வங்களை நோக்கித் திரும்பினர் (பாகால்; 2 அர 1:2தொ); மற்றவர்கள் தடைசெய்யப்பட்ட இடைநிலையினரைப் பயன்படுத்தினர் (மந்திரவாதிகள்: லேவி 19:31; இறந்தோர்; உப 18:11; இறந்தோரை வழிபடுவோர்: 1 சாமு 28:7; ஆவிகள்: எசா 8:19). பலர் தொடக்க உள்நிலை அமைப்பையே கொண்டிருக்கவில்லை.

"அவர்கள் நேர்மையானவற்றைச் செய்யும் மக்களைப் போல் உள்ளனர்; ஆனால், சட்டத்தை மறந்து விடுகின்றனர்" (எசா58:2). இறைவனைக் கண்டுபிடிக்க இவர்களில் எவராலும் இயலவில்லை. தங்களுடைய பாவங்களால் அவர்கள் அனைவரும் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டனர் (எசா 29:2).

இறைவனுக்கான உண்மையான தேடுதலானது நேர்மையான உள்ளம் (ஞான 1:1), எளிமை, தாழ்ச்சி, மற்றும் ஏழ்மை (செப் 2:3; சங் 22:27), நொறுங்கிய இதயம் மற்றும் தாழ்மையான சிந்தனை (தானி 3:39 தொ) ஆகியவற்றில் ஏற்படுகிறது. பின்னர், "அவரைத் தேடுவோருக்கு நல்லவராக உள்ள இறைவன் (புல 3:25) அவர்கள் தம்மைக் கண்டடைய அனுமதிக்கிறார் (எரே 29:14). "இறைவனைத் தேடும் எளியோர் மகிழ்ச்சி அடைவர்" (சங் 69:32).

இதயங்களுடைய மறைவான எண்ணங்களை வெளிப்படுத்துகிற இயேசு கிறிஸ்து (லூக் 2:35), இறைவனுக்கான உண்மையான மற்றும் போலித் தேடுதலுக்கிடையே ஒரு பிரிவை ஏற்படுத்துகிறார். அவர்பால் மக்கள் கொள்ளும் மனப்பான்மையானது (யோவா 8:21) உண்மையான மற்றும் போலித் தேடுதலுக் கிடையிலான வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது. அதுமுதல் இறைவனைத் தேடுவதற்கும், இயேசுவைத் தேடுவதற்கும் இடையே ஓர் இணைத்தன்மை உள்ளது. "கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ளவும், அவரைப்பற்றிக் கொள்ளவும்" (பிலி 3:8.12), தனக்குரிய நீதியை நிலைநாட்டத் தேடுவதை விட்டுவிட்டு (உரோ 10:3), விசுவாசத்தில் அவரால் பற்றிக்கொள்ளப்படத் தன்னை விட்டுவிடுவது அவசியமாக உள்ளது (பிலி 3:12). இயேசுவைத் தேடலானது, மேலுலகிலிருந்து வருகின்ற பொருட்களுக்கான தேடலில் (கொலோ 3:1) அவரது பிரிவிற்குப் பின்பும் தொடரப்பட வேண்டும் (யோவா 13:33).

III. மனிதனைத் தேடும் இறைவன்: இறைவனைத் தேடுவதென்பது, அவர் முதலில் நம்மை அன்பு செய்தார் (1 யோவா 4:19), மற்றும் அவர் நம்மை நாடினார், தனது மகனிடம் நம்மை நடத்திச்செல்ல அவர் நம்மை ஈர்க்கிறார் என்பதைக் கண்டுபிடித்தலாகும் (யோவா 6:44). இறைவனின் அருளால் எடுக்கப்பட்ட இந்த முன் முயற்சி, பிழிப்புடன் காக்கப்பட்ட மேலாண்மையான உரிமையன்று; ஏனெனில், இந்த முன்முயற்சி அன்பைச் சார்ந்தது. மற்றும் மனிதனுக்கான தேடலானது இறை இதயத்தின் ஆழத்தினின்று எழுகின்ற இயக்கம் என்பதை முழு விவிலியமும் காட்டுகின்றது. இஸ்ராயேல் இறைவனை மறந்துவிட்டு மற்றக் காதலரின் பின்னால் ஓடும்போது, தனது பிரமாணிக்கமற்ற துணைவியை நயமாகக் கவர்ந்திழுத்து "நெஞ்சுருக அவளுடன் பேச" இறைவன் திட்டமிடுகிறார் (ஓசே 2:15-16). சிதறிப்போன ஆடுகளை இஸ்ராயேலின் எந்த மேய்ப்பனும் தேடிச் செல்லாதபோது (எசே 34:5-6), மந்தையை ஒன்றுசேர்த்து, "காணாமல் போன ஆட்டைத் தேடுவதற்கான" தமது திட்டத்தை இறைவனே அறிவிக்கிறார் (34:12.16). பிரமாணிக்க மின்மையின் நேரத்திலேயே தமது தேடுதலில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள இறைவனைப் பற்றி உன்னத சங்கீதம் பாடுகிறது (உ.ச. 3:1-4; 5:6; 6:3).

இந்த ஆர்வத்தின் பரப்பை இறைமகன் வெளிப்படுத்தியுள்ளார். "இழந்து போனதைத் தேடி மீட்கவும்" (லூக் 19:10), காணாமல்போன தனி ஆட்டைத் தேடிச்செல்லவும் மனுமகன் வந்துள்ளார் (மத் 18:12; லூக் 15:4-10). தம்முடையவர்களை விட்டுப் பிரிந்து செல்லும்போது "நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பதற்காக" (யோவா 14:3), அவர்களைத் தேடி, தம்முடன் கொண்டு செல்ல, தாம் மீண்டும் வரவிருக்கின்ற தருணத்தைப்பற்றி இயேசு எண்ணுகின்றார்.

தேபேசு (THEBEZ)

தேபேசு நகரம் செக்கேமிலிருந்து 20 கி.மீ. வடகிழக்கில் உள்ள துபாஸ் நகரமே என்பது பலரின் கருத்து. இந்நகரை ஒட்டிச் செக்கேம் மற்றும் தோத்தான் ஆகிய இடங்களிலிருந்து வரும் சாலைகள் இங்குக் கூடி பள்ளத்தாக்குக்குச் செல்லுகின்றன. இந்த இடம் பாரா ஓடையிலுள்ள நப்லூசுக்குக் கிழக்கு வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

இந்நகரை நீதிபதிகள் காலத்தில் இருந்த அபிமெலக்கு தாக்கிக் கைப்பற்றியபோது ஒரு பெண் மதில் மேலிருந்து இயந்திரக் கல்லை இவனது தலைமேல் தூக்கிப் போட்டதால் இறந்தான் (நீதி 9:50; 2 சாமு 11:21). இந்த நகரம், செக்கேமை அபிமெலக்கு தாக்கிய நிகழ்ச்சியோடு கூறப்படுவதால், முதலில் இந்நகரம் அபிமெலக்கின் ஆட்சியில் இருந்து, பின்னர்ச் செக்கேமோடு சேர்ந்து கொண்டு புரட்சியில் இறங்கியிருக்க வேண்டும். அபிமெலக்கின் மரணம் ஒரு பெண்கையில் ஒரு வீரன் அடையும் இழிவான மரணத்திற்கு முதுமொழியாயிற்று (2 சாமு 11:21).

தேமனி (TEMENI - வலப்பக்கம், தெற்குப்பக்கம்)

யூதாவைச் சேர்ந்த அஸ்கூர், நாரா ஆகியோரின் புதல்வன் (1 நாள் 4:6). இப்பெயர் "தெற்கைச் சேர்ந்த மக்கள்" என்று பொருள்படும் இனப்பெயராகத் தோன்றுகிறது.

தேமா (DEMAS - புகழ்பெற்ற)

1. பவுலோடு சேர்ந்து வேலை செய்தவர் பவுல் பிலமோனுக்கு, எழுதிய திருமுகத்தில் (பில 24) தேமாவையும் மற்றச் சீடர்களையும், "தன் உடன் ஊழியர்கள்" என்று குறிப்பிடுகிறார். இவர்களும் பவுலோடு சேர்ந்து வாழ்த்து அனுப்புகின்றனர். கொலே 4:14-இல் தேமாவும் வாழ்த்து அனுப்புவதாகக் கூறப்பட்டுள்ளது. தேமா "உலகப்பற்று மேற்கொண்டதால் தம்மைவிட்டுத் தெசலோனிக்கேவுக்குப் போய் விட்டதால்" பவுல் திமொத்தேயுவைத் தம்மோடு வேலை செய்ய அழைக்கிறார் (2 திமொ 4:10). 3 யோவா 12-இல் வரும் தெமேத்திரியுவைத் தேமாவாக அடையாளம் காட்டுவர் சிலர்.

2. திசிமாசின் மற்றொரு பெயர்.

தேமா (TEMA - பாலைவனம்)

சாராளின் பணிப்பெண்ணான ஆகார் மூலமாக ஆபிரகாமுக்குப் பிறந்த இசுமயேலின் வழிவந்தவர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டனர் (ஆதி 36:24; 1 நாள் 1:45). மேலும் இசுமயேலுக்குத் தேமா என்ற பெயரில் ஒரு மகனும் உண்டு (ஆதி 25:15; 1 நாள் 1:30). அரேபியாவிலிருந்து ஓர் இடத்திற்கும், ஓர் இனத்திற்கும் இப்பெயர் இருந்தது. இரு பெரும் சாலைகளுக்கு மத்தியில் இருந்ததால் வணிகர்களின் தங்குமிடமாகவும் இருந்திருக்கிறது. இங்கிருந்து பாரசீக வளைகுடாவுக்கும், தமஸ்குவுக்கும் செல்லும் பாதைகள் சந்தித்துப் பிரிகின்றன. இஃது ஒரு பாலைவனச் சோலை போல் அமைந்துள்ளது. இவ்வழியாக வரும் வணிகர்களைப் பற்றி யோபுபேசுகிறார் (6:19). எசாயா இறைவாக்கினரும் இதனைக் குறித்துப் பேசுகிறார் (எசா 21: 14).

அசீரிய அரசன் மூன்றாம் திகலத்துபிலேசர் இதனை வெற்றி கொண்டபோது கப்பத்தைச் செலுத்தி, தன்னை அழிவிலிருந்து காத்துக் கொண்டது. நெபுகத்னேசரின் வருகையை எரேமியா உரைக்கின்றார் (எரே 25:23; காண்க. 49:28-23). பாபிலோனியாவின் கடைசி அரசனான நபோனித்து, இந்நகரின் மீது நாட்டம் கொண்டு ஒருபடையெடுப்பு நடத்தி இங்கிருந்த அனைவரையும் கொன்றுவிட்டுப் புதிதாக மக்களைக் குடியேற்றினான். தனது மகனைப் பாபிலோனியாவில் தனக்குப் பதிலாக வைத்துவிட்டு அவன் இங்கேயே சுமார் 10 ஆண்டுகள் தங்கிவிட்டான். இதற்கு இரு காரணங்கள் கூறுவர். 1) இவ்விடம் எகிப்தோடு தொடர்பு கொள்ள வசதியாயிருந்தது. ஏனெனில் வளர்ந்து வரும் பாரசீகத்தை எதிர்க்க அவனுக்குத் துணை தேவைப்பட்டது. 2) பாபிலோனியக் கோவில் குருமார்கள் மன்னனோடு சரியான முறையில் ஒத்துழைக்காததால் அக்கோவிலுக்குப் போட்டியாக இங்கு ஒரு கோவிலைக் கட்டுவது அவன் நோக்கமாக இருந்திருக்கலாம். ஆனால் இரண்டும் அவனுக்கு வெற்றியைத் தரவில்லை. இறுதியில் சைரஸ் என்ற பாரசீக மன்னன் கி.மு. 540-இல் இதனைக் கைப்பற்றினான்.

தேமானியர் (TEMANITE)

1. தேமான் இனத்தவர் குடியேறிக் கைப்பற்றிய பகுதிகளில் வாழ்ந்த எவரையும் இவ்வாறு அழைப்பர் (ஆதி 36:24; 1 நாள் 1:45).

2. யோபுவின் நண்பனான எலீபாசின் அடைமொழியாகும் (யோபு 2:11). இஃது ஏதோமிலுள்ள தேமானைக் குறிப்பதாகக் கருதப்படும். ஆனால் சூழ்நிலை அராபியாவிலுள்ள தேமாவைச் சுட்டுவதாக உள்ளது (காண்க. யோபு 6:19).

தேமான் (TEMAN - வலப்பக்கம், தெற்குப்பக்கம்)

ஏதோமில் இருந்த ஓர் இடத்தின் பெயரும் பகுதியும் ஆகும் (எரே 49:7; எசே 25:13; ஆமோ 1:12; ஒப 9). இது பொதுவாக, தெதானோடு இணைத்தே பேசப்படும். ஞானிகளுக்குப் பெயர் பெற்ற நகரம். இங்கிருந்து யாவே வருவதாக

அபாகூக்கு தனது நூலில் 3:3-இல் கூறியுள்ளார். தலைமுறை அட்டவணையில் ஏதோமியரின் குலத்தந்தையான ஏசாவின் வழிவந்தவர் என்றும், இவனது தந்தை எலீபாசு என்றும் கூறப்பட்டுள்ளது (ஆதி 36:11.15.42; 1 நாள் 36:53). பொதுவாக இவ்வார்த்தையைப் பழைய ஏற்பாட்டில் 'தெற்கு' என்ற திசையைக் குறிக்கப் பயன்படுத்தினர்.

தேர், இரதம் (CHARIOT)

கி.மு. 1700 - 1500-இல் கைக்சோஸ் இனத்தவரால் குதிரை இழுத்துச் செல்லும் தேர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மெசபொத்தாமியா, எகிப்து, சீரியா போன்ற நாடுகளில் இதை உடனே போர்க்கருவியாகப் பயன்படுத்தினார்கள். அரசர்களும், பணக்காரர்களும் மட்டுமே தேர்களை வைத்திருந்தனர். இரதம் பயணம் செய்யவும் பயன்படுத்தப்பட்டது. அசீரிய மன்னர்கள் வேட்டையாட இரதத்தைப் பயன்படுத்தினார்கள். ஒரு சாதாரண இரதத்தின் அச்சு 44-45 அங்குலம் அகலமுடையதாக இருந்தது. இரதத்தின் பின்முனை அச்சு மேல் தங்கி அமைந்திருந்தது. முதலில் எகிப்தில் நான்கு ஆரைக்கால் சக்கரங்கள் பயன்பட்டன. பிற்காலத்தில் எகிப்திலும், அசீரியாவிலும், ஆறு ஆரைக்கால் சக்கரங்கள் கொண்ட இரதங்கள் செய்யப்பட்டன. கி.மு. 800-இல் ஆசீரியர்கள் எட்டு ஆரைக்கால் சக்கர இரதத்தைக் கண்டுபிடித்தார்கள். எகிப்திய இரதங்கள் உறுதியற்ற மரங்களால் கட்டப்பட்டதால் நீடித்து உழைக்கவில்லை. ஆனால் வேகமாகச் செயல்பட்டன. பொதுவாக இரதத்தில் இரண்டு குதிரைகளே பூட்டப்படும். சில நேரங்களில் ஒன்று, மூன்று, நான்கு குதிரைகளும் பூட்டப்படுவது உண்டு. பொதுவாக ஒருதேரில் இருவர் செல்வர். ஒருவர் தேரோட்டி; மற்றவர் போர் தொடுப்பவர். அரசனின் தேரோட்டி என்பது மிகப்பெரிய பட்டமாக எகிப்தில் கருதப்பட்டது. இத்தியர்களும் அவர்களுக்குப்பின் அசீரியர்களும் கேடயம் தாங்கிய ஒருவனையும் தேரில் சேர்த்து, மூவர் செல்ல ஆரம்பித்தார்கள். அசீரியாவிலும், அரசனின் தேரோட்டியும், மூன்றாவது நபரும் பெரிய பதவியில் இருப்பதாகக் கருதப்பட்டார்கள். போர்ச் சூழ்ச்சிக்கு ஏற்றவாறு தேர்கள் அணிவகுத்துச் செலுத்தப்பட்டன. கோமேர் காலத்து இரதங்கள் எகிப்திய, அசீரிய இரதங்களை விட மாறுபட்டவை அல்ல. கிரேக்கர்கள் 6-ஆம் 4-ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் இரதங்களைப் பயன்படுத்தவில்லை. ஏனெனில் இக்காலத்தில் காலாட்படைச் சூழ்ச்சிகளும், குதிரைப்படைகளும் வளர்ச்சியடைந்திருந்தன. கிரேக்கர்கள், பாரசீகப் பாதிப்பால் 4-ஆம் நூற்றாண்டில் இரதங்களை மீண்டும் பயன்படுத்தத் தொடங்கினார்கள். மக்கபேயப் போர்களில் செலூக்கியப்படைகள் இரதங்களைப் பயன்படுத்தின. உரோமையர்கள் பந்தயங்களிலும், போக்குவரத்திலும் மட்டுமே இரதங்களைப் பயன்படுத்தினார்கள்; போர் செய்யப் பயன்படுத்தவில்லை.

எபிரேயர்களை சாலமோன் காலத்தில் இரதங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். அவர்கள் மூவர் இருந்து செல்லக்கூடிய தேர்களைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது (2 அர 7:2.17.19; 10:25; 15:25). இஃது ஆடம்பரமாகவும், பகட்டாகவும் இருந்ததால் எதிர்ப்பை உண்டாக்கியது. மேலும் பணக்கார உயர்குலத்தாரோடு தொடர்புடையதாலும் மக்கள் இதை வெறுத்தனர். கானானியர்களின் இரும்புத் தேர்கள் எபிரேயர்களுக்கு அச்சத்தைக் கொடுத்தன (யோசு 17:16-18; நீதி 4:3தொ). ஆனால் எபிரேயர்கள் அவர்களை வெற்றி கொள்வதற்கான தந்திரங்களைத் தெரிந்து வைத்திருந்தனர். தாபோரில் நடந்த போரில் சீசரா தோல்வி அடைந்ததற்குக் காரணம், பெரும் மழையால் இரதங்கள் சேற்றில் புதைந்துபோனதேயாகும் (நீதி 5:20தொ). கானானியர்களுக்கு எதிரான இந்த வெற்றியானது அவர்களுக்கு மீண்டும் இந்த இரதங்களின் மேல் இருந்த நம்பிக்கையை இழக்கவைத்தது. யோசு 11:9-இல் அவர்கள் கைப்பற்றிய குதிரைகளின் பின்னங்கால் நரம்புகளை அறுத்து, தேர்களை எரித்ததாகக் காணப்படுகிறது. என்றாலும் பெலிஸ்தியர்கள் மட்டும் எபிரேயருக்கு எதிராக இந்தத்

தேர்ப்படையைத் திறமையாகப் பயன்படுத்தி வெற்றி கண்டார்கள் (1 சாமு 13:5). ஆனால் தாவீது பெலிஸ்தியரிடமிருந்து கைப்பற்றிய குதிரைகளில் 100 இரதம் இழுக்கத் தேவையான குதிரைகளைத் தவிர்த்து மற்றவற்றின் பின்னங்கால் நரம்புகளை அறுத்ததாகக் கூறப்படுகிறது (2 சாமு 8:4). சாமுவேல் இறைவாக்கினரின் அரசாட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் முதல் இடம் பெறுவது–அரசன் தேர்களையும் குதிரைப்படைகளையும் வைத்துக்கொள்வான் என்பதாகும் (1 சாமு 8:11). அப்சலோம் (2 சாமு 15:1), அதோனியா (1 அர 1:5) ஆகியோர் பகட்டு மற்றும் அரசப் பேராசை ஆகியவற்றின் அடையாளமாகப் பயன்படுத்தினர். தேர்ப்படை நகர்களில் சாலமோன் 1400 தேர்களை நிறுத்தி வைத்திருந்தார் (1 அர 10:26). அத்தகைய நகர்களில் மெகிதோவும் ஒன்று. இங்கு 450 குதிரைகளை நிறுத்திவைப்பதற்கான குதிரை இலாயங்கள் இருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இஸ்ராயேலின் அரசர்கள் பெரிய தேர்ப்படைகளைக் கொண்டிருந்தனர். கி.மு.853-இல் கார்கர் போரில் ஆகாபு பயன்படுத்திய 2,000 தேர்களைக்கொண்ட தேர்ப்படை, மிகப்பெரிய படை என்று மூன்றாம் சல்மனேசரின் குறிப்புக்கள் கூறுகின்றன. உப ஆகமம், மன்னர்கள் அதிக குதிரைகளை வாங்கக் கூடாது என்று எச்சரிக்கிறது (உப 17:16). யூதாவில் எசாயா இறைவாக்கினர் காலத்தில் கணக்கிலடங்காத் தேர்கள் இருந்தன (எசா 2:7). எசாயா இறைவாக்கினர், யாவே மீது நம்பிக்கை வைப்பதைவிட, தேர்களில் மக்கள் நம்பிக்கை வைப்பதைக் கண்டிக்கிறார் (30:16; 31:1). இக்கண்டனம் அசீரியத் தூதுவனின் ஏளனப்பேச்சோடு (36:8-9) ஒத்துப்போகிறது. ஆனால் யாவே தேரில் வலம் வருவது, இறை மகிமைக்காட்சிகளில் விவரிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாலஸ்தீனத்தில் தேர்கள் வழக்கில் இல்லை. அ.ப. 8:28-40-இல் மட்டுமே ஒரே ஒரு தடவை இரதத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த இரத்தின் உரிமையாளன் ஒரு யூதன் அல்லன்; மாறாக எத்தியோப்பியன் ஆவான்.

உருவகமாக, எலியா (2 அர 2:12) எலிசா (13:14) ஆகிய இருவரும் "இஸ்ராயேலின் தேரே! அந்தத் தேரின் பாகனே!" என்றழைக்கப்படுகின்றனர். இஃது அவர்களின் இறைவாக்குரைத்தலின் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறது. இருவரும் நெருப்புக் தேரால் பிரிக்கப்பட்டனர் (2:11). தோத்தானில் நெருப்புக் குதிரைகளும் தேர்களும் எலிசாவைச் சீரியர்களிடமிருந்து காப்பாற்றின (6:5-19). இது போலவே இஸ்ராயேலின் வரலாற்றில், இறைவனுடைய வலிய செயல்களுக்குத் தேர் அடையாளமாக உள்ளது (சங் 68:17; அப 3:8). செக்கரியாவின் காட்சியில் விவரிக்கப்படும் விண்ணகத் தேர்கள் இறைவனுடைய தூதர்களைக் குறிக்கின்றன (செக் 6:1-8). இவர்கள் மெசியா காலத்தைத் தொடங்கி வைக்கும் தூதர்களாக இருக்கலாம்.

தேர்ந்தெடுத்தல் (ELECTION)

I. மனிதன் மட்டில் இறைவன் கொண்டிருந்த திட்டம் மற்றும் அவரது திருவுளம் ஆகியவை பற்றிய எதையும் தேர்ந்தெடுத்தல் என்ற கருத்து இன்றிப் புரிந்துகொள்வது இயலாது. ஆனால், பாவியானவன் இறைவனிடத்து மாற்றமுடியாத அவநம்பிக்கையும் தன் சகோதரர்களிடத்துப் பொறாமையும் கொண்டுள்ளான். இத்தகைய நிலையில் அவனால் இறைவனின் அருளையும் தாராள குணத்தையும் ஏற்றுக்கொள்ள எப்போதும் விருப்பமில்லாதவனாக இருக்கிறான். அதே நேரத்தில் மற்றவர்கள் இறைவனது கொடைகளை ஏற்றுப்பயன் பெறுவதை அவனால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை (மத் 20:15). ஒருவேளை அவனே அவற்றைப் பெற்றுக் கொண்டு பயன் அடைந்தாலும், தானே அவற்றிற்கு அளித்த மதிப்பையும், பொருளையும் மட்டும் அவை கொண்டிருப்பதாக நினைத்துக்கொள்கிறான். தன் சொந்தச் சகோதரனுக்கு எதிராகக் காயீன் கொண்ட காழ்ப்புணர்ச்சி மிக்க கடுஞ்சினம் ஒருபுறம் (ஆதி 4:4தொ); தன் இரத்த உறவினரான சகோதரர்களுக்காகப் பெரும் துயரமும் இடைவிடாத வேதனையும் அனுபவித்து (உரோ

9:2தொ), இறைவனது அளப்பரிய ஞானம் மற்றும் அறிவுக்காகவும், அறிவுக்கு எட்டாத அவருடைய திட்டங்களுக்காகவும் நன்றி கூறுவதில் (11:33) அந்த வேதனையை வெளிக்கொட்டுகிற பவுலின் தியாகம் மறுபுறம்; இந்த இரண்டுக்குமிடையே பாவத்திலிருந்து விசுவாசத்திற்கு இட்டுச்செல்லும் முழுவழி அமைந்துள்ளது. இதுதான் மீட்பின் முழுமை; மறைநூலின் நிறைவு ஆகும்.

II பழைய ஏற்பாடு:

1. தேர்ந்தடுத்தலின் அனுபவம்:

அ. தொடக்க உண்மை: தேர்ந்தெடுத்தலின் அனுபவம் என்பது பிறமக்களின் ஊழிலிருந்து வேறுபட்ட தனித்தன்மையுடைய நிலைக்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்படுதலின் அனுபவமாகும். இந்தத் தனித்தன்மையுடைய நிலை சூழ்நிலைகளின் குருட்டுத்தனமான சங்கிலித் தொடராலோ, மனிதவெற்றிகளின் தொடராலோ ஏற்படுவதன்று. அத்தகைய நிலை யாவேயே வலிய வந்து மனிதவாழ்வில் புகுந்து செயலாற்றும் மேலாண்மை மிக்க முன் முயற்சியாகும். தேர்ந்தெடுத்தலைக் குறிக்கும் பாரம்பரியச் சொற்றொகுதிகள் (பாகார் என்ற சொல்லும் அதைச்சார்ந்த சொற்களும்) ஓரளவு பிற்காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம். ஆனால் இஸ்ராயேல் தாங்கள் யாவேயின் மக்களாக இருப்பதை உணர்ந்த தொடக்கத்திலிருந்தே, மேற்கூறிய துல்லியமான மற்றும் சிறப்புப்பொருளில், தேர்ந்தெடுத்தலில் இறைவனது செயலை அனுபவித்தனர். இந்த அனுபவ உணர்வை உடன்படிக்கையினின்று பிரிக்க முடியாது. அதே நேரத்தில் (பலரில் ஒரே ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட) தனித்தன்மையுடையது; (இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட) உள்ளார்ந்த இரகசியமுடையது. இவ்வாறு தேர்ந்தெடுத்தல் அனுபவம் உடன்படிக்கைக்குச் சமயக் கருத்தாழத்தையும் மறைபொருள் பருமனையும் கொடுக்கிறது.

ஆ. முதல் அறிக்கைகள்: இறைத்தேர்தல் பற்றிய முதல் அறிக்கைகள் இஸ்ராயேலின் விசுவாசம் பற்றிய தொன்மைக்காலக் கூற்றுகளில் காணப்படுகின்றன. முதற்கனிகளை ஒப்புக்கொடுத்தல் சடங்குபற்றி விவரிக்கும் உப 26:1-11-இல் அவர்களின் மிகப்பழமையான விசுவாச அறிக்கை காணப்படுகிறது. அதன் சாரம், எபிரேயர்களை எகிப்திலிருந்து ஆசிர் நிறைந்த நாட்டிற்கு அழைத்துவந்த இறைவனது முன்முயற்சியாகும். யோசுவாவின் தலைமையில் செக்கேமில் செய்யப்பட்ட உடன்படிக்கை இஸ்ராயேலின் வரலாற்றை ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்த காலம்வரை பின்னோக்கி இட்டுச் செல்கிறது (யோசு 24:3). இந்த முன் முயற்சிக்கு "யாருக்கு ஊழியம் செய்வீர்கள் என்பதை நீங்களே இப்போது முடிவு செய்யுங்கள்" (24:15) என்பது ஒன்றே பதிலாகும் என்பதை வலியுறுத்துகிறது. சீனாய் மலையில் நடந்த உடன்படிக்கையின் வாய்பாடுகளான "எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ளும்" (யாத் 24:9), மற்றும் "நீங்களே எல்லா மக்களினங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள்" (19:5) போன்றவை பிற்காலத்தைச் சேர்ந்தவையாயினும், அவை விளம்பும் விசுவாசம் பிலயாமின் இறைவாக்குகளில் ஏற்கெனவே காணப்படுகிறது. "கடவுள் சபிக்காதவனை நான் எப்படிச் சபிப்பேன்?... இதோ தனியாக வாழ்கின்றதொரு மக்கள் கூட்டம்! இது வேற்றினத்தாரோடு தன்னையும் ஓர் இனமாய்க் கொள்ளவில்லை" (எண் 23:8தொ). மேலும் "இஸ்ராயேலின் கடவுளாகிய யாவேயின்" வியத்தகு செயல்களையும் (நீதி 5:3.5.11) "யாவேக்காகத்" தங்களையே அளித்த போராளிகளின் தாராளத் தன்மையையும் (5:2.9.13.23) மாறி மாறிப் புகழும் தெபோராவின் பாடலிலும் அதே விசுவாசத்தைக் காணலாம்.

இ. தேர்ந்தெடுத்தல் ஒரு தொடர் நிகழ்ச்சியாகும்: இத்தகைய அறிக்கைகள் ஒரு வரலாற்றை நினைவுகூர்கின்றன; ஒரு தனித்தன்மையுடைய திட்டத்தைப் பாடுகின்றன. மக்களைத் தேர்ந்தெடுத்தல் முந்தைய தேர்தல்களடங்கிய தொடரால் தயாரிக்கப்படுகிறது. ஒன்று மற்றதன் அடிப்படையாக அமைகிறது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனி நபர்களின் தேர்வில் தொடர்ந்து வளர்ச்சியடைகிறது.

1) ஆபிரகாமுக்கு முந்திய மனித வரலாறு இறைவனுடைய முன் ஆதரவையும் (ஆபேல்; ஆதி 4:4), சலுகையையும் (ஏனோக்கு; 5:24) “இத்தலைமுறையில் உன்னையே நான் நேர்மையானவனாகக் காண்கிறேன்” (7:1) என்று இறைவனே கூறும் நோவாவின் தனித்தன்மையுடைய வாழ்வையும் சேமுக்கு அளிக்கப்பட்ட ஆசீரையும் கொண்டுள்ளது. ஆயினும் தேர்ந்தெடுத்தலின் தன்மைகள் இவற்றில் முழுதும் காணப்படவில்லை. ஆனால் வரலாற்றுப்போக்கு, தேர்ந்தெடுத்தலை முன்கருத்தாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மனித இனம் பாவத்திற்கு இரையானது; அதே நேரத்தில் விண்ணகம் அடையக் கனவு காண்கிறது. இத்தகைய மனிதத் தலைமுறைகளைக் காணும் இறைவன் இவர்களிலிருந்து ஒரு காலத்தில் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து அவர் வழியாக “மண்ணின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிர் பெறும்படி” (12:3) வரலாறு முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது.

2) முதுபெரும் தந்தையர்களுக்கு இறைவன் தமது தேர்ந்தெடுத்தல் திட்டத்தின் தொடர்ச்சியைக் காட்டுகிறார். அவர் ஓர் இனத்தைத் தேர்ந்தெடுக்கிறார். அந்தத் தேர்தலை உறுதிப்படுத்துகிறார். ஆனால் இந்த இனத்தில் அவரது ஆசிரைப் பெறுபவர்கள் எலியேசர், இசுமயேல், ஏசா, ரூபன் முதலிய இயற்கையான வழித்தோன்றல்கள் அல்லர். ஒவ்வொரு முறையும் தம் விருப்பத்திற்கேற்ப ஈசாக்கு (ஆதி 18:19), யாக்கோபு, யூதா முதலியோரைத் தேர்ந்தெடுக்கிறார். ஆபிரகாமைத் தொடக்கத்தில் தேர்ந்தெடுத்ததின் சாதாரணமான விளைவுகளுக்கும் இறைவனின் நேரடிச்செயல்களுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடான எதிர்நிலையைத் தனது முக்கிய உட்கருத்தாகக் கொண்டுள்ளது ஆதியாகமம். இறைவனது செயல்கள் மனிதனது திட்டங்களைத் தலைகீழாக மாற்றுகின்றன. இவ்வாறு, அதே நேரத்தில், இறைவன் தமது வாக்குறுதிகளுக்கும் தமது தேர்ந்தெடுத்தலின் மேலாண்மை மிக்க முதன்மைக்கும் பிரமாணிக்கமாக உள்ளார்.

மேற்கூறிய தேர்ந்தெடுத்தல் பற்றிய விவரிப்புகள் எல்லாவற்றிலும் ஒரு நிலையான பண்பைக் காணலாம். மனிதக் கண்ணோட்டத்தில், ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சலுகை அது மற்றவர்களுக்கு மறுக்கப்படுவதாகக் கருதப்படும். இதற்கு “உன் சகோதரர்கள் உனக்கு அடிமையாக இருப்பார்களாக” என்ற கூற்று பல்லவிபோல் வருவது (9:25; 27:29.40) சான்றாகும். ஆனால் இறைவனது வாக்குறுதிகளில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்மேல் இறைவனது வாக்கு அவர்களை உலகமனைத்துக்கும் ஆசிராக்குகிறது (12:3; 22:18; 26:4; 28:14).

3) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுள், இறைவன் சிலரைப் பொறுக்கியெடுத்து அவர்களுக்குக் காலவரையுடைய அல்லது நிலையான ஒரு பணியைக் கொடுக்கிறார். தனித்தன்மையுடையவர்களாக்கி இவர்களை அர்ப்பணிக்கிற இந்தத் தேர்வு, இஸ்ராயேல் தேர்ந்தெடுக்கப்பட்டதின் பண்புகளைக் கொண்டுள்ளது. இறைவாக்கினர்களைப் பொருத்தவரையில் அவர்களை அழைப்பதின் வழியாக இந்தத் தேர்ந்தெடுத்தல் நிகழ்கிறது. இந்த அழைப்பு இறைவனது நேரடி வேண்டுகோளாகும். இஃது அவர்களுக்குப் புதியதொரு வாழ்க்கை முறையை அளித்து அதற்குரிய பதிலைக் கோருகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு மோசே ஆவார் (யாத் 3; காண்க சங் 106:23; தெரிந்து கொள்ளப்பட்ட மோசே). ஆனால் ஆமோஸ் (ஆமோ 7:15), எசாயா (எசா 8:11), எரேமியா (எரே 15:16தொ; 20:7) ஆகியவர்களும் அதே அனுபவம் பெற்றனர். அவர்கள் ஆட்கொள்ளப்பட்டு, சாதாரண வாழ்விலிருந்தும் மக்கள் சமூகத்திலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்டு இறைவனுடைய செய்தியை அறிவிக்கக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு செய்வதால் அவர்கள் தம் சொந்த மக்களின் பகைமையையும் பெறுகின்றனர்.

சவுல் (1 சாமு 10:24), தாவீது முதலிய அரசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குறிப்பாக, சவுல் நிராகரிக்கப்பட்ட அதே நேரத்தில், தாவீது யாவேயால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் (16:1).

அவரோடு அவரது சந்ததியினரும் எக்காலத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படலாம்; ஆனால் நிராகரிக்கப்பட மாட்டார்கள் (7:4தொ). இப்போது அழைப்புக் கேட்கப்படுவதில்லை. இறைவனது தேர்வு இறைவாக்கினர் வழியாக அரசர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது (10:1). இறைவாக்கினர்கள் இத்தேர்வை இறைவார்த்தையிலிருந்து அறிகின்றனர் (16:6-12; ஆகா 2:23). பெரும்பாலும் நிகழ்ச்சிகளின் சூழ்நிலைகளால், இறைவன் தாம் தேர்ந்தெடுத்த அரசனை அரியணை ஏறச்செய்கிறார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, அதோனியாவுக்குப் பதிலாகச் சாலமோனைத் தேர்ந்தெடுத்ததாகும் (1 அர 2:15). அரச மதிப்பினாலும் அபிடேகத்தின் புனிதப் பண்பாலும் மட்டும் தேர்ந்தெடுத்தல் அமைந்து விடுவதில்லை (உப 17:15). யாவேயின் அபிடேகம் பெற்றவரின் தேர்வு எப்போதும் இறைவனுடைய உடன்படிக்கையோடு இணைந்தது என்பதாலும் (சங் 89:4), இஸ்ராயேல் விசுவாசிகளை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்குப் பிரமாணிக்கமாய்க் காப்பதுதான் அரசனுடைய அடிப்படையான அலுவலாகும் என்பதாலும் தேர்ந்தெடுத்தல் நிகழ்கிறது.

குருக்களும் லேவியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணி "கடவுளாகிய ஆண்டவர் திருமுன் என்றென்றும் ஊழியம் செய்வதாகும்" (உப 18:5). இதற்காக அவர்கள் மக்களிடமிருந்து தனித்து வாழவேண்டும் (10:8). இந்தத் திருநிலைப்படுத்தலின் தொடக்கத்தில் இறைவனே முன்முயற்சி எடுக்கிறார். இறைவன் தமக்கு உரிமையாக உள்ள தலைப்பேறு அனைத்திற்கும் பதிலாக லேவியர்களைத் தேர்ந்துகொண்டார் (எண் 8:16தொ). இஃது அவரது மேலாண்மை குருட்டுப்போக்கான, அக்கறையற்ற ஆதிக்கம் அன்று; மாறாக, பங்காளிகளின் மேன்மையில் அக்கறை கொண்டது என்றும், அது மகிழ்ச்சி மிக்க விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் காட்டுகிறது. அவரது பங்காகவும் உரிமைச் சொத்தாகவும் யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட லேவியர்கள் அவரைத் தங்கள் பங்காகவும் உரிமைச் சொத்தாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும் (எண் 18:20; சங் 16:5தொ). குருக்கள், லேவியர் இஸ்ராயேல் ஆகியோரின் - தேர்ந்தெடுத்தலில் ஒரு தொடர்ச்சியுள்ளது என்றால், அது யாவே தமது மக்களை முழுவதும் "குருக்களின் அரசராகவும் தூய மக்களினமாகவும்" இருக்கத் (யாத் 19:6) தேர்ந்தெடுத்துள்ளார் என்பதேயாகும்.

தமது மக்களைத் தேர்ந்துகொண்டதுபோல், யாவே இப்பூமியையும், தமக்கே உரியதெனக் குறிப்பிட்ட புனித இடங்களையும் தேர்ந்தெடுத்துள்ளார். ஏனெனில், அவர், கானானியப் பாகால் தேவதையைப் போன்று கட்டுப்பட்டு நீரூற்றுகள், மலை போன்ற இடங்களில் மட்டும் செயலாற்றுபவர் அல்லர். அவர் "யூதாவின் குலத்தைத் தேர்ந்துகொண்டதுபோல்" தமக்கு விருப்பமான சீயோன் மலையை அவர் தேர்ந்துகொண்டார் (சங் 78:68). "அதையே தம் உறைவிடமாகத்" தேர்ந்துகொண்டார் (68:17; 132:13). எல்லாவற்றிற்கும் மேலாக எருசலேம் ஆலயத்தை, "தம் பெயர் விளங்கும்" உறைவிடமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார் (உப 12:5; 16:7-16).

2. தேர்ந்தெடுத்தலின் உட்பொருள்:

அ. தேர்ந்தெடுத்தலின் தொடக்கம் இறைவனுடைய பயன் கருதாத முன்முயற்சியேயாகும். யாவேதான் "உன் மீது அன்பு கொண்டு உன்னைத் தேர்ந்துகொண்டார்" (உப 7:7). நீ அவரைத் தேர்ந்து கொள்ளவில்லை. இந்த அருட்கொடைக்கு விளக்கம் அன்புதான். எந்தத் தகுதியும் மேன்மையும் அதைக்காரணம் காட்டி விளக்கமுடியாது. உண்மையில் இஸ்ராயேலர் எல்லா மக்களிலும் சொற்பமானவர்களே; ஆனால் "யாவே உங்கள்மேல் அன்பு கூர்ந்தார்" (7:7தொ). தேர்ந்தெடுத்தல் இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையே ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்துகிறது. "நீங்கள் உங்கள் கடவுளாகிய யாவேயின் மக்கள்" (14:1). இந்த உறவு, பிற மதங்களில் தேவதைகளுக்கும் அவர்களின்

விசுவாசிகளுக்குமிடையேயுள்ள இயற்கையான உறவு போன்றதன்று. இந்த உறவு யாவேயின் தேர்ந்தெடுத்தலின் விளைவாகும் (14:2); எப்போதும் "முதலில் அன்பு செய்யும்" (1 யோவா 4:19) அவரது யாவும் கடந்த தன்மையை எடுத்துக்கூறுகிறது.

ஆ. தேர்ந்தெடுத்தலின் நோக்கம், யாவேக்குத் திருநிலைப்படுத்தப்பட்ட புனித மக்களை உருவாக்குவதாகும். இவர்கள், "எல்லா மக்களினங்களிலும், புகழிலும், பெயரிலும், மாட்சியிலும்" உயர்த்தப்பெறுவர் (உப 26:19); மக்களிடையே ஆண்டவரின் மகிமையையும் தாராளத்தையும் ஒளிரச் செய்வர். சட்டம், குறிப்பாக இஸ்ராயேலுக்கும் மற்ற மக்களுக்கும் இடையில் தடைகளை அமைப்பதன் வழியாக, இந்தப் புனிதத்தை உறுதிசெய்யும் சாதனமாகிறது.

இ. தேர்ந்தெடுத்தல் இஸ்ராயேலை மற்ற மக்களினத்தவரிடமிருந்து பிரித்துவைக்கிறது. பிற மக்களோடு எவ்விதத்திலும் பொதுவாக இல்லாத ஓர் ஊழோடு அவர்களைப் பிணைக்கிறது; அஃது அசாதாரணச் செழிப்புடையதாக இருக்கலாம்; அல்லது ஒப்புமையில்லாத் துற்பேறுடையதாக இருக்கலாம் (உப 28). "உலகத்திலுள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களைத்தான் நான் சிறப்பாக அறிந்துகொண்டேன்; ஆதலால் உங்கள் தீச்செயல் அனைத்திற்காகவும் நான் உங்களைத் தண்டிப்பேன்" (ஆமோ 3:2) என்ற ஆமோசின் வாக்கு, தேர்ந்தெடுத்தலின் சாசனமாக அமைந்திருக்கிறது.

3. புதிய, இறுதிக்காலத் தேர்ந்தெடுத்தல்:

அ. தேர்ந்தெடுத்தலும் நிராகரித்தலும்:

இந்த அச்சுறுத்துதல் கடினமாக இருந்தாலும், மீண்டும் நம்பிக்கை அளிக்கும் குறிப்பையும் கொண்டுள்ளது. இறைவன் தம்மக்களை இவ்வாறு தண்டிக்க வேண்டுமென்றால் அவர்களைத் துறந்து கைவிட்டு விடக்கூடாது. இறைவன் தேர்ந்தெடுத்தலைத் தள்ளுபடி செய்து, மக்களினங்களிடையே மறைந்து போகவிட்டால், அதன் விளைவு மிகப் பயங்கரமானதாக இருக்கும். தாவீதுக்குச் சார்பாக அவரது ஏழு அண்ணன்களையும் புறக்கணித்ததுபோல (1 சாமு 16:7), யூதாவுக்குச் சார்பாக எப்பிராயிமை நிராகரித்ததுபோல (சங் 78:76தொ), அவர் தேர்ந்துகொண்ட நகரமான எருசலேமை நிராகரிக்கத் துணியவில்லையா? (2 அர 23:27). இறைவாக்கினர்கள், குறிப்பாக எரேமியா இத்தகையதொரு விளைவு நிகழும் என்று எடுத்துக் கூறக் கட்டாயப்படுத்தப்பட்டார். இஸ்ராயேல் தூய்மைப்படுத்த முடியாத "தள்ளுபடியான வெள்ளியாகும்;" ஆகவே குப்பைத்தொட்டியில் எறியப்படும் (எரே 6:30; காண்க 7:29). ஆகவே "நீர் யூதாவை முற்றிலும் புறக்கணித்து விட்டீரா? சீயோனை உம் உள்ளம் வெறுத்துவிட்டதா? (14:19).

இதற்குரிய இறுதியான விடை "இல்லை" என்பதுதான். "மேலே வான்வெளி அளக்கப்படக் கூடுமாயின், கீழே பூவுலகின் அடித்தளங்களைக் கண்டுபிடிக்க இயலுமாயின், இஸ்ராயேல் வழிமரபினரின் அனைத்துச் செயல்களையும் முன்னிட்டு அவர்கள் அனைவரையும் நான் தள்ளிவிடுவேன்" (எரே 31:36; காண்க. ஓசே 11:8; எசே 20:32) என்கிறார் ஆண்டவர். பிரமாணிக்கமற்ற மணப்பெண் "அவளுடைய பாவங்களுக்காகத் தள்ளிவைக்கப்பட்டாள்" என்பது உண்மையே. ஆனால் "உன் தாயைத் தள்ளிவைத்ததற்கான மணமுறிவுச் சீட்டு எங்கே? என்று கடவுள் இன்னும் கேட்கக்கூடும் (எசா 50:1). தேர்ந்தெடுத்தல் புதிய வடிவில் தொடர்கிறது. "யாவே எருசலேமைத் திரும்பவும் தேர்ந்துகொள்வார்" (செக் 1:17; 2:16). அவர் "இஸ்ராயேலை மீண்டும் தேர்ந்து கொள்வார்" (எசா14:1).அவர்களுடைய பாவங்களையும் அழிவையும் கவனியாது எஞ்சியோர் வடிவில் இஸ்ராயேலைத் தேர்ந்து கொள்வார். இது தற்செயலாக நிகழ்வதன்று. இறைவனுடைய ஆற்றலால் நிகழ்வதாகும். அவர்களே "தூய வித்து" (எசா 6:13); "தளிர்" (செக் 3:8); "பாகாலின்முன் மண்டியிடாத ஏழாயிரம் பேர்" (1 அர 19:18). பவுலின் விளக்கப்படி அவர்களே கடவுள் தமக்கென ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் (உரோ 11:4).

ஆ. இதோ நான் தேர்ந்தெடுத்தவர்கள்: இந்தப் புதிய இஸ்ராயேலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பட்டம் பெரும்பாலும் இரண்டாம் எசாயாவிலும், எப்போதும் இறைவனாலேயே கொடுக்கப்படுகிறது (எசா 41:8; 43:20; 45:4 43:10; காண்க. 65:9.15.22). இஃது இறைவனுடைய படைக்கும் முன்முயற்சியை நிறைவாக விவரிக்கிறது. புறவினத் தெய்வங்களின் இழிந்த வழிபாட்டு முறைகளில் முழுவதும் ஈடுபட்டிருந்த மக்களை உண்மையான இறைவனுடைய பணிக்குப் பற்றுறுதி உடையவர்களாக மாற்ற இறைவன் வல்லவர். உலகம் மற்றும் வரலாற்றின் மத்தியில் இறைவன் இந்த மக்களைத் தேர்ந்துகொண்டார்; அவர்களுக்காகவே உலக முழுவதையும் ஆளுகிறார். அவர் சைரசைத் தேர்ந்தெடுக்கிறார் (45:1). தாம் "தேர்ந்துகொண்ட இஸ்ராயேலின் பொருட்டு" (45:4), சைரசை வெற்றிகொள்ளச் செய்கிறார்.

இந்தச் செயலினிடையே இறைவன் ஒரு மறைபொருள் மிக்க ஆளைத் தோன்றச் செய்கிறார். அவருக்கு "என் ஊழியன்" (42:1; 49:3; 52:13), "நான் தேர்ந்து கொண்டவர்" (42:1) என்ற பெயர்களைத் தவிர வேறு பெயர் கொடுக்கப்படவில்லை. அவர் அரசரோ, குருவோ, இறைவாக்கினரோ அல்லர். ஏனெனில் இவர்கள் எல்லாம் தங்கள் பணியை உணருமுன்பே மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் ஒரு பணிக்கு அழைப்புப் பெறுகின்றனர்; அபிடேகம் பெறுகின்றனர். அவரோ "தன் தாயின் கருப்பையில் இருக்கும்போது" (காண்க. எரே 1:5), இறைவனுடைய அழைப்பைப் பெறுகிறார். அவருக்கு மனிதர்கள் பெயர் சூட்டவில்லை. அவர் தம் தாய் வயிற்றில் உருவாகும்போதே, இறைவனே பெயர் சொல்லி அழைக்கிறார் (எசா 49:1). அவருடைய வாழ்வு முழுவதுமே இறைவனிடமிருந்து வருகிறது. ஆகவே, அஃது ஒரு தேர்ந்தெடுத்தலாகும். அதனால்தான் அஃது ஒருபணியும் திருநிலைப்படுத்தலுமாகும். தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஊழியராக இருப்பது அவசியமாகும்.

II. புதிய ஏற்பாடு:

1. **இயேசுகிறிஸ்து:** இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்: புதிய ஏற்பாட்டில் இப்பட்டம் இயேசுவுக்கு அரிதாகத்தான் கொடுக்கப்பட்டாலும், அவரது வாழ்வின் முக்கியக் கட்டங்களான திருமுழுக்கு, உருமாற்றம், சிலுவையில் அறையப்படுதல் ஆகிய நேரங்களில்தான் இப்பட்டம் அவருக்கு வழங்கப்படுகிறது. அஃது எப்போதும் ஊழியனின் உருவத்தை மனக்கண்முன் கொண்டுவருகிறது. ஆபிரகாம் மற்றும் இஸ்ராயேலைத் தேர்ந்தெடுத்தலில் தாம் தொடங்கிய பணியை நாசரேத்தூர் இயேசுவில் இறுதியாக முடிவுக்குக் கொண்டு வருவதாகச் சான்று கூறும் விதத்தில் இப்பெயரை இறைவனே உச்சரிக்கிறார். அவர் மட்டுமே இப்பெயருக்குத் தகுதியானவராகவும் அவரிடம் மட்டுமே தமது வேலையை ஒப்படைக்கக் கூடுமானதாகவும், அவர் மட்டுமே தமது விருப்பத்தை நிறைவேற்றிக் கூடியவராகவும் இறைவன் கண்டார். " இதோ நான் தேர்ந்து கொண்டவர்" என்ற எசாயாவின் சொற்கள், தம்மை ஒருபோதும் ஏமாற்றாத ஒருவரைக் கொண்டிருப்பதில் இறைவனின் வெற்றிப் பெருமிதத்தை அறிவிக்கின்றன. இந்த உறுதியின் இரகசியத்தை இயேசுவின் மேல் தந்தை கூறும் " நான்தேர்ந்து கொண்டவர் இவரே" (லூக் 9:35). என்ற சொற்கள் வெளிப்படுத்துகின்றன. மானுட உடல் எடுத்த இவர்தான் தாயின் கருப்பையில் இருக்கும் போதே புனிதப்படுத்தப்பட்டு இறைவனின் மகன் என்றழைக்கப்பட்டார் (1:35). "உலகம் உருவாகும் முன்னரே," "அனைத்தையுமே கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கவேண்டும்" என்பதற்காக (எபே 1:4.10; 1 பேதுரு 1:20) அவர் முன் குறிக்கப்பட்டுள்ளார். கிறிஸ்து மட்டுமே இறைவனின் தேர்ந்து கொள்ளப்பட்டவர். அவரைத்தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்டவர் எவருமில்லை. இறைவன் எழுப்பும் கட்டடத்தைத் தாங்கக்கூடிய (1 பேதுரு 2:4தொ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே பாறை அவரே.

இப்பெயரை இயேசு கூறவேயில்லை யானாலும், தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

பற்றிய தெளிவான உறுதி கொண்டுள்ளார். தாம் மற்றொரு உலகிலிருந்து வந்தது பற்றியும் (மாற் 1:38; யோவா 8:14), மற்றொரு உலகத்தைச் சேர்ந்தது பற்றியும் (யோவா 8:23), மனுமகன் எனத் தனித்தன்மையுடைய தமது ஊழால் வாழவேண்டியது பற்றியும், இறைவனது வேலையையே நிறைவேற்ற வேண்டியது பற்றியும் (5:19; 9:4; 17:4) அவர் உறுதி கொண்டிருந்தார். இஸ்ராயேலின் தேர்வுபற்றி மறைநூல் முழுவதும் கூறுகிறது; இவை யாவும் தம்மையே சுட்டிக்காட்டுகின்றன என்பதை இயேசு அறிந்திருந்தார் (லூக் 24:27; யோவா 5:46). ஆனால் இந்த உணர்வு பணிசெய்யவும், செய்துமுடிக்க வேண்டியதை நிறைவேற்றவுமே மன உறுதியை அவரில் தூண்டுகிறது.

2. திருச்சபை, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினம்:

அ. பன்னிருவர் தேர்ந்துகொள்ளப்படல்: இது, "தாம் விரும்பியவர்களைத் " தம்மோடு சேர்த்துக்கொண்டு தமது அலுவலைச் செய்துமுடிக்க விரும்பினார் என்று காட்டுகிறது (மாற் 3:13தொ). அவர்கள் பன்னிரு கோத்திரங்களின் அடையாளமாக அவரோடு இருக்கின்றனர். தந்தை கிறிஸ்துவைத் தேர்ந்தெடுத்ததுபோல் (யோவா 6:37; 17:2), கிறிஸ்து இவர்களைத் தேர்ந்துகொள்வதில் (லூக் 6:13; யோவா 6:70) இம்மக்களினம் தோன்றுகிறது. இஃது ஆவியின் செயலால் நிகழ்கிறது (அ.ப. 1:2). இஸ்ராயேலின் தோற்றத்தைப்போலத் திருச்சபையின் தொடக்கத்திலிருந்து அஃது இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை; நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்" (யோவா 15:16; காண்க. உப 7:6). மத்தியா (அ.ப. 1:24). பவுல் (9:15) ஆகியோரின் தேர்வுகள், இறைவன் தாம்முன் குறித்து வைத்த சாட்சிகள் வழியாக மட்டும் தம் திருச்சபையைக் கட்டியெழுப்ப விரும்புகிறார் (10:41; 26:16) என்று காட்டுகின்றன.

ஆ. இறைவனின் தேர்ந்தெடுத்தல், திருச்சபையில் உயிருள்ள உண்மையாக, இன்றும் தொடர்ந்து நிகழ்கிறது. கிறிஸ்தவச் சமூகங்களும் அதன் தலைவர்களும் தேர்ந்தெடுக்கின்றனர்; பல பணிகளுக்குப் பலரை நியமிக்கின்றனர் (6:5). ஆனால் இந்தத் தேர்வுகள் இறைவனுடைய தேர்வை உறுதிமட்டும் செய்கின்றன; அவரது ஆவியை ஏற்றுக் கொள்கின்றன (6:3). எழுவர்மீது பன்னிருவரும் தம் கரங்களை விரிக்கிறார்கள் என்றால் (6;6), அந்தியோக்கியத் திருச்சபை பவுலையும் பர்னபாவையும் ஒதுக்கி வைக்கிறது என்றால், அதற்குக் காரணம் ஆவியானவர் தம் வேலைக்கு அழைப்பதாக அவர்களைக் குறிப்பிட்டுள்ளதே காரணம் ஆகும் (13:1தொ). திருச்சபையில் அருங்கொடைகள் இருப்பது தேர்ந்தெடுத்தல் அகற்றப்படவில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது.

இந்தத் தனிநபர் அழைப்புகள் ஒன்று கூட்டப்பட்டு ஒரு சமூகமாக நிறுவப்படுவதில் திருச்சபை தேர்ந்தெடுக்கப்படுகிறது. விசுவாசக் கொடை, இறைவார்த்தையை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை மனித ஞானத்தாலோ, ஆதிக்கத்தாலோ, பிறப்பாலோ விளக்கப்படவில்லை; இறைவனின் தேர்ந்தெடுத்தலாலேயே மட்டும் விளக்கப்படுகின்றன (1 கொரி 1:26 தொ; காண்க அ.ப. 15:7 1 தெச 1:4 தொ). "தேர்ந்தெடுக்கப்பட்ட இனம்... பரிசுத்த குலமாக" அமைக்கப்பெற "இருளிலிருந்து" அழைக்கப்பட்ட அனுபவ உணர்வைக்கொண்ட (1 பேதுரு 2:9) கிறிஸ்தவர்கள் வெறுமனே "தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்" என்றழைக்கப்படுவது இயல்பே (உரோ 16:13; 2 திமொ 2:10; 1 பேதுரு 1:1). திருச்சபையும் **(Ekklesia),** தேர்ந்தெடுப்பும் **(Eklekte)** இனிமையான எதிரொலிப்புக்காகச் சேர்த்துப் பயன்படுத்தப்படவில்லை (காண்க. 2 யோவா 13; திருவெளி 17:14).

3. தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது நிராகரிக்கப்பட்டவர்:

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் புதிய ஏற்பாடு "இறைவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்"

என்று குறிப்பதன் வழியாக, இத்தேர்வின் ஆட்தன்மையையும், மேலாண்மையையும் உறுதிப்படுத்துகின்றது (மாற் 13:20,27 இணை; உரோ 8:33). அதே சமயம் இறுதிக்காலச் சூழ்நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அடைமொழியின்றியும் குறிக்கிறது. இவ்வாறு சோதனைகளுக்கு அப்பால், தேர்வை, காணக்கூடியதும் வெளிப்படுத்தப்பட்டதுமான உண்மையாகக் கொண்டவர்களையும் காண்கிறது (மத் 22:14; 24:22,24). சபிக்கப்படுதலுக்கும் இதே விதம் கூறலாம்.

தேர்ந்தெடுக்கப்படாதவர் – நிராகரிக்கப்பட்டவர் என்ற பொருளில் தேர்வுக்கு முந்திய நிராகரிப்பைப்பற்றிப் பழைய ஏற்பாடு கூறுகிறது. ஆனால் இந்த நிராகரிப்பு தற்காலிகமானதே. ஏனெனில் ஆபிரகாம் தேர்ந்தெடுக்கப்படுதல் மக்களினங்களுக்கெல்லாம் ஆசீராக அமைவதாகும். தேர்ந்தெடுத்தலின் வரலாற்றில், குற்றமுள்ளவர்கள் மற்றும் தகுதியற்றவர்கள் நிராகரிக்கப்படுவதின் தொடர், வாக்குறுதிகளைப் பழுதுபடச் செய்வதில்லை. இறைவனது தேர்வு மாற்றமுடியாததாகும். இயேசுகிறிஸ்துவில் ஆபிரகாமின் தேர்வு நிறைவுபெறுகிறது; மக்களினங்களின் நிராகரிப்பு முடிவுறுகிறது. அவரில், யூதர்களும் கிரேக்கர்களும், ஒப்புரவானபின் (எபே 2:14தொ), தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். "இறைவனுடைய உடைமையாவதற்கென" ஒரே மக்களாக உருவாகும்படி "முன் குறிக்கப்படுகின்றனர்" (எபே 1:11,14).

"உண்மையை அறியும் பேறுபெற்ற பின்னரும்", ஒருவன் "கடவுளின் மகனையே காலால் மிதிக்கவும்... உடன்படிக்கை இரத்தத்தை இழிவுபடுத்தவும்.... அதனால் உயிருள்ள கடவுளின் கையில் அகப்படும் பயங்கர நிலைக்கும்" உள்ளாகக்கூடும் (எபி 10:26-31). இத்தகைய நிராகரிப்பு தேர்ந்தெடுத்தலை மறுப்பதன்று. இஃது இறைவனுடையவர்களை அறியாதவர்களின் தீர்ப்பு. தேர்ந்தெடுத்தலிலேயே உள்ளடங்கியுள்ளது என்பதை எடுத்துக்கூறுகிறது. இயேசுவின் "எனக்கு உங்களைத் தெரியாது" (மத் 25:12) என்பது, தேர்ந்தெடுத்தலில் "உங்களைத் தான் நான் சிறப்பாக அறிந்துகொண்டேன்" (ஆமோ 3:2) என்பதைத் தள்ளுபடி செய்யவில்லை. அஃது இறைவனுடைய அக்கறையையே காட்டுகிறது. "ஆதலால் உங்கள் தீச்செயல் அனைத்திற்காகவும் நான் உங்களைத் தண்டிப்பேன் (3:2).

இந்த நிராகரிப்பு இனி இக்காலத்தைச் சார்ந்ததன்று; இஃது இறுதிக்காலத்தைச் சார்ந்ததாகும். இதனால்தான் இது யூதர்கள் மேல் விழவில்லை. அவர்கள் வரலாற்றில் ஒருபாவம் இருப்பது உண்மையே. இறைவன் தேர்ந்தெடுத்து வைத்த பாறையின்மேல் இஸ்ராயேல் மக்கள் தடுக்கி விழுந்தனர் (உரோ 9:32தொ). அவர் தேர்ந்தெடுத்தவரை அவர்கள் நிராகரித்தனர். இருப்பினும் "தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால் அவர்களுடைய முன்னோரை முன்னிட்டு, அவர்கள் இறைவனின் அன்புக்குரியவர்களே" (11:22). பழைய உடன்படிக்கையில் மக்களினங்களின் தவறைப்போல் அவர்களது தவறும் தற்காலிகமானதே, இறைத்திட்டத்தைச் சேர்ந்ததே (11:30 தொ). திரும்பவும் ஆண்டவர் வராதிருக்கும்வரை, தேர்ந்தெடுத்தலுக்குள் புறவினத்தாரின் முழுத்தொகையும் வந்தடைந்தபின் எல்லா இஸ்ராயேலரும் தேர்ந்தெடுத்தலை, மீண்டும் தேர்ந்தெடுத்தலைப் பெறும்வரை, அவர்கள் மனந்திரும்ப எப்போதும் அழைக்கப்படுகின்றனர் (11:23-27).

தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமாட்டி (ELECT LADY)

யோவானின் இரண்டாம் திருமுகத்தில் அதை எழுதும் மூப்பர் ஒரு தலத்திருச்சபையை இச்சொற்றொடரால் அழைக்கிறார். இத்திருமுகத்தில், தலத்திருச்சபை தாயாகவும், அங்கத்தினர்கள் அதன் பிள்ளைகளாகவும், அடுத்த சபை சகோதரியாகவும் உருவகப்படுத்தப்படுகின்றன (2 யோவா 1,13; காண்க. 1 பேதுரு 5:13). இச்சொற்றொடரில் திருச்சபை தேர்ந்தெடுக்கப்பட்டதாகும் என்ற கருத்தும், மெசியாச் சமூகம், குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெண்ணாகும் என்ற கருத்தும்

இணைந்துள்ளன (பாரூ 4-5; கலா 4:25; திருவெளி 12).

தேர்ப்பாகன், தேரோட்டி (CHARIOTEER)

தேர்ப்பாகன் என்பது தேரினை ஓட்டுகின்றவனைக் குறிக்கிறது. ஒரே எபிரேயச் சொல் மன்னன் ஆகாபின் தேரோட்டியைக் குறிக்கவும் (1 அர 22:34; 2 நாள் 18:33), பொதுவாக, குதிரை வீரனைக் குறிக்கவும் (2 அர 9:17) பயன்பட்டுள்ளது. ஏகூவின் துணையாளராக யிருந்த பிதகர் என்பவர் ஏகூவின் சொந்தத் தேரோட்டியாக இருந்திருக்க வேண்டும் (2 அர 9:25).

தேலேம் (TELEM - ஒளிமயம்) - ஆள்

எஸ்ராவின் சமகாலத்தவர். புறவின மனைவியை நீக்கிவிட்ட லேவிய வாயில் காவலர் (எஸ் 10:24).

தேலேம் (TELEM - ஒளிமயம்) - இடம்

யூதாவைச் சேர்ந்த நெகேபு பகுதியில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:24). தெலாயிமின் மற்றொரு பெயர்.

தேலோ (DELOS - திடீரென்று தோன்றும்)

ஆகியன் கடற்கரையில் அமைந்த சிறு கிரேக்கத்தீவு. 3 மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் உடைய இத்தீவு அப்பெல்லோ தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது. ஏதன்சு நகரைப்போன்று இச்சிறு தீவும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. கிறிஸ்துவுக்கு முன் இரு நூற்றாண்டுகளில் இது மத்திய தரைக்கடலின் மிக முக்கிய துறைமுகமாகவும், வாணிபத்தலமாகவும் விளங்கியது. ஏறத்தாழ கி.மு. 167-ஆம் ஆண்டில் இஃது உரோமையரின் கைக்கு வந்தது. உரோமையர்கள் இந்நகரில் தங்கியிருந்து வாணிபம்செய்யத் தொடங்கினர். பின்னர் உரோமையர், இந்நகரைச் சுதந்தரமுடைய ஒரு துறைமுகமாக மாற்றினர். இதனால் ரோதே, கொரிந்து முதலிய வாணிகத் தலங்கள் முக்கியத்துவம் குறைந்து போயின.

சீமோன் மக்கபேயு தம் பிரதிநிதிகள் சிலரை உரோமைக்கு கி.மு. 138-137-இல் அனுப்பினார். அப்போது உரோமை அயல்நாட்டுத் தூதர் லூக்கியு, தேலோ உட்பட பிற நகரங்களுக்குக் கடிதம் அனுப்பி யூதர்களுக்கு யாரும் தீங்கிழைக்கக் கூடாது எனக் கேட்டுக்கொண்டார் (1 மக் 15:16-23). ஒருவேளை அதிக எண்ணிக்கையுள்ள யூதர்கள் அந்நகரத்தில் இருந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. ஆனால் அடுத்த நூற்றாண்டில் மித்ரிதாதெசு மன்னர் உரோமையோடு போர்புரிந்து தேலோ நகரைக் கைப்பற்றியபோது அந்நகரம் அதன் அழகையும் சிறப்பையும் இழக்கத் தொடங்கியது. பின்னர் மீண்டும் உரோமையர் அதனைக் கைப்பற்றிய பின்பும் கூட அதன் முந்தையச் சிறப்பைப் பெறமுடியவில்லை.

தேவதாரு கொட்டைகள் - (PISTACHIO NUTS)

உணவாகப் பயன்பட்ட ஒருவகைக் கொட்டை (ஆதி 43:11). பிஸ்டாக்கிய வேர என்ற மரத்தின் கொட்டைகளாகும். இம்மரம் சிறிய ஆசியா, சீரியா, பாலஸ்தீன நாடுகளில் வளர்ந்திருக்கிறது. ஒரு வியாபாரப் பொருளாகவும் பயன்பட்டுள்ளது.

தேவதாரு மரம் (CYPRESS, TEREBINTH)

விவிலியத்தில் வரும் மரங்களையும் அவற்றின் பெயர்களையும் தெளிவுபடுத்திக் கூறுவது அவ்வளவு சுலபமன்று. விவிலியக்கால மக்கள் தாவரவியல் பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை. இக்காலத் தாவரவியல் அறிஞர்கள், விவிலியத்தில் வரும் மரங்களின் பெயர்களுக்கு அடையாளம் காட்டுவதில் கருத்தொற்றுமை கொண்டிருக்க வில்லை. இக்காலத் தாவரவியல் அறிஞர்கள், விவிலியத்தில் வரும் மரங்களின் பெயர்களுக்கு அடையாளம் காட்டுவதில் கருத்தொற்றுமை கொண்டிருக்கவில்லை. கேதுரு, கருவாலி போன்ற மரங்களைத்தவிர பிறவற்றைத் தெளிவாக அடையாளம் காட்ட முடியாது.

லைபனோனின் காடுகளில் வளரும் மரங்களில் கேதுரு மரத்தோடு குறிக்கப்படும் மரங்களில் ஒன்று–தேவதாரு மரம் என்று பல வாசகங்களில் மொழிபெயர்க்கப்படுகிறது (எசா 41:19; 60:13).

தமிழில் சில இடங்களில் நூக்கு மரம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (1 அர 5:8.10). இஃது ஊசியிலை மர வகையைச் சேர்ந்தது. இது கூம்பு வடிவத்தில் 30 மீட்டர் உயரம்வரை வளரக்கூடியது. மத்திய தரைக் கடற்கரைப் பகுதிகளில் வளர்ந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த மரம் கடினமான அமைப்புடையது. ஆகவே கட்டடங்கள் மற்றும் கப்பல்கள் கட்டுவதற்குப் பயன்பட்டது. இஃது அசீரியா மற்றும் பாபிலோனுக்கு எதிராகவும் (2 அர 19:23; எசா 37:24), தீர் மற்றும் எகிப்துக்கு எதிராகவும் (எசே 27:6; 31:8) அமைந்துள்ள ஏளனப்பாடல்களில் பயன்பட்டுள்ளது. நம்பிக்கை (எசா 41:19; 55:13; 60:13; ஓசே 14:8), அழிவு (செக் 11:2), செழிப்பு (உ.ச.6:5) ஆகியவற்றைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது.

"தெரபின்து" என்ற மரமும் தமிழில் தேவதாருமரம் என்று மொழிபெயர்க்கப்படுகிறது. இஃது ஒரு பெரிய மரமாக வளரக்கூடியது. எசாயா யூதாவின் அழிவைப்பற்றிக் கூறும்போது, அது வெட்டப்பட்ட தேவதாரு மரம்போல் அழிக்கப்படும் என்று கூறுகிறார் (எசா 6:13). ஓசேயா தேவதாரு, புன்னைமரம், கருவாலி மரங்களின் அடியில் அமைந்திருந்த சிலைவழிபாட்டிடங்களைச் சபிக்கிறார் (ஓசே 4:13). சீராக்கு நூல் ஞானத்தைப் போற்றும்போது இம்மரத்தை விவரிக்கிறது.

"தேவதாரு மரத்தைப்போன்று
என் கிளைகளைப் பரப்பினேன்;
என் கிளைகள் மாட்சியும் அருளும்
நிறைந்தவை" (சீரா 24:16).

தேள் (SCORPION)

பாலஸ்தீனத்தில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட தேள் வகைகள் உண்டு. இவற்றில் 90 சதவீதம் மஞ்சள் நிறம் கொண்டவை. தேளானது இரவிலே மெதுவாக ஊர்ந்து செல்லக்கூடியது. இது மற்றப் பூச்சிகளைத் தனக்கு இரையாக்கிக்கொள்ளும். வேறு தேள்களையும் தின்றுவிடும். வால் பகுதியில், நஞ்சை வைத்திருக்கும் கொடுக்கு இருக்கும். கொட்டினால் மனிதனுக்குக்கூட அதிக துன்பத்தைக் கொடுக்கும்.

உப 8:15-இன்படி, இஸ்ராயேலர் கடந்து சென்ற பாலைவனத்தில் கொள்ளிவாய்ப் பாம்புகளும், தேள்களும் நிறைந்திருந்தன. அகிரபிம் தேள்களின் ஏற்றம் என்ற பெயர்- அங்குத் தேள்கள் நிறைந்திருந்ததால், வந்திருக்கலாம். ஒருவகை முள்சாட்டை- தேள்சாட்டை என்றழைக்கப்பட்டது. ரெகபயாம் "என் தந்தை பளுவான நுகத்தை உங்கள் மேல் சுமத்தினார்; நானோ அதை இன்னும் பளுவாக்குவேன். என் தந்தை உங்களைச் சாட்டையால் அடித்தார்; நானோ உங்களை முள் சாட்டையால் அடிப்பேன்" என்று மக்களை அச்சுறுத்தினான். முள்சாட்டை சாதாரணச் சாட்டையைவிட அதிக வலியைத் தரக்கூடியது (1 அர 12:11.14; 2 நாள் 10:11.14).

எசேக்கியேல் மக்களின் வார்த்தைகள் முட்கள், தேள் போன்றவற்றிற்கு ஒப்பாக இருந்தாலும், அவர்களைக் கண்டு எசேக்கியேல் அஞ்ச வேண்டியதில்லை (எசே 2:6). இயேசு, "பாம்புகளையும், தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வலிமையை வெல்லவும் உங்களுக்கு வல்லமை அளித்தேன்" என்று எழுபத்திரண்டு பேரிடம் சொன்னார் (லூக் 10:19). இக்கூற்றில் தமக்கெதிரான யாவற்றையும் உள்ளடக்குகிறார் எனலாம். "மீன்கேட்டால், தேளையா கொடுப்பான்", தீயோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நன்கொடைகள் அளிக்க அறிவீர்களானால் வானகத்திலுள்ள உங்கள் தந்தை, தம்மிடம் கேட்பவர்களுக்கு, எவ்வளவோ அதிகமாய்ப் பரிசுத்த ஆவியை அளிப்பார்" என்று இயேசு சொன்னார் (லூக் 11:12).

புகையினின்று வெட்டுக்கிளிகள் கிளம்பி மண்ணின்மீது படையெடுத்துவந்தன. தரையிலூரும் தேள்களுக்குள்ள கொடுமை அவற்றிற்கு அளிக்கப்பட்டது. தேள் கொட்டும் போதுள்ள வேதனைபோல், அவர்களுக்குக் (5 மாத வேதனை) கொடுக்கப்பட்டது. "குதிரைப் படை தேள்களைப்போல், வால்களும், கொடுக்குகளும் கொண்டிருந்தன" (திருவெளி 9:3.5.10). இவை நெற்றியில் முத்திரை இடப்படாதவர்களைத் தாக்கியது முதற்கொடுமையாகும்.

தேனீ (BEE)

பழைய ஏற்பாட்டில், பாலஸ்தீன நாட்டுக் காட்டுத்தேளி நான்கு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. கிரேக்கர் காலம்வரை இது வீட்டில் வளர்க்கப்படும் வகையாக மாறவில்லை. பாலஸ்தீனத்தில் தேன் உண்டாக்கும் செடிகள் பல இருந்தாலும், தேனீ குறிக்கப்படும் நான்கு இடங்களிலும் ஒரே இடத்தில்தான், அதுவும் விநோதமான பகுதியில் (நீதி 14:8), அஃது உண்டாக்கும் தேனுக்காகக் குறிக்கப்படுகிறது. கானான் நாடு "பாலும் தேனும் பொழியும் நாடு" (யாத் 3:18) என்று குறிக்கப்படுவதால் தேனீக்கள் ஏராளமாக இருந்திருக்கவேண்டும். தேனீ குறிக்கப்படும் மற்ற மூன்று இடங்களும் (உப 1:44; சங் 118; எசா 7:18), எமோரியர்கள் இஸ்ராயேலரைத் தூத்தியடித்ததையும், சங்கீத ஆசிரியரை அவரது எதிரிகள் சூழ்வதையும், இஸ்ராயேலை இறைவனே துரத்துவதையும் அடையாளமாக உணர்த்தின. அவற்றின் எரிச்சல் உண்டாக்கும் பழிவாங்கும் தன்மையும், கடுகடுப்பாகக் கொட்டுவதும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

எறும்பை, அது சுறுசுறுப்பாக வேலை செய்வதை, போற்றியபின் (பழ 6:6-8), எழுபது நூல் தேனீயைப் பற்றிப்பேசுகிறது, தேனீ பார்ப்பதற்குச் சிறியதாயினும் அது கொடுக்கும் தேன் இனியவற்றுள் சிறந்தது என்று கூறுகிறது சீராக்குநூல். இஸ்ராயேலர் தேனீக்களை வீட்டில் வாழப் பழக்கப்படுத்தினார்கள் என்பதற்கு நேரடிச் சான்று ஒன்றுமில்லை. ஆனால் எகிப்தியர் இவ்வாறு வளர்த்துள்ளனர். நவீன காலமுறையில் தேனீக்களை வீட்டில் வளர்ப்பது 1880-க்குப் பிறபட்ட முறையாகும்.

தேன் (HONEY)

பூ அமுதத்திலிருந்து தேனீக்களால் செய்யப்படும் இனிய சுவையுள்ள ஊட்டச் சத்துள்ள திரவம். பழங்களிலிருந்து எடுக்கப்பட்ட சாறும் தேன் என்று சில சமயம் அழைக்கப்படும். தேனில் காட்டுத்தேன் என்றும் (உப 32:13; சங் 81:16; நீதி 14:8; 1 சாமு 14:25; மத் 3:4; மாற் 1:6), வீட்டுத்தேன் என்றும் (2 நாள் 31:5) இருவகையுண்டு.

தேன் மனிதவாழ்வின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது (சீரா 36:26); நாட்டின் உணவுப்பொருள்கள் அல்லது நல்ல பொருள்களின் பட்டியலில் குறிக்கப்படுகிறது (ஆதி 43:11; உப 8:8; 2 சாமு 17:29; 1 அர 14:3; காண்க. எசே 16:13). ஆயினும், உயர் இன்பவாழ்க்கையைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது (ஆதி 43:11; 1 அர 14:3). பன்னாட்டு வணிகத்திலும் பயன்பட்டது (எசே 27:17). தேன் எளிதாகப் புளிப்பேறக் கூடியதாகையால் புளிக்காரம், தேன் எதையுமே ஆண்டவருக்கு நெருப்புப்பலியாக ஒப்புக்கொடுக்கக்கூடாது (லேவி 2:11). பழம் மேற்காசியாவின் மற்ற இடங்களில் தேன், பலியில் பரவலாகப் பயன்பட்டது.

தேன் ஏராளத்தன்மையை உணர்த்த உருவகமாகப் பயன்பட்டுள்ளது (யாத் 3:8.17; யோசு 5:6; எரே 11:5; காண்க. உப 8:8; யோபு 20:17) தேனின் இனிமை உருவகமாகப் பயன்பட்டுள்ளது (நீதி 14:18; சங் 19:10; 119:108; பழ 5:8; 16:24; உ.ச. 4:11; எசே 3:3; திருவெளி 10:9-10).

தொ

தொக்கேன் (TOCHEN - கடமை, அளவு)

யூதாவுக்குத் தெற்கிலுள்ள சிமியோனின் கிராமம் (1 நாள் 4:32). யோசு 19:7-இல் வரும் இணையான பட்டியல் இந்த இடத்தில் எத்தேர் என்ற கிராமப் பெயரைக் கொண்டுள்ளது. யோசு 15-இல் உள்ள நகரங்கள் பட்டியலில், இரண்டு பெயர்களுமே சொல்லப்படவில்லை. தொக்கேன் இருந்த இடம் அறியப்படவில்லை.

தொங்கலாடை (TRAN)

நீண்ட ஆடையாகும். ஆண்டவரின் தொங்கலாடை திருக்கோயிலை நிரப்பிநின்றது (எசா 6:1). இந்தத் தொங்கலாடை என்பது ஆடையின் நீண்ட விளிம்புப் பகுதியாகும்.

தொங்கு திரைகள் (HANGINGS)

திருஉறைவிட முற்றத்தைச் சுற்றித்தொங்க விடப்பட்ட திரைகளாகும் (யாத் 27:9-18; 35:17; 38:9-18; 39:40). இவை முறுக்கேற்றி மெல்லிய நார்ப்பட்டால் நெய்யப்பட்டிருக்கும். ஐந்து முழம் (2.25 மீட்டர்) உயரமுடைய தூண்களிலிருந்து தொங்கவிடப்படும். இத்திரைகள் வடபக்கத்திலும், தென்பக்கத்திலும் 100 முழ (45 மீட்டர்) நீளமும், கிழக்கு மேற்குப் பக்கங்களில் 50 முழ (22.5 மீட்டர்) நீளமுமுடையவை. முற்றத்தின் வாயில்கள் உள்ள ஒவ்வொரு பக்கத்திலும் 15 முழ (6.75 மீட்டர்) நீளமுள்ள திரைகள் தொங்கின. வாயிலின் முன் தொங்கிய திரை 20 முழ (9மீட்டர்) நீளமுடையதாகும். அது நீலம், கருஞ்சிவப்பு நிற நூலாலும் முறுக்கேற்றி நெய்த நார்ப் பட்டாலும், பின்னல் வேலைப்பாட்டுடன் அமைந்திருக்கும். நான்கு தூண்களில் தொங்கவிடப்படும் (யாத் 27:16; 38:18). இவ்வாறு அமைக்கப்பட்ட 25 முழ (11.25 மீட்டர்) நீளமுள்ள திரை சந்திப்பின் கூடாரத்தின்முன் தொங்கவிடப்படும் (25:36-37). இத்திரைகளைக் கெர்சோம் குடும்பத்தைச் சேர்ந்த லேவியர் தூக்கிச்செல்வர் (எண் 3:25-26; 4:26).

எஸ்த 1:6-இல் குறிக்கப்படும் திரைகள் வெண்ணிற, நீலநிறங்களில் இருந்தன என்பதைத் தவிர வேறொன்றும் தெரியாது. அசேராவுக்குப் பெண்கள் நெய்த திரைகள் (2 அர 23:7) வழிபாட்டு உடைகளாக இருக்கவேண்டும்.

தொடக்க நூல் அல்லது ஆதியாகமம் (GENESIS, BOOK OF)

விவிலியம் முழுவதிலுமே மிகப்பெயர் பெற்ற பகுதிகளில் ஆதியாகமமும் ஒன்றாகும். அனேகர் இந்நூலை அறிவர். யாரிடமும் எவ்வகைத் தயக்கமும் இன்றி இந்நூலைச் சுட்டிக் காட்டலாம். ஆதியாகமம் என்ற பெயரைக் கேட்டதும் பலருடைய உள்ளங்களிலிருந்து பலவாறான எண்ணங்கள் வெளிப்படும். விசுவாசிகளுக்கு ஆதியாகமம் உலகம், மனிதன், தேர்ந்தெடுக்கப்பட்ட இறைமக்கள் ஆகியோரின் தோற்றம் பற்றிய மறை பொருளைக் கொண்ட நூலாகும். இந்நோக்கோடு இந்நூலுக்கு முன்னுரை எழுதுகிறோம்.

1. பெயர்: யூதர்கள் தங்கள் நூல்களைத் தொடக்க வார்த்தைகளால் அழைத்தனர். அந்த மரபுப்படி யூதர்கள் இந்நூலை, எபிரேய மொழியில், "பெரேஷீத்" (bereshith) என்றழைத்தனர். இச்சொல் "தொடக்கத்தில்" என்று பொருள்படும். எழுபதுநூல் இதனைக் கிரேக்க மொழியில் "கெனேசிஸ்" என்றழைத்தது. இச்சொல்லுக்குத் "தொடக்கம்", "மூலம்," "தோற்றம்" என்றெல்லாம் பொருள் உண்டு. ஏனெனில் இந்நூல் உலகப் படைப்புத் தோற்றம் பற்றிய விவரிப்புடன் தொடங்குகிறது. நாம் இந்நூலைத் தமிழில் ஆதியாகமம் என்றழைத்து வந்தோம். புதிய பொதுமொழிபெயர்ப்பில் தொடக்கநூல் என்றழைக்கப்படுகின்றது.

2. பாரம்பரியங்கள்: ஐந்நூல் அல்லது தோரா என்ற தலைப்பில் குறிப்பிட்ட யாவே, எலோகீம், குருக்கள், உபாகமப் பாரம்பரியங்களை வேறுபடுத்தும் அடையாளங்கள் ஆதியாகமத்தில் சிறப்பான முறையில் தெளிவாக உள்ளன. அதனால் இந்நூல் பற்றிய பகுப்பாராய்ச்சியாளர்,

ஐந்நூலின் (பெந்தாதுகு) எழுத்து வடிவத் தோற்றம் பற்றிய ஏடுகள் பற்றிய கருதுகோளுக்கு இந்நூல் அடிப்படை அமைத்தது என்பர். ஐந்நூல் தோற்றம் பற்றிக் கூறியவற்றை, பொருத்தமான மாற்றங்களோடு, ஆதியாகமம் தோன்றிய வரலாற்றுக்கும் கூறலாம். யாவே, எலோகீம், குருக்கள் ஆகிய மூன்று பாரம்பரியங்களும் இந்நூலில் இருப்பதாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. முன் வரலாறானது யாவே, குருக்கள் ஆகிய இரு பாரம்பரியங்களின் தொகுப்பாகும். இந்த இரண்டிலும், யாவே பாரம்பரியம் இப்பகுதிக்கும் நூல் முழுவதற்கும் நிகழ்ச்சியுரைப் பணித்திட்டத்தை அளிக்கிறது. மாறாக, குருக்கள் பாரம்பரியம் நிகழ்ச்சியுரைகளுக்குக் காலவரையறை என்னும் முதுகெலும்பை அளிக்கிறது. மக்களின் மரபுப்பட்டியலையும் அளிக்கிறது.

இரண்டாம் பகுதியான 'குலமுதுவர்' வரலாற்றில் எலோகீம் பாரம்பரியமும் சேர்கிறது. ஆதியாகமத்தில் யாவே பாரம்பரியத்தில் எலோகீம் பாரம்பரியம் அடங்கியுள்ளது எனலாம். எலோகீம் பாரம்பரியத்தில் குலமுதுவர் பற்றிய நிகழ்ச்சியுரை இருந்ததா என்பது பற்றி உறுதியாக அறுதியிட்டுக் கூறமுடியாது. அப்படியிருந்தாலும், அது மூதாதையர் வரலாற்றைச் சுருக்கமான வடிவில் தான் இந்நூலில் கொண்டுள்ளது எனலாம். ஏனெனில் பிற்காலத்தில் யாவே பாரம்பரியத்தோடு ஒன்று சேர்க்கப்பட்டபோது யாவே பாரம்பரியம் மேலோங்கியது. எலோகீம் பாரம்பரியத்தின் மதிப்பும், சிறப்பும் தொடர்ச்சியான நிகழ்ச்சியுரை அளிப்பதில் அடங்கியிருப்பதில்லை; ஆனால் இறையியல் நோக்கை அளிப்பதில் அடங்கியுள்ளது.

இம்மூன்று பாரம்பரியங்களில் பாதுகாக்கப்படும் அடிப்படைப்பொருள்களின் முன் வரலாறானது மிகவும் சிக்கலானது. பொதுவாக, படைப்புப் பற்றிய பழங்கதைகள், மரபு முறைப்பட்டியல்கள், பாடல்கள், பழமொழிகள், விளக்கம் அளிக்கும் காரணகாரியங்கள், கதைகள், இவை போன்ற பலவகை அடிப்படைப் பொருள்களை இஸ்ராயேலின் வரலாற்று ஆசிரியர்கள் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இவை ஆசிரியரின் குறிக்கோள்களுக்கும் நோக்கத்திற்கும் பயன்பட்டன. இந்நோக்கங்களின் ஒளியிலேயே இவைகளுக்கு இறுதியாகப் பொருள் கூற வேண்டும்.

3. எப்போது, எப்படித் தோன்றியது: ஐந்நூலின் எல்லாப்பகுதியும் வெவ்வேறு பாரம்பரியங்களின் வளர்ச்சியோடு இணைந்தது. ஆதியாகமத்தில் யாவே, எலோகீம், குருக்கள் பாரம்பரியங்கள் காணப்படுகின்றன என்று கூறினோம். அவற்றின் தொகுப்பாகும் இந்நூல். யாவே பாரம்பரியம் கி.மு. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இப்பாரம்பரியம் ஆதியாகமத்திற்கு அடிப்படை அமைப்பை அளிக்கிறது. இது நிகழ்ச்சியுரைத் தொடர்பை அளிக்க, எலோகீம் பாரம்பரியம் இறையியல் கருத்தை அளிக்கிறது; குருக்கள் பாரம்பரியம் காலவரையறையையும் மரபு முறைப்பட்டியலையும் அளிக்கிறது. குருக்கள் பாரம்பரியம் நாம் இப்போது கொண்டிருக்கும் வடிவில், ஏறத்தாழ கி.மு. 5-ஆம் நூற்றாண்டில், உருவெடுத்தது எனலாம். கி.மு. 10-முதல் 5-வரையுள்ள நூற்றாண்டுகளில் இப்பாரம்பரியங்கள் வாய்மொழிப் பாரம்பரியங்களாகவும், எழுத்து வடிவமாகவும், பொதுமக்கள் தொகுப்பாக உருவெடுத்தன. இவற்றில் சில மிகப் பழமையானவை. திருத்தி அமைக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் சிந்திக்கப்பட்டு, இத்தொகுப்பு அதன் இறுதிவடிவ அமைப்பைப் பெற்றது. இப்பாரம்பரியங்களை அமைத்தவர்கள் இவற்றை உண்டாக்கவில்லை. அவர்கள் சமயச் சிந்தனையாளர்கள். இஸ்ராயேலின் வாழ்வின் சிறப்பான நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளிப்பவர்கள். இப்பாரம்பரியங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கி.மு. 8 அல்லது 7-ஆம் நூற்றாண்டில் ஆதியாகமம் முதல் முதலாக எழுத்து வடிவம் எடுக்கத் தொடங்கியது எனலாம். அப்போதும், அதைப்பதிப்பித்தவர், இஸ்ராயேல் துய்த்த வரலாற்றின் இறையியல் உட்கருத்துக்களின் உயர்ந்த வளர்ச்சியடைந்த தொகுப்பையே அளிக்கிறார். இம்மூன்று

பாரம்பரியங்களும் இணைத்துப் பின்னப்பட்டு நாம் கொண்டிருக்கும் இறுதி வடிவில், ஆதியாகமம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கவேண்டும். இஃது ஊர்ப் பெயர் தெரியாத, இறையூக்கம் பெற்ற ஓர் ஆசிரியரோ, பலரோ செய்த வேலைப்பாடாகும்.

ஆதியாகமத்தின் பிற்பகுதி குலமுதுவர்களைப் பற்றியதாகும். இவ்வரலாற்று நிகழ்ச்சியுரை அவர்களின் குடும்ப வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. இப்பகுதியின் இலக்கிய அமைப்பை ஆராயும்போது, இது விவிலிய இலக்கியத்திற்குப் புறம்பேயிருந்து மிகுதியாகக் கடன் வாங்கியிருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் ஒரே கருத்துடைய தனிப்பட்ட நிகழ்ச்சிகளை விளக்க, மற்ற மூலங்களிலிருந்து கடன் வாங்கியிருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது. குலமுதுவர் வாழ்க்கையின் ஒவ்வொரு கதைக்கும் தடம் தேடுவதும், முடிந்தால் அவற்றிற்கு நீண்ட வாய்மொழிப் பாரம்பரியத்தில் அளிக்கப்பட்ட தொடர்ந்த விளக்கங்களை வரையறுப்பதும், இறுதியாக அந்தப் பாரம்பரியங்களிலும், ஆதியாகமம் முழுவதிலும், அவற்றின் இறையியல் கருத்தையும், நோக்கத்தையும் மதிப்பீடு செய்வதும், அறிஞர்களிடையே இப்போது நடைபெறும் சிறப்பான வேலையாகும்.

குலமுதுவர் வரலாற்றின் அடிப்படை நிகழ்ச்சிகளை வெளிக்கொணர்தல் இப்போது அவ்வளவு கடினமன்று. ஏனெனில் முற்காலத்தைவிட இப்போது, இந்நிகழ்ச்சிகள் நடந்த காலத்தைப்பற்றி நாம் மிகவும் தெரிந்து கொள்ளலாம். தொல்பொருள் ஆராய்ச்சி, கி.மு. இரண்டாயிரமாண்டுக் காலத்தில் மேற்காசியாவில் நிலவிய அரசியல், சமூக நீதி, சமயநிலைகள் பற்றிய தெளிவான அறிவை அளிக்க வல்லது. அதே நிலைகள் ஆதி 12-50-ஆம் அதிகாரங்களில் எதிரொலிக்கின்றன. கி.மு. 10 முதல் 5 வரையுள்ள நூற்றாண்டுகளில் வாழ்ந்த எந்தப் பழைய ஆசிரியரும், உண்மையான வரலாற்று அடிப்படையின்றி, குலமுதுவர்கள் காலம் பற்றித் தெளிவான படம் தீட்டமுடியாது. தொல்பொருள் ஆராய்ச்சியும் புதைபொருள் ஆராய்ச்சியும், இஸ்ராயேல் வட மெசபொத்தாமியாவிலிருந்து குடி பெயர்ந்ததிலிருந்து, கானானில் நாடோடி வீர வாழ்வு வாழ்ந்து, எகிப்தில் குடியேறியது வரையுள்ள விவிலிய விவரிப்புக்களின் உண்மைக்குச் சான்று பகருகின்றன. வரலாறும் இதற்குச் சான்று பகருகிறது.

இப்பகுதியில் வரும் அடிப்படைக் குடும்ப வரலாறு முதலில் வாய்மொழிப் பாரம்பரியமாக உருவெடுத்தது. அதன் மூல நோக்கம் குலப் பெருமையைக் காப்பதும், மகிழ்ச்சிப் பொழுதுபோக்கும் ஆகும். இது மக்கள் விரும்பும் பொதுக்கதை வடிவம் எடுத்தது. இப்படியாக, பெயர்களுக்குப் பொருள் அளிக்கும் முகத்தான் பொது விளக்கங்கள் அளிக்கப்பட்டன. குடும்ப நிகழ்ச்சிகள் நாட்டுப் பாடலாக வடிவம் எடுத்தன. சில சமயங்களில், அறிவுகடந்த நிகழ்ச்சிகளுக்கு ஆழ்ந்த உட்கருத்தளிக்க, அவ்விடங்களில் உள்ள மறைச் சடங்குக் கதைகளைப் பயன்படுத்தினர். படிப்படியாக இக்கதைகள் சில ஆட்களைச் சுற்றி உருவெடுத்தன; அல்லது சில புனித இடங்களில் வழிபாட்டோடு இணைந்ததாக உருவெடுத்தன. இஃது அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது. பெரும்பாலும் இடங்களை ஒட்டிக் கதைச் சுழல்கள் எழுந்தன; புனித இடங்களை ஒட்டி இவை வளர்ச்சியடைந்தன. இவற்றில் மறைக்கூறுகள் வலியுறுத்தப்பட்டன. இவை மக்களின் விசுவாச அறிக்கையை எதிரொலித்தன. இவை அந்தந்த இடங்களுக்கும், குலங்களுக்கும், மகிமையும், பெருமையும் ஒளியும் அளித்தன. இந்த வளர்ச்சிக்குப் பின்தான், இவற்றை ஆதியாகம ஆசிரியர்கள் தங்களது நோக்கத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்தனர். சில சமயம், ஒவ்வொரு கதையின் மறைபோதகத்தை அழுத்திக் கூறுதற்கும் அல்லது முழு வரலாற்றில் முனைப்பான கருத்துக்களை அழுத்திக் கூறுவதற்கும் இந்த மாற்றியமைத்தல் தேவையாயிருந்தது. பல பாரம்பரியங்களும் படிப்படியாக ஒன்று சேர்க்கப்பட்டன. இறுதியில் பட்டியல் நூலாக ஏற்றுப் பதிப்பிக்கப்பட்டது. ஆயினும் இறையூக்கம் பெற்ற ஆசிரியர்களின் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, இன்னும்

பதிப்பு வேலை தொடர்ந்து நடந்தது. இந்த வரலாற்று நீண்டதாயும் பலவகைப்பட்டதாயுமிருந்தாலும், இதில் குலமுதுவர் நிகழ்ச்சியுரையின் வரலாற்றுத்தன்மை பாதுகாக்கப்பட்டது. ஆதியாகமத்தை வாசிக்கும் போதும், விளக்கம் அளிக்கும்போதும் நூலின் இந்த நீண்ட தோற்ற வரலாற்றைக் கருத்தில் கொள்ளுதல் நன்று.

குலமுதுவர் வரலாற்றுக்கு முன்னுரையாகவுள்ள முதல் பதினோரதிகாரங்கள், இஸ்ராயேலின் தனிவரலாற்றை உலக வரலாற்றோடு பொருந்திக் கூறுகின்றன எனலாம். அவை குலமுதுவர் வரலாற்றுக்கும் பின் தோன்றியவை; இஸ்ராயேலின் யாத்திரை ஆகம அனுபவத்தின் ஒளியில் எழுதப்பட்டவை. இறைவனது மீட்பை நிலையாகத் துய்த்ததின் விளைவாக இஸ்ராயேல் பல நூற்றாண்டுகளாகத் தனது இறையியல் சிந்தனையை வளர்த்து வந்துள்ளது; இறைவன் – மனிதன் உறவையும், வரலாற்றில் இறைவனது செயலாற்றலையும் ஆழ்ந்த நோக்கோடு புரிந்து கொண்டுள்ளது. முதல் பதினோரதிகாரங்கள் இச்சிந்தனையின் விளைவாகும்; இச்சிந்தனையின் சுருக்கம் என்றுகூடச் சொல்லலாம்.

ஆபிரகாமின் வரலாற்றுக்கும் முன் நடந்ததாக விவரிக்கப்படும் நிகழ்ச்சியுரைகளின் இலக்கிய வடிவம் இஸ்ராயேலின் பாரம்பரியத்துக்கு மட்டுமே உரியதொன்றன்று. அது மற்றப் புறப்பண்பாட்டுப் பாரம்பரியங்களிலிருந்து கிடைத்ததொன்றாகும். விவிலியப் பாரம்பரியங்கள் மெசபொத்தாமியாவின் கதைகளை நன்கு அறிந்திருந்தன. குலமுதுவர்கள் இப்பாரம்பரியச் சூழ்நிலையிலிருந்துதான் தோன்றி வந்திருந்தனர். இவர்கள் தங்களுடைய பழைய பாரம்பரியங்களையும், பண்பாட்டையும் மறந்துவிடவில்லை. இப்படி அயல் பாரம்பரியங்களில் தோன்றிய கதைகள் சில சிறப்புமிக்கவையாகும். இவற்றில் சில மனிதன், உலகம் ஆகியவை தோன்றிய மறை உண்மைகள், இயற்கை அமைதி, மக்களிடையே வேறுபாடு, மொழிகள் வேறுபாடு, பிள்ளை பெற்றெடுத்தலில் துன்பம், பாலினக் கவர்ச்சி வேலையின் இன்றியமையாமை சாவைத் தவிர்க்க முடியாமை முதலிய விடை காண முடியாச் சிக்கல்களை விளக்க முயன்றன. விவிலிய நிகழ்ச்சியுரைக்கும், மேற்காசியாவின் மிகப்பழைய இலக்கிய நிகழ்ச்சியுரைகளுக்கும் கருத்தளவில் உள்ள உறவைக் கவனிக்கும் போது, பொருட்களை ஒழுங்குபடுத்துவதிலும், சொற்றொடர்ப்போக்கு விவரங்களிலும் பழைய புற இன இலக்கியங்களுக்கு விவிலிய ஆசிரியர்கள் கடன்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால் இக்கதைகளுக்கு, யாவே, குருக்கள் பாரம்பரியங்கள் அளிக்கும் விளக்கம் தனிச்சிறப்புடையது; இக்கதைகள் தோன்ற உதவிய இலக்கியங்கள் அளிக்கும் விளக்கத்திலிருந்து இது வேறுபட்டது; மிகுந்த சிறப்புடையதுமாகும். தனித்தனி வேறான காட்சிகளை மறைவரலாற்றில் ஒரு தொடர்நாடகமாக ஒன்றிக்கச் செய்து, அதன் வழியாக ஆன்மீகக் காரியங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இவற்றில் ஆதிக்கம் செலுத்தும் மறைக்கருத்தால், படைப்பு பற்றிய தொடக்கக் கதைகள் ஆழ்ந்த இறையியலாக மாறுகின்றன; இஸ்ராயேலின் மீட்பு வரலாற்றோடு தொடர்பு படுத்தப்படுகின்றன. புற இனத்தைச் சார்ந்த, பிற பண்பாடுகளைச் சார்ந்த, கதைகளையும் நிகழ்ச்சிகளையும் விவிலிய ஆசிரியர்கள் பயன்படுத்தினாலும், யாவும் தங்கள் இறைவனின் சேவைக்கு ஏற்றதாகவும், தங்கள் மறைக் கொள்கைகளை விளக்கிக் கூறும் இறையியல் இலக்கியமாகவும் அவற்றை மாற்றுகின்றனர்.

தொடக்கக் காலம் பற்றிக் கொடுக்கப்படும் விவரிப்புகள் நாம் அறியும் எந்த வரலாற்றுக்கும் முந்தியவையாகும். இவற்றை எழுதும்போது கடந்தகாலம் பற்றிய அறிவியல், உயிர்நூல், மனித இயல், பிற புவிஇயல் முதலியவற்றைச் சார்ந்த நூல் ஒன்றை எழுதுவது என்பது விவிலிய ஆசிரியர்களின் நோக்கமன்று. உலகம் பற்றியோ, மனித தோற்றம் பற்றியோ அத்தகைய நூலை எழுதுவதற்கு அவர்கள் ஆற்றல் உள்ளவர்கள் அல்லர். இத்தொடக்க வரலாறு

வரலாற்றுக்காக எழுதப்பட்டதன்று. அதன் நோக்கம் முற்றிலும் வேறானது. அது வரலாறு பற்றிய இறையியல் விளக்கமாகும். துய்த்த வரலாற்றை விசுவாசம் தோய்ந்த நோக்கோடு புரிந்து கொள்ளுதலாகும். இப்பகுதி அடிப்படை மறை உண்மைகளைப் போதிக்க, வரலாற்றுச் செய்திகள், கதைகள், பொதுப் பாரம்பரியங்கள், வீரகாவியங்கள் முதலியவற்றைப் பயன்படுத்துகிறது. இப்பகுதியில் விவிலிய ஆசிரியர்கள் பயன்படுத்தும் இலக்கிய வடிவம், இக்கால இலக்கிய வடிவங்களோடு ஒப்பிடத் தக்கதன்று. இக்கால இலக்கிய அளவுகோல் கொண்டு ஆதியாகமத் தொடக்க வரலாற்று இலக்கியத்தை மதிப்பிடக் கூடாது. அதன் சிறப்பே தனிப்பட்டதாகும்.

விவிலிய ஆசிரியர்கள், இவ்விலக்கிய வடிவங்களைக் கொண்டு எப்படித் தாங்கள் விரும்பிய குறிக்கோளை எய்துகின்றனர் என்பதை அடிப்படையாகக் கொண்டு இத்தொடக்க வரலாற்றுப் பகுதியை மதிப்பிட வேண்டும். இவை பழங்கால வரலாற்று இலக்கிய வடிவங்களாகும். நாகரிகமற்ற மக்களுக்கும் பொருத்தமான, எளிய பொது நடைப்பண்பைக் கொண்டுள்ளன. இம்மக்களுக்குப் புலனறிவுத் தன்மையில் மனதைக் கவரும்படி சித்தரித்து, மிகச்சிறப்பு வாய்ந்த மறை உண்மைகளை மக்களின் மனத்தில் தெளிவாகப் பதிப்பிக்க இவை பயன்படுகின்றன. அறமிக்க ஒரே இறைத்தன்மை ஆதி விவிலிய விவரிப்புக்களுக்கு இன்றியமையாததாகும், உயிர்நிலையானது மாகும்; வேறுபடுத்தும் அடையாளமுமாகும். இஸ்ராயேலின் இறைவன் ஒரே இறைவன் என்கிற கோட்பாட்டின்அடிப்படைக் கொள்கைகள், இறையியல் செய்தியுள்ள உயிர் ஓவியக் கதைகளை ஒரு நாடகமாக இணைத்துக் கூறுதலின் வழியாகப் போதிக்கப்படுகின்றன. மீட்புத்திட்டத்தில் அடங்கியுள்ள பின்வரும் உண்மைகள், இப்பகுதியில் எடுத்துக்கூறப் படுகின்றன: தொடக்கத்தில் இறைவன் எல்லாவற்றையும் படைத்தல், ஆண், பெண் படைக்கப்படுதலில் இறைவனது சிறப்பான இடையீடு, இவர்களிடமிருந்து மனுகுலம் முழுவதும் தோன்றுதல், ஒழுக்க நிறைவும் மகிழ்ச்சியும் மிக்க தொடக்கநிலை, முதல் பெற்றோரின் பாவம், வீழ்ச்சி, பாவத்திற்குரிய தண்டனை, அதன்பின் வழிவழியாக வரும் சோதனைகளும், விளைவுகளும் ஆகியவை. உலகம் தற்செயலாகத் தோன்றியதன்று. இறைவன் திட்டம் செய்து அமைத்த வேலைப்பாடாகும். மேற்கூறியவை, காரணம் காட்டித் தர்க்க முறையில் விவரிக்கப்படுகின்றன. ஆனால் கவிதையும் கற்பனையும் மிக்க மொழியில் தரப்படுகின்றன. கவிதை உருவக முறையும், ஆழ்ந்த மனித உள்நோக்கும், இறை உண்மையும் ஒன்றை ஒன்றுதழுவியும் வியத்தகு முறையில் இணைந்தும் நிற்கும் நிலையையுடைய இப்பகுதி தனி ஒளிச்சிறப்பு வாய்ந்த இலக்கிய மணியாகத் திகழ்கிறது.

இறைவனையும் அவர்தம் ஆற்றல் மிக்க செயல்களையும், பாதுகாப்பையும், துய்த்ததாலும், விசுவாசமிக்க ஆழ்ந்த சிந்தனையாலும், வாழ்வின் பெரும் பிரச்சனைகளைப் பற்றிய அனுபவமும் சிந்தனையும் சார்ந்த வாழ்க்கைப் போராட்டத்தின் வழியாகவும், தொடக்க வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய அறிவை இஸ்ராயேல் பெற்றது. நன்மை, தீமைப்பற்றிய சமய உறுதி சிந்திக்கப்பட்டு, யாவற்றிற்கும் பொருந்தக் கூறப்பட்டு, வரலாற்றுப்பணியில் இறைவனது படைப்பின் தொடக்கத்திற்கே நீட்டப்பட்டது. இப்பகுதியில் நெருக்கமில்லாத வரலாற்றுப்பணி தெளிவாக உள்ளது. நிகழ்ச்சிகள் நடந்தகாலத்திற்கும் அவை எழுதப்பட்ட காலத்திற்கும் இடையே நீண்ட இடைக்காலம் இருந்ததால், இவ்வரலாற்றுப் பகுதியில் ஒரு தெளிவற்ற தன்மை இருப்பது தவிர்க்க முடியாத தொன்றாகும். இந்நிலையில் இஸ்ராயேல் அறமிக்க ஒரே இறைத்தன்மைத் திட்டத்தின் இறை, மனித உண்மைகளிலுள்ள தனது விசுவாசத்தை எடுத்துக்கூறவும் போதிக்கவும் பயன்படுத்திய கருவி, வண்ணமிக்க, மறைப்பொழிவுத் தன்மையுடைய நிகழ்ச் சியுரையிலக்கிய வடிவம்தான். இதற்கு இப்பகுதி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

4. திட்டமும் பொருளடக்கமும்: ஐந்நூலின் அமைப்பில் ஆதியாகமம், இஸ்ராயேலின் வரலாற்றுக்கு முன்னுரையாக அமைகிறது. இதை இருபாகமாகப் பிரிக்கலாம். முதல் பதினோரதிகாரங்களைக் கொண்ட முதற்பகுதி தானாகவே ஒரு சிறுநூலாகும். இது நாம் அறியும் எவ்வரலாற்றுக்கும் முந்தியது. இதை இனி முன்வரலாறு அல்லது தொடக்கவரலாறு என்றழைப்போம். இது ஐந்நூல் முழுமைக்கும் முன்னுரையாக அமைகிறது; அதைவிட மீட்பு வரலாற்றுக்கே இது முன்னுரையாக அமைகிறது என்பது சிறப்புடையதாகும். இப்பகுதி இறைவனுடைய தலையீட்டின் தேவையை விளக்குகிறது; மீட்பு வரலாற்றை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. உலகப்படைப்பு, மனிதனின் கெடுமதி, அதன் விளைவு முதலியவற்றைப் பற்றிக் கூறுகிறது. ஆபிரகாமின் காலத்தில் நடந்த இறையிடையீட்டுக்கு முன் காலத்தில் நடந்தவற்றைக் கூறுகிறது. இந்த இறையிடையீட்டையும் விளக்குகிறது. ஆபிரகாமின் வரலாற்றுக்கு நம்மை இட்டுச் செல்லுகிறது. இப்படியாக ஐந்நூல் முழுமைக்கும், மீட்பு வரலாறு முழுமைக்குமே பொதுவான முன்னுரையாக விளங்குகிறது இம்முன்வரலாறு.

ஆதி 12-50 அதிகாரங்களைக் கொண்ட பகுதி குலமுதுவர் வரலாறு ஆகும். இஃது ஆபிரகாமில் தொடங்கி, இஸ்ராயேலின் வரலாற்றுக்கு உடனடியான முன்னேற்பாடாகவும், முன்னுரையாகவும் அமைகிறது; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு முதலிய இஸ்ராயேலின் பெரும் குலமுதுவர்களின் வரலாற்றை வரைகிறது. இப்படிப்பட்ட பிரிவை ஆதியாகமத்தின் இறுதி ஆசிரியர்கள் அல்லது பதிப்பாசிரியர்கள் கருத்தில் கொண்டிருந்தனர் என்பதற்கும் அடையாளங்கள் உள்ளன.

இரு பகுதிகளும் பொருட்கள் தோன்றியது பற்றிய விளக்கம் அளிக்கும் பகுப்பாராய்ச்சிகளாகும். அவை பயன்படுத்தும் பொருள்களில் வேறுபடுகின்றன. மேற்கூறிய பிரிவுகளின்படி இந்நூலுக்குப் பின்வரும் பொருளடக்கத் திட்டத்தைக் கொடுக்கலாம். ஒவ்வொரு பிரிவும் எந்தப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாயிருக்கலாம் என்று அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது. யாவே, எலோகீம், குருக்கள் பாரம்பரியங்கள் முறையே J, E, P ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்படும். இஃது ஊகத்தின் அடிப்படையிலானதே.

I. முன் வரலாறு: உலகம், மனுகுலம் தோன்றிய விதம் (1:1-11:32).

1) 1:1-2:3 : உலகப்படைப்பு:முதல் வரலாறு; முதல் ஓய்வு நாள் (P).

2) 2:4-25 : உலகப்படைப்பு: இரண்டாம் வரலாறு; மனிதன், இன்ப வனம், ஏவாள் படைக்கப்படுதல் (J).

3) 3:1-24 : முதல் பெற்றோரின் வீழ்ச்சி, கடவுளின் வாக்குறுதி (J).

4) 4:1-16 : காயின், ஆபேல் வரலாறு (J).

5) 4:17-24 : காயினின் மரபு முறைப்பட்டியல் (J).

6) 4:25-5:31 : ஆதாம் முதல் நோவா வரை மரபு முறைப்பட்டியல் (P).

7) 6:1-4 : அரக்கர்.

8) 6:5-10:32 பெருவெள்ள வரலாறு (J,P).

- 6:5-8 : மனிதருடைய ஒழுக்கக்கேடு (J).
- 6:9-22 : நோவாவின் கதை: வெள்ளத்திற்கு முன்னேற்பாடு (P).
- 7:1-16 : நோவா குடும்பம் பெட்டகத்துக்குள் புகுதல் (J,P).
- 7:17-24 : வெள்ளப் பெருக்கு (J,P).
- 8:1-14 : வெள்ளம் வடிதல் (J,P).
- 8:15-22 : நோவா பெட்டகத்திலிருந்து வெளிவருதல், நோவாவின் பலி (J,P).

9:1-17 : நோவாவுடன் கடவுள் உடன்படிக்கை, புதிய உலக அமைப்பு (P).

9:18-28 : நோவாவின் புதல்வர்கள் (J).

10:1-32 : நோவாவின் வழித் தோன்றல்கள் (P,J).

9) 11:1-9 : பாபேல் கோபுரம் (J)

10) 11:10-32 : தலைமுறைப் பட்டியல் - முடிவுரை (P,J).

II. குலமுதுவர் ஆபிரகாமின் வரலாறு: (12:1-25:18).

1) 12:1-9 : ஆபிராம் அழைக்கப்படுதல், ஆபிராம் கானான் நாடு செல்லல் (P,J).

2) 12:10-20 : எகிப்தில் ஆபிராம் (J).

3) 13:1-18 : ஆபிராமும் லோத்தும் பிரிதல்; கடவுளின் காட்சி (J,P).

4) 14:1-16 : ஆபிராமும், நான்கு அரசர்களும், லோத்தின் சிறைமீட்பும் (தனி மூலம்).

5) 14:17-24 : மெல்கிசெதேக்கு ஆபிராமை ஆசீர்வதித்தல் (தனிமூலம்).

6) 15:1-21 : இறைவனின் அருள்வாக்கு; உடன்படிக்கை (J,E).

7) 16:1-16 : ஆகாரின் ஓட்டம்; இசுமயேல் பிறப்பு (J,P).

8) 17:1-27 : உடன்படிக்கை; விருத்த சேதனம் (P).

9) 18:1-15 : மாம்ரேயில் காட்சி (J).

10) 18:16-19:38: சோதோம் கொமோரா அழிவு (J).

18:16-33 : அழிவு முன்னறிவிக்கப்படுதல்; ஆபிராமின் மன்றாட்டு (J).

19:1-29 : சோதோம், கொமோரா அழிவு; லோத்து காப்பாற்றப்படுதல் (J).

19:30-39 : மோவாபியர், அம்மோனியர் தோற்றம் (J).

11) 20:1-18 : கெராராவில் ஆபிராமும் சாராளும் (E).

12) 21:1-7 : ஈசாக்கின் பிறப்பு (J,P).

13) 21:8-21 : ஆகாரும் இசுமயேலும் துரத்தப்படுதல் (P,E).

14) 21:22-34 : ஆபிராம் அபிமெலக்கு உடன்படிக்கை (J, P, E).

15) 22:1-19 : ஈசாக்கைப் பலியிட ஆபிராமுக்குக் கட்டளை (E,J).

16) 22:20-24 : நாகோரின் மரபினர் (J).

17) 23:1-20 : சாராளின் மரணம்; இரட்டைக் குகைக் கல்லறையை வாங்குதல் (P).

18) 24:1-67 : ஈசாக்கின் திருமணம் (J).

19) 25:1-18 : ஆபிராமின் மரபினர்: அவரது இறப்பு (P,J).

III. குலமுதுவர் ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் வரலாறு: (25:19-36:43)

1) 25:19-28 : ஏசா, யாக்கோபு பிறப்பு (J,P).

2) 25:29-34 : ஏசா தம்முடைய உரிமையை விற்றல் (J).

3) 26:1-22 : கெராராவில் ஈசாக்கு (J).

4) 26:23-33 : பெயேர்செபாவில் ஈசாக்கு அபிமெலக் கோடு உடன்படிக்கை (J).

5) 26:34-35 : ஏசாவின் திருமணம் (P).

6) 27:1-45 : ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தல் (J).

7) 27:46-28:9 :

மெபொத்தாமியாவிலுள்ள காரானுக்கு யாக்கோபு செல்லல் (P).

8) 28:10-22 : பெத்தேலில் கனவுக் காட்சி (J,E).

9) 29:1-30 : யாக்கோபின் திருமணங்கள் (J,E).

10) 29:31-30:24 : யாக்கோபின் புதல்வர் (J,E).

11) 30:25-43 : யாக்கோபு லாபானை ஏய்த்தல் (J,E).

12) 31:1-21 : யாகோபு லாபானை விட்டு ஓடுதல் (E).

13) 31:22-42 : யாக்கோபை லாபான் துரத்துதல் (J,E).

14) 31:43-32:2 : லாபானுடன் உடன்படிக்கை (J,E).

15) 32:3-21 : ஏசாவைச் சந்திக்க முன்னேற்பாடு (J,E).

16) 32:22-33 : யாக்கோபு இறைவனோடு போராடுதல், இஸ்ராயேல் என்ற பெயர் பெறுதல் (J).

17) 33:1-20 : யாக்கோபு, ஏசா சந்திப்பு (J,E).

18) 34:1-5 : தீனா கற்பழிக்கப்படுதல் (J,E).

19) 34:6-31 : செக்கேமியருடன் திருமண உடன்படிக்கை (J,P).

20)35:1-29 : பெத்தேலில் யாக்கோபு – ராக்கேல், ஈசாக்கு மரணம் (E, P, J).

21) 36:1-43 : ஏசாவின் வழித்தோன்றல்கள் (P,E).

IV. யோசேப்பின் வரலாறு: (37:1-50-26)

1) 37:1-36 : யோசேப்பு எகிப்திய வணிகரிடம் விற்கப்படல் (J,E).

2) 38:1-30 : யூதாவும், தாமாரும்: ஓனான் அழிவு (J).

3) 39:1-23 : யோசேப்பு சோதிக்கப்படுதல் (J).

4) 40:1-23 : சிறையிலே கனவுகளுக்கு விளக்கம் (E).

5) 41:1-36 : யோசேப்பு பார்வோனின் கனவுகளுக்கு விளக்கம் அளித்தல் (E).

6) 41:37-57 : யோசேப்பு எகிப்து நாட்டின் முதல் அமைச்சன்.

7) 42:1-34 : யோசேப்பு தனது உடன் பிறந்தவர்களை முதல் தடவை சந்தித்தல் (E,J).

8) 43:1-34 : யாக்கோபின் புதல்வர் யோசேப்பை மீண்டும் சந்தித்தல் (J,E).

9) 44:1-34 : பென்யமினுக்கு யூதாபரிந்துரைத்தல் (J).

10) 45:1-28 : தன்னைத் தெரியப்படுத்துதல் (J,E).

11) 46:1-34 : யாக்கோபு தன் குடும்பத்துடன் எகிப்தில் குடியேறுதல் (J,P).

12) 47:1-31 : எகிப்தில் எபிரேயர்கள், யோசேப்புக்கு யாக்கோபின் கட்டளை (J,P).

13) 48:1-22 : யாக்கோபு யோசேப்பின் புதல்வர்களை ஏற்று ஆசிர்வதித்தல் (J, E, P).

14) 49:1-32 : யாக்கோபின் ஆசிர்கள், இறைமொழிகள், அவருடைய மரணம் (J,P).

15) 50:1-26 : யாக்கோபு அடக்கம் செய்யப்படுதல், யோசேப்பின் இறுதிச் செயல்கள் – அவரது மரணம் (J, E, P).

5. சிறப்புக் குறிப்புக்கள்:

மேலே தொடரும்முன் சிலவற்றை மீண்டும் கூற விரும்புகிறோம். வாழ்வு பற்றிய அடிப்படைச் சிக்கல்களைப்பற்றி இறை மக்களுக்காக எழுதப்பட்ட நூலாகும் ஆதியாகமம். இதன் வாசகர்கள் எளிய நாடோடி வாழ்க்கையிலிருந்து நிலையாக வாழும் நிலைக்கு மாறிக்கொண்டிருந்த மக்களாவர். இவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்த எழுதப்பட்டதாகும் இந்நூல். ஆகையால் அறிவியல் முறைப்படியல்லாது சாதாரணமாய்ப் பொருட்கள் விவரிக்கப்படுகின்றன. ஆசிரியர்களிடம் தொலைநோக்கியோ, உருப்பெருக்கக் கண்ணாடியோ மற்றக் கருவிகளோ இல்லை. அவர்களுடைய சாதாரணக் கண்கள்தாம் பெரிதும் பயன்பட்டன. மனித கண்களுக்குச் சாதாரணமாய்ப் பொருள்கள் தோன்றிய விதத்தில்தான் அவர்கள் எழுதினார்கள்.

5. அ. இஸ்ராயேலின் விசுவாசம்:

தொடக்கத்திலிருந்து பல கடவுள்கள் கோட்பாட்டோடு வாதப்போக்கை இஸ்ராயேலின் நூல்கள் காட்டுகின்றன. அறமிக்க ஒரே இறைத்தன்மைக் கோட்பாட்டுப் பணித்திட்டத்தில் படைப்பின் கதையைப் புகுத்தி, உலகம் இறைவனால் படைக்கப்பட்டதால், தொடக்கத்தில் உலகிலுள்ள யாவும் நல்லவையாக இருந்தன என்று அழுத்திக் கூறுவதில் இந்த வாதப்போக்கு தெளிவாகிறது. படைப்புப்பற்றிய பழங்கால மேற்காசிய மிகப்பழங்கதைகளில் எல்லாம் சிறந்தது பலரும் அறிந்த " எனும்மா எலிஷ்" என்ற பாபிலோனியக் கதையேயாகும். இக்கதையைப் பயன்படுத்தும் குருக்கள் பாரம்பரியம், உடல் உறவுக்கருத்து, வெறுமைக்கும், இறைவனுக்கும் இடையே போராட்டம் முதலிய கருத்துக்களை இக்கதையிலிருந்து நீக்கிவிட்டு, இதைப் பயன்படுத்துகிறது. உலகில் உள்ள யாவும் இறைவனது வார்த்தையால், உழைப்பில்லாது தோன்றின என்று வெறுமனே உறுதியாகக் கூறுகிறது. யாவே பாரம்பரியம் மனிதன் உடனடியாகவும், நேரடியாகவும், முழுமையாகவும் இறைவனைச் சார்ந்து இருத்தலே அவனது வாழ்வுக்கு மிக இன்றியமையாததாகும் என்ற உண்மையை வண்ணத்துடன் உறுதியாகக் கூறுகிறது. இவ்விதம் இஸ்ராயேல் தனது வரலாறு உலக வரலாற்றோடு பிரிக்க முடியாத விதத்தில் உறவுடையது என்பதும், உலகமும் மனிதனும் இஸ்ராயேலின் கடவுளால் படைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுவதால்தான் உலகிலே இஸ்ராயேலின் பாகம் பொருளுடையதாக இருக்கிறது என்பதுமாகிய தனது விசுவாசத்தைப் பறைசாற்றுகிறது. இறைவன் இஸ்ராயேலைத் தமக்கே உரிய மக்களாகப் படைத்துள்ளார் என்ற இஸ்ராயேலின் அனுபவம், தமது இறைவன் உலக மக்களின் தனிப்பட்ட ஒரே ஆண்டவராக இருக்கிறார் என்பதையும் உண்டாக்குகிறது. தனிப்பட்ட விதத்தில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவம், இறைவன் உலகைப் படைத்தது, உலகின் மேலும் மனுகுலத்தின் மேலும் அவர் கொண்டுள்ள அக்கறை முதலிய உண்மைகள் பற்றிய அறிவை வளர்ச்சியடையச் செய்தது.

5. ஆ. படைப்பும் வீழ்ச்சியும்: இஃது எல்லாச் சமய உண்மைகளுக்கும் அடிப்படையான உரிமையாகும். ஆதியாகம முதல் அதிகாரத்தின் படைப்புக்கதை வழிபாட்டுப்போதகப் பாடலாக எழுதப்பட்டுள்ளது. இஃது எல்லாவற்றையும் உள்ளடக்கி இறைவனுக்கு அளிக்கும் போற்றுரையாகும். இதில் இறைவனது மூலத்திட்டமும் வரையப்படுகிறது. எல்லாப் படைப்புக்கும் தலைவனாக மனிதனை அமர்த்துவதில் இறைவனது நன்மைத்தன்மை காட்டப்படுகிறது. இதைவிடச் சிறப்பானது, இறைவன் தம்மோடு ஒன்றிப்பையும், நெருங்கிய நட்புறவையும் மனிதனுக்கு நல்கியதாகும். வாழ்வளிக்கும் மரத்தையும் நன்மை தீமை அறியும் மரத்தையும் கொண்ட இன்பச் சோலைக்கதை, மனிதன்மேல் இறைவன் சுமத்திய ஒரே ஒரு கட்டுப்பாட்டை எடுத்துக்கூறும் ஓர் இறையியல் உத்தியாகும். இந்தக் கட்டுப்பாடு, கடவுள் தன்னைப் படைத்தார் என்று மனிதன் ஏற்றுத் தான் படைக்கப்பட்ட தன்மையை ஏற்றுக்கொள்ளுதலாகும்.

இறைவன் மனிதனுக்கு அளிக்க விரும்பிய வரலாற்றை வரைந்தபின், மனிதனுடைய உரிமையான வாழ்வு எப்படி இருந்தது, மனிதனுக்கு என்ன ஆயிற்று, எப்படித் தனது துன்பத்திற்கு வந்து சேர்ந்தான் என்று படைப்புக் கதையின் மீதிப்பகுதி விவரிக்கிறது. இறைவன் நல்லவர். உலகில் நன்மையிருந்தது. ஆனால் இஸ்ராயேலின் அனுபவத்தில் தீமையும், ஒழுங்கின்மையும் மனிதனின் மகிழ்ச்சியற்ற அவலநிலையும் வெளிப்படையாகும். தீமை எப்படித் தோன்றிற்று? இன்பச் சோலை விவரிப்பில் காணப்படும் மேலான இன்ப வாழ்வு மனிதனின் சொந்த வாழ்வில் இல்லை. இறைவனது திட்டம் எப்படியோ குறுக்கிடப்பட்டுக் கெடுக்கப்பட்டுள்ளது. இறைவனிடமிருந்து மனிதன் தன்னையே விரும்பி. வேண்டுமென்றே பிரித்துக்கொண்டதின் விளைவாகும் தீமையின் தோற்றம். இவ்வாறு இஸ்ராயேல் விளக்கியது. இறைவனிடமிருந்து மனிதன் தன்னையே பிரித்துக்கொள்ளுதல் இறைவன் நேரடியாக விரும்பியதன்று. மனிதனின் பணியாமையின் விளைவாகும். இன்பச்சோலைப் பாம்பால் சோதிக்கப்படுதல், மனிதனது வீழ்ச்சி, அதன் விளைவுகள் முதலியவை நாடகக் காட்சிகளாக, மனிதப் பாணியில் உருவக முறையில் விளக்கப்படுகின்றன. இவற்றின் வழியாக மனிதனது அவலநிலையை விளக்கும் பாவம், தண்டனை பற்றிய இறையியல் போதகம் தரப்படுகிறது. முதல் பாவத்தின் தன்மையை வரையறுப்பதும் மதிப்பீடு செய்வதும் ஆசிரியரது கவனத்தைக் கவரவில்லை. மனிதன் கீழ்ப்படியாமையால் படைப்பு உடன்படிக்கையின் ஒரே எளிய சட்டத்தை மீறினான். தான் இறைவனைச் சார்ந்து இருக்கும் தனது உண்மை நிலையை ஏற்க மறுத்தான். இப்பாவத்திற்குத் தண்டனை அடைந்தான். இக்கருத்து மீட்பு வரலாறு முழுவதும் காணப்படும் தலையாய கருத்துக்களில் ஒன்றாகும்.

ஆயினும் எல்லாம் இழந்துபோகவில்லை. இறைவன் தம்மைப் பொருத்தமட்டும், தமது படைப்பு உடன்படிக்கையின் ஆசீர் அருட்கொடைகளையெல்லாம் எடுத்துக் கொள்ளவில்லை. முதல் பெற்றோர் உடனே சாகவில்லை. சாவில் முடியும் கடினவாழ்வைத் தண்டனையாகப் பெற்றனர். இருப்பினும் தீமைக்கு எதிராகப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. இது மனிதன் பாம்பினால் முழுவதும் வெல்லப்படவில்லை என்பதைக் காட்டிற்று. முதல் மூலநற்செய்தி பறைசாற்றப்பட்டது (ஆதி 3:15). வருங்காலத்தில் நிகழவிருக்கும் மீட்பு வாக்களிக்கப்பட்டது. இறைவன் தொடர்ந்து மனிதன்மீது அக்கறை காட்டினார். அவனுக்கு ஆடையளித்தார்; புது மனித உயிர்களின் ஊற்றான, பல்கிப்பெருகும் அவனது ஆற்றலைப் பயன்படுத்த மனிதனுக்குத் தொடர்ந்து இசைவு அளித்தார். ஆனால் பாவத்தின் மற்ற விளைவுகள் அழிக்கப்படவில்லை. இறைவன் மட்டுமே இச்சாபத்தை எடுக்கக்கூடும். வருங்காலத்தில் அது நிகழும் என்று வாக்களிக்கப்பட்டது. அஃது எப்போது?

5. இ. காயின் ஆபேல் கதை: ஆதி 4-ஆம் அதிகாரத்தில், பண்பாடு வளர்ந்துள்ள (4:2) வழிபாட்டு நிறுவனங்கள் ஏற்கெனவே ஏற்பட்டுள்ளன (4:3); மக்கள் பல்கிப்பெருகிப்பரவியுள்ள நிலையைக் காண்கிறோம். இவற்றைக் கருத்தில் கொண்டு, சிலர், இக்கதை முதல்பெற்றோரின் முதல் புதல்வர்களின் விதியைப் பற்றிக்கூறவில்லை; மூலப் பாரம்பரியத்தில், இக்கதை ஆயர்களுக்கும் உழவர்களுக்கும் இடையேயிருந்த பகைமையை எடுத்துக்கூறுகிறது; ஆகவே பிற்காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்பர். இது வீரகாவியமாக இருந்திருக்கலாம் என்பர். நாடோடியாக வாழ்தல், பயிர்செய்தல் முதலிய தொழில்கள் ஏற்கெனவே இருந்திருந்தாலும் இக்கதை அவை தோன்றிதற்குக் காரணம் காட்டும் கதையாக அமைந்துள்ளது என்பர்.

விவிலிய ஆசிரியர், இக்கதையை அதன் மூலப் பாரம்பரியங்களினின்று எடுத்து, குறைநீக்கி, யாவர்க்கும் போதனை அளிக்கும் கதையாக மாற்றி அதன் தரத்தை உயர்த்துகிறார். இறைவனுக்குக் கீழ்ப்படியாமையின் கொடிய விளைவு, முதல் பெற்றோரின் வழித்தோன்றல்கள்

யாவரையும் தாக்கித் துன்புறுத்தியது. பாவத் தீமையின் விளைவுகள் மிகப்பெரும் துயர் தருவதாயின; கவலைக்குரியவை ஆயின. பாவம் பாவத்திற்கு இட்டுச் சென்றது. அதன் ஆற்றல் பெருகுகிறது. வாழ்வின் ஒவ்வொரு வழியிலும் அதன் எதிர்விளைவுகள் தெளிவாயிற்று. முதல் பாவத்தின் விளைவாக இறைவனுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவு முறிந்தது. இது மனிதர்களுக்குள்ளே பகைமைக்கு இட்டுச் சென்றது. கொலை, அழுக்காறு, பொறாமை, ஒரே சமயத்தில் இருமனைவியரைக் கொள்ளல், பழிவாங்குதல் முதலியவை கீழ்ப்படியாமையின் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

காயின்-நிலத்தை உழுது பயிரிடுபவன். ஆபேல்– ஆடு மேய்ப்பவன். இறைவன் காயினது காணிக்கையை விட ஆபேலின் காணிக்கையை ஏற்றுக்கொண்டார். அதன் விளைவாகப் பொறாமையாலும் சினத்தாலும் உந்தப்பட்டுக் காயின் தனது தம்பியைக் கொன்றான். இந்த உடன்பிறந்தான் கொலைக்குப்பின், காயின் நிலையற்றவனும் நாடோடியுமாகத் திரியும்படி தண்டிக்கப்படுகிறான். இக்கதையில் இறைத்தேர்தலில் தன்னுரிமை என்ற கருத்தை ஆசிரியர் பயன்படுத்துகிறார். இத்தன்னுரிமையான தேர்தல் மீட்பு வரலாறு முழுவதிலும் அடி ஓட்டமாக உள்ளது.

"நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆள வேண்டும்" (4:7) என்ற உரையில் இக்கதையைக் கொடுப்பதில் ஆசிரியரது நோக்கம் தெளிவாகிறது. முதல் பாவத்திற்குப் பிறகு உலகில் பாவங்கள் பெருகிப்பரவியிருந்தன. ஆனால் மனிதன் பாவச்சோதனையை வெல்லமுடியும்; வெல்லவேண்டும். காயின் ஆபேலின் கதை நம்பிக்கையோடு முடிகிறது. இறைவன் காயினுக்குக் காட்டிய இரக்கம் அழுத்திக் கூறப்படுகிறது. "காயினைக் கொல்கின்ற எவனும் ஏழு முறை பழிவாங்கப்படுவான் என்று சொல்லி, காயினைக் கண்டுபிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன்மேல் ஓர் அடையாளம் இட்டார்" (4:15). மீட்பு வரலாற்று முழுவதிலும் பாவம் இறைவனது தண்டனையைக் கோருகிறது. ஆனால் தண்டனை அளிக்கும்போதும் இறைவன் தமது நீதியைத் தமது அருளிரக்கப் பெருக்கால் மட்டுப்படுத்துகிறார்.

பிற்கால விவிலிய அறிஞர்கள், காயினுக்கும் ஆபேலுக்கும் ஒழுக்க, சமயப்பண்புகளில் வேறுபாடு இருந்ததால் (ஆதி 4:6-7; எபி 11:4) இறைவன் இளையவனை ஏற்றுக் கொண்டார்; மூத்தவனைப் புறக்கணித்தார் என்பர். புதிய ஏற்பாடு, ஆபேலை அவனது குற்றமின்மைக்கும் (மத் 23:35) விசுவாசத்திற்கும் (எபி 11:4) புகழுகிறது. ஆபேல் கிறிஸ்துவுக்கு ஒரு முன் அடையாளமாகக் கருதப்படுகிறார் (எபி 12:24). நமது நற்கருணை மன்றாட்டில் ஆபேலின் காணிக்கை கிறிஸ்துவின் பலிக்கு ஓர் அடையாளமாகக் கருதப்படுகிறது. மாறாக, தன் உடன்பிறந்தானுக்கு அன்பு செய்யாத கிறிஸ்துவன் தீயோனைச் சார்ந்த காயினுக்கு ஒப்பாவான் என்று யோவான் அறிவுறுத்துகிறார் (1 யோவா 3:10-12).

5. ஈ. மரபுமுறைப்பட்டியல்கள்:

ஒரு குடும்பத்தின் அல்லது குலத்தின் முன்னோர் தலைமுறைப் பட்டியல்களைக் கணித்தல் செமித்தியர்களது வழக்கமாகும். இஸ்ராயேலரிடமும் இவ்வழக்கு இருந்தது. ஐந்நூலில் குருக்கள் பாரம்பரியம் இவ்வகை மரபுமுறைப் பட்டியலில் கவனம் செலுத்துகிறது. வாய்மொழிப் பாரம்பரியங்களை வருங்காலத் தலைமுறையினருக்குக் கையளிப்பதற்குத் திட்டம் செய்யப்பட்ட நினைவுக் குறிப்பு சார்ந்த உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன; தலைமுறை மரபுமுறைப் பட்டியல் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

ஆதியாகமத்தில் வரும் பட்டியல்கள், வரலாற்று மரபுக் கொடி முறைகள் அல்ல; ஆனால் நீண்டகால இடைவெளியை இணைக்க உதவுகின்றன. விவிலிய ஆசிரியர், மீட்பு வரலாற்றில் உள்ள ஒற்றுமையை எடுத்துக்காட்டவும் பெருங்காவியத்தின்

முடிநிலைக்கு இட்டுச்செல்லும் நோக்கோடும், யாவே குருக்கள் பாரம்பரியங்களில் காணப்படும் மரபுமுறைகளிலிருந்து சிலவற்றை எடுத்துக் கூறுகிறார். இரு பாரம்பரியங்களுமே நாட்டு வரலாற்றை எடுத்துக் கூறும் நோக்கத்திற்காக முதல் மனிதன் வரை தலைமுறை மரபுகளைத் தரவில்லை. மாறாக, இறைவன் வரலாற்றைக் கடந்தவர் என்றும், ஆதிமனிதன் முதல் தங்கள் காலம் வரை வரலாற்றில் முடிவான, உறுதியான விதத்தில் பங்கெடுத்துள்ளார் என்றும் ஏற்றுக்கொண்டனர். தன்னுரிமையற்ற நாட்டு மக்களுக்கு, அன்றையச் சமூகம் அதற்கு முன்வாழ்ந்த முன்னோர்களோடு கொண்டுள்ள தொடர்பையும், இஸ்ராயேலின் வரலாற்றில் அம்முன்னோர்களுக்காக இறைவன் தனிச்சிறப்பான முறையில் இடையிட்டுச் செயல் ஆற்றியதையும் எடுத்துக் கூற விரும்பினர். இஸ்ராயேலை இறைவன் தேர்ந்தெடுத்ததும் உலக வரலாற்றில் இஸ்ராயேலின் பாகமும் தற்செயலாக நடந்தவையல்ல. எல்லா மனிதர்களுக்கும் மூதாதையரான ஆதாமை இறைவன் படைக்கும்போதே, இஸ்ராயேலுக்கு இறைவன் தமது திட்டத்தில் இடம் கொடுத்திருந்தார் என்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினர். இதற்கு மரபுமுறைப் பட்டியல்கள் பயன்பட்டன. நீண்ட வாழ்வுகாலம் கொடுக்கப்படுகிறது. எண்களின் அடையாளப்பொருள் தெளிவாகத் தெரியவில்லை. வாழ்வு காலத்தின் நீட்சி குறைவதிலிருந்து ஒழுக்க வாழ்வு, குறைந்து, இழிநிலைக்கு உள்ளாகிறது என்று போதிக்க விவிலிய ஆசிரியர் விரும்புவதாகத் தெரிகிறது. இப்படியாகப் பெருவெள்ளத்திற்கு மேடை தயாராகிறது.

காயின் மரபுமுறைப்பட்டியல் (ஆதி 4:17-26) குருக்கள், யாவே ஆகிய இரு பாரம்பரியங்களின் இணைப்பாகத் தெரிகிறது. ஆசிரியர் இரண்டையும் ஒத்திருக்கச் செய்யவில்லை. வெறுமனே இரண்டையும் சேர்த்துத் தருகிறார். யாவே பாரம்பரியம் ஒழுங்காக அமைக்கப்பட்ட சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கேற்ற முன்னேற்றத்தையும், புதிய தொழில் முதலியவற்றையும், விவரிக்கிறது. பண்பாட்டு வளர்ச்சிக்கேற்பப் பாவங்களும் மிகுந்தன (4:23-24) என்றும் காட்டுகிறது. குருக்கள் பாரம்பரியத்தைச் சார்ந்த சேத்தின் மரபு முறை (5:1-33; 11:10-26) ஆதி 2:4-இன் தொடர்ச்சியாகும் என்று அறிஞர் கருதுவர். வெள்ளத்திற்கு முன் பத்துக்குல முதுவர்களும், இருக்கின்றனர். இப்பட்டியல் பாபிலோனிய அரசர் பட்டியலுக்கு ஒத்ததாக உள்ளது. ஆனால் விவிலியத்தில் காணப்படும் வாழ்வுக்கால நீட்சிமை பாபிலோனியப் பட்டியலோடு ஒப்பிடும்போது அளவோடு உள்ளதே.

5. உ. பெருவெள்ளம்: 1) இந்த மறைபொருள் மிக்க, தனிப்பட்ட பகுதி, சுவையில் புராணக்கதைத் தன்மையைக் கொண்டுள்ளது; பல கருத்து வேறுபாடுகளுக்குக் காரணமாகவும் இருந்துள்ளது. இக்கதையில் யாவே, குருக்கள் பாரம்பரியங்கள் பின்னிப்பிணைந்து நிற்கின்றன. அவற்றைப் பிரித்துக் கதையை அமைக்கலாம். யாவே பாரம்பிரிய விவரிப்பு: 6:5-8; 7:1-5.7 (8-9). 10.12.16-17. 22-23; 8:2 பின் பகுதி .3 முன் பகுதி 6. (7). 8-12.13 பின் பகுதி (14). 20-22; 9:18-19. குருக்கள் பாரம்பரிய விவரிப்பு 6:9-22; 7:6 (8-9). 11, 13-15.18-21,24: 8:1-2 முன் பகுதி. 3 பின்பகுதி. 5(7). 13 முன் பகுதி (14). 15-19; 9:1-17. ஒவ்வொரு தொகுப்பும் ஒற்றுமையுள்ள, முரணில்லாத கதையாகும். யாவே பாரம்பரிய விவரிப்பில் சிலவற்றை ஒதுக்கி விடலாம். குருக்கள் பாரம்பரய விவரிப்பு முழுமை உடையது. 7:8-9; 8:7.14 ஆகிய உரைகள் இருபாரம்பரியங்களுக்கும் பொதுவானவையாகத் தோன்றுகின்றன. 9:8-17 இல் இருமுறை கூறுதல் காணப்படுகிறது.

வரவிருக்கும் பேரழிவிற்கு 6:1-4-இல் எச்சரிக்கை விடப்படுகிறது. யாவே பாரம்பரியத் தொடக்க வரலாறு, உலகிலே பாவம் விரைவாகப் பரவியிருப்பதை விவரிக்கிறது. பாவம் நிறைந்த உலகில் உள்ள உயிர்களையெல்லாம் அழித்துவிடுவதாக இறைவன் முடிவெடுக்கிறார். இஃதோடு பெருவெள்ளக்கதை தொடங்குகிறது. பெட்டகத்தினுள் நுழையுமுன்தான் வெள்ளம் பற்றிய செய்தி நோவாவுக்குச் சொல்லப்படுகிறது. இதை அறியாத நிலையில் பெட்டகம் கட்ட

அவருக்கு இடப்பட்ட கட்டளை அவரது விசுவாசத்தைச் சோதிப்பதாக இருந்திருக்கலாம். பெட்டகம் கட்டப்படும் விவரிப்பு குருக்கள் பாரம்பரிய விவரிப்பில் மட்டுந்தான் தரப்படுகின்றது. யாவே விவரிப்பில், தகு (சுத்த) விலங்குகளிலும் பறவைகளிலும் ஆணும் பெண்ணுமாக ஏழுசோடிகளும், தகாத (அசுத்த) விலங்குகளில் ஆணும் பெண்ணுமாக இரு சோடிகளும் பெட்டகத்துள் நுழைகின்றன; குருக்கள் பாரம்பரிய விவரிப்பில் இந்த வேறுபாடு புறக்கணிக்கப்படுகிறது. ஆகவே ஒவ்வொன்றிலும் ஒருசோடி பெட்டகத்துள் நுழைகின்றன. ஆதி 7:8-9 பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாக இருக்கலாம் என்று அறிஞர் கருதுவர். யாவே விவரிப்பு ஓவியப் பண்புமிக்கதாயுள்ளது. நோவா பெட்டகத்துள் நுழைந்த ஏழாம்நாள் வெள்ளநீர் வந்தது. 40 நாட்கள் இரவும் பகலும் மழை பெய்தது. 8:7-ஐ யாவே பாரம்பரிய விவரிப்போடு சேர்த்தால், மழை விட்டவுடன் நோவா காக்கையை வெளியே அனுப்பினார். அது திரும்பவேயில்லை. அதற்குப்பின் ஏழுநாட்களுக்கு ஒரு முறை ஒரு புறாவை வெளியில் அனுப்பினார். புறா இருமுறை திரும்பிவந்தது. இரண்டாம் முறை ஒரு பசுங்கிளையைக் கொண்டு வந்தது. மூன்றாம் முறை, புறா தங்குவதற்கு ஓர் இடத்தைக் கண்டுபிடித்திருக்க வேண்டும்; ஆகவே திரும்பவேயில்லை. பெட்டகம் தரையைத் தொட்டது பற்றி யாவே பாரம்பரியம் குறிக்கவில்லை. இப்பாரம்பரியப்படி பெட்டகம் அதன் உச்சியில் வாயிலையும் மூடியையும் கொண்டிருந்ததாகத் தெரிகிறது; பக்கப்பகுதியில் வாயில் இல்லை. குருக்கள் பாரம்பரிய விவரிப்பில் பெட்டகத்தின் பக்கப்பகுதியில் வாயில் இருக்கிறது. யாவே பாரம்பரியத்தில் மேலிருந்து மழை பெய்கிறது. குருக்கள் பாரம்பரியத்தில் வெள்ளம் தரையிலிருந்து வந்ததாகத் தெரிகிறது. இரண்டு விவரிப்புக்களும், இயற்கை அமைதியையும், பருவகாலங்களையும் காப்பதாக யாவே உறுதி அளிப்பதோடு முடிகின்றன.

2) இப்படி ஒரு பெருவெள்ளம் நடைபெற்றதா? பெருவெள்ளக் கதைகள் பழம் மக்களிடையே பரவலாக இருந்ததாகத் தெரிகிறது. இக்கதைகள், பெருவெள்ளம் நாகரிக வளர்ச்சியில் ஒரு நிலையான மாறுதலை ஏற்படுத்தியது என்று காட்ட உதவுகின்றன. இவற்றிற்கும் விவிலிய பாரம்பரியக் கதைக்கும் விவரங்களில் பலவேறுபாடுகள் உள்ளன. இவற்றில் எதுவும் வரலாற்றில் நடைபெற்ற எந்தப் பெருவெள்ளத்தையும் துல்லியமாக விவரிப்பதாகக் காட்டவில்லை. விவிலியத்தைச் சாராத வெள்ளக் கதைகளில் மெசபொத்தாமியாவின் பாரம்பரியம் சிறப்பானதாகும். பழம் மெசபொத்தாமியாவில் பல நகரங்களை முழுவதுமாகவோ, பாதியளவோ அழித்த பல பெருவெள்ளப் பெருக்குகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் மெசபொத்தாமியா முழுவதிலும் நாகரிகச் சுவடுகளை முழுவதும் அழித்த வெள்ளப்பெருக்கு நிகழ்ந்தது என்பதற்கு உறுதியான சான்றுகள் இல்லை. அப்படிப்பட்ட பெருவெள்ளம் நிகழ்ந்திராது இருந்திருக்கலாம். வெள்ளத்தின் அழிக்கும் ஆற்றலைப் பலதரம் துய்த்த அனுபவம், இவற்றைவிட மோசமான, மக்களினம் முழுவதையும் அழித்த பெருவெள்ளம் ஒன்று தெளிவில்லாத கடந்த காலத்தில் நடந்திருக்கலாம் என்று மக்களைக் கற்பனை செய்யச்செய்தது. இப்படிப்பட்ட மெசபொத்தாமியாக்கதை, அழிக்கவல்ல பொங்கி எழும் பெருவெள்ளத்தின் முன், மனிதனது இயலாமையை எடுத்துக் கூறுகிறது.இத்தகைய அழிவுமிக்க இயற்கையின் செயல், இறைவனது சினத்தாலும் ஆற்றலாலும் தான் நடக்கக்கூடும் என்று மக்களை எண்ணச் செய்தது. "தெய்வங்கள்" வெள்ளத்தை அனுப்புவதாக மக்கள் எண்ணினர். சில சமயம் இப்பெருவெள்ளங்களிலிருந்து தப்பிக்கப் படகுகளும், கப்பல்களும் பயன்பட்டிருக்கலாம். அல்லது இவ்வெள்ளங்களின் அழிவிலிருந்து தப்பிக்கப்பெட்டகம் போன்ற படகுதான் ஒரே வழி என்று மக்கள் எண்ணியிருக்கலாம். மெசபொத்தாமியக் கதையை ஆராயுங்கால், இயற்கையின் கொடிய அழிவுமிக்க ஆற்றல்முன் மனிதனது இயலாமையை எடுத்துக்கூறும் உவமையாகவும் உருவகமாகவும் இக்கதை பயன்பட்டதாகத் தெரிகிறது.

எபிரேயர்களுக்குப் பெருவெள்ள விவரிப்பு, தனிப்பட்ட வரலாற்று நிகழ்ச்சியைப் பற்றிய விவரிப்பு என்பதைவிட, மனித நிலையைப் பற்றிய அறிக்கை எனலாம். மனிதனது தவறும் இயல்பு, பாவத்தன்மை, இறைவனது நீதி, இரக்கம், பண்பாடுகளின் குறைகள், பாதுகாப்பின்மை ஆகியவை பற்றி இக்கால மனிதன் கருத்தியலாகப் பேசுவான். அவற்றையே பழங்கால எபிரேய மக்கள் பெருவெள்ளக் கதையாகக் கூறினர். இப்படிப்பட்ட பெருவெள்ளம் நிகழாமலும் இருந்திருக்கலாம். மனிதனது கற்பனையின் படைப்பாகவும் இருக்கலாம். ஆனால் ஓர் அடிப்படைச் சமய போதகத்தை அளிப்பதற்காக இப்பெருவெள்ள நிகழ்ச்சியுரையை இறையூக்கம் பெற்ற ஆசிரியர் பயன்படுத்துகிறார்.

3) மறைபோதகம்: யாவே பாரம்பரியத்தின் தொடக்க வரலாற்றில், ஆதாமின் பாவத்திலிருந்து தொடங்கிப் பல நிகழ்ச்சித் தொடரின் முடிநிலையாவது பெருவெள்ள நிகழ்ச்சியுரை. இத்தொடர் நிகழ்ச்சிகளில் மனிதன் இறைவன்பால் வெறுப்பை வளர்த்துக்கொண்டே வாழ்க்கை நடத்துகின்றான் என்று காண்கிறோம். மனித வாழ்க்கை உண்மை நன்னெறியிலிருந்து தூர விலகியிருந்தது. இயற்கை உலகோடும், பிற மனிதர்களோடும் மனிதன் கொண்டிருந்த உறவு, தொடர்பு, கலைந்திருந்தது. வன்முறையும் பயமும் தலைதூக்கி நின்றன. இது மனிதபாவத்தினுடையவும் இறைவன் அளித்த தண்டனையினுடையவும் விளைவாகும். கலாச்சாரம், நாகரிகம் ஆகியவற்றின் ஒவ்வொரு முன்னேற்றமும் மனிதனை இறைவனிடமிருந்து ஒருபடி அகன்று செல்லச் செய்வதாகவும், இறைவன் குறித்த படைப்பு அமைதியில் இன்னுமொரு பிளவாகவும் காட்டப்படுகின்றன.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இத்திய நூல்கள், மெபொத்தாமியக் கருப்பொருளைக் கொண்ட ஹூரியன் புராணக்கதையின் மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளன. இந்நூல்கள் கி.மு. இரண்டாவது ஆயிரமாண்டுக் காலத்தைச் சார்ந்தவையாகும். ஹூரியன் புராணக்கதை நெப்பிலிம் என்னும் அரக்கர்களின் பிறப்பை விளக்கும் கதையாகும். இவர்கள் வானகப் பிராணிகளுக்கும், மனிதர்களுக்கு மிடையே புணர்ச்சியால் பிறந்தவர்கள். இத்தகைய கதை ஒன்றை யாவே பாரம்பரிய ஆசிரியர் ஆதி 6:4-இல் சுட்டிக்காட்டியிருக்கலாம். இக்கதையின் உண்மையைப்பற்றி உறுதி செய்யாமல், பொருள்கள் தோன்றின வரலாறு கூறும் முகத்தால் பெருவெள்ளச் சூழ்நிலையில் ஆதியாகம ஆசிரியர் இதைப் புகுத்துகிறார். மனிதர் - அரக்கர் புணர்ச்சி மனுகுலத்தின் ஒழுக்கக்கேட்டை எடுத்துக் காட்டுகிறது. இஃது இறைவனது தண்டனை பெறுவதற்கு வாய்ப்பாகிறது. மனிதனது உண்மைநிலையும் அதன் விளைவும் ஆதி 6:5-8-இல் அப்படியே ஓவியமாகின்றன. பாவம் மனிதனை முழுவதும் கெடுத்துவிட்டதாக இறைவனே வருந்திக்கூற வேண்டியிருந்தது. ஆதாமின் மேலும், காயின் மேலும், பொதுவாக மனிதன் மேலும், சுமத்தப்பட்ட தண்டனை பாவம் பரவுவதைத் தடுக்கவேயில்லை. உலகின் தீமை இனித் தாங்கமுடியாத நிலையை அடைகிறது. அதற்குரிய தண்டனை முழு அழிவாகும். ஆனால் புதியதோர் தொடக்கம் எழும். "நோவாவுக்கு ஆண்டவரின் அருள்பார்வை கிடைத்தது" (6:8). வெள்ளத்திற்குப்பின் நோவாவின் முதல் செயல், பலி ஒப்புக்கொடுத்தலாகும். பின், மனிதன் பாவ நாட்ட முடையனாயினும், - ஏன், அவன் அப்படியிருப்பதாலும், - மனிதனைப் பொறுத்துப்போவதாக இறைவன் உறுதியெடுக்கிறார். இறைவனின் நீதியும், இரக்கமும், ஒரே உண்மையின் இருமுகப்புக் கூறுகளாகும். மனித பாவப் பிரச்சினைக்கு முடிவான விடையின்றி வெள்ள நிகழ்ச்சியுரை முடிகிறது. ஆனால் தொடக்க வரலாற்றுக்குப்பின் ஆபிரகாம் அழைக்கப்படுதலின் மீட்பு வரலாறு மீண்டும் தொடங்குகிறது. இஃது எங்கே உண்மையான விடை காணவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இறைவன் இடையிட்டு அருள் வழங்கினால் மட்டும், அதுவும் மனிதன் அந்த அருளை ஏற்று அதற்கேற்பத் தன்னுரிமை மிக்க

பதில் அளித்தால் மட்டும், மனிதன் தனது பாவத்தன்மையிலிருந்து தப்ப முடியும். இறைவன் காலவரைக்குள் நுழைய வேண்டும்; மனித வரலாற்றில் செயல்படவேண்டும். அன்பில் வேரூன்றிய விசுவாசப் பணிவோடு மனிதன் அதற்குப்பதில் கூறவேண்டும்.

விவிலியத்தில் வெள்ளம் ஓர் இயற்கையான நிகழ்ச்சியாக விவரிக்கப்படவில்லை. இதை யாவே பாரம்பரியம் இறைவனின் நீதி, இரக்கம் ஆகியவற்றை விளக்கும் உவமையாகப் பயன்படுத்துகிறது. இப்பாரம்பரிய வெள்ளக் கதைக்கும் அது போன்ற மற்ற இயற்கைப் பெருவெள்ளப் பேரழிவுக்கதைகளுக்குமிடையே யுள்ள சிறப்பான வேறுபாடு இவ்வழிவுக்கு அளிக்கப்படும் மறை விளக்கமாகும். மெசபொத்தாமியாவை மட்டும் அழிக்கும் கதையை விரிவாக்கி, உலகமனைத்தையும் அழிக்கும் வெள்ளக் கதையாக மாற்றிக் கூறுகிறது யாவே பாரம்பரியம். புராணக் கடவுள்களோடு ஒப்பிடும்போது-யாவே அறமிக்க கடவுளாவார்; மனம்போல் செயல்படுபவர் அல்லர்; நீதி நேர்மைமிக்கவர். அவரது நீதித்தீர்ப்பு நோவாவிற்கும் அவரது குடும்பத்திற்கும் காட்டும் இரக்கத்தால் மட்டுப்படுகிறது. யாவே-மீட்கும் கடவுளாவார்; அழிவுக்குப்பின் எஞ்சிய சிலரிலிருந்து மீளவும் உலக வாழ்வைத் தொடங்குவார். மனிதனுக்கும் இறைவனுக்கும் புதியதோர் உடன்படிக்கை ஏற்படுகிறது. யாவே-வெள்ளத்தால் மனுகுலத்தை இனி அழிக்கவேமாட்டார். இயற்கையின் ஒழுங்க மைப்பும் வானவில்லும் இவ்வுடன்படிக்கைக்கு அவர் காட்டும் பிரமாணிக்கத்தின் அடையாளங் களாகும். இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள உறவில் வெள்ள நிகழ்ச்சி ஓர் ஊழியின் முடிவாகும்; புதிய ஊழியின் தொடக்கமாகும்.

யாவே பாரம்பரிய வரலாற்றைக் குருக்கள் பாரம்பரியம் நிறைவு செய்கிறது. யாவே பாரம்பரியம் கூறுவதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது, அஃதோடு இன்னும் ஆழ்ந்த பொருளை அளிக்கிறது. பாவத்தைத் தீர்ப்பிடும் இறைவன், மனிதனோடு உடன்படிக்கையைச் செய்து தம்மையே கட்டுப்படுத்துவது தமக்குத் தகுதியானதாகக் காண்கிறார் (9:8-17). பாவம் தண்டனை அடைவது விதி விலக்கற்றதாயினும், மனித வாழ்வு இறை இரக்கத்தால் காப்பாற்றப்படுகிறது. பாவத்தின் விளைவாக இயற்கை அமைதி முழுவதும் அழிந்து மறைந்து போயிருக்க வேண்டும். பாவம் இந்த இயற்கை அமைதியை மாற்றி விட்டது; இசைவு இணக்க நிலையை நொறுக்கித் தகர்த்துவிட்டது. ஆயினும் உயிரினங்கள் தொடரவேண்டும் என்றும், இயற்கைமீது மனிதன் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்றும் இறைவன் விரும்பினார். ஆகவே இயற்கை அமைதியை உறுதிப்படுத்து கிறார். அதேவேளை இயற்கையின் மத்தியில் பயத்தையும், வன்முறையையும் வைத்துள்ளார். படைப்பின் தொடக்கத்தில் மனிதனும், விலங்குகளும் பயமின்றி ஒன்றாக வாழ்ந்தனர். எல்லோரும் காய்கறி, கனிகளையே உண்டனர். ஒருவரும் ஊனை உண்ணவில்லை (ஆதி 1:29-30). மனிதனோ, விலங்குகளோ உணவுக்காகக் கொல்லப்படக்கூடாது. ஏனெனில் எல்லா உயிரும் இறைவனுக்குப் பரிசுத்தமானவை. இறைவனது அரசு பூமியில் முழுவதும் நிறைவாக நிறுவப்படும் இறுதிநாட்களையும் இக்கருத்துக்களாலேயே ஓவியமாக்குகின்றனர் இறைவாக்குரைஞர்கள் (எசா 65:25). வெள்ளம் வரை இந்நிலை பரவியிருந்ததெனக் குருக்கள் பாரம்பரியம் கருதுவதாகத் தெரிகிறது. அதற்குப்பின் உணவுக்காக விலங்குகளை மனிதன் கொல்லலாம் (9:2-3). எல்லா உயிர்களும் மனிதனைக் கண்டு அஞ்சும் (9:2). இன்னும் உயிர் இறைவன் முன் தூயனவாகவே இருக்கும். இதை ஏற்றுக்கொள்ளும் விதத்தில், மனிதன் ஊனோடு இரத்தத்தைக் குடிக்கக்கூடாது. மேலும், மனிதன் எந்த அளவுக்குப் பாவத்தை நாடிச்சென்றான் என்றால் தன் உடன் உள்ளவர்களையே கொல்ல அடிக்கடி சோதிக்கப்படுவான். கொலையைத் தண்டிக்க மனிதன் அனுமதிக்கப்படுகிறான். இத்தண்டனை கொலைக்குற்றத்தைத் தடுக்கும் உடனடியாக கருவியாக இருக்கும்.

4) பெருவெள்ளமும் புதிய ஏற்பாடும்: நற்செய்தியில், இறையரசின் வருகையைப் பெருவெள்ள வருகைக்கு ஒப்பிடுகிறார் கிறிஸ்து (மத் 24:36-39); லூக் 16:26-27). மனிதர் உண்ணுவதிலும் குடிப்பதிலும் மூழ்கியிருந்தனர். நோவாவின் செய்கையைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் எதிர்பார்க்காத நிலையில் பெருவெள்ளம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. இதுபோன்றே, பாவத்தில் மூழ்கியிருக்கும் முன்னேற்பாடு இல்லாத மனிதர்களை மனுமகனின் வருகை மேற்கொள்ளும். ஆகையால் மனிதர் எப்போதும் விழிப்பாய் இருக்க வேண்டும். ஆண்டவரைச் சந்திக்க எப்போதும் முன்னேற்பாடுடன் விழிப்பாய் இருக்கவேண்டும்.

பேதுருவினுடைய இரண்டாம் பொதுத்திருமுகம் பாவத்திற்கு அளிக்கப்பட்ட தண்டனையாகப் பெருவெள்ளத்தை வரைகிறது (2 பேதுரு 2:5). இந்நிகழ்ச்சி ஆண்டவர் நடுத்தீர்க்க உறுதியாக வருவார் என்பதற்குச் சான்றாகும் (3:5-7). பேதுருவினுடைய முதல் பொதுத்திருமுகம் வெள்ளத்தைத் திருமுழுக்குக்கு ஓர் அடையாளமாகக் காண்கிறது. திருமுழுக்கு நீரில் மூழ்குவது, கிறிஸ்துபாவத்தின்மேல் கொண்ட வெற்றியின் காரணமாக, கிறிஸ்தவனைப் பாவத்திலிருந்து மீட்கிறது (1 பேதுரு 3:20-21). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம், இறைவனால் வெள்ளம் பற்றி எச்சரிக்கப்பட்டுத் தன்னையும் தன் குடும்பத்தாரையும் காப்பாற்றப் பெட்டகத்தைக் கட்டிய நோவாவை விசுவாசத்தின் அடையாளமாகக் காட்டுகிறது (எபி 11:7).

5. ஊ. நோவாவிலிருந்து ஆபிரகாம் வரை: பாபேல் கோபுரம்.

நோவாவின் மக்கள் வழியாக மக்களினம் உலகம் முழுவதும் பரவிற்று. நோவாவுக்கு இறைவன் காட்டிய மீட்பிரக்கம்-தீமையை நோக்கிச் செல்லும் மனிதனது போக்கைக் கட்டுப்படுத்தவில்லை. திராட்சை ரசம் கண்டுபிடிக் கப்படுகிறது. நோவாவின் புதல்வர்களில் ஒருவனான காமின் பாவமும் அதன் விளைவான சாபமும் விவரிக்கப்படுகிறது. ஆதி 10-ஆம் அதிகாரத்தில் நோவாவின் சந்ததியினர் பட்டியல் கொடுக்கப்படுகிறது. இதில் நாடுகளின் வேறுபாடுகள் பற்றிய யாவே பாரம்பரியக் கருத்துக்கள் காணப்படுகின்றன. பின்பு, பாபேல் கோபுரக் கதையை உட்புகுத்தி உலகத் தொடக்க வரலாறு பற்றிய தனது காவியத்தை யாவே பாரம்பரியம் முடிக்கிறது. இந்த மொழிக்குழப்பக் கதை மறைபோதனை அளிக்கவே உட்புகுத்தப்பட்டிருக்க வேண்டும். இறைவனை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்யும் மனப்போக்கு மனிதரிடம் ஆழ்ந்து வேரூன்றி உள்ளது என்று இக்கதை காட்டுகிறது. மனுகுலம் இறைவனோடு கொண்ட உறவில் ஒரு முன்னேற்றமும் அடையவில்லை.

நோவாவின் வழித்தோன்றல்களின் பட்டியலுக்குப் பின், திடீரென்று பாபேல் கதை தொடங்குகிறது. கதை என்ற அளவில் இந் நிகழ்ச்சியுரை நன்கு பின்னப்பட்ட ஒன்றாகும். ஆனால் இக்கதையில் இருவடிவங்கள் கலந்திருப்பதாகத் தெரிகிறது. கட்டட வேலை தொடங்க இரு அழைப்புகள் விடப்படுகின்றன (ஆதி 11:3-4); இருகாரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, மக்கள் சிதறிப்போகாவண்ணம் கட்டடங்கள் அமைக்க விழைகின்றனர். மற்றது, "விண்ணை முட்டும் ஒரு கோபுரத்தைக் கட்டி நமக்குப் புகழ் உண்டாகச் செய்வோம்". அவர்களது முதல் நோக்கத்திற்கு மாறாக யாவே அவர்களைப் பூமிமுழுவதும் சிதறிப்போகும்படி செய்கிறார். இரண்டாவது நோக்கத்திற்கு மாறாக அவர்களிடையே மொழிக் குழப்பத்தை ஏற்படுத்துகிறார். மக்கள் எப்படி உலகம் முழுவதும் பரவினர், மொழிகள் எப்படித் தோன்றின என்பதற்குக் காரணம் காட்டும் விதத்தில் இக்கதை கொடுக்கப்படுகிறது எனலாம்.

இக்கதையின் மூலவடிவம் மெசபொத் தாமியாவிலிருந்து வந்திருக்கவேண்டும். இந்நிகழ்ச்சி சினார் நாட்டுச் சமவெளியில் நடந்ததாகக் கூறப்படுகிறது. சினார்-மிகப்பழைய சுமேரிய நாடாகும். செங்கல் அறுத்துச் சூளையிட்டுச் சுட்டுக் கட்டடம் கட்டுதல்

பாலஸ்தீனத்தைச் சேர்ந்ததன்று; கருங்கல் அரிதாகக் கிடைக்கும் மெசபொத்தாமியச் சமவெளியைச் சேர்ந்த பழக்கமாகும். இக்கதையில் குறிக்கப்படும் கோபுரம் மெசபொத்தாமியாவில் காணப்படும் "சிகுராத்" என்ற கோபுரங்களைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட கோபுரங்களைப் புதை பொருள் ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர். தங்களின் கோபுரங்கள் இழிவுபடுத்தும் இக்கதையை மெசபொத்தாமியர் விரும்பியிருக்க மாட்டார்கள். ஆனால் இக்கோபுரங்களும் நகரங்களும் அவற்றைக் கட்டியவர்களின் மனிதக் கைத்திறமையையும், அவர்கள் தங்கள் காரியங்களில் எல்லாம் இறைவனின் முழு ஆதிக்கத்தையும் ஏற்றுக்கொள்ளாத அகந்தையையும் எடுத்துக் காட்டுவதாக எபிரேயர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

பேராசையாலும், பாதுகாப்புத் தேவையாலும், ஒரே இடத்தில் நிலைத்திருக்கும் ஆவலாலும் உந்தப்பட்டு, தங்களுடைய புத்தியையும் ஆற்றல்களையும் ஒருங்கே பயன்படுத்தி, தனியாகச் செய்ய முடியாததைக் குழுவாகச் செய்யத் தலைப்பட்டனர் மனிதர். கோபுரங்களும் நகரங்களும் புகழுக்காகவும் பாதுகாப்புக்காகவும் கட்டப்பட்டாலும், இறைவனுக்கு எதிராகக் கட்டப்பட்டதாக ஒரு குறிப்பும் இல்லை. மூலக்கதையில் மனிதச் செயல்களைக் கண்டு "கடவுள்கள்" பொறாமைப்பட்டதாக இருந்திருக்கலாம். ஆனால் விவிலிய விவரிப்பிலே இக்கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் இறைவன் ஏன் மக்களைச் சிதறச் செய்தார், மொழிக் குழப்பத்தை ஏற்படுத்தினார் என்பதற்குக் காரணம் தெளிவாகவும் இல்லை; நிறைவளிப்பதாகவும் இல்லை. மனிதர் பிற்காலத்தில் தமக்கு எதிராக எதையும் செய்து விடுவார்களோ என்று இறைவன் அஞ்சியதாகத் தெரியவில்லை. ஆனால் மக்கள் சிதறிப் போதலும் மொழிக் குழப்பமும் இயற்கைக் காரணங்களால் நிகழவில்லை; இறைச்செயலால் நடந்தது என்று தெளிவாகக் கூறப்படுகிறது. ஆனால் எந்தக் குறிப்பிட்ட காரணமும் தரப்படவில்லை. ஆதியாகமத் தொடக்க வரலாற்றின் பரந்த சூழ்நிலையில் நோக்கினால், இறைவனது இச்செயலுக்குப் பொருளைத் தெரிந்து கொள்ளலாம். ஆதியாகமத்தின் முதல் பதினோரதிகாரங்களில் மனிதன் நாகரிகத்தில் முன்னேறும்போது பாவத்திலும் வளருகிறான் என்ற கருத்து, தெளிவாக உள்ளது. சினார் சமவெளியில் இறைவனது இத்தடுப்புச் செயல், நகரமும் கோபுரமும் கட்டி முடித்தபின் மக்களிடையே பாவம் வளர்வதைத் தடுக்கும் செயலாகும். நோவாவின் சந்ததியினர் பட்டியலையும், பாபேல் கோபுரத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, நாடுகளிலும் நகரங்களிலும் மனிதனின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியும். மக்களினம் பல நாடுகளாகவும் பல இனங்களாகவும் பிரிந்து போதல் இயற்கையானது; நல்லதும் ஆகும்; மனித வாழ்வின் இயற்கையான வளர்ச்சியும் ஆகும் (ஆதி 10). ஆனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமை அவ்வளவு இயற்கையானது அன்று. இந்த இசைவிணக்கமின்மை, மனிதனுடைய பாவத்தன்மையின் விளைவாக, இறைவனால் அனுமதிக்கப்பட்டதொன்றாகும். அது முன்னோரின் பாவத்திற்காக மனிதன் மேல் சுமத்தப்பட்ட தண்டனை ஆகும்; மனிதனுடைய வரையுள்ள தன்மையையும், அவனுக்கு இறைவனுடைய உதவியும் வழிகாட்டுதலும் தேவை என்பதையும் நினைவூட்டும் செயலும் ஆகும்.

இன்பச்சோலை, காயின் ஆபேல், பெருவெள்ளம், பாபேல் கோபுரம் ஆகிய நிகழ்ச்சியுரைகள் யாவும் ஒரே கருத்தின் வேறுபட்ட வடிவங்களாகும். படைத்தவரை வீம்போடு எதிர்த்துக் கிளர்ச்சி செய்த மனிதனின் ஒவ்வொரு செயலிலும், இறைவன் பாவத்தைத் தண்டிக்கிறார். மனிதன் இறைவனிடமிருந்து தன்னையே பிரித்துக்கொண்டு, படைப்பைத் தனது ஆட்சியின் கீழ்க்கொண்டு வரவும், தனக்குத்தானே முழுப்பாதுகாப்பு அடையவும் முயலுகிறான். அஃது இயலாது என்று அனுபவத்தால் அறிகிறான்.

தொடக்க வரலாற்றை அவலப்போக்கில் யாவே பாரம்பரிய ஆசிரியர் முடிக்கிறார். மனிதநிலை சீர்திருத்த முடியாததாகத் தோன்றியது. மனிதர்கள் இறைவனிடமிருந்து பிரிந்தும், தனக்குள்ளே பிரிந்தும் பூமியின்மேல் பரவினர். தனது நாடகக் காவியத்தை யாவே பாரம்பரிய ஆசிரியர் ஓர் இக்கட்டான முடிநிலைக்கு நடத்திச் செல்லுகிறார். ஆதாமிலிருந்து பாபேல் கோபுரம்வரை, இவர் மனிதனை உயர்ந்த தகுதிக்கு அழைக் கப்பட்டவனாகவும், ஆனால் மிக இரக்கப்பட வேண்டிய பெருந்துயர நிலைக்குத் தன்னையே ஆளாக்கிக் கொண்டவனாகவும், சித்தரிக்கிறார். ஒழுங்கற்ற உலகில் ஒழுங்கைக் கொண்டுவரத் தனது சொந்த ஆற்றலால் முயலாமல், மனிதன் பொறுமையோடும் நம்பிக்கையோடும் இறைவனுக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. பாவத்தினால் இழந்துவிட்ட பிறப்பு உரிமையை மீளவும் மனிதனுக்கு அளிக்க இறைவன் தொடக்க முயற்சி எடுக்கும்வரை மனிதன் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆதியாகமத்தின் முன்பகுதி-துன்பியலில் முடிகிறது. ஆனால் மீட்புத் திட்டத்தின் ஒரு பகுதியைத்தான் வரைந்து காட்டுகிறது. கதை அஃதோடு முடிந்துவிடவில்லை. இஃது இறைவனது அருட்செயல் மிக்க மீட்புத் திட்டத்தில் தொடர்கிறது. இத்திட்டத்தின் முதல் களம் ஆபிரகாமை இறைவன் தேர்ந்தெடுத்தலாகும். ஆபிரகாம் சிதறிக் கிடந்த மனுகுலத்தில் ஒருவர். அவர் வழியாக உலக மக்கள் யாவரும் ஆசிபெறுவர். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தலைவர் ஆவார். இத்தேர்தலிலிருந்து, இறைவனது மீட்புச்செயல் பலவிதத்தில் வெளிப்படும்; கிறிஸ்துவின் வாழ்வு-சாவு, உயிர்ப்பில் நிறைவு பெறும்; முழுமை பெறும்.

5. எ. ஆபிரகாம்: ஆதி 12-50 இஸ்ராயேல் குல முதுவர்களின் வரலாற்றை வரைகிறது. இப்பகுதி முழுவதும் வாசிப்பதற்கு எளியது. இவ்வதிகாரங்களில் இறைவன் தமது மீட்புத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்குகிறார். இத்திட்டம் கிறிஸ்துவிலும் திருச்சபையிலும் நிறைவு பெறும். இஃது இறைவன் மனிதனைத் தேடிச்செல்லும் மாபெரும் காவியமாகும்.

i) ஆபிரகாம் என்ற பெயருக்கு "இறைவன் உயர்ந்தவர்" என்றும், "பல இனத்தவருடைய தந்தை" என்றும் பொதுவாகப் பொருள் அளிப்பர். ஆபிரகாம் பாபிலோனிய மன்னன் கமுராபியின் காலத்தைச் சேர்ந்தவர் என்று கருத இடமிருக்கிறது (ஏறத்தாழ கி.மு. 19-18-ஆம் நூற்றாண்டுகள்). விவிலிய குலமுதுவர்கள் பற்றிய ஆதியாகம வரலாற்றுப்பின்னிலை, கி.மு. இரண்டாவது ஆயிரமாண்டுக் காலத்தின் முற்பகுதியைச் சேர்ந்த வட மெசபொத்தாமியாவின் நிலையோடு ஒத்துப்போவதாகத் தெரிகிறது. ஆபிரகாம் எமோரியர் இனத்தைச் சேர்ந்தவர். இவ்வினம் ஒருவகை நாடோடி இனமாகும். ஆபிரகாம் மெசபொத்தாமியாவிலிருந்து புறப்பட்டு கி.மு. 1900 - 1700-க்கு இடைப்பட்ட காலத்தில் கானான் பகுதியில் குடியேறியவர்களுள் ஒருவராவார். யாவே பாரம்பரியப்படி வட மெசபொத்தாமியா வாகிய "ஆராம் நகராயிமைச்" சேர்ந்த காரான் அபிராமின் ஊராகும். குருக்கள் பாரம்பரியப்படி தென் மெசபொத்தாமியாவின் கல்தேயத்தைச் சேர்ந்த "ஊர்" நகர் அபிராமின் ஊராகும். ஆய்வாளர்கள் கருத்துப்படி-அபிரம், தன் தந்தையின் தலைமையின் கீழ்க் கல்தேயத்தைச் சேர்ந்த ஊர் நகரிலிருந்து புறப்பட்டு, வட மெசபொத்தாமியாவிலுள்ள, காரான் நகரை அடுத்த பகுதியில் குடியேறினார். அங்கிருந்து, தமது உறவினர்களிடமிருந்து பிரிந்து, தம் சிறிய தந்தையின் மகனான லோத்தோடு கானானில் குடியேறினார். அபிராம் இப்படிக் குடியேறிய தற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம். அரசியல் பொருளாதாரக் காரணங்கள் குடியேறத் தூண்டியிருக்கலாம். ஆதி 14-13-இல் அபிராம் "எபிரேயன்" என்றழைக்கப்படுகிறார். இச் சொல்லுக்குப் பிற்கால ஆசிரியர்கள் "ஏபரின் வழித்தோன்றல்கள்" என்று பொருள் கொடுத்தனர்; மூலத்தில் "குடியேறியவர்" என்ற பொருள் இருந்திருக்கலாம். விவிலிய உரைப்படி, மறை காரணத்திற்காகக் கானானில் அபிராம் குடியேறியதாகத் தெரிகிறது. யாவேயின் கட்டளைக்குப் பணிந்து

மெசபொத்தாமியாவிலிருந்து அபிராம் புறப்படுகிறார் (ஆதி 12:1-4).

எழுபத்தைந்து வயதில், அபிராம் தம் நாட்டையும், தம் இனத்தையும், தம் தந்தையின் வீட்டைவிட்டுப் புறப்பட்டு இறைவன் காட்டவிருக்கும் நாட்டிற்குப் புறப்படுகிறார்.100 ஆண்டுகள் அலைந்து திரிந்தபின் தம் 175-ஆம் வயதில் இறக்கிறார். 100-ஆவது வயதில் அவருக்கு வாக்களிக்கப்பட்ட மகனான ஈசாக்கு பிறக்கிறான். இங்கே குறிக்கப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கை வெறும் கால அளவு மட்டுமன்று; அடையாளப் பொருளையும் உணர்த்துவதாகத் தெரிகிறது. 100 நிறைவேறலின் எண்ணிக்கையாகத் தெரிகிறது. 100-ஆவது வயதில் வாக்களிக்கப்பட்ட மகன் பிறக்கிறான். 100 ஆண்டுகள் அலைந்து திரிந்தபின் வாக்களிக்கப்பட்ட நாட்டை அபிராம் தமது உடைமையாக ஆக்கிக் கொள்ளுகிறார்.

இறைவன் "காட்டவிருந்த நாடு", "வாக்களிக்கப்பட்ட நாடு" என்ற கருத்து குலமுதுவர் நிகழ்ச்சியுரை முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறது. இக்கருத்து, பிற்காலத்தில், யாத்திரையின்போது, மோசேக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் ஒரு குறிக்கோளாகவும் தூண்டுதலாகவும் இருந்தது. பிற்கால விவிலிய ஆசிரியர்கள், அபிராமுக்கு நாடு பற்றி இறைவன் அளித்த வாக்குறுதியை யூத நாட்டின் வரலாற்றின் தொடக்கமாகவும் கருதுவர். இஃது ஒன்றே இக்கருத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும்.

2) லோத்தோடு புறப்பட்டு, மந்தைகளோடு நாடோடி வாழ்க்கை வாழ்ந்த அபிராம் கானான் நாட்டிலுள்ள மகிமைப்பள்ளத்தாக்கு எனப்படும் செக்கேம் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கே மீளவும் இறைவன் தமது வாக்குறுதியைப் புதுப்பிக்கிறார். செக்கேமிலிருந்து பெத்தேலுக்குச் சென்று சில காலம் தங்கினார். இரு இடங்களிலும் பீடம் எழுப்பி இறைவனைத் தொழுதார். பெத்தேலில் கொஞ்சம் பஞ்சம் ஏற்பட, எகிப்துக்குச் செல்லுகிறார். அழகியான தம் மனைவி சாராயியைக் கவர்ந்து கொள்ளும்பொருட்டு எகிப்திய மன்னன் தன்னைக் கொல்லக்கூடும் என்று அஞ்சிய அபிராம், சாராயியைத் தம் சகோதரி என்று கூறித்திரிகிறார். சாராயி பார்வோனின் அரண்மனைக்குள் கட்டாயமாகக் கொண்டு செல்லப்படுகிறாள். ஆனால் அவள் பொருட்டு அபிராம் அரசனுடையவும் பிறருடையவும் தயவைப் பெறுகிறார். அபிராமுக்குச் செய்யப்பட்ட அவமரியாதையைக் கண்டு இறைவன் தம் வாக்குறுதியை நினைவு கூர்ந்து பார்வோனின் வீட்டைக் கொடிய துன்பங்களால் தண்டிக்கிறார். உண்மையை அறிந்த பார்வோன், சாராயியை அபிராமிடம் திரும்ப அனுப்பிவிடுகிறான்.

அபிராமின் சொத்துக்கள் பெருகின. எகிப்திலிருந்து திரும்பிவந்து பெத்தேல் அருகில் தங்கினார். மந்தைகள் பெருக, லோத்தின் ஆட்களுக்கும் அபிராமின் ஆட்களுக்கும் பிணக்குகள் உண்டாயின. அதன் விளைவாக, சமவெளியை இருவரும் இருபகுதியாகப் பிரித்துக்கொண்டனர். இறைவன் மீண்டும் தோன்றி, அபிராமுக்குத்தம் வாக்குறுதியைப் புதுப்பிக்கிறார். அதன்பின் எபிரோனில் உள்ள மம்ரேயில் அபிராம் குடியேறுகிறார். இந்நிலையில் அபிராம் லோத்தைச் சிறைமீட்ட தீரச்செயல் ஆதி 14-இல் தரப்படுகிறது; இதை வாசித்தறியலாம். நாம் பெரும் பாலும் குலமுதுவர் வரலாற்றைத் தனிப்பட்டோரின் குடும்ப வரலாறாகக் கருதுகிறோம்; மதிப்பிடுகிறோம்; ஆனால் இவ்வதிகாரத்தில் வரும் அரசர்கள் பலருடையே நடக்கும் போர் போன்ற நிகழ்ச்சிகள், விவிலிய குலமுதுவர்கள் வாழ்ந்த காலத்தையும், வாழ்க்கைச் சூழ்நிலையையும் அரசியல் நிலையையும் எடுத்துக்காட்டுகின்றன. இந்நிகழ்ச்சியுரையில், அபிராம் ஒரு போர்த்தலைவராகத் தோன்றுகிறார். தன்னைவிட ஆற்றல் மிக்க படைப்பகுதி யொன்றைத் தாக்கி வெற்றி பெறுகிறார்.

சிலர் இக்கதை நாடு கடத்தப்பட்டபின் விவிலியப் பாரம்பரியத்தில் சேர்க்கப்பட்டது என்பர். தங்களின் மூதாதையரைப் பெருமைப்படுத்தும் பொருட்டு, பழமைமிக்க இலக்கிய நடையில், இவ்வீரக் கதையை விவிலிய

ஆசிரியர்கள் புகுத்தியிருக்கவேண்டும் என்பர். வேறு சிலர், இந்நிகழ்ச்சியுரை உண்மையான பழம் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட ஏடாகும் என்பர். ஏனெனில் இஃது இந்நிகழ்ச்சி நடந்ததாகக் கூறப்படும் காலத்திய மேற்கு ஆசியாவின் அரசியல் நிலையை எடுத்துக்காட்டுகிறது என்பர். இந்நிகழ்ச்சி பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. இந்நிகழ்ச்சியில் வரும் எந்த அரசர்களையும் நாம் வரலாற்றில் அடையாளம் தெரிந்து கொள்ளமுடியவில்லை. கி.மு. 2,000 - 1,600-க்கு இடைப்பட்ட காலத்தில், யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள பகுதிகளில் நகர வாழ்க்கையும் பண்பாடும் மிக இழிநிலையில் இருந்ததாகப் பிற மூலங்களிலிருந்து அறிகிறோம். கி.மு. 1900-1700-க்கு இடைப்பட்ட காலத்தில் எமோரியரிடமும் ஓரியர்களிடமும் இன எழுச்சி நிகழ்ந்துள்ளது. இவ்வாராய்ச்சிகளின்படி, இவ்வெழுச்சிகளோடு அபிராம் கானானில் குடியேறிய நிகழ்ச்சி ஒத்துப்போகிறது. இவ்வாராய்ச்சிகளின்படி, அபிராம், ஏறத்தாழ கி.மு. 1850-ஐ ஒட்டி எபிரோனில் குடியேறியிருக்க வேண்டும். இவ்விடத்தில் தங்கியிருந்தபோது, அரசர்களின் படையைத் தாக்கித் தம் தம்பி லோத்தைச் சிறை மீட்டிருக்கவேண்டும். இப்படிக் கூறும்போது அரசர்கள் பலரின் ஒன்றித்த படையை எதிர்த்துப் போரிட்டு வென்றார் என்ற பொருள் கொள்ளக்கூடாது. அபிராமின் நோக்கம்-தம் தம்பியை மீட்டலாகும். கைதிகளை நடத்திச் சென்ற பின்புறக் காவலர் படையைத் தாக்கி லோத்தை மீட்டு, அரசர்கள் படை கொள்ளையடித்த பொருள்களையும் கைப்பற்றியிருக்கவேண்டும். பிற மூலங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகளைக் கருத்தில்கொண்டு, இப்படிப்பட்ட நிகழ்ச்சி வரலாற்றில் நடந்திருக்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்வர். இது வெறும் வீரகாவிய மட்டுமன்று. பழம் மேற்காசியாவின் வரலாற்றோடு ஒன்றித்த நிகழ்ச்சியாகும். அபிராமின் வாழ்க்கைக் காலத்தை வரையறை செய்ய இஃதும் ஓர் உதவியாகும்.

3) லோத்தை மீட்டுத் திரும்பும்போது மறைபொருள் மிக்க மனிதர் ஒருவர் அபிராமை எதிர்கொள்ளுகிறார். "சாலேமின் அரசனும், உன்னத கடவுளின் குருவுமாய் இருந்த மெல்கிசெதேக்கு, கைகளில் அப்பத்தையும் திராட்சைரசத்தையும் ஏந்திவந்து" (ஆதி 14:18) அபிராமுக்கு ஆசீர் அளிக்கிறார். அபிராம், தாம் கைப்பற்றிய பொருட்களில் பத்தில் ஒரு பங்கை இக்குருவுக்குக் கொடுக்கிறார். இப்பொருட்களில் பிறருக்குச் சேரவேண்டியதை அவர்களிடம் ஒப்படைக்கிறார் அபிராம். இங்கே குறிக்கப்படும் சாலேம் நகர் எருசலேமைக் குறிக்கும் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். மெல்கிசெதேக்கு அப்பத்தையும் இரசத்தையும் பலியாக ஒப்புக்கொடுத்தார் என்பதற்கு உறுதியான சான்றுகள் இல்லை. போரிலிருந்து திரும்பிய வீரர்களுக்கு இவற்றை உணவாக அளித்திருக்கக்கூடும். ஆனால் பழம் மேற்காசியாவின் வழக்கில், தேறல்பலியும் (இரசப்பலி) மன்றாட்டுகளும் இல்லாத உணவு இல்லை. ஆகையால் உணவுக்குமுன் "உன்னத கடவுளின் குருவாகிய" மெல்கிசெதேக்கு பலியிட்டுச் செபம் செய்து அபிராமுக்கு ஆசிர் அளித்தார் என்று ஏற்றுக்கொள்ளலாம்.

குருவும் அரசனும் ஆகிய மெல்கிசெதேக்கு பல இறையியல் ஆராய்ச்சிகளுக்கு இடம் அளித்துள்ளார். சங்கீதத்தில் உன்னத கடவுளின் குருவும் அரசனுமாகிய "மெல்கிசெதேக்கின் முறைப்படி என்றென்றும் குருவென்று" மெசியா அரசர் அழைக்கப்படுகிறார் (சங் 109:4). மெல்கிசெதேக்கையும், இயேசுவையும் இணைத்து எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் கூறுவதை அதன் 7-ஆம் அதிகாரத்தில் வாசித்து அறியலாம். மெல்கிசெதேக்கு பற்றிய நிகழ்ச்சியுரை மிகப்பழங்காலப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். பிற்காலத்தைச் சேர்ந்த விவிலிய ஆசிரியர்கள் தங்கள் குலமுதுவரும் "இறைவனின் நண்பனும்" (எசா 41:8) ஆன அபிராமுக்கு இழிவு தருவதுபோன்ற நிகழ்ச்சியை, அதுவும் தாங்கள் வெறுத்த கானானிய அரசனிடமிருந்து ஆசீர்பெறுவது போன்ற நிகழ்ச்சியை, தங்கள் நூலில் புகுத்தியிருக்க மாட்டார்கள். ஆதி 14-இல் வரும் நிகழ்ச்சியுரை வரலாற்று அடிப்படை கொண்டது என்றும்,

அபிராமின் வாழ்வு கானானியர் அரசியல் பணித்திட்டத்தோடு பொருந்தியது என்றும் இக்கால விவிலிய ஆய்வாளர் ஏற்றுக்கொள்வர்.

4) இந்நிகழ்ச்சிக்குப்பின் இறைவனது வாக்குறுதி புதுப்பிக்கப்படுகிறது. அபிராமுக்கு ஒரு புதல்வன் பிறப்பான் என்று இறைவன் அருள்வாக்கு அளிக்கிறார். இறைவனது இவ்வாக்கை அபிராம் விசுவசிக்கிறார். இறைவன்பால் கொண்ட இந்த விசுவாசத்தால் அபிராம் விசுவாசிகளின் தந்தையென உயர்ந்து நிற்கிறார். இவ்விசுவாசத்தால் (மறைபொருள்மிக்க விதத்தில்) இறைவனோடு அபிராம் உறவு கொள்கிறார். இந்த உறவு அவரது வாழ்வையும் அவருடைய மரபினரின் வாழ்வையும் இறைவனோடு முழுமையாக இணைக்கிறது: பிணைக்கிறது. இறைவனே அபிராமோடு ஓர் உடன்படிக்கை செய்கிறார். இவ்வுடன்படிக்கையின் புறச்சடங்கு ஆதி 15-இல் விவரிக்கப்படுகிறது. இதை வாசித்து அறியலாம். சூரியன் மறையும் வேளையில் அபிராமுக்கு அயர்ந்த மறைபொருள் மிக்க தூக்கம் உண்டாயிற்று. இஃது ஏவாள் படைக்கப்பட்டபோது ஆதாம் அனுபவித்த ஆழ்ந்த உறக்கத்திற்கு ஒத்ததாகும். இத்தூக்கத்தில், மறைபொருள் மிக்க ஆன்மப்போராட்டத்திலே தம் மக்களுக்கு வரவிருக்கும் பழுவான ஊழைப்பற்றி அபிராம் முன்னுணர்வு பெறுகிறார். பகலவன் மறைகிறான். காரிருள் உலக மனைத்தையும் சூழ்கிறது. புகைகிற ஒரு சூளையும், நெருப்பு மயமான ஒரு ஒளிப்பிழம்பும் உடன்படிக்கை விலங்குகளின் துண்டங்களில் நடுவே உலாவி நின்றன. இச்சடங்கின் முடிவில் மீளவும் இறைவனது வாக்குறுதி புதுப்பிக்கப்படுகிறது. அபிராமின் வழிவந்தோரை இறைவன் பெருக்குவார். அவர்களுக்கு எகிப்தின் நதி முதல் யூப்பிரத்தீசு மாநதிவரையிலுள்ள நாட்டை உடைமையாகத் தருவார். இச்சடங்கு ஓர் உடன்படிக்கைச் சடங்காகும். அஃதோடு இறைவன் ஆணையிடுதலும் எச்சரிக்கை செய்தலுமாகும். இறைவாக்குரைஞர் எரேமியா இவ்வுடன்படிக்கைச் சடங்கை நன்கு அறிந்திருப்பதாகத் தெரிகிறது. "என் திருமுன் செய்யப்பட்ட உடன்படிக்கையை மீறி, அதன் உடன்பாடுகளை நிறைவேற்றத் தவறிய மனிதர்களை, இரண்டாக வெட்டப்பட்டு அவ்விருதுண்டங்களுக்கிடையே கடந்து செல்வதற்காகப் பயன்டுத்திய இளங்காளையைப் போல் ஆக்குவேன்" (எரே 34:18). உடன்படிக்கையை மீறுபவர்கள் துண்டிக்கப்பட்ட விலங்கைப்போல் ஆக்கப்படுவர். இச்சடங்கு "உடன்படிக்கையை வெட்டுதல்" என்றழைக்கப்பட்டது. இச்சடங்கு பழம் மேற்காசியாவில் வாழ்ந்த மக்களிடையேயும் வழக்கில் இருந்ததாகத் தெரிகிறது. பிற இன உடன்படிக்கைகளிலிருந்து அபிராம் - இறைவன் உடன்படிக்கை வேறுபடுகிறது. இறைவனே ஒளிப்பிழம்பாகத் தோன்றி உலாவித் தன்னுரிமையாக இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்கிறார். இதன் விளைவாக அபிராம் இறைவனோடு ஆற்றல் மிக்க பிணைப்புக் குள்ளாகிறார். இறைவனும், உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், தம்மை அபிராமோடும் அவரது வழித்தோன்றல்களோடும் பிணைத்துக் கொள்கிறார். இவ்வுடன்படிக்கை ஒரே ஒருதரம் செய்யப்பட்ட புறச்சடங்கால் நினைவு கூரப்படுவதன்று. இஃது அபிராமின் உடலிலேயே தங்கவேண்டும். இவ்வாறு இவ்வுடன்படிக்கை விருத்தசேதனக் கட்டளைக்கு இட்டுச்செல்கிறது. இதன்படி அபிராமின் வழித்தோன்றல்களில் ஆண்மகன் ஒவ்வொருவனும் விருத்த சேதனத்தைத் தன் உடலில் ஏற்று, இவ்வுடன்படிக்கையைத் தொடர்ச்சியாக எக்காலத்துக்கும் புதுப்பிக்கவேண்டும்.

5) புதல்வன் பற்றிய இறைவாக்கை நிறை வேற்ற, அபிராம் தனது மனைவி சாராயியால் உந்தப்பட்டு, குறுக்குவழியாக முயலுகிறார். அபிராமும் சாராயும் தங்கள் அடிமையான ஆகாரின் வழியாகப் பிள்ளைப்பேறு பெற முயலுகின்றனர். இஃது அக்காலச் சட்டமுறைக்கு ஒத்ததே. ஆனால் இறைவன் இதை ஏற்க மறுத்து, சாராயின் வழியாகப் பிறக்கும் மகனே வாக்குறுதியின் மகனாவான் என்று கூறுகிறார். ஆதி 16-இலும் 21-இலும் ஆகாரிடம் சாராயி நடந்துகொள்ளும் விதம் பொறாமையும்,

கொடுமையும் மிக்கதாய் நமக்குத் தோன்றலாம். ஆனால் சாராயியின் ஒவ்வொரு செயலும் அக்கால வாரிசுச் சட்டத்திற்கு முற்றிலும் ஒத்ததாகும். சாராயியின் இச்செயல்கள் வழியாக இறைவனது திட்டம் தனது குறிக்கோளை நோக்கி முன்னேறுகிறது.

ஆகார்வழியாக அபிராமுக்கு இசுமயேல் பிறக்கிறான். அபிராமின் தொண்ணூற்றொன்பதாவது வயதில், இறைவன், மீளவும் அபிராமுக்குத் தோன்றி, வாக்குறுதியைப் புதுப்பிக்கிறார். அபிராம் இனி ஆபிரகாம் என்றழைக்கப்படுவார். இதுவரை சாராயி என்றழைக்கப்பட்ட ஆபிரகாமின் மனைவி, இனி, சாரா என்றழைக்கப்படுவாள். அதற்குப்பின் ஆபிரகாம், இறைவன் கட்டளையிட்டபடி தம் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் அனைவருக்கும் விருத்தசேதனச் சடங்கை நிறைவேற்றுகிறார். இச்சடங்கை ஆபிரகாம் புதிதாகக் கண்டு பிடிக்கவில்லை. இஃது ஏற்கெனவே பல மக்களிடமிருந்த சடங்காகும். இன்று மகம்மதியர்களிடம் இப்பழக்கம் இருந்து வருகிறது. இஸ்ராயேலர் விருத்த சேதனம் செய்யாதவர்களைத் தூய்மையற்றவர்களாகவும், அவர்களோடு உறவு கொள்வதை இழிவாகவும் கருதியதாகத் தெரிகிறது. ஏற்கெனவே இருந்த ஒரு சடங்கை எடுத்து, புதுப்பொருள் அளித்து, தம் மக்களுக்குரிய அடையாளச் சடங்காக்குகிறார் ஆபிரகாம். விருத்தசேதனம், ஆபிரகாமின் மக்களுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள உடன்படிக்கையின் அடையாளமாக்கிற்று. உடன்படிக்கை, முதலில் இனப்பெருக்க ஆசிரின் வாக்குறுதியாக இருப்பதால், விருத்தசேதனம் தகுதியானதும் பொருள் மிக்க அடையாளமும் ஆகிறது. இச்சடங்கின் வழியாக ஆபிரகாமின் மக்கள் இறைவனுடைய உடைமையாகின்றனர். மக்களிடையே இஃது ஒரு வெறும் புறச்சடங்காக மாறிவிடும் ஆபத்து எப்போதும் இருந்து கொண்டே இருந்தது. இதை எதிர்த்து, மக்கள் விருத்தசேதனச் சடங்கைப் புறச்சடங்காகக் கொள்ளாமல், அகச்சடங்காகக் கொள்ள வேண்டும்; "உள்ளத்திலே செய்யும் விருத்தசேதனம்" தான், இஸ்ராயேலரை இறைவனுக்கு அன்புள்ளவர்களாக ஆக்கக்கூடும் (எரேமி; 9:25; 4:4; எசே 44:9; உப 10:16; 30:6).

6)இதற்குப்பின், இறைவன் மூன்று மனிதர் வடிவில் மீண்டும் ஆபிரகாமுக்குத் தோன்றி, விரைவில் சாராவின் வழியாக மகன் பிறப்பான் என்று அறிவிக்கிறார். பின், சோதோம் கொமோராவின் அழிவை முன்னறிவிக்கிறார். இந்நிகழ்ச்சியில் ஆபிரகாம் ஓர் இறைவாக்கினராகக் காட்டப்படுகிறார். இஸ்ராயேலரின் கருத்துப்படி, இறைவன் யாருக்குத் தம் திட்டத்தை வெளிப்படுத்துகிறாரோ, அவர் இறைவாக்கினர் ஆவார். "தம் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களுக்குத் தம் மறைபொருளை வெளிப்படுத்தாமல் இறைவனாகிய ஆண்டவர் எதுவும் செய்வதில்லை" (ஆமோ 3:7). சோதோம், கொமோராவைப் பற்றிய தமது தீர்ப்பை ஆபிரகாமுக்கு இறைவன் வெளிப்படுத்துகிறார். இத்தீர்ப்பைக் கண்டு எல்லா மக்களும் அஞ்சுவர். இவ்விரு நகரங்களைப்பற்றி ஆபிரகாம் இறைவனோடு பேரம் பேசுவது-இருவருக்குமிடையேயுள்ள நல்லுறவையும் ஆபிரகாமின் ஆன்மீக உயர்வையும் எடுத்துக்காட்டுகிறது. இறைவனின் இரு தூதர் சோதோமுக்குச் செல்லல், லோத்து அவர்களை விருந்தோம்புதல், நகர மக்களின் இழிவான ஒழுக்கக்கேடு ஆகியவை பற்றி ஆதி 19-இல் வாசித்தறியலாம். அந்நகரின் தீர்ப்புநேரம் வந்துவிட்டது. நகர் முழுவதிலும் பத்து நீதிமான்களைக் கூடக் காணமுடியவில்லை. ஆபிரகாமைச் சேர்ந்தவர்கள் மட்டும் காப்பாற்றப்படுவர். அவர்கள் நகரைவிட்டு வெளியேறியவுடன் இறைவன் சோதோம், கொமோரா "நகரங்களின் மேல் கந்தகமும், நெருப்பும் பொழியச் செய்தார். அந்நகரங்களையும் அவற்றைச் சுற்றிலுமுள்ள ஊர் முழுவதையும், அவற்றின் எல்லாக் குடிகளையும் நிலத்தின் எல்லாப் பயிர்களையும் அழித்தார்" (19:25). ஓடிப்போகும்போது, தயங்கித் திரும்பிப்பார்த்த லோத்தின் மனைவியும் அழிந்து போகிறாள்.

சோதோம், கொமோரா நகரங்கள் எங்கிருந்தன? ஆராய்ச்சியாளர்களில் பலர்

சாக்கடலின் தென்பகுதியில் உள்ள சித்திம் பள்ளத்தாக்கைக் காட்டுவர். ஒரு காலத்தில் பசுமைமிக்க பள்ளத் தாக்காக விளங்கிய இவ்விடம் கடலில் மூழ்கிக் கிடக்கிறது. இப்பகுதியில் பூமி அதிர்ச்சிகள் நடந்துள்ளன. நிலக்கரியும், நில எண்ணெய்ப் பொருள்களும் இயற்கையான எரிவாயுவும் நிறையைக் கிடைக்கின்றன. இந்நகரங்களின் அழிவு-பூமி அதிர்ச்சியும் எரிமலைக்கொதிப்பும் சேர்ந்த இயற்கை நிகழ்ச்சியாக இருந்திருக்கலாம். இயற்கையான எரிவாயுவும் நில எண்ணெய்ப் பொருள்களும் சேர்ந்து எரிந்ததால், "சூளையில் எழும் புகைபோலப் பூமியிலிருந்து புகை" கிளம்பியிருக்க வேண்டும் (19:28). இதையே விசுவாசமிக்க விவிலிய ஆசிரியர் இறைவனது தீர்ப்பாகக் காணுகிறார்.

7) லோத்து, அவருடைய இருபெண்கள் ஆகியவர்களைப் பற்றிய நிகழ்ச்சியை "உடல் இச்சையால்" நடந்த ஒழுக்கக் கேடு என்று கருதுவதைவிட, நம்பிக்கையற்ற, விடைகாண முடியாத, இருதலைக்கொள்ளி எறும்பு நிலையில், ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியதன் விளைவான ஒழுக்கக்கேடாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போது இப்பெண்களின் செயலை மனிதப் பண்போடு புரிந்து கொள்ளமுடியும். கெராரில் நடந்த நிகழ்ச்சியை, ஆபிரகாமுக்கு எகிப்தில் நடந்த நிகழ்ச்சியைப்போல் புரிந்து கொள்ளவேண்டும். இந்நிகழ்ச்சியுரையில் ஆபிரகாம் ஓர் இறைவாக்குரைஞர் என்பதால் சாரா திரும்பக் கொடுக்கப்படுகிறாள். அவருடைய மன்றாட்டில் ஆண்டவர் அனுப்பிய தண்டனை நீங்குகிறது. இவ்விதம், ஆபிரகாமுக்கு வாக்கு அளிக்கப்பட்ட ஆசிர், அவருக்கு உதவி செய்பவர் களுக்கும், அவர் யாருக்காக மன்றாடுகிறாரோ அவர்களுக்கும் பயன் அளிக்கிறது.

8) நிறைவை அடையாளமாக உணர்த்தும் 100-ஆவது வயதில் ஆபிரகாமுக்கு வாக்குறுதியின் மகன் பிறக்கிறான். ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளில், குழந்தைக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. சாராவின் வழியாக ஆபிரகாமுக்கு ஒரு மகன் பிறப்பான்; அவன் வழியாக ஒரு பெரும் மக்களினம் தோன்றும் என்ற வாக்குறுதி, ஆபிரகாமின் வரலாற்று நிகழ்ச்சியுரை முழுவதும் பரவிநிற்கும் கருத்தாகும். இதில் ஏழுபடிகளைக் காணலாம். ஏழு முழுமையைக் குறிக்கும் எண்; புனித எண்; இறைவனுக்குரிய எண் ஆகும். இவ்வெண்ணைப் பயன்படுத்தி இக்குழந்தை பிறப்பதில் அடங்கியுள்ள ஆழ்ந்த பொருளை ஆசிரியர் உணர்த்துகிறார். இவ்வேழு படிகள்: ஆதி 12:2; 13:15; 15:18; 17:5; 17:15; 18:10; 21:1. இந்த நீண்ட தயாரிப்பில் ஆழ்ந்த இறையியல் பொருள் உண்டு. ஈசாக்கின் பிறப்பில் இறைவனது ஆற்றல் மிக்ககரமே செயல் ஆற்றுகிறது. வயதில் முதிர்ந்த மலடி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள் என்ற கேட்டறியாத அருஞ்செயலுக்கு இறைவனே பொறுப்பு. இறைவனே சாராவுக்கு மகிழ்ச்சி அளிக்கிறார் (21:6).

அடுத்து, ஆகாரின் மகன் இசுமயேல், தனது மகன் ஈசாக்கோடு உடைமையுரிமைக்குப் போட்டியிடுவானோ என்று பயந்த சாரா, ஆகாரையும் இசுமயேலையும் வீட்டைவிட்டு வெளியே அனுப்பி விடுமாறு ஆபிரகாமைக் கேட்கிறாள். இஃது அக்காலச் சட்ட முறைப்படியே நடைபெறுகிறது. அடிமை ஆகார் தன்னுரிமை பெற்றுத் தன் மக்களிடம் செல்லுகிறாள். இசுமயேலுக்கும் ஆசிர் அளிக்கப்படுகிறது: "அவனையும் ஒரு பெரிய இனத்துக்குத் தலைவனாக்குவோம்" (21:13).

இறைவன் ஆபிரகாமோடு இருப்பதை அறியும் அபிமெலக்கு ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து கொள்கிறான். அதன்பின் ஆபிரகாமின் வாழ்வின் முடிநிலையாக அமையும் ஈசாக்கைப் பலியிடுமாறு கட்டளை வருகிறது. இந்நிகழ்ச்சி யைச் சரியான விதத்தில் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

9) இந்நிகழ்ச்சியைப் புரிந்துகொள்ள, "உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்துகொண்டேன்" (22:12) என்ற வாக்கு வழிகாட்டும். இத்தெய்வ பயம், ஒருவனை இறைவனுக்காக எதையும் செய்யவும்,

இறைவனது குரலுக்கு எப்போதும் எந்த அளவுக்கும் செவி சாய்த்து அதன்படி செயற் படவும் தயாராக இருக்கச் செய்கிறது; தன் தலைமகனையே பலியிடவும் செய்கிறது. இறைவனை ஏற்று அவருக்கு வணக்கம் செலுத்துவதற்கு இதைவிட உன்னதச் சான்று காட்டமுடியாது. இத்தகைய பலிகள் பற்றிய விவரிப்புகள் கானானியர் மத்தியில் காணக் கிடக்கின்றன.

தனது தலைமகனைப் பலியிட ஆபிரகாமுக்கு எழும் எண்ணம் ஒரு சோதனையே ஆகும். சோதனையென்றால் தீமையைத் தேர்ந்தெடுப் பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இப்பலிக்கு இறைவனே நேரடியாகக் கட்டளையிட்டதாக விவிலியம் கூறுவது உண்மை. விவிலியம் தரும் காட்சி, ஆபிரகாமின் உள்ளப் போராட்டத்தைச் சுருக்கமாகத்தான் தருகிறது. அதையும் இறைவனது நேரடிக் கட்டளையோடு பொருத்திக் கூறுகிறது. இந்தப் போராட்டத்தில் தவறு செய்யும் ஆபத்து உண்டு. அதை இறைவன் அனுமதிக்கலாம். அப்படி இறைவன் அனுமதிக்கும் ஒரு தீமையை இறைவனே செய்வதாகப் பிற இடங்களில் கூறப்படுவதை நாம் அறிவோம் (1 சாமு 16:14). இந்த மரபைப் பின்பற்றி, தவறான மனச்சாட்சியை இறைவனது குரலாகப் பொதுவாக வரைந்து காட்டுதல் விவிலிய வழக்கு ஆகும். இறைவன் தலைமகனது பலியைக் கோரவில்லை; இருப்பினும் ஒருசோதனையாக அனுமதிக்கிறார். அவரே அதைப் பெரும்பாலும் சரிப்படுத்துகிறார். மீக்கா ஆகமத்தில் இதற்கு இணையான பகுதியைப் பார்க்கிறோம். இறைவனுக்கு நிறைவான வணக்கம் செலுத்துவது எப்படி என்று இறைவாக்குரைஞரது உள்ளத்திலே போராட்டம் நிகழ்கிறது. "எதைக் கொணர்ந்து நான் ஆண்டவர் முன் வந்து உன்னதரான கடவுள் முன் பணிந்து நிற்பேன்?" (மீக் 6:6). தனது வணக்கத்தின் உன்னத அடையாளமாக மனித பலியைப் பற்றிச் சிந்திக்கிறார். "என் அக்கிரமத்தைப் போக்க என் தலைப்பேறான பிள்ளையை, என் ஆன்மாவின் பாவத்துக்காக என் வயிற்றுக் கனியாகிய குழந்தையைக் கொடுப்பேனா?" (மீக் 6:7). நாடோ, தனிப்பட்டோரோ வெகு இக்கட்டான நிலையில் இருக்கும்போது மனித பலியைப் பற்றிச் சிந்திக்கும் குறிப்புகள் பழைய ஏற்பாடு முழுவதும் காணப்படுகின்றன. தங்களின் குழந்தைகளைப் பலியிடுதல் பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் வருகிறது (2 அர 3:27; 16:3; 17:17). புதைப்பொருள் ஆராய்ச்சியும் இதை உறுதி செய்கிறது. விவிலிய காலத்துப் பிற இன வரலாற்றில் இப்பலிகள் காணப்படுகின்றன. இறையச்சமும் இறைப்பற்றுமுள்ள மனிதன் இப்பலியை ஓர் உயர் வழிபாடாகக் கருதியதில் வியப்பில்லை. ஒரு சோதனைக்குட்பட்டு, இப்படியே ஆபிரகாமும் எண்ணியிருக்க வேண்டும். ஆனால் ஆபிரகாமின் வரலாற்றில் இறைவன் சிறப்பான முறையில் இடையீடு செய்து, இப்பலியை நிறுத்துகிறார்; எல்லாத் தலைமுறைகளுக்குமே நிறுத்துகிறார். தவறான மனச்சாட்சியைத் திருத்துகிறார். ஆய்வாளர் கருத்துப்படி இந் நிகழ்ச்சியுரையின் போதகம்: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் இறைவன் மனிதபலியை விரும்பவில்லை.

இந்நிகழ்ச்சியுரையில் இறைவனோடு நெருங்கிய, உண்மையான ஆபிரகாமைச் சந்திக்கிறோம். ஈசாக்கைப் பலியிடத் தயாராக இருந்ததில், ஆபிரகாம் தனது மனித நம்பிக்கை, ஆற்றல் அனைத்தோடும் தன்னையுமே இறைவனிடம் சரணாக ஒப்படைக்கிறார். இஃது இறைவனது இதயத்தை உருக்குகிறது; உலக வரலாற்றில் ஆபிரகாம் வழியாக இடையீடு செய்ய இறைவனுக்கு வாய்ப்பளிக்கிறது. ஆபிரகாமும் அவருடைய வழித்தோன்றல்கள் அடையும் ஆசிருக்கு ஊற்றாகிறது. உலகமனைத்தும் ஆபிரகாம் வழியாக ஆசிர் பெறுகிறது. இந்நிகழ்ச்சியுரை தனது விசுவாசத்தால் இறைவனையே கட்டுப்படுத்திய மாபெரும் குலமுதுவரின் புகழ்ப்பாடலாகும். இவ்விறைவன் யார்?

10) ஆபிரகாமோடு விவிலியத் திருவெளிப்பாடு தொடங்குகிறது. ஆபிரகாமின் சிறப்பும் முதன்மையும் இதில் அடங்கியிருக்கிறது. ஆபிரகாம் இன்னும் மக்களால் நினைவு

கூரப்படுகிறார் என்பதற்கு, அவரோடு இறைவன்பேசினார், அவரில் மீட்பு வரலாறு புதியதொரு தொடக்கம் எடுக்கிறது என்பதைத் தவிர வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. இதை ஐயுற்றால், யூத, கிறிஸ்துவ விசுவாச மரபையே ஐயுறுவதாகும். ஆபிரகாமுக்குக் காட்சியளித்த இறைவன் முதலில் ஒரு குடும்பக் கடவுளாகத் தோன்றுகிறார். இவரை ஆபிரகாம், யாவே என்ற பெயரில் அறியவில்லை; "ஏல் சடாய்" என்ற பெயரில் அறிந்திருந்தார். இப்பெயருக்கு "யாவும் வல்லவர்" என்றும், "மலையில் வாழ்பவர்" என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விறைவன் நீதியுள்ளவர், நேர்மையுள்ளவர், தீமைகளைத் தண்டிப்பவர், உலகமனைத்தின் மேலும் வல்லமையுள்ளவர்; ஆபிரகாமுக்குக் கானானை உடைமையாகக் கொடுப்பவர். வழிபடுவோர் அவரை எளிதில் அணுகலாம். அவர்களின் மன்றாட்டுக்குச் செவிமடுத்து அருளுவார். பலிக் காணிக்கைகளை ஏற்றுக்கொள்வார். தமது ஆற்றலிலும் வாக்குறுதியிலும் மக்கள் நிபந்தனையற்ற விசுவாசம் கொள்ள வேண்டும்; தமக்கு வழுவாப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்று கோருவார், அவரும் பிரமாணிக்கம் தவறார். தாம் வாக்களித்ததை உறுதியாக நிறைவேற்றுவார். அவருக்குத் துணைவரோ, துணைவியரோ இல்லை, அவர் தானாகவுள்ளவர்; தனிச்சிறப்புடையவர்; ஒப்புவமையில்லாதவர். இப்படிப்பட்ட இறைவனை ஆபிரகாம் பல இடங்களில் பீடம் எழுப்பி வழிபட்டார். அவற்றில் சில செக்கேம், பெத்தேல், எபிரோன், மம்ரே, பெயேர்செபா முதலியவை.

11) விவிலிய மரபுப்படி ஆபிரகாம் மேற்காசிய மக்களைச் சார்ந்தவர்; பல மக்களினத்தாருடன் உறவுடையவர். அவரது சகோதரன் நாக்கோர் வழியாக அரமேயர்களோடும், அவரது மகன் இசுமயேல் வழியாக இசுமயேலரோடும், அவரது பேரன் யாக்கோபு வழியாக இஸ்ராயேலரோடும், மற்றொரு பேரன் ஏசா வழியாக ஏதோம் இனத்தவரோடும், அவருடைய இரண்டாவது மனைவி கெற்றூரா வழியாகப் பல அரேபிய இனத்தவரோடும் உறவு கொண்டவர். உண்மையிலேயே ஆபிரகாம் பல இனத்தவருக்குத் தந்தையாவார். இந்த ஊன் சார்ந்த உறவுகளால் ஆபிரகாம் பெருமைபெறவில்லை. முன் சொன்னதுபோல் இறைவனோடு நெருங்கிய உறவுடையவர், இறைவாக்குறுதியில் விசுவாசம் கொண்டு இறைவெளிப்பாட்டை உலகுக்கு அளித்தவர் என்பதனால் தான் பெருமை பெறுகிறார். அவரது மனைவி சாரா தனது 127-ஆவது வயதில் இறந்தாள். எபிரோனில் இரட்டைக்குகையை விலைக்கு வாங்கி அதில் அவளை ஆபிரகாம் அடக்கம் செய்தார். தனது மகன் ஈசாக்குக்குத் திருமணம் செய்தபின், தமது 175-ஆவது வயதில் எல்லா நன்மையிலும் முதிர்ந்தவராய் இறந்தார். அவரது மனைவி சாராவுக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார்.

12) ஆபிரகாமும் புதிய ஏற்பாடும்: மீட்பு வரலாற்றில் ஆபிரகாம் சிறப்பான பங்கு பெறுகிறார்; உண்மையான இறைவனை வணங்கியவருள் முதன்மையானவர். யாவேயுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர். அவ்வுடன் படிக்கையின் அடையாளம் விருத்தசேதனச் சடங்காகும். எல்லா மக்களும் தம் வழியாக ஆசிர் பெறுவர் என்ற உறுதிமொழி பெற்றவர். மீட்பு வரலாற்றை மீண்டும் தொடங்கி வைக்கும் இந்த உடன்படிக்கையும் உறுதிமொழியும் பிற்கால விவிலிய நூல்களில் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டப்படும். ஆபிரகாம் இறைவனது உறுதிமொழியில் விசுவாசம் கொண்டார். அஃது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது. யாவே தமது மீட்புத் திட்டத்தில் ஆபிரகாமுக்குச் சிறப்பான இடம் அளிக்கிறார். இஸ்ராயேலர்-ஆபிரகாம் என்ற பாறையினின்று செதுக்கப்பட்டவர்கள்; ஆபிரகாம் குழியினின்று வெட்டி எடுக்கப்பட்டவர்கள் (எசா 51:1-2). மீட்புத்திட்டத்தில் ஆபிரகாமின் பங்கை, மீட்பு நிறைவேறலோடு பொருத்தி மதிப்பிட வேண்டும்.

கிறிஸ்து மனித உருவெடுத்ததை, இயேசுவின் தாய் மரியாள், ஆபிரகாமுக்கு இறைவன் அளித்த உறுதிமொழியின் நிறைவேறலாகக் கண்டு களிக்கிறாள். "நம் முன்னோருக்கு அவர்

சொன்னதுபோல் ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும் என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம் அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்" (லூக் 1:54-55). திருமுழுக்கு யோவானின் பிறப்பின்போது, செக்கரியா இறைவனது இரக்கத்தை "நம் தந்தையாம் ஆபிரகாமுக்கு அளித்த உறுதிமொழியையும் தமது பரிசுத்த உடன்படிக்கையையும் நினைவு கூர்ந்தருளினார்" (லூக் 1:72-73) என்று பாடுகிறார். ஆபிரகாம் யூதர்களின் தந்தையாவார் (மத் 3:9). அவர்கள் அவர் வழிவந்தவர்கள் (யோவா 8:33). யோவா 8-இல் வரும் தர்க்கம் யூதர்கள் தாங்கள் ஆபிரகாமின் வழிவந்தோர் என்று பாராட்டிய பெருமையை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பதற்கு உடல் சார்ந்த விதத்தில் வழித்தோன்றல்களாக இருப்பது மட்டும் போதாது என்று இயேசு சுட்டிக்காட்டுகிறார். தாம் ஆபிரகாமையும்விடப் பெரியவர் என்றும் ஆபிரகாமுக்குமுன்பே தாம் இருப்பதாகவும் இயேசு உரிமை கொண்டாடுவதில் சொற்போர் உச்சநிலை அடைகிறது. பவுல் ஆதி 16:6-ஐ எடுத்துக்கூறி (உரோ 4:3; 9;8) ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாக இருப்பது உடலுறவால் வருவது அன்று; விருத்த சேதனத்தால் வரும் மரபு முறையும் அன்று; ஆபிரகாமுடையது போன்ற விசுவாசத்தால் வருவதாகும் (உரோ 4; எபி 11:17-19) என்று கூறுகிறார். கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வது ஒருவனை ஆபிரகாமின் உண்மையான பிள்ளையாக்குகிறது (கலா 3:29). நல்லோர் ஆபிரகாமின் மரபினரானதால், இறப்புக்குப்பின், மெசியாவின் விருந்தில் "ஆபிரகாமின் நெஞ்சத்தில்" இளைப்பாறுவர் (லூக் 16:22-23). பவுலின் போதகப்படி "ஆபிரகாமின் இரு மனைவியரும் இரு உடன்படிக்கைகளைக் குறிக்கின்றனர். ஒன்று-மோசேயால் சீனாய் மலையில் செய்யப்பட்டதாகும். இஃது அடிமைத்தனத்தின் உடன்படிக்கையாகும். ஆகார் இதைக் குறித்தாள். மற்றது-இயேசுவில் செய்யப்படும் விடுதலை உடன்படிக்கையாகும். திருச்சபையே, தன்னுரிமையுள்ள மனைவி சாராவால் குறிக்கப்படும், உறுதிமொழிகளுக்கு உரிமையான வாரிசு ஆகும் (கலா 4: 4-31). இப்போதனையைக் கேட்ட யூதர்கள், பவுலை நகருக்குப் புறம்பே தள்ளி, கல்லால் எறிந்து கசையால் அடித்ததில் வியப்பில்லை (அ.ப. 14;5).

மெல்கிசெதேக்கு கிறிஸ்துவின் அடையாளமாவார். இது கிறிஸ்துவின் உயர்தன்மையைக் காட்டுகிறது. ஏனெனில் ஆரோன் குருத்துவத்தின் முன்னோராகிய ஆபிரகாமிடமிருந்து மெல்கிசெதேக்கு பத்தில் ஒரு பங்கைக் காணிக்கையாகப் பெற்றார் (எபி 7:1தொ). திருச்சபையில் இது நற்கருணைப் பொருளோடு நோக்கப்பட்டது. கிறிஸ்துவின் பலிக்கு ஈசாக்கின் பலி ஒரு முன் எடுத்துக்காட்டாகக் கருதப்பட்டது. இப்பலி-நற்கருணைப்பலிக்கு அடையாளமாகக் கருதப்பட்டது. நற்கருணை வழிபாட்டில் "எங்கள் முதுபெருந்தந்தை ஆபிரகாமின் பலியையும் ஏற்றுக்கொண்டது போல் இவற்றையும் ஏற்றுக்கொள்ளும்" என்று திருச்சபை வேண்டுகிறது.

5. ஏ. **ஈசாக்கு:** இப்பெயருக்கு "இறைவன் சிரிக்கிறார்" அல்லது "இறைவன் (குழந்தைமேல்) புன்முறுவல் பூக்கிறார்" என்று பொருள் அளிக்கலாம். தமது முதிர்ந்த வயதில் ஈசாக்கைப் பெற்றெடுத்த சாராவின் சிரிப்போடும் (ஆதி 18:10-15;21-6), குழந்தையின் பிறப்பைக் கேட்ட மக்களின் மகிழ்ச்சியோடும் (21:6) இச்சொல்லின் பொருள் தொடர்புபடுத்தப்படுகிறது. ஆபிரகாம் ஒரு பெரும் மக்களினமாவார்; அவரும் அவருடைய மக்களும் பாலஸ்தீன நாட்டை உடைமையாகக் கொள்வார்கள் என்று ஆபிரகாமுக்கு இறைவன் உறுதிமொழி அளிக்கிறார் (12:7;13:14-17; 15:18-21). இதில் ஆபிரகாம் விசுவாசம் கொண்டார். அவ்விசுவாசத்தின் விளைவாக இறை உறுதிமொழியின் உரிமையாளனாக ஈசாக்கு பிறக்கிறார் (ஆதி 17:15-21; உரோ 9:7).

குலமுதுவர் ஆபிரகாமோடு ஈசாக்கு கொண்டிருந்த தொடர்புடைய நிகழ்ச்சிகளை ஏற்கெனவே பார்த்துவிட்டோம். ஆபிரகாம் பிற இனப்பெண்களோடு கொண்ட உறவால் அவரின்

மரபு தீட்டுப்பட்டுவிட்டது. இறை உறுதிமொழியின் மகனான ஈசாக்குக்கு அக்கதி நேரக்கூடாது என்று எண்ணிய ஆபிரகாம், காரானில் உள்ள தன் உறவினரிடமிருந்து ஈசாக்குக்குப் பெண்பார்க்க, தமது ஊழியனை அனுப்புகிறார். இந்த இன்பக்கதையை ஆதி 24-இல் வாசித்தறியலாம். இதன் விளைவாக நாக்கோரின் பேத்தி ரபேக்கா, ஈசாக்கின் மனைவி ஆகிறார். இவ்விருவருக்கும் ஏசாவும், யாக்கோபும் பிறக்கின்றனர். இனி ஈசாக்கின் வாழ்வு யாக்கோபின் வாழ்வோடு தொடர்புபெறுகிறது. இந்நிகழ்ச்சிகள் யாக்கோபின் வாழ்வில் தரப்படும்.

ஈசாக்கைப் பற்றிய நிகழ்ச்சியுரைகள் ஒன்று அவரது தந்தையைப்பற்றியது அல்லது அவரது மகன் யாக்கோபைப் பற்றியதாகும். அவையும் அவருக்காகவே விவரிக்கப்படவில்லை; அவரின் தந்தையோடும், மகனோடும் கொண்டிருந்த உறவுக்காகவே அவை விவரிக்கப்படுகின்றன. பிறரோடு ஒப்பிடப்படும்போது, ஈசாக்கு தனித்தன்மை உடையவர் அல்லர்.

ஈசாக்கு தம் தந்தைக்கு இறப்புவரை பணிவாகக் கீழ்ப்படிதலும், அவரை இறைவன் காப்பாற்றுவதும், திருச்சபை வரலாற்றில் கிறிஸ்துவின் பலிக்கும் உயிர்ப்புக்கும் எடுத்துக்காட்டாகக் கருதப்பட்டன (எபி 11;17-19). ஈசாக்கு உடலுறவால் மட்டுமல்லாது, இறை உறுதிமொழியில் ஆபிரகாம் கொண்ட விசுவாசத்தாலும், ஆபிரகாமின் மகனாகிறார் என்பதில் பவுல் ஈசாக்கைப் புற இனக் கிறிஸ்துவர்களுக்கு எடுத்துக்காட்டாகக் காண்பிக்கிறார் (உரோ 9:7; கலா 4:23-31).

5. ஐ. யாக்கோபு: இச்சொல்லுக்குப் பொருள் கூறுவது கடினம். இது குதிக்காலோடு தொடர்புடையதாகத் தெரிகிறது (ஆதி 25:26). இச்சொல்லுக்குக் "கால்வாரி விடுதல்", "பிறர் உரிமைபறித்தல்" என்பனபோன்ற பொருள் அளிக்கலாம் (ஆதி 27:36; ஓசே 12:3). விவிலிய ஆசிரியர் இச்சொல்லுக்குத் தெளிவான பொருள் கொடுக்கவில்லை. ஒருவேளை, யாக்கோபு என்ற பெயருக்கு "இறைவன் காப்பாற்றுகிறார்" என்ற பொருள் இருந்திருக்கலாம். யாக்கோபு இஸ்ராயேல் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார். இச்சொல்லுக்கும் தெளிவான பொருள் கொடுக்கமுடியாது. இதில் விவிலிய ஆசிரியருக்கு அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை. "கடவுளோடு போராடி மேற்கொண்டவன்" என்ற பொருள் அளிக்கலாம். யாக்கோபை இறைவன் தேர்ந்தெடுத்தலையும், அவரது வழிவந்தோரான இஸ்ராயேலர்களை உயர்த்தி, ஏசாவையும் அவனது வழிவந்தோரான ஏதோமியரையும் தாழ்த்தி, இவர்களின் பிறப்புரிமை பறித்த நிகழ்ச்சியையும் சிறப்பித்துக் கூறவே ஆசிரியர் விழைகிறார் எனலாம்.

யாக்கோபின் வரலாறு பற்றிய விவிலிய விவரிப்பை ஆதியாகமத்தில் வாசித்தறியலாம். இங்கு இரு நிகழ்ச்சிகளை மட்டும் சில குறிப்புகளுடன் தருகிறோம். தமது சகோதரன் ஏசாவின் பழிவாங்கும் நோக்கத்திலிருந்து தப்பிக்கவும், தம்முடைய உறவினரிடையே யிருந்து ஒரு மனைவியைத் தேர்ந்தெடுக்கவும், யாக்கோபு காரானில் உள்ள தம் மாமனிடம் ஓடிப்போய்க்கொண்டிருக்கிறார். பெத்தேல் என்ற இடத்தில் உறங்கும் போது ஒரு கனவு காண்கிறார் (ஆதி 28:12-15). தாம் செய்த தவறுகளுக்குச் சபிக்கப்பட்ட மனிதனாக ஓடிப்போய்க் கொண்டிருக்கும் யாகோபுவுக்கு, இறைவன் கனவில் தோன்றி, அவரைத் தேற்றுகிறார்; ஊக்கம் அளிக்கிறார்; உறுதிமொழி அளிக்கிறார். இக்காட்சி யாக்கோபு இறைவனுடைய பாதுகாப்பில் இருப்பதற்கு உறுதி அளித்து, இறைவனில் அவர் கொண்ட விசுவாசத்தை ஊக்குவிக்கிறது. இந்த அனுபவத்தின் சமய நினைவுச்சின்னமாக, தலைக்கு வைத்திருந்த கல்லை நாட்டி, அதன்மேல் எண்ணெய் வார்த்துத் திருநிலைப்படுத்துகிறார்.

யாக்கோபின் மற்றொரு சிறப்பான இறை அனுபவம், யாபோக்கு ஆற்றின் துறையில் "இறைவனுடன் போரிட்டதாகும்". தம் மாமன் லாபானைப் பிரிந்து, யாக்கோபு தன் மனைவியர், பிள்ளைகள், உடைமைகள் அனைத்தோடும் கானானுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறார். யாபோக்கு ஆற்றங்கரையில் மறைபொருள்மிக்க ஓர் ஆடவன் பொழுதுவிடியுமட்டும் யாக்கோபுடன் போராடினார். இதை ஆதி 32:23-32-இல்

வாசித்தறியலாம். இந்த அனுபவம் மீட்பு வரலாற்றில் அடிப்படை முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகும். இதில் யாக்கோபு இறைவனிடமிருந்து இஸ்ராயேல் என்ற பெயரைப் பெறுகிறார். ஏனெனில் "நீ கடவுளோடு போராடி மேற்கொண்டாய் என்றால், மனிதர்களை மேற்கொள்வாய் என்று சொல்லவும் வேண்டுமா," என்று யாக்கோபிடம் இறைவனே கூறுகிறார். இந்நிகழ்ச்சி போன்ற மற்ற நிகழ்ச்சிகளோடு (நீதி 6:11;13:3)இதை ஒப்பிடும்போது, யாக்கோபுடன் போராடிய ஆடவன், ஒரு வெறும் வானதூதர் அல்லர்; இறைவனே என்பது தெளிவாகும். இறைவன் யாகோபை ஆசிர்வதிப்பதோடு இவ்வனுபவம் முடிகிறது. இந்த அனுபவம், யாக்கோபு தம்மையே இறைவனுக்கு முழுவதும் ஒப்புக்கொடுக்கவும், அவரை முழுவதும் விசுவசிக்கவும் நம்பவும் செய்கிறது. அவ்விடத்திற்கு "இறைவன் திருமுகம்" என்று பொருள்படும் பெனியேல் என்று பெயரிடுகிறார்.

யாக்கோபு பற்றிய நிகழ்ச்சியுரைகள், வெளித்தோற்றத்திற்கு, இஸ்ராயேலின் குலமுதுவரான ஒருவருடைய சொந்த தீரச்செயல்கள் பற்றிய நேரடியான பாரம்பரியமாகத் தோன்றலாம். ஆனால் இக்குல முதுவர் வாழ்வு, பல பாரம்பரியப் பொருள்களை ஒன்றாய்ச் சேர்த்து, இறைவனுடைய மீட்புத் திட்டத்தோடும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினத்தோடும் அவர் கொண்டிருந்த உறவின் சிறப்புப் பொருளை எடுத்துக்கூறப் பயன்படுகிறது. விவிலிய ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியுரைகளை மனம் போன போக்கில் படைக்கவில்லை என்று நாம் உறுதியாகக் கூறலாம். தொல்பொருள் ஆராய்ச்சிகள் இந்நிகழ்ச்சியுரைகளின் உண்மையான வரலாற்று நிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன. இதற்குமேல், இந்த வாழ்க்கை நிகழ்ச்சியுரைகள், வரலாற்றைக் கடந்த ஒன்றை உணர்த்துகின்றன. குலமுதுவரின் வாழ்வை விவரிக்கும்போது, அவர் காலத்து மக்களின் பண்பையும் போக்கையும் விவிலியம் சுருக்கமாக எடுத்துக்கூறி மதிப்பீடு செய்கிறது. யாக்கோபின் வஞ்சகச் சூழ்ச்சி, தீமை செய்யத் தயங்காமை, பலவந்தம் செய்யத் தயாராக இருத்தல் முதலிய இவையாவும் அக்கால மக்களின் பொதுப்பண்பாகக் காட்டப்படுகின்றன. இவை மீட்புபற்றிய இறைத்திட்டத்தைத் தடை செய்கின்றன; கடும் துன்பத்திற்கு இட்டுச் செல்லக்கூடும். சான்றாக, தலைச்சன் பிள்ளைக்குரிய ஆசிரை யாக்கோபு மோசடி செய்து ஏமாற்றி அடைதல், அதன் விளைவான அபாயத்தை யாக்கோபின் வாழ்விலும் அவர் வழிவந்தோர் வாழ்விலும் கொண்டுவருகிறது. இவற்றில் விவிலிய ஆசிரியர் மக்களின் பொதுவான தீய குணங்களைக் கண்டிக்கிறார். மாறாக, இறைவனது திட்டத்தை விசுவாசத்தோடு ஏற்று நடப்பது இன்றியமையாதது என்று தெளிவாகக் கற்பிக்கிறார்.

இந்நிகழ்ச்சியுரைகள் தனிப்பட்டோரது வரலாறு என்பதைவிட, இவை ஒரு சமயபோதகம் என்பது சால்புடையதாகும். இதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். யாக்கோபு வஞ்சகம் மிக்கவர்; ஏமாற்றுவதில் வல்லவர்; தம் உடன்பிறந்தான் ஏசாவை ஏமாற்றுகிறார்; தந்திரத்தால் தம் தந்தை ஈசாக்கிடமிருந்து தலைமகனுக்குரிய ஆசிரைப் பெறுகிறார்; தம் மாமன் லாபானை விடத் தான் தந்திரக்காரன் என்று காட்டுகிறார். ஆனால் அவர் பிறக்கும் முன்னே ஏசாவை விட்டுவிட்டு, அவரை இறைவன் தேர்ந்தெடுத்திருக்காவிடில் அல்லது ஆபிரகாமோடு செய்த உறுதி மொழியையும் உடன்படிக்கையையும் அவரோடும் இறைவன் புதுப்பித்திருக்காவிட்டால், அவரின் சூழ்ச்சித் திட்டங்கள் எல்லாம் ஒன்றுமில்லாது போயிருக்கும். பெனியேல் என்ற இடத்தில் யாக்கோபு இறைவனோடு போராடியது, அவர் மனந்திரும்புதலைக் குறிப்பதாக விளக்குவர் அறிஞர். இதுவரை தம் ஆற்றல், தந்திரம், உடல்வலு முதலியவற்றில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார் (ஆதி 29:2-30:10). இந்த இயற்கையான போக்குகள் அழிந்து, இறைவனின் எல்லா வல்லமையிலும், எல்லாம் அறியும் ஆற்றலிலும் வேரூன்றிய ஆழ்ந்த இறை நம்பிக்கை அவரில் பிறக்கிறது. இந்த நம்பிக்கை மீட்பு வரலாற்றைத் தொடரச் செய்கிறது.

இவ்வரலாற்று நிகழ்ச்சிகளில் கவனிக்க வேண்டியதொன்றுளது. சில இடங்களில், இந்நிகழ்ச்சியுரைகள், பதிப்பிக்கப்பட்ட காலத்தில் நடந்தவை, முன்னறிவிக்கும் முகத்தால் இந்நிகழ்ச்சியுரைகளில் இடம் பெறுகின்றன. சான்றாக, தாவீது அரசன் காலத்தில்தான் இஸ்ராயேலர் ஏதோமியரை மேற்கொண்டு அவர்கள் நாட்டைக் கைப்பற்றினர். இதைக் கருத்தில் கொண்டு, யாக்கோபு என்ற பெயருக்கு "மேற்கொள்ளுதல்" என்ற பொருள் அளிக்கப் படுகிறது. பிற்கால இனத்தூய்மைக் கருத்தை மனத்திற்கொண்டு, யாக்கோபு பாதான் ஆராமிற்கு ஓடிப்போதல் (ஆதி 27:46; 28:5) இனத்தூய்மையில் குலமுதுவர் அக்கறை காட்டியதாக அழுத்திக் கூறப்படுகிறது. பிற்காலத்தைச் சேர்ந்த கலப்புமண எதிர்ப்புக் கொள்கையைத் தொடங்கி வைத்தவராக யாக்கோபு வரைந்து காட்டப்பெறுகிறார்.

பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் யாக்கோபு என்கிற பெயர் இஸ்ராயேல் இனத்தைக் குறிக்கப் பயன்படுகிறது. புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆபிரகாம், ஈசாக்கோடு சேர்த்துக் கூறப்படுகிறார்; இயேசு, பெத்தேலில் யாக்கோபு கனவுக்காட்சியில் கண்ட ஏணியோடு தம்மை ஒப்பிடுகிறார் (யோவா 1:51). புனித ஸ்தேவான் யூதத்தலைமைச் சங்கத்தின் முன் பேசியபோது யாக்கோபின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டுகிறார் (அ.ப. 7:8-16). புனித பவுல் ஏசாவிடமிருந்து யாக்கோபுக்குப் பிறப்புரிமை மாற்றப்படுவதை இறைவனது தன்னுரிமைத் தேர்தலுக்கு எடுத்துக்காட்டாகக் காண்கிறார் (உரோ 9:10-13).

5. ஓ. யோசேப்பு: இப்பெயருக்கு "வளரட்டும்" அல்லது "சேர்க்கட்டும்" என்று பொருள் கொடுக்கலாம். வீரமாமுனிவர் "வளனார்" என்று மொழிபெயர்க்கிறார்.

யாக்கோபு தம் தந்தையரைப்போல், கானானில் உள்ள மம்ரேயில் தங்கிப் பாதி நாடோடி வாழ்க்கை நடத்தினார்; பயிர்த்தொழில் செய்துவந்தார். அவரின் மக்கள் அவருடைய மந்தைகளைக் கவனித்து வந்தனர். யோசேப்பு யாக்கோபின் பதினோராவது மகன். யாக்கோபின் அன்பு மனைவி ராகேலின் முதல் மகன் (ஆதி 30:22-24). யாக்கோபு யோசேப்பிடம் மிக அன்பு பாராட்டி வந்தார். இதுவும் யோசேப்பு கண்ட கனவுகளும் அவரை அவர் சகோதரர்களின் பொறாமைக்குப் பலியாக்கியது. சகோதரர்களால் இசும யேலர்களுக்கு இருபது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டு யோசேப்பு, எகிப்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டார் (37:28). அங்குச் சிறைபட்டு, பல இன்னல்கள் அடைந்து. பின் உயர்ந்தமனிதராக எழுச்சியடைகிறார். பழிவாங்கும் எண்ணம் அவரிடம் இல்லை. தமக்கு அளிக்கப்பட்ட இறைத்தூதையும் நோக்கத்தையும் முற்றும் உணர்ந்த மனிதராகத் திகழ்கிறார். ஏனெனில் "ஆண்டவர் யோசேப்போடு இருந்தார்" (39:2). பார்வோனின் கனவுகளுக்கு விளக்கம் அளித்து, அதன் விளைவாக எகிப்து நாட்டின் ஆளுநராக உயர்வுபெறுகிறார். பூபாலன் என்ற பெயரில் பார்வோனுக்கு அடுத்த உயர்நிலைக்கு உயர்த்தப்படுகிறார். யோசேப்பு போற்றிபெராவின் மகள் ஆசினத்தை மணந்தார். அவள் அவருக்கு மனாசே, எப்பிராயிம் என்ற இருபிள்ளைகளைப் பெற்றளித்தாள். யோசேப்பின் ஆற்றல் மிக்க ஆட்சியின்கீழ் எகிப்து பஞ்சத்தை எதிர்த்துப் போராடியது. எகிப்தைத் தாக்கிய பஞ்சம், கானான் நாட்டையும் தாக்கியது. பஞ்சத்தின் கொடுமையின் கீழ்த் துன்புற்ற குலமுதுவர் யாக்கோபு தம் பிள்ளைகளை எகிப்துக்கு உணவு வாங்கி வர அனுப்பினார். யோசேப்பு, நம்பிக்கைக்கேடு செய்த தம் சகோதரர்களைத் தேர்ந்து தெளிந்தார். தம் உடன் பிறந்த தம்பிக்கும் தந்தைக்கும் தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டினார். இப்பெருங்கதை நிகழ்ச்சியுரை, யோசேப்பு தம் சகோதரர்களுடன் மகிழ்ச்சியோடு ஒன்றுசேர்ந்த நிகழ்ச்சியோடு முடிகிறது. பார்வோன் இசைவுடன் யோசேப்பின் தந்தையும் சகோதரர்களும் எகிப்திலேயே தங்கினர். பேராற்றுக் கழிமுகத்தில், வடக்கிலுள்ள கோசேன் பகுதியில் தங்கித் தங்களது ஆயர் தொழிலைச் செய்தனர்.

யோசேப்பை இறைவன் தமது மீட்புத்திட்டத்தில் சேர்த்துக் கொள்கிறார். பல இன்னல்கள் அடைந்தாலும் அவரது வாழ்வில் பழிவாங்கும் எண்ணமில்லை. எகிப்திற்குத் தாம்,

அனுப்பப்பட்டதில் இறைபாலிப்பே அவர் எண்ணத்தில் நிறைந்து நிற்கிறது. "நீங்கள் என்னைக் கெடுக்க, சதியாலோசனை செய்தீர்களே! ஆனால் கடவுள் தீமையை நன்மையாக மாற்றி, பல இனத்தாரைக் காப்பாற்றத் தக்கதாக, நீங்கள் இந்நேரம் தெளிவாய்க் கண்டறிந்தபடி என்னை உயர்த்தினார்" (50:20). யோசேப்பு, எகிப்தில் தங்கியதால் இஸ்ராயேல் மீட்படைகிறது (45:7); இஸ்ராயேல் மக்கள் காப்பாற்றப்படுகின்றனர். இக்கதையில் இறைவனது மறைமுகமான ஆதிக்கம் பரவி நிற்கிறது. இறைவன் தமது அருள்பாலிப்பால் இஸ்ராயேல் வரலாற்றை எகிப்திய வரலாற்றோடு பின்னிப் பிணைக்கிறார். யோசேப்பின் முழுவரலாறும் ஒரே கருத்தை மையமாகக் கொண்டுள்ளது: "ஆண்டவர் அவரோடு இருந்தார்" (30.2,3.21.23;41:39). ஆனால் இக்கதையை ஆதியாகமத்தில் முன் சென்றவற்றோடு ஒப்பிடும்போது, இக்கதையில் இறைவன் நேரடியாக, புலனறிவு சார்ந்த விதத்தில் இடையீடு செய்து செயல்படுவதற்கு அடையாளங்கள் இல. புதிய இறைவெளிப்பாடு ஒன்றுமில்லை. யோசேப்பு "ஞானத்தின் மகன்" என்றழைக்கப்பட்டார். ஞானியின் நற்செயல்கள் வெகுமதிபெறும், மனிதகுறைகளையும் இறையருள் பயனுள்ள விதத்தில் மாற்றவல்லது என்பன போன்ற சமயபோதகங்களை மனதில் ஆழமாகப் பதியவைப்பதே இக்கதையின் சிறப்பான நோக்கமாகும்.

யோசேப்பைப் பற்றி ஏற்பாட்டில் ஒரு சில குறிப்புகளே உள்ளன. யோவா 4:5-இல் யோசேப்புக்கு யாக்கோபு அளித்த நிலம் குறிப்பிடப்படுகிறது. அ.ப. 7:18-19-இல் ஸ்தேவான் யோசேப்பின் வரலாற்றை எடுத்துக் கூறுகிறார். எபி 11:21-22-இல் யோசேப்பின் விசுவாசம் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

யோசேப்பின் காலத்தை வரையறுத்துக் கணிக்கமுடியாது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆசிரியர்கள் யோசேப்பின் கதைக்கு வரலாற்று அடிப்படையில்லை என்று கூறுவது வழக்கமாக இருந்தது. ஆணவம் பிடித்த எகிப்தியர்கள் ஒரு செமித்தியனைத் தங்களின் முதல் அமைச்சராக, அல்லது ஆளுநராக ஏற்றுக்கொள்வர் என்பது நினைத்துப் பார்க்க முடியாததொன்றாகும்; ஆகையால் ஆதியாகம நிகழ்ச்சியுரைகளை வெறும் கதைகள் அல்லது நாட்டுப்பாடல் போன்ற இலக்கிய அமைப்பாகக் கருதவேண்டும் என்று அறிவியல்வாத விளக்கவுரையாளர் முடிவுசெய்தனர். இந்த அறிவியல்வாத விளக்கங்களும் முடிவுகளும் அடிப்படையற்றவை என்று பிற்காலத்து ஆராய்ச்சிகள் காட்டியுள்ளன. ஏனெனில் யோசேப்பின் காலத்து எகிப்து, உண்மையிலேயே செமித்தியர் ஆட்சியின்கீழ் இருந்ததாக அறிஞர்கள் காட்டியுள்ளனர். இதற்கு எகிப்தியர் வரலாறு சான்று கூறுகிறது. யோசேப்பின் வரலாற்றை எழுதிய எபிரேய ஆசிரியர் எகிப்திய மூலத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று அறிஞர் சிலர் எண்ணுவர். ஆகையால் ஓர் இளைய சகசெமித்தியனைத் தங்கள் ஆளுநராக அல்லது முதல் அமைச்சராகப் பயன்படுத்தினர் என்பதற்கு மறுப்புக் கூறமுடியாது.

கி.மு. 20-ஆம் நூற்றாண்டில் பழம் மேற்காசியாவில் நாடோடி வாழ்வு தோன்றிப் பரவியிருந்தது என்று தொல்பொருள் ஆராய்ச்சிகள் தெளிவாகக் காட்டியுள்ளன. உடல்வலிமை மிக்க பாதி நாடோடி வாழ்க்கையுடையவர்கள் பாலையின் ஓரங்களிலிருந்து நாகரிகம் வளர்ச்சி பெற்றிருந்த பகுதிகளைத் திடீரென்று தாக்கி வந்தனர். இது பல நூற்றாண்டுகளாக நடந்துவந்த ஒன்றாகும். இவற்றில் ஒன்று கி.மு. 1720-ஐ ஒட்டி எகிப்தின்மேல் கைக்சோஸ் இனத்தினர் நடத்திய தாக்குதலாகும். கி.மு. 260-ஐ ஒட்டி வாழ்ந்த எகிப்திய வரலாற்று ஆசிரியர் மனேதகோ, கைக்சோஸ் என்பவர்களை "ஆயர் அரசர்கள்" என்னும் பொருள்படத் தவறாக விளக்கம் அளித்துச்சென்றார். இவ்விளக்கம் நவீனகாலம் வரை பலரால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இச்சொற்றொடர் எகிப்தியச் சொற்றொடர் என்றும், அதன் பொருள். "அன்னிய ஆளுநர்" என்றும் இப்போது ஆய்வாளர்கள் கூறுவர். இப்படிப் படையெடுத்து எகிப்தில் நுழைந்தவர்கள் உண்மையிலேயே செமித்தியர்கள் என்பது பல

செமித்தியப் பெயர்களிலிருந்து உறுதியாகத் தெரிகிறது என்பர் ஆய்வாளர். இப்பெயர்களில் பல தடவை வருவது யாக்கோபு என்பதாகும் என்று கருத இடமிருக்கிறது.

எகிப்து முழுவதையும் கைக்சோஸ் இனத்தவர் கட்டுப்படுத்தி ஆண்டனர் என்று உறுதியாகக் கூறமுடியாது. இவர்கள் வட எகிப்திலேயே தங்கிவிட்டதாகத் தெரிகிறது. அங்கே தங்கியிருந்து தங்களது ஆட்சியையும், ஆதிக்கத்தையும் செலுத்தி வந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தங்களின் சக செமித்தயருள் ஒருவனான யோசேப்பு போன்ற ஞானமிக்க இளைஞரை ஆளுநராக அல்லது முதல் அமைச்சராக மக்களும் மன்னனும் ஏற்றுக்கொள்வதில் வியப்பில்லை. காலப்போக்கில் உள்நாட்டில் வாழ்ந்த எகிப்தியரின் ஆற்றல் தீபன் ஆல்மோசின் தலைமையில் வலுப்பெற்றது. இவன் வெறுக்கப்பட்ட செமித்திய அன்னியரை எகிப்திலிருந்து விரட்டினான். இந்நிகழ்ச்சி கி.மு. 1570-ஐ ஒட்டி நடந்திருக்கக்கூடும் என்று கருத இடமிருக்கிறது. ஆனால் பல செமித்தியர்கள் எகிப்திலேயே தங்கிவிட்டனர் என்பது செமித்தியப் பெயர்களைக் கொண்ட பல இடங்களில் வட எகிப்தில் காணப்படுவதிலிருந்து தெளிவாகிறது. அப்படித் தங்கியவர்களுள் யாக்கோபின் வழிவந்தோரும் உள்ளடங்குவர். கைக்சோஸ் இனத்தாரின் தோல்வியால் இவர்கள் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை; தங்களது ஆயர் தொழிலுடன் சிறிது வேளாண்மைத் தொழிலையும் அமைதியாகச் செய்து வந்ததாகத் தெரிகிறது. தொல்பொருள் ஆய்விலிருந்து, யோசேப்பு கைக்சோஸ் காலத்தில் (கி.மு. 1720-1570) வாழ்ந்திருக்கக்கூடும் என்று கூறலாம்.

யோசேப்பின் வரலாற்றில் பெரும் பகுதி யாவே பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். இஃது, இப்பாரம் பரியம் வீர காவியத்தை சொல்லும் கலையில் தலைசிறந்தது என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆதியாகமம்-யோசேப்பின் இறப்பு, அடக்கத்தோடு முடிகிறது. இத்துடன் மீட்பு வரலாற்றில் ஒருபடி முடிகிறது எனலாம்.

6. ஆதியாகமத்தின் வரலாறும் அதன் பொருளும்

ஆதியாகம நிகழ்ச்சியுரைப் பகுதிகள் உண்மையாக நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் தொகுப்புதானா? இதற்குப் பதில் அளிக்குமுன் சில விளக்கங்கள் தேவையாகின்றன. வரலாறு பற்றிய நவீன காலத்துக் கருத்துப்படி ஆதியாகமத்தில் வரலாறு இல்லை என்று எல்லா விவிலிய அறிஞர்களும் ஏற்றுக்கொள்ளுவர். நவீன கால வரலாற்று ஆசிரியனைப்போல் விவிலிய ஆசிரியர் தம்மைக் கருதவில்லை. அவருக்கு வரலாறு ஒரு முடிவன்று; ஒரு கருவியேயாகும். அவர் வரலாற்றை-எப்படிப் பயன்படுத்துகிறார் என்று நாம் உணரும்போது, ஆதியாகமத்தின் பொருளையும் நிறைவாக அறிகிறோம்.

ஆதியாகமத்தில் வரும் வரலாறு ஒரு தெளிவான நோக்குடையது. வரலாற்றை, இறைவனது அருள்மிக்க இடையீடுகளால் வரையறை செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியான வளர்ச்சியாகவும், இறைவன் தேர்ந்தெடுத்த இலக்கை நோக்கி அஃது இயங்குவதாகவும், விவிலிய ஆசிரியர் வரைகின்றார். இறைவனது திட்டத்தை விளக்கிக் காட்டும் அளவுக்குத்தான் வரலாற்று நிகழ்ச்சிகளில் திரு ஆசிரியர்கள் ஆர்வம் காட்டினர். இந்தத் தனிப்பட்ட போக்கு, அவர்கள் தங்களின் நூலின் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதில் குறுக்கிட்டு வழிகாட்டியது. இவ்வாசிரியர்களின் வரலாற்று நோக்கும் போக்கும் நவீன வரலாற்று ஆசிரியர்களது கருத்துக்கு மாறுபட்டதாகும்.

தொடக்க வரலாற்றில் சமய வரலாற்றுக்குரிய அடிப்படை பின்வருவனவற்றிலிருந்து முழுதும் வேறுபட்டதாகும். இதில் வரும் நிகழ்ச்சிகள் ஒரு தனிப்பட்ட இனத்தாருக்கு மட்டும் உரியவையல்ல; மக்களினம் முழுவதையும் பாதிக்கும் நிகழ்ச்சிகளாகும், பூமி முழுமைக்கும் உரிய காரியங்களாகும். இவற்றில் படைப்பு, இறைவன் அருளிலிருந்து முதல் வீழ்ச்சி போன்ற சில, தன்மையாலே ஒப்புமையற்ற தனித்தன்மை யுடையன. உடன்பிறந்தானைக் கொல்லுதல்,

பழிவாங்குதல், பெருவெள்ளம், நகரங்களின் அழிவு போன்றவை மனித வரலாற்றில் அடிக்கடி நிகழக்கூடியவை; எடுத்துக்காட்டானவையுமாகும். இவைதாம் இறையூக்கம் பெற்ற ஆசிரியருக்குக் கிடைத்த, தொடக்க வரலாறு பற்றிய பொருள்களாகும். இவ்வாசிரியர், தமது சமய முற்கோளுக்கு ஏற்ற விதத்தில், இறைவனிடமிருந்து மனிதன் படிப்படியாகப் பிரிந்து விலகிச் செல்லும் பிளவுபற்றிக் கவலை கொள்கிறார். எப்படி, அடிப்படை ஏடுகள் இல்லாவிடில், நவீன வரலாற்று முறையில் தொடக்க வரலாற்றை விளக்கும் ஆசிரியன் ஒரு பெயரையோ, ஒரு தனிப்பட்ட சூழ்நிலையையோ, ஒரு வாழ்க்கை வரலாற்றையோ படைக்கமுடியாதோ, அதே நிலையில்தான் ஆதியாகமத் தொடக்க ஆசிரியரும் இருக்கிறார். ஆகையால் அவர், எடுத்துக்காட்டான நிகழ்ச்சிகளையும், நீண்ட காலப்போக்கையும், மக்களினங்களின் தோற்றவியலையும் விளக்குகிறார். இப்படிக் கூறுவதால் அவர் எழுதுபவை வரலாற்றைச் சார்ந்தனவல்ல என்று கொள்ளக்கூடாது.

ஆதியாகமத்தில் முதல் பதினோரதிகாரங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட உண்மைகளையே கூறுகின்றன. அவற்றில் சில: காலத்தின் தொடக்கத்தில் இறைவன் உலகைப் படைத்தார்; மனிதனைப் படைத்தபோது சிறப்பான இறை இடையீடு நிகழ்ந்தது; முதல் மனிதன் இறைவனோடு நட்புறவு கொண்ட நிலையில் இருந்தான்; அந்நிலையிலிருந்து வீழ்ந்தான்; மனிதனின் பாவங்கள் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த பிளவை மிகுத்தன; அடுத்தடுத்துப் பல இயற்கைப் பெருங்கேடுகள் நிகழ்ந்தன; இவற்றால் மனிதன் தன் பாவங்களின் விளைவைத் துய்த்தான். இவை சமய விளக்கங்களாக இருப்பதால், பலவகையில் நவீன அறிவியலின் மதிப்பீட்டுக்கு அப்பாற்பட்டவை. ஆயினும் அதே சமயத்தில் அவை வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்குவதால் வரலாற்றைச் சார்ந்தவைகளாகும்.

ஆகையால், ஒப்புமையால்தான் இவ்வதிகாரங்கள் வரலாற்றுக் கொண்டுள்ளன எனலாம். இப்பகுதியின் வரலாற்றைத் தன்மை மூன்று பண்புகளைக் கொண்டுள்ளது. முதலாவது, நாம் முன்பு கூறியதுபோல், தொடக்க வரலாற்றை நவீன அறிவியல் நோக்குவது போலவே, இவ்வதிகாரங்களும் அதை நோக்குகின்றன. இரண்டும் தனிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. "அடையாளமான" நிகழ்ச்சிகளிலேயே கவனத்தைச் செலுத்துகின்றன. இரண்டாவது– பாமர மக்களும் புரிந்துகொள்ளும் விதத்தில் உண்மைகளை எடுத்துக்கூற வேண்டிய தேவை "அடையாள நிகழ்ச்சிகளை"த் தனி நிகழ்ச்சிகளாக மாற்ற வேண்டியதற்கு அடிகோலிற்று. பெரும்பாலும் பலர் சேர்ந்து செய்த காரியங்கள் ஒரு தனி மனிதனால் செய்யப்பட்டதாகக் காட்டப்படுகின்றன. ஒரு பெருங்கேட்டின் கதை, அது போன்ற எல்லாப் பெருங்கேடுகளை எடுத்துக்காட்டவும் விளக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவது பண்பு, திரு ஆசிரியரின் சமய நோக்கு இப்பொருட்களைப் பயன்படுத்தும் விதத்தை வரையறுத்து மேலும் பாதித்துள்ளது. ஆதியாகம முதல் பதினோரதிகாரங்களில் காணப்படும் வரலாற்றை மதிப்பீடு செய்வதில் இச்சமய நோக்குத் தான் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இஸ்ராயேலில் மீட்பு இறையியல்தான் முதன்மையானது. படைப்பு பற்றிய இறையியல் அவ்வளவு முதன்மையுடையது அன்று; மேலும் அது முன்னதைச் சார்ந்ததுமாகும். ஆகையால் உலகம், மனிதர் தோற்றம் முதலியவை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தோற்றத்தோடு இணைத்துக் கூறப்படுகின்றன. இந்த இறையியல் கருத்துக்களின் சார்புடைய உறவு, திரு ஆசிரியர்கள் தங்களுடைய பொருட்களைப் புவி இயல், மனித இயல் சார்ந்த அக்கறையோடு மட்டும் நோக்காமையை விளக்குகிறது.

இம்முதல் அதிகாரங்களில் காணப்படும் பொருள்களில் தோற்றம்பற்றி ஒரு சில கூற விரும்புகிறோம். இறையூக்கம் பெற்ற ஆசிரியர்களுக்கு இத்தொடக்க நிகழ்ச்சிகள்

பற்றிய செய்திகள் நேரடியாக வெளிப்படுத்தப் பட்டிருக்கலாம் என்பதை முன்னதாகவே ஏற்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது. உண்மையில், வரலாற்றில் இறைவன் செயல்படும் முறை அப்படி ஏற்றுக்கொள்வதற்கு மாறாகச் சொல்லாடுவதாக அமைகிறது. மேலும், நிகழ்ச்சியுரைகள் பற்றிய இலக்கியப் பகுப்பாராய்ச்சி, இவற்றின் இயற்கையான, ஆனால் மிகச் சிக்கல்களுடைய, தோற்றத்தையும் வளர்ச்சியையும் சுட்டிக் காட்டுகிறது. இவ்வுரைகள், இந்நிகழ்ச்சிகளில் வரும் மூல ஆட்களிடமிருந்து தோன்றி, இஸ்ராயேலின் வரலாற்று ஆசிரியர்களுக்கு உண்மை பிறழாது கிடைத்திருக்கக்கூடும் என்பது நம் பத்தகாததாயி ருக்கிறது. இப்படி நடந்திருக்கக்கூடும் என்பதற்கு முதல் மனிதனுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையேயுள்ள பல்லாயிரம் ஆண்டுகள் இடம் தரவில்லை. இதில் அருஞ்செயலான இறை இடையீடு நடந்திருக்கலாம் என்று ஏற்றுக் கொண்டால், ஒரே திருவெளிப்பாட்டுச் செயலைவிட மிகப்பெரிய பல அருஞ்செயல்கள் தேவையாகும். இப்படி எண்ணுவதற்கு விவிலியத்திலே அடிப்படையில்லை. மேலும் "முற்காலத்தில் ஆபிரகாம், நாகோர் ஆகியோரின் தந்தை தேராகு உட்பட்ட உங்கள் மூதாதையர் நதிக்கு அப்பால் வாழ்ந்தபொழுது அவர்கள் மற்றத் தெய்வங்களுக்கு ஊழியம் செய்தனர்" என்று இஸ்ராயேலின் முந்தையர் பற்றி இறைவனே கூறுகிறார். தேவர்கள் பலரை வணங்கிய இந்த மூதாதையர்கள், ஒரே இறைவனை மட்டும் வணங்கும் பாரம்பரியத்தை உண்மை பிறழாது கடைப்பிடித்துப் பிறருக்கு வழங்கியிருக்க முடியாது.

ஆகையால் இந்நிகழ்ச்சியுரைப் பொருட்கள் இஸ்ராயேலின் காலத்திற்கு முன்பேயிருப்பதால் இஸ்ராயேலுக்குப் புறம்பே தோன்றிருக்க வேண்டும். பெரும்பாலும் வட மெசபொத்தாமியா விலிருந்து இவை தோன்றியிருக்கவேண்டும். இங்கிருந்துதான் இஸ்ராயேலின் முன்னோர் வந்தனர். ஆதியாகம் நிகழ்ச்சியுரைகள் மெச பொத்தாமியாவின் கதைகளோடு கொண்டுள்ள இலக்கிய ஒப்புமை இதை உறுதிப்படுத்துகிறது.

ஆனால், இந்த ஒப்புமை, இவ்வதிகாரங்களின் பொருள்களுக்கு இஸ்ராயேல் புற இன அயலாரை நேரடியாகச் சார்ந்திருந்தது என்று குறிக்கவில்லை. இவை இஸ்ராயேலில் இறையியலால் அடிப்படையிலேயே பாதிக்கப்பட்டுள்ளன. இஸ்ராயேலைச் சேராத கதைகளோடு திட்டத்திலும் உருவகத்திலும் ஒற்றுமையிருந்தாலும், இந்நிகழ்ச்சியுரைகளுக்கு இறையியல்தான் முழுப்பொருளை அளிக்கிறது. இவ்விறையியல் முழுவதும் இஸ்ராயேலைச் சார்ந்ததாகும். அதற்கு ஒப்புமையேயில்லை.

குலமுதுவர்களின் வரலாறு, அவர்களுடைய பயணங்கள், தொழில்கள், அயலாருடன் கொண்ட உறவு, அவர்களுடைய திருமணங்கள், வீரச் செயல்கள், இறப்பு முதலியவற்றை உள்ளடக் குகிறது. மிகப்பழைய மேற்காசிய வரலாற்றியலும், தொல்பொருள் ஆய்வும் சில உண்மைகளை விளக்கியுள்ளன. ஆதியாகமத்தின் பின்னிலைகளாக உள்ள சமூக, சட்ட மரபு, அரசியல், நிலவியல், சமய நிலைகள் முதலியவை கி.மு. இரண்டாம் ஆயிரம் ஆண்டுக் காலத்தில் இப்பகுதிகளில் நிலவிய நிலைகள்தாம் என்றும், இவற்றைப் பிற்காலத்து ஆசிரியர்கள் கண்டுபிடித்திருக்க முடியாது என்றும் இவ்வாராய்ச் சிகள் காட்டுகின்றன. ஆகையால், இங்குப் பாதி நாடோடி ஆயர்கள் வாழ்ந்தனர் என்றும், அவர்கள் அனேகமாக வடமெசபொத்தாமியாவில் தோன்றிக் கானானில் குடிபுகுந்தனர் என்றும், ஆதியாகமத்தில் விளக்கப்படும் விதத்தில் வாழ்ந்தனர் என்றும், அவர்களில் சிலராவது எகிப்துக்குச் சென்று வாழ்ந்தனர் என்றும் ஏற்றுக்கொள்ளலாம். திரு ஆசிரியர்களின் சமய வரலாற்றுக்கு அடிப்படையாகப் பயன்பட்ட இந்தக் குடும்ப வரலாறுகளை இக்கால அறிவியல் வரலாற்று ஆசிரியன் ஏற்றுக்கொள்ளாதிருக்கக் காரணம் இல்லை எனலாம்.

ஆயினும் இந்த அடிப்படை நிகழ்ச்சிகள் தொடக்க காலத்தில் பொதுமக்கள் பாணியில் பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. ஆட்களின் பெயர்களுக்கு, அவருடைய அல்லது அவர் மரபினருடைய பண்புகளை அழுத்திக் கூறும்

பொருட்டு, சொல்லிலக்கண முறையில் விளக்கம் அளிக்கப்படுகிறது. குடும்ப நிகழ்ச்சிகள் ஒப்பனை செய்யப்பட்டு, நாட்டுப் பாடலுக்கும், வீரகாவியத் திற்கும் உரிய பொருட்களாக மாறுகின்றன. அவ்வவ்விடங்களில் வாழ்வோரின் பொழுது போக்கிற்காகவும், அறிவூட்டுதலுக்காகவும் மறையுரைக்காகவும் இவை பயன்பட்டன; எடுத்துக்கூறப்பட்டன. இவற்றில் சில அவ்வவ் விடங்களைச் சேர்ந்த மறை வழிபாட்டுக் கதைகளையும் வழிபாட்டுப் பழக்க வழக்கங் களையும் அடிப்படையாகக் கொண்டவை. அவற்றின் மறை உண்மை அழுத்திக் கூறப்பட்டது.

இத்தகைய பொருட்கள்தாம், தனித்தனி சிறிய பகுதிகளாகவும், சில சமயங்களில் பாரம்பரிய வட்டங்களாகவும், பிற்கால இஸ்ராயேலின் திரு ஆசிரியர்களுக்குக் கிடைத்தன. இவர்கள் தங்களுக்கே உரியவிதத்தில் தங்களது நோக்கை விளக்குவதற்கு இவற்றைப் பயன்படுத்தினர். இந்நோக்கு, அடிப்படையிலேயே சமய நோக்காகும். இதற்கே சிறப்பிடம் அளிக்கப்பட்டது; முதலிடம் அளிக்கப்பட்டது. வரலாற்று நிகழ்ச்சிகளில் படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட இறைத்திட்டத்தை எடுத்துக்காட்ட விரும்பினர். ஆகையால் தங்கள் நூல்முழுவதும் இறைவனது தொடக்கச் செயலை அழுத்திக் கூறினர். ஆபிரகாம் கானான் நாட்டில் குடியேறியது, அக்காலச் சூழ்நிலைகளால் மட்டும் வரையறை செய்யப்பட்ட தற்செயலான ஒரு நிகழ்ச்சியன்று. அது, முதன்முதலாக, இறைவனது அழைத்தலின் விளைவாகும். இவ்வழைத்தல் ஆபிரகாம் புறக்கணிக்க முடியாத ஒன்றாகும். கானானில் ஆபிரகாம் நடத்திய நாடோடி வீரவாழ்வு, பிறரோடு நடத்திய வெற்றிமிகு செயல்கள், ஆபத்துக்களிலிருந்து அவர் தப்பியது, அவருக்குப் பிள்ளைகள் பிறத்தல் இவையாவும் இறைத்திட்டத்தின் ஒளியில் அறிமுகம் செய்யப்பட்டு விளக்கப்படுகின்றன. இவற்றின் வழியாகத் தாம் அளிக்கும் நாட்டை உடைமையாகக் கொண்டு, அங்குத் தம்மை மட்டும் வணங்கும் ஒரு மக்களினத்தை இறைவன் அமைப்பதற்காகவே இவை நிகழ்கின்றன என்று எடுத்துக்காட்டப்படுகின்றன. இத்திட்டம் ஆபிரகாமுக்கு இறைவன் செய்த வாக்குறுதியில் உருவெடுக்கிறது; அவர் வழிவந்தோர்களோடு (ஈசாக்கு, யாக்கோபு) மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றது. இவர்களையும் இறைவன் தன்னுரிமையுடன், பயன்கருதாது, தேர்ந்தெடுக்கிறார். இத்திட்டமும், உறுதிமொழியும் ஆபிரகாமின் வழிவந்தோர்களின் நாடோடி வீரவாழ்வையும் விளக்குகின்றன. வரம்பில்லாத இறைநோக்கத்தின் காரணமாகக் குலமுதுவர்களின் வரலாற்றில் முழுமையான் ஒற்றுமை இருக்கிறது; இந்நோக்கம் இயற்கையைக் கடந்தது. ஆகையால், இது நவீன அறிவியலான வரலாற்றின் கட்டுப்பாடுகளைக் கடந்தது. எனவே, விவிலியத்தின் மற்ற நூல்களைப் போல், ஆதியாகமத்தின் பொருள், வரலாற்று ஆசிரியனின் கைகளிலிருந்து எப்போதும் நழுவித் தப்பிவிடுகிறது எனலாம். ஏனெனில் அவன் சமய முற்கோள்களுக்குப் புறம்பே செயல்படுகிறான்.

விவிலிய ஆசிரியர் வரலாற்றைத் தமது நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தியதனால், அவர் எழுதிய நூலின் வரலாற்றுத் தன்மை குறைந்துவிடவில்லை. கடந்த காலம் பற்றிய ஏடுகளில் இறைவனது கரம் செயல்படுவது காணப்பட வேண்டுமென்றால், அவ்வேடுகள் உண்மையான ஏடுகளாக இருக்க வேண்டும். இல்லையெனில், விவிலிய ஆசிரியர் தமது நோக்கத்திற்கே ஊறுவிளைவித்துக் கொள்கிறார். எழுதப்பட்ட, வாய்மொழிப் பாரம்பரியங்கள் வழியாக அவருக்கு வரலாறு கிடைத்தது. இந்த மூலங்களைத் தக்க முறையில் தேர்ந்து தெளிந்து, மதிப்பீடு செய்து, தமது நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தினார். நவீன கால ஆய்வுகள் இம்மூலங்களின் உண்மைத்தன்மையை எடுத்துக் காட்டுகின்றன; உறுதிப்படுத்துகின்றன.

7. ஆதியாகமத்தின் போதனைகள்: இத்தலைப்பின் கீழ் வருபவை ஏற்கெனவே கூறப்பட்டவையாயிருக்கலாம். ஆயினும் இங்குத் தொகுத்துத் தருகிறோம். ஆதியாகமத்தின் முதல் பகுதி தொடக்க காலத்திலிருந்து ஆபிரகாம்

வரையிலுள்ள மக்களின் சமய நிலையைச் சுருக்கமாக மதிப்பீடு செய்கிறது. உலகில் உள்ளதற்கெல்லாம் இறைவன் ஒருவரே காரணமாவார் (ஆதி 1:1). அவரது படைப்புச் செயலை எதிர்க்கவல்லது எதுவுமில்லை. அதற்குத் தடையேயில்லை (1:2). அவரது வார்த்தை முழு ஆற்றலுடையது. அதில் அவரது எல்லாம் வல்ல தன்மை விளங்குகிறது. அவர் உரைக்க, பொருட்கள் தோன்றுகின்றன. அவரின் படைக்கும் விருப்பத்திற்கும் படைக்கப்பட்ட பொருளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையில் அவரது சொல் செயல்படுகிறது (1:3தொ). இறைவனோடு கொண்டுள்ள சிறப்பு உறவால் மனிதன் மற்றப் படைப்புப் பொருள்களைவிட மேம்பாடு கொண்டு விளங்குகிறான் (1:26-30). இறைவனது கட்டளையால், பெண்-மனிதனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைநலமாகின்றாள்; அவனுடைய மேன்மையில் பங்கு கொள்கிறாள் (1:27; 2:18-23); பிரிக்கமுடியாத திருமண உறவால் அவனோடு இணைக்கப்பட்டிருக்கிறாள் (2:24).

மனிதனது முதல்நிலை குற்றமற்றதாகும் (2:25); இறைவனோடு நட்புறவு கொண்டதாகும் (3:8). படைக்கப்பட்ட தன்மையைக் கடந்த நிலையில் அடையுமாறு சோதிக்கப்பட்டு, மனிதன் பாவம் செய்தான் (3:1-6). இந்த முதல்பாவத்தின் விளைவு, ஆதாமுக்கும் அவர் வழிவந்தோர் யாவருக்கும் சுமையாக மாறியது. இப்பாவத்தின் விளைவாக இறைவனோடு கொண்டிருந்த நட்புறவை மனிதன் இழந்துபோனான் (3:23-4). மனிதர்களிடையே ஒருவருக்கொருவர் மதிப்பு இன்றிப் போயிற்று (3:6). மனிதன், பெண் ஆகியோரின் தன்மைக்கேற்ப உடல்சார்ந்த தீமைகளும் (3:17-19) தீய ஆற்றல்களுடன் இடைவிடாப் போராட்டமும் இப்பாவச் சுமையில் உள்ளடங்கும். இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி பற்றி உறுதிமொழி அளிக்கப்படுகிறது (3:15). இறைவனது இந்த மீட்புச் சித்தம் இஸ்ராயேலைப் பொருத்தமட்டும் தெளிவாக வெளிப்படுத்தப்படும். இறுதி வெற்றி பற்றிய நற்செய்தியின் முற்செய்தியாகும் இவ்வுறுதிமொழி.

தொடர்ந்த இந்தத் போராட்டத்தின் விளைவு முதல் மனிதனது தொடர்ந்து தோல்வியில் காணப்படுகிறது (ஆதி 4:11). இறைவனுக்கு மாறாக மீறி எழுந்த மனிதன் தன் அயலானுக்கு எதிராகவும் மீறி எழுந்தான். கொலை (4:1-3), பழி வாங்குதல் (4:24), பல மனைவியரைக் கொள்ளுதல் (4:19), உடல் சார்ந்த இச்சைகள் (16:5) முதலியவை மனிதனுடையவும் அவன் பண்பாட்டினுடையவும் வரலாற்றில் சிறப்புக்களாகத் திகழ்ந்தன. சினமுறச் செய்யப்பட்ட இறைவனது நீதி, இயற்கைப் பெருங்கேடுகளில் வெளிப்படுகிறது. இவை மனிதனை அழித்தன (ஆதி 6:6-7; 7:11). இறைவனுடைய இரக்கமும் மீட்கும் விருப்பமும் நேர்மையுடையோரை மீட்டுக் காப்பாற்றுவதில் வெளிப்படுத்தப்படுகின்றன. நீதிமானோடு இறைவன் செய்து கொள்ளும் உடன்படிக்கை இயற்கையின் அடையாளத்தால் உணர்த்தப் படுகிறது (9:8-17). அதன் பின்னும் மனிதன் தன் ஒழுக்கக்கேட்டிலேயே தொடர்ந்து வளருகிறான் (9:20-27). இதன் விளைவாக மனித சமூகம் இறைவனிடமிருந்து பிரிந்து சென்றது. மனிதர்களுக்குள்ளேயே பிளவு ஏற்பட்டது (11:1-9).

இந்நிலையில் இறைவன் சிறப்பான முறையில் மனித வரலாற்றில் இடையீடு செய்கிறார். இறைவன் ஆபிரகாமைத் தமது சேவைக்கு அழைக்கிறார் (12:1-3). ஆபிரகாமும் விசுவாசத்தோடு பணிகிறார் (12:4;15:6). இறைவன் குல முதுவர்களின் சொந்த இறைவனாக மாறுகிறார் (31:5.29.42.53). இந்த நெருங்கிய உறவு குல முதுவர்களின் வரலாற்றை வரையறுக்கிறது. இறைவனது தன்னுரிமையான தேர்தலால் தொடங்கிவைக்கப்பட்ட இந்த உறவின் விளைவாக ஆபிரகாம் ஒரு நாட்டையும் தம் வழிவந்த பெரும் மக்களினத்தையும் அடைவார் என்று உறுதிமொழி அளிக்கப்படுகின்றது (12:1-2; 13:14-16; 15:5). இவ்வுறுதிமொழி ஆபிரகாமின் வழிவந்தோரோடும் புதுப்பிக்கப்படுகிறது (26:2-5;28:13-15). இஃது இஸ்ராயேல் மக்களினத்தில் நிறைவுபெற வேண்டிய தொன்றாகும் (15:13-14.18-21).

குல முதுவர்கள்பால் காட்டப்பட்ட இச்சிறப்பான இறைவனது அக்கறையை இறைத்திட்டத்தால் மட்டும்தான் விளக்க முடியும். இறைவனது ஆற்றல், எதற்கும் கட்டுப்பட்ட தில்லையாயினும் (12:17; 14:19-20; 19:24-29), குல முதுவர்களைப் பொருத்தமட்டில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட உறுதி மொழிகளுக்கேற்ப ஒரு தனிப்பட்ட முறையில் செயல்படுகிறது. அவரது நீதியின் (12:17; 19:20-21; 38:7), அவரது இரக்கத்தின் (18:22-23; 19:29) சான்றுகள் யாவும் யாவற்றையும் கட்டுப்படுத்தும் இறைத்திட்டத்தோடு பொருத்தமுடையன. இறைவனது பெயரைப் பலவாறு பயன்படுத்தலையும் இந்த ஒளியில்தான் புரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவர் எனப் பொருள்படும் "யாவே" என்ற சொல் குலமுதுவர்களின் இறைவனும் இஸ்ராயேலின் இறைவனும் ஒருவரே என்று கருதுவதற்கு வழிவகுக்கிறது. இறைவன் என்று பொருள்படும் "எலோகீம்" என்ற பெயர், எல்லாம் வல்ல இறைவன் என்று பொருள் படும் "ஏல்சடாய்" என்ற பெயர், மிக உன்னதமான இறைவன் எனப்பொருள்படும் "ஏல் எலியோன்" என்ற பெயர், என்றும் உள்ள இறைவன் எனப் பொருள்படும் "ஏல்ஓலாம்" என்ற பெயர், ஆகியவை இறைவன் தம் திட்டத்தைப் படிப்படியாக வெளிப்படுத்தும்போது தம் ஆள் தன்மையையும் படிப்படியாக வெளிப்படுத்துகிறார் என்பதையும் காட்டுகின்றன. நூல் முழுவதும் குல முதுவர்களின் இறைவனே உண்மையான இறைவன் (35:2); அவரது ஒரே திட்டம் ஒரு நாட்டில் ஒரு மக்களை ஆட்கொள்கிறது என்று காட்டுகிறது.

இறைவனது திட்டத்தின் வளர்ச்சிக்குத் துணையான மறையுண்மைகள் பல ஆதியாகமத்தில் காணப்படுகின்றன. அவற்றில் சில, பலியால் இறைவனை வணங்குதல், அவரது பெயரைக் கூப்பிட்டு அழைத்தலின் இன்றியமையாமை (12:7-8; 13:4-18; 26:25; 31:54; 32:20; 35:1-7; 46:1), பாலுணர்வு ஒழுக்க வாழ்வு பற்றிய அக்கறை (12:17; 19:20; 38;24; 7-12), மனிதபலியையும் (22), கொலையையும் (37:21 தொ) வெறுத்துத் தவிர்த்தல், அயல்நாட்டாரிடம் அன்பு (18:1-8; 24:17-20), நீதி செய்யக்கடமை (31:37-42; 38:8-10:26), குற்றங்களை மன்னித்தல் (50:15;21), இறந்தோருக்குச் சிறப்பு செய்தல் (23:25; 35:19 தொ; 50:1-14) என்பன. அடுத்தடுத்து வரும் காட்சிகளில் இறைவனது அருள்பாலிப்பு அழுத்திக் கூறப்படுகின்றது (18). சில இடங்களில் இறைவனது யாவும் கடந்த தன்மை அழுத்திக் கூறப்படுகிறது.

8. ஆதியாகமமும், திருச்சபையும்: ஆதியாகமத்தில் காணப்படும் மறை உண்மைகளைப் பொதுவாகத் கிறிஸ்துவம் ஏற்றுக்கொண்டது. முதல் பதினோரதி காரங்களுக்கு விளக்கம் அளிப்பதில் நுண்ணிய தெளிவான வேறுபாடுகள் எழுந்தன. இப்பகுதியின் பொருள்களின் தோற்றம், விவரங்கள் முதலியவை பற்றிய பொருளைப் புரிந்துகொள்வதிலும் வேறுபாடுகள் எழுந்தன. கடந்த பல நூற்றாண்டுகளாக விவிலியச் செய்திகளுக்குச் சொற்களுக்கேற்ப விளக்கம் அளிப்பது ஏற்றுக்கொண்ட மரபாகும். இந்த மரபு அப்போது பழக்கத்திலிருந்த பகுத்தறிவுக் கோட்பாடுகளின் விளைவாகும்; புதிதாகப் பிறந்த தொல்பொருள் இயல், மொழி ஆராய்ச்சித்துறை, ஒத்தமை சமய இயல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு எதிராகக் கிறிஸ்துவக் காப்பியல் பாதுகாப்புக்குரிய எச்சரிக்கையான ஒரு போக்கைக் கடைப்பிடித்து வந்தது. புதிய அறிவியல்கள் முழுவளர்ச்சியடைந்து, அவற்றின் கொள்கைகளைத் தவறாகப் பயன்படுத்திய தனிப்பட்ட மெய்யியல் கோட்பாடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னும், கிறிஸ்துவர்களின் போக்கில் ஒரு பாதுகாப்புத்தன்மை தெரிந்தது. இதைப் பல்வேறுபட்ட ஒத்தமைவியலில் காணலாம். அதாவது, மனிதவியல் ஆகியவற்றின் முடிவுகளை எடுத்துக்காட்டச் செய்த முயற்சிகளில் காணலாம்.

ஆதியாகமத்தில் எடுத்துச்சொல்லப்படும் அடிப்படை மறை உண்மைகளைக் கத்தோலிக்கத் திருச்சபை எப்போதும் போதித்துவந்துள்ளது.

பகுத்தறிவுக்கொள்கையும், நவீன தப்பறைக் கொள்கையும் பரவியிருந்த காலத்தில், கி.பி. 1909-இல் பாப்புவின் விவிலியக்குழு ஆதியாகம முதல் மூன்று அதிகாரங்களின் வரலாற்றுத் தன்மை பற்றிக் கூறிய முடிவுகள் இதைக்காட்டுகின்றன. இம்முடிவுகள், மேலே கூறப்பட்ட பாதுகாப்பான மனப்போக்கை எடுத்துக்காட்டினாலும் தனிப்பட்ட வாசகங்களுக்கு விளக்கத்தைச் சுட்டிக் காட்டுவதிலே, அவை, பெரும்பாலும் திருச்சபையால் எப்போதும் ஏற்றுக்கொண்ட மறை உண்மைகளை வரையறுக்கப் பயன்படுகின்றன.

பன்னிரண்டாம் பத்திநாதர் 1943-இல் அளித்த சிறப்புமிகு பொதுத்திருமுகத்தில் மிகுந்த எச்சரிக்கையான இந்தத் போக்குக் காணப்படவில்லை. இதில், விவிலியத்திற்குச் சரியான கிறிஸ்துவ விளக்க இயலின் அடிப்படைக் கொள்கைகள் அமைக்கப்பட்டன. ஆய்வாளர்கள், இவற்றை அச்சமின்றிப் பயன்படுத்தி மறைநூலின் எல்லாப் பகுதிகளையும் ஆராய ஊக்கமூட்டப் பெற்றனர். அதற்குப்பின், ஆதியாகமம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் முழுவிளக்க நூல்களும் வெளிவந்தன. இவை அறிவியல் முறையைப் பயன்படுத்தின. ஆனால் திருச்சபையின் நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தின. இது 1948-இல் கர்தினால் சுகார்டுக்குப் பாப்புவின் விவிலியக்குழு எழுதிய திருமுகத்தில் தெரிகிறது. இத்திருமுகம் ஆதியாகம முதல் பதினோரதிகாரங்களைப் பற்றிக் கூறுவதாவது; "அவை எளிய, உருவக நடையில் இருக்கின்றன. மிக்க வளர்ச்சியடையாத மக்களின் அறிவுத்திறனுக்கேற்ப மாற்றியமைக் கப்பட்டுள்ளன. அவற்றில் மீட்புத்திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் அடிப்படை உண்மை களும், மனித இனம், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆகியோரின் தோற்றம் பற்றிய பொதுப்பாணி விவரிப்பும் உண்டு".

இத்தொடக்க அதிகாரங்களில் பயன்பட்டிருக்கும் பொருள்களின் தோற்றத்தைப் புரிந்துகொள்வதிலும் இத்தகைய வளர்ச்சியிருந்திருக்கிறது. புவியியல், மனிதவியல் ஆகிய அறிவியல்களின் முன்னேற்றத்திற்கு முந்திய காலத்தில், தொடக்க வரலாற்றைச் சேர்ந்த இஸ்ராயேலர் வரை, இந்நிகழ்ச்சியுரைகள் தொடர்ச்சியாகக் கையளிக்கப்பட்டன என்று எண்ணுவது கடினமாயிருக்க வில்லை. ஆனால் மனித இனத்தின் காலம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகும் என்று இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது, மூலத்திற்குப் பிரமாணிக்கமாக நிகழ்ச்சியுரைகள் தொடர்ச்சியாகப் பின்வரும் வழிவந்தோருக்குக் கையளிக்கப்படுவது, தொடர்ந்த அருஞ்செயல் இடையீடு இன்றி நடக்கக்கூடிய காரியம் அன்று என்று காட்டுகிறது. மேலும், கடந்த தொலைவான காலத்தில் நடந்தவை பற்றி மோசே போன்றோர்க்கு நேரடியான வெளிப்பாடு அளிக்கப்பட்டது என்று ஏற்கப்போதிய சான்றுகள் வேண்டும். அப்படிப்பட்ட சான்றுகள் இல்லை என்பர் அறிஞர். ஆகையால் பெரும்பாலோர் ஆதியாகம முன்பகுதியில் காணப்படும் உண்மைகள் இஸ்ராயேலரின் விசுவாசத்தின் விளைவாகும் என்பர். இந்த உண்மைகளைக் கொண்டுள்ள நிகழ்ச்சியுரை வடிவங்களை, இஸ்ராயேலுக்கு முந்திய விவிலியத்துக்குப் புறம்பான மூலங்களில் நாம் கண்டுபிடிக்கலாம் என்பர். இந்நிகழ்சியுரைகள் வட மெசபொத்தாமியாவிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் இங்குதான் குலமுதுவர்களின் முன்னோர் வாழ்ந்தனர். ஆதியாகமக் கதைகளுக்கும் மெசபொத்தாமியக் கதைகளுக்கும் ஒற்றுமையிருப்பது உண்மை. ஆனால் இக்கதைகளை எடுத்து, இஸ்ராயேலின் இறையியல் மாற்றி அமைத்து, புதுப்பொருள் கொடுத்து, அவற்றைத் தன் மறை உண்மைகளைப் போதிக்கப் பயன்படுத்தியது. கர்தினால் சுகார்டுக்கு எழுதப்பட்ட கடிதத்திற்குப்பின், ஆதி யாகமத்திற்கு மட்டுமே உரிய கட்டளை எதையும் திருச்சபை கொடுக்க வில்லை. ஆயினும் மேலே கொடுக்கப்பட்ட கருத்துகள் கத்தோலிக்க ஆய்வாளர்களால், பொதுவாசு ஏற்றுக் கொள்ளப்படுவனவாகும். திருச்சபையின் மேலாண்மை பெற்ற மறையுரைகளுக்கு ஒத்தனவாகும்.

9. ஆதியாகமத்தின் சிறப்பு: ஆதியாகம மறை உரைச்சுருக்கத்தில் இந்நூலின் சிறப்பு தெளிவாகிறது. தனது வரலாறு முழுவதும் கிறிஸ்துவம் ஆதியாகமத்தின் சிறப்பை எப்போதும் அறிந்து, ஏற்றிப் போற்றி வந்திருக்கிறது. புதிய ஏற்பாடு, திருச்சபைத் தந்தையர்களுடைய நூல்கள், திருச்சபையின் மேலாண்மை பெற்ற ஏடுகள் ஆகியவற்றில் ஆதியாகமம் குறிக்கப் படுவதும், சுட்டிக் காட்டப்படுவதும், பரந்த அளவில் கையாளப்படுவதும் இந்நூலின் சிறப்பையும், யூத கிறிஸ்துவ சமயங்களின் பல அடிப்படை உண்மைகளுக்கு இந்நூல் மூலமாய் அமைந்திருப்பதையும் எடுத்துக் காட்டவல்லன. சான்றாக, சென்ம பாவம், புதிய ஆதாம், விசுவாசத்தால் ஏற்புடைமை ஆகிய பவுலின் மறைவிளக்கங்கள் ஆதியாகமத்தை அடிப்படை யாகக் கொண்டுள்ளன. சிறப்புக் கருத்துக்களில் இவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளோம். விவிலியத்தின் திட்டமும் செய்தியும் ஆதியாகமத்தோடு தொடங்கு கிறது. அஃது இன்றி விவிலியத்தின் பிற்பகுதி களுக்குப் பொருளேயில்லை எனலாம்.

10. முடிவுரை: வெளிப்பாடு என்ற அளவில், இறைவெளிப்பாடு ஆபிரகாமின் அழைப்போடு தொடங்குகிறது. இவ்வெளிப்பாடு சிறிது சிறிதாகக் காலப்போக்கில் மலரும். இறைவன் ஆபிரகாமிடம், நிபந்தனையற்ற, தாராளமான, நிறைவான விசுவாசத்தைக் கோரினார்; ஆபிரகாமின் வழிவந்தோரிடமும் கோரினார். ஆபிரகாமுக்குச் சோதனை இருந்தது. அவரது தயங்காத, தளராத விசுவாசம் அவருக்கு ஏற்புடைமையாகக் கருதப்பட்டது. இஸ்ராயேலர்களுக்கும் சோதனைகள் இருந்தன; எகிப்தில் தங்கியிருந்தது இப்படிப்பட்ட ஒரு சோதனையாகும். இந்நிலையில் ஆதியாகமம் முடிகிறது. இச்சோதனையின் இரண்டாம்படி அடுத்த நூலாகிய யாத்திரை ஆகமத்தில் தொடங்குகிறது.

தொடுதல் (TOUCH)

இயேசு 'தொட்டார்', அல்லது 'தொடப்பட்டார்' என்ற வகையிலேயே 'தொடுதல்' என்னும் சொல் விவிலியத்தில் பயன்படுத்தப்படுகின்றது. சில சமயங்களில் இது பற்றிக்கொள்ளுதல் என்ற பொருளையும் கொடுக்கிறது. ஆனால் இது நடைமுறையில் ஏற்படும் தொட்டுக் கையாளு வதோ, விரைவான உரசலோ, வெறும் உணர்வோ அன்று. மாறாக, தொட்டு உணர்வதாகும். மெதுவாக, அன்போடு, இரக்கத்தோடு தொடு தலாகும். இயேசு ஒரு தொழுநோயாளியை இவ்விதம் தொட்டுக் குணமாக்குகிறார் (மத் 8:3; மற் 1:41; லூக் 5:13); பேதுருவின் மாமியாரின் கையைப் பற்றிக் குணமளிக்கிறார் (மத் 8:15); குழந்தைகளைத் தொட்டு அரவணைத்து ஆசிர்வதிக்கிறார் (மாற் 10;13; லூக் 18;15); பாடையைத் தொட்டு இறந்தவனை உயிர்ப்பிக்கிறார் (லூக் 7:14); தலைமைக்குருவின் ஊழியனின் வெட்டுப்பட்ட காதைத் தொட்டுக் குணமளிக்கிறார் (லூக் 22:51); செவிடனின் காதைத் தொட்டும் (மாற் 7:33), குருடர்களின் கண்களைத் தொட்டும் குணமளிக்கிறார் (மத் 9:29; 20:34). உருமாற்ற நிகழ்ச்சியில் இயேசு சீடர்களைத் தொட்டு அவர்களது பயத்தைத் தெளிவிக்கின்றார் (மத் 17:7). பெரும்பாடுள்ள பெண் ஒருத்தி, இயேசுவின் ஆடைகளைத் தொட்டுத் குணம் பெறுகிறாள் (மாற் 5:27). நோயாளிகள் பலர் அவரைத் தொட்டுக் குணம் பெற ஆசித்தனர் (மாற் 3:10; லூக் 6:19). இயேசுவின் பாதங்களுக்கு நறுமணத்தைலம் பூசி அவற்றைப் பற்றிக்கொண்டு அழுகின்ற பாவி மன்னிப்புப் பெறுகின்றாள் (லூக் 7:39).

தொடை (THIGH)

தொடை எனும் சொல் விவிலியத்தில் மூன்றுவித பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. முதலா வதாக, இஃது ஓர் உடல் உறுப்பாக மட்டும் கருதப்படுகிறது. உதாரணமாக ஓர் இளம் பெண்ணின் அழகிய உடல் உறுப்பாக வருணிக்கப்படுகிறது (உ.ச. 7:2). வீரர்கள் தங்களது வாட்களை அணியும் இடமாகக் கூறப்படுகிறது (நீதி 3:17; சங் 45:3; உ.ச. 3:8; யாத் 32:27). இதே கருத்தைக் குருக்கள் பாரம்பரிய ஆசிரியர்கள் பொருட்களின் சில பாகங்களுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்கள்.

உதாரணமாக எபிரேய மொழியில் பலிபீடத்தின் "பக்கத்தையும்" (2 அரச 16:14), விளக்குத்தண்டின் அடிப்பாகத்தையும் (யாத் 25:31) குறிக்கத் தொடை எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது.

இரண்டாவதாக, இஃது உயிருள்ள மனிதனின் இயக்க ஆற்றல் மிகுந்த உடல் உறுப்பாகக் கருதப்படுகிறது. இனப்பெருக்க உறுப்புக்களுக்கு மிக அருகில் இஃது அமைந்துள்ளதால், இது பிறப்பு உறுப்புகளின் இருப்பிடம் என அழைக்கப் படுகிறது. தொடை என்பது பிறப்புறுப்புகளைக் குறிக்கும் மங்கல வழக்காகும். 'மகன்கள்' தொடையிலிருந்து பிறந்தவர்களாகக் கருதப் பட்டனர் (ஆதி 46:26; யாத் 1:5; யாக்கோபின் புதல்வர்கள்; நீதி 8:30; கிதயோனின் எழுபது பிள்ளைகள்). முறைகேடான உடலுறவில் தொடையும் சம்பந்தப்பட்டிருப்பதால், அது சபிக்கப்பட்டதாகிறது (எண் 5:16-21). மிஷ்னா ஏடுகள், "பாவம்-தொடையிலிருந்தே ஆரம்பமா கிறது; எனவே, அது தண்டிக்கப்படவேண்டும்" எனக்கூறுகிறது. இது தொடைக்கும் பாலின உறுப்புகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை, ஆகவே உயிரின் இருப்பிடத்தைச் சுட்டுகிறது.

மூன்றாவதாக, தொடையின் கீழ் கைவைத்து ஆணையிடும் பழக்கம். இது தொடைக்கும், உண்மைக்கும் உறுதிமொழிக்குமுள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகின்றது. ஒருவன் ஆணையிடும் போது, தான் யாருக்காக ஆணையிடுகிறானோ அவரது தொடையின் அடியில் கைவைத்து ஆணையிடவேண்டும். அப்போதுதான் அந்த ஆணை, உண்மையானதும், நிறைவானதும் ஆகும் (ஆதி 24:2; 47:29). இதன் பொருள் என்னவென்றால், உயிர்நிலைக்கும், ஆணைக்கும் உள்ள தொடர்பு சுட்டிக்காட்டப் படுகிறது. இது பிறப்பு உறுப்புகளைத் தொடுவதையும் உள்ளடக்கும். மேலும் உயிர் நிலையில் மேல் ஆதிக்கம் கொண்ட கடவுளே, கூறப்பட்ட ஆணையின் சாட்சியும் உறுதி அளிப்பவராகவும் விளங்குவதாகக் கருதப்பட்டது. ஆணை என்பது நிறைவேற்றப்பட வேண்டும். இல்லை எனில், பரம்பரை பரம்பரையாகப் பொய் ஆணையிடுபவர் பழிதீர்க்கப்படுவர் என்பதும் தெளிவாகிறது. எனவே தொடை, உயிர் நிலையோடு தொடர்புடைய, மனிதனுக்கு மிகவும் இன்றியமையாத ஓர் உடல் உறுப்பாகும்.

தொட்டில், தொழுவம் (CRIB)

இது விலங்குகளுக்குத் தீவனம் வைக்கப் பயன்படும் தொட்டி. இது மாடுகள் தங்கும் கொட்டகையாகவோ (பழ 14:4), கழுதைகள் தங்கும் கொட்டகையாகவோ (எசா 1:3) பேசப்படுகிறது. மேலும் காட்டெருமைக் கொட்டகையில் தங்காது என யோபு ஆகமத்திலே கூறப்பட்டுள்ளது (யோபு 39:9). எசா 1:3-இல் கழுதை, தன் தலைவன் தனக்குத் தீனி போடும் இடத்தைத் தெரிந்திருப்பது இஸ்ராயேலரின் ஆன்மீக அறியாமையோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது. இயேசு பிறந்தபின் துணிகளில் பொதிந்து கிடத்தப்பட்ட இடம் இத்தகைய தீவனத் தொட்டியாக இருக்கலாம் (லூக் 2:7).

தொப்கா (DOPHKAH - மாட்டு வணிகர்)

இஸ்ராயேலர் சீன் பாலைவனத்தைக் கடந்தபின் தங்கிய முதல் இடம் (எண் 33:12). தற்போது இஃது எகிப்தில் சீனாய் தீபகற் பத்திலுள்ள, செராபித் ஏல்-காதிம் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இந்த இடத்தில் வெண்கலக்காலத்தில் (கி.மு. 14:12 நூற்றாண்டுகள் எகிப்தியர் சுரங்க வேலைகளில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது.

தொமிசியன் (DOMITIAN)

தீத்து பிலேவியு தொமிசியன் ஓர் உரோமைப் பேரரசன் (கி.பி.81-96). இவர் வெஸ்பாசியனின் மகன். தம் சகோதரன் தீத்துவுக்குப்பின் பேரரசனானார்.

இவரது ஆட்சியின் தொடக்கத்தில், பிரிட்டனிலும் ரைன்-தான்யூபு எல்லையிலும் பாதுகாப்புக் கோட்டைகளைக் கட்டினார். உரோமையில் ஒரு புதிய மன்றத்தையும் அரண்மனையையும் கட்டினார். ஆனால் வியாபாரத்தையும் உற்பத்தியையும் கட்டுப்படுத்தும் கடுமையான பொருளாதார

அமைப்பைப் புகுத்தினார். பொது ஒழுங்கைப்பற்றிக் கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தார். இவை பரவலாக, குறிப்பாக உயர் குடிமக்களிடமிருந்து, எதிர்ப்புகளை எழுப்பின. காலப்போக்கில் இவர் தன்னிச்சையாக ஆட்சிசெய்யத் தொடங்கினார்; தத்துவ அறிஞர்களை நாடு கடத்தினார்; தம்மை எதிர்ப்பவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தார். இவர் தம்மைத் "தலைவரும் கடவுளும்" என்று அழைக்கவேண்டும் என்று கோரியது மக்களிடையே வெறுப்பை உண்டாக்கியது.

இவரது ஆட்சி, இறுதி ஆண்டுகளில், நாட்டில் இழிவானதாகவும், பயங்கரமானதாகவும் அமைந்தது. பலபேர் கொலை செய்யப்பட்டனர். மூப்பர் அவை அங்கத்தினர்களுக்கு எதிராக நாட்டுத் துரோகக் குற்றங்கள் சாட்டப்பட்டன. இந்த அரசியல் சூழ்நிலை, யோவானின் திருவெளிப்பாட்டு நூலுக்குப் பின்னணியாக இருந்திருக்கலாம். ஆனால் இவர் கிறிஸ்தவர்களைமட்டும் குறிப்பிட்ட முறையில் துன்புறுத்தினார் என்று கூறமுடியாது. ஒரு சூழ்ச்சியின் விளைவாக, கி.பி. 96-இல் இவர் கொலை செய்யப்பட்டார். இச்சூழ்ச்சியில் இவரது மனைவியும் பங்கெடுத்திருந்தாள்.

தொர்க்கா, தபித்தா (DORCAS, TABITHA – கலைமான்)

பிறருக்குப் பல நல்ல செயல்கள் செய்து வந்த இந்தப் பெண், யோப்பாவில் வாழ்ந்து வந்தாள். இவள் கிரேக்கத்தில் தொர்க்கா என்றும், அரமேயிக்கில் தபித்தா என்றும் அழைக்கப் பட்டாள். இவள் நோய்வாய்ப்பட்டு இறந்தாள்; பேதுருவால் உயிர்ப்பிக்கப் பெற்றாள் (அ.ப. 9:36-42). தொர்க்கா ஒரு சீடர் என்றழைக்கப் படுகிறாள். புதிய ஏற்பாட்டில் இங்குமட்டுந்தான் சீடர் என்ற சொல்லின் பெண்பால் கிரேக்க மொழியில் பயன்பட்டுள்ளது.

தொர்க்கா இறந்ததும் விதவைகள் பலர் அவள் கொடுத்த ஆடைகளைக் காட்டிப் பேதுருவிடம் அழுதனர். பேதுரு அதைக்கண்டு தொர்க்காவை உயிர்ப்பித்தார். பிற்காலத்தில் திருச்சபையில் தொர்க்கா போன்று பல நல்ல செயல்களை மேற்கொள்ளும் பெண்கள் இவர் பெயரை வைத்து, 'தொர்க்கா சபைகள்' என ஆரம்பித்துள்ளனர்.

தொர்க்காவை உயிர்ப்பித்த நிகழ்ச்சி முக்கியமான ஒன்று. காரணம், இதுதான் அப்போஸ்தலர்கள் செய்த முதல் உயிர்ப்பு நிகழ்ச்சி (மத் 10:8; அ.ப. 20:9-10). மேலும் இந்த நிகழ்ச்சி மூலம் பலர் விசுவாசியானார்கள்.

தொல்பொருளியல் (ARCHAEOLOGY)

I. இச்சொல்லைக் குறிக்கும் கிரேக்கச் சொல், பழங்காலக் காரியங்களை ஒழுங்காக வகைப்படுத்துதல் என்று பொருள்கொடுக்கும். அதாவது, "பழங்காலப் பொருட்களை ஒழுங்காக வகைப்படுத்துதல்" தொல்பொருளியலாகும். இது வரலாற்றியலின் ஒரு துணை அறிவியலாகும். கடந்த இருநூற்றாண்டு களாகத்தான், இது தனக்கே உரியகுறிக்கோளும் வழிமுறைகளுமுடைய தனி அறிவியலாக வடிவெடுத்தது எனலாம். கி.பி. 19-ஆம் நூற்றாண்டுக்குமுன் வரலாறு என்பது எழுதப்பட்ட ஏட்டுச்சான்றுகளை அடிப்படையாக் கொண்டது என்றும், இதற்கு மாறாகத் தொல்பொருளியல் தரைமேல் கண்டெடுக்கப்பட்ட பழம்பொருள்களின் ஆய்வு என்றும் கருதப்பட்டது. ஆனால் இக்கால அறிஞர்களின் கருத்துப்படி, தொல்பொருளியல் என்பது கடந்தகால மனிதச் செயல்களின் சுவடுகள் மற்றும் பொருட்களில் எஞ்சியவைகளிலிருந்து சான்று காட்டும் வரலாற்று ஆய்வின் ஒரு பிரிவாகும்.

பழங்கால மனித குடியிருப்புகள் இருந்த இடங்களைக் கூர்ந்து ஆய்வு செய்யும்போது, பழங்காலச் சுவடுகளில் பெரும்பாலானவை தரைமட்டத்திற்கு அடியில் புதைந்து கிடப்பது தெரியவந்தது. அகழ்வாய்வுகள் செய்து ஆராய்ந்தபோது, இதுவரை எண்ணிப்பார்க்காத அளவு அதிகச் செய்திகள் கிடைத்தன. இத்தொல்பொருட் சான்றுகள், நினைவுச்சின்னங்கள் அல்லது எழுதப்பட்ட மூலங்களை நிறைவு செய்து, கடந்தகாலம் பற்றிய ஆய்வுக்கு இன்றியமையாதவைகளாகத் தெரியவந்தன. தொல்பொருட்களுக்கு விளக்கம் அளிப்பதில்

எழுதப்பட்ட ஏடுகள் இன்றியமையாதவையாகப் பயன்பட்டன. இவ்வாறு தொல்பொருள் ஆய்வும் எழுதப்பட்ட வரலாறும் ஒன்றையொன்று நிறைவு செய்யும் விதத்தில் பெரும்பாலும் அமைந்தன. தொல்பொருள்களில் (கல், களிமண், உலோகம், தோல் சுருள், புல்தாள் ஆகியவற்றில்) எழுதப்பட்ட குறிப்புகளும், சித்திரங்களும், கட்டடங்கள்; கலைப் பொருள்கள், கோட்டை கொத்தளங்கள், ஆயுதங்கள், கருவிகள், தனி நபர்கள் பயன் படுத்திய பொருட்களும் அடங்கும்.

தொல்பொருள் ஆய்வுகள் உலகெங்கும் நடைபெற்றாலும், மேற்கத்திய அறிஞர்களை விவிலியம் சார்ந்த நாடுகளே அதிகம் ஈர்த்தன. ஆகவே இது விவிலியத் தொல்பொருளியல் என்று குறிப்பிடப்படுவதுண்டு. பாலஸ்தீனம், சீரியா, எகிப்து, மெசபொத்தாமியா, சிறிய ஆசியா, கிரீஸ் ஆகிய நாடுகளில் விவிலியம் சார்ந்த இடங்களில் நடந்த ஆய்வுகள் சிறப்புப்பெற்றன. வளர்ச்சி யடைந்த தொழில் நுணுக்கம் இந்த ஆய்வுகளுக்கேற்பவே செய்யப்பட்டன. இக்கட்டு ரையில் விவிலியத் தொல்பொருளியலைப் பற்றியே எழுதுகிறோம்.

II. **ஆய்வுமுறை:** தற்காலத் தொல்பொருளியல் என்பது பழங்கால மனிதர்களின் குடியிருப்புகள் இருந்த இடங்களை அகழ்வாய்வு செய்து அங்குக் காணப்படும் பொருட்களைச் சேகரித்து, அவற்றிற்குக் காலம் குறிப்பதும், விளக்கம் அளிப்பதுமாகும். இக்காலத்தில் இத்தொழில் நுணுக்கம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

1. **பொருட்களைச் சேகரித்தல்:** முதல்படி ஆய்வுக்குரிய ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தலாகும். இப்படித் தேர்ந்தெடுப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். பழங்கால இடம் பற்றிய வரலாற்று முக்கியத்துவமுடைய இலக்கியச்சான்றுகள் இம்மாதிரி இடங்களைச் சுட்டியிருக்கலாம்; புவியியல் அமைப்போ தொடர்ந்து வழக்கில் இருந்து வந்திருக்கும் பெயரோ ஓர் இடத்தை ஆய்வுக்குரியதாகச் சுட்டலாம்; ஒரு வரலாற்றுக் காலவரையறைப் பிரச்சனை தீர்க்கப்படா மலிருக்கலாம்; இதை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களின் ஆய்வுகள் விடுவிக்கலாம்; அல்லது ஆய்வு நுணுக்கப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு ஏதுவான இடமாகவோ, பாதுகாப்பான இடமாகவோ இருக்கலாம்.

அடுத்தபடி, பொருட்களைச் சேகரித்தலாகும். இது தரைமட்ட ஆய்வு என்றும் அகழ்வாய்வு என்றும் வேறுபடுத்தப்படலாம்.

அ) தரைமட்ட ஆய்வு: தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சுத்தம் செய்யப்பட்டு அளவாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது. தரைமட்டத்தில் காணப்படும் பொருட்கள் கவனமாய்ச் சேகரிக்கப்பட்டு குறிக்கப்படுகின்றன. இத்தகைய முறை, தொல்பொருள் ஆய்வு முயற்சிகளின் தொடக்கத்திலிருந்தே பயன்படுத் தப்பட்டுள்ளன. இம்முறையில் பல குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் கிடைத்துள்ளன. சான்றாக, கி.பி. 1798-இல் நெப்போலியன் எகிப்தின்மீது படையெடுத்தபோது கண்டெடுக்கப்பட்ட ரோசேட்டக் கல். இஃது எகிப்து மொழியை விளக்கும் திறவுகோலாக அமைந்தது. அவ்வாறே பெகிஸ்தூன் கற்பொறிப்புகள் அசீரிய - பாபிலோனிய ஆப்பு எழுத்து வடிவங்களை விளக்க ப்பெரிதும் உதவியாய் அமைந்தன.

ஆ) அகழ்வாய்வு முறை: இதுதான் இப்போது பெரும்பாலும் பயன்படும் முறையாகும். இதற்குக் குறிக்கப்படும் இலக்கு, மேடு அல்லது குன்று என்று பொருள்படும் "தெல்" என்பதாகும். ஒரு குடியிருப்பு அழிந்தபின், அதன்மேல் மற்றொரு குடியிருப்பு அழிந்தபின் அதன்மேல் மூன்றாவது குடியிருப்பு எழும். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக ஒரே இடத்தின்மேல் அமைக்கப்பட்ட குடியிருப்புகளின் அழிவுகளை அல்லது சிதைவுகளைக்கொண்ட மேடு அல்லது குன்றுதான் தெல் என்றழைக்கப்பட்டது.

இந்த முறையின் முதற்படி 5 மீட்டர் சதுரத்திற்கு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு கட்டமைப்பு செய்து மேல்மட்டத்தைப் பாதுகாத்தலாகும். இந்த இடத்தின்மேல் காணப்படும் செடி கொடிகள், குப்பைகள், உடைந்த பாண்டத்துணுக்குகள் முதலியவற்றை

நீக்கிச் சுத்தப்படுத்துதல்; அவ்வாறு கண்டவற்றைக் கவனமாய்க் குறித்து வைத்தல். பின்பு ஒரு மீட்டர் சதுரத்திற்குச் சோதனைக் குழி தோண்டப்படும். அப்போது அங்குக் காணப்படும் பொருள்கள் சேகரிக்கப்பட்டு, அவை காணப்படும் மட்டமும் மற்றவையும் கவனமாய்க் குறிக்கப் படுகின்றன. குழியின் ஓரங்கள் சுத்தம் செய்யப்பட்டு பல்வேறு மட்டங்கள் தெளிவாகக் குறிக்கப்படுகின்றன. இஃது மட்டத்திலிருந்து மற்றொரு மட்டத்திற்குள் தோண்டி, கண்டு பிடிப்புகளைக் குழப்பி விடாதிருக்க உதவி செய்யும். பின்பு, செங்குத்தாக மேலிருந்து கீழ்நோக்கி மட்டமாகத் தோண்டப்பட்டு மண் வெளியேற்றப்படும். இவ்வாறு ஒவ்வொரு மட்டமாக அழிக்கப்படுவதால் அந்தந்த மட்டத்தில் காணப்படும் பொருட்கள் தனித்தனியாகச் சேகரிக்கப்படுகின்றன. அவை காணப்படும் இடம், பரப்பு மட்டம், அந்த மட்டத்தில் அவற்றின் இடம், காணப்பட்ட பொருட்கள் பற்றிய விவரங்கள் ஆகியவை கவனமாகக் குறிக்கப்படுகின்றன. இவை யாவும் தொல்பொருள் ஆய்வாளரின் குறிப்பேட்டில் இடம் பெறுகின்றன. பின்பு அந்த மட்டம் வரைபடம் செய்யப்படுகிறது; புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. பின்பு அந்த மட்டத்தில் காணப்படும் சுவர்கள், கட்டட அமைப்புகள் அழிக்கப்பட்டுச் சுத்தம் செய்யப் படுகிறது. இவ்வாறு அடுத்தமட்ட ஆய்வுக்கு இடம் தயார் செய்யப்படுகிறது.

தொல்பொருள் ஆய்வாளர்களைக் கவரும் பல பொருட்களில் சிறப்புப் பெறுவன-கல்லறைகளும் குகைகளுமாகும். கல்லறைகள் அதிகம் காணப்படுவதில்லை. பெரும்பாலும் இவை நிலத்தடியில் அமைந்திருப்பதால் தரைமட்டத்தில் எச்சுவடும் விட்டுச் செல்வதில்லை. ஆனால் இறந்தவரோடு புதைக்கப்பட்ட மரப் பாத்திரங்கள், அணிகலன்கள், முத்திரைகள், தட்டுமுட்டுப் பொருள்கள் போன்றவை நன்கு பாதுகாக்கப்பட்டு இக்கல்லறைகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பொதுவாகக் குகைகள் வரலாற்றுக்கு முந்திய கலாச்சாரங்கள் பற்றிய செய்திகளைக் கொடுக்கின்றன.

2. பொருட்களுக்குக் காலம் குறித்தல்:

அகழ்வாய்வு செய்தபின், தொல்பொருள் ஆய்வாளரின் முக்கியக் கடமைகளில் ஒன்று, ஆய்வுசெய்த மட்டத்தின் காலத்தை ஓரளவு தெளிவாக நிர்ணயம் செய்வதாகும். பாண்டத் துணுக்குகளை வைத்துக் காலம் குறிக்கும் தொழில் நுணுக்கம் இப்போது வளர்ச்சி யடைந்துள்ளது. இதற்கு ஒவ்வொரு கலாச்சாரக் காலமும் தனக்கே உரிய பாண்டங்களைக் கொண்டிருந்தது என்ற கருத்து அடிப்படையாக உள்ளது. இவை வடிவம், நிறம், உருவப்படம், பருமன் ஆகியவற்றில் வேறுபட்டன. இவ்வேறுபாடுகளைக் கவனமாய் ஆராய்ந்து, தெளிவாகக் காலம் குறிக்கப் பயன்படும் பிறசான்றுகளோடு ஒப்பிட்டு, தொல் பொருளியலாளர் பொருட்களுக்கும் அதன் விளைவாக ஒரு மட்டத்திற்கும் காலம் குறிக்க முயல்வர்.

சில சமயங்களில் எழுதப்பட்ட குறிப்புகள், நாணயங்கள், அரச முத்திரைகள் மற்றும் பிறபொருட்களும் காலக்குறிப்புகளைக் கொண்டி ருப்பதாக அமைந்திருக்கக்கூடும். அப்படிப்பட்ட பொருட்கள் கிடைத்தால் அவை கண்டெடுக்கப்பட்ட மட்டத்தின் காலத்தைத் துல்லியமாகக் கணிக்க முடியும். சில சமயங்களில் விவிலியத்தில் காணப்படும் காலக்குறிப்புகள் தொல் பொருட்களின் காலத்தைக் துல்லியமாகக் குறிக்கப் பயன்படுகின்றன. சான்றாக, சமாரியா ஓம்ரியின் ஏழாவது ஆண்டு நிறுவப்பட்டு (1அர 16:23-24; கி.மு. 870) கி.மு. 721-இல் அழிக்கப்பட்டது (2 அர 17:5-6). ஆனால் பெரும்பான்மையான இடங்களுக்கு இத்தகைய செய்திகள் கிடைப்பதில்லை.

அறிவியல் தொழில்நுணுக்க முறைகள் வழக்கில் வந்தபிறகு காலம் குறிக்கப் பிற முறைகளும் பயன்படுகின்றன. இவற்றில் முதன்மையானது காரீயம் - 14 (**Carbon** - 14) முறையாகும். இது மரம், எலும்பு, ஓடு, சாணம் முதலியவற்றிலுள்ள கதிரியக்கக் காரீயத்தை அளந்து காலம் குறிப்பதாகும். சில அறிவியல் வாய்பாடுகளைப் பயன்படுத்தி, விஞ்ஞானிகள், 5

விழுக்காட்டுக்குள் தவறுடைய முறையில், இப்பொருட்களின் காலத்தைத் துல்லியமாகக் கணிக்கமுடிகிறது. இவ்வாறு காலம் குறிக்கப்பட்ட பொருட்கள் அவை கண்டெடுக்கப்பட்ட மட்டத்தின் காலத்தைக் கணிக்க உதவுகின்றன.

காலப்பிரிவுகள் பற்றி அறிஞரிடையே கருத்தொற்றுமை இல்லையெனினும் பின் வரும் தோராயமான பிரிவுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

வரலாற்றுக்கு முந்திய காலம்.

புதிய கற்காலம் கி.மு. 6,000-4500
பித்தளை அல்லது செம்புக்காலம் 4500-3200
தொடக்க வெண்கலக் காலம் I 3200-2900
தொடக்க வெண்கலக் காலம் II 2900-2700
தொடக்க வெண்கலக் காலம் III 2700-2300
தொடக்க வெண்கலக் காலம் IV 2300-2100
மத்திய வெண்கலக் காலம் I 2100-1900
மத்திய வெண்கலக் காலம் II 1900-1700
மத்திய வெண்கலக் காலம் III 1700-1600
பிற்கால வெண்கலக் காலம் I 1600-1400
பிற்கால வெண்கலக் காலம் II 1400-1200
இரும்புக் காலம் I 1200-900
இரும்புக் காலம் II 900-600
இரும்புக் காலம் III 600-300
கிரேக்கர் காலம் 300-63
உரோமையர் காலம் கி.மு. 63-கி.பி.323
பைசாந்தியர் காலம் கி.பி. 323-636
இஸ்லாமியர் காலம் 636...

3. கண்டுபிடிப்புகளுக்கு விளக்கம் அளித்தல்:

அகழ்வாய்வு முடிந்தபின் தொல்பொருளியாளாளர், தாம் கண்டெடுத்த பொருள்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். தான் எடுத்த குறிப்புகள், வரைபடங்கள், புகைப்படங்கள் முதலியவற்றை ஆராய்ந்து, ஓர் இடத்தின் அல்லது மட்டத்தின், குடியிருப்பின் தோராயமான காலத்தைக் கணிக்க வேண்டும். இது காலம் குறிக்கக்கூடிய பாண்டங்கள், ஆயுதங்கள் போன்றவற்றோடு, வெவ்வேறு மட்டங்களை ஒப்பிட்டுச் செய்யப்படும். இது முடிந்தவுடன், இச்செய்திகளை அண்டை இடங்களுடனும், பொதுவாக மேற்காசியப் பகுதிகளுடனும் ஒப்பிட்டு ஆய்வுசெய்து விளக்கம் அளிக்க முயற்சி எடுக்கப்படும்.

அகழ்வாய்வு செய்யும்போது ஒவ்வொரு மட்டமாக அழிக்கப்படுவதால், தொல்பொருளியலாளர் தான் காண்பவற்றைக் மிகக் கவனமுடன் குறித்து வைக்க வேண்டும். பிறகு இக்குறிப்புகள், முதலில் சிறு சிறு பகுதிகளாகவும், பின்பு முழுமையாகவும் பதிப்பிக்கப்படும். இதனால் ஆற்றல் வாய்ந்த தொல்பொருளியலாளர் பிறரும் அவற்றிற்கு விளக்கம் அளிக்க வாய்ப்புக் கிட்டும். இம்முறையில் பல தவறுகள் அல்லது துல்லியமற்ற ஆய்வுகள் திருத்தப்படலாம்; விடுவிக்கப்படாத பிரச்சனைகள் விடுவிக்கப் படலாம்.

III. விவிலியத் தொல்பொருளில் வரலாறு:

1. சிலுவைப்போர் காலத்திலேயே விவிலியத் தொல்பொருள் ஆய்வுகள் தொடங்கினாலும், நெப்போலியன் கி.பி. 1798-இல் எகிப்தின் மீது படையெடுத்ததோடு இந்த ஆய்வு சிறப்பான முறையில் தொடங்கியது எனலாம். இந்தப் படையெடுப்பில் ரோசேட்டக் கல் கண்டெடுக்கப் பட்டது. இதன் புதிர் 1930-இல் விளக்கப்பட்டதோடு எகிப்தியல் என்ற அறிவியல் தொடங்கியது எனலாம். 1865-இல் பாலஸ்தீனம் அளவியல் செய்யப்பட்டு ஓர் அங்குலம் - ஒருமைல் - வீத விரிவான, அதிகாரபூர்வமான வரைபடம் செய்யப்பட்டது. 1940, 42-43-இல் மெசபொத்தாமியாவின் பல இடங்களிலும், குறிப்பாக நினிவேயிலும் அகழ்வாய்வுகள் செய்யப்பட்டன. 1850-இல் ராபின்சன் என்பவர் அசீரிய - பாபிலோனிய ஆப்பு எழுத்துப் புதிர்களுக்கு விடை கண்டார். 19-ஆம் நூற்றாண்டின் முடிவிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பாபிலோன் நகரில் அகழ்வாய்வுகள் நடந்தன. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மெசபொத்தாமியாக் கலாச்சாரத்தின் முன்னோடியான சுமேரியக் கலாச்சாரம் வெளிக்கொணரப்பட்டது.

பாலஸ்தீனக் தொல்பொருள், ராபின்சன் மற்றும் ஸ்மித் ஆகியவர்கள் 1838-இல்

இந்நாட்டில் பயணம் செய்து, தரைமட்ட ஆய்வுத் துணைகொண்டு, விவிலிய இடங்கள் பலவற்றை அடையாளம் காட்டியதிலிருந்து தொடங்கியது எனலாம். 1872-79-இல் மேற்குப் பாலஸ் தீனத்தில் குறிப்பிடத்தக்க தரைமட்ட அளவியல் செய்யப்பட்டது. 1884-இல் அவுரான், வடயோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் ஆய்வுப்பணி தொடங்கியது. 1933-இல் யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதிகளிலும், 1953-இல் நெகேபிலும் பணிகள் தொடங்கின.

1890-இல் தெல் ஏல்-கேசி என்ற இடத்தில் பெற்றி என்பவரால் பணி தொடங்கும்வரை பாலஸ்தீனத்தில் அகழ்வாய்வுப்பணிகள் நடக்க வில்லை. இந்த இடம் முதலில் இலாக்கீசு என்று கருதப்பட்டது; இப்போது எக்லோன் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். பெற்றி என்பவர்தாம் பாலஸ்தீன இடங்களுக்கு மட்டஅளவு ஆய்வு மற்றும் பாண்டங்களைப் பயன்படுத்திக் காலம் கணித்தல் போன்ற வைகளைப் பயன்படுத்தும் முறையை நிறுவினார். மட்ட அளவு ஆய்வு முறையில் 1870-இல் திராய் அகழ்வாய்வு செய்யப்பட்டது.

பாலஸ்தீனத் தொல்பொருளாய்வு வரலாறு மிக நீண்டது. இதில் அறிஞர்கள் பலர் ஈடுபட்டிருந்தனர். இங்கு, ஆய்வுகள் நடந்த இடங்களின் பெயர்களையும், ஆய்வு நடந்த ஆண்டுகளையும் மட்டும் சுருக்கமாகத் தருகிறோம்.

2. முதல் உலகப் போருக்கு முன் நடந்த ஆய்வுகள் : எருசலேம் (1894-97); தெல் எசேர் (கெசேர்; 1902-09); தெல் தானாக்கு (தனாக்கு; 1901-04); தெல் ஏல்–முத்தேசெலிம் (மெகிதோ; 1903-05); தெல் ஏல் – சுல்தான் (பழைய எரிகோ; 1907-09); செபாஸ்தியே (சமாரியா, 1908-10); தெல் ஏர் – ருமெய்லே (பெத் செமேசு; 1911-12); தெல் பலாத்தா (செக்கேம்; 1913-14).

இவற்றில், சிலவற்றைத் தவிர, மற்றெல்லா ஆய்வுகளும் தாழ்ந்த தரமுடையனவாக அமைந்தன. பெரும்பாலும் தவறாக விளக்கம் அளிக்கப்பட்டன எனலாம். தனிப்பட்ட ஆய்வுகள் ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஒருங்குபடுத்தப் படவில்லை. ஆகவே பாலஸ்தீனம் பற்றிய பொதுக்காலவரைத் திட்டம் அமைக்கப்படவில்லை.

3. முதல் உலகப்போருக்குப்பின் நடந்த அறிவியல் சார்ந்த அகழ்வாய்வுகளில் சில: அங்காலோன் (அங்கலோன்; 1920-22); தெல் ஏல் - குசான் (பெத்சான்; 1921-23); தெல் ஏல் - பூல் (கிபயா; 1922-23); எருசலேமில் தாவீதின் நகர் (ஒபேல்; 1923-28); தெல் ஏல் - முத்தேசெலிம் (மெகிதோ; 1925-39); எராசா (கெராசா; 1924-34); தெல் செயுனூன் (சீலோ; 1926); தெல் பலாத்தா (செக்கோம்; 1926-34); தெல் ஏன் - நாஸ்பே (மிஸ்பா; 1926-35); தெல் பெயித் மிர்சிம் (1926-32); தெல் எம்மே (1926-27); தெல் ஏல்-பாரா (திராட்சா; 1928-30); தெல் ஏர்-ருமெய்லே (பெத்செமேசு; 1928-33); தெல் ஏல்-சுல்தான் (எரிகோ; 1929-36); தெல் ஏல்-அச்சூல் (பெத்எக்லாயிம்; 1930-34); எத்-துபேய்க்கா (பெத்சூர்; 1931); செபாஸ்தியே (சமாரியா, 1931-35); தெல் அபு-கவாம் (சல்மோனா, 1932-33); எத்-தெல் (ஆயி; 1933-34); பெயித்தின் (பெத்தேல்; 1934); எருசலேம் (1933-40).

இக்கால ஆய்வுகளின் பண்புகள்: அகழ்வாய்வுக் குழுக்களின் தரம் உயர்ந்திருந்தது. கண்டுபிடிக்கப்பட்டவை கவனமாகக் குறிப்பெடுக் கப்பட்டன. அவற்றிற்கு விரைவில் விளக்கம் அளிக்கப்பட்டன. பொதுவாக, பாலஸ்தீனத் தொல்பொருளியல் அறிவியல் நிலையை எட்டியது எனலாம்.

4. இரண்டாம் உலகப்போரின்போதும் அதன்பின் வந்த அரபு இஸ்ராயேல் போரின் போதும் பாலஸ்தீனத்தில் தொல்பொருளியல் செயல்கள் யாவும் பெருமளவிற்கு ஓய்ந்து போயின எனலாம். ஆயினும் இக்காலத்தில் நடந்த சில குறிப்பிடத்தக்க ஆய்வுகளைத் தருகிறோம். கிர்பெத் கெராக்கு (பெத் எரா; 1944); தெல் ஏல்-பூல் (திராட்சா; 1946-60); கும்ரான் குகைகள், கிர்பெத் கும்ரான் மற்றும் வாடி முராப்பத்து (1948); தெல் குவாசிலே (1948-50); செசரியா (1950); யாப்பா (1950); தூலூல் அபு ஏல்-அலயிக்கு (புதிய ஏற்பாட்டு எரிகோ; 1950-51); தீபான்

(தீபோன் அல்லது தீபோன் காது; 1950;1956); அப்புலே (ஏப்பேர்; 1951); கிர்பெத் ஏல்-பித்தார் (1952-54); தெல் எஸ்-சுல்தான் (எரிகோ; 1952-58); தெல் அபு-முத்தார் (1952); தெல் தோத்தா (தோத்தான்; 1953-64); பென்-தோர் (1947); தோத்தான் (1954-55) பெயித்தின் (பெத்தேல்; 1954; 1957;1960); தெல் ஏல்-கெதா (ஆட்சோர்; 1955-58); மசாதா (1955); பலாத்தா (செக்கேம்; 1957-66); எச்-சிப்பு (கிபயோன்; 1956-62); தெல் செயிக் ஏல்-அரெய்னி (காத்து; 1956-61); இராமாத் இரகேல் (1959-62); யாப்பா (1955-61); கெயிசாரியா (ஏராதியோன், செகரியாவின் ஒருபாகுதி; 1959-62); ஓபேல் (எருசலேம்; 1961-68); எஸ் தூது (அசுதோது; 1962-72); தெல் அராது (அராது; 1962-67); தெல் எத்-துவேயிர் (இலாக்கிசு; 1966); எபேல் புரேயிதின் (ஏரோதியோம்; 1962-67); மசாதா (1963-65); தெல் தனாக்கு (தனாக்கு; 1963-68; தெல் எசேர் (கெசேர்; 1964-74); தெல் தாண் (தாண்; 1966); எருசலேமில் மாசார் (1968-77); தெல் எஸ்-செபா (பெயேர் செபா; 1969);

5.பாலஸ்தீனத்துக்கு வெளியே, எட்சி யோன்-கெபேர், பெத்திரா, தெல் தெயிர் அல்லா (சுக்கோத்து), தேல் கெஸ்போன் (எஸ்போன்) ஆகிய இடங்களில் முக்கிய அகழ்வாய்வுகள் நடைபெற்றுள்ளன. சீரியாவில் கர்க்கமிசு, தெல் கலாபு (கோசான்), இரஸ்சம்ரா (உகாரித்து), தெல் கரிரீ (மாரி), தெல் அத்சானா (அலாக்கா), தெல் எர்பாது (அர்ப்பாது), தெல் மர்திக்கா (எபிலா) ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகள் நடந்துள்ளன. லெபனோனில் பாகால்பேக் (ஆவென்), பிப்லோஸ், சீதோன், தீர், கமது ஏல்-லோஸ் (குமிதி), சாரபாத்து ஆகிய இடங்களிலும், சிறிய ஆசியாவில் பாகோஸ்கோய் (அற்றூசாஸ்), அலாக்கா குயுக்கு (எயுக்கு), குல்தெபே, கராதெபே, அலிசார், எபேசு, சார்தை, எராப்போலி, சிமிர்னா, பெர்கமு, தியத்திரா, பிலதெல்பியா, இலவோதிக்கேயா ஆகிய இடங்களிலும் அகழ்வாய்வுகள் நடந்துள்ளன.

IV. தொல்பொருளியலும் விவிலியமும்:

1. **முக்கியமான ஒப்புமை:** பாலஸ்தீனத்தில் நடந்துள்ள பெரும்பான்மையான தொல்பொருள் ஆய்வுகள் விவிலியத்திற்கு இருவழிகளில் விளக்கம் அளிக்க உதவியுள்ளன. ஒன்று, விவிலிய காலத்தில் இஸ்ராயேலின் பொருட்கலாச்சாரம் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதற்கு உதவியுள்ளது. மற்றது விவிலியத்தில் வரும் பல வரலாற்றுக் கூற்றுகளின் துல்லியத்தை உறுதிப்படுத்த உதவியுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்கள், கோட்டை கொத்தளங்கள், கலைப்பொருட்கள், ஆயுதங்கள், கருவிகள், தனிநபர்களின் பொருட்கள், பொதுவாகப் பழங்கால வாழ்வை இக்காலத்திற்கு எடுத்துக்காட்டும் எல்லாப்பொருட்களும் பழங்காலப் பொருட்கலாச்சாரம் பற்றிய அறிவை வளப்படுத்த உதவுகின்றன. இஸ்ராயேலர் கானானை வெற்றி கொண்டபோது பல கானானிய நகர்களில் காணப்படும் கி.மு. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அழிவுகளின் மட்டம் (யோசு 5-12), கி.மு. 597-இல் யூதா பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதைக் கூறும் இலாக்கிசு கடிதங்கள் ஆகியவை வரலாற்றுத் துல்லியத்தை உறுதிப்படுத்தும் கண்டுபிடிப்புகளில் சிலவாகும்.

விவிலியத்தோடு ஒத்துப்போகும் இலக்கியச் சான்றுகள் பல பாலஸ்தீனத்திற்குப் புறம்பே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணங்கள் இஸ்ராயேலரின் அண்டை நாட்டார் எழுதப் பயன்படுத்திய களிமண் தகடுகள், இஸ்ராயேலர் பயன்படுத்திய புல் தாள் ஏடுகளையும் மற்ற ஏடுகளையும் விட அதிகநாட்கள் நிலைத்திருக்கக் கூடியதாகும்.

விவிலியத்திற்கு விளக்கம் அளிக்கக்கூடிய எல்லாத் தொல்பொருளியல் இலக்கியச் சான்றுகளையும் கூறுவது என்பது அவ்வளவு எளிதன்று. இங்கு முக்கியமான சிலவற்றை மட்டுமே தருகிறோம்.

2. நினிவேயில், அசூர்பானிப்பாலின் நூல்நிலையத்தில், படைப்புப்பற்றிய பாபிலோனிய விவரிப்பு 1850-54-இல் கண்டு பிடிக்கப்பட்டது. இது "எனுமா எலிஸ்" (மேலிருக்கும்போது) என்று பெயர் பெற்றது.

இவை இவ்விவரிப்பின்படி தொடக்கச் சொற்களாகும். இவ்விவரிப்பின்படி, மிகப்பெரிய கடவுளாகிய மார்துக்குக்கும் அதன் பெண் எதிரியான திமயாத்துக்கும் இடையே நிகழ்ந்த போராட்டத்தின் விளைவாகப் படைப்பு நிகழ்கிறது. ஆதியாகமம் முதல் அதிகாரத்தோடு இவ்விவரிப்பு கொண்டிருக்கும் ஒற்றுமைகளில் முதன்மையானவை: ஒருகாலத்தில் மண்ணுலகு உருவமற்று வெறுமையாக இருந்தது; படைப்பு நிகழ்ச்சியின் வரிசை; ஏழு என்னும் எண் அடிக்கடி பயன்படுதல் ஆகியவையாகும். இரண்டிற்கு மிடையே முக்கிய வேறுபாடுகள் உண்டு. பாபிலோனிய விவரிப்பு பல தெய்வக் கோட்பாட்டைப் பயன்படுத்தும்போது விவிலியம் இறையொருமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பாபிலோனிய விவரிப்பு இறை ஆவியையும் அண்டப் பொருட்களையும் குழப்புகிறது; இஸ்ராயேல் விவரிப்பு இரண்டையும் வேறுபடுத்துகிறது. பாபிலோனிய விவரிப்பு மார்துக்குச் சிலைமுன் ஆண்டுதோறும் பாடப்பட்ட சடங்குச் சங்கீதமாகும். விவிலியம் படைப்பை ஒரு விவரிப்பாகவே எடுத்துக் கூறுகிறது.

அறிஞர் சிலர் படைப்புப்பற்றிய ஆதியாகம விவரிப்பு. பாபிலோனிய விவரிப்பைத் தழுவியது என்பர். ஆனால் இரண்டுக்கும் பொதுவான ஒரு மூலம் இருந்திருக்கவேண்டும். அது இஸ்ராயேலின் சமயத்துக்கு ஏற்றதாகச் செய்யப்பட்டபோது, அதன் இதிகாசக் கூறுகள் நீக்கப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டு, விவிலிய விவரிப்பு வடிவெடுத்தது என்று கூறுவதே சாலச்சிறந்ததாகும்.

3. மனுகுலம் முழுவதையும் அழித்ததாகக் கூறப்படும் பெருவெள்ளக்கதையைப் பல மெசபொத்தாமிய மூலங்களிலிருந்து அறிகிறோம். இவற்றில் மிக முந்தியதான சுமேரிய விவரிப்பில் சியுசுத்தார் என்ற ஒருவர் மட்டும்தான் ஒரு படகின் உதவியால் பெருவெள்ள அழிவிலிருந்து தப்பினார். ஆகவே கடவுள்கள் அவருக்குச் சாகா வரம் அளித்தனர்.

பெருவெள்ளம் பற்றிய பாபிலோனிய விவரிப்பு விவிலிய விவரிப்புக்கு நேரடிப் பொருத்த முடையதாம்.இது கில்காமெக இதிகாசத்தின் பதினொன்றாம் தகட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் உதனபிஸ்திம் என்பவர். பெருவெள்ளத்தி லிருந்து தான் தப்பியதன் காரணமாகத் தமக்குக் கடவுள்கள் சாகாவரம் அளித்த கதையைக் கில்கமெசுக்கு விளக்குகிறார். இக்கதையின் பல விவரங்கள் விவிலிய விவரிப்போடு ஒத்துப் போகின்றன. அவற்றில் சில: பெருவெள்ளம் கடவு(ள்க)ளின் சினத்தின் விளைவாகும். கதைத் தலைவனுக்கு இப்பேரழிவு முன்னுரைக்கப் படுகிறது. பல்வேறு வகைகளில் மனுகுலத்தின் பாவமே பெருவெள்ளத்திற்குக் காரணமாகும். கதைத்தலைவனும் அவரது குடும்பமும் இப்பேரழிவிலிருந்து தப்பினர்; உயிரைப் பாதுகாக்குமாறு ஒருபடகைக் கட்டுமாறு கதைத்தலைவனுக்குக் கடவுள்(கள்) கட்டளையிடு கின்றனர்; பெருவெள்ளத்தில் இயற்கைக் காரணங்களும் காலமும் குறிக்கப்படுகின்றன; படகு தங்கிய மலையின் பெயர் தரப்படுகிறது; வெள்ளத்திற்குப் பிறகு தண்ணீர் வற்றுவதை அறியப் பறவைகள் அனுப்பப்படுகின்றன; பேரழிவுக்குப்பின் கதைத்தலைவன் செய்யும் வழிபாட்டுச் செயல் விவரிக்கப்படுகிறது. அதன்பின் தலைவனுக்கு அளிக்கப்படும் சிறப்புச் செய்தி விவரிக்கப்படுகிறது. இரண்டு விவரிப்புகளுக்குமிடையேயுள்ள முக்கிய வேறுபாடுகள்; பாபிலோனியக் கதை பல தெய்வக் கோட்பாட்டைக் கொண்டிருக்கும்போது, இஸ்ராயேலரின் விவரிப்பு இறையொருமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது; விவிலியத்தில், பெருவெள்ளத்திற்குக் காரணம் மனுகுலத்தின் ஒழுக்கச் சீர்கேடேயாகும் என்பது வலியுறுத்தப்படுகிறது. பாபிலோனியக்கதை இறை ஆவியையும் அண்டப்பொருள்களையும் குழப்பும்போது, விவிலியம் இரண்டையும் வேறுபடுத்துகிறது;.

படைப்பு விவரிப்பில் போன்று, இங்கும் இரண்டு விவரிப்புகளுக்கும் பொதுவான ஒரு பாரம்பரியம் இருந்திருக்க வேண்டும் என்றும், அதன் இதிகாசக் கூறுகள் நீக்கப்பட்டு, இஸ்ராயேலர் சமயத்திற்கு ஏற்றதாக மாற்றப்பட்டது என்றும் கூறுவர் அறிஞர் பலர்.

4. நூசி என்ற பழங்கால ஊரியா நகரில் 1925-41-இல் கண்டெடுக்கப்பட்ட, பாபிலோனிய ஆப்பு எழுத்துக்களில் எழுதப்பட்ட ஆயிரக்கணக்கான களிமண் தகடுகள் விவிலிய குலமுதியவர் பற்றிய விவரிப்புகளில் வரும் பழக்க வழக்கங்களுக்கு ஒளி அளிக்கின்றன. சான்றாக, ஆபிரகாம் தம் ஊழியன் எலியேசரைத் தத்து எடுத்தல் (ஆதி 15:2), விவிலிய அறிஞர்களைத் திகைக்கச் செய்திருக்கிறது. ஆனால் தகடுகள், குழந்தையற்ற ஒரு தம்பதியர் எவ்வாறு ஓர் ஊழியனையோ உறவினரல்லாத ஒரு சுதந்தரக் குடிமகனையோ தத்து எடுத்துக் கொள்ளலாம் என்று காட்டுகின்றன. பிற்காலத்தில் அத்தம்பதியருக்குப் புதல்வன் பிறந்தால் அவனுக்குத் தத்து எடுக்கப்பட்டவன் முதல் வாரிசு உரிமையை விட்டுக்கொடுக்க வேண்டும் (21:1-14) என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

தாம் மலடி என்றுணர்ந்த சாரா தனது வேலைக்காரியை ஆபிரகாமுக்குத் துணைவியாக அளித்ததற்கும் (16:1-16; 30:9) நூசித்தகடுகள் விளக்கம் அளிக்கின்றன. நூசிச்சட்டம், ஒருவனுடைய மனைவி மலடியானால், அவள் தன் வேலைக்காரியைத் தம் கணவனுக்கு மனைவியாகக் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது.

ராகேல் தன் குலதெய்வங்களின் சிலைகளைத் திருடி ஒளித்து வைத்தலுக்கு (ஆதி 31:34) நூசி ஏடுகள் விளக்கம் அளிக்கின்றன. அவற்றின்படி, குலதெய்வச் சிலைகளைக் கொண்டிருப்பது அக்குடும்பத்தில் தலைமைப் பதவி அளிக்கிறது. ஒரு புதல்வி இவ்வாறு கொண்டிருந்தால், அவளது தகப்பனின் சொத்துக்கு உரிமை அளிக்கிறது. இக்கதையில் ராகேலின் எண்ணம் தெளிவாகிறது.

5. விவிலியக் குலமுதியவர்கள் காலம் பற்றிய மேலும் அதிகமான செய்திகள் யூப்பிரத்தீசு நதியின் கரையிலுள்ள மாரி என்ற பழம்பெரும் நகரிலிருந்து கிடைக்கின்றன. இங்கு அக்காதிய மொழியிலுள்ள 20,000 களிமண் தகடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை மாரியின் கடைசி அரசனான சிம்ரி-லிம்முக்கும் அவனுடைய தூதன் அல்லது பாபிலோனிய அரசனான கம்முராபிக்குமிடையே நடந்த கடிதத் தொடர்பாகும். இவற்றிலிருந்து விவிலியக் குலமுதிவர்கள் காலத்துப் பழக்கவழக்கங்களுக்கு விளக்கம் கிடைக்கிறது.

மோசே சட்டத்தில் பல பகுதிகள், சுமேரிய, பாபிலோனிய, அசீரிய, இத்திய, கானானிய சட்டத்தொகுப்புகளோடு இணைத்தன்மை கொண்டுள்ளன. அவற்றிலிருந்து விளக்கமும் பெறுகின்றன. இச்சட்டத் தொகுப்புகளில் குறிப்பிடத்தக்கவை லிபித்-இஸ்தாரின் பாபிலோனியச் சட்டம் (கி.மு. 1875), எஸ்னுன்னாச்சட்டம் (2000), யாவரும் அறிந்த கம்முராபியின் சட்டம் (1723) முதலியவையாகும். பலவற்றில் சொல்லமைப்பில் கூட பாபிலோனியச் சட்டத்திற்கும் இஸ்ராயேல் சட்டத்திற்கும் நெருங்கிய ஒப்புமை காணப்படுகிறது. இஃது, இஸ்ராயேலர் மேற்காசிய அண்டை மக்களோடு பொதுவான ஒரு சட்டப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. இத்தகைய தொடர்பு ஒருவேளை இஸ்ராயேல் கானானில் புகுந்தபோது நடந்திருக்கலாம்.

ஆனால் இரண்டிற்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் உண்டு. காமத்திற்கு எதிராகச் சட்டம் பாபிலோனியத் தொகுப்பில் இல்லை. நடத்தை தன்னலமற்ற பொது நலநோக்கு அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்று பாபிலோனியச் சட்டம் கட்டளையிடவில்லை. இது சமயசார்பற்ற தன்மையுடையது. ஏனெனில் கடவுள்களுக்குரிய மரியாதை அடிப்படையில் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கோரவில்லை.

6. கி.பி. 1928-இல் இராஸ்-சம்ராவில் கண்டெடுக்கப்பட்டவை பழைய ஏற்பாட்டு ஆய்வில் புரட்சி செய்துள்ளன எனலாம். அங்குக் கண்டெடுக்கப்பட்ட அகரவரிசை ஆப்பு எழுத்துக்களில் எழுதப்பட்ட களிமண் ஏடுகள் பழைய ஏற்பாட்டுக்குப் பலவிதங்களில் ஒளி அளிக்கின்றன. இவை கானானியர் சமயத்தைப்பற்றி இதுவரை அறிந்திருந்ததைவிட அதிகமான செய்திகளைக் கொடுக்கின்றன. இவற்றில் காணப்படும் இதிகாசங்களை இடிமழைக் கடவுளான பாகாலைப் பற்றி விரிவான

சித்திரத்தை அளிக்கின்றன. இஸ்ராயேலர் கானானில் வாழ்ந்த காலமுழுவதும் அவர்களின் பிரமாணிக்கத்திற்கு யாவேயோடு போட்டியாகத் திகழ்ந்தது இந்தப்பாகால்தான் (கண். 1 அர 16:31; எரே 7:9). இத்தகடுகளில் காணப்படும் மொழி இப்போது உகாரித்து மொழி எனப்படும். இது பழைய ஏற்பாட்டுச் சொற்றொகுதி பலவற்றிற்கு ஒளி அளித்துள்ளது. அக்காது இதிகாசத்தில் வரும் நேர்மையான அரசன் தானேல்- எசே 14:14-20-இல் குறிக்கப்படும் தானியேல் என்றும், பிற்காலத்தில் நூல் தலைப்புப் பெற்ற தானியேல் அல்லன் என்றும் இப்போது உறுதியாகக் கூறலாம் என்பர் அறிஞர்கள்.

7. எகிப்தில் தெல் ஏல்-அமர்னாவில் (அக்தேதாத்தோன்) 1887-இல் கண்டெடுக்கப்பட்ட களிமண் ஏடுகள் கானானிய மொழியின் காலத்தால் முந்திய மாதிரியை விவிலிய அறிஞர்களுக்கு அளித்துள்ளன. இம்மொழியைத்தான் இஸ்ராயேலர் கானானில் புகுந்தபோது ஏற்றுக்கொண்டனர் (காண். எசா 19:18). இத்தகடுகளில் பல எகிப்தின் 3-ஆம், 4-ஆம் அமென்கோதோப்பு பார்வோன்களுக்கும் மேற்காசியாவிலிருந்து சில நகர அரசுகளின் அரசர்களுக்குமிடையே நடந்த கடிதத் தொடர்புகளைக் கொண்டுள்ளன. இவை அக்காதிய மொழியில் எழுதப்பட்டுள்ளன. சில அக்காதியச் சொற்களை விளக்க எழுத்தாளர்களால் புகுத்தப்பட்ட கானானியக் குறிப்புகளையும் கொண்டுள்ளன. இம்மொழி விவிலிய எபிரேயத்திற்கு ஒளி அளிப்பதோடு, விவிலிய ஆய்வுக்கு இவ்வேடுகள் அளிக்கும் முக்கிய பங்கு கி.மு. 14-ஆம் நூற்றாண்டில் நிலவிய உயரிய கானானியக் கலாச்சாரம் பற்றிய சித்திரமாகும்.

8. 1947-இல் கண்டெடுக்கப்பட்ட கும்ரான் ஏடுகள் விவிலிய ஆய்வைப் பெரிதும் பாதித்துள்ளன. இவை பழைய ஏற்பாட்டு வாசக ஆய்வில் புரட்சி செய்துள்ளன. இங்கு வாழ்ந்த யூதப்பிரிவினரின் ஏடுகள் கிறிஸ்தவம் மற்றும் புதிய ஏற்பாடு தோன்றியது பற்றி ஒளி அளிக்கின்றன. எஸ்தர் தவிர, மற்ற எல்லாப் பழைய ஏற்பாட்டு நூல்களின் பிரதிகள் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை இதுவரை அறியப்பட்ட பிரதிகளுக்கு 1000 ஆண்டுகள் முந்தியவை. இவை கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன் மூன்று வகையான வாசகங்கள் பாலஸ்தீனத்தில் வழக்கில் இருந்தன என்று காட்டுகின்றன. **அ) மூல சமாரிய சிறப்பான வாசகப்பகுதிகளைக் கொண்ட எபிரேய வாசகம். ஆ) மூல எழுபது நூல்:** எழுபது நூலுக்கே உரிய சிறப்பான வாசகப் பகுதிகளைக் கொண்ட எபிரேய வாசகப் பகுதிகளைக் கொண்ட எபிரேய வாசகம். இ) மூல மாசரோட்டிக்கு வாசகம்: மரபுமுறை எபிரேய வாசகத்திற்கே உரிய பகுதிகளைக் கொண்ட எபிரேய வாசகம். இவை மூன்றும் கலந்த நான்காம் வகையும் காணப்பட்டுள்ளது. இந்த வாசகங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் சிறியவையே. இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன் பழைய ஏற்பாட்டு வாசகம் இன்னும் நிலையான வடிவம் எடுக்கவில்லை என்று காட்டுவதாக அறிஞர் கருதுவர்.

கும்ரான் பிரிவினரிடையே இருந்த நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களில் பல புதிய ஏற்பாட்டில் காணப்படுபவைகளுக்கு ஒப்பிடப்படுகின்றன. கும்ரானுக்கும் எருசலேமின் தொடக்கத் திருச்சபைக்குமிடையே திருமுழுக்குக்கும் மனம் வருந்துதலுக்கும் உள்ள தொடர்பு, சமூகப் பொது உடைமை, தலைவர்களின் எண்ணிக்கை, சமூகப் பொது உணவு, ஆலய வழிபாட்டில் அக்கறையின்மை போன்றவற்றில் ஒப்புமைகாண முயல்வர் சிலர். கும்ரானுக்கும் நான்காவது நற்செய்திக்குமிடையே, இருமைக் கோட்பாடு, உண்மையும் அக்கிரமமும், சகோதர அன்பு, உயிருள்ள நீரின் ஊற்று, பதிதம் ஆகியவற்றில் ஒப்புமை காண முயன்றுள்ளனர். கும்ரானுக்கும் பவுலின் நூல்கள் தொகுப்புக்குமிடையில் திருமுழுக்கு, ஆண்டவரது இறுதி இரவுணவு, புதிய உடன்படிக்கை, பழைய ஏற்பாட்டு ஒழுக்கக்கட்டளைகளுக்கு விளக்கம், தேவையான சாட்சிகளின் எண்ணிக்கை, இறைவனது சீற்றத்திற்கு இடம் கொடுத்தல், புரிந்து பாடுதல் ஆகியவற்றில் ஒப்புமை காண்பர்.

கும்ரானுக்கும் மற்றப் புதிய ஏற்பாட்டு நூல்கள் தொடக்க காலக் கிறிஸ்தவ ஏடுகளுக்குமிடையே இத்தகைய இணைவுத்தன்மை சிலவற்றில் இருப்பதை மறுக்க வேண்டியதில்லை. ஆனால் புதிய ஏற்பாடு கும்ரான் ஏடுகளை நேரடியாகத் தழுவியுள்ளது என்று ஏற்கவேண்டியதில்லை. இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்திலும், தொடக்க கிறிஸ்தவ காலத்திலும் நிலவிய யூதத்துவத்தின் பல்வேறு வகைகளை மனதில் கொண்டால், இரு இலக்கியத்தொகுப்பு களுக்கும் பொதுவான மூலம் ஒன்று இருந்திருக்கலாம் என்று அதிகபட்சமாகச் சுட்டலாம்.

9. வட சீரியாவில் 1975-இல் தெல் மார்திக் (எப்லா) என்ற இடத்தில் நடந்த அகழ்வாய்வில் 15,000 களிமண் தகடுகள் கண்டெடுக்கப்பட்டன. இதில் காணப்படும் மொழி பழைய கானானிய மொழி என்று அடையாளம் காட்டப்படுகிறது. இந்த ஏடுகள் பற்றிய ஆய்வுகள் பழைய ஏற்பாட்டுக் காலவரை, மொழி, ஆட்கள் மற்றும் இடங்களின் பெயர்கள், சமயம் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகளை ஓரளவு பாதிக்கலாம்.

10. விவிலிய ஆராய்ச்சியில், இலக்கியம் மற்றும் பொருள்கள் சார்ந்த ஒப்புமை ஆய்வில் எச்சரிக்கை மிக அவசியம். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிஞர்கள் சிலர் மேற்காசியாவை விவிலியத்தின் முன்னோராகக் காட்டுவதில் ஆவேசத் தீவிரம் காட்டினார். இவர்கள், இஸ்ராயேலர் பாபிலோனியக் கருத்துகளிலிருந்து நேரடியாகக் கடன் வாங்கினார் என்றும், பாபிலோனிய சமயத்திலிருந்து இஸ்ராயேலர் சமயம், சமய வளர்ச்சியின் பரிணாம முறையில், எபிரேய சமயமாய் வளர்ந்தது என்றும் கருதினர். அறிஞர்களின் இத்தகைய விஞ்சியபோக்கு இராஸ் - சம்ராவின் உகாரித்து ஏடுகள், சாக்கடல் ஏடுகள், எல்பா ஏடுகள் ஆகியன கண்டெடுக்கப்பட்டபின் தோன்றியது. ஆனால் சமீபகாலத்தில் மனித இன வரலாற்று இயல், மொழியில் மற்றும் பிற அறிவியல்கள் கலாச்சாரத்தைப் பாதிக்கும் தர்க்கம்பற்றிய அறிவால் பயன் அடைந்துள்ளனர். இஸ்ராயேலர் தங்களது அண்டை மக்களிடமிருந்து கடன் வாங்கினார்கள் என்றோ அவர்களின் பொருள் மற்றும் இலக்கிய வடிவங்களால் பாதிக்கப்பட்டார்கள் என்றோ தொல்பொருளியல் சான்றுகள் சுட்டினாலும், எபிரேய விசுவாசத்தின் கருத்தியல் முன்னோக்குக்கு ஏற்றவாறு இவை மாற்றியமைக்கப்பட்டன என்பது தெளிவாகிறது.

11. பழைய ஏற்பாட்டுக்குச் செய்த அளவு தொல்பொருளியல் புதிய ஏற்பாட்டுக்குச் செய்யவில்லை. இருந்தாலும் புதிய ஏற்பாட்டு இடங்களில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள் அதற்கு ஒரு கலாச்சாரப் பின்னணியை அளிக்கின்றன. உரோம் பேரரசின் பல இடங்களில் நடந்த அகழ்வாய்வுகள், அதன் நிர்வாக அமைப்பு, அது தொடக்கத் திருச்சபையின்பால் காட்டிய மாறுபட்ட மனப்போக்கு ஆகியவற்றிற்கு ஒளி அளிக்கின்றன. எகிப்தில் கண்டெடுக்கப்பட்ட கிரேக்கப் புல்தாள் ஏடுகளின் பெரும் தொகுப்பு, புதிய ஏற்பாட்டுக் கிரேக்க மொழி தான் மற்றக் கிரேக்க மொழி பேசப்பட்ட இடங்களிலும் வழக்கில் இருந்தது என்றும், அது புதிய ஏற்பாட்டுச் சொற்கள் பலவற்றிற்கு விளக்கம் அளிக்க உதவியுள்ளது என்றும் கருத இடமளிக்கிறது.

IV. தொல்பொருளியல் விவிலியத்தை எண்பிக்கிறதா?:-

விவிலியத் தொல்பொருள் ஆய்வு தொடக்கத்திலிருந்து, அது விவிலியத்தை நிரூபிக்கிறது என்று உரிமை கொண்டாடப் பட்டது. இக்கருத்துக்கு மாறாக இருவகையில் எதிர்ப்பு எழலாம்.

முதலாவதாக, விவிலிய வாசகத்தின் ஒரு சிறுபகுதிதான், அதுவும் பெரும்பாலும் வரலாற்று நிகழ்ச்சியுரைப் பகுதிகள்தான், எண்பிப்பதற்கு உரியவையாகும். அதாவது இஸ்ராயேலர் கானானைக் கைப்பற்றினர் அல்லது யூதாவின்மேல் பாபிலோன் படையெடுத்தது போன்ற விவிலியக் கூற்றுகளைத்தான் தொல்பொருளியல் நிரூபிக்கலாம். இறைவன் இருத்தல் பற்றி உறுதிப்பாடு அல்லது இயேசுகிறிஸ்துவின் இறைத்தன்மை போன்ற வற்றைத் தொல்பொருளியல் செய்ய முடியாது.

சங்கீதங்கள் பலவற்றையுமோ, பழமொழிகளையோ, யோபுவுக்கும் அவரது நண்பர்களுக்குமிடையே நிகழும் உரையாடலையோ (யோபு 3-37) அது உறுதிசெய்ய முடியாது.

இரண்டாவதாக, விவிலியத்தின் பல வரலாற்றுக் கூற்றுகள் அகழ்வாய்வுகளால் உறுதி செய்யப் பட்டாலும், இன்னும் பல கூற்றுகள் உறுதிசெய்யப் படவில்லை. இதற்கு முதன்மையான எடுத்துக்காட்டு, எரிகோ யோசுவாவால் அழிக்கப்படுதலாகும் (யோசு 6). அது அழிக்கப்பட்டதாக விவிலியம் கூறும் காலத்தைச் சேர்ந்த அழிவு மட்டம் தெல் ஏல் - சுல்தானின் (பழைய ஏற்பாட்டு எரிகோ) காணப்படவில்லை. ஒருவேளை இந்த அழிவு மட்டம் அதன் அழிவுக்குப்பின் கரைந்து மறைந்து போயிருக்கலாம். ஆனால் அது ஒரு பிரச்சனையாகவே உள்ளது.

இறுதியாக, விவிலியத்தின் சில வரலாற்றுக் கூற்றுகளைத் தொல்பொருள் ஆய்வு உறுதிப்படுத்துகிறது என்பது கிறிஸ்தவ விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது என்பதற்குச் சமமா என்று கேள்வி எழுப்பலாம். இதற்குரிய ஒரே பதில் அழுத்தந்திருத்தமாக "இல்லை" என்பதேயாகும். கிறிஸ்தவ விசுவாசத்தின் தன்மை அத்தகையதாகும். "விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதியாகும்" (எபி 11:1).

தொழில், வேலை (OCCUPATION)

பார்வோன் யோசேப்பின் சகோதரர்களை "உங்கள் தொழில் என்ன?" என்று கேட்க, அவர்கள் தாங்கள் "மேய்ப்பவர்கள்" (ஆதி 46:34), "ஆடுமேய்ப்பவர்கள்" (47:3) என்று பதில் அளித்தனர். கப்பலோட்டிகள் யோனாவை "உன்வேலை என்ன?" (யோனா 1:8) என்று வினவியபோது அவர் மறுமொழி அளிக்கவில்லை. பவுல் கொரிந்து நகரில் தன்தொழில் (அ.ப. 18:3) செய்பவர்களுடன் தங்கியிருந்தார். எபேசு நகரில் வெள்ளி ஆசாரியர்களாகிய கம்மியர்கள் தங்களுக்கென ஒரு சங்கம் வைத்திருந்தனர். இவர்கள் கிறிஸ்துவ நெறியைக் குறித்துக் கலகம் ஏற்படக் காரணமாயிருந்தார்கள் (19:25).

புதிய ஏற்பாடு திறமையைப் பொருத்துத் தொழிலைப் பாகுபடுத்துவதாகத் தெரியவில்லை. அப்படிப்பாகுபாடு காணப்பட்டால், உரிமை அடைந்தோரில் திறமை மிக்க கைவினைஞர்கள் ஈடுபட்ட தொழில்கள் முதலிடம் பெறுகின்றன.

வீடு சம்பந்தப்பட்ட தொழில்கள், ரொட்டி சுடுதல், சமைத்தல், துணி தைத்தல், கயிறுதிரித்தல், கூடாரம் செய்தல், கூடை பின்னுதல், மட்பாண்டம் செய்தல், உழவுத்தொழில், திராட்சை ரசம் தயாரித்தல், ஆடுமாடு பேணுதல் போன்றவையாகும்.

தனிப்பட்டவர்கள் செய்யும் தொழில்கள், அடிமைகளாலும் உரிமைக்குடி மக்களாலும் செய்யப்பட்டன. இவை மருந்து வியாபாரம், முடி வெட்டுதல், காவல் செய்தல், மருத்துவம், தாதித்தொழில், சத்திரக் காவல், தாசித் தொழில் முதலியனவாகும்.

அரசியல் அமைப்புகளும், அரச நிறுவனங்களும் மேலும் தொழில் வாய்ப்பைப் பெருக்கின. அரசர், இளவரசர், தூதுவர், மொழி பெயர்ப்பாளர், மேற்பார்வையாளர், ஏவலாளி, பிரபு அரண்மனைக் கண்காணிப்பாளர், பரிமாறுபவன், ஆலோசகரி, ஆளுநர், நூற்றுவர் தலைவர், வரி வசூலிப்பவர், செயலர், எழுத்தர், நீதிபதி, வழக்கறிஞர், படைவீரர்கள், இரத ஓட்டுநர்கள், ஆயுதம் தாங்குவோர், குறி சொல்வோர், சோதிடம் பார்ப்பவர், பேயோட்டுபவர், குரு போன்றோராவர். இஃதோடு மத சம்பந்தப்பட்ட தொழில்களாகக் குருத்துவம், இறைவாக்குரைத்தல், தீர்க்கதரிசனம் கூறல், கடவுள் பெயரால் குறி சொல்லுதல், சடங்கு விபசாரம் போன்றவை கருதப்பட்டன. இவை தவிர, பல்வகைப்பட்ட தொழிலாளர்களாகப் பாட்டுக்காரரர், நடனம் செய்வோர், ஒப்பாரி செய்வோர், கப்பலோட்டி, கம்மியர், ஆசிரியர், பொறியியல் வல்லுநர், ஓவியர், கேணி வெட்டுபவர், வியாபாரி, ஒட்டகம் ஓட்டுநர், பிச்சைக்காரன், குற்றவாளி, மீன் பிடிப்போன், விவசாயி, கொத்தனார், சாராயம் வடிப்போர் போன்றோர் கருதப்பட்டனர்.

பொதுவாகப் பெண்கள் தங்களை வீடு சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடுத்திக் கொண்டனர்; மேலும், மேலே குறிக்கப்பட்டுள்ள தொழில்களில் கூடை பின்னுதல், நெய்தல், மட் பாண்டம் செய்தல், தாதியர், விலைமாது, எடுபிடி வேலை, நீதிபதி, வியாபாரம், பாட்டுப்பாடுதல், நடனம் புரிதல் போன்றவற்றிலும் ஈடுபடுத்திக்கொண்டார்கள்.

தொழு, தொழுமரம் (STOCKS)

குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும், சித்ரவதை செய்வதற்கும் பயன்படுத்தப்பட்ட பழங்காலக் கருவி. குற்றவாளியின் கைகளையும், கால்களையும் குறிப்பிட்ட ஒரே நிலையில் கட்டிவைக்க உதவும் மரத்தால் செய்யப்பட்ட சட்டம். இத்தொழுமரத்தில் ஏற்றப்பட்ட குற்றவாளி, தன் கை கால்களைக் கிஞ்சித்துக் அசைக்க முடியாமல் மிகவும் துன்புறுவான். இத்தொழு மரத்தினைப் பற்றிய குறிப்புகளை யோபு 13:27; எரே 29:6 ஆகிய பகுதிகளில் காணலாம்.

புதிய ஏற்பாட்டில் அ.ப. 16:24 தொழு மரத்தினைப் பற்றிய குறிப்பைத் தருகின்றது. உரோமையர்களின் தொழுமரம், கால்களுக்கு இடைப்பட்ட தூரத்தை மாற்றக்கூடிய வகையில் இருந்தது என யூசேபியு என்னும் வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார்.

தொழுகை மேடை (HIGH PLACE)

இது குன்றுகளின் உச்சியிலோ மனிதன் அமைத்த மேடையிலோ அமைந்த வழிபாட்டு இடமாகும். பழைய ஏற்பாட்டு விவரிப்புகள் இவ்வகை மேடைகளைப் பொதுவாகப் பிறமதப் பழக்கங்களோடு தொடர்பு படுத்துகிறது.

இஸ்ராயேலர் கானானில் குடியேறியபோது, கானானிய சமயத்தில் இந்தத் தொழுகை மேடைகள் பரவலாகப் பயன்பட்டன. பழங்கால மேற்காசிய அண்டவியல் பூமியைத் தட்டையான தாகவும் தெய்வங்கள் விண்ணில் வாழ்ந்ததாகவும் கருதியது. அதனால், வழிபாட்டு மையம் உயர்ந்த இடத்தில் இருந்தால் தெய்வங்களின் கவனத்தைச் சுலபமாக ஈர்க்கலாம் என்று மக்கள் கருதினர்.

இந்தத் தொழுகை மேடைகள் திறந்த வெளியாகவோ கட்டடங்களைக் கொண்டதாகவோ அமைந்திருந்தன (1 அர 12:31; 13:32; 2 அர 17:32; 23:9). இம்மேடைகளில் சிலைகள், பலிபீடங்கள், கல்தூண்கள், மரக்கம்பங்கள் மற்றும் தண்ணீரும் உண்டு. மேடையைச் சுற்றி மரத்தோப்புகள் உண்டு. இவையெல்லாம் யாவேயின் கடுஞ்சினத்திற்குரியவையாகும் (லேவி 26:30; சங் 78:58).

இஸ்ராயேலர் கானானைக் கைப்பற்றிய போது, இந்தத் தொழுகை மேடைகளை அழித்துவிடும்படி யாவே கட்டளையிட்டார் (எண் 33:52; உப 33:29). ஆயினும் இஸ்ராயேல் வரலாறு முழுவதும் இந்த மேடைகள் குறிப்பாக அரசர்கள் காலத்தில் தொடர்ந்து இருந்தன. ஆசா ஓரளவுதான் இவற்றை நீக்கினார் (2 நாள் 14:3.5;17:6; 1 அர 15:14). சாலமோன் (1 அர 11:7), ரெகபயாம் (14:23; 2 நாள் 21:11), வட இஸ்ராயேலின் பல அரசர்கள் (2 அர 17:9) பல தொழுகை மேடைகளைக் கட்டினர். யோசபாத்து (22:43), யோவகாசு (2 அர 12:3), அமட்சியா (14:4). அசரியா (15:4), யோத்தாம் (15:35) ஆகியோர் இம்மேடைகளை அழிக்கவில்லை. ஆயினும் இவர்கள் ஆண்டவரின் வழியில் நடந்ததாகக் கூறப்படுகின்றது. எசேக்கியா (2 அர 18:4), யோசியா (23:8; 2 நாள் 34:3-7) போன்ற அரசர்கள் இவற்றை முழுவதும் அழித்தனர். எசேக்கியா அழித்தவற்றை மனாசே மீண்டும் கட்டினார் (2 அர 21:3; 2 நாள் 33:3).

இஸ்ராயேல், யூதாவின் அரசர்கள் அன்னிய இளவரசிகளை மணந்தபோது, அவர்கள் தங்கள் தெய்வங்களைத் தொழ இந்த மேடைகளை அல்லது கோவில்களை அரசர்கள் கட்ட வேண்டியதாயிற்று. இவ்விதம் பல தேவதைகள் வழிபாடு இஸ்ராயேலில் புகுந்து உறுதிப்பட்டது (1 அர 11:6-8).

இத்தொழுகை மேடைகளில் மனிதபலி (2 அர 16:4; 2 நாள் 33:6; எரே 19:4-5), சடங்கு விபசாரம் (1 அர 14:23-24), குறி கேட்டல், சூனியம் வைத்தல் (2 அர 17:17) போன்ற வெறுக்கத்தக்க செயல்கள் நடைபெற்றன.

மோவாபிய பாலாக்கு, இஸ்ராயேலரைச் சபிக்கும்முன் அவர்களைப் பார்க்க, குறி சொல்லும் பிலயாமை ஒரு தொழுகை மேடைக்குக் கொண்டு வந்தான்.

சில தொழுகைமேடையில் யாவே வழிபடப்பட்டதாகத் தெரிகிறது. சவுல் தொலைந்து போன கழுதைகளைக் கண்டுபிடிக்க சாமுவேலின் உதவியை நாடியபோது, சாமுவேல் தொழுகை மேட்டில் மக்களுக்காகப் பலி செலுத்த, தொழுகைமேட்டிற்கு வந்திருப்பதாக செய்தி அறிகிறார் (1 சாமு 9:11-19).

சவுல் அரசனாக அபிடேகம் பெற்றபின், தொழுகைமேட்டிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்த இறைவாக்கினர் குழுவைச் சந்திக்கிறார் (10:5:10). தாவீதின் ஆட்சியில் கிபயோனில் இருந்த தொழுகை மேடை ஓரளவு முக்கியத்துவம் பெறுகிறது (1 நாள் 16:39; 21:29). சாலமோனின் காலத்திலும் இந்நிலை நீடிக்கிறது (2 நாள் 1:3.13). கிபயோனில் இருந்த தொழுகை மேடையோடு சாலமோன் கொண்ட தொடர்பை அரசர்கள் நூல் ஓரளவு வெள்ளையடிக்கிறது எனலாம் (1 அர 3:4). இதையே நாளாகம ஆசிரியர், திருக்கூடாரத்தோடும் (1 நாள் 16:39;21:29) சந்திப்புக் கூடாரத்தோடும் (2 நாள் 1:3.13) தொழுகைமேடையைத் தொடர்புபடுத்தும்போது செய்கிறார். யாவே தொழுகைமேடைகளில் வழிபடப்படுகிறார் (33:11.17). மோவாபிலும் (எரே 48:35), இஸ்ராயேலிலும் (2 அர 16:4; 2 நாள் 28:4; எசே 6:3.6) தொழுகை மேடைகளில் பலிகளும் தூபமும் அளிக்கப்படுகின்றன. தொழுகை மேடைகளில் வழிபடுவோர் உண்டனர் (1 சாமு 9:13), அழுதனர் (எசா 15:2), மன்றாடினர் (16:2; 56:7). இறைவாக்கினர்களும் (1 சாமு 10:5-13) குருக்களும் (2 அர 23:5,9.20) அங்கு அடிக்கடி சென்றனர்; அங்கே வாழ்ந்தனர். இம்மேடைகள் தனிப்பட்ட பக்தி முயற்சிகள், அதிகாரபூர்வமான வழிபாடுகள், ஆண்டு விழாக்கள் ஆகியவை நடக்கும் இடமாக அரசர்கள் நூல்கள் காட்டுகின்றன. இவ்விதம் இத்தொழுகை மேடைகளை மக்கள் தொடர்ந்து பயன்படுத்தியதற்கு "அந்நாள்வரை ஆண்டவனின் திருப்பெயருக்குக் கோயில் எழுப்பப்படவில்லை. எனவே மக்கள் தொழுகை மேடைகளில் பலியிட்டு வந்தார்கள்" என்று 1 அர 3:2 விளக்கம் அளித்தாலும் சாலமோன் ஆட்சியிலும் அவருக்குப் பின்வந்த பிளவுபட்ட அரசாட்சிகளிலும் இத்தொழுகை மேடைகளில் முழுவதும் பிறமத வழிபாட்டு மரபுகள் பற்றிய குறிப்புகளே மிகுந்துள்ளன.

தொழுநோய் (LEPROSY)

தோல் சார்ந்த பலவகைத் தொத்துநோய்களையும், சாதாரண நோய்களையும் சேர்த்துத் தொழுநோய் என்ற பெயரால் விவிலியம் அழைக்கிறது. ஆடைகள், சுவர்கள்கூடத் தொழுநோய் அடையாளத்தைக் கொண்டிருக்கலாம் (லேவி 13:47-59; 14:33-57). விவிலியம் இந்நோயை மருத்துவமுறையில் துல்லியமாக விளக்கவில்லை. இக்காலத்தில் இந்நோய் பற்றிய தெளிவான கருத்து மத்திய காலத்தில் தோன்றியதாகும். ஏனெனில் அப்போது இந்நோய் ஐரோப்பாவில் பரவிக்கொண்டிருந்தது. தொழுநோயைப்பற்றிய விரிவான சட்டங்கள் (லேவி 13-14) எந்த அசுத்தத்திலிருந்தும், அஃது ஒழுக்கம் அல்லது உடல் சார்ந்ததாயிருந்தாலும், இறை மக்களைப் பிரித்துவைக்க வேண்டியதை வலியுறுத்தும் ஒரு சாதனமாகும்.

1. தொழுநோய், தூய்மையின்மை மற்றும் இறைத்தண்டனை:

யூதச் சட்டப்படி, தொழுநோய் ஓர் ஒட்டுவாரொட்டி அசுத்தமாகும். அது பிறரைத் தீண்டாதவாறு தொழுநோயாளிகள் குணமாக்கப்பட்டுச் சடங்கு முறையில் தூய்மைப் படுத்தப்படும் வரை அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். இச்சடங்கு முறைத் தூய்மைச் சடங்கில் குற்றம் நீக்கும் பலி செய்யப்பட வேண்டும் (லேவி 13-14). தொழுநோய் பாவியைத் தாக்கும் மிகக் கொடிய கொள்ளை நோயாகும். ஆண்டவர் இந்நோயால் வதைப்பதாக இஸ்ராயேலை அச்சுறுத்துகிறார் (உப 28:27.35). எகிப்தியர்களும் (யாத் 9:9தொ), மிரியாமும் (எண் 12:10-15), ஊசியாவும் (2 நாள்

26:19-23) இந்நோயால் தண்டிக்கப்பட்டனர். கோட்பாட்டளவில், தொழுநோய் பாவத்தின் அடையாளம் ஆயினும் துன்புறும் ஊழியன் இறைவனால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டபோது, அவரைக் காண்போர் தம்முகத்தை மூடிக்கொள்வர். ஏனெனில் அவர் மனிதரின் தீச்செயல்களைத் தாமே சுமந்தார்; அவரின் காயங்களால் மனிதர் குணம் பெறுவர் (எசா 53:3-12). பாவிகள் அவரது பரிகாரத்தால் ஈடேற்றம் பெற்றனர்.

2. தொழுநோயாளிகள் குணம் பெறுதல்:

இந்நோய் குணமாகலாம்; அல்லது, ஓர் அருஞ்செயலால் குணமாகலாம். தொழுநோயுற்ற நாமான் எலியாசின் கட்டளைக்குப் பணிந்து யோர்தான் நதியில் ஏழுமுறை மூழ்கி எழுந்து குணமானது (2 அர 5:8-14) இத்தகைய ஓர் அருஞ்செயலாகும். இது இறைத்தயவு மற்றும் இறைவாக்கு ஆற்றலின் அடையாளமாக விளங்குகிறது. இயேசு தொழுநோயாளிகளைக் குணமாக்கும்போது (மத் 8:1-4 இணை; லூக் 17:11-19), இந்தக் கொள்ளை நோயை வெற்றி கொள்கிறார். மனிதரின் பிணிகளைத் தாங்கி, அவர்கள் துன்பத்தைச் சுமந்த அவர் (மத் 8:17) அவர்களுக்குக் குணமளிக்கிறார். இச்செயலால் தூய்மையுடையவர், தூய்மையற்றவர்களுக் கிடையே உள்ள பிரிவைத் தகர்த்தெறிந்து, தொழுநோயாளிகள் குணம்பெற்று, பிறருடன் கூடிவாழ உரிமைவழங்குகிறார். இவர்களைக் குணமாக்கும் போதெல்லாம் குணமானவர் தம்மைத் குருக்களிடம் காட்டி, குற்றம் நீக்கும் பலியை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று இயேசு வலியுறுத்துகிறார். இதன்மூலம் யூதச் சட்டத்தின்பால், தாம் கொண்ட மதிப்பையும் வெளிப்படுத்துகிறார்; அருஞ்செயல் செய்யும் தம் ஆற்றலையும் குருக்கள் கண்டுணர வழி செய்கிறார். மற்ற நோய்களையும் தொழு நோயையும் குணமாக்குவதை, மக்கள் எதிர்பார்த்த "வரவிருப்பவர்தாமே" என்பதற்கும் (11:5 இணை), மெசியாவின் காலம் வருகைக்கும் அடையாளமாகச் சுட்டிக்காட்டுகிறார். அப்போஸ்தலர் தங்கள் தூதுப் பணிக்கு அனுப்பப்பட்டபோது, இறையரசு நெருங்கிவிட்டது என்று குணமாக்கும் அடையாளத்தால் காட்ட ஆணையும் ஆற்றலும் பெறுகின்றனர் (10:8).

தொழுவம் (STALL, STABLE)

கால்நடைத்தொழுவம், மாட்டுக்கொட்டில் என்பன ஆடுமாடுகளை அடைத்துவைத்துத் தீவனம் வழங்கும் இடமாகும்.

சராசரி வீடுகளில் ஆடு, மாடு, குதிரை போன்ற விலங்குகளை வீடுகளின் பின் பக்கத்திலோ, வீட்டின் கீழ்ப்பகுதியிலோ அல்லது வீட்டிற்கு அருகிலுள்ள குகைகளிலோ அடைத்துக் காத்து வந்தனர்.

யூதாவின் அரசர்களான எசேக்கியாவும் (2 நாள் 32:28), சாலமோனும் (1 அர 4:26; 2 நாள் 9:25) இத்தகைய தொழுவங்களை அமைத்திருந்ததாகத் தெரிகின்றது. 1 அர 4:26-இல் காண்பது போல் சாலமோன் 40 ஆயிரம் குதிரைகளைக் கொள்ளக்கூடிய பரந்த தொழுவம் அமைத்திருந்தான் என்பதை விவிலிய அறிஞர் பலர் மிகைப்படுத்தி எழுதப்பட்ட உண்மை என்றே கருதுகின்றனர். ஆயினும் சாலமோன் மன்னன் அமைத்திருந்த தொழுவம் மிகப் பரந்ததே என்பதற்கு "மெகிதோ" என்னுமிடத்துப் புதைபொருள் கண்டுபிடிப்பு சான்று பகர்கின்றது. மெகிதோவில் அடுத்தடுத்துள்ள இரு பரந்த தொழுவக் கூட்டமைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான குதிரைகளைக் கட்டிவைப்பதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள இத்தொழு வங்களில் குதிரைகளைக் கட்டி வைப்பதற்குக் கற்றூண்களும், தீனியைப் போடுவதற்கேற்ற தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஆமோ 6:4; மலா 4:2-இல் "தொழுவத்துக் கன்றுக்குட்டி"கள் என்று குறிக்கப்படுவது தொழுவத்திலேயே கொழுக்க வளர்க்கப்பட்ட கால்நடைகளைக் குறிக்கும். பழ 15:17-இல் காணும் கொழுத்த கன்றுக்குட்டிகள் இவ்வகையில் தொழுவத்திலேயே கொழுத்த கால்நடைகளே ஆகும்.

தோ

தோகர்மா (TOGARMAH - எலும்பான)

இவர், கோமேரின் மகனும் எப்பேத்தின் வழித்தோன்றலும் ஆவார். இவரது பெயர் பெத்தொகர்மா என்ற பகுதியோடு தொடர்பு படுத்தப்படுகிறது.

இந்தப்பகுதி சிறிய ஆசியாவில் உள்ளது. இது கோமேர் (சிமிரியர்), அஸ்கனாசு (சித்தியர்) போன்ற மக்களினத்தோடு தொடர்புடையது (ஆதி 10:3; 1 நாள் 1:6; எசே 38:6). இங்கிருந்து குதிரைகள், போர்க்குதிரைகள், கோவேறு கழுதைகள் ஆகியவை பண்டமாற்றப்பட்டன (எசே 27:14). இக்குறிப்புகள் சிறிய ஆசியாவிலுள்ள ஒரு நகருக்குப் பொருத்தமாய் உள்ளன. இந்நகரை அசீரியர்கள் தில்-கரிமு என்று அழைத்தனர். இப்பெயர் இத்திய தெகராமா என்ற பெயரிலிருந்து வருகிறது. பிறகு கவுரேனா எனப்பட்டது. இது மலத்தியாவுக்கு மேற்கே 112 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நகர் வரலாற்றில், கி.மு. 8-ஆவது நூற்றாண்டில் அசீரியப் போரில் ஈடுபடுத்தப்பட்ட பகுதி என்பது தெளிவாக அறியப்படுகிறது. அசீர்யர்கள் கி.மு. 695-இல் இந்நகரை அழித்து விட்டனர்.

தோகு (TOU)

தோயி என்ற பெயரின் மற்றொரு வடிவம் (1 நாள் 18:9-10).

தோகூ (TOHU - வளைந்த)

இவர் சூப்புவின் மகனும் இறைவாக்கினர் சாமுவேலின் மூதாதையருள் ஒருவரும் ஆவார் (1 சாமு 1:1). லேவியர்களின் தலைமுறைப் பட்டியலில், நாகத்து என்ற பெயரில் கோகாத்தியர் என்று சொல்லப்பட்டிருக்கிறார் (1 நாள் 6:26). மேலும் இவர் 1 நாள் 6:34-இல் தோவாகு என்றும் அழைக்கப்படுகிறார். தோகூ அல்லது ஒருவேளை தோவாகு என்பது மூலப்பெயராக இருக்குமெனக் கருதப்படுகிறது.

தோக்காத்து (TOKHATH)

இறைவாக்கினி உல்தாவின் மாமனார் (2 நாள் 34:22). 2 அர 22:14-இல் இவர் திக்வா என்றழைக்கப்படுகிறார்.

தோக்கு (DOK)

கி.மு. 135-இல் சீமோன் மக்கபேயு இச்சிறு கோட்டையில்தான் இறந்தார். சீமோனும் அவரதுமக்கள் இருவரும் குடிபோதையில் இருந்தபோது அவருடைய மருமகன் தோலமியால் கொல்லப்பட்டனர். இக்கோட்டை தோலமியால் கட்டப்பட்டது எனச் சொல்லப்படுகிறது (1 மக் 16:15-16). இக்கோட்டையை யோசிப்பசு தாகோன் என்றழைக்கிறார். இது தற்போது எரிகோவின் வடமேற்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ள அயின்துக்கு என்ற சிறு நீரோடையாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

தோசித்தேயு (DOSITHEUS)

1. யூதா மக்கபேயு படைகளில் ஒரு தலைவன். இவனும், சோசிபத்தாரும் திமொத்தேயுவையும் அவன்வசம் இருந்த கோட்டையையும் கைப்பற்றினர். ஆனால் திமொத்தேயுவைச் சிறைப் பிடிக்கவில்லை (2 மக் 12:19.24-25).

2. பாக்கனோரின் வலிமை மிக்க குதிரை வீரன். இவன் கொரிக்கியாவை உயிரோடு பிடிக்க வேண்டுமென எண்ணினான். ஆனால் திராக்கைச் சேர்ந்த ஒரு குதிரைவீரன் இவன்மீது பாய்ந்து இவன்தோளை வெட்டிக் காயப்படுத்தியதால், அம்முயற்சியில் வெற்றி பெறவில்லை (2 மக் 12:35).

3. ஒரு லேவியக் குரு. பூரிம் திருவிழா குறித்து மொர்தக்காய் அளித்த கடிதத்தைத் தம் மகன் தோலமியோடு எகிப்துக்குக் கொண்டு சென்று அளித்தவர் (எஸ்த 11:1).

தோசேத்திசம் (DOCETISM)

புதிய ஏற்பாட்டுக்காலத்திலும் அதற்குப்பின்னும் திருச்சபையின் சில பிரிவினரிடையே பரவலாக இருந்த ஒருவகைக் கோட்பாடு. இதன்படி, கிறிஸ்து ஊனுடல் எடுக்கவில்லை. மனித அவதாரம் வெறும்

தோற்றமே. இறைத்தன்மையுடைய கிறிஸ்து மனித இயேசுவின்மேல் அவர் திருமுழுக்குப் பெற்றபோது இறங்கி வந்தார்; பாடுகளுக்கு முன் அவரைவிட்டு அகன்றுவிட்டார்; மனித இயேசுவோடு ஒருபோதும் ஒன்றானதில்லை. இயேசுவின் பாடுகள், மரிப்பு, உயிர்ப்பு ஆகியவற்றில் இறைத்தன்மையுடைய கிறிஸ்து பங்கெடுக்கவில்லை.

இக்கோட்பாடு ஞானவாதக் கோட்பாட்டோடு தொடர்புடையது. ஞானவாதத்தின்படி, ஆன்மீக (அல்லது நல்லது) மற்றும் சடப்பொருள் (அல்லது தீமை) ஆகிய இரு இணைக்க முடியாத விதத்தில் முரண்பட்டுள்ளன. இதன்படி இறைமகன் மனித (சடப்பொருள்) உருவை எடுக்கவே முடியாது. கிறிஸ்துவின் இறைத்தன்மை பற்றி ஐயமில்லை என்பதால் அவரது மனிதத் தன்மை மறுக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டின்படி, இக்கோட்பாட்டைக் கொண்டவர்கள் "இயேசுவுக்குச் சாபம்" (1 கொரி 12:3) என்று கூறி "வேறொரு இயேசுவை" (2 கொரி 11:4) அறிவிப்பர் அல்லது இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் மடமை எனக் கருதுவர் (1 கொரி 1:18).

புதிய ஏற்பாட்டில், இக்கோட்பாட்டுக்கு எதிராக யோவான் தம் நற்செய்தியின் முன்னுரையிலும் தம் திருமுகங்களிலும் போராடினார். யோவா 1:14-இல் "வாக்கு மனிதன் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்" என்றும், 1 யோவா 4:2-இல் "ஊன் உருவில் வந்த இயேசு கிறிஸ்து" என்றும், 2 யோவா 7-இல் "ஊன் உருவில் வருகிற இயேசு கிறிஸ்து" என்றும் யோவான் போதித்தார்.

தோட்டம் (GARDEN)

பல்வேறு தேவைகளுக்கு, பொதுவாக விவசாயத்திற்கும், பொழுதுபோக்கிற்கும், அழகிற்கும் பயன்படும் விதத்தில் வேலி சூழப்பட்ட இடமாகும். இந்த வேலி கற்களாலோ செங்கலாலோ கட்டப்பட்டிருக்கலாம்; அல்லது, முள் வேலியாக இருக்கலாம்.

பழங்கால மேற்காசியாவில் செல்வந்தர்களும் செல்வாக்குடையவர்களும் தங்கள் வீட்டைச் சுற்றிப் பரந்த தோட்டங்கள் கொண்டிருந்தனர். இவை நீர் பாய்ச்சப்பட்டன (எசா 58:11). தங்குமிடமும் கட்டப்பட்டிருந்தன. அரச மாளிகை பரந்த தோட்டத்தையோ பூங்காவையோ (காண்க. 2 அர 25:4) கொண்டிருந்தது.

ஏதேன் தோட்டந்தான் விவிலியத்தில் முதன்முதலில் குறிக்கப்படும் தோட்டம் (ஆதி 2-3). பூக்கள், காய்கறிகள், மணச்செடிகள், பழமரங்கள் முதலியவை தோட்டங்களில் பயிரிப்பட்டன (1 அர 21:2; உ.ச. 5:1; 6:2; எரே 29:5; ஆமோ 9:14). மேலும் தோட்டங்கள் நிழலுக்காகவும் நடைப்பயிற்சி பெறவும், விருந்துகள் நடத்தவும் பயன்பட்டன. தோட்டத்தில் குளிக்க ஒரு குளமும் அமைந்திருக்கலாம் (தானி 13:7, 15-17). எகிப்தின் தோட்டங்களுக்கு நைல் நதியிலிருந்து நீர் பாய்ச்சப்பட்டன (உப 11:10). தொல்பொருள் ஆய்வுகள் பாலஸ்தீனத்தில் பலவகை நீர்பாய்ச்சும் அமைப்புகளைக் காட்டுகின்றன (காண்க. எசா 58:11; எரே 31:12). தோட்டங்கள் சவங்களை அடக்கம் செய்யும் இடமாகவும் பயன்படலாம் (2 அர 21:18,26; யோவா 19:41). இஸ்ராயேலர் காலத்தில் பிறமத பலி செலுத்தும் இடமாகவும் பயன்பட்டன (எசா 1:29; 65:3; 66:17).

உருவகமாகத் தோட்டங்கள் செழிப்பின் (யோபு 8:16; எசா 51:3; மீக் 7:14) அல்லது பாழ்நிலையின் (ஆமோ 4:9) அடையாளமாகப் பயன்பட்டன. எசா 58:11; எரே 31:12-இல் மீட்கப்பட்டோரின் வாழ்வு நன்கு நீர் பாய்ச்சப்பட்ட தோட்டத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

தோதவா (DODAVAHU - யாவேயின் அன்புக்குரியவர்)

இறைவாக்கினர் எலியேசரின் தந்தை. இவர் யூதாவில் மாரேசாவைச் சேர்ந்தவர் (2 நாள் 20:37). தோது இப்பெயரின் சுருக்கமாக இருக்கலாம். இது 2 சாமு 23:9-இல் "தோதுவின் மகன் எலியேசர்" என்று குறிக்கப்படுவதற்குக் காரணமாய் இருந்திருக்கலாம்.

தோதாய் (DODAI - யாவேயால் அன்பு செய்யப்பட்டவர்)

ஓர் அகோகியர். தாவீதின் படையில் இரண்டாம்

பிரிவின் படைத்தலைவர் (1 நாள் 27:4). 2 சாமு 23:9; 1 நாள் 11:12-இல் குறிக்கப்பட்டுள்ள தோதுவும் (2) இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

தோதானீம், தோதானியர் (**DODANIM** - தலைவர்கள்)

அயோனிய மக்கள் யாவானின் வழித்தோன்றல்கள் (ஆதி 10:4; 1 நாள் 1:7). சில வாசகங்களில் 1 நாள் 1:7-இல் ரோதனிம் அதாவது ரோதேயைச் சேர்ந்தவர்கள் என்று இச்சொல் மொழிபெயர்க்கப்படுகிறது.

தோது (**DODO** - அன்பு செய்யப்பட்)

1) இஸ்ராயேலின் தொடக்க வரலாற்றில் இசக்கார் குலத்திலிருந்து தோன்றிய தோலா என்ற சிறிய நீதிபதியின் பாட்டனும் பூவாவின் தந்தையும் ஆவார் (நீதி 10:1).

2) ஓர் அகோகியர். தாவீதின் வலிமை மிக்க மூன்று வீரர்களில் ஒருவரான எலயாசரின் தந்தை (2 சாமு 23:9; 1 நாள் 11:12). இவரும், 1 நாள் 27:4-இல் வரும் தோதாயும் ஒரே ஆளாக இருக்கலாம்.

3) பெத்லகேமைச் சேர்ந்தவர். தாவீதின் வலிமைமிக்க முப்பது வீரர்களுள் ஒருவரான எல்கானானின் தந்தை (2 சாமு 23:24; 1 நாள் 11:26).

தோத்தான் (**DOTHAN** - இரு கிணறுகள்)

யூசேயுபுவின் கூற்றுப்படி, சமாரியாவுக்கு வடக்கில் 12 உரோமையர் மைல் தொலைவிலுள்ள ஒரு நகரம். இவ்விடம் செக்கேமுக்கு வடக்கில் 22 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத் தெல்-தோத்தா என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இஃது இஸ்ரியேல் பள்ளத்தாக்கு வழியாகச் சென்ற பழங்கால முக்கிய பெருஞ்சாலையில் அமைந்திருந்தது.

செம்புக் காலத்திலேயே (கி.மு. 3000) இங்கு மக்கள் குடியேறியிருந்தாலும், விவிலியத்தில் தவிர வேறு மூலங்களில் இவ்விடம் குறிக்கப்படவில்லை. தோத்தான் மேய்ச்சல் நிலத்தில்தான் யோசேப்பு தன் சகோதரர்களைக் கண்டார். அவர்கள் அவரை முதலில் ஒரு பாழுங்கிணற்றில் போட்டனர். பின்பு இசுமயேல் வியாபாரிகளிடம் விற்றனர் (ஆதி 37:17 தொ).

இஸ்ராயேலர்நாடு பிளவுபட்ட காலத்தில், இறைவாக்கினர் எலிசாவைப் பிடிக்க, சீரிய அரசன் பெனதாது இந்நகரை முற்றுகையிட தனது தேர்களையும் படையையும் அனுப்பினார் (2 அர 6:13-14). நெபுக்கதுனேசரின் தளபதி ஓலபெரினே யூதேயாவைத் தாக்கியபோதும் இவ்விடம் குறிக்கப்படுகிறது (யூதி 3:9;4:6). பெத்தூலியாவை வேவுபார்த்தபோது அவருடைய படை இங்கு தான் பாளையம் இறங்கியிருந்து (7:3).

அகழ்வாய்வுகள் ஒரு நகரச் சுவரையும் தொடக்க வெண்கலக் காலத்தைச் சேர்ந்த குடியிருப்புகளின் ஏழு மட்டங்களில் சான்றுகளையும் காட்டியுள்ளன. மத்திய வெண்கலக்காலத்திலும் முதல் இரும்புக் காலத்திலும் இந்நகரம் மிகவும் செழிப்புற்று இருந்தது. நகரச் சுவருக்குள் அமைந்த உட்கோட்டையும், பல கைவினைப் பொருள்களுடன் கூடிய ஒரு குடும்பக் கல்லறையும் முக்கியமான கண்டுபிடிப்புகளாகும். இரண்டாம் இரும்புக் காலத்தைச் சேர்ந்த விரிவான கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டுள்ளன. இவை இஸ்ராயேலர் அரசர்கள் காலத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றில் சில வீதிகளும், வீடுகளும் ஒரு பெரிய நிர்வாகக் கட்டடமும் அடங்கும். மூன்றாம் திகிலத்பிலேசருடைய படையெடுப்போடோ (கி.மு. 732), சமாரியாவின் வீழ்ச்சியோடோ (721) தொடர்புடைய அழிவுகளின் சான்றுகள் உள்ளன. சிறிது காலத்திற்கு அசீரியர்கள் இங்குத் தங்கியபின் ஏழாம் நூற்றாண்டிலிருந்து இந்நகரம் கைவிடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. கிரேக்கர்கள் காலத்தில் ஒரு சிறு குடியிருப்பு நிறுவப்பட்டது.

தோபஅதோனியா (**TOBADONIJAH** - என் ஆண்டவர் யாவே நல்லவர்)

இவர் அரசன் யோசபாத்தால் யூதாவின் மக்களுக்குச் சட்டத்தைக் கற்றுக்கொடுக்க

அனுப்பப்பட்ட லேவியர்களில் ஒருவர் ஆவார் (2 நாள் 17:8). இது முன் வந்த அதோனியா, தோபியா ஆகிய இருபெயர்களையும் சேர்த்து மறுபடியும் கூறப்பட்ட, பிரதி எடுப்பாளரின் பிழையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தோபித்து (TOBIT - என் நன்மை)

நப்தலி இனத்தைச் சேர்ந்தவர்; அசியேல் வழிவந்த தோபியேலின் மகன். கலிலேயாவிலுள்ள திசிபேயிலிருந்து நினிவேக்கு நாடுகடத்தப்பட்டவர் (தோபி 1:1-2). பக்தியுள்ள ஒரு யூதர்; குருடாகிறார். இவரது மகன் தோபியாவின் வழியாக வானதூதர் இரப்பாயேலால் குணப்படுத்தப்படுகிறார் (ஆதி. 2; 11:1-15). காண்க. தோபித்து நூல்.

தோபித்து நூல்

1. முன்னுரை: இந்நூல் யூத குடும்பவாழ்வு பற்றிய ஒரு போதகக் கதையாகும். சிதறிக் கிடந்த யூதர்களிடையே வாழ்ந்த இரு குடும்பங்களுடைய நலன்களின் எழுச்சி - வீழ்ச்சிகளை விவரிக்கிறது. இரு குடும்பங்களின் விசுவாச வாழ்க்கையைப் பின்னிப் பிணைத்து, துன்பங்களுக்கிடையிலும் யூதவிசுவாச வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டான கதையை அளிக்கிறது இந்நூல்.

2. பெயர்: இந்நூல் எபிரேயத்தில் "தோபியின் நூல்" என்றும், அரமேயிக்கில் "தோபியாவின் வரலாறு அல்லது செயல்கள்" என்றும் அழைக்கப்படுகிறது. "தோபித்" என்ற கிரேக்கப் பெயர் எபிரேயப் பெயரின் கிரேக்க வடிவமும் அரமேயிக்குப் பெயரின் குறுகிய வடிவமும் ஆகும். "தோபி" என்பதற்கு "என் நன்மைத் தன்மை" என்றும் "தோபியா" என்பதற்கு "யாவேயின் நன்மைத்தன்மை" என்றும் பொருள் கூறலாம்.

வுல்கத்தா பாரம்பரியம் தந்தையையும் மகனையும் தோபியாஸ் என்ற ஒரே பெயரால் குறிக்கிறது. சில ஆங்கில மொழி பெயர்ப்புகள் தந்தையைத் "தோபித்து" என்றும், மகனைத் "தோபியா" என்றும் குறிக்கின்றன. நாம் இக்கட்டுரையில் தந்தையைத் தோபித்து என்றும் மகனைத் தோபியா என்றும் குறிப்பிடுவோம்.

3. வாசகங்கள்: இந்நூல் முதலில் எந்த மொழியில் எழுதப்பட்டது என்பது பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. ஆய்வாளர்கள் அவரவர் கருத்துக்கேற்பப் பல அகப்புறச் சான்றுகளைக் காட்டுவர். எவையும் மன நிறைவு தருவதாயில்லை.

ஒரு குழுவினர்- மூலத்தில் இந்நூல் செமித்திய வாசகம் கொண்டிருந்தது என்பர். இவர்களிலும் இரு சாரார் உண்டு. ஒரு சாரார்- மூலநூல் அரமேயிக் மொழியிலும், மற்றொரு சாரார்- எபிரேயத்திலும் தோன்றியது என்பர். இப்போது பெரும்பாலான ஆய்வாளர்கள் இந்நூலின் மூலவாசகம் அரமேயிக் மொழியில் தோன்றியது என்று கருதுவர். கும்ரான் ஏடுகளில், இந்நூலின் மூன்று அரமேயிக்குத் துணுக்குகளும் ஓர் எப்ரேயத் துணுக்கும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் சேர்ந்து நூலின் ஏறக்குறைய பாதிவாசகத்தைக் கொண்டுள்ளன.

இதற்கு மாறாக வேறொரு குழுவினர்- இந்நூல் முதலில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது என்பர். கும்ரான் ஏடுகள் கண்டெடுக்கப்பட்டபின் இந்நிலைக்கு அவ்வளவு ஆதரவு இல்லை. கிரேக்க வாசகத்தில் காணப்படும் செமித்தியப் பண்புகள் அரமேயிக் அல்லது எபிரேய மூலவாசகத்தைச் சுட்டுகின்றன. புனித எரோனிமு அரமேயிக் வாசகத்தைப் பயன்படுத்தியுள்ளார்; யூதர்கள் எபிரேய மொழியில் இந்நூலைக் கொண்டிருக்கவில்லை என்று கூறுகிறார். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால், இந்நூல் மக்களது மொழியாகிய அரமேயிக்கில் முதலில் தோன்றி, அதிலிருந்து எபிரேய, கிரேக்க வாசகங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இந்நூலின் வாசகம் சிறந்த முறையில் கிரேக்க மொழியில்தான் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதிலும் பல வாசக வேறுபாடுகள் உண்டு. இதில் இரண்டு பதிப்புகள் முக்கியமானவை. ஒன்று- சினாயிடிக்கஸ் ஏடு. இது நீளமானது,

மற்றவற்றை விடச் சிறந்தது. பிற்காலத்தில் பல மொழிபெயர்ப் புகள் இதைப்பயன்படுத்தியுள்ளன. மற்றது வத்திகான்- அலெக்சாந்திரினுஸ் ஏடு. இது குறுகியது. மூல செமித்திய வாசகத்தை அவ்வளவு சிறப்பாகக் கொண்டிருக்கவில்லை. இரண்டு ஏடுகளுக்கும் உள்ள தொடர்பு பற்றி ஒன்றும் உறுதியாகக் கூற முடியாது. இரண்டுக்குமிடையே சொற்றொகுதியிலும் அமைப்பிலும் பரவலாகக் காணப்படும் ஒற்றுமை, இவை ஒன்றையொன்று தழுவி அமைந்துள்ளன என்று காட்டுகிறது. ஆனால் இரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் இரண்டுக்கும் பொதுவான மற்றொரு கிரேக்க வாசகம் இருந்திருக்கலாம் என்றும், செமித்திய ஏட்டுப் பாதிப்பும் இருந்திருக்கலாம் என்றும் சுட்டுகின்றன. கிரேக்க வாசகங்களுக்கும் சாதகமான நிறைகளும், பாதகமான குறைகளும் உண்டு. ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வில் இரண்டையும் ஏற்றுக் கொள்வர்.

புனித எரோனிமு அரமேயிக்கிலிருந்து நேரடியாக இலத்தீனில் மொழிபெயர்த்த வாசகத்தை வுல்கத்தா வாசகம் தன்னுடையதாக ஏற்றுக்கொண்டது. இந்நூல் திருமுறைப் பட்டியலைச் சேர்ந்ததன்று என்று எரோனிமு கருதியதால் இதை மொழிபெயர்க்க அவர் விரும்பவில்லை. இருப்பினும் ஆயர் நண்பர்கள் சிலரின் வேண்டுகோளுக்கு இணங்கி இம்மொழிபெயர்ப்பைச் செய்தார். "என் விருப்பத்தை அன்று உங்கள் விருப்பத்தையே நிறைவு செய்தேன்" என்று எழுதுகிறார். அரமேயிக்கில் அவருக்கு அவ்வளவு பயிற்சியில்லை. ஆகவே ஒரு யூதமொழிபெயர்ப்பாளர் அரமேயிக்கிலிருந்து எபிரேயத்தில் மொழி பெயர்த்துக்கூற எரோனிமு நேரடியாகவும் உடனடியாகவும் இலத்தீனில் மொழிபெயர்த்து எழுத்தரிடம் கூறினார் என்றும், முழு நூலையும் ஒரே நாளில் மொழி பெயர்த்தார் என்றும் அறிகிறோம். இந்த வுல்கத்தா வாசகத்தின் மொழிபெயர்ப்பையே கத்தோலிக்கத் தமிழ் விவிலியம் கொண்டிருக்கிறது.

4. திருமுறைப்பட்டியலில் தோபித்து நூல்:

யூதர்களின் எபிரேய விவிலியப் பட்டியலில் இந்நூல் சேர்க்கப்படவில்லை. எழுபது நூல் தொகுப்பில் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பிற்கால யூதர்கள் இந்நூலை ஏற்றுக் கொள்வதற்கு எதிராக அமைந்தது. இருப்பினும் இந்நூல் யூதர்களிடையே எப்போதும் உயர்வானதாகக் கருதப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உண்டு. ஜுபிலி சுவடிகள் மற்ற யூத நூல்களிலும், மிட்ராஷ்களிலும் காணப்படுகின்றன. கும்ரான் குழுவினர் இந்நூலைப் பயன்படுத்தியுள்ளனர். புதிய ஏற்பாட்டில் இந்நூலிலிருந்து சில சுட்டிக்காட்டல்கள் உள்ளன. ஆதிக்கிறிஸ்தவர்கள் இந்நூலை அறிந்திருந்தனர். எழுபது நூலின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் இதை இணைத் திருமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளத் திருச்சபைத் தந்தையர் பலர் தயங்கியுள்ளனர். புனித ஏரோனிமு இந்நூலைத் திருமுறைப் பட்டியலில் ஏற்றுக்கொள்ளவில்லை. எருசலேம் சிரில், எப்பிபானெஸ், கிரேகோரி; நாசியான்சன் போன்றோர் தங்கள் பட்டியலிலிருந்து இந்நூலை நீக்கிவிட்டனர். திருச்சபைத்தந்தையரும் இந்நூலுக்கு விளக்கவுரை எழுதவில்லை. ஆனால் திருச்சபையின் தொடக்கத்திலிருந்து இந்நூல் வாசிக்கப்பட்டுள்ளது; எடுத்துக்காட்டாகப் பயன்பட்டுள்ளது. திதாக்கே என்ற போதக நூலிலும், போலிக் கார்ப்பு, "2-ஆம் கிளமந்து" அலெக்சாந்திரியா கிளமந்து, ஓரிஜன், ஹிப்போலிட்டஸ், அத்தனேசியஸ், அம்புரோஸ் மற்றும் பலரது நூல்களிலும் இந்நூல் சுட்டுக்காட்டப்படுகிறது; அல்லது எடுத்துக் காட்டாகப் பயன்படுகிறது. சிப்ரியன் இந்நூல் பற்றிய சுருக்கமான மறையுரைத் தொடரைத் தருகிறார். மேற்குத்திருச்சபையில் கி.பி. 382-இல் நடந்த உரோமைச் சங்கத்திலிருந்தும் கிழக்குத் திருச்சபையில் 682-இல் நடந்த கான்ஸ்டாண்டி நாபோலிஸ் பொதுச்சங்கத்திலிருந்தும் அதிகாரபூர்வமான திருமுறைப்பட்டியலில் இந்நூல் காணப்படுகிறது. 393-இல் கார்தேஜில் நடந்த

தலத்திருச்சபைச் சங்கங்களிலும் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பிளாரென்ஸ், திரிதிந்தீன் ஆகிய இடங்களில் நடந்த திருச்சபையின் பொதுச்சங்கங்கள் இந்நூலை இறை ஏவுதல் பெற்ற நூலாக ஏற்று அதிகாரபூர்வமான திருமுறைப்பட்டியலில் சேர்த்துக் கொண்டன. கத்தோலிக்கத் திருச்சபை இந்நூலை இணைத் திருமுறைப்பட்டியலைப் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்ளுகிறது. ஆங்கிலத் திருச்சபையும் இதை ஏற்றுத் தனது வாசகங்களில் பயன்படுத்துகிறது. மற்றப் பிரிவினைச் சகோதரர்கள் இந்நூலைத் திருமுறைப் பட்டியலைச் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்வதில்லை. காலப்போக்கில் அவர்களுடைய விவிலியத்தி லிருந்து இந்நூல் நீக்கப்பட்டது.

கிரேக்க விவிலியத்தில் தோபித்து, யூதித்து, 'எஸ்தர்' என்ற வரிசையில் அவற்றோடு இந்நூல் தொகுப்பாகிறது. ஆனால் இத்தொகுப்பு வெவ்வெறு விவிலிய ஏடுகளில் வெவ்வேறு இடங்களில் வருகின்றது. சினாயிடிக்கஸ் ஏட்டில் வரலாற்று நூல்களுக்குப் பின்னும், வத்திக்கான் ஏட்டில் ஞானநூல்களுக்குப் பின்னும், அலெக்சாந்திரினுஸ் ஏட்டில் இறைவாக்கினர் நூல்களுக்குப் பின்னும் வருகிறது. வுல்கத்தா வாசகத்தில் வரலாற்று நூல்களுக்குப்பின் இடம் பெறுகிறது. கத்தோலிக்கத்தமிழ் வாசகம் இந்த வரிசையையே பின்பற்றுகிறது.

5. ஆசிரியர், இடம், காலம்: ஆசிரியரைப் பற்றியும் நூல் தோன்றிய இடம் பற்றியும் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில் கதை நடப்பதாகக் கூறப்படும் இடத்தின் புவியமைப்பு ஆசிரியரது சொந்தக் கற்பனையாகத் தெரிகிறது. மெசபொத்தாமியா நாட்டுக் குடிமகன் எக்பத்தானுக்கும் இராகியுவுக்கும் உள்ள உயர வேறுபாட்டை அறியாதிருப்பாரா (5:8)? இரு நகரங்களுக்குமிடையிலுள்ள தூரம் இரண்டு நாள் நடைதூரமன்று, ஏறக்குறைய 185 மைல் தூரம் என்று அறியாரா? நினிவேயிலிருந்து எக்பத்தானுக்குச் செய்யும் பயணம் திகிரிஸ் நதியை நோக்கிச் செல்லாது என்பதை அறிந்திருக்க வேண்டுமே (6:7)? இவற்றில் எல்லாம் நூல் தவறான செய்திகளையே அளிக்கிறது.

இந்நூலில் காணப்படும் பின்னணி சிதறிக்கிடந்த யூதர்களிடையே நிலவிய நிலையைப் பிரதிபலிக்கிறது என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். இந்நூலுக்குச் செமித்திய மூலம் உண்டு என்று கருதுபவர்கள் இது மெசபொத்தாமியாவில் தோன்றியிருக்கலாம் என்பர். நூலில் காணப்படும் பேய்கள், மாயவித்தைகள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் இந்நூல் பாலஸ்தீனத்துக்கு வெளியில் ஒரு சுதந்தரச் சூழ்நிலையில் தோன்றியிருக்கக் கூடும் என்று சுட்டுகின்றன. காலப்போக்கில் இந்நூல் எகிப்தில் தோன்றியது என்ற கருத்து வலுப்பெற்றது. இக்கருத்து நூலின் பொருளடக்கம், பயன்படுத்தியிருக்கும் மூலங்கள், கிரேக்கப் பாதிப்பு, ஆசிரியர் கீழைய நாடுகளின் வரலாற்றையும் புவியமைப்பையும் அறியாமை ஆகியவற்றை விளக்கக் கூடியது என்று கருதினர். நூலில் காணப்படும் கி.மு. இரண்டாம் அல்லது முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாலஸ்தீன அரமேயிக்கு, எபிரேய வாசகங்கள், மொழிபெயர்ப்புகள் முதலியவை இந்நூல் பாலஸ்தீனத்தில் தோன்றியது என்று கருதத் தூண்டியதுண்டு.

காலத்தைப் பொறுத்தமட்டும், இந்நூல் நாடு கடத்தலுக்கு மிகப் பிந்தித் தோன்றியதாகத் தெரிகிறது. ஆசிரியர்களது வரலாறு பற்றிய பல தவறுகள் நூலில் காணப்படுகின்றன. ஆகவே இவை கதை நடந்ததாக விவரிக்கப்படும் காலத்தில், தோன்றியிருக்க முடியாது என்று காட்டுகின்றன. இத்தவறுகள் பற்றிப் பின்பு பார்ப்போம். இந்நூல் பிற்காலத்தில் தோன்றியது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. பிற்கால ஆலயம் பற்றிய செய்திகள் (14:7): குருக்களுக்கும் லேவியர்களுக்கும் அளிக்க வேண்டிய தசமபாகம் பற்றிய செய்தி (இவ்வழக்கு இரண்டாம் ஆலயகாலத்தில் மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது) (5:14); பழைய ஏற்பாட்டு வாசகங்கள் பயன்பட்டிருக்கும் முறை, குறிப்பாக இறைவாக்குகளிலிருந்து எடுத்துக்காட்டுகளைக் கொண்டிருப்பது; நாடுகடத்தப் பட்டபின்பு

தோன்றிய ஞானநூல்களுக்கும் குறிப்பாகச் சீராக்கு நூலுக்கும், இந்நூலுக்கும் உள்ள ஒற்றுமை - இவை இந்நூல் பிற்காலத்தில் தோன்றியது என்பதற்குச் சான்றாக அமைகின்றன. மேலும் இந்நூல் கி.மு. 200-க்கு முன் தோன்றியிருக்க முடியாது என்றும் காட்டுகின்றன. அந்தியோக்கு, எப்பிபானின் ஆட்சியில் யூதர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலையை நூல் கி.மு. 170-க்கு முன் தோன்றியிருக்க வேண்டும். மெசியாகாலம் பற்றிய விவரிப்பு, உயிர்ப்பு, அழியாமை ஆகியவை பற்றிய விசுவாசத்தோடு கூடிய காட்சி இலக்கிய வளர்ச்சி முதலிய கோட்பாடுகள் நூலில் காணப்படாமை, பிற்காலத்தில் தோன்றிய பரிசேயர், சதுசேயர் குழுக்களின் கோட்பாடுகள் காணப்படாமை ஆகியவை இந்நூல் கி.மு. 170-க் குப்பின் தோன்றியிருக்க முடியாது என்று காட்டுகின்றன. ஆகவே இந்நூல் கி.மு. 200-170-க்கு இடையில் தோன்றியிருக்க வேண்டும் என்பது பெரும்பாலான ஆய்வாளர்களின் முடிவாகும்.

6. வரலாற்றுத் தவறுகள்: இடம், காலம் பற்றிய பிரச்சினைகளோடு, இந்நூலின் வரலாற்றுத் தன்மை பற்றிய பிரச்சினையும் சேர்ந்து சிக்கல் உண்டாக்கியது. லூத்தர் போன்றோர் இந்நூலின் வரலாற்றுத் தன்மை பற்றி ஐயம் எழுப்பினர். நூலில் காணப்படும் வரலாற்றுத் தவறுகள், நூல் விவரிப்பதாகக் கருதப்படும் காலத்தில் இந்நூல் தோன்றியிருக்க முடியாது என்று காட்டுகின்றன. சிலர் இத்தவறுகளை விளக்கிக் காட்ட முயன்றுள்ளனர்; ஆனால், வெற்றி பெறவில்லை. தம் நூலுக்குப் பின்னணியாகப் பயன்படுத்திய வரலாற்றின் துல்லியம் பற்றி ஆசிரியர் அதிகம் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. கி.மு. 734-இல் நெப்தலிப் பகுதியைக் கைப்பற்றி அங்கு வாழ்ந்த யூதர்களை அசீரியாவுக்கு மூன்றாம் திகிலத்-பில்னேசர் (744-727) நாடு கடத்தினான். சல்மனேசர் (726-722) அல்லன் (2 அர 15:29; தோபி 1:2). ஆசிரியரது கருத்துப்படி, அசீரிய அரசமரபு சல்மனேசர், சனகெரிபு, ஏசர்க்கத்தோன் என்ற வரிசையில் தரப்பட்டுள்ளது (1:18). சனகெரிபுவின் உண்மையான தந்தையான சார்கோன் (722-705) குறிப்பிடப்படவில்லை, சில வாசகங்களில் காணப்படுவதுபோல், நினிவேயைக் கைப்பற்றுவதில் அகசுவேர், நெபுகத்னேசர் ஆகியவர்களை விட சியாக்சரேஸ், நெபோபோலாசர் ஆகியோர் பொறுப்பாளர்கள் ஆவார். தாவீது-சாலமோன் அரசு கி.மு. 931-இல் இரண்டாகப் பிரிந்து போயிற்று. இந்நிலையில் 1:5-இலும் 14:6-இலும் வரும் குறிப்புகள் ஒத்துப் போகவில்லை. ஏனெனில் 14:6-இன்படி நினிவேயின் அழிவுக்குப் பின்தான் (612) தோபித்து மரிக்கிறார். இந்த வரலாற்றுத் தவறுகளும் முன்பே கூறப்பட்ட இடங்கள் பற்றிய தவறுகளும் சேர்ந்து, நவீனக் கருத்துப்படி இந்நூல் வரலாற்றுத் தன்மையுடையதன்று என்று காட்டவல்லன. அதில் ஆசிரியர் அக்கறை கொண்டதாகவும் தெரியவில்லை. அவர் எழுதிய நூல் மிட்ராஷ் வகையைச் சேர்ந்த சமயப் புதினமாகும் என்பதைப் பின்பு பார்ப்போம்.

7. இந்நூலைப் பாதித்தவை:

அ. பிற இனப் பாதிப்பு: பழம் மேற்காசியாவில் ஞானியாகக் கருதப்பட்ட அகிக்கார் என்பவருடைய கதை இந்நூலை ஓரளவு பாதித்திருப்பதாகத் தெரிகிறது. இவரைப் பற்றிய கதைகள் பலவடிவங்களில் பல மொழிகளில் காணப்படுகின்றன. அவற்றுள் காலத்தால் முந்தியவை கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எலிபென்டைன் அரமேயிக்கு ஏடுகளாகும். இக்கதைகளைத் தோபித்து நூலின் ஆசிரியரும் வாசகர்களும் அறிந்திருப்பதாகத் தெரிகிறது. அகிக்கார் சனகெரிபின் அமைச்சராவார். அவருக்கு நாடன் என்ற உறவினன் இருந்தான். இவனை அகிக்கார் தத்து எடுத்துத் தமது வாரிசாக வளர்த்துத் தமக்குப்பின் பதவிக்கு வருபவனாகத் தயாரித்தார். நாடன் வரம்பு மீறி வாழ்ந்தான். நன்றி கெட்டவனாக அகிக்காருக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்தான். அவருக்கு எதிராகப் பொய்க்குற்றம் சாட்டி அவருக்கு இழிவு உண்டாக்கினான். அகிக்கார் கொலைத் தண்டனைக்குத் தீர்ப்பிடப்பட்டார். ஆனால் அத்தண்டனையை நிறைவேற்றுபவன் அவரது

நண்பன். அவன் அவரை மறைத்துவைத்துப் பாதுகாத்தான். எகிப்தியரோடு போர் தொடங்கியபோது அகிக்கார் மட்டுமே கொடுக்கக்கூடிய ஆலோசனை அரசனுக்குத் தேவைப்பட்டது. ஆகவே அச்சமயத்தில் கொலையை நிறைவேற்றுபவன் அகிக்காரை அரசன் முன் கொண்டுவந்தான். அரசனும் தனது தண்டனைத் தீர்ப்பைப்பற்றி வருந்தினான். மகிழ்ந்து அவரைப் பயன்படுத்தினான். அகிக்கார் தமது மதியால் எகிப்திய மன்னனை வென்றபின் மகிமையோடு நாடு திரும்பினார். நாடன் மக்களால் பழித்துக் கூறப்பட்டு, கைதியாக்கப்படுகிறான். சிறையில் ஊதி, வெடித்து, மிகக்கேவலமாக மடிகிறான். இவ்வாறு அகிக்காரின் கதை நேர்மைக்காக எண்பிக்கப்பட்டவரது வரலாறு ஆகும். இக்கதையின் அடிப்படையில் இந்நூலில் வருபவர்கள் பற்றிய குறிப்புகளைப் புரிந்து கொள்ளலாம்.

கிரேக்க வாசகம் அகிக்கார், நாடன் ஆகியோரைப் பல தடவை குறிக்கிறது. வுல்கத்தா வாசகம் ஒரே ஒருதரம் 11:20-இல் "அகிக்காரும் நாதாபும்" என்று குறிக்கிறது. கிரேக்க வாசகம், 1:21-இல் அகிக்கார் சனகெரிபு, ஏசர்கத்தோன் ஆகியோரின் அமைச்சராவார்; தோபித்தின் உறவினராவார்; 2:10-இல் அகிக்கார் தோபித்தைப் பாதுகாக்கிறார்; பின் எலிமாயிவுக்குப் போகிறார்; 11:10-இல் அகிக்காரும் நாதாபும் திருமணக் கொண்டாட்டத்தில் பங்கு பெறுகின்றனர்; 14:10-இல் தத்து மகனான நாதாபின் சூழ்ச்சியிலிருந்து விடுவிக்கப்படுகிறார் என்று கூறப்படுகிறது. இங்கு ஞானியான அகிக்காரைப் போற்றும் கதை பற்றிய குறிப்பைக் காண்கிறோம். ஆசிரியர் தம் கதையில் அகிக்காரைத் தோபித்தின் உறவினனாக அறிமுகப்படுத்துவது, ஏற்கெனவே நன்கு அறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கதையோடு தமது கதையை இணைத்துத் தமது கதைத் தலைவரின் புகழை மிகுதியாய்க் கூறுகிறார் எனலாம். ஒரு வேளை ஆசிரியர் தோபித்தை ஒரு யூத அகிக்காராக எண்ணியிருக்க வேண்டும். ஒரு பழங்கதையின் ஒழுக்கப் பாடத்தைத் தமது மக்களின் மொழியிலும் சிந்தனை வடிவிலும் எடுத்துக்கூற விரும்பியிருக்கலாம் பல ஞானமிக்க கூற்றுக்கள் வருகின்றன. அவற்றிற்கு இணையான கூற்றுக்கள் தோபி 4-இல் காணப்படுகின்றன.

தோபித்து நூலின் ஆசிரியர் "நன்றியுள்ள இறந்தவரது கதை" என்ற ஒரு கதையை அறிந்திருப்பதாகத் தெரிகிறது. இதுவும் பலரால் அறியப்பட்டது; பல வடிவங்கள் உள்ளன. இதன் சாதாரண வடிவில், பயணம் செய்யும் ஒரு வணிகன், தனக்கு வரவிருக்கும் ஆபத்தையும் பார்க்காது, ஒரு கடன்காரரை மீட்டு நல்லடக்கம் செய்கிறார். பின்பு மறைபொருள் மிக்க அன்னியன் வணிகனுக்கு உதவிசெய்து ஒரு கொடிய ஆபத்திலிருந்து வணிகனைக் காப்பாற்றி அவனுக்கு ஒரு மணமகளையும் காப்பாற்றி ஒழுங்கு செய்கிறான். இறுதியில் அந்த மறை பொருள் மிக்க அன்னியன், வணிகன் அடக்கம் செய்தவனின் ஆவியேயாகும் என்று வெளிப்படுத்தப்படுகிறது. இக்கதையின் மற்றொரு வடிவில் மணமகள் ஓர் இளவரசியாவாள். அவளுடைய கணவர்கள் எல்லாம் ஒரு வேதாளத்தால் கொல்லப்படுகின்றனர். கதைத்தலைவன் இந்த வேதாளத்தை வென்று கொல்லுகிறார். சில சமயம் ஒரு நாய் அவனுக்கு உதவி செய்கிறது. இக்கதையை எகிப்திய வடிவில் தோபித்து நூல் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். இக்கதை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதில் ஓர் இளவரசியைப் பேய் பிடித்திருந்தது. திசிபே என்ற இடத்துத் தெய்வம் ஒரு தூதுவனை அனுப்பிப் பேயை ஓட்டிக் குணமாக்குகிறது. இக்கதைக்கு மாற்றாகவே தோபித்துநூல் கதை எழுதப்பட்டதாகச் சிலர் கருதுவர். இவை போன்று மற்றக் கதைகளும் உள்ளன. இவற்றில் மீன், கல்லீரலின் மாயசக்திகள் போன்ற விவரங்கள் உண்டு (இக்கதைகளுக்கும் தோபித்தின் கதைக்கும் உள்ள இணைத்தன்மை தெளிவாக உள்ளது). தோபித்து நூலில் இறந்தவரை அடக்கம் செய்தல் என்ற கருத்து உண்டு; ஆனால் நன்றியுள்ள இறந்தவர்க்குப் பதிலாக இரப்பாயேல் தூதன் புகுத்தப்படுகிறார். யூத விசுவாசத்திற்கேற்ப இம்மாற்றம் செய்யப்படுகிறது.

சில இடங்களில் பாரசீகப் பாதிப்பு காணப்படுகிறது. 3:15; 6:12-இல் வரும் உறவின் முறைத் திருமணம் பற்றிய குறிப்புகள் உரிமைப் பெண்கள் திருமணம் பற்றிய மோசேயின் சட்டத்தையும் கடந்து செல்கின்றன. எண் 36:8 உரிமைப் பெண்கள் தங்கள் இனத்துக்குள்ளே மணம் செய்து கொள்ள வேண்டும் எனக்கோருகிறது. ஆனால் மகளை இரத்த உறவினனுக்குத் திருமணம் செய்விக்கத் தவறிய தந்தைக்கு மரண தண்டனை அளிக்கும் சட்டம் அல்லது வழக்கம் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. உரிமைப் பெண் தன் மிக நெருங்கிய உறவினைத் தான் மணக்க வேண்டியது அவசியமானதாகத் தோன்றவும் இல்லை. இருப்பினும் தோபியாவுக்குச் சாராவை மணம் செய்விக்கத்தவறினால் இரகுவேல் தண்டனைக்குரியவர் ஆவார் என்று இரப்பாயேல் உறுதியாகக் கூறுகிறார். இத்தகைய கருத்து பாரசீகப் பாரம்பரியத்திலிருந்து, கதைத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெறுமனே புகுத்தப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் சிலர் கருதுவர். சில ஏடுகள் 3:8-இல் வரும் வேதாளத்தின் பெயர் அசுமதேயு என்று குறிப்பிடுகின்றன. இது பாரசீக எஸ்மாதேவா என்பதிலிருந்து வரலாம் என்று சிலர் கருதுகின்றனர். இருப்பினும் இப்பெயர் அழித்தல் என்ற பொருளுடைய "ஸ்மத்" என்ற அடிப்படைச் சொல்லிலிருந்து வந்திருக்கலாம். விவிலியத்தில் தோபித்து நூலிலும் ஆயனின் காவல்நாய்கள் பற்றிய குறிப்புகளிலும்தான் (யோபு 30:1; எசா 56:10) நாய் மனிதனுக்குப் பயனுள்ளதாகவோ, நண்பனாகவோ இருப்பது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதற்கு மாறாகப் பாரசீகத்தில் நாயைப் பாதுகாக்கும் பல சட்டங்கள் உள்ளன. தோபி 5:16; 11:4-இல் வரும் குறிப்புகள் இச்சட்டங்களைப் பிரதிபலிக்கலாம் என்று கருதப்படுகிறது.

மேற்கூறப்பட்டவைகளிலிருந்து சில விவரங்களை ஒருங்கிணைத்துத் தோபித்து நூல் ஆசிரியர் யூத விசுவாசத்திற்கேற்பத் தமது கதையை ஆற்றலோடு அமைக்கிறார்; ஆனால், இக்கதைகளிலிருந்து எதையும் அப்படியே கடன் வாங்கவில்லை எனலாம். தோபித்து நூல் கதை ஆசிரியருடைய தனிப்பட்ட சுதந்திரமான படைப்பாகும்.

ஆ) விவிலியப் பாதிப்பு:

உண்மையிலேயே இந்நூலைப் பாதித்துள்ளவை முந்தைய விவிலிய நூல்களாகும். கருத்துகள், நிகழ்ச்சிகள், சொற்கள், தனிப்பட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டுதல், வாசக எடுத்துக்காட்டுகள் ஆகியவை விவிலியப் பாதிப்பைப் பிரதிபலிக்கின்றன. முந்தைய விவிலிய நூல்களின் ஆதிக்கம் இந்நூல் முழுவதும் பரவிக்கிடப்பதை அதிகமாகக் கூறமுடியாது. வாசக எடுத்துக்காட்டுகள்: 1:2 (2 அர 19:37); 2:6 (ஆமோ; 8:10); 4:14 (லேவி. 19:13); 8:6 (ஆதி 2:18); 13:2 (1 சாமு 2:6; ஞானம் 16:13).

சுட்டிக்காட்டுதல்கள்: 1:4 (ஞானம் 9:8); 1:5 (1 அர 12:28-30); 1:6 (உப 12:6; 16:16); 1:7 (உப 14:25-26); 1:8(உப 14:2-29) 1:10 (உப 1:8-9); 1:16-17 (எசா 58:7; எசே 18:5-9); 1:17; 4:17 (1 அர 13:28-29; நெகே 2:23; சீரா 7:33; 30:18; 38:16 தொ); 1:18 (எசா 37:36; சீரா 48:18-21; 1 மக் 7:41;2 மக் 8:19); 3:10;6:15 (ஆதி 42:38; 44:29.31); 3:11 (தானி 6:10). 3:17; 6:11;7:13 (எண் 27:8; 36:6-9); 4:3; 10:12 (யாத் 20:12; பழ 23:22; சீரா 7:27-28); 4:10 (பழ 10:2; 11:14); 4:7.16 (சீரா 14:8-9); 4:7தொ; 12:29; 14:11 (உப 15:7-11; சீரா 17:22;29:11-13;35:2); 7:3-5 (ஆதி 29;4-7); 7:11 (ஆதி 24:33); 8:6 (ஆதி 2:7.18.22); 11:5 (உப 32:39); 12:10 (ஞானம் 1:12); 13:5 (30:3; எரே 29.14); 13:11 (தானி 4:37:13:2 (ஆதி 27:2; எண் 24:9); 13:16-17 (எசா 54:11-12); 14:4.8 (யோனா 3:4); 14:4-5 (எஸ் 1:1; எரே 25:11-13; 29:19.14; தானி 9:2). இந்த நீண்ட பட்டியல் இந்நூலுக்கும் விவிலியத்தின் மற்ற நூல்களுக்குமிடையேயுள்ள தொடர்பை எடுத்துக்காட்ட வேண்டுமென்றே தரப்பட்டது. இவை ஆசிரியர், முழுமையாய் ஒரு யூதர்; தமது மக்களின் இலக்கியத்தில் மூழ்கித்தோய்ந்தவர் என்று காட்ட வல்லன.

6:12; 7:13-இல் சட்டம் வெளிப்படையாகக் குறிக்கப்படுகிறது. அதன் ஒழுங்குகளும்

நிகழ்ச்சிகளும் தோபி 1:6-இலிருந்து நூல் முழுவதற்கும் பின்னணியாக அமைகின்றன. 1:6-ஐ உப 16:16-ஓடும், தசமபாகம் பற்றிய 1:7-ஐ எண் 18:24 தொ; உப 18:3-5-ஓடும், ஏழைகளுக்கு உதவி செய்வது பற்றிய 1:8-ஐ உப 14:28-29-ஓடும், உணவு ஒழுங்குகள் பற்றிய 1:11ஐ லேவி 11; உப 13-ஓடும், ஐம்பதாம் நாள் விழாப் பற்றிய 2:1-ஐ யாத் 23:16-ஓடும், கூலியை உடனே செலுத்துதல் பற்றிய 4:14-ஐ லேவி 19:13 உப 24:15-ஓடும் ஒப்பிடுக. ஆதி 24:3 தொ; 28:1 தொ-இல் வரும் குலமுதியவர்களின் திருமணங்களை 4:12 நினைவுபடுத்துகிறது. தோபியாவின் திருமணம், வீடு திரும்புதல் ஆகியவை பற்றிய பகுதி ஆதி 24-ஐத் தழுவியுள்ளது.

நூல் முழுவதும் ஞான நூல்களின் சுவடுகள் காணப்படுகின்றன. நூல் செயல் முறையான, ஆழ்ந்த சமய போதகத்தை அளிக்கிறது. பழமொழிகள் அடங்கிய இரு தொகுப்புகள் (தோபி 4:3-19; 12:6-10; 14:8) ஆசிரியரது போதக நோக்கைக் காட்டுகின்றன. இவற்றிற்கு இணையான பகுதிகளைச் சீராக்கு நூலில் காணலாம். இதனால் இந்நூல் ஞானநூல்கள் வகையைச் சேர்ந்தது என்று கருதுவாரும் உளர்.

இவற்றில் எல்லாம் முதன்மையான, முக்கியமான பாதிப்பு உபாகமப் பாரம்பரியத்திலிருந்து வருவதாகும். நாடு கடத்தப்படுதலும், நாட்டின் அழிவும் பிரமாணிக்க மின்மை மற்றும் பதிதத்தின் விளைவாகும் (உப 15:15-68; தோபி 14:4). ஆயினும் தீர்ப்புக்குப்பின் இரக்கத்திற்கு இடமுண்டு (உப 30:1-4; தோபி 14:5-6). ஆண்டவரை வழிபட உரிமையுள்ள ஒரே இடம் எருசலேம் ஆலயமாகும் (உப 12:1-4; தோபி 14:5.7). உபாகமத்தின் உடன்படிக்கைச் சட்டத்தின்படி வாழ்வதைக் கதை பிரதிபலிப்பதால், இந்நூலை உபாகமத்தின் மறுகாட்சி என்றால் மிகையானது.

இவ்வாறு இந்நூலில் காணப்படும் விவிலிய நூல்களின் பாதிப்பு, பிற இனப் பாதிப்புகளை ஒன்றுமின்மையாக்கி விடுகிறது எனலாம்.

8. **இலக்கியவகை:** நிகழ்ச்சியுரை வடிவில் நூல் அமைந்திருந்தாலும் சில பாத்திரங்களின் பெயர்களைத் தவிர வேறெதுவும் வரலாற்றுத் தன்மையுடையது என்று கூறுவது கடினம். இன்றும் ஆய்வாளர்கள் சிலர் இந்நூலின் கரு வரலாற்றுத்தன்மையுடையது என்று கூறுவர். ஆனால், நூலின் வரலாற்றுச் சூழ்நிலை, கதை நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலத்தோடு ஒத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் இச்சூழ்நிலை அக்காலத்தில் கதைக்குப் பொது அமைப்பு அளிக்கிறது. ஆனால் வெறும் வரலாற்று நிகழ்ச்சிகளில் ஆசிரியர் சிறிதும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. இறைவனோடும் உடன் மனிதர்களோடும் ஒருவர் கொள்ள வேண்டிய உண்மையான உறவு பற்றிப் போதிக்கும் நோக்கம் நூலில் அதிக ஆதிக்கம் செலுத்துகிறது. ஆகவே இந்நூல் ஒரு வரலாற்று இலக்கியம் என்பதைவிட ஒரு ஞான இலக்கியம் என்பதே மேலானதாகத் தோன்றும். இதன் வரலாற்றுத் தன்மை பற்றி எதுவும் உறுதியாகக் கூறமுடியாது; கூறவேண்டிய அவசியமும் இல்லை. வரலாறு, இடங்கள் பற்றிய ஆசிரியரின் அறியாமையை அல்லது அக்கறையின்மையைச் சுட்டிக்காட்டும் குறிப்புகளை ஏற்கெனவே கூறியுள்ளோம்.

கதை கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருப்பதாய்த் தோன்றினாலும் நூலில் விவரிக்கப்படும் கருத்துக்களும் சமய மரபுகளும் நாடுகடத்தலுக்குப்பின் வந்த காலத்தைச் சுட்டுகின்றன. நூல் கவனமாய் அமைக்கப்பட்ட இணையமைப்பைக் கொண்டுள்ளது. தோபித்து, அன்னா தோபியா ஆகியோர் இரகுவேல், எத்னா, சாரா ஆகியோரோடு தெளிவாக இணையாக அமைகின்றனர். தோபித்தின் சோதனையும் மன்றாட்டும் சாராவினுடையவைகளோடு இணையாய் உள்ளன. இரப்பாயேல் வேதாளத்தை ஈடு செய்கிறார். நூல் எரிச்சல் தரும் விதத்தில் நெருக்கமில்லாத, ஒட்டு வேலையாகத் தெரிகிறது. மரித்தோரை அடக்கம் செய்வது ஏன் அவ்வளவு கொடிய குற்றமாகக் கருதப்பட்டது? தோபித்து தன்

மகனுக்குத் தோழனாக ஒருவரை வாடகைக்குப் பிடிக்கும்போது குடும்பத்தைக் காப்பாற்ற அன்னா உழைக்க வேண்டுமா? 6:9-இல் கட்டிக்காட்டுவதுபோல், தங்களது உறவினன் இரகுவேல் இருப்பதைத் தோபித்தும், தோபியாவும் அறிவார்களா? சாராவின் துன்பநிலை முழுவதும் தோபியா அறிந்திருந்தானா? அதி. 7-இல் விவரிக்கப்படுவது போன்று திருமணங்கள் அவ்வளவு விரைவில் ஒழுங்கு செய்யப்பட்டவையா? ஆசிரியர் நிகழ்ச்சியுரையின் பகுதிகளைத் தமது குறிக்கோளுக்கு ஏற்ற சாதனங்களாக மாற்றி அமைத்திருப்பதாகத் தெரிகிறது. நூலின் வரலாற்றுத் தன்மைக்குச் சான்றுகள் காட்டுவதைவிட, தனது போதக நோக்கில் அதிக அக்கறை செலுத்துகிறார். இப்போதகத்தைப் பின்பு பார்ப்போம்.

ஆசிரியர் பயன்படுத்தும் இலக்கிய வடிவம் அகடிக் மிட்ராஷ் ஆகும் என்று தோன்றுகிறது. இவ்வடிவம் ஒரு வரலாற்று நிகழ்ச்சியையோ, ஆளையோ அடிப்படையாக வைத்துச் சுதந்தரமாக ஒரு நிகழ்ச்சியுரை அமைத்து வாசகர்களுக்குப் போதனை அளிப்பது அல்லது ஆன்மீக வளர்ச்சியளிப்பது ஆகும். கதையில் உற்சாகத்தையும் எதிர் பார்ப்பையும் உண்டாக்குவதற்குக் கதையை அமைப்பதில் ஆசிரியர் காட்டும் சுதந்தரம், தோபித்தின் நற்பண்புகளை விவரிப்பது (ஆதி. 1-2), முக்கிய பாத்திரங்கள் வழியாக அடிக்கடி எடுத்துக் கூறப்படும் நல்லொழுக்கம், சமயபோதகம் (3:2-6. 13-26; 4:2:23; 6:16-22; 8:7-10; 12:6-55; 13;14;6-11) ஆகிய யாவும் ஆசிரியர் ஒரு அகடிக் மிட்ராசை எழுதுகிறார் என்று போதிய மட்டும் காட்டுகின்றன. இந்நூல் ஒரு சமயப் புதினமாகும். இதுவே அனேக நவீன ஆய்வாளர்களின் கருத்துமாகும்.

இந்நூல் தனக்குரிய இலக்கியவகையில், விவிலிய இலக்கிய மணிக்கற்களில் ஒன்றாகும். இந்நூலின் கவர்ச்சியாற்றலைச் சினாயிடிக்கஸ் பதிப்பிலோ எருசலேம் விவிலியம் போன்ற அண்மையில் செய்யப்பட்ட மொழி பெயர்ப்புகளிலோ, மிகச் சிறந்த முறையில் காணலாம். இப்போது செய்யப்படும் புதிய தமிழ்மொழி பெயர்ப்பில் இக்கவர்ச்சி வெளிக்கொணரப்படும் என்று எதிர் பார்ப்போம்.

9. ஆசிரியரின் நோக்கம்: தோபித்து நூல் ஒரு சமயப் புதினமாகும்; இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதை வலியுறுத்துகிறது. நம்பிக்கையும் ஆறுதலும் தேவைப்பட்ட ஒரு யூத சமூகத்தைச் சித்தரிக்கிறது. நினிவே, மேதியா ஆகிய பகுதிகளில் சிதறிக் கிடந்த யூத சமூகத்திற்கு இதைச் சாற்றிக் கூறுகிறது. இரு குடும்பங்களும் புறவினத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட சூழ்நிலையைச் சமாளிக்க இஸ்ராயேலின் கடந்த காலம் பாடம் கற்பிக்கிறது என்று ஆசிரியர் காட்டுகிறார். பிரமாணிக்கம் செழிப்பையும் பிரமாணிக்கமின்மை பேரழிவையும் கொண்டு வரும் என்ற உபாகமப் போதகம் உடன் படிக்கைச் சமூகத்தால் வரலாற்றில் வாழ்ந்து காட்டக்கூடிய இறையியலேதான் என்று காட்டுகிறார். அதே சமயம் அக்கால நெருக்கடி நிலையில் விசுவாசத்தின் பொருள், அதைக்கடைப் படிப்பது ஆகியவைபற்றி யூதர்கள் வியந்து கொண்டிருந்தபோது, துணிந்து வேறுவிதத்தில் வாழ்வை அமை என்று ஆசிரியர் கற்பிக்கிறார். புது இனப்பழக்க வழக்கங்களை ஏற்று அவற்றோடு ஒத்துப்போகாமல், அன்றாட உடன்படிக்கை வாழ்வில் இஸ்ராயேலின் மரபுரிமையைச் செயல்படுத்தத் தூண்டுகிறார். உடன் படிக்கை மக்களாக இருப்பது என்பது இதன் பொருளாகும்.

அதே சமயம், உடன்படிக்கை விசுவாசத்தால் வரும் மகிழ்ச்சியுணர்வை மனதில் பதியவைக்க ஆசிரியர் முயல்கிறார். பொறுப்புள்ள இடத்தில், அக்கறையுள்ள இறைவனது பிரசன்னம் இருக்கிறது. ஆகையால் தோபித்து , சாரா என்ற முக்கிய பாத்திரங்களின் வாழ்வில் இஸ்ராயேல் வரலாற்றுக்கு உருவம் அளிக்க விரும்புகிறார். அர்ப்பணிக்கப்பட்ட இந்த மக்களின் ஏற்றத்தாழ்விலும் மீட்பு வரலாற்றைத் தீட்டுகிறார். தமது மக்கள் அவநம்பிக்கையாலும், துணிவின்மையாலும் அவதிப்படும்போது, உடன் படிக்கை ஆண்டவர் தனித்து நிற்பதில்லை. சக யூதர்களின் அக்கறையாலும் அன்பாலும் அவர்

சிறப்பான முறையில் பிரசன்னமாகிறார். ஆகவேதான் தர்மம் வழங்குதல் போன்ற பழக்கங்கள் வலியுறுத்தப்படுகின்றன. யாவேக்கு யூதர்கள் காட்டும் அர்ப்பணம் யாவேயின் சமூகத்திற்கு அவர்கள் காட்டும் அர்ப்பணத்தால் அளவிடப்படுகிறது.

10. திட்டம்:

1 **கதைக்கு மேடை அமைப்பு** (1:1-3:17).

அ) 1:1-3:6 : தோபித்தின் நற்குணங்களும் சோதனைகளும்

ஆ) 3:7-17 : சாராவின் துன்பமும் அவமானமும்.

2. கதையின் நிகழ்ச்சிக்கூறு (4:1-11:20).

அ) 4:1-6:18 : எக்பத்தானுக்குத் தோபியா வின் பயணம்.

ஆ) 7:1-10:13 : தோபியா - சாரா திருமணம்.

இ) 11:1-20 : வீடு திரும்புதல்.

3. முடிவுரை (12:1-14-15).

அ) 12:1-21 : வானதூதர் தம்மை வெளிப்படுத்துதல்.

ஆ) 13:1-17 : தோபித்தின் மன்றாட்டு

இ) 14:1-15 : தோபித்தின் அறிவுரையும், தோபியா, சாராவின் மகிழ்ச்சியும்.

11. பொருளடக்கச் சுருக்கமும் குறிப்புகளும்:

விவரங்கள் வேறுபட்டாலும் கதையின் முக்கிய பொருளடக்கத்தைப் பொருத்தமட்டும் எல்லாப் பதிப்புகளும் ஒற்றுமை கொண்டுள்ளன. நாம் கிரேக்க வாசகத்தைப் பின்பற்றி, பின்வரும் பொருளடக்கத்தைத் தருகிறோம்.

1. கதையின் பின்னணி (1:1-3:17).

அ) **தோபித்தின் நற்பண்புகளும் சோதனைகளும்** (1:1-3:6): இப்பகுதி ஒருவகையில் முன்னுரையாகும். இதில் தந்தையான தோபித்தின் சிறப்புகளும் துன்பங்களும் விவரிக்கப் படுகின்றன. இவற்றைச் சில பதிப்புகள் படர்க்கையிலும், மற்றவை தன்மை ஒருமையிலும் கொடுக்கின்றன.

தோபித்து இஸ்ராயேலில் நெப்பிலி குலத்தைச் சேர்ந்தவர்; திசிபே நகரில் வாழ்ந்தவர். அங்கிருந்து கி.மு. 8-ஆம் நூற்றாண்டில், அரசன் சல்மனேசர் காலத்தில் மனைவி அன்னாவோடும், மகன் தோபியாவோடும், நினிவேக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் கலிலேயாவில் வாழ்ந்தபோதே ஒரு பக்தியுள்ள யூதராகத் திகழ்ந்தார். சிலைவழிபாட்டை நீக்குதல், எருசலேம் ஆலயத்துக்குச் சென்று முதற் பலன்களையும் தசம பாகத்தையும் காணிக்கையாகச் செலுத்தி இறைவனை வழிபடுதல், பிறருக்கு உதவுதல், தர்மம் வழங்குதல் போன்ற பற்பல நற்செயல்களில் ஈடுபட்டிருந்தார். நினிவேயில் சல்மனேசரின் சலுகை பெற்று, உயர் பதவி வகித்தார். மேதியாவுக்கு அரச காரியங்களுக்காகச் செல்வதுண்டு. அங்கே இராகியுவில் கபேலிடம் ஒரு பெருந்தொகையான பணத்தை வைப்புத் தொகையாக விட்டுவந்தார் (1:1-14).

நினிவேயிலும் தோபித்து தமது நற்செயல்களைத் தொடர்ந்து செய்துவந்தார். குறிப்பாக ஏழைகளுக்குத் தர்மம் வழங்குதல், அரசன் சனகெரிபின் காலத்தில் கொல்லப்பட்ட யூதர்களை நல்லடக்கம் செய்தல் போன்ற செயல்களைச் செய்துவந்தார். கொல்லப்பட்ட யூதர்களை அடக்கம் செய்வது அரசனுக்குத் தெரியவந்தபோது, அவர் நினிவேயை விட்டு ஓடவேண்டியிருந்தது. அவருடைய உடைமைகள் எல்லாம் பறிக்கப்பட்டன (1:15-22).

ஏசர்கத்தோன், ஆட்சிக்கு வந்தபின், தோபித்தின் உறவினனும் புதிய அரசனது அமைச்சனுமான அகிக்காரின் உதவியால், நினிவே திரும்பி வந்து, மரித்தோரை அடக்கம் செய்தலைத் தொடர்ந்து செய்துவந்தார். ஒரு தடவை அப்படிச் செய்தபின் திறந்த முற்றத்திலே உறங்கிக் கொண்டிருந்தபோது, ஒரு குருவியின் சூடான எச்சம் அவர் கண்களில் விழுந்து அவரைக் குருடனாக்கியது. அவரது மனைவி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. வறுமையிலும் அவர் நேர்மை தவறவில்லை. ஒரு தரம் தன் மனைவி திருடியிருப்பாளோ என்று ஐயுற்றதற்கு அவள் அவரது நேர்மையை நிந்தித்து

வசைபாடுகிறாள் (2:1-14). இவ்வாறு குருடனாகவும் வறுமையிலும் நான்கு ஆண்டுகள் வருந்தியபின், நம்பிக்கையிழந்தவராய்த் தம்மை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளும்படி உருக்கமாக இறைவனிடம் மன்றாடுகிறார் (3:1-6).

இம்மன்றாட்டில் வரும் கருத்துக்கள் எல்லாம் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்தவையே ஆகும். இறைவன் உண்மையுள்ளவர்; இரக்கமிகுந்தவர். துன்பங்கள் பாவத்திற்குரிய தண்டனையே. இக்கருத்துக்கள் எசே 7:6 தொ; நெகே 8-க்கு இணையானவையாகும். இறைவன் தமது மக்களுக்கு அளிக்கும் துன்பங்களிலும் அவரது நீதியே செயலாற்றுகிறது. மரணத்துக்காக மன்றாடுதல், மோசே (எண் 11:15), எலியா (1 அர 19:4), யோபு (7:15), யோனா (4:38) ஆகியோருடைய மன்றாட்டுகளுக்கு இணையானது.

ஆ) சாராவின் அவல நிலை (3:7-17): அதே சமயம் மேதியா நாட்டைச் சேர்ந்த எக்பத்தானில் இரகுவேல்-எத்னா ஆகியோரின் புதல்வியான சாராவும் துன்பநிலையில் உள்ளாள். ஒருவர் பின் ஒருவராக அவள் மணந்த ஏழு கணவன்களும் அசுமதேயு என்ற தீய, பொறாமை மிக்க பேயால், திருமண அறையிலேயே கொல்லப்பட்டனர். இதைச்சொல்லி அவளது ஊர்க்காரி, சாராவை நிந்தித்து ஏசுகிறாள். இதனால் சாரா மனம் நொந்து, தன் உயிருக்கும், அவல இழிவுக்கும் விடிவு தருமாறு இறைவனைப் பார்த்து உருக்கமாக மன்றாடுகிறாள் (3:7-15). இம்மன்றாட்டு, வுல்கத்தா வாசகத்தில், நீண்டதாக உள்ளது. சாராவின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது.

தோபித்து, சாரா ஆகியோரின் மன்றாட்டுக்களை இறைவன் கேட்டு, இரங்கி அவர்களுக்கு உதவி செய்ய இரப்பாயேல் தூதரை அனுப்புகிறார் (3:16-17). இனி இரப்பாயேல் கதையை நடத்துவார்.

2. கதையின் நிகழ்ச்சிக்கூறு:

அ) தோபித்து தாம் சாவுக்காக மன்றாடியது கேட்கப்படும் என்று நம்புகிறார். ஆகவே தமது காரியங்களை ஒழுங்குபடுத்துகிறார். இராகியுவில் குடியிருந்த கபேலிடம் கொடுத்து வைத்திருந்த பணத்தை வாங்கிவரத் தம் மகன் தோபியாவை அனுப்ப விரும்புகிறார். வறுமையில் இப்பணத்தைப் பற்றி அவர் நினைத்துப் பார்க்கவில்லையா? கதையும் அதன் பாடலும் இறைவனின் இடையீட்டைக் கோருவதாகும். ஒரே கல்லால் பல பறவைகள் விழவேண்டும்.

மகனை அனுப்புமுன் அவனுக்குத் தோபித்து ஒரு நீண்ட அறிவுரை வழங்குகிறார். இதில் வரும் பல கருத்துக்கள் மற்ற ஞானநூல்களில் காணப்படுகின்றன (4:1-21). துணைக்குத் தோபியா ஆள்தேட, இரப்பாயேல் தூதர் "இறைவன் உதவி செய்கிறார்" அல்லது "இறை உதவியின் மகன்" என்று பொருள்படும் அசாரியா என்ற பெயரோடு நம்பத் தகுந்தவரும் வழி தெரிந்தவருமாகத் தம்மை அறிமுகம் செய்து, தோபியாவுக்கு வழிகாட்ட முன்வருகிறார் (5:4-22).

இருவரும் சேர்ந்து பயணம் செய்கின்றனர். அசாரியா வழிமட்டும் காட்டவில்லை. ஆபத்து வரும்போது எப்படிச் சந்திப்பது என்றும் கற்றுக்கொடுக்கிறார். அவர்கள் திகிரீசு நதிக்கரையில் தங்கியிருந்தபோது, தோபியாவைத் தின்னவோ, அவனது காலைக்கடிக்கவோ வருவது போல் ஒரு பெரிய மீன் துள்ளிவருகிறது. அசாரியாவின் ஆலோசனைப்படி தோபியா அதைப்பிடிக்க, அதன் இதயத்தையும், பித்தப்பையையும் ஈரலையும் பிற்காலத்தில் பயன்படுத்திப் பத்திரப்படுத்திய பின், மீதிப்பகுதியை உண்டனர். பின்பு தோபித்தின் குருட்டுத்தன்மையைக் குணமாக்கும் மருந்தையும், பேய்களை ஓட்டும் மருந்தையும் அசாரியா தோபியாவுக்குக் கற்றுக் கொடுக்கிறார் (6:1-9).

எக்பத்தானுக்குப் போகும் வழியில், அசாரியா சாராவின் அழகையும் பண்பையும் புகழ்ந்து கூறி அவளைத் திருமணம் செய்து தரும்படி இரகுவேலைக் கேட்குமாறு, தோபியாவைத் தூண்டுகிறார். உறவின் காரணமாகச் சாராவுக்கு விடப்பட்டிருக்கும் ஒரே ஒரு முறைக்கணவன், உரிமையுள்ளவன், தோபியாதான் என்றும்

சுட்டிக்காட்டுகிறார். சாராவின் அவல நிலையை எடுத்துக்கூறி திருமண அறையில் நறுமண நெருப்பில் மீனின் இதயத்தையும் ஈரலையும் எரித்துப் பேயை ஓட்டும் முறையையும் தோபியாவுக்குக் கற்றுக் கொடுக்கிறார் (6:10-18).

ஆ) தோபியா - சாரா திருமணம் (7:1-10:13).

எக்பத்தானை அடைந்ததும், இரகுவேல் வீட்டிற்குச் சென்று முகமன் கூறியபின், தோபியா, சாராவைத் தனக்குத் திருமணம் செய்து தருமாறு கட்டாயமாகக் கேட்டு, அவளை மணக்கிறான். நறுமண நெருப்பில் மீனின் இதயத்தையும் ஈரலையும் போட, எழுந்த புகை, பேயை மேற்கு எகிப்திற்கு விரட்டிற்று. பின் சென்று அசாரியா அங்கு அதைக் கட்டிப் போட்டார் (8:1-3). நடந்ததை அறியாத இரகுவேல் தோபியா மரித்திருப்பான் என்ற அச்சத்தில் இரவில் புதைகுழி தோண்டச் செய்தார். ஆனால் அடுத்த நாள் காலையில் தோபியாவை உயிரோடு கண்டபோது வியப்படைந்து பெரிதும் மகிழ்ந்தார். திருமணத்தை யொட்டிப் பதினான்கு நாட்கள் மகிழ்ச்சியாய்க் கொண்டாடப்பட்டன. அதே சமயத்தில், அசாரியா தனித்துச் சென்று கபேலிடமிருந்து பணத்தை மீட்டு வந்தார். தோபியா வீடு திரும்ப அவசரப்படுகிறான்(8:4-9:9).

இதற்கிடையில் நினிவேயில், தோபித்தும் அன்னாவும் தங்கள் மகன் திரும்பி வராதது கண்டு அஞ்சி ஊக்கமிழக்கின்றனர். ஆனால் இராகுவேலும், எத்னாவும் வாழ்த்துக்கூறி வழி அனுப்ப அசாரியா, சாரா, தோபியா ஆகியோர் இறைவனைப் போற்றிக் கொண்டே வீடு நோக்கிப் பயணம் தொடங்குகின்றனர் (10:1-3).

இ) வீடு திரும்புதலும் தோபித்து கண்பார்வை பெறுதலும் (11:1-20).

வீடு திரும்பிய தோபியா, தன் பெற்றோரை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறான். அசாரியா கற்றுக்கொடுத்தபடி, தோபியா தன் தந்தையின் கண்களில் மீனின் பித்தப்பையை வைக்க அவரும் பார்வை பெறுகிறார். இதனால் முதியவர்களின் மகிழ்ச்சி உச்சநிலை அடைகின்ற. புது மணத்தம்பதியர்களை வாழ்த்த நீண்ட கொண்டாட்டம் நடக்கிறது. உறவினர் பலர் பங்கு பெறுகின்றனர் (11:1-20).

3. முடிவுரை (12:1-14:15):

இனி நடிகர்களிடமிருந்து விடைபெறுவதே மீதமுள்ளது. அசாரியா செய்த சேவைகளுக்கெல்லாம் கைம்மாறு செய்யும் பொருட்டுப் பாதிப்பணத்தை அவருக்கு அளிக்க, தோபித்துக் தோபியாவும் முன் வருகின்றனர். அப்போது அசாரியா, தாம் இரப்பாயேல் தூதன் என்று தம்மை வெளிப்படுத்துகிறார். அவர்களிடமிருந்து மறைந்து போவதற்கு முன், நற்செயல்கள் பற்றியதோர் போதகம் அளிக்கிறார். இறுதியாக இறைவனது பராமரிப்புக்கு நன்றிகூற அவர்களை அழைக்கிறார் (ஆதி.12). இதைத் தோபித்து ஆர்வமுடன் அருமையானதோர் பாடல் மன்றாட்டில் நிறைவேற்றுகிறார். இப்பாடல் எருசலேமின் வருங்கால மகிமை பற்றிய இறைவாக்குகளை விரிவாக்குகிறது (அதி.13). குல முதியவர்களைப் போல் தோபித்து மரிக்கிறார். மரணப்படுக்கையில் மகனுக்கு வருங்காலத்தை வெளிப்படுத்துகிறார். பிள்ளைக்குரிய பக்தி, நற்செயல்களைச் செய்தல், இறைச்சத்தைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றை அணிந்து கொள்ளுமாறு தூண்டுகிறார் (14:1-11). தோபியா தனது தந்தைக்கும் தாய்க்கும் இறுதிக்கடமைகளைச் செய்தபின், தனது மனைவியின் வயது முதிர்ந்த பெற்றோர்களுக்கு அதே கடமைகளைச் செய்ய எக்பத்தானுக்குச் செல்கிறான். பல ஆசிர்களையும் அனுபவித்தபின், மிக முதிர்ந்த வயதில், அவனது தந்தை தோபித்து மரிக்கும்போது கூறிய இறைவாக்குகள் நிறைவேறுதலைக் கண்ட ஆறுதலோடு மரிக்கிறான். நூல் இறைவனைப் போற்றுதலோடு முடிகிறது (14:12-15).

12. **நூலின் போதகம்:** நூல் ஒரு சமயப் புதினம் என்றோம். அதன் முக்கியத்துவம் அதன் போதகத்தன்மையில் அடங்கியிருக்கிறது. சில அடிப்படை உண்மைகள் நிறைவாக வாழ்ந்து காட்டப்படும் ஒரு கதையை ஆசிரியர் கொடுக்கிறார். வார்த்தைகளைவிடச் செயல் மாதிரி நம்மைப் புண்ணியப் பயிற்சிக்குத்

தூண்டுமாதலால், தான் கூற விரும்பிய செய்தியை ஒரு கதையாக எடுத்துக்கூறுகிறார். யூதபக்தியைச் செயல்முறையில் கடைப்பிடிக்க வேண்டிய சித்திரத்தைக் கவர்ச்சியாக வரைகிறார்.

இறைவனைப் பற்றிய சிந்தனையே நூல் முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறது. எல்லாம் அவரையே சார்ந்திருக்கிறது. அயலாருக்கு நீதியும், அன்பும், கருணையும் காட்டும்போதும் இறைவனுக்கே ஒருவன் பணி செய்கிறான். இறைவனது ஊழியர்கள் இயல்பாகவும் மனவிருப்பத்துடனும் அவரிடம் திரும்புகின்றனர். கிறிஸ்துவத்திற்குப் புறம்பான கருத்துக்கள் இந்நூலில் இல்லை. ஆனால் நிறைவு செய்யப்பட வேண்டியவை அதிகம் உள்ளன.

தோபித்து, சட்டத்திற்கு முழுவதும் பிரமாணிக்கமாய் உள்ளார். அவரோடு சேர்ந்து நாடு கடத்தப்பட்டுச் சிதறிக்கிடந்த யூதர்களுள் அவர் மட்டுமே இறைவன் தேர்ந்தெடுத்த இடமான எருசலேமில் வழிபட்டுள்ளார். சட்டம் கட்டளையிட்டபடி, அங்கு முதல் பலனையும் தசமபாகத்தையும் காணிக்கையாக அளித்துள்ளார். ஆலயத்துக்குச் செல்லுதலை ஒரு கடமையாகச் செய்தாலும், அதில் இறைவாக்கினர்கள் கண்டனம் செய்த (எரே 7:4தொ) குருட்டு மூடத்தனம் எதுவுமில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும். நாடு கடத்தப்பட்டிருந்தபோதும் பிற இனத்தாரது தீட்டிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்கிறார் (தோபி 1:6; 4:12). இதிலும் பிற மக்களை ஒதுக்கும் அடையாளமே இல்லை. அதற்காக மிக எச்சரிக்கையாக இருக்கிறார். தன்னலமற்ற செயல்களில் தம்மையே செலவிடுகிறார். கொடியவர்கள் கொலை செய்த யூதர்களை நல்லடக்கம் செய்வதில் தம்முயிரையே பணயம் வைக்கிறார் (1:19தொ). தமது துன்பங்களை முறைப்பாடு இல்லாமல் பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறார்.

தந்தை மகனுக்கு அளிக்கும் அறிவுரை, பிற்கால ஞான இலக்கியங்களின் கதம்பமான படைப்பாகும். ஞானம் அதன் தோற்றத்தில் அகில உலகப்பண்பும், சமயச்சார் பற்ற தன்மையும் உடையதாயினும், இந்நூலில் காணப்படும் ஞானம் யூத இறையியலில் தோய்ந்ததாக உள்ளது. அதி 4-இல் வரும் அறிவுரைகளும், அதி. 13-இல் வரும் மகிழ்ச்சி மிக்க மன்றாட்டும் இதற்குச் சான்றுகளாகும். மகனான தோபியாவும் பக்தியுள்ள தந்தைக்கு ஏற்ற வழித்தோன்றலாகவே உள்ளான். அவன் ஒரு நல்ல யூதன். பெற்றோரிடம் ஆழ்ந்த அன்புள்ளவன். இறைவன்பால் ஆழ்ந்த பற்றுக்கொண்டவன். தனது திருமணத்தில் இறைவனது கரத்தைக் காண்கிறான் (8:5தொ). குடும்ப அன்பு, அமைதி, ஒற்றுமை, உறுதிநிலை ஆகிய உணர்வுகள் இந்நூலில் காணப்படும் கவர்ச்சி மிக்க பண்புகளாகும். பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையேயும், கணவன் - மனைவிக்கு இடையேயும், காணப்படும் அன்புறவு வாசகர்களை இன்பத்தில் ஆழ்த்தவல்லது. இவை யாவும் இறைவனது கட்டளையின் விளைவாகும். வுல்கத்தா வாசகத்திற்கே உரிய சிறப்புப்பகுதிகள் (3:16-19; 6:16-22; 8:2) கிரேக்க வாசகத்தில் ஏற்கெனவேயுள்ள கருத்துக்களையே வெளிக்கொணர்கின்றன. அதாவது ஒருபுறம் விலங்குக் காமத்துக்கும், மறுபுறம் இறைவனில் அமையும் திருமண அன்புக்கும் உள்ள வேறுபாடாகும். திருமணச் சூழ்நிலையில் அன்பு, மகப்பேறுடைமை, ஒருவர்க்கொருவர் உதவி செய்தல், தர்மம் செய்தல் ஆகியவை ஒன்றிணைக்கப்படுகின்றன. கத்தோலிக்கத் திருமணத் திருப்பலியில் இந்நூலிலுள்ள வாசகம் பயன்படுகிறது. திருமணப் படுக்கையை மந்திரித்தல், திருமணத்திற்குப்பின் மூன்று நாட்களுக்கு மண உணவு கொள்ளாமை போன்ற சில இடங்களில் கடைப்பிடிக்கப்படும் கிறிஸ்துவப் பழக்கங்கள் இந்நூலின் நற்படிப்பைப் பிரதிபலிக்கின்றன என்பதில் வியப்படைய வேண்டியதில்லை.

இவையெல்லாம் இந்நூல் கற்பிக்கும் பாடங்கள் ஆகும். அவை இன்றும் பொருத்த முடையனவாகும்; கவனத்திற்குரியவையாகும். ஆனால் கதையின் உண்மையான தலைவன் பராமரிப்பு நிறைந்த இறைவனேயாவான். இக்கதையில் எல்லாவற்றையும் அரவணைக்கும் இறைவனது ஞானத்தையும் ஆற்றலையும்

அன்பையும் நாம் கண்டுணரலாம். இவை எல்லாப் பொருட்கள் மேலும் தனிநபர் நாடுகள் மேலும் இறைவனுக்குப் பணி செய்பவர்கள் மேலும் இறைவன் காட்டும் அன்பிலும் இரக்கத்திலும் அக்கறையிலும் செயல்படுகின்றன. இஸ்ராயேலின் பரிசுத்தரான இறைவன் விலகி ஒதுங்கியிருந்தலைப் பிற்கால யூதத்துவம் வலியுறுத்துகிறது. இது 12:12 தொ-இல் வரும் இரப்பாயேலின் சொற்களிலும், இறைவன் தூதர் வழியாகச் செயலாற்றும் இந்நூல் முழுவதிலும் தெளிவாக உள்ளது. இந்நூல் உயிர்ச்சித்திரமாக வெளிக்கொணரும் கோட்பாடுகளிலிருந்து வளர்ந்ததே- காவல் தூதர்கள்பால் கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் பக்தியாகும். இத்தூதர்கள் வழியாக இறைவனது பராமரிப்பு செயலாற்றுகிறது என்பதே இப்பக்தியின் அடிப்படை விசுவாசம்.

இந்நூலில் காணப்படும் வானதூதர் பற்றிய போதகம் பழைய ஏற்பாட்டின் மற்ற நூல்களில் காணப்படுவதைவிட வளர்ச்சியடைந்ததாகும். இப்போதகத்தின் சுவடுகளை விவிலியத்துக்குப் புறம்பான யூத இலக்கியங்களிலும் காணலாம். யூதத்துவத்துக்குப் புறம்பான நூல்களில் தூதர்களின் சித்திரம் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. கதையில் வரும் வேதாளம் கிரேக்க வாசகங்களில் அசுமதேயு என்றழைக்கப்படுகிறது. அழிவு என்று பொருள்படும் அசுமதேயு என்ற பெயரும், குணமாக்குகிறார் என்ற பொருளுடைய இரப்பாயேல் என்ற பெயரும் பொருள் பொதிந்தவை. அசுமதேயுவை விரட்டும் புகை, மருந்தின் விளைவாகும்; மந்திர ஆற்றல் அன்று. இந்நிகழ்ச்சியின் முக்கிய பாடம், அழிப்பவன், சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகத் தான் ஆற்றல் கொண்டவன் என்று காட்டுவதாகத் தெரிகிறது. உடைமைக்கு உரிமையுள்ள சாரா, அவளது உறவுக்காரனுக்காகப் பாதுகாக்கப்படுகிறாள் (எண் 27:9-11; 36:1-12). இத்திருமணச் சட்டத்தை மீறுபவர்களை இறைவன் தண்டிக்கிறார் (லேவி 20). அசுமதேயு என்ற வேதாளம் இறைநீதியின் ஒரு கருவி மட்டுமே தவிர வேறன்று. இரப்பாயேல் இறைவனது ஊழியர்களுக்குப் பணி செய்கிறார். அவர்கள் இன்னலுறும்போது அவர்கள் உறுதியாக இருக்க ஆதரவு அளிக்கிறார். அவர்களது நற்செயல்களையும் மன்றாட்டுக்களையும் இறைவனிடம் ஒப்புக் கொடுக்கிறார் (12:12-14). வானதூதர்களும், பேய்களும் பணிசெய்யும் இறைவன் மனிதர்களிடமிருந்து தம் திருமுகத்தை மறைத்துக் கொள்பவர் அல்லர் (6:17; 12:15; 13:6). இந்த உருவகங்களில் உள்ள போதகம் ஏற்கெனவே புதிய ஏற்பாட்டுப் போதகத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்நூல் "ஆசீர்களின் நூல்" என்றால் மிகையாகாது. சந்திக்கும்போதும், பிரியும் போதும் பரிமாறப்படும் வாழ்த்துக்கள் இறைவனது ஆசிர்களைக் கோருகின்றன. நன்றி கூறுதலில் அவற்றை அவரிடம் திருப்பிச் செலுத்துகின்றன (9:6; 11:7). நூலில் பரவலாகக் காணப்படும் செபங்கள், உதவிக்கு அழைப்புகள் (3:11; 8:5-7), நன்றிப் பாடல்கள் (8:15-17; 11:14-15; 12:7 தொ. 17 தொ. 22; 13:1:19) ஆகியவை இன்றும் யூத செபங்களில் பொதுவாகக் காணப்படும்; ஆசி கூறும் அழகிய வாய்பாடுகளில் காணப்படுகின்றன. இறைவனைப் போற்றுவதில் எருசலேமின் குரலோடு எல்லா நாடுகளும் ஒருநாள் ஒன்று சேரும் என்று ஆசிரியர் நம்புகிறார்.

ஆசிர்கள் இறைவனிடமிருந்து வரும் நற்பேறேயாகும். போற்றுரை இந்தப் பேற்றை அதன் ஊற்றாகிய இறைவனிடம் திரும்பச் சமர்ப்பித்தலாம். நூலின் அடிப்படைக்கருத்து நற்பேற்று வழியாகும். இது ஒரு பயணத்தில் செயல்முறையாக எடுத்துக் கூறப்படுகிறது. ஆனால், இப்பயணம் ஓர் அடையாளமாகும். இறைவனது கட்டளைகளைக் கடைப்பிடித்தல், இறையச்சம், அன்பு, நம்பிக்கை அடங்கிய பக்தி, பெற்றோர்பால் மரியாதையும் பராமரிப்பும் மிக்க பக்தி, சமூக உறவுகளில் தயக்கமற்ற நீதி, நேர்மை, அயலாரிடம் அவர்கள் தேவைகளில் காட்டும் ஆற்றலுள்ள அக்கறை, குறிப்பாக ப்பிச்சையிடுதல் (1:3-8.16 தொ; 2:2; 4:5-19; 12:8), மரித்தவர்களை நல்லடக்கம் செய்தல் (1:18 தொ; 2:4-8; 12:13)- ஆகியவை தான் நற்பேறு அடைய வழிகளாகும். ஆனால் இது நீதிமான்

தீமையால் தீட்டுப்படுவதிலிருந்து தடுக்க முடியாது. ஆனால் இத்தீமை பெறுவதற்குத் தகுதியானதும் சுத்தி செய்யும் சோதனையாகவும், இறைவனால் அவரது ஞானத்தில் உருவாக்கப்பட தங்களையே அர்பணிப்பவர்களுக்கு அவர் தவறாது அளிக்கும் நற்பேற்றின் வாக்குறுதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் நூலில் ஆசிர் இவ்வுலகிலேயே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆசிர் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசிர், உலகை உடமையாகக் கொள்ளும் சந்ததி (4:2), இந்த மகிழ்ச்சியான செழிப்பைக் காண நீண்ட வாழ்வு ஆகியவற்றில் அடங்கும். மரித்தபின் வரும் சன்மான வாழ்வு என்ற பிரச்சனையே இந்நூலில் எழவில்லை.

கிறிஸ்துவுக்கு முந்தைய சில நூற்றாண்டுகளில், இறைவனது நன்மைத் தன்மையையும் நீதியையும் ஒப்புரவாக்கும் பிரச்சனை யூதர்களில் பலரது கவனத்தை ஈர்த்தது. இந்தப் பிரச்சனையை இந்நூல் தொடவேயில்லை. நற்பண்புடைய தோபித்தும் மாசில்லாத சாராவும் அனுபவிக்கும் துன்பங்களுக்குக் காரணம் காட்டப்படவில்லை. அண்ணாவின் பழிச்சொல்லும், 2:14-இல் மற்றும் 3:3-5-இல் வரும் தோபியாவின் பெற்றோரின் பாவங்களுக்காகப் பிள்ளைகள் தண்டிக்கப்படுகின்றனர் என்ற பாரம்பரியப் போகத்தையே பிரதிபலிக்கின்றது. மறு உலக வாழ்வு பற்றிய கருத்துக்கள் நூலில் காணப்படவேயில்லை. மாறாகத் துன்பங்களுக்கிடையில் நல்ல மனிதன் கொண்டிருக்க வேண்டிய மனநிலை என்ன என்றும் புண்ணிய வாழ்வு முடிவில் எப்படியாவது சன்மானம் பெறுதலையும் நூல் காட்ட முயலுகிறது. விடாமுயற்சியோடு பிரமாணிக்கமாய் இரு. நம்பிக்கை கொண்டிரு. துன்பங்களைப் பொறுமையாக ஏற்றுக்கொள். இவற்றில் எல்லாம் பிற மக்களிடமிருந்து வேறுபடத் துணிந்திரு என்று அறிவுரை கூறுகிறது.

இறுதியாக நூலின்போதகம் ஞான நூல்களின் முத்திரையைக் கொண்டுள்ளது. செயல் முறையான, ஆழ்ந்த சமய போதகத்தைக் கொண்டுள்ளது. இந்நூலின் மருத்துவக் குறிப்புகளைக் காணாது போகலாம் (சீராக் 31:19-21; 38:1-15). அரசன் அருகில் அமர்ந்து ஆலோசனை அளிக்கும் உயர்பதவியுடைய ஞானியைக் காணாது போகலாம் (சீராக் 38:3). இவற்றால் நாம் வியப்படைய வேண்டியதில்லை. ஆனால் பழமொழிகள் அடங்கிய இரு தொகுப்புகள் (4:3-19; 12:6-10; 14:8) ஆசிரியரது நோக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றில் சீராக்கு நூலுக்கு இந்நூல் நெருங்கியதாக உள்ளது. ஆசிரியரது சமய ஒழுக்க போதகப் பின்னணியில் நூலின் வரலாற்றுத் தன்மை பற்றிய பிரச்சினை அவ்வளவு முக்கியமில்லாது போகிறது. உண்மையான நிகழ்ச்சிகள் கதையின் அடிப்படையாக இருக்கலாம். ஆனால் இலக்கிய அலங்கரிப்புகள் இவற்றை அடையாளம் காணமுடியாதவைகளாகச் செய்து விடுகின்றன. இதனால் வாசகர்கள் எதையும் இழந்துவிட வில்லை. மேலும் வரலாற்று ஆசிரியர்களின் அறிவு ஆர்வத்தை நிறைவு செய்வது ஆசிரியரது நோக்கமன்று.

13. **இக்காலத்திற்கு:** நல்ல சமாரியன், ஊதாரிமகன் போன்ற உவமைகளில் நமது ஆண்டவர் செய்ததுபோலவே, இந்நூலின் ஆசிரியர் செய்கிறார். நமது அயலாருக்கு அன்பு செய்ய வேண்டும். நமது அன்பு மிக்க தந்தையான இறைவனில் நம்பிக்கை கொள்ள வேண்டும். என்று வெறுமனே கூறுவதோடு ஆசிரியர் மன நிறைவடையவில்லை. இந்த உண்மைகள் நிறைவாக, வாழ்ந்து காட்டப்படும் ஒரு கதையைக் கொடுக்கிறது. இந்நூலை வாசிக்கும்போது, இறைவனை அன்பு செய்பவர்கள் வாழ வேண்டிய முறையைக் கற்றுக் கொண்டுக்கிறது. அதைப் பின்பற்ற ஒரு தூண்டுதல் மாதிரியை இக்கதை நமக்கு அளிக்கிறது. நற்செய்திகளில் வரும் உவமைகளை வாசிக்கும் போதும், கேட்கும்போதும் தம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வியையே இங்கும் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும். இக்கதையிலிருந்து நான் கற்றுக்கொள்ள வேண்டிய கோட்பாடு அல்லது வாழ்க்கை உண்மை என்ன? இயேசு நல்ல சமாரியன் உவமையின் முடிவில் தமக்குச்

செவிமடுத்தோருக்குக் கூறியதையே, இந்நூலின் ஆசிரியர் அவர் காலத்து மக்களுக்கும் நமக்கும் கூறுகிறார். "நீரும் போய் அவ்வாறே செய்யும்" (லூக் 10:37).

இந்நூல் நமக்கு விடும் மற்றொரு சவாலும் உண்டு. நம்மைச் சுற்றியுள்ளவர்கள் எல்லாம் அலகையைப் பின்பற்றும்போது பிரமாணிக்கமற்று இருக்கம்போது, பதிதத்தில் ஆழ்ந்திருக்கும்போது, விசுவாசி எப்படியிருக்க வேண்டும்? 'வேறுபட்டிரு' என்று இந்நூல் சவால் விடுகிறது. உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இரு; இக்கட்டான நிலையிலும் புனிதனாக இரு; ஏனெனில் நமது தந்தை புனிதரானவர். இந்த எளிய கதை எக்கால மக்களுக்கும், சிறப்பாக நமக்கும் விடும் சவால் இதுவேயாகும்.

தோபியா (TOBIAN– யாவே நல்லவர்)

1. ஓர் இனத்தின் அல்லது குடும்பத்தின் தலைவர். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்பு தாங்கள் உண்மையாகவே இஸ்ராயேல் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று இவர்களால் நிரூபிக்க முடியவில்லை (எஸ் 2:60; நெகே 7:62). இக்குடும்பம் தோபியாதுகளோடு தொடர்புள்ளதாக இருக்கலாம். ஆனால் தக்க ஆதாரங்கள் இல்லை.

2. நெகேமியா என்ற யூத ஆளுநர் எருசலேம் மதிற்சுவரைத் திரும்பக் கட்டுவதற்கு முயற்சி செய்தார். இதற்குச் சன்பலாற்றோடு சேர்ந்து முக்கிய எதிர்ப்பாளராக இருந்தார் இந்தத் தோபியா (கி.மு. 445 - 437; நெகே 2:10.19; 4:3.7; 6:1.12.19). அவர் 'அம்மோனியர்' என்று அழைக்கப்படுவது 'அம்மோன்' ஆட்சிப் பகுதியோடு தொடர்பு கொண்டுள்ளதைக் குறிப்பிடுகிறது. இது சாக்கடலுக்கு வடக்கே உள்ளது. விவிலியம் அல்லாத ஆதாரங்கள் பாரசீகர்களின் காலத்தில், 'அம்மோன்' பெயரில் இருந்த ஒரு முக்கிய குடும்பத்தைக் குறிக்கின்றன. "அரசு ஊழியனான அம்மோனியன்" என்று இவர் அழைக்கப்படுகிறார். இஃது இவர் பாரசீகர் ஆட்சியில் அதிகாரியாக இருந்ததைக் குறிப்பதாக அமையலாம். சமாரியாவுக்குச் சன்பலாற்றும் யூதேயாவுக்கு நெகேமியாவும் ஆளுநர்களாக இருந்ததுபோல அம்மோன்பகுதிக்கு ஆளுநராக, தோபியா இருந்திருக்கலாம் (நெகே 2:19,19); அல்லது இது இழிவான பட்டமாக இருந்திருக்கலாம் (காண்க. உப 23:3).

இவர் இஸ்ராயேலர்களின் வழித்தோன்றலா, இல்லையா என்று உறுதியாகக் கூற முடியாது. ஆனால் கி.மு. 586-இல் எருசலேம் அழிவிற்குப் பிறகு அம்மோனுக்கு ஓடிச் சென்ற யூதர்களின் வழித்தோன்றலாக இருக்கலாம். இவர்கள் எரே 41:15-இல் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். தோபியா என்ற பெயரே, அவரது தாய் தகப்பனின் யூத வழிபாட்டுத் தொடர்பைக் குறிப்பதாக அமைகிறது. இவர் யூத விசுவாசத்தைத் தெரிந்து கொண்டவராகவும், அதைச் சிறிது அளவு நடைமுறையில் கடைப்பிடித்ததாகவும் தெரிகிறது. நெகேமியா, எருசலேமில் இல்லாத சமயத்தில், எருசலேம் கோவிலில் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார் (நெகே 13:4-9). நெகேமியா திரும்பியதற்குப் பிறகு, வெளியேற்றப்பட்டிருக்கிறார். மேலும், தோபியா யூத மேல் குலத்தாரோடு தொடர்பு வைத்திருந்தார் எனவும், அவர்களோடு திருமணத்தால் நெருங்கியவராகவும் இருந்தார் எனவும் குறிப்பிடப்படுகிறார் (நெகே 6:17-19). இவர் தோபிய வீட்டாரின் மூதாதையராக இருக்கலாம் என அறிஞர்கள் சிலர் கருதுகிறார்கள். இக்குடும்பம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஓனியா குடும்பத்திற்கு எதிராக, பெரிய குரு பதவிக்குப் போட்டியிட்டது (2 மக் 3:1).

தோபியா (TOBIAS - யாவே நல்லவர்)

1. தோபித்துவின் மகன். இவர், வானதூதர் இரப்பாயேலால், வழிநடத்தப்பட்டு, தனது குருடான தந்தையைக் குணப்படுத்தினார்; இரகுவேலின் மகள் சாராளிடமிருந்து ஒரு பேயை ஓட்டினார். காண்க: தோபித்து நூல்.

2. மக்கபேயர் காலத்தில் ஒரு முக்கிய செல்வந்தரான யூதர். இரிக்கானுவின் (1) தந்தை (2 மக் 3:1).

தோபியா (TOBIJAH – யாவே நல்லவர்)

1. யூதாவின் நகரங்களுக்குள் ஆண்டவருடைய

திருச்சட்டத்தைப் போதிக்க யோசபாத்து அரசனால் அனுப்பப்பட்ட லேவியருள் ஒருவர் (2 நாள் 17:8).

2. இறைவாக்கினர் செக்கரியாவின் அருள்வாக்கின்படி, பெரிய குரு யோசுவாவுக்குக் கிரீடம் செய்வதற்குப் பயன்படும் பொருட்டு நால்வர் காணிக்கை கொடுப்பார்கள். இவர்கள் நாடு கடத்தப்பட்டுப் பாபிலோனில் இருக்கிறவர்களிடமிருந்து வந்திருப்பவர்களாவர். இவர்களில் ஒருவர்தான் தோபியா (செக் 6:10.14). எழுபது நூல் இப்பெயரைப் "பயன்படும் மனிதர்கள்" என்ற பட்டமாக எடுத்துக் கொண்டது.

தோபு (TOB - நல்ல)

தெற்கு அவுரானில் இருக்கும் ஒரு நகரத்திற்கும், அதைச் சுற்றியுள்ள பகுதிக்கும் பெயராக இஃது உள்ளது. இஃது எகிப்திய ஆதாரங்களில் "தூ-பி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அமர்னாவின் கடிதங்களில் தூபு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்தாகு, தனது ஒன்றுவிட்ட சகோதரர்களால் விரட்டப்படும்போது, தோபுவுக்கு ஓடிப்போனார். அம்மோன் புதல்வர்கள் இஸ்ராயேலர்களைக் கொடுமைப்படுத்தியதால் கிலயாது இனப்பெரியோர், தங்களுக்குத் தலைமை தாங்க இப்தாகுவைத் தோபு நாட்டிலிருந்து அழைத்து வந்தனர் (நீதி 11:3-5). அரமேயர்களின் நாடாக இது கருதப்பட்டது. இவர்கள் தாவீதை அவமானப்படுத்தியிருந்தனர். இதனால் தாவீதுடன் போர் தொடுக்க வேண்டியதாயிற்று. இவர்களுக்கு உதவியாக, தோபு 12,000 போர்வீரர்களை அனுப்பியது. அது யோவாப்பின் துணிவினால் தோல்வியடைந்தது (2 சாமு 10:6-13).

தோபுக்கு மற்றொரு பெயர்-தாபேல் ஆகும். இவர் யூதாவின் ஆட்சி பீடத்தில் ஆகாசுக்குப் பதிலாக, தமஸ்குவின் ரெத்சினும், இஸ்ராயேலின் பெக்காவும் தேர்ந்தெடுத்த ஓர் இளவரசர் (எசா 7:6). நாடு கடத்தப்பட்டுத் திரும்பியதற்குப் பிறகு உள்ள காலங்களில், தோபுவில் பல யூதர்கள் குடியேறினர். அருகிலிருந்து கிரேக்கர்களால் தாக்கப்பட்டபோது, யூதா மக்கபேயுவால் காப்பாற்றப்பட்டனர் பெயரும் (1 மக் 5:13; 2 மக் 12:7). இந்நகரின் பெயரும் இடமும், எத்-தயிபே என்ற கிராமத்தில் காப்பாற்றப்பட்டு இருக்கலாம். இது பொட்சராவுக்கும் எதிரேயிக்கும் இடையில் யார்முக்கு ஆற்றின் மூலத்திற்கு அருகில் கலிலேயக்கடலின் தென்கிழக்கில் 19 கி.மீ. தொலைவில் உள்ளது.

தோபேத்து (TOPHETH)

இன்னோம் பள்ளத்தாக்கும் கிதரோன் பள்ளத்தாக்கும் கூடும் இடத்தில் எருசலேமுக்குத் தெற்கில் உள்ள ஓர் இடம். இங்குக் குழந்தைகள் மோலேக்குக்குப் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டனர் (2 அர 23:10; 2 நாள் 28:3; 33:6; எரே 7:31). யூதாவின் மக்களுக்குத் தோபேத்து போர்த்தோல்வியின் இடமாகும் என்றும், "படுகொலையின் பள்ளத்தாக்கு" என்றழைக்கப்படும் என்றும் எரேமியா முன்னுரைத்தார் (எரே 7:32-34; 19:6-7.11-13). இந்த இடம் கொண்டிருந்த இழிவான, கொடிய தொடர்பால், இப்பெயரின் மெய்யெழுத்து மாற்றப்பட்டு "வெட்கப்படவேண்டியது" என்ற பொருளில் போசேத் என்றழைக்கப்பட்டது. இங்கிருந்த தொழுகை மேடையை யோசியா அரசன் அழித்துப் பாழ்படுத்தினார் (2 அர 23:10).

எசா 30:33-இல் வரும் குறிப்பு தெளிவில்லாமல் இருக்கிறது. "சுடுகாடு" என்ற பொதுப்பொருளில் தோபேத்து பயன்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இக்குறிப்பு இந்த இடம் மோலேக்கு வழிபாட்டோடு கொண்ட தொடர்பைச் சுட்டுவதாகத் தெரிகிறது.

தோபேல் (TOPHEL - (சுண்ணாம்புச் சாந்து)

மோசே, யோர்தானுக்கு அப்பால் பாலைவனத்தில் இஸ்ராயேலை ஒன்றுகூட்டி, பேசிய இடங்களில் ஒன்று (உப 1:1). இஃது இன்று சாக்கடலின் தென்கிழக்கில், 25 கி.மீ. தொலைவில் உள்ள எத்-தபிலே என்ற கிராமமே என்று கூறுகின்றனர். இதனைப் பற்றி வேறு எந்தக் குறிப்பும் இல்லை என்றாலும் இஸ்ராயேல் பாலைவனப் பயணத்தின் நடுவில் ஓய்வெடுத்த இடங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம்.

தோமா (THOMAS - இரட்டையர்)

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவருரான தோமா நான்கு புதிய ஏற்பாட்டுப் பட்டியலிலும் நடுவில் குறிக்கப்பட்டுள்ளார் (மத் 10:2-4; மாற் 3:16-19; லூக் 6:14-16; அ.ப. 1:13). பட்டியலில் அவர் கொண்டுள்ள இடம் தொடக்க காலத் திருச்சபையில் அவர் முக்கியமுள்ளவராகவோ முக்கியமற்றவராகவோ கருதப்படவில்லை என்று சுட்டுகிறது. நான்காவது நற்செய்தியில் தோமாவின் பெயர் மூன்று தடவை "திதிமு" என்ற கிரேக்க அடைமொழியோடு வருகிறது (யோவா 11:16;20:24; 21:2). அனேகமாக இப்பெயர் கிரேக்கமொழி பேசிய கிறிஸ்தவர்களிடையே வழக்கில் இருந்திருக்க வேண்டும்.

தோமா என்ற சொல் அரமேயிக்கிலும் எபிரேயத்திலும் வெறுமனே "இரட்டையர்" என்று பொருள்பாடும் அடைமொழி யாகும். இஃது ஓர் ஆளின் சொந்தப் பெயரா என்பது ஐயத்திற்குரியது. தோமா என்ற கிரேக்கப் பெயரை அரமேயிக்கு மொழியில் எழுத்துப் பெயர்ப்பு செய்யும்போது அப்பெயர் இரட்டையர் என்ற பொருள் கொடுக்கும். அப்பொருளைக் கொடுக்கும் "திதிமு" என்ற பெயரையும் நான்காம் நற்செய்தி கொடுக்கிறது. சில சீரியக்குக் கையெழுத்துப் பிரதிகள் யோவா 14:22-இல் யூதா தோமா (யூதா இரட்டையர்) என்று கொண்டுள்ளன. யோவா 14:22 வாசகங்களின் வேறுபாடுகள் லூக் 6; அ.ப. 1-இலும் காணப்படும் "யாக்கோபின் மகன் யூதாவோடு" தொடக்கத்தில் தோமா ஒரே ஆளாகக் கருதப்பட்டதாகச் சுட்டுகின்றன.

தோமாவின் பணிநூல் என்ற ஒரு போலி நூல் யூதா தோமாவும் இயேசுவும் இரட்டையர்கள் என்று கூறுவது எல்லோரையும் திடுக்கிடச் செய்யவல்லது. இதை மெசபொத்தாமியத் திருச்சபை உண்மையென நம்பியதாகத் தெரிகிறது. இக்கூற்றை இக்கால அறிஞர் சிலர் தீவிரமாக ஆய்வு செய்யத் தொடங்கினர். தோமா என்ற சொல்லுக்கு வெறுமென இரட்டையர் என்ற பொருள் மட்டும்தான் என்றும், தோமாவின் பணிநூல் கூறுவது நிராகரிக்கப்படத் தகுந்தது என்று ஏற்றுக் கொண்டால், தோமா என்று குறிக்கப்படுபவர் யாரோடு இரட்டையராகக் கருதப்பட்டார் என்றும் தோமா என்பது அவரது உண்மையான பெயர் என்றும் உறுதி கூறமுடியாது. தோமா இயேசுவோடு இரட்டையர் என்று கூறும் தோமாவின் பணிநூலின் கருத்து, அந்நூல் தோமாவைப்பற்றிக் கொண்டிருக்கும் தனிப்பட்ட கருத்தோடு தொடர்புடையதாகும்.

தோமாவின் பண்புகள் நான்காம் நற்செய்தியில் நன்கு விவரிக்கப்படுகின்றன. யூதேயாவில் தனக்கு எதிர்ப்பும் ஆபத்தும் இருப்பது தெரிந்தும், இயேசு இலாசரின் கல்லறையைப் பார்க்கச் செல்ல விருப்பம் தெரிவித்தபோது, தோமா "அவரோடு செல்லவும் அவரோடு இறக்கவும்" ஆவலாய் உள்ளார் (யோவா 11:16). இஃது இயேசுவின்பால் தோமாவின் ஆழ்ந்த பற்றுறுதியையும் வீரத்தையும் காட்டுகிறது எனலாம். சில நாட்களுக்குப்பின் இயேசு தான் தம் தந்தையிடம் திரும்பிப்போகும் காலம் நெருங்கி வருவதை விளக்குகிறார். "நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும்" என்று இயேசு கூற, "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது; அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்" என்று தோமா தனது அறியாமையை வெளிப்படையாகவும் தாழ்ச்சியோடும் கூறுகிறார் (14:4-5). இயேசு உயிர்த்த பின்பு அதை ஏற்க, மறுக்க முடியாத சான்றுகளைக் கோருகிறார். ஒரு வாரத்திற்குப் பிறகு இயேசு தோன்றி அத்தகைய சான்றுகளை அளித்தபோது, "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்!" என்று ஓர் உன்னதமான விசுவாசப் பிரமாணம் செய்கிறார். இந்த விசுவாச அறிக்கையில் நான்காம் நற்செய்தி ஓர் உச்ச கட்டத்தை எய்துகிறது எனலாம் (யோவா 20:24-28). இந்நிகழ்ச்சி தோமாவிற்குச் "சந்தேகப் பேர்வழி" என்ற பெயரைக் கொடுத்துள்ளது. ஒட்டு மொத்தமாகக் கூற வேண்டுமென்றால், தோமா ஓர் ஆழ்ந்த பற்றுறுதியுடைய ஆனால், சிறிது மந்த புத்தியுள்ள சீடராவார். அவரது அறியாமை

உண்மைகளை நிறைவாக விளக்குவதற்கு இயேசுவுக்கு வாய்ப்பளிக்கிறது. புரிந்து கொண்டபின் தோமா மிகுந்த பற்றுறுதி காட்டக்கூடியவர்.

கிறிஸ்து உயிர்த்தபின் தோமாவின் மறைபரப்புப் பணி பற்றிய பாரம்பரியங்கள் ஐயப்பாடு உடையவை. யூசேபியுவின் கூற்றுப்படி, தோமா பார்த்தியாவில் பணிபுரிந்தார். 3-ஆம் அல்லது 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தோமாவின் பணிநூல், தோமா இந்தியாவில் பணி செய்து அங்கு மறைசாட்சியாக மரித்தார் என்றும், அவரது உடல் மெபொத்தாமியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் கூறுகிறது. இந்தியாவில் தாங்கள் தோமாவின் கிறிஸ்தவர்கள் என்று உரிமை கொண்டாடுபவர்கள் இந்த நூலை ஆதாரம் காட்டுவர்.

தோமா எழுதிய இயேசுவின் பாலபருவ நற்செய்தி (THOMAS, INFANCY GOSPEL OF)

இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு போலி நற்செய்தி நூல். இது குழந்தை இயேசு ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயதுவரை செய்த பல வியத்தகு செயல்களை விவரிக்கிறது. லூக் 2:41-51-இல் வரும் ஆலய நிகழ்ச்சியின் விரிவான வாசகத்தோடு முடிகிறது. குழந்தை இயேசு செய்ததாகக் கூறப்படுபவை நம்பத்தகாத விசித்திரமான இயற்கைக்கு மேலான கதைகளாகும். இவற்றில் காணப்படும் குழந்தை இயேசுவுக்கும் திருமுறை நற்செய்திகளில் காணப்படும் குழந்தை இயேசுவுக்கும் ஓர் ஒப்புமையுமில்லை. இயேசு குழந்தையாக இருந்த போது என்ன நிகழ்ந்தது என்பது பற்றி அறிய விரும்பும் நோக்கமே இந்நூல் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கலாம். ஒரு கதையில் குழந்தை இயேசு களிமண்ணால் பறவைகளைச் செய்து பறக்கச் செய்கிறார். தமக்கு வெறுப்பூட்டுபவர்கள் மேல் பலமுறை கடுங்கோபங்கொண்டு அச்சம் தரும் விதத்தில் பேசுகிறார். ஏற்கெனவே எந்த மனிதனையும்விட அதிக அறிவுள்ள குழந்தைக்குக் கற்பிக்க முடியாமை பற்றிய கதை ஒன்றும் உள்ளது. இந்த இயேசு வெறும் மனிதக்குழந்தை அன்று என்ற தோசேத்திக்கு போக்கு நூல் முழுவதும் காணப்படுகிறது.

இந்நூலில் வரும் கதைகள் வீம்புச் செருக்குடைய, புதுமைகள் செய்யும், தன்னைப்பற்றியே உயர்வாக எண்ணும், தன்னை எதிர்ப்பவர்களின் மேல் பழிவாங்கப் புதுமை செய்யும் ஆற்றலைப் பயன்படுத்தும், தனது செயல்களின் விளைவுகளைத் தவிர்க்கும் ஆற்றலுடைய பாலனைக் காட்டுகின்றன. இக்கதைகளின் கட்டுப்பாடில்லாத தன்மையோடு ஒப்பிடும்போது திருமுறை ஆசிரியர்களின் பாராட்டத்தகுந்த கட்டுப்பாடும் அடக்கமும் மிகச் சிறப்பாகத் தோன்றும்.

இந்நூலில் வரும் கதைகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டாலும், வெறுப்பை உண்டாக்கினாலும், தோமா எழுதிய இயேசுவின் பாலபருவ நற்செய்திநூல் பரவலாகவும் பிரபல்யமாகவும் இருந்தது. அதன்மூல மொழியாகிய கிரேக்கத்திலிருந்து பல மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டது.

தோமா எழுதிய நற்செய்தி (THOMAS, GO-SPEL OF)

இயேசு கூறியதாகத் தொகுக்கப்பட்ட 114 வாக்குகளைக் கொண்ட ஒருநூல். இது கி.பி. 140-ஐ ஒட்டிச் சீரியாவில், கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும். இந்நூலை இப்போலித்து, இரேனேயு போன்ற திருச்சபைத் தந்தையர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் 1946-இல் நாகு அம்மாதி என்ற இடத்திலிருந்த ஞானவாத நூல்நிலையம் கண்டுபிடிக்கப்படும்வரை இந்நூலின் பொருளடக்கம் அறியப்படவில்லை. இந்நூல் நிலையத்தில், தோமா எழுதிய நற்செய்தியின் ஏறக்குறைய பழுதுபடாத முழுநூலும் கோப்திக்கு மொழிபெயர்ப்பில் கிடைத்தது. இஃது இந்நூல் பற்றிய நவீன ஆய்வைத் தொடங்கி வைத்தது எனலாம். இதன் விளைவாக, முன்பு, கிரேக்க மொழியில் ஓசிரிங்கஸ் துணுக்குகள் என்று கருதப்பட்ட இயேசுவின் சில வாக்குகள் தோமா எழுதிய நற்செய்தியைச் சேர்ந்தன என்பது தெரிய வந்தது.

எத்திட்டமும் இல்லாமல் நிகழ்ச்சியுரைப் பகுதியுமில்லாமல் வாக்குகள் தொகுக்கப்பட்டுள்ளன. பல கூற்றுகள் புதிய ஏற்பாட்டில் வரும் இயேசுவின் கூற்றுகளோடு நெருங்கிய இணைத்தன்மை கொண்டுள்ளன. ஆனால் அப்படியே கூறவில்லை. வேறுசில வாக்குகள் அதிகம் வேறுபாடுகின்றன. 40 வாக்குகள் முழுவதுமே புதியவையாகும். திருமுறைப்பட்டியலின் நற்செய்தி வாக்குகளிலிருந்து வேறுபடும் கூற்றுகள் ஞானவாதப் பாதிப்பைத் தெளிவாகக் காட்டுகின்றன. வலுவான இரகசியத்தன்மை காணப்படுகிறது. சாவைத் தவிர்க்க இந்த இரகசியப் பொருளைப் புரிந்து கொள்வதின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. ஒருவன் தன் தோற்றத்தையும் ஊழையும் அறிந்து கொள்வதின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்படுகிறது.

தோமா எழுதிய நற்செய்தியில் வரும் கூற்றுகளுக்கும் திருமுறை நற்செய்திகளில் வரும் கூற்றுகளுக்குமிடையே உள்ள உறவு பற்றி அதிக தர்க்கங்கள் நடந்துள்ளன. இந்நூலில் வரும் சில கூற்றுகளை விட நீளமானவை. இது பிற்கால விரிவடைந்த வடிவங்களைச் சுட்டலாம். தோமாவின் நற்செய்தி, திருமுறை நற்செய்திகளைச் சார்ந்துள்ளதா என்பது சர்ச்சைக்குரியது. இதற்கு மாறாகத் தோமாவின் சில கூற்றுகளைவிட மிகச் சுருக்கமானதாக உள்ளன. இஃது, இவை காலத்தால் முந்திய வளர்ச்சியயையாத வடிவங்களாக இருக்கும் என்பதைச் சுட்டுகிறது. 2-ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோமா நற்செய்தியின் கூற்றுகள் தொகுக்கப்படும் முன்பே தனிப்பட்ட பல வாக்குகள் வழக்கில் இருந்திருக்க வேண்டும். புதிய நாற்பது வாக்குகளில் சில உண்மையான "அக்ராபாவை" யாக அதாவது திருமுறை ஆசிரியர்களால் பதிவு செய்யப்படாத இயேசுவின் உண்மையான வாக்குகளாக இருக்கலாம்.

தோமாவின் பணிநூல் (THOMAS, ACTS OF)

கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த விரிவான ஒரு போலிநூல். இது சீரிய கிறிஸ்தவர்களிடையே தோன்றியிருக்க வேண்டும். அனேகமாக, சீரியக்கு மொழியின் எழுதப்பட்டதாக இருக்கலாம். சீரியக்கு மற்றும் கிரேக்க மொழிகளில் முழுவாசகமும், எத்தியோப்பிக்கு, இலத்தீன் மற்றும் அர்மேனிய மொழிகளில் சில பகுதிகள் மட்டும் கிடைத்துள்ளன. இந்நூல், தோமா பணிக்கு ஆணை பெற்றதிலிருந்து அவரது மறைசாட்சி மரணம் வரையுள்ள அவரது வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது. மற்றப் போலி நூல்களைப்போல் வியப்புக்குரியவற்றை அழுத்திக் கூறுகிறது.

நூலின் தொடக்கத்தில், அப்போஸ்தலர்கள் தங்கள் பணித்தளங்களை நிச்சயிக்க ஒன்று கூடுகின்றனர். தோமாவுக்கு இந்தியா பணித் தளமாக அமைகிறது. ஆனால் தோமா அங்குச் செல்ல விரும்பவில்லை. ஆகவே அவரது தலைவர் (இரட்டையர்) இயேசு, இந்திய அரசனுடைய தூதரிடம் தோமாவை அடிமையாக விற்கிறார். இந்தியாவுக்குச் செல்லும் பயணத்தின்போதும், இந்தியாவிலும் தோமா பாலுறவு விலக்கலைப் போதிக்கிறார். இதுவும் மற்றத் துறவுப் பண்புகளும் அவருடைய சொந்த வாழ்வின் பண்புகளாக விவரிக்கப்படுகின்றன. ஒரு நீண்ட பகுதி ஒரு பெண்ணின் கதையைக் கூறுகிறது. இவள் தோமாவின் போதனைக்குப் பணிந்து தன் கணவனுடன் திருமண உறவு கொள்வதைக் கைவிட்டுத் தனது புதிய கணவனான இயேசு கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாக இருக்க முயலுகிறாள். இதனால் துயருற்ற அவளது கணவன் தங்கள் திருமண உறவை மீண்டும் முறைப்படுத்த எல்லாவித முயற்சிகளையும் செய்கிறான். இத்தகைய போதகங்கள் தீவிரமாக எடுத்துக்கொள்ளும் போது உண்மையில் நடக்கக்கூடிய ஒரு வரலாற்றையே இப்பகுதி எடுத்துக்காட்டுகிறது என்று கூறலாம்.

பல சிறு சிறு கதைகள் கூறப்படுகின்றன. ஆனால் இந்நூல், அதன் ஆசிரியர் சேகரித்துள்ள மறைபொருள் மிக்க பாடல்களுக்கும் செபங்களுக்காகவும் சிறப்புப் பெறுகின்றன. அப்படிப்பட்ட பாடல்களில் ஒன்று முத்து பற்றிய பாடலாகும். இப்பாடல் உருவகங்களும் அழகும்

மிக்கது. ஓர் ஆன்மா புலன் சார்ந்த உலகிற்கு இறங்கிவந்து, அதிலிருந்து விடுதலையடைந்து, அஃது எங்கிருந்து வந்ததோ அந்த வீட்டிற்கு மீண்டும் எழும்பிச் செல்வதை உருவக வடிவில் இந்த முத்து பற்றிய பாடல் எடுத்துக் கூறுகிறது.

இந்நூல் வரலாற்று மதிப்பீடு கொண்டது அன்று. ஆனால் தோமா இந்தியாவுக்கு உண்மையிலேயே சென்றார் என்ற தொடக்க கால நம்பிக்கை மற்றும் முதல் நுற்றாண்டு இந்திய அரசன் பெயர் போன்றவற்றைப்பற்றிய நம்பிக்கையான பாரம்பரியக் கருவைக் கொண்டுள்ளது எனலாம். இஃது ஒரு ஞானவாத நூலா இல்லையா என்பது தர்க்கத்துக்குரியது. ஆனால் வைதீகமானவரால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது என்ற அறிஞர் பலர் ஏற்றுக்கொள்வர். இதனால்தான் இந்நூல் ஞானவாதிகளிடையேயும் வைதீகமானவர்களிடையேயும் பிரபல்யமாய் இருந்துள்ளது. அருட்சாதனங்கள் வழங்கப்பெற்ற தொடக்க வடிவுகள் பற்றிய சான்றுகள் அளிப்பதாலும், மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீரிய ஞானவாத கிறிஸ்துவம் பற்றிய செய்திகளை அளிப்பதாலும் இந்நூல் இக்காலத்தில் மதிப்புப்பெறுகிறது.

தோமாவின் வெளிப்பாட்டு நூல் (THOMAS, APOCALYPSE OF)

புதிய ஏற்பாட்டில் முக்கியமானவர்களால் எழுதப்பட்ட வெளிப்பாட்டு நூல்கள் அல்லது காட்சிநூல்கள் சிலவே. அவற்றில் ஒன்று இந்நூலாகும். கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் செலாசியன் சட்டத்தால், இந்நூலும் பவுலின் வெளிப்பாட்டு நூலும், ஸ்தேவான் வெளிப்பாட்டு நூலும் கண்டனம் செய்யப்பட்டன. இந்நூல் பெயரளவிலேயே அறியப்பட்டது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வியன்னாவில் இந்நூலின் பகுதிகளாகக் கருதப்பட்ட இரு பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. ஒன்று 8-ஆம் நூற்றாண்டையும், மற்றது 11 அல்லது 12- ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவையாகும்.

மற்ற வெளிப்பாட்டு நூல்கள், பெரும்பாலும் மறு உலகம் பற்றிய காட்சிகளைக் கொண்டிருக்கும். ஆனால் இந்நூல் இவ்வுலகின் முடிவைப்பற்றிய காட்சிகளைக் கொண்டுள்ளது. இவற்றை "இறைத்தந்தையின் மகனான" ஆண்டவர் தோமாவுக்கு வெளிப்படுத்துகிறார். தானியேல் நூலைப் பின்பற்றி, அக்கால நிகழ்ச்சிகளை இறைவாக்கு வடிவின் இந்நூல் விவரிக்கிறது; இவ்வுலக முடிவிற்கு முன் நிகழும் ஏழு அடையாளங்களை விவரிக்கின்றது.

இந்நூல் 9-ஆம் நூற்றாண்டிலே அறியப்பட்டிருக்கிறது. இதிலிருந்து "இறுதி நாட்களின் பதினைந்து அடையாளங்கள்" என்ற நூல் தோன்றியது. இது எரோனிமு எழுதியதாகக் கருதப்பட்டது. இது 5-ஆம் நூற்றாண்டில், இலத்தீனிலோ கிரேக்கத்திலோ எழுதப்பட்டிருக்கலாம்.

தோயி (TOI - புழு)

இவர் ஆமாத்தின் அரசன், தாவீது சோபாவின் அரசன் அததேசரின் படை அனைத்தையும் வெட்டி வீழ்த்திய செய்தியைத் தோயி கேள்விப்பட்டார். அததேசரோடு போராடி அவனை முறியடித்து வென்றதற்காகத் தன் வாழ்த்துதலையும், பாராட்டுகளையும் தாவீது அரசருக்குத் தெரிவிக்கும் பொருட்டு, தம்மகன் யோராமை அனுப்பினார். ஏனெனில் தோயி அததேசருக்கு எதிரியாயிருந்தான். தாவீதுக்குக் கொடைகள் பல கொடுத்தனுப்பினார். அவற்றைத் தாவீது ஆண்டவருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார் (2 சாமு 8:9-11). தோயி அளித்த கொடைகள், தன் நாட்டைத் தாவீதின் ஆட்சிக்கு அடிபணியச் செய்வதை உணர்த்தலாம். ஏனெனில் அவை தாவீது அடிமைப்படுத்திய நாடுகளிலிருந்து கொண்டுவந்த கொள்ளைப் பொருட்களோடு சேர்க்கப்படுகின்றன (8:11). 1 நாள் 18:9-10-இல் தோயி தோகு என்றும், யோராம் அதோராம் என்றும் குறிக்கப்படுகின்றனர்.

தோயேகு (DOEG - அமைதியற்ற)

இவர் ஓர் எதோமியன்; சவுலினுடைய இடையர்களுக்குத் தலைவர் (1 சாமு 21:8). ஏதோ ஒரு சடங்குச் செயலால் இவர் நோபுவிலுள்ள புனித இடத்தில் "ஆண்டவரால் தடை

செய்யப்பட்டிருந்தார். சவுலிடமிருந்து தப்பியோடிய தாவீது அங்கிருந்த குருஅகிமெலக்கிடம் உதவி கேட்டார் குருக்கு உதவியளித்ததைத் தோயேகு கண்டார். இதைத் தன் தலைவர் சவுலிடம் தோயேகு தெரிவித்தார்" (22:9-11). சவுல் அகிமெலக்கை அரச துரோகக் குற்றம்சாட்டி, அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மரண தண்டனை விதித்தார் (22:11-16). அரச ஊழியர்கள் இதை நிறைவேற்ற முன் வராததால், தோயேகு அகிமெலக்கையும் அவரோடு சேர்த்து என்பது குருக்களையும் அனேக பெண்களையும் குழந்தைகளையும் கொன்று அழித்தார் (22:18-19).

1 சாமு 22:22-இன்படி சவுலிடம் தன்னையும் அகிமெலக்கையும் தோயேகு குற்றம் சாட்டுவான் என்ற முன்னுணர்வைத் தாவீது கொண்டிருந்ததாகத் தெரிகிறது. சங் 52-இன் மேல் குறிப்பு இந்த நிகழ்ச்சியைச் சுட்டுகிறது. ஆனால் சங்கீதத்தின் பொருள் வரலாற்று நிகழ்ச்சியோடு ஒத்துப்போகவில்லை.

தோரா (TORAH)

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களைக் கொண்ட தொகுப்புக்கு அளிக்கப்படும் எபிரேயப் பெயராகும். இவை மோசேயின் நூல்களாகக் கருதப்பட்டன. காண்க: ஐந்நூல் அல்லது தோரா.

பொதுவாகத் தோரா என்ற சொல், உடன் படிக்கை கோரியபடி இஸ்ராயேலர் கடைப்பிடிக்க வேண்டிய இறைவனது சட்டம் அல்லது போதனையைக் குறிக்கும்.

தோரா என்ற சொல்லின் பொருள் படிப்படியாக வளர்ந்துள்ளது. அ) இறைவாக்குகள் மற்றும் யாவேயின் கோரிக்கைகளைப் பாரம்பரியமாகப் புரிந்து கொள்ளுதல் முதலியவை அடிப்படையில் குருக்கள் அளித்த போதனையைத் தொடக்க காலத்தில் உணர்த்தியது. ஆ) அரசாட்சியின் பிற்காலத்திற்குள், யாவேயால், சட்டப்பகுதிகளில் இஸ்ராயேலுக்கு அளித்த போதனைகளையும், சட்டங்களையும் குறித்தது. இ) நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், எஸ்ரா காலத்தில் நிச்சயமாகத் (கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) தோரா என்ற சொல் மோசேயின் நூல்களான ஐந்நூலின் சாரத்தைக் குறித்தது (நெகே 8:1.8; எஸ் 3:2; 7:6). ஈ) இறுதியாக, இறைவாக்கினர் நூல்கள், மற்ற நூல்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டு ஐந்நூல் முழுவதையும் குறிக்கும் கலைச்சொல்லாகத் தோரா என்ற சொல் வழக்கில் வந்தது (காண்க. சீராக்கு நூலின் முன்னுரை).

தோரிமேன் (DORYMENES)

தோலமி மாக்ரோன் என்பவனின் தந்தை. லீசியா மன்னன் யூதேயாவை அழிக்க வலிமை வாய்ந்த மூவர் தலைமையில் படைகளை அனுப்பினான். அம்மூவர்கள் நிக்கானோர், கொரிக்கியா, தோலமிமாக்ரோன் ஆவர் (1 மக் 3:38). மெனலாவு, தோல்வியடைந்தாலும், தோரிமேனின் மகனான தோலமிக்குப் பெரும் பணம் கொடுக்கச் சம்மதித்தான் (2 மக் 4:45). 2 மக் 10:12-இல் வரும் தோலமி வேறொருவராக இருக்கலாம்.

தோர் (**DOR** - குடியுள்ள இடம்)

மத்தியதரைக்கடல் பகுதியில், கர்மேல் மலைக்குத் தெற்கே உள்ள ஒரு நகரம். நாப்பத்தோர் (யோசு 12:23; 1 அர 4:11), நாப்போத்தோர் (யோசு 11:2) ஆகிய இரண்டும் தோர் என்ற நகரையே குறிக்கலாம்.

இஃது எத்-தந்தூரா என்ற சிறிய துறைமுகநகர் இருந்த இடத்தில் இருந்ததாகத் தெரிகிறது. அகழ்வாய்வுகளின்படி இப்பகுதியில் பின்வெண்கலக் காலத்திலிருந்தே (கி.மு. 1500-1200) மக்கள் வாழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் பலம் வாய்ந்த கோபுரமாக விளங்கிய ஒன்றின் சிதைவு, இப்போது ஏல்-பூர்ஜ் என்றழைக்கப்படுகிறது. இதுதான் இச்சிறுபகுதியைக் காக்கும் அரணாகக் கானானியர் காலத்தில் இருந்திருக்கலாம்.

யோசுவாவால் தோற்கடிக்கப்பட்ட கானானியக் கூட்டணியில் தோர் நாட்டு மன்னனும் ஒருவர் (யோசு 11:2; 12:23; 1 நாள் 7:29). யோசுவாவின் வெற்றி ஒருதற்காலிகமான வெற்றி போல் தெரிகிறது (நீதி 1:27). இந்நகரமானது

சாலமோனின் ஆட்சியில் நான்காவது மாவட்டத்தைச் சேர்ந்திருந்தது. அதன் முக்கிய அதிகாரி பென்-அபினதாபுக்குச் சாலமோன் தன் மகள்களில் ஒருத்தியை மணம் செய்வித்தார் (1 அர 4:11).

விவிலியத்துக்குப் புறம்பான சான்றுகள், பல நூற்றாண்டுகளுக்கு இந்நகரம் ஒரு கடற்கரை ஊராக இருந்திருக்கலாம் என்று சுட்டுகின்றன. வென்-ஆமோன் என்ற எகிப்தியன் பெனிசியாவுக்குச் சென்றபோது இந்நகருக்கும் சென்றான் என்றுள்ளது. கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் பெலிஸ்தியரோடு வந்த தெசேக்கர் என்பவர்கள் இந்நாட்டை ஆட்சி செய்திருக்கலாம் எனத் தெரிகிறது. அந்தியோக்கு சீதேத்தஸ் (கி.மு. 139-129) தனது குதிரைப்படை, காலாட்படை வீரர்கள், கப்பல்கள் ஆகியவை துணைக்கொண்டு இந்நகரை முற்றுகையிட்டான். இறுதியில் சீமோன் கொடுக்க முன்வந்த உதவியை நிராகரித்த திரிபோவை ஒரு கப்பலில் தப்பியோடக் கட்டாயப்படுத்தினான் (1 மக் 15:12-13.25). யோசிப்பசின் கூற்றுப்படி, இந்நகரில் வாழ்ந்த புறஇனத்தார் அப்பொல்லோவை வழிபட்டனர். கி.மு. 64-இல் பாம்பேயால் இந்நகருக்குச் சுயாட்சி அளிக்கப்பட்டது.

தோலமாய் (PTOLEMAIS)

இது, பழங்காலத் தென் பெனீசிய நகரமான அக்கோவின் மற்றொரு பெயராகும். இரண்டாம் தோலமி பிலதெல்புவின் (கி.மு. 285-246) புகழ்ச்சிக்காகத் தோலமாய் என்று பெயர் சூட்டப்பட்டது. இந்நகரம் கி.மு. 210-இல் செலூக்கிய கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கிளாதியு பேரரசன் காலத்தில் (கி.பி. 41-54) இஃது ஓர் உரோமைக் குடியிருப்பாயிற்று. உரோமை ஆட்சி முடிவுக்கு வந்த பின், இது மீண்டும் அக்கோ என்று அழைக்கப்பட்டது.

கலிலேயாவில் யூதர்களை அழித்தொழிக்கத் தேடிய கூட்டணியில் தோலமாயைச் சேர்ந்த படைகளும் இருந்தன என்று அறிந்த யூதா மக்கபேயு தன் சகோதரர் சீமோனை அவர்களுக்கு எதிராகப் படையெடுக்கச் செய்தார் (1 மக் 5:15.22.55). கி.மு. 163-இல் 5-ஆம் அந்தியோக்கு தோலமாயிலிருந்து கெரார் வரையிலுள்ள பகுதிக்குக் கெகமோனிய ஆளுநரை நியமித்தார் (2 மக் 13:24-25). 149-இல் அலக்சாந்தர் பாலாசு இந்நகரைக் கைப்பற்றினார் (1 மக் 10:1). இதை 2-ஆம் தெமேத்திரியு எருசலேம் ஆலயத்திற்குக் கொடையாக அளித்து, அதன் பயனாக, அதைக் கைப்பற்ற யூதர்களின் உதவியை எதிர்பார்த்தார் (10:39). இங்குதான் யோனத்தான் திரிபோவால் பதுங்கியிருந்து தாக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டார் (12:45.48). அப்போஸ்தலரான பவுல் தமது மூன்றாம் மறைபரப்பும் பயணத்தின் முடிவில் தோலமாயில் உள்ள கிறிஸ்தவர்களைச் சந்திக்க அங்குச் சிறிது காலம் தங்கினார் (அ.ப. 21:7).

தோலமி (PTOLEMY)

கி.மு. 323-முதல் கி.மு. 30-வரை எகிப்தை ஆட்சி செய்த கிரேக்க அரசர்களின் பெயராகும். உள்நாட்டு மக்கள் இவர்களைப் பார்வோன் என அழைத்தனர்.

1. முதலாம் **தோலமி** சோத்தேர் (மீட்பர்):

இவர் தோலமி அரச மரபை நிறுவினார். இவர் எயோர்தேயாவின் லாகோசின் மகன். பெரிய அலக்சாந்தர் ஆப்கானிஸ்தானையும் இந்தியாவையும் வென்ற படையெடுப்பில் பங்கு பெற்ற அலக்சாந்தரின் நம்பிக்கைக்குரிய தளபதிகளில் ஒருவரும், அவரது ஏழு மெய்க்காவலர்களில் ஒருவரும் ஆவார். எகிப்தின் சத்திராபுவாக நியமிக்கப்பட்டார் (கி.மு. 323-305). இவர் சைப்ரசு மற்றும் பாலஸ்தீனத்தை வென்றார். செலூக்கிய தளபதி அந்திக்கோனுவின் எதிர்ப்பின் விளைவாகப் பின்வாங்கினார். அப்போது அனேகயூதக் கைதிகளை அலக்சாந்திரியாவுக்குக் கொண்டு வந்தார். 315-இல் பாபிலோனிய சத்திராபுடன் சேர்ந்து அந்திக்கோனுவின் முன்னேற்றத்தைத் தடுத்தார். 312-இல் மீண்டும் பாலஸ்தீனத்தின் மேல் படையெடுத்துக் கைப்பற்றினார். 311-இல் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையின்படி சீரிய -

பாலஸ்தீனத்தை இழந்தார். பின்பு கிரேக்க நாட்டிலும் சிறிய ஆசியாவிலும் உள்ள பகுதிகளை வெல்வதில் கவனம் செலுத்தினார். 306-இல் சாலமியில் நடந்த போரில் தெமேத்திரியுவிடம் சைப்ரசை இழந்தார். ஆனால் தன்னை எகிப்தின் அரசன் என அறிவித்துக் கொண்டார் (காண்க. தானி 11:4). தெமேத்திரியுவுக்கு எதிராக ரோதுவுக்கு உதவி செய்தததற்காக இவருக்குச் "சோத்தேர்" (மீட்பர்) என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அந்திக்கோனுக்கு எதிரான கூட்டணியில் சேர்ந்து இவர் பாலஸ்தீனத்தின் மீது மூன்றாம் முறை படையெடுத்தார். அந்திக்கோனு இறந்துவிட்டான் என்ற பொய்ச் செய்தியைக் கேட்டு, பாலஸ்தீனத்திலிருந்து பின் வாங்கினார். இதை இவருடைய கூட்டணியினர் கைவிட்டதாகக் கருதி, பாலஸ்தீனத்தைச் செலூக்கியுவுக்குக் கொடுத்தனர். 285-இல் தனது பதவியைத் தன்மகன் இரண்டாம் தோலமிக்குக் கொடுத்துவிட்டு, 283-இல் இறந்தார். இவரது மகன் தோலமி செரானு என்ற பெயரில் மாசிதோனிய அரசராக ஆட்சி செய்தார் (281-279).

முதலாம் தோலமி ஆற்றல்மிக்க ஆட்சியாளர்; படைகளை நன்கு அமைத்தவர்; கிரேக்க மயமாக்குதலையும் அறிஞர்களையும் ஆதரித்தவர். அலக்சாந்திரியாவில் ஒரு பெரிய நூல் நிலையத்தை நிறுவினார். பெரிய அலக்சாந்தரின் போர் வரலாற்றை இவர் எழுதியதாகக் கூறப்படுகிறது. இவர் செரப்பிசின் கலப்பு வழிபாட்டை வளர்த்ததாகவும் கூறப்படுகிறது.

2. இரண்டாம் தோலமி பிலதெல்பு (309-246):

கி.மு. 283- முதல் 246 வரை எகிப்தை ஆட்சி செய்தார். செலூக்கிய முதலாம் அந்தியோக்கை வென்று, மத்திய தரைக்கடலின் கிழக்குப்பகுதியில் தோலமியர்களின் ஆதிக்கத்தை நிறுவியவர். பெனீசியா, யூதேயா ஆகிய நாடுகளைக் கைப்பற்றி அங்குக் கிரேக்க நகரங்களான இராபாத் - அம்மோன் (பிலதெல்பியா), அக்ரா (தோலமாய்) ஆகியவற்றை நிறுவினார். 250-இல் தன் மகள் பெர்னிக்கியை இரண்டாம் அந்தியோக்குக்குத் திருமணம் செய்து கொடுத்து, அவளுக்குப் பிறக்கும் மகன் அரச வாரிசு ஆவான் என்று உடன்படிக்கை செய்து கொண்டார் (தானி 11:6). வியாபாரம் செழித்தோங்கி இவரது பகட்டான வாழ்க்கைக்கும் இவரது அரசவையின் இழிவான வாழ்க்கை முறைக்கும் ஈடு கொடுத்தது. அலாக்சாந்திரியாவிலுள்ள நூல் நிலையத்தைப் பெரிதாக்கினார். விஞ்ஞான ஆய்வுகளுக்கு ஆதரவு அளித்தார். ஒரு விலங்குகள் காட்சியகத்தையும் நிறுவினார். பாரம்பரியப்படி இவரது ஆட்சிக் காலத்தில்தான் தோரா அல்லது ஐந்நூல் என்ற விவிலியத்தொகுப்பு கிரேக்க மொழியில் பெயர்க்கப்பட்டது.

3. மூன்றாம் தோலமி யூர்கெத்து: இரண்டாம் தோலமியின் மகன். கி.மு. 246 முதல் 221 வரை ஆட்சி செய்தார். தனது சகோதரி பெர்னிக்கியும் அவளது மகனும் கொலை செய்யப்பட்டதால், இவர் சீரியாவைத் தாக்கினார் (தானி 11;7-8; காண்சு. 1மக் 11:8). இவர் பாபிலோன் மற்றும் திராக்கு வரைக்கும் தன் அரசைப்பெரிதாக்கினார். ஆகியர் கடல் பகுதிகளிலுள்ள தீவுகளையும் கைப்பற்றினார். இவரது காலத்தில் தோலமியர்களின் ஆட்சி மிகப் பரவியிருந்தது. இவர் 214-இல் இரண்டாம் செலூக்குவுடன் உடன் படிக்கை செய்து, நாட்டிற்கு 20 ஆண்டுகளுக்கு அமைதி அளித்தார் (தானி 11:9). இவர் காலத்தில்தான் யூதேயாவின் பெரிய குரு இரண்டாம் ஓனியா தோலமியர்களுக்குக் கப்பம் கட்ட மறுத்துவிட்டார். இந்தத் தோலமி யூதேயாவின் மீது படையெடுக்க அச்சுறுத்தியதை யோசேப்பு பென் தோபியா தலையிட்டு நீக்கினார்.

4. நான்காம் தோலமி பிலோபாத்தோர்:

மூன்றாம் தோலமியின் மகன் கி.மு. 221 முதல் 204-வரை ஆட்சி செய்தார். இவரது காலத்தில் தோலமியர் அரசு குன்றத் தொடங்கியது. இவர் மூன்றாம் அந்தியோக்குவை வென்றபின் எருசலேம் ஆலயத்துள் நுழைய முனைந்தார். அனுமதி மறுக்கப்படவே சினங்கொண்டு யூதர்களை எங்கும் துன்புறுத்தத் தொடங்கினார்.

இருவருடைய படைகளுக்குள்ளே பூசல்களும் கிளர்ச்சிகளும் தோன்றத் தொடங்கின (காண்க. தானி 11:10-11).

5. **ஐந்தாம் தோலமி எப்பிபான்:** ஐந்து வயதிலே ஆட்சிக்கு வந்து கி.மு. 204 முதல் 181 வரை ஆட்சி செய்தார். இவருக்குப் பதிலாக ஆட்சி செய்தவர்களின் பகர நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு செலூக்கிய மூன்றாம் அந்தியோக்கும் மாசிதோனியாவின் ஐந்தாம் பிலிப்புவும் 198-இல் எகிப்தின்மீது படையெடுத்து வென்றனர். பாலஸ்தீனம் செலூக்கியரின் ஆட்சிக்குட்பட்டது. இவர் 197-இல் அரசனாக முடிசூட்டப்பட்டார். 192-இல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இவர் அந்தியோக்குவின் மகள் கிளியோபாத்திராவை மணந்து கொண்டார் (தானி 11:13-18).

6. **ஆறாம் தோலமி பிலோமேத்தோர்:** ஐந்தாம் தோலமியின் மகன். கி.மு. 181 முதல் 145 வரை ஆட்சி செய்தார். இவருடைய தாய் இறந்தபின், பாலஸ்தீனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவது பற்றிச் செலூக்கியர் எகிப்தியர்களிடையே போராட்டம் தொடங்கியது. நான்காம் அந்தியோக்கு எப்பிபான் 170-இல் எகிப்தை வென்று ஆறாம் தோலமியின் சகோதரன் ஏழாம் தோலமியை அலக்சாந்திரியாவில் அரசனாக ஏற்படுத்தினார். அந்தியோக்கு பின்வாங்கியபின், இரு சகோதரர்களும் அவர்களுடைய சகோதரி கிளியோபாத்திராவும் சேர்ந்து ஆட்சி செய்தனர். அதனால் பல பூசல்கள் ஏற்பட்டன. பிலோமேத்தோர் 154-இல் தன் சகோதரனை வென்று கைப்பற்றிய பின்னும் இந்நிலை நீடித்தது. இக்காலத்தில்தான், அகதியான பெரியகுரு நான்காம் ஓனியா லெயோன் தோபொலியில் ஒரு யூத ஆலயத்தைக் கட்ட அனுமதிக்கப்பட்டார் (1 மக் 11:18). 6-ஆம் தோலமி முதலாம் தெமேத்திரியுவுக்கு எதிரான கூட்டணியில் சேர்ந்தார். அந்தியோக்கு அருகில், தெமேத்திரியுவுக்கு எதிரான போரில் காயம்பட்டு இறந்தார்.

7. **எட்டாம் தோலமி இரண்டாம் யூர்கெத்து:** இவர் 6-ஆம் தோலமியின் சகோதரனும் 7-ஆம் தோலமி என்று முன்பு குறிக்கப்பட்டவரும் ஆவார். பெருந்தொந்தியுடையவர்" என்ற பொருளில் "பிசிக்கோன்" என்றும் அழைக்கப்பட்டார். இவர் 170 முதல் 164 வரை தன் சகோதரன் ஆறாம் தோலமியுடன் சேர்ந்து ஆட்சி செய்தார். இவர் ஆறாம் தோலமியின் மகனான சிறுவனைக் கொன்று 145-இல் எகிப்தின் அரசை அபகரித்துக் கொண்டார். இவர் மிகவும் கொடுமையானவர். மக்களால் வெறுக்கப்பட்டார். தன் மகனையே கொன்றார். அலக்சாந்திரியாவைச்சேர்ந்த அனேகரைக் கொன்றார். யூதர்களை வெறுத்து அவர்களைக் கொடுமைப்படுத்தினார். 2-ஆம் மக்கபேயர் நூலின் முதல் அதிகாரத்தில் வரும் கடிதம் இவர் காலத்தில் எழுதப்பட்டதாகும். இவர் 117வரை ஆட்சி செய்தார்.

8. **ஒன்பதாம் தோலமி இரண்டாம் சோத்தோர்:** இவர் லாதிரோஸ் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் 116-இலிருந்து 107 வரை தன் தாயுடன் சேர்ந்து ஆட்சி செய்தார். இவர் காலத்தில் குடும்பப் பூசல்கள் மிகுந்திருந்தன. இவர் செலூக்கியர்களுக்கு உதவி செய்தாலும், சமாரியாவை இரிக்கானு கைப்பற்றினார். இதன் விளைவாக இவரை இவர் தாய் விரட்டி விட்டாள். 88-இல் மீண்டும் அரசனாக்கப்பட்டு 80-வரை ஆட்சி செய்தார்.

9. **பன்னிரண்டாம் தோலமி பிலோமேத்தோர் பிலதெல்பு நொயேசு தியோனிசு:** பொதுவாக, "குழல் இசைஞன்" என்ற பொருளில் "அவுலெத்தெசு" என்றழைக்கப்பட்டார். இவர் ஒன்பதாம் தோலமிக்கு முறைகேடாகப் பிறந்தவர். இவர் உரோமையரோடு கொண்ட தொடர்பால் மக்களின் கிளர்ச்சியால் 58-55-இல் நாடு கடத்தப்பட்டார். உரோமையர், யூதர்கள் உதவியால் மீண்டு அரசைப் பெற்றார். இவர் 51-வரை ஆட்சி செய்தார். இவர் காலத்தில் எஸ்தர் நூலின் கிரேக்க வாசகம் எகிப்தில் அறிமுகம் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

10. 13-ஆம், 14-ஆம், 15-ஆம் தோலமிகள்: ஒன்பதாம் தோலமியின் மகள் 7-ஆம் கிளியோபாத்திரா பிலோபாத்தோர் (60-30), தன் சகோதரர்கள் 13-ஆம் தோலமி பிலோபாத்தோர் (51-47), 14-ஆம் தோலமி பிலோ பாத்தரோடும்

(47-44)பின் தன் மகன் 15-ஆம் தோலமி பிலோமேத்தோர் சீசரோடும் (44-30) சேர்ந்த ஆட்சி செய்தார். இவளும் இவள் காதலன் மாற்கு அந்தோனியும் அக்டேவியனால் தோற்கடிக்கப்பட்டபின், இவள் தற்கொலை செய்து கொண்டாள். இதன்பின் எகிப்து உரோமைப் பேரரசின் ஒரு மாகாணம் ஆயிற்று.

எகிப்திய அரச மரபைச் சேராத தோலமி என்ற பெயருடைய பலர் இருந்திருக்கின்றனர்.

11. ஒன்பதாம் தோலமி, மூன்றாம் கிளயோபாத்திர ஆகியோரின் காலத்தில் பூரிம் விழாவைப் பற்றிய கடிதத்தை அலக் சாந்திரியாவுக்குக் கொண்டு வந்தவர். இவர் தோசிதேயுடன் மகனும் லிசிமாக்குவின் தந்தையுமாவார் (எஸ் 11:1).

12. அபூபுவின் மகனும் பெரிய குருவின் மருமகனும் ஆவார். சாக்கடலுக்கு வடக்கிலுள்ள பகுதிக்கு ஆளுநர். இவரது பேராசை தன் மருமகனான சீமோன் மக்கபேயுவையும் அவரது புதல்வர்கள் மத்தத்தியாவையும் யூதாவையும் தாக்கு என்ற இடத்தில் ஒரு விழாவின் போது கொல்ல இட்டுச்சென்றது (1 மக் 16:11-17). இக்கொடிய செயலால் சீற்றம் கொண்ட யோவான் இர்க்கானு இவரையும் இவரது படையையும் கொன்றழித்தார் (16:18-22).

13. **தோலமி மக்ரோன்:** தோரிமேனின் மகன். ஆறாம் தோலமியால் சைப்ரசுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆனால் இவர் தோலமியைக் கைவிட்டு, நான்காம் அந்தியோக்கு எப்பிபானுக்கு ஆதரவு அளித்தார் (2 மக் 10:12-13). மெனலாவுவிடம் கையூட்டுப் பெற்று, ஆலயத்தை லிசிமாக்கு கொள்ளையடித்ததில் பெரிய குருவுக்குப் பங்கில்லை என்று 4-ஆம் அந்தியோக்கு விடம் இவர் உறுதி கூறினார் (4:45-47). 6:8-இன்படி தியோனிசுவின் கிரேக்க விழாவில் யூதர்களும் பங்கெடுக்கும்படி இவர்கட்டளையிட்டார். 5-ஆம் அந்தியோக்குவால் கூலே-சீரியா, பெனீசியாப் பகுதிகளுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். யூதர்களை முற்றும் அழித்துவிட நிக்கானோரைப் படையுடன் அனுப்பினார் (8:8-9). 1 மக் 3:38-41 என்ற பகுதி, யூதா மக்கபேயுவைத்தாக்க அனுப்பப்பட்டவர்களில் இவரும் ஒருவர் என்று கூறுகிறது. 2 மக் 10:12-13-இன்படி இவர் யூதர்களுக்கு ஆதரவு காட்டியதால், துரோகியாகக் கருதப்பட்டார்; அவமானப்படுத்தப்பட்டு, நஞ்சுண்டு இறந்தார்.

தோலா (TOLA - கருஞ்சிவப்பான)

இப்பெயர் இசக்கார் குலத்து இரண்டு இனத்து மக்கள் அல்லது இரண்டு தனிப்பட்டவர்களைக் குறிக்கிறது.

1) குருக்கள் பாரம்பரிய தலைமுறைப் பட்டியலிலும் (ஆதி 46:13, எண் 26:23), நாளாகமப் பட்டியலிலும் (1 நாள் 7:1-2), இசக்காரின் நான்கு புதல்வர்களில் முதல்வராகத் தோலா உள்ளார். எண் 26:23-இன்படி, தோலா நான்கு குலத்திற்குத் தலைவராக உள்ளார். இவரது சகோதரர்கள் பூவா, யாசூபு (ஆதி 46:13-இல் யோபு), சிம்ரோன் ஆவர். தோலாவின் ஆறு புதல்வர்களும் வலிமைமிகு வீரர்களாகத் திகழ்ந்தனர் (1 நாள் 7:2).

2. ஒரு நீதிபதி. இசக்கார் இனத்தைச் சேர்ந்தவர். பூவாவின் புதல்வர். தோதுவின் பேரன் எப்பிராயிம் நகரான சாமிரில் வாழ்ந்தவர். இருபத்து மூன்று ஆண்டுகள் இஸ்ராயேலின் நீதிபதியாக விளங்கினார் (நீதி 10:1).

தோலாது (TOLAD)

சிமியோன் இனத்தைச் சேர்ந்த நகரம் (1 நாள் 4:29). எல்தோலாது என்பதின் மற்றொரு பெயர். காண்க: எல்தோலாது.

தோல் (SKIN)

மனிதனுடைய அல்லது மிருகத்தினுடைய உடலின் மீது மூடியுள்ள மேற்பகுதியைக் குறிக்கின்றது.

மனிதன்: மனிதனுடைய உடல் தோலாலும், சதையாலும், தசை நார்களாலும், எலும்புகளாலும் ஆனது (யோபு 10:11;19:20; புல 3:4; எசே 37:4-6). ஒருசில இடங்களில் தோல் மட்டுமே உடல் முழுவதையும் குறிக்கிறது (யாத் 22:27; யோபு

19:26). எத்தியோப்பியர்களின் தோல் நிறம் "எத்தியோப்பியன் தன்நிறத்தை மாற்ற முடியுமோ" என்ற புகழ்மிக்க கேள்விக்குக் காரணமாக அமைந்திருந்தது (எரே 13:23). உடம்பிலுள்ள மயிர்த்திடலின் வித்தியாசம் யாக்கோபு, ஏசா ஆகியவர்களின் கதையில் உணரப்படுகின்றது. பசிக்கொடுமை மற்றும் நோயின் விளைவாக, தோல் கறுப்பாகவும், கடினமானதாகவும், வறண்டு போனதாகவும், நோயுற்றதாகவும், இருக்கலாம் (யோபு 7:5; 30:30; புல 4:8; 5:10). லேவி 13:1-46 அசாதாரண நிலையில் உள்ள தோலுக்குச் சிகிச்சை செய்வதைப்பற்றி விவரிக்கின்றது. மீக் 3:2-3-இல் ஆண்டவர் இஸ்ராயேலர்களின் தலைவர்கள் மக்களுக்குச் செய்துவந்த கொடுமைகளைச் சுட்டிக்காட்டும்போது "என் மக்களின் தோலை உயிரோடு உரிக்கிறீர்கள்" என்று உருவகமாகக் கூறுகின்றார்.

விலங்கு: யோபு 41:7-இல் குறிப்பிட்டுள்ள லேவியாத்தனுடைய தோலின் குறிப்பைத் தவிர, விவிலியத்தில் உள்ள விலங்குகளின் தோல் சம்பந்தமான எல்லாக் குறிப்புகளும், இறந்த போன விலங்குகளின் தோல் பற்றியவையேயாகும். பாலஸ்தீனத்தில் எருதுகள், கோவேறு கழுதைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் போன்றவை வீட்டு விலங்குகளாக வளர்க்கப்பட்டதால் பெரும்பாலும் அவைகளின் தோல்கள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன. வெள்ளாட்டுக் குட்டிகள் (ஆதி 27:16), ஆட்டுக்கிடாய் மற்றும் வெள்ளாடு (யாத் 25:5), ஆடு மற்றும் செம்மறி (எபி 11:37) ஆகியவற்றின் தோல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பன்றி, ஒட்டகம், உடும்பு, ஓணான், பச்சோந்தி, பல்லி ஆகியவற்றின் தோல்களைப் பற்றி மிஷ்னா குறிப்பிடுகிறது. இவை அனைத்துமே பயன்படுத்துவதற்கு முன்னமே பதனிடப்பட்டன. குருக்களுக்காகவும் சமூகம் முழுவதிற்குமாகவும் அளிக்கப்பட்ட பாவப்பரிகாரப் பலியில் இடம்பெற்ற ஆட்டின் தோலை எரித்து அழித்துவிட வேண்டும் (யாத் 29:14; லேவி 4:11.21; 8:17;9:11; 16:27; காண்க. எண் 19:5). ஆனால் மற்றப் பாவப்பரிகாரப் பலிகளின் தோல்களையும், அதேபோல் தகனப்பலியில் இடம் பெற்ற காணிக்கையாக்கப்பட்ட ஆட்டுத்தோலும் குருக்களுக்குச் சொந்தமாக்கப்பட்டது (லேவி 5:13; 7:8). அதற்குப் பொருளாதார மதிப்பு இருந்ததாகத் தெரிகிறது. விலங்குகளின் தோல் உரிக்கப்படுவதைப் பற்றி லேவி 1:6; 2 நாள் 29.34-இல் சுட்டிக்காட்டப்படுகிறது.

"தோலுக்குத் தோல்" பழமொழியில் (யோபு 2:4), இதனுடைய மூலப்பொருள் தெரியவில்லை. ஆனால் இது பயன்படுத்தப்பட்ட சூழ்நிலையைப் பார்க்கும்போது "தோலுக்குத் தோல்" என்பது, விலையுயர்ந்த பொருளுக்காக விலை மலிவான ஒன்றை இழப்பதாகும்" என்ற பொருளைத் தருகின்றது.

தோல் சுருள் (PARCHMENT)

வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளின் தோலிலிருந்து தயாரிக்கப்பட்ட எழுதுபொருள். நீண்டநாள் நிலைக்கும் தன்மையால், ஓலைச்சுருளின் இடத்தைத் தோல்சுருள் சிறுகச் சிறுக ஆக்ரமித்துக்கொண்டது. பெர்கமு நாட்டு அரசன் இரண்டாம். யூமன் (கி.மு. 197-158) என்பவர் இதனை அறிமுகப்படுத்தியதால் இது கிரேக்க மொழியில் "பெர்கமேனோன்" என்று அழைக்கப்பட்டது. ஆனால் இவை முதலில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், யூப்பிரத்தீசு நதி ஓரத்தில் உள்ள 'தூரா யூரோபோஸ்' என்னுமிடத்தில் காணப்பட்டன. கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே தோல்சுருள் அதிகம் உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதனை முதலில் கண்டுபிடித்த காலம் பற்றி அறிய இயலவில்லை. தோலில் உள்ள முடி, முதலில் சுண்ணாம்பு நீரில் நனைக்கப்படும். பின்னர், தேய்க்கப்பட்டு முடி நீக்கப்படுகிறது. பிறகு, அவை கழுவப்பட்டு, உலர்ந்தபின் சட்டங்களில் விரித்துப் பொருத்தப்படுகின்றன. இறுதியாக, அவை சுண்ணாம்பு, கல் மற்றும் மாக்கல்லால் தேய்க்கப்பட்டு மென்மையாக்கப்படுகின்றன. இவ்வாறு, தோல்சுருள் பதனிடப்பட்ட தோலிலிருந்து வேறுபடுகிறது. உயர்தர பதனிட்ட தோல் கன்றுக்குட்டிகளின் தோல்களினின்று

தயாரிக்கப்பட்டன. இது "வேலும்" என்றழைக்கப்பட்டது.

2தீமொ 4:13 குறிப்பிடும் தோல் சுருள்கள் பற்றிய குறிப்பு, தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றன. ஏனெனில் அவை தனிப்பட்ட விதத்தில் குறிக்கப்படுகின்றன. அவற்றின் தன்மை பற்றி அறிஞரிடையே கருத்தொற்றுமை இல்லை. அவை, கிரேக்க மொழி, பழைய ஏற்பாட்டின் பிரதிகளாக இருக்கக்கூடுமா என்பது தெரியவில்லை. அவை, உரோமைக் குடியுரிமைக்கான சாசனங்கள், அல்லது வருங்கால உபயோகத்திற்கான வெற்றுத் தோல் சுருள்கள் என்பன மற்றும் சில கருத்துகள் ஆகும்.

தோல் பதனிடுபவர், தோல் பதனிடுதல் (TANNER, TANNING)

சுண்ணாம்பு, சில தாவரங்களின் சாறு, பட்டை இவற்றைப் பயன்படுத்தித் தோல் பதனிடும் தொழில் மிகப்பழங்காலத்திலிருந்தே தெரிந்திருந்தது.

யாத் 25:5; 26:14; 35:23; 36;19; 39:34 ஆகியவற்றில் செந்நிறத்தில் பதனிடப்பட்ட ஆட்டுக் கிடாய்த்தோல் வாக்குறுதிப் பெட்டகத்திற்குத் திரைச்சீலையாகப் பயன்படுத்தப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ.ப. 9:43; 10:6.32-இல் தோல் பதனிடும் சீமோன் குறிப்பிடப்பட்டுள்ளார். தால் மூதின் கூற்றுப்படி, யூதர்களிடையே, தோல் பதனிடுவோர் உயர்ந்தவர்களாகக் கருதப்படவில்லை. அவர்களுடைய வேலையின் காரணமாக, தோல் பதனிடுவோர் நகருக்கு வெளியே வாழ்ந்தனர். சீமோன் கடற்கரை ஓரமாக வாழ்ந்தார். பேதுரு அவரோடு சென்று தங்குவது. அவரது பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது.

தோல்வார் (THONG)

பதனிட்ட தோலால் செய்யப்பட்ட அகலம் குறுகிய வார் அல்லது கயிறு. இது நுகத்தடியோடு பிணைப்பதற்கும் (எசா 58:6; எரே 27:2) கைதிகளை அடித்துத் தண்டிப்பதற்கும் (அ.ப. 22:25) பயன்பட்டது. இது மிதியடி வாராகவும் பயன்பட்டது (மாற் 1:7; லூக் 3:16; யோவா 1:27). சில வார்களைப் பின்னி அதை ஒரு கசையாகச் செய்து கசையடி கொடுப்பதில் பயன்படுத்துவர்.

தோவாகு (TOAH – வளைந்த)

இப்பெயர், ஏமான் என்ற லேவியரின் வழித் தோன்றல்களின் பட்டியலிலும் கோகாத்தியர் லேவியர் தலைமுறைப்பட்டியலிலும் வருகிறது (1 நாள் 6:34). இதற்கு முன் உள்ள பட்டியலில் எப்பெயர் நாகத்து என்றும் (6:26), தோகூ என்றும் (1 சாமு 1:1) இருக்கிறது. இவர் சூப்புவின் மகனும் சாமுவேலின் முன்னோரும் ஆவார்.

தௌ (THU)

இது எபிரேய நெடுங்கணக்கில் இருபத்து இரண்டாவது எழுத்தாகும். சங் 119-இல் இருபத்திரண்டாவது பகுதியின் தலைப்பாக உள்ளது. அப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்துடன் தொடங்குகிறது.

ந

நகமானி (NAHAMANI - யாவே ஆறுதல் அளித்தார்)

இவர் பாபிலோன் அடிமைத் தனத்திலிருந்து செருபாபேல் அல்லது நெகேமியாவோடு திரும்பிய இஸ்ராயேலின் தலைவர்களுள் ஒருவர் (நெகே 7:7).

நகம் (NAIL)

நகம் கால் அல்லது கைவிரலின் நுனியில் வளரும் ஒருபாகமாகும். "சிறைப்பட்டவர்களில் வடிவழகியான ஒரு பெண்ணைக் கண்டு அவள் மீது காதல்கொண்டு அவளை மணந்துகொள்ள விரும்புவாயாயின், அவளை உன் வீட்டிற்குக் கொண்டு போகலாம். அவளோ தன் தலைமயிரைக் கத்தரித்துத் தன் நகங்களையும் களைந்து.. உன் வீட்டில் உட்கார்ந்தவளாய் ஒரு மாதம் வரையிலும் தன் தாய் தந்தையரை நினைத்துத் துக்கம் கொண்டாடுவாள்" (உபா 21:12). அதற்குப்பின் அவள் மனைவியாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

இறைவனால் தண்டிக்கப்பட்ட நெபுகத்னேசர், விலங்கைப்போல் வாழ்ந்தபோது அவனுடைய நகங்கள் பறவைகளின் நகங்களைப்போல் வளரத்தொடங்கின (தானி 4:30). தானியோல் காட்சியில் கண்ட நான்காம் விலங்கு "இரும்புப் பற்களும் வெண்கல நகங்களும் கொண்டு" அஞ்சி நடுங்க வைக்கும் தோற்றத்தைக் கொண்டிருந்தது (7:19).

நகர அதிகாரிகள் (CITY AUTHORITIES)

'நகரக் குழவினர்' என்ற சொற்றொடர் அப்போஸ்தலர் பணியில் (அ.ப. 17:6.8) மட்டும்தான் காணப்படுகிறது. கிரேக்க இலக்கியங்களிலும் இத்தொடர் வருவதாகத் தெரியவில்லை. ஆனால், கல்வெட்டுக்களில் இத்தொடரைக் காணலாம்.

'நகர ஆளுநர்' என்ற சிறப்புப் பெயர் அல்லது பட்டம் உரோமைப் பேரரசைச் சேராத நகர நடுவருக்கு வழங்கப்பட்ட மாசிதோனியச் சிறப்புப் பெயராகும்.

நகர ஆளுநரின் எண்ணிக்கையானது ஒவ்வொரு நகரத்தின் முக்கியத்துவத்திற்குத் தகுந்தது போல மாறுபடும். அம்பிப்பொலி ஐந்து ஆளுநர்களையும், பெல்லா இரண்டு ஆளுநர்களையும், அகுஸ்துவின் காலத்தில் தெசலோனிக்கே ஐந்து ஆளுநர்களுளையும் அதன் பின் ஆறு ஆளுநர்களையும் கொண்டிருந்தன. தெசலோனிக்கே நகரம் சுதந்தர நகராகவும் மாசிதோனியா மாநிலத்தில் தலைநகராகவும் விளங்கியதால், அங்கிருந்த நகர ஆளுநர்கள் ஏராளமான, கடினமான பொறுப்புக்களைக் கொண்டிருந்தனர். கி.மு. 168-இல் மாசிதோனியா, உரோமையர்களால் கைப்பற்றப்பட்டபின் ஐந்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இரண்டாவது மாவட்டத்தின் தலைநகராகத் தெசலோனிக்கே விளங்கியது. கி.மு. 146-இல் மாசிதோனியா ஒரே மாநிலமாக்கப்பட்டது. தெசலோனிக்கே அதன் தலைநகராக விளங்கியது. மறுமுறையும் தெசலோனிக்கே நகரானது. ஆக்டேவியன், அந்தோனி போன்றவர்களால் சுதந்தர நகராக்கப்பட்டது. கி.பி. 44-ஆம் ஆண்டிற்குப்பின் மாசிதோனியாவிலிருந்த அரசாங்க நிறுவனங்கள் வேற்றிடத்திற்கு மாற்றப்படவில்லை. தெசலோனிக்கேயில் பவுலையும், சீலாவையும் சிறைப்பிடித்த முறையிலிருந்து (17:7), அங்கு உரோமைய அரசாங்கம் பொறுப்பு வகித்திருந்தது என்பது தெளிவாக இருந்தாலும், அப்போஸ்தலர் பணியில் கூறப்படுகின்ற இதே நிகழ்ச்சியை வைத்துப் பார்க்கும்பொழுது, நகர அதிகாரிகள்தான் நகருக்கும் உரோமைக்கும் முழுப்பொறுப்புடையவர்களாகத் தெரிகிறது. இவர்கள் மூப்பர் குழுவோடும் மக்கள் மன்றத்தோடும் சேர்ந்து செயல்பட்டனர். ஒரு நகரின் சுதந்தரம் உண்மையானதானாலும்,

"மற்றொரு அரசனை" ஏற்கும் சுதந்தரம் இல்லை.

நகரம் (CITY)

ஒரு நாகரிகத்தைப்பற்றி அறிந்துகொள்ள, அந்த நாகரிகம் இருந்த நகரத்தைத் தெரிந்து கொண்டாலே போதும். எரிகோ நகரமே மிகப் பழைமையான நகரம் எனக்கருதப்படுகிறது (கி.மு. 6800). கி.மு. 3500-இல் மெசபொத்தாமியாவில் நகர்ப்புறச் சூழ்நிலைகள் தொடங்க ஆரம்பிக்கின்றன. அதுவரை மெசபொத்தாமிய மக்கள் கிராமப் புறங்களில் விவசாயம் செய்தே வாழ்ந்துவந்தனர். சுமேரியர்களுக்கு ஏற்பட்ட சில உணர்வு மாற்றங்கள், பாதுகாப்போடு, ஒரு கூட்டு வாழ்க்கையை உருவாக்கித் தந்தது. மேய்ச்சலிலும், விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த மக்கள் நகர்ப்புறத்திற்கு வந்தபிறகு பல கருவிகளைக் கண்டுபிடித்து, தங்களது உணவைத் தயாரிக்கக் கற்றுக்கொண்டார்கள். நகரமானது பொருட்களைப் பண்ட மாற்றப் பயன்படுத்தப்பட்டது. பொருட்களை மக்கள் தங்கள் நகர மக்களோடு மட்டுமல்லாமல், பிற நகர மக்களோடும் மாற்றிக் கொண்டார்கள். பொருட்களைப் பரிமாறிக் கொண்டதால் உற்பத்தி பெருகியது. இயற்கைச் சக்திகளை மனிதன் அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கினான். நகரம் மக்களிடையே ஓர் அரசியல் பிணைப்பு ஏற்பட, காரணமாக இருந்தது. பொதுநலனுக்காக மக்கள் சக்தி திரட்டப்பட்டது. மெசபொத்தாமியாவிலும், எகிப்திலும் பயிர்த்தொழிலுக்குக் கூட்டு உழைப்புப் பயன்படுத்தப்பட்டது. பாதுகாப்புப் பணிகளும், அரசுப் பணிகளும் மன்னனிடம் ஒப்படைக்கப்பட்டன. சாலை அமைத்தல், ஆலயங்கள் கட்டுதல், பாதுகாப்பு அரண்கள் அமைத்தல் ஆகிய வேலைகள் மன்னனால் செய்யப்பட்டன. மெசபொத்தாமியாவில் உள்ள ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு ஆலயம் மையமாக இருந்தது. ஒவ்வொரு நகரத்தில் வாழ்பவர்களும், தங்களுக்கே உரிய கடவுள்களை வணங்கிவந்தார்கள். இலக்கியம், கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இந்த ஆலயங்களும், அவற்றில் பணிபுரிந்தவர்களும் பெரிதும் உதவியிருக்கின்றார்கள். அரசியல் அமைப்பில் மெசபொத்தாமியா எகிப்தைவிட மாறுபட்டு இருந்தது. மெசபொத்தாமியாவில் உள்ள ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு தனி அரசாகக் கருதப்பட்டது. அவர்கள் ஒரு பரந்த அரசைப் பல தடவை நிறுவ முயன்றும் அவர்களால் முடிய வில்லை. பெரிய நகர்ப் பகுதிகள் பேரரசு என்ற வடிவில் அமைந்தன. ஆனால் எகிப்தில், அரசு என்பது இணைந்து காணப்பட்டது. நைல் நதியின் தேவையை எல்லோரும் நம்பியிருந்ததால் ஒருவேளை, அவர்கள் எல்லோரும் ஒரே அரசாக இருந்திருக்கலாம். இஸ்ராயேலர்களுக்கு முன்பு, கானான் நாடு மெசபொத்தாமியாவைப் போலவே துண்டு துண்டு அரசாக இருந்தது. இவற்றில் மூன்றாம் துட்மோசு மன்னன் 118 நகர்களைக் கைப்பற்றியதாகச் சான்றுகள் உள்ளன. 2-ஆம் ராமசேசுவின் காலத்தில் இருந்து சீரியாவில் 56 அரண்நகர்கள் இருந்ததாகப் புல்தாள் ஏடுகள் குறிப்பிடுகின்றன. இவற்றில் பல விவிலியப் பெயர்களோடு தொடர்புடையன. அமர்னாவின் கடிதங்களில் இஸ்ராயேலர், கானான் நாட்டைப் படிப்பதற்கு முன்பு, அந்நாட்டில் உள்ள அரசியல் அமைப்புப்பற்றிக் கூறப்பட்டுள்ளன. இந்தக் காலக் கட்டத்தில் பார்வோன்களின் பிரநிதிகளால் கானானிய நகர்கள் ஆளப்பட்டன. ஆனால், ஒவ்வொரு நகர அரசும் சுதந்தரமாகச் செயல்பட்டது. இஸ்ராயேலர்கள் நாட்டைக் கைப்பற்றியபோது, கானான் நாட்டு நகர்களையே இறுதியாகக் கைப்பற்றினார்கள். இஸ்ராயேல் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பும், இஸ்ராயேலைச் சுற்றி, கானானிய நகரங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. எபிரேயர்கள் கானானின் நகர அரசுகளைக் கைப்பற்றிய போதும், அங்குள்ள அரசியல் அமைப்பைப் பின்பற்றவில்லை. நகரங்களைக் கைப்பற்றியபின்பும் இன ஒற்றுமையும், 'இஸ்ராயேல்' என்ற உணர்வும் அவர்களிடம் இருந்தன. அரசாட்சிமுறை வரும் வரை, இஸ்ராயேல் மக்களால் ஒரு நிலையான ஆட்சியை அமைக்க முடியவில்லை.

மெசபொத்தாமியாவைப் போலச் சுவர்களால் சுற்றிச் சூழப்பட்ட ஓர் அமைப்பு தான் நகரம் என்று பழைய ஏற்பாடு குறிப்பிடுகின்றன. கானானிய, எபிரேய நகரங்கள் தற்போதைய நகரங்களோடு ஒப்பிடும்போது மிகவும் சிறியன. அவைகள் அதிகபட்சம் 20 ஏக்கர் நிலப்பரப்பளவையே கொண்டிருந்தன. இந்தப் பரப்பளவில் மக்கள் தொகை மிகவும் நெருக்கமாக இருந்தது. ஓர் ஏக்கருக்குக் குறைந்தபட்சம் 50 பேராவது வாழ்ந்தார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். நகர்களுக்குள், நாம நினைப்பது போலத் தெருக்கள் எல்லாம் கிடையாது. வீடுகளுக்கிடையே ஒற்றையடிப் பாதைகள் மட்டுமே இருந்தன. நகரவாயிலுக்குப் பக்கத்தில்மட்டுமே ஒரு திறந்தவெளி இருந்தது. இந்த இடம் பாதுகாப்புப் பணிக்காக விடப்பட்டிருந்தது. காரணம், இந்த வாயில்கள் பகுதியில்தான் எதிரிகள் அதிகமாகத் தாக்குவது வழக்கம். நீண்ட நாட்களாக நாட்டில் அமைதி நிலவுமாயின், இந்தத் திறந்த வெளிப்பகுதியில் வீடுகள் கட்டப்படும். மீண்டும் போர்மூளும் அபாயம் ஏற்படும்போது அவ்வீடுகள் இடிக்கப்படும் (எசா 22:10). மதிற்சுவர்களின் மீதும் சில நேரங்களில் வீடுகள் கட்டப்பட்டன (யோசு 2:15). நகரைச் சார்ந்த பலர், நகருக்கு வெளியே தங்கி நிலங்களைப் பயிர் செய்து வந்தார்கள். நகருக்கு வெளியே இவர்கள் தங்கியிருந்த கிராமங்கள் 'நகரின் மகள்கள்' என்று அழைக்கப்பட்டன. போர்க்காலத்தின்போது இந்தக் கிராமங்களில் வாழ்பவர்கள் நகருக்குள் நுழைந்து பாதுகாத்துக் கொள்ளவார்கள். நீர் இருப்பதைப் பொருத்தும், பாதுகாப்பான வசதியைப் பொறுத்துமே நகரங்கள் நிறுவப்பட்டன. நீரோடைகள், முடியுமென்றால் மதிற்சுவர்க்குள் இருக்கும்படி அமைக்கப்பட்டன. நகரம், முற்றுகை இடப்பட்டிருக்கும்போது தண்ணீர் பெற, சிக்கல் நிறைந்த பல அமைப்புக்கள் இருந்ததாகக் காணப்படுகிறது. பழைய இஸ்ராயேலின் நகர்களில் கல் பதித்த சாலைகளே இல்லை. அவை அழுக்கு நிறைந்து காணப்பட்டன (எசா 10:6; மீக் 7:10). கழிவுப்பொருட்கள் வீட்டில் இருந்து தெருவிலே வீசப்பட்டன. தெருநாய்கள் தெருவிலுள்ள அசுத்தத்தையே தின்று வாழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது (யாத் 22:30; எசா 5:25). வாயிலுக்குப் பக்கத்தில் உள்ள திறந்தவெளி சந்தையாகவும் நீதி மன்றமாகவும் பயன்படுத்தப்பட்டது (2 அர 7:1). நகரவாயிலுக்குப் பக்கத்தில் உள்ள இருக்கையில் இருந்து பெரியவர்கள் தீர்ப்பு வழங்குவார்கள் (உப 21:19; 2 சாமு 15:2). ஒரே தொழிலைச் செய்பவர்கள் அனேகமாக ஒரே தெருவில் வாழ்ந்தார்கள். தமஸ்குவும், சமாரியாவும் பிற நகரில் இருந்து வரும் வியாபாரிகளுக்குக் கடைகள் வைக்க தனியாகத் தெருக்களை ஒதுக்கிக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது (1 அர 20:34).

புதிய ஏற்பாட்டிலும், நகரங்களும், கிராமங்களும் வேறுபடுத்திக் கூறப்படுகின்றன. பெத்தானியா, பெத்பகு, பெத்லேகம், எம்மாவூ ஆகியவை கிராமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. நசரேத்து, நயீன், கப்பர்நாகும் போன்றவை நகர் எனப்படுகின்றன. பாலஸ்தீனத்திற்குப் பக்கத்தில் அமைந்த தெக்கப்பொலி போன்ற நகர்கள் கிரேக்க நகர அமைப்பு முறைப்படி கட்டப்பட்டவை ஆகும். இந்த நகர்களுக்குள் குளியல் அறைகள், கலையரங்கம், விளையாட்டரங்கம் போன்றவை அமைக்கப்பட்டிருந்தன. கிரேக்க நகர ஆட்சி முறையில் ஒரு மூப்பர் குழுவும் மக்கள் மன்றமும் இருந்தன. ஆனால் கிரேக்கர்களின் இந்த அமைப்பு முறையை யூதர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே இல்லை.

புதிய ஏற்பாட்டில் 'நகரம்' என்ற சொல், புதிய இறையியல் பொருளைப் பெறுகின்றது. பழைய ஏற்பாட்டில் எருசலேமில் உள்ள ஆலயத்தில் யாவே குடியிருக்கின்றார். எனவே, எருசலேம் ஆண்டவரின் நகரம் எனப் பெயர் பெறுவதாகக் கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டுதான் புதிய ஏற்பாடு புது இறையியல் பொருள் பெறுகிறது. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள், மெசியா வரும்போது

எருசலேம் மீண்டும் அதன் அழிவிலிருந்து விடுபெறும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டில் இந்த மண்ணக எருசலேம் விண்ணக எருசலேமாக மாறி, அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு, நமக்கு அன்னையாகவும் மாறுகிறது (கலா 4:26). கிறிஸ்தவர்கள் விண்ணக நகரின் குடிமக்கள் (பிலி 3:29). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் பழைய ஏற்பாட்டில் சீனாய் மலையில் கடவுளின் பிரசன்சன்னத்திற்கும், கிறிஸ்தவர்கள் சீயோன் மலையைக் கருதும் விதத்திற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக விளக்குகிறது (எபி 12:22). கிறிஸ்தவர்கள் மண்ணக நகரைச் சார்ந்த குடிமக்கள் அல்லர்; மாறாக, வரவிருக்கின்ற நகரைச் சார்ந்தவர்கள் (எபி 13:14). கடவுளின் நகரமான புதிய எருசலேம் என்பது வானத்தில் உள் கடவுளிடமிருந்து வரவிருப்பதாகும் (திருவெளி 3:12). எருசலேமைப் பற்றிய கடைசிக் காட்சியில், கடவுளின் நகர் மாட்சியோடு மேலிருந்து வருகின்றது (திருவெளி 21-22). ஒளிமிக்க கற்களால் ஆன 12 வாயில்கள் உள்ளன. சூரிய ஒளியோ சந்திர ஒளியோ அந்த நகரத்திற்குத் தேவையில்லை. காரணம், கடவுளின் மாட்சியே அங்கு ஒளி கொடுக்கிறது. செம்மறியே அதன் விளக்கு ஆகும். பூலோகத்தில் உள்ள எல்லா மன்னர்களும் இதை அலங்கரிப்பார்கள். இந்த நகரின் வாயில்கள் எப்போதும் திறந்தே இருக்கும். அசுத்தமானவை எதுவும் அதனுள் நுழைய முடியாது. இந்த விண்ணக நகரம் மனிதனின் எல்லா ஆசைகளையும், கற்பனைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்யும். இந்த நகரில் வாழும் வாழ்க்கை அளிக்கும் வாய்ப்புகளைத் தொடக்க கால நாட்டுப்புற அல்லது விவசாயச் சமூகங்களில் காணமுடியாது.

நகராய், நகுராய் (NAHARAI - குறட்டை விடுபவர்)

இவர் தாவீதின் வலிமை வாய்ந்த முப்பது பேரில் ஒருவர். மேலும் இவர் யோவாபின் படைக்கலன் தாங்குவோர். இவர் பெயரோத்து ஊரைச் சார்ந்தவர் (2 சாமு 23:37; 1 நாள் 11:39).

நகர்க்காவலர் (POLICE)

அ.ப. 16:35, 38: இதன் மூல கிரேக்கச் சொல்லை உள்ளபடியே மொழிபெயர்த்தால் தனது பணி மற்றும் அதிகாரத்தின் அடையாளமாக கழி அல்லது கோல் வைத்திருப்பவர் என்று பொருள்படும். இவ்வாறு காவலர் தடி அல்லது குச்சி வைத்திருப்பது அவர்களின் அதிகாரத்தின் ஓர் அடையாளமாகும். இதற்குச் சிறைக்காவல்காரன் அல்லது உரோமைக் குற்றவாளிகளோடு செல்லும் அலுவலர் எனப்பொருள் கொள்ளலாம்.

இவர்கள் "கழி வைத்திருப்பவர்கள்" எனப் பொருள் படும் "ராப்துக்சோய்" என அழைக்கப்பட்டனர். ஏனெனில், அவர்கள் தோல் வாரினால் கட்டப்பட்ட பல கழிகளையும் ஒரு கோடரியையும் வைத்திருப்பர். இக்குச்சிகள் அடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இத்தடியால்தான் பவுல் அடிக்கப்பட்டிருப்பார். (2 கொரி 11:25). அவர்கள் வைத்திருந்த கோடரி கொலைத்தண்டனையை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இவை பயன்படாத சமயத்தில் இவை அதிகாரத்தின் அடையாளமாக விளங்கின. நகர நடுவர்களுக்குத் தங்கள் குடிமக்களைக் கொல்லும் அதிகாரம் இல்லை. எனவே அவர்களின் காவலர்கள் (அதாவது பிலிப்பி நாட்டில்) கையில் கோடரி இருக்காது.

தலைமையான உரோமைய நடுவர்களுக்கு இத்தகைய காவலர்கள் பணிவிடை புரிந்தார்கள். இஃது அவர்கள் மக்கள் மீது கொண்டுள்ள குற்றம் தீர்ப்பிடும் தனிப்பட்ட அதிகாரத்தைக் குறிக்கும். நடுவர்கள் வழங்கும் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டியது இக்காவலர்களின் கடமையாகும்.

நடுவர்களோடு செல்லும்போது, இவர்கள் ஒரே மாதிரியான ஆடை உடுத்தியிருப்பர். நகரில் "தோகா" என்ற ஆடை அணிவர். ஆடம்பர நகர் உலா வரும்போது சிவப்பு உடைகளைக் காவலர்கள் அணிந்திருப்பர். துக்க நிகழ்ச்சியின்போது கருப்பு உடை அணிவர். நடுவர்

வருவதைத் தெருக்களில் முன் சென்று அறிவித்து மக்களை நடுவரை வரவேற்கத் தயார்ப்படுத்துவர்.

காவலர்களின் எண்ணிக்கை நடுவரின் அதிகாரத்தைப் பொருத்தது. எ.கா. கி.மு. 300 வரை ஒருவருக்கு 6 காவலர்கள் உண்டு; பின்னர் 12 ஆக்கப்பட்டது. சர்வாதிகாரிக்கு 24-உம், பேரரசருக்கு 24 காவலர்களும் வழங்கப்பட்டனர். பிலிப்பி நகரின் நடுவர்கள் போன்றவர்களுக்கு 2 காவலர்கள் உண்டு.

நகலால் (NAHALAL – தண்ணீர் காட்டும் இடம்)

இது செபுலோனில் உள்ள லேவியர் ஊர் (யோசு 19:15; 21:35). இந்நகரில் வாழ்ந்த கானானியர்களைச் செபுலோன் மக்கள் வெளியேற்ற முடியவில்லை (நீதி 1:30). இந்த இடம் தற்போதைய தெல் என்-நாகல் ஆக இருக்குமெனக் கருதப்படுகிறது. இது கிசோன் ஆற்றுக்கு வடக்கிலும், அக்கோ சமவெளியின் தெற்குக் கோடிக்கு அருகிலும் அமைந்துள்ளது.

நகலியேல் (NAHALIEL – ஏலின் ஓடை)

இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டை நோக்கி வரும் வழியில் தங்கிய இடங்களில் ஒன்று (எண் 21:19). யோர்தானுக்கு அப்பால் மத்தானாவிற்கும், பாமேத்துக்கும் இடையில் இந்த இடம் உள்ளது. இது தற்போதைய வாடி செர்கா மாயின் ஆக இருக்கலாம் என, சிலர் கருதுகின்றனர். இஃது அர்னோனுக்கு வடக்கில் 17 கி.மீ. தொலைவில் சாக்கடலில்ச் சேர்கிறது. வேறு சிலர் இஃது அர்னோன் ஆற்றின் உப ஆறாகிய வாடி வாலாவாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

நகாம் (NAHAM – ஆறுதல், இரக்கம்)

இவர் யூதாவைச் சேர்ந்த ஒதியாவின் மைத்துனன் (1 நாள் 4:19).

நகுசோன், நகசோன் (NAHSHON – பாம்பு)

அம்மினதாபின் புதல்வராகிய நகுசோன் யூதாவின் தலைவர்களில் ஒருவர் (எண் 1:7; 2:3; 7:12.17; 10:14). மோசே பாலைவனத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுக்கும்போது அவருக்கு உதவிய தலைவர்களில் ஒருவர். நகுசோனின் சகோதரியான எலிசபாவை ஆரோன் மணந்துகொண்டார் (யாத் 6:23). இவரது மூதாதையராக, யூதாவுக்கும் தாமாருக்கும் பிறந்த பெரேட்சு கூறப்படுகிறார் (1 நாள் 2:4-10). இவரது வழித்தோன்றலான போவாசு இவரது பேரன். தாவீதும் இவரது வழிவந்தவரே (ரூத் 4:20-22). இயேசுகிறிஸ்துவின் தலைமுறை அட்டவணையில் அவரது மூதாதையாராக நகுசோன் (நகசோன்) குறிப்பிடப்படுகிறார். (மத் 1:4; லூக் 3:32).

நகுபி (NAHUBI – மறைத்து வைக்கப்பட்ட)

நப்தலி கோத்திரத்தில் ஒப்சியின் புதல்வனான நகுபி கானான் நாட்டை உளவுபார்க்க மோசேயால் அனுப்பப்பட்ட பன்னிருவரில் ஒருவர் (எண் 13:14).

நகைகளும் விலையுயர்ந்த கற்களும் (JEWELS AND PRECIOUS STONES)

நகைகளைக் குறிக்க எபிரேய மொழியில் எந்தச் சிறப்பான சொல்லும் இல்லை. சூழ்நிலைக்கேற்ப பொருட்கள், நகைகள், விலையுயர்ந்த கற்கள் என்று அழைக்கப்படுகின்றன. “செய்யப்பட்ட பொருள்” (எசே 16:17) அல்லது, “விலையுயர்ந்த கற்கள் (1 அர 7:9; 10:12) என்று பெயர் சொல்லி நகைகளை விவிலிய வழக்கு குறிக்கின்றது (எ.கா. உ.ச. 5:14; திருவெளி 21:19-20).

அவற்றின் அழகு, நீடித்து இருக்கக்கூடிய தன்மை, பருமன், அருமையாகக் கிடைக்கக் கூடிய தன்மை ஆகியவை நகைகளைச் சொத்துடைமையின் ஓர் இயற்கையான வடிவமாக்கியது. அவற்றை வணிகத்தாலோ (எசே 27:12), கொள்ளையடித்தலோ (எண் 31:50) அடைந்தனர். நகைகள் கொடையாகவும் (1 அர 10:10), உரிமைச் சொத்தாகவும் (2 நாள் 21:3) கொடுக்கப்பட்டன; அரச முடிகளில் பதிக்கப்பட்டன (2 சாமு 12:30); புனித இடத்தையும் (2 நாள் 3:6), குருவின் ஏபோதையும் (யாத் 28:15-21) அலங்கரித்தன; அரச கருவூலத்தில் சேர்த்து

வைக்கப்பட்டன (2 நாள் 32:27); முத்திரை மோதிரம், வளைகாப்பு, கழுத்தணி போன்றவற்றில் கற்கள் பதிக்கப்பட்டன (காண். எசா 3:18-23). நகைகளுக்கு உருண்டையான அல்லது குவி அமைப்புகள் கொடுக்கப்பட்டன. நிறத்தையும் ஒளியையும் சிறப்பித்துக்காட்ட நகைகள் மெருகிடப்பட்டன. கற்களில் உருவங்களும் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டன (யாத் 28:11-12).

தொல்பொருள் ஆய்வுகள், பாலஸ்தீனத்தில் வழக்கிலிருந்த பல்வகை நகைகளையும் விலையுயர்ந்த கற்களையும் வெளிக் கொணர்ந்துள்ளன. இஸ்ராயேலின் சொத்துக்களையும் செழிப்பையும் பற்றிய கூற்றுகள் அவர்களின் அணிகலன்களின் பட்டியலைக் கொடுக்கின்றன (2 சாமு 1:24; எசே 16:1). சில சிறப்பான காலங்களில் பயன்பட்டன (எசா 49:18; எரே 2:23). இவை சாதாரண நாட்களில் அணியப்படலாம் என்றாலும், துக்ககாலத்தில் அணியப்படக்கூடாது (யாத் 33:4-6). இந்நகைகளில் சில மூக்கு, காது, விரல், கை, கணுக்கால் (பழ 25:12; உ.ச. 7:2). கழுத்து, தலை (பழ 1:9; 4:9) ஆகிய பகுதிகளில் அணியப்படும் நகைகளாய்க் கொடுக்கப்படுகின்றன. செல்வந்தர்கள் பயன்படுத்திய நகைகளின் பட்டியலை எசா 3:18:23-இல் காணலாம். திருமணப்பெண்ணின் நகைப்பட்டியலை எசே 16:10-13 கொடுக்கிறது. சிலைகள் கூட நகைகளால் அழகு செய்யப்பட்டன (எசே 16:16-18: எசா 30:22). தனிப்பட்ட நகைகள் பற்றி அந்தந்தத் தலைப்புகளின் கீழ்க் காண்க.

விலையுயர்ந்த கற்களின் பட்டியல்கள் யாத் 28;39; திருவெளி 21-இல் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப்பற்றிய சொற்களிலும் வகைப்படுத்துவதிலும் வேறுபாடுகள் உள்ளதால், இவற்றைத் தெளிவாக அடையாளம் காட்டுவது கடினம். இவை பற்றி அந்தந்தத் தலைப்புகளின் கீழ்க் காண்க.

நகைகளும் விலையுயர்ந்த கற்களும், இறைவனுடைய ஞானத்தின் மகிமையையும் (பழ 3:15), இறையரசையும் (மத் 13:45-46), இறைவனின் மாட்சிமை மிக்க தோற்றத்தையும் (திருவெளி 4:3), புதிய எருசலேமையும் (எசா 54:11-12) விவரிக்க உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குருவின் ஏபோதில் பதிக்கப்பட்டிருக்கும் பன்னிரண்டு கற்கள் பன்னிரண்டு குலங்களைக் குறித்தன (யாத் 28:15-21). அவை அண்டத்தை அடையாளமாகக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளப்பட்டது (ஞான 18:24). புதிய எருசலேமின் அடிக்கற்களாக அமைந்துள்ள பன்னிரண்டு கற்கள் அப்போஸ்தலர்களைக் குறிக்கின்றன. (திருவெளி (21:14.19-20). அதன் முத்துக்கள், பன்னிரண்டு குலத்தவருக்கும் வாக்குறுதி அளிக்கப்பட்டு இப்போது செம்மறியில் நிறைவேறிவிட்ட வீடுபேற்றைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

நகோமி (NAOMI - என் இனியவர், என் இன்பம்)

ரூத் எனும் பழைய ஏற்பாட்டு நூலில் வரும் முக்கிய நபர்களில் ஒருவர் நகோமி. ஒரு பஞ்சகாலத்தில் நகோமியும் அவரது கணவன் எலிமெலக்கு, அவர்களது இரு புதல்வர்களும், பிழைப்பின் பொருட்டு மோவாபுக்குச் சென்றனர். அங்கு இருபுதல்வர்க்கும் திருமணம் நடந்தது. பின்னர் நகோமியின் கணவரும், இரு புதல்வர்களும் இறந்ததால் நகோமி யூதாவிலுள்ள பெத்லகேமுக்குத் திரும்பத் தீர்மானித்தாள். தனது இரு மருமகள்களையும் அவர்களுடைய குடும்பங்களுக்கே திரும்பச் செல்ல வேண்டினாள். ஓர்பா இணங்கினாள்; ஆனால், ரூத் இணங்க மறுத்து நகோமியுடன் பெத்லகேம் வந்தாள் (ரூத் 1:16-17). அப்போழுது அங்கும் பார்லி அறுவடை நடந்து கொண்டிருந்தது. நகோமி தனது விதியை எண்ணித் தனது பெயரைக் 'கசப்பி' என மாற்றி அழைக்குமாறு கூறினாள் (ரூத் 1:20-21).

வயல்வெளியில் சிந்திய கதிர்களைச் சேகரிக்கச் சென்ற ரூத், போவாசின் வயலுக்கு வர நேர்ந்தது.

அங்கு அவரது சிறப்பான கவனத்தைப் பெற்றாள் (ரூத் 2:5; 10-16). போவாசு எலிமெலக்கின் உறவினனானதால் அவனது ஊழியக்காரிகளுடன் சேர்ந்து வேலை செய்வதை நகோமி ஆதரித்தாள். பின் போவாசு இரவில் உறங்குமிடத்துக்குச் சென்று உறவின் திருமுறைப்படி மணம் செய்து தங்களைக் காக்குமாறு வேண்ட ரூத்தை நகோமி அனுப்பினாள். போவாசு, இந்த வேண்டுகோளை ஏற்று அவர்களது சொத்தை மீட்டு, ரூத்தையும் மணம் செய்து கொண்டார். அவர்கட்குப் பிறந்த குழந்தை "நகோமியின் மகனாக" ஏற்றுக்கொள்ளப்பட்டது (4:17). இவ்வாறு எலிமெலக்கின் வாரிசு பாதுகாக்கப்பட்டது; நகோமியின் மனந்தளராமைக்கு வெகுமதி கிடைத்தது. குழந்தை ஓபேது என்றழைக்கப்பட்டது. இவர்தான் தாவீது அரசனின் பாட்டனாவார் (4:22).

நங்கூரம் (ANCHOR)

கப்பலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி வைப்பதற்காகக் கயிற்றுடன் பிணைக்கப்பட்ட கப்பல் துறைக் கருவியாகும் நங்கூரம். பவுல் உரோமைக்குச் செல்லும்போது அவர் சென்ற கப்பல் மால்த்தா தீவினை நெருங்கிய பொழுது நான்கு நங்கூரங்கள் இறக்கப்பட்டதாகக் கூறுகிறார் (அ.ப. 27:29-30.40). மற்றொரு இடத்தில், 'ஆன்மாவின் நங்கூரமாக' நம்பிக்கை உருவகப்படுத்தப்படுகிறது (எபி 6:19). அ.ப. 27:13-இல் "நங்கூரத்தைத் தூக்கி" எனும் ஒரு சொற்றொடர் வருகிறது. இது கப்பலை இயக்கத் தொடங்கும் செயலைக் குறிக்கும் பொதுவான கப்பல் துறைச் சொல்லாகும்.

கப்பலின் முனையிலிருந்து முதலில் கனமான கற்கள் கீழிறக்கப்பட்டு அவையே நங்கூரமாகப் பயன்படுத்தப்பட்டன. கி.மு 650-இல் கொக்கி போன்ற அமைப்பில் மரத்திலான நங்கூரங்களும், கிழக்கு மத்தியதரைக் கடற்பகுதிகளில், நங்கூரங்களுடன் உலோகம் அல்லது கல் போன்ற கனமான பொருட்களை வைத்துக்கட்டி அதனைப் பயன்படுமாறும் செய்தனர். அதன் பிறகே முழுதும் உலோகத்தாலே செய்யப்பட்ட நங்கூரங்கள் வந்தன. பிளினி கி.பி. முதலாம் நூற்றாண்டில் காணப்பட்ட இருவகை நங்கூரங்கள் பற்றிக் கூறுகிறார். ஒன்று வழக்கம் போல் உள்ளது. மற்றொன்று இரு பக்கங்களை உடையது.

நசரேயர் (NAZARENE)

புதிய ஏற்பாட்டுச் சொல்லான இது ஏறக்குறைய இயேசுவை மட்டுமே குறிக்கும் சொல்லாக இருக்கிறது (அ.ப. 25:5-ஐத் தவிர). கிரேக்க வடிவத்தில் "நசரேனோஸ்", "நசராயியோஸ்" எனும் இரு சொற்கள் வருகின்றன. மாற்கு முதற் சொல்லையும், ஏனைய மூவரும் இரண்டாவது சொல்லையும் பயன்படுத்துகின்றனர் (லூக் 4:34; 24:19). ஆனால் இரு சொற்களிடையேயும் பொருளில் குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் இல்லை எனலாம். புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இயேசுவின் இப்பெயர், இயேசு நாசரேத்திலிருந்து வந்ததால் கூறப்பட்டதாகும் என்பர் (மத் 2:23); எனவே, நாசரேத்திலிருந்து வந்த ஒருவர் என்பதே சரி (மத் 21:11; மாற் 1:9; யோவா 1:45; அ.ப. 10:38). மத் 2:23 சுட்டும் இறைவாக்கை அடையாளம் காணமுடியவில்லை எனலாம்.

நகரேயர் என்ற சொல், நசீர் என்ற சொல்லோடு நெருங்கிய தொடர்புடையதாகத் தெரிகிறது. மத்தேயு குறிப்பிடும் இறைவாக்கு நீதி 13:3-7 என்ற பகுதிதான் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். ஆனால், புதிய ஏற்பாட்டில் இயேசு ஒரு நசீர் என்று குறிக்கப்படவே இல்லை. அவர் முடியை வெட்டிக்கொண்டதாக எக்குறிப்பும் இல்லை. ஆனால், அவர் பிணத்தைத் தொட்டார் (மத் 9:18-25), திராட்சைரசம் அருந்தினார் (26:26-29; லூக் 7:34). இவ்விரண்டும் நசீர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தன. சொல்லிலக்கணப்படி நசரேயர் நசீரோடு தொடர்புடையதாகத் தோன்றினாலும், நசரேயரான இயேசுவின் செயல்கள் இத்தொடர்பை மறுக்கின்றன.

அ.ப. 24:5-இல் உள்ளபடி, இயேசுகிறிஸ்து மட்டுமன்று, கிறிஸ்தவர்களும் நசரேயோர்கள் என அழைக்கப்படுகின்றனர். அப்படியென்றால் அவர்களும் நாசரேத்திலிருந்து வந்தவர்களெனக் கூறமுடியுமா? ஆனால் இதனை ஆழ்ந்து கவனிக்கும்பொழுது குற்றம்சாட்டும் யூதர் நசரேயர்கள் என ஒரு குழுவைப் பிரித்துக் குறிப்பிடுகின்றார். மேலும் கிறிஸ்தவர்களை இழிவுபடுத்தி அழைப்பதற்கே யூதர்கள் இச்சொல்லைப் பயன்படுத்தினர். இச்சொல்லில் மற்றொரு பொருளும் அடங்கியுள்ளது. அதாவது முன்னரே யூதரில் கொள்கை வேறுபாடுடைய ஒருபிரிவினர், இப்பெயரால்அழைக்கப்பட்டனர். இதனையே பின்னர்க் கிறிஸ்தவர்கட்குப் பயன்படுத்தினர். யூதர்கள் தங்கள் செபக்கூட வழிபாட்டின் இறுதியில் பயன்படுத்திய 18ஆசீர்களில் 12-ஆவது நசரேயர்களைச் சபிக்கிறது. இது கிறிஸ்தவர்களைக் குறித்தது எனலாம்.

கிறிஸ்துவுக்கு முந்திய மண்டேயர் என்ற ஞானவாதக் குழுவினர் "கடைப்பிடிப்பவர்கள்" என்ற பொருளில் தங்களை நசரேயர் என்று அழைத்துக்கொண்டார். எப்பிபானியு என்பவர் யூதக்கிறிஸ்தவர்கட்கும், கிறிஸ்தவர்கட்கு முந்திய ஒரு யூதக்குழுவிற்குமான வேற்றுமையைக் காட்டுகிறார். அப்படி ஒரு வேறுபட்ட யூதப்பிரிவிருந்தது உண்மையெனில், இயேசுகிறிஸ்துவும் அவரைப்பற்றிய கிறிஸ்தவர்களும் "கடைப்பிடிப்பவர்கள்" என்ற பொருளில் நசரேயர்கள் என அழைக்கப்பட்டது சரியே.

நசரேயர்களின் நற்செய்தி (NAZARENES, GOSPEL OF THE)

இது திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த மத்தேயு நற்செய்தி நூலின் பொழிப்புரை அல்லது விளக்கவுரையாகும். இந்த யூதக்கிறிஸ்தவ நற்செய்திநூல் எபிரேயர்களின் நற்செய்தி நூலோடு குழப்பப்பட்டிருக்கிறது; மேலும்,மத்தேயு நற்செய்தியின் மூல எபிரேய வடிவாகத் தவறாக அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது. இந்நூல் திருமுறையைச் சேர்ந்த கிரேக்க மத்தேயு நற்செய்தியின் அரமேயிக்கு மொழிபெயர்ப்பே ஆகும் என்று அறிஞர்கள் இப்போது ஏற்றுக்கொள்வர். எரோனிமு தாம் முதலில் "எபிரேயர்கள் எழுதிய நற்செய்தியை" மொழிபெயர்த்ததாக நிருபிக்க முடியாத உரிமை கொண்டாடுவதும் அவர் அப்பொல்லோனாரிசிலிருந்து எடுத்துக்காட்டுகள் காட்டுவதும், இந்நூலுக்கும் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த மத்தேயு எழுதிய நற்செய்தி நூலுக்கும், எபிரேயர்கள் எழுதிய மற்றொரு யூதக்கிறிஸ்தவ நற்செய்தி நூலுக்கும் இடையே குழப்பம் உருவாகி வளர்வதற்கு உதவின.

திருமுறை மத்தேயுவின் அரமேயிக்கு மொழிபெயர்ப்பாக இருப்பதால், இது முன்னதற்குப் பிந்தியதாக இருக்க வேண்டும். இந்நூலைக் கெகேசிப்பு (கி.பி. 180) முதில் குறிப்பிடுகிறார். ஆகவே அவர் காலத்திற்கு முன்பே, 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நூல் தோன்றியிருக்கவேண்டும். இது வட சீரியாவில் எழுதப்பட்டிருக்கலாம். இது விவிலியத் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த நூலன்று.

நசீர் (NAZARITE - திருநிலைப்படுத்தப் பட்டவர், பிரிந்திருப்பவர்)

இறைவனுக்கெனவோ, வேறு குறிக்கோளுக்கெனவோ தம்மையே அர்ப்பணிப் பேன் என்பது போன்ற வாக்குக் கொடுக்கும் ஒருவரே இப்பெயரால் அழைக்கப்படுகிறார். இது சமய அளவில் பயன்படுத்தப்படும் மொழியாகும். சிம்சோன் நசீர் எனப்படுகிறார் (நீதி 13:5.7; 16:17). இதில் வலியுறுத்தப்படுவது இவ்வாறு நசீராக இருப்பவர் தலைமேல் கத்தி படலாகாது என்பதே. தாடியையும் மழித்தல் ஆகாது. சிம்சோனின் தாய் மதுவோ, அசுத்தமான உணவோ உண்ணக்கூடாது. ஏனெனில் சிம்சோன் ஒரு நசீர் என்பதால் (ஆண்டவருக்கென

ஒப்புக்கொடுக்கப்பட்டவனாதலால்) அவர் தாய் கருவுற்றிருக்கும்போது இவையெல்லாம் உண்ணக்கூடாது என ஆண்டவரால் கூறப்பட்டது.

ஆமோஸ் (2:11) இறைவாக்கினர் நசீர்களை மது அருந்த வைத்ததைக் கண்டிக்கிறார். நசீர்கள் பற்றி 1 மக் 3:49-இல் கூறப்படுகிறது. பவுலும் இத்தகையதொரு வார்த்தைப்பாடு எடுத்ததால்தான் பிறகு தமது முடியை வெட்டிக்கொண்டார் (அ.ப. 18:18). தன்னோடு வந்த நால்வரையும் முடிவெட்டச் செய்து சுத்திகரிப்புச் சடங்குகளிலும் பங்கு பெறச்செய்தார். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, இந்த நசீர்வார்த்தைப்பாடு தற்காலிகமானதுதான் என்று தெரிகிறது. எண்-6 இந்த வாக்குறுதி ஆணாலோ, பெண்ணாலோ எடுக்கப்படலாம் என்று கூறுகிறது. இவ்வாக்குறுதி மதுபானம் அருந்துவதையும், கத்திகொண்டு மழித்தலையும், இறந்தவர்களோடு தொடர்பு கொள்வதையும் தடுக்கிறது. வாக்குறுதியின் காலம் முடிந்தபின் அதைக்கொடுத்தவர் தம் தலைமுடியை வெட்டி அதனைப் பீடத்திலே எரிக்கச்செய்கிறார்; அங்குப் பலிப்பொருள்களையும் சொடுக்கின்றார். இவ்வாக்குக் கொடுப்பதற்கான எந்நோக்கமும் கொடுக்கப்படவில்லை; ஆனால், இது கடவுட்பற்றால் விரும்பிச்செய்யப்படும் ஒன்று என்பது தெரிகிறது.

நச்சுப்பாம்பு (ADDER, ASP)

பாலஸ்தீனத்தில், பொதுவாக மேற்காசியாவில், பலவகைப்பாம்புகள் உண்டு. சில நஞ்சுடையவை யாகவும் மற்றவை நஞ்சில்லாதவைகளாகவும் இருந்தன. ஆனால் விவிலியத்தில், நஞ்சுள்ள பாம்புகளே குறிக்கப்படுகின்றன. பெரும்பாலும் இவை விரியன் பாம்பு என்று மொழிபெயர்க்கப் படுகின்றன. ஆனால் பலவகையான பாம்புகளைக் குறிக்கும் எபிரேயச் சொற்களை வைத்துப் பாம்புகளை வகைப்படுத்துதல் சரியன்று. ஏனெனில் பாம்புகள் வெளிப்படுத்தும் "உஸ்" என்ற ஒலியை வைத்தே எபிரேயர்கள் பாம்புகளை வேறுபடுத்தியதாகத் தெரிகிறது.

இலக்கியத்தில் இந்த நச்சுப்பாம்புகள் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எதிரியின் "இரசம் பாம்பின் நஞ்சு போன்றது; விரியன் பாம்பின் கொடிய நஞ்சு போன்றது" (உப 32:33); தீயவனின் "வயிற்றிலே அவன் உணவு மாற்றமடைந்து அவனுக்குள் விரியன் பாம்பின் நஞ்சாகிவிடும்" (யோபு 20:14); இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வு கொண்டிராதவர்களின் "உதட்டில் பாம்பின் நஞ்சுள்ளது" (உரோ 3:13); தீயவன் "விரியன் பாம்பின் நஞ்சை உறிஞ்சுவான்" (யோபு 20:16); அமைதியின் புதிய காலத்தில் "பால்குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும்" (எசா 11:8).

நஞ்சு (POISON)

பழைய ஏற்பாட்டில் இதற்குப் பயன் படுத்தப்பட்ட பல சொற்களை ஆராய்ந்தால், பொதுவாக ஒரு பொருள் தெளிவுபடும். நஞ்சுள்ள கசப்பான செடி என்பதே அப்பொருள். இஃது இஸ்ராயேலின் பாவத்திற்கும் பாவப்பழக்கத்திற்கும் உருவகமாகக் கூறப்பட்டுள்ளது (உப 29:17; 32:32; சங் 69:21; புல3:5.19; ஒசே 10:4; ஆமோ 6:12). எரேமியா (எரே 8:14; 9:14; 23:15) யாவே தரும் நஞ்சு கலந்த கசப்பான நீரைப் போற்றிப் பேசுகிறார். இதுவும் உருவகமாகப் பயன்பட்டதாக இருக்கலாம். அல்லது இஃது அந்நாட்டில் ஏற்படும் கொடும் வறட்சியையும் குறிக்கலாம். இந்த நஞ்சு என்பது விரியன் பாம்பின் நஞ்சு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது (யோபு 20:16).

பழைய ஏற்பாட்டில் நேரடியாக வேறு எந்த நஞ்சுச் செடியும் குறிப்பிடப்படவில்லை. 2 அர 4:38-41-இல் வரும் கும்மட்டிக் காய்கள் கொல்லக்கூடிய நஞ்சு உள்ளவை அன்று. மாறாகப் பேதி உண்டாக்கக்கூடிய அதிகக் கசப்பு நிறைந்த காய்கள் எனக் கூறலாம்.

ஊர்ந்து செல்லும், கொடிய நஞ்சு நிறைந்த பிராணிகள் பற்றி அடிக்கடி கூறப்பட்டுள்ளது. இதைக் குறிக்கும் எபிரேய மூலச் சொல்லுக்குக்

'கொடிய,' 'எரிக்கும்,' 'கோபமான' என்று பொருள் கொள்ளலாம். இதற்கு நஞ்சு எனவும் பொருள் கூறலாம் (உப 32:24.33; சங் 58:4; 140:3). அம்புகளின் நஞ்சைப் பற்றிக் கூறவும், இதே சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது (யோபு 6:6).

ஊர்வனவற்றில் நஞ்சு மிக்கனவாகக் கருதப்பட்ட பிராணிகள் பின்வருமாறு: கட்டுவிரியன் பாம்பு (யோபு 20:16; எசா 30:6; 59:5), பாம்பு (பழங்காலத்தில் பாம்பு என்பது புராணத்தில் வரும் வேதாளத்தைக் குறிக்கவும் முதலைகளைக் குறிக்கவும் பயன்படுத்தினார்கள். காண். ஆதி 3:1-4; எண் 21:9; உப 8:15; ஆமோ 5:19; 9:3), தேள் (உப 8:15; எசே 2:6), கொடிய விரியன் பாம்பு (உப 32:33; யோபு 20:14.16; சங் 58:4; 91:13; எசா 11:8; *சீரா* 39:30), விரியன் பாம்பின் குட்டி (பழ 23:32; எசா 11:8; 14:29; 59:5 எரே 8:17), பாம்பு (ஆதி 49:17), வேதாளம், பாம்பு (யாத் 7:9; உப 32:33; சங் 91:13) என்பன.

புதிய ஏற்பாட்டில், இச்சொல் உரோ 3:13-இல் காணப்படுகிறது (இது சங் 140:3-இன் மேற்கோள்; யாக் 3:8).

பாவத்தின் கொடிய விளைவையும், இறைவனுக்கு எதிராக எழும் நாட்டின் அழிவையும், பாவிகள் மேல் இறைவன் அளிக்கவிருக்கும் நியாயத் தீர்ப்பையும் உருவகப்படுத்தும் முறையில்தான் நஞ்சு என்ற இந்தச்சொல் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நஞ்சு மிக்க பிராணிகளைப் பற்றிய பயம் பழங்காலத்தில் மக்களிடையே பரவி இருந்தது. பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்களுக்கே உரிய விதத்தில் நஞ்சுப்பொருள்கள் மற்றும் அவற்றின் விளைவுகளை மக்களிடையே இறைவன் ஆற்றிய செயல்களோடு தொடர்புபடுத்தியுள்ளனர்.

நடனமாடுதல் (DANCING)

உடல்நலம் மற்றும் உள்ள மகிழ்ச்சி மிகுதியில் தயாரிக்கப்பட்ட கூத்துகளில் அல்லது, இறைவன்முன் பக்தியுள்ள மகிழ்ச்சி மிகுதியில் ஒத்திசைந்த மற்றும் சந்தம் பொருந்திய விதத்தில் உடலை அசைத்து ஆடுவதாகும் நடனம். எல்லாப் பழங்கால மதங்களிலும் இருந்தது போன்று, இஸ்ராயேலர் வாழ்விலும் வழிபாட்டிலும் நடனம் இடம் பெற்றிருந்தது.

பழைய ஏற்பாட்டில், நடனத்தை விவரிக்கும் சொற்கள் உடலியக்கத்தின் வேறுபாடுகளைக் குறிப்பிடுகின்றன. "அவர்தம் குழந்தைகள் குதித்தாடுவர்" (யோபு 21:11). "தாவீது தன் முழுவலிமையோடு ஆண்டவர் முன்பாக நடனமாடினார்... குதித்து ஆடினார்" (2 சாமு 6:14:16). இறைவன் புலம்பலைக் களிநடனமாக மாற்றுகிறார் (சங் 30:11). மக்கள் நடனம் செய்து இறைவனைப் போற்றினர் (சங் 149:3; 150:4). மத்தளம் கொட்டி, யாழிசைத்து, குழல் ஊதி, நடனம் ஆடினர். நடனம் நயமிக்கதாயும் அழகாயும் அமையக்கூடும். சில வேளைகளில் சிலைவழிபாடாகவும் மாறக்கூடும் (யாத் 32:19). சில சமயங்களில் சிரிப்பு, போட்டி, நகைச்சுவை போன்றவையும் நடனத்தில் இடம் பெற்றன (நீத் 16:25ச 1 சாமு 18:7). இவை ஆண்டவர் முன்னும் நடைபெற்றன (2 சமு 6:5. 21; 1 நாள் 13:8; 15:29). சில சமயங்களில் போரில் வெற்றி கொண்டு நாடு திரும்பிய அரசனை மக்கள் நடனமாடி வரவேற்றுச் சிறப்பித்தனர் (நீதி 11:34; 1 சாமு 18:6). திராட்சை அறுவடைக்குப்பின் மக்கள் மகிழ்ச்சி மிகுதியால் நடனமாடினர் (நீதி 21:21; எரே 31:4).

இஸ்ராயேலரின் நடனத்தில் பெரும்பாலும் பெண்கள் குழுவாகக் கலந்துகொண்டனர். இசையின் இனிமை நடனத்திற்கு மெருகூட்டியது.கஞ்சிராவையும், மத்தளத்தையும் கொட்டிக்கொண்டு நடனமாடுவது அடிக்கடி குறிக்கப்படுகிறது (யாத் 15:20; சங் 149; 150). விழாக்காலங்களில் நடனம் முக்கிய இடம் பெற்றது.

புதிய ஏற்பாட்டில் ஏரோதியாளின் மகள் சலோமி ஏரோது அந்திப்பாவின் பிறந்த நாளில் அவனைக்

கௌரவிக்க ஆடிய நடனம் கிரேக்கப் பண்பாட்டைச் சார்ந்தது. இதுவே திருமுழுக்கு யோவானின் தலை வெட்டப்படுவதற்குச் சூழ்நிலையை உருவாக்கித்தந்தது (மத் 14:6; மாற் 6:22). காணாமற்போன மகன் உவமையில் மூத்த மகன் வயலிலிருந்து திரும்பி வீட்டை நெருங்கியபோது, ஆடல்பாடல்களைக் கேட்டான் (லூக் 15:25). தெருக்களில் நடனமாடியும் பாடியும் திரியும் குழந்தைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (மத் 11:12தொ; லூக் 7:32).

நடுக்கூடம் (NAVE)

ஆலயத்தின் முன் மண்டபத்திற்கும் உள் அறைக்கும் (திருத்தூயகம்) இடையிலுள்ள முக்கிய அறை அல்லது மைய அறை (தூயகம்) ஆகும் (1 அர 6:3; 7:50; 2 நாள் 3:4-5.13; 4:22; எசே 41). இது கிறிஸ்தவ ஆலயங்களில் நடுக்கூடமாகும்.

நடுங்கவைக்கும் தீட்டு, பாழாக்கும் அருவருப்பு, கொடும்பாவச் செயல் (DESOLA-TING SACRI-LEGE)

இது புனிதத்தன்மையைக் கெடுக்கும்படியாகச் செய்யும் அருவருப்புச் செயலாகும் (மாற் 13:14; மத் 24:15; லூக் 16:15; திருவெளி 17:4.5; 21:27).

மத் 24:15; மாற் 13:14-இல் உள்ளதைப் போலவே, தானி 12:11-இலும் (சிறிய மாற்றங்களுடன் தானி 9:27; 11:31) இந்த அருவருப்புச் செயல் குறிக்கப்பட்டுள்ளது. தானியேல் ஆகமத்திலே இந்தப் பாழாக்கும் அருவருப்பு, நான்காம் அந்தியோக்கு எப்பிபான் எருசேலம் தேவாலயத்தில் நிறுவிய பலிபீடத்தைக் குறிக்கிறது. இதன் காரணமாக யூதர்கள் கோவிலில் இறைவனை வழிபட இயலவில்லை (1 மக் 1:54; 2 மக் 6:1-2).

மாற் 13:14-உம், இதற்கு இணையான மத்தேயு வசனமும் அந்தியோக்கு எப்பிபானின் அருவருப்புச் செயலைக் குறிப்பிடவில்லை. இதைப்பற்றிய விளக்கங்கள் பல உள்ளன.

அ) பொதுவாக இந்த நடுங்கவைக்கும் தீட்டு அல்லது 'பாழாக்கும் அருவருப்பு' கலிகுலா பேரரசர் தமது சிலையை கி.பி. 40-இல் எருசலேமில் வைக்க இருந்த திட்டத்தைக் குறிப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் இஃது ஏற்றுக்கொள்ளப்பட இயலாதது. ஏனெனில், கலிகுலா கி.பி. 41-இல் கொலை செய்யப்பட்டான். மேலும் மாற் 13:14 திடீரென வரும் ஆபத்தைக் குறிக்கிறதே தவிர நிதானமாகச் சிலை வைப்பதைக் குறிக்கவில்லை.

ஆ) இஃது எதிர்க்கிறிஸ்துவை, அக்கிரமமே உருவான மனிதனைக் குறிப்பதாகச் சிலர் கூறுகின்றனர் (2 தெச 2:3-10; திருவெளி 12:19-20).இதற்குப் பல எதிர்ப்புகள் உள்ளன.

இ) சிலர், இஃது உரோமையர் யூதாவின் மேல் படையெடுத்து எருசலேம் ஆலயத்தை அழித்ததைக் (கி.பி. 66-73) குறிக்கலாம் எனக் கூறுகின்றனர். 'நிற்கக்கூடாத இடத்தில் அது நிற்கும்' (மாற் 13:14)என்பது போரைக் குறிக்கவில்லை.

ஈ) மாற்கு எந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியையும் மனதில் கொள்ளாது எதிர்காலத்தில் நிகழும் ஒரு பாபச்செயலைக் குறிப்பிடுகிறார்.

நடுமுற்றம், நடுப்பகுதி (MIDDLE COURT)

எருசலேம் ஆலயத்திற்கும் அரச அரண்மனைக்கும் இடைப்பட்ட பகுதி அல்லது வளாகம் (2 அர 20:4). ஒருவேளை அரசன் தங்கியிருந்த அரண்மனை கட்டப்பட்டிருந்த முற்றமாக இருக்கலாம் (1 அர 7:8).

நடுவர் (MAGISTRATE, UMPIRE)

இச்சொல் அ.ப. 16-ஆம் அதிகாரத்தில் ஐந்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (16:20.22.35-36.38); அதுவும் பன்மையில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இஃது உரோமைக் காலனியான பிலிப்பி நகரின் மிக உயர்ந்த அலுவலர்களைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். இதன் மூல கிரேக்கச் சொல் பரந்தபொருளில் பயன்பட்டுள்ளது. இது படைத்தலைவனையோ, நகரத் தலைவனையோ குறிப்பிடலாம். ஏதன்சு நகரில் தரைப் படையையும்,

கடல்படையையும் முன்னின்று நடத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அலுவலர்களுக்கும் இதே பட்டம்தான் கொடுக்கப்பட்டது.

சிறிய ஆசியா மற்றும் கிரேக்க மாநிலங்களின் தலைவர்களையும், உரோமானிய எகிப்தில் படைத்தலைவர்களையும், ஆளுநர்களையும், உரோமைக் குடியிருப்புத் தலைவர்களையும் குறிப்பிடுவதற்கு இதே சொல் பயன்படுத்தப்பட்டது. இச்சொல், பலவகை அலுவலர்களுக்கும் பயன் படுத்தப்பட்டது என்ற உண்மையை, அப்போஸ்தலர் பணி நூலை நன்கு படிப்பதன் மூலம் நாம் அறியலாம்.

உரோமைக்குட்பட்ட நகர்களில் நடுவர் என்ற சொல், சாதாரணமாக ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த அலுவலர்களைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டது. அப்போது, மூன்று, நான்கு, ஐந்து, பத்து, பன்னிரண்டு என்ற எண்ணிக்கையில் நடுவர்கள் குழு இருந்திருக்கலாம். இக்குழு சமூகக்காரியங்களைக் கவனித்து வந்தது. நகரத்தலைவர்கள் (16:19), நடுவர்கள் என்ற இருசொல்லும் உரோமைப்பேரரசர்கள் அல்லது உரோமை அதிகாரிகள் மக்களுக்கு அனுப்பிய மடல்களில் காணப்படுகின்றன. இதிலிருந்து நகரத்தலைவர்கள் என்பது ஆட்சிக் குழுவைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல்லாகும் என்று கருதலாம். அனேகமாக புனித லூக்கா ஆளும் தலைவர்கள், நடுவர்கள் இருவரையும் தனித்தனியாக வேறுபடுத்தியிருக்க மாட்டார் என்று தெரிகிறது (லூக் 16:19).

நடுவர் குழுவானது, மக்கள் சமுதாயங்களை ஆட்சி செய்வதில் ஈடுபட்டது. அவர்கள் பொது நிதி, மக்கள் குழுவின் செயல் முறைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். சட்டத்தை மீறியவர்களைத் தண்டித்தனர். சில சமயங்களில் இந்தக் குழுவினரின் பெயர்கள், நகரங்களில் வெளியிடப்பட்ட வெண்கல நாணயங்களில் 'இடம் பெற்றன. சட்ட ஒழுங்குகளைக் காக்க வேண்டிய கடமையையும், பொறுப்பையும் பெற்றிருந்தனர். சிமிர்னா நகரில் ஒரு நடுவர் குழு நியமிக்கப்பட்டு எதிரிகளை அடக்குவதற்கான படைக்கருவிகளைக் கண்காணிக்கும் பொறுப்பும் அளிக்கப்பட்டிருந்தது.

லூக்கா, நடுவர் என்ற சொல்லின் மூலம் எதைக் குறிப்பிடுகிறார் என்று தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், இச்சொல்லின் மூலம் அவர் வரலாற்றுச் சூழ்நிலையைத் துல்லியமாகப் பிரதிபலிக்கிறாரா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இந்தக் கிரேக்கச் சொல்லுக்கு இணையாகப் 'பிரேத்தோர்' என்ற இலத்தீன் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உரோமைக் குடியிருப்பு அலுவலர்களைக் குறிப்பிட "துஉம்வீரி" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பிரேத்தோர் என்பதைவிடச் சற்றுக் குறைவான பொருளைக் கொண்டது.

லூக்கா பிலிப்பியத் தலைவர்களைக் குறிப்பிடுவதற்காக இந்த நடுவர் என்ற பொதுச் சொல்லைப் பயன்படுத்தினார். இதற்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள பிரேத்தோர் என்ற இலத்தீன் சொல் சற்றுக் குறைவான பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. லூக்கா எழுதியது கிரேக்கர்களுக்கே என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இந்தத் தலைவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடாததால் இந்த எண்ணிக்கை இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்டதாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே எழும் போராட்டங்களைத் தீர்த்து வைக்க ஒரு நடுவர் இல்லையே என்று யோபு ஏங்குகிறார் (யோபு 9:33). இந்நடுவர் தீர்ப்புக் கூறவல்லவராகவும் சமரசம் செய்பவராகவும் கருதப்படுவதாகத் தெரிகிறது. ஆனால், இரண்டையும் செய்பவர் இறைவன் மட்டுந்தானே!

நடுவாயில் (MIDDLE GATE)

எருசலேம் சுவரில் அமைந்திருந்த ஒரு வாயில். ஒருவேளை இது நகருக்குள்ளே

அமைந்திருந்திருக்கலாம். சாதாரணமாய் இஃது எப்பிராயிம் வாயில் என்று அடையாளம் காட்டப்படும் (எரே 39:3).

நண்பன் (FRIEND)

1. ஒருவர் யாரோடு அன்பிலும் அர்ப்பணிப்பிலும் பங்கு கொள்கிறாரோ, அவர் மற்றொருவருடைய நண்பன் எனப்படுவார். சொல் அடிப்படையில் இது சாதாரண அறிமுகத்திலிருந்து (காண்க. மத் 5:25; 20:13; யோபு 2:11) நெருங்கிய பிணைப்பு வரை (2 சாமு 15:37; காண்க: 1 சாமு 18:1) பல வகைப்படும்.

கலைச்சொல்லாக, நண்பன் என்பது நம்பிக்கைக்குரிய நிலையைக் கொண்டிருப்பவரை, பெரும்பாலும் நெருங்கிய தொடர்புடையவரைக் குறிக்கும். இவ்வாறு, திருமணத்தை ஒழுங்குபடுத்தித் தலைமை தாங்குபவர் "மணமகனின் நண்பர்" எனப்பட்டார் (நீதி 14:20; 15:2). யோவா 3:29; காண்க. 2 கொரி 11:2). அரசவையில் "அரசனின் நண்பன்" ஒரு முக்கிய அதிகாரியாவர். இவர் நம்பத்தகுந்த ஆலோசகராகவும் நெருங்கிய தோழராகவும் விளங்கினார் (1 அர 4:5; 1 நாள் 27:33; காண்க: ஆதி 26:26; 2 சாமு 15:37; 16:16). மக்கபேயர்கள் காலத்தில் இத்தகையவர்கள் ஒரு தனிப்பட்ட, சலுகைகள் பெற்ற குழுவாகத் திகழ்ந்தனர் (1 மக் 2:18; 3:38; 6:10). இவர்களிடையே பல வகையுண்டு (10:65).

2. "எப்போதும் அன்பு செய்து" (பழ 17:17) வாழ்வை இனிமையாக்குவதால் (சங் 133; பழ 15:17) "நம்பிக்கையுள்ள நண்பனுக்கு ஈடு இணை ஏதும் இல்லை" (சீரா 6;15-16; 7:18). தாவீதையும் யோனத்தானையும் ஒன்றிணைத்த வியக்க வைத்த நட்பை எவ்வாறு மறக்க முடியும் (1 சாமு 18:1-4)? அது மரணம்வரை (2 சாமு 1:25-26) சோதனையில் நிலைத்திருந்து (1 சாமு 19-20), இதயத்தின் நினைவில் நீடித்திருந்தது (2 சாமு 9:1; 21:7).

இத்தகைய நட்புறவுகள் உள்ள அதே வேளையில் மாயத்தோற்றமுடைய நட்புறவுகளும் உள்ளன. செல்வர்கள் எண்ணற்ற நண்பர்களைக் கொண்டிருக்கும் வேளையில், ஏழைகள், நோயாளிகள் மற்றும் துன்புறுத்தப்படுவோர் வெகு சிலரையே நண்பர்களாகக் கொண்டிருப்பதேன் (பழ 14:20; சங் 38:12; 55:13-14; 88:19; 109:4-5; யோபு 19:19)? "என் உணவை உண்டவன் எனக்கு இரண்டகமாகத் தன் குதிக்காலைத் தூக்குவதேன்?" (சங் 4:9). இத்தகைய சோகமான அனுபவங்கள், சில நேரங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமளவிற்குத் தங்களது நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் தெளிந்த மனதினராய் இருக்குமாறு மனிதருக்குக் கற்பிக்கின்றன (சீரா 6:5-13; 12:8-13:23; 37:1-5). உண்மையானதாயினும் (யோபு 2:12-13), நட்பானது ஏமாற்றுவதாகவும் (யோபு 6:15-30), ஒருவனைத் தீமைக்கு இழுக்கக் கூடியதாகவும் இருக்க இயலாதா (உப 13:7; சீரா 12:14; 2 சாமு 13:3-15)?

இவ்வாறாக, நட்புறவானது காலம் ஆக ஆக வலுவடைகிறது. "புதிய மதுவைப் போலவே புதிய நண்பனும். அது நாள் ஆக ஆகத்தான் நீ சுவைத்துக் களிப்பாய்" (சீரா 9:10). நட்பானது வெளிப்படையான கண்டிப்பைப் பாராட்டுகிறது (பழ 27:5-6). நட்பானது சிறப்பாக இறைபயத்தினால் ஊட்டம் பெறுகிறது; "கடவுளுக்கு அஞ்சுபவர்களே முறையான நட்பு உடையவர்கள். அவர்களைப் போலவே அவரை அடுத்தவர்களும் இருப்பார்கள்" (சீரா 6:17). உண்மையில் உண்மையான நட்பினுடைய ஊற்றாகவும், மாதிரியாகவும் இருப்பது, ஆபிரகாம் (எசா 41:8; ஆதி 18:17-19), மோசே (யாத் 33:11), இறைவாக்கினர்கள் (ஆமோ 3:7) ஆகிய மனிதருடன் இறைவன் முத்திரையிடுகின்ற நட்பேயாம்.

3. தமது மகனை நம்மிடையே அனுப்பியதன் மூலம், "மனிதரின் நண்பனாக" இறைவன் தன்னைக் காட்டியுள்ளார் (தீத் 3:4). விடாப்பிடியான நண்பனால் தொந்தரவுபடுத்தப்பட்ட தன்னை அனுமதிக்கின்ற

நண்பனாக இயேசு தம்மைக் காட்டுகின்றார் (லூக் 11:5-8). சிறப்பாக, இயேசு இந்த நட்பிற்கு ஊனுடலின் வடிவை அளித்துள்ளார். பணக்கார வாலிபனை அவர் அன்பு செய்தார் (மாற் 10:21). அவர் உணர்ச்சிப்பெருக்கோடு இலாசரை அன்பு செய்தார்; அவனில், விசுவாசத்தினால் கல்லறையினின்று எழவேண்டிய அனைவரையும் அவர் அன்பு செய்கிறார் (யோவா 11:3.11.35-36). அவரது வாழ்வில் பங்கு கொண்ட சில "தோழர்களை" அவர் கொண்டிருந்தாலும் (மாற் 3:14), அவர்கள் அனைவருமே அவரது நண்பர்களாகிடவில்லை. இவ்வாறே, யூதாஸ் இன்னமும் தோழன் என அழைக்கப்பட்டாலும் (மத் 26:50;20:13; 22:12), மற்றவர்களை நோக்கி "உங்களை நான் இனி ஊழியர் என்று சொல்லேன்; உங்களை நண்பர்கள் என்றேன்" என்று இயேசு அறிவிக்கிறார் (யோவா 15:15). அவர்கள் அவரது சோதனைகளில் பங்கேற்றனர். பாடுகளின் இரவை எதிர்கொள்ளவும் அவர்கள் தயாராக இருந்தனர் (லூக் 22:28-29). நண்பர் களிடையே செய்வது போன்று இயேசு அவர்களிடையே தமது தந்தையின் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்கிறார் (யோவா 15:15). சிலுவை வரை பிரமாணிக்கமாக இருந்த இயேசுவினுடைய நண்பனுடைய மாதிரியே, இயேசு "அன்பு செய்தவரும்" (யோவா 13:23), தம்முடைய தாயிடமே ஒப்படைத்தவருமான சீடராவார் (19:26).

தம்முடைய நண்பர்களாக இருக்குமாறு ஆண்டவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், ஒருவருக்கொருவர் நட்பினால் பிணைக்கப்பட்டிருப்பதைத் தவிர்க்க முடியாது. ஆனாலும், சில கொந்தளிப்பான தருணங்களும் எழும். சான்றாக, பல வலிமையான பிணைப்புகளால் தமது சகோதரர்களுடன் பிணைக்கப்பட்டும் (உரோ 16:1-16), அவர்களுடன் எதையும் செய்வதற்கு ஆர்வம் உடையவராகவும் உள்ள பவுல் (1 தெச 2:7-8; 2 கொரி 11:28-29), பர்னபா (அ.ப.15:36-39) மற்றும் பேதுரு ஆகியோருடனும் கூட (கலா 2:11-14) தனது நட்பில் கடும் இடர்களை அனுபவிக்கிறார். மேலும் தமது வாழ்வின் இறுதியில், எல்லா நட்பையும் இழந்து தனிமையை உணரப்போகிறார் (2 திமோ 4:9-14). இத்தகைய இடையூறுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அவரைப் பின் பற்றுகிறவர்களுக்கிடையிலான சகோதர அன்பானது ஆண்டவரது சித்தமே (யோவா 15:2-3) என்ற உறுதிப்பாடு அங்கே உள்ளது. ஆதிகிறிஸ்தவ சமுதாயத்தில் நிலவிய நட்புறவின் காட்சி (அ.ப. 2:44-45;4:32) கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டான மாதிரியாகவும், வலிமையின் ஆதாரமாகவும் உள்ளது.

4. **மணமகனின் நண்பன்:** இஸ்ராயேலின் திருமண நடவடிக்கைகளில் மணமகனுடைய நண்பனின் பிரசன்னம் தேவையாக உள்ளது. திருமணச் சந்திப்பைத் தயாரிப்பதும், இளம் பெண்ணை அவளுக்குரிய மணமகனிடம் அளிக்கின்ற திருமணகாலம்வரை இளம் தம்பதிகளுக்கிடையே இணைப்பாளராகச் செயல்படுவதும் அவரது கடமையாகும். ஆண்டவர் இஸ்ராயேலின் கணவராக விவரிக்கப்படுகின்ற நூற்பகுதிகளில் இந்தப் பழக்கத்திற்கான உருவகங்கள் காணப்படுகின்றன. இறைவனின் நண்பனாக இருந்து, மணமகளின் பிரமாணிக்கமின்மைக்காகப் புலம்புவது இறைவாக்கினரின் கடமையாகும் (எசா 5:1-7). ஆண்டவரைச் சந்திப்பதற்கென மனிதரைத் தயாரித்து, அவர்களது ஒத்த சந்தோஷத்தினால் மனமகிழ்ந்தவராய்ப் பின்னணிக்கு விலகி விடுகின்ற திருமுழுக்கு யோவானின் பணியும் இதுவே (யோவா 3:28-29). இறுதியாக, கொரிந்து சமுதாயத்தைக் கிறிஸ்துவிற்குத் திருமணம் செய்விக்கின்ற பவுலின் பணியும் இதுவே (2 கொரி. 11:2). ஆனால் பிற்காலத்தில் மீண்டும் இந்த உருவகத்தைத் கையாளும் போது, முதல் முயற்சியை எடுப்பவர் மணமகனே என்பதை அப்போஸ்தலர் அறிந்து கொள்வார். முதலில் மணமகளைத் தனது அனைத்துக் கொடைகளால் நிரப்பாவிடில் தனக்கு ஏற்புடையவளாக முடியாத

மணமகளை "அவர் தனக்கே அளிக்கின்றார்" (எபே 5:27). எனவே, முன்னர் நண்பருக்கு உரியதாயிருந்த பங்கைக் கணவரே எடுத்துக்கொள்கிறார்.

நதிக்கு அப்பால் (BEYOND THE RIVER)

சீரியாவின் பாலஸ்தீனப் பகுதியில் வாழும் ஒருவருக்கு ஆற்றின் அக்கரைப் பகுதி என்பது யூப்பிரத்திசு நதியின் கிழக்குப் பகுதியாகும் (2 சாமு 10:16; 1 அர 14:15; 1 நாள் 19:16). யோசு 24:3.14:15-இல் "நதிக்கு அப்பால்" என்பது, காரானுக்கு அருகிலிருந்த குல மூதாதையரின் தாய் நாட்டைக் குறிக்கும்.

பாரசீகர்களுக்கு இதே சொற்றொடர் யூப்பிரத்திசு நதியின் மேற்குப்பகுதியைக் குறிப்பதற்காகக் கையாளப்பட்டு வந்துள்ளது.

முதலாம் தாரியு பாரசீக ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைச் சீர்ப்படுத்துகையில் ஒரு பகுதியை 'நதிக்கு அப்பால்' எனப் பெயரிட்டது குறிப்பிடத்தக்கது. இதில் பாலஸ்தீனம், சீரியா அடங்கும். இவ்வழக்கு எஸ் 4:10-20; 5:3.6;6:6.8; 7:21.25; 8:36; நெகே 2:7.9; 3:7-இல் பிரதிபலிக்கிறது.

நத்தனியேல் (NATHANAEL - இறைவன் கொடுத்துள்ளார்)

1. தனது அன்னிய நாட்டு மனைவியை விலக்க எஸ்ராவால் கோரப்பட்ட ஒரு குரு.

2. யூதித்தின் மூதாதையரில் ஒருவர் (யூதி 8:1).

3. இயேசுவால் அவரது எதிர்கால மாட்சிமையைக் காண அழைக்கப்பெற்ற கபடற்ற இஸ்ராயேலன் இந்த நத்தனியேல் (யோவா 1:45.51).

இயேசு மெசியாவென நம்பிய பிலிப்பு (1:45) நத்தனியேலை ஆண்டவரிடம் கூட்டி வருகிறார். இவர் கானாவூரைச் சேர்ந்தவர் (21:2). இயேசுவைப்பற்றி அவர் கொண்டிருந்த எண்ணமெலாம் (2:46), இயேசு மனிதரை ஊடுருவிப் பார்த்த தன்மையை அறிந்து கொண்ட நத்தனியேல், வேறு விதமாக மாறினார் (2:25).

நத்தனியேலைக் கபடமற்றவன் என இயேசு கூறியது அவன் பாவமற்றவன் எனும் பொருளிலன்று; நேர்மையுள்ளவன், திறந்த மனதுடையவன், இறைவனுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தவன் எனும் பொருளில்தான். "உன்னை அத்திமரத்தின் கீழ்க் கண்டபோதே உணர்ந்து கொண்டேன்" (1:48) எனக்கூறுவதில் அடங்கியுள்ள பொருள் என்னவெனில், இராபிகள் அத்தி மரத்தின் கீழ், சட்டத்தைப் படிப்பதும் போதிப்பதுமான செயல்களை மேற்கொள்வர். எனவே, நத்தனியேலும் அதுபோன்று ஏதாவது ஒரு சிறந்த செயலையே அவ்விடத்தில் செய்திருக்க வேண்டும். எனவே, அவர் வெளியே மட்டுமன்று , உள்ளத்தளவிலும் சிறந்த இஸ்ராயேலனே என்பதாம்.

நத்தனியேலின் விசுவாச அறிக்கைக்கு இயேசு அளிக்கும் பதில் பெத்தேலில் யாக்கோபு பெற்ற அனுபவத்தைச் சுட்டிக் காட்டுகிறது (ஆதி 28:12). இயேசு "நீ என்னைப் பின் தொடர்ந்தால், நானும் எனது சீடர்களும் இருக்குமிடமே இறைவன் தங்கியிருக்குமிடமென்பதையும், அது விண்ணகத்தின் வாயிலென்பதையும் கண்டு கொள்வாய்" எனக் கூறுவதாக அமைந்துள்ளது.

யோவான் நற்செய்தியைத்தவிர வேறெங்கும் இவர் பெயர் காணப்படாததாலும், முக்கியமான சீடர்களின் பெயர்களுடன் இவர் பெயர் வருவதாலும் (யோவா 1:35-51;21:2) இவர் ஒத்தமை நற்செய்தியில் வரும் பார்த்தலமேயு, மத்தேயு, ஆல்பேயுவின் மகன் யாக்கோபு, யோவான், கானானியரான சீமோன் இவர்களில் யாராவது ஒருவராகவும் இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

எப்போதும் பிலிப்போடு சேர்த்து பார்த்தலமேயு கூறப்படுவதால் (மத் 10:3 இணை; மாற்கு 3:18; லூக் 6:14; அ.ப. 1:3), நத்தனியேல் என்பவர்

பர்த்தலமேயுதான் என்று சிலர் கருதுகின்றனர்.

நத்தனியேல் யாராக இருந்தாலும் சரி, இவர் யோவான் நற்செய்தியில் கடவுள் பயமுள்ள ஓர் இஸ்ராயேலனாகவும், இயேசுவின்மேல் கொண்ட விசுவாசத்தால்தான் தான் நிறைவடைய முடியும் எனும் அசையாத நம்பிக்கை கொண்ட ஒரு நல்ல உள்ளத்தின் அடையாளமாகவும் துலங்குகிறார்.

நத்தை (SNAIL, SLUG)

யூத மரபுப்படி இஃது ஓடுள்ள நத்தையினையோ, ஓடற்ற அட்டை வகையினையோ குறிக்கும். சங் 58:8 குறிப்பிடும் "ஊர்ந்து ஊர்ந்துபோகும் நத்தைபோல் ஆகட்டும்" என்பதன் பொருள் இன்னும் தெளிவு படாத ஒன்றாகவே உள்ளது. இக்கால அறிஞர்களின் கருத்துப்படி, இது காலத்துக்குமுன் குழந்தை பெறுவதைக் குறிக்கலாம். இப்பொருள் அதே வசனத்தின் பின்பகுதியில் வரும் "பிறந்தும் கதிரொளி காணாத பெண் வயிற்றுப்பிண்டம் போல் ஆகட்டும்" என்பதோடு இணையாக உள்ளது. இப்படியாயின் தனது எதிரி பிறந்திருக்கவே வேண்டாம் என்று சங்கீத ஆசிரியர் விரும்புவதாகத் தெரிகிறது (காண். யோபு 3:16; 10:18-19).

நபத்தேயர் (NABATEANS)

மக்கபேயர்களுக்கு நண்பர்களும், கூட்டாளிகளுமான இவர்கள் ஓர் அரேபிய இனத்தைச் சார்ந்தவர்கள் (1 மக் 5:25; 9:35). பாலைவன நாடோடி இனத்தைச் சார்ந்த இம்மக்கள் கி.மு. 312-இல் செலூக்கிய அரசத்தொடக்கத்தோடு வரலாற்றில் புகுகின்றனர். இவர்கள் இதற்குத் தெற்கிலுள்ள பகுதிகளிலும் குடியேறினர். அரேபியாவிலிருந்து சீரியாவிற்குச் செல்லும் வியாபாரிகள் இவர்கள் நாட்டைக் கடந்து செல்ல வேண்டியிருந்ததால் இவர்கள் இப்பகுதியில் முக்கிய இடத்தை வகித்தனர். நபத்தேயர்கள் இவ்வழியில் பல வியாபார நகரங்களையும் அமைத்தனர். இவர்களின் தலைநகரம் புகழ்வாய்ந்த பெத்ரா நகரமாகும். இவர்களின் நாட்டில் புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொண்ட நெல்சன் குளுயெக்கு, அவர்களது உயரிய நாகரிகத்தை எடுத்துக் கூறுகிறார். இதன்படி இந்த நாடோடி இனம் நாகரிக வாழ்க்கையையும், விவசாயத்தையும் சிறந்த முறையில் வளர்த்துள்ளது. நபத்தேயர்கள் இந்த நாகரிகத்தை உருவாக்க உயரிய பாராட்டக்கூடிய நீர்ப்பாசன அமைப்பை ஏற்படுத்தினர். மிதமழையும், ஒரு சில நீரூற்றுகளும் கொண்ட இப்பகுதியை இம்மக்கள் அணைகளும், வாய்க்கால்களும் அமைத்து நீரைச் சேகரித்து ஒழுங்காகப் பயன்படுத்தினர். பெத்ராவில் உள்ள மலையைக் குடைந்த கல்லறைகளும்,வீடுகளும் புகழ் வாய்ந்தவை. ஆனால் அவர்களின் கலைகளும், கட்டடங்களும் எகிப்திய, பார்த்திய, கிரேக்கக் கலையைச் சார்ந்தனவாக உள்ளன. முதலாம் அரேத்தாவின் கீழ் நபத்தேயர்கள் இனம் ஓர் அரசாக மாறியது.

நான்கு பேர் அரேத்த என்ற பெயரைக் கொண்டுள்ளனர். நபத்தேயர்கள் அலக்சாந்தர் இயன்னாயுடனும் ஏரோது அந்திப்பாவுடனும் போரிட்டு வெற்றி பெற்றனர். இந்த ஏரோது, நான்காம் அரேத்தாவின் மகளைத் திருமணம் செய்து, பின் விவாகரத்து செய்துவிட்டு ஏரோதியாளைத் திருமணம் செய்தான். அதனால், நபத்தேயர்களின் சினத்தைத் தூண்டினான். நான்காம் அரேத்தா தமஸ்கு பகுதியின் ஆட்சியைக் கலிகுலாவிடமிருந்து பெற்றான். உரோமை, பார்த்தியா ஆகிய பெரும் அரசுகளுக்கிடையில் அமைந்திருந்த நபத்தேயா, தங்கள் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள ஆற்றல்மிக்க அரசியல் தந்திரம் வேண்டியிருந்தது. இறுதியில் கி.பி. 106-இல் உரோமையரின் அரேபிய மாகாணத்துடன் இப்பகுதி சேர்க்கப்பட்டது. நபத்தேயா பழைய ஏற்பாட்டிலோ புதிய ஏற்பாட்டிலோ குறிக்கப்படவில்லை. பவுல் நான்காம் அரேத்தாவின் ஆளுநரின் கட்டளையின்படி தமஸ்குவில் சிறைப்பிடிக்கப்படுவதிலிருந்து தான் தப்பியது பற்றிக் கூறுகிறார் (2 கொரி 11:32; இந்நிகழ்ச்சி பற்றிய வேறுபட்ட விவரிப்பை அ.ப.

9:23-25-இல் காணலாம்).தான் தமஸ்குவுக்குத் திரும்பும்முன் அரேபியாவுக்குச் சென்றதாகப் பவுல் கூறுகிறார் (கலா 1:17). இஃது அரேபியத் தீபகற்பம் அன்று; நபத்தேயப் பகுதியாகும்.

நபத்தேயர்கள் எந்த இலக்கியத்தையும் விட்டுச் செல்லவில்லை. ஆனால், அவர்களுடைய பல கற்பொறிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெத்ரா, கிர்பெத் தன்னூர் இன்னும் சில இடங்களிலுள்ள கோவில்கள் பற்றிய ஆய்வுகள் இவர்களது சமயம் செமித்திய, கிரேக்கத் தெய்வங்களைக் கொண்ட கலப்புச் சமயமாகும் என்று காட்டுகின்றன. இந்தக் கோயில்கள் பரந்த திறந்த தொழுகை மேடைகளைக் கொண்டுள்ளன. இத்தகைய வழிபாட்டு இடங்களைப்பற்றிய குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் பல உள்ளன.

நபோனிது (NABONIDUS - நபு அச்சம் எழுப்பக்கூடியவர்)

இவன் பாபிலோனியப் பேரரசின் கடைசி அரசன் (கி.மு. 555-539). பாபிலோனிய அரசின் இறுதிக்கட்டத்தையும், இவ்வரசனையும் பற்றிய குறிப்புகள் மிகக்குறைவாக உள்ளன. இக்குறிப்பின்படி, நபோனிது மன்னன் காரானைச் சார்ந்தவன். இவன் அரசனாக அரியணை ஏறியதும் தன்னுடைய மகன் பெல்சாட்சரைப் பாபிலோனியத் தலைவனாகவும், முக்கியப்படைகளின் தலைவனாகவும் ஆக்கிவிட்டு (காண்க. தானி 5) அரேபியா சென்று, தேமாவைத் (இக்காலத் தெயிமார்) தலைநகராக்கி அங்கு, பத்து ஆண்டுகள் தங்கினான். பாரசீகர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க நபோனிது 540-இல் பாபிலோனுக்குத் திரும்பினான். 539-இல் சைரஸ் பாபிலோனை வென்று கைப்பற்றியபோது நபோனிது பிடிபட்டுக் கொல்லப்பட்டான். சைரஸ் மன்னன் மத சகிப்புத்தன்மைக்குப் பெயர் போனவன். இதற்கு மாறாக, நபோனிது சின் என்ற சந்திரக்கடவுள் வழிபாட்டு முறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தான். தானி 4-இல் விவரிக்கப்படும் நெபுகத்னேசரின் பைத்தியச் செயல்கள், நபோனிது மார்துக்குக்கும் பாபிலோனுக்கும் காட்டிய பற்றற்ற தன்மை பற்றிய சர்ச்சைக்குரிய பாரம்பரியத்திலிருந்து தோன்றியிருக்கலாம்.

நப்தலி (NAPHTALI - மற்போர் வீரன்)

யாக்கோபின் ஆறாவது மகன், ராகேலின் பணிப்பெண் பில்கா வழியாகப் பிறந்த இரண்டாவது மகன் (ஆதி 30:7-8). யாகுட்சேல், கூனி, எட்சேர், சில்லேம் ஆகியோரின் தந்தை (46:24). நப்தலி இனத்தவர் அனுபவிக்கும் அழகையும் பலனுடைமையையும் யாக்கோபின் ஆசீர் சுட்டிக்காட்டுகிறது (49:21).

பாலைவனத்தில் அலைந்து திரிந்தபோது, நப்தலியின் மக்கள் ஆசேர் இனத்தவரோடு சேர்ந்து தாணின் கொடியின்கீழ், பயணம் செய்தனர்; சாட்சிக் கூடாரத்தின் வடக்கில் இவர்கள் பாளைய மிறங்கினர் (எண் 2:25-31). மோசேயின் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், நப்தலி இனத்தில் ஆயுதம் தாங்கக்கூடியவர்கள் 53,400 பேர் இருந்தனர் (1:43). பாலைவனப்பயணத்தின் முடிவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 45,400 போர்வீரர்கள் இருந்தனர் (26:50).

நப்தலியின் உரிமைச்சொத்து கானானின் வடபகுதியில் அமைந்திருந்தது. மோசேயின் பாடல் நப்தலியின் செழிப்பைப் பற்றிக் கூறுவதுடன் ("ஆண்டவரின் அருளின்பால் நிறைவு பெற்றவன்") அதன் இடத்தையும், "கலிலேயக் கடலையும், தென்திசையையும் உடைமையாக்கிக் கொள்வான்," என்றும் விவரிக்கிறது (உப 33:23). இஸ்ராயேலின் தொடக்க வெற்றிகளுக்குப்பின், கிழக்கில் யோர்தான் ஆற்றின் வடபகுதியையும் கினரோத்து ஏரியையும், தெற்கில் இசக்கார் மற்றும் செபுலோன் இனத்தவரது எல்லைகளையும், மேற்கே ஆசேரின் எல்லையையும் கொண்ட பகுதி நப்தலி இனத்துக்கு அளிக்கப்பட்டது (யோசு 19:32-34). இஃது ஊற்றுகள் நிறைந்த செழிப்பான பகுதியாகும். இப்பகுதி ஆட்சோர் (காண்க 11:1), தஞ்சம் புகும் நகரான கெதேசு (20:7),

இருலேவியர் நகரங்கள் (21:6.32) ஆகியவை உட்பட பத்தொன்பது நகரங்களைக் கொண்டிருந்தது. சாலமோனின் ஆட்சியில் இஃது ஒரு நிர்வாக மாவட்டமாகிறது (1 அர 4:15). பிற்காலத்தில் நப்தலி என்ற பெயர் அசீரிய மன்னன் 3-ஆம் திகிலத் பிலேசர் கைப்பற்றிய (கி.மு. 733-732) வட இஸ்ராயேல் முழுவதையும் குறிப்பதாகத் தெரிகிறது (2 அர 15:29; காண்க. 1 மக் 5:15; மத் 4:12-16).

ஆட்சோர் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. நப்தலி இனத்தவர் இப்பகுதியில் குடியேற வாய்ப்பளித்தது (யோக 11:1-15). ஆனால் கோட்டைகளால் பாதுகாக்கப்பட்ட நகரங்களான பெத் செமேசிலிருந்தும், பெத் அனாத்திலிருந்தும் கானானியர்களை இவர்களால் விரட்டியடிக்க முடியவில்லை. அவர்களையும் ஏற்று, அரசியல் கட்டுப்பாடு மட்டும் கொண்டிருந்தனர் (நீதி 1:33). சீசராவும் எழுச்சியடைந்த கானானியர்களும் இஸ்ராயேலை அச்சுறுத்தியபோது, கெதேசைச்சேர்ந்த பாராக்கின் தலைமையில் கானானியரை வெற்றி கொண்டு, தங்கள் வீரத்திற்குப் புகழ் பெற்றனர் (4:6.10; 5:8). பிற்காலத்தில் மிதியானியர்களை விரட்டியடிக்கக் கிதியோன் தலைமையில் போரிட்டனர் (6:35; 7:23). தாவீது எபிரோனில் இருந்தபோது நப்தலி இனத்தவர் ஆயிரம் அதிகாரிகளையும், முப்பத்தேழாயிரம் வீரர்களையும், மிகுந்த உணவுப்பொருட்களையும் தாவீதுக்கு அளித்தனர் (1 நாள் 12:33.40). அவர்கள் வீரமிக்கவர்களாக இருந்தாலும் வடபகுதியில் நப்தலி இனத்தவரின் நிலை நிச்சயமற்றதாகவே இருந்தது. பாசாவின் ஆட்சிக்காலத்தில் (கி.மு. 885) பெனதாதுவின் தலைமையில் சீரியர்கள் இப்பகுதியைக் கொள்ளையிட்டுப் பாழாக்கினர் (1 அர 15:20). பெக்காவின் ஆட்சிக்காலத்தில் திகிலத்பிலேசர் இப்பகுதியைக் கைப்பற்றி, மக்களை அடிமைகளாக அசீரியாவுக்கு நாடு கடத்தினான். யோர்தானுக்கு மேற்கில் அசீரியர்களின் ஆளுகைக்குட்பட்ட முதல் மாகாணம் இப்பகுதிதான் (2 அர 15:29).

நாடு கடத்தப்பட்டு வருந்திய நப்தலி மக்களுக்கு எசாயா அவர்கள் மீட்பின் ஒளியைக் காண்பர் என்று இறைவாக்குரைத்தார் (எசா 9:1-2). இவ்வாக்கு இயேசுவின் பணிக்காலத்தில் நிறைவேறியது (மத் 4:12-16). மீட்பிற்கு முத்திரையிடப்பட்ட 1,44,000 பேரில் நப்தலி இனமும் சேர்க்கப்பட்டுள்ளது (திருவெளி 7:6).

நப்தலியைச் சேர்ந்த கெதேசு (KEDESH IN NAPHTALI)

அபிநோவாமின் மகன் பாராக்கின் சொந்த ஊர். இது கலிலேயாவில் உள்ளது. காண். கெதேசு – 4.

நப்துகிம் (NAPHTHUHIM)

அடையாளம் காணாத ஒரு மக்கள் இனம். நாடு, மொழி, இனம் இவற்றிற்கேற்றாற்போல் மக்கள் பிரிவின் அட்டவணையில் இலெகாபிம், பத்ருசிம் ஆகிய பெயர்களுக்கு இடையில் நப்துகிம் என்ற பெயர் வருகிறது (ஆதி 10:13; 1 நாள் 1:11). இந்த அட்டவணைகள், புவியியல் அமைப்பின்படி தயாரிக்கப்பட்டவை அல்லவெனினும் இலெகாபிம் லிபியாவெனவும், பத்ருசிம் மேல் எகிப்தினையும் சுட்டிக்காட்டுவதால், நப்துகிம் என்பது எகிப்தின் நைல் கழிமுகப் பகுதியில் வாழ்பவரையே குறிக்கும். எனவே, நப்துகிம் என்பது–நைல் கழிமுகப் பகுதியையே குறிப்பதால் இதுதான் ஏற்றுக்கொள்ளக் கூடியதெனப் பலர் கருதுகின்றனர்.

நம்பிக்கை (HOPE)

I. இறைமக்களின் மறைவாழ்வில் வருங்காலம் வகிக்கும் இடத்தைப்பற்றி எண்ணுவதுதான் இங்கு நம்பிக்கை என்று குறிக்கப்பெறுகிறது. வருங்காலம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டியது. அதற்காக எல்லா மக்களும் அழைப்புப் பெறுகின்றனர் (1 திமொ 2:4). இறைவனின் வாக்குறுதிகள் ஒளிமயமான எதிர்காலத்தையும், இவ்வுலகையும் சார்ந்த உண்மையாகும். ஆனால் அஃது "ஒரு மேலான நாடாகும்; அதாவது,

விண்ணக நாடாகும்" (எபி 11:16) என்று படிப்படியாக இறைவன் தன் மக்களுக்கு வெளியிட்டார். அது நித்திய வாழ்வைச் சார்ந்தது. அதில் மனிதர்கள் கடவுளைப் போல் இருப்பார்கள் (1 யோவா 2:25; 3:2). இறைவன் வாக்களித்த வருங்காலத்தின் உண்மையும் வேண்டுகோள்களும் விசுவாசத்தால் உறுதிபெறுகின்றன. இவ்வருங்காலத்தின் பிறப்பிடமான இறைவன்மேல் கொண்ட நம்பிக்கையினால் மனிதன் வலிமை பெறுகிறான். விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் வேரூன்றிய நம்பிக்கை வருங்காலத்தை எட்டிப்பார்க்க முடியும். அது விசுவசிப்பவருடைய வாழ்வை உள்ளுயிர்த்திறனால் உயர்த்த முடியும். பொறுமைக்கும் பற்றுறுதிக்கும் அடிப்படை நம்பிக்கையாகும். புதிய ஏற்பாட்டின் மிகச் சிறந்த வகையில் அதை வெளிக்காட்டுவது அன்பு. எனவே விசுவாசம், நம்பிக்கை, ஆர்வத்தோடு எதிர்பார்த்திருத்தல், அன்பு இவை அனைத்தும் ஒரே ஆன்மீக ரீதியின் பல கோணங்களாகும். எபிரேய மொழியின் ஒரேவகைச் சொற்கள் இத்தகைய எல்லாக் கருத்துக்களையும் குறிக்கின்றன.

II. பழைய ஏற்பாடு

1. யாவேயின் கொடைகளுக்காக நம்பிக்கை: பாவமுள்ள மனுகுலத்திற்குத் தொடக்கத்தில் அளித்துள்ள மறைபொருளான வாக்குறுதி (ஆதி 3:15; 9:1-17) இறைவன் மனிதனை ஒருபோதும் நம்பிக்கையின்றி விடுவதில்லை என்று காட்டினாலும், உண்மையில் விவிலிய நம்பிக்கையின் வரலாறு ஆபிரகாமோடுதான் தொடங்குகிறது. வாக்குறுதியால் உறுதி செய்யப்பட்ட வருங்காலம் மிக எளிதானது. அது தனக்கென்று ஒரு நாடும் எண்ணிக்கைக் கடங்கா வழித்தோன்றலும் தான் (ஆதி 12:1தொ). இஃது இறைவன் கொடுத்த முதல் வாக்குறுதி. பல நூற்றாண்டுகளாக இஸ்ராயேலின் நம்பிக்கை உலகப்பொருட்களை மையமாகக் கொண்டிருந்தது. "பாலும் தேனும் பாய்கின்ற நிலமும்" (யாத் 3:8.17), எல்லாவிதமான செல்வப்பெருக்கும் (ஆதி 49; யாத் 23:27-33; லேவி 26:3-13; உப 28) அதன் நோக்கம்.

இஸ்ராயேலின் நம்பிக்கை, உலகப் பொருட்களைப்பற்றி இருந்தாலும் அவர்களது மறைக்கோட்பாடுகள் அப்பொருட்களை அடையும் வழிமுறை நியதியாக அமையவில்லை. உலகச் செல்வங்களையெல்லாம் இறைவனின் ஆசிர்களாக (ஆதி 39:5; 49;25), கொடைகளாகக் (ஆதி 13:15; 24:7; 28:13) கருதினர். இறைவன் தன் வாக்குறுதிக்கு, உடன்படிக்கைக்கு, பற்றுறுதியாய் இருக்கின்றார் என்பதற்கு இவைகளைச் சான்றுகளாக எண்ணினர் (எசா 23:25; உப 28:2). இறைவனுக்குப் பற்றுறுதியாய் இருக்க இவ்வுலகப் பொருட்கள் இடறலாய் இருந்தால், தயக்கமின்றி இவைகளைத் தியாகம் செய்ய வேண்டும் (யோசு 6:17-21; 1 சாமு 15). ஆபிரகாம் செய்த பெரும் தியாகம் எப்பொழுதும் இறைவனில் வைக்கும் நிறைவான நம்பிக்கைக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது (ஆதி 22); இஸ்ராயேலின் நம்பிக்கை இன்னும் ஒருபடி உயர்ந்து வளர (எபி 7:19) இறைவன் இட்டுச்செல்வார் என்பதற்கு அறிகுறியாக அமைந்திருந்தது.

2. யாவே இஸ்ராயேலுக்கும் மற்ற நாடுகளுக்கும் நம்பிக்கை: இதை வளர்க்கும் பணி முக்கியமாக இறைவாக்கினரைச் சார்ந்தது. இஸ்ராயேலின் நம்பிக்கையைத் தூய்மைப்படுத்தி அது தளராவண்ணம் காத்தனர். அஃதோடு அந்நம்பிக்கையைப் புதிய கண்ணோக்கோடு பல கோணங்களிலிருந்து காணவும் வழிவகுத்தனர்.

அ. போலி நம்பிக்கை: வருங்கால இன்பம் உடன்படிக்கை செய்த இறைவனின் கொடை என்பதைப் பலமுறை இறைமக்கள் மறந்தனர் (ஒசே 2:10; எசே 16:15 தொ). அப்போது இம்மக்கள் வருங்காலத்தை மற்ற நாடுகளைப்போலத் தாமாக நிலைநிறுத்தும் முறைகளைக் கையாண்டனர். உயிரற்ற சடங்குமுறையான வழிபாடு, சிலைவழிபாடு, ஆதிக்கம், உடன்படிக்கைகள் போன்றவைகளைச் சாதனமாகக் கொண்டனர்.

இறைவாக்கினர் இத்தகைய பொய்த்தோற்ற முடைய நம்பிக்கையைக் கண்டனம் செய்தனர் (எரே 8:15; 13:16). பற்றுறுதியின்றி, மீட்புப்பெறும் நம்பிக்கையில்லை (ஒசே 12:7; எசா 26:8தொ; 59:9தொ). யாவேயின் நாள் கோபத்தின் நாளாக இருக்கும் (செப் 1:15தொ); ஒளியற்ற இருளாக இருக்கும் (ஆமோ 5:20). எரேமியாவின் பணி இத்தகைய பண்பைக் கொண்டிருந்தது (1:29).

ஆ. உண்மையான நம்பிக்கை: சில வேளைகளில் இறைமக்களுக்கு வருங்காலமே இல்லாததுபோல் தோன்றியது. "நமது நம்பிக்கை அழிந்துவிட்டது" (எசே 39:11; காண். புல 3:18) என்று சொல்லுமளவிற்குச் சோதனைக்குட்பட்டனர். அவ்வேளைகளில் நம்பிக்கை மறைந்திருந்ததாகக் கண்டனர் இறைவாக்கினர் (காண். எசா 8:16 தொ). ஆனால், உண்மையிலேயே அது மறைந்து போகாது. ஒருசிலர் (எஞ்சியோர்) காப்பாற்றப்படுவர் (ஆமோ 9:8 தொ; எசா 10:19 தொ). இவ்வாறு இறைவன் திட்டம் வளர்ந்து கொண்டே முன்னேறுகிறது. தண்டனை பெறும் நேரமெல்லாம், "நம்பிக்கை நிறைந்த வருங்காலம்" (எரே 29:11; 31:17) என்ற பறைசாற்றல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது (எரே 30:33; எசே 34:48; எசா 40-45). இஃது அவர்களின் நிலையான ஆறுதலும் நம்பிக்கையுமாகும் (சங் 9:19). இஸ்ராயேல் மக்களின் விசுவாசமற்ற தன்மைகூட நம்பிக்கையைத் தடை செய்யக்கூடாது. இறைவன் அவர்களை மன்னித்து விடுவார் (ஓசே 11; புல 3:22-33; எசா 54:4-10; எசே 39:29). மீட்பு தாமதமாக வருகின்றதென்பதால் (அ.ப.2:3; செப் 3:8). இரக்கமும் பற்றுறுதியும் கொண்ட யாவே இஸ்ராயேலின் நம்பிக்கையாக இருக்கிறார் (எரே 14:8; 17:13).

இ. புதிய நம்பிக்கை: இறைவாக்கினர் மொழிந்த வருங்காலம் பல பொருள் கொண்டது. அமைதி, உய்வு பெறல், ஒளி, குணமுறுதல், மீட்பு என்பன பற்றி இறைவாக்கினர் போதித்தனர். இன்பவனம், யாத்திரை, உடன்படிக்கை, தாவீதின்ஆட்சி போன்றவைகள் வியத்தகுமுறையில் உறுதியாகப் புதுப்பிக்கப்படுதல் பற்றி அவர்கள் அரைகுறையான கருத்துக்கொண்டிருந்தனர். இஸ்ராயேல் "கடவுளின் அன்புக்கொடைகளால் நிறைவுபெறும்" (எரே 31:14). "எல்லா நாடுகளின் செல்வமும் தன்னிடம் பெருகுவதை இஸ்ராயேலின் காணும்" (எசா 61). இஸ்ராயேலின் முன்னைய வரலாற்றுக்கு அருகில் இறைவாக்கினர் இருந்ததால், அவர்கள் இஸ்ராயேலையும் அதன் மண்ணுலக மகிழ்வையும் வருங்காலத்தின் மையத்தில் இருப்பதாகக் கணிக்கின்றனர்.

இறைமக்கள் கடவுளைப்பற்றிய அறிவால் நிறைவுபெறும் நாளுக்காக இறைவாக்கினர் ஏங்குகின்றனர் (எசா 11:9; அப 2:14). ஏனெனில், முதலில் இறைவன் அவர்களின் உள்ளங்களைப் புதுப்பிப்பார் (எரே 31:33தொ; எசே 36:25 தொ); பிறநாடுகளும் மனந்திரும்பும் (எசா 2:3; எரே 3:17; எசா 45:14 தொ). வருங்காலம் இறுதியான நிறைவான வழிபாட்டின் காலமாக இருக்கும் (எசே 40:48; செப் 14). அவ்வழிபாட்டில் எல்லா நாடுகளும் பங்கெடுக்கும் (எசா 56:8; செப் 14:16 தொ; காண். சங் 86:8 தொ; 102:22தொ). வழிபாட்டின் உச்ச நிலை கடவுளைத் தியானித்து அவரோடு வாழ்தலாகும் (சங் 63:34). இஸ்ராயேலுக்கும், மற்ற நாடுகளுக்கும் கடவுளும் (எசா 60:19தொ; 63:19; 51:5), கடவுளின் அரசும் (சங் 96:99) நம்பிக்கையாகும் என்று இறைவாக்கினர் கருதினர். இருப்பினும் இஸ்ராயேல் எதிர்பார்த்திருந்த வருங்கால மகிழ்ச்சி இவ்வுலகத்தைச் சார்ந்தது; இந்த மகிழ்ச்சி நிறைவேறுதல் தனிப்பட்டோரின் வாழ்க்கையைப் பொறுத்திருந்தாலும், விதிவிலக்கின்றி (எசே 18) அம்மகிழ்ச்சி அந்த முழுச் சமுதாயத்தையும் சேர்ந்தது.

3. ஒருவனின் சொந்தமீட்பிலும் வருங்காலத்திலும் நம்பிக்கை:

இத்தருணத்தில் இறைப்பற்றுமிக்க

ஆன்றோரும், ஞானிகளும் விசுவாசக்கண்கொண்டு சொந்த நன்மைக்காகப் பணிபுரியும் பொழுது பழைய ஏற்பாட்டில் நம்பிக்கை பற்றிய பொது வளர்ச்சியும் தோன்றுகிறது. இருப்பினும் இந்த விசுவாசம் நேர்மையுள்ளவனின் துன்பத்தோடு எழும் பிரச்சனையோடு முட்டிமோதியது. இத்துன்பம் மீட்பின் துன்பம். எனவே இந்த இன்னல் நம்பிக்கையை எழுப்ப வேண்டுமேயன்றி இடையூறாய் இருக்கக்கூடாது என்று பாபிலோனிய நாடு கடத்தலின் முடிவிலோ, அதற்குப்பின்னோ ஓர் இறைவாக்கினர் கற்பித்துள்ளார் (எசா 53). ஆனால், இந்தப்பழைய ஏற்பாட்டின் இறைவாக்கு அதிகநாட்கள் நீடிக்கவில்லை. தெளிவற்ற சில உணர்வுகள் இருந்தபோதிலும் (யோபு 13:15; 19:25 தொ) யோபுவைப் போன்றோரின் நம்பிக்கை சூழிருளுக்குள் இட்டுச் செல்கிறது (யோபு 42:1-6).

மறையுண்மை அனுபவம் பெற்ற புனிதர்களின் நம்பிக்கை இறைவனின் திருமுன்னால் நிறைந்திருந்து. எனவே, தம் குறிக்கோளை அடைந்துவிட்டதாக அவர்கள் உணர்கின்றனர். அத்தகைய நம்பிக்கைக்குத் துன்பமும், இறப்பும் ஒப்பீட்டு அடிப்படையில் முக்கியமற்றவை (சங் 73; 49:16; காண். 139:8;16). மறைசாட்சியினரின் விசுவாசம் உயிர்ப்பின் நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது (தானி 12:1தொ; 2 மக் 7). அது மனுமகனை மையமாகக் கொண்ட பொது நம்பிக்கையாகும் (தானி 7). நம்பிக்கை ஞானிகளுக்கு அமைதிக்கென்றும் (ஞான 3:3), ஓய்வுக்கென்றும் (4:7), வீடுபேற்றிற் கென்றும் (5:2) தோன்றியது. இக்கொடைகளை மண்ணுலகில் காணமுடியாது. ஆனால் சாவற்ற வாழ்வில் (3:4) ஆண்டவரின் திருமுன்னில் (5:15தொ) காணலாம். இவ்வாறு நம்பிக்கை சொந்த வாழ்வோடு சேர்ந்ததாக (5:5), வருங்காலத்தை நோக்கியதாக மாறுகிறது.

இயேசுவின் காலத்தில் யூதர்களின் நம்பிக்கை அக்காலத்திய சமயப்போக்குகளுக்கு ஏற்றவாறு வேறுபட்டது. உலகப் பொருட்களையும், ஆன்மீக நிலையைச் சார்ந்ததுமான வருங்காலத்தை அது எதிர்பார்த்தது; இறைவனையும் இஸ்ராயேலையும் மையமாகக் கொண்டது. எனவே, அது காலவரம்பிற்குட்பட்டும், காலத்தைக் கடந்ததாயும் அமைந்திருந்தது. இவ்வருங்காலம் இயேசுவின் நிறைவுபெற அந்த நம்பிக்கை இன்னும் அதிகமாகத் தூய்மை பெற வேண்டும்.

II. புதிய ஏற்பாடு:

1. **இயேசு நிறைவுபடுத்திய இஸ்ராயேலின் நம்பிக்கை:** இவ்வுலகில் இறையாட்சி வருதலை இயேசு அறிவிக்கின்றார் (மத் 4:17. ஆனால் இந்த அரசு விசுவாசத்தினால் மட்டும் அடையக்கூடிய ஆன்மீக உண்மையாகும். இஸ்ராயேலின் நம்பிக்கை நிறைவு பெற வேண்டுமானால் அவர்கள் எதிர்பார்த்திருந்ததிலிருந்து இவ்வுலகத்தொடர்பு கொண்டவற்றையெல்லாம் அகற்ற வேண்டும். துன்பத்தையும், மரணத்தையும் தாம் ஏற்றுக்கொண்டது போல் தன் சீடர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென இயேசு கோருகிறார் (மத் 16:24 தொ). ஆனால், ஏற்கெனவே இங்கு பிரசன்னமாக உள்ளது அவரது அரசு; இன்னொருவகையில் இனிமேல்தான் வர இருக்கின்றது. எனவே நம்பிக்கை தொடர்கிறது; ஆனால், இப்பொழுது அதன் திசைநோக்கு எல்லாம் நித்திய வாழ்வை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டது (18:8தொ); அவரவர் செயல்களுக்குத் தகுந்தபடி பரிசு வழங்கும் (16:27; 25:31-46) மனுமகனின் புகழ்மிகு வரவை நோக்கி அமைந்துள்ளது. இந்நாளை எதிர்பார்த்திருக்கும்பொழுது இயேசு கொடுத்த வாக்குறுதிகளாலும் (16:18), அவர் உடன் தங்கியிருத்தலாலும் (28:20) திருச்சபை வலிமைபெறுகிறது. இறையாட்சியையும் அதன் நம்பிக்கையையும் எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்தி இறைவாக்கினரின் நம்பிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

2. **இயேசுகிறிஸ்து திருச்சபையின் நம்பிக்கை:** திருச்சபையின் நம்பிக்கை,

விசுவாசத்தில் உறுதிபெற்ற நம்பிக்கை. ஏனெனில், தூய ஆவியின் கொடை ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றியுள்ளது (அ.ப. 2:33.39). திருச்சபையின் நம்பிக்கையின் முழு ஆற்றலும் இயேசுவின் வருகையை எதிர்பார்ப்பதிலேயே முனைந்துள்ளது (1:11; 3:20). இவ்வருகை "ஆண்டவரின் நாள்," இரண்டாம் வருகை (யாக் 5:8; 1 தெச. 2:19), சந்திப்பு, மறை உண்மை வெளிப்படுத்தல் என்று அழைக்கப்படுகிறது. இஃது அருகில் உள்ள எதிர்காலம் (யாக் 5;8; 1 தெச 4:13 தொ; எபி 12:18 தொ; 1 பேதுரு 4:7). அதன் தாமதத்தால் அடிக்கடி வியப்பு ஏற்படுகிறது (2 பேதுரு 3:8 தொ); ஆனால், அது உண்மையிலேயே "இரவில் திருடன் வருதல் போல" வரும் (1 தெச 5: 1தொ; 2 பேதுரு 3:10; திருவெளி 3:3 காண். 24:36). இதன் உறுதியற்ற தன்மை விழித்திருக்கச் செய்கிறது (1 தெச 5:6; 1பேதுரு 5:8); துன்பத்திலும் சோதனையிலும் (மன) உறுதியுள்ள பொறுமையும் கோருகிறது (யாக் 5:7 தொ; 1 தெச 1:4 தொ; 1 பேதுரு 1:5 தொ; காண். லூக் 21:29). திருச்சபையின் நம்பிக்கை துன்பத்திலும் கூட மகிழ்ச்சிகரமானது (உரோ 12:12; 1 பேதுரு 4:13; காண். மத் 5:11 தொ) ஏனெனில் எதிர்பார்த்திருக்கும் மகிமை எவ்வளவு உயர்ந்ததென்றால் (2 கொரி 4:17) அது இந்நேரத்திலும் பிரதிபலிக்கின்றது (1 பேதுரு 1:8 தொ). நம்பிக்கை ஒருவகை முக்கியத்துவத்தையும் (1 தெச 5:8; 1 பேதுரு 4:7) பற்றற்ற தன்மையையும் (1 கொரி 7:29 தொ; 1 பேதுரு 1:13) பிறப்பிக்கின்றது. உண்மையிலேயே இவை தெய்வீகத்தன்மையில் பங்கெடுக்கும் நம்பிக்கைக்கு இட்டுச்செல்லும் இவ்வுலக உதவிகளாகும் (2 பேதுரு 1:4). இறுதியாக நம்பிக்கை செபத்தையும், சகோதர அன்பையும் தூண்டுகிறது (1 பேதுரு 4:7 தொ; யாக் 5:8 தொ). வரவிருக்கும் உலகில் உறுதியாக நிலைநின்று (எபி 6:18) நம்பிக்கை கிறிஸ்துவ வாழ்வு முழுவதையும் ஊடுருவிச் செல்கிறது.

3. நம்பிக்கைபற்றிய பவுலின் கோட்பாடு: திருச்சபையின் நம்பிக்கையில் புனித பவுல் பங்குகொள்கின்றார். ஆனால் அவருடைய ஆன்மீக வாழ்வும் சிந்தனைச் செறிவும் திருச்சபையின் உண்மை விளக்கத்தைப் பல கோணங்களில் வளர்த்துள்ளன.

இதற்கு நமது உடலின் மீட்புப் பற்றிய கருத்திற்கு (உரோ 8:23), சிறப்பாக வாழ்வோரின் உருமாற்றம் (1 கொரி 15:51; காண். 1 தெச 4:13-18) மற்றும் இறந்தோர் உயிர்ப்புப் பற்றிய கருத்திற்குத் தனி இடம் கொடுத்திருப்பதைச் சான்றாகக் கூறலாம். பவுலின் கொள்கைப்படி இவ்வுயிர்ப்பில் விசுவாசமற்றிருப்பது நம்பிக்கையற்றிருப்பதற்கு ஒப்பாகும் (1 தெச 4:13; 1 கொரி 15:19).

நன்மை செய்வதில் நிலைத்திருப்பவர்க்கு மட்டுமே (உரோ 2:7 தொ; காண் எபி 6:12) வலிமை வழங்கப்படும். ஆனால் மனித சுதந்திரம் வலிமையற்றது (உரோ 7:12-25). எவ்வாறெனில் உண்மையிலேயே வாக்குறுதி அளிக்கப்பட்ட உரிமைச் சொத்தில் பங்குபெற கிறிஸ்துவன் நம்பியிருக்க முடியுமா (கொலோ 4:24)? ஆபிரகாமைப் போல, கிறிஸ்துவனும் நம்ப முடியும், நம்பவேண்டும் (சான்றுகள் முரண்பாடாகத் தோன்றினாலும்). கொடுக்கப்பட்ட வாக்குறுதியில் கொண்ட விசுவாசத்தாலும் (உரோ 4:18-25), இறைவனின் பற்றுறுதியில் கொண்ட நம்பிக்கையாலும் கிறிஸ்துவன் நம்பமுடியும். ஏனெனில், முதல் அழைப்பு விடுத்ததிலிருந்து இறுதி மாட்சியை அடையும்வரை மனிதன் பற்றுறுதியோடு இருக்க இறைவன் வலிமை தருகின்றார் (உரோ 8:28-30).

இவ்வாக்குறுதிகளெல்லாம் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுகின்றன (1 கொரி 1:20) என்ற உண்மை பவுலின் சிந்தனையில் முக்கிய இடம் பெறுகிறது. எதிர்பார்த்திருந்த மாட்சி புலன்களுக்கு மறைந்திருந்தாலும் (2 கொரி 4:18; உரோ 8:24 தொ) நம் முன்னிலையில் இருக்கும் மகிமை யாகும் (2 கொரி 3:18; 4:6). திருமுழுக்குப் பெற்றவன் ஏற்கெனவே ஆவியில் உயிர்த்தெழுந்துவிட்டான் (உரோ 6:1-7; கொலோ 3:1). வரவிருக்கும் உலகின்

அச்சாரமாகவும் (2 கொரி 1:22; 5:5; எபே 1:4) முதல் பலனாகத் தூய ஆவி அவனுள் தங்கியிருக்கின்றார் (உரோ 8:11-23). ஆதாம் மரணத்திற்கு இழுத்துச் சென்ற மனிதர்களுக்கு இறைவன் ஏற்புடைமையின் அருளை அளித்துள்ளார். ஆனால் இப்பொழுது அதற்கும் மேலாக இறைமகனோடு கொண்ட உறவு மனிதர்களை நிறைவாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றது (உரோ 5). கிறிஸ்துவில் இஸ்ராயேலின் நம்பிக்கை நிறைவுபெற்றது, கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையின் தெளிவான அடிப்படையின் நிறைவான வெளிப்பாடாகும். இவ்வன்பை எவ்வகையாலும் கிறிஸ்துவனிட மிருந்து எடுக்க முடியாது (உரோ 8:31-39).

பவுலின் நம்பிக்கை மிகுந்த வாழ்வு நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இந்நம்பிக்கை பவுலின் ஆன்மாவில் மிகச் செறிவோடு காட்சியளிக்கின்றது. அந்நம்பிக்கை இன்னும் நிறைவுபெறவில்லையே என்று வருந்துகிறது (2 கொரி 5:5; உரோ 8:23); அஃதோடு எதிர் பார்த்திருந்த வருங்காலத்தைப்பற்றிய எண்ணத்தில் மகிழ்ச்சியுறுகின்றது (1 கொரி 15:54 தொ). இஃதோடு ஒப்பிடுகையில் மிகவும் நேர்மையான நம்பிக்கைகளும் கூடத் தம் மதிப்பை இழக்கின்றன (பிலி 3:8). இதற்கு ஆதாரமாக இருப்பது நமது செயல்களால் வரும் பலனன்று; இறைவனின் அருளேயாகும் (1 கொரி 4:4; 15:10; உரோ 3:27). அவ்வுறுதி பெற்று பந்தயத்திற்கான வலிமையையும் (பிலி. 3:13 முதல்), தனது அப்போஸ்தலப் பணியைத் தொடர்ந்து நடத்த, பவுல் புரியும் போரில் உறுதியையும் (2 திமொ 4:7), அந்நம்பிக்கையின் உள் வலிமையால் ஊக்கத்தையும் பெறுகின்றார். அதே சமயம் பவுல் தானே தகுதியற்ற நிலையை அடையாது தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றார் (1கொரி 9:26 தொ). இந்நம்பிக்கை புதிய நம்பிக்கைகளை எழுப்புகின்றது (பிலி 2:19; 2 கொரி 1:9 தொ; 4:7-18). ஆனால், அது எப்பொழுதும் ஆண்டவரில்தான் தோன்றுகின்றது. பவுலின் மரணம் நெருங்கி வரும்பொழுது தன் பந்தயத்திற்குப் பரிசாகக் கிடைக்கும் அன்புக் கொடையை எதிர்நோக்குகின்றார். ஆனால் அவரது சன்மானம் கிறிஸ்துதான் என்று அவருக்குத்தெரியும் (பிலி 3:8). எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவோடு இருப்பதுதான் அவரின் நம்பிக்கை (பிலி 1:23; 2 கொரி 5:8). அப்போஸ்தலர் இனி ஒருபோதும் தமது சொந்த மகிழ்ச்சியைத் தேடுவதில்லை; தாம் அன்பு செய்யும் ஒருவரோடு இருப்பதையே தேடுகிறார். கிறிஸ்துவர்கள் மற்றவர்கள் அனைவரின் மீட்புக்காகவும் ஆற்றும் பணியில் நம்பிக்கையோடு கூடிய முழுதும் பற்றற்ற தன்மை வெளிப்படுகிறது. ஏனெனில் அவர்கள் மாட்சியின் நம்பிக்கையாகிய கிறிஸ்துவை அவர்களுக்கு வெளிப்படுத்த விரும்புகின்றனர். எனவே, பவுலின் நம்பிக்கை இறைவனின் திட்டத்தின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்குகின்றது. ஆண்டவனின் அன்புக்கு அவர் நம்பிக்கை,பதில் அன்போடு மறுமொழி தருகின்றது.

4. செம்மறியின் மணவிருந்து: புனித யோவான் நம்பிக்கையைப் பற்றிப் பேசும் பொழுது ஆண்டவருடைய வருகைக்கு எதிர்பார்த்திருத்தலையும் (யோவா 14:3; 1 யோவா 2:18), உயிர்ப்பையும், இறுதித்தீர்ப்பையும் (யோவா 5:28 தொ 6:39 தொ) பற்றிக் குறிப்பிடாமல் விட்டுவிடவில்லை. ஆனால், விசுவாசம் கொண்ட ஒருவர் பெற்ற நித்திய வாழ்வைப்பற்றி அதிகம் சிந்திக்க விரும்புகின்றார் (யோவா 3:15; 6:54; 1 யோவா 5:11 தொ). அவ்விசுவாசத்தைப் பெற்றதால் ஏற்கெனவே உயிர்ப்பும் (யோவா 11:25 தொ; 1 யோவா 3:14), தீர்ப்பும் (யோவா 3:19; 5:24) நிகழ்ந்துவிட்டன. கிறிஸ்துவின் நித்திய வாழ்விற்குச் செல்லும் வழியானது ஏற்கெனவே உள்ள உண்மையை (1 யோவா 3:2) அமைதியோடு வெளிப்படுத்தும் ஒன்றாக மட்டும் திகழும் (4:18).

திருவெளிப்பாட்டில் நம்பிக்கை பற்றிய உள்நோக்குகள் முழுவதும் வேறுபடுகின்றன. உயிர்த்த செம்மறி கிறிஸ்தவர்கள் சூழ்ந்து நிற்க

(திருவெளி 5:11-14; 14:1-5; 15:2 தொ) ஏற்கெனவே, விண்ணுலகில் வெற்றியோடு அமர்ந்துள்ளது. அங்கிருந்து தான் அவரது மணமகளாகிய திருச்சபை தோன்றும் (21:2). ஆனால் இம்மணமகள் அதே சமயத்தில் மண்ணுலகிலும் உள்ளாள் (22:17). இங்குதான் கிறிஸ்துவ நம்பிக்கை வரலாற்றுப்பிணைப்பில் ஈடுபட்டுள்ளது.

பேயின் மேலெழுந்தவாரியான வெற்றிகள் இந்நம்பிக்கையைத் தளர்த்துவதற்கு அச்சுறுத்துகின்றன. ஆனால் உண்மையில் வெல்ல முடியாத இறைவாக்கு தம் மக்களுக்காகப் போரிட்டு, தம் மக்கள் மத்தியில் ஆட்சி செய்கின்றது (19:11-16; 20:1-6). உறுதியான வெற்றி அண்மையில் உள்ளது (1:1; 2:5; 3:11; 22:6.12). ஆகவே, கிறிஸ்துவர்களின் நம்பிக்கை புதிய உலகம் வரும்வரைக்கும் வெற்றியோடு திகழவேண்டும். அப்புதிய உலகு இறுதியாகப் பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினரின் உரைகளுக்கு உறுதியான முழு நிறைவைக் கொடுக்கும் (திருவெளி 21-22).

விவிலியத்தின் இறுதியில் "என் வருகை அருகில் உள்ளது" என்று மணமகன் வாக்களிக்கின்றார். அதற்கு மணமகள் உரைக்கும் பதில்: "ஆண்டவராகிய இயேசுவே வாரும்" (22:20). இக்குரலொலி திருச்சபையின் தொடக்க நாட்களின் செபமாக (அரமேயிக்கு மொழியில், "மரனாதா") விளங்குகிறது (காண். 1 கொரி 16:22). கிறிஸ்துவ நம்பிக்கையை இதைவிடச் சிறந்த சொற்றொடரில் வெளிக்காட்ட முடியாது. ஏனெனில் உண்மையிலேயே ஆண்டவரின் பிரசன்னத்துக்காக ஏங்கும் ஆவல் பொங்கும் அன்புதான் கிறிஸ்துவ நம்பிக்கை; அதையே இச்சொற்றொடர் உள்ளடக்கியுள்ளது.

நம்பிக்கைக்குரிய, அறிவாளியான பணியாளர் (Faithful and wise servant) - உவமை.

இது (மத் 24:45-51; லூக் 12:40-43) இயேசுவின் இரண்டாம் வருகையையும் அவர் இறையரசை நிறுவுவதையும் பற்றியது. இதன்படி விசுவாசிகள் எப்போதும் ஆயத்த நிலையில் காத்திருக்க வேண்டும். பணியாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் தலைவன் வரும் நேரத்தை அறியாததால் எப்பொழுதும் நன்மையையே செய்யவேண்டும். அவ்வாறு இல்லாமல் தீமை செய்வதைத் தலைவன் கண்டால், அப்பணியாளனைத் தண்டிப்பான். எனவே, கிறிஸ்தவர்கள் தங்கள் அர்ப்பணத்திற்கேற்ப அன்பு வாழ்க்கை வாழக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும் இறைவனின் நற்செய்தியை அறிந்தவர்கள் அதிகப் பொறுப்பு வகிக்கின்றனர்; அவர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது எனவும் லூக்கா கூறுகிறார் (லூக் 12:48).

நயீன் (NAIN) - அழகான, இன்பமான)

தென்மேற்குக் கலிலேயாவில் உள்ள நகரமான இது விவிலியத்தில் விதவையின் இறந்த மகனை உயிர்ப்பிப்பதைக் கூறும்போதுமட்டும் சொல்லப்படுகிறது.

அமைந்துள்ள இடம்: யோசிப்பசு கூறும் இதுமேயாவின் எல்லையில் அமைந்த நகரமாக இஃது இருக்க முடியாது. இன்றைய அராபியர் கிராமமான நெயீன் ஆகத்தான் இஃது இருக்க வேண்டுமென அறிஞர் பலர் கருதுகின்றனர். இது விவிலிய விவரிப்போடு ஒத்துப்போகிறது. நெபிதகி எனப்படும் ஒரு குன்றின் வடமேற்குக் கீழ்ப்பகுதியில் இக்கிராமம் உள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இக்குன்று மோரே எனப்பட்டது (நீதி 7:1); சிறிய எர்மோன் எனவும் அழைக்கப்பட்டது. இக்கிராமம் நாசரேத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் தென்கிழக்கே உள்ளது; கப்பர்நாகுமிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நகர் பற்றிய விவரிப்பு: இந்நகரத்திலிருந்து எசுதிரலோன் சமவெளியின் அருமையான காட்சி தென்படும். இதுதான் நயீனுக்கு "அழகிய, இன்பகரமான" எனும் பொருளுள்ள பெயர் கிடைக்கக் காரணமானது. மேலும், இங்குள்ள ஊற்றினால் ஒலிவ

மரங்களும், அத்தி மரங்களும் வளர்ந்து இவ்விடத்தைச் செழிப்பாக்குகின்றன. இசக்காரின் நிலம் இன்பகரமானது எனும் குறிப்பு இந்நயீனைப் பற்றித்தான் (ஆதி 49:15).

இன்று இக்கிராமத்திலே சில வீடுகளில் 200 பேர்கள் மட்டுமே வசிக்கின்றனர். ஆனால், இங்குள்ள சிதைவுகளைப் பார்க்கும்போது இஃது ஒரு காலத்தில் முக்கியமான நகரமாக இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. கிராமத்தின் தென்கிழக்கே மலைப்பகுதிப் பாறையில் கல்லறைகளும், குகைகளும் உள்ளன. மத்திய காலத்தில் அந்த இளைஞனைப் புதைக்கவிருந்த கல்லறையையும், அவ்விதவையின் வீட்டையும் விசுவாசிகளுக்குக் காட்டினர். இன்று இவ்விடத்தில் பிரான்சிஸ்கு சபையாரின் கோவில் ஒன்று, மத்தியகாலக் கோவிலுக்கருகே உள்ளது.

இக்கிராமத்திற்கருகேதான், விதவையின் ஒரே மகனைச் சுமந்து வரும்போது இயேசு பாடையைத் தொட்டு அவ்விளைஞனை உயிர்ப்பித்தார். இது கிராமத்தின் நுழைவாயிலில் நடந்திருக்க வேண்டும் (லூக் 7:11-16).

நரகம் (HELL)

I. இயேசு கிறிஸ்து பாதாளங்களில் இறங்கினார்; தண்டனைக்குரியோர் நரகத்திற்குச் சென்றனர். விசுவாசத்தின் இவ்விரண்டு கூற்றுகளும் இரு வேறுபட்ட செயல்களைக் குறிப்பிட்டு, இரு வேறுபட்ட நிலைகளை வலியுறுத்துகின்றன. இயேசு இறங்கிச்சென்ற பாதாளங்களின் வாசல்கள் அதனில் சிறைப்பட்டோர் தப்பிச் செல்வதற்கெனத் திறக்கப்பட்டன. ஆனால், தண்டனைக்குரியோர் சென்றுள்ள நரகத்தின் வாயில்கள் எப்போதுமே மூடப்பட்டுள்ளன. ஆயினும் தற்செயலாகவோ, விருப்பப்படியான ஒப்பிடுதலின்படியோ இல்லாமல், உரிய சரியான காரணத்திற்காகவும் பெரிய உண்மையின் வெளிப்பாடாகவும், உபயோகிக்கப்படும் சொல் ஒன்றாகவே உள்ளது. நரகத்தைப்போன்று பாதாளமும் சாவின் அரசாக உள்ளது. கிறிஸ்து இல்லாமல் உலகில் ஒரே நகரமும் ஒரே சாவும் இருக்கும். இச்சாவானது முடிவற்றதாகவும் எல்லாம் வல்லதாகவும் இருக்கும். முதல் மரணத்தினின்று பிரிக்கப்படக்கூடிய "இரண்டாவது மரணம்" (திருவெளி 21:8) இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் தமது மரணத்தினால் சாவின் ஆட்சியை முறியடித்தது இயேசு கிறிஸ்துவே ஆவார். இயேசு பாதாளத்திற்கு இறங்கிச் சென்றதன் காரணமாக, பாதாளம் இனியும் நரகமன்று. ஆனால், அஃது அதன் தோற்றத்தைத் தொடர்ந்து கொண்டுள்ளது. இதன் காரணமாகவே இறுதித் தீர்ப்பின்போது பாதாளம் நரகத்தோடு மீண்டும் சேர்ந்து, தமது பொதுவான இடத்தை நெருப்புக் குளத்தில் ஏற்கிறது (திருவெளி 20:14). இதன் காரணமாகவே பழைய ஏற்பாட்டு நரகத்தின் உருவகங்கள் தெளிவற்றவையாகவும், தங்களது உறுதியான பண்புகளை அடையாமலும் இருந்தாலும், முடிவில்லாத தண்டனையை விவரிக்க இயேசு அவற்றை உபயோகிக்கின்றார். ஏனெனில், அவை சாதாரண உருவங்களைவிட மேம்பட்டவை. அவரில்லாவிடின் உலகம் எவ்வாறிருக்கும் என்பதன் உண்மை வடிவம் அதுவே.

II. பழைய ஏற்பாடு:

1. அடிப்படை உருவமைப்புகள்:

அ. பாதாளம், இறந்தோரின் உறைவிடம். பண்டைய இஸ்ராயேலில் பாதாளமானது (செயோல்) "வாழ்வோர் அனைவரும் கூடுமிடமாகும்" (யோபு 30:23). மற்ற மக்களைப்போன்று, இஸ்ராயேலானது இறந்தோரின் மறுவாழ்வை மதிப்பும் மகிழ்ச்சியுமில்லாத வாழ்வின் நிழலாகக் கற்பனைசெய்கிறது. செயோல் இந்த நிழல்கள் ஒன்று சேர்க்கப்படும் ஓர் அமைப்பாகும். ஆழமான, தெளிவின்மை ஆட்சி செய்கின்ற (சங் 88:7.13), வெளிச்சமே இருண்ட இரவைப் பிரதிபலிக்கின்ற (யோபு 10:21-22), கீழான பாதாளத்திற்கு அப்பாற்பட்ட (யோபு 26:5; 38:16-

17), மண்ணுலகின் ஆழமான பகுதிகளில் (உப 32:22) உள்ள கல்லறை போன்ற ஒரு பொந்து, குழி, பள்ளம் என அது காட்டப்படுகிறது (சங் 30:10; எசே 28:8). வாழ்வோர் அனைவரும் அங்கே செல்கின்றனர் (எசா 38:18; எசே 31:14). அங்கிருந்து அவர்கள் என்றுமே எழ மாட்டார்கள் (சங் 88:10; யோபு 7:9). இனி அவர்கள் இறைவனைப் புகழவோ (சங் 6:6), அவரது நீதியின் மேலும் (88:11-13), பிரமாணிக்கத்தின் மேலும் (30:10; எசா 38:18) நம்பிக்கை வைக்கவோ முடியாது. அது முழுமையான கைவிடப்பட்ட நிலையாகும் (சங் 88:6).

ஆ. உலகின்மீது தளர்த்தி விடப்பட்ட நரக வல்லமைகள்:

நிறைந்த வாழ்நாள்களைக் கடந்து மகிழ்ச்சியான முதிர்ந்த வயதின் முடிவில் "தங்களுடைய தந்தையரை மீண்டும் சந்திப்பதற்கென" (ஆதி 25:8) பாதாளத்திற்குச் செல்வதானது மனித இனத்தின் பொதுவான பங்காகும் (எசா 14:9-15; யோபு 3:11-21). எவரும், இதனைப்பற்றிய குறை கூற மடியாது. ஆனால் பெரும்பாலும் பாதாளம் இந்த நேரத்திற்கெனக் காத்திருப்பதில்லை. திருப்தியடையாத பயங்கர மிருகத்தைப் போன்று (பழ 27:20; 30:16) தனது இரைக்கென அது காத்திருந்து, முழுவலிமையுடன் அதனை எடுத்துச்செல்கிறது (சங் 54:16). "என் வாழ்நாள்களில் நடுவில் பாதாளத்தில் வாயில்கள் திறக்கப்படுவதை" எசேக்கியா காண்கிறார் (எசா 38:10). "வாழ்வோரின் உலகில்" (38:11) பாதாளச் சக்திகளின் ஆக்ரமிப்பானது அவலமாகவும் இடராகவும் இருக்கிறது (சங் 18:6; 88:4-5).

2. பாவிகளின் நரகம்: இந்த இடறல் வெளிப்பாட்டின் பகுதிகளில் ஒன்றாகும். சாவினுடைய அவலமான தன்மையானது உலகின் ஒழுங்கின்மையைக் காட்டுகிறது. இந்த ஒழுங்கின்மையானது பாவத்தின் பலன் என்ற கண்டுபிடிப்பானது, இஸ்ராயேலின் சமயச் சிந்தனையினுடைய கூரிய ஆயுதங்களில் ஒன்றாகும். இந்த உள்ளுணர்வானது மெய்ப்பிக்கப்படுவதற்கேற்ப நரகத்தின் வடிவங்கள் கொடிய தன்மையை ஏற்கின்றன. கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோரை விழுங்க அது தனது வாயைப்பிளக்கிறது (எண் 16:32-33). "சீயோனின் மகிமை, அதனுடைய இரைச்சலிடும் மக்கள் திரள், அதனுடைய கூக்குரல்கள், மகிழ்ச்சி" (எசா 5:14) ஆகியவற்றை விழுங்குவதற்கெனத் தனது ஆற்றல் அனைத்தையும் அஃது இயக்குகிறது. அஃது இறைப்பற்றற்ற மனிதரை அச்சத்தில் மறையச் செய்கிறது (சங் 73:19).

இந்த அச்சமூட்டும் முடிவைப்பற்றி இஸ்ராயேலானது இரண்டு சிறப்பான வெளிப்படுத்தும் உருவங்களை அறிந்துள்ளது. சோதோம் கொமோராவை எரித்தலும் (ஆதி 19:23; ஆமோ 4:11; சங் 11:6), அச்சத்தின் இடமாக உருவாவதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள இன்பத்தின் இடமாகிய கேகன்னா பள்ளத்தாக்கிலுள்ள தோபேத்தின் அழிவுமாகும். அங்கே "அவர்கள் நமக்கெதிராய்க் கிளர்ச்சி செய்தவர்களின் பிணங்களைக் காண்பர்; அவர்களை அரிக்கும் புழு சாவதில்லை. அவர்களை எரிக்கும் நெருப்பு அணைந்து போவதில்லை" (எசா 66:24).

நெருப்பிலான மரணமும் அழிவின் முடிவில்லாத் தொடர்ச்சியும் நரகம் பற்றிய நற்செய்தியின் உருவகங்களாகும். இஃது இனியும் இதுவரை கூறப்பட்டு வந்தது போன்ற பாதாளமாக இருந்த சாதாரண நரகமன்று; மாறாக, விண்ணிலிருந்து விழுந்ததாகக் கூறப்படுகின்ற, "யாவேயிடமிருந்து வந்த" நரகமாகும் (ஆதி 19:24). "யாவேயின்மூச்சினாலும்" (எசா 30:33), அவரது, "கனல் கக்கும் சினத்தாலும்" (30:27) தூண்டப்படுவதன் காரணமாக, சேயோலின் சாயலாகவும், சோதோமின் நினைவாகவும் உள்ள "அடித்தளமற்ற பாதாளத்தையும் நெருப்பு மழையையும்" அஃது ஒன்றாகக் கொண்டு வருகிறது (சங் 140:11).

இறைவனுக்குப் பிரமாணிக்கமாய்

இருப்பதற்கென, பாவிகளால் துன்பத்தையும் சில நேரங்களில் மரணத்தையும் ஏற்கவேண்டியுள்ள வேளையில், பாவிகளுக்கு வாக்களிக்கப்பட்ட நரகமானது நீதிமான்களுக்குரியதாக இருக்காது. இறைப்பற்றற்றோர், தூயவரும் நாத்திகரும் இணைந்து உறங்குகின்ற பாரம்பரியச் சேயோலின், தூசியின் நாட்டினுடைய "முடிவில்லா அச்சத்திற்கு" உறங்கியெழும்போது நீதி மான்கள் "முடிவில்லா வாழ்விற்கு" எழுவது சரியே (தானி 2:12). ஆண்டவர் நீதிமான்களுக்கு அவர்களுக்குரிய வெகுமதியை அளிக்கும்போது "தனது பகைவர்களைத் தண்டிப்பதற்கெனப் படைப்பிற்குப் படைக்கலனளிக்கிறார்" (ஞான 5:15-17). நரகமானது இனியும் மண்ணுலகின் கீழான பகுதிகளில் மட்டும் இடம் சுட்டப்படவில்லை. அது "மூடர்களை எதிர்த்துப் போரிட விடுவிக்கப்பட்ட உலகாகும்" (5:20). இந்த உருவகங்களை நற்செய்தி நூல்கள் எடுத்துக் கையாளுகின்றன. தீ நாக்குகளால் துன்புறுத்தப்படுகின்ற இறந்தோரின் உறைவிடத்தில், ஆபிரகாமின் மடியில் இலாசரைச் செல்வந்தன் காண்கிறான்; ஆனால், அவர்களிருவருக்குமிடையே தாண்டி வரமுடியாத பாதாளம் ஒன்று உண்டு (லூக் 16:23-26). நெருப்பு மற்றும் பாதாளம், விண்ணகத்தின் சினம் மற்றும் மண்ணகம் பிளத்தல், இறைவனின் சாபம் மற்றும் படைப்பின் எதிர்ப்பு ஆகிய இவையே நரகம்.

III. புதிய ஏற்பாடு:

1. நரகம் பற்றி இயேசுவின் போதனை:

தனது காலத்தவரிடையே நிலவிய நரகம் பற்றிய விவரிப்பை விட, வாழ்வின் இழப்பு மற்றும் தன்னிடமிருந்து பிரிந்துபோதல் ஆகியவற்றிற்கு இயேசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். கொடிய செல்வனின் உவமையில் நரகம் பற்றிய ஆண்டவரின் முடிவான கூற்றைக் காண்பது அபாயம் மிக்கதாயின், இப்பின்னணி பற்றிக் கொடூரமான இரக்கமற்ற உருவகங்களை இயேசு உபயோகிக்கும்போது அவற்றை இயேசு கவனமுடன், பயன்படுத்தியிருக்க வேண்டும்: "எரியும் சூளையில் அழுகையும் அங்கலாய்ப்பும்" (மத் 13:42); "அவர்களைத் தின்னும் புழு சாகாது; நெருப்பு அவியாது" (மாற் 9:43-48; காண்க. மத் 5:22); "அங்கே இறைவன் ஆன்மாவையும் உடலையும் அழிக்க வல்லவர்" (மத் 10:28) முதலியன இதற்குச் சான்று.

நரகத்தில் தள்ளக்கூடிய வல்லமையுடைய மனிதரால் உச்சரிக்கப்பட்டதே இந்த உறுதிப்பாடுகளுக்கு வலுவளிக்கிறது. இயேசு நரகம் ஓர் உண்மை என்று மட்டும் பேசவில்லை. "அரசில் இடறலாய் உள்ள நெறிகெட்டவர்கள் அனைவரையும் தீச்சூளையில் தள்ள வான தூதரைத் தான் அனுப்பவிருப்பதாக" அவர் அறிவிக்கிறார் (மத் 13:41-42). "சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு அகன்று முடிவில்லா நெருப்புக்குள் செல்லுங்கள்" என அவர் சாபமிடுவார் (மத் 25:41). "உங்களை அறியேன்" (மத் 25:12); "அவனை வெளி இருளில் தள்ளுங்கள்" (25:30) என்று அறிவிப்பவரும் ஆண்டவரே.

2. இயேசு கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றார்:

கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றதானது விசுவாசத்தின் ஒரு பகுதியாகும். அஃது உண்மையில் புதிய ஏற்பாட்டின் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைச் செய்தியாகும். சில பகுதிகளின் மதிப்பைத் தீர்மானிப்பதும், "நோவா பேழையைச் செய்து கொண்டிருந்த காலத்தில் கீழ்ப்படிய மறுத்தவர்களுக்கும், சிறையிலிருந்த ஆன்மாக்களுக்குமான அவரது போதனை" என்ன என்பதைக் கண்டுபிடிப்பது (1 பேதுரு 3:19-20) கடினமானதாயின், பாதாளத்திற்கு இயேசு சென்றதானது, மனிதன் என்ற நிலையில் அவரது மரணம் மற்றும் அதன் மீதான வெற்றி ஆகியவற்றின் உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. பாதாளத்தின் அச்சுறுத்தல்களினின்று, (அதாவது சேயோலினின்று) இறைவன் அவரை

மீட்டாரெனில் (அ.ப. 2:24), அஃது அவரை அதனில் மூழ்கடித்த பின்னரே. ஆனால், அதிலேயே அவரை என்றென்றைக்கும் விட்டுவிட வில்லை (2:31). கிறிஸ்து விண்ணேற்பின் மறைபொருளில் எல்லா வானங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டாரெனில், இதயத்தின் கீழ்ப்பரப்புகளுக்கும் அவர் இறங்கிச் சென்றதே அதற்குக் காரணமாகும். எல்லாவற்றையும் முழுமையாக நிறைவேற்றவும், உலகின் ஆண்டவராக ஆட்சி புரியவும் இத்தகைய தீக்குறியான இறக்கத்தை அவர் செயல்படுத்த வேண்டியிருந்தது (எபி 4:9:10). இறந்தோரிடமிருந்து உயிர்த்த பின்னர் விண்ணகத்தில் இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்பதைக் கிறிஸ்தவ விசுவாசம் அறிக்கையிடுகிறது (உரோ 10:6-10).

3. நரகத்தின் வாயில் உடைக்கப்படுதல்:

தனது மரணத்தின்மூலம் இயேசு இறுதிப் பகைவனாகிய சாவின் மீது வெற்றி கொள்கிறார் (1 கொரி 15:26). நரகத்தின் வாயில்களை அவர் உடைத்துத் திறந்தார். இறைவனின் பார்வையில் மரணமும் பாதாளமும் எப்போதும் "நிர்வாணமாகவே" இருந்தன (ஆமோ 9:2; யோபு 26:6). ஆனால், இப்போது தாங்கள் கொண்டுள்ள இறந்தோரைத் திருப்பித் தருமாறு அவை கட்டாயப்படுத்தப்படுகின்றன (திருவெளி 20:13; மத் 27:52-53). ஆண்டவரது மரணம்வரை நரகமானது, அனைத்து ஊனுடலும் கூடுமிடமாகவும், இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்ட மனித இனத்தினுடைய முடிவான சந்திக்குமிடமாகவும் இருந்தது. "துஞ்சினோரின் முதற்கனியும்" (1 கொரி 15:20-23), "இறந்தோரிடையிலிருந்து முதற் பேரானவருமான கிறிஸ்துவுக்குமுன், அதனின்று யாரும் வெளிவர இயலாததாயிருந்தது" (திருவெளி 1:5). ஆதாமில் மரணத்திற்கும் இறைவனிடமிருந்து பிரிவிற்கும் தீர்வையிடப்பட்ட மனித இனத்திற்கு மீட்பு என்பது நரகத்தின் வாயில்களைத் திறப்பதும், முடிவில்லா வாழ்வின் கொடையைப் பெறுவதுமாகும். திருச்சபையே இவ்வெற்றியின் கனியும் கருவியுமாகும் (மத் 16:18).

ஆனால், கிறிஸ்து அவரது வருகைக்கு முன்னரே வாக்களிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்டார். இவ்வாக்குறுதியை ஏற்றுக் கொண்ட அளவில் பழைய ஏற்பாட்டு மனிதன், பாதாளமானது உறுதிப்படுத்தப்பட்ட ஒளியால் ஒளிர்விக்கப்படுவதைக் காண்கிறான். ஆனால், அதற்கு முரண்பட்ட நிலையில் அதனைப் புறக்கணிக்கின்ற அளவில் பாதாளம் நரகமாக உருவாகிறது. சாத்தானின் வல்லமையானது அச்சுறுத்தலில் நிலவுகின்ற பாதாளத்தில் அவன் மூழ்குகிறான். இறுதியாக இயேசு கிறிஸ்து தோன்றும்போது, "அவரது நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்கள். அவருடைய திருமுன்னிருந்து அகற்றப்பட்டு, முடிவில்லாத அழிவைத் தண்டனையாகப் பெறுவர்' (2 தெச 1:8:9). "நெருப்புக் கடலில்" சாவு, பாதாளம் ஆகியவற்றுடன் அவர்கள் மீண்டும் ஒன்று சேர்வர் (திருவெளி 20:14-15).

நரந்தம், இலாமிச்சை நறுமணத் தைலம் (NARD)

இதைக்குறிக்கும் மூலச்சொல் சமஸ்கிருதம், பாரசீக மொழிகளிலிருந்து வருவதாகத் தெரிகிறது. இஃது இமாலயப்பகுதியில் காணப்படும் இந்திய நறுமணமூலிகையின் வேர் மற்றும் மயிரிழை கொண்ட தண்டிலிருந்து தயாரிக்கப்பட்ட விலையுயர்ந்த நறுமணத் தைலமாகும்.

பழைய ஏற்பாட்டில் பேரின்பப் பாடலில் அரச மஞ்சத்திற்கு நறுமணம் பரப்பும் பொருளாக விவரிக்கப்படுகிறது (உ.ச 1:12). மேலும் காதலியை அடையாளமாக விவரிக்கப் பயன்படும் மருதோன்றி, மஞ்சள், கன்னல், இலவங்கம், வெள்ளைப் போளம், அகில்முதலிய தலை சிறந்த நறுமணப்பொருள்களோடு சேர்த்து நரந்தம் குறிக்கப்படுகிறது (உ.ச. 4:13-14).

இயேசு, தொழுநோயாளர் சீமோன் வீட்டிலும் (மாற் 14:3), இலாசரின் வீட்டிலும் (யோவா 12:3)

உணவருந்தியபோது, நரந்தம் தைலத்தால் தலையிலும் காலடியிலும் பூசப்பட்டார். இவ்விரு இடங்களிலும் புதிய தமிழ் மொழிபெயர்ப்பில் இச்சொல் இலாமிச்சை நறுமணத் தைலம் என்றுள்ளது. இத்தைலம் கொண்ட ஒரு சிறு படிகச்சிமிழின் விலை 300 தெனாரியு என்று குறிப்பிடப்படுகிறது. இந்த விலை ஓர் உழைப்பாளியின் ஓராண்டுச் சம்பளத்திற்குச் சமமாகும். மத் 26:6-13; லூக் 7:36-50 என்ற பகுதிகள் வெறுமனே விலையுர்ந்த நறுமணத் தைலம் என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றன.

நரி, குள்ளநரி (FOX, JACKAL)

இரண்டு சொற்களும் அதிக வேறுபாடு இல்லாமல் மாறிமாறிப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

நரி மாமிசம் உண்ணும்; குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் விலங்கு; ஓநாயைவிடச் சிறியது; நீண்ட, மயிர்நிறைந்த வாலுடையது; வேகமாக ஓடக்கூடியது; சூழ்ச்சி, கபடம், தந்திரம், ஏமாற்றுதல் ஆகிய குணங்களை உடையது; தனித்து வாழ்வது. இரவில் நடமாடும் இவ்விலங்கு, சிறுபூச்சிகள், பறவைகள், எலிகள், பழங்களை உண்ணும். பதுங்கக் குழி தோண்டும் (மத் 8:20 இணை; லூக் 9:58). நரி வஞ்சகமிக்கது. அதனால்தான் ஏரோது அந்திப்பாவை நரி என்று இயேசு குறிப்பிடுகிறார் (லூக் 13:32). ஆனால் யூத வழக்கில் நரி பயனற்றதையும், சிறுமையானதையும் உணர்த்திற்று (காண். நெகே 4:3; எசே 13:4). போலி இறைவாக்கினர்களையும் குறிக்க நரி என்ற சொல் பொருத்தமாகப் பயன்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள், இஸ்ராயேலரின் துன்பங்களுக்கிடையில், தங்களது ஆதாயத்தையே தேடினர் (எசே 13:4).

குள்ள நரியும் மாமிசம் உண்ணும் பாலூட்டி விலங்காகும். ஓநாயை விடச் சிறியது. ஆனால், அதைவிடக் குறுகிய வாலைக்கொண்டது. குறுகிய காதுகளையுடையது; அதன் மூக்கு ஓநாயினுடையதைவிடக் கூர்மையானது; நரியினுடையதைவிட அகலமானது. குள்ள நரிகள் கூட்டமாக, இரவிலும் நடமாடும். இவை சிறு விலங்குகள், பறவைகள், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை உண்ணும். நரியைப்போல் அல்லாமல், செத்த உடல்களையும் கழிவுப்பொருட்களையும் உண்ணும். மற்றப்படி நரிகளுக்கும் குள்ள நரிக்கும் பழக்க வழக்கங்களில் அதிக வேறுபாடு இல்லை. ஆகையால் இரண்டுக்கும் குழப்பம் ஏற்படுவதுண்டு. குள்ள நரிகள் கூட்டமாக வாழ்வதால் உயர்தொனியில் ஊளையிட்டு ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளும் (மீக் 1:8; காண். எசா 13:21-22). இவை கோழிப்பண்ணைக்கும், திராட்சைத் தோட்டத்திற்கும், காய்கறித் தோட்டத்திற்கும் அதிக அழிவை ஏற்படுத்தக்கூடியவை.

விவிலியத்தில் குள்ள நரி தன் குட்டிகளுக்குப் பாலூட்டுவது பற்றிய குறிப்பையும் (புல 4:3), எருசலேமுக்கு வெளியிலுள்ள நரிநீரூற்று பற்றிய குறிப்பையும் (நெகே 2:13) தவிர மற்றக் குறிப்புகள் எல்லாம் பாழடைந்த இடங்களிலும் பாலைவனப் பகுதிகளிலும் அலைந்து திரிவது பற்றியவையாகும் (யோபு 30:29; சங் 44:19; எசா 35:7; எரே 9:11; 10:22; 14:6; 49:33; 51:37). பாபிலோன்(எசா 13;22; எரே 51:37), ஏதோம் (எசா 34:13), ஆட்சோர் (எரே 49:33), யூதாவின் நகர்கள் (எரே 10:22), எருசலேம் (9:11), சீயோன்மலை (புல 5:18), ஏசா (மலா 1:3) ஆகியவை குள்ளநரிகள் நடமாடும் இடங்களாக மாறிவிடும் என்று குறிக்கப்படுகின்றன. சங் 63:10-இல் சங்கீத ஆசிரியர் தன் எதிரிகள் குள்ள நரிகளுக்கு இரையாவர் என்று கூறுகிறார். ஆனால் அதே துக்ககரமான முடிவு இஸ்ராயேலுக்கு நிகழும் என்றும் சங் 44:19-இல் கூறுகிறார். மெசியாவின் காலத்தில் குள்ள நரிகள் நடமாடும் இடமெல்லாம் தாவரங்களால் செழிப்புற்று விளங்கும் (எசா 35:7). பாழ்வெளியில் கிடைக்கும் மிகுந்த தண்ணீருக்காகக் குள்ள நரியும், காட்டு விலங்குகளும் இறைவனைப் புகழும், மாட்சிமைப்படுத்தும் (எசா 43:20).

நரி நீரூற்று (JACKAL'S WELL)

நெகேமியா கடந்து சென்ற பாதையில் இருந்த ஒரு கிணறு அல்லது நீரூற்று (நெகே 2:13). இஃது எருசலேமுக்கு வெளியில் இன்னோம் பள்ளத்தாக்கில், பள்ளத்தாக்கு வாயிலுக்கும் குப்போமேட்டு வாயிலுக்கும் இடையில் அமைந்திருந்தது. சிலர் இதை ஏன்-ரோகேல் என்று அடையாளம் காட்டுவர்.

நரைமயிர் (GRAY)

இஃது ஓர் எபிரேய வினைச்சொல்லின் மொழிபெயர்ப்பாகும். வினைச்சொல்லை விட, பெயர்ச்சொல்லையே அதிகமாகக் குறிக்கும். இது நரை முடி கொண்ட முதிர்ந்த வயதைக்குறிக்கும் (ஆதி 42:38; 44:29.31; உப 32:25; 1 சாமு 12:2; யோபு 15:10; சங் 71:18; பழ 20:29; எசா 46:4; ஒசே 7:9).

நர்க்கிசு (NARCISSUS)

ஒரு குடும்பத்தின் பெயரே இது. இக்குடும்பத்தில் அடிமைகளும் இருந்தனர். சிலர் கிறிஸ்தவர்களாகவும் இருந்தனர். பேரரசர் கிளாதியுவால் (கி.பி. 41-54) உரிமை தரப்பட்ட ஒருவர் இப்பெயருடைய இக்குடும்பத்தலைவர். பவுல் தான் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தின் இறுதியில் இக்குடும்பத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார் (உரோ 16:11).

நல்ல சமாரியன் (GOOD SAMRIYAN)

"என் அயலான் யார்"? என்ற கேள்விக்கு விடையாக இயேசு இந்த உவமையைக் கூறுகிறார் (லூக் 10:30-37). எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும்பாதை திருடர்கள் நிறைந்த பயங்கரமான பாதை. அங்கே திருடர்களால் தாக்கப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தான் ஒரு யூதன். அவ்வழியே சென்ற யூதச்சட்டத்தின் இரு பிரதிநிதிகள், இறந்தவன்போல் கிடந்தவனின் உடலைத் தொடுவதனால் தீட்டுப்பட்டுவிடுமோ என்றஞ்சி, ஒருவரும் அவனுக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. அசீரியர்கள் இஸ்ராயேலின் வட பகுதியைக் கைப்பற்றியபோது, அங்குக் குடியேறிய அசீரியர்களும் யூதர்களும் கலந்த கலப்பின மக்களே சமாரியர்கள். ஆகவே இவர்களை யூதர்கள் வெறுத்தனர்; ஒதுக்கிவைத்தனர். இரு குழுவினருக்குமிடையே பரம்பரை பரம்பரையாகப் பகைமை உணர்ச்சி இருந்து வந்தது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல், அவ்வழியே சென்ற ஒரு சமாரியன், குற்றுயிராய்க் கிடந்த யூதனுக்கு உதவி செய்கிறான். இவ்வாறு திருடர்களால் தாக்கப்பட்டவனுக்கு அயலானாக, சமாரியன் காட்டப்படுகிறான். பிறரன்பு-நாடு, இனம், குலம், மதம், போன்ற பாகுபாடுகளைக் கடந்தது என்று காட்டுகிறார் இயேசு.

நல்ல சிவப்பு (CRIMSON, SCARLET)

கருவாலி மரத்தில் காணப்படும் ஒருவகைப் பூச்சி இனத்தின் பெண்பூச்சியின் காய்ந்து போன உடலிலிருந்து தயாரிக்கப்படும் செவ்வண்ணப் பொருளாகும். இது துணியாலோ, தோலாலோ செய்த ஆடைகளுக்குச் சாயம் பூசப்பயன்பட்டது (ஆதி 38:28; யோசு 2:18; ' நாள் 2:7; உ.ச. 4:3; நாகூ 2:3). இச்சாயம் பூசப்பட்ட ஆடைகள் அழகு சாதனமாகப் பயன்பட்டன (2 சாமு 1:24; எரே4:30); செல்வந்தர்களாலும் (பழ 31:21; புல 4:5; திருவெளி 18:16), அரச குடும்பத்தாராலும் (உ.ச. 7:5; மத் 27:28; திருவெளி 17:4). சிறப்பாக அணியப்பட்டன. திருக்கூடாரத்தில் பயன்பட்ட துணிகளிலும் சாலமோன் கட்டிய ஆலயத்தின் திரையிலும் இந்நிறம் சிறப்பிடம் பெற்றது (யாத் 25:4; 26:1. 31:36; 2 நாள் 3:14). தொழுநோயாளியின் தீட்டகற்றும் சடங்கிலும் (லேவி 14:4), இறந்த உடலைத் தொடுவதால் ஏற்படும் தீட்டகற்றும் சடங்கிலும் (எண் 19:6), இந்நிறநூல் இடம் பெற்றது. இச்சிவப்பு நிறத்திலிருந்து பனி அல்லது கம்பளத்தின் வெண்மை நிறத்திற்கு மாறுவது பாவமன்னிப்பை உருவகமாக உணர்த்திற்று (எசா 1:18).

உரோமையர் தாங்கள் வென்ற மக்களிடமிருந்து கோரிய கப்பத்தில் இப்பொருளும் அடங்கும். இஃது ஒரு வியாபாரப் பொருளாகவும் (திருவெளி 18:11–12), மருந்துப் பொருளாகவும் பயன்பட்டது. இந்நிறம் பல்வேறு தரமுடையது. நிறத்தைக் கெட்டியாக்கப் படிகாரம் போன்ற பொருள்கள் உதவின.

நல்லது, நல்லவர் (GOOD)

இச்சொல் பலபொருளில் விவிலியத்தில் பயன்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, "நல்ல பரந்தநாடு" (யாத் 3:8), "அவன் நல்லவன்" (2 சாமு 18;27), "கடவுள் ஒளியை நல்லது என்று கண்டார்" (ஆதி 1:4), "நல்ல வாக்குறுதி"(யோசு 23:14) போன்ற இடங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நல்ல என்ற இக்கருத்து ஏற்றுக்கொள்ளப் பட்ட செயல்முறையான ஒழுக்க அல்லது சமய மரபமைதிக்கேற்ப ஒரு நபருடைய அல்லது பொருளுடைய அழகையும், தன்மையையும் உணர்த்த வல்லது. ரபேக்காவும் (ஆதி 24:12), பாரசீக அரசிகளும் (எஸ்த 1:11; 2:2) எழில் மிக்கவர்களாக இருந்தனர். மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று (ஆதி 2:18). நல்ல மனைவியை அடைகிறவன் நல்வாழ்வு பெறுவான் (பழ 18:22). தேன் சாப்பிடுவது நல்லது (பழ 24:13). நல்ல அத்திப்பழம் (நீதி 9:11) அல்லது தேன் இனிமையானது. தேன் கிடைத்தால் அளவோடு சாப்பிடு; அளவு மீறினால் தெகிட்டிவிடும் (பழ 25:16). நீண்ட வாழ்வே நல்ல வயதாகும் (நீதி 8:32). செத்துப்போன சிங்கத்தைவிட உயிருள்ள நாயே மேல் (திருவுரை 9:4). ஆனால் பிறவாதவர்களின் நிலைமையே சிறந்தது (4:3; காண். 6:3). மாடிவீட்டில் நச்சரிக்கும் மனைவியோடு வாழ்வதைவிட, குடிசையிலோ, பாலை நிலத்திலோ தனியே வாழ்வதே மேல் (பழ 21:9.19; 25:24).

இந்த மரபமைதிகள் ஒழுக்க அல்லது சமயச்சிந்தனையில்லாமல், அன்றாட வாழ்க்கையில் மகிழ்ச்சியானவை அல்லது கடினமானவைகளை அடிப்படையாகச் கொண்டுள்ளன. ஆனால், இந்த அனுபவங்கள் ஒழுக்கக் கூறுகளைக் கொண்டிருக்கலாம். நல்லவற்றிற்கு ஒழுக்கப் பண்பளித்து, இக்கூறுகளை வெளிக்கொணர்வதே மேற்காசிய மற்றும் இஸ்ராயேல் ஞானநூல்களின் முக்கிய அக்கறையாகும். ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானம் நற்போதனை அளிக்கிறது (பழ 4:2). அதை அடைவது வெள்ளியையும், பொன்னையும் அடைவதை விட மேலானது (3:14; 8:19; 16:16). மூடர்கள் புகழ்ந்துரைப்பதைக் கேட்பதினும், ஞானி இடித்துரைப்பதைக் கேட்பது நன்று (திருவுரை 7:5). வலிமை உடையவனைவிடப் பொறுமையுடையவனே மேலானவன்; ஊரை அடக்குகிற வனைவிடத் தன்னை அடக்குகிறவனே சிறந்தவன் (பழ 16:32). வலிமையை விட ஞானமே சிறந்தது (திருவுரை 9:16). முறை கேடாகப் பேசும் செல்வனைவிட நேர்மையாக நடக்கும் ஏழையே மேலானவன் (19:1). பதற்றத்துடன் நடப்பவன் இடறிவிழுவான் (19:2); பற்றாக்குறையில் இருப்பான் (21:5). ஞானத்தைப் பெறுதலே உண்மையான தன்னலமாகும்; மெய்யறிவைப் பேணிக்காப்பவன் நன்மை அடைவான் (19:8). இஸ்ராயேலர்களுக்கு இந்த அறிவு மோசே மற்றும் இறைவாக்கினர் வழியாக யாவே அளித்த சட்டத்தில் அடங்கியிருக்கிறது (நெகே 9:13; மீக் 6:8; சங் 119:39). அதை இஸ்ராயேலரில் வயது வந்தவர் அனைவரும் கற்று நன்மை தீமையை வேறுபடுத்த அறிந்திருக்க வேண்டும் (உப 1:39; எசா 7:15). யாவேயின் கட்டளைகள் நல்லவை. ஏனெனில், அவர் நல்லவர் (சங் 136:1)! ஏன், உண்மையில் அவர் மட்டுமே நல்லவர் (மத் 19:17; மாற் 10:18; லூக் 18:19). தமது கட்டளைகளை வெளிப்படுத்துவதின் வழியாக அவர் வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் மக்கள்முன் வைத்துள்ளார் (உப 30:15).

இறைவன் உன்னத விதத்தில் நல்லவர். இந்த

நன்மை, படைப்பில் வெளிப்படுவது மட்டுமன்று. இது பேரன்பின் நன்மையாகும். நன்றிக்கும் புகழுக்கும் உரியது (சங் 106:1; 107:1; எரே 33:11). இறைவன் தம் நன்மையைப் படைப்பில் காட்டுகிறார் (ஆதி 1). அதைவிட மேலாக உடன் படிக்கைக்குக் காட்டும் பிரமாணிக்கத்தில் அதைக் காட்டுகிறார். அவர் அளித்த எகிப்திலிருந்தான மீட்பில், பாலைவனத்தில் காட்டிய அக்கறையில் (யாத் 18:9), நாட்டையும் (யோசு 24:20), போதனைகளையும் சட்டத்தையும் (எரே 6:16), ஆலயத்தையும் (எஸ் 3:11), மன்னிப்பையும் (ஓசே 3:5)கொடையாக அளித்ததில், ஒடுக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளித்ததில் (சங் 68:10), துன்ப காலத்தில் பலம் அளித்ததில் (அப 1:7), நாடு மீண்டும் அமைக்கப்பெறுதலையும் புதிய உடன்படிக்கையையும் வாக்குறுதி அளித்து (செக் 8:15; எரே 32:40), அதை இப்போது இயேசுவில் மகிமையான விதத்தில் நிறைவேற்றியதிலும் (தீத் 3:4), நற்செய்தியின் மீட்கும் சொற்களிலும் (எபி 6:5), அவை தரும் புதிய வாழ்விலும் (பிலி 1:6) இறைவன் தம் நன்மைத் தன்மையைக் காட்டுகிறார். இறைவனது பெயர் நல்லது (சங் 54:6). அவ்வாறே அவரது ஆவியும் அதன் பலன்களும் நல்லவை. அவர் நல்லவர் என்று லேவியரும் மக்கள் கூட்டமும் அறிக்கையிட வேண்டும் (1 நாள் 16:34). அவரது நன்மைத்தன்மை அவருடைய பேரன்பிலும், எளியோருக்குக் காட்டும் பரிவிலும் முக்கியமாக வெளிப்படுகிறது. அவரைத் தேடுவதும், நன்மையை நாடுவதும், தீமையை வெறுப்பதும் (ஆமோ 5:6. 14-15), நீதியைத் தேடுவது, ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்தல், திக்கற்றோர்க்கு நீதி வழங்குதல் கைம்பெண்ணுக்காக வழக்காடுதல் ஆகியவற்றுக்குச் சமமாகும் (எசா 1:17). இத்தகைய மனநிலைக்கு வெகுமதியாக இறைவன் தமது மக்களுக்கு நல்லநாடு, வெற்றிகள் மற்ற நலன்கள் ஆகியவற்றையும், தனிநபரான இஸ்ராயேலருக்கு உடல் நலம், செல்வச்செழிப்பு, நீடிய வாழ்வு ஆகியவற்றையும் அளிக்கறார். ஆனால் இவை யாவும் இறைவனோடு ஒப்பிடும்போது ஒன்றுமின்மையாகும் என்றும், அவரைத் தவிர தனக்கு வேறு நன்மையில்லை என்றும், மிகப் பெரிய இடுக்கண்கள் துன்பங்களில் கூட அவர் அருகில் இருப்பதுவே தனக்கு நலம் என்றும் பக்தியுள்ளவர் அனுபவப்பூர்வமாக உணர்வார்.

இறைவனுடைய இந்த நன்மைத்தன்மை உண்மையான இஸ்ராயேலர், தூய உள்ளத்தினர் (சங் 73:1; மீக் 2:7), அவரில் நம்பிக்கை வைத்துத் தேடுவோர் (புல 3:25) ஆகியோருக்கே கிடைக்கும். அவரது தோழமைக்குப் புறம்பே நன்மையே இல்லை (சங் 16:2). அவர் ஒருவரே நல்லவர் (மத் 19:17). இறைவனுடைய இந்த நன்மைத் தன்மைக்கு ஒருவரும் உரிமை கொண்டாட முடியாது (சங் 14:3; உரோ 7:18). ஆனால் இத்தோழமை கிறிஸ்துவின் பணியால் நமக்குக் கிடைக்கக் கூடியதாகிறது (எபி 9:11; 11:1).

மக்கள் ஒருவர்க்கொருவர் நன்மை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் (லூக் 6:35). ஒருவனை ஏற்புடையவனாக்க ஒழுக்க நன்மைத் தன்மையை அடைதலோ, கொண்டிருத்தலோ முடியாதெனினும், (உரோ 7:13), மக்கள் ஒருவர்க்கொருவர் அன்றாட வாழ்வில் நன்மை செய்கின்றனர் (லூக் 11:13). இந்த நன்மைத்தன்மையை நெறிகோணச் செய்வது தீர்ப்பைக் கொண்டு வருகிறது (எச 5:20). நன்மை தீமையைத் தேர்ந்து தெளியவும் (உப 34:15; எபி 5:14), நன்மையை மட்டும் தேர்ந்து கொள்ளவும் (சங் 5:14; 34:15; உரோ 12:9; 1 தெச 5:15) மக்களுக்கு விடப்படும் அழைப்பு விவிலியம் முழுவதும் காணப்படுகிறது. இவ்வாறு தேர்ந்து கொள்ளுதல் குருட்டுத் தன்மையுடையது அன்று. ஏனெனில், நல்ல கட்டளைகள், போதனைகள் வழியாக (சங் 119:39.68; பழ 4:2; உரோ 7:2) இறைவனே வழிகாட்டுகிறார். நீதியை நிலைநாட்டு (ஆமோ 5:14:15); பொய்பேசாதே (சங் 52:3); அமைதியைத் தேடு (சங் 34:14); நேர்மையானவனுக்கு நீதி கிடைப்பதைத் தடுக்காதே (பழ 18:5); எளியோரைப் பாதுகாத்துவா

(எசா 1:17). நல்லது எது? நேர்மையைக் கடைப்பிடித்தலும், இரக்கம் காட்டுவதும், இறைவன் முன் தாழ்ச்சியோடு நடந்து கொள்ளுவதும்தானே நல்லது! (மீக் 6:8).

இத்தகைய வாழ்க்கை முறையின் எதிர் பார்க்கப்பட்ட விளைவே நற்செயல்களாகும்; கிறிஸ்தவனின் வாழ்வின் நல்ல பலன்களாகும் (மத் 7:17; யாக் 3:17). இவையே இறைவனின் தேர்ந்தெடுத்தல் மற்றும் மீட்பின் நோக்கமாகும் (எபே 2:10; கொலோ 1:10; தீத் 2:14); நற்செய்தியைக்கேட்டு விசுவாசிக்கும் நல்ல நிலத்தின் அறுவடையாகும் (மத் 13:8.23); மறைத்து வைக்க முடியாத பலன் (1 திமொ 5:25; மத் 5:16). இந்நற்செயல்கள் கிறிஸ்தவனின் கடமையாகும் (1 திமொ 6:12); கிறிஸ்தவனின் உண்மையான செல்வமும் அணிகலனும் ஆகும் (2:10; 5:10; 6:18; 2 திமொ 2:21).

நவியோத்து (NAVIOTH - குடியிருப்பு)

இரமாவிலே சாமுவேலின் கீழ் ஒன்றாக வாழ்ந்த இறைவாக்கினர்களின் பொதுவான வாழுமிடத்தைக் குறிப்பதே இப்பெயர் (1 சாமு 19:18-24). தாவீது, பவுலின் கோபத்திற்குத் தப்பி ஓடி ஒளிந்தது இவ்விடத்தில் தான் (1 சாமு 19:18-19). இங்கு, சவுலும் அவரது ஆட்களும் தாவீதைத் தேடிச்சென்ற போது இறைவாக்கு ஆவியில் ஆட்கொள்ளப்பட்டனர் (1 சாமு 19:20-24). இதன் பிறகு யோனத்தானைச் சந்தித்தபிறகு தாவீது ஓர் அகதிகள் குழுவின் தலைவரானார் (20:1; 22:1-2).

இப்பெயர் எதிலிருந்து தோன்றியது என்பது தெளிவாயில்லை. "வாழுமிடம்" என்பதைக் குறிக்கலாம். மேலும் இவ்விடம் 'இரமாவிலே' இருந்ததெனத் திரும்பத் திரும்பக் கூறப்படுவதால் ஒரே இடத்திற்கு இரு பெயர் கொடுக்க நினைந்திருக்க மாட்டார்கள் (1 சாமு 19:9.22-23). இறைவாக்கினர்களின் செயலும், திருவிடமும், எல்லோரும் தங்குவதற்கேற்ற வசதிகளுமைந்து இந்த இடத்திற்கு ஏற்கெனவே சவுல், சாமுவேலின் விருந்தினராக வந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது (1 அர 9:19.22-25). எலிசாவின் மேற்பார்வையில் இருந்த இறைவாக்கினரின் பள்ளிபோல இதுவும் இருந்திருக்க வேண்டும் எனும் கருத்து இருக்கிறது (2 அர 6:1-7). இதற்கு ஆதரவாக தார்கும் நவியோத்தைப் "போதனையின் வீடு" என்று கூறுகிறது.

நள்ளிரவில் வந்த நண்பன் (FRIEND AT MID-NIGHT)

வேண்டுதலின் உவமைகள் என்று சில நேரங்களில் அழைக்கப்படும், இயேசுவின் இரண்டு சிறிய உவமைகளில் ஒன்றாகிய இது, லூக்கா நற்செய்தியில் மட்டுமே காணப்படுகிறது (11;5-6). செபத்தின் சூழ்நிலையில் மனிதனுக்கான இறைவனின் அருளை இது விவரிக்கிறது. சீடர்களில் ஒருவர் செபிக்கக் கற்றுக் கொடுக்குமாறு இயேசுவைக் கேட்டபோது, அவர் அவர்களுக்கு ஓர் உதாரணத்தை அளித்து (கர்த்தர் கற்பித்த செபம்), இந்த உவமையைக் கூறுகிறார். மேலும் ஆகாத வேளையில், உதவிக்கான அழைப்பிற்குப் பதிலளிக்க மறுக்கின்ற நண்பர் எவரையாவது அவர்கள் கொண்டுள்ளனரா என்று தனது சீடர்களை வினவிய பின்னர், நட்பிற்காக இல்லா விடினும், சூழ்நிலையின் அவசரத்திற்காகவேனும், நண்பர் எழுந்து தேவையான அளவிற்கு இயேசுவே பதிலளிக்கின்றார். ஆயினும் இந்த அவசரமானது, கேட்பதன் வெளிப்படையான, இடைவிடாத பிடிவாதத்தினால் மட்டுமே வெளிப்படுத்தப்பட முடியும்.

உவமையை விளக்கும்போது, "ஒருவன் தன் தந்தையிடம் அப்பம் கேட்டால், அவனுக்குக் கல்லையா கொடுப்பான்?....உங்கள் தந்தை கேட்பவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய்ப் பரிசுத்த ஆவியை அளிப்பார்" என்று தொடர்கிறார் (லூக் 11:11,13). தயக்கமுடைய அயலாரே உதவி செய்ய முன் வரும்போது, தனது பிள்ளைகளின் வேண்டுதல்களை வரவேற்கின்ற தந்தையாகிய இறைவன், பதிலளிக்க எவ்வளவு தயாராக இருப்பார் என்பதே இதன் பொருளாகும்.

ஆயினும், மனிதருடைய செபங்களுக்கும் தேவைகளுக்கும், அவர்களது விடாமுயற்சிக்கும் பதிலளிப்பதில் அவர் கொண்டுள்ள இடர்ப்பாடுகளை மனிதர் அறிய முடியாது. கேட்பதை எப்போதும் அளிக்க இயலாவிடினும், தேவையை என்றுமே அவர் கேலி செய்ததில்லை. அவர் கலந்தாழ்த்துவதைக் கண்டு நாம் அயராது, தொடர்ந்து செபிக்கவேண்டும். அநீதியான நடுவரின் உவமையும் இதனையே குறிப்பிடுகின்றது.

நறுமணத் தைலம் (OIN MENT)

இஃது அபிடேக எண்ணெயாகும். விவிலிய காலத்து மேற்காசிய நாடுகளின் பழக்கவழக்கங்களின்படி நறுமணத் தைலம் பல வகைகளில் பயன்படுத்தப்பட்டது.

1. **நறுமணத்தைலத்தில் உள்ளவை:**

அ) எண்ணெய்: இஸ்ராயேல் நாட்டில் ஒலிவ எண்ணெய்தான் நறுமணத் தைலத்திற்கு முக்கியமான அடிப்படைப் பொருள் (உப 28:40). அதுவே தைலமாகவும் பயன்பட்டது. அண்டை நாடுகள் எள் எண்ணெய், வாதுமை எண்ணெய், விலங்குகளின் கொழுப்பு போன்ற பலவகை எண்ணெய்களை, நறுமணத் தைலம் செய்வதற்கு அடிப்படைப் பொருள்களாகப் பயன்படுத்தின.

. **ஆ) பரிமளப்பொருட்கள்:** ஒலிவ எண்ணெயுடன் பல்வேறு நறுமணப்பொருட்கள் சேர்க்கப்பட்டன. தைலம் அல்லது எண்ணெய் என்ற சொல்லுடன் வரும் பண்புச் சொற்களாகிய விலைமதிப்புள்ள (2 அர 20:13), இனிமையான (உ.ச.1:3), உயர்ந்த (ஆமோ 6:6) ஆகிய அடைமொழிகள் சேர்க்கப்படுகின்றன.

2. **தயாரிக்கும் முறை:** எகிப்தியர்கள், கிரேக்கர்கள், யூதர்கள், உரோமானியர்கள் ஆகியோர் நறுமண எண்ணெய் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களை நன்கு அரைத்து, எண்ணெயில் கொதிக்க வைத்துக் கலக்கி, பின்பு வடிகட்டி, தயாரிக்கிறார்கள். ஆழியைக் கொப்பளிக்கச் செய்யும் பெகிமோத்தின் செயல் நறுமணத் தைலம் செய்தலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.(யோபு 41:23)

3. **மதிப்பு:** எசேக்கியா, எகிப்திய பார்வோன்கள் ஆகியோருடைய கருவூலங்களில் சேர்த்து வைக்கப்பட்ட பொருட்களில் நறுமணத் தைலமும் ஒன்றாய் இருந்ததே, அதன் பெரும் மதிப்பை எடுத்துக்காட்டுகிறது (2 அர 20:13). நரந்தம் என்னும் நறுமணத் தைலத்தைத்தான் மரியாள் இயேசுவின் பாதத்தில் பூசினாள் (யோவா 12;3.5). திருடர்கள் எகிப்தியக் கல்லறைகளில் தங்கப்பொருட்களை விட்டு விட்டு, நறுமணத் தைலப்பொருட்களைத் திருடிச்சென்றனர்.

4. **கொள்கலன்கள்:** அரசர்களை அபிடேகம் செய்யப் பயன்பட்ட தைலம் குப்பி (1 சாமு 10:1), கிண்ணம் (2 அர 9:1), கொம்பு (1 சாமு 10:1) போன்ற பாத்திரங்களில் எடுத்துச் செல்லப்பட்டது. பெத்தானியாவில் இயேசுவின் பாதங்களில் பூசப்பயன்பட்ட நறுமணத்தைலம் படிகச் சிமிழில் வைக்கப்பட்டிருந்தது (மத் 26:7). படிகச் சிமிழ்தான் நறுமணத்தைலம் ஊற்றி வைக்கச் சிறந்த கலனாகும் என்று பிளினி கூறுகிறார். அப்படிப்பட்ட படிகச்சிமிழ்களில்தான் நறுமண எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. எகிப்திலும், பாலஸ்தீனாவிலும் படிகச் சிமிழ்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

5. **பயன்கள்:**

அ) அழகு சாதனம்: மேற்காசிய நாடுகளில் வறட்சிக்காலத்தில் தோலின் வறட்சியை நீக்க எண்ணெய் பூசிக்கொண்டார்கள் (மீக் 6:15). தலைக்கு எண்ணெய் தடவுதல் (மத் 6:17), குளித்து முடித்தவுடன் உடம்பு முழுவதும் தடவுதல் (ரூத் 3:3; 2 சாமு 12:20) வழக்கம். யூதித்து ஒலபெரினேயைச் சந்திக்கும் முன்பும் (யூதி 10:13), எஸ்தர் அகசுவேரைப் பார்க்கும் முன்பும் (எஸ்த 2:12), மனிதர்கள் மற்றவர்களைக் குறிப்பாக, எதிர்ப்பாலினரைக் கவரவும் நறுமணத்

தைலத்தைப் பயன்படுத்துவது வழக்கமாயிருந்தது (உ.ச. 1:3).

ஆ) விருந்தோம்பல்: விருந்தின்போது விருந்தினர்களின் தலையின்மீது எண்ணெய் பூசி வரவேற்பது அவர்களைக் கௌரவிப்பதின் அடையாளமாகும் (சங் 23:5). லூக் 7:46-இல் இயேசு தன்னை விருந்துக்கு அழைத்து பரிசேயனாகிய சீமோனையும், பாவியான பெண்ணையும் எண்ணெய் பூசி வரவேற்றதில் வேறுபடுத்திக் காட்டுகின்றார். சில நேரங்களில் யூதத் திருமணங்களின்போது யூத ராபிகள் எண்ணெய் பூசி வரவேற்கப்பட்டனர். பழைய எகிப்திய விருந்துப் படங்கள் எவ்வாறு விருந்தாளிகள் எண்ணெய்பூசி வரவேற்கப்பட்டனர் என்பதைச் சித்தரிக்கின்றன.

இ) மகிழ்ச்சியின் அடையாளம்: எண்ணெய் பூசுதல் இன்பத்தின், மகிழ்ச்சியின் அடையாளமாகும் (சங் 45:7). பொதுவாக, துக்க நேரங்களில் எண்ணெய் பூசுதல் கைவிடப்பட்டது (2 சாமு 12:20-21). யூத ராபிகள் துக்க காலத்திலும், நோன்புக்காலத்திலும் நறுமணத்தைலம் பூசுவதைத் தடை செய்தனர். ஆனால் இயேசு வெளிவேடத்தைத் தவிர்க்க எண்ணெய் பூசச் சொல்கின்றார் (மத் 6:17).

ஈ) மருந்து: எண்ணெய் நோய்களையும் (எரே 8:22, மாற் 6:13, யாக் 5:14), புண்ணையும் (எசா 1:6; லூக் 10:34) குணப்படுத்தும் மருந்தாகப் பயன்பட்டது. குணமான தொழுநோயாளி மீது எண்ணெய் பூசுதல் மருந்தவ மற்றும் அடையாள நோக்குடையதாகும்.

உ) ஈமச் சடங்குகள்: எகிப்து நாட்டிலே பல வகையான நறுமணப்பொருட்களை இறந்த உடலைப் பாடம் செய்வதற்குப் பயன்படுத்தினார்கள். இந்த வழக்கத்தை யாக்கோபிற்கும் யோசேப்புக்கும் செய்தார்கள். மரியாளும் இயேசுவின் அடக்கத்தைக் குறித்தே எண்ணெய் பூசினாள் (மாற் 14:8). கிறிஸ்துவைப் பின்பற்றிய சில பெண்கள் இயேசுவின் உடல்மீதுபூச நறுமணத் தைலங்களை எடுத்துக் கொண்டு கல்லறைக்குச் சென்றார்கள் (மாற் 18:1; லூக் 23:56). மிஸ்னா, அடக்கதிற்கு முன் இறந்த உடலுக்குத் தைலம் பூசுவதைக் குறிக்கின்றன.

ஊ) கேடயங்கள்: கேடயங்களின் தோலைப் பாதுகாக்கவும், அதை வழுவழுப்பாக்கி, ஆயுதங்களை வழுக்கிப்போகச் செய்யவும் கேடயங்கள் எண்ணெய் பூசி வைக்கப்பட்டன (2 சாமு 1:21; எசா 21:5).

எ) அபிடேகம்: யாக்கோபு பெத்தேலில் எண்ணெய் வார்த்து, கல்லுக்கு அபிடேகம் செய்தார் (ஆதி 28:18). புனித அபிடேகத்தைலத்தால் உடன்படிக்கைப் பெட்டகமும் அதன் பொருட்களும் பரிசுத்தப்படுத்தப் பட்டன (யாத் 30:26-29). ஆரோனும் அவனுடைய புதல்வர்களும் குருத்துவ நிலைக்குப் புனிதத் தைலத்தால் அபிடேகம் செய்யப்பட்டனர் (யாக் 30:30-32). இஸ்ராயேல் நாட்டிலும் எகிப்து நாட்டைப்போல அரசர்கள் தைலம் பூசி அபிடேகம் செய்யப்பட்டார்கள். 1 அர 19:16-இல் எலிசா என்ற இறைவாக்கினர் அபிடேகம் செய்யப்படவேண்டும் என்று கூறப்படுகிறது. 1 சாமு 16:13-இல் அபிடேகம் செய்ததால் ஆண்டவருடைய ஆவி எப்பொழுதும் இருக்கும் என்று பொருள்.

6. உருவகம்: சங் 133:2-இல் சகோதர ஒற்றுமை புனித தைலத்தைப்போல் இனியது என்று கூறப்படுகிறது. பழைய ஏற்பாட்டிலே அபிடேகம் செய்யத் தைலம் பயன்படுவது புதிய ஏற்பாட்டிலே ஆண்டவருடைய ஆவியைக் குறிக்கப் பொருத்தமான அடையாளமாக அமைகிறது (1 யோவா 2:20.27).

நறுமண நாணல் (SWEET CANE)

இதே சொல் நறுமண வசம்பு அல்லது புல்லையும் குறிக்கும்.

இது புனித எண்ணெயிலும், நறுமணப் பொருட்களிலும் பயன்படுத்தப்படும்

எண்ணெயைத் தருகின்ற நாணல் வகையைச் சார்ந்தது. இது பழைய ஏற்பாட்டில் நறுமணப் பொருட்களோடு சேர்த்துக் கூறப்படுகிறது.

நறுமண நாணல் புனித அபிடேக எண்ணெயிலும் (யாத் 30:23) பலிகளிலும் பயன்படுத்தப்பட்டது (எசா 43:24; எரே 6:20). காதலி மணமிக்க பூஞ்சோலையோடு ஒப்பிடப்படும்போது, இந்த நறுமண நாணலும் பூஞ்சோலையோடு சேர்த்துக்கூறப்படுகிறது (உ.ச.4:14). இது வாணிபத்தில், இலவங்கத்தோடு சேர்த்துச் சிறந்த பொருளாகக் கருதப்பட்டது (எசே 27:19).

நறுமணப்பொருள் (SPICES)

பழங்காலத்தில் அபிடேகத் தைலம், தூபசாமிபிராணி, அழகு சாதனப்பொருட்கள், பரிமளம், இறந்த உடலைப் பாடம் செய்யும் பொருள்கள் ஆகிய இவைகளைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட நறுமணமுள்ள தாவரப்பொருட்களை நறுமணப்பொருள் என்று அழைத்தனர். குங்கிலியம், வெள்ளைப்போளம், கல்பான்பிசின் போன்ற இந்நறுமணப்பொருட்கள் மிக விலை மதிப்புள்ளனவாகக் கருதப்பட்டன. விவிலியத்தின்படி இந்நறுமணப்பொருட்கள் உணவு வகைகளோடு தொடர்புள்ளனவாகத் தெரியவில்லை (யாத் 30:34; 25:6; 2 நாள் 2:4; 13:11). சாலமோன் மன்னனுக்கு அளிக்கப்பட்ட பரிசுப்பொருட்களில் முக்கியமானவை நறுமணப்பொருட்களாகவே இருந்தன என்று தெரிகிறது (2 அர 10:2.10.25; 2 நாள் 9:1.9.24). சில நூற்றாண்டுகளுக்குப்பின் எசேக்கியா, பாபிலோன் மன்னன் மெரோதாக் பலாதானின் தூதர்களுக்குத் தன் கருவூலத்தைத் திறந்து காட்டிய பொருள்களில் நறுமணப்பொருட்கள் இடம் பெறுகின்றன (2 அர 20:13; எசா 39:2). ஆலய வழிபாடுகளுக்கு நறுமணப்பொருட்கள் இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன. சாலமோன் தான் கட்டிய ஆலயத்தை "நறுமணத் தூபம் காட்டுவதற்கும்", தன் கடவுளின் திருப்பெயருக்கு அர்ப்பணிக்கப் போவதாக, தீரின் அரசன் ஈராமுக்குச் செய்தி அனுப்பினார் (2 நாள் 2:3). ஒரு சில லேவியரும், குருக்களின் புதல்வரும் நறுமணப்பொருட்களைச் சரியான விகிதத்தில் கலந்து தயாரிக்கும் பொறுப்பைக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது (1 நாள் 9:29-30). ஆலய அபிடேகத் தைலத்தையும் தூப சாம்பிராணியையும் தயாரிப்பதற்கான பொருட்களின் பட்டியலையும் விகிதாச்சார முறையையும் (யாத் 30:23 தொ.34) குருக்கள் பாரம்பரிய ஆசிரியர் தருகிறார். இந்த நறுமணப் பொருட்கள் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன (35:8). நறுமணப்பொருட்கள் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யத் தயாரிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டதை 2 நாள் 16:14; எரே 34:5 குறிப்பிடுகின்றன. புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் உடலை அடக்கம் செய்யும் முன் நறுமணப்பொருட்களும் பூசித் தயாரித்ததைக் குறிப்பிடுவதை மூன்று நற்செய்திகளில் காண்கிறோம் (மாற் 16:1; லூக் 23:56; 24:1; யோவா 19:40).

உன்னத சங்கீதத்தில் வரும் நறுமணப்பொருட்கள் பற்றிய பல குறிப்புகள் ஆட்களின் உடலமைப்பை வலியுறுத்துகின்றன (உ.ச. 4:14-16; 5:13; 8:14). நறுமணப்பொருட்கள் அழகு சாதனமாகவும் பயன்பட்டுள்ளன (எஸ்த 2:12).

நறுமணம் (ODOUR)

இறைவனுக்கு விருப்பமான, உகந்த நறுமணம். வழிபாட்டு நூலும், எண்ணிக்கை நூலும் "ஆண்டவருக்கு விருப்பமான" அல்லது ஆண்டவருக்கு இனிய" நறுமணம் என்ற சொற்றொடரைத் தகனப்பலி மற்றும் நெருப்புப்பலி ஆகியவற்றுக்கு இணையாகப் பயன்படுத்துகின்றன. தகனப்பலிகளான விலங்குப்பலி (ஆதி 8:21; யாத் 29:15.25 லேவி 1:3-9), காய்கனி, தானியம் போன்ற உணவுப் படையல்கள் (லேவி 2; 6:19-23), பானப்பலி (யாத்

29:41; லேவி 23:13 எண் 15:1-10) ஆகியவையும் இவை கலந்தவையும் நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தில் வழிபாட்டில் மையம் வகித்த பலிவழிபாட்டில் முதன்மை பெற்றிருந்தன. ஆலயத்தில் அன்றாடம் நடந்த காலை, மாலை வழி பாட்டிலும், குறிப்பிட்ட விழாக்களிலும் (எண் 28:29; லேவி 23), நன்றிப்பலியிலும் (ஆதி 8:21), நேர்ச்சை உணவுப்படையலிலும் (லேவி 2:1தொ), திருநிலைப்படுத்தும் சடங்கிலும் (யாத் 29) தகனப்பலிகள் சிறப்பு அங்கம் வகித்தன. பாவப் பரிகாரக் காணிக்கைகளிலும் (லேவி 4-6; 7:1-10), சமாதானக் காணிக்கைகளிலும் (லேவி 3; 7:11-36) தகனப்பலிகள் ஏற்புடையனவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

"ஆண்டவர் மோசேயிடம் கூறியது: நீ இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளையிட்டுச் சொல்! எனக்குரிய நேர்ச்சையை, நெருப்புப் பலியான உணவை, எனக்கு உகந்த நறுமணத்தை, குறிப்பிட்டகாலத்தில் எனக்குப் படைப்பதில் நீங்கள் கருத்தாய் இருக்க வேண்டும்" (எண் 28:1-2) போன்ற கூற்றுகளில் தகனப்பலி, நெருப்புப்பலி, நறுமணம் ஆகிய சொற்களின் வழிபாட்டுப் பொருளின் ஒத்த தன்மைதெளிவாக இருப்பதைக் காணலாம். இத்தகைய நறுமணம் தெய்வத்திற்கு உணவாகவும் விருப்பமானதாகவும் கருதப்பட்டது. இத்தகைய நறுமணம் குருக்களின் மூலம் ஒப்புக்கொடுக்கப்படும்போது, அதைச் செலுத்துகிறவனுக்கு அது பாவமன்னிப்பையும் பல்வேறு நலன்களையும் பெற்றுத் தருவதாகக் கருதப்பட்டது.

குறிப்பிட்ட விழாக்களுக்கும், தனிநபரின் வழிபாட்டுக்கும் ஏற்றவாறு குறிக்கப்பட்ட தகனப்பலிகளின் பட்டியல் மோசேக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாட்டின் ஒரு பகுதியாக அமைந்தது (லேவி 1:7; 23; எண் 28-29). பழைய ஏற்பாட்டில், இக்கட்டளைகளை இஸ்ராயேல் கடைப்பிடிப்பதில், அஃது உடன்படிக்கைக்குக் காட்டிய பிரமாணிக்கம் காட்டப்பட்டதாக பொதுவாகக் கருதப்பட்டது. நாடு கடத்தலுக்கு உடனடியான முந்திய காலத்தில் வரவிருக்கும் வீழ்ச்சியைப் பற்றி எசேக்கியேல் முன்னறிவித்தார். இதற்குக் காரணமான அவர்களது முக்கிய பாவங்களில் ஒன்று அவர்களுடைய சிலைகளுக்கு நறுமணத் தூபம் காட்டிய பதிதமாகும் என்று குறிப்பிடுகிறார் (எசே 6:13; 16:19). நாடு கடத்தப்பட்ட பிற்காலத்து யூதத்துவத்தில், இஸ்ராயேலின் வருங்காலப் பாதுகாப்பு, அவர்கள் இந்த வழிபாட்டுக் கட்டளைகளுக்குக் காட்டும் பிரமாணிக்கத்தைப் பொருத்ததாகும் என்ற கருத்து பொதுவாக நிலவியது (நெகே 20:28-39).

நறுமணம் உருவகமாகவும் பயன்பட்டுள்ளது. இஸ்ராயேல் நறுமணக் காணிக்கையாகும் (எசே 20:41). பிலிப்பியர் பவுலுக்கு அளித்த கொடைகள் நறுமணம் வீசும் காணிக்கையும் கடவுளுக்கு உகந்த பலிப்பொருளுமாகும் (பிலி 4:18). "கிறிஸ்து தம்மையே கடவுளுக்கு நறுமணம் வீசும் காணிக்கையும் பலியுமாக நம்மை முன்னிட்டுக் கையளித்தார்" (எபே 5:2). திருச்சபையின் வாழ்வும் (2கொரி 2:14-16), புனிதர்களின் செபமும் (திருவெளி 5:8) நறுமணக் காணிக்கையாகும்.

நறுமண வசம்பு, நறுமணப்புல் (AROMATIC CANE)

இதுவும் நறுமண நாணலும் ஒன்றே என்று கருதப்படுகிறது. நறுமணம் வீசும் வெட்டிவேர் போன்ற ஒருவகையான நாணல் அல்லது புல். இஃது இஸ்ராயேலர்களால் பயன்படுத்தப்பட்டது (காண். உ.ச. 4.4:14; எசா 43:24; எரே 6:20). குருத்துவத் திருநிலைப்பாட்டிற்கான அபிடேகப் புனித எண்ணெயில் இதனையும் சேர்த்தனர் (யாத் 27:19; 30:23). எசேக்கியேல் கூறுவதிலிருந்து இந்த நறுமணப்புல் ஏமனிலிருந்து வருவதெனவும் (எசே 27:19), எரேமியா (6:20) கூறுவதின்படி "தூரத்து நாட்டிலிருந்து" இது கிடைத்தது எனவும் தெரிகிறது. பிளினி, இந்நறுமண நாணல் அரேபியா, இந்தியா ஆகிய நாடுகளில் வளர்கின்றது என்கிறார்.

நற்கருணை - திருவிருந்து (EUCHARIST)

I. சொல்லின் பொருள்

1. நன்றி செலுத்துதலும் ஆசி கூறுதலும்: நற்கருணை, நன்றித்திருப்பலி - திருவிருந்து என்பதன் பொருள் நன்றி செலுத்துவதற்கு அடிப்படையாக அமையும் நன்றியுணர்வாகும். கிரேக்க மொழியில் சமயச் சார்பற்ற இலக்கியத்தில் இச்சொல் பெரும்பாலும் இதே பொருளை உணர்த்துகிறது. இவ்வாறே இச்சொல் கிரேக்க விவிலியத்திலும், சிறப்பாக மனித உறவுகளைப் பற்றிப் பேசும் இடங்களில் பயன்படுகிறது (ஞான 18:2; 2 மக் 2:28; 12:31; அ.ப. 24:3; உரோ 16:4). நன்றி செலுத்தல் இறைவனைப் பொறுத்த அளவில் (2 மக் 1:11; 1 தெ 3:9; 1 கொரி 1:14; கொலோ 1:12) வழக்கமாகச் செப வடிவு கொள்கிறது (ஞான 16:28; 1 தெச 5:17 தொ; 2 கொரி 1:11; கொலோ 3:17).இதைப் பவுலின் திருமுகங்களில் காணலாம் (1 தெச 1:2). இன்னும், நன்றி செலுத்துதல் இயல்பாகவே ஆசிகூறுதலுடன் இணைகிறது. ஆசிகூறுதல் என்பது இறைவனின் "வியத்தகு செயல்களைப்" போற்றிப் புகழுதலாகும். ஏனெனில், இவ்வியத்தகு செயல்கள் மனிதனுக்காக ஆற்றப்படும் நலன்கள். இந்நலன்கள் நன்றியுணர்வுடன் செலுத்தும் புகழ்ச்சிக்குத் தனிச்சிறப்பு அளிக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் நன்றி செலுத்துதல் ஒருவகை "நினைவு கூர்தலோடு" இணைந்து செல்கிறது. இவ்வாறு நினைவு கூர்தலில் நினைவு கடந்த கால நிகழ்ச்சிகளை உள்ளத்தில் உயிர்ப்பிக்கிறது (யூதி 8:25 தொ; திருவெளி 11:17தொ). நன்றி செலுத்துதல், (eucharistein) இறைபுகழ் கூறுதலுக்குச் (eulogein) (ஆசிகூறுதலுக்குச்) சரிநிகராய் அமைகிறது (1 கொரி 14:16 தொ). இவ்வாறு ஆசி கூறி - நன்றி செலுத்தல், குறிப்பாக யூதர்கள் உணவு கொள்ளும் பொழுது பயன்படக் காண்கிறோம். அவ்வேளையில் பயன்படும் ஆசியுரைகள், இறைவன் மக்களுக்கு அளித்த உணவுக்காக அவருக்கு நன்றிகூறி அவரைப் புகழ்ந்து பாடுவனவாய் அமைகின்றன. இதைத்தான் பவுல் "நன்றிகூறி" உண்பதாகக் குறிப்பிடுகின்றார் (உரோ 14:6; 1 கொரி 10:30; 1 திமொ 4:3 தொ).

2. இயேசு பயன்படுத்தும் முறையும் கிறிஸ்தவ முறையும்:

இயேசு முதல் முறை அப்பங்களைப் பலுகச் செய்கிறபொழுது, ஒத்தமை நற்செய்திகளின் படி "இறை புகழ்" (ஆசி) கூறுகிறார் (மத் 14:19 இணை); யோவா 6:11. 23-இல் கண்டுள்ளபடி, "நன்றி கூறுகிறார்". இரண்டாம் முறை அப்பங்களைப் பெருகச் செய்கிறபொழுது, இயேசு "நன்றி கூறுவதாக" மத் 15:36 குறிப்பிடுகிறது. அதே நிகழ்ச்சியை விவரிக்கின்ற பொழுது மாற் 8:6 தொ. இயேசு அப்பங்கள் மீது "நன்றிகூறுவதாகவும்", மீன்கள் மீது "இறை புகழ்" கூறுவதாகவும் குறிப்பிடுகிறது. இவ்வாறு, ஆசி கூறுதலும் நன்றி கூறுதலும் நடைமுறையில் ஒன்றுக்கொன்று ஈடானவை: எனவே, இறுதி இராவுணவின்போது அப்பத்தின் மீது கூறப்பட்ட "இறைபுகழ்" (ஆசிகூறல்) (மத் 26:26 இணை; காண்க. லூக் 24:30), கிண்ணத்தின்மீது சொல்லப்பட்ட "நன்றி கூறுதல்" (மத் 26:27 இணை) ஆகியவற்றில் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்துதல் நல்லதன்று. தவிர, பவுல் அப்பத்தின் மீது "நன்றி கூறுதல்" (1 கொரி 11:24) என்றும், கிண்ணத்தின் மீது "இறைபுகழ் கூறுதல்" (ஆசிகூறுதல்) (1 கொரி 10:16) என்றும் மாற்றிக் கூறுகிறார்.

உண்மையிலே, நற்கருணை அல்லது நன்றி கூறுதல் (Eucharist) என்ற சொல்லே, கிறிஸ்துவ வழக்கில் நீடித்துவிட்டது. இச்சொல், இயேசு தாம் சாவதற்கு முந்தினநாள் மாலை நிறுவிய திருச்செயலுக்குச் சிறப்புப் பெயராய் அமைந்துள்ளது. ஆனால், இச்சொல் இறைவனின் வியத்தகு செயல்களால் மனிதர் அடைந்த நன்மைகளுக்காக அவருக்கு நன்றி கூறுவதையும் உணர்த்துகிறது. அந்த அளவுக்கும் அதற்கு மேலாகவும்கூட அச்செயல்களுக்காகப் புகழ் கூறுதலையும் உணர்த்துகிறது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். மீட்புக்காகத்

தாம் இறப்பதின் நித்திய பயனை இயேசு உணவில் வைத்துக் கையளிக்கிறார். இவ்வாறு செய்து, இயேசு இறைவனுக்குத் தாமும் படைப்பு அனைத்தும் அளிக்கும் வழிபாட்டை எல்லாக் காலத்திற்கென்றும் நிறைவு செய்து நிலை நாட்டினார். இது சமய வழிபாட்டுத் தன்மையுடையதும், கிறிஸ்துவின் மீட்புப் பணிக்கு இன்றியமையாததுமாகும். மனுகுலம் முழுமையும், படைப்பு அனைத்தும், கிறிஸ்து என்னும் ஆளில் சிலுவையிலும் நற்கருணையிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டுத் தந்தையிடம் திரும்பி வருகின்றன. நற்கருணையின் வளமை கிறிஸ்தவ வழிபாட்டின் நடுநாயகமாக விளங்குகிறது. இது பொருள் செறிந்த சில பகுதிகளில் காணப்படுகிறது. அடுத்து, அப்பகுதிகளை நுணுக்கமாய் ஆய்வு செய்தல் வேண்டும்.

II. நற்கருணை நிறுவப்படுதலும் அதைத் தொடக்கத்தில் கொண்டாடிய வகையும்:

1. நிகழ்ச்சி விவரங்கள்: புதிய ஏற்பாட்டில் நான்கு பகுதிகள் நற்கருணை நிறுவியதைப் பற்றிய விவரம் தருகின்றன (மத் 26: 26-29; மாற் 14: 22-25;லூக் 22:15-20; 1 கொரி 11:23 தொ). பவுல் தாம் “பெற்றுக் கொண்டதைக் “கையளிப்பதாகக்” குறிப்பிடுவது ஒரு வழிபாட்டு மரபு எனத்தோன்றுகிறது. இதைப்போலவே ஒத்தமை நற்செய்திப் பகுதிகளும் வழிபாட்டு மரபுகளக இருக்க வேண்டும்; மிக இரத்தினச் சுருக்கமாக உள்ள இப்பகுதிகள் சூழ்நிலையை வரையறுக்கின்றன. அவ்வாசகங்கள், தொடக்க காலத்திருச்சபைகள் ஆண்டவரின் இராவுணவைக் கொண்டாடிய முறையைப்பற்றி எழுந்த பயனுள்ள சிந்தனை உரைகளாகும். இவ்வாறு தோன்றிய உரைகள் என்பதால், வாசகங்களில் கண்டுள்ள ஒருமைப்பாடும் வேறுபாடும் விளங்குகின்றன. மாற்கின் அரமேய மொழி வாசகம் பாலஸ்தீனப் பாரம்பரியத்தின் படைப்பாக இருக்கலாம்; ஆனால், கிரேக்கம் சற்று மிகுந்துள்ள பவுலின் வாசகம் அந்தியோக்கியா அல்லது சிறிய ஆசியாவில் உள்ள திருச்சபைகளின் மரபினைப் பிரதிபலிக்கலாம்; ஐயத்திற்கு இடமின்றி மத்தேயு வாசகம், மாற்கு சுட்டிக்காட்டும் அதே மரபுக்குத்தான் சான்று பகர்கிறது; எனினும், மத்தேயு வாசகத்தில் ஒருசில மாறுபாடுகளும் சேர்க்கைகளும் உண்டு. அவைகளும் வழிபாட்டில்தான் தோன்றியிருக்க வேண்டும். லூக்கா வாசகமோ ஒரு சில நுண்ணிய சிக்கல்களைக் கிளப்பித்தடுமாறச் செய்கிறது. அச்சிக்கல்கள் பல்வேறு வகையில் விடுவிக்கப்படலாம். அந்த வகையில் வசனங்கள் 15-18 தொன்மையானதொரு மரபுக்குச் சான்றுபகரலாம். அந்த மரபு மற்ற மரபுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய் இருக்கலாம்; அல்லது, மாற் 14:25-இல் கண்டுள்ளதை லூக்கா விரிவாக விளக்கியிருக்கலாம். பின்னதே உண்மைக்கு நெருங்கியதாக இருக்கலாம். சில பிரதிகளில் 19-20 வசனங்கள் விடுபட்டுள்ளன. எனினும், இவை உண்மைத் தன்மையுடையனவாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்; ஏனெனில் அவ்வசனங்களில் லூக்காவே, மாற்கு வாசகத்தையும் முதல் கொரிந்திய வாசகத்தையும் இணைத்திருப்பதைக் காணலாம். இவ்வாறு இணைத்திருப்பது, கிரேக்கத் திருச்சபைகளின் மரபுக்குப் பிறிதொரு வடிவம் கொடுப்பதாகும். எனவே, மாற்-மத், 1 கொரி ஆகியவற்றில் கண்டுள்ள இரண்டு வழிபாட்டுச் சான்றுகளோடு கூட மூன்றாம் சான்றாக அமைகிறது லூக்கா தரும் சான்று. நற்கருணைத் திருவிருந்தைத் திரும்பத் திரும்ப நிகழ்த்தவேண்டும் என்ற கட்டளையைத் தவிர, மற்றப்படி வெவ்வேறான இவ்வாசகங்களில் காணப்படும் மாறுபாடுகள் அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல, மேற்படிகட்டளை, மாற்-மத் தரும் சான்றில் விடுபட்டுள்ளது. ஆனால் அக்கட்டளைக்கு 1 கொரி-லூக் தரும் சான்றும், நம்பக்கூடியதாக உள்ள கட்டளையின் அகச்சான்றும், கட்டளை பண்டைக் காலத்தியதுதான் என ஏற்றுக்கொள்ளத் தூண்டுகின்றன.

2. வரலாற்றுச் சூழமைவு: மேற்படி வாசகங்களின் பொருளை விளக்கும் பொழுது, மற்றொரு சிக்கலையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதுதான், இவ்வாசகங்கள் தோன்றிய வரலாற்றுச் சூழமைவு. ஒத்தமை நற்செய்திகளின்படி, இச்சூழமைவு ஐயமற ஒரு பாஸ்காப் பலியுணவு வேளையாகும் (மாற் 14:12-16 இணை). ஆனால் யோவா 18:28; 19:14.31 வசனங்களின்படி, பாஸ்கா விழா அடுத்த நாள் அதாவது வெள்ளிக்கிழமை மாலையில்தான் கொண்டாடப்பட்டது. இந்தக் கருத்து வேறுபாட்டை விளக்கும்படி எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டுள்ளன. ஒருசிலர் யோவானைக் குறை கூறுவர்; பாஸ்காச் செம்மறி கொல்லப்பட்ட (யோவா 19:14.36) அதே நேரத்தில் இயேசு இறக்கலானார் என்ற உருவகத்தை உணர்த்துவதற்கென்று, யோவான் பாஸ்கா விழாவை ஒருநாள் தள்ளி வைத்தார் என்பர். ஒருசிலர், அந்தக் குறிப்பிட்ட ஆண்டில் பாஸ்கா விழா, வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் யூதர்களில் வெவ்வேறு பிரிவினரால் கொண்டாடப்பட்டது என்பர். இன்னும் சிலர், எஸ்ஸேனியர் எனப்படுவோர் செவ்வாய்க்கிழமை மாலையில் பாஸ்கா விழாவைக் கொண்டாடினார்கள் என்றும், அதே நேரத்தில் இயேசுவும் அவ்விழாவைக் கொண்டாடியிருக்கலாம் என்றுகூட ஊகிக்கின்றனர். ஐயத்திற்கு இடமின்றி, மிகச்சிறந்த விளக்கம் யாதெனில், இயேசு பாஸ்கா விழா கொண்டாடப்படும் அதே வேளையில் தாம் இறக்கவிருந்ததை முன்னறிந்தவராய், அவ்விழாவை ஒருநாள் முன்கூட்டியே கொண்டாடினார் என்று ஒப்புக்கொள்வதாகும். இயேசுவின் இறுதி இராவுணவு அவருக்குப் பாஸ்காவிழாச் சடங்கு முறையைப் போதுமான அளவுக்கு நினைவுபடுத்தியிருக்கும்;அவரும் அச்சடங்கு முறையோடு தமது புதியசடங்கு முறையைப் பொருத்தி இணைத்திருப்பார். இவ்வாறு இணைக்கப் பெற்ற புதியசடங்கு முறை புதிய ஏற்பாட்டின் பாஸ்காச் சடங்கு முறையாக இருக்கும். இந்த விளக்கும், யோவான் குறிப்பிடும் காலக்கணிப்பை மதிப்பதாயும், ஒத்தமை நற்செய்திகள் விரித்துரைப்பதைப் போதிய அளவுக்குப் பொருட்படுத்துவதாயும் அமைந்துள்ளது.

3. சமயச்சடங்கும் முறை உணவும், ஆண்டவரின் திருவுணவும்: எனவே, நற்கருணை நிறுவப்பட்டதைக் குறிப்பிடும் வாசகங்களைப் பாஸ்கா உணவுச் சடங்கு முறைமுன்னோக்குடன் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஒரு சிலர் இவ்வாசகங்களுக்கு எஸ்ஸேனியர் என்போரின் சடங்குமுறை உணவின் பின்னணியில் விளக்கம் காணப்பார்க்கின்றனர். இவ்வாறு யூதர்கள் விழாக்கோலத்தில் உண்ட விருந்துச் சடங்கு முறையைவிடப் பாஸ்கா உணவுச் சடங்கு முறையே மேற்படி வாசகங்களுக்கு ஆதாரமாக அமைந்துள்ளது. எஸ்ஸேனியர் உணவு முறைகளில் உள்ளபடி இறுதி இராவுணவிலும் அப்பம் / இரசம் அடுத்தடுத்து இடம் பெறுகின்றன என்றால், இவ்வாறு கும்ரான் உணவுமுறையோடு கொண்ட தொடர்பு மேற்போக்கானதும், முக்கியத்துவமில்லாததுமாகும்; நற்செய்திகளில் இந்த அப்பம் இரச வரிசை முறை, ஒரு வழிபாட்டுச் சுருக்கமாக இருக்கலாம். அந்த வழிபாட்டுச் சுருக்கத்தில், இயேசுவின் இறுதி இராவுணவு பற்றி இரண்டு முக்கிய அம்சங்களை மட்டும் காப்பாற்றி யிருக்கலாம். அந்த இரண்டு அம்சங்கள்; தொடக்கத்தில் பயன்படும் அப்பமும், இறுதியில் பரிமாறப்படும் மூன்றாம் கிண்ணமுமாகும்; இவை இரண்டிற்கும் இடையில் நிகழ்பவை அனைத்தும் விடுபட்டிருக்கலாம். இவ்வாறு இடைவெளி இருந்தது என்பதற்கும் ஓர் அறிகுறி கிடைத்துள்ளது. 1 கொரி 11:25-இல் காணப்படும் "உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து" என்ற தொடரில் உள்ள "உணவு அருந்திய பின்" என்பது இடைவெளியைச் சுட்டுகிறது. தவிர, இயேசுவின் சொற்கள் குறிப்பாக உணர்த்தும் பாஸ்கா இறையியலை எஸ்ஸேனியர் உணவுமுறைகளில் காணோம்; இச்சொற்கள்,

பவுல் அல்லது கிரேக்கத் திருச்சபைகள் கொண்டிருந்த செல்வாக்கின் காரணமாகப் பிற்காலத்தில் தோன்றிய அம்சம் என்று கருதுவது ஆதாரமற்றதாகும். நன்கு கட்டுப்படுத்தப்பட்ட எஸ்ஸேனிய உணவுச் சடங்குமுறை, அவர்கள் காலத்து யூதர்களில் தோழமைக் கூட்டுறவினர் நடத்திய பல உணவுகளின் சடங்கு முறையைப் போன்றது; எஸ்ஸேனிய உணவு முறையை மிகைப்படுத்தினாலும்கூட, அம்முறை இயேசுவும் அவர்தம் சீடர்களும் வழக்கமாக உணவருந்திய முறையை உணர்த்தலாம். அவ்வாறே, இயேசு உயிர்த்தபின்னர், சீடர்கள் திரும்பவும் தங்கள் குருவைச் சூழ்ந்திருந்து, உயிர்த்து என்றென்றும் வாழுகின்ற ஆண்டவர் தங்களோடு எந்நாளும் இருந்துவருகிறார் என்ற நம்பிக்கையுடன் மீண்டும் ஒன்றுபடுத்தப்பட்டவர்களாய் உண்ட உணவு முறைகளையும் உணர்த்தலாம்.

எருசலேமில் இருந்த முதல் சகோதரர்கள், தங்கள் வீடுகளில் அப்பத்தைப் பிட்டு மனமகிழ்வோடு (அ.ப. 2:42.46) கூடி உண்ட அன்றாட உணவுகளில் எல்லாம் உண்மையில் நற்கருணை - திருவிருந்தைக் காணவேண்டிய அவசியமில்லை. இங்குக்கண்டுள்ள "அப்பம் பிட்குதல்" என்பது வழக்கமானதொரு உணவை மட்டும் குறிப்பிடலாம். வழக்கமானது என்றாலும் செமித்திய மக்களின் எல்லா உணவையும்போல நிச்சயமாகச் சமயப்பற்றுள்ளதாய் இருந்திருக்கும். எவ்வாறெனில், மக்கள் உயிர்த்த தங்கள் தலைவரை நினைவுகூர்ந்து, அவரை எதிர்பார்த்தவர்களாய் உணவு கொண்டிருப்பார்கள். இதனோடு, நற்கருணைத் திருவிருந்து என்று முறைப்படி அழைக்கப்பெறும் நிகழ்ச்சியும் இணைந்திருக்கலாம். அப்பொழுது மக்கள் ஆண்டவரின் சொற்களையும் சைகைகளையும் மீண்டும் நினைவு கூர்ந்தவராய்ப் புதுப்பித்து, அப்பம் இரசத்திலான மறைபொருளான ஆண்டவரின் திருப்பிரசன்னத்தில் உறவாடியிருப்பார்கள். இவ்வாறு வழக்கமான உணவு "ஆண்டவரின் விருந்து" (உணவு) (1 கொரி 11:20-34) என உருமாற்றம் அடைந்திருக்க வேண்டும். இந்த நற்கருணைத் திருவிருந்து, யூதச்சடங்கு முறையிலிருந்து விலகிச்சென்று, நிச்சயமாக ஆண்டுக்கு ஒருமுறை என்பதற்கும் மேலாக, ஒருவேளை வாரத்திற்கு ஒறு முறையக (அ.ப. 24:7.11) நடைபெறத் தொடங்கிவிட்டது எனலாம். எனினும், இவ்வாறெல்லாம் உறுதியாகச் சொல்வதற்கில்லை; ஏனெனில், வாசகங்கள் பலவற்றில் (அ.ப. 27:35; முன்னரே குறிப்பிட்ட லூக் 24:30.35) குறிக்கப்படுவது, வழக்கமான "அப்பம் பிட்குதல்" என்பதா அல்லது முறைப்படி அழைக்கப்பெறும் நற்கருணைத் திருவிருந்து என்பதா என்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில் உள்ளோம்.

III. நற்கருணை - திருவிருந்து: ஊட்டம் அளிக்கும் அருட்சாதனம்:

1. உணவு ஒரு சமயநெறி அடையாளம்: உணவு கொள்கின்றபோது ஏற்படுத்தப்பட்ட நற்கருணைத் திருவிருந்து எனப்படுவது உணவளிக்கும் ஒரு சடங்கு முறையாகும். மிகப்பழங்காலத்திலிருந்து, சிறப்பாக, செமித்திய இனத்தார் வாழ்ந்த பகுதியில், மக்கள் உணவுக்குப் புனிதமான மதிப்பு அளித்து வள்ளன்மையுள்ள இறைவனின் கொடைஎன்றும், அது வாழ்வுக்கு ஆதாரம் என்றும் உணர்ந்திருக்கிறார்கள். அப்பம், நீர், இரசம், பழங்கள் முதலியவைகளெல்லாம் நன்மைகள்; அவைகளுக்காக மனிதன் இறைபுகழ் கூறுகிறான். உணவருந்துதல் தன்னிலேயே சமயப்பொருள் உள்ளதாகும்; ஏனெனில், கூடி உணவு அருந்துதல், பந்தியில் அமர்ந்துள்ளவர்களுக்கு இடையிலும், அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையிலும் புனிதமான உறவுகளை நிலைநாட்டுகிறது.

2.முன்னடையாளங்களிலிருந்து மெய்ம் மைக்கு:

விவிலியத்தில் கண்டுள்ள இறைவெளிப் பாட்டில், உணவும் உணவு அருந்துதலும்,

இறைவன் தம் மக்களோடு வாழ்வைப்பகிர்ந்து கொள்வதை உணர்த்த உதவுகின்றன. யாத்திராகமத்தில் கண்டுள்ள மன்னாவும் காடைகளும், மேலும் ஓரேபு என்னும் பாறையிலிருந்து வெள்ளம்போல் ஓடிய நீரும் (சங் 78:20-29) முன்னடையாளமாயிருந்த நலன்கள் (1 கொரி 10:3 தொ). முன்னடையாளங்கள் என்றளவில் அவை உண்மையான கொடையை உருவகமாய் முன்னுணர்த்துகின்றன. அக்கொடை கடவுளின் திருவாயினின்று வருவதாகும் (உப 8:3; மத் 4:4). அது வானத்தினின்று வரும் (யாத் 16:4) உண்மை அப்பமாகிய (இறைவனின்) வாக்கு ஆகும்.

இந்த முன்னடையாளங்கள் இப்பொழுது இயேசுவில் நிறைவு பெறுகின்றன. அவர்தாம் "உயிர்தரும் உணவு." எவ்வாறெனில், முதலில் அவர் தமது வாக்கினால் உணவாகின்றார். அவ்வாக்கு விசுவாசங் கொள்பவர்களுக்கு முடிவில்லா வாழ்வைத் திறந்து விடுகிறது (யோவா 6:26-51). அடுத்து, அவர் தமது தசையைத் தின்னவும் தமது இரத்தத்தைக் குடிக்கவும் (யோவா 6:51-58) கொடுத்து நமக்கு உணவாகின்றார். இந்த நற்கருணைத் திருவிருந்தை இயேசு பாலைவனத்தில் மக்கட் கூட்டத்திற்குப் புதுமையாக உணவளித்த பின்னர் (யோவா 6:1-15) கூறினார். இயேசு வாக்களிப்பதும், மன்னா போன்றதன்று என்று அவரால் வேறுபடுத்தப்படுவதுமான கொடை (6:31 தொ. 49தொ) இவ்வாறு யாத்திராகமத்தில் கண்டுள்ள வியத்தகு செயல்களோடு தொடர்புபடுத்தப் பெறுகிறது. அதே பொழுது, அக்கொடை, மெசியா திருவிருந்தின் முன்சுவை என்றளவில் இடம் பெறுகிறது. திருவிருந்து என்பது விண்ணகப் பேரின்பத்திற்கு உருவகமாகும். இது, யூத மறையினருக்கும் (எசா 25:6; யூத சட்டவித்தகர்களின் ஏடுகள்) புதிய ஏற்பாட்டினருக்கும் (மத் 8:11; 22:2-14; லூக் 14:15; திருவெளி 3:20; 19:9) நன்கு தெரிந்த உருவகம்.

3. ஆண்டவரின் உணவு - நினைவுகூர்தல், வாக்குறுதி: இறுதி இராவுணவு, மெசியா திருவிருந்திற்கு இறுதியான முன்னேற்றபாடு போல் உள்ளது. அவ்விருந்தில் இயேசு, அடுத்துவரும் சோதனைக் காலத்திற்குப் பின்னர், தம்மவர்களை மீண்டும் கண்டு கொள்வார். பாஸ்காவை நிறைவேற்றுதலினாலும் (லூக் 22:15 தொ), தம்மவர்களோடு இறையரசில் சுவைக்கும் "புதிய இரத்தத்தாலும்" (மாற் 14:25 இணை) தம்மவர்களை அவர் ஆயத்தம் செய்கிறார். அப்போது அப்பமும் இரசமும் புதியதொரு மெய்ம்மையை அதாவது, தமது உடலும் இரத்தமும் என்பதைக் குறித்துக் காட்டச் செய்கிறார்.

இவ்வாறு செய்வதற்குப் பொருத்தமானதும் விரும்பத்தக்கதுமான ஒரு வாய்ப்பினை இயேசுவுக்குப் பாஸ்கா உணவு உண்ணும் சடங்குமுறை அளிக்கிறது. அவ்வேளையில் குடும்பத்தின் தந்தை பல்வேறு உணவுப்பொருட்களின்மீது, மிகச்சிறப்பாக அப்பத்தின்மீதும் மூன்றாம் கிண்ணத்தின்மீதும் முறைப்படி கூறிய சொற்கள் அந்த உணவுப் பொருட்களுக்கு ஒருவகையான ஆற்றலை அளித்தன. அந்த ஆற்றலால், கடந்த காலம் நினைவுகூரப்பட்டது; வருங்காலத்திற்கான நம்பிக்கை தூண்டப்பெற்றது. இவ்வாறு, பந்தியிலிருந்தோர் இந்த உணவுப்பொருட்களைப் பெற்றுக்கொண்டவர்களாய், யாத்திராகம காலத்துச் சோதனைகளுக்கு உண்மையில் திரும்பவும் ஆளானார்கள். அஃதோடு, மெசியாவின் வாக்குறுதிகளை எதிர்பார்த்தவர்களாய் வாழ்ந்தார்கள். சொற்களில் அடங்கிய இத்தகைய படைக்கும் ஆற்றலைச் செமித்திய மக்களின் உள்ளம் உணர்ந்திருந்தது. இந்த ஆற்றலை இயேசுவும் பயன்படுத்தித் தமக்குரிய தலைமைத்துவ அதிகாரத்தால் அந்த ஆற்றலை இன்னும் பெருகச்செய்கிறார். அப்பத்திற்கும் இரசத்திற்கும் புதிய பொருளைக் கொடுக்கிறபொழுது, இயேசு அதற்குக் காரணம் கூறக் காணோம். ஆனால் அவர் அவைகளில் பொருள் மாற்றம் விளைவிக்கிறார். இயேசு

விளக்கம் தரக் காணோம்; ஆனால், அவர் தீர்மானிக்கிறார், கட்டளையிடுகிறார்; இஃது என் உடல் (அதாவது, இதுமுதற்கொண்டு, இஃது என் உடல்தான்). "இருக்கிறது" என்ற இணைப்பு வினைச்சொல் அரமேய மொழியில் உள்ள மூலவாசகத்தில் தவறியுள்ளது. அந்த வினைச்சொல் தானாக மட்டும் இந்த இயல் வாய்மையை (இந்த அப்பம் உடல்தான் என்று) எண்பித்திடாது; ஏனெனில், அந்த இணைப்பு வினைச்சொல் உருவகப் பொருளை மட்டும் உணர்த்தக்கூடும். அதற்கு எடுத்துக்காட்டாக, "அறுவடை, உலகின் முடிவு (முடிவாய் இருக்கும்); அறுப்போர் வானதூதர் (வானதூதராய் இருப்பர்)" (மத் 13:39) என்றிருப்பதைக் காணலாம். இறுதி இராவுணவுச் சூழ்நிலை வளம் நிறைந்த பொருள் ஒன்றை வற்புறுத்துகிறது. இங்கு இயேசு ஓர் உவமையை எடுத்துரைப்பதில்லை. உவமையின் திட்டவட்டமான பருப்பொருட்கள் புலனாகாத பொருளைக் கண்டுகொள்ள உதவும் இங்கோ, இயேசு ஓர் உணவுப்பந்தியில் தலைமை தாங்குகிறார். இவ்வேளையில் சடங்கு முறைப்படி இறைபுகழ் கூறுதல், உணவுப் பொருட்களுக்கு மற்றொரு நிலை சார்ந்த தகைமை வழங்குகிறது. தவிர, இயேசுவைப் பொருத்தளவில், இவ்வாறு வழங்கும் தகைமை இதுமட்டுமே நிகழ்ந்திராத அளவுக்கு நிறைவும் மெய்ம்மையும் கொண்டுள்ளது. இதற்குக் காரணம் வாக்களிக்கப்பட்ட அர்ப்பணமாகும்; அதுதான் மீட்பளிக்கும் சாவு. அந்தச் சாவு உயிர்ப்பின் வழியாக இறுதிக்கால வாழ்வுக்கு இட்டுச்செல்கிறது.

IV. நற்கருணை - திருவருட் சாதனப்பலி

1. மீட்பளிக்கும் சாவை அறிக்கையிடல்: சாவு மீட்பு அளிப்பதாகும். ஏனெனில், இந்த உடல் "உங்களுக்காக அளிக்கப்படும்" (லூக் 1 கொரி - இல் "உங்களுக்காக" என்று மட்டும் உள்ளது; இதில் சிறிதளவு வேறுபாடு காணலாம்). இந்த இரத்தம் "உங்களுக்காகச் சிந்தப்படும்" (லூக்) அல்லது "பலருக்காகச் சிந்தப்படும்" (மாற் / மத்). பந்தியில் அப்பம், இரசம் என்று வகைப்படுத்துவதே உடலும் இரத்தமும் வன்முறையில் கூறுபடுத்தப்படுவதை உணர்த்துகின்றது. இயேசு, நெருங்கிக் கொண்டிருக்கும் தமது சாவைத் தெளிவாக அறிவிக்கிறார்; அந்தச் சாவை ஒரு பலி என அறிமுகப்படுத்துகிறார். அப்பலி, பல உயிர்களான ஆடுமாடுகளைப் பலியிடுவதோடு ஒப்பிடக்கூடியது. பலி உயிர்களின் இரத்தம் சீனாய் மலையில் செய்த முதல் உடன்படிக்கைக்கு முத்திரையிட்டது (யாத் 24:4-8). இயேசுவின் காலத்து யூத சமயம் பாஸ்காச் செம்மறியையும் ஒரு பலியாகக் கருதிய அளவுக்கு இயேசுவின் பலியும் பாஸ்காச் செம்மறியோடு ஒப்பிடத்தக்கது (காண். 1 கொரி 5:7).

இயேசுவோ "புதிய உடன்படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும்" இரத்தம் எனக் கூறுகிறார். இவ்வாறு கூறுகிறபொழுது, அவர் யாவேயின் ஊழியனையும் நினைவில் கொண்டிருந்திருக்க வேண்டும். அந்த ஊழியன் "சாவுக்குத் தம் ஆன்மாவைக் கையளித்தார்;" "பலருடைய பாவத்தைத் தாமே சுமந்து கொண்டார்" (எசா 53:12). அந்த ஊழியனை இறைவன், "மக்களுக்கு உடன்படிக்கையாகவும், புற வினத்தாருக்கு ஒளியாகவும்" (42:7; காண் 49:8) ஏற்படுத்தினார். இதற்கு முன்னரே, இயேசு இறை ஊழியனின் பணியைத் தமக்கே உரித்தாக்கியிருந்தார் (லூக் 4:17-21); இன்னும் இறை ஊழியனைப்போல், "பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கும்" (மாற் 10:45; காண். எசா 53) பணிவிடையை மேற்கொண்டதாகவும் உரிமை கொண்டாடியிருந்தார். இறுதி இரவுணவில் நெருங்கி வந்து கொண்டிருக்கும் அவருடைய சாவு, பழைய உடன்படிக்கைப் பலிகளின் இடத்தை நிரப்பப்போகிறது என்றும் மக்களை இம்மைக்குரிய அடிமைத்தனத்திலிருந்து மட்டுமன்று, பாவத்தளையிலிருந்தும் விடுவிக்கப் போகிறது என்றும் அறியப்படுத்துகிறார். இத்தகைய பணிகளைச் செய்ய ஓர் ஊழியன் இறைவனுக்குத் தேவைப்பட்டார். எரேமியா

முன்னறிவித்திருந்த இந்தப் "புதிய உடன்படிக்கையை" (எரே 31:31-34) இயேசு நிறுவப்போகின்றார்.

2. பலியில் ஒன்றுபடுதல்: ஆனால், இங்கு மிகமிகப் புதியது யாதெனில், இயேசு தமது பலியின் பயனை உணவினுள் உள்ளடக்கினார் என்பதாகும். மற்ற எல்லாப் பழங்கால மக்களையும் போல், இஸ்ராயேல் மக்களும் பலிப்பொருளை உண்டு பலியின் பயனைப் பெற்றுக் கொள்ளுதல் வழக்கம். மக்கள் பலிப்பொருளோடும் அதை ஏற்றுக்கொண்ட இறைவனோடும் உறவுகொண்டு ஒன்றுபட இவ்வாறே செய்தனர் (1 கொரி 10:18-21). விசுவாசிகள், பலியாக்கப்பட்ட இயேசுவின் உடலை உண்டும், அவருடைய இரத்தத்தைப் பருகியும், அவருடைய பலியில் பங்கு கொள்கின்றனர். இவ்வாறு, அவர்கள், இயேசு அன்பினால் அளித்த பலிப்பொருளைத் தமதாக்குகிறார்கள். இயேசுவின் பலி செயல்படுத்திய அருள் வாழ்வுக்குத் திரும்புதலின் வழியாகப் பயன் அடைகிறார்கள். மக்கள் இவ்வாறெல்லாம் எங்கும், எப்பொழுதும் செய்யக் கூடுமாய் இருக்க வேண்டும் என்றுதான், இயேசு மிகவும் சாதாரணமான உணவுப் பொருட்ளைத் தேர்ந்துகொண்டு, அவைகளைப் பலிப்பொருளுக்குரிய நிலைமையில் தமது உடலாகவும் இரத்தமாகவும் ஆக்கினார். அவர் தம் சீடர்களுக்குக் கொடுத்த கட்டளைப்படி, அவருக்குப் பின்னர், சீடர்கள் அவர்தம் அதிகாரத்தைக் கொண்டு அவர் சொன்ன வார்த்தைகளை மறுபடியும் சொல்வார்கள். அவ்வார்த்தைகள் மேற்படி மாற்றத்தை விளைவிக்கும். இவ்வாறு இயேசு தமது குருத்துவத்தில் சீடர்கள் ஆட்பேர் உரிமையுள்ளவர்க்காகப் பங்குகொள்ளச் செய்கிறார்.

இது முதற்கொண்டு கிறிஸ்துவர்கள் இந்நிகழ்ச்சியைத் திரும்ப நிகழ்த்தும் ஒவ்வொரு முறையும் அல்லது அதில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு முறையும், அவர்கள் "ஆண்டவருடைய மரணத்தை, அவர் வரும் வரையில் அறிக்கையிடுகிறார்கள்" (1 கொரி 11:26); ஏனெனில், அவர்கள் செயலாக்கும் திருவருட்சாதனைப் பிரசன்னம் கிறிஸ்துவின் பிரசன்னமாகும்; இங்குக் கிறிஸ்து தாம் பலியான நிலையில் பிரசன்னமாகிறார். இவ்வாறெல்லாம் கிறிஸ்துவர்கள் "அவருடைய நினைவாகச்" (1 கொரி 11, 25; லூக் 22,19) செய்கிறார்கள்; அதாவது, அவர்கள், இயேசுவின் மீட்புச் செயலைத் தங்கள் விசுவாசத்தைக் கொண்டு நினைவுகூர்கிறார்கள்; அல்லது ஒருவேளை, அவர்கள், இயேசுவின் மீட்புச்செயலை இறைவனுக்கு நினைவுபடுத்துகிறார்கள் என்றால் இன்னும் பொருத்தமாயிருக்கும் (காண் லேவி 24:7; எண் 10:9 தொ;சீரா 50:18; அ.ப. 10:4.31). இவ்வாறு, இயேசு செய்ததை இடையறாது புதுப்பிக்கப்படும் காணிக்கையாக நினைவுபடுத்துகிறார்கள். அக்காணிக்கை இறைவனின் அருளை வேண்டுகிறது. இந்த "நினைவு கூர்தல்' (anamnesis) என்பது இறைவன் ஆற்றிய வியத்தகு நிகழ்ச்சிகளை வியந்து பாராட்டும் வகையில் நினைவுகூர்ந்து, அவைகளை வியத்தகு நிகழ்ச்சிகள் என ஒப்புக்கொள்வதாகும். அவற்றுள் தலை சிறந்தது, மக்களின் மீட்புக்காக இறைவனின் திருமகன் ஒப்புக்கொடுத்த பலியாகும். இப்பலி அன்பின் அதிசயமாகும். இப்பலியில் பங்குகொண்டு கிறிஸ்துவர்கள் திருவிருந்தின்போது ஆண்டவரின் உடலோடும், அவரிடத்தில் அவர்தம் உறுப்பினர் அனைவரோடும் இணைந்து ஒன்று படுகிறார்கள் (1 கொரி 10:14:22). கிறிஸ்து செலுத்திய பலியின் திருவருட்சாதனமான நற்கருணைத் திருவிருந்து, அன்பின் திருவருட்சாதனமும், கிறிஸ்துவின் உடலில் கொள்ளும் ஒற்றுமையின் திருவருட்சாதனமும் ஆகும்.

V. நற்கருணை - திருவிருந்து:

திருவருட்சாதனம்:

1. புதிய உலகில் கிறிஸ்துவின் பலி தொடர்ந்து நிலைத்திருத்தல்: இத்தகைய அடையாளச் செயல்களுக்கும், சொற்களுக்கும்

முழுப்பொருளைத் தருவது, புதிய உலகு ஒன்று உண்டு என்ற உண்மையாகும். அவ்வுலகுக்கு இச்செயல், சொற்கள் எல்லாம் நுழைவாயிலாய் அமைந்துள்ளன. கிறிஸ்துவின் சாவு, உண்மையான வாழ்வில் மலர்கின்றது. இந்த வாழ்வுக்கு முடிவு இராது (உரோ 6:9 தொ). இத்தகைய வாழ்வுதான் இறுதிக்காலம்; "வரப்போகும் நன்மைகளின்" காலம்; அதனோடு ஒப்பிட்டால் நிகழ்காலம் "நிழல்" தான் (எபி 10:1; காண் 8:5; கொலோ 2:17). கிறிஸ்து தமது பலியை "ஒரே முறையில் எக்காலத்திற்குமே" நிறைவேற்றி விட்டார் (எபி 7:27; 9:11.26 தொ; 10:10; 1 பேதுரு 3:18). அவருடைய இரத்தம் பழைய உடன்படிக்கைப் பலி உயிர்களின் ஆற்றலற்ற இரத்தத்தின் இடத்தை உறுதியாகப் பிடித்துக் கொண்டது (எபி 9:12 தொ. 18-26; 10:1-10). இயேசு இணைப்பாளராக இருக்கும் புதிய உடன்படிக்கை (எபி 12:2; கண் 13:20) பழைய உடன்படிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு (8:13), "முடிவில்லா உரிமையைப்' பெற்றுள்ளது (9:15). இது முதற்கொண்டு, நம்முடைய தலைமைக் குரு "கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார்" (8:1; 10:12); "நாம் முடிவில்லா மீட்பைக் கண்டடையச்" செய்து விட்டார் (9:12; காண். 5:9). அவர் "மாறாத குருத்துவத்தைப்' பெற்றுள்ளதால் (7:24), நமக்காகப் "பரிந்து பேசுவதற்கென" என்றுமே வாழ்கிறார் (7:25; காண். 9:24). கிறிஸ்துவின் பலி, நிலையற்ற நம்முடைய உலகின் கால வரம்போடு தொடர்பு கொண்டு நிறைவேறியது கடந்த காலத்தியது என்றாலும், அப்பலி, கிறிஸ்து நுழைந்துள்ள புதிய உலகில் என்றென்றைக்கும் பிரசன்னமாக உள்ளது; எவ்வாறெனில், தம்மையே பலியாய் ஒப்புக்கொடுத்துப் புதிய உலகில் நுழைந்த கிறிஸ்து அங்கு, தொடர்ந்து தம் தந்தையிடம் தம்மையே காணிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார்.

2. இப்புதிய உலகத்தோடு கிறிஸ்துவன் நற்கருணை வழியாக உறவு கொள்கிறான்: பலிப்பொருளான நிலைமையில் நம் தலைமைக்குரு என்றென்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நற்கருணைத் திருவிருந்தோ விசுவாசியை இக்குருவோடு தொடர்பு கொள்ளச் செய்கிறது. அப்பம் உடலாகவும், இரசம் இரத்தமாகவும் ஆகும் பொழுது காணப்படும் நிலைமாற்றம் (கடந்து செல்லுதல்), தனக்குரிய திருவருட்சாதன முறையில், பழைய உலகம் புதிய உலகமாக மாறுவதை மீண்டும் செயல் படுத்துகிறது. தமது சாவின் வழியாக வாழ்வுக்குக் கடந்து சென்ற கிறிஸ்து இந்தப் புதிய உலகினுள் நுழையலானார். பாஸ்காச் சடங்குமுறை, யாத்திராகமத்தில் கண்டுள்ள திருப்பயணத்தின் (கடந்து சென்றதின்) நினைவு விழாவாகும். இவ்வாறு, அந்த யாத்திரையைப்போலப் பாஸ்காச் சடங்கு முறையும் ஏற்கெனவே, கடந்து செல்வது பற்றிய ஒறு சடங்குமுறையாக இருந்தது. எவ்வாறெனில், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் கிடைக்கவிருந்த விடுதலைக்குக் கடந்து சென்றது பற்றிய சடங்குமுறை அடுத்து, மேலும் மேலும் அது துன்பம், பாவம், சாவு ஆகியவற்றை உள்ளடக்கி. அடிமைத்தனத்திலிருந்து இன்பம், நீதி, வாழ்வு ஆகியவை உள்ளடங்கிய விடுதலைக்குக் கடந்துசெல்வது பற்றிய சடங்கு முறையானது. ஆனால், இந்தப் பாஸ்காச் சடங்கு முறையில், மெசியா காலத்து ஆசிகள் (நலன்கள்) நம்பிக்கையளவில் இருந்துவந்தன. மேலும், அப்பொழுது மக்கள் தாங்கள் ஆசி கூறிய உணவுப் பொருட்களைக் கொண்டு உருவகமாகத்தான் மெசியாவின் ஆசிகளை அனுபவிக்கக் கூடுமாயிருந்தது. இந்நிலை, கிறிஸ்துவின் பாஸ்காவில் மாறிவிட்டது. எவ்வாறெனில், மெசியாவின் உயிர்த்தெழுதலால் அவருடைய காலம் உள்ளபடியே வந்துவிட்டது. எனவே வாக்களிக்கப்பட்ட மெசியாவின் ஆசிகள் கிடைத்துள்ளன. வருங்கால ஆசிகளை கிடைத்துள்ளன. வருங்கால ஆசிகளை முன்னர் உருவகமாய் மட்டும் உணர்த்திய வார்த்தைகளும், சைகைகளும் இனி அவைகளை நிகழ்காலத்திய ஆசிகளாக நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடும்.

ஆகவே, நற்கருணைத் திருப்பலியில் வழங்கப்படும் உடலும் இரத்தமும், நிறைவு கண்டுவிட்ட ஒரு நிகழ்ச்சியின் உருவக நினைவுச்சின்னங்கள் மட்டுமல்ல; அவை, கிறிஸ்து வாழ்ந்துகொண்டிருக்கும் இறுதிக்கால உலகத்தின் முழு உண்மையுமாகும். திருவருட்சாதன அமைப்பு அனைத்தின் மையமாக இருப்பது நற்கருணைத்திருப்பலியாகும். இன்னும் பழைய உலகிலேயே மூழ்கி இருக்கும் விசுவாசிக்கு, திருவருட்சாதன அமைப்பு அனைத்தையும் போல், நற்கருணைத்திருப்பலியும் கிறிஸ்துவோடு சடப்பொருள்வகைத் தொடர்பை ஏற்படுத்துகிறது. இக்கிறிஸ்து புதிய, உயிர்த்தெழுந்த, ஆவிநிலையில் (காண். யோவா 6:63) கொண்டுள்ள தமது இருப்பின் முழுநிறைவோடு உள்ளவர். நற்கருணைத் திருப்பலியில் கையாளப்படுகின்ற உணவுப் பொருட்கள் தங்கள் இருப்பில் மாற்றமடைந்து, உண்மையான "விண்ணோரின் உணவு" ஆகின்றன (சங் 78:25; காண். ஞான 16:20). இதுவே, புது யுகத்தின் உணவு. இந்த உணவுப் பொருட்கள் பலிபீடத்தின்மீது பிரசன்னமாயிருப்பதைக் கொண்டு, மரித்து உயிர்த்த கிறிஸ்து பலிக்குரிய தமது நித்திய மனநிலையில் மெய்யாகவே பிரசன்னமாயிருக்கிறார். இதனால் தான், திருப்பலி பூசை ஒரு பலியாகும். இப்பலியும், வரலாற்றில் சிலுவையில் நிறைவேறிய பலியும் ஒன்றே. இத்தகைய பலியில் கிறிஸ்து தமது அன்பு அனைத்தையும் கொண்டு காணிக்கை யாகின்றார். கிறிஸ்துவே திருப்பலிப்பூசையை ஏற்படுத்தியவர். வரலாற்றுப்பலியிலிருந்து திருப்பலிப்பூசை, தான் நடைபெறுகின்ற காலம், இடம் என்ற தற்செயலான சூழ்நிலைகளால் மட்டுமே வேறுபடுகின்றது. எல்லா இடங்களிலும், உலகம் முடியும் மட்டும், திருச்சபை திருப்பலிப் பூசையைக் கொண்டு மக்களின் புகழ்ச்சிப் பலிகளையும், காணிக்கைகளையும், புகழ்ச்சியும் காணிக்கையும் நிறைவுபெற்ற பலியோடு ஒன்றாகச் சேர்த்திணைக்கிறது. சுருங்கக் கூறின், இதுதான் "நற்கருணைத் திருப்பலி" **(Eucharist)** என்பது! இது மட்டுமே இறைவன் திருமுன் ஏற்புடையதாகும். இதுமட்டுமே மக்களின் புகழ்ச்சிப் பலிகளுக்கும், காணிக்கைகளுக்கும் மதிப்பு அளிக்கிறது (காண். எபி 13:10.15).

நற்சான்று கூறுதல், புகழ்தல் (COMMEND)

புகழ்தல் அல்லது நம்பிக்கைக்கு உரியவர் என்று சான்று கூறுதல். தனது அப்போஸ்தல அதிகாரத்திற்குக் கொரிந்தியர்கள் சிலர் சவால் விட்டதை அறிந்த பவுல், "மறுபடியும் எங்களைப்பற்றி நாங்களே நற்சான்று கூறுகிறோமோ? அல்லது நற்சான்று கடிதங்கள்... பெற வேண்டிய தேவை எங்களுக்கு உண்டோ?" (2 கொரி 3:1) என்று அவர்களை நோக்கிக் கேட்கிறார்; இல்லவே இல்லை என்று அழுத்தமாகக் கூறுகிறார். ஏனெனில், தலத்திருச்சபையாகிய "நீங்களே எங்களுடைய நற்சான்றுக்கடிதம். அஃது எங்கள் உள்ளங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இதை எல்லா மனிதரும் பார்க்கவும், படிக்கவும் கூடும். எங்கள் ஊழியத்தைப் பயன்படுத்தி, கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே என்பது வெளிப்படை எழுதியதோ மையினாலன்று; உயிருள்ள கடவுளின் ஆவியினாலே! கற்பலகையில் அன்று, உங்கள் உள்ளங்களாகிய உயிர்ப்பலகையிலே எழுதப்பட்டது!" (2 கொரி 3:1-3) என்று எழுதுகிறார்.

விவேகத்தோடு புகழ்வதைப் பவுல் தடுப்பதில்லை (காண் 4:2;6:4தொ). உண்மையில் தனக்குரிய மரியாதையைத் தராததற்காக அவர்களைக் குற்றம் கூறுகிறார் (12:11). ஆனால், தங்களைத் தாங்களே பாராட்டிக்கொள்ளும் "போலி அப்போஸ்தலர்களின்" ஒழுக்கத்திற்கு மாறான முறையைப் பின்பற்ற மறுத்துவிடுகிறார். ஏனெனில், அது அறிவீனமாகும் (10:12); அளவுக்கு மிஞ்சியதாகும்.

உண்மையான நற்சான்றுக் கடிதம் கொடுப்பதைப் பவுல் கடிந்து கொள்ளவில்லை என்று விளக்கவுரையாளர்கள் சிலர் கருதுகின்றனர். ஏனெனில் 1 கொரி 16:10-12இல்

திமொத்தேயுவைக் கொரிந்தியத் திருச்சபையிடம் பரிந்துரைக்கிறார்.

நற்செய்தி (GOSPEL)

I. நம்மைப் பொறுத்தவரை நற்செய்தியானது, இயேசுவின் வாழ்வை விவரிக்கும் பகுதியையோ, திருப்பலியில் வாசிக்கப்படும் அதனுடைய ஒரு பகுதியையோ குறிப்பிடுகிறது. கிரேக்க மொழியில் இச்சொல்லானது வெற்றியின் அறிவிப்பாகிய நற்செய்தியைக் குறிக்கிறது. கடவுளாகவும், மீட்பராகவும் இருந்த பேரரசருடைய வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் உரோமைச் சமாதானம் முதலியன பல்வேறு நற்செய்திகளாகப் போற்றப்பட்டன. மற்றொருபுறம் மீட்பை அறிவிப்பதற்கென, ஏற்கெனவே கொண்டிருந்த தனிப்பட்ட பொருளுடன் நற்செய்தி என்ற சொல்லானது பழைய ஏற்பாட்டிலிருந்து கிறிஸ்தவ மொழிமரபால் எடுத்துக் கையாளப்பட்டது என்பதில் சந்தேகமேயில்லை.

எத்தனை நற்செய்திகள் உள்ளன? நான்கல்ல, நான்கு வடிவம் கொண்ட ஒரே நற்செய்தியாகும். மத்தேயு முதலியவர்கள் எழுதிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியாகும். நல்ல + செய்தி = நற்செய்தி; சு + விசேஷம். இதே பொருளில் நற்செய்தி, கிரேக்க மொழியில் "எவாங்கெலியோன்" (Evangelion) என்றும், இலத்தீன் மொழியில் "எவான்ஜெலியும்" (Evangelium) என்றும் ஆங்கிலத்தில் "காஸ்பெல்" (Gospel: Good + spel = God news) என்றும் அழைக்கப்படுகிறது. நற்செய்தி என்பது நமது ஆண்டவர் கொண்டுவந்த செய்தியைக் குறிக்கும். இதில் ஒரு தனிச் சிறப்பு உண்டு. சாதாரணமாக ஒரு தூதுவன் நமக்கு ஒரு கடிதம் கொண்டு வந்தால், அவன் அதைக் கொடுத்துவிட்டுச் சென்று விடுகிறான். அவனை நாம் மறந்து போகக்கூடும். நமக்கு வேண்டியது அவன் கொண்டு வந்த கடிதந்தான்; கொண்டு வந்தவனல்லன். நற்செய்தியின் சிறப்பு என்னவென்றால், நற்செய்தி என்பது ஆண்டவர் கொண்டு வந்த செய்தியை மட்டுமன்று, அவரையே செய்தியாகக் கொண்டுள்ளது. அவர் கடவுளின் "வார்த்தை". நற்செய்தியில் ஆண்டவரது தன்மையும், சொல்லும், செயலும் அவரை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

திருச்சபையின் தொடக்க காலத்தில், கிறிஸ்துவின் வாக்கையும் செயலையும் கொண்ட நூல்களை நற்செய்தி குறிக்கவில்லை. மாறாக, மெசியாவால் வந்த மீட்பைக் குறித்தது. மேலும், இவ்வார்த்தையைக் கிறிஸ்துவர்கள் புதிதாகப் பயன்படுத்தவில்லை. கிரேக்க மொழி பேசிய யூதர்களிடையே இவ்வார்த்தை வழக்கில் இருந்தது. பழைய ஏற்பாட்டில் எசாயா இறைவாக்குரைஞர் இவ்வார்த்தையைப் பயன்டுத்துகிறார்.

"நற்செய்தியை அறிவிக்கவும், சமாதானத்தைத் தெரிவிக்கவும், மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கவும், மீட்பைத் தெரிவிக்கவும், சீயோனைப் பார்த்து, "உன் கடவுள் அரசாளுகிறார்" என்று பறைசாற்றவும் வருகிறவருடைய மலரடிகள் மலைகள் மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன!" (எசா 52:7).

இந்நற்செய்தி எவ்வகைப்பட்டது? நற்செய்தி என்ற சொல் எதனைக் குறிக்கப் பயன்பட்டது? பழைய ஏற்பாட்டில் தொடர்ந்துவரும் இன்னல்களிலிருந்து கடவுள் தமது மக்களை மீட்டதை நற்செய்தி குறிக்கிறது. எசாயா தமது இறைவாக்கு நூலின் பிற்பகுதியில் அடிக்கடி இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறார். அதில் வரவிருக்கும் மீட்பையும் கடவுளின் எதிரிகளின் மேல் கொண்ட வெற்றியுடன் கூடிய "ஆண்டவருக்கு உகந்த ஆண்டையும்" நற்செய்தி குறித்துக் கூக்குரல் ஒன்று ஒலிக்கிறது:

"பாலை நிலத்தில ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள்... சீயோனுக்கு நற்செய்தி அறிவிப்பவனே, உயர்ந்த மலைமேல் நீ ஏறிப்போய் நில்; எருசலேமுக்கு நற்செய்தி அளிப்பவனே...! யூதாவின் பட்டணங்களுக்கு, "இதோ, உங்கள் கடவுள் என்று சொல்லி அறிவி..." (எசா 40:3-9).

பழைய ஏற்பாட்டில் நல்ல புலமை பெற்றிருந்த நமது நற்செய்தியாளர்களும் இதே பொருளில்தான் "நற்செய்தி" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கின்றனர். இறைவாக் குரைஞர்களால் முன் அறிவிக்கப்பட்டு இப்பொழுது இறைமகனால் நிறைவுடன் அளிக்கப்பட்ட மீட்பைக் குறிக்கிறது நற்செய்தி. ஆகையால்தான் புனித மாற்கு "கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி" என்று தமது நூலைத் தொடங்குகிறார்.

நற்செய்தி, கிறிஸ்துவின் போதகத்தைக் குறிக்கிறது (மத் 11:5; லூக் 4:18). கிறிஸ்துவின் வாழ்வு, அவரால் நமக்கு வந்த மீட்பு ஆகியவை பற்றிய அப்போஸ்தலர்களது போதனையையும் நற்செய்தி குறிக்கிறது (அ.ப. 5:20; உரோ 1:4). இரண்டும் ஒன்றே. ஏனெனில், நற்செய்தி குறிப்பது கிறிஸ்துவையும் அவரது போதனையையுமே. இவற்றைத்தான் அப்போஸ்தலர்கள் போதித்தனர். ஆரம்பத்தில் கிறிஸ்துவின் வாழ்வு, போதனை ஆகியவற்றைக் குறித்த நற்செய்தி என்ற சொல், நாளடைவில் கலைச் சொல்லாக மாறி, கிறிஸ்துவின் வாழ்வு, போதனை ஆகியவற்றைக் கொண்டுள்ள நூலைக் குறித்தது. அதேபோல், போதித்தவரைக் குறித்த நற்செய்தியாளர் என்ற சொல் நற்செய்தி நூலை எழுதியவரைக் குறித்தது.

யூதர் அல்லாத புற இனத்தவர் இலக்கியங்களிலும் நற்செய்தி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைச் சிறிது ஆராய்ந்தால், இச்சொல்லின் முக்கியத்துவமும் சிறப்பும் நமக்குச் சிறிது விளங்கும். ஆண்டவரது காலத்தில், நற்செய்தி என்ற சொல், பேரரசன் அரசுக்கட்டிலில் ஏறிய செய்தியையோ, அரசகுமாரன் பிறப்பையோ, போரில் அடைந்த வெற்றியை அறிவிக்கும் செய்தியையோ குறித்தது. பேரரசனைப் பற்றிய செய்தியைக் கேட்ட நகர மக்கள் குருத்தோலையையும் மரக்கிளைகளையும் கையிலேந்தி உண்மையான அல்லது போலி உற்சாகத்துடன் ஆரவாரம் செய்வது வழக்கம். இதைப் பின்னணியாகக் கொண்டு நற்செய்தியை வாசித்தோமென்றால், கிறிஸ்துவின் பிறப்பை "மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி" என்று ஆண்டவருடைய தூதன் (லூக் 2:10), எருசலேம் மக்கள் கிறிஸ்துவின் வரவைத் தாவீதின் அரசு வருகிறது என்றழைத்துக் கையில் குருத்தோலை ஏந்தி ஆரவாரம் செய்ததும் (மாற் 11:8-10) நமக்கு நன்கு புரியும். ஆகையால், நற்செய்தி என்பது வெறும் சமயச் செய்தி மட்டுமன்று; அஃது ஓர் அரச செய்தியுமாகும். ஆனால், இவ்வரசு கடவுளது அரசாகும். "அமைதியின் அரசரது" வருகையையும், நமது மீட்பையும் குறிக்கும் அரச நற்செய்தியாகும் நமது நற்செய்தி நூல்கள்.

II. பழைய ஏற்பாடு: பகைவனின் மரணம் (2 சாமு 18:19-20.26), வெற்றி (சங் 68:12), யூதாவின் மீட்பு (நாகூ 2:1) முதலான தனிநபர் அல்லது நாட்டின் வாழ்வுபற்றிய நற்செய்தியினுடைய அறிவிப்பைக் குறிப்பிட, எபிரேயர் ஒரு சொல்லை உபயோகிக்கின்றனர். இச்சொல்லானது அதனுடைய தனிச்சிறப்பான சமய மதிப்பினை எசா 40-66-இல் ஏற்கிறது. "நற்செய்தியின் தூதுவர்" நாடு கடத்தப்படுதலின் இறுதியில், இறைவனுடைய அரசின் வருகையைப்பற்றி அறிவிக்கிறார் (எசா 52:7). அவரது செய்தியானது ஆறுதலுக்குரியதொன்று; பாவத்திற்கான மன்னிப்பு, மற்றும் சீயோனுக்குள் இறைவனின் மறுவருகை (40:1-2,9) ஆகியவை பற்றியதாகும். இந்த நற்செய்தியானது செயல் படும் இறை சக்தியாகும் (52:1-2); மலை உச்சியினின்று அறிவிக்கப்படும் (40:9); எல்லா நாடுகளுக்கும் உரியதாகும் (52:10; சங் 96:2). அது நூற்றாண்டின் எல்லையையும் கடந்து செல்கிறது. நாடு கடத்தப்பட்டதினின்று திரும்பி வருவதற்கும் மேலாக, இது இறைவனது வெற்றியையும், அவரது முடிவான ஆட்சியையும் போதிக்கிறது.

III. இயேசு:

1. நற்செய்தியின் தூதுவர்: நாசரேத்தூர் செபக்கூடத்தின் காட்சியில் இருந்ததைப் போன்று (லூக் 4:16-21), திருமுழுக்காளரால் அனுப்பப்பட்டவர்களுக்கு அளித்த தனது பதிலில் (மத் 11:4-5) இயசு, எசா 61:1-2-இன் பகுதியைத் தனக்குச் சாற்றிக் கூறுகிறார். "பரிசுத்த ஆவியாலும் வல்லமையாலும் இறைவனால் அபிடேகம் செய்யப்பட்டவராய்" (அ.ப. 10:38; மத் 3:16-17), "எளியோருக்கு நற்செய்தியை அறிவிக்க" அவர் வருகிறார்.

2. நற்செய்தி: "காலம் நிறைவேறிவிட்டது; இறையாட்சி நெருங்கிவந்து விட்டது" (மாற் 1:15); செய்தியினுடைய சாரம் இத்தகையதே. ஆனால் இச்சமயம் செய்தி அளிப்பவரே நற்செய்தியின் மையமாக அமைகிறார். இயேசு நற்செய்தியாவார் (மாற் 1:1). வானதூதர்கள் அவரது பிறப்பை நற்செய்தியாக அறிவித்தனர் (லூக் 2:10-11). அவருடன் இறைவனின் ஆட்சியும் வருகின்றது (மத் 12:28). இயேசுவிற்காகவும் நற்செய்திக்காகவும் அனைத்தையும் இழக்கின்ற மனிதன் இவ்வாழ்வில் நூறு மடங்கு பெறுவான் (மாற் 10:30). இந்த நற்செய்தியைக் கொண்டு வருபவரை மக்கள் திரள் அமுத்தி, நிறுத்திவைக்க முயல்வதையும் நாம் காண்கிறோம். ஆனால், நற்செய்தியானது பிற இடங்களுக்கும் பரவ வேண்டும். "நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க வேண்டும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்" (லூக் 4:43).

நற்செய்திக்கான பதிலுரையானது **மனமாற்றமும் விசுவாசமும்** (மாற் 1:15) ஆகும். மன்னிப்பு (மாற் 2:10 இணை; 2:17) மற்றும் புதுப்பித்தலின் அருளை (மாற் 2:21-22) இறைவன் அளிக்கின்றார். தனது பாவத்தை அறிக்கையிட்டு விலக்குகின்ற மனிதனிடம், அவன் தனது வாழ்வையே இழக்கும் அளவிற்கு நற்செய்திக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்பதை அவர் எதிர்பார்க்கிறார்: "தம்மையே காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அழிவுக்குள்ளாவார். என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் தம்மையே காத்துக் கொள்வார்" (மாற் 8:35). நற்செய்தியால் பிறந்த இத்தகைய சீடர்கள் "எளிய மனத்தோர்" (மத் 5:3 இணை; மாற் 10:17-23), "சிறியோர்" (மத் 11:28; லூக் 9:48; 10:21), பாவிகள் (லூக் 15:1-2; 18:9-14; மத் 21:31), மற்றும் புறவினத்தார் (மத் 8:10-11; 15:21-28 இணை) முதலியோராவர் தங்களுடைய தேவையின் உணர்வு நிலையானது நற்செய்தி தோன்றுகின்ற இறை இரக்கத்திற்குச் செவிமடுக்கவும், அதை உணரவும், அவர்களை முன்கூட்டியே தயார்ப்படுத்துகிறது (மத் 9:36; 14:14 இணை; லூக் 1:41-50; 19:1-10)

IV. அப்போஸ்தலர்கள்:

1.செய்தியாளர்கள் "உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை முழுங்குங்கள்" என உயிர்த்த இயேசு தனது அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிடுகிறார் (மாற் 16:15). எல்லா இனங்களுக்கும் அறிவிக்குமாறும் அவர் கூறுகிறார் (மாற் 13:10). அப்போஸ்தலர் பணிநூலானது இப்போதனையின் நிலைகளை விவரிக்கிறது. தடைகளுக்கும் அப்பாற்பட்டு, "உலகின் கடை எல்லைகள் வரை" (அ.ப. 1:8) நற்செய்தியானது பரவுகிறது. ஆவியினுடைய அருளின் மூலமாகத் திருச்சபையானது நற்செய்தியைத் "துணிவுடன்" அறிவிக்கிறது (2:29; 4:13.31; 28:31). இப்பணியானது எவ்வளவு முக்கியமானதெனில், இது நற்செய்தியாளர் என்ற பெயரை அடைவதே ஒருவருக்குப் போதுமானதாகும். இவ்வாறு திருத்தொண்டர் பிலிப்பு, "நற்செய்தியாளர்" என்று அழைக்கப்படுகிறார் (அ.ப. 21:8; எபே 4:11; 2 திமொ 4:5).

2.செய்தி: நற்செய்தியானது எப்போதுமே இறைவனுடைய அரசைப் பற்றியதாகும் (அ.ப. 8:12; 14:21-22; 19:8; 20:25; 28:23).

"முன்னோருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேறி விட்டது" என அது போதிக்கிறது (13:32). இது மன்னிப்பின் அருள்; ஆவியின் கொடை (2:38; 3:26; 10:43; 13:38; 17:30). ஆனால், இனிமேல் சம அளவில் அது "இயேசுவினுடைய" (8:35; 17:18), "இயேசு கிறிஸ்துவின் பெயரினுடைய" (8:12), "ஆண்டவராகிய இயேசுவினுடைய" (11:20) மற்றும் "இயேசு கிறிஸ்துவிலான சமாதானத்தினுடைய நற்செய்தி" (10:36) என்றும் அழைக்கப்படலாம். கிறிஸ்துவின் உயிர்ப்பானது நற்செய்தியின் மையமாக உருவாகிறது.

3. நற்செய்தியைப் பெறுதல்: நற்செய்தியானது இயேசுவால் வாக்களிக்கப்பட்ட அடையாளங்களுடன் இணைந்துள்ளது (மாற் 16:17; அ.ப. 4:30; 5:12, 16; 8:6-8; 19:11-12). வறுமை, எளிமை, சமுதாய அன்பு மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றின் சூழலில் அது பரப்பப்படுகிறது (2:46; 5:41; 8:8.39). "இறைவனுடைய வார்த்தையைக் கேட்க ஆசிப்பதிலும்" (13:7,12),காப்பாற்றப்பட என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவதற்கான ஆர்வத்திலும் (16:29-30) ஒரு மனப்பட்ட இதயங்களை நற்செய்தியானது எல்லா இடங்களிலும் சந்திக்கின்றது. செவி மடுத்தல் (2:22. 37; 3:22-23), பெறுதல் (8:14; 11:1; 17:11) மற்றும் கீழ்ப்படிதல் (6:7) என்னும் பொதுவான குணங்களை அவை கொண்டுள்ளன. மற்றொரு புறம் இறுமாப்பான தற்செருக்கு (13:41), பொறாமை (13:45-46) மற்றும் நிலையற்ற தன்மை (17:32) முதலியன மனிதரின் இதயங்களை நற்செய்திக்கு மூடிவைக்கின்றன.

V. புனித பவுல்

1. தூதுவர்: ஒப்பிட முடியாத அளவிற்குப் பவுல் நற்செய்தியின் மனிதராவார். நற்செய்தியை அறிவிப்பதற்கென இறைவன் அவரைத் தனியே ஒதுக்கி வைத்தார் (உரோ 1:1). புறவினத்தாரிடையிலும் தனது மகனைப்பற்றி அவர் அறிவிப்பதற்கென இறைவன் தனது மகனை அவருக்கு வெளிப்படுத்தினார் (கலா 1:15-16). இறைவன் நற்செய்தியை அவரிடம் ஒப்படைத்தார் (1 தெச 2:4). நற்செய்தியின் பணியாளர் என்ற முறையில் (கொலோ 1:23), பவுல் அதனைக் கண்டிப்பாகப் போதிக்க வேண்டும் (1 கொரி 9:16). இவ்வாறு செய்வதன் வாயிலாக அவர் இறைவனுக்கு "ஓர் ஆன்மீக வழிபாட்டை" அளித்து (உரோ 1:9), புனிதப்பணியைச் செயற்படுத்துகின்றார் (உரோ 15:16).

2. செய்தி: பவுல் இந்நற்செய்தியை வெறுமனே "நற்செய்தி" அல்லது "இறைவனுடைய," "அவரது மகனும் நமது ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய" (உரோ 1:3-5,9), "கிறிஸ்துவினுடைய" (உரோ 15:19-20; 2 கொரி 2:21), "கிறிஸ்துவின் மகிமையினுடைய" (2 கொரி 4:4)அல்லது அவரது "ஆழங்காண முடியாத செல்வங்களினுடைய" (எபே 3:8) நற்செய்தி என்று குறிப்பிடுகிறார்.

அ) மீட்பின் வல்லமை: அனைத்துத் திருச்சபையைச் போன்று பவுலின் நற்செய்தியானது கிறிஸ்துவினுடைய மரணம் மற்றும் உயிர்ப்பை மையமாகக் கொண்டுள்ளது (1 கொரி 15:1-5). ஆனால், அஃது ஒரு தனிச்சிறப்பான ஆற்றலுடன் மகிமை மிக்க வருகையை நோக்கி அது திருப்பப்பட்டுள்ளது (1 கொரி 15:22-28). அப்போஸ்தலிக்கப் போதனை மற்றும் அதற்கு உள்ளார்ந்த இறை ஆற்றல் ஆகியவற்றால் போதிக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட அளவில் இது மீட்பின் புதிய திட்டமாக உள்ளது. "இது மீட்பளிப்பதற்குக் கடவுளின் வல்லமையாய் உள்ளது" (உரோ 1:16). "இந்த நற்செய்தி உலகம் முழுவதும் பரவிப்பயனளித்து வளர்ந்து வருகிறது" (கொலோ 1:6). திருச்சபைகளின் வியத்தகு வளர்ச்சி, அருட்கொடைகளின் அளவற்ற நிலை, கரைகடந்த ஆன்மீக மறுமலர்ச்சி ஆகிய அனைத்தும் அப்போஸ்தலருடைய இயற்கைக்கு மேற்பட்ட உறுதிமொழியுடன் ஒன்றிணைந்து

உலகை வெல்லக்கூடிய இயேசுவின் வல்லமையின் சாட்சியமாக அமைகின்றன (கலா 3:5; 4:26-27; 2 கொரி 2:12; 3:4; 1 தெச 1:5). பவுல் தனது கரங்களால் உழைத்து, "கிறிஸ்துவின் நற்செய்திக்கு எந்தத் தடையும் ஏற்படாதபடி எல்லாவற்றையும் தாங்கிக்கொள்கிறார்" (1 கொரி 9:12).

ஆ. மறைநூல் நிறைவேறுதல்: பழைய ஏற்பாட்டுடன் நற்செய்தியின் தொடர்ச்சியைப் பவுல் வலியுறுத்துகிறார். "ஊழி ஊழிக்காலமாக மறைவாயிருந்து இப்பொழுது வெளியாக்கப்பட்டு முடிவில்லாக் கடவுளின் திட்டத்திற்கொப்ப, புறவினத்தார் அனைவரும் கீழ்ப்படிந்து விசுவாசிக்குமாறு இறைவாக்குகளின் மூலமாய் அறிவிக்கப்பட்ட மறைபொருளை வெளிப்படுத்தும் நற்செய்தியே இது" (உரோ 16:25-26). ஆபிரகாமுடன் செய்யப்பட்ட வாக்குறுதியானது (ஆதி 12:3), ஒரு முன் நற்செய்தியாகும். புறவினத்தாரின் மனமாற்றத்தில் அஃது இப்போது நிறைவு பெறுகிறது (கலா 3:8; எபி 3:6).

3. நற்செய்திக்கான மனிதப் பதிலுரை:

மனிதர்கள் விசுவாசத்துடன் பதிலுரைக்கும் போது மட்டுமே நற்செய்தியானது தனது காக்கும் வல்லமையைச் செயற்படுத்த முடியும்; "மீட்பளிப்பதற்கு அது கடவுளின் வல்லமையாய் உள்ளது... ஏற்புடையவர்களாக்கும் இறையருட் செயல்முறை அந்த நற்செய்தியிலேயே வெளிப்படுகிறது" (உரோ 1:16-17; 1 கொரி 1:18,20). இது விரும்பித் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். வலிமையற்றதாய்த் தோன்றுவதில் அது தன்னுடைய காக்கும் வல்லமையை வெளிப்படுத்தி, சிலுவையின் மறைபொருளை நீட்டிப்பதால் (1 கொரி 1:17-2:5), சிலருக்கு இஃது ஓர் இடராகவும் முட்டாள்தனமாகவும் உள்ளது (1 கொரி 1:18,21,23; உரோ 9:32-33 கலா 5:11). மேலும், இது மறைத்து வைக்கப்பட்டதாகவும் உள்ளது. "இவ்வுலகத் தெய்வத்தால் குருடாக்கப்பட்ட இம்மனிதர்கள், கிறிஸ்துவினுடைய மாட்சிமை விளங்கும் நற்செய்தியின் ஒளியைப் பார்ப்பதில்லை" (2 கொரி 4:4). அவர்கள் அதற்குக் கீழ்ப்படிவதில்லை (2 தெச 1:8). ஆனால், மற்றவர்கள் "விசுவாசத்தின் கீழ்ப்படிதலில்" நற்செய்தியைப் பெறுகின்றனர் (உரோ 1:5; 2 கொரி 10:5). நற்செய்தியின் அருளில், அவர்கள் "அருளின் நற்செய்திக்குத்" தங்களையே திறக்கின்றனர் (அ.ப. 20:24).

VI. புனித யோவான்: யோவானின் நற்செய்தியோ, திருமுகங்களோ நற்செய்தி என்ற சொல்லை உபயோகிப்பதில்லை. வாக்கு மற்றும் சாட்சி என்பன அதன் இடத்தை ஏற்கின்றன. அவற்றினுடைய பொருளானது உண்மை, வாழ்வு மற்றும் ஒளியாகும். இறையரசின் இறுதி வருகையினுடைய நற்செய்தியாகிய "முடிவில்லா நற்செய்தியை உலகில் வாழ்வோருக்கு அறிவிப்பதற்கென ஆகாயத்தில் பறக்கும் வானதூதரைப் பற்றிய" ஒரு காட்சியை யோவான் திருவெளிப்பாட்டில் கொண்டுள்ளார் (14:6-7).

VII. முடிவுரை: இரண்டாவது நூற்றாண்டில் நற்செய்தி என்ற சொல்லானது இயேசுவின் வாழ்வு மற்றும் போதனைகளின் எழுதப்பட்ட பகுதிகளைக் குறிப்பிடத் தொடங்கியபோது, இச்சொல் தன்னுடைய மூலப்பொருளை இழந்துவிடவில்லை. கிறிஸ்துவிலான மீட்பின் நற்செய்தியையும், இறையரசையும் அது தொடர்ந்து உணர்த்துகிறது. இரனேயுவின் கூற்றுப்படி, "அப்போஸ்தலர்கள் முதலில் இந்த நற்செய்தியைப் போதித்தனர். பின்னர், இறைவனின் சித்தப்படி, நமது விசுவாசத்தின் அடிப்படையாகவும் தூணாகவும் அஃது உருவாகும்படி, அவர்கள் அவற்றை இறைவாக்குகளில் நமக்கு அளித்தனர்." "புனித நற்செய்தியின் தொடர்ச்சி" என்ற சொற்களைக் குருவோ, திருத்தொண்டரோ விளம்பும்போது, அவர்கள் இறைவாக்கினரும், அப்போஸ்தலரும் செய்தது போன்று, இயேசு கிறிஸ்துவிலான மீட்பின் நற்செய்தியை உலகிற்கு அறிவிக்கின்றனர். திருவழிபாட்டுப் பதிலுரைகளில்

"ஆண்டவரே உமக்கு மகிமை! கிறிஸ்துவே, உமக்குப் புகழ்!" என்ற சொற்களின் பொருளுக்குக் கவனமாக இருந்தால், நற்செய்தியினுடைய புதிய தன்மையோடு உலகின் முதல் சந்திப்பினுடைய ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் நாம் கண்டடைகிறோம்.

நற்செய்தி அறிவிப்பவர் (EVANGELIST)

இஃது ஒரு பட்டம், பதவியன்று; செய்கின்ற பணியின் பேரில் வருவது; தொடக்க காலத்திருச்சபையில் நற்செய்தியை அறிவித்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தச் சொல்-கிறிஸ்தவ இலக்கியத்திற்கு வெளியே அவ்வளவாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இது "ரோதே" கல்வெட்டிலே காணப்படுகிறது. இவர் புறவினச்சமயம் பற்றிப் பேசும் ஓர் அறிவிப்பாளர். புதிய ஏற்பாட்டில், இந்தச்சொல் மூன்று இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. அ) அ.ப. 21:8-இல் எழுவரில் ஒருவரான பிலிப்பைக் குறிப்பிடுகிறது. ஆ) எபே 4:11-இல் "அவர் தம் 'கொடைகளை' அருளி, சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியின் தூதர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார்" என்று உள்ளது. மேலும், இ) 2 திமொ 4:5-இல் நற்செய்தித் தொண்டனுக்குரிய வேலையைச் செய்யும் என்று உள்ளது. இதைப்பற்றி 1 தெச 3:2-இல் "கிறிஸ்துவினுடைய நற்செய்தியை அறிவிப்பதில் கடவுளின் உடனுழைப்பாளரான சகோதரர் திமொத்தேயு" என்ற குறிப்பு உள்ளது.

தொடக்க காலத்தில், அப்போஸ்தலர்களின் பணி, நற்செய்தி அறிவிப்பாளர்களின் பணியிலிருந்து அதிகம் வேறுபடுத்தப்படவில்லை (கலா 1:8). பிறகு வந்த கிறிஸ்தவப் பயன்பாட்டின்படி, நற்செய்தி அறிவிப்பாளர்கள் அப்போஸ்தலர்களின் சீடர்களாக அல்லது அவர்களைப் பின்பற்றியவர்களாகக் கருதப்பட்டனர் என்பது தெளிவாகிறது. இந்தப் பொருளில் தான், திதாக்கே 11.4-6-இல் உள்ள நடமாடும் அப்போஸ்தலரைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வரையறுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்செய்திகளின் ஆசிரியர்களே-'நற்செய்தி அறிவிப்பாளர்கள்' என்று கருதுவது மூன்றாம் நூற்றாண்டு எழுத்தாளர்களிடையே முதன்முதலில் தோன்றுகிறது. இந்த வரையறுக்கப்பட்ட நோக்கு, இப்போலித்து, தெர்துல்லியன் ஆகியோரின் நூல்களில் காணப்படுகிறது. ஆனால், இந்த நான்கு நற்செய்திகளையும் திருவெளி 4:7-இல் உள்ள நான்கு வாழும் உயிரினங்களோடு பொருத்திக்காட்டுவது, இரனேயுவின் நூலில் காணப்படுகிறது. அதில் சிங்கம் = யோவான், மாடு = லூக்கா, மனிதன் = மத்தேயு, கழுகு = மாற்கு என்றுள்ளது. ஆனால், கிறிஸ்தவக் கலை யோவானுக்கும் மாற்குக்கும் உரிய அடையாளங்களை மாற்றிவிட்டது.

இந்த "நற்செய்தி அறிவிப்பாளர்கள்" என்ற சொல், வளர்ந்த திருச்சபையிலும், வழிபாடுகளிலும், சிறப்பான பொருளிலும் காணப்பட்டது. கி.பி. 300-ஐ ஒட்டி, எகிப்தில் உருவாக்கப்பட்ட, அப்போஸ்தலர்களின் திருச்சபை அமைப்பு என்ற நூல் வழிபாட்டில் வாசிப்பவர் நற்செய்தி அறிவிப்பாளரின் பணியைச் செய்கிறார் என்று கூறுகிறது. கிறிசோஸ்தமின் வழிபாட்டு நூலில் தியாக்கோன் "நற்செய்தி அறிவிப்பாளராக" விளக்கப்படுகிறார்.

நற்செய்திகளின் ஒருங்கமைவு (HARMONY OF THE GOSPHELS)

நற்செய்திகளுக்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை அறிய, நற்செய்திகளை ஒருங்கமைவு செய்வது நல்லது. ஆரம்ப காலத்தில் அதாவது 1537- முதல், ஓசியாண்டர் என்பவரால் நான்கு நற்செய்திகளும் ஒருங்கமைவு செய்யப்பட்டன. பின்னர், காலப்போக்கில், யோவான் எழுதிய நற்செய்தியைத்தவிர மற்ற மூன்று நற்செய்திகள் மட்டுமே ஒருங்கமைவு செய்யப்பட்டன. ஏனென்றால் மாற்கு, மத்தேயு,

லூக்கா ஆகிய மூவருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த நற்செய்திகளின் ஒருங்கமைவுக்கு முன்னோடிகள் சில இருக்கின்றன. அவை பின்வருமாறு: அ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தேசியன் என்பவரால் எழுதப்பட்ட தியாதெசரோன். ஆ) கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அமோனியு என்பவரால் எழுதப்பட்ட தியாதெசரோன். இ) யூசேபியு என்பவர் எழுதிய பத்துப் பட்டியல்கள்.

நற்செய்தியாளர் யோவானின் நூல் (JOHN, THE EVANGELIST, BOOK OF)

இஃது அல்பிசென்சிய பிரிவினரால் பயன்படுத்தப்பட்ட நூலாகும். பொதுவாக இது பொகோமிலசிலிருந்து வந்ததாகக் கருதப்படுகிறது. இஃது, இயேசுவுக்கும், யோவானுக்கும் இடையே நடந்த கேள்வி, பதில்கள் கொண்டவையாக உள்ளது. உயிர்ப்பிற்குப் பிறகு, ஒரு சீடரோ, ஆண்டவரின் சீடர்களோ இவ்வாறு கேள்விகள் கேட்பது பொதுவாக நடைமுறைக்குரியது. பார்த்தலமேயு நற்செய்தியில் மட்டும் அன்று, பல பழைய ஞானவாத நூல்களிலும் இது காணப்படுகிறது. ஒரு பகுதி கோப்திக்கு பெர்லின் புல்தாள் ஏடுகளிலும், எகிப்திலுள்ள செனபோஸ்கின் என்ற இடத்தில் 1946-இல் கண்டு பிடிக்கப்பட்ட ஞானவாத ஏடுகளிலும் காணப்படுகிறது.

நற்செய்தியாளர் யோவானின் நூல் இவ்வகையைச் சேர்ந்தது மட்டுமன்றி, ஞானவாத மற்றும் மார்சியன் நூல்களில் காணப்படும் இருமைக்கோட்பாட்டையும் கொண்டுள்ளது. இதன்படி, இந்த உலகம் உருவானது கடவுளால் அன்று, மகிமையிலிருந்து வீழ்ச்சியுற்று, பலமற்ற வானதூதர்களையும் தன்பால் கவர்ந்துகொண்ட சாத்தானால் உருவானது. கிறிஸ்து மரியாளிடமிருந்து பிறக்கவில்லை. அவள் ஒரு வானதூதராவாள். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள உலகிற்கு அனுப்பப்பட்டவள். கிறிஸ்து மரியாளின் காதினுள் நுழைந்து, காதின் வழியே வெளியில் வந்தார். திருமுழுக்கு யோவான் சாத்தானால் அனுப்பப்பட்டார். அவரது சீடர்கள் உண்மையிலே கிறிஸ்துவின் சீடர்களே அல்லர். திருமுழுக்கு, ஆண்டவரின் இராவுணவு எல்லாம் மதிப்பற்றவை. திருமுழுக்கு குறைவுள்ளது, உண்மையான கிறிஸ்துவின் சீடர்கள் திருமணம் செய்வதில்லை. இதில் அவர்கள் திருமுழுக்கு யோவானின் சீடர்களிடமிருந்து வேறுபட்டவர்கள்.

ஞானவாதக்கோட்பாடு இறையியலின் இந்த விநோதமான பதிப்பு, இறுதித் தீர்ப்போடு முடிகிறது. இக்கருத்தைப் பொறுத்தமட்டும் பரம்பரையான போதகத்தைக் கொண்டுள்ளதும், தவறுகள் இல்லாமையும் இந்நூலில் பிறரது தலையீட்டைச் சுட்டுகின்றன.

இந்த நூல் இலத்தின் மொழியில் மட்டும் தான் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்கப் பதிப்பு ஏழு நூற்றாண்டுக்கு முன்பாக இருக்க வாய்ப்பு இருந்தாலும், இப்போது நமது கையில் இருக்கும் பதிப்பு, பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பாக இருக்காது என்று கருதப்படுகிறது.

நற்செய்தியின் தோற்றம் (ORIGIN OF THE, GOSPEL)

1. நற்செய்தியின் நான்கு நூல்களும் ஒரே காலத்தில் எழுதப்பட்டவை அல்ல; ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவையுமல்ல. இயேசுவின் இவ்வுலக வாழ்வு முடிந்து பத்து ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் நற்செய்தி முதன் முறையாக எழுத்து வடிவம் எடுத்திருக்கக்கூடும். நாம் கொண்டிருக்கும் வடிவில் முதல் நற்செய்தி எழுதப்படுமுன் இருபது ஆண்டுகளாவது கடந்திருக்க வேண்டும். நற்செய்தி எவ்விதம் தோன்றியது? நேரடியாக எழுதப்பட்டதா? என்பனவற்றைப்பற்றி இப்போது சிறிது காண்போம். இவ்வாராய்ச்சியில் நமக்குத் துணையாக இருப்பவை 1962-ஆம் ஆண்டு பாப்பரசது விவிலியக் குழுவிடுத்த அறிக்கையும், அவ்வறிக்கை பற்றி மறைநூல் வல்லுநர் கர்தினால் அகுஸ்தீன் பெயர் எழுதிய நூலுமாகும்.

நற்செய்தி நமக்கு அளிக்கப்பட்ட வரலாற்றில் மறைநூல் அறிஞர்கள் மூன்று நிலைகள் அல்லது

படிகளைக் காண்கின்றனர். அவை: (1) இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குப் போதித்துப் பயிற்சி அளித்தது; (2) அப்போஸ்தலர்கள் ஆற்றிய அலுவல்; (3) நற்செய்தியாளர் ஆற்றிய பணி. இவை ஒவ்வொன்றையும் பற்றி சிறிது பார்ப்போம்.

2. இயேசுவின் பாகம்: "காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கி விட்டது. மனந்திரும்பி, இந்நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:15) என்ற பறை சாற்றலுடன் கிறிஸ்து தமது மீட்பின் அலுவலைத் தொடங்கினார். பாலஸ்தீன நாடு முழுவதும் போதித்தார். கிறிஸ்து சீடர்களைத் தேர்ந்தெடுத்துத் தம்முடன் சேர்த்துக் கொண்டார் (மாற் 3:14; லூக் 6:13). அவர்கள் அவரது பணியின் தொடக்கத்திலிருந்து அவரைப் பின் சென்றனர் (லூக் 2:2; அ.ப. 1:21-22); அவரோடு உண்டும் வாழ்ந்தும் வந்தனர்; அவரது செயல்களைப் பார்த்தனர்; அவரது போதகங்களைக் கேட்டனர். இவ்விதமாக, கிறிஸ்துவின் வாழ்வு, போதனை, செயல்கள் ஆகியவை பற்றிச் சாட்சி பகர்வதற்குத் தயார் செய்யப்பட்டனர் (யோவா 15:27; அ.ப. 1:8; 10:39; 13:31). ஆண்டவர் வாய்மொழியில் தமது போதனைகளை விளக்கியபோது, அக்காலத்தில் வழக்கிலிருந்த சிந்திக்கும் மாதிரியையும், விளக்கும் முறையையும் கையாண்டார்; செவிசாய்ப்போரின் மனப்போக்குக்கும் தேவைக்கும் ஏற்ப, தமது போதகத்தை அமைத்துக் கொண்டார்; எளிய உவமைகளையும் பயன்படுத்தினார். பிறருக்கு உவமைகளில் போதித்தாலும், தமது சீடர்களுக்கு அவ்வுவமைகளை விளக்கி அவர்கள் உண்மைப் பொருளைக் கண்டுணரும்படிச் செய்தார். தாம் போதித்தவைகள் சீடர்களின் மனதில் ஆழமாயும், உறுதியுடனும் பதியவும், அவைகளை அவர்கள் எளிதாய் நினைவில் இருத்திக்கொள்ளவும் துணை செய்யும் வழிமுறைகளைக் கிறிஸ்து கையாண்டார். கிறிஸ்துவின் அருஞ்செயல்களும், அவரது வாழ்வின் மற்றச் செயல்களும் போதனைகளும், மக்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, மீட்பின் போதகத்தை ஏற்றுக்கொள்ளுவதற்காகத்தான் செய்யப்பட்டன என்று சீடர்கள் அறிந்து கொண்டனர்.

இவ்விதம் தமது மீட்புப் பணியைத் தொடர்ந்து நடத்தும்படிக்கு அப்போதஸ்தலர்களைக் கிறிஸ்து தயாரித்தார். இந்தத் தயாரிப்பில் நற்செய்தியின் தோற்றம் தொடங்குகிறது.

3. அப்போஸ்தலர்களின் பாகம்: இயேசு, பாடுபட்டு மரித்து உயிர்த்தபின்னும் வேத நூல்களை விளக்கி, மேலும் தமது அப்போஸ்தலர்களுக்குப் பயிற்சி அளித்தார். தமது வாழ்வின் பல நிகழ்ச்சிகளுக்கும் விளக்கம் அளித்தார்; "உன்னதத்திலிருந்து வரும் வல்லமையை நீங்கள் அணிந்து கொள்ளும்வரை (எருசலேம்) நகரிலேயே தங்கி இருங்கள்" (லூக் 24:49) என்றும், "பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது, அவரது வல்லமையைப்பெற்று எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அ.ப. 1:8) என்றும், "உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்" (மாற் 16:15) என்றும் அவர்களிடம் கூறினார் கிறிஸ்து.

அப்போஸ்தலர்களும் இக்கடமையைத் தலைமேற்கொண்டு, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தனர்; கிறிஸ்துவுக்குச் சாட்சி பகர்ந்தனர். எதற்குச் சாட்சி பகர்ந்தனர்? கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சாட்சி பகர்ந்தனர் (2 திமொ 2:8). இப்படிச் சாட்சி பகரும்போது மரித்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்க்கும் முன் நடந்த அவரது பாடுகள், போதனைகள், அவரது வாழ்வு ஆகியவை பற்றி அழுத்தந்திருத்தமாக விளக்கம் தர அவசியம் ஏற்பட்டது. ஆகையால் ஆண்டவரது இறைப்பையும், உயிர்ப்பையும் அப்போஸ்தலர்கள் பறை சாற்றியபோது தங்களுக்குச் செவிசாய்ப்போரின் சூழ்நிலைக்கு ஏற்ப கிறிஸ்துவின் வாழ்வு, போதனை

ஆகியவற்றைப் பிரமாணிக்கமாய் விளக்கினர். இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தபின் அவரது இறைத்தன்மையை அவர்கள் தெளிவாய்க் கண்டுணர்ந்தனர். பகுத்தறிவுவாதிகள் சிலர் கூறுவது போல் கிறிஸ்துவின் உயிர்ப்பு அப்போஸ் தலர்களது விசுவாசத்தின் கற்பனையால் உண்டாக்கப்பட்டது அன்று. இந்த உயிர்ப்பு, அவரது வாழ்வில் முன் நிகழ்ந்தவற்றைப் பற்றிய நினைவை அழிப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கு விசுவாசத்தை அளித்தது; அவரது செயல்கள், போதனை ஆகியவற்றின் செய்தது. இயேசு, கடவுளின் மகன் என்ற முறையில் சீடர்கள் அவருக்கு அளித்த வணக்கம், அவரைப் "புராணக்" கதாநாயகனாக மாற்றவில்லை. அதற்கு மாறாகக் கிறிஸ்துவின் மகிமை நிறைந்த நிகழ்ச்சிகளால் போதிக்கப்பட்டும், உண்மையாகிய பரிசுத்த ஆவியால் கற்பிக்கப்படும், அவரது சொல், செயல், வாழ்வு ஆகியவை பற்றிய உண்மைகளை அப்போஸ்தலர்கள் தங்களுக்குச் செவி சாய்ப்போருக்குக் கையளித்தனர். கிறிஸ்து தமது உயிர்ப்புக்குப்பின் தம்மைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் வாக்கியங்களை விளக்கிக் காண்பித்ததுபோல், அப்போஸ்தலர்களும் தங்களுக்குச் செவிசாய்ப்போரின் தேவைக்கு ஏற்ப, ஆண்டவரது சொல், செயல் ஆகியவற்றை விளக்கினர். ஆண்டவரது பேச்சு முறை, உவமை, உருவகம், இலக்கிய அமைப்புகள் ஆகியவற்றைத் தங்களது போதக முறையிலும் கையாண்டனர். அவர்களது போதகத்தில் அக்கால மக்கள் பயன்படுத்திய ஞான உபதேசமுறை, கதைகள், காட்சிகள், பாடல்கள், புகழ்ப்பாடல் தொகுதிகள், செபங்கள், இவை போன்ற இலக்கிய அமைப்புகள் காணக்கிடக்கின்றன. இச்சாதனங்களின் உதவியால் கிறிஸ்துவின் இறப்பையும், உயிர்ப்பையும் மக்களுக்குப் பறைசாற்றினர். ஏனெனில், அவர்கள் தங்களைக் "கிரேக்கருக்கும் கிரேக்கரல்லாதாருக்கும், அறிவுள்ளவர்களுக்கும் அறிவில்லாதவர்களுக்கும் கடமைப்பட்டவர்களா கவும்" (உரோ 1:14) "எல்லார்க்கும் அடிமையாகவும்" கருதி (1 கொரி 9:19-23), "தேவ வார்த்தையைப் போதிக்கும் பணிக்கும்" (அ.ப. 6:4) தங்களையே அர்ப்பணித்தனர்.

அப்போஸ்தலர்களது போதகத்தைப் பற்றிச் சிலவற்றை நாம் எண்ணிப்பார்ப்பது நல்லது. அவர்களது போதகம், தற்காலக் கருத்துப்படி காலவரையறையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறன்று. இப்படிப்பட்ட வேலையைக் கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கு அளிக்கவில்லை; அவர்களது நோக்கமும் அஃதன்று என்பது நற்செய்தியை மேலெழுந்தவாறாகப் படித்தாலே புரியும். ஆனாலும் நற்செய்தி சரித்திர அடிப்படை கொண்ட வாழ்க்கை வரலாறு ஆகும். சரித்தரம் என்றவுடனே, பலர் பள்ளிகளிலும், வரலாற்று ஆராய்ச்சியிலும் பயன்படும் வரலாற்று ஆராய்ச்சி ஏடுகளை நினைத்து நற்செய்தியைத் தவறாகப் புரிந்து, நகைப்புத்தரும் பலவகையான கருத்துக்களை வெளியிடுகின்றனர். நாம் இங்குக் கவனிக்க வேண்டியது, யாருக்கு அப்போஸ்தலர்கள் போதித்தனர் என்பது. அப்போஸ்தலர்களுக்குச் செவி சாய்த்தவர்களில் பெரும்பாலோர் பாமர மக்கள்; எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்; பொருளாதாரத்திலும் தாழ்ந்தநிலையில் இருந்தவர்கள். நமதுநாட்டுச் சுதந்தரப் போராட்டத்தைப்பற்றி, நமது சாதாரண மக்களுக்கு விளக்கிக் கூறும்போது, கல்வி பயிற்றுவோர் என்ன செய்வர்? நாட்குறிப்புகளுடனும், புள்ளி விவரங்களுடனும் சுதந்திரப் போராட்டத்தை விளக்குவார்களா? அவற்றைப் பொதுமக்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்களுக்கு வேண்டியது காந்தியடிகள் என்ன செய்தார்? என்ன சொன்னார்? எவ்விதம் மக்களை ஒற்றுமைப்படுத்தினார்? மற்றத் தலைவர்கள் செய்தது என்ன? இந்த ஊரில் இந்தத் தியாகி என்னென்ன செய்தார்? அந்த ஊரில் எப்படிச் சுதந்தரப் போராட்டம் உருவெடுத்தது போன்றவையே. அவர்களுக்குக் காலவரையைப் பற்றிக் கவலையில்லை. நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் முன்பின்னாக இருக்கலாம்.

ஆனால், வேண்டுவது சுதந்தரப் போராட்டத்தைப் பற்றிய அவர்களுக்கு ஏற்ற வரலாறு. இவ்விதமே கிறிஸ்துவின் வாழ்மைப்பற்றியும் அப்போஸ்தலர்கள் தங்களுக்குச் செவிசாய்த்தவர்களிடம் போதித்தனர். பாமர மக்களின் மன வளர்ச்சிக்கு ஏற்ப கிறிஸ்துவைப் பற்றிப் போதித்தனர். ஆகையால் நற்செய்தியில், நாம் இக்காலத்தில் கருதுவதுபோல் வரலாற்று ஏடுகளையோ, ஆய்வுப்பதிவேடுகளைப்போன்ற அதிகாரக் குறிப்பேடுகளையோ எதிர்பார்ப்பதோ, புகைப்படம், ஒலிப்பதிவு செய்யும் பொறி ஆகியவற்றில் காணப்படும் துல்லியம், தெளிவு முதலியவற்றை எதிர்பார்ப்பதோ, தவறான முறையில் நற்செய்தியைப் புரிந்து கொள்வதாகும். அப்போஸ்தலர்கள் விரும்பியதெல்லாம், நாசரேத்து ஊராராகிய இயேசுவின் வாழ்க்கை பற்றிய செயல்களை அவரது போதகத்தின் சூழ்நிலையில் பாதுகாப்பதாகும்.

கிறிஸ்துவுக்குச் சாட்சி சொல்லும் மகத்தான கடமையை மேற்கொண்ட அப்போஸ்தலர்கள் பேசும் இயந்திரம்போல் தங்களது போதகத்தை அளிக்கவில்லை; உயிருள்ளவிதத்தில் அளித்தனர். இவர்கள், கிறிஸ்துவின் வாழ்வு, சொல், செயல் ஆகியவை பற்றிய நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டும் ஒற்றுமை கொண்டிருந்தனர். ஆனால், இவர்கள் போதித்த விதமோ ஒருவருக்கொருவர் வேறுபட்டது. இஃது இயற்கை தானே? ஏனெனில், இவர்கள் கிறிஸ்துவை நேரில் பார்த்து அவரது திருவாய் மொழிகளைக் கேட்ட சாட்சிகள். கிறிஸ்துவின் ஆட்தன்மை, செயல், போதகம் ஆகியவை பற்றி நேரடியாக வெவ்வேறு விதத்தில் அனுபவித்து உணர்ந்தவர்கள். அவர்களது கவனத்திலும் நினைவாற்றலிலும் வேறுபாடு இருந்தது. இந்த வேறுபாடு அவர்கள் போதித்த விதத்திலும் விளக்கிய முறையிலும் பிரதிபலித்தது. அதன் விளைவாக நற்செய்தியாளர்கள் பெற்ற உயிருள்ள "பரம்பரை"ப் போதகம் பல வடிவங்களைக் கொண்டிருந்தது. நற்செய்தியின் முதல் மூன்று நூல்களை ஆராய்ந்தால், அவை ஒரே வகையான வாய்மொழிப் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது விளங்கும். கிறிஸ்துவின் வாழ்வு, செயல், போதகம் பற்றிய பலவற்றில் ஒற்றுமையிருந்தாலும், சொல்லப்பட்ட வாக்குகளிலும் நிகழ்ச்சிகளிலும் வேறுபாடு இருப்பதுடன் சொல்லும் விதத்திலும், நோக்கும் விதத்திலும், வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன. இக்கருத்தை மனதில் கொண்டிருந்தால், நற்செய்தியில் வேறுபாடுகளைக் காணும்போது மலைக்க மாட்டோம். சிறிதோ பெரிதோ, வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு, அவ்விடங்களில் புதைந்துள்ள உயிரளிக்கும் உண்மைகளைக் கண்டுணர்வோம்.

புதிய சூழ்நிலைகளும், நிகழ்ச்சிகளும், சிக்கல்களும் எழுந்தபோது, அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் செய்தியையும் வாழ்வையையும் ஆழ்ந்து தியானித்து, கிறிஸ்துவின் செய்தியைப் பொருளிலோ பொருளடக்கத்திலோ குறைவின்றி, அந்தந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தும்படி சரியான விதத்தில் விளக்கினர். இவ்விளக்கம் செவி சாய்ப்போரின் சூழ்நிலைக்கேற்ப மாறியது. செவிசாய்ப்போரின் தேவைக்கும் தன்மைக்கும் ஏற்ப கருத்துகளை அழுத்திக் கூறினர். செவிசாய்ப்போரின் முன்னைய மதக்கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தவும், திருத்தவும், தீய பழக்க வழக்கங்களை வேரறுக்கவும் நல்லதும் பயனுள்ளதுமான போக்குகளையும் குறிக்கோள்களையும் தூண்டுவதற்கும் சாதகமானவற்றை மட்டும் சமயத்திற்கேற்ப, கிறிஸ்துவின் சொல், செயல் ஆகியவற்றிலிருந்து பொறுக்கி எடுத்துக் கூறினர் அப்போஸ்தலர்கள்.

செவிசாய்ப்போரின் தன்மை அப்போஸ்தலர்களின் போதனை முறையை வரையறை செய்தது. முக்கியமான சில நிகழ்ச்சிகளையும், சில உரைகளையும் மட்டுமே ஞான உபதேச வடிவில் கொடுக்கும்படி நேரிட்டது. விளக்கங்களும் ஒரு தனி வடிவம் எடுத்தன.

செவிசாய்ப்போரின் உள்ளத்தில் உண்மைகளையும் நிகழ்ச்சிகளையும் பதியச் செய்ய நினைவுக் குறியீட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டன. இதனை 2, 3, 5, 7முதலிய எண்களைப் பயன்படுத்துவதிலும், கிறிஸ்துவின் அறவுரைகளையும் வாக்குகளையும் இணைக்கும் தூண்டு சொற்களிலும், அவரது போதகங்கள் (மத் 6, 7, 10 அதிகாரங்கள்) உவமைகள் (மத் 13-ஆம் அதிகாரம்), புதுமைகள் ஆகியவை தொகுக்கப்பட்ட விதத்திலும் காணலாம்.

மேற்கூறியபடி அப்போஸ்தலர்களின் போதகம் பற்றிய உயிருள்ள பாரம்பரியம் பலவிதத்தில் எழுத்து வடிவம் எடுக்கத் தொடங்கியது.

4. நற்செய்தியாளர்களின் பாகம்: அப்போஸ்தலர்களின் போதகம் எவ்விதம் எழுத்து வடிவம் எடுத்தது என்பது அடுத்த கேள்வி. இப்போதகத்தின் உயிருள்ள பாரம்பரியம் பல வடிவம் எடுத்தது என்று முன்னர்க் கூறினோம். இப்போதகம் எழுத்து வடிவத்திலும் பல உருவம் எடுத்தது. நாம் கொண்டிருக்கும் நற்செய்தியின் நான்கு நூல்களும் எழுதப்படும் முன்னே அப்போஸ்தலர்களின் போதகத்தை எழுதப்பலர் தொடங்கினர். இது புனித லூக்கா கூறுவதிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. "நம்மிடையே நிறைவேறிய நிகழ்ச்சிகளைத் தொடக்கம் முதல் கண்கூடாய்க் கண்டவர்கள் தேவவார்த்தையின் பணியாளராகி நம்மிடம் ஒப்படைத்துள்ளனர். ஒப்படைத்தவாறே அவற்றைப் பலர் நிரல்பட எழுத முயன்றுள்ளனர்" (லூக் 1:1-2). இதிலிருந்து நற்செய்திகளுக்கு முன்னரே கிறிஸ்துவைப் பற்றிய நூல்கள் இருந்தன என்பது தெரிகிறது. இவைகளும் நற்செய்திகளில் காணப்படும் பல வேறுபாடுகளுக்கு ஒருவிதத்தில் காரணம் என்று கூறலாம்.

அடுத்து நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டியது, நற்செய்திகளைத் தொகுத்தலில் நற்செய்தியாளர்களின் வேலை, பாகம் என்ன என்பதாகும். இஃது ஓர் அறவுரையையோ சொற்பொழிவையோ சுருக்கெழுத்தாளர் குறித்துக்கொள்வது போன்ற வேலையா? அன்று. பேதுருவின் போதகத்தைச் சார்ந்து மாற்கு எழுதியதாகப் பாரம்பரியம் கூறுவதிலிருந்தும், லூக்காவின் வாசகம் புனித பவுலின் கருத்தையும் போதகத்தையும் ஒட்டியிருப்பதிலிருந்தும் பேதுரு சொல்ல மாற்கு எழுதினார் என்றோ, பவுல் கூற லூக்கா எழுதினார் என்றோ கருதுவது சரியாகாது. லூக்காவே தமது உழைப்பைப் பற்றிக் கூறுகிறார். இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொடக்க முதல் கண்ட வார்த்தையின் பணியாளர்கள் ஒப்படைத்தவற்றை ஒழுங்குடன் பலர் எழுத முயன்றதுபோல் "யாவற்றையும் அணுகி ஆய்ந்தறிந்து" தாமும் முறையாக வரைவதாகக் கூறுகிறார் லூக்கா (லூக் 1:1-4).

நற்செய்தியின் தோற்றத்தில் நற்செய்தியாளர்களது வேலையைப்பற்றி விவிலியக் குழுவின் அறிக்கை தெளிவாகவும் சுருக்கமாகவும் கீழ்க்கண்டவாறு கூறுகிறது; "பரிசுத்த ஆசிரியர்கள் திருச்சபையின் நன்மைக்காக நான்கு நற்செய்திகளை எழுதியபோது, ஒவ்வொருவரும் தம் மனதில் கொண்டிருந்த தனிப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ற முறையைக் கையாண்டனர். பாரம்பரியமாக வழங்கப்பட்டவைகளில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்தனர்; மற்றும் சிலவற்றைத் தொகுத்து எழுதினர். இன்னும் சிலவற்றைத் திருச்சபையின் நிலைமைக்கேற்ப விளக்கி எழுதினர். அவர்களுக்குப் போதிக்கப்பட்ட போதகத்தின் உண்மையை அவர்களது வாசகர்களும் அறிந்துணர்தலையே எல்லாவிதச் சாதனங்களாலும் தேடினர்." அவர்கள் செய்த வேலைகள்-பொறுக்கி எடுத்தல், தொகுத்து வரைதல், விளக்கம் செய்தல் முதலியனவாகும். இவ்வேலையில் அவர்களுடைய குறிக்கோளும் நோக்கமும் அவர்களுக்குத் தகுந்த வழிகாட்டியாய் அமைந்தன. இவை யாவை? அப்போஸ்தலர்களின் போதகத்தை வாசகர்கள் அறிவதும் நற்செய்தியாளர்கள்

ஒவ்வொருவரையும் தூண்டிய சிறப்பு நோக்கமும் ஆகும். ஆனால் வாசகர்களின் சூழ்நிலைக்கும் தன்மைக்கும் ஏற்ப எழுதினர். இவை பற்றி விவிலியக் குழுவின் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது: "தாங்கள் பெற்றுக் கொண்டவற்றிலிருந்து, இந்தப் பரிசுத்த ஆசிரியர்கள், விசுவாசிகளின் பலவகை நிலைமைகளுக்கும் தாங்கள் கருத்தில் கொண்ட நோக்கத்திற்கும் உகந்த எல்லாவற்றையும் தேர்ந்தெடுத்து வரைந்தனர். அதே நிலைமைகளுக்கும் நோக்கத்திற்கும் ஏற்பத் தங்களது நிகழ்ச்சியுரைகளையும் அமைத்தனர். வாசகத்தின் பொருள் விளக்கம் வரிசைக்கிரமத்தைச் சார்ந்து இருப்பதால், மீட்பரின் வார்த்தைகளையும் செயல்ளையும் நமக்கு அளிக்கையில், இவற்றை வாசகர்களின் உபயோகத்திற்கு ஏற்ப, இங்கொரு சூழ்நிலையிலும் அங்கொரு சூழ்நிலையிலுமாக நற்செய்தியாளர்கள் விளக்குகின்றனர். ஆண்டவரது சொல், செயல் ஆகியவற்றை வேறு முறையில் கூறுவதாலோ, அவரது வாக்குகளைப் பொருள் மாறாது இடம் மாற்றிக் கூறுவதாலோ வரலாற்றின் உண்மை பாதிக்கப்படுவதில்லை."

இதனையே நமது பண்டைய மறைநூல் அறிஞர்கள் கூறுகின்றனர். புனித அகுஸ்தீன், புனித கிறிசோஸ்தம் யோவான் ஆகியோர் கூறுவதுபோல், அப்போஸ்தலர்களது போதனையையும், அவர்களது போதனை அடங்கிய முதல் நூல்களையும் நற்செய்தியாளர்கள் பிரமாணிக்கமாய் வேலைக்கும் சுதந்தரப் போக்கிற்கும் பல வாய்ப்புகள் இருந்தன. அவர்கள் தங்களிடமிருந்த பாரம்பரியப் போதனை நூல்களைத் தரம் வாரியாகப் பிரித்து எடுத்தனர்; போதகங்களையும் இன்னும் உயிருடன் இருந்த அப்போஸ்தலர்களின் சான்றுகளையும் ஒன்று சேர்த்தனர்; இவற்றை ஒழுங்குபடுத்தினர்; இவற்றிலிருந்து தங்கள் சொந்தக் கருத்திற்கும் வாசகங்களின் தேவைக்கும் ஏற்ப நற்செய்தி நூல்களை எழுதினர்.

இவ்விதம் நற்செய்தி, ஆண்டவர் இயேசுவிடமிருந்து அப்போஸ்தலர்களுக்கும், அப்போஸ்தலர்கள் வழியாக, அவர்களது போதகம், விளக்கம் ஆகியவற்றோடு நற்செய்தியாளர்களுக்கும் அளிக்கப்பட்டது. நற்செய்தியாளர்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலாலும் உதவியாலும் சிலவற்றைப் பொறுக்கி எடுத்தும் பலவற்றைத் தொகுத்து விளக்கியும், நாம் கொண்டிருக்கும் வடிவில் நற்செய்திகளை நமக்கு எழுதித் தந்தனர். முன்னரே எழுதப்பட்ட நூல்கள், வாய்மொழிப் பாரம்பரியம் ஆகியவற்றைச் சார்ந்து இந்நூல்கள் எழுதப்பட்டாலும், பண்டைய திருச்சபைப் பாரம்பரியப்படி நற்செய்தியாளர்கள் இந்நூல்களின் ஆசிரியர்கள் ஆவர். நற்செய்தி மனிதர்களால் எழுதப்பட்டதால், அதனை மனித நூல் எனலாம். அது மட்டுமா? தேவ நூலும் ஆகும். இதை இறை ஏவுதல் என்று தலைப்பின் கீழ்க் காண்க.

நற்பண்புகளும் தீய பண்புகளும் (VIRTUES & VICES)

1. மனிதனால் அடையப்படுகின்ற பழக்கங்களாகிய பல நல்ல மற்றும் தீய பண்புகளை விவிலியம் குறிப்பிடுகிறது. அவற்றின் மூலமாக அவன் உயர்த்தப்படுகிறான் அல்லது தாழ்த்தப்படுகிறான். ஆயினும், நற்பண்பு அல்லது தீய பண்பு பற்றிப் பொதுவாகப் பேச வரும்போது அதனுடைய சொல் தொகுதி செறிவற்றதாகவே உள்ளது. உண்மையில், கிரேக்க மனிதப்பற்றுக் கோட்பாடு போலன்றி, இறைவனுடைய நோக்கு மற்றும் மனிதனுக்கான அவரது திட்டங்கள் ஆகியவற்றைவிட, மனிதனுடைய நோக்கு மற்றும் அவனுடைய நிறைவு பற்றிக் குறைவாகவே அக்கறை கொண்டதாக உள்ளது. இறைவன் மனிதரைத் தன்னுடனும் அவர்களுக்குள்ளும் ஒன்றுபடுத்தவே விரும்புகிறார். இந்த ஒன்றிப்பானது அவர்களுடைய ஒழுக்க முன்னேற்றத்தைக் கோருகிறது.

2. நற்பண்பு மற்றும் தீய பண்பினுடைய இயல்பு: நிறைவான மனிதன் என்பவன் நிறைவாக உருவாக முயல்பவனல்லன். இறைவனை நாடி, இறைவன் காட்டுகின்ற வழியைப் பின்பற்றி அவரைக் கண்டடைகிறவனே நிறைவான மனிதன். தனக்குரிய சுயநிறைவை அவன் கண்டடையக்கூடிய ஒரே வழியும் இதுவே. "இறைவனோடு நடத்தல்" (ஆதி 5:22.24; 6:9) என்னும் வாய்பாட்டில் இந்த அடிப்படைத்தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. தீமையைத்தவிர வேறெதுவும் இல்லாத இறைப் பற்றற்ற மனிதரைப் போலன்றி, இத்தகைய மனப்பான்மையே நோவாவை நீதிமானாக்குகிறது (6:5). இறைவனுடனான உயிருள்ள உறவு, அவரது வார்த்தைகளுக்கு ஏற்றவாறு நடத்தல் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிதல், ஆழ்ந்த, நிலையான முறையில் அவரை நோக்கிய நிலை ஆகியவற்றில் நற்பண்பு அடங்கியுள்ளது. இந்த உறவே மனிதனை நீதிமானாக்குகிறது. ஆண்டவருடைய வழியைப் பின்பற்றுவதாலான இந்தப் பிரமாணிக்கமே அடிப்படையான நற்பண்பாகும். ஆபிரகாம் தமது மக்களுக்குக் கற்பிக்க வேண்டியது இதுவே (18:19). உடன்படிக்கையின் நிபந்தனையாகத் கடைபிடிக்கப்பட வேண்டியதும் இதுவே (யாத் 19:5.8). இதற்கு மாறாக, அடிப்படையான தீய பண்பானது ஒரே உண்மையான இறைவனை விட்டுவிட்டு வேறு தெய்வங்களைப் பின்பற்றுவதாகும் (உப 6:14; 4:35); இறைவனுடைய பாதையினின்று விலகுவதன் மூலம் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்க மற்றவர்களாகிறதாகும் (யாத் 32:8).

நற்பண்பினை உருவாக்குவதும், விவிலியத்தினால் அடிக்கடி நீதி என்று அழைக்கப்படுவதுமான இறை அமைப்புடனான இந்த இணக்கமானது, இறைவனால் கோரப்பட்ட செயல்களைச் செய்வதால் மட்டுமே அடையப்படுவதில்லை. அன்பின் வெளிப்பாடாக உள்ள இதயத்தினின்று வருகின்ற பணிவு மற்றும் பற்றுறுதி ஆகியவற்றை இச்செயல்கள் வெளிப்படுத்த வேண்டும். இதுவே உடன்படிக்கையினுடைய அடிப்படை விதியாகும் (உப 6:5-6; 10:16; 11:1; 30:20). நற்பண்பும் தீய பண்பும் தங்களுடைய வேரை இதயத்தில் கொண்டுள்ளன. ஒவ்வொரு நற்பண்பினுடைய ஆன்மாவாக உள்ள அன்பு மற்றும் பற்றுறுதியின் ஊற்றாக இருப்பதற்கென இறைவனுடைய வார்த்தைகள் அங்குதான் பதிப்பிக்கப்பட அல்லது செதுக்கப்பட வேண்டும். தாவீது தவறுகளையுடையவராயினும் மிகப்பெரியவராக உள்ளார். மற்றும், ஆண்டவருடைய வழிகளில் யோசப்பாத்து முன்னேறுகிறார் (1 அர 15:3; 2 நாள் 17:6). அவர்களது இதயங்கள் முற்றிலும் இறைவனுக்குரியவையாய் இருப்பதே இதற்குக் காரணமாகும். இறைவனுடைய பார்வையில் எது நல்லதாக, நீதியானதாக, நேர்மையானதாக உள்ளதோ அதை எசேக்கியா செய்கிறாரெனில், தனது முழு இதயத்தோடும் அவரை நாடுவதே அதற்குக் காரணமாகும் (2 நாள் 31:20-21).

சங்கீத ஆசிரியர்களின் ஞானமானது நற்குண மனிதரை விவரிக்கும்போது, அவனது இதயம் இறைவனுடைய சட்டத்தினால் நிறைந்து, அதனில் மகிழ்ச்சி கொள்கிறது என்று கூறுகின்றனர் (சங் 1:2; 37:31). ஆனால், தீயவன் இறைவனில்லாத இதயத்தைக் கொண்டிருக்கிறான்; அவர் இல்லை என்று கருதுகிறான் (14:1). தன்னடக்கம் மற்றும் விவேகம், நீதி மற்றும் மனவலிமை முதலிய மனிதனுக்குப் பயனுள்ள நற்பண்புகளில் ஞானத்தினால் உருவாக்கப்படும் மனிதன் மட்டுமே நீதியை அன்பு செய்பவனாவான் (ஞான 8:7). இங்கு நீதி என்பது எபிரேயப் பொருளில் அடிப்படை நற்பண்பு என்றும், கிரேக்கப்பொருளில் சமூக உறவில் சிறப்பான நற்பண்பு என்றும் பொருள்கொள்ளப்படும்.

இறுதியாக, இயேசுவின் போதிக்கப்பட்டு (மத் 5:20) மலைப்பொழிவில் விவரிக்கப்பட்ட நிறைவான நீதியானது, எல்லாத் தீய ஆசைகளினின்றும் விடுபட்டு, பகைவர்களையும் உள்ளடக்கும் இரக்கமுள்ள அன்பினால்

நிறைந்துள்ள இதயத்தைச் சேர்ந்ததாகும் (5:7-8.28.44). அவனது இதயத்தினின்று வருகின்ற தீய பண்புகளே ஒரு மனிதனை அசுத்தமாக்குகின்றன (15:18-19).

3. **நற்பண்பு மற்றும் தீய பண்பினுடைய ஊற்று:** தீய பண்பினுடைய ஊற்றினை மனிதனுக்கு வெளியே தேடவேண்டிய அவசியமே இல்லை. பாவத்தின் மூலமாக இறைவனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டதன் மூலம் தனது தீய ஆசைகளைக் கட்டுப்படுத்தவும் தனக்குத் தலைவனாக இறுக்கவும் இயலாதவனாகிறான். உலகை நிறைவுபடுத்துவதற்குப் பதிலாக அதனைச் சிதைத்துவிட்டான் (1 யோவா 2:16-17). இனிமேல் தனது இச்சைகளின் பழுவை எதிர்க்கவும் (சீரா 1:22; 18:30), மீண்டும் தூயவனாவதற்கும் தேவையான வலிமை மட்டுமே அவனது வலிமைக்கு ஊற்றாக இருக்கும் (உப 8:17-18; எபே 6:10). அஃது இல்லாமல் அவன் வலுவற்ற இதயத்தினனாகவும் அக்கறை அற்றவனாகவும் இருப்பான் (சீரா 2:12-13). அவனது இதயம் தூய்மையடைவதற்கு அவன் இறைவனால் மீண்டும் படைக்கப்பட்டு, அவனுக்குள் ஒரு புதிய ஆவியை அமைத்து வலிமைப்படுத்தப்பட வேண்டும் (சங் 51:12-14). இதுவே இறைவாக்கினர்களால் அறிவிக்கப்பட்ட கொடையாகும். இதுவே புதிய உடன்படிக்கையில் நிறைவேற்றப்படும். பின்னர் மனிதருக்கு ஒரு புதிய இதயம் அளிக்கப்பட்டு, இறைவனுடைய சட்டமானது அதில் எழுதப்படும். இறைவனுடைய ஆவியையே அவர்கள் பெறுவர். அவர் அவர்களைப் பிரமாணிக்கமுள்ளவர்களாக ஆக்குவார் (எரே 31:33; எசே 36:26-27). மெசியாவை நிரப்பி, அவரது அரச பணிக்குத் தேவையாக உள்ள அனைத்து நற்பண்புகளையும் அளிக்கின்ற ஆவி இவரே. ஆட்சிபுரிய ஞானம், பகைவரிடமிருந்து மனிதரை விடுவிக்க வலிமை, தான் சுட்டிக் காட்டுகின்ற இறைவனுடன் ஒன்றுபடுத்தும் பக்தி முதலியன இந்த நற்பண்புகளாகும் (எசா 11:2-5).

உள்ளார்ந்த வாழ்வின் தலைவராக இருந்த ஆவியின் பங்கைக் கிறிஸ்து தமது சீடர்களுக்கு வெளிப்படுத்துகின்றார் (யோவா 14:26; 16;13). வெல்லமுடியாத சாட்சிகளாக இருப்பதற்கென அவர்களுக்குத் தேவையான ஞானத்தையும் வலிமையையும் அளிக்கக்கூடியவர் அவரே (மத் 10:20; லூக் 21:14-15; 24:48-49; அ.ப. 1:8). விசுவாசியின் இதயத்தில் இறையன்பை விதைத்து, இந்த அன்பினால் உருவாக்கப்பட்ட அனைத்து நற்பண்புகளாகிய பலனை அவனில் விளைவிக்கச் செய்வதன் மூலம் (உரோ 5:5; கலா 5:22), மனிதனை நேர்மையற்றவனாக்குகின்ற உலக ஆசைகளினின்று விடுவிக்கக் கூடியவர் இவரே (கலா 5:19-21). இவ்வாறாக, இந்த ஆவியானவர் மனிதரை அவனது ஆழ்நிலைகளில் வலிமைப்படுத்துகிறார் (எபே 3:16).

4. **நற்பண்புகளுக்கும் தீய பண்புகளின் அட்டவணைக்கும் இடையிலான தொடர்பு:** நற்பண்புடைய மனிதர் பின்பற்ற வேண்டிய பாதையைச் சுட்டிக் காட்டுவதிலும், இறை தண்டனையில் இறைப் பற்றற்ற மனிதரை அச்சுறுத்துவதிலும் விவிலியமானது முழுமையடைவதில்லை (சங் 1). புறவின ஒழுக்கவியலார்களைப் போன்று, நற்பண்புகள் மற்றும் தீய பண்புகளின் முக்கிய குணவியல்புகளின் அறிவுரை அட்டவணைகளை அமைக்க இது முயல்கிறது.

தீய பண்புகளின் அட்டவணையானது இறைவாக்கினர்கள் (ஓசே 4:1-2; எரே 7:9), ஞானிகள் (பழ 6:16-19; சீரா 25:2; 26:5-6), கிறிஸ்து (மாற் 7:21-22இணை) மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் (1 கொரி 6:9-10; உரோ 1:29-31; கொலோ 3:5-9 1 திமொ 1:9-10; 2 திமொ 3:1-5; 1 பேதுரு 2:1;4:3) ஆகியோரால் அளிக்கப்படுகிறது. தீய பண்பினுடைய உண்மையான காரணமானது உண்மையான இறைவனை அங்கீகரிக்க மறுப்பதும், சிலைகளுக்கான முன்னுரிமையுமாகும் என்று

பவுல் குறிப்பாக வலியுறுத்துகிறார். சில நேரங்களில் தீய பண்புகள் மனிதரைப் பிரிக்கும் விளைவைக் கொண்டுள்ளன. சில நேரங்களில் அவை ஒன்றுக்கொன்று எதிரானவையாகவும் உள்ளன.

இத்தகைய எதிர்ப்பானது நற்பண்புகளுக்கு இடையே இருப்பதில்லை. ஏனெனில், அவை முற்றிலும் மாறுபட்ட வகையில் ஒன்றையொன்று நிறைவுபடுத்துகின்றன. நீதிமான் ஏன் தன்னிலேயே ஒன்றுபட்டுள்ளான் என்பதையும் ஒற்றுமையின் ஊற்றையும் அவற்றின் அட்டவணைகள் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, மீக்கா இறைவாக்கினரின் சுருக்கத்தை எடுத்துக்கொள்வோம்: "நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுள் முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கோருகிறார்?" (மீக் 6:18). இயேசுவைப் பொருத்தவரையில், தாம் உதாரணம் அளிக்கின்ற (யோவா 13:15) தமது தாழ்ச்சி, சாந்தம் (மத் 11:29) மற்றும் அவரது வாழ்வையே காணிக்கையாக அளிக்கச்செய்கின்ற அன்பு (யோவா 15:13) ஆகியவற்றால் அவர் சிறந்து விளங்குகிறார். இந்த அன்பானது சீடர்கள் ஒருவர்க்கொருவர் காட்ட வேண்டிய அன்பிற்கு மாதிரியாகவும் (13:34; 15:17), அவர்களைத் தனிப்படுத்திக் காட்டும் அடையாளமாகவும் உள்ளது (13:35). நற்பண்பு பற்றிய கிரேக்கக் கருத்தை ஏற்றுக்கொள்ளும் பவுல், புகழ்ச்சிக்குரிய அனைத்தையும் நாம் செய்ய வேண்டுமெனப் பரிந்துரைக்கும்போது (பிலி 3:8), எஞ்சியுள்ள மூன்றாகிய விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவற்றை அடிக்கடி வலியுறுத்துகிறார் (1 தெச 1:3; உரோ 5:1-5; கொலோ 1:4-5...). இவற்றில் மிக உயரிய நற்பண்பானது அன்பு என்றும் அவர் அறிவிக்கிறார் (1 கொரி 13:13). ஆனாலும், மற்ற நற்பண்புகளும் பரிந்துரைக்கப்படுகின்றன (1 தெச 5:14-18; உரோ 12:9-21; எபே 4:2; 1 திமொ 4:12; 6:11; 1 பேதுரு 3:8; 2 பேதுரு 1:5-7). ஆனால், அன்புதான் நிறைவுடைமையின் பிணைப்பாகும். கிறிஸ்துவினுடைய சமாதானத்தின் ஆட்சியை அஃது ஏற்படுத்துகிறது. அவரில் எல்லா மனிதரும் ஒரே உடலாக உள்ளனர் (கொலோ 3:12-15).

நன்மை தீமை (GOOD AND EVIL)

I. "கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அது மிகவும் நன்றாய் இருந்தது" (ஆதி 1:31). ஆயினும் இறுதிக்கால அரசின் வருகையைத் துரிதப்படுத்த, "தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்" என்று நமது தந்தையிடம் கேட்குமாறு கிறிஸ்து நமக்கு கூறுகிறார் (மத் 6:13). இவ்விரு கூற்றுகளுக்கு இடையிலான முரண்பாடானது இன்றைய விசுவாசிக்கு ஒரு பிரச்சனையைத் தோற்றுவிக்கிறது. இப்பிரச்சனைக்குத் தீர்வையும் விவிலியமே அளிக்கின்றது; நல்லதாகப் படைக்கப்பட்ட இவ்வுலகில், எப்போது தீமை வந்தது? எவ்வாறு எப்போது அது மேற்கொள்ளப்படும்?

II. **உலகில் நன்மையும் தீமையும்:** 1. அவற்றைக் காண்கின்ற அல்லது அனுபவிக்கிறவனுக்குச் சில பொருட்கள் அகநிலையில் நல்லவையாகவும், தீயவையாகவும் உள்ளன. அழகிய, நல்ல என்று கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்படும் "தோபு" என்ற எபிரேயச் சொல், அடிப்படையில் இனிமையான பொதுவாக நல உணர்வுககளை ஏற்படுத்தும் ஆட்களையும் பொருட்களையும் சுட்டுகிறது. சான்றாக நல்ல உணவு (நீதி 19:6-9; 1 அர 21:7; ரூத் 3:7), அழகிய இளம்பெண் (எஸ்த 1:11), தாராள குணமுடைய மக்கள் (ஆதி 40:14). சுருக்கமாக உடலளவிலன்று மன அளவில் மகிழ்ச்சியைக் கொணர்கின்ற அல்லது வாழ்வை எளிதாக்குகின்ற எதுவும் நல்லதே (உப 30:15), இதற்கு மாறாக,எவ்வடிவிலும் நோய், துன்பம், மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக மரணத்திற்கு இட்டுச்செல்லும் எதுவும் தீயதே.

2. கிரேக்கர்கள் புரிந்துக்கொண்டது போன்ற படைப்புகளின் புறநிலை சார்ந்த

நன்மைத்தனமானது பேசப்படக் கூடுமா? ஏனெனில், ஒவ்வொன்றிற்கும் பின்பற்றப்பட வேண்டிய அல்லது செயல்படுத்த வேண்டிய மூல மாதிரியை அவர்கள் கற்பனை செய்திருந்தனர். தன்னிலேயே அனைத்து ஒழுக்க அழகுடைய, சமூக குணங்களைக் கொண்டுள்ள, ஆகவே திறந்த மனதுள்ள, இணக்கமிக்க, நகரத்திற்குப் பயனுள்ள ஒரு மாதிரியை அவர்கள் மனிதனுக்கு அளித்தனர். இத்தகைய தனிப்பட்ட முன்னோக்கில், நாம் எவ்வாறு தீமையைப் பற்றிய எண்ணத்தை உருவாக்கலாம்? முழு நிறைவற்றதாகவோ முற்றிலும் எதிர்மறையான பொருளாகவோ, நன்மையின்மையாகவோ அல்லது முரண்பட்ட நிலையில், தனக்குரிய நிலையில் மெய்ம்மையாக உள்ள ஈரானிய சிந்தனையில் முக்கியப் பங்கு வகித்த தீய கோட்பாட்டினின்று வருவதாகச் சிந்திக்கலாமா? விவிலியமானது பொருட்களுக்கு மெய்யான நன்மைத்தனத்தை அளிக்கும்போது, இம்முறையில் அஃது அதனைப் புரிந்து கொள்வதில்லை. "கடவுள் அதனை நல்லதெனக் கண்டார்" (ஆதி 1:4...) என்று அது கூறும்போது, இந்த நன்மைத்தன்மையானது எவ்விதக் கருத்தியலான நன்மையாலும் அளவிடப்படாமல், பொருட்களுக்கு நன்மைத்தனத்தை அளிக்கின்ற ஒரேயொருவராகிய படைத்த இறைவனுடனான உறவினால் அளவிடப்படுகின்றது என்பதை அது காட்டுகின்றது.

மனிதனுடைய நன்மைத்தனமானது குறிப்பிட்ட நிலையாகும். உண்மையில் ஓரளவு அஃது அவரையே சார்ந்துள்ளது. படைப்பின் தொடக்கத்தில், "நன்மை தீமையை உணர்த்தும் மரத்தின்" முன்னால் இறைவன் அவனை அமர்த்தினார். கீழ்ப்படிந்து வாழ்வின் மரத்தை அனுபவித்தல் அல்லது கீழ்ப்படியாமல் மரணத்திற்கு இழுக்கப்படும் வாய்ப்பினை இறைவன் அவனுக்கு வழங்கினார் (ஆதி 2:9.17). ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்கப்படுகின்ற விடுதலையின் முடிவான சோதனை இதுவே. இறைவனின் கட்டளையைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவும், அவரது சித்தத்தோடு ஒத்துப்போவதன் மூலமும் (உப 6:18; 12:28; மீக் 6:8) தீமையை விலக்கி நன்மை புரிந்தால் (எசா 7:15; ஆமோ 5:14; காண்க: எசா 1:16-17), அவன் நல்லவனாகவும் இறைவனுக்கு ஏற்புடையவனாகவும் இருப்பான் (ஆதி 6:8). இல்லாவிடில் தீயவனாகவும், அவருக்கு ஏற்காதவனாகவும் இருப்பான் (38:7). அவன் பொறுப்புடையவனாக இருப்பதன் காரணமாக, மனச்சாட்சியின்படி செய்யப்பட்ட அவனது தேர்வானது அவனது ஒழுக்கக் குணத்தையும், அதன் விளைவாக அவனது முடிவையும் தீர்மானிக்கும்.

தீயவனால் சோதிக்கப்பட்ட நிலையில், மனிதன் தொடக்கத்திலிருந்தே தீமையைத் தேர்ந்தெடுத்துள்ளான். "உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும்" (ஆதி 3:6), ஆனால் இறைவனுடைய சித்தத்திற்கு அப்பாற்பட்ட படைப்புகளில் அவன் தனது நன்மையைத் தேடினான். பாவத்தினுடைய அடிப்படை இதுவே. இப்படைப்புகளில் துன்பம் மற்றும் மரணத்தினுடைய கசப்பான கனிகளையே அவன் கண்டடைந்தான் (ஆதி 3:16-19). அவனது பாவத்தின் விளைவாக, தீமையானது உலகிற்குள் கொண்டு வரப்பட்டு, அங்கேயே பல்கிப்பெருகியது. ஆதாமின் பிள்ளைகள் எந்த அளவிற்குத் தீயவர்களானார்களெனில், அவர்களைப் படைத்தமைக்காக இறைவனே வருத்தப் பட்டார் (ஆதி 6:5-7). மண்ணுலகில் நன்மை புரிவன் எவனுமில்லை (சங் 14:1-3; உரோ 3:10-12). இதுவும் மனிதனுடைய அனுபவமே. அடைய முடியாத ஆசைகளால் அவன் சோர்வடைகிறான் (திருவுரை 5:9-11; 6:7). ஏனெனில், தீமையானது அவனது இதயத்தினின்றே தோன்றுவதன் காரணமாக (ஆதி 6:5; சங் 28:3; எரே 7:24; மத் 15:19-20) மண்ணுலகப் பொருட்களை முழுமையாக அனுபவிப்பதினின்று (திருவுரை 5:14; 11;2-6) தடுக்கப்படுவதனாலும், "பாவம் செய்யாமல்

நன்மை புரிய" இயலாதவனாகவும் அவன் உள்ளான். அவன் தனது சுதந்தரத்தில் பாதிக்கப்பட்டுள்ளான் (உரோ 7:19-20); பாவத்திற்கு அடிமையாக உள்ளான் (6:17). அவனது பகுத்தறிவும் கூட, பாதிக்கப்பட்டுள்ளது. பொருட்களை முரண்படுத்திய நிலையில் அவன் நல்லதைத் தீயதென்றும் தீயதை நல்லதென்றும் கருதுகிறான் (எசா 5:20; உரோ 1:21-25). இறுதியாக மனந்தளர்ந்து ஏமாற்றமடைந்த நிலையில் "எல்லாமே வீண்" (திருவுரை 1:20) என அவன் உணர்கிறான். "உலகனைத்தும் தீயோனின் பிடியில் இருக்கிறது" என்பதைக் கடுமையான வழியில் அவன் அனுபவிக்கிறான் (1 யோவா 5:19; யோவா 7:7). உண்மையில் தீமையானது நன்மையின் மறைவு மட்டுமன்று, மாறாக, மனிதனைக் கீழ்ப்படுத்தி உலகைச் சீர்குலைக்கின்ற நேரிடையான சக்தியாகும் (ஆதி 3:17:18). இறைவன் அதனைப் படைக்கவில்லை; ஆனால், இன்றுள்ள நிலையில் அஃது இறைவனுக்கு எதிராக நிற்கிறது. முற்றுப்பெறாத போர் ஒன்று தொடங்கி, வரலாறு முழுவதும் நீடித்திருக்கும். மனிதனைக் காக்க, எல்லாம் வல்ல இறைவன் தீமையின்மீதும் தீயோனின் மேலும் வெற்றி கொள்ள வேண்டும் (எசே 38:39; திருவெளி 12:7-17).

III. இறைவன் மட்டுமே நல்லவர்:

1. **இறைவனின் நன்மைத்தனம்:** பழைய ஏற்பாட்டு முதன்மையான வெளிப்பாடுகளில் இதுவும் ஒன்று. எகிப்திய அடிமைத்தனத்தின்போது தீமையை அதன் உச்சநிலையில் அறிந்த இஸ்ராயேலானது, தனது விடுவிப்பாளராகிய ஆண்டவரில் நன்மையைக் கண்டுணர்கிறது. முதலில் இறைவன் அதனைச் சாவினின்று விடுவிக்கிறார் (யாத் 3:7-8; 18:9). பின்னர், "ஆண்டவர் தனது பாதுகாப்பைத் தொடர்ந்து அளிக்கின்ற," "பாலும் தேனும் ஓடுகின்ற," "நல்ல நாடாகிய" (உப 8:7-10- வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அதனை நடத்திச் செல்கிறார். உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருந்தால் (உப 8:11-119; 11:8-12; 18:28), இஸ்ராயேல் அங்கே மகிழ்ச்சியைக் கண்டடையும் (உப 4:40).

2. **இறைவன் தனது கொடைகளில் மேல் ஒரு நிபந்தனையை விதிக்கிறார்:** ஏதேன் தோட்டத்திலிருந்த ஆதாமைப்போன்று இஸ்ராயேலானது, தனது முடிவைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு தேர்வை முன் கொண்டுள்ளது. உடல் சார்ந்த மற்றும் ஒழுக்கஞ்சார்ந்த நன்மைகளிரண்டும் இறைவனுடன் சமமாக இணைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, இறைவன் அதன் முன்னிலையில் ஆசியையும், சாபத்தையும் நிறுத்துகிறார். இஸ்ராயேலானது ஆண்டவரை மறந்து, அவரை அன்பு செய்வதை விட்டுவிட்டு, கட்டளைகளைக் கடைப்பிடிக்காமல் உடன்படிக்கையை முறிக்க வேண்டி இருந்தால், அஃது உடனடியாக உலக நன்மைகளினின்று பிரிக்கப்பட்டு (உப 11:17), அதனுடைய நிலமானது பாலைவெளியாகும்வரை அடிமைத்தனத்திற்குத் திருப்பியனுப்பப்படும் (உப 30:15-20; 2 அர 17:7-23; ஓசே 2:4-14). தனது வரலாற்றுப் போக்கில் இஸ்ராயேலானது உடன்படிக்கையினுடைய இந்த அடிப்படைக் கோட்பாட்டின் உண்மையைப் பரிசோதித்தறிகிறது. இன்ப வன நிகழ்ச்சியைப்போன்று, துன்பத்தின் அனுபவமானது பாவத்தின் அனுபவத்தைத் தொடர்கிறது.

3. **இறைப் பற்றற்றவர்களின் வெற்றியும் நீதிமான்களின் துன்பமும்:** ஒரு முக்கியக் கருத்தில் இக்கோட்பாடானது தவறி விட்டதாகத் தோன்றுகிறது. இறைவன் இறைப் பற்றற்றவர்களுக்கு ஆதரவாயிருந்து, நல்லவர்களைத் துன்பத்தில் விட்டு விடுவதாகத் தெரியவில்லையா? நீதிமான் துன்புறுகிறான், ஆண்டவரது ஊழியன் துன்புறுத்தப்படுகிறான். இறைவாக்கினர்கள் சாவிற்கு உட்படுத்தப்படுகின்றனர் (எரே 12:1-2; 15:15-18; எசா 53; சங் 22; யோபு 23-24). துன்பத்தினுடைய அனுபவமானது நோவு தருவதாகவும், மறைபொருளானதாகவும்

உள்ளது. அதனுடைய பொருளை நாம் உடனடியாகக் காண்பதில்லை. ஆயினும், இதன் மூலமாக ஆண்டவரது எளியோர் நிலையற்றவையும் குறுகிய காலத்தவையாகவும் உள்ள "இவ்வுலகப் பொருட்களினின்று" தங்கள் விடுவித்துக் கொள்வதை மெதுவாக அறிந்து கொள்கின்றனர் (செப் 3:11-13; மத் 6:19-20; லூக் 12:33-34). அனைத்தும் தங்களை விட்டு விலகிய பின்னும் தங்களுடன் தங்கியுள்ள இறைவனில் மட்டுமே தங்களுடைய வலிமை, வாழ்வு மற்றும் நன்மையைக் கண்டடைவதை அவர்கள் அறிந்து கொள்கின்றனர்; வீறார்ந்த விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் அவரையே பற்றிக் கொள்கின்றனர் (சங் 22:20; 42:6; 73:25; எரே 20:11). சந்தேகத்திற்கிடமின்றி அவர்கள் இன்னும் தீமைக்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர். ஆயினும், மீட்பின் நாளில் வெற்றிபெற உள்ள மீட்பரை அவர்கள் தங்கள் பக்கம் கொண்டுள்ளனர். அதன் பின்னர், தமக்கு விசுவாசமாக இருப்போருக்கு இறைவன் வாக்களித்த பொருட்களை அவர்கள் பெறுவர் (சங் 22:27; எரே 31:1-10-14). உண்மையில் இறைவன் "மட்டுமே நல்லவர்" (மாற் 10;18 இணை).

IV. **இறைவன் தீமையின்மீது** வெற்றி **கொள்கிறார்:** மீட்பராகத் தம்மை வெளிப்படுத்துவதன் மூலம், தீமையின் மீதான தனது வருங்கால வெற்றியை இறைவன் ஏற்கனவே அறிவித்துள்ளார். மனிதனை நல்லவனாக்கி, "இவ்வுலகின் அரசனாகிய" (லூக் 4:6; யோவா 12:31; 14:30) தீயோனின் வல்லமையினின்று அவனை விடுவிப்பதன் மூலம் (1 அர 5:18-19) திட்டமான வழியில் இவ்வெற்றியானது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

1. இறைவன் ஏற்கெனவே சட்டத்தை அளித்துள்ளார்: அது நல்லதாகவும் வாழ்வைக் கொணரக் குறிக்கப்பட்டதாகவும் உள்ளது (உரோ 7:12-14). கட்டளைகளைக் கடைப்பிடித்தால், மனிதன் நல்லதைச் செய்து முடிவில்லா வாழ்வை அடைவான் (மத் 19:16-17). பாவத்தின் கைதியாகிய மனிதனின் இதயம் மாறாத வரையில், சட்டமானது தன்னில் பயனற்றதாக உள்ளது. நல்லதை எண்ணுவது மனிதனுக்கு எட்டிய தொலைவிலேயே உள்ளது. ஆனால், அதனை நிறைவேற்றுவது எட்டாத தொலைவிலுள்ளது. அவன் தான் விரும்புகின்ற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையைச் செய்கிறான் (உரோ 7:18-20). அவனுக்கே அப்பாற்பட்டு இச்சைகள் அவனது இழுத்துச் செல்கின்றன. அவனது நன்மைக்கென அமைக்கப்பட்ட சட்டமானது இறுதியில் அவனது வீழ்ச்சியாக மாறுகிறது (உரோ 7:7; 12-13; கலா 3:19). இந்த உள்ளார்ந்த போராட்டமானது முடிவில்லா மகிழ்ச்சியின்மையில் அவனை விட்டுச்செல்கிறது. அப்படியானால் யார்தான் அவனை மீட்பார்? (உரோ 7:14-24)

2. **"நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து"** மட்டுமே (உரோ 7:25): மனிதனுடைய இதயத்திலேயே தீமையின் மீது வெற்றி கொள்வதன் மூலம், அதன் வேர்களிலேயே தீமையை அவர் மட்டும் அடைய முடியும் (எசே 36:26-27). அவரே பாவமற்ற (யோவா 8:46) புதிய ஆதாம் (உரோ 5:12-21). அவர் மீது சாத்தானுக்கு எவ்வித வல்லமையும் இல்லை. சிலுவையில் மரணமடையும் அளவிற்கு அவர் கீழ்ப்படிந்திருந்தார் (பிலி 3:8). அவரது மந்தையானது மேய்வதற்கு ஓரிடத்தைக் கண்டடைவதற்கென அவர் தமது வாழ்வை அளித்தார் (யோவா 10:9-18). "வாக்களிக்கப்பட்ட ஆவியானவரை நாம் விசுவாசத்தின் வழியாய்ப் பெற்றுக்கொள்ள; கிறிஸ்து நமக்காகச் சாபமானார்" (கலா 3:13-14).

3. **ஆவியின் கொடைகள்:** இவ்வாறாக வாழ்வையும் உலகப்பொருட்களையும் துறந்து (எபி 12:2). தூய ஆவியை நமக்கு அனுப்புவதன் மூலமாக, தந்தையிடம் நாம் கேட்க வேண்டிய நற்பொருட்களைக் கிறிஸ்து நமக்கெனப் பெற்றுத்தந்தார் (மத் 7:11; லூக் 11:13). இஃது

இனிமேலும், முன்பு எபிரேயருக்கு வாக்களிக்கப்பட்டதைப்போன்ற இவ்வுலகப் பொருட்களைப் பற்றியதன்று; மாறாக, நம்முள்ளிருக்கும் "ஆவியின் பலன்களைப்" பற்றியதாகும் (கலா 5:22-25). இப்போது முதல் அருளால் மாற்றியமைக்கப்பட்ட மனிதன் "நல்லது செய்யலாம்" (கலா 6:9-10), "நற்செயல்களைப் புரியலாம்" (மத் 5:16; 1திமொ 6:18-19; தீத் 3:8.14) மற்றும் "நன்மையால் தீமையை வெல்லலாம்" (உரோ 12:21). இப்புதிய பொருட்களுக்குத் தகுதியானவனாக உருவாக, அவன் யாவற்றையும் துறக்க வேண்டும்; "தனது உடைமைகள் அனைத்தையும் விற்றுவிட்டு," கிறிஸ்துவைப் பின்செல்ல வேண்டும் (மத் 19:21). "தன்னையே மறுத்து அவருடன் தனது சிலுவையைச் சுமக்க வேண்டும்" (மத் 10:38-39; 16:24-26).

4. **தீமையின் மீதான நன்மையின் வெற்றி:** ஆவியின் தூண்டுதல்களுக்குக் கீழ்ப்படியுமாறு கிறிஸ்துவுடன் வாழும் வழியைத் தேர்ந்தெடுப்பதில், ஆதாமின் தேர்வினுடைய ஒன்றிப்பினின்று கிறிஸ்தவன் பிரிந்து செல்கிறான். இவ்வழியாக அவனில் ஒழுக்கத் தீமையானது உண்மையாகவே வெற்றி கொள்ளப்படுகிறது. இன்றைய உலகம் நிலைத்திருக்கும் வரையில் அதனுடைய உடல் சார்ந்த மற்றும் உளம் சார்ந்த விளைவுகள் நிலைத்திருக்கும் என்பது உறுதி. ஆனால் மனிதன் இப்போது தனது துன்பங்களில் மகிமையடைகிறான். அவைகளின் மூலம் அவன் பொறுமையை அடைகிறான் (உரோ 5:4). "இக்காலத்தினுடைய துன்பங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய மகிமையுடன் ஒப்பிடப்பட"த் தகுதியற்றன என்றும் அவன் கருதுகின்றான் (8:18-25). இவ்வாறு, விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் மூலமாக அழிக்கப்பட முடியாத செல்வங்களை அவன் ஏற்கெனவே கொண்டுள்ளான் (லூக் 12:33-34). "வரவிருக்கும் நன்மைகளின் தலைமைக் குருவாகிய" (எபி 9:11; 10:1) கிறிஸ்துவினுடைய தலையீட்டின் மூலமாக அவை அளிக்கப்படுகின்றன. இஃது ஒரு தொடக்கம் மட்டுமே; ஏனெனில், விசுவசிப்பதென்பது காண்பதன்று. ஆனால், விசுவாசமானது எதிர்நோக்கப்படுகின்ற நன்மைகள் (எபி 11:1), மேலான தாய்நாடு (எபி 11:16) மற்றும் தன்னால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கென இறைவன் படைக்கவிருக்கும் புதிய உலகம் (திருவெளி 21:1-3) ஆகியவற்றையளிக்கின்றது.

நன்மை தீமை அறியும் மரமும், வாழ்வின் மரமும்: (TREE OF KNOWLEDGE, TREE OF LIFE)

1. ஏதேன் தோட்டத்தில் இருந்த இயற்கையாற்றலுக்கு மீறிய மரங்களாகும். ஆதி 2-3-இல் பயன்பட்டுள்ள முரண்பட்ட மூலங்களின் காரணமாக, இந்த இரண்டு மரங்களுக்குமிடையே உள்ள தொடர்பை விவரிப்பது கடினமாகும். "நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரம்" என்ற சொற்றொடரின் பொருள் பற்றி அதிகத் தர்க்கம் உண்டு. மரம் அறிவதற்கு ஏதுவானதாகும். ஆனால் அறிவு, உரிமையால் இறைவனுக்கே உரியதாகும். இறைவனுடைய கட்டளையை மீறி இம்மரத்தின் கனியை உண்ட மனிதன் வெட்கமும், குற்ற உணர்வும் கொண்டான்; தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டான். வீழ்ச்சிக்குப் பிறகுதான், வாழ்வின் மரம் பொருளுள்ள இடம் பெறுகிறது. மனிதன் என்றென்றும் வாழ்வதற்காக, வாழ்வின் மரத்திலிருந்து பறித்து உண்ண முயற்சிப்பதைத் தடுக்க, தோட்டத்திலிருந்து விரட்டப்படுகிறான்.

2. **சொல்வியலும் பயன்படும் முறையும்:** "நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரம்" என்ற சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் இருமுறைதான் தோன்றுகிறது (ஆதி 2:9.17). அதே மரம் ஆதி 3:1-21-இல் பின்னணியாக உள்ளது. அங்கு, "தோட்டத்தின் நடுவிலுள்ள மரம்" (3:3) என்று குறிக்கப்படுகிறது. அதை உண்பவர்களுக்கு நன்மை தீமை பற்றிய அறிவை அளிக்கிறது (3:5.22). இதை "நன்மை தீமை அறிவின் மரம்" என்று மொழிபெயர்ப்பது மேலானதாகும்.

"வாழ்வின் மரம்" ஆதி 2:9; 3:22.24; பழ 3:18; 11:30; 13:12; 15:4; புதிய ஏற்பாட்டில் திருவெளி 2:7; 22:2; 14.19-இல் பயன்பட்டுள்ளது. இது யூதத் திருமுறை சேராத நூல்கள் சிலவற்றில் காணப்படுகிறது. பெயரைக் குறிக்காமலே எசேக்கியேல் இம்மரத்தைக் குறிக்கலாம் (எசே 31:3-9; 47:12).

3. **பிற சமயங்களில் இணை விவரிப்பு:** இந்த இரு மரங்கள் பற்றிய விவரிப்பை இஸ்ராயேல் மேற்காசியப் பொதுப் பாரம்பரியத்திலிருந்து பெற்றதாகத் தெரிகிறது. வட மெபொத்தாமியாவிலிருந்து கானானியக் கலாச்சாரத்தின் வழியாக இவை இஸ்ராயேலின் பாரம்பரியமாகின. ஆனால் இஸ்ராயேல் எவ்வாறு பழங்கால இதிகாசக் கருத்துக்களுக்கு மறுபொருள் அளித்துத் தமதாக்கிக் கொண்டனர் என்பதற்கு இம்மரங்கள் பற்றிய விவரிப்பு பொருள் மிக்கதாகும்.

4. **இலக்கிய ஆய்வு:** இந்த விவரிப்பு இருமூலங்களின் கலப்பாகத் தெரிகிறது. வாய்மொழிப் பாரம்பரியமாக வந்த இந்த விவரிப்புகள், உள் முரண்பாடுகளை நீக்க முயன்றதாகத் தெரியவில்லை.

5. **அறிவின் மரம்:** இதைப்புரிந்து கொள்வது மிகக்கடினமாகும். எல்லாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடையளிப்பது அவ்வளவு இலகுவன்று. விளக்க வரலாற்றில் கூறப்பட்ட சில முக்கியக் கோட்பாடுகளை மட்டும் இங்குத் தருகிறோம்.

அ) ஒழுக்கத்தீர்வு: சரியானவற்றைத் தவறானவற்றிலிருந்து பிரித்தறியவும், நல்லது கெட்டதை வேறுபடுத்தி அறியவும் இந்த மரம் ஏதுவானதாக இருந்தது. இந்தப் பாரம்பரிய விளக்கம் "நல்லது தீயது" என்ற சொற்களைப் பழைய ஏற்பாடு ஒழுக்கமுறைப் பொருளில் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது (எசா 5:20; ஆமோ 5:14; மீக் 3:2). ஆனால் சரியானது தவறானது பற்றிய முன்னறிவு இல்லாமல் உண்மையான கீழ்ப்படியாமை நிகழ்ந்திருக்கக்கூடுமா! இறைவனைப் பற்றிய எபிரேயக் கருத்தை மனதில் கொண்டால், இத்தகைய ஒழுக்கத்தீர்வு உணர்வை அடைவதை இறைவன் தடுத்திருப்பாரா என்பது கேள்விக்குரியதாகும்.

ஆ) உலக அறிவு: இந்த மரம் உலக அறிவு, கலாச்சாரம், அறிவுத்திறன் ஆகியவற்றைத் தர வல்லது. பழைய ஏற்பாட்டில் நன்மை தீமை பற்றிய கருத்துக்கள், வெறும் ஒழுக்கப்பொருளைவிடப் பரந்த தன்மையுடையது என்று ஏற்றுக்கொள்கிறது. நல்லது தீயது என்பது நலம் தரக்கூடியதும் தீங்கு செய்யக்கூடியதுமாகும் (2 சாமு 13:22). ஆதி 2-3 என்ற பகுதி பரந்த அறிவை நோக்கிய முதற்படியாக விளக்கப்படுகிறது. இஃது இறை அச்சத்திலிருந்து விலகிச்செல்கிறது. இந்த விளக்கத்தில் ஆதி 3:24 யாவரும் அறிந்த புரோமித்தியன் கருத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்த விளக்கத்திற்கு எதிராகப் பல மறுப்புகள் கூறலாம். ஆதாம் தம் கீழ்ப்படியாமைக்குப்பின் உலக அறிவில் வளர்ந்ததாகத் தெரியவில்லை. அவர் வெட்கத்திற்கும் குற்ற உணர்வுக்கும் உள்ளாகிறார். மேலும் கலை, கைவினைத்திறம் ஆகியவற்றை ஆதாம் கண்டுபிடிக்கவில்லை; அவரது சந்ததியினரே கண்டு பிடிக்கின்றனர் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது (ஆதி 4:20 தொ).

இ) பாலின அறிவு: இம்மரம் பாலின அறிவைத் தர ஏதுவானதாகச் சிலர் கருதுகின்றனர். இவர்கள் "அறிதல்" என்ற வினைச்சொல்லைச் சுட்டிக்காட்டுவர். இச்சொல் பாலினத்தொடர்பைக் குறிக்கும் மங்கலச் சொல் வழக்காகும் (ஆதி 4:1; 19:5). ஆதாமும், ஏவாளும் நன்மை தீமை அறிவைப் பெற்றபின் தாங்கள் ஆடையின்றி இருப்பதை அறிந்து வெட்க உணர்வு கொண்டனர். மேலும் "நன்மை தீமை அறிவு" என்ற சொற்றொடரைக் கொண்டுள்ள பல இணையானபகுதிகள் பாலின அறிவைச்

சுட்டுவதாக அறிவு சார்ந்த முறையில் விளக்கம் அளிக்கலாம் என்பர்.

இக்கருத்துக்கு எதிராக, ஆதி 2:23-24 என்ற பகுதி பாலின அறிவை ஏற்கெனவே உள்ளடக்கியுள்ளது; பாலின உறவின் காரணகாரியத்தைச் சுட்டுகிறது எனலாம். ஆடையின்றி இருத்தலைப் பாலின அறிவின்மையோடு ஆசிரியர் எங்கும் சமப்படுத்தவில்லை. ஆடையின்றியிருத்தல் எதிர்ப்பாலினத்தாரின் முன் வெட்கமட்டுமன்று, தன்னையே திறந்து காட்டுவதாகும்."நல்லது" என்ற சொல் வெகு அரிதாகத்தான் பாலினப் பொருளை மட்டும் சுட்டவல்லது. இறுதியாக ஆதி 3:22-இல் "மனிதன் இப்பொழுது நம்முள் ஒருவன்போல் நன்மை தீமை அறிந்தவனாகி விட்டான்" என்று கடவுள் கூறுகிறார். இந்த அறிவைப் பாலின அறிவோடு ஒத்துப்போகச் செய்யமுடியாது. மனித பிறப்பிக்கும் ஆற்றலை இறைவனது படைப்பாற்றலின் ஒத்த பகுதியாகப் புரிந்து கொள்வதனால் இந்தப் பிரச்சினையைத் தவிர்க்க முடியாது.

ஈ) அறிவின் முழுமை: இம்மரம் அறிவின் முழுமையை அல்லது இறை அறிவைத் தரவல்லது. இக்கருத்துக்கு ஆதரவாக, எபிரேய மொழிமரபைச் சுட்டிக் காட்டுவர். ஒரு பொருளைப் பற்றிய தொடரில் அல்லது எதிர்மறைகளில் முதலாவதையும் இறுதியானதையும் சேர்த்துக்கூறுவது அதைப் பற்றி முழுமையாகக் கூறுவதாகக் கருதப்படும். இம்மரபை, சங் 139:2; ஆதி 31:24; 2 சாமு 14:17.20-இல் காணலாம்.

இக்கருத்துக்கும் எதிராக, முழுமைக் கருத்துக்குள் தேர்ந்து தெளிதலின் கூறு அனுமதிக்கப்பட்டால் ஒழிய ஆதி 3:22-இன் விளக்கம் மிகவும் செயற்கை முறையாக அமையும். இம்மரத்தின் கனியைத் தின்றதால் மனிதன் அறிவு முழுமைபெறவில்லை. 3:22-ஐ வஞ்சப்புகழ்ச்சிக் கூற்றாகப் புரிந்துகொள்ளுதல் பிரச்சனையைத் தீர்க்கவில்லை.

உ) சுருக்கமாக, ஆசிரியர் இம்மரம் பற்றித் தம் கருத்தில் கொண்டுள்ள பொருளை எங்கும் துல்லியமாகக் கூறவில்லை. இதிலிருந்து விளக்கத் தெளிவின்மை தோன்றுவதாகத் தெரிகிறது. ஆசிரியரே தெளிவில்லாமல் இருக்கும் போது, விளக்கவுரையாளர்கள் அக்கருத்திற்குத் திட்டம் அளிக்க முயல்வதில்தான் தவறு இருக்கிறது.

ஆகவே, சில பரந்த கருத்துடைய கூற்றுகளோடு நாம் நிறைவடைய வேண்டும். 1) நன்மை தீமை அறிவு இறைவனைப்போல் இருப்பதற்குச் சமமாகும் (ஆதி 3:5.22). அஃது உயிரின்மேல் ஆதிக்கத்தையும் படைக்கப்பட்ட உயிருக்குப் பொருந்தாத சுயாட்சித் தன்மையையும் வழங்குகிறது. அப்போது மனிதன் வரைக்குட்பட்டவனாக, மனிதனாக இருக்க முடியாது. 2) அறிவு மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே புதிய உறவை ஏற்படுத்துகிறது (3:8 தொ). 3) அறிவின் விளைவு மனிதன் எதிர்பார்த்ததைப்போல் நன்மை பயப்பதாகத் தெரியவில்லை. வெட்கத்தையும் குற்ற உணர்வையும்தான் தந்தது (3:7தொ).

6. வாழ்வின் மரம்: படைப்பு விவரிப்பில் வாழ்வின் மரம் என்ன பங்கு கொண்டுள்ளது? இம்மரத்தின் கனி என்றென்றும் வாழும் கொடையை அளிக்கவல்லது என்று 3:22-இல் தெளிவாக விவரிக்கப்படுகிறது. ஆயினும் இம்மரத்தை மனிதன் அணுக முடிந்தால், ஏன் அவன் ஏற்கெனவே முடிவில்லாத வாழ்வை அடையவில்லை? இம்மரத்தின் கனியைத் தொடர்ந்து உண்டால்தான், முடிவில்லா வாழ்வை அடையமுடியும் என்று கூறி இப்பிரச்சனைக்கு விடைகாண, சிலர் முயன்றுள்ளனர். மனிதன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டு, கனிதரும் மரத்தை அணுகத் தடைசெய்யப்பட்டபோது,அவன் முடிவில்லா வாழ்வையும் இழந்து போனான். இந்த விளக்கத்திற்கு ஆதரவாக, சமய ஒப்பியலிலிருந்து பல இணை விவரிப்புகள் தரப்படும். இவற்றில் தொடர்ந்து உண்ணுதல் முடிவில்லாத வாழ்வுக்கு அவசியமாகிறது. இக்கருத்தை அறிஞர் பலர்

ஏற்றுக்கொள்வதில்லை. ஒரே தடவை உண்ணுதல் முடிவில்லா வாழ்வை அழிக்கவல்லது என்பது உண்மையானால்தான், மனிதன் தோட்டத்திலிருந்து உடனடியாக விரட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

வாழ்வின் மரத்தின் பங்கைப் புரிந்து கொள்வதற்கு, விவிலிய ஆசிரியரின் கருத்து என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல் முக்கியமாகும். இக்கால மனிதனின் அறிவு சார்ந்த கேள்விகளுக்கு இந்த விவரிப்புகள் விடை அளிக்கவில்லை. மனிதனின் கீழ்ப்படியாமைக்குப் பின்புதான் விவிலிய ஆசிரியர் இந்த மரத்தை முக்கியமானதாகச் சித்தரிக்கிறார்.

ஆதி 2, எளிதான மொழியில் இருந்தாலும், எடுத்துக்காட்டான வாழ்வு பற்றி எபிரேயர்கள் கொண்டிருந்த கருத்தை மிகவும் இறையியல் தன்மையோடு விவரிக்கிறது. இறைவனால் மனிதனுக்குக் குறிக்கப்பட்ட வாழ்வு ஒருங்கிணைந்த வாழ்வின் கூறாக விவரிக்கப்படுகிறது. "களி மண்ணால் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் (கடவுள்) உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிருள்ளவன் ஆனான்" (2:7). அவன், ஒரு மனிதக்குழுவில் (2:18தொ) தனக்கு அளிக்கப்பட்ட குறிப்பிட்ட வேலையைச் செய்து (2:15.19-20) இறைவனுக்குக் கீழ்ப்படிந்து அவரைச் சார்ந்திருக்கும்போதுதான் (2:7) உயிரைக் கொண்டுள்ளான்.

கீழ்ப்படியாமையால் மனிதன் இத்தகைய வாழ்வை இழந்தான். "அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்" என்று இறைவன் கூறியிருந்தார் (2:17). வெட்கம், குற்ற உணர்வு மற்றும் புறம்பாக்கப்படுதல் ஆகியவை சாவை விவரிக்கின்றன. உண்மையான வாழ்வின் இழப்பை ஈடு செய்ய, வாழ்வின் மரத்தால் முடிவில்லா வாழ்வை அடைய மனிதன் முயற்சிக்கக் கூடும் என்று கருதினர். இந்த இதிகாசக் கருத்து ஒரு போலிப்பகரமானதாக நிராகரிக்கப்படுகிறது. உண்மையான வாழ்வு மாயசக்தியுடைய மரத்தால் அன்று, இறைவனோடு கொள்ளும் சரியான உறவினாலேயே அடையப்பெறுகிறது. இந்த உறவை இழந்து விட்டதன் காரணமாகத்தான் மனிதன் இன்பவனத்திலிருந்து விரட்டப்படுகிறான். ஆதியாகம ஆசிரியர், வாழ்வு மற்றும் சாவு பற்றிய மனிதனின் இறுதியான பிரச்சனைக்குரிய போலி விடையை அடையாளப்படுத்த, பழங்கால இதிகாசக்கருத்தை ஆற்றலுள்ள விதத்தில் பயன்படுத்தியுள்ளார்.

வாழ்வின் மரம் புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலில் மீண்டும் வருகிறது. வெளிப்பாட்டியல் மொழியில், ஆசிரியர், இறைவனோடு மீண்டும் அமைக்கப்படும் உறவை, ஏதேன் தோட்ட ஆசீர்கள் மீண்டும் வருவதாக விவரிக்கிறார். மரத்தின் மாய சக்தியைப் புதிய ஏற்பாடு இனி ஒருபோதும் வலியுறுத்துவதில்லை; அது நாடுகளைக் குணப்படுத்துவதற்கு ஏதுவானது என்ற குறிக்கோளின் மேல் கருத்தை ஒருங்குவிக்கிறது.

7. இறையியல் உட்கருத்து: தனது கதையைக்கூற ஆதி 2-3-இன் விவிலிய ஆசிரியர் பழங்கால இதிகாசக் கருத்துக்களைக் பயன்படுத்துகிறார். அவற்றில் ஒன்று இன்பவத்தின் மாயசக்தியுள்ள மரமாகும். இந்த அன்னியமான பொருள் பழைய ஏற்பாட்டுக்கு விநோதமான கருத்துகளைப் பொதுவாகக் கொண்டிருந்தாலும், ஆசிரியர் இப்பொருளை ஆற்றலோடு மீண்டும் அமைத்து உண்மையான எபிரேயச் சாட்சி அளிக்கச்செய்கிறார்.

ஆதி 2-3-இன் கதை இறையியல் காரணம் காட்டும் கதையாகும். இறைவனிடமிருந்து மனிதன் பிரிந்ததையும் நிறைவாழ்வின் இழப்பையும் விளக்குகிறது. சாவுக்குக் காரணம் வாழ்வின் இதிகாச மரத்தின் இழப்புதான் என்ற பழம் மேற்காசிய மாதிரியிலிருந்து கவனத்தை அகற்றுகிறார். அந்த மரபையும் விலக்கிவிடுகிறார். மனிதனது அவல நிலைக்கு மனிதனது கீழ்ப்படியாமையே காரணம் என்று வெகுவாக

வலியுறுத்துகிறார். இந்த இறையியல் செய்தியை அளிக்கும் வாகனமாக இந்த அறிவின் மரத்தைப் படைத்துள்ளார். இறுதி ஆய்வில், இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே நடக்கும் செயல்பாட்டுக்கு மேடைப்பின்னணியாகவே மரம் அமைவதாகத் தெரிகிறது.

நன்மை புரிவோர் (BENEFACTORS)

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கடவுள்களுக்கும், மனிதர்களுக்கும் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட இந்த பட்டம், பெரும்பாலும் அரசர்களுக்கு வழங்கப்பட்டது. பொதுவாக, குறிப்பிடத்தகுந்த சேவை செய்ததற்காக அரசர்களுக்கோ, சிறப்புப்பெற்ற மனிதர்களுக்கோ இப்பட்டம் வழங்கப்பட்டது (எஸ்த 8:12; ஞானம் 19:14; 2 மக் 4:2). லூக் 22:25-இல் இதைப் பயன்படுத்துவதைக் கிறிஸ்து தடுக்கிறார். சில இடங்களில் கடவுள் செய்த நன்மைகளை மட்டுமே இச்சொல்லின் மற்ற வடிவங்கள் குறிக்கின்றன. (சங் 13:6; அ.ப. 4:9; 10:38; 1 திமொ 6:2; ஞானம் 16:2; 2 மக் 6:13; 10:38).

நன்றி செலுத்துதல் (THANKSGIVING, GRATITUDE)

I. விவிலிய வரலாற்றினுடைய முதல் உண்மையானது கைம்மாறு கருதாத அபரிமிதமான திருப்பியளிக்க முடியாத இறைவனின் கொடையாகும். இறைவனுடனான சந்திப்பானது எல்லாம் வல்லவருடைய பிரசன்னத்தில் மனிதனை நிறுத்துவதோடு நின்று விடுவதில்லை. அஃது அவனை முழுமைப்படுத்தி, அவனது வாழ்வை மாற்றியமைக்கிறது. நன்றி செலுத்துதலானது ஒருநாள் கிறிஸ்துவில் மலர வேண்டிய வளர்கின்ற மற்றும் தொடர்ச்சியான அருளுக்குப் பதிலாக அமைகிறது. அதே சமயம் இறைவனுடைய கொடைகளைப்பற்றிய ஆழ்ந்த உணர்வு எழுகிறது; இறைவனுடைய தாராளத்தின் காரணமாக வியப்பினால் ஆன்மா ஊடுருவி நிரப்பப்படுகிறது; இறைமாட்சிமையின் முன்னிலையிலான மகிழ்ச்சியான அங்கீகாரம் நிகழ்கிறது. இவ்வாறு நன்றி செலுத்துதலானது விவிலியத்தில் தன்மையாலே முக்கிய கருத்தாகும். ஏனெனில், மகிழ்ச்சி மற்றும் ஆராதனையின் துடிப்பில் இறைவனையும் அவரது உயர்வு மற்றும் மகிமை ஆகியவற்றையும் ஓரளவு மனிதன் கண்டடையும்போது படைக்கப்பட்ட மனிதனின் அடிப்படையான சமயப்பதிலாக அஃது உள்ளது. பவுலின் கருத்துப்படி புறவினத்தாருடைய தலையாய பாவமானது "இறைவனுக்கு உரிய மகிமையையும் நன்றியையும் செலுத்தாமலிருப்பதாகும்" (உரோ 1:21). மேலும், உண்மையாகவே மெசபொத்தாமியாவின் பக்தியால் படைக்கப்பட்ட பாடல் தொகுப்பில், நன்றி செலுத்துதலின் உணர்வு அரிதாக உள்ளது. ஆனால், அது விவிலியத்தில் அடிக்கடி நிகழ்வதாகவும், ஆன்மாவின் ஆற்றல் மிக்க உணர்வுகளை வெளிக்கொணர்வதாகவும் உள்ளது.

II. பழைய ஏற்பாடு:

1. **முதல் உடன்படிக்கையிலிருந்து இரண்டாவது உடன்படிக்கை வரை:** பழைய ஏற்பாட்டின் நன்றிசெலுத்துதலானது அஃது எப்போதும் இருக்கும் அளவிலே, புதிய ஏற்பாட்டின் நன்றி செலுத்துதலை முன்னுணர்த்துகின்றது; அதே நேரத்தில் நன்றியுரையாகவும் எதிர்காலம் மற்றும் உயரிய அருள் நோக்கிய நெருக்கடி நிலையாகவும் அறிவிக்கிறது. மற்றொரு புறம் புதிய உடன்படிக்கையின் காலத்தில் நன்றி செலுத்தலானது உண்மையாகவே பீறிட்டெழுகிறது; பண்டைய நீதிமான்களில் இதுவரை எப்போதுமே நிகழாதது போன்று, கிறிஸ்தவர்களின் செபம் மற்றும் வாழ்வில் எங்கும் பிரசன்னமாகிறது. விவிலிய நன்றி செலுத்துதலானது உண்மையாகவே தன்மையாலே கிறிஸ்தவமயமானது. ஆயினும், "இஸ்ராயேலர் நன்றி செலுத்தாமலே புகழ்கின்றனர்" என்று பழைய ஏற்பாட்டில் எழுதியுள்ள அளவிற்கு அது கிறிஸ்தவருக்கு

மட்டுமே உரியதன்று. பழைய ஏற்பாடானது நன்றி செலுத்துதலின் முழுமையை இன்னும் அறியாமலிருக்கிறதெனின், அருளின் முழுமையை அது சுவைக்காமலிருப்பதே அதற்குக் காரணமாகும். மேலும், அதிகத் தன்னியலான, வெளிவடிவமாக்கப்பட்ட போற்றுரையானது, இறை செயல்களுக்கும் அவரது வெளிப்பாட்டிற்கும் அதிக சிந்தனையும் கவனமும் செலுத்துகிற நன்றியறிதலைவிட அதிக இடத்தைக் கொண்டிருக்கிறதென்றால் அதற்குக் காரணம், புனித மிக்க இறைவன் தம்மைப் படிப்படியாகவும் தனது செயலின் பரப்பையும், தனது கொடைகளின் ஆழத்தையும் சிறிது சிறிதாகவும் வெளிப்படுத்துவதேயாகும்.

2. சொல் தொகுதி: விவிலியத்தில் நன்றி செலுத்துதலைக் கண்டுபிடிப்பதென்பது மகிழ்ச்சி (சங் 33:1-3.21), புகழ்ச்சி மற்றும் மகிழ்ச்சி ஆரவாரம் (எஸ் 3:11: சங் 69:30), இறைவனை மகிமைப்படுத்துதல் (சங் 50:23; 86:12) ஆகியவற்றைக் கண்டடைவதாகும். துல்லியமாகக் கூறுவதாயின் நன்றி செலுத்துதல் என்பது குறிப்பிட்ட இறை செயல்களின் பொது அறிக்கையிடுதலாகும். இறைவனைப் புகழ்வதென்பது அவரது பெருமையை விளம்பரப்படுத்துவதாகும். அவருக்கு நன்றி செலுத்துவதென்பது அவர் புரிகின்ற வியத்தகு செயல்களைப் பறைசாற்றி, அவரது செயல்களுக்குச் சான்று பகர்வதாகும். நன்றி செலுத்துதலானது வெளிப்பாட்டுடன் இணைந்து நடைபோடுகிறது. இஃது ஒருவரது இதயத்தில் வெளிப்பாட்டின் எதிரொலியாகும். இவ்வாறாக, இது பெரும்பாலும் நீதிமான்களின் சபையினையோ, அதற்குச் செவிமடுக்கக் கூடியுள்ள மக்களையோ குறிப்பிடுவதையும் (சங் 35:18; 57:10; 109:30), அதில் சேர்ந்து கொள்வதற்கான அழைப்பையும் (சங் 92:2-4; 105:1-2) உள்ளடக்கும்.

இந்த வியந்து பாராட்டும் மற்றும் நன்றியுள்ள அறிக்கையில் உள்ள நுண்ணிய வேறுபாடுகளை எபிரேயத்தில் “தோதா” என்ற சொல் எடுத்துக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் நன்றி செலுத்துதலை உருப்பெறச் செய்யும் மற்றும் எதிர்நோக்கியுள்ள சமய மனப்பான்மையைத் துல்லியமாக மொழிபெயர்க்கவும் பயன்படும் எபிரேயச் சொல் ஆசீரைக் குறிக்கும் “பாராக்கு” என்பதாகும். இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான அத்யாவசிய பரிமாற்றத்தை இது வெளிப்படுத்துகிறது. தனது படைப்பிற்கு வாழ்வையும், உடல் நலத்தையும் அளிக்கின்ற இறைவனுடைய ஆசீருக்கு (உப 30:19; சங் 28:9), அந்த ஆற்றலாலும் அந்தத் தாராளத்தாலும் எழுச்சியடைந்த மனிதன் தன்னைப் படைத்தவருக்கு நன்றி செலுத்தும் ஆசீர் பலவாக அமைகிறது (தானி 3:90; சங் 68:20.27; நெகே 9:5..; 1 நாள் 29:10).

3. **நன்றி செலுத்துதலின் வரலாறு:** நன்றி செலுத்துதலின் உயரிய இலக்கிய வரை முறையானது, குறிப்பாகச் சங்கீதங்களில் காணப்படுகிறது. இறைவனுடைய செயலுக்கு எதிர்செயலாக அது நன்றி செலுத்துதலின் பண்பை நன்றாக வெளிப்படுத்துதலின் பண்பை நன்றாக வெளிப்படுத்துகிறது. பெறப்பட்ட மீட்பினுடைய நன்றியுணர்வின் அறிக்கையானது பின் வரும் மூன்றுபகுதி கொண்ட விவரிப்பாக, சாதாரணமாக விளக்கப்படுகிறது. அனுபவித்த அபாயத்தின் வர்ணனை (சங் 116:3), துயர்மிகுந்த செபம் (சங் 116:4), இறைவனுடைய வியத்தகு தலையீட்டை நினைவுகூர்தல் (சங் 116:6; சங் 30:39; 124). இத்தகைய இலக்கிய நடையானது விவிலியம் முழுவதிலும் ஒரே மாதிரியாகக் காணப்படுகிறது. சங்கீதங்கள், புகழ்ச்சிப் பாடல்கள், மற்றும் இறைவாக்கினரின் பாடல்கள் ஆகியவற்றில் தொடர்ந்து இதே பாரம்பரியச் சொற்றொகுதிகள் பயன்பட்டுள்ளன.

நன்றி செலுத்துதல் ஒன்றாகவே இருப்பதன் காரணம் இறைவனுடைய தனித்துவமிக்க செயலுக்கு அது பதிலுரையாக இருப்பதே ஆகும். ஏறக்குறைய குழம்பிய நிலையில், யாவேயினுடைய ஒவ்வொரு இரக்கச்செயலும்

அதன் செயல்பாட்டில் பெரும் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க நொடியாக எப்போதும் உணரப்படுகிறது. நன்றி செலுத்துதலானது விவிலிய வரலாற்றை நடத்திச் சென்று, இறுதிக்கால நம்பிக்கையில் அதனை நீடிக்கச்செய்கிறது (யாத் 15:18; உப 32:43; சங் 66:8; 96).

நன்றி செலுத்துதலானது, மோசேயின் நன்றிப்பாடல் (யாத் 15:1-12) அல்லது தெபோராவின் நன்றிப்பாடல் (நீதி 5) போன்ற இஸ்ராயேலின் முழு விசுவாசத்தைச் சுருக்கித் தருகின்ற பழமையான இலக்கியப் பகுதிகளை மட்டும் தூண்டுவதாக இருப்பதில்லை. முதல் மரபு மற்றும் இஸ்ராயேலின் முழு வரலாறு ஆகியவற்றின் அடித்தளத்தில், நன்றி செலுத்துதலில் தனது மக்களுக்கான யாவேயின் பெரும் செயல்களைப் பறை சாற்றுகின்ற விசுவாசத்தின் சடங்கு அறிக்கையும் உள்ளது. இவ்வாறு தொடக்கத்திலிருந்தே உண்மையான விசுவாசமானது நன்றி செலுத்துதலில் அறிக்கையிடுதலாகும். இஸ்ராயேலானது இறைவனுடைய தாராளத்தை மேலும் அறிந்துகொள்கின்ற அளவிற்கேற்பு, இந்தப் பாரம்பரியம் தொடர்ந்து விரிவடைகிறது. மேலும், இம்மரபானது. இறைவாக்கு இலக்கியம் (எசா 12:25; 42:10... 63:7...; எரே 20:13) மற்றும் குருகுல இலக்கியம் (1 நாள் 16:8...; 29:10-19; நெகே 9:5-37), பழைய ஏற்பாட்டின் பிற்கால நூல்களின் பெரும் தொகுப்புகள் (தோபி 13:1-8; யூதி 16:1-17; சீரா 51:1-12; தானி 3:26-45. 51-90) முதலிய அனைத்துப் பகுதிகளிலும் தன்னை வெளிப்படுத்தியவாறு செல்கிறது.

III. புதிய ஏற்பாடு: முழுமையான அருளின் வெளிப்பாடு மற்றும் கொடை என்பதன் காரணமாக (யோவா 1:17), ஆண்டவருடைய ஆட்தன்மையில் புதிய ஏற்பாடானது தூய ஆவியில் தந்தைக்கு அளிக்கப்படுகின்ற முழு நிறைவான நன்றி செலுத்துதலின் வெளிப்பாடாகவும் உள்ளது.

1. கிறிஸ்தவச் சொற்றொகுதி: கிறிஸ்தவச் சொற்றொகுதியானது எழுபது நூல்களின் வழியாகப் பழைய ஏற்பாட்டுப் பாரம்பரியத்தைப் பெறுகிறது. நன்றி செலுத்துதலானது அறிக்கையிடுதல் (மத் 11:25; லூக் 2:38; எபி 13:15), புகழுதல் (லூக் 2:13,20; உரோ 5:11), மகிமைப்படுத்துதல் (மத் 5:16; 9:8) மற்றும் எப்போதும் சிறப்பான முறையில் ஆசீர்கூர்தல் (லூக் 1:64,68; 2:28; 1 கொரி 14:16; யாக் 3:9) ஆகியவற்றினின்று பிரிக்கப்பட முடியாததாக உள்ளது. ஆனால், பழைய ஏற்பாட்டில் செயல் அளவில் அறியப்படாத "எயுகரிஸ்தேயோ," "எயுகரிஸ்தியா" என்ற புதிய கிரேக்கச் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் (60 தடவைக்கு மேலாகக்) காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவில் இறைவனால் அளிக்கப்பட்ட அருளுக்குப் பதிலுரையான கிறிஸ்தவ நன்றி செலுத்துதலின் தனித்தன்மையையும் முக்கியத்துவத்தையும் அது காட்டுகிறது. கிறிஸ்தவ நன்றி செலுத்துதலானது நற்கருணையாகும். அதனுடைய முழு நிறைவான வெளிப்பாடானது. தனது திருச்சபைக்கு ஆண்டவரால் அளிக்கப்பட்ட அவருடைய நன்றி செலுத்துதலின் அருட்சாதன நற்கருணையாகும்.

2. ஆண்டவருடைய நன்றி செலுத்துதல்: ஆண்டவருடைய மேலாண்மைமக்க செயலானது நன்றி செலுத்துதலாகும். தன்னுடையவர்களைப் புனிதப்படுத்துவதற்கெனத் தன்னுடைய வாழ்வைத் தந்தைக்கு ஒப்புக்கொடுப்பதில் இயேசு செலுத்திய பலியானது (யோவா 17:19) நமது நற்கருணையாகும். இறுதி இரவுணவிலும், சிலுவையிலும் தனது வாழ்வு மற்றும் மரணத்தினுடைய ஆற்றலை இயேசு வெளிப்படுத்துகிறார். அது மகனுடைய இதயத்திலிருந்து நன்றி செலுத்துதலாகும். தந்தையை முழுமையாக மகிமைப்படுத்துவதற்காக இயேசுவின் பாடுகளும் மரணமும் அவசியமாக இருந்தன (யோவா 17:1). ஆனால் அவருடைய வாழ்வு முழுவதும் இடைவிடாத நன்றி செலுத்துதலாக இருந்தது. விசுவசிப்பதற்கென மனிதரை ஈர்த்து அவருடன் இறைவனுக்கு நன்றியை அளிப்பதற்கென அது

சில சமயங்களில் மாட்சிமை மிக்கதாகவும் வெளிப்படையானதாகவும் அமைந்துள்ளது (யோவா 11:42). இந்த நன்றி செலுத்துதலின் முக்கிய பொருள், குறிப்பிடத்தக்க வகையில் புதுமைகளால் வெளிப்படுத்தப்பட்டதாகவும் (யோவா 6:11; 11:41-43), மனிதருக்கு இறைவன் அளித்த அவரது வார்த்தையாகிய கொடையாகவும் உள்ள (மத் 11:25-27) மெசியா நிறைவேறுதலாகிய இறைவனின் செயலாகும்.

3. **சீடர்களின் நன்றி செலுத்துதல்:** திருச்சபைக்கான நற்கருணையின் கொடையானது ஒரு முக்கிய உண்மையை வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து மட்டுமே நமது போற்றுரையாக இருப்பதுபோல், அவர் மட்டுமே நமது நன்றி செலுத்துதலாகவும் உள்ளார். தந்தைக்கு முதலில் நன்றி செலுத்துபவர் அவரே. அவருக்குப்பின்னர்க் கிறிஸ்தவர்கள் அவரில் நன்றி செலுத்துகின்றனர். "இவர் வழியாக இவரோடு, இவரில்..." நன்றி செலுத்துதலில் கிறிஸ்து மட்டுமே ஒரே மாதிரியாகவும் ஒரே இடையாளராகவும் உள்ளார் (உரோ 1:8; 7:25; 1 தெச 5:18; எபே 5:29; கொலோ 3:17).

தாங்கள் பெற்ற கொடையை உணர்ந்தவர்களாயும் தலைவரின் எடுத்துக்காட்டினால் ஆட்கொள்ளப்பட்டவர் களாயும் முதல் கிறிஸ்தவர்கள் நன்றி செலுத்துதலைத் தங்களுடைய புதிதாய்க் கண்டடைந்த வாழ்வின் பாவு நூலாகவும் ஊடிழையாகவும் அமைத்தனர். இத்தகைய வெளிப்பாடுகளின் எண்ணிக்கையின் மிகுதி வியப்பூட்டவல்லது. பழைய ஏற்பாட்டின் சில நன்றிக் கீதங்களைப் போன்று, நிகழ்ச்சிகளின் மீதான நீடித்த சமய சிந்தனையால் தூண்டப்படுகின்ற லூக் 1 மற்றும் 2-இன் நன்றிக்கீதங்களும் உள்ளன. அப்போஸ்தலர்கள் மற்றும் முதல் சமுதாயத்தவர்களுடைய நன்றி செலுத்துதலின் பிரதிபலிப்புகளும் உள்ளன (அ.ப. 28:15; 5:41; 21:20;உரோ 7:25; 2 கொரி 1:11; எபே 5:20 கொலோ 3:17; 1 தெச 5:18). பவுலின் இடைவிடாத நன்றி செலுத்துதலின் நினைவுகூர்தலாக உள்ள சிறந்த பகுதிகளும் உள்ளன (1 கொரி 1:4; பிலி 1:3; கொலோ 1:3; 1 தெச 1:2; 2:13; 2 தெச 1:3). இவை சிலநேரங்களில் ஆசீர் கூர்தலின் உன்னத வடிவையும் கொண்டுள்ளன (2 கொரி 1:3; எபே 1:3). பவுலைப் பொருத்தமட்டும் முழுக் கிறிஸ்தவ வாழ்வும், முழுத் திருச்சபை வாழ்வும் வேண்டுதல் மற்றும் நன்றி செலுத்துதலின் இடைவிடா இணைப்பில் போர்த்தப்பட்டுத் தொடர்ந்து நடைபெறுகிறது (1 தெச 3:9-10; 5:17-18; உரோ 1:8-10). எல்லாவித நிகழ்வுகள் மற்றும் அடையாளங்கள் மூலமான நன்றி செலுத்துதலின் பொருளும் ஒரே விதமாகவே உள்ளது. திருச்சபை முழுவதும் பரவியுள்ள இறை அரசு, நற்செய்தியின் வருகை, கிறிஸ்துவின் மறைபொருள், மீட்பின் பலன் ஆகியவையாகும். இவை எபேசியருக்கான திருமுகத்தின் பெரும் நன்றி செலுத்துதலில் நிறைவாக அமைந்துள்ளன (எபே 1:3-14).

திருவெளிப்பாடானது இந்த நன்றி செலுத்துதலை முடிவில்லா வாழ்வின் பரிமாணங்களுக்கு விரிவுபடுத்துகிறது. மெசியா பணி நிறைவேறிய நிலையில், விண்ணக எருசலேமில் நன்றி செலுத்துதலானது மகிமையின் தூய புகழ்ச்சியாகவும், இறைவனுடைய மற்றும் அவருடைய முடிவில்லா வியத்தகு செயல்களினுடைய ஒளிரும் சிந்தனையாகவும் உருவாகிறது (திருவெளி 4:9-11; 11:16-17; 15:3-4; 19:1-8).

நன்றிப் பலி (THANK OFFERING)

அடைந்த நன்மைகளுக்காகச் செய்யப்பட்ட நேர்ச்சைப்பலி இயல்பாகவே நன்றிக் கடனாகச் செலுத்தப்பட்ட நன்றிப்பலியாக மாறியது (காண். லேவி 7:12-13.15; 22:29; 2 நாள் 33:16; சங் 50:14.23; 107:22; 116:17; எரே 17:26). இரண்டு பலிகளும் கருத்தளவில் வேறுபட்டவை. ஏனெனில், நன்றிப்பலி எந்த முன் நேர்ச்சியையும் குறிப்பதில்லை. மேலும், லேவி 7:15 தொ-இல்

நன்றிப்பலி ஒப்புக்கொடுப்போர் உணவாக உண்ணும் வகையைச் சேர்ந்தது. ஆகவே சிலவற்றிலாவது, வெற்றிகரமாக ஒரு காரியத்தைக் கொண்டாடச் செய்யப்பட்ட விருந்தில் இது தோன்றியிருக்க வேண்டும். பிற்காலத்தில்தான் பெற்ற இறை நன்மையை வெளிப்படுத்தும் கருத்தோடு இஃது இணைந்திருக்க வேண்டும். சில சமயங்களில் இது சுதந்திரமாகவோ, நேர்ச்சையாகவோ சமாதானப்பலியை உணர்த்திற்று (சங் 56:12-13; காண். சங் 50:14; 54:6-7; 116:14. 17:18). மற்றச் சமயங்களில் சமாதானப் பலியின் ஒரு தனிப்பட்ட வகையை உணர்த்திற்று (லேவி 7:12-14).

நன்னார் (NANNAR - ஒளி அளிப்பவர்)

சுமேரியரின் சந்திர கடவுளுக்கான சிறப்புப் பெயர் இது சீன் எனப்படும் இக்கடவுளைத் தென் மெசபொத்தாமியாவில் சந்திர வழிபாட்டுக்குப் பெயர்பெற்ற "ஊர்" எனுமிடத்தில் இப்பெயரால்தான் மக்கள் வழிபட்டனர்.

நா

நா (TONGUE)

1. தன் உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டு, உறவை வளர்த்துக்கொள்ள தன் நாவைப் பயன்படுத்துகிறான் மனிதன். இதயத்தில் ஊறிவரும் உணர்வுகளை இறைவன் திருமுன்படைப்பதற்கும் நா பயன்படுகின்றது. இவ்வாறு தம் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்குச் சிலருக்கு நா எழாமற் போகலாம்; அஃது இறைவன் வழங்கும் தண்டனையாக அமையலாம் (லூக் 1:20; சங் 137:6). இறைவனின் பெருமைகளைப் பாடும்படி ஊமைகளின் நாவு கட்டவிழ்த்து விடப்படலாம் (லூக் 1:64); இது மெசியாவின் சிறப்புப்பணி யாகும் (எசா 35:6; மாற் 7:33-37).

2. **நாவினால் விளைவும் நற்பயனும் தீவினையும்:** "வாழ்வதும் நாவாலே,சாவதும் நாவாலே"(பழ 18:21). பழமைமிக்க இக்கருத்து ஞானிகளின் வாக்குகளில் எதிரொலிக்கின்றது (பழ, சங், சீரா). யாக்கோபும் இதை வலியுறுத்துகிறார்; "பரம தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவதும் அந்நாவாலே; கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதனைக் தூற்றுவதும் அந்நாவாலே" (யாக் 3:9). பொய், ஏமாற்று, இரண்டகம், பழிச்சொல், அவதூறு ஆகியவை தீய நாவினால் விளைகின்றன (சங் 11:2; சீரா 51:2-6). தீய நா ஒரு நச்சுப்பாம்பு (சங் 140:3); கூர்மையானவாள் (57:5); தீட்டிய கத்தி (52:2); கொல்லும் அம்பு (எரே 9:7; 18:18). தன் நாவைக்காக்கிறவன் இடுக்கண்ணிலிருந்து தன் ஆன்மாவையே காத்துக்கொள்கிறான் (பழ 21:23). யாக்கோபு நாவைக் கப்பலின் சுக்கானுக்கு ஒப்பிடுகிறார் (யாக் 3:4-5). நாவால் மனிதன் நீதியை, உண்மையைப் போதிக்க வேண்டும். எனவே,அது மிகச் சிறந்த சக்தி கொண்டதாகக் கருதப்படுகிறது (சங் 37:30). மனிதன் நாவினால் நெறி பிறழ்ந்தும் வாழக்கூடும்.சான்றாக, தன்னைத்தானே பெருமையாகப் பேசிக்கொள்ள முடியும் (சங் 12:4); பிறருடைய நற்பெயரைக் கெடுக்க முடியும் (பழ 25:23); ஏமாற்ற முடியும் (சங் 109:2; 120:2). கடவுளைப் போற்றவே நா அமைந்துள்ளது (சங்35:28; 51:14; 70:24; உரோ 14:11; பிலி 2:11). சில சமயங்களில் நமது நா நம்மைக் கடவுளிடமிருந்து பிரித்து விடவும் கூடும் (யோபு 15:4-5). நாவினை நன்மைக்கும் தீமைக்கும் பயன்படுத்தப்படலாம் (யாக் 3:9). "தம் நாவால் பாவம் செய்யாதோர் யார்?" (சீரா19:17) என்ற வினாவிற்குப் பதில் என்ன? "தன் நாவினால் தவறாதவன் பேறு பெற்றோன்" (25:7-8) என்ற நம்பிக்கைதான். மற்றொரு நம்பிக்கையும் எதிரொலிக்கின்றது; "யாவேயின் நாளில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் "வஞ்சகப்பேச்சு" இராது (செப் 3:13).

இந்த நம்பிக்கை வீணானது அன்று, நெறிபிறழாது நீதியின் வழி நடப்போரின் நாவைப் புடம்போட்ட வெள்ளிக்கு ஒப்பிடலாம் (பழ 10:20).அந்த நா இறைவனின் நீதியை எடுத்துரைக்கும்; அவரது புகழை என்றும் பாடிப்பரவும் (சங் 35:28; 45:2); ஆண்டவரின் அளவற்ற ஆற்றலைப் பறைசாற்றும் (எசா 45:24).இதயத்தின் எதிரொலியாய் மொழி அமைகின்றது; எனவே, உள்ளத்திற்கும் உதட்டிற்கும் ஒற்றுமை வேண்டும்; சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் வேண்டும். "நம் அன்பு சொல்லிலும், பேச்சிலும் இராமல், செயலில் விளங்கும் உண்மையான அன்பாய் இருக்கட்டும்" (1 யோவா 3:18; காண். யாக் 1:26).

3. **மொழிகள் பலவிதம்:** உலகில் ஒவ்வொரு இனத்தவருக்கும் ஒரு மொழி உண்டு. ஒவ்வொரு மொழியினருக்கும் ஒரு தனிப்பண்பாடு உண்டு. இது, மனிதன் தேடிப்பெற்ற அறிவுச் செல்வத்தின் சிறப்பைக் காட்டவில்லை. மாறாக மனிதன் செய்த பாவத்தின் தீவினையைச் சுட்டிக்காட்டுகிறது.

ஏனெனில் ஒருவர் ஒருவரைச் புரிந்துகொள்ள இயலாதவாறு இந்த மொழிகள் தடைச்சுவராய் அமைந்துள்ளன. உலகில் நிலவும் பல்வேறு மொழிகளுக்குச் சமய அடிப்படையில் விளக்கம் கொடுக்கிறது- பாபேல் கோபுரம் (ஆதி 11). அதாவது, மனிதன் இறைவனைப் புறக்கணித்து ஒரு கோபுரத்தைக் கட்டிஎழுப்ப இறுமாப்புடன் முனைகிறான். அப்போது ஒருவன் பேசுவது மற்றவனுக்குப் புரியாதவாறு மொழிக்குழப்பம் ஏற்படுகின்றது. ஆனால் மனிதர்களைப் பிரித்த இந்த மொழி என்னும் தடையைத் தகர்த்தெறிகின்றது- பெந்தகோஸ்தே நிகழ்ச்சி (அ.ப. 2:1-13). தீ நாவின் வடிவிலே தூய ஆவியானவர் அப்போஸ்தலர்மீது எழுந்து வருகின்றார். அதன் விளைவாக, ஆண்டவர் அருளிய நற்செய்தியை எல்லா இனத்தவரும் தங்கள் மொழியிலே புரிந்துகொள்கின்றனர். ஆவியானவருக்கு ஒரு தனி மொழி உண்டு. அதுதான் அன்பு என்னும் தேன்மொழி. அந்த மொழியின் வழியாகத்தான் உலக இனத்தவர் அனைவரும் ஒப்புரவாக முடியும், ஒன்றுபடமுடியும். ஆவியார் அருளால் அப்போஸ்தலர்கள் பன்மொழிக் கொடையைப் பெறுகின்றனர். அந்த அருட்கொடையினால் அவர்கள் பேருவகையுடன் தேவனின் திருப்புகழைத் தொழுதேத்துகின்றனர் (அ.ப. 2:4; 10:46); அதே கொடையினால், ஆண்டவரின் அரும் பெரும் செயல்கள் அறிவித்து இறைவாக்கு உரைக்கின்றனர் (2:6.11; 19:6). இளந்திருச்சபையில் பரவசப்பேச்சுக் கொடையை ஒரு வரையறைக்குள் கொண்டுவர விரும்புகிறார் பவுல். அவர் பரவசப் பேச்சைப் பாராட்டுகிறார்; ஆனால், இறைவாக்கு வரத்தின் உறுபயன்கருதி, அதையே நாடுகிறார் (1 கொரி 14:15). பெந்தகோஸ்தே நிகழ்ச்சி நமக்குப் பல உண்மைகளை உணர்த்துகிறது. தொடக்கத்திலிருந்தே திருச்சபை பொதுமைப் பண்பைப் போற்றி வளர்க்கின்றது; பல்வேறு மொழியினருக்கும் நற்செய்தியை அறிவிக்கின்றது; இறைவனின் புகழ்பாடுவதற்கு அவர்களை ஒன்றிக்கின்றது (காண். எசா 66:18; திருவெளி 5:9; 7:9...). இவ்வாறு 'இயேசு ஆண்டவர்' என்று தந்தையாகிய கடவுளுடைய மகிமைக்காக எல்லா நாவுமே அறிக்கையிடும் (பிலி 2:11).

நாகசு (NAHASH - பாம்பு)

1. அம்மோனியர்களின் அரசனான நாகசு,யாபேசு - கிலயாதை எதிர்த்துப் போரிடத் தொடங்கினான். சவுல் இந்த அம்மோனியரைத் தோற்கடித்து, அதன்மூலம், தாம் இஸ்ராயேல் மக்களுக்கு அரசனாகும் தகுதி உள்ளவர் என எண்பித்தார் (1 சாமு 11:1-11).புகழை விரும்பிய நாகசு,யாபேசு - கிலயாது மக்கள் உதவி வேண்டி, பிற இஸ்ராயேல் இனத்தாரிடம் ஆள் அனுப்ப அனுமதித்தான்; இஸ்ராயேல் மக்களின் படைபலத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர்களிடம் பெரும் தோல்வி அடைந்தான். பிற்காலத்தில் சவுலுக்கு எதிராக தாவீதும்,நாகசும் நண்பராயினர் (2 சாமு 10:2). நாசுசுக்குப்பின் அவன் புதல்வர்கள் ஆனூனும் (2 சாமு 10:1), சோபியும் (17:27) அம்மோனியரை ஆட்சி செய்தனர்.இவர்களுள் சோபி தாவீதின் அரசப் பிரதிநிதியாகப் பணியாற்றினான்.

2. இரண்டாம் சாமுவேல் ஆகமம், "அபிகால் யோவாபின் தாயும் செரூயாவின் சகோதரியுமான நாகசின் மகள்," அப்சலோம் புதிதாக நியமித்திருந்த அமாசாவின் தாய் எனக் கூறுகிறது (2 சாமு 17:25). செரூயாவும் அபிகாயிலும் தாவீதின் சகோதரிகள் என்று 1 நாள் 2:16 கூறுகிறது.ஆகவே, தாவீதின் தந்தையான ஈசாயின் புதல்விகளாவர். ஆனால் நாகசு - தாவீதின் தந்தையன்று. ஆகவே, அறிஞரின் கருத்துப்படி நாகசு -செரூயா மற்றும் அபிகாயிலின் தாயாக இருக்க வேண்டும்; அல்லது ஈசாயின் மனைவியினுடைய முந்தைய கணவராக இருக்க வேண்டும்.

நாகத்து (NAHATH - இறக்கம், ஓய்வு, தூய்மையான,தெளிவான)

1. ஓர் ஏதோமிய இனத்தலைவர். ரெயுவேலின் மகன் (ஆதி 36:13.17; 1 நாள் 1:37).

2. ஒரு லேவியர். கோகாத்திய எல்கனாவின் பேரன் (1 நாள் 6:26). இவர் 1 நாள் 6:34-இல் தோவாகு என்றும், 1 சாமு 1:1-இல் தோகூ என்றும் அழைக்கப்படுகிறார்.

3. ஆலய வரிகளை மேற்பார்க்க எசேக்கியாவால் நியமிக்கப்பட்ட, முக்கிய அதிகாரிகளுக்கு உதவி செய்ய அரசனால் நியமிக்கப்பட்ட ஒரு லேவியர் (2 நாள் 31:13).

நாகரிகமற்றவன், மிலேச்சன் (BARBARIAN)

கிரேக்கமொழி தெரியாத,கிரேக்கன் அல்லாதோன் நாகரிகமற்றவன் என்று அழைக்கப்பட்டான். தொடக்க காலத்தில் பிறமொழிகளின் ஒலிகளை இழிவுபடுத்துவதன் அடையாளமாக, அவைகளை நாகரிகமற்ற என்ற அடைமொழியோடு குறிப்பிட்டார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இது கிரேக்கர் அல்லா தோரைக் குறிக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டது (அ.ப. 28:2; உரோ 1:14;1 கொரி 14:11; கொலோ 3:11).

நாகாய் (NAGGAI)

இவர் இறைமகன் இயேசுவின் மூதாதையர் (லூக் 3:25). இவரைப்பற்றி வேறெதுவும் தெரியவில்லை.

நாகூம்(NAHUM – ஆறுதல், இரக்கம்)

1. சிறிய இறைவாக்கினர்கள் பன்னிருவருள் ஒருவர். இவரது வாக்குகளை நாகூம் நூலில் காணலாம். இவர் தென்யூதாவிலுள்ள எல்கோசு என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் (நாகூ 1:1).

2. இயேசுவின் முன்னோர் பட்டியலில் குறிக்கப்படுபவரில் ஒருவர். எஸ்லியின் மகன் (லூக் 3:25).

நாகூம் இறைவாக்கு நூல் (NAHUM, BOOK OF)

1. பெயரும் வாழ்க்கை வரலாறும்:

“ஆண்டவர் நல்லவர்.... அவரிடம் அடைக்கலம் புகுந்தோரை, அவர் அறிவார்; தம் எதிரிகளை.... முற்றிலும் அழித்து விடுவார்; தம் பகைவர்களை இருளுக்குள் விரட்டி அடிப்பார்" (நாகூர் 1:7-8) என்ற கருத்தினை இந்நூல் விளக்குகிறது.

நாகூம் என்ற சொல் "நாகூமியாஹ்" (nahumyah) என்ற சொல்லின் சுருக்கமாகும். "யாவே ஆறுதல் அளிக்கிறார்" அல்லது, "யாவேயின் ஆறுதல்" என்று அதற்குப் பொருளாகும். இவர் எல்கோசு என்ற ஊரைச் சேர்ந்தவர் என்பது தவிர வேறு ஒன்றும் இவரைப் பற்றித் தெரியாது. இவ்விடத்தை அடையாளம் காட்ட மூன்று பாரம்பரியங்கள் முயன்றுள்ளன. முதல் பாரம்பரியம்-நினிவேயின் அழிவின் விளைவான, மண் குன்றுகளுக்கு அருகிலுள்ள நகரமான மோசுல் என்ற நகரத்துக்கு 27 மைல் தூரத்திலுள்ள, ஈராக்கைச் சேர்ந்த இக்கால ஏல்குய்தான் நூலில் குறிக்கப்படும் எல்கோசு என்று கூறும். அங்கே நாகூமின் கல்லறை இருப்பதாகக் காண்பிப்பார்.இப்பாரம்பரியம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து வருகிறது. இது சரியென்றால் சமாரியாவின் வீழ்ச்சிக்குப்பின் கி.மு. 728-21-இல் நாடு கடத்தப்பட்டவர்களில் ஒருவராக நாகூம் இருக்க வேண்டும். மற்றொரு பாரம்பரியத்தில் (எரோனிமூவின் கருத்துப்படி கி.பி. 4-நூற்) நாகூம் கலிலேயாவைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார், இப்பாரம்பரியம் சரியென்றால், அசீரியர்களால் இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டபின், வடவரசில் விடப்பட்டவர்களின் வழித்தோன்றலாக இவர் இருக்கவேண்டும். மேலும் ஒரு பாரம்பரியப்படி, நாகூம் யூதேயாவின் தென்மேற்குப் பகுதியிலிருந்த எல்கோசைச் சேர்ந்தவராவர். இதற்கு, இவர் யூதாவின்மேல் காட்டும் அக்கறையைச் சான்றாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவர். இப்பாரம்பரியம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து வருகிறது. இப்பாரம்பரியங்களில் எதற்கும் போதிய சான்றுகள் இல்லை. ஆயினும் நாகூம் யூதாவைச் சேர்ந்தவர் என்று பொதுவாக ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர்.

இவரது நூலிலிருந்து - இவர் நாட்டுப் பற்றுடையவர்; ஓரளவு நாட்டு ஆவேசம் மிக்கவர் எனத் தெரிகிறது. இந்நூலில் அமைந்த இறைவாக்கின் தொனி-இவர் எருசலேம் ஆலயத்தோடு தொடர்புடைய இறைவாக்கினராக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது.

2. வரலாற்றுப்பின்னணி: வடக்கு அரசான இஸ்ராயேலின் அரசனான ஆகாபு அசீரிய எதிர்ப்பாளர் கூட்டணியில் சேர்ந்து கி.மு. 854-இல் மூன்றாம் சல்மனேசரோடு போரிட்டான். அக்காலம் முதல் அசீரிய ஆபத்து யூதாவை அச்சுறுத்திக் கொண்டேயிருந்தது. சில ஆண்டுகளுக்குப்பின் இஸ்ராயேலின் அரசன் ஏகூ அசீரியாவுக்குக் கப்பம்கட்டத் தொடங்கினான். அதற்குப் பின் இஸ்ராயேல், யூதாவைச் சேர்ந்த அரசர்கள், கப்பம் கட்டி வந்தனர். கி.மு. 721-இல் 2-ஆம் சார்கோன் வடவரசை முழுவதும் அழித்து, பல்லாயிரக்கணக்கானவரை நாடு கடத்தினான்; யூதாவின் பெரும்பகுதிகளை அழித்தான். சனகெரிபு திடீரென்று பின்வாங்கியதால், எருசலேம் தப்பியது. மனாசேயின் நீண்ட ஆட்சிக்காலம் முழுவதும், அவன் அசீரியர்களுக்குக் கப்பம் கட்டி அடிமையாக இருந்தான். இக்காலத்தில் அசீரிய மன்னன் ஏசர்கத்தோன் எகிப்தில் புகுந்து கி.மு. 671-இல் மெம்பிசைக் கைப்பற்றினான். அவனது மகன் அசூர்பானிப் பால், தென் எகிப்தை வென்று, அதன் தலைநகரான தெபேசை, கி.மு. 663-இல் அழித்தான் (நாகூ 3:8). அவன் காலத்தில், அசீரியா அதன் உச்ச நிலையை அடைந்தது எனலாம். அவனது தலைநகரான நினிவேக்கு இணையான நகரை, அக்கால உலகில் காண முடியாது. அங்கு ஓர் அரிய நூல் நிலையத்தை அமைத்தான். அசீரிய அரசர்களும், தளபதிகளும் அதிகார வெறியாலும், மகிமை அடையவேண்டும் என்ற பேராசையாலும், தங்களால் ஆள முடியாத அளவிற்கு அரசை விரிவாக்கி விட்டனர். அவர்கள் வெற்றிகொண்ட நாடுகளில் இழைத்த கொடுமைகளுக்கு அளவேயில்லை. ஆகையால், எல்லோராலும் வெறுக்கப்பட்டனர். பிற நாடுகள் அவர்களது கொடுமைகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய, சாதகமான வாய்ப்பை எதிர் பார்த்துக்கொண்டிருந்தன. அவ்வாய்ப்புக் கிட்டியபோது, அதைப்பயன்படுத்தத் தவறவில்லை.

அசூர்பானிப்பாலின் சகோதரனான சமாஸ்-சும்-உகின் கி.மு. 652-இல் கிளர்ச்சி செய்து உள்நாட்டுப் போரைத் தொடங்கினான். இதை அடக்க ஆறு ஆண்டுகளாயின. இந்த நீண்ட போராட்டம், அரசைப் பலவீனப்படுத்தியது. அதன்பின் அசூர்பானிப்பாலின் மகன் சின்சரிஸ்குன் அரசனானான். கி.மு. 626-இல் நினிவேயை மேதியர்கள் தாக்க முற்பட்டனர். ஆனால் சித்தியர்களின் இடையீட்டால் இது வெற்றி அடையவில்லை. முதலில் எகிப்து விடுதலை பெற்றது. அசீரியப் பேரரசுக்குப் பெரிய ஆபத்து பாபிலோனிலிருந்து வந்தது. அசீரியச் சேனையின் தளபதிகளில் ஒருவனான நபோபோலாசர் கிளர்ச்சி செய்து கி.மு. 626-இல் பாபிலோனில் சுதந்தர அரசன்ஆனான். இவன் கி.மு. 616-இல், பல நூற்றாண்டுகளாக அசீரியப் பேரரசைச் சேர்ந்த, மத்திய யூப்பிரத்தீசு பகுதியைக் கைப்பற்றினான். கி.மு. 615-இல் இவன் அசூரைக் கைப்பற்ற முயன்றான்; ஆனால் வெற்றி பெறவில்லை. கி.மு. 614-இல் மேதியர்களும், பாபிலோனியர்களும் கூட்டணியாக அசூரைத் தாக்கி, அதைத்தரைமட்டமாக்கினர். அதன்பின் நினிவேயை நோக்கிப் படையெடுத்தனர். இவர்களோடு சித்தியரும் சேர்ந்து கி.மு. 612-இல் நினிவேயைத் தாக்கினர். அசீரியப்படை காரானுக்குத் தப்பி ஓடியது. நினிவேயின் அரண்மனைகளும், கோவில்களும் அழிக்கப்பட்டன. மன்னன் சின்சரிஸ்குன் கொல்லப்பட்டான். இவ்வாறு, செப்பனியா இறைவாக்குரைத்த சிறிது காலத்திற்குள்ளே, நினிவே "வறண்ட பாலை நிலமாயிற்று" (செப் 2:13). செப்பனியாவின் ஒரு சிறிய இறைவாக்கு

நாகூமின் இறைவாக்கு, நூலாக, வடிவெடுக்கிறது. காரானில் அசூர்பல்லித்து என்பவன்அரசனாகி அசீரிய அரசை நிலைநிறுத்த முயன்றான். இம்முயற்சியும் கி.மு. 610-இல் பாபிலோனியராலும் சித்தியர்களாலும் தோற்கடிக்கப்பட்டது. அசூர் பல்லித்து கர்கமிசுக்கு ஓடிப்போனான். அங்கே எகிப்தியர் அவனுக்கு உதவிபுரிய வந்தனர். இருவரையும் கி.மு. 605-இல் பாபிலோனியர் தோற்கடித்து, அசீரிய அரசை அழித்தனர். இவ்வாறு, பல நூற்றாண்டுகளாக வெல்ல முடியாதவாறு வலுப்பெற்றிருந்த அசீரியப் பேரரசு, வியத்தகு வகையில் விரைவில் சிதைந்து போயிற்று.

3. நினிவேயின்நிலை:- தொல்பொருள் அகழ்வும் ஆய்வும்:

சனகெரிபுவின் காலத்திலிருந்து நினிவே அசீரியப் பேரரசின் தலைநகராக இருந்தது. அசூர்பானிப்பாலின் காலத்தில், உன்னத நிலையை அடைந்தது. சிறந்த நூல் நிலையத்தைக் கொண்டிருந்தது. அதன் இன்றைய நிலை என்ன? திக்ரீசு நதிக்கரையிலுள்ள மோசுல் நகருக்கு எதிராக அந்நதியின் அக்கரையிலுள்ள இரு பெரும் மண் மேடுகளும் 8 மைல் சுற்றளவுள்ள சிதை பொருள்களும்தான் - நினிவேயின் இன்றைய நிலையாகும். இவ்வாறு, செப்பனியா முன்னறிவித்தபடி, நினிவே வறண்ட பாலை ஆயிற்று.

இந்த மண்மேடுகளில் ஒன்று குயுண்டிக் **(Quyundig)** என்றழைக்கப்படுகிறது. இதை, கி.பி. 1922-32-இல் கவனமாய்த் தோண்டி ஆராய்ந்தனர். புதைபொருள் அகழ்வுகள் கோவில்களையும் அரண்மனைகளையும் காட்டுகின்றன. இவற்றில் சிறப்பானவை அசூர்பானிப்பாலின் கோவில், சனகெரிபின் அரண்மனை, இஸ்தாரின் பழங்காலக் கோவில் ஆகியவையாகும். நினிவேயில் இஸ்தாரின் வழிபாடு, அக்கேடியன் காலம் வரை (கி.மு. 2500-2300) பின்செல்கிறது.

இஸ்தர் போர், காதல் ஆகியவற்றிற்குரிய தேவதையாகும். அசீரியர்கள் இதை ஒரு போர்க்கடவுளாக வழிபட்டனர். இஃது அவர்களது வரலாற்றுக்கு ஏற்ற அடையாளமே. மண்மேட்டின் நடுவில் கோவில் இருந்திருக்கிறது. நாகூம் நினிவேயின் எழுத்தர்களைப்பற்றிக் (அரச அலுவர்; நாகூ 3:17) குறிப்பிடுகிறார். அசூர்பானிப்பாலின் நூல் நிலையம் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இது களிமண்ணால் செய்யப்பட்டு,வரையப்பட்ட ஆயிரக்கணக்கான தகடுகளைக் கொண்டுள்ளது. இவை நமக்கு 26 நூற்றாண்டுகளுக்கு முந்திய அசீரியப் பண்பாட்டை விவரிக்கின்றன.

மற்றொரு மண்மேடு "நெபியூனுஸ்" (இறைவாக்கினர் யோனாஸ்) என்று அழைக்கப்படுகிறது. இதை ஒட்டியிருக்கும் மசூதியும், கல்லறை நிலமும், கிராமமும் இம்மண்மேடு அகழ்ந்து எடுக்கப்படுவதைத் தடுத்து விட்டன. இது, முதல் மண்மேட்டில் பாதி அளவுதான் உடையது.

4. நூல் எப்போது எழுதப்பட்டது?: நினிவேயின் அழிவாகிய வரலாற்றுத்திருப்ப நிகழ்ச்சியை நாகூம் திருநூல் விவரிக்கிறது. நாகூம், கி.மு. 633-க்கு முன், இந்த இறைவாக்கை உரைத்திருக்க முடியாது; ஏனெனில் தெபேசின் (நோ-ஆமோன்) வீழ்ச்சியைப்பற்றி 3:8-10-இல் குறிக்கிறார். இதற்குப் பிறகுதான் அவர்தம் பணியைச் செய்திருக்க வேண்டும். நினிவேயின் வீழ்ச்சியை அவர் விரிவாக, உயிர்ச்சித்திரமாக விவரிக்கிறார் (3:18-19). ஆகவே, நினிவேயின் அழிவுக்குப் பிறகுதான் (கி.மு. 612) இந்நூலை எழுதினார் என்று ஆய்வாளர்கள் சிலர் கூறுவர். ஆனால், சில பகுதிகள் நகரின் அழிவு உடனடியாக வருவதாகக் காட்டுகின்றன (3:12-13). நூல் முழுவதும் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுகின்றது.அசீரியர்கள் பயன்படுத்திய போர் பற்றிய விறுவிறுப்பான விவரிப்பும், அசீரிய வாழ்க்கை முறை பற்றிய அறிவும், சில நூற்றாண்டுகளாக அவர்களிடம் அவதியுற்ற

மக்களுக்குச் சாதாரண அறிவாகும். இவற்றையும் தமது கற்பனையையும் பயன்படுத்தி, சிறியதொரு காவியம் படைத்துள்ளார். மேலும், அசீரியர்களுக்கு அடுத்த பேரரசாக வந்த பாபிலோனியர்களும் கொடுமை மிக்கவர்களே. ஆனால், நூலில் இதுபற்றிக் குறிப்பு ஒன்றுமில்லை. நினிவேயின் வீழ்ச்சிக்குப்பின் நூல் எழுதப்பட்டிருந்தால் இஃது அவசியமாகக் குறிக்கப்பட்டிருக்கும். ஆகையால், இந்நூல் நினிவேயின் வீழ்ச்சிக்குச் (கி.மு. 612) சிறிதுமுன் எழுதப்பட்டிருக்க வேண்டும். 3:18-19 போன்ற பகுதிகள் பிற்காலத்தில் நாகூமின் சீடர்களால் சேர்க்கப்பட்டிருக்கலாம். இவற்றையெல்லாம் சிந்திக்குங்கால் நாகூம், கி.மு. 626-612-க்கு இடைப்பட்ட காலத்தில் போதித்திருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம்.

5. **நூலின் திட்டம்:**

1.ஆண்டவரின் சினம்: தீர்ப்பின் ஆண்டவரது இறைத்தோற்றம் (1:1-8).

1:1 தலைப்பு

1:2-6-இறையாற்றலின் வெளிப்பாடு.

1:7-8-இறை நீதியின் வெளிப்பாடு.

II. யூதா அசீரியாவைப் பற்றிய இறைவாக்குகள்: ஆசீரும் கேடும் (1:9-2:3).

1:9-10. 12:13; 2:1-யூதாவுக்கு ஆறுதலும், ஆசீரும்.

1:11.14-அசீரியாவுக்குக் கேடு.

III. நினிவேயின் வீழ்ச்சி (2:2-3:19):

அ. நினிவே தாக்கப்படுகிறு (2:2-14).

2:2-11 நினிவேயின் மேல் படையெடுப்பு.

2:12-14-அசீரியாவின் சிங்கம் அச்சுறுத்தப்படுகிறது.

ஆ. நினிவேயின் குற்றங்களே அதை வீழ்ச்சியுறச் செய்தன (3:1-19).

3:1-4-நினிவேயின் நிலை.

3:5-7-யாவேயின் தீர்ப்பு.

3:8-11-தெபேசு - ஓர் எடுத்துக்காட்டு.

3:12-15- நினிவேயின் பாதுகாப்பு வீண்.

3:15-17-வெட்டுக்கிளிகள் கூட்டம்.

3:18-19-நினிவேயின் மேல் இரங்கற் பாடல்.

6. இலக்கியச்சிறப்பு: நினிவேயின் அழிவை விவரிப்பதில், நாகூம் காட்டும் ஆற்றல், இவரை இஸ்ராயேலின் பெரும் புலவர்களில் ஒருவராகக் காட்டுகிறது. நினிவேயின் வீழ்ச்சி பற்றிய விவரிப்புக்கு, முன்னுரையான முதல் அதிகாரமும், அதே புலமையைக் காட்டுகிறது. இதை ஆசிரியர் தான் எழுதினாரா என்று ஐயுற வேண்டியதில்லை. கொடுமைப்படுத்துவோரின் பேரழிவுபற்றிச் சிறிதும் அனுதாபம் இன்றியும் மனிதத்தன்மை இன்றியும் பெருமைப்பட்டுக் கொக்கரிப்பதாக இப்பகுதி தோன்றுகிறது. இதுவும், ஆசிரியரின் பொருத்தமான உருவகங்களும், உயிர்ச்சித்திரமான விவரிப்பும், மொழியின் சிறப்பும், துடிப்பும், நூலில் ஆசிரியரது ஆவேசமான உணர்ச்சி வசப்பட்ட நாட்டுப்பற்றை நன்கு காட்டுகின்றன.

நாகூமின் கவிப்புலமை, பழைய ஏற்பாட்டிலேயே மிகச்சிறந்த பகுதிகளைச் சேர்ந்ததாகும். அவரது உருவகங்களின் உயிர்ச்சித்திரத் தன்மையை மிஞ்சமுடியாது. நினிவேயைக் கைப்பற்ற நடந்த போர் பற்றிய விவரிப்பு கவனத்தை ஈர்க்க வல்லது; சிலிர்ப்பூட்ட வல்லது; நேரடிச் சாட்சித் தன்மையுடையது; வாசகர்களைச் சொல்லாற்றில் சொக்க வைக்கவல்லது. போரின் நேர்முக வர்ணனையாகவே நூல் அமைந்துள்ளது. மேலும், ஆற்றல் மிக்க இந்த இறைவாக்கினர் புலவர் ஆவார். இவர் மனித வரலாற்றில் யாவேயின் போராட்டத்தை நடத்துகிறார். யாவேயின் அக்கினிச்சுடரால் அவரது வார்த்தைகள் பளபளக்கின்றன.

இந்நூலை வாசிக்கும்போது, ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக, நாகூம் ஆற்றிய இறைவாக்குப் பணியிலிருந்து எடுக்கப்பட்ட ஒருசில வாக்குகளையே நூல் கொண்டிருக்கிறது; அதுவும் தங்களது குருவின் வாக்குகளைப் பாதுகாத்துப்போற்றிய சீடர்களின் வேலைப்பாடு என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்நூல், ஆலயவழிபாட்டில் பயன்பட்ட மன்றாட்டு வகையில் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நினிவே, விரைவில் விழவேண்டும் என்று மன்றாடுவதாகத் தெரிகிறது.

7. சிறப்புக் கருத்துக்கள்:-

அ. இறைவனது சீற்றம்: நாகூமின் இறையியல் நேரடியானது. யாவே தம் மக்களோடு செய்து கொண்ட ஒரு தலையான அமர உடன்படிக்கையை, நாகூம் வலியுறுத்துகிறார். ஒரு காலத்திற்கு, இறைவன் தமது மக்கள் மேல் சினம் கொள்ளலாம்; ஆனால், அவர்களை எக்காலத்திற்கும் கைவிடமாட்டார்; நாடு அழிந்து போக விடமாட்டார்; நாட்டுப்பற்றே நாகூமுக்குச் சமயமாகும் என்றால் அது மிகையாகாது.

அசீரியர்கள் பல சமயங்களில் இஸ்ராயேலையும் யூதாவையும் படையெடுத்துப் பாழ்படுத்தினர்; கொடுமைப்படுத்தினர்; இழிவுபடுத்தினர். இதையெல்லாம் நாகூம் உளமார வெறுத்தார். இக்கொடிய அரசு முடிவை நெருங்கிய போது, நாகூமின் அடக்கி வைத்திருந்த சினம் எரிமலைப் பிழம்புபோல் பொங்கிவழிகிறது. இஸ்ராயேலுக்கு மட்டும் அசீரியர்கள் எதிரிகள் அல்லர்; அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம், குருதி ஓடச் செய்தனர்; கொள்ளை அடித்துத் தங்கள் நகர்களைச் செல்வமிக்கதாக்கினர். அளித்த வாக்குறுதிகளை முறித்தனர். இந்தக் கொடிய குற்றங்கள், இறைவனது நீதித் தீர்ப்பைக் கூவி அழைத்தன. தன் மக்கள் பால் கொண்டிருந்த பற்றுறுதியின் அடிப்படையில், இறைவனது சீற்றத்தை நாகூம் நோக்கினாலும், உலகமெல்லாவற்றிற்கும் வரும் இறைத்தீர்ப்பு நூலின் அடிப்படையாக அமைகிறது. இறைநீதிதான் அவரது தண்டிக்கும் தீர்ப்பிற்கு உந்து காரணமாகிறது.

பகைவர்களுக்கும் அன்பு செய்யுங்கள் என்று இயேசு போதித்தார். இப்போதக அடிப்படையில் நாகூமின் இறைவாக்கை எப்படிப் புரிந்து கொள்வது? யோனாவின் ஆகமத்திலிருந்து இந்நூல் எவ்வளவு வேறுபடுகிறது? இதை நாம் மறுக்க முடியாது. ஆனால், இக்குறுகிய நூல், இறைவனது தன்மைபற்றிய எல்லா இயல்புகளையும் கூறவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், ஓர் உண்மைமிகத் தெளிவாகக் காணப்படுகிறது. நேர்மையான வெறுப்பும் சினமும் உண்டு. அவை நேர்மையானது மட்டுமல்ல; அவசியமானதும், மேன்மை மிக்கதுமாகும். இறைவனே தீமையை வெறுக்கிறார்; அதற்கு எதிராகச் சினம் கொள்கிறார் (நாகூம் 1:2). சினம் அவரது பரிசுத்த அன்பின் மறுபக்கமேயாகும். தவறை அவர் நேர் வழிப்படுத்துகிறார்; கொடுமைப் படுத்தப் படுவோரை நியாயப்படுத்துகிறார். ஆகையால் அசீரியாவின் குற்றங்களைக் காணாதவர் போல் இருக்க முடியாது. ஏனெனில், அவர் வரலாற்று நாயகன். "உன் இடைவிடாத கொடுமையால், துன்புறாதவர் ஒருவரும் இல்லை" (3:19) என்று அசீரியாவுக்கு எதிராகக் கூறுகிறார். அசீரியர்களின் கொடுமையும், பிறநாடுகளுக்கு எதிராக இழைத்த குற்றங்களும், தண்டனை பெறாமல் போகாது. இறைவனது சினம், காலம் தாழ்த்தலாம்; ஆனால், அதிலிருந்து யாரும் தப்ப முடியாது! அதைத் தவிர்க்க முடியாது (1:2-10). அசீரியாவைப் பொறுத்தமட்டும், அதன் குற்றங்களுக்குரிய இயற்கையான விளைவாகவே, இறைவனது சினம் அமைகிறது. தண்டனை குற்றங்களுக்கு ஏற்றது. "வாளை எடுப்போர் அனைவரும் அழிந்து போவர்" (மத் 26:52). "இதோ! படைத்திரளின் ஆண்டவர் கூறுகிறார். உனக்கெதிராக நான் எழுவேன்" (நாகூம் 2:14). அசீரியா மிருகத் தன்மையிலும், கருணையே சிறிதுமில்லாத கொடுமையிலும், பேரரசு பிடிக்கும் வெறியிலும்,

சேனைகளின் பலத்திலும் நம்பிக்கை வைத்திருந்தது. இவற்றிற்கு எதிராக, இறைவன் போராடுகிறார். அவரது சினம் நாகூம் என்ற மனிதன் வழியாக எடுத்துக் கூறப்படுகிறது. "ஆண்டவரின் கோபத்தால் நான் நிறைந்துள்ளேன்! அதை அடக்கி அடக்கிச் சோர்ந்து போனேன்!!" என்று எரேமியா கூறலாம் (எரே 6:11). நாகூம் அதை அடக்கவில்லை; தங்கு தடையின்றி மகிழ்ச்சிப் பெருக்கோடு எடுத்துக் கூறுகிறார்.

வெறுப்பு தீயதாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை; நாம் வெறுக்கவேண்டியவை சில இருக்கின்றன. ஏனெனில், அவற்றை இறைவனே வெறுக்கிறார். தீமையை வெறுப்பவர்கள்மீது, ஆண்டவர் அன்பு கூர்கிறார் (சங் 97:10). மக்களை வெறுப்பது, எப்போதும் தீமையாகும். ஆனால், பாவத்தை வெறுப்பது எப்போதும் சரியாகும். தீமையை அடியோடு, ஆக்கபூர்வமாக வெறுக்காதவன், உண்மையிலேயே, நல்லவனாக இருக்கமுடியாது. தீமையைக் கண்டு வெகுண்டெழும் மனப்பற்று, நமது காலத்திற்கு மிகத் தேவையானதொன்றாகும். ஆழ்ந்து வேரூன்றிவிட்ட தீமைகளுக்குச் சிறிதும் கவலைப்படாமல், இறுமாந்த நிலையில் ஒத்துழைத்தல் அல்லது அவைபற்றிச் சோம்பல் மிக்க, அக்கறையற்றநிலை தன்னிலையே மிகக் கொடுமையான, அருவருப்பான தீமையாகும். சில சமயம், நாம் சினம் கொண்டேயாக வேண்டும். இத்தகைய சினம், பொங்கி எழவில்லையெனில், இவ்வுலகம், மிகவும் இரங்கத்தக்க இடமாகி விடும்! கோபப்படுதல், வெறுப்புக்காட்டுதல், பழி வாங்குதல் – ஆகியவை சினத்தின் தவறான வடிவங்களாகும்; சுயநலத்தை மையமாகக் கொண்டவையாகும். பிறருக்குச் செய்யப்படும் தீமைகண்டு வெகுண்டெழும் சினம் – தெய்வத் திருநிலைப்படுத்தப்பட்டதாகும். அது பிறரது நலனைத் தேடுகிறது. கிறிஸ்துவின் தன்மை, அலுவல் ஆகியவற்றின் ஒரு கூறுக்கு, நாகூமின் இறைவாக்கு முன்வடிவம் கொடுக்கிறது. ஏனெனில், நற்செய்திகளில் இயேசு அன்பையும் இரக்கத்தையும் மட்டுமே காட்டவில்லை. இயேசு சினம் கொள்கிறார் (மாற் 3:5; 10:14; மத் 23:13-26; யோவா 2:15). இறைவனின் நீதிக்கும் சினத்திற்கும் அவரே நிறைவான, இறுதியான வெளிப்பாடாவார் (உரோ 1:17-18).

ஆ. பிற கருத்துக்கள்: உடல் வலிமையின் மேலும், மோசடியின் மேலும், நிலையான அரசை நிறுவமுடியாது. ஏனெனில், அநீதியையும், வன்முறையையும் சிலை வழிபாட்டையும் இறைவன் தண்டிக்கிறார். யாவே – வரலாற்று நாயகனாவார் என்ற உண்மையையும் நாகூம் வலியுறுத்துகிறார். யாவேக்கு எதிரான உலகத்திற்க்கு, நினிவே அடையாளமாகிறது.

9. நாகூமும் விவிலியத்தின் பிற நூல்களும்: கி.மு. 612-இல் நடந்த நிகழ்ச்சிகளால், இந்நூல், இஸ்ராயேலரிடையே மனித நம்பிக்கையைத் தூண்டியிருக்க வேண்டும். ஆனால், இம்மகிழ்ச்சி சிறிது காலத்திற்கே நீடித்தது. ஏனெனில், நினிவேயின் வீழ்ச்சியை அடுத்து, எருசலேமும் வீழ்ந்தது. அதற்குப்பின் இந்நூலினது செய்தியின் நோக்கம் விசாலமாகிறது; ஆழமாகிறது. நாகூ 2:1-இலிருந்து "சமாதானத்தை அறிவிப்பவன்" என்ற உருவகத்தை எடுத்து, எசா 52:7 யாவற்றையும் உள்ளடக்கும் ஆன்மீக மீட்புக்கருத்தை விளக்குகிறது. புதிய ஏற்பாட்டு நூல்கள், இந்நூலிலிருந்து, எப்பகுதியையும் எடுத்துக் கையாளவில்லை.

ஆனால், மிக இக்கட்டான பிற்காலத்தில், இந்நூலின் வெற்றிப் பெருமிதமிக்க உருவகங்கள், ஆழமான செய்தியை அளிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கும்ரான் குகைத் துறவிகள், கடந்த காலத்தைப் பிரதிபலிக்கும் ஒன்றாகமட்டும் இந்நூலை எடுத்துக் கொள்ளவில்லை; தங்கள் காலத்துக்குரிய செய்தியாக எடுத்துக்கொண்டார். கி.மு. 88-இல் நடந்த சமய, அரசியல் போராட்டங்களை விளக்க இவர்கள் இந்நூலைப் பயன்படுத்தினர். இவ்வாறு,

இந்நூல் மூலத்தில் அசீரியப் பேரரசின் இறுதிக்காலத்தில் ஈடுபாடு கொண்டிருந்தாலும், இதன் காலம் கடந்த உண்மையான பண்பையும் காட்டுகிறது. எக்காலமும், இந்நூலுக்கு ஏற்ற காலமே! இந்நூல், விசுவாசமிக்க நம்பிக்கையின் தனிச்சிறப்பான அறிவிப்பும், அறைகூவலுமாகும்! ஆனால், எப்போதும் நிகழ்காலத்தைச் சேர்ந்ததே!

10. **இக்காலத்திற்க்கு:** தீமை இழைக்கப் படும்போது பொங்கி எழ வேண்டும் என்று இந்நூல் படிப்பிக்கிறது என்று முன்பு கூறினோம். இன்றைய இயந்திர உலகில், வரலாற்றை அமைப்பது மனிதன் அல்லன், இறைவனே! என்ற உண்மையை நாகூம் நமக்கு நினைவுறுத்துகிறார். இந்த அடிப்படையில்தான் நாடுகள் தீர்ப்பிடப்படுகின்றன; தண்டனையோ, சன்மானமோ பெறுகின்றன. இறைவன் அளித்த அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், நாடுகளைப் பாழாக்குதல், மக்களை அழித்தல், அநீதிகளைப் பெருக்குதல் முதலிய குற்றங்களை யார் செய்தாலும், அவர்களை மனிதன் தண்டிக்க முடியாமல் போகலாம். ஆனால், இறைவன் அவர்களை உறுதியாகத் தண்டிப்பார் என்று நாகூம் இன்றும் போதிக்கின்றார். சர்வாதிகார ஆட்சியில் துன்புறுபவர்கள் இறைவனை நம்ப வேண்டும். அவரே அவர்களுக்கு இழைக்கப்படும் தீமைகளைப் பழிவாங்குவார். இறைவனிடம் அன்பு செலுத்துபவர்களுக்கு அவரே அரணும், அமைதியும், அன்புப் பரிசும் ஆவார் என்று நாகூம் இன்றும் அறிக்கையிடுகிறார்.

நாகோர் (NAHOR - கோபமுள்ள) - ஆள்

1. சேமின் வழியில் பிறந்த இவர் செரூகுவின் மகன் (ஆதி 11:22-25; யோசு 24:2; 1 நாள் 1:26; லூக் 3:34). இவர் தெராகுவின் தந்தையும், ஆபிரகாமின் தாத்தாவுமாவார். தெராகுவைப் பெற்றபின் நாகோர் நூற்றுப் பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்து புதல்வர் புதல்விகளைப் பெற்றார்.

2. இவர் தெராகுவின் மகனும், ஆபிரகாம், ஆரானின் சகோதரரும் ஆவார் (ஆதி 11:26; யோசு 24:2). நாகோர் ஆரானின் மகளும், இசுக்காவின் சகோதரியுமான மில்காவை மணந்தார். மில்கா நாகோருக்கு 8 புதல்வரைப் பெற்றுத் தந்தாள் (ஆதி 11:29; 22:20-22). அவரது வைப்பாட்டியின் பெயர் இரயுமாவாகும் (22:24). அவருக்குப் பன்னிரண்டு பிள்ளைகள் இருந்தனர் (22:20-24). நாகோர்-மில்கா ஆகியோரின் மகனாகிய பெத்தூவேலின் மகளான ரெபேக்காதான் ஈசாக்கின் மனைவி (24:15). யாக்கோபின் மனைவியரான ராகேலும் லேயாவும் நாகோரின் வழித்தோன்றல்கள் (பேத்திகள்) ஆவார் (29:4-6; காண்க. 25:20). நாகோரின் உறவினர்கள், எபிரேய மூதாதையரையும் மற்ற செமித்திய இனத்தவரையும் தொடர்பு படுத்துகிறார்கள்.

நாகோர் (NAHOR - கோபமுள்ள) - இடம் இஃது வடமேற்கு மெசபொத்தாமியாவிலுள்ள ஒரு நகர் (ஆதி 24:10). இஃது ஒரு நகரின் பெயராகவோ, எபிரேய மூதாதையர் ஒருவரின் பெயரைத் தாங்கிய நகரின் பெயராகவோ இருக்கலாம். இந்நகர் காரானுக்கு அருகில் இருந்தாலும் இந்நகரும் காரானும் ஒன்று அன்று. இந்த நாகோர், ஆரானுக்குத் தெற்கில் அல்லது கிழக்கில் அமைந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மாரிவாசகம் காரானுக்கு அருகிலுள்ள மேல் பாலி ஆற்றுக்குக் கிழக்கிலுள்ள நாகுர் என்ற இடத்தை அடிக்கடி குறிக்கின்றது.

நாக்கோன் (NACON - ஆயத்தமான)

கடவுளின் பேழையைப் பாகால் யூதாவிலிருந்து எருசலேமுக்குத் தாவீதும் மற்றவரும் கொண்டு வரும் வழியில் நாக்கோனின்களத்திற்க்கு வரும்போது மாடுகள் மிரண்டு பேழையைக் கீழே சாய்த்து விட்டன. இதைக்கண்ட ஊசா அதைத் தம் கையால் தாங்க ஆண்டவர் கோபம் கொண்டார். அவனுடைய துணிவை முன்னிட்டு ஆண்டவர் அவனை வீழ்த்தினார். ஊசா பேழையின் பக்கத்திலேயே விழுந்து இறந்தான் (2 சாமு 6:6-8). ஏனெனில், குருக்களைத் தவிர வேறு யாரும் பேழையைத் தொட அனுமதிக்கப்படவில்லை.

லேவியர்கள் கூட, தண்டுகளில்தான் சுமந்து செல்லலாம் (எண் 4:15; காண்க. யாத் 25:12-14). தாவீது அவ்விடத்தைப் பெரேட்சு - ஊசா (ஊசாவுக்கெதிராகச் சினம்) என்றழைத்தார். ஏனெனில், ஊசாவுக்கு எதிராக ஆண்டவரின் சினம் பற்றி எரிந்தது (2 சாமு 6:7-8; 1 நாள் 13:11). இதற்கு இணையான 1 நாள் 13:9-இல் நாக்கோனுக்குப் பதில் கீதோன் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

நாசரேத்து (NAZARETH – காவல், கடைப்பிடித்தல்)

கலிலேயாவின் கீழ்ப்பகுதியில் உள்ள ஒரு கிராமமே நாசரேத்து. இது யோசேப்பு, மேரி, இயேசு வாழ்ந்த ஊர், இயேசு தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை இந்த ஊரில்தான் கழித்தார்.

1. இஃது அமைந்த இடம், இன்றைய நாசரேத்து இருக்குமிடந்தான் எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது பற்றிப் பழைய ஏற்பாடு, தால்மூது, மிட்ராஷ், யோசிப்பசு ஆகியவற்றில் எதுவும் கூறப்படாததால் பல கேள்விகள் எழுந்துள்ளன. அதே நேரத்தில் எந்த முக்கியத்துவமும் அற்ற ஒரு கிராமமாசு இஃது இருக்கும் நேரத்தில் (யோவா 1:46) கூறப்பட்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. நாசரேத்து, எசுதிரலோன் சமவெளிக்கு வடக்கே, தெற்குப்பக்கம் மட்டும் திறந்தவெளியுள்ள ஒரு பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இவ்வூர் கலிலேயக் கடலிலிருந்து 24. கி.மீ தொலைவிலும், மத்தியதரைக்கடலிலிருந்து 32 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 350 மீட்டர்களாகும். இது விவசாயத்திற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையையும் மழைப் பொழிவையும் கொண்டிருந்தாலும் ஒரே ஓர் ஊற்றை நம்பியே இருந்ததால் அவ்வளவு செழிப்பாசு இல்லை. பழைய கிராமம் குன்றுவரை விரிந்ததென்பது அங்குள்ள சிதைவுகளிலிருந்து தெரிகிறது (காண்க. லூக் 4:29). இவ்வூர் செப்போரிஸ் எனும் முக்கிய நகரத்துக்கருகில் இருந்தாலும் பெரும் சாலையில் அமையாததால் இயேசு வாழ்ந்த காலத்தில் முக்கியத்துவம் அற்ற ஓர் ஒதுக்கமான நகரமாக இருந்தது.

2. புதிய ஏற்பாட்டில், மரியாள் யோசேப்பு வசிக்குமிடமாக, வானதூதர் மங்கல வார்த்தை மரியாளுக்கு அறிவிக்கும் போது கூறப்படுகிற (லூக் 1:26). பின் அவர்கள் பெத்லகேம் சென்று இயேசு பிறந்தபின் திரும்பிவருகின்றனர் (மத் 2:23; லூக் 2:4). குழந்தைப் பருவத்திலிருந்து இளைஞனாக வளர்ந்ததுவரை, இயேசு அவரது பெற்றோருடனிருந்திருக்கிறார் (லூக் 2:39.51). பின் நாசரேத்தை விட்டு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப்பெறச் செல்கிறார் (மாற் 1:9). பிலிப்பு நத்தனியேலிடம் நாசரேத்திலிருந்து இயேசு கிறிஸ்து வந்தார் எனக் கூறியபோது நாசரேத்திலிருந்த நல்லது எதுவும் வரக்கூடுமோ எனக்கூறுவதிலிருந்து (யோவா 1:45-46) இஃது எவ்வளவு முக்கியத்துவமற்ற ஊர் என்பது தெரிகிறது. பிறவரலாற்றுச் சான்றுகள் எதுவும் இதுபற்றிப் பேசாதது மேலே கூறியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இயேசு நாசரேத்தைவிட்டு, கப்பர் நகுமுக்கு ஏன் சென்றார் என்பதற்கு எக்காரணமும் கூறப்படவில்லை (மத் 4:13). ஒரே ஒரு முறை மட்டும் தெளிவாக அவர் நாசரேத்துக்குத் திரும்பி வந்தது பற்றிக் கூறப்படுகிறது (லூக் 4:16; மத் 13:54; மாற் 6:1). நாசரேத்து பற்றிய மற்றக் குறிப்புகள் இயேசு மகிமையுடன் எருசலேம் வரும் போதும் (மத் 21:1), பேதுரு கொர்னேலியு வீட்டில் ஆற்றிய உரையின் போதும் (அ.ப. 10:38) வருகின்றன.

இயேசுவை, நசரேயர் எனப் பல இடங்களில் குறிப்பிடுவதைக் காண்கிறோம் (மாற் 1:24; 10:47; யோவா 18:5.7; அ.ப. 2:22; 3:6). ஒரே ஒரு முறை மட்டும் இயேசுவைப் பின்பற்றியவர்கள் 'நசரேயர்கள்' என அழைக்கப்படுகின்றனர் (அ.ப. 24:5). நசரேயர் என்பது வேறு பொருளைத் தருவதாயினும், மத் 2:23-இல் குறிப்பிடப்படுவது போல் 'நாசரேத்தைச் சேர்ந்தவர்' என்பதுவே புதிய ஏற்பாட்டுப்பொருள்.

3. பிந்திய வரலாறு: கான்ஸ்தாந்தின் ஆட்சிவரை (கி.பி. 324-37) நாசரேத்து முக்கிய புண்ணியத் தலமாகவில்லை. எப்பிபானியுவின் கூற்றுப்படி, அதுவரை யூதர்கள் மட்டுமே நாசரேத்தில் வாழ அனுமதிக்கப்பட்டிருந்தனர். 670-இல் முதன் முதலாக இங்குக் கோவில் கட்டப்பட்டது. முஸ்லிம்களால் அதிகத் துன்பமும் அழிவும் அடைந்த நாசரேத்து சிலுவைப் போர்கட்குப்பின் தன் விடுதலையை அடைந்தது. மீண்டும் முஸ்லிம்களின் கையில் அகப்பட்டு, பின்னர் இரண்டாம் பிரெடரிக்கால் மீட்கப்பட்டு, 1291-இல் முஸ்லிம்களால் அழிக்கப்பட்டது. கி.பி 1620-இல் பிரான்சிஸ்கு சபை குருக்கள் இங்குத் தங்கி இப்புனிதத்தலத்தைக் காக்குமாறு அனுமதிக்கப்பட்டனர். கி.பி. 1918-இல் இஃது ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டது. இன்றைய நாசரேத்து 20,000 மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. இஸ்ராயேலில் உள்ள மிகப்பெரிய கிறிஸ்தவநகரம் இதுவே. இக்காலத்தில், திருக்கும்பத்தோடு தொடர்புடைய பல புனித இடங்கள் உள்ளன. அவற்றில் சில: மரியாளும் அவளது மகனும் தினமும் தண்ணீர் எடுத்த ஊற்றாகக் கருதப்படும் மரியாளின் கிணறு; இயேசுவின் வீட்டின்மேல் கட்டப்பட்டதாகக் கருதப்படும் "மங்கல வார்த்தைக்" கோவில்; வடக்கில் சிலுவைப்போர்க் காலத்தில் கட்டப்பட்டகோவில்; எசா 61:1-3 (லூக் 4:18-23) நிறைவேறியதாக இயேசு அறிக்கையிட்ட செபக்கூடம் இருந்த இடத்தில் கட்டப்பட்ட கிரேக்கக்கோவில்; தெற்கில் யூதர்கள் இயேசுவை மலையிலிருந்து தள்ள முயன்ற இடமாகக் கருதப்படும் இடத்தில் கட்டப்பட்ட கோவில் என்பன.

நாசு புல்தாள் ஏடு (NASH PAPYRUS)

இஃது எங்கு எழுதப்பட்டது என்று அறிவதற்கில்லை; அனேகமாக, பையூம் என்ற இடத்தில் தயாரிக்கப்பட்டிருக்கலாம். இது காலத்தால் மிகவும் பழமையானது. சாக்கடல் ஏடுகளைக் கண்டுபிடிக்கும்வரை, காலத்தால் முந்திய பழைய ஏற்பாட்டின் எபிரேய வாசகப்பகுதி இது. மக்கபேயர் காலத்தைச் (கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு, கி.பி. 165-35) சேர்ந்ததாக இருக்கலாம். இந்த 24 வரியுடைய வாசகம் பத்துக்கட்டளையையும் (யாத் 20:2-7; உப 5:6-21) செமாவையும் (6:4-5) கொண்டுள்ளது; இதை 1902-இல் எகிப்திலிருந்து பெற்றுவந்த நாசு என்பவர் பெயரால் அழைக்கப்படுகிறது. இதைக் குக் என்பவர் 1903-இல் பதிப்பித்தார். ஒரு பக்கமுள்ள இந்த ஏடு போதிப்பதற்கோ, செபக்கூட்டங்களில் வாசிப்பதற்கோ பயன்பட்டிருக்க வேண்டும். இந்த ஏடு இப்போது கேம்பிரிட்சு பல்கலைக்கழக நூல்நிலையத்தில் உள்ளது.

நாடகத்திடல் (THEATER)

நாடகத்திடல்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலே கிரேக்க நாட்டில் தோன்றின. இத்திடல்களில் தியோனிசு என்ற கிரேக்கக் கடவுளின் அருமை பெருமைகள் பாடல்கள் வாயிலாகவும், நாடகங்கள் வாயிலாகவும் எடுத்துரைக்கப்பட்டன. நாடகத் திடல்கள் மக்கள் அவைகளாகவும் பயன்படுத்தப்பட்டன (அ.ப. 19:29-41).

வரலாறு: தியோனிசு தேவனின் விழா வருடந்தோறும் கிரேக்க நாட்டிலே கொண்டாடப்பட்டது. அப்போது நாடகப்போட்டிகள் நடைபெற்றன. இந்நாடகங்களில் உரையாடல்களும், குழுப்பேச்சும் இடம் பெற்றன. நாட்டு வரலாறு மற்றும் கிராமியப் பாடல்களே உரையாடலாகவும், குழுப்பேச்சாகவும் பயன்பட்டன. நகைச்சுவை நாடகங்கள், அறுவடைக்கால விழாவின்போது நடிக்கப்பட்டன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மெனான்டர் ஒரு சிறந்த நகைச்சுவை நாடக எழுத்தாளர். இவரின் ஒரு நாடகத்திலிருந்து புனித பவுல் மேற்கோள் காட்டி எழுதுகிறார் (1 கொரி 15:23).

திடல்களின் அமைப்பு: பொதுவாக, சரிவான நிலப்பரப்பிலே திடல்கள் அமைக்கப்பட்டன. இவை அரைவட்ட வடிவமாகப் படிக்கட்டு இருக்கைகளைக்

கொண்டனவாக அமைக்கப்பட்டன. ஒரு சில திடல்கள் மேற்கூரையுடையனவாகவும் இருந்தன. பார்வையாளர்கள், இசைக் கலைஞர்கள், நாடக நடிகர்கள் ஆகியோருக்கென்று தனித்தனி இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நாடகத்திடல்கள், விளையாட்டு அரங்கங்களிலிருந்து வேறு பட்டவையாகும்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில்: பெரிய ஏரோது, நாடகம் மற்றும் களியாட்டங்களில் இன்பம் கொண்டவன்; ஏராளமான நாடகத்திடல்கள் மற்றும் விளையாட்டு அரங்கங்களைத் தனது நாடெங்கும் கட்டியெழுப்பினான். எருசலேமிலும், செசரியாவிலும், அவன் கட்டிய திடல்கள் இன்றும் பழுதுபட்ட நிலையில் காணப்படுகின்றன. கிரேக்க மற்றும் உரோமையத்திடல்கள் இன்றும் பவுல் போதித்த இடங்களான, பிலிப்பி, ஏதன்சு, கொரிந்து, மிலேத்து, எபேசு போன்றவற்றில் காணப்படுகின்றன.

நாடா, பின்னல் (LA CE)

முறுக்கிப் பின்னப்பட்ட நூல்களின் தொகுப்பான நாடா. இது குருக்களின் மார்புப் பட்டையும், எப்போதும் ஒன்றை விட்டு ஒன்று நீங்காதபடிக்கு மார்புப் பட்டையின் வளையங்களோடு, எப்போதின் வளையங்கள் இளநீல நாடாவினாலே கட்டப்பட்டன (யாத் 28:28; 39:21). ஆரோனின் பாகையின்மேல் பசும்பொன்னால் செய்யப்பட்ட பட்டம் இதே நீல நாடாவினாலே கட்ட வேண்டும் (யாத் 28:37; 39:31).

நாடு, நிலம் (LAND)

I. விவிலிய வழக்கில் நாடு அல்லது நிலம் என்பது அரசியல் நோக்கங்களுக்காக வரையறை செய்யப்பட்ட பகுதியைக் குறிக்கிறது. இப்பகுதியிலிருந்து மக்களுக்கும், விலங்குகளுக்கும் வேண்டிய ஆதாரப் பொருள்களும் உணவும் கிடைத்தன. எபிரேய புவியியலில், நாடு- விண்ணகத்துக்கு எதிர் முரணானதாகும். இஸ்ராயேல் வரலாற்றைப் பொருத்தமட்டும்,அது சிறப்பான இறையியல் பொருள் கொள்கிறது. பழங்கால மேற்காசியக் கலாச்சாரங்களில் நாடு பரந்த பொருளுடைய விளக்கங்களைப் பெறுகின்றது. சுமேரிய, அக்காதிய இலக்கியங்களில் நாடு என்பது, விண்ணகத்து எதிர்மறையாக, மண்ணுலகையும், கீழ் உலகையும், குறிப்பிட்ட பகுதியையும், தரையையும் குறிக்கிறது. நாட்டைக் குறிக்கும் எகிப்தியச்சொல் சித்திரச்சொல்லால் கூறப்படுகிறது. அதில் தட்டையான நீர் நிறைந்த நிலம் சித்தரிக்கப்படுகிறது. அதன் அடியில் மணல் உள்ளது. இது பூமியை, தூசியை, குப்பையை அல்லது நாட்டைக் குறிக்கலாம். ஆகையால் பழைய ஏற்பாட்டில் நாட்டைக் குறிக்கும் "எரேஸ்" என்ற எபிரேயச் சொல் நாடு, பூமி அல்லது தரை ஆகியவற்றில் எதைக் குறிக்கிறது என்று தெளிவாகக் கூறுவது கடினம். இவ்வாறு "நாடு முழுவதும்" என்ற பொதுச்சொல் எசா 7:24-இல் தரையையும், எரே 4:20-இல் யூதாவையும், 1 சாமு 13:3-இல் இஸ்ராயேலையும், உப 19:8; 34:1-இல் ஒரு பகுதியையும், ஆதி 1:26; அர 5:15-இல் மண்ணுலகையும் குறிக்கிறது.

II. பழைய ஏற்பாட்டில்:

1. **சொல்வழக்கில்:** ஆதி 1:1-24-இல் வரும் படைப்புப்பற்றிய விவரிப்பு பழங்கால மேற்காசிய அண்டவியல்களுக்குப் பொதுவான விவரங்களைக் கொண்டுள்ளது. சான்றாக, மண்ணுலகு நீரால் சூழப்பட்டு குவிமாட வானவெளியால் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு அப்பால் விண்ணகம் இருந்தது என்றும் நம்பப்பட்டது (ஆதி 1:6-10). இவ்வாறு படைப்பு முழுமையின் பிரிவு "விண்ணுலகு, மண்ணுலகு" என்று குறிக்கப்பட்டது. இந்த வாய்பாடு விவிலியம் முழுவதும் காணப்படுகிறது. பூமி படைக்கப்பட்டதை விவரிக்க, பல எபிரேய வினைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இறைவன், படைப்பவர் என்ற அளவில், மழை பொழியச் செய்கிறார் (யோபு 38:26-27). அதன் விளைவாக உயிர்களுக்கு வேண்டிய

மரஞ்செடிகளை "நாடு" கொண்டு வருகிறது (காண். ஆமோ 7:2).

நிலத்தின் அமைப்பு அல்லது அதன் பொருள்களைக் குறிக்கும் பகுதிகளில், நாடு என்பதன் எபிரேயச்சொல் தரை அல்லது நிலத்தைக் குறிக்கிறது. நாடு நல்ல பலனைத்தரும் (லேவி 26:4-5; சங் 85:13; காண். ஆதி 27:28; செக் 8:12). தானியங்கள், பழங்கள் (லேவி 19:23; 23:39; காண். ஆதி 1:11; எசா 61:11), அப்பம் மற்றும் திராட்சை ரசம் (சங் 104:4-5), எண்ணெய் (உப 7:13) ஆகிய பல உணவுப்பொருள்களை நிலம் தருகின்றது.

ஆயினும், எல்லா நாடுகளும் பலன்தருபவை அல்ல, வறண்ட, ஆள் நடமாட்டமில்லாத பாலைப்பகுதிகளும் உண்டு (எரே 9:11; காண். உப 8:15). காட்டு விலங்குகள் உலவும் பலன் தராத பகுதிகளும் உண்டு (உப 29:23; எரே 2:2). பலன் கொடாத நாடு இறைத்தண்டனையின் அடையாளமாக இருக்கலாம் (லேவி 26:19-20; சங் 107:33-84; எரே 12:11; 51:42-43; எசே 12:19-20; 32:15; ஆகா 1:10-11). தரை தோல்வியையும் (எசா 14:12; 21:19; ஒப 3), துக்கத்தையும் (யோபு 2:13; எசே 26:16) அடையாளப்படுத்தலாம்.

நாடுகள் மற்ற அரசியல் அடிப்படை கொண்ட ஒரு குறிப்பிட்ட பகுதிகளைக் குறிக்கலாம். தனது வரலாறு முழுவதும் இஸ்ராயேல் மற்ற அரசியல் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்தது. அவர்களின் பெயர்களை விவிலியத்தில் காணலாம். அவற்றில் சில எகிப்து (ஆதி 41; சங் 78:12), மோவாபு (நீதி 11:15), அசீரியா (எசா 7:18), பாபிலோன் (எரே 25:12), இத்தியர்கள் (நீதி 1:26) மற்றும் அம்மோனியர்கள் (உப 2:37) முதலியவையாகும். மேலும், "கீழ்த்திசை மக்களின் நாடு" (ஆதி 29:1), "எபிரேயர் நாடு" (40:15), "இஸ்ராயேல் நாடு" (1 சாமு 13:19) போன்ற குறிப்புகளும் உள்ளன.

நகரங்களின் பெயரை வைத்தோ, முக்கியப் புவியியல் கூறுகளை வைத்தோ பெயர் பெற்ற பகுதிகளும், நாடு என்றழைக்கப்பட்டன. இவ்வாறு பெயர் பெற்றவையே அவிலா நாடு (ஆதி 2:11), சேயிர் பகுதி (32:4), அரராத்து நாடு (2 அர 19:37), ஆமாத்துநாடு (25:21), யோர்தான் மற்றும் எர்மோன் பகுதிகள் (சங் 42:6) ஆகும்.

இஸ்ராயேல் கோத்திரங்களுக்குரிய பகுதிகளும் நாடு என்றழைக்கப்பட்டன (உப 34:2; 1 சாமு 9:4.16; 13:7; 1 அர 15:20).

2. இறையியல் வழக்கில்: இஸ்ராயேல் வரலாற்றின் தொடக்கத்திலிருந்து இறைவனது வாக்குறுதியின் இரண்டு கூறுகளில் ஒன்று கானான் நாடாகும்; மற்றது ஆபிரகாமின் வழித்தோன்றல்களான இஸ்ராயேல் மக்களாவர் (ஆதி 12:1-2). இந்நாட்டில் ஆபிரகாம் குடியேறினார். ஆனால், அங்கு ஒரு நாடோடியாகவே வாழ்ந்தார். மக்பேலாக் குகையைத்தவிர அவர் அங்கு எந்தப் பகுதியையும் உடைமையாகக் கொண்டிருக்கவில்லை (23:3-20). யாத்திரை நிகழ்ச்சிகளுக்குப்பின்தான், ஈசாக்கு, யாக்கோபின் வழிவந்த ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் கானான் நாட்டை உடைமையாகக் கொண்டனர். அவர்களின் கானான் நாட்டில் புகுந்ததை நினைவுகூரும் வாசகம் "நிரந்தரக் குடியற்ற அரமேயனான என் தந்தை" என்று தொடங்குகிறது (உப 26:5-10). இந்த வாசகத்தை, ஆண்டுதோறும் முதற்பலனை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும் நாளில் அறிக்கையிட்டனர். எகிப்திலிருந்து வெளியேறியது, பாலையில் அலைந்துதிரிந்தது, கானான் நாட்டை வெற்றி கொண்டது ஆகிய இவை யாவும் கானான் நாட்டை உடைமையாகக் கொண்டிருப்பது பற்றிய வாக்குறுதியை நோக்கிச் செயல்பட்டன. இதில் அந்நாட்டை வேவுபார்த்த கதையும் (எண் 13), அதன் விளைவாக, வாக்குறுதிக்கு எதிரான கிளர்ச்சியும் (14:1-10) முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

ஆயினும், நாட்டை வெற்றி கொள்வது உடனடியாக நிறைவு பெறவில்லை; அதிலிருந்து

இஸ்ராயேலர் விரட்டியடிக்கும் வரை, முன்பு இருந்த பல இன மக்கள் தொடர்ந்து இருந்தனர் (நீதி 1:19 தொ). இஸ்ராயேலர்களுக்குப் பல இன்னல்கள் விளைவித்தனர் (2:1-4). தாவீது மற்றும் சாலமோனின் ஆட்சிக்காலம் இஸ்ராயேல் வரலாற்றின் பொற்காலமாகக் கருதப்பட்டது. அப்போது, அவர்கள் அரசியல் அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்டனர். நாட்டை உறுதியாக உடைமையாக்கிக் கொண்டனர். அதன் எல்லைகள் "தாணிலிருந்து பெயேர் செபாவரையும்" (2 சாமு 3:10), "யூப்பிரத்தீசு தொடங்கி பெலிஸ்தியரின் நாடு வரையிலும், எகிப்திய எல்லை வரையிலும்" (1 அர 4:21; 2 நாள் 9:26; காண். எண் 34:2-12; 1 அர 8:65; எசே 14:15-20) என்று வரையறை செய்யப்படுகின்றன.

பழைய ஏற்பாட்டின் பிற்கால நூல்களிலும், பிற்கால யூத வெளிப்பாட்டு நூல்களில் எதிர்பார்க்கப்பட்ட மீட்பின் இரட்டிப்பு மையம் இஸ்ராயேலில் "சிதறுண்டவர்களை"- அதாவது, நாடு கடத்தப்பட்டவர்களை- மீண்டும் அவர்களது சொந்த நாட்டில் குடியேறச் செய்வதாகும். நாடும், சிதறுண்டு போனவர்களும் மகிமையில் ஒன்றிணைக்கப்படுவர் (எசா 27:12-13; எசே 37:21-25; செப் 3:10; தோபி 14:4-5). இஸ்ராயேலின் எதிரிகள் அழிக்கப்படுவர் (எசா 63:1-6; செக் 14:12-15); அல்லது மகிமைப்படுத்தப்பட்ட எருசேலம் நகரை நோக்கித் தாழ்ச்சியாகப் பவனி வருவர் (செக் 14:16-19; எசா 60:1-3). அப்போது ஆலயத்தை மையமாகக் கொண்ட நாட்டில் இஸ்ராயேல் உறுதியுடன் வாழும் (எசா 26:1-2; 60:18; காண். எரே 31:40; செக் 14:11).

உலகமும் அதனுள் உள்ளவையும் இறைவனுடைய உடைமையாகும் என்ற கருத்து (சங் 24:1), உடைமை பற்றிய விவிலியக் கூற்றுகளுக்கு அடிப்படையாக உள்ளது. ஆகவே, யாரும் தம் உடைமையை இறைவனின் கொடையாக மட்டுமே கொண்டுள்ளனர். யாவேக்கும் இஸ்ராயேலருக்கும் இடையிலான உடன்படிக்கையில், இஸ்ராயேல் மக்கள் இறைவனின் தனிச்சிறப்பான உடைமையாகக் கருதப்படுகின்றனர் (யாத் 19:5). ஆபிரகாமுக்கு இறைவன் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் (ஆதி 13:14-17) இஸ்ராயேல் கானான் நாட்டைத் தன் உடைமையாக இறைவனிடமிருந்து பெற்றது (உப 1:25). இஸ்ராயேலில் ஒவ்வொருவனும் தன்னுடைய பகுதியைப் பெற்றான். ஆனால், அதை உடைமையாகக் கொண்டிருப்பது அவன் மக்கள் முழுமையோடு கொண்டிருந்த ஒன்றிப்பைப் பொருத்ததாகும். யாவேக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கை உறவால் உடைமை முறை செய்யப்பட்டதால் உடைமை உரிமையை மாற்றக்கூடாது. மீட்பு மற்றும் யூபிலி ஆண்டு பற்றிய ஐந்நூல் ஒழுங்குகளின் நோக்கம் நாடு எந்தக் குடும்பத்திற்குப் பங்கீடு செய்யப்பட்டதோ அந்தக் குடும்பத்துக்குள்ளேயே எக்காலத்திற்கும் உரியதாக இருக்கவேண்டும் என்பதே. சூழ்நிலையால் விற்கவேண்டிய நிலைக்குக் கட்டாயப்படுத்தப்படுபவன் யூபில் ஆண்டில் அதைத் தன் உடைமையாகப் பெற்றான் (லேவி 25:8-10.13-16).

ஆனால், இச்சூழ்நிலையில் யூபிலிக்கு முன்பே வறுமையுற்றவனின் உறவினன் இழந்த உடைமையை மீட்க வேண்டும்; அல்லது வறுமையுற்றவன் தன் நிலை முன்னேறியவுடன் மீட்க வேண்டும் என்பது முதற்படியாகும் (லேவி 25:25-28; ரூத் 4; எரே 32:6-8). நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை ஆகாபும் ஈசபேலும் அபகரித்துக்கொண்ட வரலாறு (1 அர 21), அன்னிய ஆதிக்கத்தின் மற்றும் அரச சர்வாதிகாரத்தின் விளைவாக, நாட்டுரிமைச் சட்டங்கள் எந்த அளவுக்குப் பழுதுபட்டுப் போய்விட்டன என்பதைக் காட்டுகிறது. இந்த ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கத் தவறியபோது நாட்டை உடைமையாகக் கொண்டிருந்த செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமிடையேயிருந்த இடைவெளி வளர்ந்துகொண்டே போயிற்று (எசா 5:8).

III. புதிய ஏற்பாட்டில்: நாடு பற்றிய வாக்குறுதியை விட வாரிசு பற்றிய வாக்குறுதியிலேயே ஆபிரகாம் விசுவாசம் வைத்தார் என்று பவுல் வலியுறுத்துகிறார் (உரோ 4:17-21). அப்போஸ்தலர் பணிநூலில் இரு உரைகளில் நாடு பற்றிய வாக்குறுதி குறிக்கப்படுகிறது; ஆனால், மையக் கருத்தாக மாறவில்லை (அ.ப. 7:3-7; 13:17-19). இரு உரைகளிலும், வரலாற்றுத் திறனாய்வின் நோக்கம் நாடு பற்றிய வாக்குறுதியை உள்ளடக்கவில்லை. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில், வாக்குறுதியின் நாடு பற்றிய ஆபிரகாமின் விசுவாசம் கூறப்படுகிறது (எபி 11:8-9). ஆனால் அங்கு நாடு, குறிப்பாக "நகர்" (எருசலேம்), யாவும் கடந்த உண்மையின் அடையாளமாகிறது (11:10.13-16). கலா 4:25-26-இல் யூதர்கள் ஏற்கெனவே கொண்டிருந்த எருசலேமை, வாசகர்கள் கொண்டிருக்கபோகிற "விண்ணக எருசலேமோடு" ஒப்பிட்டு வேறுபடுத்துகிறார் பவுல். கிறிஸ்தவச் சுழ்நிலை "புதிய" அல்லது விண்ணக எருசலேம் குறிக்கப்படும்போதெல்லாம் (எபி 12:22; திருவெளி 3:12; 21:2-25:5), உலகிலுள்ள எருசலேமோடு ஒப்பிடுதல் பின்னணியில் உள்ளது. ஏனெனில் வாக்குறுதியைப் புதுப்பித்தல் வேறுவிதமாக அமைந்திருக்கிறது. ஆகவே, ஒப்பிடுதல் தவிர்க்க முடியாததாகிறது. இச்சூழ்நிலையில், கி.பி. 70-இல் எருசலேம் அழிக்கப்படுதல், இறுதிக்கால நிகழ்ச்சிகள் பற்றிய விவரிப்பின் ஒரு பகுதியாக அமைவது புரிந்து கொள்ளப்படுகிறது (லூக் 21 20-24). இதில் இரண்டாம் வருகையின் நிகழ்ச்சிகளில் உலக எருசலேமின் நேர்நிலைப்பங்கும் சுட்டப்படலாம் (லூக் 21:24; உரோ 11:26). மத் 5:5-இல் நாடுபற்றிய வாக்குறுதி சங் 37:11-ஐச் சுட்டிக்காட்டுகிறது. அஃதோடு பழைய ஏற்பாட்டில் வேறு விதத்தில் கொடுக்கப்பட்ட செய்தியை முன்னிலும் திட்டமாக எடுத்துக்கூறுகிறது. அது மனித அகந்தை அல்லது வலிமையில் இல்லாமல், இறைவனில் கொண்டுள்ள நம்பிக்கையில் வாக்குறுதியை அடைகிறது. புதிய ஏற்பாட்டுச் சூழ்நிலையில் நாடு என்ற அளவில் இஸ்ராயேலில் வாக்குறுதி மையம் கொண்டிருக்கவில்லை. இப்பின்னணியில் இஸ்ராயேல் கானான் மேல் கொண்டிருக்கும் சுதந்தர ஆதிக்கம் பற்றிய வாக்குறுதியைக் கடந்து பரந்த பொருளை இவ்வசனம் கொண்டுள்ளது.

நாடு கடத்தப்படுதல் (EXILE)

I. பண்டைய மேற்காசிய நாடுகளில் நாடு கடத்தலானது, வெற்றி கொள்ளப்பட்ட மக்களுக்கு எதிராக அடிக்கடி பயன்படுத்தப்பட்ட செயல்பாடாகும் (காண்க. ஆமோ 1). கி.மு. 734 முதல் இஸ்ராயேல் அரசினுடைய சில நகரங்கள், இந்தத் துன்பமிக்க அனுபவத்திற்கு உட்பட்டன (2 அர 15:29). பின்னர், 721-இல் மொத்த அரசும் உட்பட்டது (2 அர 17:6). உடன்படிக்கையினுடைய மக்களின் வரலாற்றில் மாபெரும் அடையாளத்தை விட்டுச்சென்ற நாடு கடத்தல்கள், 597, 587, 582-ஆம் ஆண்டுகளில் யூதா மற்றும் எருசலேமிற்கு எதிரான தனது படையெடுப்புகளின் விளைவாக நெபுகத்னேசர் நிறைவேற்றியவை யாகும் (2 அர 24:14; 25:11; எரே 52:28-30). பாபிலோனுக்கு யூதாவின் மக்கள் கடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிகளைக் குறிக்க 'நாடு கடத்தல்' என்ற சொல் ஒரு கலைச் சொல்லாகப் பயன்படுகிறது. நாடு கடத்தப் பட்டவர்களின் பொருளாதார நிலையானது எப்போதுமே கடுமையானதாக இருக்கவில்லை. காலப்போக்கில் அது தளர்த்தப்பட்டது (2 அர 25:27-30). ஆனால், திரும்புவதற்கான வழியானது எப்போதும் போல மூடியே இருந்தது. தங்களுக்கென ஒரு வழி திறக்கப்பட, பாபிலோனின் வீழ்ச்சி மற்றும் 538-இல் சைரசின் கட்டளைக் கடிதத்திற்காக அவர்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று (2 நாள் 36:22-23). இந்த நீண்ட காலச் சோதனையானது இஸ்ராயேலின் சமய வாழ்வில் ஒரு வலிமையான முத்திரையை விட்டுச் சென்றது. இதன் வழியாக, தனது ஒப்பற்ற புனிதத்தினையும், பொங்கி வழிகின்ற பிரமாணிக்கத்தையும் இறைவன் அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

II. நாடு கடத்தப்படுதல், பாவத்திற்கான தண்டனை:

1. நாடு கடத்தப்படுதல், உச்ச நிலையான தண்டனை: புனித வரலாற்றின் காரணகாரிய வாதத்தின்படி, நாடு கடத்தப்படுதலின் வாய்ப்பானது கற்பனைக் கெட்டாததாகத் தோன்றியது. யாத்திரையின் போது எண்ணற்ற அருஞ்செயல்களின் பயனாக அடையப்பட்ட இறைவனுடைய முழுத்திட்டத்தின் எதிர்த் திருப்பமாக இஃது அமைந்தது. இது செய்யப்பட்ட அனைத்து உறுதிமொழிகளின் மறுதலிப்பாகும். வாக்களிக்கப்பட்ட நாட்டைச் சரணளித்தல், தாவீதினுடைய அரச உரிமையின் இழப்பு, அழிக்கப்பட்ட ஆலயத்தினின்று ஒதுக்கப்படுதல். நாடு கடத்தப்பட்ட பின்பும் மக்கள் அதை நம்பவில்லை. எல்லாம் சரியான முறையில் மீண்டும் விரைவில், தாமதமின்றி நிறுவப்படும் என்று எதிர்பார்த்தனர். இதுதான் மக்களிடையே நிலவிய இயல்பான மனநிலை. ஆனால், எரேமியா இந்த மாயத்தோற்றத்தை வெளிப்படையாகக் கண்டிக்கிறார். நாடு கடத்தப்படுதலானது தொடரப்படும் (எரே 29).

2. நாடு கடத்தப்படுதல், பாவத்தின் ஒரு வெளிப்பாடு: மக்களும், அவர்களது தலைவர்களும் தங்களுடைய குணமாக்க முடியாத நெறிபிறழ்வு நிலையை நன்கு அறிந்துகொள்ள இந்த அழிவின் தொடர்ச்சி அவசியமாக இருந்தது (எரே 13:23; 16:12-13). இதுவரை எளிதாக எடுத்துக்கொள்ளப்பட்ட இறைவாக்கினர்களின் எச்சரிக்கைகள் இப்போது முழுமையான அளவில் நிறைவேற்றப்பட்டன. நாடு கடத்தப்படுவதானது அடிக்கடி கண்டிக்கப்பட்ட தவறுதல்களுக்கான தண்டனையாக இப்போது தோன்றியது. இறை உடன்படிக்கையைச் சார்ந்திருப்பதை விட்டு விட்டு, மனித அரசியல் நடவடிக்கைகளில் தொடர்பு கொள்ள விழையும் ஆட்சியாளர்களின் தவறுகள் (எசா 8:6; 30:1-2; எசே 17:19-21); தங்களுடைய பேராசையினால் வன்முறை மற்றும் மோசடியின் மூலமாக மக்களின் சகோதரத்துவ ஒன்றிப்பை அழித்த அதிகாரமிக்கோரின் தவறுகள் (எசா 1:23; 5:8...; 10:1); எருசலேமைத் தீய இடமாக்கிய பொது மக்களின் ஒழுக்கமின்மை, மற்றும் துர்மாதிரியான சிலைவழிபாடு முதலிய தவறுகள் (எரே 5:19; எசே 22). இவற்றால் தொடர்ந்து தூண்டப்பட்ட இறைவனின் சினமானது, "இனி அவர்களுக்குக் கழுவாய் இல்லை; அவர்கள் தப்ப முடியாது" என்ற கூக்குரலுடன் கனன்றெழுந்தது (2 நாள் 36:16).

ஆண்டவரின் திராட்சைத் தோட்டமானது சீரழிந்து, பின்னர் சூறையாடப்பட்டு, வேரோடு பிடுங்கப்பட்டது (எசா 5). வேசித்தனம் புரியும் துணைவி அவளது பகட்டாடை நீக்கப்பட்டுக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டாள் (ஓசே 2; எசே 16:38). கீழ்ப்படியாமல், கிளர்ச்சி செய்த மக்கள் தங்களுடைய நாட்டினின்று விரட்டப்பட்டு, நாடுகளிடையே சிதறடிக்கப்பட்டனர் (உப 28:63-68). தண்டனையின் கடுமையானது தவறினுடைய பளுவை வெளிப்படுத்தியது. மாயத்தோற்றத்தை நிலை நிறுத்துவதோ, புறவினத்தாரின் முன் நிற்பதோ இனி இயலாத ஒன்று. "இன்றிருப்பதுபோல, தலைக்குனிவுதான் நமக்கொண்டு" (பாரூ 1:15).

3. நாடு கடத்தப்படுதலும் அறிக்கையிடுதலும்: இக்காலம் முதல் தாழ்மையுடன் பாவத்தை அறிக்கையிடுவதானது இஸ்ராயேலில் வழக்கமாகிறது (எரே 31:19; எஸ் 9:6...; நெகே 1:6; 9:16.26; தானி 9:5). நாடு கடத்தப்படுதலானது ஓர் எதிர்மறையான இறை மகிமைக் காட்சியாக, இறைவனுடைய புனிதத்தையும் மற்றும் தீமையின் மீதான முழு வெறுப்பும் இதுவரையில்லாத முறையில் வெளிப்படுத்துகிறது.

III. நாடு கடத்தப்படுதல், ஒரு பயனுள்ள சோதனை:

1. புனித நாட்டினின்று நிராகரிக்கப்பட்டு, தங்களுடைய ஆலயம் மற்றும் வழிபாட்டை இழந்தவர்களாய், இறைவனால் முற்றிலுமாகக்

கைவிடப்பட்டதை நாடு கடத்தப்பட்டோர் நம்ப வேண்டியிருந்தது. இதனால், அவர்கள் நம்பிக்கையற்ற முறையில் ஊக்கமிழந்தனர் (எசே 11:15; 37:11; எசா 49:14). உண்மையில் சோதனையின் மையத்திலேயே இறைவன் தங்கியிருந்தார். தமது மக்களை எழுப்புவதற்கென அவரது வியப்புமிக்க பிரமாணிக்கம் ஏற்கெனவே செயலில் ஈடுபட்டிருந்தது (எரே 24:5-6; 29:11-14).

2. இறைவாக்கினர்களின் ஆறுதல்: அச்சுறுத்தும் இறைவாக்குகள் மெய்யாக்கப்பட்டதானது, இறைவாக்கினரின் பணியைக் கருத்தோடு ஏற்குமாறு நாடு கடத்தப்பட்டோரைத் தூண்டியது. ஆனால், இப்போது இவ்வாக்குகளைத் தங்களுக்கே திரும்பக் கூறிக்கொள்வதன் மூலமாகத்தான் நம்பிக்கைக்கான காரணங்களை அவர்கள் அவற்றில் கண்டடைந்தனர். உண்மையில், தண்டனையின் அறிவிப்பானது எப்போதும், மனமாற்றத்திற்கான அழைப்பு மற்றும் புதுப்பித்தலின் வாக்குறுதி ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது (ஓசே 2:1-2; எசா 11:11; எரே 31). இஃது இறையின் கடினத்தன்மையால் வெளிப்படுத்தப்படுகின்ற விழிப்பான அன்பினுடைய வெளிப்பாடு போன்று உள்ளது. தண்டிக்கின்ற போதும் கூட, முதல் இரக்கமானது புதிதாய் மலர்வதைக் காட்டிலும் வேறெதையும் இறைவன் விரும்புவதில்லை (ஓசே 2:16-17). தண்டிக்கப்பட்ட குழந்தையின் குரலொலியானது தந்தையின் இதயத்தை நிரப்புகிறது (ஓசே 11:8-10; எரே 31:20). பாலஸ்தீனத்தில் மிக அரிதாகச் செவிமடுக்கப்பட்ட இச்செய்திகள், பாபிலோனிலுள்ள நாடு கடத்தப்பட்டவர்களுடைய குழுக்களால் மிக ஆர்வமுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டன. முன்னர்த் துன்புறுத்தப்பட்ட எரேமியா, இப்போது இறைவாக்கினர்களில் மிக உயர்ந்தவராக மதிக்கப்படுகிறார்.

நாடு கடத்தப்பட்டவர்களிடையிலேயே இறைவன் அவர்களுக்கு வாரிசுகளை உண்டாக்குகிறார். அவர்கள் துன்பங்களினிடையே மக்களை வழிநடத்தி ஆதரவளிப்பார்கள். புறவினத்தாருடைய படைகளின் வெற்றியானது, அவர்களது தெய்வங்களுடைய வெற்றியாகத் தோன்றியது. எனவே, சோதனையானது பாபிலோனிய வழிபாட்டினால் கவரப்படும் அளவிற்குக் கடுமையாக இருந்தது. ஆனால், இறைவாக்கு மரபானது சிலைகளை வெறுத்து, விட்டொழிக்குமாறு நாடு கடத்தப்பட்டோருக்குப் போதித்தது (எரே 10; எசா 44:9...; காண்க: பாரூ 6). இதைவிட மேலாக நாடு கடத்தப்பட்ட குருவாகிய எசேக்கியேல், ஒரு மகிமை மிக்க காட்சியில் ஆண்டவருடைய இயங்குதன்மையின் வெளிப்பாட்டைப் பெற்றார். இந்த ஆண்டவருடைய மகிமையானது ஆலயத்தில் பூட்டப்பட்டதன்று (எசே 1); மேலும், அவரது பிரசன்னமானது நாடு கடத்தப்பட்டோருக்குக் காணவியலாத புனித இடமாகும் (எசே 11:16).

3. புதிய இஸ்ராயேலின் தயாரிப்பு: இறைவனின் வார்த்தையே இறைவனுடைய பிரசன்னமாகும். இதன் அடிப்படையில் ஒரு வழிபாடு உருவாக்கப்பட்டு வளர்க்கப்படலாம். இவ்வழிபாடானது பலி வழிபாடாக இல்லாமல் செபக்கூட்டத்தின் திருச்சடங்காக இருக்கும். இறைவனுக்குச் செவிமடுக்க (புனித நூல்களை வாசித்து, விளக்கமளிப்பதன் மூலம்) தங்களை ஒன்று சேர்ப்பதையும், செபத்தில் இறைவனுடன் பேசுவதையும் இது தன்னுள் கொண்டுள்ளது. இவ்வாறாக, முழுவதும் இறைவனை நோக்கியவாறு, அவரிடமிருந்து மட்டுமே மீட்பை எதிர்பார்க்கின்ற எளியோரின் ஆன்மீக சமூதாயமானது அமைக்கப்பட்டது. இச்சமுதாயத்திற்குக் குருத்துவப் பிரிவானது புனித வரலாற்றை விவரித்து, சட்டத்தைக் கற்பிக்கும் பணியினை ஏற்றுக் கொண்டது. இப்பணியானது, பழைய நினைவுகள் மற்றும் கருத்துக்களின் தொகுப்பு மற்றும் புதுப்பிப்பாகிய ஒரு குருக்களின் பாரம்பரிய ஏட்டினை உருவாக்கியது. இவை இஸ்ராயேலை ஒரு புனித இனமாகவும் ஆண்டவருடைய குருத்துவ அரசாகவும் உருவாக்கின.

சிலை வழிபாட்டினால் தீண்டப்படுவதற்கு உட்படுவதினின்று மிகவும் அப்பாற்பட்ட நிலையில் புதுப்பிக்கப்பட்ட இஸ்ராயேலானது புறவினத்தாரின் நாட்டில் உண்மையான இறைவனுடைய தூதுவனாக உருவாயிற்று. இஸ்ராயேலானது "புறவினத்தாருக்கு ஒளியாக" இருக்கும் தன்னுடைய புதிய அழைப்பை ஏற்றது (எசா 42:6; 49:6). ஆண்டவருடைய உலகளாவிய ஆட்சியின் இறுதிக்கால நம்பிக்கையை நோக்கித் தன் கவனத்தைச் செலுத்தியது (எசா 45:14).

4. புதிய யாத்திரை: இந்த நம்பிக்கையானது எருசலேமில் மையம் கொண்டிருந்த வேளையில், அதனுடைய நிறைவேற்றமானது நாடு கடத்தப்படுதல் ஒரு முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டுமெனக் கோரியது. இரண்டாம் யாத்திரையின் அதிசயங்களை முன்னதாகவே விவரிக்கின்ற "ஆறுதலின் நூலில்" (எசா 40:55), இறைவன் தனது மக்களுக்கு வாக்களித்தது இதுவே. மீண்டும் ஒருமுறை ஆண்டவர் தாமே இஸ்ராயேலின் மேய்ப்பராவார். அவரே, குறிப்பாக மேய்ப்பன் (எசே 34:11-13), ஆடுகளை அவற்றின் மந்தைக்கு நடத்திச்செல்வது போல (எசா 40:11; 52:12), நாடு கடத்தப்பட்டவர்களைத் தேடிச் செல்வார். அவர்களுடைய தீட்டுகள் அனைத்தினின்றும் தூய்மைப்படுத்தி, புதியதோர் இதயத்தை அவர் அவர்களுக்கு அளிப்பார் (எசே 36:24-28). அவர் அவர்களுடன் ஒரு முடிவில்லா உடன்படிக்கையை நிறைவேற்றி (எசே 37:26; எசா 55:3), எல்லா நன்மைகளாலும் அவர்களை நிரப்புவார் (எசா 54:11-12). ஆண்டவருக்கு அஃது ஒரு மகத்தான வெற்றியாகும் (எசா 42:10-17).எகிப்திலிருந்தான யாத்திரையின் அனைத்து வியத்தகு செயல்களும் ஒன்றுமில்லாததைப் போல் தோன்றும் (எசா 35; 41:17-20; 43:16-21; 49:7-10).

உண்மையில் கி.மு. 538-இல் சைரசின் ஆணை பிறப்பிக்கப்பட்டது, ஆர்வ எழுச்சியும் பக்தியுமுள்ள யூதர்களை உயர்த்தியது. "அடிமைத்தளையினின்று காப்பாற்றப்பட்ட" (எஸ் 1:4) முக்கிய ஆண்களின் தன்னார்வக் குழுவானது எருசலேமிற்குத் திரும்பியது. இம்மனிதர்கள் யூத சமுதாயத்தின் அமைப்பு மற்றும் அதனுடைய ஆன்மீகப் பயிற்சி ஆகியவற்றின் மீது உறுதியான ஆதிக்கம் கொண்டிருந்தனர். பல்வேறு துன்பங்களுக்கிடையில் இதுவே மக்களின் உயிர்ப்பாக இருந்தது (எசே 37:1-14). இறைவனுடைய பிரமாணிக்கத்தைப் பறைசாற்றுகின்ற ஆச்சரியப்படத்தக்க சாட்சிகளாகவும், அதிசயிக்கும் நாடுகளின் முன்னிலையில் மகிழ்ச்சியுடன் பாடுபவர்களாகவும் திகழ்ந்தனர் (சங் 126).

5. நாடு கடத்தப்படுதலும் புதிய ஏற்பாடும்: இறைத்திட்டத்தின் மைய மறை பொருளுக்கு மரணம் மற்றும் உயிர்ப்பினுடைய அனுபவம், நாடு கடத்தப்படுதல் மற்றும் வெற்றிகரமாகத் திரும்பி வருதல் ஆகியவற்றுக்கிடையே உள்ள உறவு சாதாரணமானதைவிட மேலானதாகும் (எசா 53). இந்நிகழ்ச்சிகள் கிறிஸ்துவர்களுக்கு வளமிக்க பாடங்களாகத் தொடர்ந்து இருக்கின்றன. உண்மையில் ஓர் உயிருள்ள வழியானது உண்மையான புனிதத்தலத்திற்கு இலவச நுழைவுரிமையை உறுதிப்படுத்துகிறது (எபி 10:19; யோவா 14:6). ஆனால், இலவச நுழைவுரிமையை அடைவதென்பது, இறுதி இலக்கில் இருப்பதைப் போன்றதன்று. ஒரு நிலையில், "இந்த உடலில் குடியிருக்கும்வரை ஆண்டவரின் வீட்டினின்று தொலைவில் அலைகிறோம்" (2 கொரி 5:6). இவ்வுலகைச் சார்ந்தவர்களாக இல்லாமல் இவ்வுலகில் உள்ளவர்கள் என்ற நிலையில் (யோவா 17:16), தீமையுடன் உடன்படாதவராகிய இறைவனுடைய புனிதத்துவத்தைக் கிறிஸ்தவர்கள் எப்போதும் நினைவிற்குக் கொண்டுவர வேண்டும் (1 பேதுரு 1:15; 2:11-12). மேலும், கிறிஸ்துவில் விண்ணகத் தந்தையின் உறைவிடத்திற்கு நடத்திச்செல்லக்கூடிய இறைவனின் பிரமாணிக்கத்தை அவர்கள் நம்பியிருக்க வேண்டும் (எபி 11:16).

நாடு கடத்தப்படும் தண்டனை (BANISHMENT)

இஸ்ராயேல் மக்களுக்கு நாடு கடத்தப்படுவது என்பது யாவேயிடம் உள்ள அன்புறவைத் துண்டிப்பதாகும் (ஓசே 9:3-5; காண். ஆதி 4:14; எசே 11:5). இதைவிட மோசமானது சிலைகளை வழிபடக் கட்டாயப்படுத்தப்படுவதாகும் (உப 4:27-28; 1 சாமு 26:19; எரே 16:13). எனவே, விவிலியச் சட்டத்தில் இஃது ஒரு தண்டனையாகக் குறிப்பிடப்படவில்லை. எஸ் 7:26-இல் நாடு கடத்தப்படுதல் குறிக்கப்படுகிறது. இது சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுதலையே குறிக்கிறது (10:8).

கொலை செய்ததற்காகத் தேடப்படுபவன் தானாகவே வேறுநாட்டிற்கு ஓடிப்போவதே அவன் தப்பிப்பதற்குக் கடைசிப் போக்கிடமாகும். யாக்கோபு காரானுக்கும் (ஆதி 27:43), மோசே மிதியாவுக்கும் (யாத் 2:15), தாவீதின் பெற்றோர் மோவாபிற்கும் (1 சாமு 22:3-4), தாவீது காத்துக்கும் (24:1-4), அப்சலோம் கெசூருக்கும் (2 சாமு 13:38), எரொபவாம் எகிப்திற்கும் (1 அர 11:40), எலியா பெனிசியாவிற்கும் (17:9), உரியா எகிப்திற்கும் (எரே 26:21-23) ஓடிப்போதல் தானாகவே நாடு கடத்திக்கொள்ளும் தண்டனைக்கு எடுத்துக்காட்டுகளாகும். பழங்கால மேற்காசியாவில் அரசியல் அகதிகள் மற்றொரு நாட்டில் அடைக்கலம் புகுவது வழக்கமாகும் (2 சாமு 15:19; 1 அர 11:14-25). இத்தகைய அகதிகள் அவர்கள் நாட்டிற்குத் திரும்ப அனுப்பப்படுதற்குரிய நிபந்தனைகள் இத்திய உடன்படிக்கைகளில் காணப்படுகின்றன. விவிலியச் சட்டப்படி-எல்லாக்கொலையும் குற்றமே; ஆனால், அறியாமல் கொலை செய்தவன் அடைக்கல நகரத்திற்குச் செல்வது- ஒரு வகையில் நாடு கடத்துவதைப் போன்றதாகும் (எண் 35:32).

உரோமையர் சட்டப்படி நாடு கடத்துவதில் பல வகைகள் இருந்தன. அவை சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் மற்றும் குடியுரிமை இழத்தல் முதலியவை அடங்கிய நிலையான கடுமையான நாடுகடத்தலையும், ஒருவர் ஓர் இடத்தில் தங்குவதற்கான தடையும் தன் சொந்த இடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே குறிப்பிட்ட காலத்திற்கோ நிலையாகவோ தங்க வேண்டும் என்ற நிபந்தனையும் அடங்கிய கடுமை குறைந்த நாடு கடத்தலையும் உள்ளடக்கும். ஒரு தீவுக்கு நாடு கடத்தப்படுதல் சாதாரணமாய் வழக்கில் இருந்தது. தொடக்ககாலத் திருச்சபைப் பாரம்பரியப்படி இத்தகைய நாடு கடத்தலைத் திருவெளிப்பாட்டு நூல் ஆசிரியர் அனுபவித்தார் (திருவெளி 1:9).

நாடு கடத்தப்பட்டவர்கள், சிதறிப்போனவர்கள் (OUTCAST)

எட்டு முதல் ஆறாம் நூற்றாண்டுவரை அசீரியர்கள் பாபிலோனியர்களின் தொடர்ந்த படையெடுப்பால் இஸ்ராயேலைவிட்டு வெளியேறிய மக்களைக் குறிக்கப் பயன்படும் எபிரேயச் சொல்லின் பொருளாகும். ஆங்கில மொழியில் பயன்படுவதுபோல் சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட ஒருவரைக் குறிக்க இந்தச் சொல்லைப் பயன்படுத்துவதில்லை. யூதர்களுடைய பிரமாணிக்கமின்மையே இவர்கள் இந்த நிலையை அடைந்ததற்குக் காரணம் என விவிலியம் கூறுகின்றது. பழைய ஏற்பாட்டின் மற்றும் பிற்கால யூத இறுதிக்கால இயலின் முக்கிய கருத்து "சிதறிப்போன இஸ்ராயேலை" இறைவன் ஒன்று சேர்ப்பார்; அவர்கள் எருசலேமுக்குத் திரும்புவர் என்பதாகும் (சங் 147:2; எசா 11:12; 56:8).

நாடுகளின் அட்டவணை (TABLE OF NATIONS)

இஸ்ராயேலர் தொடர்புகொண்ட பழங்கால மக்களிடையே இருந்த உறவு முறையை மூதாதையர் பட்டியல் வடிவில் எடுத்துக்கூறும் சுருக்கமாகும் இது (ஆதி 10; 1 நாள் 1:4-24). இந்த அட்டவணை ஆபிரகாமின் வாழ்வு மற்றும் அழைப்புக்கு வரலாற்றுப் பின்னணியாக அமைகிறது; அந்த அளவில், மனுகுலம் முழுவதையும்பற்றிப் பேசும் தொடக்க நூலின் முன்பகுதிக்கும், இஸ்ராயேலின் தோற்றம் பற்றிய வரலாற்றுக்கும் இடையே ஒரு பாலமாக

அமைகிறது. இந்த நாடுகளின் அட்டவணை, நோவாவின் முதல் மகன் சேமின்மூதாதையர் பட்டியலில் கடைசியில் தருவதன் மூலம் ஆதி 10 இஸ்ராயேலின் மரபுக்கொடியை இறுதியில் வைத்து, மீண்டும் 11:10-இல் தொடர்கிறது. இஸ்ராயேல் எப்பேத்தைக் குலத்தலைவராகக் கொண்ட மக்களுடன் (10:2-5) குறைந்த அளவு தொடர்பே கொண்டிருந்தனர். எகிப்தியர் மற்றும் கானானியர்களான காமின் வழித்தோன்றல்களுடன் (10:6-19) இஸ்ராயேல் அதிகத் தொடர்பு கொண்டிருந்தது.

நாடுகளின் அட்டவணையில் வரும் பெயர்களுக்கு விவிலியத்துக்குப் புறம்பே ஆட்களின் அல்லது இடங்களின் பெயர்களாக, விளக்கம் அளிக்கப்படுகின்றன. இவற்றில் சில- உண்மையிலேயே இனப் பெயர்களாகும். நோவாவின் மூன்று புதல்வர்களை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள மூன்று பிரிவாக இந்நாடுகளைப் பிரிப்பது இன அல்லது மொழிப்பிரிவன்று. அரசியல் நோக்கத்திற்காக, பெரும்பாலும் புவியியல் அடிப்படையில் இப்பெயர்கள் பிரிக்கப்பட்டுள்ளன. சிறிய ஆசியா மற்றும் ஆகியன் கடலைச் சார்ந்த மக்களுக்கும், இடங்களுக்கும் மேதியர்களுக்கும் எப்பேத்து முன்னோர் ஆவார் (ஆதி 10:2-5). எகிப்தும் அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகளும், வட ஆப்பிரிக்கா, கிழக்கு மற்றும் மேற்கு அரேபியா, கிரேத்து லீதியா மற்றும் கானான் ஆகிய பகுதிகளும் காமின் வழித்தோன்றல்கள் வாழ்ந்த பகுதிகளாகும் (10:6-20). சேம், தென் அரேபியா, சீரியா, மெசபொத்தாமியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கும் அர்ப்பகசாது வழியாக இஸ்ராயேலுக்கும் முன்னோர் ஆவார் (10:21-31). சேமின் புதல்வர்களுள் ஏலாம் மற்றும் அசூரின் மெசபொத்தாமிய ஆதிக்கங்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும் (10:22), கூசு (எத்தியோப்பியா) மற்றும் காமின் வழித்தோன்றலான நிம்ரோது மெசபொத்தாமியாவில் அரசையும் நகரம் கட்டுதலையும் தொடங்கிவைத்ததாகக் கூறப்படுகிறது (10:8-12; காண். மீக் 5:6). ஆதி 10 நிகழ்ச்சியுரைப்பகுதிகளும் (10:8-12. 18:19. 25.30), மூதாதையர் பட்டியலும் சேர்ந்ததாகும். இந்த அதிகாரத்தில் காணப்படும் முரண்பாடுகளும் மற்றப் பிரச்சனைகளும் தொடக்க யாவே பாரம்பரியமும் பிற்காலக் குருக்கள் பாரம்பரியமும் கலப்பதால் எழுகின்றன என்று விளக்கப்படும்.

நாடுகள், இனங்கள் (NATIONS)

பொதுவாக அரசியல் அல்லது புவியியல் அடிப்படையில் குறிப்பிட்ட விதத்தில் இணைந்த மக்கள் குழு நாடு என்றழைக்கப்பட்டது. பழங்கால உலகில் நாடுகளின் வரலாறும் உறவுகளும் மூதாதையர் பட்டியல் அல்லது மரபுக்கொடி வாயிலாக எடுத்துக்கூறப்பட்டன. இத்தகைய கணிப்பு இன மற்றும் மொழிக்கூறுகளையும் பிரதிபலித்தது (ஆதி 10). நாடுகளைக் குறிக்கும் எபிரேய மற்றும் கிரேக்கச்சொல், யூதர் அல்லாதவரைச்சுட்டும்போது "புறவினத்தார்," "வேற்றினத்தார்" என்றும், எல்லா மக்களையும் குறிக்கும்போது "நாடுகள்" என்றும் மொழி பெயர்க்கப்பட்டது.

யாவே, இஸ்ராயேலுக்கு மட்டுமின்றி எல்லா நாடுகளுக்கும் (வேற்றினத்தார்) ஆண்டவரும் நடுவரும் ஆவார் (சங் 22:28; எசா 2:4; 34:1-2; எரே 1:10). இறைவன் ஆபிரகாமை இரு நோக்கங்களுக்காகத் தேர்ந்து கொண்டார். ஒன்று- ஆபிரகாமை ஒரு பெரிய இனம் ஆக்குவது; மற்றது- நாடுகளுக்கு (இனம்) ஆசி வழங்கக் கருவியாக ஆக்குவது (ஆதி 12:1-3; 18:18). யாத்திரை நிகழ்ச்சியின் பின்னுள்ள இறைநோக்கு ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதும் நாடுகளை ஆசீர்வதிக்க இஸ்ராயேலைக் கருவியாக்குவதும் ஆகும். இஸ்ராயேல் சிறப்பான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகும். அதன் நோக்கம், யாவேயின் பெயரையும் சித்தத்தையும் மற்ற இனங்களுக்கு அறிவிப்பதும், குருக்களின் அரசாக இருப்பதும் (யாத் 19:3-6; உப 4:5-8; 1

அர 8:60; சங் 67; எசா 9:3). "மக்களினத்திற்கு உடன்படிக்கையாகவும் வேற்றினத்தாருக்கு ஒளியாகவும் இருப்பதும்" (எசா 42:6) ஆகும். இஸ்ராயேல் இந்தக் கடமையில் தவறியது. ஆகவே, வேற்றினத்தாரிடையே சிதறடிக்கப்பட்டது (உப 4:27; ஆமோ 9:9). பாலஸ்தீனத்தில் வாழ்ந்த வேற்றினத்தார்மேல் அழிவையும் தீர்ப்பையும் கொண்டுவரும் கருவியாக இஸ்ராயேல் அமையும் (யாத் 34:24; உப 4:38).

புதிய ஏற்பாட்டில், இயேசு "புறவினத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளியாக" இருக்கிறார் (லூக் 2:32). அவரது பணி முதன்மையாக இஸ்ராயேல் மக்களிடையே ஆற்றப்பட்டது. ஆனால், அது யூதர் அல்லாதோரையும் உள்ளடக்கியது (மாற் 7:24-30). யூதர்களுக்காக மட்டுமன்றி எல்லா மக்களுக்காகவும் இயேசு மரித்தார் (யோவா 11:50-52). அவரது சீடர்கள் உலகமெங்கும் அனுப்பப்படுகின்றனர்; நற்செய்தி முழங்கி எல்லாரையும் சீடராக்க அனுப்பப்படுகின்றன (மத் 24:14; 28:19; காண். அ.ப. 1:8). இந்த ஊழியின் முடிவில் "எல்லாக்குலத்தையும் மொழியையும் இனத்தையும் நாட்டையும் சார்ந்த மக்கள்" இறையரசிலும் கிறிஸ்து போற்றுரையிலும் பங்கு பெறுவர் என்பது திருவெளிப்பாட்டு நூலின் பொதுத்தலைப்பாகும் (திருவெளி 5:9-10).

நாடோடி வாழ்க்கை (MOMADISM)

1. நாடோடி வாழ்க்கை என்பது ஒரே இடத்தில் நிரந்தரமாகக் குடியேறாமல் இன்று ஓரிடம் நாளை வேறு ஓரிடமாக அலைந்து திரிவது. இவர்கள் தங்கள் விலங்குகளுக்குத் தேவையான புல்வெளியை நோக்கி நகர்ந்து கொண்டே இருப்பார்கள். இவர்கள் மனம் போன போக்கில் குறிக்கோள் இன்றிச் செல்வது கிடையாது. இவர்கள் புல்வெளி நோக்கி, குறிப்பிட்ட வழியில் சென்றார்கள். யூதேயாவில் காணப்படும் பாலைவனப்பகுதியிலும் தாமிரா என்ற இனத்தவர்கள் தங்கள் எல்லையைக் குறிப்பிட்டு அதனுள் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார்கள். ஓர் இடத்தின் தட்பவெப்பநிலை, இடவமைதி, நிலவளம், நீர் வளம், தொழில் நுணுக்க முன்னேற்றங்களை வைத்தே எத்தகைய நாடோடி வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். எல்லாக் காலங்களிலும் எல்லா வகை நாடோடிகளும் காணப்படுகின்றார்கள். நாடோடிகள் வறியவர்களாக இருந்தாலும், நிலையாகக் குடியேறிய மக்களால் மதிக்கப்பட்டார்கள். நவீனக் கருவிகள் வைத்துள்ள மக்கள்கூட இவர்களின் திறமை, உடல் வலிமை, உடற்கட்டு இவைகளைக் கண்டு பயந்தார்கள்.

2. **நாடோடிகளின் வகைகள்:** மூன்று வகையான நாடோடிகள் உலகின் எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் காணக்கிடக்கின்றனர்.

அ. **வேட்டையாடுபவர்கள்:** வேட்டையாடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் அனைவரும் ஒரே வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் சில சமயங்களில் சமயச்சடங்குகளுக்காக ஓரினமாக ஒன்று கூடுவார்கள். அவர்களின் மக்கள் கூட்டம் காலத்தையும், கிடைக்கின்ற உணவின் அளவையும், இடத்தையும் பொருத்தது. அவர்கள் எவ்வளவுபேர்தான் இருந்தாலும் எல்லா வேலைகளையும் எல்லாரும் செய்ய வேண்டும். பெரும்பாலும் இவர்கள் செல்வத்தில் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். அவர்கள் சமூகம் மக்களாட்சித் தன்மையுடையது. வீட்டின் தலைவன் தந்தை. வீட்டுத் தலைவர்கள் அனைவரும் இணைக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள். வெளியிலிருந்து பெண்களைத் திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள். போரில் சிறை எடுத்துவந்து பெண்களை மணம் செய்து கொள்ளும் வழக்கம் அவர்களிடம் அரிதாக இருந்தது. தனிநபர் அரிதாகத்தான் மற்ற இனத்தாரோடு சேர்ந்து கொண்டனர். ஒருசிலர் ஆடு, மாடு மேய்ப்பவர்களாகவும் மாறினார்கள். ஆனால், இதுவரை கருதப்பட்டதுபோல், இது படிப்படியாகத் தோன்றியது அன்று.

ஆ. ஆடுமாடுகளை மேய்ப்பவர்கள்: ஆடு மாடுகளை மேய்ப்பவர்கள் தங்கள் தொழிலைக் காலத்திற்கும், இடத்திற்கும் இருக்கின்ற விலங்குகளின் நிலைக்கும் ஏற்றவாறு எப்போது, எங்கே மேய்க்க வேண்டும் என்று கணக்கிட்டுச் செய்தார்கள். வெள்ளாடுகள், செம்மறியாடுகள், கழுதைகள் இவற்றை ஓட்டிக்கொண்டு மெதுவாகப் புல்வெளியைத் தேடிச்சென்று கொண்டிருந்தனர். அரேபியாவிலுள்ள பெடுயீனர்கள் குதிரை, ஒட்டகம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். இவர்கள் விரைவாக நாடு முழுவதும் சுற்றிவந்தனர். அவர்கள் செல்வமே விலங்குகளின் பெருக்கத்தில்தான் உள்ளது. அவரவர்களுக்குக் குறிப்பிட்ட நிலப்பரப்புண்டு. அஃது அவர்களுக்குக் குடும்பச்சொத்தாகும். இவர்களில் பணக்காரர்களும் உண்டு. இவர்கள் வேட்டையாடித் திரிபவர்களைவிடத் தரத்திலும், பொருளாதாரத்திலும் உயர்ந்தவர்கள். பாலும், இறைச்சியுந்தான் அவர்களது உணவுப்பொருள். தோலினால் கூடாரம், தண்ணீர்ப்பை ஆகியவை, மயிரினால் ஆடைகளையும் செய்தார்கள். மக்களாட்சியைப் பின்பற்றினார்கள். இருந்தாலும், செல்வந்தர்களின் கையே ஓங்கி இருந்தது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறான வேலைகள் இருந்தன. ஆண்கள் வழக்கமாக விலங்குகளை மேய்த்துக்கொண்டு வருவார்கள். பெண்கள் உணவு தயாரித்தல், தோலைப்பதப்படுத்துதல், கூடாரம் அமைத்தல் ஆகியவற்றை முக்கியமான தொழிலாகக் கொண்டிருந்தார்கள். மற்ற இனத்திலிருந்தும் அல்லது அதே இனத்திலிருந்தும் பெண்களைத் திருமணம் செய்துகொண்டார்கள். இத்தகைய இனத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் நிலையாய்த் தங்கியிருந்து பயிர் செய்தார்கள். ஆனால், அவர்கள் நிலையான அமைப்புகளைக் கட்டவில்லை. ஆயினும் ஒரு சிலர் தங்கள் எல்லையின் ஓர் இடத்தில் தங்கி, பயிர்த்தொழிலை மேற்கொண்டார்கள்.

இ. பயிர்த்தொழில் செய்பவர்கள்: பயிர்த்தொழில் செய்பவர்கள் ஓரிடத்தில் நிலையாய்த் தங்கியிருந்து பயிர் செய்தார்கள்; நிலவளம் குன்றும் வரைக்கும் அங்கே தங்கியிருப்பார்கள். பிறகு, வேறொருவளமிக்க இடத்தை நோக்கி நகர்ந்து விடுவார்கள். இதுதான் அவர்களின் நடைமுறை. இவர்களை உண்மையிலேயே நாடோடிகள் என்று கூறுவதற்கு இல்லை.

3. ஒட்டகம் கழுதைகளைப் பயன்படுத்தும் நாடோடிகள்: தற்காலத்தில் வாழ்கின்ற பெடுயீனர்கள் பலர் ஒட்டகத்தைப் பயன்படுத்தும் நாடோடிகள். அவர்கள் குதிரையும் வைத்திருந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் உள்ள விவிலிய அறிஞர்களின் தவறு என்னவென்றால், தற்போது வாழ்கின்ற நாடோடிகளைப் போலவே குலமூதாதையர் வாழ்ந்திருப்பதாகக் கணிப்பதாகும். அதுவும் எவ்வித ஆதாரமும் இல்லாமல் இவர்களின் சமய சமூகப் பழக்கவழக்கங்களை அடிமைத் தனத்திற்கு முன்பிருந்த மக்களின் சமய சமூகப் பழக்கவழக்கங்களோடு ஒப்பிடுதல் தவறு ஆகும். குல மூதாதையர்கள் பற்றிய பல கதைகளில் ஒட்டகம் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 24:64; 31:34). ஆனால், இது கால வரிசைக்கு ஒவ்வாத ஒரு குறிப்பு என்று பலரும் கருதுகின்றனர். கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிதியானியர்கள்தாம் ஒட்டகத்தைப் பயன்படுத்திய முதல் நாடோடிகள் ஆவர். இந்த நூற்றாண்டில்தான் ஒட்டகம் வீட்டு விலங்காகப் பாதுகாக்கப்பட்டது. எனவே, இவ்வகையான தொழில் குலமூதாதையர்களின் கதைகளில் வருவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை. எரிகோவிலும், காதூலிலும் நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகள் நன்கு வளர்ச்சியடைந்த நகரங்கள் புதிய கற்காலம் வரை செல்லுகின்றன என்றும், நாடோடித் தன்மையும் நல்வாழ்வும்– இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட படிப்படியான மறுமலர்ச்சி அன்று என்றும் காட்டுகின்றன. மாறாக, குலமூதாதையர்கள் கழுதைகளைப்

பயன்படுத்தும் எகிப்திலுள்ள பெனி-ஆசான் இனத்தவர்போல் இருந்தார்கள் என்று கூறப்படுகின்றது. செக்கேமில் பெனி-ஆமோர் (கழுதையின் புதல்வர்கள்) குறிக்கப்பட்டுள்ளனர் (ஆதி 34:21தொ) என்பது கவனிக்கத்தக்கதாகும். குல மூதாதையர்களின் பழக்கங்களோடு ஒத்து வரும் எமோரியர்கள் மாரியில் கழுதைகளைப் பலியிட்டார்கள். கழுதை உண்மையிலேயே இழிவான விலங்கு அன்று. ஆனால் அந்தக் காலத்தில் அரசர்களும், தெய்வங்களும் ஏறிச்செல்லும் (செக் 9:9) வாகனமாகப் பயன்படுத்தப்பட்டது.

4. மேற்காசிய நாடுகளில் நாடோடித்தன்மை:

நமது நாகரிக வரலாற்றில் நாடோடிகள் திடீரென்று முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். கி.மு. 30-ஆம் நூற்றாண்டில் அக்காதியர்கள் குடியேறுகிறார்கள். கி.மு. 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எமோரிய நாடோடிகள் வளமிக்க இடங்களில் காணப்படுகின்றார்கள். அவர்களின் தாக்கத்தை மாரியில் காணப்படுகின்ற பதிவேட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவர்களில் ஒரு குழு முந்தைய குழுவின் கலாச்சாரங்களைப் பின்பற்றியது என்று அறிந்து கொள்ளலாம். கைக்சோஸ், அபிரு ஆகிய இரு குழுவினரும் செமித்திய நாடோடி மக்களையே பிரதிபலிக்கின்றனர் என்று சிலர் கருதுகின்றனர். கி.மு. 20-ஆம் நூற்றாண்டின் மத்தியில் அரமேயர்கள் காணப்படுகின்றார்கள். இஸ்ராயேல் கானானை வெற்றிகொண்ட காலத்தில், ஒட்டகத்தைப் பயணம்செய்யும் வாகனமாகப் பயன்படுத்திய மிதியானியர்கள் கிழக்கிலிருந்து தோன்றுகின்றனர். இக்காலங்களில்தான் ஏதோமியர்களும் மோவாபியர்களும் குடியேறினார்கள்.

இந்தச் செமித்திய நாடோடிகளைத் தவிர வடக்கிலிருந்த சமவெளிகளிலிருந்து மற்ற நாடோடி இனத்தவரும் தோன்றுகின்றனர். ஊரியர், இத்தியர், பின்பு மேதியர்கள், இன்னும் பிறகு பார்த்தியர்கள் போன்றவர்கள் மேற்காசிய நாடுகளில் நாடோடித் தன்மையைப் புதுப்பித்தார்கள்.

5. விவிலியத்தில் நாடோடி வாழ்க்கை:

அ. குல மூதாதையர்களின் காலம்: யாபால் என்பவர் காயீனுடைய வழித்தோன்றல். நாடோடிகளின் தந்தை என்று அழைக்கப்படும் இவர் ஆடுகளோடு கூடாரங்களில் தங்கியிருந்தார் (ஆதி 4:20). குல மூதாதையர்கள் நாடோடிகள் என்று சித்தரிக்கப்படுகின்றனர். ஆபிரகாம் இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்றதாகப் பார்க்கின்றோம் (ஆதி 13:3.5.18; 20:1; எபி 11:9). அவர் மந்தைகள் வைத்திருந்தார் (ஆதி 12:16). ஒட்டகம் வைத்திருந்தார் என்பது கால மயக்கமான தவறான குறிப்பாகும். ஆடு மேய்ப்பதற்கான உரிமை பற்றி லோத்தோடு உடன்படிக்கை செய்திருந்தார் (13:8தொ). ஆபிரகாமின் கூடாரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது (18:9-10).

இசுமயேலர்கள் அனைவரும் பழைய ஏற்பாடு முழுவதும், இக்காலத்திலும்கூட, அராபியர்களோடு உறவுள்ளவர்கள் (ஆதி 37:25; எசா 21:13). இசுமயேலின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய இறைவாக்கு அவருடைய நாடோடி வாழ்க்கையைச் சுட்டுகிறது (ஆதி 16:11). இசுமயேலரின் இடங்கள் மற்றும் குடியிருப்புகளின் பெயர்கள் எல்லாம் அராபியர்களுடன் தொடர்புடையவை என்பதை எடுத்துக்காட்டுகின்றன (25:13-18). தாவீதின்கீழ் ஓர் இசுமயேலர் ஒட்டகங்களைக் கவனிப்பவராக இருந்தார் (1 நாள் 27:30). இஸ்ராயேலர்களின் பகைவர்களான இசுமயேலர்களும் ஏதோமியர்களும் தொடர்புடையவர்கள் (சங் 83:6).

ஈசாக்கின் வாழ்வை நோக்கும்போது, அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஓரிடத்தில் குடியேறி அங்கே பயிர் செய்வார்; பிறகு வேறு ஓரிடத்திற்குப் பெயர்ந்திடுவார் (ஆதி 26:12). கழுதை அவருடைய சரித்திரத்தில் முக்கிய இடம் வகித்திருந்தது (ஆதி 22:3; 24:35; 30:43; 32:5). இஸ்ராயேலருக்கும், ஏதோமியர்களுக்கும்

இடையேயிருந்த உறவு மூதாதையர்களான யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் உள்ளதுபோல் இருந்தது.

யாக்கோபு லாபானிலிருந்து திரும்பியது, ஒரு நாடோடிக் கூட்டம் தனது கூடாரங்களில் மொத்தமாகத் திரும்பியது போல் காட்சியளித்தது (ஆதி 31:33). யாக்கோபின் புதல்வர்கள், எகிப்திலிருந்த யோசேப்பிடம் உணவு தேடிச்சென்றது, எகிப்திய பெனி - ஆசான் கதையைப்போல் உள்ளது (ஆதி 42; 46:34; 47:4). யோசேப்பின் கனவு அவரது குடும்பத்தினரின் நாடோடி வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது (37:5தொ).

கேனியர்களும் மிதியானியர்களும் கூடாரங்களில் வாழும் நாடோடிகள் (நீதி 5:24; 6:4-5). மிதியானியர்கள் ஒட்டகத்தின் மீது ஏறிச் செல்வது விவிலியம் அல்லாத பிற நூல்களிலும் காணப்படுகின்றது. எகிப்தில் நாடோடிகள் நடமாடும் பகுதிகளில் இஸ்ராயேலர் வாழ்ந்ததாகத் தெரிகிறது. மோசே ஆடுகளை மேய்க்கும் நாடோடிகளிடம் தஞ்சம் புகுந்தார் (யாத் 2:15தொ); ஆடுகளை மேய்த்தார் (யாத் 3:1தொ). தேனும், பாலும் பொழியும் நாடு பற்றிய வாக்குறுதி அடிமைகளை மட்டும் அன்று, நாடோடி வாழ்க்கை மேற்கொண்டவர்களையும் கவர்ந்தது. பாலைவனத்தில் பசுமையான இடம் எங்கெல்லாம் காணப்பட்டதோ அங்கெல்லாம் இஸ்ராயேலர் சென்றார்கள் (எண் 33:1தொ; காண். 10:31).

ஆ. கானான் வெற்றிக்குப்பின்: யோசுவா, நீதிபதிகள் நூல்களின் கானான் வெற்றியை விவரிக்கும்பொழுது கழுதையைப் பயன்படுத்திய நாடோடிக் கூட்டத்தைப் பற்றியும் குறிப்பு வருகின்றது (யோசு 15:18; நீதி 10:4; 12:14). இஸ்ராயேல் மக்கள் சிலர் கூடாரங்களிலும் வாழ்ந்தார்கள். குடியேறிய பின்னும் அவர்கள் தொடர்ந்து ஆட்டுமந்தைகளைக் கவனித்து வந்தார்கள் (உப 5:39; 2 சாமு 20:1; 1 அர 12:16). நாபால் கர்மேலில் ஆடுகளும், வெள்ளாடுகளும் வைத்திருந்தான் (1 சாமு 25:2). இஸ்ராயேலில் ஆரம்ப நாடோடி வாழ்க்கை மறக்க முடியாத ஒன்றாகும். கூடாரத்திலிருந்து எழுந்த கற்பனைகள், கவிதை, இறைவாக்கினர்களின் நூல்களில் இடம் பெற்றன (சங் 78:55; 104:2; உ.ச. 1:5.8. எசா 33:20; 40:22; எரே 10:20). இரேக்காபியர்கள் இவ்வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ்ந்தார்கள் (எரே 35:6 தொ). நகரச் சமூகத்தின் கெடுக்கிற கவர்ச்சிக்கும் சிலை வழிபாட்டுக்கும் எதிராக, இறைவாக்கினர் யாவரும் நாடோடி வாழ்க்கையை ஓர் எடுத்துக்காட்டான வாழ்வாகச் சித்தரிக்கின்றனர். இக்கருத்து "என் தந்தை நிரந்தரக் குடியற்ற அரமேயன்" (உப 26:5) என்ற அறிக்கையில் தெளிவாகக் கூறப்படுகிறது. எபிரேயர் என்ற சொல்லுக்கு "நிரந்தரக் குடியற்றவன்" என்று பொருள் கொள்வாரும் உளர்.

பிற்காலத்தில் வந்த நூல்களில் நாடோடிகள் கிழக்கிலும் (எரே 49:29), பாலைவனங்களிலும் வாழ்ந்தார்கள் (25:24). இவர்கள் அராபியர்கள் என்று ஏற்கெனவே அழைக்கப்பட்டிருக்கலாம் (எசா 13:20). இவர்கள் யசோபாத்துக்கு எருமைகளையும், ஆடுகளையும் வரியாகச் செலுத்தினார்கள் (2 நாள் 17:11). யோபுவின் கதை நாடோடித் தன்மையையும் நிரந்தரமான வாழ்வுத் தன்மையையும் பின்னணியாகக் கொண்டுள்ளது (யோபு 1:3.14.17.19; 6:18-19).

இ. நாடோடிகளுக்கும் நிரந்தரக் குடிகளுக்குமிடையே போராட்டங்கள்: பாலைநிலங்களுக்கும் பயிர் நிலங்களுக்கிடையேயும் நாடோடிகளுக்கும் நகரக் குடிகளுக்கிடையேயும் நடைபெறுகின்ற போராட்டம் வரலாறு முழுவதும் காணப்படுகின்றது. பஞ்சகாலங்களில் இப்போராட்டம் இன்னும் தீவிரமடைகின்றது. அப்போது வேட்டைப்பொருட்களும், புல்வெளிகளும் இல்லாமல் போவதுண்டு. உணவிற்காக நாடோடிகள் விளைநிலங்களின் மேல் படையெடுப்பார்கள். இதனால் அவர்கள் எல்லைப்பகுதி ஒவ்வொரு நாளும்

மாறிக்கொண்டே இருக்கும். நாடோடிகள் படையெடுத்து அயலாரின் அல்லது பகைவர்களின் பெண்களைக் கவர்ந்துசென்று மணம் புரிவார்கள். இதன் விளைவாக நாடோடிகள் தங்கள் பழக்க வழக்கங்களில் சிலவற்றைக் கைவிடுவதும் உண்டு. இப்போராட்டத்தில் பெரும்பாலும் நாடோடிகளே வெற்றி பெற்றனர். இதற்கு, இஸ்ராயேலர் கானானையும், எமோரியர்கள் மாரியையும் வென்றதைச் சான்றாகக் கூறலாம்.

இத்தகைய படையெடுப்பையும், வெற்றிகளையும் விவிலியத்தின் முதல் பகுதியிலிருந்தே நாம் பார்க்கின்றோம். காயீன் ஆபேலைக் கொன்றான் (ஆதி 4:8.17); பாபிலோன் கோபுரம் (ஆதி 11); சோதோம் கொமோரா (ஆதி 12:13; 18:19) என்பன ஒழுக்கமற்ற நகர வாழ்க்கை பற்றிய அவநம்பிக்கையைக் காட்டுகின்றன; யாக்கோபு-ஏசாவின் பகைமை உணர்ச்சி, ஆபேல்-காயின் பகைமையைப் புதுப்பிக்கிறது (25:27தொ). இஸ்ராயேலர்கள் கானானியர்கள் மீது படையெடுத்தார்கள்; வெற்றி கொண்டனர்; அதன் கலாச்சாரத்தை எதிர்த்தனர்; ஆனால், பதிலடியாக இவர்கள் மிதியானியர்கள், மோவாபியர்கள், அம்மோனியர்களின் தொல்லைக்கு ஆளானார்கள். நிலையாகக் குடியேறும்வரை இஸ்ராயேலர் விவசாயத்தில் முழுமூச்சாக ஈடுபடவில்லை. நாகரிகமடைந்த இஸ்ராயேல் மக்களுக்கும் வளர்ச்சி அடையாத இஸ்ராயேல் மக்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நடந்தன. நாடோடிகளின் கடவுளுக்கும் கானானியர்களின் கடவுள்களுக்குமிடையே போராட்டம் ஏற்பட்டது.

ஈ. எடுத்துக்காட்டான நாடோடி வாழ்க்கை: இறைவாக்கினர்கள் நாத்தான் முதல் எலியா வரை அனைவரும் நாடோடி வாழ்க்கையைப் போற்றி வாழ்ந்தார்கள். இஃது இரேக்காபியர்களின் காலத்தில் உச்சநிலையை அடைந்தது. திருமுழுக்கு யோவான் மற்றும் கும்ரான் பாரம்பரியங்கள், நகரச் சமூகங்களின் சோதனைகளிலிருந்து பின்வாங்கும் இதே போக்கைப் பிரதிபலிக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர்.

பயிர்த்தொழில் செய்த நாடோடிகள் திராட்சையைப் பயிரிடவில்லை. அதைப் பயிர் செய்வது தவறு (எரே 35:7.9) என்று கருதினார்கள். இரேக்காபியர்களும் இக்கால முகமதியர்களும் திராட்சை ரசம் குடிப்பதில்லை. ஒருவேளை நோவாவின் கதையும் (ஆதி 9:21 தொ), லோத்தின் கதையும் (19:30 தொ) குடிப்பதின்மீது ஒருவித வெறுப்பு உணர்ச்சியை உண்டாக்கி இருக்கலாம் (லேவி 10:9; உப 32:32). நசரேயர்களும் குடியைத் தவிர்த்தனர் (1 சாமு 1:15; லூக் 1:15).

இந்த நாடோடி மக்கள் கடுமையாகச் செயல்படுத்தப்பட்ட ஒரு வகையான நல்லொழுக்கத்தையும் குணநலன்களையும் பழக்க வழக்கங்களையும் பெற்றிருந்தார்கள். இரேக்காபியர்கள், புற இனத்தாரின் பழக்க வழக்கங்களை அழித்துவிட்டு இஸ்ராயேல் கூடாரங்களில் வாழ்வதே இறைமக்களுக்கு உரியதாகும் என்று தூண்டுகின்றனர் (எரே 35:9-10).

இஸ்ராயேலில் மக்களிடையே மக்களாட்சி வளர்ந்துவந்தது. இஃது உடன்படிக்கைச் சட்டங்களிலும், வரலாறு பற்றிய உபாகமக்கருத்திலும், அரசர்கள் பற்றிய அதன் தீர்ப்பிலும் பிரதிபலிக்கின்றது. இப்போக்கு அரசாட்சிக்கு எதிரான சாமுவேலின் பேச்சிலும் (1 சாமு 8:10தொ), அவரது சுய வாழ்க்கை விளக்கத்திலும் (12:1தொ) உச்சநிலை அடைகிறது. கிதியோன் நடத்தையும் (நீதி 8:23), மரத்தின் உவமையும் (9:8தொ) இதே போக்கைக் கொண்டுள்ளன.

உ. பல்வேறு பழக்கவழக்கங்கள்: விவிலியத்துக்குப்புறம்பே, கழுதையைப் பயன்படுத்திய செமித்திய நாடோடிகள் பற்றிய தெளிவான விவரிப்பைப் பெனி-ஆசன்

கொடுக்கிறார். அந்த இனத்தில் 37 குடும்பங்கள் இருந்தன. அவர்கள் கம்பள அங்கிகளையும், காலில் செருப்பும் அணிந்திருந்தார்கள். கையில் வில்லும், அம்பும், ஈட்டியும் வைத்திருந்தார்கள். விலங்குகளின் தோலினால், வாழ்கின்ற கூடாரம் முதல் தண்ணீர்ச் சித்தைகள் வரை செய்து கொண்டார்கள். தற்கால அராபியர்களின் கூடாரத்தைப்போன்றே, அக்கால இஸ்ராயேல் மக்களின் கூடாரமும் இருந்திருக்கலாம் (எசா 33:20). ஆடுகளை மேய்ப்பதற்கென்று குறிப்பிட்ட இடங்களை மரபுமுறையாலும் உடன்பாடுகளாலும் ஒழுங்கு செய்துகொண்டனர்.

பழிவாங்கும் தன்மை அவர்களிடம் நிறைந்து காணப்பட்டது; எனவேதான், "பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண்" (யாத் 21:24; லேவி 24:20). பழிவாங்குதல் ஒருவன் அவனது எதிரியோடு சமமாவதற்கு மட்டுமன்று; அவனது அமைப்பிலே ஏற்பட்ட பழுதைச் சரிப்படுத்தவும் பயன்பட்டது. இலாமேக்கின் பாடல் இதற்கோர் எடுத்துக்காட்டு (ஆதி 4:23:24).

ஆனால் இதற்கு நேரிடையாக, விருந்தோம்பல் என்பது போற்றிப் பாதுகாக்கப்பட்டது (எபி 13:2; காண். ஆதி 18:1தொ). ஆனால், இப்பழக்கம் சீசராவின் கொலையில் பயங்கரமாக முறிக்கப்பட்டது (நீதி 4:17 தொ).

நாட்டின் நடுவு (CENTRE OF THE LAND)

செக்கேமுக்கு அருகிலுள்ள ஒரு மலையின் இடுபெயராகும். இஃது அப்பகுதியின் மிக உயர்ந்த பகுதியும் மையமுமாக விளங்கிய (நீதி 9:37) கெரிசிம் மலையைக் குறிக்கலாம். எசே 38:12-இல் வரும் நாட்டின் நடுவு நாட்டின் மையப்பகுதியோ, பல நடுவு நாட்டின் மையப்பகுதியோ, பல சாலைகள் சந்திக்கும் இடத்தையோ, உலகின் மையமாகிய (காண். எசே 5:5) எருசலேமையோ குறிக்கலாம். சில மொழிபெயர்ப்புகள் சொற்றொடரை உலகின் "நாபி" அல்லது கொப்பூழ் என்று குறிப்பிடுகின்றன. இஃது உலகின் முக்கிய பகுதிகளான பூமி, விண்ணகம், கீழ் உலகம் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் "நாபியாக" ஒரு நகரை அல்லது புனிதத்தலத்தைப் பற்றிய பழங்காலக் கருத்தைச் சுட்டுகிறது. இக்கருத்து மிட்ராசிக் யூத ஏடுகளில் காணப்படுகிறது. ஆனால், எபிரேயச் சிந்தனையில் கிரேக்கர் காலம் வரை வளர்ச்சியடைந்ததாகக் காணப்படவில்லை.

நாட்டைப் பங்கீடு செய்யும் சட்டம் (LAND LAWS)

ஐந்நூலில், ஒவ்வொரு கோத்திரத்துக்கும் பாலஸ்தீனத்தில் எவ்வெப்பகுதி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், அதைக் காத்துக்கொள்வதற்கு என்னென்ன விதிகள் உள்ளன என்பதற்கான சட்டங்கள் உள்ளன (எண் 27:5-11; 36:5-9; உப 19:14; 27:17). ஏழாம் ஆண்டான ஓய்வு ஆண்டுக்கும் உரிய நில விதிமுறைகளும் உள்ளன (யாத் 23:10-11; லேவி 25).

நாணயம், பணம் (MONEY)

1. காசுகள் அறிமுகப்படுத்தப்படும் வரை, பழங்காலச் சமூகங்களில், பொதுவான பரிமாற்றச் சாதனம் உலோகங்களை எடைபோட்டுக் கொடுப்பதாகும். இக்காரணத்தினாலேயே, பழைய ஏற்பாட்டில் பரிமாற்ற அளவைகள் பற்றிய குறிப்புகள், எடை அளவுகளைப் பற்றியனவாக உள்ளன; காசுகளைக் குறிக்கவில்லை. கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் சிறிய ஆசியாவில் முதல் முறையாகக் காசுகள் அச்சிடப்பட்டன. பின் இம்முறை படிப்படியாக, முதலில் கிரீசில், ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாணய உலோகங்களின் எடையை நிர்ணயிக்கவும் உத்தரவாதம் அளிக்கவும் இம்முறை உதவியது. ஒரு காசின் எடையே இன்னும் அதன் மதிப்பின் அடிப்படை அளவையாக இருந்தது. பண்டமாற்று முறையும் மற்றப் பணமாற்ற முறைகளும் ஒருபோதும் வழக்கிலிருந்து முழுவதும் நீங்கிப் போகவில்லை. காசுகளின் தோற்ற மதிப்புக்கும் அவைகளில் வாங்கும் மதிப்புக்கும் இடையிலான வேறுபாடு மிகுந்த விரைவான பணவீக்கக் காலத்தில், பரிமாற்ற மூலமுறைகள் மீண்டும் பயன்பட்டன.

II. பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வெள்ளி உலோகந்தான் பரிமாற்றத்தில் மிகவும் பொதுவாகப் பயன்பட்டது. ஆகவே, வெள்ளி என்ற சொல் அனேக தரம் கூறப்படுவதில்லை; மாறாகப் பணம் என்று குறிப்பிடப்பட்டது. நாணய உலோகங்களை எடைபோட மிகவும் பொதுவாகப் பயன்பட்ட எடையளவுகள் செக்கேலும் (ஏறக்குறைய 11.4 கிராம்), தாலந்தும் (ஏறக்குறைய 34.27 கிலோ கிராம்) ஆகும். நாணய உலோகத்தின் அறியப்படாத அளவுகள் பல இடங்களில் குறிக்கப்படுகின்றன (ஆதி 33:9; யோசு 24:32; யோபு 42:11).

ஆகா 1:6 காசுகள் பயன்படுதலைக் குறிக்கலாம். நெகே 5:15; 10:32-இல் வரும் செக்கேல் பழைய செக்கேல் எடையுள்ள பாரசீகக் காசாக இருக்கலாம். திரக்மா, தாரிக்கு என்ற அளவைகளும் பயன் பட்டுள்ளன (1 நாள் 29:7; எஸ் 2:69; 8:27; நெகே 7:70-72). 8.4 கிராம் எடையுள்ள பாரசீகத் தாரிக்கு கி.மு. 515-இல் முதலாம் தாரியுவால் அச்சடிக்கப்பட்டது.

III. புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டுக்கு மாறாக, புதிய ஏற்பாட்டில் காசுகள் அடிக்கடி குறிக்கப்படுகின்றன. கிரேக்க உரோமை உலகின் அடிப்படையான நாணய அளவைகள் கிரேக்கத் திராக்மாகவும் (லூக் 15:8-9), அதற்குச் சமமான, உரோமைத் தெனாரியுவும் (மத் 18: 28; 20:2-13; 22:19; மாற் 6:37 இணை; லூக் 7:41; 10:35; திருவெளி 6:6) ஆகும். இவைகளின் எடை 3-4 கிராம் ஆகும். இவை வெள்ளியிலானவை. ஓர் உழைப்பாளியின் ஒரு நாள் கூலிக்குச் சமமானதாகும் (மத் 20:2).

திரக்மாவைவிட அதிக மதிப்புடைய கிரேக்க நாணய அளவைகள் பழங்கால மெசபொத்தாமிய எடைத் திட்டத்திலிருந்து வந்திருக்கலாம். ஒரு கிரேக்கத் தாலந்து (மத் 18:24; 25:15-18) ஏறக்குறைய 6000 திராக்மா மதிப்புடையதாகும். தாலந்து நாணய அளவையானாலும் அவ்வளவு உயர்மதிப்புடைய காசு ஒருபோதும் அச்சடிக்கப்படவில்லை. ஒரு "மினா" (லூக் 19:13-15) 100 திராக்மா மதிப்புடையதாகும். ஒரு செக்கேல் அல்லது தெத்திராக்மா (மத் 17:27) நான்கு திராக்மாக்களுக்குச் சமமானதாகும். திதிராக்மா (2 திரக்மா) புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அச்சடிக்கப்பட்ட காசன்று; ஆனால், யூதர்கள் செலுத்திய வருடாந்திர ஆலய வரியைக் குறிக்கும் சொல்லாகும் (மத் 17:24: காண்க. 30:13; 38:26). மத் 10:9-இல் வரும் "பொன்" உரோமையரின் பொற்காசாக இருக்கலாம். இது 25 தெனாரியு மதிப்புடையது.

செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களிலும் சிறிய மதிப்புடைய காசுகள் அச்சடிக்கப்பட்டன. இவற்றில் உரோமை அஸ் அல்லது அசாரியோன் (மத் 10:29) 1/16 தெனாரியு மதிப்புடையது; உரோமைக் குவாத்ரன் (மத் 5:26; மாற் 12:42) 1/4 அசாரியோன் மதிப்புடையது. "லெப்தோன்" (மாற் 12:42 இணை; லூக் 12:59) செம்பால் செய்யப்பட்டது; 1/2 குவாத்ரன் மதிப்புடையதாகும்.

இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாசுக்கு அளிக்கப்பட்ட 30 வெள்ளிக் காசுகளின் (மத் 26:15; 27:3-6) மதிப்பு குறிக்கப்படவில்லை. யாத் 21:32-இன் அடிப்படையில் மதிப்பிடப்பட்டால், இக்காசுகள் ஆலயக் கருவூலத்தில் பயன்பட்ட தீரியச் செக்கேல் ஆகும் (மத் 22:19; யோவா 2:15).

IV. யூதக் காசுகள்

பேரரசு அதிகாரிகள், அவர்கள் பாரசீகர்கள், கிரேக்க மாசிதோனியர்கள் அல்லது உரோமையர்களாகவே இருந்தாலும், நாணய உரிமைகளைக் கவனமாகக் கட்டுப்படுத்தினர். யூதேயாவின் முதல் காசு-யூதக்காசு அன்று; கிரேக்க முறையில் செய்யப்பட்ட, யூதேயாவாகிய பாரசீக மாகாணத்தின் வெள்ளிக்காசாகும். யூதர்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஏழாம் அந்தியோக்கு சிதேத்து என்ற செலூக்கியப் பேரரசன் நாணய உரிமையை அசமோனியப்

பெரிய குருவான சீமோனுக்கு அளித்தார் (1 மக் 15:6; கி.மு. 139). ஆனால், பிற்பாடு தனது வாக்குறுதியை அந்தியோக்கு மறுத்துவிட்டார். ஆகவே, ஒரு வேளை சீமோன் காசுகளை அச்சடிக்க வில்லை எனலாம். அவருக்குப்பின் வந்த முதலாம் யோவான் இரிக்கானு, செலூக்கியப் பேரரசு பலவீனமாய் இருந்த காலத்தில் கி.மு. 111-110-ஐ ஒட்டி முதலாவது யூதக் காசுகளை அச்சடிக்கத் தொடங்கினார். இவை வெள்ளிக் காசுகள் அல்ல; சிறிய வெண்கலக் காசுகளாகும். இத்தகைய காசுகளை, அசமோனிய மற்றும் ஏரோதியப் பாரம்பரியத்தைச் சேர்ந்த யூத ஆட்சியாளர்கள், தொடர்ந்து அச்சடித்து வந்தனர். யூதேயா உரோமை ஆளுநரின் நேரடி ஆட்சிக்கு வந்தபின் பேரரசரின் பெயர், ஆட்சி ஆண்டு ஆகியவை கொண்ட இத்தகைய காசுகளை ஆளுநர்களே அச்சடித்து வெளியிட்டனர். கி.பி. 60-70 மற்றும் 132-135-இல் நடந்த கிளர்ச்சிகளின் காலத்தில் வெளியிடப்பட்ட யூத அரசுகளின் வெள்ளிக்காசுகள் கிளர்ச்சியின் முக்கிய அறிவிப்பாக இருந்தன.

நாணயம் மாற்றுவோர் (MONEY CHANGERS)

இன்றைய வங்கிப் பணியாளர்கள் செய்வதைப்போன்ற சில பணிகளைச் செய்து வந்தவர்கள்தாம் அன்றைய நாணயம் மாற்றுவோர். அவர்கள் பல நாட்டு அல்லது பிராந்தியங்களின் பணத்தை மாற்றிக்கொடுக்கும் பணியையும் செய்தனர். இத்தகைய பணிகளுக்காகச் சிறிய அளவிலான கட்டணத்தைப் பெற்று வந்தார்கள்.

இஸ்ராயேல் மக்களில் இருபதும் அதற்கு மேற்பட்ட வயதும் அடைந்த ஒவ்வொருவரும் அரைச்செக்கேல் செலுத்த வேண்டுமென்ற சட்டம் இருந்தது (யாத் 30:11தொ). இது புதிய ஏற்பாட்டுக்காலத்தில் தீரியன் வெள்ளி நாணயத்தால் கட்டப்பட வேண்டும். எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இக்கடமையைச் சரியாக நிறைவேற்ற நாணயம் மாற்றுபவர்களின் உதவி அவசியமாகத் தேவைப்பட்டது. மிஸ்னாவின்படி, பாஸ்கா விழாவிற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே இந்தப் பணியாளர்கள் மாகாணங்களுக்குச் சென்று இந்த நாணயம் மாற்றும் வேலையைத் தொடங்குவர். பத்து நாட்களுக்குப் பிறகு வெளி நாடுகளிலிருந்து திருப்பயணிகள் அதிக எண்ணிக்கையில் வர ஆரம்பித்துவிடுவதால் இந்த நாணயம் மாற்றுபவர்கள் தங்கள் பணியைக் கோவில் மன்றங்களுக்கு மாற்றுவர்.

இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைந்த பின்னர் முதல் வேலையாக கோவிலைத் தூய்மை செய்தார். நாணயம் மாற்றுபவர்களையும் விரட்டினார் (மத் 21:12தொ; மாற் 11:15தொ; லூக் 19:45தொ; யோவா 2:13தொ). விலங்குகளையும், பறவைகளையும் வியாபாரம் செய்தவர்களை வெளியே விரட்டினார். எரே 7:11-ஐச் சுட்டிக்காட்டி ஆண்டவனின் ஆலயம் கள்வர்களின் குகையாகி விட்டதாகக் குற்றம் சாட்டினார்.

கோவிலிலிருந்த நாணய மாற்றுபவர்கள் கீழ்த்தரமானவர்களாகக் கருதப்பட்டுவந்தாலும், இந்நிகழ்ச்சியின் உண்மைப் பொருள் தெளிவாகத் தெரியவில்லை. இயேசு, தமக்கும் பேதுருவுக்கும் உரிய அரைச் செக்கேல் வரியைச் செலுத்தினார் (மத் 17:24தொ); குணமடைந்த தொழுநோயாளியைக் காணிக்கை செலுத்தக் கட்டளையிட்டார் (மத் 8:4; மாற் 1:44; லூக் 5:14). ஆகவே, ஆலயத்தையும் அதன் பலிகளையும் பேணுவதை இயேசு எதிர்க்கவில்லை என்பது தெளிவாகிறது. ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததால் கோவில் வழியாக எந்தப்பொருளையும் எடுத்துச் செல்வதைத் தடுத்தார் (மாற் 11:16). இது பரிசேயர்களின் சட்டத்துடன் ஒத்ததாகியது. ஏனென்றால் அவர்களின் சட்டப்படி, ஆலயப் பகுதிகளைக் குறுக்குவழியாக மாற்றுவது தடைசெய்யப்பட்டது. கடவுளை வழிபடுவதற்குத் தேவையான பொருட்களை எளிதில் பெறும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்த வியாபார அமைப்புகளை இயேசு ஏன் விரட்டினார் என்ற கேள்வி எழுவதுண்டு.

இதற்கு முக்கியக் காரணம், நாணயம் மாற்றுவோரும் மற்றவர்களும் அநியாயமாக பணம் வசூலித்ததுதான். இன்றைய யூத ஆதாரக் குறிப்புகள் இக்கருத்தை நேரடியாக ஏற்க மறுக்கின்றன. ஒரு வல்லுநரின் கருத்துப்படி, இவர்கள் பெற்ற அதிகமான இலாபத்தைத் தாங்களே வைத்துக்கொண்டார்கள் எனத் தெரிகிறது. மற்றவர்கள், இவர்களின் வருமானம் பொது நலனுக்காகச் செலவிடப்பட்டதாகக் கருத்து தெரிவிக்கின்றனர்.

பலியிடுவதற்கான புறாக்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன. ஒரு முறை இதன் விலை மிக அதிகமாகச் சென்றபோது, அப்போது தலைமையிடத்தைப் பெற்றிருந்த சிமியோன் (கமாலியேலின் மகன்), சட்டத்தை மாற்றிச் சட்டப்படியான பலிகளின் எண்ணிக்கையைக் குறைத்தார். அதனால் புறாக்களின் விலையும் குறைந்தது.

இயேசு செய்த சீர்திருத்தச் செயலிலிருந்து, தீய குருக்களின்பால் அன்றைய மக்களின் நிலையையும் பரிசேயர்களின் நிலையையும் அறிகிறோம். அன்றைய உரோமை ஆட்சியாளர்களுக்குக் கையூட்டுக் கொடுத்து இவர்கள் பதவி பெற்றனர். மக்கள் வெறுப்படைந்த நிலையில் வாழ்ந்தனர். நாணயம் மாற்றுபவர்கள் மிக அதிக அளவில் வரி விதித்து வசூல் செய்த காரணத்தால்தான் இயேசு கோபத்துடன் இத்தகையோரை அடித்து விரட்டினார் எனலாம்.

இத்தகைய தீய பழக்கத்திற்கு எதிராக இயேசு சினம் கொண்டார் என்று கருத வேண்டியதில்லை. "கள்வர் குகை" (மத் 21:13; காண். எரே 7:11) என்ற சொற்றொடரால் அது குற்றங்கள் நடந்த இடம் என்று பொருள் கொள்ளவில்லை. மாறாக, அவ்விடம் குற்றம் புரிவோருக்கு ஓர் அடைக்கல இடமாக மாறிவிட்டது என்று கூறுகிறார். இதைவிட, புறவினத்தாரின் முற்றத்தில் இந்த வியாபாரத் தொழிலைச் செய்ததன் வாயிலாக, ஆலயத்தில் இஸ்ராயேலின் கடவுளுக்குப் புறவினத்தார் செய்த வழிபாட்டைத் தடைசெய்தனர். ஆகவே அதை எதிர்க்கிறார் இயேசு.

நாணல் (REED, RUSH)

பாலஸ்தீனத்தில் பலவகையான உயரமான புற்கள் வளர்கின்றன. சாக்கடலில் கலக்கும் நீரோடைகளின் ஓரங்களிலும், யோர்தான் பள்ளத்தாக்கிலும், "கூலே" ஏரிப்பகுதிகளிலும் இத்தகைய நாணல்கள் ஏறக்குறைய 15-20 அடி உயரம் கூட வளர்கின்றன. இத்தகைய நாணல்களில் கனமானவை, நடந்து செல்வதற்குப் பயன்படும் ஊன்றுகோல்களாகப் பயன்பட்டன (2 அர 18:21; எசா 36:6 எசே 29:6). இத்தகைய தண்டுகள் அளவுகோல்களாகவும் பயன்பட்டன (எசே 40:3.5; திருவெளி 11:1; 21:5). நாணல் பலவீனத்தின், குறிப்பாக ஏமாறச்செய்கிற பலவீனத்தின், அடையாளமாக உருவகப்படுத்தப்படுகிறது. காற்றுக்குக்கூட வளைந்து கொடுக்கும் தன்மைக்கும் இஃது உதாரணமாகக் கூறப்படுகிறது (மத் 11:7; லூக் 7:24); நீரில் அசையக்கூடியதெனவும் கூறப்படுகிறது (1 அர 14:15). யாவேயின் ஊழியன் வளைந்த நாணலை முறியார் (எசா 42:3). நாணலை ஊன்று கோலாகப் பயன்படுத்தும்போது, எளிதில் ஒடிந்துவிடும்; அவ்வாறு ஒடியும் பொழுது அதன்பிசிறுகள் கைகளில் குத்தும். அத்தகையதே எகிப்தியர் யூதாவுக்குச் செய்யும் உதவி (2 அர 18:21; எசா 36:6; எசே 29:6-7).

நாணற்படகு (SKIFF)

இஃது ஒருவகையான படகாகும்; வேகமாகப் போகக்கூடியது. யோபு தம் வாழ்நாள்கள் நாணற்படகு போல விரைந்தோடுகின்றன என்று புலம்புகின்றார் (யோபு 9:26).

நாதபாத்து (NADABATH)

யோனத்தானும் சீமோன் மக்கபேயுவும் தம் சகோதரர் யோவானைப் பிடித்துத் தூக்கிவிட்ட நபத்தேய இனத்தைச்சேர்ந்த யாம்பிரியின் மக்கள், நாதபாத்திலிருந்து மேதபா வரை திருமண

ஊர்வலமாக வருவதைக் கேள்விப்பட்டு, வரும் வழியில் பதுங்கியிருந்து யாம்பிரியின் கூட்டத்தைத் தாக்கினர். இந்த நாதபாத்து மேதபாவுக்குத் தெற்கில் 2 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் எத்தெயிமாக அல்லது மேதபாவுக்கு வடமேற்கிலுள்ள இக்கால ஏன்–நெபா (பழங்கால நெபோ) ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நாதாபு (NADAB) – (யாவே) தாராள முள்ளவர்)

1. ஆரோனின் நான்கு பிள்ளைகளுள் மூத்தவர். இவரும் இரண்டாவது மகன் அபிகூவும் எப்பொழுதும் சேர்ந்தே குறிப்பிடப்படுகின்றனர் (யாத் 6:23; எண் 3:2; 1 நாள் 6:3).

இவர் மோசே, ஆரோன், அபிகூ மற்றும் இஸ்ராயேலின் எழுபது பெரியோர்களுடன் சீனாய் மலையில் உடன்படிக்கையை உறுதிப்படுத்தும் சடங்கில் பங்கேற்றார் (யாத் 24:1.9தொ). மேலும் இவர் குருத்துவ ஊழியமும் புரிந்தார் (யாத் 28:1). நாதாபும், அபிகூவும் தங்களுக்குக் கட்டளை இட்டிருந்ததை மீறி ஆண்டவர் திருமுன் வேற்று நெருப்பைச் சமர்ப்பித்தனர் (லேவி 10:1; எண் 3:4). உடனே ஆண்டவரிடமிருந்து நெருப்புப் புறப்பட்டு அவர்களை எரித்தது. அவர்கள் ஆண்டவர் முன்னிலையிலேயே இறந்தனர் (லேவி 10:1-7; எண் 26:61). இவர்களின் குற்றத்தின் தன்மை தெளிவாக இல்லை. தூபம் அளித்தமுறை குற்றமுடையதாக இருக்கலாம் (லேவி 10:1.9). இருவரும் வாரிசு இன்றி இறந்தனர் (எண் 3:4).

2. இஸ்ராயேலின் அரசனான நாதாபு அரசனாகி ஈராண்டுகள் அதை ஆண்டார் (கி.மு. 901-900). முதலாம் எரோபவாமின் மகனும் வாரிசும் ஆவார் (1 அரசர் 15:25). அதன்பின் அகியாவின்மகன் பாசாவால் கொலை செய்யப்பட்டார்.

அப்போது நாதாபு தானைச் சேர்ந்த பெலிஸ்தியரின். நகரமான கிபத்தோனை முற்றுகையிட்டிருந்தார் (1 அர 15:27-29). பாசா ஆட்சிக்கு வந்தபின் எரோபவாமின் வீட்டைச் சேர்ந்த யாவரையும் கொன்று அகியாவின் இறைவாக்கை நிறை வேற்றினார் (1 அர 14:20; 15:25-32; காண்க. 14:1-16).

3. யூதா குலத்தில், எரகுமவேல் வழிவந்த எட்சரோன் குடும்பத்தில் பிறந்தவர். யூதாவின் மருமகள் தாமாரின் வழித்தோன்றல். செலேது, அப்பயிம் ஆகியோரின் தந்தை (1 நாள் 2:28.30).

4. பென்யமின் குலத்தினரான இவர் எயியேல் (2), மாக்கா என்பவர்களின் புதல்வராவர். இவரது சகோதரன் கீசு, சவுலின் தந்தையாவார் (1 நாள் 8:30; 9:36).

5. தோபியா தன் மணப்பெண் சாராளோடு வந்த போது, அவர்தம் உறவினரான அகிக்காரும் நாதாபும் அவர் பொருட்டு மகிழ்வுற்று, கடவுள் அவருக்குச் செய்திருந்த எல்லா நன்மைகளுக்காகவும் அவரை வாழ்த்தினர். அவர்கள் அனைவரும் ஏழுநாள்வரை விருந்துண்டு மகிழ்ச்சிகொண்டாடினர் (தோபி 11:19-20).

சில வாசகங்களில் தோபி 14-இல் அகிக்கார் நாதாபு பற்றிய குறிப்பு வருகின்றது. முன் குறிக்கப்பட்ட நாதாபு- இந்த நாதாபுவாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர் (14:10-11).

நாத்தான் (NATHAN - கொடை)

1. தாவீது வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த இறைவாக்கினரே- நாத்தான். இவர் தாவீதின் அரசவையில் மூன்றுமுறை தோன்றுகிறார். முதல்முறை- தாவீது தமது மாளிகையைக் கட்டிமுடித்தபின் இறைவனுக்கோர் ஆலயம் எழுப்பலாமென்ற எண்ணத்துடன் கேட்டபோது, முதலில் ஆதரித்த நாத்தான், பின்னர்க் கட்ட வேண்டாமென்று கூறினார். ஆனால், தாவீதின் அரசமரபு நிறுவப்படுவதைப்பற்றி உறுதி அளிக்கிறார். (2 சாமு 7:1-17).

தாவீது இத்தியான உரியாவின் மனைவி பத்சேபாவுடன் உடலுறவு கொண்டு பாவம் செய்ததுமல்லாமல் உரியாவைப் போர்க்களத்தில் கொல்லச் செய்தபோது, ஒரு பெரிய பணக்காரன்

ஏழை ஒருவனின் ஆட்டைக் கவர்ந்த கற்பனைக் கதையை எடுத்துக்கூறி, அத்தகையவன் சாகவே சாவான் எனக்கூறிய தாவீதுக்கு, 'அம்மனிதன் நீதான்,' என மனத்துணிவோடு சுட்டிக்காட்டியவர் நாத்தான் (2 சாமு 12:1-15).

தாவீதையடுத்து அவரது அரியணையில் சாலமோன் அமர, சாலமோனின் தாய் பத்சேபாவோடு அதில் ஈடுபட்டு முக்கியப் பங்கு வகித்தவர் நாத்தான் (2 சாமு 12:25). வயதான நோயுற்ற தாவீதிடம் சென்று, தனது மகன் சாலமோனே அரியணை ஏறவேண்டுமெனப் பத்சேபாவைக் கேட்கச் செய்து, தாமும் அதனை உறுதி செய்து அன்றே சாலமோனை அரசனாக அபிடேகம் செய்யச் செய்தார் (1 அர 1:5-48).

நாத்தான், தாவீதின் செயல்கள் பற்றியும் (1 நாள் 29:29), சாமோனின் நடவடிக்கைகள் பற்றியும் (2 நாள் 9:29), நாட்குறிப்பு எழுதியதாகவும், ஆலய வழிபாட்டுக்கான இசைவளர்ச்சியில் இவர் முக்கிய பங்கு வகித்தார் எனவும், நாளாகமம் கருதுகிறது (29:25).

நாத்தான் அரசவை இறைவாக்கினரெனத் தெரிகிறது. இவர் தாவீதின் வம்சத்தின்மேல் ஆர்வம் கொண்டிருந்ததால் இவர் அரசனைக் கண்டித்துத் திருத்தியது வரலாற்று உண்மையாகுமா எனச் சிலர் சந்தேகிக்கின்றனர். ஆனால் அரசவையில் இருக்கும் இறைவாக்கினரெல்லாம் அரசர்களின் அடிமையென்பது சரியன்று.

2. தாவீதின் முப்பது வலிமை வாய்ந்த மனிதர்களுள் ஒருவரான சோபாவைச் சேர்ந்த இகாலின் தந்தை நாத்தான் (2 சாமு 23:36). நாளாகமம் காட்டும் அட்டவணையில் மிகச்சிறந்த வீரர்களின் வரிசையில் உள்ள (1 நாள் 11:38) யோவேலின் சகோதரர் நாத்தான்.

3. சாலமோனின், அலுவலர்களுக்குத் தலைவனாய் இருந்த அசாரியாவும், அரசனின் நண்பனும் குருவுமாய் இருந்த சாபூதுவும் 'நாத்தானின்' புதல்வர்களே (1 அர 4:5). இவர் 1 அல்லது 5-இல் கூறப்பட்டவர்களுள் ஒருவராகவும் இருக்கலாம்.

4. முதுபெரும் தந்தையாகிய யூதாவின் வழிவந்த எரகுமவேலின் வகுப்பைச் சேர்ந்த சாபாதுவின் தந்தையும் அத்தாயின் மகனும் ஆவார் (1 நாள் 2:36). இவர் 1-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

5. தாவீதின் மூன்றாவது மகனான இவர் எருசலேமில் பிறந்தார் (2 சாமு 5:14; 1 நாள் 14:4). இவரது தாய் பாத்சூவா (பத்சேபா) என்பதால் இவர் சாலமோனின் மூத்த சகோதரராகிறார் (1 நாள் 3:5). தாவீதின் குடும்பத்தின் ஒரு கிளையாக இவரின் வழித்தோன்றல்கள் இருப்பதால் 'ஆண்டவரது நாளில்' அவர்களோடு இவர்களும் தோன்றுவர் என, செக்கரியா நூலின் காட்சியில் (செக் 12:12) குறிப்பிடப்படுகின்றனர். இயேசுவின் தலைமுறை அட்டவணையைக் குறிப்பிடும்போது இம்மகனின் வழியாகவும் அவரது மூதாதையர்கள் பற்றி அறியப்படுகிறது (லூக் 3:31).

6. பாபிலோனிலிருந்து திரும்பிவந்த தலைவர்களுள் ஒருவர் ஆவார். எஸ்ரா, கசிப்பியாவில் உள்ள இத்தோ என்பவருக்கு ஆலயத்தில் பணி செய்வதற்கான ஊழியர்களை அனுப்புமாறு இவர்களிடம் சொல்லி அனுப்பினார் (எஸ் 8:16). தமது மனைவி அன்னிய நாட்டவள் என்பதால் அவளை விலக்கி வைப்பேன் என உறுதி கூறியவரும் பின்னூயின் (பானி) மகனுமான நாத்தான் இவர்தாம் எனவும் கருதப்படுகிறது (எஸ் 10:39).

நாத்தான் - மெலக்கு (NATHAN - MELECH - அரசன் அளித்தார்)

யோசியா அரசனின்கீழ் அண்ணகனாக இருந்த 'நாத்தான் மெலக்கு' வீட்டையடுத்து யூதாவின் அரசர்கள் சூரிய வழிபாட்டுக்கென எழுப்பியிருந்த குதிரைச் சிலைகளை யோசியா அப்புறப்படுத்தினார் (2 அர 23:11). இந்தப் பட்டம் உயர்நிலை ஊழியரையும் (2 அர 25:14), கீழ்நிலை ஊழியரையும் (1 அர 22:9) குறிப்பதாக அமையும். இஃது அசீரிய, பாபிலோனிய

வழக்கோடு ஒத்துப்போகிறது (காண்க. 2 அர 18:17; இரபிசாரி (முக்கிய அண்ணகர்).

நாத்திகர், இறைப் பற்றற்றவர் (GODLESSMAN)

I. பல்வேறுபட்ட எபிரேய மற்றும் கிரேக்கச் சொற்றொடர்களால் விவிலியமானது, பக்தி மனப்பான்மைக்கு முரண்பட்ட ஓர் ஆன்மீக மனப்பான்மையை விவரிக்கிறது. இஃது இறைவன் மற்றும் அவரது சட்டத்தின்பால் காட்டும் வெறுப்புடன் பகைமை மற்றும் வீம்புப்பேச்சு ஆகியவற்றின் நுட்பவேறுபாட்டையும் சேர்க்கின்றது. பக்தியற்ற அக்கிரமியின் வருகையைப்பற்றிப் பவுல் உரைக்கின்றார். அவன் இறுதி நாட்களில் “எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்தி, தன்னைக் கடவுளெனக் காட்டிக் கொள்வான்" (2 தெச 2:3-4.8). இறைப் பற்றின்மை அல்லது அக்கிரமத்தின் மறை பொருளானது ஏற்கெனவே உலகில் செயல்பட்டு வருகிறது என்பதையும் அவர் கூறுகிறார் (2:7). உண்மையில் ஆதாம் இறைவனின் கட்டளையை மீறிய வரலாற்றின் தொடக்கம் முதல் அது செயல்பட்டு வருகின்றது (ஆதி 3:5.22).

II. பழைய ஏற்பாடு;

1. **இறைவனின் முன்னிலையில் பக்தியற்ற மனிதர்:** பக்தியின்மையானது பாவம் நிறைந்த சமுதாயத்தில் உலகளாவிய உண்மையாகும். பெருவெள்ளக் காலத்திய தலைமுறையின் இறைப்பற்றின்மை (ஆதி 6:11; காண்க: யோபு 22:15-17), பாபேல் கோபுரத்தைக் கட்டியோரின் இறைப்பற்றின்மை (ஆதி 11:4), சோதோமில் குடியிருந்தோரின் இறைப்பற்றின்மை(ஞான 10:6) முதலியன இத்தகையன. ஆனால், இஸ்ராயேலின் பகைவர்களாய் இருந்த புறவினத்தாரின் இடையில் அது தன்னையே தனிப்பட்ட தெளிவுடன் உறுதிப்படுத்துகிறது. சான்றாக, கொடுமைப்படுத்தும் பார்வேன் (காண்க: ஞான 10:20; 11:9), கானானியச் சிலைவழிபாட்டினர் (ஞான 12:9), இறைவனைப் பழிக்கும் சனகெரிபு (எசா 37:17), அகந்தை மிக்க பாபிலோன் (எசா 13:11; 14:4) மற்றும் கொடுமைப்படுத்தும் அந்தியோக்கு எப்பிபான் (2 மக் 7:34). ஆயினும், பாலைவனத்தில் கிளர்ச்சி (சங் 106:13-33), வாக்களிக்கப்பட்ட நாட்டில் அவர்களது பிரமாணிக்கமற்ற நிலை (சங் 106:34-40) முதலியவற்றில் காண்பதுபோல இறைமக்களும் பக்தியின்மையினின்று விலக்கப்பட்டவர்களாக இல்லை. உண்மையில் இறைவன் இந்தப் பக்தியற்ற, பாவம் நிறைந்த இனத்தைத் தண்டிக்க, புறவினத்தாரை அனுப்புகிறார் (எசா 10:6; காண்க. 1:4). நாடு தழுவிய மனமாற்றத்திற்குப் பின்னும், நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர் சங்கீத ஆசிரியர்களும் ஞானிகளும் விசுவாசிகளிடையில் இறைப்பற்றின்மையின் பிரசன்னத்தைக் கண்டனம் செங்கின்றனர். மக்கபேயரின் பிரச்சனையானது சரியான வழியினின்று விலகியுள்ள சில குறிப்பிட்ட யூதரை நோக்கிக் கவனத்தைத் திருப்பும் (1 மக் 2:23; 3:15; 6:21)

2. **பக்தியற்றோரும் நீதிமான்களும்:** ஞான இலக்கியங்களில் மனித இனமானது- பக்தியற்றோர் முட்டாள்களுக்கு முரண்பட்ட நீதிமான்கள் மற்றும் ஞானிகள் என்ற இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்படுவதாகத் தோன்றுகிறது. இவ்விரண்டிற்கும் இடையில் விரோதம் மற்றும் சகோதரத்துவப் போர் உள்ளன. இவை இவ்விரு குழுக்களிடையே வேறுபட்ட செயல்களைப்பற்றிய வரைபடத்தை ஏற்கெனவே அளிக்கின்றது. காயின் மற்றும் ஆபேலில் தொடங்கிய இப்போரானது (ஆதி 4:8...), எல்லாக் காலங்களுக்கும் பரவுகிறது. இறைப்பற்றற்ற மனிதன், தந்திரம், வன்முறை, சிற்றின்பம், பெருமை முதலிய தனது இயல்புணர்வுகளுக்கு விருப்பம்போல் தன்னை ஆட்டிப்படைக்க அதிகாரத்தை அளிக்கிறான் (சங் 36:2-5; ஞான 2:6-10). அவன் இறைவனைப் பழிக்கிறான் (சங் 10:6-4; 14:1). நீதிமான்கள் மற்றும் ஏழைகள் மீது அவன் அதிகாரம் செலுத்துகிறான் (சங் 10:6-11;

17:9-12; ஞான 2:10-20). சில நேரங்களில் நீடித்ததாகவும், சமய மக்களுக்கான உண்மையான வேதனையின் ஊற்றாகவும் இருக்கக்கூடிய வெளிப்படையான வெற்றியை அவன் கொண்டுள்ளான் (சங் 94:1-6; யோபு 21:7-13). நீதியின் மீதான அக்கறையினால் துன்புறுத்தப்பட்டோர் முதலில், தவறாக வழிநடத்தப்பட்ட இந்தத் தீய மக்களின் அழிவை இறைவனிடம் கேட்கின்றனர் (சங் 10:12-18; 31:18-19; 109:6.). மேலும், நம்மை ஆச்சரியப்படுத்தக் கூடிய முறையில் தீயவர்கள் பழிவாங்கப் படுதலில் அவர்கள் முன்னதாகவே மகிழ்ச்சி கொள்கின்றனர் (சங் 58:11).

3. **இறைப் பற்றற்றோரின் செயல்வினைப் பயன்:** இறைப் பற்றற்றோர் அழிவை நோக்கிச் செல்கின்றனர் என்பதை உடன் படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருந்தோர் நன்கு அறிந்திருந்தனர் (காண்க: சங் 1:4-6; 34:22; 37:9-10.12-17.20). ஆனால், இன்னும் தற்காலிக அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ள தண்டனை பற்றிய இந்த அமைதியான கூற்று சில இடறல் உண்டாக்கும் உண்மைகளுடன் மோதுகிறது. எவ்வித இறைத்தண்டனையும் இல்லாதது போன்று (திருவுரை 7:15; 8:10-14), செழிப்படையும் சில இறைப் பற்றற்ற மனிதரும் உள்ளனர் (எரே 12:1-2; யோபு 21:7-16; சங் 73:2-12). நாத்திகனை மெசியா அரசர் அழிப்பதை இறுதிநாட்கள் காணும் என்னும் உறுதி மொழியினை இறைவாக்கு இறுதிக்கால இயல் அளிக்கின்றது (எசா 11:4; சங் 72:3). தீர்ப்பின் காலத்தில் இறைவன் அவர்களை அழித்தொழிப்பார் (எசா 24:113; 25:1-2). ஆனால், அஃது இந்த இறுதிநாளை நோக்கியிருக்கும் வேளையில் கொடியவர்கள் தங்களுடைய குற்றங்களுக்கு எப்படிப் பரிகாரம் செய்ய வேண்டும் என்பதைத் துல்லியமாக விளக்குவதில்லை.

ஆயினும், இப்பிரச்சனை அனைவருக்கும் தனிப்பட்ட அளவில் தீர்க்கப்பெறும். அதற்கான ஒரு விடைகாண நாம் ஒரு பிற்காலத்திற்கெனக் காத்திருக்க வேண்டும். மக்கபேயர் நூல்களில், நாத்திகர் அனைவரும் இறைவனுடைய நீதியிருக்கையின் முன் தனிப்பட்ட விதத்தில் தோன்றுவர் (2 மக் 7:34-35), மற்றும் வாழ்விற்கான உயிர்ப்பு அவர்களுக்கு இருக்காது என்பதை நாம் அனைவரும் அறிந்துள்ளோம் (2 மக் 7:14; தானி 12:2). எனவே, மரணத்திற்குப் பிற்பட்ட அவர்களது இறுதித் தண்டனையின் வடிவத்தை ஞானாகமமானது சித்தரிக்கிறது (ஞான 3:10-12; 4:3-6; 5:7-14). இந்த வீறார்ந்த சான்று நலந்தரும் சிந்தனையின் ஊற்றாக உள்ளது. உண்மையில், நாத்திகர்கள் சாக வேண்டுமென்பது இறைவனுடைய விருப்பமன்று; மாறாக, மனம்மாறி வாழவேண்டுமென அவர் விரும்புகிறார் (எசே 33:11; 18:20-27; 33:8-19). புதிய ஏற்பாட்டில் அதனையொத்த இரக்கமிக்க நோக்குக் காணப்படும்.

III. புதிய ஏற்பாடு:

1. **உண்மையான பக்தியின்மை:** புதிய ஏற்பாட்டின் கிரேக்கச் சொற்றொடரில் பழைய ஏற்பாட்டினால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட ஆன்மீக மனப்பான்மையானது, மிகத்துல்லியமான முறையில் சுட்டிக் காட்டப்படுகிறது. அஃது இறைப்பற்றின்மை, அநீதி மற்றும் சட்டத்தை நிராகரித்தல் முதலியனவாகும். ஆனாலும், இயேசுவிற்கும் பரிசேயருக்கும் இடையிலான விவாதங்கள் முழுவதிலும், இறைவன்பால் காட்டப்படும் ஏளனத்தினுடைய இரு கருத்துக்கள் சந்திக்கின்றன. பரிசேயரைப் பொறுத்தமட்டில் பக்தியின் உரைகல் சட்டம் கூறுபவைகளையும் அதைச் சார்ந்த பாரம்பரியங்களையும் கடைப்பிடிப்பதேயாகும். இதனைப்பற்றிய அறியாமையானது ஏற்கெனவே இறைப்பற்றின்மையாகக் கருதப்பட்டது (யோவா 7:49). எனவே, இயேசு பாவிகளுடன் உண்பதிலும் (மத் 9:11), அவர்களது நண்பராக இருப்பதிலும் (மத் 11:19), அவர்களுடன் தங்குவதிலும் (லூக் 19:7) தவறாகச் செயல்பட்டார்.

ஆயினும், ஒவ்வொரு மனிதனும் பாவி என்பதையும் தான் பக்தியுள்ளவன், நீதிமான் என எவருமே கூற முடியாது என்பதையும் இயேசு நன்றாகவே அறிந்திருந்தார். அவர் கொணரும் நற்செய்தியானது, மனமாற்றம் மற்றும் மீட்பினுடைய வாய்ப்பைப் பாவிகளுக்கு அளிக்கின்றது (லூக் 5:32). உண்மையான பக்தியின் உரைகல், இந்நற்செய்தியை ஒருவன் ஏற்றுத் தழுவுகின்ற மனப்பான்மையாகும்.

2. மீட்பிற்கு இறைப்பற்றற்றோர் அழைக்கப்படுதல்: "கொடியவர்களின் கரங்களில்" (அ.ப. 2:23) இறந்ததன் மூலம் கிறிஸ்து தனது பலியை நிறைவேற்றிய பின்னும் இப்பிரச்சனையானது அதே விதமாகவே உள்ளது. "நெறிகெட்டவர்களோடு ஒன்றாக எண்ணப்பட" அவர் உடன்பட்டாலும் (மாற் 15:28), "அநீதருக்கான நீதிமானாக" அவர் இறந்தார் (1 பேதுரு 3:18). அவரில் கொண்ட விசுவாசத்தினால் நீதிமான்களாக எண்பிக்கப்படுவதற்கென (உரோ 4:5), இறைப்பற்றற்றோருக்காக அவர் இறந்தார் (உரோ 5:6). அருளினால் ஏற்புடையவர்களாக்கப்பட்ட இறைப்பக்தியற்றவர்களே புதிய ஏற்பாட்டின் நீதிமான்களாவர். நற்செய்தியில் மீட்பிற்கான அழைப்பைப் புரிந்து கொண்டவர்களாய்க் கிறிஸ்துவை நோக்கித் திரும்புவதற்காகத் தங்களது இறைப் பற்றின்மையை அவர்கள் கைவிட்டனர் (தீத் 2:12). இனிமேல் இச்செய்தியை ஏற்க மறுப்பவர்களும், அதைச் சிதைப்பவர்களும் மட்டுமே உண்மையில் பக்தியற்றவர்களாவர். விசுவாசிகளுக்குத் தொந்தரவளிக்கின்ற போலிப் போதகர்கள் (2 திமொ 2:16; யூதா 4:18; 2 பேதுரு 2:1-3; 3:3-4) மற்றும் எதிர்க் கிறிஸ்துவின் பெயருக்குத் தகுதியுடையவர்கள் (1 யோவா 2:22), விரும்பி அறியாமையில் வாழ்கின்ற அக்கறையற்றவர்கள் (2 பேதுரு 3:5; மத் 24:37; லூக் 17:26-30), மேலும் சிறப்பாக, ஆண்டவருக்கு எதிராகக் கடுமையான இறைப்பற்றின்மையைத் தூண்டுகிற, புறவினத் தலைவர்கள் (2 தெச 2:3,8) ஆகியவர்களே உண்மையான பக்தியற்றவர்கள். இறைப் பற்றின்மையின் மறை பொருளுக்கான வெளிப்பாட்டின் பின்னணி இத்தகையதே.

3. இறைப் பற்றற்றோரின் மீதான இறைவனின் கோபம்: பழைய ஏற்பாட்டில் இருந்ததைவிட இறைப்பற்றின்மையின் தண்டனையானது இப்போது உறுதிப்படுத்தப்பட்டதாக உள்ளது. இறைவனுடைய கோபமானது அனைத்து இறைப்பற்றின்மை மற்றும் மனித அநீதி முதலியனவற்றிற்கு எதிராக நிலையான வடிவில் தன்னையே வெளிப்படுத்துகின்றது (உரோ 1:18; 2:8). இறுதிநாட்கள் மற்றும் இறுதித் தீர்ப்பின் முன்னோக்கில் இஃது இன்னும் மேலான உண்மையானதாக உள்ளது. பின்னர், தனது வருகையினுடைய மாட்சிமையின் மூலமாக ஆண்டவர், இறைப் பற்றற்றவர்களை ஒன்று மில்லாமைக்குத் தாழ்த்துவார் (2 தெச 2:8). இறைப் பற்றின்மையின் மறைபொருளில் பங்கேற்கும் அனைவரும் சீர்குலைக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார் (யூதா 15; 2 பேதுரு 2:7). தீயவர்கள் மனம் மாறுவதை அனுமதிப்பதற்கென இறைவன் பொறுமையை உபயோகிப்பதன் காரணமாகத் தண்டனையானது தாமதமாக வருகின்றது (2 பேதுரு 2:9).

நாபால் (NABAL - முட்டாள், அறிவிலி)

காலேபு குலத்தினனான நாபால், பெரும் செல்வந்தன்; பல கால்நடைகளுக்குச் சொந்தக்காரன். அவன் மனைவி அபிகாயில் விவேகமுள்ளவள். நாபாலின் கால் நடையைப் பராமரித்தற்கான கூலியைத் தாவீது கேட்க, நாபால் தர மறுத்தான். இதனால், தாவீது கோபம் கொண்டு நாபாலைத் தாக்கவரும் வேளையில் நாபாலின் மனைவி அபிகாயில் தாவீதுக்கு வேண்டிய பொருட்களைத் தந்து நாபாலை ஏதும் செய்ய வேண்டாமென மன்றாடுகிறாள். தாவீது நாபாலைப் பொருட்படுத்த வேண்டாம்; ஏனெனில், அவன் தன் பெயருக்கேற்ப அறிவிலி என்றும் கூறுகிறாள் (1 சாமு 25:25). நாபால் இறந்தபின்

தாவீது அபிகாயிலைத் தன் மனைவியாக ஆக்கிக்கொண்டார் (1 சாமு 27:3; 30:5; 2 சாமு 2:2; 3:3).

நாபிசு (NAPHISH – இன்பம்)

இவர் இசுமாயேலின் பன்னிரு புதல்வர்களில் பதினோராவது மகன் ஆவார் (ஆதி 25:15; 1 நாள் 1:31). இவரது வழித்தோன்றல்கள்தான் வடமேற்கு அராபியாவில் வாழ்ந்த அராபிய இனத்தவர். இவர்கள் யோர்தானுக்கு அப்பால் குடியேறிய இஸ்ராயேலின் ரூபன், காது இனத்தவர்களால் அடிமைப் படுத்தப்பட்டனர் (1 நாள் 5:19).

நாபேத்து (NAPHATH – உச்சி, முகடு)

யோசு 17:11-இல் வரும் ஏன்- தோரிலிருந்து தோர் என்ற இடத்தை வேறுபடுத்திக்காட்ட அதற்கு அளிக்கப்பட்ட அடைமொழியாகும். எபிரேய வாசகம் தெளிவாக இல்லை.

நாபோத்து (NABOTH – பலன், முளைவிடுதல்)

இஸ்ரியேலனாகிய நாபேத்துக்கு இஸ்ரியேலில் ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. அது சமாரியாவின் அரசன் ஆகாபின் அரண்மனை அருகில்தான் இருந்தது (1 அர 21). ஆகாபு தன் தோட்டத்தை விரிவாக்க நாபோத்தின் இடத்தைத் தனக்குக் கேட்டான். ஆனால், நாபோத்து அத்தோட்டம் தன் முன்னோரின் உடைமையெனக் கூறி, தர மறுத்தான். இதையறிந்த ஆகாபின் மனைவி ஈசபேல் அந்த நிலத்தை வஞ்சகத்தால் கவர நினைத்தாள். எனவே, அவள் நாபோத்து கடவுளையும் அரசனையும் பழித்துரைத்தான் கல்லால் எறிந்து கொல்லும்படியும் அரச முத்திரையோடு மன்றத்திற்குக் கட்டளை பிறப்பித்தாள். நாபோத்தும் அவ்வாறே கொலை செய்யப்பட ஆகாபு அவனுடைய நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளப் போனான் (21:8-16; காண்க. 2 அர 9:26). அந்நேரத்திலே எலியா இறைவாக்கினர் அவன் முன் சென்று அவன் குற்றத்தை எடுத்துரைத்து அவனும் நாபோத்து இறந்த அதே இடத்தில் இறப்பான் என இறைவாக்குரைத்தார். ஆகாபு தன் குற்றத்திற்காக வருந்தி நோன்புகாக்கவே இறைவன் அவன் மீது இரக்கம் கொண்டு அவனை வாழவிட்டார் (1 அர 21:17-24; 2 அர 9:26. 30:37).

நாப்பத்தோர் (NAPHATH-DOR – தோரின் உச்சி அல்லது முகடு, குன்றுகள்)

யோப்பாவிலிருந்து வடக்கே செல்லும் பாலஸ்தீனக் கடற்கரைப்பகுதியின் எல்லையாக அமைந்த தாழ்ந்த, குறுகிய குன்றுகள் கொண்ட பகுதியை இது குறிக்கலாம். கோட்டைப் பாதுகாப்புடைய தோர்- இப்பகுதியின் தலைநகராக இருந்திருக்கலாம். நாப்பத்தோரின் அரசனும் சேர்ந்த கானானிய அரசர்களின் கூட்டணியை யோசுவா தோற்கடித்தார் (யோசு 11:2; 12:23). பிற்காலத்தில் இப்பகுதி சாலமோனின் நிர்வாக மாவட்டங்களில் ஒன்றானது (1 அர 4:11).

நாப்போத்தோர் (NAPHOTH - DOR)

நாப்பத்தோரின் மற்றொரு பெயர் (யோசு 11:2).

நாமா (NAAMAH – இன்பமான) – ஆள்

1. இவள், காயினின் வழிவந்த துபால் காயினின் சகோதரி ஆவாள் (ஆதி 4:22).

2. இவள் சாலமோன் மன்னனின் அம்மோனிய மனைவி. இவள் ரெகபயாமைப் பெற்றெடுத்தாள் (1 அர 14:21; 2 நாள் 12:13).

நாமா (NAAMAH – இன்பமான) – இடம்

யூதாவைச் சேர்ந்த செபேலாவில் இலாக்கிசு மாவட்டத்திலுள்ள ஒரு நகர் (யோசு 15:41). இப்பெயர் இக்கால அராக்கு நாமான், தேயிர் நாமான் என்ற பெயர்களில் தங்கிநிற்கிறது. ஆனால், அஃது இருந்திருக்கக்கூடிய இடம் பெத்செமேசுக்கு வடமேற்கில் 7 கி.மீ. தொலைவில் திம்னா (2)வுக்கு அருகிலுள்ள வாடி எஸ் – சரார் (நாகால் சொரேக்கு) கரையிலுள்ள கிர்பெத் பராதுதான் என்று அறிஞர் கருதுவர்.

நாமாயர், நாமாவியர் (NAAMATHITE)

வடமேற்கு அரேபியாவில், நாமா அல்லது நாமேயில் வசிப்பவர். பழைய ஏற்பாட்டில்

யோபுவின் நண்பரான சோப்பார் நாமாவியர் தான் எனக் கூறப்பட்டுள்ளார் (யோபு 2:11; 11:1; 20:1; 42:9).

நாமானியர் (NAAMITES)

பென்யமின் இனத்தைச் சேர்ந்த ஒரு குலம். இவர்கள் நாமானின் வழித் தோன்றல்கள் ஆவர் (எண் 26:40).

நாமான் (NAAMAN – இன்பம்)

இப்பெயர் உகாரிதிக் (Ugaritic) தலைமுறை வரலாற்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. இவர் எகிப்தில் குடியேறியவர்; பென்யமின் குலத்தைச் சார்ந்தவர் (ஆதி 46:21); பேலாவின் மகனும் ஆவார் (1 நாள் 8:3-4.7); நாமானியர்களின் குலப்பெயர்த் தலைவர் (எண் 26:40).

2. சீரியா அரசனின் படைத்தலைவனான நாமான், எலிசா இறைவாக்கினரால் தன் தொழுநோயிலிருந்து குணமாக்கப்பட்டார் (2 அர 5). நாமானின் நாடு தமஸ்கு ஆகும் (2 அர 5:12). அதன் அரசர் இரண்டாம் பெனதாது ஆகவும் இருந்திருக்க வேண்டும் (கி.மு. 850; 8:7). இந்த நிகழ்ச்சியுரையில் வரும் (5:5-8) இஸ்ராயேல அரசனது பெயர் தெரியவில்லை. இக்கதையின் காலத்தைத் துல்லியமாகக் குறிக்க முடியாது. நாமான் வருந்திய தொழுநோயின் தன்மை தெரியவில்லை. ஏனெனில், இஸ்ராயேலர் இப்பெயரால் தோல் சார்ந்த பல நோய்களைக் குறிப்பிட்டனர் (லேவி 13:14). நாமானின் தொழுநோய் தொத்து வியாதியாகத் தெரியவில்லை. ஏனெனில் அவரோ அந்நோயால் தண்டிக்கப்பட்ட கேகசியோ சமூகத்திலிருந்து புறம்பாக்கப்படவில்லை (2 அர 5:27; 8:4).

இஸ்ராயேல் நாட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட சிறுமிநோய் நீங்க நாமானை இஸ்ராயேல் நாட்டிற்குச் செல்ல வேண்டுகிறாள் (5:2). எலிசா தாம் இறைவனின் இறைவாக்கினர் என்பதை இக்குணப்படுத்துதல் மூலம் எண்பிக்கிறார் (5:8). குணம் பெற்றதும் நாமான் இஸ்ராயேலின் கடவுளே உண்மைக்கடவுள் என அறிக்கையிட்டுப் போற்றுகிறார் (5:15-17). இஸ்ராயேலின் இறைவன் உலகமனைத்திற்கும் கடவுள் என்பது இங்கே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இறைமகன் இயேசு புறவினத்தார்மீது இறைவன் கொண்டுள்ள அன்பை விளக்கும்போது "இறைவாக்கினரான எலிசாவின் காலத்திலே இஸ்ராயேல் நாட்டில் தொழுநோயாளர் பலர் இருந்தனர். அவர்களுள் எவருக்கும் நோய் நீங்கவில்லை. சீரியாவைச் சார்ந்த நாமானுக்கே நோய் நீங்கியது" என்று இந்நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார் (லூக் 4:27).

"நாம் அறியாத தெய்வத்திற்குப்" பீடம் (ALTAR TO AN UNKNOWN GOD)

ஏதன்சிலுள்ள அரயோப்பாகுவில் பேசியபோது (அ.ப. 17:22-31) பவுல் பயன்படுத்திய வாசகமாகும். இஃது ஒரு பீடத்தில் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். இதைத் தனது பேச்சின் தலைப்பாகப் பயன்படுத்தினர். "நாம் அறியாத தெய்வத்திற்கு" என்று ஒருமையில் உள்ள வாசகச் சான்று எங்கும் காணப்படவில்லை. "நாம் அறியாத தெய்வங்களுக்கு" என்று பன்மையில் வாசகத்தைக் கொண்டுள்ள பீடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுளளன. பவுசானிய என்ற கிரேக்க புவியியல் அறிஞர் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) பாலேரும் துறைமுகத்துக்கும் ஏதன்சு நகருக்குமிடையில் பன்மையில் வாசகத்தைக் கொண்டுள்ள பீடங்கள் இருந்தமைக்குச் சான்று கூறுகிறார். தியோகெனேசு லெர்தியு, ஏதன்சில் கொள்ளை நோய்களைத் தடுப்பதற்கு இத்தகைய பீடங்கள் எழுப்பப்பட்டன என்று கூறுகிறார். ஒருமையில் வாசகத்தைக் கொண்டுள்ள பீடம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற உண்மை, தனது பேச்சின் இறையொருமைக் கோட்பாட்டிற்கு ஏற்றவாறு பவுல்தான் பன்மையிலிருந்து ஒருமைக்கு வாசகத்தை மாற்றியிருக்க வேண்டும்

என்று கருத விளக்கவுரையாளர்களைத் தூண்டியுள்ளது. மூலவாசகம் எப்படியிருந்தாலும், பவுல் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இதுவரை அறியப்படாத "விண்ணுலகுக்கும் மண்ணுலகுக்கும் ஆண்டவராகிய" (17:24) கடவுளை ஏதன்சிலுள்ள சமயப்பற்றுள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

"பெயர் தெரியாத கடவுளுக்கு," "உரிய கடவுளுக்கு" அளிக்கப்படும் பலிகள் பற்றிய இலக்கியக் குறிப்புகள் உள்ளன. இவற்றில் எல்லாம் பொருள் ஒன்றே; அதாவது, பெயர் தெரியாத கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக அவரைப் போற்றுகின்றன. இச்சொற்றொடர் அறிய முடியாத கடவுளைக் குறிக்கவில்லை. ஆனால், பவுல் மூல வாசகத்திற்கு விளக்கம் அளிப்பதில் அக்கறை கொள்ளவில்லை; கிறிஸ்துவில் இறைவெளிப்பாட்டை விளக்குவதற்கு வாசகத்தை மாற்றி அமைக்கிறார்.

நாய் (DOG)

இது வீட்டில் வாழும் ஊன் உண்ணும் பாலூட்டி விலங்கு. மோசே சட்டத்தால், தூய்மையற்றதாகக் கருதப்பட்டது. பாலஸ்தீன நாய் ஓநாயைப் போன்றது.

1. அன்றாட வழக்கில்: இஸ்ராயேல் வரலாறு தொடங்குவதற்குச் சில ஆயிரமாண்டுகளுக்கு முன்பே நாய், வீட்டில் வளர்க்கப்படும் விலங்காகியது. மத்திய கற்காலத்தைச் சேர்ந்த நாய் மண்டை ஓடு, வாடி ஏல்-முகாரவில் கண்டுபிடிக்கப்பட்டது இதைச் சுட்டுகிறது. எரிகோவில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய கற்காலத்தைச் சேர்ந்த பாண்டங்களில் காணப்பட்ட நாயின் சிதைவுகள் இதையே சுட்டுகின்றன. விவிலியத்தில் நாய் ஒரு சாதாரணமான விலங்கு. மத் 15:26-27; மாற் 7:27-28-க்கு உணவு கொள்ளும் இடத்திற்குச் சில நாய்கள் அனுமதிக்கப்பட்டதாய்ப் பொருள் கொள்ளலாம் என்றாலும், பிளினி விவரிப்பதுபோ,ல் நாய்க்கும் அதன் தலைவருக்கு மிடையே நிலவிய நல்ல உறவைப்பற்றி விவிலிய ஆசிரியர்கள் அதிகம் அறிந்ததாகத் தெரியவில்லை. மேற்கூறப்பட்ட பகுதிகளையும், தோபி 5:16; 11:4; யோபு 30:1-இல் வரும் மந்தையின் நாய்களை தவிர, விவிலியத்தில் காணப்படும் நாய்கள், தெருவிலும் குப்பைகளிலும் திரியும், அழுகிய பொருட்களைத் தின்று வாழும் விலங்குகளாக இருக்கின்றன. விவிலியக் குறிப்புகளிலிருந்து நாய்களின் வகைகளைப் பற்றி எதுவும் கூறமுடியாது.

நாய் நாக்கினால் நீரை நக்கிக் குடிப்பதாகவும் (நீதி 7:5), நாய் குரைப்பதைப் பற்றியும் (யாத் 11:6; காண். யூதி 11:19), சில சமயங்களில் அது விரும்பத்தகாத செயல்களைச் செய்வதைப் பற்றியும் (லூக் 16:21), வெறிநாயோடு விளையாடுவதைப் பற்றியும் (பழ 26:17), "நாய் தான் கக்கினதைத் தின்னத் திரும்பி வருவதைப்" பற்றியும் (26:11; 2 பேதுரு 2:22), அது வயல்வெளியில் பீறப்பட்டுக் கிடக்கும் இறைச்சியையும், தூய்மையற்றவைகளையும் உண்பது பற்றியும் (யாத் 22:31), அது மனித ஊனைக்கூடத் தின்பது பற்றியும் (1 அர 9:10.36; சங் 68:23; எரே 15:3) விவிலியத்தில் வாசிக்கின்றோம். நாயிடம் இப்பழக்கவழக்கங்கள் இருந்தாலும், "செத்துப்போன சிங்கத்தைவிட உயிருள்ள நாயே மேல்" என்று கூறி இறப்பைவிட உயிரோடிருப்பது மேல் என்று திருவுரை 9:4 வலியுறுத்துகிறது.

2. பலியில் நாய்: "நாயின் கழுத்தை முறிப்பது" (எசா 66:3) நாய் பலியிடப்பட்ட, யாவே வழிபாட்டுக்குப் புறம் பானதைக் குறிக்கிறது. இத்தகைய அருவருப்பான வழக்கம் கார்தசீனியர்களிடை இருந்தது. இவ்வாறு நாய் பலியிடப்படுவது பழங்காலத்தில் அரிதாகவே நிகழ்ந்திருக்கிறது. எபிரேயர் நாயைத் தூய்மையற்ற விலங்குகளில் ஒன்றாகக் கருதியதால், அதைத் தங்கள் பலிச்சடங்கில் பயன் படுத்துவதில்லை.

3. உருவக வழக்கில்: ஒருவனை நாய் என்றழைப்பது அவனை இழிவுபடுத்துவதாகும் (1 சாமு 17:43; 2 சாமு 3:8; 2 அர 8:13). மத் 15:26; மாற் 7:27-இல் நாய் யூதர் அல்லாதாரைக் குறிக்கலாம். மத் 7:6-இல் வரும் நாய் என்பது தகுதியற்றவரையும், திருமுழுக்குப் பெறாதவரையும் கூடக் குறிக்கலாம். "செத்த நாய்" மதிப்பற்ற பொருளைக் குறிக்கும் (1 சாமு 24:15; 2 சாமு 9:8; 16:9). ஒருவன் தனது எதிரியை நாய் என்று அழைக்கலாம். சங்கீத ஆசிரியர் தன் எதிரிகளை இவ்வாறு குறிப்பிடுகிறார் (சங் 22:16-20; 59:6-14).

தீயோர்கள் நாய் என்று குறிக்கப்படுகின்றனர். எச 56:10-11-இல் இஸ்ராயேலின் சமயத்தலைவர்களும், ஒருவேளை, தங்கள் கடமையைச் சரியான முறையில் செய்யாத இறைவாக்கினர்களும் பேராசையுள்ள இறைவாக்கினர்களும், குறிக்கப்படுகின்றனர். பிலி 3:2 தீமை செய்வோரையும், திருச்சபையில் யூதப்பழக்கங்களைப் புகுத்துபவர்களையும் குறிக்கிறது. திருவெளி 22:15-இல் தீயோர் குறிக்கப்படுகின்றனர்.

உப 23:19-இல் நாய் கோவில் விலை மகளைக் குறிக்கிறது.

நாரா (NAARAH - இளம்பெண்)-ஆள்

தெக்கோவாவின் தந்தையான அஸ்கூரின் இரு மனைவியருள் ஒருத்தி. இவள், அகுசாம், ஏபர், தேமனி, அகஸ்தாரி ஆகியோரின் தாய் ஆவாள் (1 நாள் 4:5-6).

நாரா (NAARAH - இளம்பெண்)-இடம்

எப்பிராயிம், பென்யமின் ஆகியோர் பகுதிகளின் எல்லையில் உள்ள பென்யமினைச் சேர்ந்த நகரம் (யோசு 16:7). இது 1 நாள் 7:28-இல் நாரான் என்றழைக்கப்படுகிறது. இதை யோசிப்பசு நாரா என்றும், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நோரான் என்றும், யூசேபியு நோராத்து என்றும் குறிப்பிடுகின்றனர். இஃது எரிகோவிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இது வாடி ஏல்-அவுயா அருகிலுள்ள ஏல்-அயாசாகவும், ஒருசெபக் கூடத்தைக் கொண்டு, எரிகோவின் வடகிழக்கில் மலையடிவாரத்தில் உள்ள அயின் துக்கு ஆகவும், எரிகோவின் வடகிழக்கில் 6 கி.மீ. தொலைவிலுள்ள தேல் ஏல்-இசிர் ஆகவும் அடையாளமாகக் காட்டப்படுகிறது.

நாராய் (NAARAI - யாவேயின் ஊழியன்)

தாவீது மன்னனின் வலிமை மிக்க முப்பது பேரில் ஒருவனான நாராய், எசிபாயின் மகன் (1 நாள் 11:37). இதற்கு இணையாக 2 சாமு 23:35-இல் இவர் அர்பாயரான பாராய் என்று அழைக்கப்படுகிறார்.

நாரான் (NAARAN)

நாரா (யோசு 16:7) என்ற இடப்பெயரின் மற்றொருவடிவம் (1 நாள் 7:28).

நாரை (CRANE)

உயரமான, நீண்ட அலகையும், கழுத்தையும் கால்களையுமுடைய நீரில் நடமாடும் பறவை வகையாகும். இடம் விட்டு இடம் மாறும் இப்பறவைகள் தெற்கிலிருந்து வட கடற்கரைகளுக்குச் செல்லும் வழியில் பாலஸ்தீனத்திற்கு வசந்த காலத்தில் (மார்ச் மாதம்) வந்து தங்கின. இவற்றின் முக்கிய உணவு தானியங்கள், விதைகள், தளிர், காட்டுச்செடிகள் ஆகியவையாகும். சில சமயங்களில் புழுப்பூச்சிகளையும், தவளைகளையும் உண்டன.

விவிலியத்தில் வரும் குறிப்புகளை வைத்துப் பறவைகளை வகைப்படுத்துவது கடினமானாலும் நோயுற்ற அரசன் எசேக்கியாவின் புலம்பலுக்கு ஒப்பிடப்படும் நாரையாக இருக்கலாம் (எசா 38:14). எரே 8:7-இல் குறித்தகாலத்தில் பாலஸ்தீனத்திற்கு இயல்பாகவே திரும்பும் பறவைகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது. இதற்கு மாறாக, இஸ்ராயேலர், அக்காலத்தில், ஆண்டவரது நீதியை உணரவில்லை.

நாரப்பட்டு (LINEN)

பண்டைய உலகில் சணல் வளர்ப்பானது எகிப்தில் மிக அதிக அளவில் நடந்தது. பாலஸ்தீனத்தில், முக்கியமாக எரிகோவில் இது நடைபெற்றதாக விவிலியச் சான்று (யோசு 2:6) உள்ளது. சணல் பறிக்கும் மாதம் பற்றிய விளக்கங்கள் கெசேர் நாளேட்டில் உள்ளன. தால்மூது காலத்தில், பெத்சான், அர்பேலா ஆகிய இடங்களில் சணல் வளர்க்கப்பட்டது. பண்டைக் காலத்திலேயே எகிப்திய சணல் ஆடைகள் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. அரச உடைகள் கூட இந்தச் சணல் நெசவின்மூலம் மிக நேர்த்தியாகவும், பட்டாடைகளுக்கு நிகரான தரம் கொண்டதாகவும் தயாரிக்கப்பட்டன. சாதாரண சணல் துணிகூட மிக உயர்ந்த தரத்தைக் கொண்டிருந்தது.

சணல் விவசாயத்தில், ஏராளமான உற்பத்தியைத் தரமான வகையில் பெற்றிட, வளமான மண் தேவை. சணல் செடியின் தண்டுகள் நன்கு முற்றியவுடன் அவை வேருடன் பிடுங்கப்பட்டு, கட்டுகளாகக் கட்டப்பட்டுப் பின்னர், உலர்வதற்காகப் பரந்த வெளியில் விரிக்கப்படும். நன்கு காய்ந்த பின்னர் அவற்றைத் தண்ணீர்க் குட்டையில் ஊற வைத்துப் பின்னர், அதன்மேல் கற்களைச் சுமையேற்றினர். நாரை எளிதாகப் பிரித்தெடுக்கும் மென்மையான பக்குவத்தை அடையும்வரை இந்த நிலையிலேயே வைத்தனர். பின்னர், அவற்றைப் பிழிந்து காயவைத்து, வெண்மையாக்கித் தூய்மையாக்கினர். கடைசியாக நாரைப் பயன்படுத்தி சிறு இழைகளாக முறுக்கினர். சணலின் அறுந்த பகுதிகளை அகற்றிட வாரிவிட்டனர். இந்த முறையில் நெசவுக்குத் தேவையான நிலையில் சணலைத் தயாரித்தனர்.

நூற்பவர்கள் இந்த நூலை நூற்புக்கழியில் சுற்றினர். அதன்பின், அது நெசவு செய்வதற்குத் தயாரானது. வண்ணம் கலந்த நார்ப்பட்டைப் பற்றிய குறிப்பு எதுவும் விவிலியத்தில் காணப்படவில்லை என்றாலும், எகிப்தில், இஃது இருந்தது என்பதை அறிகிறோம். கும்ரான் ஏட்டுச் சுருள்களோடு கண்டெடுக்கப்பட்ட சில துணிகளில் ஊதா நிற நூல்கள், பயன்படுத்தப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஆடைகளெல்லாம் வெள்ளையானதாகவே இருந்தன. ஆனால், பொருளாதார வசதி படைத்தவர்களின் ஆடைகள் வண்ண அலங்காரங்களைக் கொண்டவையாகச் செய்யப்பட்டன. பெத்தசுபேயா என்ற இடத்தில் நார்ப்பட்டு செய்யும் குடும்பமோ, தொழிலாளர்கள் கொண்ட சிறிய சமூகமோ வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது (1 நாள் 4:21). இஸ்ராயேலர்களிடையேயும் இத்தகைய கலைஞர்கள் மோசேயின் காலத்தில் வாழ்ந்தனர் (யாத் 35:35; 38:23).

நார்ப்பட்டுத் துணியிலிருந்து, படுக்கை விரிப்பு, திரைகள், இறந்த உடலைப் போர்த்தும் துணி போன்ற பலவகைப் பொருட்கள் செய்யப்பட்டன. இதனுடைய குளிர்ச்சியான தன்மையை முன்னிட்டுக் கோடைக்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட நார்ப்பட்டுத் துணிகள், ஆடம்பரப் பொருட்களின் வகையைச் சேர்ந்தது. எகிப்தில் தாழியிலடைக்கப்பட்ட முதுமக்கள் உருகள் வெளிப்பகுதியில் இந்த நார்ப்பட்டால் மட்டுமே சுற்றப்பட்டன. குருக்களின் ஆடைகள், கப்பலின் பாய், ஏட்டுச் சுருள்களின் மேலுறைகள் போன்ற பொருட்களும் நார்ப்பட்டால் செய்யப்பட்டன.

நார்ப்பட்டு என்ற பொருளில் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டன. நார்ப்பட்டு (யாத் 28:42; 39:28; லேவி 6:10; 16:4; 1 சாமு 2:18; 22:18; 2 சாமு 6:14; 1 நாள் 15:27; எசே 9:2-3.11; 10:2.6-7; தானி 10:5; 12:6-7); பட்டாடை அல்லது மெல்லிய நார்ப்பட்டு (ஆதி 41:42; யாத் 25:4; 26:1,31.36, 27:9; 27:16.18; 28:51.6.8.15.39.42; 35:6.23.25; 36:8.35.37; 38:9.16.18; 39:2-3.5.8.24.27-29); மெல்லிய வெள்ளை நார்ப்பட்டு (1 நாள் 15:27; 2 நாள் 2:14; 3:14; 5:12; எஸ்த 1:6; எசே 27:16). சணல் இழையால் செய்யப்பட்ட நார்ப்பட்டு குறிக்கப்படும் பிற இடங்களில் சில: லேவி 13:47-

48.52.59; 19:19; உப 22:11; 1 அர 10:28; 2 நாள் 1:16; பழ 7:16; 31:24; எசா 3:23; 42:3; எசே 44:17;18; மத் 12:20; 27:59; மாற் 14:51-52; 15:46; லூக் 16:9; 23:53; 24:12; யோவா 19:40; 20:5-7; அ.ப. 10:11; 11:5; திருவெளி 15:6; 18;12.16; 19:8.14).

நாரப் பட்டாடை (LINEN GARMENT)

நீள் சதுர வடிவில் செய்யப்பட்ட விரிப்பாகவோ, நீண்ட துணியாகவே தயாரிக்கப்பட்டு, மேலாடை அல்லது மேல்விரிப்புப் போன்ற பணிக்குப் பயன்படுத்தப்பட்ட நார்ப் பட்டாகும். இதனுடைய சிறப்பான தன்மையும், அழகிய வடிவமைப்பும் இதற்குப் பெரிதும் மதிப்பும் விலையும் அளித்தன. இந்த நார்ப் பட்டாடை சிம்சோனின் விடுகதைப் பந்தயத்தில் (நீதி 14:12-13) கூறப்படுகிறது. இது சுறுசுறுப்புள்ள நல்ல மனையாளின் படைப்புகளின் ஒன்றாகும் (பழ 31:24). எருசலேம் மகளிரின் சொகுசுப்பொருட்களில் ஒன்றாகும் (எசா 3:23). பிற்கால யூத இலக்கியத்தில் இச்சொல், கோடைக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட மெல்லிய மேலாடைகளைக் குறிக்கிறது. இந்தத் துணி கப்பலின் பாய்கள், திரைகள், படுக்கை விரிப்புகள் முதலியவற்றிற்கும், தரை விரிப்புக்கள் அழுக்காகி விடாமல் பாதுகாக்கவும் பயன்படுத்தப்பட்டது.

நாவாம், நாகாம் (NAAM - இன்பமான)

இவர், யூதா குலத்தில், எப்புன்னேயின் பேரனும் காலேபுவின் புதல்வரும் ஆவார் (1 நாள் 4:15).

நாளாகமம் , I-II, ஆட்சிக்குறிப்பேடு நூல்கள் I-II, (HI CHRONICLES, BOOK OF THE)

1. **முன்னுரை:** பாபிலோனியாவுக்கு

நாடு கடத்தப்பட்டு அடிமை வாழ்வு வாழ்ந்த இஸ்ராயேலில் பலர், வரலாற்றிலும், தங்கள் கடந்த கால வரலாறு அளிக்கும் படிப்பினைகளிலும் அக்கறை கொண்டவர். தாங்கள் தோன்றிய விதம், இன்னும் ஒரு தனிப்பட்ட இனமாய் இருப்பதேன் ஆகியவை பற்றி அறிய விரும்பினர். அதன் விளைவாக நாளாகமம் தோன்றியது.

2. **பெயர்:** எபிரேய விவிலியத்தின் இறுதி நூல்கள் "ஆண்டுக்குறிப்புகள்" அல்லது "வருடா வருட நிகழ்ச்சிகள்" என்ற பெயரைக் கொண்டுள்ளன. எழுபது நூல், இந்நூல்களைப் "பாறாலி போமெனோன்" (**Paralepomenon**) என்றழைத்தது. இச்சொல்லுக்கு "விடப்பட்டவை," "கையளிக்கப் பட்டவை," ஒதுக்கப்பட்டவை" என்று பலவாறு பொருள் கூறுவர். "வுல்காத்தா" பதிப்பு இப்பெயரையே பயன்படுத்தியது.

நாளாகமம் என்ற பெயரில் இந்நூல் தமிழில் அழைக்கப்பட்டது. உண்மையில் இந்நூலில் காணப்படுபவை நாட்களாகவோ, ஆண்டுகளாகவோ கணக்கிடப்படவில்லை. ஆகையால், புனித எரோனிமு இந்நூலை "முழு இறை வரலாற்றின் குறிப்பேடு" என்று அழைத்தார். இப்பெயர் இலக்கியப் போக்கிற்கு ஒத்ததாயில்லை எனினும், இந்நூலின் பொருளடக்கத்திற்குப் பொருந்தியதாகும். மார்ட்டின் லூத்தர் இப்பெயரைப் பிரபல்யப்படுத்தினார். பலராலும் இப்பெயர் ஏற்றுக்கொள்ளப்படும் இந்நூல்களைப் புதிய பொதுமொழி பெயர்ப்பில் ஆட்சிக் குறிப்பேடுகள் என்றழைக்கிறோம்.

தொடக்கத்தில் எபிரேய விவிலியத்தில் நாளாகமங்கள் ஒரே நூலாகவே இருந்தன. அலக்சாந்திரியாவில் மொழிபெயர்க்கப்பட்டு எழுபது நூல்கள் தோன்றியபோது, இந்நூல் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இவ்வழக்கு பிற்காலப் பதிப்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கி.பி. 1448-க்குப்பின் எபிரேய வாசகப் பாரம் பரியத்திலும் இம்முறை பின்பற்றப்பட்டது.

எஸ்ரா, நெகேமியா நூல்கள், நாளாகமங்களின் தொடர்ச்சியாகும் என்று எல்லோரும் இப்போது ஏற்றுக்கொள்வர். இதைப்புரிந்துகொள்ள 2 நாள் 36-ஐயும் எஸ்ரா 1:1-4-ஐயும் ஒப்பிடுக. மேலும் பயன் படுத்தப்படும் சொற்றொடர்களும் நடையும் மனப்போக்கும் இம்மூன்று நூல்களுக்கு ஒரே ஆசிரியர் இருந்திருக்கக்கூடும் என்று சுட்டும்.

3. யார் எழுதியது எஸ்ரா 1:1-3-ஐ, 2 நாள்

36:22-23-இல் ஆசிரியர் கூறுகிறார். யூத சமூகத்திற்கும் தன் சமூக சமய நிறுவனங்களுக்கும் எஸ்ராவில் காணப்படும் அதே பற்றுதல் நாளாகமத்தில் காணப்படுகின்றது. ஆலயத்திற்கும் அதன் வழிபாட்டு அமைப்புகளுக்கும் எஸ்ராவைப் போன்று நாளாகம ஆசிரியரும் சிறப்பான அன்பு காட்டுகிறார். சிறிய வழிபாட்டுப் பணியாளர்களுக்கும், சிறப்பாக லேவியர்களுக்கு, அளிக்கப்படும் கவனத்திற்கும் மரபுக்கொடிகளில் காட்டும் அக்கறையிலும், நாளாகமமும் எஸ்ரா நூலும் ஒத்திருக்கின்றன. சொற்றொகுதியிலும் இலக்கணத்திலும் இலக்கிய அமைப்பிலும் மூலங்களில் பயன்படுத்தும் முறைகளிலும் இந்நூல்களுக்குள் மிகுந்த ஒற்றுமை உண்டு. இவற்றைக் கருத்தில் கொண்டு இரு நூல்களையும் ஒரே ஆசிரியர்தான் எழுதினார் என்றும், அவர் எஸ்ராவாக இருக்கக்கூடுமென்றும் இப்போது பொதுவாக ஒருமுகமாக அறிஞர் ஏற்றுக்கொள்வர்.

இஃதோடு ராபிகளின் இலக்கியம், திருச்சபையின் தந்தையர், ஆதிவிளக்க உரையாளர்கள் ஆகியோர் அளிக்கும் பாரம்பரியச் சாட்சியும் மேற்கூறிய கருத்துக்கு ஆதரவு அளிக்கிறது. பாபிலோனிய யூதர்களின் இலக்கியமாகிய "தால்மூதின்" படி, எஸ்ரா, தனது நூலையும் தனது மரபுக் கொடியில் தொடங்கி நாளாகமத்தின் மரபுக் கொடிகளையும் எழுதினார். அதை நெகேமியா நிறைவுபடுத்தினார். இக்கூற்று மிகப்பழைய கருத்தை எதிரொலிக்கிறது. இதன்படி, நாடு கடத்தப்பட்டு, திரும்பிய யூதர்களிடையே ஏற்பட்ட சீர்திருத்தத்திற்குத் தலைமை தாங்கியவர்தான் நாளாகமங்கள், எஸ்ரா, நெகேமியா ஆகமங்களுக்குப் பெருமளவில் பொறுப்பாளியாவார். நாளாகம ஆசிரியர் லேவியர் இனத்தைச் சார்ந்த ஒரு பாடகர் ஆவார் என்பது பற்றிப் பொதுவாகக் கருத்து ஒருமைப்பாடு உண்டு. லேவியர் அரசராகமத்தில் ஒருதடவையும், சாமுவேலில் இரு தடவையும், எஸ்ரா நெகேமியாவில் 60 தடவையும், நாளாகமத்தில் 100 தடவையும் குறிப்பிடுகின்றனர். பாடும் லேவியர் பற்றி அதிகம் கூறப்படுகிறது. வெகு சிறிதே சடங்குகளைச் செய்யும் லேவியருக்குப் பாடும் லேவியரைவிட, அதிகச் சன்மானம் அளிப்பதைக் குறை கூறுவதாகத் தெரிகிறது.

4. எப்பொழுது எழுதப்பட்டது: இது பற்றி அறிஞர்களிடையே பலத்த வேறுபாடுகள் உண்டு. பிரிட்மென் என்பவரது கருத்துப்படி, இந்நூல் ஆசிரியர் ஒரு மன்னராட்சி சார்பாளர். இந்நூலை கி.மு. 515-ஐ ஒட்டி எழுதியிருக்க வேண்டும். இஃதோடு பிற்காலத்தில் குரு குழுவைச் சேர்ந்த ஒருவர் எஸ்ரா நெகேமியாவின் நினைவுக் குறிப்புகளைச் சேர்த்திருக்கவேண்டும். இது 5-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்திருக்க வேண்டும். ஆல்பிரைட் என்பவர் எஸ்ரா இந்நூலை 400-க்குப்பின் எழுதினார் என்பார். ஒரு சிலர் இந்நூல் அலக்சாந்தர் காலத்தை ஒட்டி 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டது என்பர்.

அலக்சாந்தருக்குப் பிறகு இஸ்ராயேலைக் கிரேக்கத் தன்மையுடையதாக்கச் செய்யப்பட்ட முயற்சியைப் பற்றி இந்நூல் ஒன்றும் கூறவில்லை. இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நூல் எப்போது எழுதப்பட்டது என்பதை அறிய இஃது ஒரு குறி காட்டுகிறது. சிலர் இந்நூல் கி.மு. 160-க்குப்பின் எழுதப்பட்டது என்றும் கூறுவர்.

பொருளடக்கமும் மொழி அமைப்பும் ஆசிரியரின் கருத்துக்கள், அவர் பயன்படுத்தும் துறைச்சொல், வழக்கு ஆகியவற்றின் மீது குருக்களின் சட்டம் செலுத்தும் ஆதிக்கமும் இந்நூல் நாடுகடத்தப்படுவதற்கு முன் பதிப்பிக்கப்பட்டிருக்க முடியாது என்று தெளிவாகக் காட்டுகின்றன. நாடுகடத்தப்பட்டு, திரும்பியவர்களின் மரபுக்கொடிகளின் பட்டியல் சிறப்பாக, 5-ஆம் நூற்றாண்டு முடிவுவரை தாவீது மரபுக்கொடி கொடுக்கப்படுவதும், இந்நூல் கி.மு. 400-க்கு முன் தோன்றியிருக்க முடியாது என்று காட்டுகிறது. நாளாகமமும், எஸ்ராவும், நெகேமியாவும் ஒரே நூலாக இருந்தன என்ற கருத்தையும், இந்நூலாசிரியரின் மனப்போக்கில்

தோராவும் எஸ்ராவும் கொண்டிருக்கும் ஆதிக்கத்தையும் மனதில் கொண்டால் இந்த முடிவுதான் வரும்.

தாவீது வரலாற்றுச் சூழ்நிலையில், பாரசீகத்தின் தங்க நாணயம் குறிக்கப்படுகிறது (1 நாள் 29:7). இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைக் காட்டலாம். ஆசிரியர் தன் கவனத்தை ஆலயத்தின் மீது ஒருங்குவிக்க முயல்வதாகத் தெரிகிறது. இது யாவே கோட்பாடு பல தீய சக்திகளால் அழியும் ஆபத்திலிருந்த காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கலாம் என்று சுட்டுகிறது. இத்தகைய ஆபத்துக்களில் ஒன்று கி.மு. 350-இல் தொடங்கி, கெரிசிமில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டதோடு வளர்ச்சியடைந்த சமாரியப் பிரிவினைச் சபையாகும். மற்றது முதலாம் நீதிமான் சீமோனுக்குப் பின் வந்த பெரிய குருக்கள் தோபியாவோடு கொண்ட தொடர்பும், மூன்றாம் தோலமி யூர்கெத்து அளித்த பொருளாதார உதவியும் ஆகும். கி.மு. 157-இல் இந்நூலின் கிரேக்க மொழி பெயர்ப்பை யூப்பெலம் என்பவர் பயன் படுத்தியுள்ளார் என்பது உறுதியாகும். சீராக்கு ஆகமம் (120) இந்நூலைக் குறிப்பிடுகிறது (சீரா 47:2-11). இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால் இந்நூல் 400-க்கும் 170-க்கும் இடையிட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம் என்று கூறலாம்.

5. நோக்கம்: நவீன ஆய்வுப்படி, உபாகமம் முதல் அரசராகமங்கள் வரையுள்ள நூல்கள் ஒரே தொடர் வரலாறாக அமைந்துள்ளன. இவை கி.மு. 600-ஐ ஒட்டித் தொகுக்கப்பட்டு, இன்று நாம் கொண்டிருக்கும் வடிவில் பதிப்பிக்கப்பட்டது என்பர். இஃது உபாகமப் பாரம்பரிய வரலாறு எனப்படும். இது பற்றி உபாகமப்பாரம் பரியம் பற்றிய தலைப்பில் காண்க. வரலாற்று இயலின் மிகப் பழம் கூறுகளைச் சாலமோன் காலத்தில் "யாவே" பாரம்பரிய ஆசிரியரும், பிற்காலத்தில் எலோகீம் பாரம்பரிய ஆசிரியரும் தொகுத்தனர். இவற்றையெல்லாம் சேர்த்து இணைத்துத் "தோரா"வாக நாடு கடத்தப்பட்ட பின் எஸ்ராதான் பதிப்பித்தார் என்று பாரம்பரியம் கூறுகின்றது. எஸ்ரா தனது செயல்களின் குறிப்பேட்டையும் எழுதி வைத்தார். அப்படியிருக்க ஆதாமிலிருந்து நாளாகம ஆசிரியர் காலம் வரை அடங்கிய இஸ்ராயேல் பற்றிய மற்றொரு வரலாறு ஏன் எழுதப்பட வேண்டும்.

இதற்குக் காரணம், நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப்பின் நடந்த நிகழ்ச்சிகளையும் எஸ்ராவின் செயல்களையும் ஒன்றுசேர்த்துப் பதிப்பிப்பதாக இருக்கலாம். இதைவிட மற்றொரு காரணம் பொருத்தமுடையதாக இருக்கலாம். ஐந்நூல் மோசேயையும் சீனாய் உடன் படிக்கையையும் பெருமைப் படுத்துகிறது. இது தாவீது வழி வந்த சடங்குமுறை, அரச மரபு, அதிகாரம் ஆகியவற்றைக் குறைத்துக் காட்டுவதாக அமைந்தது. இந்தப் போக்கிலிருந்து விசுவாசிகளைக் காக்க நாளாகமம் எழுதப்பட்டது எனலாம். விரும்பிய சமய போதனையைக் கொடுக்கவே ஆசிரியர் முயல்கிறார். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூத இனத்தவரிடையே எழுந்த சிக்கல் மிக்க பிரச்சனைகளுக்கு அளிக்கப்பட்ட பதில்களை வரலாற்று வழியாக எண்பிப்பதும், சிறப்பாக யூத இனத்தில் அடிப்படையான கூறுகளைத் தாவீதுக்குச் சாற்றிக் கூறுவதும் இந்நூலின் நிலையான போக்காகும். அதேபோது மோசேயின் பாகம் புறக்கணிக்கப்படவில்லை.

பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட எபிரேய மக்கள் தங்களது சுவைமிக்க கடந்த காலத்தால் பெரிதும் கவரப்பட்டனர். அவர்கள் எப்படித் தோன்றினர்? எப்படி இறைவன் இடுக்கண் மிக்க காலங்களில் அவர்களை வழிநடத்திச் சென்றார்? அவர்களின் சட்டத்தின் மேன்மை என்ன? அதைக்கடைப்பிடித்தனரா? ஏன் அவர்களது அரசன் தாவீது வழி வந்தவராக இருக்க வேண்டும்? மூல ஆலயம் எப்படி இருந்தது? அவர்களின் தற்போதைய இழிநிலை ஏன் ஏற்பட்டது? வருங்காலத்தில் நம்பிக்கை உண்டா? இது

போன்ற பல கேள்விகளுக்குப் பதிலை விரும்பினர், தேடினர். நாளாகமம் இக்கேள்விகளுக்குப் பதிலாக அமைந்தது.

இஸ்ராயேலின் குருக்களும் அரசர்களும் அடங்கிய எல்லாச் சக்திகளும் இறையரசு நிறுவப்படுவதற்குத் தடையாக இருந்தனர் என்று காட்டி மெசியா ஒருவரே உண்மையான ஒரே ஆயன் என்று சுட்டிக்காட்டுவது, இந்நூலாசிரியரின் நோக்கமாகும். "இறுதி முன்னோக்கு" இந்நூலில் இல்லை என்று கூறலாம். ஆயினும், உண்மையான மெசியா பற்றிய நம்பிக்கையை வளர்க்கிறார் எனலாம். இந்நம்பிக்கை "இறுதிக்கால முன்னோக்கை" அடிப்படையாகக் கொள்ளவில்லை. மாறாக, நாடுகடத்தப்படும்முன் இருந்த அரச மரபு வடிவில் உள்ளது. இறைவனால் வாக்குறுதி அளிக்கப்பட்ட தாவீது மரபு உறுதிப்படுத்தப்படுகிறது.

6. இலக்கியப் பண்பு: தனது நோக்கத்தை எடுத்துக்கூற "மிட்ராஸ்" என்ற இலக்கிய வடிவைப்பயன்படுத்துகிறார் ஆசிரியர். நாடு கடத்தப்பட்டு, திரும்பிய காலத்தில் இந்த இலக்கிய வடிவம் வழக்கில் இருந்தது. இவ்விலக்கியம் பற்றி விரிவாக அத்தலைப்பின் கீழ்க் காண்க. இப்போது சுருக்கமாக ஒரு சிறிது கூறுவோம். இவ்விலக்கியம் நெருக்கமில்லாத ஒருவகையான வரலாற்று நிகழ்ச்சியுரையாகும். இது பழங்கால வாசகங்களுக்கும் பாரம்பரியங்களுக்கும் விரிவுரை அளிக்கும்; இதன் வழியாக ஆசிரியர் காலத்து மக்களுக்கு ஒழுக்கம் பயிற்றும்; போதிக்கும்; அக்காலத்துக்குரிய கோட்பாடுகளையோ, ஒழுக்கப் பிரச்சனைகளையோ விளக்கும். சமயக் கருத்தை விளக்கிக்காட்ட வரலாற்றைத் தொடக்கமாகப் பயன்படுத்துவது இவ்விலக்கியத்தின் அடிப்படைப் பண்பாகும். இதில் ஆசிரியருக்குப் பாரம்பரியத் தொகுப்பும் சமய உணர்வும் வழிகாட்டும். இஸ்ராயேலின் வரலாறும் நிறுவனங்களும் தற்செயலாக நிகழ்ந்தவையன்று. மாறாக, இறைவனின் முன்னறிவோடும் ஆற்றல் மிக்க செயலாலும் நிகழ்ந்தவை என்பது தான் இச்சமய உணர்வு.

நாளாகம வரலாறு "மிட்ராசிக்" தன்மையுடையது. ஆசிரியர் வரலாற்று உண்மைகளைப் பயன்படுத்துகிறார். அந்த அளவுக்கு அவர் ஒரு வரலாற்று ஆசிரியர். ஆனால், அவர் சிலவற்றைப் பொறுக்கி எடுக்கிறார்; சிலவற்றை வலியுறுத்திக் கூறுகிறார்; தனக்குக் கிடைத்த உண்மைகளைக் கற்பனையோடு அணிசெய்கிறார். இந்த அளவுக்கு அவரது இலக்கியம் "மிட்ராசிக்" தன்மையுடையது. நாம் அவரது போதகத்தைப் பாராட்ட விரும்பினால் அவரது நூலில் காணப்படும் வரலாற்று "மிட்ராசிக்" கூறுகளை மனதில் கொள்ள வேண்டும்.

7. மூலங்கள்: விவிலியம் சார்ந்த மூலங்களைத் தவிர வேறு நம்பத்தகுந்த மூலங்களையும் இந்நூல் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார் என்று உறுதியாகக் கர்தினால் பேயா நிறுவுகின்றார். தன் நூலை எழுதியபோது, இவ்வாசிரியர் பல எழுதப்பட்ட பல மூலங்களைத் தன் முன் வைத்திருக்க வேண்டும். அவரே ஏறக்குறைய 20 மூலங்களைச் சுட்டுகிறார்.

அ. விவிலியம் சார்ந்த மூலங்கள்: இந்நூல் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கும் மூலங்களில் சில ஏற்கெனவே எழுத்து வடிவம் எடுத்திருந்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். சிலவற்றைக் குறிப்பிடத்தக்க முறையில் மாற்றியும் சிலவற்றை மாற்றாமல் நாம் இப்போது கொண்டிருக்கும் வடிவிலேயும் எடுத்துக்காட்டுகிறார். இந்நூலின் பெயர்களை ஆசிரியர் கூறாவிட்டாலும் அவர் பின்வரும் நூல்களைப் பயன்படுத்தியிருக்கக்கூடும்.

1. ஐந்நூல் (ஆதி 10:22-29 = 1 நாள் 1:17-23).
2. யோசுவா (யோசு 19:1-8 = 1 நாள் 4:28-33).
3. சாமுவேல் (1 சாமு 31:1-13 = 1 நாள் 10:1-12). (2 சாமு 5:1-10 = 1 நாள் 11:1-9).

4. அரசர்கள் (1 அர 8:1-52 = 2 நாள் 5:2-6:40; 2 அர 16:2:20 = 2 நாள் 28:1-26).

5. சங்கீதங்கள் (சங் 104 (105): 1-15 = 2 நாள் 16:8-22; சங் 95 (96) = 1 நாள் 16:23-33; சங் 105 (106):1.47-48=1 நாள் 16:34-36

இப்படியே கூறிக்கொண்டு போகலாம்.

சில மூலங்களை வெளிப்படையாகக் கூறுகிறார். அவை:

1. இஸ்ராயேல், யூதா அரசர்களின் வரலாறு (2 நாள் 25:26; 28:26;32:32).

2. யூதா, இஸ்ராயேல் அரசர்களின் வரலாறு (1 நாள் 9:1; 2 நாள் 27:7; 35:27; 36:8).

3. அனானியின் மகன் ஏகூவின் வரலாறு. இஃது இஸ்ராயேலின் அரசர்களின் நூலில் புகுத்தப்படுகிறது (2 நாள் 20:34).

4. இஸ்ராயேல் அரசர்களின் வரலாறு (2 நாள் 33:18).

5. அரசர்கள் வரலாறு பற்றிய விளக்கவுரைகள் (மிட்ராஸ்) (2 நாள் 24:27).

இந்த அரசர்கள் வரலாற்று மூலங்கள் எல்லாம் ஒருவேளை உண்மையில் ஒரே மூல நூலைக் குறிக்கலாம்.

ஆ. இறைவாக்கினர் மரபில் வந்த மூலங்கள்:

1. வருங்கால நிகழ்ச்சியை உரைப்பவரான திருக்காட்சியாளர் சாமுவேல் நூல் (1 நாள் 29:29).

2. இறைவாக்கினர் நாத்தானின் நூல் (1 நாள் 29:29; 2 நாள் 9:29).

3. திருக்காட்சியாளர் காதின் வரலாறு (1 நாள் 29:29).

4. சிலோவியரான அகீயாவின் நூல் (2 நாள் 9:29).

5. திருக்காட்சியாளர் இத்தோவின் நூல் (2 நாள் 9:29; 12:15).

6. இறைவாக்கினரான செமாயாவின் நூல் (2 நாள் 12:15).

7. அமோசின் மகன் எசாயா எழுதிய ஊசியாவின் வரலாறு (26:22).

8. எசாயா எழுதிய எசேக்கியாவின் வரலாறு (32:32).

9. மனாசே பற்றிய காட்சியாளர்களின் நூல் (33:19). இவை யாவும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு இறைவாக்கினர் தொகுப்பாக இருந்திருக்கலாம்.

1 நாள் 1-9-இல் வரும் மரபுக்கொடிகள் ஆதியாகமம், யாத்திரை ஆகமம், எண்ணாகமம், யோசுவா ஆகமம், ரூத் ஆகமம் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்படுகின்றன. 1 நாள் 10-ஆம் அதிகாரத்திலிருந்து முடிவுவரையும், சாமுவேல், அரசராகமங்களிலிருந்து முழுப்பகுதிகளும் அப்படியே எடுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இ. மற்ற மூலங்கள்:

1. காதின் குடும்ப ஏடுகள் (1 நாள் 5:17).

2. தாவீது அரசனின் நாளேடு (27:24).

3. ஆலயப் பொருட்கள் பற்றிய தாவீதின் குறிப்புகள் (28:19).

4. லேவியருக்குத் தாவீது, சாலமோன் அளித்த ஒழுங்குமுறை (2 நாள் 35:4).

5. யோசியாவின் மேல் எரேமியாவின் புலம்பல் (35:25).

ஈ. மூலங்களைப் பயன்படுத்தும்முறை:

விவிலியம் சார்ந்த மூலங்களைத் தனது குறிக்கோளுக்கு ஏற்றவாறு பயன்படுத்துகிறார்.

1. இக்குறிக்கோளை அடைய, மூலங்களைத் திரும்பக் கூறுகிறார் (1 சாமு 31:1-13 = 1 நால் 10:1-12).

2. தன் விருப்பம் போல் விட்டுவிடுகிறார்; அல்லது கூறாது அடக்கிவிடுகிறார். சான்று: சவுலினால் தாவீதுக்கு ஏற்பட்ட தொந்தரவு, பத்சேபாவுடன் தாவீது விபசாரம் செய்தலும் அவளது கணவனைக் கொலை செய்தலும், அப்சலோமின் கலகம், சாலமோனின் குற்றங்கள் (2 சாமு 24:1=1 நாள் 21:1).

3. தனது கோணத்தில் பார்த்து நிகழ்ச்சிகளைத் திருத்தி எழுதுகிறார்.

4. சுருக்கித் தருகிறார் (2 அர 18:13-19:37 = 2 நாள் 32:1-23).

5. விரித்துத் தருகிறார் (2 அர 23:21-23 = 2 நாள் 35:1-9).

இவற்றில் எல்லாம் ஓர் அடிப்படை மனப்போக்கு தெரிகிறது. ஆசிரியர் விவிலியத்துக்கு வணக்கமும் மரியாதையும் செலுத்துகிறார்; அதை உயிருள்ள விதத்தில் தியானித்து நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளிக்கிறார்; செறிவுமிக்கதாக்குகிறார். இதில் இவருக்கும் சீராக்கு ஞானாகம ஆசிரியர்களுக்கும் ஒற்றுமை உண்டு.

இம்மூலங்கள் பற்றிய மதிப்பீடு என்ன? அறிஞர்கள் வேறுபடுகின்றனர். தனக்குமுன் இருந்த ஆதியாகமம் முதல், அரசர்கள் ஆகமங்கள் வரையுள்ள நூல்களையும் சங்கீதங்களையும் இந்நூல் ஆசிரியர் நன்கு அறிந்திருந்தார் என்பது தெளிவு. இவற்றைத் தவிர்த்த பிற மூலங்களைப் பயன்படுத்தினாரா? இதுபற்றிப் பலத்த கருத்து வேறுபாடுண்டு. சிலர் இந்நூல் ஆசிரியர் விவிலியம் தவிர்த்த மற்ற மூலங்களைப் பயன்படுத்தவில்லை என்பர். விவிலியத்தைச் சாராத பகுதிகளில் காணப்படும் போக்கும் மொழிநடையும் ஆசிரியருடையதே. பிற மூலங்கள் இருந்தன என்பதற்கு உட்சான்றுகள் இல்லை என்பர். இம்மூலங்களை ஆசிரியர் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுவதைக்கூட, தான் கூறுவது அதிகாரப் பூர்வமான உண்மையுடையது என்று காட்டுவதற்காக ஆசிரியரே இட்டுக்கட்டியதாகும் என்பர். இவ்வாதம் மெய்யெனக் காட்டி நம்பவைக்கக் கூடியதன்று. ஏனெனில் பிற மூலங்களிலிருந்து எடுத்துப் பயன்படுத்தியிருந்தாலும் ஆசிரியர் அப்படியே எடுத்தாள வேண்டியதில்லை. விவிலிய மூலங்களிலிருந்து எடுத்துப் பயன்படுத்தும் போதுகூட அவர் அப்படியே பயன்படுத்த வில்லை(1 அரச 3:4 2 நாள் 1:3-6). விவிலிய மூலங்களைத் தவிர்த்த பிற மூலங்களை - ஒன்றையோ பலவற்றையோ - ஆசிரியர் பயன்படுத்தியிருக்கலாம். இவை ஒரு வேளை அரசர்களின் நூல் பற்றிய விளக்கவுரை என்ற ஒரே மூலமாக இருந்திருக்கலாம்.

8. **விவிலியப் பட்டியலில் நாளாகமம்:** இந்நூலைப் பலரும் பலவிதமாக வரவேற்றனர். இது கசிதீமியர்களையும் பரிசேயர்களையும் பிரியப்படுத்தியது; சதுசேயர்களைப் பிரியப்படுத்தவில்லை. இத்தகைய வரவேற்பு இந்நூல் விவிலியப்பட்டியலில் சேர்க்கப்படுவதைத் தள்ளிப்போட்டது. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட போது ஒரு விநோதமான வரலாறு மாறுபாட்டால் ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த எஸ்ரா, நெகேமியா ஆகமங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு எபிரேய விவிலியப் பட்டியலின் இறுதியில் இந்நூல் வைக்கப்பட்டது. எஸ்ரா ஆகமம் விவிலியத்தில் வேறெங்கும் எடுத்துக் கூறப்படாத மீட்பு வரலாற்றின் முக்கிய நூற்றாண்டுகளைப் பற்றிக் கூறுகிறது. இதுவும் சாமுவேல் முதல் அரசராகமங்கள் வரையுள்ள முந்தைய நூல்களில் காணப்படுபவையே இந்நூலில் காணப்படுவதும், இவ்வரிசை முறைக்குக் காரணமாயிருந் திருக்கலாம். இவ்வரிசை முறை இந்நூல் இறையூக்கம் பெற்ற நூலாகப் பிற்காலத்தில்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சுட்டலாம். யாம்னியாவின் பொதுக்கூட்டத்தில் (கி.பி.95) இந்நூல், அதிகாரப்பூர்வமாக எபிரேய விவிலியப் பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என உறுதியாகக் கூறலாம். கி.பி. 70-இல் ஆலயம் அழிந்தது. சதுசேயர் தங்கள் அதிகாரத்தை யெல்லாம் இழந்து இருந்தனர். பரிசேயருடைய கோட்பாடே மேலோங்கி நின்றது. அப்போது

இந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டதில் வியப்பில்லை. இந்நூல் தாவீதையும் இறையாட்சிச் சமூகத்தையும் உன்னத மாதிரியாக்குதல் இந்நூலை விவிலியப்பட்டியலில் சேர்த்துக்கொள்ள பரிசேயர்களைத் தூண்டியிருக்கலாம்.

எழுபது நூலிலும், பிற்கால மொழி பெயர்ப்புகளிலும் இந்நூல் எஸ்ரா ஆகமத்திற்கு முன் வைக்கப்படுகிறது. சாமுவேல், அரசராமங்கள் ஆகிய வரலாறுகளின் தொடர்ச்சியாகவும் பிற்சேர்க்கையாகவும் வருகிறது.

சீரியன் திருச்சபையைத் தவிர்த்த மற்றக் கிறிஸ்துவ சபைகள் இந்நூலைத் தங்களது விவிலியப் பட்டியலில் இடறல் இன்றி ஏற்றுக்கொண்டன. புதிய ஏற்பாட்டுக் காலத்திலேயே நாளாகமம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மத் 23:35-இல் ஆபேலின் இறப்பையும் (ஆதி 4:8), செக்கரியாவின் மரணத்தையும் (2 நாள் 24:21-22) இயேசு சுட்டிக்காட்டுகிறார். இதைக்கொண்டு முதல், இறுதிக் கொலைகளைச் சுட்டிக்காட்டி யூத விவிலியத்தை ஒரே வீச்சில் சுட்டிக்காட்டுகிறார். பிற புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் இந்நூலைச் சுட்டிக்காட்டுகின்றனர் (எபி 9:11-12 = 1 நாள் 16:1-2; எபி 11:13 = 1 நாள் 29:15). இந்நூல் இறையூக்கம் பெற்றதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாற்றின் உச்சநிலை, திரிதெந்தின் பொதுச்சங்க விசுவாசிகளால் புனிதமானது என்று விசுவசிக்கப்பட்டு, இது விவிலியப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய நூல்களில் ஒன்று என்று அறிக்கையிட்டதாகும். இந்நூலுக்குத் தியோடொரெட் என்பவரைத் தவிர வேறு எந்தத் திருச்சபைத் தந்தையரும் விளக்கவுரை அளிக்கவில்லை. இந்நூல் சிறிது மந்தப் போக்குடையது; எழுச்சியற்றது; எல்லோராலும் மறக்கப்பட்ட நூலாகத்தோன்றலாம். ஆயினும், கிறிஸ்துவ வழிபாட்டுச் சடங்கு இதிலிருந்து பல வாசகங்களை எடுத்துப் பயன்படுத்துகிறது.

9. திட்டம்: இவ்விரு ஆகமங்களையும் நான்கு தெளிவான பகுதிகளாகப் பிரிக்கலாம்.

I. மரபுக்கொடிகள் (1 நாளா 1-9): இப்பகுதி ஆதாமில் தொடங்கி, கி.மு. 538-இல் சைரசின் சட்டத்திற்குப் பின் எருசலேமில் வாழ்ந்த தாவீது, சாலமோன் ஆகியோரின் வழித்தோன்றல்களின் மரபுமுறைக் கொடிகளைக் கொடுக்கிறது.

அ. உலக வரலாற்றில் இஸ்ராயேலர் (1 நாள் 1:1-27).

ஆ. ஆபிரகாமில் இஸ்ராயேலர் (1:28-54).

இ. பன்னிரண்டு இனத்தவர் (2:1-7:40).

1. யூதாவின் மரபுவழி (2:1-23)

2. தென் கிழக்குக் கூட்டாட்சியின் எஞ்சியோர் (4:24-5:26).

3. லேவியர்கள் (6:1-81).

4. வடநாட்டார் தலைமுறை (7:1-40).

ஈ. தாவீதின் எழுச்சிக்குப் பின்னணி (8:1-9:44).

II. தாவீதின் பேரரசு (1 நாள் 10:29):

இப்பகுதி தாவீதின் அரசை ஓர் உன்னத மாதிரியாக எடுத்துக்காட்டுகிறது. மற்றும் அரசன் சமூக சமய அமைப்புகள் விவரிக்கப்படுகின்றன.

அ. மரபு உரிமை நேர்மையானது (10:1-11:9).

ஆ. தாவீதின் சேனைகள் (11:10-12:40).

இ. இறையாட்சி வலுவாக்கப்படுதல் (13:1-17:27).

1. பெட்டகத்தை மீட்டல் (13:1-14).

2. தாவீது தன் வீட்டைக் கட்டுதல் (14:1-17).

3. திருப்பேழை (15:1-16:43).

4. ஆலயம் கட்டுதல் ஒத்திவைக்கப்படுதல் (17:1-27).

ஈ. சேனையின் துணைகொண்டு பேரரசை அமைத்தல்.

1. யோர்தானுக்குக் கிழக்கே நடத்திய போர் (18:1-20:3).

2. பெலிஸ்தியர் பற்றிய கதைகள் (20:4-7).

3. பேரழிவு கொண்டு வந்த கணக்கெடுப்பு (21:1-7).

உ. தாவீதின் ஆலயம் (21:8-29:3).

1. கணக்கெடுப்பின் சமயப்பொருள் (211:8-22:1).

2. ஆலயத்தின் வரைபடம் (22:2-19).

3. ஆட்சிகளின் வரிசை (23:1-27:34).

4. தாவீதின் அறவுரை (28:1-21).

5. தாவீது அரசு துறத்தல் (29:1-29).

III. சாலமோனின் ஆட்சி (2 நாள் 1-9):

இப்பகுதி சாலமோனின் ஞானத்தை அழுத்திக் கூறுகிறது. இந்த ஞானம் எருசலேமில் ஆலயம் எழுப்பித் திருநிலைப் படுத்துவதில் சிறப்பாக வெளிப்படுகிறது.

அ. சாலமோன் ஞானம் பெறுதல் (1:11-17).

ஆ. ஆலயம் (2:1-7:22).

1. ஆலயம் எழுப்ப ஏற்பாடு (2:1-18).

2. கட்டடமும் அதன் அளவுகளும் (3:1-17).

3. ஆலயப் பொருட்கள் (4:1-22).

4. திருநிலைப்படுத்தும் சடங்கு (5:11-7:22).

இ. சாலமோனின் நகர்களும் வணிகமும்.

IV. சாலமோனுக்குப் பின் வந்த யூதாவின் ஆட்சிகள் (2 நாள் 10-36):

வடபகுதியை ஆண்ட இஸ்ராயேல் அரசர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். தாவீதின் அரசர்களுக்குள்ளும் நல்லவர்களும் சீர்திருத்தம் செய்தவர்களுமான யோசபாத்து, எசேக்கியா, யோசியா ஆகிய மூவருமே சிறப்புப் பெறுகின்றனர். மற்ற அரசர்கள், குருக்கள், மக்கள் ஆகியோரின் தீய ஒழுக்கம் எருசலேமுக்கும் நாட்டிற்கும் அழிவையே கொண்டு வந்தது.

அ. இஸ்ராயேலரிடையே பிளவு (10:1-16:14).

1. ரெகபயாமின் ஆட்சி (10:1-12:16).

2. அபியாவின் ஆட்சியும் ரெகபயாமின் முடிவும் (13:1-22).

3. ஆசாவின் நல்லாட்சி (14:1-16:14).

ஆ. கமூக அமைதியின்மைக் காலம் (17:1-20:37).

1. யோசபாத்து (873-849), (17:1-20:37).

2. அத்தலியா (849-837), (21:1-23:21).

3. யோவாசும் (837-800), அமட்சி யாவும் (24:1-25:28).

4. ஊசியா (26:1-23).

5. யோத்தாம் (27:1-9).

இ. அன்னியர் படையெடுப்புக்கள் (28:1-36:23).

1. ஆகாசும் அவன் பாவமும் (28:1-27).

2. எசேக்கியாவின் சீர்திருத்தமும் ஒன்றிப்பு இயக்கமும் (29:1-32:33).

3. மனாசேயும் ஆமோனும் (33:1-25).

4. யோசியாவும் அவன் சீர்திருத்தமும் (34:1-35:27).

5. பாபிலோனியாவைச் சார்ந்த பொம்மை அரசர்களும் அழிவும் (36:1-23).

மக்கள் நாடு கடத்தப்பட்டு அவதியுற்றனர். மீண்டும் எருசலேம் ஆலயத்தைக் கட்ட பாரசீக மன்னன் சைரசு ஆணை இடுவதோடு நாளாகமம் முடிகிறது. எஸ்ரா, நெகேமியா ஆகமங்கள் இவ்வரலாற்றை நிறைவு செய்யும்.

10. **சிறப்புக் கருத்துக்கள்:** அரசர்கள், இறைவாக்கினர் பற்றிய குறிப்புகள், அரசராகமங்களுக்கு அளிக்கப்பட்ட அறிமுகத்தில் காண்க.

அ. **மரபுக்கொடிகள்:** முதல் ஒன்பது

அதிகாரங்கள் மரபுக்கொடிகளைக் கொண்டுள்ளன. பிரிந்து சென்ற வட இனத்தவரின் மரபுக்கொடிகள் தாவீது காலத்துக்கு அப்பால் கொடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக, அரசு மரபுக்குப் பற்றுறுதியுடைய பென்யமின், லேவியரின் மரபுக்கொடிகள் நாடு கடத்தப்பட்ட காலம் வரை தொடர்ந்து கொடுக்கப்படுகின்றன. தாவீது அரசனின் வழித்தோன்றல்களின் மரபுக்கொடி எஸ்ரா, நெகேமியாவின் காலம்வரை கொடுக்கப்படுகிறது. இஸ்ராயேலின் அரசர்கள் தாவீதின் புதல்வர்களோடு தொடர்பு கொண்ட அளவிற்குத்தான் குறிக்கப்பெறுகின்றனர்.

பவுல் இம்மரபுக் கொடிகளை வெறுத்து ஒதுக்கலாம் (1 திமொ 1:4; தீத் 3:9). ஆனால் இம்மரபுக்கொடிகளை யூதர்கள் பெரிதும் மதித்தனர். இம்மரபுக் கொடிகள் வறட்சி மிக்க பெயர்களின் தொகுப்பாகத் தோன்றலாம். ஆனால் நுண்ணோக்கோடு அவற்றின் வரலாற்று உட்கருத்தை நோக்கினால் அவற்றின் பின் நிற்கும் வரலாற்று வளர்ச்சியும் பல வண்ணமிக்க உருவக் காட்சியும் தோன்றும்.

இம்மரபுக்கொடிகள் இஸ்ராயேலரின் தொடர்ச்சியான குடும்ப வரிசையைக் கொடுக்கின்றன. இவை, இஸ்ராயேல் சமூகத்தின் இன, குடும்ப அமைப்பிலிருந்து, தங்களது முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. ஒருவன், அவன் சேர்ந்த இனம், குடும்பத்திற்கு ஏற்ற உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றான். நாடு கடத்தப்பட்டபின் தங்களது குருகுல மரபுக்கொடிகளைக் காட்ட முடியாதவர்கள், குருத்துவத்திலிருந்து நீக்கப்பட்டதை நாம் அறிவோம் (எஸ் 2:59-65; நெகே 7:61-65). இம்மரபுக் கொடிகள் வேறு இடங்களில் காணப்படாத வரலாற்றுக் குறிப்புகளைக் கொடுக்கின்றன. இவை செயற்கை முறையில் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இம்மரபுப் பட்டியலில் அடங்கிய அதிகாரங்களிலும் ஆசிரியர் அவருக்கு விருப்பமான சில போதகங்களை எடுத்துக் கூறுகிறார். இவர் நாட்டின் ஆன்மீக வாழ்வில் முதன்மையான அக்கறை கொண்டவர். ஆகவே, இறைவனுக்குக் கீழ்ப்படிதல் (1 நாள் 2:7; 10:11-14), இறைவனிடம் செபித்தல் (4:9-10; 5:18-20), இறைவனுக்குப் பணிசெய்தல் (6:48;9:13) ஆகிய போதனை பற்றிக் கூறுகிறார். இவை குருகுலத்திற்கு மிக முக்கியமானவையாகும்.

ஆ. அரசர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு: நாளாகம ஆசிரியரின் கருத்துப்படி சவுல் கீழ்ப்படியாத சுயமையம் கொண்ட குற்றவாளி; அரசனாய் இருக்க முழுவதும் தகுதியற்றவன். ஆகவே, அவன் சில நல்ல செயல்கள் செய்திருந்தாலும், அவனது ஆட்சியைப்பற்றி இக்குருகுல வரலாற்று ஆசிரியருக்கு அக்கறையேயில்லை. அவரைப் பொறுத்தமட்டும் சவுலின்மேல் இறைவன் இட்ட தீர்ப்பைச் சுட்டிக் காட்டுவதுதான். "ஆண்டவர் அவரைச் சாகடித்து அவரது அரசை ஈசாயின் மகன் தாவீதுக்குக் கொடுத்தார்" (10:142).

தாவீதின் அரியணை பற்றி மிகுந்த மனவெழுச்சியோடு அக்கறை கொள்கிறார். அடுத்த பதினாறு அதிகாரங்களில் தாவீதின் வரலாற்றைக் கூறுகிறார். இஃது ஒரு விளக்கம் பெற்ற வரலாறு. தாவீது குடும்பத்துக்கு இழிவு தரும் காரியங்கள் விட்டுவிடப்படுகின்றன. பத்சேபாவுக்கும் அவளது கணவன் உரியாவுக்கும் எதிராகத் தாவீது செய்த பாவம் குறிப்பிடப்பட வில்லை. அப்சலோம் தன் தகப்பனுக்கு எதிராகச் செய்த கிளர்ச்சி பற்றி ஒன்றுகூடக் கூறப்படவில்லை. தாவீது ஆட்சியின் கீழ் எபிரேய நாட்டு முழு வரலாற்றையும் தான் கொடுக்கவில்லை என்று நாளாகம ஆசிரியர் நன்கு அறிந்தே செயல்படுகிறார். சில ஆன்மீக உண்மைகளை வலியுறுத்த சில பொறுக்கி எடுக்கப்பட்ட நிகழ்ச்சியுரைகளையே பயன்படுத்துகிறார். தனது உடனடி நோக்கத்திற்குப் பயன்படாதவைகளை விட்டுவிடுகிறார். அவற்றை மற்ற நூல்களில் வாசகர்கள் வாசித்தறியலாம். நாளாகம ஆசிரியர் வரலாற்றை அணுகும் முறையில் கூட்டு முயற்சிக்கு முக்கியத்துவம்

கொடுக்கிறார்(1 நாள் 9:17-34; 15:16-24; 18:14-17; 28:21). இறைவனின் சட்டத்திற்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுகிறார் ஆசிரியர். தாவீது அரசனுக்குப் பணிந்து நடக்கிறார். அவரைச் சார்ந்து செயல்படுகிறார். தேவையின்போது இறைவனது ஆலோசனையைத் தேடுகிறார். ஆன்மீக காரியங்களுக்கு முதலிடம் கொடுக்கிறார். இதைக் குருகுல ஆசிரியர் மிகுந்த ஆர்வத்தோடு எடுத்துக் கூறுகிறார். தாவீதின் வெற்றிகள் ஓர் படிப்பினையைக் கொடுக்கின்றன. இறைவனை ஒருவன் மதித்து நடந்தால் அவர் அவனைச் செழிப்புறச் செய்வார்.

இ. ஆலயம்: இவ்வாசிரியரது சிறப்புக் கருத்துக்களில் ஒன்று ஆலயமாகும். ஆலயம், அதன் நிர்வாகம், கட்டடம், திருநிலைப்படுத்துதல் ஆகியவற்றை விரிவாக எடுத்துக் கூறுகிறார். சாலமோனின் ஆட்சியைப்பற்றிப் பொறுக்கி எடுத்த நிகழ்ச்சிகளை மட்டும் கொடுக்கிறார். சாலமோனின் பாவங்கள் தீய செயல்கள் பற்றி ஒன்றுமே கூறவில்லை. சாலமோனை ஆசிரியர் இறைவனுக்கு ஆலயம் கட்டிய மன்னன் என்ற அளவிலே நோக்குகிறார்.

ஈ. மாறுபாடுகள் நிறைந்த வரலாறு: இந்நூலின் மீதிப்பகுதிகளும் எபிரேய வரலாற்றில் பொறுக்கி எடுக்கப்பட்ட பகுதிகளாகும். வடநாட்டு அரசர்களைப் பற்றி ஆசிரியருக்கு அக்கறையில்லை. அப்படி ஏது கூறினாலும் அவர்கள் தென்னாட்டு அரசைப் பாதித்த அளவே கூறப்படும். அரசராகமங்களில் தீமைக்கும் சண்டைக்கும் பெயர் பெற்ற அபியா (1 அர 15:1-8) நாளாகமத்தில் அதன் ஆசிரியர் விரும்பிப் போதிக்கும் கருத்துக்களை எடுத்துக்கூறும் சாதனமாகிறான் (2 நாள் 13). அவை: தாவீதின் கீழ் ஒன்றித்த அரசும், அவருக்குப்பின் வந்த இறைவனால் நியமிக்கப்பட்டவர்களும் (2 நாள் 13:4-7), சிலை வணக்கம் என்ற பாவமும் (13:6), இறைவனால் நியமிக்கப்பட்ட குருத்துவமும் அவன் உதவியாளர்களும் (13:9-10), சரியான சூழ்நிலையில் எருசலேம் ஆலயத்தில் சரியான முறைப்படி பலி செலுத்துவதை வலியுறுத்திக் கூறுவதும் (13:11-12) ஆகும்.

உ. ஆன்மீகக் காரியங்களுக்கு முதன்மை அளிப்பவர்கள் இறைவனால் ஆற்றல் மிக்க விதத்தில் ஆசீர்வதிக்கப்படுவர்; பெரிதாக இறை உதவி பெறுவர். யோசபாத்து இதற்கு ஒரு தலை சிறந்த எடுத்துக்காட்டாகும் (2 நாள் 20:1-30).

இப்பகுதியில் நாளாகம ஆசிரியர் சில சிறப்பான படிப்பினைகளைத் தருகிறார்.

1. **இறைவனை நம்பு.** இந்நூல் ஆசிரியரது சிந்தனையில் இறைவனை முழுவதும் சார்ந்திருப்பதும் நம்புவதும் மிக முக்கியமான தொன்றாகும் (2 நாள் 13:18; 14:11; 16:7-9; 20:5-17; 25:8; 32:7-8).

2. **இறைவனுக்குக் கீழ்ப்படி.** ஆசிரியர் சட்டத்திற்குக் காட்டும் அக்கறை பெரிது. இறைவனுக்குப் பணிபவர்களும், குருக்களின் ஆலோசனையை ஏற்பவர்களும் வளம் பெறுவர்; உள்ள உரம் பெறுவர் (2 நாள் 14:2-4; 20. 23; 18:25; 4; 30:16; 34:19-21, 31). சிலை வணக்கத்தையும் தூய்மை கெட்ட வழிபாடுகளையும் அகற்றிய அரசர்கள் சிறப்பான விதத்தில் புகழப்படுகின்றனர் (14:3-5; 15:8-16; 17:6; 23:17; 31:1; 33:15; 34:3-7). போலிவழிபாட்டை உற்சாகமூட்டுபவர்கள் தீர்வையிடப்பட்டு, தண்டிக்கப்படுவர் (25:20).

3. **இறைவனைப் போற்று.** இறைவன் யார் என்று எண்ணி அவரை ஆராதி. இறைவனை ஏற்று நமது வாழ்வில் போற்றும்போது, அங்கே வீம்புச் செருக்குடைய சுயசார்புக்கு இடமேயில்லை. அகந்தையும், சுயநிறைவும் பாவங்களிலெல்லாம் மோசமானதாகும். வாசகர்களைத் தாழ்ச்சிக்கும் இறைவனையே முழுவதும் சார்ந்திருக்கும்படியும் ஆசிரியர் அழைக்கிறார்.

4. **இறைவனைத் தேடு.** ஆசிரியர் குருகுலத்தைச் சேர்ந்தவர்; ஆதலால், செபத்தில்

அக்கறை காட்டுகிறார். இறைவனைத் தேடுபவர்கள் உதவி பெறுவர். அப்படி இறைவனைத் தேடாதவர்கள் அவர்களின் வீம்புச் செருக்கு மிக்க சுய நம்பிக்கைக்காகத் தண்டனை பெறுவர் (14:7; 15:4-12; 16:12; 17:3-4; 18:31; 20:3-4; 26:5; 30:18-19; 31:2).

11. வரலாற்று மதிப்பீடு: அறிஞர்கள் பலர் நாளாகமங்கள் வரலாற்று நூல்களே அல்ல என்று சாதிப்பர். இவற்றில் கூறப்படுபவை தொல்பொருள் இயலால் நிறுவப்படுபவைகளிலிருந்தும் வேறுபடுகின்றன. மேலும் விவிலியத்தின் பிற நூல்களில் கூறப்படுபவைகளிலிருந்தும் வேறுபடுகின்றன. நாளாகம ஆசிரியர் தனது மூலங்களைச் சுதந்தரமாகப் பயன்படுத்தும் முறை இந்நூலின் வரலாற்று மதிப்பை ஐயுறச் செய்கிறது. சான்று 2 நாள் 13:3-இல் அபியா 40,000 போர் வீரர்களுடன் போருக்குச் சென்றான் என்று கூறப்படுகிறது. முதலாம் எரோபயாமின் சேனையில் 8,00,000 வீரர்கள் இருந்தனர். இவை வரலாற்று மதிப்புடையவை அல்ல. மிகைப்படுத்திக் கூறப்பட்டவையாகும். 2 நாள் 8:2-இன்படி தீரின் அரசனான ஈராம் சில நகரங்களைச் சாலமோனுக்குக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் இந்நகரங்களைச் சாலமோன் தான் ஈராமுக்குக் கொடுத்தான் (1 அர 9:10). அரவுனாவின் போரடிக்கும் களத்திற்குத் தாவீது 10 செக்கேல் தான் கொடுத்து வாங்கினார் (2 சாமு 24:24). ஆகவே, 1 நாள் 21:25-இல் 600 செக்கேல் கொடுத்ததாகக் கூறப்படுவது மிகைப்படுத்திக் கூறுவதாகும். இப்படிப் பல சான்றுகளைக் கூறலாம்.

ஒவ்வொரு வரலாற்று ஆசிரியரும் ஏதாவது ஒரு தனிப்பட்ட நோக்கில்தான் எழுதுகிறார். அவர் எடுத்துக்காட்டும் ஒவ்வொரு காரியமும் பொறுக்கி எடுக்கப்பட்ட காரியமாகும். ஆசிரியன் தான் கூற இருக்கும் வரலாற்றில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தனது குறிக்கோளுக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கிறான், பொறுக்கி எடுக்கிறான். நாம் இந்நாளாகம வரலாற்றைப்படிக்கத் தொடங்கும்போது ஒரு பெரும் கேள்வி எழுகிறது. அஃது ஒருபுறம் இஸ்ராயேல் நாடு பற்றிய முக்கியமான செய்திகள் ஏன் விடப்பட்டுள்ளன? மறுபுறம் ஏன் சில காரியங்கள் மட்டும் நுணுக்கமாய் நீண்டதாக எடுத்துக் கூறப்படுகின்றன? இக்கேள்விகளுக்கு நாம் சரியான பதிலைக் கண்டுணர்ந்தால் இந்நூலில் காணப்படும் வரலாறு தனித்தன்மையுடையது, போதக நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்று உணர்வோம். ஒரு வரலாற்றில் பல காரியங்கள் இருக்க ஒரு சிலவற்றை மட்டும் ஆசிரியர் பொறுக்கி எடுக்கும்போது ஒரு நோக்கோடு செய்கிறார். அந்நோக்கே அக்காரியத்திற்கு விளக்கமாக அமைகிறது. இப்படித் தேர்ந்து பொறுக்கி எடுக்கப்பட்ட காரியம் "விளக்க மளிக்கப்பட்ட" காரியமாகிறது. வரலாறும் விளக்கமளிக்கப்பட்ட வரலாறு ஆகிறது. நாளாகம ஆசிரியர் சமய வாழ்வில்தான் மற்றெதையும்விட அக்கறை கொள்கிறார். அவர் எழுதுவது ஓர் "ஆன்மீக வரலாறு" ஆகும். இதில்தான் இந்நூலின் மதிப்பு அடங்கியிருக்கிறது.

வரலாற்று ஆசிரியன் சிலவற்றைப் பொறுக்கி எடுப்பதும், சிலவற்றை நிராகரிப்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். இந்த அடிப்படையில் இந்நூல் இறைவனுடைய பழைய ஏற்பாட்டு அரசின் அடிப்படைத் தன்மையைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. இதை வேறு எந்த வரலாற்றின் விரிவான அரசியல், பொருளாதார சமூக விவரிப்புகளும் கொடுக்கவே முடியாது. மேலும் விவிலியத்தின் எந்த நூலும், இக்காலப்பொருளில், வரலாற்று நூல் அன்று. அவை யாவும் ஓர் அளவு வரலாறு பற்றிய இறையியலாகும். இக்கூறு நாளாகமத்தில் அதிகமாகக் காணப்பட்டால், அதற்காக அதன் நம்பகத்தன்மையைத் தாக்க வேண்டியதில்லை; குறைத்துக் கூற வேண்டியதில்லை. கட்டுப்பாடுடைய வரலாற்றுப் பணிச்சட்டத்தை ஒட்டித்தான் பழைய ஏற்பாட்டுத் திருச்சபையின் உயிர்மையான சாரத்தின் விவிலிய இறையியலை எடுத்துக்கூறுகிறார் நாளாகம ஆசிரியர். தான் ஒருதலைப்பட்சமாய் இருப்பதாகத்

தோன்றலாம் என்பதையும் அவர் உணர்வதாகத் தோன்றுகிறது. அதனால்தான் சமயம் சாராத மூலங்களை அடிக்கடி சுட்டிக் காட்டுகிறார். துர்லபமாக இம்மூலங்கள் நமக்குக் கிடைத்தில; தொலைந்து போயின. தொல்பொருள் ஆய்வு ஓர் அளவுக்கு இந்த இழப்பை ஈடு செய்ய உதவுகிறது. இவற்றையெல்லாம் மனதில் கொண்டால் அரசராகமங்களோடு சேர்ந்து நாளாகமங்களும் இஸ்ராயேலின் அரசர்கள் பற்றிய, வரலாறு பற்றிய நம்பகமான மூலமாகும் எனலாம்.

12. **இறையியல் போதனை:** சீனாய் உடன் படிக்கைமேல் தாவீதின் உடன்படிக்கை கொண்டிருந்த மேலாண்மையை எடுத்துக் காட்டுவது நாளாகம ஆசிரியரின் நோக்கம் என்று முன்பு கூறினோம். சீனாய் மலையில் யாவேக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையில் மோசே எப்படி நடுவராக இருந்தாரோ அதேபோல் கடவுளையும் கானானில் தங்குவதற்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்யப் பட்டவர்களையும் இணைக்கும் உடன்படிக்கை தாவீதின் பொறுப்பில் விடப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் விளைவு தாவீது மரபு அரசர்களுக்கெல்லாம் நீட்டப்படுகிறது. இது யாவே யாவரின் மேலும் கொண்டிருக்கும் அரசை உண்மையிலேயே தொடங்குகிறது. வடநாட்டு இனத்தவர் பிரிந்து சென்றபின்னும், யூதா, பென்யமின் ஆகியோருடைய பகுதியான தென்னாடு யாக்கோபின் எல்லா இனத்தவருக்கும் திறந்ததாகவே இருக்கிறது. பிற இனத்தவர் அங்கு வாழ்கின்றனர் (2 நாள் 15:8-15; 30:1-22). எகிப்தியர் உட்பட அயல் இனத்தவரும் ஒதுக்கப்படவில்லை. யாவரையும் உள்ளடக்கும் அரசின் தலைவராகத் தாவீது காட்டப்பெறுகிறார்.

அரச மெசியாக் கருத்து உபாகம வரலாற்றிலும் (சாமுவேல் ஆகமங்கள்) சங்கீதங்களிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தது. அதே கருத்து நாளாகமம் முழுவதும் பரவிநிற்கின்றது. இந்நூலுக்கு அது புதிய வண்ணம் அளிக்கிறது. நாத்தானின் இறைவாக்கு, புதிய ஒளியில் காட்டப்படுகிறது (2 அரச 7:14-16-ஐ 1 நாள் 17:13-24-ஓடு ஒப்பிடுக). அது சாலமோனையும் கடந்து தாவீதின் அரச மரபு முழுவதற்கும் பொறுத்திக் காட்டப்பெறுகிறது. தாவீதின் மரபு அரசர்களின் குறைபாடுகளினால் இந்நம்பிக்கை கைவிடப்பட வேண்டியதொன்றாகத் தோன்றலாம். ஆயினும், தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி, வருங்காலத்தில் (இறுதிக் காலத்தில்) நிறைவேறுதலை நாளாகம ஆசிரியர் உண்மையில் எதிர்பார்க்கிறார்.

யாவேயின் உறைவிடமாகிய எருசலேம் ஆலயம் வழிபாட்டின் மையமாகத் திகழ்கிறது. அங்கே நிறுவப்பட்ட எல்லா வழிபாட்டுச் சடங்குகளும் தாவீதிலிருந்து தோன்றுவதாகக் காட்டப்படுகின்றன. ஈசாயின் மகனான தாவீது ஓபேது ஏதோமின் வீட்டிலிருந்து சீயோனுக்குப் பெட்டகத்தை மட்டும் மாற்றவில்லை; யாவேயின் வீட்டைக் கட்டுவதற்குத் தயாரிப்பு மட்டும் செய்யவில்லை; அங்கு நடக்கும் திருப்பணியையும் ஒழுங்கு செய்தார். இங்கே குருக்களோடு லேவியரும் சேர்ந்து பணிபுரிவதைப் பார்க்கிறோம். குருக்களின் சட்டமும் உபாகமப் பாரம்பரியமும் லேவியரது பணியைக் கட்டுப்படுத்தின (எண் 1:50-54; 3:7-8; 4:157-9; உப 10:8; 18:1-8). ஆனால், தாவீதின் வழிபாட்டு முறை அவர்களுக்கு ஆலயத்தில் நிலையாகப் பணிபுரியும் தகுதியை அளிக்கிறது. மோசே குருக்களை நிறுவியது போல், தாவீது லேவியரின் வகைகளையும் அவர்களைப் பற்றிய விவரங்களையும் நிர்ணயித்தார். புனித இசைக்கும் ஓர் அமைப்பை நிறுவினார். அவர் ஆலயத்தின் எல்லாப் பணிக்கும் அடிப்படையிட்டார். நாளாகம ஆசிரியர் ஒரு லேவிய பாடகராக இருந்திருக்க வேண்டும். அதிலிருந்து பெருமையும், வாழ்க்கையும் ஊதியமும் பெற்றிருக்க வேண்டும். தன்னுரிமையை எண்பிக்கவும், முன்னேற்றவும் முயல்கிறார். இந்தச் சுய நலத்துக்குப்பின் நிற்கும், அவர் நிறுவ விரும்பும் ஓர் அடிப்படை மதிப்பையும் கண்டுணரலாம். அது கலைச்சுவையுடைய

குரலைப் பயன்படுத்தும் பழமைப் பற்றுடைய வழிபாடு ஒரு தேவையென மனித இயற்கையை உணர்த்துவதும், திருத்தல ஊழியர்களும் தங்கள் வேலைக்கேற்ற ஊதியம் பெறுவது சமூக நீதி முறையாகும் என்பதுமாகும். நாளாகம ஆசிரியர் ஆர்வம் காட்டும் வழிபாட்டுச் சடங்குகள் பலனற்றவையன்று. இறைவனது வார்த்தையால் வளம் பெறுகின்றன. இறைவனைச் சார்ந்த காரியங்களில் கொண்ட ஆர்வ மிகுதியால்தான் சிலர் லேவியரின் அலுவலை ஏற்றுக் கொள்கின்றனர் (2 நாள் 30:22). இவர்கள் இறைவனது தீர்மானங்களை ஊடுருவிப் பார்க்கின்றனர். இவர்கள் எக்காலத்தும் இருப்பர். பிறரை நீதிக்கு இட்டுச் செல்வர் (தானி 12:3).

எருசலேம் ஆலயத்தின் பெருமை அதற்குரிய விதத்தில் ஏற்கெனவே சுடர் வீசி எரிந்தது. இஸ்ராயேலின் வாழ்வு முழுவதும் ஆலயத்தைச் சுற்றி அமைந்திருந்தது. வழிபாட்டுச் சடங்குகள், சுத்திகரச் சடங்குகள், பலிகள், சிறப்பாக நன்றிப் பலிகள், புனித விழாக்களில் பங்கெடுத்தல் ஆகியவற்றின் வழியாக மக்களின் ஒழுக்க சமய வாழ்வும், புனிதப் படுத்தலும் இங்கே தான் நடந்தன. இங்கேதான் இறைவனைத் தேடினர். இங்குதான் அவரைக் கண்டடைந்தனர். பதிதத்திற்குப்பின் உடன்படிக்கை இங்குதான் புதுப்பிக்கப்பட வேண்டும். விசுவாசம் புதுப்பிக்கப்பட வேண்டும்; ஆழப்படுத்தப்பட வேண்டும். இங்கு சங்கீதங்களைப் பாடிக்கொண்டும் இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டும் கொண்டாடப்படும் பெரும் விழாக்களை நினைவுகூர்வதில் நாளாகம ஆசிரியர் பெரும் மகிழ்ச்சி கொள்கிறார் (2 நாள் 5:11; 6:6; 29:25-30; 30:21).

இவ்விதம் நாளாகம ஆசிரியர் இறையரசின் சமய சமூகத்தைப் பார்க்கிறார். இவ்வரசை யாவேயின் அபிடேகம் பெற்றவர்களும் மெசியாவின் முன்னோடிகளுமான தாவீதும் அவரது வழித்தோன்றல்களும் ஆளுவர். வரலாற்று மன்னராட்சியைத் திரும்ப அமைத்தல் முடியாத போதும் தாவீது மரபின் பெருமையை யாவது திரும்ப நிறுவ முயல்கிறார். அதன் விளைவாக இரண்டாம் தாவீதின் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் நிலை நிறுத்துகிறார். இந்த விசுவாசமும் நம்பிக்கையும் இறைவாக்கினர் களிலும் சங்கீத ஆசிரியர்களின் ஆர்வ மிக்க அறைகூவல்களிலும் பரவி நிற்கின்றன.

நாளாகம ஆசிரியரது இறைவனைப் பற்றிய போதகம் பெரும் கருத்தியலான தன்று; யாவே பாரம்பரியத்தில் காணப்படுவது போன்று, மனிதப்பண்புகள் சாற்றிக் கூறப்பட்டதும் அன்று, அனுபவ வாயிலாக அறியப்பட்ட கடமைகளையும் அதன்பின் நிற்பதாக அறியப்பட்ட காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டது. சமூக மரபுக்கொடிகள் கவனமாய்க் காக்கப்பட வேண்டும். காரணம் இவற்றின் வழியாகத்தான் இறைவனின் சித்தப்படி மனிதச்செயல்கள் வழிவகுக்கப்படுகின்றன; தொடர்ந்து நடைபெறுகின்றன. இறைவனோடு செய்துகொள்ளும் உடன்படிக்கையில் மனிதனது பாகத்தை நிறைவேற்ற சன்மானமும் தண்டனையும் அளிக்கும் கருத்தை உபாகமப் பாரம்பரியத்திலிருந்து எடுத்து நாளாகம ஆசிரியர் பயன்படுத்துகிறார். இறையாட்சியில் மனிதர் எந்த அளவுக்கு அதிகமாக இறைவனோடு நெருங்கித் தொடர்பு கொள்கின்றனரோ, அந்த அளவுக்குக் குற்றத்தால் பயனே இல்லை என்று அனுபவ வாயிலாகக் கண்டுணர்வர். அரசராகமங்களில் காணப்படுவதைவிட இந்நூலில் உபாகமச் சட்டம் அரசர்களின்மீது தீர்ப்பை வலியுறுத்திக் கூறுகிறது. அதன் விளைவாக அரசில் செயல்படும் சீர்திருத்தத்தையும் கடந்த தன்மை, மேலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஒரே இறைவன் கோட்பாட்டுக்கு மதிப்பை மனதில் நிலைநிற்கச் செய்கிறது. இக்கருத்து இறைவனின் புனிதமும் ஆன்மீகத் தன்மையும் கண்டுணரப்படும் அளவிற்குத் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகிறது; சுத்தி செய்யப்படுகிறது. ஆயினும் யாவேயின் அன்பு மகிழ்ச்சிக்குக் காரணமாகிறது. ஏற்கெனவே

போர் வீரரான கடவுளின் இடத்தை அமைதியின் அரசர் ஏற்றுக்கொள்கிறார். பற்றுறுதி உள்ளோருக்குத் தாவீதின் அரசு யாவேயால் பாதுகாக்கப்படும் அமைதியின் அரசாகும். யாவேயின் அன்பை நிராகரிப்பவருக்கு அவரது தண்டனையை அளிக்கும் அரசாகும் அவ்வரசு.

13. **நாடு கடத்தப்பட்டு திரும்பியபின் இருந்த சமூகம்:** நாளாகம ஆசிரியர் எழுதியபோது தாவீது மரபைச் சேர்ந்த அரசன் ஒருவனும் சமுதாயத்தில் இல்லையாதலால் ஓர் உன்னத மாதிரியான சமுதாயமாக மாறி, ஓர் அரசனுக்குத் தன்னையே ஆயத்தம் செய்ய வேண்டியிருந்தது. இந்தக் குறிக்கோள் மோசே சட்டத்தில் காணப்படும் இறைவனுடைய வார்த்தைக்கு அதிகமாகப் பற்றுறுதிக்கும், அதிகத் துல்லியமாக வழிபாட்டிற்கும் கட்டாயப்படுத்தியது (எசே 9:10-14). இந்த நிறைவான சமூகத்தின் உன்னத மாதிரியை மனதில் பதிய வைக்க நாளாகம ஆசிரியர் தனது காலத்தில் வழக்கிலிருந்து வழிபாட்டு முறைகளைச் சட்டப்படி அமைத்துள்ளதாக்க முயல்கிறார். இதற்காக இவற்றைத் தாவீதோடு இணைத்துக் கூறுகிறார் (1 நாள் 23:29). சாலமோனின் ஆலயத்திற்கும் அதன் பணியாளர்களுக்கும், சிறப்பாக, லேவியர்களுக்கும் பாடகர்களுக்கும், சிறப்பிடம் கொடுக்கிறார் (2 நாள் 5:11-13).

இப்படியாகப் பரிசுத்த மக்களாக அழைக்கப்பட்டு அன்னிய அரசனுடைய பணிக்குத் தாழ்த்தப்பட்டிருந்த யூதர்கள் (நெகே 9:36:37) தங்களின் உண்மையான அரசனான யாவேயின் அடுத்த இறை இடையீட்டை நோக்கி நம்பிக்கை மிக்க எதிர்பார்ப்போடு திரும்பினர் (எஸ் 9:13; நெகே 9:32).

14. **முடிவுரை:** அரசராகமத்தில் கி.மு. 587-இல் எருசலேமின் அழிவு, யூதர்கள் நாடு கடத்தப்படுதல் ஆகியவை பற்றி வாசித்தபின் வாசகர்களிடம் ஓர் ஐய உணர்வு ஏற்படும். பாபிலோனியர் வெற்றி முழுமையுடையதாகும்; அரசராகமங்களில் காணப்படும் அரசர்களின் பற்றுறுதியில் சோர்வுமிக்க வரலாறு, மகிமைமிக்க வருங்காலம் பற்றிய இஸ்ராயேலின் நம்பிக்கை பழுது பார்க்க முடியாத அளவுக்குத் தகர்ந்து போய்விட்டது என்பனவாகும். ஆனால், எதிர்பார்ப்புகளுக்கு மாறாக இஸ்ராயேல் இன்னும் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

யூதாவின் வரலாற்றில் இறுதி நூற்றாண்டுகளில் அழிக்க முடியாத நம்பிக்கையின் புதிய தீக்கொழுந்து தூண்டப்படுகிறது. யூதாவிலும், உலகின் மேலும் தாவீது மரபைச் சார்ந்த மற்றொரு அரசன் ஆள்வார். இவ்வரசர் தாவீதிடமும் அவர் பின் வந்தோர்களிடமும் காணப்பட்ட குறைகளுக்கு ஈடுகட்டுவார். நாத்தான் வழியாக அரச மரபு பற்றி அளிக்கப்பட்ட வாக்குறுதியைச் செயல்படுத்துவார் என்று இஸ்ராயேல் நம்புகிறது. இறைவாக்கினர் வழியாக இறைவன் வாக்குறுதி அளித்துள்ளார். அவ்வுறுதி தவற முடியாது. ஆகவே இஸ்ராயேல் நம்புகிறது. "நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்" (எசா 40:8). ஆகவே பாழ்நிலையிலிலும் நம்பிக்கை இருக்கிறது. இதைத்தான் விவிலியத்தில் நாளாகமங்கள் முதலிய நூல்கள் எடுத்தியம்புகின்றன; இந்நம்பிக்கைக்கு யாவரையும் அழைக்கின்றன.

நாளேடு (CHRONICLES)

சிறப்புமிக்க நிகழ்ச்சிகளைப் பதிந்து வைக்கும் ஏடுகள். இவை பெரும்பாலும் அரண்மனையிலோ ஆலயத்திலோ பாதுகாக்கப்பட்டன. இவை, புனித இடங்களுக்கு அளிக்கப்பட்ட அரசக் கொடைகளின் பட்டியலாக அல்லது போர்ச் செயல்களின் பட்டியல்களாக இருக்கலாம். வெற்றிகள் அணிசெய்யப்பட்டு மிகைப்படுத்தப்பட்டிருக்கலாம். தோல்விகளுக்கு நியாயம் காட்டி, விளக்கம் கூறப்படலாம் அல்லது புறக்கணிக்கப்படலாம். பாபிலோனின் நாள் பட்டியல் அல்லது அசீரிய மூதாதையர் பட்டியல் முதலியவை அந்தந்த ஆண்டின் முக்கிய நிகழ்ச்சி அல்லது நிலநடுக்கம் முதலிய இயற்கை நிகழ்ச்சி, அல்லது முக்கிய

அதிகாரியின் பெயரை வைத்து, தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கலாம். காலவரிசையை நிறுவ இவை பெரிதும் உதவுகின்றன. இந்த ஏடுகள் வரலாறு எழுதுவதின் தொடக்க முயற்சிகளைச் சுட்டுகின்றன.

பல எகிப்திய மற்றும் மெசபொத்தாமிய நாளேடுகள் முழுமையாகவோ, பகுதியாகவோ, பெயரளவிலோ கிடைத்துள்ளன (காண். எஸ்த 2:23; 6:1). இத்தகைய ஏடுகள் பழங்கால இஸ்ராயேலிலும் இருந்திருக்கின்றன. இவைகள் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த 1-2 சாமுவேல், 1-2 அரசர்கள், 1-2 நாளாகமம் போன்ற நூல்களுக்கு அடிப்படையாக அமைந்திருக்கலாம். பதிவு ஏடுகள் (எஸ் 4:15; மலா 3:16; எண் 33:2) மற்றும் நாளேடுகள்ல் (நெகே 12:23), இஸ்ராயேல் வழித்தோன்றியமையை நிரூபிக்கும் தலைமுறைப்பட்டியல்கள் (எஸ் 2:62-63; நெகே 7:64-65) பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தாவீது அரசனின் நாளேடு (1 நாள் 27:24; காண். சாலமோன் அரசனின் பணிநூல்; 1 அர 11:41), இஸ்ராயேல் மற்றும் யூதாவின் அரசர்களின் நூல்கள் (1 நாள் 9:1; 2 நாள் 16:11; 27:7), இறைவாக்கினர் செமாயா மற்றும் காட்சியாளர் இத்தோவின் நாளேடுகள் (12:15) ஆகியவை பெயர் கொடுக்கப்பட்ட நாளேடுகளில் சிலவாகும்.

நாள் (DAY)

நேரத்தை இது பிரித்துக்காட்டுகிறது. இந்தச்சொல் முக்கியமாக மூன்று பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அ) பகல் நேரத்தைக் குறிக்கும். அதாவது சூரியன் உதித்து, மறையும் வரையுள்ள நேரத்தை இரவிலிருந்து வேறுபடுத்தும் சொல் (ஆதி 1:5; 8:22; அ.ப. 20:31). இப்பொருளில் நாளானது காலை, நண்பகல், மாலை எனப் பிரிக்கப்பட்டுள்ளது (சங் 55:17). புதிய ஏற்பாட்டுக்காலத்திற்கு முன் நாளானது மணிகளாகப் பிரிக்கப்படவில்லை. பொதுவாக நாளை, சூரியன் உதிக்கும் நேரம், நாளின் வெப்ப நேரம், நாளின் குளுமையான நேரம், சூரியன் மறையும் நேரம் எனப் பிரித்தனர். புதிய ஏற்பாட்டிலே ஒளியையுடைய நாளானது மீட்பையும், நேர்மையையும் குறிக்கிறது (யோவா 11:9; உரோ 13:12-13). 1 தெச 5:58 கிறிஸ்தவர்களைப் பகலின் மக்கள் என அழைக்கிறது. திருவெளிப்பாடு நிறைவு பெற்ற நிலை-இரவே இல்லாமல் என்றும் நாளாகவே இருக்குமெனக் கூறுகிறது (திருவெளி 21:25).

ஆ) சாதாரண நாள் 24 மணி நேரத்தைக் கொண்டது. இது முதல் நாள் சூரிய உதயம் முதல் அடுத்த நாள் சூரிய உதயம் வரையில் அல்லது முதல் நாள் சூரியன் மறைவு முதல் அடுத்த நாள் சூரியன் மறைவு வரையில் கணக்கிடப்பட்டுள்ளது (ஆதி 7:24; யோபு 3:6; லூக் 9:37; அ.ப. 21:26). நாளும், நேரமும் பாகுபடுத்தப்பட்டுள்ளது (மத் 25:13). காலம் மணி, நாள், திங்கள், பருவம், ஆண்டு ஆகியவையாகப் பிரிக்கப்பட்டுள்ளது (கலா 4:9; திருவெளி 9:15). எபிரேய மக்களும் நாளை ஒரு விடியற்காலை முதல் அடுத்த காலை வரை கணக்கிட்டனர் (எண் 11:32; நீதி 19:5-9). பிறகு அவர்கள் நாளை, சூரியன் உதயம் முதல் சூரியன் மறையும் வரையிலும் உள்ள நேரமாகக் கணக்கிட்டனர். இதற்குச் சந்திரனை வைத்து விழாக்கள் அமைக்கப்பட்டதே காரணம் (ஆதி 1:5 தொ; யாத் 12:18; லேவி 23:32; எஸ்த 4:16; எசா 27:3; தானி 8:14; 2 கொரி 11:25). எபிரேயர், ஓய்வு நாளைத்தவிர மற்ற நாட்களுக்குப் பெயர் கொடுக்கவில்லை. புதிய ஏற்பாட்டிலே வாரநாட்கள் எண்களைப் பெற்றிருந்தன (லூக் 24:1). நாளின் பகுதிகள் முழுநாளாக எண்ணப்படலாம் என்பதால் மூன்று நாளைக்குப்பின் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது இயேசு புதைக்கப்பட்ட காலமுழுவதையும் குறிக்கிறது (மாற் 8:31).

இ) மேலும், இந்த நாள் ஒரு செயலின் காலத்தையோ, ஒரு நிலையையோ குறிக்கிறது. எனவே 'அந்நாளில்' என்பது 'அப்பொழுது' என்ற பொருளைக் கொண்டுள்ளது (ஆதி 2:4; லேவி 14:2). ஒரு மனிதன் வாழ்ந்த காலம் அல்லது

ஆட்சிக்காலம் "அவனுடைய நாட்கள்" என அழைக்கப்பட்டது (ஆதி 26:1; 1 அர 10:21; எபி 5:7). துன்ப நாள் (சங் 20:1), கடவுளுடைய கோபத்தின் நாள் (யோபு 20:28), மெசியாவின் நாள் (யோவா 8:56), மீட்பின் நாள் (2 கொரி 6:2), பொல்லாத நாள் (எபே 6:13) என்று பலவிதநாட்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பொருளில் நாள் என்பது ஒரு போரின் நேரமாகவோ, நீதி வழங்குதலின் நேரமாகவோ அழிவின் நேரமாகவோ, மீட்பின் நேரமாகவோ இருக்கலாம் (உப 16:3; சங் 137:7; எசா 9:4; எசே 30:9). இது போன்றவையே இறுதிக்கால இயலில் வரும் "அந்நாளில்," "பிற்காலத்தில்," "ஆண்டவரின் நாளில்" போன்ற சொற்றொடர்கள்.

நானேயா (NANEA)

பாரசீகத்தில் உள்ள ஒரு கோவிலான இதை நான்காம் அந்தியோக்கு அரசன் கொள்ளையடிக்க முயன்றான் (1 மக் 6:2). இஃது அர்த்தமியின் கோவில் என யோசிப் பசால் அழைக்கப்படுகிறது. இங்கு மகா அலக்சாந்தரின் தங்கக் கவசம், கேடயம் ஆகியன இருந்ததைக் கேள்விப்பட்டு அந்தியோக்கு கொள்ளையடிக்கச் சென்றபோது, அங்குள்ள மக்கள் அவனைத் துரத்தியடித்ததால் அவன் சீரியாவுக்கு மிகுந்த வருத்தத்துடன் திரும்பினான். நானேயா எனப்படும் தேவதை, பாபிலோனில் நானா எனவும், அப்ரோடைட் எனக் கிரேக்கத்திலும், வீனஸ் என உரோமையிலும் அழைக்கப்படுகிறது.

2 மக் 1:13-18-இன் விவரிப்பின்படி அந்தியோக்கு இக்கோவிலின் தேவதையை மணக்கப் போவதாகக் கூறி இக்கோவிலின் சொத்து முழுவதும் தனக்கு வரதட்சணையாகச் சேர வேண்டுமென்றான். இக்கோவிலின் குருக்கள் அவனை உள்ளே அழைத்துச் சென்று தந்திரமாகக் கொன்றுவிட்டனர். இந்நிகழ்ச்சியில் கூறப்படுபவன்- மூன்றாம் அந்தியோக்குதான் என்றும், இவன் எலிமேயாவிலுள்ள பிலூவின் கோவிலைக் கொள்ளையடிக்க முயன்றபோது இவன் உயிரை இழந்தான் என்றும் சிலர் கருதுவர். இங்குக் குறிக்கப்படுபவன் பார்த்தியருக்கு எதிரான போரில் கி.மு. 238-இல் உயிரிழந்த ஏழாம் அந்தியோக்கு சிதேத்தசு என்று வேறுசிலர் கருதுவர். ஆனால், இரண்டாம் மக்கபேயர்நூல் ஆசிரியர் நான்காம் அந்தியோக்கு எப்பிபானைத்தான் கருத்தில் கொண்டிருந்திருக்க வேண்டும். எருசலேம் ஆலயத்தைப் பங்கப்படுத்தியதற்காக இவ்வாறு அவன் தண்டிக்கப்பட்டான் என்று அவர் கருதியிருக்க வேண்டும்.

நான்கு படைவீரர்களைக் கொண்ட குழு (SQUAD)

அ.ப. 12:1-11, புனித பேதுரு- நான்கு படைவீரர் கொண்ட குழுக்களால் காவல் காக்கப்பட்டதாகக் கூறுகின்றது. ஒவ்வொரு சாமத்துக்கும் ஒரு குழுவாக 4 குழுக்கள் பேதுருவின் காவலுக்கு இருந்தனர். பேதுரு, இருபடைவீரர்களுக்கு இடையே இரு விலங்குகள் மாட்டப்பட்டுத் தூங்க, வேறு இருவர் வாயிலுக்குக் காவல் செய்திருப்பர் என்று அறிகிறோம்.

நிக்கப்பொலி (NICOPOLIS - வெற்றியின் நகரம்)

நிக்கப்பொலி என்னும் பெயர் பல நகரங்களுக்குச் சூட்டப்பட்டிருந்தது. தீத் 3:12-இல் குறிப்பிட்டுள்ள நிக்கப்பொலி நகரைக் கண்டுபிடிக்க, பவுலின் வாழ்நாளில் இருந்த நிக்கப்பொலி என்னும் பெயர் கொண்ட நகரங்களையும் அவை குளிர்காலத்தில் தங்க ஏற்றவையா என்பதையும் அறியவேண்டும். பாம்பேயால் கட்டப்பட்ட நிக்கப்பொலியும், அகுஸ்துவால் அலக்சாந்திரியாவின் அருகில் கட்டப்பட்ட நிக்கப்பொலியும் வெகு தொலைவில் உள்ளன. நெஸ்தோ ஆற்றின் கரையிலுள்ள நிக்கப்பொலி திரேசன் என்பவரால் கட்டப்பட்டது. பித்தினியாவில் உள்ள நிக்கப்பொலி குளிர்காலத்தில் தங்க ஏற்ற இடம் அன்று.

இங்கு எப்பிருசில் உள்ள நிக்கப் பொலியையே தீத் 3:12 குறிப்பதாகக் கருத வேண்டும். இந்நகரம் அக்டேவியனால் தான் கி.மு. 31-இல் மாற்கு

அந்தோனியின் மீது வெற்றி கொண்ட நிகழ்ச்சியின் நினைவாகக் கட்டப்பட்டது. இந்நகரம், அர்த்தா வளைகுடாவிற்கு வடக்கில் அக்டேவியனது படைகள் தங்கியிருந்த இடத்திலேயே கட்டப்பட்டுள்ளது. பெரிய ஏரோது அங்குள்ள பொதுக்கட்டடங்களைக் கட்டினான் என்று யோசிப்பசு கூறுகின்றார். எப்பிக்தேத்து என்னும் தத்துவ மேதை கி.பி. 89-இல், தொமிசியன் என்னும் அரசனால், உரோமையிலிருந்து வெளியேற்றப்பட்டபின் இங்குதான் தங்கி இருந்தார். அலக்சாந்திரியா விவிலியத் தொகுப்பு, தீத்துவுக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் முடிவில் இது நிக்கப்பொலியிலிருந்து எழுதப்பட்டது என்ற குறிப்பைச் சேர்க்கிறது. இது தவறானது என்று கருதலாம்.

அப்போஸ்தலர் பவுல், நிக்கப்பொலியில் குளிர்காலத்துக்குத் தங்கிவிட்டு, அங்கிருந்து இல்லிருக்கம் வழியாக உரோமைக்குச் செல்லத் திட்டமிட்டிருக்க வேண்டும் (தீத் 3:12).

நிக்கானோர் (NICANOR – வெற்றி பெற்றவன்)

1. நிக்கானோர்- அந்தியோக்கு எப்பிபான் அரசனின் படைத்தலைவனும், நண்பனும் (1: மக் 3:38), பத்திரொக்குலின் மகனும் (2 மக் 8:9) ஆவார். இவர் யூதர்களின் எதிரி. நிக்கானோர், யூதா மக்கபேயுவினால் நடத்தப்பட்ட கிளர்ச்சியை அடக்க, கி.மு. 166-இல், லீசியாவால் அனுப்பப்பட்ட மூன்று படைத்தலைவர்களுள் ஒருவர். இக்கிளர்ச்சியில் யூதா மக்கபேயு வெற்றி பெற்றார்.

நடந்த நிகழ்ச்சி பின்வருமாறு: நிக்கானோரும், அவனது படைகளும் எருசலேமுக்கு அருகிலுள்ள எம்மாவுவில் போர் செய்ய நிலைகொண்டனர். ஆனால், அப்படைகள் யூதாவால் விரட்டியடிக்கப் பட்டதால் அவர்கள் உயிருக்கு அஞ்சி, பெலிஸ்தியாவிற்கு ஓடிவிட்டனர். நிக்கானோர், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, அந்தியோக்கியா நகருக்கு மாறுவேடத்தில் ஓடியதாக இரண்டாம் மக்கபேயர் நூல் ஆசிரியர் குறிப்பிடுகின்றார் (2 மக் 8:34-36). யூதாவைத் தந்திரத்தால் பிடிக்க நிக்கானோர் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. கப்பர்நகுமில் நடந்த போரில் இரு படைகளுக்கும் அதிகசேதம் ஏற்பட்டது. கி.மு. 161, மார்ச் மாதத்தில் முதலாம் தெமேத்திரியு ஆட்சியில் அதசா, பெத்-கோரோன் ஆகிய இடங்களில் நடந்த போர்களில் நிக்கானோர் யூதாவால் தோற்கடிக்கப்பட்டான். இப்போரின் முடிவில் அவன் கொல்லப்பட்டான். அவன் தலையும், வலது கையும் வெற்றிச் சின்னமாக எருசலேமில் தொங்கவிடப்பட்டன. சீரியர்களை வென்ற இந்த நிகழ்ச்சியானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 13-ஆம் நாள் 'நிக்கானோர் நாள்' என்று கொண்டாடப்பட்டது (1 மக் 7:26-50; 2 மக் 14:11-15:36). இந்த வெற்றிப்பெருமிதத்துடன் 2-ஆம் மக்கபேயர் நூலை ஆசிரியர் முடிக்கிறார். இவன் யூதமதத்தை வெறுத்ததால் யூதர்கள் இவனைத் தனிப்பட்ட முறையில் எதிர்த்தனர்.

2. எருசலேமின் திருச்சபையில், பந்தியில் பணிபுரிய அப்போஸ்தலர்களால் நியமிக்கப்பட்ட எழுவருள் ஒருவர் (அ.ப. 6:1-6).

நிக்கானோர் வாயில் (NICANOR GATE)

எருசலேம் ஆலயத்தின் முற்றத்திற்கு இட்டுச்செல்லும் வாயில்களில் ஒன்று. ஸ்கோப்பு மலையிலுள்ள ஒரு குகையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்சவப்பெட்டியில் உள்ள குறிப்பின்படி ,இந்த வாயிலைக் கட்டிய கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த அலக்சாந்திரிய கைவினைஞரின் பெயரால் இவ்வாயில் அழைக்கப்பட்டது. ஆலய வாயில்களில் இஃது ஒன்றுதான் பொன்முலாம் பூசப்படாததாகும். இது "தங்கம்போல் மின்னும் கொரிந்தியச் செம்பு" உலோகத்தால் செய்யப்பட்டதாகும்.

இஃது எங்கு இருந்தது என்பது பற்றிப் பல கருத்துகள் உண்டு. இது பெண்கள் முற்றத்தின் மேற்கிலும், ஆண்கள் இஸ்ராயேலர் முற்றத்தின் கிழக்கிலும் இருந்தது என்பர் சிலர். புனித இடத்திற்கு அப்பால், பெரிய வாயிலை நோக்கிப் பெண்கள் முற்றத்தின் கிழக்கில் இருந்தது என்பர் வேறு சிலர்.

ஏரோது கட்டிய ஆலயத்தில் இந்த வாயில் பெண்கள் முற்றத்தின் மேற்கில் அமைந்திருந்தால் மரியாள் குழந்தை இயேசுவை, இஸ்ராயேலர் முற்றத்திற்கு இட்டுச்சென்ற பதினைந்து படிகளைக்கொண்ட அரைவட்டவடிவமான படிக்கட்டு வரை கொண்டு வந்திருக்க வேண்டும் (லூக் 2:22-23). இங்குதான், மரியாளின் குழந்தை வழியாக இஸ்ராயேலுக்கு விடுதலை கிடைக்குமென்று சிமியோனும் அன்னாவும் இறைவாக்குரைத்திருக்க வேண்டும் (2:27-38).

நிக்கொலா (NICOLAUS – மக்களை வென்றவர்)

நிக்கொலா எருசலேம் திருச்சபையில் பந்தியில் பணிபுரிய அப்போஸ்தலர்களால் நியமிக்கப்பட்ட எழுவரில் ஒருவர். இவரைப்பற்றிக் கூறும்போது சீரியாவின் அந்தியோக்கியாவைச் சேர்ந்த இவர், "யூத மதத்தைத் தழுவியவர்" என்று கூறப்பட்டுள்ளது (அ.ப. 6:5). ஆனால், இந்த ஏழு பேரும் யூத மதத்தைத் தழுவியவர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவர்களுடைய பெயர்கள் எல்லாம் கிரேக்க மொழிப்பெயர்கள். பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள், தங்கள் பிள்ளைகளுக்குக் கிரேக்க மொழிப்பெயர்களைச் சூட்டுவது வழக்கமாய் இருந்தது. இவர்களைப் போன்றவரிடையேதான் கிறிஸ்துவ மதம் அந்தியோக்கியாவில் பரவியது. இவர் திருச்சபையை விட்டு விலகி, நிக்கொலாயர் என்ற புதிய பிரிவினரை உண்டாக்கியதாக முற்காலத் திருச்சபைத் தந்தையர்களில் இரேனேயு, இப்போலித்து போன்றவர்களின் நூல்கள் சுட்டுகின்றன. ஆனால், இக்கருத்துக்கு ஆதாரமில்லை எனலாம்.

நிக்கொலாயர் (NICOLAITANS – நிக்கொலாவைப் பின்பற்றுபவர்கள்)

ஏபேசு (திருவெளி 2:6), பெர்கமு (2:15) ஆகிய திருச்சபைகளில் காணப்பட்ட ஒரு பிரிவினைக் குழுவினர். திருவெளிப்பாட்டு நூல் ஆசிரியர் யோவான் இவர்களைக் கண்டனம் செய்கிறார். இவர்களைப் பற்றிய விவிலியக் குறிப்புகளைத் தவிர, இவர்களின் தோற்றம், போதனை, வாழ்க்கைமுறை ஆகியவை பற்றிய பிற செய்திகள் கிடைத்திலது. இவர்களும் பிலயாமைப் பின்பற்றுபவர்களும் (2:14) ஒரே குழுவினரே என்று சிலர் கருதுகின்றனர். இவர்களையும் அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்ய நியமிக்கப்பட்ட ஏழு திருத்தொண்டர்களுள் ஒருவரும் யூத மதத்தைத் தழுவியவரும் அந்தியோக்கியாவைச் சேர்ந்தவருமான நிக்கொலாவையும் (அ.ப. 6:5) தொடர்புபடுத்த முயன்றுள்ளனர் சிலர். இதற்கு போதிய ஆதாரமில்லை.

நிக்கொலாயர்கள் சிலை வழிபாட்டையும் பாலின ஒழுக்கக்கேட்டையும் கடைப்பிடித்துள்ளனர். இவர்களைப் போன்றவர்களே பிலயாமையும் (திருவெளி 2:14), ஈசபேலையும் (2:20-24) பின்பற்றுபவர்கள். ஆகவே, இவர்களுக்கும் பிற்கால ஞானவாதக் குழுவினருக்குமிடையே தொடர்பு காண அறிஞர் சிலர் முயன்றுள்ளனர்.

நிக்கோதேமு (NICODEMUS – மக்களை வென்றவர்)

இவர் ஒரு பரிசேயர்; யூதத் தலைவர்களுள் ஒருவர் (யோவா 3:1); ஒரு போதகர் (3:10). ஒருநாள் இரவில் இவர் இயேசுவைக் காண வந்தவர். இரகசியமாக இயேசுவைப் பின்பற்றியவர்.

இயேசுவின் உயர்வை ஏற்று, அவரால் இன்னும் போதிக்கப்பட விரும்பி வந்தவர் (3:1-2). மறுபடி பிறப்பின் அவசியம் பற்றிய இயேசுவின் போதனையை இவர் உடனடியாகப் புரிந்து கொள்ளவில்லையானாலும் (3:3-36), காலப்போக்கில் புரிந்துகொண்டு இயேசுவின் சீடரானவர் (7:50). ஒருவருடைய வாக்குமூலத்தை முதலில் கேட்காமல் அவரைத் தீர்ப்பிடுவது முறையா என்று யூதப் பொதுச்சங்கத்தில் இயேசுவுக்காக மறைமுகமாக வாதாடுகிறார் (7:51). இயேசுவின் உடலை அடக்கம் செய்ய அரிமத்தியா யோசேப்புக்கு உதவி செய்கிறார் (19:38-42).

யோவா 3-இல், ஆசிரியர் இரு பொருளுடைய சொற்கள் பலவற்றைப் பயன்படுத்துகிறார். இரவில் இயேசுவைக்காண வரும் நிக்கோதேமு இஸ்ராயேலரின் போதகரும் பரிசேயருமாய் இருந்ததால் இறையரசு பற்றிய உண்மைகளை அறிய ஆவல் உள்ளவராக இருந்திருக்க வேண்டும். இவருக்கும் இயேசுவுக்குமிடையே நடைபெறும் உரையாடல், திருமுழுக்குப் பற்றிய உரைக்கு வாய்ப்பாக அமைகிறது.

நிக்கோதேமுவின் நற்செய்திநூல் (NICODEMUS, GOSPEL OF)

பிலாத்து பணிநூலின் இலத்தீன் மொழிபெயர்ப்புக்கு கி.பி. 12-14-ஆம் நூற்றாண்டுகளில் அளிக்கப்பட்ட பெயர். காண்க: பிலாத்துவின் பணிநூல்.

நிசுரோக்கு (NISROCH)

நிசுரோக்கு என்பது சனகெரிபு வழிபட்ட அசீரியர்களின் கடவுள். நிசுரோக்கின் கோயிலில் அசீரியாவின் மன்னன் சனகெரிபு வழிபட்டுக் கொண்டிருந்தபோது அவனுடைய புதல்வர்களால் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டான் (2 அர 19:37; எசா 37:38). இப்பெயர் வரலாற்றில் அறிமுகமான எந்த ஓர் அசீரியத் தெய்வத்தையும் குறிக்கவில்லை. ஆனால் இப்பெயர்- பாபிலோன் நகரின் தெய்வமான மார்துக்கு, நினூர்த்தா, தீயின் தெய்வமான நுஸ்கு முதலிய அசீரியத் தெய்வங்களைக் குறிப்பதாகக் கருதுகிறார்கள்.

நிபுகசு (NIBHAZ)

இது கி.மு. 722-க்குப்பிறகு இவ்வா நாட்டிலிருந்து சமாரியாவில் பாபிலோனியரால் குடியமர்த்தப்பட்ட சீரியர்களால் வணங்கப்பட்ட தெய்வங்களுள் ஒன்று (2 அர 17:31).

இது சீரியர்களால் வணங்கப்பட்ட, "காட்சியாளர் நெபோ" அல்லது "முகத்தின் நெபோ" என்ற பெயருடைய பாபிலோனியத் தெய்வமாகவோ, இப்னகாசா என்ற ஏலாமியத் தெய்வமாகவோ அடையாளம் காட்டப்படுகிறது.

நிப்சான் (NIBSHAN - மணற்பாங்கான)

இது பாலைவனப்பகுதியிலுள்ள யூதாவின் ஊர்களில் ஒன்று (யோசு 15:62). இவ்வூர் எரிகோவின் தென்மேற்கிலும், எருசலேமுக்குத் தென்கிழக்கில் 17 கி.மீ. தொலைவிலும் உள்ள ஆக்கோர் பள்ளத் தாக்கிலுள்ள இக்காலக் கிர்பெத் ஏல்-மாகாரி என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

நிம்சி (NIMSHI - வெளியே இழுத்தல்)

இவர் யோசபாத்தின் தந்தையும், இஸ்ராயேல் அரசன் ஏகூவின் தாத்தாவும் (அல்லது முன்னோரும்) ஆவார் (2 அர 9:2-14). ஆனால் 1 அர 19:16; 2 அர 9:20; 2 நாள் 22:7-இன்படி இவர் ஏகூவின் தந்தையாவார். சமாரியாவில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்ட ஏடுகளில் இப்பெயர் காணப்படுகிறது.

நிம்பா (NYMPHA)

இலவோதிக்கேயில் கிறிஸ்துவரான நிம்பா வீட்டில்தான் மக்கள் கூடிச் செபித்தனர். பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்தில் இவருக்கு வாழ்த்து அனுப்புகிறார் (கொலோ 4:15). கிரேக்க வாசகத்தில் வரும் இப்பெயரிலிருந்து இவர் ஆணா பெண்ணா என்று உறுதிசெய்வது முடியாத காரியமாகும்.

நிம்ரா (NIMRAH)

பெத்-நிம்ரா என்ற பெயரின் மற்றொரு வடிவம் (எண் 32:3).

நிம்ரிம் நீர்நிலைகள் (NIMRIM, THE WATERS - சிறுத்தைகளின் தண்ணீர்)

மோவாபைப் பற்றிய புலம்பலில் மோவாபின் நீர் நிலையான நிம்ரிம் நீர் நிலைகள் வற்றிவிடும் என்று எசாயாவும் எரேமியாவும் முன்னறிவிக்கின்றனர் (எசா 15:6; எரே 48:34). இவை விவசாயத்திற்கும் பயன்பட்டன. சிலர், இதனைச் சாக்கடலின் கிழக்குப்புறமாக ஓடுகின்ற, அதன் தென்முனையிலிருந்து 14 கி.மீ.

தொலைவிலுள்ள, வாடி என் நுமெரியா ஓடையுடன் ஒன்றுபடுத்துகின்றனர். இங்குக் குறிப்பிடப்படும் இடம் சரியென்றால் இதுதான் சோதோம் மற்றும் அதனைச் சேர்ந்த மற்ற நகர்களுக்கு, அவற்றின் அழிவிற்கு முன், தண்ணீர் கொடுத்தது. வேறு சிலர் இதனைச் சாக்கடலுக்கு வடக்கில் 13 கி.மீ. தொலைவில் யோர்தானோடு கலக்கும் நிம்ரின் என்னும் சிற்றாறோடு ஒன்றுபடுத்துகின்றனர். இங்குள்ள நிலம் வளமிக்கது. இஸ்ராயேல் மக்கள் யோர்தானைக் கடக்குமுன் பாளையம் இறங்கி இருந்த மோவாபு சமவெளி வாடி நிம்ரின் என்பதிலிருந்து சாக்கடலின் வடமேற்கு எல்லைவரை தெற்கு நோக்கிப் பரவி இருந்தது.

நிம்ரோது (NIMROD - கிளர்ச்சி செய்தல்)

நிம்ரோது ஆதி 10:8-12; 1 நாள் 1:10; மீக் 5:6 ஆகியவற்றில் குறிப்பிடப்படுகின்றது.

நிம்ரோது- கூசு என்பவரின் மகன் (2 நாள் 1:10). இவன் பூமியிலேயே மிகவும் வலிமை மிக்கவனாய் இருந்தான். ஆண்டவருக்குமுன் அவன் வலிமை மிக்க வேட்டைக்காரனாய் இருந்தான். ஆதலால், "ஆண்டவருக்கு முன்பாக நிம்ரோதைப் போல் வலிமை மிக்க வேட்டைக்காரன்" என்னும் பழமொழி வழங்கலாயிற்று (ஆதி 10:8-9). மெசபொத்தாமியாவில் இவனுடைய அரசு, புகழ் பெற்றிருந்தது. சினாரில், பாபேல் (பாபிலோன்), எரேக்கு, அக்காது, கல்னே என்பவை இவனது அரசின் முக்கிய நகரங்கள் ஆகும் (ஆதி 10:10). இவன் ஆசூர் (ஆதி 10:11), நினிவே (ஆதி 10:11-12) ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால் அசீரியா "நிம்ரோதின் நாடு" (1 மீக் 5:6) என்று அழைக்கப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் நிம்ரோதின் கதை இடம் பெறுவதற்கு அவனுடைய பெரும் புகழ் மட்டுமன்று, கலாச்சார, இனக்காரணகாரிய விளக்கங்களுக்குப் பழங்காலக் கதைகளை யாவே பாரம்பரிய ஆசிரியர் அடிக்கடி பயன்படுத்துவதும் காரணமாகும். இங்குப் பெரிய அசீரிய பாபிலோனியக் கலாச்சாரத்தின் தோற்றத்தை விளக்க அவருக்கு இக்கதை உதவுகிறது.

நிலக்கரி, கரி (COAL)

பாலஸ்தீனத்தில் கனிப்பொருளிலிருந்து தயாரிக்கப்படும் கரி காணப்படவில்லை. நிலக்கரி பற்றி விவிலியக் குறிப்புகள் காணப்படவில்லை. ஏனெனில், பாலஸ்தீனத்தின் புவியியல் அமைப்பு அண்மைக் காலத்தைச் சேர்ந்ததாகும்.

மரக்கட்டைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கரியையே இஸ்ராயேலர் பல காரியங்களுக்குப் பயன்படுத்தினர். 1) குளிர்காலத்தில் (டிசம்பர் மாதம்) சூடுபடுத்த அல்லது வெப்பம் உண்டாக்க அரண்மனையில் கரி பயன்பட்டது (எசா 47:4; எரே 36:32). ஏப்ரல் மாதத்தில், இயேசுவின் பாடுகளின் போது அனல்காய பேதுருவுக்கும் மற்றவர்களுக்கும் கரி பயன்பட்டது (யோவா 18:18). 2) சமைப்பதற்கும் (எசா 44:19; யோவா 21:9) பயன்பட்டது. 3) பரிகார நாளில் பெரிய குரு நெருப்புத்தணல் நிரப்பிய தூபக்கலசத்தைப் பயன்படுத்தி (லேவி 16:12-13), தூபச் சடங்கு செய்தார் (லேவி 10:1; எண் 16:46). 4) கொல்லனின் வேலைகளுக்கும் கரி பயன்பட்டது (எசா 44:12; 54;16).

பழ 26:21-இல் கரி, தழல் உண்டாக்குவது போல், சண்டை- கலகத்தையும் சச்சரவையும் உண்டாக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

நிலக் கீல் (BITUMEN)

முதலில் இது வெறும் நிலக்கீல் மட்டுமே எனக் கருதப்பட்டது. ஆனால், இத்துடன் பல நீரகக் கரிமங்கள் இருப்பதாகத் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் எபிரேய மூலச்சொல்லானது 'நுரைத்தல்' என்று பொருள் தருகிறது. ஆதி 14:10-இல் கிணற்றோடு இது தொடர்பு படுத்தப்பட்டதால் இது 'நுரைத்தல்' என்று பெயர் பெற்றிருக்கலாம். மேலும் 'மூடுதல்' என்ற பொருளையும் கொடுக்கின்றது. காரணம், மோசேயின் தாய் மோசேக்குச் செய்த பேழையை ஆற்றில் மிதக்கவிடுமுன், அதை அடைக்க இந்தக்

கீலையே பயன்படுத்தினாள் (யாத் 2:3). யோசிப்பஸ் சாக்கடலைப் புகைக்கீல் ஏரி என்று அழைக்கின்றார். காரணம், அதன் தென் முனையின் மேற்பரப்பில் புகைக் கீல் படர்ந்துள்ளது.

நிலக் கீலை எகிப்தியர்கள் உடலைப் பதப்படுத்துதலில் பயன்படுத்தினார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், இஃது உண்மையா என்பது ஐயத்திற்குரியதாகும். சினார் சமவெளியில் நிலக்கீல் சாந்தாகப் பயன்படுத்தப்பட்டது (ஆதி 11:3). .நிலக்கீல் அசீரியாவில் உள்ள 'கிர்குக்குப்' பகுதியிலும், யூப்பிரத்தீசு நதிக்கரையிலும் காணப்பட்டது. 'ஊரில்' உள்ள சிகுராத்துக் கட்டடங்களுக்கு இந்த நிலக் கீல் சாந்தாகப் பயன்படுத்தப்பட்டது. கூடை போன்ற படகுகள் செய்யவும், அதன் ஓட்டைகளை அடைக்கவும், இது பயன்படுத்தப்பட்டது. நினைவுச் சின்னங்களைத் தயாரிக்க இஃது ஒரு கருப்பொருளாகவும் பயன்படுத்தப்பட்டது.

நில நடுக்கம் (EARTH QUAKE)

எரிமலையினாலும், நிலவுலகின் புறத்தோடு இடம் பெயர்வதாலும் நிலத்தில் உண்டாகும் நடுக்கமே நில நடுக்கமாகும். அதன் அதிர்வு அலைகள் அதிகமாகும் போது அதிக அதிர்ச்சியுடன் சப்தமும் (எசே 3:12-13), வலுத்த பெருங்காற்றும் (1 அர 19:11), நிலப்பிளவும் (எண் 16:32), அழிக்கும் நெருப்பும் (திருவெளி 8:5) உண்டாகும்.

காகசு, இமாலயம், ஆல்ப்ஸ் மலைகள் சூழ்ந்த நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பகுதியில் பாலஸ்தீனம் அமைந்துள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள நில நடுக்கங்களில் 40 சதவீதம் இப்பகுதியில் உண்டானதாகும். பாலஸ்தீன நாட்டில் ஒரு நூற்றாண்டில் ஏறக்குறைய ஒன்று அல்லது இரண்டு அழிக்கும் நிலநடுக்கங்களும், ஓராண்டில் ஏறக்குறைய 2 அல்லது 6 சிறிய நிலநடுக்கங்களும் ஏற்படுகின்றன. நில நடுக்கம் ஏற்படும் முக்கிய இடங்கள் வட கலிலேயா, நப்லுசுக்கு அருகிலுள்ள சமாரியர் வாழும் பகுதி (செக்கேம்), லித்தாவுக்கு அருகிலுள்ள யூதா மலையின் மேற்கு எல்லை முதலியனவாகும். யோர்தான் பள்ளத்தாக்கிலுள்ள எரிகோவும், திபேரியாவும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்படும் இடங்களாகும்.

கிறிஸ்தவர்களின் காலத்தில் பாலஸ்தீனப் பகுதியில் 17 பெரிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாக எழுத்தாளர்கள் பலர் கூறுகிறார்கள். 1837-ஆம் ஆண்டு உண்டான நிலநடுக்கம் 12 மாவட்டங்களை அழித்ததோடு 4000 பேர்களையும் கொன்றது.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த தொல்பொருள் இயல் நிபுணரான கிளாது சாப்பேர் என்பவர், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து விவிலியத்தில் வரும் ஊர்களின் காலத்தைக் கணிப்பதில் வல்லவர். இவர் கி.மு. 1365-ஆம் ஆண்டளவில், அதாவது இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் இருந்தபோது, ஒரு பெரிய நிலநடுக்கம் நிகழ்ந்ததாகக் கூறுகிறார். ஆமோஸ் இறைவாக்குரை தொடங்கிய காலம், ஊசியா அரசனின் காலத்தில் உண்டான நில நடுக்கத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது (கி.மு. 786 - 744; ஆமோ 1:1; செக் 14:5). இயேசுவைச் சிலுவையில் அறைந்த போதும், அவர் உயிர்த்த போதும் நில நடுக்கம் ஏற்பட்டதாக மத்தேயு கூறுகிறார் (மத் 27:54; 28:2). பவுலும் சீலாவும் வைக்கப்பட்டிருந்த சிறை, நிலநடுக்கத்தால் தகர்க்கப்பட்டதாக லூக்கா கூறுகிறார் (அ.ப. 16:26).

இறைவன் தன்னை வெளிப்படுத்தும் போதும் (யாத் 19:18), தீர்ப்பிட வரும் போதும் (எசா 29:6) நிலநடுக்கம் அவரது பிரசன்னத்தின் அடையாளமாக இருந்தது. இறுதி நாட்களில் ஏற்படும் அழிவுகளில் நிலநடுக்கமும் ஒன்றாகும் (மத் 24:7; மாற் 13:8; லூக் 21:11; திருவெளி 6:12; 8:5; 11:13.19; 16:18).

நிலவறை (CELLAR)

இதைக்குறிக்கும் எபிரேயச்சொல் 'செல்வம்,' 'கருவூலம்' என்று பொதுவாக

மொழிபெயர்க்கப்படும். ஒரே ஓர் இடத்தில் மட்டும் எண்ணெயும், இரசமும் சேகரித்துவைக்கும் 'கிடங்கு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (1 நாள் 27:27-28). பொதுவாக, பாலஸ்தீனத்தில் நிலத்திற்கு அடியில் அறைகளை வைப்பதில்லை. விளக்கை ஏற்றி, மரக்காலுக்குள்ளும், நிலவறையிலும் வைப்பதில்லை; மாறாக, யாவருக்கும் ஒளி கிடைக்கும்படி அதை விளக்குத்தண்டின் மீது வைப்பர் என்று இயேசு கூறுகிறார் (லூக் 11:33).

நிலவறைச்சிறை (DUNGEON)

இதைக்குறிக்கும் எபிரேயச் சொல்லுக்கு முதன்மையான பொருள்-பள்ளம் அல்லது நிலத்தின் அடியில் தோண்டப்பட்ட அறையாகும். இஃது ஒரு பாழுங்கிணற்றைக் குறிக்கலாம் (எரே 38:6.7.9-11.13). இதில் தண்ணீரில்லாமல் சேறு மட்டுமே இருக்கக்கூடும்; அல்லது வறண்டிருக்கக்கூடும். காண்க சிறை.

நிலவுலகம், மண்ணுலகம், பூமி (EARTH)

1. எபிரேயர்கள் மண்ணுலகு தட்டையான விரிந்த பரப்பு என்றும் (எசா 42:5; 44:24). நீர்த்திரளின்மீது (சங் 24:2; 136:6) அல்லது வெற்றிடத்தில் (யோபு 26:7) அமைந்துள்ளது என்றும் கருதினார்கள். மேலும் அது தூண்களின் மீதும் (யோபு 9:6; சங் 75:3), அடித்தளங்களின் மீதும் (2 சாமு 22:16; பழ 8:29; எசா 24:18; எரே 31:37) நிறுவப்பட்டிருந்தது என்றும், அதன் கீழ் எல்லைகள் அடி உலகம் வரை செல்கின்றன என்றும் அவர்கள் நினைத்தார்கள். சுற்றியுள்ள கடல், நிலத்தை மூழ்கடிக்காதவாறு நிலத்தைச் சுற்றிச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது (யோபு 26:10; பழ 8:29). இச்சட்டம் மலைத்தொடர்களாக இருக்கலாம்.

"நான்கு எல்லைகள்" அல்லது "நான்கு கோடிகள்" என்ற சொற்கள் மண்ணுலகு முழுவதையுமே குறிக்கும் (எசா 11:12; எசே 7:2; யோபு 37:3). யோபு 38:13 நிலவுலகை மூடியுள்ள வையகத் தொங்கலை இறைவன் பிடித்து உதறி, பொல்லாதவர்களை அதனின்று உதிர்க்கிறார் என்று கூறுகிறது.

சீரியாவுக்கு வடக்கே அல்லது வடகிழக்கே அமைந்துள்ள காட்டுப்பகுதிகளே மண்ணுலகின் கடைசி எல்லைகளாகக் கருதப்பட்டன (எரே 6:22; 31:8; 50:41). எனவேதான் நோவாவின் பேழை உலகின் எல்லைக்குச் சென்று அராரத்துமலையில், அதாவது உரார்து - அர்மேனியாவில் தங்கியதாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 8:4).

2. **நிலத்தின் வளம்:** நிலத்தின் வளமை மனிதரின் நடத்தையைப் பொருத்தது என்று பலர் கருதினார்கள். எனவே தீய செயல்கள் வறட்சியைக் கொணர்ந்தன. மனிதனுடைய தீய செயல்கள் இறைவனைப் புண்படுத்துவதால் இறைவன் தன் பிரசன்னத்தையும், பராமரிப்பையும் நீக்கி விடுகிறார் (உப 11:16-17; யோவேல் 1).

எசா 62:4-இல், முதலில் வளமின்றிப் பிறகு வளமாக்கப்பட்ட நிலத்தை, முதலில் கைவிடப்பட்டவளாய் இருந்து பிறகு மணமானவளாய் ஆன பெண்ணுக்கு ஒப்பிடுகிறார். இவ்வாறு ஒப்பிடுதல், ஏற்கெனவே தெல் ஏல் அமர்னாவின் கடிதங்களில் காணப்படுகின்றது. கற்பின்றி நடக்கும் போது நிலம் வறட்சியடைகிறது (எசா 24:5; எரே 3:1).

கொலை செய்து இரத்தம் சிந்துவதால் நிலம் தூய்மையற்றதாவதாகக் கருதப்பட்டது. மாசற்ற இரத்தம் சிந்தப்பட்ட இடத்தில் எதுவுமே வளராது (ஆதி 4:11-12; எண் 35:33-34); அந்நிலத்தில் மழையும் பெய்யாது (2 சாமு 1:21).

எபிரேயர்களின் சட்டப்படி, ஏழு ஆண்டுகளுக்கொரு முறை நிலத்தில் பயிரிடக் கூடாது (யாத் 23:10-12; உப 31:10). இவ்வாறு செய்வது ஏழைகளுக்கு உதவுவதற்காகவே என்று விளக்கப்பட்டது. ஆனால், ஒரு குத்தகை முடிந்து அடுத்த குத்தகை ஆரம்பிக்கும் முன்னால் ஓராண்டு நிலம் வெறுமையாக இருக்கவேண்டும் என்று முற்காலப் பழக்கம் ஒன்று இருந்தது.

3. கடவுளின் நிலமும் பேயின் நிலமும்: ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி அங்கு வழிபடப்படும் கடவுளின் உறைவிடமாக அழைக்கப்பட்டு வந்தது (2 சாமு 20:19; சங் 79:1; எரே 2:7; 16:18). ஆனால், பயன்படுத்தப்படாத நிலங்கள் தீய ஆவிகளின் உறைவிடமாகக் கருதப்பட்டன (எசா 13:21; 32:14).

4. **நிலத்தாய்:** இஸ்ராயேலர்கள் நிலத்தை வழிபட்டனர் என்பதற்குச் சான்றுகளே இல்லை. ஆனால், அவர்களின் அயலார்கள், நிலத்தை வழிபட்டு வந்தனர். அசூரில் எர்சித்து அதாவது நிலம் என்ற தேவதையை வழிபட்டு வந்தனர். ஆர்சி அதாவது 'நிலப்பெண்' என்பவள் பாகாலின் மணப்பெண்களில் ஒருத்தியாக வணங்கப்பட்டாள் என்று இராஸ் சம்ராவின் உகாரித்துப் பாடல்களில் காண்கிறோம்.

5. **உலகப்படைப்பிலும், இறுதி நாளிலும் மண்ணுலகு:** படைப்பின் மூன்றாம் நாளில் நிலம் படைக்கப்பட்டதாக ஆதி 1:9-10 கூறுகிறது. கடவுள் பூமியின்மீது மழை பொழியச் செய்யவில்லை. ஆயினும், பூமியிலிருந்து தோன்றிய ஒரு நீரூற்று பூமியெங்கும் பாய்ந்து கொண்டிருந்தது (ஆதி 2:5-6).

நிகழ்கால மண்ணகத்தின் மறைவுக்குப் பின் 'புதிய படைப்பு' உண்டாகும். அதிலே வியத்தகு வளமிக்கதாக இருக்கும் மண்ணுலகு. உயிரளிக்கும் நீரோடைகள் புறப்படும் (செக் 14:8). வானங்கள் எண்ணெய் பொழியும்; ஓடைகளில் தேன் வழிந்தோடும் (யோவா 3:18; ஆமோ 9:13).

நிலா (MOON)

1. பழைய ஏற்பாட்டில், முப்பத்து நான்கு முறையும், புதிய ஏற்பாட்டில், ஒன்பது முறையும் 'நிலா' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அண்டவியல் மற்றும் இறுதிக்கால இயல் சூழ்நிலைகளைக் குறிப்பிடும்போது இது பயன்படுத்தப்பட்டுள்ளது. சந்திர வழிபாட்டைப்பற்றிய குறிப்புகளும், இதனுடன் தொடர்புடைய கதைகளும், பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. சில சமயங்களில் நிலா, நிலைத்த தன்மையின் அடையாளமாகவும் அறிமுகப் படுத்தப்படுகிறது.

2. **அண்டவியலிலும் இறுதிக்கால இயலிலும் நிலா:**

படைப்பின் நான்காம் நாளன்று வான் மண்டலத்தில் நிலா உருவாக்கப்பட்டது. இரவில் ஒளிதந்து பருவங்களைப் பிரிக்கும் செயலினைச் செய்வதற்காகப் படைக்கப்பட்டது. சூரியனைப்போல நிலா தன்னொளி கொண்டதாகவும், சூரியனைச் சாராததாகவும் இதன் இயக்கம் கடவுளின் திருவுளத்திற்கு உட்பட்டதாக உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி 1:14-19; சங் 104:19; 136:9; சீரா 43:6-8). இந்த யுகத்தின் இறுதியில், அனைத்தும் குழப்பநிலையை அடையும்போது நிலாவும் இருளடையும் (எசா 13:10; யோவே 2:10; மத் 24:29; மாற் 13:24); இரத்தமாக மாறும் (யோவே 2:21; திருவெளி 6:12); அல்லது, இயற்கைக்கு மாறாகப் பகலில் ஒளிரும். யாவேயின் நாளில் நிகழும் நிகழ்ச்சிகளில் நிலாவின் ஒளி மறைப்பும் (கிரகணம்) ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது (எசா 13:10; எசே 32:7; யோவே 3:15). கடவுளின் மாட்சிமை நாளில், மீண்டும் ஒளிர ஆரம்பித்து ஒருபோதும் தேய்வுறாது (எசா 60:20). எருசலேம் மீண்டும் அமைக்கப்படும் மெசியாவின் காலத்தில், சூரியனைப்போல் நிலா பிரகாசமாய் ஒளிவிடும் (30:26). விண்ணக எருசலேமில் நிலாவின் ஒளி தேவையற்றதாகும் (திருவெளி 21:23).

3. **நிலா வழிபாடு:** செமித்திய இனமக்கள் அனைவரும் செய்தது போலவே, பாலஸ்தீன மற்றும் சீரியாவின் புறமத மரபினைச் சேர்ந்தவர்கள் நிலா வழிபாட்டிற்கு மிக முக்கியத்துவம் அளித்தனர். இவ்விடங்களில் நிலா ஓர் ஆண் கடவுளாக வழிபடப்பட்டது. கோவில்களில் பலிசெலுத்தினர். அமாவாசை நாளில் சிறப்பான காணிக்கைகள்

செலுத்தப்பட்டன. நிலாக்கடவுளோடு சேர்ந்த பல பெயர்கள் காணப்படுகின்றன.

அக்காதியர் நிலாக் கடவுளைச் சீன் என்று அழைத்தனர். தென் பாபிலோனிலிருந்த ஊர் என்ற இடம், நிலா வழிபாட்டிற்கு மிகப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இக்கடவுளுக்காக இயற்றப்பட்ட பல பாடல்கள் பாதுகாக்கப் பட்டுள்ளன. ஆனால், இப்பாடல்கள் கடவுளின் பண்புகளை வரையறுக்காமல் பொதுவான பண்புகளைக் கொண்டுள்ளன. சுமேரியர் நிலாக்கடவுளை- நன்னார் என்று அழைத்தனர். சுருபாக்கு என்ற இடம், இந்த வழிபாட்டின் மைய இடமாக விளங்கியது. சுமேரியக் கடவுளான நன்னாரையே செமித்திய மக்கள் சீன் என்று மாற்றிக்கொண்டனர் என்று வல்லுநர் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால், வேறுசிலர் செமித்திய மக்களிடையே நிலா வழிபாடு அதிகப் பரவலாக இருந்ததைக் காரணம் காட்டி, சீன் என்ற கடவுளையே- நன்னார் என்று மாற்றினர் என்று கூறியுள்ளனர்.

எபிரேய இயலில் நிலா இறைவனால் படைக்கப்பட்ட பொருட்களில் ஒன்றாகக் கருதப்பட்டது (ஆதி 1:16; சங் 8:3; 104:19; 136:7-9; எரே 31:35; சீரா 43:6-7). இது அவருடைய நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்டது (யோசு 10:12-13; அப 3:11). நிலாவையும் மற்ற விண்ணகக் கோள்களையும் வணங்குவது இஸ்ராயேலில் தடை செய்யப்பட்டிருந்தது (உப 4:19; 17:3; காண். யோபு 31:26). ஆனால், இஸ்ராயேலர் இவ்வழிபாட்டில் ஈடுபட்டனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பதித அரசனான மனாசே (கி.மு. 687-641; 2 அர 21:3.5), இதை அதிகாரப்பூர்வமான வழிபாடாக ஏற்றுப் பரப்பினான். மற்ற அரசர்களும் பொது மக்களும் இவ்வழிபாட்டைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது (எரே 8:2). இவ்வழிபாட்டை அரசன் யோசியா முழுவதும் தடை செய்தார் (2 அர 23:5). இவ்வழிபாட்டின் சிறப்புக்கூறுகள் வீட்டுமேல் தளங்களிலிருந்து நிலாவை வணங்குவதும் (எரே 19:13; செப் 1:5), "ஒளியில் தவழும் திங்களை" (யோபு 31:26-27) வாழ்த்துக்கூறி வணங்குவதும் ஆகும்.

4. நாட்காட்டியில் நிலா: இஸ்ராயேலரின் நாட்காட்டி நிலாவின் வளர்ச்சி, தேய்வை அடிப்படையாகக் கொண்டது. முக்கியமான பருவகால விழாக்களாகிய பாஸ்கு மற்றும் சேகரிக்கும் விழாக்கள் முழுநிலா நாளில் தொடங்கின. அமாவாசை நாளில் எக்காளம் ஊதப்பட்டது. இஃது அசுத்த ஆவிகளை விரட்டுவதாகக் கருதப்பட்டது. அன்று சிறப்பான காணிக்கைகள் செலுத்தப்பட்டன (எண் 10:10; 28:11-15; சங் 81:3). வியாபாரத்திற்காகப் பயணம் செய்வோர், முடிந்தால் முழு நிலா நாளில் வீடு திரும்பிவிடுவர் (பழ 7:20). இது தேயும் நிலா, குறிப்பாக அது தேயத் தொடங்கும் இரவு, வணிகம் செய்யத் தீய சகுனம் உடையதாகக் கருதப்பட்டதைப் பிரதிபலிக்கிறது.

5. விவிலிய நாட்டுப்பாடலில் நிலா: பழைய ஏற்பாட்டு நாட்டுப்பாடல்களில் நிலாவோடு தொடர்புடைய இரு நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

அ. யாவே போரில் ஈடுபடும்போது சூரிய ஓட்டத்தைப்போல் நிலாவின் ஓட்டமும் நிறுத்தப்படலாம் (அப 3:11). யோசுவாவின் காலத்தில், கிபயோனில் இஸ்ராயேலர் தங்கள் பகைவர்களோடு போரிட்டபோது இஃது உண்மையிலேயே நடந்ததாக நம்பப்பட்டது (யோசு 10:12).

ஆ. நிலா தன் தீய சக்தியால் ஒருவனைப் பைத்தியமாக்கக்கூடும் (சங் 126:6). எங்கும் பரவியிருந்த மூட நம்பிக்கை புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது (மத் 4:24; 17:15).

6. மொழி மரபில் நிலா: சூரியனைப் போல் நிலாவும் நிலைத்த தன்மைக்கு அடையாளமாகக் கருதப்பட்டது (சங் 72:5.7; 89:37; எசா 60:20; எரே 31:35-36). இந்த அடிப்படையில்தான், நிலாவின் மாற்றங்கள் அல்லது அதன் மறைவு, இறுதிக்கால இயல் மொழியில், முடிவின்

பொருள்மிக்க அடையாளமாயிற்று (எசா 13:10; 24:23; யோவே 2:10.31; 3:15; மத் 24:29 இணை; அ.ப. 2:20; திருவெளி 6:12; 8:12).

நிலைகளின் மேற்சட்டம் (LINTEL)

இது, கதவிற்கு மேல் பகுதியில் அமைக்கப்படும் ஒரு மரச்சட்டம். 1 அர 6:31-இல் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி இந்தச் சொல்லின் பொருள் தெளிவாக இல்லை. ஏனென்றால், இதில் இரு சட்டங்கள் கோண வடிவில் ஒன்றையொன்று சந்திக்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதாக விவரிக்கப்பட்டுள்ளது. இஃது உடன்படிக்கைப் பேழையைக் கொண்டிருந்த கூடாரத்தைச் சுட்டுகிறது. பாஸ்கா விழாவின்போது நிலையின் மேற்சட்டம், நிலைக்கால்கள் ஆகியவற்றின் மீது இரத்தம் தெளிக்கப்பட்டது (யாத் 12:7.2-23).

நிழல் (SHADOW, SHADE)

I. இரவு அல்லது மேகத்தைப்போன்று நிழலானது, ஒளியின் பிரசன்னம் இன்மையையோ இருத்தலையோ உறுதிப் படுத்துவதற்கேற்ப ஓர் இரட்டை அனுபவத்தை அடையாளமாக உணர்த்துகிறது. நாளின் முழு ஒளியை விரும்பும் மனிதன், மர நிழலைத் தேடுகிறான். இறைவன் ஒளியாகவும் எரிகின்ற தீயாகவும் மட்டுமின்றி, புத்துணர்வூட்டும் நிழலாகவும் உள்ளார். கருமையான மேகத்தில் தங்கியிருக்க அவர் தீர்மானித்திருந்தார். விவிலியமானது, இந்த இருபொருட்பண்பை வைத்துச் சொல்லாடல் செய்கிறது.

II. மரணத்தின் அறிவிப்பு:

1. **விலகியோடும் நிழல்:** தான் மறைந்து போவதற்கு உட்பட்ட படைப்பு என்பதை அறிந்த நிலையில், நிழலினுடைய நீண்டு வளரும் அல்லது தோன்றி மறையும் பிரசன்னத்தில் மனிதன் தனது ஊழை அறிந்து கொள்கிறான்; "பொழுது சாய்ந்தது, மாலை நேரத்து நிழல் நீண்டு வளர்கின்றது" (எரே 6:4). இவ்வாறாக, அதன் பாகைகள் மாற்ற முடியாத விதத்தில் நிழற்கடிகையில் சேர்க்கப்படுவது தான் மனித வாழ்க்கை (2 அர 20:9-11). "நிழல் போல் ஓடி நிலையற்றுப்போகிறான்" மனிதன் (யோபு 14:2; 8:9). அவனது நாட்கள் நிழலைப்போல இரவில் தேய்கின்றன (சங் 102:12; 144:4). எந்த நம்பிக்கையுமின்றி மரணத்தை நோக்கிக் கடந்து செல்லுகின்றன (1 நாள் 29:15; ஞான 5:9). வீணான வாழ்வினுடைய நூலின்மேல் (திருவுரை 6:12) நிழலைப்போல அவன் பயணம் செய்கிறான் (சங் 38:7). ஆனால் திருப்பமுடியாத இந்த வளர்ச்சிக்குள்ளே தனது முழு மாற்றத்தை அனுபவிக்கின்ற வேளையில், "மாற்றமோ, மாறுதலின் நிழலோ நிலவாத ஒளியின் தந்தையின் மேல்" அவன் தனது விசுவாசத்தை நிலைப்படுத்துகின்றான் (யாக் 1:17).

2. **இருளும் மரணத்தின் நிழலும்:** எழுபது நூல் விவாதத்துக்குரிய ஆனால் மெய்ம்மையின் ஆழமான உணர்வைக் கொண்டுள்ள சொல்லாக்க விளக்கத்தைக் கொண்டுள்ளது. ஆழமான நிழல் என்பதைக் குறிப்பிடும் எபிரேயச் சொல்லை மரணத்தின் நிழல் என அது சாதாரணமாக மொழிபெயர்த்தபோது, நற்செய்தியாளர்கள் அதை ஏற்றுக்கொள்கின்றனர் (எசா 9:1; மத் 4:16; லூக் 1:79). ஏனெனில், நிழலானது மாற்றமடைந்து விரைந்தோடுகின்ற ஒரு சாதாரண இயல் நிகழ்ச்சியன்று. அஃது ஒரு வெறுமை, ஒன்றுமில்லாமை, யோபு தனது துன்பங்களில் விரும்புகின்ற இருண்ட தெளிவற்ற நிலையாகும் (யோபு 3:1-6). இறந்தோரின் நாடாகிய செயோல் என்ற நம்பிக்கையற்ற பாதாளமானது, இருள் மற்றும் நிழலின் உறைவிடமாகும் (10:21). எல்லா வெளிச்சமும் அங்கு இருளாகவே இருக்கும். இந்த வாழ்விலும் சோதனையானது மனிதனை வாழ்வோரின் ஒளியினின்று ஏற்கெனவே ஒதுக்குகிறது; "என் கண்களும் இருண்டுபோயின" (16:16).

3. **நிழலின் தலைவர்:** அச்சுறுத்தும் மரணத்தின் நிழலுக்கு முன்னால், இறைவன் மட்டுமே ஒரே அடைக்கலம். இருளைப் படரச்

செய்பவர். பாவியின் நம்பிக்கையாக உள்ள செயற்கை ஒளியை மங்கச் செய்கிறார் (எரே 13:16: சங் 44:20). அவர் "காரிருளை ஒளிக்குக் கடத்திவரக் கூடியவர் (யோபு 12:22). "காரிருளிலும் சாவின் நிழலிலும் கட்டுண்டு கிடந்தவர்களை வெளிக்கொணர" அவரால் முடியும் (சங் 107:10. 14). இவ்வாறு மனவுறுதி நிறைந்தவராய்ச் சங்கீத ஆசிரியர், "சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சேன்" என்று கூவுகிறார் (சங் 23:4). "சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்தது" என்னும் எசாயாவின் இறைவாக்கைக் கிறிஸ்து நிறைவேற்றியதால், இந்த நம்பிக்கையானது உண்மையாயிற்று (மத் 4:16; எசா 9:1).

III. பாதுகாப்பின் பிரசன்னம்: மேகமானது சிலருக்கு- அச்சுறுத்தும் இருளாகவும், மற்றவர்களுக்கு- ஒளியாகவும் பாதுகாப்பாகவும் இருந்ததுபோல, பயங்கர நிழலானது பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்கலாம். அஃது உறுதியளிக்கும் பிரசன்னத்தின் மூலமாக மனிதன் ஒரு பிரசன்னத்தைக் கண்டுபிடிக்கிறான்.

1. மண்ணுலக நிழல்கள்: அன்றாட வாழ்வில், குறிப்பாக மேற்காசிய நாடுகளில் நிழலானது பாராட்டப்படுகிறது. ஏனெனில், சூரியனின் வெப்பத்தினின்று அது காப்பாற்றுகிறது. எல்லாப் படைப்புகளும் நிழலை நாடுகின்றன. வலிமை மிக்க பெகிமோத்து, தாமரையின் நிழலை நாடுகிறது (யோபு 40:22). பறவைகளும், விலங்குகளும், மனிதரும் மரத்தின் நிழலை நாடுகின்றனர் (எசே 31:6). "அரசே, அந்த மரம் நீர்தான்" என்று தானியேல் நெபுகத்னேசருக்கு விளக்குவது போன்று, நிழலளிக்கும் மரமானது பாதுகாப்பு ஆற்றலை அடையாளங் காட்டுகிறது (தானி 4:17-19). அதே போன்று அரசனின் நிழலில் பாதுகாப்பானது உறுதியளிக்கப்படுகிறது (நீதி 9:15). நீதியுள்ள அரசர், "காய்ந்த மண்ணில் பெரும் குன்றின் நிழல் போல" இருப்பார் (எசா 32:2). இருபொருள் மயக்கத்தன்மையுடைய இத்தகைய நிழலானது, யோனாவின் தலை மீதான உதிர்ந்து போன ஆமணக்குச் செடியைப்போலவும் (யோனா 4:5-7), இஸ்ராயேலின் அரசனுடையதைப் போலவும் (புல 4:20) ஏமாற்றலாம். நொடியில் வேருடன் பிடுங்கப்பட்டு, தங்களுடைய ஏமாற்றும் நிழலின் மேல் நம்பிக்கை கொண்டுள்ளவர்களுடன் குழியில் எறியப்படக்கூடிய (எசே 31; தானி 4) எகிப்தினுடைய (எசா 30:2) அல்லது லெபனானின் கேதுரு மரங்களினுடைய நிழலானது எவ்வளவு ஏமாற்றம் தரக்கூடியதாக இருக்கும்!

2. **இறைவனின் நிழல்:** வலுவற்ற பாதுகாப்பிற்குப் பதிலாக, பாதுகாப்பான நிழலை இறைவன் மட்டுமே அளிக்கிறார். மனிதன் புனித மரங்களின் இனிய நிழலைப் பின்னால் விட்டு விட்டு (ஓசே 4:13), யாவேயில் தனது நிழலை எல்லா நேரங்களிலும் கண்டடைய வேண்டும் (சங் 12:5: எசா 25:4-5). "எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பதும்" (சங் 91:1), அவரது வலிமை மிக்க கரம் (எசா 49:2; 51:16) அல்லது அவரது சிறகுகளின் நிழலில் (சங் 7:8; 56:2; 62:8) உண்மையான ஊழியனாக இருப்பதும் விசுவாசம் நிறைந்த மனிதனின் கனவாகும்.

இந்த உருவகங்களின் பின்னணியில், யாத்திரையின் சில நினைவுகளை எதிர் கொள்கிறோம். மேகமானது இறைவனுடைய கூடாரத்தின்மீது நிழலிட்டு (யாத் 40:35), ஓரிடத்தில் பாளையம் தங்கியிருந்த காலத்தை நிர்ணயித்தது (எண் 9:18.22). ஞான நூல் கூறுவது போன்று (ஞான 19:7), தனது நிழலால் அஃது இஸ்ராயேலருக்குப் புகலிடமும் அளித்து (எண் 10:34) வியத்தகு முறையில் அவர்களைப் பாதுகாத்தது. இப்பாதுகாப்பானது இறுதிக்காலங்களில் புதுப்பிக்கப்படும். "ஒரு விதான மண்டபமாகவும், பகல் வெப்பத்தினின்று காக்கும் நிழலாகவும், மழைக்கும் புயல் காற்றுக்கும் ஒதுங்கும் புகலிடமாகவும், அரணாகவும்" (எசா 4:5-6), தூய்மைப்படுத்தப்பட்ட சீயோனின் மேல் இறைவனின் மகிமை வந்து தங்கும். இந்த இறை

மகிமையின் கீழ் இஸ்ராயேல் பயணம் செய்யும்போது, "காடுகள் அதற்கு நிழலைத் தரும்" (பாரூ 5:7-9; 1:12).

ஆலயம் திருநிலைப் படுத்தப்பட்டபோது மேகமானது திருத்தூயகத்தின் மேல் பரவித் தங்கியிருந்தது. "ஆண்டவரே! நீர் கரிய மேகத்தில் உறைவதாகக் கூறினீர்" என அப்போது சாலமோன் சொன்னார் (1 அர 8:12). பாதுகாப்பினுடைய கருத்துடன் இறைவனுடைய நெருங்கிய பிரசன்னமும் இங்கே சேர்க்கப்படுகிறது. இந்தப் பொருளில் உன்னத சங்கீதத்தின் தலைவியைப் போன்று எருசலேமானது "அவரது நிழலிலே அமர்வதில் இன்புறலாம்" (உ.ச. 2:3). உருமாற்றத்தின்போது யார்மீது மேகம் நிழலிட்டதோ (லூக் 9:34 இணை) அவரை இறைவனது ஆற்றலால் மரியாள் கருத்தரித்தபோது (1:35) அவரில் இக்கனவானது உண்மையாயிற்று.

3. இஸ்ராயேலின் நிழல்: தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய முறையின் போது இறைப்பாதுகாப்பின் ஊற்றாக உருவாகின்றனர். முன்னர், மற்ற அரசுகளுக்கு மேலாக, இஸ்ராயேலின் திராட்சைத் தோட்டமானது தனது நிழலால் மலைகளை மூடியது (சங் 80:11). இறைத் தீர்ப்பினால் வீழ்ச்சியுற்ற நிலையில் இஸ்ராயேலானது இறுதியாக, பறவைகள் வந்து தங்குகின்ற பசுமையான மரமாகவும் (எசே 17:23; தானி 4:9), எல்லா நாடுகளுக்கும் திறக்கப்பட்டுள்ள இறை அரசினுடைய காணக்கூடிய உருவமாகவும் (மத் 13:32) மீண்டும் உருவாகும். அதே முறையில் பேதுரு, நோயாளிகளைத் தனது நிழலால் குணப்படுத்தும்போது (அ.ப. 5:15), இறைவனுடைய மீட்பளிக்கும் பிரசன்னத்தை அவரது திருச்சபையில் வெளிப்படுத்துகிறார்.

நிழற்கடிகை அல்லது கதிரவக்கடிகை (DIAL)

ஆகாசினால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும், நேரத்தைக் கணக்கிடப் பயன்படுத்தப்பட்ட ஒரு கருவி. எசாயா, சூரியனின் நிழல் திரும்புவதின் அடையாளத்தை எசேக்கியாவிற்குக் காட்டுவதற்காக இதைப் பயன்படுத்தினார் (2 அர 20:11; எசா 38:8).

பல வகைப்பட்ட சூரிய நிழற்கடிகைகள் பழங்கால மேற்காசிய மக்களால் பயன் படுத்தப்பட்டன. பாபிலோனியர்கள் 12 மணிகளின் அளவுகளைக் குறிக்கும் ஒரு கருவியைப் பயன்படுத்தியதாக எரோதோத்து கூறுகின்றார். ஆகாசு பயன்படுத்திய சூரியக் கடிகை, எந்த வகையைச் சேர்ந்ததென்று தெரியவில்லை.

ஆகாசின் சூரியக்கடிகை, பாபிலோனிய வகையைச் சேர்ந்த, குறியும் மணி அளவுகளும் கொண்ட ஒரு தனிப்பட்ட கருவி என்று அறிஞர்கள் பலர் கருதி வந்திருக்கின்றனர். இருப்பினும், இஃது ஒரு படிக்கட்டு என்றும், அதன்மேல் அருகிலுள்ள ஒரு பொருளின் நிழல் படும்பொழுது, நேரம் கணக்கிடப்பட்டது என்றும் இன்றைய வல்லுநர்களும், எழுபதுநூலும், யோசிப்பசும் கருதுகின்றனர். எகிப்தியர்கள் இப்படிப்பட்ட ஒரு கருவியைப் பயன்படுத்தியதாக இப்பொழுது தெரிகின்றது. கும்ரான் ஏடுகளும் இதற்குச் சான்று பகர்கின்றன.

நிறம், வண்ணம் (COLOUR)

இஸ்ராயேலர், தங்கள் அண்டை இனத்தவர்களுக்கு மாறாக, நிறங்களின் பொதுவான வேறுபாடுகளையே, குறிப்பாக திட்பமற்ற மற்றும் திண்மையான நிறங்களையே அறிந்திருந்தனர். மேலும், நிறங்களின் நுண்ணிய வேறுபாடுகளைக் குறிக்கும் சொற்களை அரிதாகவே பயன்படுத்தினர். பழைய ஏற்பாட்டில் நிறங்களைச் சுற்றி வளைத்துத்தான் விவரிக்கப்படுகின்றன. சான்றாக, "கலப்பு நிறமோ, புள்ளியோ உடைய" ஆடுகள் (ஆதி 30:33); "வரியோ புள்ளியோ உடைய வெள்ளாடு" (30:35); "நீண்ட பல்வண்ண இறகுகள்" (எசே 17:3); யோசேப்பின் புகழ்பெற்ற "அழகு வேலைப்பாடுகள் நிறைந்த அங்கி" (ஆதி

37:3.23.32) உண்மையில் வெறும் நீண்ட கைகளையுடைய அங்கியாக இருந்திருக்கலாம். இஸ்ராயேலர் நிறங்களைப் பற்றித் தெளிவில்லாமல் கூறுவது சிலைகள் செய்வதைத் தடுக்கும் இறைவனது கட்டளையின் விளைவாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

விவிலியம் சில வண்ணங்களைக் குறிப்பாகக் கருஞ்சிவப்பு நிறத்தைக் குறிக்கின்றது. இந்நிறத்தில் மிதியான் அரசர்கள் இயேசுவின் உவமையில் செல்வர் உடுத்தினர் (நீதி 8:26– பட்டாடை). இயேசுவின் உவமையில் செல்வர் உடுத்திய ஆடையும் இந்நிறத்தில் (செந்நிறம்) இருந்தது (லூக் 16:19). சிவப்பு நிறத்தையும் குறிப்பிடுகிறது (யாத் 25:4). பழைய ஏற்பாடு வெள்ளை (ஆதி 49:12), கருப்பு (உ.ச. 1:5; 5:11), பச்சை (ஆதி 1:30), சிவப்பு (ஆதி 49:12) ஆகிய நிறங்களையும் குறிப்பிடுகிறது. மஞ்சள், சிவப்பு, வெள்ளை (லேவி 13:19.24:43), நல்ல சிவப்பு (எரே 22:14; எசே 23:14) ஆகிய நிறங்கள் சில இடங்களில்தான் குறிக்கப்படுகின்றன.

இஸ்ராயேலர் ஒப்புமையில் நிறங்களை விரும்பிப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. ஆறுதல் சொற்களைக் கூற எசாயா நிறங்களைப் பயன்படுத்துகிறார் (எசா 1:18). திருவெளிப்பாட்டு நூல் அடையாளப் பொருட்களோடு பல நிறங்களைப் பயன்படுத்துகிறது. முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்பட்டபின் தோன்றிய நான்கு குதிரைகளின் நிறங்கள் அடையாளப் பொருளுடையவை. வெள்ளைக் குதிரை– வெற்றியைக் குறித்தது (திருவெளி 6:1-2; காண். செக் 6:3). செந்நிறக் குதிரை– போரையும் இரத்தம் சிந்துதலையும் குறித்தது (திருவெளி 6:4; காண். செக் 6:2). கறுப்பு பசியைக் குறித்தது (திருவெளி 6:5; காண். செக் 6:2), வெளிறிய குதிரை– சாவைக்குறித்தது (திருவெளி 6:8). வெள்ளை நிறம் தூய்மையைக் குறித்தது. சர்தையிலுள்ள விசுவாசிகளும், அவர்களைப் போன்றவர்களும் இவ்வாறு இருந்தனர் (3:4-5). இத்தகைய பொருள்கள் விவிலியத்தின் மற்றப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. தூய்மையை– வெள்ளை நிறமும் (மாற் 16:5 இணை), கறுப்பு– பசியையும் (புல 5:10) அல்லது அரசமகத்துவத்தையும் (எஸ்த 8:15), சாம்பல் நிறம்– முதியவர்களிடையே ஞானம் அல்லது அழகையும் (யோபு 15:10; பழ 20:29; காண். எசா 46:4) உணர்த்தவல்லன.

தொல்பொருள் ஆய்வுகள், சாயம் செய்வதிலும், நிறங்களை மாற்றுவதிலும் பழங்கால மேற்காசியாவில் பயன்படுத்தப்பட்ட முறைகளைப் பற்றி அதிகம் அறிய வாய்ப்பளித்துள்ளன. பலவகைக் களிமண்களைப் பயன்படுத்தி, அதைப் பலவித வெப்ப நிலையில் சூடுபடுத்தி, கற்களுக்கு நிறம் கொடுத்தனர்; பல்வகை வண்ணங்கள் பூசினர். எகிப்தியர் பலவகை உலோகங்களிலிருந்து தங்கள் வண்ணங்களைத் தயாரித்தனர். சான்றாக, படிகக்கல்பொடி, செம்பைச் சூடுபடுத்தி நீலநிறம் தயாரித்தனர். ஓவியங்களிலும் பாண்டங்களில் பூசவும் வண்ணங்களைத் தயாரிப்பதோடு, பழங்கால மக்கள், பூச்சிகளிலிருந்து ஆடைகளுக்குச் சாயம்பூசும் வண்ணங்களையும் தயாரித்தனர்.

நிறைவுடைமை (PERFECTION)

I. நற்செய்தியின் ஒரு சொற்றொடரானது இறைவனைப் பின்பற்றுதலையே நிறைவுடைமையின் மாதிரியாகத் தருகின்றது; “உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போன்று நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்” (மத் 5:48). “நீங்கள் தூயவராயிருங்கள். ஏனெனில், நாம் தூயவர்” (லேவி 11:45; 19:2) என்னும் லேவியர் ஆகமக் கட்டளை பழைய ஏற்பாட்டில் கொண்டிருந்த இடத்தை மேற்கூறப்பட்ட முனைப்பான கட்டளை புதிய ஏற்பாட்டில் கொண்டுள்ளது. ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குக் கருத்து மாற்றமானது தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது.

II. பழைய ஏற்பாடு

1. **இறைவனின் தூய்மையும் நிறைவுடைமையும்:** பழைய ஏற்பாடானது

நிறைவுடைமையை விட, புனிதத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகிறது. இறைவன் தூயவர்; அதாவது, இவ்வுலக உயிர்களைவிட முற்றிலும் வேறுபட்ட அமைப்பைச் சார்ந்தவர். அவர் உயர்ந்தவர், ஆற்றல் மிக்கவர், அச்சம் விளைவிக்கிறவர் (உப 10:17; சங் 76). வியத்தகு முறையில் நல்லவராகவும் பிரமாணிக்கமுள்ளவராகவும் அவர் காணப்படுகிறார் (யாத் 34: சங் 136). மேலாண்மை மிக்க நீதியுடன் அவர் வரலாற்றில் தலையிடுகிறார் (சங் 99). "நிறைவுள்ளவராக" அவரை யாரும் தகுதிப்படுத்துவதில்லை. ஏனெனில், எபிரேய மொழியில் ஒரு சில குறிப்பிட்ட உயிரினங்களுக்கு மட்டுமே இச்சொல்லானது சரியாகப் பொருந்துகிறது. ஆனால், அவரது செயல்களிலும் (உப 32:4), சட்டத்திலும் (சங் 19:8), வழிகளிலும் (2 சாமு 22:31) நிறைவுடைமை பற்றிப் பேசப்படுகிறது.

2. **நிறைவுடைமையின் கோரிக்கை:** தூய்மையின் இறைவன் தனக்கென ஒரு மக்களைத் தேர்ந்தெடுக்கும்போது, பதிலுக்கு இம்மக்கள் தூயவர்களாகின்றனர்; அதாவது, திருநிலைக்குப் புறம்பானவற்றிலிருந்து பிரிக்கப்பட்டு, திருநிலைப்படுத்தப் படுகின்றனர். அதே நேரத்தில் நிறைவுடைமைக்கான ஒரு கோரிக்கையும் அதனில் விதிக்கப்படுகிறது. திருநிலைப் படுத்தப்பட்டதானது முழுமையானதாகவும், மாசற்றதாகவும் இருக்க வேண்டும்.

முதலாவதாக உடல் சார்ந்த முழுமை. பலியில் ஒப்பு கொடுக்கப்படுகின்ற விலங்குகளில் இது தேவையாக உள்ளது. "குருடு, ஊனம், நெரிவு முதலிய குறைபாடுள்ளவற்றை ஆண்டவருக்குச் செலுத்தக் கூடாது" (லேவி 22:22). தூய்மை மற்றும் தூய்மையின்மை பற்றிய விதிமுறைகள் மக்களின் குணநலன்களைப்பற்றிக் குறிப்பிடுவதால் (லேவி 11-13), இதே சட்டமானது குருக்களுக்கும் (லேவி 21:17-23), ஓர் அளவுக்கு அனைத்து மக்களுக்கும் பொருந்தும்.

மனிதர்களைப் பொருத்தமட்டும் உடல் சார்ந்த முழுமையுடன், சேர்க்கப்பட வேண்டும். அனைத்து நேர்மை மற்றும் பிரமாணிக்கத்தில் நிறைவான இதயத்துடன் யாவேக்கு ஊழியம் புரிய வேண்டுமென்றும் (1 அர 8:61; உப 6:5; 10:12), இப்பணியானது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலையும் தீமைக்கெதிரான போராட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது என்றும் இஸ்ராயேல் அறிந்திருந்தது (1 அர 8:61; உப 6:5; 10:12). "இவ்வாறு உன் நடுவிலிருந்து தீமையை அகற்றுவாய்" (உப 17:7.12). சமய உணர்வில் விலகிப்போதலை இறைவாக்கினர்கள் கடுமையாக எதிர்த்துப் போராடினர் (ஆமோ 4:4...; எசா 1:10-17; 29:13). வன்முறையையும் தான் என்ற எண்ணத்தையும் விலக்கும் போதும், இறைவனிலான விசுவாசத்திலும், உரிமைக்கான மரியாதை கொடுத்து நல்லதைச் செய்தலிலும் நாம் உண்மையான நீதியை நாடவேண்டும் (எசா 58). "என் முன்னிலையில் நடந்து நிறைவுள்ளவனாய் இரு" என்று இறைவன் ஆபிரகாமுக்கு இட்ட கட்டளை (ஆதி 17:1), மீளவும் உப 18:13-இல் எடுத்துரைக்கப்பட்டு அதன் பொருட்செறிவை மேலும் மேலும் வெளிப்படுத்துகிறது.

3. **நிறைவுடைமையில் செயற்பழக்கம்:** தங்களுடைய முன்னோர்களின் மாதிரிகளைத் தியானித்து (ஞான 10; சீரா 44:49), பக்தியுள்ள யூதர்கள் சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் நிறைவை நாடினர்; "ஆண்டவருடைய சட்டப்படி நடப்பவர்களே அவர்களது வழியில் மகிழ்ச்சியும் நிறையும் உள்ளவர்களாவர்" (சங் 119). ஆனால், இந்தக் குறிக்கோளின்பால் அவர்கள் கொண்டிருந்த பற்றே சில பிரச்சனைகளைக் குறித்துக்காட்டியது. யோபு நிறைவுடைமைக்கு ஒரு மாதிரி, "மாசற்றவர், நேர்மையுள்ளவர், கடவுளுக்கு அஞ்சித் தீமையை விலக்கி நடந்து வந்தவர்" (யோபு 1:1). துரதிருஷ்டம் ஏன் அவரை விடவில்லை? இந்தத் துக்ககரமான கேள்வியானது ஆன்மாக்களைத் திறந்த நிலையிலும் எதிர்பார்ப்பிலும் வைத்திருந்தது.

III. புதிய ஏற்பாடு

1. சட்டத்தின் நிறைவுடைமை: எதிர்பார்த்தலை முன்னோக்காகக் கொண்ட இந்த நிறைவுடைமைக்கு நற்செய்தி வணக்கம் செலுத்துகிறது. சட்டத்தின்பால் திருமுழுக்கு யோவானின் பெற்றோர், சிமியோன், அன்னா ஆகியோர் கொண்டிருந்த குற்றம் கூற முடியாத பற்றுறுதி (லூக் 1:6) இத்தகையதே. ஆனால், சட்டத்தின் செயற்பழக்கமானது தன்னிலேயே உளநிறைவுடன் அடங்கியிருப்பதெனில், அது போலியான நிறைவுடைமையாகும். அஃது இயேசுவின் சிறிதும் விட்டுக் கொடாத எதிர்ப்பை எழுப்புகிறது (லூக் 18:9-14; யோவான் 5:44). இந்த எதிர்ப்பைப் பவுல் தொடர்ந்து நடத்துகிறார் (உரோ 10:3; கலா 3:10).

2. இயேசுவும் நிறைவுடைமையும்: உண்மையில் முற்றிலும் மாறுபட்டதொரு வழியில் சட்டமானது தனது முழு நிறைவைக் கண்டடைய வேண்டும். மிகத்தூய இறைவனே அன்பின் இறைவன் என்பதை வெளிப்படுத்துகின்ற வேளையில், இறைவனுடனான உறவு எழுப்புகின்ற நிறைவுடைமைக்கான கோரிக்கைக்கு இயேசு புதியதொரு திருப்பம் அளிக்கின்றார். இனி மேலும், இது நேர்மையைப் பாதுகாப்பது பற்றிய கேள்வியன்று; மாறாக, இறைவனுடைய கொடைகளையும் அன்பையும் பெற்று மக்களிடையே பரப்புவதாகும்.

பாவிகளுடனான தொடர்பினின்று விலகியோடுகின்ற நீதிமான்களுடன் இயேசு சேரவில்லை. பாவிகளுக்காகவே அவர் வந்தார் (மத் 9:12-13). உறுதியாகவே, லேவியராகமத்தின் குறிப்புகளால் முன்னுரைக்கப்பட்ட "மாசற்ற செம்மறி" இவரே (1 பேதுரு 1:19). ஆனால், நமது பாவங்களை அவர் தன் மேல் சுமந்துகொண்டு, அவற்றின் மன்னிப்பிற்காகத் தனது இரத்தத்தையே பொழிந்தார். இவ்வாறு நமது முறையில் நம்மை நிறைவுபடுத்தக்கூடியவரான (எபி 10:14) நமது "நிறைவுள்ள" குருவாக அவர் உருவாகிறார் (எபி 5:9-10; 7:26-28).

3. தாழ்ச்சியில் நிறைவுடைமை: எனவே, கிறிஸ்து கொணர்கின்ற மீட்பிலிருந்து பயனடைய விரும்பும் மனிதன் தன்னைப் பாவியென ஏற்றுக்கொள்ள வேண்டும் (1 யோவா 1:8); மேலும், தன்னை அவருடைய அருளுக்குமட்டுமே ஒப்படைப்பதற்கென, தனிப்பட்ட சொந்த அனுகூலத்தின் காரணமாக உயர்வுபடுத்தும் எண்ணத்தை விட்டுவிட வேண்டும் (பிலி 3:7-11; 2 கொரி 12:9). தாழ்ச்சியும் பற்றற்ற தன்மையுமின்றி, இயேசுவைப் பின்செல்ல இயலாது (லூக் 9:23 இணை; 22:26-27). அனைவரும் ஒரே விதமான செயலாற்றல் மிக்க துறத்தலுக்கு அழைக்கப்படவில்லை (மத் 19:11-12; அ.ப. 5:4). ஆனால், நிறைவை நோக்கி முன்னேற விரும்பும் ஒவ்வொருவரும் இப்பாதையில் தாராள மனதுடன் நடந்து செல்ல வேண்டும். பணக்கார இளைஞனுக்கு உரைக்கப்பட்ட வார்த்தை குறிப்பிடத்தக்கது; "நிறைவுள்ளவராக விரும்பினால், நீர் போய் உம் உடைமைகளை விற்று... பின்னர் வந்து என்னைப் பின்பற்றும்" (மத் 19:21; அ.ப. 4:36-37).

4. அன்பின் நிறைவுடைமை: இறைவனின் பிள்ளைகள் அன்பின் நிறைவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர் (கொலோ 3:14; உரோ 13:8-10). மத் 5:48-க்கு ஒத்த லூக்காவின் பகுதியில் 'நிறைவுள்ளவர்' என்பதற்குப் பதிலாக 'இரக்கமுள்ளவர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது (லூக் 6:36). மத்தேயுவின் பின்னணியானது உலகளாவிய அன்பையும் பகைவனுக்கும் துன்புறுத்துகிறவனுக்கும் காட்டப்படும் அன்பையும் பற்றிப் பேசுகிறது. கிறிஸ்தவன் தீமையினின்று தன்னை விலக்கி வைத்திருக்க வேண்டும் (மத் 5:29-30; 1 பேதுரு 1:14-16). ஆனால், தனது தந்தையைப் பிரதிபலிப்பதற்கென (மத்5:45; எபே 5:1-2) அவன் அதே நேரத்தில் பாவிகளைப் பற்றி, கவலை கொள்ளவேண்டும் (உரோ 5:8); அவர்களை அன்பு செய்ய வேண்டும். கடினமாயினும் "நன்மையால் தீமையை வெல்ல வேண்டும்" (உரோ 12:21; 1 பேதுரு 3:9).

5. நிறைவுடைமையும் முன்னேற்றமும்: அடைகின்ற விளைவுகள், பயன்களின் காரணமாக இந்த வெற்றி கொள்ளும் தாராளத்தன்மையானது ஒருபோதும் திருப்தி அடைவதில்லை. இன்னும் முன்னேற வேண்டும் என்ற கருத்தானது நிறைவுடைமைக் கருத்தோடு பிணைக்கப்பட்டதாகும். கிறிஸ்துவின் சீடர்கள் எப்போதுமே முன்னேற வேண்டியவர்கள். உருவாக்கப்பட்ட கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியாய் அவர்கள் அமைந்தாலும் (1 கொரி 2:6; 14:20; பிலி 3:12.15), அறிவிலும் அன்பிலும் வளர வேண்டும் (பிலி 1:9).

6. இரண்டாம் வருகையில் நிறைவுடைமை: அந்நாளில் எவ்விதப் பழியும் இல்லாமல் இருக்கும் நிலையைத் தங்களுக்கு இறைவன் அளிப்பார் என்ற நம்பிக்கையில், தங்களுடைய ஆண்டவருடைய வருகைக்காக, தயாரிப்பை அவர்கள் நிறுத்தி விடுவதில்லை (1 தெச 3:12-13). "மகிமையோடு தொடங்கும் ஒரு திருச்சபையை" (எபே 5:27) அந்நேரத்தில் அளிக்க விரும்பும் கிறிஸ்துவின் ஆவலுக்குப் பதிலளிப்பதை அவர்கள் தங்களது பேராவலாகக் கொண்டிருப்பார். ஏற்கெனவே நிறைவேறியதை மறந்தவர்களாய், கிறிஸ்துவில் தனது முழுமையை அடைகின்ற காலத்தின் வலிமையில் இந்த நிறைவுடைய மனிதனை அமைப்பதற்கென அனைவரும் ஒன்றாகச் சந்திக்கும்வரை (எபே 4:13) அவர்கள் முன்னேறிக்கொண்டிருப்பர் (பிலி 3:13).

நிறைவேற்றுதல் (FULLFILL)

II. மனித பலவீனத்தாலும் நிலையற்ற தன்மையினாலும் முத்திரையிடப்பட்டுள்ள மனித வாழ்வை, நிறைவேறாத மற்றும் உறுதியற்ற திட்டங்கள் குறிக்கின்றன. எல்லாம் வல்ல பிரமாணிக்கமுள்ள, இறைவன் மடிவுறாத பணிகளால் திருப்தியடைவதில்லை. விவிலியமானது மொத்தமாகவும், முழு அளவிலும் அவரது திட்டங்களின் நிறைவேறுதல்களுக்குச் சாட்சியமளிக்கிறது. செய்து முடிப்பதானது செய்தலை விட அதிகமாக உணர்த்துகிறது. இச்சொல்லை மொழிபெயர்க்கின்ற சொற்கள் முழுமை, சாதனை மற்றும் முழுநிறைவு ஆகியவற்றின் கருத்தை வெளிக்கொணர்கின்றன. தொடங்கிய பணியை ஒருவன் செய்து முடிக்கிறான் (1 அர 7:2; அ.ப. 14:26). அதாவது விரும்பத்தக்க நிறைவிற்கு அதனைக் கொண்டு வருகிறான். வார்த்தை, கட்டளை, வாக்குறுதி அல்லது உறுதிமொழி ஆகியவற்றை ஒருவன் செய்து முடிக்கிறான். வார்த்தையானது, உண்மை நிலைக்கு உருவம் அளிக்கும் வார்ப்பம்போன்று உள்ளது; பின்பற்றி, முடிவை அடையவேண்டிய செயலின் முதல் படியாக இஃது உள்ளது.

II. பழைய ஏற்பாடு

நிறைவேற்றுதலின் முன்னோக்குகள்:

1. இறைவார்த்தையும் சட்டமும்: மற்றெந்த வார்த்தையையும் விட மேலாக இறைவனின் வார்த்தையானது நிறை வேற்றுதலை நாடுகிறது. "நம் வாயினின்று புறப்படும் வார்த்தை பயன்தராமல் நம்மிடம் திரும்பாது" (எசா 55:11). இறைவன் "வீணாகப் பேசுவதில்லை" (எசே 6:10). அவரது சட்டமும் கட்டளைகளும் கீழ்ப்படிதலைக் கோரி (யாத் 20), இறுதியில் அதனைப்பெறும் (உப 4:30-31; 30:6-8; எசே 36:27).

2. இறைவாக்குகள்: இறை வாக்குகள் துரிதமாகவோ, தாமதமாகவோ நிறைவேறுகின்றன. "பண்டைய நிகழ்ச்சிகளை முன் கூட்டியே அறிவித்தோம்; திடீரென நாம், செயல்பட்டோம்; யாவும் நிகழ்ந்தன" (எசா 48:3; காண்க. செக் 1:6; எசே 12:21-28). இறைவாக்கினருடைய அழைப்பிற்கும் அவரது செய்தியின் நம்பத்தகுந்த நிலைக்கும் உறுதியளிக்கின்ற இறைவனின் அடையாளம் நிறைவேற்றுதலே (உப 18:22). இறைவாக்கினால் உரைக்கப்பட்ட "ஆண்டவரது வார்த்தையை நிறைவேற்ற" இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதற்குப் பழைய ஏற்பாடு பலமுறை சான்று

பகர்ந்துள்ளது. இவ்வாறாக, தாவீதின் சந்ததியைப் பராமரித்தல் மற்றும் ஆலயத்தைக் கட்டுதல் (1 அர 8:24), நாடு கடத்தப்படுதல் மற்றும் ஆலயத்தை மீண்டும் கட்டத் திரும்பி வருதல் (2 நாள் 36:21-23; எஸ் 1:1-2) முதலியன எடுத்துக்காட்டப்படு கின்றன. இப்பழைய சாதனைகள் வரவிருக்கும் நிறைவேற்றுதல்களுக்கு உறுதியாக உள்ளன.

3. காலங்கள் நிறைவேற்றப்படுகின்றன: சில நேரங்களில் திடீரென இருந்ததைப்போல நிறைவேற்றுதலானது, தற்செயலாக இல்லாமல், "அதனுடைய காலத்தில்" (லூக் 1:20) ஒருவித சூழ்நிலையில் அடையப்படுகிறது. வார்த்தை யானது நிறைவேற்றப்படுவதற்கு "அதற்குரிய காலத்தை அடைவது" அவசியமாக உள்ளது (எரே 25:12). மேலும், இறைவனுடைய திட்டமானது முழுமையாக மற்றும் மொத்தமாக நிறைவேற்றப்படுவதற்குக் காலத்தின் முழுமை யானது வந்தடைவது அவசியமாகும் (எபே 1:10; கலா 4:4; மாற் 1:15).

III. புதிய ஏற்பாடு

1. எல்லாம் நிறைவேறிற்று: நிறைவேற்றுதலின் ஒப்பிடப்பட முடியாத காலமானது புதிய ஏற்பாட்டுக் காலமாகும். நற்செய்தியாளர்கள், குறிப்பாக மத்தேயு, வாசிப்போரை இந்த உண்மை பற்றி உறுதிப்படுத்த விழைகின்றார்.

அ. இறைவாக்குகள்: "இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன" என்ற வாய்பாடானது மத்தேயு நற்செய்தியில் பின்வரும் பத்து நிகழ்ச்சிகளில் திகழ்கிறது. கன்னி கருத்தரித்தல், எகிப்திற்குத் தப்பியோடுதல், நோயாளிகளைக் குணமாக்குதல், உவமைகளில் போதித்தல், எருசலேமிற்குள் வெற்றி வீரராய் நுழைதல், யூதாஸ் காட்டிக் கொடுத்தல்... ஒத்த வாய்பாடுகள் மற்ற நற்செய்திகளில் காணப்படுகின்றன. மொத்த பழைய ஏற்பாடும் இயேசுவின் வெளிப்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டது என்பதை நாம் உணர வேண்டும் என்பதையே இந்த விரிவான குறிப்புகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. அங்கு வலியுறுத்தப்பட்ட நிறைவேறுதல்கள் என்பவை, இயேசுவின் மண்ணுலக வாழ்வின்போது இறைத்திட்டம் முழுமையாக நிறைவேறுதலினுடைய பொதுவான தயாரிப்பேயாகும்.

இயேசுவின் வாழ்விலேயே இந்த நிறை வேறுதல்கள் அனைத்தும் ஒரே மட்டத்தில் இருக்கவில்லை. அவற்றில் ஒன்று மட்டுமே "முழுமையான செயலாக," குறிப்பிடப்படுகிறது. அதாவது, இயேசுவின் சிலுவை மரணம், யோவா 19:28-இல்வரும் "மறை நூலில் எழுதியுள்ளது இவ்வாறு நிறைவேறிற்று" என்ற சொற்றொடரில் அதன் பின்னணியானது "எல்லாம் நிறைவேறிற்று" என்பதை மீண்டும் கூறுவதன் மூலம் முழுமையினை வலியுறுத்துகிறது (19:30). லூக்கா இச்சொல்லைப் பாடுகளைக் குறித்து மட்டுமே உபயோகிக்கிறார் (லூக் 15:20; 18:31; 22:37). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின்படி, இயேசுவின் வாழ்வு அவருடைய பாடுகளால் நிறைவேற்றப்பட்டு, முழுமைக்குக் கொண்டு வரப்பட்டது (எபி 2:10; 5:8-9).

எனவே, புனித வரலாற்றின் அனைத்து நிகழ்ச்சிகளும் கிறிஸ்துவின் வருகையை நோக்கியே தயாரிக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் வாழ்வில், மறைநூலின் அனைத்துச் செயல்களும் அவரது பலியில் உச்சநிலை அடைகின்றன. இவ்வாறாக, "கடவுளின் வாக்குறுதிகள் யாவற்றுக்கும் ஆம் என்பது அவரிடமே இருந்தது" (2 கொரி 1:20).

இந்த நிறைவேற்றமானது முன்னோக்கப் பட்டதைவிட அதிகமாகவே செய்கிறது. உண்மையில் இறை நிறைவேற்றங்களின் சட்டமானது, முன்னர்க் கற்பனை செய்யப்பட்டதைவிட அதிகமாகவே இருக்க வேண்டும் என்பதாகும். இதன் விளைவாக, புதிய ஏற்பாட்டிலான பழைய ஏற்பாட்டின் நிறைவேற்றமானது, தொடர்பு மற்றும் தொடர்ச்சி என்ற கருத்துகளால் சாதாரணமாக விளக்கப்பட

முடியாது; ஆனால், அதே நேரத்தில் உயர்வான இடத்திற்கான இயக்கத்தால் கோரப்படுகின்ற வேறுபாடுகளையும், பிரிவுகளையும் தன்னுள் கொண்டுள்ளது என்பதாகும். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியர் மோசேயையும் கிறிஸ்துவையும் (3:1-6), பழைய குருத்துவத்தையும் கிறிஸ்துவின் குருத்துவத்தையும் (5:1-10; 7:11-28), பழைய வழிபாட்டையும் கிறிஸ்துவின் பலியையும் (9:1-14) ஒப்பிடும்போது, மூவகை உறவானது (ஒப்புமை, வேறுபாடு, உயர்நிலை) தனிப்பட்ட விதத்தில் தெளிவாக்கப்படுகிறது. ஆயினும், அதே கருத்தானது புதிய ஏற்பாடு முழுவதிலும் அடிப்படையாக உள்ளது. இறுதியான நிறைவேற்றமும் ஒரு வெளிப்பாடேயாகும். இதுவரை முன்னோக்கப்படாத ஒரு தொகுப்பாகக் கடந்த காலத்தில் பேசப்பட்ட வார்த்தைகளை ஒன்று சேர்ப்பதன் மூலம், இஃது அவைகளுடைய பொருளுக்குப் புதிய ஆழத்தை அளிக்கிறது. தாவீதின் வாக்களிக்கப்பட்ட வாரிசு-- உண்மையில் இயேசுவே (2 சாமு 7:12-13; லூக் 1:32-33). ஆனால், அவரது அரசு -இவ்வுலகைச் சார்ந்ததன்று (யோவா 13:36-37). ஏனெனில், தாழ்வுற்ற மரணத்தை அடையும் ஊழியன் (எசா 53:1; பேதுரு 2:24-25) மற்றும் வெற்றிகரமான ஆண்டவராகிய (சங் 110:மத் 26:64) விண்ணக மனுமகன் (தானி 7:13-14; மத் 26:64) ஆகியோரைப்பற்றிய இறைவாக்கின் நிறைவேற்றத்தை நாம் அவரிலே காண்கிறோம். புறவினத்தாரின் செல்வங்கள் திரளாக வந்தடையும் புதிய ஆலயத்தை அவர் கட்டுகிறார் (ஆகா 2:6-9; எசா 60:7-13). ஆனால், இது கைகளால் உருவாக்கப்பட்ட ஆலயமன்று (மாற் 14:58); மாறாக, அவரது உயிர்த்த உடலாகும் (யோவா 2:21). நாம் அதன் உறுப்பினர்களாக மாறுகின்றோம் (1 கொரி 12:27). பழைய ஏற்பாட்டு வாசகங்களைப் புதிய ஏற்பாடு பயன்படுத்தும் மன உலைவுபடுத்துமுறை பின்வருமாறு விளக்கப்படலாம்: ஆசிரியர்கள், நிகழ்ச்சிகளின் மூலமாக இறைவனாலேயே குறிக்கப்பட்ட புதிய பின்னணியைவிட, குறைந்த அளவிலேயே ஒவ்வொரு சொல்லினுடைய மூலப்பின்னணியின் மீது அக்கறை கொண்டுள்ளனர்.

2. சட்டம்: இறைவனுடைய வார்த்தையானது வாக்குறுதி மட்டுமன்று, கோரிக்கையுங்கூட. மலைப்பொழிவில் சட்டத்தைப்பற்றிப் பேசும்போது, அதை "அழிப்பதற்கன்று, நிறைவேற்றுவதற்கே" தான் வந்துள்ளதாக இயேசு போதிக்கிறார் (மத் 5:17).

மோசேயின் சட்டத்தை அழிப்பதற்குப் பதிலாக, அதனுடைய கட்டளைகளை இயேசு ஆழப்படுத்துகிறார் என்பதை இப்பின்னணியானது நாம் புரிந்து கொள்ளச் செய்கிறது. எண்ணங்கள் மற்றும் மறைக்கப்பட்ட ஆசைகள் ஆகியவற்றின் உலகிற்குள்ளும் அவர் அதனுடைய கோரிக்கைகளை விரிவுபடுத்துகிறார். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லாவற்றிற்கும் அவசியமான முதன்மைத் தேவையான அன்பின் கட்டளையை முழுமையாக வெளிப்படுத்துவதன்மூலம் அவர் சட்டத்தைப் புதுப்பித்து, அதனை நிறைவுபடுத்துகிறார் (யாக் 1:25). அதிலே சட்டமும் இறைவாக்கினர்களும் தாங்கள் ஒருமைப்படுத்தப்பட்டு, தங்களுடைய முழுநிறைவிற்கு உயர்த்தப்படுவதைக் கண்டடைகின்றனர் (மத் 7:2; 22:40).

மேலும், "சட்டத்தை நிறைவேற்றுவதற்காக," தன்னுடைய கட்டளையைப் பிரகடனப்படுத்துவதோடு இயேசு மனநிறைவு அடையவில்லை. அவர் கட்டளையிடுகிறார். அனைத்து நீதியையும் நிறைவேற்ற வேண்டியிருப்பவர் (மத் 3:15), தன்னிலேயே அதனைச் சாதிக்கிறார். அவர் கோருகின்ற அனைத்தையும் தனது விசுவாசிகளில் நிறைவேற்றுகிறார். அவரது பலி, அன்பின் உச்சநிலையாகும் (யோவா 15:13). அதுவே அன்பின் ஊற்றாகவும் உள்ளது. "நிறைவுள்ளவரான நிலையில்" (எபி 5:9) அதே செயலில் கிறிஸ்து "தாம் பரிசுத்தராக்கியவர்களை என்றென்றைக்கும் நிறைவுள்ளவராக்கினார்" (எபி

10:14; யோவா 17:4.23).

முரண்பாடு ஏதுமின்றி பழைய சட்டத்தினுடைய அதையொத்த நிறைவேற்றமானது அதனுடைய நீக்கமாக விளக்கப்படலாம். நிறைவானது நிகழும்போது, நிறைவற்றது ஒரு முடிவிற்கு வருகிறது (1 கொரி 13:10). பவுலின் கருத்து இத்தகையதே. ஒரு புறம் சட்டத்தை ஒன்றுபடுத்துகின்ற அன்பானது அதனை ஆண்டு அதற்கு விளக்கம் அளிக்கிறது. இவ்வாறு இச்செயலின் மூலம் சட்ட நெறிமுறைகளின் அடிமைத்தனத்தை அழிக்கிறது. "பிறரிடத்தில் அன்பு கூர்பவன் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவன் ஆகிறான்" (உரோ 13:8,10; கலா 5:14). மற்றொரு புறம் சட்ட நெறிப்போக்கு வேரிலேயே வெட்டிவிடப்படுகிறது. சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் தனது நிறைவைச் செயல்படுத்த மனிதனால் இனி இயலாது. "சட்டத்தின் நீதியானது நம்மில் நிறைவேற்றப்படுவதற்காக" இறைவன் தனது மகனை அனுப்ப வேண்டியதும் (உரோ 8:3-4), மேலும் அவரது மகனின் மூலமாக, நாம் ஆவியைப் பெற வேண்டியதும் அவசியமாயிற்று. இச்செயலின் மூலமாக " இனி நாம் சட்டத்தின் அதிகாரத்தில் இல்லாமல் இறையருளின் அதிகாரத்தில் இருக்கிறோம்" (உரோ 6:15).

பணிகள் செய்வது அருளின் இயக்க ஆற்றலினாலேயே கோரப்படுவதாகும் (கொலோ 1:10-11). பணிகளில் விசுவாசமும் (யாக் 2:22; கலா 5:6), அதே போன்று இறை அன்பும் நிறைவேற்றப்படுகின்றன (1 யோவா 2:5;4:12). ஆனால், பணிகளைச் செயல்படுத்துவதானது பவுலால் தாக்கப்படுகின்ற சட்டநெறிப் போக்கினின்றும் அப்பாற்பட்டதாகும். மனித காட்சியைப் பற்றிய கேள்வியே இனி இல்லை. கேள்விக்குரியது இறைபலனுடைமையே ஆகும் (கலா 5:22-23; யோவா 15:5).

3. **காலத்தின் முடிவு:** கிறிஸ்துவின் சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பணியானது, "உலகின் முடிவு வரும்வரையில்" வரலாற்றில் எடுத்துக்காட்டப்படும் (மத் 24:9 இணை). இது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளால் அறிவிக்கப்பட்டது (ஆண்டவரின் நாள்). இஃது கிறிஸ்துவில் இறைவனுடைய திட்டத்தின் நிறைவேற்றத்தின் முழு வெளிப்பாடாக இருக்கும்.

நினிவே (NINEVEH)

நினிவே மெசபொத்தாமியாவின் மிகவும் பழைமை வாய்ந்த நகரங்களில் ஒன்று. அசீரியர்களின் தலைநகரமாக விளங்கிய நினிவே, கி.மு. 612-இல் அசீரியா அழிந்த போது, அழிவின் சின்னமாகக் கருதப்பட்டது. நினிவே நகரம் திக்ரீசு ஆற்றின் கிழக்குக்கரையில் இக்கால மோசூலுக்கு எதிராக அமைந்திருந்தது. நினிவே நகரம் அழிந்த பகுதி- குயுன்சிக்கு, நெபியூனுசு என்னும் இரண்டு மண்மேடுகளால் குறிப்பிடப்படுகிறது. இவற்றைச் சுற்றிலும், 13 கி.மீ. சுற்றளவுள்ள நகரச் சுவர்கள் இருந்தன. கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு மக்கள் வாழ்ந்தார்கள். கமுராபியின் சட்டத்தில்தான் இந்நகரின் பெயர் முதன் முதலில் குறிப்பிடப்பட்டது. இங்குதான் புகழ்பெற்ற இஸ்தார் தேவதையின் சிலையும் கோவிலும் இருந்தன. கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் முதலாம் திகிலத்பிலேசர் காலத்திலிருந்து, சார்கோன் (722-705 கி.மு.) காலம் வரை இது அசீரியாவின் அரச பரம்பரையினரின் இடமாக இருந்தது. சார்கோன் புதிய நகரைக் கட்டினான். மீண்டும் சனகெரிபுவின் (கி.மு. 705-681) காலத்தில் இஃது அசீரிய அரசர்களின் தங்கும் இடமாக மாற்றப்பட்டது. சனகெரிபு இங்கு ஓர் அரண்மனையும், பல கட்டடங்களையும், நகரச்சுவர்களையும் கட்டி நகரைப் பலப்படுத்தினார். இவருக்குப் பின்வந்த ஏசர்கத்தோன் (கி.மு. 681-668), அசூர்பானிப்பால் (கி.மு. 668-630) ஆகிய மன்னர்கள் பல அரண்மனைகளைக் கட்டினார்கள். இந்நகரம் கி.மு. 614-இல் பாபிலோனியர்கள், மேதியர்களாலும், கி.மு. 612-இல் புயலாலும் அழிக்கப்பட்டது. இதனை வென்றவர், இந்நகரை முழுவதுமாக அழித்துவிட்டனர். இந்நிகழ்ச்சி

நாகூமின் இறைவாக்கு நூலில் எடுத்துக்கூறப்படுகிறது.

இவ்விடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் பழங்கால மெசபொத்தாமியாவைப் பற்றிய அரிய செய்திகளை வெளிக்கொணர்ந்துள்ளன. சனகெரிபு, ஏசர் கத்தோன், அசூர்பானிப்பால் ஆகியோரின் அரண்மனைகளில் காணப்படும் புடைப்பகழ்வுச் சித்திரங்கள் அசீரியர் கலையின் அழகிய எடுத்துக்காட்டுகளாகும். அசூர்பானிப்பால் என்னும் அரசனால் அமைக்கப்பட்ட நூலகம் 25,000, ஆப்பெழுத்து முறையில் எழுதப்பட்ட களிமண் பலகைகளையும் மதம், புராணம் சம்பந்தப்பட்ட சுவடிகளையும் கொண்டிருந்தது. அசூர்பானிப்பாலின் காலத்திலிருந்த இலக்கியங்களை 'அக்காதிய' மொழியில் மொழிபெயர்த்து, இரட்டைமொழி அகராதிகளையும், இலக்கணப் புத்தகங்களையும் உருவாக்கினர்.

விவிலியத்தில், முதன்முதலில் நினிவே மெசபொத்தாமியாவில் நிம்ரோதால் அமைக்கப்பட்ட முக்கியமான நகரங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது (ஆதி 10:11 தொ). இதே போன்ற குறிப்புகள் யோனா ஆகமத்திலும் கூறப்பட்டுள்ளன (யோனா 1:2; 3:3; 4:11). நினிவேயின் புகழ் இஸ்ராவேயில் மக்களுக்கும் தெரிந்திருந்தது. நினிவேயில், சனகெரிபு அவனுடைய புதல்வர்களால் கொல்லப்பட்டான் என்று 2 அர 19:36; எசா 37:37-38 ஆகியவை குறிப்பிடுகின்றன. நினிவேயின் அழிவு, செப்பனியா (செப் 2:13), நாகூம் ஆகிய இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்டது. யோனா நூலில் கூறப்படும் அறநெறிகளுக்காக வரலாற்று உண்மைகள் வேறு வடிவம் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூல், நினிவேயின் அரசனைப்பற்றியும் (யோனா 3:6), அதைக் கடக்க மூன்று நாள் ஆகும் (யோனா 3:3) என்றும் கூறுகின்றது. யோனா இறைவாக்கினர் அவருக்கே உரிய முறையில் நினிவேயின் புகழைக் கூறுகின்றார். மத் 12:41; லூக் 11:30,32-இன்படி, இறுதித் தீர்ப்பு நாளில் நினிவேயின் மக்கள் எழுந்து இயேசுவின் காலத் தலைமுறையினரைக் கண்டனம் செய்வர்.

நினைவு (MEMORY, MEMORIAL)

1. மனிதனுடைய நினைவைப்பற்றி ஒருவன் விவிலியத்தில் வினா எழுப்புவானாயின், ஆசிரை நினைவு கூர்தல் (ஆதி 40:14), அல்லது தந்தையின் எச்சரிக்கைகளை மறத்தல் (தொபி 6:16) போன்ற உளவியல் குறிப்புகளை அவன் காணலாம். ஆனால், இங்கு நாம் கொள்ளும் அக்கறை நினைவினுடைய சமயப்பொருளும், இறைவனுடனான நமது உறவுகளில் அதன் பங்குமாகும்.

மனிதனுக்கான இறைவனுடைய நினைவைப் பற்றியும், இறைவனுக்கான மனிதனுடைய நினைவைப் பற்றியும் விவிலியம் கூறுகிறது. ஒவ்வொரு பரிமாற்ற நினைவு கூர்தலும் ஒருவன் மற்றவனுடன் உறவுகொண்டிருந்த பழைய நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துகிறது. இந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்தலானது உறவினைப் புதுப்பிக்கிறது. இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையிலான நிலை இத்தகையதே. விவிலியத்தில் நினைவு என்பது, கடந்த காலத்தில் நிகழ்ந்த சந்திப்புகளையும் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட காலத்தையும் குறிப்பிடுகிறது. உடன்படிக்கையினின்று பொழிகின்ற பிரசன்னத்தின் முனைப்பான ஆர்வத்தை, "இன்றைய நாளை" வாழ்விற்கு அது கொண்டு வருகின்றது. எதிர்காலத்தைத் தீர்மானித்து அதனை முன்னதாகவே தன்னுள் கொண்டுள்ள சலுகைக்குரிய நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இஃது இருப்பதால், அவற்றை நினைவுகூர்தல் அதற்குரிய இடத்தைப்பெறுகிறது. கடந்த காலத்தைப் பற்றிப் பிரமாணிக்கமான நினைவு மட்டுமே எதிர்காலத்திற்கான நல்ல முன்னோக்கை உறுதிப்படுத்த முடியும்.

2. **நினைவின் தோற்றம்:**

அ. **உண்மை நிகழ்ச்சிகள்:** முதல்

நிகழ்ச்சியானது படைப்பாகும். இஃது எப்போதுமே இறைவனை நினைவு கூர்வதற்காக மனிதனுக்கு அளிக்கப்பட்ட அடையாளமாகும் (சீரா 42:15-43:33; உரோ 1:20-21). மனிதன் அடையாளத்தைவிட உயரியவன். அவன் இறைவனின் சாயல். அவனால் அவரை நினைவு கூரவும் முடியும். மனிதனுடனான இறைவனுடைய தொடர்ச்சியான உடன்படிக்கைகள் (நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது) இறைவனுடைய நினைவிலிருந்தே வந்துள்ளன. அப்போது நினைவுகூர்ந்த அவர், பின்னரும் காப்பாற்றுவதற்கும் (ஆதி 19:29; யாத் 6:5) நினைவு கூர்வதாக வாக்களித்தார் (ஆதி 8:1; 9:15-17; யாத் 2:24; 2 சாமு 7). இறைமக்களை எக்காலத்திலும் முன்னோக்கச் செய்யும் மீட்கும் நிகழ்ச்சியானது பாஸ்கா ஆகும் (ஓசே 13:4-6).

ஆ) நிகழ்ச்சிகளின் நினைவு: கடந்த காலத்தின் செயலாற்றல் தன்மையை இக்காலத்திலும் தொடர்வதற்கு நினைவானது எண்ணற்ற வழிகளைக் கொண்டுள்ளது. எபிரேய மொழியில் இச்சொல்லானது, ஆன்மீக வாழ்விலும், திருவழிபாட்டிலும் முக்கிய பங்கு வகிக்கின்ற பல்வேறு செயல்களை நினைவிலிருத்தல், நினைவுகூர்தல், குறிப்பிடுதல், பாதுகாத்தல் மற்றும் கூவி அழைத்தல் என்ற பல்வேறு வடிவங்களில் அதனைப்பற்றி ஓரளவு கருத்தினை நமக்கு அளிக்கின்றது.

பெயரை உச்சரிப்பதென்பது பாஸ்கா நினைவினின்று பிரிக்க முடியாததாகும் (யாத் 20:2). ஏனெனில், தனது பெயரை அளிப்பதாலேயே யாவே பாஸ்காவைத் தொடங்கிவைத்தார் (யாத் 3). இந்த வேண்டுதல் கேட்கின்ற உண்மையான மீட்பானது (சங் 20:8) பண்டைய வியத்தகு செயல்களின் புதுப்பிப்பு என்று புரிந்து கொள்ளப்படுகிறது (சங் 77; யோவே 3). வழிபாடு பற்றிய நினைவின் மூலப்பொருளும் உள்ளது. ஏனெனில், “அவரது உடன்படிக்கையின் நினைவை” அது தட்டியெழுப்புகிறது. குருக்கள் பாரம்பரியத்திற்கு மிகவும் விருப்பமான இந்தச் சொற்றொடர், இறைவன் தனது மக்களை நினைவுகூர்கிறார் மற்றும் மக்கள் மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற வழிபாட்டுச் சடங்குகளில் (விழாக்கள், ஓய்வுநாள்) அல்லது தாங்கள் சந்திக்கின்ற இடங்களில் (பாறை, பீடம், பேழை, கூடாரம், ஆலயம்) தங்களுடைய இறைவனை நினைவு கூரவேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. மீட்பின் நிகழ்வுகளில் உருவாக்கப்பட்ட நிலையில், செபமானது நன்றியுணர்வால் தோய்ந்திருப்பது அவசியமே. இறைவனுடைய முன்னிலையில் நினைவின் சாதாரணத்தொனி இந்த நன்றியுணர்வே (யாத் 15; சங் 136).

நினைவுகளை எடுத்துக்கூறல் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ வார்த்தையின் வழியாக (யாத் 12:25-27; 17:14), குறிப்பாக, சட்ட நூல்களின் (யாத் 34:27; உப 31:19-21) வழியாகப் பிற்காலத்தினருக்கு அளிக்கப்படுவதில் உறுதிப்படுத்தப்படுகிறது. அப்போது சட்டத்தின் மீதான தியானம் விசுவாசிகளுக்கு நினைவுகளின் ஒப்புமைத்தொடர்புடைய வடிவாக உள்ளது (உப ஆகமம்; யோசு 1:8). இத்தகைய விழிப்பான கவனமானது ஞானத்திற்கான வாயிலைத் திறக்கிறது (பழ 3:1-3). கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலானது உறுதியாக இந்த நினைவின் உண்மையான வெளிப்பாடாகும். யாவேயின் வழிகளைக் கடைப்பிடிப்பதில் இஃது அடங்கியுள்ளது (சங் 119; ஞான 6:18; எசா 26:8).

3. மறத்தலின் விபரீதம்: இறைவன் தனது வார்த்தையையோ, பெயரையோ மறக்காத போது (எரே 1:12; எசே 20:14) அங்கேதான் மனிதனுடைய நினைவானது தனது பலவீனத்தைக் காட்டுகிறது. “உங்கள் கடவுளாகிய யாவேயை மறந்துபோகாதபடி கவனமாயிருங்கள்... நினைவு கொள்ளுங்கள்” என்று உப ஆகமம் எச்சரித்திருந்தும் (உப 4:9; 8:11; 9:7) மக்கள் தங்களுடைய இறைவனை மறந்தனர்; அதுவே அவர்களுடைய பாவமாகும் (நீதி 8:34; எரே 2:13; ஓசே 2:15). அன்பினுடைய வாதத்தின்படி, தனது

விசுவாசமற்ற துணைவியை இறைவன் மறந்து விடுவதாகத் தெரிகிறது. இந்தக்கேடு அவரைத் திரும்பிவரச் செய்ய வேண்டும் (ஓசே 4:6; மீக் 3:4; எரே 14:9). உண்மையில் ஒவ்வொரு துன்பமும் மனிதனில் இறைவனுடைய நினைவைப் புதுப்பிக்க வேண்டும் (2 நாள் 15:2-4; ஓசே 2:9;5:15). இங்கு இறைவாக்குப் போதனையானது சேர்க்கப்படுகிறது. இறைவன் தனது பாஸ்காவை நிறைவேற்றக்கூடிய, ஏற்கும் மன நிலையில், மனிதனுடைய இதயத்தை மாற்றியமைக்க வகுத்தமைக்கப்பட்ட (எசே 16:63; உப 8:2-4) நீண்ட "நினைவுகூர்தலாக" இஃது உள்ளது (மீக் 6:3-5; எரே 13:22-25).

அதே நேரத்தில் தவறுகளை நினைவுகூர்தல் என்ற அளவில் மனத்துக்கம் இறைவனுடைய நினைவிற்கான வேண்டுகோளாகும் (எசே 16:61-63; நெகே 1:7-9). அன்பை நினைவாகக் கொண்டுள்ள இறைவன், மன்னிப்பில் உடன்படிக்கையை நினைவுகூர்ந்து (1 அர 21:29; எரே 31:20), பாவத்தை மறக்கிறார் (எரே 31:32).

4. **நினைவிலிருந்து எதிர்பார்ப்புக்கு:** இங்கே ஒரு முரண்பாடு உள்ளது. கடந்து விட்ட பாஸ்காவானது இன்னும் வரவேண்டியதாக உள்ளது. யாவே தங்களுக்குச் செய்த அனைத்தையும் மக்கள் நினைவுகூர்கின்றனர். கடந்த காலமானது இறைவனது பிரமாணிக்கத்தை நிரூபிக்கிறது; ஆனால், இக்காலமானது ஏமாற்றக்கூடியது; வருங்காலமும் இத்தகையதே. வாக்குறுதிகளின் முழுநிறைவானது ஏற்கெனவே ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டு விட்டதை அதுகாணும். பிரமாணிக்கமும் நிறைவேறாத நம்பிக்கைகளும் இறைமக்களுடைய மனங்களைத் தீர்மானமான "இறுதிக்காலங்களின்" தோற்றத்திற்குத் திறக்கின்றன. கடந்தகாலம் மூலமான எதிர்காலம் பற்றிய இந்த உயிருள்ள கருத்தானது, நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்தபின்னர் மக்களுடைய நினைவின் சிறப்புப்பண்பாக உள்ளது. ஒருவித மாற்றம் இங்கே உள்ளது. நினைவு கூர்தலானது எதிர்பார்ப்பாக உருவாகிறது; மற்றும் நினைவானது வெளிப்பாட்டுக் கற்பனையில் முடிவடைகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு எசேக்கியேலுக்கு உரியது (40:48). செக்கரியா, தானியேல், தாவீது, நான்காவது நற்செய்தியாளர், மற்றும் திருவெளிப்பாட்டின் ஆசிரியர் ஆகியோர் அவரைப் பின்தொடர்கின்றனர்.

சமுதாயம் என்ற அளவில் மகிமை மிக்க கடந்த காலமானது துன்புறும் நிகழ் காலத்தின் இதயத்தில் விடுதலையின் அச்சாரமாக உள்ளது (எசா63:15-64:11; சங் 77; 79:80; 89). தனிப்பட்ட நபர் அளவில் வெளிப்படையாகவே இறைவனால் மறக்கப்பட்ட ஏழை மனிதன் (சங் 10:12; 13:2), அவரது அன்பிற்குத் தான் பிரசன்னமாகியிருப்பதை அறிய வேண்டும் (எசா 66:2; சங் 9:19). சோதனையானது அவனது நினைவைப் புதுப்பித்து (1 மக் 2:51; பாரூ :27) புதிய நிகழ்ச்சிக்கு அதனைத் தயாரிக்கிறது (எசா 43:18-19).

5. **பிரசன்னத்திலிருந்து தெளிவாகத்தெரிகின்ற நிலைக்கு:**

அ. "யாவே இங்கு இருக்கிறார்" என்று கூறும்போது (எசே 48:35; மத் 1:23) நினைவானது நிகழ்காலத்துடன் ஒன்றுபட்டு, அதனுடைய முழு நிறைவாக உள்ளது. வாக்குறுதிகள் மற்றும் உடன்படிக்கையின் நினைவானது, காலத்தைச் சுருக்குகின்ற கிறிஸ்துவின் வருகையில் செயலாக மாறுகின்றது (2 கொரி 1:20; லூக் 1:54.72). அவரில், இரு மறத்தல்களின் விபரீதமானது மனிதனின் திரும்ப வருகையினாலும் இறைவனின் மன்னிப்பினாலும் தீர்க்கப்படுகிறது (கொலோ 3:13). இறைவன், கிறிஸ்துவில் பிரசன்னமாகி மனிதனை நினைவுகூர்வதால், மனிதன் இறைவனை இனிக்கடந்த காலத்தில் தேடாமல், நிகழ்காலத்தில் கிறிஸ்துவில் தேட வேண்டும் (யோவா 14:6-7; 2 கொரி 5:16-17). உண்மையில் கிறிஸ்து, இறைவனுக்கு உறுதியான முறையில் பிரசன்னமாகியுள்ள மனிதனாகவும், மனிதனுக்கு

உறுதியாகப் பிரசன்னமாகியுள்ள இறைவனாகவும் உள்ளார். குருவாகிய கிறிஸ்து தந்தைக்கான வழியை நமக்குத் திறக்கிறார் (எபே 2:18; எபி 10:19). அவரது ஆவி நம்மை அவருடன் ஒன்றுபடுத்துகிறது (உரோ 8:15-16; 8:26-27).

ஆ. ஆனால், காலம் இன்னும் நிறைவேறவில்லை. இப்போது முதல் இறைவன் புதிய நித்திய உடன்படிக்கையில் பிரசன்னமாக இருந்தாலும், மனிதன் அடிக்கடி இறைவனுக்குப் பிரசன்னமாக இருப்பதில்லை; ஆகவே, அவரை நினைவுகூர வேண்டியவனாக உள்ளான். இதன் காரணமாகவே ஆவியானவர் கிறிஸ்துவின் மறைபொருளை ஒரு நூலாக நினைவு கூராமல், உயிருள்ள வார்த்தையின் ஆளுரிமையுடைய செயலுண்மையாக நினைவு கூர்கிறார். இது பாரம்பரியமாகும் (யோவா 14:26; 16:13). ஆவியானவர் கிறிஸ்துவின் மறைபொருளை அவரது உடலில் ஒரு சாதாரண நினைவுச்சின்னமாக இல்லாமல், ஒரே சமயத்தில், உயிர்த்தவராகவும், உலகிற்குப் பிரசன்னமான வராகவும், உடலின் அருட்சாதனச் செயலுண்மையில் நிறைவேற்றுகிறார்; இது வழிபாடாகும் (லூக் 22:19-20; 1 கொரி 11:24-26). பழைய ஏற்பாட்டில் இருந்ததைப்போன்று பாஸ்காவின் இந்த "மீண்டும்-பிரசன்னப்படுத்துதல்" செயலுக்கும் வாழ்விற்கும் பணிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவ நினைவானது "யாவேயின் வழிகளைக் கடைப்பிடிப்பதிலும்" ஆண்டவருடைய ஏற்பாட்டைக் கடைப்பிடிப் பதிலும், அதாவது அன்பில் தங்கியிருப்பதிலும் அடங்கியுள்ளது (யோவா 13:34; 15:10-12; 1 யோவா 3:24). இறுதியாக இறைவனுடைய நினைவுக்கு மனிதனுடைய நினைவின் இறுதி இணக்கத்தைப் பொருத்தவரையில், எந்த அளவிற்கு ஆவியானவர் கிறிஸ்துவனின் வாழ்வில் இடம் பெறுகிறாரோ அந்த அளவிற்கு அவர் அதனை விழிப்புள்ளதாக்குகிறார்; காலங்களின் அடையாளங்களுக்குக் கவனமுள்ளதாக்குகிறார்; ஆண்டவரது செயல்மிக்க பிரசன்னத்திற்கு இடமளிக்கும் மற்றும் அவரது வருகை நெருங்கிவருதலை வெளிப்படுத்தும் சாட்சியாக்குகிறார் (திருவெளி 3:3; பிலி 3:13-14; 1 தெச 5:1-10).

நீ

நீகர் (NIGER – கறுப்பான)

அந்தியோக்கியாவின் சபையில் இறைவாக்கினர்களும், போதகர்களும் இருந்தனர். நீகர் என்பது இவர்களுள் ஒருவரான சிமியோன் என்பவரின் சிறப்புப் பெயராகும் (அ.ப.13:1). இப்பெயரின் கறுப்பான என்ற பொருள்– இவர் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர் என்று சுட்டவில்லை.

நற்செய்தியில் கூறப்படும் சிரேனே ஊரைச்சேர்ந்த சீமோன் (7) (மாற்கு 15:21 இணை) இவர்தான் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

நீசான் (NISAN – அரும்புதல், மலர்தல்)

எபிரேய, பாபிலோனிய நாட்காட்டியில் முதல் மாதம் (நெகே 2:1; எஸ்த 3:7). (மார்ச் – எப்ரல், பங்குனி மாதத்துக்கு இணையானது). நாடு கடத்தலுக்குமுன் இம்மாதம் ஆபிபு என்றழைக்கப்பட்டது. இம்மாதத்தில் பாஸ்கு, புளியாத அப்ப விழாக்கள் கொண்டாடப்பட்டன. திஸ்ரி மாதத்தைக்கொண்டு தொடங்கிய ஆண்டு நாட்காட்டியில் நீசான் (ஆபிபு) ஏழாவது மாதமாகும்.

நீண்ட ஆயுளுள்ளவர் தொன்மை வாய்ந்தவர் (ANCIENT OF DAYS)

இச்சொற்றொடர், இறுதிநாளில் வரும் ஒரு நீதிபதியைக் குறிப்பதாகவே அமைகிறது (தானி 7:9). இதற்கு முதலில் தோன்றியவர்– வணக்கத்திற்குரியவர்– காலங்களால் முடிசூட்டப்பட்டவர்– எனப் பல பொருள்கள் உண்டு (1 நாள் 4:22). இத்தொடர் செமித்திய நாகரிகத்தில் வழங்கப்பட்ட ஒரு மொழிமரபுத்தொடர்; அதாவது, இதைச் சார்ந்து நிற்கும் பெயர்ச்சொல், முடிவற்றது என்பதைக் குறிக்கும்.

உகாரித்துச்சுவடிகள் சில, ஓர் அரசனைக் காலங்களின் தந்தை என்கிறது. அதாவது, அவன் வயதான ஒரு அரசன் என்று குறிப்பிடுகின்றன.

இந்த வழக்கு, கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. கடவுளின் அறிவு, ஞானம், மாண்பு, மரியாதை ஆகியவற்றைக் குறிக்கவே இது பயன்படுத்தப்பட்டது (யோபு 36:26). ஆனால், சிலர் இதனைக் கடவுளின் வானதூதரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது என்கின்றனர் (செக் 3:1). சிலர் இதனை ஈரானில் வழங்கப்பட்டு வந்த 'அகுரா மஸ்தா' என்ற கருத்திலிருந்து வந்தது என்றனர். எது எப்படியிருந்தாலும் 1 அர 22:19–20; சங் 50:1–6, யோவே 3:2; செக் 3:1–இல் கூறியுள்ளபடி சாதாரண வழக்கில் இருந்த இந்த ஒரு மரபுத் தொடரைக் கடவுளைக் குறிக்க மக்கள் பயன்படுத்தினர். இது கடவுளின் என்றும் வாழும் பண்பை உணர்த்துகிறது (சங் 9:7; 29:10; 90:2). இந்த உருவகம் விண்ணக அவையில் தலைமை தாங்கும் இறைநீதிபதியாகக் கடவுளைச் சித்தரிக்கிறது (சங் 82:1; 1 அர 22:19).

நீதி (JUSTICE)

I. நீதி என்ற சொல்லானது, மரபு அல்லது விதியைக் கடைப்பிடிப்பதைக் கட்டாயப்படுத்து வதன் மூலம் நீதிபதி, நீதியைச் செயல்படுத்துகின்ற சட்டரீதியான அமைப்பை மனதிற்குக் கொண்டு வருகின்றது. நீதியின் ஒழுக்க நோக்கானது பரந்த அளவிலானது. இதன்படி, மரபு அல்லது விதியினால் நிர்ணயிக்கப்படாவிடினும், நீதியானது ஒவ்வொருவருக்கும் உரிய பங்கை அளிக்கின்றது என்ற உண்மையின் அளவிற்கு விரிவடைகிறது. நீதியின் இயற்கை விதி, கடுமையானது; பரிமாற்றம் அல்லது பங்கீட்டினுடைய சம நிலையினைச் சார்ந்துள்ளது. இறைவனுடனான மனித உறவுகளின் சமயப் பின்னணியில், நீதியுடன் தொடர்புடைய சொற்றொடரானது, இன்றைய மொழிகளில் குறிப்பிட்ட அளவே பயன்படுகிறது. ஆயினும், இறைவனை– நீதியுள்ள நடுவர் என்றும், தீர்ப்பானது– மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான இறுதிப்போராட்டம்

என்றும் கூறுவது இக்காலத்தைச் சார்ந்ததே. ஆனால், விவிலிய மொழியுடன் ஒப்பிடும்போது, நீதியுடன் தொடர்புடைய சொற்களின் நவீன சமய உபயோகமானது முற்றிலும் வரைக்குட்பட்டதாகத் தெரிகிறது. பொருளளவில் மற்ற பல சொற்களுடன் நெருங்கியிருந்தாலும் (நேர்மை, புனிதம், நடுநிலைமை, நிறைவுடைமை, முதலியன) நீதி என்ற சொல்லானது நியாயம், நியாயப்படுத்துதல், ஏற்புடைமை போன்ற சில குறிப்பிட்ட சொற்களுக்கு மையமாகவும் உள்ளது.

முக்கிய விவிலியக் கருத்துக்களுள் ஒன்றில், இறைவனுடைய கட்டளைகள் அனைத்தையும் முழுமையாகக் கடைப்பிடிக்கும் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டு, நீதியானது நன்கு அறிமுகமான ஒழுக்கமுறையாக உள்ளது. ஆனால், இறைவனின் முன்னிலையில் நியாயமான பங்கிற்கு மனிதனை உரித்தாக்குவதாக இது கருதப்படுகிறது. இஃதோடு தொடர்புடைய விதத்தில்தான் நேர்மையின் ஒரு மாதிரி என்னும் விதத்தில் இறைவன் தனது நீதியை எடுத்துக்காட்டுகிறார். முதலாவதாக- மக்களையும் ஒவ்வொரு தனி நபரையும் வழிநடத்தும் தனது சட்டரீதியான செயல்முறையிலும், அடுத்து- ஒருவரது செயல்களுக்கேற்பத் தண்டிப்பதிலும் அல்லது வெகுமதி அளிப்பதிலும் வினைப்பயன் அளிக்கும் இறைவன் என்ற அளவில் இதை எடுத்துக்காட்டுகிறார். தீர்ப்பு என்ற நோக்கில், நீதி பற்றிய கருத்து பின்வரும் II-ஆம் பிரிவில் விவாதிக்கப்படுகிறது.

மற்றொரு விவிலியக் கருத்து, அல்லது தனது படைப்பில் தயாரிக்க இறைவன் எண்ணுகின்ற அமைப்பு பற்றிய ஆழ்ந்த கருத்தானது, நீதிக்கு ஒரு பரந்த பொருளையும், உடனடி சமய மதிப்பையும் அளிக்கின்றது. மனித நேர்மையானது எப்போதுமே இறைவனுடைய வீதாச்சாரம் உயர்ந்தது பற்றிய மேலான உணர்வையோ, உலகை நிர்வகித்துத் தனது படைப்புகளை நிரப்புகின்ற வியத்தகு மென்மையையோ வெறுமனே பிரதிபலிப்பதில்லை; அல்லது அவற்றின் விளைவாக அமைவதில்லை. விசுவாசத்தின் மூலமாக மனிதன் அடைகின்ற இறைவனின் நீதியானது முடிவாக அவரது இரக்கத்துடன் ஒன்றுபடுகிறது. மேலும், இறை இரக்கத்தைப்போன்று சில நேரங்களில் ஓர் இறைப்பண்பை அது சுட்டிக்காட்டுகிறது; மற்ற நேரங்களில் இவ்விரக்கம் அளிக்கின்ற மீட்பின் உறுதியான கொடைகளைக் குறிப்பிடுகின்றது. நீதி பற்றிய இந்தப் பொருள்விரிவாக்கம் விவிலிய மொழிபெயர்ப்புகளில் காணக்கிடக்கிறது. ஆனால், பெரும்பாலும் இஃது இறையியல் கலைச்சொற்பொருளைக் கடந்து செல்வதில்லை. உரோ 3:25-ஐ வாசித்த பின்னர், இயேசு கிறிஸ்துவில் இறைவன் வெளிப்படுத்திய நீதியானது குறிப்பாக அவரது மீட்பின் நீதி, அதாவது இரக்கமிக்க பற்றுறுதியாகும் என்பதைப் படித்த எந்தக் கிறிஸ்தவனும் ஐயுறான்! III-ஆம் பிரிவானது இரக்கத்தின் தோற்றத்தினின்று நீதி பற்றிய விவிலியக் கருத்தை அளிக்கும்.

II. நீதியும் தீர்ப்பும்

1. மனித நீதி.

அ. பழைய ஏற்பாடு.

i) சமுதாய நீதி; தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுதலில் நேர்மையைக் காட்ட வேண்டும் என்று இஸ்ராயேலின் பண்டைய சட்டமுறையானது ஏற்கெனவே நீதிபதிகளிடம் கோரியது (உப 1:16; 16:18.20; லேவி 19:15.36). அவ்வாறே, தொடக்ககாலப் பழமொழிகளும் அரசனுடைய நீதியைப் புகழ்கின்றன (பழ 16:13; 25:5). இவற்றையொத்த சில பகுதிகள் நீதிமானை உரிமையாளனாகவும் (யாத் 23:6-8), சில நேரங்களில் நியாயமான நீதிபதிகளையும் குறிப்பிட்டுப் பேசுகின்றன (உப 16:19). குற்றமற்ற மனிதனை விடுவிப்பதன் மூலமாகவோ, அவனுக்குரிய உரிமைகளைத் திரும்ப அளிப்பதன் மூலமாகவோ நீதிபதிகள் அவனை நியாயப்படுத்த வேண்டும் (உப 25:1; பழ 17:15).

ஏழைகளை அடக்குவதில் நீதிபதிகளும் அரசர்களும் செலுத்திய அநீதியை நாடு கடத்தப்படுவதற்கு முந்தைய இறைவாக்கினர்கள் அடிக்கடி, முழு வல்லமையுடன் வெளிப்படையாகக் கண்டனம் செய்கின்றனர். இத்தகைய ஒழுங்கின்மைக்குச் சம்பளமாகத் தீமையை அவர்கள் முன்னுரைத்தனர் (ஆமோ 5:7; 6:12; எசா 5:7.23; எரே 22:13.15). அநீதியினுடைய ஒழுக்க மற்றும் சமய பரிணாமங்களின் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்து கின்றனர். விதிமுறைகள் அல்லது மரபுகளை மீறுதலாக, சாதாரணமாக, நோக்கப்பட்டதானது இப்போது ஓர் ஆட்தன்மையுடைய இறைவனு டைய தூய்மைக்கு எதிரான பழியாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே மரபு சார்ந்த தண்டனையை விட அதிகமாகவே அநீதியானது பெறுகின்றது. இறைவனாலேயே தயாரிக்கப்பட்ட ஒரு தண்டனையை அது பெறுகின்றது. இறைவாக்கு பழியுரைகளின் நீதிமானே மீண்டும் உரிமை கோருபவனாக உள்ளான். ஆனால், அவன் கிட்டத்தட்ட எப்போதும் ஏழையாகவும், ஒடுக்கப்பட்டவனாகவும் மட்டுமே தோற்றுவிக்கப் படுகிறான் (ஆமோ 2:6; 5:12; எசா 5:23; 29:21).

இறைவாக்கினர்கள் அடிக்கடி தங்களுடைய பழியுரைகளுடன் சரியானதும் நீதியானது மானதைச் செய்யவேண்டும் என்னும் அறிவுரையினையும் கூறுகின்றனர் (ஓசே 10:12; எரே 23:3-4). மனித நீதியின் வலுவின்மையை அறிந்தவர்களாய், எல்லாவற்றிற்கும் மேலாகக் குறையற்ற நீதியை அளிக்கக்கூடிய நேர்மைமிக்க அரசராகிய வருங்கால மெசியாவை அவர்கள் எதிர்நோக்குகின்றனர் (எசா 9:6; 11:4-5; எரே 23:5; சங் 45:4-5.7-8; 72:1-3.7).

2) சட்டத்தின்பால் கொண்டுள்ள பற்றுறுதி என்ற அளவில் நீதி: நாடுகடத்தப்படுவதற்கு முன்னர், நீதியானது இறைக்கட்டளைகளை முழுமையாகக் கடைப்பிடிப்பதை, அதாவது சட்டத்திற்கு ஒத்த நடத்தையைக் குறிப்பிட்டது. இக்கருத்தானது பல பழமொழிகளிலும் (பழ 11:4-6. 19; 12:28), பல்வேறு நிகழ்ச்சியுரைக் குறிப்புகளிலும் (ஆதி 18:17-19), எசேக்கியேலிலும் (எசே 3:16-21; 18:5-24) காணப்படுகிறது. அதே பின்னணியில் நீதிமான் பக்தியுள்ளவனாகவும், பழிகூற முடியாத ஊழியனாகவும், இறைவனின் நண்பனாகவும் உள்ளான் (பழ 12:10; ஆதி 7:1; 18:23-32; எசே 18:5-26). நாடு கடத்தப்பட்ட பின்னர் இந்த இறைபக்திக் கருத்தானது புலம்பல்களிலும் (சங் 18:21.25; 119; 121), பாடல்களிலும் (சங் 15:1-2; 24:3-4; 140:14) தெள்ளத்தெளிவாகிறது.

3) நீதி, ஒரு வெகுமதி: சட்டத்திற்கு ஒத்த நடத்தையானது, தகுதி மற்றும் வளமையின் ஊற்றாகும். இந்நடத்தையை விவரிக்கின்ற நீதி என்னும் இச்சொல்லானது, நாடு கடத்தப்படுவதற்கு முற்பட்ட சொற்பொருள் மாறுபாடு சார்ந்த வளர்ச்சி பெற்று, நீதிக்கான பல்வேறு வெகுமதிகளையும் குறிப்பிடலாயிற்று. இவ்வாறாக, இரக்கமிக்க ஒரு செயலானது, யாவேயின் பார்வையில் நீதியாக உருவாகிறது. இதைத் "தகுதி" என்று மொழிபெயர்க்கலாம் (உப 24:13; 6:24-25). பழ 21:21-இல் "நேர்மையையும், இரக்கத்தையும் கடைப்பிடித்து நடப்பவன், நீடித்து வாழ்வான்; நீதியையும் மேன்மையையும் அடைவான்." கடைசி மூன்று கருத்துகளும் இங்கு ஒரு பொருட் பன்மொழியாகப் பயன்பட்டுள்ளன. சங் 24:3-4-இல் இறைவனிடமிருந்து ஒருவன் பெறுகின்ற நீதியானது, திருப்பயணியின் பக்தியுள்ள பணியின் வெகுமதியான இறை ஆசீராகும் (சங் 112:1.3.8; 37:6).

4) நீதி, ஞானம் மற்றும் நன்மைத் தனம்: பழைய ஏற்பாட்டின் இறுதி நூல்களில்- சில புதிய நுட்ப வேறுபாடுகளுடன், முந்தைய நூல்களின் அனைத்துப் பாரம்பரியக் கருத்துகளும் காணப்படுகின்றன. தனது அயலாருடனான மனிதனுடைய தொடர்புகளை நடத்தவேண்டிய கண்டிப்பான நீதியின் கருத்துடன் (யோபு 8:3; 35:8; திருவுரை 5:7; சீரா 38:33), ஞான 1:1.15-இல் ஒரு புதிய பண்பு சேர்க்கப்படுகிறது. அங்கு

நீதியானது, செயல்படுத்தப்படும் ஞானமாக உள்ளது. ஞான 8:7-இல் கிரேக்க ஆதிக்கமானது தெளிவாகத் தெரிகிறது. அங்கே ஞானமானது நான்கு முக்கிய குணங்களாகிய அடக்கம், விவேகம், நீதி,மனவுறுதி ஆகியவற்றைக் கற்பிக்கிறது.

சில பிற்காலப் பகுதிகளில் நீதியானது பிச்சையிடுதல் என்ற பொருளைக் கொண்டுள்ளது. "எரியும் நெருப்பைத் தண்ணீர் தணிக்கும்; பிச்சையிடுதல் பாவங்களுக்குக் கழுவாயாக அமையும்" (சீரா 3:33; தோபி 12:8-9; 14:9-11). இந்தச் சொற்பொருள் வேறுபாடு சார்ந்த நோக்கின் காரணமானது நீதிபற்றிய செமித்தியக் கருத்தில் காணப்படுகிறது. ஏனெனில், இது நேர்மையுள்ளவர்களின்பால் நீதிபதி கொண்டுள்ள ஆர்வமிக்க ஈடுபாடாய் இருப்பதால், இது சார்பின்மையின் முனைப்பற்ற மனப்பான்மையாக இருப்பதில்லை. இந்த உடன்பாட்டுப் பொறுப்புணர்வானது, ஒவ்வொரு நிலையிலும் தண்டனை அல்லது மீட்பு இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கிறது. மேலும், நீதியை அளிக்கின்ற பொதுவான மற்றும் இருமனப் போக்குடைய செயலன்று இது. நீதி பற்றிய இக்கருத்திற்கு ஏற்றவாறு நீதிமான் இரக்க மிக்கவனாகவும், தயாள குணமுள்ளவனாகவும் உள்ளான் (தோபி 7:6; 9:6; 14:9). மேலும், "நீதிமான் மனித நேயம் கொண்டவனாக இருக்க வேண்டும்" (ஞான 12:19).

ஆ. புதிய ஏற்பாடு

1) **இயேசு:** சட்டரீதியான நீதிக்கான அறிவுரையானது, இயேசுவின் செய்திக்கு மையமானதன்று. நீதியின் பணிகள் பற்றிய விதிமுறைகள் எவற்றையும் நற்செய்தியானது குறிப்பிடவில்லை. ஒடுக்கப்பட்ட குழுவிற்கும் அது வலியுறுத்தும் வேண்டுகோளை விடுப்பதில்லை. மேலும், நேர்மையான நீதிபதியாகவும் அது மெசியாவைக்காட்டுவதில்லை. இந்த மௌனத்திற்கு நல்ல காரணங்களும் உள்ளன. இறைவனுடைய சித்தத்தின் வெளிப்பாடுகளாகிய பழைய ஏற்பாட்டு விதிமுறைகள் சமூகத்தின் தனியுரிமைப் பத்திரமாகவும் உள்ளன. இயேசுவின் காலத்தில் நீதியானது, உரோமையரால் நிறைவேற்றப்பட்டது. இயேசு தன்னை ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவோ, இனத்தின் மெசியாவாகவோ வெளிப்படுத்தவில்லை. அவரது காலத்தவரின் மிகக்கொடிய தவறானது சமூக அநீதியன்று; மாறாக, ஆசாரப்போக்கும் வெளிவேடமும் ஆகிய சமயத் தவறுகளாகும். இயேசுவினுடைய பரிசேயத்தன்மையின் மீதான பழிப்புரையானது, அநீதியின் மீதான இறைவாக்கினரின் பழிப்புரையுடன் ஒத்துள்ளது. "சாதாரண" நீதியைப் பின்பற்றுவதற்கு இயேசு தனது காலத்தவரை அறிவுறுத்தியிருக்க வேண்டும். ஆனால், இது பற்றியவை சிறிதளவே எஞ்சியுள்ளது (மத் 23:23. தீர்ப்பானது கண்டிப்பான நீதியைக் குறிப்பிடுகின்றது).

இயேசுவின் போதனை முறையில், நீதியானது சட்டத்திற்கான பற்றுறுதி என்னும் விவிலியப்பொருளைப் பாதுகாக்கின்றது. அவரது செய்தியின் மையப்பொருளாக இஃது இல்லாவிடினும் ஒழுக்க வாழ்வை உண்மையான நீதியென்றும், இறைவனுடைய கட்டளைகளுக்கான ஆன்மீகக் கீழ்ப்படிதல் என்றும் விளக்க இயேசு சிந்தனைப் போக்குகளைக் காணலாம். ஒருபுறம் பரிசேயரின் போலியான நீதியின் மீதான கண்டனம் உள்ளது; பெரிய இறை வாக்கினர்களைவிட உயரிய அளவில் இயேசு, மனித மற்றும் செருக்கு வாய்ந்த சமயத்தின் வெளிவேட நடைமுறையினைக் கண்டிக்கிறார் (மத் 23). மற்றொரு புறம் அவரது தொடக்க மறையுரையானது அவரது சீடர்களின் உண்மையான நீதியை விளக்குகிறது (மத் 5:17-48; 6:1-18). எனவே, கட்டளைகள் பற்றிய குறுகலான, சொற்பொருள் விளக்கத்தினின்று விடுவிக்கப்பட்ட சீடனின் வாழ்வானது நீதியின் வாழ்வாக இன்னும் உள்ளது. அதாவது இயேசுவால் புதிதாய்ப் பறைசாற்றப்பட்டு,

இறைவனின் உண்மையான நிறைவான சித்தமாகிய மோசேயின் உணர்வை மீண்டும் எடுத்துக்கூறுகின்ற சட்டங்களுக்கான பற்றுறுதியான வாழ்வாகும்.

2) **அப்போஸ்தலிக்கத் திருச்சபை:** கண்டிப்பான பொருளில் நீதியானது தொடக்கக் கிறிஸ்தவத்தின் முன்னீடுபாடுகளில் ஒன்றன்று. புதிய திருச்சபையானது நற்செய்தி நூல்களின் உலகம் இருந்ததை விட இஸ்ராயேல் சமுதாயத்தைப் போன்று தாழ்வாக உள்ளது. திருச்சபையினுடைய பிரச்சனைகள் சமூக நீதியைப்பற்றிய பிரச்சனைகளாக இல்லாமல் யூத அவிசுவாசம், மற்றும் புறவினத்தாரின் சிலைவழிபாடு பற்றியனவாக உள்ளன. ஆயினும், சந்தர்ப்பம் வாய்க்கும்போது, நீதியின் மீதான அக்கறையானது முக்கிய சக்தியாக உள்ளது (1 திமொ 6:11; 2 திமொ 2:22).

நீதியைப் புனிதத்தன்மையாகக் கருதும் கருத்து ஆதிகாலத் திருச்சபையிலும் காணப்படுகிறது. யோசேப்பு (மத் 1:19) மற்றும் சிமியோனைப் (லூக் 2:25) பொருத்தவரை சட்டத்தின் மீதான பற்றுறுதியானது அவர்களை மெசியா வெளிப்பாட்டிற்குத் தகுதியுள்ளவர்களாகச் செய்கிறது (மத் 13:17). தனது திருமுழுக்கின்போது இயேசு "கடவுளுக்கு ஏற்புடையவை (நீதி) அனைத்தையும் நிறைவேற்றினார்" என மத்தேயு எழுதும்போது, தனது நற்செய்தியின் ஒரு முக்கிய கருத்தை அறிவிப்பதுபோல் அவர் தோன்றுகிறார்; அதாவது, சட்டத்தின் சமயமாகிய பண்டைய நீதியை இயேசு உச்சநிலைக்குக் கொண்டு வருகிறார் (மத் 3:15). பேறுகளைப்பற்றிய மத்தேயுவின் வாசகம், யூத பக்தியின் புதுப்பிக்கப்பட்ட வடிவைக் கிறிஸ்தவத்தில் வெளிப்படுத்துகிறது (5:6.10). ஒருவர் ஆசைப்பட்டு அதற்காகத் துன்புறவும் வேண்டிய நீதியானது, சட்டமாக உள்ள வாழ்வுமுறையின் மீதான பற்றுறுதியாகத் தெரிகிறது. இஃது, ஏற்கெனவே பழைய ஏற்பாட்டில் காணப்பட்டாலும், மீண்டும் அப்போஸ்தலிக்கத் திருமுகங்களில் தோன்றுகின்ற சொற்றொடரின் தனித்தன்மை கொண்டுள்ளது. நீதியானது கனியாகவும் (பிலி 1:11; எபி 12:11; யாக் 3:18), கிரீடமாகவும் (2 திமொ 4:8) காணப்படுகிறது. முடிவில்லா வாழ்வின் உட்பொருளைப்போன்று இஃது உள்ளது (2 பேதுரு 3:13).

2. இறை நீதி:

அ. **பழைய ஏற்பாடு:** பண்டைய போர்சார்ந்த மற்றும் சமயப்பாடல்கள், இஸ்ராயேலின் பகைவர்களுக்கு எதிரான இறைவனுடைய தண்டிக்கிற தீர்ப்பாக (உப 33:21) அல்லது (சிறப்பாகப் பன்மை வடிவில்) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய அவரது மீட்பாக (நீதி 5:11; 1 சாமு 13:6-7; மீக் 6:3-4) அதன் செயல்பாட்டுப் பின்னணியில் இறை நீதியைப் புகழ்கின்றன. இறைவாக்கினர்கள் இத்தகைய வெளிப்பாட்டின் வடிவை ஏற்றுக்கொண்டு அதற்கு ஒரு புதிய ஆழத்தை அளிக்கின்றனர். தனது நீதியாகிய தண்டனைகளை இறைவன் பாவிகளுக்கும் இஸ்ராயேலருக்கும் அனுப்புகிற அளவிற்கு மக்களின் பகைவர்களுக்கு அனுப்புவதில்லை (ஆமோ 5:24; எசா 5:16; 10:22...). மற்றொரு புறம், இறைவனுடைய நீதியானது சாதகமான தீர்ப்பாகவும் உரிமை கோருபவரின் விடுதலையாகவும் (எரே 9:23; 11:20; 23:6) இருக்கலாம். நியாயப்படுத்துதல் என்ற சொல்வழக்கு, இதிலிருந்துதான் வருகிறது (1 அர 8:32). அதே இரட்டைப் பொருளானது புலம்பல்களிலும் காணப்படுகிறது. அங்கே ஆசிரியர் சில நேரங்களில், அவரது பற்றுறுதியில், தன்னை மீட்குமாறு இறைவனை இறைஞ்சுகிறார் (சங் 71:1-2). மற்ற நேரங்களில் தன்னைத் தண்டிப்பதன்மூலம் இறைவன் அவரது சிதைக்கவியலா நீதியை வெளிப்படுத்தி (தானி 9:6-7; பாரூ 1:15; 2:6), அவரே நீதியுள்ளவர் என்று காட்டுகிறார் (எஸ் 9:15; நெகே 9:32-33; தானி 9:14) என ஆசிரியர் அறிக்கையிடுகிறார். இயல்பாகவே, பாடல்கள் நீதியின் சாதகமான கூறைச் சிறப்பாகப் புகழ்கின்றன (சங் 7:18; 9:5;

96:13). நீதியுள்ள இறைவனே இரக்கம் நிறைந்த இறைவனாவார் (சங் 116:5-6; 129:3-4).

ஆ. புதிய ஏற்பாடு: இறைவாக்கினர்களுக்கும் சங்கீத ஆசிரியர்களுக்கும் முரண்பட்ட நிலையில், விசுவாசி அல்லது சமூகத்தின் வாழ்வில் இறைவனுடைய சட்டரீதியான நீதியின் இடையீட்டைப் பற்றிய புதிய ஏற்பாடு சிறிதளவே கூறுகிறது. மாறாக, அஃது இறுதித்தீர்ப்பை நோக்கி நமது கவனத்தைத் திருப்புகிறது. இந்த உயரிய தீர்ப்பில் இறைவன் தன்னை நியாயமானவராகக் காட்டுகிறார் என்பது புரிந்துகொள்ளத் தக்கதே. ஆனால், நீதிபற்றிய சொற்றொகுதி அரிதாகவே பயன்பட்டுள்ளது. ஏனெனில், இறுதித் தீர்ப்புபற்றிய, பாரம்பரிய சொற்றொகுதியை ஒதுக்கிவிடாமல் இயேசு (மத் 12:36-37; 41:42), ஒருவனது விசுவாசம் மற்றும் தாழ்ச்சிக்கு ஏற்ப அளிக்கப்பட்ட இறைக்கொடையாக மீட்பை வெளிப்படுத்துகிறார்.

அப்போஸ்தலிக்கத் திருச்சபையானது பிந்தைய சிந்தனையைக் கொண்டிருந்தாலும் (யோவா 16:8.10-11; 2 திமொ 4:8), இறைவனுடைய தீர்ப்பின் கடுமையை அது இன்னமும் வலியுறுத்துவது தெரிகிறது. செயல்களுடைய ஒழுங்கின் மொழிக்குத் திரும்புவதையும் (மத் 13:49; 22:14; மாற் 7:13-14; லூக் 13:24), விசுவாசத்தின் மூலமான மீட்பின் நற்செய்தியுடன் தீர்ப்பின் கருத்தை அடுத்தடுத்து வைத்ததையும் காணலாம். மேலும், ஒன்று மற்றதாக ஆக முடியாத இந்த இருமைத் தன்மையின் சில சுவடுகள் பவுலிடமே காணப்படுகின்றன. சந்தேகத்திற்கிடமின்றி அருள் மற்றும் விசுவாசத்தினுடைய கோட்பாட்டை அதனுடைய முழுமையில் அவர் அளிக்கிறார். ஆனால், பவுலும் ஒவ்வொருவருக்கும் அவரவர் செயல்களுக்கேற்ப வெகுமதி அளிக்கின்ற இறைவனுடைய நியாயமான தீர்ப்பைப் பற்றி யூதச் சொற்களிலேயே தொடர்ந்து கூறுகிறார் (2 தெச 1:5-6; உரோ 2:5).

III. நீதியும் இரக்கமும்

1. மனிதனின் நீதி:

அ. பழைய ஏற்பாடு: சட்டமுறையின் அடிப்படையே நீதியையும் சட்டத்தைக் கடைப்பிடித்தலையும் ஒன்றாக்குவதாகும். இப்போக்கு நாடு கடத்தப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே காணப்படுகிறது. சட்டமே ஒழுக்க வாழ்வின் விதியாகும். விசுவாசமுள்ள யூதனின் நீதியானது வளமை மற்றும் மகிமைக்கான அவனது சிறப்பு உரிமையாகும். எனவே, இந்தச் சட்ட ரீதியான நீதியானது, வீணானது மற்றும் செயலற்றது என்று பறைசாற்றும் சில பகுதிகளைக் குறிப்பிட்டுக் காட்டுவது மிகவும் அவசியமானதாகும். விசுவாசத்தினாலான மீட்பு என்னும் பவுலின் கருத்தை முன்குறித்துக் காட்டுகின்ற சொற்களில் சில பண்டைய பகுதிகள் வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றுதலைப் பற்றிக் கூறுகின்றன: "எங்களுடைய நேரிய நடத்தையின் பொருட்டே இந்த நாட்டை உடைமையாக்கிக் கொள்ளும்படி ஆண்டவர் எங்களைக் கூட்டிவந்தார்" என்று உங்கள் உள்ளத்தில் எண்ண வேண்டாம் (உப 9:4-6).

இதே ஒளியில் ஆதியாகமத்தின் புகழ்பெற்ற பகுதியான "ஆபிராம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார்; அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்" (ஆதி 15:6) என்ற பகுதி விளக்கப்பட வேண்டும். இப்பகுதியில் நீதியானது இறைவனுக்குத் திருப்தியான நடத்தையாகவோ, மேலே குறிப்பிடப்பட்ட சொல்லின் பொருள் வளர்ச்சியின்படி வெகுமதியாகவோ, தகுதியாகவோ புரிந்து கொள்ளப்பட்டாலும், இரு நிலைகளிலும் விசுவாசமானது இறைவனைத் திருப்திப் படுத்துவதற்கான வழி என்று உயர்வுபடுத்தப்படுகிறது. பவுல் நன்கு வலியுறுத்தியது போன்று, நீதிக்கும் இறைவனைச் சரணடைதலுக்கும் இடையிலான உயர்நிலையான இணைப்பானது நீதியைச் சட்டரீதியான வடிவில்

கருதுவதினின்று நம்மைத் தடுக்கிறது. ஆதியாகமத்தின் வார்த்தைகள் 1 மக் 2:52-இல் குறிப்பிடப்படுகின்றன. அதன் எதிரொலி 1 மக் 14:35-இல் கேட்கிறது. அங்கு நீதியானது தனது மக்கள்பால் சீமோன் கொண்டிருந்த பற்றுறுதியாகும்.

இறுதியாக, யோபுவின் நாடகப்பாணியான கேள்விகளிலும், வினைப்பயன் கோட்பாடு பற்றிய சந்தேகத்தை விதைக்கின்ற திருவுரையாளரின் "ஏவுதல் பெற்ற எதிலும் தேடுதல் காணும் மனப்பான்மையிலும்" ஓர் உயரிய வெளிப்பாட்டிற்கான தயாரிப்பினைக் காணக்கூடிய வாய்ப்பு உள்ளது. "நேர்மையானவன் நேர்மையுள்ளவனாயிருந்தும் மாண்டழிகிறான்...." (திருவுரை 7:5; 8:14; 9:1-2). "மனிதன் இறைமுன் நேர்மையாய் இருப்பது எப்படி?" (யோபு 9:2; 4:17; 9:20...).

ஆ. புதிய ஏற்பாடு

1) இயேசுவின் செய்தி: இது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதைவிட இறைவன் மீதான நம்பிக்கைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. ஆனால், நீதிபற்றிய சொற்றொகுதிக்கு ஒரு புதிய திருப்பத்தை அளிக்காமலே ஏழை, தாழ்ந்தோர், பாவிகள் முதலிய சொற்களுக்கு இயேசு புதிய பொருளைக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஆயினும் இயேசு, விசுவாசத்தை உண்மையான நீதியென்று அழைத்ததும், பாவியை உண்மையிலேயே நீதிமான் என்று குறிப்பிட்டதும் (மத் 9:13), ஏற்புடைமையை எளியோருக்கான மன்னிப்பு என்று விளக்குவதும் (லூக் 18:14) ஏற்புடையதே.

2) பவுல்: மனமாற்றத்திற்கு முன்னர் அவர் சட்டத்தின் நீதியைப் பின் தொடர்ந்தார் (பிலி 3:6). தனது நற்செயல்களுக்கேற்ப மனிதன் இந்த நீதியைப் பெறுகிறான் (உரோ 9:30-31; 10:3). இவ்வாறாக, இது சட்டத்தினின்று வருகிற நீதி என்றும் (உரோ 10:5; கலா 2:21; பிலி 3:9), செயல்களினின்று வருகிற நீதி என்றும் (உரோ 3:20; 4:2; கலா 2:6) அழைக்கப்படலாம். தனது மனமாற்றத்தின் தொடக்கத்தில் பவுல் இக்கருத்துகளினின்று முழுமையான முறிவினை ஏற்படுத்தவில்லை. ஆயினும், அந்தியோக்கிய விவாதமானது தீர்மானமான திருப்புமுனையாக அமைகிறது. கலா 2:11-21-இல் பவுல் ஏற்புடைமை பற்றிய இரு கருத்துக்களையும் எதிர்க்கிறார். ஏற்புடைமை என்பதற்கு அதன் கிறிஸ்தவப்பொருளை அளிக்கின்றார்; "திருச்சட்டம் விதிக்கும் செயல்களால் அன்று, இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் மட்டுமே ஒருவன் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆகக்கூடும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்" (கலா 2:16). இக்காலக் கட்டத்திலிருந்து நீதிபற்றிய பவுலின் கருத்தானது முற்றிலுமாக மாறுகிறது. அதுமுதல், மனிதன் இறைவனில் விசுவாசங் கொள்கிறான். இறைவனும் அவனை ஏற்புடைமையுள்ளவன் ஆக்குகிறார்; அதாவது, விசுவாசத்தினாலும் கிறிஸ்துவோடு ஒன்றிணைப்பினாலும் மீட்பை அவனுக்கு உறுதியளிக்கிறார். இனிமேல் நீதி என்ற சொல்லும் அதனைச் சார்ந்த சொற்களும் மீட்பு பற்றிய கிறிஸ்தவ உண்மைகளைச் சுட்டிக்காட்டும். உண்மையில் இறை உதவியின் உறுதிப்பாடானது அனுபவ முறையில் அடையப்படுகிறது. ஆவியும் (கலா 3:2), வாழ்வும் (2:19-21) ஏற்புடைமைக்கு உறுதியளித்து, அதே நேரத்தில் அதனை உருவாக்குகின்றன. கவனம் இறுதித்தீர்ப்பினின்று மாறுபட்டு மனிதனின் நிகழ்கால நிலையாகக் கருதப்படும் நீதியின்பால் மையம் கொள்கிறது. ஆனால், அதனுடைய விண்ணக வெகுமதிகளின் எதிர்பார்ப்பில் இறுதிக்காலத்தைச் சார்ந்ததாகவே அஃது இன்னும் உள்ளது.

2. இறை நீதி

அ. பழைய ஏற்பாடு: தனது சட்டச் சார்பான நீதியைச் செயற்படுத்துவதில், ஒடுக்கப்பட்டவரை விடுவிப்பவராகவே இறைவன் அடிக்கடி காணப்படுகின்றார். தன்னிலேயே இந்த

விடுதலையானது சட்டச்சார்பான நீதியின் வரைமுறைக்குள்ளேயே உள்ளது. ஆனால் இறைவனுடைய உதவி என்று பார்க்கப்படும்போது, இறைவனுடைய நீதி பற்றிய வளமிக்க கருத்துச் செறிவைக் கொண்டுள்ளது. மற்றொருபுறம், மனிதன் தனது சொந்த நீதியினாலேயே இறையுதவியைப் பெற முடியாது. மற்றும் யாவேயின் முன் ஏற்புடைமையைக் கண்டடைய விசுவாசமானது உயரிய மதிப்புடையது என்பதைப் பழைய ஏற்பாடானது முன்னோக்கியுள்ளது. அவரது இரக்கத்திற்கான சான்று எனவும், ஏற்புடைமையின் மறைபொருளை அடைவதற்கான சாதனம் எனவும் இறைவனது நீதியைக் கருதுவதற்கான மற்றொரு காரணத்தை இக்கருத்து அளிக்கின்றது.

நீதி பற்றிய இக்கருத்தானது துரிதமாக வளர்ச்சியடைகிறது. உபாகமப் பாரம்பரிய ஆசிரியருடைய கருத்துப்படி அநாதைக்கு நீதி வழங்குவதில் இறைவன் மனநிறைவு அடைவதில்லை. அவர் அகதியை நேசித்து, அவனுக்கு உணவும் உடையும் அளிக்கிறார் (உப 10:18). ஓசே 2:21-இல் "நேர்மையிலும் நீதியிலும் பேரன்பிலும்" தன் மக்களோடு மண ஒப்பந்தம் செய்து கொள்வதாக வாக்களிக்கிறார். புலம்பல்களின் ஆசிரியர் இறைவனுடைய நீதிக்கான தனது வேண்டுகோளில், நியாயமான தண்டனையை விட அதிகமாக எதிர்பார்க்கிறார்; "நீர் நீதியுள்ளவராய் இருப்பதால் எனக்கு வாழ்வளியும்" (சங் 119:40.107; 36:11). மேலும், பாவத்தின் மன்னிப்பாகிய நீதியையே அவர் எதிர்நோக்குகிறார் (சங் 51:16; தானி 9:16). பாவியின் ஏற்புடைமை பொருந்தாத செயலாகவும், சட்டச்சார்பான போதனைக்கு முரண்பட்டதாகவும் உள்ளது; இப்போதனையில் குற்றவாளியை ஏற்புடையவனாக்குவது மிகப்பெரிய தவறாகும். பல சங்கீதங்களில் இதை ஒத்த பொருந்தாமையானது காணப்படுகிறது. அங்கே இறைவன் தனது பிரதிபலன் கருதாத, சில நேரங்களில் உலகளாவிய உதவிகளால் தனது நீதியை வெளிப்படுத்துகிறார். எதிர்பார்ப்பதற்கென மனிதன் உரிமை கொண்டுள்ள அனைத்தையும் அது முழுமையாக விஞ்சியுள்ளது (சங் 65:6; 111:3; 145:7; 17; நெகே 9:8).

எசா 40:66-இல் இறைவனுடைய நீதி என்ற சொற்றொடரானது முதன்மையையும் முக்கியத்துவத்தையும் அடைகிறது. பவுலின் பெரும் கருத்தை இது முன்னுரைக்கிறது. எசாயாவின் இந்த அதிகாரங்களில் இறைவனுடைய நீதியானது சில நேரங்களில்- அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் மீட்பாகவும், மற்ற நேரங்களில்- இரக்கம் மற்றும் பற்றுறுதி என்ற இறைத் தன்மையாகவும் எடுத்துக் கூறப்படுகிறது. இந்த மீட்பானது விடுவித்தல் அல்லது வெகுமதி பற்றிய கருத்தை மிகவும் விஞ்சியுள்ள கொடையாக உள்ளது. யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்னும் ஒரே தகுதியைக் கொண்டுள்ள மக்கள்மீது சமாதானம் மற்றும் மகிமை முதலிய விண்ணக ஆசிகளைப் பொழிதலை அது கொண்டுள்ளது (எசா 45:22-24; 46:12-13; 51:1-3.5.8; 54:17; 56:1; 59:9); இஸ்ராயேலின் முழு இனமும் ஏற்புடையதாக்கப்படும்; அதாவது, மகிமைப்படுத்தப்படும் (45:25). இவ்வாறாக, இறைவன் தனது இரக்கத்தை வெளிப்படுத்தி, தனது வாக்குறுதிகளை அருளுடன் நிறைவேற்றுகின்றார் என்ற பொருளில், தான் நீதியுள்ளவர் என்பதைக் காட்டுகின்றார் (41:2.10; 42:6.21; 45:13.19-21).

ஆ. புதிய ஏற்பாடு

1) **இயேசு:** தனது உலக வருகையானது கொண்டு வந்த இறை மீட்பிற்கான வெளிப்பாட்டை எடுத்துக்கூற இயேசு விரும்பிய போது, இரண்டாம் எசாயா அல்லது பவுலைப் போன்று இறைவனுடைய நீதியின் வெளிப்பாட்டைப்பற்றி அவர் பேசவில்லை. ஆனால், அதற்கு இணையான "விண்ணக அரசு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். இயேசுவின்

மொழியை நெருக்கமாகப் பின்பற்றிய பவுலைச்சேராத கிறிஸ்தவமானது, இயேசு கிறிஸ்துவில் இறையருளின் உண்மையான வெளிப்பாட்டை வெளிப்படுத்த, "இறைவனுடைய நீதி" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தவில்லை.

2) பவுல்: மற்றொரு புறம் இறைவனுடைய நீதி பற்றிய கருத்தைப் பவுல் தெளிவாக விவரிக்கிறார். ஆயினும், இவ்வளர்ச்சியானது அவரது பணியின் தொடக்கத்துடன் ஒன்றுபடவில்லை. தெசலோனிக்கேயர் மற்றும் கலாத்தியருக்கான திருமுகங்கள் இதனைப்பற்றி ஒன்றுமே குறிப்பிட வில்லை. மூலபோதனைக்கு ஒத்தவாறு பவுலின் தொடக்ககால மீட்புச் செய்தியானது இறுதிக்காலம் பற்றியதாகவே உள்ளது (1 தெச 1:10). இவ்விடங்களிலான அழுத்தமானது சினத்தைவிட, விடுவித்தலின்மீதே அதிகமாக வலியுறுத்தப் படுகிறது. ஆனால், இந்த விடுவித்தலானது தீர்ப்பினுடைய சாதகமான கூறு மட்டுமேயாகும். மேலும், இஃது இறைவனுடைய சட்டச்சார்பான நீதியின் வரைமுறைக்குள்ளேயே உள்ளது. ஆயினும், யூதக் கிறிஸ்தவர்களுடன் கொண்ட வாக்குவாதங்கள் உண்மையான நீதியை இக்காலத்தில் பொழியப்பட்ட அருள் என்று விளக்குமாறு பவுலை இட்டுச்சென்றன. பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் கிறிஸ்தவ வாழ்வை இறைவனுடைய நீதி என விளக்குகிறார். இக்கருத்து மீட்பு மற்றும் அரசு ஆகியவற்றுடன் மூலத்தில் தொடர்பு கொண்டிருந்த இறுதிக்காலப் பொருளின் சில பண்புகளைப் பாதுகாக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் செயல்களின் விளைவான நீதிக்கு எதிரான வகையில் இஃது இக்கால அருள் என்ற உண்மையையும் வலியுறுத்துகிறது. எனவே, இறைவனுடைய நீதியானது-இறை அருளாகும். அது தன்னிலேயே இறுதிகாலப் பண்பையும் இறை வெளிப்பாட்டுப் பண்பையும் கூடக் கொண்டுள்ளது. ஆனால், அஃது உண்மையில் இக்காலத்திலேயே கிறிஸ்தவ வாழ்வில் எதிர்பார்க்கப்படுகிறது. இறைவனுடைய நீதியானது விண்ணகத்திலிருந்து வருகின்றது (உரோ 1:17; 3:21-22; 10:3); மற்றும் மனிதகுலத்தை மாற்றியமைக்க அது வருகின்றதெனப் பவுல் கூறுவார். அது தன்மையாலே இறைவனுக்குரிய ஆசீராகும். விண்ணகத்திலிருந்து வந்த நிலையை இழக்காமலேயே அது நமக்குரியதாகிறது.

அதே நேரத்தில், இந்த நீதி அளிக்கப்படுவது தனது உடன்படிக்கை மீதான இறைவனின் பற்றுறுதியில் அல்லது ஒரே சொல்லில் அவரது இரக்கத்தில் வேர் ஊன்றியுள்ளதாகப் பவுல் குறிப்பாகச் சொல்கிறார். சில நேரங்களில் இக்கருத்தானது, "இறைவனின் நீதியானது" இரக்கத்தினுடைய இறை குணமாகும் என்ற பவுலின் இரண்டாவது பொருளுக்கு இடமளிக்கும் வகையில் வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இப்பொருளானது உரோ, 3:25-26-இல் தோன்றுகிறது: "இக்காலத்தில் அத்திருவருட் செயல் முறையைக் காட்டவிரும்பி, அவர் அருள் மிக்கவராகவும், இயேசுவில் விசுவாசம் கொள்பவன் தமக்கு ஏற்புடையவன் ஆகும்படி அருள் அளிப்பவராகவும் விளங்குகிறார்". உரோ 10:3-இல் நீதியின் இரண்டு பொருள்களும் ஒன்றிணைத்துக் கொணரப்படுகின்றன; "கடவுளின் திருவருட் செயல்முறையை (கிறிஸ்தவர் மீது பொழியப்பட்ட அருள்) அவர்கள் அறிந்து கொள்ளாமல், அருள் பெறுவதற்குத் தங்கள் முறையையே நிலை நாட்டத் தேடினார்கள்; ஆகவே கடவுளுடைய அருட்செயல்முறைக்குத் (இரக்கம்) தங்களை உட்படுத்தவில்லை".

இவ்வாறாக, நீதியின் இயல்பு பற்றிய விவிலியச் செய்தியானது, இரட்டைத் தன்மையை அளிக்கின்றது. வரலாற்றுப் போக்கில் செயல்புரிகின்ற இறைத் தீர்ப்பினுடைய நோக்கில் மனிதன் நீதியைச் செயல்படுத்த வேண்டும். இப்பணியானது "ஆவியிலும், உண்மையிலும் தொழுதலில்" முடிவடைகின்ற மிக உள்ளார்ந்த முறையில் புரிந்து கொள்ளப்படவேண்டும். மற்றொரு புறம், மீட்பின் திட்டத்தைக் கருத்தில் கொண்டு, தனது செயல்களால் மட்டுமே இந்த

நீதியை அடையமுடியாது என்பதை மனிதன் காண்கிறான்; ஆனால், அருளின் கொடையாக அவன் அதனைப் பெறுகிறான். இறைவனுடைய நீதியைத் தீர்ப்புச் செயலாக வரையறை செய்ய முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக, இஃது அவரது மீட்புச் சித்தத்திற்கான இரக்கமிக்க பற்றுறுதியாகும். மனிதனிடம், தான் கோருகின்ற நீதியை அது மனிதனில் படைக்கிறது.

நீதி இருக்கை (JUDGEMENT SEAT)

இஃது ஒரு பெரிய, மிகவும் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அமைக்கப்பட்ட, இருக்கையென அகழ்வாய்வுகள் காட்டியுள்ளன. சந்தை கூடுமிடங்களில் நடுவில் அமைக்கப்பட்டு வழக்குகளைக் கேட்கவும் மக்களிடம் பேசவும் ஏதுவானதாக அமைந்திருந்தது. இயேசுவையோ, பரபாவையோ விடுதலை செய்ய வேண்டும் என்று யூத மக்கள் விருப்பம் தெரிவிக்கக் கூடியபோது, "கல்தளம்" என்று பொருள்படும் "கபத்தா" என்ற மேடையில் அமைந்திருந்த நடுவர் இருக்கையில், பிலாத்து அமர்ந்தான் (மத் 27:19; யோவா 19:13). முதலாம் ஏரோது அகிரிப்பா அரச உடை அணிந்து மேடையில் வீற்றிருந்து மக்களுக்கு உரையாற்றுகையில் ஆண்டவரின் தூதர் அவனைத் தண்டிக்கவே, உடனே அவன் புழுத்துச் செத்தான் (அ.ப. 12:21-23).

அப்போஸ்தலர் பவுல், கொரிந்தில், ஆளுநர்கள் கல்லியோ மற்றும் பெஸ்துவின் நீதியிருக்கை முன் கொண்டுவரப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டார் (அ.ப 18:12; 25:6). நான்காம் அந்தியோக்கு எப்பிபானின் பிரதிநிதியான லீசியா தாலமாயின் குடிமக்களோடு பேச்சு நடத்தியபோது இத்தகையதோர் இருக்கையில் அமர்ந்திருந்தான் (2 மக் 13:26).

நீதிபதி, நடுவர் (JUDGE, JUSTICE)

சட்டப்படி வழக்குகளை ஆய்ந்து நீதி வழங்கும் அதிகாரம் படைத்தவரே நீதிபதி. இதே அதிகாரத்தைக் கொண்டு நீதிசபைக்கு வெளியே இஸ்ராயேலில் மக்களைப் போருக்கு இட்டுச் சென்று அவர்களை இறை அருளால் அன்னிய ஆக்ரமிப்புகளிலிருந்து மீட்ட தலைவர்களும் (யோசுவாவுக்கும் தாவீதுக்குமிடையே வாழ்ந்தவர்கள்) நீதிபதிகள் என்றே அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்தின் மூத்த தந்தையர்கள் அவர்கள் குடும்பத்தின் நீதிபதிகள் ஆவர் (ஆதி 21:22; 27...).

நாடுகளில் நீதி வழங்கிய குற்றநடுவர்கள்- நீதிபதிகள் எனப்பட்டனர். நீதி வழங்கியதன் மூலம் இறைவனுக்குப் பணி செய்தனர். இறைவனின் தீர்ப்பை அளித்தனர் (2 நாள் 19:6). மோசே இத்திரோவின் ஆலோசனைப்படி நீதிபதிகளை நியமித்தார் (யாத் 18:5). துணை நீதிபதிகள் பற்றி ஐந்நூல்களில் காண்கிறோம் (எண் 11:16-17; உப 1:9 தொ). அரசர் காலத்தில் அரசன் தான் மிக உயர்ந்த நீதிபதி (2 சாமு 15:2-3). அரசர்கள் நீதிபதிகளை நியமித்ததைப் பற்றிக் கூறப்பட்டாலும் (1 நாள் 23:4; 2 நாள் 19:5), அவர்களுக்குக் குறுகிய வட்டத்திலேதான் அதிகாரம் இருந்தது (உப 16:18; 17:8-9). குருக்களும் நீதிபதிகளாக இருந்ததால்தான் ஒவ்வொரு திருத்தலமும் நீதி வழங்கும் இடமாயின (யாத் 33:8 தொ; உப 17:12). நகரத்தின் மூப்பர்கள் நகரவாயிலில் நீதி வழங்கினர் (நீதி 8:16; ரூத் 4:2; யோபு 29:7-8). சாமுவேலைப் போல ஒரு நீதிபதி, நகரம், நகரமாகச் சென்றும் நீதி வழங்கலாம் (1 சாமு 7:15). எஸ்ரா பல குற்ற நடுவர்களையும் நீதிபதிகளையும் ஏற்படுத்தினார். கிரேக்கர் காலத்தில், அரசனுடைய இடத்தில் தலைமைக் குருவே உச்சநீதிபதியாகச் செயல்பட்டார் (காண். 2 நாள் 19:8). கிறிஸ்தவர்களும், யூதர்களும் தங்களுக்குள் ஏற்படும் சண்டைகளைப் புறவின நீதிபதிகளிடம் கொண்டு செல்வதைத் தவிர்த்தனர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூதத் தலைமைச் சங்கமே உயர்நீதிமன்றமாக இருந்தது. எல்லாக் காலங்களிலும், இடங்களிலும் இருப்பது போன்று அன்றும் நீதிபதிக்குக் கையூட்டுக் கொடுப்பது தெரியாத ஒன்றாக இருக்கவில்லை (மீக் 7:3). நேர்மையற்ற நடுவர் பற்றிய உவமை லூக்கா 18-ஆம் அதிகாரத்தில் கூறப்படுகிறது.

சிலர் தங்கள் அயலாருக்கு நீதி மன்றத்துக்கு வெளியே தீர்ப்பு வழங்கியதற்காக வன்மையாகக் கண்டனம் பெறுகின்றனர் (ஆதி 19:9; யாத் 2:14; லேவி 19:15; அ.ப. 7:27). இயேசுகிறிஸ்து கடவுளைத் தவிர வேறு யாரும் தீர்ப்பிடக் கூடாது என்றார் (லூக் 6:37; யாக் 4:12). தனது உரையைக் கேட்பவர்களிடம் அஃது உண்மையா, பொய்யா எனத் தீர்ப்பிடுமாறு பவுல் கூறுகிறார் (1 கொரி 10:15).

அன்னியர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டபோது மக்களை மீட்டு, வழிநடத்திய தலைவர்களும் நீதிபதிகளே. இவர்களை விடுதலை வீரர்கள் என்று பொருத்தமாக அழைக்கலாம். சங் 2:10- அவர்கள் அரசர்கள் போல் அதிகாரம் உள்ளவர்கள் (ஓசே 7:7) எனக் குறிப்பிடுகிறது. இவர்கள் எந்தக் குறிப்பிட்ட கோத்திரத்தோடோ நகர ஆட்சியோடோ தொடர்புடையவர்கள் அல்லர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களது அதிகாரம்- குழப்பங்கள் தோன்றி மறையும் காலம்வரையே நீடித்தது. கோத்திரங்களையெல்லாம் கடந்து நின்ற இவர்கள் எல்லோரிடமிருந்தும் மரியாதையையும், கீழ்ப்படிதலையும் கோரினர் (நீதி 5). ஆனால், சிம்சோனைப்போல ஒரு குறிப்பிட்ட கோத்திரத்தில் அவர்கள் அதிகாரம் செயல்பட்டு இருக்கலாம் (நீதி 15). நீதிபதிகள் சிலர் ஒத்த காலத்தவர்களாய் இருந்திருக்கின்றனர். ஒருவகையில் மோசேயை- முதல் நீதிபதியாகவும், சாமுவேலை- இறுதி நீதிபதியாகவும் கொள்ளலாம்.

கடவுள் நீதிபதியென அழைக்கப்படுகிறார். ஏனெனில், அவரே எல்லா மனிதர்க்கும் இறுதித் தீர்ப்பு அளிப்பவர் (ஆதி 18:25; எசா 33:22; யாக் 4:12). அவரே எல்லா உலகங்களின் நீதிபதி (சங் 94:2; அ.ப. 10:42; உரோ 3:6). நாடுகளுக்கிடையே தீர்ப்பளிக்கிறார் (எசா 2:4). பாவி கடவுளின் தீர்ப்பிலிருந்து தப்பிக்க உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவனாக இருக்க விழைகிறான் (சங் 6:8; 50:45; 82:8; 96:10; எபி 10:30; 12:23). இயேசுவும் நீதிபதியென அழைக்கப்படுகிறார் (யாக் 5:9; 1 பேதுரு 4:5). அவர் கொண்டு வரும் 'நடுவு நிலைமையின்படி' பார்க்கப்போனால் யாரும் பாவமற்றவன் என்று கூறிக்கொள்ள முடியாது (யோவா 7:24). அவர் தீர்ப்பிட்டால் அது செல்லும்; ஏனெனில் தீர்ப்பிடுவதில், தான் தனியே இல்லை, தந்தையும் தன்னுடன் இருப்பதாகக் குறிப்பிடுகிறார் (யோவா 8:16). உலகம் முழுவதையும் அவர் தீர்ப்பிடுகிறார் (1 திமொ 4:1). உலகம் முடியும் காலத்திலே புனிதர்களும் அவருக்குத் தீர்ப்பிட உதவுவர் (1 கொரி 6:2-3).

நீதிபதிகள் ஆகமம் (JUDGES, BOOK OF)

காண்க. விடுதலை வீரர்கள் நூல்.

நீதி மண்டபம் (JUDGEMENT, HALL OF)

சாலமோனால் கட்டப்பட்ட, அவனது அரண்மனையில் உள்ள ஒரு மண்டபம். அது நீதியிருக்கை அமைந்திருக்கின்ற அரியணை மண்டபம். அது தளம் முழுவதும் கேதுரு மரப் பலகையால் பாவப்பட்டிருந்தது (1 அர 7:7).

நீதிமன்றம் (COURT OF LAW)

விவிலியத்திலுள்ள சட்ட நடவடிக்கைகள் பல காலந்தோறும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. குல மூதாதையர் காலத்தில் பிதாப்பிதாக்களின் சட்டப்பிரச்சனைகள் கோத்திரப் பாரம்பரியங்களின் அடிப்படையில் குடும்பங்களுக்கிடையேயும், கோத்திரங்களுக்கிடையேயும் தீர்த்து வைக்கப்பட்டன (ஆதி 31:37;34:4-24). மோசேக்கும், யோசுவாவிற்கும்கீழ் கோத்திரங்கள் ஓர் அமைப்புக்கு வந்தபிறகு 'கடவுளுக்கு முன்னிலையில்' (அதாவது, கோத்திரங்களின் மையப் புனித இடத்தில்) சிறிது கடினமான சிக்கல்கள் தீர்த்து வைக்கப்பட்டன (யாத் 21:6; 22:8). பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள முதல் நீதிமன்றம்- தெபோராவின் பேரீச்ச மரத்தடியாகும். இங்குதான் இஸ்ராயேல் அனைவரும் தீர்ப்பு பெற வந்தார்கள் (நீதி 4:5). பொதுவாக உள் விவகாரங்கள் நகரவாயிலின் முன் தீர்க்கப்பட்டன (ஆமோ 5:10; ரூத் 4:1).

அரசாட்சி நிறுவப்பட்ட பிறகு, அரசன் இந்த வேலையைக் கவனிக்க ஆரம்பித்தான் (1 சாமு 7:16-17). மிகவும் சிக்கலானவைகளைத் தீர்க்கும் மேல் உயர்நீதிமன்றமாகவும் அரசன் இருந்தான் (1 அர 3:16-18; 1 சாமு 15:2-6). நகரவாயில் இன்னும் நீதி வழங்கும் இடமாகத் தொடர்ந்து இருந்தது. அரசன் அல்லது அவனுடைய பிரதிநிதிகள் பிரச்சினையையும் அதற்கான சாட்சிகளையும் கேட்டுத் தீர்ப்பை வழங்கினார்கள்.

பதிதம் பற்றிய குற்றச்சாட்டில், தலைவர்களும் மூப்பர்களும் குற்றம் சாட்டப்பட்டவனை உயரமான இடத்தில் நிற்க வைத்து, அவன்மேல் குற்றம் சுமத்துபவர்களின் சாட்சியங்களைக் கேட்டனர். குற்றம் சாட்டப்பட்டவன் குற்றம் செய்தவனாக நிரூபிக்கப்பட்டால், மக்கள் அவனைக் கொன்றார்கள் (1 அர 21:9-13).

பழைய ஏற்பாட்டில் "நீதிமன்றம்" என்பதைக் குறிக்க, தகுந்த சொல் இல்லை. இந்தப் பொருளுக்கு மிக நெருங்கிய சொல் "நகர வாயில்" (தானி 2:49) என்பதாகும். பிற்காலத்தில் 'நீதியின் வீடு' என்பது சில சமயங்களில் நீதியின் இருக்கையைக் குறித்தது (தானி 7:10.26).

மத் 5:25-இல் வழக்கு மன்றம் குறிக்கப்படுகிறது. 1 கொரி 4:3; அ.ப. 19:38-இல் மட்டும்தான் நீதிமன்றம் என்ற சொல் சரியாகப் பயன்பட்டுள்ளது.

நீதிமொழிகள் நூல், பழமொழி யாகமம் (PROVERBS, BOOK OF)

1. பெயர்: நவீன நூலைப் போன்று, இந்நூல் தலைப்பு, ஆசிரியர் பெயர், அவரது "பட்டங்கள்" ஆகியவற்றோடு "இஸ்ராயேலின் அரசனும் தாவீதின் மகனுமான சாலமோனின் நீதிமொழிகள்" (பழ 1:1) என்ற வாசகத்தோடு தொடங்குகிறது. இந்நூலின் துணைத்தலைப்பு, வழக்கத்திற்கு மாறாக நீண்டதாக உள்ளது (1:2-6).

இந்நூல் எபிரேயமொழியில் "சாலமோனின் பழமொழிகள்" என்றும், கிரேக்க எழுபதுநூலில் "பழமொழிகள்" என்றும் அழைக்கப்படுகிறது. இந்நூலைத் தமிழில், பழமொழியாகமம் என்று அழைத்து வந்துள்ளோம். ஆனால், இப்பெயர் நூலின் தன்மையை முழுவதும் உணர்த்தவில்லை. சான்றாக, தொடர்வாக்குகளையோ, ஒழுக்க, சமய போதகத்தையே, பழமொழி என்ற சொல் உணர்த்தவில்லை. வரவிருக்கும் புதிய தமிழ் மொழிபெயர்ப்பில் இந்நூலை "நீதி மொழிகள்" என்றழைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மரபுக்கும் ஏற்றது. நூலின் தன்மையையும் ஓரளவுக்கு விவரிக்கிறது. ஆயினும், இந்நூலைக் குறிக்க இரு தலைப்புகளையும் பயன்படுத்துவோம்.

2. ஆசிரியர்: இந்நூல் சாலமோனால் எழுதப்பட்டது (1:1; 10:1; 25:1) என்பதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. ஞான இலக்கியங்களைச் சாலமோன் எழுதினார் என்று கருதிய எபிரேய மரபு பற்றி ஞான இலக்கியம் பற்றிய கட்டுரையில் காண்க.

மேலெழுந்தவாறு வாசித்தாலும், இந்நூல் ஒரே ஆசிரியரின் படைப்பு அன்று, பலருடைய படைப்பாகும் என்பது தெளிவாகும். சில பகுதிகளின் தொடக்கம் இதற்குச் சான்றுகூறும்: 10-ஆம் அதிகாரத்தின் தொடக்கத்தில், "சாலமோனின் பழமொழிகள்," 25-ஆம் அதிகாரத்தின் தொடக்கத்தில், "....இவை கூடச் சாலமோனின் பழமொழிகளேயாம்", "மாசாவைச் சார்ந்த யாக்கேயின் மகன் ஆகுரின் மொழிகள்" (30;1), "மாசாவின் அரசனான இலெமுவேலின் மொழிகள்" (31:1). ஞானிகள் வேறு சில முதுமொழிகள்" என்று 24:23-இல் வருகிறது. "இதுவும்" என்பது ஞானிகள் போதித்ததை.. செவி கொடுத்துக் கேள்" (22:17) என்பதைச் சுட்டலாம்.

மற்ற உள்ளார்ந்த சான்றுகளும் இந்நூல் பலருடைய படைப்புக்களின் தொகுப்பு என்பதற்கு ஆதரவு தருகின்றன. 31:10-31-இல் உள்ள "நல்ல மனையாள்" பற்றிய பாடல் மூலத்தில் அகர வரிசையில் இருப்பதால் அஃது ஒரு

தனித்தொகுப்பாக இருக்கலாம். 22-17-இல் தொடங்கும் ஞானிகளின் மொழிகள் முடிவின்றிப் போய்க்கொண்டிருக்க முடியாது. ஏனெனில், "அறிவும் நல்லுரையும் தரக்கூடிய முப்பது முதுமொழிகளை நான் உனக்கென்றே எழுதி வைத்திருக்கிறேன் அல்லவா?" (22:20) என்று கூறப்பட்டுள்ளது. எப்படி இந்த முப்பது முதுமொழிகளை எண்ணுவது என்பது தெளிவாக இல்லை. ஆனால் 23:15-இல் நடை மாறுகிறது. அமென்-எம்-ஒப்பேயின் எகிப்திய முப்பது கூற்றுகளோடு கொண்ட உறவும் முடிவு பெறுகிறது. ஆகவே, 23:15-24:22 என்ற பகுதி ஒரு தனிப்பட்ட தொகுப்பாகக் கருதப்படலாம்.

மேலும், அறிவுரைகள், சமன் செய்யப்பட்ட வரிகள், இரட்டிப்பு வாசகங்கள், உவமைகள், உருவகங்கள் போன்ற பல வகைப்பட்ட இலக்கிய வடிவங்கள் இந்நூல் பலரால் தொகுக்கப்பட்டது என்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. கூற்றுகள் ஒரே பகுதியிலும் (18:8; 19:24; 20:16; 21:19; 22:23), வெவ்வேறு பகுதிகளிலும் மீண்டும் மீண்டும் கூறப்படுதல் (26:22;26:15; 27:13; 25:24; 27:12), இந்நூலை ஒரே ஆசிரியர் எழுதினார் என்பதற்கு மாறாக உள்ளன. ஆசிரியரோ, தொகுத்தவரோ எந்த முறையுமின்றிச் செயல்பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் இத்தனை இரட்டிப்பு வாசகங்களைக் காணமுடியாது.

இவையெல்லாம் தனித்தனியான மேற்கோள் தொகுப்புக்கள், கவனிப்பு உரைகள், அறவுரைகள் சேர்ந்த தொகுப்பாகும் இந்நூல் என்பதையே சுட்டுகின்றன. இவற்றை மனதிற்கொண்டு பின்வருமாறு இந்நூலைத் திட்டம் செய்யலாம்.

3. திட்டமும் பொருளடக்கமும்:

I. **தலைப்பும் நோக்கமும்:** 1:1-7.

II. **ஞானத்தின் தன்மையும் மேன்மையும், அறவுரைகளும் எச்சரிக்கைகளும்:** 1:8-9:18.

அ. 1:8-33 : தொடக்கவுரை.

1. 1:8-19 : இளைஞருக்கு நல்லுரை.
2. 1:20-33 : ஞானம் விடுக்கும் அழைப்பு; ஞானத்தின் முதல் அறவுரை.

ஆ. 2:1-7:27 : **ஞானத்தின் ஆசீர்கள்.**

1. 2:1-22 : ஞானம் அளிக்கும் பலன்.
2. 3:1-12 : ஆண்டவருக்கு உகந்த வாழ்க்கை.
3. 3:13-35 : ஞானத்தின் மேன்மை.
4. 4:1-27 : ஞானத்தினால் வரும் நன்மைகள்.
5. 5:1-14 : கற்பு நெறி தவறாமை.
6. 5:15-23 : பிறன் மனைவியை நயவாமை.
7. 6:1-5 : சில நல்லுரைகள்.
8. 6:6-19 : சோம்பல், கயமை, ஆண்டவருக்கு வெறுப்பானவை.
9. 6:20-7:27 : கற்புநெறி - விலை மகளுக்கு இடம் கொடாமை.

இ. 8:1-36 : **ஞானத்திற்குப் புகழுரை, இரண்டாம் அறவுரை.**

ஈ. 9:1-18 : ஞானமும் மதிகேடும்.

III. **சாலமோனின் நீதிமொழிகள் - முதல் தொகுப்பு:** 10:1-22:16. 375 வாக்குகளைக் கொண்டது.

IV. **ஞானிகளின் வாக்குகள் - முதல் தொகுப்பு:** 22:17-23:14.

V. **அறிவுரைகளும் எச்சரிக்கைகளும்:** 23:15-24:22.

VI. **ஞானிகளின் வாக்குகள் - இரண்டாம் தொகுப்பு:** 24:23-34.

VII. **சாலமோனின் நீதிமொழிகள் - இரண்டாம் தொகுப்பு:** 25:1-29:17. எசேக்கியாவின் அவையினர் தொகுத்தது 238 வாக்குகளைக் கொண்டது.

VIII. **ஆகூரின் கூற்றுக்கள்; எண்ணிக்கை வாக்குகள்:** 30:1-33.

IX. **இலெமுவேலின் வாக்குகள் அரசனுக்கு அறிவுரை:** 31:1-9.

X. **நல்ல மனையாள்:** 31:10-31.

4. காலம்: நூல் தோன்றிய காலம் குறிப்பது ஒரு சிக்கலான பிரச்சனையாகும். இந்நூல் உருவெடுக்கப் பல ஆண்டுகள் எடுத்தன. இது பலருடைய படைப்புகளைக் கொண்ட தொகுப்பு நூலாகும் என்று முன்பே கூறியுள்ளோம். காலம் பற்றிய பிரச்சனை மூன்று கேள்விகளை எழுப்புகிறது. அ) இந்நூலில் காணப்படும் காலத்தால் முந்திய பகுதிகள் எவ்வளவு பழங்காலத்தவை? ஆ) ஞானிகள் குழுவின் காலம் எது? இ) எப்போது இந்நூல் இறுதியாகத் தொகுக்கப்பட்டு முன்னுரை அளிக்கப்பட்டது?

IV, V-ஆவது பகுதிகள் (22:17-24:22), "ஞானிகள் போதித்ததை நான் உனக்குக் கூறுகிறேன்" என்று தொடங்குகிறது. இப்பகுதியை எகிப்திய ஞானியான அமென்-எம் - ஒப்பேயின் நூலோடு ஒப்பிடலாம். இவர் தன் நூலை "முப்பது வாக்குகள்" என்றழைத்தார். "முப்பது முதுமொழிகள்" என்ற சொற்றொடர், பழ. 22:20-இல் வருகிறது. இரு நூல்களுக்கும் பொருளடக்கத்தில் அவ்வளவு ஒற்றுமையில்லையானாலும் சில பகுதிகள் இரு நூல்களிலும் அப்படியே உள்ளன. இரு நூல்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி கருத்து வேறுபாடு உண்டு. இரு நூல்களுக்கும் பொதுவான மூலம் இருந்திருக்கலாம் என்று விவிலிய ஆய்வாளர் சிலர் கருதுவர். ஆனால், இம்மூலம் எகிப்தியரைச் சார்ந்ததா, எபிரேயரைச் சார்ந்ததா என்று கூறுவதற்கில்லை. வேறு சிலர் இரு நூல்களுக்குமிடையேயுள்ள ஒப்புமை தற்செயலானதே; எபிரேய நூல் எகிப்திய நூலைச் சார்ந்து எழுதப்பட்டதன்று; அயல் பாதிப்பு எப்படியிருந்தாலும், விவிலியக் கூற்றுகள் பிறவற்றைவிட மேம்பாடு உடையன என்பர். எகிப்திய நூலுக்கும் கி.மு. 1600 - 1000-க்கு இடைப்பட்ட காலத்தை அறிஞர் குறிப்பர்.

III, VII - ஆவது பகுதிகள் (10:1-22:16 25:1-29:17), சாலமோனுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. இவை உண்மையிலேயே சாலமோன் காலத்தைச் சேர்ந்தவையாயிருந்தால், இவை கி.மு. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். 10:1-22:16 என்ற பகுதியைச் சாலமோன் எழுதியதாக நூல் கூறுகிறது. சாலமோன் அரசன் இஸ்ராயேலின் ஞானிகளில் தலைமையானவர்; ஒரு முன் மாதிரியானவரும் கூட (1 அர 5:12). இப்பகுதியில் எந்தக் குறிப்பிட்ட வாக்கையும் சாலமோன்தான் எழுதினார் என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், சில வாக்குகளாவது அவரது காலத்தைச் சேர்ந்தவை என்று கூறலாம். ஏனெனில், எரேபிய ஞான இலக்கியம் சாலமோனின் அரசவையில் தோன்றியது என்று பொதுவாகக் கூறலாம். மனிதர் கூடி வாழும் இடங்களில் எல்லாம் அன்றாட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுப்பாணி இலக்கியம் தோன்றுவது தவிர்க்க முடியாதது. இந்த இலக்கியம் மனிதப் பிரச்சனைகளை எடுத்துரைப்பதோடு, பின் வரும் ஆட்சியாளர்களுக்குப் பயன்படும் முறையில் அமைந்திருக்கும். பொதுவாழ்வு பற்றிய போதனை அளிக்கும் இலக்கிய வடிவில் எகிப்தியர் போதிய அளவில் ஏற்கெனவே தேர்ச்சி பெற்றிருந்தனர். எகிப்திய அரசவையைப் பின்பற்றித் திட்டமிட்டுச் சாலமோன் தனது அரசவையை அமைத்தபோது எகிப்திய ஞானிகளைப் பயன்படுத்தியிருக்கலாம் (1 அர 4:3). ஞானிகளுள் சிறந்தவர் என்ற தனது சொந்தப் பெருமையால், சாலமோன் தனது அண்டை நாட்டினரையும் மிஞ்சினார் (3:9-12; 5:9-14; 10:1-9). சாலமோன் இஸ்ராயேலின் ஞான இலக்கியப் பாரம்பரியத்தைத் தோற்றுவித்தவரும் அதன் புரவலரும் ஆவார்.

பழ 25:1-29:27 என்ற பகுதி "யூதாவின் அரசனாகிய எசேக்கியாவின் அவையினர் தொகுத்து எழுதியவை" என்று நூல் கூறுகிறது (25:1). அப்படியானால் கி.மு. 700-ஐ ஒட்டி இப்பகுதி தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். இக்குறிப்பு, இப்பகுதியில் சில கூற்றுகளாவது நாடு கடத்தலுக்கு முந்தியவை என்று காட்டுகிறது. தனக்குக்கிடைத்த கூற்றுகளில் சில, நீண்ட பாரம்பரியம் உடையவை என்று பதிப்பாசிரியர் நம்பியதாகத் தெரிகிறது.

மேற்கூறப்பட்ட இரு பகுதிகளிலும் எளிய, முதிராத நிலையுடைய இரட்டிப்பு வாசகங்கள் காணப்படுகின்றன (10:1 = 15:20; 10:2 = 11:4; 10:6 = 10:11; 10:8 = 11:10; 10:13 = 19:29; 16:2 = 21:2; 19:5 = 19:9). இவை தொகுத்ததில் நெருக்க மின்மையைக் காட்டலாம். ஆனால், இக்கூற்றுகள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் காணப்படுவதால், இறுதிப் பதிப்பாசிரியர் பல மூலங்களிலிருந்து இந்நூலைத் தொகுத்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. அரசனைப் பற்றிப் பேசும்முறையும் (14:28-35; 16:10-15; 20:2.8.28; 25:1-6; 29:4;.......), அரசவை வாழ்வு பற்றிய குறிப்புக்களும் (10:8; 11:2; 15:1; 16:14.15.18; 19:12; 22:11; 25:6-7; 29:23) இஸ்ராயேலின் ஆட்சி மிகவும் புகழ்பெற்றிருந்த காலத்தில், ஒரு வேளை சாலமோன் காலத்தில், இப்பகுதிகள் தோன்றியிருக்கலாம் என்று சுட்டுகின்றன. ஆயினும், இப்பகுதிகளில் காணப்படும் அரமேயிக்கு இலக்கியப் பண்புகள், மீண்டும் மீண்டும் கூறுதல், வாசக வேறுபாடுகள், வாசகச் சீர்திருத்தங்கள் ஆகியன இப்பகுதிகளில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட பகுதிகளும் திருத்தங்களும் உண்டு என்றும், புலமைமிக்க எழுத்தாளர்கள் மீண்டும் மீண்டும் திருத்திப் பதிப்பித்திருக்க வேண்டும் என்றும் சுட்டுகின்றன. பல வாக்குகள் இறைவாக்கினர் நூல்களோடும், உபாகம நூல்களோடும் தொடர்பு கொண்டுள்ளன. நாடுகடத்தப்பட்டு மீண்டகாலம், ஞான இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு புது மலர்ச்சிக் காலமாகும். இக்கலாத்திய யூத சமயத் தேவைகள் இதற்குக் காரணங்களாய் அமைந்தன. இக்காலத்தில் சாலமோன் பாரம்பரியத்தில் வந்தவையெல்லாம் தொகுக்கப்பட்டு நூல்வடிவம் எடுத்தன. இவ்வாறு சாலமோன் பகுதிகள் காலப்போக்கில் வளர்ந்தன. குறிப்பாக, பழ 25:29 என்ற பகுதி நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின் வந்த காலத்தில், நூல்வடிவம் எடுத்தது எனலாம்.

VIII, IX பகுதிகளில் வரும் (30:1-31:9) - ஆகூர், இலெமுவேல் என்பவர்களைப்பற்றி அதிகம் தெரியவில்லை. இவர்கள் மாசாவைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இந்த இடம், வட அராபியாவில் உள்ளதாகும். இக்குறிப்பு இலக்கிய வகை மரபாக இருக்கலாம் (எசா 13:1). இவர்கள் எப்போது வாழ்ந்தனர் என்றும், இவர்கள் கூற்று எவ்வளவு பழமையானவை என்றும் கூறமுடியாது. இவர்களது கூற்றுகள் நூலில் கொண்டிருக்கும் இடமும், இவற்றில் காணப்படும் அரமேயிக்குப் பண்பும், இவை நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்பதையும், அராபிய ஞானிகளின் பாதிப்பையும் சுட்டுகின்றன.

முந்தைய கூற்றுகள் எப்போது தொகுக்கப்பட்டன, பிரதி எடுக்கப்பட்டன, மாற்றியமைக்கப்பட்டன, விரிவாக்கப்பட்டன - என்பவைபற்றி IV, VI ஆகிய பகுதிகளின் தலைப்புகள் ஒரு குறிகாட்டுவதாகத் தெரிகிறது. சிலவற்றை நேரடியாகவோ எசேக்கியா வழியாகவோ சாலமோனுடையவை என்று பதிப்பாசிரியர் அடையாளம் கண்டதாகத் தெரிகிறது. மற்றவை அயல் பாதிப்புடையவை என அடையாளம் கண்டிருக்கலாம். இவற்றை ஆகூர், இலெமுவேல் ஆகியோருடன் தொடர்புபடுத்தியதாகத் தெரிகிறது. இறுதிப்பதிப்பாசிரியர் IV, VI - ஆவது பகுதிகளை ஞானிகளது கூற்றுகளாகக் குறிப்பிடுகிறார். அப்படிச் செய்யும்போது, தன்னைப்போன்ற ஞானிகளையும் ஆசிரியர்களையும், வயது முதிர்ந்த தன் காலத்தவரையும் குறித்திருக்கலாம். இவர்கள் அக்காலத்தில் தொகுத்தும், பிரதிஎடுத்தும், மாற்றியமைத்தும், விரிவாக்கியும், ஏன்? தாங்களே சில கூற்றுகளைப் படைத்தும், ஞான இலக்கிய வளர்ச்சியில் பங்கு பெற்றிருக்கலாம்.

இறுதிப் பதிப்பாசிரியர் I, II (1:1-9:18)-ஐ முன்னுரையாகவும், × (31:10-31)-ஐ முடிவுரையாகவும் தொகுத்திருக்க வேண்டும். இவர், நூலின் மற்றப் பகுதிகளை அறிந்திருப்பதாகவும் அவற்றை இளைஞர்களின் கவனத்திற்குப் பரிந்துரைப்பதாகவும் தெரிகிறது.

இந்நூல் இறுதி வடிவெடுத்தகாலம் -ஞானிகள் இஸ்ராயேலில் போதித்த காலமாகும். ஞானமிக்க ஆண்களும் பெண்களும், நடுவர்கள் காலமுதல் இஸ்ராயேலில் இருந்துவந்தாலும், நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்புதான் இளைஞர் பயிற்சிக்குரிய நிலையங்களில் ஞான ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்நூல் பலதடவை பதிப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். காலப்போக்கில் "ஞானிகள் போதித்தவை" (22:17-24:22; 24:23-34) சாலமோனின் முதல் தொகுப்போடு (III) சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். சாலமோனின் இரண்டாவது தொகுப்பு (VII) முதல் தொகுப்போடு (III) சேர்க்கப்படுவதற்கு முன்னே, 30:1-31:9 என்ற பகுதி சாலமோனின் இரண்டாவது தொகுப்போடு சேர்க்கப்பட்டதா என்று உறுதியாகக் கூறமுடியாது. இறுதிப் பதிப்பாசிரியர் I, II-ஐ முன்னுரையாகவும் X-ஐ முடிவுரையாகவும் சேர்த்துப் பதிப்பித்திருக்க வேண்டும்.

இந்நூல் கி.மு.200-ஐ ஒட்டித் தோன்றிய சீராக்கு நூலுக்கு முன்பே முழுமை பெற்றிருக்க வேண்டும். சீராக்கு நூல் ஆசிரியர் பழ 1:6-ஐ, சீரா 47:17-இல் சுட்டிக்காட்டுகிறார். மேலும், இவர் பழமொழி நூலில் காணப்படும் சில கருத்துக்களையும் சிந்தனைப் போக்குகளையும் விரிவாக்குகிறார். பழமொழி நூல் ஏற்கெனவே கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கலாம் (சீராக்கு நூல் முன்னுரை).

விவிலியச் சிந்தனை வளர்ச்சியில், குறிப்பாகத் தனி மனிதனுக்கும் வினைப்பயன் கோட்பாட்டுக்கும் காட்டும் கவனத்தில் ஞானத்தின் இடமும், ஞான இலக்கியங்களில் பழமொழி நூல் கொண்டிருக்கும் இடமும் இந்நூல் கி.மு.5-ஆம் நூற்றாண்டின் முடிவேலோ, 4-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ ஒரு நூலாக இறுதிவடிவம் எடுத்திருக்க வேண்டும் என்று கருத இடந்தருகிறது.

5. நூல் தோன்றிய சூழ்நிலை: எந்தச் சூழ்நிலையில் இந்நூல் தோன்றியது என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து ஒருமைப்பாடு இல்லை. நான்கு கருதுகோள்கள் ஆய்வுக்குத் தகுதி பெறுகின்றன. இந்நூல் 1) அரசவைக் சூழ்நிலையில், 2) பள்ளிச்சூழ்நிலையில், 3) இனச் சூழ்நிலையில், 4) அறிவுப்புலமை பெற்ற குழுவில் தோன்றியது என்று கூறுவர். இவை ஒவ்வொன்றுக்கும் ஆதரவாகவும் மாறாகவும் நூலிலிருந்து சான்றுகள் காட்டலாம். எந்த ஒரு கருதுகோளுக்கும் ஆதரவாக, மறுக்கப்படக் கூடாத, போதிய சான்றுகள் இந்நூலின் இல்லை.

6. விவிலியப்பட்டியலில் பழமொழிநூல்: எபிரேய விவிலியம் சட்டம், இறைவாக்கினர்கள், நூல்கள் எனப் பிரிக்கப்பட்டது. இதில் மூன்றாவது பிரிவான நூல்களில் ஒன்றாகப் பழமொழி நூல் வருகிறது. மிஸ்னா பாரம்பரியப்படி பழமொழி, திருவுரையாளர்-ஆகிய நூல்கள் திருமுறைப்பட்டியலில் சேர்க்கப்படுவது கி.மு. முதல் நூற்றாண்டுவரை இன்னும் பிரச்சினைக்குரியதாக இருந்து வந்துள்ளது. தால்மூது நூல், பழமொழி நூலில் எதிர் முரணான கூற்றுக்கள் காணப்படுவதாகக் கூறுகிறது. ராபி நாத்தானின் நூல் வேதநூலிலிருந்து வராத வெறும் கூற்றுகளைக் கொண்ட நூலாகப் பழமொழி நூலைத் திருவுரையாளர், உன்னத சங்கீதம் ஆகியவற்றோடு தொகுக்கிறது. ஒரு வேளை, இவை பழங்காலத்தைச் சேர்ந்தவை இல்லை என்பதால் ஐயுறப்பட்டிருக்கலாம். ஆனால், இவை சாலமோனுக்குச் சாற்றிக் கூறப்பட்டன. காலப்போக்கில் இவை யூதத்திருமுறைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

ராபிகளின் ஒரு பாரம்பரியப்படி, யோபு, சங்கீதங்கள், பழமொழி என்று வரிசைப்படுத்துகிறது. இஃது ஒருவேளை காலவரை ஒழுங்கமைப்பாக இருக்கலாம். இப்பாரம்பரியம் யோபுநூலை மோசேயும், சங்கீதங்களைத் தாவீதும், பழமொழிநூலைச் சாலமோனும்

எழுதியதாகக் கூறுகிறது; எழுபது நூல், சங்கீதங்கள், பழமொழி, திருவுரையாளர், உன்னத சங்கீதம், யோபு என்ற வரிசையில் இந்நூல்களைத் தொகுக்கிறது. இது, சாலமோன் எழுதியதாகக் கருதப்பட்ட பழமொழி, திருவுரையாளர் உன்னத சங்கீதம் ஆகிய நூல்களை ஒருங்கே சேர்க்கிறது. தமிழில் கத்தோலிக்க மொழிபெயர்ப்பு, யோபு, சங்கீதங்கள், பழமொழி, திருவுரையாளர், உன்னதசங்கீதம் என்ற முறையில் வரிசைப்படுத்துகிறது.

பல காரணங்களில் ஒன்றாக, விலைமகளின் சாகசங்கள் உயிர்ச்சித்திரமாக விவரிக்கப்பட்டிருப்பதால், இந்நூலைப் பொதுக்கூட்டங்களில் பயன்படுத்துவதை, யாம்னி யாவில் நடந்த யூதப்பொதுச் சங்கத்தில், (கி.பி. 90) சில ராபிகள் தடைசெய்ய விரும்பினார். இதை எதிர்த்து, இச்சங்கம் மேற்கூறப்பட்ட விவரிப்பை உருவகமாக விளக்கவேண்டும் என்று தீர்மானித்து, இந்நூல் பற்றிய வாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

இந்நூல் விவிலியப் பட்டியலைச் சேர்ந்தது, இறை ஏவுதல் பெற்றது என்பன பற்றிக் கத்தோலிக்கத் திருச்சபை ஒரு போதும் ஐயுற்றதில்லை. இந்நூலிலிருந்து புதிய ஏற்பாடு பல தடவை மேற்கோள்காட்டுகிறது. இந்நூலுக்குத் திருச்சபையின் தந்தையர் எவரும் விளக்கவுரை அளித்ததாகத் தெரியவில்லை.

7. எபிரேய கிரேக்க வாசகங்கள்:

இந்நூல் முதலில் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. வாசகம் தெளிவாக உள்ளது. எப்போதாவது தெளிவின்மை அல்லது தவறான குறிப்புக் காணப்பட்டால், அது சொல் மாறிவிட்டது என்பதைக் காட்டுகிறது. இதிலிருந்து கிரேக்க வாசகம் பெரிதும் வேறுபடுகிறது. சில பகுதிகள் விடப்பட்டுள்ளன; சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன; மற்றும் சில பகுதிகள் வேறுபடுத்தப்பட்டுள்ளன. நூலின் பாகங்களின் வரிசை வேறுபடுகின்றது. எபிரேய வாசகம் 30:1-10, எழுபது நூலில் எபிரேய வாசகம் 24:22-க்குப் பின்னும், எபிரேய வாசகம் 30:11-31:9, எழுபது நூலில் எபிரேய வாசகம் 24:34-க்குப் பின்னும் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகள், எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோரின் தவறுகளையும் புரிந்துகொள்ள இயலாமையையும் மட்டும் எடுத்துக் காட்டவில்லை. மொழிபெயர்க்கப்பட்டபோது இந்நூலின் வாசகம் வளர்ச்சியுற்றுக் கொண்டிருந்தது என்றும், இறுதியாக நிர்ணயிக்கப்படவில்லை என்றும் காட்டுகின்றன. படைப்பு வேலையோ பதிப்பு வேலையோ இன்னும் இறுதியாக முடிவெடுக்க வில்லை; பல பகுதிகள் இடமாற்றம் பெறலாம், புதிய மொழிகள் படைக்கப்பட்டு எபிரேய வாசகத்திலோ மொழிபெயர்ப்பிலோ சேர்க்கப்பட்டிருக்கலாம் என்றும் காட்டுகின்றன.

8. அயல் இலக்கியப் பாதிப்புகள்:

பழமொழி நூலின் சில பகுதிகளில் காணப்படும் அயல் இன இலக்கியப்பாதிப்பு இந்நூல் பலவகைத் தொகுப்பு என்பதற்கு ஆதரவு அளிக்கிறது. IV-ஆவது பகுதி (22:17-23:14), எகிப்திய அமென்-எம்-ஒப்பேயின் "முப்பது மொழிகளுக்கு" ஒத்தது என்பது பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம். இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. எபிரேய ஆசிரியர் எகிப்திய மூலத்தை அப்படியே பயன்படுத்தாமல், தனது சமயமரபுக்கேற்ப சுதந்தரமாகப் பயன்படுத்தியுள்ளார். கானானியச் சுவடுகள் இங்குமங்குமாகக் காணப்படுகின்றன. சீரியா, அரமேயிக்குப் பண்புகள் எந்த அளவுக்கு இந்நூலைப் பாதித்தன என்று உறுதியாகக் கூற முடியாது.

9. நூலின் நோக்கம்: பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதிலிருந்து திரும்பி வந்து மீண்டும் அமைக்கப்பட்ட யூத சமூகம் ஒரு புதிய நாடன்று. மெசியாவைப் பற்றிய கடந்தகால விசுவாசம் மக்களைக் கவரவில்லை. மக்கள் அதில் அக்கறை கொள்ளவில்லை. தனிநபர் மற்றும்,

ஒழுக்கமின்மையும் மக்களிடையே மூர்க்கமாகப் பரவியிருந்தது. சுயநலம் தேடுதல், செல்வர்கள் ஏழை எளியவர்களைச் சுரண்டுவதற்கு இட்டுச்சென்றது. இந்த அவலநிலையில் இறைவாக்கினர்களின் குரல் மறைந்து கொண்டே வந்தது. புறச்சடங்கிற்கு முக்கியம் கொடுத்த வழிபாடு வெறுமை மிக்கதாயிற்று. இந்த வருந்தத்தக்க நிலையில் ஞானிகள் மக்களுக்குப் போதிக்க, வழிகாட்டத் தலைப்பட்டனர். இவர்கள் மக்களுக்கு மகிழ்ச்சியும் செழிப்பும் அளிக்கும் உடனடி வழிவகைகளை எடுத்துக்கூறினர். இவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சனைக்குள்ளும் தங்களை வரைப்படுத்திக் கொள்ளவில்லை. இவர்கள் பட்டறிவின் அடிப்படையில் வாழ்வை முழுமையாக நோக்கினர். இவர்கள் மக்களுக்குக் காட்டிய வழி ஞானத்தைத் தேடுவதாகும். மனிதன் தான் வாழும் உலகின் நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு தனது நடத்தையை வெற்றிகரமாக, தனது சொந்த ஆற்றலாலேயே, சரி செய்துகொள்ளக் கூடும் என்று கருதப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், இந்தச் சுதந்தரத்தின் வரையறைகளை ஏற்றுக்கொண்டது ஞானப்பாரம்பரியம் (பழ 16:7.9.33).

பாரம்பரிய யாவே கோட்பாடு- இஸ்ராயேல், ஓர் இனமாக, தன்னையே யாவேயின் திருவுளத்திற்கு அடிபணிய வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இதிலிருந்து பழமொழி நூலில் காணப்படும் மனிதன், தன் பிரச்சினைகளைத் தனது சொந்த ஆற்றலாலேயே தீர்த்துக் கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கை, ஞானபாரம்பரிய வாழ்க்கையின் பால் கொண்டிருந்த வேறுபட்ட மனப்போக்கைக் காட்டுகிறது. இந்த இரண்டு பாரம்பரியங்களையும், யாவே தான் உண்மை ஞானத்தின் ஊற்று என்ற கோட்பாட்டால், ஒப்புரவு படுத்துவது இஸ்ராயேலின் ஞான வளர்ச்சியின் இரண்டாவது கட்டமாகும். இந்த இரு பாரம்பரியங்களுக்கும் முரண்பாடு இருக்கமுடியாது. மனித அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட உண்மைகளுக்கும், குருக்கள், இறைவாக்கினர்கள் வழியாக வெளிப்படுத்தப்பட்ட கட்டளைகளுக்கும் இடையில், முரண்பாடு இருக்கமுடியாது என்ற உணர்வு வளர்ந்தது. இறையச்சம் என்பது ஒழுக்க, சமயக்கூறுகளையெலாம் தன்னுள் அடக்கும் பரந்த கருத்தாகும். இக்கருத்து இரண்டு பாரம்பரியங்களையும் ஒப்புரவாக்குவதில் முக்கிய இடம் வகித்தது. இக்கருத்தை, பழ 13:14; 14:27; 9:10 ஆகிய பகுதியில் காணலாம்.

இவ்வாறு இரு பாரம்பரியங்களையும் ஒருங்கு கொணர்வது, ஞானத்தின் செயல்முறைப் போக்கையும், ஓரளவு ஒழுக்கச் சார்பற்ற பண்பையும் மாற்றியமைத்தது. இதை, ஞானபோதகத்திற்கே உரிய சில சொற்கள் புதிய பொருள் பெறுவதில் காணலாம். இவ்வாறு முன்பு சிறப்புத் தகுதிகளாகக் கருதப்பட்ட தன்னம்பிக்கை, தன்னலம் தேடுதல் ஆகியவை யாவேயின் கண்டனத்தைப் பெறுகின்றன. விரும்பத்தக்க பண்பாகக் கருதப்பட்ட விவேகத்தைக் (5:2) குறிக்கும் எபிரேயச்சொல், 12:2-இல் "தீய சூழ்ச்சி செய்தல்" என்ற பொருளைப் பெறுகிறது. இத்தகைய தன்னம்பிக்கை, தன்னலம் மற்றும் விவேகம் உடையவர்களை யாவே கண்டனம் செய்கிறார். இத்தகைய சான்றுகள், ஞான போதகம் படிப்படியாக, புதிய இறையியல் திருப்பம் பெறுகிறது என்பதைக் காட்டுகின்றன. இந்த மாற்றத்தைப் பழமொழி 10:29 ஐயமறப் பாதித்தது எனலாம்.

இந்தப் புதிய இறையியல் போக்கு, படைப்பு பற்றிய முழு இறையியலுக்கு அடிப்படை வகுத்தது. மனித ஆற்றல்களுக்கும் முயற்சிகளுக்கும் உரிய இடத்தை அளித்தது. ஒருபுறம் மனித அறிவும் வினைத்திட்பமும் இறைவன் அளித்தவையாகையால், நேர்மையானவையாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. மறுபுறம் இறைவனுக்குச் சேவை செய்து பணிந்திருத்தல், மனிதனது எல்லாச் செயல்களுக்கும் பணிச் சட்டமாக அமைகிறது. இந்த உள்நோக்கு ஞானபாரம்பரியத்தில்

மனிதனை மையமாகக் கொண்ட போக்கை மாற்றி அமைக்கிறது. யூதத்துவம் இறையியல் உலகில் தனக்குரிய இடத்தைப் பெறுகிறது.

இந்நூலின் முன்னுரை (1:2-6), அதன் குறிக்கோளைத் தெளிவாய் எடுத்துக்கூறுகிறது. ஞானத்தின் போதனையை ஏற்றுக்கொள்ளும்படி மக்களைத் தூண்டுகிறது. ஆனால், நூல் ஞானத்தைத் தொடர்ச்சியாக, கருத்தியலாக ஆராயவில்லை. அதன் குறிக்கோள் நடைமுறை சார்ந்ததாகும்; பட்டறிவை அடிப்படையாகக் கொண்டதாகும்; பரந்த நோக்குடையதாகும். அதன் போதகமும் விரிவான எடுத்துக்காட்டுதல்களும் விவேகமிக்க ஆலோசனைகளும், அவற்றை ஏற்று நடக்கும் எந்த மனிதனையும் விவேக மிக்கவனாகவும், மகிழ்ச்சி மிக்கவனாகவும், நன்னெறி வாழ்க்கையுடையவனாகவும், வாழ்வில் வெற்றி பெறுபவனாகவும் ஆக்கும் நடைமுறை-ஞானமாகும். இந்நூலில், இஸ்ராயேல் சமயப்பாரம்பரியத்திற்கே உரிய வாக்குறுதி, தேர்வு, உடன்படிக்கைச் சட்டம், மெசியாவில் விசுவாசம் போன்ற கருத்துக்கள் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ஆனால், இவற்றில் தோய்ந்த விசுவாசமுடைய ஆசிரியர்கள் நடைமுறை ஞானத்தை எடுத்துக்கூறுகின்றனர். நூல் முழுவதும் வெளிப்பாட்டின் மறைமுகப் பாதிப்பைக் காட்டுகிறது.

குருக்கள், இறைவாக்கினர்கள் ஆகியோரின் குறிப்பாக, உபாகம ஆசிரியர் எசாயா, எரேமியா ஆகியோரின் போதகங்கள், இந்நூலுக்குப் பின்னணியாக அமைந்துள்ளன. இவற்றின் அடிப்படையில், இந்நூலின் ஆசிரியர், ஒவ்வொரு யூதனும், உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஞானியாவதற்குரிய, பட்டறிவு அடிப்படை கொண்ட நடைமுறை ஞான வழிகளை எடுத்துக்காட்டுகிறார். ஞானத்தால் வழிநடத்தப்பட, தங்களயே அர்ப்பணிக்குமாறு வாசகர்களை அழைக்கிறார் (1:2-7). போதகம், படிப்பு, பயிற்சி, சிந்தனை, தியானம், ஆலோசனை ஆகியவற்றின் உதவியோடு ஞானத்தைத் தேடத் தூண்டுகிறார்.

இதனால்தான் "இளைஞரைப் பயிற்றுவிக்கும் ஞானம்" என்று புனித கிரகோரி நாசியான்சனும், "எல்லா நன்னெறியையும் போதிக்கும் ஞானம்" என்று உரோமையைச் சேர்ந்த புனித கிளமெந்தும் இந்நூலைக் குறிப்பிடுகின்றனர்.

10. இலக்கியச் சிறப்புக்கள்: பழமொழி என்ற சொல்லைக் குறிக்கும் எபிரேயச் சொல் "மாசால்" ஆகும். இதுபற்றி ஞான இலக்கியம் என்ற அதிகாரத்தில் காண்க. இஃது இரண்டு செயல்களுக்கிடையிலோ, பொருட்களுக் கிடையிலோ உள்ள ஒப்புமையை எடுத்துக்கூறுவதாகும். சான்றாக, "சாந்தப்படுத்தும் சொல், வாழ்வெனும் கனிதரும் மரம் போன்றது" (15:4). அறநெறி முறையில் ஒரு காரியத்தைப் பற்றியோ, செயலைப்பற்றியோ, அதன் உள்ளார்ந்த பொருளை வெளிக்கொணர இந்த ஒப்புமை உதவுகிறது. விவிலிய நோக்கில், அனுபவத்தையோ, கவனிப்பையோ அடிப்படையாகக் கொண்டு, ஒப்புமை வழியாக ஓர் அறநெறி அல்லது சமய போதகத்தை எடுத்துக்கூறுவது பழமொழியாகும். அஃது உள்ளார்ந்த ஒற்றுமை வேற்றுமையை எடுத்துக் காட்டுகிறது. வழக்கமாக, நிலையையும் (உணர்ந்த ஒரு நிகழ்ச்சி) எதிர் நிலையையும் (அதன் விளைவு), எடுத்துக்கூறுகிறது. இவற்றைச் சிந்தித்து வாசகர் தனது வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு உடன்நிலையை (போதகம்) அடைய வேண்டும். சான்றாக, "சோம்பேறி- பருவத்தில் உழுது பயிர் செய்யமாட்டான்; அறுவடைக் காலத்தில் விளைவை எதிர்பார்த்து ஏமாறுவான்" (20:4). பழமொழி ஒரு விவசாயச் சூழ்நிலையை எடுத்துக்கூறுகிறது. உழாதவன் அறுவடை பெறான் என்ற உண்மை கவனிக்கப்படுகிறது. அதிலிருந்து எல்லா வாழ்க்கைக்கும் பொருந்தும் ஓர் அடிப்படைக் கருத்து உணரப்படுகிறது. இவற்றைச் சிந்தித்து, வாசகர் தனது சொந்த வாழ்க்கைக்குப் பொருந்தும் உடன் நிலையை உய்த்துணரவேண்டும். இந்த உடன்நிலை எல்லாருக்கும் ஒரே விதமாய் இராது. அவரவரது

சொந்த வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஓரளவு வேறுபடும்.

பழமொழிகள் பெரும்பாலும் குறுகிய வசனக்கூற்றுகளாக அமைந்திருக்கும். பழமொழிநூலின் பெரும்பகுதி இவ்வகைக் கூற்றுகளையே கொண்டுள்ளது. இவற்றைத் தவிர நீண்ட இணைக்கப்பட்ட கூற்றுகளும் உண்டு (1:10-19). இக்கூற்றுகளுக்கு, எகிப்திய மெசபொத்தாமிய இலக்கியங்களில் நீண்ட முன்வரலாறு உண்டு. இவை எபிரேய ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட முன்மாதிரியாக விளங்கின. நீண்ட கூற்றுகள் இலக்கிய முதிர்ச்சியையும் எடுத்துக்காட்டுகின்றன. குறுகிய கூற்றுகள் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். நீண்ட கூற்றுகளைப் போல், இவற்றிலும் இலக்கிய முதிர்ச்சியைக் காணலாம். பழமொழி நூல் வெறும் பொதுப்பாணிக் கூற்றுகளின் தொகுப்பன்று. பழமொழிகள் பொதுப்பாணிச் சூழ்நிலையில் தோன்றியிருந்தாலும், நூலில் இடம் பெறும்போது கலைநயமிக்க இலக்கியப் படைப்புகளாகவே இடம் பெறுகின்றன.

குறுகிய கூற்றுகளை- அறிவிப்புகள், எச்சரிக்கைகள் என இருபிரிவாகப் பிரிக்கலாம். அறிவிப்புகள் வாழ்க்கை அனுபவத்தை எடுத்துக்கூறுகின்றன. ஆனால், எந்தத் தீர்மானத்தையோ படிப்பினையையோ எடுத்துக் கூறுவதில்லை. சான்றாக, "ஒருவனது இன்பமோ, துன்பமோ அவனுடையதே; வேறெனும் அதைத்துய்க்க இயலாது" (14:10). "நம்பிக்கையிலும் துயரமுண்டு; மகிழ்ச்சியை அடுத்து வருத்தம் உண்டு" (14:13). இக்கூற்றின் பயன் இன்ப துன்பம் பற்றிய ஒருவரது அனுபவத்தைப் பொருத்தது.

"கோடைக் காலத்தில் விளைச்சலைக் சேர்த்து வைப்பவன் மதியுள்ளவன்; அறுவடைக் காலத்தில் தூங்குபவன் இகழ்ச்சிக்குரியவன்" (10:5). இஃது ஒரு பொதுச்சூழ்நிலையை எடுத்துக் கூறுகிறது. இப்படிப்பட்ட அறிவிப்புக் கூற்றுகள் ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்களுக்கு இடம் அளிக்க வல்லன. இவற்றிலிருந்து செயல்முறையான அறிவுரைகளை வடித்தெடுக்க முடியும் என்றாலும், சிந்தனையைத் தூண்டுவதே அவற்றின் நோக்கமாகும்.

அறிவுப்புக் கூற்றுகளுக்கு மாறாக, எச்சரிக்கைக் கூற்றுகள் தெளிவான, செயல் முறையான அறிவுரையை எடுத்துக் கூறுகின்றன; கட்டளைத் தொனியைக் கொண்டிருக்கும். சான்றாக, "மூடனை விட்டு விலகிச்செல், அறிவுடைய பேச்சு அவனிடம் ஏது?" (14:7). இத்தகைய கூற்றுகள் கல்விபயிற்றுவிக்கும் சூழ்நிலையில் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. எகிப்தில் நிலவிய "போதகம்" என்றழைக்கப்பட்ட ஞானநூல்களின் பாதிப்பால், இவற்றில் காணப்படும் கட்டளைத்தொனி இப்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப்போதகங்கள், கல்வி பயிற்றுவிக்கும் இலக்கியங்களைச் சேர்ந்தவையாகும். அண்மையில், இத்தகைய கூற்றுகள் இஸ்ராயேலுக்கே சொந்தமான "இன ஞானத்திலிருந்து" தோன்றின என்று கூறுவாரும் உளர்.

குறுகிய கூற்றுகளின் தோற்றம் எதுவாயினும், நீண்ட கூற்றுகள் (அதி. 1-9) எகிப்தியப் பாதிப்பைத் தெளிவாக எடுத்துச் காட்டுகின்றன. எகிப்திய போதகத்தோடு, இவை- நடை, சொற்றொகுதி, சிந்தனையிலும் கூட ஒத்திருக்கின்றன.

III. (10:1-22:16), VII. (25:1-29:17) ஆகிய பகுதிகளில் வரும் பழமொழிகள் சமன் செய்யப்பட்ட ஒருவசனக் கூற்றுகளாகும்; ஒன்றோடொன்று தொடர்பில்லாதவை. தனித்தனியான ஒரு வசனப் பழமொழியே இப்பகுதிகளில் காணப்படும் மரபு. வாய்மை பற்றிய 12:17-23 என்ற பகுதியும், அரசனைப்பற்றிய 16:10-15 என்ற பகுதியும், சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய தொகுப்புகள்

வெகு அரிதாவே இப்பகுதிகளில் காணப்படும்.

இத்தகைய ஒருவசனப் பழமொழிகளில் இரு பகுதியுண்டு. இரண்டும் சமன் செய்யப்பட்ட இணையமைப்புத் தன்மை கொண்டவை. பழ 10:15; 28:29 ஆகிய பகுதிகளில் எதிர்நிலை இணையமைப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. பழ 16-இலிருந்து நேர்நிலை இணையமைப்புக் கூற்றுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பழ 25:26-இல் பாதிக்குமேல் விரிவான உவமைகள் காணப்படுகின்றன. இதில் தொகுப்பு இணையமைப்பு அதிகம் பயன்படுகிறது.

IV (22:17-23:14), V (23;15-24:22),VI (24:23-34) ஆசிய பகுதிகளில் பெரும்பாலான பழமொழிகள் இருவசனக் கூற்றுகளாகும். சில ஒரு வசனக் கூற்றுகளும் உண்டு. சில நீண்ட எச்சரிக்கைக் கூற்றுகளும் உண்டு. சான்று சோம்பேறியின் கதி (24:30-34), குடிகாரனின் துன்பம் (23:29-35).

I (1:1-7), II (1:8-9:18) ஆகிய பகுதிகளில் சமன் செய்யப்பட்ட வசனங்களைக் கொண்ட நீண்ட உரைகள் அதிகம் காணப்படுகின்றன. இவற்றில், ஞானத்தின் வேண்டுகோள்கள் (1:20.33;8) சிறப்பாகக் குறிக்கப்பட வேண்டியவையாகும். தீய பெண்கள் பற்றிய எச்சரிக்கை (அதி. 5), X-இல் வரும் "நல்ல மனையாள்" பற்றிய பாடலுக்கு (31:10-31) இணையானது.

விடுகதையோடு தொடர்புடைய எண்களை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள் VIII (30:1-33)-இல் அடிக்கடியும், 6:16-19-இலும் வருகின்றன.

இவை தவிர இந்நூலில் பல வகையான இலக்கிய வடிவங்களுண்டு. இவை இந்நூல் வெவ்வேறு சூழ்நிலையில் தோன்றியது என்றும், இது பல்வகைத்தொகுப்பு நூலாகும் என்றும் காட்டுகின்றன.

பழமொழிகள் எப்படித் தோன்றினவோ, அதே முறையில் அவற்றை அணுக வேண்டும். முதலில் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய கவனிப்பு, அடுத்து அஃதோடு நேர்நிலை அல்லது எதிர் நிலை, ஒப்புமை உள்ள மற்றொன்றை உய்த்துணர்தல், மூன்றாவது இரண்டையும் இணையமைப்பு முறையில் தொடர்புபடுத்துதல், இறுதியாக ஓர் உண்மை பற்றிய அறிவிப்பு. - இவ்வாறு பலருடைய கவனிப்பும் ஒருவருடைய அல்லது சிலருடைய புத்திக் கூர்மையும் சேர்ந்து இலக்கியக் கலைப்பண்புடைய ஒரு பழமொழியைப் படைக்கின்றன. வாசகர் பழமொழியின் நிலையையும் எதிர்நிலையையும் ஒருங்கு கொணர்ந்து ஒருங்கு நிலையைக் கண்டுணர வேண்டும். பின்பு அது யாவருக்கும் பொருந்தும் உண்மைத் தன்மையை உய்த்துணர வேண்டும்.

வாசகரின் சொந்த அனுபவம் இருவகையில் பழமொழியின் பொருளை விரிவாக்கலாம். ஒன்று பழமொழியின் பொருளை உணர்ந்து அவரது அனுபவத்தை ஆழப்படுத்துதலாகும் (14:13). மற்றது பொது மனிதச் சூழ்நிலை பற்றிய உண்மையாகப் பழமொழியைக் கண்டறிவது (10:5).

பழமொழியின் அமைப்பிலிருந்து, அது நேரடியாகப் போதிப்பதற்கன்று, வாழ்வு பற்றி ஆற்றலுள்ள விதத்தில் சிந்திக்கப் பயன்படும் சாதனமாகும் என்பது தெளிவாகும். சிந்தனையைத் தூண்டுவதே பழமொழியின் முதன்மையான நோக்கம் என்பது முரணான கூற்றுகள் அருகருகே அமைந்திருப்பதிலிருந்து தெரிய வரும். சான்றாக, "மடையனின் கேள்விக்கு முட்டாள்தனமாகப் பதிலுரைக்காதே, உரைத்தால் நீயும் அவனைப்போல் மடையனே! மடையனின் கேள்விக்கு அவனது மடமையை உணர்த்தும் வகையில் பதிலுரை! இல்லாவிடில் அவன் தன்னை ஞானி என்று எண்ணிக்கொள்வான்" (26:45).

மாணவன் அல்லது வாசகர், எது தனக்கும் பொருந்தும் என்று தன்னையே கேட்க வேண்டும். அவர் ஆசிரியரது ஞானத்தைப் பெறும் வெறும் கலமாக இருக்கக்கூடாது. அனுபவத்திலிருந்து

கற்றுக்கொள்ளும் ஆற்றலுள்ள உடன் உழைப்பாளியாகச் செயல்பட வேண்டும். ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே யாருடைய அறிவு வேகமாக வேலைசெய்கிறது என்ற ஒருபோட்டி மனப்பான்மை இருக்க வேண்டும். பழமொழிகள்-கல்விபயிலும் முறையில் அமைய ஒருவர் தனது சொந்த அறிவையும் தீர்மானிக்கும் ஆற்றலையும் கைவிட்டு விடுவதற்காகப் பயன்படக்கூடாது. பழமொழிகளை வாசிப்பது வாழ்க்கை பற்றிய அனுபவமாக அமைய வேண்டும். அவற்றிலிருந்து கற்பதை விட, அவற்றைச் சாதனமாகக் கொண்டு கற்க வேண்டும். ஏனெனில் மொழியின் தூண்டும் ஆற்றல் வழியாக, அவை எடுத்துக் கூறும் உண்மையை அடைய வேண்டும். தனி நபருக்கு எடுத்துக் கூறப்பட்டாலும், அதே சூழ்நிலையிலுள்ள எவருக்கும் பழமொழியின் செய்தி பொருந்தும். மனித சூழ்நிலைபற்றிய உணர்வைத் தூண்டும் இயற்கையையும், மனிதர்களையும் பற்றிய அனுபவ அறிவை வளர்க்கும்.

11. **பகுப்பாய்வு: I, II** பகுதிகள் (1:1-9:18): நூலின் இம்முன்னுரைப் பகுதிகள் அமைப்பிலும் சிந்தனைப் போக்கிலும், மற்றப் பகுதிகளிலிருந்து வேறுபட்டுத் தனித்து நிற்கின்றன. மற்றப் பகுதிகள் எந்தத் தெளிவான திட்டமுமின்றித் தொகுக்கப்பட்டுள்ளன. மாறாக, இப்பகுதி ஒரு கட்டுரைபோல் வாக்குகளை ஒன்றிணைக்கிறது. இப்பண்பை 1:10-19.20-23; 2:1-22; 4:1-27; 5:1-23; 6:20-35; 7:1-27; 8-9 ஆகியவற்றில் சிறப்பாகக் காணலாம். இப்பகுதி ஞானத்தைத்தேடி அடையும்படி தந்தை மகனுக்கு விடுக்கும் அழைப்பையும், ஆட்தன்மைப் படுத்தப்பட்ட ஞானம் விடுக்கும் அழைப்பையும் தலைப்பாகக் கொண்டுள்ளது. ஆசிரியர் மாணவனுக்கு அளிக்கும் அறவுரையாக உள்ள இப்பகுதி, மாணவனைக்கெட்ட தோழர்களிடமிருந்தும் (1:10-19), தீய பெண்களிடமிருந்தும் (5:1-23; 6:20; 7:27) காப்பதிலும், ஞானவழிபாட்டை அவனது இதயத்தில் வளர்ப்பதிலும் கருத்தைச் செலுத்துகிறது. ஞானத்தின் பயன் (2:1-22), அதைத்தேடி அடைவது (3:1-35), அதனால் வரும் நன்மைகள் (4:1-27) ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறது. ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானத்திற்கும் மதிகேடுடைய பெண்ணுக்குமிடையேயுள்ள எதிர்நிலை (9:1-6.13-18) நூலில் காணப்படும் உயிர்ச்சித்திரமான உருவங்களில் ஒன்றாகும். ஞானம் யாவேயின் உடைமையாகும்; படைப்பில் அவரது ஊழியனாகும் (8:22-31). அதன் தன்மையை விவரிக்கும் சொல், 8:30-இல் தெளிவில்லாமல் இருக்கிறது. அதைச் சிற்பி, தலை சிறந்த வேலையாள், செல்லப்பிள்ளை, தத்துப்பிள்ளை என்று பலரும் பலவாறு மொழிபெயர்த்துள்ளனர். பழ 8-இல் காணப்படும் ஞானம் பற்றிய விவரிப்பு-யோபு 28; சீரா 24; ஞானம் 7 ஆகிய பகுதிகளில் காணப்படும் விவரிப்புகளுக்கு இணையானதாகும்.

தந்தை அளிப்பதாக அமைந்துள்ள இந்த அறிவுரைகளின் ஆசிரியர், எந்த அயல் நாட்டு ஞானபாரம்பரியத்தையும்விட விவிலிய பாரம்பரியத்துக்கு நெருங்கியவராகத் தோன்றுகிறார். அவர் வாழும், சிந்திக்கும், தியானிக்கும் கருத்தியலான சூழ்நிலை, காலத்தால் முந்திய பழைய ஏற்பாட்டு நூல்களில் காணப்படும் கோட்பாடுகளையே பின்னணியாகக் கொண்டுள்ளது. பிரமாணிக்கம் (4:11), இரக்கம் (3:27-30), பணிவு (1:8; 5:13), பேராசை (1:19), வன்முறை (1:11.16; 3:29-31), தீயதோழமை (1:10:16), தீயநடத்தை, விபசாரம் (2:6-19; 5:3-23; 6:20-35), அறிவு, விவேகம், இறையச்சம் ஆகியவை பற்றிய அறவுரைகளில் முற்கால இஸ்ராயேலின் பாரம்பரியத்தையே ஆசிரியர் பின்பற்றுகிறார் (1:1-7).

மேலும், பழமொழிநூல் ஆசிரியர் வெவ்வேறுபட்ட முறையில் உபாகமம், எரேமியா, இரண்டாம் எசாயா ஆகிய நூல்களைப் பயன்படுத்தியுள்ளார். இவர் இவற்றின்

வாசகங்களை அப்படியே எடுத்தாளவில்லை; தமது நோக்கத்திற்கு ஏற்ப வாசகங்களைத் திருத்தி அமைத்துள்ளார். இந்தப் பழம்பெரும் மூலங்களின் கூறுகளை அறிமுகம் செய்து, தனது இலக்கிய அமைப்புக்குள் ஏற்றுள்ளார். இவ்வாறு தனது இனத்தின் தனித்தன்மைக்குப் பணிகிறார். இந்த இனத் தனித்தன்மை, கவனமான உணர்வுகளால் எப்போதும் பாதுகாக்கப்பட்டு, கோட்பாட்டு வளர்ச்சியைத் தூண்டியுள்ளது. இத்தகைய பண்பை "மிட்ராஸ்" இலக்கியங்களில் காணலாம். இப்படிச் செய்யும்போது, ஆசிரியர் கடந்த காலத்திலிருந்து முறித்துக் கொள்ளாமல், ஒரே உயிருள்ள சிந்தனைப் போக்கில் ஒன்றியைந்த ஒருமைப்பாட்டோடு கோட்பாட்டு வளர்ச்சியைத் தூண்டுகிறார்.

இத்தொகுப்பு காலத்தால் பிந்தியது; கி.மு. 4-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதன்று. இறுதிப் பதிப்பாசிரியர் இப்பகுதிக்கு இப்போதுள்ள இறுதி வடிவத்தை அளித்து, நூலுக்கு முன்னுரையாக அமைத்துள்ளார். விவிலிய ஞான இலக்கியங்களுள், பழமொழி நூல்- காலத்தால் முந்தியதாகும். முற்கால அறவுரைகளின் தொகுப்பாகும். இறுதிப் பதிப்பாசிரியரின் வேலைப்பாடான இந்த முன்னுரை (1-9) கடந்தகால மரபுரிமையை மதிப்பீடு செய்வதோடு, அதற்கு ஒரு புதிய ஒன்றிப்பையும் போக்கையும் அளிக்கிறது.

III. (10:1-22:16) என்ற பகுதி, சாலமோனின் நீதி மொழிகளைக் கொண்ட முதல் தொகுப்பாகும். 375 வாக்குகளைக் கொண்டது. இப்பகுதி திட்டமிட்டு அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இரத்தினங்களை அடுக்கி வைப்பதுபோன்ற அமைப்பைக் கொண்டுள்ளது. இவற்றில் ஆசிரியரது கவனிக்கும் ஆற்றல் சிறப்புப் பெறுகிறது. இவற்றில் மதிப்பீடுகள் இல்லை. அனுபவத்தை எடுத்துக் கூறுவதோடு ஆசிரியர் நிறைவு பெறுவதாகத் தெரிகிறது.

இப்பகுதியில் பல இரட்டிப்பு வாசகங்கள் உண்டு. இஃது ஆசிரியரின் கவனமின்மையைச் சுட்டலாம். ஆனால், இக்கூற்றுகள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் காணப்படுவது - ஆசிரியர் பயன்படுத்திய ஏற்கெனவே இருந்த பல மூலங்களிலும் இவை காணப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. இப்போதுள்ள வடிவில், இப்பகுதி ஒருவேளை நாடுகடத்தலுக்கு முந்தியதன்று. இதன் முதல் தொகுப்பு ஒருவேளை சாலமோனின் காலத்திலேயே செய்யப்பட்டிருக்கலாம். பழமொழி நூலில் இத்தொகுப்புதான் காலத்தால் முந்தியதாகும்.

இப்பகுதியில், மதிப்பீடு செய்தல் அதிகமில்லை எனினும், சிலகூற்றுகள் தீர்ப்புக்குறிப்பைக் கொண்டுள்ளன. திறன் ஆய்வுமுறையும் இக்கருத்துக்கு ஆதரவு அளிக்கிறது. நன்மை - தீமையையும், ஞானிமூடனையும் ஆசிரியர் தெளிவாக வேறுபடுத்துகிறார். ஆசிரியர் பலவற்றை எடுத்துக்கூறி, இந்த வேறுபாட்டை வெளிப்படுத்துகிறார். இவற்றை எதிர்நிலை இணையமைப்பு வாக்குகளில் எடுத்துக்கூறுகிறார் (10:3.6.7; 21:26). நல்லோர்களைப் பற்றிய போற்றுரை (10:31-32. 12:5.15.16: 15:18; 19:11), எடுத்துக்காட்டான பிள்ளைகள் (10:1; 15:20), ஞானமும் அடக்கமும் உள்ள பெண்கள் (11:16; 18:22; 19:14), தீயபெண்கள் (12:5-17; 13:5-10; 16:28-29; 21:14), அடங்காத பெண்கள் (11:22; 19:13; 21:9.19), அவமானமும் சாபமும் கொண்டுவரும் தீய பிள்ளைகள் (19:26; 20:20) ஆகியவர்களைப் பற்றிய விவரிப்புக்கள் கவனிக்கத்தக்கன. தீயபெண்கள், அடங்காத பெண்கள் ஆகியோரின் திரையை ஆசிரியர் இரக்கமற்ற முறையில் கிழிக்கிறார்; கண்டனம் செய்கிறார். பாவங்களைக் கண்டம் செய்தல் உயிர்ச்சித்திரமாக வடிவெடுக்கின்றது. சான்றுகள்; அகந்தை (6:17; 11:2.13; 10:15. 25; 16:18), பேராசை (15:27; 23:4-5; 10:12; 11:4. 28), பொறாமை (14:30), பெருந்தீனி உண்டல் (23:29-35; 21:17), கோபம் (15:18), காமம் (5:1-14; 6:20; 7:27) சோம்பல் (6:6-11; 10:4-5) என்பன.

IV, V (22:17-24:22): "ஞானிகளின் கூற்று" என்ற தலைப்பு 22:17-இன் ஒரு பகுதியாக மாறிவிட்டது. இத்தொகுப்பிலும் எத்தகைய திட்டமும் இல்லை. இப்பகுதி அயலார்பால் கொள்ள வேண்டிய கடமையையும், மட்டுடைமையின் ஒழுங்குகளையும் வலியுறுத்துகிறது. இதில் நேர்நிலை இணையமைப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. சில- இருவசன அடியையுடையன; மற்றும் சில- நீண்டவை. இத்தொகுப்புகளுக்கும், எகிப்திய அமென்-எம்-ஒப்பேயின் போதகத்திற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. இந்த எகிப்திய ஞானி தனது நூலை "30 வாக்குகள்" என்றழைத்தார். பழ 22:20-இல் "30 மொழிகள்" என்று குறிக்கப்படுகின்றது. பொருளடக்கத்தில் இரண்டு நூல்களும் முழுவதும் ஒத்திருக்கவில்லை. ஆனால், இரு நூல்களிலும் சில பகுதிகள் அப்படியே உள்ளன. இஃது இரண்டிற்கும் பொதுவான மூலம் இருந்திருக்கக் கூடும் என்பதைச் சுட்டுகின்றது.

இப்பகுதி நல்ல எடுத்துக்காட்டான அதிகாரிகளைப் பயிற்றுவிக்கும் நோக்கம் கொண்டது. பலவகையான, செயல்முறை ஆலோசனைகள் கூறப்படுகின்றன. நேர்மைமிக்க மனிதன் (22:22-23; 23:10-11), நல்ல பழக்கமுள்ள நண்பன் (23:14-22; 23:1-2), மட்டுடையவன் (23:20-21.29-35), ஒழுக்க வாழ்வுடையவன் (23:26-28) ஆகியவர்களின் பண்புகள் அரியணைக்குரியவனிடம் காணப்படவேண்டும்.

VI (24:23-34) என்ற ஞானிகளின் கூற்றுகள் அடங்கிய பகுதி சோம்பலுக்கு எதிராகச் செயல்திறனை வலியுறுத்துகிறது.

VII (25:1-29:17) என்ற சாலமோனின் இரண்டாம் தொகுப்பு எசேக்கியாவின் காலத்தில் தொகுக்கப்பட்டதாகத் தெரிகிறது. III-ஆம் பகுதியைப் போல், பல்வேறு தலைப்புகளையும், பல இலக்கிய வடிவங்களையும் கொண்டது. இதில் 128 வாக்குகள் அடங்கியுள்ளன. அதி. 28:29-இல் காணப்படும் சமயம், சட்டம் ஆகியவை பற்றிய அக்கறை, இப்பகுதி காலத்தால் முந்திய தனிப்பட்ட தொகுப்பாக இருந்திருக்கலாம் என்று கருதத் தூண்டுகிறது.

VIII (30:1-33), **IX** (31:1-9) ஆகிய பகுதிகள் ஆகூர், இலெமுவேல் ஆகியோரின் கூற்றுகளைக் கொண்டுள்ளன. (இங்கே, ஒரு குறிப்பு அவசியமாகிறது. நம்மிடையே இதுவரை பழக்கத்திலுள்ள கத்தோலிக்க விவிலிய தமிழ் மொழிபெயர்ப்பு, வுல்கத்தா வாசகத்திலிருந்து செய்யப்பட்டது. அதில் ஆகூர் என்ற சொல் ஓர் ஆளின் பெயராக எடுத்துக்கொள்ளப்படாமல், பொதுப்பெயராக எடுத்துக்கொள்ளப்பட்டு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு "மாசாவைச் சார்ந்த யாக்கேயின் மகனான ஆகூரின் வார்த்தைகளாவன" என்பது, "கக்குகிறவனின் புதல்வனான, சேகரிப்போனின் வார்த்தைகளாவன" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (30:1). ஆகூர் என்ற சொல்லை ஓர் ஆளின் பெயராக எடுத்துக்கொள்வதே சரியானதாகும்). ஆகூரின் கூற்றுகள் சிறிது கரடுமுரடானவை. அவற்றில் சமயப்பண்பு காணப்படுகிறது. அஃது இயற்கையால் உந்தப்பட்டு, செபத்தில் மலரும் விசுவாசமாகும். எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள எபிரேய வாக்குகள் (30:18-33) பழமொழி நூலுக்கு மட்டும் உரியவையன்று (யோபு 5:19; மீக் 5:4; திருவுரை 111:2; சீரா 23:6; 25:7; 25:5.19). இவ்வகை இலக்கிய மரபு, கவனத்தைக் கவரவும், ஞாபகத்திற்கு உதவவும் பயன்பட்ட யுக்தியாகும். இலெமுவேலின் கூற்றுகள் அரசனுக்கு அளிக்கப்படும் ஆலோசனைகளாகும்.

X (31:10-31) என்ற அகரவரிசைப் பாடல் நல்ல மனையாளைப் போற்றுகிறது; உயர்ந்த, ஒழுக்க, சமய நிலையினை உடையது. ஆசிரியர் தம் காலத்து மக்களிடையிலிருந்து இச்சித்திரத்தை வரைகிறார். இப்பாடல் - ஞானிகள், வாழ்க்கைச் சூழ்நிலையைக் கூர்ந்து கவனிக்கக் கூடியவர்கள்,

ஊடுருவிப்பார்க்கும் உளவியல் அறிவுடையவர்கள், யாவர்க்குமுரிய விதத்தில் ஓர் எடுத்துக்காட்டான சொல்லோவியத்தை வரையக் கூடியவர்கள் என்பதைக் காட்டுகிறது.

12. **சிறப்புக்கருத்துக்கள்:** விவிலியத்தின் பெரும்பான்மையான நூல்கள் இறைவனின் அழைப்போடோ, அவரது உடன்படிக்கையோடோ, அவர் மக்களுக்கு அளிக்கும் செய்தியோடோ, தொடங்குகின்றன. ஆனால், பழமொழி நூல்-உலகைப் பற்றிய காட்சி அறிவோடு தொடங்குகிறது. பழங்கால ஞானிகள் இவ்வுலக வாழ்வின் வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி காட்டுவதிலும் அவற்றிற்குரிய சாதனங்களைக் கற்பிப்பதிலும் அக்கறை கொள்கின்றனர். இதற்காக, வாழ்க்கைச் சூழ்நிலையைக் கூர்மையாகக் கவனித்தனர், படித்தனர். ஏன் சிலர், வாழ்வில் வெற்றி பெறுகின்றனர்? மற்றும் சிலர் வெற்றி பெறுவதில்லை என்பவை பற்றித் தாங்கள் கற்றறிந்தவற்றைத் திட்பநுட்பக் கூற்றுகளிலும் மேற்கோளுரைகளிலும் எடுத்துக்கூறினர்.

இந்நூலில் நாம் இறையனுபவ இறையியலைக் காணமுடியாது; சமயம் புறச்சடங்குகள் பற்றிய கூற்றுகளும் அதிகம் இல்லை; கொள்கை அடிப்படை கொண்ட ஒழுக்க இயல் இல்லை. இதில் காணப்படும் ஞானம் இறைவெளிப்பாட்டின் விளைவன்று, பட்டறிவின் விளைவாகும். இதில் விவேமிக்க பொது அறிவைக் காணலாம். இந்நூலின் ஆசிரியர் முழுவதும் இவ்வுலகைச் சார்ந்தவர். அவருடைய கூற்றுகள் அன்றாட அனுபவத்தைச் சார்ந்தவை. இயற்கையின் ஒழுங்கமைப்பையும், செயலுக்கும் அதன் விளைவுக்குமிடையேயுள்ள தொடர்பையும் கண்டுணர்ந்தவர். இவற்றின் அடிப்படையில் தேர்வுசெய்து முடிவெடுத்து, தன் மேற்கோளுரைகளுக்கு இலக்கிய வடிவம் கொடுத்தார். காட்சியறிவின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இவ்வித மேற்கோளுரைகளையே இந்நூல் பெரும்பாலும் கொண்டுள்ளது. இந்தப் பட்டறிவு ஞானத்தைப் படித்து, அதைத் தனதாக்கித் தன் வாழ்வில் பயன்படுத்தும் மாணவன், தன் வாழ்வில் நேரிய முடிவுகள் எடுப்பதில் வல்லவன் ஆவான்; ஞானி ஆவான். படிப்பு, போதகம், கட்டுப்பாடு, சிந்தனை, தியானம் ஆகியவற்றின் உதவியால் ஞானத்தைத் தேடும்படியும் அதனால் நடத்தப்பட்டு வாழ்வை அமைத்துக் கொள்ளும்படியும் மாணவனைத் தூண்டுகிறார் ஆசிரியர் (1:2-7).

12. அ) **உலகில் ஒழுங்கமைப்பு:** விவிலியத்தின் பெரும்பாலான நீதிமொழிகள் நேர்மையான மற்றும் நேர்மையற்ற செயல்களைப் பற்றியவையாகும். சில பகுதிகளில் ஞானிகள் தங்களது, ஆசிரிய, ஆலோசனை அளிக்கும் தொழிலையும் கடந்து, தங்களது போதகத்திற்குப்பின் நிற்கும் முன் கருத்துக்களையும் எடுத்துக் கூறுகின்றனர். உலகைப் படைக்கும்போது இறைவன் ஞானத்தைப் பயன்படுத்தியதால், உலகம் ஒழுங்கமைப்புடையதாக இருக்கிறது. படைப்பின் தொடக்கத்தில் உலகம் "உருவமற்றதும் வெறுமையுற்றதுமாய்" இருந்தது. இறைவன் உலகிற்கு அமைப்பு அளித்தார். அந்த அமைப்பு நல்லதெனக் கண்டார் (ஆதி 1). உலகினுள் ஞானம் புகுத்திய ஒழுங்கமைப்பை நாம் காணலாம். ஞானத்தைப் பின்பற்றி இந்த ஒழுங்கமைப்பை அறிந்து கடைப்பிடித்தால், நமது வாழ்வை என்ன செய்வது என்றும், எப்படி முடிவுகள் எடுப்பது என்றும் அறிவோம். இயற்கை உலகு ,ஞானத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மனிதன் தன் வாழ்வை ஞானத்தால் ஒழுங்குசெய்யக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இஸ்ராயேலில் அரசாட்சி நிறுவப்படுமுன், கேட்கும் முறையில் இறைவன் சாமுவேலிடம் பேசினார் (1 சாமு 3). முக்கிய முடிவுகள் எடுக்குமுன், மக்கள் திருவுளச் சீட்டால் அவரது விருப்பத்தை அறிய முயன்றனர். தகனப் பலியால் அவரைத் திருப்தி செய்தனர் (1 சாமு 13:14). இறைவனைப் பற்றிய இந்த உறவுத் தன்மையுடைய - ஆனால் நிறைவற்றபோக்கு

ஞானிகளின் போதகத்தில் காணப்படவில்லை. படைப்பின் ஒழுங்குநிறை செயலாற்றலைக் கூர்ந்து கவனித்து, அதில் தான் இறைவனது தன்மையையும் திருவுளத்தையும் கண்டுணர்ந்தனர். அவர் உலகைப் படைத்தார். ஞானத்தால் உலகில் ஒழுங்கமைப்பை நிறுவிய அவர், மனிதனுக்கும் ஞானத்தை அளித்துள்ளார். அவன் இந்த ஒழுங்கமைப்பைக் கற்று, தனது வாழ்வை நடத்தவேண்டிய முடிவுகளை எடுக்க வேண்டும். தனது பிரச்சனைகளைத் தானே தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்து இக்காலத்தில் சமயச் சார்பற்ற போக்கிற்கு இணையானதாகத் தோன்றலாம்.

உலக ஒழுங்கமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஞானிகளின் ஒழுக்க போதகச் செயல்முறையானது, கருத்தியலானது அன்று; புரிந்துகொள்ள எளியது. ஒருவன் ஞானியாய் இருந்தால் அவன் வாழ்வைக் கூர்ந்து கவனிக்கிறான். முதியோரின் போதனையை ஆவலாய்க் கேட்கிறான். அதன் விளைவாக நேர்மையானதையே செய்யக் கற்றுக் கொள்கிறான். இறைவன் வெற்றியை அவனுக்குக் கைமாறாகத் தருகிறார். ஆனால், ஒருவன் மூடனாகவோ சோம்பேறியாகவோ இருந்தால், அவனை இறைவன் தண்டிப்பார். அவனது துன்பம் பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும். இந்த நியதியிலிருந்து தப்ப முடியாது. படைப்பில் ஞானத்தால் நிறுவப்பட்டு உலகில் காணப்படும் ஒழுங்கமைப்பால் இந்நியதி அமைகிறது. இவ்விதம்தான் தொடக்கம் முதல் உலகம் அமைந்திருக்கிறது. இந்த அமைப்புக்கு இரு அடிப்படை உண்டு. ஒன்று, துன்பமாய் இருப்பதைவிட மகிழ்ச்சியாய் இருப்பதே மேல் என்ற பொது அறிவு உந்து காரணமாகும். மற்றது, எந்தச் செயல்கள் – மகிழ்ச்சிமிக்க, வெற்றிகரமான வாழ்வைத் தருகின்றன என்பது பற்றிய கூரிய காட்சியறிவாகும்.

ஆ) வெற்றிவாழ்வு: இந்நூலைக் கவனமாகப் படித்தால், ஞானிகள் எப்படி மனித நடத்தையையும், அதன் செயல்முறைப் பண்பையும் கூர்ந்து கவனித்துள்ளனர் என்பது தெளிவாகும். வாழ்வில் வெற்றி பெறுவதற்குரிய எல்லாக் கூறுகளையும் பகுதிகளையும் கூர்ந்து கவனித்து, தங்கள் மேற்கோளுரைகளை அமைத்தனர்.

வாழ்வில் வெற்றிபெற ஞானத்தைத் தேடுகிறவனுடைய தலையாய பண்பு- கடின உழைப்பாகும். அஃது இன்றி ஒருவன் வெற்றிபெற முடியாது (பழ 12:24). சிறிது நேரத்துக்குச் சோம்பலாய் இருப்பதுகூட அழிவில் முடியும் (6:9-11). வேலையைத் தட்டிக் கழிக்கக் கூறும் எந்தச் சாக்குப் போக்கும் மிகுந்த மூடத்தனமாகும் (26:13). செல்வர்களுக்கும் வறியவர்களுக்குமிடையேயுள்ள முதன்மையான வேறுபாடு கடின உழைப்பாகும். தொழில் வெற்றி கொள்வதைப் பாதிக்கும் மற்றக் கூறுகளும் உண்டு. ஆகவே, திட்டம் செய்வது முக்கிய மானதாகும். அஃதோடு துணிவும் முயற்சியும் அவசியமாகும் (11:16; 21:15). ஊழியர்களைக் கவனமாய்த் தேர்ந்தெடுப்பது தொழிலில் வெற்றி பெறுவதற்கு மிக அவசியமாகும் (10:26; 26:6). காரியங்களைச் செய்வதில் முரட்டுத்தனமான பலத்தைவிட, அறிவுக் கூர்மையும், ஆழ்ந்த சிந்தனையும் கொண்ட செயல், நல்ல பயன் அளிக்கும் (24:5-6). வாழ்வில் நேர்மை மிக அவசியம். ஏமாற்றுதல் உடனடியான பயனைத் தருவதுபோல் தோன்றலாம். ஆனால், அது சாதாரணமாய்த் தொல்லையையே பின்பு கொணரும் (20:17). ஆகவே, கடினமாய் உழை; முன்னோக்குத் திட்டம் செய்து செயல்படு; சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நேர்மையைக் கடைப்பிடி; அப்போது "நீ வாழ்வில் வெற்றி பெறுவாய், வளம் பெறுவாய்" எனப் பழமொழி படிப்பிக்கின்றது.

வாழ்வில் வெற்றிபெற, கடின உழைப்பும் செல்வமும் மட்டும் போதா. நல்ல நண்பர்களும், சமூகத்தில் மேன்மையும் கொண்டிருப்பது அவசியமாகும். ஞானத்தைத்தேடுபவன்

சமூகத்திலும் தன் குடும்பத்திலும் நல்ல உறவுகளை அமைத்து அவற்றை வளர்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்துவான். பிறரோடு நல்லுறவு கொண்டிருத்தல் வெற்றியின் அடையாளம் மட்டும் அன்று; அவனது நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும் உதவுகிறது. தனது வாழ்வில் தோழர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். என்று உணர்ந்து ஞானி, தீய தோழமையை நீக்கி, நல்ல நட்பை வளர்ப்பதில் கவனமாய் இருப்பான் (20:20-21: 22:24-25; 27:10).

நல்லவர்கள்பால்கூட ஞானி கவனமாய் இருக்க வேண்டும். இல்லையெனில், பல பிரச்சினைகளுக்கு உள்ளாவான். விரைவில் நட்புக்கொள்ளக்கூடாது. பலரோடு நட்பு கொள்ளக்கூடாது. உறவு முறியும் அளவுக்குப் பிறர் மேல் நட்பைச் சுமத்தக்கூடாது (25:16-17). நண்பர்களுக்கிடையே நேர்மை அவசியம் (24:26). நல்லுறவுக்கு ஊறுவிளைப் பனவற்றைப் புறக்கணிக்க வேண்டும். இவற்றையெல்லாம் விட – ஞானி வாதம் செய்தல், கதை பேசுதல், சில்லறைப் பூசல்களில் ஈடுபடுதல் போன்றவற்றைத் தவிர்ப்பான் (26:20-22). நல்ல உறவுகளை ஏற்படுத்தி, அவற்றைப் பாதுகாப்பது ஒரு பெரும் கலையாகும். எப்போது பேச வேண்டும், எப்போது பேசக்கூடாது, எப்போது ஆறுதல் அளிப்பது, எப்போது கண்டிப்பது போன்றவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். சில சமயங்களில் நண்பர்களைத் திருப்திப்படுத்துவது தான் மிகச்சிறந்தது (16:24). மற்ற நேரங்களில் பொதுவாக, நேர்மையோடு நடந்து கொள்வது அவசியம். ஞானத்துடன் தேர்ந்தெடுத்த உண்மையான நண்பனிடம் தாராளமிக்க பிரமாணிக்கம் காட்ட வேண்டும் (3:28; 11:13; 13:20; 22:4; 25:9; 27:10). பிறரோடு கொள்ளும் உறவில் ஏமாற்றுவதைவிட நேர்மையை எப்போதும் தேர்ந்து கொள்ள வேண்டும் (27:5; 26:23).

திருமணமானவர்கள் ஒருவர்க்கொருவர் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் (5:5-21). குடும்பத்தலைவன் தன் குடும்பத்திற்கு வேண்டியவற்றையெல்லாம் தேடிக்கொடுக்க வேண்டும் (27:23-27). நல்ல மனையாளுடைய பெருமையை அளவிட முடியாது (12:4; 14:1;31:10-31). அறிவில்லாத மனையாள் (14:1), தீய மனையாள் (7:6-23; 12:4), சண்டை போடுபவள் (19:13; 21:9; 25:24; 27:15-16) ஆகியவர்களால் ஒருவனது மகிழ்ச்சி பாழ்படும். மனிதன் விழக்கூடிய மிகக் கேவலமான சிக்கல் –விபசாரமாகும். அது மேன்மை மிக்கவர்களையும், வெற்றியுடையவர் களையும் வீழ்ச்சியுறச் செய்யும். விலை மகளோடு செய்யும் விபசாரம்– கெட்டதாகும். திருமணமான பெண்ணுடன் செய்யும் விபசாரம்– அதைவிடக் கொடியது (6:26-29.34). ஒருவன் அடுத்தவனது மனைவியிடம் இன்பம் காண்பது தவறாகும். தன் சொந்த மனைவியிடம் பகிர்ந்து கொள்ளும் அன்பில்தான் உண்மையான இன்பத்தைக் காண வேண்டும் (5:18-20).

நல்ல நண்பர்கள், கற்புடைய வாழ்வு, நல்ல பிரமாணிக்கமுள்ள மனைவி ஆகியவர் இருந்தும் கூட, குழந்தைகள் இல்லையெனில், மனித வாழ்வு குறையுடையதே. ஞானியின் வாழ்வு நல்ல குழந்தைகளால் நிறைவு பெறுகிறது. அவர்களின் கல்வி வாழ்வு முழுவதும் நீடிப்பதாகும் (22:6). அன்பு செய்யும் தந்தை தன் பிள்ளைகளைக் கண்டித்துத் தண்டித்துத் திருத்துவான் (13:24; 23:13-14). நற்போதனையாலும் கட்டுப்பாட்டாலும் பிள்ளைகளைச் சரியாக வளர்த்தால், அவர்கள் தந்தையின் முதுமையில் பெருமை கொண்டு வருவார்கள். விருப்பம்போல் நடக்கவிடப்பட்ட மகன் தன் குடும்பத்திற்கு இழிவையும் கெட்ட பெயரையும் கொண்டு வருவான் (29:15.17). பிள்ளைகள் பணிவுள்ளவர்களாக இருக்கவேண்டும் (6:20-23:22); இதனால் பல துன்பங்களைத் தவிர்ப்பார்கள் (19:26; 20:20; 28:24). பிள்ளைகள் தங்களுக்கு அளிக்கப்படும் போதகத்தில் கவனம் செலுத்தவேண்டும்; பிறரிடமிருந்து கற்றுக்கொள்ளும் திறந்த மனது

கொண்டிருக்க வேண்டும். அப்போது ஒருவன் வாழ்வுக்கலையில் வெற்றி பெறுவான் (26:11; 27:17).

செல்வம், நல்ல நண்பர்கள், நல்ல குடும்பம் ஆகியவற்றோடு வாழ்வில் வெற்றி பெற விரும்பும் ஞானி, சில மனப்போக்குகளையும் குணவியல்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். கடின உழைப்பு நல்லது; ஆனால், பேராசை கொள்ளக்கூடாது. அது துன்பத்தைக் கொண்டு வரும். ஒருவன் தான் உழைத்துச் சேகரிப்பதோடு மனநிறைவு கொள்ள வேண்டும். பெறத்தூண்டும் பேராசை எப்போதும் துன்பத்திற்கு இட்டுச் செல்லும் (15:27; 23:4-5; 10:22; 11:4.28). பிறர் தீமை செய்தால் சினம் கொள்ளக்கூடாது. ஏனெனில், அஃது ஒருவனை மேலும் சண்டை சச்சரவுகளில் சிக்க வைக்கும்; பூசல்களுக்கு இட்டுச்செல்லும் (15:18; 25:21-22; 26:21; 29:22; 30:33). தானே பெரியவன் என்னும் மமதையுடையவரையாரும் விரும்ப மாட்டார். அகந்தையும் வீண்பெருமை பாராட்டுவதும் பிறரது வெறுப்பையே பெற்றுத்தரும் (6:17; 11:2; 13:10; 15:25; 16:18; 25:6-7; 29:23). தன்னடக்கம் ஒருவனது ஆளுமையைச் சிறப்பித்துக்காட்டும் (25:6-7). தன்னையே பெருமைப்படுத்துபவன் மட்டுடையவனாக இருப்பது கடினம் (27:21). சோம்பல் (6:6-11; 10:4-5; 24:30:34; 26:13-16), குடிப்பழக்கம் (21:17; 23:29-35), காமம் (5:1-14; 6:20-7:27), பொறாமை (14:30) முதலியவற்றை ஞானி முழுவதும் தவிர்க்க வேண்டும். எல்லாவற்றிலும் ஞானி தன்னையே கட்டுப்படுத்துவான் (25:28). நேர்மையான சிந்தனையே விரும்பத்தக்க மன நிலையாகும். ஏனெனில், ஒருவன் வாழ்வை நோக்கும் முறை அவனது உணர்வையும் மன நிலையையும் அமைக்கிறது (17:22).

இறுதியாக ஒருவன் வாழ்வில் உண்மையிலேயே வெற்றியடைய வேண்டுமென்றால், அவன் சமயப்பற்றுள்ளவனாக இருக்க வேண்டும். எல்லா நன்மைகளும் இறைவனிடமிருந்தே வருகின்றன. ஆகவே, அவர் வெறுப்பதையெல்லாம் தவிர்க்க வேண்டும். அவருக்கு விருப்பமானவற்றையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் (11:1; 12:22; 15:3-8; 16:1-9). ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் (1:7; 14:2). அதுவே வாழ்வின் ஊற்று; மகிழ்ச்சியின் உறுதி (12:28; 14:27; 16:20; 18:10; 29:6.25). ஞானி சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; நேசிக்க வேண்டும் (29:18). நீதியையும் பிரமாணிக்கத்தையும் உயர்வாகக் கருத வேண்டும் (21:3). சமய உணர்வும் இறைவனை வழிபடுதலும் வாழ்வில் வெற்றி பெற மிக அவசியமானவை யாகும். இறைவழிபாட்டை ஒதுக்குபவன் வீம்புடையவனாக, ஆணவம் மிக்கவனாக இருப்பான். முதியோரையும் பாரம்பரியத்தையும் மதியான். பல தவறுகளில் வீழ்வான் (24:16). அவனது வாழ்வு பல சோதனைகளுக்கு உள்ளாகும்.

இறைவனே வாழ்வின் மேலாண்மை மிக்க தலைவரானாலும் (16:1-33), பெரும்பாலும் நாமே நமது வாழ்வுக்கு வடிவம் கொடுக்கிறோம். நாம் அடையும் மகிழ்ச்சிக்கும் துன்பத்திற்கும் நாமே பொறுப்பாளி. வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் தடைகளை நீக்கி, வெற்றிப்பாதையில் இட்டுச் செல்வதே இந்நூலின் நோக்கம்.

இந்த அறிவுரைகளையெல்லாம் கடைப்பிடிப்பவன் நீடிய ஆயுளையும், செல்வங்களையும், சமூகத்தில் பெருமையையும் சன்மானமாகப் பெறுவான். அவன் பல நல்ல நண்பர்களையும், நல்ல மனைவியையும் தன் முதுமைக் காலத்தில் பெருமை அளிக்கும் பிள்ளைகளையும் கொண்டிருப்பான். இவ்வறிவுரைகளைக் கடைப்பிடிக்காதவன் அழிவையும், சாவையும், ஏழ்மையையும் பெறுவான்; பிறரால் எள்ளி நகையாடப்படுவான்; பிள்ளை அற்றுப்போவான். பிள்ளைகள் இருந்தாலும், அவர்கள் அவனுக்கு எதிராகக்

கிளர்ச்சி செய்து துன்பம் கொடுப்பர் (10:22; 14:26-27).

இ) செயல்வினைப்பயன் கோட்பாடு: ஞான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்குமாறு இளைஞர்களைத் தூண்டச் சன்மானம் என்ற கருத்துப் பயன்பட்டது. நேர்மையான செயலின் சன்மானம் - வாழ்வில் வெற்றியாகும். ஆனால், அது தூரத்திலிருப்பதாகத் தோன்றுகிறது; அதன் விலையாகிய கடின உழைப்போ உடனடியானதாக இருக்கிறது. இதற்கு மாறாக-ஒழுக்கக் கேடான அல்லது நேர்மையற்ற செயலின் சன்மானம்- உடனடியானதாகவும், அதன் விரும்பத்தகாத விளைவு- தூரத்திலிருப்பதாகவும், தவிர்க்கக் கூடியதாகவும் தோன்றுகிறது. செயலுக்கும் அதன் சன்மானத்திற்குமிடையேயுள்ள தூரத்தை ஞானிகள் சுருக்க முடியாது. ஆனால், செயலுக்கும் அதன் விளைவுக்குமிடையே உள்ள தொடர்பை வலியுறுத்துகின்றனர். ஒருவன் நேர்மையாகச் செயலாற்றினால் வெற்றி பெறுவான்; தீய வழியில் செயல்பட்டால், தோல்வியால் தண்டிக்கப் பெறுவான். இந்தப் பாரம்பரிய நம்பிக்கையில் தளராத விசுவாசம் கொண்டிருக்கிறார், இந்நூலின் ஆசிரியர்.

உலக ஒழுங்கமைப்பின் அடிப்படையில், இறைவன் நல்லோருக்குச் சன்மானம் அளித்து, தீயோரைத் தண்டிக்கிறார். ஒருவன் வாழ்வில் வெற்றி பெறாது வறியவனாக இருந்தால், அதற்கு அவனது சோம்பேறித்தனமோ (12:11-24: 13:4; 18:9; 19:15; 20:4-13; 22:7; 23:24), ஒழுக்கக் கேடான வாழ்வோ (13:25), ஞானபோதகத்திற்குச் செவிமடுத்து வாழ்வைத் திட்டம் செய்யத் தவறியதோ (21:17) காரணமாகலாம். ஞானிகள் பயன்படுத்தும் ஒழுக்க ஒப்பளவுகள் சுய நலத்தையும், இவ்வுலகு சார்ந்த வாழ்வையும் கடந்து செல்லவில்லை. புண்ணியவாழ்வு - வெற்றிக்கும் மகிழ்ச்சி மிக்க வாழ்வுக்கும் இட்டுச்செல்லும் (10:11; 13:4; 16:22; 12:31); தீய வழி அழிவுக்கும் சாவுக்கும் இட்டுச் செல்லும் (10:16:17; 11:19). இதை உறுதியாகக் கூறுவதோடு, ஞானிகள் தங்கள் போதகத்தை வரையறை செய்து கொள்கின்றனர். ஆனால் இந்தச் சமன்பாடு, அன்றாட வாழ்வில் எப்போதும் காணப்படுவதில்லை; பெரும்பாலும் தலைகீழாகவே உள்ளது. நீதிமான்கள் துன்புறுவதும், தீயவர்கள் செழிப்புறுவதும் ஞானிகளது கவனத்திலிருந்து தப்பவில்லை. இந்நிலை எத்தனை தடவை நடந்தாலும், அதை ஒரு விதிவிலக்காகவே ஞானி கருதுகிறார். வாழ்வில் காணப்படும் இந்த முரண்பாடு, அவரது பாரம்பரிய விசுவாசத்தை அசைக்கவில்லை; தளர்ச்சியுறச் செய்யவில்லை. இந்த முரண்பாட்டை இருவிதமாக விளக்கினர்.

1. ஒருவர் மற்றவரைப் பற்றியதெல்லாம் அறிந்திருப்பது முடியாத காரியம். இறைவன் ஒருவரே மனித இதயத்தை முழுவதும் அறிவார். அவனது உள்ளத்தைச் சோதிக்கிறார் (15:3.11; 16:2; 17:3; 20:12; 21:2); எண்ணங்களை வெளிப்படுத்துகிறார் (21:3.27; 28:9). அவர் மட்டும்தான் உலகின் முன்னேற்றத்தையும் (19:21), மனிதரின் கதியையும் (16:1-9. 33; 21:31), எல்லா வாழ்வின் நடத்தையையும் (20:14; 21:1) தம் கையில் கொண்டுள்ளார். அவர்தான் ஒருவனது உண்மையான தன்மைக்கேற்ப சன்மானமோ, தண்டனையோ அளிக்கிறார்; அளிக்கவல்லவர். இத்தகைய இறைவனில் தளராத விசுவாசம் கொண்டிருந்தனர் ஞானிகள்.

2. சன்மானமோ தண்டனையோ செயல்படுவதற்கு முன்னுள்ள காலத்தில் கவனம் செலுத்துகிறார் ஞானி. ஒரு நாள் கடின உழைப்பு எவனையும் செல்வந்தனாக்குவதில்லை. இந்தக் காலம் தாழ்த்துதல் போதனையை அவசியமாக்குகிறது. தீயோர் குறைந்த உழைப்பினால் செழிப்புறுவதாகத் தோன்றினாலும் எப்போதும் நல்லதையே செய்யும் மன உறுதி வேண்டும். ஏனெனில், இறுதியில் நீதியே வெற்றி பெறும் (5:22 தொ). ஆசிரியர் மாணவனைச் சோதிப்பதுபோல், சில சமயங்களில் இறைவனும் நீதிமானைக் கடின

காலத்தில் சோதிக்கிறார் (3:11 தொ). இறுதியில் நல்லவர் எப்போதும் வெற்றி பெறுவர் (24:16).

இதற்குமேல்- நல்லவர், தீயவர் பிரச்சனையை இந்நூல் ஆசிரியர் தர்க்கித்திருப்பதாகத் தெரியவில்லை. யோபு நூலின் ஆசிரியர், இப்பிரச்சனையை விரிவாகத் தர்க்கிப்பார். ஆனால், யோபுக்கு யாவே அளிக்கும் பதில் - யாவேயில் முற்கால ஞானிகள் கொண்டிருந்த நம்பிக்கையையே செயல் அளவில் எடுத்துக் கூறுகிறது. மறுவாழ்வில் சன்மானம் அளிக்கப்படுவது பற்றி வெளிப்படுத்தும் காலம் இன்னும் இஸ்ராயேலுக்கு வரவில்லை.

வாழ்வில் வெற்றி பெறுவது பற்றிய ஞானிகளின் ஒழுக்க இயலை, மூன்று காரியங்கள் வரையறை செய்கின்றன.

1. **முதல்வரையறை:** மோசே வழியாகக் கொடுக்கப்பட்டு, தலைமுறை தலைமுறையாக மக்களுக்கு அளிக்கப்பட்ட சட்டமாகும். ஞானம் வெற்றிடத்தில் வளரவில்லை. அது மோசே சட்டத்தாலும், ஏற்புடைமைக்கு இறைவாக்கினர் விடுத்த அழைப்பாலும் சமன் செய்யப்பட்டது. அரசர்கள் கூட தோராவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஒழுக்கம் பற்றிய அக்கறையில் தோராவுக்கும் ஞானத்திற்கும் ஒருமைப்பாடு உண்டு. சான்றாக, பிறரது நிலத்தை அபகரித்தல் (23:10 தொ: உப. 19:14; 27:17), நேர்மையான வியாபாரம் (பழ 20:13), சார்பில்லாமல் நீதி வழங்குதல் (24:24 தொ), ஏழைகளுக்கு இரக்கம் காட்டுதல் (14:31) போன்றவற்றில் ஞானபோதகம் தோராவோடு ஒத்திருக்கிறது.

2. பொருளாதார வெற்றி எப்போதும் உண்மையான வெற்றியன்று; மகிழ்ச்சியோடும் சமாதானமாயும் இருப்பது முக்கியமாகும். ஒருவன் செல்வத்தையோ மகிழ்ச்சியையோ தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் மகிழ்ச்சியே சாலச் சிறந்தது. (25:24; 15:17). சமூகத்தின் நற்பெயரும் புகழும் மிக முக்கியமானவையாகும். பழமொழி நூலில் - மிக உயர்ந்த நன்மை - நற்பெயராகும் (22:1). இதையே சீராக்கு நூலும் கூறுகிறது (சீரா41:31).

3. **மனித அறிவின் வரைக்குட்பட்ட தன்மை:**

முடிந்தனவற்றையெல்லாம் ஞானி படிக்கலாம்; ஆய்வு செய்யலாம்; கவனமாய்த் திட்டம் செய்யலாம்; நேர்மையானவற்றையே செய்யலாம். ஆனால், வாழ்வு அவருக்கு எதிராகச் செல்லலாம். அவர் தவறு செய்யலாம் (11:24; 14:13). வருங்காலத்தை அறிய முடியாமை, நல்லபயனை அளிக்கலாம் (25:25; 19:14). எல்லாவற்றிலும் மட்டுடையவனாகவும் தாழ்ச்சியுடையவனாகவும் இருப்பதும், ஆண்டவர்பால் அச்சத்தோடு வாழ்வதும் ஞானமாகும். ஒருவன் தன் வாழ்வுக்குத் தானே தலைவன் என்று நம்புவது மிகப் பெரிய மதிகேடாகும் (28:26).

இம்மூன்று காரியங்களால் ஞானி, தனது போதனையை வரையறை செய்து கொண்டார். குற்றமற்றவன் துன்புறுவதில்லை; ஒருவன் தீயவனாய் இருப்பதாலேயே துன்புறுகிறான். நல்லவன் துன்புற்றால் அது தற்காலிகமானதே. அவனது நன்மைத் தன்மை சோதிக்கப்படுகிறது; அவன் விரைவில் செழிப்புறுவான் என்ற நம்பிக்கையில் ஞானி உறுதியாக நிலை கொள்ளுகிறார்.

ஈ) மனிதனின் ஞானம்:

மனிதனுக்குச் சாற்றிக் கூறும்போது, ஞானம் ஒரு சிக்கலான பண்பாகும். ஒழுங்கமைப்பின் வரையறைகளைக் கொண்ட பின்னணி உடையது. அதன் கூறுகள் பலவகைப்பட்டன. ஞானம் கவனமிக்க காட்சியறிவின் விளைவாகும் (1:2-6; 2:5-9; 8:5-9; 14:8; 19:25; 20:24; 28:5; 29:7). தேர்வுணர்வுடைய சிந்தனையின் விளைவாகும் (16:20; 21:12). முன்னோக்கின் (3:21; 6:14;), விவேகமுள்ள திறமையின் (12:16-23; 13:16; 14:8-15; 22:3; 27:12), கூரிய நுண்ணறிவின் (1:4; 2:11; 3:21; 5:2; 8:12) விளைவாகும். படைப்பவரை ஊற்றாகக் கொண்ட

செயல்முறையான அறிவாகும் (1:2. 4.7.29; 2:5.9.10; 3:20; 4:1; 5:2; 8:10.12; 14:10; 17:27; 31:23;), இந்த நிலையை அடையும் போது ஞானம் நிறைவடைகிறது. அஃது ஆண்டவரிடம் கொள்ளும் பக்தி மிகுந்த அச்சத்தால் வழி நடத்தப்படுகிறது (15:33). இதுவே ஞானத்தின் குறிக்கோள் (1:29; 2:5;); இன்னும் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு நீதி (1:3; 8:8.15), நீண்ட ஆயுள் (10:27), பாதுகாப்பு (14:26), செல்வச் செழிப்பு, நற்பெயர், மேன்மை, வாழ்வு (15:16; 22:4; மேலும் காண்க. 10:3.6.7. 11.20.21.31.32; 11:21.28; 12.3.5.7.10; 13:5; 15:28; 20:7; 21:26; 29:7;) ஆகிய ஆசீர்களையும் நலன்களையும் அளிப்பதாக வாக்குக் கொடுக்கிறது.

உ) ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானம்: இந்நூலின் ஞானம் ஒரு பண்பாக மட்டும் தோன்றவில்லை. கருத்தளவிலான வடிவங்களைக் களைந்துவிட்டு, ஞானம் உயிருள்ள ஒரு பொருளின் வடிவங்களை எடுத்துக் கொள்வதாகத் தோன்றுகிறது. அது பரந்த வெளியில், தொழில் நடக்கும் இடங்களில், இரைச்சல் மிக்க சந்திப்புக்களில், நகரவாயில்களில் (1:20-21; காண்க. எரே 7:2; 11:6; 17; 19:20; 22:2-6;...) ஓர் இறைவாக்கினரைப்போல், நின்று அறைகூவல் விடுக்கிறது.

ஞானம் தனது அறைகூவலால் மக்களின் கவனத்தை ஈர்க்கிறது. இறைவாக்கினர்களைப் போல், ஞானம் முதலில் அதை அறியாதவர்கள் (1:22; 1:4; மேலும் காண்க. 20:19; 7:7; 8:5; 9:4.16; 14:15.18; 19:25; 21:11; 22:3), ஏளனம் செய்வோர் (1:22; 3:34; 9:8; 15:12; 19:25; 21:11), முட்டாள்கள் (1:22; 15:5; 17:28: 22:15) ஆகியோரைப் பார்த்துப் பேசுகிறது. அதன் அழைப்பு குற்றம் கூறுவதாக அமைகிறது (1:22). பின்பு வற்புறுத்தும், நட்புமிக்க, இணக்கமான, ஆதரவு காட்டும் அழைப்பாக மாறுகிறது (1:22-23). அஃது இறைவாக்கினர் மொழியில் பேசுகிறது. இறைவாக்கினரின் மொழி, இறைவனது மொழியே (1:23; எசே 36:24-27; எசா 44:3). இறைவாக்கினர்களைப்போல் ஞானம் அச்சுறுத்தல்களை எடுத்துக் கூறுகிறது (1:24:27; எசா 28:7-22; எரே 7:24-29; 11:8; 17:23; எசா 65:2-12; 66:4). அவர்களுக்கு இடுக்கண்வரும் காலம் ஞானம் பழிவாங்கும் காலமாகும். அப்போது அவர்கள் ஞானத்திடம் திரும்புவர். ஆனால், அது மிகவும் காலம் கடந்த செயலாகும் (1:26-32).

ஞானம் உண்மையிலேயே ஓர் இறைவாக்கினர்தான். மேலும், ஞானம் தாராளமிக்க விருந்தளிக்கும் பெண்ணின் பண்புகளையும் எடுத்துக் கொள்கிறது (9:1-6). தான் கட்டும் வீட்டில் தன்னுடையவர்களை அவள் விருந்துக்கு அழைக்கிறாள். அங்கு எல்லா மனிதர்களும் அழைக்கப்படுகின்றனர். இதில் ஆலயப் பணியிலிருந்து எடுக்கப்பட்ட கட்டடம், பலிப்பொருள், உணவு போன்ற உருவகங்களிலிருந்து, ஆன்மீகப் புனிதத் தலத்தில் நடைபெறும் காலத்துக்கு அப்பாற்பட்ட விருந்தின்முன், உருவத்தை நாம் கற்பனை செய்யலாம். ஞானம் இங்கு ஒரு கோட்பாட்டு அலுவலை நிறைவு செய்கிறது. அதன் போதகம் சுவையுள்ளதாகவும் உயிர்ச் சத்துள்ளதாகவும் எடுத்துக் கூறப்படுகிறது. இதற்கு மாறாக, மூடப்பெண் வீதியில் ஓர் உணவுச் சாலையை நடத்துகிறாள் (9:13-18). அவளது நடத்தை வேறுபாட்டால், உண்மையான ஞானத்தின் வியத்தகு அழைப்பு உயர்த்திக் காட்டப்படுகிறது.

மேலும், ஞானம் தன்னையே புகழ்ந்து கொள்ள வல்லது (8:1-21); மேன்மைக்கு உரிமை கொண்டாடுகிறது (8:22-36). எல்லா மனிதர்களுக்கும் மேலானது. அதன் தூது யாவர்க்கும் உரியது (8:1-3). அது வாக்களிக்கும் நலன்கள் மிகவும் உயர்ந்தவை. ஆகையால், மனிதர்கள் அதன்பால் ஈர்க்கப்பெறுகின்றனர். அதன் சொந்த உயர்வே இந்நலன்களுக்கு அவற்றின் அசாதாரண மதிப்பை அளிக்கிறது. ஏனெனில், மனிதன் உழைப்பால் கொண்டிருப்பதை ஞானம் தன்மையாலே கொண்டிருக்கிறது (8:12-14). இவை நல்லுணர்வு,

விவேகம், கூரிய அறிவு, சிந்திக்கும் ஆற்றல், முன்னோக்கு, ஊடுருவிப் பார்த்தல் ஆகியவையாகும். ஞானம் தலைவர்களுக்கு ஒழுக்க நேர்மையையும் அதிகாரத்தையும் அளிக்கிறது (8:15-16). அதை நேசிப்பவர்களை அது நேசிக்கிறது. அதை ஆவலோடு தேடுபவர்கள் அதைக் கண்டடைவர்; அதை நிறைவாகக் கொள்வர் (8:17-21; காண்க. மத் 7:7-8; லூக் 11:9-10).

ஊ) இறை ஞானம்:

மேற்கூறப்பட்ட ஞானத்தை ஆட்தன்மைப்படுத்துவதை எப்படிப் புரிந்து கொள்வது? ஞானம் இறைவனோடு நெருக்கமானது. அவரே அதை நித்தியத்திலிருந்து படைத்தார்; அதற்குப் பிறப்பளித்து அரியணையில் அமர்த்தினார் (8:22.26). யாவே எப்போதும் ஞானமிக்கவர். அவரது படைப்புச் செயல் முழுவதிலும் அவரோடு ஞானம் ஒத்துழைக்கிறது. விளையாட்டுப் போல் உலகை அமைக்கிறது (8:27-31). அதே சமயம் மனிதர்களின் தோழமையை மகிழ்ச்சியோடு தேடுகிறது (8:31). இக்காரணத்திற்காக அதன் போதனைக்குச் செவிமடுப்பது அவர்களுக்கு வாழ்வு மற்றும் சாவுக்குரிய பிரச்சனையாகும்.

இந்த ஞானத்தை ஆட்தன்மைப்படுத்தும் பிரச்சினையைப் புரிந்து கொள்வது பற்றி ஏற்கெனவே ஞான இலக்கியம் என்ற தலைப்பில் காண்க. முற்காலக் கிறிஸ்துவ ஆசிரியர்களில் பலர் இந்நூலின் ஆசிரியர் வெறும் உருவகப்பொருளைக் கடந்து செல்கிறார் என்பர். இந்நூலில் வரும் ஞானம் பற்றிய விவரிப்பை யோவானது நற்செய்தியின் முன்னுரையில் வரும் விவரிப்போடு ஒப்பிட்டுள்ளனர். புதிய ஏற்பாட்டின் ஒளியில் கி.பி. முதல் நூறாண்டுத் தந்தையரும், விளக்கவுரையாளர்கள் பலரும், ஞானம் பற்றிய விவரிப்பை மூவொரு இறைவனின் இரண்டாம் ஆளுக்குச் சாற்றிக் கூறியுள்ளனர். பழைய சித்தைகளில் புதிய இரசத்தை ஊற்றி வைப்பது ஆபத்தானதாகும் என்பதை நினைவில் கொள்வது நலம்.

கத்தோலிக்கத் திருச்சபை, தன் வழிபாட்டில், பழ 8-இல் வரும் ஞானம் பற்றிய விவரிப்பை மரியாளுக்குச் சாற்றிக் கூறிவந்துள்ளது. இவள்தான் மனிதனான வார்த்தையானவர்க்குத் தாயாவதற்கு முன் - நித்தியத்தில் இறைவனது எண்ணத்தில் முன்னேற்பாடாய் உண்டானவள். இவளை ஞானத்திற்கு இருப்பிடமே! என்று வாழ்த்திப் பெருமைகொள்கிறது திருச்சபை. இந்த வழிபாட்டு முறையை அதற்குரிய முறையில் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், மிகைப்படுத்தக் கூடாது.

ஓ இந்நூலின் பல வாக்குகளில், குறிப்பாகக் காலத்தால் முந்திய சாலமோனின் இரு பகுதிகளிலும் III, IV காணப்படும் இவ்வுலகியல் சார்ந்த போக்கும், மனிதப் பண்பும், இலக்கியத்தொனியும் கிறிஸ்தவர்களுக்கு ஓரளவு அதிர்ச்சியைக் கொடுக்கலாம். இந்நூல் வரைக்குட்பட்ட முன்னோக்குடையது; சொந்த வெற்றியையும், தன்னலத்தையும் பாதுகாக்கும் குறிக்கோளுடையது; ஒழுக்க வாழ்வுக்கும் வழிகாட்டுகிறது. எளியவர்களுக்கு அன்பு காட்டுவதற்குக்கூட (28:27; 30:10) சுயநலமும் சொந்த வெற்றியும் போதிய தூண்டு காரணங்களாகக் காட்டப்படுவது நமக்கு ஓர் இடறலாகத் தோன்றலாம். குறிப்பாகச் செயல்வினைக் கோட்பாடு பற்றிய போதகம் தாறுமாறானதாகத் தோன்றலாம்.

நம்மிடையே நிலவும் மதிப்பீடுகளின் அமைப்பு, பழமொழி மதிப்பீடுகளிலிருந்து அதிகம் வேறுபட்டதன்று. நேர்மை, உழைப்பு, மட்டுடைமை, சிக்கனம், விவேகம் ஆகியவை சமூக நற்பண்புகளாகக் கருதப்படுகின்றன. நாம் நல்ல கல்வி பெற்றால், நேர்மையானதைச் செய்தால், பூசல்களைத் தவிர்த்தால், கடினமாக உழைத்தால், ஆலயத்திற்கு ஒழுங்காகச் சென்றால் நல்ல மனைவியை மணந்து பெருமை தரும்

பிள்ளைகளைப்பெற்றால், நேர்மையாகச் சிந்தித்தால் - மகிழ்ச்சியாகவும் இன்பமாகவும் இருந்தால் - அப்போது நாம் வாழ்வில் வெற்றியடைந்தவர்கள் என்று நம்புகிறோம். இத்தகைய வாழ்வமைப்பில் மனநிறைவு அடைகிறோம். இந்த நம்பிக்கைகளை நாம் எடுத்துக்கூறும் விதம், ஞானிகளுடையதைப் போன்று, அவ்வளவு பாடல் நயமும், பல தடவை இறைவனைச் சுட்டும் தன்மையும் இல்லாமல் போகலாம். ஆனால், இரண்டும் ஒத்த தன்மை கொண்டவையே.

இவ்வுலகில் இறைவனது நீதி செயல்படுவது பற்றிய ஞானியின் போதகமும், எதிர்பார்ப்பும் முற்றிலும் தவறுடையவையல்ல என்றாலும், மிகவும் எளிதான முதிராத தன்மையையுடையன. இத்தகைய இலக்கியம், எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இறை ஏவுதல் பெற்றதாக இருக்க முடியும் என்று ஐயம் எழலாம்.

ஒருவனது மகிழ்ச்சி - செல்வத்திலும், பிறர் மதிப்பிலும், நீடிய வாழ்விலும் அடங்கியிருப்பதாக இஸ்ராயேல் ஞானிகள் கருதினர். இந்தப் பழைய ஏற்பாட்டு முன்னோக்கை நிறை சமன்பாடுடையதாக்க புதிய ஏற்பாட்டு வெளிப்பாடு தேவையாய் இருந்தது. கிறிஸ்துவின் போதனைப்படி, இறையரசில் கொள்ளும் நித்திய வாழ்வில் மனிதனது இறுதியான நிறை மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. வான் வீட்டில் தன் சொத்தைச் சேர்த்து வைக்கும்படி கிறிஸ்தவனுக்குப் படிப்பிக்கப்படுகிறது (மத் 6:20). கிறிஸ்தவனின் மேன்மை, இறையரசுக்காக இவ்வுலகில் தனது வாழ்வையும் பலியிடத்தயாராய் இருப்பதில் அடங்கியிருக்கிறது (லூக் 17:33). ஆயினும், அவன் இறைவனால் படைக்கப்பட்ட பொருட்களைப் போற்றவும் அன்பு செய்யவும் வேண்டும். பழமொழி நூலில் காணப்படும் சமயம் சார்ந்த மனிதப்பற்றுக்கோட்பாடு பல குறைகளைக் கொண்டிருக்கலாம். கிறிஸ்தவன் இயற்கை கடந்த கதியைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தாலும், இயற்கை சார்ந்த, மனிதப் பண்புடைய மதிப்பீடுகளை வெறுத்து ஒதுக்கக் கூடாது என்று இந்நூல் போதிக்கிறது.

இந்நூலின் ஆசிரியர், செயல்வினைப்பயன் கோட்பாட்டிற்கு விடையாக நித்திய சன்மானம் பற்றிக் கவலைப்படவில்லை என்று தெரிகிறது. இஃது அவரது குறுகிய மனப்போக்கையும், இப்பிரச்சனை பற்றிய இறை வெளிப்பாட்டைப் பெற இஸ்ராயேல் வெகுதூரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. மறுபுறத்தில், இறைவனது ஞானம் பற்றிய பகுதிகள் - குறிப்பாக 8:22-31 என்ற பகுதி, இறைத்தன்மையைப் பற்றிய உயர்ந்த கருத்தை எடுத்துக் கூறுகிறது. ஆசிரியர், தான் அறியாமலே, இறை ஏவுதலின்கீழ், ஞானத்திற்கு ஆட்தன்மை அளிக்கும் கருத்து வழியாக, சாலமோனைவிடப் பெரிய ஒருவரது வருகைக்குத் தயார் செய்கிறார் (மத் 12:42) எனலாம். மனிதனான - நித்திய வார்த்தையே இறைஞானம் (1 கொரி: 1:30).

நற்செய்திப் போதகம் இந்நூலின் போதகத்தைக் கடந்து செல்கிறது. நிறைவு செய்கிறது. இந்நூலின் பல வாக்குகள் இயேசுவின் போதனையை முன்னறிவிக்கின்றன. உண்மையான இறைப்பற்றுக்கு அடிப்படையாக, பத்துக்கற்பனை ஒழுக்கவியல் அமைய வேண்டியதின் அவசியத்தை இந்நூல் எடுத்துரைக்கிறது. நேர்மை, விவேகம், அறிவு சார்ந்த பண்புகள் ஆகியவை இல்லாமல் ஒருவர் பக்தியாகவோ, இறைப்பற்றுடையவராகவோ இருக்க முடியாது. ஆகையால், இந்நூலிலிருந்து பல எடுத்துக்காட்டுகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில் வியப்பொன்றுமில்லை. இந்நூலிலிருந்து வாக்குகள் புதிய ஏற்பாட்டில் பதினான்கு தரம் நேரடியாக எடுத்துக் கூறப்படுகின்றன; பலதடவை சுட்டிக்காட்டப் படுகின்றன.

பல நூற்றாண்டு அனுபவச் சிந்தனை வளர்ச்சியால் வடித்தெடுத்த நூலாகும் இது. தனிப்பட்ட நீதிமொழிகளை இரத்தினச் சுருக்கமாக

அதிகம் கொண்டுள்ளது. ஆகவே, ஒரே மூச்சில் அல்லது தொடர்ந்து இந்நூலை வாசிக்கக்கூடாது. இந்நூலை உணர்ந்து சிறிது சிறிதாகப் படிக்க வேண்டும்; பதம் பார்க்க வேண்டும்; சுவைக்க வேண்டும்; மெதுவாகச் சீரணித்துக் கிரகிக்க வேண்டும்.

நீரூற்று நகர் (CITY OF WATERS)

இஃது இரபா நகருக்கு மற்றொரு பெயர் ஆகும் (2 சாமு 12:27).

நீரோ (NERO)

நீரோ கிளாதியு சீசர் துருசு என்பது நீரோவின் முழுப்பெயர். இவர் கிளாதியு என்பவருக்குப்பின் அரசனானார். இவருடைய தாய் அக்ரிப்பினா அகுஸ்துவின் பேத்தியும், கலிகுலாவின் சகோதரியும், கிளாதியுவின் மனைவியும் ஆவாள். இவளுக்கும் இவளுடைய முந்தைய கணவன் தொமித்தியு அகெனோபார்புசு என்பவனுக்கும் பிறந்த குழந்தைதான் நீரோ (கி.பி. 37). கி.பி. 50-இல் அக்ரிப்பினா கிளாதியுவிடம் தன் மகன் நீரோவை, அவனுடைய மகன் பிரிட்டானிக்குவின் பாதுகாப்பாளராகத் தத்து எடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தினாள். நான்கு ஆண்டுகளுக்குப் பின் கிளாதியு இறந்தபின், நீரோ உரோமைக் குடியரசின் ஆட்சிப் பேரவையால் பேரரசனாக முடி சூட்டப்பட்டான். நீரோவின் அரசு அவனுடைய தாயாலும், அவனுடைய ஆசிரியர் செனேக்கா என்பவனாலும், புரூசு என்பவனாலும் ஆளப்பட்டு வந்தது. கி.பி. 55-இல் பிரிட்டானிக்கு கொல்லப்பட்டான். கி.பி. 59-இல், செனேக்கா மற்றும் அவனுடைய மனைவி போப்பேயா ஆகியோரின் ஆலோசனைப் படி நீரோ தன் தாயைக் கொன்றான். மூன்று ஆண்டுகளுக்குப்பின் புரூசு இறந்தான். செனேக்கா ஓய்வு பெற்றபின், அவனுடைய மனைவி போப்பேயா என்பவளை மணமுடிக்க விரும்பி, நீரோ தன் மனைவியை விவாகரத்து செய்தான்.

பின் நீரோ தேர்ப்பந்தயங்களிலும், பற்பல கேளிக்கைகளிலும் கவனத்தைச் செலுத்தினான். இவன் கிரேக்க மொழிக் கவிதையிலும், இசையிலும் ஆர்வமுள்ளவனாயினும் இவனிடம் திறமைகள் இல்லை. இவனுடைய ஆடம்பரச் செலவு நாட்டின் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்தது.

கி.பி. 64-இல் ஜூலைமாதம் 19-ஆம் நாள் நடந்த தீ விபத்தில் உரோமை நகரின் கால்பாகம் அழிந்து விட்டது. இது நீரோ தன் அரண்மனைக்கு இடம் கிடைக்கச் செய்த வேலை என்று கூறப்பட்டது. ஆனால், நீரோ பழியைக் கிறிஸ்தவர்கள் மேல் சுமத்திவிட்டான். கிறிஸ்தவர்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டனர். சிலர் மிருகங்களின் தோலில் கட்டப்பட்டு நாய்களால் தாக்கப்பட்டனர். வேறு சிலர், சிலுவையில் அறையப்பட்டனர். பின்னும் சிலர் தைபர் நதியின் மேற்கிலுள்ள நீரோவின் தோட்டத்தில் எரிக்கப்பட்டனர். செனேக்கா, நீரோவின் தவறுகளைச் சுட்டிக் காட்டியதால் கொல்லப்பட்டான்.

அப்போஸ்தலர்கள் பேதுருவும், பவுலும் இந்த வேத கலாபனையின்போது இறந்ததாக உரோமைக் கிளமந்து தம் கடிதத்தில் எழுதுகின்றார். இவர்கள் இருவரும் உரோமை நகரில் வேத சாட்சிகளாக மரித்திருக்க வேண்டும். பெண்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டதாகத் தாசித்து குறிப்பிடுகின்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின், ஓய்வு பெற்ற பேத்து திராசெயா அரசனைக் குறை கூறியதால் கொல்லப் பட்டார்.

இதன்பின் நீரோ, கிரேக்க நாட்டுக்கு நீண்ட சுற்றுலாச் சென்றான் (67-68). அங்கு அவன் பல போட்டிகளில் 18,000 விருதுகளை வென்றான். இச்சமயத்தில் நாட்டின் நிலை சீரழியத் தொடங்கியது. நீரோ ஜெர்மனி நாட்டின் தளபதியையும், இரு ஆளுநர்களையும் தற்கொலை செய்து கொள்ளும்படி செய்தான். ஆனால் 68-இல் ஸ்பெயின், கால், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் கலகம் தொடங்கியது. கிரேக்க

நாட்டிலிருந்து நீரோ உரோமைக்குத் திரும்பியபோது அவன் உயிருக்காக நாட்டைவிட்டு ஓட வேண்டியிருந்தது; ஜுன் 6-ஆம் தேதி தற்கொலை செய்து கொண்டான். இவனுக்குப் பின் பலர் அரசனானார்கள். ஆனால், வெஸ்பாசியன் அரசனான பின்தான் நிலையான அரசு நிறுவப்பட்டது.

பேரவை நாட்டின் எதிரியாக நீரோவை அறிவித்திருந்ததால் அவனைத் தெய்வமாக்கவில்லை. அவனை அரச பரம்பரையினரும், கிறிஸ்துவர்களும் வெறுத்தனர். இப்பொழுதும் சிலர் அவன் இன்னும் இறக்கவில்லை எனக் கருதினார்கள். கி.பி. 69-இல் ஒரு போலி நீரோ தோன்றினான்; ஆனால், கொல்லப்பட்டான். 88-இல் வேறொருவன் தான்தான் நீரோ என்று கூறிக்கொண்டு வந்தான். அவனும் கொலை செய்யப்பட்டான்.

கிறிஸ்துவர்களைப் பொருத்தமட்டில், அவர்களை நீரோ கொடுமைப்படுத்தினான். நீரோவின் அரச ஆணை இதற்குக் காரணமாக இருந்தது என்று கருதப்படுகிறது. ஆனால் சம்பந்தமில்லாத கொடுமைகள், அவ்வாறு ஒரு சட்டம் இருந்ததை நிரூபிக்கவில்லை. இக்கொடுமைகளால்தான் அப்போஸ்தலர்கள் சொன்னவை எல்லாம் நூல்வடிவம் பெற அவசியமாயின. மாற்கு நற்செய்தி இக்காலத்தில்தான் எழுதப்பட்டது என்று கருதப்படுகிறது. இக்காலத்தில்தான் கிறிஸ்துவ, யூத மதங்களுக்கிடையே பிளவு ஏற்பட்டது.

நீரோடை (WATER COURSE)

வறண்ட ஓடையை வான்மழை நீரோடையாக மாற்றுவதுபோல் சீயோனின் அடிமை நிலை மாறும் (சங் 126:4). எகிப்துக்கு உவமையான கேதுரு மரக்கிளைகளும் கொம்புகளும் நாடெங்கும் ஓடைகளில் முறிந்து கிடக்கும் (எசே 31:12). எகிப்தின் இரத்தத்தால் நீரோடை நிரம்பி வழியும் (32:6). இவற்றில் எல்லாம் நீரோடையின் முந்தைய வறட்சி நிலை சுட்டிக்காட்டப்படுகிறது.

நீர் (WATER)

1. முதன்முதலில், நீர் வாழ்வின் ஊற்றும் பலமும் ஆகும்; செடிகொடிகள், விலங்குகள் உயிரோடிருப்பதற்குத் தேவையான ஆதாரங்களில் முதன்மையானதாகும். அப்பத்தோடு, நீர் மனித வாழ்விற்கு மிக இன்றியமையாத தேவைகளில் ஒன்றாகும் (காண். ஆதி 21:14; யாத் 23:25). அஃது இல்லையேல், மிகக்கொடிய நிலை ஏற்பட்டுச் சாவில் முடியலாம் (எசா 3:1; எசே 4:17; காண். எசா 30:20). அஃது இல்லையேல் நிலவுலகு வறண்ட பாலையாகும், பசியும் தாகமும் நிறைந்த நாடாகும்; மனிதனும் விலங்குகளும் மடிவது திண்ணம். அழிக்கும் நீர்ப்பெருக்கு பூமியை ஆக்கிரமித்து உயிருள்ளவற்றையெல்லாம் விழுங்கி அழிக்கும். குளிப்பதற்கும், துவைப்பதற்கும், சடங்குத் தூய்மையிலும் நீர் பரவலாகப் பயன்படுகிறது. வீட்டுப்பழக்கத்திலிருந்து வரும் சடங்கு முழுக்கில், நீர், அன்றாட வாழ்வில் ஏற்படும் கறைகளிலிருந்து மனிதர்களையும் பொருள்களையும் சுத்தம் செய்கிறது. இவ்வாறு நீர், உயிரளிக்கும் அளவிலோ அழிக்கும் அளவிலோ, எப்போதும் தூய்மைப்படுத்தும் தன்மையுடையது. இந்த அடிப்படையில் உடன்படிக்கை மக்களின் வாழ்விலும் வரலாற்றிலும் நெருங்கிய விதத்தில் கலந்துள்ளது.

2. **இயற்பியல் கூறுகள்:** பாலஸ்தீனம் பெருமளவிற்கு மழைநீரையே நம்பியிருந்தது. மெசபொத்தாமியாவும், எகிப்தும் பள்ளத்தாக்குகளோடு கூடிய பெரும் ஆறுகளால் வளம் பெற்றன. ஆனால், பாலஸ்தீனத்தில் அப்படியில்லை. ஆண்டு மழையளவில் சிறிது வேறுபட்டாலும் அது பஞ்சத்தைக் கொணரும். உண்மையில் விவிலியக்காலம் முழுவதும் பஞ்சம் ஒரு பெரிய பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது (ஆதி 26:1; 1 அர 7:1).

சாதாரண ஆண்டுளில் கோடையின் வறட்சியால் பிரிக்கப்பட்ட (சங் 32:4) குளிர்காலம் மற்றும் இலையுதிர்காலம் என்ற இரு

மழைப்பருவங்கள் உண்டு. பாலஸ்தீனம் முழுவதிலும் பெய்யும் மழையின் அளவு பெரிதும் வேறுபட்டது. கடற்கரைச்சமவெளிகளில் ஓர் ஆண்டுக்கு ஏறக்குறைய 56 செ.மீ. மழைபெய்தது. பொதுவாக, பாலஸ்தீனத்தின் வடக்குப்பகுதி, மேற்குப்பகுதி, கடலை நோக்கிய மலைப்பகுதிகள் ஆகியவை அதிக மழை நீரைப் பெற்றன. தென் பாலஸ்தீனம், குறிப்பாகச், சாக்கடலைச் சுற்றிய பகுதிகள், பெருமளவிற்குப் பாலைவனமே ஆகும்.

பாலஸ்தீனத்தில் பள்ளத்தாக்குகளும் பெரிய ஆறுகளும் இல்லாதது மட்டுமன்று, நீரைத்தேக்கி வைக்கப் போதிய இயற்கை வசதிகளும் இல்லை. ஆகையால், அதன் குடிமக்கள் செயற்கை முறையில் நீரைத்தேக்கி வைத்துக்கொண்டனர். கிணறுகள் ஆழ்ந்த குழிகள் ஆகும் (ஆதி 21:30; 29:2-8; யோவா 4:11-12). வருடமுழுவதும் நீர் கிடைப்பதற்காக, இக்குழிகள் தரை நீர்மட்டம் வரை ஆழமாகத் தோண்டப்படும். பொதுவாகக் கிணறுகள் கற்சுவர்களைக் கொண்டிருக்கும். இது தரைக்குமேல் பாதுகாப்பாகவும், தரைக்கடியில் தண்ணீர் ஓடிவிடாமல் தடுக்கவும் பயன்பட்டது. பள்ளங்களும் சிறு நீர்த்தேக்கங்களும் அமைக்கப்பட்டன (2 நாள் 26:10; எரே 2:13). இவற்றில் வீட்டுக்கூரை மீதிருந்து மழை நீரையும், தரையிலிருந்து நீரையும் நிரப்பித்தேக்கி வைத்துக்கொண்டனர். பொதுவாகக் கிணறுகளும் பள்ளங்களும், நீர் நீராவியாகப் போவதைத் தடுக்க, மூடப்பட்டிருந்தன. குளங்கள், நீரூற்றுகளைச் சுற்றிச் சுவர் எழுப்பி அமைக்கப்பட்டன. இவை பொதுவாக மூடப்படவில்லை (2 சாமு 2:13; எசா 7:3; யோவா 5:2-7).

3. நீர் இறைவனின் படைப்புகளில் ஒன்று:

அ. அண்டவியல்: தொல் பழமையான காலத்திலிருந்தே, பழங்கால மக்கள், நீர் பூமிக்கு மேலும் கீழும் உள்ளது என்பதை அறிந்திருக்கின்றனர். மழை நீராக அதைவானிலிருந்து பெறலாம். விரும்பினால் ஆழமாகத் தோண்டி பூமியின் ஆழத்திலிருந்தும் பெறலாம் பழம் மேற்காசியச் சமூகங்களில், இந்த முரண்தோற்றம், கடவுளுக்கும், குழப்பத்தின் பறவை நாகத்திற்குமிடையே நடந்த உலகின் தொடக்க நிலைக் காலத்துக்குரிய போர் பற்றிய கதையால் விளக்கப்பட்டது. பாபிலோனியாவில், வெற்றி பெற்ற மார்துக்குக் கடவுள் தனது துணைவி தியமாத்தின் உடலைப் பிளந்து, அந்த உடலிலிருந்து பூமியைப் படைத்தார்; இப்பூமியை விண்ணக நீர்த்திரளுக்கும், பாதாள நீர்த்திரளுக்கும் இடையிலுள்ள குழப்பத்தின் வயிற்றில் வைத்தார் என்ற கதையுண்டு.

ஆ. உலகத்தோற்றம் அல்லது அண்டப் பிறப்புப் பற்றிய இந்த அடிப்படைக் கோட்பாட்டைப் பழைய ஏற்பாடு அறிந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இக்கருத்துக்கள் இஸ்ராயேலின் இறையொருமைக் கோட்பாட்டுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன (ஆதி 1:1-10; 7:11; காண்க. யாத் 20:4; உப 4:18; 2 சாமு 22:14-17; யோபு 26:5-13; சங் 104:3-6; 136:6; 148:4-7; எரே 10:11-13; ஆமோ 9:5-6; யோனா 2:2-6). இறைவனே உலக முழுமையின் தலைவர்; தம் விருப்பம்போல் நீரைப் பயன்படுத்துகிறார். ஆகவே, மனுகுலத்தில் ஊழ் அவரது கையில் உள்ளது. பழங்காலப் பாபிலோனிய அண்டப்பிறப்புப் பற்றிய கோட்பாட்டைப் பின்பற்றி, இஸ்ராயேலர் நீரை இரு தெளிவான வேறுபட்ட தொகுப்புகளாகப் பிரித்தனர். "மேலுள்ள நீர்" அல்லது அண்ட நீரைக் கடினத்தளம் எனக் கருதப்பட்ட வானம் தாங்கிநின்றது (ஆதி 1:7; சங் 148:4; தானி 3:60; காண்க. திருவெளி 4:6). கடவுள் வானத்தின் மதகுகளைத் திறக்க, நீர் மழையாக அல்லது இரவில் பனியாகப் பெய்ய அனுமதிக்கப் படுகின்றது (ஆதி 7:11; 8:2; எசா 24:18; மலா 3:10 யோபு 29:19; உ.ச. 5:2; யாத் 16:13). நீர் படிகம்போன்று வானத்தில் ஊடுருவிப் பார்க்கக்கூடியதால் வானம் நீல நிறமாக உள்ளது. வானத்திற்கு மேல் நீல நிற அரியணையில்

இறைவன் வீற்றிருப்பதாக எசே 1:26 சித்தரிக்கிறது. ஊற்றுகளும் ஆறுகளும், மழைநீரால் அல்லாமல், நிலவுலகில் நிறுவப்பட்டிருக்கும் மாபெரும் நீர்த்தேக்கத்திலிருந்து ஓடுகின்றன. இத்தேக்கம் "வானத்திற்குக் கீழுள்ள நீர்" என்றும் (ஆதி 1:7), "பாதளம்" என்றும் (ஆதி 7:11; உப 8:7; 33:13; எசே 31:4) அழைக்கப்படுகிறது.

இந்த அமைப்பை நிறுவியவராகிய கடவுள்–நீருக்குத் தலைவர் ஆவார். அவர் தம் விருப்பம்போல், மேலுள்ள நீரையும் கீழுள்ள நீரையும் கட்டுப்படுத்துகிறார் அல்லது விடுவிக்கிறார்; அதன் விளைவாக வறட்சியை அல்லது வெள்ளத்தை உண்டு பண்ணுகிறார் (யோபு 12:15). "மண்முகத்தே மழையைப் பொழிபவர் அவரே" (யோபு 5:10; சங் 104: 10:16). இந்த நீர் கடவுளிடமிருந்தே வருகிறது; மனிதரிடமிருந்து அன்று (மீக் 5:6; காண்க. யோபு 38: 22-28). மழைக்கு அவர் கட்டளை இட்டுள்ளார் (யோபு 28:26). ஏற்ற காலத்தில் மழையைப் பெய்யச் செய்கிறார் (லேவி 26:4; உப 28:13). மழை பிந்திப் பெய்தால் விதைப்பது தள்ளிப்போடப்படும். மழைபெய்வது ஏற்ற காலத்திற்கு முன்பே நின்று விட்டால், அறுவடை இல்லாமல் போகும் (ஆமோ 4:7). இதற்கு மாறாக, தக்க காலத்தில் மனிதருக்கு முன் மாரியும் பின்மாரியும் இறைவன் அருள தயைகூரும்போது (உப 11:14; எரே 5:24), நாட்டின் செழிப்பு உறுதி செய்யப்படுகிறது (எசா 30:23 தொ).

அதேபோல் தம் விருப்பத்திற்கேற்ப இறைவன் பாதாளத்தையும் ஆளுகின்றார் (சங் 135:6; பழ 3:19 தொ). அதை அவர் வற்றச்செய்தால் ஊற்றுகளும், ஆறுகளும் வறண்டு போகின்றன (ஆமோ 7:4; எசா 44:27; எசே 31:15). அதனால் நாடு பாழாகிறது. பாதாளத்தின் மதகுகளை அவர்திறந்து விடும்போது ஆறுகளில் நீர் ஓடுகிறது. அவற்றின் கரைகளில் தாவரங்கள் செழிப்புற வளர்கின்றன (எண் 24:6; சங் 1:3; எசே 19:10). மழைநீர் இல்லாதபோது இந்தத் தரைநீர் மிகவும் அவசியமானதாகும் (எசே 17:8). பாலைவனப் பகுதிகளில் ஊற்றுகளும் கிணறுகளும் மட்டுமே விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் தாகம் தீர்க்கும் மூலங்களாகும் (ஆதி 16:14; யாத் 15:23.27). இவற்றைக் கைப்பற்றக் கடுமையான போராட்டங்கள் நிகழ்வதும் உண்டு (ஆதி 21:25; 26:20 தொ; எசா 15:19).

நீரின்மேல் இறைவன் கொண்டிருக்கும் வியத்தகு ஆதிக்கத்தை சங் 104 நன்கு சுருக்கமாக விவரிக்கிறது. அவரே மேலுள்ள நீரையும் (104:3), பாதாளத்திலுள்ள நீரையும் (104:6) படைத்தவர். அவற்றின் ஓட்டத்தை அவர் கட்டுப்படுத்துகிறார் (104:7தொ). பூவுலகை நீர் மீண்டும் மூடிவிடாதபடி, அதற்கு எல்லை வகுத்துள்ளார் (104:9). அவர் ஊற்றுகளிலிருந்து நீர்சுரக்கச் செய்கிறார் (104:10); மழை பெய்யச் செய்கிறார் (104:13). அதன் விளைவாகப் பூமி செழிப்புறுகிறது. மனித உள்ளம் மகிழ்ச்சியடைகின்றது (104:11-18).

4. இறைமக்களின் வரலாற்றில் நீர்:

அ. நீரும் இம்மைக்குரிய முறைமைக் கைம்மாறும்: இறைவன் தம் விருப்பம் போல் நீரை அளித்தாலும் மறுத்தாலும், இதை அவர் தன்னிச்சையாகச் செய்வதில்லை. அவருடைய மக்களின் நடத்தைக்கு ஏற்றவாறு செய்கிறார். உடன்படிக்கைக்கு அவர்கள் பிரமாணிக்கமாய் இருப்பது, இல்லாததைப் பொருத்து அவர்களுக்கு இறைவன் நீரைக் கொடுக்கிறார் அல்லது மறுக்கிறார். இஸ்ராயேலர் இறைச்சட்டத்துக்கு ஏற்றவாறு வாழும்போது, அவரது குரலுக்குக் கீழ்ப்படியும்போது, இறைவன் தக்க காலத்தில் அவர்களுக்கு மழையைப் பொழிகிறார் (லேவி 26:3தொ.10: உப 28:1.12). இறைவனுக்குப் பிரமாணிக்கமாக ஊழியம் செய்பவருக்கு, நீர் இறை ஆசீரின் விளைவாகவும் அடையாளமாகவும் உள்ளது (ஆதி 27:28; சங் 133:3). இதற்கு மாறாக, இஸ்ராயேல் இறைவனுக்குப் பிரமாணிக்கமில்லாமல் இருந்தால், "வானத்தை இரும்பைப் போன்றும்

நிலத்தை வெண்கலத்தைப் போன்றும் இறுகச் செய்து" (லேவி 26:19; உப 28:23) அவர்கள் தங்கள் குற்றத்தை உணர்ந்து மனந்திரும்பும்படி (ஆமோ 4:7) அவர்களைத் தண்டிக்கிறார். ஆகவே, வறட்சி இறைப்பற்றற்றோர்பால் விழும் இறைச்சாபத்தின் விளைவாகும் (எசா 5:13; 19:5தொ; எசே 4:16தொ; 31:15). ஆகாபு காலத்தில் இஸ்ராயேலர் "ஆண்டவரின் கட்டளைகளைப் புறக்கணித்துப் பாகால் பின்னே சென்றபோது" இத்தகைய அழிவு நாட்டைப் பாழ்படுத்தியது (1 அர 18:18).

ஆ. **அச்சுறுத்தும் நீர்:** நீர் வெறும் உயிரின் ஆற்றல் மட்டுமன்று. கடல்நீர் தன் தொடர்ந்த அமைதியற்ற நிலையால் பேய்களின் அமைதியற்ற தன்மையையும், அவற்றின் கசப்பால் செயோலின் பாழ் நிலையையும் பிரதிபலிக்கின்றது. மேற்குக்காற்று திடீரென்று பொங்கி எழுந்து, புயலில் பூமியையும் உயிர் வாழ்பவைகளையும் அடித்துச்செல்வது (யோபு 12:15; 40:23). எதிர்பாராமல் மனிதன்மேல் விழும் துன்பத்தையும் (சங் 124), நீதிமானுக்கு எதிராக அவருடைய எதிரிகள் செய்யும் சூழ்ச்சிகளையும் (சங் 18:5 தொ. 17; 42:8; 71:20; 144:7) அடையாளமாக உணர்த்துகிறது. தீயவர்கள் தாங்கள் சூழ்ச்சியால் நீதிமானைப் பாதாளத்துக்கடியில் இழுத்துச் செல்ல முயல்கின்றனர் (சங் 32:25; 69:2தொ). இந்த அழிவுகளிலிருந்து நீதிமானை இறைவன் காக்கிறார் (சங் 32:6; காண்க. உ.ச 8:6தொ). அதேபோல் தீயோர் பிறர் அன்புக்கு மாறாக நடந்துகொள்வதற்கு ஏற்ற நேர்மையான தண்டனையாக (யோபு 22:11) அழிவுப் பெருவெள்ளத்தை அவர்கள்மேல் இறைவன் எளிதில் வரச்செய்கிறார். பெரிய ஆறுகளின் அழிக்கும் பெரும் வெள்ளத்தை, சிறுநாடுகளை அழித்து மறைந்து போகச் செய்யும் அரசுகளின் ஆற்றலை உணர்த்தும் அடையாளமாகக் காண்கின்றனர் இறைவாக்கினர்கள். அசீரிய ஆதிக்கம் யூப்பிரத்தீசுக்கும் (எசா 8:7), எகிப்தின் ஆதிக்கம் நைல் நதிக்கும் (எரே 46:7தொ) ஒப்பிடப்படுகின்றன. இறைநம்பிகை கொள்ளாத தம் மக்களின் மேலும் (எசா 8:6தொ), இஸ்ராயேலின் பரம்பரையான எதிரிகள் மேலும் (எரே 47:1தொ) இந்த ஆறுகளைத் தண்டனையாக இறைவன் அனுப்பப்போகிறார்.

படைப்பவரின் கரங்களின் இந்தக்கொடிய தண்டனை குருட்டுத் தன்மையுடைதன்று. இறைப் பற்றற்ற உலகை அது விழுங்கினாலும் (2 பேதுரு 2:5), பெருவெள்ளம் நீதிமானாகிய நோவாவைத் தப்பவிடுகிறது (ஞானம் 10:4). செங்கடலின் (நாணல் கடலின்) நீர் இறைவனின் மக்களையும் சிலைகளின் மக்களையும் வேறுபடுத்திச் செயல்படுகிறது (ஞானம் 10:18தொ). அச்சுறுத்தும் நீர்கள் நெருப்பால் வரும் இறுதித் தீர்ப்பை நோக்கி முன்கூட்டிச் செயல்படுகின்றன (2 பேதுரு 3:5 தொ; காண்க. சங் 29:10; லூக் 3:16தொ). இந்த அழிவுக்குப்பின் அவை ஒரு புதிய பூமியை விட்டுச்செல்கின்றன (ஆதி 8:1).

இ. சுத்திசெய்யும் நீர்: சினத்தின் நீர் என்ற கருத்து நீரின் நலம் அளிக்கும் மற்றொரு கருத்தோடு இணைக்கப்படுகிறது. நீர் உயிர் அளிக்கமட்டுமன்று, நீராட்டவும், கழுவவும் பயன்படுகிறது (காண்க.எசே 16:4-9; 23:40). விருந்தோம்பலின் ஒரு முதற்படியான சடங்கு, விருந்தினரின் கால்களில் பயணத்தால் படிந்துள்ள தூசியைத் துடைக்க, அவரது கால்களைக் கழுவுவதாகும் (ஆதி 18:4; 19:2; காண்க. லூக் 7:44; 1 திமொ 5:10). தாம் சாவதற்கு முந்திய இரவில், இயேசு, தாழ்ச்சிக்கும் கிறிஸ்தவ அன்புக்கும் எடுத்துக்காட்டான அடையாளமாக, அவரே ஊழியர் செய்யும் இந்தப் பணியைச் செய்யத் திருவுளமானார் (யோவா 13:2-5).

உடலைச் சுத்திசெய்யப் பயன்படும் நீர், ஒழுக்கத்தூய்மையின் அடையாளமாகவும் பல தடவை பயன்படுகிறது. மக்கள், தாங்கள் குற்றமற்றவர்கள் என்றும் குறிப்பிட்ட தீமையைச் செய்யவில்லை என்றும் காட்டத் தங்கள்

கைகளைக் கழுவுவர் (சங் 26:6; காண்க. மத் 27:24). மனிதன் தன் பாவங்களை விட்டுவிட்டு மனந்திரும்புதல், புழுதி படிந்த மனிதன் குளித்துத் தன்னைச்சுத்தி செய்வதற்கு ஒப்பிடப்படுகின்றது (எசா 1:16). இறைவன் பாவியின் பாவங்களை மன்னிக்கும்போது அவனைக் கழுவுகின்றார் (சங் 51:2). பெருவெள்ளத்தால் இறைப்பற்றற்றோரை அழித்தபோது இறைவன் பூமியைச் சுத்தி செய்தார் (காண்க. 1 பேதுரு 3:20 தொ).

ஈ. சடங்குமுறையில்: யூதச்சடங்குமுறை நீரால் சுத்தி செய்யப்படுவதற்குப் பலதரம் வாய்ப்பளிக்கிறது. பெரியகுரு தன் பதவிக்குரிய ஆடைகளை அணிவதற்குமுன் குளித்துத் தயார் செய்ய வேண்டும் (யாத் 29:4; 40:12). பெரிய பாவநீக்க நாளில் நீராடிய பின்னரே அவர் புனித ஆடைகளை அணியலாம் (லேவி 16:4-24). செத்த உடலைத் தொட்டவன் நீரில் மூழ்கிச் சுத்தி செய்ய வேண்டும் (11:40; 17:15தொ). தொழு நோயிலிருந்து தூய்மைப்படவும் (14:8தொ), பாலினத்தீட்டிலிருந்து தூய்மைபெறவும் (லேவி 15) நீரால் சுத்தி செய்யப்பட வேண்டும். இந்த உடல் சார்ந்த சுத்திகரச் சடங்குகள், மும்முறை புனிதரான இறைவனை அணுகிவர விரும்புகிறவனுக்கு அவசியமான இதயத்தின் உள்ளார்ந்த தூய்மையை அடையாளமாக உணர்த்துகின்றன. ஆனால், இவையெல்லாம் ஆன்மாவை ஆற்றலுள்ள விதத்தில் தூய்மைப்படுத்தச் சக்தியற்றவை. புதிய உடன்படிக்கையில் கிறிஸ்து சுத்திகரிப்பின் புதிய முறையை நிறுவுகிறார். கானாவூர் திருமணத்தில் நீரைத் (யோவா 2:6) திராட்சைரசமாக மாற்றியபோது இதை அடையாளமாக முன்னறிவித்தார். இஃது ஆவியையும் தூய்மைப்படுத்தி வாக்கையும் அடையாளப்படுத்துகிறது (15:3; காண்க. 13:10).

கசப்பு நீர், தீட்டுக்கழிக்கும் நீர், வாழ்வுதரும் நீர் முதலியவை பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழ்க் காண்க.

5. அ. இறுதிக்காலநீர்: இறைமக்கள் மீண்டும் அமைக்கப்படும் முன்னோக்கில், நீர் என்னும் கருத்து ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. சிதறிப்போனவர்களை ஒன்று கூட்டியபின், இறைவன் தூய நீரை அவர்கள் மேல் தெளிப்பார். அவர்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மை பெறுவர். அதன் விளைவாக, அவர்கள் இறைவனது நியமங்களைக் கடைப்பிடிப்பார்கள்; அவரது நீதித் தீர்ப்புகளைக் கவனமாய்ச் செயல்படுத்துவார்கள் (எசே 36:24-27). அப்போது சாபத்திற்கும் வறட்சிக்கும் முடிவு ஏற்படும். இறைவன் "ஏற்ற காலத்தில் மழையை வரச்செய்வார்" (34:26). இது செழிப்பை உறுதிப்படுத்தும் (36:29தொ). விதைகள் முளைத்துச் சமவெளிகள் நிறைந்த அறுவடையைக் கொடுக்கும் (எசா 30:23 தொ). இறைவனின் மக்கள் கொப்புளிக்கும் நீரூற்றுகளுக்கு இட்டுச் செல்லப்படுவர்; பசியும் தாகமும் எக்காலத்திற்கும் மறைந்து போகும் (எரே 31:9; எசா 49:10).

பாபிலோனுக்கு நாடு கடத்தலின் இறுதியில் யாத்திரைநிகழ்ச்சியின் நினைவு மீண்டும் அமைக்கப்படும் கருத்துகளோடு கலந்துள்ளது. நாடுகடத்தலிலிருந்து திரும்பி வருதல் உண்மையிலேயே ஒரு புதிய யாத்திரை நிகழ்ச்சியாகும். அப்போது மிகவும் வியத்தகு அருங்குறிகள் நிகழும். கடவுள் தமது மக்களின் தாகத்தைத் தீர்க்க, மோசேயின் கரங்களைக் கொண்டு பாறையிலிருந்து தண்ணீர் வரச்செய்தார் (யாத் 17:17; எண் 20:1-13; சங் 78:16.20; 114:8; எசா 48:21). இனி இறைவன் இவ்வருஞ்செயலைப் புதிப்பிப்பார் (எசா 43:20). ஆனால், இஃது எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாய் இருக்குமென்றால், அப்போது இறைவன் பாலைநிலத்தை வளமுள்ள நிலமாக்குவார் (41:17-20); தாகமுற்ற தரை நீரூற்றுகளால் நிறைந்திருக்கும் (35:6-7).

புனித யாத்திரைகள் முடியும் இடமான எருசலேம் வற்றாத நீரூற்றுகளைக் கொண்டிருக்கும். ஆலயத்திலிருந்து ஓர் ஆறு

தோன்றி சாக்கடலில் சேரும். அதுபோகும் இடமெல்லாம் உயிரையும் நலத்தையும் வழங்கிச்செல்லும். அதன் கரைகளில் மரங்கள் செழிப்புற்று வளர்ந்து வியத்தகு பலனளிக்கும். இந்நிலை இன்பவனத்தின் மகிழ்ச்சி திரும்ப வந்ததுபோல் இருக்கும் (எசே 47:1-12; காண்க. ஆதி 2:10-14). இறைமக்கள் இந்த நீரில் தூய்மையையும் (செக் 13:1). உயிரையும் (யோவே 4:18; செக் 14:8), புனிதத்தையும் (சங் 46:5) கண்டடைவர்.

ஆ. இந்த இறுதிக்கால முன்னோக்கில் நீர் ஓர் அடையாளப் பொருளைப் பெறுகிறது. உண்மையில் இஸ்ராயேல் சடப்பொருள்களை உடைமையாகக் கொண்டிருப்பதில் தனது பார்வையை நிலைநிறுத்துவதில்லை. அது கணநேரம் காணும் நற்பேறு; உலகம் சார்ந்த செழிப்பு மட்டுமே. ஆனால், ஆலயத்திலிருந்து தோன்றுவதாக எசேக்கியேல் காணும் நீர். இறைவனின் வாழ்வளிக்கும் ஆற்றலை அடையாளமாக உணர்த்துகிறது. இந்த நீர் மெசியா காலத்தில் பொங்கி வழிந்து, மனிதர்கள் மிகுதியான பலனைக் கொண்டு வரச்செய்யப்போகிறது (எசே 47:12. காண்க. எரே 17:8; சங் 1:3; எசே 19:10 தொ). எசா 44:3 தொ-இல் நீர் இறைவனது ஆவியின் அடையாளமாகும். இந்த ஆவி பாலைவனத்தைப் பூத்துக்குலுங்கும் தோட்டமாக்கும். பிரமாணிக்கமற்ற மக்களை உண்மையான இஸ்ராயேலராக மாற்றும். பிற இடங்களில் இறைவாக்கு, நிலத்தைப் பலனுள்ளதாக்க வரும் மழைக்கு ஒப்பிடப்படுகிறது (எசா 55:10 தொ; காண்க. ஆமோ 8:11தொ). ஞானம் போதிக்கும் போதகம் வாழ்வளிக்கும் நீரைப் போன்றதாகும் (எசா 55:1; சீரா 15:3; 24:25-31). சுருக்கமாக, இறைவனே மனித வாழ்வின் ஊற்றாவார். அன்பிலும் பிர மாணிக்கத்திலும் வளர்ந்து விரிவடைய அவனுக்கு வலிமை அளிக்கிறார் (எரே 2:13; 17:8). மனிதன் இறைவனிடமிருந்து பிரிந்து செல்லும்போது. அவன் வறண்ட நீர்ப் பசையற்ற நிலமாவான்; சாவுக்கு ஊழின் வழியில் உந்தப்பட்டவனாவான் (சங் 143:6). ஆகவே, கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பதுபோல், மனிதன் இறைவனுக்காக ஏங்கித் தவிக்கிறான் (சங் 42:1தொ). ஆனால், கடவுள் அவனோடு இருந்தால், இறைவனில் தனது வாழ்வின் ஊற்றைக் கொண்டிருக்கும் தோட்டம் போலாவான் மனிதன் (எசா 58:11).

6. புதிய ஏற்பாட்டில்:

அ. வாழ்வளிக்கும் நீர்: இறைவாக்கினர்கள் வாக்குறுதியளித்த வாழ்வளிக்கும் நீரைக் கொண்டுவர கிறிஸ்து வந்தார். மனிதர்கள், தங்களது உண்மையான வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்தில் தங்களதுதாகத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய நீரை (1கொரி 10:4; யோவா 7:38; காண்க. யாத் 17:1-7), அடித்தவுடன் (யோவா 19:34) அவரது விலாவிலிருந்து நல்கிடும் பாறை- அவரே. அதே போல், புதிய இன்பவனமாகிய புதிய எருசலேமை நீர்பாய்ச்சி உயிரளிக்கும் ஆறு தோன்றும் (யோவா 7:37 தொ; திருவெளி 22:1.17; எசே 47:1-12) ஆலயமும் அவரே (யோவா 2:19 தொ). இந்தநீர் தூய ஆவியே ஆவார்; படைப்பவரான இறைவனின் வாழ்வளிக்கும் ஆற்றலாவார் (யோவா 7:39). ஆனால், யோவா 4:10-14-இல் கிறிஸ்து - ஞானம் (4:25) கொண்டு வந்த வாழ்வளிக்கும் போதனையை நீர் அடையாளப்படுத்துவதாகத் தோன்றுகிறது. எது எப்படியிருந்தாலும் எல்லாம் நிறைவேறும் நாளில், உயிருள்ள நீர் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் முடிவில்லா மகிழ்ச்சியின் அடையாளமாகிறது. அவர்கள் செம்மறியால் வளமுள்ள சமவெளிக்கு இட்டுச் செல்லப்படுவர் (திருவெளி 7:17; 21:6; காண்க. எசா 25:8; 49:10).

ஆ. திருமுழுக்கு நீர்:

கிறிஸ்துவத் திருமுழுக்கில், நீரின் அடையாளம் முழுப்பொருளைப் பெறுகிறது. தொடக்கத்திலிருந்து, நீர் அதன்

தூய்மைப்படுத்தும் தன்மையால், திருமுழுக்கில் பயன்படுத்தப்பட்டது. "மனமாற்றம் அடைவதற்காக" யோவான் நீரால் திருமுழுக்கு அளித்தார் (மத் 3:11 இணை). இதற்காக, முன்பு நாமானைத் தொழுநோயிலிருந்து தூய்மைப்படுத்திய (2 அர 5:10-14) யோர்தான் நீரையே யோவான் பயன்படுத்தினார். ஆனால், திருமுழுக்கு, உடல் தூய்மையைக் கொண்டு வரவில்லை; ஆன்மாவின், மனசாட்சியின் (1 பேதுரு 3:21) தூய்மையைக் கொண்டு வருகிறது. அது நமது பாவங்களிலிருந்து நம்மைத் தூய்மைப்படுத்துகிறது (1 கொரி 6:11; எபே 5:26; எபி 10:22; அ.ப. 22:16). கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் மீட்பளிக்கும் சக்தியை நமக்கு அளிக்கிறது (எபி 9:13 தொ; திருவெளி 7:14; 22:14).

திருமுழுக்கு நீரின் இந்த அடிப்படை அடையாளப் பொருளோடு, பவுல் மற்றொன்றையும் சேர்க்கிறார். திருமுழுக்குப் பெறுபவர் நீரில் மூழ்குதலும் அதிலிருந்து எழுதலும், கிறிஸ்துவோடு அடக்கம் செய்யப்படுதலையும் ஆன்மீக உயிர்ப்பையும் அடையாளப்படுத்துகிறது (உரோ 6:3-11). ஒருவேளை, திருமுழுக்கு நீரில் கடலின் உருவத்தைப் பவுல் காட்சி செய்திருக்கலாம். தீய சக்திகள் வாழும் இடமும் சாவின் அடையாளமும் ஆன கடலை, முன்பு யாவே செங்கடலை (நாணல் கடலை) வெற்றி கொள்கிறார் (1 கொரி 10:1தொ; காண்க. எசா 51:10). இறுதியாக இறைவனது ஆவியை நமக்கு அளிப்பதால் திருமுழுக்கு புதிய வாழ்வின் ஊற்றுமாகும். தண்ணீரைக் கொண்டு பலரைக் குணமாக்கியபோது (யோவா 9:6தொ; காண்க. 5:1-8), இதையே சுட்டிக்காட்ட கிறிஸ்து விரும்பியிருக்கலாம். திருமுழுக்கு "புதுப்பிறப்பைத்தரும் முழுக்காகவும், புத்துயிர் அளிக்கும் தூய ஆவியாகவும்" கருதப்படுகிறது (தீத் 3:5; காண்க. யோவா 3:5).

இ. தூய ஆவி: பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் பல, இறைவனது ஆவியை உருவகமாகக் குறிக்க நீரைப் பயன்படுத்துகின்றன (எசா 44:3-4; காண்க. எசே 36:25-26; யோவா 2:23; 3:1). மேலும், இறைவனைக் குறிக்கவே நீர் பயன்படுகிறது (எரே 2:13; 17:13). இன்னும் பல பகுதிகள், நீர்மங்களைக் குறிக்கும் சொற்களால் ஆவியைக் குறிக்கின்றன (எசே 39:29; யோவே 3:1-2; எசா44:3; பழ 1:23; எசா 32:15; யாத் 31:3; 35:31; உப 34:9). "நீர்த் திரள்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடி" படைப்பில் செயலாற்றுகிறார்.

உயிர் அளிக்கும் அல்லது தூய்மைப்படுத்தும் நீரோடு இறைவனது ஆவி தொடர்பு-படுத்தப்பட்டிருக்கலாம்; அல்லது இதைவிட ஆழமான மிகவும் இதிகாசத் தொடர்பு இறைவனது ஆவிக்கும் அண்ட நீருக்கும் இடையே இருந்திருக்கலாம் (காண்க. ஆதி 1:2; எசே 1:26).

இந்தச் சூழ்நிலைகளில் எல்லாம், புதிய ஏற்பாடு ஆவியைக் குறிக்க நீரைப்பயன் படுத்துகிறது. குறிப்பாக, லூக்கா நற்செய்தியும் அப்போஸ்தலர் பணியும் ஆவியைக் குறிக்க, நீர்மங்கள் தொடர்புடைய சொற்களைப் பயன்படுத்துகின்றன (லூக் 1:15.41.67; அ.ப. 2:4.17-18; 4:8; எபே 5:18).

புதிய ஏற்பாட்டில் நீர் அடையாளம் பற்றிய சிக்கலான கருத்து, யோவான் நற்செய்தியில் காணப்படுகிறது. அதில் பல நிகழ்ச்சிகளில் நீர் மைய இடம் வகிக்கிறது. இயேசு திருமுழுக்குப் பெற்ற நிகழ்ச்சியைத்தவிர (யோவா 1:26-33), யோவானுக்கே உரிய ஏழுநிகழ்ச்சிகளில் நீர் இடம் பெறுகிறது. அவை தண்ணீரைத் திராட்சைரசமாக மாற்றியது (2:7-9;4:46); நிக்கொதேமுவோடும் (3:5), சமாரியப் பெண்ணோடும் (4:7-15) இயேசுவின் உரையாடல்கள்; பெத்சதா குளத்தருகில் ஒருவருக்குக் குணமளித்தல் (5:3-7); கூடாரவிழாவின் போது இயேசுவின் அறிவிப்பு (7:38); சீடர்களின் பாதங்களைக் கழுவுதல் (13:5); இயேசுவின் விலாவிலிருந்து இரத்தமும் நீரும் வழிதல் (19:34). ஆவி பற்றிய இறையியலை எடுத்துக் கூறுவதற்கு மட்டுமே யோவான் நீரைப்

பயன்படுத்துவதாகத் தெரிகிறது. இந்த இறையியல் ஆவியில் செயல்களோடு (1:32-33; 3:5-8; 7:38-39; காண். 19:30) அல்லது, அஃது அகற்றும் சடங்குத் தூய்மைப்படுத்துதலோடு (2:6; 13:10-11) நெருங்கிய இணைப்புடையதாகத் தெரிகிறது. இவ்விதம் புரிந்து கொள்வதற்குரிய விளக்கம், கூடார விழாவில் ஆலயத்தில் அளிக்கப்பட்ட நீர்ப்பலிச்சடங்கிலிருந்து வருகிறது. இச்சடங்கோடு இலையுதிர் காலத்தின் "பின்மாரிக்காக"வும் மன்றாடப்பட்டது. இதை ஆதித்திருச்சபை ஆவியைப் பொழிதலாக நம்பியது (அ.ப. 2:4.16-21; காண்க. யோவே 3:1-5). இந்தச் சடங்கின்போதுதான், இயேசு தானே இத்தகைய வாழ்வு தரும் நீர் என்று அறிவிக்கிறார் (யோவா 7:38-39). இந்த ஒளியில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் விலாவிலிருந்து வழிந்தோடிய நீருக்கும் பொருள் கொள்ளலாம் (19:34; காண்க. செக் 12:10; 13:1).

"வாழ்வின் நீர்" (திருவெளி 21:6; 22:1.17;12:10 காண்க. 7:17) என்பது, இவ்வுலகில் உள்ளவர் தாகம் கொள்ளும் உண்மையான என்றும் நீடிக்கும் வாழ்வை, நித்திய வாழ்வைக் குறிக்கிறது. இந்த உருவகம் நீரின் தொடர்ந்து ஓடும் மூலத்தை மட்டுமன்று, உயிரை உள்ளடக்கும், படைக்கும், மற்றும் அளிக்கும் அதன் பண்பையும் சுட்டிக்காட்டுகிறது.

நீர்க்குடம் (WATER SKIN)

கவிதைகளில் மழை மேகத்தைக் குறிக்க இது பயன்பட்டுள்ளது (யோவு 38:37; காண். 26:8). இவை விலங்குகளின் தோலிலிருந்து திரவப்பொருள்களை வைக்க, தயாரிக்கப்பட்ட பை போன்ற அமைப்பை உடையவையாகும்.

நீர்க்கோவை நோய் (DROPSY)

இது லூக் 14:2-இல் குறிக்கப்படுகிறது. இப்போகிராத்து காலத்திலிருந்து மருத்துவர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு பெயர். இஃது ஓர் அறிகுறியே அன்றி வியாதியன்று. இது முற்றிவிட்ட உடல்நோயைக் குறிக்கின்றது. உடலின் தசைநார்களுக்குள்ளோ, குழிகளுக்குள்ளோ அளவுக்கு அதிகமாக நீர் சேர்ந்து விடுவதால் இந்நோய் வருகின்றது. இது வந்திருக்கும் இடத்தைப் பொருத்து- அடிவயிற்று நீர்க்கோவை, நுரையீரல் சவ்வு நீர்க்கோவை, இருதய நீர்க்கோவை, கை கால் நீர்க்கோவை என்று அழைக்கப்படும். லூக் 14:2-இல் குறிக்கப்படும் நீர்க்கோவை, அனேகமாக இருதய, குண்டிக்காய் அல்லது கல்லீரல் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

நீர்க்கோழி, சகோரம் (CORMORANT)

ஒரு பெரிய கடற்பறவை இனம். இது லேவி 11:17-இல் சகோரம் என்றும், உப 14:17-இல் நீர்க்கோழி என்றும் மொழி பெயர்க்கப்படுகிறது. இஃது உண்ணத்தகாத தீட்டுள்ள அருவருப்பான பறவையாகும் (லேவி 11:13; உப 14:17).

இந்தப் பறவை இனத்தில் ஏறக்குறைய 30 வகைகள் உள்ளன. மீன்களை மட்டும் உண்ணும் மீன்கொத்தியானது பாலஸ்தீனக் கடற்கரையிலும், கலிலேயாக் கடலிலும், யோர்தான் ஆற்றிலும் இருந்ததாகத் தெரிகிறது. விவிலியப் பறவைகளின் பட்டியலில் இப்பறவை சேர்க்கப்பட்டிருப்பது இயற்கை. இவை நீரில் வேகமாக நீந்தக் கூடியவையும் மூழ்கி எழக்கூடியவையும் ஆகும். இவை முழு மீன்களையும் விழுங்கக்கூடியவை. இவற்றின் நீண்ட உடலும், நீண்ட ஒல்லிய கழுத்தும் பார்ப்பவர்களைக் கவரக்கூடியன.

நீர்த்திரள், வெள்ளப்பெருக்கு (MANY WATERS)

குழப்பத்தின் நீர்த்திரளைக் குறிக்கும் பழைய ஏற்பாட்டுக் கவிதைச் சொற்றொடர். உலகம் பற்றிய பழங்கால நோக்கில், இந்நீர்த்திரள் மேல்தான் நிலப்பகுதி நிறுவப்பட்டிருந்தது. இது பாகால் கடலோடு நடத்திய போராட்டம் பற்றிய பழங்காலக் கானானிய (உகாரித்து) இதிகாசத்திலிருந்து வந்த கருத்தாக இருக்கலாம்.

இது 2சாமு 22:17; சங் 18:16-இல் வெள்ளப்பெருக்கென்றும், அப 3:15-இல்

பெருவெள்ளக்குவியல் என்றும், சங் 77:19-இல் வெள்ளத்திரள் என்றும், எசா 51:10-இல் பேராழ நீர்த்திரள் என்றும் குறிக்கப்படுகின்றது. இது, யாவே தம் இறையாற்றலில் தோன்றும்போது (எசே 1:24; 43:2; திருவெளி 1:15 பெருவெள்ளத்தின் இரைச்சல்) அழிக்கப்பட்ட இயற்கைச் சக்திகளில் ஒன்றாகும். மற்ற இடங்களில் யாவே தம் எதிரிகளுக்கு எதிராய்ப் பயன்படுத்தும் ஆயுதமாகவும் (யாத் 15:10), படைப்பின் வாகனமாகவும் (எரே 24:7) குறிக்கப்படுகிறது. இந்த உருவகம் இன்பவனச் சூழ்நிலையை (எரே 51:13; காண். எசே 17:5; 19:10; 31:5.15) அல்லது ஆபத்தையும் அழிவையும் (சங் 144:7; காண் சங் 32:16; எசே 26:19) குறிக்கலாம்.

எசா 17:12-13-இல் ஆசிரியர் தன் பகைவர்களைப் பெருவெள்ளத்திற்கு உருவகமாக ஒப்பிடுகிறார்.

நீர்த்தேக்கம் (RESERVOIR)

மழை நீரைச் சேகரித்துத் தேக்கி வைக்குமிடங்கள் விவிலிய காலத்தில் பொதுவாகக் காணப்படுகின்றனர். அதன் அடையாளங்களை இன்று கூடக் காணலாம். எசா 22:11 இரண்டு சுவர்களுக்குமிடையேயுள்ள நீரைத் தேக்கி வைக்குமிடத்தைக் குறிப்பிடுகிறது. இஃது எசேக்கியா அரசனால் நிறுவப்பட்டிருக்கலாம்.

நீர்த்தொட்டி (RUNNEL, TROUGH)

இது யாக்கோபு, தன் மந்தைகள் தண்ணீர் குடிக்கப் பயன்படுத்திய நீர்த்தொட்டி (ஆதி 30:38.41). மிதியான் நாட்டுக் குருவின் ஏழு புதல்வியரும் ஆட்டு மந்தைகளுக்குத் தண்ணீர் காட்ட, நீர் மொண்டு தொட்டிகளை நிரப்பினர் (யாத் 2:16).

நீர்ப்பாசனம், நீர் பாய்ச்சுதல் (IRRIGATION)

பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்குக் கையாளப்படும் செயற்கை முறைகளுக்கு- நீர் பாய்ச்சுதல் என்பது பெயர். விவிலிய காலத்தில் அணைக்கட்டுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள், மற்றும் நிலத்தடிச் சுரங்கங்கள் மூலம் நீரை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு சென்றனர்.

நீர்வீழ்ச்சி, அருவி (CATARACT)

சங் 42:7-இல் குறிக்கப்படும் இந்த அருவிகள் யோர்தான் தோன்றும் மிகவும் மேற்குக் கோடியில் அமைந்துள்ள ஏன்-தன்னூர் நீர் வீழ்ச்சியைக் குறிக்கலாம் அல்லது யோர்தான் தோன்றும் மிகக் கீழ்க்கோடியில் அமைந்துள்ள நக்ர-பானியாவைக் குறிக்கலாம். பின்னது எர்மோன் மலையின் அடிவாரத்தில் குகையிலிருந்து ஓசையுடன் கொப்பளிக்கின்றது. மறு புறத்தில் வாசகச் சூழ்நிலை, கீழ் உலக நீரைச் சுட்டலாம்.

நீல மணிக்கள் (SAPHIRE, LAPIS LAZULI, TURQUOISE)

இச்சொல் பல எபிரேயச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்க்கிறது. இது திண்ணிய நீல நிறக் குருந்தம். வைரத்திற்கடுத்தபடி கடினம் வாய்ந்த கனிப்பொருள்வகை. கெம்புகள் போன்ற வேதியல் அமைப்புடையது. வெள்ளை, பச்சை, கருஞ்சிவப்பு மஞ்சள் நிறமுடைய நீல மணிக்கற்களும் உண்டு.

விவிலியச் சூழ்நிலைகள், அதன் நிறத்தையும் கடினத்தன்மையையும் குறிப்பிடாது; அதன் மினுமினுக்கும் மற்றும் விலையுயர்ந்த தன்மைகளைச் சுட்டுகின்றன. இஸ்ராயேல் கடவுளின் பாதங்களின் கீழுள்ள தளம்- நீல மணிக்கல் இழைத்த வேலைப்பாடு போன்றிருந்து (யாத் 24:10). அவரது அரியணை- நீலமணிக்கம் தோற்றமுடையது (எசே 1:26; 10:1). மண்ணிலிருந்து பெறப்படும் அரிய பொருட்களில் நீலமணிக்கல்லும் ஒன்றாகும் (யோபு 28:6.16). புதிய எருசலேம் நீலக்கற்களால் நிறுவப்படும் (எசா 54:11). தீர்ப்புக்கூறும் மார்புப்பட்டையிலும் ஏபோதிலும் பதிக்கப்பட்டுள்ள கற்களில் இதுவும் ஒன்றாகும் (யாத் 28:18; 39:11). தீர்நாட்டு மன்னன் அணிந்திருந்தவற்றில் இதுவும் ஒன்றாகும் (எசே 28:13). எருசலேமின் இளவரசன் நீலமணிக் கட்டழகராய் இருந்தார் (புல 4:7). “காதலனின்

வயிறு, யானைத் தந்தத்தின் வேலைப்பாடு; அதில் நீலமணிகள் பொதியப்பெற்றுள்ளன" (உ.ச. 5:14).

புதிய எருசலேமின் இரண்டாவது அடிக்கல் நீலக்கல்லால் ஆனது (திருவெளி 21:19). குதிரையில் ஏறி வந்தவர்கள் அணிந்திருந்த மார்புக் கவசங்களின் நிறங்களில் ஒன்று நீலமாகும்.

நீலம், ஊதா, கருஞ்சிவப்பு (BLUE, VIOLET, PURPLE)

விவிலியத்தில் கூறப்படுகின்ற ஒரு தெளிவில்லாத நிறம் அனேகமாக ஊதா அல்லது இந்திர நீல நிறமாக இருக்கலாம். மத்திய தரைக்கடல் பகுதியில் கிடைக்கும் ஒருவிதச் சிப்பிகளிலிருந்து இந்த நிறப்பொருள் தயாரிக்கப்பட்டு சாயம்பூசப் பயன்படுத்தப் பட்டது. சிலைகளின் உடைகளுக்கு அதிகமாக இந்த நிறச் சாயம் பூசப்பட்டுள்ளது (எரே 10:9; எசே 23:6). எசே 23:6-இல் அசீரிய இளவரசர்களின் ஆடை நீலத்தால் ஆனது எனப்படுகிறது.

நீலமும், இந்திர நீலமும் எல்லா இடங்களிலும் கிடைத்தாலும் (எசே 27:7.24) அதிகமாகத் தீர் நகரில் இந்த நிறங்கள் தயாரித்து விற்கப்பட்டிருக்கின்றன (2 நாள் 2:7.14). பேழையில் உள்ள துணிகளில் இந்த நிறம் பயன்படுத்தப்பட்டது (யாத் 25:4; 26:1.4; எண் 4:6-7.9). குருக்களின் ஆடைகளிலும் (யாத் 28:5-6.8.15; 39:1). சாலமோனின் ஆலயத்திலும் இந்த நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எஸ்த 1:6-இல் அகசுவேர் அரசனின் அரண்மனையில் உள்ள நீலத் தொங்கல்களைப் பற்றியும், எஸ்த 8:15-இல் நீலம், வெள்ளை வர்ணங்களினாலான அரச மேலாடைகளைப் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளன. சீராக்கு நூலில், ஞானத்தின் தளைகள் நீல மணிவடத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளன (சீரா 6:30). மோசேயின் திருவுடை பொன்னீல நிறமும் கருஞ்சிவப்பு நிறமும் கொண்டதாகும் (45:10). யூதா மக்கபேயு நீலநிறப் பட்டாடைகளையும் கொள்ளைப் பொருளாகக் கைப்பற்றினார் (1 மக் 4:23). கும்ரான் சமூகத்தைச் சேர்ந்த குருக்கள் போரின்போது அணிந்திருந்த ஆடையில், நீலம் முதன்மை பெற்றது.

நு

நுகம் (YOKE)

பொதுவாக இஃது எருதுகளின் கழுத்தின் மேல் வைக்கப்படும் மரச்சட்டமாகும். இச்சட்டம் வண்டியோடோ, கலப்பையோடோ இணைக்கப்பட்டிருக்கும். நுகத்தில் பல வகையுண்டு (எரே 28:10; எண் 19:2; உப 21:3). நுகத்தின் மையத்தில் ஒற்றை மரச்சட்டம் இணைக்கப்பட்டு அது கலப்பை அல்லது வண்டியை இழுத்தது. மனிதர்கள் கைதிகளாக நடத்திச் செல்லப்படும்போது மனிதர்களின் மேலும் நுகம் சுமத்தப்பட்டது (எரே 28:10; 1 அர 12:9; 2 நாள் 10:4). அடிமைகள் மரத்தாலோ இரும்பாலோ செய்யப்பட்டிருக்கும் நுகத்தினடியில் கட்டி வைக்கப்பட்டனர் (1 திமொ 6:1). இதையே உருவகப்படுத்தி, நுகம் அடிமை நிலையைக் குறிக்கும் அடையாளமாகிறது. யாக்கோபு ஏசாவின் மீது நுகத்தைச் சுமத்துவார் என்று முன்னறிவிக்கப்பட்டது (ஆதி 27:40). எரொபவாமின்கீழ் மக்கள் கட்டாய வேலை மற்றும் பளுவான நுகத்தையும் பற்றி முறையீடு கூறினர் (1 அர 11:28; 12; 11.14). அடிமைத்தனமும் (சீரா 33:27), எந்தத் துன்பமும் (புல 3:27; சீரா 40:1) நுகத்தைப் போன்றாகும். ஒரு நாடு மற்றொரு நாட்டால் இழிவுபடுத்தப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் நுகத்திற்கு ஒப்பிடப்படுகிறது (எரே 27:8; 28:4; ஓசே 11:7; காண்க. உப. 28:48; எசா 47:6). அடிமைத்தனத்தைக் களைந்தெறிவது நுகத்தை உடைத்தெறிவதாக விவரிக்கப்படுகிறது (எரே 28:2; காண்க. எசா 9:4; 14:25). இறைவன் எகிப்தின் ஆதிக்கத்தை அழித்தொழிப்பதாக வாக்குறுதி அளிக்கிறார் (எசே 30:18). இறைவனிடமிருந்து பிரிந்து செல்வதும் அவருக்குக் கீழ்ப்படிய மறுப்பதும் பாவியாக அல்லது கிளர்ச்சிக்காரனாக இறைவனது நுகத்தை முறிப்பதாகும் (எரே 2:20; 5:5; சீரா 51:39). சட்டத்திற்கும், பாவத்திற்கும், தீமைக்கும் அடிமையானதோடு ஒப்பிடுகையில் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதாகிய நுகம் எளியது (மத் 11:29). பாவம் ஒரு நுகமாகும் (புல 1:14). சட்டத்தின் வாசகத்தையே பின்பற்றுவது ஒரு நுகமாகும் (அ.ப. 15:10; கலா 5:1).

ஒரு குழு அல்லது ஒரு சோடி மாடுகளை நுகத்தோடு பிணைப்பது ஒரு "நுகம்" என்றழைக்கப்பட்டது (1 சாமு 11:7; 1 அர 19:21; லூக் 14:19). மாடுகள் சோடியாக வேலை செய்தன. சில சமயங்களில் அதிகமான பளுவை இழுக்க நான்கு மாடுகள் பொருத்தப்பட்டன. பாகால் பெயோரை அடிபணிவது பாவமாகும் (எண் 25:3.5). பவுல் தன் உடன் உழைப்பாளர்களை "என்னோடு தோள் கொடுத்து உழைத்த உண்மையான தோழர்களே" (பிலி 4:3) என்றழைக்கிறார். இஃது ஒரு குழுவைச் சுட்டலாம். இதைவிட இயேசுவின் நுகத்தடியின்கீழ் வேலை செய்பவர்கள் என்று பொருள் கொள்வது மேல்.

ஓர் ஏர் ஒருநாளில் உழக்கூடிய நிலத்தின் அளவு- ஓர் ஏக்கர் என்று அழைக்கப்பட்டது (1 சாமு 14:14; எசா 5:10).

நுண்ணோக்கு, உள்நோக்கு (INSIGHT)

இது பொருட்களின் தன்மையைத் தேர்ந்து தெளியும் அறிவுசார்ந்த மற்றும் ஆன்மீக ஆற்றல் ஆகும். பகுத்தறிவும் மற்றும் வேறுபாடு கண்டறியும் ஆற்றலாகும் (எஸ் 8:16; பழ 1:2; 2:3; 3:5; 4:1.5.7; 7:4; 8:14; 9:6; எபே 1:9; 3:4; காண்க. 2 சாமு 14:17.20; ஞானம் 7:7. 17-21). விவிலியக்கருத்தில், ஞானத்தைப் போன்று, நுண்ணோக்கு இறைவனது கொடையாகும் (திருவுரை 2:26; ஞானம் 7:27; காண்க. 7:7; 1 கொரி 2:2-16; யாக் 1:5-8). இஃது ஓரளவு நிலையான மனம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த கொடையாகும். அதை விரும்புவது தலைமையாகச் செயல் முறையானதாகும்; வாழ்க்கை வழிகாட்டலுக்கு அவசியமானதாகும். இறைவனுக்குப் புறம்போ, மனிதனது அறிவு சரியான முறையில் நடத்திச் செல்லாது (பழ 3:5).

நுண்ணோக்கு ஞானத்தோடும் (பழ 1:2; 4:5.7; 7:4; 8:14; 9:10; எபே 1:9), மெய்யறிவோடும் (பழ 2:3), ஆலோசனை (8:14) ஆகியவற்றோடும் இணைந்தது. அவற்றோடு நெருங்கிய உறவுடையது. அது மெய்யறிவையும் (2:3), இறைவனைப் பற்றிய ஆழ்ந்த அறிவையும் (யோபு 11:7; 28; எரே 9:23-24; ஞானம் 9:13-18; 1 கொரி 2:10-11) இறைவனது ஆலோசனையையும் (ஞானம் 9:13-17), நன்மை தீமை பற்றிய அறிவையும் (2 சாமு 14:17; 1 அர 3:9), பூமியிலுள்ள எல்லாப்பொருட்கள் பற்றிய அறிவையும் (2 சாமு 14:20), இறைவனுக்கு விருப்பமானவை பற்றிய அறிவையும் (திருவுரை 2:26; ஞானம் 9:18), விரும்பிய முடிவை அடைய காரியங்களை ஒழுங்குபடுத்தும் ஆற்றலையும் (பழ 8:14) மனிதர்களுக்கு அளிக்கிறது. இத்தகைய அறிவு வெளிப்பாடாகக் கருதப்படுகிறது.

இக்கொடையால், சடப்பொருளில் ஆன் மீகத்தையும், மனித வரலாற்றில்- இறைவனது செயலையும், நாசரேத்து இயேசுவில்- இறைவனின் கிறிஸ்துவையும் மனிதனால் கண்டுணர முடிகிறது.

நுழைவாயில் (THRESHOLD)

இது வாயிற்படிக்கல்லை அல்லது கல்லால் ஆன கதவுநிலையின் தரைமட்டக் கல்லைக் குறிக்கும்.

பழங்கால இஸ்ராயேலிலும் அதன் அண்டை நாடுகளிலும் நுழைவாயிலும், கடைவாயிலும் முக்கியமான அடையாளப் பொருள்கள் கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட வீடும் குடும்பமும் அதன் வீட்டு வாசலைக்கொண்டு மற்றவற்றிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது (யாத் 21:5-6; உப 15:16-17). இஸ்ராயேலர் வீட்டு வாயில்கள் பங்குச் செம்மறியின் இரத்தத்தால் குறிக்கப்பட்டிருந்தன (யாத் 12:7.13). சட்டத்தின் பகுதிகள் கதவு நிலைகளிலும் நுழைவாயில்களிலும் எழுதிவைக்கப்பட்டன (உப 6:9).

ஒரு வீட்டின் அல்லது ஆலயத்தின் நுழைவாயில் புறவுலகோடு கொண்ட எல்லையாக அமைந்திருந்தது. அதைக் கடப்பது, செயல் அளவில் ஒன்றிலிருந்து மற்றதற்குச் செல்வதின் அடையாளமாகும் (நீதி 19:27; 1 அர 14:17). வாயிலைக் காக்கும் ஊழியர் சிறப்பு முக்கியத்துவம் கொண்டிருந்தனர் (2 அர 12:9; 22:4; எஸ்த 2:21; எரே 35:4). ஆலயத்தின் நுழைவாயில் புனிதமாகக் கருதப்பட்டது (எசே 46:2). தாகோனின் பெலிஸ்திய கோவிலின் நுழைவாயிற்படியை மிதிப்பது தடை செய்யப்பட்டிருந்தது. இதற்குத் தாகோனின் சிலை ஆண்டவரின் பேழைக்குமுன் முகம் குப்புறத் தரையில் விழுந்து கிடந்ததும், அதன் தலையும் இரு கைகளும் துண்டிக்கப்பட்டு வாயிற்படியில் கிடந்ததும் காரணமாகக் கூறப்படுகின்றன (1 சாமு 5:4-5). கோவிலையோ, வீட்டையோ சேர்ந்த நுழைவாயிலை மிதியாமல் தாவிச்செல்லும் பழக்கம் இப்படிப்பட்ட ஆனால் பரந்த பொருளையுடைய தடையின் விளைவாக இருக்கலாம். இஃது இஸ்ராயேலரைச் சேராதவர்களின் பழக்கம்; ஆனால், யூதாவில் சிலரால் பின்பற்றப்பட்டது (செப் 1:9). யாவேயின் ஆலய நுழைவாயிலுக்கருகில் மனிதர் வாழும் பகுதிகளை அமைப்பது, அளவுக்கு அதிகமாக அவரோடு கொண்ட நெருக்கத்தைக் குறிக்கிறது. இவ்வாறு தங்கள் வீடுகளை அமைத்து யாவேயின் பெயரை அவர்களின் அருவருப்பான செயல்கள் மூலம் தீட்டுப்படுத்தினர் (எசே 43:8). எசேக்கியேலின் காட்சியில் கடவுளின் மாட்சிமை அது தங்கியிருந்த கெரூபுகளை விட்டு மேலெழுந்து அடையாள எழுத்தரிடம் பேசுவதற்காக இருமுறை ஆலயத்தின் வாயிற்படிக்கு வந்தது (9:3; 10:4.18).

நுனித்தோல் (FORESKIN)

ஆண்குறியை மூடும் மேல்தோல். காண்க: விருத்தசேதனம்.

நூ

நூசி (NUZI)

நூசி அசூருக்குக் கிழக்கிலும், அரப்பாகாவிற்குத் (இக்காலக் கிர்குக்கு) தென்மேற்கிலும் 15 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு பழங்கால மெசபொத்தாமிய நகரம். இது கி.மு. 2-ஆம் ஆயிரம் ஆண்டுகளில் புகழோடு விளங்கியது. இங்குக் கண்டெடுக்கப்பட்ட ஏடுகள் எல்லாம் அக்காதிய மொழியில் ஆப்பு எழுத்தில் எழுதப் பட்டுள்ளன. இவை யூதகுலத் தலைவர்கள் காலத்திய சமூகப் பழக்கவழக்கங்களைப் பற்றி அறிய உதவுகின்றன.

நூசி இருந்த இடம், பாக்தாத்தின் வடக்கில் சுமார் 240 கி.மீ. தொலைவிலுள்ள யோக்லான் தெபே மண்மேடாகும். இவ்விடத்தில் ஊரியன் இனத்தவர் வாழ்ந்த போது இது நூசி என்று அழைக்கப்பட்டது. இவ்விடம் மித்தானி என்னும் மன்னனின் அரசாகவும் விளங்கியது. அசீரியர்கள் இதனைக் கைப்பற்றியபின் இந்நகரத்தின் புகழ் குன்றத் தொடங்கியது. ஊரியன் **(Hurrian)** இனத்தவர் இங்குக் குடியேறு முன்னமே வேறு இனத்தவர் இங்கு வாழ்ந்து வந்தனர். பழைய அக்காதிய காலத்தில் இது காசூர் என்று அழைக்கப்பட்டது.

யூதகுல மூதாதையர்கள் பாலஸ்தீன நாட்டில் குடியேறுமுன், மத்திய யூப்பிரத்தீசு பள்ளத்தாக்கில் காரானில் வாழ்ந்தனர். இப்பகுதியில் ஊரியன் இனத்தவரும் வாழ்ந்தனர். இவர்கள் அவர்களைச் சுற்றி வாழ்ந்த மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். நூசியும், ஊரியன் இனத்தவர் வாழ்ந்த மிகவும் கிழக்கில் உள்ள நகரமாகும். எனவே, நூசியில் உள்ள ஊரியன் இனத்தவரைப்பற்றி அறிந்த உண்மைகள், எபிரேயர்களுடன் வாழ்ந்த ஊரியன் இனத்தவருக்கும் பொருந்தும். இவர்களிடையே இருந்த பழக்க வழக்கங்கள் சில எபிரேயர்களிடம் காணப்படுகின்றன.

மிகவும் பொருந்தும் ஓர் உதாரணம், ராகேல் விக்கிரகங்களைத் திருடிச் சென்றதாகும் (ஆதி 31:19.30). முதலில் இஃது ஒரு புதிராக இருந்தாலும், நூசியில் கிடைத்த பல உண்மைகள் இதை விளக்குகின்றன. சில சமயங்களில் ஒருவனுடைய செல்வம் அவனுடைய மருமகனுக்குச் சேரும் வாய்ப்பு உண்டு. ஆனால், அவன் தன் மருமகனுக்குத் தன் குடும்பத்தின் விக்கிரகங்களைக் கொடுத்தால் மட்டுமே சாத்திய மாகும். எனவேதான், ராகேல் விக்கிரகங்களைத் திருடிச்சென்றாள். மூன்று முக்கியமான இடங்களில் 'மனைவி', 'சகோதரி' என்று குறிப்பிடப்படுகின்றாள் (ஆதி 12:10-20; 20:2-6; 26:1-11). ஊரியன் சமுதாயத்தில் ஆண்கள் இரத்த உறவின்படி இல்லாவிட்டாலும், சட்டப்படியாவது 'சகோதரி' முறையுள்ள பெண்களையே மணந்தனர். எனவே, 'மனைவி' என்பதும், 'சகோதரி' என்பதும் ஒரே ஆளைக் குறிக்கும்படி இரு சொற்களும் மாற்றிப் பயன்படுத்தப்பட்டன. மேலும், இச்சமுதாயத்தில் ஒரு பணக்கார மனைவி தன்னால் தன் கணவனுக்குக் குழந்தை பெற்றுத்தர முடியாவிட்டால் அவள் தன் கணவனுக்கு அடிமைப்பெண்ணை மனைவியாகக் கொடுத்து வாரிசைப் பெறலாம் (16:1-4; 30:1-13). இந்த உண்மையின் மூலம் 16:2-இல் கூறப்படும் "அவள் மூலம் நான் பிள்ளைகளைப் பெறுவேன்", என்பது தெளிவாகிறது. மகன் இல்லாதபோது, உரிமைச் சொத்தைக் குடும்பத்திற்குள்ளே வைத்துக்கொள்ள தத்து எடுக்கலாம் (15:2 தொ). ஊரியர்களிடையே பிறப்புரிமை காலவரிசைப்படி அமையவில்லை; தந்தையின் சட்டப்படியே அமைந்தது. குறிப்பாக, அவர் இறக்க இருக்கும்போது கூறும் சட்டம் எல்லாரையும் கட்டுப்படுத்துவதாகும். இத்தகைய வழக்கை ஆதி 27-இல் காணலாம். மாறுபட்ட சூழ்நிலையில் இந்த வழக்கம் தடை செய்யப்படுகிறது. அதற்கு மாறாக, காலவரிசைப்படி தலைச்சன் பிள்ளைக்கே சொத்துக்களைப் பங்கிடும்போது, இரு மடங்கு அளிக்க வேண்டும் (உப 21:15-17).

நூமேனியு (NUMENUS)

நூமேனியு அந்தியோக்குவின் மகனும், சீமோன் என்னும் மக்கபேய தலைமைக்குரு யோனத்தானால் உரோமைக்கும் ஸ்பார்த்தாவுக்கும் அனுப்பப்பட்ட யூத தூதுவர்களில் ஒருவரும் ஆவார் (1 மக் 12:16). சீமோன், கி.மு. 141-இல் நூமேனியுவின் தலைமையில் தூதுக்குழு ஒன்றை அனுப்பினார். அவர்களிடம் 1000 பொற்காசுகள் நிறையுள்ள தங்கக் கேடயம் ஒன்றையும் கொடுத்து அனுப்பினார் (14:24). கி.மு. 139-இல் நூமேனியு உரோமை ஆளுநன்லூக்கியுவால் பக்கத்து நாடுகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களுடன் திரும்பி வந்தார். அக்கடிதத்தில் உரோமையர்கள், யூதர்களோடு கொண்டிருந்த நட்புறவைப் பற்றியும், உரோமைக்கு வந்த யூத தூதுக்குழு பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் பக்கத்து நாடுகள் யூதர்களைத் துன்புறுத்தக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இக்கடிதத்தின் உண்மைத்தன்மை பற்றிச் சிலர் ஐயுறுவர். ஆனால், யோசிப்பசு இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். அவரது கூற்றுப்படி, இது 2-ஆம் இரிக்கானுவின் ஆட்சிக்காலத்தில் நடந்ததாகும்.

நூல், புத்தகம் (BOOK)

1. எழுத்தும் நூல்களும்: எழுத்து, நூல் இவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவை. ஆனால், இவை இரண்டு சொற்களுக்கும் பொருள் வேறுபாடுண்டு. ஒன்றோடொன்று தொடர்புள்ளவற்றை எழுதி ஒன்றாகத் தொகுக்கும்போது அதை நாம் நூல் அல்லது புத்தகம் என அழைக்கிறோம். வேதநூலில் கூட பொருள் ஒற்றுமையுள்ள ஓர் எழுத்துப் பகுதியைத் தான் ஒரு புத்தகம் என அழைக்கிறோம். இக்காரணத்தினால்தான் நாம் ஒரு நூலுக்கு ஒரு தலைப்புக் கொடுக்கிறோம். பொதுவாக, இத்தலைப்பு ஒருநூலின் தொடக்கத்தில் காணப்படுகிறது. ஒரு நூலுக்கு ஒரு தலைப்பு இருக்க வேண்டும். அஃது ஒற்றுமையுள்ள ஒரு பொருளைப்பற்றி எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், ஒரு நூல் என்பது ஒரு தொகுப்பு. பலவரித்தொடர்களையோ, பல எழுத்துப் பத்திகளையோ நாம் பொதுவாக ஒரு நூல் அல்லது ஒரு புத்தகம் என அழைப்பதில்லை. ஒரு நூலில் ஒவ்வொரு பகுதியும் மற்றப் பகுதிகளோடு தொடர்புள்ளதாக இருக்கின்றன. அதில் பல நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக வரிசைக் கிரமமாக எடுத்துக் கூறப்படுகின்றன. அதில் ஒன்றோடொன்று தொடர்புள்ள எழுத்துக்கள், பாக்கள், செய்யுட்கள், சொற்றொடர்கள், உவமைகள், இறைவாக்குகள் எல்லாம் ஒன்றாகத் தொகுக்கப் பெறுகின்றன.

நூல் அல்லது புத்தகத்தைப்பற்றி இஸ்ராயேல் மக்களின் வரலாற்றுத் தொடக்கத்திலேயே நாம் வாசிக்கின்றோம். தொன்று தொட்டே "யாவேயின் போர்கள்" (எண் 21:14), "யாசாரின் நூல்" (யோசு 10:3; 2 சாமு 1:18) என்ற இரண்டு பழங்காப்பிய, உணர்ச்சிப்பாடல் தொகுப்புகளை அவர்கள் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். தொடக்கத்திலிருந்தே இஸ்ராயேல் மக்கள் தம் இறுதி முடிவின் தனித்தன்மையையும் இறைவன் அவர்களது வரலாற்றிற் அளிக்க இருந்த தொடர்ச்சியையும் நன்கு உணர்ந்து அறிந்திருந்தனர் என்பதை இவ்விரு தொகுப்புகளும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஒரு சில நூற்றாண்டுகளில் இச்சிறுமக்களினம் வெளியிட்ட, பலதிறப்பட்ட ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ள நூல்களின் எண்ணிக்கை இம்மக்களின் விசுவாசத்தின் ஆழத்திற்கும் ஆற்றலுக்கும் சாட்சி கூறி நிற்கின்றது. இவ்விசுவாசமே அவர்களுக்கு ஏற்பட்ட பல பிரச்சினைகளைத் தெளிவாக எடுத்துரைப்பதற்கும் அவற்றைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்கு உறுதுணையாகயிருந்தது. அவர்கள் வரலாற்றுத் தொகுப்புகளை வெளியிட்டனர்; சட்டநூல்கள் எழுதினர்; கவிதைகளையும் வழிபாட்டுப் பாக்களையும் தொகுத்தளித்தனர்; நடைமுறை வாழ்வில் எழும்

மனிதப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்ந்தறிந்து விவரித்தனர்.

2. நூல் - ஒரு நினைவுச்சின்னம், திருச்சான்று:

இஸ்ராயேல் மக்கள் வெளியிட்ட நூல்கள் பலவற்றின் தொடக்கத்தைக் கண்டறிய நம்மால் முடிகின்றது. இத்தொடக்கம் புனிதமானதொன்று எனவும் நாம் அறிய வருகின்றோம். இவ்வாறு புனிதமான தொடக்கத்தைக் கொண்டவைதான் இஸ்ராயேல் மக்களின் சட்ட நூல்களும் இறைவாக்கு நூல்களும். இறைவன் சட்டமும் இறைவாக்கினர்களும் வேதநூலின் சிறப்பான அமைப்பாகத் திகழ்கின்றன.

மோசே இறைவனிடமிருந்து பெற்று, தம் கைகளில் ஏந்திவந்த (யாத் 32:15) "சட்ட திட்டங்கள்" (யாத் 24:12) அடங்கிய 'கடவுளின் கையால் எழுதப்பட்ட சாட்சிப் பலகைகளாகிய இரண்டு பலகைகளையும்" (யாத் 31:18) நாம் மேலே பார்த்த பொருள் பட நூல் என அழைக்க முடியாது. களிமண் பலகைகளை விடக் கற்பலகைகள் சிறந்தவைதான். தெய்வக் "கட்டளை முதலிய சட்டதிட்டங்கள்" கற்பலகைகளில் எழுதப்பெற்றதுபோல் பிற்காலத்தில் மறைநூல் அறிஞர்கள் களிமண் பலகைகளில் தம் சட்டங்களை எழுதி வெளியிட்டனர். ஆனால், "கடவுளின் கையால் எழுதப்பட்ட சாட்சியக் கற்பலகைகள்" போற்றிக் காக்கப்பெற்றன. ஏனெனில், அவற்றை எழுதிய இறைவனின் திருவுளத்திற்குச் சான்றுரைத்து நிற்கின்றன. பிற்காலத்தில் படிப்படியாகத் தோன்றி வளர்ந்த பல தொகுப்புகளின் சுருக்கமாகவும், நடுப்பகுதியாகவும் இக்கற்பலகைகள் அமைந்தன. இவ்வாறு வளர்ந்த தொகுப்புகள்தான் "உடன்படிக்கையின் புத்தகம்" (எண் 24:7; 2 அர 23:2.21), "மோசேயின் திருச்சட்ட நூல்" (2 நாள் 25:4; 35:12; எஸ் 6:18; மாற் 2:26), "சட்ட நூல்" (உப. 28:58.61; மாற் 29:20; யோசு 1:8; 8:34) என்று அழைக்கப்பெறுகின்றன. இறைவனது ஆணைகளைக் காப்பதும் அவருக்குத் தாம் அளித்திருக்கும் வாக்குறுதிகளைக் கைவிட்டு, உதறித்தள்ளி, அலட்சியம் செய்வோர் அனைவருக்கும் எதிராக நிலையான சான்றுரைத்து நிற்பதும் தான் இந்நூலின் நோக்கம் (உப 31:26 தொ: காண்க. யோசு 24:27).

இறைவாக்கினர்களின் தொகுப்புகளும் இவ்வாறு ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே எழுந்தன. தமது சீடர்களை மட்டும் கூட்டி அவர்களது இதயத்தில் மட்டும் தம் சான்றைப் பதித்துப் புதைத்து வைத்து (எசா 8:16) அவரது மக்கள் மத்தியில் மட்டும் திருச்சட்டத்தை வெளிப்படுத்தி இறைவனுக்குச் சான்று கூறி நிற்க (8:20) இறைவாக்கினர் எசாயாவால் முடியவில்லை. ஏனெனில், "இப்பொழுது நீ சென்று அவர்கள்முன் பலகையில் பதித்துவை; எழுத்துச் சுருள் ஒன்றில் எழுதிவை; வருங்காலத்திற்கென என்றுமுள சாட்சியாக அது விளங்கும்" (30:8), என்று இறைவனிடமிருந்து அவர் ஆணையொன்று பெறுகிறார். "ஆண்டவர் இம்மக்களுக்கு விரோதமாகப் பெருங்கோபத்தோடும், ஆத்திரத்தோடும் பேசியிருக்கும்" சொற்களின் தொகுப்பாவது அவர்களைத் திகிலடையச் செய்து அவர்கள் தங்கள் தீய நெறியைவிட்டுத் திரும்பச் செய்யக்கூடும் (எரே 36:2.7) என்ற நம்பிக்கையோடு இருபது ஆண்டு காலத்தில் தாம் கூறிய கூற்றின் சுருக்கத்தை இறைவாக்கினர் எரேமியா இரண்டு தடவை இறைவாக்கினர் பாரூக்குக்கு எடுத்துக்கூறி எழுத வைத்தார்.

இலக்கியக்கூறை நோக்கினாலும் சரி, அவற்றின் தனிப்பட்ட சிறப்பைச் சீர்தூக்கிப் பார்த்தாலும் சரி, இஸ்ராயேல் மக்களின் நூல்கள் கடந்தகால வரலாற்றுக்கோ ஒரு மக்களின் தகுதி வாய்ந்த திறனுக்கோ சான்று கூறவில்லை என்ற உண்மை நமக்குப் புலப்படுகிறது. அதற்கு மாறாக, அவற்றின் வழியாக இறைவன் தாமே தமது நீதிக்கும் மனிதனின் பாவத்திற்கும் சான்று கூறுகிறார். "அனைத்துமே பாவத்தின் ஆட்சிக்கு

உட்பட்டிருப்பதாக மறைநூல் சாற்றுகிறது" (கலா 3:22) என்று கூறி, புனித பவுலும் இந்த அலுவலையே வேத நூலுக்கு ஒதுக்குகிறார்.

3. மண்ணிலிருந்தும் விண்ணிலிருந்தும் தோன்றிய நூல்:

இறைவாக்கினரின் புத்தகங்களில் இறைவனின் வாக்குகள் அடக்கியிருக்கின்றன என்பது உண்மை. அதை அறிந்த எசேக்கியேல் போன்றதொரு காட்சி காண்பவர் இறைவாக்கினர் என்ற தமது இறைவாக்குரைக்கும் அலுவலைப்பற்றிக் கனவுகாண ஆரம்பிக்கின்றார். அக்கனவில் விண்ணிலிருந்து வந்ததோர் ஓலைச் சுருளைத் தாம் தின்பதைப்போலவும், விண்ணிலிருந்து எழுதப்பெற்ற அவ்வாசகத்தை மண்ணில் தாம் திரும்ப எடுத்துரைப்பதைப்போலவும் அவர் காண்கிறார் (எசே 2:8-3,3). பிற்காலத்தில் எழுந்த உரையாசிரியர்கள் பலரின் கடுமையான சொற்பொருள் விளக்கக் கொள்கைக்கு மாறாக, எசேக்கியேலின் இக்காட்சியானது தேவனின் துணைகொண்டு எழுதப்பெற்ற நூலின் தன்மையைத் தெளிவாக, விளக்கமாக எடுத்துரைக்கின்றது. இந்நூல் முற்றிலும் கடவுளது துணைகொண்டு மனித ஆசிரியரால் தொகுத்தெழுதப் பெற்றது என இக்காட்சி விளக்குகிறது.

மனித அறிவால் புரிந்துகொள்ள முடியாத, மறைபொருள் மிக்க வேறுபல நூல்களுமுண்டு. அந்நூல்களின் பொருளடக்கத்தைக் கூட்டியோ குறைத்தோ இறைவன் முற்றிலும் தமக்கே ஒதுக்கி வைத்துக்கொண்டார். எடுத்துக்காட்டாக, இவ்வாறு ஒரு நூல்தான் "சீயோனின் மக்களினங்களோடு பிறமதத்தினரும் பதிவு செய்யப்பெற்றிருக்கும் நூல்" (சங் 87:5-7; எசா 4:3). இவற்றிலிருந்து "போலிக்காட்சியைக் கண்டு, பொய் வாக்கைப் பிதற்றும் தீர்க்க தரிசிகளின்" பெயர்கள் நீக்கப்பெற்றிருக்கின்றன (எசே 13:9). எருசலேமில் பேரெழுதப்பட்டவன் ஒவ்வொருவனும் என்றென்றும் வாழப்பிறந்தவன் (எசா 4:3). எனவே, இந்நூலானது இறைவன் இவ்வுலகிலும் (யாத் 32:32 தொ) மறுவுலகிலும் (தானி 12:1; லூக் 10:20) வாழ்வதற்காகத் தமது மக்களின் பெயர்களை முன் குறித்து எழுதி வைத்திருக்கும் "வாழ்வோரின் நூலோடு" (சங் 68:28) முற்றிலும் பொருந்துகிறது. நமது வாழ்நாட்களும் நமது செயல்களும் அவை நடந்தேறுவதற்கு முன்பே (சங் 139:16) எழுதப்பெற்றிருக்கும் ஒரு நூல் இருக்குமென்றால், அந்நூலானது தீர்ப்பு நேரத்தில் (தானி 7:10; திருவெளி 20:12) கொண்டுவரப் பெற்றுத் திறக்கப்பெறும் அந்நூல்களுக்கு முற்றிலும் மாறுபட்ட தொன்றாக இருக்க வேண்டும். இவ்வுருவகங்களிலிருந்தெல்லாம் எழும் முக்கிய வினா கணக்கீடு, மதிப்பீடு பற்றிய தொன்றன்று. ஆனால் மனிதனிடம் இறைவன் கொண்டுள்ள ஆர்வத்தின் தலைசிறந்த நீதியையும் அவரது திட்டம் தவறில்லாமல் நிறைவேற்றப் பெறுவதையும் பற்றியதாகும். இந்நூலில் கணக்கிடப்பட்டிருப்பதெல்லாம் நமது கண்ணீர்கள் மட்டும்தான் (சங் 56:8).

4. முத்திரையிடப்பெற்ற நூல்:

"ஏழு முத்திரை பொறித்து மூடப்பட்டிருந்த" நூல், "அரியணையில் வீற்றிருந்தவரின் வலக்கையிலிருந்த அச்சுருள்", செம்மறியானவர் மட்டுமே எடுக்கவும் அதன் முத்திரைகளை உடைக்கவும் தகுதியுள்ள அச்சுருள் (திருவெளி 5:1-10) பழைய ஏற்பாட்டின் மரபுப்படி இறைவாக்கினரின் நூலில் ஒன்று என்றும், (காண்க: எசா 8:16; 29:11 தொ; எசே 2:9) ஒருவேளை, இஸ்ராயேலின் வேதநூலின் முழுத்தொகுப்பாகும் என்றும், நாம் நிச்சயமாகக் கூறலாம். இந்நூல்கள் யாவும் இயேசு கிறிஸ்துவில் புதிய, ஐயமற்ற பொருளைப் பெறுகின்றன. கிறிஸ்துவின் காலம் வரை அவைகள் முதலிடத்தில் ஒரு சட்டமாக, என்றும் மீறப்பட்ட தெய்வீக ஆணைகளின் சுருக்கமாக, நமது பிரமாணிக்கமின்மைக்கு நொறுக்கும் சான்றாகக் கருதப்பெற்றன. ஆனால், சுருளில்

கூறப்பெற்றிருக்கும் கிறிஸ்து வந்து, "இதோ! இறைவா, உம் திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன்" (எபி 10:7=சங் 40:9) என்று கூறிய பிறகோ இறைவனது திருச்சித்தம் கடைசிப்புள்ளிவரை நிறைவேற்றப்பெறும் (மத் 5:18); அவரது வார்த்தைகள் இறுதிவரை காப்பாற்றப்பெற்ற பெரியதொரு வாக்குறுதி. முழுமை ஆக்கப்பெற்ற இணையற்றதொரு திட்டம் என மக்கள் அறியவருவர். இயேசு கிறிஸ்துவில் பல்வேறு நூல்கள் எல்லாம் ஒன்று திரட்டப்பெற்று ஒரே ஒரு நூலாக்கப் பெறுகிறது. இந்நூலைத்தான் இன்று நாம் வேதநூல் என அழைக்கிறோம்.

நூல் நூற்றல் (SPINNING)

நார் இழைகளை ஒன்று சேர்த்து முறுக்கிநூலாக அல்லது புரியாக அமைக்கும் செயலாகும். சாதாரணமாக இச்செயல் பெண்களுக்குரியதாகக் கருதப்பட்டது (யாத் 35:25-26; பழ 31:19). இது அயர்ச்சி தரும் வேலையாகக் கருதப்பட்டது. ஓர் எளிய கருவி பயன்படுத்தப்பட்டது. கம்பளம், சணல் அல்லது பஞ்சு ஆகியவற்றின் நூற்கப்படாத இழைகள் நூற்புக்கழியில் தளர்ச்சியாகச் சுற்றப்பட்டிருக்கும். நூற்புக் கழியைக் கையால் சுழற்றி அவற்றை முறுக்குவர்.

நூற்புக்கழி, இராட்டினம் (DISTAFF)

தயாரிக்கப்பட்ட இழைகளைப் பிடித்துக் கொள்ளப் பயன்படுத்தப்பட்ட ஒரு குச்சி. இந்த இழைகளிலிருந்து நூல் நூற்கப்பட்ட இழைகளைக் கையிலோ, பையிலோ வைத்துக் கொண்டும் நூல் நூற்கலாம். தயாரிக்கப்பட்ட இழைகளிலிருந்து உருண்டையாகவோ, வட்டமான பாத்திரத்திலோ நூலைச் சேர்க்கலாம். இந்தச் சொல், பழ 31:19-இல் மட்டும் வருகின்றது.

இராட்டினம் என்பது மரத்தாலோ, எலும்பாலோ, தந்தத்தாலோ, உலோகத்தாலோ செய்யப்பட்ட ஓர் உருண்டையான கட்டை இதன் ஒரு முனையோ இரண்டு முனைகளுமோ கூராகவும், ஒரு முனையில் வட்டமான தட்டும் பொருத்தப் பட்டிருக்கும். இந்தத் தட்டின் மேல் நூல் சேர்க்கப்படும்.

நூல் நூற்பது- பெண்கள், முதியோர்களின் வேலை என்ற எண்ணம் மேற்காசியாவில் பரவலாக இருந்தது.

நூற்றுவர் கோபுரம், மேயா காவல்மாடம் (TOWER OF THE HUDNERED)

எருசலேமின் வடசுவரில் அமைந்திருந்த ஒரு கோபுரம் அல்லது காவல் மாடம். இது மீன்வாயிலுக்கும் ஆட்டு வாயிலுக்கும் இடையில் அமைந்திருந்தது (நெகே 3:1; 12:39). நெகேமியாவால் மீண்டும் கட்டப்பட்ட சுவரின் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்படுகிறது. அனனேல் காவல் மாடத்துக்கு முன் குறிக்கப்படுவதால், இஃது, ஓபேல்மோரிய பக்க மலையின் வடமேற்குப் பகுதியின் மேலிருந்து ஆலயத்தை நோக்கும் விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இங்குதான் பிற்காலத்தில் பெரிய ஏரோது, அந்தோனியாக் கோட்டையைக் கட்டினான். ஒரு படைப்பிரிவின் பெயரிலிருந்து இப்பெயர் வந்திருக்கவேண்டும். இஃது இந்தக் கோபுரம் கோட்டைக் காவல் தளமாகப் பயன்பட்டிருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது.

நூற்றுவர் தலைவன் (CENTURION)

நூறு வீரர்களுக்குப் படைத்தலைவன். இஃது உரோமையர் படையின் மிகச்சிறிய பிரிவாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு சிறு படையில் நூறு பேர் கொண்ட பத்துப்பிரிவுகள் இருந்தன. இப்படிப்பட்ட ஆறு சிறு படைகள் சேர்ந்த தொகுப்பு, படையாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு படையிலும் ஏறக்குறைய 6000 வீரர்களும், 120 குதிரை வீரர்களும் இருந்தனர். நூற்றுவர் தலைவர்கள்தான் படையின் முதுகெலும்பாவார். இவர்கள்தான், ஒழுங்கை நிலைநிறுத்தவும், ஆயுதங்களை ஆய்வு செய்யவும் பாசறையிலும் போர்க்களத்திலும் நூற்றவர் குழுவிற்குத் தலைமை தாங்கவும், உதவிப்படைகளை நடத்தவும் பொறுப்புடையவர்கள்.

லூக்கா இருவரை நூற்றுவர் தலைவர்க் குறிப்பிடுகிறார். ஒருவர்- முதல் புறவினக் கிறிஸ்தவரான கொர்னேலியு ஆவார் (அ.ப. 10:1.22. 30.44-47). மற்றவர்- பவுலைப் பாதுகாப்பாக உரோமைக்குக் கூட்டிச்செல்லும் பொறுப்புடைய யூலியு என்பவர் ஆவார் (27:3,43).

மற்ற நூற்றுவர் தலைவர்களின் பெயர்கள் கொடுக்கப்படாவிட்டாலும் பரிவாகக் குறிக்கப்படுகின்றனர். கப்பர்நாகூமிலிருந்த நூற்றுவர் தலைவனுடைய விசுவாசத்தை இயேசு போற்றுகிறார். அவனது ஊழியன் குணம் பெறுகிறான் (மத் 8:5-13; லூக் 7:1-10). இயேசுவும் மற்ற இருவரும் சிலுவையில் அறையப்படுவதை மேற்பார்த்த நூற்றுவர் தலைவன், இயேசு இறந்தபின், "இவர் உண்மையாகவே இறைமகனாய் இருந்தார்" என்று அறிக்கையிட்டான் (மத் 27:54; லூக் 23:47; மாற் 15:39. 44-45).

நூன் (NUN - மீன்) - ஆள்

நூன் யோசுவாவின் தந்தை ஆவார் (யாத் 33:11; எண் 11:28; 13:8. 16; உப 1:38; 32:44; யோசு 1:1; நீதி 2-8; 1 அர 16:34; நெகே 8:17). நூன் யோசுவாவின் தந்தை என்பதையும், அவர் எப்பிராயிம் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதையும் தவிர அவரைப்பற்றி வேறு எதுவும் தெரியவில்லை. நூன், ஓசேயாவின் தந்தை என்றும் குறிப்பிடப்படுகின்றார் (எண் 13:18.16; உப 32:44).

நூன் (NUN) - எழுத்து

நூன் எபிரேய மொழியின் நெடுங்கணக்கில் பதினான்காவது எழுத்தாகும். அகர வரிசை சங்கீதம் 119-இன் பதினான்காவது பகுதியின் தலைப்பாக உள்ளது. இப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்துடன் தொடங்குகிறது.

நெ

நெகலாம் (NEHELAM – கனவு காண்பவன்)

இப்பெயர் எரேமியாவால் கடிந்துகொள்ளப்பட்ட போலி இறைவாக்கினர்களில் ஒருவரான செமாயைக் குறிக்கும் (எரே 29:24; 31:32). இப்பெயர் குடும்பப் பெயராகவோ, இடத்தின் பெயராகவோ இருக்கலாம். சிலர் இது கனவைக் குறிப்பதாகவும், செமாயா "கனவு காண்பவர்" என இச்சொல்லை இருபொருள்பட அமைந்துள்ளதாகக் கருதுவதும் (எரே 23:25.32) ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

நெகியேல் (NEIEL இறைவன் தங்குமிடம்)

இஃது ஆசேரின் எல்லைப்புற நகரம் (யோசு 19:27). அக்கோ சமவெளியின் கிழக்கு ஓரத்தில் அமைந்த கிர்பெத் யானின் நெகியேல் இருந்த இடமாகக் கருதப்படுகிறது. வெண்கல, இரும்புக் காலத்திய சிதைவுகள் இவ்விடத்தில் காணப்படுகின்றன.

நெகுஸ்தா (NEHUSHTHA - செம்பு, பாம்பு)

இவள் யோயக்கிமின் மனைவியும், யோயாக்கின் அரசனின் தாயுமாவாள் (2 அர 24:8). யோயாக்கினும் நெகுஸ்தாவும் எருசலேமின் குடிகளோடு கி.மு. 597-இல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டனர் (2 அர 24:12,15).

நெகுஸ்தான் (NEHUSHTAN - செம்பால் செய்யப்பட்ட)

மன்னன் எசேக்கியா எபிரேய வழிபாட்டைத் தூய்மைப்படுத்துவதற்காக உடைத்தெறிந்த பித்தளைப் பாம்பே இந்த 'நெகுஸ்தான்' வழிபாட்டு மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட இச்செயல் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எசேக்கியா உடைத்தெறிந்த இப்பித்தளைப் பாம்பு மோசேயால் செய்யப்பட்டதென நம்பப்பட்டது (எண் 21:8-9). விக்கிரக ஆராதனைக்காக அமைக்கப்பட்டிருந்த தொழுகை மேடைகளையும், சிலைகளையும் பாகால் வழிபாட்டோடு தொடர்புடையவைகளையும் அழித்ததைப் பற்றியும் இதனுடன் குறிப்பிடப்படுகிறது.

நெகுஸ்தான் எனும் பெயர், எசேக்கியா அரசன் 'பித்தளைப் பொருள்' என வெறுப்புடன் வைத்த பெயரே எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், நெகுஸ்தான் என்ற பெயரே இப்பொருளுக்கு நெடுங்காலமாக வழங்கப்பட்டது.

பாகால் வழிபாட்டோடு தொடர்புடைய பாம்புத் தெய்வத்தின் பெயராகவும் இஃது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இஃது எவ்வாறு நிச்சயமாகிறதென்றால் யோயாக்கின் மன்னனின் தாய் நெகுஸ்தா எனப்பெயர் கொண்டிருந்தார் (2 அர 24:8). ஓர் உலோகத்தின் பெயர் அரசிக்கு நிச்சயமாக இடப்பட்டிருக்க மாட்டாது. ஓர் இயற்கைத் தெய்வத்தின் பெயரே இடப்பட்டிருக்க வேண்டும்.

இஸ்ராயேலில் எப்போழுதுமே யாவேயைப் பின்பற்றி அவருக்காக உறுதியாக நிற்போர் ஒரு குழுவும், பாகாலைப் பின் பற்றி அதனை வழிபடுவோர் ஒரு குழுவுமாக முரண்பாடு இருந்து வந்தது உண்மை. எசேக்கியா யாவேயின் ஊழியன். பாகால் வழிபாட்டிற்குரிய கானானிய அடையாளமே- பாம்பு ஆகும். இது பலரால் வெறுக்கப்பட்ட அடையாளமாகும்.

நெகூம் (NEHUM – ஆறுதல்)

பாபிலோனிலிருந்து திரும்பியவர்களின் பெயர்ப்பட்டியலில் முதன்மையாக வந்துள்ள பெயர்களில் ஒன்று (நெகே 7:7). எஸ்ராவில் வரும் இது போன்ற பெயர்ப்பட்டியலில் இவர் இரகூம் என்றழைக்கப்படுகிறார் (எஸ் 2:2). ஆனால், பின்னது– சரியானது என்றும், முன்னது படிவம்– எழுதியவரின் பிழையாக இருக்கவேண்டும் என்றும் கருதப்படுகிறது.

நெகேபு (NEGEB, THE - தெற்கு நோக்கி, தென்னாடு, வறண்ட நிலம்)

இது கானானின் முக்கியப் பகுதிகளில் ஒன்று. முக்கோணத்தைக் கவிழ்த்து வைத்தாற்போல அமைந்துள்ளது. இம்முக்கோணத்தின் ஒருபக்கம் வாடி ஏல்-அராபாவோடும், மற்றொரு பக்கம் சீனாய்த் தீபகற்பத்திற்கருகில் அக்காபா வளைகுடாவிலிருந்து காசாவின் சுற்று வட்டாரம் வரையும் அமைந்துள்ளது. அதன் அடிப்பக்கம் கடற்கரையிலிருந்து சாக்கடல்வரை அமைந்துள்ளது. மலைநாடான மேற்குப் பாலஸ்தீனத்தின் தென்பகுதியில் இஃது அமைந்திருப்பதாலும் இச்சொல் தெற்கு எனப்பொருள் கொடுப்பதாலும், இஃது இந்நிலத்தைக் குறிக்கிறதா, அல்லது அதன் திசையைக் குறிக்கிறதா எனும் சந்தேகம் எழுகிறது (ஆதி 12:9; 13:1).

விவிலிய காலத்திற்குமுன் இது பாலைவனமாக இருக்கவில்லை. அப்பொழுது இங்குப் பல தாவரங்கள் இருந்ததால் அவை மண்ணை ஈரமுள்ளதாக்க, இவ்விடம் வளமுள்ளதாக இருந்தது. பின்னரே, இது மக்களின் அசட்டையால் வறண்ட பாலைவனமாகி இருக்க வேண்டும். இப்பகுதியில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப்படுவதாக ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர்.

பழைய கற்காலத்திலிருந்து தொடர்ந்து வந்த காலங்களின் மக்கள் குடியிருந்ததற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. இவர்கள் வட தென் வழியாகிய, வடக்கே பெயேர் செபாவிலிருந்து காதேசு பர்னேயா வரையிலும், அங்கிருந்து சீனாய்த் தீபகற்பம் வழியாக எகிப்து செல்லும் வழியெல்லாம் குடியிருந்திருக்கின்றனர். ஆபிரகாமுக்கு முந்திய மத்திய வெண்கலக் காலத்தில் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததால்தான் ஆபிரகாம் எகிப்திலிருந்து திரும்பும்போது வழியில் பல நகரங்களையும் தன் ஊழியர்களுக்கும் விலங்குகளுக்கும் வேண்டிய உணவையும் காண முடிந்தது (ஆதி 12:9-13:1). இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்தவர்கள் மறைந்ததற்குக் கெதர்லாகோமேரும் அவனுடைய கூட்டணியும் உட்புகுதலே காரணமாயிருந்திருக்க வேண்டும் (ஆதி 14:7) ஒரு படையெடுக்கும் நோக்கமின்றி கொள்ளையடிப்பதையே நோக்கமாகக் கொண்டதால், நாட்டை அழித்துப் பாழ்படுத்தினர். வழிகள் எல்லாம் மறைந்தன. எனவேதான், ஆகார் வழி தவறிப்போனான் (21:14); மேலும், முதுபெரும் தந்தையர்கள் இதனால்தான் நெகேபில் தொடர்ந்து செல்லாமல், பெயேர்செபா, எபிரோனிலே தங்கிவிட்டனர்.

இஸ்ராயேலர்கள் எகிப்திலிருந்து திரும்பி இவ்வழியே வந்தனர் (எண் 14:44-45; உப 1:44). யூதா, சிமியோன் கோத்திரத்தார், மலைநாட்டை வெற்றி கொண்ட பின்னரே அமலேக்கியரின் நெகேபினைப் பிடிக்க முயன்றனர். அச்சமயத்தில் இப்பகுதி ஆடுகள் வளர்க்குமிடமாகவே இருந்தது. அவர்களின் மன்னரான அகாகுவையும் அவன் நகரையும் சவுல் அழித்தார் (1 சாமு 15). தாவீது இப்பகுதியில் தன்னை நிலை நிறுத்தியபின் (1சாமு 27:10; 30:14.29), நெகேபு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவை சிக்லாகு அருகிலுள்ள கெரீத்தியரின் நெகேபு, பெயேர் செபாவைச் சுற்றியுள்ள யூதாவின் நெகேபு, எபிரோனுக்கு அருகில் காலேபின் நெகேபு, ஏரகுமவேலின் நெகேபு, கெனிசியரின் நெகேபு ஆகியவையாகும். இவையெல்லாம் பின்னர் யூதாவுடன் தாவீதால் இணைக்கப்பட்டன.

தாவீது ஏதோமையும் அராபாவையும் வென்றபின், குறிப்பாகச் சாலமோன் தனது வியாபாரம், தொழில் ஆகியவற்றை இப்பகுதியில் விரிவுபடுத்தத் தொடங்கியபின், இப்பகுதி முக்கியத்துவம் பெற்றது. இரண்டாம் இரும்புக் காலத்தைச் சேர்ந்த (கி.மு. 900-600) குடியிருப்புகள் இஸ்ராயேல் தங்கள் அரசைத் தெற்கில் விரிவாக்கியதற்குச் சான்று கூறுகின்றன. சிமியோனின் கோத்திரத்தார் தமது நாட்டைக் கெரார்வரை விரிவுபடுத்தினார். இஃது அமேலக்கியர்களை அழித்துக் கிடைக்கப்பெற்ற பகுதியாகும் (1 நாள் 4:39-43).

கி.மு. 597-இல் யூதா நாடு பிடிபட்டு, இஸ்ராயேலர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட பின் இந்நாட்டின் வடபகுதி ஏதோமியர்கள் கைவசமாகி அவர்களின் இதுமேயா அரசின் ஒரு பகுதியாகியது. இதன் மத்திய, தென்பகுதிகள் நபத்தேயர்களால் ஆட்கொள்ளப்பட்டன. இவர்கள் பல நகர்களை எழுப்பி, அணைகள் கட்டி, நீரைத்தேக்கி, கால்வாய்கள் வெட்டி மீண்டும் இப்பகுதியை வளமுள்ளதாக்கினர். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இது பாலைவனப் பயணிகள் தங்கிச் செல்லும் ஒரு சோலைவனமாக இருந்தது. பின்னர் அதிகம் கவனிக்கப்படாததாலும் போர்களின் பேரழிவுகளாலும் இப்பகுதி பாலைவனமாக மாறியது.

நெகேமியா (NEHEMIAH - யாவே ஆறுதல் அளித்தார்)

1. கி.மு. 538-இல் பாபிலோனிலிருந்து திரும்பிய இஸ்ராயேல் தலைவர்கள் பெயர்ப்பட்டியலில் முதன்மையான பெயர் இது (எஸ்ரா 2:2; நெகே 7:7).

2. அக்கல்யாவின் மகனும், பாரசீக மன்னனான முதலாம் அர்த்தக்சஸ்தாவின் மது பரிமாறுபவனுமாக இவர் இருந்தார். கி.மு. 444-இல் தனது உறவினினனான அனானியிடமிருந்து எருசலேமிலுள்ள யூதர்களின் துன்பமிக்க அவல நிலையைக் கேள்விப்பட்டு மிகவும் வருந்தி நோயுற்றார். எனவே, அரசன் இவரை எருசலேமுக்கு ஆளுநராக அனுப்பி வைத்தான் (நெகே 1:1-2:8). எருசலேமுக்கு வந்தவுடன் சிதையுண்ட எருசலேம் மதிற்சுவர்களை இரகசியமாகப் பார்வையிட்டார் (நெகே 2:9-16). இதனை மீண்டும் கட்டுவதாக அவர் செய்த முடிவைச் சன்பலாற்று, தோபியா போன்றோர் எதிர்த்தாலும் (2:17-20), பக்தியுள்ள யூதர்கள் பலரால் இது மீண்டும் கட்டப்பட்டது (ஆதி 3-4). ஓர் ஆளுநராகத் தன்னலமில்லாது பணியாற்றி, பொருளாதாரச் சீர்குலைவைச் சரி செய்தார் (ஆதி .5). அவர் எதிரிகள் தீய திட்டங்களையும் முறியடித்து (6:1-14), நெகேமியா மதிற்சுவரைக் கட்டி முடித்து, வாயிற்காப்போர்களை நியமித்தார் (7:1-3). எருசலேமில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை மிகக்குறைந்த அளவே இருந்ததால் (7:4-73), பத்து யூதர்களில் ஒருவனாவது தலைநகரில் வாழ வேண்டும் (11:1-2) எனக் கட்டளையிட்டார். எருசலேமில் வாழ்ந்தோரின் பட்டியலும் (11:3-19), யூதேயாவில் வாழ்ந்தோரின் பட்டியலும் (11:20-36) கொடுக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஆட்சிக்குறிப்பேட்டாளரால் நெகேமியாவின் நாட்குறிப்பேட்டில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்; மேலும், இதனுடன் எருசலேம் மதிலை அர்ப்பணிப்பது பற்றிய விபரமும் சேர்க்கப்பட்டுள்ளது (12:27-43); காணிக்கைப் பொருட்களைச் சேகரிப்போர் பட்டியலும் தரப்பட்டுள்ளது (12:44-47).

கி.மு. 432-இல் மீண்டும் எருசலேம் வந்த நெகேமியா தோபியாவைக் கோவிலிலிருந்து வெளியேற்றினார் (13:4-9); லேவியர்கட்குச் செலுத்தப்பட வேண்டியவற்றைச் செலுத்துதல் (13:10-4), ஓய்வு நாளைக் கடைப்பிடித்தல் (13:15-22) ஆகியவற்றைக் கட்டாயப்படுத்தினார். கலப்புத் திருமணத்தை ஒழிப்பதற்காக, தலைமைக் குருவின் பேரன் ஒருவனைத் துரத்தினார். ஏனெனில், அவன் சன்பலாற்றின் மகளை மணந்திருந்தான் (13:28029). தன் நூலின் இறுதியில் இறைவனின் சட்டத்தை நிலை நிறுத்தத் தான் எடுத்த முயற்சிகளை நினைவு கூர்ந்தருளுமாறு வேண்டுகிறார் நெகேமியா (13:30-31).

எஸ்ராவைப் போலன்றி நெகேமியா ஒரு செயல்வீரர். தனது ஆற்றலாலும், தன்னலமற்ற தன்மையாலும், புத்திக்கூர்மையாலும், செத்துக்கொண்டிருந்த எருசலேமின் யூத சமூகத்துக்கு இவர் உயிரூட்டினார். எருசலேமின் மதிலை எழுப்பி அந்நகரைப் பலப்படுத்தினார்; ஏழை எளியவர்க்கு உதவிசெய்து சமூக உயர்வையும், மோசேயின் சட்டத்தை நிலைநாட்டி

நாட்டுயர்வையும் நிலைபெறச்செய்தார் (காண்க. 2 மக் 1:18-36; 2:13; சீரா 49:13).

3. இவர் அசபூக்கின் மகனும் பெத்சூரின் பாதிப்பகுதிக்கு ஆட்சியாளரும் ஆவார். கி.மு. 444-இல் நெகேமியா எழுப்பிய எருசலேம் சுவருக்கு உதவியவர்களுள் ஒருவர் (நெகே 3:16).

நெகேமியா நூல் (NEHEMIAH, BOOK OF)

காண்க. எஸ்ரா, நெகேமியா நூல்கள் (**EZRA and NEHEMIAH, Books of**).

நெக்கோ (NECO)

கி.மு. 609-594-இல் எகிப்தை ஆண்ட 26-ஆவது அரசமரபைச் சேர்ந்த பார்வோன் மன்னனாகிய இவன் யோசியா மன்னனைக் கொன்றான். அரசன் யோவகாசுக்குப் பதிலாக, யோயாக்கிமை அரியணை ஏற்றினான் (2 அர 23:29-53).

கி.மு. 671-இல் அசீரிய அரசன் எசர்கத்தோன் எகிப்தில் புகுந்து மெம்பிசுவைப் பிடித்தான். எத்தியோப்பியப் பார்வோன் மன்னனைத் தெற்கு நோக்கி ஓட விரட்டினான்; அங்குள்ள சிற்றரசர்களின் ஆட்சியை உறுதிப்படுத்தினான். அவர்களில் ஒருவன் சாயிஸ் மற்றும் மெம்பிசுவின் நெக்கோ என்பவனாவான். பின்னர் இந்தநெக்கோவின் மகன் முதலாம் சம்மெட்டிக்கு 663-இல் எகிப்து முழுவதின்மேல் ஆட்சி உரிமை கோரி, சாயிசைத் தலைநகரமாகக் கொண்ட 26-ஆவது அரச மரபை நிறுவினான். இவனுக்கு அசீரியர்களின் ஆதரவு கிடைத்தது. மேலும், இவன் கூலிப்படைகளையும் பயன்படுத்தினான்.

மூன்று ஆண்டுகளுக்குப்பின், தன் தந்தையை அடுத்து 2-ஆம் நெக்கோ 609-இல் அரியணை ஏறினான். புதிய பாபிலோனிய அரசு சீரிய, பாலஸ்தீனத்துக்குள் புகுமுன் இம்மன்னன் காசா, அஸ்கலோன் போன்றவற்றைப் பிடித்து, பாலஸ்தீனத்தில் தனது ஆட்சியின் அடிப்படையை நிலைநாட்டினான் (எரே 47:1,5), பின்னர், பெலிஸ்தியச் சமவெளியையும், சாரோன் சமவெளியையும் கடந்து, அசீரியரின் எஞ்சிய படையோடு இணைந்துகொள்ளத் தீர்மானித்தான். யூதாவின் அரசன் யோசியா இவனை எதிர்த்து நின்றபோது கொல்லப்பட்டான் (2 அர 23:29; 2 நாள் 35:20-24). எருசலேம் மக்களிடம் யோவகாசு என்னும் எகிப்தியருக்கு எதிரான மனப்பான்மையை யூதாவின் அரசானது ஏற்படுத்தியபோது, நெக்கோ இரிப்லா எனுமிடத்தில் அவனை நீக்கி, யூதாவிற்கும் பெரும் தண்டனையைத் தந்தான். நெக்கோ எலியாக்கிம் என்பவனை, யோயாக்கிம் எனும் பெயரில் யூதாவின் அரசனாக ஆக்கினான் (2 அர 23:33-35). இவ்வாறு யூதா தன்னுரிமை நாடாக இருந்த நிலைமாறி எகிப்தின்கீழ் ஆட்சி செய்யும் சிற்றரசாகியது.

சில ஆண்டுகள் ஆசியாவில் அவன் பலம் ஓங்கியிருந்தது. இவனது நினைவுச் சின்னங்கள் சீதோனில் காணப்படுகின்றன. தன்னிடமுள்ள கூலிப்படையைக் கொண்டு கர்க்கமிசை வலுப்படுத்தி, திக்ரீசைக் கடந்து, சக்தி பெற்று வரும் பாபிலோனிய அரசரான நபோபோலாசரை அச்சுறுத்தத் தொடங்கினான். ஆனால், நபோபோலாசரின் மகன் நெபுகத்னேசரிடம் கர்க்கமிசில் பெரும் தோல்வி அடைந்தான் (2 அர 24:7; எரே 46:2). நெபுகத்னேசரிடம் நெக்கோவை எகிப்திய ஆறு வரை விரட்டிச் சென்றான். தன் தந்தையின் இறப்பால் நாடு திரும்பிய அவன் மீண்டும் கி.மு. 601-இல் எகிப்திய எல்லையில் நெக்கோவுடன் போரிட, இரு பக்கமும் பேரிழப்பு ஏற்பட்டது. அத்துடன் எகிப்திய மன்னன் நெக்கோ தனது நாட்டுக்கு வெளியே போரிடச் செல்வதில்லை என முடிவு செய்தான்.

இந்த அரசன் பற்றி நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் எரோதோத்தசு போன்ற வரலாற்றிஞர்களிடமிருந்து பெறப்பட்டதாகும். இவர் இம்மன்னன் ஆட்சி முடிந்த சில தலைமுறைகளுக்குப்பின் எகிப்துக்குச் சென்றிருக்கிறார். ஆகவே இச்செய்திகளின் உண்மைத்தன்மை ஐயத்திற்குரியதாகும்.

இச்செய்திகளின்படி, நைல் நதியிலிருந்து, செங்கடல் வரை ஒரு கால்வாய் வெட்ட பெருமுயற்சி செய்தான் மன்னன் நெக்கோ. ஆனால் அவனால், அதனை நிறைவேற்ற முடியாததால் பாரசீக மன்னன் தாரியுதான் இவ்வேலையை முடித்தான். நெக்கோ ஆப்பிரிக்காவைச் சுற்றி கப்பல்களை அனுப்பினான் என்றும் மரபு கூறுகிறது.

நெக்கோதா (NEKODA)

1. பாபிலோனிலிருந்து எருசலேம் திரும்பிய ஆலயப்பணியாளர்களில் ஒருவரான இவர் ஓர் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:48 = நெகே 7:50).

2. தாங்கள் இஸ்ராயேலில் யார்வழி வந்தவர்கள் என நிரூபிக்க முடியாத, பாபிலோனிலிருந்து திரும்பி வந்த இஸ்ராயேலர்கள் சிலரின் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:60 = நெகே 7:62).

நெசவாளரின் தறிக்கட்டை, படைமரம் (BEAM)

இது தறியில் பாவுநூல் சுற்றப்பட்டிருந்த படைமரமாகும். இது மிகப்பெரியதாக இருந்திருக்க வேண்டும் (1 சாமு 17:7; 2 சாமு 21:19; 1 நாள் 11:23; 20:5).

நெசவுத்தறி (LOOM)

நெய்வதற்குப் பயன்படும் ஒரு கருவி அல்லது எளிய சட்ட அமைப்பாகும். சிம்சோனுடைய ஏழு மயிர்க் கற்றைகளையும் பாவு நூலால் பின்னி, அவரைக் கட்டிப்போட தெலீலா முயன்றாள் ஆனால், அவர் எழுந்து முளையோடு பாவுநூலைப் பிடுங்கி எறிந்தார் (நீதி 16:13-14). யோபு தன் "நாள்கள் தறி ஓடு கட்டையிலும் விரைந்தோடுகின்றன" எனப் புலம்புகிறார் (யோபு 7:6). "நெசவாளன் பாவைச் சுருட்டுவதுபோல் என் வாழ்வை முடிக்கிறேன். தறியிலிருந்து அவர் என்னை அறுத்தெறிகிறார்" என்று எசேக்கியா புலம்புகிறார் (எசா 38:12). இந்த இரண்டு கூற்றுகளிலும் வாழ்வு கடந்து முடிந்து போவதை உருவகமாக எடுத்துக்கூற, தறி பயன்படுகிறது.

நெடுங்கணக்கு (ALPHABET)

இது பேச்சில் பயன்படும் தனி ஓசைகளை எடுத்துக்காட்டப் பயன்படும் அடையாளங்களின் தொகுப்பாகும். இங்குச் செமித்திய மொழியில் தொடங்கி கிரேக்கம், இலத்தீன் வழியாக மேல்நாட்டு மொழிகளில் பயன்படும் நெடுங்கணக்கின் வரலாற்றைச் சுருக்கமாகத் தருகிறோம். கி.மு. இரண்டாம் ஆயிரமாண்டுகளில் முதல் பகுதியில் வடமேற்குச் செமித்திய மக்களிடையே தோன்றிய நெடுங்கணக்குதான் இன்றைய எழுத்துக்களின் முதன்மையான தொகுப்பாகும். இது காலப்போக்கில் கிரேக்கர்களால் மாற்றியமைக்கப்பட்டு, இலத்தீன் மொழியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேல்நாட்டு மொழிகளில் இடம் பெற்றது.

நெடுங்கணக்கு எழுத்து முறையின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை பற்றிய அறிவு முதன்மையாகத் தொல்லெழுத்துக் கலை பற்றிய தொல்பொருள் ஆய்வுகளிலிருந்து வருகிறது. இந்தக் கலை எழுத்துப் பொறிப்புகளின் சான்றுகளை ஆராய்ந்து எழுத்து அடையாளங்களின் வளர்ச்சி வரிசை முறையைப் பாகுபாடு செய்கிறது. நெடுங்கணக்கு எழுத்துகளின் அமைப்பு மற்றும் பின்வந்த மாறுதல்களுக்கு அடிப்படை உந்து காரணம் ஆவணங்களுக்கும், கடிதங்களுக்கும் பொறுப்பான எழுத்தாளர்களிடையே நிலவிய எளிதாக்கும் போக்கே ஆகும். ஒரு மொழி அல்லது திரிபுமொழிக்கு எழுதும் முறையை அமைக்க நெடுங்கணக்கு எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன. எகிப்திய மற்றும் மெசபொத்தாமிய எழுத்துத் தொகுப்பு தனிப்பட்ட சொல் அல்லது அசையைக் குறிக்க பலநூறு அடையாளங்களைப் பயன்படுத்தின. இவற்றிலிருந்து செமித்திய முறை ஒரு முன்னேற்றமாகும். எகிப்திய சித்திர எழுத்துக்களால் உந்தப்பட்டு, தொடக்ககால நெடுங்கணக்கு சித்திர அடையாளங்களைப் பயன்படுத்தின. இவை படிப்படியாக எளிதாக்கப்பட்டு விரைவாகவும் தெளிவாகவும்

எழுத நயப்படுத்தப்பட்டன. சொற்களின் முதல் அசை, எழுத்து அல்லது ஒலி படக்குறியீடுகளால் குறிக்கப்படும் முறையில், மூல அடையாளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன என்று அறிஞர் பலர் கருதுகின்றனர். சான்றாக, அலேபு என்ற எழுத்து எருது என்பதைக் குறிக்கும் 'அல்பு' என்ற சொல்லிலிருந்து வந்தது; எருதின் தலை அடையாளமாயிற்று.

நெடுங்கணக்கு எழுத்துமுறைக்குக் காலத்தால் முந்திய எடுத்துக்காட்டுகள் மத்திய வெண்கலக் காலத்தைச் சேர்ந்த (கி.மு. 1500) செராபித் ஏல்–காதேமியர்களிடமிருந்து கிடைத்துள்ள பாறையில் வெட்டப்பட்ட சுவர் ஓவியங்களாகும். இவர்கள் சீனாய் தீபகற்பத்தில் வாழ்ந்த எகிப்திய சுரங்கத் தொழில் செய்யும் குழுவினர் ஆவர். இந்த எழுத்துப் பொறிப்புகள், சீரியா, பாலஸ்தீனத் தொழிலாளிகளால் பயன்படுத்தப்பட்ட முந்தைய கானானிய நெடுங்கணக்கைச் சித்திர அடையாளங்களால் எடுத்துக்காட்டுவதாகத் தோன்றுகிறது. மத்திய வெண்கலக் காலத்திற்கும், பிற்கால வெண்கலக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இத்தகைய பொருட்கள் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த நகர அரசுகளாகிய இலாக்கிசு, மெகிதோ, ஆட்சேர் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பிற்கால வெண்கலக் காலத்தைச் சேர்ந்த பல எழுத்துப் பொறிப்புகள் அடையாளங்களைக் கருத்தியல்படுத்துவதையும் செங்குத்தாக, இடமிருந்து வலம் எழுதும் முறையை அகற்றுவதையும் சுட்டுகின்றன. பிற்கால வெண்கலக் கால முடிவில், கானானிய நகர அரசுகள் அழிந்தபின் பல சுயாட்சியுள்ள நாடுகள் தோன்றின. அஃதோடு பழைய கானானிய நெடுங்கணக்கு எழுத்துகளும் ஒவ்வொரு நாட்டுக்குமுரிய விதத்தில் வேறுபட்டன. இவ்வாறு கி.மு. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தீர் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து, தனிப்பட்ட புதிய பெனிசிய எழுத்துமுறை வளர்ந்து தீர் மற்றும் சிதோனியப் பேரரசுகளிலும் அவற்றோடு தொடர்புடைய மத்தியதரைக்கடல் நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தியது. எபிரேய எழுத்துமுறை கி.மு. பத்தாம் நூற்றாண்டில் கானானிய–பெனிசிய எழுத்து முறையிலிருந்து பிரிந்ததாகத் தோன்றுகிறது. இது குல, இனக் கூட்டாட்சியிலிருந்து தாவீது சாலமோன் காலத்தில் அரசாட்சி தோன்றிய போது நடந்ததாகத் தெரிகிறது. ஒன்பதாம் நூற்றாண்டைச்சேர்ந்த, பெனதாதின் பெயர் பொறிக்கப்பட்ட தூண்கள், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த செபிர் தூண்கள் உட்பட்ட அரமேயிக்கு எழுத்துப் பொறிப்புகள், தனிப்பட்ட எழுத்து முறையைச் சுட்டுகின்றன. இது சாலமோனின் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் முதலாம் பெனதாதுவின் கீழ் அரமேய நாடுகள் ஒன்றுபடுத்தப்பட்ட காலத்தில் நடந்ததாகத் தெரிகிறது. இது சதுர எழுத்துகளைக் கொண்டதாகும். இது பாரசீகர்கள் காலத்தில் எபிரேய எழுத்து முறையை அகற்றி அதன் இடத்தை எடுத்துக்கொண்டது. கானானிய எழுத்து முறைகள், மோவாயிய (மேசாகல்), ஏதோமிய மற்றும் அம்மோனிய (தெல் தெயிர் அல்லது எழுத்துப் பொறிப்புகள்) எழுத்து முறைகளாகும்.

கிரேக்கர்கள், பெனிசிய நெடுங்கணக்கின் 22 எழுத்துகளைக் கடன் வாங்கினர் என்பது தெளிவாகும். இதை எழுத்துகளின் வரிசையிலிருந்தும் பெயர்களிலிருந்தும் அறியலாம். இதற்குக் கிரேக்க வரலாற்று ஆசிரியர்களும் சான்று கூறுவர். எப்போது இது நடந்தது என்பது பற்றித் தர்க்கம் இருக்கலாம். எழுத்துப் பொறிப்புகள், பெனிசிய எழுத்துவடிவங்களோடு கிரேக்கர்கள் கொண்ட முயற்சி கி.மு. 12–ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கியதாகத் தெரிகிறது. காலத்தால் முந்திய கிரேக்க எழுத்துகள் ஒன்பதாம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெனிசிய எழுத்துகளோடு நெருங்கிய ஒப்புமை கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இக்காலத்தில்தான் பெனிசியர்களின் கடல்போக்குவரத்து பரவியிருந்தது (வட ஆப்பிரிக்கா, இத்தாலியா, மால்தா மற்றும்

ஸ்பெயின் ஆகிய நாடுகளில் காணப்பட்ட பெனிசிய எழுத்துப் பொறிப்புகளைக் காண்க). செமித்திய நெடுங்கணக்கு முதன்மையாக மெய்யெழுத்துகளைக் கொண்டது. கிரேக்க நெடுங்கணக்குதான், உயிர் எழுத்துகளைத் திட்டமிட்டு முதன்முதலாகப் பயன்படுத்தியது. இதற்கு ஐந்து செமித்திய எழுத்துகளைப் பயன்படுத்தியது. பழைய அரமேயிக்கு மொழி ஒன்பதாம் நூற்றாண்டிலேயே வவ், யோது, மற்றும் இறுதி உயிரெழுத்தைக் குறிக்க கே–யையும் பயன்படுத்தியதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால், கிரேக்கர்கள்தான் முதன்முதலில் உள்ளார்ந்த உயிர் எழுத்துகளைச் சுட்டிக் காட்டினர். ஏழாம் நூற்றாண்டில் கிரேக்க நெடுங்கணக்கு எழுத்துகள் எட்ரஸ்கர்களால் உரோமையர்களால் பயன்படுத்தப்பட்டன.

கீழே எபிரேய, கிரேக்க நெடுங்கணக்குப் பட்டியலையும் பொருளையும் தருகிறோம்.

ஆலப்பு **(Aleph - Alaph** – எருது

பேத்து **(Beth - Beta)** – வீடு

கிமல் **(Gimel - Gamma)** - ஒட்டகம்

டாலத்து **(daleth - delta)** - கதவு.

ஏ **(He - epsilon)** - (ஐயப்பாடானது)

வவ் **(waw - upsilon)** - கொக்கி.

சாயீன் **(zayin - zeta)** - ஆயுதம் (?) ஒலிவமரம் (?)

கேத்து **(heth - eta)** – வேலி.

றேற்று **(teth - Theta)** – (ஐயப்பாடானது)

யோது **(Yodh - iota)** - கை.

காப்பு **(Kaph - Kappa)** – உள்ளங்கை.

லாமேது **(Lamedh - Lambda)** – எருது தாற்றுக்கோல்.

மேம் **(Mem - Mu)** – தண்ணீர்.

நூன் **(Nun - Nu)** – மீன்.

சாமேக்கு **(Samekh - Sigma)** – ஆதாரம்.

ஆயின் **(ayin - O-mikran)** – கண்.

பே **(peh - pi)** – வாய்.

இட்சாதே **(Sadhe - San)** – தூண்டில்.

கோப்பு **(qoph - Koppa)** – பின்தலை (?)

ரேசு **(Res - Rho)** – தலை.

சீன் **(Sin -)** - பல்.

தௌ **(Tau - Tau)** – குறி.

நெடுஞ்சாலை (HIGHWAY)

மத்திய தரைக்கடலையும் சீரிய பாலைவனத்தையும் இணைக்கும் நிலப் பாலமாகப் பாலஸ்தீனம் அமைந்துள்ளது. பாலஸ்தீனத்தில் நெடுஞ்சாலைகளும் சிறிய சாலைகளும் குறுக்குமறுக்குமாக ஓடி ஒரு பின்னல் வடிவைக் கொண்டுள்ளது. இவற்றை இத்தியர் முதல் உரோமையர் வரை மக்கள் வியாபாரத்திற்கும் போர்களுக்கும் பயன்படுத்தியுள்ளனர். கல்பதித்த நெடுஞ்சாலைகள் உரோமையரோடு பாலஸ்தீனத்திற்குள் வந்தன. இவற்றிற்கு முன் இருந்த சாலைகள் பயணத்தை எளியதாகவும் நேரடியானதாகவும் ஆக்கின.

பழங்கால மேற்காசியா முழுவதும் புவியியலுக்கு ஏற்றவாறு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. முக்கியமான பன்னாட்டுச் சாலை பெருங்கடல் வழிப்பாதையாகும் (எசா 8:23). கீழ் நைல் நதியில் தொடங்கி, கடலோரத்தை ஒட்டி ஓடி, இஸ்ரியேல் பள்ளத்தாக்கை வெட்டி, ஆட்சோர் மற்றும் தமஸ்குவை அடைந்தது. அங்கிருந்து நெடுஞ்சாலை பிரிந்து வடக்கே ஆலப்போவுக்கும் தெற்கில் ததிமோருக்கும் சென்று, மாரியில் சந்தித்தன. பின்பு இந்த நெடுஞ்சாலை தெற்கு நோக்கி யூப்பிரத்தீசு நதியை ஒட்டி ஓடி, பாரசீக வளைகுடாவை அடைந்தது. பெருங்கடல் வழியின் ஒரு முக்கிய கிளை அரசு நெடுஞ்சாலை என்றழைக்கப்பட்டது. இச்சாலை யோர்தானுக்கு அப்பால் உள்ள மலைப்பகுதியில், பாலைவனத்துக்கு வெகு அருகில் ஓடியது. இஃது இரண்டாம் தர வழியென்றாலும், பெருங்கடல் வழியைச் சேரும். பல கிழக்கு மேற்குச் சாலைகளைக்கொண்டிருந்தது. ஏதோம் (எண் 20:17; நீதி 11:14-20), எமோரியா (எண் 20:17; நீதி 11:14-20), எமோரியா (எண் 21:22; உப 2:27)

ஆகிய நாடுகளைக் கடந்து செல்ல இஸ்ராயேலர் அனுமதிகேட்ட சூழ்நிலையில் அரச நெடுஞ்சாலை பழைய ஏற்பாட்டில் குறிக்கப்படுகிறது.

வரலாற்று நிகழ்ச்சியுரைகளில் நெடுஞ்சாலை அடிக்கடி குறிக்கப்படுகிறது (நீதி 20:31.32.45; 21:19: 1 சாமு 6:12; 2 அர 18:17; எசா 36:2; 7:3). இச்சொல் பாடல்களிலும் இறைவாக்குகளிலும் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (எசா 11:16; 33:8; 49: 11; 59:7; காண்க. நீதி 5:20; யோவே 2:8; பழ 15:19; 16:17; எரே 18:15; 31:21) எசா 11:16; 19:23; 35:8; 40:3; 62:10-ஆகிய பகுதிகளில் இச்சொல்லால்-பாபிலோனிய அடிமைத்தனத்தி லிருந்து விடுபட்டவர்கள் திரும்பிவந்த சாலை-குறிக்கப்படுகிறது. மேலும் காண்க. அரச நெடுஞ்சாலை; பயணமும் தொடர்புகளும்.

நெட்சிபு (NEZIB - தூண், காவற்படை, எல்லைக் காவல் நிலையம்)

இது செபேலாவிலுள்ள யூதாவின் கிராமங்களில் ஒன்று. கிர்பெத் கிலா என்னுமிடத்திலிருந்து, சுமார் 3 கி.மீ. தொலைவிலுள்ள இலாக்கிசிலிருந்து கிழக்கிலும் எபிரோனுக்கு வடக்கில் 13 கி.மீ. தொலைவிலும் உள்ள இக்காலக் கிர்பெத் பெயித். நெசிபு என்று அடையாளம் காட்டப்படுகிறது.

நெட்சியாகு (NEZIAH - விசுவாசமுள்ள)

இவர் பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்தவர்களின் பட்டியலில் கூறப்படும் ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத்தின் குலப்பெயர் முதியவர் ஆவார் (எஸ் 2:54; நெகே 7:56).

நெதபியா (NEDABIA - யாவே தூண்டினார், கட்டாயப்படுத்தினார்)

இவன் மன்னன் எக்கோனியாவின் (யோயாக்கினின்) மகன் (1 நாள் 3:18).

நெத்தனியா (NETHANIAH - யாவே கொடுக்கிறார்)

1. இவர் கெதல்யாவைக் கொன்ற இஸ்மயேலின் தந்தை (2 அர 25:23.25; எரே 40:8. 14-15; 41:1-9).

2. நெத்தனியா, சுரமண்டலங்களையும், தம்புருகளையும், கைத்தாளங்களையும், இசைத்து இறைவாக்குரைக்க தாவீதால் நியமிக்கப்பட்ட வரும், ஆசாபுவின் மகனும், லேவியரும் ஆவார் (1 நாள் 25:2). இவர் லேவியப்பாடகர்களின் ஐந்தாம் பிரிவுக்குத் தலைவர் (25:12).

3. நெத்தனியா, யோசபாத்தால் யூதாவின் நகரங்களில் ஆண்டவரின் சட்டங்களைப் போதிக்க அனுப்பப்பட்டவர்களுள் ஒரு லேவியர் (2 நாள் 17:8).

4. நெத்தனியா எகுதியின் தந்தை. இவர் எரேமியாவின் ஏட்டுச் சுருளை அரசனுக்குப் படித்துக் காட்டியவர் (எரே 36:14.21).

நெத்தனியேல் (NETHANEL - கடவுள் கொடுக்கிறார்)

1. நெத்தனியேல், இசக்காரின் கோத்திரத்தில் சூவாரின் மகன் ஆவார் (எண் 1:8). 54,400 பேருக்குத் தலைவராய் இருந்த இவர் (2:5; 10:15) பீடமும், கூடாரமும் அர்ப்பணிக்கப்பட்டபோது அதில் பங்கு கொண்டவர் (7:18-23).

2. நெத்தனியேல் ஈசாயின் நான்காவது மகனும், தாவீதின் மூத்த சகோதரனும் ஆவார் (1 நாள் 2:14).

3. தாவீதின் காலத்தில் பேழை எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்ட போது நெத்தனியேல், ஆண்டவரின் பேழைக்கு முன் எக்காளம் ஊத வேண்டியவர்களுள் ஒருவர் (1 நாள் 15:24).

4. நெத்தனியேல், லேவியரும், எழுத்தர் செமாயாவின் தந்தையும் ஆவார் (1 நாள் 24:6).

5. நெத்தனியேல், கோராகிய லேவியரும், ஓபேது ஏதோமின் ஐந்தாவது மகனும், ஆலய வாயில் காப்போனும் ஆவார் (1 நாள் 26:4).

6. நெத்தனியேல் யோசபாத்து அரசனால் யூதாவின் நகரங்களில் ஆண்டவரின்

சட்டநூலைப் போதிக்க அனுப்பப்பட்ட யூதாவின் தலைவர்களுள் ஒருவர் (2 நாள் 17:7-9).

7. நெத்தனியேல், லேவியரும் கொனனியாவின் சகோதரனும் ஆவார். இவர் யோசியா அரசன் காலத்தில் பாஸ்கு விழாவுக்குக் காணிக்கை கொடுத்தவர்களுள் ஒருவர் (2 நாள் 35:9).

8. நெத்தனியேல் பஸ்கூரின் மகன். நாடு கடத்தப்பட்டபோது அயல் நாட்டு மனைவியரை மணந்த குருக்களில் ஒருவர் (எஸ்ரா 10:22). நாடு திரும்பியபின் அவளை விலக்கிவிட்டவர்.

9. நெத்தனியேல் யோயாக்கிம் தலைமைக் குருவாய் இருந்த காலத்தில் எதாயா வம்சத்தின் தலைவராக இருந்தார் (நெகே 12:21).

10. நெத்தனியேல், திரும்பவும் புதியதாகக் கட்டப்பட்ட எருசலேமின் சுவர் அர்ப்பணிக்கப்பட்டபோது அதில் கலந்து கொண்டவர். ஆசாபுவின் வழித்தோன்றல் (நெகே 12:36). இவரும் 9-இல் குறிக்கப்படுபவரும் ஒருவராக இருக்கலாம்.

நெத்தினிம் (NETHINIM)

காண்க; ஆலய ஊழியர்கள்

நெபயோத்து (NEBAIOTH) - உச்சி)

இசுமயேலின் மூத்த மகனும், கேதாரின் சகோதரனுமான இவன் பெயரிலிருந்து (ஆதி 25:13; 28:9; 36:3; 1 நாள் 1:29) இதே பெயரில் அரேபிய இசுமயேலரின் மத்தியிலும் குலப்பிரிவுகள் இருந்ததெனத் தெரிகிறது. கேதாரும் நெபயோத்தும் ஆடுகள் வளர்ப்பதில் பெயர் பெற்றவர்கள் (எசா 60:7). நெபயோத்து அராபியர்களும், மூன்றாம் திகிலத்பிலேசர், அசூர்பானிப்பால், பிளினி ஆகியோர் குறிப்பிடும் "நபாயியத்தி" அரேபியர்களும் ஒன்றே எனக் கருதப்படுகிறது. அறிஞர் சிலர் கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'நபத்தேயர்களே', நெபயோத்து' இனத்தினர் எனக் கூறினாலும் அஃது அவ்வளவு ஏற்கக் கூடியதாக இல்லை.

நெபல்லாற்று (NEBALLAT - இரகசியமடமை)

இது சாரோன் சமவெளியின் தென்கிழக்குப் பகுதியைப் பார்க்கும் வண்ணம் குன்றின் மேலமைந்த நகரம். பாபிலோனிலிருந்து திரும்பி வந்த பென்யமின் குலத்தினர் இங்குத் தங்கினர் (நெகே 11:34). லோதுக்கு வடகிழக்கே 7 கி.மீ. தொலைவிலும், ஆட்சோருக்கு மேற்கில் 32 கி.மீ. தொலைவிலும் உள்ள பெயித்துநாபாலாவாக அடையாளம் காட்டப்படுகிறது. கி.மு. ஏழாம் நூற்றாண்டின் சமாரியாவைச் சேர்ந்த ஓர் அசீரிய ஆளுநன் நபு-உபாலித்தின் பெயர் நினைவாகக் கட்டப்பட்டதாக இருக்கலாம்.

நெபாற்று (NEBAT - நோக்கு, காட்சி)

இவர் முதலாம் எரொபவாம் அரசனின் தந்தை. செரேதைச் சேர்ந்த எப்பிராமியர் (1 அர 11:26). யோவாசின் மகன் இரண்டாம் எரொபவாமிலிருந்து முதலாம் எரோபவாமை வேறுபடுத்த "நெபாற்றின் மகன்" என்ற அடைமொழி, பழைய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படுகிறது. இப்பெயர் வடஅரேபியாவில் பொதுவானது. ஒரு சிலர் கருதுவதுபோல் இதுவும் நாபோத்தும் ஒன்றன்று.

நெபிசிம் (NEPHISIM)

பாபிலோனிலிருந்து திரும்பி வந்த ஆலயப்பணியாளர்கள் அல்லது நெத்தினிம் எனும் குடும்பத்தின் இனப்பெயர் முதல்வர் (எஸ் 2:50). நாபிசு இசுமயேலர்களோடு தொடர்புடையவராக (உறவினராக) இருக்கலாம். இதற்கு இணையான நெகே 7:52-இல் இப்பெயர் நெபுசசிம் என்றுள்ளது.

நெபுகத்னேசர், நெபுகத்ரேசர் (NEBU-CHADNEZZAR, NEBUCHADREZZAR - நபு என் எல்லையைப் பாதுகாத்தார்)

கி.மு. 605-562-இல் பாபிலோனியாவின் அரசனான இவன் நெபோபோலாசரின் மகனும்,

அவில் - மெரோதக்குவின் தந்தையுமாவான்.

D.J. வைஸ்மன் நெபுகத்னேசரைப் பற்றி எழுதியுள்ளவையே அவனது ஆட்சியின் சிறப்புத்தன்மைகளை நமக்குப் புலப்படுத்துகின்றன. இவன் வருடத்திற்கொரு முறை தனது படைகளுடன் சென்று தனக்குச் செலுத்தப்பட வேண்டிய திறைப்பொருளைச் சேகரித்தான். இவன் தன்னிடம் தோற்றவர்களை மற்ற அசீரிய அரசர்களைப் போலவே மிகக் கொடுமையாகத் தண்டித்தான். இவனது 43 ஆண்டு கால ஆட்சியில் முதல் 10 ஆண்டுகளே மிகவும் பெருமைக்குரியனவாக அமைந்தன. அதன்பின் வந்த ஆண்டுகள் பற்றி எதுவும் தெரியவில்லை. முதல் பத்தாண்டுக் காலத்திலே இவனுக்கெதிராக எழுந்த இரண்டு கிளர்ச்சிகள் உள்நாட்டிலும் குழப்பங்கள் இருந்தன என்பதைக் காட்டுகின்றன.

இவன் பட்டத்து இளவரசனாக இருக்கும் போதே எகிப்திய இரண்டாம் நெக்கே பார்வோனைக் கர்க்கமிசு என்னும் இடத்தில் பெரும் வெற்றி கொண்டதால் பாபிலோனிய அரசே இவன் காலடியில் வீழ்ந்தது. தோல்வியடைந்த எகிப்தியரை அவர்களது நாட்டு எல்லைவரை விரட்டிச் சென்றான்; ஆனால், அவன் யூதாவிற்குள் புகவில்லை (2 அர 24:7). யூதாவின் மன்னனான யோயாக்கிம் ஆட்சியை ஏற்றுக்கொண்டான். இதற்கிடையில் தனது தந்தையின் மரணத்தைக் கேள்விப்பட்டு நாடு திரும்பிய நெபுகத்னேசர் மீண்டும் அரசனாக யூதாவுக்கு வந்து தனது திறைப்பணத்தைப் பெற்றுச் சென்றான். ஒவ்வொரு வருடமும் ஒரு நகரமாகப் பிடித்து வந்தான். 601-ஆம் ஆண்டில் இவன் எகிப்தியரிடம் தோற்றான். எனவே, காசா வரை அவர்கள் வெற்றி பெற்று, எருசலேமிலும் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டினர். இதற்கு எதிராக எரேமியா பல தடவை இஸ்ராயேலரை எச்சரித்தார். ஆனால், யோயாக்கிம் இன்னும் நெபுகத்னேசருக்குத்தான் திறை செலுத்தினான் என்று யோசிப்பசு கூறுகிறார். இதற்கிடையில் யோயாக்கின் யூதாவின் ஆட்சிக்கு வந்திருந்தான். ஆனால், 597-இல் 'யூதாவின் நகரமென' நாளாகமம் கூறும் எருசலேம் நகரத்தையும், நாட்டையும் பிடித்து யோயாக்கினை நாடு கடத்தினான். 'செதேக்கியாவை யூதாவின் அரசனாக அரியணையில் ஏற்றினான். ஆனால், யூதா பெருமளவில் கப்பம் கட்ட வேண்டியிருந்தது. இதன் பிறகு நெபுகத்னேசர் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சீரியாவின் மீது படையெடுத்தான். இவனது ஆட்சியின் ஒன்பதாவது ஆண்டில் திக்ரீசுக்கு அப்பால் உள்ள ஏலாம் நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான்.

நெபுகத்னேசர் தன் இறுதி 33 ஆண்டுகளில், தீர் நாட்டைப் பிடித்தான்; 586-இல் எருசலேமை இரண்டாம் முறையாகப் பிடித்து அழித்தான்; 567-இல் பார்வோன் அமாசிசுக்கு எதிராகப் படையெடுத்தான்.

மற்ற அசீரிய மன்னர்களைவிட இவன் செல்வாக்குப் பெற்றதற்குக் காரணம் தன் அண்டைநாடான 'மேதிய' அரசின் மகளை மணந்ததால் வடக்கு, மற்றும் வடமேற்கு எல்லைகள் பாதுகாப்புடையனவாக இருந்தன. வெற்றிகொண்ட நாட்டினின்று பெற்ற செல்வங்களையெல்லாம் தன் அரண்மனைகளை அழகுபடுத்தவும், பாபிலோனியாவில் கோவில் கட்டவும், நகர்களைப் பலப்படுத்தவும் பயன்படுத்தினான். உலகப்புகழ் பெற்ற 'பாபிலோனியத் தொங்கு தோட்டம்' சிதைவுகளிடையே அடையாளம் காணமுடியாததாக உள்ளது. தானியேல் 4-இல் குறிப்பிடப்படும் பைத்தியக்காரத்தனம் நெபுகத்னேசரை அன்று, நபோனிது என்பவனையே குறிக்கும். ஏனெனில் அரசனாக இருந்து ஒருவர் செய்யத்தகாத செயல்களைச் செய்ததால், பலரது எதிர்ப்பைப்பெற்ற இவனே அந்தப் பைத்தியக்காரனாக இருக்க வேண்டும்.

நெபுசசுபான் (NEBUSHAZBAN - நபு என்னைக் காப்பாற்று)

நெபுகத்னேசரின் தலைமை அண்ணகன் இவன்; பாபிலோனியச் சிற்றரசர்களில் ஒருவனாகக் கூறப்படுகிறான். எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின் எரேமியாவைப் பாதுகாக்க பாபிலோனிய அரசன் இவனை அனுப்பினான் (எரே 39:13).

நெபுசரதான் (NEBUZARDAN - நபு மகப்பேறு அளித்தார்)

நெபுகத்னேசரின் அரசவை உயர் அதிகாரி. இவன் எருசலேம் நகரின் கோவில், அரண்மனை, வீடுகள், அதன் சுவர் அனைத்தையும் நெருப்பால் எரித்தழித்தான்; இஸ்ராயேலர் பலரை நாடு கடத்தினான் (2 அர 25:8-12; எரே 39:9-14). இவன் மீண்டும் அதிக மக்களை நாடு கடத்த நான்கு வருடம் கழித்து எருசலேம் வந்தான் (எரே 52:12-30). இவன் அரசனது "மெய்க்காப்பாளர் தலைவன்" ஆவான்.

நெபேகு (NEPHEG - முளைவிடுதல், துளிர்விடுதல்)

1. இட்சகாரின் மகனான இவர் கோராகு, சிக்ரி ஆகியோரின் சகோதரன் ஆவார். இவர் லேவியர் (யாத் 6:21).

2. எருசலேமில் தாவீதுக்குப் பிறந்த மகன்களில் ஒருவர் (2 சாமு 5:15; 1 நாள் 3:7; 14-16).

நெபோ (NEBO - அறிக்கையிடுபவர், இறைவாக்கினர்) - தெய்வம்.

இது பாபிலோனியாவின் அழிவையும், அதன் கடவுளர்களின் அழிவையும் பற்றித் தமது இறைவாக்கு வசைப்பாடலில் (எசா 46:1) எசாயா குறிப்பிடும்போது கூறப்படும் ஒரு தெய்வமாகும். இவர் எழுதுதல், பேசுதல், ஆகவே ஞானம், வியாபாரம், இறைவாக்கு அடையாளம் கூறுதல் முதலியவற்றின் கடவுள் எனக் கருதப்பட்டது. பாபிலோனில் புதுவருட வசந்த விழா ஊர்வலத்தில் மார்துக்குடன், நெபோ எனப்படும் இத்தெய்வமும் சுமந்து செல்லப்படும். இத்தெய்வம் முதலில் நீரின் தெய்வமாக இருந்தாலும், பேச்சாற்றல் மிக்க மெசபொத்தாமிய மெர்க்குரியாகவே இது வழிபடப்பட்டது. கி.மு. 612-538-இல் புதிய பாபிலோனியாவில் இத்தெய்வம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதென்பது இறுதி ஆறு அரசர்களில் மூவர் பெயரில், நபோபோலேசர், நெபுகத்ரேசர், நபோனிது என இத்தெய்வத்தின் பெயர் இணைத்தே வழங்கப்பட்டதால் உறுதியாக்கப்படுகிறது.

நெபோ (NEBO) - இடம்

1. யோர்தானுக்கு அப்பால் உள்ள மோவாபிலுள்ள நகரமான இது, ரூபன், காது கோத்திரத்தாரால் விரும்பிக் கேட்கப்பட்டது. ஏனெனில், இஃது ஒரு நல்ல மேய்ச்சல் நிலமாகும் (எண் 32:3). ரூபன் கோத்திரத்தாரால் மீண்டும் கட்டப்பட்டது (எண் 32:38). இஃது ரூபனின் வழித்தோன்றல்களில் ஒருவரான பேலாவைப் பற்றிக் கூறும் பொழுது தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது (1 நாள் 5:8). 'மோவாபியர் கல்வெட்டில்' இந்நகரம் மோவாபியரின் அரசன் மேசாவால் பிடிபட்டது பற்றியும், ஏழாயிரத்துக்கு மேல் இஸ்ராயேலர் கொல்லப்பட்டது பற்றியும் குறிப்பிடப்படுகிறது. ஏழாயிரம் என்பது மிகைப்படுத்திக் கூறப்பட்டதே. மோவாபுக்கு எதிரான இறைவாக்குகளிலும் 'நெபோ' குறிப்பிடப்படுகிறது (எசா 15:2; எரே 48:1.22).

யூசேபியு, நெபோ எஸ்போனிலிருந்து எட்டு உரோமைக் கல்தொலைவில் இருக்கவேண்டுமெனக் கருதுகிறார். எஸ்போனுக்குத் தென்மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் மிக்கயெத்துதான் இஃது எனக் கருதுகின்றனர். இவ்விடத்தில் மோவாபியரின் இரும்புக்காலத்திய கலங்கள் எடுக்கப்பட்டன. பளிங்குத் தரையிலான அழகான பைசாந்தியக் கோவிலின் சிதைவுகளும் காணப்படுகின்றன.

2. யூதாவின் பகுதியில், பெத்தேல், ஆயிக்குப்பின் குறிக்கப்படும் ஓர் இடம். இங்குதான் நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் "நெபோவின் மகன்கள்" ஐம்பத்து இரண்டுபேர் குடியேறினர்

(எஸ் 2:29). இதற்கு இணையான பட்டியலாகிய நெகே 7:33-இல் இந்த இடம் "மற்றொரு நெபோ" என்று 1-இல் கூறப்பட்டுள்ளதிலிருந்து வேறுபடுத்திக் கூறப்படுகிறது. இங்கு நெபோ என்பது ஒரு குடும்பப் பெயர் என்று (காண்க. 10:43) அறிஞர் சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் "மற்றொரு நெபோவும்," நோபுவும் ஒன்றே எனக் கருதுகின்றனர்.

நெபோ மலை (NEBO MOUNT - நபுவின் மலை, மலையின் உச்சி)

யோர்தான் நதியின் முகத்துவாரத்திலிருந்து 19 கி.மீ. தொலைவு கிழக்கே, எரிகோவுக்கு எதிராக உள்ள அபாரிம் மலைத்தொடரில் உள்ள ஒரு மலையே நெபோ. இஃது இஸ்ராயேலர்கள் தங்கிச் சென்ற இடங்களில் ஒன்று. அபாரிம் மலையில் நெபோவுக்கு முன் இருந்தது (எண் 1347). மோசேயின் பாடலுக்குப்பிறகு (உப 32) மோவாபு நாட்டில் எரிகோவுக்கு எதிரேயுள்ள அபாரிம் மலைத்தொடரிலுள்ள நெபோ என்ற மலைமீது ஏறக் "கட்டளையிடப்பட்டார்" (32:49). அங்கிருந்து கானான் நாட்டைக் கண்டுவிட்டு அங்கேயே இறக்கும்படி ஏற்பட்டது. உப 33-இல் மக்களனைவரையும் மோசே ஆசீர்வதித்தபின் நெபோ மலையின் மேல் ஏறி, பிஸ்காவின் உச்சியை அடைந்தார். கடவுள் அங்கிருந்து அவருக்குக் கிலயாதிலிருந்து தாண் வரையிலும், நப்தலி, எப்பிராயிம், மனாசே இவர்களின் நாட்டையும், மேற்குக் கடற்கரையில் உள்ள யூதாவின் நாட்டையும், நெகேபு, எரிகோவின் பள்ளத்தாக்கையும் சோவார்வரை காட்டினார் (உப 34:1-3).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இம்மலை பலரது கைகளுக்கு மாறியது. இஸ்ராயேலர் இதனைப்பிடிக்குமுன் எமோரியர்களின் அரசனான சீகோன் மோவாபைப் பிடித்தான் (எண் 21:26-30). இதனை இஸ்ராயேலர் சீகோனிடமிருந்து கைப்பற்றினர் (21:23-32). இப்பகுதிக்கே மோவாபின் மன்னனான பாலாக்கு, இஸ்ராயேலரைச் சபிக்குமாறு பிலயாமை அழைத்து வந்தான் (23:14.8). இப்பகுதி ரூபன், காது கோத்திரத்துக்கு ஒதுக்கப்பட்டது (அதி .32). நீதிபதிகள் காலத்தில் மோவாபின் அரசன் எக்லோன் இதைக் கொண்டிருந்திருக்க வேண்டும் (நீதி 3:12-30). தாவீது காலத்தில் இது மீண்டும் இஸ்ராயேலுக்குரியதாகியது (2 சாமு 8:2). மோவாபிய மன்னன் மேசா இதனைக் கைப்பற்றினான். கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் இது தனது சுதந்தரத்தை இழந்தது.

இன்றைய எபெல் என் - நெபாதான் நெபோ மலையெனக் கூறப்படுகிறது. இது மத்தியதரைக்கடல் மட்டத்திலிருந்து 820 மீட்டர் உயரமும், சாக்கடல் மட்டத்திலிருந்து 1200 மீட்டர் உயரமும் உடையது.

உப 34:1-3-இல் குறிப்பிடப்படுவதிலிருந்து இதன் மேலிருந்து வடக்கு, மேற்கு, தென்கிழக்கு ஆகிய திசைகளில் உள்ள நிலங்களை நன்கு காணலாம் என்பது தெரிகிறது. வடக்கிலும், வடகிழக்கிலும் யோர்தானுக்கு அப்பாலுள்ள செழிப்பான சமவெளி காணப்படும். சாதகமான வானிலைச் சூழ்நிலையில் பனி போர்த்திய எர்மோன் மலையைச் காணலாம். இங்கிருந்து தெற்கில் தாபோர், ஏபால், கெரிசிம், யூதா பென்யமினின் உயரமான இடங்களையும், பெத்லகேம், எபிரோன், சாக்கடல் ஆகிய ஏன்கேதி வரையுள்ள எல்லாப்பகுதிகளையும் காணலாம். இதற்கு நேர்கீழே யோர்தான் பள்ளத்தாக்கு உள்ளது. இடையேயுள்ள மலைகளினால் இங்கிருந்து மத்தியதரைக் கடலைக் காணமுடிவதில்லை.

இம்மலையையொட்டி இரும்புக்கால, வெண்கலக் காலங்களைச் சேர்ந்த பகுதிகள் காணப்பட்டன. மோவாபியர் காலத்தில் இம்மலையின் ஊற்றுகள் காவல் செய்யப்பட்டன. இப்பகுதியில் கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கான பல அடையாளங்கள் காணப்படுகின்றன.

நெப்தார் (NEPHTHAR)

நெகேமியா ஓர் இடத்திற்குக் கொடுத்த பெயர். இதன் பொருள் புனிதம் என்பதாகும். ஆனால், பலர் நாப்தா என்று இதை அழைத்தனர் (2 மக் 1:36). இப்பெயரின் சொல்லிலக்கணம் தெரியவில்லை.

நெப்தோவாகு (NEPHTOAH – திறப்பு, வாயில்)

"நெப்தோவாகு எனும் நீரூற்று" எனும் சொற்றொடரில் மட்டுமே பயன்படுத்தப்படும் ஓர் இடத்தின் பெயர் இது (யோசு 15:9; 18:15). எருசலேமுக்கு வடமேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலலிப்தாவையும், அதன் நீரூற்றையுமே இஃது இருந்த இடமெனக் காட்டுகின்றனர். பெத்லகேமுக்குத் தெற்கேயுள்ள அற்றாம் போன்ற இடங்களைக் காட்டினாலும் கிரியத்து எயாரிமுக்கு அண்மையில் உள்ள லிப்தாதான் சரியென்று பலர் கருதுகின்றனர். அறிஞர் சிலர், இதனை 'மாரென்ப்தா' என்ற எகிப்தியச் சொல்லிலிருந்து வந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

நெப்பிலிம், அரக்கர்கள் (NEPHILIM)

இவர்கள் பெருவெள்ளத்திற்கு முந்திய மக்களாவர். "தெய்வப்புதல்வர்கள்" "மனிதப் புதல்வியர்"களின் சேர்க்கையால் பிறந்தவர்கள் (ஆதி 6:1-4). இதைப் பெருவெள்ளத்தின் காரணமாகத் தொடக்கநூல் ஆசிரியர் கூறுவதாகத் தெரிகிறது. இச்சேர்க்கை ஒழுக்கக்கேட்டின் அடையாளமாகும்.

மற்றொரு விளக்கம்– சேத்தின் நேர்மையுள்ள புதல்வர்கள், இறைப் பற்றற்ற பெண்களை மணந்ததின் விளைவாகப் பிறந்தவர்களை நெப்பிலிம் குறிக்கிறது. அதன் விளைவாகச் சேத்தின் நேர்மையுள்ள வம்சம் ஒழுக்கக்கேடடைந்தது.

எண் 13:33-இல், கானானில் வேவு பார்க்கச்சென்றவர்கள் நெப்பிலிமியர்களைக் கண்டதாகக் கூறுகின்றனர். இங்கு நெப்பிலிமியர் ஆனாக்குவின் புதல்வர்கள் என்று குறிக்கப்படுகின்றனர். இவர்கள் எபிரேயருக்கு அறிமுகமான அரக்கர்கள் (உப 9:2; யோசு 15:14; நீதி 1:20). கோலியத்து இப்படிப்பட்ட ஓர் அரக்கர்.

ஆதி 6:1-4-இல் வரும் நெப்பிலிம் என்ற அரக்கர் பற்றிய கதையைப் பிற புராணங்களிலிருந்து எடுத்து, அதைப் பெருவெள்ளத்திற்குரிய காரணங்களில் ஒன்றாக ஆசிரியர் காட்டுகிறார் எனலாம். இவர்களையும் பிற்கால அரக்கர்களையும் குழப்பக்கூடாது.

நெமுவேல் (NEMUEL – இறைவனின் நாள்)

1. தாதானுக்கும், அபிராமுக்கும் சகோதரரான இவர் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்; மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராகக் கோரகுடன்சேர்ந்து கொண்டார் (எண் 26:9).

2. சீமோனின் கோத்திரத்தைச் சேர்ந்த நெமுவேலிய வம்சத்தலைவர் (எண் 26:12; 1 நாள் 4:24). ஆதி 46;10; யாத் 6:15-இல் எமுவேல் என அழைக்கப்படுகிறார்.

நெயரியா (NEARIAH – யாவேயின் ஊழியன் அல்லது இளைஞன்)

1. தாவீதின் வழிவந்த தூரத்து வழித்தோன்றல். செமாயாவின் மகனும், எலியோவெனாய், இசுக்கியா, அசிரிக்காம் ஆகியோரின் தந்தையுமாவார் (1 நாள் 3:22-23).

2. சிமியோனின் இனத்தைச் சேர்ந்தவர் இவர். இசீயின் நான்கு புதல்வர்களில் ஒருவர். இவர் எஞ்சியிருந்த அமலேக்கியர்களைக் கொன்று அவ்விடத்தில் குடியேறியவர். எசக்கியேல் அரசனாக ஆண்டபோது இது நிகழ்ந்தது (1 நாள் 4:42-43).

நெயாப்பொலி (NEAPOLIS – புதிய நகர்)

இது பிலிப்பியின் ஒரு துறைமுகம். திராக்குவில் உள்ள ஒரு நகரமெனக் கூறப்படுகிறது. கி.மு. 188-இல் உரோமைத் தளபதி மான்லியு வோல்சோ என்பவர் இங்கு வந்தார். கி.மு. 42-இல் புருட்டசும், காசியசும் பிலிப்பு நகரில் தங்கியிருந்த போது

அவர்களது போர்க்கலங்கள் நெயாப்பொலியில் தான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என ஆப்பியன் குறிப்பிடுகிறார்.

பைசாந்தியர்களின் காலத்தில் நெயாப்பொலி கிறிஸ்தோபொலி என அழைக்கப்பட்டது. அஃது இன்றைய கிரேக்கக் 'கவாலா'வாகும். இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள், யூதகிரேக்கப் பண்பாட்டின் நினைவுச்சின்னங்களும் முக்கியமாக, கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் பார்த்தேனோசு எனும் தேவதையின் கோவிலும் (நெயாப்பொலியின் தெய்வம்) இங்கு இருந்ததைக் காட்டுகின்றன. இலத்தீன் கல்வெட்டுகள், உரோமையர்கள் காலத்தில் இத்துறைமுகம் பிலிப்பியைச் சார்ந்தே இருந்ததெனவும், பிலிப்பியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் இங்குத் தங்கியிருந்தது பற்றியும் கூறுகிறது.

பவுல் தனது இரண்டாம் மறைபரப்புப் பணியின்போது நெயாப்பொலியில் சில நாட்கள் தங்கியிருந்தார் (அ.ப. 16:11).

நெய்தல் (WEAVING)

பழங்காலத்தில் பலவகைத் துணிகள் உற்பத்தி செய்யும் பொதுவான முறை இது. நெசவுத்தறியில் பாவு நூல் தொகுப்பை அமைத்து ஊடிழையைக் கொண்டு பின்னி, அதை அழுத்தி அல்லது அடித்துத் துணியாக்கும் அடிப்படை முறையாகும்.

பழங்காலப் பாலஸ்தீனத்திலும் எகிப்திலும் மூன்று வகையான நெசவுத்தறிகள் பயன்பட்டுள்ளன. 1) செங்குத்தான தறி. இதில் பாவு நூல் தொகுப்பு மேல்சட்டத்திலிருந்து தொங்கவிடப்படும்; பாவு நூலின் கீழ்ப்பகுதியில் கனமான எடை தொங்க விடப்பட்டிருக்கும். இதன் முன் நின்று நெசவாளர் மேலிருந்து கீழாக வேலை செய்வர். 2) இதுவும் செங்குத்தான தறி. இதில் மேலும் கீழும் சட்டம் அமைந்திருக்கும். இரு பக்கமும் நெசவாளர்கள் நின்று மேல் நோக்கிச் சேர்ந்து வேலை செய்வார்கள். 3) இது தரைமட்டமானது; தூக்கிச் செல்லக்கூடியது. இதில் முன்னும் பின்னும் சட்டங்கள் அமைந்து, அவை முளைகளால் தரையில் அமைக்கப்பட்டிருக்கும். நெசவாளர் முன் நின்று வேலை செய்வர். இவற்றில் எந்த வகையைப் பயன்படுத்தித் தெலீலா சிம்சோனின் முடியைப் பின்னினாள் (நீதி 16:13-14) என்பது தர்க்கத்திற்குரியதாகும்.

நெய்தல் பற்றிய பல குறிப்புகள் விவிலியத்தில் காணப்பட்டாலும், குறிப்பிட்ட விவரிப்புகள் சிலவே. நெய்தல் தொழில் பெரும்பாலும் பெண்களாலேயே செய்யப்பட்டது (யூதி 16:13-14; காண். யாத் 35:25-26; பழ 31:32). ஆனால், இத்துறையில் உயர்திறன் பெற்றவர்கள் (யாத் 35:35) அல்லது இத்தொழில் செய்யும் குழுவினைச் (1 நாள் 4:21) சேர்ந்த ஆண்கள் நேர்த்தியான துணிகளை நெய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆரோனும் அவரது புதல்வர்களும் அணிந்த ஆடைகள் (யாத் 28:8.27-28.39; 39:22.27). இயேசுவின் தையல் இல்லாத அங்கி (யோவா 19:23) ஆகியவை நெய்யப்பட்ட ஆடைகளுக்குச் சில விவிலிய எடுத்துக்காட்டுகள் ஆகும்.

வெள்ளாட்டு மயிர் (யாத் 26:7; 36:14) பெரும்பாலும் சணல் நார் இழை மற்றும் கம்பளியிழை (லேவி 13:48) ஆகியவை நெய்யப் பயன்பட்டன. சணல்நார் இழையும் கம்பளி இழையும் கலந்து ஆடை நெய்வது தடை செய்யப்பட்டிருந்தது (உப 22:11; காண்க. லேவி 19:19). இத்தகைய தடைகள் சமயப்பின்னணி உடையவையாக இருக்கலாம். ஒருவேளை சடங்குத் தூய்மை மற்றும் இறைவனின் புனிதம் பற்றிய விவிலியக் கருத்துகளுடன் தொடர்புடையவையாக இருக்கலாம்.

வாழ்வு கடந்து போய் முடிவடைவதைக் குறிக்க நெசவுத்தறி உருவகமாகப் பயன்பட்டுள்ளது (யோபு 7:6; எசா 38:12).

நெருஞ்சிமுள், முட்செடி (BRIER)

இது முட்செடிகளைக் குறிக்கும் பல எபிரேயச் சொற்களின் மொழி பெயர்ப்பாகும்.

இஸ்ராயேலரின் பகைவர்களைக் குறிப்பதற்கு இஃது உவமையாகக் கூறப்படும் (எசே 28:24); அல்லது ஒன்றுக்கும், உதவாத ஒரு பொருளைக் குறிக்க (மீக் 7:4) முக்கியமாக ஒன்றுக்கும் பயன்படாத நிலத்தைக் குறிக்க (எசா 5:6; 7:23-25; 55:13) இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

நெருப்புத்தட்டு (FIRE PAN)

எரிந்து கொண்டிருக்கும் கரித்துண்டுகளைச் சேகரிக்கவும், பீடத்திலிருந்து அகற்றவும் பயன்படுத்தப்படும் உலோகத்தட்டு அல்லது சட்டி. இது வெண்கலத்தால் செய்யப்பட்டதாக இருக்கும் (யாத் 27:3; 38:3). பொன்னால் செய்யப்பட்டவைகளாகவும் ஒரு சில வேளைகளில் இருக்கலாம் (1 அர 7:50 = 2 நாள் 4:22). இது பீடத்தைச் சார்ந்த பொருட்களில் ஒன்றாகும்; பலி கொடுக்கும்போது பயன்படுத்தப்படுகிறது (எண் 4:14; 2 நாள் 25:15 = எரே 52:19). சாம்பிராணி (நறுமணப்பொருள்) எரிந்து கொண்டிருக்கிற நெருப்பின்மீது போடப்படும்போது, இந்த நெருப்புத்தட்டு தூபக்கலசமாக மாறுகிறது (லேவி 10:1; 16:12; எண் 16:6.17-18.37-39). இது விளக்குத்தண்டின் கத்திரிகளோடு பயன்படுத்தப்பட்டது; அதாவது திரிச்சாம்பலை வைக்கத் தக்க கலசங்களாகப் பயன்படுத்தப்பட்டது (யாத் 25:38; 37:23; எண் 4:9).

நெருப்பும் மேகமுமான தூண் (PILLAR OF FIRE AND CLOUD)

எகிப்திலிருந்து தப்பி ஓடிவந்தபோது இஸ்ராயேலருக்கு இறைவன் தம் பிரசன்னத்தை உணர்த்தவும், அவர்களை நடத்திச்செல்லவும், பாதுகாப்பு அளிக்கவும், இறைவன் பயன்படுத்திய சாதனமாகும் (யாத் 13:21-22; 14:19-20.24). பாலைவனத்தில் அவர்களை வழிநடத்தவும் இதைப் பயன்படுத்தினார் (யாத் 40:38; எண் 14:14; நெகே 9:12.19; காண்க. சங் 78:14). பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் மேகம் திருஉறைவிடத்தைவிட்டு எழும்பும் போதெல்லாம் மக்கள் புறப்பட்டுச் சென்று தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர் (யாத் 40:36-37). மக்களுக்காக மோசே மன்றாடிய போது மேகத்தூண் இறங்கிவந்து கூடார நுழைவாயிலில் நின்று இறைவனது பிரசன்னத்தை வெளிப்படுத்தியது (33:9-10; எண் 12:5; உப 31:15).

மேகம் இறைவனது பிரசன்னத்தை உணர்த்திற்று. அது மேகத்தூணாக இருக்க வேண்டுமென்பதில்லை (யாத் 16:10; லேவி 16:2; எண் 11:25; 1 அர 8:10-11; எசே 1:4). நெருப்புத்தூண், மேகத்தூண் ஆகியவற்றைச் சீனாய்த் தீபகற்பத்திலுள்ள எரிமலைச் செயலாக அல்லது பயணிகளை வழிநடத்தப் பயன்படும் தீ மற்றும் புகை அடையாளங்களாக, இயற்கை சார்ந்த முறையில் விளக்க முயற்சிகள் நடந்துள்ளன. மற்றொரு விளக்கத்தில், தீ இறை அரசனைச் சூழும் கண்கூசச் செய்யும் ஒளி வட்டத்தைக் குறிக்கிறது என்பர். மெசபொத்தாமிய ஓவியங்களில், நெருப்பு தீப்பிழம்பாடையாகவும், மேகம் பார்ப்பவர்களைத் தேவதையின் சக்தியிலிருந்து பாதுகாக்க அதைப்போர்த்துவ தாகவும் சித்தரிக்கப்படுகின்றன. இறையாற்றல் தோற்றக் காட்சிகளில் இடி முழங்கும் இறைவன் குரலை இத்தூண் எடுத்துக்காட்டலாம் என்பர் சிலர்.

நெற்றாயிம் (NETAIM – நடுதல்)

இஃது, அரசனின் வேலையைக் கவனித்து வந்த குயவர்கள் வாழ்ந்து வேலை செய்த இடமாகும் (1 நாள் 4:23). ஆனால், இஃது இருந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை. வாடி ஏலாவுக்குத் தெற்கில் உள்ள கிர்பெத் என்-நூவேயத் ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நெற்றி (FOREHEAD)

பசும்பொன்னால் ஒரு பட்டம் செய்து ஆரோனின் தலைப்பாகையின் முன் அமைக்கப்படும் இடம் நெற்றி என்று அழைக்கப்படுகிறது (யாத் 28:38). விலைமாதின் அடையாளம் அவளது நெற்றியில் எழுதப்பட்டிருந்தது (எரே 3:3; திருவெளி 17:5). இறைவனின் மனிதர்களையும் (எசே 9:4;

திருவெளி 9:4), விலங்கின் மனிதர்களையும் (13:16) பிரித்துக்காட்டும் அடையாளங்கள் அவர்கள் நெற்றியில் குறிக்கப்பட்டன. கருமையான நெற்றி பிடிமுரண்டுத் தனத்தை உருவகமாக உணர்த்தும் (எசே 3:7-8).

நெற்று (POD)

அவரை முதலிய செடிகளின் விதைகள் அடங்கிய தோடு, காணாமற்போன மகன் தனக்கு உணவு கிடைக்காதபோது பன்றிகளுக்கும் போடும் நெற்றை உணவாக உட்கொள்ள விரும்பினான். ஆனால், அதைக்கூட அவனுக்குக் கொடுப்பாரில்லை (லூக் 15:16).

இத்தகைய நெற்றுகள் இனிப்பாகவும் ஓர் அடி நீளமுள்ளதாகவும் இருக்கும். அக்காலத்தில் பொதுவாக இவை ஆடு, மாடுகளுக்கும், பன்றிகளுக்கும் உணவாக அளிக்கப்பட்டன.

இந்த நெற்றுகளை ஏழைகளும் சாப்பிட்டு வந்தார்கள்.

நெற்றோபா (NETOPHAH - ஆற்றொழுக்கான, விழவிடு)

இது யூதா மலைநாட்டில், பெத்லகேமுடன் மிகவும் நெருங்கிய தொடர்புள்ள நகரம் (1 நாள் 2:54; எஸ் 2:21-22; நெகே 7:26). தாவீதின் "வலிமை வாய்ந்தவர்களான" மனிதர்களில் மகராய், ஏலேபு ஆகிய இருவரும் இங்கிருந்து வந்தவர்கள் (2 சாமு 23:28-29; 1 நாள் 11:30). இவர்கள் முறையே பத்தாவது, பன்னிரண்டாவது மாதங்களுக்கான படைப்பிரிவுகளுக்குப் படைத்தலைவர்களாய் இருந்தனர் (1 நாள் 27:13.15).

எருசலேம் கி.மு. 587-இல் பாபிலோனியரால் அழிக்கப்பட்டபோது நாடு கடத்தப்படாமல் விடப்பட்டவர்களுக்கு நெற்றோபாவைச் சார்ந்த தங்குமெத்துவின் மகனான செராயா படைத்தலைவராய் இருந்தார். இப்படை கெதலாயாவோடு சேர்ந்து கொண்டது (2 அர 25:23; எரே 40:8-9). செருபாபேலுடன் பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவர்களுள், நெற்றோபாவைத் தங்கள் மூதாதையர்களின் ஊராகக் கொண்ட 56 பேர் இருந்தனர் (எஸ் 2:22; நெகே 7:26). திரும்பி வந்த லேவியர் சிலரும் நெற்றோபாத்தியர்களின் ஊர்களில் (1 நாள் 9:16) தங்கினர். எருசலேம் நகர மதில் அர்ப்பணிக்கப்பட்டபோது பங்கெடுத்த பாடகர்கள் குழுவில் இந்த லேவியருள் சிலரும் இருந்தனர் (நெகே 12:27-28).

நெற்றோபா இருந்த இடம், பெத்லகேமின் தென்கிழக்கில், 5 கி.மீ. தொலைவில் இரண்டு பள்ளத்தாக்குகள் சேரும் இடத்தில் உள்ளது எனலாம். அதே பகுதியில் அயின் என்-நத்துபு என்ற ஊற்று பழங்காலப் பெயரைப் பாதுகாத்துள்ளது எனலாம்.

நே

நேபாய் (NEBAI – நெபோவின் குடிமகன்)

இவர் நெகேமியாவின்கீழ், புதிய உடன்படிக்கையில் கையெழுத்திட்ட தலைவர்களில் ஒருவர் (நெகே 10:19).

நேயா (NEAH – நடுங்குகின்ற)

இது செபுலோனுக்குரிய பகுதியின் எல்லைப்புறத்தில் ரிம்மோனுக்கும் அன்னத் தோனுக்குமிடையில் அமைந்திருந்த ஒரு நகரமாகும் (யோசு 19:13). இஃது இருந்த இடத்தை அடையாளம் காட்ட முடியவில்லை; ஆகாபு அரசன் காலத்தைச் சேர்ந்த சமாரியர்களின் பாண்டத் துணுக்குகளில் காணப்படும் நோவா என்ற இடமாக இருக்கலாம்.

நேரி (NERI – விளக்கு)

இயேசுவின் மூதாதையருள் ஒருவர். செயல்தியேலின் தந்தை (லூக் 3:27).

நேரியா (NERIAH – யாவே ஒளியாவார்)

நேரியா யூதா நாட்டைச் சார்ந்தவர் மாசியாவின் மகன் (எரே 32:12). இவருடைய இரு மகன்கள் எரேமியாவுக்கு ஊழியம் செய்தனர். பாரூக்கு படியெடுக்கும் செயலாளனாகவும் (32:16; 36:4.8; 43:3; 45:1; பாரூ 1:1), செராயா பாபிலோனுக்கு எதிரான இறைவாக்கினரின் கூற்றுக்களைப் பாபிலோனுக்குக் கொண்டு சென்றவரும், அரச விடுதிப்பொறுப்பாளரும் ஆவர்.

நேரேயு (NEREUS)

உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் 16:15-இல் தனது பெயர் கொடுக்கப்படாத சகோதரியுடன் வாழ்த்துப்பெறும் ஒரு கிறிஸ்தவர். பிலோலகு, யூலியா ஆகியோர் நேரேயுவின் பெற்றோர் எனவும், ஒலிம்பா அவரது சகோதரி எனவும் கருதப்படுகிறது. இப்பெயர்கள் எல்லாம் ஒரே வசனத்தில் அமைந்துள்ளதாலும், அதன் வரிசை முறையிலும் மேலே கூறிய கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

கிரேக்கப் புராணத்தில் நேரேயு கடலின் வயது முதிர்ந்த ஞானி எனவும், இவனுக்கு 50 பெண்கள் இருந்தனரெனவும் (நரேயர்கள்) கூறப்படுகிறது. ஒரு கிறிஸ்தவன் அன்னிய தெய்வமொன்றின் பெயரை வைத்திருப்பது வித்தியாசமாகத் தோன்றுகிறது. ஆனால், இக்கருத்து பெபாவுக்கும் எர்மசுக்கும் பொருந்தும்.

நேர் (NER – ஒளி, விளக்கு)

பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த 'நேரின்' மகனான அப்னேரே சவுலின் படைத்தலைவனாக இருந்தார் (2 சாமு 26:5.14). இவரது பெயரைத் தவிர இவரைப் பற்றி வேறொன்றும் கூறப்படவில்லையெனினும், இவருக்கும் சவுல் குடும்பத்துக்கு மேற்பட்ட உறவு மிக முக்கியமானது. சிலர் நேர் சவுலின் சிற்றப்பாவும், 'கீசு' என்பவரது சகோதரரும் ஆவார் என்கின்றனர். ஆனால், இத்தகையதொரு முடிவுக்கு வரவேண்டுமெனில் (1 சாமு 14:50; 1 நாள் 8:33; 1 நாள் 9:36.39; ஆகிய) பல பகுதிகளை ஆராய்ந்து தெளிவு கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் நேர் சவுலின் 'தாத்தா' என்றும், கீசு, அப்னேரின் தந்தையென்றும் கொண்டால் விவிலியப் பகுதிகளை மாற்ற வேண்டியதில்லை. 1 சாமு 9:1-இல், கீசின் பெயரை அடுத்து இவர் நேரின் மகன் என்று எழுதினால்போதும். இப்படிக் கொண்டால், பென்யமின் குலத்தின் தலைமுறை அட்டவணையில் சவுலுக்கும் நேருக்கும் உள்ள உறவு தன்னிறைவுடையதாகும்.

இதன்படி நேர் என்ற பெயர்- பென்யாமின் குலத்தைச் சேர்ந்த ஒருவரையோ இருவரையோ குறிக்கலாம்.

1. இவர் மாக்கா, எபியேல் (2) இவர் 1 சாமு 14:5-இல் அபியேல் என்றழைக்கப்படுகிறார்) ஆகியோரின் மகன்; ஆகவே, கீசுவின் சகோதரன் (1 நாள் 9:36). இதற்கு இணையான 8:30 இப்பெயரை விட்டு விடுகிறது. இவர் அப்னேரின்

தந்தையும் (அல்லது தாத்தா), சவுலின் சிற்றப்பனும் ஆவார்.

2. எயியேலின் (2) மகனும் கீசுவின் தந்தையுமாவார் (1 நாள் 8:33; 9:39). 8:30; 9:36-இல் வரும் எயியேலின் புதல்வர்கள் பட்டியலில், நேர் என்ற பெயரில்லை. கீசு எயியேலின் மகன் என்று குறிக்கப்படுகிறார்.

நேர்கால் (NERGAL – பெரிய நகரத்தின் கடவுள்)

நேர்கால் மெசபொத்தாமியாவின் கடவுள். இவருடைய பெயர், 2 அர 17:30-இலும் எரே 39:3.13-இல் வரும் நேர்கால் சரேசர் என்னும் பெயரிலும் காணப்படுகிறது. இஸ்ராயேல் நாடு கி.மு. 722-இல் முழுவதுமாக அழிந்தபின் அங்கு அசீரியர்களால் குடியமர்த்தப்பட்ட படை வீரர்கள் நேர்கால் என்ற கடவுளை வழிபட்டனர். முக்கியமாக, கூத்தா இனத்தவர் இவரை நகரக் கடவுளாக வழிபட்டனர். ஆரம்பத்தில் இவர் தீயோடும், வெயிலோடும் தொடர்பு உடையவராகக் கருதப்பட்டார். பிற்காலத்தில் போர், வேட்டையாடுதல் மற்றும் மக்களை அழிக்கும் சக்திகளுடன் தொடர்புபடுத்தப்பட்டார். இவர் சிங்கத்தை வாகனமாகக் கொண்டவர். இவர் போர்க்கருவிகள் ஆகியவற்றின் கடவுளாகவும் கருதப்பட்டார்.

நேர்கால் சரேசர் (NERGAL - SHAREZER – நேர்கால் அரசனைக் காப்பாற்றுவாராக)

இவர் கி.மு. 587-இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது அங்கிருந்த பாபிலோனிய அதிகாரிகளுள் ஒருவர். இவர் இரபிமாகு என்றும் அழைக்கப்படுகின்றார். இவர் நெபுகத்னேசரின் படைத்தலைவராகவும் இருந்துள்ளார் (எரே 39:3.13). நெபுகத்னேசரின் மகன் அவில் மொரோதக்கு ஒரு கிளர்ச்சியில் கொல்லப்பட்ட போது நெபுகத்னேசரின் மருமகன் நெரிக்லிசார் அரியணை ஏறினான் (கி.மு. 560-556). இந்த நெரிக்லிசாரும் நேர்கால் சரேசரும் ஒருவரே என்று பெரோசுஸ் கூறுகின்றார். நெரிக்லிசார் சிலிசியாவின்மீது படையெடுத்தார் என்பதைத் தவிர வேறு எதுவும் அவரைப் பற்றித் தெரியவில்லை. இவர் அந்நாட்டின் தனிக்குடிமகன் ஒருவருடைய மகன் ஆவார். நபோனிது, பெல்சாட்சர் ஆகிய பெயர்களைப்போன்று இப்பெயரும் சட்ட வாசகங்களில் காணப்படுகிறது. இப்பெயர் எரே 39:3-இல் இருமுறை வருவதால் இப்பெயர் இரு தனிப்பட்ட நபர்களைக் குறிக்கலாம்.

நேர் தெரு (STRAIGHT STREET)

இது தமஸ்கு நகரிலுள்ள ஒரு தெரு (அ.ப. 9:11). அங்கு யூதா என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். நகருக்கு வெளியே காட்சியில் இயேசுவைக் கண்டபின் பவுல் தங்கியிருந்தார். ஆண்டவர் கட்டளைப்படி அனனியா அங்கு சென்று பவுலைப்பார்த்து அவருக்குக் கண்பார்வை அளித்தார்.

இது நகரின் முக்கியப் பொது வீதியாகும். இது கிழக்கு மேற்காக ஓடியது. இருபுறமும் தூண்கள் நின்றன. இருமுனைகளிலும் பெரிய வாயில்கள் அமைந்திருந்தன. இப்போதும் "நேர்" என்ற பெயர் இத்தெருவுக்கு உண்டு. ஆனால், அதன் அமைப்பு சிறிது மாறிவிட்டது.

நை

நைல் (NILE - கருநீலம்) - நதி

ஆப்பிரிக்காவின் நதிகளுள் மிகவும் நீளமான 'நைல்', உலகின் இரண்டாவது நீண்ட நதியாகும். இதன் நீளம், விக்டோரியா நயான்சா என்னும் ஏரியிலுள்ள 'வெள்ளை நைல்' என்னும் அதன் மூலத்திலிருந்து, மத்தியதரைக் கடலில் கலக்கும் இடம்வரை ஏறக்குறைய 5,000 கி.மீ. ஆகும். எகிப்தில் மட்டும் இதன் நீளம்- ஆஸ்வானிலுள்ள முதல் நீர் வீழ்ச்சியிலிருந்து அதன் முகத்துவாரம் வரை- 960 கி.மீ. ஆகும். கழிமுகத்தில் நைல் நதியானது, ரோசேட்டா, தமியேட்டா என்னும் இரு பிரிவுகளாகப் பிரிந்து செல்கிறது. கிழக்கிலுள்ள தமியேட்டா 120 கி.மீ. நீளமும், ரோசேட்டா 80 கி.மீ. நீளமும் உடையவை. இதன் அகலம் மேல் எகிப்தில் 450 மீட்டர் முதல் 1600 மீட்டர் வரையும், அதன் முகத்துவாரத்தில் 180 மீட்டர் முதல் 840 மீட்டர் வரையும் உள்ளது. மத்திய ஆப்பிரிக்காவில் பனி உருகுவதால் உண்டாகும் நீரோடைகள் இதன் முக்கிய மூலங்களாகும். இதன் முக்கிய துணைநதியான நீல நைல், வெள்ளை நைலுடன் கார்ட்டூம் என்னும் இடத்தில் சேர்ந்து கொள்கிறது. கார்ட்டூமுக்கும் வாடிகல்பா என்பதற்கும் இடைப்பட்ட பகுதியில் நைல் "S" வடிவில், நுபியின் பாலைவனம் வழியாகப் பாய்கிறது. இந்தப் பகுதியில் 1-6 நீர்வீழ்ச்சிகள் உள்ளன.

நைலில் வழக்கமாக ஏற்படும் வெள்ளப் பெருக்கு, அதன் அருகிலுள்ள பள்ளத்தாக்கின் வளமான நிலங்களில் விவசாயம் செய்ய உதவுகிறது. இப்பள்ளத்தாக்கை அடுத்து, பயிரிட முடியாத பாலைவனமும் உள்ளது. கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நைலின் வெள்ளப்பெருக்கு குறிக்கப்பட்டிருக்கிறது. இன்றும் ஆஸ்வானில் ஆற்றில் நீர் மட்டத்தைக் காட்டும் அளவு குறிப்பிடப்பட்ட ஒரு தூண் உள்ளது. கார்ட்டூமில் ஏப்ரல் - மே மாதங்களில் இதன் அடியளவு 5.4 மீட்டரும், ஆகஸ்டு - செப்டம்பர் மாதங்களில் 7.5 மீட்டராகவும் இருக்கும். பழங்காலத்திலிருந்தே உழவர்கள் இந்த நீரைக் குளங்குட்டைகளில் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்தினர். தண்ணீர் உருளைகளைப் பழங்காலக் கல்லறைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்களிலும், இன்றைய எகிப்தின் வயல்களிலும் காணலாம். பழங்காலத்தில் கழிமுகம் மேற்கிலிருந்து கிழக்காக, ஏழு முகவாய்களைக் கொண்டிருந்தது. இவை இவற்றின் அருகிலுள்ள நகரங்களின் பெயரால் அழைக்கப்பட்டன. ஆனால், இன்று ரோசேட்டா, தமியேட்டா என்னும் இரு பிரிவுகளாக மட்டுமே உள்ளது.

பழைய ஏற்பாட்டில், நைல், 'நீரோடை' எனப் பொருள்படும் எகிப்தியச் சொல்லால் அழைக்கப்பட்டு வந்தது. இஸ்ராயேல் மக்கள் இந்நதியைப் பற்றி அறிந்திருந்தனர். எகிப்து கால்வாய்களினால் நீர் பாயும் நாடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மோசேயின் குழந்தைப்பருவம் நைல் நதியின் கரையில் கோரைகளுள்ள சதுப்புநிலத்தில்தான் ஆரம்பமாகிறது (யாத் 2:1தொ). 10 கொள்ளை நோய்களில் முதல் இரண்டில் நைல் குறிப்பிடப்படுகிறது (யாத் 7:14-8:15). எகிப்தின் அகந்தை நைலின் வெள்ளப்பெருக்கோடும் (எரே 46:7தொ), நிலநடுக்கம் நைலின் எழுச்சியோடும் வீழ்ச்சியோடும் (ஆமோ 8:8; 9:5) ஒப்பிடப்படுகின்றன. எகிப்து நைலில் வாழும் ஒரு முதலையோடு ஒப்பிடப்படுகிறது (எசே 29:3). தெபேசு நகர் நைல் நதியின் கரையிலிருந்து அதன் நீரை மதிலாகக் கொண்டது (நாகூ 3:8). அசீரியாவின் மன்னன் 'நைல் நதியை வற்ற வைத்தான்' என்று தன்னையே புகழ்ந்து கொண்டான் (2 அர 19:24; எசா 37:25). மேலும் கடவுள் நைல் நதியை வற்றச்செய்து, அதன் பயிர்களை வாடச்செய்து, எகிப்திலுள்ள உயிரினங்களையே அழித்துவிடுவார் என்று இறைவாக்கினர் எச்சரிக்கின்றார் (எசே 30:12; எசா 19:5-8).

நொ, நோ

நொறுங்கிய, குற்றமுணர்ந்த (BROKEN AND CONTRITE)

சங்கீதங்களில் செய்த குற்றங்களுக்கு மனம் வருந்தும் ஒருவனின் உள்ளம் நொறுங்கிய, குற்றமுணர்ந்த உள்ளம் எனக் குறிப்பிடப்படுகிறது (சங் 34:18; 51:17; ஏசா 57:15; 66:2). தாழ்வுற்று நொறுங்குண்ட உள்ளம் என்று இது கூறப்பட்டுள்ளது. இஸ்ராயேல் பாபிலோனில் மிகவும் கீழ்ப்படுத்தப்பட்ட அனுபவத்திற்குப் பின் அவர்கள் பயன்படுத்திய ஒரு சொற்றொடர். அடிமைத்தனத்திற்குப்பின் தாழ்ச்சி, சாந்தம், பொறுமை ஆகியவை ஒரு பக்தியுள்ள மனிதனுக்கு அவசியமான நற்பண்புகளாயின. இது புதிய ஏற்பாட்டில் மலைப் பொழிவிலும், மரியாளின் பாடலிலும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

நோகாகு (NOGAH - ஒளிப்பிழம்பு, சுடர் வீசுகின்ற)

இவர் எருசலேமில் தாவீதுக்குப் பிறந்த புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 3:7; 14:6). இதற்கு இணையான பட்டியலில் (2 சாமு 5:15) இப்பெயர் காணப்படவில்லை. ஆகவே, நெபேகு என்று இரட்டிப்பாக்கிய எழுத்தரின் பிழையாகும் என்று சிலர் கருதுவர்.

நோகாகு (NOHAH - ஓய்வு) - ஆள்

இவர் பென்யமினுக்கு நான்காவதாகப் பிறந்த மகன் (1 நாள் 8:2). இப்பெயர் ஆதி 46:21-இல் வரும் பட்டியலில் காணப்படவில்லை.

நோகாகு (NOHAH - ஓய்வு) - இடம்

நோகாகுவின் சந்ததியினர் வாழ்ந்த இடம். இங்கிருந்து மற்ற இனத்தவர்கள் பென்யமின் இனத்தவரைத் துரத்திச் சென்றனர் (நீதி 20:43).

நோதாபு (NODAB - மேன்மையான)

இவர் யோர்தானுக்கு அப்பால் இருந்த இஸ்ராயேலரை எதிர்த்துப் போரிட்ட எத்தூர், நாபிசு ஆகியவர்களோடு சேர்த்துக் குறிக்கப்படும் ஓர் ஆகாரியர் (1 நாள் 5:19). ஆகாரின் மகன் இசுமயேலின் புதல்வர்களாக எத்தூர், நாபிசு, கேதமா ஆகியோர் குறிக்கப்படுவதால் (ஆதி 25:15; 1 நாள் 1:13), கேதமாவும் நோதாபும் வெவ்வேறானவர்களாவர். ஆனால், இரு பெயரும் ஒரே ஆளைக் குறிக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். நோதாபு என்ற பெயர் கவுரானிலுள்ள நுதேபே என்ற கிராமத்தின் பெயரில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

நோது (NOD - அலைந்து திரிதல்)

இஃது ஏதேனுக்குக் கிழக்கில் இருந்த ஒரு நாடு. காயின் ஆபேலைக் கொலைசெய்தபின் இங்குதான் வாழ்ந்தான் (ஆதி 4:16). காயினின் தண்டனையைக் குறிக்கும் அடையாளப்பெயராக இருக்கலாம்.

நோபாகு (NOBAH - நாயின் குரைத்தல்) - ஆள்

இவர் மனாசே கோத்திரத்தின் தலைவர். இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டைக் கைப்பற்றியபோது இவர் கெனாத்தை வென்றார் (எண் 32:42). மனாசேயின் புதல்வர்கள் கிலயாது நாட்டைக் கைப்பற்றியது (எண் 32:39-42) வேறு மூலத்திலிருந்து எடுக்கப்பட்டது போலவும், மற்ற நிகழ்ச்சிகளோடு ஒத்துவராதது போலவும் தோன்றுகிறது. ஆனால், நீதி 1-இல் கூறப்படும் கானான் நாடு தனித்தனிக் கோத்திரத்தால் கைப்பற்றப்பட்ட விவரிப்போடு ஒத்துப் போகிறது. இவ்வாறு மனாசேயர்களால் கைப்பற்றப்பட்ட கெனாத்து, கிலயாதின் ஒரு பகுதியாகிறது. கெனாத்து யோர்தானுக்கு அப்பால் இருந்தது. இதை நோபாகு கைப்பற்றித் தன் பெயரை அதற்கு இட்டார் (எண் 32:42).

நோபாகு (NOBAH - நாயின் குரைத்தல்) - இடம்

1. இது கிலயாதைச் சேர்ந்த நகர். முன்பு கெனாத்து என்றழைக்கப்பட்ட இந்த ஊரை நோபாகு கைப்பற்றித் தனது பெயரையே அதற்கு இட்டார் (எண் 32:42).

2. இது கிலயாதின் கிழக்கில், யோக்பகாவுக்கு அருகில் உள்ள ஒரு நகரம். கிதியோன் மிதியா நாட்டவரின் இந்த இரு ஊர்களையும் சுற்றிச் சென்று கர்க்கோர் என்னுமிடத்தில் அவர்களை முறியடித்தார் (நீதி 8:10-11).

நோபு (NOB - உச்சி)

அகிமெலக்கு சீலோவில் குருவாக இருந்தார் (1 சாமு 14:3). சீலோ அழிக்கப்பட்ட பின் நோபு சென்றார் (எரே 7:14). அகிமெலக்கின்கீழ் குருக்கள் பலர் இருந்தனர். தாவீது, சவுலிடமிருந்து தப்பித்து ஓடிப்போகும்போது நோபுவுக்கு வந்து, அகிமெலக்கிடம் தான் ஒரு திருப்பயணம் மேற்கொண்டிருப்பதாகவும், தனக்கு உணவும், கோலியத்தின் வாளும் தரும்படியும் வேண்டினார் (1 சாமு 21:1-9). இஃது, ஏதோமைச் சார்ந்த தோயேகு என்பவனால் சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, சவுல் அகிமெலக்கையும் அவருடன் இருந்தவர்களையும் கொலை செய்யும்படி கட்டளை இட்டான். சவுலின் ஊழியர்கள் இக்கட்டளைக்குப் பணிய மறுத்தபோது, தோயேகு அவர்களைக் கொன்று, நகரம் முழுவதையும் வாளுக்கு இரையாக்கினான். அகிமெலக்கின் அபியாத்தார் என்னும் மகன் மட்டும் தப்பித்துத் தாவீதிடம் ஓடிவிட்டார் (27:9-23).

நோபு பென்யமின் கோத்திரத்தாரின் நகரங்களில் ஒன்று. இஃது அனத்தோத்துக்கும் எருசலேமுக்கும் இடையில் எருசலேமை நோக்கி அமைந்திருந்தது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின், மக்கள் இங்குக் குடியேறினர் (நெகே 11:31-32). அசீரியர்கள் விரைந்து வருவது பற்றிக் கூறும்போது இவ்விடம் குறிப்பிடப்படுகிறது (எசா 10:32). எருசலேமின் அருகில் உள்ள நகரம் என்றும், எருசலேமிலிருந்து பார்த்தாலே தெரியும் என்றும் சுட்டுகின்றன (2 சாமு 21:18 தொ; எசா 10:32).

ஆய்வாளர் சிலர் நோபுக்குப் பதிலாகக் கோபு என்ற பெயரைக் பயன்படுத்துகின்றனர் (2 சாமு 21:16). வேறு சிலர், இந்த இடம் இருந்ததாக ஒலிவமலையில் உள்ள எத்-தோர் என்னுமிடத்தையும், எருசலேமுக்கு வடகிழக்கில் 2 கி.மீ. தொலைவிலுள்ள ஸ்கோப்பு மலையை அல்லது அதன் சரிவுகளையும் சுட்டிக்காட்டுவர்.

நோப்பாகு (NOPHAH - வெடிப்பு)

இஃது எமோரியர்களின் அரசனைக் சீகோன் சூறையாடியதைப் பற்றி எழுதப்பட்ட கதைகளில் குறிப்பிடப்படும் தீபோனுக்கு வடக்கிலுள்ள மோவாபியர்களின் நகரங்களில் ஒன்று (எண் 21:30). வாசகம் ஐயத்திற்குரியது.

நோய், பிணி (DISEASE)

சாதாரண உடல் சார்ந்த அல்லது உளவியல் சார்ந்த செயற்பாடுகள் சேதப்படுதல், அல்லது ஊறுபடுதல். இது நோய்தொற்றுதல், உடல்நிலை சமன்கெடுதல் அல்லது உடல்நிலை மோசமாகுதலோடு தொடர்புடையது.

எபிரேயர், இறைவெறுப்பின் எடுத்துக்காட்டாகவோ, தீய செயல்களுக்குத் தண்டனையாகவோ, நோய்கள் இறைவனால் அனுப்பப்படுவதாகக் கருதினர் (யாத் 4:11; எண் 25:18; உப 32:29; யோவா 9:2). பாரசீக, கிரேக்க பாதிப்பின் விளைவாக, நோய்களின் காரணமாக, சாத்தானும் (யோபு 2) பேய்ச்சக்திகளும் (மாற் 9:17.25; 1 யோவா 3:8), மனித தீயவிருப்பமும் (யோபு 5:2) காட்டப்பட்டன. உடலின் முக்கிய பாகங்கள், உணர்ச்சி மற்றும் உடல் சார்ந்த செயற்பாடுகளைக் கொண்டிருப்பதாக எபிரேயர்கள் கருதினர். இவ்வாறு இதயம் அறிவுக்கும் சித்தத்திற்கும் இருப்பிடமாகக் கருதப்பட்டது (1 நாள் 29:18; எசே 19:31); சிறுநீர்ப்பை உணர்ச்சிகளுக்கும் ஆசைகளுக்கும் உரிய இடமாகும் (எரே 12:2); குடல், இரக்கத்தின் இடமாகும் (கொலோ 3:2). இக்கருத்துக்கள் உணர்ச்சி நிலைகளுக்கும், உடல் சார்ந்த நோய்களுக்குமிடையேயுள்ள தொடர்பு பற்றிய முழு நல நோக்கில் புரிந்து கொள்ளுதலுக்கு இட்டுச்சென்றது. மேலும், சுகாதாரத்தின் முக்கியம் பற்றிய அடிப்படைக் கருத்தும், நோயைத்தடுக்கும்

சாதனமாக உடல் சார்ந்த ஓய்வு பற்றிய கருத்தும் பழைய ஏற்பாட்டுச் சட்டத்தின் பின்னணியாக உள்ளன (ஆதி 2:3; லேவி 11:15;18-20).

புதிய ஏற்பாட்டில் நோயை இறைத்தண்டனையின் அடையாளமாக இயேசு கருதியதற்கு எக்குறிப்புமில்லை. மாறாக, வாழ்வு பற்றிய இறையமைப்பை மீண்டும் அமைப்பதில் குணமாக்குதலை இன்னுமோர் சாதனமாக இயேசு தனது பணியில் கருதினார். நோய் இந்த இறை ஒழுங்கமைவுக்கு மாறாக உள்ளது (காண்க. லூக் 4:18).

மொழியின் சொற்பொருள் சார்ந்த இடர்ப்பாட்டாலும், துல்லியமான விவரிப்புகள் இன்மையாலும், பழை ஏற்பாட்டில் விவரிக்கப்படும் நோய்களை மிகவும் பொதுவாகத்தான் அடையாளம் கூற முடியும். இயேசு எதிர்கொண்ட நோய்களில் குருட்டுத்தன்மை, வாதநோய், தொழுநோய், மனம் கலங்கிய நிலைகள் போன்ற நோய்கள் அடங்கும். குறிப்பிட்ட வியாதிகள் பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழ்க் காண்க.

நோய்நிலையும், குணப்படுதலும் (SICKNESS AND HEALING)

I. நோய் நிலையும் அத்துடன் தொடர்ந்து வரும் துன்பமும், எக்காலத்து மனிதர்களுக்கும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளன. அவர்கள் வாழும் உலகம், மற்றும் அவர்கள் கட்டுப்படுத்தும் சக்திகள் ஆகியவைபற்றி அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கேற்ப இந்தப் பிரச்சனைக்கு அவர்கள் பதில் அமைந்திருக்கும். பழங்கால மேற்காசியா தீய ஆவிகளால் ஏவப்பட்ட தண்டனையாக அல்லது வழிபாட்டுச் சடங்கில் தவறுகளால் கோபம் அடைந்த கடவுள்களால் அனுப்பப்பட்டதாக நோய் நிலையை மக்கள் கருதினர். குணப்பட, தீய ஆவிகள் நீக்க பேயோட்டுதலைச் செய்தனர். மன்றாட்டுக்களாலும் பலிகளாலும் கடவுள்களின் மன்னிப்பை வேண்டினர். இவ்விருவகை வாய்பாடுகளையும் பாபிலோனிய ஏடுகள் கொண்டுள்ளன. அதேபோல் மருத்துவமும் குருக்களுக்கே உரிய அலுவலாகும். அது மாய வித்தையை நெருங்கியதொன்றாக விளங்கியது. மருத்துவம் ஒரு சுதந்தரமான வளர்ச்சியுடைய அறிவியலாக உருவெடுக்க கிரேக்கர்களின் செயலறிவால் தெரிந்துகொள்ளும் போக்கு வளர்ச்சிக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. இத்தகைய சூழ்நிலையிலிருந்து வேறுபட்டு விவிலிய வெளிப்பாடு இப்பிரச்சனையின் அறிவியல் கூறைப் புறக்கணிக்கிறது. அது, மீட்புத் திட்டத்தில் நோய்நிலை மற்றும் குணப்படுத்தல் பற்றிய சமயப்பொருள் பற்றி மட்டுமே கருத்தைச் செலுத்துகிறது. நோய்நிலையில் மனிதன் மேல் சாவின் ஆற்றல் ஏற்கெனவே தெளிவாக இருப்பதால் (காண்க. 1 கொ 11:28-32), இந்தக் கருத்து மேலும் உண்மையாகிறது. ஆகவே, அஃது இதைப்போன்ற பொருளையே கொண்டிருக்க வேண்டும்.

II. பழைய ஏற்பாடு:

1. நோய்நிலை: அ) நலமாய் இருப்பது உயிர்நிலையான சக்தியை நிறைவாகக் கொண்டிருப்பதாகும். நோய்நிலை பலவீனமான, வலுக்குறைந்த நிலையாகக் கருதப்பட்டது (சங் 38:10). இந்தச் செயலறிவால் வரும் சான்றைத் தவிர மருத்துவக் குறிப்புகள் தோராயமானவையே. அவை ஒருவர் கண்ணுக்குப்படுவதைப் பற்றி மட்டும் கூறுகின்றன. இவை தோல்நோய்கள், காயங்கள், முறிவுகள், காய்ச்சல், நடுக்கம், போன்றவையாகும் (சங் 6:32;38;39; 88:102). நோய்களைப் பாகுபடுத்தி வேறுபடுத்துவது தெளிவில்லாமல் இருக்கிறது. சான்று: தொழுநோய், காயங்கள், வீழ்தல் (2 சாமு 4:4), முதுமை போன்ற தெளிவாகக் காணக் கூடியவற்றைத் தவிர, நோய்களின் இயற்கைக் காரணங்களில் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை. திருவுரையாளர் முதுமையின் தளர்ச்சியைச் சோர்வூட்டும் நகைச்சுவையுடன் விவரிக்கிறார் (திருவுரை 12:1-6; காண்க. 27:1; 1 அர 1:1-4; இதற்கு மாறாக உப 34:7). உண்மையில்

சமயப்பற்றுடையவருக்கு நோய் பற்றிய கருத்து முழுவதும் வேறுபட்டதாகும். நோயுற்ற மனிதனுக்கு நோயின் பொருள் என்ன?

ஆ) யாவும் இறைவனால் செயலாற்றப்படுகின்றன என்று நம்பும் உலகில் நோய் நிலையும் இறைவனின் செயலே. மனிதனைத் தாக்கும் இறைவனின் தண்டனையாக நோய் நிலையைக் கருதாதிருப்பது முடியாததாகும் (யாத் 4:6; யோபு 16:12 தொ; 19:21; சங் 39:11தொ). மனிதனுக்கு மேலானவரான இறைவனைச் சார்ந்திருப்பதும், அவர் தலையிடுவதும் புரிந்து கொள்ளக்கூடியவையே. இவ்வாறு அழிக்கும் தூதர் (2 சாமு 24:15 தொ; 2 அர 19:35; காண்க. யாத் 12:23), உருவம் அளிக்கப்பட்ட கொள்ளை நோய்கள் (சங் 21:5 தொ) அல்லது சாத்தான் (யோபு 2:7) போன்றவர்களை அவர் அனுப்பலாம். நாடு கடத்தப்பட்ட பிற்கால யூதத்துவத்தில் பேய்கள், தீய ஆவிகளின் செயல்களில் அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது. நாம் வாழும் உலகின் மேல் இவை கொண்டிருக்கும் ஆதிக்கம் பற்றிய கண நேரத் தோற்றத்தை நோய்நிலை நமக்கு அளிக்கிறது. இறைவன் தனிமுதல் தலைவரானால், உலகில் இந்தப்பேய் ஆதிக்கம், தீமையின் பிரசன்னம் இருப்பது ஏன்?

இ) தன்னியலார்ந்த இயக்கத்தால் மனிதனின் சமய உள்ளுணர்வு நோய் நிலைக்கும் பாவத்திற்குமிடையே உறவை நிறுவியது. இந்த உறவை விவிலிய வெளிப்பாடு மறுக்கவில்லை; இந்த உறவை எந்த நிபந்தனைகளோடு புரிந்து கொள்ள வேண்டும் என்பதை மட்டும் தெளிவாக்குகிறது. இறைவன் மனிதன் மகிழ்ச்சியாக இருக்கவே படைத்தார் (காண்க. ஆதி 2). மற்ற மனிதத் தீமைகளைப்போல் நோய்நிலையும் இந்த அடிப்படை நோக்கத்திற்கு மாறானதாகும். பாவத்தின் விளைவாகவே நோய்நிலை உலகில் புகுந்தது (ஆதி 3:16-19). இது பாவமிக்க உலகிற்கு எதிரான இறைவனின் சினத்தின் அடையாளங்களில் ஒன்றாகும் (காண்க. யாத் 9:1-12). உடன்படிக்கைக் கோட்பாட்டுத்திட்டம் குறிப்பாக இந்தப் பொருளைக் கொண்டுள்ளது. பிரமாணிக்க மற்ற மக்களைத் தாக்கும் முக்கிய சாபங்களில் இதுவும் ஒன்றாகும் (உப 28:21 தொ. 27 தொ. 35). ஆகவே நோய் பற்றிய அனுபவம் பாவம் பற்றிய மனித விழிப்புணர்வைக் கூர்மைப்படுத்த வேண்டும். மன்றாட்டுச் சங்கீதங்கள் இவ்வாறுதான் அமைந்துள்ளன. குணப்படுத்தப்பட வேண்டும் மன்றாட்டு பாவங்களின் அறிக்கையோடு எப்போதும் இணைக்கப்பட்டுள்ளது (சங் 38:2-6; 39:9-12; 107:17). நோயுற்றவரின் சொந்தப் பாவங்கள்தான் அவரது நோய்க்குக் காரணம் என்று எவ்வாறு அறிவது என்ற பிரச்சனை எழலாம். இது பற்றிய போதகம் அவ்வளவு துல்லியமாக இல்லை. குழுக்குற்றக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுவது நிறைவான பதிலைக் கொடுக்கவில்லை (யோவா 9:2). இரு பதில்களை மட்டும் தெளிவில்லாமல் பழைய ஏற்பாடு சுட்டுகிறது. யோபு அல்லது தோபி போன்ற நீதிமான்களை நோய் தாக்கும்போது, அஃது அவர்களின் பற்றுறுதியை எடுத்துக் காட்டும் தெய்வச் செயலான சோதனையாக இருக்கலாம் (தோபி 12:13). யாவேயின் ஊழியனாகிய நீதிமானின் துன்பம் என்ற சிறப்பான எடுத்துக்காட்டில், நோய்பாவிகளின் குற்றங்களுக்குப் பரிகாரமாக அமையலாம் (எசா 53:4தொ).

2. குணப்படுதல்:

அ) பழைய ஏற்பாடு மருத்துவத்தைப் பயன்படுத்துவதை ஒருபோதும் தடை செய்வதில்லை. எசேக்கியாவைக் குணப்படுத்த எசாயா மருந்தைப் பயன்படுத்தினார் (2 அர 20:7). இரப்பாயேல் தோபியைக் குணப்படுத்த அதைப்பயன் படுத்தினார் (தோபி 11:8.11 தொ). எளிய மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவது வழக்கில் இருந்தது (காண்க. எசா 1:6; எரே 8:22; ஞானம் 7:220). சீராக்கு மருத்துவத் துறையைப் பெரிதும் புகழ்கின்றார் (சீரா 38:1-8.12 தொ). சிலை

வழிபாட்டுடன் தொடர்புடைய மாயவித்தைப் பழக்கங்கள் தான் (2 அர 1:1-4) தடை செய்யப்பட்டிருந்தன. இவை மருத்துவத்தையே பாழ்படுத்தின (காண்க. 2 நாள் 16:12).

ஆ) ஆனால், குணம்பெற இறைவனை மட்டுமே நாடவேண்டும். ஏனெனில், அவர் மட்டுமே வாழ்வின் தனிமுதல் தலைவர் ஆவார் (சீரா 38:9தொ. 14). காயப்படுத்துபவரும் அவரே; குணமாக்குபவரும் அவரே (உப 32:29; காண்க. ஒசே 6:1). அவரே மனிதருக்கு ஒரே மருத்துவர் (யாத் 15:26). அதனால்தான் சாராவைக் குணப்படுத்த அனுப்பப்பட்ட வானதூதர் இறைவன் குணமாக்குகிறார் எனும் பொருள்படும் இரப்பாயேல் என்ற பெயரால் அழைக்கப்படுகிறார் (தோபி 3:17). இவ்வாறு, நோயுற்றோர் ஆண்டவருடைய பிரதிநிதிகளான குருக்களிடமும் (லேவி 13:49 தொ; 14:2தொ; காண்க. மத் 8:4), இறைவாக்கினர்களிடமும் (1 அர 14:1-13; 2 அர 4:21; 8:7 தொ) மன்றாடினர். தாழ்ச்சி மிக்க அறிக்கையோடு, குணமாகுதலை ஓர் அருளாக வேண்டுகின்றனர். சங்கீதங்கள் அவர்கள் தங்கள் துன்பநிலையை வெளிப்படுத்துவதையும், இறைவனுடைய உதவியை வேண்டி மன்றாடுவதையும், அவரது எல்லாம் வல்ல தன்மையையும் இரக்கத்தையும் கெஞ்சுவதையும் படம் பிடித்துக் காட்டுகின்றன (சங் 6:38; 41; 88; 102;...). அவர்பால் கொண்டிருக்கும் நம்பிக்கையினால், அவரிடம் வேண்டும் தயவைப்பெறத் தயாராக இருக்கின்றனர். இஃது சில சமயங்களில் அருஞ்செயலாக நிகழலாம் (1 அர 17:17-24; 2 அர 4:18-23). எவ்வாறெனினும், இஃது அடையாளப் பொருளுடையது; துன்புறும் மனித இயல்பை அதன் வேதனையினின்று விடுவிக்க இறைவன் இறங்கி வந்துள்ளார்.

இ) ஆயினும், நோய்நிலை ஒரு பொருளைக் கொண்டிருந்தாலும், அது தீமையே ஆகும். அதனால்தான் இறைவாக்கினர்களின் இறுதிக்காலம் பற்றிய வாக்குறுதிகள், காலமுடிவில் இறைவன் தம் மக்களைக் குடிவைக்கும் புதிய உலகில், இந்நோய்கள் அழிக்கப்படுவதை முன்னோக்குகின்றன. அங்கே நோயுற்றோர் இருக்கமாட்டார்கள் (எசா 35:5தொ); துன்பமோ கண்ணீரோ இராது (25:8; 65:19). பாவத்திலிருந்து விடுபட்ட உலகில், நமது இனத்தைப் பெரும் சுமையாக அழுத்தும் பாவத்தின் விளைவுகள் மறைந்து போக வேண்டும்; இல்லாமல் போக வேண்டும். துன்புறும் நீதிமான் நமது தீமைகளைத் தன் மேலே சுமந்து கொள்ளும்போது, அவருடைய காயங்களால் நாம் குணம் பெறுவோம் (எசா 53:4தொ).

III. புதிய ஏற்பாடு:

1. நோய் நிலையை இயேசு எதிர்கொள்கிறார்:

அ) இயேசு தனது பணிக்காலம் முழுவதும் எங்கு சென்றாலும் நோயாளிகளைக் கண்டார். வினைப்பயன் நோக்கில் குறுகிய விதத்தில் நோய் நிலையை விளக்காமல் (காண்க. 9:2தொ) நோயிலே, அவர் மனிதர் அனுபவிக்கும் தீமையையும், பாவத்தின் விளைவையும், மனிதர்மேல் சாத்தான் கொண்டிருக்கும் ஆதிக்கத்தின் அடையாளத்தையும் (லூக் 13:6) கண்டார். அதனால் அவர்கள்மேல் இரக்கம் கொண்டார் (மத் 20:34). இந்த இரக்கம் அவரைச் செயலாற்றத் தூண்டியது. பேய் பிடித்தலிலிருந்து இயற்கையான நோய் நிலையை வேறுபடுத்தாமல், "அவர் அசுத்த ஆவிகளை விரட்டினார்; எல்லா நோயாளர்களையும் குணமாக்கினார்" (8:16). இரண்டும் சேர்ந்தே நிகழ்கின்றன. இரண்டும் சமமாக அவரது ஆற்றலை வெளிப்படுத்துகின்றன (லூக் 6:19). இறுதியில் இரண்டும் ஒரே பொருளைக் கொண்டுள்ளன. சாத்தான்மேல் இயேசு கொள்ளும் வெற்றியையும் மறைநூலுக்கேற்ப, இறையரசு இவ்வுலகில் நிறுவப்படுவதையும் (மத் 11:5 இணை) உணர்த்துகின்றன. இனிமேல் நோய்நிலை உலகிலிருந்து மறைந்துபோகும் என்பதையன்று. அதை இறுதியில்

வெற்றிகொள்ளும் இறையாற்றல் இப்போதிலிருந்தே உலகில் செயல்படுகிறது என்பதை உணர்த்துகின்றன. அதனால்தான் அவரில் நம்பிக்கையை எடுத்துக்கூறும் எல்லா நோயாளிகளிடமிருந்தும் (மாற் 1:40; மத் 8:2-6 இணை) அவர்கள் விசுவசிக்க வேண்டும் என்ற தெளிவான ஒரே கோரிக்கையை இயேசு விடுக்கிறார். ஏனெனில் விசுவாசத்திற்கு எல்லாம் செய்ய முடியும் (மத் 9:28; மாற் 5:36 இணை; 9:23). அவரில் கொள்ளும் விசுவாசம் இறையரசில் கொள்ளும் விசுவாசமாகும். இந்த விசுவாசம்தான் மீட்கிறது (மத் 9:22 இணை; மாற் 10:52 இணை).

ஆ) குணமளிக்கும் அருஞ்செயல்கள், இறைவாக்குகளின்படி இறையரசில் மனித இயல்பு இறுதியாகத் திரும்பவும் அடையும் நிறைநிலையை ஓரளவு முன்கூட்டியே எதிர் நோக்குகின்றன. ஆனால், அவை இக்காலத்தைச் சேர்ந்த அடையாளப் பொருளையும் கொண்டுள்ளன. பாவமனிதன் தானே காணும் நிலையில் நோய்நிலை அடையாளமாகும். ஆன்மீக முறையில் அவன் குருடன், செவிடன், வாத நோயுடையவன். ஆகவே, நோயாளியைக் குணமாக்குவதும் ஓர் அடையாளமாகும். மனிதரில் இயேசு ஆற்ற வந்த ஆன்மீகக் குணமளித்தலை அஃது உணர்த்துகிறது. இயேசு வாத நோயுடையவனின் பாவங்களை மன்னித்தார். தனக்கு அந்த ஆற்றல் உண்டு என்று மெய்ப்பிக்க, அவனைக் குணப்படுத்தினார் (மாற் 2:1-12 இணை). அருஞ்செயல்களின் இந்தக்கூறு நான்காம் நற்செய்தியில் சிறப்பான முறையில் வெளிப்படுகிறது. பெத்சதாவின் வாதநோயாளியைக் குணமாக்கியது இயேசுவை உலகின் ஒளியாகக் காட்டுகிறது (யோவா 9). ஆகவே, நோயாளிகளுக்கு இயேசு செய்தவை கிறிஸ்தவ அருட் சாதனங்களுக்குப் பீடிகையாக அமைகிறது. பாவிகளுக்கு மருத்துவராக இயேசு உலகிற்கு வந்துள்ளார் (மாற் 2:17 இணை). இந்த மருத்துவர் பிணிகளையும், துன்பங்களையும் போக்க அவற்றைத் தன்மேலேயே சுமந்து கொண்டார் (மத் 8:7 = எசா 53:4). இதுவே அவரது பாடுகளின் பொருள். மனுகுலத்தின் தீமைகளின் மேல் இறுதியாக வெற்றிகொள்ள, துன்புறும் மனுகுலத்தின் நிலையை இயேசு ஏற்றுக் கொள்வார்.

2. அப்போஸ்தலர்களும், திருச்சபையும் நோய் நிலையை எதிர்கொள்கின்றனர்:

அ) இறையரசின் அடையாளமாகச் செய்யப்பட்ட அருஞ்செயல் குணமளிப்புகள் இயேசுவின் இவ்வுலக வாழ்க்கையோடு நின்றுவிடவில்லை. அப்போஸ்தலர்களின் முதல் தூதிலிருந்து, நோயாளிகளைக் குணமாக்கும் அவரது ஆற்றலில் அவர்களையும் கூட்டாளியாக்கினார் (மத் 10:1தொ). இறுதியாக அவர்களைத் தூதுரைக்க அனுப்பியபோது அவர்களின் நற்செய்திப் போதகத்திற்குச் சான்று பகர இந்த அடையாளங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று உறுதி அளித்தார் (மாற் 16:17தொ). அப்போஸ்தலர் பணிநூல் குணமளிக்கும் அருஞ்செயல்களைக் கூறுகின்றன (அ.ப.3:1தொ; 8:7; 9:32 தொ; 14:8 தொ; 28:8 தொ). இவை இயேசுவினுடைய பெயரின் வல்லமையையும் அவரது உயிர்ப்பின் உண்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. பவுலும், அருங்கொடைகளில் குணமளித்தலையும் குறிப்பிடுகிறார் (1 கொரி 12:9.28.30). இந்த நிலையான அடையாளம், தூய ஆவி செயலாற்றுகிறார் என்று காட்டி இயேசுவின் திருச்சபைக்குத் தொடர்ந்து சாட்சி அளிக்கிறது. ஆயினும் இறையருள், சாதாரணமாக, பகட்டு அதிகமில்லா முறையில் நோயாளிகளுக்குக் கிடைக்கிறது. அப்போஸ்தலர்களின் செயலைப் பின்பற்றி (மாற் 6:13), "திருச்சபையின் மூப்பர்கள்" ஆண்டவர் பெயரால் நோயாளியின் மீது எண்ணெய் பூசி அவனுக்காகச் செபித்தனர். விசுவாசமுள்ள செபம் நோயாளியைக் குணமாக்கிற்று. அவன் பாவம் செய்தவனாயிருந்தால் மன்னிப்புபெறுவான்.

ஒருவர்க்கொருவர் பாவ அறிக்கை செய்துகொண்டு, விசுவாசத்தோடு செபித்தனர். அந்தச் செபம் அவர்களை மீட்டது. ஏனெனில், அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன; இறைவன் விரும்பினால் அவர்கள் குணமாக்கப் பெறுவர் என்று நம்பலாம் (யாக் 5:14தொ).

ஆ) ஒரு சடங்கு செபத்தால் மந்திர விளைவுபோல் இந்தக் குணமாகுதல் எப்போதும் தவறாது நிகழ்வதில்லை. இவ்வுலகம் இருக்கும்வரை மனுகுலம் பாவத்தின் விளைவைத் தொடர்ந்து சுமக்க வேண்டும். ஆனால், பாடுகளின்போது "நமது துன்பங்களைத் தம்மேல் சுமந்து கொண்டதால்", இயேசு அவற்றிற்கு ஒரு புதிய பொருளைக் கொடுத்துள்ளார். மற்ற எல்லாத் துன்பங்களைப்போல், இனி அவை மீட்பு மதிப்பீடு கொண்டுள்ளன. பவுல் பல தடவை இதை அனுபவத்தால் உணர்ந்துள்ளார் (கலா 4:13; 2 கொரி 1:8 தொ; 12:7-10). அவை ஒருவனைக் கிறிஸ்துவின் துன்பங்களோடு ஒன்றிக்கின்றன என்பதை அறிந்திருந்தார். "இயேசுவின் வாழ்வு எங்கள் உடலில் வெளிப்படும்படி, போகுமிடமெல்லாம் இயேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம்" (2 கொரி 4:10). யோபுவால் தன்சோதனையின் பொருளைப் புரிந்து கொள்ள முடியவில்லை; ஆனால், "திருச்சபையாகிய தம் உடலின் பொருட்டு, கிறிஸ்து பட வேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாய் இருப்பதைத் தன் உடலில் நிறைவாக்குவதில்" (கொலோ 1:24) கிறிஸ்தவன் மகிழ்ச்சி கொள்கிறான். வாழ்வின் மரக்கனிகளால் மனிதர்கள் எக்காலத்திற்கும் குணமாக்கப்படும் (திருவெளி 22:2; காண்க. எசே 47:12) இடமாகிய இன்பவனத்திற்குத் திரும்பி வந்து சேர்வதை எதிர்நோக்கியிருக்கும் போது, துன்பம் மற்றும் இறைப்பைப் போன்று, நோய் நிலையே மீட்பு அமைப்பில் ஒன்றிணைக்கப்படுகிறது. அதனை ஏற்று அனுபவிப்பது சுலபமாகிவிட வில்லை. அஃது ஒரு சோதனையாகவே தொடர்ந்து இருக்கும். நோயாளிகளைப் பார்த்து ஆறுதல் கூறுவதின் வழியாக அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளச் செய்யும் உதவி அன்பாகும். "ஒவ்வொருவருடைய துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று அந்தியோக்கிய இஞ்ஞாசியார் அறிவுரை கூறுகிறார். நோயாளிகளுக்குப் பணி செய்வது இயேசுவின் துன்புறும் அங்கத்தினர்களில் இயேசுவுக்கே சேவை செய்வதாகும். "உடல் நலம் குன்றியிருந்தேன். என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்" என்று தீர்ப்பு நாளில் அவர் கூறுவார் (மத் 25:36). கிறிஸ்தவ உலகில் இனி நோயாளி, மக்கள் விலகியோடும் விதத்தில் சபிக்கப்பட்டவன் அல்லன் (சங் 38:12; 41:6-10; 88:9). அவன் கிறிஸ்துவின் உருவமும், அடையாளமும் ஆவான்.

நோவதியா NOADIAH - யாவே தம்மையே வெளிப்படுத்தியுள்ளார்)

1. நோவதியா, பின்னூயன் மகனும், லேவியரும் ஆவார். இவர், எஸ்ரா பாபிலோனிலிருந்து கொண்டு வந்த ஆலயச் செல்வங்களின் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டவர்களுள் ஒருவர் (எஸ் 8:33).

2. நோவதியா, என்னும் இறைவாக்கினி நெகேமியாவை அச்சுறுத்த முயன்றதாகக் குறிப்பிடுகின்றார் (நெகே 6:14).

நோவா (NOAH - ஓய்வு)

1. நோவா, ஆதி 9:20-29-ஐத் தவிர, மற்ற இடங்களில் வெள்ளத்திலிருந்து தப்பியவராகவும் (எசா 54:9; மத் 24:37-38; லூக் 17:26), நீதிமானாகவும் (எசே 14:14; 20, 1 பேதுரு 3:20, 2 பேதுரு 2:5), கடவுள் மேலுள்ள விசுவாசத்தாலும், கீழ்ப்படிதலினாலும் (எபி 11:7) காப்பாற்றப்பட்டவராகவும் குறிப்பிடப்படுகின்றார்.

நோவா, சேத்தின் வழிவந்த, ஆதாமின் ஒன்பதாவது வாரிசான இலாமேக்கு என்பவரின் மகன். ஆதாம் இறந்து 126 ஆண்டுகள் கழித்து நோவா பிறந்தார். "ஆண்டவரின் சாபத்திற்குள்ளான மண்ணில் நமக்கு உண்டான கடினவேலையிலும் உழைப்பிலும் நமக்கு

ஆறுதல் அளிப்பான்" என்று சொல்லி இலாமேக்கு இப்பெயரை அளித்தார் (ஆதி 5:29). இவர் மனுகுலத்தை அழிவினின்று காப்பாற்றியவர் என்று குறிப்பிடப்படுகின்றார். சேம், காம் எப்பேத்து என்பவர் பிறப்பதற்கு முன் இவர் 500 ஆண்டுகள் வாழ்ந்தவர் (ஆதி 5:32). உலகம் கடவுளின்பார்வையில் கெட்டுப்போனபோது (ஆதி 6:11), நோவா மட்டும் "நேர்மையானவராகவும் குற்றமற்றவராகவும்" (ஆதி 6:9; காண்க. 2 பேதுரு 2:5), இருந்தார். கடவுள் உலகிலுள்ள உயிரினங்களை அழிக்க விரும்பிய போது (ஆதி 6:7) நோவா கடவுள் முன் அருள் பெற்றவராக இருந்தார் (6:8). கடவுள்தான் முடிவை நோவாவுக்கு அறிவித்தார் (6:13). எனவே, நோவாவை ஒரு பெட்டகம் செய்து அதன் உட்புறம் கீல் பூசும்படி (6:14) சொன்னார். நோவா கீழ்ப்படிந்தார் (6:22; 7:5). இவ்வாறு அவர் தம் குடும்பத்தாரோடும், விலங்குகளோடும் வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்டார். நோவாவின் 600-ஆவது வயதில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. 601-ஆம் வயதில், முதல் மாதம், முதல் நாள் வெள்ளம் வற்றியது (8:13). நோவா பெட்டகத்தை விட்டு வெளியே வந்தபின் சுத்தமான மிருகங்களையும், பறவைகளையும் கடவுளுக்குப் பலியிட்டார் (8:20). கடவுள் பலியை ஏற்றுக்கொண்டு இனிமேல் உலகை வெள்ளத்தால் அழிப்பதில்லை என்று உறுதி கூறினார் (8:21). பின், நோவா உலகின் இரண்டாவது தந்தையாக பல்கிப் பெருகி உலகை நிரப்புங்கள் (9:1), கொலை செய்யாதீர்கள் என்ற கட்டளைகளைப் பெற்றார் (9:5-6). கடவுள் இந்த உடன்படிக்கையின் அடையாளமாக வானவில்லை ஏற்படுத்தினார்.

நோவா விவசாயியாகவும் குறிப்பிடப்படுகின்றார் (ஆதி 9:20). இப்பகுதி நோவா திராட்சை பயிரிடும் முறையைக் கண்டு பிடித்தது பற்றியும், மதுகுடிப்பதால் உண்டாகும் தீமையைப் பற்றியும்தான் பேசுகிறது. மது அதிகமாகக் குடித்ததால், நோவா தம் கூடாரத்தில் நிர்வாணமாகக்கிடந்தார் (9:21). இதைக்கண்ட காம், மற்றச் சகோதரர்களிடம் கூறினான். சேமும் எப்பேத்தும், ஒரு துணியை எடுத்துக் கொண்டு பின்புறமாக நடந்து வந்து அவர் மேல் போட்டு மூடினர் (ஆதி 9:23). இதை அறிந்த நோவா, காம் ஆகிய கானானைச் சபித்து, சேமையும் எப்பேத்தையும் ஆசீர்வதித்தார் (9:24-27). நோவா வெள்ளத்திற்குப் பிறகு 350 ஆண்டுகள் வாழ்ந்து, தம் 950-ஆம் வயதில் இறந்தார் (9:28-29).

நோவாவை விவசாயியாகக் குறிப்பிடும் இப்பகுதி வேறு ஒரு பாரம்பரியத்திலிருந்து வந்திருக்க வேண்டும். இங்குக் கூறப்படும் பகுதி மேய்ப்புத் தொழிலிலிருந்து விவசாயத்திற்கு மாறியதை ஏற்றுக் கொள்கிறது. நோவாவும், அவருடைய புதல்வர்களாக சேமும், எப்பேத்தும் கூடாரவாசிகளாக இருந்தபோதிலும் நோவா மிகவும் கடினமான திராட்சை பயிரிடும் தொழிலைச் செய்ததாகக் கூறப்படுகிறது. இத்தொழிலின் விளைவு மிகவும் கீழ்த்தரமானதாக மாறக்கூடும் என்பதை நோவா-கானான் கதை எண்பிக்கின்றது. காயினுக்கும், ஆபேலுக்கும் இடையே இருந்த அதே எதிர்ப்பு (ஆதி 4:1-16) மேய்ப்புத்தொழிலுக்கும், விவசாயத்திற்கும் இடையே கூறப்படுகிறது.

2. செலோவுகாதின் ஐந்து புதல்வியர்களுள் ஒருத்தி (எண் 26:33). இவர்கள் தங்களுக்குச் சகோதரர்கள் இல்லை என்பதால், மோசேயிடம் கேட்டுத் தங்கள் தந்தையின் மரபுரிமைச் சொத்தைப் பெற்றுக்கொண்டனர் (27:1-11; காண்க. யோசு 17:3-6). இவர்கள் ஒவ்வொருவரும் காலப்போக்கில் தங்கள் தந்தையின் உறவினர்களை மணந்து கொண்டனர் (எண் 36:10-12). இப்பெயர் மனாசே இனத்தோடு தொடர்புடைய ஓர் இடத்தின் பெயராகவும் கருதப்படுகிறது.

நோவாமோன் (NO-AHAMON)

நோவாமோன் 'நோ' என்னும் எபிரேயப் பெயரின் முழு வடிவமாகும். எகிப்தியச்

சொல்லிலிருந்து வந்த நோ என்னும் எபிரேயச்சொல், தெபேசு என்பதைக் குறிக்கின்றது.

நோவாவின்பேழை (ARK OF NOAH)

இது பெருவெள்ளத்தின்போது, இறைவனின் கட்டளைக்குப் பணிந்து, நோவா தன்னையும் விலங்கினங்களையும் பாதுகாக்கச் செய்த பேழை, படகு அல்லது பெட்டகமாகும். இப்பேழையைக் குறிக்கும் எபிரேயச் சொல் நோவாவின் பேழையையும், குழந்தையான மோசே வைக்கப்பட்ட கோரைப்புல்லால் செய்யப்பட்ட பேழையையும் மட்டும் குறிக்கப் பயன்படுகிறது.

1. **பழைய ஏற்பாடு:** நோவாவின் படகு கோபெர் மரத்தால் (ஆதி 6:14) அல்லது நூக்கு மரத்தால் செய்யப்பட்டதாகும். அதில் பல அறைகளும் பிரிவுகளும் இருந்தன. உள்ளேயும் வெளியேயும் கீல் பூசப்பட்டிருந்தது (6:14). அதன் தோராயமான அளவுகள்: நீளம் 133.5 மீட்டர், அகலம் 22 மீட்டர், உயரம் 13.4 மீட்டர். பேழை மூன்றடுக்குகளையும் கூரையையும் கதவையும் கொண்டிருந்தது.

இஃது எகிப்திய சரக்குப் படகைப்போல் செய்யப்பட்ட செவ்வக மூலைகளையும், பெட்டிபோன்ற அமைப்பையும் கொண்டு, மிகுந்த சரக்குகளை ஏற்றப் போதிய இடத்தைக் கொண்டிருந்தது. பேழையில் ஏற்ற வேண்டிய விலங்குகள் நோவா தன் படகைக் கட்டிய பகுதியில் வாழ்ந்தன என்று ஏற்றுக்கொண்டால், 35 ஆயிரம் தனிப்பட்ட தண்டெலும்பு விலங்குகளே பேழையில் இடம் பெற வேண்டும். மேலும் விலங்குகள் குளிர்காலத்தில் செறிதுயில் கொண்டிருக்கலாம். இவ்வாறு தக்க விலங்குகளில் ஏழு சோடியும், தகாத விலங்குகளில் ஒரு சோடியுமாக எல்லா விலங்குகளும் பேழையில் ஏற்றப்பட்டன என்ற ஆதியாகம விவரிப்பு, முதலில் தோன்றுவது போல் அவ்வளவு நம்பத்தகாதது அன்று.

2. புதிய ஏற்பாடு: நற்செய்திகளில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பெருவெள்ளத்திற்கு ஒப்பிடப்படுகிறது. மனிதர்கள் தங்கள் சுயமைய வாழ்க்கை முறையிலிருந்து மனந்திரும்ப, இறைவன், நோவாவின் காலத்தில் செய்ததுபோல் அனுமதிப்பார் (மத் 24:37-39; லூக் 17:26-27). எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியரின் கருத்துப்படி, விசுவாசத்தினாலே நோவா பேழையை அமைத்தார் (எபி 11:7). இவ்வாறு அவர் உலகைப் பெருவெள்ளத்திற்குத் தீர்ப்பிட்டார். அவர் நீதியுடைமைக்கு வாரிசு ஆனார் (காண். 2 பேதுரு 2:5). பேதுருவுக்குப் பேழை திருமுழுக்கின் அடையாளமாகும் (1 பேதுரு 3:20-21).

நோவாவின் வெளிப்பாடு (NOAH, APOCALYPSE OF)

இஃது ஒரு போலி வாழ்க்கை வரலாற்று நூலாகும். இது யூபிலி நூலில் நோவாவின் நூல் என்று குறிப்பிடப்படுகிறது; யூபிலி நூலின் சில பகுதிகளையும், ஏனோக்கு நூலின் சில பகுதிகளையும் கொண்டுள்ளது. இதன் சில பகுதிகள் சாக்கடல் ஏடுகளில் காணப்படுகின்றன. இது யூபிலி நூலுக்கு முந்தியதாகும். ஆகவே, இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் மத்தியகாலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்நூலின் சில பகுதிகள் வானதூதர்களின் வீழ்ச்சியைப் பற்றிக் கூறும் புராணத்தில் தனிக் கவனம் செலுத்துகின்றது. தெய்வ புதல்வர்கள் மனித புதல்வியரோடு உடலுறவு கொண்டனர் (காண்க. 6:1தொ). இவர்கள்தான் உலகில் தீமையைப் புகுத்தினர். இவர்களுக்குப் பயங்கர தண்டனை காத்திருக்கிறது. மனுகுலத்தில் இவர்களால் ஏற்பட்ட ஒழுக்கக்கேடே பெருவெள்ளத் தண்டனைக்குக் காரணமாயிற்று எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நூல் நோவா பிறந்ததை அழகாக விவரிக்கிறது. அவர் ஒரு சிறப்புமிக்க குழந்தையாக வளர்ந்து பெரியவனாகிப் பின் இறந்ததையும் இந்நூல் குறிக்கிறது. மெசியா அரசின் வருகையும் இதிலே கூறப்பட்டுள்ளது.

தீர ஆராய்ந்தால் இதற்கு வெளிப்பாடு என்ற

தலைப்பு கொடுக்கக் கூடாது. மாறாக, யூபிலி நூல் குறிப்பிடுவதுபோல் "நோவாவின் நூல்" என்ற தலைப்பே பொருத்தமுடையது.

நோன்பு (FASTING)

1. நோன்பு என்பது ஒருநாள் அல்லது பலநாட்களுக்கு, ஒரு மாலையிலிருந்து மறுநாள் மாலைவரை உணவு நீர் இன்றி இருத்தல் ஆகும். உடலுறவைத் தவிர்ப்பது கூட நோன்பு எனக்கருதப் படும்.

மேற்கத்திய நாடுகளில் வாழ்வோர், ஏன் கிறிஸ்தவர்களும்கூட, நோன்பு இருத்தலின் மேன்மையை உணர்ந்து போற்ற முடியவில்லை. குடிப்பதிலும் உண்பதிலும் அளவோடு இருக்கவேண்டும் என்று கருதுவோர், நோன்பு இருப்பது சுகக்கேடு என்றும் கருதுகின்றனர். ஆன்மீக வாழ்வுக்கு இஃது எவ்வளவு உறுதுணை அளிக்கிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை. இந்த மனப்பான்மை எங்கும் எம்மதத்தைச் சார்ந்த மறையோரும் கூறும் உண்மைக்கு மாறானது. நோன்பு தவத்திற்காகவோ, தூய்மைக்காகவோ, மன்றாட்டு வேண்டுதல்களுக்கோ துக்கத்தை முன்னிட்டோ மதச்சடங்குகளில் ஒரு தனி இடம் பெற்றுள்ளது. இஸ்லாமிய சமயத்தில் இறையின் அப்பாற்பட்ட தன்மையை நோன்பின் வழியாக அறியமுடிகிறது என்று கருதப்படுகிறது. திருச்சபையின் கொள்கைகளுக்கு அடிப் படையான வேதாகமம் எல்லா மதங்களோடும் இந்தக் கொள்கையில் ஒத்திருக்கின்றது. ஆனால், நோன்பின் உட்கருத்தையும் அதனைக் கையாளும் முறையையும் திருச்சபை ஒழுங்கு படுத்துகிறது. செபம், நற்செயல்கள், பிச்சையிடு தல், இவைகளோடு மனிதனின் தாழ்ச்சி, நம்பிக்கை, அன்பு என்பவைகளை இறைவனிடம் எடுத்தியம்புகின்ற சிறந்த சாதனமாக உள்ளது நோன்பு.

2. நோன்பின் உட்பொருள்: மனிதன் உடலும் ஆன்மாவும் கொண்டவனானதால் ஆன் மீகத்தைச் சார்ந்ததாக மட்டும் மதம் இருந்துவிட முடியாது. உலகோடும் உடலோடும் ஒன்றி இயங்க, ஆன்மாவிற்கு உடலைச்சார்ந்த நெறிகளும், செயல்களும், மனப்பான்மைகளும் இன்றியமை யாதனவாகும். மன்றாட்டோடு சேர்ந்த நோன்பால் இறைவன் முன் மனிதனின் தாழ்ச்சியை வெளிப்படுத்த இயலுகிறது. நோன்பு (லேவி 16:31) "உள்ளத்தைத் தாழ்த்துவதற்குச்" (16:29) சமம். நோன்பு ஒரு தவநெறி அன்று; உளவியல் சார்ந்த அல்லது மறையைச் சார்ந்த தனித்தன்மை அடைய வேண்டும் என்று அது செய்யப்படுவதில்லை. மதவரலாறுகளில் இத்தகைய கண்ணோட்டத்தோடு நோன்பு எழுதப் பட்டிருக்கின்றது. ஆனால் விவிலியத்தில், ஒருவன் உணவை ஒறுத்து ஒருநாள் முழுவதும் இருக்கும்போது (நீதி 20:23; 2 சாமு 12:16தொ; யோனா 3:7), உணவைக் கடவுளின் கொடையாகக் கருதும்பொழுது (உப 8:3), இஃது ஒரு மதச்சடங்காக மாறுகிறது. ஆனால், அதன் நோக்கை நாம் சரியாக உணரவேண்டும். மண உறவைக் குறித்தும் இது சொல்லப்படலாம் (யோவே 2:16).

இறைவனையே நம்பியுள்ளோம், அவருக்கே நம்மைக் கையளித்துள்ளோம் என்ற நம்பிக்கையோடு அவர்பால் திரும்புகிறோம் (தானி 9:3; எஸ் 8:21). கடினமான செயலைத் தொடங்கு முன்னும் (நீதி 20:26; எஸ்த 4:16), குற்றத்திற்கு மன்னிப்பு கோரும்பொழுதும் (1 அர 21:27), குணமாக்கப்பட வேண்டும்போதும் (2 சாமு 12:16.22), விதவையானபின் துக்கச் சடங்கள் கொண்டாடும் போதும் (யூதி 8:5; லூக் 2:37), நாட்டில் நடந்த பெருங்கேட்டிற்குப் பின்னும் (1 சாமு 7:6; 2 சாமு 1:12; பாரூ 1:5; செக் 8:19) துக்கம் தெரிவிக்கும்பொழுதும், பெரிய இடையூறின் முடிவை எதிர் நோக்கும்போதும் (யோவே 2:12-17; யூதி 4:9-13), இறை ஒளிக்குத் தன் மனதைத் திறப்பதற்கும் (தானி 10:12), கொடுத்த பெரும் பொறுப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான இறையருள் பெறவேண்டியும் (அ.ப. 13:2 தொ), இறைவனைச் சந்திக்க தன்னையே தயாரிக்க வேண்டியும் (யாத் 34:38; தானி 9:3) நோன்பு பயன்படுத்தப் படுகிறது.

நோன்பு செய்யும் நோக்கமும் காலமும் மாறுபடும். ஆனால், தன்னையே விசுவாசத்தோடு தாழ்த்தி இறையருளைப்பெறவும், இறைவனின் முன்னிலையில் இருக்கவும் நோன்பு செய்யப்படுகிறது என்பது மாறுபடாத உண்மை. மோசேயின் நாற்பது நாள் தவம் (யாத் 34:28) மற்றும் எலியாவின் தவமுயற்சிகள் (1 அர 19:8) ஆகியவற்றின் பொருளை இந்த ஆழ்ந்த கருத்து வெளிப்படுத்துகின்றது. கிறிஸ்துவின் நாற்பது நாள் நோன்பு, மோசே, எலியா செய்த தவத்தை ஒத்தது. இறைவனின் ஆவியால் நிறைந்தவராகையால் (லூக் 4:1) இறை ஆவியின் வருகைக்காக, தவம் செய்தார் என்று கூறுவது தவறு. தூய ஆவியால் உந்தப்பட்டு வனாந்தரத்திற்குச் சென்றது, தனது மெசியாப்பணியைத் தந்தையின் சித்தத்திற்குத் தலை தாழ்த்தித் தொடங்குவதற்கே (மத் 4:1-4).

3. **நோன்பு இருத்தலின்** மரபு: யூத வழிபாட்டின்படி பாவநீக்க நாளன்று பெரிய நோன்பு இருப்பது வழக்கம் (காண். அ.ப. 27:9). இறைமக்களாய் இருப்பதற்கு இத்தகைய நோன்பு இருப்பது அவசியமான ஒரு நிபந்தனையாகும். நாட்டுக்கு நிகழ்ந்த துக்க நிகழ்ச்சிகள் ஆண்டு நினைவின் போது பொது நோன்பு இருப்பதும், பக்தியுள்ள யூதர்கள் தங்கள் நோக்கத்திற்கேற்ப நோன்பு இருப்பதும் வழக்கம் (லூக் 2:37). எடுத்துக்காட்டாக பரிசேயர்களும், திருமுழுக்கு யோவானின் சீடர்களும் (மாற் 2:18). அவர்களில் சிலர் வாரம் இருமுறை நோன்பு இருந்தார்கள் (லூக் 18:12). இவ்விதமாக சட்டத்தின் மற்றும் இறைவாக்கினர்களின் விதிகளுக்கேற்ப, தங்களையே ஏற்புடையவர்களாக்கிக் கொண்டனர். கிறிஸ்து இதுபோன்று தனது சீடர்களுக்கு எதுவும் குறிப்பிடவில்லை (மாற் 2:18). எனினும், இத்தகைய ஏற்புடைமையை அவர் குறைவாக எண்ணினார் அல்லது எடுத்தெறிய எண்ணினார் என்று சொல்ல முடியாது. இவைகளை நிறைவேற்றவே வந்தார். அதனால்தான் நோன்பு வெறும் வெளிப்படையான சடங்காக இருப்பதைத் தடுத்துப் பேசினார். தனது சீடர்கள் இத்தகைய நீதியைக் கடந்து வெளிப்படையில் மட்டும் இல்லாதவிதத்தில் மிளிர வேண்டும் என எண்ணினார் (மத் 5:17. 20:6:1). செல்வத்தின்பால் பற்றற்ற தன்மையும் (மத் 19:21), உடல் நாட்டங்களில் ஈடுபடுவதைச் சுயமாக விரும்பித் தவிர்க்க வேண்டும் என்றும் (18:12), சிலுவையின் வழியில் நடக்க தன்னை மறுத்தல் வேண்டும் என்றும் (10:38-39) இயேசு வலியுறுத்துகிறார்.

நோன்பு முயற்சிகளில் சில குறைகளும் இருக்கின்றன. இது வெளிப்படையான ஆசாரச்சடங்காக மாறுகிறது. இதை இறைவாக்கினர் ஏற்கெனவே கண்டித்துள்ளனர் (ஆமோ 5:21; எரே 14:12). அகந்தையோடும், வெளிப்பகட்டிற்கும், 'பிறரால் பார்க்கப்பட வேண்டியும்' (மத் 6:16) செய்யப்படலாம். கடவுளுக்கு ஏற்புடையதாய் இருப்பின் நோன்பு பிறர் அன்போடு ஒன்றினைத்ததாயும், உண்மையான நீதியைத் தேடும் கருத்துடையதாகவும் (எசா 58.2-11) இருக்க வேண்டும். செபத்தைப் போன்று, நோன்பையும் ஏழைக்கு உதவும் மனப்பான்மையி லிருந்து பிரித்து வைக்க முடியாது. இறுதியாகக் கடவுள் (செக் 7:5). உண்மையான விவேகத்தோடு நோன்பு செய்யப்பட வேண்டும் என்று இயேசு தன்னைப் பின் பற்றுவோரைக் கோருகிறார். கடவுளுக்கு மட்டும் தெரிந்த இஃது, அவர் மேல் கொண்ட நம்பிக்கையின் தூய அடையாளமாக இருக்கும். தாழ்ச்சியோடு கலந்த நோன்பு உள்ளார்ந்த நீதிக்கு இதயத்தைத் திறக்கிறது. இது, மறைவாயிருந்து கண்டு, செயலாற்றும் தந்தையின் செயலாகும் (மத் 6:17 தொ).

அப்போஸ்தலரின் திருச்சபை நோன்பு பற்றிய செயலில், யூத மறைஒழுங்குகளைக் கடைப்பிடித்தது; ஆனால், கிறிஸ்து வரைந்த உட்பொருளின்படி மாற்றி அமைத்தது. அப்போஸ்தலர் பணிநூல் நோன்போடும் செபத்தோடும் கலந்த சில மதநிகழ்ச்சிகளைக்

குறிப்பிடுகின்றது (அ.ப. 13:2தொ;14:22). பவுலின் பல பயணங்களில் உணவின்றிக் கழித்த பல சமயங்களைத்தவிர, தானே நோன்பு செய்துள்ளார் (2 கொரி 6:5; 11:27). இப்பாரம்பரியத்தைப் பின்பற்றி இறையருளைப் பெறவும், கடவுளின் வருகைக்காகக் காத்திருக்கவும் நோன்பு முயற்சிகளைக் கையாளவேண்டும் என்று திருச்சபை இறைமக்களுக்கு அறிவுரை கூறுகிறது. கிறிஸ்துவின் முதல் வருகையால் இஸ்ராயேல் செய்த தவமுயற்சிகளுக்கு விளக்கம் கிடைத்தது. எனினும், அவரின் உயிர்ப்புக்குப் பின்னைய நாட்கள் தவமுயற்சிகள் இல்லாத முழு மகிழ்ச்சியின் காலமன்று. பரிசேயர்களுக்கு எதிராக இயேசு நோன்பு செய்யாத தன் சீடர்களுக்காகப் பரிந்துரைத்தார் "மணமகன் தங்களோடு இருக்கு மளவும் மணவிருந்தினர் நோன்பு இருக்க முடியுமா? மணமகன் அவர்களோடு இருக்கும் காலம் எல்லாம் அவர்கள் நோன்பு இருக்க முடியாது. மணமகன் அவர்களைவிட்டுப் பிரிய வேண்டியகாலம் வரும். அப்போது அவர்கள் நோன்பு இருப்பார்கள்" (மாற் 2:19 தொ). உண்மையான நோன்பு விசுவாசத்தின் நோன்பாகும்; அன்பரைக் காணாதிருப்பதும் மணமகனின் வருகைக்காகக் காத்திருப்பதும் இடைவிடாமல் அவரைத் தேடுவதும் ஆகும். மணமகன் மீண்டும் நம்மிடம் வருவதற்காகக் காத்திருக்கும்போது, தவமிக்க நோன்பு திருச்சபையின் வழக்கில் இடம் கொண்டுள்ளது.

ப

பகத் - மோவாபு (PAHATH - MOAB – மோவாபின் ஆளுநன்)

இவர் மோவாபை ஆட்சிசெய்தவர். எபிரேயரான இவரின் பெயர் இவரது வழிவந்த குடும்பத்தை அல்லது இனத்தைக் குறித்தது. இந்த இன மக்கள் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களுள் அடங்குவர் (எஸ் 2:6; 8:4; நெகே 7:11).

மேலும், இவர்களில் பலர் எஸ்ரா காலத்தில் அன்னியப் பெண்களை மணந்திருந்தனர் (எஸ் 10:30). இந்த இனத்தைச் சேர்ந்த அசுபு என்ற ஒருவர் நெகேமியா, எருசலேம் நகரைப் பழுது பார்த்தபொழுது உதவினார் (நெகே 3:11). வேறு சிலர் நெகேமியாவின் தலைமையில் புதிய உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர் (10:14).

பகபக்கர் (BAKBAKKAR – ஆய்வாளர்)

ஆசாபுவின் புதல்வர்களில் ஒருவர். எருசலேமில் வாழ்ந்த ஒரு லேவியர் (1 நாள் 9:15). நெகே 11:16-இல் வரும் பகபுக்கியாவும் இவரும் ஒன்றாக இருக்கலாம்; இதற்கு இணையானபட்டியல் நெகே 11:16-இல் இப்பெயர் காணப்படவில்லை.

பகபுக்கியா (BAKBUKIAH – ஆண்டவரின் புட்டி அல்லது குடம்)

ஒரு பாடகரும் (நெகே 11:17; 12:9), கோவில் கருவூலங்களின் காவலனும் (நெகே 12:25) ஆவார். நெகே 11:17 ஆசாவினுடையவும் எதுத்தூனுடையவும் புதல்வர்களைப்பற்றிக் கூறுவதால், பகபுக்கியா ஏமானின் மகனாக இருக்கலாம். இவ்வாறு புலமை வாய்ந்த மூன்று இசைக் குழுக்களைக் குறிப்பதை நிறைவு செய்கின்றது (காண். 1 நாள் 25:1-5). நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், எருசலேமில் வாழ இவருக்குச் சீட்டு விழுந்தது. இவர் ஆலய வாயில்காப்போனும், ஆலயப்பாடகர் குழு ஒன்றுக்குத் தலைவராகவும் இருந்தார் (நெகே 12:9.25).

பகபூக்கு (BAKBUK – புட்டி)

அடிமைத்தளையிலிருந்து செருபாபேல் தலைமையில் நாடு திரும்பிய பின்பு கோவில் ஊழியர்களில் கீழ்வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத் தலைவர் (எஸ் 2:51; நெகே 7:53).

பகரும், பகருமியர் (BAHARUM, BAHARUMITE – இளைஞர்கள்)

பகூரிமின் மற்றொரு பெயர். காண்க: பகூரிம்

பகியேல் (PAGIEL – இறைவனின் ஊழ் அல்லது நற்பேறு)

ஒக்கிரானுடைய புதல்வனாகிய இவர் ஆசேர் கோத்திரத்தின் தலைவர்களுள் ஒருவர் (எண் 1:13; 2:27; 7:72. 77; 10:26).

பாலைவனத்தில் மோசேக்கு /மக்கள் கணக்கு எடுக்கவும் மற்றக் காரியங்களிலும் உதவி செய்த பன்னிரண்டு கோத்திரத் தலைவர்களுள் இவரும் ஒருவர்.

பகூரிம் (BAHURIM – சமவெளி)

எருசலேமிற்கு அருகில் ஸ்கோபு மலைக்குக் கிழக்கே இன்றைய இராஸ்-தெ-மிம் என்ற இடத்திலிருந்த ஒரு கிராமம். மீக்கால் தாவீதிடம் கொண்டு செல்லப்பட்ட பொழுது இந்த இடத்தில்தான் அவள் பல்தியேலைப் பிரிந்தாள் (2 சாமு 3:16). அப்சலோமிடமிருந்து, தாவீது பயந்து ஓடிக்கொண்டிருந்தபோது இங்குதான் சிமயிதாவீதை வசைமொழிகூறினார் (2 சாமு 16:5; 19:16; அர 2:8). யோனத்தானும் அகிமாசும் தாவீதுக்காக உளவு பார்த்துக் கொண்டிருந்தபொழுது பகூரிமைச் சேர்ந்த ஒரு மனிதனின் வீட்டுக்கிணற்றில் பதுங்கிக் கொண்டார்கள் (2 சாமு 17:18).

2 சாமு 23:31; 1நாள் 11:33- ஆகிய பகுதிகளில் காணப்படும் வேற்றுமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தாவீது மன்னனின் வலிமை

வாய்ந்தவர்களில் ஒருவரான அசமாவேத்து என்பவர் பகூரிமைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

பகைவன், எதிரி (ENEMY)

I. பகைமை நிலை:

1. நிலைபெற்ற தன்மையும் வரையறைகளும்:

விவிலிய மனிதன் எப்போதும் தன் பகைவனோடு மோதிக்கொண்டே (எதிராடிக்கொண்டே) வந்திருக்கிறான்; இது குறித்து எவ்வித ஐயமும் இல்லை. குடும்ப வட்டத்திற்குள்ளேயே, காயீனுக்கும் ஆபேலுக்கும் (ஆதி 4:1-16), சாராவுக்கும் ஆகாருக்கும் (ஆதி 16:1-7), யாக்கோபுவுக்கும் ஏசாவுக்கும் (ஆதி 27:29), யோசேப்புக்கும் அவர் சகோதரர்களுக்கும் (ஆதி 37:4), அன்னாவுக்கும் பெனின்னாவுக்கும் (1 சாமு 1:6தொ) பயங்கரமான பகைமை கிளர்ந்தெழுந்தது. நகரத்திலே, இறைவாக்கினரும் சங்கீதம் பாடிய அடியார்களும் தங்களின் பகைவர்களைப் பற்றி முறையிடுகிறார்கள் (சங் 31; 35; 42:10; எரே 18:18-23). பகைவர்கள் சுற்றத்தினராகவே (மீக் 7:6; எரே 12:6), பழைய நண்பர்களாகவோ (55:13தொ) இருக்கலாம். வாழ்வில் வரும் ஒவ்வொரு தீமைக்குப்பின்னும் ஒரு பகைவன் இருக்கிறான்; சங்கீதங்களில், நோய் வாய்ப்பட்டவனென்று அழைக்கப்படுபவன் பிறரால் துன்புறுத்தப்படுபவனே (சங் 13; 38:1-16) என்னும் எண்ணக் கண்ணோட்டம் விவிலியத்தில் விரவிவருகின்றது. பகைமை பாராட்டுபவன் இஸ்ராயேல் இனத்தைச் சேர்ந்தவனென்றால் அவனையும் குடியுரிமை கொண்டவனாகவே சட்டம் கருதுகிறது (யாத் 23:4; எண் 35:15). இஸ்ராயேல் இனமே பகைமையுடைய இவ்வுலகத்தில் தான் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், பகைமையில் பல நிலைகள் உள்ளன. இரக்கமே இல்லாத மூர்க்கத்தனமான பகைமை கானானியர்களிடமும், அமலேக்கியர்களிடமும் காணப்படுகிறது (யாத் 17:16; 1 சாமு 15); கொடிய சண்டையோடு முடிந்துவிடும் பகைமை மோவாபுக்கும் அம்மோனுக்கும் எதிராக நிகழ்ந்தவற்றில் காணப்படுகிறது (உப 23:4-7). மேலும், உபாகமத்தில் ஏதோமுக்கும் எகிப்துக்கும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்தில் (உப 23:8) உபாகமக் கருத்துப்படி அன்னியன் என்பது பகைவனைக் குறிப்பதில்லை என்பது கவனிக்கத் தருந்தது.

2. தொடக்கம்: திருச்சரிதையிலே இத்தகையதோர் ஒவ்வாத நிலைமை நிலைபெற்று வந்துள்ளதை எவ்வாறு (புரிந்து) ஏற்றுக்கொள்வது? உண்மையில், பாவம் தோன்றி வெறுப்பை விளைத்தபின்னர், பகைமையென்பது வரலாற்றில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகிவிட்டது. இஸ்ராயேலர் தாங்கள் இரக்கமற்ற கொடியதோர் உலகத்தின் நடுவே வாழ்வதைத் தெளிவாக உணர்ந்திருந்தனர். ஆனால், அவர்களை இத்தகைய உலகச் சூழ்நிலை அமைப்பிலிருந்து அப்புறப்படுத்தித் தனித்துப் பார்க்க விரும்புவதென்பது, அவர்களின் உண்மையான வரலாற்றுத் தொடர்புகளிலிருந்து அவர்களை விலக்கி, அவர்களுக்குள்ள உண்மை உருவத்தையே மாற்றிவிடுவதாக ஆகிவிடும். கடவுள், மனிதனை அவன் இருக்கும் இடத்திலேயே, சூழ்நிலையிலேயே வந்து சந்திக்கிறார். கானானியர்கள் சிலையை வழிபடுவதாலும் (ஆதி 15:16; உப 20:16 தொ). வாக்களிக்கப்பட்ட நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்ததாலும் (உப 2:12) தாக்கப்படுகிறார்கள். இவ்வித நிகழ்ச்சிகள், 'இஸ்ராயேலரின் எதிரிகள் இறைவனுக்கும் எதிரிகள்' என்னும் உண்மையை விளக்குகின்றன. "உங்கள் பகைவர்களுக்கு நான் பகைவனாக இருப்பேன்" (யாத் 23:22) என்னும் கூற்றைக் காண்க.

II. பகைமை சூழ்ந்த உகைத்தில் ஒளி:

1. தெள்ளிய ஓர் எடுத்துக்காட்டு: தாவீதினிடத்துச் சவுலுக்கிருந்த போராட்டம் பற்றிய வரலாறு தனிமனிதருக்கிடையே இருந்து வந்த பகைமையை விளக்கும் விரிவான பகுதியாகும்.

சவுல் மட்டுமே பகைமை பூண்டிருந்தார்; தாவீதின் உயிரைப் பறிக்கத் துடித்தார் (1 சாமு 18:10 தொ; 19:9-17). அத்தகு புன்மைநெறியால் இறைவன் மனித இனத்திற்காகக் கொண்டிருந்த புனித திட்டத்தை எதிர்த்தார். இப்பகைமையின் உட்கிடக்கையாக அமைந்தது பொறாமையே என்பதை விவிலியம் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் சவுலின் வெறுப்புணர்வால் தானும் கறை பட்டுவிடாதபடி தாவீது பார்த்துக் கொள்கிறார். அவருடைய மனப்பாங்கின் மாண்பும் பெருந்தன்மையும் எத்தகையதென்றால், அத்தகைய நிலையை எட்டிப்பிடிப்பதற்கு இன்றைய கிறிஸ்தவன் எவ்வளவோ அரும்பாடுபட வேண்டியிருக்கும். உண்மையிலேயே, கடவுளின் நண்பர் பலர், தாவீதைப்போல அத்தகையதோர் உயர்ந்த தியாக வாழ்வு வாழ வேண்டியிருந்தது. கடவுளின் அழைப்பு, அவர்களை உண்மை வாழ்விலே ஊன்றி நிற்கச்செய்யும் பொருட்டு, அவர்கள் தங்களின் தன்னலத்தை உதறித்தள்ளுவதற்குத் துணை நின்றது.

2. **தோல்வி அனுபவம்:** இஸ்ராயேல் மக்கள் ஓர் இனமாகவே இத்தகைய தோல்வியனுபவங்களை அடைந்திருக்கிறார்கள். வெற்றி வேட்கையால் பிறர் மேல் தொடுத்த ஒரு போருக்காக அவ்வினம் எத்தனையோ போர்களால் தாக்கப்பட்டது. காலம் செல்லச் செல்ல, பகைவன் என்னும் சொல் கொடுங்கோலன் என்னும் பொருளில் கலந்து கையாளப்பட்டது. அத்தகைய நிலையில் தங்களின் அதிகாரத்தைப்பற்றிய கனவெதுவும் அவர்கள் காணவில்லை. மாறாக, கடவுள் நீதிமானுக்கு அதிகச் சக்தி தருவதற்குப் பதில் தாமே அவனை விடுவிக்கிறார் என்னும் உண்மையை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள் (யாத் 14:13தொ. 30). தன்னால் கொடுமைப்படுத்தப்பட்ட நீதிமானின் சக்தியால் கொடுங்கோலன் அழிவதில்லை; ஆனால் தானே தனக்கு எதிரியாகி அழிவுறுகிறான் (சங் 7:13-17; காண். சவுல், ஆமான்....). தான் இறுதியில் அழிவையே தேடிக்கொண்டாலும் அவனது வெற்றியில் ஒரு காரணம் இல்லாமலில்லை. அதாவது, அவன் வாயிலாகக் கடவுள் தம் மக்களைத் தண்டித்துத் திருத்துகிறார். அக்கொடுங்கோலனின் முடிவு கடவுள் தம் இனத்திற்குத் தரும் ஆசியின் முழுமையாகத் திகழ்கிறது (ஆதி 22:17; 49:8; உப 28:7). வரலாற்றுப்போக்கில் அன்றளவில் அவன் சக்தி வாய்ந்தவனாக வளரும்படி கடவுள் விட்டு விடுகிறார் (நீதி 2:3; 2:20-23; உப 7:22). அவன் அந்நிலையில் தொடர்ந்து செல்வது, ஒன்று கடவுள் தம் மக்களுக்குக் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார் என்பதற்கு அறிகுறி; மற்றது, மக்கள் இறைவனிடத்து முழு நம்பிக்கையும் பற்றும் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு அறிகுறி. இவ்விரு நிலைகளுக்கும் காலத்தின் நிறைவு இன்னும் வரவில்லை.

3. **காலத்தின் செயலாக்கம்:** சங்கீதத்தில் வரும் சாபங்களைப் பல்லாண்டுகளுக்குப் பின்னர் பயன்படுத்துவோர், அதே மனநோக்கோடு பயன்படுத்த மாட்டார்கள்; அதுபோலவே அதே மக்களைக் குறித்தும் சாபமிட மாட்டார்கள். காலத்தின் ஓட்டத்தில் எவ்வளவோ தூய்மையாக்கம் நடைபெற்றுள்ளது. இத்தகைய வளர்ச்சி மாற்றத்தை ஞானாகமத்தில் தெளிவாகக் காணலாம் (ஞான 10-19). அதாவது, மக்கள் இதுவரையில் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை முன்னிட்டுச் செய்து வந்த சச்சரவானது மாறி, கொள்கையின் அடிப்படையில் ஏற்படத் தொடங்கியது. தம் பாரம்பரிய வழக்கப்படி புனிதப்போரைத் தொடங்கும் மக்கபேயர்கள் "தங்களது உயிருக்காகவும், தங்கள் திருச்சட்டங்களுக்காகவும்" சண்டையிடுகின்றார் கள் (1 மக் 2:40; 3:21). இவ்விரு நோக்கங் களையும் மனதில் கொண்டு, எவ்விதத் தாழ்ந்த விருப்பமுமின்றிப் போரிடுகிறார்கள். சுருங்கக்கூறின், ஒன்று, தங்கள் பகைவர்களுக்குச் சட்டரீதியில் தகுந்த தண்டனை கொடுத்தல் – இது பழிவாங்குதல் அன்று; இஸ்ராயேலரின் வெற்றி அதன் பகைவர்களின் வீழ்ச்சியாக முடிகிறது (எஸ்தர்). மற்றொன்று, அனுபவமும், இறை ஒளியும் அன்பு நோக்கி மனதை ஈர்த்துச்

செல்கிறது. சீராக்கு நூலில் வரும் அறிவுரைகளில், மனிதன் கடவுளின் மன்னிப்பைப் பெற வேண்டுமாயின் அவன் பிறரை மன்னிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது (சீரா 28:1-7; காண்க. பழ 24:29). இதுவே இயேசுவும் விடுத்த கோரிக்கையாகும்.

III. பகைமையை இயேசு வெல்கிறார்:

1. **கட்டளையும் செயலொழுக்கமும்:** "உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோர்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத் 5:44 இணை). இந்தக் கட்டளையானது இயேசு விடுக்கும் புதிய கோரிக்கைகளில் முதன்மையானதாகத் திகழ்கிறது (காண்க. 5:43). உவமையொன்றில் வருவதுபோல (லூக் 19:27) அவருடைய பகைவர்கள் "அவர் ஓர் அரசனாவதை" விரும்பவில்லை. அவர்கள் அவரைக் கொன்றார்கள்; அவரோ சிலுவையின் கொடிய வேதனையிலும் அவர்களை மனமார மன்னித்தார் (லூக் 23:34). அது போன்றே, அவரது சீடரும் தம் தலைவரின் வழியொழுகி வாழவேண்டும் (காண்க. 1 பேதுரு 2:23); தனக்கு மன்னிப்பு வழங்கும் (காண். மத் 6:12) விண்ணகத் தந்தையின் நெறியினைக் கடைப்பிடித்தால் (மத் 5:45 தொ). அவரிடமிருந்து மன்னிப்புப்பெறலாம். இயேசு எவ்வாறு தம் பகைவர்களான பரிசேயர்களையும் ஏரோதையும் வேறு சிந்தனை எதுவுமின்றி மன்னித்தாரோ அவ்வாறே கிறிஸ்தவனும் மன்னித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதென்பது எவ்விதத் தவறான நோக்கத்தோடுமன்று. ஆயினும், இத்தகையதொரு செயலானது வேதாகமம் கூறுவதுபோல், "பகைவனின் தலைமேல் எரிதழலைக் குவிக்கிறது" (உரோ 12: 20 = பழ 25:21 தொ); இது பழிக்குப்பழி பகைவன் மனது வைத்தால் ஓர் அன்புப் பெருக்காக மாறிவிடும் தன்மையது. பகைவனுக்கு அன்பு செய்யும் ஒருவன், அவன் தன் நண்பனாக மாற வேண்டுமென்றே விழைகிறான்; அதற்கேற்ப ஞானத்தோடு வழிமுறைகளைக் கையாளுகிறான். இத்தகையதோர் முன் செயலில் கடவுளே அவனுக்கு வழிகாட்டியாய் முன் சென்றிருக்கிறார். கடவுளுக்குப் பகைவர்களா யிருந்தும் அவருடைய மகனது மரணத்தின் வழியாய் நாம் கடவுளோடு ஒப்புரவாக்கப் பட்டுள்ளோம் (உரோ 5:10).

2. **பகைமையின் மீது வெற்றி:** இயேசு பகைமை நிலவுவதை மறுக்கவரவில்லை. ஆனால், அதை வெல்லும்போது அதனுடைய முழுப்பருமனும் நன்றாக வெளிப்படுவதைச் சுட்டிக்காட்ட வருகிறார். பகைமை ஒரு சாதாரணமான உண்மையன்று; அஃது ஒரு மறைபொருள்; சாத்தானுடைய ஆட்சியின் ஓர் அறிகுறி. அவனே எல்லாருக்கும் மேலான மிகப்பெரிய பகைவன். ஆதியில் இன்பவனத்தில் நடந்த நிகழ்ச்சி, அவனைப் பின்னர் மனித குலத்திற்கே பகைவனாக்கி விடுகின்றது (ஆதி 3:15). கடவுளுக்கும் மனிதனுக்கும் பகைவனாகவுள்ள அவன் களைகளை இவ்வுலகில் விதைக்கிறான் (மத் 13:39). அதனால்தான் நாம் அவனது தாக்குதல்களுக்கு உள்ளாகிறோம். ஆனால் பகைவனிடமிருந்து வரும் எல்லாத் தீய சக்திகளையும் எதிர்த்து நிற்கவும், அடக்கியாளவும் வேண்டிய வலிமையை இயேசு தம் சீடர்களுக்குக் கொடுத்திருக்கிறார் (லூக் 10:19). இத்தகையதொரு வலிமையை அவர்கள், இயேசு தம் தோல்வியால் வெற்றிகண்டதிலிருந்து பெறுகின்றனர். அவர் சாத்தானின் கைக்கூலிகளின் வழியாகத் தாக்குதல்களை ஏற்றுத் தம் மரணத்தால் மரணத்தையே வென்றார். இவ்வாறு அவர்கள் மனித இனத்தையே பிரித்து நின்ற "பகைமைச் சுவரை" இடித்துத்தள்ளுகிறார்கள் (எபே 2:14-16). சாவென்னும் இறுதிப் பகைவனை வென்று (1 கொரி 15:25 தொ) தன் பகைவர்கள் அனைவரையும் தம் கீழ்ப்படியச்செய்யும் அப்பெருநாளை எதிர்நோக்கி யிருக்கும் கிறிஸ்தவன், அதே நேரத்தில், கிறிஸ்துவோடு இணைந்து நின்று, மனித இனத்தின் பழைய பகைவனுக்கு எதிராகப் போராடுகிறான் (எபே 6:11-17). இயேசுவோடு உடனிருந்து கொண்டு சிலுவையின் பகைவனாய்

எவனும் இருக்க முடியாது (பிலி 3:18). ஏனென்றால் சிலுவைதான் உண்மையான வெற்றியை விளைக்கிறது; சிலுவையில்தான் நிலையான ஒப்புரவு எழுகிறது. அதற்குப்புறம்பே மனிதனிடத்தும் இறைவனிடத்தும் ஒப்புரவு எழுவதற்கிடமில்லை.

பகோவா (BAGOAS - அண்ணகன்)

அசீரியத்தளபதி ஓலபெரினேயின் "சொந்தக் காரியங்களைக் கண்காணித்து வந்த" ஓர் அண்ணகன் (யூதி 12:11). தன்னுடைய தலைவன் யூதித்தால் கொல்லப்பட்டான் என்பதைக் கண்டுபிடித்தவன் (14:14-18).

பக்தி (PIETY)

I. நம்முடைய நவீன உலகிற்குப் பக்தி என்பது, பெரும்பாலும் பக்திச் செயல்களாகக் குறைக்கப்பட்ட சமயக்கடமைகளுக்கான பற்றுறுதி ஆகும். விவிலியத்தில் பக்தியானது, மேலும் பரந்த பொருளுடையது. தனது அயலாருடனான மனிதனின் உறவுகளையும் அது தழுவுகிறது.

II. பழைய ஏற்பாடு

1. மனித **உறவுகளில் பக்தி:** எபிரேயத்தில் பக்தியானது முதலாவதாக, உறவினரையும் (ஆதி 47:29), நண்பரையும் (1 சாமு 20:8), கூட்டாளிகளையும் (ஆதி 21:23) இணைக்கின்ற ஒருவருக்கொருவரான உறவினை அடையாளப் படுத்துகிறது. பயனுள்ள, பிரமாணிக்கம் நிறைந்த துணையினை இந்த நெருக்கம் வெளிக்காட்டு கிறது. "பக்தியைச் செயல்படுத்துதல்" என்ற சொற்றொடர் பக்தி, செயல்களில் காட்டப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது "பக்தி / பற்றுறுதி" (ஆதி 24:49; பழ 20:28; சங் 25:10) என்னும் சோடியில் இரண்டு சொற்களும் பொதுவாக ஒன்றை மற்றது ஊடுருவிச் செல்லும் தன்மையுடையன. இரண்டாவது சொல் ஆன்மாவின் ஒரு தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது. இஃது இல்லாமல் முதலாவது சொல் வெளிப்படுத்தும் நன்மைத்தனமானது நிறைவு பெறாது. எழுபது நூலின் மொழிபெயர்ப்பின்படி, பக்தியினுடைய இன்றியமையாத்தன்மை இரக்கமிக்க நன்மைத்தனமாகத் தெரிகிறது.

2. **இறைவனுடனான உறவுகளில் பக்தி:** வலுவான இந்தப் பக்தியின் மனிதப் பிணைப்பானது, உடன்படிக்கையின் மூலமாக இறைவன் தனக்கும் தன் மக்களுக்கும் இடையே என்ன ஏற்படுத்தினார் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இறைவனுடைய பற்றுறுதிக்கு அதாவது, அவரது தலைச்சன்பிள்ளையாகிய இஸ்ராயேலின்பால் அவர் கொண்டுள்ள இரக்கமிக்க அன்பிற்கு (யாத் 34:6; காண்க. 4:22; எரே 31:3; எசா 54:10), மற்றொரு பற்றுறுதியால் அதாவது விசுவாசம் நிறைந்த கீழ்ப்படிதலும் அன்புமிக்க வழிபாடும் தூண்டியெழுப்புகின்ற மகனுக்குரிய பற்றுதலால் பதிலளிக்க வேண்டும் (உப 10:12 தெர்). இறைவன்பால் காட்டப்படும் இந்த அன்பினின்று, இறைவனுடைய நன்மைத் தனத்தையும் ஏழைகளுக்கான அவரது அக்கறையினையும் பின்பற்றும் சகோதர அன்பானது மனிதரிடையில் வர வேண்டும். இவ்வாறு உண்மையான பக்தியை விளக்க மீக்கா அதனை நீதி, அன்பு மற்றும் தாழ்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புபடுத்துகிறார் (மீக் 6:8).

இந்த விளக்கம் இறைவாக்கினர்களுக்கும், ஞான ஆசிரியர்களுக்கும் உரியது. ஓசேயாவைப் பொருத்தவரை பக்தியானது சடங்கில் அடங்கி இருக்கவில்லை. அச்சடங்கிற்கு உயிரளிக்கும் அன்பில் அடங்கியிருக்கிறது (ஓசே 6:6 = மத் 9:13). இந்த அன்பை நீதியினின்றும் (ஓசே 12:7 தொ; 4:1 தெர்). எரேமியாவைப் பொறுத்தவரை, இறைவனே பக்திக்கும், நீதிக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார் (எரே 9:23). மற்ற இடங்களில், ஏழைகள் ஒடுக்கப்படும் போதும், நீதியானது மீறப்படும்போதும் பக்தியானது விட்டுக்கொடுக்கப் படுவதை நாம் காண்கிறோம் (மீக் 7:2; எசா 57:1; சங் 12:2-6). சங்கீதங்களில் பக்திமானுடைய வழிபாடானது இறைவனுடைய பக்தியைப் போற்றுகின்ற (சங் 103) அன்புப் புகழ்ச்சியிலும், நம்பிக்கையான மகிழ்ச்சியான புகழ்ச்சியிலும்

வெளிப்படுத்தப்படுகிறது (சங் 31:24; 149). ஆயினும், பற்றுறுதியுடன் இணைக்கப்பட்டால் மட்டுமே இந்த வழிபாடு ஏற்புடையதாகும் (சங் 50). வழிபாட்டையும் அன்பையும் பிரிக்காத பக்திமான்களுக்கு (சீரா 35:1-10) இறைவன் ஞானத்தை அளிக்கிறார் (சீரா 43:33). இறைவனால் படைக்கப்பட்ட நல்லவை அனைத்தினின்றும் அவர்கள் பலன் பெறுகின்றனர் (39:27).

மக்கபேயரின் காலத்தில் அவர்களது விசுவாசத்திற்காக மரணம் வரை போராடிய அசிதேயரை ("பக்தியுள்ளோர்" 1 மக் 4:2) இயக்கியது. இந்த ஒன்றுபட்ட பக்தியே. அவர்களை வலுவுள்ளவர்களாக்கி. பக்தியானது உயிர்ப்பில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது (2 மக் 12:45). இறுதித் தீர்ப்பின்போது ஞானம் புகழ்ந்து பாடுகின்ற வெற்றியினையுடைய, "மற்ற எல்லாவற்றையும்விட வலுவுள்ள" பக்தியும் இத்தகையதே (ஞான 10:12; காண்க. ஞான 2:5-இல் நீதியுள்ளோர் / பக்தியற்றோரின் எதிர்ப்பு). மண்ணுலகில் இறையரசை அமைக்கவிருக்கின்ற மெசியாவிற்கு இந்தப் பக்தி அளிக்கப்படும் (எசா 11:2).

III. புதிய ஏற்பாடு

1. **கிறிஸ்துவினுடைய பக்தி:** "தூய்மையோடும் (பக்தியோடும்) நேர்மையோடும் ஆண்டவர் முன்பணிசெய்ய" ஆசைப்படுவோரின் எதிர்பார்ப்பிற்கு, கிறிஸ்துவை அனுப்பிய இறைவனுடைய பக்தியால் வெகுமதி அளிக்கப்படுகிறது (லூக் 1:75.78). கிறிஸ்து மற்ற எல்லோரையும்விட பக்தியுள்ளவர் (புனிதர், பரிசுத்தர்) (அ.ப. 2:27; 13:35; சங் 16:10). அவருடைய மகனுக்குரிய பக்தியானது அவரது தந்தையாகிய இறைவனுடைய சித்தத்தை முழுமையாக நிறைவேறச் செய்தது (யோவா 8:29; 9:31). நிறைவான வழிபாட்டுச் செயலை அளிக்க அஃது அவரை நடத்திச்சென்றது (எபி 10:5-10). இப்பக்தி நம்மைப் புனிதப்படுத்து வதற்கு, அவரது வேதனையின் ஆர்வமிக்க செபத்தையும், வேதனைமிக்க பலியின் காணிக்கையையும் தூண்டியது (மாற் 14:35-36). நமக்குத் தேவையான பக்தியுள்ள தலைமைக்குருவாக கிறிஸ்துவே இருப்பதால் (எபி 7:26), "அவரது பக்தியின் காரணமாக" (5:7) அவர் இறைவனால் செவிமடுக்கப்படுகிறார். இதன் காரணமாகவே, கிறிஸ்துவின் மறைபொருளானது "பக்தியின் மறைபொருள்" என்று அழைக்கப்படுகிறது (1 திமொ 3:16). அவரில் இறைவனுடைய பக்தியானது தனது மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுகிறது. அவரில் கிறிஸ்தவனுடைய பக்தியானது தனது ஊற்றையும் மாதிரியையும் கொண்டுள்ளது.

2. **கிறிஸ்தவனின் பக்தி:** இறைவன் ஏற்கெனவே ஒவ்வொரு நாட்டின் மனிதருடன் மனநிறைவு அடைந்திருந்தார். இவர்கள் இறை பயத்தினால் தங்களுடைய செபங்களாலும், உதவி அளித்தலாலும் தூண்டப்பட்டு, யூத பக்தியில், இறைவழிபாடு மற்றும் நீதியைச் செயல்படுத்துதல் என்னும் அதனுடைய இரு பண்புகளில் பங்கு பெற்றனர். யூத சிமியோன் (லூக் 2:25), பெந்தகோஸ்தே விழாவிற்கு எருசலேமிற்கு வந்திருந்த மக்கள் (அ.ப. 2:5), மற்றும் நூற்றுவர் தலைவன் கொர்னேலியு (10:2.4.22.34-35) ஆகியோர் இத்தகையோரே. இந்தப் பக்தியானது இயேசுவாலும், ஆவியின் கொடையாலும் புதுப்பிக்கப்படுகிறது. அப்போஸ்தலர் பணியில் அனனியா (22:12) அல்லது ஸ்தேவானைப் புதைக்க முன் வந்த கிறிஸ்தவர்கள் (8:2) முதலிய சில பக்திமான்களை நாம் காணலாம். பவுலின் எண்ணப்படி அவர்களுடைய வழிபாடானது இறைவனைப் பொறுத்தவரை மகனுக்குரிய ஆவியால் இப்போது உருவாக்கப்படுகிறது (4:6); மற்றும் அவர்களுடைய நீதியானது அன்பின் மூலமாக இயங்குகின்ற விசுவாசத்திற்குரியதாகும் (கலா 5:6). புதிய மனிதனின் பக்தி இத்தகையதே. போலியான முற்றிலும் மனிதத்தனமான பக்தியினுடைய வெறுமையான செயல் முறைகளுக்கு எதிராக (கொலோ 2:16-23), பவுல் நிலைநிறுத்துகின்ற உண்மையான கிறிஸ்தவ

பக்தியும் இதுவே (எபே 4:24). இதன் மூலமாக மரியாதையுடனும் பயத்துடனும் ஓர் ஏற்புடைய வழிபாட்டினை நாம் இறைவனுக்கு அளிக்கிறோம் (எபி 12:28).

மேய்ப்புப்பணித் திருமுகங்களிலும், பேதுருவின் 2-ஆம் திருமுகத்திலும், ஆயர் மற்றும் இறை மனிதனுடைய பல அடிப்படையான பண்புகளில் பக்தியும் அடங்கியுள்ளது(1 திமொ 6:11; தீத் 1:8). இஃது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மிகவும் அவசியமானது (தீத் 2:12; 2 பேதுரு 1:6-7). இதனுடைய இரண்டு சிறப்பியல்புகள் வலியுறுத்தப்படுகின்றன. முதலாவதாக, பணத்தின் மீதான பற்றற்றது. போலியான ஆதாயம் தேடும் பக்திக்கு எதிராக இஃது அவசியமானதுடன் நிறைவடைகிறது. இதனுடைய ஆதாயமானது இந்தப் பற்றற்ற விடுதலையே ஆகும் (1 திமொ 6:5-10). அடுத்து, கிறிஸ்துவின் பக்தியை மாதிரியாகக் கொண்டுள்ளவர்களுடைய ஒரு பங்காக உள்ள துன்பங்களைத் தாங்கிக்கொள்வதற்கு இது வலிமையை அளிக்கிறது (2 திமொ 3:10-12). இந்தப் பற்றற்ற தன்மையும் நிலைத்தன்மையும் இல்லாமல், பக்தியின் தோற்றங்களை மட்டுமே ஒருவன் கொண்டுள்ளான் (3:5). உண்மையான பக்திக்கு இவ்வாழ்வின் சோதனைகளில் இறைத்துணையும், பிற்காலத்தில் முடிவில்லா வாழ்வும் வாக்களிக்கப்படுகிறது (2 பேதுரு 2:9; 1 திமொ 4:7-8).

இம்முறையில்தான் பக்தியானது கிறிஸ்தவ வாழ்வை அதனுடைய அனைத்துக் கோரிக்கைகளுடனும் இறுதியாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறது (1 திமொ 6:3; தீத் 1:1). "பக்தியுடைய ஒரே நபரான" அவரின் அன்பிற்குப் பதிலளிக்க (திருவெளி 15:4), கிறிஸ்தவன் அவரைப் பின்பற்றி, அதன் மூலம் தனது சகோதரருக்கு அவர்களது விண்ணகத் தந்தையின் சாயலை வெளிப்படுத்த வேண்டும்.

பக்தியுள்ள, இறைப்பற்றுடையோர் (DENOUT)

இது பழைய ஏற்பாட்டில் "நீதியுள்ள" என்னும் சொல்லின் மறு சொல்லாகும்; புதிய ஏற்பாட்டில் மதிப்புமிக்க, பக்தியுள்ள, சடங்கிற்கு அல்லது வழிபாட்டிற்கு நியமிக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் பணி நூலில் இச்சொல் பிற இனத்தவர் வழிபாட்டைக் குறிக்கிறது. இவர்கள் செபக்கூடத்துடன் ஓரளவு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் (அ.ப. 10:2).

பங்கு, பாகம் (PORTION, SHARE)

இது, போரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் (ஆதி 14:24; 1 சாமு 30:24). சடங்கு உணவு உண்பது (யாத் 29:26; லேவி 7:33; 1 சாமு 1:4-5) போன்றவற்றில் பங்கீடு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். உரிமைச்சொத்து (ஆதி 31:14; லூக் 15:12), நாட்டின் நிலம் (உப 10:9) ஆகியவற்றைப் பொருத்த மட்டும் இச்சொல் ஒரு கலைச்சொல்லாகப் பயன்படுகிறது. நாட்டின் உண்மையான சொந்தக்காரர் யாவேயே ஆவார் என்றும், அவரே அதை இஸ்ராயேலுக்குப் பங்கீடு செய்து அளிக்கிறார் அல்லது பொறுப்பாக ஒப்படைக்கிறார் என்பதை உணர்த்தும். "ஒருவரிடம் பங்கு கொள்ளுதல்" என்ற சொற்றொடர் அவரோடு கொண்டுள்ள தொடர்பையோ, அவருடன் தோழமை கொண்டிருப்பதையோ, அவருடைய சமூகத்தோடு உறவு கொண்டிருப்பதையோ உணர்த்தும் (2 சாமு 20:1; 1 அர 12:16; காண்க. யோவா 13:8). இச்சொற்கள் ஒருவருக்கு விருப்பமானதையும் நெருங்கியதையும் குறிக்கலாம். இவ்வாறு இஸ்ராயேல் ஆண்டவரின் பங்கு என்றும் (உப 32:9), ஆண்டவர் இஸ்ராயேலின் பங்கு என்றும் (சங் 16:5; 73:26; 119:57; 142:5; எரே 10:16; புல 3:24) அழைக்கப்படுகின்றனர். ஒருவரின் நிலை அல்லது ஊழ் இறைவனிடமிருந்து வரும் பங்கென்று குறிக்கப்படுகிறது (யோபு 31:2; எரே 13:25; திருவெளி 21:8). லூக் 10:42-இல் மரியா தேர்ந்துகொண்ட "நல்ல பங்கு" அவள் இயேசுவின் போதனைக்குக் கவனத்தோடு செவிமடுப்பதாகும்.

பசி தம்மிம் (PAS - DAMMIM - இரத்தம் சிந்திய இடம்)

தாவீது மன்னன் வெற்றிபெற்ற பல இடங்களில்

இஃதும் ஒன்று. இங்குதான் அவர் பெலிஸ்தியரை வென்றார் (1 நாள் 11:3). இதுவும், 1 சாமு 17:1-இல் குறிக்கப்படும் எபேசுதம்மீமும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

பசியும் தாகமும் (HUNGER & THIRST)

I. இவை உயிர்நிலையான தேவைகளைக் குறிப்பிடுவதால், இறைவன்முன் மனித வாழ்வின் பொருளை வெளிப்படுத்துகின்றன. அதனால் இவை இருமுகப்போக்குடையவை (பழ 30:9). பசி, தாகம் அனுபவிப்பது மனிதனை இறைவன்பால் திறந்த மனதுடையவனாக்க வேண்டிய நேர்படியான அனுபவமாகும். ஆனால், பசியாய் இருப்பது ஒரு தீமையாகும். இறைவன் விரும்பிய ஒன்றன்று. ஆகவே அகற்றப்பட வேண்டியதொன்றாகும். பஞ்சம் போன்ற ஒரு சமூக நிகழ்ச்சியாக அது மாறும்போது, விவிலியம் அதை ஒரு பேரழிவாக, இறைத்தீர்ப்பின் அடையாளமாகக் காண்கிறது.

II. பழைய ஏற்பாட்டில்

1. பசியும் தாகமும், விசுவாசத்தின் ஒரு சோதனையாகும்:

அ) பாலைவனத்தில் இறைவன் தம் மக்களைச் சோதித்தறியவும், அவர்களது உள்ளார்ந்த எண்ணங்களை அறியவும், அவர்களைப் பசி, தாகத்திற்கு உட்படுத்தினார் (உப 8:1 தொ). இஸ்ராயேல் தான் வாழ்வதற்கு யாவேயை மட்டுமே முழுவதும் சார்ந்திருக்க வேண்டும்; ஏனெனில் அவர் மட்டுமே அவர்களுக்கு உணவும் பானமும் கொடுக்கிறார் என்பதைக் கற்றுணர வேண்டியிருந்தது. இந்த உடல் சார்ந்த தேவைகளுக்கு அப்பால், இவற்றை விட உயிர்நாடியான தேவையை, இறைவனைப்பற்றிய தேவையை, இஸ்ராயேல் தன்னிலேயே கண்டுபிடிக்க வேண்டும். விண்ணிலிருந்து வந்த மன்னா, இறைவன் வாயிலிருந்து வெளிப்படும் அவரது வார்த்தை, அவரது சட்டம் ஆகியவற்றைப் பொருத்தமாக அவர்கள் மனதிற்கு வெளிப்படுத்த வேண்டும். இவற்றிலேயே அவர்கள் வாழ்வைக் கண்டடைய வேண்டும் (உப 30:15 தொ; 32:46 தொ). ஆனால் மக்கள் இதைப்புரிந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர். அவர்கள் எகிப்தில் உண்ட இறைச்சியை மட்டுமே எண்ணுகின்றனர் (எண் 11:4 தொ). ஆகவே பசி நலம் தரும் சோதனையாக இருப்பதற்குப் பதிலாக, "அவர்கள் மூக்கில் வெளிவந்து திகட்டிப்போகும்வரை" அவர்களைத் தின்னச் செய்யும்படி இறைவன் கட்டாயத்துக்குள்ளாக்குகிறார் (11:20; காண்க. சங் 78:26-31).

ஆ) குடியேறியபின்பு: நாட்டில் நிலையாகக் குடியேறி, அதன் நன்மைகளை அனுபவிக்கத் தொடங்கியபின், இஸ்ராயேலர் பாலைவனத்தில் கற்றபாடங்களை மறந்து விட்டனர். அவற்றைத் தம் சொந்த முயற்சியால் பெற்றதாகக் கருதினர். அவற்றைப்பற்றி யாவேயின் முன் பெருமை பாராட்டிக்கொண்டனர் (உப 32:10-15; ஓசே 13:4-8). ஆகவே, இறைவன் தம் மக்களை மீண்டும் பாலைவனத்திற்கு இட்டுச்செல்ல வேண்டியிருந்தது. அதனால் தாகத்தால் மயங்கி, இழந்துபோன தானியங்களுக்காகவும் அழிந்து போன திராட்சைத் தோட்டங்களுக்காகவும் அழுது (2:11.14), இஸ்ராயேலின் இதயம் விழிப்பூட்டப்படும் (2:16). "ஆண்டவரின் வாக்குக் கிடைக்காத பஞ்சமாகிய" (ஆமோ 8:11) அவசியமான பசி, தாகத்தைக் கடுமையாக உணர்வர்.

இ) இறைவாக்கினர்களும் ஞானிகளும் இப்பாடங்களை ஏற்றுக்கொள்கின்றனர். இறைவனை அன்பு செய்பவர்களுக்கு அவர் அளிக்கவிருக்கும் நன்மைகளைப் பற்றிய தேவை மற்றும் ஆவல் உணவு, அப்பம், தண்ணீர், திராட்சை ரசம் போன்ற உருவகங்கள் வழியாகத் தொடர்ந்து எடுத்துக்கூறப்படுகின்றன. யாவே தம் மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் ஏற்பாடு செய்யும் சிறந்ததொரு விருந்துக்காக ஒருவர் ஏங்குகிறார் (எசா 25:6). மற்றொருவர் புத்துயிர் அளிக்கும் ஞானத்திற்காகவும் (பழ 5:15; 9:5), காதலாகிய களிப்பூட்டும் மதுவிற்காகவும்

(உ.ச. 1:4; 4:10) தாகம் கொள்கிறார். தாகத்திற்குப் பானத்தையும் திருப்தி அளிக்கும் உணவையும் (எசா 55:1தொ), "காசு பணமின்றி" இறைவனிடமிருந்து பெற விரைகின்றனர். ஆனால் இறைவனாகிய (சங் 42:2) மிகத் தூய்மையான நீருக்காகவும், உயிரைக் கொண்டு வரும் போதை அளிக்கும் திராட்சை ரசத்திற்கும் மட்டுமே ஆவல் கொள்கின்றனர். இந்த ஆவலை நிறைவேற்ற, இறைவன் எப்போதும் தயாராக இருக்கிறார். "உங்கள் வாயை விரிவாகத் திறங்கள்: நான் அதை நிரப்புவேன்" (சங் 81:10).

2. பசியும் தாகமும் பிறரன்புக்கு ஓர் அழைப்பு:

பாசிதாகமெனும் சோதனை ஒரு விதி விலக்காகவே இருக்க வேண்டும். நாட்டில் ஏழைகள் என்றும் இருப்பர் (உப 15:11). அவர்களுக்கு இஸ்ராயேலர் தாராளமாக இருக்க வேண்டும். ஓர் இஸ்ராயேலனின் முதன்மையான கடமைகளில் ஒன்று தன் சகோதரனுக்கும், சக குடிமகனுக்கும் (யாத் 23:11), தேவையுள்ளோர் எவருக்கும் (தோபி 4:16 தொ), பகைவனுக்கும் கூட (பழ 25:21) அப்பமும் தண்ணீரும் அளிப்பதாகும். நீதியைக் கடைப்பிடிப்பது (எசே 18:5.16) மற்றும் இறைவனுக்கு நோன்பை விருப்பமுடைய தாக்குவது (எசா 58:7-10) என்பதன் பொருள் இதுதான். இறுதியில் யாவேயே பசி, தாகம் உடையோருக்கு ஆதரவாக இடையீடு செய்து அவர்களது பசி, தாகத்தை முழுவதும் நிறைவு செய்யும் விருந்திற்கு அழைப்பார் (எசா 25:6; 65:13).

III. புதிய ஏற்பாட்டில்:

1. இயேசு கிறிஸ்து: ஏழைகளின் மெசியா (லூக் 1:53) பசி, தாகம் உடையவர்கள் நிறைவுபெறுவர் என்று அறிவிக்கிறார் (6:21). தனது தூதைத் தொடங்கும்முன் அவரே பசி, தாகத்திற்குத் தன்னை உட்படுத்துகிறார். பாலைவனத்தில் இஸ்ராயேலைப்போல் சோதிக்கப்படும்போது, மனிதனின் அவசியமான தேவை இறை வார்த்தையும், தந்தையின் விருப்பமுமே (மத் 4:4) ஆகும் என்று அறிவிக்கிறார்; நிரூபிக்கிறார். தந்தையின் விருப்பத்தைத் தன் உணவாக்குகிறார்; அதனால் அவர் வாழ்கிறார் (யோவா 4:32 தொ). சிலுவையில் "தந்தை தனக்களித்த துன்பக் கிண்ணத்திலிருந்து குடித்தபின்" (யோவா 18:11) சிலுவைச்சாவுக்கான அவரது தாகம், "மறைநூலில் எழுதியுள்ளதை நிறைவேற்றும்" ஆவலிலிருந்தும் (19:28), தந்தையின் அலுவலை நிறைவுச்செய்யும் ஆவலிலிருந்தும் மேலும் அவர் திருமுன்னிலை நிற்பதற்கான (சங் 42:2) ஆவலிலிருந்தும் பிரிக்க முடியாதது.

2. இயேசு பசி, தாகத்தைத் தணிக்கிறார், எழுப்புகிறார். முன்பு பாலைவனத்தில் இறைவன் செய்தது போல், இயேசு தன்னைப் பின்பற்றும் மக்களின் பசியைத்தீர்க்கிறார் (மாற் 8:1தொ). அதே சமயத்தில் இறைவார்த்தைக்காகவும் உண்மையான அப்பமாகிய தனக்காகவும் (யோவா 6), அவரது ஆவியாகிய வாழ்வுதரும் நீருக்காகவும் (7:37 தொ) மக்களின் ஆவலைத் தூண்டியெழுப்பக் கருத்தாக இருக்கிறார். இந்த ஆவலைச் சமாரியப் பெண்ணிடம் தூண்டியெழுப்புகிறார் (4:1-14). அதே போல, தேவையான ஒரே காரியமான அவரது வார்த்தையை விரும்ப மார்த்தாவை அழைக்கிறார் (லூக் 10:39-42).

3. கிறிஸ்தவனும் பசிதாகமுடையோரும்: பசித்தோருக்கு உணவளிக்கும் கடமை, முன்பைவிட, கிறிஸ்துவைப் பின்பற்றுவோரிடம் அதிகம் கோரப்படுகிறது. தன் வாசலில் இருக்கும் பசித்தவனைக் காணாதவனுக்குப் பாதாளத்தில் மிகுந்த வேதனை அளிக்கும் தாகம் காத்திருக்கிறது (லூக் 16:19-24). இயேசுவின் சீடர்களுள் ஒருவருக்கு ஒரு கிண்ணம் குளிர்ந்த நீர் கொடுப்பவர் கைம்மாறு பெறாமல் போகார் (மத் 10:42). பசித்தோருக்கு உணவளிப்பதும், தாகமுற்றோருக்குப் பானம் அளிப்பதும், இயேசுவின் சகோதரர்கள் வழியாக, இயேசுவின் பசி தாகத்தைத் தணிப்பதால், இந்த அடிப்படையில்

ஒவ்வொருவரும் தீர்ப்பிடப்படுவர் (25:35-42). பிறரது துன்பங்களைக் குறைக்கும் இந்தப் பிறர் அன்புக்காக நாம் எப்போதும் தாகம் கொள்ள வேண்டும். இந்தப் பிறரன்பின் ஊற்று ஆவலுள்ள ஆன்மாக்களுக்கும், இறைவனுக்காகவும் அவரது திருமுகக் காட்சிக்காகவும் தாகம் கொண்டுள்ள ஆன்மாக்களுக்கும், உண்மையான வாழ்வுக்குத் தாகம் கொண்டுள்ளவர்களுக்கும், எப்போதும் திறந்துள்ளது, கட்டுப்பாடற்றது (எசா 55:1 தொ; திருவெளி 21:6; 22:17).

பசு (COW)

ஒரு பசுவின் முக்கியமான பணி கன்றுகள் ஈனுவதும் அவற்றிற்குப் பால் கொடுப்பதும் ஆகும் என்று லேவி 22:27-28; உப 7:13; 28:14.18.51; யோபு 21:10; 1 சாமு 6:7 ஆகிய பகுதிகள் குறிப்பிடுகின்றன.

ஓர் இடத்தில் கறவைப்பசுக்கள் வண்டி இழுக்கப் பயன்படுத்தப்படுகின்றன (1 சாமு 6:7-8). யாக்கோபு, ஏசாவிற்கு நாற்பது பசுக்களைப் பரிசாகக் கொடுத்தார் (ஆதி 32:15). பசுவின் பாலிலிருந்து தயிர் தயாரிக்கப்பட்டது (உப 32:14; எசா 7:21-22; 2 சாமு 17:29). பால்பொருட்களுக்காகப் பசுக்கள் வளர்க்கப்பட்டன என்பதற்கு அதிகச் சான்றுகள் இல்லை. ஆடுகளுக்கிருந்த மேய்ச்சல் நிலத்தைவிட, பால் கறக்கும் பசுக்களுக்கிருந்த புல்வெளியானது பாலஸ்தீனத்தில் மிகவும் குறைவாக இருந்தது. எசே 25:4-இல் குறிக்கப்படும் பால் பசு, ஒட்டகம், வெள்ளாடு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டவை யாகும்.

யோசேபின் கனவிலும் (ஆதி 41), ஆமோசிலும் மட்டும்தான் பசுவானது உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சுகத்தை விரும்பும் சமாரிய நாட்டுப்பெண்கள் பாசான் பசுக்களுக்கு (இவ்விடம் பசுக்களுக்குப் பெயர் போனது) ஒப்பிடப்படுகின்றனர் (ஆமோ 4:1; காண்க. உப 32:14; சங் 22:12; எசே 39:18). இவர்கள் பரவலாக நாட்டில் நிலவிய அநீதிகளுக்கு இணக்கம் தெரிவித்தனர்.

பசுமையான (GREEN)

இச்சொல் பல எபிரேயச் சொற்களின் மொழிபெயர்ப்பாகும்; பொதுவாகத் தாவர வளர்ச்சியோடு தொடர்புடையது (ஆதி 1:30; 9:8; யாத் 10:15; யோபு 39:8; சங் 37:2). தொழுநோயைக்காட்டும் அடையாளங்களில் ஒன்று பச்சை நிறமாகும். சிலை வழிபாட்டு இடங்களைக் குறிக்கும் போது அவற்றைச் சுற்றியுள்ள பசுமையான மரங்கள் கூறப்படுகின்றன (உப 12:2; 1 அர 14:23). மற்ற இடங்களில் இச்சொல் நிறத்தைவிட, செழிப்பான, நலமிக்க வளர்ச்சியைக் குறிக்கப்பயன்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் தாவரப் பசுமையைக் குறிக்க இச்சொல் பயன்பட்டுள்ளது (மாற் 6:39; திருவெளி 8:7).

பச்சை குத்தல் (TATTOO)

உடலில் காயம் ஏற்படுத்தி, சில சித்திரங்களை வரைந்து கொள்ளும் முறையாகும். பச்சைகுத்தல் இறந்தவருக்காகத் துக்கம் கொண்டாடும்போது உடலைக் காயப்படுத்திக்கொள்ளும் முறையோடு சேர்த்துக் கூறப்படுவதால், இவை இரண்டும் புற வினத்தாரின் மத மரபிலிருந்து வந்தவையாகக் கருதப்படுகின்றன. இரண்டும் சட்டத்தால் தடை செய்யப்பட்டவையாகும் (லேவி 19:28).

பச்சோந்தி (CHAMELEON)

பச்சோந்தி என்பது சூழ்நிலைக்கேற்றவாறு தனதுதோலின் நிறத்தை மாற்றிக் கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்த மரம் செடிகொடிகளில் தங்கி வாழ்கின்ற, ஒரு சிறிய விலங்காகும். தனது நீண்ட ஒட்டுப்பசை வாய்ந்த நாக்கால் தன் இரையைப் பிடித்துக் கொள்ளும். தீட்டான ஊர்வனவற்றில் இதுவும் ஒன்றாகும் (லேவி 11:30).

பஸ்கூர் (PASHHUR - அமைதியாக இருத்தல், சுற்றி வளைத்து)

இப்பெயரைக்கொண்ட சிலர் அல்லது எல்லோரும் ஒரே ஆளைக்குறிக்கலாம். நாடு கடத்தப்பட்டுத்திரும்பிய சூழ்நிலையிலும் (1,2), எரேமியாவின் எதிரிகளிலும் (3-5) இப்பெயர்

வருகிறது. இரு குழுவிலும் ஒருவர் இம்மேரின் வழித்தோன்றலாகவும் (1,3), வேறு ஒருவர் மல்கியாவின் மகனாகவும் (1,4) உள்ளனர்.

1. இவர் ஒரு குரு; மல்கியாவின் மகன் (1 நாள் 9:12; நெகே 11:12). இம்மேரின் வழித்தோன்றல் (1 நாள் 9:12). நாடு கடத்தப்பட்டுத்திரும்பிய காலத்தில் பஸ்கூரின் தோன்றல்களில், செருபாபேலின் தலைமையில் நாடுதிரும்பிய குருகுலம் உள்ளடங்கும் (எஸ் 2:38; நெகே 7:41). இவர்களில் குருக்கள் சிலர் அன்னிய மனைவியர்களை நீக்கி விட்டனர் (எஸ் 10:22). இவர்களில் அதாயா ஒருவராவார் (1 நாள் 9:12; நெகே 11:22).

2. நெகேமியா தலைமையின் கீழ் நிலையான உடன்படிக்கையில் கையொப்பமிட்டவருள் இவரும் ஒருவராவார் (நெகே 10:3).

3. இம்மேரின் மகனான பஸ்கூர், முடியாட்சியின் கடைசிக்காலத்தில் எருசலேம் ஆலயத்தில் தலைமை அதிகாரியாக இருந்தார். பெரிய குருவிற்கு அடுத்தபடியாகப் பதவி வகித்த இவர் ஒழுங்கைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டார். இவர் எரேமியா இறைவாக்கினரை அடித்துச் சிறையில் தள்ளவே, அவரும் சினந்து பஸ்கூருக்கு எதிராகவும் அந்நாட்டின் அழிவைப் பற்றியும் இறைவாக்குரைத்தார் (எரே 20:1-6).

4. மல்கியாவின் மகனான இவர், செதேக்கியா அரசனின் கீழ் ஓர் இளவரசராவார் (எரே 21:1). இவர் எரேமியாவிடம் சென்று பாபிலோனியப் படையெடுப்பைப்பற்றி ஆண்டவரின் வாக்கை கேட்க, அவரும் செதேக்கியாவின் வீழ்ச்சியைப் பற்றி இறைவாக்குரைத்தார். எரேமியாவைப் பாழுங்கிணற்றில் போட்டவர்களில் ஒருவர் (எரே 38:1).

5. இவர் செதேக்கியா அரசன் காலத்தில் வாழ்ந்த இளவரசர். கெதல்யாவின் தந்தை ஆவார் (எரே 38:1). எரேமியாவைப் பாழுங்கிணற்றில் போட்டவர்களில் ஒருவராவார்.

பஞ்சம் (FAMINE)

உணவு பற்றாக்குறையினால் ஏற்படும் நிலைமையைப் பல்வேறுபட்ட படிகளில் **(degrees)** வெளிப்படுத்த இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

(அ) பொதுப்படையான பஞ்சகாலம் (யோபு 5:20).

(ஆ) மழை பெய்யாததால், ஏற்பட்ட வறட்சியின் காரணமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குமட்டும் நிலவிய பஞ்சம். இவ்வகைப்பஞ்சம் ஆபிராம் காலத்திலும் (ஆதி 12:10), ஈசாக்கு காலத்திலும் (26:1), யோசேப்பு எகிப்திலிருந்த காலத்திலும் (ஏழு ஆண்டுகள்: 41:27; உலகமெங்கும் பஞ்சம் 41:54), ரூத் காலத்திலும் (1:1), தாவீது காலத்திலும் (2 சாமு 21:1-இல் மூன்று ஆண்டுகள்; 2 சாமு 24:13-இல் ஏழு ஆண்டுகள் பயமுறுத்திய பஞ்சம்), எலியா காலத்திலும் (1 அர 18:2), எலிசா காலத்திலும் (2 அர 4:38; 8:1-இல் ஏழு ஆண்டுகள்), கிளாதியு காலத்திலும் (உலகெங்கும் பெரும் பஞ்சம் அ.ப. 11:28) நிலவியது.

(இ) சமாரியா (2 அர 6:25; 7:4) எருசலேம் (2 அர 25:3; புல 4:8-10) போன்ற நகர்கள் முற்றுகையிடப்பட்டபோது பஞ்சம் நிலவியது.

பஞ்சம் கடவுளால் அனுப்பப்படும் தண்டனைகளில் ஒன்றாகவும் (எசா 51:19; எரே 14:13-18; ஆமோ 4:6), வரப்போவதாக வெளிப்படுத்தப்பட்ட துன்பங்களில் ஒன்றாகவும் (மாற் 13:8) குறிப்பிடப்படுகிறது.

பாலஸ்தீனத்தில் குறைந்த அளவே மழை பெய்தது. அதுவும் முறையாகப் பெய்வதில்லை. வறட்சியாலும் (ஆகா 1:10-11), பயிரழிக்கும் நோயாலும், வெட்டுக்கிளிகளாலும் (ஆமோ 4:9) அறுவடை இல்லாமல் போயிற்று. விலங்கினங்கள் அழிந்தன (1 அர 18:5). போரினால் நாடு பாழ்படுத்தப்பட்டது (எசா 1:7; 3:1.7). இது பட்டினிக்கு இட்டுச்சென்றது. மிகக்கொடிய பஞ்சகாலத்தில் மனிதன் மனிதனை உண்ணும் நிலையும் ஏற்பட்டது (2 அர 6:28; புல 4:10).

பஞ்சு (COTTON)

பருத்திச்செடியின் இழைகள். இந்த இழைகள் பழங்காலத்திலிருந்தே நூலாகத் திரிக்கப்பட்டு, துணியாக நெய்யப்பட்டது. எஸ்த 1:6 சூசா அரண்மனையில் இருந்த பஞ்சுத் தொங்கணிகளைக் குறிக்கின்றது. எசா 19:9 எகிப்திய பஞ்சு நெய்வோரைப் பற்றிக் கூறுகின்றது.

படகு (BOAT)

இது மாற் 4:36; யோவா 21:18 ஆகிய பகுதிகளில் குறிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில், இச்சொல் சில சமயங்களில் மத்திய தரைக்கடலில் செல்லக்கூடிய கலங்களைக் குறிப்பிடுகின்றது (அ.ப. 20:13). அப்போது கப்பல் என்று மொழிபெயர்க்கப்படுகிறது. ஆனால் பெரும்பாலும் கலிலேயக் கடலில் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட சிறிய கலங்களைக் குறித்தது (மாற் 3:9; மத் 4:21). அ.ப. 27:16. 30:32-இல் இது கப்பலோடு சேர்ந்த சிறு படகுகளைக் குறிக்கிறது.

படிகச் சிமிழ் (ALABASTER)

மென்மையான கல்லாகிய இது 'படிகம்' போன்றது. இதனைப் பளிங்கு எனவும் அழைக்கின்றனர். சிறு பொருட்களின் வடிவங்களில் இக்கற்கள் எகிப்திலிருந்து பாலஸ்தீனத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டன. இதனை நறுமணப்பொருட்கள் வைத்துக்கொள்ளும் சிமிழாகவே பயன்படுத்தினர். அதனால்தான் பெத்தானியாவிலிருந்து வந்த பெண் 'படிகச் சிமிழில்' விலையுயர்ந்த பரிமளத் தைலங்களாகக் கொணர்ந்தனர் (மத் 26:7; மாற் 14:3; லூக் 7:37). 'படிகச் சிமிழ்' என்பதே சரியான மொழிபெயர்ப்பாகும். ஏனெனில் அகழ்வாராய்ச்சியின்போது இது போன்ற பல படிகச் சிமிழ்கள் கண்டெடுக்கப்பட்டன.

எகிப்திய படிகச் சிமிழ்கள் கால்சியம் கார்பனேட்டால் ஆனவை. உள்நாட்டுப் படிகச் சிமிழ்களோ சிப்சம், கால்சியம் சல்பேட் ஆகியவற்றால் ஆனது என யோர்தான் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கானானியரின் மத்திய காலத்திலிருந்து இஸ்ராயேலரின் தொடக்க காலம் வரை பயன்படுத்தப்பட்டன. கிரேக்க-உரோமையர் காலத்துச் சாடிகளும் பயன்படுத்தப்பட்டன. பாலஸ்தீனத்தில் செய்யப்பட்ட சிமிழ்கள் எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மண்ணினால், உள்நாட்டு மட்பாண்டங்கள் செய்வது போலச் செய்யப்பட்டன. எகிப்தியச் சிமிழ்கள் துளையிடப்பட்டனவாகவும், பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவை உளியால் செதுக்கப் பட்டவையாகவும் இருந்தன. பெத்சானில் பின்வெண்கலக்காலத்தில் இச்சிமிழ்களைச் செய்வதற்கு வேண்டிய கற்களை அளித்த சுரங்கங்கள் இன்றும் சிப்சம் எடுப்பதற்குப் பயன்படுகின்றன.

படிகப் பச்சை (BERYL)

சீனாய்த் தீபகற்பத்தில் காணப்படும் நீல நிற அல்லது நீலப்பச்சை நிறமுடைய செம்பு எரியகி (காப்பர் பாஸ்பேட்டு) ஆகும். இஃது அறுகோணப் பட்டைகளையுடையது. பெரிய குருவின் மார்புப் பட்டையில் நான்காவது வரிசையில் முதலாவதாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் விலையுயர்ந்த கல் (யாத் 28:20; 39:13). தானி 10:6-இல் தானியேல் கண்ட மனிதனின் உடல் படிகப் பச்சை (பளிங்கு) போன்றிருந்தது. தீர் மன்னன் அணிந்திருந்த விலையுயர்ந்த கற்களுள் படிகப் பச்சையும் ஒன்று (எசே 28:13). புதிய ஏற்பாட்டில் புதிய எருசலேம் நகர மதில்களின் எட்டாவது அடிக்கல் படிகப் பச்சையாகும் (திருவெளி 21:20).

படிக்கட்டு (STAIRS)

ஏணிப்படிகளின் தொகுதி; வீட்டின் மேல் தளத்திற்கோ, கீழ்த்தளத்திற்கோ செல்லும் படிக்கட்டு.

பாலஸ்தீனத்தில் வீடுகளின் கூரை மேல் தளம், மிக முக்கிய இடமாகக்கருதப்பட்டது. பல குடும்ப

நிகழ்வுகள் அக்கூரை மேல்தளத்தில் நிகழுமாதலால் எல்லா வீடுகளுக்குமே கூரையின்மீது செல்லத்தக்க படிக்கட்டு வரிசைகள் அமைக்கப்பட்டிருக்கும். ஒருமாடி வீடுகளில் மேல்தளத்திற்குச் செல்வதற்கு வெளியே படிக்கட்டு அமைக்கப்பட்டிருக்கும். இருமாடி வீடுகளில் வெளியே படிக்கட்டு அமைக்கப்பட்டிருக்கும். இருமாடி வீடுகளில், கூரைக்குச்செல்லும் படிக்கட்டோடு, இரண்டாம் மாடிக்குச்செல்ல உள்ளே அமைக்கப்பட்ட படிக்கட்டுகளும் உண்டு. பொதுவாக, படிக்கட்டு வரிசைகள் கற்களால் அமைக்கப்பட்டிருக்கும். எனவே படிகளுக்குக் கைப்பிடிச்சுவர் போன்ற அமைப்பு எதுவும் இருக்காது.

மலைப்பாங்கான இடங்களில் சாலைகளிலும் கூட ஒரு மட்டத்தினின்று இன்னொரு மட்டத்திற்குப் படிகள் அமைக்கப்பட்டிருந்தமையை நெகே 3:15; 12:37-இலிருந்து அறிகிறோம்.

கிணறுகளிலும் கூட படிகள் இருந்தமையைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் உலகெங்கும் கிரேக்க மற்றும் உரோமையரின் நாடக அரங்குகள் படிக்கட்டு அமைப்பு கொண்டிருந்தன. 1 அர 6:8-இல் மட்டும் சுழற்படிகள் குறிக்கப்படுகின்றன. எசேக்கியேலின் கோயிலில் படிக்கட்டுகள் உள்ளன (எசே 40:6; 43:17). லேவியர்களின் படிகளைப் பற்றிய குறிப்பு நெகே 914-இல் காண்கிறோம்.

ஆதி 28:12-இல் யாக்கோபு கனவில் கண்ட ஏணியும் கூட, படிக்கட்டுகளின் வரிசையாக இருக்கலாம்.

படிமங்கள், செதுக்கிய சிலைகள் (FIGU-RED STONE)

இஃது அபிரேயர்களுடைய அருவருப்பான சில வகை வழிபாட்டைச் சித்தரிப்பதாக வர்ணம் தீட்டப்பட்டோ, கல்லில் செதுக்கப்பட்டோ அமைந்திருக்கும். எச்சூழ்நிலையிலும் இவ்விதமான கற்கள் அமைக்க இஸ்ராயேலர் தடைவிதிக்கப்பட்டிருந்தார்கள் (லேவி 26:1). அவர்களுடைய நாட்டிலிருந்து அவைகளை எடுத்துவிட ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்து (எண் 33:52).

எசே 8:12-இல் மூப்பர்கள் தத்தம் அறைகளில் இவ்வகையான பொருட்களை வைத்திருந்தது பற்றி இறைவாக்கினர் பேசுகின்றார். தமிழில் "தெய்வ உருவங்கள்" என்று மொழிபெயர்க்கப்படுகிறது.

காசோரில் கானானியக் கோயிலில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியில், 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கற்சிலைகள் சிங்கங்கள் முதலிய உருவங்களோடு கண்டெடுக்கப் பட்டுள்ளன.

படுக்கை (BED)

இதற்குப் பரப்பி வைக்கப்பட்டிருப்பது, படுக்கும் இடம் அல்லது சாயும் இடம் என்று பல பொருளுண்டு.

1) **வகைகள்:** பெரும்பாலும் தரையில் படுக்கின்ற இடம் படுக்கை எனப்படும். சுவரோடு சேர்ந்த சிறிது தாழ்ந்த அடுக்குபடுக்கை எனப்படுகிறது. படுக்கைகள் பொதுவாக மேல் அறையில் இருக்கும் (1 அர 17:19). மரச்சட்டங்களால் செய்யப்பட்ட சில படுக்கைகள் சில நேரங்களில் ஆட்களைத்தூக்கிச் செல்லவும் பயன்படும் (1 சாமு 19:15; மத் 9:2; லூக் 5:18). இந்த வகைக்கட்டில் கடனைத் திருப்பி அடைப்பதற்குப் பதிலாகக் கொடுக்கப்படுகின்ற அளவு மதிப்புள்ளது (பழ 22:27). பணக்காரர்கள் தங்களது வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்றாற்போல விலையுயர்ந்த மரத்தால் படுக்கைகளைச் செய்து படுக்கையறைகளுக்குள் (2 அர 11:2) வைப்பார்கள். ஆமோ 6:4-இல் யானைத் தந்தத்தால் ஆன படுக்கைகள் பற்றிக் கூறப்படுகின்றன. மேலும் எசேக்கியா சனகெரிபுக்கு அளித்த 'கப்பப்பட்டியலில் யானைத் தந்தத்தால் ஆன கட்டில்கள் இடம் பெறுகின்றன. பழ 7:16-17-இல் நறுமணப் பொருட்களால்

சூழப்பட்ட விபசாரியின் கட்டிலைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆனால் எகிப்தியக் கட்டிலோடு தொடர்புடைய இரத்தினக்கம்பளம், மணமிக்க மரத்தைலம், ஆகியவை பற்றி விவிலியத்தில் காணப்படவில்லை. (காண்க. இரத்தினக்கம்பளம் பழ 7:16; மாற் 15:46). எருசலேமின் தலைமைக்குருவான எலியாசருக்கு வெள்ளிக்கால்களுடன் கூடிய 10 கட்டில்களைத் தோலமி கொடுத்ததாக யோசிப்பசு கூறுகிறார். உப ஆகமம் 3:11-இல் வரும் இரும்புக்கட்டில் என்பதன் பொருள் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு வேளை அது கல் சவப்பெட்டியைக் குறிப்பிடலாம். தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட சயன மஞ்சங்கள் சூசாவில் உள்ள செருசுவின் மாளிகையில் இருந்திருக்கின்றன (எஸ்த 1:6). யூதித்தின் கதை ஒலபெரினேயின் கூடாரக்கட்டிலைப் பற்றிக் கூறுகின்றது (யூதி 10:21). எடுத்துச் செல்வதற்கான சிறிய படுக்கைகளும் உண்டு (மாற் 2:4தொ; யோவா 5:8 தொ; அ.ப. 5:5).

2) பயன்கள்: படுக்கைகள் இரவில் தூங்கவும் (யோபு 7:13), காதல் உறவுக்கும் (ஆதி 49:4; நீதி 21:11; உ.ச. 1:15.17; எசே 23:17), இளைப்பாறவும் (2 சாமு 4:5-7; காண்க. பழ 26:14), அரசனின் எரிச்சலைக்காட்டவும் (1 அர 21:4), அமரவும் (1 சாமு 28:23), நோயாளிகளுக்கும் (ஆதி 48:1-2), காயத்திலிருந்து சுகம் பெறவும் (2 நாள் 24:25; 2 அர 1:4), நோயாளிகளையும் ஊனமுற்றவர் களையும் பிற இடங்களுக்குத் தூக்கிச் செல்லவும் (மாற் 6:55; யோவா 5:58), பாடையாகவும் (2 சாமு 3:31; 2 நாள் 16:14) பயன்படுத்தப்பட்டன.

3) சமயப் பயன்கள்: படுக்கைகள் சில தனிமனிதர்களின் பக்தி முயற்சிகளுக்கு இடமாய் விளங்கியுள்ள (ஆதி 47:31; 1 அர 1:47). எசா 57:7-8-இல் வரும் படுக்கைகள், யாவே வழிபாட்டைச்சேராத பாலின வழிபாட்டைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

4) உருவக வழக்கில்: பாதாளத்தில் படுக்கையைத் தயார் செய்வது என்பது ஒரு தனி மனிதனின் மரணத்தையோ (யோபு 17:13-14; காண்க. சங் 139:8), ஒரு நாட்டின் அழிவையோ (எசே 32:23-25) குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. எசா 28:20-இல் வரும் சிறிய படுக்கை பொறுக்க முடியாத வேதனையின் அடையாளமாக நிற்கின்றது.

படை (ARMY)

1. **அரசாட்சிக்கு முன்:** அரசாட்சியின் தொடக்கமே இஸ்ராயேல் சீரமைக்கப்பட்ட படைகளின் தொடக்கமாகும்.

அ) குல மூதாதையரின் காலத்தில்:

ஆபத்து ஏற்படும்போது அந்த இனத்தைச் சார்ந்த ஆண்கள் அனைவரும் ஒன்றுகூடி பகைவரை எதிர்ப்பது வழக்கம். சமவெளி நகரங்களுக்கு எதிராக அரசர்கள் கூட்டுச் சேர்ந்து போர் தொடுத்தபோது, ஆபிரகாம் தனது 318 ஆட்களை 3 குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு எதிராகப் போராடி, அவர்கள் கொள்ளையிட்ட பொருட்களையும், உறவினர்களையும் மீட்டுக்கொண்டு வந்தார்கள் (ஆதி 14). பல்வேறுபட்ட இனங்கள் ஒன்று சேர்ந்து, ஒரு பொது நன்மைக்காகவோ, பொது ஆபத்திலிருந்து விடுபடவோ போராடின (யாத் 17:8-13; நீதி 1).

ஆ) நீதிபதிகளின் காலத்தில்:

சீரமைக்கப்படாத படைகள் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு இனத்திடமும் இருந்தன. இந்தப் படைகளின் போர்வீரர்கள் தாமாகவே முன்வந்து சேர்ந்தார்கள். இந்தப் படைகள் சிறியதாக இருந்தாலும் மலைப்பாங்கான இடங்களிலும் திறமையாக போர் நடத்தும் வளமை பெற்றிருந்தது (நீதி 7:7-23). சமாதான காலங்களிலும் இவர்கள் ஒன்று சேர்ந்து வழிப்பறி செய்யும் குழுக்களாகச் சேர்ந்து, தாங்கள் அளித்த பாதுகாப்பிற்காக மக்களிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டார்கள்.

2) **அரச ஆட்சியின்போது:** ஒரு நிலையான படையின் தேவையை உணர ஆரம்பித்தார்கள்.

அ) சவுல்: சவுல் தொடக்கத்தில் ஓர் அருங்கொடை பெற்ற தலைவனாக இருந்தார் (1 சாமு 11:6-11). ஆனால் அம்மோனியர்களை வென்றபிறகு மூவாயிரம் பேர்களைக் கொண்ட நிலையான படையை அமைத்து அரசனாக மாறினார் (1 சாமு 13:2; காண்க. 24:2; 26:2). அவரது ஆட்சியின் தொடக்கக் காலத்தில் சேனையானது, அவரதும், அவரது மகனான யோனத்தானுடையவும் நேரடிக்கட்டுப்பாட்டில் இருந்தது. பிற்காலத்தில் அப்னேர் படைத்தளபதியாக நியமிக்கப்பட்டார் (1 சாமு 17:55). அப்னேருக்கு என்னென்ன பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன என்பது பற்றித் தெளிவில்லை. காரணம் சவுல் இறக்கும் வரை அவனது படைகளை அவரே நடத்திச் சென்றார்.

ஆ) தாவீது: தாவீதின் போர்த்திறமை அவர் மன்னன் ஆவதற்கு முன்பே வெளிப்படுகிறது. தாவீது காலம்வரை பாதுகாப்பிற்காக மட்டுமே படைவீரர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். தாவீது, யோவாபைத் தலைமைப் படைத்தளபதியாக அமர்த்தி, இஸ்ராயேலின் படைகளை நவீனப்படுத்தினார். அவர்தான் இஸ்ராயேலருக்கு, முற்றுகை இட்டுக் கைப்பற்றும் போர்த்திறமையை அறிமுகப்படுத்தினார் (2 சாமு 20:15). இவ்வாறு கைப்பற்றப்பட்ட எருசலேம் என்ற எபூசியரின் கோட்டையைத்தான் தாவீது பிற்காலத்தில் தன் தலை நகராகப் பயன்படுத்தினார்.

இ) கூலிப்படைகள்: சவுலால் நிலையான ஓர் அரசை ஏற்படுத்த முடியவில்லை. சவுலின் தவறுகளை எல்லாம் தாவீது கண்டுபிடித்து, அவற்றை நிவர்த்தி செய்து ஒரு நிலையான அரசை அமைக்க கூலிப்படைகளை அமர்த்தினான். இந்தக் கூலிப்படையில் பிறநாட்டவரும் இருந்தார்கள். அவர்களுக்கு அரசாங்கக் கூலி கொடுக்கப் பட்டதால் அவர்கள் தாவீதோடு மட்டுமே உடன்பாடு கொண்டிருந்தார்கள். அவர்கள் தாவீதின் மெய்க்காப்பாளர்களாகவும், தாவீதின் இல்லக் காவலர்களாகவும், நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பவர்களாகவும் இருந்தார்கள். இந்தக் கூலிப்படையில் அதிகமான பெலிஸ்தியர்கள் இருந்தார்கள். தாவீதுக்கு எதிராக அவரதுமகன் அப்சலோம் கிளர்ச்சி செய்தபோது, தாவீதின் மகுடத்தைக் காப்பாற்றியவர்கள் இந்தக் கூலிப்படைகளே. தாவீதின் அரச மரபில் கூலிப்படைகளை வைத்திருப்பது நிலையான ஒரு வழக்கமாக பிற்காலத்தில் மாறிவிட்டது. ஆனால் வடக்கு அரசில் படைகளால் ஆட்சியும் கிளர்ச்சியும் ஆட்சியின் கூறாகிவிட்டன.

ஈ) குதிரை, தேர்ப்படைகள்: தாவீது படையில் எத்தனையோ மாற்றங்கள் செய்தாலும் எல்லாமே காலாட்படையாக மட்டுமே இருந்தன. இஸ்ராயேலின் வரலாறு முழுவதும் காலாட்படையே அதிகமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. காரணம், பாலஸ்தீனிய மலைப்பகுதிகளில் குதிரைப்படைகளை வைப்பது வசதிக்கு ஏற்ற ஒன்றாக இல்லை. அரமேயச் சமவெளியைக் கைப்பற்றி பேரரசாக மாறியபிறகு, இந்த வகைப்படைகளின் தேவை ஏற்பட்டது. இந்த வகைப்படைகள் சாலமோன் மன்னனால் அறிமுகப்படுத்தப்பட்டன. பெலிஸ்தியர்களும், சீரியர்களும் தேர்ப்படையில் சிறந்து விளங்கியதால் (1 சாமு 13:5; 2 சாமு 1:6), இந்த வகைப் படைகளைப்பற்றி நிச்சயமாக தாவீதுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும்; ஆனால், அவர் விவேகத்தோடு அதை ஒதுக்கிவிட்டார். ஆனால் அவரது மகன், செலவு மிகுந்த, இந்த வகைப் படையை அறிமுகப்படுத்தியது (1 அர 10:26) நாட்டின் பிளவுக்கு ஒரு காரணமாக இருந்தது. பிற்காலத்தில் இஸ்ராயேலின் அரசர்கள் தேர்களையும், குதிரைப்படைகளையும் கைவிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. உண்மையைச் சொல்லப்போனால், எசேக்கியாவிடம் குதிரை வீரர்களே இல்லை என்று சொல்லலாம் (2 அர 18:23).

வடக்கு அரசில் குதிரைகளும் தேர்களும் படைகளில் ஒரு பிரிவை வகித்தன. 3-ஆம் சல்மனேசரின் ஏட்டின்படி ஆகாபு, அசீரியர்களுக்கு எதிரான கிளர்ச்சியில் சீரியக்

கூட்டணிக்கு 2000 தேர்களையும், 10,000 காலாட்படையினரையும் கொடுத்தார்.

உ) படை பராமரிப்பு: தாவீதின் காலத்திற்கு முன்பு படைவீரர்களே தங்களது ஆயுதத்தையும் உணவையும் கவனித்துக் கொள்ள வேண்டும் (1 சாமு 17:17-18). பிறநாட்டில் படையெடுத்துச் செல்லும் போது அங்குள்ள பொருட்களைக் கொள்ளையிட்டு பராமரிப்புச்செலவுக்குப் பயன்படுத்தினார்கள். சாதாரண இஸ்ராயேல் குடிமகன் இயற்கையிலே படையில் உள்ள சட்டதிட்டங்களோடு ஒத்துப் போகும் தன்மையுள்ளவன் அல்லன். எனவே, வெளிநாட்டுக்காரர்களைக் கூலிப்படையாக வைப்பதில், மன்னருக்கு எந்த விதப் பிரச்சனையும் இருக்கவில்லை.

ஊ) படை உருவாக்கம்: இஸ்ராயேலின் போர் அதிகாரிகளைப் பற்றியும் படையின் அமைப்பு பற்றியும் மிகக் குறுகிய குறிப்புகளே உள்ளன. பழைய ஏற்பாட்டில் 1000, 100, 50 என்று படைவீரர்களைப் பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தலைவனை நியமித்தது என்று குறிப்பிடுகிறது. ஆனால், இந்த எண்ணிக்கை ஒரு முழுமையைக் குறிக்கவே குறிப்பிடப் பட்டுள்ளனவே அன்றி, அவை உண்மையான எண்ணிக்கை அல்ல.

3. நாடு கடத்தப்பட்டுத்திரும்பிய பின்பு: பாலஸ்தீன அரசுகளின் அழிவுக்குப் பின்பு, இஸ்ராயேலியப் படையானது அழிவுற்றது. நாடு கடத்தப்பட்டு கி.மு. 538-இல் திரும்பி வந்தபின்பு அவர்கள் ஒரு பாரசீக மாகாணமாகத் திகழ்ந்தனர். மக்கபேயர் தலைமையில் அவர்கள் போராட்டம் தொடங்கும்வரை அவர்களிடம் படையே இல்லை. அவர்களிடம் சீரமைக்கப்பட்ட படை இல்லை. மாறாக மறைந்திருந்து தாக்க பயிற்சி பெற்ற வெறும் கூட்டம் மட்டுமே இருந்தது. பிற்காலத்தில் அசமோனியர்கள் யூதர் மற்றும் புறவினத்தார் ஆகியோரைக்கொண்ட நிலையான படையை நிறுவினார்கள். யோவான் இரிக்கானுதான் போர்வீரர்களை வாடகைக்கு அமர்த்தும் பழக்கத்தைக் கொண்டு வந்ததாக யோசிப்பசு குறிப்பிடுகிறார்.

அசமோனிய அரசு கி.மு. 63-இல் அழிவுற்றபோது, பாலஸ்தீனம் உரோமையரின் ஆட்சியின் கீழ் வந்தது. உரோமையரின் சிற்றரசனாக விளங்கிய பெரிய ஏரோது, தனது படைகளை உரோமையிடமே ஒப்படைத்திருந்தான்; அவர்கள் படை அமைப்பையும் பின்பற்றினான். ஏரோதின் கூலிப்படையில் பலநாட்டவர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இது யூதர்களுக்கு ஏரோதிடமிருந்த வெறுப்பை அதிகரித்தது.

படைக்கருவிச்சாலை (ARMUORY)

போருக்கான ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கும் இடமே படைக்கலச்சாலை. எரே 50:25; நெகே 3:19, ஆகிய இரண்டிலும் ஆயுதங்கள் குவித்து வைத்திருக்கும் இடம் பற்றிக்கூறப்படுகிறது. நிலையான படை இருந்ததால் படைக்கலங்களைச் சேகரித்து வைக்க வேண்டியது அவசியமாகியது. சாலமோன் லெபனானின் காடுகளில் இத்தகையதொரு "வீட்டையே" கட்டினார் எனத்தெரிகிறது (1 அர 7:2; காண். 10:16-17 எசா 22:8). அத்தலியா ஆண்டபோது ஆலயமே ஆயுதக்கிடங்காகப் பயன்பட்டது (2 அர 11:10). எசேக்கியாசு ஆண்ட காலம் வரை எருசலேமில் ஆயுதக்கிடங்கு இருந்தது (2 அர 20:13; எசா 39:2). எருசலேம் சுவரைக் கட்டியெழுப்பும்போது இச்சொல் இடக்குறிப்பாகப் பயன்பட்டது (நெகே 3:19).

படைக்கலம் தாங்குபவன், பரிசையன் (ARMOR BEARER)

போர்த்தளபதிக்கு உதவியாக அவனது ஆயுதங்களைச் சுமந்து செல்பவன். தொடக்ககாலத்தில் மட்டுமே இவர்களைப் பற்றிக் கூறப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் அபிமெலக்கு (நீதி 9:54), யோனத்தான் (1 சாமு 14), சவுல் (1 சாமு 31), யோவாபு (2 சாமு 18:15; 23:37; 1 நாள் 11:39) ஆகிய இவர்களுக்கு இவர்களது ஊழியர்கள் ஆயுதங்களைச் சுமந்து சென்றனர். யோனத்தான்

வீழ்த்தியவர்களை அவனது ஆயுதம் சுமக்கும் ஊழியன் கொன்றான் (1 சாமு 14:13). அபிமெலக்கும், சவுலும் தாங்கள் எதிரியினால் பிடிபடாது இருக்க தங்களைக் கொல்லுமாறு இவ்வூழியர்களிடம் கேட்டுக் கொண்டனர் (நீதி 9:4; 1 சாமு 31:4; 1 நாள் 10:45). இத்தகைய ஊழியர்கள் தங்கள் தலைவர்களிடம் மிகுந்த பற்றுறுதியுடையவர்களாகவும் (1 சாமு 31:5), ஆபத்தான காரியங்களில் தலைவருடன் செல்பவர்களாகவும் இருந்தனர் (1 சாமு 14:6 தொ). ஒரு குறிப்பிட்ட காலத்திறக்குத் தாவீதைச் சவுல் தனது ஆயுதம் சுமப்பவனாகத் தேர்ந் தெடுத்ததாகக் கூறப்படுகிறது (1 சாமு 16:21). யோவாபின் பரிசையனான பெயரோத்தின் நகுராய் தாவீதின் 30 வலிமை மிக்க வீரர்களுள் ஒருவன் (2 சாமு 23:37; 1 நாள் 11:39).

படைத்தலைவர் (GENERAL, CAPTAIN, MARSHAL, TRIBUNE)

இது பல எபிரேயச் சொற்களின் மொழி பெயர்ப்பாகும். சீசரா (நீதி 4:7), யோவாபு (1 நாள் 27:34), மத்தத்தியாவின் மகன் யோனத்தான் (1 மக் 10:65) ஆகியோர் படைத்தலைவர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் படையின் தளபதிகள் எனலாம். இச்சொல் திருவெளி 6:15-இல் தெளிவில்லாமல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

படைத்தலைவர்களுள் காவலர் தலைவனும் (ஆதி 40:3-4), தேர்ப்படைத்தலைவனும் (1 அர 22:31தொ), ஆயிரத்தவர், நூற்றுவர், ஐம்பதின்மர் தலைவர்களும் (எண் 31:48; 2 அர 19தொ), அரசனுக்குப் பக்கபலமாயிருந்த அதிகாரியும் (2 அர 7:217.19; யோவா 18:12; காண்க. அ.ப. 21:31.36; திரிப்யூன்), கோவில் காவல் தலைவரும் (லூக் 22:4.52; அ.ப. 4;1; 5:24.26) குறிக்கப்படுகின்றனர்.

போர் வீரர்களைக் கணக்கெடுப்பதற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகளும் படைத்தலைவர்கள் என்று குறிக்கப்படுகின்றனர் (நீதி 5:14; 1 மக் 5:42). இத்தகைய அதிகாரியின் செயலன் 2 அர 25:19-இல் குறிக்கப்படுகிறான். பாபிலோனுக்கு எதிரான போர்த்தயாரிப்பில் இத்தகைய "தானைத்தலைவனை ஏற்படுத்துவதும்" (எரே 51:27) குறிக்கப்பட்டுள்ளது.

படைத்திரளின் ஆண்டவர் (LORD OF HOSTS, HOST OF HEAVEN)

பழைய ஏற்பாட்டிலே இஸ்ராயேலரின் கடவுள் படைத்திரளின் ஆண்டவர் எனப்பட்டார் (ஏசா 47:4; 51:15; எரே 10:16; 31:35; ஆமோஸ் 5:27). ஏனெனில், இதுவே அவருடைய சொந்தப்பெயர். இது கடவுளின் வரலாற்றில் மேலாண்மையான வல்லமையையும், மகிமையையும் குறிக்கும். ஆனால், படை என்பதற்குப் பொருள் தெளிவாக இல்லை.

எபிரேய வார்த்தையான சாபா என்ற சொல்- போருக்குத் தயாராக நிற்கும் படையைக் குறிக்கும். இஸ்ராயேலில் எப்போதும் உள்ள படைவீரரைத் தவிர பொது மக்களிடையே இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட படையை இது குறிக்கும். இது பிற்காலத்தில் எழுந்த ஒரு பெயர். இதுபழைய ஏற்பாட்டிலே அங்குமிங்குமாக 284 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பாக எசாயா, எரேமியா, ஓசேயா, ஆமோஸ், மீக்கா, செப்பனியா, ஆகாய், மலாக்கி ஆகியோரின் இறைவாக்கு நூல்களில் இது காணப்படுகிறது. சக்திகள் அனைத்தும் ஆண்டவருடையது என்பதை இது குறிக்கிறது.

வானுலகப் படை என்பது இஸ்ராயேலரின் படையையோ, வானதூதர்கள் அல்லது விண்ணக உயிர்களின் படைகளையோ, விண்ணுலகம் அல்லது மண்ணுலகம் சார்ந்த எல்லா அண்டச்சக்திகளையோ குறிக்கும் எனச் சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலரின் கருத்துப்படி கடவுள்தான் இஸ்ராயேலின் படைகளின் ஆண்டவர் என்பதைக் காட்டுவதற்காக எழுந்த தொடர் எனக் கருதப்படுகிறது.

வானுலகப்படை என்பது கி.மு. 8-ஆம்

நூற்றாண்டிற்குப் பின் வந்த சுவடிகள் மட்டுமே காணப்படுகிறது. எனவே, இஃது இஸ்ராயேலர் வழிபட்ட வானுலகத் தேவர்களையே குறிக்கும். எனவே, இது வானதூதர்களைக் குறிக்காது எனவும் கருதப்படுகிறது (யோசு 5:14, நீதி 5:20). இந்தப்பகுதியும் பிற்காலத்திலேயே சேர்க்கப்பட்டதாகக் கருதப்படுகிறது (யாத் 7:4; 12:41). எனவே, அறிஞர்களின் கருத்துப்படி முதன் முதலில் யாவே, இஸ்ராயேலின் படைகளின் கடவுள் எனப்பட்டு வந்த வழக்கே பின்பு இஸ்ராயேலின் கடவுள் படைத்திரளின் ஆண்டவர் என வடிவெடுத்தது எனக் கருதப்படுகிறது. எனவே, இந்த இரு வழக்குகளும் ஒரே பொருளையே கொண்டவை.

படைப்பிரிவுகள் (LEGION, COHORT, CENTURIES)

உரோமைப்பேரரசின் முதன்மையான படை அளவு, படை (Legion) என்றழைக்கப்பட்டது. ஒவ்வொரு படையிலும் வீரர்களின் எண்ணிக்கை வேறுபட்டது. ஒவ்வொரு படையிலும் சராசரி 5000 காலாட்படையினரும், 1200 குதிரை வீரர்களும் இருந்தனர். ஒவ்வொரு படையும் பத்துப்படைப்பிரிவுகளாக (Cohort, bathalion) அமைக்கப்பட்டது. ஒவ்வொரு படைப்பிரிவிலும் ஏறக்குறைய 600 வீரர்கள் இருந்தனர். ஒரு படைப்பிரிவு 6 நூற்றுவர் படையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. படையின்மேல் உரோமைப் பிரதிநிதியும் (Legate) படைப்பிரிவின்மேல் படைத்தலைவனும் (Tribune), நூற்றுவர் படைக்கு நூற்றுவர் தலைவனும் (Centurion) தலைமை தாங்கினர். கிறிஸ்தவசகாப்தத் தொடக்கத்தில் உரோமைப் பேரரசில் இருபது முதல் முப்பது படைகள் இருந்தன.

நேரடியாகப் போரில் ஈடுபடும் படையைத் தவிர்த்து உதவிப்படைகளும் இருந்தன. இதில் ஒவ்வொரு படைப்பிரிவிலும் சராசரியாக 700 காலாப்படையினரும், 240 குதிரைவீரர்களும் இருந்தனர். இப்பிரிவு படைத்தலைவனால் நடத்தப்பட்டது. எருசலேமில் இருந்த அந்தோனியாக் கோட்டை போன்ற மாகாணக்கோட்டைகளில் இத்தகைய உதவிப் படைகள் தங்கியிருந்தன. புதிய ஏற்பாட்டில் குறிக்கப்படும் படைப்பிரிவுகள் (மத் 27:27 இணை; அ.ப. 10:1; 21:31; 27:1) உதவிப்படையைச் சேர்ந்தவையாகத் தெரிகின்றன.

மாற் 5:9.15இணை ஆகிய பகுதிகளில் வரும் "படை" என்ற சொல் உருவகமாகப் பெரும் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. தீய ஆவிகளின் கூட்டத்தை மட்டும் குறிக்கப்பயன்பட்டுள்ளது. மத் 26:53-இல் படைப்பிரிவினர் குறிக்கப்படுகின்றனர்.

படைப்பு (CREATION)

பழைய ஏற்பாடு:

I. விண்ணகத்தையும், மண்ணகத்தையும் படைத்தவர்:

பண்டைய இஸ்ராயேலர் இறைவனை, உலகம் மற்றும் மனிதனைப் படைத்தவர் என்பதைவிட, இஸ்ராயேலின் மீட்பர் மற்றும் உடன்படிக்கையின் காரணர் என்று கருதுவதிலேயே பழக்கப்பட்டிருந்தனர் என்னும் எண்ணத்தைத் தொடக்ககால விவிலிய இலக்கியம் அளிக்கிறது. ஆயினும், படைப்பு பற்றிய கருத்தானது இஸ்ராயேலின் தொடக்க நாட்களுக்கே செல்கிறது என்பது உறுதி. உண்மையில், படைப்பு பற்றிய கருத்தானது ஆபிரகாமின் காலத்திற்கு முன்னரே, விவிலிய வெளிப்பாட்டினுடைய மேற்காகியச் சூழ்நிலையில் இருந்து வந்தது. எகிப்தில் படைப்பு பற்றிய அத்துமின் வர்ணனையானது பிரமீடுகளின் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். மெசபொத்தாமியாவில், சுமேரிய மரபுகளைச் சார்ந்து, படைப்பு பற்றிய பல்வேறு விவரங்களை அளிக்கின்ற அக்காதிய வாசகங்கள் உள்ளன. உகாரித்தில், உயர்ந்த தெய்வமாகிய ஏல் "படைப்புகளின் படைப்பாளர்" என்று அழைக்கப்பட்டார். சந்தேகத்திற்கிடமின்றி, இந்த மூன்று விவரிப்புகளிலும் உலகின் தோற்றமானது பல தெய்வக்கருத்துகளுடன்

இணைந்துள்ளது. மெசபொத்தாமியாவில், படைப்பானது தெய்வங்களுடைய போரின் ஒரு பகுதியாகும். இப்போரை, இதிகாசக் காலத்தின் தொடக்கத்தில் நடந்ததாகக் கருதியது. ஆயினும் இப்புராணங்கள், இஸ்ராயேலுக்கு அன்னியமாக இருக்க முடியாத, முன்னீடுபாடுகளுக்கும் கருத்துக்களுக்கும் சான்றுபகர்கின்றன.

யாவே என்னும் இறைபெயரானது "இருக்கச்செய்பவர்" அதாவது "படைப்பாளர்" என்னும் காரணப்பொருளைக் கொண்டிருந்தது என்பது ஒரு கருதுகோளாகும். ஆனால், ஆதியாகமமானது, ஒரு முக்கிய குறிப்பை அளிக்கின்றது. மெல்கி செதேக்கு ஆபிரகாமை "விண்ணுலகையும் மண்ணுலகையும் தோற்றுவித்த உன்னதக் கடவுளால்" ஆசீர்வதிக்கிறார் (ஆதி 14:19). இதே சொற்றொடர் பெனிகிய ஏடுகளில் காணப்படுகிறது. பின்னர் ஆபிரகாமே தனது சாட்சியாக "விண்ணுலகையும் மண்ணுலகையும் தோற்றுவித்த உன்னதக் கடவுளை" ஏற்கிறார் (ஆதி 14:22). இவ்வாறு, இத்தெய்வத்தின் பண்புகளை மாற்றியமைத்த பலதெய்வக்கோட்பாட்டுக்கு அப்பாற்பட்டு, மூதாதையர்கள், சாலேம் அரசனின் படைப்புக்கடவுளில் தங்களுடைய இறைவனையே கண்டடைகின்றனர்.

II. படைப்புபற்றிய விவிலிய விவரிப்பு:

படைப்பு பற்றிய இணைந்து முழுமையாகவல்ல இரு விவரிப்புகளுடன் ஆதியாகமம் தொடங்குகின்றது. நோவா, ஆபிரகாம் மற்றும் மோசே ஆகியோருடனான உடன்படிக்கைக்கு முன்னுரையாக அவை அங்கே அமைக்கப்பட்டுள்ளன; அல்லது இதைவிட இறைவனுடைய நன்மைத்தனத்தின் பல்வேறு வெளிப்பாடுகளுக்கும் மனிதனுடைய பிரமாணிக்கமின்மைக்கும் இடையிலான நாடக வினைவெதிர் விளைவுத்தொடர்பைத் தொடங்குகிற மீட்பு வரலாற்றில் முதல் அங்கமாக உள்ளது எனலாம்.

1. காலத்தால் முந்திய விவரிப்பு (ஆதி 2:4-25):

இது முதல் மனித தம்பதியின் படைப்பு மற்றும் அவர்களது உடனடியான சுற்றுச் சூழல்கள் பற்றி முதன்மையான அக்கறை கொண்டுள்ளது. மண்ணுலகம் பயனளிப்பதாய் இருப்பதற்கென இறைவன் நிலத்தினின்று நீரை வெளிக்கொணர்கிறார். பேரின்பவனமாக ஏதேன் தோட்டத்தை அங்கு அவர் அமைக்கிறார். பின்னர், நிலத்தின் மண்ணினின்று மனித உடலையும், விலங்குகளின் உடல்களையும் உருவாக்குகிறார். அதன் பின்னர், மனிதனின் உடலினின்று பெண்ணை உருவாக்குகிறார். இவ்வாறாக, இருக்கின்ற அனைத்தும் இறைவனுடைய சொந்த தனிப்பட்ட செயலின் விளைவேயாகும். மேலும் விவரிப்பானது, மனித கைவினைஞர் முறையில் இறைவன் பணிபுரிவதைக் காட்டி தனக்கேயுரிய முறையில் இச்செயலின் உறுதியான சிறப்புப்பண்புகளை வலியுறுத்துகிறது. ஆனால் இறைவனின் செயல் முழுமையாக நிறைவடைந்துள்ளது. ஏனெனில், விலங்குகள் தனக்குப் பணிபுரிகின்ற நிலையிலும், தனது மற்றொரு நிலையாகிய பெண் துணையாக இருக்கும் நிலையிலும், மகிழ்ச்சியோடு வாழ மனிதன் படைக்கப்பட்டுள்ளான். தன் தொடக்கத்தில் நல்லதாய் இருந்த உலகில் பாவம் மட்டுமே சீர்குலைவையும் சாபத்தையும் உட்புகுத்தும்.

2. குருக்கள் பாரம்பரிய விவரிப்பு (ஆதி 1):

இஃது ஒரு கம்பீரமான அமைப்பைக் கொண்டுள்ளது. தொடக்கத்தில் இறைவன் மூலக் குழப்பத்தினின்று உலகை (விண்ணையும் மண்ணையும்) வெளிக்கொணர்ந்தார் (ஆதி 1:1). பின்னர், உலகிற்குச் செழிப்பையும் அழகையும் அளிக்கின்ற அனைத்தையும் அவர் வெளிக்கொணர்கிறார். இந்த விவரிப்பின் ஆசிரியர் படைப்பின் அமைப்பினால், சிறப்பாக அதனுடைய வேறுபட்ட பகுதிகளுக்கிடையிலான வேறுபாடு, விண்மீன்களின் முறையான இயக்கம்,

இனப்பெருக்க விதிகள் ஆகியவற்றால் பெரிதும் கவரப்படுகிறார். இவை அனைத்தும் படைத்தவரின் செயலாகும். தனது வார்த்தையின் வல்லமையாலேயே அவர் அனைத்தையும் அவற்றிற்குரிய இடத்தில் அமைத்தார் (சங் 148:5). இந்தச் செயலின் உச்ச கட்டமானது, இறைவனுடைய "உருவிலும் சாயலிலும்" இருப்பவரும், உலகை ஆள வேண்டிய வருமானவரின் படைப்பாகும். இறுதியாக அவரது வேலை முடிவடைந்தவுடன் இறைவன் ஓய்வெடுத்தார். இவ்வாறு ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதனை ஓய்வுநாளாக நிர்ணயித்தார். இந்த இறுதிக் கூறு மனிதனுடைய வாழ்விற்கு வாரத்தினுடைய புனித ஒழுங்கியல்பை அளித்தது. இந்த இயல்பானது படைப்பினுடைய இம்மைக்குரிய அமைப்பைச் சார்ந்ததாகும். இவ்வாறாக, இறைவனுடைய படைப்புச் செயலானது அனைத்து மனிதப் பணிக்கும் மாதிரியாக உள்ளது.

இந்த இரண்டாம் விவரிப்பானது பாபிலோனிய மரபுகளுடன் சில பொதுவான கூறுகளைக் கொண்டுள்ளது. பாதாளத்தின் மீதான வெற்றி, மேல் மற்றும் கீழ் நீரைப்பிரித்தல், விண்மீன்களைப் படைத்தல் போன்றன இவை. ஆனால், ஆதியாகமத்தின் இந்த அதிகாரத்தில் புராணத்தின் எச்சுவடும் இல்லை. இறைவன் தன்னில் மட்டுமே திட்டமிட்டு, தனியாகச் செயல் புரிகிறார். குழப்பத்தின் மீதான அவரின் வெற்றியானது உண்மையான போராட்டத்தின் விளைவன்று. பாபிலோனிய தியாமாத்தைப் போன்று பாதாளமானது ஒரு தீய தெய்வமன்று. இறைவன் தோற்கடிக்கின்ற அல்லது சிறைப்படுத்துகின்ற கோர விலங்குகளோ, பூதங்களோ, எதுவுமே அங்கு இல்லை. படைப்பு என்பது எல்லாம் வல்ல இறைவனால் தன்னியலாகத் தொடங்கப்பட்ட செயலாகும். அவர் ஒரு திட்டத்தின்படியும், அவரது சாயலாக அவர் படைத்த மனிதனின் நன்மைக்காவும் செயலாற்றுகிறார்.

3. **விவிலியப்** பாரம்பரியம்: இவ்விவரிப்பில் எடுத்துக்காட்டப்பட்ட படைப்பு பற்றிய தோற்றக்கருத்தானது, விவிலிய விவரிப்புகள், தங்களுடைய இன்றைய வடிவை ஏற்பதற்கு முன்னரே இஸ்ராயேலின் சிந்தனையைக் கட்டுப்படுத்தியன என்பதாம். சிலைகளுக்கெதிரான தங்களுடைய வாதங்களில் இறைவாக்கினர்கள் படைப்பு பற்றிய இக்கருத்திற்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். யாவே உலகைப் படைத்தவராக உள்ள நிலையில் (ஆமோ 4:13; 5:8-9; 9:5-6; எரே 10:6-16; எசா 40:21-26) இந்தச் சிலைகள் மனித கரங்களின் உயிரற்ற படைப்புகளாகவும், காப்பாற்ற வல்லமையற்றவையாகவும் உள்ளன (எரே 10:1-5; எசா 40:19-20; 44:9-20).

நாடு கடத்தப்பட்ட பின்னர், படைப்பு பற்றிய இறையியல் சிந்தனையை ஞானிகள் மேம்படுத்துகின்றனர். பழமொழிகளின் தொகுப்பாளர், இறைவன் உலகை ஞானம், விவேகம், அறிவாற்றல் ஆகியவற்றுடன் படைத்தார் என்பதை வலியுறுத்திக் கூறுவதுடன் திருப்தியடையாமல் (பழ 3:19-20; சங் 104:24), முதல் தொடக்கத்தில் இறைவன் உருவாக்கிய முதல் செயலாக ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானத்தைப்பற்றிக் கூறுகிறார் (பழ 8:22-24). எல்லாப் பொருட்களும் படைக்கப்பட்ட போது, தலைமை வினைஞனாகச் செயலாற்றி, ஞானம் அங்கே இருந்தது (பழ 8:24-30). மனிதரின் தோழமையில் இன்பம் அடைவதற்கு முன் அஃது உலகின் இன்பம் கண்டது (பழ 8:31). சீராக்கு இந்தக் கோட்பாட்டினால் வலுவூட்டப்பெற்றார். மற்ற அனைத்திற்கும் முன்னால் ஞானமானது படைக்கப்பட்டதென்ற உண்மையை அவரும் வலியுறுத்துகிறார் (சீரா 1:9; 24:9). அவ்வாறே ஞான நூலானது ஞானத்தை உலகின் கைவினைஞராகக் கண்டது (ஞான 8:6; 9:9). இஃதோடு நெருங்கிய தொடர்புடைய எண்ணத்தை, படைப்பினை ஆட்தன்மைப் படுத்தப்பட்ட வார்த்தைக்கும் இறைவனின் ஆவிக்கும் சாற்றிக்கூறும் சங்கீதங்களின் ஆசிரியர்களில் காண்கிறோம் (சங் 33:6; 104:30;

யூதி 16:14). இந்தப் புதிய அனுபவ எல்லை, வார்த்தை மற்றும் தூய ஆவியினுடைய வெளிப்பாட்டிற்கு முக்கிய பாயிரமாக உள்ளது.

இறுதியாக, கிரேக்க காலத்தில், வெறுமையினின்று படைக்கப்பட்ட உலகைப்பற்றிய வெளிப்படையான கருத்தை நாம் அடைகிறோம். "விண்ணையும் மண்ணையும் அவற்றிலுள்ள அனைத்தையும் பார். இவை யாவற்றையும், மனிதகுலத்தையும் கடவுள் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கினாரென்று கண்டறிவாய்" (2 மக் 7:28). அக்காலத்தில் படைப்பின் இறையியலானது யூதரின் காப்புரைகளில் இடம் பெற்றிருந்தது. இறைவனைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களையும் தெய்வங்களாகக் கொண்ட புறவின உலகை எதிர்கொண்ட நிலையில், இஸ்ராயேலானது, தமது செயல்களின் மூலமாகத் தம்மைப்பற்றிய காட்சித்துணுக்கு களை அளிக்கின்ற இறைவனின் உயரிய நிலையை வலியுறுத்துகிறது (ஞான 13:1-5).

III. இறைவனின் திட்டத்தில் படைப்பு:

1. படைப்பும் வரலாற்றும்: படைப்பின் மீதான பழைய ஏற்பாட்டின் ஆர்வமானது, பொருட்களின் தொடக்கத்தினுடைய பிரச்சனையை ஆராயும் மனித அவாவைத் தூண்டும் பொருளைச் சார்ந்ததன்று. பழைய ஏற்பாடானது படைப்பில் எல்லாவற்றிற்கும் மேலாக இறைத் திட்டத்திற்கும், மீட்பின் வரலாற்றிற்குமான தொடக்க நிலையைக் காண்கிறது. இஸ்ராயேலின் வரலாறு முழுவதும் தொடருகின்ற உயரிய இறைசெயல்களில் முதன்மையானது படைப்பாகும். படைக்கும் வல்லமையும் வரலாற்றின் ஆதிக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. உலகின் படைப்பாளர் மற்றும் தலைவர் என்ற நிலையில், உலகின் மீதான தமது திட்டத்தைச் செயல்படுத்த யாவே, நெபுகத்னேசரையோ (எரே 27:4-7), சைரசையோ (எசா 45:12-13) தேர்ந்தெடுக்கலாம். அவரைச்சார்ந்து நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. உயர்வு நவிற்சியற்ற முறையில் அவரே அவற்றைச் செய்கிறார் (எசா 48:6-7). அவரால் உருவாக்கப்பட்டு அமைக்கப்பட்ட இறைமக்களின் மீட்பு (43:16-19) முதலான, இஸ்ராயேலின் ஊழை வடிவமைக்கின்ற உயரிய நிகழ்ச்சிகளில் இது சிறப்பானமுறையில் உண்மையாக உள்ளது. இக்காரணத்திற்காக சங்கீத ஆசிரியர்கள், புனித வரலாற்றின் மீதான தங்களது சிந்தனையில், இறைவனுடைய புதுமைகளின் தகுதியான காட்சியைச் சித்தரிக்க விரும்பி படைப்பின் வியப்புக்குரியவைகளுடன் இந்தப் பெரும் நிகழ்ச்சிகளைச் சேர்க்கின்றனர் (சங் 135:5-12; 136:4-26).

முற்கூறப்பட்ட பின்னணியின் சூழ்நிலையில், இறைவனுடைய படைப்புச் செயலானது பண்டைய மேற்காசிய புராண கருத்துக்களால் உருக்குலைக்கப்படுவதினின்று முழுமையாகத் தப்புகிறது. இனிமேல் முதல், புனித ஆசிரியர்கள், நஞ்சு நீக்கப்பட்ட பழைய புராணங்களிலிருந்து உருவங்களைப் பெற்று, கவிதைநடையில் படைப்பைப்பற்றி பாதுகாப்பாக எடுத்துக் கூறலாம். குழப்பத்தின் உருவகமாகிய இராகாபு மற்றும் லேவியாத்தான் முதலிய விலங்குகளுக்கு எதிரான மாபெரும் போராட்டத்தில் படைத்தவரே நாயகனாகிறார். இறைவன் இந்தக்கொடிய விலங்குகளை நசுக்கி (சங் 89:11), ஊடுருவக்குத்தி (எசா 51:9; யோபு 26:13) துகள்களாக நொறுக்கினார் (சங் 74:13). ஆயினும் அவை இறுதியாக அழிக்கப்படாமல், மௌனப்படுத்தப்பட்டு (யோபு 3:8), சிறைப்படுத்தப்பட்டு (7:12; 9:13), கடலுக்குள் அமிழ்த்தப்படுகின்றன (சங் 104:26). இச்சொற்களில் படைப்பானது இறைவனின் முதல் வெற்றியாக உள்ளது. அதே உருவங்களால் விவரிக்கப்படக்கூடிய வரிசையான போராட்டங்கள் வரலாற்றில் அதனைத் தொடர்ந்து வந்தன. யாத்திரையானது பாதாளத்தின் மீதான புதிய வெற்றியாக இருக்காதா (எசா 51:10)? அடையாளங்களின் தலையீட்டின் மூலமாக, வரலாற்றிலான இறைவனின் செயல்களை

அவரது முதல் பெரிய செயலுடன் ஒப்பிடுவது தொடர்ந்து நிகழ்கின்றது.

2. மீட்பு புதிய படைப்பும்: புனித வரலாறானது இக்காலத்தோடு நின்றுவிடாமல், இறைவாக்கு இறுதிக்கால இயல் சித்தரிக்கும் முடிவை நோக்கி நகர்கிறது. இறுதியான மீட்பின் பொருளைத் துல்லியமாகப் புரிந்துகொள்ள, இறைவனுடைய படைப்புச்செயலை நாட வேண்டும். இஸ்ராயேலின் மனந்திரும்புதலானது உண்மையான மறுபடைப்பாக இருக்கும். "ஆண்டவர் விந்தையான ஒன்றை உலகில் படைத்துள்ளார்; ஒரு பெண் தன் கணவனைப் பாதுகாக்கிறாள்" (எரே 31:21). அவ்வாறே எதிர்கால மீட்பானது (எசா 45:8) புதிய யாத்திரையின் அற்புதங்களோடு நிகழும் (41:20). புதிய எருசலேமில் மக்கள் இன்பவனத்தின் மகிழ்ச்சியை அனுபவிப்பர் (65:18). உலகில் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் நிலைத்த தன்மையானது, வரவிருக்கும் புதிய அமைப்பானது நீடித்திருக்கும் என்பதற்கான உறுதியான அறிகுறியாகும் (எரே 31:35-37). இறுதியாக உலகம் முழுவதும் அனைத்துப் பொருட்களின் முழுப் புதுப்பித்தலில் பங்கு பெறும். ஏனெனில், யாவே புதிய விண்ணுலகையும், புதிய மண்ணுலகையும் படைப்பார் (எசா 65:17; 66:22-23). மனிதனுடைய பாவத்தினால் திறக்கப்பட்ட நீண்ட இடைவெளிக்குப் பின், அவரது மூலப்படைப்பின் நிறைவுடன் இறைவனுடைய திட்டத்தின் முடிவு சேர்க்கப்பட்டதன் கம்பீரமான கருத்தாகும் இது. படைத்தல் என்னும் வெளிப்படையான சொல்லை எசேக்கியேல் உபயோகிப்பதில்லை. ஆனால், மனிதனை ஏதேனின் மகிழ்ச்சிக்கு மீண்டும் அறிமுகப் படுத்துவதற்கென இறுதிக்காலங்களில் ஆண்டவர் மனிதனின் இதயம் மாற்றுவதைக் காட்டும்போது, மேலே கூறப்பட்டதற்கு அவர் நெருங்கி உடன்படுகிறார் (எசே 36:26-35; 11:19). எனவே, தன்னில் "தூயதோர் உள்ளத்தைப்படைத்தருள" இறைவனை இறைஞ்சுவதற்கென சங்கீத ஆசிரியர் இந்த வாக்குறுதியினை நம்பியுள்ளார் (சங் 51:12). இவ்விதம் தன்னையே புதுப்பித்தலில், இயேசு கிறிஸ்துவில் அமைக்கப்பட வேண்டிய புதியபடைப்பின் உறுதியான எதிர்பார்த்தலை அவர் சரியாக வலியுறுத்துகிறார்.

IV. படைத்தவர் முன் மனிதன்:

1. மனிதனுடைய இக்கட்டான நிலை: படைப்பு பற்றிய விவிலியக் கோட்பாடானது ஊகமான அல்லது கருத்தியலான இறையியலாக இல்லாமல், ஆன்மீக எதிர்ச்செயலைக் கோரும் சமய உணர்வாக உள்ளது. படைப்பின் மூலமாக மனிதன் படைத்தவரைக் கண்டுபிடித்து (ஞான 13:5), வியப்பு மற்றும் நன்றியின் ஆழ்ந்த உணர்வுகளுக்கு நடத்திச்செல்லப்படுகிறான். சில சங்கீதங்களில் படைப்பினுடைய அழகின் மீதான சிந்தனையானது உற்சாகமான புகழ்ச்சிக்கு நடத்திச்செல்கிறது (சங் 19:1-7; 89:6-15;104). மற்ற இடங்களில் இறைவனுடைய வியத்தகு செயல்களில் தோன்றுகின்ற இறை மாட்சிமையால் மனிதன் திணற அடிக்கப்படுகிறான். யோபுவின் நூலிலுள்ள இறைவனுடைய உரையின் பொருள் இதுவே (யோபு 38:41). இத்தகைய உண்மையான நினைவுறுத்தல்களுடன் ஆழ்ந்த தாழ்ச்சியில் யோபு மூழ்கக்கூடாதா (42:1-6)? இவ்வாறு மனிதன்படைப்பு என்னும் தனது உண்மையான நிலையை ஏற்றுக்கொள்கிறான். இறைவன் அவனைக் களிமண்ணைப் போன்று பிசைந்து, வனைந்து, அமைத்தார் (யோபு 10:8-10; எசா 64:7; எரே 18:6). இறைவனின் இரக்கம் மிகவும் தேவைப்படும் மனிதன் இறைவனின் முன் யார் (சீரா 18:8-14)? இறைவனின் முன்னிலையினின்று தப்பியோடுவதென்பது வீணான முயற்சியாகும். ஏனெனில், ஒவ்வொரு தருணத்திலும் மனிதன் படைத்தவரின் கரங்களில் இருக்கிறான். மேலும், படைக்கப்பட்ட எதுவும் இறைவனிடமிருந்து தப்புவதில்லை (சங் 139). பழைய ஏற்பாடு முழுவதிலும் பரவிக்கிடக்கும் மனநிலையான உண்மையான, பக்தியின் அடிப்படைத்தன்மை இதுவே.

2. நம்பிக்கைக்கு வழி: இறைவன் முன்னிலையிலான தனது உண்மையான நிலையைப்பற்றிய இந்த அறிவில், நம்பிக்கைக்கான வழியை மனிதன் கண்டடையலாம். வானத்தையும், பூமியையும் படைத்த அதே இறைவன் தனது மக்களுடைய எதிரிகளை அழிக்கவும், தனது மக்களுக்கு மீட்பினை அளிக்கவும், புதிய எருசலேமை மீண்டும் அமைக்கவும் இப்போது எண்ணுகிறார் என்னும் உண்மையை எசாயா மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறுகிறார் (எசா 44:24-28; 51:9-11). விண்ணையும், மண்ணையும் படைத்த ஆண்டவரிடமிருந்து அவனது உதவி வருவதால், விசுவாசி அனைத்துப் பயத்தையும் விட்டுவிட வேண்டும் (சங் 121:2).

II. புதிய ஏற்பாடு:

I. படைத்தவராகிய இறைவன்: பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்ட படைத்தவராகிய இறைவன் என்னும் கருத்தானது, புதிய ஏற்பாட்டில் தனது முக்கிய இடத்தை மீண்டும் பெற்று, மேலும் விரிவாக்கப்படுகிறது.

1. பழைய ஏற்பாட்டு மரபுரிமை: தனது வார்த்தையாய் அவர் உலகைப் படைத்த போது (2 கொரி 4:6), இல்லாதவற்றையும் வாழ்வதற்கு இறைவன் அழைத்தார் (உரோ 4:17). அவர் படைப்புகளுக்கு உயிரளிக்கும் போது இந்த முதற்செயலானது தொடர்கிறது. ஏனெனில், அவரில் நாம் வாழ்வு, இயக்கம் மற்றும் உயிர் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம் (அ.ப. 17:25; 1 திமொ 6:13). உலகையும் " அதிலுள்ள அனைத்தையும்" அவர் படைத்தார் (திருவெளி 10:6; அ.ப. 14:15; 17:24; எபி 2:10). அனைத்தும் அவரால், அவருக்காக வாழ்கின்றன (1 கொரி 8:6; உரோ 11:36; கொலோ 1:16). எனவே, படைக்கப்பட்ட அனைத்துமே நல்லது மற்றும், இறைவனிடமிருந்து வருவதனைத்தும் தூயது (1 கொரி 10:25-26; கொலோ 2:20-22). ஆகவே, இயற்கையமைப்பின் சட்டங்கள் மனிதனால் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சான்றாக, மணமுறிவானது ஆதியில் மனிதனையும் பெண்ணையும் படைத்த இறைவனுடைய திட்டத்திற்கு முரண்படுகிறது (மத் 19:4-8).

இயல்பாகவே, பிற சமயத்தினருக்கான கிறிஸ்தவ போதனையில் இக்கோட்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. இதில் ஆதித்திருச்சபையானது யூதக் கோட்பாட்டையே கையளிக்கிறது (அ.ப. 14:15; 17:24-28). படைப்புகளின் சிறப்பினைப் புரிந்து கொள்ளக்கூடிய எவனுக்கும் இறைவனுடைய காண இயலா நிறைவுகள் மிகத் தெளிவாக இருப்பது போன்று (உரோ 1:19-20), "உலகானது இறைவனுடைய ஒரே வார்த்தையால் உருவாக்கப்பட்டது என்பதை விசுவாசத்தினால் நாம் அறிகிறோம்" (எபி 11:3). விசுவாசியில் இக்கோட்பாடானது புகழ்ச்சிக்கு இட்டுச் செல்வதாகவும் (திருவெளி 4:8-11), நம்பிக்கையின் அடிப்படையாகவும் உள்ளது (உ.ப. 4:24).

2. இயேசு கிறிஸ்துவும் படைப்பும்: ஒரு முக்கிய கூறில், பழைய ஏற்பாட்டில் மறைவாய் இருந்ததைப் புதிய ஏற்பாடு நிறைவுபடுத்துகிறது. அதாவது, இஸ்ராயேல் அறிந்திருந்த படைத்தவராகிய இறைவன் இப்போது இயேசு கிறிஸ்துவின் தந்தையாக வெளிப்படுத்தப்படுகிறார். தந்தையின் படைப்புச்செயலில் இயேசு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதன் காரணமாக, "யாரில் அனைத்தும் வாழ்கின்றனவோ, யாரால் நாம் உள்ளோமோ அந்த ஒரே ஆண்டவராக அவர் உள்ளார்" (1 கொரி 8:6). இறைவன் படைத்த படைப்பின் "ஆதியாக உள்ளவர்" அவரே (திருவெளி 3:14). அவரே இறைவனுடைய ஞானமாக இருப்பதால் (1 கொரி 1:24) அவர் "இறைவனுடைய மகிமையின் பிரதிபலிப்பாகவும், அவரது உயிரின் சாயலாகவும்" (எபி 1:3), "காணவியலா இறைவனின் சாயலாகவும், அனைத்துப் படைப்புகளின் முதற்பிறப்பாகவும்" உள்ளார் (கொலோ 1:15). அவரில் அனைத்தும்

படைக்கப்பட்டு இணைந்து நிலைப்பதால் (கொலோ 1:15). அவரில் அனைத்தும் படைக்கப்பட்டு இணைந்து நிலைப்பதால் (கொலோ 1:16-17) "தனது வல்லமை மிக்க வார்த்தையின் மூலம் உலகைத் தாங்கி வருபவர்" அவரே (எபி 1:3). கால நிறைவில் ஊனுடலாக ஆவதற்கு முன்னர், தொடக்கத்திலிருந்தே இறைவனுடன் வாழும் இறைவனுடைய வார்த்தை அவரே (யோவா 1:1-2.14). அவரே அனைத்தையும் படைத்தவராய் படைக்கப்பட்ட உலகில் தொடக்கத்திலிருந்தே வாழ்வாகவும் ஒளியாகவும் உள்ளார் (1:3-4). இவ்வாறு, கைவினைஞராகவும், மாதிரியாகவும், எல்லாவற்றிற்கும் முடிவாகவும் உள்ள இறைமகன் மீதான சிந்தனையால் படைப்பு பற்றிய கருத்தானது நிறைவடைகிறது.

III. புதிய படைப்பு:

1. **கிறிஸ்துவில்:** இன்றைய உலகானது அழிக்கப்பட்டு மறைவதற்கெனக் குறிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை அறிந்திருப்பதன் காரணமாக, மனித பாவத்தின் விளைவாய்ப் படைப்பின் நிறைவிற்குள் புகுத்தப்பட்ட வியப்பு மிக்க விளைவுகளைப் பழைய ஏற்பாட்டை விட, புதிய ஏற்பாடு அதிகமாய் அறிந்துள்ளது (1 கொரி 7:31; எபி 1:11-12; திருவெளி 6:12-14; 20:11). ஆனால், இறைவாக்கினர்களின் திருவாக்குகள் சுட்டிக்காட்டியதைப்போன்று, கிறிஸ்துவில் ஒரு புதிய படைப்பு ஏற்கெனவே தொடங்கி விட்டது. பழையது கடந்தபின் புதியதாக, உயிராக (2 கொரி 5:17), ஒரு புதுப்படைப்பாக கிறிஸ்துவில் உருவாகின்ற (கலா 6:15), படைத்தவருடைய சாயலுக்கேற்ப, திருமுழுக்கினால் உள்ளார்ந்த விதத்தில் புதுப்பிக்கப்பட்ட மனிதனில், இப்படைப்பானது முதன்மையாக உள்ளது (கொலோ 3:10). ஆனால் புதுப்படைப்பானது உலகமுழுவதற்கும் பரவுகிறது. ஏனெனில் இறைவனுடைய திட்டமானது, ஒரே தலைமையாக கிறிஸ்துவின் கீழ் அனைத்தையும் ஒன்றுசேர்க்கவும் (எபே 1:10), அவரோடு அவரில் அனைத்தையும் ஒப்புரவாக்குவதும் ஆகும் (2 கொரி 5:18-19; கொலோ 1:20). இவ்வாறு, உலகுடனான கிறிஸ்துவின் உறவை விவரிப்பதில், முதல் படைப்பிலான அவரது செயலினின்று, படைப்புகளின் இறுதிக்கால மறுபடைப்பிலான அவரது செயல்கள் வரை ஒரு நுட்பமான இயக்கம் உண்டு. இவ்வாறு, படைப்பும் மீட்பும் ஒன்றுபடுகின்றன. ஏனெனில், நாம் "நற்செயல்களின் வாழ்விற்காக கிறிஸ்து இயேசுவில் படைக்கப்பட்ட இறைவனின் வேலைப்பாடு" ஆவோம் (எபே 2:10).

2. முதல் படைப்பினின்று இறுதிப்படைப்பு வரை:

முதல் மற்றும் இறுதிப் படைப்பிற்கு இடையிலான குறிப்பிடத்தக்க ஒப்புமையின் காரணமாக, இயேசு கிறிஸ்துவிலான புதிய மனித இனத்தின் இப்படைப்பு வருவது பற்றிய போக்கினை விரிவாக விவரிப்பது கூடியதொன்றே (எபே 2:15; 4:24). தொடக்கத்தில் இறைவன் ஆதாமை மனித இனத்தின் தலைவனாக்கி, அவரது ஆதிக்கத்தில் உலகை ஒப்படைத்தார். இறுதிக்காலத்தில் மனுவுருவான இறைமகன் புதிய ஆதாமாக வரலாற்றில் நுழைந்தார் (1 கொரி 15:21.45; உரோ 5:13). இறைவன் கிறிஸ்துவை அவரது உடலாகிய மீட்கப்பட்ட மனித இனத்திற்குத் தலைவராக்கி (கொலோ 1:18; எபே 1:22-23), மண்ணுலகில் அவருக்கு அனைத்து வல்லமையும் அளித்தார் (மத் 28:18; யோவா 17:2). விண்ணக மண்ணக உயிர்கள் அனைத்தும் அவரில் ஒன்றுபடுவதற்கென (எபே 1:10) அனைத்தும் அவரது கரங்களில் ஒப்படைக்கப்பட்டு, அனைத்திற்கும் அவர்வாரிசு ஆக்கப்பட்டார் (எபி 1:2; 2:6-9). ஆவியின் முழுமையைக் கிறிஸ்து தன்னில் கொண்டிருப்பதன் காரணமாக (மற் 1:10 இணை; லூக் 4:1), மற்ற மனிதருடைய ஆன்மீகப் புதுப்பித்தலுக்காகவும், அவர்களைப் புதிய படைப்பாக ஆக்குவதற்காகவும் அவர் அவர்களுக்கு இந்த ஆவியை அளிக்கிறார் (உரோ 8:14-17; கலா 3:26-28; யோவா 1:12).

3. வெற்றியின் எதிர்பார்ப்பில்: பெந்த கோஸ்தே நாளில் தொடங்கிய இந்தப் புதிய படைப்பானது இன்னும் முழுமையை அடையவில்லை. உள்ளார்ந்தவிதத்தில் புதுப்பிக்கப்பட்டமனிதன், உயிர்ப்பின் நாளில் தனது உடலின் மீட்பிற்காக இன்னும் ஏங்குகிறான் (உரோ 8:23). சுற்றியுள்ள உலகானது இப்போது சோர்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இறைவனுடைய பிள்ளைகளின் மகிமையான விடுதலையை அனுபவிப்பதற்கென, தவிர்க்கமுடியாத அழிவிற்கான தனது அடிமைத்தனத்தினின்று சுதந்தரத்தை அது நாடுகிறது (உரோ 8:13-22). நற்செய்தியால் போதிக்கப்பட்ட இந்தப் புதிய விண்ணகமும் மண்ணகமுமான முடிவைநோக்கி வரலாறு செல்கிறது (2 பேதுரு 3:13). இதனைப் பின்வரும் குறிப்பிடத்தக்க விவரிப்பில் திருவெளிப்பாடு எதிர்பார்க்கிறது: "முதலிலிருந்த வானகமும், வையகமும் மறைந்து போயின... அரியணை மீது வீற்றிருந்தவர், 'இதோ நான் அனைத்தையும் புதியன வாக்குகிறேன்' என்றார்" (திருவெளி 21:1-5). செம்மறியின் உறுதியான வெற்றி அடையப்படும்போது, மாற்றி அமைக்கப்பட்ட உலகின் இறுதிப்படைப்பாக இஃது இருக்கும்.

பட்சிக்கும் பறவை, இரைமேல் பாயும் பறவை (BIRD OF PREY)

பிற மிருகங்களைப் பிடித்து உண்ணும் பறவை. பாலஸ்தீனத்தில் இத்தகைய பறவைகள் பல இருந்தன. கழுகு, கருடன், வல்லூறு, சிறு கழுகு போன்றவை இவற்றில் சிலவாகும். இவைகள் யூதர்களைப் பொருத்தமட்டில் தீட்டுப்பட்டவை எனக் கருதப்பட்டன. சில பறவைகள் உண்ணத் தகாதவை என்றும் விவிலியப்பகுதிகளில் கூறப்பட்டுள்ளது (லேவி 11; உப 14). இரத்தத்தை உண்ணுவது அல்லது இரத்தம் சரியாக நீக்கப்படா இறைச்சியை உண்ணுதல், சவத்தைத்தொடுதல் ஆகியவற்றைப் பற்றிய உடன்படிக்கைக் கட்டளைகளிலிருந்து (லேவி 17) இத்தடை தோன்றுகிறது. ஏனெனில், இப்பறவைகள் தங்கள் இரையைப் பிடித்துக்கிழித்து உண்ணும் வழக்கமுடையவை.

பட்சிலித்து, பட்சலூத்து (BAZLITH, BAZLUTH)

இவர் ஓர் ஆலய ஊழியர். செருபாபேல் தலைமையில் நாடு திரும்பியவர்களுள் இவரது வழித்தோன்றல்களும் இருந்தனர். இவரது குடும்பத்தினர் நெத்தினிம் குழுவைச் சேர்ந்தவர்கள் (நெகே 7:54). இவர் எஸ் 2:52-இல் பட்சலூத்து என்றழைக்கப்படுகிறார்.

பட்டு (SILK)

பட்டுப்பூச்சி வளர்ப்பு, பட்டுநூல் நூற்றல், பட்டு நெய்தல் கொரியா சீனாவில் தோன்றி அதன்பிறகு கொரியா வழியாக சப்பானுக்குப் பரவியது.மெதுவாகத்தான் மேற்கு நாடுகளுக்குப் பரவியது. கி.மு. முதல் ஆயிரம் ஆண்டிலேயே இந்தியாவில் பட்டுத் தொழில் இருந்தது, என்று சமஸ்கிருத இலக்கியம் குறிப்பிடுகின்றது. பட்டுத்தொழில் பற்றிய குறிப்புக்கள் அரிஸ்டாட்டில் எழுதிய "விலங்குகளின் வரலாறு" என்ற நூலில் பட்டுப் புழுக்களைப்பற்றி எழுதியுள்ள பகுதியிலிருந்து கிடைக்கின்றது. 1 மக் 6:34-இல் முசுக்கொட்டைச் சாற்றினைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எசே 16:10.13-இல் மூலச்சொல் பாரம்பரியமாகப் பட்டு என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இது ஐயத்திற்குரியதாகும். "மென்துகில்" என்று பொதுவான பொருளில் எடுத்துக்கொள்வதுமேல். இதுபோலவே பழ 31:22-இல் வரும் பட்டாடையையும் மென்துகில் என்று பொருள் கொள்வது மேல். பட்டாடை பற்றிய ஒரே ஓர் உறுதியான விவிலியக் குறிப்பு திருவெளி 18:12-இல் வருகிறது. அதில், பாபிலோனுக்கு வியாபாரிகள் வாங்கிக்கொண்டு சென்ற பொருட்களின் பட்டியலில் பட்டும் சேர்க்கப்பட்டுள்ளது.

பட்டை, முகக்கூறு (FACETS)

மணிக்கல்லின் பட்டையிட்ட பரப்புகளின் ஒரு முகக்கூறு. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஏழு

பட்டைகளையுடைய மணிக்கல் குருவாக இருந்த யோசுவாவுக்குக் கொடுக்கப்பட்டது (செக் 3:9).

பணக்காரனும், ஏழையும் - உவமை (THE RICHMAN AND POOR - PARABLE)

இந்தக் கதையானது பண ஆசை பிடித்தவரும், சட்டங்களை நுணுக்கமாகக் கடைப்பிடிப்ப வருமான பரிசேயர்களுக்காகக் கூறப்பட்டது (லூக் 16:19-31). பணக்காரர் நீதியற்ற கண்காணிப்பாளனைப் போன்றவர். இருவரும் தங்கள் செல்வத்தைத் தகாத வழியிலேயே செலவிடுகின்றனர். இதன் விளைவை அவர்கள் உணரவில்லை. லாசர் விண்ணகத்துக்குச் செல்ல, காரணம் அவனது ஏழ்மையன்று, மாறாக, அவனது கடவுள் பற்று. பணக்காரன் நரகத்திற்குச் செல்ல, காரணம் அவன் மோசேயின் மற்றும் இறைவாக்கினர்களின் அறிவுரைக்கேற்ப வாழாமையே. அவன் செல்வமிக்கவனாயிருந்த தால் விண்ணகம் சேரவில்லை என நாம் கூற இயலாது. செல்வத்தை நேரிய வழியில் ஏழை எளியவர்க்குச் செலவிட்டிருந்தால் அவன் விண்ணகத்தை அடைந்திருப்பான்.

பணப்பெட்டி (MONEY BOX)

பணத்தை வைத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட சிறிய கொள்கலத்தைக் (பெட்டி/ பை) குறிப்பிடுகின்றது. விவிலியத்தில் இச்சொல், அப்போஸ்தலர்கள் தங்களின் பொதுப்பணத்தை வைத்துக் கொள்வதற்காகப் பயன்படுத்திய கொள்கலத்தைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா 12:6; 13:29).

பணப்பை (PURSE)

பணப்பை எவ்வகைப்பொருட்களால் செய்யப்பட்டன என்று குறிப்படப்பட வில்லை; ஆனால் பிற்காலத்தில், இவைகள் நூலினால் பின்னப்பட்ட வலையைப் போன்று செய்யப்பட்டன என்று குறிப்பிடப்படுகின்றது. சில பணப்பைகள் தோலினால் செய்யப்பட்டன. எல்லாப் பணப்பைகளும் சாதாரணப் பைகளைப் போன்று வாயின் பகுதிகளில் தோலினாலோ, நூலினாலோ இறுக்கிக் கட்டுவதைப்போன்ற அமைப்பை உடையன. எனவேதான், இதே சொல் மற்றப் பைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

சொத்துக்கள் அனைத்தையும் சேர்த்துக் கட்டிவைக்கப்பட்டிருக்கும் பை (பழ 1:14); பொன்னைக் கட்டிவைத்திருக்கின்ற பை (எசா 46:6); "உன் பணப்பையில் ஒன்றுமில்லாதபோது கடன்வாங்கி விருந்தாடி ஏழை ஆகாதே" (சீரா 18:32) என்று வறிய நிலையைக்குறிக்கின்றது. மத் 10:9-இல் பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் உங்கள் இடைக்கச்சைகளில் வைத்திருக்க வேண்டாம் என்று குறிப்பிடப்படுகிறது. லூக் 10:4; 22:35-36-இல் பணப்பை குறிக்கப்படுகிறது. வானகத்தில் குறையாத செல்வத்தையும், இற்றுப்போகாத பணப்பைகளையும் தேடிக்கொள்ளுங்கள் என்று உருவகமாகக் கூறப்பட்டிருக்கின்றது (லூக் 12:33).

பணி (MINISTRY)

I. வுல்கத்தாவில் பணியாளர் என்ற சொல்லானது வழிபாட்டின் பணியாளராகிய தியாக்கோன்களைக் குறிப்பிடும். எழுபது நூல், இச்சொல்லைச் சமயச்சார்பற்ற சூழ்நிலையில் பயன்படுத்துகிறது (எஸ்த 1:10; 6:1-5). யோசுவா மோசேயின் பணியாளர் என்று குறிக்கப்படுகிறார் (யாத் 24:13). மூல எபிரேயச்சொல் வழிபாட்டுப் பணியாளராகிய குருக்களையும் குறிக்கலாம் (எசா 61:6; எசே 44:11; யோவே 1:9). ஆயினும் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே, சில குறிப்பிட்ட சமயச் செயல்களுக்குப் பொறுப்புள்ள மனிதரால் இறை மக்களிடையே நிறைவேற்றப்படுகின்ற சமயப் பணியில் உண்மை, நன்கு சான்று செய்யப்பட்ட ஒன்றாகும். அரசர்கள், இறைவாக்கினர்கள், குருத்துவக்குழுவினர் ஆகியோர், இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையே தலையீட்டைச் செயல்படுத்துகின்ற இறைவனுடைய ஊழியர்களாவர். இவ்வாறாக, மோசே முதல் உடன்படிக்கையின் பணியாளர் என பவுல் கூறுகிறார் (2 கொரி 3:7,9). புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவே இறைவனுக்கும் மனிதருக்கும்

இடையிலான ஒரே இணைப்பாளர்; மீட்பின் பலியை அளிக்கின்ற தனித்துவமிக்க குரு; அவரே ஊனுடலெடுத்த இறைவனுடைய வார்த்தையாக இருப்பதன் காரணமாக வெளிப்பாட்டினைக் தனித்துவமிக்க முறையில் கொண்டு வருபவராகிறார். ஆனால், அவர் தோற்றுவித்த திருச்சபையில் புதுவிதப் பணியானது செயல் படுத்தப்படுகிறது. அது அவரது வார்த்தை மற்றும் அருளுக்குப் பணி செய்வதாக உள்ளது.

II. திருச்சபையில் பணி:

1. **அப்போஸ்தலத்துவப்பணி:** தங்களது செயலை ஊழியமாக நோக்குமாறு இயேசு தனது அப்போஸ்தலர்களுக்குக் கற்பித்தார். நாடுகளின் தலைவர்கள் புரவலர்களாகவும் தலைவர்களாகவும் கருதப்பட விரும்பினர். ஆனால் அவரது எடுத்துக்காட்டைப் பின் பற்றி அப்போஸ்தலர்கள் அனைவருடைய ஊழியராக இருக்க வேண்டும் (மாற் 10:42:44). அவர்கள் அவரது ஊழியர்கள். இப்பட்டத்தின் கீழ்தான் தந்தையின் மகிமைக்குள் அவர்கள் அவருடன் நுழைவர் என அவர் வாக்களிக்கின்றார் (யோவா 12:26). அப்போஸ்தலர் பணி நூலின் தொடக்கம் முதலே அப்போஸ்தலத்துவமானது ஒரு பணியாகக் காட்டப்படுகிறது (அ.ப. 1:17.25). மற்றப் பதினொருவருடன் சேர்ந்து அதனை நிரப்புமாறு மத்தியாவும் அழைக்கப்படுகிறார். அப்போஸ்தலத்துவத்திற்கான பவுலின் அழைப்பு (உரோ 1:1) பணிக்கான ஓர் அழைப்பாகும் (1 திமொ 1:12; 2 கொரி 4:1). அதனைத் தகுதியுடன் நிறைவேற்றுவதற்காக பவுல் முயற்சியெடுக்கிறார் (அ.ப. 20:24). அதன் விளைவாக இறைவன் புறவினத்தாருக்கும் மீட்பை அளிக்கிறார் (21:19). இவ்வாறு இறைவனுடைய பணியாளராகவும் (2 கொரி 6:3-4), கிறிஸ்துவினுடைய பணியாளராகவும் இருப்பதை உணர்ந்தவராய் (11:23), இந்த அலுவலின் உயர்வு பற்றிய உயிருள்ள உணர்வை அவர் கொண்டுள்ளார். இது மோசேயினுடையதை விட உயர்ந்ததே. ஏனெனில், இது புதிய உடன்படிக்கையினுடைய நீதியினுடைய, ஆவியினுடைய (3:6-9), ஒப்புரவினுடைய (5:18), நற்செய்தியினுடைய (கொலோ 1:23; எபே 3:7), திருச்சபையினுடைய (கொலோ 1:25) ஒரு பணியாகும்.

2. **பல்வேறுபட்ட பணிகள்:** ஆயினும் புதிதாகத்தோன்றிய திருச்சபையினுடைய பணியானது, அப்போஸ்தலத்துவ செயல் முறை என்று அழைக்கப்படுவதையும் கடந்துசெல்கிறது. பணி என்ற சொல்லானது முதலாவதாக உணவுபரிமாறுதல் (அ.ப. 6:1.4; லூக் 10:40), மற்றும் எருசலேமின் ஏழைகளுக்கான காணிக்கை சேகரிப்பு (அ.ப. 11:29; 12:25; உரோ 15:31; 1 கொரி 16:15; 2 கொரி 8:4; 9:1.12.13) போன்ற சமுதாயத்திற்கு அவசியமான உடல் சார்ந்த ஊழியத்தைக்குறிக்கிறது. இது தவிர அர்கிப்புவிற்கும் (கொலோ 4:17), திமொத்தேயாவுக்கும் (2 திமொ4:5), ஒருபணி ஒப்படைக்கப்படுகிறது. பணியாளர் என்ற பெயரானது பவுலைப் போன்று அப்பொல்லோவிற்கு (1 கொரி 3:5), திமொத்தேயுவுக்கும் (1 தெச 3:2; 1 திமொ 4:6), திக்கிக்குவுக்கும் (கொலோ 4:7; எபே 6:21), எப்பப்பிராவிற்கும் (கொலோ 1:7), யூதமயமாக்கும் போலி அப்போஸ்தலர்களுக்கும் கூட (2 கொரி 11:23) அளிக்கப்பட்டது. திருச்சபையில் பல்வேறுபட்ட பணிகள் இருந்தன என்பதை இது காட்டுகிறது (1 கொரி 12:5). ஏனெனில், "திருப்பணிக்குரிய வேலையை முன்னிட்டு இறைமக்களைப் பக்குவப்படுத்த ஆவியானவர் அக்கொடைகளை அளித்தார்" (எபே 4:12). இவ்விதமான ஒவ்வொரு ஊழியமும் இறைவனிடமிருந்து பெறப்பட்ட பொறுப்பென (1 பேதுரு 4:11) ஆவியினுடைய தூண்டுதலின் கீழ், பயன்படுத்தப்பட வேண்டும் (உரோ 12:7). இந்தச் செயல்கள் எதில் அடங்கியுள்ளன என்பதைப் பொறுத்திருந்தே காணவேண்டும். திருமுகங்களில் அளிக்கப்பட்டுள்ள கொடைகளின் அட்டவணையானது இறைவார்த்தைக்குத் தொடர்புடைய செயல்களை எப்போதும் மேலாகக் குறிப்பிடுகிறது (அப்போஸ்தலர், இறைவாக்கினர்,

போதகர், நற்செய்தியாளர்). ஆனால், எபேசியருக்கான, திருமுகம் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்ற மேய்ப்புப்பணிக்குரிய அலுவல்களை அது விலக்குவதில்லை (எபே 4:11).

III. படி மரபுடைய பணி:

1. அப்போஸ்தலர்களுடைய காலம் முதற்கொண்டு புதிய ஏற்பாடானது, அவர்களது செயலை நீட்டிக்கக்கூடிய அரசினுடைய படி மரபின் பிறப்பில் துணைபுரியச்செய்கிறது. எல்லா யூத சமூகங்களும் மூப்பர்களைத் தங்களுடைய தலைவர்களாகக் கொண்டிருந்தன. அவ்வாறே, மறைபரப்புப் பணியாளர்களாகிய பவுலும் பர்னபாவும் எல்லா இடங்களிலும் அவர்களை வழிநடத்த திருச்சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்தினர் (அ.ப. 14:23). எருசலேமில் அப்போஸ்தலிக்கக் கூட்டத்தின் நேரத்தில் யாக்கோபின் தலைமையின்கீழ் உள்ள அவ்விடத்துச் சமூகத்தின் மூப்பர்கள் பன்னிருவருடன் சேர்வதை நாம் காண்கிறோம் (15:2.4.6.22-23; 16:4). பவுல் திரும்பி வரும்போதும் நாம் அவர்களை மீண்டும் காண்போம் (21:18). அதே போலத் தனது கடைசிப் பயணத்தின்போது மிலேத்துவில் எபேசிலிருந்து வந்த மூப்பர்களை வரவழைக்கிறார் (20:17). அது முதல் அப்போஸ்தலர்கள் நேரடியாகவோ, தங்களது பிரதிநிதிகள் மூலமாகவோ ஒவ்வொரு நகரிலும் மூப்பரின் சபையை அமைக்கின்றனர் (தீத் 1:5). அவர்களைச் சேர்ப்பதானது நுட்பமான விதிகளுக்குட்பட்டதாகும். கைகளை மேலே விரிப்பதன் மூலம் அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர் (1 திமொ 5:17-22). மூப்பர் சபைக்குத் தூய ஆவியினுடைய சிறப்பான கொடை தேவையாயிருந்தது என்பதை இந்தக் கடைசிக்கூறு காட்டுகிறது. எனவே, இஃது ஒரு சாதாரண ஆளுகைச்செயல் மட்டுமன்று. உண்மையில் யாக்கோபின் திருமுகத்தில், மூப்பர்கள் நோயாளிகளுக்காகச் செபித்து, தைலத்தால் அவர்கள்மேல் பூசுவதை நாம் காண்கிறோம் (யாக் 5:14). மேலும், கிறிஸ்தவ சபையில் அவர்கள் தலைமை வகித்தனர் என்றும் கூறப்படுகிறது (1 திமொ 5:17). தலைவர்களைப் பற்றிய பவுலின் குறிப்புகள் அனேகமாக மூப்பர்களைக் குறிப்பிடலாம் (1 தெச 5:12-13; உரோ 12:8). அவ்வாறே, எபிரேயருக்கான திருமுகத்திலும் தலைவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன (எபி 13:7.17.24).

2. ஆனால் பிலிப்பியருக்கான திருமுகம் ஆயர்களையும் திருத்தொண்டர்களையும் அருகருகே குறிப்பிடுகிறது (பிலி 1:1). கூருநிலையில் ஒரு படிமரபை நாம் அங்குக் காண்கிறோம். மேசையில் பணிபுரிய அப்போஸ்தலர்கள் ஏற்படுத்திய எழுவரில் (அ.ப. 6:1-6). அப்போஸ்தலர் பணிநூல் வருங்காலத் திருத்தொண்டர்களின் முன்னோடிகளைக் காண்பதாகத் தெரிகிறது. மேலும், இவர்கள் மூப்பர்களைப் போன்றே கைகள் விரிக்கப்படும் சடங்குடன் தங்களுடைய பணியை ஏற்றனர் (அ.ப. 6:6). அவர்களது பணியானது பொருளுதவியையும் கடந்துசென்றது. ஏனெனில், அவர்கள் போதிக்கவும் செய்தனர். பிலிப்பு நற்செய்தியாளராக வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார் (21:8). இத்தகைய திருத்தொண்டர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகளை மேய்ப்புப்பணி மடல்கள் விதிக்கின்றன (1 திமொ 3:8-13). அப்போது இது கீழானபணியைப் பற்றியதாகிறது. அதனுடைய கடமைகளைத் துல்லியமாக விவரிப்பதென்பது இயலாத ஒன்று. கெங்கிரேயாத் திருச்சபையைச் சேர்ந்த பெண் திருத்தொண்டர் பெபாவின் பணி இதே அமைப்பை உடையது அன்று (உரோ 16:1). ஏனெனில், வழிபாட்டுச் சபைகளில் பெண்களின் பங்கு பற்றி பவுல் அளித்த ஒழுங்கு முறைகள் மிகவும் கண்டிப்பானவை (1 கொரி 11:1-16; 14:33-34).

3. ஆயர்கள், அவர்களது பெயர் குறிப்பிடுவது போன்று, தன்மையால் சமூகங்களின்மேல் கவனமாய் இருக்க ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வையாளர்களாவர். இத்தகைய பதவி யூத

மதத்தில் அறியப்படாததன்று. கும்ரான் சமூகத்தில் பார்வையாளர் அதே போன்ற பணியைக் கொண்டிருந்தார். தொடக்கத்தில் இந்தக் கவனிப்புப் பணியைச் செயல்படுத்துபவர்களாக மூப்பர்கள் இருந்ததும் ஒவ்வொரு திருச்சபைக்கும் பொதுவானதாக இருந்தது. ஏனெனில், மேய்ப்பர்களின் மாதிரியாகவும் (1 பேதுரு 5:4), மேய்ப்பராகவும், ஆன்மாக்களை மேற்பார்வையிடுபவராகவும் உள்ள (1 பேதுரு 2:25) கிறிஸ்துவின் சாயலைப் பின்பற்றி, இறைவனின் மந்தையை மேய்க்கும் பணியை அவர்கள் கொண்டிருந்தனர் (அ.ப. 20:28; 1 பேதுரு 5:2-3). ஆனால், ஒவ்வொரு சமூகத்திலும் ஓர் ஆயர்மட்டுமே இருந்தார் என மேய்ப்புப்பணித் திருமுகங்கள் காட்டுகின்றன. அவர் மூப்பர்களிடையினிறு வெளிப்படையாக (தீத் 1:5-9), கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் (1 திமொ 3:1-7). சந்தேகத்திற்கிடமின்றி, பவுல் பல அருங்கொடைகளில் ஒன்றாகக் கூறுகின்ற (எபே 4:11) மேய்ப்பரின் இப்பணியை நிறைவேற்றுபவரும் (அ.ப. 20:28-29), அப்போஸ்தலிக்கப் பொறுப்புகளில் ஒன்றினை நினைவிற்குக், கொணருபவரும் இவரே (யோவா 21:15-17); மத் 18:12-14). பவுலின் பிரதிநிதிகளாகிய தீத்துவும், திமொத்தேயுவும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபைகளுடைய மூப்பர்கள், திருத்தொண்டர்கள் மற்றும் ஆயர்கள்மீது அதிகாரம் கொண்டிருந்தார். திருவழிபாடு (1 திமொ 2:1-15) மற்றும் மறை கோட்பாட்டுப் போதனைகளைச் சார்ந்தவற்றில் (1 திமொ 4:6.13-16; 6:3) பொறுப்புகளைக் கொண்டிருந்தனர். ஆனால், போதனையைப் பொருத்தமட்டில் ஒவ்வொரு ஆயரும் தனது ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில் கவனக்கண்காணிப்பைச் செயற்படுத்துகின்றனர் (தீத் 1:9). முதலில், அப்போஸ்தலர்களைச் சார்ந்திருந்த ஆட்சி அலுவல்களில் இந்தப் பிரதிநிதித்துவமானது திருச்சபையின் அமைப்பு வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது என்பதை காட்டுகிறது. அப்போஸ்தலர்கள் மறைந்த பின்னர், பின்வரும் மூன்று நிலைத் தலைமையில் அது தன்னை நிலைப்படுத்திக்கொண்டது. ஆயர் மேய்ப்பர், திருத்தொண்டர்கள் துணை புரிந்து மூப்பர்களால் சூழப்பட்ட சமூகத்தின் தலைவர். அவர்களது அலுவல்களைச் செயற்படுத்துவதற்கு அவசியமான அருங்கொடையானது முன்பு போலவே, கைகளை விரிக்கும் சடங்கினால் அவர்களுக்கு அளிக்கப்பட்டது (2 திமொ 1:6).

4. குருக்கள் என்ற பட்டமானது அப்போஸ்தலர்களுக்கோ, புதிய உடன்படிக்கையின் மற்றப் பணியாளர்களுக்கோ எங்குமே அளிக்கப்படவில்லை. ஆனால் அவர்களுடைய பணியானது, மனிதருடைய ஒரே தலைமைக்குருவாகிய இயேசு கிறிஸ்துவினுடைய குருத்துவப்பணியில் அவர்களை அமர்த்துகிறது. இப்பட்டத்தினால் அப்போஸ்தலர்களுக்குப் பிறகு அவர்கள் இறைவனுடைய (தீத் 1:7), அவரது மறை பொருள்களுடைய (1 கொரி 4:2), அவரது அருளினுடைய (1 பேதுரு 4:10) கண்காணிப்பாளராக உள்ளனர். இத்தகைய முன்னோக்கில்தான் கிறிஸ்தவ குருத்துவம் பற்றிய கருத்து வளர்ச்சியடைய இருக்கிறது. மூன்று நிலைகளில் (ஆயர், குருக்கள், திருத்தொண்டர்கள்) படி மரபு செய்யப்பட்டு, புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்ட பணியுடன் தனது செயல்களால் ஒத்ததாகி, அதே அருங்கொடை வல்லமையால் செயல்படுத்தப்படுகிறது. இறுதியாக, அப்போஸ்தலிக்கப்பணியில் பிறருக்கு அளிக்கப்படக்கூடியவற்றிலிருந்து இந்தப் படி மரபு தோன்றுகிறது.

பண்டபாத்திரங்கள், துணைக்கலங்கள் (UTENSILS)

பாத்திரங்களையும், கருவிகளையும் குறிக்கப் பயன்படும் பொதுவான சொல்லாகும். இஃது உடன்படிக்கைக் கூடாரத்தின் பணிக்கான எல்லாப் பொன், பித்தளைப் பாத்திரங்களையும் குறிக்கும். சாம்பல் எடுக்கும் சட்டி, நெருப்பைத் தூண்டும் குறடு, முள், தீச்சட்டி, மேசைச் சாமான்கள், விளக்குத்தண்டு, தகனப்பலிபீடம், தூபப்பீடம் (யாத்

25:39; 27:3.19; 30:27-28; 31:8-9). இதே சொல் ஆலயத்தின் பணிக்கான எல்லாப்பொருட்களையும் குறிக்கும் (1 நாள் 9:28-29; 2 நாள் 24:14-19; 1 அர 10:21; 2 நாள் 9:20; எரே 27:18-21).

பதர், சருகு (CHAFF)

சுளகால் பொலி போடும்போது காற்றில் பறந்துசெல்லும் நுண்துகளான, காய்ந்த பொருள் பதர் என்று குறிக்கப்படும். பதர் பற்றிய விவிலியக்குறிப்புகள் எல்லாம் மதிப்பற்றது அல்லது அழிக்கப்படவிருக்கும் தீமையின் உருவங்களாகும் (யோபு 13:25; 21:18; சங் 1:4; 35:5; 83:13; எசா 17:13; 29:5; 33:11; 41:15; எரே 23:28; தானி 2:35: ஓசே 13:3; செப் 2:1; மத் 3:12; லூக் 3:17).

பதனிட்ட தோல் (EATHERN)

பதப்படுத்தப்பட்டு, மனிதனின் பயனுக்காக அல்லது தேவைக்கேற்பத் தயார்செய்யப்பட்ட விலங்குகளின் தோலாகும்.

முற்காலத்திய மேற்காசிய நாடுகளிலும் பாலஸ்தீனத்திலும் தோலானது பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பது அனைவரும் அறிந்தது. பதனிட்ட தோலினால் செய்யப்பட்ட உடைகள், அரைக்கச்சைகள், காலணிகள் போன்றவைகளைப் பயன்படுத்தியது பற்றி விவிலியத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன (ஆதி 3:21; லேவி 13:48; 2 அரச 1:8; எசே 16:10; மத் 3:4; மாற் 1:6; எபி 11:37). சரியான முறையில் தோலினைப் பதப்படுத்தாததால் சில தோலாடைகளில் 'தொழுநோய்' காணப்பட்டது (லேவி 13:47-59). இறைவனது திருப்பேழையையும் (யாத் 26:14), அதனோடு சேர்ந்த மற்றப் பொருட்களையும் (எண் 4:6) மூடப்பயன்படுத்தப்பட்ட தோல் திரைகள் அனைத்தும் பதனிடப்பட்ட தோலிலிருந்து செய்யப்பட்டவையாகும். நடைமுறை வாழ்வில் பயன்படுத்தப்படும் ஏராளமான பொருட்கள் (லேவி 13:48; எண் 31:20), தாவீதினுடைய சட்டைப்பை (1 சாமு 17:40) தோலினால் செய்யப்பட்டவையாகும். சிறிய விலங்குகளின் முழுத்தோல்களிலிருந்து தண்ணீர், பால், திராட்சைரசம் போன்றவற்றை ஊற்றி வைத்துக்கொள்ளப் பயன்படும் புட்டிகள், சித்தைகள் அல்லது துருத்திகள் தயார் செய்யப்பட்டன (ஆதி 21:14; நீதி 4:19; 1 சாமு 1:24; யோபு 38:37; மத் 9:17). தோல் எழுதுவதற்கும் பயன்பட்டது. கி.மு. 150-ஆவது ஆண்டைச் சேர்ந்த சாக்கடல் சுருள்களிலுள்ள எசாயா நூலின் கையெழுத்துப் பிரதிகள், சேர்த்துத் தைக்கப்பட்டிருந்த சொரசொரப்பான தோல்களிலிருந்து தயாரிக்கப்பட்ட, பதினேழு தோலினாலான தாள்களால் செய்யப்பட்ட சுருளில் எழுதப்பட்டிருந்தன. பதான் (PADDAN – சமவெளி)

பதான் - ஆராம் என்ற பெயரின் சுருக்கமான வடிவம் (ஆதி 48:7).

பதான் - ஆராம் (PADDAN-ARAM - ஆராம் சமவெளி)

வடக்கு மெசபொத்தாமியாவில் இருந்த இந்த இடம், யூத மூதாதையரின் சொந்த நாடு ஆகும் (ஆதி 25:20; 28:2; 48:7). காரான் நகர் இந்த இடத்தைச் சேர்ந்ததே. மெசபொத்தாமியாவின் நகரங்களில் வாழ்ந்து வந்த இந்த மூதாதையர்கள், கால்நடைகளையும் வளர்த்து வந்தனர். சிலர் வியாபாரத்திலும் முழு ஈடுபாடு கொண்டிருந்தனர்.

இவர்களின் மொழி அரமேயிக் ஆகும் (ஆதி 31:49). மேலும், இக்குழுவில் இருந்தவர்கள் எல்லாம் 'அரமேயர்' என அழைக்கப்பட்டனர் (ஆதி 31:24).

யாக்கோபு, ஏசாவிடமிருந்து பாதுகாப்பிற்காகத் தப்பிக்கவும் அவர்களின் உறவினர்களிடையே ஒரு மனைவியைத் தேடவும் (ஆதி 28:7; காண்க. 27:42-45), ரெபேக்காவின் தந்தையும் தன் பாட்டனுமாகிய பெத்துவேலின் வீட்டிற்கு, பதான் - ஆராமுக்குச் சென்றார் (25:20). அங்கு ராகேல் மற்றும் லேயாவை மணந்து (ஆதி (35:23-26; 46:15). பெரும் செல்வந்தர் ஆனார்.

பதிப்பு வேலை (INLAY)

ஒரு பொருளின் உள்வெட்டுப்புழையில் மற்றொரு பொருள் துண்டுகளைப் பொருத்தி இணைப்பது பதிப்பு வேலையாகும். எசே 27:1-9-இல் வரும் தீர் நகரம் பற்றிய புலம்பலில், தீர் நகரம் ஒரு கப்பலுக்கு ஒப்பிடப்படுகிறது. அதில் "சைப்ரஸ் மரத்தினால் உன் மேல்தளம் கட்டி அதில் தந்தம் இழைத்தனர்" என்று கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் தந்தப் பொருள்கள் என்பவை பெரும்பாலும் தந்தம் பதிப்புச்செய்யப்பட்ட பொருள்களேயாகும். 1 அர 10:18-இல் வரும் சாலமோனின் அரியனை மரத்தால் செய்யப்பட்டு தந்தம், பொன் இழைக்கப் பட்டதாகும். இவ்விதமே ஆமோ 6:4-இல் எசேக்கிய சனகெரிபுவுக்கு அளித்த கப்பத்தில் தந்தத்தால் பதிப்பு வேலை செய்யப்பட்ட மஞ்சங்களும் சேர்க்கப்பட்டன. இதிலிருந்து இப்படிப் பதிப்பு வேலை செய்யப்பட்ட பொருள்கள் பெரிதும் மதிக்கப்பட்டன எனத்தெரிகிறது. 1 அர 22:39-இல் தந்தத்தால் கட்டிய வீடு; சங் 44:8; ஆமோ 3:15-இல் தந்தமாளிகை, தந்தத்தால் இழைத்த வீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவையும் கதவுகள், சன்னல்களில் அதிகமாகத் தந்தப்பதிப்பு வேலைப் பாடுடையவை என்றே புரிந்துகொள்ளப்பட வேண்டும். சுமேரியர் காலத்திலிருந்து இக்காலம்வரை, பதிப்பு வேலைகள் வீட்டு அழகு சாதனங்களாக விளங்கியுள்ளன. தொடக்க பதிப்பு வேலைகளில் எலும்பு, முத்து, சிப்பிகள் போன்றவை பயன்பட்டுள்ளன.

பதில் (ANSWER)

வேண்டுகோளுக்கோ, வினாவுக்கோ அளிக்கப்படும் எதிர்ச்சொல். பேசுவதைக்குறிக்கும் கிரேக்கச்சொல்லோடு சேர்த்துப் பயன்பட்டுள்ளது. லூக் 2:47-இல், இயேசுவின் "பதில்களில் விளங்கிய அறிவுத்திறன்" வயதுக்கு மீறிய அறிவாற்றலைச் சுட்டவில்லை. மாறாக, இயேசு ஆன்மீகக் காரியங்கள் மற்றும் யூத விசுவாசத்தின் உடன்படிக்கைப் பொறுப்புகள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டதைக் குறிக்கிறது (காண்க. சங் 119:99-100).

பதிவாளர் (RECORDER)

இஸ்ராயேலர் அரசவையில் ஓர் உயர் பதவி அதிகாரி. தொடக்ககாலத்தில், அரசனுடைய சட்டங்களையும் தீர்ப்புகளையும் ஒருவேளை, மக்களின் பழக்கவழக்கங்களையும் பாதுகாத்து வந்தவர். இவர் அரசனுக்கு ஆலோசனை கூறினார். அரச செயல்பற்றிய குறிப்பேடுகளுக்குப் பொறுப்பானவர். தாவீதுக்கும், சாலமோனுக்கும் யோசபாத்து பதிவாளராகப் பணிபுரிந்தார் (2 சாமு 8:16; 1 அர 4:3; 1 நாள் 18:15). ஆசாபின் மகனான யோவாகு எசேக்கியாவின் பதிவாளராக இருந்தார் (2 அர 18:18.37; எசா 36:3.32). இவர், யோசியா அரசன் காலத்தில் ஆலயத்தைப் பழுதுபார்த்தவர் களுக்குக் கூலி கொடுப்பதில் ஈடுபட்டிருந்தார் (2 நாள் 34:8).

பதிவு செய்தல், கணக்கெடுத்தல் (ENROLL-MENT)

குடும்பம், குலம், நிலை இவற்றிற்கேற்ப பொதுப்பதிவேட்டில் மக்களைப் பதிவு செய்தல். இத்தகைய தலைமுறை அட்டவணைகள் பல ஊர்களில் இருந்திருக்கலாம். படைவீரர்களைக் கட்டாயமாக இராணுவத்தில் சேர்ப்பதற்காகப் பதிவு செய்து கொள்வது வழக்கம் (எண் 1:2-3; 2 சாமு 24:1-9; 1 நாள் 7:40; 21:1-5; 2 நாள் 25:5). தாவீதும், சாலமோனும் கட்டாய வேலையில் சேர்ப்பதற்காக புறவினத்தார்களையும் பதிவு செய்தனர் (2 நாள் :217). தங்களது குருத்துவப்பணிக்கும், ஊதியத்துக்கும் தாங்கள் தகுதியானவர்கள் என்பதைக் காட்டுவதற்காக, குருக்கள் தங்கள் குடும்பப் பதிவேட்டை வைத்திருந்தனர் (1 நாள் 23:3; எஸ் 2:61-63; நெகே 7:61-65). வரி விதிப்பதற்காக உரோமை அரசாங்கம் மக்களின் பெயர்களைப் பதிவு செய்தது என்று புதிய ஏற்பாடு கூறுகிறது (லூக் 2:2; அ.ப. 5:37).

1. பழைய ஏற்பாட்டில் 'பதிவு செய்தல்':

அரசர்கள் ஆட்சி செய்வதற்கு முன்

இஸ்ராயேலில் இராணுவத்திற்கு மக்களைப் பதிவு செய்வது வழக்கமாக இருந்தது (எண் 1:2-3; 1 நாள் 7:40). அதன் பிறகு, அரசன் சண்டைக்குச் செல்ல விரும்பிய போதும் மக்களைப் பதிவு செய்தனர் (2 சாமு 24:1-9; 1 நாள் 21:1-5; 2 நாள் 25:5).

அரசாங்கப் பதிவேடுகளைத் தவிர, குடும்பம், குலம் இவற்றின் அடிப்படையிலும் தலைமுறைப்பதிவேடுகள் பாதுகாக்கப்பட்டன (எசே 13:9). அவர்கள் குடும்பம், மூதாதையர்கள், குல ஒற்றுமை முதலியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாலும், ஆபிரகாமின் மக்களாயிருப்பதைப் பற்றியும், இறைவனின் வாக்குறுதியின் மக்களாக இருப்பதைப்பற்றியும் பெருமைப் பட்டதாலும், தலைமுறைப் பதிவேடுகளைப் பாதுகாத்து வந்தனர். யோத்தாம் இரண்டாம் எரோபயாம் ஆகியவர்களின் காலத்தில் தலைமுறைப் பதிவேடு ஒன்று இருந்ததாக நாளாகம ஆசிரியர் கூறுகிறார். எப்பொழுது, எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை இத்தகைய பதிவுகள் செய்யப்பட்டன என்பது தெரியவில்லை. தலைமைக்குரு ஒருவரின் குடும்பத்தலைமுறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பதிவாகியிருந்ததாக யோசிப்பசு கூறுகிறார். இத்தகைய தலைமுறைப் பட்டியல்களைக் குருத்துவ ஆசிரியரும், நாளாகம ஆசிரியரும் பயன்படுத்துகின்றனர்.

2. புதிய ஏற்பாடு: அகுஸ்து உரோமைப் பேரரசாகவும், கிரேனியு சீரியாவின் ஆளுநராகவும் இருந்தபோது, யூதர்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தின்படி தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய, தத்தம் ஊருக்குச் சென்றதாக லூக்கா கூறுகிறார் (லூக் 2:2). இதுவே முதல் கணக்கெடுப்பு என்றும் அவர் கூறுகிறார். எனவே வேறு பல கணக்கெடுப்புகளும் இருந்திருக்க வேண்டும். கலிலேயனான யூதா காலத்தில் இத்தகைய கணக்கெடுப்பு நடந்தது (அ.ப. 5:37). எகிப்துநாட்டில் 14 ஆண்டுகளுக்கொரு முறை கணக்கெடுப்பு நடந்ததாக எகிப்து புல்தாள்கள் தெரிவிக்கின்றன. விப்ரியு மாக்சிமுஸ் (கி.பி. 104) என்பவரின் அரச கட்டளையிலும் இத்தகைய கணக்கெடுப்பு பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது.

முதல் கணக்கெடுப்பு நடந்ததாக லூக்கா கூறும் காலத்தைப்பற்றி, சிலர் ஐயம் எழுப்புவர். ஏனெனில், விவிலியத்திற்குப் புறம்பான நூல்களில் இத்தகைய உலக மக்கள் கணக்கெடுப்பு இயேசு பிறந்தபோது நடந்ததாகக் கூறப்படவில்லை. மேலும், கி.பி. ஆறாம் ஆண்டில் நடந்த கணக்கெடுப்பின் போது, கிரேனியு சீரியாவின் ஆளுநராக இருந்தார். ஆனால், கி.மு. 8 அல்லது 6-ஆம் ஆண்டில் சென்சியு சாத்துரினு என்பவர் ஆளுநராக இருந்தார். ஆனால் 'ஆளுநர்' என்ற சொல் கிரேனியுக்கும் பொருந்தும். இவர் இக்காலத்தில் சீரியாவில் ஓர் இராணுவப்பதவியைக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், இவர் அதிகாரப்பூர்வமான பிரதிநிதியாக இருந்ததாகத் தெரியவில்லை.

பதிவேடு (REGISTER)

குடிக்கணக்கெடுப்பின்போது முறைப்படி ஒவ்வொரு வீட்டிலும் தலைவனும், ஒவ்வொரு வீட்டிலும் போருக்குச் செல்லத் தகுதியான ஆணும் தம் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு எடுக்கும் பதிவேடுகள் பின்னர் வந்த யூதர்களுக்குத் தங்கள் தலைமுறை அட்டவணையை அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்பட்டன; முக்கியம் வாய்ந்ததாக அமைந்தன.

பதினொருவர் (ELEVEN, THE)

உயிர்ப்பை விவரிக்கின்ற பகுதியிலே காட்டிக்கொடுத்த யூதாசைக் கழித்துவிட்டு இயேசுவின் பன்னிரு சீடர்களைக்குறிக்கும் சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (மத் 28:16; மாற் 16:14; லூக் 24:9.33; 1 கொரி 15:5). அ.ப. 1:26, "பதினொரு அப்போஸ்தலர்கள்" என்ற கணக்கெடுப்பு செய்து, யூதாசை நீக்கிவிட்டு மத்தியாவின் தேர்ந்தெடுப்பை விவரிக்கிறது.

பதுமராகம் (CARNELIAN, SARDIUS)

இது கடினமான சிவப்பு - ஆரஞ்சு ஆழ்ந்த சிவப்பு அல்லது சிவப்பு-வெள்ளை சேர்ந்த

நிறமுறைய மணிக்கல் வகையைச் சேர்ந்தது. விவிலியத்தில் குறிக்கப்படும் பல கற்களில், இது பாலஸ்தீனத் தொல்பொருள் ஆய்வு இடங்களில் ஓரளவு காணப்படும் ஒன்றாகும். இது தலைமைக் குருவின் மார்புப்பட்டையிலும், ஏபோதிலும் பதிப்பிக்கப்பட்ட கற்களில் ஒன்றாகும் (யாத் 28:17; 39:10). தீர் அரசன் தன்னை அழகுபடுத்திய விலையுயர்ந்த கற்களில் இதுவும் ஒன்று (எசே 28:13). விண்ணக அரியணையில் வீற்றிருந்தவர் பற்றிய விவரிப்பில் இது குறிக்கப்படுகிறது (திருவெளி 4:3). புதிய எருசலேமின் சுவரின் ஆறாவது அடிக்கல் பதுமராகத்தால் ஆனது (21:20).

பத்சூவா (BATH - SHUA - சூவாவின் மகள்)

1. யூதாவின் கானானிய மனைவியும், ஏர், ஓனான், சேலா ஆகியோரின் தாயும் ஆவாள் (1 நாள் 2:3).

2. பத்சேபா என்ற பெயரின் மற்றொரு வடிவம் (1 நாள் 3:5).

பத்சேபா (BATHSHEBA - நிறைவின் மகள்)

எலியாமின் (2 சாமு 11:3) அல்லது அம்மியேலின் (1 நாள் 3:5) மகள். தாவீது மற்றும் அப்சலோமின் ஆலோசகரான அகித்தோபலின் பேத்தி (2 சாமு 23:24). இவள் இத்தியனான உரியாவின் மனைவி ஆவாள். இவள் மேல் தாவீது காதல் கொண்டார். இவள் தன்னால் கருத்தரித் திருக்கிறாள் என்பதை அறிந்த தாவீது, இவளது கணவனைப் போரில் கொல்லச் செய்தார் (11:2-21). பிறகு தாவீதின் மனைவியானாள். இந்த விபசாரத்தினால் இவள் சிமயா, சோபாபு, நாத்தான், சாலமோன் ஆகியோருக்குத் தாயானாள்.

தாவீதுக்குப் பிறகு அரசாட்சியை ஏற்றுக் கொண்ட சாலமோனின் தாய் இவளே (2 சாமு 12:15-25). இதன் பிறகு 'அதோனியா "நான் அரசன் ஆவேன்" என்று சொல்லி ஆர்ப்பாட்டம் செய்தபோது நாத்தான் இறைவாக்கினர் உதவியால் சாலமோனை அரசர் என்று அறிவிக்க, தாவீதைத் தூண்டியவளும் இவளே (1 அர 1:5-40). அபிசாகைத் தனக்கு மணம் முடித்துத்தருமாறு கேட்ட அதோனியாவின் வேண்டுகோளை, இவள் சாலமோனிடம் எடுத்துச்சொன்னாள். அதன் விளைவாக அதோனியா உயிர் இழந்தான் (2:13-25). இப்பெயரின் மற்றொரு வடிவம் பத்சூவா ஆகும் (1 நாள் 3:5). புதிய ஏற்பாட்டில் பத்சேபா சேர்க்கப்பட்டிருக்கிறது (மத் 1).

பத்தனேயா (BATANEA)

பாசானின் மற்றொரு பெயர். பெரிய ஏரோது அரசின் நான்கு பகுதிகளில் ஒன்று.

பத்தாரா (PATARA - மிதிபட்ட)

லீக்கியாவின் பழைய நகரமான பத்தாரா, சான்துஸ் ஆற்றின் முகத்துவாரத்திற்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்திருந்தது. இந்த இடத்திலிருந்த நல்ல துறைமுகமும், கடல் வாணிபமும், வளமிக்க சாந்துஸ் பள்ளத்தாக்குடன் வியாபாரமும் இந்நகரை லீக்கியாவின் பெரிய வளம் கொழிக்கும் நகரங்களுள் ஒன்றாகச் செய்தது. இந்த நகர் அப்பொல்லோவின் மகனான பத்காருவினால் நிறுவப்பட்டது. பத்தாரா மத வழிபாட்டில் முக்கியமாக, இம்மக்கள் அப்பொல்லோவை, இப்பொல்லோ பத்தாரு என்ற பெயருடன் வழிபட்டனர். அப்பொல்லோவின் ஆலயமும், பத்தாரா குறி சொல்லுதலும் புகழ் வாய்ந்ததாகும். பழங்கால அரங்குகள், குளங்கள், சுவர்கள் போன்றவைகளின் அழிவுச்சின்னங்கள் இன்னும் உள்ளன. இது தற்போது கெலேமிஸ் என வழங்கப்படுகிறது. தோலமிகள் லீக்கியாவை ஆதிக்கம் செலுத்தியபோது தோலமி பிலதெல்பு பத்தாராவை விரிவுபடுத்தி ஆர்சினோ என மறுபெயரிட்ட போதிலும் அப்பெயர் பொதுவாக மரபில் வழங்கப்படாமல் விரைவில் மறைந்துவிட்டது. மேலும் பத்தாரா எகிப்துடன் சிறந்த வாணிப உறவு கொண்டிருந்தது. மத்தியதரைக்கடலில் மேற்கு நோக்கி வீசும் காற்று எகிப்திலிருந்து லீக்கியா செல்லவும், சிறிய ஆசியா செல்லவும் பத்தாரா உதவுகிறது.

பவுல், எருசலேம் நோக்கிய தனது

இறுதிப்பயணத்தில் மிலேத்து, கோசு, ரோது வழியாக பத்தாரா துறைமுகத்தை அடைந்தார். பாலஸ்தீனத்தை அடைய, அவர இங்குக் கப்பல் மாற்றி, சைப்பிரசுக்கு மேற்கிலும் தெற்கிலும் பயணம் செய்து தீரை அடைந்தார் (அ.ப. 21:1-3).

பத்திரொக்குல் (PATROCLVS)

இவர் நிக்கானோரின் தந்தையாவார். இந்த நிக்கானோர் யூதா மக்கபேயுவுக்கு எதிராய்ப் போர்தொடுக்க அனுப்பப்பட்ட தளபதிகளில் ஒருவர் (2 மக் 8:9).

பத்திரொபா (PATROBAS)

உரோமைத் திருச்சபையில் ஒருவராவார். பவுலால் உரோமையர் மடலில் வாழ்த்தப்பட்ட ஒரு கிறிஸ்தவர் ஆவார் (உரோ 16:14).

பத்திலொரு பங்கு (TITHE)

வருமானத்தில் அல்லது சொத்தில் பத்திலொரு பங்கைக் குருக்களின் மற்றும் மத சம்பந்தப்பட்ட தேவைகளுக்குக் கொடுப்பது இஸ்ராயேல் மக்களின் பழக்கம். இந்தப் பழக்கம் மிகவும் தொன்மையானது. இப்பழக்கம் செமித்திய மக்களிடம் மட்டுமல்லாமல் மற்றப் பல இனத்தவரிடத்திலும் இருந்து வந்தது. பழைய ஏற்பாட்டில் இப்பழக்கம் வெவ்வேறு முறைகளில் செயல்படுத்தப் படுவதைக் காண்கிறோம். எனவே ஒரு தெளிவான, முழுமையான வரலாற்றை இப்பழக்கத்தில் காண்பது அரிது. இருப்பினும் பொதுவாக நான்கு காலக்கட்டங்களில் இப்பழக்கத்தின் நிலையை நாம் காணலாம்.

1. பழைய ஏற்பாட்டின் தொன்மையான குறிப்புகள்:

ஆதி 28:22-இல் பெத்தேல் என்னும் புனித இடத்தில் யாக்கோபு, தான் கடவுளுக்குப்பத்திலொரு பங்கு செலுத்துவதாக நேர்ச்சி செய்வது கூறப்படுகிறது. இதே குறிப்பை ஆமோ 4:4-இல் நாம் காணலாம். 1 சாமு 8:15. 17-இல் எவ்வாறு இஸ்ராயேல் மக்கள் ஓர் அரசனுக்குத் தங்கள் உடைமையில் பத்திலொரு பாகம் செலுத்தித் துன்பப்பட வேண்டுமென்பது கூறப்படுகிறது. ஆதி 14-இல் ஆபிரகாம், மெல்கிசெதெக்கிடம் அளிக்கும் பத்திலொரு பாகம், கேள்விக்குரிய ஒன்றாகும். ஏனென்றால் இக்குறிப்பின் காலம் வரையறுக்கப்படவில்லை.

தொடக்ககாலத்தில், அதாவது உடன்படிக்கையின் காலத்தில் இந்தப்பழக்கம் நடைமுறையில் இல்லை. இதற்குப் பதிலாக விளைச்சலின் முதற்கனிகளை அளிக்கும் பழக்கம் இருந்துவந்தது. இரண்டும் ஒரே தோற்றம் கொண்டிருந்திருக்கலாம். காலப்போக்கில், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற கேள்விக்கு விடையாக ஏற்பட்டதுதான் பத்திலொரு பாகம் அளிப்பது என்பது. குறிப்பாக வட புனிதத் தலங்களில் இப்பழக்கம் ஆரம்பமானதாக இருக்கலாம்.

2. உப ஆகமத்தில் பத்திலொரு பாகம்:

உப ஆகமத்திலிருந்துதான் முறையான பத்திலொருபாகம் கொடுக்கும் பழக்கம் ஆரம்பமானதற்கான குறிப்புகள் விவிலியத்தில் நாம் காண்கிறோம்.

அ. பத்திலொரு பாகம் அளிப்பதின் விதி முறைகள்:

பத்திலொரு பாகத்தை இருவகையாக அளிக்கலாம் என உப ஆகமம் கூறுகிறது. முதலாவதாக, விளைச்சலில் பத்திலொரு பாகம் வருடா வருடம் குடும்பக் காணிக்கையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறெனில், காணிக்கை செலுத்த வேண்டிய குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து ஒரு புண்ணியத்தலத்தில் விருந்து ஒன்றைத் தயாரித்து அதற்கு லேவியர் ஒருவரையும் அழைக்க வேண்டும் (உப 14:22-27; காண்க. 12:6-19). இரண்டாவதாக, பத்திலொரு பாகத்தை மூன்று வருடத்திற்கு ஒருமுறை அறச்செயல்களில் பயன்படுத்த வேண்டும் (உப 14:28-29: 26:12-15). அதாவது, பத்திலொரு பாகத்தை லேவி, அன்னியன்,

திக்கற்றவன், விதவை ஆகியோருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, உப ஆகமத்தின்படி பத்திலொரு பாகம் கொடுப்பது என்பது இறைவன்தான் விளைச்சலைக் கொடுக்கும் பூமிக்குச் சொந்தக்காரர் என்று அங்கீகரிப்பதாகும். மேலும், இது குருக்களின் தேவைக்காகவும், அறச் செயல்களுக்காகவும் கொடுக்கப்படுகிறது.

ஆ. பத்திலொரு பாகம் கொடுப்பதற்கும், முதற்கனிகளைக் கொடுப்பதற்கும் இடையேயுள்ள தொடர்பு.

பத்திலொரு பாகம் கொடுப்பதும் முதற்கனிகளை அளிப்பதும் ஒரே செயலா என்பது கேள்விக்குறியாக அமைந்துள்ளது. உப 26:1-15-இல் நாம் காணும் விவரங்கள் பத்திலொருபாகம் மற்றும் முதற்கனிகளைக் கொடுப்பதைப் பற்றிக் கூறுகின்றன. இதிலிருந்து பத்திலொருபாகம் கொடுப்பது, முதற்கனிகளை அளிக்கும் பழக்கத்திற்குப் பின்னர் ஏற்பட்டதாக நாம் அறிகிறோம். உப ஆகமத்தின்படி பத்திலொருபாகம் கொடுப்பது இஸ்ராயேல் மக்களிடம் காணப்பட்ட ஒரு பழக்கமாகும். இது முதற்கனிகளை வழங்கும் பழக்கத்துடன் தொடர்புடையதாகும். மேலும் வெவ்வேறு முறையில் இதுசெலுத்தப்பட்டது. மனிதனுடைய எல்லா உடைமைகளும் இறைவனுக்கே சொந்தமானவை என்பதை இரண்டும் எடுத்துக் காட்டுகின்றன.

3. குருக்களின் நியமங்களுக்கும் பத்திலொருபாகத்துக்கும் இடையேயான உறவு: பத்திலொரு பாகம் முழுவதும் லேவியருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்டதில் பத்திலொரு பாகத்தை லேவியர்கள் குருக்களுக்குக் கொடுக்க வேண்டும் (எண் 18:20-32). குருக்களின் நியமங்களின்படி பத்திலொருபாகம், பலிகளோடு தொடர்புடையது. குருக்களின் நியமங்களும் உப ஆகமத்தைப் போலவே பத்திலொருபாகம் விளைச்சலின் ஒரு பகுதியே எனக்கூறுகிறது (லேவி 27:30-31). இதே பழக்கம் பிற்பாடு நெகே 10:37-38; 12:44; 13:5-இல் உறுதிப்படுத்தப்படுகிறது. மலா 3:8,10-இல் பத்திலொருபாகம் கொடுப்பது வற்புறுத்தப்படுகிறது. சில பகுதிகள் விலங்குகளிலும் பத்திலொரு பங்கு அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றன (லேவி 27:32-33; 2 நாள் 31:5-12).

4. பிற்கால யூத மரபில் பத்திலொரு பாகம்:

இருவகையான பத்திலொருபாகம் மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டன. முதல் வகையில் லேவியர்களுக்குப் பத்திலொருபாகம் வழங்கப்பட்டது. இதன் கடுமையை இயேசு கண்டிக்கிறார் (மத் 23:23; லூக் 11:42). இரண்டாவது வகை குடும்ப விருந்தில் பயன்படுத்தப்பட்டது. இதில் கால்நடைகளும் அடங்கும். இந்த இருவகைகளைத் தவிர மூன்றாவதாக ஒரு முறையும் காணப்படுகிறது. இஃது ஏழைகளைப் பராமரிக்க விதிக்கப்பட்ட பத்திலொரு பாகமாகும்.

பத்துக்கட்டளைகள் (TEN COMMANDMENTS)

I. இது யாவேக்கும் இஸ்ராயேலுக்கும் இடையிலான உடன்படிக்கைக் கோரிக்கைகளின் சுருக்கமாகும். இச்சொல் யாத் 34:28; உப 4:13; 10:4-இல் வருகிறது. இப்பகுதியில் மோசே இச்சட்டங்களை எழுதும்படி கட்டளையிடப்படுகிறார். இவை காலந்தோறும் சமய, பண்பாட்டு வளர்ச்சியிலும் வரலாற்றிலும் சமூக அமைப்பின் பேருரிமைப்பத்திரமாக விளங்குகின்றன.

II. பிரிவுகள்: இக்கட்டளைகள் ஓரளவு வேறுபட்ட இருவடிவில் விவிலியத்தில் வருகின்றன. இவற்றை யாத் 20:2-17; உப 5:6-21 ஆகிய பகுதிகளில் வாசித்து ஒப்பிட்டறிக. இவற்றிற்கு எண்ணிக்கை அளிப்பதில் பல வேறுபாடுகள் உண்டு. மூன்று முக்கியமான பிரிவு முறைகளை இங்குத் தருகிறோம்.

அ) முதல் முறை: இதைப் பீலோ, யோசிப்பசு,

கிரேக்கத் தந்தையர், கிரேக்க மற்றும் சீர்திருத்தச்சபைகள் பின்பற்றுகின்றன. இதன்படி 1) போலி அல்லது அன்னியக் கடவுளுக்குத் தடை, 2) உருவங்களுக்குத் தடை, 3) இறை பெயரை வீணாகப் பயன்படுத்துவதற்குத் தடை, 4) ஓய்வு கள், 5) பெற்றோர், 6) கொலை, 7) விபசாரம், 8) களவு, 9) பொய்ச்சாட்சி, 10) பிறர் பொருள் கவர்தல் என்பன.

ஆ) இரண்டாம் முறை: இம்முறை ஓரிசனால் தோற்றுவிக்கப்பட்டு அலக்சாந்தியா கிளமந்து, அகுஸ்தீன் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டது. இப்போது இலத்தீன் திருச்சபை, லூத்தரின் திருச்சபை ஆகியவை இதைப் பின்பற்றுகின்றனா். இதன்படி 1) போலிக்கடவுள்களுக்கும், உருவங்களுக்கும் தடை, 2) இறைபெயரை வீணாகப் பயன்படுத்துவதற்குத்தடை, 3) ஓய்வு நாள், 4) பெற்றோர், 5) கொலை, 6) விபசாரம், 7) களவு, 8) பொய்ச்சாட்சி, 9) பிறர் மனைவியைக் கவர்தல், 10) பிறர் உடைமையைக் கவர்தல் என்பன.

இ மூன்றாம் முறை: இதை இக்கால யூதர்கள் பயன்படுத்துகின்றனர். இதன்படி, 1) முகவுரை, "நானே உன் கடவுளாகிய ஆண்டவர்....", 2) போலிக் கடவுள்களுக்கும், உருவங்களுக்கும் தடை, 3) இறையின் பெயரை வீணாகப் பயன்படுத்துவதற்குத் தடை, 4) ஓய்வு நாள், 5) பெற்றோர், 6) கொலை, 7) விபசாரம், 8) களவு, 9) பொய்ச்சாட்சி, 10) பிறர் பொருள் கவர்தல் என்பன.

இம்மூன்று முறைகளில் முதலாவது முறைபொருள் அளவில் சிறந்தது; ஒரு வேளை மூலமானதாக இருக்கலாம். இக்கட்டளைகள் இரு பிரிவாகப் பிரிக்கப்படலாம். முதல் பிரிவு இறைவன்பால் கொள்ள வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறுகின்றது. இரண்டாம் பிரிவு பிற மனிதரிடம் கொள்ள வேண்டிய கடமைகளை எடுத்துக்கூறுகிறது. இவற்றில் வாழ்வின் ஊற்றும் இறைவனின் பிரநிதிகளுமான பெற்றோர் முதன்மை பெறுகின்றனர். "நானே உன் கடவுளாகிய ஆண்டவர்..." என்ற முகவுரை ஒரு கட்டளையாக எண்ணப்பட்டாலும், இது கட்டளைகளுக்குப் புறம்பானதாகும்.

முதல் பிரிவு இறைவனைப்பற்றியதாகும். இதில் சமயத்தின் முதன்மை அழுத்திக் கூறப்படுகிறது. இறைவனை மட்டுமே வழிபடவேண்டும். இஃது எகிப்திலிருந்து விடுதலை அடைந்ததற்கும் உடன்படிக்கையெனும் கொடையைப் பெற்றதற்கும் இஸ்ராயேலர் அளிக்கும் நன்றியறிதலாகும். ஒரே இறைவனை வழிபடும் கட்டளைக்கு, சிலை வணக்கத்தைத் தடுக்கும் கட்டளை பாதுகாப்பு அளிக்கிறது. உடன்படிக்கை மக்களின் கதி அவர்களுடைய இறைவழிபாட்டின் தூய்மையைப் பொருத்ததாகும். இறைவன் பெயருக்கு வணக்கம் செலுத்துதல், ஓய்வு நாளைக் கடைப்பிடித்தல் என்பன உடன்படிக்கை இறைவனுக்குக் காட்டும் அன்புமிக்க மரியாதையும் ஆராதனையும் ஆகும். அவருக்குக் காட்டும் பிரமாணிக்கமாகும்.

இரண்டாம் பிரிவு பெற்றோருக்கு மரியாதை காட்டுவது, ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய குடும்ப உணர்வு ஆகியவற்றை வலியுறுத்துகிறது. கொலை, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி, பிறர் பொருளைக் கவர்தல் என்பன தெளிவாகத் தடை செய்யப்படுகின்றன.

எதிர் மறையான வாக்கிய அமைப்பு நேர்முறையான பொருளை அழுத்திக் கூறவே பயன்படுகிறது. உடன்படிக்கையின் கீழ் நன்றியோடு வாழ்ந்து, அக்கொடைக்கேற்ப வாழ்க்கை அமைத்தலும் இந்த நேர்முறையான பொருளாகும். இக்கட்டளைகள் வெறுமனே புறக்கட்டளைகளை மட்டும் தரவில்லை. அகத்தூய்மையில் அக்கறை கொள்கின்றன. இவை ஒரு மனித ஒழுக்க அமைப்பைத் தருகின்றன. பத்துக் கட்டளைகள் இறைமக்கள் எல்லாருக்கும், எல்லா இடங்களிலும், எல்லாக்காலங்களிலும் உரியதாகும். யாவே ஓர் இனத்தாருடைய கடவுள் மட்டும் அல்லர். அது போல் அவரது கட்டளைகளும் எல்லா இன எல்லைகளையும் கடந்தது; முழு உலக ஒழுக்க

அமைப்பிலும் நிறைந்து நிற்கிறது. உலக இலக்கியம் முழுவதிலும் இதற்கு ஒத்த ஒழுக்கச்சட்டத்தைப் பார்ப்பது அரிது.

III. இந்தக் கட்டளைகள் பற்றிய இரு வாசகங்களையும் (யாத் 20:2-17; உப 5:6-21) வாசித்து, அவற்றிடையேயுள்ள வேறுபாடுகளைக் கண்டுணரலாம். இரண்டு வாசக வடிவமுமே மூல வடிவத்தைப் பிரதிபலிக்கவில்லை எனலாம். மூலத்தில், எல்லாக் கட்டளைகளுமே கொலை, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி ஆகியவை பற்றிய கட்டளைகளைப்போல் சுருக்கமாக இருந்திருக்கலாம் என்று விளக்கவுரையாளர்கள் கருதுகின்றனர். மற்றக் கட்டளைகள், அவற்றைக் கடைப்பிடிக்க உதவியாக , போதக உந்து காரணங்களால் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ஓய்வுநாள் பற்றிய யாத்திரை ஆகம வாசகம், ஆதி 1:1-2:3-இல் வரும் இறைவன் ஆறுநாட்கள் வேலை செய்து ஏழாம் நாள் ஓய்வெடுத்தது உந்து காரணமாகக் காட்டப்படுகிறது. உபாகம வாசகம், எபிரேயர் குடும்பங்களும் மட்டுமன்று, எல்லாருக்கும் இக்கட்டளை உரியது என்று சுட்டுகிறது. ஒரு காலத்தில் எபிரேயர்கள் அடிமைகளாக இருந்தனர் என்பது மனிதாபிமான உந்து காரணமாக எடுத்துக் கூறப்படுகிறது. பிறர் பொருளைக்கவர்வது பற்றிய கட்டளை ஒரே எளிய கட்டளையாக இருந்திருக்க வேண்டும். இது பிறகு இரு முறையில் விரிவாக்கப்படுகிறது. யாத்திரை நூல் வாசகம், அயலாருடைய உடைமைகளையும் உள்ளடக்கும் குடும்பத்தைக் குறிப்பிட்டு விரிவாக்கப்படுகிறது. பிறகு, மனைவி, அடிமைகள், வீட்டு விலங்குகளையும் உள்ளடக்கும் முறையில் விரிவாக்கப்படுகிறது. உபாகம விரிவாக்கத்தில் மனைவி வெளிப்படையாகவும், தனியாகவும் குறிக்கப்படுகிறாள். பின்பு வீடு, அடிமைகள், விலங்குகளையும் உள்ளடக்கு முறையில் கட்டளை விரிவாக்கப்படுகிறது. இது குடும்ப வாழ்வு பற்றிய மிகவும் வளர்ச்சியடைந்த நோக்கைப் பிரதிபலிக்கிறது.

இக்கட்டளைகள் அல்லது தடைகள் நேரடியானவை; ஐயவாதமோ, நிபந்தனையோ உடையவையல்ல. இவை யாத்திரை ஆகம நூலில் பெற்றிருக்கும் இடம் மூல இலக்கியச் சூழ்நிலையைச் சார்ந்ததல்ல என்றும் குருக்கள் பாரம்பரியப் பின்னணியில் உள்ளன என்றும் இக்கால ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். உபாகமத்தில் இக்கட்டளைகள் கொண்டிருக்கும் இடம், *சீனாய்* உடன்படுக்கையோடு தொடர்புபடுத்தும் பாரம்பரியத்தைத் தழுவி இவற்றின் ஆசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் தொகுத்துள்ளனர் என்று காட்டுகிறது. இதுதான் இவற்றிற்குரிய இடமாகும். இவையெல்லாம், மூல, பழைய மற்றும் எளிய வடிவத்தை நீக்கி, குருக்கள் பாரம்பரிய இறுதி வாசக வடிவம் கொடுத்தவை என்று காட்டுகின்றன.

IV. பழைய ஆய்வாளர்கள் சிலர் இக்கட்டளைகள் மோசே காலத்தைச்சேர்ந்தவை என்பதை மறுத்தனர். இவர்கள் கருத்துப்படி, இக்கட்டளைகள் கி.மு. 8-7-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இறைவாக்கினர்களின் ஒழுக்கபோதனையின் சுருக்கமாகும். இதற்குச் சான்றாக, இவற்றின் சில பண்புகள், மோசே காலத்துப் பாலைவனத்து வாழ்க்கைக்குப் பொருந்துவதைவிட, கானானில் குடியேறிய காலத்து வாழ்க்கைக்குப் பொருந்துவதாக அமைந்திருக்கின்றன என்பர். சான்றாக, வீடு மற்றும் நிலம், எருது மற்றும் கழுதைகள் பற்றிய குறிப்புகள். உருவங்கள் தடை செய்யப்படுவது 8 அல்லது7-ஆவது நூற்றாண்டிலிருந்துதான் தொடங்கியது என்று கருதப்பட்டது. ஓய்வுநாள் நாடோடி வாழ்க்கைக்கு ஒத்ததாகத் தெரியவில்லை. ஆனால், நவீன காலக்கண்டுபிடிப்புகள் இந்த மறுப்புகளின் கனத்தைக் குறைத்துள்ளன. இக்கட்டளைகளின் உபாகம வாசக வடிவு, மன்னர்கள் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால், இக்கட்டளைகள் வாசகத்தைவிட பல நூற்றாண்டுகளுக்கு முந்தியவையாக இருக்கலாம். பிற்கால விவிலிய இலக்கியத்தில் பத்துக்கட்டளைகள்

வெளிப்படையாக எடுத்துக்கூறப்படவில்லை என்பது உண்மையானாலும் உறுதியளிப்பதாக அமையவில்லை. மோசே காலம் என்பது மோசேக்கு மட்டும் சாற்றிக்கூறப்படுவதில்லை. ஆனால், அக்காலத்தில் அவர்தான் முதன்மையானவர். இப்படி மோசேக்குச் சாற்றிக்கூறுவது, கற்பலகைகள் இறைவனால் எழுதப்பட்டு (யாத் 34:12; உப 5:22), பின்பு மோசேயால் மீண்டும் எழுதப்பட்டன (யாத் 34:28) என்ற நிகழ்ச்சியுரை, இக்கட்டளைகளின் இறைத்தோற்றத்தையும் அதிகாரத்தையும் மிகவும் கற்பனை மிக்க விதத்தில் எடுத்துக் கூறுவதேயாகும். போலிக்கடவுள்களையும், உருவங்களையும் தடை செய்யும் கட்டளை, இஸ்ராயேல் சமயத்துக்குத் தனிச்சிறப்பான பண்பாகும். இதைப் பாரம்பரியம் மோசேக்குச் சாற்றிக் கூறுகிறது.

இறைவன் பெயரை வீணாகப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் கட்டளை, மந்திரவித்தைகளில் அப்பெயரைப் பயன்படுத்துவதற்கு எதிரானதாகும். பழங்கால இஸ்ராயேலில் மற்றக் கட்டளைகள் புரிந்து கொள்ளப்பட்ட விதம் பற்றி குடும்பம், திருமணம், கொலை, களவு ஆகிய தலைப்பின் கீழ்க் காண்க. பொய்ச்சாட்சியைத் தடைசெய்யும் கட்டளை சட்ட முறையைச் சேர்ந்ததாகும். பிறர் பொருள்களைக் கவர்வது பற்றிய தடை உள்ளார்ந்த செயலில் அக்கறை கொள்கிறது. தீமைகளுக்கு வேர் உள்ளார்ந்த ஆசையே. இத்தகைய தீய ஆசைகளைத் தடை செய்யும் கட்டளை, பத்துக்கட்டளை தோன்றியதாகக் கருதப்படும் எக்காலத்திலும், இஸ்ராயேல் ஒழுக்க மரபின் சிறப்புப் பண்பாகும்.

வழிபாடு சார்ந்த பத்துக்கட்டளைகளை, யாத் 3:14-26 என்ற பகுதியில் கண்டுபிடித்துள்ளதாக நவீன ஆய்வாளர்கள் சிலர் நம்புகின்றனர். உண்மையில், இப்பகுதியில் பத்துக்கு மேற்பட்ட கட்டளைகள் உள்ளன. சூழ்ச்சித்திறனுடன்தான் பத்து என்ற எண்ணிக்கையை அடைய முடியும். இவர்கள், யாத் 34:28-இல் வரும் "பத்துக்கட்டளைகள்" என்ற சொற்றொடர் வழிபாட்டின் பத்துக்கட்டளைகளைத்தான் குறிக்கிறது என்பர். இரண்டு பத்துக்கட்டளைகளும் மற்றக் கடவுள்களை வணங்குவதற்குத் தடை (34:14), உருவங்களுக்குத் தடை (4:17), ஓய்வுநாள் (34:21) ஆகியவற்றைப் பொதுவாகக் கொண்டுள்ளன.

V. புதிய ஏற்பாடு: தனிப்பட்ட கட்டளைகள் குறிக்கப்படுகின்றன. ஆனால், பத்து என்று ஓரிடத்திலும் குறிக்கப்படவில்லை. விபசாரம் (5:27) ஆகியவை பற்றிய தடை (உப 24; 1:1மத் 5:31) இணையாகக் கூறப்படுகிறது. யாத் 20:7; எண் 30:3; உப 23:22 ஆகியவை கலந்த வாசகம் மத் 5:33-இலும், யாத் 21:24; மத் 5:38-இலும் லேவி 19:18; மத் 5:43-இலும் எடுத்துக் கூறப்படுகின்றன. இயேசு அழிக்கவன்று நிறைவேற்ற வந்த சட்டம் இதுவே. எல்லா எடுத்துக்காட்டுகளும் யூதத்துவத்தின் உச்ச அதிகாரமான தோராவிலிருந்து எடுத்துக் கூறப்படுகின்றன. யாத் 20:12; மத் 15:4; எபே 6:2-3-இலும், உப 5:17-21; உரோ 13:9-இலும் யாத் 20:13 தொ (உப 5:7 தொ); யாக் 2:11-இலும் எடுத்துக் கூறப்படுகின்றன. முடிவில்லா வாழ்வு பெற விரும்பும் வாலிபனுக்குக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கச்சொல்கிறார் இயேசு. எக்கட்டளைகள்? என்ற கேள்விக்கு, இயேசு பத்துக்கட்டளைகளில் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். ஆனால், வழக்கமான வரிசையிலோ, முழுமையாகவோ அவர் கூறவில்லை. மத் 19:18-19-இல் கொலை, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி, பெற்றோரைப் போற்றுதல் ஆகியவற்றோடு அயலான்மேல் அன்பு காட்டுவது பற்றிய கட்டளை (லேவி 19:18) சேர்க்கப்படுகிறது. மாற் 10:9-இல் அதே கட்டளைகளோடு வஞ்சித்துப் பறிக்காதே என்றும் கூறப்படுகிறது. ஆனால், அயலார் அன்பு பற்றிய கட்டளை விடப்பட்டுள்ளது. லூக் 18:20-இல் விபசாரம், கொலை, களவு, பொய்ச்சாட்சி,

பெற்றோரைப் போற்றுதல் ஆகியவை பற்றிய கட்டளைகள் கூறப்படுகின்றன. இப்பகுதிகள், நற்செய்திகள் காலத்தில்கூட பத்துக்கட்டளைகள் அடிப்படை அளவில், நிலையான வடிவத்தையும் முக்கியத்துவத்தையும் அடையவில்லை என்பதைச் சுட்டுகின்றன. இந்நிலையைப் பிற்காலக் கிறிஸ்தவத்தில்தான் பத்துக்கட்டளைகள் அடையும்.

பத்துக்கன்னியர் - உவமை (TEN VIRGINO-PARABLE)

ஆண்டவரது இரண்டாம் வருகை யாரும் எதிர்பாராத நேரத்திலே திடீரென இருக்கும் என்பதை விளக்க இந்த உவமை கூறப்பட்டது (மத் 25:1-13). இந்த உவமையிலே வருகின்ற மணமகன் இறைமகன் இயேசு. இவர் இரண்டாம் வருகையின்போது வல்லமையோடும் மாட்சிமையோடும் வருவாரெனக் கூறப்பட்டுள்ளது (லூக் 21:27). விளக்குகளில் எண்ணெயோடு காத்திருக்கும் விவேகக் கன்னியர்கள் ஆண்டவரின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் விசுவாசிகளைக் குறிக்கின்றனர். அறிவிலிகளான கன்னியர்கள் விசுவாசமற்றவர்களைக் குறிக்கிறார்கள். இந்த எண்ணெயாகிய விசுவாசம் வானக இன்பத்தை அடையவழி. விவேகிகள் எண்ணெய் தர மறுப்பது பேராசையால் அன்று. விசுவாசமானது மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள இயலாதது. மற்றவர்கள் தாங்களாகவே விசுவாசத்தை அடைய முயல வேண்டும். இறுதி வேளையிலே விசுவாசத்திற்காகத் தேடி அலைந்து பயனில்லை. ஏனெனில், தாமதிப்போரை ஆண்டவர் ஏற்பதில்லை.

பத்மு (PATMOS)

இஃது அகியன் கடலில் சிதறிக்கிடக்கும் தீவுகளுள் ஒன்று. இது மிலேத்துக்கு மேற்கு தென் மேற்கில் 60 கி.மீ. தொலைவிலும், எபேசுக்குத் தென்மேற்கில் 90 கி.மீ. தொலைவிலும், சாமோசுக்குத் தென் தென் மேற்கில் 45 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இது வடக்கு-தெற்காக 16 கி.மீ. நீளமும், வட எல்லையில் அதிக அகலமாக 10 கி.மீட்டரும் கொண்டது. இது பாறைகளையும் எரிமலைகளையும் கொண்ட ஒரு தீவு. உரோமையர்கள் இத்தகைய சிறிய தீவுகளுக்கு அரசியல் குற்றத்திற்காக நாடு கடத்தப்பட்டவர்களை அனுப்பினர். காட்சியாளரான யோவான் கடவுளின் வார்த்தையை அறிவித்ததற்காக பத்மு தீவிற்கு அனுப்பப்பட்டார் (திருவெளி 1:9). யோவான் தன் துன்பங்களால் துன்புறும் திருச்சபைகளுடன் அவற்றின் துன்பங்களைப் பகிர்ந்துகொள்கிறார் (திருவெளி 6:9; 20:4). யூசேபியுவின் கூற்றுப்படி, யோவான் தொமிசியன் பேரரசனால் கி.பி. 95-இல் நாடு கடத்தப்பட்டு, பதினெட்டு மாதத்திற்குப் பின்னர் நெர்வா பேரரசனால் விடுவிக்கப்பட்டார்.

யோவானின் சில காட்சிகள் இந்தத்தீவில் நடந்திருக்கக்கூடும் என்பதைப் பிரதிபலிக்கின்றன (10:2; 19:6). இவ்வாறு நாடு கடத்தப்பட்டு வரையறுக்கப்பட்ட நிலையை யோவான் அதிகம் உணர்ந்ததாகத் தெரிகிறது. ஆகவே எல்லைகளும் வரையறைகளும் நீக்கப்படுவதை, கடல் மறைந்து போவதாக உருவகப்படுத்துகிறார் (21:1).

இத்தீவிலுள்ள பல புனித இடங்களில், யோவான் காட்சி கண்டதாகப் பாரம்பரியம் கருதும் குகையும் ஒன்றாகும். இங்கு கி.பி. 1088-இல் புனித யோவான் பெயரில் ஒரு துறவியர் இல்லம் கிறிஸ்தோதுலோவால் நிறுவப்பட்டது.

பத்ரபீம் (BATH - RABBIM- கூட்டத்தின் மகள்) எஸ்போனின் வாயில். இது மீன்குளங்களுக்கு அருகில் இரபாவை நோக்கியிருந்தது (உ.ச. 7:4).

பத்ருசிம் (PATHRUSIM - பத்ரோசின் மக்கள்)

பத்ரோசின் மக்களாகிய இவர்கள், எகிப்தின் தென் பகுதியில் வாழ்ந்தனர். இப்பெயர் இன விளக்கவியல் பட்டியலில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது (ஆதி 10:14; 1 நாள் 1:12).

பத்ரோசு (PATHROS - தென்னிலம்)

இஃது எகிப்தின் தென் பகுதியை அதாவது, எகிப்தின் மெம்பிசுக்கு மேலுள்ள அனைத்துப்

பகுதிகளையும் குறித்தது. அசீரிய ஏடுகளிலும் எசா 11:11-இலும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின்படி பத்ரோசு மெம்பிசுக்குத் தெற்கிலிருந்து சீனிம் நீர் வீழ்ச்சிவரையுள்ள பகுதியைக்குறிக்கும். பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் இந்தப் பத்ரோசு குறிப்பிடப்பட்டுள்ளது. நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேலர் சிலர் இங்குத்தப்பி ஓடினர் (எசா 11:11; எரே 44:1.15; எசே 30:14).

எசே 29:14-இல் பத்ரோசு எகிப்தியரின் முன்னோர் நாடு எனக்கூறப்படுகிறது. மேலும், பத்ரோசின் மக்கள் என்று பொருள்படும் பத்ரூசிம் என்ற பெயர் நாடுகளின் பட்டியலில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது (ஆதி 10:14; 1 நாள் 1:12).

பந்து (BALL)

பந்தைப்பற்றிய ஒரே விவிலியக்குறிப்பு, எசேக்கியாவின் அரண்மனைப் பொறுப்பாளனாகிய செபுனாவின் பதவி இறக்கம் பற்றிய பகுதியில் வருகிறது (எசா 22:15-25). ஒருவேளை, செபுனா தனக்கெனத் தயாரித்துக் கொண்டிருந்த பறைக்கல்லறை அருகில் அவனைச் சந்தித்து, அவனது வீழ்ச்சியை முன்னறிவிக்கிறார் எசாயா. "ஆண்டவர் உன்னைத் தள்ளிவிட்டுத் தூக்கி எறிவார்; உன்னைக் கெட்டியாய் மடக்கிப் பிடித்து, சுற்றிச்சுற்றி, உன்னைச் சுழற்றி, பரந்து விரிந்த நாட்டிலே பந்தடுவார்". அதாவது ஆண்டவர் செபுனாவை அசீரியாவுக்கு நாடு கடத்துவார். இங்கு விளையாட்டில் பயன்படும் பந்தைக் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

பப்பிரஸ் (PAPYRUS)

உயரமான நீர்நாணல் பயிர். பண்டைக் காலத்தில் எழுதுவதற்கு உதவும் ஒரு பொருளாக இது பெரிதும் கருதப்பட்டு வந்தது. பண்டைக்காலத்தில் இந்த நாணல் எகிப்து நாட்டுச் சதுப்புநில ஓரங்களில் பெருமளவிலும், நைல் நதியின் ஓரங்களில் சிறிதளவும் காணப்பட்டது. தற்சமயம் எகிப்தில் இத்தகைய நாணல் காணப்படுவதில்லை. வட எகிப்தியக் கலையின் சின்னமாக அது விளங்கிற்று. சூடானின் வட பாகத்தில் தற்சமயம் இது காணப்படுகிறது. பாலஸ்தீனத்தின் கூலே ஏரியின் சதுப்பு நிலங்களில் இது வளர்கிறது. இந்த நாணல் பட்டையையும் உள்ளீடான மென்சோறும் கொண்ட தண்டுடையது. இது நீருக்குமேல் 1.2 மீட்டர் முதல் 4.5 மீட்டர் வரை வளரக்கூடியது. உச்சியில் குடையைப் போன்று இலைகளைக் கொண்டது.

மரங்கள் அரிதாகக் காணப்பட்ட எகிப்தில், நாணல் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. படகு, கூடை, கயிறு போன்றவற்றைச் செய்வதற்கும், பிற பொருட்களைக் கட்டுவதற்கும் இது பயன்படுத்தப் பட்டது. எகிப்து மட்டுமே அந்நாட்களில் நாணலைத் தயாரிக்கும் நாடாக விளங்கியது. பின்னர், அதனை அண்டை மேற்காசிய நாடுகளுக்கும், கிரேக்க நாடுகளுக்கும், இத்தாலிக்கும் ஏற்றுமதி செய்தது.

நாணலை நீர்த் தாவரமாக யோபு 8:1 குறிப்பிடுகின்றது. எசா 18:2 நாணலால் உருவாக்கப்பட்ட படகினைச் சுட்டிக்காட்டுகிறது. யாத் 2:3-இல் குழந்தை மோசேயை வைத்த கூடை நாணலால் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. எசா 35:7 குறிப்பிடும் புதிய பாலைவெளியில், புல் நாணலாகவும், கோரையாகவும் வளரும் என்று கூறப்படுகிறது. இதன் பொருள் பரந்த அளவினதாய் இருந்தாலும், நீர்ப் பெருக்கையே உருவகமாகக் குறிப்பிடுகின்றது.

நாணல் அதிக அளவு எழுதுபொருளாகப் பயன்படுத்தப்பட்டது. கி.மு. 3000 ஆண்டுகளில் தொடக்கத்திலிருந்து, கி.பி. 1000 வரை, எகிப்தில் நாணல் எழுதுபொருளாகப் பயன்படுத்தப்பட்டது. இஃது எகிப்தின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்தது. வென்-ஆமோன் பற்றிய நிகழ்ச்சியில், பிபிலோசு அரசனிடமிருந்து பெற்ற ஒரு கப்பல் நிறைந்த தேவதாரு மரங்களுக்கு ஈடாக அளிக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதியாக ஐந்நூறு சுருள் நாணலும் அடங்கும்.

எழுதும் தாள் நாணல் தண்டின் மென்சோறிலிருந்து தயாரிக்கப்பட்டது. முதலில்

மென்சோற்றுப்படைகள் செங்குத்தாக அடுக்கப்படும். அதன் மேல் மற்றொரு பட்டியல் கிடைநிலையில் அடுக்கப்படும். பின் ஒட்டுப்பொருள் சேர்க்கப்பட்டு அழுத்தப்பட்டு ஒரு தாளாக வடிவெடுக்கும்.

காய்ந்த பின்னர், கிளிஞ்சல் அல்லது சிறு கற்களால் அவை மெருகூட்டப்பட்டு, இணைக்கப்பட்டு, தாள்களாகச் சுருட்டி வைக்கப்படுகின்றன.

யோவா 2 மட்டுமே விவிலியத்தில் எழுதுவதற்குப் பயன்பட்ட பப்பிரஸ் அல்லது தாளைப்பற்றிய குறிப்பைக்கொண்டுள்ளது. எசா 19:7 காகித நாணல்களைப்பற்றிக் கூறுகின்றது. ஆனால் எபிரேய மூலச்சொல் அதனை 'வெற்றிடங்கள்' என்று அழைக்கிறது. சாக்கடலின் அருகில் கும்ரான் குகையில் கிடைத்த சுவடிகளை நோக்கும் போது, நாணல் காகிதம் பெருமளவில் பயன்படுத்தப்படவில்லை என்பது தெரிகிறது. இதற்குக்காரணம் அங்குத் தோல் சுவடிகள் பெருமளவில் புழக்கத்தில் இருந்திருக்கலாம்.

எரே 36-இல் வரும் கதையிலிருந்து கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட எரேமியாவின் நூல்கள் நாணற்சுவடிகளில் எழுதப்பட்டதாக அறிஞர் பலர் கருதுகின்றனர்.

எழுதுபொருள் என்னும் அளவில், ஓலைத்தாள்கள் ஏடுகள் போன்று பப்பிரஸ் சிறப்புற விளங்கியது. ஆனால், ஈரமான இடங்களில் அவற்றைச் சேர்த்து வைக்க முடியாது; காய்ந்துபோனால் எளிதில் உடைந்துபோகும். இப்படியிருப்பினும் கிரேக்க மொழியில் மட்டும் எழுதப்பட்ட 30,000 சுவடிகளைப் பழங்கால எகிப்தியப் பகுதிகளில் கண்டெடுத்துள்ளனர்.

பம்பிலியா (PAMPHYLIA)

இந்தப்பகுதி சிறிய ஆசியாவின் தெற்குக் கடற்கரையில் அமைந்திருந்தது. இதன் மேற்கில் லீக்கியாவும், வடக்கில் பிசிதியாவும், கிழக்கில் சிலிசியா திரகேயியாவும் இருந்தன. இதற்குத் தெற்கில் இருந்த மத்திய தரைக்கடல் பம்பிலியாக்கடல் என அழைக்கப்பட்டது. பெரும்பாலும் சதுப்பு நிலம் கொண்ட இப்பகுதி 80-182 கி.மீ. நீளமும், 20-32கி.மீ. அகலமும் கொண்டது. கடலை நோக்கியிருந்த இப்பகுதி அத்தாலியா, சீதே, பெருகை போன்ற துறைமுகங்களைக் கொண்டிருந்தது (அ.ப. 13:13).

ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்கர்கள் இங்குக் குடியேறினார்கள் இரண்டாம் நூற்றாண்டில் யூதர்கள் இங்கு வாழ்ந்தனர் (1 மக் 15:23; அ.ப. 2:10). வெளிநாட்டவர்கள் இங்கே குடியேறினாலும் பழங்குடி மக்களே அதிகமாக வாழ்ந்தனர். அவர்கள் பெரும்பாலும் நாகரிகத்தில் பின் தங்கியவர்கள்.

இந்த நாடு வெளிநாட்டவரால் குறிப்பாக, பாரசீகர்களாலும், மாசிதோனியராலும், செலூக்கியர்களாலும், உரோமையராலும் ஆக்கிரமிக்கப்பட்டது. பவுலின் முதலாம் மறைபரப்புப் பயணத்தின்போது, பாப்போவிலிருந்து கப்பல் ஏறி பம்பிலியாவிலுள்ள பெருகைத்துறையை அடைந்தனர். அங்கே யோவான், மாற்கு அவர்களை விட்டுப்பிரிந்து எருசலேமிற்குத் திரும்பினார் (அ.ப. 13:13-14). இப்பகுதி மதப்பிரச்சாரத்திற்கு ஏற்றதாக இல்லாததால், இங்கே அவர்கள் தங்கவில்லை. பிசிதியா அந்தியோக்கியா நகர் சென்று திரும்புகையில் அவர்கள் பெருகையில் போதித்தார்கள். ஆனால், கிறிஸ்தவ மதம் இங்கே தாமதமாகவே பரவியதாகத் தெரிகிறது. பம்பிலியாவிலுள்ள அத்தாலியாவி லிருந்து கப்பல் ஏறி சீரிய அந்தியோக்கியா நகருக்குச் சென்றனர் (14:24-26). பவுல் உரோமைக்குச் செய்த பயணத்தில், லூக்கா தற்செயலாகத்தான் பம்பிலியாவைக் குறிப்பிடுகிறார் (27:5).

பயணமும், தகவல் தொடர்பும் (TRAVEL AND COMMUNICATIONS)

I. பழைய ஏற்பாடு

1. பாலஸ்தீன மக்கள் தொன்றுதொட்டே

சாலைகளைப்பற்றி அறிந்திருந்தனர். இஃது அவர்களின் பயணம் மற்றும் தகவல் தொடர்புக்கு மிகவும் பயன்பட்டது. மெசா என்ற மோவாபிய மன்னனின் நினைவுத் தூண் ஒன்று இதைக்குறிப்பிடுகிறது. தெல்-ஏல்-அமர்னா ஏடுகளும் பாலஸ்தீன நாட்டின் சாலைகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. எகிப்து, அசீரியா, மற்றும் பாபிலோனிய நாடுகள் பாலஸ்தீனத்தைத் தங்கள் பயண, மற்றும் போர்ச்சாலையாகப் பயன்படுத்தினர். பாலஸ்தீனத்தின் கடற்கரையையொட்டி. ஒரு பன்னாட்டு நெடுஞ்சாலை அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இச்சாலை வியாபாரம், மற்றும் போர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

2. **சாலைகள்:** பழைய ஏற்பாட்டில் சாலைகளைப்பற்றி ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. தொடக்கத்தில் சாலைகள் சரிவர செப்பனிடப்படவில்லை.இதன் காரணமாகப் பயணங்கள், மற்றும் பலவற்றில் சீர்கேடுகள் உண்டாயின. பாதைகளின் இடையூறுகளினால் மக்களும், வியாபாரிகளும் துன்புற்றனர் என்பது விவிலியத்தில் குறிப்பிடப்படுகிறது (நீதி 5:6; எசா 40:3-4). நல்ல பாதைகள் அமைக்கப்படும்; அதன் காரணமாக, பற்பல நன்மைகள் ஏற்படும் என்று எசாயா இறைவாக்குரைக்கின்றார் (40:3-4). விவிலியத்தில் பாதைகள் நீதிக்கும், நேர்மைக்கும், நல்ல வாழ்க்கைக்கும் உவமைகளாகக் கூறப்பட்டன (பழ 2:13; 15:19; எசா 26:7; யோவா 14:16). பாதைகள், சிறு சாலைகளாகவோ, நெடுஞ்சாலைகளாகவோ அமைந்தன (எசா 9:1; 35:8; எண் 20:17; எசே 21:21). சாலைகள், கால்களால் மிதிக்கப்பட்டே அமைக்கப்பட்டன. சில சமயங்களில் பாதைகளை அமைக்க கற்களும் பயன்படுத்தப்பட்டன. பாதைகளை அமைப்பது மற்றும் செப்பனிடுவது குறித்து விவிலியத்தில் குறிப்புகள் பல உள்ளன: பாதைகளை அமைக்க (எசா 40:3), பாதைகளிலுள்ள கற்களைத் தகர்க்க (எசா 62:10), பாதைகளைச் சமப்படுத்த (26:7). அடைக்கல நகரங்களுக்குப்பாதைகள் அமைக்கப்பட்டன (உப 19:3).

3. **பன்னாட்டு நெடுஞ்சாலைகள்:** பண்டைய கிழக்கத்திய நாடுகளின் பன்னாட்டு நெடுஞ்சாலைகள் எகிப்து, அசீரியா, பாபிலோனியா, சீரியா சிறிய ஆசியா போன்ற நாடுகளை இணைத்தன. ஒரு சாலை, பாரசீக வளைகுடாவிலிருந்து புறப்பட்டு ஊர், பாபிலோன், அசூர், காரான், கர்க்க மிசு, ஆலாபு, உகாரித்து வழியாக சைப்ரசு வரை சென்றது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள இரு முக்கிய நெடுஞ்சாலைகள்: 1. அரசனின் நெடுஞ்சாலை (எண் 20:17); 2. கடல் அருகில் அமைந்த நெடுஞ்சாலை (எசா 9:1). முதல்வழி தமஸ்கிலிருந்து புறப்பட்டு அஸ்ரோத்து, இராமோத்து அம்மோன், கிலயாது, இரபாத்து அம்மோன், எஸ்போன், இராபாத்து, மோவாபு, கீர் அரசேத்து வழியாக ஏலாத்தை அடைந்தது. கடல் அருகில் அமைந்த வழி தமஸ்கிலிருந்து புறப்பட்டு, ஆட்சோர், மெகிதோ, கர்மேல், அக்கோ, அசுதோது, காசா, இரப்பியா வழியாக எகிப்தை அடைந்தது. தமஸ்கிலிருந்து புறப்பட்ட மற்றொரு கிளைச்சாலை பெத்சயான், எரிகோ வழியாக எருசலேமை அடைந்தது. மற்றொரு கிளைச்சாலை பெத்சயான், செக்கேம், பெத்தேல், கிபயா, எருசலேம், ஏங்கேதி வழியாக, தாமரை அடைந்தது. யூதா, இஸ்ராயேல் நாடுகளில், இஸ்ராயேல் நாட்டில்தான் பாதைகள் அதிகமாக அமைந்திருந்தன. எனவேதான்,அது யூதாவுக்கு முன்பாக வீழ்ந்தது.

II. புதிய ஏற்பாடு

1. **புதிய ஏற்பாட்டில் காணப்படும் பயணங்கள்:**

இயேசுவும் அவருடைய பெற்றோர்களும் செய்த பயணங்களே முதலில் நம் நினைவுக்கு வருகின்றன. மரியாள் எலிசபெத்தைச் சந்திக்க யூதவுக்குச் செல்கிறாள் (லூக் 1:39-56). மரியாளும், யோசேப்பும் தங்கள் பெயரைப் பதிவு செய்ய பெத்லகேம் செல்கின்றனர் (2:1-7). மரியாள், யோசேப்பு இருவரும் இயேசுவை

எருசலேம் ஆலயத்திற்கு எடுத்துச் செல்கின்றனர் (2:22-39). ஒவ்வொருவரிடமும் பாஸ்கா விழாவுக்கு மரியாளும், யோசேப்பும் இயேசுவுடன் எருசலேம் சென்றனர் (லூக் 2:41). நாசரேத்திற்கும், எருசலேமுக்கும் இடையே இருந்ததூரம் எழுபத்தைந்து மைல். இதை நடந்து கடக்க குறைந்தது ஐந்து நாட்கள் வேண்டும். இயேசு பலமுறை எருசலேமுக்குச் சென்றதாக விவிலியக்குறிப்புகள் கூறுகின்றன (யோவா 2:13; 5:1; 7:1-14; 10:22; 12:1; மத் 26:17; மாற் 14:12; லூக் 22:7). மூன்று ஞானிகள் வருகை சுட்டிக் காட்டப்படுகிறது. அவர்கள் எங்கிருந்து வந்தனர் என்பதைத் தெளிவாகக் கூறுவதில்லை (மத் 2:1-12). திருக்குடும்பம் எகிப்திற்குச் செல்வதும் அவ்வளவு தெளிவாகக் கூறப்படவில்லை (13:23). இயேசு தாம் திருமுழுக்குப் பெற யோர்தானுக்குச் செல்கிறார். யோர்தானில் எந்த இடம் என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், எரிகோவிற்கு அருகில் எனக் கருதப்படுகிறது (மத் 1:1-11). இயேசு தீர், சீதோன், செசரியா-பிலிப்பு ஆகிய ஊர்களுக்குப் பயணம் செய்கிறார் (மத் 7:24-30; 8:27-30). பலமுறை இயேசு கலிலேயாக் கடலைக் கடந்திருக்கின்றார் (மத் 4:35; 5:1-20). இயேசு பெத்தானியாவிற்கு ஓரிருமுறை சென்றிருக்கின்றார் (மத் 21:17; 26:6). எம்மாவூ என்ற இடம் எருசலேமிலிருந்து அறுபது பர்லாங்கு தொலைவில் இருக்கிறது. இங்கு இயேசு இரு சீடர்களுக்குக் காட்சி கொடுக்கிறார் (லூக் 24:13-35). பிலிப்பு சமாரியாவிற்குச் சென்றார். பின்பு அங்கு, பேதுருவும் யோவானும் சென்றனர் (அ.ப. 8:5.14). மேலும், பிலிப்பு காசாவிற்குச் சென்றார் (8:26). பேதுரு லித்தா (9:35), யோப்பா (9:39), செசரியாவிற்குச் (10:1) சென்றார். பேதுரு உரோமை நகருக்குச் சென்றதைப் பற்றிய தெளிவான குறிப்பு இல்லை. ஆனால் பாரம்பரியம், அவர் உரோமை சென்றதாகக் கூறுகிறார். பவுல் ஒரு தலை சிறந்த பயணியாவார். இவர் சிறிய ஆசியாவிலுள்ள தர்சு நகரிலிருந்து எருசலேமிற்குக் கல்வி கற்கச் செல்கிறார் (அ.ப 22:3). கடவுளின் திருச்சபையை அழிக்க தமஸ்கு செல்கிறார் (9:2); திரும்பவும் எருசலேம் வந்து தர்சு நகர் செல்கிறார் (9:30).

II. பவுலின் மறைபரப்புப் பயணங்கள்:

அ) முதல் பயணம்: 1) அந்தியோக்கியா (11:25-27), 2) சைப்ரசு, 3) அத்தாலியா, 4) பிசிதியா, 5) இக்கோனியா, 6) தெர்பை, 7) அத்தாலியா, 8) அந்தியோக்கியா.

ஆ) இரண்டாம் பயணம்: 1) அந்தியோக்கியா, 2) துரோவா, 3) தர்சு, 4) லீஸ்திரா, 5) இக்கோனியா, 6) அந்தியோக்கியா, 7) திராலா, 8) பிலதெல்பியா, 9) சர்தை, 10) பெர்கமு, 11) பிலிப்பி, 12) நெயாபொலி, 12) தெசலோனிக்கே, 13) ஏதன்சு, 14) எபேசு, 15) எருசலேம்.

இ) மூன்றாம் பயணம்: 1) எருசலேம், 2) எபேசு, 3) கொரிந்து, 4) மிலேத்து 5) எருசலேம்.

ஈ) எருசலேமிலிருந்து உரோமைக்குக் கடல்வழிப் பயணம்.

III. பிரயாணத்தின் நோக்கங்கள்: திருவிழாக்களின் போது எருசலேம் செல்வது திருயாத்திரையாகக் கருதப்பட்டது. திருயாத்திரையின் மையமாக மட்டுமல்லாமல் எருசலேம் ஒரு வியாபாரத்தலமாகவும் இருந்து வந்தது. ஆலயங்கள் உள்ள நகரங்களில் மக்களின் மதஉணர்வு மட்டுமல்லாமல் கலை, வாணிக, உணர்வுகளும் வளர்க்கப்பட்டன. மாணவர்கள் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ள பல பிரயாணங்களை மேற்கொண்டனர்.

IV. போக்குவரத்துச் சாதனங்கள்: பொதுவாக மக்கள் தங்கள் கால்களையே பிரயாணத்திற்கு நம்பியிருந்தனர். விலங்குகளும் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. மிகவும் சாதாரணமாக, கோவேறு கழுதை பயன்படுத்தப்பட்டது. இயேசு கழுதைமேல் ஏறி எருசலேமிற்குள் நுழைகிறார் (மாற் 11:1-11).

ஒட்டகங்களும், போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்டன (ஆதி 24:10; 1 அர 10:2).

இவை அதிகமான பாரங்களைப் பாலைவனங்களில் நீண்டதூரம் சுமக்கப் பயன்படுத்தப்பட்டன.

குதிரைகள் பொதுவக, சாலமோன் மன்னனது காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்டன என நாம் அறிகிறோம் (1 அர 4:26). ஆனால், அவைகளைப் பராமரிக்க அதிக செலவு ஆனதால் அரசர்களும், செல்வந்தர் களுமே அவைகளை உபயோகப் படுத்தினர்.

யானைகள் போர்க்காலங்களில் பயன்படுத்தப்பட்டன (1 மக் 1:11; 60:30-35).

V). நெடுஞ்சாலைகள்: கடல், தரைவழிகள் பயன்பட்டன. இவற்றில் கடல்வழி மிகவும் அதிகமாகப் பயன்பட்டது. உரோமையர்கள், மத்திய தரைக்கடலைத் தங்களது சொந்தமெனக் கருதினர். அதைப்பெரும்பாலும் பயன்படுத்தியவர் களும் அவர்களே. உரோமையர்கள் அறிந்திருந்தனர். பயணிகள் விடுதிகள் நிறையக் கட்டப்பட்டன.

VI). மற்ற தகவல் தொடர்புகள்: பயணம் எப்போதும் மெதுவாக, கடினமாக, அதிக செலவாக அமைந்ததால் கடித வழித்தொடர்பு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. பவுலின் கடிதங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. அந்தியோக்கு இன்னாசியார், மற்றும் போலிக்கார்ப்பு ஆகியோரின் மடல்களும் குறிப்பிடத்தக்கவை. உரோமையர்கள் தங்களுக்கென ஓர் அஞ்சல் துறையையே வைத்திருந்தனர். இதற்காக, தூதுவர்களைப் பயன்படுத்தினர். அரசியல் சம்பந்தப்பட்ட செய்திகளே இத்துறையால் எடுத்துச் செல்லப்பட்டன. தனியார் தாங்களே தங்களது கடிதங்களை அனுப்பினர்.

பயணவிடுதிப்பொறுப்பாளர் (QUARTER MASTER)

செதேக்கியாவின் அதிகாரிகளுள் ஒருவரான செராயாவின் பட்டம் (எரே 51:59). இந்த அதிகாரி படைவீரர்களுக்கு வேண்டிய உணவு, மற்றப் பொருள்களை அளிக்கும் பொறுப்புடையவர். சிறைக்கும் இவர் காப்பாளராக இருந்திருக்கலாம்.

பயபக்தி (REVERENCE)

இச்சொல் எபி 12:28-இல் மட்டும் வருகிறது. இது சில சமயங்களில் இறைபக்தியைத் தவிர மற்ற அச்சங்களைக் குறிக்கிறது (லேவி 19:3.30; 20:2). "ஆண்டவருக்கு அஞ்சுதல்" என்பது (அ.ப. 9:31; உரோ 3:18; 2 கொரி 5:11; 7:1), இறைவனுக்கு மனிதன் அளிக்கும் அன்பாகிய பதிலைக் குறிக்கிறது.

பயனற்ற ஊழியர் - உவமை (UNWORTHY SERVANTS - PARABLE)

மனிதனுக்கும், இறைவனுக்கும் இடையே இருக்கும் உறவை, குறிப்பாக மனித தாழ்ச்சியின் முக்கியத்துவத்தை இந்த நீதிக்கதை விளக்குகிறது (லூக் 17:7-10). இதிலே தலைவன் இறைவனையும், பயனற்ற ஊழியர்கள் அப்போஸ்தலர்களையும் விசுவாசிகளையும் குறிக்கின்றனர். இந்த நீதிக்கதையை இயேசு கூறுமுன்னர் அப்போஸ்தலர்கள் தங்கள் விசுவாசத்தை அதிகரிக்குமாறு இயேசுவைக்கேட்டனர். இதற்குப்பதிலாக இயேசு கடுகளவு விசுவாசத்தால் அரிய செயலைச்செய்யலாமென்கிறார். விசுவாசம் ஆண்டவரிடம் பெறுவதன்று; மாறாக ஆண்டவன்பால் நாம் செய்யும் கடமை. இதை நாம் அதிகமாகவோ, குறைவாகவோ வைத்திருக்க முடியாது. மனிதன் விசுவாசம் கொண்டவனாகவோ, அஃது இல்லாதவனாகவோ மட்டுமே இருக்க முடியும். ஊழியன் தனது கடமையைத் தலைவனது நன்றியை எதிர்பாராமல் செய்வதுபோல், விசுவாசிகளும் பாராட்டை எதிர்பாராமல் கடவுளுக்கு ஊழியம் புரியவேண்டும்.

பயனின்மை, நிலையாமை (VANITY)

விவிலிய வழக்கில் ஒன்றுமின்மையையும், வெறுமையையும், குழப்பத்தையும் இச்சொல்

குறிக்கவல்லது. இது சிலை அல்லது சிலை வழிபாடு பற்றியும் பயன்படுகிறது.

இச்சொல் விவிலியத்தில் அடிக்கடி பயன்படும். காற்று (பழ 21:6) அல்லது மூச்சு (எசா 57:13) ஆகிய சொற்கள் இக்கருத்தின் பொருளைக்காட்டுகிறது. இது வாழ்வின் கடந்து போகும் தன்மையைக் குறிக்கிறது (திருவுரை 1:14; 2:11; 4:16; 6:9; இது காற்றைப் பிடிப்பதற்கு ஒப்பானது; காண்க. சங் 39:5; 144:4); அல்லது திருப்தியற்ற தன்மையைக் குறிக்கிறது (சங் 62:9).

இக்கருத்து, இறைவனுக்கும் பிறருக்கும் மேலாக ஒருவன் தன் செயல்களைப் பெரிதாகக் கருதுவதாகும். இதன் விளைவு, இறுதியில் மதிப்பற்றது, காற்றைப்போல் மறைந்துபோவது. ஏனெனில், ஒருவனுடைய குறிக்கோள் இறைவனுடைய நித்திய குறிக்கோளோடு ஒத்துப்போகவில்லையென்றால், அவனது முயற்சிகள் வெறுமையானவையே. இவ்வாறு இக்கருத்து, இறைச்சட்டத்திற்கோ, இறைவனது வழிகாட்டல் மற்றும் தாங்கும் அவரது ஆற்றலுக்கோ அக்கறையின்றி அவன் கொண்டுள்ள மாயையை எடுத்துக்காட்டுகிறது (சங் 2:1; 4:2; அப 2:13). இக்கருத்து, குறிப்பாகப் புறவினத்தாரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது (எசா 30:28; எபே 4:17). இந்நிலை ஒருவன் தன் தற்பெருமை அல்லது குற்ற உணர்வால் படைத்துக் கொள்ளும் போலி உண்மையாகும் (யோபு 31:5; சங் 12:2; 24:4; பழ 30:8; எசே 13:6.8-4).

சிலை அல்லது சிலைவழிபாடும் பயனற்றதாகும்; மனித கரங்களால் செய்யப்பெற்ற மதிப்பற்ற உருவங்களாகும் (உப 32:21; சங் 31;6; எசா 57:13; அ.ப. 14:15); மாயையின் அழிந்துபோகும் பொருட்களாகும்; அவற்றிற்கு "மூச்சு" இல்லை (எரே 51:17-18; எசா 40:17).

சுருக்கமாக, இக்கருத்து "ஒன்றுமின்மையையும்" (2 பேதுரு 2:18) வெறுமையையும் (உரோ 8:20) உணர்த்துகிறது.

பயித்து (BAJITH – வீடு)

சாக்கடலுக்குக் கிழக்கில் தீபோனுக்கு அருகிலுள்ள ஒரு மோவாபிய நகரம் (எசா 15:2). சில மொழிபெயர்ப்புகள் இதைத் "தீபோனின் புதல்வியர்" என்று கொண்டிருக்கின்றன. இஃது ஒரு நகரைக் குறிக்கும் (எரே 48:18).

பயிரிடப்படாத நிலம், தரிசு நிலம் (FALLOW GROUND)

பொதுவாக, பயிரிடப்படாத நிலம், மண்கட்டி உடைக்கும் கருவியால் சீராக்கப்படுகிறது. ஆனால், களைகளையும், பூச்சிகளையும் அழித்து, மண்ணை வளப்படுத்துவதற்காகப் பயிரிடப்படாமல் விடப்படுகிறது.

இவ்வாறு நிலத்தைப் பயிரிடாமல் விடுவது முற்கால மக்களின் வழக்கமாகும். இஃது ஒரு மத அலுவலுக்குப் பயன்படுவதாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு ஏழாவது ஆண்டும் நிலம் பயிரிடப்படாமல் விடப்பட வேண்டும் என்பது இஸ்ராயேலர்களின் மத ஒழுங்கு (லேவி 26:34-35; யாத் 23:11). இந்த ஓய்வு ஆண்டில் தானாக விளைந்த யாவும் ஏழைகளுக்கும், விலங்குகளுக்கும் உணவாக விடப்பட்டன (யாத் 23:11; நெகே 10:31; பழ 13:23). ஆனால், இத்தகைய ஒழுங்கு இஸ்ராயேல் மக்களால் கடைப்பிடிக்கப் பட்டதற்குச் சான்றுகள் இல்லை. லேவி 26:34-35-லிருந்து இந்த ஒழுங்கு கடைப்பிடிக்கப்படவில்லை என்பது தெரிகிறது. "தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்" என்பது (எரே 4:3; ஓசே 10:12) புதிய நிலத்தைப்பயிரிடுங்கள் அல்லது உருவக முறையில் "உங்கள் வாழ்வைப் புதுப்பியுங்கள்" என்று பொருள்படும்.

பயிற்சிக்கூடம் (GYMNASIUM)

கிரேக்க இளைஞர்களுக்கான உடற்பயிற்சிக்கூடம். இக்கூடம் ஒரு நகரத்தின் சிறப்பு அம்சமாகக் கருதப்பட்டது. ஆகவே, பொதுப்பணத்திலிருந்து கட்டப்பட்டு, பாது காக்கப்பட்டது. இக்கூடம், இளைஞர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கும், பயிற்சிகள் சொல்லிக்

கொள்வதற்கும் பயன்படுத்தப் பட்டது. ஓட்டம், குதித்தல், ஈட்டி எறிதல், மற்போர் போன்றவை பல முக்கிய உடற்பயிற்சிகளாகும். இக்கூடம் பொது மக்களுக்கு அறிவுரை வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது. தலைமைக்குரு 'யாசோன்' வேண்டு கோளுக்கிணங்க எருசலேமில் உடற் பயிற்சிக்கூடம் கட்டப்பட்டது (1 மக் 1:14; 2 மக் 4:12). பவுல் மறைமுகமாக இவ்வுடற்பயிற்சிகளைக் குறிப்பிடுகின்றார். மற்போர் (1 கொரி 9:26), போராடுதல் (எபே 6:12), ஓட்டப்பந்தயம் (1 கொரி 9:24; கலா 5:7; பிலி 3:12-14). புண்ணியங்களைக் கடைப்பிடிப்பதே கிறிஸ்தவ உடற்பயிற்சியாகும் என்றும் குறிப்பிடுகின்றார் (1 திமொ 4:7 தொ).

பயிற்றுவித்தல், கற்றுக்கொடுத்தல் (DISCI-PLINE)

விவிலியத்தில் இக்கருத்து பயிற்சி, விதி முறைகளை விளக்கு, அறிவைப் பெருக்குதல் என்ற பொருளில் ஒரு புறமும் திருத்துதல், தண்டித்தல் என்ற பொருளில் மறுபுறமும் எண்ணப்படுகின்றது. இதன் இயல்பான சூழ்நிலை குழந்தையைப் பயிற்றுவித்தலாகும். சமய கண்ணோக்கில் கடவுள் மக்கள், நாடுகளின் வாழ்வில் அவர்களைத் திருத்த மேற்கொண்ட நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றது. இச்செயல் கடவுளின் அன்பினால் உந்தப்பட்டு, செய்யப்பட்ட செயல் என்பது இறையியலின் கண்ணோட்டம் ஆகும்.

1. பழைய ஏற்பாடு: பழைய ஏற்பாட்டில் காணப்படும் பயிற்றுவித்தலின் சூழ்நிலை குடும்பமும், குடும்பத்தில் அமையும் கல்வி முறையுமாகும். இஸ்ராயேல் மக்கள் கண்ணீர் சிந்தாமல் கல்வியில் அல்லது பயிற்சியில் நம்பிக்கை வைத்தது கிடையாது. தாய் தந்தையரின் சொல்லைக் கேளாதபிள்ளை தண்டிக்கப்பட வேண்டும் (உப 21:18). "பிள்ளையின் இதயத்தில் மடமை ஒட்டிக் கொண்டிருக்கும்; கண்டித்துத்திருத்தும் பிரம்பால் அதை அகற்றிவிடலாம்" (பழ 22:15). இது சிறுவர்களைப் பயிற்றுவிக்கும் மந்திரம் ஆகும்.

குடும்பச் சூழ்நிலை விடுத்து மற்ற இடங்களில் பயிற்றுவித்தல் என்பது தண்டனையைக் குறிக்கின்றது. "என் தந்தை உங்களைச் சாட்டையால் அடித்தார்; நானோ உங்களை முள் சாட்டையால் அடிப்பேன் (1 அர 12:11.14; காண்க. உப 22:18). மறுபுறம் பயிற்றுவித்தல் என்றால் விதி முறைகளைக் கூறுதலும், திருத்துதலும் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பாரம்பரியத்திலும் (உப 6:20 தொ), சட்டத்தின் கட்டளைகளிலும் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிப்பது தந்தையின் பொறுப்பாகும்.

குடும்பக்கட்டுப்பாட்டிலிருந்து இப்போது இறைவனின் பயிற்றுவித்தலைப் பார்ப்போம். "ஒருவன் தன் மகனுக்குக் கற்றுக்கொடுப்பதுபோல், உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்" (உப 8:5). மேலும் "கடவுள் திருத்தும் மனிதன் பேறுபெற்றவன்; ஆகவே, வல்லவரின்கண்டிப்பை வெறுக்காதே" (யோபு 5:17; சங் 94:12). "பிரம்பைக் கையாளாதவன் தன் மகனை நேசிக்காதவன்; மகனை நேசிக்கிறவனோ, அவனை அடிக்கத்தயங்க மாட்டான்" (பழ 13:24). இவ்வாறே நாடுகளுக்கும் அறிவுரைகள் கூறப்படுகின்றன; அவை தண்டிக்கப்படுகின்றன, திருத்தப் படுகின்றன. இது கடவுளின் நிலையான அன்பை வெளிப்படுத்துகின்றது. எப்படி இருப்பினும் சங் 6:1-இல் "ஆண்டவரே என்மீது சினங்கொண்டு என்னைக் கண்டியாதேயும்; என் மீது கடுஞ்சீற்றம் கொண்டு என்னைத் தண்டியாதேயும்" என்று ஆசிரியர் வேண்டுகின்றார்.

ஞான நூல்களின் கட்டுப்பாடு என்பது மிகவும் கடுமையாகக் காணப்படுகின்றது. சாட்டையடிகள் கட்டுப்பாட்டுக்குச் சமமாகக் கூறப்படுகின்றது (சீரா 22:6; 23:2). ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானம் இந்தப் பயிற்றுவித்தலுக்கு ஆசிரியர் ஆகும். இந்த ஆசிரியர் சில சமயங்களில் வதைக்கலாம் (4:17). சமயநோக்கு பாழ்படுத்தும் பேரழிவுக்கும், திருத்தும்

மற்றும் நலமளிக்கும் பயிற்சிக்குமிடையே வேறுபாடு உண்டாக்கலாம். உலகக்கண்களுக்கு நல்லவர்கள் படும் துன்பம் தண்டனையாகத் தோன்றுகின்றது. இறைவன் உண்மையில் அவர்களைச் சோதிக்கின்றார், தூய்மைப்படுத்துகின்றார். பயிற்சி அளிக்கிறார் (ஞானம் 3:4-7). முடிவில் அவர்கள் இறைவனுக்கு ஏற்றவர்களாய் இருப்பதைக் காண்பார்கள் (ஞானம் 11:10). "இத்தகைய துன்பங்களைப்பற்றி உள்ளத்தில் சோர்வடையாதபடி இப்புத்தகத்தை வாசிக்கிறவர்களை மன்றாடுகிறேன். ஆனால், நடந்ததெல்லாம் மக்களின் அழிவுக்கன்று, தண்டனைக்காக மட்டுமே நடந்தனவென்று கொள்ளுங்கள்" (2 மக் 6:12) என்று 2 மக்கபேயர்நூல் ஆசிரியர் வேண்டுகோள் விடுக்கிறார்.

2. புதிய ஏற்பாடு: கிரேக்க உலகில், கற்றுக்கொடுத்தல், பயிற்றுவித்தல் போன்ற சொற்கள் வீட்டில், குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியைப்பற்றியும், கலாச்சார உலகில் ஒருவன் தனக்குரிய இடத்தைப்பெற வேண்டிய பயிற்சியையும் குறிக்கின்றன. புதிய ஏற்பாடு மோசேயின் கல்வியைப்பற்றிய விவரிப்பும் (அ.ப.7:22), காமலியேலிடம் பவுல்பெற்ற கல்வியைப் பற்றிய விவரிப்பும் இதற்குச்சான்றுகள்.

தண்டனை என்ற பழைய எண்ணம் இயேசுவின் வாழ்வில் வருகின்றது. பிலாத்து இயேசுவைத் தண்டித்து விடுதலை செய்வேன் (லூக் 23:16) என்று கூறுகின்றார். இயேசுவின் சீடர்கள் ஒதுக்கப்பட்டார்கள் (2 கொரி 6:9). பவுல் கடுமையாகத் தண்டித்துத் திருத்தப்படுவதைப்பற்றிச் சிந்தித்து, 2 திமொ 2:25-இல் "சாந்தத்தோடு கடிந்துகொள்ள வேண்டும்" என்று கூறுகின்றார். எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் 12-ஆம் அதிகாரத்தில் தந்தை, பிள்ளையைக் கண்டித்துத் திருத்துவது போல், இறைவன் நம்முடைய நலன் பொருட்டு நம்மைத் தண்டிக்கின்றார் என்று கூறுகின்றார். இமனேயும், அலெக்சாந்தரும் தண்டனை பெற்று இனியும் கடவுளைப் பழிக்காதிருக்க பாடம் கற்றுக்கொள்ளும் பொருட்டு அவர்களைச் சாத்தானுக்கும் கையளித்துவிட்டேன்" (1 திமொ 1:20) என்று கூறுகின்றார்.

திருவெளி 3:19-இல் "நான் யார்மேல் அன்பு கூர்கிறேனோ அவர்களைக் கண்டித்துத் தண்டித்துத் திருத்துகிறேன். ஆகவே நீ மனம் திரும்பி ஆர்வமுள்ள வாழ்க்கை நடத்துக" என்ற கூற்றைக் காண்கின்றோம்.

குடும்பத்தில் கிறிஸ்துவ வளர்ப்புபற்றிக் கூறும்பொழுது "தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்குச் சினமூட்டாதீர்கள். அவர்களைக் கண்டித்துத் திருத்தி, ஆண்டவருக்கேற்ற முறையில் அறிவு புகட்டி வளர்த்தல் வேண்டும்" என்று (எபே 6:4) கூறப்படுகிறது. இங்குக் கல்வி என்பது கொடூரமான கட்டுப்பாடு அன்று; சொல், செயல் முன் மாதிரியினால் அறிவு புகட்ட வேண்டுமென்று குறிப்பிடப்படுகின்றது.

திருச்சபை எவ்வாறு கிறிஸ்துவ மக்களுக்கு அறிவுபுகட்டியது என்பது திதாக்கே என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பொல்லோ என்ற யூதர் ஆண்டவரது அருள்நெறியைக் கற்றறிந்த ஆர்வமிக்க உள்ளத்துடன் இயேசுவைப்பற்றிய செய்திகளையெல்லாம் பிழையறப் போதித்து வந்தார் (அ.ப. 18:25). திருச்சபையும் திருச்பையின் தலைவர்களும் கிறிஸ்துவ சமூகத்தில் காணப்படும் தீயவைகளைக் களைந்து அவர்களைத் திருத்தினார்கள்: சான்று கொரிந்து, அந்தியோக்கியா திருச்சபைகள்.

துன்பங்களையும் எதிர்ப்புகளையும் ஏற்று இறைபயிற்றுதலாக மாற்றுபவருக்குப் பவுல் ஓர் எடுத்துக்காட்டாவார். ஆதலால் "தன் உடலில் முள்ளை" ஏற்றுக் கொள்கிறார் (2 கொரி 12:7). 2 கொரி4:7-15-இல் விவரிக்கப்படும் துன்பங்கள் எல்லாம் "அற்பமானதும், நொடிப்பொழுதே நீடிப்பது" என்றும், அவை "நம்மில் அளவிட முடியாத நித்திய மாட்சிமையை ஒப்புயர்வற்ற

வகையில் விளைவிக்கிறதாகவும்" பவுல் கருதுகிறார்.

பரக்கியா (BARACHIAH)

செக்கரியாவின் தந்தை (மத் 23:25). இந்தச் செக்கரியா, பழைய ஏற்பாட்டில் ஆலயத்தில் கொலை செய்யப்பட்டவராக இருக்கலாம் (2 நாள் 24:20-23) என்று சிலர் கருதுவர். வேறு சிலர் இந்தப் பரக்கியாவும், பழைய ஏற்பாட்டுப் பெரக்கியாவும் (?) ஒருவரே என்று கருதுவர்.

பரக்கோசு (BARKOS – ஓவியன்)

ஆலயப் பணியாளர்களின் குடும்பத்தலைவன் (எஸ் 2:53; நெகே 7:55). இவரது வழித்தோன்றல்கள் நாடு கடத்தலிலிருந்து செருபாபேலின் தலைமையில் நாடு திரும்பினர்.

பரத்தை (ADVENTURESS)

தனது விருப்பம் போல் வாழும் பெண் இவ்வாறு அழைக்கப்படுகிறாள். முக்கியமாகத் தன் வாழ்வை உடல் இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழியாக அமைத்துக் கொள்பவள். பழமொழிநூலில் இச்சொல் (பழ 23:27; காண். 6:24). "விலைமகள்" எனும் சொல்லுக்கு இணையாக வருகிறது. தொடக்கத்தில் "விலைமகள்கள்" வெளி நாட்டவராக இருந்ததால் இச்சொல் "அன்னியப்பெண்" எனவும் மொழி பெயர்க்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்களிடமிருந்து ஒருவரைக்காப்பாற்றுவது அவரது பெற்றோர் அளிக்கும் கட்டளை, சட்டம், அறிவுரைகள் ஆகியவையாகும்.

பரபா (BARABBAS – தந்தையின் மகன்)

இயேசுவின் வழக்கு விசாரணையின் பொழுது, உரோமை அதிகாரிகளால் சிறைப்படுத்தப்பட்டவன் என்று எல்லாப் புதிய ஏற்பாட்டு நற்செய்திகளும் கூறுகின்றன. "பேர் போனகைதி" என்று மத்தேயு அவனை அழைத்தாலும் (மத் 27:15) அவன் என்ன குற்றம் செய்தான் என்று குறிப்பிடவில்லை. இவன் ஒரு கள்வன் என்று நான்காம் நற்செய்தி கூறுகின்றது (யோவா 18:40); ஆனால் மாற்கும், லூக்காவும் "ஒரு கலகத்தில் ஈடுபட்டுக் கொலை செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டவன்" (லூக் 23:19; மாற் 15:7), பிடிபட்டவன் என்று சொல்லுகின்றார்கள். இக்குறிப்பு உரோமைய ஆட்சியை ஒழிக்க வேண்டும் என விரும்பிய தீவிரவாதிகள் கூட்டத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்று சுட்டுகிறது.

மூன்று நற்செய்திகளின் படி (மத் 27:15; மாற் 15:6; யோவா 18:39), யூதர்கள் விரும்பும் ஒரு கைதியைத் திருவிழாவின் பொழுது (பாஸ்கா விழா என்று யோவான் மட்டும் கூறுகிறார்), விடுதலை செய்ததின் மூலம், உரோமை ஆளுநனான பிலாத்து யூதர்களைச் சாந்தப்படுத்துவதுண்டு. லூக்கா அதிகத்துல்லியமான வரலாற்று ஆசிரியராக இருந்திருக்கலாம். அவர் இதை ஒரு பழக்கம் என்று சொல்லவில்லை (லூக் 23:18 தொ). மேலும், இப்படிப்பட்ட வழக்கம் இருந்ததென்று பூர்வீக இலக்கியங்களில் சொல்லப்படவில்லை. இருப்பினும், பல காரணங்களுக்காக, சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படும் வழக்கம் இருந்து வந்தது. கைதிகள் சங்கிலிகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்று லிவி என்ற வரலாற்று வல்லுநர் கூறினாலும், அவர்கள் உண்மையில் சிறையிலிருந்து வெளியே சென்றார்கள் என்று சொல்லவில்லை.

இத்திருவிழாவின்பொழுது இயேசுவை அல்லது பரபாவை விடுதலை செய்வதென்ற வாய்ப்பு இருந்ததென்று நான்கு நற்செய்திகளும் கூறுகின்றன. யூதத்தலைவர்களால் தூண்டப்பட்டு மக்கள் பரபாவை விடுவிக்கும்படியும், இயேசுவைக்கொலை செய்யும்படி கோரினார்கள். பிலாத்து இதற்கு ஒத்துக்கொண்டு இயேசுவை மரண தண்டனைக்குத் தீர்ப்பிட்டான். அதன்பிறகு பரபாவின் வரலாறு தெரியவில்லை. இவன் விடுதலையாக்கப்பட்டான் என்று நான்காம் நற்செய்தி சொல்லவில்லை.

பரம்படித்தல் (HARROW)

ஒரு தனிக்கருவியாக பரம்பு, எகிப்தில்

அறியபட்டதொன்றாகத் தெரியவில்லை. பழங்காலப் பாலஸ்தீனத்தில் இஃது இல்லையென்று கூறலாம். ஆனால், யோபு 39:10; எசா 28:24; ஒசே 10:11 ஆகிய பகுதிகள் உழுவதிலிருந்து வேறுபட்ட ஒரு முறையைக் குறிப்பிடுகின்றன. பரம்படித்தலைக் குறிக்கும் எபிரேய மூலவினைச் சொல்லின் பொருள் தெளிவாக இல்லை. ஒருவேளை, இது விதைகள்மேல் மண்ணை மூடுவதற்கு மரக்கிளைகளை இழுத்தலைக் குறிக்கலாம்.

பரவசக்காட்சி (TRANCE)

கடவுளைக்கண்டவர்கள், அல்லது அவரது வெளிப்பாட்டை உணர்ந்தவர்களின் நிலையாகும் (மாற் 16:8). இந்நிலையைக் குறிக்கும் மூலச்சொல் பல்வேறு பொருள்களைக் கொண்டது. உதாரணமாக, இடமாற்றம், வெளியேற்றம், அருகில், போன்ற பொருள்களைக் கொடுக்கிறது. மேலும், இது சமயத்தில் ஏற்படும் பய உணர்ச்சியாகவோ, மகிழ்ச்சிப் பெருக்காகவோ அமையலாம். இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து ஒருவரிடம் நீடிக்குமானால் அவர் நலமற்றவராகக் கருதப்படுவர். இறைவனின் பிரசன்னத்தைக்கண்ட இறைவாக்கினர் உடல்களை மறந்து நின்ற நிலையில், ஆன்மா இவ்வுலகப்பற்றுகளை விடுத்து இறைவனின் பிரசன்னத்துக்குச் சென்று விடுகிறது. அவர்கள் "இறைவனின் வார்த்தைகளைக் கேட்கின்றனர்", எல்லாம் வல்லவரின் காட்சி பெறுகின்றனர் (எண் 24:4,16). இந்தத் தொடரைப் பயன்படுத்தும் லூக்கா, இதை ஒரு வெளிப்பாட்டுக் கருவியாகவே பயன்படுத்துகிறார். (அ.ப. 10:10; 11:5; 22:17). இந்த இரு நிகழ்ச்சிகளில், காட்சி முக்கியமன்று; ஆனால், அவை வெளிப்படுத்தும் உண்மை முக்கியமாகும். இவற்றின் வழியாக லூக்கா இரு உண்மைகளை வலியுறுத்துகிறார் அ) கிறிஸ்தவத்தோழமைக்குள் புறவினத்தார் ஏற்றுக்கொள்ளப்படுவது இறைவனுடைய செயலாகும் மனிதனுடையதன்று. வெளிப்பாட்டு நிகழ்ச்சி என்ற அளவில் அது கட்டளையிடப்படுகிறது. ஆ) பேதுருவோ பவுலோ இத்தகைய புரட்சிகரமான மாற்றத்தைத் தங்கள் சொந்த நடத்தையாலோ, அனுபவத்தின் அடிப்படையாலோ திருச்சபைக்கு அறிவித்திருக்கத் துணிந்திருக்கமாட்டார்கள். இவ்வாறு, புறவினத் தாருக்குத் தூதுரைத்தல் இறைவனது செயலாக அறிவிக்கப் படுகிறது.

பராமரிப்பு, பாதுகாப்பு (PROVIDENCE)

I. தந்தை தன் மக்களுக்குத் தேவையானவைகளை அளித்து, அவர்களைப் பாதுகாத்து வளர்ப்பதுபோல், இறைவனின் பராமரிப்பு விவிலியத்தில் விவரிக்கப்படுகிறது. "ஆண்டவரே, நீர் தக்க காலத்தில் மனுமக்களுக்கும், கால்நடைகளுக்கும் உணவளிக்கிறீர்" (சங் 145:15 தொ; 104:27 தொ; 36:7; 147:9). இறைவனின் பராமரிப்பு இச்சங்கீதங்களில் நன்கு விளக்கப்பட்டு உள்ளது. பராமரிப்பைப்பற்றி நினைக்கும் பொழுது, இக்காட்சி நமது மனதின் முன் நிற்கிறது. இதற்குத் தகுந்த சொல் எபிரேய மொழியில் கிடையாது. கிரேக்க மொழியில் இறைவனின் பராமரிப்பைக் குறிக்கப் "புறோநோய்ய" (பாதுகாப்பு) என்ற சொல் கையாளப்படுகிறது (ஞான 14:3; 17:2). விவிலியத்தில் பராமரிப்பைக் குறிப்பதற்குக் கரிசனம், அக்கறை என்ற சொற்கள் வருகின்றன (யோபு 10:12). இவை மீட்பின் வரலாற்றில் தெளிவாகக் காணப்படுகின்றன. ஆனால் இப்பராமரிப்பை, மனிதனைக் கொடுமைப்படுத்தும் ஊழ் முறைமையாகப் புரிந்துகொள்ளக் கூடாது; இறைவனை, விபத்துகளிலிருந்து நம்மைக் காப்பாற்றும் ஒரு மாய வித்தைக்காரனாக எண்ணக்கூடாது; அல்லது ஒரு சலுகை கொடுக்கும் தந்தையாகத் கருதக்கூடாது. இறைவனின் பராமரிப்பு, அவரிடத்தில் நம்பிக்கை வைக்க நம்மைத்தூண்டுகிறது; அவருடன் ஒத்துழைக்க வேண்டிய கடமையை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

II. பராமரிப்பு நம்பிக்கையின், உறுதியின் அடித்தளம்: இறைவனின் திட்டம் அன்பின் திட்டமாகும் (சங் 103:8தொ). இது

நிறைவேற்றப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை (சங் 33:11). ஆகவேதான் மனிதன் நம்பிக்கையுடன் வாழவேண்டும். இறைவன் உலகத்தைச் சட்டத்திட்ட ஒழுங்குடன் நடத்துகிறார் (ஆதி 8:22). "இறைவன் நல்லோர் மேலும், தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச்செய்து, நேர்மையுள்ளோர் மேலும், நேர்மையற்றோர் மேலும் மழை பொழியச் செய்கிறார்" (மத் 5:45). மேலும், செழிப்புமிக்க பருவங்களை அளித்து, நமது உள்ளம் மகிழ்ச்சி பொங்க, நிறைய உணவு கொடுத்து நன்மை புரிகிறார் (அ.ப. 14:17). இப்படி மனுகுல முழுவதும் அவரைத்தேடி வாழும்படி, உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்து, எல்லாவற்றையும் வரையறுத்துக் கொடுக்கிறார் (17:24-28).

1. இறைவன், குலமூதாதையர்களை நன்கு பராமரித்துக் காத்தார். சிறப்பாக, குலத்தந்தையாகிய யோசேப்பின் கதையில், தன் வல்லமையை, மாட்சிமையை யோசேப்பிடத்திதல் வெளிப்படுத்தினார். மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற தீமைகளை நன்மைகளாக மாற்றினார். "என்னை இங்கு அனுப்பியது நீங்கள் அல்லீர், கடவுளே... ஆனால், கடவுள் அதை... திரளான மக்களை உயிரோடு காக்கும்பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார்" (ஆதி 45:8; 50:20). தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள், பாலைவனத்தைக் கடந்து செல்ல வேண்டிய ஆற்றலையும், தேவையான உணவையும் இறைவனிடத்திலிருந்து பெற்றுத் திருப்தியடைந்தனர் (யாத் 16:15-18).

இறைவாக்கினர், இறைவனுடைய கட்டுப் பாடுகளையும், ஒழுங்குகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றனர். இறைவன் நடக்கப்போகின்றவற்றை முதலிலிருந்தே முன்னறிவித்தவர்; வரப்போவதை இப்பொழுதே நமக்கு அறிவிக்கிறவர் (எசா 44:7). இறைவனே, மகிழ்ச்சியிலும், இன்னலிலும் நமக்கு ஆதரவு (ஆமோ 3:6; எசா 45:7). அவர் தம் விருப்பத்திற்கு ஏற்ப எல்லாப் பொருள்களையும், திறமைகளையும் அருள்கிறார் (எரே 27:5தொ). மனிதன் இதயத்தில் சிந்தனைகள் பலவாம்; ஆண்டவர் திருவுளமோ நிலைபெற்றிருக்கும் (பழ 16:1.33; 19:21; 20:24). நன்மையும் தீமையும், வாழ்வும் சாவும், வறுமையும் செல்வமும் இறைவனிடமிருந்து வருகின்றன (சீரா 11:14). ஏனெனில், மண்ணுலக அரசாட்சி இறைவன் கையில் இருக்கிறது. எல்லா ஒழுங்குமுறைகளும் இறைவனால் செயல்படுகின்றன (39:31).

இந்த மனவுறுதி இறைவனுடன் செபத்தில் ஐக்கியமாக நம்மைத் தூண்டுகிறது. "இறைவன் தம் வல்லமையால் என்றென்றும் ஆட்சி செலுத்துகிறார். அவர் கண்கள் மக்கள் இனத்தாரைக் கவனித்து வருகின்றன" (சங் 65:7-14). இஸ்ராயேலை எல்லாத் தீமைகள், கொடுமைகளிலிருந்தும் காப்பாற்றி வருகிறார் (சங் 121). "இறைவன் வீட்டைக் கட்டினாலொழிய, அதைக் கட்டுபவர்களின் உழைப்பெல்லாம் வீணே; அவர் நகரைக் காத்தாலொழிய, அதைக்காப்பவன் விழிப்பெல்லாம் வீணே" (சங் 126:1). இறைவன் நல்ல ஆயன்; ஆகவே, "இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், தீமையானதெதற்கும் அஞ்சேன்; ஏனெனில், இறைவன்கோலும், கைத்தடியும் எனக்கு ஆறுதலாக உள்ளன" (சங் 23). வாழ்வின் முடிவை இறைவனிடம் ஒப்படைத்துவிடும்; அவரையே நம்பியிரு; அவரே உன்சார்பில் எல்லாம் செய்வார் (சங் 37:5).

2. இயேசு தன் போதனைகளில் இறைவன் பாரமரிப்பைப் பற்றி நன்கு கூறியுள்ளார். இறைவன் எப்படி நமக்குத் தந்தையாக இருந்து பராமரிக்கிறார் என்பதைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார். "எங்கள் தந்தாய், எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும்" (மத் 6:11) என்று எளிமையோடு அவரிடம் செபிக்க வேண்டும். மேலும், நாளைய தினத்தைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். உடலைக் கொல்லுவோருக்கு அஞ்சாதீர்கள். நமது விண்ணகத் தந்தை நமக்கு என்ன தேவை, என்ன

நிகழப்போகிறது என்பதை முன் அறிந்து அதற்கு ஏற்ப உதவுவார் (6:25-34 10:28-31; லூக் 6:34; 12:22-32;21:18). கிறிஸ்துவின் இப்போதனைகள், கிறிஸ்தவனை அசைக்க முடியாத விசுவாசத்தில் உறுதியாக நிலைத்து இருக்கச்செய்கிறது. ஏனெனில், பவுல் கூறுவது போல், "இறைவனின் திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு ஆவியானவர் அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத்தெரியும்... வாழ்வோ, சாவோ, வானதூதரோ, தலைமை ஏற்பவரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமைமிக்கவரோ, வானத்தில் உள்ளவையோ ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்புப் பொருளோ, நம் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்ட இறை அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாது" (உரோ 8:28. 31:39); கொடிய துன்ப துயரங்களாலும் பிரிக்க முடியாது; மாறாக, பவுல் துன்ப துயரங்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறார். ஏனெனில், இறைவனின் பராமரிப்பைத் துன்பத்தில், துயரத்தில், இடையூறுகளில் நாம் அதிகம் சுவைக்கிறோம். இவற்றில் தந்தையினுடைய பராமரிப்பின் உண்மைப்பொருள் என்ன என்று பிறருக்கு வெளிப்படுத்துகிறோம்.

III. பராமரிப்பு உறுதியையும் பிரமாணிக்கத்தையும் கோருகிறது.

1. மனிதன் செயல் அற்று, தனது உரிமையை இழப்பதற்கு, இறைவன் அவனை அழைக்கவில்லை; ஆனால், மனிதனின் ஒத்துழைப்புத்தேவை என்பதற்காக, துன்ப துயரங்களின் வழியாக அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்புகிறார். மனிதன் இறைவனோடு ஒத்துழைக்கும்போது ஏற்படும் ஆபத்துகளைத் தடுப்பதற்குப் பயங்களை அகற்றுவதற்கு வேண்டிய துணிவை, நம்பிக்கையை அவனிடத்தில் பிறப்பிக்கிறார். அவரது பிள்ளைகளாக இருக்க அழைக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து, அவர்கள் தன் அன்புக்குச் சாட்சி சொல்ல வேண்டிய அழைப்புக்குப் பிரமாணிக்கமாய் இருக்க ஆற்றலையும், துணிவையும் அருளுகின்றார்.

பழைய ஏற்பாட்டில், இறைவனின் நண்பர்கள் அவர்களைக் காப்பாற்றிப் பராமரித்து வரும் இறைவனுக்கு முழுப்பிரமாணிக்கத்துடன் இருந்தனர் என்பதைக் காண்கிறோம். தகனப்பலிக்கு வேண்டிய விலங்கை இறைவனே தயார் செய்து கொடுப்பார் 'மகனே' என்று கூறி, தன் ஒரே மகனைப் பலியாக ஒப்புக்கொடுக்கத் தயங்கவில்லை (ஆதி 22:8.13தொ). யோசேப்பு இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்வதைவிட, தன் தலைவனுடைய கோபத்தின் தண்டனைக்கு இரையாவதற்குத் தயங்கவில்லை. இதற்கு மாறாக இஸ்ரேயல் மக்கள் தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்து, பாலைவனத்தில் உணவும், தண்ணீரும் கொடுத்துப் பராமரித்து வரும் இறைவனிடத்தில் நம்பிக்கை, விசுவாசம் வைக்காமல், தங்கள் அவநம்பிக்கை கோபம் இவைகளை வெளிப்படுத்தினர். அன்றாட உணவை இறைவனிடத்தில் எதிர்பார்க்காமல் அவருடைய கட்டளைக்கு எதிராக, சிறிது உணவைப் பத்திரப்படுத்தி வைத்தனர் (யாத் 16:20).

யூதித்து நூல், இறைவனுடைய அழைத்தலுக்கு ஏற்ப நாம் வாழ வேண்டும் என தெளிவாகக் கூறுகிறது. யூதித்து ஆண்டவரைச் சோதிப்பதற்கு மறுக்கிறாள் (யூதி 8:12-16). ஆனால் யூதித்து, சட்டங்களையும் ஒழுங்குகளையும் நன்கு கடைப்பிடித்து, இறைவனின் பராமரிப்பின் கருவியாக இருக்க அவள் தயங்கவில்லை (யூத் 9:9; 12:2: 13:8தொ). இதே எடுத்துக்காட்டுத்தான் சங்கீதங்களில் எதிரொலிக்கிறது. "ஆண்டவர் மீது நம்பிக்கை வை, நன்மை செய்" (சங் 36:2).

2. அளவற்ற அன்பால் ஆண்டவன் தம் மக்களைப் பராமரித்து வருவதையும் அதற்கு எப்படிப் பதில் அளிக்க வேண்டும் என்பதையும் இயேசு தன் சொற்களால், எடுத்துக்காட்டுகளால், செயல்களால் வெளிப்படுத்துகிறார். மனிதன்

உலகத் தலைவர்களுக்கும் அறிஞர்களுக்கும் ஊழியம் செய்வதைவிட, இறை அரசையும், அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடவேண்டும் (மத் 6:24.33); அதாவது விண்ணகத் தந்தையின் திருவுளம் விண்ணுலகிலும் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேற மன்றாட வேண்டும். அன்றாட உணவையும், தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற கடவுளின் பிள்ளைக்கு வேண்டிய யாவற்றையும் அவரிடமிருந்து எதிர்பார்க்க வேண்டும் (மத் 6:10 தொ).

துன்ப துயரங்கள் மத்தியில் இறைவனிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். இந்த நம்பிக்கைக்கு இயேசு ஒரு விலக்கு அல்லர்; அவரே "என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்" எனக்கூறுகிறார் (மத் 27:14). சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிந்து, மகனுக்குரிய நம்பிக்கையைச் சிலுவைமீது வெளிப்படுத்துகிறார்: "தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்" (லூக் 23:46). விசுவாச நம்பிக்கை மூலம், சாவு மற்றும் துன்பதுயரங்களை வென்ற நமது ஆண்டவர், நல்ல ஆயன், துன்ப துயரங்கள் தீமைகள் இவைகளால் சோர்வு அடையும் நமக்கு உண்மை ஒளியாக விளங்குகிறார்; இருளிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறார். கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இறைவனின் பராமரிப்பின் மறை உண்மையை நன்கு உணர்ந்து, சுவைத்து, அதைப்பிறருக்குச் சாட்சியாக வெளிப்படுத்த வேண்டும். விசுவாசத்தில், நம்பிக்கையில், அன்பில் இறைவனுடன் ஒத்துழைக்க வேண்டும்.

பரிகாரம் (EXPIATION, PROPITIATION, ATONEMENT)

1. இச்சொல் பல எபிரேயச்சொற்களின் பொருளைத் தமிழில் மொழி பெயர்க்கிறது. பழைய ஏற்பாட்டில் "பாவத்திற்கான" பலிகளுடனோ, குரு "பரிகாரச்சடங்கினை நிறைவேற்றுகிறார்" என்று கூறும்போதோ (லேவி 4) இச்சொல் பயன்படுகிறது. மேலும் சிறப்பாக. "பரிகாரங்களின் நாள்" என்று அழைக்கப்படும் திஸ்ரிமாதம் பத்தாம் நாள் கொண்டாடப்படும் ஆண்டு விழாவிலும் இச்சொல் பயன்படுகிறது. இந்நாள் பரிகாரநாள், பாவநீக்க நாள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்நாளின் சடங்கானது லேவி 16-இல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் இச்சொல்லானது அரிதாகவே இருந்தாலும் (உரோ 3:25; எபி 2:17; 1 யோவா 2:2; 4:10) இக்கருத்தானது, பரிகாரங்களின் நாளில் தலைமைக்குருவின் செயலோடு கிறிஸ்துவினுடைய மீட்புப் பணியை ஒப்புமைப்படுத்தி வேறுபடுத்தும் எபிரேயருக்கான முழுத்திருமுகத்தில் மட்டுமின்றி, கிறிஸ்து "நமது பாவங்களுக்காக இறந்தார்" (1 கொரி 15:3) அல்லது "பாவங்களை நீக்குவதற்கென தமது இரத்தத்தைச் சிந்தினார்" (மத் 26:28) என்று சொல்லப்படும் ஒவ்வொரு முறையும் கிட்டத்தட்ட உறுதியாகக் காணப்படுகின்றது.

2. பரிகாரமும் பாவமும்: ஏறக்குறைய எல்லா மொழிகளிலும் பரிகாரம் பற்றிய கருத்தானது. மருந்து போன்றிராத தண்டனையுடன் குழப்பப்படுகிறது. ஆனால், இது துல்லியமானதன்று. ஏனெனில், பண்டைக் காலத்தவர் அனைவருக்கும் "பரிகாரம் செய்தல்" என்பது, "தூய்மைப்படுத்துதல்" அல்லது மேலும் துல்லியமாக ஒரு பொருளையோ, இடத்தையோ. நபரையோ "தெய்வங்களின் முன்னால் முன்பு ஏற்புடையவராகாமல் இருந்த நிலையினின்று ஏற்புடையவராக்குதல்" என்று பொருள்படும். எனவே, ஒவ்வொரு பரிகாரமும் அஃது அழிக்க வேண்டிய பாவம் இருப்பதை முன்குறித்துக் காட்டுகிறது.

இந்தப் பாவமானது மனிதனுடைய ஆற்றலால் துடைத்தழிக்கப்படக்கூடிய பருப்பொருள் கறையாக எண்ணப்படவில்லை. ஆனால், இறைவனுக்கெதிரான மனிதனுடைய கிளர்ச்சியாக இது கருதப்படுகிறது. ஆகவே, புதிதாக மனிதனை இறைவனுடன் மீண்டும் ஒன்றுபடுத்தி, இரத்தத்தைத் தெளிப்பதன் பொருளுக்கேற்ப அவனை இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம்,

பரிகாரமானது பாவத்தைத் துடைத்தழிக்கிறது. ஒரு புறம் பாவமானது இறைவனுடைய சினத்தைத் தூண்டுவது போன்று, ஒவ்வொரு பரிகாரமும் இந்தச் சினத்தை முடித்து வைக்கிறது. அஃது "இறைவனை நல்லிசைவானவராக ஆக்குகிறது." ஆனால், விவிலியமானது சாதாரணமாக "மனிதனை இறைவனுக்கு ஏற்புடையவராக ஆக்கும்" நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு இறைவனை நல்லிசைவானவராக ஆக்கும் பங்கைப் பரிகாரப்பலியோடு கூடிய செபத்திற்குச் சாற்றிக் கூறுகிறது.

3. **பரிகாரமும் வேண்டுதலும்:** பரிகாரம் மற்றும் சினம் முதலிய இரண்டு சொற்களும் இணைந்து காணப்படும் சில பகுதிகளில் உண்மையில் பொதிந்திருப்பது செபமே. மோசேயின் பரிகாரம் (யாத் 32:30; 31:11-13), அல்லது ஞான 18:21-25-இன்படி ஆரோனுடைய பரிகாரம் (எண் 17:11-13) இத்தகையதே. தார்குமின் கருத்துப்படி பினகாசுவினுடையதும் (சங் 106:30), மேலும் தெளிவாக வேண்டுபவர் என்று நான்கு முறை குறிப்பிடப்பட்டுள்ள "ஆண்டவருடைய ஊழியனின்" பரிகாரமும் இத்தகையதே (எசா 53:4.7.11.12). பரிகாரம் பற்றிய இக்கருத்தின் விளைவாகவே புனித எரோனிமு பழைய இலத்தீன் பதிப்பைப்பின்பற்றி, "பரிகாரச் சடங்கை நிறைவேற்றுதல்" என்று பொருள்படும் எபிரேயச்சொல்லைச் "செபித்தல்," "வேண்டுதல்" என்ற பொருளுடைய ஒரே சொல்லாக மொழிபெயர்த்தார் (லேவி 4:20.26.310.

"வேண்டுதல்" என்று விளக்கப்படும் (எபி 7:25; 9:24) தனது குருத்துவத்தின் இன்றியமையாக் கடமையை நிறைவேற்ற விண்ணிற்குச் செல்கின்ற கிறிஸ்துவை விவரிக்கின்ற எபிரேயருக்கான திருமுகமானது, திரைக்கு அப்பால் பரிகாரத்திற்காக, இரக்க இருக்கையின் மீது இரத்தத்தைத் தெளிக்கின்ற முக்கியமான பலியை நிறைவேற்றச் செல்கின்ற தலைமைக்குருவுடன் ஒப்பிடுகிறது. கிறிஸ்துவின் மரணமே உயர்ந்த "வேண்டுதலாக"க் கருதப்படுகிறது (எபி 5:7).

இத்தகைய விளக்கம், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அதிகாரபூர்வ பரிகாரமானது அதனை அளிப்பவருடைய உள்ளார்ந்த மனநிலையைச் சார்ந்திராமல் எம்மதிப்பையும் கொண்டிருக்க முடியாது என்பதை வலியுறுத்துகிறது. முதலாவதாக இது, வெளிச்செயல் வெளிப்படுத்துகின்ற ஆனால் அளிக்க முடியாத ஆன்மீகச் செயலாகும். மனிதனைப்பொருத்தமட்டும் தனக்கு உகந்தவராக உருவாக இறைவனை வற்புறுத்தும் கேட்புரிமையையும் இது விளக்குகிறது. ஆரோனின் வேண்டுதலை விவரிக்கும்போது ஞான நூல், அவரது செபமானது "இறைவனது வாக்குறுதிகளையும், உறுதிமொழிகளையும் இறைவனுக்கு நினைவுபடுத்துவதாக" இருந்ததெனத் தெளிவாக விளக்குகிறது (ஞான 18:22). அந்த அளவில் இத்தகைய செபம் இறைவனது பிரமாணிக்கத்தில் கொள்ளும் விசுவாசமாகிறது. இவ்வாறு கருதப்படும் போது, பரிகாரமானது எவ்வழியிலும் (மனிதனுடைய பார்வையைத் தவிர்த்து) இறைவனுடைய மனநிலையை மாற்றுவதாக இல்லை. ஆனால், இறைவனுடைய கொடையைப் பெறுமாறு அது மனிதனை அமைக்கிறது.

4. **பரிகாரமும் மன்னிப்பும்:** யூதருடைய சமய உணர்வில் "பரிகார நாளானது" பெருமளவில் "மன்னிப்பின் நாளாகவே" கருதப்பட்டது. யோவான் இரு வேறுபட்ட இடங்களில், முதலில் தந்தையின் முன்பான கிறிஸ்துவினுடைய விண்ணக வேண்டுதலையும் (1 யோவா 2:2), பின்னர் அவரது மரணம் மற்றும் உயிர்ப்பினால் கீழுலகில் நிறைவேற்றப்பட்ட பணியையும் (4:10) சுட்டிக்காட்டும்போது அவர் அல்லது தந்தையே நமது பாவங்களுக்காக அவரைப் பரிகாரப் பலியாக்கினார் என்று அறிவிக்கிறார். கிறிஸ்துவின் வழியாகவும் கிறிஸ்துவிலும், தன்னை நல்லிசைவானவராகக் காட்டுவதன் மூலம் தனது முடிவில்லா அன்பின்

திட்டத்தைத் தந்தை நிறைவேற்றுகிறார் (4:8); அதாவது உண்மையாகவே பாவங்களை அழிக்கின்ற, மனிதனைத் தூய்மைப்படுத்தி இறைவனுடைய வாழ்வையே அவனுக்கு அளிக்கின்ற (4:9) ஆற்றல் மிக்க மன்னிப்பினால் மனிதரை மன்னிப்பதில் அத்திட்டத்தை நிறைவேற்றுகிறார்.

பரிசு (PRIZE)

ஓட்டப்பந்தய உருவகத்தின் ஒரு விவரத்தை எடுத்து பவுல் கிறிஸ்தவ வாழ்வை விவரிக்கிறார் (1 கொரி 9:24; பிலி 3:14; கலா 2:2).

1 கொரி 9:24-இல் கால்பந்தயத்தில் பெறும் பரிசைப் பற்றி நேர்சொற்பொருள் காணப்படுகிறது. பிலி 3:14-இல் பரிசு உருவகமாகப் பயன்பட்டுள்ளது. ஓட்டப்பந்தயத்தில் நாம் ஓடி முதலில் வருவது பரிசுக்குத் தகுதி உள்ளவர்கள் ஆக்குகிறது. அதே போல் விண்ணக வாழ்வே நம் கிறிஸ்தவ வாழ்வின் பரிசாகும் என்கிறார். பவுலை இத்தகைய ஓர் உன்னத பரிசைப் பெறவே கடவுள் அழைத்திருக்கிறார் எனப் பவுல் கூறுகிறார் (1 தெச 2:12; எபே 1:18; 4:4).

இந்தவொரு சூழ்நிலையில்தான் (பிலி 3:3-11) பவுல் உலகின் பதவி, ஆடம்பரங்களையெல்லாம் வெறுத்து அந்த முடிவற்ற பரிசை நோக்கிச் செல்கிறார். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்வதும் அவரோடு ஒன்றித்திருப்பதும், விசுவாசத்தை அடிப்படையாகக்கொண்டு இறைவனுக்கு ஏற்புடையவனாக இருப்பதும், அவரை அறிந்துகொள்வது, அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையைத் துய்த்துணர்வதும், அவரது பாடுகளில் பங்கு பெறுவதும், இறந்தோரிடமிருந்து உயிர்ந்தெழுதலை அடைவதுமே இந்தப் பரிசாகும். இவற்றிற்காகத்தான் இயேசு பவுலை ஆட்கொண்டார். அதைப்பற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு பவுல் தொடர்ந்து ஓடுகிறார். இதுவே அவரது அழைப்பின் நம்பிக்கை. கிறிஸ்து இயேசுவுக்குள் ஒருவரைக் கடவுள் மேலுலகுக்கு அழைப்பதே இப்பரிசாகும்.

பரிசேயர் (PHARISEE)

I. வரலாற்றில் பரிசேயர்: இந்தப்பிரிவினர் எவ்விதம், எப்போதும் தோன்றினர் என்பது பற்றி உறுதியாக நாம் அறுதியிட்டுக் கூறமுடியாது. ஒருவேளை மக்கபேயர் காலத்திலிருந்த "கசிதீம்" என்ற அடியார்களின் கூட்டத்திலிருந்து இப்பிரிவினர் தோன்றியிருக்கக்கூடும். அசமோனியப் பரம்பரையைச் சார்ந்த யோவான் இரிக்கானு (கி.மு. 135-104) காலத்தில் நிலையாக வேரூன்றி இருந்தனர் பரிசேயர். பரிசேயர் என்பதற்குப் "பிரிந்து இருப்பவர்கள்" என்று பொருள் கூறலாம். அசமோனியப் பரம்பரையினரின் ஒழுக்கக்கேடான வாழ்வையும் அவர்கள் யூதர்களிடையே கிரேக்கக் கலாச்சாரத்தைப் புகுத்துதலையும் எதிர்த்து எழுந்ததால், இப்பெயர் இவர்களுக்குப் பட்டப்பெயராக இவர்களுடைய எதிரிகளால் வழங்கப்பட்டிருக்கலாம். யூத முறையைச் சாராத பிறநாட்டுப் பண்பாடுகளிலிருந்தும், மறை ஒழுக்கத்திற்கும் சட்டத்திற்கும் முரண்பட்ட அனைத்திலிருந்தும் பிரிந்து வாழ்ந்தனர். இவர்கள் யோவான் இரிக்கானு (கி.மு. 134-104), அலக்சாந்தர் யன்னேயு (கி.மு. 103-76) ஆகியோரின் காலத்தில் பல இன்னல்கள் உற்றனர். அரசி அலக்சாந்திரா சலோமே (கி.மு. 76:67) காலத்தில் இவர்களது செல்வாக்கு ஓங்கியிருந்தது. பெரிய ஏரோது, உரோமையர் ஆட்சிக்காலத்தில் இவர்களது செல்வாக்கு குறைந்திருந்தது.

பரிசேயர்கள், யூத இனத்தைக் கடவுள் ஆட்சி கொண்டதாகக் கருதினர். கடவுளே தங்கள் அரசன்; மற்றைய ஆட்சிமுறை யூதர்கள் மேல் புகுத்தப்பட்டால் அஃது ஓர் உரிமைப் பறிப்பாகும் எனக்கருதினர். அவர்களது மதம் மோசே அளித்த சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களையும் அவை பற்றிய விளக்கவுரைகளையும் பாரம்பரியத்தையும் (மத் 15:2; மாற்கு 7:5) அதிகாரபூர்வமான நூல்களாக ஏற்றுக் கொண்டனர். சட்டத்திற்கு மிக

விரிவான விளக்கங்கள் அளித்தனர். சட்டத்தைப் பரிசேயர் பல நூற்றுக்கணக்கான கட்டளைகளாகப் பிரித்தனர். ஒவ்வொன்றையும் செயல்படுத்துதலில் மிக விரிவான விளக்கங்கள் எழுதினர். இவற்றில் முக்கியமானவை ஓய்வுநாளைக் கடைப்பிடித்தல், சடங்குத்தூய்மையைக் கடைப்பிடித்தல், தேவாலயத்திற்குச் செலுத்த வேண்டிய பத்தில் ஒரு பங்காகிய கோயில் மகமையைச் செலுத்துதல் முதலியவைகளாகும். பரிசேயர் ஆன்மாவின் அழிவின்மை, இறந்த பின் தீர்ப்பு, உயிர்ப்பு, விண்ணகத் தூதர்கள் இருத்தல் முதலியவைகளை விசுவசித்தனர். மனிதனது சுயாதீனச் சித்தத்தையும், கடவுள் முன் ஒவ்வொருவருக்குமுள்ள பொறுப் புணர்ச்சியையும் வலியுறுத்திக்கூறினர். சட்டத்தைச் சரியான முறையில் கடைப்பிடித்தால் ஒரு யூதன் உறுதியாக மீட்பு அடைவான் என்று நம்பினர். இது தேவாலயத்தில் பரிசேயனுடைய செபத்திலிருந்து தெரியவருகிறது (லூக் 18:11.12). ஆகையால் சட்டத்தை நுணுக்கமாய் அனுசரிப்பதை வலியுறுத்திக்கூறினர் பரிசேயர். ஓய்வு நாளில் தவிர்க்கப்பட வேண்டியவை பற்றி மிக நுணுக்கமான விதிகளை வகுத்தனர். ஓய்வு நாளில் இடப்பட்ட முட்டையை, அந்நாளில் பறிக்கப்பட்ட பழங்களை உண்ணலாமா என்பன போன்றவை பல உள. எவ்விதத் தண்ணீர் அதிகமாய்ச் சுத்தம் செய்ய உதவும், நீரில் கைகளை எவ்வளவுக்கு அமிழ்த்தலாம், கோயில் மகமை செலுத்தப்படாத பொருள்கள் வாங்கி உண்ணலாமா? என்பவை போன்றவைகளுக்கும் விதிகள் உண்டு.

இப்படிப்பட்ட விதிகளைக் கேட்டு நாம் புன்முறுவல் பூக்கலாம். ஆனால் பரிசேயர் மிகச்சிரத்தையுடன் இவைகளை அனுசரித்தனர். சட்டத்தை அனுசரிப்பதை ஒரு சுமையாகக் கருதவில்லை. அதற்கு மாறாக அதனை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதினர். மோசே வழியாகச் சட்டத்தை இறைவன் பிறமக்களுக்கு அளிக்காது, யூதர்களுக்கும் மட்டுமே அளித்தது ஒரு பெரும் பேறு அல்லவா? அவ்வாறு அளிக்கப்பட்ட சட்டத்தின் ஒவ்வொரு சிறு பகுதியையும் அனுசரிப்பது எவ்வளவு பெரிய பேறு! அதில் இன்பம் கண்டனர்.

மக்கள் பரிசேயரைப் பெரிதும் மதித்தனர். பரிசேயருடைய பக்தியும், ஒழுக்க உயர்வும், அவர்கள், மக்களுக்கு அளித்த மதக் குறிக்கோள்களும், அரசியல் அதிகாரிகளுக்கு முன் அவர்கள் அஞ்சாமையும், அவர்களை மக்கள் உயர்வாகக் கருதும்படி செய்தன. அதனால் பரிசேயர்களே தங்களை உயர்வாகக் கருதினர். சாதாரண மக்களைச் சபிக்கப்பட்டவர்கள் (யோவா 7:49) என இழிவாகக் கருதினர். மிதவாதியான மேதைகில்லல் கூட சட்டத்தையும் மரபு வழக்குகளையும் வணங்க முடியாது என்று கூறியதாகக் கேள்விப்படுகிறோம். சட்டத்தை அனுசரிப்பது ஒரு விக்கிரக வணக்கமாக மாறியது என்று கூடக் கூறலாம். நாளடைவில் இவ்வனுசரிப்பு பொருளற்ற புறத்தோற்றத்தை மட்டும் கொண்டிருந்தது.

பரிசேயர்கள், மக்கபேயர்கள் காலத்தில் சட்டத்தையும் தேவாலயத்தையும் காப்பதில் பெரிதும் சிரத்தை காட்டினர். பின்வந்த அசமோனியர் பரம்பரையை மத அடிப்படையில் எதிர்த்தனர். ஏரோதர்களுடனும் அவர்கள் ஒத்துவைக்கவில்லை. மக்கள் ஏரோதர்களுக்குப் பணிவதை அனுமதித்தாலும் அவர்கள் மட்டும் அரசியலில் தலையிடாது ஒதுங்கி வாழ்ந்தனர்; இதேபோல்தான் உரோமையரோடும் பழகினர்; ஆனால், இறை ஆட்சியினை ஆவலோடு எதிர்பார்த்தனர்; மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். மக்களிடையே மெசியாவைப் பற்றிய விசுவாசத்தைப் பரப்பினர். மத அடிப்படை கொண்ட இந்த நோக்கமே, மற்றப் பிரிவுகள் அழிந்த போதும் பரிசேயர்கள் குழு அழியாமைக்குக் காரணம்.

கி.பி. 70-ஆம் ஆண்டில் எருசலேம் அழிந்து யூத மக்கள் சிதறுண்டபோது, யூதமக்களைத்

திருத்தி அமைத்தவர்கள் இப்பரிசேயர் பிரிவைச் சேர்ந்தவர்கள்தான். பரிசேயரைச் சேர்ந்த பேரறிஞர்கள்தான் "தால்மூது" என்ற நூலை எழுதினர். இந்நூல் கி.பி. 200-500-இல் பாலஸ்தீனம், பாபிலோன் ஆகிய நாடுகளில் வாழ்ந்த யூத அறிஞர்களால் எழுதப்பட்டது. அதன் மூலம் யூதச் சட்டம், அவர்களது விளக்கவுரைகள், கதைகள், யூத மரபுகள் முதலியவற்றை அறிகிறோம். சட்டமும், வேத நூலைச்சார்ந்த யூத வைதீகமும் நமக்குக் கிடைத்துள்ளன என்றால் அதற்கு இப்பரிசேயர்கள் செய்த சேவையே காரணமாகும்.

II. **பரிசேயரும் இயேசுவும்:** இப்பரிசேயர் குழுவினர் ஆண்டவர் இயேசுவோடு பல இடங்களில் தொடர்பு கொள்கின்றனர். நற்செய்தியின் தொடக்கத்திலிருந்து இருவருக்குமிடையே எதிர்ப்பும் பகைமையும் இருந்து வருகிறது. ஏன்? தாங்கள் கொண்டிருந்த மதத்தலைமைப் பதவியை இயேசு கைப்பற்றிக் கொள்வார் என்ற அச்சம், இயேசுவைப் பரிசேயர் பகைக்கக் காரணமாய் இருந்திருக்கலாம். திருமுழுக்கு யோவான்கூட பரிசேயரது அளவு கடந்த மமதையையும், சுய நம்பிக்கையையும், யூதர்கள் என்ற முறையில் அவர்கள் கொண்டிருந்த தற்பெருமையையும் கண்டு அவர்களை 'விரியன் பாம்புக் குட்டிகளே' என்று அழைக்கிறார் (மத் 3:7-10; லூக் 3:7-8).

இயேசுவிடம் ஏதாவது ஒரு குற்றம் கண்டுபிடிக்கக் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர் பரிசேயர் என்பதை நற்செய்தியில் காண்கிறோம். அவரது பேச்சில் குற்றம் கண்டு பிடிக்க முயல்கின்றனர் (மத் 22:15; மாற் 12:13; லூக் 20:20). அந்நோக்குடன் சட்டம், மெசியா, இறையரசின் வருகை இவற்றைப்பற்றிய யூத விசுவாசம் முதலியவை பற்றி விளக்கம் கேட்கின்றனர் (மத் 22:34). இயேசுவின் நடத்தையைப் பற்றியும், அவர் பாவிகளோடும் ஆயக்காரர்களோடும் பழகுவதைக்கண்டும் பழி தூற்றினர் (மத் 9:9-13; மாற் 2:13-17; லூக் 5:27-32; 7:34; 15:2). அவர் ஓய்வு நாளில் நுணுக்க விதிகளைக் கடைப்பிடிப்பதில் கவனம் கொள்ளாது (மத் 12:1 தொ: மாற் 2:24 தொ; லூக் 6:1 தொ) ஓய்வு நாளில் குணப்படுத்தியது (லூக் 14:13), சடங்குத் தூய்மை விதிகளைப் பின்பற்றாதது (மத் 15:1 தொ; மாற் 7:1 தொ) முதலியவைகளுக்காக அவரை வெறுத்தனர். இவை காரணமாக அவரைப் பழி தூற்றுதலோடு நில்லாது, தாங்கள்தான் சட்டத்தையும் அதன் விதிகளையும் கடைப்பிடிப்பவர்கள் என்று யாவரும் அறிய வெளிப்படுத்திக் கொண்டனர். இயேசு பாவத்தை மன்னிப்பதை எதிர்த்தனர் (லூக் 5:17 தொ). அவர் பேய் ஓட்டுதலைப் பேய்களின் தலைவன் பெயெல்செபூபுவைக் கொண்டு செய்வதாகக் கூறினர் (மத் 12:24). அவரது சீடர்கள் அவரை வெற்றிப் பெருமிதத்துடன் வாழ்த்துவதை வெறுத்தனர் (லூக் 19:39). பரிசேயரது பகைமையையும் (யோவா 12:19-37), அவர்களது விசுவாசமின்மையையும் (7:45-52; 8:13; 9:13-34) யோவான் பல இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார். இயேசுவைக் கொல்லச் சதி செய்கின்றனர் பரிசேயர் (மத் 12:14; மாற் 3:6). இயேசுவைக் கைது செய்ய தலைமைக் குருக்களும், பரிசேயரும் காவலர்களை அனுப்பினர் (யோவா 18:3). பரிசேயர் பேராசை மிக்கவர்கள் என்றும், இறைவனது திட்டத்தைச் சிதைப்பதில் சிரத்தை கொண்டவர்கள் என்றும் லூக்கா குறிப்பிடுகிறார் (லூக் 7:30; 14:16).

தமது சீடர்களின் நீதித்தன்மை பரிசேயருடையதைவிட மிகுந்திராவிட்டால் விண்ணரசு புக மாட்டார்கள் என்று இயேசு கூறியது (மத் 5:20), அவர் பரிசேயரைப் பற்றி மிதமாகக் கூறியதாகும். பரிசேயர் இயேசுவின் தூதை உறுதிப்படுத்த ஓர் அடையாளத்தைக் கேட்டபோது, அவர்களைக் கெட்ட விபசாரத் தலைமுறை என்றழைக்கிறார் இயேசு (மத் 12:38 தொ). அவர்கள் தாங்களே சிறந்தவர்கள் என்று கருதி ஒதுங்கி வாழ்தலைக் கண்டிக்கிறார் (மத் 9:9-13; மாற் 21:3-17; லூக் 5:27-32; 7:36 தொ). அவர்கள் சட்டத்தைப் பிறருக்கு ஒரு பெரும்

சுமையாக்கினர் (மத் 23:4). பரிசுத்த ஆவியாருக்கு விரோதமான மன்னிக்கப்பட முடியாத பாவத்தைக் கட்டிக்கொள்கின்றனர் (மத் 12:31 தொ). அவர்கள் சில சமயங்களில் சட்டத்தைத் திரித்துத் தங்களுக்குகந்த விதத்தில் அதற்குப் பொருள் கூறினர் (மத் 15:6; மாற் 7:8.13). குத்தகைக்காரர் உவமையில் கொடிய குத்தகைக்காரர்கள் பரிசேயராவர் (மத் 21:33-46). அவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள் (யோவா 9:40). அவர்கள் தாங்களே நீதிமான்கள் என்று எண்ணிக்கொண்டனர். இதைப் பரிசேயனும் ஆயக்காரனும் என்ற உவமையில் கண்டனம் செய்கிறார் இயேசு (லூக் 18:8-14). இக்குணங்கள், அவர்கள் தங்களைத் தாங்களே எண்ணிக்கொண்டது போல், மெச்சத்தகும், பிறர் பின்பற்றத்தகும் உயர்ந்த மேதைகள் அல்லர்; மாறாக இழிந்தோர்களே எனக்காட்டுகின்றன. இயேசுவினுடைய வார்த்தைகளும் இதையே உணர்த்துகின்றன. தமது கண்டனப் பொழிவில் கிறிஸ்து பரிசேயர்களை "வெளிவேடக்காரர்களே" என்றழைக்கிறார் (மத் 23). அவர்கள் சட்டத்தின் முக்கியமான பரிசுத்த கடமைகளைப் புறக்கணித்துவிட்டு, வெளிச் சடங்குகளையும் வெளித்தோற்றங்களையும் வலியுறுத்திக் கூறினர். பிறர்மேல் சுமத்தும் கடமைச் சுமையைத் தாங்களே அனுசரியார். அவர்கள் "வெள்ளையடித்த கல்லறைகள்"; வெளித்தோற்றத்தில் பக்திமான்களாகத் தோன்றினாலும், உள்ளத்தில் கறைபடிந்தவர்கள்; கள்ள ஞானமும் அக்கிரமும் நிறைந்தவர்கள்.

மேற்கூறப்பட்டவற்றை நற்செய்தியில் வாசிக்கும் சிலர், நற்செய்தியாளர்கள் பரிசேயரைத் தவறாகவும், அவதூறாகவும் சித்தரிக்கின்றனர் என்று குற்றம் சாட்டுகின்றனர். பரிசேயராலே எழுதப்பட்ட "தால்மூது" என்ற நூலிலும் பரிசேயரைப்பற்றி இதே குறைகள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இக்குறைகள் நற்செய்தியில் பரிசேயரைப்பற்றிக் கூறப்பட்டவைகளுக்கு முரண்படாது ஒத்து இருக்கின்றன. நற்செய்தியில் பரிசேயரைப் பற்றிய கூற்றுக்களிலும் முரண்பாடு காணப்படவில்லை. மேலும் இக்கூற்றுக்கள் மிகையானவை என்று கூறவும் முடியாது. கிறிஸ்துவுக்கு விரோதமாய் இருந்தவர்கள் பரிசேயர் மட்டுமல்லர்; சதுசேயரும் மறைநூல் அறிஞரும் இவர்களோடு சேர்ந்து இயேசுவை எதிர்த்தனர். இயேசுவின் மரணத்திற்குப் பரிசேயர்களும் பொறுப்பாளிகள் என்றாலும், பொறுப்பின் பெரும்பகுதி சதுசேயரையும் சாரும். பரிசேயரில் உண்மையான, நேர்மையான நீதிமான்களும் உண்டு. அவர்களில் சிலர் நிக்கொதேம் (யோவா 3; 7:45-52), அரிமத்தி யாவூர் யோசேப்பு (19:39), கமாலியேல் (அ.ப. 5:34) போன்றவர்களாவர். பவுல் ஒரு பரிசேயர்; அப்படியிருப்பதில் பெருமைப்படவும் செய்தார் என அறிகிறோம் (அ.ப. 23:6-7; 26:5; பிலி 3:5). எருசலேம் கிறிஸ்தவர்களில் பலரும் (அ.ப. 15:5), ஆதிக்கிறிஸ்தவர்களில் பலரும் பரிசேயர் பிரிவிலிருந்து மனந்திரும்பியவர்கள்.

III. **பரிசேயத்தனம்:** பரிசேயர் என்ற சொல்லினை வாதப்பின்னணியில் பயன்படுத்துவது துரதிருஷ்டவசமாக, கிறிஸ்தவப் பண்புக்குப் புறம்பான விதத்தில் அச்சொல்லைத் தவறான விதத்தில் பயன்படுத்த இட்டுச் சென்றுள்ளது. ஆயினும், யூதரைப் பற்றி இல்லாமல், மூடிய மனதுடனான எம்மனிதனுடைய நடத்தையையும் குறிக்கு இச்சொல்லைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டால், இம்முறையில் புரிந்து கொள்ளப்படும் பரிசேயத்தனமானது, பரிசேயருடைய பிரிவுடன் எந்தத் தொடர்பையும் கொண்டிருக்காது. இது நற்செய்தியினுடையதற்கு எதிரான ஒரு மனநிலையாகும். பரிசேயருடைய குருட்டுத்தனத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ள சில காட்சிகளை நான்காவது நற்செய்தி பாதுகாத்து வைத்துள்ளது (யோவா 8:13; 9:13.40). ஆனால், இது சாதாரணமாக அவற்றை யூதருடன் இணைக்கிறது. இவ்வாறு, இயேசுவுடனான அவர்களது முரண்பாடு வரலாற்றிற்கு அப்பாற்பட்ட மதிப்பைக் கொண்டுள்ளது என்பதை

அது சுட்டிக்காட்டுகிறது. நீதியெனும் முகமூடியணிந்து கொண்டு உள்ளார்ந்த வாழ்வின் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் அல்லது தன்னைப் பாவியென்று ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் இறைவனுடைய அழைத்தலிலிருந்து தவிர்த்துக் கொள்ளுதல் ஆகியவை பரிசேயத்தனமாகும். தன்னுடைய சமய அறிவின் குறுகிய வட்டத்திற்குள் ஒரு மனிதன் இறைவனுடைய அன்பை ஒடுக்குவதும் இத்தகையதே. இந்த மனநிலையானது தொடக்க காலக் கிறிஸ்தவத்தில் யூதேயக் கிறிஸ்தவரிடையிலும் காணப்பட்டது. இதைப் பவுல் எதிர்க்கிறார் (அ.ப. 15:5). இவர்கள் புறவினத்தாரிலிருந்து வருகின்ற புதுக்கிறிஸ்தவர்களை யூதச் செயல் முறைகளுக்கு உட்படுத்த விரும்பினர். அதன் விளைவாக, கிறிஸ்துவின் மரணத்தினால் சட்டத்தின் நுகத்தடியினின்று விடுவிக்கப்பட்டவர் களை மீண்டும் அதே நுகத்தடிக்குக் கீழ்ப்படுத்த அவர்கள் விரும்பினர். மரத்தினின்று வெட்டப்பட்ட யூதனை இழிவாகக் கருதுகின்ற கிறிஸ்துவனிலும் (உரோ 11:18-20) பரிசேயத்தனம் காணப்படுகிறது (11:18). கிறிஸ்தவன் சட்டத்தைக் கடைப்பிடிக்கும் நிலைக்குப் பின்வாங்கி, அருளின் உலகளாவிய தன்மையை அறிந்துகொள்வதில் தவறுமளவிற்குப் பரிசேயத்தனமானது கிறிஸ்துவத்தை அச்சுறுத்துகிறது.

பரிசேயனும் ஆயக்காரனும் - உவமை (PHARISEE AND TAX COLLECTOR - PARABLE)

செபமானது நேர்மையானதும் தாழ்ச்சியுடையதுமாய் இருக்க வேண்டும். இந்த உவமை (லூக் 18:9-14) தங்களை நீதிமான்களெனக் கருதி, பிறரைப் புறக்கணிக்கும் வெளிவேடக்காரரை நோக்கிக் கூறப்பட்டது. தன்னைத்தானே புண்ணியவானாகக் கருதி நிறைவடைபவர் இறைவனுக்கு ஏற்றவரல்லர். இங்கே தன்னிறைவு கொண்ட பரிசேயனும், தாழ்ச்சி நிறைந்த ஆயக்காரனும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றனர். தங்களுடைய செயலில் நிறைவுக் கொண்டு அதை நினைத்துப் பெருமைப்படுபவரை இந்தப் பரிசேயன் பிரதிபலிக்கிறான். ஆயக்காரனோ தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தோடு ஆண்டவரின் மன்னிப்பை மன்றாடும் நல்ல உள்ளம் படைத்தவரைக் குறிக்கிறான். கடவுள் தாழ்ச்சியுடையோர்க்குத் தம் அருளை ஈந்து வாழ்வளிக்கிறார். தீயோரையும், இறுமாப்புக் கொண்டோரையும் புறக்கணிக்கிறார் (1 பேதுரு 5:5).

பரிந்துபேசுபவர் (ADVOCATE)

இது "பாராகிளேத்தோஸ்" என்ற கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு. 1 யோவா 2:1-இல் இயேசுவுக்கு அளிக்கப்படும் ஒரு பட்டமாகும். விசுவாசிகள் இன்னும் பாவிகளே என்று கூறியபின், யோவான், இயேசு கிறிஸ்து அவர்களின் பரிந்துரையாளர் என்று விளக்குகிறார்.

நம் பாவத்திற்கு உயிருள்ள பரிகாரமாக விளங்குவதால் கிறிஸ்து, தந்தையோடு மனிதனுக்காகப் பரிந்து பேசுகிறார். இவர்கடவுளிடம் மனிதனுக்காகப் பரிந்து பேசும் மனிதனின் பிரதிநிதி, துணையாளர், உதவுபவர் என்ற முறையில் இவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார்.

இதே செயல் பரிசுத்த ஆவியாலும் செய்யப்படுகிறது (யோவா 14:16). இந்தத் தூய ஆவி விண்ணகத்துக்கு எழுந்து சென்ற கிறிஸ்துவுக்கும் அவர்தம் மக்களாகிய நமக்கும் இடையே உள்ள பாலமாய் இருக்கிறார்.

பரிமளம், நறுமணப்பொருள் (PERFUME)

1. எல்லா மேற்காசிய மக்களையும் போன்று இஸ்ராயேலும் நறுமணப் பொருட்களை அதிக அளவில் பயன்படுத்தியது. முப்பது வகைக்கும் குறையாமல் விவிலியம் அவற்றைக் குறிப்பிடுகிறது. மூதாதையர் அவற்றை யோசேப்புக்கு அளிக்கின்றனர் (ஆதி 43:11). நறுமணப் பொருட்களின் விற்பனையில் சாலமோன் (1 அர 10:2, 10; ஆதி 37:25) மற்றும் எசேக்கியா (2 அர 20:13) முதலானோர் ஏகபோக

உரிமை பெற்றிருந்தனர். உண்ணுதல், குடித்தலைப் போன்று நறுமணப் பொருட்களும் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தன. அதனுடைய பொருளானது இருவிதமானது; சமூக வாழ்வில் அது மகிழ்ச்சியின் அடையாளம் அல்லது சம்பந்தப்பட்ட நபர்களுடைய நெருக்கத்தின் வெளிப்பாடு; திருவழிபாட்டில் அது காணிக்கை மற்றும் போற்றுதலின் அடையாளம்.

2. **நறுமணப்பொருளும் சமூகவாழ்வும்:** நறுமணப்பொருட்களைப் பயன்படுத்துவது வாழ்வதில் ஒருவரது மகிழ்ச்சியை வெளிப்படையாக வெளிப்படுத்துவதாகும் (பழ 27:9). எப்போதையும்விடத் தன்னை மிகவும் அழகுபடுத்துவதாகவும் இது பொருள்படும். விருந்துகளில் விருந்தினர் இதனைப் பயன்படுத்துவர் (ஆமோ 6:6). உடலின்ப உறவில் காதலர்களும் இதனைப் பயன்படுத்துவர் (பழ 7:17). ஒருவருடைய விருந்தினரின் தலைமேல் நறுமணப்பொருளைப் பொழிவதென்பது, அவரை வரவேற்பதில் அவருக்குள்ள மகிழ்ச்சியின் அடையாளமாகும் (மத் 26:7). இச்செயலை விட்டு விடுவதானது மோசமான ஒழுக்கமாகும் (லூக் 7:46). மற்றொரு புறம் துக்க நேரங்களில், மகிழ்ச்சியின் இந்த அறிகுறிகள் நீக்கப்படுகின்றன (2 சாமு 12:20; 14:2). ஆயினும், தங்களுடைய தவத்தைக் காட்டிக்கொள்ளாமலிருக்கவும் (மத் 6:17), துக்கத்தினால் உண்மையான கிறிஸ்தவ மகிழ்ச்சியைச் சிதைக்காமல் இருக்கவும், தாங்கள் நோன்பு இருக்கும்போதும் கிறிஸ்துவின் சீடர்கள் நறுமணப் பொருட்கள் பூசுவதைத் தொடர்வர்.

சில நேரங்களில் நறுமணப்பொருளானது மிக நெருக்கமான பங்கையும் வகிக்கலாம். அதாவது ஒருவருடைய உடல்சார்ந்த பிரசன்னத்தை நுட்பமான, மிகவும் ஊடுருவிச்செல்கின்ற முறையில் தெரிவிக்கின்றதாக இஃது இருக்கலாம். மனிதனுடைய தன்மையையே வெளிப்படுத்தி, அவனுள் மறைந்துள்ள வாழ்வின் ஓர் அனுபவத்தை அளிக்கின்ற அமைதியான மென்மையான உறவாகும் இது. இதன் காரணமாகவே, தாங்கள் கவரவேண்டும் என்று எண்ணுகின்றவர்களுடைய உணர்வுகளை அதிகமாகக் கிளர வேண்டுமென்ற நோக்கத்தில் எஸ்தர் (எஸ் 2:12-17) மற்றும் யூதித்து (யூதி 10:3-4) ஆகியோர் வாசனைத் தைலத்தினாலும் வெள்ளைப் போளத்தினாலும் தங்களை அலங்கரித்துக் கொள்கின்றனர். யாக்கோபின் உடைகளினின்று வருகின்ற விளைச்சலின் வாசனையானது (ஆதி 27:27) இறைவனின் ஆசிர் அவர் மேல் தங்கியுள்ளது என்பதற்கான அறிகுறியாகும். உன்னத சங்கீதத்தில் தலைவி தனது காதலரின் பிரசன்னத்தை வெள்ளைப்போள முடிப்பிற்கும் (உ.ச. 1:12) நறுமணப்பொருளுக்கும் (1:3) ஒப்பிடும் வேளையில், அவளது துணைவர் அவளை வெள்ளைப் போளம் என்றும் பரிமளப் பொருள் என்றும் அழைக்கிறார் (5:1;4:10).

3. **நறுமணப்பொருளும் திருவழிபாடும்:** பண்டைய உலகானது தனது வழிபாட்டில் நறுமணப்பொருட்களைக் காணிக்கையின் அடையாளங்களாகப் பெருமளவில் பயன்படுத்தியது. இஸ்ராயேலும் இம்மரபைத் தழுவிக் கொண்டது ஆலய வழிபாட்டில் "நறுமணப் பீடம்" (யாத் 30:1-10), கத்திரிகள் (1 அர 7:50), மற்றும் தூபக்கலசங்கள் (எண் 7:86) முதலியன இடம் பெற்றன. மகிழ்ச்சிமிக்க ஆராதனையில் ஒவ்வொரு காலையும் மாலையும் நறுமணப் பலியானது அளிக்கப்பட்டது (யாத் 30:7-8; லூக் 1:9-11). புகையில் எழுகின்ற சாம்பிராணி மணமானது, இறைவனுக்கு அளிக்கப்படுகின்ற புகழ்ச்சியின் அறிகுறியாகும் (ஞான 18:21; சங் 14:2; திருவெளி 8:2-5; 5:8). சாம்பிராணியை எரிப்பதானது இறைவனை ஆராதித்து அமைதிப்படுத்துதல் என்று பொருள்படும் (1 அர 22:44; 1 மக் 1:55).

ஆனால், உண்மையான இறைவனுடைய வழிபாடாகிய ஒரே வழிபாடு மட்டுமே அங்கு இருக்க முடியும். இதன் விளைவாக, இறுதிக்காலங்களில் எல்லா நாடுகளும் இறைவனுக்கு அளிக்கக்கூடிய

இரத்தமற்ற பலியாகிய நிறைவான வழிபாட்டை அடையாளங் காட்ட சாம்பிராணியும் அதன் நறுமணமும் பயன்படுகின்றன (மலா 1:11; எசா 60:6; மத் 2:11). இந்த நிறைவான வழிபாடானது கிறிஸ்துவால் நிறைவேற்றுப்படுகிறது. அவர் தம்மையே கடவுளுக்கு நறுமணம் வீசும் காணிக்கையும் பலியுமாகக் கையளித்தார் (எபே 5:2; யாத் 29:18; சங் 40:7). அவருடைய வாழ்வானது இறைவனுக்கு ஏற்ற அன்பின் பலியாக எரிக்கப்பட்டது என்று இதற்குப் பொருள்.

கிறிஸ்தவன் தனது திருமுழுக்கின்போது கிறிஸ்துவுடன் விலை மதிப்புடைய நறுமணப்பொருட்களின் கலவையாகிய கிறிஸ்மாவின் அடையாளத்தினால் அபிடேகம் செய்யப்பட்டுள்ளான் (யாத் 30:22-25). அவன் தனது முறையில் தனது செயல்களில் சிறியவைகூட இந்தக் காணிக்கையின் ஆற்றலுடன் ஊக்குவிக்கப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொண்டு (பிலி 4:18), கிறிஸ்துவின் இனிய மணத்தைப் பரப்ப வேண்டும் (2 கொரி 2:14-17).

பருந்து (KITE)

இது நடுத்தர உருவமுடைய பிற உயிர்களைப் பட்சிக்கும் பறவையாகும். பாலஸ்தீனத்தில் பொதுவாக, சிவப்புப் பருந்துகளே காணப்படுகின்றன. கறுப்பு இறக்கைகளோடும் பருந்துகள் இங்கு உண்டு. இவை கழிவுப்பொருட்கள், உயிருள்ள சிறு பறவைகள், பாலுண்ணிகள் ஆகியவைற்றை உட்கொள்கின்றன. ஆகவே தீட்டானவையாகும்; உண்ணாமல் அருவருக்க வேண்டியதாகும் (லேவி 11:14). இவை மனிதரற்ற பாலைவனங்களில் வாழ்கின்றன எனக்கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதே (எசா 34:15).

பருவகாலம் (SEASON)

இது பல மூல எபிரேய, கிரேக்கச் சொற்களின் கூட்டு மொழி பெயர்ப்பு. இருந்தபோதிலும் எல்லாச் சொற்களும் வரையறுக்கப்பட்ட காலத்தைக் குறிக்கின்றன.

அ) வருடா வருடம் வருகின்ற பருவகாலங்கள் வானிலையை வைத்துப் பிரித்துக்காட்டப்பட்டன: குளிர்காலம், பிந்திய இலையுதிர்காலக்குளிர் (பழ 20:4; எரே 36:22), மழைக்காலம் (செக் 11:14), இளவேனிற் காலம் (செக் 10:1), கோடையின் வறட்சி (சங் 32:4; எசா 18:4). பறவைகள், மிருகங்கள் போன்றவையினுடைய நடத்தைகளினாலும் (ஆதி 31:10; எசா 18:6; எரே 8:7), விவசாயக் கூறுகளை வைத்தும் பருவங்கள் குறிக்கப்பட்டன: உழவு செய்தல் (யாத் 34:21), விதைத்தல் (லேவி 26:5), தளிர்விடுதல் (மத் 24:32), வாற்கோதுமை அறுவடை (ரூத் 1:22), கோதுமை அறுவடை (ஆதி 30:14), கதிரடித்தல் (யோபு 5:26), கோடைப்பழம் (ஆமோ 8:1), அத்திப்பழம் பழுக்கும் காலம் (மாற் 11:13), திராட்சை அறுவடை (எண் 13:26). விண்மீன் குழுக்களின் இடத்தை வைத்தும் (யோபு 38:3), திருயாத்திரை போன்ற (1 சாமு 1:3; லூக் 2:41) பாரம்பரிய பழக்கங்களை வைத்தும், போர்க்காலங்களை வைத்தும் (2 சாமு 11:1) பருவகாலங்களை நிர்ணயித்தனர்.

பரோசு (PAROSH தெள்ளுப்பூச்சி)

அடிமைத் தனத்திற்குப்பின் வாழ்ந்த இருவரின் பெயராகும்.

1. அடிமைத் தனத்திற்குப்பின் வாழ்ந்த ஒரு குடும்பத்தலைவரின் பெயர் (எஸ் 2:3; 8:3; 10:25; நெகே 3:25; 7:8).

2. எஸ்ரா காலத்தில் உடன்படிக்கையிலே கையொப்பமிட்ட தலைவர்களுள், இவரும் ஒருவராவார் (நெகே 10:14).

பர்சந்தாத்தா (PARSHANDATHA - ஆர்வமிக்க, தலையிடுகிற)

ஆமானின் பத்துப் புதல்வர்களில் இவரும் ஒருவர். இவர்களின் தந்தையான ஆமானைத் தூக்கிலிட்டபின் இவர்களை யூதர்கள் கொன்றனர் (எஸ்த 9:7).

பர்சபா (BARSABBAS - ஓய்வுநாளின் மகன் அல்லது சாபாவின் மகன்)

1. பர்சபா என்னும் யோசேப்பு. இவருக்கு யுஸ்து என்ற பெயரும் இருந்தது. யூதாசு இஸ்காரியோத்து இழந்துபோன அப்போஸ்தலர் இடத்தைப் பெறுவதற்குச் சீட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் (இருவரில்) இவர் ஒருவர் (அ.ப. 1:23).

2. அந்தியோக்கியாவில் பவுல், பர்னபா ஆகியோருக்கு உதவிசெய்ய சீலாவோடு பர்சபா என்னும் யூதாசை எருசலேம் திருச்சபை அனுப்பியது (அ.ப. 15:22). சீலாவைப்போல், இவரும் ஓர் இறைவாக்கினர் (15:32).

பர்சில்லாய் (BARZILLAI - இரும்புமனிதன்)

1. ரோகலிமைச் சேர்ந்த கிலயாதியரான இவர் மற்ற இருவருடன் கிளர்ச்சி செய்த தன் மகன் அப்சலோமிருந்து தாவீது தப்பியோடியபோது அவரிடம் வந்து அவருக்குப் படுக்கைகள், கிண்ணங்கள் மண்பாண்டங்கள், கோதுமை, வாற்கோதுமை, மாவு, வறுத்த தானியம், மொச்சை இன்னும் பலவற்றைக் காணிக்கையாகக் கொடுத்தார் (2 சாமு 17:27-29).

அப்சலோம் தோற்கடிக்கப்பட்ட பின், அரசரோடு யோர்தானைக் கடந்து சென்று மரியாதை செய்தார். அவருக்கு எண்பது வயதாகி விட்டதால், அரசவையில் சேர்ந்துகொள்ள அரசன் விடுத்த அழைப்புக்கு இணங்க மறுத்து விட்டார். தனக்குப் பதிலாக தன் மகன் கிம்காமை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு அரசர் இணங்கினார் (19:31-40). தனது இறப்புக்குமுன், தாவீது அரசர் பர்சில்லாயின் புதல்வர்களை அரசவையில் மதிப்பு மிக்கவர்களாக நடத்தும்படி, தன் மகன் சாலமோனுக்குக் கட்டளையிட்டார் (1 அர 2:7).

2. இவர் ஒரு மெகொலத்தியர். இவரது மகன் அதிரியேல், சவுலின் மகள் மேராபுவைத் திருமணம் செய்து கொண்டார் (1 சாமு 18:19). 2 சாமு 21:8-இல் மீக்கால் மேராபு என்று இருக்க வேண்டும்.

3. ஒரு குரு. பர்சில்லாயின் (1) புதல்வியரில் ஒருத்தியை மணந்து அவரது பெயரையே எடுத்துக்கொண்டவர். இப்பெயர் மாற்றத்தில் இவரது வழித்தோன்றல்கள், நாடு கடத்தப்பட்டதற்குப்பின், தங்களது மரபு முறைப்பட்டியலை எண்பிக்க முடியாததால், குருத்துவப் பணியினின்று நீக்கப்பட்டனர் (எஸ் 2:61; நெகே 7:63-64).

பர்த்தலமேயு (BARTHOLOMEW - தல்மாயின் மகன்)

புதிய ஏற்பாட்டின் நான்கு குறிப்புகள்படி இவர் ஓர் அப்போஸ்தலர். இவர் எப்போதும் பிலிப்புக்குப்பின்னோ (மத் 10:3; மாற் 3:18; லூக் 6:14), சிறிது பிந்தியோ (அ.ப. 1:13) குறிக்கப்படுவதால், இவர் நத்தனியேல்தான் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். இந்த நத்தானியேலைப் பிலிப்பு இயேசுவிடம் கூட்டி வந்தார் (யோவா 1:45-51; காண்க. 21:2).

திருச்சபைப் பாரம்பரியப்படி இவர் இந்தியா, அர்மேனியா, பிரிகியா, லிக்கவோனியா, மெசபொத்தாமியா, பாரசீகம் ஆகிய பகுதிகளில் நற்செய்தி அறிவித்ததாகத் தெரிகிறது. இவர் பிலிப்போடு சேர்ந்து நற்செய்திப்பணி செய்தார் என்று அறிகிறோம். கத்தோலிக்கப் பாரம்பரியம் பிலிப்புக்கும், பர்த்தலமேயுவுக்கும் சேர்ந்து விழாக்கொண்டாடுகிறது. மத்தேயு நற்செய்தி விளக்கவுரையின் முன்னுரையில் எரோனிமு பர்த்தலமேயு எழுதிய நற்செய்தி ஒன்றைக் குறிப்பிடுகிறார்.

பர்த்தலமேயு எழுதிய கிறிஸ்துவின் உயிர்ப்பு பற்றிய நூல் (BARTHOLOMEW THE APOSTLEL, BOOK OF THE RE SURRECTION OF CHRIST BY)

இந்நூலானது பர்த்தலமேயுவால் எழுதப்பட்டு, அவரின் மகனான ததேயூவிடம் கொடுக்கப்பட்டு, அவிசுவாசிகளின் கையில் அந்நூல் கிடைக்காமல் பாதுகாத்துக் கொள்ளும்படி கூறப்பட்டதாகக்

கூறப்படுகிறது. இது பர்த்தலமேயுவின் சிறப்பைப் பற்றிக் கூறுவதற்காக எழுதப்பட்டதாகவே தெரிகிறது. பர்த்தலேமேயுவின் சிறப்பைப் பற்றிக் கூறுவதற்காக எழுதப்பட்டதாகவே தெரிகிறது. பர்த்தலேமேயுவின் நற்செய்தியில் காணப்பட்டது போலவே, இந்நூலிலும், இயேசுவின் உயிர்ப்பும், பாதாளத்தில் இறங்கி அவர் ஆன்மாக்களை மீட்டதும், ஆதாமை மீட்டதும் மையக்கருத்தாகக் கூறப்படுகின்றன. திருமுறை சேராத பிற நற்செய்திகளைப் போலவே, இந்நூலும், திருமுறை நூல்களிலிருந்து மையக்கருத்தை எடுத்து, அதை விரிவுபடுத்தித் தேவைக்கேற்றாற்போலக் கூறியுள்ளது. இந்த நூலின்படி, இயேசு இருமுறை அடக்கம் செய்யப்படுகிறார். ஒருதடவை அரிமத்தியா யோசேப்பாலும், இன்னொரு தடவை ஒலிவமலையில் இருந்து இறங்கிவரும்போது, குணமாக்கப்பட்ட பையனின் தந்தையான பிலகனேசு என்பவராலும் அடக்கம் செய்யப்பட்டார். மேலும், சாவு, இயேசுவைச் சந்திக்கக் கல்லறைக்குச் சென்று உறவாடுதல், அப்போஸ்தலர்கள் விண்ணேற்றம், இயேசுவின் கல்லறைக்குச் சென்ற பெண்கள், தோமையாரின் சந்தேகம் போன்றவற்றை மிகவும் விரிவாக இந்நூலில் காணலாம். தோமையாரின் மகனான சியோபான் தொலைநாட்டில் இறந்து விட்டதால்தான் இயேசு வந்தபோது, தோமையார் அங்கு இல்லை என்றும் கூறுகிறது இந்நூல்.

இதைத் தவிர மீட்கப்பட்ட ஆன்மாக்களை வரவேற்றுப் பாடும் எட்டுப்பாடல்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இந்நூல் 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலாக இருக்கலாம்.

பர்த்தலமேயு எழுதிய நற்செய்தி (BARTHOLOMEW, GOSPEL OF)

எரோனிமு தான் எழுதிய மத்தேயு நற்செய்தி விளக்கவுரையின் முன்னுரையில் திருமுறைப்பட்டியலைச் சேராத நூல் பட்டியலின் வரிசையிலும் இந்நூலைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எரோனிமுவுக்கு இந்தப் புத்தகத்தைப் பற்றித் தெரியுமா என்பதுபற்றி நமக்குத் தெரியவில்லை. காரணம் அவர், "பந்தனேயு இந்தியாவில் கிரேக்கத்தில் எழுதப்பட்ட மத்தேயு எழுதிய நற்செய்தி நூல் ஒன்றைக் கண்டெடுத்தார். அஃது அங்கு பர்த்தலமேயுவால் கொண்டு செல்லப்பட்டது" என்று யுசேபியு எழுதிய செய்தியையே இவர் ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகிறார். அரயோபாகியர் தியோனிசு எழுதிய ஒரு நூலில் "இறைவல்லுநர் பர்த்தலமேயு" என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டதாக இரண்டு மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. ஆனால், மேலே குறிப்பிட்ட எந்தத் தகவலும், பர்த்தலமேயு எழுதிய நற்செய்தியைப் பற்றி எதுவும் சரியாகத் தர இயலவில்லை.

இன்று கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில் காணப்படும் "பர்த்தலமேயுவின் கேள்விகள்" என்னும் நூல், ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இஃது ஒரு வேளை திருமுறைப் பட்டியலுக்கே தெரியாத, அதனால் ஏற்கப்படாத நூலாக இருக்கலாம்.

இந்த நூலில், இயேசுவின் சிலுவைப் பாடுகளின்போது தூரத்தில் இருந்து பின் பற்றிய பர்த்தலமேயு, உயிர்த்த இயேசுவிடமும், மரியாளிடமும், சாத்தானிடமும் பல கேள்விகள் கேட்பதாகக் கூறப்பட்டுள்ளது. சிலுவையில் அறையப்படும்போது இவர் தூரத்தில் இருந்து கண்ட தெய்வீகக் காட்சிகளை வேறு யாரும் காணவில்லை என்றும், அஃது இயேசு, இவரை அழைத்தபோது கொடுத்த வாக்குறுதி என்றும் (யோவா 50:51) கூறப்படுகிறது.

இந்த நூலில், நரகத்தில் இறங்குதல், மங்கள வார்த்தையும், அதைத்தொடர்ந்து இயேசுவின் புதுமைப்பிறப்பும், போன்ற பல கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளைப் பற்றிக் கற்பனை கலந்து கூறப்பட்டுள்ளது. இதில் ஐந்து முக்கிய காட்சிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. 1) இயேசு பாதாளத்தில் இறங்கி, நம் முதுபெரும் தந்தையாரை மீட்டு வருதலும், ஒவ்வொரு நாளும்

அங்கிருந்து மீட்கப்படும் ஆன்மாக்களின் எண்ணிக்கையும், அங்குப் போகும் ஆன்மாக்களின் எண்ணிக்கையும்; 2) மரியாளைத் தூதர் சந்தித்ததும், அப்போது மரியாள் நடத்திய புதுமைகளும்; 3) இயேசு, அப்போஸ்தலர்களிடம் அவர்களின் மிக முக்கிய விருப்பம் எது எனக் கேட்க, அவர்களின் விருப்பப்படி, ஆழமே தெரியாத ஒரு பெரிய பாதாளத்தைக் காணுதல்; 4) பர்த்தலமேயுவால் சாத்தானிடம் கேட்கப்பட்ட கேள்விகள்; 5) தலையான பாவங்கள் பற்றிய தொகுப்பு.

பர்த்திமேயு (BARTIMAEUS – திமாயின் மகன், அல்லது தீட்டுப்பட்டவனின் மகன்)

இயேசுவால் குணப்படுத்தப்பட்ட ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் (மாற் 10:46-52). இவரது தந்தையின் பெயர் கிரேக்கப் பெயராய் இருப்பதால் பர்த்திமேயு ஒரு கிரேக்கர் என்று கூற அவசியமில்லை. மத்தேயு (மத் 20:29-34), லூக்கா (லூக் 18:35-43) ஆகியோரின் விவரிப்புகள் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிகழ்ச்சியின் சாராம்சம் ஒன்றுபட்டிருந்தாலும் வர்ணனையில் வேறுபாடுகள் தென்படுகின்றன.

மாற்கு விவரிப்பு, நேரில் கண்டவரின் நினைவுபோல் அமைந்துள்ளது. "தாவீதின் மகனே" என்ற அழைப்பு மெசியாத்தொனியைக் கொண்டிருக்கலாம். இந்நிகழ்ச்சியுரையில், பர்த்திமேயுவின் விடாமுயற்சி, விசுவாசம், நன்றிப்பெருக்கு மற்றும் இயேசுவின் ஒத்துணர்வான பதில் ஆகியவை கவனிக்கத்தக்கவையாகும்.

பர்பார் (PHARPAR – வேகமான)

சீரியாவின், பர்பார், தமஸ்கு நகரில் ஓடும் இரண்டு ஆறுகளில் ஒன்று. இது மற்றொன்றான அபானா என்னும் நதியுடன் சேர்த்துக் குறிப்பிடப்படுகிறது (2 அர 5:12). பர்பார், பரதா ஆற்றின் கிளை ஆறான இக்கால நகர்-ஏல்-அவாசு எனக் கருதப்படுகிறது. இது தமஸ்குவுக்குத் தெற்கில் 13 கி.மீ. தொலைவில் ஓடுகிறது. 2 அர 5:12-இல் பர்பார் தமஸ்கு ஆறுகளில் ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேலே கூறப்படும் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

பர்மஸ்தா (PARMASHTA – மிக முதன்மையான, முக்கியமான)

ஆமானின் பத்துப் புதல்வர்களின் இவர் ஏழாவது புதல்வராவார் (எஸ்த 9:9). இவர் யூதர்களால் கொல்லப்பட்டார்.

பர்மனா (PARMENAS – தளராத)

எருசலேம் திருச்சபை அப்போஸ்தலர்களுக்கு உதவி புரியத் தேர்ந்தெடுத்த ஏழு தொண்டர்களில் இவரும் ஒருவர் (அ.ப. 6:5).

பர்வயிம் (PARVAIM – கீழ்த்திசை சேர்ந்த)

சாலமோன் எருசலேமில் கட்டிய ஆலயத்தை அழகுபடுத்த பர்வயிமினின்று கொண்டு வரப்பட்ட பொன் பயன்படுத்தப்பட்டது (2 நாள் 3:6). இராபிகளின் மூலங்களின்படி, இந்தப் பொன்னானது சிவப்பு நிறமுடையது. இந்தப்பொன்னால் செய்யப்பட்ட பாத்திரத்தினால், பெரிய குரு பாவப்பரிகார நாளன்று பீடத்தில் எரித்த காணிக்கைகளின் சாம்பலை நீக்குவார். அரேபியாவில் பொன் அதிகமாகக் கிடைத்ததால் இந்தப் பர்வயிம் எனும் இடம் அரேபியாவில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இது தற்போது ஏமானில் இருக்கும் சாக்-ஏல்-பர்வெயின் என்ற இடமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பர்னக்கு (PARNACH – வேகமான)

பர்னக்கு செபுலோன் கோத்திரத்தின் தலைவனாகிய எலிட்சாபானின் தந்தை ஆவார். இந்த எலிட்சாபான் மேற்கு யோர்தானில் கானான் நாட்டை இஸ்ராயேல் மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க நியமிக்கப் பட்டவர்களில் ஒருவராவார் (எண் 34:25).

பர்னபா (BARNABAS - ஆறுதலின் மகன், உற்சாகத்தின் மகன்)

சைப்பிரசுத் தீவினரான யோசேப்பு என்னும் லேவியரான இவருக்கு அப்போஸ்தலர் அளித்த பெயராகும் இது (அ.ப. 4:36). இளம் வயதிலேயே இவர் கிறிஸ்தவரானார். அதற்குப்பின் அவரின் முதல் செயல், தனக்கிருந்த ஒரு நிலத்தை விற்றுத் தொகையைக் கொண்டுவந்து, ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கும்படி அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைத்ததாகும் (4:37). பவுல் மனந்திரும்பியபின் பர்னபாதான் அவரை எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களிடம் அழைத்துச்சென்று அறிமுகம் செய்து வைத்தார் (9:27). சீரியா அந்தியோக்கியாவில் புதிதாக நிறுவப்பட்ட திருச்சபைக்குப் பர்னபாவைத்தான் எருசலேம் திருச்சபை அனுப்பி வைத்தது (11:22). அங்கு அவர் தம் பணியில் அடைந்த வெற்றி, அப்பணியில் பங்குபெறப் பவுலை அழைத்துவரத் தூண்டியது. இருவரும் சேர்ந்து அங்கு ஓராண்டு தங்கிப் போதித்தனர் (11:25-26). சில காலத்திற்குப்பின், எருசலேம் ஏழைகளுக்காக அந்தியோக்கியாவில் சேகரித்த பொருளுதவியை இருவரும் எருசலேமுக்குக் கொண்டு சென்றனர் (11:29-30).

அ.ப. 13:2-3-இன்படி, இறை ஆவியானவர், "பவுலையும் பர்னபாவையும் நான் தெரிந்தெடுத்த வேலைக்காக எனக்கென ஒதுக்கி வையுங்கள்" என்று கோர, அந்தியோக்கியத் திருச்சபை நோன்பிருந்து செபம் செய்து, அவ்விருவர் மீது கைகளை விரித்து அவர்களை அனுப்பி வைத்தது. சைப்பிரசில் பணிசெய்தபோது, சிறிய ஆசியாவில் செய்த பணியின் தொடக்கத்தில் பர்னபா முதன்மைப் பேச்சாளராக விளங்கினார். ஆனால் பிற்பகுதியில் பவுல் தலைமை ஏற்கிறார். லிஸ்திராவில் பவுல் பேச்சாளராக இருந்ததால், எர்மா என்றும், பர்னபா செயுசு என்றும் அழைக்கப்படுகின்றனர் (14:12). முதல் மறைபரப்புப் பயணத்திற்குப்பின் இருவரும் எருசலேமில் நடந்த அப்போஸ்தலிக்கச் சங்கத்திற்குப் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டனர் (15:2). பின்பு, சங்கத்தின் முடிவுகளைச் சிறிய ஆசியாத் திருச்சபைகளுக்கு எடுத்துக்கூற இருவரும் பணிக்கப் பெறுகின்றனர் (15:22 தொ).

தனது இரண்டாம் மறைபரப்புப் பயணத்தில் பங்குபெற பர்னபாவைப் பவுல் அழைத்தபோது, மாற்கைக் கூட்டிச் செல்வதா இல்லையா என்பது பற்றி இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஆகவே பிரிந்து தத்தம் போக்கில் சென்றனர். பர்னபா மாற்கைக் கூட்டிக் கொண்டு சைப்பிரசில் பணிசெய்யச் சென்றார் (15:36-39). ஆனால் பவுல், பர்னபாவுக்கிடையே நிகழ்ந்த இந்தப்பிரிவு ஆழமானதோ, நிலையானதோ அன்று. ஏனெனில் தனது முந்தை உடனுழைப்பாராகிய பர்னபாவைப் பாராட்டியே பேசுகிறார் பவுல் (1 கொரி 9:6; காண்க. கலா 2:1.9.13). மாற்கையும் பற்றிப் பாராட்டிப் பேசுகிறார் (2 திமொ 4:11).

பிற்காலத் திருச்சபையின் சான்று, பர்னபாவை ஓர் எழுத்தாளராகக் காட்டுகிறது. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியராகப் பர்னபாவைக் குறிப்பிடுகிறார் தெல்துல்லியன். அலக்சாந்திரிய கிளமெந்தும், ஓரிசனும் பர்னபா ஒரு திருமுகத்தை எழுதியதாகவும், திருமுறையைச் சேர்ந்ததாகவும் கருதுகின்றனர். ஏனெனில், இருவரும் பர்னபாவை ஓர் அப்போஸ்தலராகக் கருதினர். ஆனால், எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் மற்றும் பர்னபாவின் திருமுகம் ஆகியவற்றின் தன்மையைக் கலாத்தியர் திருமுகத்தில் விவரிக்கப்படும் பர்னபாவின் பழைமை வாதத்தன்மையோடும், அப்போஸ்தலர் பணி நூலில் பர்னபாவை எருசலேமைச் சார்ந்தவராகக் காட்டுவதோடும் ஒத்துப்போகச் செய்வது கடினம். மேலும், பர்னபா எழுதிய திருமுகத்தின் உள்ளார்ந்த சான்று இந்நூல் கி.பி. 130-இல் எழுதப்பட்டிருக்கலாம் என்று சுட்டுகிறது. இது பர்னபாவின் காலத்திற்கு மிகவும் பிந்தியதாகும்.

பர்னபா எழுதிய திருமுகம் (BARNBAS, EPISTLE OF)

இது புதிய ஏற்பாட்டு இறுதிக்காலக்கட்டத்தில்

கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும். இஃது அப்போஸ்தலத் தந்தையரின் நூல்வகையைச் சார்ந்தது. இந்நூலின் மையக்கருத்து பழைய ஏற்பாட்டு வெளிப்பாடு யூதருக்கா? கிறிஸ்தவருக்கா? என்பதே. மேலும் இந்நூலில் இருளின் வழியும், ஒளியின் வழியும் என்னும் முறையில், அறநெறிக்கொள்கைகளையும், படிப்பினைகளையும் கூறுகின்றது.

1. **அமைப்பும் பொதுப்பண்பும்:** பழைய காலத்துத் திருமுகங்களுக்கான முறைகள் எதுவும் இந்தக் கடிதத்தில் அதிகமாகக் காணப்படவில்லை என்றாலும், இஃது ஒரு திருமுகமாகவே கருதப்படுகிறது (1:5; 4:9; 17:2; 21:9). எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தோடு இஃது ஒப்பிடத் தகுதி பெற்றது. இது 'திருச்சபையின் போதனை' வகைசார்ந்த திருமுகம் என தெரியவருகிறது. எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தைப் போல, இந்நூல் ஒரே பொருளை, மையக்கருத்தாகக் கொண்டு, அதை விளக்கியுள்ளது. யூத மதம், கடவுளின் வழியையும், எண்ணத்தையும் ஏமாற்றுகின்றது என்றும், பழைய ஏற்பாடு தொடக்கத்திலிருந்தே கிறிஸ்தவர்களுக்காவே எழுதப்பட்டது என்றும், அதில் குறிப்பிட்டுள்ள இறைவாக்குகள் அனைத்தும் கிறிஸ்தவர்களுக்கே தொடர்புடையது என்றும், தனது மையக்கருத்தில் (அத்தியாயம் 1:17) குறிப்பிட்டுள்ளார். இதை அவர் குறிப்பிட்டது, தனது கிறிஸ்தவர்கள் உடன்படிக்கையின் வரலாற்றுத் தோற்றத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விடாதபடி பார்த்துக் கொள்ளவே. அவர்கள் புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள். நூலின் திட்டம், பிற்காலத்தைச் சேர்ந்த திருமுழுக்கு ஞான உபதேசமாயும், தயாரிப்பாயும் அமைந்திருக்கிறது.

2. **பொருளடக்கம்**

I. திருமுழுக்கு அருட்கொடையின் சிறப்போடு கூடிய முன்னுரை. அதி. 1.

II. முக்கிய போதகப் பாகம், யூதர்களின் தவறும் கிறிஸ்தவர்களின் மேன்மையும் (அதி. 2:17).

1) பலி ஒப்புக்கொடுத்தல் (அதி. 2).

2) நோன்பு இருத்தல் (அதி. 3).

3) காலத்தின் உடனடியாக வரவிருக்கும் முடிவும், விசுவாசிகளிடம் அதன் கோரிக்கைகளும் (4:1-6.10-14).

4) உடன்படிக்கையின் வாரிசுரிமை (4:7-9; அதி. 13:14).

5) இயேசுவின் மீட்புப்பணி. அவர் மனிதன் ஆதல், துன்பம், இறப்பு ஆகியவை பழைய ஏற்பாட்டு அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன (அதி. 5-8; 11-12).

6) விருத்தசேதனம் (அதி. 9).

7) உணவு பற்றிய தடைகள் (அதி. 10).

8) ஓய்வு நாள் (அதி. 15).

9) ஆலயம் (அதி. 16).

10) முடிவுரை (அதி. 17).

III. நடைமுறை அறநெறியின் போதனைகள் (அதி. 18-20).

1) இருவழிகளின் கோட்பாடு (அதி. 18).

2) ஒளியின் வழி (அதி. 19).

3) இருளின் வழி (அதி. 20).

IV. திருமுகத்தின் முடிவுரை (அதி. 21).

ஆசிரியர், தனிப்பட்ட தலைப்புகளை ஒழுங்காக அமைக்காததால், மொத்தத்தில் இந்நூலில், தொடர்ச்சியின்மையும், ஒழுங்கற்ற வடிவமைப்பும் காணப்படுகின்றன. மரபு மரபாக, வாய்வழியாகச் சொல்லப்பட்டதைத் தன்னுடைய நூலுக்கு மையப்பொருளாகக் கொண்டுள்ளார்.

3. **மூலங்கள்:** முதற்பகுதி பழைய ஏற்பாட்டை அதிகமாக இது தழுவியுள்ளது. கிறிஸ்தவ இயல் கருத்துக்களைச் சொல்ல இந்தப் பகுதியையே அவர் பயன்படுத்தியிருக்கிறார். பழைய

ஏற்பாட்டைத் தவிர, இவர் நற்செய்தி நூல்களை அதிகமாகப் பயன்படுத்தவில்லை. அதிகமாக, மரபு மரபாக, வாய் மொழியாகச் சொல்லப்பட்டு வந்ததையே இவர் எழுதியதாகக் கூறப்படுகிறது. இருவழிகளின் கோட்பாடு (அதி 18-20) திருச்சபையின் போதனை நூல் திதாக்கேயிலும் காணப்படுகிறது. என்றாலும், இது திதாக்கேயைத் தழுவியது என்று கூறமுடியாத அளவுக்குப் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே இவை இரண்டும், வேறு ஒரு பொது மூலத்தைத் தழுவி அமைந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

4. **இறையியல்:** பர்னபாவின் திருமுகம், பவுலின் இறையியல் கொள்கையை அதிகமாகச் சார்ந்துள்ளது. பவுல் கூறும், விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகியவை பற்றி பர்னபா 1:4.6-இல் குறிப்பிட்டுள்ளார். விசுவாசத்தால் ஆபிரகாமை ஏற்புடையவராக்குவதன் பொருள், புறவினத்தார் மனந்திரும்புதலுக்கும் சாற்றிக் கூறப்படுகிறது (13:7). கிறிஸ்துவின் முன்தோற்றத்தைப் பற்றிய இறையியல் முழுவதும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர் எதிர்-யூதத்துவம், ஞானம் போன்ற சொற்களைப் பயன்படுத்துவது, ஞானவாதக் கோட்பாடுகளைக் குறிக்க அல்ல; மாறாக, பழைய ஏற்பாடு பற்றிய உருவக விளக்கத்தால், கிறிஸ்தவத்தின் ஆழ்ந்த உட்கருத்தை வெளிக்கொணரவே.

5. **காலமும் ஆசிரியரும்:** எசாயா இறைவாக்கினர், எருசலேம் ஆலயம் எதிரிகளால் தகர்க்கப்படுவது மற்றும் அது மீண்டும் கட்டப்படுவது பற்றிக் கூறிய இறைவாக்கு 16:3-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் அதிரியான் காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. திருமுகத்தின் உள் அமைப்பு புதிய ஏற்பாட்டு நூல்களைத் தழுவி அமையாமை, ஆயரின் பணி பற்றிக் குறிப்பிடாமை, ஆகியவற்றை மனதில் கொண்டு இது கி.பி. 130-இல் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆனால் திருமுகம் இதற்கு முந்தைய காலத்தைச் சுட்டலாம். என்ன இருந்தாலும், அப்போஸ்தலர் பர்னபா எழுதியிருக்கவே முடியாது. பர்னபா எழுதிய திருமுகத்திலே, ஆசிரியர் பெயர் குறிப்பிடவில்லை. ஆசிரியர் பெருந்தன்மையுடன் அவரைப் போதகர் என்றே குறிப்பிடுகிறார் (1:8; 4:6,9; 9:9; 21:1). இந்தத் திருமுகத்தின் குறிப்புக்களைக் கொண்டு, இவர் தொடக்க கிறிஸ்தவ நிறுவனத்தில் பிரதிநிதியாக இருந்திருப்பார் என்றும், அவர் திருமுழுக்குக் கொடுத்த மக்களுக்குத் தமக்குத் தெரிந்த, வாய்மொழியாகப் பெறப்பட்ட திருமுழுக்குப் போதனையைத் திருமுகமாக எழுதியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

பர்னபாவின் பணிநூல் (BARNBAS, ACTS OF)

இது பவுலோடு பர்னபா செய்த பயணம், மாற்கின் காரணமாக எழுந்த தகராறு, அதனால் வந்த பிரிவு, தனித்து செய்த பயணங்கள், சைப்பிரசில் அவரது மறைசாட்சி மரணம் ஆகியவற்றை விளக்க, அப்போஸ்தலர் பணிநூலைப் பெரிதும் தழுவி எழுதப்பட்ட பிற்காலத்தைச் சேர்ந்த குறுகிய போலி நூலாகும். இந்த நூலானது மாற்கால் எழுதப்பட்டதாகவும், மாற்கு கண்ட காட்சியே அவரைப் பவுலோடும், பர்னபாவோடும் கொண்டு சேர்த்ததாகவும், பர்னபாவின் இறப்புக்குப் பிறகு மாற்கு அலக்சாந்திரியாவுக்குப் போனதாகவும் குறிப்பிட்டுள்ளது. கிரேக்கத்தில் எழுதப்பட்ட இந்நூல் 5-ஆம் நூற்றாண்டுக்குப்பின் சைப்பிரசில் எழுதப்பட்டிருக்கலாம். இது சாதாரண, அப்போஸ்தலர் பணி நூலோடு, சில புதுமைக்கதைகளையும், சேர்த்துக் கற்பனையோடு எழுதப்பட்ட நூலாகத்தான் இருக்கமுடியும்.

பல இனப்பெருந்திரள் (MIXED MULTITUDE)

எபிரேய மக்கள், எகிப்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது, அவர்களுடன் கதம்பப் பண்புகளுடைய வேற்று இன மக்களும், மிருகங்களும் சேர்ந்து கொண்டனர்.

இத்தகையவர்களையே பல இனப்பெருந்திரள் என்று அழைக்கின்றனர் (யாத் 12:38). எபிரேயச்சொல், யூதாவுடன் இணையற்பெற்ற வெளிநாட்டு வழித்தோன்றல்களையும் (நெகே 13:3), எகிப்துடன் இணைந்த வேற்றின மக்கட் கூட்டத்தையும் (எரே 25:20), பாபிலோனுடன் இணைந்து வெளிநாட்டுப் படையினரையும் (எரே 50:37), பாலைவனத்தில் இணைந்த பல இன மக்களையும் (எரே 25:24) குறிப்பிடுகின்றது.

பலகை (TABLET, BLANK)

இது பல எபிரேய, கிரேக்கச் சொற்களின் மொழிபெயர்ப்பு. பொதுவாக, எழுது பலகையைக் குறித்தது. இது மரத்தாலோ (எசா 8:11; 30:8; எரே 17:1; அப 2:2; லூக் 1:63), கல்லாலோ (யாத் 24:12; 31:18), உலோகத்தாலோ (1 அர 7:36) செய்யப்பட்டிருக்கலாம்.

கப்பல் கட்டுவதற்கும் (எசே 27:5; அ.ப. 27:44), திருஉறைவிடத்தை அமைக்கவும், பலிபீடத்தை அமைக்கவும் (யாத் 26:15; 27:8), சாலமோன் கட்டிய ஆலயத்தில் கீழ்த்தளம், சுவர், மேல்மச்சு முதலியவற்றை மூடவும் (1 அர 6:15) பலவகையான மரப்பலகைகள் பயன்பட்டன.

பலமொழிகளில் பேசுதல், பரவசப்பேச்சு (TONGUES, GIFTS OF)

I. இக்கொடை ஆதித் திருச்சபையில் கருத்தைக் கவர்கின்ற ஒரு நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது. இது கிறிஸ்தவர்கள் பரவச நிலையில், ஆவியால் ஆட்கொள்ளப் பட்டுள்ளதாக நம்பி, தெளிவாக ஆனால் புரியாத மொழியில் பேசுவதாகும். பவுல் நிறுவிய சபைகளில் குறிப்பாகக் கொரிந்தில், இக்கொடை பரவலாக இருந்ததாகத் தெரிகிறது (1 கொரி 12:14). ஆனால் இக்கொடை, திருச்சபை வரலாற்றில் தோன்றி யூதேயாவுக்கும், சமாரியாவுக்கும் பரவிய போதே திருச்சபையில் இருந்தது (அ.ப. 2:1-42; 10:44-48; 11:15-17; 19:2-7).

இத்தகைய நிகழ்ச்சி கிறிஸ்தவ சமயத்திற்கு மட்டும் உரியதன்று. பழங்காலத்து மற்றச் சமயங்களிலும் காணப்பட்டது. இது நிகழும்போது, ஒருவர் வழிபடும் கடவுளின் ஆவி அவரை ஆட்கொண்டு, அவர் வழியாகப் பேசியது; அவரில் அசாதாரண உடல் அசைவுகளை உண்டாக்கியது என்று பொதுவாக நம்பப்பட்டது. இந்தப்பரவச் நிலையில் பேசும் உறுப்புகள் பாதிக்கப்பட்டன. மனித மனக்கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சக்தியால் இயக்கப்படுவதுபோல், வாய் அசைந்து பல கூற்றுகளை வெளிப்படுத்தும் இந்நிலை, பார்ப்பவருக்கு எந்த அளவுக்கும் புரியாததாயிருந்துபோல் கவர்வதாயும் இருந்தது. இத்தகைய பரவசப்பேச்சு தொடக்க கால எபிரேய இறைவாக்கினர்கள் அல்லது நபிகளிடையே பரவலாக இருந்தது. இவர்கள் குழுக்களாக நாடு முழுவதும் சுற்றித்திரிந்தனர். இசையாலும், நடனத்தாலும் தங்களையே ஓர் ஆவேச நிலைக்குக் கொண்டு வருவர் (1 சாமு 10:5-13; 19:18-24; 2 சாமு 6:13-17; 1 அர 20:35-37). இவர்களைக் குறித்த நபி என்ற சொல் இவர்களுடைய பரவச உளரல்களிலிருந்தும் 'இறைவாக்குரைத்தலிலிருந்தும்' வந்திருக்கலாம். இவர்களுடைய நடத்தை பல மொழி பேசுதலுக்கு ஒத்ததாக இருந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. கிரேக்கர்களிடையே தியோனிசி வழிபாடு மற்றும் பிற இரகசியச் சடங்குகளில் ஈடுபட்டோர், சடங்குகளினால் பரவசநிலையடைந்து ஆவேசம் கொண்டனர். அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் புரிந்து கொள்ளும் வடிவங்களில் பேசினர். காலந்தோறும் திருச்சபையின் பல பிரிவுகளில் இத்தகைய பரவசப்பேச்சு மீண்டும் மீண்டும் தோன்றியுள்ளது. இவற்றின் உளவியல் கூறு தெளிவாக உள்ளது.

II. பெந்தகோஸ்தே நாளில் பரவசப் பேச்சு: 1) கிறிஸ்தவ சமூகத்தில் இக்கொடை பெந்தகோஸ்தே நாளில் தோன்றியது. அப்போது, அப்போஸ்தலர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும், தியானத்தாலும் செபத்தாலும் (அ.ப. 1:24) உயிர்த்த இயேசுதான் கடவுளின் மெசியா என்றும் (2:36), மெசியாவின் காலம் தொடங்கி விட்டது என்றும் (2:29-33),

அவர்கள்தான் பழைய ஏற்பாட்டு இறைமக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் வாரிசான புதிய ஏற்பாட்டு மக்கள் என்றும் (2:16-17; 3:25) மன உறுதி கொண்டனர். இந்த உறுதியின் சக்தியால் ஆட்கொள்ளப்பட்டு, தடைகள் நீக்கப்பட்டு, புதிய ஆன்மீக ஆற்றல் பெற்று, அதை அசாதாரண முறையில் வெளிப்படுத்தினர். இந்தப் பெருஞ்சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியை லூக்கா "எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, ஆவியானவர் அருளியபடி அயல்மொழிகளில் பேசத்தொடங்கினர்" என்று விவரிக்கிறார் (2:4).

திருச்சபையின் இந்த முதல் அனுபவத்தில் (2:4-11), பரவசப்பேச்சு பேசியவர்களுக்குத் தெரியாத, உண்மையான மனித மொழிகளாகக் கேட்டது. ஆனால், இது பேச்சின் அருஞ்செயலைவிட, கேட்டலின் அருஞ்செயலாக இருக்கலாம் (2:6-8). மற்றப்படி பரவசப்பேச்சு சாதாரணமாக உண்மையான மனித மொழியாகக் கருதப் படுவதில்லை. மாறாக, அஃது இறைவனை நோக்கிப் பேசப்பட்டதாகவும் மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாததாகவும் கருதப்பட்டது (1 கொரி 14:2). பேச்சின் அருஞ்செயல் தன்மையால் மனிதர்களுக்கு, குறிப்பாக விசுவசியாதவர்களுக்கு அளிக்கப்பட்ட அடையாளமாக இருக்கலாம் (14:21-22). இக்கொடையைப் பவுல் "மண்ணோர் மொழிகள் மற்றும் விண்ணோர் மொழிகள்" (13:1) என்று குறிப்பிடுகிறார். "விண்ணோர் மொழிகள்" என்ற சொற்றொடர் பிற்கால வெளிப்பாட்டு இலக்கியங்களிலும் காணப்படுகிறது. "சொல்லொண்ணாப் பெருமூச்சு" (உரோ 8:26) என்ற நிலையையும் பவுல் சுட்டிக் காட்டலாம்.

III. மனந்திரும்பியவரிடையே பரவசப்பேச்சு: அ.ப. 2-ஐத் தவிர்த்து, இது போன்ற பரவசப்பேச்சு நிகழ்ச்சிகள் திருச்சபையில் தொடர்ந்தன. இவை யாவும் புதிதாக மனந்திரும்பியவர்களிடையே நிகழ்ந்தனவாகும். செசரியாவிலும், எபேசிலும் மனந்திரும்பியவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது பல மொழிகளில் பேசினர் (அ.ப. 10:45-46; 19:6). இந்த இரு நிகழ்ச்சிகளின் அனுபவம் பெந்தகோஸ்தே நாள் அனுபவத்திற்கு ஒத்ததென்று பேதுரு கூறிகிறார் (10:47). இந்த இரு நிகழ்ச்சிகளிலும் புறவினத்தாருக்கு நற்செய்தி அளிப்பது ஏற்புடையதே என்று திருச்சபையின் தலைவர்களுக்கு எடுத்துக்காட்ட பரவசப் பேச்சு அவசியமாய் இருந்தது (சமாரியர்களுக்கு அ.ப. 8; புறவினத்தாருக்கு அ.ப. 10:47). கொரிந்தில், மனந்திரும்பியவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுதலோடு பெற்ற பரவசப் பேச்சுக்கொடை, அவர்கள் பெற்ற அனுபவம், திருமுழுக்கு யோவானைப் பின்பற்றியபோது பெற்ற அனுபவத்தைக் கடந்து செல்கிறது என்று அவர்களுக்குக் காட்டியது (19:1-6). கிறிஸ்தவ மறைக்கு மனந்திரும்பிய மற்ற நிகழ்ச்சிகள் பரவசப்பேச்சு அனுபவத்தைச் சுட்டிக்காட்டாமல் எடுத்துக் கூறப்படுகின்றன (2:41-42; 4:4; 8:35-38; 9:3-18; 13:12-43; 16:14-15.31-33; 17:4-12). ஆனால் இவற்றில், பவுல் மனந்திரும்பிய நிகழ்ச்சியைத் தவிர்த்து, மற்றவையெல்லாம் மிகச் சுருக்கமாகவுள்ளன. ஆகவே, பரவசப்பேச்சு அனுபவம் கிறிஸ்துவ அனுபவத்திற்கு அவசியமானதா என்று தீர்மானிப்பது கடினமாகிறது. ஆனால், பரவசப்பேச்சு நிகழ்வது பரிசுத்த ஆவியின் பிரசன்னத்திற்கு உறுதியான சான்றாகக் கருதப்படுகிறது. மாற் 16:17-இல் புதிய மொழிகள் பேசுவது பற்றிய குறிப்பு கவனிக்கத் தக்கதாகும்.

IV. லூக்காவின் விவரிப்பு: அ.ப. 2-இல் உள்ள நிகழ்ச்சியுரை தெளிவாக உள்ளது. பெந்தகோஸ்தே நாளில் பேசப்பட்ட மொழிகள் அயல்மொழிகளாகும். ஆனால் திடுக்கிட்டுத் திகைத்துப்போன மக்கள் கூட்டம் புரிந்துகொண்டது. ஆனால் செசரியா மற்றும் எபேசு நிகழ்ச்சிகளில் பேசப்பட்ட மொழிகள் பற்றிய அருஞ் செயல் தன்மை குறிக்கப்படவில்லை. இருப்பினும் இந்த அனுபவங்கள் பெந்தகோஸ்தே நாள் அனுபவம் போன்றதே என்று பேதுரு கூறுகிறார் (அ.ப. 10:46; 19:6). மொழிசார்ந்த

அருஞ்செயல் உதவி அப்போஸ்தலர்களுக்குப் பிற்காலத்தில் கிடைத்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை. அதற்குத் தேவையும் இருக்கவில்லை. ஏனெனில் கிரேக்க, அரமேயிக்கு மொழிகள் திருச்சபையின் தேவைகளுக்குப் போதியதாக இருந்தன. மேலும், லூக்கா அப்போஸ்தலர் பணிநூலை எழுதி முடிக்கும் முன்பே பரவசப்பேச்சு நிகழ்ச்சி பவுல் நிறுவிய சபையில் பொதுவான ஒரு பண்பாக இருந்தது. ஆனால், அஃது அயல் மொழிகள் பேசும் ஆற்றல் எனக் கருதப்படவில்லை. பரவசப்பேச்சு புரிந்துகொள்ளக் கூடியதென்று, புரிந்து கொள்ளப்படவுமில்லை. சில சமயம் பைத்தியமாகக் கருதப்படக்கூடும் என்று பவுல் அறிவிக்கிறார் (1 கொரி 14:9.23). இவற்றிலிருந்து, அ.ப. 2:4-இல் வரும் லூக்காவின் விவரிப்புக்கும் பவுலின் விவரிப்புக்களுக்குமிடையே ஒத்துப் போகாத வேறுபாடுகள் உள்ளது தெளிவாகிறது. இருவரும் அதே பரவச நிகழ்ச்சிகளைப் பற்றித்தான் எழுதுகின்றனர் என்று கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்த விவரிப்பில் லூக்காவின் வேலை என்ன? ஒரு கருத்துப்படி சீடர்களின் பரவச நிலையையும் (2:13) மற்றும் இறைவாக்கு ஆவியையும் (2:15; 3:24-25) அழுத்திக்கூறும் பரவசப்பேச்சுப் பற்றிய மிகப்பழைய, அதிகம் நம்பத்தகுந்த பாரம்பரியத்தை எடுத்து, சட்டம் எல்லா மொழிகளிலும் அளிக்கப்படுவது பற்றிய இராபிகளின் பாரம்பரியத்துக்கேற்ப, நாடகபாணியில் மாற்றி அமைக்கிறார். அப்படிச் செய்யும் போது, கிறிஸ்துவத்தின் உலகளாவிய கருத்தைத் தனக்கே உரியவிதத்தில் அழுத்திக் கூறுகிறார்.

மற்றொரு கருத்துப்படி, பவுலின் ஆதிக்கத்தின்கீழ், திருச்சபைக்கு அப்போது, ஊறு விளைவித்துக் கொண்டிருந்த பரவசப் பேச்சின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் நோக்கோடு பல மொழி பேசும் மூல அனுபவத்திற்கு லூக்கா மறுவிளக்கம் அளிக்க முயன்றார்.

மற்றும் ஒரு கருத்துப்படி, லூக்கா பரவசப்பேச்சை நேர்ச்சொற்பொருட் படுத்துகிறார்; அல்லது ஒருவேளை பரவசப்பேச்சு புரியாத ஒன்றானாலும், சரியான சூழ்நிலையிலும், சரியான ஆட்களின் வழிவிளக்கம் பெறுவதாலும், புரிந்து கொள்ளக் கூடிய ஒரு மொழிவடிவமாகும் என்று லூக்கா கருதியிருக்கக்கூடும்.

V. பவுல் நிறுவிய சபைகளில் பரவசப்பேச்சு: பலமொழிகளில் பேசுவது கொரிந்திலும் மற்ற இடங்களிலும் நன்கு அறியப்பட்டதொன்றாகும். பவுல் இதனை விளக்க வில்லை; இதன் புரியாத, பரவசப் பண்பை மட்டும் அழுத்திக் கூறுகிறார். மக்களின் மொழியில் உள்ள வேறுபாடுகளாலும் அல்லது அவர்களின் ஆன்மீக நிலையின் வேறுபாடுகளாலும் (1 கொரி 12:10.28), "பலவகைப் பரவசப் பேச்சு" இருந்தது. சிலர் இதைக் கொண்டிருக்கவில்லை (12:30). மற்றவர்கள், வழிபாட்டின் நோக்கத்தைப் பாதுகாக்க விரும்பி இதைக்கட்டுப்படுத்த முயன்றனர் (1 கொரி 14:39; கொலோ 3:16; 1 தெச 5:19-20; எபே 5:18-20). பல விசுவாசிகள் (1 கொரி 12) பரவசப் பேச்சால் பெரிதும் கவரப்பட்டு, இதைப் பரிசுத்த ஆவியைக் கொண்டிருப்பதின் உறுதியான அடையாளமாகக் கருதினர்; இதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்; பெரிதும் விரும்பினர்.

கொரிந்தில் பரவசப்பேச்சுக்கு மிகைப்படுத்தப்பட்ட அழுத்தம் கொடுக்கப்பட்டதால், பவுல் இதை முறைப்படுத்த வேண்டியிருந்தது. இக்கொடையைப் பற்றிய உண்மையை அவர் ஏற்றுக்கொள்கிறார். அ) இஃது ஆவியின் உண்மையான கொடையாகும்; ஆகவே அதைத்தடை செய்யக்கூடாது. பவுலும் இக்கொடையைக் கொண்டிருந்தார் (1 கொரி 14:5. 18:39). ஆ) தனிப்பட்டோரின் பக்திக்கு இஃது ஓர் உதவியாகும். இறைவனோடு ஒன்றிப்புக் கொள்ள ஓர் ஏதுவாகும். சாதாரண முறையில் வெளிப்படுத்த முடியாத உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்த இஃது ஒரு வாய்ப்பாகும் (1 கொரி 14:4; உரோ 8:26-27). இ) அவிசுவாசிகளுக்கு

இஃது ஓர் அடையாளமாகும். இறையாற்றலின் பிரசன்னத்திற்கு ஒரு சான்றாகும் (1 கொரி 14:22). யோனாவின் அடையாளத்தைப்போன்று (12:39). இஃது, உண்மையானது ஆனாலும், கடின இதயமுடையவர்களாலும், அவிசுவாசிகளாலும் இன்னும் அடையாளம் கண்டு கொள்ளப்படவில்லை.

பவுல், பரவசப்பேச்சின் பயனைவிட அதனால் வரும் ஆபத்தைத் தெளிவாகக் கண்டார். ஆகவே, பொது வழிபாட்டில் இதற்கு முதன்மையோ, உற்சாகமோ கொடுக்கவில்லை (1 கொரி 14:19.28). அவருடைய பட்டியலிலும், மதிப்பீட்டிலும் இதுதான் கடைசியானது (12:10.30; 14:19). இதைக் கட்டுப்படுத்தும் முறையையும் சுட்டிக்காட்டுகிறார்.

அ) முறைப்படுத்தும் ஒழுங்கு: எல்லா ஆன்மீகக் கொடைகளும் அவை திருச்சபையை "அன்பில்" கட்டியெழுப்புவதற்குப் பயன்படும் விதத்தைக் கொண்டு தீர்ப்பிடப்பட வேண்டும் (1 கொரி 13; 14:4-5.17-19; கொலோ 3:14; எபே 4:16). மொழிகளில் பேசுவது மிகவும் தனிநபர்த்தன்மை கொண்டது; சுய-மையத்தன்மையையும் சுய முக்கியத்துவத்தையும் உற்சாகப்படுத்துகிறது. ஆகவே, கிறிஸ்தவத் தோழமையின் ஒற்றுமைக்குப் பாதிப்பு விளைவிக்கக்கூடிய (உரோ 12:3; 1 கொரி 13:5; பிலி 2:3-4).

ஆ) ஒழுங்கான வழிபாட்டைக் கடைப்பிடித்தல்: திருச்சபை கட்டியெழுப்பப்படுவதுதான் முதன்மையானது. விளக்கம் கூறும் திறனுடையவர்கள் இல்லையெனில், பரவசப் பேச்சு பேசுபவர் தன்னையே கட்டுப்படுத்த வேண்டும்; மௌனம் காக்க வேண்டும் (1 கொரி 14:27-28). வழிபாடு புரிந்து கொள்ளப்பட வில்லையென்றாலும் உண்மையைத் தேடுபவர்களை வெறுப்படையச் செய்தாலும், அது தன் நோக்கில் தவறி விட்டதாகும். ஒழுங்கும் தகுதியுடைமையும் முதல்தரமான முக்கியத்துவமுடையதாகும் (14:13-19.23.33.40).

இ) விளக்கம் கூறும் கொடையைப் பயன்படுத்துதல்: பரவசப்பேச்சை விளக்குவது சிலரது தனிச்சிறப்பான கொடையாகும் (12:10-30; 14:28). பரவசப்பேச்சு பேசுபவர் விளக்கம் கூறும் கொடையைக் கொண்டிராவிட்டால், அதற்காகச் செபிக்க வேண்டும். ஏனெனில், அவர் தனக்கும் திருச்சபைக்கும் பொறுப்புள்ளவர் ஆவார் (14:13-14).

பலவண்ணத்தளம் (MOSAIC BASEMENT)

மூல எபிரேயச்சொல் பாவு தளத்தைக் குறித்தாலும் எஸ்த 1:6-இல் சூழ்நிலை பல்வண்ண ஒட்டுத் தளத்தைச் சுட்டுகிறது.

பல வண்ணப்பறவை (SPECKLED BIRD OF PREY)

எரே 12:9-இல் வரும் பல வண்ணப்பறவையினைப் பற்றி முழு உண்மைப்பொருளும் இன்னும் தெளிவு படாத ஒன்றாகவே உள்ளது.

பல வண்ணங்களைக் கொண்டுள்ள பறவைகளையே இரைகொள்ளும் பறவையினத்தைச் சேர்ந்த ஒரு பறவையாக இருக்கலாம். எரே 12:9-இல் இஸ்ராயேல் பல வண்ணப் பறவைக்கு ஒப்பிடப்படுவதாகத் தெரிகிறது. அதன் அழகிய இறகுகள் அதன் எதிரிகளை ஈர்க்கிறது.

பலனுடைமை (FRUITFULNESS)

I. எல்லாப் பலனுடைமையையும், அளவு கடந்த விதத்தில் விஞ்சிய மட்டுமீறிய வளமான நிறைவுடைய இறைவன், ஆதாமைத் தம் உருவிலும், தம் ஒரே மகனில் உருவிலும் படைத்தார். இந்த ஒரே மகனில் மட்டுமே இறைவனது நித்திய பயனுடைமை நிறைவெய்துகிறது. இந்த மறையுண்மையை அடைய மனிதன், உயிரை வழங்கும்போது, காலப்போக்கில் தன் உருவையே வழங்குகிறான். இவ்வாறு தலைமுறை தலைமுறையாக நீடிக்கிறான்.

II. பலுனுடைமைக்கு அழைப்பு: காலத்தின் தொடக்கத்திலிருந்து, "பல்கிப் பெருகுங்கள்", "மண்ணுலகு படைப்புகளால் நிரம்பட்டும்" என்ற படைப்பவரின் அழைப்பு தொடர்ந்து எதிரொலிக்கிறது.

1. கட்டளையும் ஆசிரும்: கடவுள் அப்படிக் கட்டளையிடும்போது அதற்குப் பதில் அளிக்கவும் ஆற்றல் அளிக்கிறார். இக்கட்டளை தாவரங்களிலும், விலங்குகளிலும் தன் செயலாற்றலைக் காட்டிய பின், தங்களுடைய உருவிலேயே உயிர்களை உண்டாக்கும் ஆற்றலுடையவர்களாக ஆணையும் பெண்ணையும் செய்யும் ஆசிரும் இத்தகைய பொருளுடையதே. இனப்பெருக்க வளத்தினால், உயிருள்ளோர் எல்லோருக்கும் தாயாகிய ஏவாள், முதல் குழந்தை பெற்றபின் "ஆண்டவர் அருளால் ஆண் மகன் ஒருவனை நான் பெற்றுள்ளேன்" என்று (ஆதி 4:1) மகிழ்ச்சியில் திளைக்கிறாள். ஆதியாகமம் மனிதனின் தோற்றம் பற்றிய வரலாறு ஆகும். தலைமுறைகள் பட்டியல், சிறு கதைகள், விரும்பப்பட்ட பிறப்புகள், கடினமான பிறப்புகள், நடக்கமுடியாத பிறப்புகள், திருமணத்திட்டங்கள், பிள்ளைப் பேறுக்கு உண்மையான வழி ஆகியவை அடங்கிய, காலத்தொடக்கத்தில் இறைவன் இசைக்கும், ஒத்திசைவான இசையாக அமைகின்றன. இந்த வரலாற்றை இறைவன் தம் ஆசிரால் நிரப்புகிறார். வாக்களிக்கப்பட்ட நாட்டோடு இந்த ஆசிர் "விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப்போலவும் வழிமரபையும்" (22:17) அறிவிக்கிறது. நாடு கடத்தப்பட்டபின் தொலைவிலிருந்து தனது பிள்ளைகள் தன்னை நோக்கி வருவதைக் காணும் எருசலேமுக்கும் இவ்விதமே அமையும் (எசா 49:21; 54:1 தொ; 60:4.15; 62:4).

2. உயிரின் ஊற்றின் பாதுகாப்பு: இரு நிகழ்ச்சிகள், மற்றப் படிப்பினைகளை அளிப்பதுடன், வாழ்வின் ஊற்றுகளைச் சூழவேண்டிய மதிப்பை எடுத்துக்காட்டுகின்றன. தன் தந்தை போதைக்குள்ளாகி, ஆடை விலகி நிர்வாணமாகக் கிடப்பதை ஒருவர் பார்க்க அனுமதியில்லை. அப்படிச் செய்தல் சாபத்தைக் கொண்டுவரும் (ஆதி 9:20-27). குல மூதாதையரின் மனைவிகளின் கருப்பை ஆபத்துக்குள்ளாகும்போது இறைவனே தலையிடுகிறார். சாராவும், ரபேக்காவும் இஸ்ராயேலாகிய இறை மக்களாக இருக்க வேண்டியிருக்கும் போது பார்வோனோ (12:12-20), அபிமெலக்கோ (20.26:7-12) இறைவனது செயலோடு மனிதச்செயலைக் கலக்க எப்படித் துணியலாம்? தன் சுயநலத்தால், ஓனான் தன் விந்தைத் தரையில் சிந்தி, அஃது உயிர் உண்டாக்குவதைத் தடுத்தால், அவன் தன் உயிரை இழக்கிறான் (38:8தொ).

3) சட்டங்களும் பாடங்களும்: பிற்காலத்தில் சில தடைகளை எடுத்துக்கூறி, சட்டம் மனித இனப்பெருக்க வளத்தைப் பாதுகாக்கிறது; அவை, பெண்ணின் மாதவிலக்குக்காலம் (லேவி 20:18), இளம்பெண்கள் மற்றும் அவர்களுடன் காதலர்களுக்குப் பாதுகாப்பு (உப 22:23-29), சில செயல்களுக்குத் தடை (25:11தொ) முதலியவையாகும். இந்த ஒழுங்குகள் மோசே காலத்திற்கு முந்தியவையாகவும் இயல்பானதூண்டுதல் தடைகளாக இருந்தாலும் கூட, இவை ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் இனப்பெருக்க வளம் பற்றிய கருத்தால் இயக்கப்படுகின்றன. "நீ யாவேக்குப் பிரமாணிக்கமாய் இருந்தால் உன் கருவின் கனியும் ஆசி பெற்றிடும்"என்று சட்டம் கூறுகிறது (28:4).

இதற்குப்பின் சங்கீதங்கள் "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசு" என்று பல்லவியாக மீண்டும் மீண்டும் பாடுகின்றன (சங் 127:3; 128:3; பழ 17:6). இளம் மணப்பெண்ணுக்கு "எம் சகோதரியே! ஆயிரம் ஆயிரமாக நீ பெருகுவாய்" என்று ஆசி வழங்கப்படுகிறது (ஆதி 24:60; ரூத் 4:11 தொ).

III. வழி மரபைத்தேடி: இறை ஆசியாலும் மனிதனுடைய விருப்பத்தாலும் உந்தப்பட்டு ஒவ்வொரு மனிதனும் சாவுக்குப்பின் தன் பெயரை நிலைநிறுத்தக் கனவுகாண்கிறான்.

1. இயற்கையின் இந்த ஆழ்ந்த ஆசை ஒரு கதையில் எடுத்துக்கூறப்படுகிறது (ஆதி 10:30-38). இக்கதை இழிவானதாகத் தோன்றினாலும் பிற்கால ராபிகளின் பாரம்பரியத்தில் போற்றப்பட்டது. இக்கதை தனித்து வாழ்ந்த லோத்தின் புதல்வியர்களைப் பற்றியதாகும். குழந்தைகள் பெற்று வளம் பெறாமல் காய்ந்து போவதைவிட, தங்கள் தந்தை தான் செய்வது என்ன என்று அறியாத நிலையில், அவருடன் உறவு கொண்டு, அவர் மூலம் வழிமரபைக் காத்துக்கொண்டனர். இது சட்டத்தால் கண்டிக்கப்பட்ட, நெருங்கியவர்களுடன் பாலுறவு கொள்வது பற்றிய கதையாகும் (லேவி 8:6-18). இது மோவாபியர்களுக்கு எதிரான வசையுரையாக அமைக்கப்பட்டது. ஆனால் இஃது, ஏவாளின் புதல்வியர்களின் தந்திரத்தைப்பாராட்ட வழிவகுத்தது. ஏனெனில், அவர்கள் இதில் படைப்பவரின் விருப்பத்தை நிறைவேற்றினர்.

2. **லேவிரேட் சட்டம்:** கணவன் உடன் பிறந்தானோடு திருமணச்சட்டம் (உப 25:5-10). இது குழந்தையின்றி இறந்துபோகும் மனிதனுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது (ரூத் 4:5-10). குழந்தையற்ற விதவையின் கணவரின் சகோதரன் அளவில் குழந்தை உண்டாக்க வேண்டும். ரூத்து நூலின் பாடல், ஒருவன் இறந்து போனாலும், நாடு கடத்தப்பட்டாலும், அவன் உறுதிப்படுத்தும் இனப்பெருக்க வளத்தைப் போற்ற எழுதப்பட்டதாகும். தன் கணவனின் உடன்பிறந்தானான ஓனான் சுயநலமாக நடந்து கொண்டாலும், தன் மாமனாரான யூதா நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டாலும் (ஆதி 38:6-26; ரூத் 4:12; மத் 1:3), பிள்ளைப்பேறு பெறுவதற்காகத் தாமார் விலைமகளாகவும் நடிக்கத் தயங்கவில்லை.

3. மலட்டுத்தன்மைக்கு எதிராக, தத்து எடுப்பதற்கு யூதர்கள் ஓர் உபாயத்தைப் பயன்படுத்தினார். இது வேலைக்காரி தன் கணவனுக்குப் பெற்ற குழந்தையை உண்மையான மனைவி தன் குழந்தையாக ஏற்றுக்கொள்வதாகும் (ஆதி 16:2; 30:3;...). வழிமரபுப்பட்டியல்கள் தந்தையிலிருந்து மகனுக்குத் தலைமையைக் கூறுவதில் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. தந்தை வழியில் பிறப்பு மூலத்தின் அடிப்படையாக உடலுறவு சார்ந்த முறையில் உயிர்கொடுப்பது அமைந்திருந்தால், இது தான் இதன் ஒரே பொருள் அன்று. ஏனெனில், இரத்த உறவின்படி மட்டும் தான் இறை ஆசிகள் மரபுரிமை வழியாகக் கொடுக்கப்படுவதில்லை. ஆதியாகமம் மண்ணுலகில் மக்கள் பெருகினர் என்பதைக் கூறும்போது வழிமரபுப் பட்டியல்கள் ஒரு மனிதனை ஒரு குழுக்களின் அல்லது நாட்டின் தந்தையாக்குகின்றன. இதனைப் பயன்படுத்தி, நாடுகளின் தோற்றத்தில் உள்ள பிரச்சனை ஒரு குடும்பக் கால்வழி விரிவாக்கமட்டுமன்று; குடியேற்றம், திருமணம், உடன்படிக்கை மற்றும் வெற்றிகள் ஆகியவை பற்றியதுமாகும் என்று ஆசிரியர் கூற விரும்புகறார்.

இந்த இன வரிசை விரிவாக்கப்பட்டு ஒரு ஆன்மீகப் பொருளைப் பெறலாம் ஆபிரகாமின் வழிமரபில், மணந்திரும்பியவர்கள் சலுகை பெற்ற இனத்தோடு சேர்க்கப்படுவர்.

இவ்விதம் நோக்கினால், விவிலிய வரலாறு முதலாவதாக ஒரு வழிமரபுப் பட்டியலாகும். இக்கருத்தில் மனிதன் இருத்தல், முழுவதும் வருங்காலத்தை நோக்கி, வரவிருக்கும் ஒருவரை நோக்கி, இயக்கப்படுகிறது. படைப்பவரால் மனிதனில் வைக்கப்பட்டிருக்கும் தூண்டுதலின் பொருள் இதுவே. தொடர்ந்து வாழ்வது மட்டுமன்று, ஒரு மானிட மகனில் இறைவனின் நிறை உருவத்தை ஒருநாள் தியானிக்கவே.

IV. கிறிஸ்துவில் பலனுடைமை: இறைவனின் இந்த உருவம் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்து இந்தப்

பலனுடைமை ஆசையை அடக்குவதில்லை; மாறாக, அதை நிறைவு செய்கிறார்; அதற்கு நிறைபொருள் அளிக்கிறார்.

1. இயேசு கிறிஸ்துவும் மனித வழி மரபுகளும்:

பழைய ஏற்பாட்டின்படி மனிதனின் வரலாறு அவனது வழித்தோன்றல்களில் எய்தப்பெறுவதாகக் கருதப்பட்டது (ஆதி 5:1; 11:10; 25:19;...). வரலாறு முழுவதும் இந்த வாக்குறுதி நிறைவேறும் வருங்காலத்தை ஆவலோடு நோக்குகிறது. இயேசுவைப் பொருத்தமட்டும் அவருக்கு ஊன் சார்ந்த வழித்தோன்றல்கள் இல்லை. ஆனால், அவருக்கு முன்னோர்களும், ஓர் ஆன்மீக வழிமரபும் உண்டு.

அ) காலம் நிறைவுற்றபோது, கிறிஸ்து ஒரு புனித வரலாற்றின் முடிவில் வருகிறார் (ஆதி 4:4). ஏனோக்கு நூலில் வெளிப்பாட்டுக்கணிப்பின்படி, அவர் ஆபிரகாமின் அழைத்தலுக்குப்பின், ஏழாவது வாரத்தை, மெசியாவின் காலத்தைத் தொடங்கி வைக்கிறார். கிறிஸ்துவின் வழிமரபுப் பட்டியலை 3 × 14 தலைமுறைகளாக அமைப்பதில் (மத் 1:1-17), மத்தேயுவின் நோக்கம் ஒருவேளை இதுவாக இருக்கலாம். காலந்தோறும் எல்லாத் தலைமுறைகளும் காத்திருந்த இறுதி வாரிசாக இயேசு தம்மைக் காட்டுகிறார்.

ஆ) பழைய ஏற்பாட்டில் வரையப்பட்ட உலகளாவிய பொதுப்பண்பைக் கிறிஸ்து நிறைவேற்றுகிறார். வழிமரபுப் பட்டியலில் நான்கு பெண்களின் பெயர்கள் இடைபுகுகின்றன. இவை குல மூதாதையர்களின் மனைவியர்களின் பெயரல்ல. மாறாக, அன்னியர்களின் மனைவியர் பெயர்கள் அல்லது அசாதாரணச் சூழ்நிலையில் பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்களின் பெயர்கள்: தாமார் (ஆதி 38); இராகாபு (நீதி 2:1); ரூத்து (ரூத் 1:16; 2:12); பத்சேபா (2 சாமு 11:3). இஸ்ராயேலின் முன்னோர் பட்டியல், சில யூதரல்லாத, நேர்மையற்ற மண்ணைச் சேர்ந்தவர்களைக் கொண்டுள்ளது. இவர்கள் மனிதர்கள் மகிமை மற்றும் பாவமுடைமையின் காலத்தில் அதை உரிமையாகப் பெறுகின்றனர். இந்த ஊன் சார்ந்த பலனுடைமைக்கு வேறுபடும் முறையில், தூய ஆவியின் செயலால் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த கன்னி மரியாளின் முழுவதும் தூய்மையான இந்தத் தாய்மை அமைந்துள்ளது.

இ) கிறிஸ்துவே வரலாற்றின்முடிவு. ஏனெனில், அவரே புதிய ஆதாம். இவருடைய வழிமரபை மத்தேயு வரைகிறார் (மத் 1:1; ஆதி 5:1). வரவேண்டிய இவரில் வருங்காலம் ஏற்கெனவே வந்து விட்டது. இயேசு ஓர் ஆன்மீகத் தலைமுறையில் இறைவன் ஆசிகளின் பூவுலக மரபு வழியை நிறைவேற்றுகிறார். இஸ்ராயேல், மனிதனின் புதிய பிள்ளைகளால் பெருகுகிறது. கிறிஸ்துவின் உடல் இறைவனின் பிள்ளைகளின் ஆன்மீகப் பிறப்பால் பெருகுகிறது.

2. விசுவாச வாழ்க்கையும் கன்னித்தன்மையுடைய பலனுடைமையும்: இனப்பெருக்க வளம் பற்றிய கடமை பற்றிய ஆதியாகமக் கட்டளையை மீண்டும் கூறுவதற்கு வேளைவாய்ப்பு வந்துவிட்டதாகக் கருதவில்லை. "இனப்பெருக்கம் செய்யாதது மனித இரத்தத்தைச் சிந்துவதற்குச் சமம்" என்று அறிவித்த யூதப் பாரம்பரியத்திலிருந்து முறித்துச் செல்கிறார். இதற்கு மாறாக, விரும்பி அண்ணகராக இருப்பதை உற்சாகப்படுத்தவும் செய்கிறார் (மத் 19:12). இன்னும் அதிகமாக, இனப்பெருக்க வளத்தின் பொருளை வெளிப்படுத்துகிறார்.

முதலாவதாக இதை மரியாளின்பால் செய்கிறார். தாய்மைக்கு அவள் பெற்ற அழைப்பின் அழகை அவர் மறுக்க வில்லை. இத்தகைய நற்பேற்றைப் போற்றிய ஒரு பெண்ணுக்கு, அதன் ஆழ்ந்த பொருளை வெளிப்படுத்துகிறார்; "இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்". மரியாள் விசுவசித்ததால் பேறு பெற்றவள். அவளது கன்னித் தாய்மையினால், இறைவனை மட்டும் சார்ந்திருப்பவர் அனைவருக்கும் அவள் ஒரு மாதிரி ஆவாள்.

எப்பொருள் விசுவாசம் ஆன்மீக இனப்பெருக்க வளமாக உள்ளது என்பதையும் விளக்குகிறார் இயேசு. ஊன் சார்ந்த தன் பெற்றோருக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை என்று கூறுகிறார். "என் தாய் யார்? என் சகோதரர் யார்?" என்று கேட்டு, "விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரர் சகோதரி, தாய்" என்று கூறுகிறார். தன் மகனை ஈன்றெடுத்தலில் இறைவன் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்; செய்துவிட்டார். இறைவனோடு ஒன்றிக்கும் விசுவாசி, மகனை ஈன்றெடுத்தலில் பங்குகொள்கிறான். ஆன்மீக இனப்பெருக்க வளம், விசுவாசத்தின் கன்னிமையை முன்கொள்கிறது.

3. **திருச்சபையின் பலனுடைமை:** தங்களுடைய பலனுடைமையில், விசுவாசிகள் முழுத்திருச்சபையின் பலனுடைமையில் பங்குபெறுவது மட்டுமே செய்கின்றனர். அவர்கள் வேலை, ஒரு குழந்தைக்குப் பிறப்பளிக்கும் பெண்ணின், ஆண் குழந்தையினுடைய தாயின் (அ.ப.12) வேலைக்கு ஒத்ததாகும். பவுல் தனது சொற்களாலும் வாழ்வாலும் சிறப்பான முறையில் காட்டியது போன்று, இதுதான் அப்போஸ்தலனின் முதன்மையான அலுவல்.தாயைப்போல, வேதனையில் புதிதாகப் பிறப்பளிக்கிறார் (கலா 4:19). அவரது குழந்தைகளைப் பேணி வளர்த்து அவர்களிடம் அன்பாய் நடந்துகொண்டார் (1 தெச 2:7; 1 கொரி 3:2). அவர்களின் ஒரே தந்தையாக, அவர்களைக் கிறிஸ்து இயேசுவுக்குள் ஈன்றெடுத்தார் (1 கொரி 4:15); வற்புறுத்தி அறிவுறுத்துகிறார் (1 தெச 2:11-12). இந்த உருவங்கள் வெறும் உருவகங்கள் அல்ல; திருச்சபையில் அப்போஸ்தலத்துவத்தின் உண்மையான அனுபவத்தை எடுத்துக் காட்டுகின்றன.

ஒவ்வொரு விசுவாசியும் உண்மையான திராட்சைக்கொடியின் உண்மையான கிளைகளாக (யோவா 15:2.8), திருச்சபையில் பலன் கொண்டு வர வேண்டும். இச்செயல்களில் வழியாகத்தான், விண்ணில் இருப்பவரும் (மத் 5:16), எல்லாப் பலனுடைமைக்கும் ஊற்றாக இருப்பவரும் ஆன தந்தையை விசுவாசிகள் மகிமைப்படுத்துகின்றனர்.

பலாதான் (BALADAN)

இவர் பாபிலோனியாவை ஆண்ட அரசர்களுள் ஒருவர். இவர் மெரொதாக்கு - பலாதானின் தந்தை. யூதாவின் அரசர் எசேக்கியாவுக்குச் சம காலத்தவர் (2 அர 20:12; எசா 39:1).

பலி (SACRIFICE)

1. விவிலியத்தினுடைய பரவலான கணிப்பானது பலியினுடைய முக்கியத்துவத்தையும், உலகளாவிய தன்மையையும் நமக்கு அறிவிக்கிறது. பலியானது பண்டைய மனித இனம் (ஆதி 8:20), மூதாதையரின் செயல்கள் (15:9...), மோசேயின் காலம் (யாத் 5:3), நீதிபதிகள் மற்றும் அரசர்களுடைய காலம் (நீதி 20:26; 1 அர 8:64) மற்றும் நாடு கடத்தப்பட்டதற்குப் பிந்தையகாலம் (எஸ் 3:1-6) முதலிய வரலாற்றின் அனைத்து நிலைகளிலும் தனது முத்திரையை இட்டுச்செல்கிறது. தனி நபர் மற்றும் சமுதாயத்தினுடைய வாழ்விற்கு அஃது ஓர் இலயத்தை அளிக்கிறது. மரபானது பலியுணவைக் காண்கின்ற மெல்கிசெதேக்கின் மறைபொருளான நிகழ்ச்சியும் (ஆதி 14:18). இத்திரோவினுடைய வழிபாட்டுச் சடங்குச் செயலும் (யாத் 18:12), பரப்பை மேலும் அதிகமாக விரிவுபடுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு வெளியே (யோனா 1:16), பலியானது, தனிநபர் மற்றும் ஒன்றுபட்ட குழுவின் பக்தியை வெளிப்படுத்துகிறது. எதிர்காலம் பற்றிய தங்களுடைய காட்சிகளில் இறைவாக்கினர்கள், புறவினத்தாருடைய காணிக்கைகளைப் பற்றி அறியாதவர்களாக இல்லை (எசா 56:7; 66:20; மலா 1:11). எனவே, பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் வரலாற்றினுடைய ஓவியத்தைத்

தீட்டும்போது, பலியைச் சமய வாழ்வின் இன்றியமையாத ஒரு பகுதியாகக் கருதினர். புதிய ஏற்பாடு இந்த உட்கருத்தைத் துல்லியமாக்கி, அசலான மற்றும் உறுதியான முறையில் இதனைத் திருநிலைப்படுத்தும்.

II. பழைய ஏற்பாடு

1. பலிச் சடங்குகளின் வளர்ச்சி:

அ. **மூல எளிமையினின்று:** விவிலிய வரலாற்றினால் நமக்கு வெளிப்படுத்தப்படும் தொடக்க காலத்தில் சடங்குகள், அடிப்படையான அடக்க அமைதி கொண்டிருந்தன; பீடங்களை அமைத்தல், இறையின் பெயரை வேண்டுதல், மண்ணின் விளைச்சல் அல்லது விலங்குகளை அளித்தல் (ஆதி 4:3; 12:7-8) முதலிய நாடோடி அல்லது அரை நாடோடிகளுடைய பழக்கவழக்கங்களுக்கு ஒத்திருந்தன. குறிப்பிட்ட இடம் ஏதுமில்லை. இறைவன் தன்னை வெளிப்படுத்துமிடத்தில் அவர்கள் பலியிட்டனர். பண்டைய மண்ணாலான பலிபீடமும், நடமாடும் கூடாரமும் (யாத் 20:24; 23:15) அவைகளுக்கே உரிய முறையில், பண்டைய வழிபாட்டுத் தலங்களினுடைய அவ்வப்போது நிகழ்கிற, தற்போதைய பண்புகளுக்குச் சான்று பகர்கின்றன. குறிப்பிட்ட பணியாளர்களும் கிடையாது. குடும்பம் அல்லது கோத்திரத்தினுடைய தலைவனும் (முடியாட்சியின் கீழ்), அரசனும் பலிப்பொருட்களைச் சுட்டெரித்தனர். ஆனால் காலப்போக்கில், தனிப்பட்ட விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் இப்பணியினை ஏற்றனர் (உப 33:8-10; நீதி 17). யோசியாவின் கீழ் கோவில் மட்டுமே அனைத்துப் பலி காரியங்களுக்கும் மையமாக இருந்தது போல, லேவியரின் துணையுடனோ, துணை இன்றியோ குருக்கள் பலிகளின் தனியுரிமையைத் தங்களுக்கு ஒதுக்கிக்கொண்டனர்.

ஆ. **சடங்குகளின் கலப்பு நோக்கி:** வரலாற்றின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட வளப்பெருக்கினின்று இக்கலப்பு வெளிப்படுகிறது. உண்மையில் பலிகளில் பல்வகைப்பாடு, வேறுபாடு மற்றும் சிறப்புத் தன்மை என்ற பொருளில் ஒரு படிப்படியாக வளர்கிற மலர்ச்சி நிகழ்கிறது. பல்வேறுபட்ட காரணங்கள் இந்த வளர்ச்சியை விளக்குகின்றன. நாடோடி மற்றும் மேய்ப்பு நிலையிலிருந்து நிலையாகத் தங்குகின்ற வேளாண்மை வாழ்விற்கான மாற்றம், கானானிய ஆதிக்கம், குருத்துவத்தின் வளரும் முக்கியத்துவம் முதலியன இந்தக் காரணங்களாகும். தனது அயலாரிடமிருந்து பெற்ற பண்புகளை இஸ்ராயேலானது தன்னோடிணைத்துக் கொள்கிறது. இதில் அது வடிகட்டுகிறது, திருத்துகிறது, ஆன்மீகப்படுத்துகிறது. பொதுப்பாணிச் சமயத்தில் தவறுகளும் கெடு வழக்கங்களும் இருந்தாலும் (மீக் 6:7; நீதி 11:30-3; 1 அர 16:34), அது மனிதபலிகளை நிராகரிக்கிறது (உப 12:31; 18:10; 1 சாமு 15:33-பலியையன்று, சாபத்தைச் செயல்படுத்துவதை விவரிக்கிறது). மற்ற மக்களிடமிருந்தான கலாச்சார உறவினால் இஸ்ராயேல் வளம் அடைந்தது. இவ்வாறு, புறவினக் கருத்துக்களால் தவறாக வழங்கப்பட்ட செயல்முறைகளை உண்மையான இறைவனை நோக்கி மீண்டும் அமைப்பதன் மூலம் தனது இணைப்பாளர் பணியை, இஸ்ராயேல் நிறைவேற்றியது. அதனுடைய சடங்குகள் முழுமையானவையாகவும், சிக்கலானவையாகவும் ஆயின.

2. பலியின் பல்வேறு கூறுகள்:

அ. **வரலாற்றினால் அளிக்கப்பட்ட பல்வேறு வகைகளினின்று:**

விவிலியமானது தொடக்கத்தினின்று பல்வேறு வகைகள் சேர்ந்து இருந்ததற்குச் சான்று பகர்கிறது. மெசபொத்தாமியரால் அறியப்படாதாகவும், பின்னர் எகிப்திற்கு இறக்குமதி செய்யப்பட்டதுமான தகனப்பலி ஏற்கனவே ஆதிகால மரபுகளிலும் நீதிபதிகளின் காலத்தில் காணப்படுகிறது (ஆதி 8:20; நீதி 6:21; 11:31; 13:19). கொடையானது முழுமையானது மற்றும் திரும்பப்பெற முடியாதது என்று காட்டுவதற்கென, முழுப்பலிப்பொருளும் (மாடு,

செம்மறி, வெள்ளாட்டுக்குட்டி, பறவை) எரிக்கப்பட்டது. செமித்திய இனத்தவரிடையே பெரிதும் பரவியிருந்த மற்றொருவித பலியானது முக்கியமாக புனித விருந்தில் அடங்கியிருந்தது. "யாவேயின் முன்னிலையில்" விசுவாசிகள் உண்டு குடித்தனர் (உப 12:18; 14:26). ஒவ்வொரு புனித விருந்தும் ஒரு பலியினை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பதும் அவசியமில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டில் இந்த ஒன்றிப்பு விருந்துகள் உண்மையில் இதனைக் கொண்டிருந்தன. பலிப்பொருளின் (பெரிய அல்லது சிறிய விலங்கு) ஒரு பகுதியானது, வாழ்வின் தலைவராகிய இறைவனுக்கு உரிமையாக அளிக்கப்பட்டது (சிந்திய இரத்தம், எரிக்கப்பட்ட கொழுப்பு - "இறைவனின் சத்து," "ஆண்டவருடைய உணவு"). மாமிசமானது உண்பவருக்கு உணவாகப் பரிமாறப்படுகிறது. பரிகாரச்சடங்குகள் வெகுமுன்காலத்திலிருந்தே வழக்கில் இருந்தன (1 சாமு 3:14; 26:19; 2 சாமு 24:15...; ஓசே 4:8; மீக் 6:7). பாதுகாக்கப்பட்டு ஆன்மீகப்படுத்தப்பட்ட (லேவி 1:9;3:16) ஒரு பண்டைய வாய்பாட்டின்படி (ஆதி 8:21), இனிமையின் நறுமணத்தில் ஆண்டவர் காணிக்கைகளை ஏற்றுக்கொள்கிறார்.

ஆ. லேவியராகமத்தின் தொகுப்பு: தொழில் நுட்ப மொழியில் லேவியராகமமானது, இரத்தம் சிந்தி அல்லது இரத்தம் சிந்தாது இறைவனுக்கு அளிக்கப்பட்ட காணிக்கைகளைத் திட்டத்துடன் எடுத்துக் கூறுகிறது (லேவி 1-7; 22:17-30). அவை தகனப்பலி, உணவுக் காணிக்கைகள், ஒன்றிப்பின் பலிகள் (நன்றிகூறுதல், நேர்ச்சை, தன்னியலானவை), பாவப்பலி, பரிகாரப்பலி முதலியனவாகும். ஆனால், சடங்கு முறைகள் ஆவியை நெரித்து விடுவதில்லை. மிகச்சிறிய, நுட்பமான செய்கைகளுக்கும் புனிதப்பொருள் அளிக்கப்படுகிறது. நன்றிசெலுத்துதலும் பரிகாரம் புரிதலுக்கான ஆசையும் (லேவி 1:4; 2 அர 12:16; யோபு 1:5) தகனப்பலியைத் தூண்டுகின்றன. சில நேரங்களில் அச்சுறுத்தக்கூடியதாக உள்ள சொற்றொடரின் பின்னணியில் இறைவனுடைய புனிதத் தன்மையின் நயப்படுத்தப்பட்ட உணர்வு, பாவத்துடனான வெறி, மற்றும் தூய்மைக்கான தணியாத தேவை முதலியவற்றை ஒருவன் கண்டுணரலாம். இச்சடங்கில் பலி பற்றிய எண்ணமானது பரிகாரம் பற்றிய கருத்தின்மீது கவனங்கொள்கிறது. இரத்தம் இதில் பெரும் பங்கு வகித்தாலும், அதனுடைய செயல் திறனானது இறுதியாக இறை சித்தத்தினின்று பெறப்படுவதாகவும் (லேவி 17:11; எசா 43:25), வருத்தத்தின் உணர்வுகள் உள்ளடக்குவதாகவும் உள்ளது. சுத்தம் மற்றும் அசுத்தம் பற்றிய சட்டங்கள் தீமையினின்று விலகுவதற்கு ஆன்மாக்களைத் தயாரிப்பது போல, சடங்குத் தூய்மையின்மைகள் மற்றும் உணர்வற்ற நிலையில் செய்த தவறுகளின் பரிகாரமானது இதயத்தைத் தூய்மைப்படுத்துதலை நோக்கி விசுவாசிகளைச் செயல்முறையில் இட்டுச்செல்கிறது. புனித விருந்தானது தங்களுக்குள்ளும் இறைவனுடனும் உள்ள ஒன்றிப்பினுடைய சமூக இயல்பினை மகிழ்ச்சியிலும், ஆன்மீக நன்னிலையிலும் வெளிப்படுத்தி நிறைவேற்றுகிறது. ஏனெனில், அனைவரும் ஒரே பலிப்பொருளில் பங்கு பெறுகின்றனர்.

3. சடங்குகளினின்று ஆன்மீகப் பலிக்கு:

அ. ஆன்மீகப் பலியின் அறிகுறிகளாக சடங்குகள்:

விவிலியத்தின் இறைவன் பலிகளினின்று எந்த இலாபத்தையும் பெறுவதில்லை. யாவே மனிதனுடைய கடனாளியாகக் கருதப்படுவதில்லை, மாறாக, மனிதன் இறைவனைச் சார்ந்தவனாகக் கருதப்படுகிறான். சடங்குகள், ஆராதனை (தகனப்பலி), இறைவனுடனான நெருக்கத்தின் மீதான அக்கறை (விருந்து), பாவ அறிக்கையும் மன்னிப்பிற்கான ஆசையும் (பரிகாரச் சடங்குகள்) முதலிய உள்ளார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்த உதவுகின்றன. இறைத்தன்மையுடனான உடன்படிக்கையின் சடங்குகளில் பலியானது இடம் பெறுகிறது (ஆதி 8:20-22: 15:9-21; யாத் 24:4-

6). இஃது இன, குடும்ப, தனிப்பட்ட வாழ்வை, முக்கியமாக திருப்பயணங்கள் மற்றும் விழாக்களின் சமயத்தில், திருநிலைப்படுத்துகிறது (1 சாமு 1:3; 20:6; 2 அர 16:15). உரையாடல்கள் (யாத் 12:26; 13:8; 24:4-6), விசுவாச அறிக்கை (உப 26:5-11), பாவங்களை அறிக்கையிடுதல் (1 சாமு 7:6 லேவி 5:5) மற்றும் சங்கீதங்கள் (சங் 22:23-30; 27:6; 54:8) முதலியன உடல் சார்ந்த செயலின் ஆன்மீகப் பொருளை அடிக்கடி வெளிப்படையாக்குகின்றன. ஆதி 22-க்குப் பின்னர் (கோயில் பலிகளின் பட்டயம்), இறைவன், மனிதபலிகளை, நிராகரித்து, விலங்குகளைச் சுட்டெரிப்பதை ஏற்றுக்கொள்கிறார். ஆனால், அவர் விலைமதிப்பற்றதாகக் கருதுகின்ற (ஆபிரகாமின் மாதிரியைப் பின்பற்றி) விசுவாசத்தோடு பலியிடக்கூடிய உதயத்தால் அளிக்கப்படும்போது மட்டுமே அவர் இக்கொடைகளை ஏற்றுக்கொள்கிறார்.

ஆ. உள்ளார்ந்த சமயத்தின் முதன்மை: பொருளைப் புறக்கணித்துவிட்டு சடங்குகளைப் பற்றிக்கொள்ளும் சோதனை இன்னும் உள்ளது. எனவே, இறைவாக்கினரின் எச்சரிக்கைகளும் காணப்படுகின்றன. மனிதர்கள் சில நேரங்களில் தங்களுடைய கருத்துக்களைப் பற்றி ஏமாந்து போகக்கூடும். இறைவாக்கினர் பலியைக் கண்டனம் செய்வதில்லை; ஆனால், அதன் போலிகளைக் குறிப்பாக, கானானியச் செயல்முறைகளைக் கண்டிக்கின்றனர் (ஓசே 2:5; 4:13). சடங்குகளின் பல்வகைப்பாடு தன்னிலேயே இறைவனைப் போற்றுவதில்லை. முன்னர், இந்தப் பெருக்கம் இல்லாமலிருந்தது (ஆமோ 5:25; எசா 43:23-24; எரே7:22-24). இதயத்தின் சரியான மனநிலை இல்லாமல், பலியானது வீணான, போலியான சைகைக்குத் தாழ்த்தப்படுகிறது. நெறிகோணிய உணர்வுகளுடன் அஃது இறைவனைப் பிரியப்படுத்துவதில்லை (ஆமோ 4:4; எசா 1:11-16). தங்களுடைய பேச்சின் தனித்தன்மைக்கேற்ப இறைவாக்கினர்கள் ஆற்றலுடன் ஆன்மாவினுடைய முதன்மையை வலியுறுத்துகின்றனர் (ஆமோ 5:24; ஓசே 6:6; மீக் 6:8). இதில் அவர்கள் புதியதொன்றையும் செய்யவில்லை; பண்டைய (யாத் 19:5; 24:7-8) தொடர்ந்த மரபினை (1 சாமு 15:22; 1 நாள் 29:17; பழ 15:8; 21:3,27; சங் 40:7-9; 50:16-23; 69:31-32; சீரா 34:18-20) அவர்கள் நீட்டிக்கின்றனர். உள்ளார்ந்த பலியானது ஒரு மாற்று அன்று; ஆனால், இன்றியமையாதது (சங் 51:18-19). பெரும்பாலான நேரங்களில் சடங்கினுடைய இடத்தை இஃது எடுத்துக்கொள்கிறது (சீரா 35:1-10; தானி 3:38-40). கும்ரானில் மீண்டும் தோன்றுகின்ற இந்த ஆன்மீக அடியோட்டமானது மேற்போக்கான, சுயநலமிக்க அல்லது வாழ்வோடு ஒத்திராத பக்தியைக் கண்டனம் செய்கிறது. இறுதியாக, சடங்குகளைப் பற்றியே ஐயப்பாடு எழுப்புகிறது. இந்தப் பொருளில் பலியின் இயல்பைப் பொறுத்தவரை, புதிய ஏற்பாட்டின் வெளிப்பாட்டினை இறைவாக்கினர்கள் எதிர்நோக்குகின்றனர்.

இ. பழைய ஏற்பாட்டில் உள்ளார்ந்த சமயத்தின் உச்சநிலை: லேவியராகமத்தின் சட்ட ரீதியான தொகுப்போடு சேர்ந்து, விவிலியமானது மற்றொரு தொகுப்பையும் அளிக்கிறது. ஒரு நபரில் மனித அவதாரம் எடுப்பதின் காரணமாக இஃது உயிருள்ளது. எசா 53-இன்படி இறைவனுடைய ஊழியன் பரிகாரப்பலியாகத் தனது சாவை அளிப்பார். இறைவாக்குக் கூற்றுகள் லேவி 16-இல் காணப்படும் கருத்துக்களைக் குறிப்பிடத்தக்க அளவில் விஞ்சிய ஒரு வளர்ச்சியினைக் காட்டுகிறது. பரிகாரம் செய்யும் பெருநாளில் பலியாடானது மக்களுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டது. ஆனால், கைகளை விரிக்கின்ற சடங்கு செய்யப்பட்டாலும், பலிப்பொருளுடன் அவை அடையாளப்படுத்தப்படவில்லை. தண்டனையின் பகர ஆள் பற்றிய கோட்பாடானது அச்சடங்கில், காரியங்களைச் சமப்படுத்திவிடவில்லை. ஆனால் அதற்கு முரண்பட்ட நிலையில், ஊழியன் சுதந்தரமாகத் தன்னையே பாவிகளுக்கு மாற்றானாக ஆக்குகிறார். அவரது குறையற்ற

பலியுணவானது இறைவனுடைய வரைமுறைக்கேற்ப மக்கள் திரளுக்குப் பலனளிக்கிறது. இங்கு உள்ளார்ந்த தன்மையின் உச்சநிலையானது மிகப்பெரும் செயல்திறனுடன் மிக உயர்ந்ததாக இருக்கக்கூடிய கொடையுடன் இணைந்துள்ளது.

III. புதிய ஏற்பாடு: சடங்கின் மீதான ஆன்மாவின் முதன்மையினுடைய இறைவாக்குக் கருத்தை இயேசு ஏற்றுக்கொள்கிறார் (மத் 5:23 தொ: மாற் 12:33). அதனை நிறைவுபடுத்துவதன் மூலம், தன்னுடைய பலியின் பொருளைப் புரிந்துகொள்ள அவர் மனிதரைத் தயாரிக்கிறார். இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையில் ஒரு தொடர்ச்சியும், விஞ்சிய நிலையும் உள்ளன. பழைய ஏற்பாட்டு பலிச்சொற்றொடரைக் கிறிஸ்துவின் மரணத்திற்குச் சாற்றிக் கூறுவதில் தொடர்ச்சியானது வெளிப்படுத்தப்படுகிறது. இயேசுவினுடைய காணிக்கையின் முழுமையான தனித்தன்மையில் விஞ்சிய நிலையானது வெளிப்படுத்தப்படுகிறது. உண்மையில் இந்த விஞ்சிய நிலையானது உலகிற்குள் தன்மையாலேயே புதிய உண்மை ஒன்றை அறிமுகப்படுத்துகிறது.

1. இயேசு பலியில் தன்னையே அளிக்கிறார்: இறைவனின் ஊழியனுடைய பரிகாரப்பலியை வருணித்த அதே சொற்களைக்கொண்டு இயேசு தனது பாடுகளை அறிவிக்கிறார். அவர், "பணிவிடை புரிய" வந்தார், "தனது உயிரைத் தந்தார்," "பலரின்" நன்மைக்கென "பரிகாரப்பலியாக" இருக்கிறார் (மாற் 10:45இணை; லூக் 22:27; எசா 53:10-12). மேலும், பிரிவு விருந்தினுடைய பாஸ்கா அமைப்பானது (மத் 26:2; யோவா 11:55-57; 12:1...; 13:1), கிறிஸ்துவின் மரணத்திற்கும் பாஸ்காச் செம்மறியின் பலிக்குமிடையில் ஒரு திட்டமிட்ட, துல்லியமான உறவினை ஏற்படுத்துகிறது. இறுதியாக, "உடன்படிக்கையின் இரத்தம்" என்னும் மோசேயின் வாய்பாட்டை அவர் தன்னுடையதாக்கிக் கொள்ளும்போது (மாற் 14:24 இணை), இயேசு யாத் 24:8-ஐ வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார். யூத மக்களை விடுவிக்கிற இரத்தத்தினுடைய செம்மறி, பண்டைய உடன்படிக்கைக்கு முத்திரையிடுகின்ற சீனாய்ப் பலிப்பொருட்கள், ஊழியனுடைய பரிகார மரணம் ஆகிய மூன்றையும் சுட்டிக்காட்டல் இயேசுவின் மரணத்தினுடைய பலியின் தன்மையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. மனித குலத்திற்கு இது பாவமன்னிப்பைப் பெற்றுத் தருகிறது, நிரந்தர உடன்படிக்கையையும், புதிய மக்களின் பிறப்பையும் திருநிலைப்படுத்துகிறது. மீட்பைக் காப்பீடு செய்கிறது. கல்வாரிப் பலியில் இனப்பெருக்க வளத்தின் தன்மையினை இவ்விளைவுகள் நன்கு புலப்படுத்துகின்றன. சாவே வாழ்வின் ஊற்று. யோவா 17:19-இல் வரும் பொருள் பொதிந்த வாய்பாடு இக்கருத்தினை வற்புறுத்திக் கூறுகிறது. "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்". விருந்தின் அமைப்பில் சிலுவையின் தனித்துவமிக்க பலியை நினைவாக (லேவி 24:7) விளங்கச் செய்ய, குறிக்கப்பட்ட நற்கருணையானது கிறிஸ்தவரின் புதிய சடங்கினைப் பண்டைய ஒன்றிப்புப் பலிகளுடன் இணைக்கிறது. எனவே, இயேசுவின் காணிக்கையானது அதனுடைய இரத்தம் சிந்தும் வடிவிலும் அருட்சாதன வடிவிலும், பழைய ஏற்பாட்டினுடைய பலித்திட்டத்தைத் தொகுத்து, நிறைவுபடுத்துகிறது. அஃது ஒரே சமயத்தில் தகனப்பலியாகவும், இரத்தப் பலியாகவும், பரிகாரக் காணிக்கையாகவும், ஒன்றிப்பின் பலியாகவும் உள்ளது. இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையில் உள்ள தொடர்ச்சியை மறுக்க முடியாது. ஆனால் கிறிஸ்துவின் பலியானது, இறை மகனுடைய மதிப்பு மற்றும் அவரது காணிக்கையின் நிறைவு ஆகியவற்றின் காரணமாக அஃது ஒன்றே ஒன்று என்ற தனித்துவத்தினாலும், அதனுடைய உலகளாவிய செயல்திறனாலும், பழைய ஏற்பாட்டினுடைய பல்வேறுபட்ட பலிகளை விஞ்சுகிறது. பழைய சொல் தொகுப்பு ஆனால்,

புதிய உட்பொருள். உண்மையான நிகழ்ச்சி அதனை வெளிப்படுத்த உதவிபுரிகின்ற எண்ணத்தின் மூலக்கூறுகளின் எல்லைக்கு அப்பால் மேம்படுத்துகிறது.

2. இயேசுவின் பலியைத் திருச்சபை சிந்திக்கிறது:

அ. கல்வாரிப் பலியிலிருந்து நற்கருணை விருந்துக்கு: அப்போஸ்தலிக்க நூல்கள் வேறுபட்ட வடிவங்களில் இந்த அடிப்படைக் கருத்துக்களை விரிவுபடுத்துகின்றன. இயேசு "நமது பாஸ்காவாக" ஆகிறார் (1 கொரி 5:7; யோவா 19:36). பலியாக்கப்பட்ட செம்மறியானது (1 பேதுரு 1:19; திருவெளி 5:6) தனது இரத்தத்தில் புதிய உடன்படிக்கையைத் தொடங்குகிறது (1 கொரி 11:25); மந்தையை மீட்கிறது (அ.ப.20:28); பாவங்களுக்குப் பரிகாரமாகிறது (உரோ 3:24-25); இறைவனுக்கும் மனிதருக்கும் இடையில் ஒப்புரவை ஏற்படுத்துகிறது (2 கொரி 5:19:21; கொலோ 2:14). லேவியராகமத்தில் உள்ளது போன்று, இரத்தத்தின் பங்கு வலியுறுத்தப்படுகிறது (உரோ 5:9; கொலோ 1:20; எபே 1:7; 2:13; 1 பேதுரு 1:2. 18-19; 1 யோவா 1:7; 5:6-8; திருவெளி 1:5; 5:9). ஆனால், இங்குத் தந்தையின் தூண்டுதலால் மகனின் இரத்தம் சிந்தப்படுகிறது. எனவே, அப்போஸ்தலர்கள் ஈசாக்கினுடைய பலிக்கும் இயேசுவினுடைய பலிக்கும் இடையிலான உறவினை வெளிக்கொணர்கின்றனர். இந்த இணைவுத்தன்மை கல்வாரிப் பலியின் நிறைவை நன்கு புலப்படுத்துகிறது. "அன்பு மகனாகிய" கிறிஸ்து மரணத்திற்கும் தன்னைக் கையளிக்கிறார் (மாற் 12:6; 1:11; 9:7). மனிதர்பால் கொண்ட அன்பின் காரணமாக, தந்தை தனது மகனையே கையளித்தார் (உரோ 8:32; யோவா 3:16). இவ்வாறு, சிலுவையானது நறுமணம் வீசும் பலியின் நெருங்கிய உள்ளார்ந்த இயல்பை வெளிப்படுத்துகிறது (எபே 5:2). இப்பலியானது, அதனுடைய ஆன்மீக உட்பொருளில் அன்பின் செயலாகும். இப்போது முதல், பாவம் நிறைந்த மனுகுலத்தின் முடிவாகிய மரணமானது முழுவதும் மூல முன்னோக்கில் அமைக்கப்பட்டுள்ளது (உரோ 5).

ஆலயத்தில் ஓர் "அப்பமேசை" இருந்தது. கிறிஸ்தவ சமூகத்திலும் ஆண்டவருடைய மேசை (பந்தி) காணப்படுகிறது. பவுல் இஸ்ராயேலின் புனித விருந்துகளுடன் நற்கருணையை வெளிப்படையாகவே ஒப்பிடுகிறார் (1 கொரி 10:18). ஆனால் எவ்வளவு வேறுபாடு! கிறிஸ்தவர்கள் இனிப் புனிதமான அல்லது மிகப் புனிதமானவற்றில் பங்கு பெறுவது மட்டுமில்லை; முடிவில்லா வாழ்வின் ஊற்றாகிய (யோவா 6:53-58) கிறிஸ்துவின் உடலிலும், இரத்தத்திலும் அவர்கள் ஒன்றுபடுகின்றனர் (1 கொரி 10:16). இந்த பங்கேற்பானது ஒரே உடலில் விசுவாசிகளின் ஒன்றிப்பைக் குறிப்பிட்டு, உண்டாக்குகிறது (1 கொரி 10:17). இவ்வாறு, மலாக்கியாவினால் முன்னுரைக்கப்பட்ட மாதிரிப் பலியானது (1:11), எல்லா மனிதருக்கும் எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற மெய்ம்மையாகிறது.

ஆ) உருவங்களும், மெய்ம்மையும்: நற்செய்திகளும், அப்போஸ்தலிக்க நூல்களும் பழைய ஏற்பாட்டினுடைய சடங்கு சார்ந்த சொற்றொகுதிகளைப் பல்வேறு முறையில் சுட்டிக்காட்டும் விதம் பண்டைய வழிபாட்டு முறையின் ஆழமான பொருளை வெளிப்படுத்துகின்றது. இந்தப் பண்டைய வழிபாட்டுமுறை மீட்பின் பலிக்காகத் தயாரித்து, அதை முன் உருவகப்படுத்தியது. இரு திட்டங்களையும் திட்டமிட்ட விதத்தில் ஒப்பிடுவதன் மூலமாக, எபிரேயருக்கான திருமுகமானது இக்கோட்பாட்டை வெளிப்படையானதாக்குகிறது. மோசே சீனாய் மலையில் செய்தது போன்று, தலைமைக்குருவும் பலிப்பொருளுமாகிய இயேசு, இறைவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையில் ஓர் உடன்படிக்கையை நிறுவுகிறார். இனிமேல் இந்த உடன்படிக்கையானது நிறைவானதாகவும், நிரந்தரமானதாகவும் உள்ளது (எபி 8:6-13; 9:15-10:18). மேலும், பரிகார நாளில் தலைமைக்குரு என்ற அளவில் கிறிஸ்து ஒரு தூய்மைப்படுத்தும்

செயலை நிறைவேற்றுகிறார். ஆனால் இம்முறை, கோவில் பலிப்பொருட்களை விட அதிக செயல்திறன் மிக்கதாக உள்ள தன்னுடைய இரத்தத்தையே பொழிந்து அவர் பாவத்தை அழிக்கிறார். விசுவாசிகள் இனி ஊனுடலின் தூய்மையினை மட்டுமின்றி, மனச்சாட்சியின் தூய்மையையும் அடைகின்றனர் (9:12-14). தலைமைக்குருவின் ஆட்தன்மையும், பலியானது ஊிக்கப்படுகிற விண்ணகமாகிய புனித இடத்தின் சிறப்புத்தன்மையும் கிறிஸ்துவினுடைய பலியின் தனிமதிப்பிற்கும், முழுமையான மற்றும் உலகளாவிய செயல்திறனுக்கும் உறுதியளிக்கின்றன. மெய்ம்மையின் சாயல்களாக உள்ள மற்றெல்லாவற்றிற்கும் தலையான மாதிரியாக உள்ள இப்பலியானது மீண்டும் நிகழ்த்தப்பட வேண்டிய அவசியமில்லை (10:1-10). திருவெளிப்பாட்டின்படி, பலியாக்கப்பட்ட செம்மறியைச் சுற்றி விண்ணகத்தில் நிகழ்த்தப்படும் இந்த வழிபாட்டுச் சடங்கானது (திருவெளி 5:6...) எபிரேயருக்கான திருமுகத்தில் வரும் விவரிப்புடன் ஒத்துள்ளது.

இ. தலைவரின் பலியிலிருந்து உறுப்பினர்களுடைய ஆன்மீகப் பலிக்கு:

சடங்கினுடைய செயல்களை அன்றாட வாழ்விற்குள் விரிவுபடுத்துவதை இறைவாக்கினர்கள் வலியுறுத்தினர். இன்னும் மேலாக, சீராக்குநூல் நற்குணமுடைய நடத்தையினைப் பலிக்கு ஒப்பிடுகிறது (சீரா 35:1-3). கிறிஸ்தவனுக்கும் அப்போஸ்தலிக்க வாழ்விற்கும் அதே ஆன்மீக முறையில் சாற்றிக் கூறுவது புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது (உரோ 12:1; 15:16; பிலி 2:17; 4:18; எபி 13:15). தங்களை உயிரூட்டும் ஆவியால் தூண்டப்பட்ட விசுவாசிகள், தங்களுடைய ஆண்டவருடனான உயிருள்ள ஒன்றிப்பில், இயேசு கிறிஸ்துவின் மூலமாக இறைவனுக்குப் பிரியமான ஆன்மீகப் பலியை அளிக்கும் நோக்குடன், "புனித குருத்துவத்தை" அமைக்கின்றனர் (1 பேதுரு 2:5).

பல் (TOOTH)

விவிலியத்தில் இச்சொல் பல இடங்களில் வெவ்வேறு கருத்துகளில் பயன்படுத்தப்படுகின்றது. பழைய ஏற்பாட்டிலே கண்ணுக்கு இணையாக பல் போற்றப்படுகிறது (யாத் 21:24.27; லேவி 24:20; உப 19:21; மத் 5:38). பல்லின் அழகு உ.ச. 4:2; 6:6-இல் வருணிக்கப்படுகிறது. கொடிய மிருகங்களின் பற்கள் (உப 32:24; யோபு 41:14; தானி 7:5; திருவெளி 9:8) அழிக்கும் தன்மையை உணர்த்துகின்றன (யோபு 29:17; சங் 124:6; தானி 7:5; 9:7). எனவே, எதிரி அல்லது தீயவன் கடிக்கும் விலங்குக்கு ஒப்பிட்டுக் கூறப்படுகிறான் (சங் 35:16-17; 57:4; 58:6; பழ 30:14; 2:16; யோவே 1:6; அ.ப. 7:54). நீதிமான்கள், கொடியோரின் கோரைப்பற்களை உடைத்து, பற்களுக்கிடையில் அவர்கள் பிடித்திருந்த இரையை (பாதுகாப்பற்றவர்களை) விடுவிக்கிறார்கள் (யோபு 29:17). இது போலவே சங்கீத ஆசிரியர் இறைவனை நோக்கி, தீயோரின் பற்கள் உடையும் எனக்கூறுகிறார் (சங் 2:7; 57:6). அதே இறைவன், அவருடைய கோபத்தில் கொடிய விலங்காக உருவகப்படுத்தப்படுகிறார் (யோபு 16:9; புல 3:10-11). மற்ற உருவகங்களில் பற்கள் வலியையும் (பழ 25:19), வெறுப்பையும் (10:26) குறிக்கின்றன. மத் 8:12; 13:42; 22:13; 24:51; 25:30; லூக் 13:28-இல் காணப்படும் "பற்களைக் கடித்தல்" என்னும் சொற்றொடருக்கு இணையான அமைப்பைப் பிற இலக்கியங்களில் காணுவது அரிது. இச்சொற்றொடர் அரசுக்குப் புறம்பாக்கப்பட்டவர்களின் நம்பிக்கையற்ற கோபத்தையும் துக்கத்தையும் விவரிக்கிறது.

பல்தி (PALTI - என் மீட்பு)

1) இராபூ புதல்வனான பல்தி, பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இஸ்ராயேலர் கானான் நாட்டை ஊடுருவும்முன் அந்த நாட்டை உளவு பார்க்க மோசே அனுப்பிய பன்னிரண்டு ஒற்றர்களில் இவரும் ஒருவர் ஆவார் (எண் 13:9).

2. பென்யமின் கோத்திரத்தில் கல்லீம் ஊரைச் சார்ந்த இவர், இலாயிசின் மகனாவார். சவுல்

மன்னன் தம் புதல்வியும், தாவீது மன்னனின் மனைவியுமான மீக்காலைப் பல்திக்கு மணம் செய்து கொடுத்தார் (1 சாமு 25:44). நேரின் மகனான அப்னேர், இசுபொசேத்துடன் சண்டையிட்டு ஒன்றுபட்ட அரசு ஏற்படுத்த தாவீதுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பினார். அப்பொழுது தாவீது தன் மனைவி மீக்காலை உடனே அனுப்பச்சொன்னார். எனவே அப்னேர், அவள் கணவன் பல்தி பெருந்துயர் அடைந்தபோதும், அவளை அழைத்துத் தாவீதிடம் ஒப்படைத்தார் (2 சாமு 3:15-16). பல்தி பகூரீம் வரை அழுது கொண்டே மீக்காலைப் பின்தொடர்ந்து வந்தார்.

பல்தியர் (PALTITE)

தாவீது மன்னனின் ஆற்றல் வாய்ந்தவர்களுள் ஒருவரான எலேசுவை விவரிக்கும் பெயரடை (2 சாமு 23:26). இதன் பொருள் பெத்-பெலேத்தில் வாழ்பவர் என்பதாகும் (யோசு 15:27; நெகே 11:26). இதற்கு இணையாக உள்ள முதலாம் நாள் ஆகம அட்டவணை பெலோனியன் எனக்கூறுகிறது (1 நாள் 11:27; 27:10). இது பல்தியராகத் திருத்தப்பட வேண்டும்.

பல்தியேல் (PALTIEL – இறைவன் மீட்பராவார்)

1. இசக்கார் கோத்திரத்திலே தோன்றிய இவர் அசானுடைய புதல்வராவார் (எண் 34:26). எலயாசர், யோசுவா மேற்பார்வையில் மேற்கு யோர்தான் நிலத்தைப் பத்துக் கோத்திரங்களும் பங்கிட்டுக் கொள்வதைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டவர்களுள், பல்தியேலும் ஒருவராவார் (எண் 34:26).

பல்தியேலின் பொருள் மற்றும் வேறுபெயர்களும், கானானில் புது வாழ்க்கைக்காக இஸ்ராயேலரின் கடவுளைச் சார்ந்துள்ள நிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

2. இது பல்தி என்ற பெயரின் மற்றொரு வடிவம். பென்யமின் கோத்திரத்தில் கல்லீம் ஊரினரான இவர், இலாயிசின் மகனாவார். தாவீது மன்னனின் மனைவியை மணமுடித்த இவர், பின்னர் அப்போரினால் அவளைத் திருப்பிக்கொடுக்கக் கட்டாயப் படுத்தப்பட்டார் (2 சாமு 3:15).

பல்லக்கு (LILLER, PALANGUIN)

இச்சொல் பல எபிரேயச் சொற்களின் மொழிபெயர்ப்பாகும். இது திரைகள் தொங்கவிடப்பட்டு, மனிதர் தோள்களில் சுமந்து கொண்டு செல்லும் வகையில் செய்யப்படும், பெட்டக வடிவ வாகனம். இதனுள்ளே அரசனைப் போன்றோர் அமர்ந்து சென்றனர். பொதுவாக அடிமைகளே இவற்றைச் சுமந்து சென்றனர்.

இது மேற்கவிகை கொண்ட படுக்கை அல்லது பஞ்சணையாக இருக்கக்கூடும். சாமான்களை ஏற்றிச்செல்லும் கூண்டு வண்டிகளையும் குறிக்கலாம் (எசா 66:20; உ.ச. 3:7.9; எண் 7:3).

பல்லி (LIZARD)

இஃது ஊர்வன உயிர் வகையைச் சேர்ந்தது. பலவகைப் பல்லிகள் பாலஸ்தீனத்தில் காணப்படுகின்றன. "நிலத்தில் ஊர்வனவற்றில் உங்களுக்குத் தீட்டானவற்றுள்" ஆறு வெவ்வேறான எபிரேயச் சொற்களால் குறிக்கப்பட்ட பலவகைப் பல்லிகள் குறிக்கப்படுகின்றன (லேவி 11:29-30). இவை யாவும் இந்த வசனத்தில் மட்டுந்தான் காணப்படுகின்றன. இவை "ஆமை, உடும்பு, அழுக்கு, ஓணான், பல்லி, பச்சோந்தி" எனத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இக்கால அறிவியல் சொற்களைப்போல் எபிரேய உயிரியல் சொற்கள் அவ்வளவு துல்லியத்தைக் கொண்டிராததால், இவை ஏதோவோர் ஊர்வனவற்றைக் குறிக்கின்றன என்பதற்கு மேல், இவற்றிற்குச் சரியான பொருள் கூறமுடியாது.

பல்லூ (PALLU – சிறப்பான)

இவர் ரூபனின் இரண்டாவது மகன் (ஆதி 46:9; யாத் 6:14; 1 நாள் 5:3). எலியாபின் தந்தையாகிய இவர், பல்லூயர் வம்சத்தின் தலைவரும் ஆவார் (எண் 26:5.8).

பவழம் (CORAL)

இது கடற்பஞ்சு - பவழம் முதலியவற்றை உள்ளடக்கிய உயிரினங்கள்; சுண்ணாம்பு நீற்றாலான எலும்புக் கூடாகும். மத்திய தரைக்கடலில் காணப்படும் பவழம் சிறப்பு நிறமுடையது. விலை உயர்ந்ததாகக் கருதப்பட்டது; நகைகள் செய்யப் பயன்பட்டது. இச்சொல் இரு எபிரேயச்சொற்களின் மொழி பெயர்ப்பாகும்.

யோபு 28:18-இல் ஞானத்தை மதிப்பீடு செய்வதில் மணியும், பவளமும், முத்தும் ஒப்புமையாகப் பயன்படுகின்றன. எசே 27:16-இல் தீருக்கும் ஏதோமுக்குமிடையில் நடந்த வியாபரத்தில் ஒரு பொருளாகப் பவளம் குறிப்பிடப்படுகிறது. புல 4:7-இல், சீயோனின் அருமை மைந்தரின் உடலழகு "பவளத்தினும் சிவந்த மேனி" என்று விவரிக்கப்படுகிறது.

பவுலின் பணிகள்நூல் (PAUL, ACTS OF)

விவிலியத் திருமுறைப் பட்டியலைச் சேராத போலிநூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது இந்நூல். நாம் புதிய ஏற்பாட்டில் காணும் அப்போஸ்தலர் பணிநூலில் காணப்படாத பவுலைப்பற்றிய பல செய்திகள் இதிலே காணப்படுகின்றன. பவுல், தேக்கிலா ஆகியவர்களைப் பற்றிய கதையும், பவுலின் பாடுகள் பற்றியும் இதில் காணப்படுகின்றன.

இத்தகைய ஓர் நூல் இருப்பது முன்னமே தெரிந்திருந்தாலும் 19-ஆம் நூற்றாண்டில் தான் இதன் நூல் வடிவம் நிர்ணயிக்கப்பட்டது. இந்தப் புத்தகம் பெண்கள் போதிக்கவும், திருமுழுக்கு அளிக்கவும் உற்சாகமூட்டியதைத் தெர்துல்லியன் வெகுவாகக் கண்டித்தார். இதன் ஆசிரியர் ஆசியாவில் இருந்த ஒரு குரு என்றும் தெர்துல்லியன் கூறுகிறார். இத்தகைய தவறான போதனையை எழுதியதற்காக அவர் பதவியிலிருந்து நீக்கப்படுகிறார். அவர் பவுல் மேல் கொண்ட அளவற்ற பற்றினாலேயே அவ்வாறு செய்தாரெனினும் அஃது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. யுசேபியு, இப்போலித்தசு, ஓரிசன், இரேனிமு ஆகியோரும் இந்நூலைப்பற்றிக் கூறுகின்றனர். இதன் மொத்தவரிகள் 3,600; அதாவது, அப்போஸ்தலர் பணியைவிட 800 வரிகள் அதிகம். போசியு (கி.பி. 890) என்பவர், இதை மற்ற நான்கு பணிநூல்களோடு லூக்கியு என்பவர் எழுதியதாகக் கூறுகின்றார். ஆனால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. தெர்துல்லியன் கூற்றின்படியும், இந்நூல் அமைப்பின்படியும் பார்த்தால் இதை ஓர் ஆர்த்தடொக்ஸ் கிறிஸ்தவர் கி.பி. 160-170-ஐ ஒட்டி எழுதியிருக்கலாம்.

இந்நூலின் பெரும்பகுதி தொலைந்து போய் விட்டாலும் வெவ்வேறான மூன்று சிறு பகுதிகள், பாதுகாக்கப்பட்டு வழக்கில் இருந்தன. முதல் பகுதி பவுல் மற்றும் தேக்கிலா ஆகியோரின் பணிநூலாகும். இரண்டாவது பகுதி பவுலுக்கும் கொரிந்தியர்களுக்கும் இடையிலான கடிதப் போக்காகும். இதில் பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதிய நூல் அடங்கியுள்ளது. மூன்றாவது பகுதி உரோமையில் பவுல் மறைசாட்சியாக மரித்த கதையைக் கூறுகிறது.

பவுல், பிசிதியா - அந்தியோக்கியாவிலிருந்து தப்பி ஓடி இக்கோனியா சென்றடைகிறார். அங்கேதான் தேக்கிலா என்ற பெண்ணுக்கும் பவுலுக்கும் இடையே நடந்த உரையாடல் விளக்கப்படுகிறது. இந்தத் தேக்கிலா என்பவள் ஒரு கிரேக்கப் பெண். அவளுக்குத் திருமணம் செய்ய ஒப்பந்தமாயிருந்தது. தன் வீட்டுச் சன்னல் வழியாக, பவுலின் போதனையைக் கேட்கிறாள். கற்பைப் பற்றிய அவரின் போதனை அவள் மனதைத் தொட்டது. உடனே தன் மண ஒப்பந்தத்தை முறித்துவிட்டு, பவுலைச் சிறையில் சந்தித்துப் போதிக்கும் பணியில் ஈடுபடுகிறாள். பலமுறை சாவிலிருந்து தப்புகிறாள். பின் ஒருநாள் ஒரு பெரிய குளத்தில் தனக்குத் தானே திருமுழுக்கு கொடுத்துக் கொள்கிறாள். பின் மீராவில் பவுலைச் சந்தித்து இதைப் பற்றிக் கூறுகிறாள். பவுல் இக்கோனியாவுக்குச் சென்று போதிக்கும்படி அவளைப் பணிக்கிறார். பலரை மனம்

மாற்றியபின் இறுதியாக அமைதியாக இறக்கிறாள். சில கிரேக்கச் சுவடிகளில் இது சற்று உயர்வு நவிற்சியில் கூறப்பட்டுள்ளது. இந்தத் தேக்கிலா தன் 90–ஆம் வயதில் கலாமோன் மலையில் வாழ்ந்து வந்தாள். அங்கு, சிலர் அவளைச் கற்பழிக்க முயன்றனராம். அவள் செபித்ததின் விளைவாக, பாறை பிளந்தது. அவள் உள்ளே சென்றவுடன் அது மூடிக்கொண்டது. வேறு சில சுவடிகளில் அவ்வாறு பாறையில் புகுந்து உரோமை நகருக்கே சென்றாள் எனக்கூறப்பட்டுள்ளது.

பெண்கள் பற்றியும், திருமணம் பற்றியும் பவுலின் சில கருத்துகளுக்கு மாறாக (1 கொரி 14:34; 1 திமொ 2:12; தீத்து 2:4), இத்தகைய கட்டுக்கதைகள் எழுதப்பட்டன என்ற கருத்தை மதிப்பீடு செய்வது கடினம். இந்த நூலில் கூறப்பட்டுள்ள பவுலைப்பற்றிய உருவ விளக்கத்தை வைத்துதான் அவரின் உருவப் படம் பிற்காலத்தில் தீட்டப்பட்டது. வளைந்த கால்கள், கொக்கி போன்ற மூக்கு, குட்டையான உருவம், முடி அதிகமில்லாத தலை, ஒன்றோடொன்று தொடும் புருவங்கள் என்று அவர் உருவம் வர்ணிக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் மனிதனைப் போலவும், சில நேரங்களில் வானதூதன் போன்றும் தோன்றினார் என்றும் எழுதப்பட்டுள்ளது.

கொடிய விலங்குகளிடமிருந்து பவுல் எபேசு நகரில் எவ்வாறு தப்பினார் (1 கொரி 15:2) என்பதைப்பற்றி இதன் கிரேக்க வாசகம் கூறுகிறது. அதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது; கொடிய விலங்கான சிங்கம் பவுலோடு பேசுகிறது. பவுல் உடனே, "நான் உனக்கு ஞானஸ்நானம் அளித்ததை மறந்து விட்டாயா?" எனக் கேட்கிறார். உடனே சிங்கம் பவுலைப் புரிந்து கொண்டு அவரைத் துன்புறுத்தவில்லை. இது பவுல் எப்படித் தப்பித்திருப்பார் என்ற கேள்விக்குப் பழங்காலக் கிறிஸ்தவர்கள் சிலர் தந்த கற்பனைக் கதை. இதைப் புனித எரோனிமு ஏற்றுக்கொள்ள வில்லை.

எபேசிலிருந்து பவுல் பிலிப்புக்குச் செல்கிறார். அங்குச் சிறையில் அடைக்கப்படுகிறார். இங்கிருந்து பவுல் கொரிந்தியரோடு கடிதத்தொடர்பு கொள்கிறார். தங்களிடையே தவறான போதகங்களைப் பரப்பிவந்த இருவரைப் பற்றி கொரிந்தியர்கள் பவுலுக்கு எழுதினர். அதற்குப் பதிலாகப் பவுல் அத்தவறுகளைக் கடுமையாக மறுத்துக்கூறி, "கொரிந்தியருக்கும் மூன்றாம் திருமுகத்தை" எழுதுகிறார்.

கிரேக்கச் சுவடிகள் சில இஃதோடு வேறு சில கதைகளையும் தருகின்றன. பவுல் கப்பலில் செல்லும்போது அதன் தலைவனைக் கிறிஸ்தவனாக்குகிறார். பின், இயேசு கடல்மீது நடந்து வந்த பவுலை விரைவாக உரோமைக்குச் செல்லும்படி கூறுகிறார். உரோமைக்குச் சென்றவுடன் நீரோ மன்னனால் கொல்லப்படுகிறார். பின், மீண்டும் தோன்றி அம்மன்னனை அச்சுறுத்துகிறார். இது நாம் விவிலியத்தில் காணும் அப்போஸ்தலர் பணி நூலின் கற்பனைத் தொடர்ச்சி எனக் கருதப்படுகிறது. பவுலை நீரோ மன்னனின் படைவீரர் வெட்டியபோது அவர் உடலில் இருந்து பால் பீறிட்டு அப்படைவீரன் மேல் அடித்ததாம். பின், பவுல் மீண்டும் தோன்றி, நீரோவின் அழிவை முன்னறிவித்து அவனின் பாவச் செயல்களைக் கண்டிக்கிறார்.

ஆசியாவில் பவுலின் பக்தனான ஒரு குரு இவற்றைப் பவுலின் புகழுக்காக எழுதியிருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. இது பழங்காலக் கிறிஸ்தவர்களிடையே நன்றாகப் பரவியிருந்தது.

பவுலின் மன்றாட்டு (PAUL, PRAYER OF THE APOSTLE)

சுருக்கமான ஒரு ஞானவாத நூலாகும். இது கி.பி. 2–ஆம் அல்லது 3–ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டிருக்கலாம். நாக்கம்மாதியில் கண்டெடுக்கப்பட்ட ஏடுகளில் ஒன்றாகும். இது ஞானவாத ஏடுகள், மந்திர ஏடுகளோடு தொடர்புடையது; பொருளடக்கத்தைப்

பொருத்தமட்டும் சங்கீதங்களிலிருந்தும், பவுலின் திருமுகங்களிலிருந்தும் சில கருத்துக்களைக் கொண்டுள்ளது.

பவுலின் வெளிப்பாட்டு நூல் (PAUL APOCA-LYPSE OF)

இது பிற்காலத்தில் தோன்றிய, ஆனால் பரவலாகப் படிக்கப்பட்ட ஒரு நூல், பவுலின் மூன்றாவது வானக அனுபவம் (2 கொரி 12:2-4) பற்றி இது விவரிக்கிறது.

சொசோமென் என்பவர் தன் திருச்சபை வரலாற்றில், இந்நூலைப் பழங்காலத்தில் யாரும் அறிந்ததாகத் தெரியவில்லை; ஆனால் சில துறவிகள் இப்புத்தகத்தைப் பவுலின் வீட்டில் (சிலிசியாவில் தர்சு நகரில்) இருந்த பளிங்குப் பெட்டியில் கண்டெடுத்ததாகக் கூறுவதைக் குறிப்பிடுகிறார். ஆனால், சொசோமென் அந்நகரின் வயதான குருவையும் மற்றச் சிலரையும் விசாரித்ததில் அத்தகைய நிகழ்ச்சி (அதாவது பவுலின் வீட்டில் பெட்டி கண்டுபிடித்தது) நடக்கவில்லை என்பது தெரிய வந்தது. அகுஸ்தீன் இந்நூலைக் கண்டிக்கிறார். 2 கொரி 12:2-4-இல்வரும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பேதுருவின் வெளிப்பாட்டு நூலை ஒரு மாதிரியாக வைத்து எழுதப்பட்ட நூலாகும் இது.

இந்நூலில் ஏழு பகுதிகளைக் காணலாம். அ) பவுலின் வீட்டில் இந்நூல் அடங்கிய பெட்டியைக் கண்டெடுத்தல். ஆ) ஆண்டவர் பவுலைப் போதிக்கக் கட்டளையிடுகிறார். ஏனெனில் சூரியன், விண்மீன்கள், கடல், நீர், பூமி, சந்திரன் ஆகியவை பாவிகளை அழிக்க கடவுளிடம் கேட்டுக் கொண்டே இருக்கின்றனவாம். இ) வானதூதர்களின் தினசரி செய்தி. ஈ) பவுல் சாவைப் பற்றிய காட்சி காண்கிறார். உ) விண்ணகத்தைப் பற்றி பவுலின் முதல் காட்சி. அங்கு ஆற்றில் பாலும், தேனும் ஓடினதாம். ஊ) நரகத்தைப் பார்வையிடல். அங்கே கெட்ட கிறிஸ்தவர்கள், குருக்கள், ஆயர்களைத் தண்டிக்க மிகக் கொடுமையான இடம் தனியாக இருந்ததாம். பவுல் இம்மக்களுக்காக, கடவுளின் இரக்கத்தை மன்றாடுகிறார். கடவுளும் நேரில் வந்து மன்னிப்பை வழங்குகிறார். சில வாசகங்களில் ஏழாவது பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. எ) பவுலின் 2-ஆவது காட்சியில் யூத குலமுதியவர்கள் (ஆபிரகாம், ஈசாக்கு), மோசே, மூன்று பெரிய இறைவாக்கினர்கள் (எசாயா, எரேமியா, எசேக்கியேல்), லோத்து, யோபு, நோவா இன்னும் பல பழைய ஏற்பாட்டு ஆட்களுடன் பவுல் உரையாடுகிறார்.

பவுல், அப்போஸ்தலர் (PAUL, THE APOSTLE)

I. இயேசுவின் சீடர்களைத் துன்பப் படுத்திய, முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு யூதர். பின்பு தொடக்க காலக் கிறிஸ்துவத்தின் மறைபரப்புப் பணிகளில் தலைமையானவராக மாறினார். இவர் தன்னைப் "புறவினத்தாரின் அப்போஸ்தலர்" என்று அழைத்துக் கொண்டார் (உரோ 11:13). சிறிய ஆசியாவிலும், கிரீசிலும் பல திருச்சபைகளை நிறுவி, அவற்றோடு பரந்த அளவில் கடிதப்போக்கு வைத்துக் கொண்டார். இவர் எழுதியதாக ஏற்றுக் கொள்ளப்படும் திருமுகங்கள் புதிய ஏற்பாட்டில் முக்கிய பகுதியாக அமைந்துள்ளன. அப்போஸ்தலர் பணிநூல் பாதிக்குமேல் இவரைப்பற்றிய விவரிப்பாக அமைந்துள்ளது. நற்செய்தியில் அடங்கியுள்ள கோட்பாடுகளையும் ஒழுக்க முறைகளையும் எடுத்துக்கூறுவதில் முன்னோடியாவார். இவருடைய ஆதிக்கம் காலந்தோறும் திருச்சபையில் நிலைத்திருக்கிறது. கிறிஸ்துவத்தில் படைப்பாற்றல் மிக்க ஆட்தன்மையுடையவர் என்ற அளவில் இவரது தலைவரான இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாகக் கருதப்பட வேண்டியவர்.

II. **மூலங்கள்:** விவிலியம் மற்றும் அதைச் சார்ந்த போலி நூல்களுக்குப் புறம்பே பவுல் எங்கும் குறிக்கப்படவில்லை. யோசிப்பசு கூட இவரை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. தன் காலத்து இலக்கிய மற்றும் அதிகார வட்டாரங்களில் இவர் தன் முத்திரையை விட்டுச் செல்லவில்லை எனலாம்.

ஆனால் புதிய ஏற்பாட்டில் இவரைப்பற்றிய மிகுந்த செய்திகளை அறிகிறோம். இவரது

திருமுகங்களில் முதன்மையான மூலங்களைக் கொண்டிருப்பதோடு, அப்போஸ்தலர் பணிநூல் இவரது மறைபரப்புப் பணி பற்றிய நீண்ட நிகழ்ச்சியுரையைக் கொண்டுள்ளது. இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அப்போஸ்தலர் பணிநூல் ஆசிரியர் பவுலின் திருமுகங்களை அறிந்திருந்தாரா என்பது ஐயத்திற்குரியதாகும். இரண்டுக்குமிடையே சில ஒற்றுமைகள் காணப்படும்போது, அது தற்செயலானதாகத் தோன்றுகிறதேயொழிய ஒன்றையொன்று தழுவியுள்ளன என்று காட்டவில்லை. இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகளில் சொல்லாமல் விடப்பட்டவையும், முரண்பாடுகளும் அடங்கும். இந்த இரு மூலங்களும் ஒன்றையொன்று சாராதிருப்பது சாதகமாகவும், பாதகமாகவும் இருக்கின்றன. இரண்டும் ஒத்திருக்கும்போது ஒன்றையொன்று உறுதிப்படுத்துகின்றன. கொடுக்கப்படும் செய்தியின் நம்பத்தகுந்த தன்மை அல்லது அதைப்புரிந்து கொள்வதில் வாசகர்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றன. அவை வேறுபடும்போது பல பிரச்சனைகளை எழுப்புகின்றன. ஏனெனில், அப்போஸ்தலர் பணிநூல் வாழ்க்கை வரலாற்றுத் தன்மையைக் கொண்டுள்ளது. இதற்கு மாறாகத் திருமுகங்கள் தற்செயலாகத்தான் இத்தன்மையைக் கொண்டுள்ளன. இவை யாவும் பவுலின் வாழ்க்கையின் காவலரைப் பற்றியும், அவரது பணிபற்றியும் பல பெரிய பிரச்சனைகளை எழுப்புகின்றன. இக்கட்டுரையில் இப்பிரச்சனைகளுக்குள் நாம் புகப்போவதில்லை. இவைபற்றிய விளக்கங்களைத் தனித்திருமுகங்களுக்குரிய கட்டுரைகளில் காண்க.

III. வாழ்க்கை வரலாறு:

1. தொடக்க கால வாழ்க்கை : பவுல் சிறிய. ஆசியாவின் தென்பகுதியைச் சேர்ந்த சிலிசியாச் சமவெளியில் உள்ள தர்சு நகரில் பிறந்தவர். ஆனால் பிறந்த ஆண்டை நிர்ணயிக்க முடியாது (அ.ப.9:11; 21:39; 22:3). இந்நகரோடு மூன்று தடவை அப்போஸ்தலர் பணிநூல் அவரைத் தொடர்பு படுத்துகிறது (9:11.30; 11:25). பவுல் பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர் (உரோ 11:1; பிலி 3:5). அவரது யூதப்பெயர் சவுலாகும். அவரது குடும்பம் கி.மு. 4-இல் கலிலேயாவிலுள்ள சிஸ்கலாவிலிருந்து தர்சுக்குக் குடியேறியிருந்திருக்கலாம். தர்சு, சிலிசியா உரோமை மாநிலத்தின் ஒரு முக்கிய நகரமாகும். அங்கே சிறுவயதிலிருந்து கிரேக்கத்தால் பாதிக்கப்பட்ட யூத்துவத்தில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் (9:11; 11:25; 21:39; 22;3). அவரது தந்தை உரோமைக் குடியுரிமைபெற்றிருந்தார் (16:37-39; 22:25-29; 25:10-12). ஆனால் இதை எப்படிப்பெற்றார் என்று கூறப்படவில்லை. பவுல் உரோமைக் குடியுரிமையுடன் தர்சு நகர் குடியுரிமையும் கொண்டிருந்தார் (21:39). அவருடைய சவுல், பவுல் என்ற இரு பெயர்கள் கிரேக்க ஆதிக்கத்தில் சிதறிக்கிடந்த யூதர்களின் இரட்டைக் கலாச்சாரத்துப் பின்னணியைப் பிரதிபலிக்கின்றன. பவுலின் இரட்டைக் குடியுரிமைச் சலுகை, பிற்காலத்தில், அவரது மறைபரப்புப் பயணங்களில் பெரிதும் உதவியாக இருக்கும் (16:3தொ; 21:39; 22:25 தொ; 25:10தொ). பவுலின் குடும்பம் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் ஓரளவு உயர்நிலையில் இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. பவுல் கூடாரம் செய்யும் தொழில் செய்பவர். இஃது அவரது குடும்பத் தொழிலாக இருந்திருக்கலாம் (18:3). பவுலின் திருமணமான சகோதரி எருசலேமில் வாழ்ந்தாள் என்ற கூற்று (23:16). அவர் இளைஞனாக இருக்கும்போதே அவரது குடும்பம் எருசலேமில் குடியேறியிருக்க வேண்டும் என்று கருத சிலரைத் தூண்டியுள்ளது. ஆனால், இயேசு மரித்த சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் பவுல் எருசலேமுக்கு வந்தார் என்பதும், இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது இவரைப் பவுல் கண்டதேயில்லை என்பதும் உறுதியாகும்.

எருசலேமில் பவுல் ராபிகளின் பயிற்சி பெற்றோர்; பாலஸ்தீன யூதத்துவத்தின் பாரம்பரியங்களை நன்கு கற்றுத்தேர்ந்தார் (22:3). அவர் கமாலியேவின் மாணவனாய் இருந்தார். கமாலியேல் பரந்த கொள்கையுடைய புகழ்பெற்ற இல்லேலின் குழுவைச் சேர்ந்தவர். இருப்பினும் எருசலேமில் பெற்ற பயிற்சியினாலோ, வீட்டில் பெற்ற பயிற்சியினாலோ, இரண்டினாலுமோ பவுல் சட்டத்தைக் கடுமையாகக் கடைப்பிடிக்கும் பரிசேயரானார் (23:6; 1 கொரி 15:9; கலா 1:13; பிலி 3:6). இம்மனப்பான்மை தொடக்க காலத்தில் நற்செய்தி மற்றும் கிறிஸ்துவத்தின்பால் பவுல் கொண்டிருந்த மனப்போக்கைப் பெரிதும் பாதித்தது. ஆகவே, கிறிஸ்துவத்தை அழிக்கத் தேடினார் (அ.ப. 8:3; 1 கொரி 15:9; கலா 1:13.23). ஸ்தேவான் கல்லால் எறிந்து கொல்லப்பட்டபோது அங்கு, பவுல் இருந்ததுபற்றிய நிகழ்ச்சியுரை (அ.ப. 7:58; 8:1-3; 22:20; கலா 1:23), அங்கு அவர் வெறுமனே நிற்கவில்லை, மாறாகக் கிறிஸ்தவர்களைத் தாக்குவதில்லை எருசலேம் பொதுச்சங்கத்தின் செயல்வீரராக இருந்தார் என்பதைச் சுட்டுகிறது. தமஸ்குவிலிருந்து கூட, கிறிஸ்தவர்களைக் கைது செய்து எருசலேமுக்குக் கொண்டுவரத் தலைமைக் குருவிடம் ஆணை பெற்றுச் சென்றார் (அ.ப. 9:1-2).

2. மனந்திரும்புதலும் அப்போஸ்தலப் பணியின் தொடக்கமும்:

பவுலின் மனந்திரும்புதல், அவர் சீரியாவிலுள்ள தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில், அந்நகருக்கு அங்கே பெற்ற அனுபவத்தின் விளைவாகும். இயேசு பவுலுக்குத் தோன்றுகிறார். பவுல் கண்பார்வை இழக்கிறார்; அனனியாவால் குணப்படுத்தப்பட்டுத் திருமுழுக்குப் பெறுகிறார் (அ.ப.9). இந்த அனுபவம் பற்றிய விவரிப்பு அதிகம் வேறுபாடில்லாத வேறு இருபகுதிகளிலும் கூறப்படுகிறது (22:6-21; 26:12-18). இந்த விவரிப்புகளில் சிலவற்றை நாம் கவனிக்க வேண்டும். அக்காலத்தில் பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார். இத்தகைய அனுபவம் நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை. இந்த மனமாற்றம் ஒரு வெளிப்பாட்டால் ஏற்பட்டுத் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த வெளிப்பாடு பவுலுக்கு மட்டுமே தெளிவான முறையில் அளிக்கப்படுகிறது. இந்த வெளிப்பாட்டுக்குப்பின் கிறிஸ்தவர் ஒருவருடனாவது பவுல் தொடர்பு கொண்டிருந்தார். அவர் பவுலுக்குத் திருமுழுக்கு அளிக்கிறார். பவுல் புறவினத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்க உடனடியாக இயேசுவால் அழைக்கப்படுகிறார். இந்தத் தோராயமான கூறுகளைக் கொண்ட சித்திரம், பவுல் தனது மனந்திரும்புதல் மற்றும் புறவினத்தாருக்கு அப்போஸ்தலராக இருக்க அழைக்கப்படுதல் பற்றி எழுதுபவைகளோடு ஒத்துப்போகிறது (1 கொரி 9:1; 15:8-9; கலா 1:15-16; காண்க. எபே 3:1-6). இந்த அனுபவம் பவுலிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தியதோடு, அவரது விசுவாசம் மற்றும் நற்செய்தியின் பண்புகளையும் நிர்ணயித்தது. இஃது இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்து, திருச்சபையில் வாழும் மகிமை பெற்ற ஆண்டவரிடம் குவிமையம் கொள்கிறது. புறவினத்தாருக்குக் கிறிஸ்துவைப் போதிக்க பவுல் ஆணை பெறுவது நற்செய்தியின் உலகளாவிய பண்பை உணர்த்துகிறது. இதை அப்போது பவுல் புரிந்துகொண்டார் என்று கூறமுடியாது. தேர்ந்தெடுத்தல் என்ற கருத்து, இயேசு கொண்டுவரும் முழு மீட்பு, உயிர்ப்பின் முக்கியத்துவம் ஆகியவையும் இந்த அனுபவத்தில் அடங்கியுள்ளன. இத்தகைய திடீர் மனமாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய அனுபவத்திற்கு இணையானதொன்றைப் பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் காண்பது அரிது. ஆகவே, இந்த அனுபவத்தைப் பகுப்பாய்வு செய்வது கடினம். ஊனுடலில் உண்மையான இயேசுவை, உயிர்த்த மற்றும் மகிமை பெற்ற இயேசுவை, தான் கண்டதுபற்றிய மன உறுதியே பவுலின் பின் வாழ்க்கை முழுவதற்கும் அடிப்படையாயிற்று. பன்னிருவருக்குச் சமமான பதவியும், உரிமையும் கொண்ட அப்போஸ்தலர் என்று பவுல் உரிமை

கொண்டாடுவதற்கு இந்த அனுபவம் காரணமாயிற்று (1 கொரி 9:1).

அ.ப. 9:20-இன்படி, தன் அழைத்தலுக்குப்பின் பவுல் உடனடியாகச் செபக்கூடங்களில், "இயேசு கடவுளின் மகன் தான்" என்று அறிவிக்கத் தொடங்கினார். ஆனால், இதைக் கலா 1-ஓடு சேர்த்துப் பார்க்கும்போது, பவுல் தனது வருங்காலத்தைப்பற்றித் தெளிவான கருத்துக் கொண்டிருக்கவில்லை; ஆகவே, முதலில் மூன்று ஆண்டுகளுக்கு அரேபியாவுக்குச் சென்றார் எனத் தெரிகிறது. இந்த அரேபியா நபத்தேய நாடாக இருக்கலாம். அங்கும் அவர் போதித்திருக்கலாம். இந்தக் கால இடைவெளிக்குப் பவுலே காரணம் கூறவில்லை. மோசே, எலியா மற்றும் இயேசு ஆகியோர் பாலைவனத்திற்கு ஒதுங்கியதுபோல் இதைப் புரிந்து கொள்ளலாம். அங்கிருந்து திரும்பி வந்து தமஸ்குவில் யூதர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். புறவினத்தாருக்கான அவரது பணி அல்லது அது செயல் படுத்தப்பட வேண்டிய முறை இன்னும் தெளிவாகவில்லை. அவரது போதகம் யூதர்களின் விரோதத்தை எழுப்பியது. இந்த விரோதம் அவரது வாழ்நாள் முழுவதும் பவுலைத் தொடரும். யூதர்கள் பவுலை ஒரு கட்சி மாறியாக, துரோகியாகக் கருதினர். இவர்களால் தூண்டப்பட்டு நான்காம் அரேத்தா என்ற நபத்தேய அரசன் பவுலைக் கைது செய்ய முயற்சித்தான். சகோதரர்களின் உதவியால் தமஸ்குவிலிருந்து தப்பி, பவுல் எருசலேமுக்குச் சென்றார் (கலா 1:17-20; 2 கொரி 11:32-33; அ.ப. 9:20-29). அங்கு இரு வாரங்கள் தங்கினர். அப்போது பேதுருவையும் யாக்கோபையும் சந்தித்தார். பவுல் "யூதேயா நாட்டுக் கிறிஸ்தவ சபைகளுக்கு அதுவரை அறிமுகம் ஆகாமலே இருந்தார்" என்ற இவரது கூற்றை (கலா 1:22) ஏற்றுக்கொள்வது கடினம். ஏனெனில், தங்களைக் கொடுமைப்படுத்திய ஒருவரைக் கிறிஸ்தவர்கள் அறியாதிருந்திருப்பார்களா? மனந்திரும்பிய பவுல் முதல் முறையாக எருசலேமுக்குச் சென்றது பற்றிய சுருக்கமான விவரிப்பு, அவர் எருசலேம் திருச்சபைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டார் என்பதையும், ஆனால் தன் நற்செய்தியை அவர்களிடமிருந்தே பெற்றார் என்பதையும், அவர் பிறரைத் தழுவாது சுதந்தரமாய்ச் செயல்பட்டார் என்பதையும் வலியுறுத்துகிறது. பல குறிப்புகள் அவர் யூதர்களாலும் கிறிஸ்தவர்களாலும் அவ்வளவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சுட்டுகின்றன. ஆகவே, எருசலேமிலிருந்து தனது சொந்த ஊராகிய தர்சுக்குத் திரும்பினார் (கலா 1:21-24; அ.ப. 9:30). அங்கு அவர் போதித்திருக்கலாம் அல்லது வெறுமனே காலத்தைக் கழித்திருக்கலாம். இக்காலம் பற்றி ஒன்றும் அறிவதற்கில்லை (கி.பி. 36:46). முதல் புறவினத் திருச்சபையாகிய அந்தியோக்கியத் திருச்சபையை அவர் நிறுவியதாகக் கருதமுடியாது. ஆனால், இந்தத் திருச்சபைதான் பவுலைப் புறவினத்தாரின் அப்போஸ்தலராக மாற்றியது எனலாம்.

இதற்கிடையில் போதிக்கும் ஆற்றல் பெற்றவர் என்று பவுலின் புகழ் பரவியிருந்திருக்க வேண்டும். தர்சுவில் பவுல் வாழ்ந்த, மறைந்த வாழ்க்கையிலிருந்து அவரைப் பர்னபா வெளிக்கொணர்ந்தார். பர்னபா, பவுலை அந்தியோக்கியாவுக்கு அழைத்துச் சென்று அங்குப் போதிக்கும் பதவி அளித்தார் (அ.ப 11:26). இக்காலக்கட்டத்திலிருந்து அப்போஸ்தலர் பணிநூலிலும் கலாத்தியரிலும் விவரிக்கப்படும் நிகழ்ச்சியுரைகளுக்கிடையிலான தொடர்பு தெளிவாக இல்லை. அப்போஸ்தலர் பணிநூலின்படி, பவுல், பர்னபா மற்றும் யோவான் மாற்கு ஆகியோர் அந்தியோக்கியாவிலிருந்து பஞ்ச நிவாரணக்காணிக்கையோடு எருசலேமுக்குச் சென்றனர் (11:27-30; 12:25). ஆனால், இதைப்பற்றி பவுல் ஒன்றும் கூறவில்லை. எருசலேமிலிருந்து அந்தியோக்கியா திரும்பியபின், இதுவரை நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களில் அதைப்போதிக்கப் பர்னபாவும், பவுலும் அந்தியோக்கியத் திருச்சபையிடமிருந்து ஆணை பெற்றனர். இதுவே முதல் மறை பரப்புப் பயணமாகும் (13:1-5).

3. முதல் மறைபரப்புப்பயணம் (கி.பி. 47-48):

அந்தியோக்கியாவின் துறைமுகமான செலென்சியாவில் கப்பல் ஏறி சைப்பிரசிலுள்ள துறைமுகமான சலாமியை அடைந்தனர். பின் தீவின் தென்பகுதி வழியாகப் பயணம் செய்து அதன் தலைநகரான பாப்போவை அடைந்தனர். இங்கு பவுல், செர்கியு பவுல் என்ற உரோமை ஆளுநனை மனந்திருப்பினார் (13:6-12). ஆனால் இந்த ஆளுநனின் ஆட்சிக்காலத்தை நிர்ணயிக்க முடியவில்லை. பாப்போவிலிருந்து பவுலும் அவருடன் இருந்தவர்களும் கப்பல் ஏறி பம்பிலியாவிலுள்ள பெருகை அடைந்தனர். அங்கிருந்து தரைவழியாக பிசிதியா - அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, தெருபை ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்தனர் (13:13; 14:28). இவ்விடங்களில் இருந்த சிறிய கிரேக்க-யூதக்குழுக்களுக்குப் போதித்தனர்; புறவினத்தாருக்கும் போதித்தனர். பலரைச் சீடராக்கி உறுதிப்படுத்தியபின், சென்ற வழியிலே திரும்பி வந்து அந்தியோக்கியாவை அடைந்தனர் (அ.ப. 13:14). இக்காலகட்டத்தில் அந்தியோக்கியா இவர்களின் பணி மையமாசு இருந்திருக்கிறது. சவுல் இனிப் பவுல் என்று குறிக்கப்படுகிறார் (13:6-12).

இக்கால கட்டத்தில் பவுலின் பணியில் சில பண்புகள் தெளிவாக உள்ளன. பவுலின் பணி அவரை அரசாங்க அதிகாரிகளோடு தொடர்பு கொள்ளச்செய்கிறது. பவுலே செயல்வீரராகத் தலைமை தாங்குகிறார். மற்ற உடன் ஊழியர்கள் வெறுமனே குறிக்கப்படுகின்றனர் அல்லது விடப்படுகின்றனர். பவுல் துணிவோடு நேரடியாகப் பேசுகிறார். எதிர்ப்புகள் தோல்வியுறுகின்றன. பவுலின் உரைகள் துணிவோடு இருப்பதுமல்லாமல், நற்பயனை விளைவிக்கின்றன.

மறைபரப்பாளர்கள் பெருகையை அடைந்தபோது யோவான் மாற்கு அவர்களை விட்டுப்பிரிந்து எருசலேமுக்குத் திரும்பினார் (13:13). இக்காலத்தில்பவுல் யூத சமூகங்களோடு கொண்ட தொடர்பில் சில பண்புகள் காணப்பட்டன. இவை பிற்காலப் பணியிலும் காணப்பட்டன. பவுல் செபக்கூடங்களில், ஓய்வுநாள் வழிபாட்டில் மறைநூலை வாசித்து, கிறிஸ்துவைப்பற்றிப் போதிப்பார் (9:20; 13:5.14-16; 14:1; 17:1-2; 10:17; 18:4.19; 19:8). இவ்வாறு அதே செபக்கூடத்தில் மீண்டும் மீண்டும் போதித்திருக்கலாம் (13:42; 17:2; 18:4; 19:8). யூதர்களிடமிருந்து எதிர்ப்பு உண்டாகிறது. அவர்கள் பவுலைச் செபக்கூடத்திலிருந்தும் நகரிலிருந்தும் விரட்டியடிப்பர் (9:23-25; 13:45.50-51; 14:2.4-6; 17:5-10.13-14; 18:6-7; 19:9). யூதர்கள் நற்செய்தியை ஏற்க மறுத்தபின்தான் அப்போஸ்தலர்கள் புறவினத்தாரிடம் போதிக்கத் தொடங்கினர் (13:46 தொ). யூத மறை தழுவிய திரளான கிரேக்கர்களும், "கடவுளுக்கு அஞ்சி வாழ்ந்தவர்களில் "பலரும் (10:2; காண்க. 13:50; 16:14; 17:4.17; 18:7) யூதர்கள் சிலரும் கிறிஸ்துவை விசுவசித்தனர் (13:48; 14:1; 16:14; 17:4.12; 18:4.7). இது யூதர்களின் பகைமையை மேலும் தூண்டியது. அவர்கள் பவுலுக்கும் அவருடன் இருந்தவர்களுக்கும் எதிராகக் கலகம் செய்தனர்.

4. எருசலேமில் அப்போஸ்தலிக்கச் சங்கம் (கி.பி. 49):

முதல் மறைபரப்புப் பயணத்தின் முடிவில், புறவினக் கிறிஸ்தவர்கள் யூதச் சட்டத்தைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்த வேண்டுமா என்ற பிரச்சனை தோன்றிக் கடுமையாயிற்று. அதன் விளைவுதான் முதல் எருசலேம் சங்கமாகும். இது பற்றிய அ.ப. நூல் விவரிப்புக்கும் கலாத்தியரில் வரும் விவரிப்புக்கும் பல வேறுபாடுகள் உண்டு. ஆனால் இரண்டும் புறவினக் கிறிஸ்தவர்களின் மேல் யூதச் சட்டத்தைச் சுமத்தக்கூடாது என்ற பவுலின் கோட்பாடு பற்றி ஒருமைப்பாடு கொண்டுள்ளன. சங்கத்தில் பேதுருவும் யாக்கோபும் சிறப்பாகப் பங்கெடுத்தனர். சங்கம் இக்கோட்பாட்டை ஏற்று உறுதிப்படுத்தியது. பவுலும் பர்னபாவும் சங்கத்தின் தீர்மானத்தைத் தாங்கள்

நிறுவிய சிறிய ஆசியாவிலுள்ள திருச்சபைகளுக்கு எடுத்துச் சென்றனர்.

ஸ்தேவானின் மறைசாட்சி மரணத்துக்குச் (கி.பி. 36) சிறிது காலத்திற்குப்பின், பவுல் மனந்திரும்பியிருந்தால் "14 ஆண்டுகளுக்குப்பின்" எருசலேமுக்குச் சென்ற பயணம் பற்றிய அவரது குறிப்பால் இப்பயணமும் சங்கமும் கி.பி. 49-இல் நடந்திருக்க வேண்டும். ஆனால் பர்னபாவும் பவுலும் பஞ்ச நிவாரணக் காணிக்கையோடு எருசலேமுக்குச் சென்றதாக ஒரு குறிப்பு உள்ளது (அ.ப. 11:27-30; 12:25). இது பற்றி பவுலின் திருமுகங்களில் குறிப்பு ஒன்றுமில்லை. கிளாதியுவின் ஆட்சியில் (கி.பி. 41:54) பாலஸ்தீனத்தில் ஏற்பட்ட பஞ்சம் பற்றி அக்காலத்திய ஏடுகளில் சான்று இல்லை. ஆனால் யோசிப்பசு திபேரியு அலக்சாந்தர் ஆளுநனாக இருந்தபோது (கி.பி. 46-48) பாலஸ்தீனத்தில் பஞ்சம் ஏற்பட்டது என்று கூறுகிறார். இப்பஞ்சம் ஓய்வு ஆண்டாகிய கி.பி. 47-48-இல் கடுமையாக இருந்தது. சமய காரணங்களுக்காக, அறுவடையேயில்லை. இக்காலத்தில் பாலஸ்தீனக் கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்ய அந்தியோக்கியாவில் காணிக்கை எடுக்கப்பட்டு அனேகமாக சங்கத்திற்கு வந்தவர்கள் வழியாக அனுப்பப்பட்டிருக்கலாம். பவுல் எருசலேமுக்குச் செய்த ஒரு பயணத்தைப்பற்றித்தான் பேசுகிறார். அ.ப. நூலில் லூக்கா, பஞ்சு நிவாரணம், சங்கத்தில் பங்கெடுத்தல் ஆகிய இரண்டையும் பிரித்து, இரு பயணங்கள் பற்றிக்குறிப்பிடுகிறார். ஆனால் இரண்டும் ஒரே பயணத்தின் பின் செய்யப்பட்டிருக்கலாம்.

5. இரண்டாவது மறைபரப்புப்பயணம் (கி.பி. 50-53): எருசலேமிலிருந்து திரும்பிய சிறிது காலத்துக்குப்பிறகு பவுலும், பர்னபாவும் தங்களது இரண்டாவது பயணத்தைத் தொடங்க இருந்த நேரத்தில் யோவான் மாற்கைக் கூட்டிச் செல்வது பற்றி, பவுலுக்கும் பர்னபாவுக்குமிடையே கடுமையான கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் விளைவாக இருவரும் பிரிந்தனர். இவ்வாறு சீலாவை அழைத்துக்கொண்டு பவுல் தனது இண்டாவது மறைபரப்புப் பயணத்தைத் தொடங்கினார் (அ.ப. 15:40-18:21). பவுலின் மூன்று மறைபரப்புப் பயணங்களில் இண்டாவதுபயணம் மிக முக்கியம் வாய்ந்ததாகும். பவுலும் அவரோடு இருந்தவர்களும் தரைவழியாக சிலிசியா, கலாத்தியா வழியாகப் பயணம் செய்து, பின்பு வட மேற்காக மீசியாவை அடைந்தனர். வழியில் ஆங்காங்குள்ள திருச்சபைகளில் போதித்து உறுதிப்படுத்தினர். லிஸ்திராவில் திமொத்தேயுவைத் தங்களோடு சேர்த்துக் கொண்டனர். மீசியாவில் இருக்கும்போது கண்ட ஒரு காட்சியின் விளைவாக பவுல் மாசிதோனியாவில் போதிக்கச் சென்றார். மீசியாவிலிருந்து ஆகியன் கடற்கரையிலுள்ள அலக்சாந்திரியா துரோவா துறைமுகத்தை அடைந்தனர். அங்குக் கப்பலேறி, சமொத்திருக்குத் தீவுக்கும், நெயாப்பொலிக்கும் சென்றனர். அங்கிருந்து கிழக்கு மாசிதோனியாவிலுள்ள முக்கியமான உரோமையரின் குடியிருப்பாகிய பிலிப்பியை அடைந்து போதித்தனர்; பலரை மனந்திருப்பினர். ஆனால் யூதர்கள் உரோமைக் குடிமக்களை மனந்திரும்ப அனுமதியில்லையாதலால், சட்ட விரோதமாகச் செயலாற்றிக் கலகம் உண்டாக்குவதாக பவுல் குற்றம் சாட்டப்பட்டார். அவரும் சீலாவும் கைது செய்யப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டு, அடிக்கப்பட்டு, நகரத்திலிருந்து விரட்டப்பட்டனர் (அ.ப. 16:11-40). ஆனால் இந்தக் கிறிஸ்தவ சமூகம்தான் பவுலுக்கு எப்போதும் பிரமாணிக்கமுள்ளதாகவும், மிகப்பெரியமானதாகவும் இருந்தது (பிலி 4:14-20).

எக்னேசியன்சாலை வழியாக மேற்கு நோக்கிப் பயணம் செய்து தெசலோனிக்கேயை அடைந்து அங்கு யூதர்களுக்கும் புறவினத்தாருக்கும் சிலகாலம் பவுல் போதித்தார் (அ.ப. 117:1-9). பிறவினத்தாரிடையே பவுல் எதிராகக் கலகம் மூட்டினர். அங்குள்ள கிறிஸ்துவ சமூகத்தின் நன்மைக்காக, அந்நகரைவிட்டகலக் கட்டாயப்படுத்தப்பட்டார் பவுல்.

தெசலோனிக்கேயில் காரியங்களைக் கவனித்துக் கொள்ள சீலாவையும் திமொத்தேயுவையும் விட்டு, பவுல் பெரோயா சென்று, அங்கிருந்து ஏதன்சை அடைந்தார். இங்கு, பவுல் குறுகிய காலத்திற்கே தங்கினார். அவருடைய பணி வெற்றி பெறவில்லை. இங்கிருந்த அரயோப்பாகுவில் பவுலின் உரை நகர மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனெனில், இயேசுவையும் அவரது உயிர்ப்பையும் பற்றிய பவுலின் உரை ஏதன்சு நகர மக்களுக்கு மடமையாகத் தோன்றியது (17:16-34; காண்க. 1 கொரி 1:18-25). ஆகவே, அக்காயா என்னும் உரோமை மாநிலத்தின் தலை நகரமான கொரிந்தை அடைந்தார் பவுல்.

இந்தக் துறைமுக நகரத்தில் பவுலின் பணி மிகுந்து பலனளித்தது. யூதர்கள் சிலரையும் புறவினத்தார் பலரையும் பவுல் மனந்திருப்பினார். இங்கு 18 மாதங்கள் தங்கிப்போதித்து, அவர் நிறுவிய திருச்சபைகளிலேயே மிகுந்த புகழ்பெற்ற கொரிந்தின் திருச்சபையை நிறுவினார். இங்குதான் அவர் அக்கிலா மற்றும் பிரிஸ்கில்லாவைச் சந்தித்தார். கொரிந்தின் சுற்று வட்டாரத்தில் பல கிறிஸ்தவச் சபைகள் தோன்றி வளர்ந்தன. இங்கிருக்கும்போது, தெசலோனிக்கே திருச்சபையின் நிலை பற்றித் தெரிய வந்தார். திமொத்தேயு வந்து, பல இடுக்கண்கள் இருந்தாலும் தெசலோனிக்கே திருச்சபை விசுவாசத்தில் உறுதியாக இருந்தது என்று அறிவித்தார் (18:5; 1 தெச 3:1-2.3). இந்தச் சூழ்நிலையில்தான் பவுல் தெசலோனிக்கேயருக்கான தனது முதல் திருமுகத்தை எழுதினார் (கி.பி. 52). இத்திருமுகத்தில், பல இடைஞ்சல்களுக்கிடையில் அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருப்பதைப் பாராட்டுகிறார். மாசிதோனியாவில் நற்செய்திக்குச் சான்று கூறியதின் விளைவாகத் தான் அடைந்த துன்பங்களை நினைவுகூர்கிறார் (1 தெச 1:2-2:16). ஆண்டவர் இயேசுவின் "இரண்டாம் வருகைக்கு" முன் இறந்தவர்களின் விதி என்னவாகும் என்ற பிரச்சனை தெசலோனிக்கேயர்களிடையே மனக்குழப்பம் உண்டாக்கியது (4:13-18). இப்பிரச்சனைக்குப் பவுல் பதில் அளிக்கிறார். பிரமாணிக்கமுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களும் வாக்களிக்கப்பட்ட மகிமையில் சமமாகப் பங்கு பெறுவர். ஆனால் அந்தப் பெரிய "நாள்" எப்போது வரும் என்பது அறியப்படாததாகவே இருக்கும் என்பதை வலியுறுத்துகிறார் (5:1-11). ஆனால், இது தெசலோனிக்கேயருக்கு உடனடியாகத் தெளிவு அளிக்கவில்லை. மனக்குழப்பத்தை நீட்டித்தது. ஆகவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி மீண்டும் எழுதக் கட்டாயப்படுத்தப்பட்டார். இதுவே தெசலோனிக்கேயருக்குப் பவுல் எழுதிய இரண்டாம் திருமுகமாகும் (கி.பி. 52:53). இதில் பல துன்பங்களுக்கிடையில் அவர்கள் காட்டிய விசுவாசப்பிரமாணிக்கத்திற்கு அவர்களை மீண்டும் பாராட்டுகிறார். ஆனால், ஓர் எச்சரிக்கையையும் அளிக்கிறார். "ஆண்டவரின் நாள்" வருவது உறுதி. அதன்பின் அவரது மக்களின் எதிரிகள் தண்டிக்கப்படுவர். ஆனால் அதற்குமுன் பல அடையாளங்கள் நிகழ வேண்டும். இந்த இறுதிக்கால நிகழ்ச்சிகள் நிறைவேறும்வரை, கிறிஸ்தவர்கள் பிரமாணிக்கமுள்ளவர்களாகவும் செயலாற்றல் மிக்கவர்களாகவும் வாழ வேண்டும் (2 தெச 2:1-12; 3:6-13). வருங்காலம் பற்றிய அக்கறை நிகழ்காலப் பொறுப்புகளிலிருந்து அவர்களுக்கு விடுதலை அளிக்கவில்லை.

பவுல் கொரிந்தில் 18 மாதங்கள் தங்கிப் பணி செய்தார் (அ.ப. 18:11). அவரது வெற்றி யூதர்களின் பகையைத் தூண்டியது. அவர்கள் ஆளுநன் லூக்கியு யுனியு கல்லியோவிடம் பவுலைப் பற்றிக் குற்றம் சாற்றி, அவரது இயக்கத்தைத் தடைசெய்யும்படி கோரினர். ஆனால், கல்லியோ இவற்றைக் கண்டு கொள்ளவில்லை. பவுல் சுதந்தரமாக நற்செய்தியைப் போதித்து வந்தார் (18:12-17). தெல்பியில் கண்டெடுக்கப்பட்ட கற்பொறிப்புச்சான்று கிளாதிய ஆட்சி செய்த (கி.பி. 41:54) பன்னிரண்டாம் ஆண்டில் (கி.பி. 52) கல்லியோ ஆளுநனாக இருந்ததைக் குறிப்பிடுகிறது. இக்காலத்தில் பவுலின் பணி

பற்றிய காலவரையைக் கணிக்க இச்சான்று உதவுகிறது. இவை கொரிந்தில் பவுல் ஒன்றரை அல்லது இரண்டு ஆண்டுகள் தங்கியிருக்க வேண்டும் (கி.பி. 51:53) என்று சுட்டுகின்றன.

கொரிந்திலிருந்து பவுல் சீரிய நாட்டுக்குச் சென்றார். அங்குக் கெங்கிரேயா என்ற துறைமுக நகரில், தான் செய்திருந்த பொருத்தனையின்படி அவர் முடி வெட்டிக் கொண்டார். அங்குக் கப்பல் ஏறி, எபேசு வழியாக செகரியா அடைந்தார். அங்கிருந்து எருசலேமுக்குச் சென்று அந்தியோக்கியா திரும்பினார். அவரது இரண்டாம் மறைபரப்புப் பயணம் வெற்றிகரமாக அமைந்தது (18:18-22).

6. மூன்றாம் மறைபரப்புப்பயணம் (கி.பி. 54:58): சிறிது காலத்திற்கு அந்தியோக்கியாவில் ஓய்வு எடுத்தபின், பவுல் கலாத்தியா, பிரிகியாத் திருச்சபைகளைச் சந்தித்து சீடர்களை உறுதிப்படுத்தினார். பின் நேரடியாக உரோமையரின் ஆசிய மாநிலத்தின் தலை நகரான எபேசுக்கு சென்றார். இப்பயணத்தின் பெரும்பகுதி, ஏறக்குறைய மூன்று ஆண்டுகள், இங்கு நற்செய்தியைப் போதித்து திருச்சபையை நிறுவுவதில் செலவிடப்பட்டது (18:23-19:41; காண்க. 19:10; 20:31). இங்கு, பவுல் அடைந்த வெற்றிகள், அர்த்தமுவின் பக்தர்களின் அச்சம் மற்றும் அரங்கத்தில் ஏற்பட்ட கலகம் ஆகியவற்றை லூக்கா விவரிக்கிறார். ஆனால், மக்கள் முன் பவுல் குற்றமற்றவராக எண்பிக்கப்படுகிறார். இது பவுலுக்கு மிகக்கடுமையான சோதனைகளின் காலமாகும். எபேசை அடைந்த சிறிது காலத்திற்குள்தான் கலாத்தியாவில் நிறுவிய திருச்சபைகளில் கடும் பிரச்சனைகள் தோன்றியது பற்றிப் பவுல் அறிகிறார் (கி.பி. 54). இது பவுல் கலாத்தியருக்கு ஒரு திருமுகம் எழுதத் தூண்டியது. இத்திருமுகம் யாருக்கு எழுதப்பட்டது என்பது தர்க்கத்திற்குரியதாகும். அ.ப. நூல், இத்திருமுகம் அந்த உரோமை மாநிலத்தின் தென் பகுதியினருக்கு எழுதப்பட்டது என்று சுடுகிறது. ஆனால், திருமுகத்தின் சொற்றொகுதி அது வட பகுதியினருக்கு எழுதப்பட்டது என்று சுட்கிறது (காண்க. அ.ப. 16:1-6; கலா 1:2; 3:1; 4:12-14). பிரச்சனை இதுதான்: யூதச்சார்புடைய கிறிஸ்தவர்கள் சிலர், மீட்புப்பெற வேண்டுமானால், சமூகத்திலுள்ள யூதர்களும் புறவினத்தாரும் மோசேயின் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். உணர்ச்சிமிக்க பதிலில், பவுல் எருசலேம் சங்கத்தின் தீர்மானத்தைச் சுட்டிக்காட்டி, இப்பிரச்சனை ஏற்கெனவே தீர்த்து வைக்கப்பட்டுவிட்டது என்று வலியுறுத்துகிறார் (கலா 1:6-2:11). இயேசு கிறிஸ்துவின் வழியாக வெளிப்படுத்தப்பட்ட இறைவன் அருளால் யாவரும் மீட்புப்பெறுகின்றனர். சட்டத்தின் செயல்கள் ஒருவனை இறைவன்முன் ஏற்புடையவனாக்க முடியாது. இறைவனது விருப்பத்தை வெளிப்படுத்த மட்டுமே சட்டத்தால் இயலும். ஆனால், அதைக்கடைப்பிடிக்க அவர்களுக்கு உதவி செய்யமுடியாது. ஆபிரகாமைப்போல் இயேசு மட்டுமே சட்டத்திற்குக் கீழ்ப்படிய முடியும். விசுவசிப்பவர், கிறிஸ்துவில் மகன் தன்மையாகிய விசுவாசத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியில் பங்கு பெற முடியும் (3:1-4:7). சட்டத்தை மீண்டும் ஏற்றுக்கொள்வது அடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்வதாகும் (5:1-15). இந்த அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்தவர்கள் விடுதலை பெற்று விட்டனர். அவர்கள் மகன் தன்மையைக் கொண்டுள்ளனர். அதனால் அவர்கள் வாழவேண்டும் (5:16-6:10). திருச்சபை யூதத்துவத்திலிருந்து சுதந்தரமானதாகும்.

எபேசில் தங்கியிருந்தபோது பவுல் சில சொந்தத்துன்பம் அனுபவிக்க வேண்டியிருந்தது. அஃது அவரது உயிருக்கும் ஆபத்தை விளைவித்தது என்பது பற்றிய குறிப்புகள் உள்ளன (1 கொரி 15:32; 2 கொரி 1:8-10). இத்துன்பம் சிறைவாசத்தையும் உள்ளடக்கியதாகத் தெரிகிறது (பிலி 1:7.13.14.17; காண்க. 2:17; 4:14). இதை அறிந்த பிலிப்பியர்கள் அவருக்குச் சில கொடைகளை அனுப்பினர். அவர்கள் காட்டிய இந்த அக்கறைக்கு நன்றிப் பதிலாகத்தான் எபேசியர் திருமுகம் எழுதப்பட்டது

(கி.பி. 56). இதில் அவர்கள் அனுப்பிய எப்பப்பிராதித்து வழியாக இக்கடிதம் அனுப்புவதாகவும், விரைவில் திமொத்தேயு அவர்களைக்காண வருவார் என்றும், தானே அவர்களிடம் விரைவில் வரப்போவதாகவும் கூறுகிறார் (பிலி 2:19-30). திடீரென்று தொனியை மாற்றி, உடலில் ஊனம் ஏற்படுத்தும் "போலி விருத்தசேதனக்காரர்களைப்" பற்றியும், "கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளாக நடப்போர்" பற்றியும் பேசுகிறார் (3:2; 8:18-10). அத்திருச்சபையில் இரு பெண்களுக்கிடையே நிலவிய சண்டையைப் பற்றி எதிர்பாராத சூழ்நிலையில் பேசுகிறார் (4:2-3). இந்த மாற்றங்களின் விளைவாக, நாம் இப்போது கொண்டிருக்கும் கிரேக்க வடிவில் பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகம் பவுலின் இரு கடிதங்களின் தொகுப்பாகும் என்று சிலர் கருதுகின்றனர் (முதல் கடிதம் பிலி 1:1-3:1; 4:8-23; இரண்டாம் கடிதம் 3:2-4:7). இதை நிரூபிப்பது கடினம். எது எப்படியிருந்தாலும், நூல் முழுவதும் பவுலின் நன்றியுணர்வு (1:3-11), தன்னைப் பொருத்தமட்டும் இறைவனது திருவுளம் நிறைவேற வேண்டும் என்ற பேராவல் (1:12-30), சாவு வரை கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற அவர் தயாராக இருப்பது (2:1-11) ஆகியவை ஒளிவீசுகின்றன. இஃது அவரது ஆட்தன்மையின் மற்றொரு பருமனை வெளிப்படுத்தும் பவுலின் உண்மையான மடலாகும். அவர் அன்பு செய்த சமூகத்தில் அவர் கொண்ட மகிழ்ச்சியும் மன நிறைவுமே அந்தப் பருமனாகும்.

இக்காலத்தில், கொரிந்து திருச்சபையில் ஏற்பட்ட குழப்பங்கள் பவுலின் பயணத்தில் சிக்கல்களை ஏற்படுத்தின. இக்காலத்தில் அவரது பயணத்தைப்பற்றி எதையும் உறுதியாகக் கூற முடியாது (காண்க. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட திருமுகங்கள்). எபேசிலிருந்து முதல் கொரிந்தியர் திருமுகத்தையும், பின் மாசிதோனியாவிலிருந்து 2-ஆம் கொரிந்தியர் திருமுகத்தையும் பவுல் எழுதினார் என்று நம்ப இடமிருக்கிறது. இவை கி.பி. 55:57-க்கு இடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

கொரிந்தில் தொடர்ந்து நிலவிய இடுக்கண் நிலையும் (1 கொரி 1:10-4:21; 2 கொரி 1:15-3:3), எருசலேமுக்காகக் காணிக்கை எடுத்தலும் (1 கொரி 16:1-9; காண்க. உரோ 15:25-27; கலா 2:10) எபேசிலிருந்து புறப்பட பவுலைத் தூண்டின. கப்பல் வழியாக மாசிதோனியாவை அடைந்தார். அங்கு, கொரிந்து திருச்சபையில் எல்லாப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டுவிட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியோடு தீத்து வந்து சேர்ந்தார் (கி.பி. 57). இதற்குப் பதிலாக ஒரு மடல் எழுதினார். இதன் பெரும்பகுதி 2-ஆம் கொரிந்தியரில் உள்ளதாகக் கருதப்படும். இக்கடிதத்தைத் தீத்து வழியாக அனுப்பினார். பின்பு தானே அங்குச் சென்றடைந்தார் (2 கொரி 2:12-13; 7:5-16). அங்கு, குளிர்காலத்தைக் கழித்து (கி.பி. 57-58), எஞ்சியிருந்த பிரச்சனைகளைத் தீர்த்திருக்க வேண்டும் (அ.ப. 20:1-3).

பவுல் அக்காயாவில் குளிர்காலத்தைக் கழித்தபோது (கி.பி. 58) உரோமையருக்கு எழுதப்பட்ட நீண்ட திருமுகத்தை எழுதத்தீர்மானித்தார். உரோமையிலிருந்த மதிப்பு வாய்ந்த சமூகத்தைச் சந்தித்து நற்செய்தியைப் போதிக்கவும், அதன்பின் மேற்கு நோக்கி ஸ்பெயின் வரை சென்று போதிக்கவும், வெகுகாலமாக எண்ணியிருந்தார் (உரோ 1:7-15; 15:28-29; அ.ப. 19:21).

பவுல் இத்திருமுகத்தை எழுதியபின் எருசலேமுக்குச் செல்ல உறுதி பூண்டார். மூன்றாவது மறைபரப்புப் பயணத்தின் முடிவில் அந்தியோக்கியாவுக்குத் திரும்பவில்லை. எருசலேம் செல்லும் வழியில் பிலிப்பி, துரோவா, மிலேத்து ஆகிய இடங்களில் தங்கிச்சென்று தீரை அடைந்தார் (அ.ப. 20:3-21:6). எபேசின் தலைவர்களை மிலேத்துக்கு அழைத்து பிரியாவிடை பெற்றார். அங்கிருந்து பவுலும் அவருடன் இருந்தவர்களும் தொலமாய், செசரியா

வழியாக எருசலேமை அடைந்தனர். இஃதோடு மூன்றாவது மறைபரப்புப் பயணம் முடிவடைந்தது (2:7-16).

7. எருசலேமில் சிறைப்படுதலும் விசாரிக்கப்படுதலும் (கி.பி. 58-63):

எருசலேமில் கிறிஸ்தவ சமூகத்தால் பவுல் மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டார். தனது பணி பற்றிய விவரிப்பை அச்சமூகத்திற்கு எடுத்துக்கூறினார் (21:17-26). புறவினக் கிறிஸ்தவர்கள் எருசலேம் சங்கத்தால் யூதச் சட்ட அனுசரிப்பிலிருந்து விடுவிக்கப் பெற்றிருந்தனர் என்று இச்சகோதரர்கள் அறிந்திருந்தாலும், சிதறிக்கிடந்த யூதர்களும் யூதச் சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று பவுல் போதித்ததாக எழுந்த வதந்தி அவர்களுக்குக் கவலையளித்தது. இந்த வதந்தியைப் போக்க, சகோதரர்களின் ஆலோசனைப்படி பவுலும் மற்ற நான்கு யூதக் கிறிஸ்தவர்களும் துப்புறவுச் சடங்கு செய்து கொண்டு ஆலயத்துக்குள் நுழைந்தனர். இதை வாய்ப்பாகக் கொண்டு, பவுல் புறவினத்தாரையும் ஆலயத்துக்குள் கூட்டிச்சென்றார் என்று பொய்ச் செய்தியைப் பரப்பி, யூதர்கள் கலகம் உண்டாக்கினர் (21:27-36). புறவினத்தார் ஆலயத்துக்குள் செல்லுதல் தடை செய்யப்பட்டிருந்தது. அப்படிச் செய்தால் அதற்குரிய தண்டனை மரணமாகும். பவுல் கைது செய்யப்பட்டு ஆலய வளாகத்திலேயே யூதர்கள் முன் விசாரிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி எருசலேம் யூதர்கள் பவுலை எவ்வளவு பகைத்து வெறுத்தனர் என்று சுட்டுகிறது. ஆலயவளாகத்தில் விசாரித்தல் கலகத்திற்கு இட்டுச்செல்லும் என்றுணர்ந்த கிளாதியு லீசியா என்ற திரிபியூன் பவுலை அங்கிருந்து அகற்றி, விரைவில் யூதப்பொதுச்சங்கத்தின் முன் விசாரணை செய்யச் செய்தான் (20:30-23:11). இது கடும் தர்க்கத்திலும், பவுலின் உயிருக்கு ஆபத்திலும் முடிந்ததால், பவுல் செசரியாவுக்கு அனுப்பப்பட்டு அங்கு இரு ஆண்டுகள் சிறைவாசம் செய்தார் (கி.பி. 58-60).

அங்கு அப்போது ஆளுநனாக இருந்த அந்தோனியு பெலிக்சு யூதர்களின் குற்றச் சாட்டைக் கேட்டான். கைக்கூலி பெறும் எண்ணத்துடன் இவன் வழக்கைத் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருந்தான். ஆனால் பவுல் தன் விடுதலைக்காகக் கைக்கூலி கொடுப்பதாயில்லை (23:12-24:27). இந்தப் பெலிக்சு எப்போது பதவி நீக்கம் செய்யப்பட்டான் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் அவனுக்குப்பின் பொர்க்கியு பெஸ்து ஆளுநன் ஆனான் என்பது உறுதியாகும் (கி.பி. 60-62). இவன் பவுலின் வழக்கை விசாரிக்கத் தொடங்கினான். விசாரணைக்காக தான் எருசலேம் அனுப்பப்பட்டால் அங்கே தனக்கு உறுதியாக மரணம் ஏற்படும் என்று அஞ்சிய பவுல், தனது உரோமைக் குடியுரிமைச் சலுகையைப் பயன்படுத்தி, தன் வழக்கை உரோமையில் சீசரின் நீதிமன்றத்துக்குச் அனுப்பக்கோரினார். உரோமைக்குப் போகுமுன், 2-ஆம் அகிரிப்பா மற்றும் பெர்னிக்கி ஆகியோரின் முன்னிலையில் பவுல் விசாரிக்கப்படுகிறார். அகிரிப்பா அரசன் பவுல் குற்றமற்றவர் என்று அறிவிக்கிறான் (26:30-32). ஆயினும், பவுலின் கோரிக்கைப்படி அவர் சீசரிடம் செல்ல வேண்டும். இதைப் பவுலின் நான்காம் மறைபரப்புப்பயணம் என்றழைக்கலாம் (கி.பி. 60-63).

யூதர்களோடு கொண்ட இந்தப் போராட்டத்தில், உரோமை அதிகாரிகள்முன், பவுல் தனது வழக்கு உயிர்ப்புப்பற்றிய யூதர்களுக்கிடையிலான வழக்காகும் என்று கூறவிழைந்தார் (23:6; 24:20-21). ஆனால், இது தம்மைச் சாவுக்கு இட்டுச்செல்லும் என்ற நிலை ஏற்பட்டபோது தன் வழக்கு உரோமை நீதிமன்றத்துக்குரியது என்று கோரினார் (25:8.10). வழக்கு உரோமை நீதிமன்றத்துக் உரியதாக்கப்பட்டு, எருசலேமிலிருந்து வரக்கூடிய ஆபத்து நீக்கப்பட்ட பின்புதான் கிறிஸ்துவின் உயிர்ப்பை அறிவிப்பதோடு தன் வழக்கை வெளிப்படையாக இணைத்துக்கூறினார் (26:8.22-23). இந்த யுக்திகளுக்குப் பின்னால், உரோமைக்குச் சென்று

போதிக்க வேண்டும் என்ற பேராவல் அவரைத் தூண்டியது எனலாம்.

8. **உரோமையை நோக்கிப் பயணம்:** படைப்பாதுகாப்பின் துணையோடு பவுல் செசரியாவில் கப்பல் ஏறி மீராவை அடைந்தார். அங்கு இத்தாலியா செல்வதற்குக் கப்பல் மாற்றப்பட்டார் (27:1-6). இக்கப்பல் புயலில் சிக்கி மால்தா கடற்கரையில் உடைந்து போயிற்று (27:7-44). பவுல் அங்கு, குளிர்காலத்தைக் கழித்தபின், வேறொரு கப்பலில் பயணம் செய்து அடுத்த வசந்த காலத்தில் இத்தாலியாவிலுள்ள புத்தயோலியை அடைந்தார். அங்கிருந்து தரைவழியாக உரோமைக்குக் கொண்டு செல்லப்பட்டார் (28:1-16). அங்கு இரு ஆண்டுகள் வீட்டுக்காவலில் இருந்தார். "தன்னைக் காண வந்தோரை உபசரித்து, மிக்க துணிவோடு தடை எதுவுமின்றி அவர்களுக்குக் கடவுளின் அரசைப் பற்றிய செய்தியை அறிவித்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய உண்மைகளைப் போதித்து வந்தார்" (28:30-31). இக்கூற்றோடு அப்போஸ்தலர் நூல் முடிகிறது.

உரோமையில் இருக்கும்போது, சிறிய ஆசியாவில் தான் நிறுவிய திருச்சபைகளோடு கடிதத்தொடர்பு கொண்டிருந்தார் பவுல். அவற்றில் ஒன்று ஒனேசிமு என்ற அடிமைக்காக, தன் பழைய நண்பனான பிலமோனுக்குப் பவுல் எழுதிய பரிந்துரைக்கடிதமாகும். இதன் முடிவில் "நான் வரும்போது தங்குவதற்கு ஏற்பாடு செய்யவும்" என்ற வேண்டுகோள், சிறிது காலத்தில் தான் சிறைவாசத்திலிருந்து விடுவிக்கப்படுவதைப் பவுல் எதிர்பார்த்தார் என்று சுட்டுகிறது (பில 22). உரோமையிலிருந்து தான் சிறைக்கூடமடல்களான பிலிப்பியர், கொலோசையர், எபேசியர் ஆகியோருக்கான திருமுகங்கள் எழுதப்பட்டன என்று நம்பப்படுகிறது. இங்கிருந்துதான், மேய்ப்புப் பணித்திருமுகங்களான, திமொத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதலாம், இரண்டாம் திருமுகங்கள், தீத்துவுக்கு எழுதப்பட்ட திருமுகம் ஆகியவை எழுதப்பட்டன என்று பாரம்பரியமாகக் கருதப்பட்டாலும், இவை பவுலின் பெயர் தெரியாத ஒரு சீடரால் எழுதப்பட்டிருக்கலாம். திருமுகம் என்பதை விட ஓர் இறையியல் கட்டுரையாக அமைந்துள்ள எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகமும் பவுலின் பெயர் தெரியாத ஒரு சீடரால் பிற்காலத்தில் எழுதப்பட்டதாகும். இவைபற்றி அந்தந்தத் திருமுகங்கள் பற்றிய தனிக்கட்டுரைகளில் காணக.

9. **பவுலின் மரணம்:** ஈராண்டு முடிவில் பவுலின் வழக்கு உரோமையில் விசாரிக்கப்பட்டு அவர் தீர்ப்பிடப்பட்டிருந்தால் அவர் கி.பி. 62-இல் இறந்திருக்க வேண்டும் அல்லது விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். மேய்ப்புப் பணித்திருமுகங்கள், பவுல் கிழக்கு நோக்கி மற்றொரு பயணம் செய்ததாகச் சுட்டுகின்றன. பவுல் விடுதலை பெற்றபின் மேற்கு நோக்கிப் (ஒரு வேளை, ஸ்பெயின்வரை) பயணம் செய்ததாக உரோமையைச் சேர்ந்த கிளமந்து சாட்சி கூறுகிறார். இரண்டும் நெடுங்காலம் எடுத்திருக்க முடியாது. ஏனெனில், பவுல் சிறைப்படுதலும் கொல்லப்படுதலும் நீரோவின் சாவுக்குமுன் அதாவது, கி.பி. 67-68-க்கு முன் நடந்திருக்க வேண்டும். பாரம்பரியம் பவுல் நீரோவின் ஆட்சியில் (கி.பி. 54-68) மறை சாட்சி மரணம் எய்தினார் என்று கூறுகிறது. உரோமை நகரத்தின் மையம் தீயால் அழிக்கப்பட்ட பின்னணியில் (கி.பி. 64), கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்த நீரோ விடுத்த கட்டளையின் விளைவாக இருக்கலாம். ஆனால், பவுல் மரித்த ஆண்டைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியாது. உரோமைப் பாரம்பரியப்படி "சுவருக்கு வெளியே"யுள்ள புனிதபவுலின் பேராலயம் இப்போது இருக்கும் இடத்தில் பவுல் மறைச்சாட்சி மரணம் எய்தினார் எனலாம். இவர் உரோமைக் குடிமகனாக இருந்ததால், அவர் சிரச்சேதம் செய்யப்பட்டிருக்கலாம்.

IV. பவுல் என்ற ஆள்: பவுலின் திருமுகங்களை வாசிக்கும்போது, அவற்றில் காணப்படும் உணர்ச்சி மிகுந்த போக்கு, பவுல் ஆழ்ந்த, வலிய

மனவெழுச்சி, ஆர்வம் உடையவர் என்று காட்டுகிறது. அதே சமயத்தில் இத்திருமுகங்கள், அவரது கூரிய, கட்டுப்பாடுடைய அறிவுக்கும் சான்று கூறுகின்றன. அவரது தீவிரமான ஆட்தன்மை அவரது சிந்தையைக் குழப்புவதில்லை. தலைமை தாங்குதல், மற்றும் அமைப்புகளை நிறுவுவதில் அவரது ஆற்றல்கள் அவரது மறைபரப்புப் பயண விவரிப்புகளில் தெளிவாகத் தெரிகின்றன. திருமுகங்கள், அவர் சிறு விவரங்களுக்கும் காட்டிய கவனத்தை வெளிப்படுத்துகின்றன.

தம் நண்பர்கள் மற்றும் தோழர்களைப் பற்றி அவர் அடிக்கடி ஆர்வத்தோடும், அக்கறையோடும் பேசுகிறார். இஃது அவர் நட்புறவா ஆட்தன்மையுடையவர் என்று காட்டுகிறது. அவர் பெரும்பாலும் அன்னியர்களைச் சந்தித்து அவர்களோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தார். ஆகவே அவர் திறந்த, ஆர்வமிக்க மனமுடையவராக இருந்திருக்க வேண்டும். கலாத்தியர், கொரிந்தியர், பிலிப்பியர் ஆகியோருக்கும் அவர் எழுதிய திருமுகங்கள், அவர் எந்த அளவுக்குத் தன்னைத் தான் நிறுவிய சபைகளோடு ஒன்றாக்கிக் கொள்ளக்கூடும் என்று காட்டுகின்றன. எங்கும், யூதர்களோடும் புறவினத்தாரோடும் எளிதில் சமமாகப் பழகக்கூடியவர். விவிலியத்திலேயே பரந்த மனப்பான்மை மிக்கவர். பழைய ஏற்பாட்டு உலகோடும் மத்தியதரைக்கடல் நகரங்களின் வாழ்வோடும் அதிகம் அறிமுகம் பெற்றவர். நற்செய்தியில் காணப்படும் கிராமச் சூழ்நிலைக்கும் பவுலின் திருமுகங்களில் காணப்படும் நகரச் சூழ்நிலைக்குமிடையே நுண்ணிய வேறுபாடுகள் இருக்கின்றன. பவுல் நகரத்தைச் சேர்ந்தவர்; அவரது நூல்கள் எதிலும் நாட்டுப்புறம், கிராமம் ஆகியவை பற்றிய உணர்வைக் காண்பது அரிது. இவற்றில் அவர் அக்கறை கொண்டதாகவும் தெரியவில்லை.

பவுல் உடலிலும் உள்ளத்திலும் திண்மையும், உறுதியும் உடையவர் என்பதற்கு அவரது வாழ்க்கைப்பணியே சான்றாகும். அவரது ஆன்மீக உறுதி, அவர் போதித்த இயேசுவோடு கொண்டிருந்த ஒருமைப்பாட்டால் இன்னும் வலிமை பெற்றது. நற்செய்தியை அறிவிப்பது தன்மேல் சுமத்தப்பட்ட கடமையாகக் கருதுகிறார் (1 கொரி 9:16 தொ). அவரது ஆர்வம் மட்டும் நம்மைக் கவரவில்லை. நற்செய்தியை எங்கும் வெற்றியோடு அறிவிக்க முடியும் என்று அவர் கொண்டிருந்த அமைதியான உறுதியும் நம்மைக் கவரவல்லது. இந்த உறுதி விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் மேல் நிறுவப்பட்டதாகும் (2 கொரி 12:9 தொ). கிறிஸ்தவர்கள் அவரை வெறுமனே "அப்போஸ்தலர்" என்று அழைத்து வந்துள்ளனர்.

பவுலின் புறத்தோற்றத்தைப் பற்றி அதிகம் அறிவதற்கில்லை. திருமுறை சேராத, கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த, பவுலின் பணிநூல் என்ற போலிநூல், குட்டையான உடல், வழுக்கைத்தலை, வளைந்த கால்கள், கட்டான உடலுடையவர் என்றும், அவரது கண்புருவங்கள் ஒன்றையொன்று தொட்டன என்றும் சிறிது வளைந்த மூக்குடையவர் என்றும் விவரிக்கிறது. "அவருடைய கடிதங்கள் கடுமையானவை; அழுத்தமிக்கவை. ஆனால், ஆளை நேரில் பார்த்தால் தோற்றமும் இல்லை; பேச்சுத்திறனும் இல்லை" என்று தன் எதிரிகள் தன்னைப்பற்றிக் கூறுவதை எடுத்துக்கூறுகிறார் (2 கொரி 10:10). இஃது அவர் குட்டையான உருவமுடையவர் என்றும், அவருடைய உரைகள் கிரேக்கப் பேச்சுக்கலையின் வடிவத்தையோ, நயத்தையோ கொண்டிருக்கவில்லை என்றும் சுட்டுவதாக அமைந்திருக்கிறது. தான் நோயால் வருந்தியதாக அவர் ஒரே ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார் (கலா 4:13-15). "என் உடலில் தைத்த முள்" (2 கொரி 12:7). என்ற குறிப்பு நோயைக் குறிக்கவில்லை என்று உறுதியாகக் கூறலாம். இது யூதர்களிடமிருந்தான கொடுமையைக் குறிக்கலாம் என்று விளக்கம் அளிக்கலாம்.

V. இறையியல்: பவுலின் திருமுகங்களில் பல இறையியல் கருத்துகள் உள்ளன. அவற்றில் சில: இறைவனின் ஆற்றலும் நேர்மையும், மனித நோக்கில் மனிதன், கிறிஸ்துவே இறைவனின்

ஆற்றலும் ஞானமும், கிறிஸ்தியல், சிலுவையியல், விசுவாசமும் சட்டமும், ஆவியில் வாழ்வு, திருச்சபை கிறிஸ்துவின் உடலாகும், ஆவியால் நடப்பது, இறுதிக்கால இயல் ஆகியவையாகும். இவை பற்றி அந்தந்தத் தலைப்புகள் பற்றிய கட்டுரைகளில் காண்க.

கிறிஸ்துவத்தின் வரலாற்றில், பவுல் படைப்பாற்றல் மிக்க சிந்தனையாளர் ஆவார். கிறிஸ்துவோடு தன்னை ஒன்றித்துக்கொண்டு அவருக்குப் பின்னால் தன்னை மறைத்து அழித்துக்கொள்வதில் தன் வாழ்வை முழுவதும் செலவிட்டார். தமஸ்குச் சாலை அனுபவம் அவரது சிந்தனைக்குத் திசை அளிப்பதில் மையமாக விளங்கியது. இஃதோடு மறை மெய்மை சார்ந்த அனுபவத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் (2 கொரி 12:1 தொ). அவருடைய இறையியலை நிர்ணயிப்பதில் யூதத்துவம் பற்றிய வாதமும் முக்கியமானதாகும். இந்தப் பிரச்சனைக்குப்பதில் காணமுயலும் போது, பவுல் அவருக்கே உரிய முனைப்புடன் கருத்துக்களைக் கண்டுணர்ந்தார். யூதத்துவம், கிரேக்க நகரக்கலாச்சாரம் ஆகிய இரண்டையும் சேர்ந்தவர் என்பது அவரது இறையியல் வளர்ச்சியில் ஓரளவு முக்கியத்துவமுடையதாகும். அவர் தன்னை வளர்த்த யூதத்துவம் பற்றிய ஆழ்ந்த அறிவு மற்றும் அதை ஏற்றலிலோ தான் பயிற்சி பெற்ற ராபிகளின் முறையையோ ஒருபோதும் கைவிடவில்லை. அவர் பழைய ஏற்பாட்டைக் கையாளும் முறை ராபிகளைச் சேர்ந்ததாகும். அவரைக் "கிறிஸ்தவ ராபி" என்று அழைப்பது அவருக்கு ஓரளவு பொருந்தியதாக இருக்கலாம். ஆனால், அஃது அவரது அசாதாரணமான வளமிக்க பலதிறப்பட்ட ஆட்தன்மையை வெளிக்கொணரவில்லை. அவரது கிரேக்க நடை முதல்தரமானதாக இல்லை எனலாம். ஆனால் எளியது, நல்ல நடையாகும். கருத்துச் செறிவினாலும், தம் உள்ளுணர்வான முறையில் முடிவுகளுக்கு வருவதாலும், அவரது நடை சில இடங்களில் தெளிவில்லாது இருப்பதாகத் தோன்றலாம். எந்தப்பிரச்சனையையும் எடுத்து விளக்கி அதற்கு விடை அளிக்கும் போது தனது அறிவு, அனுபவம் ஆகிய மூலங்களை ஒருங்குவித்துச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர். இதிலிருந்துதான் அவருடைய நூல்களின் தரம் வெளியாகிறது. இருகோடித்தன்மையுடன் கூற்றுகளிலும், அவர் கிரேக்கத் தன்மையால் அல்லாது செமித்தியப் பண்புகளால் மட்டுடையவர். துர்வசமாக, இதன் விளைவாக, பல தவறான கோட்பாடுகள் பவுலின் நூல்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியுள்ளன. அதே சமயத்தில் கிறிஸ்தவச் சிந்தனை வரலாற்றில் எந்தப் பெரிய இயக்கமும் பவுலின் நூல்களில் ஒரு அடிப்படையில்லாமல் தோன்றவில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். முதல் தடவையாக அவரில்தான் திருச்சபையும், திருச்சபையில் வாழும் கிறிஸ்துவும் உலகக் கலாச்சாரத்தை எதிர் கொண்டனர். உலகத்தோடு உறவுகொள்வதில் பவுலின் மொழியைவிட மேன்மையானதொன்றைத் திருச்சபை ஒருபோதும் கற்றுக்கொள்ளவில்லை எனலாம்.

பவுல் மற்றும் செனக்காவின் திருமுகங்கள் (PAUL AND SENECA, EPISTLES OF)

இஃது இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட பதினான்கு திருமுகங்களின் தொகுப்பு ஆகும். இக்கடிதங்கள் பவுலுக்கும் செனக்கா என்ற உரோமைத் தத்துவ ஞானிக்கும் இடையே பரிமாறிக்கொள்ளப்பட்டன. இதில் இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்கின்றனர். செனக்கா, பவுல் உண்மையிலேயே கடவுளின் ஆவியைப் பெற்றவர்; அவரின் போதனைகளும், கருத்துக்களும் மிகச் சிறந்தவை எனப் புகழ்கிறார். ஆனால், அவர் கடிதங்களில் அவர் கருத்து அளவுக்கு அவர் மொழி நடை சரியில்லை என்கிறார்.

எரோனிமு இந்தத் திருமுகங்கள் பலராலும் படிக்கப்பட்டது எனக் கூறுகிறார். ஆகவே, இதன் காலம் நான்காம் நூற்றாண்டுக்குப் பிந்தியதாக இருக்க முடியாது. இஃது இலத்தீன் மொழியில் எழுதப்பட்டது.

செனக்கா ஸ்பெயினில் பிறந்து உரோமையில் கல்வி கற்றவர்; ஸ்தோயிக்கு ஞானியும், அரசியல்வாதியுமாவார். இவர் பேரரசன் நீரோவுக்கு ஆசிரியராகவும் ஆலோசகராகவும் இருந்தார். தனக்கு எதிரான ஒரு சதித்திட்டத்தில் செனக்கா பங்கெடுத்ததாக நீரோவால் சந்தேகிக்கப்பட்டதால், செனக்கா கி.பி. 65-இல் தற்கொலை செய்து கொண்டார். இவருடைய ஒழுக்க போதனைகள் கிறிஸ்தவப் போதனைகளுக்கு மிக நெருங்கியதாக உள்ளன. ஆகவே, பல திருச்சபைத் தந்தையர்கள் இவர்பால் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். செனக்காவை ஒரு கிறிஸ்தவராகக் காட்டவும், உரோமையர் பவுலின் திருமுகங்களை வாசித்தறிய ஊக்குவிக்கவும் இந்நூல் எழுதப்பட்டது என்று கருதப்பட்டது.

பவ்வாய் (BAVVAI)

இவர் கெயிலா மாவட்டத்தின் ஒரு பாதிக்கு ஆளுநராய் இருந்த ஏனதாத்தின் மகன் (நெகே 3:18). லேவியரான இவர், நெகேமியாவின் தலைமையில் எருசலேம் நகரின் சுவர் திரும்பவும் கட்டப்பட உதவியவர் (3:17-18).

சில எபிரேய கையெழுத்துப் பிரதிகள், சீரியக்கு மற்றும் சில கிரேக்க வாசகங்களின்படி, பவ்வாய் என்பவரும் பின்னுாய் என்பவரும் ஒரே ஆளாக இருக்கலாம் (3:24).

பழங்கள், பழப்பொருட்கள் (FRUITS, FRUIT PRODUCTS)

பழைய ஏற்பாட்டில் 100 முறைகளுக்கு மேலாகவும், புதிய ஏற்பாட்டில் 60 முறைகளுக்கு மேலாகவும் இந்தச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பெரும்பாலும் இந்தச்சொல், குறித்துச் சொல்லப்படாமல், அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பழச்சதை, விதைகளைச் சுற்றியுள்ள சதைப்பகுதி. விவிலிய மக்கள், அவர்கள் வரலாற்றில் நிலத்தோடு ஒட்டி வாழ்ந்ததால் இந்தச் சொல்லை அடிக்கடி பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அவர்களது பழக்கத்தில் இருந்த மிக முக்கியமான பழங்களாக ஒலிவப்பழம், அத்திப்பழம், திராட்சைப்பழம் ஆகியவை யோத்தானின் உவமையில் சொல்லப்படுகின்றன (நீதி 9:7-15). விவிலியத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற மற்றப் பழங்கள். வாதுமைப்பழம், ஆப்பிள்பழம், பேரீச்சம்பழம், முலாம் பழம், மல்பரிப்பழம், மாதுளங்கனி, காட்டத்திப்பழம் ஆகியன. தூதாயீம் கழற்சிமயிற்கொன்றை ஆகிய மரப்பழங்களை எப்போதாவது கிடைத்த நேரத்தில் உண்டார்கள்.

பழைய ஏற்பாட்டில் சில எபிரேயச்சொற்கள் சில வகையான பழப்பொருட்களைக் குறிக்கின்றன.

(அ) திராட்சை அடைகள், கிச்சிலிப்பழங்கள் (2 சாமு 6:19 = 1 நாள் 16:3; உ.ச. 2:5; எசா 16:7; ஓசே 3:1).

(ஆ) கோடைக்காலம் வருமுன் பருவம் தப்பிப்பழுத்த அத்திப்பழம் (எசா 28:4; எரே 24:2; ஓசே 9:10; மீக் 7:1).

(இ) அத்திப்பழ அடைகள் (1 சாமு 25:18; 30:12; 2 அர 20:7 = எசா 38:21; 1 நாள் 12:40).

(ஈ) காட்டுத்திராட்சை (1 சாமு 25:18; 30:12; 2 சாமு 16:1; 1 நாள் 12:40).

(உ) அத்திப்பழக்குலை, தோற்பை திராட்சை ரசம் (2 சாமு 16:1-2; எசா 16:9; எரே 40:10, 12; 48:32; ஆமோஸ் 8:1-2).

(ஊ) அத்திமரப் பழம், நல்ல கனி (நீதி 9:11).

புதிதாக நடப்பட்ட மரத்தின் கனியை 5 வருடங்களுக்கு உண்ணக்கூடாது (லேவி 19:23-25). முதல் மூன்று வருடங்களில் கிடைக்கின்ற எந்தக்கனியும் விலக்கப்பட்டதாகவே இருக்கும். நான்காம் ஆண்டில் வருகின்ற கனி ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்.

பழங்கால மேற்காசிய மொழிகள் (LANGUAGES OF THE ANCIENT NEAR EAST)

பாபேல் கோபுரம், பெந்தகோஸ்தே நாள் போன்ற விவிலியக் கதைகள் பழங்காலத்தில்

மொழிப்பிளவுகள் ஏற்பட்டதைக் குறிப்பிடுகின்றன. ஆதி 10-இல் குறிப்பிடப்படும் மக்கள் கணக்கினை மையமாகக் கொண்டு ராபிகள் 72 மொழிகள் பேசப்பட்டதாகக் கணித்தனர். இக்கருத்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. விவிலியத்தில் குறிப்பிடப்படும் பல மக்களின் மொழியைப் பற்றி விளக்கம் நம்மிடம் இல்லை. அதே சமயம், பல மொழிகள் விவிலியத்துடன் தொடர்பு அற்றனவாகவும் உள்ளன. இத்தகைய மொழிகளைப்பற்றிய அறிவு, எழுத்து ஆதார மூலங்களிலிருந்தே கிடைக்கின்றது.

மேற்காசிய நாடுகளில் எழுத்துமுறை ஏறக்குறைய கி.மு. 3500-ஐ ஒட்டித்தான் ஆரம்பமானது. எனவே, இக்காலத்திற்கும் முற்பட்ட நிலையை நாம் அறியோம். ஆரம்ப எழுத்து முறையானது சித்திர எழுத்து முறையாகவும், ஒலியைக் குறித்துக் காட்டாத சொல்லின் கருத்துக் குறியீடாகவும் இருந்தன. பின்னர் அடையாளமானது பொருளுக்கு அல்லாமல், ஒலிக்கு அடையாளமாக மாறியபோது ஒலியமைப்பு வடிவம் பெற்றது. பிற்காலத்தில்தான் இன்றைய எழுத்து முறை உருவாக்கப்பட்டது.

மேற்காசிய மொழிகளில் சில முற்றிலும் அறிவிற்குப் புலனாகக் கூடியதாகவும், மற்றவை ஓரளவுதான் புரியக்கூடியதுமாக உள்ளன. புவியியல் சம்பந்தம் அல்லாத எந்தப் பிரிவும் நடைமுறைக்கு கடினமானதாக அமையும்.

1. மெசபொத்தாமியத் தொகுதி:

எழுத்துக் கலை தெற்கு மெசபொத்தாமியாவில் ஆரம்பமானதாகத் தோன்றுகிறது. இங்குக் காலத்தால் முந்திய வாசகங்கள் சுமேரிய மக்கள் சித்திர எழுத்து முறையைக் கண்டுபிடித்துக் களிமண்ணில் எழுத ஆரம்பித்து, ஆப்பு எழுத்துக்களை வளர்த்தனர். ஏறக்குறைய கி.மு. 3200 முதல் அர்சாசித்துக் காலம்வரை சுமேரிய வாசகங்கள் இவ்வெழுத்து முறையில் இருந்தன. இவை செமித்திய மற்றும் இந்தோ – ஐரோப்பியன் அல்லாத மொழி. இதில் எமெகு, எமெசால் என்ற இரு பிரிவுகள் உள்ளன. எமெகு பழமையானது. மூன்றாம் ஆயிரமாண்டுகளின் ஆரம்பக்காலத்தில் செமித்திய மொழிபேசுதல், வடக்கு, மத்திய மெசபொத்தாமியாவில் முக்கிய இடம் வகித்தது. சுமேரியர்களிடமிருந்து ஆப்பு எழுத்து முறையைப் பெற்று, செமித்தியர்கள் தங்களின் சொந்த மொழியை இம்முறையில் எழுதினர். இதுதான் அக்காதிய மொழியாகும். இதில் பாபிலோனியா மற்றும் அசீரியா என்ற இரு பிரிவுகள் இருந்தன. பதினைந்து, பதிமூன்றாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அக்காதிய மொழியானது பொதுமொழியாக மாறி, செமித்தியர் அல்லாதவர்களாலும் பயன்படுத்தப்பட்டது. இது கப்பதோக்கியன், நூசி, எலாமிய மற்றும் மாரி என்ற பிரிவு வகைகள் உருவாக வழிவகுத்தது. அக்காதிய மொழியானது, ஏறக்குறைய கி.மு. 2800 முதல் கி.பி. 50-க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகின்றது. அக்காதிய மொழி மிகமுக்கிய இடம் வகித்தது.

2. சக்ரோஸ் தொகுதி: முற்காலத்திலிருந்தே குன்றுகளில் வாழ்ந்த மக்கள் மெசபொத்தாமியாவில் குடியேறி வாழ்ந்தனர். சக்ரோஸ் மலைகளிலிருந்தும் சில கூட்டத்தினர் குடியேறினர். இப்பகுதியைச் சார்ந்தவர்கள் புதிய மரபினை உருக்கின் நான்காம், ஐந்தாம் அரச மரபுகளுக்கு இடையே ஏற்படுத்தினர். இந்தக் குட்டியன் மரபு அரசர்களின் பெயர்கள் செமித்திய மொழியைச் சேர்ந்தவையல்ல. பழை ஏற்பாட்டு ஓரியர்களான ஊரியர்களின் குடியேற்றம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஊரியர்களின் மொழியானது ஆப்பு எழுத்து வாசகங்களிலிருந்தே தெரிய வருகின்றது. எலாமிய மொழியில் போதிய ஆதாரங்கள் இருந்தாலும் அவை முற்றிலும் புலனாகக் கூடியவை அல்ல. ஆரம்ப காலத்தில் ஏலாமியரின் முக்கிய நகராகிய சூசாவின் கல்வெட்டுகள் சித்திர எழுத்து முறையைக் கொண்டது. இது மெசபொத்தாமிய ஆரம்பத்தையோ, தனி வளர்ச்சியைக் கொண்டதாகவோ இருக்கலாம்.

பிற்காலத்தில் சூசா மக்கள் ஆப்பு எழுத்து முறையைப் பின்பற்றினார்கள்.

3. **அனத்தோலியன் தொகுதி:** ஆப்பு எழுத்து முறை அனத்தோலியாவின் மேற்குப் பகுதியிலும் பரவி அக்காதிய மற்றும் பிராந்திய மொழிகளை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இம்மொழி ஊரியர்கள் மூலமாக இத்தியர்களை வந்தடைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தோ - ஐரோப்பிய மொழி பேசிய இம்மக்கள் மேற்கிலிருந்து சிறிய ஆசியாவில் நுழைந்து காலிசு ஆற்றின் வளைவுப் பகுதியில் ஒரு அரசை ஏற்படுத்தினார்கள். இம்மக்கள் தங்களை நேசியன்கள் என்று கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இவர்கள், அங்கு வாழ்ந்த பழைய காத்தி மக்களை அகற்றி உரிமையைப் பெற்றார்கள். இந்தக் காத்தி மக்கள்தான் பின்னர்க் கித்தி என்று அழைக்கப்பட்டனர்.

அவர்களின் சொந்த மொழி இந்தோ - ஐரோப்பியன் ஆகும். ஆனால், பழைய மக்களின் மொழியான மூல-காத்தி வேறு எந்த மொழியுடனும் தொடர்பற்றதாகக் காணப்படுகின்றது. இத்திய அரசுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் சித்திர எழுத்துமுறையிலான கல்வெட்டுகள் கசுவட்டுவானாவின் சிலிசிய அரசு மொழியில் அமைந்ததாகக் கருதப்படுகின்றன. நேசியர்கள் மட்டுமல்லாமல் இன்னும் சில மக்கள் பிரிவினரும் இதே காலகட்டத்தில் இந்தோ-ஐரோப்பிய மொழிபேசுபவர்களாக வாழ்ந்தனர் என்று இத்திய ஆப்பு எழுத்து வாசகங்கள் காட்டுகின்றன.

சற்றுப் பிற்பட்ட காலத்தில் இந்தோ - ஐரோப்பியர்களின் படையெடுப்பின் காரணமாக பிரிகிய மொழி பேசுபவர்கள் மத்திய அனத்தோலியாவில் புகுந்தனர். இதன் பழைய கல்வெட்டுகள் 7 அல்லது 6-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. இவை பழைய மேற்குக் கிரேக்க எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பட்டன. புதிய பிரிகிய கல்வெட்டுகள் உரோமையரின் காலத்தில், சாதாரணக் கிரேக்க எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பட்டன. பிரிகிய மொழி, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையிலும் பேசப்பட்டதாக ஒரு கருத்து உள்ளது. உரார்தேய மொழியும் ஆப்பு எழுத்து முறையிலேயே எழுதப்பட்டது. இதனை வன்னிக் என்று அழைத்தனர். ஏனென்றால், ஆரம்பகாலக் கல்வெட்டுகள் வான் ஏரிக்கருகிலிருந்து வந்தன. சிலர் இதனைக் கல்தி என்றும் அழைக்கின்றனர். இந்தக் கல்வெட்டுகள் கி.மு. 840-640-க்கு இடைப்பட்ட காலத்தைச்சேர்ந்தவை. இவை செமித்திய மற்றும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளைச் சேராதவையாகும். இதனை ஊரிய மற்றும் கவுகாசிய மொழிகளுடன் தொடர்புபடுத்திப் பார்த்ததில் வெற்றிகரமான முடிவுகள் கிடைக்கவில்லை.

4. **ஈரானியத்தொகுதி:** மேதிய மற்றும், பாரசீகப்பகுதிகள் எலாமிற்கு வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகளில் இருந்தன. இந்த இந்தோ - ஐரோப்பிய மொழி பேசியவர்கள், வேறுபட்ட பேச்சு வழக்கினைக் கொண்டிருந்தவர்களிடையே குடியேற வந்தனர். தாரியு, சைரஸ், செருசு, அர்த்தக் சஸ்தா ஆகிய அரசர்களின் முற்காலக் கல்வெட்டுகள் ஆப்பு எழுத்து முறையிலேயே எழுதப்பட்டன. பாரசீகத்திலிருந்து பாரசீக மொழி வந்தது. இதனைப் பழைய பாரசீக மொழி என்பர். மேதிய மொழியானது ஆட்கள் அல்லது இடங்களின் பெயர்களிலிருந்தே தெரியவருகின்றது. இது, மத்திய ஈரானியர்களின் மொழிக்கு வழிசெய்தது.

பழைய சொராஸ்திய மதநூல் மொழியான அவெஸ்தன் தென்கிழக்குப் பகுதியின் மொழியான பாக்தியனைப் பிரதிபலிப்பதாகக் கருதப்பட்டது. சித்தியர்களின் மொழியும் ஈரானிய வகையைச் சார்ந்ததே.

5. **சீரிய - பாலஸ்தீனியத்தொகுதி:** சீரியாவிலும், பாலஸ்தீனத்திலும் சித்திர மற்றும் ஆப்பு எழுத்து முறைகள் பயன்படுத்தப்பட்டு, இவற்றிலிருந்தே பிராந்திய மொழி எழுத்துகள்

வளர்ந்தன. இரஸ்சம்ரா என்ற இடத்தில் பண்டைய நகரான உகாரித்தை ஆராய்வதற்காகச் செய்யப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிப் பணியின் மூலம் அகரமுறையில் எழுதப்பட்ட இலக்கியம் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ஆப்பு எழுத்து முறையின் அடையாளங்கள் காணப்பட்டன. இந்த உகாரித்து வாசகங்கள் கி.மு. 1500 - 1300 காலக்கட்டத்தைச் சார்ந்தவை; ஒரு செமித்திய மொழியில் எழுதப்பட்டன. பெனிசிய மொழியும் ஒரு செமித்திய மொழிதான். வட ஆப்பிரிக்காவின் பெனீசியக் குடியேற்றப்பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட மொழி அமைப்பினைப் பூனிக் என்று அழைத்தனர். அகுஸ்தினார் காலம்வரை இது பயன்படுத்தப்பட்டது. பிபுலோசில் செய்யப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம், எகிப்திய மொழியைச் சார்ந்த பாதி சித்திர எழுத்து முறையிலான மற்றொரு பிரிவைச் சார்ந்த கல்வெட்டுகள் வெளிக்கொணரப்பட்டன. இந்தப் பிபுலோசிய மொழியும் செமித்திய மொழியைப் போன்றதாகக் கருதப்படுகின்றது. கானானிய மொழிகளான எபிரேயம், அரமேயிக்கு, சமாரிய, மோவாபிய, ஏதோமிய மற்றும் அம்மோனிய மொழிகள் அனைத்துமே செமித்திய மொழியினத்தைச் சார்ந்தவையாகும்.

அராபியர்களின் மொழியினைப் பற்றிய சில குறிப்புகளும் கிடைத்துள்ளன. தென் அராபிய அரசுகளிடமிருந்து கிடைத்த கல்வெட்டுகளில் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மினேயோ - சபேயன் மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. சில வட அராபியக் குழுக்கள் இவற்றிலிருந்து தங்களின் எழுத்துகளைக் கற்றுக்கொண்டு அவர்களின் மொழிகளான தெதானிய, லிகியானிய தாமுதிக்கு மற்றும் சாபைத்திய மொழிகள் ஆகியவற்றில் இவ்வாறு எழுதினர். பெந்தகோஸ்தே நாளில் அங்குத் தங்கியிருந்த அராபியர்கள் நபத்தேயர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் மொழி திருத்தப்பட்ட அரமேயிக்கு எழுத்துமுறையினில் இருந்தது. இஸ்லாமிய காலம்வரை இது தொடரப்பட்டது. அனைத்து அராபிய மொழிகளும் செமித்திய வகையைச் சார்ந்தவை.

6. ஆகியன் தொகுதி: வரலாற்றுக் காலங்களில் கிரேக்க மொழியானது பல வகைகளில் பேசப்பட்டது. ஏனெனில், பலவிதமான பேச்சு வழக்கினையுடைய மக்களிடையே கிரேக்க ஆதிக்கம் செலுத்தப்பட்டதால் அவர்களின் மொழிகளும் பல்வேறுபட்டதாக அமைந்தன. இத்தகைய மொழிகள் சிலவற்றைப் பற்றிய ஆதாரங்கள் கிரேத்தா மற்றும் சிப்ரிய கல்வெட்டுகளில் உள்ளன. மினோவான் மொழிக்கான சான்று கிரேத்த சித்திர எழுத்துக் கல்வெட்டுகளில் உள்ளது.

சில சிப்ரிய கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து அமைப்பு கிரேத்த முறையை ஒத்ததாக இருக்கின்றது. இவற்றைச் சிப்ரிய - மினோவான் என்று அழைக்கின்றார்கள். சிப்ரிய மொழியில் அசை எழுத்து முறை பயன்படுத்தப்பட்டது.

7. சிறிய ஆசியாவின் கடலோர மொழிகள்: இவற்றில் பெரும்பான்மையானவைகளை அவற்றின் நேரியப் பெயர்களிலிருந்தும், சிலவற்றைப் பொருள் விளக்கங்களின் மூலமாகவும், இன்னும் சிலவற்றைச் சிறிய கல்வெட்டுகளின் மூலமும் அறிகின்றோம். சிலிசிய, பிசிதிய, மைசிய, இஸவரிய மற்றும் லிக்கவோனிய மொழிகளைச் சில பொருள் விளக்கங்களின் மூலமே அறிகின்றோம். இவை இந்த மொழிகளின் பண்புகளை விளக்கியுள்ளன.

கி.மு. நான்கு அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிதேத்தோ - பம்பிலியன் மொழியிலான நாணயங்கள் கிடைத்துள்ளன. சிதேத்தோ மற்றும் கிரேக்க மொழியிலான மூன்று கல்லறைப் பொறிப்பு எழுத்துகள் கிடைத்துள்ளன. காரியன் என்னும் மொழியைப் பெயர்களிலிருந்தும், பொருள் விளக்கங்களில் இருந்தும், சில பொறியெழுத்துகளின் மூலமும் அறிகின்றோம். சர்தையில் நடந்த அகழ்வாய்வுகளில் கிடைத்த கல்வெட்டுகள் லிதியா மொழியைக் கொண்டவை. இக்கல்வெட்டுகள் கி.மு. 5-4ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை.

8. எகிப்திய-பெர்பெர் தொகுதி: பழைய எகிப்திய மொழி, சுமேரிய மொழியைப் போன்ற பழமை வாய்ந்தது. முதலில் இது சித்திர எழுத்துமுறையிலேயே எழுதப்பட்டது. வரலாற்றுக் காலக்கட்டத்தில் இந்தமொழி பெரும் மாறுதல்களை அடைந்தது. எனவே ஒன்றுமுதல் எட்டாவது அரச மரபுவரை (கி.மு. 3000 - 2155) பயன்படுத்தப்பட்ட மொழியைப் பழைய எகிப்திய மொழியென்றும், ஒன்பது முதல் பதினெட்டாம் அரச மரபுக்குட்பட்ட (2155 - 1350) காலத்திய மொழியினை மத்திய எகிப்திய மொழியென்றும், பத்தொன்பதிலிருந்து இருபத்தைந்தாம் அரச மரபுக்கு இடைப்பட்ட காலத்திய (1350 - 720) மொழியைப் பிற்கால எகிப்திய மொழி என்றும் பிரித்துள்ளார்கள்.

இக்காலத்திலிருந்து உரோமையரின் காலம் வரைக்குமான மொழியைத் தெமோதிக்கு என்றும், எகிப்து கிறிஸ்தவமயமாக்கப்பட்ட பின்னர்க் கிரேக்க எழுத்துமுறையில் அமைக்கப்பட்ட மொழியைக் கோப்திக்கு என்றும் அழைத்தனர். கி.மு. எட்டாம் நூற்றாண்டில் நபதாவின் எத்தியோப்பிய ஆட்சியாளர்கள் தங்களின் கல்வெட்டுகளில் எகிப்திய மொழியையே பயன்படுத்தினார்கள்.

எகிப்திற்கு மேற்கே, பெர்பெர் மொழிகள் பேசப்பட்ட பகுதி உள்ளது. இவற்றில் ஒன்றான நுமிதிய மொழி பொறி எழுத்துகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, விநோதமான லிபிய எழுத்துகளால் எழுதப்பட்டது. இந்த எழுத்துகளின் ஆரம்பத்தை அறியமுடியவில்லை. இம்மொழி வாசகங்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்ற ஆதாரமற்ற கருத்து உள்ளது.

பழங்கால விவிலிய வாசகங்கள் (VERSIONS ANCIENT)

மறைநூல்கள் எழுதப்பட்ட மூல மொழிகளில் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்காக இம்மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டன. கி.மு. கடைசி ஆறு நூற்றாண்டுகளில், அரமேயிக்கு மொழி பேசிய யூதர்கள் பழைய ஏற்பாடு எழுதப்பட்ட மரபுமுறை எபிரேய மொழியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இவர்களுக்காக அரமேயிக்கு மொழியில் பொழிப்புரைகள் செய்யப்பட்டன. இவை தார்கும் என்று அழைக்கப்பட்டன. அதே சமயத்தில் கிரேக்க மொழி பேசிய யூதர்களுக்காகவும் புறவினத்தாருக்காகவும் பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. பிற்காலத்தில், மூல எபிரேய மொழியிலிருந்தோ, பழைய கிரேக்க மொழி பெயர்ப்புகளிலிருந்தோ பழைய ஏற்பாடு பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

அதை தேவையின் அடிப்படையில் புதிய ஏற்பாடு மூல கிரேக்க மொழியிலிருந்து பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

இவற்றில் சில முக்கியமானவையாகும்:

1. அரமேய தார்கும்.

2. கிரேக்க மொழிபெயர்ப்புகள்

அ. எழுபது நூல்.

ஆ. பிற கிரேக்க மொழி பெயர்ப்புகள்.

3. இலத்தீன் மொழிபெயர்ப்புகள்.

அ. பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு.

ஆ. வுல்காத்தா.

4. சீரியக்கு மொழிபெயர்ப்பு.

5. கோப்திக்கு மொழிபெயர்ப்பு.

6. கோதிக்கு மொழிபெயர்ப்பு.

7. அர்மேனிய மொழிபெயர்ப்பு.

8. கியோர்சியன் மொழிபெயர்ப்பு.

9. எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு.

10. அராபிய மொழிபெயர்ப்பு.

11. ஸ்லாவோனிக் வாசகங்கள்.

இவை பற்றிய தனித்தனி தலைப்புகள் பற்றிய கட்டுரைகளில் காண்க.

பழத்தோட்டம் (ORCHARD)

இதைக்குறிக்கும் எபிரேயச்சொல் பாரசீக மொழியைச் சேர்ந்த சொல்லாகும். இச்சொல் வளமான தோட்டத்தையும் (உ.ச. 4:3), காட்டினையும் (நெகே 2:8), பல்வகைப் பழத்தோட்டங்களையும் (திருவுரை 2:5; உ.ச. 6:11; நெகே 9:25) குறிக்கப்பயன்பட்டது.

பழமில்லாத அத்திமர உவமை (PARABLE OF BARREN FIG TREE)

இந்த உவமை நிகழ்ச்சியை மாற் 11:13-14.20-21; மத் 21:18-23-இல் வாசித்தறிக. இந்நிகழ்ச்சி, வாசகத்தின் முன், பின்வரும் பகுதிகளோடும் இயேசுவின் பண்போடும் ஒத்துப்போவதாகத் தெரியவில்லை. இதுவரை அளிக்கப்பட்டிருக்கும் விளக்கங்களும் நிறைவு அளிப்பதாகத் தெரியவில்லை. இது லூக் 13:6-9-இல் வரும் உவமையின் நாடகப்பாணிச் செயலாக்கமாகும் என்று கருதப்படுகிறது. இஃது இந்த உவமை தங்கள் வாழ்வில் உரிய பலனைக் கொடாதவர்களின் பரிதாப மிக்க முடிவைச் சுட்டிக்காட்டுகிறது.

வசந்த காலத்தொடக்கத்தில் இலைசுள் தோன்றுவதற்கு முன்னே, அத்திக்காய்கள் தோன்றும் (உ.ச. 2:13). இஃது அந்த அத்திமரம் உரிய காலத்தில் நல்லபலனை அளிக்கும் என்று முன்னதாகவே சுட்டிக்காட்டும். இக்காய்கள் இல்லாமை, இந்நிகழ்ச்சியுரைக்கு அடிப்படையாக இருக்கலாம். இருப்பினும், இயேசு திடீரென்று உணர்ச்சிவசப்பட்டுச் செயலாற்றுவதை விளக்கவில்லை என்றே கூறலாம். ஒரு வேளை இந்நிகழ்ச்சியுரை, மூலத்தில் இறுதிக்கால இயல் பொருளைச் சுட்டிக் காட்டியிருக்கலாம். ஆனால், இந்நிகழ்ச்சியுரையின் மூலச் சூழ்நிலையும், பொருளும் குழப்பப்பட்டிருக்கிறது, அல்லது தவறிப் போய்விட்டது என்பது தெளிவு. லூக்கா தனது நற்செய்தியில் இந்நிகழ்ச்சியுரையை விட்டுவிடுவது இந்த இடுக்கண் நிலையைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது எனலாம்.

சாபத்திற்கும் அதன் நிறைவேற்றத்துக்கும் இடையில் ஆலயத்தை இயேசு சுத்தி செய்த நிகழ்ச்சி புகுத்தப்பட்டுள்ளது. இது யூத ஆலய வழிபாடும் மற்றவைகளும் கனிகொண்டிராத அத்தி மரத்துக்கு ஒப்பானவையாகும். ஆகவே, அத்திமரம் பட்டுப்போனது போல், ஆலயமும் அதைச் சார்ந்த யாவையும் கண்டனம் பெறுகின்றன; அவை அழிக்கப்படும் என்ற பொருளையும் உணர்த்தக்கூடியது இந்த உவமை நிகழ்ச்சி.

பழிவாங்குதல் (VENGEANCE)

இன்றைய சூழ்நிலையில் பழிவாங்குதலென்பது, தீமைக்குத் தீமை செய்வதன் மூலம் ஒரு தவற்றைத் தண்டிப்பதாகும். விவிலிய மொழியில் பழிவாங்குதல் என்பது நீதியை மீண்டும் ஏற்படுத்துதல், தீமையின் மீதான வெற்றி என்று முதன்மையாகப் பொருள்படும். தவறு புரிந்தவர் மீதான வெறுப்பினால் ஒருவரைப் பழிவாங்குவதென்பது எப்போதுமே தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், மீறப்பட்ட உரிமையினைப் பழிதீர்ப்பதென்பது ஒரு கடமையாகும். இப்பொறுப்பைச் செயல் படுத்துவதென்பது வரலாற்றுப்போக்கில் வளர்ச்சியடைந்தது. தனிநபரிடமிருந்து எடுக்கப்பட்டு, இது சமூகத்தின்மேல் சுமத்தப்பட்டது. படிப்படியாகத் தான் மட்டுமே நீதியின் அமைப்பினுடைய சட்ட பூர்வமான பழி தீர்ப்பாளரென இறைவன் சுட்டிக்காட்டுகிறார்.

1. **இரத்தப்பழி வாங்குவோன்:** இஸ்ராயேலின் தொடக்ககால நாடோடிச் சமுகத்தில், கோத்திரத்து உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பாதுகாப்பையும், ஆதரவையும் அளிக்க வேண்டும். கொலையைப் பொறுத்த மட்டில், கோத்திரத்திற்காக, குற்றவாளியைக் கொல்வதன் மூலம் "இரத்தப்பழி வாங்குவோன்" பழிவாங்குவான் (எண் 35:21). ஆபேலின் வாழ்வில் நடந்தது போல, இரத்தத்தின் குரல் பழிவாங்கக் கூக்குரலிடுகிறது என்ற உறுதி (ஆதி 4:1; யோபு 16:18) கோத்திர ஒருமைப்பாடு

என்ற கருத்துடன் சேர்க்கப்பட்டது. ஏனெனில், யாவே தங்கியிருக்கும் இடத்தை இந்த இரத்தம் தீட்டுப்படுத்துகிறது (எண் 35:33-34). எனவே, நீதியைப் பாதுகாப்ப தென்பது ஒரு கடமையாகும்.

இறுதியாக இஸ்ராயேல் ஓரிடத்தில் தங்கியபின்னர், அது இப்பழக்கத்தை மீண்டும் வழக்கில் கடைப்பிடித்தது (2 சாமு 3:22-27). அதனுடைய சட்டங்கள் (யாத் 21:12; லேவி 24:17) இரத்தப்பழி வாங்குவோனை, நீதியின் பிரதிநிதியாகத் தொடர்ந்து கருதினாலும் (எண் 35:12-19). கோபத்தின் மிகைப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக, அவனது உரிமையின் செயல்பாட்டை வரைமுறைப்படுத்துவதற்கென ஓர் அக்கறை இருந்தது (உப 19:6). அது முதல், வேண்டுமென்றே செய்யப்பட்ட மனிதன் கொலை மட்டுமே (உப 24:16). இரத்தப்பழி வாங்குதலுக்கு உட்பட்டதாகும். கொலையாளி தப்பியோடிய அடைக்கல நகரத்தில் முற்பட்ட விசாரனை ஒன்று நடைபெற வேண்டும் (எண் 35:24-30; உப 19). எனவே, பழிவாங்கும் உரிமையானது படிப்படியாகத் தனிநபரிடமிருந்து சமூகத்தைச் சேர்ந்ததாகிறது.

2. **தனிப்பட்ட பழிவாங்குதல்:** பழிக்குப் பழி என்னும் சட்டத்துடன் (யாத் 21:23.25; லேவி 24:19; உப 19:21), இஸ்ராயேலின் சட்டமானது தீமைக்குத் தீமை புரிய எப்போதும் விரும்புகின்ற மனித உணர்வுகளை எப்போதும் கட்டுப்படுத்துகிறது. காட்டுமிராண்டி காலங்களின் எல்லைலற்ற பழிவாங்கும் எண்ணத்தை இது தடை செய்கிறது (ஆதி 4:15.24). இறுதியாக, இஸ்ராயேலின் சட்டமானது சில குறிப்பிட்ட சம்பவங்களில் பணவகையான இழப்பீடு அளிப்பதன் மூலம் பழிக்கும் பழி சட்டத்தையும் மென்மைப்படுத்துகிறது. இது பிற மேற்காசிய நெறிமுறைகளால் ஏற்கப்பட்ட கோட்பாடாகும் (யாத் 21:18-19.26-27). ஆயினும் பழிக்கும் பழி சட்டத்துடன், ஒழுக்க உணர்வின் மேம்பட்ட வளர்ச்சியினைத் தடை செய்யும் அபாயமும் இருந்தது. சமூக நீதியால் நெறிமுறைப் படுத்தப்பட்டாலும், பழிவாங்குவதற்கான ஆசையானது ஆன்மாவில் தங்கியிருக்கலாம். எனவே, ஒழுக்க அறிவு பற்றிய மனிதனுடைய உணர்வானது பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

அ) தடைசெய்யப்பட்ட பழிவாங்குதல்: புனிதத்தின் சட்டமானது பழியின் அடிப்படைக்கே செல்கிறது: "உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகைக்காதே... பழிக்குப் பழியென உன் இனத்தார்மேல் காழ்ப்புக் கொள்ளாதே. உன்மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்தவன் மீதும் அன்புகூர்வாய்" (லேவி 19:17-18). மன்னிப்பைப் பற்றிய சில எடுத்துக்காட்டுகள் புகழ்பெற்றவை: தான் அனுபவித்த வேதனையையும், தீமையினின்று நன்மையைக் கொணர அறிந்துள்ள இறைவனுடைய திட்டமாக விவரிக்கின்றார் யோசேப்பு (ஆதி 45:3-4; 7:50:19); சவுலுக்கு எதிராகப் பழி வாங்காத தாவீது (1 சாமு 24:4-5; 26:5-12), யாவேயினால் அபிடேகம் செய்யப் பட்டவருக்கு எதிராகக் கையோங்கவில்லை. ஆனால், அதே தாவீது தனது மரணத்திற்குப் பின்னர், சிமயி மற்றும் யோவாபின்மேல் பழி தீர்க்கிறார் (1 அர 2:6-46). எப்படியிருந்தபோதிலும் மன்னிக்கும் கடமை ஒருவருடைய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் வரையறை செய்யப்படுகிறது. இவ்வாறு, பெலிஸ்தியருக்கு எதிராக சிம்சோன் பழிவாங்குவதை நீதிபதி ஆகமம் எவ்விதத்திலும் குறைகூறவில்லை (நீதி 15:3-7). ஞான நூல்களின் இக்கடமையானது மன்னிப்பை ஆழப்படுத்தி, உலகளாவியதாக ஆக்க முயல்கிறது: "பழிவாங்குவோர் ஆண்டவரிடமிருந்து பழிக்குப்பழி பெறுவர்... அடுத்தவர்மீது வெகுளி கொள்ளாதே" (சீரா 28:1.7). இந்தக் கோட்பாடு எவரையும் புறம்பாக்குவதாகத் தெரியவில்லை.

ஆ) இறைபழிக்கு வேண்டுகோள்: இறைவனிலான நம்பிக்கையானது பழிவாங்குதலை முழுவதுமாகக் கைவிடுமாறு நீதிமானை உந்துகிறது. "தீமைக்குத் தீமை செய்வேன் என்று

சொல்லாதே! ஆண்டவரையே நம்பியிரு; அவர், உன்னைக் காப்பார்!" (பழ 20:22). நீதிமான் பழி வாங்காமல், நீதிக்குரிய பழிவாங்குதலை இறைவனிடமே விட்டுவிடுகிறார்: "பழிக்குப்பழி வாங்குவது எனக்கு உரியதாகும் என்கிறார் ஆண்டவர்" (உப 32:35). இவ்வாறு, துன்புறுத்தப்பட்ட எரேமியா "தனது வழக்கை இறைவனிடம் சொல்லும்போது" செயல்படுகிறார் (எரே 20:12). தனது நிலையை இறைவனுடைய நிலையுடன் ஒன்றுபடுத்தியதன் காரணமாக (15:15), "இறைவன் பழிவாங்குவதைத் காண" அவர் உறுதியாகவே விரும்புகிறார் (1:20). அவர் தீமையையன்று, நீதியையே விரும்புகிறார். இஃது இறைவனால் மட்டுமே மீண்டும் ஏற்படுத்தப்பட முடியும்.

அவ்வாறே சங்கீத ஆசிரியரும் ஆரவாரமான செமித்தியச் சொற்றொடரில், "தனது பகைவரின் இரத்தத்தில் தனது பாதங்களைக் கழுவ" விரும்புகிறார் (சங் 58:11). பயங்கர சாபங்களையும் அதனுடன் அவர் சேர்க்கிறார் (சங் 5:11; 137:7-8). ஆயினும் அவர், நீதிக்கான ஆசையாலே தூண்டப்படுகிறார். உணர்வினுடைய உண்மைத்தன்மை பற்றி அவர் தன்னையே ஏமாற்றலாம். ஆனால் அவரது மனப்போக்கின் சமயப் பொருள் மறுக்க முடியாதது. "என் மீட்பர் வாழ்கிறார் என்றும், இறுதியில் அவர் (நெருங்கிய உறவினனாக) மண்மேல் எழுதந்தருளி" நீதியை மீண்டும் ஏற்படுத்துவார் என்றும் நான் அறிவேன் (யோபு 19:25).

3. பழிவாங்கும் இறைவன்: யோபுவின் நம்பிக்கையும், எரேமியாவின் நம்பிக்கையும் வீணானதல்ல. எவ்வழியிலும் உயரிய நடுவர் இறைவனே. இதயத்தினுடைய ஆழமான இடைவெளியை அவர் ஆராய்ந்து, அவரவருடைய செயல்களுக்கேற்ப கைம்மாறு அளிக்கிறார். அவரே இஸ்ராயேலின் மீட்பர் (எசா 41:14). ஆண்டவருடைய நாள் பழிவாங்கும் நாள் என்று அழைக்கப்படலாம் (எரே 46:10). ஏனெனில், அப்போது இறைவன் நீதிக்காகவும் தனது மாண்புக்காகவும் பழிவாங்குவார். இந்தப் பொருளில், இறைவன் மட்டுமே அவருக்காகப் பழிவாங்க முடியும் என்று கூறலாம். எனவே நீதி, மீட்பு, மற்றும் பழிவாங்குதல் முதலியன ஆண்டவருடைய நாளுடன் இணைந்து செல்லும் (எசா 59:17-18). இஸ்ராயேலானது உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருக்கும் வரையில், மனித நடுவர்களின் அநீதியினின்று "பழிவாங்கும் இறைவனாகிய" தனது மீட்பரை நோக்கி, உலகைத் தீர்ப்பிட வருமாறு வேண்டுகோள் விடுக்கலாம் (சங் 94). இது கிறிஸ்தவ மன்னிப்பாக இல்லாவிடினும், ஆண்டவரது வருகையின் நாளை எதிர்பார்த்திருப்பதில், ஆண்டவரிடம் தாழ்ந்த அடிபணிதலாகும்.

4. **கிறிஸ்துவும் பழிவாங்குதலும்:** இயேசு தனது இரத்தத்தைச் சிந்தியபோது, இறுதியாக நேரம் வந்தது. அப்போது, மனித அநீதியின் உச்சநிலை இறைவனுடைய எல்லையற்ற நீதியைக் காட்டியது. அது முதல், விசுவாசியின் செயல்முறைகள் "பழித்துரைக்கப்பட்டபோதும் எதிர்த்துப்பழிக்காத" (1 பேதுரு 2:23) கிறிஸ்துவின் எடுத்துக்காட்டினால் தயக்கமுறும். இயேசு, பழிக்குப்பழி சட்டத்தினுடைய கோட்பாட்டை நிறைவேற்றுகின்ற புதிய சட்டத்தினைத் தொடங்கியதோடல்லாமல், தீமைபுரிவோனை எதிர்க்க வேண்டாம் என்றும் நமக்குக் கட்டளையிடுகிறார் (மத் 5:38-42). இறை நீதியைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பானவை என்று பவுல் கூறுகின்ற (உரோ 13:4) மனித நீதிமன்றங்களின் நீதியையும் இயேசு கண்டனம் செய்யவில்லை. ஆனால், தன்னுடைய சீடர்கள் குற்றங்களை மன்னித்துத் தங்களுடைய பகைவர்களை அன்பு செய்ய வேண்டுமென அவர் கோருகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, தனக்கு எதிரான அநீதியை ஏற்றுக்கொள்பவன் மட்டுமே மற்றவனுடைய அநீதியை மன்னிப்பான் என்று கூறுகிறார். இறை பழிவாங்குதலுக்கான கோரிக்கை மட்டும் இப்போது போதுமானதன்று. ஏனெனில், ஒருவன் "தீமையை நன்மையால்

வெல்ல வேண்டும்" (உரோ 12:21). இவ்வாறு ஒருவன் "தனது பகைவனின் தலையின்மேல் எரியும் தணலைச் சுமத்தி," தனது வெறுப்பை அன்பாக மாற்ற வேண்டிய சூழ்நிலையில் உள்ளான்.

எல்லா நீதியும் கிறிஸ்துவின் இரத்தத்தில் நிறைவேறி விட்டாலும், இறுதிநாள் இன்னும் வரவில்லை என்பதே உண்மை. உலகில் அன்பானது தனது எதிர்விளைவுகளால் துன்புறுகிறது. இயேசுவைப் போன்று கிறிஸ்தவர்களும் அநீதியான வன்முறைக்குப் பலியாகின்றனர். அவர்கள் தங்களைக் கொன்றவர்களை மன்னித்தாலும் (அ.ப. 7:60), பலியானோரின் இரத்தம் இறைவனை நோக்கிக் கூக்குரலிடுகிறது: "பரிசுத்தரும் உண்மையுமான ஆண்டவரே, எவ்வளவு காலம் நீதி வழங்காமல் இருப்பீர்? எங்கள் இரத்தத்தைச் சிந்திய மண்ணுலகத்தாரை எவ்வளவு காலம் பழிவாங்காமல் இருப்பீர்?" (திருவெளி 6:10; 16:6;19:2). வரலாற்றின் தீர்ப்புவரை காலங்கடத்தப்பட்ட நிலையில், இறைவனுடைய பழிவாங்குதலானது முடிவில்லா அரசில் நீதியை மீண்டும் ஏற்படுத்தும். அங்கு மீண்டும் என்றுமே சாபம் இராது (22:3).

பழைய ஆடையும், புதிய துணியும் (OLD GARMENT, AND UNSHRUNK CLOTH)

(மத் 9:16; மாற் 2:21; லூக் 5:36).

பாலஸ்தீன நாட்டிலே பழைய ஆடையிலே புதுத்துணியை வைத்துத் தைக்க மாட்டார்கள். ஏனெனில், இந்தப் புதுத்துணி சுருங்கி, பழைய ஆடையைக் கிழிக்கும். இயேசுவின் நற்செய்தியைப்பின்பற்றி வாழ்தல் மோசே காட்டிய வழியிலே வாழ்வதற்கு மாறுபட்டது. இயேசு இந்த உலகிலே தோன்றி அதைப் புதிய பாதையில் வழி நடத்திச் செல்கிறார். அவர் யூத மதத்தின் கொள்கைகளை எடுத்து, புதிய கிறிஸ்தவ மதத்தை நிறுவவில்லை. மாறாக, அவர் புதிய கொள்கைகளைக் கொண்டு கிறிஸ்தவ மதத்தை நிறுவுகின்றார்.

பழைய இலத்தீன் மொழிபெயர்ப்புகள் (OLD LATIN VERSIONS)

பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு என்பது, எரோனிமு என்பவர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் செய்து முடித்த இலத்தீன் மொழி பெயர்ப்பிற்கு முன்பாக மக்கள் மத்தியில் உலவிய மொழி பெயர்ப்பாகும்.

சுமார் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான், இலத்தீன் மொழியில் விவிலியம் மொழி பெயர்க்கப்பட்டது. இம்மொழிபெயர்ப்பு நடந்த இடம் வட ஆப்பிரிக்கா. இங்கு அக்காலத்தில் திருச்சபையின் வழிபாட்டு மொழியாக இலத்தீன்தான் பயன்படுத்தப்பட்டது.

பழைய ஏற்பாட்டை இப்போது மொழி பெயர்த்தபோது, இதற்கு எழுபது நூல் என்ற கிரேக்க மொழி பெயர்ப்பைத்தான் ஆதாரமாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்; எபிரேய மூலம் பயன்படுத்தப்படவில்லை. இதனால் 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓரிசன் என்ற அறிஞருக்குமுன், எவ்வாறு எழுபது நூல் என்ற கிரேக்க மொழிபெயர்ப்பு இருந்திருக்கிறது என்பதை ஊகிக்க இந்தப் பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

கி.பி. 3-ஆவது நூற்றாண்டில் பல பழைய இலத்தீன் மொழி பெயர்ப்புகள் உலாவி வந்தன. உதாரணமாக, ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனி இலத்தீன் மொழி பெயர்ப்புகள் பழக்கத்தில் இருந்தன. இத்தாலி, பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகள் தங்களுக்கென்ற தனி இலத்தீன் மொழி பெயர்ப்பைப் பெற்றிருந்தன. அத்துடன் ஒரே வசனத்திற்கு வேறுபட்ட வாசகங்கள் பயன்பட்டு வந்தன. உதரணமாக உப 31:17 என்ற வசனத்தைக் குறைந்தது எட்டு வேறுபட்ட வாசகங்களில் அவரவர்கள் விருப்பத்தைப்போலச் சொல்லி வந்தனர். அதேபோன்று லூக் 24:4-5 என்ற வசனங்கள் சுமார் 27 வேறுபட்ட வாக்கியங்களில் கூறப்பட்டு வந்தன. எரோனிமு என்பவர் இச்சூழ்நிலையைப் பற்றிக்குறிப்பிடும்

போது ஒவ்வொரு பழைய இலத்தீன் விவிலியப் பிரதியும், ஒரு தனிப்பட்ட விதத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது எனக்கூறுகிறார். புனித அகுஸ்தினாரும் இந்நிலையைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்; "எண்ணிக்கையில்லாத மொழிபெயர்ப்புகள்" என்கிறார்; நகைச்சுவையாகவும் இதை விளக்குகிறார்; கிரேக்கம், இலத்தீன் இந்த இரண்டு மொழிகளும் சற்றுத் தெரிந்தால் கூடப்போதும், அவர்களுக்குக் கிரேக்க விவிலிய ஏடு ஒன்று கிடைத்துவிட்டால், உடனே அதனை இலத்தீனில் மொழி பெயர்க்க ஆரம்பித்து விடுவார்கள் என்கிறார்.

தற்போது நமக்குக் கிடைக்கும் பழைய இலத்தீன் மொழிபெயர்ப்புச் சுவடிகள் இதனையே நிரூபிக்கின்றன. இம்மொழி பெயர்ப்பின் மொழி நடை சாதாரண மக்கள் பேசும் கொச்சை மொழியில் அமைந்திருக்கிறது. எழுதுவதற்கேற்ற இலக்கிய நடையில் இஃது எழுதப்படவில்லை.

மேலை நாட்டில் விளங்கிய பாரம்பரியத்தைப் பின்பற்றித்தான். பழைய இலத்தீன் மொழிநடை அமைந்திருக்கிறது. குறிப்பாக, புதிய ஏற்பாட்டில் இது தெளிவாகத் தெரிகிறது. பழைய ஏற்பாடும் மேலை நாட்டைச்சார்ந்த லூசியன் அவர்கள் திருத்திய எழுபது நூலை ஒட்டி வருகிறது. ஆனால் இஃது இன்னும் முழுமையாக ஆய்ந்து கூறப்படவேண்டும்.

கி.பி. 4-ஆம், 5-ஆம் நூற்றாண்டை ஒட்டி, இந்தப் பழைய இலத்தீன் மொழிபெயர்ப்புகளை அகற்றிவிட்டு, வுல்கத்தா இலத்தீன் வாசகம் வழக்கிற்கு வந்தது. அறிஞர்கள் கருத்துப்படி, பழைய இலத்தீன் மொழிபெயர்ப்பு ஒரு தனிப்பட்ட மொழிபெயர்ப்பன்று; மாறாக, பல மொழிபெயர்ப்புகளின் தொகுப்பாகும்.

பழைய ஏற்பாடு (OLD TESTAMENT)

நவீன வழக்கத்திலே இதை எபிரேய வேதாகமம் என்று கூறலாம். கிரேக்க வேதாகமமான எழுபதுநூல் கடவுள் மேல் கொண்ட வணக்கத்தின் காரணமாக இதைத்தேவ உடன்படிக்கை என்கிறது. பழைய ஏற்பாடு என்பதற்குப் பதில் பழைய உடன்படிக்கை எனக் கூறுவது சிறந்தது (ஞான 12:21).

இச்சொல் அதாவது, 'உடன்படிக்கை' என்பதில் இரண்டு சமமான நிலையில் உள்ள கட்சிக்காரர்கள் உரையாடுகிறார்கள். ஆனால், ஏற்பாடு என்ற சொல்லில் இறந்துபோன ஒருவர் மட்டுமே தீர்மானிக்கிறார்.

பழைய உடன்படிக்கை யூதர்களோடு ஏற்படுத்தப்பட்டது (2 கொரி 3:14; எபி 9:15). புதிய உடன்படிக்கை எரே 31:30-இல் வாக்குறுதி அளிக்கப்பட்டது. புதிய உடன்படிக்கை கிறிஸ்தவர்களோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது (1 கொரி 11:25; 2 கொரி 3:6; எபி 8:6-13; 10:16-17; காண்க. லூக் 22:20).

பழைய ஏற்பாட்டு மொழிகள் (O.T. LANGUAGES)

பழைய ஏற்பாட்டின் மொழி எபிரேயம் ஆகும். சில பகுதிகள் (எஸ் 4:8-6:18; 7:12-26; எரே 10:11; தானி 2:4-7:28; தோபியாநூல்), அரமேய மொழியில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. 2 மக்கபேயர், சாலமோனின் ஞானநூல், தானி 13-14 ஆகியவை கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. யூதித்து, பாருக்கு, சீராக்கு 1 மக்கபேயர் ஆகியவை எபிரேய மொழியில் எழுதப்பட்டாலும், இவற்றில் கிரேக்க மொழி வாசகங்கள்தான் நமக்குக் கிடைத்துள்ளன. நாம் எப்படி இத்தாலிய வார்த்தையான 'பியானோ' (Piano) ஆங்கில வார்த்தையான 'பஸ்', 'கார்', 'ரோடு', ஆகிய சொற்களையும் தமிழில் பயன்படுத்துகிறோமோ அதே போல் இஸ்ராயேல் மக்களும் தங்களின் அண்டை நாட்டு மொழிகளின் சில சொற்களைத் தங்கள் நூல்களில் பயன்படுத்தினர். காண்க: எபிரேய மொழி, அரமேயிக்கு மொழி, விவிலியத்தின் மொழிகள், பழம் மேற்காசிய மொழிகள்.

பழைய வாயில் (OLD GATE)

நெகேமியா எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டியெழுப்பியபோது, பழுதுபார்த்து மீண்டும்

அமைக்கப்பட்ட ஒரு வாயில் (நெகே 3:6; 12:39). இது மிஸ்னே வாயில் அதாவது இரண்டாம் தொகுதியின் வாயிலாகவோ (2 அர 22:14; 2 நாள் 34:22), 2 அர 14:13; 2 நாள் 26:9-இல் குறிக்கப்படும் மூலை வாயிலாகவோ இருக்கலாம். இது நெகே 12:39-இல் குறிக்கப்படும் எப்பிராயிம் வாயிலாக இருக்கலாம் என்றும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

பளிங்கெனத் தெரிந்த கடல் (SEA OF GLASS)

காண்க. கண்ணாடிக்கடல்.

பள்ளத்தாக்கு (VALLEY)

பள்ளத்தாக்கு என்பது, விவிலியத்தில் மலைகளுக்கிடையே உள்ள பள்ளங்கள், சமவெளிகள், மலையிடுக்குகள் ஆகியவற்றைக் குறிக்கும். இது பல எபிரேயச்சொற்களின் மொழிபெயர்ப்பாகும்.

அ) ஓர் எபிரேயச்சொல் (எண் 14:25; யோசு 8:13; 1 சாமு 6:13) ஆக்கோர், அய்யாலோன், பாக்கா, பெராக்கா, ஏலா, கிபயோன், எபிரோன், இஸ்ரியேல், கெசிசு ஆகிய இடங்களுக்கு அருகிலுள்ள சமவெளியையோ, பள்ளத்தாக்கையோ குறிக்கும். இச்சொல் "அரசர் பள்ளத்தாக்கு" (ஆதி 14:17; 2 சாமு 18:18) யோசபாத்து பள்ளத்தாக்கு (யோவே 4:2.12), "தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கு" (4:14) ஆகியவற்றையும் குறிக்கும்.

ஆ) மற்றொரு எபிரேயச்சொல் எரிகோ, லெபனோன், மெகிதோ ஆகிய நகரங்களுக்கு அருகிலுள்ள சமநிலங்களையும் குறிக்கப் பயன்பட்டது (உப 8:7; எசா 41:18; எசே 37:1).

இ) வேறொரு சொல் (எண் 21:20; உப 34:6; 2 அர 2:16; சங் 23:4) தொழிலாளிகள் வாழ்ந்த பள்ளத்தாக்கையும் குறித்தது.

ஈ) வேறொரு சொல் (ஆதி 26:19; எண் 24:6; உப 21:4; 1 சாமு 15:5) எசுக்கோல், கெரார், சித்திம், சோரேக்கு, செரேது ஆகிய இடப்பெயர்களுடன் சேர்த்துப் பள்ளத்தாக்கைக் குறிக்கிறது.

உ) மற்றுமொரு சொல் (யோசு 9:1; 10:40; நீதி 1:9) மத்திய உயர்நிலங்களுக்கும், பெலிஸ்தியரின் கடற்கரைக்கும் இடைப்பட்ட மலையடிவாரக் குன்றுகளைப் பள்ளத்தாக்கு என்று குறிக்கும்.

கானான் நாட்டின் நிலவமைப்புக் காரணமாக பள்ளத்தாக்குகள் வேறுபட்ட உருவங்களிலும், அளவுகளிலும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. நாட்டின் எல்லைகளைச் சுட்டிக்காட்ட பள்ளதாக்குகள் குறிப்பிடப்படுகின்றன (உப 3:16). மேலும், நீர்வளம் மிக்க இடங்களைக் குறிப்பிடவும் (ஆதி 13:10), நகரங்களைக் குறிப்பிடவும் (ஆதி 19:29), ஊற்றுகளைக் (1 அர 18:5) குறிக்கவும் பள்ளத்தாக்குகள் பயன்பட்டுள்ளன. இவற்றில் பல போர்களும் நிகழ்ந்தன (ஆதி 14:8). இவற்றில் திராட்சைத் தோட்டங்கள் செழித்திருந்தன (எண் 13:23). இவை பழங்காலந்தொட்டே கானானியர்களின் தங்கும் இடமாகவும், அவர்களுடைய தெய்வங்களின் கோவில்களாகவும் விளங்கிய (எண் 14:25; 1 அர 20:28). பள்ளத்தாக்குகள் மந்தைகளுக்கு மேய்ச்சல் நிலமாகவும் (1 நாள் 27:29), தானியங்கள் விளையும் பூமியாகவும் (சங் 65:13), கோதுமை அறுவடை இடமாகவும் (1 சாமு 6:13), காக்கைகளின் இடமாகவும் (பழ 30:17), புறாக்களின் இருப்பிடமாகவும் (எசே 7:16) விளங்கின. பள்ளத்தாக்குகள் நிரவப்படும் என்று உருவகமாகக் கூறப்படுவது பிரமாணிக்கமற்ற மக்கள்மீது வரும் கடவுளின் நீதியைக் குறிக்கின்றது (மீக் 1:6; செக் 14:5). "இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கு" (சங் 23:4) வாழ்க்கையில் வரும் ஆபத்துகளைக் குறிக்கின்றது.

காண்க: தனிப்பட்ட பள்ளத்தாக்குகள்.

பள்ளத்தாக்கு வாயில் (VALLEY GATE)

இன்னோம் பள்ளத்தாக்கின் மேற்கு அல்லது தென்மேற்குத் திசைக்குக் கொண்டு செல்லும் எருசலேமின் ஒரு வாயில். இது குப்பைமேட்டு வாயிலுக்கு 1000 முழம் தூரத்தில், நரி நீரூற்றின் சுற்று வட்டாரத்தில் இருந்தது (நெகே 2:13.15; 3:13).

இது நெகேமியாவால் புதுப்பிக்கப்பட்டது. இந்த வாயிலையும் குப்பைமேட்டு வாயில்வரை இருந்த மதிலையும், ஆனூனும் சானோவாகு மக்களும் பழுதுபார்த்தனர். இதன் கோபுரங்கள் ஊசியாவால் கட்டப்பட்டன (2 நாள் 26:9).

பள்ளம், கிணறு, தொட்டி (CISTERN)

எபிரேயச்சொல், இது பள்ளம், குழி போன்றவற்றையும் பெரும்பாலும் கிணற்றையும் உணர்த்தவல்லது. ஆனால், நீரூற்றிற்கும் இவற்றிற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. கிணற்றிற்கும், பள்ளத்திற்கும் உள்ள வேறுபாடு தெளிவாக இல்லை (பழ 5:15; எசா 30:14; எரே 14:3). பாலஸ்தீனத்தில் சுண்ணாம்புப் பாறைகளிலுள்ள சிறிய துளைகளை அடைக்கக்கூடிய சுண்ணாம்புச்சாந்து பரவலாகக் கிடைக்கும்வரை, அப்பாறையில் தோண்டப்பட்ட குழிகளில் தண்ணீர் தேக்கி வைக்க இயலவில்லை.

கோடை காலங்களிலும், வறண்ட நேரங்களிலும் இந்த நீர்த்தேக்கங்கள் மக்களுக்குப் பெரும் உதவியாகவும் ஆதரவாகவும் இருந்தன (காண். எசா 36:16). மேலும், பெண்களின் வேலைப்பளுவினையும் குறைத்தன. இவை தனிமனிதனின் வளமைக்கும், வாழ்க்கைநிலை உயர்வுக்கும் வழிவகுத்தன (2 அர 18:31 = எசா 36:16). நகரங்களிலுள்ள நீர்த்தொட்டிகள் மழைக்காலத்தில் வீட்டின் கூரை அல்லது மேல்தளத்திலிருந்து விழுகின்ற தண்ணீரால் நிரப்பப்பட்டன.

அமலேக்கின் மகனான மல்கியாவின் சிறைக்கூடத்து முற்றத்திலிருந்த பாழ்குழியில் எரேமியாவைத் தள்ளிவிட்டதாகக் கூறப்படுகிறது (எரே 38:6.13). இந்த அளவிற்கு நீர்க்குழிகள் ஆழமானதாக இருந்திருக்கின்றன. இஸ்ராயேல் மக்கள் குடிபுகுந்த நகரங்களில் அவர்களால் வெட்டப்படாத கிணறுகள் அங்கு இருந்தன (உப 6:11). ஊசியா மன்னன் தனது ஆடுமாடுகளுக்காகவும், வேளாண்மை வேலைக்காகவும் பாலைவனப்பகுதியில் கிணறுகளை வெட்டினான் (2 நாள் 26:10). எரேமியா ஆகமம் 14-ஆம் அதிகாரத்தில் உடைந்துபோய், நீரைக் கொள்ள முடியாத நீர்த்தேக்கங்கள், புறவினத்தெய்வங்களைக் குறித்துக் காட்டும் அடையாளங்களாகப் பயன்படுகின்றன. திருவுரை 12:6-இல் "கிணற்றருகில் உருளை உடைந்து போதல்" என்பது வாழ்வின் முடிவுக்குக் கூறப்படும் அடையாளங்களில் ஒன்று.

நீர்த்தொட்டிகளனைத்தும் பொதுவாகபுட்டி வடிவத்தைக் கொண்டிருக்கும். பெரும்பாலும் வடிவமற்றுத்தான் காணப்படும். இவற்றின் வாயில்கள் கற்களால் மூடப்படும். அவ்வப்போது இவை சுத்தம் செய்யப்படும். சிலசமயம் இவற்றில் தானியங்களைச் சேர்த்து வைப்பதும் உண்டு.

பறவை (BIRD)

வெப்ப இரத்தமுடைய முதுகெலும்புள்ள உயிர். உடல் முழுவதும் இறகுகளால் மூடப்பட்ட, பிற விலங்குகளிலிருந்து வேறுபடுத்தப்படுகிறது (ஆதி 1:21).

பாலஸ்தீனத்தில் ஏராளமான, வேறுபட்ட பறவைகள் காணப்படும். திரிஸ்திராம் என்பவர் அவற்றை 322 வகையாகவும், பொதென்கிமர் என்பவர் 413 வகையாகவும் பிரித்துக் கூறினர். இப்பெரும்பான்மைக்கு மூன்று காரணங்கள் கூறப்படும். அ) மத்திய தரைக்கடலுக்குக் கிழக்கிலும், அரமேயப் பாலைவனத்திற்கு மேற்கிலும் அமைந்த பாலஸ்தீனம், ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கும் மேற்காசியாவுக்கு இடையிலான பறவைகள் புலம்பெயர்ந்து செல்லும் பெரும்பாதையின் ஒரு பகுதியாகும் (காண்க. உ.ச. 2:12; எரே 8:7; ஓசே 11:11). ஆ) பாலஸ்தீனம் வெப்ப மண்டலங்களின் ஓரப்பகுதிகளில் அமைந்திருந்தது. அதன் தட்பவெப்பநிலை, உள்நாட்டுப் பறவைகளுக்கும் புலம்பெயரும் பறவைகளுக்கும் சாதகமாக இருந்தது. இ) கூடு கட்டுவதற்கும் குஞ்சுகளை வளர்ப்பதற்கும் ஏற்ற பல வகையான

இயற்கையான இருப்பிடங்களைப் பாலஸ்தீனம் கொண்டிருந்தது. சாக்கடலை ஒட்டிய வறட்சிப் பகுதிகள் சில பறவைகளையே ஈர்த்தன. ஆனால், யோர்தான் பள்ளத்தாக்கு, கெனசரேத்து ஏரி, கூலே ஏரி போன்ற இடங்கள் பலவகைப் பறவைகளை ஈர்த்தன. இவை பறவைகளுக்கு அடைக்கல இடங்களாகத் திகழ்ந்தன (காண்க. சங் 104:12; எசே 31:6). பாறைகளில் உள்ள பிளவுகளும், வயல்வெளியின் சுண்ணாம்பு மண்ணும், பயிர் செய்யப்பட்ட நிலங்களின் புதர்களும் மரங்களும் பறவைகள் இனப்பெருக்கம் செய்ய ஏற்ற இடங்களாகும். அதேபோல் முட்புதர்கள் பாடும் பறவைகளுக்குப் பாதுகாப்பான இடங்களாக அமைந்தன.

பறவைகளைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பழைய ஏற்பாட்டில் பயன்பட்டுள்ளன (ஆதி 1:21; 7:14; 40:17.19; லேவி 11.20-21; உப 4:17; 14:19; சங் 102:7; 124:7; பழ 1:17; 6:5; எரே 5:27; எசே 39:4.17). புதிய ஏற்பாட்டில் பறவைகள் மத் 6:26; 13:4; அ.ப. 10:12; 11:6; 1 கொரி 15:39-இல் குறிக்கப்படுகின்றன.

பாலஸ்தீனத்தில் பல வகையான பறவைகள் காணப்பட்டாலும் விவிலியம் ஐம்பது வகைகளுக்கே பெயர்கள் கொடுக்கிறது. விவிலிய அடிப்படையில் பறவைகளை வகைப்படுத்துவது கடினமாகும். ஏனெனில், சொற்கள் தனிப்பட்ட வகைகளையும், பொது வகையையும் குறிக்கப்பயன்பட்டுள்ளன. இச்சொற்கள் அதிக விவரிப்புச் செய்திகளைக் கொடுக்கவில்லை. சில இடங்களில்தான் விவிலியம் பறவைகளை விவரிக்கிறது (காண்க. லேவி 11:13-23; உப 14:11-20).

உணவு பற்றிய ஒழுக்கங்கள் சில பறவைகளை உண்ணலாமென்று அனுமதித்தாலும் (உப 14:11.20; லேவி 7:26), பறவைகள் இஸ்ராயேலரின் உணவில் அதிக இடம் பெறவில்லை. கோழிவகைகள் உண்ணப்பட்டன (நெகே 5:18). பறவைகளை வேட்டையாடுதல் அல்லது கண்ணிவைத்துப் பிடித்தல் பற்றி, பல குறிப்புகள் உள்ளன (லேவி 17:13; சங் 124:7; பழ 1:17; எரே 5:27). நாடு கடத்தலுக்குப் பின்புதான் கோழிப்பண்ணைகள் அறிமுகப்படுத்தப் பட்டதாகத் தெரிகிறது.

பழைய ஏற்பாட்டில் வரும் மெய்மை பற்றிய இறையியல் கருத்தின் ஒரு முக்கிய பகுதியாக பறவைகள் இடம் பெறுகின்றன. இரண்டாம் நாளில் வானத்தை உருவாக்கிய பின் (ஆதி 1:6-8), ஐந்தாம் நாளில் இறைவன் பறவைகளைப் படைத்தார் (1:21). பெருவெள்ளத்தின்போது பாதுகாக்கப்பட்ட உயிரினங்களில் பறவைகளும் அடங்கும் (7:3.8). வெள்ளத்தின் விளைவு அறியகாகமும், புறாவும் அனுப்பப்பட்டன (8:7-12). சடங்கு முறையில், உணவுப் பொருள் என்ற அளவிலும், பலிப்பொருள் என்ற அளவிலும் பறவைகள் சுத்த, அசுத்தப் பறவைகள் என்று கவனமாய் வேறுபடுத்தப்பட்டன (லேவி 11:13-23; உப 14:11-20).

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும், பறவைகள் எடுத்துக்காட்டுகளாகப் பயன்பட்டுள்ளன (உ.ச. 1:15). அவை தங்கள் குஞ்சுகளைக் கவனித்துக்கொள்வது, இறைவன் தன் மக்களுக்குக் காட்டும் கவனத்திற்கு எடுத்துக்காட்டாகிறது (உப 32:11; எசா 31:5; மத் 23:37). இறைவன் வானத்துப் பறவைகளுக்குக் காட்டும் அக்கறை, கவலை கொள்ளாது விண்ணகத் தந்தையிடம் நம்பிக்கை கொள்ளுவதற்கு ஒரு காரணமாகும் என்று இயேசு எடுத்துக் கூறுகிறார் (மத் 6:26; லூக் 12:24). இறைவன் பறவைகளுக்கு உறைவிடம் அளிக்கும் போது (எசே 17:23; 31:6), அவரது மகனைப் பின்பற்றுகிறவர்களுக்குத் "தலைசாய்க்கவும் கூட இடமில்லை" (மத் 8:20). தன் வீட்டை விட்டு வெளியேறி அலைந்து திரிபவன், தன் கூட்டைவிட்டு வெளியேறி அலைந்து திரியும் பறவைக்கு ஒப்பாவான் (பழ 27:8; காண்க. எசா 16:2). இறைவனுடைய தீர்ப்பு கழுகுகள் கூடுவதாகச் சித்தரிக்கப்படுகிறது (மத் 24:28; திருவெளி 19:17-18.21). இதே உருவகம்

வீழ்ச்சியடைந்த பாபிலோனின் அவல நிலையையும் சித்தரிக்கிறது (திருவெளி 18:2).

பறவை நாகம் (DRAGON)

இது புராணங்களில் வரும் ஒரு உயிரினமாகும். கானானிய மற்றும் பாபிலோனியப் படைப்பு பற்றிய புராணங்களில் முக்கியத்துவம் பெறுகிறது. கடவுள்களுக்கு எதிரான சக்தியாகச் சித்தரிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் உள்ள கவிதைப் பகுதிகளில் தொடக்ககாலத்தில் யாவேக்கும், பறவை நாகத்திற்கும் இடையே நடைபெற்ற போரைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றில் இவ்விலங்கின் பெயர் லேவியாத்தன் (யோபு 3:8; சங் 74:14; எசா 27:1); இராகாபு (யோபு 9:13; 26:12; சங் 89:10); யாம் (Yam -கடல்) (யோபு 7:12; அப. 3:8); நாகர் (=ஆறு) (சங் 93:3; அ ப 3:8); தானின் (=கடல் விலங்கு) (யோபு 7:12; சங் 74:13; எசா 51:9); பாசான் (=கடல் நாகம்) (சங் 68:22) என்பனவாகும்.

தொடக்க காலப்போராட்டத்தில் இந்தப் பாம்பின் தலையைக் கடவுள் நசுக்கிவிட்டார் (சங் 74:13); இதை ஊடுருவக்குத்தினார் (எசா 51:9). புராணத்தாக்கம் எதுவாயினும் பழைய ஏற்பாடு, பாபிலோனியப் புராணங்களைப் போல், இந்த உயிரினத்தை ஆட்தன்மைப் படுத்தவில்லை. ஆனால் வாத நோக்கோடு, இப்புராணக்கதைக்கு விளக்கம் அளிக்கிறது. எசா 51:9 படைப்பையோ, யாத்திரை நிகழ்ச்சியையோ சுட்டலாம்; ஏனெனில், இராகாபு எகிப்தை ஆட்தன்மைப்படுத்துகிறது. யோபு 7:12-இல் யோபு தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய கடல் பெருநாகமன்று என்று வாதாடுகிறார். இது பாபிலோனியப் புராணத்தை எதிரொலிக்கலாம். ஆனால் 38:4-7-இல், இறைவனே யாவற்றையும் படைத்தார் என்று கூறப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் பறவைநாகம் திருவெளிப்பாட்டு நூலில் மட்டும்தான் வருகிறது. இதில் இறைவனுக்கு எதிரான ஒரு விலங்காகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இஃது அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்படுகிறது (திருவெளி 12:9). இது குழந்தை கிறிஸ்துவை விழுங்கத் தேடுகிறது; ஆனால், வெற்றியடையவில்லை (12:4).

தொடக்க காலத்தில் நடைபெற்ற போராட்டம் புதிய படைப்பின்போதும் நடைபெறும் என்று யூதர்கள் நம்பினர் (எசா 27:1). சக்தி வாய்ந்ததாயினும் (13:2-4; 16:13), இறுதிக்காலத்தில் இஃது ஆயிரமாண்டுகளுக்குக் கட்டப்பட்டிருக்கும் (20:2-3); இறுதியில் கந்தக நெருப்புக்கடலில் எறியப்படும் (21:10). ஆசிரியர் இந்த இறுதிக்காலப் போராட்டத்தில் பழைய ஏற்பாட்டு உருவகத்தை வேண்டுமென்றே பயன்படுத்தியிருக்கலாம் (எசா 27:1).

பறி (SEINE)

அப 1:14-17-இன் சூழ்நிலையில் "தூண்டில்," "வலை", "பறி" (1:15) என்பன உருவகமாகப் பகைவர்களின் படைத்திறமையை எடுத்துச்சொல்கின்றது. 1:16-இல் வலைக்குப் பலி செலுத்துவதென்பது படைக்கருவிகளுக்குக் காண்பிக்கின்ற மரியாதையைக் குறிக்கின்றது. ஆனால், "பறி" என்ற சொல்லின் துல்லியமான பொருள் தெளிவாக இல்லை.

பறிமுதல் செய்தல் (CONFISTICATION)

இது தனியார் சொத்தைப் பொது உபயோகத்திற்காக அல்லது கருவூலத்திற்காக எடுத்துக் கொள்வதாகும். விவிலியச்சட்டத்தில் சொல்லப்படாத இச்செயல் அரசர்கள் காலத்தில் வழக்கிற்கு வந்தது. தன்னுடைய சொந்த உபயோகத்திற்காகவும், தன்னுடைய அலுவலர்கள் உபயோகத்திற்காகவும் தனியார் சொத்தை எடுத்துக்கொள்வது அரசனுக்கு மட்டும் இருந்த உரிமையாக இருந்தது (1 சாமு 8:14; காண்க. 22:7). இந்த உரிமையைத் தவறான முறையில் பயன்படுத்தியதால் எதிர்ப்பு எழுந்தது (எசே 45:7-8; 46:16-18). நாட்டுக்குத் துரோகம் செய்தவர்களுடைய சொத்து அரசனுக்குச்

சென்றது. இதனால் ஆகாபு, நாபோத்தைக் கொன்ற பின்பு அவனுடைய திராட்சைத் தோட்டத்தைத் தனதாக்கிக் கொண்டான் (1 அர 21:15-16). பாரசீகர்கள் ஆட்சிக்காலத்தில் சொத்துக்களை அபகரித்துக்கொள்ள யூத அதிகாரிகளுக்கு உரிமையிருந்தது (எஸ் 7:26; 10:8).

பறை அறிவிப்பவர், கட்டியங்காரர் (HERALD)

இவர் நாட்டு அல்லது அரச செய்திகளை மக்களுக்கு அறிவிக்கும் அதிகாரி அல்லது, அரசர்களுக்கிடையே சடங்குச் செய்திகளை எடுத்துச்செல்பவர் ஆவார். இச்சொல் இப்பொருளைத் தானி 3:4-இல் கொண்டுள்ளது. இங்குப் பயன்படும் சொல் ஒரு கிரேக்கச் சொல்லின் மொழி பெயர்ப்பாகும். இச்சொல்லைப் புதிய ஏற்பாடு தூதுரைப்பவர் அல்லது போதகர் என்ற பொருளில், உருவகமாகப் பயன்படுத்துகிறது (1 திமொ 2:7; 2 திமொ 1:11; 2 பேதுரு 2:5). இச்சொல் நற்செய்தி தருபவன் அல்லது நற்செய்தியாளன் என்ற பொருளில் எசா 40:9; 41:27-இல் உருவகமாகப் பயன்பட்டுள்ளது. இந்த உருவகத்தின் அறிவிப்பாளர், விண்ணரசன் அளித்த செய்தியை அல்லது அறிவிப்பைப் போதகர் கொண்டு வருகிறார் என்பதாம்.

பனி, மூடுபனி, உறைபனி, வெண்பனி (DEW, MIST, SNOW)

இப்பெயர்களால் நீரின் மூன்று நிலைகள் குறிக்கப்படுகின்றன.

பனி (Snow): வெப்பம் குறைந்த நிலத்தோடோ, பொருட்களோடோ கொள்ளும் தொடர்பால் குளிராக்கப்படும் காற்றிலிருந்து உண்டாகும் நீராவியின் உறைவு ஆகும். இது, வெப்பம் குறைந்து காற்று நீர்ச் சத்துள்ளதாய் இருக்கும் தெளிவான, அமைதியான இரவுகளில் முக்கியமாக நிகழ்கிறது. பழைய ஏற்பாட்டு மக்களின் கருத்துப்படி பனி என்ற சொல், தரையிலிருந்து உருவாகும் பனியையும், இரவில் காணமுடியாத விதத்தில் உருவாகும் மூடுபனியையும் குறித்தது (எண் 11:9; 2 சாமு 17:12). இந்தப் பனியானது பாலஸ்தீனத்தில் மழையில்லாத காலங்களில் தாவரங்களுக்கு மிகவும் அவசியமானது. இது பெயேர் செபாவுக்கு மேற்கிலுள்ள கடற்கரையிலும், எசுதிரலோன் சமவெளியிலும், எர்மோன் மலைச்சரிவுக்கடியில் யோர்தான் நதி தோன்றும் (சங் 133:3) இடங்களிலும் மிக அதிகமாக உள்ளது. இது சூரியவெப்பம் அதிகரிக்க அதிகரிக்க (ஓசே 6:4) விரைவில் ஆவியாகிவிடும் (யாத் 16:14). பனி காண முடியாத விதத்தில் (2 சாமு 17:12) ஆகாயத்திலிருந்தோ (செக் 8:12), உயர்ந்த மேகங்களிலிருந்தோ (பழ 3:20) விழுவதாக நம்பப்பட்டது.

பனி என்ற சொல் செழுமையையும் (ஆதி 27:28), புத்துணர்ச்சியையும், புதுப்பித்தலையும் (சங் 110:3; ஓசே 14:5), மனித சக்திக்கு அப்பாற்பட்டதையும் (மீக் 5:7), அமைதியான வருகையையும் (2 சாமு 17:12), நிலையற்ற தன்மையையும் (ஓசே 13:3), காப்பின்மையையும் (உ.ச. 5:2) உருவகமாகக் குறிக்கிறது. பனி இறைவனின் ஒரு கொடையாகக் கருதப்பட்டது (1 அர 17:1; மீக் 5:7).

மூடுபனி (Mist): இதைக் குறிக்கும் எபிரேயச் சொல் நிலத்திற்குக் கீழான நீரைக் குறிக்கும் (ஆதி 2:6). இஃது இறைவனுடைய மிக முக்கியம் வாய்ந்த நீர் ஊற்றைக் குறிக்கிறது. தாவரங்களின் படைப்பிலும் பின்பு மனித உயிரின் படைப்பிலும் இதை இறைவன் பயன்படுத்துகிறார். யோபு 36:27-இல், கடவுள் "நீர்த்துளிகளை ஆவியாக இழுக்கிறார், அவற்றை மழையாக வடித்துக் கொடுக்கிறார்" என்று கூறுகிறது. "அவர் குரல் கொடுக்க வானத்து நீர்த்திரள் முழக்கமிடுகிறது. மண்ணுலகின் எல்லையினின்று மேகங்களை எழச்செய்கிறார்... தம் கிடங்குகளினின்று காற்று வீசச்செய்கிறார்" (எரே 10:13; 51:16) என்று நீரின்மேல் இறைவன் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டை எடுத்துக் கூறுகிறது.

மூடுபனி பற்றிய மற்றக் குறிப்புகள்

உருவகமாக, வாழ்வின் நொடிப்பொழுதில் தோன்றி மறையும் தன்மையையும் (யாக் 4:14), சிலைகளின் மறைந்துபோகும் தன்மையையும் (ஓசே 13:3), போலிப்போதகங்களின் தன்மையையும் (2 பேதுரு 2:17), இறைவன் அளிக்கும் பாவமன்னிப்பையும் (எசா 44:22 விவரிக்கின்றன. இச்சொல் அ.ப. 13:11-இல் பவுல் தற்காலிகமாகக் குருடாக இருந்ததை விவரிக்கிறது.

உறைபனி, வெண்பனி (Snow): உறைபனி பாலஸ்தீனத்தில் அதிகம் பெய்வதில்லை. வருடத்திற்கு அதிகபட்சமாக, சராசரி மூன்று நாட்கள் பெய்யும். சில சமயங்களில் மிக அதிகமாக இருக்கலாம் (2 சாமு 23:20; 1 மக் 13:22). எர்மோன் மலையின் உறைபனி நிறைந்த முகடுகளை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் காணலாம் (எரே 18:14). உருவக முறையில் தொழுநோயால் தோல் வெண்மையாவதை விவரிக்கவும் (யாத் 4:6; எண் 10:12; 2 அர 5:27), காட்சியில் காணப்படுவோரை அல்லது அவர்களின் ஆடைகளை விவரிக்கவும் (தானி 7:9; மத் 28:3; திருவெளி 1:14), இறைவன் பாவியைப் புனிதப்படுத்தும் போது விளையும் தூய்மையை விவரிக்கவும் (சங் 51:7; எசா 1:18; காண்க. 4:7) உறைபனியின் வெண்மை பயன்படுகிறது. தண்ணீரை விட பனிநீர் அதிகம் சுத்தி செய்யக்கூடியது என்று யோபு 9:30 சுட்டுகிறது. இறைவனிடமிருந்து வரும் பொருட்களில் உறைபனியும் ஒன்று; அதன் தோற்றம் பற்றிய மறைபொருள், இறைவனின் ஆற்றலுக்கும் மனிதனின் அறியாமைக்கும் அதைச் சிறப்பான சாட்சியாக விளங்கச் செய்கிறது (யோபு 37:5-6; 38:22; சங் 147:16; 148:8). சீரா 43:18, உறைபனியின் அழகைக் குறிப்பிடுகிறது.

பன்றி (SWINE)

அ) லேவி 11:7; உப 14:8 என்பன பன்றி இறைச்சியை இஸ்ராயேல் மக்களுக்குத் தடை செய்கின்றன. "பன்றி இரண்டாகப் பிரிந்திருக்கும் வரிக்குளம்புடையது. ஆனால், அது அசை போடாது. அவற்றின் இறைச்சியை உண்ணலாகாது. அவற்றின் சடலங்களைத் தொடவும் கூடாது. இவைகள் உங்களுக்குத் தீட்டானவை" (லேவி 11:7). கெசேர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, புதிய கற்காலத்தைச் சார்ந்த பொருட்களிலிருந்து முற்காலச் செமித்திய மக்கள் பன்றியைக் கொன்று அதனை உண்டார்கள் என்பது தெளிவாகிறது. கிரேக்கர்களிடையே அதிகமாகப் பலியிடப்பட்ட விலங்குகளில் பன்றியும் ஒன்று. மேலும், அதோனிசு என்ற பன்றிக்கடவுளையும் வழிபட்டனர். பாபிலோனியரிடையே பன்றி இறைச்சி மிகவும் புனிதமாகக் சுருதப்பட்டதால், அது சில முக்கியமான விழாக்களில் மட்டுமே உண்ணப்பட்டது. ஆனால், மற்ற நாட்களில் அதை உண்ண அவர்களுக்கு அனுமதி இல்லை. சீரியர்களிடையே இது தம்முசு என்னும் கடவுளுக்குப் புனிதமானதாகக் கருதப்பட்டது. எகிப்தியரிடையே இவ்விறைச்சி விலக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும் சில நாட்களில் உண்ணலாம். எனவே, பன்றி இறைச்சி விலக்சுப்பட்டதொன்றாகக் கருதப்பட்டதால், பன்றியைப் பலியிடுவது மிகவும் புனிதமாகவும் சக்தி வாய்ந்த பலியாகவும் கருதப்பட்டிருக்க வேண்டும். இது, எசா 65:4; 66:3.17 ஆகிய பகுதிகளை விளக்கலாம். பன்றி இறைச்சி யூதர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தது என்பது அவர்களின் அண்டை நாட்டுப் பழக்கவழக்கங்களிலிருந்து வேறுபட்டிருந்தது என்பதில் ஐயமில்லை. இதைத் தவிர மற்றப் பழக்க வழக்கங்களை யூதர்கள் பின்பற்றினர். இறைவாக்கினர் பன்றி, நாய், எலி, இவற்றை உண்பதைக் கண்டிக்கின்றனர்.

ஆ) பழைய ஏற்பாட்டில் மற்ற இடங்களில் இஃது உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. சங் 80-இல் ஒரு சமூகப் புலம்பல் இஸ்ராயேலைப் பாழாக்கிய ஓர் எதிரியைக் காட்டுப்பன்றியோடு ஒப்பிடுகின்றது. காட்டுப்பன்றிகள் அழிப்பதில் மிகவும் சக்தி வாய்ந்தவை. இஃது அதன் அடையாளமாகும். பழ 11:22-இல், மதியில்லாத பெண்ணின் அழகு பன்றியின் மூக்கிலுள்ள

பொன்வளையம் போலிருக்கும் என்று ஆசிரியர் கூறுகின்றார். 2 மக் 6:18-இல் எவ்வாறு கிரேக்கப்பற்றுடையவர்கள் யூதர்களைப் பன்றி இறைச்சியை உண்ணும்படி கட்டாயப்படுத்தினர் என்று விளக்குகிறது (காண்க: 1 மக் 1:47).

புதிய ஏற்பாட்டிலும் இஃது உருவகமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. பரிசுத்தமானதை நாய்களுக்குப் போட வேண்டாம்; உங்கள் முத்துக்களைப் பன்றியின் முன் எறியவும் வேண்டாம் என்று மத் 7:6 கூறுகின்றது. மத உண்மைகள் புறவினத்தாரிடமும், அவிசுவாசிகளிடமும் பகிர்ந்து கொள்ளப்படக்கூடாது. பன்றி மேய்க்கும் தொழில் யூதர்களுக்கு அறிமுகமானதொன்றாக இருந்தாலும் "காணாமற்போன மகன்" உவமையில், இளையவன் பன்றி மேய்ப்பது அவனது மிகவும் தாழ்ந்த நிலையைக் காட்டுகின்றது. அவன் பன்றியின் உணவை உண்பது அவனது ஏழ்மையைக் குறிக்கின்றது. 2 பேதுரு 2:22-இல் "கழுவியபின் பன்றி மீண்டும் சேற்றிலே புரளும்" என்பது உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. கதரேன் அருகில் ஒருவனைப் படையாகப் பிடித்திருந்த பேய்கள் தங்கள் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த பன்றிக் கூட்டத்திற்குள் அனுப்புமாறு வேண்டுகின்றன. பேய்கள் அவற்றினுள் புகுந்தபோது அவை கடலை நோக்கிப் பாய்ந்து நீரில் மூழ்கி இறந்தன. அனேகமாக, பன்றிகள் தீட்டான விலங்காதலால், அவைதான் பேய்களுக்கு ஏற்ற இடமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

பன்னிரண்டு (TWELVE)

இஸ்ராயேலின் வாழ்வில் இந்த எண் புனிதமானதாகக் கருதப்பட்டது. இதற்கான குறிப்புகள் விவிலியம் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. இவர்கள் காலத்தில் வாழ்ந்த மற்றப் புறவின மக்களிடமும் இந்த நம்பிக்கை இருந்தது. அக்காலத்தில் நிலாவைக் கொண்டு அமைந்த வருடத்தின் பிரிவுகள், இராசி அறிகுறிகள் (காண்க. 2 அர 23:5; யோபு 38:32), பன்னிரு விண்மீன்கள், ஏழும் ஐந்தும் சேர்ந்து தொகை, மும்முறை நான்கு என்றெல்லாம் வருவது இந்த எண்ணின் முக்கியத்துவத்தை உணர்த்தி நின்றன.

இஸ்ராயேல் வாழ்வில் அவர்களது கோத்திரங்கள் 12 என்று குறிப்பு வருவதே (ஆதி 35:22; 42:13.32; 49:20; எண் 1:44), இந்த எண் சமயப்பொருள் முக்கியத்துவம் பெறப் போதுமானதாக இருந்தது. ஆபிரகாமின் மற்றொரு மகனான இசுமயேலின் கோத்திரங்களும் பன்னிரண்டு (ஆதி 17:20). இந்த எண் கோத்திரங்களைக் கணக்கிடும் பொழுது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. லேவியின் கோத்திரம் மறைந்து விட்டபின் யோசேப்பின் கோத்திரங்களான எப்பிராயிம், மனாசே தனித்தனி கோத்திரமாக்கிக் கணக்கிடப்பட்டு, புனித எண் பன்னிரண்டு பாதுகாக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டிலும் யூதாஸ் தவறியபிறகு மத்தியாவைச் சேர்த்துக்கொள்கின்றனர் (அ.ப. 1:23-25). இஸ்ராயேலில் எந்தச் செயலுக்கும் ஆட்களைத் தெரிவு செய்யும்பொழுது ஒவ்வொரு குலத்திற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது (யாத் 24:4; 28:21; எண் 7:3; 17:26; யோசு 4:1 அர 18:31; எஸ் 6:17; 8:35; எசே 48:31). புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களும் இஸ்ராயேல் கோத்திரங்களோடு தொடர்புடையவர்களாவர் (மத் 19:28). இதைத்தவிர பழைய ஏற்பாட்டில் குருக்கள் மற்றும் லேவியரின் பிரிவுகள் 24 (1 நாள் 24:4,25:31); லேவிய நகரங்கள் 48 (எண் 35:7), மூப்பர்கள் 72 (எண் 11:24-26), என்றெல்லாம் வருவது இந்த எண்ணின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இதைத்தவிர யூதாவுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே கிபயோனில் நிகழ்ந்தபோரில் ஒவ்வொரு பக்கமும் இறந்தவர்கள் பன்னிரண்டு (2 சாமு 2:12-17). சாலமோனின் ஊழியர்கள் 12 (1 அர 4:7-19). தாவீதின் படை வீரர்கள் ஒவ்வொரு பிரிவிலும் 24,000.

புதிய ஏற்பாட்டில் விண்ணக அரியணையைச் சுற்றி நின்ற மூப்பர்கள் 24 (திருவெளி 4:4; 5:8; 11:16; 19:4). புதிய எருசலேம் 12 அடிக்கற்களைக் கொண்டது (21:12-14). வாழ்வு மரத்தின் கனிவகைகள் 12 (22:2). வானவர் படைப்பிரிவுகள் 12 (மத் 26:53). 12 கூடைகளில் அப்பத்துண்டு (மத் 14:20). ஒவ்வொரு கோத்திரத்துக்கும் 12000 வீதம் தொகுக்கப்படும் 144000 இறைவனுடைய ஊழியர்கள் (திருவெளி 7:4). இவ்வாறு வருவது இந்த எண்ணுக்கு அக்கால மக்கள் அளித்த சிறந்த இடத்தை நமக்குணர்த்துகிறது.

பன்னிரு குல மூதாதையரின் ஏற்பாடுகள் (TESTAMENTS OF THE TWELVE PATRIARCHS, THE)

ஒரு போலிவாழ்க்கை வரலாற்று நூலாகும். இன்றைய உருவத்தை இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அடைந்திருக்க வேண்டும். இப்போது உள்ள வடிவத்தில் 12 பகுதிகள், 'ஏற்பாடுகள்' என்ற தலைப்பின்கீழ் உள்ளன. இதில் சாகும் தருவாயில், இருந்த யாக்கோபின் 12 பிள்ளைகள் ஆற்றிய உரைகள் உள்ளன. இவை எல்லாம் ஒரே பாணியில் உள்ளன. குல மூதாதையர் புதல்வர்களை அழைத்துத் தன் வாழ்க்கையைப்பற்றிக் கூறுகிறார்; குறிப்பிட்ட தீமையைப்பற்றி எச்சரிக்கிறார்; நல்ல பண்புகளைப் போற்றும்படி கூறுகிறார்; அவர்களின் எதிர்கால வாழ்க்கை, பாவம், தண்டனை, மீட்பு ஆகியவற்றைக் குறித்து முன்மொழிகிறார்; பின்பு இறந்து எபிரோனில் அடக்கம் செய்யப்படுகிறார். தனியுரைகள் யோசு 23-24; 1 அர 2-இல் காணப்படும் விவிலிய வடிவத்தை விரிவாக்குகின்றன. முழுத்தொகுப்பும் ஆதி 49; உப 33-இல் காணப்படும் வடிவத்தைப் பின்பற்றுகிறது. இத்தொகுப்பு யூத-கிறிஸ்தவ இலக்கியத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இதில் ஒவ்வொரு தனிப்பகுதியும் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. அ) யூபிலி, ராபிகளின் மிட்ராஸ் ஆகியவற்றோடு தொடர்புடைய செய்திகள் உள்ளன. ஆ) ஏனோக்கின் பாரம்பரியம், கும்ரான் இலக்கியங்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய இறுதிக்கால இயல், பேய் இயல் பொருள்கள் உள்ளன. இ) ஞான இலக்கியங்கள், கும்ரான் இலக்கியங்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய மறையுறைக் கருத்துகள். இத்தொகுப்பு திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், இவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று நிரூபிக்க பலர் முயன்றுள்ளனர். இருப்பினும் மத்திய காலத்தில், அர்மேனியத் திருச்சபையினர் இவற்றை ஆலயங்களில் வாசித்து வந்தனர்.

1. **வாசக வரலாறு:** இப்போது உள்ள வாசகத்தில் பெரும்பாலான பகுதிகள் எபிரேயத்திலோ, அரமேயிக்கு மொழியிலோ எழுதப்பட்டிருக்க வேண்டும். கும்ரானில் வாழ்ந்த பிரிவினர், லேவி ஏற்பாட்டுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய படைப்பைக் கொண்டிருந்தனர். இந்தப் படைப்புக்கான சிறிய கையெழுத்து ஏடுகள் முதலாம் கும்ரான் குகையிலும், பெரியவை நான்காம் கும்ரான் குகையிலும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கி.மு. முதல் நூற்றாண்டுக்காலத்தவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதே பிரிவினர் நெப்தலி ஏற்பாட்டோடு தொடர்புடைய மற்றொரு படைப்பையும் கொண்டிருந்தனர். இதன் சிறிய, கையெழுத்துப் படிவங்கள் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2. **திறனாய்வின் வரலாறு:** இந்த நூல்களில் பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய ஆர்வம், பைசாந்திய மறுமலர்ச்சியோடு தொடர்புடையது. இந்தச் சமயத்தில் இலத்தீன் மொழி பெயர்ப்புகள் மிகவும் புகழ்பெற்றிருந்தன. பகுத்தறிவுக் கொள்கை (Rationalism) வளர்ச்சியின் காரணமாக இதன் புகழ் குன்றத் தொடங்கியது. 17-ஆம் நூற்றாண்டு அறிஞர்கள் கிரேக்க வாசகப்பதிப்பை வெளியிட்டனர். ஆனால், 18-ஆம் நூற்றாண்டு அறிஞர்கள் இதற்குப் போதிய கவனம் செலுத்தவில்லை. 19-ஆம் நூற்றாண்டில் செர்மனியில் திருச்சபை வரலாற்றில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் காரணமாக இந்நூல் ஆதித்திருச்சபையில் ஒருவரால் எழுதப்பட்ட

நூலாகக் கருதப்பட்டது. ஆராய்ச்சியின்போது இதில் உள்ள கருத்துகள் ஒன்றோடு ஒன்றாக முரண்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, இதன் முழுமை ஐயத்திற்குள்ளானது. சினாப்பு என்பவர், இது வாத எதிர்வாதங்களை விரித்துச் சொல்லும் ஆராய்ச்சிக் கட்டுரை என்று முடிவு கட்டினார். அவருக்குப் பின் வந்தவர்கள் இதைச் செபக்கூடப் போதனைகளின் தொகுப்பாகக் கருதினர். சினாப்பின் முடிவுகள் தயக்கத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், இங்கிலாந்தில் குறைகூறப்பட்டது. தீன் என்பவர் இதில் காணப்படும் தொடர்பில்லாத் தன்மையைக் காண மறுத்து, அதில் எந்தவித வேறுபாடும் இல்லை என்று கூறினார். கோனிபியர்ஸ் என்பவர் அர்மேனிய வாசகம் கிரேக்க வாசகத்தைவிட நீளம் குறைந்தது என்றும், பல சொற்கள் இல்லாமல் இருக்கின்றன என்றும் கண்டுபிடித்தார். இது கலப்படம் செய்யப்பட்டதை உறுதி செய்வதாக இருந்தது. ஆனால், அர்மேனிய வாசகம் பெரியபகுதிகளில் கிரேக்க வாசகத்தோடு ஒத்திருந்தது. சினாப்பு தன் கொள்கையையே பின்பற்றியதால், இந்தப் பிரச்சனை மீண்டும் ஆராயப்பட்டது. இதன் விளைவாக 1908-இல் கிரேக்க வாசகத்தின் சார்லஸ் பதிப்பு வெளிவந்தது.

சார்லஸ் பதிப்பு இரண்டு சக்திகளின் போக்காக விளக்கப்படலாம். ஒருபுறம் இந்த ஏற்பாடுகள் எபிரேய மொழியில் எழுதப்பட்டவை என்று உறுதியாக நம்பினார். எனவே இதில் காணப்பட்ட கிறிஸ்துவக் கருத்துகள் எல்லாம் கலப்படம் செய்யப்பட்டவை என்று உறுதியாகக் கருதினார். மறுபுறம் இங்கிலாந்தின் திறனாய்வு கையெழுத்துச் சான்றுகளைத் தேடும்படி செய்தன. இதற்கு அவர் சிறு வாசகங்களைக் கொண்ட வாசகங்களை விரும்பினார். இதனால் பல கலப்படங்கள் நீக்கப்பட்டன. இவ்வாறு இவர் ஒரு கலப்பில்லாத வாசகத்தை உருவாக்கினார். இதிலும் முரண்பாடுகள் இருந்தன. எனவே, சார்லஸ் இவ்வாசகம் யோவான் இரிக்கானு என்பவரின் பிற்காலத்தைச் சேர்ந்த அசமோனியர்களுக்குச் சார்பான படைப்பு என்றும் அவர்களது வீழ்ச்சிக்குப் பின் இது கலப்படம் செய்யப்பட்டது என்றும் முடிவு செய்தார். இம்முடிவு தயக்கத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. திறனாய்வின் விளைவுகள்: இதனால் சில வாசகங்கள், நூலிலிருந்து நீக்கப்பட்டன, சிறியதாக்கப்பட்டன. சில பகுதிகள் விரிவாக்கப்பட்டன. இன்னும் சில திரும்பவும் எழுதப்பட்டன. இவ்வாறு மாற்றப்பட்டாலும் பல கருத்துகள் மாறாமல் இருந்தன. பல சொற்களும் கருத்துகளும் ஒழுக்கத்தொகுப்போடு இணையாகச் செல்கின்றன. எபிரேய நெப்தலி ஏற்பாடு இடையில் மாற்றப்படினும் மூல நூலில் உள்ள கருத்துகள் பல இன்னும் உள்ளன. இவ்வாறு மாறாத தன்மையைக் கொண்டு இவை எந்தக் காலத்தைச் சார்ந்தவை என்று கண்டுபிடிக்க இயலும். பழங்கால யூத மதத்தைப் பற்றியோ, ஆதிக் கிறிஸ்துவ மதத்தைப் பற்றியோ அதிகம் தெரியாததால் ஒரு குறிப்பிட்ட பகுதியை இது யூத மதத்தைச் சார்ந்தது என்றோ, கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தது என்றோ கூறுவது கடினமாக உள்ளது.

இந்த ஏற்பாடுகள் பாலஸ்தீன் மதத்திலிருந்த சில கருத்துகளின் இணைப்பையும், அவற்றின் திசையையும், அவை கிறிஸ்து பிறக்குமுன் 2 நூற்றாண்டுகளில் எவ்வாறு இருந்தன என்பதையும், கிறிஸ்து பிறந்த பின் 2 நூற்றாண்டுகளில் எவ்வாறு இருந்தன என்பதையும் காட்டுகின்றன. இது மிகவும் சிறந்த தொகுப்பாகும். இது கிரேக்கப் பண்பாடு, விவிலியக் கல்வி, இஸ்ராயேல் பாரம்பரியத்தில் பெருமை, இஸ்ராயேலின் எதிர்காலத்திலும் புறவினத்தாரின் இறுதி மீட்பிலும் நம்பிக்கை, மீட்பர் ஓர் அரசரும் குருவும் ஆவார், மனிதனின் சுதந்தரத்தில் நம்பிக்கை, மக்கபேயரைப் பற்றி மாறுபட்ட எண்ணங்கள், பற்றற்ற வாழ்க்கை, தியாகம், சகோதர அன்பு, இவ்வுலக இறையரசை எதிர்பார்பது, இன்னும் பல கருத்துகளையும் கொண்டுள்ளது.

பன்னிருபாக எழுத்துகள் (UNCIALS)

கி.பி. 4-ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், கிரேக்கச் சொற்களையும் இலத்தீன் சொற்களையும் எழுத ஒரு குறிப்பிட்ட எழுத்து வடிவ முறையைப் பின்பற்றினார்கள். இதற்குப் பெயர்தான் பன்னிருபாக எழுத்துகள் அல்லது உன்சியல் என்று கூறுவார்கள். இலத்தீன் சொல் உன்சியா (UNCIA) என்றால் பன்னிரண்டில் ஒருபாகம் என்று பொருள். எரோனிமு இவ்வாறு பன்னிரண்டு பாக எழுத்துகளைக் குறிப்பிட்டு ஒரு கடிதத்தில் எழுதுகிறார். இவரின் இக்கடிதத்தை ஆரம்பமாக வைத்துத்தான், இவ்வடிவ எழுத்துகளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இம்முறைப்படி, எழுத்துகள் எல்லாம் பெரிய எழுத்துகளிலேயே எழுதப்பட்டிருக்கும். சொல்லுக்குச் சொல் இடைவெளி விட்டு எழுதப்படுவதில்லை. இந்தப் பன்னிரண்டு பாக எழுத்துகளில், எழுதப்பட்ட மிகுதியான, விவிலியப் பழஞ் சுவடிகள் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றில் வத்திக்கான் சுவடி, அலக்சாந்திரியாச் சுவடி, சீனாய்ச் சுவடி முதலியன சிலவாகும்.

பன்னிருவர் (TWELVE, THE)

இயேசுவுக்குப்பின் அவரது பணியை இவ்வுலகில் தொடர்ந்து ஆற்றவும் (மத் 10:1-4; மாற் 3:13-19; லூக் 6:12-16; காண்க. யோவா 6:70), இயேசு தீர்வையிட வரும் பொழுது உதவவும் (மத் 19:28; லூக் 22:30), இயேசுவால் சிறப்பான முறையில் தேர்ந்துகொள்ளப்பட்டு அறிவுறுத்தப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர் குழுவாகும். இவர்கள் இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பிரதிநிதிகளாகக் கருதப்பட்டனர்.

இயேசு இறந்து உயிர்த்த பிறகு யூதாசுக்குப் பதிலாக மத்தியா என்பவர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார் (அ.ப. 1:15-26). அதன் பிறகு இத்தொகை கூட்டப்படவோ, குறைக்கப்படவோ இல்லை. பவுலின் கூற்றுப்படி உயிர்த்த இயேசுவிடமிருந்து முதலில் நேரடியான காட்சிகளைப் பெற்றவர்களுள் இவர்களும் உள்ளடங்குவர் (1 கொரி 15:5; காண்க. மாற் 16:7). அ.ப. 1-6-இல் இவர்களே திருச்சபையின் தொடக்ககாலத் தலைவர்களாகத் தோற்றமளித்தாலும் பிறகு அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை பெருகப்பெருக அதில் கலந்து விடுகின்றனர்.

இவர்களின் பெயர்ப் பட்டியலை நான்கு நற்செய்தியாளர்களும் தந்தாலும் எல்லாம் ஒத்திருப்பதில்லை. யோவான் நத்தனியேலின் பெயரைச் சேர்த்துள்ளார். விவிலியத் திருமுறைப்பட்டியலைச் சேராத நூல்களில் இப்பெயர்கள் பெரும் முரண்பாடுகளைக் கொண்டுள்ளன. ஆனால், பேதுருவே முதன் முதலில் தேர்ந்து கொள்ளப்பட்டவர் என்பதும், அவரே உயிர்த்த இயேசுவை முதலில் பார்த்தவர் என்பதும் மறுக்க முடியாத ஒன்றாகும். ஆனால் மற்றவர்களுக்காக இயேசுவிடம் அவர் பேசும் இடங்களைத்தவிர மற்ற இடங்களில் அவரது முதன்மை நிலை அறிஞர்களுக்கிடையே தர்க்கத்திற்குரியதாக இருந்துள்ளது (மத் 16:18; லூக் 22:32; அ.ப. 1:15; 2:14; 5:3; கலா 2:8; காண்க. பேதுரு). இவர்களின் பணியைப்பற்றியும், முடிவைப்பற்றியும் உறுதியாக எதனையும் கூறமுடிவதில்லை. நமக்குக் கிடைத்துள்ள செய்திகளெல்லாம் புதிய ஏற்பாட்டில் வருபவை மட்டுமே. பேதுரு உரோமையில் மறைசாட்சி மரணமடைந்து அடக்கம் செய்யப்பட்டார் என்பது உண்மையான செய்தி என்பதில் ஐயமில்லை. யோவான் எபேசில் வாழ்ந்த இடம் மற்றும் மரணம் ஆகியவை தெளிவில்லாமலேயே இருக்கின்றன.

பா

பாகசா, பாசா (BAASHA - பாகால் கேட்கிறார், சூரியன் பாகால் ஆவார்)

ஏறக்குறைய கி.மு. 900-877 வரை இஸ்ராயேலின் அரசன். இவர் நாதாபுவைக் கொன்று அரசனானான்.

இசக்காரின் இனத்தைச் சேர்ந்த ஆகியாவின் மகன் (1 அர 15:27). இவன் திரட்சாவில் 24 ஆண்டுகள் ஆண்டான் (15:33). இங்குதான் முதன்முறையாக திரட்சா வடவரசின் தலைநகரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தலைநகரம் செக்கேமிலிருந்து மாற்றப்படவுள்ளது என்பதற்கு முன்பே குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன (14:17; 15:21). ஓம்ரி அரசனாகும் வரை திரட்சா தலை நகரமாயிருந்தது.

இஸ்ராயேல் கிபத்தோனை முற்றுகையிட்டிருந்த பொழுது, பாகசா, நாதாபு அரசனுக்கு எதிராகச் சதி செய்து, அவனைக் கொன்று விட்டு அரசனானான் (1 அர 15:27-28). வடவரசு இன்னும் ஒரு நிலைமைக்கு வரவில்லை என்பதையும், அருங்கொடைத் தலைமை பற்றிய கருத்து இன்னும் வலிமை வாய்ந்ததாக இருந்தது என்பதையும் இது சுட்டுகிறது.

இவன் ஆட்சியின் சுருக்கத்தில் (1 அர 16:5) இவனுடைய வலிமையைப் பற்றிய குறிப்பு உள்ளது. ராமாவைச் சுற்றி கோட்டை மதில் சுவரைக் கட்டியதைத் தவிர (15:17) இவன் ஆட்சியைக் குறித்து மற்ற எந்தக் குறிப்புகளும் தரப்படவில்லை. எருசலேமின் வடக்கே ஏறக்குறைய 8 கி.மீ. தொலைவிலுள்ள ராமாவைச் (இன்றைய எர்ராம்) சுற்றி கோட்டை கட்டப்பட்ட பொழுது, சீரியாவின் அரசனான பெனதாதுவின் உதவியுடன் யூதாவின் அரசனான ஆசா எதிர்த்தெழுந்தான். சீரியா வடக்கு இஸ்ராயேல்மீது படையெடுத்த பொழுது பாகசா பின்வாங்க வேண்டியதாயிற்று (15:17-21). ஆசாவிற்கும், பாகசாவிற்கும் இடையே தொடங்கிய இந்த எல்லைத் தகராறு பாகசாவின் ஆட்சி முழுவதும் நீடித்தது (15:16).

அனானியின் மகன் எகூ, பாகசா மற்றும் அவன் குடும்பத்தினரின் பாவத்திற்கும் கீழ்ப்படியாமைக்கும் கடவுளின் தண்டனை வரும் என்று இறைவாக்குரைத்தார் (1 அர 16:1-7).

பாகநா, பாநா (BAANAH - துன்பத்தின் மகன், கொடுமையின் மகன்)

1. பெயரேத்தைச் சேர்ந்த பென்யமின் இனத்தைச் சேர்ந்த ரிம்மோனின் புதல்வர்களில் ஒருவர். இவர் தன்னுடைய சகோதரன் இரேக்கபுவுடன் சேர்ந்து அரசனான இசுபொசேத்தைக் கொன்றார் (2 சாமு 4:2-12). இறந்துபோன அப்னேர் என்பவர், தாவீதின் தலைமையில் ஓர் ஒன்றிய அரசை நிறுவ எண்ணினார். இதைச் செயல்படுத்த இசுபொசேத்தின் இரு படைத்தலைவர்களும் இந்த மூர்க்கத்தனமான செயலைச் செய்தனர். இவர்கள் இருவரும், தூங்கிச் கொண்டிருந்த வீட்டு வேலைக்காரியைக் கடந்து அரசனின் படுக்கை அறைக்குச் சென்றனர். தூங்கிக் கொண்டிருந்த இசுபொசேத்தின் தலையை வெட்டிக்கொண்டு தாவீதிடம் சென்று தாங்கள் முடித்த காரியத்தை அறிவித்தனர். ஆனால், இஃது ஒரு மன்னிக்க முடியாத கொலையென்று தாவீது எண்ணி அவர்களைக் கொலை செய்யச்சொன்னார். இருவருடைய கைகால்களையும் வெட்டி எபிரோன் குளத்திற்கருகே ஓர் எச்சரிக்கையாகத் தொங்கவிட்டார்.

2. இவர் ஒரு நெற்றோபாயர். 'முப்பதின்மரில்' ஒருவனான ஏலேதுவின் தந்தை (2 சாமு 23:29; 1 நாள் 11:30).

3. செருபாபேலோடு சேர்ந்து பாபிலோனிய அடிமைத் தளையிலிருந்து மக்களை யூதாவிற்கு அழைத்து வந்தவருள் ஒருவர் (எஸ் 2:2; நெகே 7:7).

4. நெகேமியா காலத்தில் உடன்படிக்கைக்கு

முத்திரையிட்டவர்களில் இவரும் ஒருவர் (நெகே 10:27). இவரும் பாகனாவும் (3) ஒரே ஆளைக்குறிக்கலாம்.

பாகலா (BAALAH – தலைவி)

1. கிரியத்து எயாரிமின் முற்காலப்பெயர் (யோசு 15:9; 1 நாள் 13:6).

2. யூதாவின் வட எல்லையிலுள்ள ஒரு மலை (யோசு 15:11); இஃது அனேகமாக, சோரெத்து பள்ளத்தாக்கிற்கு வடக்கேயும், கிர்பெத் ஏல் முக்கானா (எக்ரோன்)விற்கு வடமேற்கேயும் ஏறக்குறைய 8 கி.மீ. தொலைவிலுள்ள முக்கார் என்ற மலையாகும்.

3. யூதாவின் செபேலா மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்; முன்பு சிமியோன் கோத்திரத்தின் ஒரு பகுதியாக இருந்தது (யோசு 15:29; 19:3; 1 நாள் 4:29). அனேகமாக இதுவும், பாலாவும் (யோசு 19:3), பிலகாவும் (1 நாள் 4:29) எரே இடத்தைக் குறிக்கலாம். இஃது ஏல்–முத்தாலாப் பகுதியிலுள்ள கிர்பெத்து ஏல்–மெசாவுக்கு அருகிலுள்ள (பெயேர் செபாவுக்கும் சாக்கடலுக்கும் இடையிலுள்ள) துலூல் ஏல்-மெதாபாவாக அடையாளம் காட்டப்படுகிறது.

பாகலாத்து (BAALATH – தலைவி)

தாணுக்கு ஒதுக்கப்பட்ட பூர்வீக நிலப்பரப்பில் இந்த ஊர் சேர்க்கப்பட்டுள்ளது. பட்டியலில் இது கிபத்தோனுக்கும் ஏகூதுக்கும் இடையில் அமைந்திருக்கிறது (யோசு 19:44-45). சாலமோன் கோட்டை மதில்களைக் கட்டுவித்த மூன்று நகரங்களில் இதுவும் ஒன்று (1 அர 9:18; 2 நாள் 8:5-6). இஃது இருந்த இடம் உறுதியாகத் தெரியாவிட்டாலும் யோசிப்பசு இதைக் கெசேர் (gezer) அருகில் குறிக்கிறார். இதுவும் பாகலா அல்லது கிரியத் எயாரிமும் (யோசு 15:9) ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

பாகலாத் பெயேர் (BAALATH - BEER – கிணற்றின் தலைவி)

சிமியோன் பகுதியிலுள்ள ஒரு நகரம். ஒரு கானானியத்தேவதையின் திருத்தலமாக இருந்ததாகத் தோன்றுகிறது. யோசு 19:8-இல் இவ்விடம் நெகேபிலுள்ள ராமாவாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. சிலர் இதைப் பெகலோத்தோடும் (யோசு 15:24), பாகாலோடும் (1 நாள் 4:33) ஒன்றாகக் கருதுகின்றனர்.

பாகனா (BAANA – கொடுமையின் மகன், துன்பத்தின் மகன்)

1. அகிகூதின் மகன்; சாலோனின் 12 கண்காணிப்பாளரில் ஒருவர். இவர் இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் தென்பகுதியில் மெகிதோவிலிருந்து யோர்தான் வரையுள்ள பகுதியை மேற்பார்த்து வந்தார்.

2. ஊசாயின் மகன். சாலமோனின் 12 மேற்பார்வையாளர்களில் ஒருவர். ஆசேர், மற்றும் பெகலோத்து ஆகியவை இவருடைய பகுதிகளாகும் (1 அர 4:16).

3. நெகேமியாவின் காலத்தில் எருசலேமின் சுவர்களைக் கட்டுவதில் பங்கேற்றவரான சாகோக்கின் தந்தை (நெகே 3:4). இவரும் பாகநாவும் (4) ஒரே ஆளாக இருக்கலாம்.

பாகாலி (BAALI – என் தலைவர், என் கணவன்)

இறைவனைக் குறிக்கும் அடையாளப் பெயர். இஃது இஸ்ராயேலுக்கும் அதன் கடவுளுக்குமிடையுள்ள சமூக, உடன்படிக்கை உறவைச் சித்தரிக்கிறது. இது கானானிய பாகாலை அல்லது பிற சமய மனித இறை உறவின் பண்பை உணர்த்துவதால், ஓசேயா இதை நிராகரித்து, இஸ்மி (என் கணவன்). என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். " 'என் கணவன்' என என்னை அழைப்பாய், 'என் பாகாலே' என இனிமேல் என்னிடம் சொல்ல மாட்டயே" என்கிறார் ஆண்டவர் (ஓசே 2:18).

பாகாலிசு (BAALIS – உயர்வின் மகன்)

அம்மோனியருடைய அரசன். இவன் எருசலேம் அழிக்கப்பட்டவுடன் கெதல்யாவைக் கொல்ல இசுமயேலை அனுப்பினான் (எரே

40:14). இதன் விளைவாக, யூதாவின் அழிக்கப்பட்ட சில பகுதிகளை எடுத்துக்கொள்ளலாம் என்று நம்பினான்.

பாகால் (BAAL - ஆண்டவர், தேவதை, உடைமைக்காரன்) - ஆள்

1. கிபயோனைச் சேர்ந்தவனும் சவுலினுடைய மூதாதையுமான ஏகியேல் என்பவருடைய 4-ஆம் மகன் நாள் 8:30 = 9:36).

2. அசீரியர்களால், நாடு கடத்தப்பட்டவனும், ரூபன் கோத்திரத் தலைவனுமான பேரா (Beerach) என்பவரின் தந்தை (1 நாள் 5:5).

3. 1 நாள் 4:33-இல் எழுத்துப்பிழையினால் பாகலாத் பேயேர் என்பது பாகால் என்றுள்ளது.

பாகால் (BAAL - ஆண்டவர், தேவதை, உடைமைக்காரன்) - தேவதை.

இது கானான் நாட்டின் சிறந்த இனச் செழுமையின் கடவுளான அதாது ஆகும்.

இந்தப் பெயரை மனிதர்களுக்கும், கடவுள்களுக்கும் கொடுக்கும்பொழுது இஃது உரிமையையும், இடத்தையும் குறிப்பிடலாம். சான்றாக, பாகால் - பெயோர் (எண் 25:3.5; உப 9:3); பாகால் - எர்மோன் (நீதி 3:3) முதலியவையாகும்; அல்லது செயல்பாட்டினைக் குறிக்கலாம். சான்றாக, பாகால் - பெரித்து ("உடன்படிக்கையின் கடவுள்") (நீதி 8:33; 9:4).

கி.மு. 3000 முதல் 200 வரை குறிப்பாக, எமோரியர்களுடைய குளிர்காலம், மழை, புயல், ஆகியவற்றின் கடவுளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இதனுடைய பெயர் அதாது என்று மெசபொத்தாமிய, இராஸ் - சம்ரா ஏடுகளிலிருந்து தெரிகிறது.

ஏறக்குறைய, கி.மு. 1400-இலிருந்து பாகலைப் பற்றிப் பல கதைகள் தோன்றியுள்ளன. இதனுடைய வளமைப்படுத்தும் தன்மை இயற்கையை மட்டும் பாதித்தது. கானானியர் கடவுள்களின் தொகுப்பில் மூத்தவரான "ஏல்" என்பது அனைத்திற்கும் தலைமைக் கடவுளாக இருந்தது. "பாகால் என்பவர் ஓர் அரசன். அவர் அரசுக்கு முடிவேயிராது" என்பது கானானியருடைய விசுவாச அறிக்கையாகும்; இந்த அறிக்கையினால் அல்லது அதைச்சார்ந்த ஒரு சடங்கினால் இயற்கையின் போக்கை மாற்றுவதாக எண்ணினர்.

இந்தப் புராணங்களின் கருத்துகள் பழைய ஏற்பாட்டில், சிறப்பாகச் சங்கீதங்களில், கடவுளின் அரசைக் குறிக்கும்பொழுது காணப்படுகின்றன. (உ.ம்) சங் 9:29:46; 88;93;96-98. இறைவாக்கினர் கடவுளின் அரச தன்மையைப் பற்றிக் கூறும் பொழுதும் காணப்படுகின்றன. ஒழுங்கின்மையின் சக்திகளுடன் போரிட்டு வெற்றி பெற்றதைக் குறிக்கும் 'ஆண்டவரின் நாள்' (எசா 2) என்ற கருத்துக்கூட பாகால் தண்ணீரின் மேல் கொண்ட வெற்றி, அதைத் தொடர்ந்து அரசனான கருத்தின் வளர்ச்சிதான். இவ்வாறு எபிரேயப் பகுதிகளுக்கும், கானானியக் கதைகளுக்கும் இடையே தொடர்பிருப்பதோடு, பயன்படுத்தப்படும் உவமைகளுக்கிடையிலும், குறிப்பிடத்தக்க ஒற்றுமை இருக்கின்றது (உ.ம்) சங் 29:93. பாகாலின் பண்புகளுடன் யாவே சித்தரிக்கப்படுகிறார். இந்தக் கருத்து யூத (தானி 7:7தொ), கிறிஸ்தவ (திருவெளி 12) மற்றும், இறைவாக்கினர் வெளிப்பாடு பற்றிய எபிரேய இலக்கிய வரலாற்றில் தொடர்ந்து வளர்ந்தது. கானானியக் கதைகளுடன் அதன் பருவச் சடங்குகளும் விவசாயத்திற்கான முறைகள் என்று எபிரேயர் ஏற்றுக்கொண்டனர். செக் 14:16-19 கடவுளின் அரசத்தன்மையையும் இலையுதிர்கால புது வருடத்தையும் (கூடார விழா) தொடர்புபடுத்துகிறது.

இராஸ்-சம்ரா கல்வெட்டில் "மேகங்களின் மேல் பயணம் செய்பவர்" என்றுள்ளது. இது யாவேக்குக் கொடுக்கப்பட்டுள்ளது: "வான மேகங்களைத் தேர் ஆக்குகின்றார்" (உப 33:26; சங் 68:4). பாகலின் காலடியில் அலைகள் போல வரையப்பட்டுள்ள கோடுகள் மேகங்களில் உள்ள தண்ணீரை

அல்லது மலையுச்சிகளைக் குறிக்கின்றன. இதையே ஆமே 4:3; மீக் 1:3-இலும் காண்கின்றோம்: "மாநிலத்தின் உயர்ந்த இடங்களில் நடமாடுபவர்."

பாகால் வழிபாடு எகிப்தையும் அடைந்தது. பெலூசியும் அருகில் உள்ள பாகால் சாப்போன் என்ற இடம் எகிப்தில் இவ்வழிபாட்டின் மையமாக இருந்தது.

இராஸ்-சம்ராவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாகாலைப் பற்றிய கதைகள், வறட்சி, வளமையின்மையின் தேவதையான மோத்துடன் செய்த போரைப்பற்றி விளக்குகின்றன. கோடைவெயிலில் பயிர்கள் வாடும்பொழுது பாகால் இறக்கும் கடவுளாகவும், குளிர்கால மழையில் பயிர்கள் செழுமை அடையும்பொழுது பாகால் உயிர்க்கும் கடவுளாகவும் உள்ளது. பாகால் தோற்கும்பொழுது, அதனுடைய சகோதரி தேவதை அனாத்து மோத்துடன் போரிட்டு அதைத் தூள்தூளாக்கி நிலத்தின்மேல் வீசி எறிகிறது. இத்தகைய சடங்கு லேவி 2:14-இல் விவரிக்கப்படுகிறது. பாகால் மீண்டும் உயிர் பெறும்பொழுது வானம் பொழிய எங்கும் செழிப்பாக இருக்கிறது. இறுதியாக, ஏழு ஆண்டுகளுக்குப்பின், பாகால் போரிட்டு அனாத்தை வெல்கிறது.

இந்தக் கதைகளின் சில பகுதிகள் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சில சடங்குகளைக் குறிக்கின்றன. பாகால் இறந்த பிறகு அவனுடைய சகோதரியான "கன்னியான அனாத்து" மலைகளில் அவளது அழுகுரல் எதிரொலிக்கும்படி அழுது கொண்டு தேடிச்செல்கின்றது. இஃது அததரிம்மோனுக்காக அழுவதையும் (செக் 12:11), எருசலேம் பெண்கள் தம்மூசுவுக்காக அழுவதையும் (எசே 8:14), அனேகமாக இஸ்ரயேல் கன்னிப்பெண்கள் இப்தாகுவின் மகளுக்காக பாரம்பரியமாக அழுவதையும் (நீதி 11:37-40) சுட்டுவதாக அமைகிறது.

இஸ்ராயேல் சில சமயங்களில் பாகால் வழிபாட்டைத் தங்களுக்கு ஏற்றபடி எடுத்துக் கொள்ளாமல், அப்படியே பாகாலின வழிபாட்டைப் பின்பற்றினர். ஆகவே, எபிரேயருடைய வரலாற்றில் பல இடுக்கண்கள் ஏற்பட்டன. (உ.ம்) ஆகாபு-ஈசபேல் ஆட்சியில் (1 அர 16:32). ஓசே இறைவாக்கினர் (1 அர 2) இதைக் கண்டித்தார். எசேக்கியா, யோசியா ஆகியோரின் ஆட்சியில் இவ்வழிபாடு அழிக்கப்பட்டாலும் (2 அர 18:4;23) நாடுகடத்தலின் தொடக்கத்திலும் (எசே 8:14), பாரசீகர் காலத்திலும் (செக் 12:11) தம்மூசின் வழிபாடு என்று அழைக்கப்பட்டது.

பாகால் - அனான் (BAAL-HANAN - ஆண்டவர் கருணையுள்ளவர்)

1. இஸ்ராயேலருடைய முடியாட்சிக்கு முன்னால் ஏதோமில் இருந்த ஓர் அரசன்; இவர் அக்போரின் மகனும் ஏதோமின் ஏழாவது அரசனும் ஆவார். இவர் யூப்பிரத்தீசிலிருந்து சாவூலுக்கு அடுத்த அரசன் ஆவார். இவருக்குப்பின் அதாது அரசனானார் (ஆதி 36:38-39; 1 நாள் 1:49-50).

2. தாவீதின் ஆட்சியில் பதவி வகித்த ஒரு கெதேரியர். செபேலாவிலுள்ள ஒலிவ மரங்களையும், அத்திமரச் சோலைகளையும் இவர் கண்காணித்தார் (1 நாள் 27:28). ஒருவேளை இவரும் தாவீதின் வலியவீரர்களில் ஒருவரான அனானும் ஒரே ஆளாக இருக்கலாம் (11:43).

பாகால் - ஆட்சோர் (BAAS - HAZOR - ஆட்சோரின் தலைவர் அல்லது பாகால்)

அனேகமாக, எபிராயிமுக்கு அருகிலுள்ள, அப்சலோமின் மலைவீடாக இருக்கலாம். ஆட்டு மயிர்வெட்டும் கொண்டாட்டத்திற்காக இவ்விடத்திற்கு அப்சலோம் தாவீதின் மற்றப் புதல்வரை வரவழைத்தான்; அப்சலோமின் ஏவுதலால் அவனுடைய ஊழியர்கள் அம்னோனை இங்குதான் கொன்றனர் (2 சாமு 13:23).

இது கலிலேயாக் கடலுக்கு வடக்கேயுள்ள ஆட்சோர் அன்று. நெகே 11:33-இல் குறிக்கப்படும் ஆட்சோர் சில சமயங்களில் பாகால்-ஆட்சோர்

என்று கருதப்படுகிறது. அனேகமாக பெத்தேலுக்கு, வடகிழக்கே ஏறக்குறைய 7 கி.மீ.தொலைவிலுள்ள எபெல் அசூர் என்ற மலையாக இருக்கலாம். இதன் உயரம் 1032 மீட்டராகும். சாக்கடல் சுருள்களில் ஒன்றான ஆதியாகமக் கதையில் அபிராம் லோத்தைவிட்டுப் பிரிந்தபின் கடவுள் 'இராமோத்து ஆட்சோர்' என்ற இடத்தில் அபிராமுக்குத் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ளது (ஆதி 13:14). பாகால் ஆட்சோருக்கு மற்றொரு பெயர் இராமோத்து ஆட்சோர் என்று இன்னொரு பழைய பாரம்பரியம் சொல்கின்றது; அப்சலோமின் மலை வீடானது பூர்வீக கானானிய எபிரேயத் திருத்தலமாக இருந்திருக்கலாம் என்று பிற்காலப் பாரம்பரியம் கூறுகிறது.

பாகால் - ஆமோன் (BAAL - HAMON - வளமையின் அல்லது செல்வத்தின் ஆண்டவர்)

அதிகமான பலன் தரக்கூடிய அம்மோனுடைய திராட்சைத் தோட்டம் இருந்த இடம் (உ.ச 8:11). இஃது இருந்த இடம் தெரியவில்லை; திருத்தப்பட்ட வாசகங்களும் குறிப்பாகச் சொல்லப்பட்ட இடங்களும் ஆதாரங்களால் நிலைநிறுத்தப்படவில்லை. "செல்வம் உள்ளோனின்" நிலைமையைச் சொல்லும் பொருட்டு ஒரு கவிஞனின் கற்பனையில் உண்டாக்கப்பட்ட பெயராக இருக்கலாம். திராட்சைத் தோட்டம் அரசபெண்டிரைக் குறிக்கலாம். ஆகவே, இஃது எருசலேமை மறைமுகமாகக் குறிக்கலாம் என்று விளக்கவுரையாளர் சிலர் கருதுகின்றனர்.

பாகால் - எர்மோன் (BALL-HERMON - எர்மோனின் ஆண்டவர், புனித இடத்தின் ஆண்டவர்)

1. மனசே கோத்திரத்தின் எல்லையிலிருந்து ஓர் இவ்வியர் நகரம்; இஃது இஸ்ராயேலருடைய படையெடுப்பினால் பாதிக்கப்படவில்லை (நீதி 3:3; 1 நாள் 5:23).

2. இஃது எர்மோன் மலைக்கு அருகில், இஸ்ராயேலின் வடக்கு எல்லையில் அமைந்திருக்க வேண்டும். சிலர் இஃது எர்மோன் மலையுச்சியில் இருந்திருக்க வேண்டும் என்கிறார்கள்; மற்றவர்கள் இது பாகால்-கதுவின் மற்றொரு பெயர் என்று கருதுகின்றனர். அறிஞர் சிலர் இது யோர்தான் தோன்றும் இடத்திலுள்ள பனியாவாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். ஆபேல் என்பவர் இஃது இருந்த இடமாக இக்லிம் ஏல்-பெல்லானைச் சுட்டிக் காட்டுகிறார்.

பாகால்-கது (BAAL-GAD - நற்பேற்றின் ஆண்டவர்)

யோகவாவினுடைய வெற்றிகளின் வட எல்லையைக் குறிக்கும், எர்மோன் மலைக்கு அருகில் உள்ள ஒரு நகரம் (யோக 11:17; 12:17; 13:5). இஃது ஒரு பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இதற்கு மேற்கே லெபனோன் மலையும், கிழக்கே எர்மோன் மலையும் உள்ளன. இஃது இருந்த இடம் தெரியவில்லை; ஆனால், இன்றைய அஸ்பெயாவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால், இதற்கு வடக்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள தெல்-கவுசு இருக்குமிடத்தில் பாகால்-கது இருந்ததாகக் கருதுவது மேலாகும். இரண்டும் வாடி எத்-தெயிமில் அமைந்துள்ளன.

பாகால் - சாலிசா (BAAL SHALISHAH - மாவட்டத்தின் தலைவர்)

எப்பிராயிமின் மலைப்பகுதியில் சாலிசாவிலுள்ள ஒரு நகரமாகும் (1 சாமு 9:4). எலிசா, சில்காலில் இருந்தபொழுது, வாற்கோதுமை ரொட்டிகளையும், புதிய தானியக்கதிர்களையும் கொண்டு சென்ற மனிதனின் ஊராகும் (2 அர 4:42). இக்குறிப்பும், பாலஸ்தீனத்தில் மற்ற இடங்களை விட இங்கு முன்னதாகவே கதிர்கள் முற்றின என்ற தால்மூதின் கூற்றும், இவ்விடம் வளமை மிகுந்த பகுதியில் இருந்தது என்பதைக் காட்டுகின்றன. அறிஞர் சிலர் சாலிசா இருக்கின்ற இடத்தில் இஃது இருந்தது என்று கருதுகிறார்கள்.

செக்கேமிற்குத் தென்மேற்கிலுள்ள கெபர்தில்த்

என்ற ஊரின் பெயரில் இவ்விடத்தின் பெயர் இன்னும் ஒலிக்கின்றது. இவ்வூர் அனேகமாக, பாகால்-சாலிசா இருந்த இடமாக இருக்கலாம்.

பாகால் - செபூபு (BAAL - ZEBUB - ஈக்களின் தலைவர்)

பெலிஸ்திய நகரமான எக்ரோனின் கடவுள். இஸ்ராயேல் அரசன் அகசியா மேல்மாடியிலிருந்து ஜன்னல் வழியாகக் கீழே விழுந்த பிறகு, அவன் தான் உயிர் வாழ்வானா என்பதை அறிந்துகொள்ள இந்தக் கடவுளிடம் ஆட்களை அனுப்பினான் (2 அர 1:2-19).

எபிரேய மொழியில் 'செபூபு என்றால் 'ஈ' என்று பொருள். ஆகவே, இப்பெயர் "ஈக்களின் பாகால்" என்ற பொருளில் எழுபது நூல் மற்றும் யோசிப்பசால் பயன்படுத்தப்படுகிறது. தொற்றுநோயை உண்டு பண்ணும் ஒருவகை ஈக்களை வாட்டிய கடவுளை இப்பெயர் குறிக்கும் என்று இன்றைய வல்லுநர்கள் விளக்கம் கூறுகின்றார்கள். இதைக் கிரேக்க நாட்டுச் சேயுசு அப்போமியோசுடன் ஒப்பிடுகின்றனர். இந்தச் சேயுசு "ஈக்களை நீக்குகின்றவர்", "ஈக்களை விரட்டுபவர்" என்றெல்லாம் விளக்கப்படுகின்றார். ஆனால், அ) தொற்றுநோயை விரட்டுகின்ற கடவுள் ஏன் வீழ்ச்சியின்போது அழைக்கப்படுகின்றார்? ஆ) கிரேக்கக் கடவுள்கள் பொதுவாக ஈக்களை விரட்டுகிறவர்கள் அல்லர். ஆகவே, பாகால்-செபூபு ஈக்கள் பறக்கும் ஒலியில் குறி சொல்லும் கடவுளாகும். பாகால்-செபூபு என்பது பாகால்-செபூபு (பாகால் ஆண்டவர்) என்பதன் வெறுப்பான பெயராகும்.

பாகால் - செபோன் (BAAL - ZEPHON - வடக்குத்திசைத் தலைவர், வடகாற்றின் தலைவர்)

இஸ்ராயேலின் யாத்திரையின்போது, வடகிழக்கு எகிப்திலுள்ள இவ்விடத்தில் பாளையம் இறங்கினார்கள்.

இதனுடைய சரியான இடம் தெரியவில்லை. ஏனெனில் இதனோடு சொல்லப்பட்டுள்ள பிகாஹிரோத்தும் மித்தோலும் (யாத் 14:2.9) இன்னும் அடையாளம் காட்டப்படவில்லை; பொதுவாக இவை வடகிழக்கு எகிப்தில் இருப்பனவாகச் சொல்லப்படுகிறது. இஃது ஒரு கோவிலையோ, புனிதத் தலத்தையோ குறிக்கலாம் (எண் 33:7).

இன்றைய ஆராய்ச்சிகளின் விளைவாக, பாகால்-செபோனைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இத்தேவதையின் பெயரால் இவ்விடம் அழைக்கப்பட்டது. இது வடமேற்கு செமித்தியப் பெயர்; இதன் பொருள் 'வடக்கின் தலைவன்'. பழமை வாய்ந்த உகாரித்து இலக்கியத்தின் பலிப்பட்டியலில் இக்கடவுளின் பெயர் கூறப்பட்டுள்ளது. எகிப்திய இலக்கியத்தில் இஃது ஒரு கடல் கடவுள், புயற்கடவுள் என்று சொல்லப்பட்டுள்ளது. இக்கடவுளும், எகிப்திய தகபனகேசும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்று பெனிசிய புல்தாள் ஏடுகள் கூறுகின்றன.

பாகால் - தாமார் (BAAL - TAMAR - ஈச்சமரங்களின் தலைவர்)

பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த கிபயா என்ற நகருக்கு அருகில் உள்ளது. இங்கு இஸ்ராயேலர் கூடி கிபயா மீது கடைசியாக, வெற்றியின் போர் செய்தனர் (நீதி 20:33-36). இவ்விடம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இஃது ஒரு நகரமாகவே இருந்திருக்காது; அனைவரும் அறிந்த ஓர் இடமாக இருந்திருக்கலாம். யூசேபியுவின் கூற்றுப்படி தெல் ஏல்-புல்லுக்குக் (பென்யாமினின் கிபயா) கிழக்கேயுள்ள ஏற்றமான இராஸ் எத்-தவில் ஆகும் இவ்விடம்.

பாகால் - பெயோர் (BAAL - PEOR - திறப்பின் தலைவர், பெயோரின் தலைவர்)

பெயோர் மலையின் கடவுள். இஸ்ராயேலர் சித்திமில் பாளையம் இறங்கி இருந்தபோது மோவாபியப் பெண்களோடு விபசாரம் செய்தனர். அவ்வாறு இஸ்ராயேல் தங்களைப் "பெயோரின் பாகாலைப் பின்பற்றி" தகாத வழிபாட்டுச் சடங்குகளில் ஈடுபட்டார்கள். தண்டனையாக

இஸ்ராயேலர் கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டார்கள். மதியானியரும் இஸ்ராயேலரைத் தவறான வழியில் இட்டுச்சென்றனர் (எண் 25:1-9; உப 4:3; சங் 106:28; ஓசே 9:10).

பாகால்-பெராட்சிம் (BAAL - PERALIM - பிளவின் தலைவர்)

தாவீது இஸ்ராயேலரின் அரசனாக அபிடேகம் செய்யப்பட்ட சிறிது காலத்திற்குப் பின்பு பெலிஸ்தியரைத் தோற்கடித்த இரபாயிம் பள்ளத்தாக்கிற்கு அருகில் உள்ளது இவ்விடம் (2 சாமு 5:20 தொ; 1 நாள் 14:11தொ). எசாயா எருசலேமிற்குத் தந்த எச்சரிக்கையில் இவ்விடம் கிபயோன் பள்ளத்தாக்கிற்கு இணையாகக் கொடுக்கப்பட்டுள்ளது (எசா 28:2:). லிப்தா (நெப்தோவா)விற்கு மேலும், எருசலேமிற்கு வடமேற்கிலும், இராஸ் என்-நாதிரிலும் லிப்தாவுக்கு (நெப்தோவாகுக்கு) வடக்கிலும் உள்ள இன்றைய செயிக்கு பெதூராக இருக்கலாம்.

பாகால் - பெரித்து (BAAL - BERITH - உடன்படிக்கையின் தலைவர்)

கிதியோனின் மகனான அபிமெலக்கின் ஆட்சியில் செக்கேமியர் வழிபட்ட ஒரு கானானியத் தேவதையின் பெயர் (யோசு 8:33; 9:4). ஓர் உடன்படிக்கையின் விளைவாக அபிமெலக்கு செக்கேமின் அரசனானான். அதன்படி பாகால் - பெரித்து கோவிலிருந்து அவனுக்கு எழுபது வெள்ளிக்காசுகள் கொடுக்கப்பட்டன (9:3). மூன்று ஆண்டுகளுக்குள், இருவருக்குமிடையேயிருந்த உறவு கசந்து போயிற்று. செக்கேமியர் உடன்படிக்கையை முறித்தனர் (9:22-23).

இக்கடவுள் ஏல்-பெரித்து என்றும் அழைக்கப்பட்டது (9:46). இதன் உண்மையான பெயர் ஆமோர் என்று இருந்திருக்கலாம். இதன் பொருள் கழுதையாகும். இஃது "உடன்படிக்கையின் தலைவர்" என்ற பெயருக்குக் குறிப்பிட்ட பொருளுடையதாகும். மாரியில் கழுதையைக் கொன்று பலியிடுவது உடன்படிக்கைச் சடங்கின் முக்கிய பகுதியாகும். காலப்போக்கில் கழுதையைக் கொல்வது, உடன்படிக்கையை ஏற்படுத்துவது என்ற பொருள் கொண்டது. இதுவே அபிமெலக்குக்கும், செக்கேமியருக்கும் இடையிலான உடன்படிக்கைச் சடங்காக இருந்திருக்கலாம். செக்கேம் அரசனின் பெயர் ஆமோர் ஆகும். அவனது சந்ததியினர் "ஆமோரின் மக்கள்" என்று அல்லது "கழுதையின் ஆள்கள்" என்று அழைக்கப்பட்டனர் என்பது கவனிக்கத் தக்கது (யோசு 24:32; நீதி 9:28; காண்க. அ.ப. 7:16).

பாகால்பேக்கு (BAAL BEK)

நாகர் ஏல் - ஆசியின் மூலத்திற்கு அருகிலுள்ள பெக்கா என்ற இடத்திலுள்ள ஒரு லெபனோனிய நகரம்.

இந்தச் செமித்தியப் பெயரானது அங்கு வழிபடப்பட்ட பெக்காவின் பாகால் என்ற கடவுளின் பெயரைக் கொண்டுள்ளது. இதன் கிரேக்கப் பெயர் எலியாப்பொலி (சூரியனின் நகரம்) என்பதாகும். பாகால் சூரியக்கடவுளோடு ஒன்றாக்கப்பட்டதால், இப்பெயர் செலூக்கியர் காலத்தில் பயன்படுத்தப்பட்டது. நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் அந்தப் பூர்வீகப்பெயர் மறுபடியும் பயன்படுத்தப்பட்டது.

கோவிலின் இடிபாடுகளில் இன்று பாகால்பேக்கு புகழ்மிகுந்ததாக இருக்கின்றது. மிகவும் பழைமை வாய்ந்த அந்தக் கோவில் முதலில் செமித்திய புயற்கடவுளான அதாதின் வழிபாட்டிற்காகக் கட்டப்பட்டது. பிறகு, இது சூரியக் கடவுளுக்கும், அதன் பிறகு யூப்பித்தருக்கும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. சூரியக் கடவுளும், யூப்பித்தரும் ஒன்றே என்று மக்ரோபியு கூறுகின்றார். பூர்வீகப் பெனிசியாவின் ஆகாயக் கடவுளான பாகால்சமென் என்பதும், யூப்பித்தரும் ஒன்றாயின. தியோனிசுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட கோவில் அடுத்த முக்கியத்துவம் வாய்ந்தது. மூன்றாவது முக்கியமான கோவில் வட்டக்கோவில் என்று அழைக்கப்பட்டது. பாகால் பேக்கில்

வழிபடப்பட்ட மற்றக் கடவுள்கள் வீனசும், மெர்க்குரியுமாகும். இவையிரண்டும் யூப்பித்தரோடு சேர்த்துத் தலைமைக் கடவுள், தாய்த்தேவதை, இளைய கடவுள் என மும்மைக் கடவுளாயினர்.

கி.பி. 637-இல் பாகால்பேக்கு அரேபியர்களால் கைப்பற்றப்பட்டு 1401-இல் மங்கோலியர்களால் அழிக்கப்பட்டது. மேலும், இந்த இடம் பல நில நடுக்கங்களால் தாக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் விலை மதிப்பில்லாத பொருட்கள் இந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 1900-1904-இல் இவ்விடம் செர்மானியரால் அகழ்வாய்வு செய்யப்பட்டது.

பாகால் - மெகோன் (BAAL - MEON - குடியிருப்பின் தலைவர், மெகோனின் தலைவர்)

வடமோவாபில் இருந்த ஒரு நகரம்; இது பெத்-பாகால்-மெகோன், பெத்-மெகோன், பெகோன் என்றும் அழைக்கப்பட்டது. இஃது ரூபனின் கோத்திரத்திற்குக் குறிக்கப்பட்ட பகுதியாகும் (எண் 32:3.38; யோசு 13:17; 1 நாள் 5:8; எரே 48:23). ஏறக்குறைய கி.மு. 830-இல் இது மோவாபியருடைய கையில் இருந்தது; ஏனெனில், மேசா என்பவர் "பாகால் - மெகோனைக்கட்டி, அதில் ஒரு நீர்த்தேக்கத்தை உண்டாக்கினார்." மேலும் "மேதபா, பெத்-திப்லாத்தயிம் மற்றும், பெத்-பாகால்-மெகோனையும்" கட்டினார். பாண்ட உடைசல்கள், இது கி.பி. 772-இலிருந்து இஸ்ராயேலரின் கையில் இருந்தது என்று காட்டுகின்றன. பிறகு, மீண்டும் இது மோவாபியருடைய கையில் சேர்ந்து (எரே 48:23; எசே 25:17).

மேதபாவிற்குத் தெற்கே ஏறக்குறைய 6 கி.மீ. தொலைவிலுள்ள மாயின் என்ற பெரிய மண்மேடு இருந்த இடத்தில்தான் இஃது இருந்தது என்று அடையாளம் காட்டப்படுகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்து இது குடியேறப்பட்டது என்பதற்கு ஓர் ஆதாரமும் கண்டுபிடிக்கப்படவில்லை; ஆனால், தொடர்ந்து வந்த பல குடியேற்றங்களால் இஃது அழிந்து விட்டிருக்கலாம். இந்நகரை அடுத்த பள்ளத்தாக்கும் மலைச்சரிவும் மிகவும் செழிப்பானவை. அதே சமயம் அதன் மேற்குப் பகுதி பாறையான பகுதியாகும். ஆனால், நல்ல மேய்ச்சல் நிலத்தைக் கொடுத்தது.

பாகால் - யூதா (BAALE - JUDAH - யூதாவின் பாகால்கள் அல்லது யூதாவின் தலைவர்கள்)

இதுவும் கிரியத்து எயாரிமும் ஒன்றே (2 சாமு 6:2; 1 நாள் 13:6). காண்க. கிரியத்து எயாரிம்.

பாகை, தலைப்பாகை (CAP, TURBAN)

துணியால் ஆன, தலையைச் சுற்றிக்கட்டப்படும் ஓர் ஆடைப்பகுதி. இதைக்குறிக்க, பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. தலைப்பாகை சுதந்தர ஆண்மகனின் தலையணியாகும் (யோபு 29:14; எசா 3:23). விவிலியத்தில் குருக்களின் தலைப்பாகை சிறப்பான முறையில் குறிக்கப்படுகிறது. பெரிய குரு மெல்லிய நார்ப்பட்டால் செய்யப்பட்ட தலைப்பாகை அணிந்திருக்க வேண்டும் (யாத் 28:4.39; எசே 44:18; செக் 3:5). பசும்பொன்னால் செய்யப்பட்ட ஒரு பட்டத்தில் "ஆண்டவருக்கு அர்ப்பணம்" என்று முத்திரை போல் பொறித்து அந்தப் பட்டத்தைத் தலைப்பாகை மேல் இணைத்துக் கட்டுவர் (யாத் 28:36-38; 29:6; 39:30; லேவி 8:9; சீரா 45:12). பெரிய குருவைத் தவிர்த்த மற்றக் குருக்கள் மெல்லிய நார்ப்பட்டால் செய்யப்பட்ட கூம்பு வடிவமான தலைப்பாகையைத் தங்கள் பதவியின் அடையாளமாக அணிந்திருப்பார் (யாத் 28:40; 29:9; 39:28; லேவி 8:13). இது குருக்களின் ஆடைகளில் தனிச்சிறப்பானதாகும். பிற்காலத்தில் குருக்கள் யாவரும் ஒரே மாதிரியான தலைப்பாகை அணிந்திருந்ததாகத் தெரிகிறது (யூதி 4:15).

பாக்கனோர் (BACENOR)

2 மக் 12:35-இல் வரும் "பாக்கனோரைச் சேர்ந்தவர்கள்" என்ற சொற்றொடரிலுள்ள ஒரு

பெயர். இவர்களும், 12:17-இல் சொல்லப்பட்டுள்ள துபியானிகளும் ஒருவரே எனத் தோன்றுகிறது. இந்தப் பெயரின் பொருள் தெளிவற்றுள்ளது.

பாக்கா பள்ளத்தாக்கு (BACA, VALLEY OF - நறுமண மரங்களுடைய பள்ளத்தாக்கு)

ஒரு பாலஸ்தீனப் பள்ளத்தாக்கு. பசையைக் கக்கும் ஒரு வகை மரத்திலிருந்து அனேகமாக இந்தப் பெயர் வந்திருக்கலாம். இப்பள்ளத்தாக்கில் வளர்ந்த பால்சம் மரமாக இருக்கலாம். இந்தச் சொல் 'அழுதல்' என்ற சொல்லிலிருந்து வந்ததாக இருக்கலாம். இந்தப் பள்ளத்தாக்கு இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், இரபாயிம் என்ற பள்ளத்தாக்கில் நிறைய பால்சம் மரங்கள் இருப்பதால், அதுவாக இருக்கலாம் என்று தோன்றுகின்றது.

இப்பள்ளத்தாக்கு வறட்சியானது; பிரயாணத்திற்குத் தகுந்ததாக இல்லை. இதன் வழியாக எருசலேமிற்குப் (சீயோன்) பாதை செல்கின்றது. அதன் வழியாக யூதர்கள் விசுவாசத்துடனும் மகிழ்ச்சியுடனும் திருப்பயணம் சென்றனர் (சங் 84:6). இஃது ஒரு அடையாளப் பள்ளத்தாக்காகவும் இருந்திருக்கலாம்.

பாக்கிது (BACCHIDES)

முதலாம் தெமேத்திரியு என்ற அரசனின் நண்பன்; யூப்பிரத்தீசுக்கு வடக்கேயுள்ள பகுதிக்கு ஆளுநராகவும் இருந்தவன் (1 மக் 7:8 தொ). யூதா மக்கபேயுவின் கிளர்ச்சியை அடக்கவும், ஆல்கிமுவைத் தலைமைக் குருவாக்கவும் இவன் ஒரு படையுடன் அனுப்பப்பட்டான். இவன் பணி ஓரளவு வெற்றி பெற்றது. இவன் யூதாவையும், அவர் சகோதரர்களையும் சமாதான வார்த்தைகளால் ஏமாற்றப் பார்த்தான்; ஆனால், அவன் அசட்டை செய்யப்பட்டான். எழுத்தர்கள் குழு (கசிதேயர்கள்) பாக்கிது மற்றும் ஆல்கிமுவின் முன்னிலையில் தோன்றி நீதி கேட்டபொழுது இந்த இரண்டு தலைவர்களும், அவர்களுக்கு ஒரு தீமையும் செய்வதில்லை என்று சத்தியம் செய்தனர். இதை எழுத்தர்கள் நம்பினார்கள். ஆனால், அவர்களின் பிரமாணிக்கத்தை ஐயுற்று இரு தலைவர்களும் இரக்கமின்றி 60 பேரைக் கொன்று விட்டனர். அசமோனியப் படையிலிருந்து ஓடியவர்களை நம்பாததால் அவர்களைப் பாக்கிது கைது செய்தான்.

ஒரு படையுடன் ஆல்கிமுவின் கையில் நாட்டை ஒப்படைத்து விட்டு, பாக்கிது அரசனிடம் திரும்பினான். இரண்டாம் படைத்தளபதியான நிக்கானோர் யூதாவோடு செய்த போரில் இறந்தபொழுது, தெமேத்திரியு, பாக்கிதுவை மீண்டும் யூதேயாவிற்கு அனுப்பினான். அவன் அர்பேலாவில் வெற்றி பெற்றான் (1 மக் 9:2). பிறகு, எலாசா என்ற இடத்தில் பாக்கிதுக்கு எதிராக நடந்தபோரில் யூதா தோற்றார்.

யூதாவின் மரணம், பஞ்சம் ஆகியவைகளின் விளைவாக, பாக்கிது யூதேயாவை ஆட்டிப்படைக்கவும் யூதத்துவத்தைப் பிரமாணிக்கத்தோடுத் பின்பற்றினவர்களைத் துன்புறுத்தவும் செய்தான். ஓய்வு நாளில், யோர்தான் கரையில், யோனத்தானோடு போரிட்டான் (9:46). தன்னுடைய படையில் ஓராயிரம் பேர் மாண்டாலும், பாக்கிது வெற்றி பெற்றான். எருசலேமுக்குச் சென்று அந்நகரத்தின் மேல்நிலையிலிருந்தவர்களின் புதல்வர்களைப் பிணைக் கைதிகளாகக் கொண்டு சென்றான். எருசலேமைச் சுற்றிப் பல இடங்களில் அரண்களைக் கட்டி தன்னுடைய ஆட்களைக் கோட்டையில் வைத்தான். இதன்பிறகு கசிதேயர்களுக்குப் பயன்படாமல், பாக்கிது, சீரியாவிற்குத் திரும்பினான். இந்தத் திரும்புதல் ஆல்கிமுவின் மரணத்திற்குப்பின் நடந்ததென்றும், அதன்பிறகு யூதேயா கி.மு. 158 வரை இரண்டாண்டுகள் அமைதியாக இருந்ததென்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் முறையாக யூதேயாவிற்குப் போகும்படி பாக்கிது தூண்டப்பட்டான். பெத்பாசியில் யோனத்தானுடன் இவன் போரிட்டான்; ஆனால், அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். யோனத்தானை அழிக்கும்

தன்னுடைய முயற்சி வெற்றி பெறாததற்குக் சிரேக்கமொழி பேசும் யூதர்கள்தான் காரணம் என்று பொய் சொல்லி அனேகரைக் கொன்றான். இதன் விளைவாக யோனத்தான் அமைதியை வேண்டி சிறைக் கைதிகளின் விடுதலையையும் தேடினான். பாக்கிது இதற்கு ஒத்துக்கொண்டு, இனித் தான் வாழும்வரை யோனத்தானுக்கு எதிராகத் தீங்கு இழைப்பதில்லை என்று வாக்களித்தான். தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிய அவன் மறுபடியும் யூதேயாவிற்குத் திரும்பவில்லை. பாக்கிதுடன் செய்து கொண்ட சமாதானத்தின் விளைவாக யோனத்தான் அங்கீகரிக்கப்பட்ட தலைவரானார். ஆல்கிமு இறந்துவிட்டதால் அவருக்குப் போட்டியாக யாரும் எழவில்லை.

பாசமத்து (BASEMATH - நறுமணம்)

1. ஏசாவின் மனைவியர்களுள் ஒருத்தி. ரெயுவேலின் தாய் (ஆதி 36:4.13.17). 26:34-இல் இவள் இத்தியரான ஏலோனின் மகள் என்றழைக்கப்படுகிறாள். ஆனால், 36:2-இல் ஆதா ஏலோனின் மகள் என்றழைக்கப்படுகிறாள். 36:3-இல் பாசமத்து இஸ்மயேலின் மகள் என்று குறிக்கப்படுகிறாள். இவளும் 28:9-இல் வரும் மகலாத்து (1) என்பவளும் ஒரே ஆளாக இருக்கலாம்.

2. இவள் சாலமோனின் மகளும், நப்தலியில் இருந்த சாலமோனின் கண்காணிப்பாளரான அகிமாசின் மனைவியும் ஆவாள் (1 அர 4:15).

பாசயாகு (PASEAH - நொண்டுகிற)

இதன் உண்மைப்பொருளின்படி, இப்பெயரைத் தாங்கியவர், ஏதாவது ஒரு விதத்தில் முடவர் எனத்தெரிகிறது.

1. யூதா குலத்தின் வழித்தோன்றலாகிய இவர் எஸ்தோனின் மகனாவார் (1 நாள் 4:12).

2. இது செருபாபேலோடு அடிமைத்தனத்திலிருந்து யூதாவுக்குத் திரும்பி வந்த ஆலய ஊழியர்களில் ஒரு குடும்பத் தலைவன் பெயராகும் (எஸ் 2:49; நெகே 7:51).

3. இப்பெயர் யோயாதாவின் தந்தையைக் குறிப்பதாகும். இந்த யோயாதா பழைய வாயிலைப் பழுது பார்த்தவர்களில் ஒருவராவார் (நெகே 3:6).

பாசவேல் (PHASAEL)

எருசலேமில் பெரிய ஏரோதுவின் அரண்மனையில் வடகோடியிலுள்ள கோபுரங்களில் மிகப்பெரியது. இது தாவீதின் கோபுரம் என்று அழைக்கப்பட்டது. இஃது ஏரோதின் மூத்த சகோதரன் பெயரால் பாசவேல் என்றழைக்கப்பட்டது. கி.பி. 70-இல் தீத்துவால் எருசலேம் அழிக்கப்பட்டபோது தப்பிய பகுதிகளில் இதுவும் ஒன்று. இக்கோபுரத்தின் அடிப்பகுதி ஏரோது காலத்தையும் மேற்பகுதி துருக்கியர் காலத்தையும் சேர்ந்தது.

பாசாக்கு (PASACH - பிரித்தல்)

ஆசேரின் கோத்திரத்தில் தோன்றிய இவர், யாப்லேற்று என்பவரின் மூன்று புதல்வர்களில் தலைமகனாவார் (1 நாள் 7:33).

பாசான் (BASHAN - செழிப்பான சமவெளி)

யோர்தானின் கிழக்குப்பகுதிகள் பிரிக்கப்பட்டுக் காணப்படும் வடகோடிப்பகுதிகள் தான் இந்தப் பாசான் சமவெளி. இதன் சரியான பரப்பளவை நிர்ணயிப்பது கடினம். ஏனெனில், விவிலியம் இதை ஒரு சில இடங்களில் பரந்த விளைச்சல் நிலம் என்றும், வேறு சிலர் இடங்களில் ஓகுவின் அரசாட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளையும் குறிக்கவும் பயன்படுத்துகிறது. இதன் எல்லைகளாக வடக்கே எர்மோன் மலையும், கிழக்கே எபெல் துருசையும், மேற்குப்புற எல்லையாக கலிலேயாக் கடலின் கிழக்கிலுள்ள மலைகளும் கொண்டு, யார்முக்கை அடுத்து 10 கி.மீ. வரைக்கும் பரந்து காணப்படுகிறது. மாகாணங்கள் இதன் உள்ளடங்கும். கர்னாயிம், அஸ்தரோத்து, சலிக்கா, கெனாத்து, எதிரேயி ஆகிய நகரங்கள் இப்பகுதியைச் சேர்ந்தவை.

பிற்கால கிரேக்க நகரங்களான இப்போ, தியோன், அபீலா முதலியன இதில் அடங்கும்.

எமோரியர்களை வெற்றி கொண்டபின் இஸ்ராயேலர் ஓகுவின் நாடாகிய பாசான் மேல் படையெடுத்து எதிரேயில் ஓகுவை வென்றனர் (எண் 21:33-34). இப்பகுதி மனாசேயின் பாதி-இனத்திற்குப் பங்கீடு செய்யப்பட்டது (உப 3:13; எண் 32:33). இஸ்ராயேல் நாடு பிளவுபட்ட தொடக்க காலத்தில் பாசான் வட அரசைச் சேர்ந்ததாக இருந்தது. ஆகாபு (1 அர 23:3), யோராம் (2 அர 8:28). ஏசூ (10:33) ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் பாசானின் ஒரு பகுதியோ முழுவதுமோ சீரியர்கள் வசமாயிற்று. 2-ஆம் எரொபவாம் இதை மீண்டும் கைப்பற்றினார் (2 அர 14:15). ஆனால் விரைவில் இதை 3-ஆம் திகிலத்-பிலேசர் அசீரியப் பேரரசுக்குள் சேர்த்துக் கொண்டான் (15:29). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பிலிப்புவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளான கலானித்து, திராக்கோனித்து, பத்தனேயா ஆகியவை பாசானைச் சேர்ந்தவையாகும் (காண்க. லூக் 3:1).

வளமைமிக்க பாசான் சமவெளி செழிப்பான மேய்ச்சல் நிலங்களையும், பொதுவாக, செல்வச் செழிப்பையும் அளித்தது (எரே 50:19; மீக் 7:14). அதன் புகழ்பெற்ற கருவாலி மரங்கள் தீருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன (எசே 27:6); இன்றும் அங்குக் காணப்படுகின்றன. "பாசான்மலை" (சங் 68:15) எபேல் கவுரானாக அடையாளம் காட்டப்படுகிறது.

உருவகமாக, "பாசானின் கொழுத்த எருதுகள்" தீயவர்களையும், "பாசான் பசுக்கள்" (ஆமோ 4:1) சொகுசு வாழ்க்கை கொண்டிருந்த சமாரியப் பெண்களையும் குறித்தன. இவர்கள் ஏழைகளைப் புறக்கணித்தனர்; கொடுமைப்படுத்தினர். ஏசா 2:12-இல் "இறுமாப்பும் செருக்கும் உடையவர்கள்" பாசானின் கருவாலி மரங்களுக்கு ஒப்பிடப்படுகின்றனர்.

பாசிக்கமா (BASKAMA)

செலூக்கியப் படைத்தலைவன், மக்கபேயர் தலைவர் யோனத்தானை வஞ்சகமாகப் பிடித்து, இந்த இடத்தில்தான் கொன்று, தற்காலிகமாக அடக்கம் செய்தான் (1 மக் 13:23; காண்க. 12:39-48). இந்த இடம் இன்னும் அடையாளம் காட்டப்படவில்லை. இது, கலிலேயாக்கடலுக்கு வடகிழக்கில் கிலயாதில் உள்ள இக்காலத் தெல்-பசுக்காக இருக்கலாம். யோசிப்பசு இதை வெறுமனே பஸ்கா என்று குறிப்பிடுகிறார்.

பாசிரோன் (PHASIRON)

யோனத்தனால், பெத்பாசி அருகில் கொல்லப்பட்டவர்களின் மூதாதையர் (1 மக் 9:66).

பாசிலிதசின் நற்செய்தி (BASILIDES, GOSPEL OF)

இந்தப் போலி நற்செய்தி நூலினைப்பற்றி ஓரிசன் குறிப்பிடுகிறார். இந்நூலைப்பற்றி, அம்புரோஸ், எரோனிமு, யூசேபியு ஆகியோரும் தங்களது நூல்களில் குறிப்பிடுகின்றனர். இந்நூல் இன்று நம்மிடம் இல்லை. இந்நூல் 24 பகுதிகளாக அமைந்திருக்கலாம் என நாம் அறிகிறோம். அதிலிருந்து சில எடுத்துக்காட்டுகளே கிடைத்துள்ளன. இந்நற்செய்தி இயேசுவின் வாழ்க்கை விளக்கமாக அமைந்திருக்கலாம்; அல்லது லூக்கா நற்செய்திக்கு விளக்கவுரையாக இருக்கலாம். இதில் ஆசிரியர் தனது மாறுபட்ட கருத்துக்களைக் கொடுக்கிறார். இந்நூல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானவாதியான பாசிலிதசால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பாசேயா (BAASEIAH - யாவேயின் வேலை, யாவே துணிவுடையவர்)

கோகாதிய குலத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். ஆசாபு என்ற ஆலயப் பாடகரின் முன்னோர். பல கையெழுத்துப் பிரதிகளில் இப்பெயர் மாசேயா என்றுள்ளது. ஒரு வேளை இதுதான் சரியான பெயராக இருக்கலாம்.

பாசேலி (PHASELIS)

சிறிய ஆசியாவில் லீக்கியாவின் கடற்கரையில் கவிந்திருக்கும் நிலமுனையில் அமைந்திருந்த நகரங்களில் ஒன்று. இங்கு மூன்று துறைமுகங்கள் இருந்ததால், இந்நகரம் வாணிபத்தில் சிறந்திருந்தது மட்டுமல்லாமல் தன் நாணயங்களை அந்நகரமே வெளியிட்டது. ஆனால், சிறிது காலம் ஏதன்சு கூட்டாட்சி சிறிய ஆசியக் கடற்கரையில் ஆதிக்கம் செலுத்தியதால் தன் நாணயங்களை வெளியிட முடியாமல் போயிற்று. ஆனால், கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் பாசேலி சுதந்தரம் அடைந்தது. அனேகமாக கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இந்நகரம் தோலமியர்களின் ஆட்சியின் கீழ் இருந்திருக்க வேண்டும். கி.மு.168-ஐ ஒட்டி இது லீக்கியாவின் கூட்டாட்சியில் ஓர் அங்கத்தினர் ஆனது. உரோமைத் தூதுவன் யூதர்களுடன் போரிடாமல் இருக்கவும், அவர்களுக்குச் சில சலுகைகளை வழங்கவும், சில மாநிலங்களைக் குறிப்பாக, பாசேலியைக் கேட்டபோது, கி.மு. 138-இல் இது சுதந்தர நகரமாக இருந்திருக்க வேண்டும். இதிலிருந்து இங்கு யூதர்கள் குறிப்பிடத்தக்க அளவில் வாழ்ந்தனர் என்பது தெளிவாகிறது (1 மக் 15:23; கி.மு. 139-138). அடுத்த நூற்றாண்டில் உரோமையரின் ஆட்சியில் இந்நகரம் தன் சுதந்தரத்தை இழந்தது. பெரிய ஏரோது தன் சகோதரன் பாசயேலின் நினைவாக யோர்தான் பள்ளத்தாக்கில் கட்டிய பாசயேலி நகரமும், பாசேலி நகரமும் ஒன்று அல்ல.

பாஸ்கா (PASSOVER, PASCHA - கடந்து செல்லுதல்)

இயேசுவின் காலத்தில் யூத பாஸ்காவானது மோசேயின் விசுவாசிகள் அனைவரையும், பாஸ்கா செம்மறியைக் காணிக்கையாக்கி உண்ணவேண்டு மென்ற நோக்கத்திற்காக, எருசலேமில் ஒன்று சேர்த்தது. எகிப்திய அடிமைத் தளையினின்று எபிரேயரை மீட்ட யாத்திரையை இது கொண்டாடியது. இன்று கிறிஸ்தவ பாஸ்காவானது கிறிஸ்துவின் சீடர்களை, உண்மையான இறைவனின் செம்மறியாகிய அவர்களுடைய ஆண்டவருடைய சமூகத்தில் ஒன்று சேர்க்கிறது. அவர்களைப் பாவத்தினின்றும் மரணத்தினின்றும் விடுவித்து அவரது மரணத்துடனும் உயிர்ப்பினுடனும் அஃது அவர்களை ஒன்று சேர்க்கிறது. ஒரு விழாவினின்று மற்றொன்றிற்கு வெளிப்படையான தொடர்ச்சி உள்ளது. ஆனால், இயேசுவினுடைய பாஸ்காவின் இடைநிலை மூலமாக, பழைய உடன்படிக்கையினின்று புதிய உடன்படிக்கைக்குக் கடந்து செல்வதில், முன்னோக்கு மாற்றப்பட்டு விட்டது.

1. இஸ்ராயேலின் கடந்து செல்லல்

1. நாடோடித்தன மற்றும் வீட்டுப் பண்புடைய, பண்டைய பாஸ்கா: தொடக்கத்தில் பாஸ்கா ஒரு குடும்பவிழாவாக இருந்தது. ஆபிபு மாதம் (நாடு கடத்தப்பட்டதற்குப் பின் நீசான் என்று அழைக்கப்பட்டது), 14-ஆம் நாள், இளவேனிற்காலத்தில் ஞாயிறு நிலநடுக்கோட்டினைக் கடந்து செல்லும் முழுநிலவு இரவில் இது கொண்டாடப்பட்டது. மந்தைகளின் மீது இறையாசிகளை வருவிப்பதற்கென, அவ்வாண்டில் பிறந்த ஒரு சிறு விலங்கானது ஆண்டவருக்குக் காணிக்கையாக்கப்பட்டது. பலிப்பொருளானது செம்மறியாகவோ, குட்டியாகவோ ஆண்பாலானதாகவும், மருவற்றதாகவும் இருக்க வேண்டும் (யாத் 12:3-6). அதனுடைய ஒரு எலும்புகூட முறிவுபட்டிருக்கக்கூடாது (12:46; எண் 9:12). அதனுடைய இரத்தமானது, காப்பதன் அடையாளமாக ஒவ்வொரு வீட்டு வாயிலின் முன்னும் வைக்கப்பட்டது (யாத் 12:7.22). பயணம் செல்லவிருக்கும் விருந்தினர்களைப் போன்று அதனுடைய இறைச்சியானது. விரைவாக உண்ணப்பட்டது (12:80-11). இத்தகைய நாடோடித்தனமான மற்றும் வீட்டைச் சார்ந்த தனிக்கூறுகள், பாஸ்காவின் மிகப்பழமையான தொடக்கத்தைச் சுட்டுகின்றன. பாலைவனத்தில் கொண்டாட, இஸ்ராயேலரால் பார்வோனிடம்

கேட்கப்பட்ட பலி இதுவாக இருக்கலாம் (3:18;5:1தொ). இவ்வாறாக இது மோசேக்கும், எகிப்திலிருந்து புறப்படுதலுக்கும் முன்பானதாக இருக்கலாம். ஆனால், இதற்கு இதனுடைய உறுதியான பொருளை அளித்தது யாத்திரையே.

2. கடந்து செல்லலும் யாத்திரையும்; இறைவன் தன் தலையீட்டினாலான பல்வேறு செயல்களால், மிகக்குறிப்பாக, எகிப்தியரின் தலைப்பேற்றாண்களைக் கொல்கின்ற பத்தாவது கொள்ளை நோயின் மூலம் எகிப்தியரின் நுகத்தடியினின்று தனது மக்களை விடுவித்தபோது, இஸ்ராயேலின் சிறப்பான இளவேனிற்காலம் ஏற்பட்டது (யாத் 11:5; 12:12. 29-30). இந்நிகழ்ச்சியுடன் பாரம்பரியமானது பிற்காலத்தில், மந்தையின் தலைப்பேறுகளைக் காணிக்கையாக்குவதையும், முதல்பேறான இஸ்ராயேலரை மீட்பதையும் சேர்த்துக் கொண்டது (13:1-2. 11-15; எண் 3:13; 8:17). ஆனால், இந்த ஒத்த ஒப்பீடானது இரண்டாவதாகவே உள்ளது. கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், பாஸ்காவானது இஸ்ராயேலரை விடுவிப்பதுடன் இணைந்து வருகின்றது. இஃது அவர்களது வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்ச்சியாகிய யாத்திரையின் நினைவுச் சின்னமாக ஆகியது. இறைவன் எகிப்தியரைத் தாக்கி, தனது விசுவாசிகளைத் தப்பிக்கச் செய்தார் என்பதை இது நினைவுபடுத்துகிறது (12:26-27; 13:8தொ). இது முதல் பாஸ்காவின் பொருளும், அதனுடைய பெயரின் புதிய பொருளும் இவ்வாறே இருக்கும்.

பாஸ்கா என்னும் இச்சொல்லின் தோற்றமானது சர்ச்சைக்குரியதாக உள்ளது. சிலர் இதற்கு அசீரிய அல்லது எகிப்தியத் தோற்றத்தை அளிக்கின்றனர்; ஆனால், எதுவுமே பொருந்துவதாக இல்லை. விவிலியமானது நொண்டுதல் அல்லது பலியைச் சுற்றி சடங்குமுறை நடனமாடுதல் என்ற வினைச்சொல்லையோ (1 அர 18:21.26), உருவகமாகக் "குதித்தல்", "கடத்தல்", "விடுவித்தல்" என்பதையோ பொருளாகக் கொண்டுள்ளது. கடந்து செல்லல் என்பது, ஆண்டவர் எகிப்தியரைத் தாக்கியபோது இஸ்ராயேலரின் வீடுகளைக் கடந்து சென்ற பாதையாகும் (யாத் 12:13.23.27; எசா 31:5).

2. கடந்து செல்லலும் புளியாத அப்பமும்: காலப்போக்கில் பாஸ்காவுடன் மற்றொரு விழாவும் ஆதியில் தனிப்பட்டதாக இருந்தாலும், அதனுடைய இளவேனிற்காலத் தேதியின் காரணமாக, பாஸ்காவுடன் இணைக்கப்பட்டதாக உருவாயிற்று (யாத் 12:15-20). பாஸ்காவானது மாதத்தின் 14-ஆம் நாள் கொண்டாடப் பட்டது. புளியாத விழாவானது இறுதியாக 15-இலிருந்து 21-க்குக் குறிக்கப்பட்டது. இப்புளியாத அப்பங்கள், விளைச்சலின் முதல் கனிகளுடன் சேர்த்துக் காணிக்கையாக்கப்பட்டன (லேவி 23:5-14; உப 26:1). பழைய புளிப்பை நீக்குவதென்பது தூய்மை மற்றும் வருடாந்திர புதுப்பிப்பின் சடங்காக இருந்தது. இதனுடைய தோற்றமானது நாடோடித் தனமானதாகவோ, விவசாயத்தினுடையதாகவோ கருதப் பட்டது. இஃது எவ்வாறாக இருந்தாலும், இஸ்ராயேலின் பாரம்பரியமானது இச்சடங்கினையும் எகிப்திலிருந்து புறப்பட்டுச் செல்லுதலுடன் சேர்த்தது (யாத் 23:15; 34:18). புறப்பட்டுச் செல்வதன் அவசரமானது எவ்வளவு வேகமானதெனில், இஸ்ராயேலர்கள் தங்களுடைய பிசைந்த மாவு புளிப்பதற்கு முன்பே எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது என்பதை இது நினைவு கூர்கிறது (யாத் 12:34.39). வழிபாட்டு நாட்காட்டிகளில், பாஸ்கா மற்றும் புளியாத அப்பத் திருவிழாக்கள் சில நேரங்களில் வேறுபடுத்தப்பட்டும் (லேவி 23:5-8; எஸ் 6:19-22; 2 நாள் 35:17), சில நேரங்களில் குழப்பப்பட்டும் (உப 16:1-8; 2 நாள் 30:1-13) உள்ளன.

எந்நிலையிலும், ஆண்டுப் பாஸ்கா விழாக்களில் யாத்திரையின் மீட்பே பிரசன்னப்படுத்தப்படுகிறது. இவ்விழாவின் இந்த ஆழமான பொருளானது, சீனாய் (எண் 9) மற்றும் கானானில் நுழைதல் (நீதி 5), 716-ஐ ஒட்டி

யோசியாவின் சீர்திருத்தங்கள் (2 அர 23:21தொ), 515-ஐ ஒட்டி நாடு கடத்தப்பட்டதற்குப் பிற்பட்ட மறு சீரமைப்பு (எஸ் 6:19-22) போன்ற இஸ்ராயேலினுடைய வரலாற்றின் முக்கிய கட்டங்களில் அதிக முனைப்புடன் உணரப்படுகிறது.

4. பாஸ்காவும் யாத்திரையைத் திரும்பத் திரும்பச் செய்தலும்: இஸ்ராயேலானது மற்றொரு அடிமைத்தனத்திற்குக் கீழ்ப்படும் ஒவ்வொரு சமயத்திலும், எகிப்திய அடிமைத் தளையினின்று விடுவிக்கப் பெற்றது நினைவிற்குக் கொண்டுவரப்படுகிறது.

710-இல் அசீரிய அடிமைத்தளையின் கீழ், இறைவன் எருசலேமைக் காக்கும்போது (எசா 31:5; 10:26), எசாயா மீட்பினைப் பாஸ்கா இரவாக வாழ்த்துகிறார் (30:29). நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், 721-இல் அடிமைப்பட்டவர்களின் விடுதலையைப் புதிய யாத்திரையாக எரேமியா கொண்டாடுகின்றார் (எரே 31:2-21). எழுபதுநூலின் கிரேக்க வாசகப்படி முதலாவதன் துல்லியமான ஆண்டு விழாவாகவும் கொண்டாடப்படுகிறது: "இதோ, பாஸ்கா விழா நாளில் நாம் இஸ்ராயேலின் மக்களை அழைத்து வருவோம்", (எரே 31:8) என்கிறார் இறைவன்.

பாபிலோனிய அடிமைத்தளையின் கீழ், 597-இல் நாடு கடத்தப்பட்ட மக்களின் வருகையானது இஸ்ராயேலின் நினைவில் யாத்திரையின் இடத்தைக் கொண்டிருக்குமென எரேமியா கூறுகின்றார் (23:7-8). இறுதியான யாத்திரையாக நாடு கடத்தப்பட்டதன் முடிவை (கி.மு. 587-538) இரண்டாம் எசாயா முன்னறிவிக்கிறார். இது, முந்தையதை மறைத்துவிடுமெனக் கூறுகிறார் (எசா 40:3-5; 41:17-20; 43:16-21; 49:9-11; 55:12-13; 63:7-64:11). சிதறிப்போனவர்களை ஒன்று சேர்ப்பதானது (49:6) செம்மறியாகிய ஊழியரின் பணியாக இருக்கும் (53:7). அவரே நாடுகளுக்கு ஒளியாகவும் உருவாகி, பாஸ்கா செம்மறியுடன் சேர்ந்து வரவிருக்கும் மீட்பரின் ஒரு மாதிரியாகவும் விளங்குவார்.

5. ஆலய விழாவாகிய பாஸ்கா: இவ்வாறாக, காலப்போக்கில் பாஸ்காவானது உருவாயிற்று. சில சிறப்புப் பண்புகளும், சில மாற்றங்களும் ஏற்பட்டன. இவற்றில் மிக முக்கியமானது, உப ஆகமம் பழைய குடும்பக் கொண்டாட்டத்தை ஆலய விழாவாக மாற்றியமைத்ததாகும் (உப 16:1-8). இந்தச் சட்ட முறையானது எசேக்கியாவின் காலத்தில் செயல்படத் தொடங்கியிருக்கலாம் (2 நாள் 30; எசா 30:29); எவ்வாறாயினும், யோசியாவின் காலத்தில் இஃது ஒரு நிறுவப்பட்ட உண்மையாக அமைந்தது (2 அர 23:21 தொ; 2 நாள் 35). இவ்வாறாக, பாஸ்காவானது வழிபாட்டின் பொதுவான மையப்படுத்துதலிலேயே தனது இடத்தைப் பெறுகிறது. அதனுடைய சடங்குமுறை பொருத்தமாக மாற்றி அமைக்கப்படுகிறது: பீடத்தின்மீது இரத்தம் ஊற்றப்படுகிறது (2 நாள் 35:11); மற்றும் குருக்களும் லேவியரும் இச்சடங்கின் முதன்மையான ஊழியர்களாக உள்ளனர்.

நாடு கடத்தப்பட்ட பின்னர், பாஸ்காவானது மிகப்பெரிய விழாவாக உருவாயிற்று. அதனை விட்டுவிடுதலானது யூதருக்கு ஒரு மெய்யான சமய நீக்கத்தைக் கொண்டு வந்தது (எண் 9:13). விருத்த சேதனம் செய்யப்பட்டோர் மட்டுமே அதில் பங்கு பெறலாம் (யாத் 12:43-49). அவசரத்தேவைகளில், இஃது ஒரு மாதத்திற்குத் தள்ளி வைக்கப்படலாம் (எண் 9:9-13; 2 நாள் 30:2 தொ). குருக்கள் புகுத்திய இந்த நிபந்தனைகள் அது முதல் மாற்றப்பட முடியாத சட்டத்தன்மையைக் கொண்டிருந்தன. 419-ஆம் ஆண்டினுடைய ஒரு சுவடியின்படி, எகிப்தினுடைய எலி பன்டைனிலுள்ள யூதக் குடியிருப்பில் வழக்கில் இருந்தது போல் புனித நகருக்கு வெளியே, பாஸ்காவானது சந்தேகத்திற்கிடமின்றி இங்குமங்குமாக குடும்ப முறையில் கொண்டாடப்பட்டது. ஆனால், செம்மறியைப் பலியிடுதலானது காலப்போக்கில் இத்தகைய தனிப்பட்ட கொண்டாட்டங்களினின்று படிப்படியாக

விடப்பட்டு விட்டது. அப்போது முதல், இவை எருசலேமின் ஆடம்பரத்தினால் மறைக்கப்பட்டு விட்டன.

6. **பாஸ்கா, இறைவனுடைய பெரிய செயல்களின் காலம்:** இவ்வாறு, பாஸ்காவானது வழிபாட்டு ஆண்டின் முக்கிய திருயாத்திரைகளில் ஒன்றாக உருவாயிற்று. யூத மதத்தில் அது பல்வளஞ்செறிந்த பொருளைப் பெறுகிறது. இதை யாத் 12:42-க்கு அளிக்கும் விளக்கத்தில் தார்கூம் விவரிக்கிறது. அடிமைத் தனத்தினின்று இஸ்ராயேல் காப்பாற்றப்பட்டதானது, குழப்பத்தினின்று உலகை வெளிக்கொணர்ந்ததையும், ஈசாக்கு மரணத்தினின்று காப்பாற்றப்பட்டதையும், ஏங்கி எதிர்பார்த்த மெசியாவினால் மனித இனம் அதனுடைய துன்பத்தினின்று விடுவிக்கப்பட்டதையும் சுட்டுகிறது. இக்கருத்துக்கள் விவிலியத்தில் மிகுந்த ஆதரவைக் காண்கின்றன.

அ) பாஸ்காவும் படைப்பும்: படைப்பும் மீட்பும் அடிக்கடி, குறிப்பாக பாஸ்கா புகழுரையில் (அல்லேல்), இணைக்கப்படுகின்றன; சங் 136:4-15; காண்க. ஓசே 13:4; எரே 32:17-21; எசா 51:9-10; நெகே 9; சங் 33:6-7; 74:13-17; 77:17-21; 95:5-9; 100:3; 124:4-8; 135: 6-9; ஞான 19. இறைவன் காலத்தின் தொடக்கத்தில் முதலில் பெருங்கடலை இரண்டாகப் பிரித்ததன் காரணமாகவே (ஆதி 1:6). பின்னர் அவரால் செங்கடலைப் பிரிக்க முடிந்தது (யாத் 14:21).

ஆ) பாஸ்காவும் ஈசாக்கும்: அவ்வாறே, இறைவன் யாக்கோபின் மக்களைக் காப்பாற்றக்கூடிதென்பது, முதலில் அவர்களுடைய முன்னோரை அவர் காப்பாற்றியதே காரணமாகும். ஆபிரகாம் யாத்திரையை எதிர்நோக்கி உள்ளார் என்றும் (ஆதி 15:13-14), அதற்கான உறுதியானது ஈசாக்கின் பாதுகாப்பு என்றும் (ஆதி 22) சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால், பிற்கால பாஸ்காச் செம்மறியைப்போன்று (உப 16), ஈசாக்கும் சீயோன் மீது காணிக்கையாக்கப் பட்டிருக்க வேண்டும் (2 நாள் 3:1); மற்றும் பிற்காலத்தில் இஸ்ராயேலுக்கு ஏற்பட்டது போன்று (யாத் 12:23; 1 நாள் 23:15), ஈசாக்கு கத்தியினின்றும் காப்பாற்றப்பட்டார் (ஆதி 22:12). ஈசாக்கு ஓர் ஆட்டுக்கிடாயினாலும், இஸ்ராயேல் செம்மறியினாலும் காப்பாற்றப்படுகின்றனர். பிற்காலத்தில் பாஸ்காப்பலிப்பொருளின் இரத்தம் இருக்கப்போவதைப் போன்று (எசே 45:18-24), தனது விருத்த சேதனத்தில், பரிகார மதிப்பில் ஏற்கெனவே செல்வாக்கு மிக்கதாக உள்ள இரத்தத்தை ஈசாக்கு சிந்துகிறார் (யாத் 4:24-26). ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, ஈசாக்கு தனது மொத்த இரத்தத்தையும் சிந்தத் தயாராக இருப்பதன் மூலம் பாஸ்காச் செம்மறியாகிய இயேசு கிறிஸ்துவை முன்குறிப்பதற்குத் தகுதியுடையவராகிறார் (எபி 11:17-19).

இ) பாஸ்காவும் மெசியாவின் காலமும்: கடந்த காலத்திலான இறைவனின் அனைத்துத் தலையீடுகளும், எதிர்காலத்தில் ஓர் உறுதியான தலையீட்டின் நம்பிக்கையை உருவாக்குகின்றன. இறுதியான (இறுதிக்கால) மீட்பானது புதிய படைப்பு (எசா 65:17), திரும்ப இயலா யாத்திரை (65:22-23), தீமையின் மீதான முழுமையான வெற்றி, மற்றும் மீண்டும் பெறப்பட்ட இன்பவனம் (62:25) என்று பார்க்கப்படுகிறது. இம்மாற்றத்தைச் செயல்படுத்துமாறு இறைவன் இப்பணியை அளிக்கின்ற தூதுவர், மெசியாவைத்தவிர வேறொருவருமில்லை (11:1-9). இக்கருத்தானது எவ்வளவு வலுலாக இருந்ததெனில், ஒவ்வொரு பாஸ்கா இரவிலும் யூதர்கள் அவருடைய வருகையை எதிர்பார்த்திருந்தனர். சிலர் மெசியாவைத் தொடர்ந்து போர்வீரனாகக் கருதிக்கொண்டிருந்தமையால், தேசியவாதத்தை மீண்டும் எழுப்புகின்ற அபாயமும் இங்குண்டு. மேலும், பாஸ்கா காலத்திலேதான் அடிக்கடி அரசியல் இயக்கங்கள் தோன்றுவதும் (லூக் 13:1தொ), அல்லது சமய உணர்ச்சிகள் தூண்டப்படுவதும் (அ.ப. 12:1-4) நிகழ்ந்தன.

உரோமையர் ஆட்சிக் காலத்தில் பாஸ்கா விழாக் காலத்தில் அமைதியை நிலைப்படுத்த அதிகாரிகள் விழிப்பாயிருந்தனர். மேலும், ஒவ்வோர் ஆண்டும் இக்காலத்தில் உரோமை ஆளுநன் எருசலேமிற்குச் செல்வார். ஆனால், சமய விசுவாசமானது இந்த உணர்ச்சிப்பெருக்கிற்கு அப்பாலும் நோக்கி, ஐயுறவு நிலைக்கு உட்படாது சுதந்தரமாகவும் இருக்கலாம். இறைவன் அனுப்பவிருக்கிற மெசியாவின் வருகையின் முறையையும், காலத்தையும் குறிப்பிடுவதை அஃது இறைவனிடமே ஒப்படைத்து விடுகிறது.

II. இயேசுவின் பாஸ்கா: உண்மையில் மெசியா வந்தார். முதற்கட்டமாக இயேசு, யூதரின் பாஸ்காவில் பங்கு கொண்டார். அவருடைய நோக்கமானது அதை நிறைவு செய்வதாகும். இறுதியாக அவர் அதனை அகற்றி, நிறைவு செய்கிறார்.

பாஸ்காவின் காலத்தில், அதனுடைய பொருளைப் படிப்படியாக மாற்றிய வார்த்தைகளை இயேசு உரைத்து, செயல்களைச் செய்தார். இவ்வாறு தந்தைக்கு அருகில் இருப்பதை அறிந்துள்ளதால் (லூக் 2:41-51), திருத்தூயகத்துக்கு அருகில் இருக்கிற ஒரே மகனின் பாஸ்காவை நாம் கொண்டுள்ளோம்; இயேசு தற்காலிக புனித இடத்தைத் தூய்மைப்படுத்தி, உறுதியான புனிதத் தலமாகிய தனது உயிர்த்த உடலைப் பற்றி அறிவித்த புதிய ஆலயத்தின் பாஸ்காவைக் (யோவா 2:13-23; காண்க. 1:14. 51;4:21-24) கொண்டுள்ளோம்; பலியில் காணிக்கையாக்கப்படவுள்ள அவரது உடலாக உள்ள பன்மடங்காக்கப்பட்ட அப்பத்தின் (யோவா 6) பாஸ்காவைக் கொண்டுள்ளோம்; மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக இறுதியாக பாஸ்காப் பலிப்பொருளின் இடத்தை இயேசு ஏற்கின்ற புதிய செம்மறியின் பாஸ்கா, புதிய பாஸ்கா உணவை நிறுவி, இப்பாவ உலகினின்று தந்தையினுடைய அரசிற்குக் கடந்து செல்லுதலாகிய அவரது புதிய யாத்திரையைச் செயல்படுத்துகிறார் (யோவா 13:1).

நற்செய்தியாளர்கள் இயேசுவின் எண்ணங்களை நன்றாகப் புரிந்துகொண்டு, பல்வேறு நுட்ப வேறுபாடுகளின் மூலம் அவற்றிற்கு ஒளி அளித்தனர். முதல் மூன்று ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவின் இறுதி இரவுணவைப் (பாஸ்காவிற்கு முந்தின நாளே உண்ணப்பட்டாலும்) பாஸ்கா உணவாக விவரிக்கின்றனர். எருசலேமின் சுவர்களுக்குள்ளாகவே இந்த இரவுணவு உண்ணப்படுகிறது. அல்லேல் பாடப்படுவதை உள்ளடக்கிய (மாற் 14:26) அனைத்தையும் கொண்ட திருவழிபாட்டில் இஃது அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இது புதிய பாஸ்காவின் உணவாகும். அப்பத்தின் மீதும் திராட்சைரசத்தின் மீதும் கூறப்பட்ட வழிபாட்டு ஆசிகளுக்குள், நற்கருணை அமைப்பை இயேசு இணைக்கின்றார். தனது உடலை உண்பதற்கும், தனது இரத்தத்தைக் குடிப்பதற்கும் தருவதன் மூலம், தானே புதிய செம்மறியாக உள்ள பாஸ்காவின் பலியாகத் தனது மரணத்தை அவர் விவரிக்கிறார் (மாற் 14:22-24 இணை). செம்மறியாகிய இயேசுவிற்குத் தனது நற்செய்தியில் பல்வேறு சுட்டிக்காட்டுதல்களை உட்புகுத்தி (யோவா 1:29.36), நீசான் மாதம் 14-ஆம் நாளின் பிற்பகலில் செம்மறியைப் பலியிடுதலையும் (18:28; 19:14.31;42), உண்மையான பாஸ்கா பலிப்பொருளின் சிலுவை மரணத்தையும் (19:36) ஒன்றுபடுத்துவதன் மூலம், இவ்வுண்மையை வலியுறுத்த யோவான் விரும்புகிறார்.

III. கிறிஸ்தவ பாஸ்கா:

1. ஞாயிறு பாஸ்கா: ஓய்வு நாளுக்கு முந்தின நாள் சிலுவையில் அறையப்பட்ட இயேசு (மாற் 15:42; யோவா 19:31), வாரத்தின் முதல் நாளாகிய (மாற் 16:2 இணை) ஓய்வு நாளுக்கு அடுத்த நாள் உயிர்த்தெழுந்தார். அப்போஸ்தலர்கள் தங்களது உயிர்த்த ஆண்டவரைக் கண்டதும் முதல் நாளிலேயே இரவுணவின் புதுவடிவாகிய உணவின்போது அவர் அவர்களுக்குத் தோன்றுகின்றார் (லூக் 24:30.42-43; மாற்

16:14; யோவா 20:19-26: 21:1-14; அ.ப. 1:4). எனவே, வாரத்தின் முதல் நாளில் கூடிய கிறிஸ்தவர்கள், அப்பத்தைப் பிட்குதலுக்காக ஒன்றுசேரப்போகிறார்கள் (அ.ப. 20:7; 1 கொரி 16:2). இந்நாளானது வெகு விரைவிலேயே, ஆண்டவரின் நாள் என்று புதிய பெயரைப் பெறும் (திருவெளி 1:10). அது கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கிறிஸ்தவர்களுக்கு நினைவுபடுத்தியும், அவரது நற்கருணையில் அவர்களை அவரோடு ஒன்றுபடுத்தியும், அவரது மறு வருகையைப் பற்றிய நம்பிக்கையை நோக்கி அவர்களைத் திருப்புகிறது (1 கொரி 11:26).

2. வருடாந்திர பாஸ்கா: ஞாயிறு பாஸ்காவிற்கு அப்பாற்பட்டு, புதியதொரு உட்பொருளும் உள்ளது. யூதர்கள், அன்னிய அடிமைத் தளையினின்றான தங்களது மீட்பைக் கொண்டாடி, ஒரு தேசிய மெசியாவாகிய விடுவிப்பாளரை எதிர்பார்த்திருந்த வேளையில், சிலுவையில் மரித்து உயிர்த்த கிறிஸ்துவுடன் அவருடைய முடிவில்லா வாழ்வைப் பகிர்வதன் மூலம் தங்களை இணைத்து, பாவம் மற்றும் மரணத்திலிருந்தான தங்களுடைய விடுதலையைக் கிறிஸ்தவர்கள் கொண்டாடி, அவருடைய மகிமை மிக்க வருகையை நோக்கி, தங்களுடைய நம்பிக்கையைத் திருப்பினர்.

பகல்லப்போல ஒளிவீசும் அவ்விரவில், உலகின் பாவங்களைத் தன்மீது ஏற்று, சுமக்கின்ற இறைவனுடைய செம்மறியுடனான புனித இரவுணவின் சந்திப்பிற்கெனத் தயாரிக்கும்விதமாக, யாத்திரையின் வரலாறானது புதியதொரு ஆழத்துடன் வாசிக்கப்படுகின்ற திருவிழிப்பிற்கென அவர்கள் ஒன்று சேர்கின்றனர் (பேதுரு 1:13-21); திருமுழுக்கினால் யாத்திரையில் இறைவனின் மக்களாக உருவாக்கப்பட்ட அவர்கள் (1:17), இடைக்கச்சை கட்டியவர்களாக (1:13), தீமையினின்று விடுவிக்கப்பட்டவர்களாய், விண்ணக அரசினுடைய வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி அவர்கள் முன் செல்கின்றனர். அவர்களுடைய பாஸ்கா பலிப்பொருளாகிய கிறிஸ்து பலியிடப்பட்டுவிட்டதால், அவர்கள் தீய நடத்தையாகிய பழைய புளிப்பு மாவினாலன்றி, தூய்மை மற்றும் உண்மையின் புளியாத அப்பத்தினால் விழாவைக் கொண்டாட வேண்டும் (1 கொரி 5:6 தொ). கிறிஸ்துவுடன் பாவத்திற்கு இறந்து புதிய வாழ்விற்கு உயிர்த்தெழுந்ததன் மூலம் பாஸ்கா மறைபொருள் அவர்கள் தனிப்பட்ட விதமாக வாழ்ந்தனர் (உரோ 6:3-11; கொலோ 2:12). இதன் காரணமாகவே, உயிர்ப்பின் விழாவானது, பாஸ்கா மறைபொருள் மீண்டும் வாழ்கின்ற கிறிஸ்தவர்களின் உயிர்ப்பாகிய திருமுழுக்கின் சலுகைக்குரிய தருணமாக, விரைவிலேயே உருவாயிற்று. பாஸ்காவின் தேதி பற்றிய 2-ஆம் நூற்றாண்டின் பிரச்சனையானது, யூத விழாவினுடைய இறுதி கடந்து செல்லலைக் கோடிட்டுக் காட்டுகின்ற இந்த ஆழமான பொருளைப் பழுதுபடாமல் விட்டுச்செல்கிறது.

3. **இறுதிக்காலப் பாஸ்கா:** பாஸ்கா மறைபொருளானது ஆண்டவருடனான சந்திப்பு, மரணம், உயிர்ப்பு ஆகியவற்றின் மூலமாகக் கிறிஸ்தவர்களால் அடையப்படுகிறது. மண்ணுலக பாஸ்காவானது, வரவிருக்கும் பாஸ்காவாகிய இந்த இறுதிக் கடந்து செல்லலுக்கு அவர்களைத் தயாரிக்கிறது. உண்மையில் "பாஸ்கா" என்ற இச்சொல்லானது, கிறிஸ்துவினுடைய மரணம் மற்றும் உயிர்ப்பினுடைய மறைபொருளையோ, வாராந்தர அல்லது வருடாந்தர நற்கருணைச் சடங்கையோ மட்டுமே குறிப்பிடாமல், நாம் அனைவரும் பயணம் மேற்கொண்டுள்ள விண்ணகப் பெருவிருந்தையும் சுட்டிக்காட்டுகிறது. திருவெளிப்பாட்டு நூலானது, வேதனைகளால் இன்னமும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், நேர்மையாக வாழ்ந்து நிமிர்ந்து நிற்கின்ற செம்மறியை நோக்கித் தமது கண்களை உயர்த்துகின்றது. மகிமையால் நிரப்பப்பட்ட அவர், தனது மறை சாட்சிகளைத் தன்னை நோக்கி ஈர்க்கிறார் (திருவெளி 5:6-12; 12:11). அவருடைய சொற்களின்படியே, தனது மரணத்தினுடைய நற்கருணைப் பலியுணவினாலும், தனது

உயிர்ப்பினாலும், தனது பலியின் நிரந்தர அருட்சாதனத் தன்மையாலும், மற்றும் இறுதியாகத் தனது மறு வருகையினாலும் (லூக் 22:16), இயேசு உண்மையாகவே பாஸ்காவை நிறைவேற்றியுள்ளார். அவரது மறு வருகையானது, அவரது தந்தையினுடைய அரசின் இறுதிப் பெருவிருந்தினுடைய மகிழ்ச்சியில் நம்மை இணைக்க வேண்டியுள்ளது (மத் 26:29).

பாஸ்காச் செம்மறி (PASCHAL LAMB)

பாஸ்கு அல்லது கடந்து செல்லுதல் விழாவில் கொல்லப்பட்ட செம்மறி. இது கிறிஸ்துவின் சாவை யூத பாஸ்கோடு இணைத்துக் கூறும்போது உருவகமாகப் பயன்படுகிறது (1 கொரி 5:7). காண்க. பாஸ்கா.

பாடை (BIER)

இஃது அடக்கம் செய்யப்படும் முன் உடல் வைக்கப்பட்டிருக்கும் தூக்குக்கட்டில் அல்லது படுக்கையாகும் (காண்க. அடக்கம்). 2 சாமு 3:31; 2 நாள் 16:14; லூக் 7:14 ஆகிய இடங்களில்தான் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. மேற்சொன்ன பகுதிகளிலிருந்து தாவீது மன்னன், அப்னேர் இறந்த பின், அவர் பாடையின் பின்னால் சென்றார் என்றும், இயேசு நயீன் பட்டணத்து இளைஞன் இறந்தபோது அவன் பாடையைத் தொட்டார் என்றும் நாம் அறிகிறோம். இதிலிருந்து பாடை என்பது தூக்கிச் செல்லப்படும் ஒன்றாக இருந்திருக்கின்றது. ஆசா என்பவரின் அடக்கத்தின் குறிப்புகளிலிருந்து இந்தப் பாடை என்பது அகலமாகவும் இருந்தது; கல்லறைக்குள்ளும் வைக்கும்படியாக இருந்தது என்று தெரிகிறது.

பாதங்கழுவும் பாத்திரம் (WASHBASIN)

இந்தச் சொல் சங் 60:8; 108:9 ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எபிரேயச் சொல் வாய் அகலமான சமைக்கும் பாத்திரத்தைக் குறிக்கும். சமைக்கும் பாத்திரம் சடங்கு முறைப்படி சுத்தமாய் வைத்திருக்கப்பட வேண்டியது, மேற்கூறப்பட்ட பகுதிகளில் கால் கழுவும் பாத்திரமாக இழிவுபட்டு விட்டது. இப்பகுதிகளில் மோவாபு இறைவனுக்குப் பாதம் கழுவும் பாத்திரமாயிற்று என்று கூறப்பட்டதற்கு மோவாபு சாக்கடலுக்கு அருகிலிருந்தது காரணமாகலாம்.

பாதாளத்தில் இறங்குதல் (DESCENT IN HADES)

கிறிஸ்தவ விசுவாச அறிக்கை, இயேசு இறந்து, அடக்கம் செய்யப்பட்டு, பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற உண்மைகளைக் கொண்டுள்ளது. "பாதாளங்களில் இறங்கி" என்ற சொற்றொடர் பழைய ஏற்பாட்டு மொழியை அடிப்படையாகக் கொண்டது. இங்குப் "பாதாளம்" என்பது இறந்தோரின் உறைவிடமான எபிரேயச் "செயோலைக்" குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் செயோல் பற்றிய கருத்தில் சன்மானமும் இல்லை, தண்டனையுமில்லை; நல்லோர், தீயோர் நிலை வேறுபாடும் இல்லை. பழைய ஏற்பாட்டில் இறத்தல் என்பது "செயோலுக்குள் இறங்குதலாகும்." உயிர்த்தெழுபவன் செயோலிலிருந்து எழுகிறான். ஆனால், லூக் 23:43-இல் வேறுபட்ட கருத்து முற்கோளாகக் கொள்ளப்படுகிறது. இங்கு மனந்திரும்பிய நல்ல கள்ளனுக்கு இயேசு "நீ இன்று என்னோடு பேரின்பவீட்டில் இருப்பாய் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்" என்கிறார். "என்னைப் பாதாளத்திடம் (செயோல்) ஒப்புவிக்க மாட்டீர்; உம் அன்பனைப் படுகுழியைக் காணவிடமாட்டீர்" என்ற சங் 16:10-இன் வாசகத்தைப் பேதுரு இயேசுவுக்குச் சாற்றிக்கூறுகிறார் (அ.ப. 2:27). ஆகவே "மரண வேதனை"யை இறைவன் கலைத்து அழித்து விட்டார்; ஏனெனில் மரணம் இயேசுவைத் தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை (அ.ப. 2:24-31). இந்த வாசகம், இயேசுவின் இறப்பு, அதன் விளைவாக அவரது உயிர்ப்பையும் பற்றிய உண்மையை உறுதியாக அறிவிக்கிறது. அதற்கு மேல் ஒன்றும் கூறவில்லை. ஆனால் 1 பேதுரு 3:19-இல், இயேசு "சிறையிலிருந்த

ஆன்மாக்களிடம் சென்று அவர்களுக்குத் தம் செய்தியை அறிவித்தார்" என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஆன்மாக்கள் நோவா காலத்தில் வாழ்ந்த அவிசுவாசிகள் ஆவர். இந்த வாசகத்தைக் கொண்டு, இயேசு பாதாளங்களில் இறங்கி, அங்கு விடுதலை அறிவித்தார் என்ற கருதுகோளை அமைக்க முடியாது. ஏனெனில் நோவா காலத்திலிருந்த அவிசுவாசிகள், தங்கள் அவிசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு மாறிவிட்டனர் என்பதற்கு எந்த அடையாளமும் இல்லை. ஆகவே, அவர்கள் இயேசுவின் மீட்பில் பங்கு பெற வாய்ப்புக்கொண்டிருக்கவில்லை. இங்கு வரும் அறிவிப்பு, இயேசு பாவம் மற்றும் இறப்பின்மேல் கொண்ட வெற்றி பற்றியதாகத் தெரிகிறது. 1 பேதுரு 4:6-இல் மனிதருக்கேற்ப ஊனுடலில் தீர்ப்பைப்பெற்றவர்கள் இறைவனுக்கேற்ப ஆவியில் வாழும் பொருட்டு இறந்தோருக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பை இயேசுவே செய்தார் என்பதற்கு எக்குறிப்புமில்லை. பவுல் (உரோ 10:6தொ) உப 30:12; சங் 107:26-ஆகிய இரு வாசகங்களையும் இணைத்து, கிறிஸ்துவைக் கீழே கொண்டு வருவதற்காக வானகத்திற்கு ஏறுபவன் யார்? அல்லது கிறிஸ்துவை இறந்தோரிடமிருந்து கொண்டுவருவதற்காக, கீழ் உலகுக்கு இறங்குபவன் யார்? என்று கேட்கிறார். இங்கும் இயேசுவின் இறப்பு என்னும் உண்மை பற்றிய குறிப்பே உள்ளது. எபே 4:8-தொ-இல் சங் 68:18 என்ற பகுதி இயேசுவுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. சங்கீதத்தில் குறிக்கப்படும் ஏறிச் செல்லுதல், ‘மண்ணுலகின் கீழ்ப்பகுதிக்கு’ இயேசு இறங்கியதோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது. இப்பகுதியில் கீழ்ப்பகுதிக்கு இறங்குதல் வெறுமனே இயேசு மனிதனானதைக் குறிக்கிறதா அல்லது அவரது இறப்பு மற்றும் அடக்கத்தைக் குறிக்கிறதா என்பது தெளிவாக இல்லை. "இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு" (கொலோ 1:18) என்பது உறுதியாக இயேசுவின் உயிர்ப்பைக் குறிக்கிறது. ஆனால், இறங்குதல் பற்றி ஒன்றும் கூறவில்லை. இயேசு பரிசேயர்களுக்கு யோனாவின் அடையாளத்தைக் கொடுத்தார் (மத் 12:40). எவ்வாறு யோனா மூன்று பகலும் மூன்று இரவும் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்தாரோ, அவ்வாறே மனுமகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார். இஃது இயேசுவின் அடக்கம் பற்றிய குறிப்பாகும். இப்பகுதிகளில், யூதத்துவத்தின் மொழி எளிய முறையில் பயன்பட்டுள்ளது. யூதத்துவம் விண்ணகத்தை இறைவனின் உறைவிடமாகவும், இறந்தோரின் உறைவிடமான செயோலைப் பூமிக்கு அடியில் இருப்பதாகவும் கருதியது. உலக அமைப்பைப்பற்றிய இந்தக் குழந்தைத் தனமான நோக்கு, இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம் ஆகியவை பற்றிய விசுவாசத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. மேற்கூறப்பட்ட வாசகங்கள் எல்லாம் இயேசுவின் இறப்பைப்பற்றிய உண்மையைச் செயோலுக்குள் இறங்குவதாக எடுத்துக் கூறுகின்றன. "நரகத்தின் பெரும் வேதனை", தந்தையர்கள் தங்கிய இடத்திற்கு இயேசுவின் விடுதலை அளிக்கும் பயணம், அவரது உயிர்ப்பில் அவர்கள் அவரோடு சேர்ந்து எழுதல் ஆகியவை பற்றிய கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் புதிய ஏற்பாட்டில் அடிப்படை கொண்டிருக்கவில்லை.

பாதாளம், படுகுழி (ABYSS)

சரியாக நிர்ணயிக்கப்படாத, புதிரான ஒருகுழி என்று பொருள் கொள்ளலாம். இறந்தவர்கள் வாழும் இடத்தைக் குறிக்கும் பல சொற்களில் இதுவும் ஒன்று. இதற்கு ஆழம், அடிப்பகுதியே இல்லாத குழி, இருள் நிறைந்த பாதாளம் (ஆதி 1:2), ஆழம் காணாக் குழி, பூமியின் அடிப்பகுதி என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். லூக் 8:31-இல் பாதாளம் அல்லது படுகுழி பேய்கள் சிறைப்பட்டிருக்கும் இடமாகும். உரோ 10:7-இல் இஃது இறந்தோரின் உறைவிடமான செயோலுக்கு மற்றொரு பெயராகும். திருவெளிப்பாட்டில் வரும் பாதாளக்குழி (திருவெளி 9:1-2.11; 11:7; 20:1.3), பேய்கள், அவைகளின் நிலையான உறைவிடமான எரிகிற

நெருப்புக்கடலில் எறியப்படும் காலம் வரும் வரையில் (19:20; 20:10), தங்கியிருக்கும் இடமாகும்.

பாதி அல்லது அரைக்கோத்திரம் (HALF-TRIBE)

இந்தச் சொல் மனாசேயோடு தொடர்பாக, யோசுவா, 1 நாள் ஆகமம் ஆகிய நூல்களில் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எண்ணிக்கை நூல், உப ஆகமம் ஆகிய நூல்களில் ஒரு சில இடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எஸ்போனின் அரசன் சீகோனையும் பாசானின் அரசனான ஓகுவையும், மோசேயும் அவரது படைகளும் தோற்கடித்தபின் ரூபன், காது ஆகிய கோத்திரங்களைப் போன்று மனாசேயின் அரைக்கோத்திரமும் யோர்தானுக்குக் கிழக்கில் குடியேற அனுமதி கேட்டது. அவர்கள் கானானைக் கைப்பற்றுவதிலும் மேற்குப் பகுதிகளில் குடியேற்றங்களை நிறுவ உதவி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின்பேரிலும் அனுமதி வழங்கப்பட்டது (எண் 32:33-42; உப 3:12-13; 29:8; யோசு 12:4-6; 18:7). இந்த நிபந்தனை நிறைவேற்றப்பட்டபின்பு, மனாசேயின் அரைக்கோத்திரம் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள தனது பகுதிக்குத் திரும்பியது (யோசு 1:12-18; 4:12). இக்கோத்திரத்திற்குக் கிலயாதின் ஒரு பகுதியும் பாசானின் முழுப்பகுதியும் கொடுக்கப்பட்டது (உப 3:13-15; யோசு 13:29-33). மற்றொரு அரைக்கோத்திரம் மத்திய பாலஸ்தீனத்தில் குடியேறியது (யோசு 17:5-10).

பாதுகாப்பாளர் (GUARDIAN)

வயதுக்கு வராதவனையும் அவனுடைய சொத்தையும் காக்க, பொறுப்பு உள்ளவனாக சட்டப்பூர்வமாக நியமிக்கப்பட்ட ஓர் ஆள்; வயதுக்கு வந்த ஆள். பொதுவான பொருளில் கிரேக்கச்சொல் "காரியத்தலைவனை" (மத் 20:8; லூக் 8:3) அல்லது ஆளுநனைக் (லூக் 3:1) குறிக்கிறது. ஆனால், குறிப்பிட்ட சட்டபூர்வமான பயன்படுத்துதலில், வயதுக்கு வராதவனுடைய பாதுகாப்பாளன் என்பதைக் குறிக்கும். சாதாரணமாக இதே பொருளில் ராபிகளின் இலக்கியத்தில் கடன் வார்த்தையாகக் காணப்படுகிறது. லீக்கியா சீரியா நாட்டு இளவரசன் அந்தியோக்கு எயுபாத்தரின் பாதுகாப்பாளன் என்று அழைக்கப்படுகிறார் (2 மக் 11:1; 13:2; 14:2; காண். 1 மக் 3:32-33; 6:15-17). இதே பொருளில் புதிய ஏற்பாட்டில் வரும் ஒரே இடம் கலா 4:2 ஆகும். அங்கு, பவுல் இயேசுகிறிஸ்துவுக்கு முன் யூத சட்டம் ஒரு தற்காலிக அமைப்பு என்று வாதிடும்போது இச்சொல்லைப் பயன்படுத்துகிறார்.

பாதை, வழி சாலை (ROAD)

இவற்றைக் குறிக்கும் எபிரேயச் சொற்கள் வரும் சில இடங்கள் (ஆதி 38:14.16; எண் 22:23-34; உப 2:8.27; எசா 59:8; எரே 6:16; 18:15; 1 நாள் 26:16.18; மத் 21:8; மாற் 10:32; 11:8; லூக் 9:58; 10:4.31; 19:36; 24:32.35; அ.ப. 8:26.36; 9:17.27).

அன்றைய தென்மேற்காசியாவின் முக்கிய நாடுகளை வியாபார அடிப்படையிலும், வரலாற்றடிப்படையிலும் இணைத்த முக்கிய நெடுஞ்சாலைகள் பாலஸ்தீனத்தின் வழியே சென்றன. இவை திருத்தலங்களுக்குப் பாத யாத்திரை செல்வதற்கும் படைகளை நடத்திச் செல்வதற்கும் பயன்பட்டன. எருசலேமும், தமஸ்கு நகரும் திருத்தலங்களாக மட்டுமல்ல, வியாபார மையங்களாகவும் ஆனதால் இரண்டு வகையிலும் பயன்பட்டன.

விவிலிய வரலாற்றில் சாலைகளும், பயணங்களும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பார்க்கிறோம். பாலஸ்தீனத்தைக் கடந்து சென்ற சாலைகள் பல முக்கியமான நாடுகளுக்கு இட்டுச்சென்றன. மேலும், முக்கியமான சந்திப்புகளில் அமைந்துள்ள கோட்டைகள் படை பலத்தையும், இயக்கத்தையும், வியாபாரப்போக்கையும் கட்டுப்படுத்துவதாக அமைந்தன.

பாலஸ்தீனத்திலிருந்து எகிப்துக்குச் செல்லும்

முக்கிய வழி கடற்கரையோரமாகச் செல்கிறது. இஸ்ராயேலர் கி.மு. 586-இல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபோது பாலஸ்தீனத்துக்கும் பாரசீகத்துக்கும் இடைப்பட்ட வளமான பகுதியைச் சுற்றி யூப்பிரத்தீசு நதி வழியாகப் பாபிலோனைச் சென்றடைந்திருக்க வேண்டும். பாலைவனத்தில் பல வழிகள் இருந்தாலும் இந்த வழியாகச் சென்றிருந்தால்தான் விலங்குகட்கும், மனிதர்கட்கும் தேவையான நீர் கிடைத்திருக்கும் (நெகே 7:66-69).

விவிலிய நாட்டில் இருந்த மிகப்புகழ் பெற்ற சாலை மேற்கு நெடுஞ்சாலை அல்லது கடற்கரைச்சாலை ஆகும். இது பல பிரிவுகளைக் கொண்டிருந்தது. யோர்தானுக்கும், கலிலேயாவுக்கும் இடையே சென்ற ஒரு பிரிவு தமஸ்கு நகரையும், தோத்தானையும் இணைத்தது. கப்பர்நாகும் வழியாக கெனசரேத் வரை சென்ற ஒரு சாலைப்பிரிவு மேற்கு நெடுஞ்சாலையை 'ராமா'வில் தொட்டது. கப்பர்நகுமிலிருந்து எசுதிரலோன் சமவெளி வழியாக, தாபோர் மலைக்குத் தெற்கே சென்று, மெகிதோ வழியாக எகிப்து வரை சென்ற ஒரு சாலைப்பிரிவு அதிகம் பேர் பயணம் மேற்கொண்ட சாலையாகும். கர்மேல் மலைப்பகுதி வழியாக அந்தியோக்குவரை ஒரு பிரிவு சென்றது. முக்கிய சாலைகள் கலிலேயா, எசுதிரலோன் சமவெளி வழியாக எருசலேம், எபிரோன், பெயேர்-செபா போன்ற ஊர்களையும் இணைத்தன. எரி கோவிலிருந்து ஒரு சாலை எருசலேமின் வட பகுதி வழியாக யோப்பா வரை சென்றது. விவிலியத்தில் அரச நெடுஞ்சாலை மூன்றுமுறை குறிக்கப்படுகிறது (எண் 20:17; 21:22; உப 2:27). இச்சாலை தமஸ்குவிலிருந்து புறப்பட்டு, கிழக்குப் பாலஸ்தீனம் வழியாக ஓடி, பாசான், கிலயாது, அம்மோன், மோவாபு மற்றும் ஏதேமை இணைத்து, நெகேபில் பெனிசியாவிலிருந்து எகிப்துக்கு ஓடிய குறுக்குச் சாலைகளைச் சந்தித்து, அக்காபா வளைகுடாவை அடைந்தது.

மேற்காசியாவில் இத்தியர்கள், பாபிலோனியர்கள், அசீரியர்கள், பாரசீகர்கள் அனைவரும் வியாபார, போர் நடவடிக்கைகளுக்காகச் சாலைகள் அமைத்தனர். உரோமையர்கள் தங்கள் பேரரசின் எல்லாப்பகுதிகளையும் தொடுமாறு சாலைகள் அமைத்தனர். 'உரோமையின் அமைதியை' நிலை நாட்ட உருவாக்கப்பட்ட இச்சாலைகள் அனைத்தும் அழிந்துவிடவில்லை. இன்றும் சில சாலைகள் குறிப்பாக, யோர்தான் பகுதியில் உள்ள சாலை, அப்படியே உள்ளது.

நாசரேத்தூர் இயேசு உபசாலைகளை அதிகம் தேர்ந்தெடுக்கிறார். அவை வழியே செல்வதையே விரும்பியிருக்கிறார். அவரது சொந்த ஊராகிய நாசரேத்து பல பாலைவன வழிகள் செல்லும் பாதையாகவும், உரோமைய நெடுஞ்சாலைகள் கடந்து செல்லும் அல்லது தொட்டுச்செல்லும் ஊராகவும் இருந்தது. மத்திய தரைக்கடல், மெகிதோ, எருசலேம், கலிலேயாக்கடல் இவற்றின் வழியாகச் செல்லும் சாலையில் தொடர்புபடுத்தப்பட்டது. செப்போரிசுக்கு அருகே ஒரு நெடுஞ்சாலை பெனிசியக் கடல் ஓரங்களைத் தொடர்புபடுத்துவதாகச் சென்றது. இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் ஊடே சென்ற சாலை பெத்சானுக்குத் தெற்கே சென்று, யோர்தானுக்குக் குறுக்கே சென்றது. கலிலேயாக் கடலுக்குத் தெற்கேயுள்ள மக்கள் நெருக்கமான நகரங்களை ஒருசாலை அமைப்பு தொடர்புபடுத்தியது.

பவுல் பாலஸ்தீனம், சிறிய ஆசியா, ஐரோப்பா ஆகியவற்றின் நெடுஞ்சாலைகள் வழியே பன்முறை பயணம் செய்துள்ளார். உரோமை ஆப்பியன் சாலை வழியே அடைந்தார். இச்சாலை இன்றும் 'பிரிந்தி சிக்கும்', 'உரோமைக்கும்' இடையே உள்ளது.

பாதோன் (PADON – மீட்பு)

பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஆலய ஊழியர்களுடைய குடும்பத்தின் பெயர் (எஸ் 2:44; நெகே 7:47).

பாத்தி, நாற்றங்கால் (BED - GARDEN)

தோட்டத்திலுள்ள ஒரு சமமான துண்டு நிலம். இச்சொல் உ.ச. 5:18; 6:2; எசே 17:7.10-இல் மட்டும்தான் காணப்படுகின்றது. இஃது எப்பொழுதும் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாத்திரங்கள் (VESSELS)

பாத்திரங்கள் திடப்பொருளையோ, திரவப்பொருளையோ கொள்ளும்படி குழிவுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள் ஆகும். விவிலிய காலத்தில் மட்பாண்டம்தான் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. பின் கூடைகள், உலோகப் பொருட்கள், தோல் பொருட்கள், துணிப்பைகள், மரப்பாத்திரங்கள் முதலியவை பயன்படுத்தப்பட்டன. ஆராய்ச்சியாளர்கள் பெரும்பாலும் மட்பாண்டங்களையே கண்டுபிடித்துள்ளனர். எரிகோவுக்கு அருகிலுள்ள கல்லறைகளில் கூடைகள், தோல், துணி, மற்றும் மரப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலோகப் பாத்திரங்கள் நீண்டநாட்கள் இருந்திருக்கும். ஆனால், போரில் முதலில் கைப்பற்றப்படும் பொருட்கள் உலோகப் பொருட்கள்தான். மேலும், கல்லறைத் திருடர்கள் இவற்றை விரைவிலேயே கல்லறைகளிலிருந்து அகற்றிவிட்டனர்.

1. தோல், துணி, மரப்பொருட்கள், கூடைகள்: மட்பாண்டங்கள் எளிதில் உடையக்கூடியவை ஆதலாலும், உலோகப் பொருட்கள் விலை அதிகம் ஆதலாலும், இவற்றால் செய்யப்பட்ட பொருட்கள் நாடோடிகளுக்கு இன்றியமையாப் பொருட்களாயின. விவிலிய மக்களில் ஒரு சிறிய பகுதியினரே நாடோடிகளாக வாழ்ந்தனர். பெரும்பாலான இஸ்ராயேலர் நிலையாக வாழ்ந்தனர். இவர்கள் பின்வரும் தோல் பொருட்களைப் பயன்படுத்தினர்: கிணற்றிலிருந்து நீரிரைக்க ஒரு தோல்வாளி, நீரைச் சுமந்து செல்ல ஒரு தோல்பை, சித்தை, துணிப்பைகள் ஆகியவை. இவை பெரும்பாலும் சேமித்து வைக்க அல்லாது, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லவே பயன்பட்டன. துணி விலைமிக்கது மட்டுமல்லாது, துணிப்பைகள் எளிதில் விபத்துக்குள்ளாகக்கூடும். தானியங்கள் கோணிகளில் எடுத்துச் செல்லப்பட்டனவே ஒழிய அவைகளில் சேமித்து வைக்கப்படவில்லை. மரப்பொருட்கள் அவைகளைத் தயாரிக்க ஏற்படும் செலவின் காரணமாக அரிதாகவே பயன்படுத்தப்பட்டன. கூடை எளிதில் கிடைக்கக்கூடிய பொருளாகையால் அவை இடமாற்றத்திற்கும் சேமித்து வைக்கவும் பயன்படுத்தப்பட்டன.

2. மண் மற்றும் உலோகப் பாண்டங்கள்: மட்பாண்டங்கள்தான் அதிகமாகப் புழக்கத்திலிருந்தன. மோசே இரத்தத்தை வார்க்கப்பயன்படுத்திய பாத்திரம்தான் உலோகத்தாலான மிகப்பெரிய பாத்திரம் (யாத் 24:6). செம்பு (யாத் 2:3), வெள்ளி (எண் 7:13), பொன் (2 நாள் 4:8; எஸ் 1:9) பாத்திரங்களும் இருந்தன. சமைக்கும் உலோகப் பாண்டங்களும், கிண்ணங்களும் அதே உருவத்திலிருந்த மட்பாண்டங்களின் பெயரைப் பெற்றிருந்தன. உலோகப் பாண்டங்கள் பெரும்பாலும் பலியிடுவதில்தான் பயன்படுத்தப்பட்டன.

3. கற்பாண்டங்கள்: உலோகப் பாண்டங்கள் செய்யப்படுவதற்குமுன் வீட்டின் தட்டுகளும், முக்கிய பொருட்களும் மாக்கற்களினால் செய்யப்பட்டன. எகிப்தியர்கள்தான் இந்தக் கலையில் மிகவும் பெயர் பெற்றவர்கள். படிகச்சிமிழ் விலையுயர்ந்த தைலங்களை வைக்கப்பயன்பட்டது (மத் 26:7). கற்களில் அமைந்து பெரிய பள்ளங்கள் சாயம் தோய்க்கப் பயன்பட்டன. யோவா 2:6, துப்புறவுச் சடங்கில் பயன்படும் பெரிய கற்சாடிகளைப் பற்றிக் கூறுகின்றது.

பாபிலோனியா (BABYLONIA - விண்ணகத்தின் வாயில்)

திகிரீசு மற்றும் யூப்பிரத்தீசு நதிகளுக்கிடையில்,

தென் மெசபொத்தாமியாவில் அமைந்திருந்த ஒரு முக்கிய நாடும் கலாச்சாரமும் ஆகும். இது மூன்றாம் ஆயிரமாண்டு முதல் பிந்திய முதலாம் ஆயிரமாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் செழித்து வளர்ந்தோங்கியிருந்தது. அதன் தலைநகரான பாபிலோன் என்ற பெயரால் கிரேக்கர்கள் அதனை அழைத்தனர். விவிலியத்தில் அது சினார் என்றும் (ஆதி 11:2; 14:1.9; யோசு 7:21), கல்தேயரின் நாடு என்றும் (எரே 24:5; எசே 12:13) அழைக்கப்படுகிறது. ஆனால், தொடக்ககால மக்கள் இதைச் சுமேர் மற்றும் அக்காது என்றும் அழைத்தனர்.

I. **வரலாறு:** வெகு காலமாக "கலாச்சாரத்தின் தொட்டில்" என்று கருதப்பட்ட தென் மெசபொத்தாமியா கி.மு. 7000-ஐ ஒட்டி விவசாயப் புரட்சியையும் நகர அமைப்புகளையும் கண்டது. பொதுவாக இதன் "வரலாற்றுக்கு முந்திய" காலம், கி.மு. 6000-2500 ஆண்டுகளில், ஐந்து கலாச்சாரக் கட்டங்களாகப் பிரிக்கப்படும். இவற்றில் காலத்தால் முந்தியது எரிது என்ற இடத்தில் (காண்க. ஈராது, ஆதி 4:18) இருந்திருப்பதாகத் தெரிகிறது. இங்கு, சில கோவில்களும் பலவகைப்பட்ட மட்பாண்டங்களும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. 4300-3500-க்கு இடையில் செமித்திய-இரானியத் தோற்றமுடைய "உபய்து" கலாச்சாரம் வளர்ந்தோங்கியது; வடமெசபொத்தாமியாவுக்கும் பரவியது. அதற்குப்பின் செமித்திய இனத்தைச் சேராத சுமேரியர்கள் உருக்குக் கலாச்சாரத்தைப் புகுத்தினர். இவர்கள் சித்திர எழுத்து முறையையும் விவசாயத்தையும் அறிமுகப்படுத்தினார். பரந்த கலாச்சார ஆதிக்கம் கொண்டிருந்தாலும், சுமேரியர்கள் தென்மெசபொத்தாமியாவில் மட்டுமே அரசியல் ஆதிக்கம் செலுத்தினர். கி.மு. 3100-2900-க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த தொல்பொருள்கள் எம்தெத்து நசர் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் தென் மெசபொத்தாமியா முழுவதிலும் நகரப்புரட்சி நிகழ்ந்திருக்கிறது. இது "வரலாற்றுக்கு முந்திய" இறுதிக்கட்டத்திற்குத் தயாரித்தது. இக்கட்டம் தொடக்க அரசமரபுக் காலம் அல்லது லகாசு காலமாகும். இக்காலத்தின் சுமேரிய அரசன் லிஸ்டு என்பவரின் கூற்றுப்படி, கடவுள்களிடமிருந்து "அரசநிலை" தாழ்த்தப்பட்டு பதினொரு நகர அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்பட்டது. கிஸ் என்னுமிடத்தில் அமைந்திருந்த அரசமரபின் தலைவர்களுள் உருக்கு (எரேக்கு) மற்றும் ஊர் என்பவர்கள் புராணத்தில் வரும் கில்காமிசு மற்றும் அக்கா ஆகியோர் தலைவர்களாவர். இந்த மரபைச்சேர்ந்த ஊர்-நான்சேயும் எயனாத்தும் அரசியலில் வெற்றி பெற்ற தலைவர்கள் ஆவர். பாபிலோனியா சிறிது காலத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நாட்டில் சமூகச் சீர்கேடுகள் நிலவின. பின்பு லகாசில் உருக்காகினா சீர்திருத்தவாதியாகத் தோன்றினார். அவருக்குப்பின் ஆற்றல்மிக்க லூகல்சகேசி ஆட்சிக்கு வந்தார். இவர் லகாசை அழித்து உருக்கு மற்றும் ஊர் ஆகியவற்றைக் கைப்பற்றி, உருக்கின் மூன்றாவது அரசமரபின் ஒரே தலைவராகத் தன்னை நிறுவிக்கொண்டார். அவரது ஆதிக்கம் பாரசீக வளைகுடாவிலிருந்து மத்திய தரைக் கடல்வரை நிலவியது.

அக்காதில் சார்கோனால் நிறுவப்பட்ட செமித்திய அரசமரபு (கி.மு. 2300-2230) சுமேரிய அரசை வென்று, தனது அரசின் மையமாகப் புதிய அக்காதை நிறுவியது. இவ்வரசில் நிலையான படையும், வலுவான மைய ஆட்சியமைப்பும் சிறப்புப் பெற்றன. அதன் ஆட்சி ஏலாமிலிருந்து அனத்தோலியா வரை பரவியிருந்தது. வடக்கிலிருந்து படையெடுத்து வந்த கூட்டியர்கள் அக்காதைக் கைப்பற்றியபோது, செமித்திய அரசு வடபகுதியில் தன் ஆதிக்கத்தை இழந்தாலும் லாகாசில் குதேயாவின் தலைமையில் செழித்து விளங்கியது. இது கி.மு. 2100-ஐ ஒட்டி நகர-அரசுகள் தங்களது சுதந்தரத்தை மீண்டும் உரிமையாக்கிக் கொள்ளும்வரை தென்பகுதியில் ஆதிக்கம் கொண்டிருந்தது.

"சுமேர் மற்றும் அக்காதின் அரசர்கள்" என்று தங்களையே அழைத்துக்கொண்ட ஊரின் (ஊர் III) புதிய சுமேரிய மூன்றாம் அரசமரபு பரந்த வியாபாரத்தையும் கலாச்சார முன்னேற்றத்தையும் அறிமுகப்படுத்தியது. இதற்கு ஆப்பு எழுத்துச் சான்றுகள் உள்ளன. இந்த அரசமரபு ஊர்-நம்மு என்பவரால் நிறுவப்பட்டது. சுல்கி, அமர்-சுயென் போன்ற வலிமை வாய்ந்த அரசர்கள் இந்த மரபைச் சேர்ந்தவர்கள். ஆனால் எமோரியரின் படையெடுப்பால், இதன் தலைநகர் தனிமைப்படுத்தப்பட்டது. ஊர் ஏலாமியர்களிடம் வீழ்ச்சியுற்றது. இஃதோடு சுமேரிய ஆட்சி முடிவுக்கு வந்தது. எமோரியரின் இந்தத் காலத்தைச் சேர்ந்ததாக ஆபிரகாமின் குடியேற்றம் (ஆதி 11:31) இருக்கலாம்.

சுமு-அபும் என்பவரால் பாபிலோனில் நிறுவப்பட்ட (கி.மு. 1894) முதல் எமோரியர் அரசமரபு, அதன் ஆறாவது அரசனான கம்முராபியின் காலத்தில் உச்ச நிலை அடைந்தது எனலாம் (கி.மு. 1792-1750). மாரி ஏடுகள் சுட்டுவதுபோல், அவர் பத்து நகர-அரசுகளுக்குத் தலைமை தாங்கினார். அவர் லார்சாவின் ரிம்சினையும், மாரியின் சிம்ரியையும் வென்றார். அசீரியாவுடனும் எசுன்னாவுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார். பாபிலோனிய அரசு நிலைப்படுத்தப்பட்டது. கம்முராபி அக்காதிய மொழியை முக்கியமான மொழியாக்கினார். பாபிலோனியக் கடவுள்களின் தொகுப்பில் மார்துக்கை மிக முக்கிய கடவுளாக்கினார். ஊர்-நம்மு மற்றும் லிபித்-இஸ்தார் ஆகியோரின் முந்தைய சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட தனது சட்டத்தொகுப்பை அமைத்தார். ஆனால், அவருக்குப்பின் பாபிலோனிய அரசு பலவீனப்பட்டது. கி.மு. 1595-இல் இத்தியரான முதலாம் முர்சிலிசிடம் நகரம் வீழ்ச்சியுற்றது. அதன் பின் போர்த்திறமுடைய காசியர்கள் பாபிலோனியாவில் புகுந்தனர். முதலாம் நெபு கத்னேசர் கி.பி. 1150-இல் எழுச்சியுற்றது வரை பாபிலோனியாவின் வரலாறு ஓர் இருண்ட காலமாகும்.

பின்வந்த நூற்றாண்டுகளில், பாபிலோனியா எப்போதும் சுதந்தரமாக இருக்க முயன்றாலும், அக்காலத்தில் ஆதிக்கம் செலுத்திய அசீரியப் பேரரசால் மீண்டும் மீண்டும் இழிவுபடுத்தப்பட்டது. மூன்றாம் சல்மனேசர் (கி.மு. 858-824), தென்பகுதியில் புகுந்திருந்த கல்தேயர்கள் (அரமேயர்கள்) மேல் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். மூன்றாம் திகிலத்-பிலேசர் கி.மு. 745-இல் பாபிலோனின் அரியணைக்கு உரிமை கொண்டாடினார் (காண்க. 2 அர 15:19; 1 நாள் 5:26). மார்துக்கு-அப்லா-இதினா (மொராதாக்கு-பலாதான்; 2 அர 20:12; எசா 39:1) என்ற கல்தேயத்தலைவர், முதலில் அசீரியர்களுக்கு உதவியளித்தார். ஆனால், பின்பு ஏலாமியர்களின் உதவியுடன் திகிலத்-பிலேசருடைய மகன் இரண்டாம் சார்கோனிடமிருந்து பாபிலோனைக் கைப்பற்றினார். கி.பி. 703-இல் சனகெரிபால் விரட்டியடிக்கப்பட்டார். மார்துக்கு-அப்லா-இதினா, யூதாவின் எசேக்கியா உள்பட்ட கூட்டமைப்பின் உதவியுடன் (2 அர 20:12-19; எசா 39) மீண்டும் படையெடுத்தார். ஆனால், அசீரியர்கள் அவரை மீண்டும் விரட்டியடித்தனர். ஏசர்கத்தோன் தன் மகன் சமஸ்-சமுக்கினை கி.மு. 672-இல் பாபிலோனில், அடுத்த நேர் அரச உரிமையுள்ள இளவரசனாய் நியமித்தார். ஆனால் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, அவனது சகோதரரான அசூர்பானிப்பால் என்ற அசீரிய அரசன் கிளர்ச்சி செய்த பாபிலோனை அழித்தபோது இளவரசன் தற்கொலை செய்து கொண்டார்.

அசூர்பானிப்பாலுக்குப் பின்வந்த கண்டாலானு கி.மு. 627-இல் இறந்தபோது செயா-லாந்துப் பகுதியின் ஆளுநரான நபு-அப்லா-உசூர் (நபோபோலாசர்) பாபிலோனிய அரியணையைக் கைப்பற்றி, புதிய பாபிலோனிய அல்லது கல்தேய அரச மரபை நிறுவினார். சியாக்சரேசு மற்றும் மேதியர்களின் உதவியுடன் நபோபோலாசர் கி.பி. 612-இல் நினிவேயைக் கைப்பற்றினார். நபு-குத்துரி-உசூர் (2-ஆம் நெபுகத்னேசர், கி.மு. 604-

562) என்பவரின் தலைமையில் கர்கமிசு என்ற இடத்தில் பாபிலோனியர் எகிப்தியரைத் தோற்கடித்தனர் (கி.மு. 605; எரே 46:2). பின்பு சீரியாவையும் பாலஸ்தீனத்தையும் கைப்பற்றினர் (காண்க. 2 அர 24:7). யோயாக்கிம் என்ற யூதாவின் அரசன் நெபுகத்னேசரின் சிற்றரசன் ஆனார்; பின் எகிப்தின் 2-ஆம் நெக்கோவோடு சேர்ந்து கொண்டார். இதற்குப் பதிலடியாக நெபுகத்னேசர் கி.மு. 547-இல் எருசலேமை முற்றுகையிட்டு, யோயாக்கிமை நாடு கடத்தினார்; மத்தனியாவை (செதேக்கியாவை) எருசலேமில் அரசராக்கினார். செதேக்கியா கிளர்ச்சி செய்ததால், பாபிலோனியர்கள் எருசலேமை அழித்தனர் (கி.மு. 587); மக்களை நாடு கடத்தினார். இதுதான் பாபிலோனிய அடிமைக்காலம் (2 அர 25:8-26). நெபுகத்னேசர் போர் வெற்றிகளில் சிறந்து விளங்கியது போல், சட்டம் மற்றும் கட்டடக்கலையிலும் அவரது ஆட்சி சிறந்து விளங்கியது. அவரை அடுத்து அமெல்-மார்துக்கு (அவில்-மெரோதக்கு; கி.மு. 562-560; 2 அர 25:27-30; எரே 52:31-34) ஆட்சிக்கு வந்தார். நபோனிது (கி.மு. 556-539) மேதியா மற்றும் லீதியாப்படைகளை எதிர்த்துப் போராடினார்; ஆனால், செமாவுக்கு ஓடிவிட்டார். இந்நிலையில் சைரசு தலைமையில் பாரசீகர்கள் பாபிலோனைக் கைப்பற்றி ஆளுநர் பெல்-சார்-உசூர் (பெல் சாட்சர்; காண்க. தானி 5:30) என்பவரைக் கொன்றனர்.

சைரசின் ஆட்சிக் காலத்தில் பாபிலோனின் ஆட்சி ஆளுநர் குபாரு (கோப்ரியா)விடம் ஒப்படைக்கப்பட்டது. அக்கமேனியர்கள் யூதர்களுக்குச் சாதகமாக இருந்தனர். அவர்கள் எருசலேமுக்குத் திரும்பிச்சென்று ஆலயத்தைக் கட்டுவதை ஊக்குவித்தனர் (எஸ் 1:1-11). கி.மு. 522-இல் இரண்டாம் கம்பிசுவின் இறப்பு, பாபேல் அரசுக்கு உரிமை கொண்டாடவும் நாட்டில் அமைதியின்மைக்கும் இடமளித்தது. ஆனால், 2-ஆம் தாரியுவின் காலத்தில் (கி.மு. 520-485) ஒழுங்கு நிலைப்படுத்தப்பட்டது. தாரியு, சத்திரபுகள் மற்றும் தல ஆளுநர்களின் தலைமையில் பாபிலோனிய ஆட்சியைத் திருத்தி அமைத்தார். இவரது ஆட்சியில்தான் எருசலேம் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது (எஸ் 4:15.24-6:22).

பாபிலோனியர்கள், செருசுவின் ஆட்சியில் (கி.மு. 486-470; காண்க. எஸ் 4:6; அகசுவேர்) மீண்டும் ஒரு முறை கிளர்ச்சி செய்து தோல்வியுற்றனர். கி.மு. 331-இல் பெரிய அலக்சாந்தர் பாபிலோனைக் கைப்பற்றினார். நாடு கிரேக்க ஆட்சியில் கீழ் வந்தது. காலப்போக்கில் இதைச் செலூக்கியர்களும் (கி.மு. 312-64), பார்த்தியர்களும் ஆண்டனர். கி.பி. 641-இல் அரேபியர்களின் கைவசமாயிற்று.

II. சமயம்: மெசபொத்தாமியாவின் சிக்கல்மிக்க வரலாற்றின் காரணமாக அதன் சமயத்தில் சுமேரிய மற்றும் அசீரிய-பாபிலோனியக் கூறுகளை வேறுபடுத்துவது கடினமாகும். அவற்றில் குழப்பமும் தெளிவின்மையும் அதிகம் உண்டு. ஆயினும் அவற்றின் பண்புகளை வேறுபடுத்தி எடுத்துக்கூற அறிஞர் பலர் முயன்றுள்ளனர்.

சுமேரிய சமயம் அடிப்படையில் கீழுலகுக்குரியதாகும். அதாவது நிலவுக்கு மற்றும் அதன் சக்திகளில் சிறப்பு அக்கறை கொள்வதாகும். ஒழுங்கமைவின்பால் கொண்ட ஆர்வத்தில் சுமேரியா உலகநோக்கு அடிப்படை கொண்டுள்ளது. எல்லாம் திட்டமிட்டபடி, நிலையாக, செவ்வொழுங்கோடு இருக்க வேண்டும். சுமேரிய சமயம் அமைதி, மற்றும் பாதுகாப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டது. இயற்கை வாழ்வோடு ஒப்புமையுடையதாகக் கருதப்பட்டது. விண்ணகமும், பூமியும் எதிரிணையானவை. விண்ணகத்தில் நிகழ்பவை பூமியிலும் நிகழ்ந்தன. இவ்வாறு பெண்தெய்வமாகக் கருதப்பட்ட பூமி விண்ணகமான ஆண் தெய்வத்தால் கருவுற்றது. குறிப்பிட்ட காலங்களில் தெய்வம் அல்லது அதன் பிரதிநிதிக்கும் தெய்வீகமணமகளைக் குறிக்கும், பெரும்பாலும் ஆலய விலைமகளுக்கும், திருமணம் நடப்பதாக நம்பப்பட்டது. சுமேரிய

சமயத்துக்கு மாறாக, அசீரிய-பாபிலோனிய சமயம் சூரியன், சந்திரன், விண்மீன்கள், மழை, காற்று, பருவகாலம் போன்ற விண்ணகச்சக்திகளில் அக்கறை காட்டியது.

மெசபொத்தாமிய கடவுள்கள் தொகுப்பு நூற்றுக்கணக்கான தெய்வங்களைக் கொண்டுள்ளது. புராணவாசகங்கள், சமய ஏடுகள், எழுத்தர்களின் பட்டியல், ஆட்களின் பெயர் ஆகியவற்றிலிருந்து 2500-க்கும் மேற்பட்ட தேவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் பல, முக்கிய தேவர்களைப் பற்றிய அடைமொழியாகவும் அவர்களுடைய பண்புகளை எடுத்துக்கூறுபவைகளாகவும் அமைந்திருக்கலாம்; அல்லது கடவுள்களுக்கு ஊழியர்களையும் வழித்தோன்றல்களையும் அளிக்கும் ஆர்வத்தில் பிற்கால சமயவாதிகளால் படைக்கப்பட்டிருக்கலாம். சுமேரியக் கடவுள்கள் அக்காதியப்பெயர்களில், அசீரியர்களாலும் பாபிலோனியர்களாலும் வணங்கப்பட்டனர்.

முக்கிய கடவுள்கள்: விண்ணகத்தின் கடவுளும், தேவர்களின் கடவுளும் அரச நிலையின் கடவுளும் ஆனவர் அனு (சும்-அன்) என்றழைக்கப்பட்டார். வான்வெளி மற்றும் காற்று ஆகியவற்றின் கடவுளும் மனித ஊழைக் கொண்டிருப்பவரும் புயல் மற்றும் சுழல்காற்று வழியாக அழிவை ஏற்படுத்தும் கடவுளும் ஆனவர் என்லில் (எல்லில் அல்லது பேல்) என்றழைக்கப்பட்டார். பூமிக்கடியிலுள்ள இனிப்பான தண்ணீர், ஆகவே வளமையின் கடவுளும் ஞானம் மற்றும் மந்திரவாதம் ஆகியவற்றின் கடவுளும் ஆனவர் எயா (சும்-என்கி) என்றழைக்கப்பட்டார். இந்த முக்கியப் படைப்புக் கடவுள்களோடு, சுமேரியர்கள் நின்குரசாகு என்ற தாய்த் தேவதையையும் சேர்த்துக்கொண்டனர்.

முக்கியத்துவத்தில் அடுத்து வரும் கடவுள்கள்.சந்திரகடவுளான சின் (சும்-நானா, சுயென்): இது நிலாவின் பருவங்களுக்கேற்ப இளம் காளையாகவோ, கிழ மனிதனாகவோ கருதப்பட்டது. இது ஞானத்தின் கடவுளாகவும், இரவு நீதிபதியாகவும், வியப்புக்குரியவற்றின் தேவதையாகவும் கருதப்பட்டது. இஃது ஊர் மற்றும் காரான் போன்ற இடங்களில் (காண்க. ஆதி 11:31; யோசு 24:2) சிறப்பாக வழிபடப்பட்டது. சூரிய கடவுள் (சும் உத்து): நீதியின் கடவுளும் ஒழுங்கமைவைப் பாதுகாக்கும் கடவுளாகவும் கருதப்பட்டது. வெள்ளிக் கோளின் தேவதை: இது காதல், பாலினப் பெருக்கம் மற்றும் போரின் தேவதை என்று கருதப்பட்டது. பிற கடவுள்கள்: இடியின் கடவுளான, அதாது: புயல், போர், வேட்டை செய்தல் ஆகியவற்றின் கடவுளான நினுர்த்தா: கீழ் உலகம் மற்றும் கொள்ளை நோய்களின் கடவுளான நெர்கால் என்பன. தம்முசு கடவுள்: இது விவசாயக்கடவுளாகும்; மரித்து உயிர் பெறும் கடவுளாக புராணத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தது. அது கீழ் உலகில் இறங்கி மீண்டும் எழுதல் பருவகாலங்களுக்கு அடிப்படையாக நம்பப்பட்டது.

மார்துக்கு (சூரியனின் மகன்) எயாவின் புதல்வராகும். கம்முராபியின் ஆட்சிக்குப் பின், இது நாட்டுத்தேவதையாக பாபிலோனியத் தெய்வங்கள் தொகுப்பில் முதன்மை பெற்றது. பாபிலோனியப் படைப்புக்காவியத்தில் (எனுமா எலிசு) அவர் குழப்பத்தின் தேவதையான தியமாத்தை வெல்கிறார். அதன் விளைவாக மற்றத் தேவர்கள் பாபிலோனில் எசாகில் என்ற கோவிலை அவருக்காக நிறுவுகின்றனர். அவரிடம் அதிகாரத்தையும் ஊழ் தகட்டையும் ஒப்படைக்கின்றனர். மார்துக்கின் பண்புகளை எடுத்துரைக்கும் ஐம்பதுக்கு மேற்பட்ட பெயர்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. இவருக்குப் பிற்காலத்தில் பேல் (தலைவர், ஆண்டவர்) என்ற பெயர் வழங்கிற்று. இவரது துணைவி சர்பனித்து தேவதையாகும். அவரது மகன் நபு (நெபோ), நூல்கள் மற்றும் அறிவியலின் கடவுளாகும்.

பாபிலோனிய சமயத்தின்படி, மனுகுலத்தின் முதன்மையான கடமை தேவர்களுக்குச் சேவை செய்வதாகும். இச்சேவை, சிலைகளுக்கு ஆடை அணிவித்துத் தினமும் கோவிலில்

உணவுப்படையல் செய்வதாகும். பொதுமக்கள் தேவர்களை அணுக முடியாது. ஆகவே, இக்கடமைகளைக் குருக்களும், சடங்குகளில் பயிற்சி பெற்றவரும் செய்து வந்தனர். இவர்களில் பலவகைக் குருக்களும், வழிபாட்டுச் சடங்குகளில் திறமை பெற்றவர்களும், இசைவல்லுநர்களும், பாடகர்களும், முன்னுரைப்பவர்களும், சோதிடர்களும் அடங்குவர். தீய ஆவிகள் அல்லது பேய்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டிய மந்திரங்கள் அடங்கிய பல ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கனவுகளுக்கும் பலியிடப்பட்ட விலங்குகளின் உள்ளுடல் கூறுகளில் காணப்படும் அடையாளங்களுக்கு விளக்கம் அளிக்கவும், இயற்கை நிகழ்ச்சிகளைக் கவனிப்பதிலிருந்தும், தேவர்களோடு கொள்ளும் நேரடியான பரவசத் தொடர்புகளிலிருந்தும், மனித ஊழை எடுத்துக்கூறவும் பலவகையான வழிபாட்டாளர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

கம்முராபியின் காலத்திலேயே, அரசன் தெய்வீகமுடையவனாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் மக்களின் நலனிலும், நாட்டின் செழிப்பிலும் முக்கியமான பங்கு வகித்தார். அவர் மார்துக்கிடம் கொண்ட பிரமாணிக்கம் ஆண்டுதோறும் "அகிட்டு" அல்லது புத்தாண்டு விழாவில் புதுப்பிக்கப்பட்டது. இச்சடங்கில், அரசன் ஆடை நீக்கப்பெற்று, குருக்களால் அடிக்கப்பட்டான். மார்துக்கின்முன் மன்னிப்புக்காகக் குனிந்து வணங்கி, தனது புனிதக் கடமைகளை நிறைவேற்றுவதாக வாக்கு அளித்தபின், அரசனது அதிகாரம் புதுப்பிக்கப்பட்டது.

III. மரபுரிமை: சுமேரிய, பாபிலோனியக் கலாச்சாரத்தின் பல்வேறு பண்புகள் மற்ற மேற்காசிய நாடுகளுக்கு, சிறப்பாக சீரியா, பாலஸ்தீனத்துக்குக் கிடைத்தன. இவற்றில் முக்கியமானது எழுத்துமுறையாகும். இது முதலில் சித்திர எழுத்தில் தொடங்கி விரிவான ஆப்பு எழுத்து முறையாக வளர்ந்தது. இந்த முறையை எப்லாயிக்கு, இத்திய, கூரிய, எமோரிய, ஏலாமிய மற்றும் பழைய பாரசீக மொழிகளில் பயன்படுத்தலாம். இஃது உகாரித்து அகரவரிசை முறைக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட்டது. கல்வி எங்கும் பரவியிருக்கவில்லை. ஆகவே, எழுத்தர் குழுக்கள் பலவகை வியாபாரம் மற்றும் நிர்வாகம் தொடர்பான கடிதங்கள், சட்டச் செயல்கள், உடன்படிக்கைகள், அரசகட்டளைகள், வழிபாட்டு வாசகங்கள் ஆகியவை பற்றிய ஏடுகளைப் பாதுகாத்து வந்தனர். இக்குழுக்கள் பலவகை இலக்கியங்களையும், பெயர்ப் பட்டியல்களையும் தயாரித்தனர். இவற்றில் வரலாறு மற்றும் அதிகாரபூர்வமான ஏடுகள் மட்டுமின்றி, செறிவுமிக்க இதிகாசங்கள், சமயப்பாடல்கள், முதுமொழிகள், ஞான இலக்கியங்கள், மன்றாட்டுகள், போற்றுரைப்பாடல்கள் ஆகியவையும் அடங்கும். இவற்றிற்கு ஒத்த இலக்கியப்படைப்புகள் மேற்காசியா மற்றும் அனத்தோலியாக் கலாச்சாரங்களிலும் காணப்படுகின்றன. விவிலிய நூல்களில் காணப்படும் மெசபொத்தாமிய பாதிப்புக்களை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதி பற்றிய பாபிலோனிய அக்கறை அங்குக் காணப்படும் சட்டத்தொகுப்புகளில் தெளிவாகத் தெரிகின்றன. இவை அக்காலத்தில் நிலவியவற்றை விவரிக்கின்றன. 282 பகுதிகளையுடைய கம்முராபியின் சட்டத்தொகுப்பு பலரும் அறிந்த ஒன்றாகும். இவை உடைமை, திருமணம் மற்றும் விவாகரத்து, களவு, வியாபாரம், விவசாயம், தத்து எடுத்தல், உரிமைச்சட்டம், நீதிமன்ற முறைகள், குற்றங்களுக்குத் தண்டனை ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன. இக்காலத்தியப் பொருளில் சட்டம் என்பது அரச கட்டளைகளிலும், அரசனது ஆட்சியின் முதலாண்டில் விடுக்கும் அறிக்கையிலும் காணப்படுகிறது. இவை பெரும்பாலும், மனித நலம், நீதி ஆகியவற்றில் அக்கறை கொள்கின்றன. இவை மாற்றியமைக்கப்பட்ட வடிவை ஐந்நூல் பிரதிபலிக்கின்றது.

தாவரங்கள், விலங்குகள், கனிமப்பொருட்கள்

ஆகியவைபற்றிய ஆப்பு எழுத்துப்பட்டியல்கள் பாபிலோனியர்களுடைய அனுபவ அறிவியலின் தோற்றத்தைச் சுட்டுகின்றன. கணிதத்தில் பல்வகைகளும் இங்கே தோற்றம் கொண்டுள்ளன. வானவியல், மருத்துவம் பற்றிய ஏடுகள் பாபிலோனியர்கள் இவற்றில் அடைந்திருந்த வளர்ச்சியைக் காட்டுகின்றன. ஆனால், மாயவித்தையும் பேயோட்டுதலும் இடங்கொண்டிருந்தன.

பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட காலம் (PERIOD OF BABYLONIAN CAPTIVITY)

காண்க: இஸ்ராயேல் வரலாறு – V. பாபிலோனில் அடிமை வாழ்வும் மீளுதலும்.

பாபிலோன் (BABYLON – இறைவனின் கதவு)

I. பழைய ஏற்பாடு: மெசபொத்தாமியாவின் மிகப்பழமையான தலைநகரமான பாபிலோன் இன்றைய ஈராக்கில் பாக்தாத்தின் தென்மேற்கில், கில்லா என்ற நகருக்கருகே இருந்திருக்க வேண்டும். இதன் சிதைவுகள் யூப்பிரத்தீசு நதியின் கிளைநதி ஒன்றின் ஓரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

I. புவியியலும் விவரிப்பும்: யூப்பிரத்தீசு நதியும், திகிரீசு நதியும் மிக நெருங்கி வரும் இடத்தில், யூப்பிரத்தீசு நதியின் இடக்கரையில் அமைந்துள்ளது பாபிலோன் நகரம். மிக வளமையான மண்ணைக்கொண்ட இப்பகுதி இரு நதிகளாலும் இன்னும் வளமாக்கப்பட்டுள்ளது. ஆனால், இரு நதிகளின் வெள்ளம் அடிக்கடி நகரத்தைப் பாதித்தாலும் இதனைக் கட்டுப்படுத்த அணைகளும், நீர்த்தேக்கங்களும் கட்டி எழுப்பப்பட்டதால், வெள்ளத்தின் சேதத்தைத் தவிர்க்க முடிகிறது. திகிரீசு நதியை விட யூப்பிரத்தீசு நதி கப்பல் செலுத்த, சிறந்த இடமாக உள்ளது.

II. 4 ச.கி.மீ. பரப்பளவுள்ள இந்நகரின் சிதைவுகள் பழங்காலப் பெருமைகளை எடுத்தியம்பும் வண்ணம் அமைந்துள்ளன. புதிய நகரம் ஏற்கெனவே உள்ள பழைய நகரின் விரிவுதான். இது நெபுகத்னேசர் செய்த பணியாகும். இந்நகர் இரட்டைச் சுவர்களால் பாதுகாக்கப்பட்டது. இதனை அடுத்து நெபுகத்னேசர் மற்றுமொரு சுவரைக் கட்டினார். பல கால்வாய்கள் நகரத்திற்குள் சென்றன. எட்டுவாயில்கள் பெரும் வீதிகளுக்கு இட்டுச்செல்வதாக அமைந்திருந்தன. இடையேயுள்ள குறுக்கு வீதிகள் நகரைப் பல பிரிவுகளாக்கின. யூப்பிரத்தீசு நதியின் குறுக்கே இரு பாலங்கள் இருந்தன. நகரம் 53 கோவில்களைக் கொண்டிருந்தது. 'மார்துக்கு' எனும் தெய்வத்தின் ஆலயமான "ஈசகில்" என்பதே இதில் மிகப்பெரிய கோவில் ஆகும். இது சிகுராத்து எனும் உயரமான கோபுரத்தைக் கொண்டிருந்தது. இதுவே பாபேல் கோபுரம் என்றழைக்கப்பட்டது. இந்த ஆலயத்தில்தான் மார்துக்கின் சிலை இருந்தது. ஒவ்வொரு புதுவருடமும் அரசன் தன் அரசாட்சியை மார்துக்கின் கையினின்று பெறுவதாக ஒரு மரபு உண்டு. இந்தச்சிலை அரசர்கள் பலரால் பல முறை எடுத்துச் செல்லப்பட்டு முடிவில் கி.மு. 1130-இல் முதலாம் நெபுகத்னேசர் I என்பவரால் பாபிலோனுக்குக் கொண்டு வரப்பட்டது. சனகெரிபு என்பவரால் கி.மு. 689-இல் நினிவேக்கு எடுத்துச்செல்லப்பட்டு, 21 ஆண்டுகட்குப் பிறகு பாபிலோனுக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீரச் செயல்கள் பாபிலோனின் வீழ்ச்சி, எழுச்சியை மட்டுமின்றி மார்துக்கின் சிலையின் மீது உரிமை கொண்டவர்களே அவரது நாட்டின்மீது அரசாட்சி செலுத்தலாம் என்பதையும் குறிக்கும். புதுவருட விழாவின் போது மற்றும்பல சிறு தெய்வங்களும் 'மார்துக்குடன்' பவனியில் எடுத்துச் செல்லப்படும். நெபுகத்னேசரின் அரண்மனைச் சிதைவுகளில் தொங்கும் தோட்டம் இருந்ததற்கான அடையாளங்கள் பல காணப்படுகின்றன.

III. வரலாறு: பாபிலோன் அக்காதின் சார்கோனால் முதன்முதல் குறிக்கப்படுகிறது. எமோரியர்களின் ஆளுகையில்தான் பாபிலோன் மிகச்சிறப்பு வாய்ந்த நகரமாகிறது. முக்கியமாக கி.மு. 1728-1686-இல் கம்முராபி என்ற

மன்னனின் ஆட்சியில் இது மிகச்சிறப்பு வாய்ந்த நகரமாகியது. இவரது ஆட்சிக்காலத்தில் பாபிலோன் அசீரியா, சுமேரியா, அக்காதியா அனைத்தையும் உள்ளடக்கிய மிகப்பெரும் நாடாகியது. ஒருமுக மைய ஆட்சியை ஏற்படுத்தி அமைதியும், வளமையும் நிறைந்த மிகச் சிறந்த ஆட்சிமுறையை நிலவச் செய்த பெருமை இவரையே சேரும். சட்டத்தை வரையறுத்த பெருமையும் இவருக்குரியதே. விவிலிய ஆராய்ச்சிக்கு இவரது சட்டத்தொகுப்பு முக்கியமானது. காசியர் படையெடுப்பில் எமோரியப் பேரரசு சிதைந்து போயிற்று. ஆனால், கி.மு. 1530 - 1160-இல் காசியர் அரசின் கீழ் பண்பாட்டிலும், கலையிலும் இருளடைந்த நிலையில் இருந்தது. ஆயினும், கம்முராபி நிலைநாட்டிய அந்தக் கலாச்சாரம் நிலைத்திருந்தது. கி.மு. 7-ஆம் நூற்றாண்டு வரை இந்நிலை தொடர்ந்தது. பின்னர், இஃது அசீரிய அரசர்களின்கீழ் உள்ள ஓர் அரசாகவே திகழ்ந்தது. அவர்கட்குத் திரை செலுத்தும் அரசாக இருந்தாலும் இது முழுமையாக அசீரியர்களால் கட்டுப்படுத்தப்படவில்லை. இதன் பிறகு பலமுறை பாபிலோன் அன்னிய அரசர்களின் கைக்குள் வசமாகி, பின்னர் மீண்டும் பாபிலோனிய அரசர்களின் வசப்பட்டது.

கி.மு. 605-இல் நெபுகத்னேசர் தன் தந்தை நெபோலசாரை அடுத்து, பாபிலோனைப் பிடித்தான்; பின்னர் சீரியா, பாலஸ்தீனம் அனைத்தையும் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தான். கி.மு. 587-இல்தான் எருசலேம் பாபிலோனியரால் தரைமட்டமாக்கப்பட்டது. கி.மு. 605-562 வரை நெபுகத்னேசரின் ஆட்சியின் கீழ் மிகச் சிறந்த பெருமையை அடைந்தது பாபிலோன். நெபுகத்னேசரின் ஆட்சிக்குப்பிறகு வந்தவர்கள் நாட்டை ஆளவும் கட்டிக்காக்கவும் திறமை அற்றவர்களாகப் போனதால் இஃது எதிரிகளின் கையில் பெருமை இழந்தது. பாரசீகர் ஆட்சியில் இஃது ஒரு முக்கிய மையமாக இருந்ததெனினும் பின்னர்க் கிரேக்கர் ஆட்சியின் கீழ் முக்கியமற்ற நகராகப் போனது.

3. சமயம்: பாபிலோனிய சமயமானது சுமேரிய சமயத்தின் பல பண்புகளைக் கொண்டதாகவும், பல செமித்திய சமயப் பண்புகளை உள்ளடக்கியதாகவும் இருந்தது. இஃது ஒரு பல கடவுள் சமயமாகும். 3300-க்கு மேற்பட்ட கடவுள்களின் பெயர்கள் அக்காதிய இலக்கியங்களில் உள்ளன. இவற்றில் பல ஒரே தெய்வத்தைக் குறிப்பிடுவதாக உள்ளன. இக்கடவுள்கள் 'மண்ணகக் கடவுள்கள்', 'வானகக் கடவுள்கள்' என இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை அனைத்தும் வெவ்வேறு பெயரில் வழிபடப்பட்டன. நல்ல, தீய கடவுளர்கள் இருப்பதாக நம்பினர். பொதுவாக இயற்கைச் சக்திகளை வழிபட்டனர். நகரங்களின் காவல் தெய்வங்கள் பல இருந்தன. 'மார்துக்கு', 'அசூர்' என்பவைதான் அவர்கள் வழிபட்டவைகளிலே மிக உயர்ந்தவையாகக் கருதப்பட்டன. இச்சமயம் பல மூடநம்பிக்கைகளையும், தீயசக்திகள், பேய் நம்பிக்கை போன்றவற்றையும் கொண்டிருந்தன. இவர்களின் கடவுள் இயற்கைச் சக்திகளைக் கடந்த ஒருவராகப் பார்க்கப்படவில்லை. பொதுவாக, இச்சமயம் வழிபாட்டுச் சடங்குகளைத் தவிர வேறு எதையும் பக்தர்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

IV. பாபிலோனின் சிறப்பும், முக்கியத்துவமும்: பாபிலோன் உலக நாகரிகத்திற்கு அளித்துள்ளது மிகப்பெரிய அளவாகும். ஆப்பு வடிவ எழுத்துக்களைக்கொண்டு பல புராண இலக்கியங்களையும், வேறுபல இலக்கியங்களையும் உலகிற்கு அளித்துள்ளது. அது தந்துள்ள "கில்காமிசு" புராணம் விவிலிய நிகழ்ச்சிகள் பலவற்றின் மூலக்கதைகளைத் தந்துள்ளது. 'உலகின் பெருவெள்ளம் பற்றியும்', துன்பம் என்ற பிரச்சனை பற்றியும் (யோபு) மற்றும் பல சங்கீதங்கள் பற்றியும் இது கூறுகின்றது. பாபிலோனிய ஏடுகள் அசீரிய அரசர்களைப் பாபிலோனிய அரசர்களுடன் தொடர்புபடுத்திப் பேசுவதால் அவை முதன்மையான வரலாற்று

மூலங்களாகின்றன. பாபிலோனியா நாகரிகங்களின் தொட்டில் எனலாம். செமித்திய நாகரிகம், சுமேரிய நாகரிகத்திலிருந்து தோன்றி அதை வளர்ச்சி பெறச்செய்தல்.

நகர நாகரிகம் வளர்ச்சி பெற்றது, கலைகள், கைவினைப்பொருட்கள் செய்தல், வியாபாரம் போன்ற பல்வேறு திறமைகளில் அவர்கள் சிறப்புற்று விளங்கினர். சட்டம், ஒழுங்கு நகரத்தில் மக்கள் உரிமையைப் பாதுகாக்க நடைமுறையில் இருந்தன. அவை முற்றிலும் பெருமைப்படத்தக்க முறையில் இருந்தன எனக்கூற முடியாது. அடிமைத்தனம் அங்கு இருந்தாலும் மிகவும் மோசமான நிலையில் இல்லை. சிலர் இங்கு நடந்த அரசியல் ஆட்சியைத் தொடக்க கால மக்களாட்சியாகப் பார்க்கின்றனர். பொருட்கள் உற்பத்தியும், வியாபாரமும் அமைதியாக, சிறந்த முறையில் நடைபெற்றன.

அறிவியல் நடைமுறைப்பயன்பாட்டில் மட்டுமே இருந்தது. வானவியல் ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கியதால் அவர்கள் காலக்கணக்கீடு சிறப்பாக இருந்தது. பாபிலோனியர்களைவிட கட்டடக்கலையில் அசீரியர்கள் சிறந்து விளங்கினர். ஏனெனில் அவர்கள் கற்கள் பற்றி அறியாததே காரணம். ஆபரணங்கள் செய்வதில் இவர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்ததால் கலைஞர்களின் தனித்தன்மையைக் கட்டுப்படுத்தினர்.

V. பாபிலோனின் அடையாளப்பொருள்: விவிலிய அடையாளம் என்ற நிலையில் தெளிவற்ற பொருளைக் கொண்டுள்ள எகிப்துக்கு முரண்பட்ட நிலையில், பாபிலோனானது, இறைவன் சில நேரங்களில் தமது குறிக்கோளை அடைவதற்கென இதனைப் பயன்படுத்தினாலும், ஒரு தீய சக்தியையே எப்போதும் சுட்டிக்காட்டுகிறது.

1. பாபேலின் அடையாளம்: மெசபொத்தாமியப் பாபிலோன் நகருடன் இஸ்ராயேலானது நேரடி உறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னரே, புனித வரலாற்றின் பரப்பில் அது பிரசன்னமாகியிருந்தது. ஏனெனில், பாபேல் என்பது பாபிலோனுக்கான எபிரேயப் பெயராகும். ஆதி 11:1-9-இல் வருகிற புகழ்மிக்க கோபுரமானது அதனுடைய கோயிலினுடைய பல்வேறு மட்டங்களையுடைய கோபுரமேயாகும். பாபிலோனியச் சிலைவழிபாட்டின் முதன்மையான அடையாளமான இந்தக் கோபுரமானது மனித அகந்தையின் அடையாளமாகவும் விவரிக்கப்படுகிறது. விவிலிய மரபானது பேச்சுக் குழப்பத்தினைப் பாபேலின் அடையாளத்துடன் இணைக்கிறது. இவ்வாறாக, இறைவன் மனிதரை அவர்களது அகந்தைமிக்க சிலை வழிபாட்டிற்காகத் தண்டிக்கிறார்.

2. இறைவனுடைய சவுக்கு: மேலும், ஏழாவது நூற்றாண்டின் தொடக்கமுதல் இன்னும் பாபிலோனானது புனித வரலாற்றில் மிக நேரடியான பங்கை வகிக்கின்றது. அந்நேரத்தில் அதனை வென்ற கல்தேயர்கள், மத்திய மேற்காசியாவின் ஆட்சியை நினிவேக்குக் கொண்டு செல்வதாகக் கனவு கண்டனர். அது "தங்கள் வலிமையைக் கடவுளாகக் கருதுகின்ற" (அப 1:11) வெல்ல முடியாத வல்லரசாக இருந்தது. ஆனால், இவ்வல்லமையைத் தனது திட்டத்தின் ஒரு பகுதியாக அமைக்க இறைவன் எண்ணுகின்றார். நினிவேக்கு எதிரான அவரது தீர்ப்பைச் செயல்படுத்துவதன் மூலம் பாபிலோன் இதற்கு ஒத்துழைக்கிறது (நாகூ 2:2-3:19). இஸ்ராயேலருக்கும், அதன் அண்டை அரசுகளுக்கும் இறைவனுடைய சவுக்கு இதுவே. அதனுடைய அரசனாகிய நெபுகத்னேசரின் கரங்களில் யாவே அவர்கள் அனைவரையும் கையளிக்கிறார். அவருக்காக அவர்கள் நுகத்தடியைச் சுமக்க வேண்டும் (எரே 27:1-28:17). யாவே தனது மக்களைக் குடிவெறியராக்குகின்ற பொற்கிண்ணம் இதுவே (எரே 25:15-29; 51:7). முழு உலகையும் அடித்து நொறுக்க அவர் பயன்படுத்தும் சம்மட்டியும் இதுவே (எரே 50:23; 51:20-22). எல்லாவற்றிற்கும் மேலாக,

யூதாவிற்கு எதிரான யாவேயின் தண்டனையை அது செயல்படுத்தும் (எரே 21:3-7). தனது மக்களில் எஞ்சியோரை இறைவன் ஒன்று சேர்க்கின்ற நாடு கடத்தப்பட்ட இடமாக அதன் நாடு இருக்கும் (29:1-20). அரசராகமங்கள் விவரிக்கின்ற கடினமான உண்மை இதுவே (2 அர 24-25). ஆனால், கண்ணீருக்கு இடமளிக்கின்ற பாடல்கள் "பாபிலோன் நதிக்கரைகளில்" (சங் 137) வருங்கால மீட்டலுக்குத் தயாரிக்கின்ற தூய்மைப்படுத்தும் துன்பத்தினை நாடு கடத்தப்பட்ட யூதர்கள் அனுபவிப்பர்.

3. **தீமையின் நகரம்:** பாபிலோனுடைய இந்தத் தெய்வச்செயலான பங்கானது இணையற்ற வடிவில் தீமையின் நகராக இருப்பதினின்று அதனைத் தடுக்கவில்லை. மற்ற நாடுகள் மற்றும் நினிவேயைப் போன்று (எசா 19:24; யோனா), அதுவும் ஒரு நாள் இறைவனுடைய மக்களுடன் ஒன்றிக்கப்படுமாறு உறுதியாக அழைக்கப்படும் (சங் 87:4). ஆனால் நினிவேயைப் போன்று, தன்னுடைய வல்லமையிலேயே அது திருப்தியடைகிறது (எசா 47:7-8.10; 9:7-14). யாவேக்கு முன்னால் செருக்குடனும் திமிருடனும் அது நிற்கிறது (எரே 50:29-32; எசா 14:13-14). சூனியம் (எசா 47:12), சிலை வழிபாடு (எசா 46:1; எரே 51:44-52), மற்றும் எல்லாவிதமான கொடுமைகள் ஆகிய தனது குற்றங்களை அது பெருக்குகிறது. அஃது உண்மையாகவே தீமையின் ஆலயமாகவும் (செக் 5:5-11), "வெறுமையின் நகராகவும்" (எசா 24:10) ஆகிவிட்டது.

4. **பாபிலோனிலிருந்து வெளியேறுதல்:** நாடு கடத்தப்பட்டதானது இஸ்ராயேலுக்கு ஒரு நீதியான தண்டனையெனின், இப்போது சோதனையால் மனம் மாறிய சிறிய குழுவான எஞ்சியோருக்கு அது சகிக்க முடியாத அடிமைத்தனமாகவும், ஆபத்தான பயணமாகவும் உள்ளது. முன்னுரைக்கப்பட்ட 70 ஆண்டுகள் கடந்தவுடன் (எரே 25:11; 29:10; 2 நாள் 36:21), மன்னிப்பின் ஆண்டு வரவிருக்கிறது (எசா 61:2; லேவி 25:10). நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த விடுதலையானது இறை மக்களுக்கு "நற்செய்தியாகும்" (எசா 40:9; 52:7-9). தீய நகரினின்று வெளியேறுமாறு நாடு கடத்தப்பட்டோர் அழைக்கப்படுகின்றனர்: "பாபிலோனிலிருந்து புறப்படுங்கள்!" (எசா 48:20; எரே 50:8); "வெளியேறுங்கள், தீட்டானதொன்றையும் தொடாதீர்கள்" (எசா 52:11). புதிய யாத்திரையில் உள்ளது போன்று அவர்கள் எருசலேமை நோக்கிச் செல்லவிருக்கின்றனர். இஃது அரிய தருணமாகும். இதை வெறுமனே நினைவுகூர்வதே வரவிருக்கும் நூற்றாண்டுகளில் இதயங்களை மகிழ்ச்சியால் நிரப்பும் (சங் 126:1-2). மெசியா காலத்தை நோக்கிப் படிக்கல்லாக மத்தேயு அமைக்கின்ற முக்கிய காலம் இது (மத் 1:11-12).

5. **பாபிலோன் மேல் தீர்ப்பு:** புனித வரலாறானது ஒரு புதிய திருப்பத்தை ஏற்கும் போது, இறைவனின் சவுக்காகிய பாபிலோன் தனது முறையில் இறை தீர்ப்புகளை அனுபவிக்கிறது. தீமையின் நகருக்கு எதிராகத் தீர்ப்பிடப்படுகிறது. தண்டனையானது இறைவாக்கினர்களால் மகிழ்ச்சியுடன் அறிவிக்கப்படுகிறது (எசா 21:1-10; எரே 51:11-12). அவர்கள் பாபிலோன்மீது வஞ்சப் புலம்பல்களை ஓதுகின்றனர் (எசா 47). அதனுடைய பயங்கர அழிவை அவர்கள் முன்னதாகவே விவரிக்கின்றனர் (எசா 13; எரே 50:21-28; 51:27-43). அந்நாள் அதற்கு எதிரான யாவேயின் நாளாகவும் (எசா 13:6...), அதனுடைய தெய்வங்களுக்கு எதிரான பழியாகவும் இருக்கும் (எரே 51:44-57). சைரசினுடைய வெற்றிகரமான பவனியானது, இந்நிகழ்ச்சிக்கான முன்னோடியாகும் (எசா 41:1-5; 45:1-6). பாபிலோனில் கல்லின்மேல் கல் இராதபடிக்கு, கி.மு. 485-இல் செருசின் படைகள் தண்டனையை நிறைவேற்றும் (எசா 24:7-18; 25:1-5). ஆயினும், அழிவிற்குக் குறிக்கப்பட்ட புறவின நகரின் மாதிரியைப் போன்று, பாபிலோனானது யூதரின் நினைவில் தொடர்ந்து

இருக்கும்; மற்றும் அகந்தை மிக்க, புனிதத்தைப் பாழாக்குகின்ற கொடுங்கோலனின் மாதிரியாக அதனுடைய அரசன் நெபுகத்னேசரும் இருப்பார் (தானி 2-4; யூதி 1:1-12).

6. **பாபேலினுடைய மறைபொருளின் நிலைத்தன்மை:** புதிய ஏற்பாட்டின் வருகைக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே வரலாற்று நகராகிய பாபிலோன் வீழ்ந்து விட்டது. ஆனால் அதன் மூலமாக இறை மக்கள், கீழுலகில் தொடர்ந்து நிலவுகின்ற தீமையின் மறைபொருளை அறியலாயினர். ஒன்றையொன்று எதிர்நோக்கியுள்ள பாபிலோனும், எருசலேமும், அவற்றிடையே மக்கள் பிரிக்கப்பட்டுள்ள இரு நகரங்களாக உள்ளன. கிறிஸ்தவ மொழியில், அது சாத்தானின் நகருக்கு எதிராக இறைவனின் நகரம் எதிர்கொள்தலாகும். இவ்விரு நகரங்களின் இந்த நாடகத்திற்குள் தானும் இழுக்கப்பட்டுள்ளதை ஆதித்திருச்சபையானது விரைவிலேயே புரிந்து கொண்டது. பாபிலோனானது ஒவ்வொரு நொடியும் புதிய எருசலேமிற்கு எதிராக அணிவகுக்கிறது (கலா 4:26; திருவெளி 21), நீரோவினுடைய கலாபனையின் தொடக்கத்தில் உரோமைப் பேரரசினுடைய உறுதியான வடிவைப் பாபிலோன் ஏற்கிறது (1 பேதுரு 5:13). செந்நிற விலங்கின்மேல் அமர்ந்து, புனிதர்களின் இரத்தத்தைக் குடிக்கின்ற பெயர்போன வேசியின் வேடத்தில் திருவெளிப்பாடு அதனை விவரிக்கிறது (திருவெளி 17). சாத்தானாகிய பறவை நாகத்துடனும், எதிர்க்கிறிஸ்துவாகிய விலங்குடனும் சேர்ந்து அது தன் வழியே சென்றது. இவ்வாறு, தப்பியோடுமாறு இறைமக்கள் அழைக்கப்படுகின்றனர் (18:4). ஏனெனில், இறைவனுடைய தீர்ப்பு நெருங்கி வருகின்றது; பெரிய பாபிலோன் வீழ்ச்சியடையப் போகிறது (18:1-8). இறைவனுடைய எதிரிகளாகிய நாடுகள் அதனை நினைத்துப் புலம்பும். ஆனால், விண்ணகமோ மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கும் (18:9-19:10). தீமையின் நகருக்கு இறுதியாக ஒதுக்கப்பட்டுள்ள முடிவானது இத்தகையதே. இறைவனுக்கும் அவரது திருச்சபைக்கும் எதிரான உலகப் பேரரசுகளின்மீது விழுகின்ற ஒவ்வொரு வரலாற்றுப் பூர்வப் பேரழிவும் இந்த இறை தீர்ப்பினுடைய செயல்வடிவமேயாகும். பழைய ஏற்பாட்டில் பாதுகாக்கப்பட்டுள்ள பாபிலோனுக்கு எதிரான கூற்றுக்கள் தங்களது இறுதிக்கால நிறைவேறுதலை இந்த நோக்கில் கண்டடைகின்றன. இக்கூற்றுக்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பாபிலோனின் மறைபொருளைத் தோற்றுவிக்கின்ற பாவநாடுகளின் மீது, அச்சுறுத்தும் விதமாகத் தொங்குகின்றவைகளாக உள்ளன.

பாபேல் (BABEL - குழப்பம்)

இது பாபிலோன் என்ற பெயரின் எபிரேய வடிவமாகும். பெருவெள்ளத்திற்குப் பிறகு மக்கள் அனைவரும் சினார் சமவெளிக்கு வந்ததாக ஆதி 11:1-9-இல் சொல்லப்பட்டிருக்கின்றது. தங்களுக்காக அழிக்கமுடியாத ஒரு நினைவுச் சின்னத்தைக் கட்டும் பொருட்டும், தங்களை ஒன்றுபடுத்தி, தாங்கள் பூமியில் சிதறிப் போவதைத் தடுக்கும் ஒரு பொதுவான நோக்கோடும் ஒரு நகரையும், விண்ணைமுட்டும் கோபுரத்தையும் கட்ட முடிவு செய்தனர். ஆனால், கடவுள் அவர்களுடைய மொழியை மாற்றியதால் ஒருவர் ஒருவரைப் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. ஆகவே, அவர்கள் பிரிந்து போக வேண்டியதாயிற்று.

இந்தக் கதையில் பாபிலோனியாவைப் பற்றித் தெளிவான குறிப்பு இருப்பதால், இக்கதையின் மையமான கோபுரம், பாபிலோனியாவின் கடவுளான மார்துக்கின் மேடைக்கோபுரமாகவோ, சிகுராத்தாகவோ இருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு கோபுரம் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இஃது ஒன்றன்மேல் ஒன்றாக ஆறு சதுர மேடைகளைக் கொண்டுள்ளது; கடைசி மேடையானது கடவுளின் சிறிய ஆலயமாக உள்ளது. இது பற்றிய ஆப்பு எழுத்து வாசகம் முக்கியமான விவரங்களைக் கொடுக்கிறது. இது கிரேக்கர்கள் காலத்தில் தோன்றிய விதத்தில் எரோதோத்து ஒரு

விவரிப்பைக் கொடுக்கிறார். கோல்டேவேர் என்பவர் பாபிலோனியாவில் நடத்திய புதைபொருள் ஆராய்ச்சிகள் மூலம் இந்தக் கோபுரத்தின் அடிப்படைத் திட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்குக் கண்டுபிடிக்கப்பட்ட ஆப்பு எழுத்து ஏட்டில், இந்தக் கோபுரத்தின் அளவுகள், பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன; இதனால் இந்தக் கோபுரத்தை மறுபடியும் அமைக்க முடிந்தது. இதன் அடிப்படை 230 அடிசதுரம். இந்தக் கோபுரம் எப்படியிருந்தது என்ற கேள்விக்கு இன்னும் முடிவுகாண முடியவில்லை. இதை எகிப்தியக் கடவுளின் (அல்லது) அரசனின் கல்லறையான பிரமிடுகளைப் போல் சிலர் கருதுகின்றனர். சிகுராத்துக் கோபுரம் கடவுளின் அண்டமலையாகவும் கடவுளின் அடையாள ஆசனம் போலவும் இருந்தது என்று சிலர் விலக்குவர். கடவுளை 'உயர்ந்த இடங்களில்' வழிபட்டுப் பழக்கப்பட்டவர்கள் சமவெளியில் குடியேறியபோது இக்கோபுரங்களைக் கட்டினர். ஆகவே, இச்செயற்கை மலை விண்ணகத்தையும் மண்ணகத்தையும் இணைக்கும் பாலமாக அமைகிறது. இதன் வழியாக மனிதன் கடவுள்களிடம் ஏறுகிறான். கடவுள்கள் மனிதரிடம் இறங்கி வருகின்றனர். இக்கருத்துக்கு ஆதி 11:4-இல் வரும் "வானளாவிய கோபுரம்" ஓரளவு ஆதரவு அளிக்கிறது. இக்கருத்தை யாக்கோபின் கனவு (28:11-19) சுட்டலாம். இந்தக் கோபுரம் இடிபாடுகளில் இருந்தபொழுது ஆதி ஆகமத்தின் கதை தோன்றி இருக்கக்கூடும் எனத்தோன்றுகிறது.

ஆதி 10-ஆம் அதிகாரத்தில் நோவாவின் சந்ததியினர் பட்டியல் கொடுக்கப்படுகிறது. இதில் நாடுகளின் வேறுபாடுகள் பற்றிய யாவே பாரம்பரியக் கருத்துக்கள் காணப்படுகின்றன. பின்பு, பாபேல் கோபுரக்கதையை உட்புகுத்தி உலகத் தொடக்க வரலாறு பற்றிய தனது காவியத்தை யாவே பாரம்பரியம் முடிக்கிறது. இந்த மொழிக்குழப்பக் கதை மறைபோதனை அளிக்கவே உட்புகுத்தப்பட்டிருக்க வேண்டும். இறைவனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் மனப்போக்கு மனிதரிடம் ஆழ்ந்து வேரூன்றி உள்ளது என்று இக்கதை காட்டுகிறது. மனுகுலம் இறைவனோடு கொண்ட உறவில் ஒரு முன்னேற்றமும் அடையவில்லை.

நோவாவின் வழித்தோன்றல்களின் பட்டியலுக்குப் பின், திடீரென்று பாபேல் கதை தொடங்குகிறது. கதை என்ற அளவில் இந்நிகழ்ச்சியுரை நன்கு பின்னப்பட்ட ஒன்றாகும். ஆனால், இக்கதையில் இருவடிவங்கள் கலந்திருப்பதாகத் தெரிகிறது. கட்டடவேலை தொடங்க இரு அழைப்புகள் விடப்படுகின்றன (ஆதி 11:3-4); இரு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, மக்கள் சிதறிப் போகாவண்ணம் கட்டடங்கள் அமைக்க விழைகின்றனர். மற்றது, "விண்ணை முட்டும் ஒரு கோபுரத்தைக் கட்டி நமக்குப் புகழ் உண்டாகச் செய்வோம்". அவர்களது முதல் நோக்கத்திற்கு மாறாக, யாவே அவர்களைப் பூமி முழுவதும் சிதறிப் போகும்படி செய்கிறார். இரண்டாவது நோக்கத்திற்கு மாறாக, அவர்களிடையே மொழிக்குழப்பத்தை ஏற்படுத்துகிறார். மக்கள் எப்படி உலகம் முழுவதும் பரவினர். மொழிகள் எப்படித் தோன்றின என்பதற்குக் காரணம் காட்டும் விதத்தில் இக்கதை கொடுக்கப்படுகின்றது எனலாம்.

இக்கதையின் மூலவடிவம் மெசபொத்தாமியாவிலிருந்து வந்திருக்க வேண்டும். இந்நிகழ்ச்சி சினார் நாட்டுச் சமவெளியில் நடந்ததாகக் கூறப்படுகிறது. சினார் மிகப்பழைய சுமேரியா நாடாகும். செங்கல் அறுத்துச் சூளையிட்டுச் சுட்டுக் கட்டடம் கட்டுதல் பாலஸ்தீனத்தைச் சேர்ந்ததன்று; கருங்கல் அரிதாகக் கிடைக்கும் மெசபொத்தாமியாச் சமவெளியைச் சேர்ந்த பழக்கமாகும். இக்கதையில் குறிக்கப்படும் கோபுரம் மெசபொத்தாமியாவில் காணப்படும் "சிகுராத்" என்ற கோபுரங்களைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட கோபுரங்களைப் புதைபொருள் ஆய்வாளர் கண்டு பிடித்துள்ளனர். தங்களின் கோபுரங்களை இழிவுபடுத்தும்

இக்கதையை மெசபொத்தாமியர் விரும்பியிருக்க மாட்டார்கள். ஆனால், இக்கோபுரங்களும் நகரங்களும் அவற்றைக் கட்டியவர்களின் மனித கைத்திறமையையும், அவர்கள் தங்கள் காரியங்களில் எல்லாம் இறைவனின் முழு ஆதிக்கத்தையும் ஏற்றுக்கொள்ளாத அகந்தையையும் எடுத்துக் காட்டுவதாக எபிரேயர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

பேராசையாலும், பாதுகாப்புத் தேவையாலும், ஒரே இடத்தில் நிலைத்திருக்கும் ஆவலாலும் உந்தப்பட்டு, தங்களுடைய புத்தியையும் ஆற்றல்களையும் ஒருங்கே பயன்படுத்தி, தனியாகச் செய்ய முடியாததைக் குழுவாகச் செய்யத் தலைப்பட்டனர் மனிதர். கோபுரங்களும் நகரங்களும் புகழுக்காகவும் பாதுகாப்புக்காகவும் கட்டப்பட்டாலும், இறைவனுக்கு எதிராகக் கட்டப்பட்டதாக ஒரு குறிப்பும் இல்லை. மூலக்கதையில் மனிதச் செயல்களைக் கண்டு "கடவுள்கள்" பொறாமைப்பட்டதாக இருந்திருக்கலாம். ஆனால், விவிலிய விவரிப்பிலே இக்கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில், இறைவன் ஏன் மக்களைச் சிதறச் செய்தார், மொழிக்குழப்பத்தை ஏற்படுத்தினார், என்பதற்குக் காரணம் தெளிவாகவும் இல்லை; நிறைவளிப்பதாகவும் இல்லை. மனிதர் பிற்காலத்தில் தமக்கு எதிராக எதையும் செய்து விடுவார்களோ என்று இறைவன் அஞ்சியதாகத் தெரியவில்லை. ஆனால், மக்கள் சிதறிப் போதலும் மொழிக் குழப்பமும் இயற்கைக் காரணங்களால் நிகழவில்லை; இறைச்செயலால் நடந்தது என்று தெளிவாகக் கூறப்படுகிறது. ஆனால், எந்தக் குறிப்பிட்ட காரணமும் தரப்படவில்லை. ஆதியாகமத் தொடக்க வரலாற்றின் பரந்த சூழ்நிலையில் நோக்கினால், இறைவனது இச்செயலுக்குப் பொருளைத் தெரிந்து கொள்ளலாம். ஆதியாகமத்தின் முதல் பதினோரதிகாரங்களில் மனிதன் நாகரீகத்தில் முன்னேறும்போது பாவத்திலும் வளருகிறான் என்ற கருத்து தெளிவாக உள்ளது. சினார் சமவெளியில் இறைவனது இத்தடுப்புச் செயல், நகரமும் கோபுரமும் கட்டி முடித்தபின் மக்களிடையே பாவம் வளர்வதைத் தடுக்கும் செயலாகும். நோவாவின் சந்ததியினர் பட்டியலையும் பாபேல் கோபுரத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, நாடுகளிலும் நகரங்களிலும் மனிதனின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியும். மக்களினம் பல நாடுகளாகவும் பல இனங்களாகவும் பிரிந்து போதல் இயற்கையானது; நல்லதும் ஆகும்; மனித வாழ்வின் இயற்கையான வளர்ச்சியும் ஆகும் (ஆதி 10). ஆனால், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமை அவ்வளவு இயற்கையானது அன்று. இந்த இசைவிணக்கமின்மை, மனிதனுடைய பாவத்தன்மையின் விளைவாக, இறைவனால் அனுமதிக்கப்பட்ட தொன்றாகும். அது முன்னோரின் பாவத்திற்காக மனிதன் மேல் சுமத்தப்பட்ட தண்டனையும் ஆகும்; மனிதனுடைய வரையுள்ள தன்மையையும், அவனுக்கு இறைவனுடைய உதவியும் வழிகாட்டுதலும் தேவை என்பதையும் நினைவூட்டும் செயலும் ஆகும்.

பாப்பியா (PAPIA)

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாப்பியா சிறிய ஆசியாவில் எராபோலியின் ஆயராவார். இவர் "ஆண்டவரது கூற்றுகளின் விளக்கங்கள்" என்ற தலைப்பில் ஐந்து புத்தகங்கள் எழுதினார். இவற்றில் சில பகுதிகளே கிடைத்துள்ளன. இவை இரேனயு, யூசேபியு மற்றும் பைசாந்தியர் விளக்கவுரையாளர்கள், வரலாற்று ஆசிரியர்களின் நூல்களில் காணக்கிடக்கின்றன.

இரேனயுவின் கூற்றின்படி, பாப்பியா ஆண்டவரின் சீடர் யோவானிடம் கேட்டறிந்தவரும் போலிகார்ப்பின் தோழருமாவார். இவர் "ஆயிரம் ஆயிரமாண்டு நல்லாட்சி" என்ற கருத்தை உறுதியாக நம்பினார்.

யுசேபியு கூறியபடி, பாப்பியா ஆண்டவரைப்

பார்த்த எவருடனும் பழக்கம் கொள்ளவில்லை. இவர் இயேசுவைப் பற்றிய தமக்குள்ள அறிவை நற்செய்தியாளர் பிலிப்புவின் புதல்விகளிடமிருந்து அறிந்திருக்க வேண்டும் (அ.ப. 21:8-9).

பாப்பியா தன் நூல்களில் இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் அப்போஸ்தலத் தலைமுறையைச் சேர்ந்த முக்கியமானவர்கள் ஆகியோருடைய பாரம்பரியமாகக் கருதப்பட்ட கதைகள், கூற்றுகள் ஆகியவற்றைத் தொகுத்தார். மாற்குவின் நற்செய்தியைப் பேதுருவின் போதகத்தோடும், "எபிரேய மொழியின் கூற்றுக்களை" மத்தேயுவோடும் தொடர்புபடுத்தி பாப்பியா கூறுவது, முதல் இரண்டு நற்செய்திகளின் தோற்றம் பற்றிய ஆய்வில் முக்கியமானதாகும்.

பாப்போ (PAPHOS)

சைப்பிரசுத் தீவின் தென் மேற்குக் கரையில் இந்நகரம் உள்ளது. பவுல், பர்னபா, மாற்கு எனும் யோவான் ஆகியோர் தங்கள் முதலாம் மறைபரப்புப் பயணத்தின்போது இங்கே சென்றனர் (அ.ப.13:6-13). பவுலின் காலத்திய இந்தப் புதிய பாப்போ நகரம், பழைய பாப்போ நகரத்திலிருந்து வேறுபட்டிருக்க வேண்டும். உரோமையர் காலத்தில் இது சைப்பிரசு அரசின் ஆட்சிபீடமாக விளங்கியது. இந்த இடத்தில் ஆளுநராக இருந்த செர்கியு பவுல், பர்னபாவையும், பவுலையும் வரவேற்றான் (அ.ப. 13:7).

கி.மு. 55-இல் சைப்பிரசு உரோமையரால் கைப்பற்றப்பட்டு, கி.மு. 22-இல் உரோமை மேல்சபையின் மாகாணமாயிற்று. பாப்போ ஓர் இயற்கையான துறைமுகமாகும்; புதிய பாப்போ, பழைய பாப்போவிலிருந்து (இக்கலாக் கூகலியா) 15 கி.மீ. தொலைவில் இக்காலத்திய பாபோ இருக்கின்ற இடத்தில் இருந்தது. பாப்போ பைசாந்தியர் காலம் வரை முக்கியம் வாய்ந்த நகராய் விளங்கியது.

பாமோத்து (BAMOTH – உயர்ந்த இடங்கள்)

இஸ்ராயேலருக்கு உரித்தான யோர்தானுக்கு அப்பாஸ், நகலியேலுக்கும், "பாலை நிலத்தை நோக்கி நிற்கும் பிஸ்காவின் கொடுமுடிக்கருகில் மோவாபு பகுதியில் இருந்த பள்ளத்தாக்குக்கும்' இடையில் இஸ்ராயேல் தங்கிய ஓர் இடம் (எண் 21:19-20). இது பாமோத்து-பாகாலின் சுருக்கமான பெயராக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

பாமோத் - பாகால் (BAMOTH - BAAL – பாகாலின் மேடுகள்)

மோவாபைச் சேர்ந்த ஒரு நகர். பாலாக்கு அரசன், பிலயாமை இந்த மேடுகளுக்குக் கூட்டிக்கொண்டு போனான். பிலாயம் அங்கிருந்து இஸ்ராயேலரில் மிகவும் அண்மையில் இருந்தோரைப் பார்த்தான் (எண் 22:41).

பாமோத்-பாகால் என்ற பெயரும், பாலாக்கு மற்றும் பிலாயமின் பலிகளும் இவ்விடம் பாகால் தெய்வத்திற்கு உரிய புனித இடமாகும் என்று சுட்டுகின்றன (எண் 23:1-12). பிற்காலத்தில் இஃது ரூபன் குலத்தாருக்கு அளிக்கப்பட்டது (யோசு 13:17).

இவ்விடம் இருந்த இடம் இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை ஆயினும், நெபோ மலைப்பகுதியில் யோர்தானுக்கு அப்பாலுள்ள சமவெளியின் மேற்கு ஓரத்தில் இருந்திருக்கலாம். மோவாபிய கல்லில் குறிக்கப்படும் பெத்-பாமோத்து இவ்விடமாக இருக்கலாம்.

பாம்பாட்டி வித்தை (SNAKE CHARMING)

பாம்பாட்டி மந்திரம் அல்லது தந்திரம். பாலஸ்தீனத்தில் பொதுவாக, பாம்புகள் அதிகமாதலால் பாம்பாட்டி வித்தை தெரிந்தோர் பலர் பாலஸ்தீனத்தில் இருந்தனர் (காண்க. திருவுரை 10:11; சீரா 12:13). மகுடி என்னும் இசைக்கருவியினின்று மயக்கும் இசையை எழுப்பி, பாம்புகளை வயப்படுத்துதலே பாம்பாட்டி வித்தை எனப்பட்டது.

விவிலியத்தில் இரு இடங்களில் உருவகமாக,

"பாம்பாட்டி வித்தை" பயன்படுத்தப்பட்டுள்ளது.

அ) எரே 8:7, எவ்வகை மந்திர தந்திரங்களுக்கும் மயங்காத பாம்புகளைப் போன்றவர்கள் என்று எதிரிகளை விவரிக்கிறது.

ஆ) சங் 58:4-5, மனச்சாட்சி மழுங்கிப்போன பாவிகளையும், தீயவர்களையும் குறிப்பதற்கு இச்சொல்லைப் பயன்படுத்துகிறது. "செவிட்டு விரியன் தன் காதை அடைத்துக்கொள்வது போல, அவர்களும் தங்களைச் செவிடாக்கிக் கொள்கின்றனர். பாம்பாட்டியின் மகுடியோசை அவ்விரியனின் காதில் விழாது; அவன் திறமையுடன் ஊதினாலும் அதற்குக் கேளாது".

பாம்பின் பாறை (SERPENT'S STONE)

ஏன்-ரோகேல் நீரூற்றுக்கருகிலுள்ள சோகேலேத்து என்ற பாறை. இஃது ஒரு கல்லாகவோ, சிறுமலையாகவோ இருந்திருக்க வேண்டும். இப்பெயர் எக்காரணமும் இல்லாமல் வழங்கி வந்த பெயராக இருக்கலாம்; அல்லது பாம்பு வழிபாடு பரவலாக இருந்த காலகட்டத்தில் இப்பாறையிலும் அதன் உருவம் பொறிக்கப்பட்டிருந்திருக்கலாம். இங்கு தான் தாவீதரசனின் மகன்களில் ஒருவனான அதோனியா தாவீது நோயில் படுத்த படுக்கையாயிருக்கையில், தகனப்பலிகளை ஒப்புக் கொடுத்துத் தன்னை அரசனாக அறிக்கையிட்டுக் கொண்டான் (1 அர 1:9). ஆனால், பெரும் ஆதரவு இல்லாததால் நிலைக்க முடியவில்லை.

பாம்பு (SERPENT)

நீளமான பக்க உறுப்பற்ற, செதில்கள் மூடிய ஊர்வன இனத்தைச் சேர்ந்தது பாம்பு.

1. பெயர்களும் அடையாளங்களும்: விவிலியத்தில் பாம்புகளுக்குப் பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், எந்த ஒரு பெயரையும் தனித்தமையுடன் ஒரு குறிப்பிட்ட பாம்புக்கு அளிக்கமுடியாது. அ) நாகாசு என்பது எல்லாப் பாம்புகளுக்கும் பொதுவான பெயராகும். ஆ) விவிலியத்தில் உள்ள இரண்டு பாம்புகள் புராணத் தன்மையுடையன. அவைகள் சராப்பு என்ற பறக்கும் பாம்பும் செராபிம் எனப்படும் எரிக்கும் (எண் 21:8; உப 8:15) பறவை நாகமும் (எசா 14:29; 30:6) ஆகும். "தானின்" என்ற பாம்பு ஒருவேளை புராணத்தன்மையுடையதாக அல்லது, தெளிவாகக் கூறமுடியாத தன்மையுடையதாக (யாத் 7:9) இருக்கலாம். அங்கு, பார்வோனின்முன்கோல் பாம்பாக மாறுகிறது. இதே பெயர் பாம்புக்குப் பொதுவாகவும் (உப 32:33; சங் 91:12), பறவை நாகத்திற்கும் (ஆதி 1:21; சங் 74:15; 141:7; எசா 27:1; 51:9; எரே 51:34; எசே 29:3) கொடுக்கப்பட்டுள்ளது. இ) பாம்பைக்குறிக்கும் மற்றொரு சொல் ஊரும் நச்சுப் பூச்சி (உப 32:24), "ஊர்வன" (யாக் 3:7) ஆகும்.

விரியன் பாம்பு என்ற பெயரும் பயன் படுத்தப்படுகின்றது. இது மணல் பகுதியில் வாழும் ஒன்றாகும் (ஆதி 49:17: உரோ 3:13; எசா 11:8; 14:29; பழ 23:32; எரே 8:17). நவீன பாலஸ்தீனத்தில் முப்பத்தாறுவகையான பாம்புகள் அறியப்பட்டுள்ளன. ஆனால், பண்டைய எபிரேயர்களுக்கு இவைகளில் ஒருசில வகை மட்டுமே தெரியும் எனக் கருதப்படுகின்றது. நாகாசு என்ற பொதுப்பெயர் எல்லாப் பாம்புகளுக்கும் பொதுவாக அளிக்கப்பட்டது; ஆனால், பெரிய வகையான பாம்புகளுக்கு அளிக்கப்பட்ட பெயராகும். சீரியாவின் கறுப்புப்பாம்பு, தண்ணீர்ப் பாம்பு, மோண்ட்பெல்லிர் பாம்பு, பூனைப் பாம்புகளையும் குறிக்க இப்பெயர் பயன்பட்டது. ஆனால், நச்சுப்பாம்புகளைச் சுட்டிக்காட்டுவதற்கு ஒரு தனித்தன்மையான அடையாளம் கிடையாது. ஆனால், இப்பொழுதுள்ள முறையை வைத்துக்கொண்டு விவிலியத்தில் நஞ்சுள்ள, நஞ்சற்ற பாம்புகள் என்று பிரிக்கப்பட்டிருந்தாலும், நாம் ஒற்றுமைப்படுத்திக்காட்ட முடியாது. ஆனால், கிரேக்கப் பாரம்பரியத்தில் இப்படிப் பிரித்துக் காட்டப்படவில்லை.

பொதுவாக, பாம்புகள் வெறுப்புக்குரியவை. சாதாரணமாக, எல்லாப் பாம்புகளுமே நஞ்சுள்ளவையாகக் கருதப்பட்டுள்ளன.

2. **சொற்பொருளில்:** பெரும்பாலான பாம்பு சம்பந்தமான குறிப்பீடுகளுக்குச் சிறப்பான விளக்கம் தேவையில்லை. பாம்புக்கடி (சங் 10:8; ஆமோ 5:19), பாம்பின் வழி (பழ 30:19), பாம்பை மயக்குதல் (சங் 58:5; திருவுரை 10:11; யாக் 3:7), இஸ்ராயேல் மக்களைத் துன்புறுத்தும்படியாக, பாலைவனத்தில் கடவுளால் அனுப்பப்பட்ட கொள்ளிவாய்ப் பாம்புகள் (எண் 21:6-7; உப 32:24; ஞான 16:5-14; 1 கொரி 10:9). பறக்கும் பாம்பு (எசா 14:29; 30:6), உண்மையான விலங்காக இருக்குமானால், ஒருவேளை பாலைவனத்தில் உள்ள விரியன் பாம்பாக இருக்கும். ஆமோ 93-இல் குறிப்பிட்டுள்ள கடலிலுள்ள பாம்பானது, பெரும்பாலும் ஆழ்கடலிலுள்ள கடிக்கும் பாம்பைப் பற்றியதாக இருக்கலாம். இது யாவேயின் சித்தத்திற்கு உட்பட்டதாயினும் பயங்கரமான சக்திவாய்ந்ததாக இருந்தது எனக் கருதப்பட்டது. மெசியாவின் வருகையின்போது பாம்புகளின் உணவு தூசியாக இருப்பதால் (எசா 65:25; ஆதி 3:14) பாம்பு நஞ்சற்றதாகிவிடும்; ஆகவே மனிதன் பயப்பட வேண்டியதில்லை என்பதைக் காட்டுகின்றது.

3. **உருவகத்தில்:** திரிஸ்தராம் குறிப்பிடும் பதினெட்டு வகைப் பாம்புகளில் பதின்மூன்று வகை நஞ்சற்றவை என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், விவிலிய ஆசிரியர்கள் பொதுவாக, பாம்புகளை மனிதனுக்குத் துன்பந்தரக் கூடியவையாகவும், தீயவையாகவும் கருதுகின்றனர். தீய மனிதர்களைப்பற்றிப் பேசும் இடத்தில் பாம்பு பயன்படுத்தப் பட்டுள்ளது (சங் 58:4); அசீரியர்கள் (எசா 14:29), பாபிலோனியர்கள் (எரே 8:17), இஸ்ராயேலின் பகைவர்கள் (உப 32:33), திராட்சை ரசத்தின் விளைவுகள் (பழ 23:32), பரிசேயர்கள், சட்டவல்லுநர்கள் (மத் 23:33) ஆகியவர்களைக் குறிக்க பாம்பு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் இழிநிலையைச் சுட்டிக்காட்டுவதற்காக பாம்புகளைப்போல அந்நாடு தூசியைத் தின்னுவதாகக் கூறப்படுகிறது (மீக் 7:17). பாம்பின் தந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது (ஆதி 3). இயேசு தன்னுடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த எச்சரிக்கையில் "பாம்புகளைப் போல் விவேகமுள்ளவர்களாய்" இருங்கள் என்று எச்சரிக்கின்றார் (மத் 10:16). ஆதி 49:17-இல் தாணைப் பற்றிய உருவகம் அதற்குப் பெருமை தருவதாக உள்ளது. தாண் சிறியதாகவும், பலவீனமானதாகவும் இருந்தாலும் வெகு சாமர்த்தியமாக தன்னுடைய வேலையைச் செய்யக்கூடியது என்றும் கூறப்படுகிறது (உப 33:22; நீதி 18).

4. **மந்திரவாதம் அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளில்:** கழியோ, கோலோ பாம்பாக மாறிய நிகழ்ச்சியை இஸ்ராயேல் மக்களின் விடுதலை வரலாற்றிலே மட்டுமே காண்கின்றோம் (மோசே: யாத் 4:3; 7:15; ஆரோன்: 7:9-10; எகிப்திய மந்திரவாதிகள் 7:2).

5. **புராணங்களில்:** பழக்கப்பட்ட பண்டைய மேற்காசிய நாடுகளில் உள்ள புராணங்களில் இருதலையான சக்திகளுக்கு இடையே காணப்படுகின்ற எதிர்ப்புகளின் எதிரொலியைப் பழைய ஏற்பாட்டிலே காணலாம். ஆனால், இவை யாவேக்கும் அவரது எதிரிக்கும் நடக்கும் போராட்டமாகும். இந்த எதிரியைக் குறிக்கும் ஒரு சொல் "விரைந்தோடும் பாம்பு" ஆகும் (யோபு 26:13; காண்க. சங் 74:13-14; 89:9=10; எசா 51:9). மனிதனை இன்பவனத்திலிருந்து துரத்திய நிகழ்ச்சியுரையின் (ஆதி 3) தனித்தன்மை இஸ்ராயேலரின் கடவுட்கோட்பாட்டைப் பிரதிபலித்தாலும் அதே வேளையில் இந்தக் கருத்து மேற்காசிய புராணங்களுடன் தொடர்புடையதாகத் தென்படுகின்றது. சுமேரிய என்கி மற்றும் நின்குர்சாகு பற்றிய கதை, அடப்பா கதை, கில்காமிசு காவியம் இவை எல்லாமே விவிலியத்திற்கு இணையான

தொடர்புடையவையாகத் தென்படுகின்றன. கில்காமிசு காவியத்தில், பதினொன்றாவது பலகையில், உத்தனாபிஸ்தியும் அவருடைய மனைவியும் கடவுளைப்போல் இருக்கும் வாய்ப்பை எதிர்பார்த்ததாகத் தெரிகிறது. இங்கு வாழ்வளிக்கும் செடி ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செடியை ஒரு பாம்பு கில்காமிசிடமிருந்து கவர்ந்து சென்று விடுகின்றது.

ஆதி 3-ஆம் அதிகாரத்திலே பாம்பு கடவுளால் படைக்கப்பட்ட உயிர்மட்டுமன்று; ஆனால், கடவுள் படைத்த எல்லாப் பிராணிகளிலும் அதிக தந்திரமுள்ளதாய் இருந்தது (3:1); நிறைய உண்மைகளை அறிந்திருந்தது (3:4-5). கொடுக்கப்படாத, ஏதோ ஓர் இறையியல் காரணத்திற்காகவே பாம்பு படைத்தவரின் நோக்கத்தை எதிர்க்கின்றது (2 கொரி 11:3). அதனுடைய விளைவுகள் (ஆதி 3:14-19) பூமியிலுள்ள அனைத்தும் சபிக்கப்பட்டதாகிவிட்டது. பாம்பை வயிற்றினாலே ஊர்ந்து செல்லக்கூடிய பிராணியாகச் சபிக்கின்றார் (3:14). ஏனோக்கு நூலில் ஒரு வானதூதர் ஏவாளைத் தவறான வழிக்கு அழைத்துச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது. ஞான 2:24-இல் “அலகையின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது” என்று படிக்கின்றோம். ஒரு சிலர் இதை விளக்கும்போது பாம்பைச் சாத்தானுடன் ஒன்றுபடுத்திக் காட்டுகின்றனர். பீலோ என்பவர் பாம்பை இச்சைக்கும், உணர்ச்சிகளுக்கும் அடையாளமாக எடுத்துக் கொல்கிறார்.

6. வழிபாட்டுப் பொருளில்: மேற்காசிய நாடுகளில் பாம்பு, தேவதையின் மற்றும் வளமைச் சக்திகளின் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. எகிப்தில் ஒரு பாம்புத் தேவதைக்குச் செலுத்தும் மரியாதையிலிருந்து இன்னொரு பாம்புத் தேவதைக்கு மாறுவது வழக்கமாக இருந்து வந்தது. தென் எகிப்தில் பூட்டோ என்ற மிகவும் நன்மை வழங்கி வந்த பாம்புத் தேவதையை வணங்கி வந்தனர். நாகப்பாம்பு வடிவத்திலே இந்தத் தேவதையை வழிபட்டனர். காலப்போக்கில் அரசாங்க முத்திரையிலும், மன்னன் மணிமுடியிலும் நாகப்பாம்பு அடையாளம் பொறிக்கப்பட்டது. அந்த நாட்டின் பாதுகாவலாகவும் அறிவிக்கப்பட்டது.

எகிப்தியப் பேய்களில் மிகவும் முக்கியமான அப்போபிசு, ரேயின் தலையான எதிரியாகும். இதுவும் பாம்பாகத்தான் காட்டப்படுகின்றது.

மெசபொத்தாமியாவிலும் பாம்பு ஒரு சமய அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது. இதை நிங் கிங்ஸிட்டா என்ற இளமையான தெய்வத்துடன் சேர்த்துப் பயன்படுத்தினர். பிற்காலக் கானானியர்களிடையேயும், முற்காலப் பாலஸ்தீன எபிரேயர்களிடையேயும் பாம்புத் தேவதைகளை வணங்கும் பழக்கம் இருந்ததாக பெத்சான், பெத்-செமேசு, கெசேர், ஆபசோர், செக்கேம், தெல் பெயிட்மிர்சிம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2 அர 18:4-இல் குறிக்கப்படும் எசேக்கியாவின் சீர்திருத்தத்தின்போது அவர், “மோசேயால் செய்து வைக்கப்பட்ட வெண்கலப்பாம்பையும் உடைத் தெறிந்தார்” (எண் 21:8-9) என்று சொல்லப்பட்டுள்ளது. வெண்கலப்பாம்பின் தொடக்கம் எதுவாக இருந்தாலும் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இறைவாக்கினர் அனைவருமே அதைச் சிலைவழிபாடாகக் கருதி, வெறுத்தனர்; அதை அழிக்கவும் செய்தனர். இந்தப் பாம்பு மோசேயால் செய்யப்பட்டது என்பது ஐயத்திற்குரியது. அனேகமாக இது கானானியத் தொடக்கமுடையதாக இருக்கலாம். செழுமை அளிக்கக்கூடிய தேவதையாக இருந்திருக்கலாம். தாவீதுக்கு வெகு காலத்திற்கு முன்பே இஃது எருசலேமில் இருந்து வந்த பழக்கமாகத் தெரிகிறது. இதனுடைய வழிபாடு எபிரேயர்களுடைய காலத்தில் எசேக்கிய மன்னனுடைய ஆட்சிக்காலம் வரை நீடித்தது என்று சொல்லப்படுகின்றது.

7. இறுதிக்கால இயலில்: எசா 27:1-இல் ஒரு புராணக்கருத்து இறுதிக்கால நோக்கத்திற்காகப்

பயன்படுத்தப்பட்டுள்ளது. "லேவியாத்தன் என்னும் விரைந்தோடும் பாம்பு" என்னும் சொற்றொடர் ஆண்டவருடைய பகைவர்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றது. அவர்கள் "அந்த நாளில்" வீழ்த்தப்படுவர். ஆனால், இங்கே குறிப்பிட்டுள்ள பகைவர்கள் மண்ணுலகைச் சார்ந்தவர்களா, விண்ணுலகைச் சார்ந்தவர்களா அல்லது அண்டத்தைச் சார்ந்தவர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. திருவெளிப்பாட்டின் ஆசிரியர் "பறவை நாகம்" என்ற பாம்பைச் சாத்தானுடன் அல்லது பேயுடன் ஒன்றுபடுத்திக் காட்டியுள்ளார் (திருவெளி 12:9-15; 20:2). தொடக்ககால அண்டப்போராட்டங்கள், இன்பவன நிகழ்ச்சி, பழமையான இனப்பெருக்கச் சடங்கு ஆகிய யாவும் பாம்பைச் சாத்தான் எனக்கருதியதோடு ஒன்றாகின்றன. இந்தப் பாம்பின் இறுதியான முடிவு கந்தக நெருப்புக்கடலில் எறியப்படுவதாகும் (திருவெளி 20:10; காண்க. மத் 25:41).

பாயி (PAI)

பாவு என்ற பெயரின் மற்றொரு வடிவம் (1 நாள் 1:50).

பாய்மரம் (MAST)

விவிலியத்தில் மூன்று இடங்களில் பாய்மரம் குறிப்பிடப்பட்டுள்ளது (எச 33:23; எசே 27:5; பழ 23:34). இவற்றில் எசே 27:5-இல் மட்டுமே தீர்நாட்டுக் கப்பலின் பாய்மரம் குறிப்பாகப் பேசப்படுகிறது. பழங்காலத்தில் எகிப்தியர் பயன்படுத்திய ஆற்றுப்படகுகளில் இரண்டு பாய்மரங்கள் இருந்தன. பிற்காலத்தில் ஒற்றைப்பாய்மரம் பயன்படுத்தப்பட்டது. பயணம் செய்யப் பயன்படாதபோது இதைக் கப்பலின் மேல் தளத்தில் கழற்றிப் போட்டுவிடுவர். மத்திய தரைக்கடலில் பயணம் செய்த பெரிய கப்பல்களில் நிலையான பாய்மரங்கள் இருந்தன. இவற்றிலும், கழற்றக்கூடிய பாய் மரங்களைக் கொண்ட கப்பல்கள் இருந்தன.

பாரக்கேல் (BARACHEL -இறைவன் ஆசீர்வதிக்கிறார்)

யோபுவின் நான்காம் நண்பனான எலிகூவின் தந்தை. ஒரு பூசியர் (யோபு 32:2).

பாரசீகம் (PERSIA)

பாரசீகம் மேற்காசியாவின் மிகப்பெரிய பேரரசு. அதன் ஆதிக்கத்தின் உச்சநிலையில் அஃது இந்தியாவைக் கிழக்கு எல்லையாகவும் அயோனியாவை மேற்கெல்லையாகவும் கொண்டிருந்தது. மக்கள் அதை ஆரியனா என்றழைத்தனர்.

1. **புவியியல்:** பாரசீகம் நிறுவப்பட்டிருந்த இடம் 7,77,000 சதுர கி.மீட்டர் பரப்புடைய பீடபூமியாகும். அது கடல் மட்டத்திலிருந்து 900-2,500 மீட்டர் உயரத்தில் அமைந்திருந்த உயர்ந்த பள்ளத்தாக்குகளையும், வறண்ட பள்ளங்களையும் கொண்டிருந்தது. பீடபூமி மேற்கில் குர்திஸ்தான் மற்றும் சக்ரோஸ், வடக்கில் எல்புர்சு, கிழக்கில் இந்துகுஷ் ஆகிய மலைத்தொடர்களால் சூழப்பட்டிருந்தது. மற்றும் தஸ்த்-இ-லூத் என்ற இரு பரந்த உப்புக்கட்டிகள் நிறைந்த பாலைவனங்களைக் கொண்டிருந்தது.

வடக்குப் பகுதியைத் தவிர, மற்றப் பகுதிகளில் மழை குறைவாகவே பெய்தது. பீடபூமியின் கிழக்குப்பகுதியில் 20 கி.மீ. அல்லது அதற்கும் குறைவான அளவும், மேற்குப்பகுதியில் 38 செ.மீ. அளவும் மழை பெய்தது. ஆகவே, பரந்த அளவில் விவசாயம் செய்ய வேண்டும் என்றால் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் அவசியமாயிற்று. புதிய கற்காலத்தில் (கி.மு. 9000) கோதுமையும், வாற்கோதுமையும் பயிரிடப்பட்டன; ஆடுகள் வளர்க்கப்பட்டன. தட்பவெட்ப நிலை மத்திய பகுதியில் சராசரி - 18° செல்சியசிலிருந்து, உச்ச அளவாக 20-32° செல்சியசு வரை வேறுபட்டது. பாரசீக வளைகுடாப்பகுதியில் 50° செல்சியசு வரை உயரலாம். வடக்கில் காஸ்பியன் கடல்பகுதியில் தட்பவெப்பம் வெப்ப மண்டலத்துக்கும் குறைவாக இருந்தது. அங்கு மழைக்காடுகள் மிகுந்திருந்தன.

2. வரலாறு:

அ. தொடக்ககாலம்: கி.மு. 9000-ஆண்டுக் காலத்திலேயே சாக்ரோஸ் மலைப்பகுதிகளில் பல இடங்களில் விலங்குகளும் தாவரங்களும் வீட்டுப்பொருளாக்கப்பட்டதற்குச் சான்றுகளைத் தொல்பொருள் ஆய்வுகள் கொடுத்துள்ளன. விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட கிராம நாகரிகம் வழக்கிலிருந்தது.

பாரசீகப்பேரரசுக்கு முந்திய ஏலாம் அரசு தென்மேற்கு ஈரானில் பாரசீக வளைகுடாவின் வடகரையில் அமைந்திருந்தது. இது சுமேருக்குச் செம்பு, தகரம், வெள்ளி, ஈயம் போன்ற பொருள்களைக் கொடுத்து வந்தது. விலையுயர்ந்த கற்கள், மரம், குதிரைகள் முதலியவைகளும் ஏலாமிலிருந்தும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இரண்டாம் ஆயிரமாண்டு முடிவில் காஸ்பியன் கடலுக்குத் தெற்கிலும் கிழக்கிலிருந்தும் பல இனக்குழுக்கள் ஏலாமுக்குள் நுழைந்தன. இந்த ஆரியர்களின் குழுக்களுள் சிமிரியர்கள், சித்தியர்கள், மேதியர்கள் மற்றும் பாரசீகர்கள் உள்ளடங்குவர். ஏறத்தாழ கி.மு. 9-ஆம் நூற்றாண்டில், மேதியர்களும் பாரசீகர்களும் ஈரானின் வடமேற்கில் குடியேறி நிலைத்துவிட்டனர். இவர்கள் உரார்த்து, அசீரியா, ஏலாம் மற்றும் பாபிலோனியர்களால் சூழப்பட்டிருந்தனர். அசீரிய அரசனான மூன்றாம் சல்மனேசர் (கி.மு. 859-825), தனது கற்பொறிப்புகளில் முதல் தடவையாக பாரசீகர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இவர் கி.மு. 837-இல் அனேக பாரசீகர்களை நாடு கடத்தினார். இவர்கள் மூன்றாம் திகிலத்-பிலேசருக்கும் (745-727), இரண்டாம் சார்கோனுக்கும் (721-705) கப்பம் செலுத்தினர்.

7-ஆம் நூற்றாண்டில் அசீரியர்கள் மற்றும் உரார்த்தியர்களின் தாக்குதல் மேதியர்களை ஒன்றுபடக் கட்டாயப்படுத்தின. இவர்கள் எக்பத்தானைத் (இக்கால அமதான்) தலைநகராகக் கொண்ட ஓர் அரசை நிறுவினர். இவர்களின் தலைவர் தியோசீஸ் (அல்லது தயாக்கு) என்பவராவார். இவர் கி.மு. 715-இல் அசீரியர்களால் பிடிக்கப்பட்டு, சீரியாவிலுள்ள ஆமாத்துக்கு நாடு கடத்தப்பட்டார். இவருக்கு அடுத்தவரான பிராரோர்தெஸ் (க்சாதிர்த்தா) 675-653-இல் ஆட்சி செய்தார்; தென்மேற்கில் பாரசீகர்களை வெற்றி கொள்ளும்போது உயிர் துறந்தார். சித்தியர்களின் ஆட்சியில் மேதியர்கள் இருபது ஆண்டுகள் வாழ்ந்தனர். சியாக்செரேஸ் (உபகசத்ரா; 683-585) மேதியர்களை விடுவித்தார். பாபிலோனியர், சித்தியர்களோடு சேர்ந்து, சியாக்செரேஸ் நினிவேயை முற்றுகையிட்டு அழித்தார். பின்பு, இவர் பாபிலோனோடு உடன்படிக்கை செய்து கொண்டார். தன்பேத்தி அமித்திசை, நபோபோலாசரின் மகன் 2-ஆம் நெபுகத்னேசருக்கு (605-562) மணம் செய்வித்தார். இந்த அமித்திசுக்காகத்தான் புகழ்பெற்ற "தொங்கும் தோட்டம்" பாபிலோனில் கட்டப்பட்டது.

பாரசீகர்கள் படிப்படியாக ஏலாமுக்குக் கிழக்கில் குடியேறினர். கி.மு. 700-ஐ ஒட்டி அக்கமேனஸ் ஓர் அரசமரபைத் தொடங்கிவைத்தார். இவருக்குப்பின் வந்தவரான தெயிஸ்பே அன்சானைப் பாரசீக அரசோடு சேர்த்தார். இவரது புதல்வர்கள், அரிய ராம்னேயும் (640-590), முதலாம் சைரசும் (குராஸ் 640-600) மேற்கில் நாட்டை விரிவாக்கினர். முதலாம் கம்பிசேஸ் (600-559) அஸ்தியாகேசின் மகள் மந்தானேயை மணந்து 2-ஆம் சைரசை மகவாய்ப் பெற்றார். மோசேயைப்போன்று, சைரசைப் பற்றிய ஒரு கதை அவரது பிறப்பையும், குழந்தையைக் கைவிட அஸ்தியாகேஸ் கட்டளையிட, ஓர் ஆட்டு இடையனால் காப்பாற்றப்பட்டதையும் விவரிக்கிறது. கி.மு. 549-இல் 2-ஆம் சைரஸ் அஸ்தியாகேசுக்கு எதிராக வெற்றிகரமாகக் கிளர்ச்சி செய்து, அக்கமேனியர் அரச மரபை நிறுவினர்.

ஆ)பாரசீகப்பேரரசு: 1. இரண்டாம் சைரஸ் (559-530). பாபிலோனியர் மேற்கில் தங்கள்

அரசை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டிருந்த காலம் அசீரியா, சிலிசியா, சர்தை மற்றும் அயோனியக் கிரேக்கத் தீவுகளைத் தன் அரசோடு சேர்த்துக் கொள்வதற்குச் சைரசுக்கு வாய்ப்பளித்தது. புதிதாக வெல்லப்பட்ட பகுதிகள், தொடக்கத்தில் இருபது சத்திராபுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் உயர் குடிமக்கள் தலைவராக நியமிக்கப்பட்டனர். பாபிலோனியத் தேவர்களின் உருவங்களைத் தலைநகருக்கு மாற்றும் அரசன் நபோனிதுவின் தீர்மானம் மக்களால் பெரிதும் வெறுக்கப்பட்டது. இது பாபிலோனை வெல்வதற்குச் சைரசுக்கு வாய்ப்பளித்தது. கிளர்ச்சி செய்த பாபிலோனியர்களின் உதவியோடு சைரஸ் கி.மு. 539-இல் பாபிலோனில் நுழைந்து அதைக் கைப்பற்றினார்.

பாரசீக அரசன் ஏகாதிபதியாகத் திகழ்ந்தான். அவனது மோதிர முத்திரை பெற்ற அறிக்கைகள் சட்டமாகக் கருதப்பட்டன (எஸ்த 3:12; 8:8). ஆறு முக்கிய குடும்பங்கள் அரசவையில் மரபுரிமையாக வரும் அதிகார உரிமை கொண்டிருந்தனர். இவர்கள் விஸ்பாத்தி என்றழைக்கப்பட்டனர். இவர்களில் சிறப்புப் பெற்றவர், "அழியாதவர்களில்" தலைவன் என்றழைக்கப்பட்ட அரசனது மெய்க்காவலர் ஆவார். இந்தப் பெரிய பேரரசைப் பற்றி அதிகமாக அறிவதற்கில்லை. கண்டெடுக்கப்பட்டுள்ள மிகுதியான ஆவண ஏடுகள், தலத்துப் பிரச்சனைகள் பற்றியே கூறுகின்றன.

ஓர் அரசியல் யுக்தியாக, தேவர்களின் உருவங்களை அந்தந்தக் கோவிலுக்குத் திருப்பிக்கொடுக்குமாறு சைரஸ் கட்டளையிட்டார். பாபிலோனியாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த மக்கள் அவரவர்களது சொந்த ஊருக்குத் திரும்பினர் (2 நாள் 36:23; எஸ் 1:1-4). இதனால் நாடு கடத்தப்பட்ட யூதாவின் மக்கள் கொண்ட மகிழ்ச்சி (காண்க. எசா 44:28; 45:1.13), பிற மக்களாலும் அனுபவிக்கப்பட்டது எனலாம். பாரசீகர்கள், தாங்கள் வென்ற பகுதிகளின் பாரம்பரியத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப அப்பகுதிகளில் அரசராக முடிசூட்டிக்கொள்வதில் கவனமாய் இருந்தனர். "சைரசின் நீர் உருளை" என்றழைக்கப்படும் பாபிலோனியப் பொறிப்பு சைரசை நபோனிதுவின் ஆட்சியை வீழ்த்த மார்துக்கினால் தேர்ந்து கொள்ளப்பட்டவராகச் சித்தரிக்கிறது; பாபிலோனின் கோவில்களிலிருந்து தேவர்களின் உருவங்களைக் கொள்ளையடிக்காமைக்கு அவரைப் போற்றுகின்றது. கி.மு. 530-இல் வடகிழக்கு எல்லையில் மசாகெத்தேக்கு எதிரான போரில் சைரஸ் இறந்தார்.

2. **இரண்டாம் கம்பிசேஸ்** (529-522). இவர் சைரசின் மூத்தமகனாவார். பேரரசை விரிவாக்குவதை விரைவாகத் தொடர்ந்தார். எகிப்து, சைப்பிரசு, கிரேக்கத்தீவுகள் என ஒன்றன்பின் ஒன்றாக, பேரரசுக்குள் சேர்க்கப்பட்டன. ஆனால், நுபியாவில் பாரசீகர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். இக்காலக்கட்டத்தில், அரியணை கவுமாத்தாவால் கைப்பற்றப்பட்டது. இவர் "மாகி" (ஞானிகள்)களில் ஒருவர். 526-இல் கம்பிசேசால் கொல்லப்பட்ட அவருடைய இளைய சகோதரனான பர்தியாக வேடம் போட்டுக் கொண்டு திரிந்தார். மேதியா, அர்மேனியா, பாபிலோனியா ஆகிய பகுதிகளில் கிளர்ச்சிகள் தோன்றின. அம்மக்களுக்கு இராணுவச் சேவையிலிருந்தும் வரிவிதிப்பிலிருந்தும் விடுதலை அளித்துத் தன்னுடைய பதவியை நிலைப்படுத்த கவுமாத்தா முயன்றார். ஆனால், அவரது ஆட்சி ஆறு மாதங்களுக்கே நீடித்தது. கம்பிசேசு, பாபிலோனுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, புதிரான சூழ்நிலையில் இறந்தார். ஒருவேளை இஃது ஒரு தற்கொலையாக இருக்கலாம்.

3. **முதலாம் தாரியு** (தரியவாவுசு; 522-486). இஸ்தாபேயின் (விஸ்தாபா) மகனான தாரியு, பார்த்தியா மற்றும் இரிக்கானியா பகுதிகளுக்குச் சத்திராபாக இருந்தார். இவர் கவுமாத்தாவைக் கைதியாக்கி 522-இல் எக்பத்தானாவில் கொலை செய்தார். அதன் பின் இவர் அரசராகப் பறைசாற்றப்பட்டார். பேரரசு முழுவதும்

கிளர்ச்சிகளை அடக்குவதற்கு இவருக்கு இரு ஆண்டுகள் ஆயின. 518-க்குள் எகிப்து, அயோனியா போன்ற வெகுதொலைவிலுள்ள சத்திராபுகளும் இவருடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டன. பாரசீகர்கள் மேற்கில் தான்யுபு நதிவரை படையெடுத்துச் சென்றனர். ஆனால், 490-இல் மாரத்தோனில் கிரேக்கப்படைகளால் தோற்கடிக்கப்பட்டனர். எக்பத் தானா-பாபிலோன் வர்த்தகசாலையில் பெகிஸ்துன் (இக்காலப் பிஸ்துன்) என்ற இடத்திலுள்ள மலையுச்சியில் அமைந்துள்ள பெரிய புடைப்புச் சித்திரம் தாரியுவின் வெற்றிகளை நினைவுகூர்கிறது. இதில், அகுரா-மஸ்தா என்ற கடவுளின் பாதுகாப்பில் இருப்பதாகவும், கவுமாத்தாவையும் அவருடன் ஒன்பது கிளர்ச்சித் தலைவர்களையும் நசுக்குவதாகவும் தாரியு சித்தரிக்கப்பட்டுள்ளார். பழைய பாரசீக மொழி, அக்காதிய ஏலாமிய மொழிகளிலுள்ள பொறிப்புகள் இப்பழங்கால மொழிகளைப் பொருள் கண்டுபிடிக்கப் பெரிதும் உதவியுள்ளன. இதன்பிறகு அயோனியக் கிளர்ச்சிவரை (500-494) பேரரசு முழுவதும் அமைதி நிலவிற்று. இந்தக் கிளர்ச்சியால் மிலேத்து அழிக்கப்பட்டது.

தாரியுவின் ஆட்சிக்காலத்தில்தான் யூதாவிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் எருசலேமுக்குத் திரும்பி ஆலயத்தைக் கட்டத்தொடங்கினர். "யூதாவின் தலைவரான" செருபாபேல் இதற்குத் தலைமை வகித்தார். ஆகாய், செக்கரியா போன்ற இறைவாக்கினர்கள் இவ்வேலையில் மக்களை ஊக்குவித்தனர். ஆலயம் கட்டுவது தத்தெனாய் போன்றவர்களிடையே ஐயம் எழுப்பியபோது, ஆலயம் கட்டுவதற்குச் சைரஸ்தான் அனுமதி அளித்தார் என்ற யூதர்களின் கூற்றை (எஸ் 5) உறுதிப்படுத்தும்படி தாரியுவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. சைரசின் சட்டப்பிரதி, தேடிக்கண்டுபிடிக்கப்பட்டது. ஆலயம் கட்டும்வேலை தொடர்ந்து நடக்க வேண்டும் என்று தாரியு கட்டளையிட்டார் (எஸ் 6).

தாரியு நிர்வாக ஆற்றலுடையவர். பேரரசை 22 சத்திராபுகளாகப் பிரித்து, மத்திய அரசிலிருந்து பிரதிநிதிகளை நியமித்தார். சத்திராபுகளை எப்போதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். நல்ல சாலை அமைப்பு, அரச அஞ்சல் தொடர்பு அமைப்பு, நெடுங்காலமாக ஆட்சிமொழியாக இருந்த வந்த ஏலாமிய மொழியை நீக்கி, அரமேயிக்கு மொழியை ஆட்சி மொழியாக்கியது ஆகியவை ஆட்சியின் நிர்வாகத்தை மேம்படுத்த உதவின. தாரியு ஒரே விதமான வரிமுறையையும், ஒரே விதமான அளவு முறைகளையும் புகுத்தினார் 517-இல் பொன் தாரிக்கை, வெள்ளிச் செக்கேல் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி, நாணய அமைப்பை ஒன்றியப்படுத்தினார்.

வணிகம் வளம்பெற்றது. வங்கிமுறைகள் நிறுவப்பட்டன. நைல் நதியையும், செங்கடலையும் இணைக்கும் கால்வாய் ஒன்றைத் தாரியு தோண்டச் செய்தார். கிரேக்க விஞ்ஞானிகளும், கலைஞர்களும், மருத்துவர்களும் பாரசீக அரசவையில் பயன்படுத்தப்பட்டனர். 521-இல் ஆசாவில் சேமவளமிக்க புதிய அரண்மனை கட்டப்பட்டது. 518-இல் பெர்செப்போலியில் (பார்சா) புதிய தலைநகரம் கட்டத் தொடங்கப்பட்டது. தாரியு பெர்செப்போலியில் "அரச பகுதி" என்றழைக்கப்பட்ட பகுதியைக் கட்டினார். இது 12 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்ட செயற்கையான மாடியாகும். இதை அடைய, குதிரைகளும் ஏறக்கூடிய படியமைப்புகள் செய்யப்பட்டன. ஆட்சி நிறுவனங்களும், குடியிருப்புப்பகுதிகளும் மாடியில் இடம் பெற்றன.

அன்னிய நாட்டுத் தூதர்கள் ஆசாவிலும் எக்பத்தானாவிலும் வரவேற்கப்பட்டனர். ஆனால், பெர்செப்போலியில் ஒருபோதும் வரவேற்கப்படவில்லை எனத்தெரிகிறது. புத்தாண்டு விழாவைக் (மார்ச் மாதம் 21-ஆம் நாள்) கொண்டாட அரசவை ஆசாவிலிருந்து பெர்செப்போலிக்குச் சென்றது. அப்போது பேரரசின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் தூதுக்குழுக்கள் வரவேற்கப்பட்டன.

தாரியு இறந்தபோது, பாரசீகம் பரப்பளவிலும் செல்வப்பெருக்கிலும் உச்சநிலையில் இருந்தது. கிழக்கில் சிந்து மற்றும் யக்சாதெஸ் ஆறுகளையும், மேற்கில் எகிப்தையும் ஆகியனையும், தெற்கில் பாரசீக வளைகுடாவையும், வடக்கில் காஸ்பியன் மற்றும் கருங்கடல்களையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. தாரியுவுக்குப் பின்வந்த அரசர்கள் அவர் நிறுவிய பேரரசின் பரப்பையும் பெருமையையும் பாதுகாப்பதிலேயே ஈடுபட்டிருந்தனர்.

4. முதலாம் செருசு (485-465). முன்பு பாபிலோனின் ஆளுநராக இருந்த செருசு, எஸ்ரா மற்றும் எஸ்தர் நூல்களில் அகசுவேர் என்றழைக்கப்படுகிறார். இவர் எகிப்தையும் பாபிலோனையும் கட்டுப்பாட்டுடன் ஆண்டார். கிரேக்கர்களுக்கு எதிரான போரை ஆற்றலோடு நடத்தினார். பெனிசிய, எகிப்திய, ஐயோனிய, சைப்ரசு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கப்பல்களின் உதவியுடன் 480-இல் கிரேக்கர்களுக்கு எதிராகப் படையெடுத்தார். தெர்மோ பிலேயில் தற்காலிகமான காலங்கடத்தலுக்குப்பின், தேபசுவையும் ஏதன்சையும் பாரசீகப்படை கைப்பற்றியது. ஆனால் சாலமி, மிலேத்து, பிலத்தேய மற்றும் மிக்கேலே ஆகிய இடங்களில் ஏற்பட்ட தோல்விகள் சிறிய ஆசியாவுக்கு அப்பாற்பட்ட நாடுகளின் மேல் கொண்டிருந்த ஆதிக்கத்தைக் கைவிட செருசைக் கட்டாயப்படுத்தின. 465-இல் அவர் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் முதலாம் அர்த்தக்சஸ்தா அரசரானார்.

5. முதலாம் அர்த்தக் சஸ்தா (465-425). இவருடைய ஆட்சியின் பெரும்பகுதி, கிரேக்கர்களால் தூண்டப்பட்டு எகிப்தில் நடந்த கிளர்ச்சிகளையும் கலகங்களையும் அடக்குவதில் செலவிடப்பட்டது (460-454). மற்றக் கிளர்ச்சிகளின் விளைவாக கிழக்குப் பகுதிகளை இழக்க நேர்ந்தது. 449-இல் கல்லியாவில் ஏற்பட்ட உடன்படிக்கையால் ஏதன்சோடு அமைதி நிலவியது.

450-ஐ ஒட்டி, சமாரியாவின் ஆளுநன் இரகூம் எருசலேம் சுவர்கள் பழுதுபார்க்கப்படுவதைப் பற்றி அர்த்தக்சஸ்தாவிடம் முறையிட்டார் (எஸ் 4). இந்தச்சமயத்தில் அரச ஆயப்பதிவேடுகள் யூதச் சதியை வெளிப்படுத்தின. ஆகவே, அர்த்தக்சஸ்தா எருசலேம் சுவர்கள் பழுதுபார்க்கப்படுவதை நிறுத்திவைத்தார். 455-இல் நெகேமியா சூசாவிலிருந்து எருசலேம் வரும்வரை பழுதுபார்க்கும் வேலை தொடரவில்லை. 433 வரை சுவர்கள் கட்டி முடிக்கப்படவில்லை.

6. இரண்டாம் தாரியு (423-404). கிரீஸ் பெலப்போனேசியன் போர்களால் பிளவுபட்டுக் கொண்டிருந்தபோது இவர் அரியணை ஏறினார். இவருடைய மனைவி பரிசாத்தில் இடையிட்டுத் தொந்தரவு செய்தாலும், இவர் ஸ்பார்த்துகளின் பக்கம் ஆதரவு அளித்ததால், சிறிய ஆசியாவிலுள்ள பல கிரேக்க நகர்களை மீண்டும் கைப்பற்ற முடிந்தது.

419-இல், பாரசீக ஆளுநர் வித்ரங்காவின் உதவியுடன் எகிப்தியர் எலபன்டையினிலுள்ள யூத யாகு ஆலயத்தை அழித்தனர். அங்கு இருந்த யூதக் கூலிப்படைப்பிரிவு பாரசீக அரசரவைக்கு எழுதிய பல கடிதங்கள், ஆலயத்தை மீண்டும் கட்டுவதற்கு அனுமதிகோரி அவர்கள் முயற்சி செய்ததை வெளிப்படுத்துகின்றன.

7. இரண்டாம் அர்த்தக்சஸ்தா நேமோன் (404-359). பலவீனமான அரசனான இவர் 60 ஆண்டு நீடித்த கிளர்ச்சியை எகிப்தில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஸ்பார்த்தா, ஏதன்சு, சைப்பிரசு ஆகியவற்றோடு சேர்ந்து எகிப்து பாரசீகர்களுக்கு எதிராகச் செயல்பட்டது. இவர் 386-இல் கிரேக்கர்களோடு அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்பின் இவர் எகிப்தின்மேல் கொண்ட படையெடுப்பு பார்வோன் முதலாம் நெக்தனபோவின் தந்திரமான எதிர்ப்பால் தடைசெய்யப்பட்டது.

8. மூன்றாம் அர்த்தக் சஸ்தா ஒக்கு (359-338). ஒரு கொடிய, பேராசையுள்ள அரசன். இவர்

எகிப்துக்கு எதிராக மற்றொரு முறை படையெடுத்தார். ஆனால், 2-ஆம் நெக்தனபோ 351-இல் இவர் படையை விரட்டியடித்தான். எகிப்தியர் பெனிசியாவில் ஒரு கிளர்ச்சிக்கு ஆதரவு அளித்து பாரசீகத்திற்கு எதிராகக் கலகங்களைத் தூண்டி விட்டுக்கொண்டேயிருந்தனர். இறுதியாக, 343-இல் அர்த்தக்சஸ்தா எகிப்தியரைத் தோற்கடிப்பதில் வெற்றி கொண்டார். இவர், தன்னுடைய ஆலோசகனும் அண்ணகனுமான பகோவால் 338-இல் கொலை செய்யப்பட்டார்.

9. மூன்றாம் தாரியு கொடோமான்னு (336-330). இசுவில் இவருடைய படை பெரிய அலக்சாந்தரால் தோற்கடிக்கப்பட்டது. தாரியு பாக்ட்ரியாவுக்கு ஓடிப்போய் அங்கே இறந்தார். இவர்தான் அக்கமேனிய அரசமரபின் கடைசி அரசன். அலக்சாந்தர் 330-இல் பெர்செப்போலியைக் கைப்பற்றி, அதன் சொத்துக்களையெல்லாம் எக்பத்தானாவுக்கு அனுப்பிவைத்தார்.

இ. அக்கமோனிய அரசமரபுக்குப்பின்: கி.மு. 323-இல் அலக்சாந்தர் இறந்தார். அதன்பின், பாரசீகம் கிரேக்க ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டது. செலூக்கியர்கள், குறுகிய காலத்திற்கே இப்பகுதியின் மேல் ஆதிக்கம் கொண்டிருந்தனர். கிழக்கு ஈரானிலிருந்துவந்த பார்த்தியர்கள் தெசிபோனில் (கசிபியார்) தங்கள் தலைநகரத்தை நிறுவினர். அரசித்து அரசமரபு படிப்படியாக நாட்டில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. பார்த்தியர்கள் ஈரானில் மீண்டும் வணிக முறையை அமைத்தனர். வியாபாரத்தில் மத்தியதரைக் கடலுக்கும், ஆசியாவுக்கும் இடையாளராகத் திகழ்ந்தனர்.

சீரியாவைத் தங்கள் அரசோடு சேர்த்த உரோமையர் தங்கள் ஆதிக்கத்தைப் பாரசீகத்தில் பரப்ப பலமுறை முயன்றனர்; ஆனால், வெற்றியடையவில்லை. கி.மு. 40-இல் உரோமை சீரியா மாகாணத்தின் மேல் படையெடுத்த பார்த்தியர்கள் யூதர்களால் விடுதலை அளித்தவர்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் அரிஸ்தோபுலின் மகன் அந்திகோனை எருசலேமில் அரசராக்கினர் (40-37). தீத்து எருசலேமை முற்றுகையிட்டபோது எருசலேமுக்கு இராணுவ ஆதரவு அளித்தனர். யூதர்களும் பார்த்தியர்களும் சேர்ந்து திரேசன் மற்றும் அதிரியான் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் உரோமைக்கு எதிராகச் செயல்பட்டனர்.

பார்த்தியர்களுக்குப்பின் வந்த சசானியர்கள் (கி.பி. 223-651) வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதியையும், வட மெசபொத்தாமியாவையும், அர்மேனியாவையும் தங்கள் அரசுடன் சேர்த்துக்கொண்டனர். உரோமையருக்கு எதிரான போரில் இவர்கள் ஒருமுறை பேரரசன் வலேரியனைக் (260) கைதியாக்கினர். பார்த்தியர்களைப்போல், சசானியர்களும் மேற்காசியாவை மற்ற ஆசியப்பகுதிகளுடன் இணைக்கும் வியாபாரிகள் ஆவர்.

II. சமயம்: தொடக்கத்தில், மேற்காசியாவில் பொதுவாக இருந்ததுபோல், இந்தியாவும் பாரசீகமும் தேவர்கள் பலரைப் பொதுவாகக் கொண்டிருந்தனர். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் அகூரா-மஸ்தா என்ற கடவுள் முதன்மை இடத்துக்கு உயர்த்தப்பட்டார். உடன்படிக்கை மற்றும் போரின் கடவுளான மித்திரா, குடிபோதையின் கடவுளான கோமா, ஆறுகள் மற்றும் வளமையின் தேவதையான அனகித்தா, மழையைக் கொண்டு வரும் கடவுளான திஸ்திரியா ஆகியோர் பிற தேவர்களாவர்.

ஆறாம் நூற்றாண்டில் சாரதுசித்திரா தோன்றினார். அவருடைய பாரம்பரியப்படி, அவ்விடத்து முக்கிய விஸ்தாபா ஆகியதன் சீடனின் ஆதரவைப் பெற்றார். சாரது சித்திராவின் போதனைகள் அவெஸ்தாவின் முன் பகுதியான காதாக்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது. சுதந்தரமாக, தீமைக்கு எதிராக நல்லதை ஆதரிக்குமாறு அவர் எச்சரிக்கிறார். விலங்குகளை வளர்க்கும் முறைகளும், அதனால் வரும் பயன்களும் பற்றிய உரைகள் சாரதுசித்திராவின் போதனைகளில் காணப்படுகின்றன.

சராதுசித்திராவின் போதனை. அசுரா-மஸ்தா உருவில் இறையொருமைக் கோட்பாட்டுக்கு ஆதரவு அளித்தாலும், உண்மை, பொய்மைக்கு இடையிலான இருமைக்கோட்பாடும் காணப்படுகிறது. எந்த அளவுக்கு இவருடைய போதனைகள் அக்கமேனியர் ஆட்சியில் பரவியிலிருந்தது என்பது பற்றித் தெளிவாகக் கூறமுடியவில்லை; என்றாலும், அசுரா-மஸ்தா பல படைப்புச் சித்திரங்களிலும், குறிப்புகளிலும் காணப்படுகிறார்.

பாரத்தோன் (PHARATHON)

யூதேயாவிலுள்ள ஒரு நகரம். ஆற்றுக்கு அப்பாலுள்ள மாகாணத்தின் செலூக்கிய ஆளுநரான பாக்கீது இதைப் பலப்படுத்தினான் (1 மக் 9:50). பல தடவை செய்யப்படுவதுபோல் இஃது எப்பிராயிமின் பிராத்தோனாக (யூதி 12:13-15) அடையாளம் காட்டப்படக்கூடாது.

பாரா (BAARA - பாகால் அனுப்பினார்)

இவள் பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த சகரயிமின் மனைவியருள் ஒருத்தி (1 நாள் 8:8). இங்கு வாசகம் பழுதுபட்டுள்ளது.

பாரா (PARAH – இளம் பசுங்கன்று)

இது பென்யமின் கோத்திரத்தார் குடியேறிய நகர்களில் ஒன்று (யோசு 18:23). இஃது எருசலேமுக்கு வடகிழக்கில் 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இது நவீன காலக் கிர்பெத் ஏல்-பாரா என்ற இடமாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

பாராக்கு (BARAK – மின்னல்)

நப்தலியின் கெதேசைச் சேர்ந்த அபினோவாமின் மகன். இவர் தெபோராவுடன் சேர்ந்து வடக்கு இஸ்ராயேல் படைகளை யாபீன் அரசனுடைய கானானியப் படைகளின் தளபதியான சீசராவிற்கு எதிராக நடத்திச் சென்று, வெற்றி பெற்றார். இந்த வெற்றிக் காவியமானது உரைநடையிலும் (நீதி 4), கவிதை வடிவிலும் (நீதி 5) பாதுகாக்கப்பட்டுள்ளது. உரைநடை நிகழ்ச்சியுரையில், நப்தலியைச் சேர்ந்த கெதேசு ஊரைச் சேர்ந்த பாராக்கை எப்பிராயிம் மலையிலுள்ள தன்னுடைய ஆட்சிபீடத்திற்குத் தெபோரா அழைத்தாள். அங்கு அவள் அவருக்கு யாவேயின் இறைவாக்கை அறிவித்தாள். அதன்படி நப்தலியினின்றும், செபுலோனின்றும் இவர் 10,000 ஆட்களைச் சேர்த்து, கானானியருடைய கொடுங்கோன்மையை அழிக்க வேண்டும். இதைக் கண்ட சீசரா, தன்னுடைய வீரர்களுடனும் 900 இரும்புத் தேர்களுடனும் இஸ்ராயேலருடைய கிளர்ச்சியை அடக்க எண்ணி வந்தான். ஆனால், இஸ்ராயேலர் போர்முனையிலிருந்து வந்து கானானியரை நிலைகுலைய வைத்தனர். சீசரா வடக்கு நோக்கி, சானானிமிற்கு ஓட்டம் பிடித்து, கேனியரான எபேரின் மனைவியான யாயேலிடம் அடைக்கலம் புகுந்தான். ஆனால் அவள், அவன் தூங்கும்போது வஞ்சகமாகக் கொன்றாள். பாராக்கு சீசராவை விரட்டி அங்கு வந்தபோது யாயேல் தான் செய்ததை அவரிடம் கூறினாள். சீசராவின் தலைமையின் கீழான வடக்குக் கானானியரின் தோல்வியானது யாபீனின் இறுதி முடிவை முன்னுணர்த்தியது.

வெற்றிக்காவியத்தைப் பாராக்கு, தெபோராவுடன் சேர்ந்து பாடினார் என்று பதிப்பாசிரியர் கூறுகின்றார் (நீதி 5:1).

கொடுமைப்படுத்தியவரிடமிருந்து இஸ்ராயேலை மீட்டவருள் ஒருவராகப் பாராக்கு சாமுவேலின் பிரியாவிடையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (1 சாமு 12:11; இங்கு, பாராக்கிற்குப் பதிலாகப் பாதான் என்று தரப்பட்டுள்ளது). முன்மாதிரியான விசுவாசிகளாகச் சொல்லப்பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டுப் பட்டியலில் இவர் பெயரும் இடம் பெறுகிறது (எபி 11:32).

பாராய் (PAARAI)

அர்பாயரான பாராய் தாவீது மன்னனின் வலிமை வாய்ந்த முப்பது பேரில் ஒருவராவார் (2 சாமு 23:35). இதற்கு இணையாக உள்ள முதலாம் நாளாகம அட்டவணையில் இவர்,

எசிபாயின் மகன் நாராய் என அழைக்கப்படுகிறார் (1 நாள் 11:37). மூலப் பெயர் அர்பாயரான நாராய் எனக் கூறுவதற்கு வாய்ப்பு உள்ளது (யோசு 15:52).

பாரான் (PARAN – குகைகளின் இடம்).

சீனாய்த் தீபகற்பத்தின் கிழக்குப்பகுதியாகும். இது பொதுவாக, "பாரான் பாலைவனம்" என்றழைக்கப்படும். சீனாயில் சட்டத்தைப் பெற்றபின், இஸ்ராயேலர் பாரானைக் கடக்குமுன் அட்சரோத்தில் பாளையம் இறங்கினர் (எண் 10:12; 12:16). கானானை வேவு பார்க்கச் சென்றவர்கள் திரும்பி வந்தடைந்த காதேசு பாரானில் இருந்ததாகத் தெரிகிறது (13:3.26). பாலைவனத்தில் இறையாற்றல் தோற்றங்கள் பற்றிய காவியக்குறிப்புகளில் "பாரான்மலை" அக்காபா வளைகுடாவிற்கு மேற்கிலுள்ள மலைப்பகுதியாகும். இஃது இஸ்ராயேலின் தெற்கு எல்லைகளுக்கு அப்பாற்பட்ட நிலப்பகுதியைப் பற்றிய பொதுவான குறிப்பாகும் (உப 33:2; அப 3:3).

பாரானில் இசுமயேல் வாழ்ந்து வந்தார் (ஆதி 21:21). இங்குதான் தாவீது அபிகாயிலை மனைவியாகப் பெற்றார் (1 சாமு 25:1). அதாது ஏதோமிலிருந்து எகிப்துக்குத் தப்பியோடியபோது பாரானைக் கடந்து சென்றான் (1 அர 11:18). பாரானைப்பற்றிய மற்றக் குறிப்புகள்: ஆதி 14:5-7; 21:21; நீதி 5:4-5; சங் 68:7-8 என்பன.

பாரியா (BARIAH – நாடோடியான, தப்பியோடுகிற)

செருபாபேல் வழி, தாவீதின் வழித்தோன்றல்களில் ஒருவரான செமாயாவின் ஒரு புதல்வன் (1 நாள் 3:22).

பாருவாகு (PARUAH - வனப்புள்ள, பூத்துக்குலுங்கும்)

இவர் யோசபாத்தின் தந்தையாவார். இந்த யோசபாத்து சாலமோன் மன்னன் காலத்தில் இருந்த பன்னிரு கண்காணிப்பாளர்களில் ஒருவர்; சட்டப்படி உடைமை உரிமையாக்கப்பட்ட இசக்காரின் பகுதிக்கு ஆளுநராய் இருந்தவர் ஆவார் (1 அர 4:17).

பாரூக்கின் நூல் (BARUCH, BOOK OF)

1. **முன்னுரை:** யூத வரலாற்றின் இறுதி நூற்றாண்டுகளில் ஒரு புதுவகையான இலக்கிய வடிவம் தோன்றியது. இது கடந்த காலத்தைச் சேர்ந்த பெரியவர்களின் பெயரால், புனைபெயரில் நூல்கள் எழுதும் வழக்கம். இது விநோதமானதாகவும், ஏமாற்றுத் தன்மையுடையதாகவும், இருந்தாலும், மக்களிடையே பரவலாகவும் விரும்பத்தக்கதாகவும் விளங்கிற்று. இவ்வாறு எழுதப்பட்ட நூல்களுக்குக் கடந்த கால ஞானியையோ, இறை வாக்கினரையோ, ஒரு மூதாதையரையோ ஆசிரியர் என்று கூறி, அவர்களை உண்மையான ஆசிரியருக்குப் பதிலாகப் பேசச் செய்வது மரபு. இத்தகைய நூல்கள் திருமுறைக்குப் புறம்பான நூல்களில் பல உண்டு. இவற்றில், உண்மையான ஆசிரியர் தம்மைக் கடந்த காலத்தில் வாழ்ந்த ஆளாகப் பாவித்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட விவிலிய ஆட்களின் அதிகாரத்தோடு பேசுவார். இத்தகைய புனைபெயர் இலக்கிய வடிவம் மக்களிடையே பெரிதும் விரும்பப்பட்டது. நன்கு நிறுவப்பட்ட வடிவமாக ஆகிவிட்டது. அதனால் இறையூக்கம் பெற்ற ஆசிரியர்களும் இவ்வடிவத்தைப் பயன்படுத்தினர். இவ்வாறு, உன்னத சங்கீதம், திருவுரையாளர், பழமொழி, ஞானம் ஆகிய நூல்கள் சாலமோனால் எழுதப்பட்டன என்று கருதப்பட்டது. உண்மையில் இவை புனைபெயர் இலக்கியங்களே. தானியேல், பாரூக்கு நூல்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே. இந்த அடிப்படையில் பாரூக்கின் நூலுக்கு அறிமுகம் வழங்குகிறோம்.

2. பெயர்: "பாரூக்கு" என்ற பெயருக்கு ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று பொருள் கூறலாம். இவர் யூதாவின் ஒரு முக்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் மக்சேயாவின் மகனான நேரியாவின் மகன் ஆவார் (எரே 32:12). இவரது சகோதரன் செராயா அரசன் செதேக்கியாவின்

கருமத் தலைவர் ஆவார் (எரே 51:59). பாரூக்கு எரேமியாவின் தோழனும் செயலரும் ஆவார். கி.மு. 604-இல் இவர் நமக்கு அறிமுகப்படுத்தப் படுகிறார் (எரே 36:4). அதுவரை எரேமியா கூறியவற்றையெல்லாம், குறிப்பாக எருசலேமின் அழிவுபற்றி எரேமியா கூறிய இறைவாக்குகளை, அவர் சொல்லச் சொல்ல பாரூக்கு எழுதினார். பின்பு, எரேமியாவின் கட்டளைக்கிணங்கி பாரூக்கு அவற்றை ஆலயத்தில் வாசித்துக் காட்டினார். அவற்றை அரசன் யோயாக்கிமினுடைய அதிகாரிகள் முன் வாசித்துக் காட்டினார். அவர்களது ஆலோசனையின்படி அவரும் எரேமியாவும் ஓடி ஒளிந்து கொண்டனர். அரசன் அந்த ஏட்டை வாசிக்கச் செய்து, அதைச் சிறிதுசிறிதாக வெட்டி எரித்தான் (எரே 36:1-23). பின்பு பாரூக்கு, எரேமியா கூற முதல் ஏட்டில் எழுதப்பட்டவைகளோடு வேறு சிலவற்றையும் சேர்த்து மற்றொரு ஏட்டை எழுதிவைத்தார் (எரே 36:32). எருசலேம் முற்றுகையிடப்பட்டிருந்தபோது எரேமியா அனத்தோத்திலிருந்த அவரது உறவினன் அனமேலிடமிருந்து ஒரு நிலத்தை வாங்க உதவி செய்தார். அதன் ஒப்பந்த விலைப்பத்திரத்தை ஒரு மட்பானையில் வைத்துப் பாதுகாத்தார் (எரே 32:12-15). பாரூக்கு தம் வாழ்வின் துன்பங்களையும் தம் மக்களின் கேடுகளையும் பற்றி முறையிட்டபோது, அவரை எச்சரித்தும், அவர் பேரழிவிலிருந்து தப்பிப்பார் என்று உறுதி அளித்தும் எரேமியா இறைவாக்குரைத்தார் (எரே 45). எருசலேமின் அழிவு, கெதல்யாவின் கொலை ஆகியவற்றிற்குப்பின், யூதாவில் எஞ்சியவர்கள் எகிப்துக்கு ஓடிப்போக விரும்பியபோது, அவர்களைத் தடுத்து, எரேமியா இறைவாக்கு அருளினார். இந்தவாக்கை அளிக்க பாரூக்கே எரேமியாவைத் தூண்டினார் என்று குற்றம் சாற்றப்பட்டு, மக்கள் எகிப்துக்கு ஓடிப்போனபோது எரேமியாவோடு கூட்டிச்செல்லப்பட்டார் (எரே 43:2-6). இதற்குமேல் பாரூக்கின் இறுதிக்காலம் பற்றி எரேமியா நூலிலிருந்து ஒன்றும் தெரியவில்லை. அவர் பாபிலோனுக்குச் சென்றாரா என்பதற்கும், அப்படியானால் எப்போது சென்றார் என்பதற்கும் ஒரு சான்றுமில்லை. இவை பற்றிப் பல கருத்துக்கள் உண்டு. எரோனிமுவின் கூற்றுப்படி, பாரூக்கு எரேமியாவோடு எகிப்தில் மரித்தார். மற்றொரு கருத்துப்படி, கி.மு. 538-ஐ ஒட்டி அவர் எகிப்திலிருந்து பாபிலோனுக்குச் சென்றார்.

இந்தப் புனைபெயர் நூலுக்கும், பாரூக்கின் வெளிப்பாடு என்ற திருமுறைப் பட்டியலைச் சேராத நூலுக்கும் ஆசிரியராக்கப்படுகிறார் பாரூக்கு.

3. **திருமுறைப்பட்டியலில் பாரூக்கு நூல்:** கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட யூதர்களில் எபிரேய விவிலியத்திலும், பிற்காலப் பிரிவினைச் சகோதரர்களின் திருமுறைப்பட்டியலிலும் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆனால், கிரேக்க விவிலியத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. பாரூக்கின் நூலும் எரேமியாவின் நூலும் யூதத்திருமுறைப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. இவை யூதர்களால் முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்பு நிராகரிக்கப்பட்டது என்பதற்கு இஃது அடையாளமாகும். தியோடோசின் வாசகத்தில் இவை இடம் பெறுகின்றன. திருமுறைப் பட்டியல்களில் சேராத நூல்களைக் கடுமையாக ஒதுக்கிய மிகப்பழைய பட்டியல்களில் பாரூக்கு நூல் எரேமியாவின் புலம்பலும் - மடலும் என்ற தலைப்போடு காணப்படுகின்றது. கிறிஸ்துவத் தொடக்க காலத்தில் யூதச் செபக்கூடங்களில் சில விழாக்களில் இவை வாசிக்கப்பட்டன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

எழுபது நூலின் அனேக பிரதிகளில், எரேமியா நூலை அடுத்து, பாரூக்கு புலம்பல் நூல், எரேமியாவின் மடல் என்ற வரிசையில் இந்நூல்கள் இடம் பெறுகின்றன. இதே வரிசையில் கிரேக்கத் திருச்சபைத் தந்தையர்களாலும் இவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. வுல்கத்தா வாசகத்தில் எரேமியா நூல், புலம்பல்நூல் பாரூக்கின் நூல் என்ற வரிசையில் இவை இடம் பெறுகின்றன. வுல்கத்தா எரேமியாவின் மடலைப் பாரூக்கு

நூலின் ஆறாம் அதிகாரமாக இணைக்கிறது. ஆனால், இஃது அவ்வளவு பொருத்தமுடையதன்று. ஏனெனில் அதன் நீண்ட தலைப்பு, அஃது ஒரு தனிப்படைப்பு என்று காட்டப்போது மானது. வுல்கத்தாவின் சில நல்ல பிரதிகள், எரோனிமுவைப்போல் பாரூக்கு நூலை விட்டுவிடுகின்றன. அதன் முந்தைய வாசகம் இலத்தீன் விவிலியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. திரிதெந்தீன் பொதுச்சங்கம் தன் திருமுறைப்பட்டியலில் பாரூக்கு நூலைச் சேர்த்துக் கொண்டுள்ளது.

4. நூலின் மூலமொழி: இந்நூல் நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் கிரேக்க மொழியில்தான் உள்ளது. எரோனிமுகூட எபிரேய வாசகத்தை அறிந்ததாகத் தெரியவில்லை. ஆனால், இக்கால ஆய்வாளர்களில் பெரும்பான்மையோர் இந்நூல் மூலத்தில் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுவர். உரைநடைப்பகுதியானது (1:1-3:8; 6:1-72) மூல எபிரேய வாசகத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது எனலாம். நூலின் கிரேக்க வாசகம், முதல் பகுதியில் அதிக செமித்தியப் பண்புகளைக் கொண்டிருந்தாலும், இறுதிப்பகுதி தூய்மையானதாக இருக்கிறது. இது நூலின் ஒரு பகுதிக்காவது எபிரேய மூலம் இருந்திருக்கலாம் என்று சுட்டுகிறது. பாரூ 1:15-3.8 என்ற பகுதி தானி 9:4-19-இல் வரும் மன்றாட்டை ஒத்திருக்கிறது. அதைத் தழுவியதாகவும் இருக்கலாம். இஃது இரண்டிற்கும் பொதுவான ஓர் எபிரேய மூலவாசகத்தைச் சுட்டுகிறது. மேலும் 1:14-இல் வரும் கட்டளை, இப்பகுதி வழிபாட்டில் பயன்பட்டதாகத் தெரிகிறது. இதுவும் இப்பகுதிக்கு எபிரேய மூலத்தைச் சுட்டுகிறது. கிரேக்க மொழிபெயர்ப்பும் எரேமியா, தானியேல் ஆகிய நூல்களின் கிரேக்க வாசகத்தைத் தழுவியதாகத் தெரிகிறது. ஞானம் பற்றிய பாடல் (3:9-4:4) ஒருவேளை எபிரேயத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறார் எயிஸ்ஃபெல்ட் என்ற அறிஞர். இறைவாக்குப் பகுதிகள் (4:5-29; 4:30-5:9) கிரேக்க மூலத்தைச் சேர்ந்தவையா என்று தீர்மானிப்பது கடினம். எபிரேயத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட தியோடோசியன் வாசகம் பாரூக்கு நூலையும் கொண்டுள்ளது. இவையெல்லாம் பாரூக்கு நூலின் பெரும் பகுதிக்கு எபிரேய மூலம் இருந்திருக்கக் கூடும் என்பதைச் சுட்டுகின்றன.

5. நூலின் திட்டம்: சுட்டிக்காட்டும் வசதிக்காக ஆசிரியர், காலம் என்ற தலைப்புகளுக்கு முன்னே, நூலின் திட்டத்தைத் தருகிறோம். முதற்பகுதியும் கடைசிப்பகுதியும் உரைநடையில் உள்ளன. மற்ற இரு பகுதிகளும் பாடல் வடிவில் உள்ளன.

I. பாரூக்கின் மன்றாட்டு (1:1-3:8).

அ) முன்னுரை: பாரூக்கும் பாபிலோனியாவிலிருந்த யூதர்களும் (1:1-14).

ஆ) நாடு கடத்தப்பட்டவரின் செபம் (1:15-3:8).

II. ஞானம் பற்றிய பாடல்: அஃது இஸ்ராயேலரின் தனியுரிமையாகும் (3:9-4:4).

அ) ஞானமாகிய சட்டத்தை மீறியதே யூதர்களின் இடர்களுக்குக் காரணமாகும் (3:91-14).

ஆ) ஞானத்தை எவரும் கண்டடைய முடியாது (3:15-31).

இ) சட்டமே ஞானம் (3:32-4:4).

III. எருசலேமின் முறையீடுகளும், நம்பிக்கைகளும் (4:5-5:9).

அ) முதல் இறைவாக்குரை (4:5-29).

ஆ) இரண்டாம் இறைவாக்குரை: எருசலேமுக்கு ஓர் ஆறுதல் செய்தி (4:30-5:9).

IV. எரேமியாவின் திருமுகம் (6:1-72).

அ) முன்னுரை (6:1-6).

ஆ) சிலை வழிபாட்டுக்கு எதிராக உரை (6:72).

6. நூல் தோன்றிய காலம்: நூலை மேலெழுந்த வாரியாக வாசித்தாலும், அதன் சில

பகுதிகள் எழுதப்பட்ட காலத்தைத் தோராயமாக நிர்ணயிப்பது எளிது. பாரூக்கின் மன்றாட்டின் முன்னுரை, நெபுகத்னேசரிடம் எருசலேம் வீழ்ச்சியுற்றதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப்பின், அதாவது கி.மு. 582-இல் மன்றாட்டு எழுதப்பட்டதாகக் கூறுகிறது (1:2). எரேமியா திருமுகத்தின் முன்னுரை, திருமுகம் கி.மு. 567-இல் நாடு கடத்தப்பட்டவர்களுக்கு எழுதப்பட்டதாகக் கூறுகிறது (6:1). இறைவாக்கு உரைகள் நாடுகடத்தப்பட்ட பின்னணியைக் கவனத்தில் கொண்டுள்ளன. ஆகவே, கி.மு. 538-க்கு முந்தியதாக இருக்கலாம். ஞானம் பற்றிய பாடல் இதே காலத்தில் தோன்றியதாக இருக்கலாம்.

ஆனால், நூலின் வெவ்வேறு பகுதிகளுக்குப் பிற்காலங்களைக் குறிப்பதற்கு நல்ல காரணங்கள் உள்ளன. முன்னுரையும் மன்றாட்டும் அடங்கிய முதல் பகுதியில் வரும் நிகழ்ச்சிகள், பெயர்கள் பற்றிய விவரிப்புகளுக்கும் வரலாற்று நூல்களில் வரும் விவரிப்புகளுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. பாரூக்கின் மன்றாட்டு தானி 9-இல் வரும் மன்றாட்டைத் தழுவியுள்ளதாகத் தெரிகிறது. ஆகவே, இப்பகுதிக்குத் தானியேல் நூலின் காலத்தைக் குறிப்பர் சிலர். ஆனால், மன்றாட்டில் வரும் முடிவுகாலச் செயல்கள் பற்றிய பாரூக்கின் போதகம் தானியேலில் காணப்படுவது போன்று அவ்வளவு வளர்ச்சியுடையதன்று. ஆகையால், பாரூக்கு தானியேலுக்கு முந்தியதாக இருக்கலாம். ஆனால், இப்போதுள்ள ஆய்வுகளின்படி இரண்டு மன்றாட்டுகளுக்கும் பொதுவான ஒரு யூத வழிபாட்டுப் பாரம்பரியம் இருந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. மேலும், இப்பகுதி சீராக்கு நூலோடு (ஆதி 36) ஒப்புமை கொண்டுள்ளது. இக்காரணங்களுக்காக இப்பகுதி தோன்றிய காலத்தை முந்தியகாலமாக, கி.மு. 2-ஆம் நூற்றாண்டைக் குறிக்கலாம்.

ஞானம் பற்றிய பாடலைக் கொண்ட இரண்டாம் பகுதி யோபு 28-ஐப் பின்பற்றுவதாகத் தெரிகிறது; மக்கபேயர் காலத்தைப் பிரதிபலிக்கிறது; ஆனால், உப 30-இலிருந்து தமது சமய ஏவுதலைப் பெறுவதாகத் தெரிகிறது (மேலும் காணக. உப 4:1-8). இப்பகுதியும் சீராக்கு நூலோடு ஓரளவு ஒப்புமை கொண்டுள்ளது (சீரா 1:1-20; 24:1-32). ஆகவே, இப்பகுதியும் கி.மு. 200-ஐ ஒட்டி எழுப்பட்டிருக்கலாம் என்று முடிவு செய்யலாம்.

இறைவாக்கு உரைகளைத் கொண்ட மூன்றாவது பகுதி யோபுவையும் தானியேலையும் தழுவியுள்ளது. மேலும் இப்பகுதி, சொல்லுக்குச் சொல் ஏறக்குறைய அப்படியே சாலமோனின் சங்கீதங்கள் என்ற புனைபெயர் நூலில் 11-ஆம் பாடலில் காணப்படுகிறது. இந்நூல் முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். பாரூக்கு நூலுக்குப் பிந்தியது. ஏனெனில், இந்நூல் இறுதிக் காலச்செயல்கள் பற்றி மிகவும் வளர்ச்சியுற்ற போதகத்தைக் கொண்டுள்ளது. ஆனால், இறைவாக்கு உரைப்பகுதிக்கும் அதற்கு முந்திய அதிகாரங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு, இப்பகுதி கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியிருக்கலாம் என்று கருதத்தூண்டுகிறது.

எரேமியாவின் திருமுகம் தெளிவாக நாடு கடத்தலுக்கு மிகவும் பிற்பட்ட காலத்திலே எழுதப்பட்டதாகும். யூதர்கள் எச்சரிக்கப்படும் சிலைவழிபாடு கிரேக்க ஆதிக்கம் வலுவுற்றிருந்த காலத்தைச் சேர்ந்ததாகும். இப்பகுதி கி.மு. 587-இல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்களுக்கு உண்மையிலேயே எரேமியாவால் எழுதப்பட்டிருந்தால், நாடு கடத்தப்படுதலுக்கு உடனடியான பிற்காலத்தில் தோன்றிய எரேமியா நூலோடு இப்பகுதி ஏன் சேர்க்கப்படவில்லை என்று விளக்குவது கடினம். ஒருவேளை, இப்பகுதி எழுதப்பட்ட காலம் பற்றிய துல்லியமான குறிப்பு 6:2-இல் உள்ளது எனலாம். இதில், எழுபது ஆண்டுகளுக்கு நாடு கடத்தப்படுதல் பற்றிய எரேமியாவின் முன்னறிவிப்பு (எரே 25:12; 29:10), ஏழு தலைமுறைக்கு நாடு கடத்தல் பற்றிய முன்னறிவிப்பாக மாறுகிறது. ஒரு தலைமுறைக்கு ஏறக்குறை நாற்பது ஆண்டுகள் என்று

கணித்தால் (எண் 32:13), கிரேக்க காலத்தைச் சேர்ந்த ஒரு யூத ஆசிரியர், இன்னும் அடிமைத்தனத்தில் வாழ்ந்த தமது சக யூதர்களுக்கு, விரைவில் இறைவனது உதவிவரும் என்று வாக்குறுதி அளிக்கிறார்.

இந்நூலின் பாரூக்கின் பகுதிகளும் எரேமியாவின் திருமுகமும் தோன்றிய காலம் பற்றி ஆய்வாளர்களிடையே ஒரு மித்த கருத்து இல்லை. பொதுவாக இந்நூல் மக்கபேயர் காலத்திலோ, அதற்குப்பின்னோ தோன்றியிருக்க வேண்டும் என்பர். நூலின் எந்தப்பகுதியும் கி.மு. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்னோ, முதலாம் நூற்றாண்டின் முடிவுக்குப் பின்னோ எழுதப்பட்டிருக்க முடியாது.

ஒருசிலர், இந்நூல் கி.பி. 70-க்கும் பின் தோன்றியது என்பர். நெபுகத்னேசர், பெல்சாட்சர் என்ற பெயர்கள் வெஸ்பாசியன், தீத்து ஆகியோரைக் குறிக்கும் புனைபெயர்கள் என்பர். அப்படியானால், நூலில் இப்போது காணப்படுவதை விட, உரோமையரது படையெடுப்பின் சுவடுகள் அதிகமாகக் காணப்படவேண்டும். உரோமையருக்காக மன்றாடுமாறு (1:11) ஒரு பக்தியுள்ள யூதன் தன் சக யூதர்களைத் தூண்டுவது கற்பனை செய்து பார்க்கக் கூடியதன்று.

7. ஆசிரியர்(கள்): இந்நூலை யார் எழுதியது என்ற பிரச்சனை சிக்கல் மிக்கதாகும். இதற்கு அறுதியிட்ட முடிவு கூறமுடியாது. இப்படியோ அப்படியோ இருக்கலாம். என்றுதான் கூற முடியும் என்பது தெளிவு. வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் சான்றுகளின் அடிப்படையில் முழுநூல் பற்றிப் பொதுப்படையாகத்தான் கூற முடியும்.

கடந்த காலத்தில், இந்நூலுக்கும் பாரூக்கு தான் ஆசிரியர் என்று கருதப்பட்டது. அதாவது நகரமும் ஆலயமும் அழிக்கப்பட்டு விட்டன (2:26; 4:31). மக்கள் நாடுகடத்தப்பட்டுவிட்டனர் (3:8.10; 4:26). இந்தக் கொடுமைக்குப் பாபிலோனியர்களே காரணம் (2:21-23; 4:15-16). இவற்றை நாடுகடத்தப்பட்ட ஒருவர்தான் எழுதியிருக்க வேண்டும் என்றும், நாடு கடத்தப்பட்டவர்களுக்கு அறிவுரையும் ஆறுதலும் அளிப்பதுவே அவரது நோக்கம் என்றும் கருதப்பட்டது.

ஆனால், நூலின் வெவ்வேறு பகுதிகள் வேறுபட்ட இலக்கிய வகைகளைச் சேர்ந்தவையாகும். கிரேக்க வாசகம் முதல் பகுதியில் அதிக செமித்தியப் பண்புகளைக் கொண்டுள்ளது; ஆனால், போகப்போக கிரேக்கநடை தூய்மை பெறுகிறது. இஃது, ஒரு பகுதிக்காவது எபிரேயமூலம் இருந்திருக்கலாம் என்று சுட்டுகிறது. முன்னுரை நாடு கடத்தலின் தொடக்ககாலத்தை நம் கண்முன் கொண்டு வருகிறது. மூன்றாம் பகுதி எருசலேமுக்கு உடனடியாகத் திரும்புதலை முன் கருத்தாகக் கொண்டுள்ளது. மேலும், உண்மையிலேயே முதல் மூன்று பகுதிகளுக்குப் பாரூக்கும், நான்காம் பகுதிக்கு எரேமியாவும் ஆசிரியர்களாக இருந்திருந்தால், யூதப் பாரம்பரியம் எப்படி இந்நூலைப் புறக்கணித்தது என்று விளக்குவது கடினம். இந்நூல் சிறுபகுதிகளின் தொகுப்பென்றால், ஒவ்வொரு பகுதியையும் யார் எழுதினார் என்பதற்கு விடை காண வேண்டும். இந்நூலின் ஒருபகுதி மொழிபெயர்ப்பாகும். மற்றவை நேரடியாக நல்ல கிரேக்க மொழியில் எழுதப்பட்டவை என்று ஏற்றுக்கொண்டால், முதல் மூன்று பகுதிகளையும் ஒரே ஆசிரியர்தான் எழுதியிருப்பார் என்பது ஐயத்திற்குரியதாகும். நாடுகடத்தலுக்கு வெகு பிற்காலத்தில் நூல் முழுமையுமோ ஒருபகுதியோ தோன்றியது என்றால் அதற்குப் பாரூக்கோ, எரேமியாவோ ஆசிரியராக இருக்க முடியாது. நூலின் வெவ்வேறு பகுதிகள் தோன்றிய காலங்களை ஏற்கெனவே கூறியுள்ளோம். இவற்றை மனதில் கொண்டால், இந்நூலின் ஆசிரியர் பற்றிய பிரச்சனை ஏன் தர்க்கிக்கப்படுகிறது என்பதை நாம் உணரலாம்.

இக்காலத்தில், இந்நூலின் ஆசிரியர் (கள்) தோன்றிய காலங்கள் பற்றிய கருத்துக்கள்

பெரிதும் வேறுபடுகின்றன. இப்போது இந்நூலுக்கும் எரேமியா மற்றும் அவருடைய செயலர் பாரூக்கு ஆகியோரிடையே எந்த உறவும் இருப்பதாக வெகு சிலரே கருதுவர். இந்நூல் காலத்தால் மிகப்பிந்திய படைப்பாகும்; மற்றொரு தலைமுறைக்கு எழுதப்பட்டது. நாடுகடத்தலுக்குப் பலவிதத்தில் ஒத்த துன்பங்களை இவர்கள் அனுபவித்தனர். இப்போது, நூலின் முதல் மூன்று பகுதிகளுக்கும் மூன்று ஆசிரியர்கள் இருந்ததாகவும் ஒத்த பின்னணியின் அடிப்படையில் பிற்காலத்தில் ஒன்றாகத் தொகுக்கப்பட்டதாகவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டால், இந்நூல் நாடு கடத்தலுக்கு வெகுகாலத்திற்குப்பின்பு பெயர் தெரியாத சிலரால் எழுதப்பட்டிருக்கலாம்; அல்லது பல காலங்களில் எழுதப்பட்டவைகளைப் பெயர் தெரியாத ஒருவர் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ, முதல் நூற்றாண்டின் முடிவிலோ தொகுத்திருக்கலாம். இவர், இந்நூல் இறை ஏவுதல் பெற்றது, அதிகாரம் பெற்றது கடந்த காலப்பெரியார்கள் இந்நூலை எழுதியதாகப் புனைந்துரைத்திருக்கலாம். இத்தகைய யுக்தி விவிலியத்தின் பிற்கால நூல்களில் (திருவுரை, உன்னத சங்கீதம், ஞானம்) பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் இதில் எந்த முரண்பாட்டையும் காணவில்லை. மாறாக, இந்த யுக்தியை ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. மேலும், பாரூக்கைப் புனைபெயராகக் கொண்ட, திருமுறைப் பட்டியலைச் சேராத மற்ற நூல்களும் உள்ளன.

எரேமியாவின் திருமுகத்தைப் பொறுத்தமட்டும், ஆசிரியர் பாபிலோனின் சிலை வழிபாட்டை நன்கு அறிந்திருக்கிறார். அதைக் கடுமையாக விமர்சிக்கிறார். ஆனால், இப்பகுதி எரேமியா நூலின் நடைக்கு மிகவும் தாழ்ந்த தரமுடையதாகும். எரேமியா நூலில் காணப்படும் உணர்ச்சிமிக்க எரிமலை வெடிப்புத் தன்மையும், இரங்கற்பாத் தன்மையும் தீவிரமும் இப்பகுதியில் காணப்படவில்லை. இதற்கு இணையான எரே 10:2-16-ஓடு ஒப்பிடுக. எசா 44:9-20-என்ற பகுதியாலும் ஆசிரியர் உந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பகுதி உண்மையிலேயே எரேமியாவால் எழுதப்பட்டிருந்தால், பிற்காலப்பதிப்பாசிரியர் இதைப் பாரூக்கு நூலோடு அல்லாமல் எரேமியா நூலோடு இணைத்திருப்பார். இப்பகுதியில் ஆசிரியர், காலத்தால் எரேமியாவுக்கு மிகப்பிந்தியவர். எரேமியா கி.மு. 587-இல் நாடு கடத்தப்பட்டவர்களுக்கு எழுதிய மடலைத் தழுவி எழுதுகிறார் (எரே 29).

8. **நூலின் நோக்கம்:** இதுவரை கூறப்பட்டவை இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்பதையோ, இதன் தவறின்மையையோ எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. கத்தோலிக்கர்களுக்குத் திரிதெந்தீன் பொதுச் சங்கம் திருமுறைப்பட்டியலைப் பற்றி உறுதியாக எடுத்துக் கூறியுள்ளது உண்மையில் இணைத்திருமுறைப் பட்டியலில் வரும் மற்ற நூல்களைவிட இந்நூலின் திருமுறைப்பட்டியல் தன்மைபற்றி, தொடக்ககாலத் திருச்சபை வரலாறு அதிகச் சான்று கொடுத்துள்ளது.

மிகக் கடந்த காலத்தைச் சேர்ந்த ஒருவரைப் பேச வைத்து, அவர் வாழ்ந்த காலத்திய வரலாற்றுச் சூழ்நிலையை வாசகர்களுக்கு மீண்டும் படைக்க முயற்சி செய்யும் ஆசிரியரது யுக்தியானது வரலாறு, ஆசிரியத் தன்மை ஆகியவை பற்றிய நமது காலத்திய அறிவியல் கருத்துக்கு முரண்பாடாகத் தோன்றலாம். இவ்விதம் வரலாற்றை மறுபடைப்புச் செய்வதில், நமது காலத்திய கருத்துப்படி வரலாற்றுத் தவறுகள் இருந்தாலும், நூலின் தவறின்மையை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. ஏனெனில் இஃது ஒரு போதக நூலாகும்; ஓர் அக்காதா மிட்ராஷ் ஆகும். இத்தகைய இலக்கியத்தின் முழுநோக்கு, கடந்தகால வரலாற்றை எல்லா விவரங்களுடனும் துல்லியமாக எடுத்துரைப்பதன்று. இத்தகைய நூல்களில் தமது கால மக்களுக்குக் கடந்த

காலத்தை மறுவிளக்கம் செய்து அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்துவதே ஆசிரியரது நோக்கம். இத்தகைய நூல்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. சான்றாக, ரூத்து, யோனா, யூதித்து, எஸ்தர், தோபித்து போன்ற நூல்களைக் காட்டலாம். இவற்றில் கற்பனையும் வரலாறும் இணைக்கப்படும் முறை நூலுக்கு நூல் வேறுபடலாம். ஆனால், நோக்கம் ஒன்றே. இக்கோணத்தில் பாரூக்கு நூலை நோக்கினோம் என்றால் அவரது குறிக்கோள் தெளிவாகிறது.

9. நூலின் போதகம்:

அ) மன்றாட்டு :- இது விவிலியத்தின் பல நூல்களுக்கும், குறிப்பாக இறைவாக்கினர் நூல்களுக்கும், பொதுவானதாகும். இறைவனது நீதி, ஆற்றல் ஆகியவை பற்றிய அறிக்கை, மனந்திரும்புதல், மன்னிப்புக்கேட்டல், மீட்புக்கு ஏங்குதல் ஆகியவை அடங்கியதாகும். அறிக்கையிட்டு மன்றாடும் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது (எஸ் 9:5-15; நெகே 9:6-37; தானி 9).

ஆ) ஞானமும் சட்டமும்:- சட்டத்தோடு ஒன்றாக்கப்படும் ஞானம் இறைவனது கொடையாகும். அதை மனிதன் சுயமுயற்சியால் அடைய முடியாது. அவனுடைய செல்வத்தாலும் உழைப்பாலும் அதைக்கண்டடைய முடியாது. அது வாழ்வுக்கும் மகிழ்ச்சிக்கும் ஊற்றாகும். இறைவனது அருளாகிய வெளிப்பாடு மனிதனைப் பாவத்திலிருந்து மீட்கிறது.

இ இறுதி உண்மைகள்:- இவைபற்றி கி.மு. 2-ஆம் நூற்றாண்டுவரை பழைய ஏற்பாட்டில் நிலவிய போதகத்தை இந்நூல் அளிக்கிறது. ஆசிரியர் குழுத்தன்மை நோக்கோடு எழுதியதால், மறு உலகம் பற்றிய பிரச்சனைகள் அவருக்கு அவ்வளவு கடுமையாகத் தோன்றவில்லை.

ஈ) இறைவன் நித்தியர் ஆவார்:- இறைவனை நித்தியர், "என்றும் உள்ளோன்" என்றழைக்கிறார். இவ்விதம் இறைவனை அழைப்பவர் பழைய ஏற்பாட்டிலே இவர் ஒருவர்தான். மற்ற இடங்களில் பலதடவை "நித்திய அல்லது நித்தியமான இறைவன்" "என்றுமுள்ள இறைவன்" என்ற பெயர்கள் வருகின்றன. ஆனால், அடைமொழியான உரிச்சொல்லே பெயர்ச் சொல்லாவது ஒருபோதும் இல்லை. இது பாரூக்குக்கே உரியதாகும்.

நித்தியம் பற்றிய இந்த ஈடுபாடு தொடக்கத்திலிருந்து ஆசிரியரது நினைவில் ஓயாது ஊடாடுகிறது. மன்றாட்டில் நித்திய உடன்படிக்கைக்காக ஏங்குகிறார் (2:35). ஆனால், இறைவன் எப்போதும் நிலைத்திருக்கும் போது (3:3) மனிதன் திரும்பிவராமல் மறைந்து போகிறான் என்ற சிந்தனையால் அல்லல் உறுகிறார். ஆனால், இதற்குப் பரிகாரமாகச் சட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. அஃது இறைவனைப்போல் எப்போதும் நிலைத்திருக்கும் (4:1). அது மனிதர்களை நித்திய அமைதிக்கு இட்டுச் செல்லும் (3:13). மீட்பு இறுதியாக நித்திய இறைவனிடமிருந்து வருகிறது (4:8). அவருக்கு எதிராகக் குற்றம் செய்யப்பட்டாலும், பாவியை முதலில் தண்டித்து, பின்பு அவனை மீட்டுத் தமது மகிமையை வெளிப்படுத்துகிறார். ஆறுதல் உரை முழுவதும் நித்தியர், "என்றும் உள்ளோன்" பரவி நிற்கிறார் (4:10.14.21.22.24.35; 5:2). இந்த உரை நித்திய மகிழ்ச்சியை அறிவிக்கிறது (4:23.39; 5:1-4). மாறுபடும் தன்மையுடைய கடந்துபோகும் மனிதனுக்கும், எப்போதும் ஒரே தன்மையுடையவராய்த் தமது வார்த்தைகளை நிறைவேற்றுவதில் பிரமாணிக்கமுள்ள இறைவனது நித்தியத்திற்கும் இடையேயுள்ள எதிர்நிலை, இறைவாக்கு நூல்களில் வழக்கமாகக் காணப்படும் கருத்தாகும். அது பாரூக்கின் அழுத்தத்தால் புது ஆற்றல் பெறுகிறது.

பெயர்ச் சொல்லாகும் அடைமொழிச் சொல்லான "நித்தியர்" என்பதற்கு ஈடான வழக்கு எபிரேயத்தில் இல்லை. நேரடியாகக் கிரேக்கத்தில் எழுதப்பட்ட நூல்களில் மட்டும்தான் காணப்படுகிறது (2 மக்). இது பாரூக்கு நூலின் மூன்றாவது பகுதி கிரேக்கத்தில் எழுதப்பட்டது

என்பதைச் சுட்டுகிறது; இந்நூல் பிற்காலத்தில் தோன்றியது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

உ) மீண்டும் அமைத்தல்:- இந்நூல் யூதர்கள் நாடுகடத்தப்பட்ட வரலாற்றை நிழற்படப் பின்னணியாகக் கொண்டதாகும். அவ்வரலாறு பற்றிய சில சிந்தனைகளை அதை நன்கு அறிந்த, சிதறிக்கிடந்த யூதர்களுக்கு அளிக்கிறது. இந்த யூதர்களுக்கு நாடுகடத்தல் பற்றிய சிந்தனைகள் இன்னும் உண்மைகளாக இருந்தன. கி.மு. 538-இல் நாடு திரும்பியது, இறைவன் தமது மக்களுக்கு வாக்களித்த நாட்டை மீண்டும் அமைத்தற்கன்று என்பது அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்து இருந்தது. நாடுகடத்தல் வரலாற்றைப் பயன்படுத்தும் ஆசிரியர் சிதறிக்கிடந்த யூதர்களுக்கு அத்துன்பத்திற்குரிய காரணத்தையும் மீட்பின் ஊற்றையும் எடுத்துக் கூறுகிறார். ஆனால், மீண்டும் அமைக்கப்படும் எருசலேம் நாடு கடத்தலைச் சேர்ந்த எருசலேம் அன்று, முடிவு காலத்தின் புதிய எருசலேமாகும். இஃது இரண்டாவது இறைவாக்கு உரையிலிருந்து தெளிவாகிறது (4:30-5:9). கி.மு. 538-இல் நாடு திரும்பியது வரவிருக்கும் பெரும் நிகழ்ச்சியின் முன் நிழலிடுதலும் உத்தரவாதமும் ஆகும்.

ஊ) மெசியாப் பொருள்:- 2:35-இல் வரும் மெசியா பற்றிய போதகம் எரே 32:40-இல் வருவதாகும். 5:1-9-இல் மெசியா காலத்தில் எருசலேம் நிறைவான பொருளில் ஆன்மீக மறுமலர்ச்சி அடைவது முன்னறிவிக்கப்படுகிறது. 3:38-க்கு அளிக்கப்படும் மெசியாப் பொருள் வுல்கத்தா வாசகத்தை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாக்குக்குத் திருச்சபையின் தந்தையர் மெசியாப் பொருள் அளிக்கின்றனர். ஆனால், ஞானத்தோடு ஒன்றாக்கப்பட்ட மோசே சட்டத்தைப் பற்றியே பேசுவதாக ஆசிரியர் தெளிவாகக் கூறுகிறார்; அவர் மெசியாவைக் கருத்தில் கொள்ளவில்லை. இருப்பினும், புதிய ஏற்பாட்டு வெளிப்பாட்டுக்குப்பின் இவ்வாக்குக்கு மெசியாப் பொருள் அளிப்பது சரியானதே. ஏனெனில், இறைவனது வார்த்தையும் அவரது ஞானமும் மனிதனான இறைமகனே ஆவார் (யோவா 1).

ஐ) எரேமியாவின் திருமுகம்:- எரேமியாவாகத் தன்னையே பாவித்துத் தனது காலத்துச் சிதறிக்கிடந்த யூதர்களுக்கு இந்தத் திருமுகத்தை எழுதும் ஆசிரியர் பிற மதத்தினரின் சிலைவழிபாடு பற்றி எச்சரிக்கையாக இருக்க வாசகர்களை அழைக்கிறார் (6:16). பின்பு எசா 44:9-20; எரே 10:1-16-இலிருந்து கடன் வாங்கிச் சிலைவழிபாட்டின் ஆற்றலற்ற, பயனற்ற தன்மையை எள்ளி நகையாடுகிறார். சிலைகளை வழிபடுவோருக்கு எதிராக வண்ணமிக்க, சில சமயம் நகைச்சுவை மிக்க, பழியுரைகளைக் குவிக்கிறார் (6:7-72). ஆனால், விவிலியத்தில் வேறெங்கும் காணப்படாத முறையில் இறையொருமைக் கோட்பாட்டின் உயர்வு இப்பகுதியில் ஒளிர்கிறது.

10. **இக்காலத்திற்கு:** ஓர் அறிஞர், பாரூக்கின் போதகம் பாவம், மனந்திரும்புதல், மீட்பு ஆகியவை அடங்கிய நாடகமாகும் என்பார். இக்கருத்துக்கள் நூல் முழுவதும் பரவிக்கிடக்கின்றன (1:5.13. 17-19. 21-22; 2:5.8.10.12....) பாவ உணர்வு மனிதனிடம் இல்லையேல், மனந்திரும்புதல் இல்லை. இதுவே இந்நூல் இக்காலத்திற்கும் அளிக்கும் போதகம். பாவத்தின் விளைவுகளை மனிதனிடமும் உலகிலும் காணும்போது, பாவமே இல்லை என்று சிலர் கூறுவதைப் புரிந்துகொள்வது வெகு கடினமாகும். பாவத்திற்கு உளவியல் விளக்கம் அளித்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணுபவர்கள், போதிப்பவர்கள் உள்ளனர். அதன் விளைவு, மனிதன் மேலும் இழிவடைகிறான்; உண்மையான விடுதலை அடைவதில்லை. மனித சமூகம் சீர்படுவதில்லை. பாரூக்கு கூறுவதுபோல், மனிதன் தன் பாவத்தை ஏற்று, மனத்துக்கப்பட்டு இறைவனிடம் திரும்பும்போதுதான் உண்மையான விடுதலை அடைகிறான், மேன்மை அடைகிறான். மீட்புப் பெறுகிறான். இந்த உள்ளார்ந்த விடுதலை இல்லையென்றால் வேறெந்த விடுதலையாலும்

எப்பயனுமில்லை. இதுவே, பிற விடுதலைகளுக்கு அடிப்படையும் முடிவும் ஆகும்.

பாரூக்கின் வெளிப்பாடு (BARUCH APOCALYPSE)

இந்நூல் கத்தோலிக்கத் திருமறையால் ஏற்கப்படாத நூலாகும். இது முதலில் எபிரேய மொழியில் எழுதப்பட்டு, பின்பு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. பின்பு கிரேக்க மொழியிலிருந்து சீரியக் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட யூத நூலாகும். இந்நூல் பாரூக்கு கண்ட திருக்காட்சியைப் பற்றி விவரிக்கிறது. எருசலேம் கல்தேயர்களால் அழிவுறப்போவதை முன்கூட்டியே தனது காட்சியில் காண்கிறார். ஆனால், எருசலேமின் இவ்வீழ்ச்சி கடவுளின் தண்டனையின் முன்னடையாளம் மட்டுமே. மெசியாவின் வருகையைப் பற்றியும், அவரின் ஆட்சியில் பூவுலகம் பெறும் செழிப்பைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது. கடவுளின் திருச்சட்டத்தின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்படுகிறது. பாரூக்கின் உருவகக் காட்சியில் தோன்றும் பெரிய ஒரு தடாகம் மெசியாவுக்கும், கேதுருமரம் ஒன்று உரோமைக்கும் ஒப்பிடப்படுகின்றன. இம்மரம் எரிக்கப்படும். ஆனால், திராட்சைக்கொடி (மெசியா) வளர்ந்து கொண்டேயிருக்கும். பின்பு, சட்டமும் நீதிமான்களின் உயிர்ப்பும் விவரிக்கப்படுகின்றன. நீதிமான்கள் சட்டத்தைக் கடைப்பிடிப்பதால் ஏற்புடையவர்களாகின்றனர். பின்பு சட்டத்தைக் கடைப்பிடிக்கத்தவறிய தீயவர்களின் முடிவு விவரிக்கப்படுகிறது. மற்றொரு அடையாளக்காட்சியில் ஆறு கறுப்பு நதிகள் அநியாய காலங்களையும், ஆறு ஒளிநதிகள் நீதியின் காலங்களையும் எடுத்துரைக்கின்றன. சட்டத்தைக் கடைப்பிடிக்க மக்கள் எச்சரிக்கப் படுகின்றனர், தூண்டப்படுகின்றனர். இந்நூல் கி.பி. 70-க்கும், கி.பி. 100-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். இதை எழுதியவர் ஒரு பரிசேயர் குழுவைச் சேர்ந்த யூதராகத் தெரிகிறது. இந்நூல் இறுதிநாட்களில் வர இருக்கும் மெசியாவின் அரசினைப்பற்றிக் கூறுகிறது. நன்மையும், தீமையும் இரு வெவ்வேறு சக்திகளல்ல; மாறாக, இறைவனுக்கு நன்மைமேலும் தீமை மேலும் அதிகாரம் உண்டு என இந்நூல் கூறுகிறது. இன்றைய உலகம் ஒரு முன்னேறும் உலகமாகும். கடவுளின் பாதுகாப்பில் வளரும் இவ்வுலகம் இறுதியில் முழுமையடையும். ஆதாமின் பாவத்தால் விளைந்த சாவும், துன்பமும், கடவுளின் கட்டளையினால் குணமாக்கப்படும். நன்னடத்தை முடிவில்லா வாழ்வைப் பெற்றுத்தரும். நன்னடத்தை இறைவனின் விருப்பப்படி நடப்பதாகும். பழைய ஏற்பாடு, இந்நூலின் ஆதாரமாக விளங்குகின்றது.

பாரூக்கு (BARUCH - ஆசீர்வதிக்கப்பட்டவர்)

1. சபாயின் மகன். இவர் எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டுவதில் பங்கெடுத்தார் (நெகே 3:20).

2. நெகேமியாவின் தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு குரு (நெகே 10:6). இவரும் 1-இல் குறிக்கப்பட்டவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

3. யூதா இனத்தைச் சேர்ந்தவர். மாசேயாவின் தந்தை. எருசலேமில் வாழ்ந்தவர்களுள் ஒருவர் (நெகே 11:5).

4. நூல் தலைப்பைப் பெற்றவர் காண்க. பாரூக்கின் நூல் 2. பெயர்.

பாரேசு, பார்-இயேசு (BAR-JESUS - இயேசுவின் மகன்)

சைப்பிரசில் பாப்போ என்ற ஊரில் வாழ்ந்து வந்த மந்திரவாதியும், போலித்தீர்க்கதரிசியுமான ஒரு யூதன். பவுலின் சாபத்தின்படி பார்வை மங்கி, குருடன் ஆனவன் (அ.ப. 13:6-11).

பார் (BAR - மகன்)

எஸ்ரா மற்றும் தானியேல் ஆகிய நூல்களின் அரமேயிக்குப் பகுதிகளுக்குப் புறம்பே, இச்சொல் சங் 2:12; பழ 31:2-இல் காணப்படுகிறது. புதிய

ஏற்பாட்டில் பார்-இயேசு (அ.ப. 13:6), பார்-யோனா (மத் 16:17), பரபா (அ.ப. 4:36) ஆகிய பெயர்களின் முன்பகுதியாக வருகிறது.

பார்-கோக்பா (BAR-KOKHBA - விண்மீனின் மகன்)

பேரரசன் அதிரியான் காலத்தில் உரோமையர்களுக்கு எதிராக யூதர்களை செய்த இரண்டாம் கிளர்ச்சியில் தலைவரான சீமோன் அல்லது சிமியோனின் பட்டப்பெயர். கி.பி. 132 முதல் 135-வரை நடந்த இக்கிளர்ச்சி, ராபி அகீபாவால் தயாரிக்கப்பட்டு, ஆதரிக்கப்பட்டது. அகீபா, பார்-கோக்பாவை வரவிருக்கும் மெசியாவாகக் கருதினார். 5,00,000 யூதர்களும், சமாரியர்களும் பார்-கோக்பாவைப் பின்பற்றினர். முதலில் உரோமையர் பின் தள்ளப்பட்டனர். எருசலேமையும் கைவிட வேண்டியிருந்தது. ஆனால், பிரிட்டனிலிருந்து அழைக்கப்பட்ட தளபதி யூரியு செவேரு இந்தக் கிளர்ச்சியை அடக்கினார். கி.பி. 135-இல், எருசலேமுக்குத் தெற்கில் பார்-கோக்பாவின் தலைமையகமாயிருந்த பெத்தேரை வென்றார். பெத்தேரைக் காப்பாற்றச் செய்யப்பட்ட போரில் பார்-கோக்பா கொல்லப்பட்டார். அவரது பெயர் யூத நாட்டுணர்வின் அடையாளமாக இருந்து வந்துள்ளது. 1948-இல் இக்கால இஸ்ராயேல் நாட்டில் யூத விடுதலை வீரர்களுள் ஒருவராக பார்- கோக்பா பெருமைப்படுத்தப்பட்டார்.

யூதேய பாலைவனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல ஏடுகளில் பார்-கோக்பா எபிரேய, கிரேக்க, அரமேயிக்கு மொழிகளில் எழுதிய கடிதங்களும் அடங்கும். இவை பார்-கோக்பா என்ற மனிதனைப் பற்றியும் விளக்கம் அளிக்கின்றன. இவற்றில் பார்-கோக்பாவின் எதிரிகள் அவரை பார்-கொசியா (பொய்யின் மகன்) என்றழைக்கின்றனர். அரசின் தலைவர் என்ற பொருளில் "நாசி" என்ற பட்டமும் அவருக்குக் கொடுக்கப்படுகிறது.

பார்த்தல் (SEE)

I. சிலைகளுக்குக் "கண்கள் உண்டு; ஆனால், அவை காண்பதில்லை" (சங் 135:16). "வானகத்தின் கீழ் உள்ளவற்றை இறைவன் பார்க்கிறார்" (யோபு 28:24). முக்கியமாக "மானிடர் அனைவரையும் அவர் பார்த்து" (சங் 33:13-14), "எண்ணங்களையும், விருப்பங்களையும் கண்டறிகிறார்" (7:9). ஆயினும், மனிதனைப் பொறுத்தமட்டில் "எவரும் கண்டிராத அல்லது காணவியலாத" (1திமொ 6:16; 1:17; 1யோவா 4:12), "தம்மை மறைத்துக் கொள்ளும் இறைவன்" ஆக அவர் உள்ளார் (எசா 45:15). ஆயினும், தம்மை "நேர்முகமாகக் காண்கிற" மக்களை அவர் தேர்ந்தெடுத்தார் (எண் 14:14).தனது முகத்தைக் காண, இறுதியாக அவர்களை விண்ணகத்திற்கு நடத்திச் செல்வதற்கு முன்னர் (திருவெளி 22:4), தனது ஒரே மகனின் உருவில் இம்மக்களுக்குத் தோன்றுமளவிற்கு அவர் உள்ளார் (யோவா 1:18; 12:45).

II. பழைய ஏற்பாடு

1. இறைவனைப்பார்க்கும் ஆசை: இறைவனைத் "தம் கண்களாலேயே" காண்பதே (எசா 52:8) பழைய ஏற்பாட்டினுடைய மிக முனைப்பான ஆசையாகும். விவிலியம் முழுவதும் நிறைந்துள்ள இன்பவனத்திற்கான நாட்டமானது முதலாவதாக, இறைவனுடனான நேரடியான, நெருங்கிய தொடர்பை இழந்ததை உணர்வதாகும். இந்த உள்ளுணர்வமானது அவரது சினம் பற்றி நிலையான அச்சமாக இருந்தாலும், அவரது திருமுன் வந்து அவரது புன்னகையைப் பார்ப்பது பற்றிய நீடித்திருக்கும் நம்பிக்கையாகவும் உள்ளது. இறைவாக்கினர்கள் மூலமான இறைவார்த்தை பற்றிய அனுபவம், மற்றும் அவர்களது வழிபாட்டிலான அவரது பிரசன்னம் பற்றிய அனுபவம் ஆகிய இஸ்ராயேலின் இரு உயரிய சமய அனுபவங்களும், இறைவனைப் பார்த்தலாகிய இறுதியான சலுகைக்குரிய அனுபவத்தை நோக்கிச் செல்கின்றன.

அ) இறைவாக்கினர்களுக்கு இறைவன் தோன்றுதல்: இறைவாக்கினர்களுடைய

வாழ்வில் இவையே உச்ச நிலையாக உள்ளன. மோசே மற்றும் எலியா போன்ற இறைவாக்கினர்களுடைய வாழ்வும், இறைப்பணிகளும் இந்த அனுபவத்தை அதனுடைய மிகவும் உன்னத வடிவில் கொண்டிருந்தன. ஆயினும், "உம்முடைய மாட்சியை எனக்குக் காண்பித்தருளும்" (யாத் 33:18) என்று மோசே வேண்டும் போது, ஆண்டவர் அவரது வேண்டுதலுக்குச் செவி மடுத்து "நாம் கடந்து செல்லும் வரை எம் வலக்கையால் உன்னை மூடி மறைப்போம். பின், நாம் எம் கையை அகற்றுவோம். நீ, எம் பின்புறத்தைக் காண்பாய், நம் முகத்தையோ காணமாட்டாய்" என்று பதிலளிக்கிறார் (33:22-23).யாவே தன்னை நெருங்கும் போது எலியா, "தனது முகத்தை மூடிக்கொண்டு" ஒரு குரலொலியை மட்டுமே கேட்கிறார் (1 அர 19:13; காண்க. உப 4:12). இறைவனே தன்னைக் காணக்கூடிய வராக்கினாலன்றி, எவரும் இறைவனைப் பார்க்க முடியாது. மோசேயின் சலுகை தனிச்சிறப்புடையது: "ஆண்டவர் உருவை அவன் காண்கிறான்" (எண் 12:8). மற்றத் தாழ்ந்த நிலைகளில், "கனவுகளிலும் காட்சிகளிலும்" இறைவாக்கினர்கள் (12:6), இவ்வுலகைச் சாராத ஒன்றைக் காண்கின்றனர் (எண் 24:4,16; 2 நாள் 18:18; ஆமோ 9:1; எசே 1-3: தானி 7:1). ஆபிரகாமும் யாக்கோபும் இதற்கொத்த அனுபவங்களைக் கொண்டிருந்தனர் (ஆதி 15:17; 17:1; 28:13). கிதியோன் (நீதி 6:11-24), மனோவாகு மற்றும் அவரது மனைவி ஆகியோரும் இறையனுபவம் பெற்றனர் (13:2-23). மலையின் மேல் இஸ்ராயேலின் இறைவனை நோக்கும்போது இஸ்ராயேலின் எழுபது முதியோரும் மோசேயின் சலுகையில் ஓரளவு பங்கேற்கின்றனர் (யாத் 24:10).

ஆ. வழிபாடு: இறைவன் தன்னையே பிரசன்னப்படுத்தும் இடங்களில் நடக்கும் வழிபாடானது (யாத் 20:24) நற்குணத்தவரிடையே இறைவனைப் பார்த்தால், அவரது திருமுகத்தைத் தேடுதல் (சங் 24:6), அவரது "இனிய அழகைப் பார்த்தல்" (27:4), அவரது "அற்றலையும் மாட்சிமையையும்" பார்த்தல் (63:3) ஆகியவற்றிற்கான ஆர்வத்தையும், தொலைவிலிருந்து ஆலயத்தைப் பார்ப்பதையும் தூண்டுகிறது. (யோனா 2:5). மோசேக்கு அளிக்கப்பட்ட இறைவல்லமைக் காட்சிகளைப் போன்று எசாயாவுக்கு அளிக்கப்பட்ட காட்சியானது, வார்த்தையிலும் இறைப் பணியிலும் மையம் கொண்டுள்ள இறைவாக்குக் காட்சிக்கும், பிரசன்னத்தில் மையம் கொண்டுள்ள வழிபாட்டில் அடைகின்ற காட்சிக்கும் இடையில் ஒரு பொருத்தத்தினை விளைவிக்கிறது (எசா 6; 2 நாள் 18:18; எஸ் 10:1).

2. பார்த்தலும் விசுவசித்தலும்: இறைவன் விசுவாசத்திற்குத் தன்னை வெளிப்படுத்துகின்ற, "மறைத்துக் கொள்ளும்" (எசா 45:15) கடவுளாக இருப்பதன் காரணமாக, இறைவனைப் பார்க்கும் ஆர்வமானது அரிதாக ஓரளவிற்கே நிறைவேற்றப்படுகிறது. "கட்புலனாகாதவர்" அவரது படைப்பின் வியப்புகளில் அறிவுக்குப் புலனாவதால் (உரோ 1:20), அவரை அறிவதற்கு அவரது வார்த்தைக்குச் செவிமடுத்து, அவரது செயல்களைப் பார்ப்பது அவசியமாகிறது. விண்மீன்களின் காட்சி, அவருடைய வல்லமையினைப் பற்றி ஓரளவு அறிவிக்கின்றது (எசா 40:25-26). உலகைப் பற்றிச் சிந்திப்பதென்பது ஏற்கெனவே இறைவனைப் பார்ப்பதாகும் (யோபு 38:41).

ஆனால், மறைத்துக்கொள்ளும் இறைவனை இன்னும் உயரிய அளவில் வரலாற்றில் பார்க்கலாம். முன்னர் என்றுமே கண்டிராத அடையாளங்களைத் (யாத் 34:10) தனது மக்களுக்கென அவர் புரிந்த வியத்தகு செயல்களில் (யாத் 14:13; உப 10:21; யோசு 24:17), அவரது மகிமையை இஸ்ராயேல் கண்டது (யாத் 16:7). எனவே, இறைவனை அறிதலானது, அவரது மாட்சிமை மிக்க செயல்களைப்பார்த்து அவர் யாரென அறிந்து கொள்ளுதலும் (சங்

46:9-11; காண்க. எசா 41:20; 42:18; 43:10), அவரது சாதனைகளைப் பார்த்து அவரில் விசுவாசங் கொள்ளுதலுமாகும் (யாத் 14:31; சங் 40:4; யூதி 14:10). ஏனெனில், அவரன்றி வேறு இறைவன் இல்லை (உப 32:39).

ஆனால், அறிவுத்திறமற்ற சிலைகளைப் போன்று மனிதர் செவிடராகவும், பார்வையற்றவராகவும் உள்ளனர் (எசா 42:18). "அவர்கள் கண்ணிருந்தும் காணாத, காதிருந்தும் கேளாத, மதிகெட்ட, இதயமற்ற மக்கள்" (எரே 5:21; எசே 12:2). மக்களை ஒளிர்விப்பதற்கெனக் குறிக்கப்பட்ட இறைவனுடைய அறிகுறிகளும் கொடைகளும் அவர்களது பார்வையின்மையிலேயே அவர்களைக் கடினமாக்கலாம். இறைவாக்கினரின் போதகம் "அவர்கள் கண்ணால் காணாமலும், காதால் கேட்காமலும், உள்ளத்தால் உணராமலும், மனம் மாறிக் குணமாகாமலும் இருக்கும்படி இந்த மக்களின் இதயத்தைக் கொழுப்படையச் செய்து, காதுகளை மந்தமாக்கி, கண்களை மூடுகிறது" (எசா 6:10).

III. புதிய ஏற்பாடு

1. இயேசு கிறிஸ்துவில் இறைவன் காணப்படுதல்:

அ) கேட்டிராத அருங்குறிகள் இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்படுகின்றன:

இறைவாக்கினரால் வாக்களிக்கப்பட்ட (எசா 52:15; 64:3;66:8) இதுவரை கண்டிராத செயல்கள் இயேசுவில் வெளிப்படுத்தப்படுகின்றன (மத் 9:33). தன்னுடைய "கண்கள் மீட்பைக் கண்டு கொண்டதனால்", சிமியோன் அமைதியாகப் போகலாம் (லூக் 2:30). இயேசுவின் செயல்களைப் பார்க்கின்ற கண்கள் பேறுபெற்றவை! "பல இறைவாக்கினரும் நேர்மையாளரும் காணவிரும்பியும் காண முடியாதவைகளை" அவை காண்கின்றன (மத் 13:16-17). ஆபிரகாம் தொலைவிலிருந்து பார்த்து (எபி 11:13), இயேசுவின் நாளினை அதிலேயே மகிழ்ச்சியுடன் கொண்டாடியதை விட (யோவா 8:56), மிக அண்மையிலிருந்து அவை காண்கின்றன. இயேசுவினால், இடறல் படாமல் உண்மையில் நடப்பது என்ன என்பதை மட்டுமே காண்பார்களேயாகில், இயேசுவைப் பார்க்கும் கண்கள் பேறு பெற்றவையே! "குருடர் பார்க்கின்றனர்... நற்செய்தி போதிக்கப்படுகிறது" (மத் 11:5-6).

ஆ) பார்த்தலும் விசுவசித்தலும்:

ஏற்கெனவே, ஒத்தமை நற்செய்திகளிலும், மிகவும் தெளிவாக யோவானிலும், இயேசுவின் செயல் மற்றும் அவரில் இறைவன் எதைக்கொணர்கிறார் என்பதனுடைய காட்சியானது விசுவசிப்பதற்கும், விசுவாசத்தின் மூலமாக மீட்பு வரலாற்றின் காணமுடியாத பக்கத்தை அணுகி அறிவதற்குமான அழைப்பாக உள்ளது.

இயேசுவால் நிறைவேற்றப்படும் அறிகுறிகள் விசுவாசத்திற்கு நடத்திச்செல்ல வேண்டும் (யோவா 2:23; 10:41; 11:45; லூக் 17:15,19). கேட்கிறவன் எவனுக்கும், மேலும் அதிக அறிகுறிகள் அளிக்கப்படவில்லையெனில், அவை விசுவாசத்தில் விளைவதில்லை என்பதில் ஓரளவிற்கேனும் சந்தேகமில்லை (மத் 12:38-39; மாற் 15:32). அதற்கும் அப்பாற்பட்டு, முழுமையான விசுவாசமானது அறிகுறிகள் இல்லாமலும் செயல்பட வேண்டும் (யோவா 4:38). ஆனால், மெய்ம்மையானது இந்நிலைக்கு மிகவும் அப்பால் உள்ளது. உண்மையில் அவர்களது கண் முன்னால் அறிகுறிகள் பல செய்யப்பட்டாலும் பலர் விசுவசிக்கவும் (யோவா 12:37), எவ்வழியிலும் பார்ப்பதும் (மத் 13:14-15; யோவா 12:40; காண்க. எசா 6:9-10) முடிவதில்லை. அவர்களுக்கு, உலகின் ஒளியானது (யோவா 8:12; 9:5) இருளாகிறது; காட்சியின் தெளிவானது குருடாகிறது: "நீங்கள் பார்வையற்றோராய் இருந்திருந்தால் உங்களிடம் பாவம் இராது. ஆனால், நீங்கள் 'எங்களுக்குக் கண் தெரிகிறது'

என்கிறீர்கள். எனவே நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்" (யோவா 9:41).

உயிர்ப்பின் விவரிப்பிலும் அதே கருத்துகள் மீண்டும் நிகழ்கின்றன. வெறுமையான கல்லறையின் காட்சி (யோவா 20:28), தேர்ந்தெடுக்கப்பட்ட சாட்சிகளால் (அ.ப. 10:40-41) இயேசு தன்னையே பார்க்குமாறு அனுமதிக்கின்ற காட்சிகள் முதலியனன் (அ.ப. 13:31; 1 கொரி 15:5-8; மத் 28:7,10 இணை) விசுவாசத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் (யோவா 20:29; காண்க. மத் 28:17). விசுவாசத்தின் மாதிரியானது இங்குக் காணாமலே விசுவசிக்க வேண்டியதாக இருக்க வேண்டிய நேரத்தில் (அரு 20:29), கண்டும் அவிசுவாச நிலையில் இருப்பவர்களைப் பார்ப்பதும், அவர்களைப் பற்றிக் கேட்பதும் இன்னும் காணக்கூடியதே (லூக் 24:12; 27:39-41; மாற் 16:11-14).

இ. இயேசு கிறிஸ்துவின் இறைவன் வெளிப்படுகிறார்: விசுவாசத்திற்கு முன் செல்கின்ற ஒரு பார்த்தல் இருக்கிறதெனில், விசுவாசமே அறிவிற்கும், காட்சிக்கும் இட்டுச்செல்கிறது. உண்மையில், மனுமகனின்மீது வானங்கள் திறக்கப்படுதல் (யோவா 1:51; காண்க. மத் 3:16), இறைவனின் மறைபொருட்கள் வெளிப்படுத்தப் படுதல், மற்றும் அவரில் விசுவாசங்கொள்வோருக்கு வாழ்வு அளிக்கப்படுதல் மட்டுமின்றி (யோவா 3:21.36), கணநேரம் தோன்றிமறையும் மற்றும் துணுக்குத் தன்மையில் மோசே கண்ட இறைவனுடைய மகிமை (யாத் 33:22-23; 2 கொரி 3:11) இடைவிடாமல் நேரடியாக ஆண்டவிரினின்று விரிந்து செல்கிறது (2 கொரி 3:18). "அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்... தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்" (யோவா 1:14). இயேசுவைப் பார்ப்பதென்பது ஏற்கெனவே வார்த்தையினையும், "தந்தையோடு இருந்து நமக்கு வெளிப்படுத்தப்பட்ட வாழ்வையும்" பார்ப்பதாகும் (1 யோவா 1:1-3). "நான் தந்தையினுள்ளும், தந்தை என்னுள்ளும் இருப்பதனால்", "என்னைக் கண்டவர் தந்தையைக் கண்டவனாகிறார்" (யோவா 14:9-10; காண்க. 1:18; 12:45).

2. அவர் இருக்கிறவாரே இறைவனைப் பார்த்தல்: இயேசு தந்தையிடம் திரும்புவதற்கு முன் (யோவா 14:12.28), தனக்குரிய மகிமை அனைத்தையும் வெளிப்படுத்தாததன் காரணமாக (17:1.5), மகன் மனிதனாயினும் கூட, இறைவனைப் பார்ப்பதற்கான நமது ஆசையை நிறைவேற்ற முடியாது. இயேசு, தான் வந்த கட்புலனாகாத மறைவான உலகிற்கு, எவரும் கண்டிராத, காணக்கூடியவற்றின் ஊற்றாக உள்ள மெய்ம்மைகளின் உலகிற்கு (எபி 11:1-2), இறைவனுடைய உலகிற்கு மீண்டும் ஒருமுறை திரும்புவதற்காக மறைந்துவிட வேண்டும். இதன் காரணமாகவே அவர் இனிக் காணப்படக் கூடாது (யோவா 16:10-19). அவரைக் காணாமல் மனிதர் அவரைத் தேட வேண்டும் (7:34; 8:21). அவரது விண்ணேற்பின்போது சீடர்கள் அவரை இறுதிமுறையாகக் கண்ட வேளையில் (அ.ப. 1:9-11), அவரைக் காணாதவர்கள், அவரை மீண்டும் காணாமல் விசுவசிப்பதன் மூலமாகவே அவரை அன்பு செய்து மகிழ வேண்டிய நேரம் தொடங்கும் (1 பேதுரு 1:8-9).

"எல்லாம் வல்லவரின் வலப்பக்கத்தில் அமர்ந்தவராய்" (மத் 26:64), "வான மேகங்களின் மேல் வருபவராய்" (24:30) மனுமகனைக் காணும் நாள் ஒன்று வரும். ஆண்டவருடைய அந்நாளினை நிகழ்காலத்திற்கு உரியதொன்றாக ஸ்தேவான் ஏற்கெனவே காண்கிறார் (அ.ப. 7:55-56). இவ்வருகையானது வரலாறு முழுவதும் ஏற்கெனவே பார்க்கப்படுகிறதெனத் திருவெளிப்பாடு நூல் சுட்டுகிறது. "இதோ அவர் மேகங்கள் சூழ வருகிறார். அனைவரும் அவரைக் காண்பர். அவரை ஊடுருவக் குத்தினவர்களும் காண்பார்கள்" (திருவெளி 1:7; காண்க. யோவா 19:37). ஆனால், உண்மையில் "அனைத்தும் அவருக்கு உட்படுத்தப்படும்வரை" (எபி 2:8),

விசுவாசத்திலன்றி "அவரை இனிக்காண மாட்டோம்". இஃது இனியும் வானகத்தை நோக்குகின்ற காலமன்று. மாறாக, அவர் சென்றவாரே திரும்பி வருவதைக் காண்போம் என்பதற்குச் சான்று பகர்தலுக்கும் (அ.ப. 1:11), இந்த இரட்டை எதிர்பார்ப்பின் நிலையில் வாழ்வதற்குமான காலம் இது. அவரது பிள்ளைகளுக்கு முழுமையாக ஒப்படைக்கப்பட்ட அவரது அணுக முடியாத மறைபொருளில் எப்போதும் ஆண்டவருடன் இருப்பதும் (1 தெச 4:17; பிலி 1:23), இறைவனைக் காண்பதும் (மத் 5:8), அவரது திருமுகத்தைப் பார்ப்பதும் (திருவெளி 22:4), அவர் உள்ளவாரே அவரைப் பார்ப்பதுமாகும் (1 யோவா 3:2).

பார்த்தியர் (PARYTTHIANS)

இஃது ஓர் ஈரானிய இனம். எருசலேமில் பெந்தெகோஸ்தே திருநாளுக்காகக் கூடியிருந்தவர்களில் மேதியர், ஏலாமித்தார் போன்றோருடன் பார்த்தியரும் இருந்தனர் (அ.ப. 2:9-11).

கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் பார்த்தியர், செலூக்கிய அரசர்களிடம் இருந்த சுதந்தரம் பெற்றனர். இந்த அரசை நிறுவியவர் அர்சாசிது என்பவர். எனவே, இதன் அரசர்கள் அர்சாசிதியர் என அழைக்கப்படுகின்றனர். இந்த அரசர்கள் நிறுவிய அரசு யூப்பிரத்தீசு முதல் சிந்துநதிவரை பரவியிருந்தது. யூப்பிரத்தீசு நதியில் அமைந்திருக்கும் ஸ்தெசிபோன் என்ற நகரம் இவர்களின் ஒரு தலைநகரமாகும்.

பார்-யோனா (BAR - YONA - யோனாவின் மகன்)

சீமோன் பேதுருவின் தந்தை வழிப்பெயர். இவர் மத் 16:17-இல் யோனாவின் மகன் (பார்-யோனா) என்று அழைக்கப்படும்போது, யோவா 1:42; 21:15-17-இல் யோவானின் மகன் என்றழைக்கப்படுகிறார். பேதுருவின் தந்தைக்கு இரு பெயர்கள் இருந்தனவா அல்லது ஒரே எபிரேயப் பெயர் இரு கிரேக்க வடிவங்களில் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றி உறுதியாகக் கூறமுடியாது.

பார்வோன் (PHAROH - பெரிய வீடு)

விவிலியத்தில் இந்தப் பெயர் அல்லது பட்டம், எகிப்திய மன்னர்களின் பெயராகவோ, பெயரோடு சேர்க்கப்பட்ட அடைமொழியாகவோ பயன்படுத்தப் படுகிறது. கி.மு. 2500-ஐ ஒட்டி, பழைய எகிப்திய அரசில் அரண்மனையைக் குறிக்க, பெரிய வீடு என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி வந்தனர். கி.மு. 1500-இல், 18-ஆம் அரசமரபின்போது இச்சொல், அரண்மனையில் வாழ்ந்த அரசனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (உதாரணம் பார்வோன் சிசாக்கு). இச்சொல் அரசர்களின் பெயரோடு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. எனவே, விவிலிய காலத்தில் இச்சொல் அரசனின் பெயருக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டது.

பார்வோன்களின் பெயருக்குப் பொருள் உண்டு. உதாரணமாக, "ராம சேசு" என்பது 'ரா' என்னும் "சூரிய கடவுளால் பெற்றெடுக்கப்பட்டவன்" என்பது பொருள். இப்பெயர் குழந்தை பிறந்தவுடன் சூட்டப்பட்டது. இதுவே குடும்ப பெயராகவும் அமைந்தது. இவ்வாறு சூட்டப்பட்ட பெயர்கள் மத சம்பந்தமானவை. எடுத்துக்காட்டாக, துத்துமோஸ், 'துத்து'க்கடவுளோடு தொடர்புடையவன் என்று கருதப்பட்டான். பட்டமளிப்பு விழாவின்போது அரசன் 'நான்கு' பெயர்களைச் சூட்டிக் கொண்டான். அவற்றுள் முக்கியமானது 'முற்பெயர்' ஆகும்.

முதன் முதலில் எகிப்திய நாகரிகத்தில்தான் சிதறிக்கிடந்த பல பகுதிகள் இணைக்கப்பட்டு ஓர் அரசனின் ஆட்சியின் கீழ் அரசாக உருவாக்கப்பெற்றன. எகிப்து மேல் எகிப்து, கீழ் எகிப்து என்று கலாச்சார அடிப்படையில் பிரிந்திருந்தது. இவை இரண்டையும் ஒன்றாக இணைக்க, அவர்களை ஆண்டது ஒரு கடவுள் என்று எகிப்தியர் கருதினர். இக்கொள்கையின்படி எல்லா நிலமும், செல்வமும், மக்களும் இக்கடவுளுக்கு உரியவை என்று கருதினர். எனவே, இக்கடவுளின் வார்த்தையே சட்டங்களாக எண்ணப்பட்டன. இவன் இறந்ததால் ஓசிரிசு என்ற

கடவுளாக மாறிவிட்டதாகவும் எண்ணினர். இவ்வாறு தெய்வத்தோடு தொடர்புடையவனாகக் கருதப்பட்ட அரசன் சர்வாதிகாரியாக இருந்ததால் இக்கொள்கைக்குப் பல எதிர்ப்புகள் எழுந்தன. இதன் பலனாகப் பல அரசு அமைப்புகள் தோன்றின. நிரந்தரமாக, படைகள் உண்டாக்கப்பட்டன. இந்தப் படைத்தலைவர்களிலிருந்து சீசாக்கு போன்ற பல அரசமரபுத் தலைவர்கள் தோன்றினர். பல குருக்களும் பதவிகளுக்கு ஆசை கொண்டனர். இக்காலத்திலிருந்து, அரசன் எவ்வேலையைச் செய்யும் முன்பும் 'குறி' கேட்டான். இதனால் தலைமைக் குரு முக்கியமானவராகக் கருதப்பட்டார். அரசன் தெய்வத்தன்மை பொருந்தியவன் என்ற கொள்கை நிலவினாலும், அரசனுக்கு அடுத்தபடியாக இருந்த குருக்களும், மற்ற அதிகாரிகளும், அவன் மக்களோடு நேரடித்தொடர்பு கொள்ளாதபடி செய்தனர்.

ஆதி ஆகமத்தில், பார்வோன் அடிமையாக வந்த யோசேப்பிடம் அளவில்லாத அன்பு காட்டியதும், யாத்திராகமத்தில் மோசேயும், ஆரோனும் பார்வோனிடம் சென்று பேசியதும் குறிப்பிடப்படுகிறது. ஆனால், இவை மேலே கூறப்பட்ட கருத்துக்களுடன் ஒத்துப்போகவில்லை. ஆனால், அரசர்கள் பலர் அன்புள்ளவர்களாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. எகிப்தியர் பேரரசை நிறுவ விரும்பியபோது, அருகில் இருந்த அரசர்களுடன் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதே போல்தான் சாலமோன் பார்வோனின் மகளை மணந்தான் (1 அர 3:1). வெளிநாடுகளின் வெற்றியால் பல கைதிகள் எகிப்துக்குக் கொண்டு வரப்பட்டனர். பலர் வீட்டு வேலைக்காரர்களாகவும், யோசேப்பைப் போன்று அரண்மனைக் கண்காணிப்பாளர்களாகவும் இருந்தனர் (ஆதி 47:6). வேறு பலர் அரசனின் மந்தைகளைக் கண்காணிக்கவும், பெரிய கட்டடங்களை எழுப்பவும் அமர்த்தப்பட்டனர் (யாத் 1:11). அரசனுக்கு ஆலோசனை கூற அமைச்சர்களும், குறிசொல்ல குருவும் இருந்தனர். யோசேப்பு பிற்காலத்தில் வரி வசூலிக்கும் அமைச்சராக இருந்தார் (ஆதி 47:13-26). குருக்கள் வரிவிலக்கு அளிக்கப்பட்டனர். காண்க. எகிப்து, யாத்திரை.

பாலஸ்தீனம் (PALESTINE)

1. இஃது இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்து வந்த பகுதிக்கு விவிலிய அறிஞர்களும் தொல்பொருள் ஆய்வாளர்களும் அளிக்கும் பெயராகும். இப்பெயர் "கடல்வாழ் மக்கள்" என்ற பொருளுடைய சொல்லிலிருந்து வந்ததாகத் தெரிகிறது. பாலஸ்தீனம் என்ற சொல் விவிலியத்தில் காணப்படுவதில்லை.

பாலஸ்தீன எல்லைகளை, விவிலியம் யோசுவா நூலின் தொடக்கத்திலேயே பொதுவாக வரையறை செய்கிறது. "மோசேக்கு நாம் கூறியவாறு உன் காலடிபடும் இடத்தையெல்லாம் உங்களுக்குக் கொடுப்போம். பாலைநிலத்திலிருந்து இந்த லெபனோன் வரையிலும், யூப்பிரத்தீசு பேராறு தொடங்கி இத்தியர் நாடு முழுவதுமாகக் கதிரவன் மறையும் பெருங்கடல் வரையிலும் உங்கள் நிலமாக இருக்கும்" (யோசு 1:4) என்று யாவே யோசுவாவுக்குக் கூறினார். யோசுவா காலம் தொடங்கி வரலாற்று நூல்களில் காணப்படும் விவிலிய நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை இப்பகுதியில் நடந்தவை. இப்பகுதியின் புவியியல், எல்லைகள், தட்பவெப்பநிலை, பருவகாலங்கள், நாட்டின்செழிப்பு, முன்பு வாழ்ந்த மக்கள் ஆகியவை பற்றி இங்கு, சுருக்கமாகக் காண்போம்.

2. இட அமைதியும் எல்லைகளும்:

பாலஸ்தீனம் அரேபியாப் பகுதியின் வடமேற்கு எல்லையின் ஒரு பகுதியாகும். இது சீரியாவோடு இணைக்கப்பட்டு அதன்புடைப்பகழ்வுச் சித்திரத்தில் பங்கு கொள்கிறது. இது வடக்கே கடற்கரையிலுள்ள தீரிலிருந்து உள்நாட்டில் தாண் வரை பரவியிருந்தது. இதற்குக் கிழக்கில் பாலைவனமும், மேற்கில் மத்தியதரைக் கடலும் எல்லைகளாக அமைந்தன. தென்கிழக்கில்

சாக்கடலுக்குக் கிழக்கிலுள்ள அர்னோன் ஆறு எல்லையாக அமைந்தது. தெற்கில் கடற்கரைப் பகுதியிலுள்ள எகிப்தின் ஆற்றிலிருந்துதொடங்கி, உள்நாட்டில் கதேசு பர்னேயா வரை ஒரு எல்லையாலும், அங்கிருந்து அராபா வரையும் சாக்கடலிலிருந்து தெற்கே வரையும் ஒடுக்கமான பள்ளத்தாக்கை ஓர் எல்லையாகவும் கொண்டிருந்தது. தாவீது, சாலமோன் ஆட்சிக் காலத்தில் மட்டும்தான் யோசு 1:1-4-இல் குறிப்பிடப்படும் எல்லையை யூதாநாடு கொண்டிருந்தது.

3. எவ்வளவு பெரியது:

இஸ்ராயேலருக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட பாலஸ்தீனம் ஏறக்குறைய 10,000 சதுரமைல் பரப்புடையது. வடக்கில் தாணிலிருந்து தெற்கில் எகிப்து ஆறுவரை ஏறக்குறைய 200-250 மைல் நீளமுடையது. வடக்கில் ஏரியிலிருந்து கடற்கரையில் கர்மேல் அருகிலுள்ள அக்கோர் வரை 25 மைல் அகலமுடையது. தெற்கில், சாக்கடலிலிருந்து மத்தியதரைக்கடல் வரை 50 மைல் அகலமுடையது. தெளிவாக வேறுபடுத்தக்கூடிய நான்கு புவியியல் பிரிவுகளைக் கொண்டது. அவை: 1)கடற்கரையை ஒட்டிய சமவெளிப்பகுதி. 2) மலைப்பகுதிகள். 3) யோர்தான் பள்ளத்தாக்கு. 4) யோர்தானுக்கு அப்பால் உள்ளபகுதி. இவ்விதப் பிரிவு நாட்டை நான்கு நிரைகோட்டுப் பிரிவாகப் பிரிப்பதற்கு ஒத்ததாகும்.

4. கடற்கரைப்பகுதி:

மேற்றிசையிலிருந்து பாலஸ்தீனத்தை அணுகும்போது, நாம் எதிர்கொள்ளும் நிரைகோட்டுப்பிரிவின் முதற்பகுதி கடற்கரைப் பகுதியாகும். இது வடக்கில் பிபுலோசிலிருந்து தெற்கில் எகிப்திய ஆறு வரையுள்ள கடற்கரைப் பகுதியாகும். பொதுவாகக் கடல்துறைக்கு அவ்வளவு ஏற்ற பகுதியன்று. சீரிய-பெனிசியா கடற்கரைப் பகுதி ஒரு நெருங்கிய நாடாவைப் போன்ற ஒடுக்கமான பகுதியாகும். இப்பகுதி லெபனோன் மலையால் சூழப்பட்டது. இப்பகுதி கடலுக்குள் புகும் மலைகளால் சுற்றி வளைக்கப்பட்டதால் இங்கு வாழ்ந்த பெனிசியர்கள் கடற்கரையை நோக்கியே வாழவேண்டியிருந்தது. அவர்களது முக்கிய கடல்துறைகளான பிபுலோஸ், தீர், சீதோன் ஆகியவை குறைந்த வசதிகளைக் கொண்டிருந்தாலும் பழங்கால உலகத்தில் கடல்துறையில் சிறந்து விளங்கினர். பாலஸ்தீனக் கடற்கரைப் பகுதி உள்நாட்டில் பரந்து இருக்கிறது; வண்டல் மண் பகுதியாகும். இது கர்மேலுக்கு வடக்கே சுமார் 25 மைல் நீளமுள்ளது. அக்கோவுக்கு எதிரில் மிகப்பரந்து இருக்கிறது. கயிபாவாவுக்குத் தென்கிழக்கில் ஏறக்குறைய 9 மைல் தூரத்தில் ஓர் ஒடுக்கமான வழியாக எசுதிரலோன் (இஸ்ரியேல்) பள்ளத்தாக்கின் சமவெளியோடு இணைகிறது. இதன் வழியாக, கிசோன் ஆறு ஓடுகிறது. அக்கோவுக்குத் தெற்கை விட, வடக்கில் நிலம் உழவுக்கு மிக உகந்ததாகும். தெற்கில் உழவர்கள் நிலத்துள் புகும் சதுப்பு நிலம், மணல்மேடுகள் ஆகியவற்றோடு போராட வேண்டும். இப்பகுதியின் சிறப்பு அதன் கடற்கரை யோரத்தின் உருவ அமைப்பாகும். அக்கோ இருக்கும் பாறைப்பகுதிக்கும் கர்மேல் மலைக்கும் இடையிட்ட பகுதி அரை நீளவட்ட வடிவமுடையது. உண்மையான கடற்கரைப் பண்புகளைக் கொண்டது. நுண்ணிய மணல் ஒரே சீராகப் படிந்து, இவற்றின் முகப்பில் உப்பங்கழிகள் காணப்படும். பாலஸ்தீனத்திலுள்ள இரண்டே கடல்துறைகளில் அக்கோவும் ஒன்று.

கர்மேல் மலைக்கும் யோப்பாவுக்கும் இடையில் சாரோன் சமவெளி அமைந்துள்ளது. இது மிக வளமுடையது. செசரியாப் பக்கத்தில் 9 மைல் அகலத்திற்கு உள்நாட்டில் இச்சமவெளி பரவுகிறது. யோப்பாவுக்கு எதிரில் சமவெளி 12 மைல் அகலமுள்ளது. யோப்பாவுக்கும் எகிப்திய ஆற்றுக்குமிடையே உள்ள பகுதி பெலிஸ்தியச் சமவெளியாகும். அசுகலோனைச் சுற்றி இச்சமவெளி 15 மைல் அகல முடையது. சாரோன், பெலிஸ்தியச் சமவெளிகள் பொதுவாக, கடல் மட்டத்திலிருந்து 500 அடி உயரத்தில் உள்ளவை; மிக வளமுடையவை. குளிர்காலப் பெரும்

வெள்ளத்தால் ஏற்பட்ட வண்டல் படிவுகள் இப்பகுதியை வளமுடையதாக்குகின்றன. யோப்பா பாலஸ்தீனத்தின் மற்றொரு கடல் துறையாகும். இஃது எருசலேமின் கடல் துறையாகும்; எருசலேமிலிருந்து சுமார் 30 மைல் தூரத்தில் உள்ளது. பெலிஸ்தியச் சமவெளியை மணல்மேடுகள் புகுந்து கெடுக்கின்றன. இப்பகுதியில் சுண்ணாம்புச் சத்துடைய கடினமான மணல் மேடுகளில் மக்கள் குடியேறினர். கர்மேலில் தொடங்கி நைல் நதியின் கழிமுகப் பகுதிவரை இக்கடற்கரைச் சமவெளி தொடர்ச்சியாக உள்ளது. ஆங்காங்கே சில இடங்களில் கடற்பகுதிகள் உண்டு. அங்கே குடியிருப்புகள் தோன்றின. கடற்கரை ஓரத்தில் சிறுசிறு மணல்தீவுகளும் உப்பங்கழிகளும் உண்டு.

கடற்கரைச் சமவெளிக்கும் மலைப்பகுதிக்கும் இடையில் தாழ்நிலைச் சமவெளி உள்ளது. இதன் இடையே குன்றுகள் உண்டு இவைகளை அடுத்து யூதாவின் மலைப்பகுதிகள் தொடங்குகின்றன. இத்தாழ்நிலைச் சமவெளி யூதாவுக்கு மேற்கிலுள்ள முதல் அரணாக அமைந்திருந்தது.

5.மலைப்பகுதி: நிரைகோட்டுப் பிரிவில் இரண்டாவது பகுதி மலைப்பகுதியாகும். இது கலிலேயா மலைப்பகுதி, சமாரிய-யூதா மலைப்பகுதியென இரண்டாகப் பிரிகிறது. லெபனோன் மலைத்தொடர் வடக்கில் சீரியாவில் தொடங்கி கலிலேயாவில் மெதுவாகத் தாழ்ந்து எசுதிரலோன் சமவெளியில் முடிகிறது. கலிலேயா மலைப்பகுதி கடற்கரைச் சமவெளியாலும் யோர்தான் பள்ளத்தாக்காலும் சூழப்பட்டு ஒரு பீடபூமிபோல் அமைந்துள்ளது. எபெல் யார்முக்கு என்ற இடம் இப்பகுதியில் உயர்ந்த சிகரமாகும் (3930 அடி). இது பாலஸ்தீனத்தில் உயர்ந்த இடம் எனலாம். இது நாசரேத்தை நோக்கிச் சரிந்து எசுதிரலோன் சமவெளியில் முடிகிறது. இச்சமவெளி கர்மேல் மலைக்கு அருகில் தொடங்கி யோர்தான் நதிவரை தென்கிழக்குத் திசையில் பரவியுள்ளது. 100 சதுரமைல் பரப்புடையது. தீர் சமவெளிக்குத் தெற்கே ராஸ்-எல்-அயியாத், ராஸ்-என்-நகுரா என்ற இடங்களில் கலிலேயா மலைப்பகுதி கடலுள் புகுகிறது. கலிலேயா மலைப்பகுதியில்தான் நாசரேத்தூர் மலை இருக்கிறது. இது, செங்குத்தாய்த் தனித்து நிற்கும் தாபோர் (1840 அடி) மலையோடு இணைகிறது. குவிமாடம் போன்ற பாறைகளும் பள்ளங்களும் உண்டு. இவை, கலிலேயா மலையைக் கிழக்கு மேற்கு மலைத்தொடராகப் பிரிக்கின்றன. இடையிலுள்ள 8 மைல் நீளமும், 1.5 மைல் அகலமுமுடைய சகெல்-புட்பு என்ற ஏரிபோன்ற நீர்க்குட்டை குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

பாலஸ்தீனத்தின் தென்மலைத் தொடர் எசுதிரலோன் சமவெளியின் தென் பகுதியிலிருந்து தொடங்கி சமாரியா, யூதேயா வழியாக பெயேர்-செபா, கதேசு-பர்னேயா வரை செல்லுகிறது; மேற்கில் படிப்படியாகவும் கிழக்கில் யோர்தானை நோக்கிச் செங்குத்தாகவும் சரிகிறது. இது வடக்கில் வளர்பிறை போன்ற அமைப்புடைய கில்போவா (1,700 அடி) மலையைக் கொண்டுள்ளது. அதன் இரு கொம்புகளிடையே 12 மைல் தூரம் உண்டு. பாலஸ்தீன தென்மலைத் தொடரில் கூடை போன்ற சிறுசிறு குன்றுகள் உண்டு. அவற்றில் உயர்ந்தவை: ஏபால் மலை (3100 அடி), கெரிசிம் மலை (2900 அடி). எருசலேம் வரையுள்ள மலைப்பகுதி கூடைபோன்று அமைந்துள்ளது. இப்பாறைகள் புறத்தில் சாம்பல் நிறமாயும் உள்ளே மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பாயும் இருக்கும். எருசலேம் 2500 அடி உயரமுடையது. எபிரோன் மலை 3000 அடி உயரமுடையது. அங்கிருந்து பெயேர்-செபாவில் இம்மலைத்தொடர் 1000 அடியாகத்தாழ்கிறது.

6. யோர்தான் பள்ளத்தாக்கு: பாலஸ்தீனத்தின் மூன்றாவது நிரைகோட்டுப் பகுதி யோர்தான் பள்ளத்தாக்காகும். இஃது ஒரு பெரும் பிளவின் பகுதியாகும். இப்பிளவு வடசீரியாவில் தொடங்கி லெபனோனுக்கும் எதிர் லெபனோனுக்கும் இடையே தெற்காக ஓடிப் பின், பாலஸ்தீனத்தின் நடுவில் ஓடி, அக்காபா வளைகுடா வழியாக ஆப்பிரிக்காவுக்குச்

செல்கிறது. இந்தப் பிளவின் பாதி தூரத்திற்கு யோர்தான் பள்ளத்தாக்கு அமைந்திருக்கிறது. எர்மோன் மலை (9200 அடி) அடிவாரத்தில் தொடங்கும் சிறு ஆறுகள் ஒன்று சேர்ந்து யோர்தான் நதியாக உருவெடுக்கின்றன. பாறைகளோடு கூடிய இந்நதி சதுப்பு நிலையோடு கூடிய கூலே என்ற சின்ன ஏரியை உண்டாக்குகிறது. இந்த ஏர் கடல் மட்டத்திலிருந்து 7 அடி உயரத்திலிருக்கிறது. இதிலிருந்து கலிலேயாக் கடலுக்கு நீர் வேகமாக வடிகிறது. இந்தப் பள்ளத்தாக்கில் ஒன்பது மைல் நீளத்திற்குள் 680 அடி சரிகிறது. கலிலேயாக் கடலாகிய திபேரியா ஏரி கடல் மட்டத்திலிருந்து 675 அடி கீழே உள்ளது. அதன் அதிக ஆழம் 165 அடியிலிருந்து 230 அடி வரைக்கும் இருக்கும். மேலும், அது 13 மைல் நீளமும் 8 மைல் அகலமும் உடையது; 1000 அடி உயரமும் மலைகளால் சூழப்பட்டுள்ளது. அது கந்தகப் பாறைகளால் மூடப்பட்டிருக்கும். இவ்வேரியின் தெற்கிலிருந்து ஒரு நீர்த்தேக்கம் தொடங்குகிறது. இது திபேரியா ஏரிக்கரையில் 3 மைல் அகலமும், எரிக்கோ அருகில் 12 மைல் அகலமும் கொண்டது. இதனூடே யோர்தான் நதி வளைந்து வளைந்து சாக்கடலை நோக்கிப் பாய்கிறது. நேராகச் சென்றால் 65 மைல் தூரத்திற்குள் 585 அடி சரிந்து யோர்தான் சாக்கடலில் விழுகிறது. இக்கடல் 48 மைல் நீளமும் 10 மைல் அகலமும் கொண்டது. அதன்நீர் மட்டம் கடல் மட்டத்திலிருந்து 1300 அடி கீழே உள்ளது. 1200 அடி ஆழமுடையது. இது தான் உலகிலே தாழ்மட்ட நீர்த்தேக்கமாகும். இதுதான் உலகத் தரையிலுள்ள மிக ஆழமான பள்ளமாகும்.

சாக்கடலிலிருந்து அக்காப வளைகுடாவுக்குச் செல்லும் ஏல்-அரபா ஆறு யோர்தான் நதியின் தொடர்ச்சியாகும் என்று கருதப்படுவதுண்டு.

7. யோர்தானுக்கு அப்பால்: பாலஸ்தீனத்தின் நான்காவது நிரைகோட்டுப் பகுதி யோர்தான் பள்ளத்தாக்குக்குக் கிழக்கில் உள்ள பகுதியாகும். இஃது ஒரு பீடபூமியாகும். இதன் பெயர் யோலான் என்பதாகும். இது தென்சீரியாவின் பெரிய எரிமலைப்பகுதியின் ஓரமாகும்; கந்தகப் படிவங்களால் மூடப்பட்டது. இப்பீட பூமி கடல் மட்டத்திலிருந்து 2000 அடியிலிருந்து 3000 அடிவரை உயரமுள்ளது. திபேரியா ஏரியில் வடியும் பெரும் வெள்ளத்தால் ஏற்பட்ட பள்ளங்களும், எரிமலை வெடிப்பால் ஏற்பட்ட முகடுகளும் இதில் உண்டு. இப்பீடபூமி தெற்கில் சரிகிறது; யோர்தானுக்கு அருகில் செழிப்புள்ளதாய், உழவுத் தொழிலுக்கு ஏற்றதாய் உள்ளது; கிழக்கில் போகப்போக வறட்சி மிகுந்து, பாலையாகிறது. இப்பீடபூமியின் பலபகுதிகள் ஒரே சீராக அமைந்து இருப்பதால், இஃது ஓர் இயற்கையான நெடுஞ்சாலையாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கேற்றவாறு "அரச பெரும் நெடுஞ்சாலை" என்றழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இப்பீடபூமி வடக்கிலிருந்து தெற்காக யார்முக்கு, யாபோக்கு, அர்னோன், செரேது ஆகிய நான்கு ஆறுகளால் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுதிகளின் பழம் பெயர்கள் பாசான், கிலயாது, அம்மோன், மோவாபு, ஏதோம் ஆகும்.

8. தட்ப வெப்பநிலை: இது பாலஸ்தீனத்தில் ஒரே சீரானதன்று. பாலஸ்தீனம் 30°- 33.5°C நிலக்கோடுகளுக்கிடையில் அமைந்திருப்பதால், ஏறக்குறைய வெப்ப மண்டலத்தைச் சேர்ந்ததாகும். இடத்தின் உயரத்திற்கேற்ப தட்பவெப்ப நிலை மாறும். மலைப்பகுதியில் சுகமானநாள், கடற்கரைச் சமவெளியில் வெப்பமிக்கதாயிருக்கும். அதேபோது யோர்தான் பள்ளத்தாக்கில் பொறுக்கமுடியாத அளவில் வெப்பம் மிகுந்திருக்கலாம். மத்தியதரைக் கடலிலிருந்து அடிக்கும் மேற்கத்திய காற்று கடற்கரையையும் மலைப்பகுதியையும் பிற்பகலில் குளிரச்செய்யும், ஆனால், வெப்பம் மிக்க யோர்தான் பள்ளத்தாக்கில் ஒரு பாதிப்பும் ஏற்படாது.

9. பருவ காலங்கள்: நவம்பரிலிருந்து ஏப்ரல் வரை மழை பெய்யும் மாரிக்காலம் ஆகும். மேயிலிருந்து அக்டோபர் வரையுள்ள மற்ற

மாதங்கள் வறட்சியான கோடை காலமாகும். ஆகஸ்டு மிக வெப்பமான மாதமாகும். ஜனவரி குளிர் மிக்கதாகும். ஜூனிலிருந்து செப்டம்பர் வரையுள்ள காலத்தில் மழையே இராது. முன்மாரி என்றழைக்கப்படும் முதல் மழை அக்டோபரில் பெய்யும். திசம்பர்-மார்ச்சு மாதங்களுக்கிடையில் கனமாகப் பருவமழை பெய்யும். பின்மாரி என்ற பெயருடைய கடைசி மழை ஏப்ரல் முடிவிலும், மே தொடக்கத்திலும் பெய்யும் (உப 11:14; எரே 5:24; யோவே 2:23). பாஸ்கு விழாவுக்கும், ஐம்பதாம் நாள் விழாவுக்கும் இடையில் வரும் இளவேனிற்கால அறுவடை அவ்வாண்டில் பெய்த மழையைப் பொறுத்ததாகும். மழை பெய்யாததாலும், சிறிதளவே பெய்வதானாலும் பஞ்சம் ஏற்படுவது அரிதன்று. மலைப்பகுதியில் பனிமழை பெய்தல் அபூர்வமன்று. அண்மையில் எருசலேமிலும் பெத்லகேமிலும் பனிமழை பெய்து தரையை மறைத்துள்ளது. காலையில் பனி பெய்தல் பாலஸ்தீனத்தில் அடிக்கடி நடப்பதொன்றாகும். மக்கள் இதைப் பெரிதும் விரும்பினர் (உப 33:28; சங் 132). வறட்சியான கோடையிலும் பனி பெய்வதால் தரை மழை பெய்தபின் இருப்பதுபோல் ஈரமாய் இருக்கக்கூடும்.

10. **நீர் நிலைமை:** தரையின் மேலுள்ள சுண்ணாம்புக் கல்லும், கடற்கரை மணற்கற்களும், ஒரு நீர்த்தேக்கத்தின் களிமண்ணும் நீரால் ஊடுருவிச் செல்லக்கூடியவை. இவை மழை நீரை விரைவில் உறிஞ்சித் தரையின் கீழ் உள்ள கால்வாய்களை நிரப்பும். ஆனால், நீரை வெளியேற்ற பெரும்பாலும் வடிகால் இருப்பதில்லை. மலைப்பிரிவு களிடையேயுள்ள பள்ளத்தாக்குகள் அனேகமாக வறட்சியாகவே இருக்கும். பெருமழை பெய்யும்போது தற்காலிக நீரோட்டம் ஏற்படும். கலிலேயாவில் மேற்கே பாயும் நான்கு ஆறுகள் உள்ளன. அவற்றில் அக்கோவும், கிசோனும் சிறப்பானவை. இரண்டும் 6 மைல் நீண்ட நிலையான ஓட்டமுடையவை. கர்மேல் மலைக்குத் தெற்கே உள்ள கடற்கரையில் 10 சிறு ஆறுகள் உள்ளன. இவை பெரும்பாலும் தரையில் அடுத்தடுத்து இருந்த நீர்த்தேக்கங்களின் வடிகால்கள் ஆகும். கிழக்கிலிருந்து பல கிளையாறுகள் யோர்தானில் சேர்கின்றன. இவற்றில் யார்முக்கும், யாபோக்கும் சிறப்பானவை. சாக்கடலில் விழும் ஆறுகளில் சிறப்பானது அர்னோன் என்ற ஆறாகும். சாக்கடல் தனது நீருக்கு யோர்தானைச் சார்ந்துள்ளது.

11. **நாட்டின் செழிப்பு:** கோதுமை, வாற்கோதுமை, கொடிமுந்திரி, அத்தி, ஒலிவா, மாதுளை, தேன் ஆகியவை பாலஸ்தீனத்தில் மிகுதியாகக் கிடைப்பதாகக் கூறப்படுகிறது (உப 8:8). மற்றக் கனிகளும், காய்வகைகளும் விளைந்தன என்பது உறுதி. ஆனால், அவைபற்றி ஒன்றும் கூறப்படவில்லை. உழவுத் தொழிலுக்குரிய பரப்புவரம்புக்கு உட்பட்டதே. அஃது அக்கோ, எசுதிரலோன், சாரோன், பெலிஸ்தியா ஆகிய சமவெளிகளும் மலைப்பகுதியில் ஆங்காங்கே காணப்படும் சில பகுதிகளுமாகும். இந்நாடு "தேனும் பாலும் பொழியும் நாடாக" விவிலியத்தில் கூறப்படுகிறது. இதற்கு விவிலிய மொழியில் உண்ணவும் குடிக்கவும் அபரிமிதமாகப் பொருட்களைக் கொடுக்கும் நிலம் என்று பொருள் கொடுக்கலாம். இப்படி விவரிக்கப்பட்டாலும் சுகமான வாழ்வுக்குப் போதிய பொருட்களை விளைவிக்க, குடியானவன் கடினமாக உழைத்தால்தான் நிலம் செழிப்பாக இருக்கும். ஆனால், இதுவும் எளிதாகக் கைகூடுவதன்று. கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் இஸ்ராயேலர் நாடோடிகளாகத் திரிந்த பகுதிகளான சீனாய்த் தீபகற்பம், நெகேபு ஆகிய நாடுகளோடு ஒப்பிடும்போது, பாலஸ்தீனம் ஓர் இன்பவனம்தான்.

12. **நாட்டு மக்கள்:** பாலஸ்தீனத்தில் இஸ்ராயேலர் குடியேறுமுன் அங்கு வாழ்ந்த மக்களை விவிலியம் பொதுவாக எமோரியர்கள் அல்லது கானானியர்கள் என்றழைக்கிறது. சில இடங்களில் மலைப்பகுதியில் வாழ்ந்தோரை எமோரியர்கள் என்றும், சமவெளியில் வாழ்ந்தோரைக் கானானியர்கள் என்றும்

அழைக்கிறது (எண் 13:29; உப 1:7). ஆனால், அடிக்கடி ஒரு பொருட் பன்மொழியாக இரண்டும் பயன்பட்டன. இவர்கள் பெரும்பாலும் செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்கள். இஸ்ராயேல் பயன்படுத்திய மொழியிலிருந்து சிறிதே வேறுபட்ட மொழியைப் பயன்படுத்தினர்.

கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் இவர்களது கலாச்சாரம் நமது மனதைக் கவரக்கூடியதாக இருந்திருக்கிறது. பாதி நாடோடி வாழ்க்கையையுடைய எபிரேயருடைய கலாச்சாரத்தைவிட உயர்ந்ததாக இருந்திருக்கிறது. நவீனகால அளவுகோல்படி இவர்களது நகரங்கள் சிறியவை; ஐந்து அல்லது பத்து ஏக்கர் பரப்புடையவை; ஆனாலும், பலமான அரண்களையும் நல்ல வடிகால் வசதியையும் உடையன. எருசலேம், மெகிதோ போன்ற நகரங்களில் முற்றுகையின்போது தண்ணீர் கொண்டுவருவதற்காக, நுணுக்க விரிவுடைய சுரங்க வழிகள் அமைக்கப்பட்டிருந்தன. குடிசைகளால் சூழப்பட்ட அழகிய பெரிய வீடுகள் இருந்த சுவடுகள், செல்வர்கள், ஏழைகள் என்று தெளிவாகப் பாகுபடுத்தப்பட்ட சமுதாயம் இருந்திருக்கக்கூடும் என்று சுட்டுகிறது. இடையிட்ட நடுத்தர வகுப்பினர் இருந்ததற்கு அடையாளம் இல்லை.

சிறுசிறு நகரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த அரசியல் அமைப்பு இருந்தது. இதன் தலைவர்கள் தங்களை அரசர்கள் என்று அழைத்துக்கொண்டனர் (யோசு 10:1-5); ஆனால், பெரும்பாலும் பார்வோனுக்குப் பணிந்து இருந்தனர். சாதாரண காலங்களில் அவனுக்குக் கப்பம் கட்டிவந்தனர். இஸ்ராயேலின் நல்லகாலம் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீன நகர அரசர்கள் தங்களிடையே ஒருமித்த அமைப்பை இழந்து உதவியற்று இருந்தனர். எகிப்தியரின் வெளிநாட்டுக் கொள்கையே இதற்குக் காரணம். எகிப்தியர் வேண்டுமென்றே இந்நகர அரசர்களை ஒற்றுமையின்றி இருக்கச் செய்தனர். மேலும், தங்கள் உள்நாட்டுக் காரியங்களிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தினர்.

கானானில் இஸ்ராயேலர் நுழைந்துபோது அவர்களை எதிர்கொண்ட நல்லமைப்புடைய அரசுகள் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள ஏதோமியரும் மோவாபிரும்தான். விவேகத்தோடு இவர்களை இஸ்ராயேலர் தவிர்த்தனர்.

பாலமோன் (BALAMON)

தோத்தானுக்கு அருகில் உள்ள ஒரு நகர். இதுவும் பேல்மாயினும் ஒன்றாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

பாலா (BALAH - முட்டாள், பழைய, பாழடைந்து)

திருவுளச் சீட்டின்படி சிமியோன் கோத்திரத்திற்கும், அதன் வழிவந்தோருக்கும் கிடைத்த நகர்களில் ஒன்று பாலா. இது யூதாவின் நெகேபில் இருந்தது (யோசு 19:3). 1 நாள் 4:29-இல் வரும் பில்காவும், யோசு 15:29-இல் வரும் பாகலாவும் இதே இடத்தைச் சுட்டலாம். இதன் சரியான இடம் இன்னும் அறியப்படவில்லை. இருப்பினும் பெயேர்சபாவுக்குத் தெற்கிலும், கிழக்கிலும் காணப்படும் பகுதியாக இருக்கலாம் எனச் சூழ்நிலை சுட்டுகிறது.

பாலாக்கு (BALAK - அழிப்பவன், பாழ்படுத்துகிறவன்)

மோவாபின் அரசன் சிப்போரின் மகன். எமோரியர்களை இஸ்ராயேலர் தோற்கடித்த போது வெகுவாக அச்சமுற்றுப் பாலாக்கு அரசன் குறிகாரன் பிலயாமை அழைத்து அவர்களைச் சபிக்கத் தூண்டினான் (எண் 22:24). பிலயாம் இஸ்ராயேலரைச் சபிப்பதற்குப் பதிலாக ஆசீர் அளித்ததும், அதைத் தொடர்ந்து அவர்களுக்குக் கிடைத்த வெற்றிகளும் ஆண்டவரின் காக்கும் வல்லமையை வெளிப்படுத்தியது. தனது முயற்சி தோல்வியடைந்தபின், பிலயாமின் ஆலோசனையை ஏற்று, பாலாக்கு இஸ்ராயேலரைச் சிலைவழிபாட்டிற்கும் பரத்தமைத் தொழிலுக்கும் கவர்ச்சி செய்தான் (யோசு 24:9-10; மீக் 6:5; காண்க. 11:25;

திருவெளி 2:14).

பாலால் (PALAL – இறைவன் தீர்ப்பிட்டார், நடுவர்)

உசீயின் மகனான பாலால், எருசலேம் மதிலை நெகேமியா பழுது பார்த்தபொழுது, அவருக்கு உதவியவர்களுள் ஒருவராவார் (நெகே 3:25).

பாலினப்பண்பு (SEXUALITY)

பாலினப்பண்பு என்னும் இச்சொல் விவிலியத்தில் காணப்படாவிடினும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவுமுறையின் மீது ஒளியை வீசுவதற்கென, இருபாலுக்கும் இடையிலான வேறுபாடு அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் குறிப்பிடத்தக்க பங்கிற்கு மதிப்பளிக்கும் வேளையில், அவற்றினுடைய கால வரிசையின்படி ஆய்வு செய்யாமை மேலாகத் தெரிகிறது. இத்தலைப்பு பற்றி பழைய ஏற்பாட்டில் ஏராளமான கருத்துகள் உள்ளன. ஆனால், இயேசு கிறிஸ்துவின் வருகையுடன்தான் இவை தனது முழுப்பொருளை அடைகின்றன.

I. பாலினப்பண்பும் மனித நிலையும்: "ஆணும் பெண்ணுமாக அவர் அவர்களைப் படைத்தார்" என்று ஆதியாகமம் கூறுகின்ற வேளையில் (ஆதி 1:27), "ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே" எனப் பவுல் கூறுகிறார் (கலா 3:28). இவ்விரு கூற்றுகளுக்கிடையில் ஒரு குறிப்பிட்ட உலைவு இருப்பது தெளிவாக இருந்தாலும் அவை ஒன்றையொன்று முரண்படுத்தாமல், ஒன்றின்மேல் ஒன்று ஒளிவீசி, ஒத்த அளவில் ஒன்றையொன்று வரையறுக்கின்றன.

1. "ஆணும் பெண்ணுமாக அவர் அவர்களைப் படைத்தார்" (ஆதி 1:27). பழைய ஏற்பாட்டில் பால்களுக்கு இடையிலான வேறுபாடானது முதலில் மனிதன் "இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டான்" என்ற உறுதியான கூற்றோடு இணைக்கப்படுகிறது. இப்பகுதியின் உடனடிப் பின்னணியான குருக்கள் பாரம்பரிய ஆசிரியரின் செயலானது, வாழ்வளித்து உலகைக் கட்டுப்படுத்துகின்ற இறைவனுடைய ஆக்க வளமுடன் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான பாலின வேறுபாட்டை இணைப்பதில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது (ஆதி 1:28). யாவே பாரம்பரிய ஆசிரியரின் கருத்தானது அதிக முழுமையானதாக உள்ளது. அவரது நோக்கில் பாலினங்களுக்கிடையிலான வேறுபாட்டினுடைய அடிப்படையானது, சமூகத்தில் வாழ்வதற்கு மனிதனுக்கான இன்றியமையாமையாகும். "மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவோம்" (ஆதி 2:18). இந்த ஆசிரியரால் மேற்போக்காக விடப்பட்டு விடாத வளமையுடைமையோடு பாலினங்களின் மாற்றுத் தன்மையினுடைய உறவு பற்றிய கருத்தானது சேர்க்கப்படுகிறது (3:20). இந்த இரு செயல் நோக்கங்களின் மூலமாக, தனிநபர் சமூகப் பின்னணியில் நிறுத்தப்படுகிறார். பொதுவாக இன்பவனச் சூழலில், இரு உயிர்களின் சந்திப்பினுடைய காட்சியானது எளிமையினுடையதாக உள்ளது. "இருவரும் ஆடையின்றி இருந்தனர்; ஆனால், அவர்கள் வெட்கப்படவில்லை" (2:25). இறைவனிடமிருந்தான பிரிவைக் கொண்டுள்ள பாவமானது, தொலைவு மற்றும் பயத்தினுடைய உணர்வை இக்காட்சிக்குள் புகுத்துகிறது. இப்போதுமுதல் பாலின உணர்வானது குழப்பமானதாக உள்ளது. அடிப்படையில் நல்லது என்ற நிலையினின்று இது விலகா விட்டாலும், பிரிக்கும் சக்தியாகிய பாவத்தினுடைய ஆதிக்கத்தின் கீழ் அது விழுந்துவிட்டது. மற்றவருடைய குறைக்க முடியாத வேறுபாட்டுடன் மகிழ்ச்சியின் இடத்தில், சுயநல உடைமையின் ஆசையைப் பங்காளர்கள் அனுபவிக்கின்றனர் (3:16). இயல்பாகவே புறமுகமாகத் திரும்பும் பாலினத் தூண்டுதலானது அகச்சிந்தனை இயக்கத்தினால் குலைக்கப்படுகிறது. மற்றவரை நோக்கித் திரும்புவதற்குப் பதிலாக, தன்னை நோக்கியே அது திரும்புகிறது.

விவிலியத்தைப் பொறுத்தவரையில், திருமணத்திலான பாலின உறவினுடைய நன்மைத்தனமும் மதிப்பும் எப்போதுமே சந்தேகத்திற்கு உட்பட்டதில்லை. உன்னத சங்கீதத்தில் மட்டுமின்றி (உ.ச. 4:1;5:9; 6:4) பெரும்பாலான மற்ற நூல்களிலும், திருமணம் பற்றிய தன்மை மற்றும் வளமை ஆகியவற்றினுடைய இவ்விரு கூறுகளும் காணப்படுகின்றன. "உன் இளமையின் மனைவியோடு மகிழ்ந்திரு" (பழ 5:18; காண்க. எசே 24:15; சீரா 26:16-18; திருவுரை 9:9). ஆண் மற்றும் பெண்ணிடமிருந்து இறைவனால் உருவாக்கப்பட்ட தனித்துவமிக்க படைப்பினுடைய புறப்பொருள் என்ன? "இறைவன் தந்த சந்ததி" (மலா 2:14-16). ஆதியாகமத்தின் அதே சொற்களை எதிரொலிப்பவராய் இயேசு, இவ்வாறு உருவாக்கப்பட்ட தம்பதியர்களைப் பிரிக்க முடியாததை வலியுறுத்துகிறார். "இனி அவர்கள் இருவர் அல்லர், ஓரே உடல்" (மத் 19:4-6). இறுதியாக, பாலின வாழ்விற்கு எதிரான துறவி என்று தவறாக விவரிக்கப்படும் பவுல், இக்காலத்த வருக்கும் ஏற்றதாக உள்ள நெறிமுறைகளைத் தம்பதிகளுக்கு அளிக்கிறார் (1 கொரி 7:1-6). கொரிந்தியர்கள் கொண்டிருந்த தற்கட்டுப்பாட்டிற்கான கற்பனையான ஆசைகளுக்கு முரண்பட்ட நிலையில், திருமணத்தினுடைய பொதுவான வழியினையும், பாலின உறவின் கடமைகளையும் அவர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். "ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய கடமையை மறுக்காதீர்கள். செபத்தில் ஈடுபடுவதற்காகச் சிறிது காலத்திற்கு அக்கடமையைச் செய்யாமலிருக்கலாம். ஆனால், அதற்கு இருவரும் உடன்பட வேண்டும். அதன்பின் முன்போல் கூடிவாழுங்கள்" (7:5; காண்க. 1 திமொ 4:3; 5:14). படைப்பிலிருந்து வெளிப்படும் சூழ்நிலை இவ்வாறு காக்கப்பட்டு, உயர்த்தவும்படுகிறது. கணவன் மற்றும் மனைவியினுடைய சமூகமானது செபத்தினுடைய சலுகைக்குரிய எல்லைப் பரப்பிற்குள் நுழைகிறது.

2. "ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இனி எந்த வேறுபாடு இல்லை: ஆனால், கிறிஸ்து இயேசுவிற்குள் நீங்கள் அனைவரும் ஒன்றாக உள்ளீர்கள்" (கலா 3:28). இக்கூற்றானது முன் குறிப்பிடப்பட்ட எக்கருத்தையும் மறுப்பதில்லை. ஆனால், இயேசுவின் வருகையானது ஆண் மற்றும் பெண்ணுக்கு உரிய சூழ்நிலையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. பாலின நிலையின் முழுப் பரிமாணமும் தோன்றுவதற்கு இஃது அனுமதிக்கிறது.

இக்கருத்து பற்றிய கோட்பாட்டை இயேசு செயல்படுத்தவில்லை. ஆனால், தனக்கென ஒரு சிறப்பான வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்டு, மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். உண்மையில், திருமணம் புரிந்தவர்களாக எதிர்பார்க்கப்பட்ட யூத போதகர்களைப் போன்று இயேசு வாழவில்லை. எஸ்ஸேனியரிடையில் பின்பற்றப்பட்டு வந்த கற்பு நிலையானது, இத்தகைய நிலையில் எவ்வித வியப்பையும், அவதூறையும் தவிர்க்க உதவியது. ஆனால், இயேசுவைப் பொறுத்தவரையில் இது பெண்களுக்கு எதிரான துறவு நிலை அன்று. இதற்குப் பின்னணியில் உள்ள காரணங்கள், பின்வரும் மறைமுகமான நம்பிக்கையாகிய கருத்தினின்று புரிந்து கொள்ளப்படலாம்: "விண்ணரசை முன்னிட்டுத் தம்மைத்தாமே அண்ணகராக்கிக் கொண்டவரும் உளர்" (மத் 19:12). இச்சொற்கள், இதனை ஏற்றுக் கொள்ளக்கூடியவருக்கான அழைப்பாகும். லூக்காவிலும் இதற்கிணையான திடீர் ஒப்புமை உள்ளது. "இயேசுவின் சீடனாக இருப்பதற்கு ஒருவன் தனது மனைவியையே துறக்க வேண்டும்" (லூக் 14:26). வாழ்வின் இத்தகைய வழியானது, இயேசுவின் வருகையுடன் வெளிப்படுத்தப்படும் ஒரு புதிய நடைமுறை நிலையில் மட்டுமே புரிந்து கொள்ளப்படும். அவரைப் பின்பற்றுவதன் மூலம் ஒருவன் நுழையக்கூடிய இறைவனுடைய அரசின் வருகையே அது. தன்னியலான தூய்மைக்கு ஒரு பொருள் அளிக்கப்பட்டுள்ளதன் காரணமாக,

இப்புதிய அமைப்பில் நுழைவதானது, படைப்பின் கட்டளைக்கு அப்பால் செல்வதற்கான அழைப்பாகும்.

பவுல் திருமணம் செய்தவராக இருக்கலாம். ஆனால், இயேசுவினுடைய பாதச்சுவடுகளில் கன்னிமையைப் பரிந்து பேசுபவராக, தன்னையே அமைத்துக் கொள்கிறார். வாழ்வினுடைய இந்தப் புதிய வழிக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று அவர் கேட்டது போன்று சிறப்பு அழைப்பினுடைய அருங்கொடை (1 கொரி 7:7); மற்றது காலத்தின் இறுதியால் உருவாக்கப்பட்டு, இயேசுவில் தொடங்கப்பட்ட சூழ்நிலை. உண்மையில் இறுதிக்காலங்களில் வாழ்வதனுடைய விளைவானது, மனிதரிடையே இரு குழுக்களிடையில் வேறுபாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். மிகப்பழமையான ஆண் / பெண் முரண்பாட்டுடன், மணமானவர் / கன்னிமை என்னும் முரண்பாடும் சேர்க்கப்பட வேண்டும். விண்ணக அரசினுடைய முழுமையினை ஒத்திசைவான வழியில் அமைத்து வெளிப்படுத்த, ஆண் பெண் பற்றிய இருவகைகள் தேவையாக இருந்தன. எனவே, பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களை மட்டுமே கருத்தில் கொண்டு, ஆணும் பெண்ணும் தங்களுடைய உண்மையான முழுமையினைப் பாலினத் துணைவருடனான திறனுள்ள ஒன்றிப்பில் மட்டுமே அடைய முடியும் என்று கூறுவது தவறாகும். உண்மையில் இயேசு கிறிஸ்து பிரதிபலிக்கின்ற முழு மனித சமூகத்தில், பாலினச் சேர்க்கையினின்று விலகியுள்ள அதே நேரத்தில், மற்றவருடன் ஒன்றுபடுவதற்கு இயலக்கூடியதே.

II. பாலினப்பண்பு, புனிதம் மற்றும் தூய்மையின் நிலை:

1. இஸ்ராயேலைச் சுற்றியுள்ள மக்களுடைய சமயங்கள், பாலினப்பண்பினைத் தங்களின் தெய்வங்களுடைய உலகின் ஒரு பகுதியாகவும் ஆக்கி விட்டன. தாய்த் தெய்வங்கள் மற்றும் தந்தைத் தெய்வங்கள், தங்களிடையில் அல்லது மனித உயிர்களுடன் மணம் புரிகின்ற காதல் தெய்வங்கள், மற்றும் இறைமையைக் குறிப்பிடுகின்ற புனித வேசிகள் ஆகியோரின் ஒன்றுபட்ட நிலையினை அங்கு நாம் காண்கிறோம். விண்ணகம் மற்றும் மண்ணகத்தின் ஒன்றிப்பினை அடையாளங் காட்டுவதற்கென, தரையில் வீழ்த்தப்பட்ட பணயமாகிய பாகால் மற்றும் அஸ்தார்தி ஆகியவற்றுடன் இஸ்ராயேல் நன்கு அறிமுகமாயிருந்தது. இப்போலியான தெய்வங்களுடனும் அவர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். ஆண்பாலின் இனப்பெருக்க ஆற்றலின் அடையாளமாகிய பொன் கன்றுக்குட்டியையும் அவர்கள் செய்தனர். உப 23:18 தடை செய்திருந்தாலும் இந்தப் புனித வேசிகளின் வாழ்க்கை தொடர்ந்து இருந்ததற்கான ஆதாரம் இருந்தாலும், இந்த அன்னிய சமயங்களுக்கெதிரான போராட்டமானது, ஆண்டவருக்கான வெற்றியுடன் முடிவடைந்தது (1 அர 14:24; 15:12; 22:47; 2 அர 23:7; ஓசே 4:4; மீக் 1:7).

இந்தப் புறவின நடைமுறைகளின் சுத்திகரிப்பிற்குப் பின்னும், பாலினத்திற்கும் புனிதத்திற்கும் இடையே இஸ்ராயேல் தொடர்ந்து ஒரு தொடர்பைக் கொண்டிருந்தது. ஆனால், இந்தப் புனிதச்சடங்கிற்குப் பின்னிருந்த காரணங்கள் மாறிவிட்டன. அஃது இனியும் தெய்வங்களுடைய பாலினப்பண்பை ஒத்துச் செயல்படுவதன்று. மாறாக, இறைவனுடைய படைப்பு வல்லமையில் பங்கு பெறுவதன் மூலம், இறைவனுடைய வார்த்தையால் தூண்டப்பட்ட செயலைச் செயல்படுத்துவதாகும். குழந்தையைப் பெற்ற பின்னர், “கடவுள் அருளால் ஒருவனை நான் பெற்றுள்ளேன்” என்று ஏவாள் அறிவித்தாள் (ஆதி 4:1). புனிதச்சடங்கினுடைய இந்தப் புதிய அமைப்பின் விளைவுகளில் ஒன்றானது, இஸ்ராயேலுக்கும் அதனுடைய இறைவனுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்தப் பயன்படுகின்ற பாலின அடையாளவியலில் (தாய்மைக்குரிய அல்லது மண வாழ்விற்குரிய)

காணப்படுகிறது. யாவேயுடனான உடன்படிக்கையினைக் குறிப்பிடுவதற்கான விருத்த சேதனத்தின் வழக்கமானது இதனுடன் சேர்க்கப்படலாம் (ஆதி 17:9-14; லேவி 12:3).

பாலினப் பண்பைப் புனிதப்படுத்தும் சடங்கினுடைய மற்றொரு கூறு பண்டைய மேற்காசியச் சடங்குகளினின்று இஸ்ராயேலால் பெறப்பட்ட தூய்மை மற்றும் தூய்மையின்மையினுடைய சடங்குகளைப் பற்றியதாக உள்ளது. குழந்தை பெற்றவுடனே தாய் தீட்டானவள் என்று அறிவிக்கப்பட்டு, புனித இடத்தை அணுக முடியாதவளாகிறாள் (லேவி 12:6). அவளுடைய மாதவிலக்குக் காலத்திலும் (15:19-30), இரவில் விந்து ஒழுகும்போதும் அதே நிலை உள்ளது (15:1-17; உப 23:11). பாலின உறவுகள் மக்களை வழிபாட்டில் சேர்வதற்குத் தகுதியற்றவையாக்கின (லேவி 15:18; யாத் 19:15; 1 சாமு 21:5-6; 2 சாமு 11:11). குருக்களுக்கு இவ்வொழுக்கங்கள் சிறப்புமிக்க முக்கியத்துவமுடையனவாக இருந்தன (யாத் 20:26; 28:42; உப 23:2). இந்த ஒழுக்கங்கள் பாலினப்பண்பினைப் புறக்கணிப்பதன் விளைவல்ல; ஆனால், அதனுடைய சடங்கு அல்லது இந்நிலையிலான புனிதத்தினுடைய தெளிவின்மை மற்றும் சடங்குத் தூய்மையின் தெளிவின்மை ஆகியவற்றின் விளைவாகும். இறுதியாக, இறைவனுடைய படைப்பு வல்லமையில் இயலளவில் பங்கு பெறுகின்ற செயலுக்கும், இறைத் தலைமையுடனான உறவினை அவிநயப்படுத்திக் காட்டுகின்ற கலாச்சாரச் செயலுக்கும் இடையே ஒரு முரண்பாடு இருப்பதில்லை?

2. கிறிஸ்தவ விசுவாசத்தின் வருகையுடன் இந்தத் தீட்டுகள் அனைத்தும் மறைந்து விட்டன; அல்லது புனிதச்சடங்கு பற்றிய பண்டைய கருத்தினின்று, புனிதத்தை நோக்குவதில் புதிய வழிக்கு ஒரு மாற்றம் ஏற்பட்டது. பவுலின் சில கருத்துகளுக்கான விளக்கம் இதுவே: "அவிசுவாசியான கணவன் தன் மனைவியால் புனித மடைகிறான்... இல்லையெனில் உங்கள் பிள்ளைகள் மாசுபட்டவர்களாய் இருப்பார்கள். இப்பொழுதோ புனிதமாய் இருக்கிறார்கள்" (1 கொரி 7:14). இந்தப் புறப்பொருள் நிலையின் காரணமானது இனியும் பாலின உறவின் புனித குணமாக இல்லாமல், புனித மக்களின் உறுப்பினர் தன்மையாகவும், முடிவாகத் தூய ஆவியின் பிரசன்னமாகவும் உள்ளது. கிறிஸ்தவ வாழ்வின் குறியாக உள்ள பாலினத் தூய்மையின் தேவைகளைப் பற்றிய பண்டைய ஞான உரையைப் பின்பற்றி, பரிந்துரைகளைச் செய்தபோது, பவுல் ஆவியின் இக்கொடையினை மனதில் கொண்டிருக்கக்கூடும். "நீங்கள் பரிசுத்தராவதே கடவுளின் திருவுளம்; அதாவது, கெட்ட நடத்தையை விட்டுவிட வேண்டும். கடவுளை அறியாத புறவினத்தார் காம இச்சைகளுக்கு இடங்கொடுப்பதுபோல் நீங்கள் செய்யாமல், உங்களுள் ஒவ்வொருவரும் தன் உடலை அடக்கி ஆண்டு மரியாதையாய் நடத்தி, பரிசுத்தமாய்க் காப்பாற்ற அறிந்திருக்க வேண்டும்" (1 தெச 4:3-5). இனிமேல் உடலானது ஆவியின் கொடையால் புனிதப் படுத்தப்படுகிறது. "உடல் காமத்திற்கென்று இல்லை; ஆண்டவருக்கென்று இருக்கிறது" (1 கொரி 6:13).

பாலின அடையாளவியலானது இப்போது கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் பயன்படுகிறது. "கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செய்ததுபோல கணவர்கள் தங்கள் மனைவியருக்கு அன்பு செய்ய வேண்டும்" (எபே 5:25). "கணவன் தன் மனைவியோடு கூடி இருப்பான், இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள்" என்னும் படைத்தவரின் கட்டளையை நினைவு கூர்ந்தவராய், "இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது. இது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் பொருந்தும் என்று நான் சொல்லுகிறேன்" என்று பவுல் மேலும் கூறுகிறார் (எபே 5:31-32). அதே அடையாளவியலானது விசுவாசிகளை இறைவனுடன் ஒன்றுபடுத்துகின்ற அன்பின் உறவினை அறிவிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. விசுவாசிகள் கன்னித்தன்மையுடன் இருப்பதால்

செம்மறியைப் பின்தொடர்கின்ற வேளையில் (திருவெளி 14:4), செந்நிற விலங்கின் மேல் பயணம் செய்வது வேசியே (திருவெளி 17).

III. செயல்முறையும் நோக்கமும்:

1. பழைய ஏற்பாடு: பழைய ஏற்பாட்டில் எண்ணற்ற விதிகளின் கருப்பொருளாகப் பாலின ஒழுக்கம் உள்ளது. இது, பாலினப் பண்பைக் கண்டிக்கும் ஆசை அல்லது இந்தக் குறிப்பிட்ட நிலைக்கு அளிக்கப்படும் அதிகப்படியான ஒழுக்க கவனம் ஆகியவற்றினுடைய விளைவன்று; மாறாக, நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட புனிதச்சடங்கின் விளைவு. இதற்கு அப்பாற்பட்டு, சமயப்போர்வையின் கீழ் தனது சிற்றின்ப உணர்வை மறைக்கின்ற தவறான உலகிற்கு எதிரான தடுப்பு எதிர்ச்சொல் இங்கு உள்ளது. இறுதியாக இறைவனுடைய மக்களின் நலம் பற்றி ஆர்வம் கொண்டதாக இருந்த சட்டத்தினுடைய கற்பிக்கும் பங்கை நாம் மறத்தலாகாது. இத்தகைய விதிகளின் விவரமான அட்டவணையைத் தயாரிப்பதென்பது அயர்ச்சி தரக்கூடும். லேவி 20:10-21-இன் அட்டவணையைத் சற்றுக் காண்போம். மணமாகாத ஆண் பெண் உறவு (காண்க. உப 22:23-29), மாதவிலக்குக் காலத்தில் பெண்ணுடன் பாலின உறவு, விபசாரம் (உப 5:18; 22:22; கவர்தல் பற்றிய யாத் 20:17; மற்றும் பழ 2:16; 6:25; 7:55-57; சீரா 9:9), நெருங்கிய இரத்த உறவினருடன் உடல் உறவு (உப 23:1), ஓரின உடலுறவு (ஆதி 18:20; 19:5), விலங்கோடு புணர்வது (யாத் 22:18) முதலியனவற்றை இது கண்டிக்கிறது. மறுபுறம் தனது இறந்த சகோதரனுக்கென, சந்ததியை விருத்தியடையச் செய்ய மறுத்த ஓனானின் பாவத்தில், ஓனானிசம் என்று நாம் அழைப்பதைக் கண்டிப்பதற்கு எந்த அடிப்படையும் இல்லை (ஆதி 38:9-10). இதற்கு அப்பாற்பட்டுக் குருக்களுக்கென, சிறப்பு விதிகள் இருந்தன. விலை மகளையோ, கணவனால் தள்ளப்பட்ட வளையோ மணந்துகொள்ள அவர்கள் அனுமதிக்கப் படவில்லை (லேவி 21:7.13-14). புனித வேசித்தன்மைக்கு அப்பாற்பட்டு, விபசாரத்துடன் இணைந்து வேறு எந்தத் தடையும் இல்லாமலிருப்பதை நாம் இறுதியாக உற்றுக் கவனிக்க வேண்டும் (ஆதி 38:15-23; நீதி 16:1). ஆனால் பழங்கால விவரிப்புகளுடன் ஒப்பிடும்போது, ஞான இலக்கியங்கள் தெளிவான முன்னேற்றம் காட்டுகின்றன. இப்பழக்கத்தால் வரும் அபாயங்கள் பற்றி எச்சரிக்கின்றன (பழ 23:27; சீரா 9:3-4; 19:2).

2. இயேசு: முன் குறிப்பிடப்பட்ட சடங்கு விதிகளைப்பற்றி இயேசு ஒன்றும் கூறவில்லை. புரிந்த தவறைக் கண்டிப்பதில் அவர் நேரத்தைச் செலவழிக்கவில்லை. சான்றாக, விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணின் பாவம் (யோவா 8:11), அல்லது தங்களுடைய விசுவாசத்தின் காரணமாக வேசிகள் பரிசேயரைவிட எளிதாக விண்ணரசில் நுழைவர் என்று அவர் குறிப்பிடுதல் முதலிய நேரங்கள் (மத் 21:31-32). ஆயினும், ஆசையிலும் பார்வையிலும் இந்தத் தவறுகளின் வேரில் உள்ள பாவத்தை நோக்கி நேராகச் சுட்டிக்காட்டுவதன் மூலம் அவர் பழைய ஏற்பாட்டு விதிகளை மிகவும் அடிப்படையானவை ஆக்குகிறார் (மத் 5:28; 15:19).

கொரிந்துவின் பெரிய துறைமுகத்தின் சீரழிந்த ஒழுக்கச் சூழ்நிலையில் பவுல் தன்னைக் காணும் வேளையில், இயேசு யூதரிடையே வாழ்ந்தார். எனவே, தீமையின் அனைத்து வடிவங்களுக்கும் எதிராக ஒரு கடுமையான நிலையினை அவர் எடுத்தார். "காமுகர், சிலை வழிபாட்டினர், விபசாரர், இயற்கைக்கு மாறான பாவம் செய்வோர், அதற்கு உடன்படுவோர், திருடர், பொருளாசை பிடித்தவர், குடிகாரர், பழி பேசுவோர், கொள்ளைக்காரர் இவர்களுக்குக் கடவுளின் அரசு உரிமையாகாது" (1 கொரி 6:9-10; காண்க. உரோ 1:24-27). விபசாரத்திற்கு எதிராக அவர் தொடர்ந்து எச்சரித்து வந்தார் (1 கொரி 6:13-15; 10:8; 2 கொரி 12:21; கொலோ 3:5). செயல்துறைக் கோட்பாட்டாளர் என்ற நிலையில், தீய ஒழுக்கமுடைய சகோதரருடன் எவ்விதத் தொடர்பையும் அவர்

தடுத்தாலும், இவ்வுலகின் தீய ஒழுக்கமுடைய மக்களுடனான தொடர்பை அவர் தடுக்கவில்லை. இல்லாவிடின், "நீங்கள் இவ்வுலகைவிட்டே வெளியேற வேண்டியிருக்கும்" (1 கொரி 5:10).

இக்கட்டளையை வற்புறுத்துவதன் காரணமென்ன? யூதத் தோற்றமற்ற கிறிஸ்துவர்களை ஊனுடலின் பிழைபாட்டிலிருந்து காப்பதே இக்காரணமாகும். யூத சட்டத்தினுடைய அரணை அதனுடைய துல்லியமான விதிமுறைகளுடன் தனது செயலாற்றலில் பவுல் கொண்டிருக்கவில்லை. ஆனாலும், "எதையும் செய்ய எனக்கு உரிமையுண்டு (1 கொரி 6:12). ஏனெனில், காலத்தின் கலாச்சாரத்தினால் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்ட, எழுதப்பட்ட சட்டத்தினை ஒழுக்க நிலையானது சார்ந்திருக்க வில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால், இப்போது முதல் உடலுக்கும் ஆண்டவருக்கும் இடையில் நிலவி வந்த உறவின்மீது அஃது இன்னும் நெருக்கமாகச் சார்ந்திருந்தது. உடலானது தூய ஆவியின் ஆலயமாகவும், கிறிஸ்துவின் ஓர் உறுப்பாகவும் உள்ளது! "நான் ஆண்டவரின் உறுப்புகளை எடுத்து வேசியின் உறுப்புகளாகச் செய்யலாமா? ஒரு காலும் செய்யலாகாது. வேசியோடு சேருகிறவன் அவளோடு ஒருடலாகிறான் என நீங்கள் அறியீர்களா?" (1 கொரி 6:15-16). "வலுவற்ற உங்கள் இயல்பைப் பேணுபவர்களாய்த் தீய இச்சைகளுக்கு இடங்கொடாதீர்கள்" (உரோ 13:14; கலா 5:16-19).

இவ்வாறாக, இயேசுவின் வருகையாலும், பவுலின் படிப்பினையினாலும் பாலின உணர்வானது படிப்படியாக, சமயச் சார்புடைய தன்மையினின்று நீக்கப்பட்டது. இந்த இயக்கமானது ஒரு நிபந்தனையின் கீழ் தொடரும், தொடரப்படவேண்டும். மனிதனுடைய உடல் சார்ந்த இயல்பை மாற்றியமைத்து, அதனை எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்திருக்கும் இறை உலகுடன் அடிக்கடி தொடர்புபடுத்தும் புனிதத்தன்மையின் பரிமாணத்தைக் காத்தலே, அந்த நிபந்தனை.

பாலைவனம் (DESERT)

I. பாலைவனத்தின் சமயப்பொருள் வேறுபட்ட விதத்தில் அதனுடைய அமைப்பிற்கேற்ப புவியியல் இடமென்றும், மீட்புவரலாற்றில் சிறப்புரிமை பெற்ற காலமென்றும் கருதப்படுகிறது. முதல் கருத்தில் பாலைவனமானது இறைவன் ஆசீர்வதிக்காத இடமாகும். மழைக்கு முன்னர் இன்பவனத்தில் இருந்தது போன்று (ஆதி 2:5), அங்கு நீர் அரிதானதாகவும், தாவர வளர்ச்சி குறைந்த அளவினதாகவும், வாழ்தல் இயலாததாகவும் இருந்தது (எசா 6:11). ஓர் இடத்தைப் பாலைவனமாக்குவதென்பது, அதை மூலக்குழப்பத்திற்கு ஒத்ததாகச் செய்வதாகும் (எரே 2:6; 4:20-26). இஸ்ராயேலின் பாவங்கள் இதற்குத் தகுதி பெறுகிறது (எசே 6:14; புல 5:28; மத் 23:38). இந்தத் தரிசான நிலத்தில் தீய ஆவிகளும் (லேவி 16:10; லூக் 8:29; 11:24), பேய்களும் (லேவி 17:7), மற்றக் காட்டு விலங்குகளும் வாழ்கின்றன (எசா 13:21; 14:23; 30:6; 34:11-16; செப் 2:13-14). சுருக்கமாக இந்த ஒளியில் காணும்போது, சாபமானது ஆசிருக்கு முரண்படுத்தப்படுவது போன்று பாலைவனமானது குடியேறிய பகுதிக்கு முரண்படுத்தப்படுகிறது.

இப்போது, ஆதிக்கம் வகிக்கிற விவிலிய நோக்கில், பாலும் தேனும் ஓடுகின்ற நாட்டில் நுழையச் செய்வதற்கென இறைவன் தனது மக்களை இந்தப் "பயங்கர பாலையைக்" கடந்து செல்லுமாறு விரும்புகிறார் (உப 1:19). இந்த நிகழ்ச்சியானது முந்தைய அடையாளத்தை மாற்றியமைக்க உள்ளது. பாலைவனமானது பாழடைந்த இடம் என்னும் தனது பண்பை எப்போதுமே கொண்டிருக்குமாயின், எல்லாவற்றிற்கும் மேலாக, புனித வரலாற்றின் ஒரு கட்டமாகிய "இறை மக்களின் பிறப்பு" என்பதையும் அது நினைவிற்குக் கொண்டு வருகிறது. பின்னர்,

பாலைவனத்தினுடைய விவிலிய அடையாளமானது தனிமையினுடைய மறைபொருளுடனோ, நாகரிகத்தினின்று விலகிச் செல்லுதலின் மறைபொருளுடனோ குழப்பப்படக்கூடாது. பாலைவன மாதிரிக்குத் திரும்புவதை அது நோக்கமாகக் கொள்ளாமல், இஸ்ராயேலின் யாத்திரையை மாதிரியாகக் கொண்ட பாலைவன காலத்தின் வழியாகக் கடந்து செல்லுதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

II. பழைய ஏற்பாடு:

1. வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குப் புறப்படுதல்: எகிப்திலிருந்தான யாத்திரையின் நினைவுகளைப் போலன்றி, பாலைவனத்திலான பயணத்தின் நினைவுகள் பிற்காலத்தில்தான் உயர்வுபடுத்திக் கூறப்பட்டன. அதனுடைய இன்றைய வடிவில் அது மக்களுக்குச் சோதனையின் காலமாகவும் பதிதத்தின் காலமாகவும் மட்டுமின்றி, ஆண்டவருடைய மகிமைக்கான காலமாகவும் இருந்தது என்பதைப் பாரம்பரியங்கள் காட்டுகின்றன. பின்வரும் மூன்று உறுப்புகள் இந்த நினைவுகளை நெறிப்படுத்துகின்றன: இறைவனுடைய திட்டம், மக்களுடைய விசுவாசமற்ற நிலை, இறைவனுடைய வெற்றி.

அ. இறைவனுடைய திட்டம்: பாலைவனக் கடத்தலை இரட்டிப்பான நோக்கம் இயக்கியது. இறைவன் தனது மக்களின் வழிகாட்டியாக இருக்க விரும்பியதன் காரணமாக (யாத் 13:21), குறுகியதாக இல்லாவிடினும், இறைவனால் வெளிப்படையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி இதுவே (13:17). இறுதியாக, சீனாய்ப் பாலைவனத்தில்தான் எபிரேயர்கள் இறைவனை வழிபட வேண்டும் (யாத் 3:17-16=5:1-3). அங்கு அவர்கள் சட்டத்தையும், இந்த நாடோடிகளை உண்மையான இறை மக்களாக்குகின்ற உடன்படிக்கையையும் பெறுகின்றனர். குடிக்கணக்கு எடுக்கவும் அவர்களால் முடியும் (எண் 1:1-3). இறைவன் தனது மக்கள் பாலைவனத்தில் தான் உருவெடுக்க வேண்டுமென விரும்புகிறார். ஆயினும், அவர் அவர்களுக்கு ஒரு நாட்டை வாக்களிக்கிறார்; எனவே, பாலை நிலப் பயணத்தை ஒரு சலுகை மிக்க ஆனால், தற்காலிக காலமாக அமைத்தார்.

ஆ. மக்களுடைய பிரமாணிக்கமற்ற நிலை: இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழியானது, ஊட்டமும் பாதுகாப்பும் குறைவற்று இருந்த எகிப்தினுடைய வளமான நிலத்துடன் ஒப்பிட எதையுமே தன்னில் கொண்டிருக்கவில்லை. மாறாக, இஸ்ராயேலை வழிநடத்திச் சென்றவரின் மீதான உண்மையான விசுவாசத்தின் வழியாக மட்டுமே அஃது இருந்தது. பயணத்தின் தொடக்க முதலே "பாதுகாப்பில்லை, தண்ணீரில்லை, இறைச்சியில்லை" என இறைவனுடைய ஏற்பாடுகளுக்கு எதிராக எபிரேயர்கள் முணுமுணுக்கின்றனர். பாலைவனத்தில் முதல் மற்றும் இரண்டாம் சந்ததியினரால் எழுப்பப்பட்டது போன்று, நிகழ்ச்சியுரை முழுவதும் இந்தக் குற்றச் சாட்டுகள் காணப்படுகின்றன (யாத் 14:11; 16:2-3; 17:2-3; எண் 14:2-4; 16:13-14; 20:4-5; 21:5). சாதாரண வாழ்வை அவர்கள் வாழ முடியவில்லை. அதை இழந்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டின் மையக்கருத்துத் தெளிவாக உள்ளது. எகிப்தில் வாழ்ந்த காலம் கடினமானதாக இருந்தாலும், இறைவனுடைய கவனத்திற்கு மட்டுமே கையளிக்கப்பட்ட இந்த அசாதாரண வாழ்வைக்காட்டிலும் அதனையே விரும்பினர். எக்கணமும் அச்சுறுத்தும் மரணத்தைவிட அடிமை வாழ்வே மேலானது; மேலும், சுவையற்ற மன்னாவைவிட ரொட்டியும், இறைச்சியுமே உயர்ந்தது. இவ்வாறு பாலைவனமானது, தான் உட்பட்டுள்ள சோதனையை எதிர்கொள்ள இயலாத மனிதனுடைய இதயத்தை வெளிப்படுத்துகிறது.

இ. இறை இரக்கத்தினுடைய வெற்றி: விசுவாசமின்மையிலும், நம்பிக்கையற்ற நிலையிலும் கடினப்படுத்தப்பட்டுள்ள அனைவரும் பாலைவனத்தில் அழிந்து போக, இறைவன் அனுமதிக்கிறாரெனில், அவர் தனது

திட்டத்தைக் கைவிட்டு விடுவதில்லை. ஆனால், அவர் தீமையினின்று நன்மையை வெளிக்கொணர்கிறார். முணுமுணுக்கின்ற மக்களுக்கு வியத்தகு உணவையும், நீரையும் அளிக்கிறார். பாவிகளை அவர் தண்டிக்க வேண்டுமெனில், வெண்கலப் பாம்பு போன்ற எதிர்பாராத மீட்பின் சாதனங்களையும் அளிக்கிறார் (எண் 21:9). இறைவன் எப்போதுமே தனது புனிதத்தையும், மகிமையையும் ஒளிவீசச் செய்கிறார் (20:13). உண்மையான மக்கள் யோசுவாவுடன் சேர்ந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழையும்போது அவரது மகிமை தெளிவாகும். இறுதி வெற்றியானது மக்களுடைய பிரமாணிக்கமற்ற காலத்தைவிட இறைவனுடைய இரக்கம் நிறைந்த பிரமாணிக்கத்தின் காலத்தையே நமக்குக் காட்டுகிறது. எதிர்பாளர்களை முன்னதாகத் தடுத்துத் தனது திட்டத்தை முடிக்கின்ற இறைவனையே காணச்செய்கிறது.

2. பின்நோக்கிச் காட்சியில் பாலைவனக் காலம்: வாக்களிக்கப்பட்ட நாட்டில் நிலைப்படுத்தப்பட்ட மக்கள் வழிபாட்டுக்கும் கொடிய வளமைக்குமுரிய இடமாக அதை மாற்றுவதில் விரைவிலேயே வெற்றி கண்டனர். உடன்படிக்கையை அளித்தவரைவிட உடன்படிக்கையின் கொடைகளையே அவர்கள் பெரிதும் விரும்பினர். பிற்காலத்தில் பாலைவனக் காலமானது இறை மகிமையால் மேம்படுத்தப்பட்டு எடுத்துக்காட்டானதாகக் கருதப்பட்டது.

அ. மனமாற்றத்திற்கான அழைப்பு: பாலைவன நிகழ்ச்சிகளை மீண்டும் நினைவாக்கி, மீண்டும் நிகழ்காலத்தில் அவற்றைப் பிரசன்னப்படுத்துகிறது உப ஆகமம் (உப 8:2-4.15-18). இஃது இறைவனுடைய தந்தைக்குரிய அக்கறையின் வியப்புக்குரிய காலமாகும். மக்கள் அங்கேயே அழிந்து விடவில்லை. மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று, இறைவனுடைய வாயினின்று வருகின்ற ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான் என்பதை உணர்ந்து கொள்வதற்காக, இறைவன் அவர்களை அங்கே சோதிக்கிறார். அவ்வாறே, பாலைவனக் காலத்தில் நிலவிய வழிபாட்டின் வீறமைதி சடங்குமுறை வழிபாட்டில் மட்டுமே திருப்தியடையாதிருக்குமாறு இஸ்ராயேலைத் தூண்டுகிறது (ஆமோ 5:25=அ.ப. 7:42). இதற்கு நேர்மாறான நிலையில், கீழ்ப்படியாமையின் நினைவுகள் இறைவனில் மட்டுமான மனமாற்றம் மற்றும் நம்பிக்கைக்கான அழைப்பாகும். இப்போதாவது வணங்காக் கழுத்துடனும் இறைவனைச் சோதிப்பவராகவும் இருப்பதை விட்டுவிட்டு (சங் 78:17-18.40; 95:7-9; அ.ப. 7:51), செயல்களைச் செய்வதில் இறைவனுடைய வழிக்குப் பொறுமையுடன் தங்களை மாற்றிக்கொள்ளக் கற்று (சங் 106:13-14), அவரது இரக்கத்தின் வெற்றியை வியக்க வேண்டும் (நெகே 9; சங் 78; 106; எஸ் 20).

ஆ. இறைவனுடைய வியப்பு மிக்க செயல்கள்: இந்தப் பிரமாணிக்கமின்மைகளை ஒருவர் மனதிற்குக் கொண்டு வந்தாலும், பாலைவனப் பயணத்தை ஒரு தண்டனையாகக் காட்டும் எண்ணமே அங்கு இல்லை. தனது மக்களுடனான இறைவனுடைய மண ஒப்பந்தக்காலத்தில் நிகழ்ந்த வியப்பு நிகழ்ச்சிகளின் நினைவுகூர்தலாகவும் கருதப்பட்டதாகத் தெரியவில்லை. அது கானானில் நிகழ் காலத்திற்கு முரண்பட்ட பழமையின் எளிய வாழ்க்கைக்காலமாக இருந்தது. எனவே, எலியா ஓரேபிற்குச் செல்லும்போது பாலைவனத்தில் அடைக்கலம் நாடிச் செல்பவராக மட்டுமின்றி, இளைப்பாற இடம் தேடுபவராகவும் செல்கிறார் (1 அர 19). விசுவாசமற்ற துணைவியைத் திரும்பக் கொண்டு வருவதில் தண்டனைகள் வெற்றியடையாமையால், இறைவன் அவளைப் பாலைவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கே அவளது இதயத்துடன் பேசுவிருக்கிறார் (ஓசே 2:16). மீண்டும் அது மண ஒப்பந்தகாலமாக இருக்கும் (2:21-22). பழைய வியத்தகு நிகழ்ச்சிகள் நினைவில் அழகுபடுத்தப்படுகின்றன. மன்னாவானது விண்ணக ஊட்டச்சத்தாகவும் (சங்

78:24), எல்லாச் சுவையுமுள்ள அப்பமாகவும் உருவாகிறது (ஞான 16:21). இறைவன் பிரமாணிக்கமுள்ளவராய் இருப்பதனால், இப்போது இக்கொடைகள் நிகழ்காலப் பிரசன்னத்தின் பிணையமாகவும் உள்ளன. அவர் அன்புமிக்க தந்தையாகவும் (ஓசே 11), ஆயனாகவும் உள்ளார் (எசா 40:11; 63:11-14; சங் 78:52). மக்கள் இறைவனுடன் மிக நெருங்கி வாழ்ந்த இக்காலத்தின் காரணமாக, வழிநடத்தி ஊட்டமளிக்கிற ஒருவர்மீது எவ்வாறு ஒருவன் முழுமையான நம்பிக்கை வைக்காதிருக்க முடியும் (சங் 81:11)?

3. பாலைவன மாதிரி: பாலைவனக் காலமானது மாதிரிக் காலமெனில், முடிவில்லாமல் அதனை ஏன் நீட்டிக்கக்கூடாது? இதன் காரணமாகவே, கானானிய நாகரிகத்தைத் தாங்கள் புறக்கணிப்பதைக் காட்ட இரேக்காபியர்கள் கூடாரங்களில் வாழலாயினர் (எரே 35). இதனாலேயே, கும்ரான் துறவிகள் எருசலேமின் அதிகாரபூர்வ குருத்துவத்துடன் உறவை முறித்துக்கொண்டனர். பாலைவனத்திற்குச் செல்லுதலின் மறை பொருளானது ஒரு மேன்மையையும் கொண்டுள்ளது. துன்புறுத்தப்படும் சூழ்நிலைக்கு ஒரு பொருளையும் அஃது அளிக்க முடியும் (1 மக் 2:28.30; எபி 11:38). ஆனால், அது தோன்றிய செயல்முறையான, நிகழ்ச்சியினின்று அது தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்கிற அளவில், பலனற்ற பிடிகொடாமைக்குத் தாழ்ந்து போகக்கூடும். பாலைவனத்தில் வாழ்வதற்காக இறைவன் இஸ்ராயேலை அழைக்கவில்லை; ஆனால், வாக்களிக்கப்பட்ட நாட்டில் வாழ்வதற்காக பாலைவனத்தைக் கடந்து செல்ல அழைத்தார். மேலும், பாலைவனம் தனது உருவக மதிப்பீட்டைக் கொண்டுள்ள பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டோரால் எதிர்பார்க்கப்படும் மீட்பானது புதிய யாத்திரையாகக் கருதப்படுகிறது. பாலைவனமானது அவர்களது காலடிகளின்கீழ் மலரும் (எசா 32:15-16; 35:1-2; 41:18; 43:19-20). சில வெளிப்பாட்டு விவரிப்புகளில், காலத்தின் முடிவிலான மீட்பானது பாலைவனத்தை இன்பவனமாக மாற்றுவதாகக் காட்டப்படுகிறது; பின்னர், மெசியா பாலைவனத்தில் தோன்றுவார் (மத் 24:26; அ.ப. 21:38; திருவெளி 12:6.14).

III. புதிய ஏற்பாடு:

1. கிறிஸ்துவும் பாலைவனமும்: கும்ரானில் உள்ளதைப்போன்று எஸ்ஸேன் சமூகத்தவர் நகரினின்று அகன்று செல்வதை மிக உயர்வாகப் புகழ்ந்து பாலைவனத்திற்குச் சென்றாலும், அதற்கு எவ்வித மறைபொருளையும் அளிக்க திருமுழுக்கு யோவான் விரும்பவில்லை. சலுகைக்குரிய காலத்தைப் புதுப்பிக்கவே அவர் தனது செய்தியை அங்கே போதிக்கிறார். நீரானது அவர்களுடைய இதயங்களைப் புதுப்பித்த பின்னர், திருமுழுக்குப் பெற்றவர்களை அவர்களது பணிக்கு அவர் திருப்பியனுப்புகிறார் (லூக் 3:10-14). பாலைவனமானது வரவிருக்கும் மெசியாவை நோக்கிய, மனமாற்றத்தின் சாதனமாக மட்டுமே இருந்தது.

2. பாலைவனத்தில் கிறிஸ்து: இறைவனுடைய மக்களின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் மீண்டும் வாழ இயேசு விரும்பினார். பண்டைய எபிரேயரைப்போன்று, சோதிக்கப்படுவதற்கென அவர் இறைவனின் ஆவியால் பாலைவனத்திற்கு நடத்திச் செல்லப்பட்டார் (மத் 4:1-11 இணை). ஆனால், தனது மூதாதையருக்கு முரண்பட்ட வகையில், அவர் சோதனையை வென்று, தனது தந்தைக்குப் பிரமாணிக்கமுள்ளவராக இருக்கிறார். அவர் அப்பத்திற்குப் பதிலாக, இறை வார்த்தையையும், கவரும் புதுமைக்குப் பதிலாக நம்பிக்கையையும், உலக ஆதிக்கத்தினுடைய அனைத்து எதிர்பார்ப்பிற்குப் பதிலாக இறைவனுடைய பணியையும் தேர்ந்தெடுக்கிறார். யாத்திரையின்போது தோல்வியடைந்த சோதனையானது அதன் பொருளை இப்போது கண்டடைகிறது. இஸ்ராயேலின் ஊழ் நிறைவேற்றப்படுகின்ற தலைப்பேறான மகன்

இயேசுவே. மீண்டும் பெறப்பட்ட இன்பவனத்தின் கருத்தை மாற்கின் விவரிப்பில் நாம் காணக்கூடும் (மாற் 1:12-13).

3. கிறிஸ்து, நமது பாலைவனம்: தனது பொதுவாழ்வின் காலத்தில், மக்கள் கூட்டத்திடமிருந்து தப்பிப்பதற்கும் (மத் 14:13; மாற் 1:45; 6:31; லூக் 4:42), தனிமையாகச் செபிப்பதற்கும் (மாற் 1:35) உகந்த இடமாகச் சந்தேகத்திற்கிடமின்றி, இயேசு பாலைவனத்தைப் பயன்படுத்தினார். ஆனால், பாலைவன அடையாளத்தோடு நேரடியாகத் தொடர்புடையவைகளாக இச்செயல்கள் விவரிக்கப்படவில்லை. இதற்கு மாறாக, நேற்றைய நாளின் வியத்தகு கொடைகளைத் தன்னில் நிறைவேற்றுபவராக இயேசு காட்டப்படுகிறார். அவரே உயிருள்ள தண்ணீர், வானிலிருந்து வந்த அப்பம், வழியும் வழிகாட்டியும், இரவின் ஒளி, காப்பாற்றப்படுவதற்காக தன்னை உற்று நோக்கும் அனைவருக்கும் வாழ்வளிக்கும் பாம்பு. இறுதியாக, அவரது உடலிலும் இரத்தத்திலும் பங்கு கொள்வதன் மூலம் இறைவனுடைய நெருங்கிய அறிவானது நிறைவேறப்படக் கூடியது இவரிலேயே. ஒரு குறிப்பிட்ட பொருளில், கிறிஸ்துவே நமது பாலைவனம் என்றும் நாம் கூறலாம். அவரில் நாம் சோதனையை வெல்கிறோம்; அவரில் இறைவனோடு நாம் முழுமையான ஒன்றிப்பைக் கொண்டுள்ளோம். இனிமேல் பாலைவனமானது இடமாகவும் காலமாகவும் இயேசுவில் நிறைவேற்றப்படுகிறது. இங்கு உருவகமானது உண்மைக்கு வழிவிடுகிறது.

4. பாலைவனத்தில் திருச்சபை: பாலைவனத்தினுடைய அடையாளமானது திருச்சபையின் நிலையைப் புரிந்து கொள்வதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. சாத்தானுடைய வல்லமையை முடிக்கக்கூடிய கிறிஸ்துவின் மறுவருகை வரை, அது பாலைவனத்தில் மறைந்து வாழ்கிறது (திருவெளி 12:6.14). இயேசு பாலைவனத்தில் அப்பங்களைப் பெருகச் செய்து, பாலைவனத்தில் வாழ்வது அவசியமானதன்று; ஆனால், கிறிஸ்துவினுடைய வார்த்தையால் மட்டுமே மனிதன் உயரிய வழியில் வாழக்கூடிய புதிய காலமானது தொடங்கி விட்டது என்பதைக் காட்டும்போது, இந்த அடையாளமானது அதனுடைய விவிலியப் பின்னணியுடன் மிக நெருங்கிய உறவினைக் கொண்டுள்ளது (மத் 14:13-21 இணை).

பவுல் அதே முன்னோக்கைக் கொண்டுள்ளார். பழமையின் நிகழ்ச்சிகள் என்பவை காலத்தின் உச்சநிலைக்கு வந்துள்ள நமக்குப் படிப்பினைக்கானவை என்று அவர் கற்பிக்கிறார் (1 கொரி 10:11). மேகத்திலும், கடலிலும் திருமுழுக்குப் பெற்ற நாம், உயிருள்ள அப்பத்தினால் ஊட்டப்பெற்று, பாறையினின்று பொழியப்படுகின்ற ஆவியின் நீரில் தோய்க்கப்படுகிறோம். இப்பாறையே கிறிஸ்து. அஃது எந்தப் போலித்தோற்றமுமன்று. நாம் இன்னும் பாலைவனத்தில் ஆனால், அருட்சாதன முறையில் வாழ்கிறோம். எனவே, பாலைவனத்தினுடைய உருவகமானது, நாம் கிறிஸ்தவ வாழ்வின் இயல்பினை அறிந்து கொள்ள வேண்டுமாயின், விலக்கப்பட முடியாததாக உள்ளது.

இறைவனுடைய அமைதியில் நாம் நுழையாத வரையில் இவ்வாழ்வானது சோதனையினுடைய அடையாளத்தின்கீழ் வாழப்படுகிறது (எபி 4:1). எனவே, பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்வதன் மூலம், நமது இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாமலிருப்போமாக. நமது "இந்நாளானது" வெற்றியடைவது உறுதி. ஏனெனில், சோதனைக் காலத்தில் பிரமாணிக்கமாக இருக்கும் கிறிஸ்துவில் நாம் பங்காளர்களாக இருக்கிறோம் (3:14).

பால் (MILK)

பாலைவனத்தில் எபிரேயருடையதைப் போன்றிருந்த மேய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட நாகரிகத்தில், எவ்விதத்திலும் மனிதனுடைய உழைப்புத் தேவைப்படாத

இயற்கையின் கொடைகளில் ஒன்றாகிய பால், ஊட்டத்திற்கு முக்கிய அடிப்படைகளில் ஒன்றாகும். இஸ்ராயேலின் அன்றாட உணவில் ஒன்றாக இஃது எப்போதுமே இருந்தது (நீதி 5:25; பழ 27:27; சீரா 39:26). பால் மிகுதியாகக் கிடைப்பது செல்வத்தின் அடையாளமாகும் (யோபு 29:). வாக்குறுதிகளுடனும் அதனுடைய உருவகப் பயன்பாடுமான தொடர்பின் மூலம் பால் என்ற இச்சொல்லானது ஒரு அடையாளப் பொருளையும் கொண்டுள்ளது.

1. **இறை இரக்கத்தன்மை:** ஒரு தாய் தனது குழந்தைக்கு உணவூட்டுவதென்பது எல்லையற்ற பரிவையும். முனைப்பார்வத்தையும் வெளிப்படுத்துகின்ற மிக இயல்பான அடையாளங்களில் ஒன்றாகும் (2 மக் 7:21). இந்த உருவகமானது, சிறப்பாக எசிப்திலிருந்து வெளியேறி வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்லும் பின்னணியில், தனது மக்களுக்கான யாவேயின் அளவில்லாத இரக்கம் மற்றும் கவனம் நிறைந்த அக்கறை முதலியவற்றை விவரிப்பதற்கென இஸ்ராயேலில் பயன்பட்டிருக்க வேண்டும் என்பதில் வியப்பில்லை (எண் 11:12). பாலருந்திய பின் குழந்தையானது தனது தாயின் மார்பில் நிறைவோடு இளைப்பாறுவது போலத் தங்களை இறைவனிடம் விட்டுவிடுமாறு சங்கீத ஆரிசியர் மக்களை இதன் காரணமாக அழைக்கிறார் (சங் 13:2-3).

2. **இறையாசிகள் மற்றும் மெசியா வாக்குறுதிகளின் உருவகம்:** பாலின் மிகுதி வாக்குறுதிகளினுடைய உயரிய விவரிப்பின் ஒரு பகுதியாகும். இஸ்ராயேல் நுழையவிருக்கும் நாடானது "பாலும் தேனும் ஓடும் நாடு" என, பழைய ஏற்பாட்டில் அடிக்கடி விவரிக்கப்படுகிறது (யாத் 3:8; 13:5; உப 6:3; 11:9; எரே 11:5; எசே 20:6.15). "இந்த நல்ல பரந்த நாடு" (யாத் 3:8; காண்க. உப 32:12-14), "மற்றெல்லா நாடுகளிலும் பெருமைமிக்கதுமான நாடு" (எசே 20:6.15) என நாடோடி வாழ்வின் செல்வங்களில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. மெசியா முன்னோக்குடைய யூதாவின் ஆசியில் (ஆதி 49:8-12), யூதா நாட்டின் அசாதாரண வளமையானது திராட்சைரசம் மற்றும் பாலின மிகுதியால் விவரிக்கப்படுகிறது. இறைவாக்கினரிடையில் இந்த வளமையின் சித்திரம் வரவிருக்கும் காலங்களின் மாதிரியான நாட்டை விவரிக்கிறது (யோவே 4:18; எசா 55:1; 60:16). அது மெசியாவின் ஆறுதல் மற்றும் மீட்பினுடைய உருவகமுமாகும் (எசா 66:11-13). உன்னத சங்கீதத்தில் பாலானது மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையிலான அன்பின் இன்பத்தை அடையாளப்படுத்துகிறது (உ.ச. 4:11; 5:1). தேவைப்படும்போது இந்தப் பாலைவன ஊட்டமானது இம்மானுவேலுக்கும் தப்பிப் பிழைத்தவர்களுக்கும் மீண்டும் அடிப்படை உணவாகும். அதன் மிகுதி வாக்குறுதிகளை நினைவூட்டுவதாகும் (எசா 7:15.22).

வளமையானது இறையாசிகளின் அளவையாக இருக்குமெனில், போதுமான பாலில்லாமையும் பொதுவான பாழ்நிலையும் இறைவனுடைய சாபம் மற்றும் தண்டனையின் அடையாளமாகும். இஸ்ராயேலினுடைய குற்றங்களின் காரணமாக இஸ்ராயேலின் உதரங்களை மலடாக்கி, அவர்களது மார்புகளைக் காய்ந்து போகச் செய்யுமாறு ஓசே இறைவனிடம் கேட்கிறார் (ஓசே 9:14). புதிய ஏற்பாட்டின் நோக்கில் இறுதிக்காலத் தீர்ப்பானது எவ்வளவு பயங்கரமானதாக இருக்குமெனில், இயேசு கூறுவது போல, அந்நாளில் பால்தராத பெண்கள் பேறு பெற்றோர் (லூக் 23:29; 21:23) ஆவர்.

3. **இறைவனுடைய பிள்ளைகளின் பால்:** சாதாரணமாக, புதிய ஏற்பாடு உருவகப்பொருளில் பாலைப்பற்றிப் பேசுகிறது. போதனையை, இறைவனுடைய பிள்ளைகளின் உணவு எனப் பொருள் கொள்கிறது. குழந்தையின் முதிர்ச்சியடையாத நிலைமீது தனது கவனத்தை மையமாக்கியுள்ள பவுலைப் பொறுத்தவரை ஊனியல்புடைய கொரிந்தியருக்கு அளிக்கப்படும் பாலானது முதல் கிறிஸ்தவச் செய்தியாகும். இது நிறைவுடையவர்களுக்கென ஒதுக்கப்பட்ட

ஞானத்தினுடைய கெட்டியான உணவிற்கு மாறானதாகும் (1 கொரி 3:2; காண்க. எபி 5:12-14). இதற்கு மாறாக, 1 பேதுரு 22-இன்படி புதிய வாழ்விற்குள் பிறந்த விசுவாசி, வலிமையுடையவனாக வளர்ந்து மீட்பினை அடைவதற்காக, வார்த்தையின் பாலுக்காகத் தொடர்ந்து ஏங்க வேண்டும். ஏனெனில், அவன் எப்போதும் வளரும் குழந்தையாகவே இருப்பதால் இறைவனுடைய வார்த்தையின் பால் எப்போதும் தேவையாக உள்ளது. இறுதியாக, திருச்சபையின் தந்தையர்கள் கற்பித்தது போல, இவ்வார்த்தையானது கிறிஸ்துவேயாகும் (2:3). "உண்மையின் ஊட்ட உணவாகிய, வார்த்தை நமக்குத் தேவையாக உள்ளது" (அலக்சாந்திரிய கிளமெந்து).

பால்தசார் (BALTHASAR)

பின்னால் தோன்றிய பாரம்பரியப்படி குழந்தை இயேசுவைத் தரிசிக்க வந்த மூன்று அரசர்களில் ஒருவரான இவர் அரேபியாவைச் சார்ந்த ஓர் அரசன் என நம்பப்படுகிறது.

பால்பாயிம் (BALBAIM)

தோத்தானுக்கருகில் உள்ள ஒரு நகர். இது பேல்மாயினாக இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

பாவப்பரிகாரக் காணிக்கைகள் (SIN OFFERING)

இது பாவங்களுக்கான காணிக்கைகள் என்றும் குற்ற நீக்கக் காணிக்கைகள் என்றும் அழைக்கப்படும். இஃது ஒருவகையான விலங்குப் பலியாகும் (லேவி 4:1-5:13; 6:17-23). இப்பலி பெரிய குருவுக்காகவோ, மக்கள் அனைவர்க்குமாகவோ ஒப்புக் கொடுக்கப்பட்டால், பலியிடப்பட்ட விலங்கின் உடல், பீடத்தில் எரிக்கப்படுவதில்லை; மாறாக, ஆலயம் அல்லது கூடாரப்பகுதிக்குப் புறம்பே எரிக்கப்படும். மற்றச் சமயங்களில், அது குருக்களால் உண்ணப்பட வேண்டும். பாவப்பரிகாரக் காணிக்கையின் இரத்தம் திருத்தூயகத்தைப் பிரிக்கும் திரைமுன் தெளிக்கப்படும்; தகனப்பலிபீடத்தின் முன் ஊற்றப்படும். இது யாருக்காகப் பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது என்பதைப் பொருத்தது. பலிப்பொருளின் கொழுப்புப்பகுதிகள் பீடத்தில் எரிக்கப்படும். பலி செலுத்துபவர் மிக ஏழையென்றால், விலைமிக்க விலங்குக்குப் பதிலாக ஓர் ஏப்பாவின் பத்திலொரு பங்கு நல்ல மாவைக் காணிக்கையாக அளிக்கலாம்.

பல சூழ்நிலைகளில் பாவப்பரிகாரக் காணிக்கைகள் செலுத்தப்பட்டன. அவற்றின் பட்டியல்கள் லேவி 5:1-4-இல் கொடுக்கப்பட்டன. இப்பலிகள் குரு திருநிலைப்படுத்தப்பட்ட போதும் (யாத் 29:14), அமாவாசை நாளன்றும் (எண் 28:15), வருடாந்திர விழா நாட்களிலும் (28:22; 29:5. 11.16) ஒப்புக்கொடுக்கப்பட்டன.

பாவப்பரிகாரநாள், பாவநீக்க நாள் (ATONEMENT, DAY OF)

யூதர்களின் சமூக ஆண்டு திஸ்ரி (செப்டம்பர்-அக்டோபர்) என்ற ஏழாம் மாதத்தில் தொடங்கியது. புத்தாண்டு நாளில் தங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரம் செய்யுமாறு மக்களை அழைக்கும் நோக்கத்துடன் கொம்புகள் ஊதப்படும். அடுத்த பத்து நாட்களும் மக்கள் நோன்பு இருக்க வேண்டும். பத்தாவது நாள் பாவங்களுக்குப் பரிகாரமாக உருக்கத்தோடு தபசு செய்ய வேண்டும். உண்ணல், பானம் பருகுதல், குளித்தல், அழகு செய்தல் போன்றவை தடை செய்யப்பட்டிருந்தன. ஆலயத்தில் சிறப்பான வழிபாடுகள் நிறைவேறும். அவை பற்றிய விவரங்களை லேவியராகமம் பதினோராம் அதிகாரத்தில் நாம் காணலாம். பெரிய குரு தூய உடை அணிந்து, மக்களின் பாவங்களுக்குப் பரிகாரப் பலிக்காக இரு வெள்ளாடுகளையும், தகனப் பலிக்காக ஒரு செம்மறி ஆட்டையும், தமது பெயரில் பாவப்பரிகாரப் பலிக்காக ஓர் எருதையும் ஆலயத்துக்குள் இட்டுச் செல்வார். இரு வெள்ளாடுகளில் எது கடவுளுக்கு உரியது, எது "அசாசெல்"லுக்குரியது என்று திருவுளச் சீட்டுப்போட்டுத் தேர்ந்தெடுப்பர் ("அசாசெல்" என்பதற்குப் பொருள் என்ன என்று ஓர் இடத்திலும்

விளக்கப்படவில்லை. அது பெரும் பாலைநிலத்தில் உலவும் பேயாக இருக்கக்கூடும் என அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். இச்சடங்கு எப்போது தோன்றியது, பாவங்கள் சுமத்தப்பட்ட ஆடு ஏன் பேயிடம் அனுப்பப்படுகிறது என்பவை பற்றி அறியமுடிவில்லை. சிலர் "அசாசெல்" என்ற வார்த்தையைச் செங்குத்தான பாறை, கொடும்பாறை என மொழி பெயர்க்கின்றனர்). பின் பெரியகுரு தமக்காகவும் தமது வீட்டினருக்காகவும் பாவப்பரிகாரப் பலியாக எருதைக் கொன்று பலியிடுவார். பின் எருதின் இரத்தத்தைக் கையில் ஏந்தி, தூபப் புகைசூழ திருத்தூயகத்துக்குள் நுழைவார்; உடன்படிக்கைப் பெட்டகத்தை வலம் வருவார். பெட்டகத்தின் மேலுள்ள இரக்கத்தின் அரியணை மேல் ஒருமுறையும், பெட்டகத்தின் முன் ஏழு முறையும் எருதின் இரத்தத்தைத் தெளிப்பார்; பிறகு, வெளிவருவார். தமக்காகப் பரிகாரம் செய்தபின், பெரிய குரு மக்களுக்காகப் பரிகாரம் செய்வார். கடவுளுக்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட வெள்ளாட்டைப் பலியிட்டு, அதன் குருதியை முன்கூறியதுபோல் திருத்தூயகத்தினுள் சென்று தெளிப்பார். பின் தூயகத்தையும் அதன் பொருட்களையும் இரத்தத்தைத் தெளித்துச் சுத்தி செய்வார். இவ்விதம் பரிகாரச் சடங்கு நடைபெறும். அதன் விளைவாக அதிதூயகமும், தூயகமும், பீடமும் தீட்டிலிருந்தும், மக்களும் குருக்களும் தாங்கள் அறியாமல் செய்த பாவங்களினின்றும் சுத்தி செய்யப்பட்டனர். இவ்வாறு சுத்தி செய்யப்பட்ட மக்களுடன் பரிசுத்தமே இயல்பான இறைவன் ஒன்றிப்புக்கொள்வார். இதற்கு அடையாளம் உயிரைக் குறிக்கும் பலிப்பொருளாகிய இரத்தமே.

மேற்கூறப்பட்ட சடங்கிற்குப்பின், திருவுளச் சீட்டுப் போட்டு "அசாசெல்"லுக்கெனத் தெரிந்து கொள்ளப்பட்ட வெள்ளாடு தகனப்பலி பீடத்துக்குமுன் கொண்டு வரப்படும். அதன்மேல் தம்முடைய கைகளை விரித்து இஸ்ராயேலரின் சகல பாவங்களையும் அறிக்கையிடுவார் பெரிய குரு. இவ்வாறு அடையாளமாக மக்களின் பாவங்கள் சுமத்தப்பட்ட வெள்ளாடு பாலை நிலத்துக்குத் துரத்தப்படும். பிற்காலத்தில் இவ்வாடு செங்குத்தான பாறையிலிருந்து எறிந்து கொல்லப்பட்டது. இதில் பங்குகொண்ட குருக்களும் பிறரும் தங்களையே சுத்தி செய்தபின், செம்மறியாட்டைத் தகனப்பலியிடுவர்.

இந்நாள் பலவிதத்தில் சிறப்புடையது. இந்நாளை யூதர்கள் வெறுமனே "நாள்" அல்லது "யோமா" என்று அழைத்தனர். இதுவே இந்நாளின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் காட்டும். ஆண்டில் இந்நாளில் மட்டும் பெரிய குரு ஒருவரே திருத்தூயகத்துக்குள் நுழைவார். யூதர்கள் இத்தினத்தில் கடுமையான உபவாசம் இருந்தனர். தங்களுடைய பாவங்களுக்கு வருந்தி மன்னிப்புக்கேட்கும் இந்நாளை இறைவனோடு சமாதானம் செய்யும் பெருநாளாக யூதர்கள் கருதினர். இந்நாளைச் செபத்திலும், தியானத்திலும், சட்டத்தை வாசிப்பதிலும் செலவிட்டனர். இந்நாளை ஓய்வு நாளாக அனுசரித்தனர். இந்நாளின் முடிவிலே விருந்துண்டு மகிழ்வெய்தினர். இவ்விழாவைப்பற்றி நற்செய்திகளில் ஒரு குறிப்பும் இல்லை.

மோசே சட்டத்தால் கட்டளையிடப்பட்ட ஒரே நோன்பு நாளான பாவப்பரிகாரநாள் (காண்க. யாத் 30:10) நாடு கடத்தப்பட்ட பிற்காலத்தில் மேலும் முக்கியத்துவம் பெற்றது (காண்க. நெகே 9:1). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நோன்புகள் கடைப்பிடிக்கப்பட்டாலும் (காண்க. அ.ப. 27:9) கிறிஸ்தவர்களிடையே, பாவப்பரிகாரநாள் விழாபெரிய தலைமைக்குருவாகிய இயேசு கிறிஸ்துவின் பரிகாரப்பலியாகும் என்று மறுபொருள் அளிக்கப்பட்டது (எபி 9:11 தொ; காண்க. 5:5). காண்க. பெரிய குரு.

பாவம், பாவி (SIN, SINNER)

I. நாம் "பாவம்" என்று பொதுவாக அழைக்கும் உண்மை பற்றி விவிலியமானது அடிக்கடி, ஏன் ஒவ்வொரு பக்கத்திலும், பேசுகிறது. இதனைக் குறிக்க பழைய ஏற்பாடு பயன்படுத்தும் சொற்கள்

எண்ணற்றவையாகும். இவை மனித உறவுகளினின்று பெறப்பட்டவையாகவும் உள்ளன. செய்யாது விட்டுவிடுதல், கொடுமை, கிளர்ச்சி, அநீதி. யூத இனமானது கடன் என்ற சொல்லையும் சேர்க்கும். இந்தச் சொல்லைப் புதிய ஏற்பாடும் பயன்படுத்துகிறது. "இறைவனுடைய பார்வையில் தீமை புரிபவனைப்" பாவி என்று குறிப்பிடுவது இன்னும் பொதுவானதாகும். நீதிமான் சாதாரணமாக, கொடியவனுக்கு எதிரானவன். ஆனால் குறிப்பாக, விவிலிய வரலாறு முழுவதிலும் பாவத்தினுடைய உண்மையான இயல்பானது அதனுடைய அனைத்து வன்மத்துடனும் அனைத்துப் பரிமாணங்களிலும் தோன்றுகிறது. மனிதனைப் பற்றிய இந்த வெளிப்பாடானது அதே நேரத்தில் இறைவனைப் பற்றிய, பாவத்திற்கு முரண்பட்ட அவரது அன்பு பற்றிய, பாவத்தைப் பொறுத்தமட்டில் அவர் செயல்படுத்துகின்ற அவரது இரக்கம் பற்றிய, வெளிப்பாடாகவும் இருப்பதை நாம் அறிகிறோம். ஏனெனில் மீட்பின் வரலாறு என்பது, மனிதனை அவனுடைய பாவநிலையினின்று வெளிக்கொணர்வதற்கான படைத்தவராகிய இறைவனுடைய சோர்வற்ற, விடாப்பிடியான முயற்சிகளேயாகும்.

II. **மூலப்பாவம்:** பழைய ஏற்பாட்டின் அனைத்து விவரிப்புகளிலும் மனித இனத்தின் வரலாற்றைத் தொடங்குகின்ற முதல் வீழ்ச்சியின் விவரிப்பானது, தொடக்கத்தில் அசாதாரணமான வளப்பமுடைய படிப்பினையை அளிக்கிறது. அங்கு அச்சொல் பயன்படாவிடினும், பாவம் என்பது என்ன என்பதைப் புரிந்துகொள்வதற்கு, நாம் அங்கிருந்தே தொடங்க வேண்டும்.

1. **ஆதாமின் பாவம்:** ஆதாமினுடைய பாவமானது கீழ்ப்படியாமை என்று வெளிப்படுத்தப்பட்டது. இச்செயலின் மூலமாக இறைவனுடைய கட்டளைகளில் ஒன்றை மீறுவதன் மூலம், மனிதன் மனப்பூர்வமாக வேண்டுமென்றே தன்னை இறைவனுக்கெதிராக நிறுத்துகிறான் (ஆதி 3:3). ஆனால், கிளர்ச்சியெனும் இந்தப் புறச்செயலுக்கு அப்பாற்பட்டு, புறச்செயலுக்கு முற்பட்ட ஓர் உள்ளார்ந்த செயலை மறை நூல் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. பாம்பின் ஆலோசனைக்கு இணங்கி "நன்மை தீமை அறிந்தவர்களாய்க் கடவுள்களைப் போல இருக்க" விரும்பியதன் காரணமாக ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படிய மறுத்தனர் (3:5); அதாவது, மிகவும் பொதுவான விளக்கவுரையின்படி, நன்மை தீமையினைத் தீர்மானிப்பதில் இறைவனுடைய இடத்தைத் தாங்களே எடுத்துக்கொள்ள அவர்கள் விரும்பினர். தங்களையே அளவாக ஏற்று, தங்களுடைய ஊழினை நிர்ணயிக்கும் தலைவர்களாக உரிமை கொண்டாடினர். தாங்கள் விரும்பியவாறு நடந்து கொண்டனர். தங்களைப் படைத்தவரைச் சார்ந்திருப்பதற்கு மறுத்தனர். இதன் விளைவாக, மனிதனை இறைவனுடன் ஒன்றிக்கின்ற உறவினைத் தவறாகப் பயன்படுத்தினர்.

இப்போது, ஆதி 2-இன்படி, இந்த உறவானது சார்ந்திருப்பது மட்டுமின்றி, நட்புறவாகவும் இருந்தது. பண்டைய புராணக்கதைகளில் நாம் காணும் தெய்வங்களைப் போலன்றி, விவிலியத்தின் இறைவன் "தனது உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட" மனிதனுக்கு எதையும் மறுக்கவில்லை (ஆதி 1:26-27). தனக்கென எதையுமே, வாழ்வைக்கூட அவர் ஒதுக்கி வைக்கவில்லை (காண்க. ஞான 2:23). பாம்பினுடைய ஆலோசனையினால் மட்டுமே ஏவாளும், பின்னர் ஆதாமும் இறைவனுடைய எல்லையற்ற தாராளத் தன்மையைச் சந்தேகிக்க ஆரம்பித்தனர். மனிதனுடைய நன்மைக்கென இறைவனால் அளிக்கப்பட்ட கட்டளையானது (காண்க. உரோ 7:10), அவரது சலுகைகளைக் காப்பதற்கென இறைவனால் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் உபாயமாகும் என்றும், கட்டளையுடன் சேர்ந்துள்ள அச்சுறுத்தலானது ஒரு பொய்யே என்றும் கருதினர். "நீங்கள் சாகவே மாட்டீர்கள். ஏனெனில், நீங்கள் அதிலிருந்து உண்ணும்

நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்" (ஆதி 3:4-5). மனிதன் தனக்கு எதிராளியாக உருவான இறைவனை எதிர்த்து மீறுகிறான் இறைவனைப் பற்றிய கருத்தே தவறாகப் பயன்படுத்தப்பட்டது. ஏனெனில், மேலாண்மையோடு நிறைவுள்ளவராக இருப்பதால் மேலாண்மை மிக்க தன்னலமற்றவராயும், எதுவும் தேவையற்றவராகவும் கொடுக்கக் கூடியவராகவும் மட்டுமே உள்ள இறைவனைப் பற்றிய கருத்துக்குப் பதிலாக, தனது படைப்பிற்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதிலேயே முழுவதும் கவனமுள்ளவராகவும் விருப்பமுடையவராகவும் தேவை உள்ளவராகவும் கடவுள் கருதப்பட்டார். மனிதனைச் செயல்படத் தூண்டுவதற்கு முன் பாவம் அவனது ஆவியைக் கெடுத்தது. யாருடைய சாயலாக இருந்தானோ அந்த இறைவனுடனான உறவையே இது பாதித்தது. இதைவிட, கொடுமையான நெறிப்பிறழ்வைச் சிந்தித்துப் பார்க்கமுடியாது; அதனால், ஏற்பட்ட பயங்கர விளைவுகள் வியப்பு அளிக்க வேண்டியதில்லை.

2. பாவத்தின் விளைவுகள்: மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் அனைத்தும் மாறிவிட்டன. மனச்சாட்சியின் தீர்ப்பு இதுவே. தண்டனை தொடங்குவதற்கு முன்னரே (ஆதி 3:23), இதுவரை இறை நட்பை அனுபவித்து வந்த ஆதாமும், ஏவாளும் (2:25), "ஆண்டவராகிய கடவுளின் திருமுன்னிலையிலிருந்து தோட்டத்தின் மரங்களுக்கு இடையே ஒளிந்து கொண்டார்கள்" (3:8). தொடக்க முயற்சியானது மனிதனிடமிருந்தே வந்ததால், தவறுக்கான பொறுப்பும் அவனிடமே உள்ளது. இறைவனை இனியும் விரும்பாமல், அவரிடமிருந்து ஓடிப்போனவன் இவனே. இன்பவனத்தினின்று விரட்டப்பட்டதிலிருந்து மனிதன் தன்னுடைய விருப்பத்தை உறுதிப்படுத்தும் அச்சுறுத்தலானது ஒரு பொய்யன்று என்பதைப் பின்னரே அவன் அறிந்து கொள்வான். இறைவனுக்குத் தொலைவான நிலையில், வாழ்வின் மரத்தினை அணுகுவது இயலக்கூடியதன்று (3:22). உறுதியான மரணம் மட்டுமே மீதியாக உள்ளது. ஆதாமும் ஏவாளும் இன்ப வனத்தினின்று வெளியே தள்ளப்பட்டு விட்டனர். இந்நேரம் முதல், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுகளில் முறிவு ஒன்று உள்ளது.

பாவமானது மனித சமூக உறுப்பினர்களுடைய உறவுகளிலும் ஒரு முறிவைப் புகுத்தியது. இந்த முறிவு முதல் பெற்றோரின் இதயத்திலேயே இருந்தது. ஆதாம் பின்வாங்கியபோது, இப்பாவம் புரியப்பட்டிருந்தது. "தனது எலும்பின் எலும்பாகவும், தசையின் தசையாகவும்" (2:23) இறைவன் அவருக்குத் துணையாக (2:18) அளித்தவளை அவர் குற்றஞ்சாட்டுகிறார். தண்டனையானது இந்த முறிவை உறுதிப் படுத்துகிறது. "உன் கணவன்மேல் நீ வேட்கை கொள்வாய்; அவனோ உன்னை ஆள்வான்" (3:16). அதன் பின்னர், இந்த முறிவு ஆதாமின் பிள்ளைகளுக்கும் பரவும்; ஆபேலில் கொலை நிகழும் (4:8); பின்னர், இலாமேக்கின் கட்டுப்பாடற்ற பாடல் புகழ்கின்ற வன்முறை மற்றும் வலியோரின் சட்டத்தின் ஆட்சி நிலவும் (4:24).

அது மட்டுமே அனைத்துமன்று. பாவத்தினுடைய மறைபொருளானது மனித உலகிற்கும் அப்பால் செல்கிறது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில், காட்சியில் ஒரு மூன்றாம் நபர் நுழைகிறான். பழைய ஏற்பாடு அரிதாகவே அவனைப்பற்றிப் பேசும். அவனை இரண்டாம் தெய்வமாக மாற்றுவதைத் தடுக்கவே இந்நிலை அவனைப் பேய் அல்லது சாத்தான் என அடையாளப்படுத்துகிறது (ஞான 2:24). புதிய ஏற்பாட்டில் அவன் மீண்டும் தோன்றுவான்.

இறுதியாக, மனிதனுக்கு நம்பிக்கை அளிக்கப்படாவிடின், முதல் பாவத்தினுடைய விவரிப்பானது முடிவு பெறாது. தான் சுதந்தரம் அடைவேன் என்று எண்ணிய நிலையில், தான்

தண்டிக்கப்பட்ட அடிமைத்தனமானது சந்தேகமின்றி தன்னிலே உறுதியானதாகும். பாவம் உலகில் நுழைந்தவுடனேயே, அது விரைந்து பெருகும். அது பெருகுவதற்கேற்ப, வெள்ளத்தில் முழுமையாக மறையும் அளவிற்கு அது குறையும் (ஆதி 6:13-15). முறிவு மனிதனால் தொடங்கப்பட்டதனால், ஒப்புரவுக்கான முன் முயற்சி இறைவனிடமிருந்தே வரும் என்பது தெளிவு. முதல் விவரிப்பின் நேரத்திலேயே தாம் ஒருநாள் முன் முயற்சியை எடுப்போம் என்பதை இறைவன் சுட்டிக்காட்டுகிறார் (3:15). மனிதன் இகழ்ந்து ஒதுக்கிய இறைவனுடைய நன்மைத்தனமானது இறுதியாக வெற்றிகொள்ளும். அது "நன்மையால் தீமையை வெல்லும்" (உரோ 12:21). ஆதாம் "தன்னுடைய சொந்தக் குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டார்" என ஞானநூல் குறிப்பிடுகிறது (ஞான 10:1). எது எப்படியிருந்தாலும் ஆதியாகமமானது இறைவனுடைய நன்மைத்தனம் செயல்படுவதைக் காட்டுகிறது. ஏனெனில், நோவாவுடன் புதிய உலகைப் படைப்பதற்கென (ஆதி 8:17.21-22; 1:22.28; 3:17), நோவாவையும் அவரது குடும்பத்தையும் உலகளாவிய சீர்கேடு மற்றும் தண்டனையினின்று அது காப்பாற்றுகிறது (6:5-8). "மக்களினங்கள் தங்களது ஒருமித்த கெட்ட நடத்தையால் குழப்பத்திற்குள்ளான போது" (ஞான 10:5), அஃது ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து, அவர் மூலமாக உலகின் அனைத்து இனங்களும் ஆசீர்வதிக்கப்படுவதற்கென (ஆதி 3:14-16-உடன் தெளிவாகத் தொடர்புடைய 12:2-3), அவரைப் பாவ உலகினின்று வெளியே இழுத்தது (ஆதி 12:1; காண்க. யாக் 24:2-3.14).

III. இஸ்ராயேலின் பாவம்: பாவமானது மனித வரலாற்றின் தொடக்கத்தில் ஓர் அறிகுறியை இடுவதுபோல், இஸ்ராயேலின் வரலாற்றின் மேலும் ஓர் அறிகுறியை இடுகிறது. அதனுடைய பிறப்பின் முதலிலிருந்தே இஸ்ராயேலானது ஆதாமின் வாழ்வை மீண்டும் வாழ்ந்தது. தனது முறையில், தன்னுடைய அனுபவத்தின் மூலமாகவே அஃது அறிந்து, பாவம் என்றால் என்ன என்பதை நமக்குக் கற்பிக்கிறது. இரு நிகழ்ச்சிகள் குறிப்பாகக் கற்பிக்கக் கூடியவையாகத் தோன்றுகின்றன.

1. பொன் கன்றுக்குட்டியை ஆராதித்தல்: ஆதாமைப் போன்று கூடுமானால் இன்னும் அதிகமாகக் கைம்மாறு தராத விதத்தில், இறைவனுடைய கொடைகளால் பொங்கி வழியும் அளவிற்கு இஸ்ராயேல் நிறைவிக்கப்பட்டது. தன்னளவில் எத்தகுதியும் இன்றி (உப 7:7; 9:4-6; எசே 16:2-5), இறைவனுடைய அன்பினால் மட்டுமே (உப 7:8), உலகின் அனைத்து மக்களிடையே சலுகைக்குரிய சிறப்பான மக்களாக, அது தேர்ந்தெடுக்கப்பட்டு (யாத் 19:5) "இறைவனுடைய தலைப்பிள்ளையாக" (4:22) உருவாக்கப்பட்டது. ஏனெனில், இஸ்ராயேலானது மற்ற இனங்களைவிட அதிகமாகவோ, குறைவாகவோ பாவியாக இருக்கவில்லை (யோசு 24:2.14; எசே 20:7-8.18). பார்வோன் மற்றும் பாவத்தினுடைய நாடு (5:1-இன்படி ஒருவன் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய முடியாத இடம்) ஆகியவற்றின் அடிமைத்தனத்தினின்று அதனை விடுவிக்க, இறைவன் தனது வியப்புச் செயல்களைப் பெருக்கினார். ஆனால், இறைவன் தன்னையே அவர்களுக்கு ஒப்படைத்து, "சாட்சியப் பலகைகளை" மோசேயிடம் அளித்துத் (31:18), தனது மக்களுடன் உடன்படிக்கை மேற்கொண்ட அதே தருணத்தில், "எங்களை வழிநடத்தும் தெய்வங்களை எங்களுக்கு உருவாக்கிக் கொடும்" (32:1) என்று மக்கள் ஆரோனைக் கேட்டனர். தனது பற்றுறுதி பற்றி இறைவன் நிரூபணங்களை அளித்திருந்தாலும், மக்கள் அவரைத் தொலைவிலுள்ளவராகவும், காண முடியாதவராகவும் கொண்டு, அவரில் விசுவாசங்கொள்ளாதவர்களாக இருந்தனர். அவர்களுக்கு எட்டிய தொலைவில் உள்ள, பலிகளால் கோபத்தைத் தணிக்கக்கூடிய கடவுளையே இஸ்ராயேல் விரும்பியது. எவ்வாறாயினும், இஸ்ராயேலானது

உண்மையான இறைவனைப் பின் தொடர்ந்து, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக (காண்க. 40:36-38), தனது சிந்தனைக்கேற்ப மாற்றப்படக்கூடிய கடவுளையே விரும்பியது. இறைவனுடன் நடப்பதற்குப் பதிலாக, இறைவன் தன்னுடன் நடக்க வேண்டுமென இஸ்ராயேல் விரும்பியது.

இஸ்ராயேலின் "மூலப்"பாவமானது கீழ்ப்படிய மறுத்ததாகும். அதாவது, இறைவனை விசுவசித்து, தன்னை அவரிடமே விட்டுவிட மறுப்பதாகும். கீழ்ப்படிய மறுப்பதை உப 9:7 குறிப்பிடுகிறது. உண்மையில், "வணங்காக் கழுத்துடைய மக்களின்" எண்ணற்ற கிளர்ச்சிகள் ஒவ்வொன்றிலும் இது புதுப்பிக்கப்படும். வெகுகாலத்திற்குப் பின்னர், ஆண்டவருக்கு அளிக்கப்படும் வழிபாட்டுடன் பாகாலுக்கும் வழிபாடு அளிக்குமாறு இஸ்ராயேல் சோதிக்கப்பட்டபோது, தனக்கு வாழ்வு அளித்தவர் இறைவனே என்றும், அவருக்குப் பணிசெய்ய வேண்டியது கடமை என்றும் ஏற்று, தனக்கு " அவசியமானவர் அவர் ஒருவரே" என்ற யாவேயைக் காண இஸ்ராயேல் மறுத்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும் (உப 6:13; காண்க. மத் 4:10). பிற்காலத்தில், சிலை வழிபாடான பாவத்தின் வன்மத்தைப் பவுல் விவரிக்கும்போது, புறவினத்தாரிடையிலும், இஸ்ராயேலின் முதல் பாவத்தைப் பற்றிக் குறிப்பிட அவர் தயங்குவதில்லை (உரோ 1:23; சங் 106:20).

2. இச்சையின் கல்லறைகள்: பொன்கன்றுக்குட்டி நிகழ்ச்சிக்குப் பின்னர் உடனடியாக உப 9:22 இஸ்ராயேலின் மற்றொரு பாவத்தை நினைவு கூர்கிறது. "பாலைவனப் பாவங்களுக்கு" மாதிரியாகப் பவுல் இதனைப் பயன்படுத்துகிறார் (1 கொரி 10:6). இந்நிகழ்ச்சியின் பொருளானது தெளிவாக உள்ளது. இறைவன் புதுமையான முறையில் தேர்ந்தெடுத்து அளித்த உணவு வகைகளைவிட, தனது தேர்விற்கு ஏற்ற உணவுகளையே இஸ்ராயேல் விரும்பியது. "நமக்கு உண்ண இறைச்சி யார் தருவார்?...இப்பொழுதோ நம் வலிமை குன்றிப்போயிற்று; மன்னாவைத் தவிர வேறதுவும் நம் கண்களில் படுவதில்லையே!" (எண் 11:4-6). இஸ்ராயேலானது இறைவனால் நடத்திச் செல்லப்பட மறுத்தது; அவரில் நம்பிக்கை கொள்ள மறுத்தது; இறைவனுடைய விருப்பப்படி பாலைவனத்தில் ஆன்மீக அனுபவத்தை ஏற்க மறுத்தது (உப 8:3; காண்க. மத் 4:4). இஸ்ராயேலின் இச்சைகள் திருப்தி செய்யப்படும். ஆனால், ஆதாமைப் போன்று, இறைவனுடைய வழிகளுக்குப் பதிலாக மனிதன் விருப்பம்போல் நடத்தலின் விளைவுகளை இஸ்ராயேல் அறிந்து கொள்ளும் (எண் 11:33).

IV. இறைவாக்கினர்களின் போதனை: இறைவன் தனது இறைவாக்கினர்களின் மூலமாக இஸ்ராயேலுக்கு மீண்டும் எடுத்துக்கூறிய போதகம் இதுவே. இவ்வாறு, தானாகவே கட்டியெழுப்ப முடியும் என்று எண்ணும் மனிதன், தன்னுடைய அழிவை மட்டுமே கொண்டு வருவான். எனவே, இறைவன் வரைந்த பாதையை விட்டு விலகிய உடனேயே இறைவனுடைய மக்கள் அழிவுறுகின்றனர். உண்மையில், பாவம் இஸ்ராயேலுக்கான இறைவனின் திட்டத்திற்கும் அவரது ஆட்சிக்கும் இறைவனுடைய மக்களாகிய இஸ்ராயேலின் மகிமையுடன் ஒப்பிடப்படக்கூடிய அவரது மகிமைக்கும் மிகச்சிறப்பான முறையில் ஒரே தடையாகக் கருதப்படுகிறது. இந்தக் தலைவருடைய நோக்கில் அரசனுடைய, குருவினுடைய பாவமானது சிறப்பான பொறுப்புடையது என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. இதன் காரணமாகவே தனிப்பட்ட விதத்தில் இல்லாவிடினும், குறிப்பிட்ட விதத்தில் இது குறிப்பிடப்படுகிறது. ஆக்கானுடைய பாவமானது இஸ்ராயேலின் படையை ஆயிக்கு முன்னர் நிறுத்தியது (யோசு 7). பெரும்பாலும், ஒரு குழுவான மக்களுடைய பாவங்கள் நாட்டினுடைய இடையூறுகளுக்குப் பொறுப்பாக இறைவாக்கினரால் கருதப்பட்டன. "மீட்க இயலாதவாறு, கை குறுகிவிடவில்லை கேட்க

முடியாதவாறு ஆண்டவரின் காது மந்தமாகி விடவில்லை. உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும் உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ள" (எசா 59:1-2).

1. பாவத்தைக் கண்டனம் செய்தல்: இறைவாக்கினர்களுடைய போதனையானது பெருமளவிற்குப் பாவத்தைக் கண்டனம் செய்வதில் அடங்கியுள்ளது. தலைவர்களது பாவத்தையும் (1 சாமு 3:11; 13:1-14; 2 சாமு 12:1-15; எரே 22:13), மக்களுடைய பாவத்தையும் இது கொண்டுள்ளது. இவ்வாறு சாதாரணமாக, கிட்டத்தட்ட நேரடியாகப் பத்துக் கட்டளைகளைச் சுட்டிக்காட்டும் இறைவாக்கு இலக்கியத்தில் அடிக்கடி காணப்படுகின்ற பாவங்களின் கணக்கீடுகளை நாம் கொண்டுள்ளோம். ஞான இலக்கியத்தில் இந்த விவரங்கள் ஏராளமாக உள்ளன (உப 27:15-26; எசே 18:5-9; 33:25-26; சங் 15; பழ 6:16-19; 30:11-14). பாவமானது செயல் முறையான உண்மை ஆகிறது. யாவே பின்வாங்கியதற்கான காரணத்தையும் நாம் அறிகிறோம். வன்முறை, திருட்டு, அநீதியான தீர்ப்பு, பொய்கள், விபசாரம், பொய்ச்சத்தியங்கள், மனிதக்கொலைகள், தகாதவட்டி, உரிமைகளைப் புறக்கணிக்கும் மனப்பான்மை, மற்றும் சுருக்கமாக அனைத்துச் சமூக ஒழுங்கின்மைகளே, இதற்குக் காரணம். எசா 59-இல் இடைச் செருகலாயுள்ள "அறிக்கை", "இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே பிளவை உண்டாக்கிய" (59:2), இந்த அநீதிகள் என்ன என்பதைச் செயல்முறையாக வெளிப்படுத்துகின்றது. "எங்கள் குற்றங்கள் எங்களோடு இருக்கின்றன. எங்கள் தீச்செயல்களை நாங்களே அறிவோம். ஆண்டவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து அவரை வஞ்சித்தோம்; எங்கள் கடவுளைப் பின்பற்றாது அகன்று போனோம்; ஒடுக்குவதையும் கிளர்ச்சி செய்வதையும் பற்றிப் பேசினோம்; பொய்யானவற்றை மனதில் உருவாக்கி அவற்றை மொழிந்தோம்; நீதி துரத்தப்பட்டது; நேர்மை தொலைவில் நின்றது; பொது இடங்களில் வாய்மை நிலை குலைந்தது; உண்மைக்கு அங்கே இடமில்லை" (59:12-14). இதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே ஓசேயா அதே முறையில் பேசினார்: "நாட்டில் உண்மையுமில்லை, இரக்கமும் இல்லை; கடவுளை அறியவும் அறிவும் இல்லை. பொய்யாணை, பொய்யுரை, கொலை, களவு, விபசாரம் ஆகியன பெருகிவிட்டன". எல்லாக் கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிகின்றனர்; இரத்தப்பழிமேல் இரத்தப்பழி குவிகின்றது. "ஆதலால் நாடு-புலம்புகிறது" (ஓசே 4:1-2; காண்க. எசா 1:17; 5:8; 65:6தொ; ஆமோ 4:1; 5:7-15; மீக் 2:1-2).

படிப்பினையானது முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்தது. இறைவனைச் சாராமல் தானாகவே கட்டியெழுப்ப முடியும் என்று எண்ணும் மனிதன், பெரும்பாலும் மற்றவர்களின் இழப்பின் மூலமாக, குறிப்பாகச் சிறியோர் மற்றும் எளியோர்களின் இழப்பின் மூலமாகவே அதனைச் செய்து முடிப்பான். "கடவுளைத் தன் புகலிடமாய்க் கொள்ளாதவன்"... "அழிவுச் செயலையே புகலிடமாய்க் கொள்வான்" (சங் 52:7); "கேடு விளைவிக்கத் திட்டமிடுவான் (52:2); நீதிமானோ, "கடவுளின் பேரன்பில் எப்போதும் நிலையாக நம்பிக்கை வைத்திருக்கிறான்" (52:8) என்று சங்கீத ஆசிரியர் போதிக்கிறார். தாவீதினுடைய விபசாரமானது ஏற்கெனவே இதனைப்பற்றி ஒரு கருத்தை அளிக்கவில்லையா (2 சாமு 12)? ஆயினும், பாவம் பற்றிய யூதக் கருத்திலிருந்து அதனுடைய முக்கியத்துவம் அறியப்படுகின்ற அந்நிகழ்ச்சியினின்று, எவ்விதத்திலும் குறைவு படாத மற்றொரு உண்மை பெறப்படுகிறது. மனிதனுடைய பாவமானது இறைவனுடைய உரிமைகளைத் தாக்குவதோடு நில்லாமல், இதயத்தையே பாதிக்கிறது.

2. பாவம், இறைவனுக்கு எதிரான குற்றம்: உண்மையில் இறைவனைப் புண்படுத்த பாவியால் முடியாது. விவிலியமானது இறைவனது யாவும் கடந்த நிலை பற்றி அதிக அக்கறை கொண்டுள்ளது; ஆகவே, அவ்வப்போது

இந்த உண்மைகளை நினைவுபடுத்துகிறது: "எனக்கு வருத்தம் வருவிக்கும்படி வேற்றுத்தெய்வங்களுக்குப் பானப்படையல் படைக்கிறார்கள். எனக்கா வருத்தம் வருவிக்கிறார்கள் என்கிறார் ஆண்டவர்; தங்களுக்குத்தாமே அவ்வாறு செய்து கொள்கிறார்கள்! வெட்கக்கேடு!" (எரே 7:18-19). "நீர் பாவம் செய்தால் அவருக்கெதிராய் என்ன சாதிக்கிறீர்? நீர் மிகுதியான அக்கிரமங்களைச் செய்வதால், அவருக்கு என்ன செய்து விடுகிறீர்?" (யோபு 35:6). இறைவனுக்கெதிராகப் பாவம் புரிவதால் மனிதன் தன்னையே அழித்துக்கொள்கிறான். இறைவன் நமக்கெனச் சட்டங்களை வகுக்கிறாரெனில், அவை அவருக்காக இல்லாமல் "நமக்கு இன்று இருப்பதுபோல் என்றும் நலமாகும் பொருட்டும், நமது வாழ்வை அவர் பாதுகாக்கும் பொருட்டும்" (உப 6:24) அவற்றை அளித்தார். ஆனால், விவிலியத்தினுடைய இறைவனென்பவர், மனிதனுக்கும் உலகிற்கும் விருப்பு வெறுப்பற்ற அரிஸ்டாட்டிலினுடைய இறைவனல்லர்.

அ) பாவமானது இறைவனை அவரிலேயே புண்படுத்தாவிடின், அவர் அன்பு செய்பவரைப் பாதிக்கும் அளவிற்கு அது அவரைப் புண்படுத்துகிறது. இவ்வாறு, "இத்தியனான உரியாவை நீ வாளுக்கு இரையாக்கி அவன் மனைவியை உன்மனைவியாக்கிக் கொண்டதன்" மூலம் இஸ்ராயேலனல்லாத ஒரு மனிதனை மட்டுமே புண்படுத்தியதாகத் தாவீது எண்ணினார். இறைவன் எல்லா மனித உரிமைகளின் காப்பாளராகத் தன்னையே அமைத்திருப்பதை அவர் மறந்து விட்டார். அவர் யாவேயைப் புறக்கணித்து விட்டார். அதன் விளைவாக அவர் தண்டிக்கப்படுவார் என்று ஆண்டவர் பெயரால் நாத்தான் தாவீதுக்கு அறிவிக்கிறார் (2 சாமு 12:9-10).

ஆ) மேலும், பாவமானது வாழ்வின் தனிச்சிறப்பான ஒரே ஊற்றாகிய இறைவனிடமிருந்து மனிதனைப் பிரிக்கிறது. இதனால், இறைவனுடைய அன்பின் திட்டத்தில் அவரையே இது பாதிக்கிறது. "நம் மக்களோ என் மாட்சியைப் பயனற்ற ஒன்றிற்காக மாற்றிக் கொண்டனர்... பொங்கி வழிந்தோடும் நீரூற்றாகிய எனைப் புறக்கணித்தார்கள். தங்களுக்கென்று தண்ணீர் தேங்காத உடைந்த குட்டைகளைக் குடைந்து கொண்டார்கள்" (எரே 2:11.13).

இ அந்த அன்பினுடைய ஆழத்தை விவிலிய வெளிப்பாடு அறியச்செய்யும் அளவிற்கு, மனிதனுடைய பாவமானது இறைவனைப் புண்படுத்தக்கூடும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பாவம் என்பது அன்புடைய தந்தைக்குப் பிள்ளை காட்டும் நன்றியின்மையாகும் (எசா 64:7). "தாய்மார்கள் பிள்ளையை மறப்பதானாலும், தனது வயிற்றின் கனியை மறவாத" தாய்க்குப் பிள்ளை காட்டும் நன்றியின்மையாகவும் உண்மையில் இஃது உள்ளது (எசா 64:7). "தாய்மார்கள் பிள்ளையை மறப்பதானாலும், தனது வயிற்றின் கனியை மறவாத" தாய்க்குப் பிள்ளை காட்டும் நன்றியின்மையாகவும் உண்மையில் இஃது உள்ளது (எசா 49:15). சிறப்பாக, பாவமானது கணவனுடைய குறைவற்ற அன்பிற்கு அக்கறையற்றவளாய், வருவோருடனெல்லாம் வேசித்தனம் புரியும் மனைவியின் துரோகத்தைப் போன்றதாகும். "பற்றுறுதியற்ற இஸ்ராயேல் செய்ததைக் கண்டாயா?... இவை அனைத்தையும் செய்தபின் என்னிடம் திரும்பிவருவாள் என நம்பினேன். அவளோ திரும்பி வரவில்லை.... பற்றுறுதியற்ற இஸ்ராயேலே, என்னிடம் திரும்பிவா என்கிறார் ஆண்டவர். நான் உன் மீது சினம் கொள்ள மாட்டேன். ஏனெனில், நான் பேரன்பு கொண்டவன் என்கிறார் ஆண்டவர். நான் என்றென்றும் சினம் கொள்ளேன்" (எரே 3:6.7.12; காண்க. எசே 16:23).

வெளிப்பாட்டின் இந்தக்கட்டத்தில் பாவமானது தனிப்பட்ட உறவுகளின் மீறலாகத் தோன்றுகிறது. அன்பு செய்யப்படாமல் துன்புறுகிற, அன்பினால் வடுப்படுத்தப்படக்கூடிய இறைவனால் அன்பு

செய்யப்படுவதற்குத் தன்னைக் கையளிக்க மனிதன் மறுக்கிறான். புதிய ஏற்பாட்டில் மட்டுமே முழுமையாக வெளிப்படுத்தப்படக்கூடிய அன்பின் மறைபொருளாக இஃது உள்ளது.

3. பாவத்திற்குப் பரிகாரம்: மனமாற்றத்திற்கும் பெரும் ஆற்றலோடு அழைப்பதற்காகவே இறைவாக்கினர்கள் பாவத்தினைக் கண்டனம் செய்து அதனுடைய கொடுமையை வெளிப்படுத்துகின்றனர். மனிதன் பற்றுறுதியற்றவனாய் இருந்தாலும், இறைவன் பற்றுறுதியுள்ளவராய் இருக்கிறார். மனிதன் இறைவனுடைய அன்பை ஏற்க மறுத்தாலும், அதனை அளிப்பதை இறைவன் விட்டுவிடுவதில்லை. திரும்புவதற்கு மனிதனால் இயன்ற வரையில், இறைவன் அவனைத் திரும்புமாறு வற்புறுத்துகிறார். ஊதாரி மைந்தனின். உவமையில் உள்ளது போன்று, இத்தகைய விரும்பத்தக்க திரும்புதலுக்கு அனைத்தும் ஒழுங்கு செய்யப்படுகின்றன; எதிர்பார்க்கப்படுகின்றன; "ஆதலால், நான் அவள் வழியை முள்ளால் அடைப்பேன்; அவள் எதிரில் சுவர் ஒன்றை எழுப்புவேன். அவளால் வழி கண்டுபிடித்துப் போக இயலாது. அவள் தன் காதலர்களைப் பின் தொடர்ந்து ஓடுவாள்; ஆனால், அவர்களிடம் போய்ச்சேரமாட்டாள். அவள் அவர்களைத் தேடித்திரிவாள்; ஆனால், அவர்களைக் காணமாட்டாள். அப்போது அவள் 'என் முதல் கணவனிடமே நான் திரும்பிப் போவேன். இப்போது இருப்பதைவிட அப்போது எனக்கு நன்றாய் இருந்தது என்பாள்" (ஓசே 2:6-9; காண்க. எசே 14:11).

உண்மையில் பாவமானது அன்பை மறுப்பதில் அடங்கியுள்ளதெனில், மனிதன் புதிதாய் அன்பு செய்ய ஏற்றுக்கொள்ளும் அளவிற்கே அது துடைக்கப்பட்டு, நீக்கப்பட்டு, மன்னிக்கப்படும் என்பது தெளிவு. இறைவனிடம் திரும்புவதினின்று மனிதனை விடுவிக்கின்ற மன்னிப்பைக் கற்பனை செய்வது ஒரே சமயத்தில் அன்பு செய்வதினின்று அவனை செய்ய வேண்டுமென விரும்புவதாகவும் இருக்கும். அப்போது இந்தத் திரும்புதலைக்கோருவதை இறைவனுடைய அன்பே தடுக்கும். இறைவன் தன்னை "எரிச்சலுடைய இறைவன்" என்று அறிவிக்கிறாரெனில் (யாத் 20:5; உ.ப. 5:9), அவருடைய எரிச்சலானது அவரது அன்பின் விளைவாக இருப்பதே அதற்குக் காரணம் (எசா 63:15; செக் 1:14). தான் மட்டுமே (தனது சாயலாகப் படைக்கப்பட்) மனிதனுடைய மகிழ்ச்சியை வழங்க எண்ணுகிறாரெனில், அவர் மட்டுமே அதனைச் செய்ய முடியும் என்பதே அதற்குக் காரணம். இந்தத் திரும்புதலின் நிபந்தனைகள் பற்றி சாம்பல், அறிவித்தல், பரிகாரம், விசுவாசம், மன்னிப்பு, மனவருத்தம்-மனமாற்றம், மற்றும் மீட்பு ஆகிய தலைப்புகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஆகவே, மனிதனைப் பொறுத்தமட்டும் முதல் நிபந்தனையானது, சுதந்தரமாய் இருப்பதற்குரிய விருப்பதைக் கைவிட்டு, இறைவனுக்குப் பணியவும், அன்பு செய்யத் தன்னையே அனுமதித்துக் கொள்ள ஒத்துக்கொள்வதுமாகும். அதாவது... தனது பாவத்திற்கு அடிப்படையாக இருப்பதையே விட்டுவிடுவதாகும். தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பொருள் துல்லியமாக இதுவே என்பதை இப்போது அவன் உணர்கிறான். மனிதன் மன்னிக்கப்படுவதற்கு, இறைவன் அவனைத் துரத்தாமல் இருப்பதற்கு உடன்படுவது மட்டும் போதுமானதன்று; அதிகம் தேவைப்படுகிறது. "எங்களை உம்மிடம் திருப்பியருளும், நாங்களும் உம்மிடம் திரும்புவோம்" (புல 5:21). சிதறிப்போன ஆடுகளைத் தேடி இறைவனே செல்வார் (எசே 34). அவர் மனிதனுக்குப் "புதிய இதயத்தையும், புதிய ஆவியையும் அளிப்பார்" (36:26-27). அதுவே புதிய உடன்படிக்கையாக இருக்கும். சட்டமானது அங்கு இனியும் கற்பலகைகளில் பொறிக்கப்படாமல், மனிதனுடைய இதயத்தில் பொறிக்கப்படும் (எரே 31:31-33; காண்க. 2 கொரி 3:3). இறைவன் தனது அன்பை அளிப்பதிலோ,

நமது அன்பைக் கோருவதிலோ மனநிறைவு அடைவதில்லை. "உன் கடவுளாகிய ஆண்டவர் உன் உள்ளத்தையும், உன் வழிமரபின் உள்ளத்தையும் பண்படுத்துவார். அதனால் உன் கடவுளாகிய ஆண்டவர்மீது நீ முழு உள்ளத்தோடும் முழு ஆளுமையோடும் அன்பு கூர்வாய். அப்போது நீயும் வாழ்வுபெறுவாய்" (உப 30:6). சங்கீத ஆசிரியரும் தனது பாவத்தை அறிக்கையிடும்போது, தன்னைக் கழுவித் தூய்மையாக்கி, தன்னில் தூயதோர் உள்ளத்தைப் படைக்குமாறு இறைவனிடம் இறைஞ்சுகின்றார் (சங் 51). ஏனெனில், பாவத்திலிருந்து ஏற்புடைமை பெறுவது முற்றிலும் இறைவனுக்குரிய, படைப்புச் செயலுக்கொத்த செயலைக் கோருகிறது என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார். இறுதியாக, மனிதனை அவனுடைய பாவத்தினின்று விடுவிக்கின்ற மனிதனுடைய உள்ளார்ந்த மாற்றமானது, மறைபொருளான ஊழியனுடைய பலியால் நிறைவேற்றப்படுகிறதென, பழைய ஏற்பாடு அறிவிக்கிறது. இந்த இறைவாக்கு நிறைவேறுவதற்கு முன்னர் இந்த ஊழியனுடைய அடையாளத்தை எவராலும் ஊகிக்க முடியவில்லை.

V. புதிய ஏற்பாட்டின் போதனை: "மனிதனைப் பாவத்தினின்று விடுவிக்க வந்த" இந்த ஊழியன் (எசா 53:11) இறைவனுடைய மகனைத் தவிர வேறெவருமல்லர் என்பதைப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டில் வகித்த இடத்தைவிடக் குறைவான இடத்தைப் பாவம் வகிக்கவில்லை என்பதோ, பாவத்தை வெல்வதற்கு இறையன்பு என்ன செய்தது என்றும் அதனுடைய உண்மையான பரிமாணத்தையும் அதே நேரத்தில் இறைஞானத்தினுடைய திட்டத்தில் அதனுடைய பங்கினையும் பற்றிய முழு வெளிப்பாடு அனுமதிப்பதோ வியப்பளிக்க வேண்டியதில்லை.

1. இயேசுவும் பாவிகளும்:

அ) ஒத்தமை நற்செய்திகளுடைய போதனையின் தொடக்கத்தினின்றே பாவிகளின் நடுவில் இயேசுவை நாம் காண்கிறோம். ஏனெனில், நீதிமான்களுக்கன்று, பாவங்களுக்காகவே அவர் வந்தார் (மாற் 2:17). அக்கால யூதச் சொற்றொடரைப் பயன்படுத்தி, அவர்களது பாவங்கள் "மன்னிக்கப்பட்டு" விட்டன என்று அவர் அவர்களுக்கு அறிவிக்கிறார். இதனால் இச்சொல்லானது கடன் என்ற பொருளில் சில நேரங்களில் பயன்பட்டாலும் (மத் 6:12; 18:23-25), அது ஒரு கடனாகக் கருதப்பட வேண்டும் என்று பொருளன்று; மாறாக, மனிதனுடைய ஆவி மற்றும் இதயத்தினுடைய மாற்றத்தையே கோராத இறைவனுடைய செயலால் பாவம் மன்னிக்கப்படலாம் என்று சுட்டுகிறது எனலாம். இறைவாக்கினர்கள் மற்றும் திருமுழுக்கு யோவானைப் போன்று (மாற் 1:14), இயேசுவும் மனமாற்றம் பற்றிப் போதிக்கிறார். இறை அருளைப் பெறுவதற்கும், இறைவனைத் தன்மேல் செயல்பட அனுமதிப்பதற்கும் வேண்டிய மனநிலையில் மனிதனை அமைக்கின்ற ஆவியினுடைய அடிப்படையான மாற்றமாக இஃது உள்ளது. "இறையரசு நெருங்கி வந்து விட்டது; மனமாற்றம் அடைந்து நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:15). மற்றொரு புறம் உவமையிலுள்ள பரிசேயனைப் போன்று (லூக் 18:9-11), ஒளியை மறுப்பவர்கள் (மாற் 3:29) அல்லது தங்களுக்கு மன்னிப்புத் தேவையில்லை என்று கருதுபவர்கள் முன்னிலையில், இயேசு வல்லமையற்றவராக உள்ளார்.

ஆ) இதன் விளைவாக இறைவாக்கினரைப்போன்று, இயேசு பாவத்தை அது எங்கிருந்தாலும், கண்டனம் செய்கிறார். புறச்சட்டத்தின் விதிகளைப் பின்பற்றுவதன் காரணமாக, தாங்கள் நீதிமான்கள் என்று கருதுவோரையும் அவர் கண்டிக்கிறார். ஏனெனில், பாவமானது உள்ளத்தினுள்ளே இருக்கிறது. "ஏனெனில், மனிதர் உள்ளத்தினின்றே பரத்தமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத்

தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவரும். தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப்படுத்தும்" (மாற் 7:21-23). அவர் திருச்சட்டத்தை அழிப்பதற்கன்று, நிறைவேற்றவே வந்தார் (மத் 5:17) என்பதால் இயேசுவின் சீடன் பரிசேயரின் நெறியில் நிறைவு அடைய முடியாது (5:20). இயேசுவினுடைய நெறியானது சந்தேகத்திற்கிடமின்றி இறுதியாக அன்பாக உருவெடுக்கிறது (7:12). ஆனால், தனது தலைவர் செயல்படுவதைக் காண்பதில் சீடன், "அன்பு செய்வது" என்ன என்பதைப் படிப்படியாக அறிந்து கொள்வான். இதனோடு கொண்டுள்ள தொடர்பில், அன்பை மறுப்பதுதான் பாவம் என்பதையும் அவன் காண்பான்.

இ) பாவிக்கான இறைவனுடைய எண்ணிப்பார்க்க முடியாத இரக்கத்தினை இயேசு அவனுக்கு வெளிப்படுத்துவதற்குச் செவி மடுப்பதன் மூலம், சிறப்பாக அவன் அதை அறிந்து கொள்வான். காணாமற்போன மைந்தன் அல்லது இரக்கம் நிறைந்த தந்தையின் உவமையானது (லூக் 15:11தொ), பெருமளவில் பழைய ஏற்பாட்டின் போதனையைப் போன்று உள்ளது. பாவம் என்பது எவ்வாறு இறைவனுக்கெதிரான குற்றம், பாவியினுடைய திரும்புதலைக் கொண்டிராத மன்னிப்பைப்பற்றி எண்ணுதல் எவ்வளவு அபத்தம் என்பதைப்பற்றிப் போதிக்க, இந்த உவமையைவிட, புதிய ஏற்பாட்டின் சில பகுதிகள்தான் மேலானவையாக உள்ளன. தனது கீழ்ப்படிதலுடன் ஒப்பிடுவதற்கென மூத்த சகோதரன் மட்டுமே சுட்டிக்காட்டும் கீழ்ப்படியாமை உள்ளடங்கியிருந்தாலும் (15:29), தந்தையினுடைய உள்ளத்தை வருத்தப்படுத்தியது, இனியும் தந்தையை அனுமதிக்காத அவரது மகனின் பிரிவுமேயாகும். தன்னுடைய பிரசன்னத்தை மறுத்தல் மூலம் மகன் தந்தையைப் புண்படுத்தினான். திரும்ப வந்து, தன்னை மீண்டும் ஒருமுறை மகனான நடத்தச் சம்மதிக்காத வரையில் எவ்வாறு அவன் தனது குற்றத்தைச் சீர்ப்படுத்த முடியும்? இதன் காரணமாகவே உவமையானது தந்தையின் மகிழ்ச்சிக்கு அழுத்தம் தருகிறது. இத்தகைய திரும்புதல் இல்லாமல், மன்னிப்பை எண்ணிப் பார்க்க முடியாது. மிகத்துல்லியமாக, தந்தை எப்போதுமே அவனை மன்னித்தார். ஆனால், அவனுடைய திரும்புதலால்தான் மன்னிப்பானது பயனுடைய விதத்தில் மகனுடைய பாவத்தைச் சென்றடைகிறது.

ஈ) பாவத்தின்பால் இறைவனுடைய மனப்போக்கைச் சொற்களைவிட, செயல்களாலேயே இயேசு அதிகமாய் வெளிப்படுத்தினார். உவமையிலுள்ள தந்தையைப் போன்று அதே அன்பு மற்றும் கனிவுடன் அவர் பாவிகளை ஏற்றுக்கொண்டார் (லூக் 7:36-38; 19:5; மாற் 2:15-17; யோவா 8:10-11). ஆனால், மூத்த மகனைப்போன்று (லூக் 15:28-30), இந்த இரக்கத்தினைப் புரிந்து கொள்ள முடியாத சாட்சிகளுக்கு இடறல் அளிக்கும் அபாயமும் அங்கே இருந்தது. ஆனால், அவர் பாவத்திற்கு எதிராக நேரடியாகவே செயல்பட்டார். அவரே சோதனை நேரத்தில், முதலில் சாத்தானை வெற்றி கொண்டார். தனது பொதுவாழ்வின்போது தீமையின் வல்லமையினின்றும், நோயும் பேய் பிடித்திருத்தலும் உள்ளடக்கியுள்ள பாவத்தினின்றும் (மாற் 1:23) அவர் மனிதனை விடுவித்தார். "தனது வாழ்வை ஈடாக அளிக்கவும்" (மாற் 10:25), "உடன்படிக்கையின் இரத்தமாகிய தனது இரத்தத்தைப் பலருடைய பாவமன்னிப்புக்காகச் சிந்துவதற்காகவும்" (மத் 26:28) காத்திருந்த வேளையில், ஊழியனுடைய பங்கை அவர் இவ்வாறாகத் தொடங்கி வைத்தார் (மத் 8:16-17).

2. **உலகின் பாவங்கள்:** பாரம்பரிய சொற்றொடரை அறிந்திருந்தாலும் "பாவங்களை மன்னிப்பதை விட" (யோவா 20:23; 1 யோவா 2:12), "உலகின் பாவத்தைப் போக்க வந்த" கிறிஸ்துவைப்பற்றியே யோவான் பேசுகிறார் (யோவா 1:29). தனிச்செயல்களுக்குப்

பின்னணியில் அவற்றைத் தோற்றுவிக்கின்ற, இறைவனையும் அவரது ஆட்சியையும் எதிர்க்கும் வல்லமையாகிய ஒரு மறைபொருளான உண்மையை யோவான் காண்கிறார்.

அ. இந்த எதிர்ப்பானது முதலில், ஒளியைச் சுயமாக, செயல்முறையில் மறுப்பதில் காட்டப்பட்டது. பாவமானது இருளின் மறைக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. "ஒளி உலகிற்கு வந்திருந்தும், தங்கள் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர்" (யோவா 3:19). "தனது செயல்கள் வெளிப்படுத்தப்படுமோ என்ற பயத்தினால்" பாவி ஒளியைக் கண்டு அஞ்சி அதை எதிர்க்கிறான். அவன் அதனை வெறுக்கிறான். "தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர்" (3:20). இது குருட்டுத்தனமாக விரும்பிச் செய்யப்படுகிறது. குருட்டுத்தனமாக அன்பு செய்யப்படுகிறது. ஏனெனில், தீமை அதன் உண்மைத்தன்மையில் அடையாளம் காணப்படுவதில்லை. "நீங்கள் பார்வையற்றோராய் இருந்திருந்தால் உங்களிடம் பாவம் இராது. ஆனால், 'எங்களுக்குக் கண் தெரிகிறது' என்கிறீர்கள். எனவே, நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்" (9:40).

ஆ) இத்தகைய குருட்டுத்தன்மையானது சாத்தானுடைய நெறிகோணிய ஆதிக்கத்தினால் மட்டுமே விளக்கப்படுகிறது. செயல்முறையளவில், பாவம் சாத்தானுக்குப் பணி செய்கிறது. "பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமை" (யோவா 8:34). கிறிஸ்தவன் இறைவனுடைய மகனாக இருப்பதுபோல், பாவியும் "தொடக்கமுதல், பாவஞ்செய்துவருகின்ற அலகையின் மகனாக உள்ளான்;" மேலும், "அவன் சாத்தானுடைய செயல்களைச் செய்கிறான்" (1யோவா 3:8-10). இப்போது இச்செயல்களில் மனிதக்கொலை மற்றும் பொய் ஆகிய இரண்டினை யோவான் சுட்டிக்காட்டுகின்றார். "தொடக்கமுதல் அவன் ஒரு கொலையாள். அவனிடம் உண்மை இல்லாததால் அவன் உண்மையைச் சார்ந்து நிற்கவில்லை. அவன் பொய் பேசும் போதும் அஃது அவனுக்கு இயல்பாக இருக்கிறது. ஏனெனில், அவன் ஏற்படுத்தப்படவில்லை. அவன் தனது பொய்களைக் கூறும்போது, அவன் பொய்யன், பொய்மையின் பிறப்பிடம்" (8:44). மனிதன்மேல் சாவினைச் சுமத்துவதன் மூலமும் (ஞான 2:24), தனது சகோதரனைக் கொல்ல காயீனைத் தூண்டுவதிலும் (1 யோவா 3:12-15) அவன் கொலைகாரனாக இருந்தான். தங்களிடம் உண்மை பேசுபவரைச் சாவிற்கு உட்படுத்துமாறு யூதர்களைத் தூண்டுவதன் மூலம் அன்றும் அவன் கொலைகாரனாக இருக்கிறான். "கடவுளிடமிருந்து கேட்டறிந்த உண்மையை உங்களுக்கு எடுத்துரைத்த என்னை நீங்கள் கொல்ல முயல்கிறீர்கள்... நீங்கள் உங்கள் தந்தையைப்போல் செயல்படுகிறீர்கள்... அலகையே உங்களுக்குத் தந்தை. உங்கள் தந்தையின் ஆசைப்படி நடப்பதே உங்கள் விருப்பம்" (யோவா 8:40.41.44).

இ தங்கள் முறையில், மனிதக்கொலையும் பொய்களும் வெறுப்பினால் மட்டுமே விளக்கப்படுகின்றன. அலகையைப் பொறுத்தமட்டில், இறை வார்த்தையானது பொறாமையைப் பற்றிக் கூறியது (ஞான 2:24), "வெறுப்பு" என்று கூற யோவான் சிறிதும் தயங்கவில்லை. யூதர்கள் கிறிஸ்துவையும் அவரது தந்தையாகிய இறைவனையும் வெறுப்பதுபோல (யோவா 15:22-23), அதே முறையில், பிடிவாதமான அவிசுவாசியும் ஒளியை வெறுக்கிறான் (3:20). இங்கு யூதர்கள் என்பது கிறிஸ்துவை ஏற்க மறுக்கின்ற சாத்தானுடைய ஊழியத்திற்குட்பட்ட உலகினைக் குறிக்கும். உண்மையில் இந்த வெறுப்பானது இறைமகனுடைய கொலையில் முடிவடையும் (8:37).

ஈ) இவ்வாறு, இயேசு வெற்றிகொண்ட உலகினுடைய பாவத்தின் இயல்பை நாம் காண்கிறோம். அவர் பாவமற்றவராய் இருப்பதனாலும் (யோவா 8:46; காண்க. 1யோவா 3:5), அவரது தந்தையுடன் ஒன்றாக இருப்பதாலும்

(யோவா 10:30), இருளற்ற தூய ஒளியாகவும் (1:5; 8:12), எவ்விதப் பொய்யும் அற்ற உண்மையாகவும் இருப்பதாலும் (1:14; 8:40), இறுதியாக "இறைவன் அன்பு" என்பதால் அன்பாக இருப்பதாலும் (1 யோவா 4:8) அவரால் அவ்வாறு வெற்றிக்கொள்ள முடிகிறது. தனது வாழ்வில் அவர் அன்பு செய்வதை விடாமலிருந்தாலும், மேலும் உயர்ந்ததொன்றை எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு உயர்ந்த அன்பின் செயலாக அவரது மரணம் இருக்கும். மேலும், அவரது மரணமானது அன்பின் நிறைவாக இருக்கும் (யோவா 15:13; காண்க. 13:1; 19:30). போட்டியில் தான் வெல்வதாக எண்ணுகின்ற "உலகினுடைய அரசன்" மீதான வெற்றியாகவும் இந்த மரணம் உள்ளது. ஆனால், இயேசுவிற்கு எதிராக அலகை வல்லமையற்றவனாக உள்ளான் (14:30). "தள்ளப்பட்டவன்" இவனே (12:31). இயேசு உலகை வென்றுவிட்டார் (16:33).

உ) "தான் அளித்த வாழ்வை மீண்டும் எடுக்க" இயேசுவால் முடியும் என்ற உண்மை மட்டுமே மேற்கண்டதற்கு நிரூபணமாக இல்லை (யோவா 10:17). அவரது வெற்றியில் அவரது சீடர்களும் பங்காளர் ஆகின்றனர் என்ற உண்மையே மேலும் உயரிய நிரூபணம் ஆகும். இயேசுவை ஏற்றுக்கொண்டதால் இறைவனின் பிள்ளையாக உருவாகிய நிலையில் (1:12), "கிறிஸ்தவன் இறைவனிடமிருந்து பிறந்திருப்பதால் அவன் பாவஞ்செய்வதில்லை" (1 யோவா 3:9). மேலும், "இறைவனுடைய ஆவியின் மூலமாக அவன் செயல்படும் அளவிற்கு" எனப் பவுல் கூறுவது போல (உரோ 8:14; காண்க. கலா 5:16), "இறைவித்து" அவனில் வாழும் அளவிற்கு, அவனால் பாவம் புரிய முடியாது. உண்மையில், ஆவியில் திருமுழுக்கு அளிப்பதன் மூலம் (அர 1:33), அதாவது, அதற்கு ஆவியை அளிப்பதன் மூலம் இயேசு "உலகின் பாவத்தைப் போக்கி விடுகிறார்" (1:29). சிலுவையில் அறையப்பட்டவருடைய ஊடுருவப்பட்ட விலாவினின்று பொங்கிவரும் நீரால் இஃது அடையாளப்படுத்தப்படுகிறது. பாவத்தையும் அசுத்தத்தையும் கழுவுவதற்கெனத் தாவீதின் வீட்டாருக்குத் திறக்கப்பட்ட நீரூற்று என, செக்கரியா கூறிய ஊற்றாகவும் (யோவா 19:30-37; காண்க. செக் 12:10; 13:1), ஆலயவாயிலின் அடியினின்று புறப்பட்டு, சாக்கடல் கரைகளை இன்பவனமாக மாற்றுவதென எசேக்கியேல் கண்ட (எசே 47:1-12; திருவெளி 22:2) ஊற்றாகவும் இஃது உள்ளது. உறுதியாகவே, கிறிஸ்தவன் இறைவனில் பிறந்திருந்தாலும், மீண்டும் பாவத்தில் விழக்கூடும் (1 யோவா 2:1). ஆனால், "இயேசு நமது பாவங்களுக்குப் பரிகாரமாக்கப்பட்டார்" (2:2); மேலும், அப்போஸ்தலர்கள் சரியாக, பாவங்களை மன்னிப்பதற்கென ஆவியை அவர்களுக்கு அளித்தார் (யோவா 20:22-23).

3. பவுலின் போதனைப்படி பாவம் பற்றிய இறையியல்:

அ) பாரம்பரிய வாய்பாடுகளுக்குப் புறம்பே தவறுகள், அல்லது மீறல்கள் என்றழைக்கப்படும் பாவச்செயல்களினின்று பாவத்தை மேலும் தெளிவாக வேறுபடுத்துவதற்கு வளமைமிக்க சொற்றொகுதி பவுலுக்குப் பெரிதும் துணைபுரிகின்றது. ஆயினும், இஃது இச்செயல்களின் இடர்த்தன்மையைச் சிறிதும் குறைவு படுத்துவதில்லை. இவ்வாறு, பவுல் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்ற, இன்பவனத்தில் ஆதாமினால் புரியப்பட்ட பாவமானது, மீறல், தவறு மற்றும் கீழ்ப்படியாமை எனத் தொடர்ந்து அழைக்கப்படுகிறது (உரோ 5:14.17.19).

எவ்வாறாயினும், பவுலின் திருமுகங்களில் அடிக்கடி காணப்படும் பாவங்களின் அட்டவணைகள் சுட்டிக்காட்டுவதுபோல, பாவச்செயலானது பவுலின் ஒழுக்கவியலில், ஒத்தமை நற்செய்திகளில் வகிக்கும் இடத்தைவிட தாழ்ந்த இடத்தை வகிப்பதில்லை (1 கொரி 5:10-11; 6:9-10; 2 கொரி 12:20; கலா 5:19-21; உரோ 1:29-31; கொலோ 3:5-8; எபே 5:3; 1 திமொ 1:9; தீத் 3:3; 2 திமொ 3:2-5). சின்னப்பர் சில நேரங்களில், வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுவது

போல, இந்தப் பாவங்கள் அனைத்தும், இறை அரசிற்குப் புறம்பாக்கும் தன்மை உடையன (1 கொரி 6:9; கலா 5:21). பழைய ஏற்பாட்டின் ஒத்த அட்டவணைகளில் உள்ளது போன்று, இப்பட்டியல்கள் பாலின ஒழுங்கின்மைகள், சிலைவழிபாடு மற்றும் சமூக அநீதிகள் ஆகிய தலைப்புகளில் தொகுக்கப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும் (உரோ 1:21-32; மற்றும் 1 கொரி; கலா; கொலோ மற்றும் எபேயில் உள்ள அட்டவணைகள்). "அதிகம் கொண்டிருப்பதற்கென, எப்போதும் ஆசைப்படுவதில்" அடங்கியிருக்கும் பிறர் பொருள் மீதான பேராசை என்னும் பாவத்தின் மீது பவுல் சாற்றிக்கூறும் கனாகனம் குறிப்பிடத்தக்கது. பிறர் பொருள் மீதான ஆசை என்ற தலைப்பின் கீழ் (உரோ 7:7) பத்துக் கட்டளைகள் தடை செய்வதை இது பெருமளவில் ஒத்திருக்கிறது. இதனைச் சிலை வழிபாட்டுப் பாவத்துடன், ஒப்பிடுவதில் பவுல் திருப்தியடையவில்லை. "சிலைவழிபாட்டுக்கு ஒப்பான பொருளாசை" என்று இரண்டையும் அவர் ஒன்றெனக் காட்டுகிறார் (கொலோ 3:5; காண்க. எபே 5:5).

ஆ) இந்தப் பாவச்செயல்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அவற்றினுடைய முதன்மையான காரணத்திற்குப் பவுல் திரும்புகிறார். பாவியாகிய மனிதனில், இறைவனுக்கும் அவரது அரசுக்கும் எதிரான சக்தியினுடைய வெளிப்பாடாகவும், புறவடிவாகவும் அவை உள்ளன. யோவான் கூறியிருந்ததும் இதுவே. அதற்குப் பாவம் என்ற ஒருமைச் சொல்லைப் பவுல் சிறப்பான முறையில் ஒதுக்குவது, அதன் சிறப்பு முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள உதவும். ஆனால் முக்கியமாக நம்மில் அதனுடைய தோற்றத்தையோ, அதனுடைய விளைவுகளையோ விவரிக்க, பவுல் முனைகிறார். இதில் பாவம் பற்றிய உண்மையான இறையியல் திட்டம் அளிப்பதில் போதிய துல்லியம் உள்ளது.

வல்லமையாகவும் இவ்வுலகின் கடவுளாகிய சாத்தானுடன் குழப்பப்படும் அளவிற்கு ஆட்தன்மைப்படுத்தப்படும் பாவமானது (2 கொரி 4:4), ஒரு தனிப்பட்ட உண்மையாக உள்ளது. அது பாவ மனிதனுக்குச் சொந்தமானது. அஃது அவனுள் உள்ளது. ஆதாமின் கீழ்ப்படியாமையால் அது மனித இனத்திற்குள் புகுத்தப்பட்டது (உரோ 5:12-19). ஒருவிதப் பின்விளைவாகச் சடப்பொருள் உலகிற்குள் புகுத்தப்பட்டுள்ளது (உரோ 8:20; ஆதி 3:17). பாவமானது விதிவிலக்கின்றி அனைத்து மனிதருக்குள்ளும் சென்று, தண்டிக்கப்பட்டோர் நரகத்தில் துன்புறுவது போன்று, அவர்களைச் சாவிற்கும், இறைவனிடமிருந்தான முடிவில்லாப் பிரிவிற்கும் ஈர்க்கிறது. மீட்பினைச் சாராத நிலையில் யாவும் ஒரு "மீளாத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்ட தொகுப்பாக" இருக்கின்றன. புனித அகுஸ்தீனாருடைய இச்சொற்கள் சரியான முறையில் புரிந்து கொள்ளப்பட்டால், அந்நிலையைத் துல்லியமாக விவரிக்கின்றன. "பாவத்திற்கு அடிமையாக விற்கப்பட்டாலும்" (உரோ 7:14), நன்மையோடு "ஒத்துணர்வு" கொள்ளக்கூடியவனும் (7:16,22), அதனை "விரும்பக்கூடியவனுமான" (7:15,21) மனிதனுடைய இந்நிலையை விரிவாக விவரிக்க பவுல் விரும்புகிறார். மனிதனிலுள்ள அனைத்தும் சீரழிந்து போகவில்லை; ஆனால், நன்மையானதைச் செய்ய அவன் முடியாதவனாக உள்ளான் என்பதை இது நிரூபிக்கிறது (7:18). மேலும், முடிவில்லா மரணத்திற்கு அவன் அவசியமாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக (7:24), பாவத்தின் முழு நிறைவாகிய சம்பளத்தையும், விளைவையும் விலக்க முடியாதவனாக உள்ளான் (6:21-23).

இ) மேற்கண்ட கூற்றுகளின் காரணமாக, அப்போஸ்தலர் சில நேரங்களில் எதிலும் கெடுதலையே காண்பவராகக் குற்றஞ்சாட்டப்படுகிறார். குற்றம் சாட்டுவோர், பவுல் இந்தக் கூற்றுகளை உறுதியாகக் கூறியபோது கிறிஸ்துவின் அருளினின்றே பிரித்துக் கொள்கிறார் என்பதை மறந்து விடுகின்றனர். சட்டத்தினுடைய வல்லமையின்மையை நிறுவவும்

மற்றும் கிறிஸ்துவினுடைய விடுதலையளிக்கும் பணியின் முழுமையான அவசியத்தை உயர்த்திக்காட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கித்திற்காக, பாவத்தினுடைய உலகளாவிய தன்மையினையும், கொடுங்கோல் தன்மையினையும் வலியுறுத்துமாறு, அவருடைய விவாதமே அவரை அத்தருணத்தில் வற்புறுத்துகிறது. மேலும், பவுல் ஆதாமுடனான மொத்த மனித இனத்தினுடைய ஒன்றிப் பினை நினைவு கூர்வதன் மூலம், இயேசு கிறிஸ்துவுடனான அனைத்து மனித குலத்தின் உயரிய ஒன்றிப்பினையே வெளிப்படுத்துகின்றார். இறைவனின் எண்ணத்தில் எதிர் மாதிரியான இயேசு கிறிஸ்துவே முதலாவதானவர் (உரோ 5:14). இயேசு கிறிஸ்து அதன்மீது வெற்றி கொள்ள வேண்டும் என்ற காரணத்திற்காகவே ஆதாமின் பாவமும் அதன் விளைவுகளும் அனுமதிக்கப்பட்டன என்று இதற்குப் பொருள். மேலும், இதுவும் எவ்வளவு மிகு நிறைவான முறையில் என்றால் முதலாம் ஆதாமினுடைய பங்கிற்கும், இரண்டாம் ஆதாமினுடைய பங்கிற்கும் இடையிலான ஒப்புமைகளைக் காட்டுவதற்கு முன்னரே (5:17-19), வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுவதைப் பவுல் வலியுறுத்துகிறார் (5:15-16).

பாவத்தின் மீதான கிறிஸ்துவினுடைய வெற்றியானது பவுலை ஈர்ப்பதில் எந்த அளவிலும் யோவான் ஈர்க்கப்படுவதிலிருந்து குறைவுபடவில்லை. விசுவாசத்தினாலும் திருமுழுக்கினாலும் ஏற்புடையவனான கிறிஸ்தவன் (கலா 3:26-38; காண்க. உரோ 3:21-23; 6:2-4), பாவத்தினின்று முற்றிலும் முறித்துக்கொண்டு விட்டான் (உரோ 6:10=11). பாவத்திற்கு மரித்தவனாய், மரித்து உயிர்த்த கிறிஸ்துவுடன் அவன் "புதிய உயிராக" (6:5), "புதுப்படைப்பாக" உருவாகியுள்ளான் (2 கொரி 5:17). ஆவியின்படி நடக்க அவன் மறுத்தால் (உரோ 8:4), அழியும் உடலில் வாழும் வரையில் அவன் மீண்டும் பாவத்தில் விழுந்து "தனது இச்சைகளுக்கு இடங்கொடுத்தாலும்" (6:12), அவன் இனியும் ஊனுடலில் அன்று, ஆவியிலேயே உள்ளான் (7:5; 8:9).

ஈ) இறைவன் பாவத்தின்மீது மட்டும் வெற்றி கொள்ளவில்லை. மூலவளத்தில் எல்லையற்ற அவரது ஞானம் (எபே 3:10), பாவத்தைப் பயன்படுத்தும் வேளையில் இந்த வெற்றியை அடைகிறது. இறைவனுடைய அரசிற்கும் மனிதனுடைய மீட்பிற்கும் முதன்மைத்தடையாக இருந்த, இந்த மீட்பினுடைய வரலாற்றில் ஒரு பங்கு வகிக்கிறது. உண்மையில் பாவத்துடனான தொடர்பில் "இறைவனுடைய ஞானத்தைப் பற்றி," பவுல் பேசுகிறார் (1 கொரி 1:21-24; உரோ 11:33). எவ்விதச் சந்தேகமுமின்றி, தனது உள்ளத்திற்குப் பெருந்துயராகவும் (உரோ 9:2), எந்நிலையிலும் தனது ஆர்வத்திற்கு இடரலாகவும் உள்ள பாவத்தைப்பற்றித் தியானிக்கும் வேளையில், முக்கியமாக அவர் இதனைச் செய்கிறார். இஸ்ராயேலின் அவிசுவாசம் இதுவே. இந்தப் பிரமாணிக்கமின்மை, எவ்வளவு ஒரு சார்பானதாகவும் தற்காலிகமானதாகவும் இருந்தாலும் (உரோ 11:25), மனித இனத்திற்கான இறைவனுடைய மீட்புத் திட்டத்தில் நுழைந்து விட்டது: மற்றும், "அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காக, கடவுள், அனைவரும் கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கச் செய்தார்" (உரோ 11:32; கலா 3:22) என்று பவுல் புரிந்து கொள்கிறார். "கடவுளின் அருட்செல்வம் எத்துணை மிகுதியானது! அவரின் ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை! அவருடைய திட்டங்கள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை" என்று பவுல் நன்றியுள்ள வியப்போடு பறை சாற்றுவார் (உரோ 1:33).

உ) மனிதனுடைய மீட்பிற்கான பாவத்தையும் உபயோகிக்கின்ற இறை ஞானத்தினுடைய இந்த மறைபொருளானது, இறைமகனுடைய பாடுகளைத் தவிர வேறெங்கும் இவ்வளவு தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை. உண்மையில், தந்தையாகிய இறைவன் தனது

மகனைச் சாவிற்குக் கையளித்தாரெனில் (உரோ 8:32), கற்பனை செய்யக்கூடிய அன்பு மற்றும் கீழ்ப்படிதளினுடைய மிகப்பெருஞ்செயலை அவர் செய்து முடிக்கக்கூடிய நிலைகளில் அவரை நிலைநிறுத்துவதற்கும், இவ்வழியாக, ஊன் நிலையினின்று ஆவியின் நிலைக்குக் கடந்து செல்வதன் மூலம் நமது மீட்பினைக் கொண்டு வருவதற்கும் ஆகும். இந்தக் கடந்து செல்லுதலை அவரே முதலில் செய்கிறார். இந்தச் செயலுக்கென மிகவும் ஏற்ற நிலைகளை உருவாக்குவதற்கென கட்டளையிடப்பட்ட மரணத்தின் சூழ்நிலைகள் அனைத்தும் மனிதனுடைய பாவத்தின் விளைவுகள் உள்ளன. யூதாசு காட்டிக்கொடுத்தல், அவரது அப்போஸ்தலரால் கைவிடப்படுதல், பிலாத்துவினுடைய பலவீனம், யூத இன அதிகாரிகளுடைய வெறுப்பு, கொலை நிறைவேற்றுவோரின் கொடூரம் ஆகிய காணக்கூடிய இவை அனைத்திற்கும் மேலாக அழிப்பதற்கென அவர் இறந்த நமது பாவங்கள் முதலியன இந்தச் சூழ்நிலைகளாகும். வேறு எந்த மனிதரும் அன்பு செய்திராத அளவிற்கு அன்பு செய்ய அவரை அனுமதிக்க தனது மகன் மனிதனுடைய பாவத்தினால் வடுப்பட வேண்டும் என்று கடவுள் சித்தம் கொண்டார். அன்பினுடைய மேலான செயலின் விளைவாக, இறைவனுடைய பலனுள்ள விளைவுகளுக்கு நாம் உட்படுவதற்காக, பாவமாகிய மரணத்தினுடைய வல்லமையின் தீய விளைவுகளுக்குத் தனது மகனை உட்படுத்தினார் (2 கொரி 5:21). எனவே, பாவம் முதற்கொண்டு "தன்னிடம் அன்பு கூர்பவர்களுடைய நன்மைக்கென இறைவன் அனைத்துப் பொருட்களையும் செயல்படுத்துகிறார்" என்பது உண்மையே (உரோ 8:28).

பாவு (PAU - முனங்கல், ஆட்டின் கத்தல்)

ஏதோமின் நகரான இஃது, அதாது அரசனின் தலைநகராகும் (ஆதி 36:39; 1 அர 11:14; 1 நாள் 1:50). இதன் அமைவிடம் சரியாகத் தெரியவில்லை. 1 நாள் 1:50-இல் இது பாயி என்றழைக்கப்படுகிறது.

பாழாக்கும் அருவருப்பு (ALIOMINATION THAT MAKES DESOLATE)

காண்க: நடுங்க வைக்கும் தீட்டு.

பாளையம், பாசறை (CAMP)

ஓர் இனத்தின் அல்லது படையின் தற்காலிகமான மற்றும் பாதுகாக்கப்பட்ட இடம். விவிலியகாலத்தில் பாளையக் கூடாரங்கள் வட்ட வடிவமாகவோ, சதுர வடிவமாகவோ அமைக்கப்பட்டு எப்போதும் வீரர்களால் காவல் காக்கப்பட்டன (யோசு 7:19). அடிக்கடி பாளையங்களைச் சுற்றி, சாமான் ஏற்றி வரும் வண்டிகள் நிற்கும். இதுவே ஒரு பாதுகாப்பு அரணாக அமையும். பெலிஸ்தியர்களும் (1 சாமு 17:20), தாவீதைத் தேடியபோது சவுலும் (26:5.7), இத்தகைய பாளையங்களைப் பயன்படுத்தியிருக்கின்ற. போர்க்காலத்தில் சாமான் வண்டிகளுக்குப்பின் வீரர்கள் நின்று பாளையத்தைக் காத்து வந்தனர் (25:13).

பாலைவனத்தில் இஸ்ராயேலரின் பாளையம் ஒரு போர்க்காலக் குடியிருப்பு போல் அமைந்திருந்தது (எண் 2). இறைவன் பாளையம் ஒரு புனிதப்பண்பு பெற்றது. தூய்மையற்றது எதுவும் பாளையத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் புறம்பே வைக்கப்பட வேண்டும். மோசே மலையில் இறைவனோடு இருந்தபோது, இஸ்ராயேலர் பொன் கன்றுக்குட்டி செய்து பாவம் செய்து பின்னர், மோசே இறைவனைச் சந்திப்பதற்காக, பாளையத்துக்கு வெளியே ஒரு கூடாரம் அமைத்தார் (யாத் 33:7-14). வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையுமுன், ஆண்டவர் பாளையத்தில் பிரசன்னமாய் இருப்பதால், பாளையத்தைப் புனிதமானதாக வைத்திருக்க இஸ்ராயேலர் எச்சரிக்கப்படுகின்றனர் (உப 23:14). தீட்டுடைய எதுவும் இறைவனை மக்களிடமிருந்து விலகியிருக்கச் செய்யும் (23:12-14).

எபிரேயருக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் (எபி 13:11-12) பாவப்பரிகார நாளில் மக்களின் பாவங்களுக்காகப் பலியிடப்பட்ட விலங்கின் உடல்

"பாளையத்திற்குப் புறம்பே' எரிக்கப்படுவதையும், இயேசு எருசலேம் 'நகர் வாயிலுக்கு வெளியே" சிலுவையில் அறையப்படுவதையும் இணைப்படுத்துகிறார். விசுவாசிகள் "பாளையத்திலிருந்து வெளியேறி" இயேசு பட்ட நிந்தைகளில் பங்கு பெறுமாறு (13:13) அளிக்கப்படும் அறைகூவல் யாத் 33:7-11-இல் காணப்படும் மோசேயின் செயலைச் சுட்டலாம். திருவெளி 20:9-இல் வரும் "இறை பாசறை" (பாலைவனத்தில் இஸ்ராயேலர் வாழ்ந்தது போன்று) விசுவாசிகளின் திருயாத்திரையை அல்லது இறையரசுக்குப் பணிவதைக் குறிக்கலாம்.

பாறை (ROCK)

இதுவரையிலும் வெவ்வேறான பொருளில் வழங்கி வந்த இரு கருத்துக்களைச் சேர்த்து, ஆண்டவர் இயேசுவே பாலைவனப் பாறை (1 கொரி 10.40) என, பவுல் கூறுகின்றார். "இறைவன் இஸ்ராயேலின் பாறை" (2 சாமு 23:3); வறட்சியின் சின்னமான பாறையினின்று கடவுள் வாழ்வளிக்கும் நீரை வரச் செய்தார்.

1. பாறையைப் போன்று கெட்டியானவர் இறைவன்: தப்பியோடுபவனுக்குப் பாதுகாப்பாக மலையைப்போல் பாறையின் கெட்டித்தன்மையும் புகலிடமாக அமைகின்றது. பாறையின் குழிவான பகுதி புகலிடமும் பாதுகாப்புமளிக்கிறது (எரே 48:28). இஸ்ராயேலருக்கு மீட்பினை உறுதியளிப்பதால் இறைவன் இஸ்ராயேலின் பாறை எனப்படுகிறார். பாறை எனும் சொல்லின் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஏனைய இறைத்தலைப்புக்களும் மேற்சொன்ன பொருளையே அழுத்திக் கூறுகின்றன. கடவுள் ஓர் கோட்டை, தஞ்சம், அலங்கம், கேடயம், கெட்டியான கோபுரம், துறைமுகம் என்பன (2 சாமு 22:2 தொ; சங் 18:3. 32; 31:4; 61:4; 14:2). இறைவனே முடிவில்லாதவரும் (எசா 26:4; 30:29) பாறையுமாகையால் (44:8) மனிதன் அவரில்தான் தன் நம்பிக்கையை வைத்தல் வேண்டும். பாறையானது உறுதியான பாதுகாப்பு மட்டுமன்று, கெட்டியான அடித்தளமுமாகிறது. பிரமாணிக்கம் உள்ளவராதலால், இறைவனே பாறை (உப 32:4; சங் 92:16). அவரில் விசுவாசங்கொள்பவன் தடுமாறான் (எசா 28:16). இப்பாறையின் மீது தன் அடித்தளத்தை எழுப்ப மறுப்பவன் அப்பாறையின் மீதே மோதி நசுக்கப்படுவான். இடறல் கல்லுக்கு (8:14) இரையாகிச் சுக்கு நூறாவான்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவே அடிக்கல் (உரோ 9:33; 1 பேதுரு 2:6 தொ); அவருடைய வார்த்தைக்குச் செவிமடுப்பவன் பாறையின் மீது கட்டுகிறான் (மத் 7:24). பேதுரு எனும் பாறையின்மேல் திருச்சபை கட்டப்பட்டுள்ளது. பேதுரு அதன் நிலையான தன்மையில் பங்கு பெறுகிறார் (16:18).

2. இறைவன் கரத்தில் பாறை: விளைச்சல் கொடாத பாறை மலட்டுத்தன்மையின் அடையாளமாகும். இறைவன் தன்னை ஆசிர்வதித்துப் பலுகிப் பெருகச் செய்யுமுன் தனிமையிலிருந்த ஆபிரகாம் பாறையைப் போலானார் (எசா 51:2; காண்க. மத் 3:9). இப்பாறையினின்று உருவாகிவாழ்ந்து வந்த இஸ்ராயேலரின் கூட்டம், இறைவனின் எல்லையற்ற வல்லமையின் சின்னம். அவருடைய திருக்கரத்தில் பாலஸ்தீனப்பாறைகள் உணவு வழங்குகின்றன (உப 32:13). இதற்கும் மேலாக, வறண்ட பாலைவனத்திலே, நாம் காணும்படியாக படைப்பின்மேல் தமக்குள்ள ஆதிக்கத்தை இறைவன் வெளிப்படுத்துகிறார். காய்ந்துபோன பூமியினின்றும், மெரிபா பாறையினின்றும் நீர் பெருகி ஓடச் செய்கின்றார் (யாத் 17:6; எண் 20:10 தொ).

இறைவனின் இச்செய்கை இறுதிநாளில் நிகழவிருக்கும் அதிசயங்களின் முன்னறிகுறியாக விளங்குகின்றது (சங் 78:15-20; 105:41; எசா 43:20). மீட்புநாளில் தேவாலயத்தினின்று ஒரு நதி புறப்பட்டு, புனித நாட்டை இன்பவனமாக மாற்றும் (எசே 47:1-12; செப் 14:8). நற்செய்தியிலே இப்புதுமை நிகழ்ந்தேறக் காணலாம். தூய ஆவியால் நிரப்பப்பட்ட இயேசு, தன்னைப் பின்

தொடர்பவர்கட்கு ஆவியானவரை வழங்குவதால் உயிருள்ள நீரின் ஊற்றைத் திறக்கின்றர் (யோவா 7:37தொ; 19:34). விடுதலை நோக்கி நடைபோடும் புதிய இனத்தின் பாறை அவர். பழைய ஏற்பாட்டின் காலத்திலும், கிறிஸ்து எனும் பாறையினின்றே மக்கள் மெய்யான வரங்களைப் பாலைவனத்தில் பெற்றார்கள் என பவுல் மொழிகின்றார் (1 கொரி 10:4). மனித உறுதிகளால் அல்லாமல், பிரமாணிக்கமுள்ள இறைவனின் அருளால் அப்பாறையில்தான் நாம் நிலையாக நிற்கிறோம் (10:12 தொ).

பாற்கட்டி, பாலாடைக்கட்டி (CHEESE)

விவிலியத்தில் உணவுப்பொருள்கள் பற்றிக் கூறப்படும் பகுதிகளில் இரண்டு முறை பாலாடைக்கட்டி பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

அ) தாவீது பாசறையில் இருக்கும் தனது சகோதரர்களுக்குப் பாலாடைக்கட்டி கொண்டு வருவார் (1 சாமு 17:18).

ஆ) தாவீது மகனாயிம் என்ற பாளையத்தை அடைந்தபோது சோபியும், அம்மியேலும், பர்சில்லாயும் கோதுமை, வாற்கோதுமை, மாவு, வறுத்த தானியம், பாற்கட்டிகள் போன்ற பொருட்களை அவருக்குக் காணிக்கையாகக் கொடுத்தனர் (2 சாமு 17:29).

விவிலியகாலத்தில் உப்பிட்ட தயிரினைச் சிறிய வட்டமான தட்டுகளின் ஊற்றி, திறந்த வெளியில் அவற்றைக் காயவைத்து அல்லது உறையவைத்துப் பாலாடைக்கட்டி தயாரிக்கப்பட்டது. யோபு என்பவர், "பால் போல என்னை நீர் வார்க்கவில்லையா? தயிர்போல் என்னை நீர் உறைவிக்க வில்லையா?" என்று யாவேயிடம் கேட்கிறார் (யோபு 10:10).

பானப்படையல், பானப்பலி (LIBATION, DRINK OFFERING)

இது திரவம் அல்லது பானக்காணிக்கையைப் பலியாக ஒப்புக்கொடுத்தலாகும். இஸ்ராயேலர் ஒவ்வொருநாளும், நோன்பு நாட்களில் அதிக அளவிலும், உணவுப் பொருள்களில் பலவற்றை ஒழுங்காக அளித்த காணிக்கைப் பொருளான விலங்குகள், தானியம், எண்ணெய் போன்ற பொருட்களோடு, பானக்காணிக்கையும் ஒன்றாகும் (எண் 28:29). தூயகத்தில் ஆண்டவருக்குப் பானப்படையலாக மதுபானத்தை ஊற்ற வேண்டும் (28:7). விலங்குகளோ, தானியங்களோ காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்படும்போது பானப்படையலும் சாதாரணமாக ஒப்புக்கொடுக்கப்பட்டது (எண் 6:15. 17; 1 நாள் 29:21; 2 நாள் 29:35; எஸ் 7:17). ஒப்புக்கொடுக்கப்பட்ட விலங்கின் பருமனுக்கேற்ப, பானப்படையலின் அளவும் இருந்தது (எண் 28:14). பெத்தேலில் பீடத்தை யாக்கோபு திருநிலைப்படுத்தும்போது பானப்படையலையும் பயன்படுத்தினார் (ஆதி 35:14).

பானக்காணிக்கை பழம் மேற்காசியாவில் வழிபாட்டில் பரவலாகப் பயன்பட்டது; ஆகவே, இஸ்ராயேலர் ஈடுபட்ட சில வழிபாட்டில் ஓர் இடம் வகித்தது (எசா 57:6; எரே 20:28). யாவே வழிபாட்டில் பலியிடப்பட்ட விலங்குகளின் இரத்தம் சிந்தப்பட்டது; ஆனால், இரத்தத்தைப் பானப்படையலாகப் பயன்படுத்தும் பழக்கம் மற்றத் தெய்வங்களின் வழிபாட்டில் மட்டுமே தொடர்பு கொண்டிருந்தது (சங் 16:4).

நற்செய்தியின் பணியில் தனது இறப்பைக் குறிக்க பவுல் பானப்படையலை உருவகமாகப் பயன்படுத்துகிறார் (பிலி 2:17).

பானம் (DRINK)

விவிலிய காலங்களில் மனிதனால் பருகப்பட்ட முக்கியமான பானங்கள் திராட்சைரசம், பால், தண்ணீர் ஆகியவையாகும் (சீரா 39:26; இவை மனித வாழ்க்கைக்கு அவசியமான தேவையான மூன்று பொருட்கள் என்று கொடுக்கப்பட்டுள்ளன). இவற்றோடு, தாகத்தைத் தணிக்கும் பானமாகக் காடி பயன்படுத்தப்பட்டது. குடிப்பது என்பது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கண்டிக்கப்படவில்லை; சீனாய் மலைமீது

மோசேயும், தலைவர்களும் கடவுள் முன்னிலையில் உண்டார்கள், குடித்தார்கள் (யாத் 24:9-11). கடவுள் பயம் அற்றவர்கள்தான் தாகமாயிருப்பவர்களுக்குக் குடிக்கக் கொடுப்பதில்லை (எசா 32:6). மேலும், இயேசு தனது நற்செய்தியை "நிலைவாழ்வு அளிக்கிற தண்ணீர்" (யோவா 4:14) என்றும், தன் இரத்தத்தை "உண்மையாகவே குடிக்கலாம்" (6:55) என்றும் கூறுகின்றார். "உண்பதையும் குடிப்பதையும், தன் உழைப்பால் வரும் இன்பத்தைத் துய்ப்பதையும் விட நலமானது மனிதனுக்கு வேறொன்றுமில்லை" என்று திருவுரையாளர் கூறினாலும் (திருவுரை 2:24; 3:13; 5:18; காண்க. 8:15), "கடவுளின் அரசு உணவிலும் பானத்திலும் அடங்கியில்லை; கடவுளின் அரசு என்பது நீதியும், அமைதியும் பரிசுத்த ஆவியில் துய்க்கும் மகிழ்ச்சியும் ஆகும்" என்று பவுல் கூறுகிறார் (உரோ 14:17).

பானம் பரிமாறுபவர் (CUPBEARER)

இவர் அரசருக்குத் திராட்சை ரசம் தருபவர். அவரது நம்பிக்கையையும் பெற்றவர். சூழ்ச்சிகள் பற்றிய அச்சம் இந்த வேலையைத் தனிச்சிறப்பான நம்பிக்கைக்குரியதாக்கியது. இதற்குப் பிரமாணிக்கம் முதன்மையான பண்பாகும். சாலமோன் மன்னருடைய பானம் பரிமாறுபவரும், மற்றவரும் சேபாவின் அரசியை வியப்பில் ஆழ்த்தினர் (1 அர 10:5; 2 நாள் 9:4). நெகேமியா பாரசீக மன்னருக்குப் பானம் பரிமாறுபவராக இருந்தார் (நெகே 1:11; 2:1). இந்த வெளிநாட்டவரான நெகேமியா இந்த உயர்ந்த பதவியை வகிக்கக் காரணம் அவரது கூர்மதியும், நேர்மையும், பாரசீகத்தின் சுதந்தரப்போக்குமாகும்.

பானி (BANI - நிறுவியவர்)

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட பிறகு உண்டான ஒரு பெயர். இது பல பெயர்களோடு ஒன்றித்துச் செல்வதால் பல்வேறு கருத்துகளுக்கு இடம் அளிக்கிறது.

1. காது வம்சத்தினர். தாவீதின் புகழ் பெற்ற 30 போர்களில் ஒருவர் (2 சாமு 23:36). இதையொத்து நாளாகமத்தில் காணப்படும் பெயர்ப்பட்டியலில் (1 நாள் 11:38) இப்பெயர் காணப்படவில்லை.

2. மெராரியின் வழிவந்த ஒரு லேவியர். ஏத்தான் குடும்ப வழிவந்தவர். தாவீது காலத்தில் ஆலயப்பாடகர் (1 நாள் 6:46).

3. யூதாவின்மகன். பெரேட்சின் சந்ததியில் பிறந்த ஊத்தாயின் வழிவந்தவர் (1 நாள் 9:4).

4. செருபாபேல் மற்றும் எஸ்ராவின் தலைமையில் அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய ஒரு பெரும் குடும்பப் பெயர்ப்பட்டியலில் இவரது பெயர் இடம் பெறுகிறது (எஸ் 2:10; 8:10).

5. தனி நபரைக்காட்டிலும், ஒரு குடும்ப அளவில் தோன்றும் சிறு கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. இவர்களில் பலர் அன்னியப் பெண்களை மணந்தவர்கள் (எஸ் 10:29,34).

6. எருசலேம் மதிற்சுவரைப் பழுதுபார்த்த இரகூமின் தந்தை (நெகே 3:17).

7. எஸ்ரா சட்டத்தை மக்களுக்கு அறிவிக்க, அதை மக்களுக்கு விளக்கிக்காட்டிய லேவியர்களுள் ஒருவர் (நெகே 8:7). இவர் பொதுச் செபத்திலும் பங்கெடுத்தார் (9:4-5). நெகேமியா தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர் (10:13).

8. எஸ்ரா காலத்தில் கூடாரத் திருவிழாவில் கலந்து கொண்ட ஒரு லேவியர் (நெகே 9:4-5).

9. நெகேமியா தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மக்கள் தலைவர்களுள் ஒருவர் (நெகே 10:15).

10. எருசலேமில் லேவியர் குலத்தின் மேற்பார்வையாளராய் இருந்த உசீயின் தந்தை (நெக 11:22).

பானுவேல் (PHANUVEL - இறைவன் முகம்)

பானுவேல், இறைவாக்கு உரைப்பவளான அன்னாவின் தந்தை (லூக் 2:36).

பி

பிககிரோத்து (PIAHIROTH - கோரைப்புல் நிலம் (தேவர்), ஆர்து தெய்வத்தின் வீடு)

இது நைல்நதியின் கிழக்குக் கழிமுகப் பகுதியில் உள்ள நகரம். இதன் அருகில் யாத்திரையின் தொடக்ககாலத்தில், செங்கடலைக் கடக்குமுன் இஸ்ராயேல் மக்கள் கடைசியாகத் தங்கியிருந்தனர் (யாத் 14:2.9; எண் 33:7). பாகால் - செபோன் என்னும் இடத்திற்கு அருகில் பிககிரோத்து இருந்ததாக எண் 33:7 கூறுகின்றது. இஃது இருந்த இடம் தெரியவில்லை. ஆனால், நைல் கழிமுகப்பகுதியில் கிழக்குக் கோடியில் இருந்திருக்க வேண்டும்.

பிகதா (BIGTHA – கடவுளின் கொடை)

அகசுவேர் அரசனின் கீழ் இருந்த ஏழு அண்ணகர்களில் இவனும் ஒருவன். அந்தப்புரக் காவலர்களாகிய இவர்கள் அரச கட்டளைப்படி அரசி வஸ்தியை அவன்முன் அழைத்து வர அனுப்பப்பட்டவர்கள் (எஸ்த 1:10). இவனும் எஸ்த 2:21; 6:2-இல் குறிப்பிடப்படும் பிகதானும் ஒரே ஆளாக இருக்கலாம்.

பிகதான், பிகதானா (BIGTHAN, BIGTHANA - கடவுளின் கொடை)

இவன் அகசுவேர் அரசனின் அரண்மனையின் தலைவாயிலைக் காத்து வந்த இரு அண்ணகர்களில் ஒருவன். மற்றொருவன் தெரேசு என்பவன் ஆவான் (எஸ்த 6:2; 2:21). இந்த இரு அண்ணகர்களும் அகசுவேர் அரசன்மேல் சினம் கொண்டு, அவனுக்கு எதிராய் எழுந்து அவனைக் கொல்ல வாய்ப்புத் தேடினர் (2:21). மொர்தக்காயின் செய்தியால் அஃது உண்மை எனத் தெரியவே அக்காவலர்கள் இருவரும் தூக்கிலிடப்பட்டார்கள். இவனும் எஸ்த 1:10-இல் குறிக்கப்படும் பிகதாவும் ஒரே ஆளாக இருக்கலாம்.

பிகல் (PHYGELUS – தப்பியோடியவர்)

ஆசியாவைச் சேர்ந்த கிறிஸ்தவனான பிகல் பவுலைக் கைவிட்டு விலகிச் சென்றார். இவர் கருத்து வேறுபாட்டாலோ, உரோமையில் பவுலைப் போன்று உயிர் துறக்க வேண்டுமே என்ற அச்சத்தாலோ அவரிடமிருந்து விலகிச் சென்றதாகக் கருதப்படுகிறது (2 திமொ 1:15). இதற்கு மாறாக, ஒனேசிப்போர் பவுலுக்கு ஆறுதல் அளித்தார். விலங்கிடப்பட்ட பவுலைக் குறித்து வெட்கப்படவில்லை (1:16-17).

பிகவாய் (BIGVAI - மகிழ்ச்சியான)

இவர் பாபிலோனிலிருந்து செருபாபேலோடு திரும்பிய யூதத்தலைவர்களில் ஒருவர் (எஸ் 2:14; நெகே 7:19). "பிகவாயின் புதல்வர்களில்" சிலர் எஸ்ராவோடும் திரும்பி வந்தார்கள் (எஸ் 2:2; நெகே 7:7). எஸ்ராவின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர்களில் இவரும் இடம் பெறுகிறார் (நெகே 10:16).

பிக்கோல் (PHICOL – வலிமையான)

பிக்கோல், அபிமெலக்கின் படைத்தலைவன் ஆவார். அபிமெலக்கு ஆபிரகாமோடு பெயேர்செபாவிலும் (ஆதி 21:22-32), ஈசாக்கோடு கெராரிலும் (ஆதி 26:26-31) உடன்படிக்கை செய்து கொண்டதற்குச் சாட்சியாவார். இப்பெயர் ஓர் ஆளின் பெயரைவிட, ஒரு பட்டமாக இருக்கலாம்.

பிக்ரி (BICHRI – தலைப்புதல்வன்)

பென்யமின் இனத்தைச் சேர்ந்த சேபாவின் தந்தை, சேபா தாவீதுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான் (2 சாமு 20:1 தொ). இப்பெயர் இனப்பெயராக இருப்பதால் "பிக்ரியின் மகன்" என்ற சொற்றொடருக்குச் சேபா, பெக்கர் குலத்தைச் சேர்ந்தவன் என்று பொருள் கொள்ளலாம் (ஆதி 46:21; 1 நாள் 7:6.8).

பிக்ரியர் (BICHRITES)

பிக்ரியின் வழித்தோன்றல்களும் கிளர்ச்சி செய்த சேபாவின் உறவினர்களுமாவர் (2 சாமு 20:14).

பிசிதியா (PISDIA)

சிறிய ஆசியாவின் மத்திய தென்பகுதியின் மத்தியில் அமைந்த ஒரு மலைப்பங்கான பகுதியே பிசிதியா. இதற்குத் தெற்கே பம்பிலியாவும், மேற்கே லீக்கியாவும் காரியாவும், வடக்கே பிரிகியாவும், கிழக்கே இசாவுரியாவும் அமைந்துள்ளன. இப்பகுதி கிழக்கு மேற்காக 192 கி.மீ. தொலைவும் தெற்கு வடக்காக 80 கி.மீ. தொலைவும் பரந்து விரிந்து கிடக்கிறது. தவுரசு மலைப்பகுதியில் மலைகள் பல சூழ அமைந்துள்ளதால் இதனை அன்னியர் புகுந்து கைப்பற்றுவது கடினமாகும். மேலும், இப்பகுதியின் முரட்டுப் போர்த்தன்மையுடைய மக்கள், உரோமைய, கிரேக்கக் கலாச்சாரத்துக்குத் தங்களையே அவ்வளவு எளிதாசு அளித்து விடவில்லை. ஆனால், இம்மலைப்பாங்கான பகுதி வளமிக்க பள்ளத்தாக்குகளையும், பெரிய ஏரிகளையும், காடுகளையும் கொண்டுள்ளதால் ஏராளமான ஒலிவமரங்கள் வளர்கின்றன. மேய்ப்பு நிலங்களும் நிறைந்துள்ளன. இங்கு, திராட்சை ரசம் சிறந்ததாக உள்ளது. எனவே, ஏராளமானோர் வாழ்வதற்கு வாய்ப்பளிக்கிறது.

உரோமையர் காலத்துக்குமுன் வேறெவருக்கும் பிசிதியா கீழ்ப்பட்டிருந்ததில்லை. கி.மு. 25-இல் கலாத்திய அரசனான அமிந்தசு தனது உயிரை இழந்தபின், அவரது முயற்சியான பிசிதியாவைக் கைப்பற்றுதல் உரோமையர்களால் தொடரப்பட்டது. அகுஸ்து சீசர் பிசிதியாவிற்கு வெளியே உரோமைக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்தி அதனைப் பிசிதியாவோடு இணைத்து, பிசிதியாவை ஏனைய உரோமைக் குடியேற்ற நகரங்களோடு இணைத்தான். இங்கு அந்தியோக்கு என்பவன் அதிகாரியாக இருந்தான். இவனையே அ.ப. 13:14 'பிசிதியாவின் அந்தியோக்கு' என அழைக்கிறது. ஆனால், இது பிசிதியாவில் உள்ள அந்தியோக்கு என்னும் ஓர் இடத்தைக் குறிப்பதாகக் கொள்வதே சரி யென்கின்றனர்.

கி.மு. 25-இல் கலாத்தியா உரோமையர்களின் ஒரு பகுதியானபோது கலாத்தியா மட்டுமன்று, பிசிதியா, லிக்கவோனியா, இசாவுரியா, பிரிகியாவின் ஒரு சில பகுதிகள் ஆகியவையும் இணைக்கப்பட்டன. இதனால்தான் பவுல் வடக்கே பம்பிலியாவிலுள்ள பெருகையிலிருந்து செல்லும் போது, பிசிதியாவின் அந்தியோக்கு வழியே சென்றார் (அ.ப. 13:14). இது கலாத்தியாவின் ஒரு பகுதியே. பவுல் பிசிதியா வழியில் போகும்போதோ, திரும்பும்போதோ எங்கும் தங்கவில்லை (14:24). ஏனெனில், இப்பகுதியில் யூதர்கள் அதிகமில்லை. இங்கு வாழ்ந்தவர்களே யூத-கிரேக்கப் பண்பாட்டை வெறுப்பவர்களாக இருந்தனர். 2 கொரி 11:26-27-இல் குறிப்பிடுவதன்படி திருடர்களிடமிருந்து இவர் பெற்ற ஆபத்து இப்பிசிதியாவின் மக்களிடமிருந்து பெற்றதாகவே இருக்க வேண்டும். ஆனால், பிசிதியாவின் எப்பகுதியில் பயணம் சென்றார் எனக் கூற இயலாது. அவர் பெருகையிலிருந்து வடக்கே சென்று, தென்கிழக்கே லிம்னாய் என்றழைக்கப்பட்ட இரட்டை ஏரிகளின் கரை ஓரத்திலே பயணம் செய்து, அததா என்னும் பகுதியின் வழியே சென்றிருக்க வேண்டும்.

கி.பி. 74-இல் வெஸ்பாசியன் பிசிதியாவின் தென்பகுதியை உரோமையின் மாநிலமான லீக்கியா-பம்பிலியாவோடு இணைத்தார். வட பகுதி கலாத்தியா மாநிலத்துடன் இருந்தது. பின்னர், கலாத்தியாவின் ஒரு பகுதியான பிசிதியா தனியே பிரிக்கப்பட்டு, பிசிதியா மாநிலமாக விரிவுபடுத்தப்பட்டது.

பிசித்தா (BIZTHA - அண்ணகன்)

அகசுவேர் அரசனின்கீழ் அந்தப்புரக் காவலர்களாயிருந்த ஏழு அண்ணகர்களில் இவரும் ஒருவர். அரசி வஸ்தியை அழைத்து வர அனுப்பப்பட்டவர் (எஸ்த 1:10).

பிசியோத்தியா (BIZIOTHIAH - யாவேயின் வெறுப்பு, புறக்கணிப்பு)

யூதாவின் நெகேபு மாவட்டத்தில் பெயேர்செபாவுக்கு அருகிலுள்ள ஒரு நகரம் (யோசு 15:28). இப்போதுள்ள வாசகம் பழுதுபட்டுள்ளது. இஃது ஒரு வேளை "அவள் புதல்விகள்" (அதாவது சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்கள்) என்று வாசிக்கப்பட வேண்டும்.

பிசின் மரம் (BALSAM TREE)

இது 1 நாள் 14-15-இல் பிசின் மரம் என்றும், அதற்கு இணையான 2 சாமு 5:23-24-இல் முசுக்கொட்டை மரம் என்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதை மரம் என்பதைவிட, புதர்ச்செடி என்பது மேல். இச்செடி பால்போன்ற சாற்றினைச் சுரக்கும். இது யூதேயாவின் மலைப்பகுதியில் அதிகமாகக் காணப்படுகிறது. இதனுடைய பல கிளைகளும் கடினமான இலைகளும் பாதுகாப்புக்கோ, மறைந்துகொள்வதற்கோ தகுந்த இடம் அளிக்கக்கூடியது.

பிசைந்து மாவு (DOUGH)

இது மாவும் (அல்லது உணவு) தண்ணீரும் (அல்லது ஒலிவ எண்ணெய்) சேர்ந்த ஒரு கலவையாகும். இது மரப்பாத்திரத்திலோ, மாவு பிசையும் பாத்திரத்திலோ பிசையப்படும் (யாத் 12:34. 39; 1 சாமு 13:8; எரே 7:18; ஓசே 7:4; உரோ 11:16; 1 கொரி 5:6-7). பிசைவதற்குச் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் மாவுகள் வாற்கோதுமை, கோதுமை ஆகியவையாகும்; சில சமயங்களில் பிற தானியங்களும் பயன்பட்டன. பிசையப்பட்ட மாவில் சிறிது புளிப்பு மாவு சேர்க்கப்பட்டு, புளிக்கச் செய்தபின் அப்பம் செய்யப்பட்டது. பிசைந்த மாவு, எண் 15:20-21; நெகே 10:37; எசே 44:30-இல் குறிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இஃது உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (உரோ 11:16; 1 கொரி 5:6-7). இது மாவு பிசையும் பாத்திரத்திலிருந்தும், போரடிக்கும் களத்திலிருந்தும் முதற்பலனைக் காணிக்கையாகக் கொடுப்பதை உணர்த்தலாம் (எண் 15:20-21; எசே 44:30; உரோ 11:6).

மாவு பிசையும் பாத்திரம் மரம், வெண்கலம், மட்கலங்கள் ஆகியவற்றில் செய்யப்பட்டிருக்கலாம். எகிப்தில் கொள்ளை நோய்கள் தாக்கியபோது தவளைகள் மாவு பிசையும் பாத்திரங்களிலும் ஏறிவந்து விட்டன (யாத் 7:28). இஸ்ராயேலர் எகிப்தை விட்டு ஓடியபோது மாவு பிசையும் பாத்திரங்களையும் எடுத்துச் செல்வதில் கவனமாய் இருந்தனர் (12:34). யாவேயின் ஆசீரையும் சாபத்தையும் பெறும் பொருட்களில் மாவு பிசையும் பாத்திரமும் உள்ளடங்கும் (உப 28:5.17).

பிசோன் (PISHON)

ஏதேன் தோட்டத்தில் ஓடிய நான்கு ஆறுகளில் ஒன்று. இஃது அவிலா நாட்டைச் சுற்றி ஓடியது (ஆதி 2:11). கங்கை, சிந்து, யூப்பிரத்தீசுவின் உப நதிகளும் மற்ற நதிகளும் இதற்கு அடையாளம் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கருத்தும் ஏதேன் தோட்டம் எங்குள்ளது என்ற கணிப்பைப் பொருத்தது. எந்தக் கருத்தும் மற்றதை விட மேலானதாகத் தெரியவில்லை.

பிச்சையிடுதல், ஈகை (ALMSGIVING)

I. பழைய ஏற்பாடு:

1. **சொல்லின** பொருள்: எபிரேய மொழியில் பிச்சையிடுதலைக் குறிக்க தனிச்சொல் எதுவும்மில்லை. இதைக் குறிக்கும் கிரேக்கச் சொல் விவிலியத்தில் பல பொருட்களைத் தருவதாக அமைந்துள்ளது. இச்சொல் இறைவனின் இரக்கத்தையும் (சங் 24:5; எசா 59:16), சில சமயங்களில் மனிதன் இறைவனுக்குப் பணிந்து நடப்பதையும் (உப 6:25), அயலாருக்கு இரக்கத்தைச் செயலில் காட்டுவதையும், அதிலும் முக்கியமாக இல்லாதவருக்குப் பொருளுதவி செய்வதையும் குறிப்பிடுகின்றது. ஈகையைக் குறிக்கும் "எலிமோசின்" என்ற இந்தக் கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டிலும், தானியேல் (9:16), தோபியா (3:2), சீராக்கு நூல் (16:14; 17:29)

போன்ற பழைய ஏற்பாட்டின் பிந்திய தொகுப்புகளிலும், பொதுவாகப் பிறருக்கு அளிக்கும் தர்மத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது. சிறப்பாக, விவிலியம் முழுவதிலும் ஒருவன் அயலானுக்கு உதவும் ஈகையானது, இறைவன் மனிதனுக்குச் செய்த உதவியைப் பின்பற்றுவதாக அமைந்துள்ளது.

2. **ஈகை நமது கடமை:** சகோதரரையும், எளியவரையும் அன்பு செய்ய வேண்டும் என்ற உணர்வு தொன்றுதொட்டு விவிலிய இறைமக்களின் சமய மரபில் இருந்து வந்துள்ளது. இவ்வுணர்வுதான் ஈதலின் அடிப்படைக் காரணமாகும். அதனால்தான் மோசே சட்டத்தில் ஈகையைக் குறித்துச் சில விதிமுறைகளைப் பார்க்கிறோம். எ.கா., அறுவடையான கதிர்களில் ஒரு பாகத்தை ஏழைகள் பொறுக்கிச் சேகரித்துக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டும். (லேவி 19:9; 23:22; உப 24:20 தொ; ரூத் 2). வருடத்தில் மூன்று தடவை பத்தில் ஒரு பாகத்தை நிலமற்ற லேவியர்கள், அன்னியர்கள், அனாதைகள், கைம்பெண்கள் ஆகியவர்களின் பராமரிப்புக்காக அளிக்க வேண்டும் (உப 14:28 தொ; காண். தோபி 1:8); எளியவருக்குத் தாராள மனப்பான்மையுடனும் (உப 15:11; பழ 3:27), அவரவர் தேவைக்கேற்றவாறும் (சீரா 18:15 தொ) உதவ வேண்டும்.

3. **ஈகையும் சமய வாழ்க்கையும்:** ஈகையை நாம் வெறும் மக்கட்பணியாகக் கருதாது மதச்சார்புள்ளதாகக் கருத வேண்டும். பலமுறை ஈகை திருவழிபாட்டோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது (2 சாமு 6:19; நெகே 8:10 தொ; 2 நாள் 30:21-26; 35:7 தொ). ஏழைகளுக்குத் தானம் அளித்தல் திருவிழாக்களில் நடைபெறும் சாதாரணமான நிகழ்ச்சி ஆகும் (உப 16:11.14; தோபி 2:1 தொ). இந்தச் செய்கையானது இறைவனை அடைவதற்கும் (பழ 19:17), அவரது அருளை அடைவதற்கு உரிமையையும் (எசே 18:7; காண். 16:49; பழ 21:13; 28:27), பாவத்திற்கு மன்னிப்பையும் (தானி 4:24; சீரா 3:30) பெற்றுத்தருவதால் ஈகையின் மாண்பு வெளிப்படுகிறது. ஈகை இறைவனுக்குப் பலி செலுத்துவதற்குச் சமம் (சீரா 35:2). தன் பொருட்களைத் தானம் செய்வதின் மூலம் ஒருவன் முடிவில்லாத திரவியத்தைச் சேர்த்துக் கொள்கிறான் (சீரா 29:12). "எளியோர் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றவர்" (சங் 41:1-4; காண். பழ 14:21). மூத்த தோபியா தன் மகனுக்குத் தூண்டுரை வழங்குகிறார். "உன் உடைமையிலிருந்து தானம் செய். எந்த ஏழையைக் கண்டாலும் புறக்கணியாது அவனுக்குப் பரிவுகாட்டு. அவ்வாறு செய்தால் கடவுளும் உன்னைப் புறக்கணியாமல் உனக்குப் பரிவு காட்டுவார்... உனக்கு மிகுதியான செல்வம் இருக்கும்போது ஏராளமாய்க் கொடு; குறைந்த செல்வம் இருக்கும்போது கொஞ்சமாய் ஆனால், நன்மனத்தோடு கொடுக்கும்படி கவனித்துக்கொள்" (தோபி 4:7-11.15தொ).

II. புதிய ஏற்பாடு: இயேசுவின் வருகையால் ஈகையின் மாண்பு குறையவில்லை. மாறாக, புதிய திட்டத்தில் செயல்படுவதால் புதிய மெருகு பெறுகிறது.

1. **நடைமுறையில் ஈகை:** அன்னியர்களும், விசுவாசத்திற்கு ஒத்துணர்வுகாட்டும் தெய்வ பயமுள்ளவர்களும் ஈகை செய்யும்போது, அது விசுவாசிகளால் பெரிதும் போற்றப்படுகிறது (லூக் 7:5; அ.ப. 9:36; 10:2). ஆன்மீக வாழ்வின் முப்பெரும் தூண்களாக ஈகை, செபம், தபம் என்பன இருப்பதாக இயேசு கருதினார் (மத் 6:1-18). விருப்பு வெறுப்பின்றி (மத் 6:1-4) எதையும் எதிர்பாராது (லூக் 6:35; 14:14) ஒரு குறிப்பிட்ட அளவின்றி (லூக் 6:30) தானம் செய்ய வேண்டும் என்று இயேசு போதித்தார். சட்டத்தின்படி பாரம்பரியமாக, பத்தில் ஒரு பங்கையன்று, சொத்தில் பாதியை அளிக்க வேண்டும் என்று நற்செய்தியின் மூலம் அறிகிறோம். சக்கேயு தன் உடைமையில் பாதியை அளிக்க முன்வருகிறார் (லூக் 19:8). பிறருடைய தேவைக்கு நாம் செவிமடுக்கத் தவறக்கூடாது (மத் 5:42 இணை).

ஏனெனில், ஏழைகள் எப்போதும் நம்மோடு இருப்பர் (26:11). ஒருவனிடம் பொருள் எதுவும் இல்லையெனினும் (அ.ப. 2:44) அவன் கிறிஸ்துவின் அருட்கொடைகளைப் பிறர்க்கு அளிக்கக் கடமையுள்ளவனாவான் (அ.ப. 3:6). மேலும், தேவையால் வாடுபவர்களுக்கு உதவ உழைக்க வேண்டும் (எபே 4:28).

2. **கிறிஸ்துவும், ஈகையும்:** ஈகை நமது முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். ஏனெனில், அதற்குக் காரணமும் உட்பொருளும் கிறிஸ்துவின் விசுவாசத்தில் ஆழ்ந்த முறையில் தெளிவாக விளங்குகின்றன.

அ) வானகத்தில் குறையாத செல்வத்தை அளிப்பது ஈகை (மத் 6:2.4; லூக் 12:21.33தொ) என்ற யூதர்களின் கருத்தை இயேசு ஏற்றுக் கொண்டபோதிலும், இது பிரதிபலனை எதிர்பார்த்துச் செய்வதன்று; ஏனெனில், நமது எளிய சகோதரர்களின் மூலமாக நாம் இயேசுவைக் கண்டடைகிறோம். "சின்னஞ்சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்...." (மத் 25:31-46).

ஆ) அவருடைய சீடர்கள் தங்களிடமுள்ள அனைத்தையும் துறந்துவிட வேண்டும் (லூக் 11:41; 12:33; 18:22). பொருளின்மீது வீண் ஆசை வைக்காது இயேசுவைப் பின்பற்றுதலே அதற்குரிய காரணம் (மத் 19:21 தொ). கடைசியாக இயேசுவைப்போல் நாமும் தாராளக் குணமுடையவர்களாக இருக்க வேண்டும்; "அவர் செல்வமிக்கவராய் இருந்தும், அவருடைய ஏழ்மையால், நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையானார் (2 கொரி 8:9).

இ) ஒரு பெண் தானாக விரும்பி, பரிமளதைலத்தினால் இயேசுவின் பாதங்களைப் பூசியபோது, அவள் முந்நூறு நாள் ஊதியத்தை இழந்துவிட்டாள். அவளைக் குற்றங்கண்ட யூதாசின் போக்கைக் கண்டிக்க இயேசு தயங்கவில்லை. இந்நிகழ்ச்சியில், கிறிஸ்தவ ஈகையானது வெறும் மனித நேய சட்ட திட்டங்களினின்று வேறுபட்ட சட்டத்தைக் கொண்டுள்ளது என்று இயேசு காட்டுகிறார்.

"ஏழைகள் எப்போதும் உங்களோடு இருக்கிறார்கள். நானோ எப்போதும் உங்களோடு இருக்கப்போவதில்லை" (மத் 26:11 இணை). நாட்டில் ஏழைகள் என்றும் இருப்பர் (உப 15:11). ஏழ்மை நமது பாவமனுகுலத்திற்குச் சாதாரணமானதொன்றாகும். ஆனால், இயேசு மெசியாத் தன்மையுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட அமைப்பைக் குறிக்கிறார். முன்னது பின்னதின் வழியாகத்தான் தனது உண்மையான பொருளைப் பெறுகிறது. இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தில் வெளிப்படும் இறைவனால்தான் ஏழைகள் கிறிஸ்தவ முறையில் உதவி செய்யப்படுகின்றனர்.

3. **திருச்சபையில் ஈகை:** இறையரசின் நற்செய்தியையும், ஏழ்மையை அழிப்பதையும் குழப்புவதைத் தடுக்க சில பயன் கருதாத செயல்கள் அவசியமானாலும், நம்மிடமிருந்து பிரிந்து சென்று விட்ட மனுமகனை (மத் 9:15) அடைவதற்கு நாம் அயலாருக்கு உதவி செய்வது அவசியமாகும். "இவ்வுலகச் சகோதரன் வறுமையுற்றிருப்பதைக் கண்டு மனமிரங்காவிடில் அவனுள் கடவுளன்பு நிலைத்திருக்கிறதென்று எவ்வாறு சொல்ல முடியும்? (1 யோவா 3:17; காண்க. யாக் 2:15). தன் சகோதரனுடன் உடைமைகளைப் பகிர்ந்துகொள்ளாதவன் எவ்வாறு நற்கருணைத் திருவிருந்தில் பங்கு கொள்ள முடியும்? (1 கொரி 11:20 தொ). இத்தகைய வாசகங்கள் இறைவனை அடைவதற்கு நாம் அயலாருக்கு உதவ வேண்டியதின் அவசியத்தை உணர்த்துகின்றன.

ஈகை மேலும் பரந்த நோக்கையும் எல்லையையும் கொண்டது. அது திருச்சபைகளின் ஒன்றிப்பைக் குறிக்கிறது. பவுல் பிச்சை எடுத்தலுக்கு, எருசலேமிலுள்ள தாய்த் திருச்சபைக்கு ஆதரவாகப் பிற திருச்சபைகளில் எடுத்த காணிக்கைக்குப் புனிதப்பெயரைக் கொடுக்கும்போது இதைத்தான் குறிக்கிறார். இஃது

ஓர் அறப்பணியாகும், தொண்டாகும், திருப்பணியாகும் (2 கொரி 8:4; 9:1.12 தொ). பிற இனத்திருச்சபைக்கும் யூதத்திருச்சபைக்கும் இடையில் தோன்றி பெரிதாகத் தொடங்கிய பிளவைப் பழுது பார்த்துத் திருத்தும் நோக்கோடு, கிறிஸ்துவின் ஒரே உடலில் உள்ள இரு பிரிவுகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை ஈகையால் ஏற்படுவதை விளக்குவதில் பவுல் கவனமாய் இருக்கிறார் (காண்க. அ.ப. 11:29; கலா 2:10; உரோ 15:26 தொ; 1 கொரி 16:1-4). கொரிந்தியருக்கு அளித்த உரையில் எவ்வளவு ஆர்வத்தோடு பிறரன்பு பற்றிய போதகத்தைத் தருகிறார் (2 கொரி 8-9). சகோதரர்களிடையே கிறிஸ்துவின் தாராள மனப்பான்மையைப் பின்பற்ற (8:4), சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் (8:13). இறைவன் மகிமைப்படுத்தப்படுவதற்காக (9:1-14), நாம் ஏராளமாக "விதைக்க வேண்டும்" ஏனெனில், "முகமலர்ச்சியுடன் கொடுப்பவர்கள்மேல்தான் கடவுள் அன்பு கூர்கிறார்" (9:6தொ).

பிஸ்கா மலை (PISGAH MOUNT)

அபாரிம் மலைத்தொடர்களின் நடுவே இம்மலை எரிகோவுக்கு எதிரேயுள்ளது.

'பிஸ்காவின் கொடுமுடியில்' என்ற சொற்றொடர்களில் நான்கு முறை இப்பெயர் வருகிறது. "பாமோத்திலிருந்து பாலைநிலத்தை நோக்கி நிற்கும் பிஸ்காவின் கொடுமுடிக்கருகில் மோவாபு பகுதியிலிருந்த பள்ளத்தாக்குக்கு" இஸ்ராயேலர் சென்றனர் (எண் 21:20). பாலாக்கு அரசன் இஸ்ராயேலரைச் சபிக்குமாறு பிலயாமைக் கூட்டிச் சென்றது இம்மலையுச்சிக்குத்தான் (எண் 23:14). வாக்களிக்கப்பட்ட நாட்டைக் காணப் பிஸ்காவின் கொடுமுடிக்குச் செல்லுமாறு மோசேக்குக் கட்டளையிடப்பட்டது (உப 3:27). பின்னர் மோசே மோவாபு சமவெளியைக் கடந்து நெபோ மலையில் ஏறி, எரிகோவுக்கு எதிரேயுள்ள பிஸ்கா மலையுச்சியை அடைந்தார் (34:1).

"பிஸ்காவுக்குத் தாழ்வாக இருக்கும்" என்ற சொற்றொடர்களில் நான்கு முறை இதன் பெயர் வருகிறது. நாடுகளின் எல்லைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, "பிஸ்காவுக்குக் கிழக்கே தாழ்வாக இருக்கும் அராபாவின் உப்புக்கடல் வரை" எனக் குறிப்பிடப்படுகிறது (உப 3:17; 4:49). சீகோன் ஆண்ட பகுதி பற்றி" அராபாவிலிருந்து... தெற்கில் பிஸ்கா மலைச்சரிவு வரையிலும்" என விளக்கப்படுகிறது (யோசு 12:3). ரூபனின் கோத்திரத்தார்க்குரியது பிஸ்கா மலைச்சரிவு வரைக்குமாம் (யோசு 13:20). உப 4:49 "பிஸ்காவுக்குக் கிழக்கே தாழ்வாக இருக்கும் அராபாக் கடல் வரைக்கும்" என்று குறிப்பிடுகிறது.

சிலர் இஃது அபாரிம் மலைத்தொடர்களில் ஒன்றெனவும், இதன் உச்சி நெபோ மலையெனவும் கருதுகின்றனர். ஆனால், பிஸ்காவின் கொடுமுடியெனக் குறிப்பிடுவது இஃது ஒரு தனிமலையென்பதைக் காட்டுகிறது. இராஸ் எஸ்-சியகா என்பதுதான் பிஸ்காவின் உச்சியெனில் எண் 21:20 குறிப்பிடும் பள்ளத்தாக்கு அயுன்மூசாவாகத் தான் இருக்க வேண்டும்.

பிஸ்திஸ் - சோபியா (PISTIS SOPHIA - விசுவாசம் - ஞானம்; இங்கு ஓர் ஆன்மீக உயிரின் பெயர்.)

இஃது ஒரு ஞானவாத நூல். இயேசு உயிர்த்த பன்னிரண்டாம் ஆண்டில், சீடர்களின் கேள்விகளுக்கு, குறிப்பாக, மகதலாவின் மரியாளின் கேள்விகளுக்குப் பாவம் மற்றும் மீட்பு ஆகியவை பற்றி இயேசு அளித்த போதனைகளைப் பிலிப்பு எழுதிவைத்ததாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூல் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் முதல் மூன்று பாகங்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டு, பிஸ்திஸ் சோபியா என்ற தொகுப்பாக உள்ளன. நான்காவது பாகத்தில் சில பத்தாண்டுகளுக்கும் முன்பே எழுதப்பட்டதாகும். இரண்டும் எகிப்தில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டு, கோப்திக்கு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கோப்திக்கு

மொழியில்தான் நமக்கு இந்நூல் கிடைத்துள்ளது. ஒருவகை ஞானவாதத்தைப் பற்றிய நேரடியான செய்திகளுக்கு இந்நூல் முக்கியமானதாகும்.

பிஸ்பா (PISPA)

ஆசேர் இனத்தைச் சேர்ந்த எத்தேரின் மகன் (1 நாள் 7:38).

பிஸ்லாம் (BISHLAM - அமைதியின் மகன்)

பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்களுக்கு எதிராக, பாரசீக அரசன் அர்த்தக்சஸ்தாவுக்கு மனு எழுதிய முக்கிய மூவருள் இவர் ஒருவராவார் (எஸ் 4:7). ஒருவேளை இஃது ஓர் ஆளின் பெயராக இல்லாமல் வெறுமனே ஒரு வாழ்த்தாக (அமைதியின் மகன்) இருக்கலாம்.

பிணக்குழி, கல்லறை (GRANE)

இறந்தவர்களைப் புதைப்பதற்காகத் தோண்டி எடுக்கப்பட்ட ஓர் இடம். விவிலியச் சான்றுகளிலிருந்து இஃது ஆழ்கிடங்கா, கல்லில் செதுக்கப்பட்ட குகையா என்பது தெரியவில்லை. 2 அர 13:21; சங் 49:14; தோபி 8:9.18 ஆகியவற்றில் சொல்லப் பட்டுள்ளது ஆழ்கிடங்காக இருக்கலாம். இயற்கையான அல்லது செயற்கையான குகைகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன.

பிணந்தின்னிக்கழுகு (VULTURE)

பல பிணந்தின்னி பெரிய பறவைகளில் ஒருவகை. இவை தூரத்தில் பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். இவற்றின் நகங்கள் அவ்வளவு வளர்ச்சியுற்றவை அல்ல. அலகு வலிமையுள்ளது. பெரிய பறவைகள் 2.5 மீட்டர் அகலத்திற்குத் தன் இறக்கையை விரிக்கக்கூடும்.

இவை, விவிலியகாலத்தில் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டிருக்கின்றன. பறக்கும்போது இவைகளுக்கும், பருந்துகளுக்கும் அவ்வளவு வேறுபாடு இருக்காது. இரண்டிற்கும் பொதுவான பண்புகளையே விவிலியம் கூறுகிறது. வேறுபாட்டை அவ்வளவு கவனத்தில் கொள்ளவில்லை. இரண்டு வகைகளும் பெரியவை; வலிமை மிக்கவை; நீண்ட காலம் வாழ்ந்தன; ஒரே மாதிரியாகக் கூடுகட்டின; வேட்டைப் பொருள்களையும் பிணங்களையும் தின்றன.

அசுத்தப் பறவைகளின் பட்டியலில் கழுகு முதலிடம் பெறுகிறது (லேவி 11:18; உப 14:12). கழுகு பற்றிய பிற குறிப்புகள் உருவகமாகவோ, விவரிப்பாகவோ உள்ளன (யாத் 19:4; உப 28:49; சங் 103:5; எச 40:31; எரே 49:16; அப 1:8). இப்பறவையைக் குறிக்கும் எபிரேயச் சொல்லை. யோபு 39:27-30; மீக் 1:16; மத் 24:28; லூக் 17:37; பழ 30:17; புல 4:19; ஓசே 8:11 ஆகிய பகுதிகளில் கழுகு என்றே மொழி பெயர்ப்பது சிறந்தது.

லேவி 11:13; உப 14:17-இல் வரும் கருடன், கடலூராஞ்சி, லேவி 11:18-இல் வரும் கூழக்கடா ஆகியவை கழுகு வகையைச் சேர்ந்தவையே. இவை பாலஸ்தீனத்தில் காணப்பட்டன.

பிணைக்கைதிகள் (HOSTAGES)

புரட்சியின்போது அல்லது படையெடுப்பின்போது பிணையாளராகப் பிடிக்கப்படுபவர்கள். இதன் எபிரேயச் சொல் "பிணையாகக் கொடுத்தல் அல்லது எடுத்தல்" என்ற வினைச்சொல்லில் இருந்து உருவானது. எனவே, இச்சொல்லுக்குப் "பிணையாக்கப் பட்டவர்கள்" என்பது பொருள்.

யோவாசு, யூதாவின் அரசன் அமட்சியாவை வென்றதை விவரிக்கும் இடத்தில் மட்டும்தான் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (2 அர 14:14=2 நாள் 25:24). அமட்சியா கைது செய்யப்பட்டான்; எருசலேம் சுவரின் ஒரு பகுதி உடைக்கப்பட்டது; யூதா அரசர்கள் எதிர்காலத்தில் நன்கு நடக்க வேண்டுமென்பதற்காக, பிணைக்கைதிகளாகச் சிலர் பிடித்துச் செல்லப்பட்டனர்.

பிணையாளர் (SURETY)

விரும்பி மற்றொருவருடைய கடனுக்குச் சட்டப்படி உத்தரவாதம் அல்லது பொறுப்பாளி ஆகுபவர் பிணையாளர் ஆவார். இச்சொல் கலைச்சொல்லாக ஆதி 43:9; 44:32-இல் பயன்பட்டுள்ளது. இங்கு யூதா பென்யமினுக்குத் தன்னைப் பொறுப்பாளி ஆக்குகிறார். பழ 6:1-5; 1:15; 17:18; 20:16; 22:26; 27:13 ஆகிய பகுதிகள் பிறருக்காக, குறிப்பாக அன்னியருக்காகப் பிணையாளராக ஆவது பற்றி எச்சரிக்கின்றன. ஏனெனில், இஃது ஆபத்தானது; பிறரது கடனுக்குப் பொறுப்பாக வேண்டியிருக்கும்; சுதந்தரத்தை இழந்து அடிமையின் நிலைக்கு உள்ளாக வேண்டியிருக்கும்.

இச்சொல் உருவகமாகவும் பயன் பட்டுள்ளது. கொடுமைப்படுத்துபவர்கள் முன்னிலையில், இறைவன் தன் ஊழியர்களுக்காகப் பிணையாளர் ஆகிறார் (சங் 119:122). இறைவனுக்கும் மக்களுக்குமிடையிலான உடன் படிக்கையின் இடையாளராக மட்டுமில்லாமல் அதன் உத்தரவாதமும் ஆவதால், இயேசு "மேலான உடன்படிக்கையின் பிணையாவார்" என்று கூறப்படுகிறது (எபி 7:22).

பிதகர் (BIDKAR - ஊடுருவக் குத்துதலின் மகன்)

யோராமைக் கொன்ற சமயம் ஏகூவின் தேரோட்டியாக இருந்தவன் (2 அர 9:25).

பித்தநீர், பிச்சு (GALL OF LIVER)

இந்தச் சொல்லானது "கசப்புத்தன்மை" என்னும் பரந்த பொருளைக் குறிக்கிறது (யோபு 13:26). அதற்குப்பின் இந்தச்சொல் பிச்சிற்குக் (உடலைக் கிழித்து) குறித்துச் சொல்லப்படுகிறது (யோபு 20:25). தோபி 6:8-இல் மீனிலிருந்து எடுக்கப்பட்டது மருந்திற்குப் பயன்படும் என்று குறிக்கிறது. பித்தநீர்க் குழி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (யோபு 16:13).

பித்தியா (BITHIAH - ஆண்டவரின் மகள்)

பார்வோனின் மகளும், யூதாவின் மெரேதின் மனைவியுமாவாள் (1 நாள் 4:17). இவள் இஸ்ராயேலின் கடவுள் வழிபாட்டுக்கு மனம் மாறியவள் என்று இவள் பெயர் காட்டுகிறது.

பித்தினியா (BITHYNIA)

இது சிறிய ஆசியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்த ஓர் உரோமையர் மாகாணமாகும். இது கருங்கடல் கரையில், கிழக்கில் பாப்லகோனியாவை அடுத்தும், மேற்கு மற்றும் தென்மேற்கில் மீராவை நோக்கியும் அமைந்திருந்தது. இதில் திராக்கோனியர், தீனியர், பித்தினியர் ஆகிய இனத்தவர்கள் கலந்து வாழ்ந்தனர்.

கிரேக்கர் காலத்தில் முதலாம் நிக்கோமேது (கி.மு. 277-250) ஓர் அரச மரபைத் தொடங்கி வைத்தார். இப்பகுதி முக்கியத்துவம் பெற்றது. நிக்கோதியா இதன் தலைநகரமாகும். நிக்கோமேது திராக்கிலிருந்து காலியர்களைத் தனக்கு உதவியாக அழைத்தார். இது காட்டுமிராண்டிகளை நாட்டிற்குள் புகுத்தும் ஆபத்தைக் கொண்டு வந்தது. இவரது பேரன் முதலாம் பிருசியா (கி.மு. 230-183), பெர்கமோவிற்கு எதிராக, மாசிதோனியர்களுக்கு உதவி செய்தார். ஆனால், இவரது ஆதிக்கம் உரோமையரால் கட்டுப்படுத்தப்பட்டது. இவர் புருசா மற்றும் ஒலிம்பும் நகரங்களை நிறுவினார். இந்நாட்டின் செழிப்பு விவசாயத்தையும் மருந்து நீரூற்றுகளையும் சார்ந்திருந்தது. இந்நாடு கி.மு. 74-இல் உரோமையர்களுக்கு உடைமையாகக் கொடுக்கப்பட்டது.

கி.மு. 65-63-இல் பாம்பே பொந்துவையும் பித்தினியாவையும் சேர்த்து ஒரே மாகாணம் ஆக்கினார். இப்பகுதி பற்றி நாம் அறிவதெல்லாம் இளைய பிளினியின் கடிதங்களிலிருந்துதான். இவர் கி.பி. 111-113-இல் இப்பகுதிக்குச் சிறப்பு ஆணையாளராக இருந்தார். இவரது காலத்தில் பித்தினியக் கிறிஸ்தவர்கள் பெரிதும் பெருகியிருந்தனர். கிறிஸ்துவம் கிராமப் புறங்களுக்கும் பரவிவிட்டது என்று பேரரசன்

திரேசனுக்கு இவர் எழுதுகிறார். இது, நற்செய்தியறிவித்தல் கிரேக்கக் கலாச்சாரமுடைய சிறிய பகுதிகளுக்கும் பரவியிருந்தது என்பதைச் சுட்டுகிறது.

பவுல் தனது இரண்டாம் மறைபரப்புப் பயணத்தில் பித்தினியாவுக்குப் போகமுயற்சித்தார். ஆனால், "இயேசுவின் ஆவி அவர்களைப் போகவிடவில்லை" (அ.ப. 16:7). ஆகவே, அவர் துரோவாவுக்குச் சென்றார். ஆனால், பித்தினியப் பகுதியில் விரைவில் திருச்சபை நன்கு நிறுவப்பட்டது (1 பேதுரு 1:1). வரும் நூற்றாண்டுகளில் பித்தினியாவிலுள்ள நிசேயா (கி.பி. 325,787), கால்சிதோன். (451) ஆகிய நகரங்களில் திருச்சபையின் பொதுச்சங்கங்கள் நடைபெற்றன.

பித்தோம் (PITHOM – ஆதும் தெய்வத்தின் வீடு)

எகிப்தில் உள்ள இந்நகரம், ராமசேசுடன் சேர்த்து எபிரேயர்களால் கட்டியெழுப்பப் பட்டது. கொடுமைப்படுத்திய எகிப்திய பார்வோனுக்காக இஃது எழுப்பப்பட்டது (யாத் 1:11).

விவிலிய விளக்கங்கள் இந்நகரம் அமைந்த இடத்தைச் சரியாகச் சுட்டிக் காண்பிக்கவில்லையாதலால், எகிப்தியரின் உணவுக் களஞ்சியமான இதனைப் பற்றி அகழ்வாராய்ச்சியில் கிடைத்தனவற்றை வைத்துத்தான் இஃது அமைந்த இடத்தைக் காண முடிகிறது அல்லது சுட்டிக் காட்டமுடிகிறது.

தெல் ஏல்-ரத்தாபா அல்லது தெல் ஏல்-மஸ்குத்தா இவை இரண்டில் ஏதாவது ஒன்றுதான் இந்நகரமாக இருக்க வேண்டும். ஆனால், இது பற்றிய பல கருத்துக்கள் அறிஞர்களிடையே இருந்தாலும் இவை அமைந்த இடமாகக் கருதப்படுபவற்றை நன்கு ஆய்ந்தாலொழிய தெளிவான முடிவு எதற்கும் வர முடியாது. ஆனால், பித்தோம், சுக்கோத்து ஆகியவற்றை வாடிதுமெயிலாத்து இருக்கும் பகுதியில் உள்ளது என்று கூறுவது இஸ்ராயேலர்கள் பயணம் செய்த பாதையை வைத்துக் கூறப்பட்டதாகும்.

பித்தோன் (PITHON – தீங்கற்ற)

இவர் மீக்காவின் மகனும், பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த சவுலின் வழித்தோன்றலும் ஆவார் (1 நாள் 8:35; 9:41).

பித்ரோன் (BITHRON – குறுகிய மலையிடுக்கு)

அப்னேரும், அவர் வீரரும் கிபயோன் அருகில் கண்ட தோல்விக்குப் பிறகு அவர்களது பாசறைக்குப் பித்ரோனைத் தாண்டி அல்லது அதன் வழியாக மகனயிமை அடைந்தனர் (2 சாமு 2:29). அப்பொழுது மிகவும் பிரபலமான குறுகிய மலைப்பாதை, தற்போது அஃது இருந்த இடமே இல்லை என்ற அளவில் அறியப்படாமல் உள்ளது. ஒருவேளை இது முற்பகலைக் குறிக்கலாம் என்று அர்னால்டு என்ற அறிஞர் கருதுகிறார்.

பிபசேத்து (PI-BESETH – பூனைத் தேவதை பஸ்தெத்துவின் வீடு)

நைல் நதியின் கழிமுகப்பகுதியில் அமைந்து இந்நகரம், எகிப்தின் கீழ்ப்பகுதியில் அமைந்த 18-ஆவது பிரிவின் தலைநகரமாகும்.

விவிலியத்தில் இந்நகரம் ஒரே ஒருமுறை மட்டும் பேசப்படுகிறது. எசேக்கியேல் எகிப்துக்கு எதிராக இறைவாக்குரைக்கும் போது ஒன் நகரத்தோடு இந்நகரமும் சேர்த்துப் பேசப்படுகிறது. இந்நகரம் நைல் நதியின் உபநதியான தானித்தின் வலக்கரையில், இன்றைய சாகாசிக்குத் தென்கிழக்கே அமைந்துள்ளது. இன்று இது தெல் பாஸ்தா என அழைக்கப்படுகிறது. பழைய பெயர் பாஸ்தெத்துவின் வீடு எனப் பொருள் தரும். அதாவது, இஃது எகிப்திய பூனைத் தெய்வத்தில் ஒன்று ஆகும்.

இந்நகரம் மிகப்பழமையானதும், பழைய அரசர்கள் காலத்திலிருந்தே உள்ள நகரமும் ஆகும். வரலாற்றில் மிகவும் பிந்திய காலத்தில்தான் இது முக்கியத்துவம் பெற்று 22, 23-ஆவது அரச வம்சங்களின் தங்கும் நகரமாகியது.

பிபுலோசு (BYBLOS – பிப்ளோஸ்)

இது பழங்காலப் பெனிசியத் துறைமுகமான கெபாலின் கிரேக்கப் பெயராகும். இத்துறைமுகம் வியாபாரத்திற்கும் கப்பல் கட்டும் தொழிலுக்கும் மையமாக விளங்கியது (காண்க. 1 அர 5:18; எசே 27:9). இத்துறைமுகம் வழியாகக் கடந்து சென்ற பொருள்களுள் புல்தாள் ஏடுகள் (பைப்பிரஸ்) அடங்கும். இப்பொருளின் கிரேக்கப் பெயரால், இத்துறைமுகம் கிரேக்கர்களால் பிபுலோசு என்றழைக்கப்பட்டது.

பிம்கால் (BIMHAL – விருத்தசேதனத்தின் மகன்)

நாளாகமத்தின்படி, பாபிலோனிலிருந்து திரும்பியபின் எடுக்கப்பட்ட தலைமுறை அட்டவணைக்கேற்ப ஆசேர் கோத்திரத்தில் வந்த யாப்லேற்றுவின் மகன். இப்பெயர் ஒரு குலப்பெயராகவும் இருக்கலாம் (1 நாள் 7:33).

பிரக்கோர் (PROCHORUS – பாடற் குழுத்தலைவன்)

எருசலேம் திருச்சபையில் போதிப்பது தவிர மற்றப் பணிகளை நிருவாகம் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுவரில் ஒருவர் (அ.ப. 6:5). இவரைப் பற்றிய புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் கூறப்படவில்லை. பாரம்பரியம் இவரை அப்போஸ்தலரான யோவானுடன் தொடர்புபடுத்திப் பேசுகிறது. பைசாந்திய ஓவியங்களில் யோவான் இவரிடம் கூற இவர் நான்காவது நற்செய்தியை எழுதுவதாகக் காட்டப்படுகிறது. மேலும், ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யோவானின் வாழ்க்கை இவரது பெயரில் எழுதப்பட்டது.

பிரக்கோர் எழுதிய யோவானின் பணிகள் (JOHN, ACTS OF, BY PROCHORUS)

இது கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கக் கதையாகும். மூலத்தில் லூக்கியுவின் யோவான் பணி நூலிலிருந்து வேறுபட்டது. பத்முவில் யோவான் தனது பதினைந்தாம் வருடத்தில் செய்த புதுமையான காரியங்களைக் கொண்டுள்ளது. கிரேக்கத்தைத் தவிர, இஃது இலத்தீன், எத்தியோப்பிய, அர்மேனிய, அரமேய, பழைய ஸ்வானிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், ஆண்டவரது வாழ்க்கைப் பாடுகள் பற்றி எந்தப் பகுதியும் குறிப்பிடவில்லை. பிரக்கோர் இந்நூலின் ஆசிரியராகக் கருதப்படுகிறார். இவரிடம்தான் யோவான் தனது நற்செய்தியைக் கூறி எழுதச் செய்வதாக, பைசாந்தியக் கலை சித்தரிக்கிறது. இஃது எருசலேமின் ஏழு திருத்தொண்டர்களில் ஒருவரைப் (அ.ப. 6:5) பிரதிபலிக்கிறது. பாரம்பரியம் இவரை ஆண்டவர் அனுப்பிய எழுபது சீடர்களில் ஒருவராகவும், பிற்காலத்தில் நிக்கோமதியாவின் ஆயராகவும் பாவிக்கிறது.

பிரதிநிதி (DEPUTY)

இவர் மற்றவருக்காகச் செயல்பட அதிகாரம் பெற்றவராவார். விவிலியத்தில் இப்பிரதிநிதி பற்றி வரும் இடங்களாவன: 1 அர 22:48; 2 அர 18:24; எஸ்த 8:9; 9:3; எரே 51:28.

பிராத்தோன் (PIRATHON –இளவரசத் தன்மையுடைய)

இஃது அமலேக்கியர்களின் மலைப்பாங்கான நாட்டிலுள்ள எப்பிராயிமின் நகரங்களில் ஒன்று (நீதி 12:15). இங்கே ஒரு சிறிய நீதிபதி புதைக்கப்பட்டார். தாவீதின் சிறந்த வீரர்களான பனாயாவும், அப்தோனும் பிராத்தோனியர்களே (நீதி 12:13.15;5 2சாமு 23:30; 1 நாள் 11:31; 27:14). அதாவது, பிராத்தோனில் வாழ்ந்தவர்கள் என்பது பொருள். நீதி 5:14 அமலேக்கியர்கட்கும், பிராத்தோனில் வாழ்ந்தவர்க்கும் தொடர்பு இருப்பதாகக் காட்டுகிறது. ஆனால், அமலேக்கியர்கள் தென்கானான் நாட்டிலே வசித்ததாகவே வழக்கமாகக் கூறப்பட்டனர்.

செக்கேமுக்குத் தென்மேற்கே 8 கி.மீ. தொலைவிலும், நப்லூசுக்கு மேற்குத் தென்மேற்கில் 10 கி.மீ. தொலைவிலும் இன்றுள்ள பராத்த எனுமிடத்திலே பிராத்தோன் இருந்ததாகக் கூறப்படுகிறது. அப்தோன் பென்யமின்

கோத்திரத்தைச் சேர்ந்தவராகையால் பிராத்தோன் பென்யமினின் நாட்டில் இருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர் (1 நாள் 8:23.30;9:36). 1 மக் 9:50-இல் குறிப்பிடப்படும் பெத்தாரோனும் பென்யமினின் நாட்டில்தான் உள்ளது. பிராத்தோன் செக்கேமுக்கு அருகில் இருக்க வேண்டுமென்பதைப் பலர் ஏற்றுக் கொள்கின்றனர்.

பிராம் (PIRAM காட்டுக்கழுதை, வேகமான)

இவர் எருசலேமுக்குத் தென்மேற்கேயுள்ள யார்முத்தின் அரசனாவார் (யோசு 10:3). யோசுவா தங்கள் நாட்டுக்குள் புகாமல் தடுப்பதற்கு எருசலேம் அரசனால் வழி நடத்தப்பட்ட ஐந்து எமோரிய அரசர்களில் இவரும் ஒருவர். எருசலேம் அரசன் தான் இவர்கள் ஐவரையும் ஒன்று கூட்டியது. ஆனால், கிபயோனில் நடந்து போரில் இவர்கள் தோற்கடிக்கப்பட்டு, பின் கொல்லப்பட்டனர் (10:23-26).

பிரிகியா (PHRYGIA)

1. **எல்லைகள்:** பிரிகியா, பழங்காலத்தில், சிறிய ஆசியாவின் பெரும்பகுதியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பெயராகும். இதன் எல்லைகள் பல்வேறுபட்ட காலங்களில் மாறுபட்டிருந்தன. இதன் வடக்கில் பித்தினியாவும், கிழக்கிலும் தென்கிழக்கிலும் கலாத்தியாவும் லிக்கவோனியாவும், தெற்கில் பிசிதியாவும் எல்லைகளாக இருந்தன. இப்பகுதி, அசீரியர்களால் முசுக்கி என்றும், பழைய ஏற்பாட்டில் மெசேக்கு என்றும் அழைக்கப்பட்டது.

2. **வரலாறு:** கி.மு. 1200-ஐ ஒட்டிய பிரிகியர்கள் சிறிய ஆசியாவில் புகுந்தனர். இஃது அக்காலத்தில் நிலவி, மக்கள் இடமாற்றம் செய்த பெரும் இயக்கத்தின் ஒரு பகுதியாகும். பிரிகியர், கோர்தியனைத் தலை நகராகக் கொண்ட ஓர் அரசை நிறுவினர். இந்நகர் பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்தது. இதன் புகழ்பெற்ற அரசர் மிதாஸ் ஆவார். பிரிகியாவின் முக்கிய நகரங்கள் இலவோதிக்கேயா, கொலோசை, எராப்பொலி ஆகியவையாகும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பிரிகியா, ஆசியா மற்றும் கலாத்தியா ஆகிய இரு உரோமையர் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

3. **மக்களும், நாகரிகமும்:** பிரிகிய இனத்தவர் அயல்நாட்டு மன்னர்களுக்கு அடிமைப்பட்டு இருந்ததால், இவர்களுடைய வாழ்க்கை முறை மற்ற நாடுகளின் பண்பாடுகளால் பாதிக்கப்பட்டது. இவர்கள் அமைதியானவர்களாகவும், அடங்கிப்போகும் குணம் உடையவர்களாகவும், நாகரிகம் உடையவர்களாகவும் இருந்தனர். இவர்கள் விவசாயமும் வாணிபமும் செய்தனர். கிரேக்கர் உரோமையர் காலத்தில் கிரேக்க மொழி பரவலாகப் பேசப்பட்டது.

இவர்களின் வழிபாட்டு முறைகள், அயல்நாட்டு வழிபாட்டு முறைகளால் பாதிக்கப்பட்ட போதிலும், இவர்களின் சமயச்சடங்குகளில் இசையும், நடனமும் முக்கிய பங்கு வகித்தன. தாய்க் கடவுளான ரேயசிபெல்லும் இயற்கையைப் புதுப்பிக்கும் ஆற்றலுள்ள சபாசியுவும் முக்கியமான தெய்வங்களாகும். இங்கு யூதர்களும் வாழ்ந்தனர். செலூக்கு நிக்காத்தோர் தான் ஆசியாவில் அமைத்த நகரங்களில் யூதர்களுக்குக் குடியுரிமை அளித்தார். லீதியா நாட்டினருக்கும், பிரிகியருக்கும் இடையே சமநிலைமை உருவாக்க பாபிலோனியா, மெசபொத்தாமியா ஆகிய இடங்களிலிருந்து 2000 யூதக்குடும்பங்களைக் குடியேற்ற மூன்றாம் அந்தியோக்கு முடிவு செய்தார்.

இங்கு வாழ்ந்த யூதர்கள் யூதச்சட்டங்களைக் கடைப்பிடிப்பதில் அக்கறை காட்டுவதே இல்லை. இங்கிருந்த குளியல் அறைகளும், மதுவும் பத்துக்கோத்திரத்தினரைத் தங்கள் சகோதரர்களிடமிருந்து பிரித்து விட்டது என்று தால்மூது கூறுகின்றது. பிரிகியா, லிக்கவோனியா நாடுகளில் வாழ்ந்த யூதர்கள், பவுலின் போதனையை உடனே ஏற்றுக்கொண்டதிலிருந்து அவர்கள் புதிய போதனைகளை ஏற்றுக்

கொள்வதில் திறந்த மனம் கொண்டவர்கள் என்பதும், பவுலின் போதனைக்கு எதிராக யூதப் பெரியோர்கள் எழுந்தது அவர்கள், யூதர்கள் சட்டங்களைப் கடைப் பிடிப்பதில்லை என்பதை அறிந்திருந்தனர் என்பதும், இதைப் பவுல் ஊக்குவித்தார் என்று கருதினார் என்பதும் புலனாகின்றன (அ.ப. 13:45.50; 14:2.19).

4. பிரிகியாவில் கிறிஸ்துவ மதம்: பெந்தெகொஸ்தேயின் போதும், பேதுரு உரையாற்றிய போதும் பிரிகியா நாட்டினர் சிலர் எருசலேமில் இருந்ததாக அ.ப. 2:10 கூறுகிறது. இவர்கள் பேதுருவால் மனந்திருப்பப்பட்டவர்கள் குழுவில் இருந்திருக்க வேண்டும் என்றும், இவர்கள்தான் பிரிகியாவுக்கு நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள் என்றும் கருதப்படுகிறது. ஆனால், இக்கருத்து நிரூபிக்கப்பட முடியாதது.

பவுல் பம்பிலியாவிலிருந்து வந்து இரண்டு பிரிகிய நகரங்களான, அந்தியோக்கியாவை நோக்கியுள்ள பிசிதியா, இக்கோனியா ஆகிய நகரங்களுக்குச் சென்றார் (அ.ப. 13:14; 14:24). இரண்டாவது மறைபரப்புப் பயணத்தின்போது பவுல், சீலா, திமொத்தேயு ஆகியவர்களுடன் பிரிகியா, கலாத்தியா பகுதிகள் வழியாகச் சென்றார் (16:6). மூன்றாம் பயணத்தின்போதும் பவுல் இங்கு வந்தார். இங்கு, பவுல் தெற்குக் கலாந்தியாவிலுள்ள பிரிகியாவுக்குப் பல முறை வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. லிகுஸ் பள்ளத்தாக்கில் வாழ்ந்த கிறிஸ்துவர்களின் வரலாறு, பிரிகியாவின் வரலாற்றில் ஒரு பகுதி ஆகும். இப்பள்ளத்தாக்கில்தான் கொலோசை, எராப்பொலி, இலவோதிக்கேயா முதலிய நகரங்கள் அமைந்திருந்தன (கொலோ 2:1; 4;13). எப்பப்பிராதான் இப்பள்ளத்தாக்கில் நற்செய்தி போதித்தார் என்று கருதப்படுகிறது. 1 பேதுரு 1:1-இல் குறிப்பிடப்படும் செய்திகளிலிருந்து பிரிகியாவிலிருந்த திருச்சபை பல எதிர்ப்புகளைத் தாங்க வேண்டி இருந்தது என்பது புலனாகிறது. ஆனால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இங்கு, திருச்சபை வலுப்பெற்றது. இங்கு ஆயரான பப்பியாக, எராப்பொலியின் அப்போலினாரிக ஆகிய தலைவர்கள் தோன்றினர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் என்று யுசேபியு கூறுகின்றார். தியோகிலேசியன் (கி.பி. 301-312) காலத்தில் இந்நகரம் முழுவதும் அழிக்கப்பட்டது.

பிரிக்கும் பாறை (ESCAPE, ROCK OF)

மாவோன் பாலைவனத்தில் ஓர் இடம் ஒருவேளை ஒரு செங்குத்தான பாறையாக இருக்கலாம் (1 சாமு 23:28). தாவீது சவுலிடமிருந்து தப்பி ஓடிய பாலைவனம் இதுதான். செங்குத்தான பாறையாக இருப்பதால் சிறிய பள்ளத்தாக்கால் பிரிக்கப்பட்டு, எதிர்ப்புறத்திலும் அதேபோலச் செங்குத்தான பாறையை ஒருவன் காணலாம். ஆனால், சுற்று வழியில்தான் அடுத்த பாறையை அடைய முடியும். இந்த இடம் மாவோனின் வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள வாடி ஏல்-மலாக்கியாக இருக்கலாம். சுற்று வழியை ஏறக்குறைய சவுல் தாண்டி வந்து விட்டார். ஏனென்றால், பெலிஸ்தியரை எதிர்க்கத் திரும்பிச் செல்வதற்குமுன் 'தாவீதை அருகில் பின்தொடர்ந்ததாக' எழுதப்பட்டிருக்கிறது.

பிரிஸ்கா, பிரிஸ்கில்லா (PRISCA, PRISCILLA)

அக்கிலாவின் மனைவி. இருவரும் கூடாரம் செய்பவர்கள். பிரிஸ்கா (உரோ 16:3; 1 கொரி 16:19; 2 திமொ 4:1-9) அப்போஸ்தலப் பணியில் பிரிஸ்கில்லா என்று அழைக்கப்படுகிறாள். இவள் பிஸ்கா இனம் என்ற உரோமை உயர்குடியைச் சேர்ந்தவளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பேரரசன் கிளாதியு எல்லா யூதர்களையும் உரோமையிலிருந்து வெளியே துரத்தியபோது, பிஸ்காவும் அக்கிலாவும் கொரிந்துக்குச் சென்றனர். அங்கே பவுல் இவர்கள் வீட்டில் தங்கினார். (அ.ப. 18:2-3). அங்கிருந்து இவர்கள் பவுலோடு எபேசுக்குச் சென்றனர். அங்கு, இருவரும் அப்பொல்லோவுக்குக் "கடவுளின் அருள் நெறியைத்" திட்டவட்டமாய் விளக்கினர்

(18:26). கிளாதியு இறந்தபின், இருவரும் உரோமைக்குத் திரும்பினர். உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் கொரிந்திலிருந்து பவுலின் வாழ்த்தைப் பெறுபவர்களில் இவர்கள் இருவரும் முதலிடம் பெறுகின்றனர் (உரோ 16:3).

பிரியாவிடை உரைகள் (FAREWELL; SPEECHES)

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பல பிரியாவிடை உரைகள் காணக்கிடக்கின்றன. மரண நிலையில் இருப்பவர்கள் தங்களுடைய வழித்தோன்றல்களிடமிருந்து பிரியும் நிலையில் இவ்வுரைகளைத் தருகின்றனர். இவை அவர்களுடைய இறுதி விருப்பங்களாகவும் ஏற்பாடுகளாகவும் அமைகின்றன.

I. பழைய ஏற்பாடு: இறைமக்கள் பற்றிய பொறுப்புடையவர்கள் இப்பிரியா விடை உரைகளை அளிக்கின்றனர். இவர்கள், யாக்கோபு, மோசே, யோசுவா, சாமுவேல், தாவீது (பிற்கால யூதப் பாரம்பரியத்தில் 12 குலமுதுவர்கள்) போன்றவராவர். இவ்வுரைகள் எழுதுவதற்குக்காரணமான வெவ்வேறு சூழ்நிலைகளுக்குரிய சிறப்புப் பண்புகளைத் தவிர, மேலும் பலவற்றைப் பொதுவாகக் கொண்டுள்ளன. அவை: இறக்கவிருப்பவர் தம் மக்களுக்கு இறைவன் அளித்த கொடைகளை நினைவுகூர்கிறார்; வாக்களிக்கப்பட்ட மீட்பை முன்னோக்குகிறார் (ஆதி 49:8-12; உப 32:36-43; 12 குல முதுவர்களின் ஏற்பாடு); தன் வழித்தோன்றல்களைப் பிரமாணிக்கமாய் இருக்கும்படி தூண்டுகிறார் (உப 31-32; யோசு 24; 1 சாமு 12); பிற்கால நூல்களில் (1 மக் 2:51-61; 12 குல முதுவர்களின் ஏற்பாடு) அவர் தன் முன்னோர்களின் எடுத்துக்காட்டை அழுத்திக் கூறுகிறார்.

ஆகவே, இஸ்ராயேலின் தந்தையரும் தலைவர்களும் உடன்படிக்கையின் சாட்சிகளாகக் காட்டப்படுகின்றனர். தாங்கள் பெற்றுக் கொண்ட பாரம்பரியத்தையும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும், ஆற்றல்களையும் தங்களுடைய வழித்தோன்றல்களிடம் கையளிக்கின்றனர்; தங்களுடைய வேலையைத் தொடர்ந்து செய்யுமாறு வழித்தோன்றல்களைக் கேட்டுக் கொள்கின்றனர்.

II. புதிய ஏற்பாடு

1. **இயேசுவின் பிரியாவிடை உரைகள்:** இறுதிக்காலம் பற்றிய உரையே (மாற் 13) மக்களுக்கு இயேசு அளித்த இறுதிப் போதகமாகும். தான் பறை சாற்றியுள்ள வாக்குறுதிகளின் நிறைவேறுதலுக்குத் தங்களையே தயாரிக்கும்படி இயேசு விசுவாசிகளைத் தூண்டுகிறார். தம் மகிமை மிக்க இரண்டாம் வருகை பற்றிய இறைவாக்கினைப் போன்ற புதிய கருத்தைத் தம் ஆட்தன்மையின் புரட்சி மிக்க புதுமையால். புகுத்துகிறார். இவ்விறைவாக்கு இவ்வுரையை அவர் மீண்டும் வருவதை அறிவிக்கும் முன்னறிவிப்பாக மாற்றுகிறது.

இறுதி இரவுணவு உரை. இயேசுவின் பிரியாவிடை உரைகளில் எல்லாம் முதல்தரமான எடுத்துக்காட்டாகும். மத்தேயுவிலும் மாற்கிலும் நற்கருணை நிறுவப்படுதல், இறையரசில் மீண்டும் சந்திப்பது பற்றிய குறிப்போடு முடிவு பெறுகிறது (மாற் 14:25 இணை). லூக்காவில் இயேசுவின் பணியாகிய எடுத்துக்காட்டைப் பின்வருமாறு பன்னிருவரையும் தூண்டும் அறிவுரையில் நற்கருணை நிறுவப்படும் நிகழ்ச்சியுரை தொடர்கிறது (22:24-27); ஏற்பாட்டு வடிவில், தம் ஆற்றலில் பன்னிருவரும் பங்கு பெறுவார்கள் என்று வாக்களிக்கிறார் (22:28-30). யோவானில், இந்த நீண்ட உரை (யோவா 13-17) சீடர்களின் கால்களைக் கழுவுவதுடன் தொடங்குகிறது. இதில் இயேசு தம் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டுக் கொடுக்கிறார். இப்பிரியாவிடையில் இரு இணை உரைப்பகுதிகள் உண்டு (அதி. 14 மற்றும் 16:16-33). இவற்றில் வரவிருக்கும் துன்பமிக்க பிரிவையும், அவர் மீண்டும் வருதலின் மகிழ்ச்சியையும் இயேசு முன்னறிவிக்கிறார் (16-ஆம் அதிகாரத்தில் வரும் "பாஸ்குக் காட்சிகள்;" 14-ஆம் அதிகாரத்தில் வரும்

திருச்சபையில் அவரது பிரசன்னம்). விசுவாசத்திற்கும், அன்புக்கும் அமைதிக்கும் தம் சீடர்களைத் தூண்டுகிறார். அவர்களிடையே அவர் இல்லாதிருத்தல் ஒரு சிறிது காலத்திற்கே; அதுவும் தோற்ற அளவிற்கே.

மோசே, சாமுவேல், தாவீது ஆகியோருடைய பிரியாவிடை உரைகளைப்போல், உயிர்த்த கிறிஸ்து பன்னிருவருக்கும் அளிக்கும் காட்சிகள் அவர்களுக்கு ஆற்றல் அளிப்பதையும் உள்ளடக்கியுள்ளன. இத்தறுவாய்களில், தம் தூதைத் தொடர்ந்து செய்யும் அலுவலைத் தம்மைப் பின்பற்றுவோருக்குக் கையளிக்கிறார். போதிக்கவும், திருமுழுக்கு அளிக்கவும், மன்னிக்கவும் அவர்களுக்குக் கட்டளை அளிக்கிறார் (மத் 28:19). எந்நாளும் அவர்களோடு இருப்பதாக வாக்களிக்கிறார் (28:20).

2. அப்போஸ்தவர்களின் பிரியாவிடை உரைகள்:

இவர்கள் இறைவன் திட்டத்தைச் செயல் படுத்துபவர்கள். பழைய ஏற்பாட்டுத் தலைவர்களுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டிருக்கின்றனர்.

திமொத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகம், ஓர் உண்மையான இறுதிவிருப்பமும் ஏற்பாடும் ஆகும். பவுல் தமக்கு மரணம் வெகு தொலைவில் இல்லை என்றுணர்ந்து (2 திமொ 4:6-8) இயேசுவின் மீட்பைத் (1:9-10) தன் பிரமாணிக்கமுள்ள சீடருக்கு நினைவுபடுத்துகிறார்; பதிதம் அல்லது சமய மறுப்பைப் பற்றி எச்சரிக்கிறார் (2:16-18); ஆண்டவரின் நாள் வருகையை முழு நம்பிக்கையோடு எதிர் நோக்குகிறார் (1:12.18; 2:11-12). பேதுருவின் இரண்டாம் திருமுகத்திலும் இதே கருத்துக்கள் காணப்படுகின்றன. அவை: அப்போஸ்தலரின் நெருங்கிவரும் மரணம் (2 பேதுரு 1:12-15); ஏற்கனவே அளிக்கப்பட்ட மீட்பு (1:3-4); சமய மறுப்பு என்ற நிகழ்ச்சி (2:1-3. 10-22); ஆண்டவர் நாளை எதிர்பார்த்தல் (1:16-19; 3:8-10. 12:13-18).

எபேசின் தலைவர்களுக்குப் பவுல் அளித்த ஏற்பாடு மிகச்சிறப்பு வாய்ந்ததாகும் (அ.ப. 20:17-38). இங்கே நாம் காண்பவை: தம்மையே ஓர் எடுத்துக்காட்டாகக் காட்டுகின்றார் (20:18-21.31-35); வரவிருக்கும் அவரது சிறைப்படுதலை எதிர்நோக்குகிறார் (20:22-24); தமது அலுவலை முடித்துவிட்டதாகப் பகிரங்கமாக அறிவிக்கிறார் (20:25-27); திருச்சபையின் பணியில் அவரது அலுவலைத் தொடர்ந்து நடத்த அழைப்புவிடுக்கிறார் (20:28); சமயத்தை மறுப்பவர்களுக்கு எதிராக மந்தையைக் காக்கும்படி கேட்டுக்கொள்கிறார் (20:29-30).

இயேசுவின் உரைகளில் மீண்டும் சந்திப்பது பற்றிய குறிப்பு உண்டு. ஆனால், அப்போஸ் தலர்களின் உரைகளில் மீண்டும் சந்திக்கும் கருத்து இருப்பதில்லை. இதற்குக் காரணம், ஆண்டவர் நாளில், தங்களுடைய பிரமாணிக்கமுள்ள விசுவாசிகளைச் சந்திப்போம் என்று இவர்கள் நம்பவில்லை என்பதன்று; இந்நாளைப் பற்றி எண்ணும்போது, மற்றெல்லாவற்றையும் விடத் தாங்கள் ஆண்டவரைச் சந்திப்பதையே அதிகமாய்ச் சிந்தித்தனர். அவர் ஒருவரே சாவை வென்றவர்; இன்மையை எல்லாம் வென்றவர் (நிறைவு செய்பவர்).

பிரேத்தோரியம் (PRAETORIUM)

1.உரோமைப் படைத்தளத்தின் தலைமை இடத்தை அல்லது இராணுவத்தின் தளபதியைக் குறிப்பதாக இச்சொல் வருகிறது; பின்னர் இதன் பொருள் விரிவடைந்து மாநில ஆளுநர் தங்கும் அரண்மனையையும் குறிப்பதாக அமைந்தது. இந்த ஆளுநரின் பெயர் குற்றவியல் நடுவர், புறமாகாண ஆளுநர், கருவூல அதிகாரி என வேறுபட்ட வடிவங்களில் அமையலாம் (யோவா 18:28; அ.ப. 23:35). இறுதியாக எந்தப் பெரிய வீட்டையும் குறிப்பதாகவே இச்சொல் அமைந்தது. நற்செய்தியிலும், அப்போஸ்தவர் பணியிலும், இஃது ஆளுநர் தங்குமிடத்தைத் குறிப்பதாகவே அமைந்தது. இச்சொல் ஆளுநரின் தங்குமிடத்தைக் குறிக்கிறதா (மாற் 15:16),

ஆளுநரின் வீட்டைக் குறிக்கிறதா (யோவா 18:28. 33; 19:9), ஏரோதின் அரண்மனையினைக் குறிக்கிறதா (அ.ப. 23:35) அல்லது காவற்படையினர் தங்குமிடத்தைக் குறிக்கிறதா (மத் 27:27) என்பது தெளிவாகவில்லை.

மாற் 15:16-இன்படி 'போர் வீரர்கள் அனைவரும் இருந்தனர்' என்பது காவற்படையினர் தங்குமிடத்தைத்தான் குறிக்க வேண்டும் என்கின்றனர் சிலர். ஆளுநரின் அரண்மனையில் பொதுமக்களின் குறைகளைக் கேட்பதற்கும், நீதி அளிப்பதற்குமென ஒரு திறந்தவெளி அரங்கு இருந்தது (யோவா 19:13); காவற்படை தங்குமிடமும் இதன் ஒரு பகுதியாக இருந்தது. எனவே, 'பிரேத்தோரியம்' என்பது இதில் ஏதாவதொரு பகுதியை, அல்லது முழுவதையும் குறிக்கலாம்.

யோவான் கூறுவதின்படி இந்தச் சொல் ஆளுநர் தங்குமிடம், காவற்படையினர் தங்குமிடம், நீதி வழங்குமிடம் இவையனைத்தும் சேர்ந்ததையே சுட்டிக்காட்டுவதாக வருகிறது.

ஏரோதின் பிரேத்தோரியம் (அ.ப. 23:35) பெரிய ஏரோதினால் செசரியாவில் கட்டப்பட்டது. பவுல் பெலிக்சினால் இந்த இடத்தில்தான் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர் பவுலை ஒரு கைதியைப் போலன்று, மிக மரியாதையுடன் ஒரு விருந்தினரைப்போல நடத்தியிருக்கிறார் எனத் தெரிகிறது.

நற்செய்தியில் குறிப்பிடப்படும் 'பிரேத்தோரியம்' நகரின் வடமேற்கு மூலையில் அமைந்த ஏரோதின் மாளிகையைக் குறிக்கிறதா அல்லது ஆலயத்தின் வடமேற்கு மூலையில் அமைந்த அந்தோனியாக் கோட்டையைக் குறிக்கிறதா எனத் தெரிவில்லை.

பிரேத்தோரியத்தில் உள்ள படைக்கு, பிரேத்தோரியக் காவல்படை என்பது பெயர். இது 1) படைத்தளத்திலுள்ள ஆலோசனைக் குழுவையோ, 2) உயர் நீதி மன்றத்தையோ, 3) அரச காவலர்களையோ குறிக்கலாம்.

கி.மு. 27-இல் அகுஸ்து உரோமையில் ஒரு தலைமைப் படைத்தளத்தை நிறுவினான். உரோமையிலிருந்த பிரேத்தோரியத்தில் இத்தாலியர்களே சேர்க்கப்பட்டனர். பின், ஆள் பற்றாக்குறையினால் அவனது படைகளில் வெளி மாநிலத்தவரும் சேர்க்கப்பட்டனர்.

கி.பி. 23-இலிருந்து காவற்படையினரின் முக்கியத்துவம் அதிகரித்தது. செசானு காலத்தில் இப்படை அச்சுறுத்தும் ஓர் அமைப்பாக மாறியது. கி.பி. 41-இல் கலிகுலா இறந்தபின் இவர்கள் குடியரசை மீண்டும் நிலைநாட்டி கிலாதியுவை அரசனாக்கினர். கி.பி. 98-117-இல் திரேசன் இப்படையை உரோமைக்குள் கொண்டு வந்தார். இது தொடர்ந்து பல அழிவுக்குக் காரணமான ஒரு சக்தியாக அமைந்ததால் கான்ஸ்டன்டைன் இதனை ஒழித்து விட்டார்.

பிர்சா (BIRSHA – அசிங்கமான)

கொமோர் அரசன் (ஆதி 14:2). கெதர்ல கோமோரை எதிர்த்துத் தோற்றுப்போனவர் (ஆதி 14:8, 10:11).

ஆபிரகாம் காலத்தில் கொமோராவின் அரசன் (ஆதி 14:2). கெதர்லகோமருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, தோற்கடிக்கப் பட்டவன் (14:8.10-11)

பிர்சாவித்து (BIRZAITH – ஒலிவமரக் கிணறு)

பாபிலோனின் அடிமைத்தனத்திற்குப் பிறகு ஆசேர் கோத்திர வழிவந்த குடும்பங்களின் பெயர்ப் பட்டியலில் காணப்படும் ஒரு பெயர்.

இதற்கு இணையான பகுதிகளாகிய ஆதி 46:17; எண் 26:4-47 ஆகியவற்றில் இப்பெயர் குறிக்கப்படவில்லை. இஃது ஓர் இடத்தின் பெயராக இருக்கலாமோ என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இவ்விடம் பழங்காலத் தீருக்கு அருகில், ரமல்லாவுக்கு வடக்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலப் பிர்செய்த்தாக அடையாளம் காட்டப்படுகிறது.

பிலகோன் (PHLEGON - எரிகின்ற)

கிறிஸ்தவரான பிலகோனுக்கும், அவருடன் இருந்த மற்றக் கிறிஸ்தவர்களுக்கும் பவுல் தன் திருமுகத்தில் வாழ்த்தைக் கூறுகின்றார் (உரோ 16:14).

பிலதெல்பியா (PHILADELPHIA - சகோதர அன்பு)

பிலதெல்பியா, மேற்குச் சிறிய ஆசியாவில் லீதியா மாகாணத்து நகரங்களில் ஒன்று (திருவெளி 1:11; 3:7).

தமோலுஸ் மலைகளின் தொடர்ச்சியான, கோகமிஸ் ஆற்றின் தெற்கில் அமைந்துள்ள பீடபூமியின்மீது பிலதெல்பியா அமைந்திருந்தது. இரண்டாம் அத்தாலுசு (பிலதெல்புசு - கி.மு. 159-138) இந்நகரைக் கட்டியதால் அவன் பெயரே இந்நகருக்குச் சூட்டப்பட்டது. இது பலமுறை நில அதிர்ச்சிகளால் தாக்கப்பட்டாலும் வளமுடையதாக இருந்தது. பிலதெல்பியாவின் செல்வம் அதைச் சுற்றியிருந்த கிராமங்களில் இருந்ததால், மக்கள் நகரத்தில் வாழ்வதை விட, கிராமங்களில் வசிக்கவே விரும்பினார்.

கிரேக்கர் காலத்தில் இந்நகரம் செழிப்பாக விளங்கியது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன. மாசிதோனியக் கேடயம் நாணயங்களில் காணப்படுவது இங்கு மாசிதோனியக் குடியிருப்புகள் இருந்ததைச் சுட்டிகிறது.

உரோமையர்கள் காலத்தில் நகரின் வாழ்க்கைநிலை மாற்றியமைக்கப்பட்டது. கி.பி. 17-இல் ஒரு நிலநடுக்கம் பிலதெல்பியாவைத் தாக்கியது. இச்சமயத்தில் திபேரியுஸ் இதற்கு உதவி செய்ததால் நன்றிக் கடனாக இந்நகரம் நெயேசெசரியா என்ற பெயரைச் சூட்டிக்கொண்டது. வெஸ்பாசியன் காலத்தில் பிளாவிய என்ற பெயர் நாணயங்களில் பொறிக்கப்பட்டது.

பிலதெல்பியாவின் பொருளாதாரம் விவசாயத்தையும், தொழிற்சாலைகளையும், நெசவு, தோல்பதனிடுதல் ஆகிய தொழில்களையும் சார்ந்திருந்தது. இந்நகரம் பல பிற மதத் திருவிழாக்களைக் கொண்டாடியதால் "சிறிய ஏதன்சு" என்ற பரிகாசப் பெயர் சூட்டப்பட்டது.

திருவெளிப்பாட்டில் குறிப்பிடப்படும் ஏழு திருச்சபைகளுள் பிலதெல்பியாவும் ஒன்று. ஆனால், இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்களைப் பற்றி எதுவும் தெரியவில்லை. பிலதெல்பியா மற்ற நகரங்களோடு தொடர்பில்லாத ஒரு கிறிஸ்தவ நகரமாகும். இங்கு இருந்த கிறிஸ்தவ சமூகம் அவ்வளவு சக்திவாய்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், அதன் பற்றுறுதிக்காகப் போற்றப்படுகிறது. இங்கு இருந்த யூத சமூகம் கிறிஸ்தவர்களுக்குப் பல இன்னல்களைக் கொடுத்ததாகத் தெரிகிறது (திருவெளி 3:7-13).

இதன் பெருமை, ஓட்டமான் பேரரசை எதிர்த்து நின்றதில் வெளிப்படுகிறது. வெற்றி கொள்ளப்பட்ட பின்னும், இஃது ஒரு கிறிஸ்தவ நகரமாகத் தனித்து நின்றது.

பிலமேத்தோர் (PHILOMETOR)

இவர் 2 மக் 4:21-இல் குறிக்கப்படும் தோலமி ஆவார்.

பிலமோனுக்குத் திருமுகம் (PHILEMON, LETTER TO)

1. முன்னுரை: இத்திருமுகம் புதிய ஏற்பாட்டின் பதினெட்டாவது நூலாகும். விவிலியத்திலேயே மிகச் சிறிய நூல்களில் ஒன்று. சிறையிலிருந்த அப்போஸ்தலர் பவுல் கொலோசையிலிருந்த பிலமோன் என்ற கிறிஸ்தவருக்கு, ஒனேசிமு என்ற தன் தலைவரிடமிருந்து ஓடி வந்துவிட்ட அடிமைக்காகப் பரிந்துரைத்து எழுதும் மடலாகும். இது தனிமனிதருக்கு எழுதப்பட்ட மடலானாலும், திருமுறைப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இது பவுலின் சிறைக்கூட மடல்களில் ஒன்றாகும்.

2. சந்தர்ப்பமும் நோக்கமும்: ஒனேசிமு என்ற அடிமை தன் தலைவரிடமிருந்து ஓடி, அவருக்குப் பெருமளவு இழப்பு ஏற்படுத்திவிட்டார். தன் தலைவர் பவுலிடம் கொண்டுள்ள பெருமதிப்பைக் கருத்தில் கொண்டு, அவர் சிறையிருந்த இடத்தில் அவரிடம் சரண் அடைந்தார். எப்படியோ பவுல் அவருக்கு அடைக்கலம் கொடுத்துக் காலப்போக்கில் அவரைக் கிறிஸ்தவராக்கினார் (பில 10). ஒனேசிமு பிலமோனுடைய அடிமையாவார் என்பதை அறியவந்த பவுல், நற்செய்திப் பணியில் தனக்கு உதவி செய்ய ஒனேசிமுவை நிறுத்திக்கொள்ள விரும்பினாலும், பிலமோனின் உரிமையைக் கருத்தில் கொண்டு, ஒனேசிமுவை அவரது தலைவரிடம் திருப்பி அனுப்பத் தீர்மானிக்கிறார் (14:16). ஓடிப்போன அடிமையை "அடிமையாக அன்று, மாறாக அன்புமிக்க சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்படி" (16) பிலமோனுக்குப் பவுல் வேண்டுகோள் விடுக்கிறார். அதாவது, சட்டம் அனுமதிக்கும் கடும் தண்டனையை ஒனேசிமுக்கு அளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறார். ஒனேசிமு பிலமோனுக்கு ஏற்படுத்தக் கூடிய நட்டத்தை ஈடு செய்வதாகவும் வாக்களிக்கிறார். ஆனால், சிறையிலிருந்து இதை எப்படிச் செய்வார் என்று கூறவில்லை. மேலும், தன்னோடு உழைக்க ஒனேசிமு திரும்ப வருதலை விரும்புவதாகவும் பவுல் சுட்டிக்காட்டுகிறார் (20). இதன் மூலப் பிலமோன் ஒனேசமுக்கு விடுதலை அளிக்க வேண்டும் என்று பவுல் சுட்டுகிறாரா? இச்செய்தியும் உள்ளடங்கியிருக்கலாம்.

3. ஒனேசிமு, பிலமோன், அர்க்கிப்பு: கொலோ 4:9-இலிருந்து, ஒனேசிமு (பயனுள்ளவர்) கொலோசையைச் சேர்ந்தவராகத் தெரிகிறது. இவர் பிலமோனுடைய (அன்புள்ளவர்) அடிமையாவார் என்ற பாரம்பரியக் கருத்துக்கு மாறாக, நாக்சு என்ற அறிஞர் மாறானதொரு கருத்தைக் கூறுகிறார். இவருடைய கருத்துப்படி ஒனேசிமுவின் தலைவர் அர்க்கிப்பு ஆவார். இவர்தான் கொலோசைச் சபை கூடுவதற்கு இடம் அளித்தவர். ஒனேசிமுவுக்குப் பிலமோன்தான் தலைவர் என்று திருமுகத்தில் எதுவும் காட்டவில்லை. பிலமோன் லீக்குப் பள்ளத்தாக்கில் இருந்த சபைகளின் மேற்பார்வையாளராக இருந்திருக்கலாம். லவோதிக்கேயில் வாழ்ந்திருக்கலாம். கொலோசையர் களுக்கும், பிலமோனுக்கும் எழுதப்பட்ட இருதிருமுகங்களும் ஒரே இடத்திலிருந்து ஒரே சமயத்தில் எழுதப்பட்டவை என்ற அடிப்படையில் "லவோதிக்கேயாவிலிருந்து வரும் கடிதம்" (கொலோ 4:16) பிலமோனுக்கு எழுதப்பட்ட கடிதம்தான். அர்க்கிப்புவைப் பவுல் நேரடியாக அறிந்திராததால், பிலமோன் அர்க்கிப்புவிடம் தன் செல்வாக்கைப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறார்.

இந்தப் புனைதிறமிக்க கோட்பாடு நமது கவனத்தை அவ்வளவு ஈர்க்க வேண்டியதில்லை; ஏற்புடையதும் அன்று. ஏனெனில், யாருக்குக் கடிதம் எழுதப்பட்டதோ அவர் மூன்றாம் இடத்தில் குறிக்கப்படுவது (2) பவுலின் திருமுகங்களில் காணப்படாத தொன்றாகும். "அவர் வீட்டில் கூடும் சபை" என்பது இலக்கணப்படி அர்க்கிப்புவைக் குறிக்கலாம் (2). ஆனால், இது முதலில் குறிக்கப்பட்ட வரையே சேர்ந்தது என்று ஏற்றுக் கொள்வதே இயல்பான பொருளாகும். மேலும், திருமுகத்தில் அடிக்கடி வரும் "நீர்" என்ற சொல் அர்க்கிப்புவைக் குறிப்பதாக ஏற்றக்கொள்வது வெகு கடினமாகும். மேலும், பிலமோனுக்கும் கொலோசையருக்கும் எழுதப்பட்ட திருமுகங்கள் ஒரே இடத்திலிருந்தும் ஒரே காலத்திலும் எழுதப்பட்டவை என்ற கருத்தை அறிஞர் பலர் இப்போது ஏற்றுக்கொள்வதில்லை. பில 1-4-ஐச் சாதாரணமாக வாசித்தாலே, பிலமோன் ஒனேசிமுவின் தலைவர் என்றும், "நீர்" என்ற சொல் பிலமோனையே குறிக்கிறதென்றும் நாம் கண்டுணரலாம்.

ஆகவே, பாரம்பரியக் கருத்தை ஏற்றுக் கொள்வதே சாலச் சிறந்ததாகும். இதன்படி, இம்மடலைப் பெறுபவர் சிறிய ஆசியாவின் லீக்குப் பள்ளத்தாக்கிலுள்ள ஒரு நகரத்தில், ஒருவேளை

கொலோசையில் வாழ்ந்த ஓர் இளம் செல்வந்தர்; எல்லாராலும் மதிக்கப்பட்ட கிறிஸ்தவர். பிலமோன், அப்பியா, அர்க்கிப்பு மற்றும் "அவர் வீட்டில் கூடும் சபை" ஆகியோருக்குப் பவுல் வாழ்த்துக் கூறுகிறார். அப்பியா பிலமோனுடைய மனைவியாகவும், அர்க்கிப்பு அவர்களின் மகனாகவும் இருக்கலாம். இதற்குச் சார்பாகவோ மறுப்பாகவோ திருமுகத்தில் எக்குறிப்பும் இல்லை. பிலமோன் ஒருவேளை எபேசில் (அ.ப. 19:10) பவுலால் மனந் திருப்பப் பட்டிருக்கலாம் (பில 19). "அவர் வீட்டில் கூடிய சபை" என்பது அவரை அதன் தலைவராக ஆக்கவில்லை. ஒருவேளை அப்போஸ்தலரோடு உடனுழைத்தவர் என்பதால் அச்சபையின் சிறப்பு மிக்க உறுப்பினர் ஆவார்.

பிலமோனைப் பற்றி, நாக்சு மற்றொரு கருத்தைக் கூறியுள்ளார். இதன்படி பவுலுக்கு உதவி செய்ய ஒனேசிமு திரும்பி வந்தார். காலப்போக்கில் அவர் எபேசின் ஆயரானார். பவுலின் திருமுகங்களை ஒரு தொகுப்பாகச் சேர்ப்பதில் முக்கிய பங்கு வகித்திருக்கலாம். இக்குறிப்புகள் உண்மையாக இருக்கக் கூடிய வாய்ப்புள்ளது.

4. காலமும் இடமும்: பிலமோனுக்குத் திருமுகத்தைப் பவுல் சிறைக் கைதியாக இருந்தபோது எழுதினார் (23). ஆனால் எங்குச் சிறைக் கைதியாக இருந்தார் என்று உறுதியாகக் கூறமுடியாது. பாரம்பரியக் கருத்து இந்தச் சிறையிருத்தலை உரோமையில் பவுல் வீட்டுக் காவலில் இருந்ததுதான் (கி.பி. 61-63) என்று கூறுகிறது. விளக்கவுரையாளர் சிலர் இது பவுல் செசரியாவில் சிறை இருந்ததுதான் (கி.பி. 58-60) என்பர். வேறு சிலரின் கருத்துப்படி இது பவுல் எபேசில் சிறை இருந்ததைக் குறிக்கிறது (கி.ப. 56-57) என்பர். பெரும்பாலான இன்றைய அறிஞர்கள் மூன்றாவது கருத்துக்கு ஆதரவு அளிக்கின்றனர். ஏனெனில், எபேசில் இருந்த பவுலும் கொலோசையில் இருந்த ஒனேசிமுவும் சென்று வரக்கூடிய தொலைவில் (108 கி.மீ) இருந்தனர் என்பது இக்கருத்துக்குச் சாதகமாக உள்ளது. இது பிலமோனைச் சந்திக்க வரும் பவுலின் திட்டத்தை எளிதாக விளக்குகிறது. உரோமையில் சிறை இருந்திருந்தால் இது நடக்கக் கூடியதன்று

5. உண்மைத் தன்மை: மார்சியோன் காலத்திலிருந்தே இத்திருமுகத்தைப் பவுல் தான் எழுதினார் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பிலமோன், கொலோசேயர் ஆகிய இரு திருமுகங்களுக்கிடையே காணப்படும் தொடர்பிலிருந்து இரண்டும் ஒரே காலத்தில், ஒரே ஆளால் எழுதப்பட்டது என்று பாரம்பரியமாகக் கருதப்பட்டது. ஆகவே, பவுல்தான் கொலோசையரை எழுதினார் என்பதை மறுத்தவர்கள் பிலமோனையும் அவர் எழுதவில்லை என்று கூற வேண்டியதாயிற்று. இது துபியன் பள்ளி செய்த பல தவறுகளில் ஒன்றாகும். ஏனெனில், திருமுகம் முழுவதும் பவுலோடு கொண்டுள்ள தொடர்புண்மைகளை நினைவூட்டுகிற பண்புகள் நிறைந்த காணப்படுகின்றன. கடிதக் கலையின் இந்த நிறை மாதிரியில் பவுலின் உண்மையான குரலை, அவருக்கே உரிய ஆழ்ந்த, தனிப்பட்ட முறையில் காண்பதாகப் பெரும்பாலான அறிஞர்கள் உறுதி கொண்டுள்ளனர்.

6. திட்டம்

I. முகவுரை (1-7).

1-3 : வாழ்த்து.

4-7 : நன்றிகூறுதல்.

II. வேண்டுகோள் (8-21).

8-14 : அடிமையின் மேல்பிரிவு.

15-21 : அடிமைக்காகப் பரிந்து பேசுதல்.

III. முடிவுரை (22-25).

22 : செய்திகள்.

23-25 : வாழ்த்துக்கள்.

7. கோட்பாடு: சமூக, மேய்ப்புப்பணிக் கருத்தில்லாததாகத் தோன்றும் ஒரு தனி நபருக்கு எழுதப்பட்ட கடிதம் ஏன் திருமுறைப்பட்டியலில் இடம் பெற்றது என்று பழங்கால விளக்கவுரையாளர்கள் வியப்பு அடைந்துள்ளனர். ஆனால், இம்மடல் பிலமோனைத்தவிர அவர் வீட்டில் கூடிய சபையாகிய மற்றவர்களுக்கும் எழுதப்பட்டதாகும். இஃது ஒரு தனிப்பட்ட காரியத்தைப் பற்றி எழுதப்பட்ட மடலாக மேலெழுந்தவாரியாகத் தோன்றினாலும், இம்மடல் அடிமைத்தனம் பற்றிய ஆதித் திருச்சபையின் மனப்பான்மையை உட்கொண்டுள்ளது. அடிமைத்தனத்தைப் பற்றி 1 கொரி 7:20-24; கொலோ 3:22-4:1; எபே 6:5-9; 1திமொ 6:1-2; தீத் 2:9-ஆகிய பகுதிகளில் பவுல் பேசுகிறார். இவை அக்காலத்தில் நிலவிய அடிமைத்தனத்தைப் பவுல் ஏற்றுக்கொள்வதாகக் காட்டுவதாகத் தோன்றுகின்றன. இது நமது சமத்துவ உணர்ச்சிகளைப் புண்படுத்தலாம். ஏனெனில், தன்னையே ஒரு முடிவாகக் கொண்டு நடத்தப்பட வேண்டும் என்ற ஒவ்வொரு தனி நபருக்குமுரிய உரிமை பற்றிய நமது கருத்துக்கு எதிர் முரண்பாடாக இஃது உள்ளது. அடிமைத்தனத்தைப் பவுல் முனைப்பாகக் கண்டனம் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், "எந்த நிலையிலும் ஒருவன் அழைக்கப்பட்டானோ அந்த நிலையிலேயே அவன் இருக்கட்டும்" (1 கொரி 7:20) போன்ற கூற்றுகளால் நாம் தவறான கருத்துகளுக்கு இடங்கொடுக்கக் கூடாது. கிறிஸ்துவான ஒரே தலைவர்முன் எல்லாரும் சமமானவர்கள் என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்துதலில் பவுல் ஓர் அடி முன் எடுத்து வைக்கிறார். இது காலப்போக்கில் சமூக அமைப்பு முழுவதையும் மாற்றி அமைக்கும். மனிதர்களும் நிறுவனங்களும் ஒன்றன்மீது ஒன்று செயலாற்றி ஒன்றையொன்று பாதிக்கின்றன. வன்முறையால் மனித நிறுவனங்களை மாற்றுவது அல்லது மனித மனத்தை மாற்றி அதன் விளைவாகத் தீய நிறுவனங்களை அகற்றச் செய்வது ஆகிய இருவழிகளைப் பவுல் எதிர்கொள்கிறார். வன்முறையால் ஏற்படும் கொடிய விளைவுகளுக்கு வரலாறு சான்று கூறுகிறது. உரோமைப் பேரரசில் நிகழ்ந்த மூன்று அடிமைக் கிளர்ச்சிகளால் ஏற்பட்ட பயங்கர விளைவுகளைப் பவுல் நன்கு அறிந்திருக்கக் கூடும். ஆகவே, பவுல் மனித மனப்பான்மையை மாற்றும் வழியைத் தேர்ந்தெடுக்கிறார்.

முதலில் பவுல் ஒனேசிமுக்கு மேய்ப்புப் பணி மற்றும் அன்புள்ள பாசத்தைக் காட்டுகிறார். இரண்டாவது ஒனேசிமுவைப் பிலமோனிடம் திருப்பி அனுப்புவதில் ஏற்கெனவே இருக்கும் சமூக அமைப்பை அகற்ற, பவுல் முயற்சிக்கவில்லை. அடிமைத்தனத்தை அகற்றச் செய்யும் முயற்சியின் பயங்கர விளைவுகளையும் பயனின்மையையும் நன்குணர்ந்தவராய், இத்திருமுகத்தில் பவுல் பரிந்துரைக்கும் கோட்பாட்டின் வளர்ச்சி காலப்போக்கில் மனித சமூகத்தை மாற்றியமைக்கும். இப்பிரச்சனைக்குச் சமூக அமைப்புகளின் பண்பு மாறச் செய்வதே பவுலின் விடையாகும். ஒனேசிமுவை ஒரு "சகோதரனாக" வரவேற்கும்படி பிலமோனைத் தூண்டுகிறார். ஏனெனில் ஒனேசிமு "ஆண்டவர் விடுவித்த உரிமைக் குடிமகனாக இருக்கிறார்" (1 கொரி 7:22). இதை, கலா 3:27-38-இல் பவுல் போதிப்பதோடு ஒப்பிடுக. பவுல் தனது அப்போஸ்தோலிக்க அதிகாரத்தைப் பயன்படுத்தி பிலமோனிடம் கீழ்ப்படிதலைக் கோரமுடியும் என்றாலும் (பில 8), "அன்பின் பெயரால்" இக்கோரிக்கையை இடுகிறார்.

பவுலின் இந்தக் கோட்பாடு உலகில் மெதுவாகத்தான் செயல்பட்டது. இந்தக் குற்றம் கோட்பாட்டைச் சார்ந்ததன்று. அதைச் செயலாற்ற வேண்டிய மனிதர்களைச் சேர்ந்ததாகும். இக்கோட்பாட்டின் காரணமாக ஒரு தனிப்பட்டவருக்கு ஆதரவாக எழுதப்பட்ட கடிதம் "அப்போஸ்தலிக்கத் திருமுகம்" ஆகியது.

பிலமோன் (PHILEMON)

கொலோசையில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவர். இவருக்கு, ஓடிப்போன ஒனேசிமுவுக்கு ஆதரவாகப் பவுல் ஒரு மடல் எழுதினார் (காண்க. கொலோ 4:9). ஒருவேளை பவுல் கொலோசைக்குச் சென்றதில்லை என்று கருதலாம் (2:1). ஆகவே, பவுலும் பிலமோனும் வேறொரு இடத்தில், ஒருவேளை எபேசில் சந்தித்து இருக்கலாம் (அ.ப. 19:8-10). பவுல் பிலமோனை மனந்திருப்பியிருக்க வேண்டும் (பில 19). பிலமோன் ஓர் அடிமையையாவது கொண்டிருந்தார். அவர் வீட்டில் கிறிஸ்தவ சமூகம் கூடியது (2); பயணமாய் வரும் போதகர்களை விருந்தோம்பினார் (22). இவையெல்லாம் அவர் ஒரு செல்வந்தர் என்று காட்டுகின்றன.

பிலயாம் (BALAAM - விழுங்குபவன், பெருந்தின்னி) - ஆள்

பிலயாம் ஒரு காட்சியாளர். இஸ்ராயேலரைச் சபிக்குமாறு பாலாக்கு என்ற மோவாபிய அரசனால் அழைத்து வரப்பட்டவர். அவ்வாறு சபித்தால் கானான் நாட்டில் நுழையவிருக்கும் இஸ்ராயேலர் அதில் நுழையமாட்டார்கள் என அரசன் நம்பினான் (எண் 22:5-24:25; 31:8.16; உப 23:4-5; யோசு 13:22; 24:9-10; நெகே 13:2; மீக் 6:5; 2 பேதுரு 2:15; யூதா 11; திருவெளி 2:14).

பிலயாம் பெத்தோர் ஊரைச் சேர்ந்த பேயோரின் மகன். மோவாபின் அரசனான பாலாக்கு பிலயாமை அழைத்ததும், அவர் வர மறுத்ததும், பின்னர்ப் புறப்பட்டு வரும்போது தொடர்ந்து செல்ல அவர் ஏறிச்சென்ற கழுதை மறுப்பதும், அதனோடு பிலயாமின் உரையாடலும் ஆகிய இவை அனைத்தும் நாடோடி இலக்கியத் தன்மைகளை அதிகம் கொண்டுள்ளன.

சடங்கு முறைப்படி இஸ்ராயேலைச் சபிக்குமுன் பிலயாம் ஏழு பீடங்களைக் கட்டி, பதினான்கு பலிப்பொருட்களைப் பலியிட்டார். பின் நான்கு முறை இறைவாக்கு உரைத்தார். அவை சாபத்துக்குப் பதிலாக ஆசீராக முடிந்தன.

முதல் இறைவாக்கு இஸ்ராயேல் மற்ற நாடுகளைப் போல் இல்லாது தனித்து விளங்குவதற்காகப் புகழ்கிறது (எண் 23:7தொ). இரண்டாவது இறைவாக்கு, இஸ்ராயேலுக்குள்ளே எந்தவிதத் துன்பமும் குழப்பமும் இல்லை; ஏனெனில், அவர்கள் சிலை வழிபாட்டையோ சோதிடம், குறி சொல்வதையோ நம்புவதில்லை என்பதற்காகப் போற்றுகிறது. இக்காரணத்திற்காக அவர்களுக்கு எதிரான எந்த மந்திர மாயமோ, குறி சொல்லுதலோ பயனளிக்காது (எண் 23:8 தொ). மூன்றாவது இறைவாக்கு இஸ்ராயேலுக்கு வரப்போகும் செல்வாக்கையும், அது பெறப்போகும் வெற்றிகளையும் முன்னோக்குகிறது (எண் 24:2தொ). நான்காவது இறைவாக்கு அவர்கள் உடனடியாக மோவாபின் மீதும், ஏதோமின் மீதும் கொள்ளப்போகும் வெற்றியை உறுதிப்படுத்துவதாக உள்ளது (எண் 24:15 தொ).

பிலயாமைப் பற்றிய பின்னைய மரபு ஒன்று அவர் மோவாபியர்களிடம், பாகாலை வழிபடுமாறும் இஸ்ராயேலரை மயக்குமாறும் கூறியதாகக் குறிப்பிடுகிறது. இதற்காக இஸ்ராயேலர்களால் அவர் தண்டிக்கப்பட்டார் (எண் 31:8.16; யோசு 13:22). பிலயாம் எங்கிருந்து தோன்றினார் என்பது நினைவுபடுத்த முடியாத அளவுக்கு முக்கியத்துவமின்றிப் போய்விட்டது (எண் 22:5). பிலயாம் இறைவாக்குரைப்பதின் பாடல் நடை 11, 12-ஆம் நூற்றாண்டுப் பாடல்களின் நடையைக் கொண்டுள்ளதால், அவரது மரபும் அக்காலத்தவையாகவே இருக்க வேண்டும் என்று ஆல்பிரைட்டு என்பவர் கூறுகிறார். யாக் கோபின் விண்மீன் என்பது (எண் 24:17) யாகோபின் விண்மீன் வெற்றி கொள்ளும் பொழுது என மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்று அதே அறிஞர் குறிப்பிடுகிறார். பிலயாம் தப்பறைக் கொள்கைகளைப் போதிப்பவராக 2 பேதுரு 2:16; யூதா 11; திருவெளி 2:4-இல் காட்டப்படுகிறார்.

பிலயாம் என்ற உருவகம் பழைய ஏற்பாட்டில் தனித் தன்மையுடையதாகும். இவர் ஓர் அன்னியர். ஆனால், இஸ்ராயேலின் கடவுளின் கட்டளைக்குட்பட்டவர். சினத்தில் யாவே பயன்படுத்தும் கோலாக விளங்கிய அசீரியாவைப் போலன்றி (எசா 10:5), தனது ஆற்றல்கள் ஆண்டவரிடமிருந்தே வருகின்றன என்று நெஞ்சறிய ஏற்றுக்கொள்பவராகப் பிலயாம் சித்தரிக்கப்படுகிறார் (எண் 24:13). "ஆண்டவரின் வார்த்தையை மீறச்சென்று என் விருப்பப்படி நன்மையோ, தீமையோ செய்ய இயலாது" (24:13) என்று கூறும் பிலயாமின் செயல் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பேசப்பட்ட வார்த்தையின் ஆற்றலுக்கு அசாதாரண எடுத்துக்காட்டாகும் (காண்க. ஆதி 12:3; 27:33; யாத் 21:17; எசா 55:11).

பிலயாம் (BILEAM – அன்னியர்கள்) – இடம்

இது 1 நாள் 6:70-இல் காணப்படும் பட்டியலில், மனாசேயுக்குரிய பகுதியில் லேவியர் குலத்திற்குரிய நகரமாகும். இஃது இபிலயாமாக இருக்கலாம் என்று அறிஞர்கள் பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

பிலலோகு (PHILOLOGUS – கல்வி, படிப்பு ஆர்வமுடைய)

கிறிஸ்தவனான பிலலோகு என்பவருக்கு, உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் புனித பவுல் வாழ்த்து கூறுகின்றார். பெயர்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் விதத்திலிருந்து இவர் குடும்பத்தின் தலைவன் என்றும், யூலியா இவரது மனைவி என்றும், மற்றவர்கள் பிள்ளைகள் என்றும் எண்ணத்தோன்றுகிறது (உரோ 16:15).

பிலாஸ்து (BLASTOS – மொட்டுவிடு, தளிர்விடு)

முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மேற்பார்வையாளன் (அ.ப. 12:20).

அ.ப. 12:20-ஐத் தவிர வேறு எங்கும் இவரைப் பற்றி எழுதப்படவில்லை. ஏரோது தீர், சீதோன் நகர மக்கள் மீது வெஞ்சினம் கொண்டிருந்தான். அந்நிலையில் ஏரோதுக்குட்பட்ட நாடுகளிலிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் கிடைக்காது என்ற அச்சத்தில் இம்மக்கள், ஏரோதைக் கண்டு சமாதானமாக விரும்பினர். இதற்குப் பிலாஸ்துவைப் பயன்படுத்தினர்.

பிலாத்து, பொந்தியு (PILATE, PONTIUS)

பொந்தியு பிலாத்து யூதேயாவின் உரோமை ஆளுநனும் (கி.பி. 26:36), இயேசுவுக்குக் கொலைத்தீர்ப்பிட்டவனும் ஆவார்.

1. **மூலங்கள்:** பிலாத்து, திபேரியுவின் ஆட்சிக்காலத்தில் இயேசுவுக்குக் கொலைத் தீர்ப்பிட்டதாகத் தாசித்து கூறுகின்றார்.

பிலாத்து எருசலேமின் அரண்மனையில் பேரரசரின் பெயர் பொறிக்கப்பட்ட கேடயங்களைத் தொங்கவிட்டிருந்தான் என்றும், அதை எடுத்து விடுமாறு பேரரசர் கட்டளை இட்டார் என்றும், இவன் கொலை கொள்ளை கற்பழிப்பு ஆகியவற்றில் வல்லவன் என்றும் பீலோ கூறுகிறார்.

யோசிப்பசு பின்வரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றார். யூதர்கள் சிலைகளை விரும்பாததால் உரோமை அதிகாரிகள் பேரரசரின் உருவத்தை யூதேயாவிற்குள் கொண்டு வருவதில்லை. பிலாத்து பதவி ஏற்றவுடன், இரகசியமாக உருவங்களைக் கொண்டு வந்தான். இதைக் கண்ட யூதர்கள் அவனது வீட்டைச் சுற்றி நின்று எதிர்ப்புத் தெரிவித்தனர். ஐந்து நாட்களுக்குப்பின் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கினான். மற்றொரு நிகழ்ச்சியில் கால்வாய் வெட்டுவதற்கு ஆலயப்பணத்தைப் பயன்படுத்த பிலாத்து திட்டமிட்டபோது, யூத மக்கள் எதிர்த்தனர். இந்த எதிர்ப்பை அடக்க பிலாத்து தன் படைவீரர்களை ஏவி விட்டான். இதனால், யூதர்கள் பலர் கொல்லப்பட்டனர். மூன்றாம் நிகழ்ச்சியில் கி.பி. 35-இல் கெரிசிம் மலை மீதுள்ள சமாரியரின் வழிபாட்டு இடத்தைத் தாக்கி, சிலரைக் கொன்று, பலரைச் சிறையில் அடைத்தான். சமாரியர்கள் இவனைப் பற்றி சீரியாவின் வித்தேலியு என்ற

உரோமைத் தூதுவனிடம் முறையிட்டனர். அதன் விளைவாக, பிலாத்து பதவி இழந்து உரோமைக்கு அனுப்பப்பட்டான்.

புதிய ஏற்பாட்டில், யூதத்தலைமைச் சங்கத்தின்முன் விசாரிக்கப்பட்ட பின்பு இயேசு பிலாத்துவிடம் ஒப்படைக்கப்பட்டார். லூக் 13:1-5, பிலாத்து கலிலேயர்களைக் கொன்றதைக் குறிப்பிடுகிறது. 1 திமொ 6:13-இல் வரும் குறிப்பைத் தவிர, பவுல் இவனைக் குறிப்பிடவில்லை.

2. குணம்: யோசிப்பசும், பீலோவும் பிலாத்து வணங்காத் தன்மையுடையவன், கொடூரமானவன், முரட்டுத் தன்மை உடையவன், கொலைகாரன், கொள்ளைக்காரன், பல நீதிமான்களைக் கொன்றவன் என்று கூறுகின்றனர். ஆனால், பிற்காலக் கிறிஸ்துவ இலக்கியங்கள் இவனுக்குச் சாதகமாகவே பேசுகின்றன.

3. இயேசுவின் வழக்கு விசாரணை: மாற் 15:1-15, பிலாத்து இயேசுவைத் தீர்ப்பிட்டதாகக் கூறுகின்றது. இயேசுவைக் கசைகளால் அடித்தபின் தலைமைக் குருக்களும், மூப்பரும், மறைநூல் அறிஞரும் இயேசுவைக் கட்டி, பிலாத்திடம் கூட்டிப் போயினர். பிலாத்து, "நீ யூதரின் அரசனோ?" என்று அவரை வினவ, அவர் மறுமொழியாக, "நீர்தான் சொல்லுகிறீர்" என்றார். தலைமைக் குருக்கள் பலவற்றைக் குறித்துக் குற்றம் சாட்டிய பின்னும் இயேசு பதில் கூறாததைக் கண்டு "பிலாத்து வியப்புற்றான்". திருவிழாதோறும் கைதிகளை விடுவிக்கும் வழக்கப்படி பிலாத்து யூதர்களிடம் "யூதரின் அரசனை" விடுதலை செய்யலாமா என்று கேட்டான். கூட்டம் பரபாவை விடுதலை செய்யக்கோரியது. பிலாத்து அவர்களை நோக்கி, இயேசுவை அவன் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதற்குச் "சிலுவையில் அறையும்" என்று கூச்சலிட்டனர். பிலாத்து அவர்களைத் திருப்திப்படுத்த விரும்பி பரபாவை விடுதலை செய்து, இயேசுவைக் கசையால் அடித்துச் சிலுவையில் அறையும்படி கையளித்தான். மாற்கு நற்செய்தியில் பிலாத்து ஓரளவு சார்பற்ற நீதிபதியாகவும் இயேசுவேயோ, அவரைப் பற்றித் தெரிந்துகொள்வதையோ குறித்துக் கவலை கொள்ளாதவனாகவும் குறிப்பிடப் படுகிறான். சிலுவைக் கொலைக்குற்றம் யூதர்கள்மேல் சுமத்தப்பட்டாலும் பிலாத்து குற்றமற்றவனாகக் காட்டப்படவில்லை. இவன் எதற்கும் கவலையற்றவனாக மாற்கில் காட்சி அளிக்கிறான்.

மத்தேயு நற்செய்தியும் (27:1-26) மாற்கு நற்செய்தி கூறியதையே கூறி, சிறிது சேர்த்துச் (27:19) சொல்கிறது. பிலாத்துவின் மனைவி ஆளனுப்பி, "அந்நீதிமானின் காரியத்தில் நீர் தலையிட வேண்டாம். ஏனெனில், அவர் பொருட்டு இன்று நான் கனவில் துன்புற்றேன்" என்றாள். இச்சிறப்புக் குறிப்பை மத்தேயு கொடுக்கிறார். பிலாத்து இக்கொலைத் தீர்ப்பில் தனக்குப் பங்கு இல்லை என்பதைத் தெரிவிக்கக் கைகழுவினான். அதற்கு மக்கள், "இவன் இரத்தம் எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்" என்றார்கள். இதன் மூலம், மத்தேயு, இயேசுவின் இறப்புக்கு யூதர்களே முழுக்காரணம் என்று சுட்டிக் காட்டுகிறார்.

லூக் 23-இன்படி, இயேசு பிலாத்து முன் கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டார். பிலாத்து அவரிடம் குற்றம் ஏதும் காணாததாகக் கூறினான். இயேசு கலிலேயாவிலிருந்து எருசலேம்வரை மக்களிடையே குழப்பம் விளைவிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டபோது, பிலாத்து இயேசுவை, கலிலேயாவின் சிற்றரசனான ஏரோது அந்திபாவிடம் அனுப்பினான். ஏரோது இயேசுவை விசாரித்தபின், அவனது படைவீரர்கள் அவரை இழிவாக நடத்தினர். மீண்டும், இயேசு பிலாத்திடம் கொண்டு வரப்பட்டபோது இரண்டாம் முறையும் அவர் குற்றமற்றவர் என்றான். மீண்டும் மக்கள், பரபாவை விடுவிக்கக் கோரிய போதும், இயேசு குற்றம் அற்றவர் என்றான். ஆனால், மக்கள் கூட்டம் வலியுறுத்திக் கேட்கவே, பிலாத்து இயேசுவை அவர்களிடம் கையளித்தான். மத்

27:28-31; மாற் 15:17-19 இவற்றில் இயேசுவுக்குச் செய்யப்பட்ட அவமரியாதை எல்லாம் உரோமையர்களால் செய்யப்பட்டது. ஆனால், லூக்கா இவை எல்லாம் ஏரோதின் படைவீரர்களால் செய்யப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் லூக்கா, இயேசு யூதச் சட்டத்தை மீறவில்லை என்றும், இயேசுவும், அப்போஸ்தலர் பணிநூலில் பவுலும், பேதுருவும் பிரமாணிக்கமுள்ள யூதர்கள் என்றும் குறிப்பிட விரும்பினார் யோவா 18:28-19:16-இன்படி, இயேசு பிலாத்துவிடம் கொண்டு வரப்பட்டபோது அவர்களைக் காண அவன் தனது அரண்மனைக்கு வெளியே வந்தான். யூதர்களே இயேசுவுக்குத் தீர்ப்பிடலாமே என்று அவன் கூறியபோது, யூதர்கள் அதற்குத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று கூறினர். பிலாத்து இயேசுவை உள்ளே அழைத்து அவரோடு உரையாடினான். இதன்பின் அவன் வெளியே வந்து இயேசு குற்றமற்றவர் என்றான். ஆனால், அவர்கள் வற்புறுத்தவே, பிலாத்தின் படைவீரர்கள் அவரை அடித்து, சிவப்பு அங்கியைப் போர்த்தி ஏளனம் செய்தனர். பிலாத்து இரண்டாம் முறையும் இயேசு குற்றம் அற்றவர் என்று கூறினான். மீண்டும், மூன்றாம் முறையும் இயேசுவை விடுவிக்க அவன் முயற்சி செய்து வெற்றியடையாததால் இயேசுவைச் சிலுவையில் அறையக்கையளித்தான். இந்தப் பகுதியின் மூலம் யோவான் யூதர்கள் மேல் பழிசுமத்துகிறார். இறைமகன் இயேசு, இறைவன் வகுத்த திட்டத்தில் பிலாத்து ஒரு சிறு கருவிதான் என்று கூறி, தன்னையே கையளித்தார் என்றும் கூறுகிறார்.

1 திமொ 6:13-இல், 'இயேசு பிலாத்து முன் நின்றபோது, சிறந்த விசுவாச அறிக்கையைச் செய்தார்' என்று குறிப்பிடும் போது பிலாத்து குறிப்பிடப்படுகிறான்.

4. வரலாறும், கதையும்: இயேசுவின் காலத்தில் பிலாத்து ஆளுநராக இருந்தார். இயேசு இறந்ததற்கு உரோமையர்களும் காரணம். அவரது இறப்பின்போது பிலாத்துவைப் போன்ற உரோமை அதிகாரி ஒருவர் இருந்தார். இந்த உண்மைகளிலிருந்து பிலாத்து இயேசுவின் இறப்பில் தொடர்புடையவன் என்பது புலனாகிறது.

5. பின்வரலாறு: பிலாத்துவின் பின்வரலாறு, மரணம் பற்றி எதுவும் உறுதியாகத் தெரியாது. இவன் பேரரசன் கலிகுலா காலத்தில் தற்கொலை செய்ய கட்டளையிடப்பட்டதாகவும், நீரோ காலத்தில் தலை வெட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வரலாற்றுச் செய்திகள் மிகக் குறைவாயிருந்தாலும் பிலாத்துவைப் பற்றிய கிறிஸ்தவக் கதைகள் வளர்ந்தன. கிறிஸ்தவப் பாரம்பரியம் இயேசுவின் மரணப்பழியை யூதர்கள்மேல் முழுவதும் சுமத்தியது; குறிப்பாக, கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்குமிடையே பகை வளர வளர, இப்போக்கு மேலும் மேலும் வளர்ந்தது. பிலாத்துவைப் பற்றிப் பல கிறிஸ்தவப் போலி நூல்கள் பல கதைகளைக் கூறுகின்றன. ஒன்றில் பிலாத்து கிறிஸ்தவ மறைசாட்சியாக மரிக்கிறான். சில கதைகள், பிலாத்துவின் மனைவியை ஒரு புனிதையாகக் கருதுகின்றன. மத் 27:19-இல் பெயர் குறிக்கப்படாத இவள், இக்கதைகளில் புரோக்ளா என்றழைக்கப்படுகிறாள். பிலாத்துவும் அவர் மனைவியும் எத்தியோப்பிய திருச்சபையால் புனிதர்களாகக் கருதப்பட்டு, விழாவையும் கொண்டுள்ளனர். கிரேக்கத் திருச்சபை புரோக்ளாவைப் புனிதையாகக் கொண்டாடுகிறது.

பிலாத்துவின் பணிநூல் (PILATE, ACTS OF)

இஃது ஒரு போலிநூல் இது நான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இயேசுவின் பாடுகளைப் பற்றிய நற்செய்தியாகும். இதில் 2 பகுதிகள் உள்ளன. முதல் பகுதி இயேசு பிலாத்துவின் முன் தீர்ப்பிடப்படுகிறார்; பின், சிலுவையில் அறையப்படுகிறார். இதைத் தொடர்ந்து யூதத் தலைமைச் சங்கத்தில் சில செயல்கள் இடம் பெறுகின்றன. இவை இயேசுவின் உயிர்ப்பையும் விண்ணேற்றத்தையும் நிரூபிக்கின்றன. இரண்டாம் பகுதி பாதாளத்தில் இருந்து வந்த இருவர் வழங்கும் சாட்சியங்கள்.

இயேசு இறந்தபின் பாதாளம் சென்றார் (இறந்தோர் வாழும் இடம்; நரகம் அன்று); அங்குக் கைதிகளாக இருந்தோரை மீட்டார்.

முதல் பகுதி நான்கு நற்செய்தியை மிகவும் தழுவியதாக உள்ளது. அஃதோடு நிகழ்ச்சிகள் கற்பனை வளத்தோடு உயர்வு நவிற்சியில் கூறப்பட்டுள்ளது. பல சாட்சிகள் பிலாத்தின் விசாரணையின்போது கொண்டு வரப்பட்டதாம். இயேசுவை விசாரிக்க அழைத்து வந்தபோது பிலாத்து அவருக்குத் தலை வணங்கினானாம். அஃதோடு அரண்மனைக் கொடிகளும் வணங்கி நின்றனவாம். நூற்றுவர் தலைவன் இயேசு இறந்ததை அறிவித்தவுடன் பிலாத்து மனம் வருந்தினாராம். இயேசு மலைமேல் உயிர்த்தெழுந்ததை மூன்று பேர் ஒரு குரு, ராபி, ஒரு லேவியன்-பார்த்ததாகக் கூறப்படுகிறது. உடனே, இவர்கள் கல்லறையில் உடலைத் தேடியபோது உடல் கிடைக்கவில்லையாம். பின், சிறையில் அடைக்கப்பட்ட அரிமத்தியா ஊர் யோசேப்பு புதுமையாக இயேசுவால் விடுவிக்கப்பட்டாராம்.

மறைசாட்சியான யுஸ்தீன் பிலாத்துவின் அறிக்கை ஒன்று பற்றிக் கூறுவது இந்நூலில் இருந்து எடுக்கப்பட்டிருக்கலாம் எனச் சிலர் கருதி இந்நூல் 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்கின்றனர். ஆனால், யுசேபியு இப்புத்தகத்தை அறிந்திருக்கவில்லை.

2-ஆவது பகுதியில் "தேவ ஆவியால் அவர் சேயோலில் இருந்த ஆன்மாக்களுக்குப் போதித்தார்" (1 பேதுரு 3:19) என்று சற்றே உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. அரிமத்தியா ஊர் யோசேப்பைப் பற்றி அடிக்கடி கூறப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பகுதிகளும் எழுதப்பட்ட காலத்தைக் குறித்து அறிஞர்கள் ஆராய்ச்சி செய்கின்றனர். சிலர், இதை நிக்கோதேமு எழுதினார்; பின், 425-இல் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டது எனக் கூறுகின்றனர். சிலர், இது 5-ஆம் நூற்றாண்டில் தான் எழுதப்பட்டது என்கிறார்கள்.

இந்நூல் இயேசுவின் இறப்புக்கும் பாடுகளுக்கும் உயிர்ப்புக்கும் ஒரு சாட்சி எனலாம். காலப்போக்கில் இஃதோடு பல பிற்சேர்க்கைகள் சேர்க்கப்பட்டன. பேதுரு, பவுல் ஆகியோரின் பணிகள், பாடுகள் ஆகிய புத்தகங்களில் இருந்தும் சில பகுதிகள் இதிலே சேர்க்கப்பட்டுள்ளன.

பிலிகா (PILHA - இயந்திரக்கல்)

எஸ்ராவின் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மக்கள் தலைவர்களுள் ஒருவர் (நெகே 10:24).

பிலிப்பி (PHILIPPI)

பிலிப்பி, மாசிதோனியாவின் நகரங்களில் ஒன்று. இது வடகிழக்கு மாசிதோனியாவில், நெயோப்பொலி வளைகுடாவில், கடலிலிருந்து 16 கி.மீ. தொலைவிலிருந்தது. இந்நகரம் மலைகளால் சூழப்பட்ட சமவெளியில் இருந்தது. இஃது, அதை அமைத்தவரான மாசிதோனிய மன்னன் இரண்டாம் பிலிப்பு மாசிதோனின் பெயரால் அழைக்கப்படுகிறது. கி.மு. 167-இல் இந்நகரம் உரோமையர் ஆட்சியின் கீழ் வந்தது. இங்கு, புரூட்டசு, காசியு ஆகியவர்கள் அந்தோனி, அக்டேவியன் ஆகியவர்களால் கி.மு. 45-இல் தோற்கடிக்கப்பட்டனர். இஃது உரோமையர்களின் குடியிருப்பாக மாற்றப்பட்டது. இந்நிலையில் இந்நகரம் இருந்தபோதுதான் பவுல் இங்கு வந்தார்.

பிலிப்பியில் அகழ்வாராய்ச்சி நடத்திய போது கோயில்கள், நூல்நிலையம், குளிக்கும் இடங்கள், இடுகாடு, மண்டபங்கள், வாயில்கள், உரோமைக் குடியிருப்புகள் முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட தெருக்களில் ஒன்று இத்தாலியிலிருந்து எக்னேசியா வழியாகப் பைசாந்தியம் செல்லும் உரோமையர்களின் நெடுஞ்சாலை என்று கருதப்படுகிறது. பிலிப்பி, மாசிதோனியாவின் ஒரு மாவட்டத்தின் முக்கியமான நகரம் என்று அ.ப. 16:12 குறிப்பிடுகிறது.

துரோவாவில் கண்ட காட்சியின் பயனாகப் பவுலும், சீலாவும் மேற்கொண்ட இரண்டாவது மறைபரப்புப் பயணத்தின்போது இங்கு வந்தனர் (அ.ப. 16:9-12). முதலில் பவுல் யூதர்கள் ஒன்று கூடிச் செபிக்கும் இடத்தில் போதித்தார். பின்னர், பவுலும் சீலாவும் அவர்களால் மனந்திரும்பிய லீதியா என்னும் பெண்ணின் வீட்டில் தங்கினர். பவுல் இவளிடமிருந்த ஆவியை ஓட்டி விட்டதால் அப்பெண்ணின் உரிமையாளன் பவுல், சீலா ஆகியோர் மீது வழக்கைத் தொடுத்தான். இருவரும் கசையால் அடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். இச்சமயத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிறையின் கதவுகள் உடைபட்டும் பவுலும் சீலாவும் தப்பித்துச் செல்லாததைக் கண்ட காவலன் மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றான் அடுத்த நாள் பவுல் தான் ஓர் உரோமைக் குடிமகன் என்று வெளிப்படுத்தியவுடன் நகர அதிகாரிகள் அஞ்சி, அவர்களை நகரை விட்டு வெளியேறக் கட்டளையிட்டனர். பவுல் மீண்டும் மூன்றாம் மறைபரப்புப் பயணத்தின்போது பிலிப்பி நகருக்கு வந்தார் (அ.ப. 20:6). இந்நகர மக்கள்பால் பவுல் கொண்டிருந்த அன்பும் பரிவும் அவர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் தெளிவாகக் காணப்படுகிறது.

பிலிப்பியருக்குத் திருமுகம் (PHILIPPIANS, LETTER TO THE)

1. **முன்னுரை:** இது புதிய ஏற்பாட்டில் பதினொன்றாவது நூலாகும். ஐரோப்பாவில், முதலில் மாசிதோனியப்பகுதியில் உள்ள பிலிப்பி நகரில் பவுல் திருச்சபையை நிறுவினார் (அ.ப. 16:11-40). அந்நகரக் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் இத்திருமுகத்தை எழுதுகிறார். நூல்முழுவதும், அப்போஸ்தலர் அந்நகர மக்களிடம் கொண்டிருந்த அன்பும் பரிவும், அக்கறையும் மிளிர்கின்றன. இது "பவுலின் சிறைக்கூட மடல்கள்" என்ற தொகுப்பில் ஒன்றாகும்.

2. **பிலிப்பி நகரமும் அங்கு இருந்த திருச்சபையின் நிலையும்:** பவுலின் காலத்தில், பிலிப்பிநகரம், மாசிதோனியா நாட்டிலுள்ள ஓர் உரோமை மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றாகும் (அ.ப. 16:12). இது பங்கேயு மலைக்குக் கிழக்கேயுள்ள சமவெளியில் அதிரியாத்திக்கு மற்றும் ஆகியன் கடல்களை இணைக்கும் எக்னேசியன் சாலையில் அமைந்திருந்தது. இது முதலில் கிரேனிது (சிறு சுனைகள்) என்றழைக்கப்பட்டது. கி.மு. 356-இல் மாசிதோனியனின் 2-ஆம் பிலிப்பு இதை அழித்து அதன்மேல் ஒரு நகரம் கட்டி அதற்குத் தன் பெயரையே இட்டான். இஃது அழகிய துறைமுகமான நெயாப் பொலிக்கும் (16 கி.மீ.), அதன் அருகிலுள்ள தங்கச் சுரங்கங்களுக்கும் சென்றுவர எளிதான வழிகளைக் கொண்டிருந்தது. பிலிப்புவின் போர்ச்செயல்களுக்கும் அரசியல் காரியங்களுக்கும் இது பெரும் மதிப்புடையதாகும். கி.மு. 167-இல் உரோமை ஆட்சியின்கீழ் வந்தபோது இப்பகுதி ஓர் உரோமைய மாசிதோனிய மாவட்டமும், பிலிப்பி அதன் முக்கிய நகரமுமாயிற்று. கி.மு. 42-இல் அந்தோனியும் அக்டேவியனும், புரூட்டசையும் காசியசையும் இவ்விடத்தில் தோற்கடித்தபோது இவ்விடம் புகழ் பெற்றது. காலப்போக்கில் உரோமை வீரர்களில் முதியவர்கள் இங்குக் குடியேறினர். கி.மு. 30-இல் மற்றொரு இலத்தீன் பேசும் குடியிருப்பு இங்கே நிறுவப்பட்டபின், அக்டேவியன் இதற்குப் பிலிப்பியில் உள்ள அகுஸ்தா யூலியக் குடியிருப்பு என்று பெயரிட்டான். நகர் "இத்தாலிய உரிமை" பெற்றது. இதன் விளைவாக, உரோமைச் சட்டப்படி, சொத்துரிமை, தலைவரி மற்றும் நிலவரி முதலியவற்றிலிருந்து நகர் விதிவிலக்குப் பெற்றது. இந்நகர் படைத்தளபதி என்றழைக்கப்பட்ட மேலாண்மையுடைய நடுவரைக் கொண்டிருந்தது (அ.ப. 16:19. 35-39). ஒரு நூற்றாண்டுக்குள் இலத்தீன் குடும்பங்கள் கீழ்த்திசைச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டன. நகரத்தில் எப்போதும் திரேசியன் மக்கள் இருந்தனர். ஆசியாவையும், ஐரோப்பாவையும் இணைக்கும் எக்னேசியன் சாலையின் முதல் இடமாக இருந்ததால் மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வந்த

வணிகர்களைப் பிலிப்பியில் காணலாம். இவை பிலிப்பியருக்குத் திருமுகத்தைப் புரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவும்.

ஐரோப்பாவின் தனது மறைபரப்புப் பணியைப் பிலிப்பியில் பவுல் தொடங்கினார் (கி.பி. 50; 2-ஆவது மறைபரப்புப் பயணம்). அ.ப. 16:11-40 பிலிப்பியில் திருச்சபை நிறுவப்பட்டதைச் சில கதைப் பண்புகளோடு விவரிக்கிறது. நகரத்தில் யூதச் செபக்கூடம் இல்லாததால் கிரேனிது ஆற்றங்கரையிலுள்ள "செபிக்கும் இடத்தில்" தனது போதிக்கும் பணியைப் பவுல் தொடங்கினார். ஓர் அடிமைப் பெண்ணிடமிருந்து பேயை ஓட்டியது, அவர் பிடிக்கப்பட்டுத் தடியால் அடிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்படுதலுக்கு இட்டுச் சென்றது. இரவில் ஏற்பட்ட ஒரு நில நடுக்கம், பவுல் தப்பி ஓடுவதற்கு ஒரு வாய்ப்பு அளித்தது. இதற்கு மாறாக, தான் ஓர் உரோமைக் குடிமகன் என்று வெளிப்படுத்தி குற்றம் செய்த அதிகாரிகளை மன்னிப்புக் கேட்கும்படி செய்கிறார் (16:37-30). இப்படிச் செய்வது, புதிதாக நிறுவப்பட்ட சபையைப் பாதுகாப்பான அடிப்படையில் வைக்க அவசியமாயிற்று எனலாம். அதிகாரிகளின் அச்சத்தைக் கண்டு மக்கள் புதிய சமயத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பர். தொடக்கத்திலிருந்தே இங்குள்ள சபையில் பெண்கள் முக்கிய பங்கு வகித்திருப்பதாகத் தெரிகிறது. லீதியா (16:14-15.40), எயோதியா மற்றும் சிந்திக்கி (பிலி 4:2-3). பிலிப்பியர் திருமுகத்தில் காணப்படும் பெயர்களிலிருந்து, பிலிப்பியக் கிறிஸ்தவ சமூகம் பெரும்பாலும் புறவினத்தாரையே கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

பிலிப்பியில் புதிய சபையை நிறுவியபின், அதன் பொறுப்பு லூக்காவிடம் விடப்பட்டதாகத் தெரிகிறது. ஏனெனில், "நாங்கள்" என்ற பகுதி மூன்றாவது மறைபரப்புப் பயணத்தின் முடிவில் பிலிப்பியிலிருந்து புறப்படும் வரை கொடுக்கப்படவில்லை. பிலிப்பியில் தான் நிறுவிய திருச்சபையின்பால் பவுல் ஒரு தனியன்பு கொண்டிருந்தார் (4:1). தன் பயணங்களின் போது அடிக்கடி பிலிப்பிக்குச் சென்று தன் அன்பார்ந்த திருச்சபையைக் கண்டதாகத் தெரிகிறது (1 கொரி 16:5; அ.ப. 20:1; 1 திமொ 1:3; 2 திமொ 4:13). அவரது தனித்தேவைகளுக்கும் எருசலேம் திருச்சபையின் பொதுத்தேவைகளுக்கும் பிலிப்பித்திருச்சபை தாராளமாகப் பெருநிதி அளித்துப் பலமுறை உதவியது (பிலி 4:16.18; 2 கொரி 11:9). பிலிப்பியரின் அன்பு நன்கொடையை ஏற்க, பவுல் தயங்கவில்லை.

3. நூலின் உண்மைத் தன்மையும் திருமுறைப் பட்டியலும்: கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டுவரை இத்திருமுகத்தைப் பவுல்தான் எழுதினார் என்றும், ஆகவே இது திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிலிப்பிக்குப் பவுல் "கடிதங்கள் எழுதினார்" என்று போலிக்கார்ப்பு கூறுகிறார். மார்சியன் இதை ஏற்றுக்கொண்டார். முராத்தோரியன் துணுக்குகளில் இப்பெயர் காணப்படுகிறது. இரேனேயு, தெர்துல்லியன், அலக்சாந்திரியாவின் கிளமந்து ஆகிய திருச்சபைத் தந்தையர்கள் இந்நூலிலிருந்து எடுத்துக்காட்டுகள் கொடுக்கின்றனர். இதன் நடை, சொற்தொகுப்பு, கருத்துப்போக்கு ஆகியவை பவுலுக்கே உரியவையாகும். ஆகவே, இந்நூலைப் பவுல்தான் எழுதினார் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால், கி.பி. 1845-இல் துபியன் பள்ளி இக்கருத்தை ஐயுறத் தொடங்கி, அதுபற்றி எழுதியது. ஆனால், இப்போது அறிஞர்கள் இதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

4. நூலின் ஒற்றுமை: இந்நூல் ஒற்றுமையுடைய ஒரே திருமுகம் என்று பொதுவாகக் கருதப்பட்டது. இக்கருத்துக்கு இன்றும் ஆதரவாக உள்ள அறிஞர் சிலர் உள்ளனர். ஆனால், இக்கருத்து இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மாறாக இந்நூல், மூலத்தில் தனித்தனியாக எழுதப்பட்ட இரண்டு அல்லது மூன்று கடிதங்களைக் கொண்ட

ஒரு தொகுப்பாகும் என்ற கருதுகோள் அறிஞர்களிடையே பரவலாக நிலவுகிறது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போலிக்கார்ப்பு, பவுல் பிலிப்பியருக்கு எழுதிய "கடிதங்களைக்" குறிக்கிறார். ஆனால், அவர் பன்மையைப் பயன்படுத்துகிறாரா என்று அறுதியிட்டுக் கூறமுடியாது.

நூலின் உள்ளார்ந்த ஆய்வு பிலிப்பியருக்குத் திருமுகம் என்ற நூல் ஒரு தொகுப்பாகும் என்ற புதிய கருதுகோளுக்கு இணக்கமாய் உள்ளது. அதற்குப் பின்வரும் காரணங்கள் சுட்டிக்காட்டப்படும். 1) பவுலின் திருமுகங்களில் மாதிரி முடிவாகத் தோன்றுவதை அடுத்து பிலி 3:1-இல் தொனியிலும் பொருளடக்கத்திலும் முனைப்பான மாற்றம் தோன்றுகிறது. இன்னும் குறிக்கப்படாத எதிரிகளுக்கு எதிராக இப்பகுதியில் ஒரு தர்க்கவாதப் பகுதியைப் பவுல் தொடங்குகிறார். 2) 4:2-9-இல் இத்தகைய முடிவுக்குப்பின், 4:10-இல் புதிதாக ஒரு பகுதியைப் பவுல் தொடங்குகிறார். பிலிப்பியரின் கூறுகிறார். 3) 4:4-இல் "அகமகிழுங்கள்" என்று கோருவது, 3:1-இல் வரும் அதே மாதிரியான கருத்தோடு இயல்பாக இணைந்துள்ளது.

இந்தப் புதிய கருதுகோளின் அடிப்படையில், பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகத்தைப் பின்வருமாறு பிரிப்பர். கடிதம் I: 4:10-20 - நன்கொடையை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி கூறுதலாகும். கடிதம் II. 1:1-2:31; 4:4-7. 21-23- ஒற்றுமைக்கும் அகமகிழ்வதற்கும் தூண்டும் கடிதம். எப்பப்பிராதித்து பிலிப்பிக்குத் திரும்பியபோது கொடுத்தனுப்பப்பட்ட கடிதம். கடிதம் III. 3:1-4:3.8-9-இது கடிதம் II-இல் புகுத்தப்பட்ட ஓர் இடைச்செருகலாகும். இது யூதர்களின் கோரிக்கைகளுக்கு எதிராகப் பிலிப்பியரை எச்சரிக்கிறது. இஃது ஒரு வாதப்பகுதியாகும்.

பிலிப்பியரில் ஒற்றுமையுள்ளது என்று கருதுபவர்கள் மொழி, கருத்து, சர்ச்சைக்குரிய பகுதிகள் ஆகியவற்றில் போதிய இணைப்புத் தன்மை இருப்பதையும், தொகுக்கப்பட்ட முறையையும் இப்புதிய கருதுகோளால் விளக்குவது கடினம் என்பர். ஆனால், 3:1-இல் வரும் முனைப்பான முறிவு ஒரு பெரிய தடையாகவே உள்ளது. ஓர் ஆற்றல் மிக்க பதிப்பாசிரியர் தொகுத்தலை உண்மையிலேயே செய்திருப்பாரா? என்று வியக்கத் தோன்றுகிறது. அப்படிச் செய்திருந்தால், பவுலை இடைவிடாது துன்புறுத்தி வந்த யூதேய மயமாக்கும் பிரிவினரைப் பவுல் தாக்குவதை இன்னும் உறுதிப்பாடான முறையில் செய்திருக்க மாட்டாரா? பவுலின் திருமுகங்களில், கோட்பாட்டுப் பகுதிக்குப்பின் ஒழுக்கத் தூண்டுரை வருவது மரபு. இம்முறையை இத்திருமுகத்தில் பின்பற்றாததற்கு உளவியல் காரணங்கள் காட்டப்படலாம். வேறுபட்ட இலக்கியப் பொருள்களை இந்நூல் கொண்டிருந்தாலும், இதில் இன்னும் ஒற்றுமை இருப்பதாக ஆய்வாளர் சிலர் கருதுவர்.

நூலின் ஒற்றுமை பற்றிய இத்தகைய ஆய்வு நூலின் விளக்கத்திற்கு அதிக ஒளி அளிக்காவிட்டாலும், நூல் தோன்றிய இடம் மற்றும் காலம் பற்றிய சிக்கலான பிரச்சனைக்கு ஒரு வகையில் நம்பக்கூடிய விடை அளிக்கலாம். அப்போது வெவ்வேறான பகுதிகள் வெவ்வேறு காலங்களிலும், இடங்களிலும் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது.

5. இடமும் காலமும்: இஃது ஒரு சிக்கல் மிக்க பிரச்சனையாகும். கொலோசையர், பிலமோன், பிலிப்பியர், எபேசியர் ஆகியோருக்குப் பவுல் தன் சிறைவாசத்தில் திருமுகங்கள் எழுதியதாகவும், ஆகவே இவை "சிறைக்கூட மடல்கள்" என்றழைக்கப்படுவதாகவும் கருதப்பட்டன. பிலிப்பியருக்குத் திருமுகம் சிறைவாசப் பின்னணியில் எழுதப்பட்டது பற்றி ஐயமில்லை. பவுலே அதைச் சுட்டிக்காட்டுகிறார் (பிலி 1:14.17). அச்சிறைவாசமும் உரோமையருக்குக்கீழ் இருந்த ஒரு சிறையில் நிகழ்ந்தது என்றும் சுட்டுகிறார். "அரண்மனைக் காவலர்கள்" மற்றும் "சீசருடைய வீட்டைச் சேர்ந்தவர்கள்" ஆகிய குறிப்புகள் இதைத் தெளிவாகச் சுட்டுகின்றன. ஆனால், இச்சிறை

எங்கிருந்தது? இஃது ஒரு பெரிய பிரச்சனையாகும். இஃது ஆய்வுக்குட்பட்டு இன்றும் முடிவு காணப்படாத நிலையில் உள்ளது.

அப்போஸ்தலர் பணிநூலில் காணப்படும் செய்திகளிலிருந்து, பவுல் செசரியாவிலும் உரோமையிலும் உரோமையரின்கீழ் சிறைப்பட்டிருந்தார் என்பது தெளிவு. இதைத் தவிர்த்துத் தான் பல தடவை சிறைப்பட்டதாகவும் (2 கொரி 11:23), "எபேசில் விலங்குகளோடு போராடியதாகவும்" (1 கொரி 15:30-32; காண்க. 2 கொரி 1:8-10) பவுல் கூறுகிறார்.

1) இந்நூல் பவுல் செசரியாவில் சிறையிருந்தபோது எழுதப்பட்டது என்ற கருத்து ஆய்வாளர்களிடையே அவ்வளவு ஆதரவு பெறவில்லை. இந்நூல் உரோமையில் எழுதப்பட்டது என்பது பாரம்பரியக் கருத்தாகும். இப்போது மற்றொரு கருதுகோள்முன் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி, அப்போஸ்தலர் பணிநூலில் எபேசில் பவுல் சிறைப்பட்டிருந்தது பற்றிய எக்குறிப்பும் இல்லையெனினும், அங்குச் சிறையிலிருந்தபோதுதான் இந்நூலை எழுதினார் என்ற கருதுகோள் கி.பி. 1897-இலிருந்து சிறிது சிறிதாக அறிஞர்களிடையே அதிக ஆதரவு பெற ஆரம்பித்தது. பின்னிரண்டு கருத்துகளையும் ஆய்வு செய்வது அவசியமாகும்.

இந்நூல் உரோமையில் எழுதப்பட்டது என்று கூறுபவர்கள் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம். 1) பிலி 1:13; 4:22-இல் குறிக்கப்படுபவை உரோமைச் சிறைவாசத்தோடு ஒத்துப்போகின்றன. 2) 1:15-17-இல் குறிக்கப்படும் சூழ்நிலை உரோமையைப் பொருத்த மட்டும் உண்மையாக இருக்கலாம். அத்தகைய கட்சிப் பிரிவுகள் எபேசுத் திருச்சபைக்குப் பொருந்தாது. 3) தன் சிறை வாசத்திற்குப் பவுல் கொடுக்கும் முக்கியத்துவம் உரோமைச் சிறைவாசத்தால் மேலான முறையில் விளக்கப்படலாம். 4) திருச்சபை செழித்து வளர்ந்த மையமான எபேசில் பவுல் சிறைப்பட்டிருந்தால், பிலிப்பியிலிருந்து நன்கொடை கொண்டு வருவதில் எப்பப்பிராதித்து உண்மையில் அபாயமான பயணத்தை மேற்கொள்ள அவசியமில்லை. தூரத்திலிருந்த உரோமைக்கு இஃது அவசியமாகும். பவுல் எபேசில் சிறையிருந்ததற்கு ஆதரவாகக் காட்டப்படும் காரணங்கள் உண்மையாகத் தோன்றலாம். கவர்ச்சியானவையாகவும் இருக்கலாம். இரண்டு கருதுகோள்களுக் கிடையில், எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பிலிப்பியர் திருமுகம் உரோமையில் எழுதப்பட்டது என்ற பழங்காலக் கருதுகோள் அனுமதிக்கப்பட வேண்டும். இந்நூல் எப்போது எழுதப்பட்டது என்று நாம் துல்லியமாகக் கூற முடியாவிட்டாலும் கி.பி. 60-64-க்கு இடையில், ஒருவேளை இக்காலத்தின் பிற்பகுதியில், எழுதப்பட்டிருக்கலாம் என்பதோடு நாம் திருப்தி அடைய வேண்டும்.

பிலிப்பியர் திருமுகம் எபேசில் கி.பி. 56-57-க்கு இடையில் எழுதப்பட்டது என்ற கருதுகோளுக்குச் சார்பான காரணங்களின் தொகுப்பையும், அவை பற்றிய ஆய்வுக் குறிப்புகளையும் பின்வருமாறு தருகிறோம். 1) தனது 2-ஆம் மறைபரப்புப் பயணத்தில் தெசலோனிக்கேயில் இருந்ததிலிருந்து, பிலிப்பியரிடமிருந்து பவுல் எந்த நன்மையும் பெறவில்லை என, பிலி 4:10.16- இலிருந்து தோன்றுகிறது. ஆயினும், உரோமைச் சிறைவாசத்திற்குமுன் பவுல் இருமுறை பிலிப்பிக்குச் சென்றதாக அ.ப. 20:1-6 என்ற பகுதியிலிருந்து அறிகிறோம். அப்போது அவர்களிடமிருந்து உதவி பெற்றிருக்கலாம். ஆனால், கடிதங்கள் I மற்றும் II பிலிப்பிக்குத் திரும்பச் செல்லவில்லை என்று சுட்டுகின்றன. தன்பால் அவர்கள் கொண்டிருந்த அக்கறையைக்காட்ட அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. என்பது வஞ்சப் புகழ்ச்சியாகவோ, குறையாகவோ கூறப்பட்டதன்று. இத்திருமுகம் கி.பி. 56-இல் எபேசில் எழுதப்பட்டதென்றால் எல்லாம் விளக்கமாகிறது. ஏனெனில், அக்குறுகிய காலத்தில் அதுவரை அவர் அவர்களிடம் வரவில்லை. இதற்கு மாறாக, உரோமைச் சிறைவாசம் வரை

அப்போஸ்தலருக்கு அவர்களின் உதவி தேவைப்படவில்லை அல்லது அவர்களின் உடனடித் தேவையால் அவர்களால் அவருக்கு உதவி செய்ய முடியவில்லை என்று 4:10-க்குப் பொருள் கூறலாம்.

2) இம்மடலில் மூன்று அல்லது நான்கு பயணங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் பவுல். எப்பப்பிராதித்து, திமொத்தேயு ஆகியோருடையவும் தன்னுடையவும் ஆகிய மூன்று பயணங்களை முன்னோக்குகிறார் (பிலி 2:19. 24:25.27). மடல் எழுதியபோது பவுல் உரோமையில் இருந்திருந்தால் இத்தனை பயணங்களை மேற்கொள்வது அவ்வளவு எளிதன்று. உரோமையிலிருந்து பிலிப்பிக்கு ஒரு பயணம் செய்ய, குறைந்தது 7 அல்லது 8 வாரங்கள் ஆகும். ஆனால், எபேசிலிருந்து பிலிப்பிக்குச் செல்ல ஏறக்குறைய பத்து நாட்கள்தான் ஆகும். இந்த நீண்ட உறுதியற்ற, ஆபத்துக்கள் நிறைந்த பயணங்களைப் பவுல் குறிப்பிட்டிருக்க மாட்டார். ஆகவே, இந்நூல் உரோமையிலிருந்து எழுதப்பட்டிருக்க முடியாது என்பது ஒரு கருத்தாகும்.

ஆனால், உரோமைச் சிறைவாசம் இரு ஆண்டுகள் நீடித்ததால், இந்த நீண்ட பயணங்கள் செய்யக் கூடியவையே. ஆகவே, உரோமையில் இந்நூல் எழுதப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு.

3) உரோமையருக்குப் பவுல் எழுதியபோது, ஸ்பெயினுக்குப் போகும் வழியில் அவர்களைப் பார்க்க வரும் திட்டத்தைக் கூறுகிறார் (உரோ 15:24.28). இக்கூற்றில் கிழக்கில் தனது பணி முடிந்துவிட்டதாகப் பவுல் கருதுவதாகத் தெரிகிறது. பின் ஏன் தனது திட்டத்தை மாற்றி பிலிப்பியர்களைச் சந்திக்க விரைவில் வருவதாகக் கூறுகிறார்? (பிலி 2:24). உண்மையில் திமொத்தேயுவின் தூதும், எபேசியர் பணிக்காலத்துக்குப்பின் வந்த பவுலின் பணியும் (அ.ப. 19:21-22; 20:1-2) இந்நூல் எபேசிலிருந்து எழுதப்பட்டது என்ற கருதுகோளோடு ஒத்துப்போகிறது.

ஆனால், கி.பி. 63-க்கு இடைப்பட்ட காலத்தில் பவுலிடம் ஏற்பட்டிருக்கக் கூடிய உளவியல் வேறுபாடுகளை நாம் கவனிக்க வேண்டும். 63-க்கு முன் ஏற்கெனவே ஏதாவது ஒரு வகையில் 5 வருடங்கள் பவுல் சிறையில் கழித்துவிட்டார். உடனடியாக ஸ்பெயினுக்குச் செல்லும் திட்டத்தை அவர் எளிதில் மாற்றி மாகிதோனியாவிலுள்ள சபைகளைக் காணாத நீண்ட இடைவெளிக்குப்பின் அவர்களைப் பார்த்து உற்சாகப்படுத்த விரும்பியிருக்கலாம். ஆகவே, பிலிப்பியிலுள்ள சபையை நிறுவியபின் அதை மீண்டும் பார்க்கவில்லை என்ற குறிப்பு பிலி 1:26.30; 4:15 தொ-இல் உள்ளது என்றும், எனவே அ.ப. 20:1 தொ-க்கு முன் இந்நூலை எபேசிலிருந்து எழுதினார் என்றும் கூறும் வாதம் மிக வலுவற்றதாகத் தோன்றுகிறது.

4) பிலிப்பியரில் குறிக்கப்படும் சிறைவாசத்திற்குக் காரணமானதை அடிப்படையாகக் கொண்ட வாதம் அவ்வளவு உறுதிவாய்ந்ததாகத் தெரியவில்லை எனலாம். பிலி 1:7. 12:13-இல் நற்செய்திக்காகப் போராடி அதை நிலை நிறுத்துவது சிறைவாசத்துக்கு உந்துகாரணமாகக் கூறப்படுகிறது அ.ப. 21:28; 24:6; 25:8-இல் உரோமைச் சிறைவாசத்துக்கு ஆலயத்தைப் பங்கப்படுத்தியது காரணமாகக் கூறப்படுகிறது. வாசகங்களை ஆராயும்போது யூதசமயத்துக்கு எதிராகப் பேசிய நசரேயர் பிரிவின் தலைவனாகப் பவுல் இருந்தது தான் உண்மைக் காரணமாகத் தெரிகிறது. யூத மயமாக்க விரும்புபவர்கள்மேல், அவர்கள் யூதக்கிறிஸ்தவர்களோ, யூதர்களோ யாராக இருந்தாலும், தாக்குதல் கலாத்தியருக்குத் திருமுகம் எழுதப்பட்டதற்கு முன்புதான் பொருந்தும் என்ற வாதமும் வலுவுள்ளதன்று. ஏனெனில், இத்தகைய போக்கு அப்போஸ்தலர் இறந்த பின்னும் திருச்சபையில் நீடித்திருந்தது.

5. பிலிப்பியர் திருமுகத்துக்கும் பவுலின் மற்றப் பெரிய திருமுகங்களுக்கும் இடையேயுள்ள கருத்தொற்றுமை காரணமாக இந்நூலும் அவை

எழுதப்பட்ட காலத்திலேயே எபேசிலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது இறையியல் வாதமாகும். இதற்கு மாறாக, இந்நூல் பிற்காலத் திருமுகங்களோடும் கருத்தொற்றுமை கொண்டுள்ளது என்பது சுட்டிக் காட்டப்படலாம். இவ்வாறு பிலி 3:8-ஐ எபே 3:19-ஓடும், பிலி 3:10-ஐ எபே 1:19 தொ-ஓடும் ஒப்பிடுக. பிலிப்பியர் சூழ்நிலையால் எழுதப்பட்டதாகும். அஃது ஓர் இறையியல் திருமுகமன்று. ஆகவே, கோட்பாட்டு வாதத்தைப் பயன்படுத்தி பவுலின் முன்தொகுப்போடு சேர்க்க முடியாது என்று எபேசு கருதுகோளுக்கு மறுப்பைக் கூறுவர்.

ஆயினும், தனது மூன்றாவது மறைபரப்புப் பயணத்தில் (அ.ப. 19:1-20:1) பவுல் எபேசில் நீண்ட காலம் தங்கியபோது சிறைவாசம் இருந்தார்; அப்போது பிலிப்பியரை எழுதினார் என்ற கருதுகோளுக்கு இக்கால விளக்க விரையாளர்கள் பலர் பெரும் ஆதரவு அளிப்பர். பவுல் எபேசில் சிறைப்பட்டிருந்தார் என்பதற்கு ஏட்டுச்சான்று எதுவும்மில்லை. ஆனால், தான் பல தடவை சிறைப்பட்டதாகப் பவுல் கூறுகிறார் (2 கொரி 11:23). "எபேசில் விலங்குகளோடு போராடியதாகவும் கூறுகிறார்" (1 கொரி 15:30-32; காண்க. 2 கொரி 1:8-10). இக்கூற்றை அப்படியே சொற்பொருளில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஓர் உரோமைக் குடிமகனுக்கு இத்தகைய தண்டனை கொடுக்க முடியாது. மேலும், இந்நூலை எழுதியபோது அவர் உயிரோடு இருந்தார். ஆகவே, இக்கூற்று எபேசில் சிறையிருந்ததைச் சுட்டலாம். மேலும், எபேசில் கண்டடெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் "அரண்மனைக்காவலர் களையும்", படைத்துறை சாராத அதிகாரிகள் அடங்கிய குழுவாகிய "*சீசர் வீட்டைச் சேர்ந்தவர்கள்*" பற்றியும் குறிப்பிடுகின்றன. மேலும், பிலிப்பி எபேசிலிருந்து எளிதில் போய் வரக்கூடிய தொலைவில் இருந்தது. ஆகவே, இந்நூல் எபேசில் எழுதப்பட்டிருக்கலாம்.

இரண்டு கருதுகோள்களுக்கும் சார்பான காரணங்கள் எவ்வளவு மதிப்புடையவையாயினும், முழுச்சூழ் நிலையும் (சங்கிலிகள், சிறைவாசம் பற்றிய குறிப்புக்கள்) இந்நூல் உண்மையான சிறைவாசத்தின் போது எழுதப்பட்டது என்பது உறுதி. எங்கே, எப்போது என்ற பிரச்சனைகள் முடிவு காணப்படாதவைகளாக உள்ளன.

6. சந்தர்ப்பமும் நோக்கமும்:

கடிதம் I: பிலி 4:10-20. பிலிப்பியர்கள் தங்கள் சபையின் உறுப்பினரான எப்பப்பிராதித்து வழியாகப் பவுலுக்குப் பண உதவி அனுப்பினர். இக்கடிதம் அதை ஏற்றுக்கொண்டு உடனடியாக நன்றி கூறுகிறது.

கடிதம் II: பிலி 1:1-31; 4:4-7. 21-23. முதலாம் கடிதத்துக்குச் சில வாரங்களுக்குப்பின் இக்கடிதம் எழுதப்படுகிறது. எப்பப்பிராதித்து நோய்வாய்ப்பட்டு இப்போது குணமடையந்துள்ளார். பிலிப்பிக்குத் திரும்பிச் செல்ல ஆவல் கொள்கிறார். பிலிப்பியில் நிலவிய சூழ்நிலையைப்பற்றிக் கேள்விப்பட்டவற்றிற்கு நீண்ட பதில் எழுதுகிறார் பவுல். பிலிப்பியக் கிறிஸ்தவர்கள், தங்கள் உடன் குடிமக்களிடமிருந்து பெரும் எதிர்ப்பை எதிர்கொண்டனர் (பிலி 1:28-30). தன்னலத்தாலும் அகந்தையாலும் தூண்டப்பட்டுத் தங்களிடையே பிரிந்து பலவீனப்பட்டு இருப்பதைப் பவுல் காண்கிறார். அவர்கள் தாங்களிடையேயுள்ள பிரிவுகளை அகற்றி, தன்னலமில்லாமல், ஆழ்ந்த ஒற்றுமையைக் காணும்படி பேரன்போடு அவர்களைத் தூண்டுகிறார். அதே சமயம் தனது நிலையைப் பற்றிச் சிந்தித்து அவர்களின் ஆறுதலுக்காக, நற்செய்திக்காகத் துன்புறுவதின் மறையுண்மையை விளக்குகிறார். அவர்கள் அவரோடு துன்பப்படுவதுபோல், அத்தகைய துன்பங்கள் கொண்டு வரும் கிறிஸ்துவோடு கொண்டுள்ள ஆழ்ந்த ஒன்றிப்பின் விளைவான மகிழ்ச்சியிலும் பங்குகொள்வர். கடிதம் II: பொதுப்பங்கெடுப்பு (**Koinonia**): என்ற கருத்தைச் சுற்றிச் சுழல்கிறது. துன்பத்தில் பொதுப்பங்கெடுப்பு அப்போஸ்தலருக்கும் அச்சமூகத்திற்கும் இடையிலுள்ள ஒன்றிப்பை ஆழப்படுத்துகிறது. அதே சமயம் கிறிஸ்துவில் கொள்ளும்

அடிப்படைப் பொதுப்பங்கெடுப்பு அவர்களின் உறவுகளுக்கு வடிவம் கொடுக்க வேண்டும்; அவற்றை நிர்ணயிக்க வேண்டும்.

கடிதம் III: பிலி 3:1-4:3.8-9. பவுல் சிறையிலிருந்து விடுதலை பெற்ற காலத்திலும், பிலி 2:24-இல் குறிக்கப்படும் பிலிப்புக்குச் செல்லுதலுக்குப் பின்வரும் காலத்திலும் இந்த வாதப்போக்குடைய கடிதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். (காண்க. பிலி 1:26; அ.ப. 20:1-2). யூத மயமாக்கும் சுற்றித்திரியும் மறை பரப்பாளர்களால் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பெரும் அபாயத்தைக் காண்கிறார். ஆகவே, ஒருவேளை கொரிந்திலிருந்து (காண்க. அ.ப. 20:2-6; உரோ 15:24-26), தான் ஏற்படுத்திய சபையை இந்த அபாயத்திலிருந்து பாதுகாக்க இக்கடிதத்தைப் பவுல் எழுதுகிறார். கிறிஸ்துவுக்கு மனந்திரும்புதல் என்றால் என்ன, "உண்மையான நிறைவு" எதில் அடங்கியிருக்கிறது ஆகியவை பற்றித் தான் உய்த்துணர்ந்தவற்றிலிருந்து தனது கடிதத்தை அமைக்கிறார்.

7. நூலின் திட்டம்:

I. முன்னுரை (1:1-11).

1:1-2 : அஞ்சலியும் வாழ்த்தும்.
1:3-8 : நன்றி நவிலல்.
1:9-11 : மன்றாட்டு.

II. செய்திகளும் போதனையும் (1:12-3:1).

அ) பவுலின் நிலை (1:12-26).

ஆ) அறவுரைகள் (1:27-2:18).

1:27-30 : ஒற்றுமையும் பற்றுறுதியும்.
2:1-11 : தாழ்ச்சியும் தன்னலமின்மையும்.
2:12-18 : கீழ்ப்படிதலும் உலகுக்குச் சான்றாய் இருத்தலும்.

இ) தனிப்பட்ட செய்திகள் (2:19-30).

2:19-24 : திமொத்தேயுவை அனுப்புதல்.
2:25-30 : எப்பப்பிராதித்து திரும்புதல்.

ஈ) முடிவுரை (3:1)

III. போலிப்போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை (3:1-4:1).

IV. ஒற்றுமை, மகிழ்ச்சி மற்றும் அமைதி – அறவுரை (4:2-9).

4:2-3 : ஒற்றுமைக்கு அழைப்பு.
4:4-7 : அகமகிழவும் மன அமைதிகொள்ளவும் அழைப்பு.
4:8-9 : பவுலைப் பின்பற்ற அழைப்பு.

V. நன்கொடையை ஏற்றல் (4:10-20).

VI. முடிவுரை - வாழ்த்தும் ஆசீரும் (4:21-23).

8. போதகம்: இத்திருமுகத்தில் கிறிஸ்தவ மகிழ்ச்சி, கிறிஸ்துவின் நாள், நற்செய்திப்பணி, ஆண்டவர் கிறிஸ்து, கிறிஸ்துவில் மீட்பு, கிறிஸ்தவ நட்புறவு முதலிய பல உண்மைகளைப் பற்றி பவுல் போதிக்கிறார். அவற்றைச் சுருக்கமாக இங்குத் தருகிறோம்.

திருமுகத்தில் பதினொரு தடவை கிறிஸ்தவ மகிழ்ச்சியைப் பற்றிச் சிறப்புக் குறிப்புகள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் இயேசுவினுடைய ஆவியின் மூலம், கடவுளோடும் ஒருவர் பிறரோடும் கொண்டுள்ள தோழமையின் பொதுப்பங்கெடுப்பாகும். இந்தத் தோழமை (**Koinonia**) ஏற்கெனவே அ.ப. 2:4-இல் சுருக்கமாக விவரிக்கப்படுகிறது. பிலிப்பியர்களோடு பவுல் கொண்ட முதல் தொடர்பிலிருந்து நற்செய்திப்பணியில் அவரோடு அவர்கள் கொண்ட தோழமையை எடுத்துக்காட்டும் இக்கடைசிச் செயல்வரை (நன்கொடை) "கிறிஸ்துவின் வழியாக வரும் ஏற்புடைய வாழ்வின் பயனால் நிரப்பப்பட்டுள்ளனர்" (பிலி 1:11) என்பதற்கு அவர்கள் அவருக்குப் பல சான்றுகள் கொடுத்துள்ளனர். கிறிஸ்தவத் துன்பம் பற்றிய பவுலின் போதனையின் மையம் 3:8-11-இல் கொடுக்கப்பட்டுள்ளது. நமது மீட்பு நமது தகுதியாலோ, சட்டத்தாலோ வருவதில்லை. உண்மையான ஏற்புடைமை கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தால் வருகிறது. இதுவும் இறைவனுடைய கொடையேயாகும். இது

கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் இறப்பில் அவரோடு கொள்ளும் ஒன்றிப்பாகும். இதனால் அவரோடு சிலுவையில் அறையப்படுவதால் அவருடைய உயிர்த்த வாழ்வின் புதுமையிலும் நாம் பங்கு கொள்கிறோம் (3:10-11.20-21). இக்கருத்து எபே 2:1-10; 3:14-19; 4:15-16. 22-23; கொலோ 2:6-13; 3:3-11-இல் முழு அழுத்தத்தோடு விவரிக்கப்படுகிறது. அச்ச நடுக்கத்தோடு கிறிஸ்தவர்கள் தங்கள் மீட்புக்காக உழைக்க வேண்டியிருக்கும்போது (பிலி 2:12). கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கு கொள்வதின் மூலம் கிறிஸ்துவோடு இறுதியாக ஒன்றிப்புக்கொள்ளும் நம்பிக்கை கொண்டுள்ளனர். கிறிஸ்தவத் துன்பத்திற்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள இணைப்பு அவரில் நாம் வாழ்கிறோம் என்பதில் அடங்கியுள்ளது. கிறிஸ்துவுக்காகப்படும் இத்தகைய துன்பங்கள் எல்லாம் நற்செய்தியைப் பரப்புவதற்கும், விண்ணகக் குடிமகன் உரிமையை அடைவதற்கும் உதவும். இதற்குப் பவுலின் துன்பங்களே நிறைசான்றுகளாகும்.

9. **கிறிஸ்துவுக்குப் பாடல்** (பிலி 2:5-11): இப்பாடல் சிறப்பு மிக்கதாகும். கிறிஸ்துவின் இறைத்தன்மை பற்றிய இப்பகுதியில் புதிதாக எதையும் போதிக்கும் எண்ணம் பவுலுக்கு இல்லையெனலாம். கிறிஸ்துவின் மீட்கும் செயலிலிருந்து கிறிஸ்தவனில் காணப்பட வேண்டிய மனநிலை மாதிரியை எடுத்துக்காட்ட ஏற்கனவே அறியப்பட்ட கோட்பாடுகளை இப்பாடல் எடுத்துக்கூறுகிறது. சமூகத்தின் நன்மைக்காக, கிறிஸ்தவர்கள் தங்கள் உரிமையையும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதே இப்போதனையின் நோக்கமாகும். இதற்குக் கிறிஸ்துவே மாதிரி ஆகிறார். அவர் தனது இறை உரிமைகளைக் கைவிட்டுத் தன் தந்தைக்குக் கீழ்ப்படிந்து, அடிமையின் சாவை ஏற்றார். பாடலின் ஒவ்வொரு வசனமும் கிறிஸ்து என்னும் மறையுண்மையின் வெவ்வேறு நிலையை எடுத்துக்கூறுகிறது. 2:6-இறைமேன்மை; 2:7 - மனிதன் ஆனதில் வெறுமையாக்கப்படுதல்; 2:8-இறுதியான சிலுவை இழிவு; 2:9-உயர்த்தப்பெறுதல்; 2:10-எல்லாப்படைப்புகளும் வழிபடுதல்; 2:11-"இயேசு கிறிஸ்து ஆண்டவர்" என்று அறிக்கையிடுதல்.

இப்பாடலைப் பவுல் எழுதினார் என்றும், இது வழிபாட்டில் பயன்படுத்தும் நோக்கோடு எழுதப்பட்டது என்றும் கூறுவர் சிலர். வேறு சிலர், இது பவுலுக்கு முன்பே தோன்றியது என்று கூறுவர். இதில் கிறிஸ்து என்ற மறையுண்மையின் முன்நிலைகளைப் பற்றித் திருச்சபையின் காலத்தால் முந்திய போதனையைக் காண்கிறோம் என்றும் எருசலேம் திருச்சபையின் மூலப்போதனையைக் கொண்டிருக்கிறது என்றும் கூறுவர். எது எவ்வாறாயினும் எருசலேம் திருச்சபையின் போதகம் அந்தியோக்கியாவிற்குக் கொண்டுவரப்பட்டு, அங்குப் பாடல் வடிவம் எடுத்து, அத்திருச்சபையால் விருத்தசேதனம் செய்யாதவர்களிடையே உழைக்க ஒதுக்கப்பட்ட (அ.ப. 13:1-3) பவுலால் பிலிப்புக்குக் கொண்டுவரப்பட்டது என்றும், பிலிப்பியர் உடனடியாக ஏற்று வழிபாட்டில் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் நம்பலாம்.

10. **முடிவுரை:** திருமுகம் முழுவதுமே பவுல் பிலிப்பியர்பால் கொண்ட அன்பு பிரதிபலிக்கிறது. இந்நூல், பவுல் தான் நிறுவிய சபையின்பால் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பையும், இறைமக்கள்பால் ஓர் அப்போஸ்தலன் கொண்டிருக்கவேண்டிய உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. பவுலும் ஒரு மனிதன்; அவருக்கு ஓர் இதயம் உண்டு; அவரும் அன்பு செய்ய முடியும்; அன்பைப் பெறவும் முடியும் என்பதை உணர்த்துகிறது இத்திருமுகம். இந்நூல் ஒரு கொள்கைத்திரட்டு அன்று; ஓர் ஒப்பற்ற அன்பு மடலாகும்.

பிலிப்பு (PHILIP - குதிரைகளின் அன்பன்)

1. இரண்டாம் பிலிப்பு (கி.மு. 359-336) மாசிதோனியாவின் அரசனும், மகா அலக்சாந்தரின் தந்தையும் ஆவார் (1 மக் 1:1). இவரது ஆட்சியில் உருத்தெரியாமலிருந்த

மாசிதோனியா பேரரசாக வளர்ந்தது. இவர் தன் படைகளைச் சிறிய ஆசியாவுக்குள் செலுத்த விரும்பியபோது கி.மு. 336-இல் கொல்லப்பட்டார். இவருக்குப்பின் இவருடைய மகன் அலக்சாந்தர் அரசனானார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அலக்சாந்தர் பாரசீகத்தை வென்று, கிரேக்கர்களின் ஆதிக்கத்தை "உலகின் எல்லைவரை" செலுத்தினார் (1 மக் 1:3; காண்க. 8:5-7).

2. ஐந்தாம் பிலிப்பு மாசிதோனியாவின் அரசராக (கி.மு. 220-179) இருந்தபோது கி.மு. 197-இல் உரோமையர்களால் இழிவுபடுத்தப்பட்டார் (1 மக் 8:5). கார்த்தேசு போர்களின்போது இவர் கன்னிபாலுடன் (கி.மு. 215) உடன்படிக்கை செய்து கொண்டார். கி.மு. 200-இல் உரோமைப்படைகள் நகரைத் தாக்கி, தம்முடன் சமாதானம் செய்யும்படி செய்தனர்.

3. பிரிகியா இனத்தவனான பிலிப்பு, எருசலேம், யூதேயா ஆகியவற்றின் ஆளுநராக அந்தியோக்கு எப்பிபானால் நியமிக்கப்பட்டான் (2 மக் 5:22). பிலிப்பு, அந்தியோக்குவைவிட மிகவும் கொடுமையானவன் என்று கூறப்பட்டுள்ளது. அந்தியோக்கு கி.மு. 169-இல் ஆலயத்தைச் சூறையாடியபின் பிலிப்பை ஆளுநராக்கினான் (1 மக் 1:20-24; காண்க. தானி 11:25-28). இச்சமயத்தில் அந்தியோக்கு கிரேக்க நாகரிகத்தை யூதரிடையே புகுத்த முயன்றான் (2 மக் 6:11; 8:8).

4. பிலிப்பு, அந்தியோக்கு எப்பிபானின் வளர்ப்புச் சகோதரனும், நண்பனும் ஆவார் (1 மக் 6:14-18; 2 மக் 9:29). அந்தியோக்கு இறந்தபோது அவனுடன் பாரசீகத்தில் இருந்த பிலிப்பு அரசனாக்கப்பட்டான். லீசியா அரசைக் கைப்பற்றிக்கொண்டு அவனைக் கொன்றிருக்க வேண்டும் (1 மக் 6:17); அல்லது அவனை எகிப்துக்குப் போகும்படி செய்திருக்க வேண்டும் (2 மக் 9:29; காண்க. 1 மக் 6:2-63). பிலிப்பு திரும்பி வந்து அந்தியோக்கியாவில் தங்கினான். லீசியா எருசலேமைச் சூறையாடி அதனைக் கைப்பற்றும் நிலையிலிருந்தபோது பிலிப்பு அந்தியோக்கியாவில் இருக்கும் செய்தி அவனுக்கு எட்டியது (1 மக் 6:55-56; காண்க. 2 மக் 13:23). உடனே முற்றுகையை நீக்கிவிட்டு, யூதர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பிலிப்பைச் சந்திக்க அந்தியோக்கியாவிற்குச் சென்றான் (1 மக் 6:57-63).

5. இவன் பெரிய ஏரோது மற்றும் பெரிய குரு சீமோனின் மகள் மரியம்னே ஆகியோரின் புதல்வன். ஏரோது அந்திப்பாவின் ஒன்றுவிட்ட சகோதரன். இவன் புதிய ஏற்பாட்டில் மாத்திரந்தான் பிலிப்பு என்று அழைக்கப்படுகிறான் (மத் 14:3; மாற் 6:17; லூக் 3:19). மற்றபடி இவன் ஏரோது, ஏரோது பிலிப்பு என்று குறிக்கப்படுகிறான். பெரிய ஏரோதின் உயிலில், முதன்மையான வாரிசான அந்திபத்தாருக்கு அடுத்தபடியாய் நாடு முழுவதற்கும் வாரிசாகக் குறிக்கப்பட்டிருந்தான். இவன் பெரிய ஏரோது மற்றும் அசமோனிய இளவரசியான மரியம்னே ஆகியோரின் பேத்தியாகிய ஏரோதியாளை மணந்தான். இருவருக்கும் சலோமி பிறந்தாள். இவனது ஒன்றுவிட்ட சகோதரன் சிற்றரசன் பிலிப்புக்குச் சலோமியை மணம் செய்வித்தான். இந்தச் சகோதரன் ஏரோது பிலிப்புவின் மருமகனானதுதான், ஏரோது பிலிப்பு என்ற பெயர் பற்றிய குழப்பம் நற்செய்திகளில் காணப்படுவதற்குக் காரணமாகும்.

ஏரோது அந்திப்பா உரோமைக்குப் போகும் வழியில், ஏரோதியாளை மனைவியாக்கிக் கொண்டு, அவனது மனைவியாகிய நபத்தேய அரசன் அரேத்தாவின் மகளை விவாகரத்து செய்தான். இதைத் திருமுழுக்கு யோவான் கண்டனம் செய்தார். இஃது அந்திப்பா அவரைச் சிறையிடவும், கொலை செய்யவும் இட்டுச் சென்றது. இதில் ஏரோதியாளும் சாலோமியும் ஈடுபட்டிருந்தனர் (மத் 14:3-11; மாற் 6:14-28; லூக் 3:19-20).

6. சிற்றரசனான பிலிப்பு, பெரிய ஏரோது மற்றும் எருசலேமைச் சேர்ந்த கிளியோபாத்ரா ஆகியவர்களின் மகன். இவன் கி.மு. 4 முதல் கி.பி.

34 வரை, கலிலேயாவிலிருந்து, வடக்கிலும் கிழக்கிலும் தமஸ்கு நகரை நோக்கி இருந்த, மக்கள் அதிகம் வாழாத பகுதிக்குச் சிற்றரசனாக இருந்தான். இவனுது ஆட்சியில் கலானித்து, திராக்கோனித்து, பாத்தானேயா, பானியா, அவுரானித்து ஆகிய பகுதிகள் இருந்ததாக யோசிப்பசு கூறுகின்றார். லூக் 3:1 இவனது ஆட்சியில் இத்துரேயாவும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. பிலிப்பு உரோமையில் கல்வி பயின்றதால், உரோமையர்களுக்கு விசுவாசம் உள்ளவனாய் இருந்தான். பிலிப்பு பனியோன் என்னும் இடத்தில் ஒரு புதியகரைக் கட்டி அதற்குப் பேரரசரின் ஞாபகமாக செசரியா-பிலிப்பி என்று பெயரிட்டான். இப்பெயரில் தன் பெயரையும் இணைத்ததன் மூலம், பெரிய ஏரோதால் கட்டப்பட்ட செசரியாவிலிருந்து இதனை வேறுபடுத்திக் காட்டினான். கடலின் அருகே பெத்சாய்தா நகரைக் கட்டி அதற்கு அகுஸ்துவின் மகள் பெயரான யூலியா என்று பெயரிட்டான். ஏரோதியாளின் மகள் சலோமி இவன் மனைவி. இவளுக்குப் பிள்ளைகள் இல்லை. இவன் 27 ஆண்டுகள் ஆட்சி செய்தபின் கி.பி. 33-34-இல் இறந்தான். இதற்குப் பின் இவன் அரசு சீரியாவுடன் இணைக்கப்பட்டு, கி.பி. 37-இல் கலிகுலாவால் முதலாம் அகிரிப்பாவிடம் கொடுக்கப்பட்டது.

7. அப்போஸ்தலரான பிலிப்பு பன்னிருவருள் ஒருவராகக் குறிப்பிடப்படுகின்றார் (மாற் 3:18=மத் 10:3=லூக் 6:14; காண்க. அ.ப. 1:13). இவர் யோவான் நற்செய்தியில் மிகவும் முக்கியத்துவம் உடையவராகத் தோன்றுகிறார். இவர் கலிலேயாவிலுள்ள பெத்சாய்தா நகரைச் சார்ந்தவர். இயேசுவால் அழைக்கப்பட்டு, நத்தானியேலை இயேசுவிடம் அழைத்து வந்தவர் (யோவா 1:45-49). அப்பம் பலுகுதலின்போதும் (6:5-7), இயேசுவின் முக்கிய உரைகள் ஒன்றிலும் குறிக்கப்படுகிறார் (14:8-9). கிரேக்க மொழி பேசிய யூதர்கள் தங்களை இயேசுவிடம் அழைத்துச் செல்லுமாறு பிலிப்புவை வேண்டியது, பிலிப்பு மற்ற அப்போஸ்தலர்களைவிட இயேசுவிடம் அதிக பழக்கமுள்ளவர் என்பதைக் காட்டுகிறது (12:20-23). இவர்தான் இயேசுவிடம், தந்தையைக் காட்டும்படி கூறியவர்(14:8). பிற்காலப் பாரம்பரியங்கள் இவரை நற்செய்தியாளர் பிலிப்புவோடு குழப்பியுள்ளன.

8. எருசலேமில் அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்யும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட எழுவருள் ஒருவர் (அ.ப. 6:5). இவர் ஸ்தேவானின் மரணத்தால் எருசலேமை விட்டு வெளியேறியவர்களுள் இருந்தார் என்று அ.ப. 8:4-5 கூறுகின்றது. சமாரியாவில் முதன் முதலில் நற்செய்தியை அறிவித்தவரும் (8:5-13), சீமோன் என்னும் மந்திரவாதியை மனந்திருப்பியவரும் (8:5-13), இவர்தான். இவர் எருசலேமிலிருந்து காசாவுக்குச் செல்லும்போது எத்தியோப்பிய அரசியின் அண்ணகனை மனந்திருப்பினார் (26:40). இவர் செசரியாவில் இறைவாக்கு உரைப்பவர்களான "நான்கு புதல்வியரோடு" தங்கி இருந்தார் (21:8-9). இவர்கள் பிற்காலப்பாரம்பரியங்களால், சிறப்பாக மோன்த்தானியர்களால், நினைவுகூரப்படுகின்றனர். பிலிப்பு திரலசில் ஆயராக இருந்ததாகக் கூறப்படுகிறது.

பிலிப்புவின் நற்செய்தி (PHILIP, GOSPEL OF)

எகிப்து நாட்டின் ஞானவாதக் கோட்பாட்டினர் இதைப் பிலிப்பு எழுதினார் என ஒரு போலியான நற்செய்தியைக் கொணர்ந்தனர். எப்பிபானியு என்பவர் இதிலிருந்து சில மேற்கோள்களைக் காட்டியுள்ளார். இது தபசை வலியுறுத்தியது. இந்த உலகம் தீமையால் நிறைந்துள்ளது. அதிலிருந்து விடுவிக்கப்படுவதே நம் மீட்பு என்பதே இக்கூட்டத்தினரின் கொள்கை.

ஆண்டவரின் உயிர்ப்புக்குப் பின் அவர் பிலிப்புக்குத் தோன்றி அருளிய காட்சிகளே புத்தகமாக எழுதப்பட்டுள்ளது என, பிஸ்திஸ் சோபியா என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மார்சியோனியர்கள், பிலிப்பு, 'திருமணத்தை எதிர்க்கும் ஓர் எதிரி' எனக் கருதியதாக அலக்சாந்திரியா நகரின் கிளமந்து கூறுகிறார்.

எனவே, இது 3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம்.

பிலிப்புவின் பணிகள் (PHILIP, ACTS OF)

இது நான்காம் அல்லு 5-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னால் எழுதப்பட்ட நூல். மற்ற நூல்களில் கூறப்படாத மற்ற அப்போஸ்தலர்களைப் பற்றிய சில விளக்கங்கள் இங்கே காணப்படுகின்றன. பிலிப்பின் புதுமைகள், அவர் எராப்போலி என்னுமிடத்தில் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு வேதசாட்சியாக மரித்தல் ஆகிய செய்திகள் இதில் கூறப்பட்டுள்ளன.

இதன் கிரேக்கச் சுவடியில் இப்பணிகள் 15 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மறைசாட்சி மரணம் ஆகிய ஒன்பது பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவை தனித்தனியாக, மக்கள் சிலரிடம் மட்டுமே பரவியிருந்தது.

பிலேத்து (PHILETUS - அன்புக்குரியவர்)

கிறிஸ்தவனான பிலேத்து புரியாத மொழியைப் பயன்படுத்தி விசுவாசிகள் பலரின் விசுவாசத்தைக் கெடுத்தான். இவர் இமனேயுவுடன் சேர்ந்து, உயிர்த்தெழுதல் ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டது என்று போதித்தார் (2 திமொ 2:17-18). இவர்கள் உடல் உயிர்த்தெழுதலை மறுத்தனர். இத்தகைய போதனையைத் தவிர்க்க வேண்டும் என்று பவுல் திமொத்தேயுவுக்கு எச்சரிக்கிறார்.

பில்கா (BILGAH - மகிழ்ச்சியான)

ஆரோனின் வழிவந்தவர். தாவீதின் காலத்தில் குருக்கள் பிரிவுகள் பல ஏற்படுத்தப்பட்டிருந்தன. இவர் அதில் பதினைந்தாவது பிரிவின் தலைவர் (1 நாள் 24:14).

1. பாபிலோனிய அரசன் நெபுகத்னேசர் பாபிலோனுக்குச் சிறைப்படுத்திக் கொண்டு சென்றவர்களுள் அடிமைத்தனத்தினின்று செருபாபேலோடு திரும்பிய தலைமைக் குருக்களில் ஒருவர் (நெகே 12:5,18).

பில்கா (BILHAH - எளிமையான, அடக்கமான) - ஆள்

ராகேலின் பணிப்பெண், ராகேல் தான் மலடியாய் இருந்தது கண்டு, தன் சகோதரியின்மேல் பொறாமை கொண்டு, யாக்கோபுக்கு இவளை வைப்பாட்டியாகக் கொடுக்க, அவளோ யாக்கோபுவுடன் சேர்த்து கருவுற்று தாண், நப்தலி என்ற இரண்டு புதல்வர்களைப் பெற்றுக் கொடுத்தாள் (ஆதி 29:31-35; 30:1-8). இவர்களே பிறகு தாண், நப்தலி என இரு கோத்திரங்கள் உண்டாகக் காரணமாயினர். ராகேல் தனது மரணப்படுக்கையில் பென்யமினைப் பெற்றெடுத்தபின், யாக்கோபின் மூத்த மகன் ரூபன் பில்காவுடன் உடலுறவு கொண்டான் (ஆதி 35:22; காண்க. 49:4).

பில்கா (BILHAH - எளிமையான அடக்கமான) - இடம்

யூதாவின் தென் பகுதியில் காணப்பட்ட ஏதோ ஒரு கிராமமாக இருந்திருக்கலாம் (1 நாள் 4:29). இது பாலா (யோசு 19:3) என்றும், பாகலா (15:29) என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இஃது இருந்த இடம் தெரியவில்லை.

பில்காய் (BILGAI - மகிழ்ச்சியான)

அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய குருக்களில் இவரும் ஒருவர் (நெகே 10:8). எஸ்ராவின் தலைமையில் இஸ்ராயேலரின் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டபோது இவரும் கையொப்பமிட்டுச் சாட்சியாகயிருந்தார். இவர் பில்கா (2) ஆக இருக்கலாம்.

பில்கான் (BILHAN - எளிய)

1. ஓரியரான எட்சேரின் மகன். ஏதோம் நாட்டின் சேயிர் மலைப்பகுதியைச் சேர்ந்தவர் (ஆதி 36:27; 1 நாள் 1:42).

2. பென்யமின் குலத்தைச் சேர்ந்த எதியாவேலின் (1) மகனும், ஏழு புதல்வர்களுக்குத் தந்தையுமாவார் (1 நாள் 7:10). இவர் குறிக்கப்படும்

மரபு முறைப்பட்டியல் செபுலோனைச் சேர்ந்ததாக இருக்கலாம். இது வட இனத்தவர்களிடையே குறிக்கப்படவில்லை. ஒருவேளை, தொலைந்து போயிருக்கலாம்.

பில்சான் (BILSHAN - அவர்களின் ஆண்டவர், கேட்டறிபவர்)

பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு பாலஸ்தீனத்திற்குத் திரும்பிய யூதத்தலைவர்களுள் ஒருவர் (எஸ் 2:2; நெகே 7:7).

பில்தாசு (PILDASH - தீக்கொழுந்து)

நாகோருக்கும் மில்காவுக்கும் பிறந்த ஆறாவது மகனே பில்தாசு (ஆதி 22:22). இதனை ஓர் இனத்தின் பெயராகக் கொண்டால் அவ்வினம் எங்கே இருந்தது என்பது தெரியவில்லை. ஆனால், வட அரேபியாவில் மற்ற நாகோரியர் வாழுமிடத்தில்தான் இருந்திருக்க வேண்டும்.

பில்தாது (BILDAD - ஆண்டவரின் அன்புக்குரியவன், போராட்டத்தின் மகன்)

யோபுவின் மூன்று நண்பர்களில் இவரும் ஒருவர் (யோபு 2:11; 8:1; 18:1; 25:1; 42:9). இவரைச் சூகாயர் என அழைப்பதிலிருந்து இவர் பாலஸ்தீனத்தின் தென்கிழக்குப் பகுதியில் சுற்றித் திரிந்த அரமேய குல நாடோடிகளைச் சேர்ந்தவராக இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது (ஆதி 25:2.6). இவர் பழங்கால அறிவர்களின் ஞானத்திலிருந்து மூன்று நீண்ட உரைகளை வழங்குகிறார். இவை யோபுவுக்கு எதிராக, கடவுளின் குற்றச்சாட்டை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளன (யோபு 8:18; 25).

பில்தாய் PILTAI - யாவே மீட்பவர்)

மோவாதியாவின் தந்தை குடும்பத்திற்குத் தலைவரும், பாபிலோனிலிருந்து திரும்பி வந்தபின் யோயாக்கிம் தலைமைக் குருவாகப் பணியாற்றியபோது வாழ்ந்தவருமாகிய பில்தாய் ஒரு குரு ஆவார் (நெகே 12:17).

பிறப்பு (BIRTH)

பெரிய குடும்பங்களின் இன்றியமையாமையை உணர்ந்ததால் பிறப்புகள் வரவேற்கப்பட்டன. கருத்தரித்தல், உயிரின் பிறப்பு போன்றவற்றைப் பற்றி அதிகமான மக்கள் அறிந்திருக்கவில்லை (திருவுரை 11:5). பெண் முட்டையைப் பற்றி விவிலிய ஆசிரியர்கள் அறிந்திருக்கவில்லை. ஆணின் விதை மட்டுமே கருத்தரித்தலுக்குக் காரணம் என்றும், பெண்ணின் கருப்பை அதை வளர்க்கவும், பாதுகாக்கவும் பயன்படுகிறது என்றும் கருதினார்கள் (ஞான 7:2.3). எகிப்தியக் கவிதை ஒன்றில் பெண்ணின் விதை என்றும், ஆணின் "நீர்மம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. விவிலியத்தில் கருத்தடைக்கு எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஓனான் என்பவன் உடலுறவு கொள்ளும்போது விந்துவை வெளியே சிந்தியதால் கண்டிக்கப்பட்டான். காரணம், அவன் சகோதரனின் மனைவிக்கு ஒரு வாரிசைக் கொடுக்கத் தவறிவிட்டான்; அதனால், சட்டத்தை மீறி விட்டான் என்பதேயாகும். ஒன்பது மாதக் கர்ப்பம் பற்றி ஓர் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (7:27; காண்க. பத்து மாதக் கர்ப்பம்: ஞான 7:2-3). எகிப்தில் உள்ள எபிரேயப் பெண்கள் விரைவாகப் பெற்றெடுத்தார்கள் (யாத் 1:19). பிறப்பின் வேதனையை ஆசிரியர்கள் உருவகமாக வெளிப்படுத்துகிறார்கள். அவைகள் அரசர்களின் அச்சம் (சங் 48:6), கடவுளின் நாள் நெருங்கும்போது ஏற்படும் திகில், துயரம் (எசா 13:8), மூச்சுத்திணறல், வேதனைக்கூக்குரல் (எசா 42:14; காண்க. எரே 6:24; 13:21; 22:23; 30:6; 48:41; 49:24; 50:43. யோவா 16:21; திருவெளி 12:2) ஆகியவற்றிற்கு உருவகமாகப் பயன்படுத்தப்பட்டது. குழந்தை பிறப்பின் போது, பெண்கள் உதவி புரிவார்கள். பிறந்த பிறகு, குழந்தையின் தொப்புள் கொடி வெட்டப்பட்டது. பின், குழந்தை கழுவப்பட்டு, உப்பினால் தேய்க்கப்பட்டு, துணியினால் சுற்றப்படும் (எசே 16:4). குழந்தை பிறப்புக்குப்பின் தாய் தன்னைத்

தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் (லேவி 12:2.8).

பெண்ணின் உடலில் சக்தி இல்லாவிட்டாலோ (2 அர 19:3), அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேள்விப்பட்டாலோ குறைப்பிரசவம் ஏற்பட வாய்ப்பு உண்டு (1 சாமு 4:19). முற்றுப் பெறாத குறைப்பிறப்பு இருட்டில் மறைகிறது (திருவுரை 6:4-5). குறைப் பிரசவத்தில் பிறப்பவர்கள் வாழ்க்கையின் துன்பத்தைத் தாங்க வேண்டியது இல்லை (யோபு 3:11-13). விபத்துக்களால் கரு அழிந்து போகலாம் (யாத் 21:22-25). இப்படி அழிவது கடவுளின் தீர்ப்பாகக் கருதப்படும் (சங் 58:8; ஒசே 9:14). ஆண் பிறப்பு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும் (ரூத் 4:14; எரே 20:15; லூக் 1:14.57-58; 2:13; யோவா 16:21). குழந்தைகள் பிறந்த உடன் அவற்றிக்குப் பெயர் வைக்கப்படும் (ஆதி 29:32.35; 30:6 தொ). குழந்தையின் பிறந்த நாள், விழாவாகக் கொண்டாடப்படும் (ஆதி 40:20; மத் 14:6). வாழ்க்கை துன்பமானதாக மாறும்போது பிறந்த நாள் சபிக்கப்படும் (யோபு 3:3; எரே 20:14). ஆன்மீகப்பொருளில், ஒருவன் ஆவியினாலும், தண்ணீராலும் மறுபிறப்பு அடைகிறான் (யோவா 3:3-7); உருவகமாக, புதுப்பிறப்படைகிறான்.

பிறப்புரிமை (BIRTHRIGHT)

ஒருவனுடைய எல்லா மகன்களுக்கும் சில உரிமைகள் இருந்தாலும் தலைச்சன் பிள்ளைக்கு மட்டுமே சில சிறப்பு உரிமைகள் இருந்தன. அவனே சொத்துரிமையும் குடும்பப்பெயரையும் பெற்றான். தலைச்சன் பிள்ளை வழியாகவே குடும்ப உறவு கணக்கிடப்பட்டது.

எசாவின் பிறப்புரிமையை யாக்கோபு பெற்றுக்கொண்ட கதை பிறப்புரிமையின் இன்றியமையாமையைக் காட்டுகிறது (ஆதி 25:29-34). பிறப்புரிமை தலைச்சன் பிள்ளையிடமிருந்து சில வேளைகளில் எடுக்கப்படலாம். ரூபனின் பிறப்புரிமையானது அவனிடமிருந்து எடுக்கப்பட்டு யோசேப்பின் பரம்பரைக்கு வழங்கப்பட்டது (1 நாள் 5:1; காண்க. ஆதி 49:4). உணவின்போது வயது கிரமப்படியே வரிசையில் அமர்ந்தனர். தலைச்சன்பிள்ளையே நாட்டின் வாரிசு (2 நாள் 21:3; காண்க. சங் 89:27). இஸ்ராயேல் தன்னைக் கடவுளின் தலைச்சன்பிள்ளை ஆக்கிக் கொண்டதால் கடவுளின் பாதுகாப்பைப் பெற்றது (யாத் 4:22.23; எரே 31:9). புனித பவுல் உரோமைக் குடியுரிமையைப் பிறப்புரிமையால் பெற்றிருந்தார் (அ.ப. 22:28).

பினகாசு (PHINEAAS)

1. பழங்கால நினைவு சுவர்தலில் வடக்கிலிருந்து வந்த இஸ்ராயேலன் மிகவும் முக்கித்துவம் வாய்ந்தவனாய் இருந்ததால், எப்பிராயீம் மலைநாட்டில் ஒருபகுதி 'பினகாசின் கிபயா' என்று அழைக்கப்பட்டது (யோசு 24:33). பினகாசு எலயாசரின் மகனும், ஆரோனின் பேரனும் ஆவார் (யாத் 6:25; 1 நாள் 5:30; 6:35). இவர் எஸ்ராவின் மூதாதையரும் (எஸ் 7:5), எஸ்ராவோடு இருந்த கெர்சோம் என்ற குருவின் மூதாதையரும் ஆவார் (எஸ் 8:2). இவர் செருபாபேல், எஸ்ரா ஆகியவர்கள் காலத்தில் பாபிலோனில் சிறப்புப் பெற்றிருந்தவர். இவர் கடவுளுக்காக ஆர்வமுடன் உழைத்தவர்.

மோசே காலத்தில் ஏற்பட்ட கொள்ளை நோயினால், மக்கள் சந்திப்பின் கூடாரத்தின் முன்பாக அழுது கொண்டிருந்தார்கள். அப்போது, இஸ்ராயேலன் ஒருவன் மிதியானியப் பெண்ணொருத்தியை அழைத்து வந்தான். இதைக் கண்ட பினாகசு, கூட்டத்தை விட்டெழுந்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார். அவர்கள் வீட்டில் உடலுறவு கொள்ளும்போது அவர்களை மறைவிடத்தில் ஈட்டியால் குத்திக் கொன்றார். இந்தப் பற்றுறுதியால் திருப்தி அடைந்த ஆண்டவர், கொள்ளை நோயை நீக்கி விட்டார். பினகாசின் ஆர்வத்தைக்கண்டு கடவுள் அவருக்குக் குருத்துவத்தை நிலையாக அளித்தார் (எண் 25:6-18; காண்க. சங் 106: 30-31; 1 மக் 2:26.54; சீரா

45:23-26). மோசே மிதியானியர்களை அழிக்க படைகளை அனுப்பியபோது, பினகாசைத் தலைவராகவோ, குருவாகவோ அனுப்பினார். பினகாசு "திருத்தலத் துணைக்கலங்களையும், போர் எக்காளங்களையும் கையோடு எடுத்துச் சென்றார்" (எண் 31:6; காண்க. 10:1-10; 2 நாள் 13:12).

யோர்தானின் கிழக்கிலுள்ள கோத்திரங்கள் தனிப் பீடத்தை ஆண்டவருக்கென்று எழுப்பியபோது, அதைப் பற்றி விசாரிக்க, மேற்கிலுள்ள கோத்திரத்திலிருந்து பத்துப்பேர் சென்றபோது அவர்கள் தலைவராக, பினகாசு சென்றார். அங்குச் சென்றபோது கிழக்கிலுள்ள கோத்திரத்தார் தாங்கள் செய்த செயல் சரியென்று வாதாடினர். திருப்தியடைந்த இவர்கள் திரும்பி சீலோவுக்கு வந்து போரிடக் காத்திருந்த இஸ்ராயேலரை, அமைதியாக அனுப்பிவிட்டனர் (யோசு 22:9-34).

இஸ்ராயேலர், தங்கள் சகோதரரான பென்யமின் கோத்திரத்தாரோடு போரிடலாமா என்று ஆண்டவரிடம் ஆலோசனை கேட்க வந்தபோது ஆண்டவரின் திருப்பேழைமுன் பணிபுரிந்த பினகாசு ஆண்டவரின் சம்மதத்தை அறிவித்தார் (நீதி 20:27-28). பினகாசு வாயில் காப்போரின் மேற்பார்வையாளராக இருந்ததாக 1 நாள் 9:20 கூறுகிறது. இது வாயில் காப்போருக்கும் பிற்காலத்தில் பெரிய குருவாய் இருக்கப்போகிறவருக்கும் தொடர்பை நிறுவியது.

2. பினகாசு ஏலியின் மகனும், ஒப்னியின் சகோதரனும் ஆவார் (1 சாமு 1:3). இவரும், அவருடைய சகோதரரும் குருத்துவத்தைத் தவறான வழியில் பயன்படுத்தினர் (1 சாமு 2:12-36). இவர்களுடைய மரணம் முன்னறிவிக்கப்பட்டது. அபேக்கு என்ற இடத்தில் நடந்த போரில் இருவரும் மாண்டனர் (1 சாமு 4:4. 11.17). சவுலின் காலத்தில் குருவாய் இருந்த அகீயா, பினகாசின் பேரன். அபியாத்தார் பதவியிலிருந்து நீக்கப்படும் வரை இக்குலம் இருந்தது.

3. இவர், நாடு கடத்தலுக்குப்பின் வாழ்ந்த குருவாகிய எலயாசரின் தந்தை. இவர் எஸ்ராவோடு நாடு திரும்பினார் (எஸ் 8:33).

பினயா (BINEA – யாவேயின் மகன்)

சவுல் வீட்டாரின் வழிவந்தவர்களில் இவனும் ஒருவன். நாள் 8:37; 9:43-இன்படி பென்யமின் கோத்திரத் தலைமுறைப்பெயர்ப் பட்டியலில் இவன் மோட்சாவின் மகன் என்றும், இரபாயாவுக்குத் தந்தை என்றும் குறிப்பிடப்படுகிறான்.

பினோன் (PINON – இருள்)

ஏதோமின் தலைவர்களுள் ஒருவர். இப்பெயர் அவர்கள் வாழ்ந்த இடத்தின் பெயரிலிருந்தோ, குல மூதாதையர் பெயரிலிருந்தோ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் (ஆதி 36:41; 1 நாள் 52). நிச்சயமாக ஏதோமிலுள்ள செம்பு வெட்டி எடுக்குமிடமான பூனோன்தான் இதுவென்று கூறலாம். இங்கு இஸ்ராயேலர். மோவாபுக்குள் நுழையுமுன் தங்கினர் (எண் 33:42-43).

பின்பற்று (FOLLOW, IMITATE)

கடவுளைப் பின்பற்றுவது என்றால் அவரின் வழியில் நடப்பதாகும். முன்னைய யாத்திரை சமயத்தில் கடவுள் தம் மக்களினத்தை வாக்குறுதி நாட்டை நோக்கி இட்டுச்சென்றார். அவர்தம் மைந்தனோ மனிதர் அனைவரையும் புதிய மெய்யான புறப்பாட்டு முடிவுக்கு நடத்திச் செல்கிறார். அவர் காட்டும் வழிதனைக் கடைப்பிடிக்க நாம் அழைக்கப்பெறுகிறோம்.

1. **இஸ்ராயேலின் அழைப்பு:** எகிப்தை விட்டு வெளியேறித் தம்மைப் பின்பற்ற அழைத்த யாவேக்கு (காண். ஓசே 11:1) மக்கள் செவிமடுத்தனர். பாலைவனத்தில் மேகத் தூணாகவும் நெருப்புத் தூணாகவும் (யாத் 13:21) இருந்து வழிநடத்துபவரும், பாதையை வகுத்துக்காட்ட தம் தூதனை அனுப்புபவரும் ஆன யாவேயை இஸ்ரயேலர் பின்பற்றினர். ஒரு மணமகள் தன் மணமகனைப் பின்

தொடர்வதுபோலவும் (எரே 2:2), ஆட்டு மந்தை தன் ஆயனைப் பின்தொடர்வதுபோலவும் (சங் 79:1), குடிமக்கள் தம் அரசரைப் பின்தொடர்வது போலவும் (2 சாமு 15:13; 17:9), பற்றுறுதியுள்ளவன் தன் கடவுளைப் பின்தொடர்வது போலவும் (1 அர 18:21), யாவேயைப் பின்பற்று எனும் அழைப்பு இஸ்ரயேலுக்கு இடையறாது ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

பின்பற்றுவது என்பது- உண்மையில் முழுப் பற்றிணைப்பையும் வரம்பற்ற பணிவையும், அதாவது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் குறித்துக் காட்டும். இவ்வண்ணம், காலேபு என்பவர் ஒருபோதும் ஐயுறாது யாவேயைப் பின்பற்றிச் சென்றதாகப் போற்றப் பெறுகிறார் (உப 1:36). கட்டளைகளைக் கடைப்பிடித்த தாவீது, முழு இதயத்தோடு கடவுளைப் பின்பற்றுவோருக்கெல்லாம் ஒரு மேற்கோளாய்க் காட்டப்படுகிறார் (1 அர 14:8). யோசியா அரசனும் அவனுடைய குடிகளும் தேவ உடன்படிக்கைக்கேற்ப வாழ வாக்களிக்கும் போது, 'யாவேயைப் பின்பற்றுவோம்' என்றே உறுதி எடுக்கின்றனர். இதன்பின் விசுவாசியின் இலட்சியம் எப்பொழுதும் 'ஆண்டவரின் வழிகளைப் பின்பற்றுவது' என்றாகவேயிருக்கும் (சங் 19:22;24:4;...)

எனவே, யாவேயைப் பின்பற்றும்படி பற்றுறுதி கேட்கிறது. மெய்யாகவே யாவே பொறாமை உள்ளவர்தான். பிற தெய்வங்களைப் பின்பற்றுவோரை அதாவது அவைகளை நம்பி வழிபடுவோரை ஒருபோதும் கண்டு பாவிக்கக் கூடாது எனத் தம் மக்களைத் தடுக்கிறார் (உப 6:14). ஆனால், இஸ்ரயேலர் அங்கங்குள்ள தெய்வங்களுக்குக் காது கொடுக்கின்றனர். கானான் நாட்டுக்கு வந்ததுமே சீனாய் மலையில் தோன்றிய கடவுளுக்கு எதிராய்ப் பாகால் தெய்வங்கள் அவர்களின் உள்ளத்தை ஈர்க்கின்றன (உப 4:3). இருமருங்கும் சாய்ந்து சாய்ந்து நடக்கும் நொண்டியைப்போல், இஸ்ரயேலர் உள்ளனர்; எனவே, "ஆண்டவர் கடவுளானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் கடவுளானால் அவனைப் பின்பற்றுங்கள்" எனும் இறைவாக்கினரின் கடும் குரல் கேட்கிறது (1 அர 18:21). "ஆண்டவரை விட்டு விலகி வேசித்தனத்தில் மூழ்கி விட்டாய்" (ஓசே 1:2) என்றும், "அன்னிய தெய்வங்களை நீ பின்பற்றுகிறாய்" (எரே 7:6.9; 9:13; 11:10) என்றும், இறைவாக்கினர் பலர் இடைவிடாது இஸ்ரயேலைக் கண்டிக்கின்றனர்; இஸ்ரயேலரே, மனந்திரும்புங்கள் எனப் போதிக்கின்றனர்; யாத்திரைக் காலத்தில், அவர்கள் பின்பற்றிய பாதையில் மீண்டும் வந்து நடக்க (ஓசே 2.17), அதாவது திரும்பிவந்து யாவேயைப் பின்பற்ற அவர்கட்கு அழைப்பு விடுக்கின்றனர்.

2. **கிறிஸ்துவின் அடிச்சுவட்டில்:**

அ. முதல் கட்டம்: *சீமோனையும்*, அந்திரேயாவையும், யாக்கோபுவையும் யோவானையும், மத்தேயுவையும் பார்த்து இயேசு, 'என்னைப் பின்தொடர்க' என்கிறார். அதிகாரம் ததும்பும் அவரது வாக்கு காந்தம் போல் ஈர்க்கவே, அவர்கள் உடனே அவரைப் பின்பற்றுகின்றனர் (மாற் 1:17-20; 2:14). இயேசுவின் *சீடர்களாய்* ஆனபிறகும், அவரது தூது மறைபொருளிலும் ஆளுமை மறை உண்மையிலும் அவர்கள் மேன் மேலும் புகுமுகம் பெறுகின்றனர். இவ்விதம் இயேசுவைப் பின்பற்றுவது ஓர் ஒழுக்க நெறி அல்லது ஆன்மீகப் போதனையைக் கடைப்பிடிப்பது மட்டுமன்று; மெய்யாகவே, அவர்தம் நன்மை தீமையில் பங்கு கொள்வதும் ஆகும். அவரது மகிமையிலே பங்குபெறச் சீடர்கள் தயாராய் உள்ளனர் என்பதுதெளிவு. "இதோ! நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின் தொடர்ந்தோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்?" (மத் 19:27). ஆனல், அவரது மகிமையில் பங்குபெறுமுன், அவருடைய கடும் தொல்லைகளிலும் துயர்ப்பாடுகளிலும் பங்குகொள்ள வேண்டுமென அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். பற்று முழுவதும் அறுக்க இயேசு கேட்கிறார். சொத்துகளையும்

பாதுகாப்பையும் துறக்க வேண்டும். சொந்தக் குடும்பத்தையுமே (மத் 8:19-22;10; 37:19; 16-22) இதயப்பிளவின்றி அல்லது திரும்பிப் பார்க்கும் எண்ணமின்றித் (லூக் 19:61 தொ) துறக்க வேண்டும் எனக் கோருகிறார். இந்தக் கோரிக்கை பலருக்கும் வரக்கூடும்; ஆனால், பணக்கார இளைஞனைப் போல் (மத் 19:22 தொ), ஒருசிலர் அதை ஏற்றுக்கொள்ளாதது வருந்தற்பாலதே.

ஆ. பலி தியாகத்துக்கு: சீடன் தன் உடைமைகளையும் உலகியல் பற்றுதல்களையும் துறந்து பிறகும், இயேசுவைச் சிலுவை மட்டும் பின்தொடர வேண்டுமென உணர வருகிறான். "என்னைப் பின்தொடர விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்" (மத் 16:24 இணை). இயேசு தம் சீடர்களிடமிருந்து இம்மாபெரும் தியாகத்தைத் கேட்கும்போது, தம் உடைமைகளை மட்டுமல்ல, தங்களையுமே பலியாக்க வேண்டுமென அவர் கோரும்போது, அவர் தாம் கடவுள் என்றும், கடவுளின் கோரிக்கைகள் எவ்வளவு தியாகம் கேட்கின்றன என்றும் வெளிப்படுத்துகிறார். ஆனால், இயேசுவே முதன் முதல் தம்மைப் பலியாக அர்ப்பணிக்க வேண்டும். அதன்பிறகே, சீடர்கள் அவருடைய கோரிக்கைகளுக்கு இணங்கும் ஆற்றல் பெறுவர். இயேசு போகுமிடம் எல்லாம் அவரைப் பின்தொடர பேதுரு விரைவில் உள்ளார்வம் கொள்கிறார்; ஆனால், அதே விரைவில் மற்றச் சீடர்களைப்போல அவரைக் கைவிட்டு ஓடிப்போகிறார். தம் மரணத்தாலும் உயிர்ப்பாலும் இயேசு தியாகப் பாதையைத் திறந்த பின்பே (யோவா 13:36 தொ), தமக்கு விருப்பமில்லாத இடத்துக்குத் தாம் போவதைப் (21:18 தொ) பேதுரு நன்குணர்கிறார்.

இ. விசுவசிக்கவும் கண்டு பாவிக்கவும்: புதிய ஏற்பாட்டு இறையியலார் மேலே கூறிய உருவகத்தைச் சிறிது மாற்றுகின்றனர். பவுல் கருத்துப்படி, கிறிஸ்துவைப் பின்பற்றுவது அவரது சாவிலும் உயிர்ப்பிலும் ஒருவன் ஒத்துருக் கொள்வதாகும். இறைத்தந்தை தம் மகனின் சாயலுக்கேற்ற உருவை நாம் தாங்கும்படி நித்தியமாய் முன் குறித்துள்ளார் (உரோ 8:29). இந்த ஒத்துருப் பொருத்தம் நம் திருமுழுக்கில் தொடங்கியுள்ளது (6:2 தொ). இயேசுவை நாம் கண்டு பாவிப்பதாலும் (1 கொரி 11:1), உயிர்ப்பின் ஆற்றல் மிளிரும் அவரது துன்பத்தில் உளமாரப் பங்கெடுப்பதாலும் (2 கொரி 4:10 தொ; 13:4; பிலி 3:10 தொ; காண். 1 பேதுரு 2:21) இப்பொருத்தம் ஆழம் பெறவேண்டும்.

அன்புச் சீடர் யோவான் கண்ணோட்டத்திலோ, கிறிஸ்துவைப் பின்பற்றுவது அவரை விசுவசிப்பதாகும். அவரின் வெளி அருங்குறிக்காக அல்லாது, அவரது சொல்லுக்காக அவரை நம்பி அவரில் நிறைவிசுவாசம் கொள்வதாகும் (யோவா 4:42). வெறும் பகுத்தறிவால் எழும் தயக்கங்களை வெல்லக்கூடியது- இவ்விசுவாசம் (6:2.66-69). உலகின் ஒளியாக வழிகாட்டும் அவரைப் பின்தொடர்வது இவ்விசுவாசம் (8:12). ஒரே ஆயன் சேர்க்கும் ஒரே ஆட்டு மந்தையில் இணைந்திருக்க வைப்பது இவ்விசுவாசமும் இப்பின்பற்றலும்தான் (10:1-16).

இறுதியாக, அப்போஸ்தலர்களைப் பின்பற்றும் விசுவாசி (அ.ப. 13:43) கிறிஸ்து செல்லுமிடமெல்லாம் (திருவெளி 14:4; காண். யோவா 8:21 தொ) அவரைப் பின்பற்றத் தொடங்குகிறான். "முன்னோடியாய்த் திரைச் சீலையைக் கடந்து சென்றுள்ள இயேசுவின் அடிச்சுவட்டில்" (எபி 6:20) விசுவாசி பின்செல்லக் காத்திருக்கிறான். அப்போது, "எனக்குப் பணிவிடை செய்பவன் என்னைப் பின்தொடரட்டும். எங்கே நான் இருக்கிறேனோ, அங்கே என் பணியாளனும் இருப்பான்" என்று இயேசு கூறிய வாக்குறுதி நிறைவேறும் (யோவா 12:26).

பின் மாரி (LATTER RAIN, SPRING RAIN)

இஃது இளவேனிற்கால மழையாகும் (எரே 5:24). இஃது ஏப்ரல், மே மாதங்களில் பெய்யும் மழையாகும். மழைக்காலம் முடிவுறுவது

இம்மழையோடுதான். காலதாமதமாகப் பயிரிடப்பட்ட பயிர்களுக்குக் கைகொடுப்பது இப்பின்மாரியே. பொதுவாக, பாலஸ்தீனத்தில் அக்டோபர், நவம்பர் மாதங்கள் மழைக்காலமாக இருக்கும். இது முன் மாரி என்றழைக்கப்படும். மழைக்கால மாதங்களாகிய ஏப்ரல், மே மாதங்களில் பெய்யும் மழையினைப் பின் மாரி என்றும் அழைப்பர். இரண்டும் சேர்ந்து இறை நன்மைத்தனத்தின் அடையாளமாகின.

பின்னல் தட்டி (LATTICE)

சன்னலை மூடியிருக்கும் பின்னல்தட்டி. இப்பகுதியின் வழியே சன்னலுக்கு வெளியே உள்ளவைகளைக் காணலாம் (நீதி 5:28; 2 அர 1:2; பழ 7:6; உ.ச. 2:9).

பின்னல் வேலைப்பாடு (CHECKER WORK)

1. ஆலயத் தூண்களில் அழகுற அமைக்கப்பட்ட வேலைப்பாடுகளின் ஒரு பகுதியைக் குறிக்கிறது. சில இடங்களில் இச்சொல்லானது பின்னல் வேலைப்பாடமைந்த சன்னல்களையும் (2 அர 1:2), வலையையும் (யோபு 18:8) குறிக்கிறது. ஆனால், இங்குக் (1 அர 7:17) குறுக்கு வெட்டுக்கோடுகளாலான வடிவமைப்பைக் குறிக்கிறது.

2. மேலும், இச்சொல் மெல்லிய சணல் நூலால் நெய்யப்பட்ட தலைமைக் குருவின் உட்சட்டையையும் குறிக்கிறது (யாத் 28:4). அதாவது, பல நிறங்களையுடைய மெல்லிய நூலினால் உருவாக்கப்பட்ட பலவிதமான கட்டங்களைக் கொண்ட வேலைப்பாட்டு அமைப்பினைக் குறிக்கிறது.

பின்னூய் (BINNUI - கட்டியெழுப்பு)

1. பாபிலோனியரின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய குடும்பங்கள் பல. அக்குடும்பங்களில் ஒரு குடும்பத்தலைவன் பெயரே பின்னூய். எஸ் 20:10; நெகே 10:34-இல் குறிப்பிடப்படும் பானியும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

2. அடிமைத்தனத்திற்குப் பிறகு வாழ்ந்த ஒரு யூதன். பகத்-மோவாபின் மக்களில் ஒருவர். இவர் அன்னிய மனைவியை விலக்கிவிட வேண்டியிருந்தது (எஸ் 10:30).

3. அடிமைத்தனத்திற்குப் பிறகு வாழ்ந்த குடும்பங்களில் ஒரு குடும்பத்தலைவன். இவரது பதிமூன்று புதல்வர்கள் அன்னிய மனைவியரை விலக்கிவிடக் கட்டாயப்படுத்தப்பட்டனர் (எஸ் 10:38).

4. அடிமைத்தனத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு லேவியராகயிருக்கலாம். செருபாபேலோடு சமகாலத்தவர் (நெகே 12:8). எருசலேமின் சுவர்கள் மீண்டும் கட்டப்படுவதில் பங்கெடுத்தவரும், நெகேமியாவின் தலைமையில் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டவருமான ஏனதாதுவின் மகனாக இருக்கலாம் (நெகே 3:24; 10:9). எஸ் 8:33-இன்படி இவர் லேவியரான நோவாதியாவின் தந்தையாவார். இவரும் பவ்வாயும் ஒரே ஆளாக இருக்கலாம் (நெகே 3:18).

பீ

பீடத்தின் கொம்புகள் (HORNS OF THE ALTAR)

தகனப்பலி பீடம் மற்றும் தூபப்பீடங்களின் நான்கு மூலைகளிலும் அமைக்கப்பட்ட கொம்பு போன்ற நீட்டல்களாகும் (யாத் 27:2; 30:2; 37:25; 38:2; எசே 42:15). இவை பொன்னாலோ, வெண்கலத்தாலோ வேயப்பட்டு, பீடத்தோடு சேர்ந்து ஒரே பொருளாகத் தோன்றின. குருக்கள் திருநிலைப்படுத்தப்படுதல் (29:1-2), பாவநீக்க நாள் (லேவி 16:8), பாவக்காணிக்கை செலுத்தல் (லேவி 4) போன்ற சிறப்புச் சடங்குகளில், பலியிடப்பட்ட விலங்குகளின் இரத்தம் இக்கொம்புகளில் பூசப்பட்டது.

இவற்றின் அடையாளப்பொருள் தெளிவாக இல்லை. ஆயினும், இவை இறைபலத்தையும் புனிதத்தையும் எடுத்துக்காட்டுவதாகக் கருதப்பட்டது. விரும்பிச் செய்த கொலையாளிகளைத் தவிர (காண்க. 21:14; 1 அர 2:28 தொ), மற்ற அகதிகள் இக்கொம்புகளைப் பற்றிக் கொள்வதால் அடைக்கலம் பெறலாம் (1 அர 1:50-53). இஸ்ராயேலின் பாவங்களுக்கான தண்டனையாக, இறைவன் பீடத்தின் கொம்புகளை வெட்டிவிடுவார் என்று ஆமோஸ் இறைவாக்கு கூறுகிறார் (ஆமோ 3:14).

கொம்புகளையுடைய பலவகையான பீடங்கள் பெயேர்செபா, தாண், கெசேர், மெகிதோ போன்ற விவிலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பீடம் (ALTAR)

ஒவ்வொரு மறையிலும் பலியீட்டு வழிபாட்டின் மையமாகப் பீடம் அமைந்துள்ளது. பீடம் இறைப் பிரசன்னத்தைக் குறிக்கும் அடையாளமாகும். இந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் மோசே பலியிடப்பட்ட விலங்கின் ஒருபாதி இரத்தத்தைப் பீடத்தின்மேல் தெளித்து, மற்றொரு பாதியை மக்கள்மேல் தெளித்தார். இதன் மூலமாக இறைவனுக்கும் மக்களுக்குமிடையே உறவொன்று ஏற்பட்டது (யாத் 24:6 தொ). பவுலும் இதையே வலியுறுத்துகிறார். "பழைய இஸ்ராயேல் மக்களைப் பாருங்கள்; பலிப்பொருளை உண்பவர்கள் பலிபீடத்தோடு உறவு கொள்கிறார்கள் அல்லரோ?" (1 கொரி 10:18). நிறைவான பலியில், அடையாளங்கள் உண்மைக்கு இடம்விட்டு அகலுகின்றன. ஏனெனில், கிறிஸ்துவே ஒரேசமயத்தில் குருவாகவும், பலிப்பொருளாகவும், பலிபீடமாகவும் உள்ளார்.

1. **நினைவுக்கொண்டாட்டத்திலிருந்து வழிபாட்டு இடத்திற்கு:** தொடக்கத்தில், தனக்குத் தற்போதுதான் காட்சி தந்த இறைவனுக்குப் பதில் அளிக்கும் முறையில், மனிதன் பீடமொன்று கட்டினான். இது தான் குலமுதியவர்களின் செயல் தொகுப்பில், அடிக்கடி காணும் "ஒரு பலிபீடம் எழுப்பி ஆண்டவரது திருப்பெயரைப் போற்றினார்" (ஆதி 12:7தொ; 13:18; 26:25) என்ற வாய்பாட்டின் பொருளாகும். பலிபீடம் பலியிடும் இடமாக இருப்பது மட்டுமின்றி, இறையருளின் நினைவுச்சின்னமாகவும் உள்ளது. இதையே இப்பீடங்களுக்கு அளிக்கப்பட்ட அடையாளப் பொருளுடைய பெயர்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன (30:20; 35:1-7; நீதி 6:24). ஆனால், அதே சமயத்தில் பீடமானது பலிசெலுத்தும் இடமுமாக அமைகின்றது. தொடக்கத்தில் தகுதி வாய்ந்த பாறைகளே பீடத்திற்குப் போதுமானதென்று (நீதி 6:20; 13:19 தொ) கருதப்பட்டாலும், மனிதன் விரைவிலேயே குழைத்த மண்ணினாலோ, கரடுமுரடான கற்களினாலோ பீடத்தைக் கட்ட அறிந்து கொண்டான் (யாத் 20:24 தொ).

குலமுதியவர்களின் வழிவந்தவர்களுக்கு வழிபாட்டு இடமானது, அந்த வழிபாட்டுக்குக் காரணமாய் இருந்த இறையாற்றல் காட்சிகளில் நினைவுகூர்தலைவிட அதிக மதிப்பு வாய்ந்தனவாயிற்று. அது பெரும்பாலும் திருயாத்திரைத் தலமாக மாறிற்று. இவ்வாறு கானானிய வழிபாட்டின் பழங்கால இடங்களான

பெத்தேல் (ஆதி 35:7) அல்லது செக்கேம் (33:19), பிற்காலத்தில் கில்கால் (யோசு 4:20) அல்லது எருசலேம் (நீதி 19:10) திருயாத்திரைத் தலங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இறைக்காட்சியை நினைவுகூர்தலைவிட இடம் முதன்மை பெற்றது என்பதை ஏற்கெனவே வெளிப்படுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கானானில் புகுந்துபோது, திருச்சட்டத்தினால் இரக்கமின்றி உடைத்தெறியும்படி கோரப்பட்ட புறவினத்தாரின் பீடங்களைக் கண்டனர் (யாத் 34:13; உப 7:5; எண் 33:52). எனவே, கிதியோன் (நீதி 6:25-32) அல்லது ஏகூ (2 அர 10:27) பாகாலின் பீடங்களை அழித்தொழித்தனர். ஆனால், சாதாரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், தங்களுடைய பருப்பொருட்களின் காணிக்கையால் தொழுகை மேடைகளைத் "திருமுழுக்காட்டுவதோடு" மனநிறைவு பெற்றனர் (1 அர 3:4).

இக்காலக்கட்டத்தில் இருவகையில் ஒரு மறையின் சீர்கேட்டிற்குப் பீடம் காரணமாகலாம்: ஒன்று- பீடமானது உயிருள்ள இறைவனை அடைய ஓர் அடையாளமே என்பதை மறந்து விடுவது; மற்றது- யாவேயின் வழிபாட்டைச் சிலைகளின் வழிபாட்டைப்போல் ஆக்குவது. இப்படியாகச் சாலமோன், தனது அன்னிய மனைவிகளால் புகுத்தப்பட்ட சிலைகளை ஏற்றுக்கொண்டதால், ஒரு சகிப்புத்தன்மைக் காலத்தைத் தொடங்கிவைத்தான் (1 அர 11:7). ஆகாபும் இவ்வாறே செய்வான் (16:32). ஆகாசும் மனாசேயும் புறமதப்பாணியில் செய்யப்பட்ட பீடங்களை ஆலயத்திற்குள்ளேயே புகுத்துவர் (2 அர 16:10-16; 215). இப்படியாகப் பீடங்களின் எண்ணிக்கை பெருகுவதை, இறைவாக்கினர் வன்மையாகக் கண்டித்தனர் (ஆமோ 2:8; ஓசே 8:11; எரே 3:6).

2. எருசலேமிலுள்ள ஒரே ஆலயத்தின் பீடம்: வழிபாட்டை எருசலேமின் மட்டும் மையப்படுத்துதால் பல இடங்களில் பலி செலுத்துவதினால் எழும் பிரச்சனைக்கு விடை காணப்பட்டது (2 அர 23:8 தொ; காண். 1 அர 8:63 தொ). இக்காலத்திலிருந்து தான் தகனப்பலிபீடம் இஸ்ராயேலின் சமய வாழ்வை நிலையாக உருப்படுத்தியது. இப்பீடமானது விசுவாசிகளின் இதயங்களிலே பெற்றிருந்த சிறப்பிடத்திற்குப் பல்வேறு சங்கீதங்கள் சான்று பகர்கின்றன (சங் 26:6; 48:4; 84:4; 118:27). வருங்கால ஆலயத்தை விவரிக்கையில் எசேக்கியேல் பீடத்தை நுண்ணிய முறையிலே விவரிக்கிறார் (எசே 48:13-17). பீடத்தைப் பற்றிய குருக்கள் பாரம்பரிய சட்டத்தொகுப்பானது மோசேயால் இயற்றப்பட்டதாகக் கருதப்பட்டது (யாத் 27:1-8;லேவி 1-7). இவ்வாறே, வெகுகாலத்திற்கு முன்பே அடைக்கலமாகக் கருதப்பட்ட பீடத்தின் கொம்புகள் (1 அர 1:50 தொ; 2:28) மேன்மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன. பரிகாரச் சடங்கிற்காக அவற்றின்மேல் இரத்தம் அடிக்கடி தெளிக்கப்படும் (லேவி 16:18; யாத் 30:10). இந்தச் சடங்குகள் பீடமானது இறைவனின் பிரசன்னத்தை அடையாளமாக உணர்த்திற்று என்பதைத் தெளிவாக விளக்குகின்றன.

அதே சமயத்தில் குருக்களின் அலுவல்கள் துல்லியமாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன. குருக்கள் பீடத்தின் பிரத்தியேகப் பணியாளர்களாக மாற, லேவியர்கள் மற்றக் கடமைகளைப் பொறுப்பாகப் பெறுகின்றனர் (எண் 3:6-10). இந்த வேலைப் பங்கீட்டை வலியுறுத்தும் (1 நாள் 6:48தொ) ஆட்சிக்குறிப்பேட்டாளர் இந்த ஒழுங்குகளுக்கு ஏற்றவாறே அரசின் வரலாற்றை எழுதியுள்ளார் (2 நாள் 26:16-20; 29:18-36; 35:7-18). இறுதியாக, பீடத்தின்மேல் தாங்கள் கொண்டுள்ள பக்திக்கு எடுத்துக்காட்டாக, தாயகம் திரும்பிய முதல் அகதிக் கூட்டத்தினர் முதல் வேலையாகத் தகன பலிபீடத்தை மீண்டும் கட்ட பேரார்வம் காட்டுகின்றனர் (எஸ் 3:3தொ). பிற்காலத்தில் யூதா மக்கபேயுவும் இதே பக்தியைக் காட்டுவார் (1 மக் 4:44-59).

3. அடையாளத்திலிருந்து உண்மைக்கு: பீடம் உணர்த்தும் உட்பொருளின் காரணமாக

அதை இயேசு புனிதமாகக் கருதுகிறார். பரிசேயர்களின் ஐயவாதத்தால் அழிக்கப்பட்டு, பழக்கத்தில் புறக்கணிக்கப்பட்ட இந்த உட்பொருளை இயேசு நினைவுபடுத்துகிறார் (மத் 23:18 தொ). பலி செலுத்தப் பீடத்தை அணுகுவது இறைவனை அணுகுவதாகும். ஆகவே, உள்ளத்திலே சினங்கொண்டவர்கள் இதைச் செய்யக்கூடாது (5:23 தொ).

பழங்கால வழிபாட்டுக்கு உண்மையான பொருளைக் கொடுப்பதோடு மட்டுமின்றி, அதற்கே ஒரு முடிவு காண்கிறார் இயேசு. அவருடைய உடலாகிய புதிய ஆலயத்தில் (யோவா 2:21) அவரைத் தவிர வேறு பீடமில்லை (எபி 13:10). ஏனெனில், பீடம்தான் பலிப்பொருளைப் புனிதப் படுத்துகிறது (மத் 23:19). இவ்வாறு நிறைவான பலிப்பொருளான அவர் ஒப்புக் கொடுக்கப்படும்போது தன்னையே புனிதப்படுத்துகிறார் (யோவா 17:19). ஒரே வேளையில் அவரே குருவும் பீடமுமாக உள்ளார். மேலும், ஆண்டவரின் உடலிலும் இரத்தத்திலும் பங்குபெறுவது, ஆண்டவராகிய பீடத்தில் பங்கு பெறுவதாகும். அவரோடு ஒன்றாகப் பந்தியில் அமர்வதாகும் (1 கொரி 10:16-21).

இவ்வாறே, திருவெளிப்பாட்டுநூல், மறை சாட்சிகளைத் தன் கீழ் கொண்டிருக்கும் விண்ணகப் பீடத்தைப் பற்றியும் (திருவெளி 6:9), புனிதர்களின் செபங்கள் ஒன்றித்த அடர்ந்த மணமுள்ள புகையை எழுப்பும் தீக்கொழுந்தைக் கொண்ட பொன்னாலான பீடத்தைப் பற்றியும் (8:3) குறிப்பிடுகிறது. இந்தத் தீக்கொழுந்து கிறிஸ்துவைக் குறிக்கும் அடையாளமாகவும் விளங்குகிறது; செம்மறி என்ற அடையாளத்தை நிறைவு செய்கிறது. இதுதான் இறைவனுக்கு விருப்பமான நறுமணம் கொண்ட ஒரே பலியின் ஒரே பீடமாகும். திருச்சபையின் காணிக்கைகள் கிறிஸ்துவின் ஒரே நிறைவான பலியோடு சேர்த்து ஒப்புக்கொடுக்கப்படும் விண்ணகப்பீடம் இதுதான் (எபி 10:14). கற்களாலான நமது பீடங்கள் இந்த ஒரே பீடத்தின் உருவங்களேயாகும். இந்த உண்மையை ஆயர்களின் செபநூல் "பீடம் கிறிஸ்துவே" என்று எடுத்துக் கூறுகிறது.

பீம் (PIM)

இஃது ஓர் எடையளவாகும். ஒரு செக்கேலின் மூன்றில் இரண்டு பாகத்திற்கு அல்லது ஏறக்குறைய 7.6 கிராமுக்குச் சமமானது. இது 1 சாமு 13:21-இல் மட்டும் குறிக்கப்படுகிறது.

பீரு (PYRRHUS - அனற்சிவப்பு)

பீரு பெரோயா நகரைச் சேர்ந்தவர். சோப்பத்தரின் தந்தையாகிய பீரு பவுலின் துணையாளர்களில் ஒருவராவார் (அ.ப. 20:4).

பீலோ யூதேயு (PHILO JUDAEUS)

இவர் எகிப்தின் அலக்சாந்திரியாவைச் சார்ந்த ஒரு யூத தத்துவ ஞானி. இயேசுவோடு சமகாலத்தவர். கி.பி. முதல் நூற்றாண்டு யூத தத்துவத்துள் யூதப்பாரம்பரியங்களைக் கிரேக்கத் தத்துவ இயலோடும் கலாச்சாரத்தோடும் ஒத்து இசைந்து போகச் செய்த இவரது முயற்சிகள் சிறப்புமிக்கவையாகும். இது கிரேக்க, உரோமையர் உலகில் கிறிஸ்தவம் பரவுவதற்கு வழிவகுத்தது. யூதரைச் சேராத நகரில் பீலோ வாழ்ந்ததும் அவருடைய பல நூல்களும் இந்த இயக்கம் பற்றிய ஆய்வுக்கு முதன்மையான பொருளாகின்றன.

பீலோவின் வாழ்வு பற்றி அதிகம் தெரியவில்லை. இவர் கி.மு. 10-கி.பி. 45-க்கு இடையில் வாழ்ந்தார். உரோமைப் பேரரசிலேயே மிகச் செல்வமிக்க குடும்பங்கள் ஒன்றில் பிறந்தவர். முக்கிய பொதுப்பணியாளராக விளங்கினார். அலக்சாந்திரிய யூதர்கள் சார்பாக கி.மு. 39-இல் உரோமைக்கு ஒரு தூதுக்குத் தலைமை தாங்கிச் சென்றார். அலக்சாந்திரியாவிலுள்ள யூதர்கள் கலிகுலா பேரரசன் சிலையை வணங்க மறுத்ததை அறிந்த கலிகுலாவின் சினத்தைப் பீலோ தன் அரச தந்திரத்தால் தவிர்த்தார்.

பீலோ தனது யூத பாரம்பரியங்களுக்குக் காட்டிய பற்றுறுதியை அவரது நூல்கள் பிரதிபலிக்கின்றன. இந்தப் பாரம்பரியத்தோடு ஒன்றிணைந்து, கிரேக்க இலக்கியங்கள், தத்துவ இயல் மற்றும் வரலாறு ஆகியவற்றில் எபிரேய மதிப்பீடுகளைக் காண நம்பிக்கையோடு முயல்கிறார். அவரது நூல்களில், அண்டம் மற்றும் மனிதப் பொறுப்புடைமை ஆகியவற்றை ஆய்வு செய்யும் தத்துவ நூல்களைக் காணலாம்; இஸ்ராயேலின் வரலாறு, விசுவாசம் ஆகியவற்றைப் புறவின வாசகர்களுக்குக் கவர்ச்சியான முறையில் எடுத்துக்கூறும் காப்புரை நூல்களைக் காணலாம்; ஸ்தோயிக்கு மற்றும் பிளேட்டோனியக் கருத்துக்களைப் பழைய ஏற்பாட்டுக் கருத்துகளோடு ஒப்பிடும் வளர்ச்சியடைந்த உருவக விளக்கங்களைக் கொண்ட விளக்கவுரை நூல்களையும் காணலாம். இந்த உருவக விளக்கமுறை தொடக்க மற்றும் மத்தியகாலத் திருச்சபையில் பழைய ஏற்பாட்டை அணுகப் பெரிதும் பயன்பட்டது. யூதரல்லாத சிந்தனைகளில் மிகச் சிறந்தவை எபிரேய மூலமுடையவை என்று பீலோ காட்டிய முயற்சி, தொடக்ககால யூத, கிறிஸ்தவக் காப்புரையாளர்களுக்கு வழிகாட்டியது.

தத்துவ இயலில், எப்படி அறிவை அடையலாம் என்ற தர்க்கத்துக்குள் தன்னையே வெளிப்படுத்தும் இறைவனைப் பற்றிய கருத்தைப் புகுத்த முயற்சி செய்ததில் பீலோவின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. செமித்திய, கிரேக்கக் கருத்துகளுக்கிடையே ஒரு பாலம் அமைக்க அவர் செய்த முயற்சிகள், அவரது போதனையின் மிக முக்கியக் கூறுகளாகும். இவை விவிலிய ஆய்வுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. இதன் விளைவுகளைத் தொடக்ககாலத் திருச்சபையின் தந்தையர்கள் பயன்படுத்தினர். இப்படிப்பட்ட முயற்சிகளில் ஒன்று, கடவுளுக்கும் உலகத்திற்கும் இடையிலான உருவகமாக "வார்த்தை" பற்றிய புதிய-பிளேட்டோனிய கருத்தைப் பீலோ பயன்படுத்துவதாகும். வார்த்தையை விவரிப்பதில் பீலோ ஒரே நிலையாக இல்லை. சில சமயங்களில், படைப்பிலும் மனுகுலத்திற்கு ஒளி அளிப்பதிலும் செயலாற்றும் ஆட்தன்மை கொண்ட உருவமாக வார்த்தையை விவரிக்கிறார். மற்றச் சமயங்களில், படைப்பவராகிய இறைவனின் அறிவைப் பிரதிபலிக்கும் உலகின் உள்ளியல்பான அறிவே என்று வெறுமனே வார்த்தையை விவரிக்கிறார்.

வார்த்தை பற்றிய பீலோவின் கருத்து எந்த அளவுக்கு யோவான் நற்செய்தியின் முன்னுரையைப் பாதித்தது (யோவா 1:1-18) என்பது பற்றிய தர்க்கத்திற்கு விடை காண்பது எளிதன்று. நேரடியான பாதிப்பு உண்டு என்று கூறமுடியாது. கிழக்கு மத்தியதரைக்கடற்பகுதியில் நிலவிய தத்துவ இயல் சூழ்நிலையில் பீலோ எழுதினார் என்றும், அதே கலாச்சாரச் சூழ்நிலையில் சில பத்தாண்டுகளுக்குப் பின், யோவானின் நற்செய்தி எழுதப்பட்டது என்றும் கூறுவதுதான் இப்பிரச்சனை பற்றி அதிகம் கூறக்கூடியதாகும்.

பீலோ பயன்படுத்திய உருவக மற்றும் மாதிரி முறைகளும் சிந்தனை அமைப்புகளும் இலக்கிய நடைகளும் புதிய ஏற்பாட்டின் மற்ற நூல்களை விட எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் அதிகம் பிரதிபலிக்கப்படுகின்றன. இங்கும் நேரடியான இலக்கியச் சார்புடைமையில்லை; இரண்டிற்கும் பொதுவான பின்னணியே இருந்திருக்க வேண்டும் என்று கூறுவதோடு மனநிறைவடையலாம்.

பீலோவின் விவிலியத் தொன்மை நிகழ்ச்சிகள் பற்றிய நூல் (PHILO BIBLICAL ANTIQUITIES OF)

இந்நூலின் ஆசிரியர் யார் என்று தெரியாது. இஃது இலத்தீனில் எழுதப்பட்டது. அலக்சாந்திரியா நகரைச் சேர்ந்த உண்மையான பீலோ என்பவரின் நூலோடு இதுவும் முதலில் வெளியிடப்பட்டது. பின் இதன் ஆசிரியர் போலியான பீலோ என்று குறிப்பிடப்படுகிறார். அதாவது, அலக்சாந்திரியா நகர பீலோ அல்லர், மற்றொரு பீலோ என்பதே கருத்து. இஃது ஆதாமிலிருந்து சவுலின் இறப்பு

வரை சுருக்கமான விவிலியக் கதையைக் கொண்டுள்ளது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள இந்நிகழ்ச்சிகள் சில இடங்களில் நீட்டப்பட்டும் சில இடங்களில் விடப்பட்டும் காட்சியளிக்கின்றன. நீதிபதிகள் ஆகமத்திற்கு அதிக கவனம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் இறையியல் கொள்கைகளும் அவ்வப்போது மாறுபடுகின்றன.

இந்நூல் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. ஏனெனில், எபிரேய நூலான மிஸ்னாவிற்கு முன் எபிரேயர்கள் எவ்வாறு எழுதினார்கள் என்பதைப் பற்றிய சில உண்மைகளை இது தருகிறது. இந்நூலின் நடையிலிருந்து இஃது ஒத்தமை நற்செய்திகள் எழுதப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆலயச் சடங்குகள் பற்றியும், லேவியர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

உயிர்த்தெழுதலில் விசுவாசத்தை இஃது உறுதிப்படுத்துகிறது. வானதூதர்கள் பற்றியும் அவர்களின் பெயர்கள் பற்றியும் இதிலே கூறப்படுகிறது. இது மெசியா என்ற வார்த்தையைப் பயன்படுத்தினாலும் புதிய ஏற்பாட்டில் வரும் கருத்தோடு பயன்படுத்தவில்லை.

யூதமதத்தைப் பற்றிய தவறான பல கருத்துகளைத் திருத்திக் கொள்ள இந்நூல் உதவும். இந்நூல் எபிரேயத்திலிருந்து கிரேக்கத்திலும், பின் இலத்தீனிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

பு

புகழ்ச்சி, போற்றுரை (PRAISE)

இது புகழ்தல், வேண்டுதல், நன்றி செலுத்துதல் ஆகியவற்றிற்கிடையே- செபத்தில் பொதுவாகச் செய்யப்படும் சிறப்பு வேறுபாடாகும். விவிலியத்தில் வாழ்த்துதலும் நன்றி செலுத்துதலும் சேர்ந்து ஆன்மாவின் ஒரே எழுச்சியாகக் கருதப்படுகிறது. இலக்கிய எழுத்து நடையிலும் இவை ஒன்றாகவே கூறப்பட்டிருக்கின்றன. மனிதனுக்குச் செய்துவரும் அருட்செயல்கள் அனைத்திலும் கடவுள் தம்மை. வாழ்த்துக்குரியவராக வெளிப்படுத்துகிறார். எனவே, புகழ்தல் என்பது இயற்கையாகவே நன்றி கூறுதலாகவும், ஆசீராகவும் ஆகிறது. மறை நூலின் பல பகுதிகள் இவைகளை இணைத்தே கூறுகின்றன (சங் 35:18; 69:31; 109:30 எஸ் 3:11). புகழ்தல், நன்றி நவிலல் இரண்டுமே மகிழ்ச்சியின் ஒரே விதமான புறத்தோற்றத்தையே விளைவிக்கின்றன. முக்கியமாக மக்களுடைய வழிபாட்டில், இவை இரண்டுமே கடவுளின் மகத்துவத்தை வெளிப்படுத்தி அவருக்கு மகிமையை அளிக்கின்றன (எசா 42:12; சங் 22:24; 50:23; 1 நாள் 16:4; லூக் 17:15-18; அ.ப. 11:18; பிலி 1:11; எபே 1:6.12.14).

ஆனால், இச்சொற்கள் வெவ்வேறாக இருப்பதாலும், வெவ்வேறு இடங்களில் கூறப்பட்டிருப்பதாலும் தனித்தனியாகப் பொருள் கொள்ளவும் ஒரு வகையில் இடம் இருக்கிறது. இந்த வகையில் புகழ்ச்சி என்பது கடவுளின் கொடைகளை விட மேலாக, அவருடைய ஆட்தன்மையையே குறிக்கிறது எனலாம். புகழ்ச்சி இறைவனை மையமாகக் கொண்டது; அவரில் தன்னை இழந்து விடுவது; ஆராதனையை ஒத்தது; பரவசத்தில் ஒருவனை ஆழ்த்தவல்லது. இவ்வாறாக, புகழ்ச்சிப்பாக்கள் சாதாரணமாக ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சிக்கு அல்லது கொடைக்கு அப்பாற்பட்டதாய் அமைந்திருக்கின்றன. இறைவன் இறைவனாகவே இருப்பதனாலேயே, அவரை இப்பாக்கள் பாடுகின்றன.

1. **இறைவனின் புகழ்ச்சி:** புகழ்ச்சிப் பாக்கள் மகிழ்ச்சி ததும்பிய நிலையில் கடவுளை விவரிக்கவும், அவருடைய உன்னத மகிமையை எடுத்துரைக்கவும் செய்கின்றன. இப்பாக்கள் யாவேயின் நன்மைத் தனம், நீதி (சங் 145:6தொ), மீட்பு (சங் 71:15), உதவி (1 சாமு 2:1), அன்பு, பிரமாணிக்கம் (சங் 89:2; 117:2), மகிமை (யாத் 15:21), வல்லமை (சங் 29:4), வியத்தகு திட்டம் (எசா 25:1), விடுதலை தரும் நீதித் தீர்ப்பு (சங் 146:7) ஆகிய இவையனைத்தையும் பற்றிப் பாடுகின்றன. இவையனைத்தும் யாவேயின் வியப்புமிக்க நிகழ்ச்சிகளிலும் (சங் 96:3), அவருடைய வல்லமை மிகுந்த செயல்களிலும் (சங் 105;1தொ; 106:2), அவருடைய எல்லாச் செயல்களிலும் (சங் 92:5 தொ) பிரதிபலிக்கின்றன. இவை கிறிஸ்துவினுடைய புதுமைகளிலும் (லூக் 19:37) வெளிப்படுகின்றன.

செயல்களிலிருந்து செயலாற்றுபவரை அறிகிறோம். "ஆண்டவர் மாண்பு, மிக்கவர்; பெரிதும் போற்றுதலுக்குரியவர்" (சங் 145:3). "என் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எத்தனை மேன்மை மிக்கவர்; நீர் மாண்பையும் மாட்சியையும் அணிந்துள்ளீர்!" (சங் 104:1; காண்க. 2 சாமு 7:22; யூதி 16:13). பல பாடல்கள் கடவுளுடைய உன்னதமான பெயரைப் போற்றுகின்றன (சங் 34:4; 145:2; எசா 25:1). கடவுளைப் போற்றுதல் என்பது அவரை உயர்த்தி மகிமைப்படுத்துதல் ஆகும் (லூக் 1:46; அ.ப. 10:46). இஃது அவருடைய தனிப்பட்ட ஈடில்லா மகிமையை ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். ஏனெனில், அவர் வானகத்திற்கும் உயரே உறைபவர். அவர் ஒருவரே தூயவர் (லூக் 2:14). கடவுளுடைய புனிதத் தன்மையை உணரும்போது மகிழ்ச்சி கலந்த புகழ்ச்சி உடைபட்ட வெள்ளமாக வெளிப்படுகிறது (சங் 30:5 = 97:12; 99:5; 105:3; காண்க. எசா 6:3). இத்தகைய தூய ஆன்மீகப் புகழ்ச்சி-

கடவுளோடு ஒரு தனிப்பெரும் ஒன்றிப்பை ஏற்படுத்துகிறது.

2. புகழ்ச்சியின் ஆக்கக் கூறுகள்:

அ) புகழ்ச்சியும் அறிக்கையும்:- எல்லாவற்றையும் விட, புகழ்ச்சி கடவுளின் மேன்மையை அறிக்கையிடுவதாகும். புகழ்ச்சி பல வகைகளிலும் எப்போதும் அறிக்கையிடுவதாகும் (காண்க. எசா 12; 4தொ; எரே 31:7; சங் 89:2; 96:1தொ; 105: 1தொ; 145:6; காண்க. 79:13). இந்தப் பிரகடனத்திற்கு ஒரே மனதாக இசைவுதர நீதிமான்கள் என்றும் உள்ளனர் (சங் 22:23-26; காண்க. 33:1). தாழ்ச்சியுள்ளோர் உண்மையுள்ளோர் ஆகிய இவர்கள் மட்டுமே, அறிவற்றவர் அல்லர் (சங் 92:7); இறைவனின் பெருமையை உணரவல்லவர்கள்; அவர் புகழ்பாடக்கூடியவர்கள் (சங் 30:5; 34:3; 66:16தொ). அறிவற்றவர்களால் முடியாது (92:7). என்றும் வாழும் இறைவனோடு ஒன்றியியங்கும்போது மனிதன் புகழ்ச்சியால் உந்தப்பட்டு (சங் 57:8; 108:2-6) வாழ்க்கையில் புதுப்பிக்கப் பெறுகிறான். கடவுளைப் புகழ்வதற்குத் தன்னுடைய எல்லாச் சக்திகளையும் பயன்படுத்துகிறான். அஃது உண்மைப் புகழ்ச்சியாக அமையும்போது, அதற்கு முடிவேயிருப்பதில்லை (சங் 145: 1தொ; 146:2; திருவெளி 4:8). செயோலை அடைந்து விட்ட இறந்தவர்களல்லர், இவ்வுலகில் உயிர்வாழ்பவர்கள் மட்டுமே இறைவனைப் புகழ முடியும் (சங் 6:6; 30:10; 88:1தொ; 115:17தொ; எசா 38:18; பாரூ 2:17; சீரா 17:27தொ). புதிய ஏற்பாட்டிலும், இறைப்புகழ் என்பது முதலில் அவருடைய பெருமையினை உயர்வுபடுத்துதல் என்பதாகும் (மத் 9:31; லூக் 2:38; உரோ 15:9 = சங் 18:50; எபி 13:15; காண்க. பிலி 2:11).

ஆ) புகழ்ச்சியும் பாடலும்: கடவுள் முன்னிலையில் இருக்கும்போது ஓர் ஆன்மா இறைவனை வியந்து போற்றுதலில் புகழ்ச்சி எழுகிறது. மகிழ்ச்சியோடு இணைந்து இது பல வகைகளில் வெளிப்படலாம் (சங் 47:2.6; 81:2; 89:16தொ; 95:1; 98:4). ஆயினும் சமூகத்திற்குப் புரியும் விதத்தில், வெளிப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இருப்பதால், அது சாதாரணமாக ஒரு கவிதையாகவும், இசையும் இயலும், நடனமும்கூட, இயைந்து தோன்றும் பாட்டாகவும் உருவெடுக்கின்றது (சங் 33:2தொ; 98:6; 1 நாள் 23:5). புகழ்ச்சியைக் குறிக்க, பாடலுக்குமுன் பாடுவதற்கு அழைப்பு விடப்படுவது அடிக்கடி காணப்படுகிறது (யாத் 15:21; எசா 42:10; சங் 105:1தொ; எரே 20:13).

எபிரேய மொழியில் 'கில்லெல்' எனும் சொல் புகழ்ச்சியினைத் தனக்கே உரிய பண்போடும் செறிவோடும் நன்கு எடுத்துரைக்கிறது. பெரும்பாலும் புகழ்தலுக்குரிய காரணம் வெளிப்படையாகக் கூறப்படுகிறது. அப்படி இல்லையெனில், அது புகழ்ச்சிக்காகவே புகழப்படுகிறது. இஃது 'அல்லேலூய = அல்லேலு-யா = யாவேயைப் புகழ்' என்ற விளித்தலில் சிறப்பாகக் காணப்படுகிறது. புதிய ஏற்பாடும் புகழ்தல் பற்றிப் பேசும்போது அதைப் பாடலாகவும் (திருவெளி 5:9; 14:3; 15:3), கவிதையாகவும் (மத் 26:30; அ.ப. 16:25), இசைக்கருவிகள் இணைந்து வருவதாகவும் (உரோ 15:9 = சங் 18:50; 1 கொரி 14:15) பேசுகிறது. எபே 5:19 இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துக் கூறுகிறது.

இ) புகழ்ச்சியும் இறுதிக்கால இயலும்: இஸ்ராயேல் நாட்டு மக்கள் ஒரே உண்மையான கடவுளைப் பற்றி தனிப்பட்ட விதமாக அறிய அவரால் அழைக்கப்பட்டிருப்பவர்களாதலால், புகழ்தல் முக்கியமாக அவர்களுடைய கடமை என விவிலியம் கூறுகிறது. பின்னர் மற்றவர்களும் உண்மையான மகிமைக்குரிய யாவே என்னும் இறைவனை ஏற்றுக்கொள்ளும்போது அவர்களும் அவரைப் புகழ அழைக்கப்படுகின்றனர் (சங் 117:1; 96:3.7தொ; 97:1; 98:3 தொ). கடவுளின் வெற்றிகளைச் சிறப்பாக, நாடு கடத்தலிலிருந்து திரும்புவதைக், குறிப்பிடுகையில்- உலகின் எல்லா மக்களும் மட்டுமல்லர், இயற்கையே இறைவனைப்

புகழ்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது (எசா 42:10; சங் 98:8; 148; தானி 3:51-90). இந்த உலகளாவிய பண்பு, பின்வரும் இறுதிக்கால இயலை எதிர்நோக்கியிருக்கிறது. நாடு கடத்தப்பட்டு வாழ்ந்த காலம் முடிந்து நாடு திரும்பிய காலத்தில் தொடங்கிய இந்த உலகளாவிய புகழ்ச்சி இனிக் 'காலமெல்லாம்' பரவிப் பெருகும். பழைய ஏற்பாட்டில் காணப்படும் பாடல்கள் எல்லாம் யாவேயின் முடிவில்லா நிறைவு நாளில் ஒலிக்கும் கீதத்தின் எதிரொலியாக இருக்கின்றன. சங்கீத நூலில் வரும் "புதிய பாடல்கள்" தங்களது இறுதி எதிரொலியைத் திருவெளிப்பாட்டின் "புதிய பாடலில்" காண வேண்டும் (திருவெளி 5:9;14:3).

3. **புகழ்ச்சியும் வழிபாடும்:** இஸ்ராயேலின் புகழ்ச்சி எப்பொழுதும், முக்கியமாக ஆலயம் எழுப்பப்பட்டபின், மக்களின் வழிபாட்டோடு இயைந்தே காணப்படுகிறது; புதிய அமைப்பைப் பெறுகின்றது. ஆலயத்திலே நடைபெற்ற வழிபாடுகளில் ஈடுபடும்போது மக்கள் மிகவும் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்ந்திருந்தனர். வருடாந்திர முக்கியமான விழாக்களிலும், முக்கிய நிகழ்ச்சிகளான அரச மகுடம் தரித்தல், வெற்றிவிழா, ஆலயம் அர்ப்பணிக்கப்படுதல் போன்ற நாட்களிலும், புகழ்ச்சி 'ஆமென்' 'அல்லேலூயா' என்னும் மக்களின் குரலொலியில் ததும்பி (1 நாள் 16:36; நெகே 8:6; 5:13), "என்றும் உளது அவரது பேரன்பு" (சங் 136:1; எஸ் 8:11) எனும் சொற்கள் பாட்டு வடிவிலும் கவிதைத் தொகுப்பிலும் உயர்ந்து நின்றன. இவ்வாறாக, பல சங்கீதங்கள் எழுந்தன. முக்கியமாக 'சிறிய அல்லெல்' (சங் 113 முதல் 118 முடிய), 'பெரிய அல்லெல்' (சங் 136), 'நிறைவுறும் அல்லெல்' (சங் 146 முதல் 150 முடிய) என்று கூறப்படும் சங்கீதத் தொகுப்புகள் இதற்குச் சான்றாக விளங்குகின்றன. ஆலயத்தில் "போற்றுரைப்பலி"யான "தோதாவில்" சங்கீதங்களைப் பாடுவது சிறப்புப்பெற்றது (காண்க. லேவி 7:12;....22:29தொ; 2 நாள் 33:16). இது நல்லுறவுப் பலியாகும். இதற்குப்பின் ஆலய வளாகத்திற்குள்ளேயே புனித உணவு மகிழ்ச்சியோடு உண்ணப்பட்டது.

கிறிஸ்தவர்கள் தன்னார்வத்தோடு வழிபாட்டுடன் புகழ்ச்சியைத் தொடர்புபடுத்து கின்றனர். இதற்குச் சான்றுகள்– அப்போஸ்தலர் பணியிலும் திருமுகங்களிலும் குறிக்கப்படும் வழிபாட்டுக் கூட்டங்களிலும் (அ.ப. 2:46 தொ; 1 கொரி 14:26 எபே 5:19), விண்ணகத்தில் நடக்கும் வழிபாடு மற்றும் புகழ்ச்சி பற்றிய திருவெளிப்பாட்டு விவரிப்புகளிலும் காணப்படுகின்றன.

4. **கிறிஸ்தவ வாழ்த்து:** வாழ்த்து என்பது இரண்டு ஏற்பாட்டிலும் ஒன்றாக இருந்தாலும், புதியதில் அது மீட்பராம் கிறிஸ்துவின் அன்புக்கொடையாக மாறியதில் கிறிஸ்தவத்தன்மை பெறுகிறது. கிறிஸ்துவின் பிறப்பின்போது, வானதூதர்களின் வாழ்த்தொலியும், மேய்ப்பர்களின் புகழ்ச்சியும் இந்தக் கிறிஸ்தவத் தன்மையைக் கொண்டிருக்கின்றன (லூக் 2:13தொ. 20). இயேசுவின் புதுமைகளுக்குப்பின் மக்கள் கூட்டம் அளிப்பதாக வரும் புகழ்ச்சியும் இத்தன்மையதே (மாற் 7:36 தொ; லூக் 18:43; 19:37). இதுவே குருத்து ஞாயிறன்று எழும்பிய 'ஓசன்னா' எனும் குரலுக்கும், திருவெளிப்பாட்டு நூலில் வரும் செம்மறியின் பாடலுக்கும் அடிப்படைப் பொருளாகும் (காண்க. மத் 21:16 = சங் 8:2தொ; திருவெளி 15:3). திருச்சபையின் ஆரம்ப நாட்களின் பாடல்களில் சில பகுதிகள் திருமுகங்கள் வழியாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. பக்தியின் மறை உண்மையை வெளிப்படுத்தியவரும் (1 திமொ 3:16) கிறிஸ்துவைத் திரும்பவும் நமக்காக அளிக்க இருப்பவருமான (6:15 தொ) இறைவனைப் புகழ்ந்து பக்திப் பரவசத்தில் பாடப்பட்ட பகுதிகளாக அவை அமைந்திருக்கின்றன. கிறிஸ்துவின் மறை உண்மையையும், மீட்பின் மறை உண்மையையும் இவை அறிக்கையிடுவதாகவும், அதன் விளைவாக விசுவாசத்தையும் கிறிஸ்தவ வாழ்வின் தன்மையையும் பற்றிய உண்மையான அறிவிப்பாகவும் அமைந்திருக்கின்றன (எபே 5:14).

புதிய ஏற்பாட்டில் புகழ்ச்சி கிறிஸ்துவின் கொடையினை ஆதாரமாகக் கொண்டு கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு கடவுள்பால் எழும் கிறிஸ்தவத் தன்மையை வலியுறுத்தி நிற்கிறது (எபே 3:21). இது கிறிஸ்துவின் செபத்தைப் பின்பற்றி எழும் இறுதிப் புகழ்ச்சியாகும் (காண்க. மத் 11:25); புகழ்ச்சி கிறிஸ்துவுக்கே நேரடியாகவும் சாற்றப்படுகிறது (மத் 21:9; அ.ப. 19:17; எபி 13:21; திருவெளி 5:9). எனவே, இனிமேலாக ஆண்டவர் இயேசுவே நம்முடைய புகழ்ச்சி எனலாம்.

விவிலியமே தனிப்பட்ட விதமாகக் கூறுவதுபோல், புகழ்ச்சி கட்டாயமாக கிறிஸ்து வத்தில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. அதுவே வழிபாட்டுச் செபம் 'அல்லேலுயா', 'பிதா சுதன் பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாவதாக' போன்ற இவைகளோடியைந்த ஒரு பாடலமைப்பாக உருவெடுக்கிறது. அதுவே செபத்தில் ஈடுபடும் மக்களுக்கு வாழ்க்கையின் நிறைவினை அளித்து, அவர்கள் புகழ்ச்சிக்குச் சான்றுகளாக விளக்குமாறு செய்கிறது.

புகேயான் (BOUGAEAN - கொடுமைக்காரன், வீண்பெருமை கொள்பவன்)

இஃது அம்மதத்தாவின் புதல்வனான ஆமானின் பணிமனைப் பதவிப்பெயர் (எஸ்த 12:6). இவன் அரசனிடம் பெரும் மதிப்பு பெற்றிருந்தான். இவன் கொலையுண்ட அண்ணகர் இருவரையும் முன்னிட்டு மொர்தக்காயிக்கும் அவர் மக்களுக்கும் தீங்கு விளைவிக்க மனம் கொண்டிருந்தான்.

புகை மண்டலம் (SMOKE)

இறைவன் தன் பிரசன்னத்தையோ, தனது கோபத்தினையோ மக்களுக்கு வெளிப்படுத்த நினைக்கும்போது புகைமண்டலத்தின் (மூலம்) ஊடே வெளிப்படுத்தியதாக விவிலியத்தின் பல இடங்களில் காண்கின்றோம் (யாத் 19:18; 20:18. காண்க. ஆதி 15:17). இறை பிரசன்னத்தை உறுதிப்படுத்தும் வெளித்தோற்றங்களாக, புகை மண்டலமும் நெருப்பும் தோன்றுவதை மேற்கண்ட விவிலிய வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. பிற்கால இலக்கியங்களிலும் மகிமையில் இறைவனது பிரசன்னத்தைச் சுட்டிக்காட்ட புகையும் நெருப்பும் பயன்படுகின்றன (எசா 4:5; 6:4; காண்க. திருவெளி 15:8).

பிறிதொரு சூழ்நிலையில் இறைவனின் நெருப்பிலிருந்து புகை எழுகிறது. அஃது அவரது மக்களின் எதிரிகளுக்கு அவர்காட்டும் சினத்திலிருந்து எழுகிறது (உப 29:20; சங் 18:8; எசா 30:27). இதற்குச் சான்று இறைவன் தீர்ப்பால் அழிக்கப்பட்ட நகரங்கள் மற்றும் நாடுகளிலிருந்த புகையாகும் (ஆதி 19:28; எசா 34:10; திருவெளி 18:9.18; 19:3).

தகனப்பலிகளினின்று எழும்பும் புகை பற்றியும் (சங் 66:15), தூபக்கலசத்தினின்று எழும்பும் புகை பற்றியும் (எசா 8:11) விவிலியக் குறிப்புகள் உள்ளன. எசா 51:6; ஓசே 13:3 ஆகிய இடங்களில் புகையின் நிலையற்ற தன்மையைக் குறிக்க, புகை உருவகமாகப் பயன்பட்டுள்ளது.

புக்கி (BUKKI - யாவேயால் சோதித்தறியப்பட்டவன்)

1. தாண் கோத்திரத்தின் ஒரு தலைவன்; கானான் நாட்டை இஸ்ராயேலருக்குப் பிரித்துக் கொடுப்பதில் உதவி செய்த ஒருவர் (எண் 34:22).

2. ஆரோனின் குலத்தில் தோன்றிய ஒரு குரு; அபிசுவாவின் மகன். எலயாசர், பினகாசு ஆகியோரின் வழிவந்தவர் (1 நாள் 6:5.51; எஸ் 7:4).

புக்கியா (BUKKIAH - யாவேயின் கலம்)

இவர் ஒரு லேவியர்; ஏமானின் புதல்வர்; இசைக்கருவிகளோடு கோவிலில் இறைவாக்குரைக்கும்படி தாவீதால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர். பாடற்குழுக்களின் ஆறாவது பிரிவைச்சேர்ந்தவர் (1 நாள் 25:4.13).

புடைநிலை (JAMB)

எசேக்கியேல் எருசலேம் ஆலயம் பற்றிய காட்சியில் புடைநிலைகளை விவரிக்கின்றார் (எசே 40:9-41:3). இவை புதுமுக மண்டபம், அறைகளின் வாயில்கள், கதவுகள் ஆகியவற்றைச் சேர்ந்த கட்டட அமைப்பாக மட்டுமல்லாமல், அழகு செய்யப்பட்டனவாக இருந்தன.

புட்பராகம் (TOPAZ)

இது மஞ்சள் நிறமான விலையுயர்ந்த கல்லாகும். இதைக் குருக்கள் உடையின் மார்புப்பகுதியில் பொருத்த வேண்டுமென யாத் 28:17 கூறுகிறார். தீர்நாட்டு மன்னன் இதை அணிந்திருந்ததாக நாம் காண்கிறோம் (எசே 28:13). எருசலேம் நகரத்தின் அடிப்படையான விலைமிக்க கற்களில் இஃது ஒன்பதாவதாகும் (திருவெளி 21:20). யோபு, எத்தியோப்பியாவின் புட்பராகம், ஞானத்திற்கு இணையாகாது என்று கூறுகின்றார் (யோபு 28:19).

புண் (SORES)

இவ்வகைப் புண்களைப் பற்றி விவிலியத்தில் எகிப்தில் தோன்றிய ஆறாவது கொள்ளை நோய் பற்றிய பகுதியில் காண்கிறோம் (யாத் 9:9-10). இவை மனிதர்களையும் விலங்குகளையும் தாக்கித் துன்புறுத்தின. இந்நோயினால் மனிதர்கள் விலங்குகளின் உடல்களிலெல்லாம் கொப்புளங்கள் தோன்றி வெடித்துப் புண்ணாயின.

புதிய (NEW)

I. புதிய என்னும் கருத்து, கிரேக்க மொழியில் இரு சொற்களால் விளக்கப்படுகிறது. நெயோஸ் (Neos) காலத்தில் புதிது, புதிய, இளமையான அதாவது முதிராதது; கைநோஸ் (Kainos) தன்மையில் புதியது; இவ்விதமாகக் குணத்தில் சிறந்தது. விவிலியத்தில் மீட்பைச் சார்ந்த உண்மைகளுக்கு இந்த இரு சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. முதல் சொல்- பழமையில் புதிய பிரசன்னத்தைக் காட்டுகிறது; இரண்டாவது- முதல் சொல்லை விட அடிக்கடி ஆச்சரியத்திற்குரிய, புனிதமான, முழுமையுமற்ற தான உண்மைகளை விவரிக்கின்றது. ஏனென்றால், மனிதனும் உலகமும் ஆடையைப்போல் பழமையாகின்றனர் (சீரா 14:17; எசா 50:9; 51:6); ஆனால், இறைவனில் பழமை ஒன்றுமில்லை, எல்லாமே புதுமை.

II. **புதுமை தன்மையும் புனிதத்தன்மையும்:** படைப்பு எல்லாமே இறைவனைச் சார்ந்ததால், பயன்படுத்துவதால் பாழ்படாப் புதிய பொருள் ஒரு புனிதத் தன்மையைக் கொண்டுள்ளது. அறுவடையின் முதற்கனியும், புதிய பிறப்பும் இறைவனுக்காக ஒதுக்கி வைக்கப்படுகின்றன (உப 26:1-11; யாத் 13:11); நுகத்தடி சுமக்காத விலங்குகள் சிலவற்றைப் பலி செலுத்துகின்றனர் (எண் 19:2; உப 21:3); வேலை செய்யாத விலங்குகள் புனித பெட்டகத்தை இரதத்தில் சுமந்து செல்கின்றன (1 சாமு 6:7; 2 சாமு 6:3); தூய்மையற்ற நீரைப் புனிதப் படுத்துவதைக் குறிக்க, உப்பு நிறைந்த ஒரு புதிய கிண்ணத்தைப் பயன்படுத்துவதின் மூலம் அடையாளமாகக் காட்டுகிறார் (2 அர 2:20). "யாரும் அதுவரை வைக்கப்படாத" (மத் 27:60; யோவா 19:41) புதிய கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்வதிலும், புனிதமானவற்றின்பால் கொள்ளவேண்டிய அதே மரியாதை காணப்படுகிறது.

III. **புதிய காலத்தின் எதிர்நோக்கல்:** பருவந்தவறாமல் படைப்பைப் புதிப்பிப்பதை இஸ்ராயேலர் போற்றினர்; அதை இறைவனின் ஆவி செய்வதாகக் கருதினர் (சங் 104:30). மெசியா மற்றும் இறுதிக் காலத்திலும் இப்படிப்பட்ட யாவும், முழுமையாகப் புதுப்பிக்கப்படுவதை எதிர்பார்த்தார்கள்.

1. **புதியதொரு யாத்திரை:** ஆறுதலின் நூலானது பழைய வியப்புக்குரியவற்றோடு, நாடு கடத்தப்பட்டுத் திரும்பிவரும்போது செய்யப்படவிருப்பவற்றை எதிர்கொள்ளச் செய்கிறது (எசா 42:9); எகிப்திலிருந்து

திரும்புகையில் நடைபெற்ற புதுமைகளைவிட, புதிய யாத்திரையின் புதுமைகள் சிறந்து விளங்கும். இறைவன், "இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன்... பாலை நிலத்தில் நான் பாதையொன்றை அமைப்பேன்; பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன்" என்று கூறுகிறார் (43:19). இவ்வியப்பு மிக்க செயல்களால் யாவே இஸ்ராயேல் மக்களைப் பாலஸ்தீன நாட்டிற்குள் வழிநடத்திச் செல்வார்; அங்குத் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தி எல்லா மக்கள்மீதும் தம்முடைய மேலாண்மையை நிலைநிறுத்துவார் (45:14-17.20-25). இந்த மேன்மைமிகு வாக்குறுதிகள் புதியதொரு பாடலால் கொண்டாடப்படவேண்டும் (42:10; சங் 149:1). அதை உலகனைத்தும் சேர்ந்து பாடும் (சங் 96:1).

2. இறைவன் பயன்படுத்தும் அதிகாரம் மெசியா வழிவரும் உய்வை ஒரு புதிய படைப்பாகக் கருதும்படி செய்கிறது (எசா 41:20; 45:8; 48: 6தொ); இஸ்ராயேல் மீட்பர் அவர்களைப் படைத்தவரே (43:1.15;54:5); அவரே முதலும் முடிவும் ஆவார் (41:4; 44:6; 48:12). எதிர்காலத்தில் பாலஸ்தீனம் இறைவாக்கினர் விவரித்துள்ளதுபோல (எசா 11:6-9; 65:25; எசே 47:7-12) ஏதேன் தோட்டமாகத் திகழும் (எசா 51:3; எசே 36:35). அடிமை வாழ்வுக்குப் பிறகு "புதிய வானமும் புதிய பூமியும்" எதிர்பார்க்கப்படுகின்றன (எசா 65:17; 66:22).

3. புதியதொரு உடன்படிக்கை: பழைய உடன்படிக்கையில் பல பெரும் உண்மைகள் உருவ மதிப்பைக் கொண்டுள்ளன; வருங்காலத்தில் அவ்வுடன்படிக்கையைப் புதுப்பித்து நிறைவு செய்யப்படுவதை முன்னறிவிக்கின்றன. யாவேயின் முடிவில்லா அன்பையும் (எசா 54:11-17), அவர் மக்கள் மத்தியில் எழுந்தருளியுள்ள (எசே 48:35) தன்மையையும் கொண்டுள்ள புதியதொரு தாவீதையும் (34,23), புதியதொரு ஆலயத்தையும் (40-43), புதியதொரு புனித நாட்டையும் (47:13-48:29), புதியதொரு எருசலேமையும் இறைவாக்கினர் எதிர்பார்த்திருந்தனர். புதியதொரு பெயரால் சீயோன் அழைக்கப் பெறுவாள் (எசா 62:2; 65:15); இனி, ஒருபோதும் கைவிடப்பட்டவளன்று, மண ஒப்பந்தம் செய்துகொள்ளப் பெற்றவள் என்று அழைக்கப்பெறுவாள் (62:4). யாவேயும் இஸ்ராயேலரும் தங்களுடைய அன்பின் உறவை மீண்டும் தொடர்வார்கள் (54:4-10); "யாவே விந்தையான ஒன்றை உலகில் படைத்துள்ளார்; ஒரு பெண் (இஸ்ராயேல்) தன் கணவனைப் (யாவேயை) பாதுகாக்கிறாள்" (எரே 31:32). இது முடிவில்லா உடன்படிக்கையாக இருக்கும் (எசா 55:3; 61:8).

ஆனால், அதே சமயத்தில் சீனாய் மலை உடன்படிக்கையிலிருந்து வேறுபட்ட புதியதொரு உடன்படிக்கையாகும் இது (எரே 31:31-34). இது பாவத்திலிருந்து தூய்மைப்படுத்தும் தன்மையையும், சட்டத்தை உள்ளார்ந்ததாக ஆக்குவதையும் கொண்டுள்ளது (எசே 36:26தொ). புதியதொரு இதயத்தையும், புதியதொரு ஆவியையும் மனிதனுக்குக் கடவுள் அளிப்பார் (11:19; 18:31; 36:26). இறுதியாக எல்லாப் பொருட்களையும் புதுப்பிக்கும் அலுவலை இறை ஞானம் ஆற்றுகிறது; தூய ஆன்மாக்களுள் பரவி அவர்களை இறைவனின் நண்பர்களாக்குகிறது (ஞான 7:27).

IV. புதிய மெசியா உடன்படிக்கை:

1. புதியதொரு போதகம்: இயேசுவினுடைய போதகத்தின் ஆரம்பத்திலிருந்தே அவருக்குச் செவிமடுப்போர் அவருடைய புதுமையான போதகத்தைக் கேட்டு வியப்படைந்தனர் (மற் 1:27). அவர் இறைவாக்கையும், சட்டத்தையும் நிறைவுபடுத்தவே வருகிறார் (மாற் 5:17). பயன்படுத்திய ஆடைக்கு மாறாக, புதியதொரு ஆடையைப் போலவும், பழைய தோல் துருத்திகளுக்குப் பதிலாக புதிய திராட்சைரசத்தைப் போலவும் (மத் 9:16 இணை), பழைய போதகத்திற்கு மாறாகத் தம்முடையதை எடுத்துரைக்கிறார் (மத் 5, 21-48). சட்டத்தின் முக்கியமானவை மாறுபடாமல் உள்ளன. ஆனால்,

நிறைவு செய்யும் நற்செய்தியாலும், விண்ணரசின் புதுத்தன்மையாலும் அது புதுப்பிக்கப்பட வேண்டும்; சீடர்கள் "தன் கருவூலத்தினின்று புதியனவற்றையும், பழையனவற்றையும் எடுத்து அளிக்கிற வீட்டு உடைமையாளருக்கு" ஒப்பாவார் (மத் 13:52).

அதே சமயத்தில் பிறர் அன்பின் கட்டளை பழமையும் புதுமையும் சேர்ந்தது (1 யோவா 2:7; 2 யோவா 5). விசுவாசிகள் தாங்கள் மனந்திரும்பிய காலத்திலிருந்து கடைப்பிடித்துள்ளதால் இது பழமையாகவுள்ளது; சட்ட வடிவமாக்கப்பட்டதால் மட்டுமன்று (லேவி 19:18). இயேசு இதைத் "தமது கட்டளையாக" அழைத்திருக்கிறார். (யோவா 15:12); இக்காரணத்தால் இஃதொரு புதிய கட்டளையாகும் (13:34). கிறிஸ்து நமக்காகத் தம்மைக் கையளித்தார் (13:1.34; 15:12). அவரில் தந்தையின் அன்பு வெளிப்பட்டது (3:16; 1 யோவா 4:9). ஆகவே, பிறர் அன்பில் அவரைப் பின்பற்ற வேண்டும்; இது சகோதரர்களிடையான அன்பாகும்; தந்தை மகன் அன்புறவில் பங்கு கொள்ளுதலாகும் (யோவா 15:9; 17:26; 1 யோவா 4:16).

2. புதிய உடன்படிக்கை: இறுதி உணவில் இயேசு "இக்கிண்ணம், உங்களுக்காகச் சிந்தப்படுகிற என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" என்று கூறுகிறார் (லூக் 22:20 இணை; 1 கொரி 11:25). சீனாய் மலையின் உடன்படிக்கை அதனுடைய பலி விலங்குகளின் இரத்தத்தால் முன்பே முத்திரையிடப்பட்டுள்ளது (யாத் 24:3-8). பழைய உடன்படிக்கையை முழுமைப்படுத்தி நிறைவேற்றிய புதிய உடன்படிக்கை (எபி 8:1-10:18), நிறைவான பலியும், சிறந்த பெரிய குருவும், புதிய உடன்படிக்கையின் இடையாளருமான இயேசுவின் குருதியால் சிலுவையில் முத்திரையிடப்பட்டுள்ளது (எபி 9:15; 12:24). இறைவாக்கினரால் அறிவிக்கப்பட்ட பாவமன்னிப்பு, கிறிஸ்துவின் பலியில் நிறைவேறிற்று (10:11-18). நற்கருணையில் புதிய உடன்படிக்கையின் குருதி கொடுக்கப்படுகிறது; ஆனால், நற்கருணைத் திராட்சைரசம் விண்ணரசியின் இறுதிக்கால விருந்தில் அருந்தும் புதிய திராட்சை ரசத்தின் முன் எதிர்பார்ப்பாகும் (மத் 26:29 இணை).

பழமையில் தயாரிக்கப்பட்ட (இதயத்திலுள்ள சட்டம், உப 30:14) புதிய உடன்படிக்கையின் மற்றொரு தன்மை என்னவென்றால், இது கற்பலகைகளில் எழுதப்பட்டதன்று; ஆனால், தசை உள்ளங்களில் எழுதப்பட்டது (2 கொரி 3:3; காண்க. எரே 31:33; எசே 36:26 தொ). இந்த எதிர்வாதத்தைப் பவுல் குறிப்பிடுகிறார். மோசேயின் சட்டம் "பழைய ஏற்பாடு" (2 கொரி 3:14). ஆவியின் புதுமை மூலம் (உரோ 7, 6) கொல்லும் பழைய சட்டத்தோடு உயிர்கொடுக்கும் ஆவியையும் (3:6), எழுத்தின் பழமையோடு ஆவியின் புதுத்தன்மையையும் (உரோ 7:6) எதிர்கொள்ளச் செய்கிறார். இப்புதிய உடன்படிக்கை ஆவியின் உடன்படிக்கை. தூய ஆவியினால் ஆட்கொள்ளப் பட்டவர்கள். புதிய மொழிகளில் பேசுவார்கள் (மாற் 16:17; அ.ப. 2:4); அதாவது, ஆவியால் தூண்டப் பெற்ற ஒரு விண்ணக மொழியில் பேசுவார்கள்.

3. புதிய மனிதன்: மீட்பின் முழுப்பணியும் பெரியதொரு மறுமலர்ச்சியாகும். ஆனால், இறைவாக்கினரால் பேசப்பெற்ற புதிய படைப்பு துல்லியமாக்கப்படுகிறது. இஃது அடிப்படையில் மனித மறுமலர்ச்சியே; அம்மனிதன் வழியாக இவ்வுலகம் புதிப்பிக்கப்படும்.

அ) புதிய ஆதாமாகிய கிறிஸ்து: அனைவருக்கும் இவர் உயிர் அளிக்கிறார் (1 கொரி 15:22.44-49). வீழ்ந்த மனுகுலத்தின் தலைவனாகிய ஆதாம் வழியாக, பழைய மனிதன் பாவத்திற்கு அடிமையானான் (உரோ 6:6.17; எபே 4:22); மீட்பிற்குப் பிறகு புதிய மனிதன் கிறிஸ்துவில் புதுப்பிக்கப் பெற்ற மனுகுலமாகிறான். கிறிஸ்து, தம்முடைய சொந்தத் தசையில், பிறமதத்தாரையும், யூதர்களையும் புதியதொரு தனி மனிதனாய் உருவாக்கியுள்ளார் (எபே 2:15). ஆதாமின் வழிநின்று உண்மையின்

புனிதத்திலும், நீதியிலும் இப்புதிய மனிதன் மறுபடியும் படைக்கப்பெற்றுள்ளான் (4:24). இதிலிருந்து அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றே (கொலோ 3:11).

ஆ. ஒவ்வொரு கிறிஸ்துவனும் தன்னுடைய மறுபிறப்பால் "இறைவனுடைய வேலையாக" அழைக்கப் பெறலாம் (எபே 2:10). "ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், அவன் ஒரு புதிய படைப்பு; அதாவது, பழைய படைப்பு மறைந்து, புதிய படைப்புத் தோன்றியுள்ளது" (2 கொரி 5:17; 6:15). புதுப்பிறப்பு திருமுழுக்காலும் (யோவா 3:5; தீத் 3:5), உண்மையின் வார்த்தையாலும் (யாக் 1:18; 1 பேதுரு 1:23) நிறைவேறியுள்ளது; அதாவது, ஆவியின் கொடையாகிய விசுவாசத்தால் நிறைவேறுகிறது (யோவா 3:5; 1 யோவா 5:1-4).

விசுவாசிகளின் வளர்ச்சியுள்ள புனிதத் தன்மையின் வளர்ச்சி வழியாகப் புதுப்பிறப்பைப் பற்றி பவுல் கூறுகிறார்: "நம்மிடமுள்ள உள் மனிதன் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுகிறான்" (2 கொரி 4:16). புதிதாகப் பிசைந்த புதிய மாவாக இருக்கும் பொருட்டுத் திருமுழுக்குப் பெற்றவர்கள் பழைய புளிப்பு மாவிலிருந்து தங்களைத் தூய்மைப்படுத்த வேண்டும் (1 கொரி 5:7); அவர்கள் பழைய மனிதனைக் கழித்து விட்டு, புதிய மனிதனை அணிய வேண்டும் (கொலோ 3:10; எபே 4:22தொ); புதுவாழ்வு வாழ வேண்டும் (உரோ 6:4). இறைவடிவான கிறிஸ்துவே நாம் பின்பற்ற வேண்டிய முன்மாதிரியாவார் (உரோ 8:29; 2 கொரி 3:18; 4:4; கொலோ 1:15). படைத்தவரின் சாயலை நம்மில், மீண்டும் நிலை நிறுத்துவது (கொலோ 3:10; ஆதி 1:27), கிறிஸ்துவை அணிவதாகும் (உரோ 13:14).

இந்த உருமாற்றம் எல்லாவற்றையும்விட ஆவியின் வேலையே (உரோ 7:6; 8:1-16; கலா 5:16-25). இஃது உய்வுக்குத் தேவையான மறுபிறப்பின் முழுக்கு மட்டுமன்று; ஆவிக்குரிய விதத்தில் பிறப்பும் ஆகும் (யோவா 3:5.8); ஆவியின் புதுப்பிக்கும் வேலையுமாகும் (தீத் 3:5). இறைவனுடைய வார்த்தையாகிய பாலும் (1 பேதுரு 2:2), நம்மில் செயல்படும் உண்மையின் நீதி, புனிதம் (எபே 4:24), விசுவாசமும் (கலா 5:5) இம்மறுமலர்ச்சியின் சாதனங்களாகும். இவ்விதமாக விசுவாசமுள்ளவன் தன்னைப் படைத்தவரின் சாயலில் தன்னைப் படிப்படியாகப் புதுப்பிக்கும் அறிவை நோக்கிப் பயணம் செய்கிறான் (கொலோ 3:10).

இ மறுமலர்ச்சியின் வேலை, கிறிஸ்தவன் வழியாக உலகை முழுவதும் பரவவேண்டும். கிறிஸ்து எல்லாவற்றையும் இறைவனோடு ஒப்புரவாக்கியுள்ளார் (கொலோ 1:20; எபே 1:10). படைப்பனைத்தும் மீட்புக்குக் காத்திருக்கிறது (உரோ 8:19-23). ஆனால், உலகளாவிய இம்மறு நிலைப்படுத்தல் இறுதிநாளில் "நீதி குடி கொள்ளும் புதிய வானம், புதிய பூமியில்" தான் முழுமை பெறும் (2 பேதுரு 3:13).

V. எருசலேம்: கிறிஸ்து தம்முடைய விண்ணேற்றத்தால் புதியதொரு உயிருள்ள வழியைத் தம்மில் உண்டாக்கியிருக்கிறார்; நாம் விண்ணகப் பீடத்தை அணுக அது வழி வகுத்துள்ளது (எபி 10:19). இறுதிக்கால முடிவில்லா வாழ்வின் மறுமலர்ச்சியைத் திருவெளிப்பாடு விவரிக்கிறது. இறைவன் பிரசன்னத்தால் நிறைந்துள்ள (எசே 48:35) "புதிய எருசலேம்" (திருவெளி 3:12; 21:2) இறைவனின் நகரமாகும். மணப்பெண்ணைப்போல் அலங்கரிக்கப்பெற்று, மனிதனோடு வாழும் இறைவன் குடிகொள்ளும் இடமாகிய இவள் உடன்படிக்கையின் தன்மையைச் சிறப்பாக நிலைநிறுத்தியுள்ளாள். "இறைவன் அவர்கள் மத்தியில் வாழ்கிறார்" (திருவெளி 21:3). இப்பொழுது இங்குப் "புதியவானம், புதிய பூமி" தோன்றியுள்ளதால், படைப்பனைத்தும் இதில் பங்கு கொள்ளும். "முதலிலிருந்த வானமும், வையமும் மறைந்து விட்டன" (21:1).

வருங்கால மறுமலர்ச்சியைப் பற்றி பெரும் இறைவாக்கு வாசகங்கள், அவற்றின் நிறைவான பொருளில் மறுபடியும் இங்குத் தோன்றுகின்றன.

முன்புபோல், நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய எபிரேயரைப் போல் (எசா 42:10) இறுதியாக மீட்புப் பெற்றதைக் கொண்டாட (திருவெளி 5:9; 14:3) வயோதிகரும், தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களும் புதியதொரு பண்ணிசைக்கின்றனர். மெசியா சீயோனில் வாழ்பவர்களைப்போல (எசா 62:2; 65:15) கிறிஸ்தவ வெற்றிவீரர்கள் "புதிய பெயர் பொறிக்கப்பட்டிருக்கும் ஒரு வெள்ளைக் கல்லைப்" பெறுவர் (திருவெளி 2:17); இம்முறை இப்பெயர் ஒரு கிறிஸ்தவத் தனித்தன்மை கொண்டிலங்கும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இறைவனையும், கிறிஸ்துவையும் சார்ந்தவர்கள் என்பதற்கு அடையாளமாகத் தங்களுடைய நெற்றியில் (14:1; 22:3) இறைவன் பெயரையும் (3:12), செம்மறியின் பெயரையும், தந்தையின் பெயரையும் தாங்கியிருப்பார்கள். இறுதிக் காட்சியில் இறைவன் கூறும் "இதோ நான் அனைத்தையும் புதியனவாக்குகிறேன்; நானே அகரமும் னகரமும், முதலும் முடிவும்" என்னும் கூற்றோடு திருவெளிப்பாடு முற்றுப்பெறுகிறது (21:5தொ). எல்லாப் புதுமையின் அடிப்படையும் இறைவன் தாமே என்பதைத் திருவெளிப்பாட்டின் இறுதிப் பக்கம் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது.

கிறிஸ்து நிறைவேற்றிய மீட்புப் பணியே படைப்புகளின் இப்பெரிய மறுமலர்ச்சி வேலையாகும். "கிறிஸ்து தம்மைக் கொண்டு வருவதன் மூலம் எல்லாப் புதுத்தன்மையையும் கொண்டு வந்துள்ளார்" (இரனேயு). இவ்விதமாக, நமது மீட்பை உயிர்ப்பு வாரத்தில் கொண்டாடும் திருச்சபை "பழையதைக் களைந்து புதிய படைப்பாக மாறுவதற்குச்" செபிக்க நமக்கு அழைப்பு விடுக்கிறாள்.

புதிய எருசலேம் (NEW JERUSALEM)

புதிய எருசலேம், கடவுளின் புதிய படைப்பின் தலைநகரம் (திருவெளி 21:1). இக்கருத்து பழைய ஏற்பாட்டிலும், யூதரின் இலக்கியங்களிலும் (காண்க. எசா 54;60; எசே 40; 48), புதிய ஏற்பாட்டிலும் (கலா 4:26-27; பிலி 3:20; எபி 12:22) காணப்படுகின்றது. "இஃது மணமகனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணமகள்" என்று குறிப்பிடப்படுகிறது (திருவெளி 21:2). இஃது இறைவனின் உண்மையான மக்களான திருச்சபையைக் குறிக்கிறது (காண்க. எசா 61:10; ஓசே 1-3; எபே 5:25 தொ; எபி 11:10). காண்க. புதிய-V.

புதிய ஏற்பாடு (NEW TESTAMENT)

நவீன வழக்கத்திலே புதிய ஏற்பாடு என்பது இருபத்தியேழு புத்தகங்கள் அடங்கிய பகுதி. அதாவது, கிறிஸ்தவ வேதாகமத்தின் இரண்டாம் பகுதி என்பது பொருள்.

இது பழைய ஏற்பாடு அல்லது எபிரேய வேதாகமத்திலிருந்து வேறுபட்டது; ஆனால், அதன் தொடர்ச்சியானது. இது பற்றிய குறிப்புகள் 1 கொரி 11:25; 2 கொரி 3:6; எபி 8:8. 13; 9:15; காண்க. எரே 31:31-34-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

புதிய பிறப்பு (NEW BIRTH)

I. புதிய பிறப்பினுடைய அடையாளவியலானது மனித இனத்துச் சமயங்களில் ஒரு பொதுவான கருத்தாக உள்ளது. எனவே, பண்டைய மக்களிடையே பெரிதும் பரவியிருந்த குழந்தையை வாலிபனாகவும், சமயச் சார்பற்றவனாகவும் ஆக்குகின்ற பழக்க வழக்கங்கள், புதிதாய்ப் பிறந்தவரை மீண்டும் தனது முதல் குழந்தைப் பருவத்தின் நிலைகளைக் கடக்குமாறு செய்கின்ற சடங்குகளில் அடிக்கடி அடங்கியுள்ளது. அதே முறையில் அரச அரியணையேறுதலும் ஒரு புதிய பிறப்பாகவே தோன்றலாம் (சங் 2:7; 109:3). ஆனால், யூத கிறிஸ்தவ வெளிப்பாட்டில், ஒரு தனிப்பட்ட அமைப்பின் உண்மைகளை அடையாளவியல் வெளிப்படுத்துகிறது. "ஊனுடலால் பிறப்பது ஊனுடலே. ஆவியால் பிறப்பதோ ஆவி" (யோவா 3:6). மனிதனுடைய இயல்பான பிறப்பிற்கு எதிராக, புதிய ஏற்பாடானது, வார்த்தையையும் இறைவனுடைய ஆவியையும் கோட்பாடாகக் கொண்டதும், திருமுழுக்கு மற்றும்

விசுவாசத்தினால் நிறைவேறக் கூடியதுமான இயற்கைக்கு அப்பாற்பட்ட பிறப்பினை அளிக்கிறது.

II. தயாரிப்புகள்: மனிதனுக்கான புதிய பிறப்பு பற்றிப் பழைய ஏற்பாடு ஒருபோதும் கூறுவதில்லை. ஏனெனில், அவருடைய இயல்பான பிறப்பின் வாயிலாக இறை மக்களுக்குரிய உரிமைகள் அனைத்தையும் இஸ்ராயேலர் கொண்டுள்ளனர். அவனுக்குப் புதிய பிறப்புத் தேவையில்லை. ஆயினும், இக்கருத்தானது பழைய ஏற்பாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

இறைவனுடைய மக்களாக இஸ்ராயேல் நிறுவப்படுதல் ஓர் உண்மையான குழந்தைப் பிறப்பாகப் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. இஸ்ராயேல் இறைவனுடைய முதல் பிறப்பு (யாத் 4:22; ஞான 18:13). எகிப்திலிருந்து அவனை வெளிக்கொணர்ந்த போது இறைவன் அவனை ஈன்றெடுத்தார் (உப 32:6. 18-19). பாலைவன வாழ்வானது அவனது இளம் குழந்தைப் பருவத்தைப் போன்றது (உப 1:31; 31:10; ஓசே 11:1-5). யூத மரபானது இஸ்ராயேலின் இப்பிறப்பினைச் சட்டத்தை அளிப்பதுடன் குறிப்பாக இணைத்துள்ளது. "ஒரு மனிதன் ஏன் சீனாயை எனது தாயின் இல்லம் என்று அழைக்க வேண்டும்? ஏனெனில், அங்கே இஸ்ராயேலர் புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் ஆயினர்" (உ.ச. 8:2-இன் மீதான மிட்ராஸ்).

இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்ட புதிய உடன்படிக்கையில், தனது சட்டத்தைத் தனது மக்களுக்கு அளிப்பதில் இறைவன் மனநிறைவு அடைய மாட்டார்; ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் அவர் அதனைப் பொறித்து வைப்பார் (எரே 31:31-34; உப 30:10-14). மேலும், மனிதனுடைய இதயத்தைப் புதுப்பிக்க வரவேண்டியது ஆவியே (எசே 36:26-27). மீண்டும் ஒரு புதிய பிறப்பு மற்றும் கேட்டிராத மகிழ்ச்சியின் ஓர் ஊற்றானது எருசலேமின் உதரத்தைத் திறந்து பிள்ளைகளில் பலுகிப் பெருகுமாறு அவளை உருவாக்கும் (எசா 66:7-14).

நம்முடைய காலத்தில் முதல் கட்டத்தில் யூத மதமானது புதிய பிறப்புப்பற்றிய கருத்தைக் கொண்டிராமல் இல்லை. ஒரு புறவினத்தான் மனமாற்றப்பட்டு, புறவினத்தாருடைய திருமுழுக்கினைப் பெற்றவுடன், அவனது முந்தைய அனைத்து உறவுகளும் முறிந்து போனவையாகக் கருதப்பட்டன. பழமையுடனான இந்த முறிவினைக் குறிப்பிட, புதிதாய்ப் பிறந்த குழந்தையென அவன் கூறப்பட்டான். இது சட்ட ரீதியில் எண்ணப்பட்ட ஓர் உருவகம் மட்டுமே. புதிய ஏற்பாட்டில் இஃது ஓர் உண்மையாகும்.

III. இயேசுவின் வார்த்தைகள்: ஒத்தமை நற்செய்திகளில் புதிய பிறப்புபற்றி கிறிஸ்து பேசவில்லை. ஒரு முறை எரே 31 மற்றும் உப 30-ஐத் தொடக்கக் கருத்துக்களாக உபயோகித்து, புதிய ஒழுக்க வாழ்வின் கோட்பாடாக உருவாவதற்கென மனிதனின் இதயத்தில் விதைக்கப்படுகின்ற விதையுடன் இறை வார்த்தையை அவர் ஒப்பிடுகிறார் (மத் 13:18-23). மேலும், விண்ணக அரசிற்குள் நுழைவதற்காகக் குழந்தைகளின் நிலைக்குத் திரும்ப வேண்டியதன் அவசியத்தையும் அவர் கற்பிக்கின்றார் (மத் 18:3). ஒரு குழந்தையைப்போல அனைத்தையும் இறைவனிடமிருந்து பெற உடன்படுபவனாக மனிதன் இருக்க வேண்டும். இந்த உண்மையானது நான்காம் நற்செய்தியில் வெளிப்படையாகிறது. "மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது" (யோவா 3:3.5).

IV. அப்போஸ்தலிக்கச் சிந்தனை:

1. இறைக் கோட்பாடு: பிறக்கின்ற உயிரின் இயல்பைத் தீர்மானிக்கின்ற வாழ்வின் கருவினின்றே ஒவ்வொரு பிறப்பும் உருவாகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அளவில் மீண்டும் பிறப்பதற்கு, மேலிருந்து, இறைவனிடமிருந்து வருகின்ற வாழ்வின் கோட்பாட்டினை மனிதன் தன்னிலேயே பெற வேண்டும். அப்போஸ்தலிக்க

மரபானது இதனை இறைவனுடைய வார்த்தை அல்லது விளக்கம் என்று அடையாளம் காட்டுகிறது.

அ. **வார்த்தை:** யாக் 1:18.21-இன் படி தன்னுடைய உண்மையின் வார்த்தையினால் இறைவன் நம்மை ஈன்றெடுத்தார். மீட்படைவதற்கு இதனைப் பெறுவது அவசியமாகும். யூதேய கிறிஸ்தவ முன்னோக்கில் வார்த்தையானது மீண்டும் மோசேயின் சட்டத்துடன் அடையாளம் காட்டப்படுகிறது (1:22-25). ஆகவே, இந்த "ஈன்றெடுத்தல்" இறைவனுடைய புனித மக்களின் நிறுவுதலின்மீதோ, கிறிஸ்தவனுடைய புதிய பிறப்பின்மீதோ, அக்கறை கொண்டுள்ளது என்பதைத் தீர்மானிப்பது கடினமானதாகும். 1 பேதுரு 1:22-25-இன்படி இறைவன் தன்னுடைய வார்த்தையால் (நற்செய்தியின் போதனையால்) நம்மை மீண்டும் பிறக்கச் செய்தார். வாழ்வின் வித்தாக அவர் அதனை நம்மில் விதைத்தார். அதற்கு நாம் அடிபணிய வேண்டும். புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போன்று, மீட்பை நோக்கி நம்மை வளரச்செய்கின்ற வார்த்தையின் பாலை நாம் ஆசிக்க வேண்டும் (1 பேதுரு 2:2). அவ்வாறே யோவானுக்கும் நம்முடைய புதிய பிறப்பானது நம்மில் விதைக்கப்பட்ட இறைவனுடைய வார்த்தையின் விளைவாகும் (1 யோவா 3:9). விசுவாசத்தினால் நாம் பெற வேண்டிய (யோவா 1:12-13) இறைவனுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவே அவ்விதை (1 யோவா 2:14; 5:18).

ஆ. **ஆவி:** யோவா 3:3-5-இல் அஃது இனியும் வார்த்தையன்று. தீத் 3:5-இல் உள்ளதுபோல, அது, திருமுழுக்கின் நீருடன் சேர்ந்து நமது புதிய பிறப்பின் கோட்பாடாக அளிக்கப்படும் ஆவியே அவர். பவுலைப் பொறுத்தவரை நம்மை "இறைவனின் பிள்ளைகளாக" ஆக்குபவர் ஆவியே (உரோ 8:15-16; கலா 4:6). பிறப்பானது, விசுவாசத்தினால் ஒருவன் பெறும் வார்த்தையின் மூலம் அல்லது திருமுழுக்கின் மூலமாக நமக்கு அளிக்கப்படும் ஆவியின் மூலமாகப் பெறுவதாகும். ஆவியும் வார்த்தையும் பிரிக்க முடியாதவையாகையால், இவையிரண்டும் ஒரே மெய்ம்மையினுடைய இரண்டு முழுமையாக்கும் தன்மைகளாகும். ஆவியானது வார்த்தைக்குச் செயல் தன்மையினை அளிக்கிறது. படைப்பைப் போன்று (ஆதி 1:2தொ; சங் 33:6), நமது மறுபிறப்புச் செயலானது வார்த்தை மற்றும் ஆவியினுடைய ஒத்துழைப்பின்றிச் சிந்தித்துப் பார்க்க முடியாது.

2. **புதிய வாழ்வு:** புதிய ஏற்பாட்டில் புதிய பிறப்பானது இனிமேல் ஓர் உருவகமன்று; ஆனால், ஓர் ஆழ்ந்த உண்மை. வார்த்தையாலும், ஆவியாலும் மீண்டும் படைக்கப்பட்ட மனிதன் ஒரு புதிய உயிராக உருவாகியுள்ளான் (தீத் 3:5). அவனுடைய ஒழுக்க நடத்தையானது அடிப்படையாகவே மாற்றப்படுகிறது. அவன் தீமையை விட்டு விட்டான் (1 பேதுரு 2:1; யாக் 1:21). அவன் இனியும் தனது உணர்ச்சிகளைப் பின்பற்றாமல் (1 பேதுரு 1:14) தனது சகோதரரை அன்பு செய்யுமாறு தன்னைப் பணிக்கும் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறான் (1:22-23). சகோதர அன்பின் கோரிக்கைகளுக்கு எதிராக அவன் இனியும் பாவம் செய்ய முடியாது (1 யோவா 3:9-10). அதுமுதல், கிறிஸ்துவினுடைய வாழ்விற்குள்ளே இணைக்கப்பட்டவனாய் (உரோ 6:5) ஆவியினுடைய ஆதிக்கத்தின் கீழ் அவன் வாழ்கிறான் (8:14).

3. **இறுதிக்காலக் கனிகள்:** மகனாக உருவாகிய நிலையில், அரசினுடைய உரிமைச் சொத்திற்கு அவன் உரிமை கோர வேண்டும் (யோவா 3:5; 1 பேதுரு 1:3-5; உரோ 8:17; கலா 4:7). நம்மில் நடப்பட்ட விதையானது "எல்லாக் காலங்களிலும் வாழ்கின்ற" வார்த்தையாக இருப்பதனால் அழிவின்மையின் கருவாக உள்ளது (1 பேதுரு 1:23-25). விண்ணகத்திற்குத் செல்வதற்கு, அங்கிருந்து இறங்கி வந்திருக்க வேண்டியது அவசியமாகும் (யோவா 3:13). முதல் தலைவராகிய மனுமகனில் ஏற்புடையதாக உள்ள இந்தக் கோட்பாடானது உலகளாவிய ஈடுபாட்டைக் கொண்டுள்ளது. நம்முடைய மகிமைமிக்க உயிர்ப்பினுடைய பிணையமும் (உரோ 8:10-23) இறைவனுடைய ஆவியுமாகிய (யோவா 3:5)

மேலிருந்து வந்த கோட்பாட்டினைத் (யோவா 3:3; யாக் 1:17) தன்னில் பெற்றவர் மட்டுமே விண்ணகத்திற்கு ஏறிச் செல்லமுடியும்.

புதிய பூமி, புதிய வானம் (NEW EARTH, NEW HEAVEN)

திருவெளிப்பாடு 21:1-இல் புதிய படைப்பைக் குறிக்க இச்சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கருத்து எசா 65:17; 66:22 ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. புனித பவுலைப் போலவே, திருவெளிப்பாட்டு ஆசிரியரும், மனிதனின் பாவத்தால் கெட்டுப்போன படைப்பின் பயனின்மையைக் காண்கிறார் (உரோ 8:19 தொ; திருவெளி 20:11; காண்க. ஆதி 3:17 தொ; திருவுரை 1:2).

புதிய வாயில் (NEW GATE)

'புதிய வாயில்– எருசலேம் ஆலய வாயில்களில் ஒன்று. இங்குதான் யூதாவின் தலைவர்கள், குருக்களும் இறைவாக்கினர்களும் எரேமியாவுக்கு எதிராக மரண தண்டனைத் தீர்ப்புக் கூறுவதைக் கேட்டனர் (எரே 26:10). இங்குதான் பாரூக்கு இறைவாக்கினரின் கூற்றுகளடங்கிய சுருளை மக்கள் முன்னிலையில் வாசித்தார் (36:10). இவ்வாயில் இருந்த இடம் உறுதியாகத் தெரிய வில்லை. இது, மேல் முற்றத்தில் இருந்திருக்கலாம் (காண்க. 20:2).

புதிர் அல்லது விடுகதை (RIDDLE)

புதிர் போடுவது அறிவுபூர்வமாகப் பேசுவதில் ஒரு சிறப்பான பகுதியாகும். ஞானம் நிறைந்த பேச்சில் அறிஞர்களுக்குப் பிடித்தமானவற்றுள் புதிர் போடுவதும் ஒன்று. கேட்பவர்களின் உள்ளத்தில் ஓர் ஆர்வத்தைத் தூண்டி மறைந்துள்ள பொருளைத் தேடிக் கண்டுபிடிக்கச் செய்வது அல்லது அவர்களது அறியாமையை ஏற்றுக் கொண்டு விளக்கம் கேட்கச் செய்வதே. புதிர் போடுவதன் நோக்கம் ஆகும். எனவே, புதிருக்கு விடை கூறுவதென்பது அறிவின் அடையாளமாகக் கருதப்பட்டது. பல முனிவர்கள் தங்களுக்குள்ளே விளையாட்டுப்போலப் புதிர் போட்டு அதன் மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளுதலும் இருந்தது. சிம்சோனின் திருமணத்தில் கலந்து கொண்டவர்கள் சாதாரண மனிதர்களே யெனினும் அங்கும் இத்தகைய விடுகதைப் பரிமாற்றம் நடக்கின்றது. தனது மனைவியின் ஊரைச் சேர்ந்தவர்களிடம், தான் கூறியதை விடுவிக்குமாறு கேட்கிறார் (நீதி 14:12). சிம்சோனின் மனைவியின் மூலம் அதற்குப் பதிலைத் தெரிந்து கொண்டபின் அவர்கள் கூறிய விடை வேறொரு விடுகதைக்கு இடமளிக்கிறது (நீதி 14:18).

செபா நாட்டு இளவரசி சாலமோனுக்கு விடுகதைகள் பல போட்டு அவரது ஞானத்தைச் சோதிக்கிறாள் (1 அர 10:1; 2 நாள் 9:1). ஞானநூல்கள் பல விடுகதைகட்டுப் பதிலளிப்பவை போல அமைந்துள்ளன (பழ 11:22; 27:3.8; 30:15). பழமொழி ஆகமம் 26:4-இல் மதி கெட்டவனுக்குச் சமமாய் மறுமொழி சொல்லாதே; பேதை தனக்குத் தானே ஞானியாய்த் தோன்றாதபடி அவனுக்குப் பதில் சொல் என்பதில் முரண்பாடு உள்ளதுபோல் தோன்றுகிறது. எனவே, இது விளக்கப்பட வேண்டிய விடுகதையாகும். எண்களை வைத்துப் புதிர் போடுவது பழ 30:15-6.18-19:21-23. 24-28.29-31-இல் காணப்படுகிறது. சங் 49:5-இல் வரும் விடுகதை தீயோர் வளமாக வாழ்வதைப் பற்றியது. எசே 17:2-இல் உள்ள கழுகும், திராட்சைக்கொடியும் என்பன உருவகமே; அதற்குப் பின்னே மறைந்துள்ள ஆட்களை வாசகர்கள் கண்டுகொள்ள வேண்டும். பழ 1:6; சங் 78:2–இல் உள்ள விடுகதை ஞானவாக்கியமாகவே உள்ளது. அ.ப. 2:6–இல் வரும் விடுகதை மறைமுகமாக இழித்துப் பேசுவதாகும். மோசே மற்ற இறைவாக்கினர்களைவிட வேறுபட்டவர். ஏனெனில், அவரிடம் ஆண்டவர் விடுகதைகளிலோ, புதிர்போட்டோ பேசுவதில்லை (நேரடியாகப் பேசுகிறார்); வெளிப்படையாகப் பேசுகிறார் (எண் 12:8). பிற்காலப் பகுதியான தானி 8:23-இல் புதிர்போடுதல் வஞ்சகத் தன்மையுடையதாகவோ, சுற்றி வளைத்துக் கூறுவதாகவோ கருதப்பட்டது.

புதினா (MINT)

இனிய மணம் தரக்கூடிய ஒருவகைக் கீரை இது. இதன் இலைகளிலும், தண்டுகளிலும் காணப்படும் நறுமணமுள்ள எண்ணெயினை மருந்து மற்றும் உணவுப் பொருட்களில் பயன்படுத்துவார்கள். பரிசேயர்களின் வெளிவேடத்தை இயேசு கண்டித்துப் பேசியபோது புதினாவும் குறிப்பிடப்பட்டுள்ளது (மக் 23:23; லூக் 11:42); "வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், நீங்கள் புதினா, சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கிறீர்கள். ஆனால், திருச்சட்டத்தில் முக்கியப் போதனைகளாகிய நீதி, இரக்கம், பற்றுறுதி ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் விட்டு விடுகிறீர்கள்" (மத் 23:23).

புதினா இனத்தைச் சேர்ந்த பலவகையான கீரைகள் பாலஸ்தீனத்தில் உள்ள ஈரமான பகுதிகளில், குறிப்பாக ஆற்றங்கரைப் பகுதிகளில், காணப்படுகின்றன.

யூத சட்டத்தின்படி, பாஸ்கா விழாவன்று உண்ண வேண்டிய கசப்பான காட்டுக்கீரைகளில் புதினாவும் ஒன்றாக இடம் பெற்றுள்ளது (யாத் 12:8; எண் 9:11).

புதுமை, அருஞ்செயல் (MERACLE)

I. புதுமைகள் பற்றிய கருத்து, கண்டிப்புடன் வரையறுக்கப்பட்டது என்று கூறுவது கிறிஸ்தவர்கள் சிலருக்கு அசாதாரணமானதன்று. ஆனால், மற்றவர்கள் போலிவியப்புச் செயல்களில், ஆர்வம் உள்ளவர்களாக இருப்பதும் அசாதாரணமானதன்று. இந்த முரண்பட்ட மிகைபாடுகள், நீண்டகாலமாக உள்ள வலிமையுள்ள காப்புரையின், ஒரு வகையால் ஊட்டம் பெற்ற பொதுமூலத்தைக் கொண்டுள்ளன. புதுமைகளில் இயற்கை விதிகளின் மீறலையே அவர்கள் காண்கின்றனர். அனைவருடைய அறவுத்திறனுக்கு ஏற்ப அமைக்கப்படுகின்ற அவற்றின் அடையாளப் பங்கு கவனிக்கப்படுவதில்லை.

இறைவனுடைய கையானது தன்னுடைய மக்களுக்காகத் தனது வல்லமையையும் அன்பையும் வெளிப்படுத்துவதை விவிலியம் முழுவதும் நாம் காண்கிறோம். வரலாற்றின் போக்கில் ஏற்படும் இறைவனின் அசாதாரண இடையீடுகளைப் போன்று, படைக்கப்பட்ட உலகானது தன்னுடைய குறிப்பிட்ட அமைப்புடன் (எரே 31:36-37) ஒரு வியப்பாகவும் (சங் 88:6), அடையாளமாகவும் (சங் 64:9) உள்ளது. இன்றைய வரலாற்று ஆசிரியர் அதனைச் சாதாரணமானதாக மற்றும் விளங்க வைக்கக் கூடியதாகக் கருதினாலும், வரலாற்று இடையீடுகள் தனது முறையில் புதுப்பிக்கப்பட்ட படைப்புகளாக உள்ளன (எண் 16:30; எசா 65:18). இயற்கைக் காரணங்களின் விதிவிலக்காக ஒருங்கு சேர்கிற தெய்வீகச் செயல்களுக்கு இடையிலான நவீன வேறுபாடுகளைப் புறக்கணித்தும், இரண்டாம் நிலைக் காரணங்கள் அல்லது இயல்பான பதிலாளர்களின் இடைச்செயலுக்குப் பதிலாக இறைச்செயலை மாற்றீடு செய்தும், விவிலியமானது விசுவாசியின் கவனத்தை, இவ்வனைத்து வகைகளுக்கும் பொதுவானதாக உள்ள ஒரே அத்தியாவசியக் கூறாகிய நிகழ்ச்சிகளின் சமயச் சிறப்புப் பொருள்மீது திருப்புகிறது. இவ்வாறாக, புனித அகுஸ்தீனார் விசுவாசக் கண்களுடன் அப்பங்களைப் பலுகச் செய்ததில் கண்டதுபோன்று, அறுவடையின் சேகரிப்பிலும் இறையன்பு மற்றும் வல்லமையின் அடையாளத்தை அதே தெளிவுடன் காண்கிறார். அவை இரண்டையும் அவர் வேறுபடுத்தாவிடின் அதற்குக் காரணம் ஒரு நன்மை சாதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுவதும், மற்றொன்று வியப்புடன் பெறப்படுவதுமாகும். இந்நோக்கில் ஒரு விவரமானது நாம் அளிக்க விரும்புவதைவிட அதிக முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதில்லை. இவ்வாறு, கனி கொடாத அத்திமரமானது உடனடியாகவோ (மத் 21:19), மிகவும் பிற்பாடோ (மாற் 11:20) உலர்ந்துபோவது முக்கியமன்று. ஆனால், இந்த அடையாளச் செயலில் மறைந்துள்ள படிப்பினையே முக்கியமானதாகும்.

II. பழைய ஏற்பாட்டில் புதுமைகள்:

1. **உண்மைகள்:** போதக இலக்கிய வகையைச் சேர்ந்த குறிப்பிட்ட சில நூல்கள் அல்லது நூல்களின் பகுதிகளில் காணப்படும் (யோனா, தோபியா, யோபுவின் நாடகப்பாணி அமைப்பு, தானி 1-6-இல் அக்கதாப்பகுதி, 2 மக்கபேயரின் எடுத்துக்காட்டான ஒப்பனைகள்) மற்றும் எசாயாவின் வாழ்வில் விவரிக்கப்படும் இரு வியப்புகள் (எசா 37:36-37; 38:7-8) ஆகியவற்றிற்குப் புறத்தே, பின்வரும் இருமுக்கியக் காலங்களைத் தவிர்த்துப் புனிதவரலாற்றில் புதுமைகள் எண்ணற்றவையாக இல்லை. இக்காலங்கள் இறைவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை உருவாக்கி நிலைப்படுத்துகின்ற மோசே மற்றும் அவரது வாரிசு யோசுவாவின் வாழ்க்கைக் காலம், மற்றும் மோசேயின் உடன்படிக்கையை மீண்டும் நிறுவியவர்களான எலியா மற்றும் எலியாசினுடைய வாழ்க்கைக் காலம் ஆகியவையாகும்.

எலியா மற்றும் எலியாசின் சூழலின் மெய்யான வரலாற்றுத் தன்மை பொதுப்பான்மையான மிகைப்படுத்துதலை நன்கு பயன்படுத்துகிறது (எ.கா. 2 அர 1:9-16). இவை ஒன்றிலிருந்து மற்றதற்கு விரிந்து வளர்ந்து, பெருமளவு சமயப்பண்பை இழந்து விடுகின்றன (எ.கா. 2 அர 2:23 தொ; 6:1-7). காலப்போக்கில் அவர்கள் கடந்து சென்ற ஏற்புடைய குறிப்பிடத்தக்க விரிவாக்கங்களுக்கும் அப்பாற்பட்டு, எகிப்தின் பத்துக் கொள்ளை நோய்கள் அல்லது பாலைவனத்தின் புதுமைகள் மற்றும் வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றுதல் முதலியவற்றின் பாரம்பரிய விவரிப்புகள், காலப்போக்கில் பெருமளவு விரிவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதே வரலாற்றுத் தன்மையை இன்னும் கொண்டுள்ளன. இவற்றை நூலாக எழுதியவர்கள், தங்கள் காலத்தில் இருந்த இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக, பாரம்பரியங்களைத் தொகுத்தனர்; தங்களுக்குக் கிடைத்த விவரிப்புகளைச் சுதந்தரமாகப் பயன்படுத்தினர். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய வரலாற்றின் தொடக்கத்தில், எல்லாம் வல்ல இறைவனுடைய காக்கும் பிரசன்னத்தைக் காட்டுவதான (யோசு 24:17) தங்களுடைய சமய நோக்கை அவர்கள் என்றுமே இழக்கவில்லை. இந்தப் பாரம்பரியங்கள் வீர காவியத் தன்மையைச் சிறப்புப் பண்பாகக் கொண்டிருந்தாலும், இவை அடிப்படைத் தன்மையுடையவை. படைப்பு நிகழ்ச்சிக்கு அடுத்த தனிச்சிறப்பான ஒரே நிகழ்ச்சியாக (எசா 65:17) இஸ்ராயேலின் பிறப்பை விவரிக்கின்றனர். இஃது இறுதிக்காலப் புதுப்பித்தலோடு (எசா 43:16-21) ஒப்பிடத் தகுதியுடையதாகும்.

2. **புதுமைகள்: இறைத்தன்மையுடைய, பயன்தரும் ஆற்றலுடைய அடையாளங்கள்:**

அ) புதுமைகள் இறைவனுடைய வெளிப்பாடுகள் மற்றும் அவரது செயலின் பயன் தரும் ஆற்றலுடைய அடையாளங்கள் எனப் பழைய ஏற்பாடு காட்டுகிறது. பயன்படுத்தப்படும் சொற்களாலேயே இச்செயலானது சுட்டிக்காட்டப்படுகிறது. அவை "அடையாளங்கள்" (அருஞ்செயல்கள்) (யாத் 10:1), "அடையாளங்கள் மற்றும் அருங்குறிகள்" (உப 7:19). புதுமையைவிட இச்சொற்களைச் சாதாரணமாகப் பயன்படுத்துதல், ஒவ்வொரு சமய வியப்புகளிலும் மறைந்துள்ள அறிகுறி அல்லது அடையாளத்தின் பரிமாணத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இவ்வாறாக, இறைவாக்கினர் ஓர் அறிகுறியாக இருக்கலாம். ஏனெனில், அவரது வாழ்க்கையானது அவரது செயல்களால் அறியச் செய்யப்படுகின்ற இறைவார்த்தையை அடையாளப் படுத்துகிறது (எசா 8:18; 20:3; எசே 12:6.11; 24:24.27).

வியத்தகு அறிகுறிகள் இந்த வார்த்தைக்கு உறுதுணை புரிகின்றன. ஏனெனில், இறைவனுடைய தூதர்களால் அறிவிக்கப்பட்ட மீட்பினை உறுதியான செயல்களில் அவை

வெளிப்படுத்தி, அந்தத் தூதுவர்களை இறைவனுடைய அதிகாரபூர்வமான செய்தியாளர்களாக அடையாளங்காட்டுகின்றன (யாத் 4:1-5; 1 அர 18:36-38; எசா 38:7-8; எரே 44:29-30). வார்த்தைக்குக் கீழடக்கமான இந்தத் துணைமை நிலையே மந்திரவாதிகளாலும் போலி இறைவாக்கினர்களாலும் நிறைவேற்றப்படும் தந்திரங்களினின்று உண்மையான புதுமைகளை வேறுபடுத்துவதாகும் (யாத் 7:12....). வியப்பானவைகளைப் புரிபவருடைய செபத்தினால் சிறப்பாக வெளிப்படுத்தப்படும் செய்தியின் மதிப்பானது (1 அர 18:27-28.36-37) புதுமையின் உண்மையைத் தீர்மானிக்கின்ற முதல் அறிகுறியாகும் (உப 13:2-6). புதுமைகள், வார்த்தையால் தீர்மானிக்கப்பட்ட பின்னர், அதற்கு ஆதரவு மட்டுமே அளிக்கின்றன.

ஆ) இந்த அறிகுறிகள் அனைத்திலும் புதுமைகள் தங்களுடைய செயல் திறத்தினாலும், அசாதாரணப் பண்பாலும் வேறுபடுத்தப் படுகின்றன. ஒருபுறம் தாங்கள் குறிப்பிடுவன வற்றை வழக்கமாகச் செயல்படச் செய்கின்றனர். அற்புதங்களை ஒன்றுபடுத்துவதன் மூலம், இறைவன் தனது மக்களை விடுவித்த முதல் யாத்திரையும், அவரது வார்த்தையின் செயல் திறத்தினை வெளிப்படுத்துகின்ற புதிய யாத்திரையும் இத்தகையதே (எசே 15.11.13). மற்றொரு புறம் இச்செயல்கள் (சங் 76:13; 145:4), சில நேரங்களில் இவை இயற்கை நிகழ்ச்சிகளாக இருந்தாலும் (மழை, பஞ்சம்...) பெரும்பாலும், மனிதன் உலகில் காணக்கூடியதையோ, அவனால் நிறைவேற்றக்கூடியதையோ கடந்து செல்கின்றன. எனவே, புதுமையானது குறிப்பாக இறைவனுடைய வல்லமையை வெளிப்படுத்தக் கூடிய அருங்குறியாகும். பெரும்பாலும் இஃது அருஞ்செயல் (யாத் 15:11), வல்லமை மிக்க செயல் (சங் 106:2), பெரும் செயல் (சங் 106:21), திகிலூட்டும் செய்கை (யாத் 34:10) மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக வியத்தகு செயல்கள் (யாத் 15:11; சங் 106:7) என்று குறிப்பிடுகிறது. கடைசிச் சொல்லானது மனிதனால் நிறைவேற்றுவதற்கு இயலாதவையாக உள்ள செயல்களைக் குறிப்பிடுகிறது. இஃது இறைவனுக்கு மட்டுமே உரியதாகும் (சங் 86:10). அவர் தனது விஞ்சிய நிலையாகிய தனது புனிதத்தின் பிரதிபலிப்பான (யாத் 15:11; சங் 77:14; லேவி 10:3) தனது மகிமையை அவைகளில் வெளிப்படுத்துகின்றார் (யாத் 15:1.7; 16:7; எண் 14:20; லேவி 10:3).

ஆனால், இறை வல்லமையானது பாவிகளை மட்டுமே அழிவிற்குக் கொணர்கிறது (உப 7:17-20; மீக் 7:15-17). வாக்குறுதி பெற்ற மக்களுக்கு (உப 4:37) அவரது அற்புதங்கள் முயன்று தாழ்த்துகின்ற நேரத்திலும் (8:16) பலனுள்ளவையாகவே உள்ளன. ஏனெனில், "ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர்" (சங் 145:9). ஆகவே இறுதியாக, புதுமைகள் ஆண்டவருடைய இந்தப் பேரன்பின் பயனுள்ள அருங்குறிகளாகவும் (சங் 106:7; 107:8), அவரது பயன் எதிர்பாராத கொடைகளாகவும் உள்ளன (உப 6:10-12; யோசு 24:11-13). இயேசுவில் மட்டுமே இந்த மீட்கும் அன்பின் உலகளாவிய நிலையானது முழுமையாக வெளிப்படுத்தப்படும். புறவினத்தாரின் சார்பாகச் செயல்படுத்தப்பட்ட தன்னுடைய புதுமைகளின் இறைவாக்குப் பொருளைக் கோடிட்டுக் காட்டுவதையும் (மத் 8:11-13), சீதோனியப் பெண் மற்றும் சீரியனுடைய சார்பாக எலியா மற்றும் எலியாசுவின் மூலம் முன்னர் நிறைவேற்றப்பட்ட புதுமைகளின் பொருளை வெளிப்படுத்துவதையும் (லூக் 4:25-27) ஒரே சமயத்தில் அவர் செய்வார்.

3. விசுவாசம் பற்றிய குறிப்பில் புதுமை:

புதுமைகள் தூண்டுகின்ற வியப்பிற்கு அப்பாற்பட்டு, விசுவாசத்தையும் அதனோடு வருபவைகளையும் தூண்டியெழுப்பி உறுதிப்படுத்துவதை அவை குறிக்கோளாகக் கொண்டுள்ளன. விசுவாசத்தோடு வருபவை பற்றுறுதி, நன்றி செலுத்துதல் மற்றும்

நினைவுக்கூர்தல் (சங் 105:5), தாழ்ச்சி, கீழ்ப்படிதல், இறை அச்சம், நம்பிக்கை, முதலியனவாகும். பார்வோனைப் போன்று அறியப்படாத இறைவனிடமிருந்து எதையும் எதிர்பார்க்காதவர்களை அவை குருடாக்குகின்றன (யாத்-7:13...). ஆனால், ஏற்கெனவே இறைவனை அறிந்து அவரை மட்டுமே சார்ந்திருப்பவனுக்கு, அவைகளில் இறை அன்பினுடைய வல்லமை மிக்க செயலும், இறைவனுடைய பிரதிநிதியின் பணியை அங்கீகரிக்கும் முத்திரையும் வெளிப்படுத்தப்படுகின்றன. பின்னர், அதே இயக்கத்தில் இறைவனின் வார்த்தையிலும் அவன் விசுவசிக்கிறான். இறைவனிலேயே அவன் விசுவாசம் கொள்கிறான் (எண் 14:11).

மனித நிலையில் இயலாததான வாரிசின் பிறப்பை விசுவாத்தால் பெற்ற ஆபிரகாமில் இந்த விசுவாசத்தின் மாட்சிமையை இஸ்ராயேல் வியந்து பாராட்டுகிறது (ஆதி 15:6; உரோ 4:18-22). உப ஆகமம், இறைவாக்கினர்கள் (எசா 63:7-14), சங்கீத ஆசிரியர்கள் (சங் 76: 105-107), ஞான ஆசிரியர்கள் (ஞான 10-19 ஆகியவற்றில் அடங்கியுள்ள பழமையின் தொடர் நினைவூட்டுதல்களுக்கு இந்த விசுவாசமே அடித்தளமாக உள்ளது. இஸ்ராயேலுடனான இறைவன் உறவு கொண்ட காலத்தின் புதுமைகளைச் சுட்டிக் காட்டுகின்ற இவை, எதிர்கால அனுகூலங்களின் அளவையாகவும், அதே நேரத்தில் அவற்றின் கல்வி புகட்டும் தன்மையை வலியுறுத்துவனவாகவும் உள்ளன (உப 8:3: ஞான 16:21). "இந்த அருஞ்செயல்களின் நினைவு கூர்தலாக", திருவிழாக்களை உண்டாக்குவதன் மூலம் யாவே இந்த விசுவாசத்திற்கு ஊட்டமளிக்கிறார் (சங் 111:4). புதுமை மட்டுமே யூதாவைக் காக்கக்கூடிய நேரத்தில் ஏசயாவிற்கு உயிரளித்ததும் (ஏச 37:34-35). புதுமையான கருத்தரிப்பு அறிவிக்கப்பட்டபோது மரியாளுக்கு ஊக்கமளித்ததும் (லூக் 1:45) இந்த விசுவாசமே.

இதற்கு மாறாக, இறைவன் சுமத்திய சோதனைகளுக்குச் சிற்றின்பத்துடன் எதிர்ச்செயலாற்றியபொழுது (உப 8:2) பாலைவனத்தில் இஸ்ராயேலர்கள் விசுவாச மற்றவர்களாக இருந்தனர் (சங் 78:32); மேலும், ஒரு புதுமையைக் கோரி ஆண்டவரையும் சோதனைக்குட்படுத்துகின்றனர் (யாத் 17:2; சங் 95:9). புதுமைகளின் இறைவனைவிட அதிகமாகத் தோழர்களைச் சார்ந்திருப்பதில் ஆகாசு விசுவாசமின்மையைக் காட்டினார் (எசா 7:12). தன்னுடைய ஐயத்தினால் செக்கரியாவும் அதே போன்ற விசுவாசமின்மையைக் காட்டினார் (லூக் 1:18-20). இந்த எல்லா மனப்பான்மைகளிலும் மனிதன் மீதான இறைவனுடைய ஆதிக்கம் மறக்கப்படுகிறது; அவரது வல்லமையும் பயன்கருதாத அன்பும் புறக்கணிக்கப்படுகின்றது; மற்றும் அவரது வார்த்தை சந்தேகத்திற்கு உட்படுத்தப்படுகிறது. இவற்றில் எல்லாம் புதுமையானது உண்மையான கொடையாகவும் ஏற்கப்படுவதில்லை. அறிகுறியாகவும் அறியப்படுவதில்லை.

III. இயேசுவின் வாழ்வில் புதுமைகள்:

1. உண்மைகள்: முன்னுரைக்கப்பட்ட புதிய யாத்திரையின் மகிமையைவிட குறைவாகக் கண்டு ஏமாற்றமடைந்த நாடுகடத்தலிலிருந்து திரும்பி வந்த இஸ்ராயேலரின் பேரார்வத்தைப் பென் சீராக்கு "புதிய அருங்குறிகளைச் செய்யும்; வேறு பல வியத்தகு செயல்களை நிகழ்த்தும்" (சீரா 36:5) என்ற மன்றாட்டில் வெளிப்படுத்துகிறார். இந்த எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கு இயேசு வந்தார். ஆனால், அதே சமயத்தில் பரபரப்பூட்டுகிறவைகள்பால் கொள்ளும் ஆர்வத்தையும், பழிவாங்கத் தேடுவதையும் உற்சாகப்படுத்தவில்லை.

யாத்திரை விவரிப்புகளுக்கு முரண்பட்ட நிலையில், நற்செய்தியாளர்கள் முதல்நிலைச் சாட்சிகளைச் சார்ந்தவர்களாய், அமைவடக்கமானவர்களாக உள்ளனர். அவர்களுடைய விவரிப்பு அமைவடக்கமாய் இருப்பதாலேயே புதுமைகள், நற்செய்தி விவரிப்புகள் இயல்பாயமைந்துள்ளவையாகத்

தெரிகின்றன. இயேசுவைப் பொருத்தமட்டில் முயற்சியில்லாமை அங்குள்ளது (அவரது செயல்களின் அடையாளவியலைச் செறிவுள்ளதாக ஆக்குகின்ற போதனை முறையில் பயன்படும் வாய்பாடுகள், தொடுதல்கள், பூசுதல்கள், படிப்படியாகச் செயலாற்றும் முறை (மாற் 8:23-25) ஆகியவை இந்த முயற்சியின்மையோடு ஒத்துப்போகக் கூடியன). எல்லா மந்திரவாதத்தையும் விலக்குகின்ற வெளிப்படையாக (யோவா 11:41-42) அல்லது சுட்டிக் காட்டப்படும் (மாற் 6:41; 7:34; 9:29; 11:24) சமய நோக்கமும் செபத்துடன் கூடிய மனப்பான்மையும் அங்குள்ளன. புதுமைகள் இல்லாமல் திருச்சபையினுடைய விசுவாசத்தை விளக்கும் கடின நிலையும் அங்குண்டு. நற்செய்தியினுடைய பாவுநூல் மற்றும் ஊடிழையுடன் புதுமைகள் பின்னிப் பிணைந்துள்ளன. இவ்வனைத்துக் குறிப்புகளின் மூலமாக நற்செய்தியின் புதுமைகள், போலி நற்செய்தி ஆசிரியர்களால் கண்டுபிடிக்கப்பட்ட புதுமைகளினின்றும், கிறிஸ்தவத் தொடக்க காலத்தவராகிய ராபிகள், தெய்வங்கள், அல்லது புறவின சாதுக்கள் ஆகியோருக்கு மரபானது சாற்றிக்கூறும் புதுமைகளினின்றும், அடிப்படையிலேயே வேறுபடுத்தப்படுகின்றன. ஒவ்வொரு புறநிலை ஒப்பீடும் நற்செய்தி வாசகங்களின் வரலாற்று மற்றும் சமய மதிப்பீட்டை வெளிக்கொணர்கின்றன. உண்மையானவையாக மட்டுமின்றி அசாதாரணமானவையாகவும் உள்ள இச்செயல்களின் மூலம், இயேசு தனது மக்களுக்கு ஓர் அருங்குறியை அளித்தார்.

2. மெசியா மீட்பின் செயலாற்றலுள்ள அடையாளங்களாக இயேசுவின் புதுமைகள்:

அ) இறைவாக்கினரால் அறிவிக்கப்பட்ட மெசியா அரசானது தன்னில் தோன்றிப் பிரசன்னமாகியுள்ளது என்பதைத் தனது புதுமைகளின் மூலம் இயேசு காட்டினார் (மத் 11:4-5); தனக்கும் தன்னில் தோன்றிய அரசின் நற்செய்திக்கும் அவர் கவனத்தை ஈர்த்தார்; வியந்து பாராட்டுதலையும் சமய அச்சத்தையும் தூண்டியெழுப்பினார். இஃது அவர் யாரெனக் கேட்குமாறு மனிதரைத் தூண்டியது (மத் 8:27; 9:8; லூக் 5:8-10). பாவங்களை மன்னிக்க அவருக்கிருந்த அதிகாரம் (மாற் 2:5-12), ஓய்வு நாளின் மீதான அதிகாரம் (மாற் 3:4-5; லூக் 13:15-16; 14:3-5), அவரது அரச மெசியா நிலை (மத் 14:33; யோவா 1:49), தந்தையின் பெயரிலான அவரது வருகை (யோவா 10:36), அவரிலான விசுவாசத்தின் வல்லமை (மத் 8:10-13; 15:25) ஆகிய பிரச்சனைகள் யாவும் இயேசுவினுடைய பணிக்கும் தகுதிக்கும் சான்று பகர்கின்றன. ஆனால், இவ்வுலகைச் சேர்ந்த தேசிய மெசியா பற்றிய யூத நம்பிக்கைகளால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன (மாற் 1:44; 5:43; 7:36; 8:26). பின்னர், யோவான் சுட்டிக்காட்டவிருக்கும் அருங்குறிகள் ஏற்கெனவே இந்தப் பிரச்சினைகளில் அடங்கியுள்ளன.

இந்த அருங்குறிகள் இயேசுவினுடைய மெசியாத்தன்மையையும், இறைத் தன்மையையும், நிரூபிக்கின்றனவெனில், தான் யாரென அவர் உரிமை கொண்டாடியபடி, அவர் உண்மையாகவே உள்ளார் என்பதற்கான மறைமுகமான சான்றுகளாகவும் அவை உள்ளன. அவரது வார்த்தையினின்று இந்த அருங்குறிகள் பிரிக்கப்படக்கூடாது. எளியோருக்கு நற்செய்தி அறிவித்தலில் அவை கைகோத்துச் செல்கின்றன (மத் 11:5 இணை). இயேசு தனக்கு அளிக்கும் பட்டங்கள், தனக்கென உரிமையாக்கும் வல்லமைகள், அவர் போதிக்கும் மீட்பு, அவர் கோரும் துறத்தல் ஆகிய அனைத்தும் அவரது புதுமைகளிலிருந்து இறைநம்பகத் தன்மையைப் பெறுகின்றன என்று தொடக்கத்திலிருந்தே அவரது செய்தியின் உண்மையைப் புறக்கணிக்காத வர்களால் காண முடிகிறது (லூக் 16:31). இவ்வாறாக, இந்த உண்மையானது புதுமைகளைவிட உயர்ந்தது என்பதை யோனா பற்றிய இயேசுவின் வார்த்தைகளினின்று நாம் அறிந்து கொள்ளலாம் (லூக் 11:29-32). இருவிதக் காரணத்திற்காக அவர் தன்னை முதலாவதும்

மற்றும் அவசியமான ஒரே அடையாளமாகவும் காட்டுகிறார் (யோவா 20:23). முதலாவது, அவரது தூதின் இணையற்ற சொந்த அதிகாரம் காரணமாகும் (மத் 7:29); இரண்டாவது, முந்தைய வெளிப்பாட்டை நிறைவேற்றுவதில் (லூக் 16:31; யோவா 5:46-47) அவருக்குச் செவிமடுப்போர் ஆவியின் வேண்டுகோளுக்குப் பதிலை அவரில் கண்டனர் (யோவா 14:17,26) என்பது அதிக உள்ளார்ந்த காரணமாகும். ஆனால், அவரது பணியானது புதுமைகளால் உறுதிப்படுத்தப்பட்டு விவரிக்கப்படுவதற்கு முன்னர், உண்மையான புதுமைகளுக்கும் போலி அருங்குறிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை அவர் சுட்டிக்காட்ட வேண்டும் (மாற் 13:22-23; மத் 7:22; 2 தெச 2:9; திருவெளி 13:13). உப ஆகமத்தில் உள்ளது போன்று இங்கும் "புதுமைகள் கோட்பாட்டைச் கண்டறிகின்றன; கோட்பாடு புதுமைகளைக் கண்டறிகிறது.

ஆ) புதுமைகள் விதிக்கட்டில்லாத அடையாளங்களாகவோ, வெறும் பகட்டாகவோ இல்லாததனால், புறநிலையான எதற்கும் புதுமைகள் சான்று பகர்வதில்லை. இறுதிக்கால அரசில் முழுமையைக் காணவிருக்கின்ற மெசியா மீட்பின் உறுதிநிலையை வெளிக்கொணர்ந்தவாறு அவை தாங்கள் குறிப்பிடுவனவற்றைத் தொடக்க நிலையில் நிறைவேற்றுகின்றன. ஒத்தமை நற்செய்திகளும் அவற்றை வல்லமையின் செயல்கள் என்றே அழைக்கின்றன (மத் 11:20-23; 13:54.58; 14:2). உண்மையில் தனது மனித இரக்கத்தினாலும் (லூக் 7:13; மத் 20:34; மாற் 1:41), அதற்கும் மேலாக வாக்களிக்கப்பட்ட ஊழியன் என்ற மன உணர்வினாலும் உந்தப்பட்டவராய் இயேசு (மத் 8:17) நோய், சாவு, மனிதனுக்கான இயற்கையின் எதிர்ப்பு ஆகியவற்றைத் திறமையுடன் வெற்றிகொள்கிறார்; சுருக்கமாக ஓரளவிற்குப் பாவத்தினால் உருவாக்கப்பட்டு (ஆதி 3:16-19; மாற் 2:5; லூக் 13:2-3; யோவா 9:3) உலகில் பேயின் வேலைக்கு உதவுகின்ற (மத் 13:25; எபி 2:14-15) ஒவ்வொரு சீர்குலைவையும் வெல்கிறார். சாத்தான் (மத் 4:2-7), கெட்டுப்போன தலைமுறை (12:38-40; 16:1-4), பொறாமைக்காரர் (லூக் 4:23), சிறுமைத்தனமானவர் (23:8-9) முதலியோர் மீட்புப் பயனைக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதனால் அதிசயிக்கத் தக்க அருங்குறிகளை நிறைவேற்ற இயேசு மறுக்கிறார். வரலாற்றைவிட இறைவாக்கு உருவகங்களுக்கு மிகவும் ஏற்றவையாகத் தோன்றுகின்ற அண்ட அற்புதங்கள் (அ.ப. 2:19-20) தன்னையே காத்துக்கொள்ளுமாறு சவாலுக்கு உட்படுத்தப்பட்ட வேளையில், அனைத்து மனிதருக்காக இயேசு தனது உயிரையே அளித்த தருணம் வரை (மத் 27:39-54; 1 கொரி 1;22-24) எழுதப்பப்படவில்லை. மத் 17:20 இணை-இல் அவர் வாக்களிப்பதாகத் தோன்றுகின்ற அற்புதங்கள், விசுவாசத்தினுடைய வல்லமையின் எடுத்துக்காட்டுகளாக மட்டுமே இருக்கின்றன.

மேற்கூறப்பட்டவையின் ஒளியில் குணமாக்குதலுக்கும் பேயோட்டுதலுக்கும் இடையிலான அடிக்கடி வரும் தொடர்பானது தெளிவாகிறது (மத் 8:16). பேய் பிடித்தவன் விடுதலை பெறுவது சாத்தானின் மீதான "வலியோனுடைய" (லூக் 11:22) வெற்றியின் சலுகைக்குரிய நிலையாகும்; இதை ஒவ்வொரு புதுமையும் தனக்கே உரிய விதத்தில் கொண்டிருக்கிறது. பாலைவனத்தில் தொடங்கி (மத் 4:1-இணை), சிலுவையில் உச்சநிலை அடைந்து (லூக் 4:13; 22:3.53), பொதுத் தீர்வையுடன் மட்டுமே முடிவடையக்கூடிய (திருவெளி 20:10) ஒரு போராட்டத்தில் அஃது இயேசுவை நேரடியாகப் பகைவனுடன் பிணைக்கிறது. ஆனால், இதில் சாத்தானுடைய தோல்வியானது முன்னரே அறியப்பட்ட முடிவாகும் (மத் 8:29; லூக் 10:18). பேயோட்டுதலானது அரசின் வருகையினுடைய தனிச் சிறப்பான செயல்திறனுள்ள அடையாளமாகும் (மத் 12:28).

3. புதுமைகளும் விசுவாசமும்:

அ) இயேசு போதித்து, தன்னிலேயே இருப்பதாகக் காட்டிய அரசினுடைய

நற்செய்தியானது மனமாற்றத்தினாலும் விசுவாசத்தினாலும் பெறப்பட வேண்டும் (மாற் 1:15). அவரது புதுமைகளும் பேயோட்டுதல்களும் மன மாற்றத்தையும் விசுவாசத்தையும் உண்டு பண்ணுவதையே நோக்கமாகக் கொண்ட அவரது வியப்புக்குரிய செயல்களைக் கண்ட நிலையில் கொராசின் மற்றும் கப்பர்நகூம் நகரங்கள் மனந்திரும்பி விசுவசித்திருக்க வேண்டும் (மத் 11:20-24 இணை). விசுவாசத்தின் வேறுபட்ட நிலைகளை வேறுபடுத்தும்போது யோவான் இக்கருத்தினை வலியுறுத்துகிறார் (யோவா 2:11; 11:15; 20:30-31). முதலாவதாக மட்டுடைய ஆர்வம் (2:23-25; 4:48) மற்றும் சுயநல ஈர்ப்புக்கள் (6:26). இந்த அடையாளங்கள் இயல்பாகவே இயேசுவை இறைவனுடைய தூதராகவும் (3:2;9:16;10:36), இறைவாக்கினர் (4:19), கிறிஸ்து (7:31, மனுமகன் (9:35-38) என்றும் அறிந்து கொள்ள நடத்திச் செல்கிறது. விசுவசிப்பதற்கென அவரது புதுமைகளின்மேல் அதிக அளவிற்குச் சார்ந்திருப்பதென்பது முழு நிறைவற்ற விசுவாசத்தின் அருங்குறியாகும். இயேசுவினுடைய வார்த்தையின் மெய்ம்மையானது, தனது குழந்தைக்குரிய பற்றுறுதியால் பெறுகின்ற பற்றற்ற தன்மையில் உறுதியளிக்கப்படுவதன் காரணமாக (7:16-18; 12:49-50) சமாரியர்களையும் (4:41-42), கப்பர்நகூமின் அதிகாரியையும் (4:50) மனநிறைவு ஏற்படுத்தியது போலவும், உயிர்த்த உடலைத் தொடாமலே வார்த்தையை விசுவசித்தவர்களுக்கு மன நிறைவு ஏற்படுத்தியது போலவும் (20:29), அது மனநிறைவு ஏற்படுத்த வேண்டும். ஆகவே, அவரது புதுமைகளைக் கண்டும் (6:36; 7:3; 15:24) விசுவசிக்க மறுப்பவர்கள் (7:5; 12:27) மன்னிக்கப்பட முடியாதவர்களாவர் (9:41; 15:24) என்பதற்கு அதிக காரணங்கள் உள்ளன.

ஆ). அவரது புதுமைகளின் சாட்சியத்தைப் பலர் புறக்கணித்தனரெனில் (யோவா 5:36) அதற்குக் காரணம் ஆன்மீகச் சோர்வு (6:15,26) அல்லது சட்டரீதியான அகந்தை (5:16; 7:49,52; 9:16), பொறாமை (12:11) மற்றும் போலி விவேகம் (11:47-48) முதலியன அவர்களைக் குருடாக்கியதாகும் (9:39; 12:40). ஒத்தமை நற்செய்திகளில் புதுமைகளுக்கு முற்பட்ட விசுவாசத்தை உருவாக்கும் இறைவனிடம் ஒப்படைத்து, அவர்பால் திறந்த மனநிலையோடு இருத்தலை அவர்கள் கொண்டிருக்கவில்லை (மாற் 5:36; 9:23; 10:52). இவையில்லாமல் இயேசுவும் கிட்டத்தட்ட வல்லமையற்றவராகவே தோன்றுகிறார் (மத் 13:58). இம்மனிதர்கள், பாலைவன இஸ்ராயேலரைப் போலவும், சமீபச் சோதனைகளில் சாத்தானைப் போலவும் (4:3-7) இயேசுவைச் சோதனைக்கு உட்படுத்தவே அருங்குறி கேட்கின்றவர்களும் (16:1), அவர் பேய்கள் ஓட்டுவதை அவரது இயற்கைக்கு மேம்பட்ட வல்லமைக்கு உட்படுத்தாமல், பேய்களுக்கு உட்படுத்தவே விரும்புகின்ற வர்களுமான (மாற் 3:22,29-30) இவர்கள் காலங்களின் அருங்குறிகளை எவ்வாறு விளக்கமுடியும்? (16:3). கடினமாக்கப்பட்டு, வார்த்தைக்கு மூடப்பட்ட இதயங்களுக்கு அவர்கள் நம்பும் அருங்குறிகள் புரியாதவைகளாகவே உள்ளன.

அத்தலைமுறையானது யோனாவின் அருங்குறியைத் தவிர வேறு அருங்குறியைப் பெறாது (மத் 12:39-40). தனது உயிர்ப்பின் நாளுக்கென, அதாவது அவரது குறிப்பிடத்தக்க அருங்குறியின் நாளுக்கென இயேசு தனது பகைவர்களுடன் ஒரு சந்திப்பைத் திட்டம் செய்துள்ளார். ஆனால், சான்று நாடுவோருக்கு இந்த அருங்குறியும் எளிதாக எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடியதாகும். ஏனெனில், அதனை நிரூபிப்பதற்கான சாதனங்கள் அனைத்தும் மறைமுகமானவை (வெறுமையான கல்லறை, சிலருக்கான காட்சிகள்: மத் 28:13-15; லூக் 24:11). விசுவாசத்தினுடைய இறுதியான ஆதாரமாக இருக்க வேண்டியதே முதலில் விசுவாசத்தினுடைய மேலான சோதனையாக இருக்க வேண்டும்.

IV. திருச்சபையில் புதுமைகள்:

1. **உண்மைகள்:** உயிர்ப்பினுடைய அருங்குறியும், புதிய யாத்திரையின் உச்ச நிலையும் (யோவா 13:1) அதனின்று பிறந்த திருச்சபைக்கு முந்தைய அனைத்து வரலாற்றிற்குமான திறவுகோலை அளித்துத் தான் அடைந்த மீட்பினுடைய முழுமையான இறந்தோரின் உயிர்ப்பை அறிவிப்பதற்கு முன்பும், தான் தோற்றுவித்த விசுவாசத்திற்கு மனிதரை நடத்துவதற்கு முன்பும் ஒரு புதிய அருங்குறிகளின் தொடரைத் தொடங்கியது (1 கொரி 15:20-28; உரோ 4:25).

2. **நற்செய்தியின் பாஸ்கா ஒளிமயம்:**

அ) தனது நற்செய்தியிலும் போதனையிலும் ஒரு முக்கிய இடத்தை உயிர்ப்பிற்கு அளிக்கின்ற திருச்சபைக்கு, முற்பட்ட அருங்குறிகளின் முழுப் பொருளையும் உயிர்ப்பானது தெளிவுபடுத்தியது. அந்தப் போதனையின்படி இந்த அருங்குறிகள் இயேசுவுக்குச் சான்று பகர்ந்து (அ.ப. 2:22) அவரது நன்மைத் தனத்தை வெளிப்படுத்துகின்றன (10:38); ஒவ்வொரு ஒத்தமை நற்செய்தியும் திருச்சபையினுடைய சிந்தனையின் வளர்ச்சிக்குச் சான்று பகரும் விதமாகத் தனக்கே உரிய கருத்தினை விவரிக்கிறது. இந்த வேறுபட்ட கருத்துகளை, உதாரணமாக, பேய்பிடித்த சிறுவனைப் பற்றிய மூன்றுவித விவரிப்புகளில் காணலாம். லூக் 9:37-43 நன்மைத்தனத்தின் மாண்பினை விவரிக்கிறது. மத் 17:14-21-ஆனது இயேசுவினுடைய யாவும் கடந்த நிலையிலும், அவரது வல்லமையில் பங்கு பெறும் சீடர்களிலும் அக்கறை கொண்டுள்ளது. யோவானின் அடையாளவியலை ஏற்கெனவே தோராயமான வரை முறையில் முன்னறிவிக்கின்ற குறிப்பிடத்தக்க பகுதியில் மாற் 9:14-29-ஆனது, சாத்தானின் மீதான வாழ்வின் தலைவரது வெற்றியைப் புகழ்ந்துரைக்கிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் உயிர்ப்பின் ஒளியில் பொருளின் புதிய ஆழத்தைப் பெறுகின்ற தெளிவான நிகழ்ச்சிகளும் உள்ளன. புதுமைகள் வழியைத் தயாரித்த இறைமகன் தன்மையினை அறிவிப்பது (மத் 14:33; 27:54) அதனுடைய முழுமையான பொருள் செறிந்த உணர்வில் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதே உறுதியாக நற்செய்தியாளர்களின் எண்ணமாகும். பிற்கால உண்மைகளின் பொதுக்கோட்பாடுகளைக் குறிப்பிட்ட புதுமைகளில் தியானிக்க வேண்டும். எ.கா. அப்பங்களைப் பலுகச் செய்வதில் நற்கருணையும், அதிசயமான முறையில் மீன்களைப் பிடிப்பதில் அப்போஸ்தலத்துவமும் (லூக் 5:1-11) கண்டுணரப்பட வேண்டும்.

ஆ) யோவான்: இவர் இதற்கு அப்பாலும் செல்கிறார். பழைய யாத்திரையைச் செய்து முடித்து (எண் 14:22), புதியதன் காலத்தை எதிர்பார்க்கும்போது, இந்த அடையாளங்கள், "மகிமையின்" ஒருபகுதியை ஏற்கெனவே வெளிப்படுத்தியுள்ளன (யோவா 2:11; 11:40) என அவர் சுட்டிக் காட்டுகிறார். அஃது, இயேசுவின் "உயர்த்தப்படுவதில்" தன்னை வெளிப்படுத்தியதாகவும் (17:5), மனுவுருவான வார்த்தையினின்று வெளிவரும் மீட்பின் வல்லமையினுடைய மேன்மையாகவும் உள்ளது (1:14). உள்ளவாறே, மறையுரையுடன் பிணைந்துள்ள இந்த அடையாளங்களில் ஒவ்வொன்றும் தூய்மைப்படுத்துகின்ற, மன்னிக்கின்ற, உயிரூட்டுகின்ற, ஒளிமய மாக்குகின்ற, வாழ்விற்கு மீண்டும் அழைக்கின்ற பின்னணியில் அமைகின்றது (2:6; 5:14; 6:35; 9:5; 11:25). பல அருங்குறிகள் திருச்சபையில் அதனுடைய வல்லமையின் விளைவுகளைப் பங்கிடவும் செய்கின்ற அருட்சாதனங்களையும் (திருமுழுக்கு, நற்கருணை...) அடையாளப்படுத்தி, மன்னா முதலிய பண்டைக்கால அடையாளங்களையும் செயலில் விஞ்சுகின்றன (6:32. 49-50). மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவெனில், தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான நெருங்கிய உறவினை வெளிப்படுத்துவதற்காக (5:17; 10:37-38; 14:9-10), நிறைவேற்றுமாறு தந்தை மகனுக்கு

அளிக்கின்ற செயல்களே இந்தப் புதுமைகள் என்பதாகும் (5:36). உயர்ந்த அடையாளமாக உயர்த்தப்பட்ட இயேசுவின் பக்கத்தினின்று (12:3; காண்க 3:14; எண் 21:8) வெளிப்படும் வாழ்வினுடைய செயல்திறனுள்ள அடையாளங்களை உற்று நோக்குவதென்பது (யோவா 19:34), இயேசுவே கிறிஸ்து திருச்சபையில் செயல்புரியும் இறைவனின் மகன் மற்றும் அவரது பெயரில் வாழ்வை அடைய வேண்டும் என்று விசுவசிப்பதாகும் (20:30-31). மேலும், தந்தை மற்றும் மகனுடைய பொதுவான மகிமையைத் தியானிப்பதும் (11:4), மூவொரு இறை உறவுகளின் மட்டத்தில் ஒருவரை அமர்த்துவதும் என்று இது பொருள்படும்.

3. ஆவியின் காலம்: அ) இயேசு இன்னும் அவர்களுடன் இருப்பதன் காரணமாக (மத் 28:20), பெந்தகொஸ்தேவின் இறைப்புதுமைகள் தொடங்கி அப்போஸ்தலர்கள் அவரது மீட்புச்செயல்களைப் புதுப்பிக்க வேண்டுமென்பது வியப்பூட்ட வேண்டியதில்லை (அ.ப. 3:1-10). ஏனெனில், கிட்டத்தட்ட நிலையான இந்த வல்லமையை அவர் அவர்களுக்கு வாக்களித்து (மாற் 16:17-18), அதை உபயோகிப்பதிலும் அவர்களுக்குச் சிறிது பயிற்சியளிக்கிறார் (மத் 10:8).

அவர்கள் செயல்படுத்திய செயல் ஆற்றலானது உயிர்த்த இயேசுவின் மீட்பின் வல்லமையை உறுதியாக வெளிப்படுத்தி (அ.ப. 3:6.12.16; உரோ 1:4), நற்செய்தி வார்த்தையின் தூதுவர்களுக்குச் சான்றளிப்பதன் மூலம் மனிதரை விசுவாசத்திற்குக் கொண்டு செல்கிறது (மாற் 16:20; 1 கொரி 2:4). இவ்வாறு, புதுமைகள் மற்றும் வார்த்தைக்கு இடையிலான அவசியமான தொடர்பும், அவைகளின் இருவித நோக்கமாகிய காப்புரை மற்றும் மீட்பு முதலியனவும் உறுதிப்படுத்தப்படுகின்றன. இங்கே அருங்குறிகளின் படிமரபைக் காண்கிறோம். செவிச் சான்றின் மதிப்பு (எபி 2:3-4), மறைபரப்பாளர்களின் மாறாத் தன்மை (2 கொரி 12:12), உறுதி மற்றும் பற்றற்ற தன்மை (1 தெச. 2:2-12) முதலியன இந்த "அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள்" ஆகியவற்றுடன் சேர்ந்து, போலி இறைவாக்கினரிலிருந்து இறைவனுடைய உண்மையான தூதுவர்களை வேறுபடுத்துகின்றன (அ.ப. 8:9-24; 13:4-12). இவை அனைத்தும் தூய ஆவியினுடைய வல்லமையின் மூலமாகச் செய்து முடிக்கப்படுகின்றன (1 தெச 1:5; 1 கொரி 2:4; உரோ 15:19).

ஆ) திருச்சபையின் தொடக்கம் முதல், குறிப்பிட்ட விசுவாசிகளின் நம்பிக்கையான செபங்களுக்கு ஆவியானவரும் புதுமைகளை அளித்தார் (மத் 21:21-22; யாக் 5:16-18). வியத்தகு அருங்கொடைகள் (யோவா 14:12) போதிக்கும் உயர் கொடைகளின் கீழ் உட்படுத்தப்பட்டு (1 கொரி 12:28-29), இறுதியாகக் கிறித்தவ வாழ்வில் உயரிய அதிசயமாகிய அன்பிற்குக் கீழும் உட்படுத்திக் கூறப்பட்டன (13:2). இக்கொடையானது, ஓரளவு அதே பங்கினை வகிக்கின்ற அருட்சாதனங்களுடன் இணைந்து இருக்கின்றது (மாற் 6:13; யாக் 5:13-15). ஆனால், இதனுடைய ஆன்மீக செயல்திறனானது, உயிர்ப்பை நோக்கி ஆவியை மிக நேரிடையாகத் திசை திருப்புவதும், அனைத்துப் படைப்பையும் மீண்டும் அமைப்பதுமான அருங்குறிகளுக்கு இடமளிக்கிறது (உரோ 8:19-24; திருவெளி 21:4).

அதே நிலையானது இன்றும் நிலவுகிறது. உண்மையில் நமது கால உலகானது, மனிதரை விசுவாசத்திற்கு நடத்திச் செல்வதற்கெனத் திருச்சபையினுடைய பல்வேறுபட்ட ஒழுக்கப் புதுமையினைக் கொண்டுள்ளது. இஃது இறைபிரசன்னத்தினுடைய உறுதியான அருங்குறியாகிய வீரமிக்க ஒன்றுபடுத்தும் அன்பினுடைய புனிதரின் மாட்சியில் சிறப்பாகக் காணப்படுகிறது (யோவா 13:35; 17:21). ஆனால், நமது கவனத்தை வார்த்தை மற்றும் உறுதியான அரசை நோக்கித் திருப்பவும், மனிதனை முதலில் மனமாற்றத்திற்கும் பின்னர் மறு மனமாற்றத்திற்கும் தூண்டியெழுப்பவும் (மத் 18:3), இறை அன்பை உயிருள்ள செயல்களாக

மாற்றவல்ல இயற்பியல் சார்ந்த புதுமைகள், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுக் காலங்களில் இருந்தது போன்று, தொடர்ந்து உள்ளன. முற்காலங்களில் இருந்தது போன்றும் இன்றும் இம்மொழியானது தற்பெருமையாளர்களுக்கும் சமயப் பற்றற்றவர்களுக்கும் அறிந்து கொள்ள முடியாததாக உள்ளது. ஆனால், "இறைவனால் இயலாதது ஒன்றுமில்லை" (ஆதி 18:14 = லூக் 1:37) என்பதை அறிந்தவன், ஒரு நிகழ்ச்சியின் சமயப் பின்னணியானது இறைவனே அறிகுறியை அளிப்பவர் என்று சுட்டிக் காட்டும்போது, விசுவாசம் மற்றும் அன்பினுடைய கோரிக்கைகளுக்குத் தனது இதயத்தைத் திறக்கும் போது தயாராகப் புரிந்து கொள்கிறான்.

புத்தயோலி (PUTEOLI)

நேப்பிள்ஸ் வளைகுடாவில் அமைந்த நகரம் புத்தயோலி. பவுல் உரோமைக்குச் செல்லும் வழியில் இறங்கிச் சென்ற துறைமுகம் இதுவே (அ.ப. 28:13). இன்று இந்நகரம் 'புஸ்ஸோலி' எனப்படுகிறது.

பைசாந்தியத்திலிருந்த ஸ்தேவான், கிரேக்கத் தீவான சாமுவிலிருந்து வந்த சமியர்கள் **(Samians)** தங்களின் வாழ்வைத் தொடங்கியது இங்குதான் என்கிறார். ஆனால், ஸ்திராபோ, இந்நகரம் கிரேக்கர்களின் குடியேற்றங்களில் மிகப்பழைமையான கூமே துறைமுகநகரமாக மட்டும் இருந்தது என்கிறார். கி.மு.6-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டிருக்கும் இந்நகரின் பெயர் திகேயார் கியவாகும். கி.மு. 215-இல் கனிபால் இத்தாலியில் நுழைந்த பொழுது, உரோமையர் இங்கு ஒரு படையை நிறுத்தி வைத்திருந்தனர். பிறகு இதன் பெயர்- புத்தயோலி என மாற்றப்பட்டது. கி.மு. 194-இல் புத்தயோலி ஓர் உரோமைக் குடியேற்ற நகரமாகியது. அப்பொழுது அங்கு 300 உரோமைக் குடிமக்கள் குடியேறினர். அகுஸ்து காலத்திலும் இஃது தொடர்ந்தது.

கந்தகம் ஏற்றுமதி செய்யப்படும் பகுதியில் புத்தயோலி இருந்தது. மேலும், இங்கு எல்லா வகையான உலோகத் தளவாடங்களின் நுணுக்க வேலையும் செய்யப்பட்டன. வங்கி உரிமையாளர்கள் பலர் இருந்தனர். குளுவியு என்பவர் சிறிய ஆசியாவிலுள்ள ஐந்து சமூகங்களுக்குக் கடன் கொடுத்திருந்தார். அகுஸ்துவின் காலத்தில் இது மிக முக்கியமான துறைமுக நகரமாகியது. பின்னர் திரேசவ், ஒஸ்தியா எனுமிடத்தில் துறைமுகம் கட்டிய பின்னே இதன் முக்கியத்துவம் குறைந்தது. இங்கு கிடைக்கும் சுண்ணாம்பு, எரிமலைச் சாம்பல் ஆகியவற்றைக் கலந்து மிக உறுதியான கப்பல் தளங்களைக் கட்ட முடிந்ததால், பெரிய கப்பல்களும் இவ்வளைகுடாவில் பத்திரமாக வந்து நங்கூரம் பாய்ச்ச வசதி ஏற்பட்டது. எனவே, உரோமைக்குச் செல்லும் பயணிகளும், அலக்சாந்திரியாவிலிருந்து தானியங்கள் சுமந்து சென்ற கப்பல்களும் இங்குத் தங்கிச்சென்றன. செனேகா, புத்தயோலி நகர மக்கள் ஆவலுடன் அலக்சாந்திரியக் கப்பல்கள் வந்து நிற்பதைப் பார்த்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

இவை புனித பவுல் பயணம் செய்த கப்பல் போன்றவையே (அ.ப. 27:6). சுடோனியு **(Suetonius)** பவுல் போலவே, தீத்து எருசலேமின் அழிவுக்குப்பின் உரோமை செல்லும்போது இங்கு இறங்கிச் சென்றார் என எழுதி வைத்துள்ளார்.

இங்குச் 'செராபியம்' எனும் பெயரில் ஒரு சந்தையும், அகுஸ்துவின் கோவிலொன்றும், ஒரு பெரிய பந்தயத்திடலும் இருந்தன என்று அகழ்வாய்வுகள் காட்டுகின்றன.

பவுல் புத்தயோலியில் சகோதரர்களுடன் ஏழு நாட்கள் தங்கி இருந்ததால் இங்கு ஏற்கெனவே கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது. ஆனால், இங்கு இக்கிறிஸ்தவ சமூகம் எவ்வாறு தோன்றியது எனத் தெரியவில்லை. பவுல் ஸ்பெயினுக்குச் சென்றபின் செசரியாவிலிருந்து கப்பல் வழியாகப் புத்தயோலிக்குப் பேதுரு வந்து சேர்ந்தார் எனப் 'பேதுருவின் பணிகள்' எனும் நூலில் கூறப்படுவது வெறும் கற்பனைக் கதையென ஒதுக்கப்படுகிறது.

புத்தாண்டு (NEW YEAR)

புதிய நாட்காட்டி, ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கும் நாளாகும். இந்நாளில் பழங்கால மேற்காசியா முழுவதும் பலவகை விரிவான கொண்டாட்டங்கள் கடைப்பிடிக்கப்பட்டன.

எகிப்தில் ஓருஸ் தேவரின் சிலை அவரது ஆலயத்திலிருந்து வெளிக்கொண்டு வரப்பட்டது. சூரிய ஒளி சிலையில் படுவதால், அவரது ஆன்மாவும் உடலும் ஒன்றிணைவதாகக் கருதினர். பாபிலோனிலும் அசீரியாவிலும் "அகிட்டு" என்ற வசந்தகால விழா, புத்தாண்டு நாளோடு தொடங்கியது. பதினோரு நாள் கொண்டாட்டத்தில், மார்துக்கின் மேலாண்மை கொண்டாடப்பட்டது; கோவில் தூய்மைப்படுத்தப்பட்டது; அரசனது அதிகாரம் புதுப்பிக்கப்பட்டது. பாபிலோனியப் படைப்பு இதிகாசம் மார்துக்கின் முன் வாசிக்கப்பட்டது. வரும் ஆண்டின் நிகழ்ச்சிகள் முன்னறிவிக்கப்பட்டன. கானானிய இதிகாசத்தில் செழிப்பின் கடவுளான பாகாலின் இறப்பும் மீண்டும் உயிர் பெறுதலும், இலையுதிர் காலத்தில் வரும் புத்தாண்டோடு தொடர்புபடுத்தப்படுகின்றன.

இஸ்ராயேலில் புத்தாண்டு விழாவின் தன்மை மற்றும் நாள்பற்றிப் பெரிதும் புலமைமிக்க வாதங்கள் நடந்துள்ளன. ஆனால், விவிலியத்தில் இது பற்றிய குறிப்புகள் குறைவாய் இருப்பது இந்த ஆய்வுக்குத் தடையாக இருக்கிறது. அறிஞர் சிலர், புத்தாண்டு விழாவை விவசாய விழாவோடு, சிறப்பாக இலையுதிர் காலத்தில் வரும் அறுவடை விழாவோடு தொடர்பு படுத்துகின்றனர் (எ.கா. எக்காள விழா, லேவி 23:23-25; எண் 29:1-6). வேறு சிலர் சில "அரியணை ஏறும்" சங்கீதங்கள் (சங் 47:93; 96-100) யாவே அரியணை ஏறுவது பற்றிய வருடாந்திர விழாவுக்குரிய வழிபாட்டைச் சேர்ந்தவை என்று கருதுகின்றனர். பழங்கால மேற்காசிய விழாக்களுக்கும் இஸ்ராயேலர் விழாக்களுக்கும் இடையில் பல இடைவெளிகள் உள்ளதால் எதையும் உறுதியாகக் கூறுவதற்கில்லை.

இவ்விதமே, இஸ்ராயேலரின் புத்தாண்டு இலையுதிர் காலத்திலா (திஸ்ரி மாதத்தின் முதல்நாள், செப்டம்பர் - அக்டோபர், புரட்டாசி), வசந்த காலத்திலா (நீசான் மாதம் முதல்நாள், மார்ச் - ஏப்ரல், பங்குனி) எப்பொழுது கொண்டாடப்பட்டது என்ற பிரச்சனைபற்றி எதுவும் உறுதியாகச் சொல்ல முடியாது. யாத் 12:2-இல் இறைவன், மோசே மற்றும் ஆரோனிடம் ஆபீபு (நீசான்) மாதம் ஆண்டின் முதல் மாதமாய் இருக்கும் என்று கூறுகிறார் (காண்க. யாத் 13:4; 23:15; 34:18; 40:2.17; உப 16:1). 1 அர 6:1-இல் சீவு (இய்யார், ஏப்ரல் - மே, சித்திரை) மாதம் இரண்டாம் மாதம் என்று குறிக்கப்படுவதால் நீசான் மாதம் முதல் மாதமாகும். இதே போல் கிசிலேவு (நவம்பர் - டிசம்பர், கார்த்திகை) மாதம் ஒன்பதாவது மாதம் என்று எரே 36:22-இல் குறிக்கப்பட்டுள்ளது. எசே 40:1 "ஆண்டின் தொடக்கத்தைப்" பற்றிக் கூறுகிறது. எசேக்கியேலின் நாட்காட்டி நீசான் மாதத்தில் தொடங்கும் புத்தாண்டைக் கொண்டது. ஆகவே, எசேக்கியேலின் குறிப்பு வெறுமனே ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

லேவி 25:9 யூபிலி ஆண்டு இலையுதிர் காலத்தில் தொடங்குவதாகக் குறிப்பிடுகிறது. நெகே 1:1; 2:1 ஒன்பதாம் மாதமாகிய கிசிலேவுவை முதல் மாதமாகிய நீசானுக்குமுன் குறிக்கிறது. இஃது இலையுதிர் காலப் புத்தாண்டைக் குறிக்கலாம். யூபிலி ஆண்டு விவசாய நாட்காட்டியைப் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. இஃது, இக்காலப் பொருளாதார ஆண்டு அல்லது கல்வியாண்டைப்போல், அதிகாரபூர்வமான புத்தாண்டைக் குறிக்காமலிருக்கலாம் (காண்க. யாத் 34:22. இதுவும் ஒரு வேளை விவசாயக் கணிப்பைப் பிரதிபலிக்கலாம்). நெகே 8:2. 14-15 இலையுதிர்காலத் கூடார விழாவை ஏழாவது மாதத்தில் குறிப்பதால், இஃது, இஸ்ராயேலர் அப்போது வசந்த காலத்தில் தொடங்கிய நாட்காட்டியைப் பயன்படுத்தினர் என்று காட்டுகிறது. சுருக்கமாக, புத்தாண்டு பற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் தெளிவற்றவையாக அல்லது ஐயத்திற்கு உரியவையாக உள்ளன.

ஆனால், கிடைத்திருக்கும் சில சான்றுகள் நீசான் மாதம் முதல்நாள் புத்தாண்டு கொண்டாடப்பட்டது என்பதற்குச் சார்பாக உள்ளன. இதிலிருந்து, இஸ்ராயேலில் மிகுந்த பொருள் பொதிந்த சமயவிழாக்கள் புத்தாண்டின் சிறப்பைக் குறைத்து விட்டதாலேயே, அதுபற்றிய குறிப்புகள் சிலவே கிடைத்துள்ளன என்று தோன்றுகிறது.

புதிய ஏற்பாட்டில், இந்தப் புத்தாண்டு பற்றிய எக்குறிப்பும் இல்லை. விவிலிய காலத்திற்குப் பின்வந்த யூதத்துவத்தில், திஸ்ரி மாதத்தின் முதல் நாள் புத்தாண்டாகக் கொண்டாடப்பட்டது. இஃது இறைவனது படைப்புச் செயலை நினைவுகூர்தலாகவும், ஒருவர் தம்மைப் பற்றியே சிந்தித்தறியும் நாளாகவும் கொண்டாடப்பட்டது.

புத்துயிர் பெறுதல் (REGENERATION)

கிறித்தவ சமயத்திலே நுழைதல் ஒரு புத்துயிர் பெறுதல் என யோவான், பேதுரு ஆகியோரின் திருமுகங்களுக்குப் புறம்பே புதிய ஏற்பாட்டில் அரிதாகக் காணப்படும். பழைய ஏற்பாட்டில் இதைப் பற்றிய முன்குறிப்பு இல்லை. இரகசிய வழிபாடுகளில் இத்தகைய நுழைவு புதுப்பிறப்பு என வழங்கப்பட்டது. அதிலிருந்தே புதிய ஏற்பாடு இக்கருத்தைக் கையாண்டிருக்க வேண்டுமென அறிஞர்கள் சுட்டிக்காட்ட முயன்றிருக்கின்றனர். ஆனால், இவற்றுக்கான தெளிவான ஆதாரம் இல்லை.

யோவானின், முதலாம் திருமுகம் இறைவனிடமிருந்து பிறந்தவன் நீதியைக் கடைப்பிடிக்கிறான் (2:29), அயலானை அன்பு செய்கிறான் (4:7), இயேசுவை மெசியாவென நம்புகிறான் (5:1) எனக் கூறுகிறது. இந்தப் புத்துயிர் பெறுதலின் விளைவாக மனிதன் பாவம் செய்வதில்லை; செய்யவும் முடியாது. ஏனெனில், அவன் இறைவனிடமிருந்து பிறந்துள்ளான் (3:9; 5:18). இது மனிதர்களைக் கடவுளின் நிலைக்கு உயர்த்துகிறது. புத்துயிர் பெறுதலால், கிறிஸ்து உலகை வென்றதுபோல் (யோவா 16:33), அவன் உலகை வெல்கிறான் (5:4). யோவான் நற்செய்தியிலே கடவுளில் பிறந்தவர் அவரது பெயரை நம்புகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் இரத்தத்தினாலோ, உடல் ஆசையினாலோ, ஆண்மகன் கொள்ளும் விருப்பத்தினாலோ பிறவாமல், கடவுளாலேயே பிறந்தவர்கள் (1 யோவா 1:13). அவர்கள் புதிய வாழ்க்கை வாழ்கின்றனர். இறை மூலம் கொண்ட புதிய தன்மையைக் கொண்டுள்ளனர். இப்புதுப்பிறப்பு திருமுழுக்கு ஆகும். இஃது ஆவியின் பிறப்பாகும் (யோவா 3:3-8).

முதலாம் பேதுரு திருமுகத்திலே கிறிஸ்தவர்கள் கலப்பற்ற ஞானப்பாலை அருந்தும் புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் ஆவர் (1 பேதுரு 2:2). இறந்தோரிடமிருந்து எழுந்த இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால், இறைவன் தம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப நமக்கு வற்றாத நம்பிக்கையைத் தரும் புதுப்பிறப்பை அளித்தார் (1:3). இங்கே புத்துயிர் பெறுதல் இறுதிக்கால நிறை வேற்றுதலை எதிர்நோக்குகிறது. இதே இறுதிக்கால நோக்கு 1:23-இலும் தென்படுகிறது. அழியா வித்தினால் கிறிஸ்தவன் புதிதாகப் பிறக்கிறான். இங்கே பிறப்பு உயிருள்ள மற்றும் நித்திய வார்த்தையினால் வருகிறது. இங்கே வார்த்தை நற்செய்திப் போதனையைக் குறிக்கிறது. திருமுழுக்கு புத்துயிர் பெறுதலின் முழுக்காகும்; தூய ஆவியால் வரும் புதுப்பித்தலாகும் (தீத் 3:5). மத் 19:28-இல் புத்துயிர் பெறுதல், யூத இறுதிக்கால நம்பிக்கையான, உடல் உயிர்ப்பையும், உலகப் புதுப்பித்தலையும் குறிக்கிறது.

புத்துயிர் பெறுதல் என்ற கருத்து- இரகசிய வழிபாடுகளின் தொனியை ஒருவேளை கொண்டிருப்பதால், இதற்குப் புதிய ஏற்பாட்டில் அதிக இடமில்லை. ஆனால், திருமுழுக்கு பழைய வாழ்க்கைக்கு மரித்துப் புத்துயிர் பெறுதல் என்ற கருத்து திருமுழுக்குப் பற்றிய பவுலின் கருத்தோடு நெருங்கிய இணைத்தன்மையுடையது. காண்க: புதிய பிறப்பு.

புப்பிலியு (PUBLIUS)

மால்தாத் தீவின் தலைவனான இவன் உரோமையில் உயர் அதிகாரியாய் இருந்திருக்க வேண்டும். உரோமைக்குச் செல்லும் வழியில் பவுலும், மற்ற உடன் கைதிகளும் கப்பல் சிதைவிலிருந்து தப்பி இத்தீவையே அடைந்தனர். ஆனால், தீவின் தலைவன் என்பது அந்நாட்டுத் தலைமை அதிகாரியையோ, உரோமை அரசின் அதிகாரியல்லாத வேறு ஏதேனும் ஒன்றைச் சார்ந்த அலுவலரையோ குறிக்கலாம்.

புப்பிலியு பவுலையும், அவருடன் வந்தவர்களையும் மூன்று நாட்கள் தன் இல்லத்தில் வைத்திருந்து நல் விருந்தளித்து அனுப்பினார் (அ.ப. 28:7). காய்ச்சலாலும் சீதபேதியாலும் நோயுற்றிருந்த இவரது தந்தையைப் பவுல் குணமாக்கினார் (28:8). இவர் ஒரு மறைசாட்சி மரணம் எய்தியவர் என்ற ஒரு மரபைச் சுட்டிக்காட்டுகிறார் எரோனிமு.

புயல் (STORM)

1. இது புயல், சூறாவளி அல்லது புயல் மழையைக் குறிக்கும். இஃது அழிவை உண்டாக்கக்கூடிய காற்றாகவோ, சுழற் காற்றாகவோ இருக்கலாம் (சங் 77:18; எசா 17:3). இத்தகைய காற்று பெரும்பாலும் மழைக்காலத்தில் தோன்றினாலும், உண்மையான புயல் கடற்கரைப் பகுதிகளில், காற்று நிலைகொள்ளாமல் இருக்கும் பனிக்காலத்தில் உண்டாகின்றது. இத்தகைய சூறாவளி குறுகிய பகுதிகளின் வழியாகச் செல்லும்போது அழிவை உண்டாக்கும். இதைப்போன்ற சூறாவளிதான் எலியா இறைவாக்கினரை விண்ணுக்கு எடுத்துச் சென்றிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. நெருப்புக் குதிரையும் தேரும், புயலின்போது ஏற்படும் இடி, மின்னல்களைக் குறிக்கும் அடையாளமே (2 அர 2:11; 2 அர 2:12; அப 3:8). குறைவான சக்திகொண்ட சூறாவளிகள் 'தூசிப் பேய்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இவை மிகவும் வெப்பமான மணற்பரப்பிலிருந்து உண்டாகக் கூடும் என்று கருதப்படுகிறது.

2. புறவினத்தாரின் விளக்கம்: பண்டைய மேற்காசிய நாடுகளில் புயலானது ஒரு கடவுளின் வெளிப்பாடாகக் கருதப்பட்டது (கானானில் பாகாலின் வெளிப்பாடு). இந்த வெளிப்பாடு மூன்று தனிச்சிறப்புகளை அளிக்கிறது. இவற்றிற்குமுன் மனிதனால் எதுவுமே செய்யமுடியாத அண்டச் சக்திகளாக வெளிப்படும்போது, புயலானது இறைவனுடைய அச்சுறுத்தும் மாட்சிமையினை வெளிப்படுத்துகிறது. மனிதனுக்கு அபாயமான தோற்றம் என்ற அளவில், இது கோபத்தின் அறிகுறியாக உள்ளது. மேகங்களில் மறைந்துள்ள கடவுள் தனது பகைவர்களுக்கு எதிராகப் பேசுகிறார் (இடி இடித்தல்); அவர்களுக்கு எதிராகத் தனது அம்புகளை (ஒளிரும் மின்னல்கள்) வீசுகிறார் (சங் 18:6-16). இறுதியாக, பலனுள்ள மழையைக் கொண்டு வருவதில் புயலானது இறைவனில் விளையும் வளத்தின் ஊற்றைக் காட்டுகிறது.

3. புயல், இறைமாட்சியின் அருங்குறி: விவிலிய மொழியில் ஒவ்வொரு பல தெய்வத் தொனியும், சிறப்பாக இனப்பெருக்கச் சடங்குகளுடன் தொடர்புடையதும் நீக்கப்படுகிறது. ஆனால், புயலானது ஒரு பொருளைத் தக்க வைத்துள்ளது. இது படைத்தவரின் பேராற்றலைப் பறைசாற்றும் அதிசயங்களில் ஒன்றாகவும் (எரே 51:16-17; சங் 135:7; யோபு 38:34-38), அவரது அச்சத்திற்குரிய மாட்சியின் மறைவான வெளிப்பாடாகவும் உள்ளது (யோபு 36:29-37:5). இறைவன் யாவும் கடந்த தனது நிலையில் அதற்கு மேலாக அரியணையில் அமர்ந்துள்ளார் (சங் 29). இவ்வாறு இறைவன் தன் மகிமையில் சித்தரிக்கப்படுகிறார் (யோபு 38:1; எசே 1:13தொ; 10:5; திருவெளி 4:5; 8:5தொ; 10:3தொ). உலகிலே இறைவனுடைய இடையீட்டை எழுப்பும் இறையாற்றல் தோற்றத்தின் பின்னணி இதுவே. இந்த இடையீடுகள் வரலாற்றைச் சேர்ந்ததாக இருக்கலாம். இவை யாத்திரைக் காலமாகவோ (சங் 77:19 தொ). சீனாய் மலையிலோ (யாத் 19:16-19), கானானில் புகுந்தபோதோ (நீதி 5:4-5), தமது அபிடேகம் பெற்றவரையும் (சங் 18) தம்

மக்களையும் (அப 3:3-16) தமது நிலையான அரசைத் தொடங்கி வைக்கும்போதோ (சங் 97:1-6) நிகழலாம். ஆயினும், இறைவன் புனித பயத்தைத் தூண்டுகின்ற மாட்சிமிகு தோற்றம் மட்டுமல்லர். ஏற்கெனவே, ஒரேபு மலையில் ஓர் உயரிய வெளிப்பாட்டினைப் பெறுவதற்கென, இந்த ஒரு சார்பு அருங்குறியைக் கடந்து செல்லுமாறு எலியா அழைக்கப்படுகிறார். தென்றலின் அடக்கமான மெல்லிரைச்சலில் மனிதனுடன் பேசக்கூடிய நெருங்கிய பிரசன்னமாகவும் இறைவன் உள்ளார் (1 அர 19:11-13).

4. புயல், **இறை சினத்தின் அருங்குறி:** மனிதரைப் பொருத்த அளவில் இறைவனுடைய மன நிலையை வெளிப்படுத்துவதற்கென, புயலானது இரு தன்மையுடைய ஐயப்பாடான அருங்குறியாக உள்ளது. வறட்சியில் இயற்கைக்கு இறைவன் அருளுடன் செழிப்பை அளிக்கும்போது நன்மை செய்யும் அருங்குறியாக உள்ளது (1 அர 18); தனது சினத்தின் அடையாளமாக இறைவன் தனது பகைவர்களுக்கு ஒதுக்கி வைத்துள்ள பயங்கர தண்டனைக் கருவியாகவும் இஃது உள்ளது (யாத் 9:13-34). இறைவன் தீர்ப்பிட்டுத் தண்டிக்கும்போது (எசா 30:27-29), சிறப்பாக, பாபிலோனுக்கு எதிராகத் தனது தண்டனைகளைச் செயல்படுத்தும் இறுதித் தீர்ப்பின் காலத்தில் (திருவெளி 16:18; காண்க. 11:19), புயலின் பயங்கர இறையாற்றல் தோற்றம் இறைவனுக்குப் பயன்படும் சிறப்பான கருவியாகிறது. இதன் காரணமாகவே, இந்தத் தீர்ப்பை முன்னோக்குவதன் வழியாக, இவ்வுலகின் அரசன் பாதாளத்தில் தள்ளப்படும் தருணத்தில் மகனுடைய மகிமையைப் பறை சாற்றும்போது, இறைக்குரலானது இடியின் முழக்கம்போல ஒலிக்கிறது (யோவா 12:28-32).

புயலுக்கு எதிராகத் தானே அவர்களுக்குப் புகலிடமாக இருப்பேன் எனத் தனக்குரியவர்களுக்கு இறைவன் உறுதியளிக்காவிடில் தீர்ப்பைப்பற்றிய முன்னோக்கு ஒருவனைப் பயத்தில் நடுங்கச்செய்யும். பாவ உலகம் மட்டுமே இந்த இறுதிக்காலத் தண்டனையால் அச்சுறுத்தப்படுகிறது (எசா 4:6). ஏனெனில், இறைவன் இடிக்கும் யூபித்தருக்கு அப்பாற்பட்டுள்ளார். தன்னை ஏற்காவர்கள்மீது நெருப்பு விழச் செய்வதில், தாம் மகிழ்ச்சி கொள்வதில்லை (லூக் 9:54-55) என்று "இடியின் மக்களை" இயேசு புரிந்து கொள்ளச் செய்கிறார் (மாற் 3:17). இயேசுவின் உருவில் நமக்கு அளிக்கப்படுகின்ற இறை அருளின் வெளிப்பாட்டினால் புயலின் இறையாற்றல் தோற்றம் நிறைவு செய்யப்படுகிறது (தீத் 2:11). "முரசொலியைக் கேட்கும்போதும், மின்னல் ஒளியைக் காணும்போதும் உலகம் நடுங்குகிறது; ஆனால், ஒரு கன்னியின் வயிற்றில் நீர் இறங்கும்போது, உமது அடியானது எந்தச் சப்தத்தையும் உண்டாக்குவதில்லை" (கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய கிறிஸ்தவச் செய்யுள்).

புரா (PURAH)

இவர் கிதியோன், மதியானியர் பாளையம் இறங்கியுள்ள இடத்திற்கு நடுநிசியில் அவர்கள் பேசுவதைக் கேட்டறியச் சென்றபோது, அவருடன் சென்ற ஊழியன் (நீதி 7:10-11).

புராணக்கதைகள் (MYTHS)

மேய்ப்புப்பணித் திருமுகங்களில் எச்சரிக்கப்படும் புராணக்கதைகளும் போலிப்போதகங்களும் கற்பனையான ஊகப்போதனைகள், முடிவேயில்லாத தலைமுறை வரலாறுகள் (1 திமொ 1:4; காண்க. தீத் 3:9). "உண்மையை விரும்பாத மனிதரின் கட்டளைகள்" (தீத் 1:14) ஆகியவற்றின் தொடர்பில் கூறப்படுகின்றன. மேலும், இவை "இலௌகீகக் கதை, பாட்டி கதைகள்" (1 திமொ 4:7) எனவும், "யூதக்க ட்டுக்கதைகள்" (தீத் 1:14) எனவும் விவரிக்கப்படுகின்றன. மேய்ப்புப்பணித் திருமுகங்களில் வரும் இந்தப் பகுதிகளில் காணப்படும் போலிப் போதகங்களிலிருந்து தோன்றும் சித்திரம் யூத (1 திமொ 1:7; தீத் 1:10),

ஞானவாதத் துறவு (1 திமொ 4:3; 6:20; 2 திமொ 2:18) கூறுகளின் கலப்பைக் கொண்டுள்ளது. இத்தகைய "புராணங்கள்" தலைமுறை வரலாறுகளைப் போன்றதாக இருக்கும். தலைமுறை வரலாறு என்ற சொல், பூமிக்கும் உண்மையான கடவுளுக்கும் இடையில் இருப்பதாகக் கருதப்பட்ட ஊழிகள் பற்றிய ஞானவாத விவரிப்பைக் குறிக்கும் சொல்லாகும். "புராணங்கள்" பாதகமான முறையில் 2 பேதுரு 1:16-இல் குறிக்கப்படுகின்றன. நற்செய்திப் போதகம் "சூழ்ச்சியாகப் புனைந்த கதைகளை" அடிப்படையாகக் கொண்டிருக்க வில்லை; மாறாக, நேரடிச் சாட்சிகளை அடிப்படையாகக் கொண்டது. இங்கு அண்டவியல் புராணங்களை ஞானவாதக் கோட்பாடு கொண்டிருப்பதும் வரலாற்றில் நிகழும் வெளிப்பாட்டை வலியுறுத்துவதும் எதிர்ப்புடையன வாக அமைந்துள்ளன.

புதிய ஏற்பாட்டில் இச்சொல் உண்மையல்லாத ஒன்றைக் குறித்தது; ஆனால், ஏதாவது ஒன்றிற்கு விளக்கமளிக்கவோ, விசுவாசத்திட்டத்தை அல்லது போதனையை வலியுறுத்தவோ, புனையப் பட்டதாகவோ, விரிவாக்கப்பட்டதாகவோ அது கருதப்பட்டது. இச்சொல் ஒன்று உண்மையோ பொய்யோ, அது சேர்ந்து காணப்படும் போதனைக்கு முக்கியமல்லாததைக் குறிக்கவும் பயன்பட்டது. அது புறத்திலிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கலாம். ஒரு விதத்தில், வெளிப்படையாகப் போதிக்கப்பட்டதை எடுத்துக் கூறாமல், போதனை மூலத்தில் கூறப்பட்ட சிந்தனை உலகைச் சேர்ந்ததாக இருக்கலாம். இந்த விளக்கத்திற்குப்பின், விவிலியத்தில் காணப்படும், குறிப்பாகப் பழைய ஏற்பாட்டில் காணப்படும் புராணக் கூறுகளைப் பற்றிப் பேசலாம். நீண்ட வரலாறு உடைய மக்களின் முழு இலக்கிய ஏட்டுத் தொகுப்பில் இத்தகைய கூறுகளைக் காணலாம். நாகரிகக் கூறுகளின் தோற்றம் பற்றிய விவரிப்புகள் (ஆதி 4:17.20-22), மக்களிடையே வேறுபாடுகள் தோன்றியது பற்றி விவரிப்பு (11:1-9), கடவுள்கள் கூடும் "வட புரத்து எல்லைப் பகுதியிலுள்ள பேரவை மலை" (எசா 14:13) பற்றிய குறிப்பு, படைப்புக் காலத்தில் வெல்லப்பட்ட கொடும்விலங்குகள் பற்றிய குறிப்பு (யோபு 26:12; சங் 74:13-14; எசா 51:9; காண்க. 3:8.15) ஆகியவை மேற்கூறப்பட்ட புராணக் கூறுகளையுடையவையாகும். இத்தகைய விரிவாக்கப்பட்ட புராணங்கள் பற்றிய சிந்தனைகளோடு புராண மொழியைப் பயன்படுத்தும் எளிய உருவக எடுத்துக் கூறல்களும் உண்டு. இந்த விதத்தில்தான் இடி இறைவனுடைய குரலாகக் கருதப்படுகிறது (2 சாமு 22:14); பூமிக்கும் தாயின் உதரத்துக்கும் இணைவுத் தன்மை காணப்படுகிறது (யோபு 1:21; சங் 139:15); "நாட்களின் நூல்" (சங் 139:16) குறிக்கப்படுகிறது. மற்ற மேற்காசிய மக்களின் இலக்கியங்களிலும் இதற்கு மிகவும் இணையான புராணக் கூறுகளைக் காணலாம்.

புராணக்கூறு, முக்கியப் பொருள் ஆகியவற்றிடையேயுள்ள வேறுபாடு விளக்கவுரையாளருக்கு ஒரு முக்கிய பிரச்சினையாகிறது. விளக்கவுரையாளரின் உலகநோக்கே, குறிப்பாக ஒரு குறிப்பிட்ட புராணக்கதை உண்மையான நிகழ்ச்சியைக் குறிக்கின்றதா இல்லையா என்ற பிரச்சினை எழும்போது, விளக்கத்தில் ஒரு துணைக்கூறு ஆகிறது. எடுத்துக்காட்டாக, பேய்கள் இருப்பதையே புறம்பாக்கும் உலகநோக்கில் வாழும் ஒருவர், இயேசு செய்யும் பேயோட்டுதலையும், தீமையின் எல்லா வடிவங்கள் மேலும் இயேசு கொண்டிருக்கும் கருத்தியலான ஆற்றலையும் கதைவடிவில் சித்தரிப்பதாக விளக்கம் கூறலாம். இவ்விளக்கத்தால் இயேசுவின் காலத்தைச் சேர்ந்தவர்கள் விசுவசித்த வடிவில் பேய்கள் இருத்தலையோ இல்லாததையோ பற்றி ஒன்றையும் அவர் நிரூபிக்கவில்லை.

நவீன விவிலிய ஆய்வில் ஒரு முக்கியமான வளர்ச்சி, புராணம் என்ற கருத்தைத் திருமுறை பொருள்கோள் சேர்ந்த கருவியாகப் பயன்படுத்துதலாகும். இதன் விளைவாக, புராணக் கூறுகளை அகற்றுவதில் அக்கறையும்

வளர்ந்துள்ளது. இதன் அடிப்படைக் கருதுகோள், அறிவியல் உலகில் வாழும் மக்கள் விவிலியத்தில் காணப்படும் புராணக் கூறுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும், அவை விவிலியத்தில் சேர்ந்து வரும் உண்மையான செய்தியைப் புரிந்துகொள்ள முடியாததாக அல்லது ஏற்றுக்கொள்ள முடியாததாக ஆக்குகின்றன என்பதும் ஆகும். ஆகவே நவீன மனுகுலம் ஏற்றுக் கொள்ளக்கூடிய புதியமுறையில் புராணங்கள் விளக்கப்படவேண்டும். ஆயினும், நிகழ்ச்சியின் புறநிலை உண்மையைப் பாதுகாக்காது. இயேசுவின் கன்னிப்பிறப்பு போன்றவை எடுத்துக்கூறும் உண்மையைப் பற்றி பேசுவது சரியானதா என்ற பிரச்சனை எழுகிறது. மேலும், கிறிஸ்தவ போதனையின் குறிக்க முடியாத மிகக்குறைந்த அளவைக் கூறுவதும், அதன் விளைவாக, அக வரம்பில்லாது புராணக் கூறுகளை நீக்கும் அலுவலுக்குரிய எல்லையை நிர்ணயிப்பதும் முடியாத காரியமாகும். மேலும், புராணம், அடையாளம் மற்றும் கதைகள் இல்லாமல் சமயமொழி இருக்கக் கூடும் என்ற கருத்து கேள்விக்குரியதாகும்.

புலம்பல் நூல் (LAMENTATIONS, BOOK OF)

1. **முன்னுரை:** இறைவன் அனுப்பும் துன்பங்களும், தண்டனைகளும் இருவகை மனநிலைகளை மனிதர்களிடையே ஏற்படுத்தலாம். சிலருக்கு, அவை மனம் புண்பட்டுக் கிளர்ச்சிக் குரல் எழுப்ப வாய்ப்பாக அமையலாம். மற்றவர்களுக்கு அவை அவர்களது மனசாட்சியை நேர்மையான முறையில் சோதித்தறியவும், மனம் வருந்திக் கண்ணீர் விடவும், இறைவனது தண்டிக்கும் கரம் ஒரு தந்தையினுடையது என்றும், அதே, கரம் மனந்திரும்பி வரும் மகனை வரவேற்று அரவணைக்க எப்போதும் விரிந்திருக்கிறது என்றும் ஆழ்ந்துணரவும் ஓர் அரிய வாய்ப்பாகும். பின்னதையொத்த ஓர் உன்னத உணர்வை உள்ளடக்கியதாகும் இந்தப் புலம்பல் நூல். யூதவரலாற்றில் ஓர் உன்னதமான, மென்மையான காலத்தைப் பாடல் வடிவில் வார்த்து, பாதுகாத்து நமக்கு அளிக்கிறது இந்நூல். அக்காலம் யூதா தனது குற்றத்தை மனமுவந்து ஏற்று மனம் வருந்தி இறைவனிடம் திரும்பி வந்த காலமாகும். இம்மாற்றத்தை எரேமியா நெடுங்காலமாகப் போதித்தார். ஆனால், அவரது இறப்புக்குப்பின்தான் அது நிகழ்ந்தது. அதை இந்நூல் படம் பிடித்துக்காட்டுகிறது.

2. **நூலின் பெயர்:** எபிரேய விவிலியத்தில் இந்நூல் "எப்படி! எவ்வாறு!" என்று வியப்புப் பொருள்படும் "எக்கா" **(Ekah)** என்ற தலைப்பைக் கொண்டுள்ளது. இச்சொல் எபிரேய இரங்கற் பாடல்களில் வழக்கமான தொடக்கச் சொல்லாகும். மூல நூலில் இச்சொல் 1:1; 2:1; 4:1-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தால்மூது நூலும், இராபிகளும், எரோனிமுவும் இரங்கற்பா அல்லது புலம்பல் என்று பொருள்படும் "கினோட்" **(quinot)** என்ற தெளிவான தலைப்பைப் பயன்படுத்துகின்றனர். இச்சொல் 2 நாள் 35:25-இலும் காணப்படுகிறது. இதற்கொத்த பொருளில் எழுபது நூல் "த்ரேனோய்" **(Threnoi)** என்றும் வுல்காத்தா வாசகம் "லாமென்டாசியோனெஸ்" **(Lemntationes)** என்றும், இந்நூலை அழைத்தன. தமிழில் புலம்பல் நூல் என அழைக்கிறோம்.

3. **திருமுறைப் பட்டியலில் புலம்பல்நூல்:** எபிரேய விவிலியத்தில் மூன்றாவதான "நூல்கள்" என்ற தொகுப்பில் ஒன்றாகும். இந்நூல், எழுபது நூலிலும் சீரியா வாசகத்திலும், வுல்காத்தா வாசகம் மற்றும் அதைத் தழுவிய மொழிபெயர்ப்புகளிலும் எரேமியா நூலுக்குப்பின் இடம் பெறுகிறது. இறைவாக்கினர் நூல்களில் ஒன்றாகக் கருதப்பட்டது .

இந்நூல், யூத விழாக் காலங்களில் வாசிக்கப்படும் ஐந்து சுருள்கள் அல்லது "மெகில்லோத்" **(Megilloth)** என்ற தொகுப்பில் மூன்றாவது நூலாகும். இஃது அபு மாதம் 9-ஆம் நாள், கி.மு. 587-86-இல் எருசலேம் எரியூட்டப்பட்டதை நினைவுகூரும் நோன்பின்போது வாசிக்கப்பட்டது. பிற்காலத்தில், அதே நாளில் கி.பி. 70-இல் எருசலேமை

உரோமையர் அழித்ததை நினைவுகூரும் நோன்பின்போது வாசிக்கப்பட்டது.

4. புலம்பல் இலக்கிய வகை: புலம்பல் இலக்கியம் பல வகைப்படும். இறந்தவர்களுக்காகப் பாடப்பட்ட புலம்பல் பாக்கள், சவுல், யோனத்தான் (2 சாமு 1:17-27), அப்னேர் (2 சாமு 3:33-34) ஆகியோர் இறந்த போது தாவீது பாடிய பாடல்களில் வருகின்றன. சவ ஊர்வலப் புலம்பல்களும் உண்டு. மற்ற மேற்காசிய மக்களைப் போன்று இஸ்ராயேலர் மரண அடக்கச் சடங்குகளைக் கொண்டிருந்தனர். இதில் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களோ (எரே 9:17; ஆமோ 5:16), இறந்துபட்டவரின் உறவினர்களோ (2 சாமு 1:17; 3:33) புலம்புவர். இப்புலம்பலில் இசைக் கருவிகள், குறிப்பாகத் தாரை இசைக்கப்படும் (மத் 9:23). இந்த இரங்கற் பாக்கள் எப்படி, எவ்வாறு என்று பொருள்படும் "எக்கா" **(Ekah)** என்ற சொல்லோடு தொடங்கும். மரணத்தால் ஏற்பட்ட ஆழ்ந்த மாற்றங்களைப் புலம்பல் பாக்கள் அறிவிக்கும். "எக்கா" என்ற தொடக்க விளிச்சொல் இந்த மாற்றத்தை அழுத்திக் காட்டும். இந்தப் புலம்பல் பாடல்களால் ஒருவர் தமது சொந்தத் துக்கத்தை எடுத்துக் கூறினார் என்பது உண்மையானாலும், இப்பாடல்கள் வழியாக இறந்த போனவருக்கு ஒரு சமயக் கடமையையும் செய்வதாக இஸ்ராயேலர் கருதினர் (யாத் 20:12). இப்பாடல்களில் யாவே என்ற இறைவனது பெயர் கூறப்படுவதில்லை. ஏனெனில், அவர் இறந்து பட்டவர்களின் இறைவன் அல்லர்; மாறாக, வாழ்வோரின் இறைவனாவார் (சங் 115: மத் 22:32).

இறைவாக்கினர் நூல்களும் புலம்பல் இலக்கியவடிவத்தைப் பயன்படுத்துகின்றன. நாடுகளின் வீழ்ச்சியையோ, தனி நபர்களின் அழிவையோ பற்றிக் கூறும் போது இறைவாக்கினர் புலம்பல் வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளனர் அவை; இஸ்ராயேல் (ஆமோ 5:2), சல்லூம் (எரே 22:11), யூதா (9:21 தொ), யூதாவின் தலைவர்கள் (எசே 19:12), தீர் (26:17; 27:32-36), தீரின் அரசன் (28:12-19), எகிப்து (32:19தொ), பாபிலோன் அரசன் (எசா 14:4-21).

மற்றப் புலம்பல் பாடல்களின் பொதுவடிவம் மன்றாட்டு வடிவமாகும். அதில் பாடகர் தமது தேவைகள் மற்றம் துரதிர்ஷ்டத்தைப் பற்றிப் புலம்பி, உதவி மற்றும் விடுதலை அளித்திடுமாறு யாவேயைப் பார்த்து மன்றாடுவார். சங்கீத நூலின் மூன்றில் ஒரு பாகம் இவ்வகையைச் சேர்ந்ததாகும். இப்புலம்பல் வகை தனி நபர்களுடையதாகவும் (எரே 11:18-23; 12:1-4; 15:10-12. 15-18; 17:14-18; 18:19-23; 20:7-12; எரேமியாவின் சுயவாழ்வு அறிக்கைகளின் பெரும்பகுதி), குழுத் தன்மையுடையதாவும், சமூகத்தின் பெயரால் கூறப்பட்டதாகவும் (எஸ் 9:6-15. நெகே 1:5-11; எசா 63:7-64; எரே 14:7-9. 17:22; ஓசே 6:1-8; யோவே 1-2) இருக்கும். சில சமயம் மக்கள் குழுவோ, நாடுகளோ ஒரு தனி ஆளாகப் பாவிக்கப்பட்டு, அந்த ஆளைப் பற்றிய புலம்பலாக நகைச்சுவைமிக்க வசைப்பாடலாக இருக்கும் (நாகூ 3:18-19; எசா 14:4-21; எசே 26:15-18; 27:3-36; 41:10-18; 42:17-18). சில சமயம் உடனடியாக வரவிருக்கும் நாடுகடத்தப்படுதல் (எரே 9:7-22), பொதுப் பேரிடர்கள் (எரே 14:2-6), அழிவுகள் (ஆமோ 5:2) ஆகியவற்றால் தூண்டப் பெற்று, நாட்டின் பெயரால் புலம்பல் பாடப்பட்டுள்ளது. சில புலம்பல்கள் மக்கள் கூட்டம் முன்னிலையில் கூறப்படுகின்றன. இவற்றில் பேரழிவுகள் பற்றி மக்கள் குழுவோ, அவர்களது பிரதிநிதிகளோ புலம்புவர். இப்புலம்பலுக்குப்பின் உருக்கமான மன்றாட்டுகளும் கூறப்படும் (சங் 74; 79; 89; எரே 14:2-6; எசா 63:7; 84). பிறபுலம்பல்கள் தனிநபர்த் தன்மையுடையான (சங் 3; 4; 5; 7; 22). இப்புலம்பல்களில் சில, புலம்பலுக்குப்பின் இறைவாக்குகளைக் கொண்டுள்ளன; இறை வழிபாட்டில் இறைவாக்கினர்களால் பேசப்பட்டன. இறைவாக்கினர்களின் இக்கூற்றுகள் சாதகமாய் இருப்பதைவிட, பெரும்பாலும் அச்சுறுத்தல் களாகவே அமைந்திருந்தன.

பழைய ஏற்பாட்டுக்கும் மெசபொத்தாமியாவின் வழிபாட்டில் பயன்பட்ட புலம்பல்களுக்கும் இடையில் வடிவத்திலும் பொருளடக்கத்திலும் ஓரளவு ஒற்றுமையுண்டு. செழிப்பின் கடவுளுடைய வழிபாட்டு மரணத்திற்காகக் கொண்டாடப்பட்ட புத்தாண்டு விழாவில், புலம்பல் பாக்கள் பயன்பட்டன. விவிலியப் புலம்பல்களுக்கும் பிற செமித்தியப் புலம்பல்களுக்குமுள்ள உறவை இஸ்தார் தேவதை பற்றிய புலம்பலிலும், "ஒரு கடவுளுக்குச் செபம்" என்ற பாடலிலும் காணலாம். இரண்டிலும், முன்னுரையும் குற்ற அறிக்கையும் அடங்கியுள்ளன. புலம்பல் நூலின் பாடல்கள் கி.மு. 2000-ஐ ஒட்டி வீழ்ந்த ஊர் என்ற நகர் பற்றிய சுமேரியப் புலம்பலுக்கு ஒத்தவையாகக் கருதப்படும். ஆனால், தலைப்பும், புலம்பல் தன்மையும் தவிர இரண்டிற்கும் வேறு எந்தத் தொடர்பும் இல்லை.

5. **புலம்பல் நூல்:** மேற்கூறப்பட்ட பல பண்புகளும் புலம்பல் நூலில் காணப்படுகின்றன. இஃது ஒரு தொகுப்பு நூலாகும். மேலும், இந்நூல் மற்றுமொரு பண்பைக் கொண்டது. இதன் ஒவ்வொரு அதிகாரமும் அகரவரிசை அமைப்பைக் கொண்டிருக்கிறது. எபிரேய மொழியில் 22 எழுத்துகள் உண்டு. இவற்றை வரிசைப்படி முதல் எழுத்தாகக் கொண்டு ஒவ்வோர் அடியும் தொடங்கும். இவ்வாறு 1:1 ஆலபு **(Aleph)** என்ற முதல் எழுத்தோடும், 1:2 பேத்து **(Beth)** என்ற அடுத்த எழுத்தோடும் தொடங்கும். இவ்வாறு 1, 2, 3, 4 அதிகாரங்கள் 22 அடிகளைக் கொண்டுள்ளன. முதல் மூன்று அதிகாரங்கள் மூன்று வரிகளைக் கொண்ட அடிகளைக் கொண்டுள்ளன. நான்காம் அதிகாரம் இரண்டு வரிகள் கொண்ட அடிகளைக் கொண்டுள்ளது. மூன்றாம் அதிகாரத்தில் அகரவரிசை மிகக் கடுமையாகக் கடைபிடிக்கப்படுகிறது. அதில் ஒவ்வோர் அடியின் மூன்று வரிகளும் அதே எழுத்தோடு தொடங்கும். ஐந்தாம் அதிகாரம் அகர வரிசையில் இல்லை. ஆனால், 22 அடிகளைக் கொண்டுள்ளது. அகரவரிசை அமைப்பைப் பழைய ஏற்பாட்டின் பிறபகுதிகளிலும் காணலாம் (நாகூ 1:2-8; சங் 9-10; 25; 34; 37; 111; 112; 145; பழ 31: 10-31).

புலம்பல் சந்தத்தையும், அகரவரிசை அடியமைப்பையும் ஆசிரியர் விரும்பிப் பயன்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. நூலின் அடிப்படைக் கருத்து அவ்வளவு துன்பியலானது. இல்லையென்றால் இந்தச் செயற்கை முயற்சி சீர்கெட்டிருக்கும். உண்மையான துக்கத்தையும், மிகவும் கடுமையான இலக்கண ஒழுங்கையும் இணைப்பது முடியாததாக முதலில் தோன்றலாம். ஆனால், உணர்ச்சிகளுக்கோ உண்மைத்தன்மைக்கோ பங்கமில்லாமல் ஆசிரியர் இந்த முயற்சியில் வெற்றி பெறுகிறார். இத்தகைய கடுமையான இலக்கிய அமைப்பை ஆசிரியர் பயன்படுத்தியதற்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்டலாம். இப்பாடல்கள் வழிபாட்டில் பயன்பட வேண்டியிருந்ததால், இந்த அகரவரிசை முறை இப்பாடல்களை மனனம் செய்வதற்கும், மனதில் பதியவைப்பதற்கும் ஓர் உதவியாக அமைந்தது. மற்றுமொரு காரணம், ஆசிரியர் தான் கூற விரும்பியவற்றை முழுமையாகக் கூறிவிட்டதாகக் காட்டும் ஒரு யுக்தியாகும். இந்த அகரவரிசை முறையில் ஆலபுவிலிருந்து தௌவரை ஒரு கவி எல்லாவற்றையும் கூறிவிட்டால், ஒரு தலைப்பைப்பற்றிச் சொல்லக் கூடியதையெல்லாம் சொல்லிவிட்டார் என்று பொருளாகும். புலம்பல் நூல் துன்பத்தின் கொடுமையையும், துக்கம் மற்றும் அவ நம்பிக்கையின் நிறைவையும், விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் முழுமையையும் அழுத்திக் கூற, இந்த அகரவரிசை முறையைப் பயன்படுத்தியுள்ளது. இந்தச் செயற்கை முயற்சியில் அறிவு செறிந்த கருத்து வளர்ச்சியை எதிர்பார்க்கமுடியாது. ஆயினும், மற்ற அகர வரிசைப் பகுதிகளைப்போல் இந்நூல் அயர்ச்சி தரவில்லை. தொடக்கத்தில் இப்பாடல்கள் தனித்தனியாகத் தோன்றினாலும் அவற்றின் கருத்தொற்றுமையால் பிற்காலத்தில் ஒரே தொகுப்பாக இணைக்கப்பட்டிருக்கலாம்.

இந்த அகர வரிசை அமைப்போடு, ஒரு சொல் அல்லது பல சொற்கள் சமன் செய்யப்பட்ட முறையில் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன. இந்த அமைப்பு முக்கிய கருத்துகளை அழுத்திக் கூறுகிறது; அடி அமைப்பைத் தெளிவாக வெளிக்கொணர்கிறது.

அனேகமாக, எல்லாப் பண்பாடுகளிலும் புலம்பலுக்குப் பொதுவான கருத்தாகிய துன்பம் மிக்க பின்னணி அடிக்கடி விவரிக்கப்படும். நிகழ்கால மரணம், பேரழிவு ஆகியவற்றால் ஏற்பட்ட அதிர்ச்சியை எடுத்துக்கூற, கடந்தகால மகிழ்ச்சிமிக்க மகிமை பற்றிய நினைவுகள் உதவியாக அமைகின்றன. சான்றாக, "அந்தோ! மக்கள் மிகுந்த மாநகர் தனியளாய் அமர்ந்தனளே! (1:1). 1, 2, 4-ஆவது பாடல்கள்- பொதுப்புலம்பல்களாகும். சவ ஊர்வலப் பண்புகளையும் கொண்டுள்ளன. அவற்றில் மக்கள் யாவேயை ஆவேசமாய்க் கூவி அழைத்தலையும், மனமார்ந்த குற்ற அறிவிப்புகளையும், மிக விரைவாக உதவி தரும்படி மன்றாடுதலையும் காணலாம். ஐந்தாவது பாடல்- தெளிவாக ஒரு குழுச் செபமாகும். மூன்றாவது பாடல்- எரேமியாவின் சுயவாழ்க்கை அறிக்கைகள்போலவும் (எரே 11:118-12; 15:10-12; 17:12-18; 18:23; 20:7-18), யோபுவின் புலம்பல்களைப் போலவும் (யோபு 16:8-17; 17:6-9; 30:123) தனிநபர்ப் பண்புடையது. ஆனால், நாட்டின் பேரழிவைக் கண்முன் கொண்டு வருகிறது. அதனால் இஸ்ராயேலின் பொதுத் துக்கத்தைப் பிரதிபலிக்கிறது. குழு ஆளாக யூதா சித்தரிக்கப்படுகிறது. மூன்றாவது பாடல்- யோபு நூலைத் தழுவியுள்ளாதாகத் தெரிகிறது. அப்படியானால் இப்பாடல் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும். ஆனால், ஏன் யோபு நூல் இந்தப் பாடலைத் தழுவியிருக்கக்கூடாது? இப்பிரச்சினை ஆய்வுக்குரியதாகும்.

இப்பாடல்களின் இலக்கிய மதிப்பீடு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளுக்குப் பின் இன்றும் அவை எழுப்பும் ஆழ்ந்த உணர்வுகள், இன்றும் உள்ளத்தை உருக்கவல்லன. அவற்றில் காணப்படும் உருவகங்களை நாம் இன்றும் வியக்கலாம். இறுதி அதிகாரம்- துன்புற்று நொந்துபோன இதயத்திலிருந்து எழும், மிகவும் உள்ளத்தை அறுக்கும், அழுகுரலுக்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும்.

இப்பாடல்களில் எவ்வித நாடகப்பாணி முன்னேற்றமும் இல்லை. ஒவ்வொரு பாடலும் தனித்து நிற்கலாம். இந்நூல் எருசலேம் வீழ்ச்சியை நினைவுகூரும் வருடாந்திர நோன்பு நாளில் பாடப்படுவதற்காக அமைக்கப்பட்ட புலம்பல்களின் தொகுப்பாகும் என்று கருதுவதுமேல் (எரே 41:4-5; செக் 7:1-5). இவை, பல பாடல்கள் அடங்கிய பெருந்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டு நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டதால், இஸ்ராயேலின் தூய்மைப்படுத்தப்பட்ட மனநிலையையும், அவர்களது ஆழ்ந்த துன்பத்தையும் அசைக்கமுடியாத விசுவாசத்தையும் எடுத்துக் கூறுவதாகக் கருதப்பட்டு, மக்களுக்கு விருப்பமானதாக ஆகியிருக்க வேண்டும். இறுதிப் பாடல் அகரவரிசை அமைப்புடைய முதல் நான்கு பாடல்களுக்குப் பின்னுரையாகவும் சுருக்கமாகவும் தெரிகிறது; தொகுப்பை முழுமைப்படுத்துவதகாவும் காலத்துக்கு ஒத்ததாக ஆக்கும் முயற்சியுமாய் அமைந்துள்ளது.

தொகுப்புமுறை, முரண்தொடர் அணி அடிப்படையில் அமைந்துள்ளது. 1. 5-ஆம் அதிகாரங்கள்- அழிவைச் சுருக்கித் தருகின்றன. 2, 4-ஆவது அதிகாரங்கள்- மரணம், அழிவு பற்றிய விவரங்களை விரிவாக எடுத்துக்கூறுகின்றன. அகர வரிசையைக் கடுமையாகப் பின்பற்றும் மூன்றாவது அதிகாரம்- வடிவத்திலும், பொருளடக்கத்திலும் இஸ்ராயேல்பால் இறைவன் கொண்டுள்ள நன்மைத் தனத்தில் நம்பிக்கையை வலியுறுத்துகிறது. இவ்வதிகாரம்- திருகுமுனை இயல்புடைய அமைப்பைக் கொண்டுள்ளது. இறையியல் நோக்கில் முக்கியத்துவம் உடைய

அடிகள், பாடல் அமைப்பில் மையம் வகிக்கின்றன. அதன் விளைவாக முழுத்தொகுப்புக்கும் மையம் வகிக்கின்றன (3:31-36). தொகுப்பின் விளைவு, முதற்பகுதி மூன்றாம் அதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது. பிற்பகுதி அதிலிருந்து பிரிந்து செல்கிறது. அதன் விளைவாக நூலின் மையப்பகுதி அதன் உச்சநிலையாக அமைந்துள்ளது.

6. ஆசிரியர்: இந்நூலை எரேமியா எழுதினார் என்ற யூதப் பாரம்பரியம், எழுபதுநூல் காலத்திலிருந்து வருவதாகத் தெரிகிறது. வுல்காத்தா வாசகமும் இதே கருத்தைச் சுட்டுகிறது. தால்மூது பாரம்பரியமும், கிரேக்க, இலத்தீன் திருச்சபைத் தந்தையர்களும் இதை ஏற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. நூல் முழுவதும் எரேமியாவின் செல்வாக்குப் பரவிக்கிடக்கிறது. கன்னிப்பெண், சீயோனின் மகள்: புல 1:15; 2:13; எரே 8:21.22; 14:17; நுகத்தடிபூட்டப்பட்ட கழுத்து: புல 1:14; எரே 27:2; போலி இறைவாக்கினர், அர்ச்சகர்களின் அக்கிரமம்: புல 1:14; 4:13-15; எரே 2:8; 5:32; 14:13; 23:10.40;.... இந்நூலுக்கு ஆசிரியர் யார் என்ற கேள்விக்கு எரேமியாதான்- என்ற பதில் இயல்பாகவே அமைகிறது. இப்பதிலுக்கு மற்றுமொரு தூண்டுதலாக 2 நாள் 35:25 அமைகிறது. இதன் அடிப்படையில் இப்பாரம்பரியம் தோன்றியிருக்கலாம். நூலில் கூறப்படும் நிகழ்ச்சிகளுக்கு மிகவும் நெருங்கிய முறையிலும் அவற்றின் துன்பங்களிலும் பங்கு கொண்ட சாட்சி எரேமியா தானே! எழுபதுநூல் பாரம்பரியத்தைச் சேர்ந்தப் யூதப் பாரம்பரியம், தார்கும், தால்மூது ஆகியவை புலம்பல்நூல் எரேமியாவால்தான் எழுதப்பட்டது என்று கூறுகின்றன. தொடக்க காலத்தில் எபிரேயத்திலும் இந்நூல் எரேமியாவுக்குப்பின் இடம் பெற்றிருந்தது என்பதற்கு ஓரிசன், கில்லரி, எப்பிபான், எரோனிமு ஆகியோர் சான்று கூறுவதாகத் தெரிகிறது. பிற்காலத்தில் வழிபாட்டுக் காரணங்களுக்காக யூதத் திருமுறைப்பட்டியலில் இடமாற்றம் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமிருக்கிறது.

நவீன ஆய்வாளர்கள் மேற்கூறப்பட்ட பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்வதில்லை. மேலும், முன்பு கூறப்பட்ட வாதங்களும் உறுதியானவை அல்ல. உள்ளார்ந்த ஆய்வுகள் பல பிரச்சினைகளை எழுப்பியுள்ளன. இவை எரேமியா நூலும், புலம்பல் நூலும் தொடர்புடையன என்ற கருத்தைப் பலவீனப்படுத்துகின்றன.

1) முதல் அதிகாரத்தில், எபிரேய எழுத்துக்கள் சாதாரண வரிசையில் வருகின்றன. அடுத்து மூன்று அதிகாரங்களில் பே (Pe) என்ற எழுத்து ஆயின் (Ain) என்ற எழுத்துக்கு முன் வருகிறது. இந்த வேறுபாடு, இரு பகுதிகளின் ஆசிரியர்கள் வேறுபட்டவர்கள் என்று சுட்டுவதாகத் தெரிகிறது. எபிரேய எழுத்துக்களை வரிசைப்படுத்துவதில் எபிரேயக் கவிகள் ஓரளவு சுதந்திரம் கொண்டிருந்தனரா? 2) புல 2:9-இல் வரும் "அவள் இறைவாக்கினரும் ஆண்டவரின் காட்சி பெறவில்லை" என்ற குறைபாடு இரண்டாவது அதிகாரத்தின் ஆசிரியராக எரேமியா இருக்க முடியாது என்று சுட்டுகிறது. ஏனெனில், ஆண்டவரது உண்மையான இறைவாக்கினராக எரேமியா விளங்கினார் 3) எரேமியா எகிப்திலிருந்து உதவியை எதிர்பார்க்கவில்லை. மாறாக, புல 4:17 எகிப்திலிருந்து உதவியை எதிர்பார்த்தவர்களுள் ஒருவராக ஆசிரியரைக் காட்டுகிறது. இதை எரேமியா கூறியிருக்கமுடியாது. 4) புல 4:20-இல் ஆசிரியர் அரசன் செதேக்கியாவைப் பற்றி மரியாதையாகக் குறிப்பிடுகிறார். ஆனால், இவ்வரசனைப்பற்றித் தமது நூலில் எரேமியா இழிவாகப் பேசுகிறார் (எரே 24:8-10). 5) புலம்பல் நூலில் வரும் சொற்கள் எரேமியா நூலில் வரும் சொற்களிலிருந்து வேறுபடுகின்றன. மேலும் புலம்பல்நூல்-பாடல் வடிவிலும், எரேமியாவின் நூல்- உரைநடையிலும் அமைந்துள்ளன. புலம்பல் நூலில் வருவது போன்ற, கடினமான, செயற்கையான பாடல் வடிவை எரேமியா பயன்படுத்தியிருப்பாரா? 6) குழு வினைக்கோட்பாட்டை எரேமியா போற்றியிருக்கக் கூடுமா? (புல 5:7; எரே 31:29). 7) எருசலே மின்

அழிவுக்குப்பின் எகிப்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்படுமுன் சில வாரங்களே எரேமியா யூதாவில் தங்கினார். அப்போது எரேமியா தமது நூலில் வெளிப்படுத்தும் உணர்வுகளும் (எரே 39-43), புலம்பல் நூலில் வரும் உணர்வுகளிலிருந்து வேறுபடுகின்றன. 8) 2 நாள் 35:25, யோசியா அரசன் கி.மு. 609-இல் இறந்தபோது பாடிய இரங்கற்பாவைக் குறிக்கிறது. நாளாகமக் கூற்றுக்கும், புலம்பல் நூலுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்பது மிகவும் ஐயத்திற்குரியது. ஏனெனில், புலம்பல் நூலில் யோசியாவின் மரணம் பற்றிய எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. இந்நூல் கி.மு. 597-இலும் அதற்குப் பின்னும் வந்த பேரழிவுகளைப் பற்றியே பேசுகிறது. 9) எசேக்கியேல், இரண்டாம் எசாயா ஆகிய நூல்களின் சுவடுகள் இந்நூலில் காணப்படுகின்றன. இவை எரேமியாதான் இந்நூலை எழுதினார் என்பதற்கு மாறாக அமைகின்றன. 10) இந்நூலை எரேமியா எழுதியதாக எழுபது நூல் இலத்தீன் வாசகங்களிலும், சிக்ஸ்டோகிளமந்து பதிப்பிலும் காணப்பட்டாலும், இத்தகைய குறிப்பு எபிரேய விவிலியத்தில் காணப்படவில்லை. அதில் எரேமியா நூலுக்குப்பின் அடுத்துப் புலம்பல்நூல் இடம் பெறவில்லை. மாறாக, மூன்றாவது தொகுப்பான நூல்கள் தொகுப்பில் இடம் பெறுகிறது. புலம்பல் நூலுக்கு எரேமியா ஆசிரியர் என்றால், அஃது எரேமியா நூலோடு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இக்காரணங்களுக்காக எரேமியாதான் புலம்பல் நூலை எழுதினார் என்ற பாரம்பரியம், இப்போது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இந்நூல் எபிரேய விவிலியத்தில் கொண்டிருக்கும் இடமே, அதாவது நூல்கள் என்ற தொகுப்பில் ஒன்றாக இருப்பதுதான் இந்நூலுக்கு உரிய இடம் என்று ஏற்றுக்கொள்வர். பின் யார்தான் இந்நூலை எழுதியது? இவரைப் பற்றி அதிகம் கூறுவதற்கில்லை. ஆசிரியர் எரேமியாவோடு நடையிலும் மனப்போக்கிலும் ஓரளவு உறவு கொண்டிருப்பதால், அவர் எரேமியா காலத்தவராக இருக்கலாம். ரூடால்பு என்ற அறிஞர், இந்நூலின் ஆசிரியர் செதேக்கியா போரிட்டபோது அதில் பங்கு பெற்ற படையைச் சேர்ந்தவராகவோ, ஓர் அரசியல்வாதியாகவோ இருந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார் (புல 4:19). எது எப்படியிருந்தாலும் ஆசிரியர் தமது உணர்வுகளை விவரிப்பதன்வழியாக எருசலேமின் அழிவால் ஏற்பட்ட அனுபவத்தை விவரிக்கும் மக்களில் ஒருவராக இந்நூலை எழுதுகிறார்.

அடுத்து இந்நூலை ஒரே ஆசிரியர் எழுதினாரா, அல்லது பலர் எழுதினாரா? என்பது கேள்வி. யூதாவின் பேரிடர் மிக்க காலத்தில் வாழ்ந்த ஒருவரே இந்நூலை எழுதினார் என்பர் சிலர். இக்கருத்துக்குச் சார்பாக –முதல் அதிகாரம், தனித்து நிற்பதுபோலத் தோன்றினாலும், கூர்ந்து ஆராயுங்கால், இந்த அதிகாரத்திற்கும் நூலின் பிற பகுதிகளுக்கும் நெருங்கிய உறவு இருப்பதாகக் காண்கின்றனர். மூன்றாம் அதிகாரம், கடுமையாக அகரவரிசையில் அமைந்து, ஆசிரியரது சொந்த அனுபவத்தைக் கொண்டிருப்பதால், சமூக நோக்குடைய 1, 2-ஆவது அதிகாரங்களிலிருந்து அது வேறுபடுத்தப்படுகிறது. ஆனால், இது தேவையற்றதாகும். நூலில் காணப்படும் பொதுவான நடை, சொற்றொகுதி, பொருளடக்கம் ஆகியவை இந்நூலை ஒரே ஆசிரியர் எழுதினார் என்பதற்கு ஆதரவு அளிக்கின்றன என்பர். அழுத்தத்தில் காணப்படும் வேறுபாடுகள் ஒவ்வொரு பாடலும் தோன்றிய காலம், சூழ்நிலை ஆகியவற்றில் உள்ள வேறுபாட்டின் விளைவாகும் என்பர்.

ஆனால், பாடல்களில் காணப்படும் வேறுபாடுகள், இலக்கியத் தழுவல்கள் பற்றிய சிக்கல்கள் ஆகியவற்றை ஆராயும்போது, இந்நூலுக்கு ஆசிரியர்கள் பலர் இருந்திருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இந்நூலை ஒரே ஆசிரியர்தான் எழுதினார் என்று கருதும் ரூடால்பு என்பவர்கூட, முதல் பாடல் கி.மு. 597-இல் ஒரு தனிப்பட்ட ஆசிரியரால் எழுதப்பட்டது என்று கூறக் கட்டாயப்படுத்தப்படுகிறார். வழிபாட்டில்

இப்பாடல்கள் பயன்பட்டன. இஃது, இவை காலப்போக்கில் ஒரே நூலாகத் தொகுக்கப் படுவதற்குக் காரணமாய் அமைந்திருக்கலாம்.

7. **காலம்:** நூல் மையக் கருத்தாகக் கொண்டிருக்கும் நிகழ்ச்சியான கி.மு. 587-86-இல் நடந்த எருசலேமின் அழிவின் காலத்திற்கு அதிகம் பின்தள்ளி ,நூல் தோன்றியிருக்கமுடியாது என்று பொதுவாக ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். கி.மு. 597-க்குப் பின்னும், விடுதலைகிடைத்த 538-க்கு முன்னும் இடைப்பட்ட காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கவேண்டும். இவர்கள் கருத்துப்படி முதல் பாடல், கி.மு. 597-இல் நெபுகத்னேசருக்கு எருசலேம் பணிந்தபோது எழுதப்பட்டதாகும். இதன் ஆசிரியர் 597-இல் நடந்த பேரழிவை அனுபவித்திருந்தார். 587-இல் நடந்த பேரழிவை இன்னும் அனுபவிக்கவில்லை. இரண்டாவது, நான்காவது பாடல்கள் 587-இல் நடந்த பேரழிவின் துன்ப அனுபவத்தைச் சித்தரிக்கின்றன. இப்பாடல்கள்- காலத்தால் முந்தியவை, நிகழ்ச்சிகளுக்கு மிக நெருங்கியவை. மூன்றாவது, ஐந்தாவது பாடல்கள்- பிற்காலத்தில் தோன்றியவையாகும். நகரத்தின் அழிவு இரண்டாம் முறை நாடுகடத்தப்படுதல் ஆகியவற்றிற்குப்பின் வந்த குழப்பம், வெறுமை நிலை, அரசியல் கொடுமை ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. வழிபாட்டுத் தோற்றமுடைய இந்நூல் எரே 41:5; செக் 7:3-இல் கூறப்படுவது போல் 587-இல் நடந்த பேரழிவை ஆண்டுதோறும் நினைவுகூர்தலுக்காக எழுதப்பட்டிருக்கலாம்.

8. **வரலாற்று, சமயப்பின்னணி:** புலம்பல் நூலில் நேரடியான வரலாற்றுச் சான்று எதுவுமில்லை. ஏதோம் என்று ஒரு பெயர் மட்டும் குறிக்கப்படுகிறது (4:2). ஆனால், இந்நூலில் காணப்படும் விவரிப்புகள் யூதாவின் இறுதிக்காலத்தில் நடந்ததாக 2-ஆம் அரசர்கள், எரேமியா ஆகிய நூல்களில் காணப்படும் விவரிப்புகளோடு பெருமளவு ஒத்துப்போகின்றன; அவற்றை நிறைவு செய்கின்றன. முற்றுகை (2 அர 25:1-2; புல 2:22; 3:5.7); பஞ்சம் (2அர 25:3; எரே 37:21; புல 1:11.19; 2:11-12.19-20; 4:4-5.9-10); அரசன் ஓடிப்போதல் (2 அர 24:4-7; புல 1:3.6; 2:2; 4:19-20); ஆலயம் கொள்ளையடிக்கப்படுதல் (2 அர 25:13-15; புல 1:10; 2:6-7); ஆலயம், அரச மாளிகை முதலியன எரியூட்டப்பெறுதல் (2 அர 25:8-9; புல 2:3-5; 4:11; 5:18); நகரச் சுவர்கள் அழிக்கப்படுதல் (2 அர 25:10; புல 2:7-9); தலைவர்கள் கொல்லப்படுதல் (2 அர 25:18-21; எரே 39:6; புல 1:15; 2:2.20; 4:16); குடிமக்கள் நாடுகடத்தப்படுதல் (2 அர 25:11-12; புல 1:1.4-5.18; 2:9.14; 3:2. 19; 4:22; 5:2); அன்னிய உதவியை எதிர்பார்த்தலும், அது கிடைக்காமல் போனதும் (எரே 27:1-11; 37:5-10; புல 4:17; 5:6); யூதாவின் நிலையற்ற அரசியல் நட்பு நாடுகள் (2 அர 24:2; எரே 40:14; புல 1:2.8.17.19); யூதா ஒரு சில மாநிலமாதல் (2 அர 25:22.24-25; புல 1:1; 5:8-9). இவ்வாறு இந்நூல் கி.மு. 609-586-க்கு இடைப்பட்ட காலம் பற்றிய பல வரலாற்றுக் குறிப்புகளைக் கொடுக்கிறது. மேலெழுந்த வாரியாக வாசிப்பவர்களுக்குக்கூட முற்றுகை, பஞ்சம், திடீர்மரணம், அவமானம், அரசியல் சமய வெறுமை உணர்வு ஆகிய அனுபவம் அளிக்கக்கூடியது இந்நூல். இது வெறும் நிகழ்ச்சியுரை அன்று. இந்நூலின் பாடல் வடிவம் எருசலேமின் அழிவைப் பற்றி மிகுந்த தாக்கம் விளைவிக்கக் கூடியது. யோபு நூலைப்போல், இந்நூல் ஒரு புதிரான பேரழிவு பற்றிய பாடல் வடிவுடைய சிந்தனைத் தொடராகும்.

கி.மு. 609-இலிருந்து நடந்த நிகழ்ச்சிகள் யூதாவின் விசுவாசத்தில் ஓர் இக்கட்டான நிலையை உண்டாக்கின. யூதாவில் நிலவிய கலப்பு மதம், பொதுவான சீர்கேடு ஆகியவற்றிற்காக, வட வரசைப்போல் அஃது அவலநிலையை அடைந்திருக்க வேண்டும். ஆனால், அசீரியப் படையெடுப்பிலிருந்து தப்பி யூதா நீண்ட காலம் இருந்தது. இப்போது உபாகம நூலின்படி ஒரு சீர்திருத்தத்தை யோசியா அரசர் செயல்படுத்தினார். இது மகிழ்ச்சிமிக்க

வருங்காலத்திற்கும் நாட்டின் பெருக்கத்திற்கும் அடிப்படை அமைத்தது. இச்சீர்திருத்தம் வருங்காலத்தை உறுதிப்படுத்த ஏதுவானதாகும். ஆலயம் மைய முக்கியத்துவம் பெற்றது. பிற புனித இடங்களும், கலப்பு மதங்களும் அழிக்கப்பட்டன. மோசே சட்டம் வலியுறுத்தப்பட்டது. அச்சட்டதிற்கு ஏற்றவாறு அரசியலும் அமைக்கப்பட்டது. சீர்திருத்த நூல்கள் பெருகின. பற்றுறுதியின்மையை யாவே நேர்மையாய்த் தண்டித்தால், இச்சீர்திருத்தத்தில் காட்டப்பட்ட பற்றுறுதிக்கு அவர் நேர்மையாய்ச் சன்மானம் அளிக்க வேண்டும். யோசியாவின் சீர்திருத்த இயக்கம் யாவேயின்பால் கொண்ட பற்றுறுதியை எடுத்துக்காட்டும் அசாதாரண நிகழ்ச்சியாகும். இது சலுகைகளை அளிக்கும் என்றும், அரசமரபையும் நாட்டையும் நிலைப்படுத்தும் என்றும், தாவீது, சாலமோன் காலத்தை மீண்டும் கொண்டு வரும் என்றும் மக்களை நம்பிக்கையோடு எதிர்பார்க்கச் செய்தது.

ஆனால், இச்சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கை, மெகிதோவில் யோசியா இறந்தபோது அழிந்தது. அங்கு யூதா தமது அரசனை இழந்து, எகிப்துக்கு அடிமையானது. போரில் ஈடுபட்டிருந்த வல்லரசுகளால் இச்சிறுநாடு அலைக்கழிக்கப்பட்டது. யூதா பாபிலோனின் ஆதிக்கத்திற்குள்ளானது. எரேமியாவின் எச்சரிக்கைகளையும் பொருட்படுத்தாமல் அரசன் யோயாக்கிம் பாபிலோனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். பாபிலோன் உறுதியாக, விரைவாகச் செயல்பட்டது. கி.மு. 597-இல் யூதா நெபுகத்னேசரிடம் சரணடைந்தது. மூன்று மாதங்களுக்குப்பின் அவனது மகன் யோயாக்கின் அரசனானான். இவனும் தலைமைக் குடிமக்களும் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டனர். இவனது சிற்றப்பனான செதேக்கியாமை யூதாவிற்கு அரசனாக்கினர் பாபிலோனியர்கள். இவன் ஒரு சமயம் எரேமியாவுக்குச் செவிமடுப்பதும், மற்றொரு சமயம் எகிப்துக்குச் சார்பான கட்சியினர்களுக்குச் செவிமடுப்பதுமாய் ஊசலாடினான். பாபிலோன் ஆட்சியின்கீழ் பத்து ஆண்டுகளுக்குக் கப்பம்கட்டும் நாடாக இருந்தபின், இறுதியில் எகிப்து கட்சியினருக்குச் செவிமடுத்து, பாபிலோனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். பாபிலோனின் பழிவாங்குதல் விரைவாக இருந்தது. ஆனால், யூதா இனிமேல் தலைதூக்க முடியாமல் அதை முழுவதும் அழித்தது. நகர் முற்றுகையிடப்பட்டது; தரைமட்டமாக அழிக்கப்பட்டது. ஆலயம் அழிக்கப்பட்டுப் பாழ்படுத்தப்பட்டது. மக்கள் மற்றுமொரு முறை நாடு கடத்தப்பட்டனர். பாரம்பரியப் போதகத்தைப் பின்பற்ற யோசியா செய்த முயற்சியால் எப்பயனும் ஏற்படவில்லை. உலக முடிவுபோல் தோன்றியது. மக்களின் விசுவாசம் தளர்ச்சியுற்றது. ஐயப்பாடுகள் எழுந்தன.

நடக்கமுடியாது என்று நம்பியது, நடந்து விட்டது. யாவேயின் புனித தளமாகிய பரிசுத்த நகரமும், ஆலயமும் அழிக்கப்பட்டு விட்டன. யூதாவின் குடிமக்கள் சிதறடிக்கப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். நாட்டில் அன்னியர் குடியேறிவிட்டனர். யாவே தமது வாக்குறுதிகளுக்குப் பிரமாணிக்கம் தவறி விட்டாரா? அல்லது தமது மக்களை மீட்கச் சக்தியற்றுப் போய்விட்டாரா? இஸ்ராயேலை வெற்றிகொண்ட பிற இன அரசுகளைவிட ஆற்றல் குறைந்தவர்தானா அவர்? யாவே வெறும் பூஜ்யம்தானா? அப்படியானால், யூதாவின் அழிவு- வெற்றி கொண்டவர்களோடு ஒத்துப்போய் அவர்களின் தேவர்களுக்குப் பலி செலுத்தியவர்களுடைய செயல் சரியானது என்று காட்டவில்லையா? இவ்வாறு மக்களிடையே பல ஐயங்கள் எழுந்தன. மக்கள் விசுவாசம் இழந்து, அவநம்பிக்கையுற்று அவதியுற்றனர்.

ஆனால், இறைவனுடைய வாக்குறுதிகள் அவருடைய மக்களின் நடத்தையைப் பொறுத்தது, நிபந்தனைக்குரியது என்று உணர்ந்தவர்களும் இருந்தனர். இவர்கள் எரேமியா மீண்டும் மீண்டும் கூறிய எச்சரிக்கைகளை நினைவுகூர்ந்தனர். அப்படிப்பட்டவர்களுள் புலம்பல் நூல் ஆசிரியரும்

ஒருவர். புதிய பாபிலோனியர்களால் கி.மு. 587-86-இல் எருசலேம் அழிக்கப்பட்டதையும் அப்போது முற்றுகைக்கு முன்னும், அது நடந்த போதும், அதன் பின்னும் மக்கள் அனுபவித்த துன்பங்களைப் பற்றியும் ஆசிரியர் புலம்புகிறார். ஆனால், அவரது பாடல் வெறும் நம்பிக்கையற்ற புலம்பலன்று. நினிவே, அதன் கடவுளர் ஆகியோரின் வீழ்ச்சியைப் பற்றி அசீரியர்கள் பாடிய புலம்பல் போல், இவரது புலம்பல் முழுவதும் நம்பிக்கையற்றதன்று. இவர் நகரத்தின் அழிவு, அவமதிக்கப்பட்ட அரசன், இறந்துபோன குடிமக்கள், நாடு கடத்தப்பட்டவர்கள், நாட்டின் தேவைகள் ஆகியவை பற்றிப் புலம்பினாலும், அவர் அவநம்பிக்கை முடிவைக் கடந்து செல்கிறார். மக்களுக்கு அரியதோர் பாடத்தைக் கற்றுக்கொடுக்கிறார். அதைப் போதகம் என்ற தலைப்பின்கீழ்க் காண்போம்.

9. திட்டம்:

அதிகாரங்களின் எண்ணிக்கைக்கேற்ப இந்நூலை ஐந்து பாடல் பகுதிகளாகப் பிரிக்கலாம்.

I. முதலாம் : கி.மு. 597-இல் புலம்பல் நடந்த நிகழ்ச்சிகள் (1:1-22) பற்றியது.
அ) 1:1-11 : எருசலேமின் அவநிலை.
ஆ)1:12-22 : எருசலேமின் மன்றாட்டு.
II. இரண்டாம் : 587-86-இல் நடந்த புலம்பல் நிகழ்ச்சிகள் பற்றியது. (2:1-22)
அ) 2:1-12 : யாவேயே அழிவை நிகழ்த்துகிறார்.
ஆ)2:13-17 : எருசலேமை நோக்கிச் சுவக்குரல்.
இ) 2:18-22 : யாவேயிடம் மன்றாட எருசலேமுக்கு அழைப்பு.
III. மூன்றாம் : ஆசிரியரது துன்ப புலம்பல் மிக்க சொந்த அனுபவம் (3:1-66)
அ) 3:1-21 : ஆசிரியரின் கசப்பான அனுபவம்.
ஆ) 3:22-4 : அவரது நம்பிக்கை.
இ) 3:43-66 : தமக்காகவும், நாட்டுக்காகவும் அவர் மன்றாடுதல்.
IV. நான்காம் : 587-86-இல் நடந்த புலம்பல் நிகழ்ச்சிகள் பற்றிய (4:1-22) மற்றுமொரு புலம்பல்.
அ) 4:1-11 : எருசேலமின் மக்கள்.
ஆ)4:12-16 : அதன் அர்ச்சகர்களும் இறைவாக்கினர்களும்.
இ) 4:17-20 : அதன் அரசன்.
ஈ) 4:21-22 : யூதாவும் ஏதோமும்.
V. ஐந்தாம் : பின் விளைவுகள். புலம்பல் (5:1-22)
அ) 5:1-18 : யூதாவில் எஞ்சியவர்களின் அவலநிலை.
ஆ) 5:19-22 : நாடும் சமூகமும் அமைக்கப்பட மன்றாட்டு.

10. போதகம்: வரலாற்று விசுவாசம், வரலாற்று உண்மை ஆகியவற்றிற்கிடையே காணப்படும் முரண்பாடு என்னும் அச்சைச் சுற்றி, புலம்பல் நூலின் சிந்தனைப்போக்கு சுழல்கிறது. இது காலந்தோறும் சமயத்தை எதிர்கொள்ளும் பிரச்சனையானாலும், கி.மு. 587-86-க்குப்பின் இஸ்ராயேலின் வரலாற்றில் ஏற்பட்ட கடுமையான மாற்றம் இப்பிரச்சனைக்குப் புதிய கோணத்தை அளிக்கிறது. ஒரு தனிப்பட்ட அவசரத் தன்மையையும் அளிக்கிறது. சுருக்கமாக, புலம்பல் நூலில் பல கேள்விகளை எழுப்புகிறது. கி.மு. 609-586-க்குப்பின் இடையில் இஸ்ராயேல்மேல் விழுந்த பயங்கரப் பேரிடர்களின் பொருள் என்ன? அதாவது, யோசியா அரசின் அகால மரணம் தொடங்கி, அடிமை ஊழியம், கிளர்ச்சி, முற்றுகை, பஞ்சம் ஆகியவை வழியாக நகரின் இழிநிலைக்கும், நாட்டின் அழிவுக்கும் இட்டுச் சென்ற இந்த மாற்றத்தின் பொருள் என்ன? இவை யாவேயின் திருவுளத்தை எடுத்துக்கூறுவதாக உண்மையிலேயே புரிந்து கொள்ளக்கூடுமா? அப்படியானால் இஸ்ராயேலின் நிகழ்காலப் பாகம் என்ன? யாவே இஸ்ராயேலுக்கு இன்னும் வேறு திட்டம்

வைத்திரக்கிறாரா? தமது மக்களை இரக்கமற்ற முறையில் தண்டித்துத் தூய்மைப்படுத்திய இந்த இறைவனுக்கு, இஸ்ராயேல் எவ்வாறு பதில் அளிக்க வேண்டும்? புலம்பல் நூல், மனிதர்களாலும், இறைவனாலும் கைவிடப்பட்ட நிலை பற்றிய ஆழ்ந்த உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. இத்துன்பங்கள், வரலாற்றில் இறைவனது நோக்கங்களுக்கும், அதன் விளைவாகத் தவிர்க்க முடியாத விதத்தில் விசுவாச வாழ்வுக்கும் அச்சுறுத்தல்களாக அமைகின்றன என்றும் எடுத்துக் கூறுகிறது.

நூல் முழுவதும் கசப்பான உண்மைத் தன்மை பரவிக்கிடக்கிறது. படுகொலை, பஞ்சம், அழிவு ஆகியவற்றை விவரிப்பதில் எந்த முயற்சியும் தவிர்க்கப்படவில்லை. மெலிந்து இறக்கும் குழந்தைகளின் அவலநிலை இரங்கத்தக்க முறையில் செதுக்கப்பட்டுள்ளது. மிகக்கொடுமையான பசியால் தூண்டப்பட்டு, மனிதனை மனிதன் உண்ணுதல், ஆலயத்திலேயே குருக்கள் கொல்லப்படுதல் முதலியவை இஸ்ராயேல்பால் இறைவனது நோக்கத்திற்கு மறுப்பாக ஆசிரியரால் எடுத்துக் கூறப்படுகின்றன. ஆன்மீக ஆறுதலற்ற கடும்வேதனையால் பாடல்கள் துடிக்கின்றன. ஆயினும், நூல் முழுவதும் செபவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அது துயர்மிக்க வேண்டுதலுக்கு வழிவகுக்கிறது. விவிலியச் செபத்தின் தன்மை ஆற்றலோடும், வாய்மையோடும் எடுத்துக்கூறப்படுகிறது. இந்நூல் அறிவற்ற முறையில் துக்கத்தை வெளிக்காட்டும் புலம்பல் அன்று. மாறாக, யாவேயின் என்றும் தொடரும் ஆற்றல், இரக்கம், நீதி ஆகியவை பற்றிய உறுதியான விசுவாச அறிக்கையாகும். இஸ்ராயேல் மறைந்துவிட்டாலும் அது தேர்ந்தெடுக்கப்பட்டதில் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

மேலும், இந்நூலில் செபத்தன்மையுடைய முறைப்பாட்டோடு, ஆழ்ந்த இறைவாக்குச் சிந்தனைப்போக்கும் அமைந்துள்ளது. புலம்பல் நூல் அழிவு பற்றிய இறைவாக்குகளை எண்பிக்கிறது. எருசலேம் தனது பாவங்களுக்காகவே தண்டிக்கப்பட்டுள்ளது. அதன் கதி கொடுமை மிக்கதானாலும், நேர்மையானதே! தகுதியானதே!! எதிரிக்கு விரோதமாக ஒன்றும் செய்யாமல், அமைதியாக இறைவனில் நம்பிக்கை வைக்கும்படி ஆசிரியர் மக்களுக்கு ஆலோசனை கூறுகிறார். நாடுகடத்தப்பட்ட யூதர்களுக்குச் சோதனையாக அமைந்த கலப்புமதம், பல தேவர்களை வணங்குதல் ஆகியவற்றை உறுதியாக நிராகரிக்கிறார் (எசா 57: எரே 44; எசே 8). யாவேயிடம் வரம்பெற்ற முழுமையான பிரமாணிக்கத்தை வெளிப்படுத்துகிறார். பிரமாணிக்கமற்ற இறைவாக்கினர்களையும் அர்ச்சகர்களையும் கண்டிக்கிறார். இந்த அலுவல்களைத் தொழிலாகக் கொண்ட தலைவர்களின்றி யாவேயின் சமயம் தொடர்ந்து நிலைக்கக்கூடும் என்ற விசுவாசத்தில் உறுதியாக உள்ளார். இந்நூல், இறைவனின் உடன்படிக்கை அன்பில் நிலையான நம்பிக்கையை எடுத்துக்கூறுகிறது.

ஏனெனில், எருசலேமின் இறைவனாகிய யாவே இன்னும் வாழ்கிறார். அவர் நீதியும், இரக்கமும் மிக்கவர். யூதாவின் அழிவு, யாவே பலவீனர் என்றோ, யூதாவைக் காப்பாற்ற இயலாதவர் என்றோ, தமது மக்களைக் கைவிட்டுவிட்டார் என்றோ காட்டவில்லை. மாறாக, அவரே எருசலேமின் வீழ்ச்சியைச் செயல்படுத்துகிறார்; தமது மக்களை அழித்த சக்திகளை அவரே நடத்திச் செயல்படுத்துகிறார் (1:5.12-15; 2:1-8.17-20; 2:22; 3:1-18.43-45; 4:11). நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பேரழிவு அவரது அக்கறையின்மையின் விளைவோ, அவரது ஆற்றலின்மையின் விளைவோ அன்று. அது யாவேயின் நேர்மைமிக்க செயலாகும். மக்கள் மீண்டும் மீண்டும் செய்த பாவங்களுக்குரிய தண்டனையாகும் (1:5.8-14.18; 3:40-42; 4:6.13; 5:7.16).

இறைவாக்கினர்களின் கூற்றுகள் நிறைவேறுதலாகும். மக்களின் போலிப் பற்றுறுதியையும், நாட்டின் சமயம் பற்றிய குறுகிய மனப்போக்கையும், அதன் தொடர்ச்சியான பதித்ததையும் இறைவன் தண்டிக்கிறார். தண்டனையின் குறிக்கோள், அது குணமளிக்கும் மருந்தாகப் பயன்படவேண்டும் என்பதே; மனத்துக்கத்திற்கு அழைக்கிறது (3:9.40).

எருசலேமின் வீழ்ச்சி- யாவேயின் ஊமைத் தன்மைக்குச் சான்று என்றால், ஏதோ தற்செயலாக நடந்தது என்றால், அப்போது எருசலேம் அவநம்பிக்கைதான் படமுடியும். ஆனால், எருசலேமின் வீழ்ச்சி, யாவேயின் ஆற்றல் மிக்க சினத்திற்குச் சான்று என்றால்- அப்போது அஃது எருசலேமின் திருத்தம், நல்வாழ்வு ஆகியவற்றில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த, சொந்த அக்கறையின் அடையாளமாகும், சினம் இறையருளை உணர்த்தும் உருவகமாகும். யூதாவின்மேல் வந்த துன்பங்கள், அது மனந்திரும்பியபின் அதற்கு மேலான நலன் அளிக்கும்; அதனை மீண்டும் அமைக்கும் அருளுக்கு வழிவகுக்கும். மக்களுக்கு 'வருங்காலம்' இன்னும் தோன்றவில்லை யானாலும், அவர்கள் தங்கள் இறைவனைத் தொடர்ந்து நம்ப வேண்டும். விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கவேண்டும். இந்த விடுதலை அவர்களது மனத்துக்கத்திற்கு விடையாகவும், இறைவாக்குறுதிகளின் இறுதி நிறைவேறுதலாகவும் கிடைக்கும். மக்கள் தங்கள் பாவங்களை ஏற்று அறிக்கையிடுவதும் யாவேயின் இரக்கம், மன்னிப்பு ஆகியவற்றில் நம்பிக்கை கொள்வதும் மட்டுமே அவர்களை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும் (1:18; 3:21-26.40.58; 4:22; 5:20-22). ஏனெனில், இறைவன் நன்மைத் தன்மையுடையவர். ஆகவே, நம்பிக்கைக்கு இடமிருக்கிறது (1:21; 2:20; 3:19-24.31-33; 4:22-23; 5:1தொ. 19-22). இந்த நம்பிக்கைகளை ஏற்பதே, இஸ்ராயேல் சுதந்தர நாட்டு நிலையை இழந்தபின்னும் ஒரு விசுவாச மக்களாக நிலைத்திருக்க உதவின.

எபிரேயத்துவம் அழிந்து யூதத்துவம் தோன்றுவதற்கு இடையிலுள்ள இடைவெளியைப் புலம்பல் நூல் நிரப்புகிறது. பாவத்தின் பொறுப்பு, துன்பங்களால் வரும் பயிற்சியின் மதிப்பு, இறைவனின் வரையற்ற நீதி மற்றும் நிலையான அன்பு, அவரின் வழிகளில் ஆய்ந்தறிய முடியாத தன்மை, விசுவாசியின் வெல்ல முடியாத நம்பிக்கை, பொறுமையின் அவசியம் ஆகிய பற்றுக்கோள்கள் மூன்றாவது பாடலில், முக்கியமாக அதன் மையப்பகுதியில் (3:19-39) செறிந்து காணப்படுகின்றன. அரசியல் அழிவின் சாம்பலிலிருந்தும், இழிமானத்திலிருந்தும், இறந்து உயிர்த்தெழும் பறவை போல் உயிர் பெறவிருந்த யூத விசுவாசத்தில் இப்பற்றுக்கோள்கள் ஆதிக்கம் செலுத்தின. இஸ்ராயேலுக்கு இறைவன் குறித்திருக்கும் குறிக்கோள், அவரது அளவிடமுடியாத ஆனால் நம்பத்தகுந்த, அன்பிலும் இரக்கத்திலும் மட்டுமே அடித்தளமிடப்பட்டுள்ளது. துன்பங்களால் தூய்மைப்படுத்தப்பட்டு, நயப்படுத்தப்பட்டு, உயிர் பெற்றெழுந்த இஸ்ராயேலின் நம்பமுடியாத விசுவாசத்தை ஆர்வத்தோடு அறிவிக்கிறது இந்நூல். அதை யூதத்துவத்தின் வழிபாட்டில் அழிக்க முடியாத விதத்தில் எழுதி வைத்துள்ளது.

மனத்துக்கம், திருத்தம், மனந்திருந்துதல் ஆகியவை இந்நூலில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய கருத்துக்களாகும். இந்த உணர்வுகளைத் தங்கள் காலக் கிளர்ச்சி செய்யும் மக்களிடையே தூண்டியெழுப்பப் பெரிதும் முயன்றனர் எரேமியா, எசேக்கியேல் போன்ற இறைவாக்கினர்கள். ஆனால், வெற்றி பெற்றாரில்லை எனலாம். மாறாக, இப்பேரழிவுகள் வெற்றிபெற்றன; இவ்வுணர்வுகளை மக்களிடையே தூண்டி எழுப்புகின்றன. தண்டனை வீண் போகவில்லை. அது குணமளிக்கும் மருந்தாக அமைந்தது (எரே 30:1-17) என்று புலம்பல் நூல் உறுதியளிக்கிறது.

11. புலம்பல் நூலும் வழிபாடும்: இந்நூல் வழிபாட்டுச் சூழ்நிலையிலும் வழிபாட்டுக்காகவும் தோன்றியிருக்கலாம் என்று கூறினோம். துக்கம்,

உள்ளச்சோர்வு ஆகியவற்றை நீக்கித் தூய்மைப்படுத்துவதே புலம்பல் வழிபாட்டின் நோக்கமாகும். புலம்பல் நூலில் காணப்படும் அகரவரிசை அமைப்பும், ஓரளவு உரையாடல் அமைப்பும், சொற்கள் மீண்டும் மீண்டும் வருதலும், இந்நூலை வழிபாட்டிற்கு உகந்ததாக்குகின்றன. குறிப்பிட்ட நினைவு நாட்களில் இப்பாடல்கள் மக்கள்முன் பாடப்படுதல், ஒருவேளை சீயோன் குடிமக்கள், வழிப்போக்கர்கள் ஆகியோரின் பகுதிகளை வெவ்வேறு குழுவினர்கள் பாடுதல், அவர்களது முந்தைய வாழ்க்கை முறையைச் சேர்ந்த எல்லாவற்றையும் இழந்துவிட்ட மக்களின் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளை வெளிக்கொட்டுவதற்குச் செயலாற்றல் மிக்க வடிகாலாக அமைந்திருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு யூத மக்கள், கி.மு. 587-86-இல் நிகழ்ந்த அழிவை நினைவுகூரும் விதத்தில், அபு மாதம் 9-ஆம் நாள் இந்நூல் வாசிக்கப்பட்டது. பிற்கால யூதர்களிடையே கி.பி. 70-இல் உரோமையரால் எருசலேம் அழிக்கப்பட்டு, யூதர்கள் சிதறிப்போனதை நினைவுகூரும் விதத்தில் செபக்கூடங்களில் இந்நூல் ஆண்டுதோறும் அபு மாதம் 9-ஆம் நாள் நோன்பின்போது வாசிக்கப்பட்டது.

கத்தோலிக்கத் திருச்சபை, தனது புனித வாரக்கட்டளைச் செபத்தில் புலம்பல் நூலைப் பயன்படுத்துகிறது. கிறிஸ்துவின் துன்பங்களுக்கான தனது துக்கத்தை எடுத்துக்கூற, திருச்சபை விவிலியத்தில் வாசகங்களைத் தேடியபோது புலம்பல் நூலைத்தவிர, பொருத்தமானது எதையும் காணவில்லை. நாடு கடத்தப்பட்டபோதும் அதற்குப் பின்னும் யூதர்கள் கண்டதுபோல் (செக் 7:3; 8:19), கத்தோலிக்கத் திருச்சபையும் தனது மனவருத்தத்தையும், இறைவனது மாறுபடாத மீட்புத் திருவுளத்தில் கொண்டுள்ள விசுவாசத்தின் பலனையும், அவரது இரக்கத்தில் மிக்க நம்பிக்கை கொள்ளத் தூண்டுதலையும் புலம்பல்நூல் எடுத்துக் கூறுவதாக அமைகிறது.

யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள், கி.மு. 587-86-இல் நடந்த அழிவு பற்றிய இந்நூலை, மீட்பு வரலாற்றில் பிற்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளுக்குச் சாற்றி, இதைத் தங்களது வழிபாட்டில் பயன்படுத்துகின்றன. இதைப் பின்பற்றி திருச்சபையும், குழுக்களும், தனிப்பட்டோரும் தங்கள் செபவாழ்வில் இந்நூலைப் பயன்படுத்தியுள்ளனர். திருச்சபை அல்லது தலக்குழுவின் பெயரால் அதைக் கவ்வியுள்ள இழப்பு உணர்வை எடுத்துக்கூற இந்நூலை வாசிக்கலாம். துன்புறும் நண்பனுக்காக மன்றாட -இந்நூல் அடிப்படையாக அமையலாம். கடும் சோதனைகளை அனுபவிக்கும்போது- ஒருவருடைய துன்ப, இழப்பு உணர்வுகளை எடுத்துக்கூற இந்நூல் பயன்படலாம். நமது அவல நிலையைச் செபத்தில் எடுத்துக்கூற உகந்த சொற்களை நாம் காணாமற்போகும் நிலையில், சங்கீத நூலைப்போல் புலம்பல் நூலும், இறையூக்கம் பெற்ற சொற்களை நமக்கு அளிக்கிறது.

12. **இக்காலத்திற்கு:** மனத்துக்கம், திருத்தம், மனந்திருந்துதல் முதலிய கருத்துக்கள் இந்நூலில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்று கூறினோம். இவையே இந்நூல் நமக்கு இன்றும் அளிக்கும் செய்தியாகும். மனிதன், தனிநபர் என்ற அளவிலும், சமூகம் என்ற அளவிலும், தன்பாவங்களுக்குத் துக்கப்பட வேண்டும்; தனது வாழ்வை இறைவனுக்கு ஏற்புடைய முறையில் திருத்த வேண்டும்; இறைவனிடம் முழுமையாகத் திரும்ப வேண்டும். அப்போதுதான், மனுகுலத்திற்கு மீட்பு உண்டு; நற்காலம் உண்டு.

மற்றுமொரு பாடமும் உண்டு. எருசலேமின் அழிவுக்குப்பின் யூதாவில் எஞ்சியவர்களும், நாடு கடத்தப்பட்டவர்களும், கடந்த காலத்திற்காக ஏங்கினர்; நிகழ்காலத்திற்குரிய சவால்களை ஏற்கத் தயங்கினர்; வருங்காலத்தை எதிர்நோக்கப் படிப்படியாகத்தான் கற்றுக்கொண்டனர். இந்நிலையில்தான் 2-ஆம் வத்திக்கான் புதுப்பித்தலை நோக்கிச் செயல்பட்டது. ஆனால்

பின்பு நடந்த பல செயல்கள் புதுப்பித்தலை எடுத்துக்காட்டவில்லை. கடந்த காலத் திருச்சபையின் பல நல்ல செயல்கள் தவறிப்போய்விட்டன. விரும்பத்தகாதவைகள் தோன்றின. இதைக் கண்டு பலர், நம்பிக்கையிழந்து எல்லாம் பாழ்பட்டுப் போய்விட்டன என்று எண்ணுகின்றனர். புதிய அமைப்பிலும் பல நல்ல செயல்கள் உள்ளன. கடந்தகாலத் திருச்சபையில் எல்லாம் விரும்பத் தக்கவை அல்ல. ஆகவே, விசுவாசிகளின் கடமை கடந்த காலத் திருச்சபையிலிருந்து இப்போது இழந்து போனதாகத் தோன்றும் நல்ல செயல்களை மீண்டும் முயன்று அமைக்க வேண்டும்; அயராது உழைக்க வேண்டும்; போராட வேண்டும். அதே போன்று, புதிய அமைப்பில் உள்ள நல்ல செயல்களை மனமுவந்து ஏற்கவேண்டும். தீயவற்றை எதிர்த்துப் போராடத் துணியவேண்டும். இவ்வாறு, தீமையை எதிர்த்துப் போராடி, நல்லனவற்றையெல்லாம் ஏற்று, அவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய திருச்சபையை, புதிய யுகத்தை அமைக்க வேண்டும். இதுவே புலம்பல் நூல் நமக்கு விடும் சவாலாகும். அவநம்பிக்கைக்கும், ஏமாற்றத்திற்கும், இழப்பு உணர்வுக்கும் மீட்பு வரலாற்றில் இடமே இல்லை. ஏமாற்றம், இழப்பு உணர்வுகளுக்கு இடமளித்து ஒன்றுமே செய்யாமல் கையாலாகாதவர்களாய் இருப்பதுவே திருச்சபையில் பல தீய போக்குகள் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் காரணமாகின்றன. இந்நிலையைக் கைவிட்டு, தனது கருவூலத்திலிருந்து பழையனவும் புதியனவும் கொண்டுவரும் பொறுப்புள்ள மேற்பார்வையாளர்போல் நல்லவை எல்லாம் ஏற்று, உற்சாகத்தோடும் விடாமுயற்சியோடும் புதிய திருச்சபையை அமைக்க வேண்டும் என்று, புலம்பல் நூல் நமக்கு இன்று கற்பிக்கிறது. ஏனெனில், இறைவன் இன்றும் ஆட்சி செய்கிறார்; வரலாற்றின் ஆண்டவராக உள்ளார். ஆகவே, நம்பிக்கைக்கு இடமிருக்கிறது.

புலவர் (POET)

புலவர் என்பது பொயெத்தெஸ் என்ற கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு (அ.ப.17:28). கிரேக்கச் சொல்லின் சொற்பொருள் "செய்பவர்" என்பதாகும் (உரோ 2:13; யாக் 1:22-23.25; 4:11). அ.ப. 17:28-இல் பவுல் "உங்கள் புலவர்களில் சிலர்" எனக் குறிப்பிடுகிறார், அதாவது, "உங்கள் புலவர்களில் ஒருவர் கூறுவதுபோல் நாமும் அவரினமே" என்ற வாக்கியம் பின்னோக்காக "நாம் வாழ்வதும் இயங்குவதும் இருப்பதும் அவரிலேதான்" என்ற வரியைக் குறிக்கிறதா, முன்னோக்காக "நாம் கடவுளின் இனத்தவராதலால்...." என்ற வரியைக் குறிக்கிறதா அல்லது இரண்டையும் குறிக்கிறது என்பதா என்பதைக் கிரேக்க வாசகம் சுட்டிக்காட்டவில்லை. "நாம் வாழ்வதும், இயங்குவதும், இருப்பதும் அவரிலேதான்" என்ற வாக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும், இந்த மேற்கோள், கிறிஸ்துவுக்குமுன் 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எப்பிமானிதெஸ் என்ற கிரேக்கப்புலவரின் மேற்கோள் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆனால், இக்கருத்தையும் அறிஞர்கள் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. இக்கருத்து ஸ்தோயிக்குத் தத்துவம் தோன்றுமுன் ஏற்பட்ட ஒரு கருத்து. அதாவது, மனிதன் 'சேயுசு எனும் கடவுளில்' வாழவில்லை; மாறாக, கடவுளின் வல்லமையால் வாழ்கிறான் என்பதே எப்பிமானிதெஸ் என்ற கிரேக்கப் புலவரின் கருத்து. எனவே, எப்பிமானிதெஸ் கருத்துப்படி சேயுசு இறக்கவில்லை, இன்னும் வாழ்கிறார். ஏனெனில், அவரால்தான் நாம் வாழ்கிறோம். எது எப்படியிருந்தாலும் இந்த வாக்கு யூத முறைப்படியும் ஸ்தோயிக்கு முறைப்படியும் எளிதாக விளக்கப்படலாம்.

இரண்டாவது பகுதியான "நாமும் அவரினமே" என்பது கி.மு. 310-ஆம் ஆண்டில் சிசிலியாவில் பிறந்த அராத்து என்பவர் எழுதிய பினோமினா என்ற நூலில் காணப்படுகிறது. இவர் ஸ்தோயிக்கு செனோ என்பவரின் நண்பர். எனவே, இவர்

ஸ்தோயிக்குத் தத்துவத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். இந்த வாக்கு, அராத்துவின் நூலின் தொடக்கத்தில் வருகிறது. இதை இவர் கிரியாந்தெஸ் என்ற மற்றொரு புலவரின் "சேயுசுக்கு ஒரு பாடல்" என்ற நூலிலிருந்து எடுத்துக் கையாண்டிருக்கலாம். அதில் வாசகம் "ஏனெனில், நாங்கள் உமது வழிமரபு" என்றுள்ளது.

நமது ஆராய்ச்சி எதுவானாலும், ஒன்று மட்டும் உண்மை; பவுல் கிரேக்கர்களுக்குப் போதிக்கும்போது கிரேக்கக் கவிதைகளை மேற்கோள் காட்டிப் போதித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புல் (GRASS)

எபிரேய மொழி- பலவகைப் புல்களையும், புல் போன்ற மருத்துவப் பூண்டுகளையும் கவனமாக வேறுபடுத்தவில்லை எனலாம். இதைக் குறிக்கும் எபிரேயப் பொதுச்சொல் (ஏதேபு = புற்பூண்டு), விலங்குகளுக்கு அளிக்கப்படும் உணவையும் (உப 11:15), மனிதர்களின் உணவையும் (ஆதி 1:29) குறிக்கின்றது. மற்ற இடங்களில் விலங்குகளின் உணவையும் வீட்டுக் கூரையில் வளர்வதையும் மட்டும் புல் குறிக்கிறது (சங் 104:14; 129:6). பல எபிரேயச் சொற்கள் புல்லைக் குறிக்கின்றன (2 சாமு 23:4; யோபு 6:5; எண் 22:4).

காலையில் தோன்றி மாலையில் வாடிக்காய்ந்து போகும் புல்லின் தன்மை மனிதவாழ்வின் தற்காலிகத் தன்மையை அடையாளமாக உணர்த்துகிறது (சங் 90:6). புல்லின் பெரும் வளர்ச்சி பலனுடைமையையும், செழிப்பையும் குறிக்கிறது (எசா 66:14). கால்நடைகளுக்கும் மனிதருக்கும் இறைவன் புல்லை அளிப்பது அவரது அருட்காவலுக்கு ஓர் அடையாளமாகும் (சங் 104:14). வறட்சிக்காலத்தில் புல் கிடைக்காமை இறைவனுடைய விருப்பமின்மையின் அடையாளமாகும் (எரே 14:5).

புதிய ஏற்பாட்டில் சமவெளியின் புல் பற்றிய குறிப்புகள் பல உள்ளன (மத் 14:19; மாற் 6:39; யோவா 6:10; திருவெளி 8:7; 9:4). பயிர் செய்யப்பட்ட புல்லும் காட்டுப் புல்லும் வேறுபடுத்தப்படுகின்றன (மத் 6:30 இணை; லூக் 12:28; யாக் 1:10-11; 1 பேதுரு 1:24). இறைவனது அருட்காவலையும் (மத் 6:30), மனிதனின் நிலையாமையையும் (யாக் 1:10-11) குறிக்க, புல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புல்லறுப்பு (MOWING)

இது பொதுவாக "முதல் புல்லறுப்பு" என்ற கருத்தில்தான் வருகின்றது. சான்றாக, ஆமோ 7:1-இல் "அரசனுக்கென முதல் புல்லறுப்புச் செய்தானபின்" என்று வருவதைப் பார்க்கின்றோம். இந்த முதல் புல்லறுப்பு அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரியாக எண்ணப்பட்டது.

புளிப்பற்ற அப்பம் (UNLEAVEND BREAD)

இது புளிப்புச் சத்துச் சேர்ந்து புளிப்பேறாத மாவால் செய்யப்பட்ட அப்பமாகும். பாஸ்கா விழாவைப் புளிப்பற்ற அப்பங்களோடு கொண்டாடும்படியும் (யாத் 12:8.15), தானியக் காணிக்கைகளைப் புளிப்புச்சத்து இன்றி ஒப்புக்கொடுக்கும்படியும் (லேவி 2:4) எபிரேயர்கள் யாவேயால் கட்டளையிடப்பட்டனர். சில சமயங்களில் விரைவாகப் பயணம் செய்வதின் பொருட்டு, புளிப்பற்ற மாவிலிருந்து அப்பங்கள் சுடப்பட்டன (ஆதி 19:3; நீதி 6:19; 1 சாமு 28:24).

புதிய ஏற்பாட்டில் தூய்மையற்றது என்ற உருவகப்பொருளில் பவுல் புளிப்புச்சத்து என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். அது சிறிய அளவாய் இருந்தாலும், மாவு முழுவதையும் மாசுபடுத்தும் (1 கொரி 5:1-2.6-8).

புளிப்பற்ற அப்பவிழா (UNLEAVEND BREAD, FEAST OF)

இது 'மட்சோத்து விழா' என்றழைக்கப்பட்டது. இதுவும், பாஸ்காத் திருவிழாவும் சேர்த்துக் கொண்டாடப்பட்டன. இஃது ஒரு வரலாற்று விழா;

இஸ்ராயேலர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துகின்றது (யாத் 12). பாஸ்கா நாளிலிருந்து ஒரு வாரத்திற்குப் புளிப்பற்ற அப்பம் மட்டுமே உணவாக உட்கொள்ள வேண்டும் (யாத் 12:15-20; 13:3-7). புளிப்பற்ற அப்பவிழாவும், அறுவடை விழாவும், சேகரிப்பு விழாவும் வருடத்தின் முதல் மாதத்திலேயே கொண்டாடப்பட வேண்டும் (யாத் 23:15-16). ஆனால், பாஸ்காவைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. புளிப்பற்ற அப்பவிழா அதே சொற்களில் யாத் 34:18-இல் பாஸ்காவைப் பற்றிக் குறிப்பிடாமல் விவரிக்கப்பட்டுள்ளது.

பாஸ்கா விழாவும் புளிப்பற்ற அப்பவிழாவும், சில இடங்களில் சேர்த்துக் குறிக்கப்படுகின்றன (லேவி 23:6; யாத் 12; எண் 28:17; உப 16:1-8; எசே 45:21; 2 நாள் 35:17); சில இடங்களில் பாஸ்கா விழாவைக் குறிக்காமல், புளிப்பற்ற அப்பவிழா கூறப்படுகிறது (உப 16:16; 2 நாள் 8:13; 30:13.21; எஸ் 6:12). இஃது அறுவடைக்காலத்தின் தொடக்கத்தில் செலுத்தப்பட்ட நன்றிகூர்தல் விழாவாகும். இயற்கையிலிருந்து கிடைப்பது புனிதமானது; தெய்வத்திடமிருந்து நேரடியாக வருவது. ஆகவே, மனிதன் அதைப் பயன்படுத்துமுன் தெய்வத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். இச்சடங்கில் புளிப்புச் சத்தை ஒரு வாரத்திற்குச் சேர்க்காமலிருக்க வேண்டும். புறத்திலிருந்து புளிப்புச் சத்தைச் சேர்ப்பது, மாவை மாசுபடுத்துகிறது. இவ்விழா கானானியர்களிடம் தோன்றியிருக்கலாம். அவர்களிடமிருந்து இஸ்ராயேலர் ஏற்று, தங்கள் மீட்பு வரலாற்று நிகழ்ச்சி ஒன்றின் நினைவுகூர்தலாக மாற்றியிருக்கலாம். ஆனால், இஸ்ராயேலர் கடைப்பிடித்த சடங்கில் கானானியருக்கு மட்டும் உரிய எந்தப் பண்பைப் பற்றியும் சுட்டிக்காட்ட முடியாது.

புதிய ஏற்பாட்டில், இயேசுவின் பாடுகளின் வரலாற்றோடு புளிப்பற்ற அப்பவிழா குறிப்பிடப்படுகிறது. இறுதி இரவு உணவு "புளிப்பற்ற அப்பவிழாவின் முதல் நாளிலும்" (மத் 26:17; மாற் 14:12), "புளிப்பற்ற அப்பவிழா நாளிலும்" (லூக் 22:1.7) நடைபெற்றது. இவ்விழா அ.ப. 12:3; 20:6-இலும் சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்விழா 1 கொரி 5:7.8-இல் பவுலால் சுட்டிக்காட்டப்படுதல், பாஸ்காக் காலத்தில் புளிப்பற்ற அப்பத்தை உண்ணும் பழக்கம் புறவினக் கிறிஸ்தவர்களிடையேயும் இருந்தது என்பதைக் காட்டுகிறது. இவ்விழாவின் தன்மை, உரோமை வழிபாட்டு முறையில் நற்கருணைப்பலியில் புளிப்பற்ற அப்பம் பயன்படுவதில் எஞ்சியிருக்கிறது.

புளிப்புச்சத்து உவமை (LEAVEN, PARABLE OF)

இறையரசு எளிமையாக ஆரம்பித்து, பின்னர் உலகமனைத்திலும் பரந்து விரிந்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட இயேசு இந்த உவமையைக் கூறுகிறார் (மத் 13:33). சிறிதளவு புளிப்புச்சத்து, மாவு முழுமையிலும் புளிப்பேற்றுவது போல, இறையரசும் ஆரம்பத்திலே மிகவும் சிறிய முறையிலே தோன்றிப் பின்னர், வியத்தகு முறையில் எல்லா இடங்களிலும் பரவி வளர்ந்து நிற்கும்.

புள்ளி, கொம்பு (DOT)

மிகவும் சிறிய விவரம், தோராவின் ஒவ்வொரு விவரத்தின் நிலையான, மாற்ற முடியாத தன்மையைப் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் வலியுறுத்துகின்றன (மத் 5:18; லூக் 16:17). இதே கருத்து பிற்கால யூதத்துவத்திலும், குறிப்பாக ராபிகளின் நூல்களிலும் வலியுறுத்தப்படுகிறது. புள்ளி அல்லது கொம்பு என்பது ஓர் எழுத்தின் சிறு பகுதியைக் குறிக்கிறது. இவை எபிரேய எழுத்துக்களை வேறுபடுத்தப் பயன்பட்டனவாக இருக்கலாம்.

புள்ளிகளையுடைய (DAPPLED)

இந்தச் சொல் செக் 6:36-இல் வரும் சில குதிரைகளின் நிறத்தைக் குறிக்கிறது. இது "புள்ளிகளையோ", "பலவண்ணப் புள்ளிகளையோ" குறிக்கிறது (காண்க. ஆஸிதி 31:10.12).

புள்ளோட்டி உருவம், தோட்டத்துப் பொம்மை (SCARECROW)

இது பெரும்பாலும் ஒரு தூணாகவோ, செப்பமற்ற மனித உருவாகவோ இருக்கலாம். இது பறவைகளைப் பயமுறுத்தவும், தீய ஆவிகளை அச்சுறுத்தவும் பயன்படக் கூடியதாக அமைக்கப்படும். எரேமியா (10:5) புறவினத்தினருடைய சிலைத் தெய்வங்களை இதற்கு ஒப்பிட்டுச் சொல்கிறார். "அவை வெள்ளரித் தோட்டத்துப் பொம்மை போன்றவை" (எரே 10:5) என்றார். பாரு 6:69 எரேமியாவின் 'இந்த ஒப்புமையைப் பிரதிபலிக்கிறது.

புறவினத்தார் (GENTILES, PAGANS NATIONS)

I. பழைய ஏற்பாடு மனித குலத்தை இரண்டாகப் பிரிக்கிறது. ஒரு குழுவினர்- இறைமக்கள் என்று அழைக்கப்படும் இஸ்ராயேலர் ஆவர். இறைவன் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களோடு உடன்படிக்கை ஏற்படுத்தி, அவர்களுக்கு வாக்குறுதிகள் அளித்தார். மற்றோர் குழுவினர்- ஏனைய நாடுகளைச் சேர்ந்த புறவினத்தார் ஆவர். இவ்விரு குழுவினருக்குமிடையே வேறுபாடுகள் உண்டு. இவை இன வேறுபாடுகளோ, அரசியல் வேறுபாடுகளோ மட்டுமல்ல. அவர்களுக்கிடையே உள்ள முக்கிய வேறுபாடு- சமய வேறுபாடேயாகும். புறவினத்தார், யாவே என்றழைக்கப்படும் இஸ்ராயேல் மக்களின் இறைவனை அறியாதோரும் (புறமதத்தினர்), இம்மக்களின் வாழ்க்கையில் பங்கு பெறாதோரும் (அன்னியர்) ஆவர். புதிய ஏற்பாட்டில் "இறைமக்கள்" என்ற சொல்லின் பொருள் வளர்ந்து விரிவுமடைந்து திருச்சபையாக, அதாவது கிறிஸ்துவின் உடலாகத் திகழ்கிறது. இந்தப் புதிய மக்கள் குழுவில் சேர எல்லா மனிதருக்கும் உரிமை இருந்தாலும், யூதர், புறவினத்தார் என்ற வேறுபாடு இன்னும் மறையவில்லை (காண். உரோ 1:16; 15:7-12). இப்படியாக இஸ்ராயேல் மக்களுக்கும் புறவினத்தாருக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பற்றிய விவாதம் மீட்பின் வரலாற்றில் தொடர்ந்து காணப்படுகிறது. இறைவன் அவருடைய திட்டத்தை இஸ்ராயேல் மக்களின் மூலம் மனித வரலாற்றில் புகுத்துகிறார். இதற்காகவே அவர்களைத் தேர்ந்தெடுத்து, தனியாக ஒதுக்கிவைத்தார். ஆனால் அதே நேரத்தில், இத்திட்டம் மனிதகுலம் முழுவதின் மீட்பைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக்காரணத்தினால் இஸ்ராயேலையும் புற வினத்தாரையும் ஒன்றிணைக்க கிறிஸ்து வரும் வரை (எபே 2:14 தொ) மீட்பு தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கே கிடைக்கும் என்ற கோட்பாட்டுக்கும், யாவருக்கும் உரியது என்ற கோட்பாட்டுக்கும் இடையில், மீட்பு வரலாற்றுக்கு முன்னர், ஊசலாடியது.

II. பழைய ஏற்பாடு

1. **தொடக்கங்களின் மறைபொருள்:** பழைய ஏற்பாட்டின் ஆரம்பத்தில் இறைவனின் அழைப்பு இவ்வுலகுக்கு வரும் பொழுது இவ்வுலகம் பற்பல இனங்களாகவும், நாடுகளாகவும், பண்பாடுகளாகவும் பிளவுபட்டுக் கிடப்பதைக் காண்கிறோம். இந்த அடிப்படை வரலாற்று உண்மை பல கேள்விகளை எழுப்புகின்றது. இப்பிளவுகளை இறைவனே ஏற்படுத்தினாரா? இல்லாவிடில், இவை ஏற்பட்டதன் காரணமென்ன? இக்கேள்விகளுக்கு மறைநூல் அறிவியல் முறைப்படி பதிலளிக்கவில்லை. அதே நேரத்தில் மனுகுலத்தின் ஆரம்பத்தைப் பற்றிய மறையுண்மையைத் திருவெளிப்பாடு ஒளிர்விப்பதற்காக, விவிலியம் இப்பிரச்சனை பற்றி நெருக்கமாக ஆய்வு செய்யாமலில்லை.

அ) மனிதகுலத்தின் ஒன்றிப்பும், வேறுபாடுகளும்:

ஆதியாகமம் மனித இனத்தின் ஒன்றிப்பை வலியுறுத்துகிறது. இறைவன் மனித குலம் முழுவதையும் ஒரே மூலத்திலிருந்து உண்டு பண்ணினார் (அ.ப. 17:26). எல்லா மனிதருக்கும் ஒரே தன்மை இருப்பதுமின்றி அவர்எல்லாரும் ஒரே இரத்தமுடையவர்களாயுமிருக்கிறார்கள். தலைமுறைக் கொடிகளெல்லாம் ஆதாம்-ஏவாளான முதற்பெற்றோரிடமிருந்தே

ஆரம்பிக்கின்றன. பெருவெள்ளத்திற்குப் பின், அவற்றிற்கு நோவாவிலிருந்து தொடர்பு காட்டப்பட்டன (ஆதி 9:18தொ). ஆனால், இந்த ஒன்றிப்பானது வேறுபாடற்ற ஒன்றிப்பன்று. மனிதன் பெருகிப் பலுகிப் பூமியை நிரப்ப வேண்டும் (ஆதி 1:28). இதைச் செய்வதென்றால் படிப்படியாக வெவ்வேறு இனங்களும் நாடுகளும் ஏற்படவேண்டியது அவசியம் என்றும், இதுவே இறைவனின் விருப்பம் என்றும் மறைநூல் கருதுகிறது (ஆதி 10; உப 32: தொ).

ஆ) பாவத்தின் சமூக விளைவுகள்: மனிதனுடைய தற்போதைய நிலை இறைவனுடைய நோக்கத்திற்கு இசைந்ததாக இல்லை. மனிதனுடைய வரலாற்றில் பாவம் குறுக்கிட்டது. ஆதாமும் ஏவாளும் தெய்வங்கள் போலாக ஆசித்தார்கள் (ஆதி 3:5). சினார் நாட்டுச் சமவெளியில் குடியேறி, "வானளாவிய கோபுரம் கொண்ட நகரைக்" கட்டத் திட்டமிட்டார்கள் (ஆதி 11:4). இவ்விரண்டு செயல்களிலும் ஒரே விதமான எல்லையற்ற தேவ துரோகம் உள்ளடங்கியுள்ளது. அதே போல் இறைவனும் ஒரே விதமான தீர்ப்பையே இவ்விரண்டு செயல்களுக்கும் அளிக்கின்றார் (ஆதி 3:14-24; 11:5-8). இன்று மனிதன் தன் வாழ்க்கையில் அனுபவிப்பதெல்லாம் இச்செயல்களின் விளைவே. பாவச்சூழ்நிலையின் விளைவான இந்த இனப்பிரிவு, சகோதரரிடையே வெறுப்பையும் (காயின்-ஆபேல், 4:1-16), ஆன்ம ஒன்றிப்பின்மையையும் (மொழிக்குழப்பம் 11:7 தொ) உண்டாக்குகிறது. இப்படியாக இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவை முறிக்கும் சிலை வழிபாடும், மனிதரிடையே வெறுப்பை ஏற்படுத்தும் அகந்தையும் நிறைந்த சூழ்நிலையில்தான் இனங்கள் உண்டாயின. இதே சூழ்நிலையில்தான் ஆபிரகாமும் அழைக்கப்பட்டார். இறைவன் அவரைப் புறமதத்தினரிடமிருந்து தேர்ந்தெடுத்தது உண்மைதான் (யோசு 24:2). ஆனால், தமக்குச் சொந்தமான ஒரு புதிய மக்களின் தகப்பனாராக்கவும் இறுதியில் மண்ணுலகின் எல்லாக் குடும்பங்களையும் அவர் மூலம் ஆசீர்வதிக்கவுமே அவரை அழைத்தார் (ஆதி 12:1 தொ).

2. வரலாற்றில் இஸ்ராயேலும் புறவினத்தாரும்: சில சுற்றுப்புற நாடுகளுடன் தமக்கு இருந்து வந்த இயற்கையான உறவுகளை இஸ்ராயேல் மக்கள் புறக்கணிக்கவில்லை. குலமுதியவர்களின் தலைமுறை அட்டவணைகள் இவ்வுண்மையைப் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளன. இசுமயேலுக்கும் (ஆதி 16) மிதியானுக்கும் உள்ள உறவு (25:1-6); மோவாபுக்கும் அம்மோனியருக்கும் உள்ள உறவு (19:30-38); அரமேயருக்கும் (29:1-14) எதோமியருக்கும் இடையே உள்ள உறவு (36). மேலும், மக்கபேயர் காலத்தில் யூத மக்கள் ஸ்பார்த்த மக்களோடு இனவுறவு கொண்டாடினார்கள் (1 மக் 12:7.21). இருந்தபோதிலும், புறவினத்தாரிடம் இஸ்ராயேல் மக்களுக்கு இருந்த மனப்பான்மை அவர்களுடைய உடன்படிக்கையாலும் மீட்புத் திட்டத்தாலும் அமைக்கப்பட்டது.

அ) புறவினத்தார் இறைவனின் எதிரிகள்: இஸ்ராயேல் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு; எனவே, உண்மையான இறைவனைப் பற்றிய அறிவு, அவரை வணங்கும் முறை, உடன்படிக்கையில் உள்ளடங்கிய மீட்பின் நம்பிக்கை, இறைவனின் வாக்குறுதிகள் ஆகிய அடிப்படை உண்மைகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், இவை ஒவ்வொன்றிற்கும் ஏனைய நாடுகள் பேரிடராக இருந்தன. அரசியல் ஆதிக்கம் செலுத்துவதன் மூலமும், தவறான சமய நெறிகளைப் புகுத்துவதன் மூலமும் புறவினத்தார் இஸ்ராயேல் மக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தார்கள்.

1) அரசியல் அச்சுறுத்தல்: இஸ்ராயேல் மக்களின் அரசியல் வாழ்க்கை அச்சுறுத்தப்படாத காலம் மிக அரிது. செருக்கும், பேராசையும் புறவினத்தாரை ஆட்கொண்டிருந்தன. எனவே, கௌரவம் நில உடைமை முதலியவற்றைப் பற்றி

அக்கறையுடையவர்களாய் இருந்தார்கள். பன்னாட்டு அரசியலில் சிக்கிக்கொண்ட இஸ்ராயேலரோ தம்முடைய கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்ட உண்மைகளை விடாப்பிடியாகப் பாதுகாக்க வேண்டியிருந்தது. எகிப்து நாட்டில் அனுபவித்த அடிமை வாழ்க்கையைப் பற்றி இஸ்ராயேலர் அறிந்திருந்தனர். பிறகு கானான், மிதியான், பெலிஸ்தியர் முதலிய நாடுகளுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே இறைவனால் மூட்டப்பட்ட போர்களையும் அவர்கள் அறிவார்கள். தாவீது அரசனின் ஆட்சியில் இச்சூழ்நிலை தற்காலிகமாக மாறியது (காண். 2 சாமு 8); இஸ்ராயேலின் கௌரவம் ஓரளவு அதிகரித்தது. ஆனால், வெகு விரைவில் இந்நிலை மாறியது. சுற்றுப்புறத்திலுள்ள சிற்றரசுகள் இஸ்ராயேல்மேல் வெறுப்பும் நப்பாசையும் கொண்டன. மேலும், வல்லரசுகளான எகிப்து, அசீரியா, பாபிலோன் முதலியவையும் இஸ்ராயேல் மேல் ஆதிக்கம் செலுத்தமுயன்றன. அரசர்கள் காலம் இப்படிப்பட்ட கடினமான போராட்டங்கள் மலிந்த காலமாகும். இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்ட காலத்தில் நடந்ததுபோல் (யாத் 5-14), பொய்க்கடவுளை வணங்கும் கர்வம் நிறைந்த நாடுகள் உண்மைக் கடவுளையே எதிர்த்து நின்றன (2 அர 18:33 தொ; 19:1-7. 12-19). பிற்காலத்தில் அந்தியோக்கு எப்பிபான் என்பவனும் இதே முயற்சியில் ஈடுபட்டான். அவன் யூதேயாவைக் கிரேக்க மயமாக்கப் பாடுபட்டான் (1 மக் 1:29-42). இவற்றிலிருந்து, இஸ்ராயேலுக்கும் புற வினத்தாருக்குமிடையே இருக்கக்கூடிய உறவு வெறுப்புடையதாகவே இருக்க முடியும் என்பது வெள்ளிடைமலை.

2) தவறான சமயக் கவர்ச்சி: புறவினத்தாரையே புறமதங்களின் அறிகுறி என்று இறைமக்கள் கருதினார்கள். இப்புறமதங்கள் சில வேளைகளில் தவறான சமய நெறிகளைப் புகுத்தின. மற்ற நேரங்களில் கொடுமையானதாக இருந்தன. இஸ்ராயேல் மக்கள் சிலைகளை வணங்கும் முன்னோரின் வழி வந்தோராகையால், புறமதத்தினரை எளிதில் பின்பற்றும் மனப்பான்மை அவர்களிடமிருந்து (யோசு 24:2). நீதிபதிகளின் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் கானானியரின் சிலை வணக்க முறையைப் பின்பற்றி வந்தனர் (நீதி 2:11 தொ). எருசலேம் தேவாலயத்தை எழுப்பிய சாலமோன் அரசர் அண்டை நாட்டுத்தேவர்களுக்குத் திருவிடங்களைக் கட்டினார் (1 அர 11:5-8). பின்வந்த நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்து வந்த அசீரியரின் மதக்கோட்பாடுகள் ஏற்கெனவே வழக்கில் இருந்த கானானியரின் மதக்கோட்பாடுகளுடன் சேர்க்கப்பட்டன (2 அர 16:10-18; 21:3-7; எசே 8). மக்கபேயர் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் பண்பாட்டுக் கௌரவம் நிறைந்த கிரேக்க மதக்கோட்பாடுகளைப் பின்பற்றப் பார்த்தார்கள். மேலும், அந்தியோக்கு எப்பிபான், இம்மதக் கோட்பாடுகளையே இஸ்ராயேல் மக்களிடம் புகுத்தப் பாடுபட்டான் (1 மக் 1:43-61). இச்சூழ்நிலையில்தான் உபாகமம் கடுமையான சட்டங்களை வகுத்தது. புறவினத்தாருடைய மதக்கோட்பாடுகள் இஸ்ராயேலருடைய மதத்தின் தூய்மையைக் கெடுத்து விடாமலிருக்க, இஸ்ராயேல் மக்கள் புறவினத்தாரிடம் இருந்து முழுவதும் பிரிந்து வாழ வேண்டும் என்று போதித்தது (உப 7:1-8).

ஆ) இறைவன் திட்டத்தில் புறவினத்தார்: புறவினத்தார் உண்மை இறைவனின் எதிரிகள் என்றும், இஸ்ராயேல் மக்கள் அவர்களிடமிருந்து பிரிந்து வாழவேண்டும் என்றும் பழைய ஏற்பாடு போதிப்பது உண்மை தான். ஆனால், புறவினத்தாரைப்பற்றிய வேறு போதனைகளையும் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம். யாவே எல்லாருக்கும் இறைவன். எல்லா இனத்தவரும் அவருடைய பராமரிப்பில்தான் இருக்கின்றனர். ஏற்கெனவே புறவினத்தாரின் முதற்கனிகள் உண்மை இறைவனை வணங்கும் பொருட்டு இஸ்ராயேல் மக்களோடு ஒன்று சேர்க்கப்பட்டு விட்டார்கள்.

i) யாவே முன்னிலையில் புறவினத்தார்: யாவே எல்லா நாடுகளையும் கண்காணிக்கிறார். அவர் இஸ்ராயேல் மக்களை எகிப்து நாட்டிலிருந்து

மீட்டதுபோல், பெலிஸ்தியரையும், அரமேயர்களையும், புகழுடையச் செய்தார் (ஆமோ 9:7). இஃது ஒரு முக்கியமான உண்மை. எந்த விதமான சமயந்தழுவிய நாட்டுப்பற்றையும் இவ்வுண்மை தடைசெய்கிறது. ஆனால், அதே நேரத்தில் இஸ்ராயேலைப்போல் அவர்களும் ஒரே கடவுளின் தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் என்பதைப் புறவினத்தார் உணரவேண்டும் (ஆமோ 1:3-23). இந்தத் திருமுறையில் பழைய ஏற்பாடு மீட்புத்திட்டத்தின் அனைத்துலகத் தன்மையை உறுதிப்படுத்துகிறது. ஆனால், புறவினத்தாரின் பங்கு கிளைக்கதைகளாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. சில வேளைகளில் இவர்கள் இறைவனின் கடுஞ்சினத்தை வெளிப்படுத்தும் கருவிகளாக மாறி, இஸ்ராயேல் மக்களைத் தண்டிக்கிறார்கள் (எசா 8:6 தொ; 10:5: எரே 27). வேறு வேளைகளில், சைரஸ் என்பவனைப்போல், மீட்புப் பணிக்கு அழைக்கப்படுகின்றனர் (எசா 41:1-5; 45:1-6). அதே நேரத்தில் அவர்கள் கொண்டு வந்த மனித மதிப்பீடுகளை ஏளனம் செய்யலாகாது. ஏனெனில், அவை இறைவனின் கொடை, இஸ்ராயேல் மக்கள் அவற்றைத் தங்களுடைய நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் எகிப்து நாட்டை விட்டு ஓடும்பொழுது எகிப்தியரின் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றார்கள் (யாத் 12:35தொ); கானானியரின் நாட்டிற்குப் படையெடுத்தபொழுது அவர்களுடைய பண்பாட்டிலிருந்து பயனடைந்தனர் (உப 6:10தொ). மேலும், ஒவ்வொரு சகாப்தத்திலும் பன்னாட்டு பண்பாட்டிலிருந்து சில புதிய அம்சங்களைத் தம்முடையதாக்கிக் கொண்டனர் (காண். 1 அர 5:9-14; 7:13).

2) **புறவினத்தின் முதற்கனிகள்:** பற்பல வெளிப்படைக் காரணங்கள் இருந்த போதிலும் இறைவனின் திட்டத்தோடு புறவினத்தார் ஒத்துழைத்தனர். இஸ்ராயேல் மக்கள் இறைவனிடமிருந்து சிறப்புரிமைகளைப் பெற்றடைந்த அளவு புறவினத்தார் பெறவில்லை. எனினும், இதற்கு விதிவிலக்குகள் இருந்தன. சில புறவினத்தார் உண்மை இறைவனை வழிபட்டுவந்தனர். இதை இறைவனும் ஏற்றுக்கொண்டார். எடுத்துக்காட்டாக, மெல்கிசெதேக்கு (ஆதி 14:18தொ), இத்திரோ (யாத் 18:12), நாமான் (2 அர 5:17). சிலர் உடன்படிக்கை மக்களோடு சேர்த்துக்கொள்ளப்பட்டனர். எடுத்துக் காட்டாக, தாமார் (ஆதி 38), இராகாபு (யோசு 6:25), ரூத்து (ரூத் 1:16) ஆகிய இயேசுவின் முன்னோர் (மத் 1:2-5), கிபயோனியர் இனம் (யோசு 9:19-27), விருத்த சேதனத்தை ஏற்றுக்கொண்ட அன்னியர்கள் (யாத் 12:48 தொ; நெகே 15:15 தொ). இவை எல்லாம் இறைவன் இறுதியில் நிலைநிறுத்தப் போகும் அனைத்துலகத் தன்மை வாய்ந்த திட்டத்தின் முன்அறிகுறிகளாகும்.

3. இறைவாக்கினர் நூல்களில் இஸ்ராயேலும் புறவினத்தாரும்:

இறைவாக்கு பற்றி இங்குக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் பண்பு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. மாறாக, இறுதியில் இறைவனின் திட்டம் எப்படி எடுத்துக்காட்டான முறையில் நிறைவேறும் என்பதாகும். இதுபற்றி இறைவாக்கினர் ஓரளவு மட்டுமே அறிந்திருந்தார்கள். அவர்களுடைய கருத்துப்படி புறவினத்தாருக்கு இதில் ஒரு முக்கிய இடமுண்டு. இறைவனுடைய தீர்ப்புக்குப் பணிந்து நடப்பதிலும் சரி, அவருடைய மீட்புச் செயலினால் பயனடைவதிலும் சரி, அவர்களுக்கு முக்கிய இடம் உண்டு.

அ) **புறவினத்தார்மேல் தீர்ப்பு:** இறைவாக்கினர் புறவினத்தாருக்கு எதிராகக் கூறிய இறைமொழிகளெல்லாம் ஒரே வகைப்பட்டவையே (எசா 13:21; எரே 46:51; எசே 25-32). சில வேளைகளில் இஸ்ராயேல் மக்களின் மீட்பைப் பெற்றடைய, கொடிய முறையைக் கையாளும் புறவினத்தாரை முறியடிக்க வேண்டியது இன்றியமையாததாகத் தோன்றிற்று. இவ்வேளைகளில் இறைமொழிகள் மிகுந்த முக்கியத்துவம் அடைந்தன. அவருடைய குறிப்பிட்ட நாள் வரும்பொழுது, இறைவன்

கொடுங்கோன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மாகோகு நாட்டின் அரசன் கோகு என்பவனைத் தகர்த்தெறிவார் (எசே 38-39); எதிரிகளின் எல்லா வலிமையையும் சமாளிப்பார் (யோவே 4:9-14; செக் 14:1-6.12தொ); அவர்களுடைய நகரங்களை அழித்திடுவார் (எசா 24:7-13); அவர்களுடைய அரசர்கள் மேல் தீர்ப்புக் கூறுவார் (24:21 தொ). யூதித்து என்பவளின் கதை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தானியேலின் காட்சியாகமமும் இந்தக் கதையும் மேலே கூறிய கருத்துக்களை மையமாகக் கொண்டுள்ளன. அந்தியோக்கு மக்களுக்குக் கொடுத்த துன்பங்கள் இவற்றின் உண்மையைப் புலப்படுத்தின.

ஆ) புறவினத்தாரின் மீட்பு: ஆனால், இந்த வரலாற்றுக்கு மற்றொரு பக்கமும் உண்டு. இறுதியில் மீட்பு இஸ்ராயேலுக்கு மட்டும் உரியதன்று; ஆரம்பத்திலிருந்து பாவம் மனுகுலத்தின் ஒன்றிப்பைத் தகர்த்தெறிந்தது. அதேபோல், புறவினத்தாரின் முடிவான மனமாற்றம் மனுகுலம் முழுவதின் ஒன்றிப்புக்கு வழிவகுக்க வேண்டும். எருசலேம் நகருக்கு வருவோர் இறைச்சட்டங்களைக் கற்றுக்கொள்வதற்காக வருகிறார்கள். இஃது உலகளாவிய சமாதானத்திற்குத் திரும்புதலாகும் (எசா 2:2தொ). அவர்கள் முடிவில்லா இறைவனிடம் திரும்பிவந்து (எசா 45:14-17. 20-25) அவருடைய வழிபாட்டு முறைகளில் பங்கெடுக்கிறார்கள் (எசா 60:1-16; 25:6; செக் 14:16). எகிப்தும், அசீரியாவும் மனந்திரும்புகின்றன. இஸ்ராயேல் இவற்றை ஒன்றாக இணைக்கும் கருவியாக விளங்குகிறது. (எசா 19:16-25). பாபேலில் ஏற்பட்ட பிரிவினைக்கு முடிவு காணும் வகையில் இறைவன் எல்லா நாட்டினரையும் மொழியினரையும் அவர் பக்கத்தில் ஒன்று சேர்க்கிறார் (66:18-21). எல்லா இனத்தாரும் அவரை அரசராக ஏற்றுக்கொள்கின்றனர். அனைவரும் ஆபிரகாமின் மக்களோடு ஒன்றித்து விடுகின்றனர் (சங் 47). சீயோன் அனைவர்க்கும் அன்னை என்று அழைக்கப்படுகிறது (சங் 87). இறைவனின் ஊழியன் இஸ்ராயேல் மக்களுக்கு நடுவராக இருப்பதுபோல் அவர்களுக்கும் நடுவராக இருக்கிறார் (எசா 42:4.6). இப்படியாக இறுதி நாளில் ஒருமுகமாக இறைமக்கள் மறுபடியும் உருவாக்கப்படவேண்டும். இதன் வழியாக ஆரம்பத்திலிருந்த அனைத்துலகத் தன்மை மறுபடியும் நிலைநாட்டப்படும். சட்ட நூல்கள் இஸ்ராயேல் மக்களுக்குத் தனிப்பட்ட தன்மையைக் கொடுப்பதாகத் தோன்றினாலும், இறைவாக்கினர் நூல்களில் இறைவன் ஆரம்பத்திட்டத்தின்படி, அனைவரும் ஒன்றாக இணைவதைக் காண்கிறோம்.

4. எதிர்பார்ப்புகள்: நாடு கடத்தலுக்குப் பின் இஸ்ராயேல் மக்கள் சட்ட நூல்களின் போதனைகளுக்கும், இறைவாக்கினரின் போதனைகளுக்கும் உரிமையாளர் ஆனார்கள். எனவே, புறவினத்தாரைப் பற்றி மேலே குறிப்பிட்ட இருவிதமான போக்குகளுக்குமிடையே ஊசலாடின். இது வேறுபட்ட தேவைகளுக்கேற்ப அமைந்துள்ளது.

அ) யூத மக்களின் பிரிவுணர்ச்சி: கடந்தகால அனுபவம் யூத மக்களிடையே பிரிவுணர்ச்சியைத் தூண்டிவிட்டது. புறமதத்தினருடன் உறவு வைத்ததால்தானே இஸ்ராயேல் மக்கள் பற்பல தீமைகளுக்கு ஆளானார்கள்? எனவே, அவர்களிடமிருந்து பிரிந்து வாழ்வது முதல் தேவையாகத் தோன்றியது. நெகேமியா, எஸ்ரா ஆகியவர்களின் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் மறுபடியும் தங்கள் உரிமைகளைப் பெற்றடைந்தார்கள். ஆனால் இதை ஒரு தீவிரமான, பிரிவுணர்ச்சி நிறைந்த சூழ்நிலையிலேயே அடைந்தனர் (எஸ் 9-10; நெகே 10:13). இந்த மனப்பான்மை பிற்காலத்தில் சிறிது விரிவடைந்தாலும், மக்கபேயர் காலத்து இடுக்கண் நிலை அவர்களுடைய சமயத்தைத் தழுவிய நாட்டுணர்ச்சியைக் கிளறிவிட்டது. இதே மனப்பான்மை சிறிது காலத்திற்குப்பின் பரிசேயரிடமும், எஸ்ஸேனியரிடமும் மறுபடியும் தலைதூக்கும்.

ஆ) யூத மதமாற்றங்கள்: அதே காலத்தில் இஸ்ராயேல் மக்கள் யூத மதத்தில் சேரவிரும்பும் நன்மனம் படைத்த புறவினத்தாரை முன்பைவிடத் தாராளமாக வரவேற்றார்கள். யோனா நூலாசிரியர் கேலியாகச் சித்தரித்துள்ள சமயவெறி கண்டனம் செய்யப்பட்டது. இஸ்ராயேல் மக்களுடன் இணைய விரும்பும் மனந்திரும்பிய புறவினத்தாருக்கு அதிகார பூர்வமான சட்டம் ஒன்று கொடுக்கப்பட்டது (எசா 56:1-8). கடந்த காலத்தில் எந்தச் சந்தர்ப்பங்களில் இச்சலுகை கொடுக்கப்பட்டது என்றும் மகிழ்வுடன் நினைவு கூரப்பட்டது. உதாரணமாக, மோவாபு நாட்டைச் சேர்ந்த ரூத்து (ரூத் 1:16), அம்மோனியர் நாட்டைச் சேர்ந்த அக்கியோர் (யூதி 5:5-6:20)... அலக்சாந்திரியாவைச் சேர்ந்த யூதர்கள் இதற்கு வழிகாட்டிகளாய் இருந்தார்கள். அங்கு விவிலியம் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. மேலும், ஒரு காப்புரை நூலும் வரையப்பட்டது. இதன் மாதிரிச் சான்றுகளைப் பாரூக்கு நூலிலும் (பாரூ 6), ஞான ஆகமத்திலும் (ஞான 13-15) காணலாம். இக்காலத்திலிருந்து மதத்திற்குச் சான்று பகர்வதும் அதைப் பரப்புவதும் அவர்களுடைய தேவ அழைத்தல் என்பதை யூதமக்கள் உணர்ந்தார்கள்.

III. புதிய ஏற்பாடு:

1. இயேசுவும் புறவினத்தாரும்: இயேசுவின் வருகையோடு இறுதிக்காலம் பிறக்கிறது (மாற் 1:15). அவருடைய பொதுவாழ்வின் ஆரம்பத்தில் இறைவாக்கினர் கூறியுள்ளதுபோல் அனைத்துலகத் தன்மையோடு நடப்பார் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், உண்மையில் சூழ்நிலை இதைவிடச் சிக்கலானதாக இருக்கிறது.

அ) வார்த்தை ஒன்று நோக்கம் ஒன்று:

1) குறுகிய நோக்கங்கொண்ட நடத்தை: அயல்நாடுகளில் தங்கியிருந்தபொழுது கூட, இயேசு அங்குள்ள யூத மக்களுக்கே நற்செய்தியை எடுத்துரைத்தார். அவர்கள் மத்தியில் மட்டுமே புதுமைகளைச் செய்தார். "இஸ்ராயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்பவரிடமே நான் அனுப்பப்பட்டேன்" (மத் 15:24). "பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது நல்லதன்று" (மாற் 7:27) என்று கூறியுள்ளார். மேலும், பன்னிருவரைப் போதிக்க அனுப்பும்பொழுது "புறவினத்தாருடைய நாட்டுக்குச் செல்ல வேண்டாம்" (மத் 10:5தொ) என்று கூறினார்.

2) அனைத்துலகத் தன்மை: அதே நேரத்தில் "காணாமற்போன ஆடுகளின்" தவறான மனோநிலையை இயேசு உணர்ந்த பொழுது, அவர்மேல் விசுவாசங்கொண்ட அன்னியரைப் புகழத் தயங்கவில்லை. உதாரணமாக, கார்ப்பர்நாகும் ஊரைச் சேர்ந்த நூற்றுவர் தலைவன் (மத் 8:10), சமாரியா நாட்டுத் தொழுநோயாளி (லூக் 17:17தொ), கானானியப் பெண் (மத் 15:28). இவர்கள்தான் புறவினத்தாரிடமிருந்து இறை அரசுக்குக் கிடைத்த முதற்கனிகள். ஆனால், எதிர்காலத்தில் இவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நாலா பக்கங்களில் இருந்தும் வந்து இறுதிக்கால விருந்தில் பங்கெடுப்பார்கள். இறை அரசுக்கு உரிமையாளர்களான இஸ்ராயேல் மக்களோ புறம்பே தள்ளப்படுவர் (லூக் 13:28தொ). இப்படியாக வியப்புக்குரிய விதத்தில், யூத மக்களின் நிலையும் புறவினத்தாரின் நிலையும் தலைகீழாக மாறிவிடுகிறது. உடன்படிக்கை உரிமைகளைப் புறவினத்தார் கவர்ந்து விடுகிறார்கள். இறைவனின் திராட்சைத்தோட்டம் இஸ்ராயேல் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு வேறு குடியானவர்களிடம் ஒப்படைக்கப்படும் (மத் 21:43).

ஆ) சிக்கலுக்கு விடை: இயேசுவின் குறுகிய நோக்கத்திற்கும் அனைத்துலகத் தன்மைக்கும் முரண்பாடு எதுவும் இல்லை. மாறாக, வளர்ச்சியடைந்து வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தன்னுடைய கொள்கையை மாற்றியமைத்துக் கொள்கிறார். ஆரம்பத்தில் இஸ்ராயேலை மட்டும் மனந்திருப்பி அவர்களை மண்ணுலகம் முழுவதற்கும் விண்ணரசின் போதகர்களாக்க விரும்பினார். இதனால்தான்

அவருடைய சொந்த இனத்தாரைவிட்டு வேற்றினத்தாரிடம் செல்லவில்லை. ஆனால், யூத மக்களின் உள்ளக் கடினம் ,இத்திட்டத்திற்கு எதிராக நின்றது. இந்நிலையில் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற இறைவன் நிச்சயமாக மாற்றி அமைப்பார். இறை மக்களால் புறக்கணிக்கப்பட்ட இயேசு "பாவ மன்னிப்புக்கென்று பலருக்காக", தன்னுடைய இரத்தத்தைச் சிந்துவார் (மத் 26:28). இப்பலி இறுதிக்கால உடன்படிக்கையின் உறுதிப்பாடாக விளங்குவதோடு இறையரசின் கதவை எல்லா இனத்தவர்க்கும் திறந்துவிடும். இதன் பயனாக மனிதகுலம் இறைவனோடு ஒன்றித்துவிடும்; அதன் உள்ளார்ந்த ஒன்றிப்பையும் மறுபடியும் பெற்றடையமுடியம். எனவேதான் இத்தகனப் பலியைத் தன்னுடைய மகிமையான உயிர்ப்பின் மூலம் நிறைவு செய்தபின், இயேசு பன்னிருவருக்கும் அனைத்துலகத் தன்மை வாய்ந்த இறைப் பணியைக் கொடுப்பார். படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவிக்கவும் (மாற் 16:15), எல்லா இனத்தாரையும் சீடராகவும் (மத் 28:19), மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்கும் அவருடைய சாட்சிகளாய் இருக்கவும் (அ.ப. 1:8) கட்டளையிடுவார். இயேசுவின் உயிர்ப்பினால் யூதமக்களின் தனிப்பட்ட உரிமைகள் திட்டவட்டமாகத் தகர்த்தெறியப்படுகின்றன. அவர்களுடைய பிரிவுணர்ச்சி பரந்த குறிக்கோளுக்கு இடம் கொடுக்கிறது.

2. புறவினத்தாருக்கு நற்செய்தி

அ) முதற் கிறிஸ்தவர்களும் புறவினத்தாரும்.

1) திருச்சபையின் சீரான வளர்ச்சி: தூய ஆவியானவர் சீடர்கள்மேல் இறங்கிய போது இறைவனின் புகழ் எல்லா மொழிகளிலும் அறிவிக்கப்பட்ட போதிலும் (அ.ப. 2:8-11), முதற் கிறிஸ்தவர்கள், ஆரம்பத்தில் இஸ்ராயேல் நாட்டில் மட்டுமே நற்செய்தியைப் போதித்தனர். அங்கிருந்தே இறைவனின் மீட்பு உலகெங்கும் பரவவேண்டும். ஆனால், தூய ஆவியின் ஏவுதலால் திருச்சபை படிப்படியாக வேறு நாடுகளுக்கும் பரவியது. பிலிப்பு சமாரியாவில் நற்செய்தியை அறிவித்தார் (அ.ப. 8). விருத்தசேதனத்தின் மூலம் இஸ்ராயேல் சுவட்டத்தில் சேர்க்கப்படாத நூற்றுவர் தலைவன் கொர்னேலியு என்பவனுக்குப் பேதுரு திருமுழுக்குக் கொடுக்கிறார் (அ.ப. 10). இறுதியாக அந்தியோக்கியாவில் வாழும் கிரேக்கர்களுக்கு இயேசுவைப்பற்றிப் போதிக்கப்படுகிறது. அவர்களில் அனேகர் மனந்திரும்புகிறார்கள் (11:20தொ). பவுலின் அழைப்பில் இறைவாக்குகளுக்கேற்ப (13:47; காண் எசா 49:6) புறவினத்தாரிடம் நற்செய்தியைப் பரப்புவதற்கு ஒரு கருவியைத் திருச்சபை பெறுகிறது (அ.ப. 9:15; 22:15.21; 26:17).

2) எருசலேம் சங்கம்: இப்படியாகத் திருச்சபை வளர்ந்து ஓர் அடிப்படைப் பிரச்சனையை எழுப்பியது. புறவினத்தார் மோசேயின் முறைமைகளைப் பின்பற்ற வேண்டுமா? எருசலேம் சங்கத்தில் இதைப்பற்றி விவாதம் நடந்தது. இப்படிப்பட்ட பாரத்தைப் புறவினத்தார் மேல் சுமத்தலாகாது என்று பவுல் வாதாடினார் (அ.ப. 15:1-5; கலா 2). பேதுரு இதை ஆதரித்து வழி மொழிந்தார். புறவினத்தார் மனந்திரும்புவது மறைநூலின் போதனைக்குப் பொருத்தமானதே என்றார் யாக்கோபு (அ.ப. 15:7-19). இப்படியாக இயேசுவின் சிலுவை மரணத்திலும் உயிர்ப்பிலும் உள்ளடங்கிக்கிடந்த உண்மை இறுதியில் வெள்ளிடை மலையானது. புதிய இறைமக்களின் சமூகமான திருச்சபையில் புறவினத்தாருக்கும் இஸ்ராயேலருக்கும் சமநிலை அளிக்கப்படுகிறது. தான் புறவினத்தாரின் போதகராக அழைக்கப்பட்டது உண்மை என்பதைப் பவுல் இதிலிருந்து, உறுதியாக உணர்கின்றார் (கலா 2:7தொ).

ஆ) பவுல் - புறவினத்தாரின் போதக்: பவுல் நற்செய்தியைப் போதிக்கும்பொழுது பழைய உடன்படிக்கையிலிருந்து வரும் அமைப்புக்குத் தக்க மரியாதை கொடுக்கிறார். எப்பொழுதும், யூத மக்களுக்குத்தான் முதலில் நற்செய்தியைப்

போதிக்கிறார். அவர்கள் அதை ஏற்க மறுத்த பிறகே புறவினத்தாரிடம் செல்கிறார் (அ.ப. 13:45 தொ; 18:5தொ; 19:8 தொ: காண். உரோ 1:16; 2:10). ஆனால் மற்ற இடங்களில் புறவினத்தாருக்கும் நற்செய்திக்குமுள்ள தொடர்பை விளக்குகிறார்.

1) நற்செய்தியும் புறவினத்தாரும்: புறவினத்தாரும் யூத மக்களைப்போல், இறைவனின் சினத்திற்கு உட்பட்டவர்களே (உரோ 1:18). இறைவன் படைப்புகளின் மூலம் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார் (உரோ 1:19தொ; அ.ப. 14:17); ஆனால், அவர்களோ அவரை அறிந்து கொள்ளவில்லை (உரோ 1:21தொ). மனச்சான்றின் மூலம் அவருடைய திருச்சட்டத்தைத் தெரியப்படுத்தினார் (2:14 தொ); அவர்களோ சிலைவழிபாட்டின் விளைவாக உள்ளத்து இச்சைகளுக்குத் தங்களையே கையளித்தனர் (1:24-32). எனினும், இன்று புறவினத்தார் நற்செய்தியில் விசுவாசங் கொள்வார்களேயானால் இறைவன் யூத மக்களுக்கு இரக்கங்காட்டுதுபோல் அவர்களுக்குங் காட்ட ஆசிக்கின்றார் (1:16; 3:21-31; 10:12). விசுவாசந்தான் இருவினத்தாரையும் இறைவனுக்கு ஏற்புடையவராக்குகின்றது. மறைநூலின் சாட்சிப்படி, விசுவாசத்தால் மீட்கப்பட்டோர,ே இறைவனின் ஆசீரைப் பெற உரிமையுள்ள ஆபிரகாமின் மக்களாவர் (கலா 3:6-9). இந்த வாக்குறுதியைக் கண்டனுபவிக்கும் எல்லா இனத்தவரும் ஒருமிக்க விருத்தசேதனம் பெற்றவர்களாகிறார்கள். இப்படியாக ஆபிரகாம் இனத்தார் பலருக்குத் தந்தையாகிறார் (உரோ 4).

2) திருச்சபையில் யூதரும் புறவினத்தாரும்: கிறிஸ்துவில் மனித குலத்தின் ஒன்றிப்புப் புதுப்பிக்கப்படுகிறது. இனி, யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை (கலா 3:28). பகைமை என்னும் சுவர் யூதரையும் புறவினத்தாரையும் பிரித்து வைத்திருந்தது. இந்தச் சுவர் கீழே இடித்துத் தள்ளப்பட்டவுடன் இரு மக்களுக்குமிடையே நட்புண்டாகியது. அவர்கள் எல்லாரும் ஒருமுகமான புதிய மனிதகுலத்தை உருவாக்குகிறார்கள். இந்தப் புதிய மனுகுலம் கிறிஸ்துவை மூலைக்கல்லாகக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாகிறது. மனுகுலம் முழுவதும் ஒரே உடல்; கிறிஸ்து அதன் தலை (எபே 2:11-22). இந்த ஒன்றிப்பின் மறையுண்மை இப்பொழுது திருச்சபையில் செயல் பெற்று வருகிறது. மேலும், விண்ணரசில் முழு நிறைவை அடையக் காத்துக்கொண்டிருக்கிறது. மனித குலத்தை இரு பாகங்களாகப் பிரிக்கும் பழங்காலப் பழக்கம் மறை வரலாற்றிலுள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது. முன்பொரு சமயத்தில் இஸ்ராயேல் மக்கள் பணிவற்றவர்களாய் இருந்ததால் அவர்களில் "எஞ்சியவர்" சிலரையே இறைவன் பாதுகாத்து மற்றவர்களைப் புறக்கணித்தார். புறவினத்தாரை இஸ்ராயேல் மக்களுடன் இணைத்து அதன் மூலம் அவர்களை மீட்கவும், அதே நேரத்தில் இஸ்ராயேலின் பொறாமையை எழுப்பிவிட்டு, அதனால் அவர்களை மனந்திரும்பவைக்கவுமே இவ்வாறு செய்தார் (உரோ 11:1-24). பிற்காலத்தில் புறவினத்தார் எல்லோரும் திருச்சபையில் சேர்ந்தபின், இஸ்ராயேல் இனம் முழுவதும் மீட்கப்படும் (11:25-29). இறைவனின் செயல்முறைகள் புறவினத்தார் எல்லாரும் இஸ்ராயேலுடன் இணைத்து மீட்படைவதோடு முடிகிறது. அப்பொழுது அனைவரும் ஒருமிக்க இறைவனின் மக்களாவார்கள் (15:7-12).

3. கிறிஸ்தவச் சிந்தனைகள்

அ) நற்செய்தி நூல்கள்.

1) முதல் மூன்று ஒத்தமை நற்செய்திகள்: இயேசுவின் இவ்வுலக வாழ்க்கைச் சம்பவங்களை ஒன்று சேர்ப்பதினால் முதல் மூன்று நற்செய்தியாளர்களும் புறவினத்தாரின் மீட்பில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை வெவ்வேறு வழிகளில் காட்டுகிறார்கள். மாற்கு எழுதிய நற்செய்தி நூல் புறவினத்தைச் சேர்ந்த நூற்றுவர் தலைவன் சிலுவை அடியில் செய்த விசுவாசப் பிரமாணத்தை நோக்கி ஒருங்குவிக்கின்றது. "உண்மையாகவே, இம்மனிதர் இறை மகனாய் இருந்தார்" (மாற் 15:39). மத்தேயு புறவினத்தைச்

சேர்ந்த பெண்கள் இயேசு கிறிஸ்துவின் தலைமுறை அட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார் (மத் 1:2-6). மேலும், குழந்தைப் பருவத்திலிருந்தே இயேசு புறவினத்தாரின் அரசராக விவரிக்கப்படுகிறார் (2:1-11). அவருடைய மறைப்பணியைப் "புறவினத்தாரின் நாடான" கலிலேயாவில் ஆரம்பிக்கிறார் (4:15 தொ). இயேசுவின் இறுதி வார்த்தைகளும் புறவினத்தாரைப் பற்றியவையே. நற்செய்தியை எல்லா இனத்தாருக்கும் போதிக்கும்படி கட்டளை இடுகிறார் (28:19). லூக்கா கொடுக்கும் இயேசுவின் தலைமுறை அட்டவணை மனித குலத்தின் தந்தையாகிய ஆதாம்வரை செல்கிறது இயேசு இம்மனுகுலத்தை மீட்கவே வந்தார் (லூக் 3:23-38). எனவேதான் சிமியோன் அவரைப்பார்த்து, "இதுவே பிறவினத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி. இதுவே உம்மக்களாகிய இஸ்ராயேலின் மாட்சி" என்று புகழ்பாடுகிறார் (2:32). இறுதியாக, நற்செய்தி நூல்களையும், அப்போஸ்தலர் பணி நூலையும் இணைத்துப் பார்க்கும்பொழுது இயேசு தன்னுடைய பலியினால் எருசலேமில் பெற்றடைந்த மீட்புச்செயல் மண்ணுலகின் இறுதி எல்லைவரை பரவியுள்ளது தெளிவாகிறது (அ.ப. 1:8).

2) **யோவான்:** யோவான் புறவினத்தாரின் மீட்பை அவ்வளவு வலியுறுத்தவில்லை. ஏனெனில், அவருடைய கவனமெல்லாம் விசுவசியாத யூதமக்கள் மேல்தான் இருந்தது (யோவா 12:37-43). அவர்கள் இறை மக்களாக இருந்தபோதிலும் அவர்களுடைய மனக்கடினம் அவர்களை மற்ற நாட்டினரைப் போலவே ஆக்கியது (11:48 தொ; 18:35). அதே நேரத்தில் இயேசு இவ்வுலகில் இருந்த பொழுதுகூட விசுவாசமுள்ள புறவினத்தார் அவரை அணுகுவதைப் பார்க்கிறோம். இவர்கள்தான் புறவினத்தாரின் முதற்கனிகள் (4:53; 12:20-32). இறுதியாக, அவருடைய மரணம் மனுகுலம் முழுவதையும் இறைவனோடு ஒப்புரவாக்குகிறது. ஏனென்றால், அவருடைய இனத்திற்காக மட்டும் அவர் இறக்கவில்லை; சிதறிக்கிடக்கும் இறை மக்கள் எல்லாரையும் ஒன்று சேர்க்கவே இறந்தார் (11:50தொ).

அ) **திருவெளிப்பாடு:** திருவெளிப்பாடு ஒரு கிறிஸ்தவ இறைவாக்கு. இதுவும் பழைய ஏற்பாட்டிலுள்ள இறைவாக்குகளைப்போல் இறைவனுக்கும் புறவினத்தாருக்குமிடையே உள்ள இரண்டு விதமான தொடர்புகளை விளக்கியுள்ளது.

1) **பகைவர்மீது தீர்ப்பு:** முற்காலத்தில் புறவினத்தார் இஸ்ராயேலிடம் நடந்து கொண்டது போலவே, சில புறமத நாட்டினர் புதிய இறைக்களிடமும் பகைமை காட்டினர் (காண். திருவெளி 11:2). தம்மை வணங்கச் செய்யும் விலங்குகள் என்றும் (திருவெளி 13), இயேசுவின் சாட்சிகளது இரத்தத்தைக் குடித்து இறைநிந்தனை கூறும் பாபிலோனிய வேசி (திருவெளி 17) என்றும் குறிப்பிடுவது இவர்களைப் பற்றியே. இச்சக்திகள், சாத்தானின் ஆற்றல்களால் நிரப்பப்பட்டு இருப்பதால் கிறிஸ்துவுக்கு எதிராக இறுதிப்போர் புரிகின்றன (17:13 தொ; 19:19; 20:7 தொ). இதனால் அவர்கள் தீர்ப்பிடப்பட்டுத் தகர்த்தெறியப்படுவர் (14:6-11;18). கிறிஸ்துவுக்கு எதிராகச் செய்யும் போராட்டத்தில் அவர்கள் தோல்வி காண்பார்கள் (17:14; 19:15.20தொ).

2) **மனந்திரும்பிய நாடுகளின் மீட்பு:** அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் இந்தப் பாவக்கறை படிந்த மனித குலத்திற்கு எதிராக ஒரு புதிய மனிதகுலம் உருவெடுத்துள்ளது. இது செம்மறியின் இரத்தத்தால் மீட்கப்பட்டுள்ளது. எல்லா நாடுகளையும், குலங்களையும், இனங்களையும், மொழிகளையும் சார்ந்த மக்கள் கூட்டம் இது (திருவெளி 7:9-17). இம்மக்கள், இறைவனை நாடுகளுக்கெல்லாம் அரசர் என்று போற்றி (திருவெளி 15:3தொ), ஊழியுள்ள காலம் வரை, புதிய எருசலேமில் வாழ்வார்கள் (21:24 தொ). மீட்கப்பட்ட மனிதகுலம் இறுதியில் ஒன்றிப்பை அடைந்துவிடுமாகையால் புதிய ஏற்பாடு இந்த நம்பிக்கையூட்டும் இறைவார்த்தைகளுடன் முடிவடைகிறது.

நாடுகளின் அரசரே, அவர்களால் விரும்பப்பட்டவரே, அவர்களை ஒன்றாக இணைத்த மூலைக்கல்லே, மண்ணிலிருந்து உண்டாக்கிய மனுகுலத்தை மீட்டருளும்.

புறவினத்தார் முற்றம் (GENTILES, COURT OF THE)

ஏரோது மன்னனின் காலத்தில் கோவில் பரப்பில் வெளிப்புறப் பகுதி இவ்வாறு அழைக்கப்பட்டது. இப்பகுதியில் மட்டும் தான் யூதர் அல்லாதவர்கள் நுழையமுடியும் என்று கோவிலை இரண்டாகப் பிரிக்கும் சுவரில் அமைந்துள்ள எச்சரிக்கைக் கல்லில் குறிப்பிடப் பட்டிருந்தது. மாற்கு 11:15-18-இல் விவரிக்கப்படும் நிகழ்ச்சி கோவிலின் இப்பகுதியில்தான் நடைபெற்றது. காண்க. எருசலேம் ஆலயம்.

புறா (DOVE)

1. புறா என்னும் பொதுப் பெயரின்கீழ் விவிலியமானது கரும்புறா, காட்டுப்புறா, மாடப்புறா, புறா என்னும் பல்வேறு பறவையினங்களை வகைப்படுத்துகிறது. ஆலயப்பலியில் அளிக்கப்படும் பறவை இது மட்டுமே. இஃது ஏழைகளின் காணிக்கையாகும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தூய்மைச் சடங்குகளில் இது பயன்படுத்தப்பட்டது (லேவி 1:14; 5:7,11; எண் 6:10; லூக் 2:24; லேவி 12:8). எனவே, ஆலயத்தில் புறா விற்பவர்களும் இருந்தனர் (மத் 21:12; யோவா 2:14,16).

2. புறாவின் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்தவர்கள் என்ற முறையில், ஒப்பிடுவதில் யூதர்கள் அவற்றைப் பெருமளவில் பயன்படுத்துகின்றனர். இஸ்ராயேலானது வந்திராத மீட்பிற்காகக் காத்திருக்கும் வேளையில், அவர்களது புலம்பலானது புறாவினுடைய வேதனைக் குரலைப் போல உள்ளது (எசா 38:14; 59:11; நாகூ 2:8). அவர்களுக்கு மனத்தளர்வு உண்டாகும்போது, பாலைவனத்திற்கு ஓடிவிட அவர்கள் விரும்புகின்றனர் (சங் 55:7-8). இது புறாவின் பறக்கும் ஆற்றலைச் சுட்டுகிறது. புறா பாறைகளில் கூடு கட்டுகிறது (எரே 48:28) புறாவின் வண்ணங்கள் சங் 68:13-இலும், அதன் கண்கள் உ.ச. 1:15; 4:1; 5:12-இலும் குறிக்கப்படுகின்றன. இஸ்ராயேலானது இறைவனிடம் காட்டாத இயல்பான அறிவைப் புறா கொண்டிருப்பதைப் பருவகால இடப்பெயர்வுகள் காட்டுகின்றன (எரே 8:7). இந்த இடப்பெயர்வுகள் நாடு கடத்தப்படுதலை ஒரு தருணத்திலும் (எசே 7:16). அடுத்து ஓய்விடத்தில் ஒன்று சேருதலையும் சுட்டுகின்றன (ஓசே 11:11; எசா 60:8). மற்றொருபுறம் எப்பிராயிம் ஆபத்தினால் பயமுறுத்தப்பட்ட "அறிவில்லாப் பேதைப் புறாவைப்போல்" உள்ளது (ஓசே 7:11). இவற்றில் எந்தவொரு ஒப்புமையும் இயேசுவால் நேரடியாகப் பயன்படுத்தப்படவில்லை. அவர் முரண்பாடுகளைப் பயன்படுத்தி "பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாகவும், புறாக்களைப் போலக் கபடற்றவர்களாயும்" தங்களைக் காட்டுமாறு தமது சீடருக்குக் கூறுகிறார் (மத் 10:16).

3. இறுதியாக, மற்றக் கவிஞர் பலரிடம் உள்ளது போன்று விவிலியத்திலும் புறாவானது அன்பின் அடையாளமாய் இருக்கலாம். காதலரின் பார்வையில் அவரது அன்பிற்குரியவர் "புறாவாக" உள்ளார் (உ.ச. 2:14; 5:2; 6:9). புறா, தன் இணைக்குக் காட்டும் பிரமாணிக்கமும், மென்மையும், அன்பிற்குரியவரைக் குறிக்க ஏற்ற ஒப்புமையாகக் கருத இடமளிக்கிறது. இஸ்ராயேலானது இப்பெயரினாலேயே தன்னை அழைக்கிறது. "உமக்குச் சொந்தமான புறாவின் உயிரைப் பொல்லாத விலங்கிற்கு ஒப்புக்கொடுத்து விடாதேயும்" (சங் 74:19). இயேசுவினுடைய திருமுழுக்கின்போது இறைவனின் ஆவியானவர் புறா வடிவில் இறங்கிவந்து இயேசுவின்மேல் தங்குகிறார் (மத் 3:16 இணை). இந்த அடையாளத்தினுடைய உறுதியான விளக்கத்தைக் கண்டடைவது இயன்றதாக இல்லை. அனேகமாக, நோவாவின் பெட்டகத்திற்குச் திரும்புகின்ற புறாவினைச் சுட்டும் குறிப்பாக இஃது இருக்காது (ஆதி 8:8-12). ஆய்வாளர்கள் சிலர் யூத மரபுகளின் துணையுடன், புறாவினை

இஸ்ராயேலுடன் ஒப்பிடுவர். ஆனால், இறைவனுடைய அன்பானது அடையாள வடிவில் உலகின்மீது இறங்குகிறது என்பதற்கான சுட்டுதலாக இஃது இருக்கக்கூடாதா? இறுதியாக, நீரின்மேல் அமைந்தாடிக் கொண்டிருந்த இறைவனின் ஆவியைப் புறா வடிவாகக் கண்ட மற்ற சில யூத மரபுகளின்படி (ஆதி 1:2), இயேசுவின் திருமுழுக்கின்போது ஒரு புதிய படைப்பு நிகழ்க்கிறது என்பதை இந்த அடையாளம் சுட்டலாம் என்று ஆய்வாளர் சிலர் கருதுவர்.

புறாவின் எச்சம் (DOVE'S DUNG)

சமாரியா முற்றுகையிடப்பட்ட பொழுது இந்தப் பொருளானது அதிக விலைக்கு விற்கப்பட்டது (2 அர 6:25). எருசலேம் முற்றுகையிடப்பட்ட பொழுது (கி.பி. 66-70) மாட்டுச்சாணம் உணவாகப் பயன்பட்டது என்று யோசிப்பசு கூறுகிறார். பயங்கரமான சூழ்நிலைகளில் இது போன்ற பொருட்கள் உண்ணப்பட்டன என்று ஆசிரியர்கள் பலர் கூறுகின்றார்கள். இஃது உப்பாகப் பயன்படுத்தப்பட்டது என்பது போதிய விளக்கமாக இல்லை. அரேபியாவில் "குருவிச் சாணம்" என்ற மூலிகை இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இஸ்ராயேலில் அப்படிப்பட்ட ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை.

புற்றுநோய் (GANGRENE)

இது பழைய கிரேக்க வழக்கில், பரவிப் படரும் புண்ணாகும். 2 திமொ 2:17-இல் போலிப் போதகரின் பதிதப் போதகம் மிகக் கேடு விளைவிக்கும் முறையில் பரவுவதை விவரிக்க இச்சொல் உருவகமாகப் பயன்பட்டுள்ளது. புளூட்டார்த்தகும் இம்முறையில் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

புனித கல்லறை (HOLY SEPULCHRE)

இஃது எருசலேமில் இயேசு கிறிஸ்து புதைக்கப்பட்ட கற்குகையான கல்லறையைக் குறிக்கும். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கல்லறையைக் குறிக்க, பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மத் 27:60 இயேசு வைக்கப்பட்ட கல்லறை அரிமத்தியா ஊராரான யோசேப்பு என்பவருடையது எனக் குறிப்பிடுகிறது. மாற்கும், லூக்காவும் இதைச் சுட்டுகின்றன. ஆனால், அது சரியாக எந்த இடத்தில் இருந்தது என்பதை மூவரும் குறிப்பிடவில்லை. மாற்கைத் தவிர, மற்ற மூன்று நற்செய்திகளும் இக்கல்லறையில் அதுவரை யாரையும் வைத்ததில்லை எனக் கூறுகின்றன. யோவான் போகிற போக்கிலே, அங்கு ஒரு தோட்டம் இருந்ததென்றும், ஆயத்தநாள் தொடங்க இருந்ததால், அங்கிருந்த புதுக்கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்தனர் என்றும் கூறுகிறார்.

ஆதிக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த முதல் மூன்று நூற்றாண்டுகளில் இந்தப் புனிதக் கல்லறை இருக்குமிடம் பற்றி எந்த ஏட்டுச் சான்றும் தெரியவில்லை. யுசேபியுவின் கூற்றுப்படி மன்னர் கான்ஸ்டன்டைன் ஆயரான மக்காரியுவை இந்தக் கல்லறையின் இடத்தை அறியுமாறு பணித்தார். இக்கல்லறை புதையுண்டு போயிருந்ததாலும் மற்றும் பல இடர்கள் இருந்ததாலும், இந்த ஆயர் இறை வழிகாட்டுதலின் உதவியால் இந்த இடத்தைக் கண்டுபிடித்தார். மன்னர் இந்த இடத்தில் இருந்த அப்போதீத்துக் கோவிலை இடித்துவிட்டு ஓர் ஆலயத்தை எழுப்பினார்; பின், கொல்கொதா தேவாலயத்தையும் கட்டினார். மன்னரின் இச்செயலுக்கு அவர் காலத்தில் வாழ்ந்த (கி.பி. 313) யுசேபியுவும், போர்தோ திருப்பயணியரும் சான்று கூறுகின்றனர்.

இதைத் தவிர சிலர் இக்கல்லறை வேறு ஓர் இடத்தில் தோட்டக்கல்லறை என்னுமிடத்தில் இருப்பதாகக் கூறினர். இது தமஸ்கு வாயிலின் வடக்குத் திசையில் சிறிது தொலைவில் உள்ளது. இது 1867-இல்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோல் கல்லில் குடைந்த கல்லறைகள் பல இங்குக் காணப்படுகின்றன. எனவே, இதுவே உண்மையான இடமாயிருக்கலாம் என்று சிலர் கருதுவர்.

புனிதத்தின் அல்லது தூய்மையின் சட்டம் (HOLINESS CODE)

காண்க. வழிபாட்டு நூல்: தூய்மையின் சட்டம்.

புனிதப்படுத்தல் (SANCTIFICATION)

புனிதம், அடிப்படையில் இறைவனுடைய பண்பானாலும் (யோபு 6:10; எசா 6:1-5; ஓசே 11:9), இறைவனுடைய செயலால் ஆட்கள், இடங்கள் அல்லது பொருட்கள் புனிதப்படுத்தப்படுகின்றன. அதாவது, பொதுவாழ்விலிருந்து பிரிக்கப்பட்டு, ஏதாவது ஒரு வகையில் இறைவனுடைய பணிக்கோ, வழிபாட்டுக்கோ அர்ப்பணிக்கப்படுகின்றன.

பழைய ஏற்பாட்டில், இறைவன் எப்பொருளையும் இடத்தையும் புனிதமுடையது என்று வெறுமனே அறிவிப்பதில்லை. அவரே புனிதப்படுத்துகிறவர் என்றாலும் (யாத் 30:43; காண். 31:13), புனிதப்படுத்தலில் சடங்கு முறைகள் இடம் பெறுகின்றன. பீடம் பலியாலும், அபிடேகத்தாலும் புனிதமாக்கப்படுகிறது (29:36-37). திரு உறைவிடம் முதன்முறையாகப் பயன்படுத்தப்படும்போது, அதிலுள்ள அனைத்தோடும் அபிடேகம் செயயப்படுகிறது (40:9-11; காண். 30:22-29). மந்தைகளின் முதல் பேறான ஆண்விலங்குகள் சடங்கு உணவில் உண்ணப்படவேண்டும் (உப 15:19-20).

அர்ப்பணச் சடங்குகள், இடங்களும் பொருட்களும் தங்களுடைய ஆற்றலால் புனிதம் அடையவில்லை என்றும், இறை மக்களுடையவும் அவர்கள் வழிபாட்டினுடையவும் புனிதத்தில் ஈடுபடுவதால் புனிதம் அடைகின்றன என்றும் காட்டுகின்றன. வழிபாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்களின் புனிதமும் ஆட்தன்மையற்றதன்று, அல்லது பொது நிலையானதன்று. அவை இறைவனோடும் அவரது மக்களோடும் கொண்ட உறவின்மேல் அமைந்ததாகும். குறிப்பிட்ட ஆட்கள், எடுத்துக்காட்டாக குருக்கள் (யாத் 30:30; 40:12-15), லேவியர்கள் (எண் 8:5-21; 2 நாள் 39:5), தலைப்பேற்றாண்கள் (யாத் 13:2) மற்றும் நசரேயர்கள் (எண் 6:1-21) ஆகியோர் குறிப்பிட்ட அலுவலுக்காக அர்ப்பணிக்கப்பட்டாலும், அதன் அடிப்படைக் கருத்து இறைமக்கள் யாவரும் யாவேக்கு அர்ப்பணிக்கப்படுகின்றனர் (காண். லேவி 2:8) என்பதாகும். இந்த மக்கள் முழுமையும் அர்ப்பணிக்கபபடுதல் சில சமயங்களில் சடங்குகளால் நிறைவேற்றப்பட்டது (யாத் 19:10.14). இந்த அர்ப்பணம் மக்களின் முன்செல்லும் தன்மை நோக்கமும் உடையது (லேவி 19:2; காண். 1 பேதுரு 1:15). மக்கள் புனிதப்படுதலுக்கு, இறைவனுடைய குறிப்பிட்ட கட்டளைக்குக் கீழ்ப்படிதல் (யாத் 31:13; லேவி 20:8), சடங்குளைச் சரியான முறையில் கடைப்பிடித்தல் (19:5-8), பொது ஒழுக்க நடத்தை (19:17-18), பிற மக்களிடமிருந்து அவர்கள் வேறுபட்டிருத்தல் (யாத் 33:16) ஆகியவை சான்றாக அமைகின்றன.

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்களைப் புதிய ஏற்பாடு "புனிதர்கள்" என்றழைப்பது இறைவனது சொந்தச் செயல் மற்றும் அவர்களின் புனிதம் பற்றிய அவரது அறிவிப்பின் விளைவாகும் (யோவா 17:17). இந்தப் புனிதப் படுத்துதல் "கிறிஸ்து இயேசுவில்" நிகழ்கிறது (1 கொரி 1:2.30). புனிதப்படுத்தப்பட்டோர் அவரில் விசுவாசம் கொள்பவர்கள் ஆவர். தனது இறப்பினால் அவரே புனிதப்படுத்துபவர் ஆவார் (யோவா 17:19; எபே 5:25-26; எபி 2:11; 10:10.14; 13:12). தூய ஆவியும், தந்தையாகிய இறைவனும் கிறிஸ்தவர்கள் புனிதப்படுதலில் ஆற்றலோடு செயலாற்றுகின்றனர் (உரோ 15:16; 1 பேதுரு 1:2; யூதா 1). இறைவனால் புனிதப்படுத்தப்படுதல் நிறைவேற்றப்படுவதால், பவுல் கிறிஸ்தவர்களைப் பொதுவாகப் "புனிதர்கள்" என்றும், "இறைமக்கள்" என்றும் அழைக்கிறார் (உரோ 12:13; 1 கொரி 1:2; கலா 1:1). கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வோரைப் புனிதப்படுத்தும் இறைவனது செயல் திருமுழுக்குச் சடங்கோடு இணைக்கப்பட்டுள்ளது (1 கொரி 6:11; எபே 5:26). இறைவனது சட்டத்துக்குப் புறம்பான முந்தைய வாழ்க்கையைக் கொண்டிருப்பவர்களின் வெளிப்படையான

மாறுபட்ட வாழ்வுமுறை இதற்குச் சான்று கூறுகிறது (1 கொரி 6:9-11).

ஒரே செயலாகப் புனிதப்படுத்துதலைக் கருதும் நோக்கோடு, அதை மனித முயற்சிகளடங்கிய ஒழுக்க வளர்ச்சிக்காகப் புரிந்து கொள்ளுதலும் காணப்படுகிறது (உரோ 6:19; 1 தெச 4:1-7; 2 திமொ 2:21; எபி 12:14). இதுவும் விசுவாசிகளிடம் இறைவன் ஆற்றும் முந்தையச் செயலையும், தொடர்ச்சியான அலுவலையும் சார்ந்ததாகும் (1 தெச 5:23).

புனிதம் (HOLY, HOLINESS)

I. 'தூயவர், தூயவர், தூயவர்' என இறைவனை நாம் வழிபாட்டில் வாழ்த்துகிறோம். 'நீர் ஒருவரே பரிசுத்தர்' எனக் கிறிஸ்துவைப் போற்றுகிறோம். புனிதர்களின் திருநாளையும் கொண்டாடுகிறோம். புனித வாக்கு என்றும், புனித வாரம் என்றும் கூறுகிறோம். நாமும் புனிதத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். புனிதம் என்னும் மறையுண்மை புதுமையானதொன்றாக, கடவுளுக்கு உரியதாய்ப் பொருந்தி நிற்கிறது; அதே நேரத்தில் வழிபாடு, நல்லொழுக்க நெறி இவற்றையும் தழுவியதாய் உள்ளது. கடவுளுக்கே உரித்தான ஒன்றாக இருப்பினும், உலகப் படைப்புகளுக்கும் சாற்றிக் கூறக்கூடியதாக அமைகிறது.

புனிதத்தைக் குறிக்கும் கோதெஸ் (Qodes) என்னும் எபிரேயச் சொல் பிரிந்து வைக்கப்பட்டது, தனித்து ஒதுக்கப்பட்டது என்னும் பொருளிலிருந்து தோன்றியதாகத் தெரிகிறது. அதாவது, சமயச்சார்பற்ற பொருள்களிலிருந்து பிரிந்து வைக்கப்பட்டது எனலாம். புனிதப் பொருள்களை யாரும் கண்டபடி தொட்டுப் பயன்படுத்துவதில்லை. சடங்குத் தூய்மையின் சூழ்நிலையில் அல்லாமல் கடவுள் புனிதமானவர் என்னும் உணர்வு, மனிதன் நெஞ்சத்தில் கடவுளிடத்து ஓர் அளவற்ற ஈர்ப்பையும், அதே நேரத்தில் ஒருவித அச்சத்தையும் விளைவிக்கிறது. மேலும் கடவுளின் புனிதமிக்க சுடரொளிமுன் தான் எவ்வளவு தாழ்ந்தவன் என்னும் உண்மையையும் தெளிவாக்குறிது.

விவிலியத்தில் புனிதத்தின் தன்மை இன்னும் ஆழ்ந்த பொருளுடையதாய் இருக்கிறது. மனிதன் இறைவனைக் காண்பதில் அடையும் திகைப்பைக் கூறி, புனிதமென்பது சமயச்சார்பற்றவற்றிற்கு அப்பாற்பட்டது என்று கூறுவதோடன்றி, கடவுளே தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்தியதைக் கூறுகிறது. கடவுள் மட்டுமே புனிதமானவர்! அவரே புனிதத்தின் ஊற்று! அவரிடமிருந்தே புனிதம் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. ஆனால், புனிதமே உருவானவர் நம்மோடு எவ்வாறு உறவுகொள்கிறார் என்பதை அறிந்துகொள்வது ஒரு பிரச்சனைதான். மனிதன், இடம், பொருள் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவனின் புனிதமானது, பரிசுத்த ஆவியினால் கொடையாக அவற்றிற்கு அருளப்படுகிறது. இறைவனின் அன்பு (1 யோவா 4:18) பாவத்தை வென்று இவ்வாறு புனிதமெருகேற்றப்பட்ட படைப்பிற்கு அருளப்படுகிறது.

II. பழைய ஏற்பாடு

1. கடவுள் புனிதமானவர், தன் புனிதத்தை வெளிப்படுத்துகிறார்;

மனிதனானவன் அணுகமுடியாத புனித மயமானவர் இறைவன். மனிதனால் அந்த நிலையையும் புரிந்துகொள்ளச் சக்தியில்லை. எனவே, இதைத் தெரிவிக்க கடவுளே தனது மகிமையையும், புனித நிலையையும் வெளிப்படுத்தவேண்டும். படைப்பு, இறையாற்றல் தோற்றம், சோதனை, தண்டனைகள், பெருந்துயர் ஆகியவற்றின்மூலம் (எண் 20:1-13; எசே 38:21 தொ) இறைவன் தன்னையே வெளிப்படுத்துகிறார். அதே வேளையில், அளவிடற்கரிய அற்புதமான புதுமைகள் வழியாகவும் தன் தனிப்பெரும் புனிதத்தை மனிதனுக்குக் காட்டுகிறார்.

சீனாய் மலையில் இறைவனின் புனிதம் பல்வேறு இறையாற்றல் தோற்றங்களில் வெளிப்படுகிறது (யாத் 19:3-20). யாவேயின் புனிதம் தன்னை நெருங்குவோர்க்குப்

பயங்கரமானதாகவும், புதிரானதாகவும், அச்சத்தை விளைவிப்பதாகவும் இருக்கிறது (1 சாமு 6:19தொ). அதே நேரத்தில் அதன் உறைவிடமான பெட்டகத்திற்கு மரியாதையளித்து அதற்கு இடமளிப்பவர்களுக்கு அது பாதுகாப்பாக அமைந்து, ஆசீர் வழங்குகிறது (2 சாமு 6:7-11). இதைக் கடவுளின் யாவும் கடந்த நிலை அல்லது சினம் என்பதோடு குழப்பிவிடக்கூடாது. ஏனென்றால், இஃது அன்பும் மன்னிப்பும் தந்து, அதன் வழியாகவே வெளிப்படுகிறது (ஓசே 11:9).

தேவாலயத்தில் எசாயாவுக்குத் தோன்றும் போது யாவே மகத்துவம்மிக்க ஒரு பேரரசர் போலவும், உலகமெல்லாம் நிறைந்த புகழுடைய படைப்பின் ஊற்றாகவும், செராபியர் மாத்திரம் அணுகி முறையான வழிபாடு செலுத்தக்கூடிய வழிபாட்டுத் தலைவரெனவும் வெளிப்படுகிறார். செராபியர்கூட அவரை ஏறெடுத்துப் பார்க்க முடியாது. மனிதன் அவரைக் காண நினைத்தாலே இறந்துவிடுவான் (எசா 6:1-5; யாத் 33:18-23). இருப்பினும், அணுக முடியாத இறைவன், படைப்புக்கும் தனக்கும் இடையே இருக்கும் ஆழ்ந்தகன்ற பிளவை நிரப்பி, இணைத்து வைக்கிறார். அவர் இஸ்ராயேலின் புனிதமானவர்; அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டு அவர்களுக்கு மகிழ்ச்சியாகவும் சக்தியாகவும், ஆதரவாகவும், மீட்பாகவும் அமைந்திருக்கிறார் (எசா 10:20; 17:7; 4:14-20).

இவ்வாறு, கடவுளின் புனிதமானது மனிதனிடமிருந்து யாவும் கடந்த தூரத்தே விலகி நிற்காமல், அவனது வாழ்விலே கலக்கிறது; அவனுக்குக் கடவுளின் செல்வமாகவும், வாழ்வாகவும், நன்மையாகவும், சக்தியாகவும் அமைகிறது. புனிதம் என்பது கடவுளின் பண்புகளில் ஒன்றுமட்டுமன்று. கடவுளின் பெயரே புனிதம்தான் (சங் 33:21; ஆமோ 2:7; காண் 3:14). யாவே தன் புனிதத்தை வைத்தே ஆணையிடுகிறார் (ஆமோ 4:2). யாவே புனிதமனாவர் என ஒரு பொருட் பன்மொழியாய் அமைந்திருக்கும் இச்சொல்லே இந்த உறுதியைப் பிரதிபலிக்கிறது (சங் 7:22; எசா 5:24; அப 3:3).

2. கடவுள்தான் புனிதமானவர் என்பதைப் பிறர் உணரவேண்டும்:

தன் புனித நிலையை ஏற்றுக்கொண்டு தனக்கு மட்டுமே வழிபாடும் பணிவும் செலுத்த வேண்டுமென்பதிலும், தான் ஒருவரே கடவுள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதிலும் கடவுள் பெரும் ஆவல் உடையவர். தன் அடியார் வழியாக, தன் புனிதத்தைப் பிற மனிதர்க்கு ஒளிர்விக்கவும் விரும்புகிறார். தனக்குரிய வழிபாடு நுணுக்கமான சடங்குகளின்படி நடைபெற வேண்டுமென்றும் (லேவி 1-7), வழிபாட்டிற்குத் தூய்மை அவசியம் என்றும் (லேவி 12-15), தன் பெயருக்கு எவ்வித இழுக்கும் ஏற்படக்கூடாதென்றும் (லேவி 22:32) கடவுள் கோரினால், அதற்குக் காரணம் நல்ல முறையில் ஒழுங்கு நெறியோடு கொண்டாடப்படும் வழிபாடு அவருடைய மகத்துவத்தையும் மேன்மையையும் சிறப்பாக வெளிப்படுத்துகிறதென்ற ஒன்றேயாம். (லேவி 9:6-23; 1 அர 8:10தொ; காண் லேவி 10:1தொ; 1 சாமு 2:17; 3:11தொ). வழிபாடு திருச்சட்டத்துக்கு உட்பட்டதாகவும் (லேவி 22:31தொ), விசுவாசம் தோய்ந்ததாகவும் (உப 20:12), கடவுளை உண்மையாகவே போற்றுவதாகவும் (சங் 99:3-9) இருக்க வேண்டும். கடவுளுக்கு அஞ்ச வேண்டும். "அவருடைய புனிதத் தன்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்பதன் பொருள் இதுதான் (எசா 8:13).

3. கடவுள் புனிதப்படுத்துகிறார், தன் புனிதத்தை நமக்கு அளிக்கிறார்.

அ) புனிதமும் அபிடேகமும்: யாவே தன் புனிதத்தன்மையை வெளிப்படுத்தும் வழிபாட்டிற்கென ஒருசில ஒழுங்குகளை வரையறுத்துக் கொடுத்ததுபோல, தனக்கெனச் சில இடங்களை (புனிதநாடு, திருவிடம், ஆலயம்), ஆட்களை (குருக்கள், லேவியர், தலைப்பேறு, அதிகாரிகள், இறைவாக்கினர்), பொருட்களை (காணிக்கை, ஆடைகள், வழிபாட்டுப்பொருட்கள்), காலத்தை (ஓய்வு நாட்கள், யூபிலி ஆண்டுகள்)

என்றிவ்வாறு ஒதுக்கி வைத்திருக்கிறார். இவைகளையெல்லாம் குறிப்பிட்ட சடங்குகள் மூலம் (காணிக்கை, பலி, அர்ப்பணம், அபிடேகம், இரத்தம் தெளித்தல்) புனிதப்படுத்தி இவ்வாறு திருநிலைபெற்றவற்றைச் சாதாரண வேலைகளுக்குப் பயன்படுத்தக் கூடாதென்று கூறியிருக்கிறார். இதனால் தான், லேவியர் உடன்படிக்கைப் பெட்டகத்தை ஏரெடுத்துக்கூடப் பார்க்கக்கூடாது (எண் 4:1-20); ஓய்வுநாளுக்கு இழுக்கு வரும்படி நடக்கக்கூடாது (எசே 20:12-24); குருக்களின் நடத்தை குறிப்பிட்ட கண்டிப்பான ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு நடைபெற வேண்டும் (லேவி 21).

இவையெல்லாம் புனிதமானவை. ஆனால் இப்புனிதத்தின் படி நிலைகள், இவை கடவுளோடு எவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதைப் பொருத்து வேறுபடுகின்றன. இவற்றின் புனிதம் கடவுளின் புனிதம் போன்றதன்று. தீட்டு தொற்றிக் கொள்வதுபோல் (லேவி 11:31; 15:4-27), இறைப் புனிதத்தின் தொடர்பால், புனிதம் தன் இயக்கமாகப் பெறப்படுவதில்லை. அவருடைய திருச்சட்டத்தின் படியும், அவரால் நிர்ணயிக்கப்பட்ட சடங்கு முறைப்படியும், இறைவனுடைய சுதந்தரத் தீர்மானத்தால் விளைவதாகும். கடவுளுக்கும் படைக்கப்பட்ட பொருளுக்கும் இடையே உள்ள அளவில்லாத் தூரத்தை இத்திருச்சடங்குகள் வெளிப்படுத்துகின்றன (யோபு 15:15). இதனால் தான், தலைமைக் குருகூட ஆண்டுக்கொருமுறை மட்டும் அதுவும் தன்னையே நுணுக்கமான முறையில் புனிதப்படுத்தியபின், திருத்தூயகத்துள் நுழையலாம் (லேவி 16:1-16). எனவே, கடவுளின் புனிதத் தன்மைக்கும், மனிதன் மற்றும் பொருட்களின் திருநிலைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை உணர்வது அவசியம். இவர்கள் பெறும் திருநிலை, இவர்களைச் சமயச் சார்பற்றவற்றிலிருந்து விடுதலைப்படுத்தி இடைநிலைக்கு உயர்த்துகிறது. இந்த இடைநிலை, ஒரே நேரத்தில், கடவுளின் புனிதத்தை மறைக்கிறது, வெளிப்படுத்துகிறது.

ஆ) புனித மக்கள்: கடவுளால் பிற நாடுகளினின்று பிரித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இஸ்ராயேல் கடவுளின் தனிப்பட்ட இனமாக, குருத்துவ இனமாக புனித இனமாக ஆகின்றது. விவரிக்க முடியாத அன்பினால், கடவுள் அவர்களோடு வாழ்ந்து வருகிறார் (யாத் 33:12-17). மேகம், பெட்டகம், ஆலயம் இவற்றின் வழியாகத் தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். அவர்கள் நாடு கடத்தப்பட்ட போதும், அவர்களோடு உடனிருந்து (எசே 1:1-28) "நானே உங்கள் நடுவிலிருக்கும் புனிதர்" என்கிறார் (ஓசே 11:9). இறைவன் மக்களோடு உடனுறைவதானது வெறும் சடங்குமுறைப் புனிதத்தையன்று, ஒழுக்கப் புனிதத்தைக்கோரும் உண்மையான மேன்மையை மக்களுக்கு அளிக்கிறது. தன் மக்களுக்குத் திருநிலை தரவேண்டும் என்பதற்காகத்தான் யாவே திருச்சட்டத்தை அமல்படுத்துகிறார் (லேவி 22:31தொ). இஸ்ராயேல் கானானிய மக்களோடு கலந்து, அவர்களின் தீய பழக்கங்களைக் கையாளக் கூடாது. இஸ்ராயேல் மற்ற இன மங்கையரை மணக்கவோ, அவர்கள் தொடர்பால் தங்களையே மாசுபடுத்திக் கொள்ளவோ கூடாது (உப 7:1-6). இஸ்ராயேலின் புனிதரான (எசா 7:9) யாவேயிடத்து மட்டுமே அவர்கள் பாதுகாப்பைத் தேடவேண்டும்; அதை விடுத்துப் படைக்கலங்களிலும், அரச தந்திரங்களிலும் நம்பிக்கை வைக்கக்கூடாது. யாவே இஸ்ராயேலுக்குப் பிற இனங்களிலிருந்து வேறுபடுத்தும் ஒரு தனிப்பண்பினைத் தருவதோடு, அதன் பாதுகாப்பாகவும் (எசா 41:14-20; 54:1-5), பெருமையாகவும் (43:3-14; 49:7), நிலை பெற்ற அழியாத நம்பிக்கையாகவும் (60:9-14).

4. இஸ்ராயேல் தன்னையே புனிதப்படுத்திக் கொள்ளவேண்டும்: இஸ்ராயேலைப் புனிதப்படுத்த விழையும் கடவுளின் சுதந்தர அழைப்புக்கு அது விருப்பம் தெரிவித்து, அவருடைய அருளை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அ) இஸ்ராயேல் முதலில் தன்னையே தூய்மைப்படுத்தவேண்டும். அதாவது, கடவுளின் காட்சியைக்கண்டு அவரை வழிபடுவதற்கு முன்பு, இஸ்ராயேல் முதன்முதலில் கடவுளின் புனிதத்துக்கு ஒத்துப்போகாத எவ்வகைத் தீட்டையும் கழுவித் தன்னைத் தூய்மைப்படுத்த வேண்டும் (யாத் 19:10-15). ஆனால், பலியின் இரத்தத்தின் வழியாகவும் (லேவி 17:11), அவளுடைய இதயத்தைத் தூய்மைப்படுத்துவதின் வழியாகவும் (சங் 51) கடவுளே இஸ்ராயேலைத் தூய்மைப்படுத்துகிறார்.

ஆ) இறைவாக்கினரும் உபாகமமும் கடவுளுக்குப் பரிகாரம் தெரிவிக்க, பலிகள் மட்டும் போதாது; ஆனால் நீதி, கீழ்ப்படிதல், அன்பு இவையெல்லாம் வேண்டியவையாகும் என்று கூறுகின்றனர் (எசா 1:4-20; உப 6:4-9). "தூயோராய் இருங்கள். ஏனெனில், நான் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்! தூயவர்!" (லேவி 19:2; 20:26) என்று கடவுள் கூறும்போது, அது வெறும் வழிபாட்டு முறைகளை மட்டும் குறிப்பிடுவதன்று; அவர்களின் குடும்ப, சமுதாய, பொருளாதார வாழ்வு நிலையிலும் அத்தகைய புனிதத்தன்மை உயிருள்ள விதத்தில் வாழ்ந்து காட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது (லேவி 17-26).

இ) மனிதனின் புனிதத்துவத்திலும் முன்னேற்றம் உண்டு. எவர் இறுதிக்கால அரசிலிருந்து வரும் சோதனைகளையும் நன்மைகளையும் கடந்து செல்கின்றனரோ (தானி 7:18-22), அவர்தான் "புனிதர்" என்றழைக்கப் பெறமுடியும். இவர்கள்தான் யாவேக்கு அஞ்சிய உண்மையான ஞானிகள் (சங் 34:10); இவர்கள்தான் சீயோனில் எஞ்சியிருப்பவர்கள்; எருசலேமில் தப்பி வாழ்பவர்கள்; உயிர் பிழைப்பதற்கென எருசலேமில் பெயர் எழுதப்பட்டவர்கள் (எசா 4:3); புனிதர்கள்.

III. புதிய ஏற்பாடு: அப்போஸ்தலிக்கச் சமூகத்திலும் பழைய ஏற்பாட்டுச் சொற்களே பயன்படுத்தப்பட்டன. கடவுள் புனித தந்தை (யோவா 17:11); யாவும் கடந்த படைப்பின் தலைவர்; கால இறுதியில் வரும் நீதிபதி (திருவெளி 4:8; 6:10). அவருடைய பெயர் புனிதம், தூய்மை (லூக் 1:49). அதுபோலவே, அவருடைய திருச்சட்டமும் (உரோ 7:12), உடன்படிக்கையும் (லூக் 1:72) புனிதமானவை. வானகத்தூதர்களும் (மாற் 8:38), இறைவாக்கினர்களும், புனித ஆசிரியர்களும் (லூக் 1:70; மாற் 6:20; உரோ 1:2) புனிதமானவர்கள் ஆவர். ஆலயமும், விண்ணக எருசலேமும் புனிதமானவையாகும் (1 கொரி 3:17; திருவெளி 21:2). கடவுள் புனிதர்; எனவே, அவரால் அழைக்கப்பட்டவர்களும் புனிதர்களாக விளங்க வேண்டும் (1 பேதுரு 1:15தொ லேவி 19:2). இறையரசின் வருகையில் அவருடைய பெயரின் புனிதம் வெளிப்படுத்தப்படவேண்டும் (மத் 6:9). ஆயினும், பரிசுத்த ஆவியின் வருகை புதிய ஏற்பாடு ஏற்படுத்திய புனித யுகத்தின் தொடக்கமாக அமைகிறது.

1. **புனிதரான இயேசு:** தந்தையின் ஒரே மகனாகவும், கடவுளின் ஆவி குடிகொள்ளும் நிலையாகவுமுள்ள இயேசுவின் புனிதத்துவம் தன் நிலையோடு பிணைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. "தூய ஆவியால் பிறக்கும்" அவர் புனிதராக இருப்பார்; "கடவுளின் மகன் எனப்படுவார்" (லூக் 1:32.35; மத் 1:18). திருமுழுக்கு யோவான் அவருக்குத் திருமுழுக்குக் கொடுத்தபோது, "அன்பார்ந்த மகன்" தூய ஆவியன் அபிடேகம் பெற்றார் (அ.ப. 10; 38; லூக் 3:22). அவர் அசுத்த ஆவிகளை விரட்டியபோது, அவை "கடவுளின் புனிதர்", "கடவுளின் மகன்" என்று கூறி அறிக்கையிட்டன (மாற் 1:24; 3:11). இவ்விரு சொற்றொடர்களும் ஒரே பொருளில் கையாளப்பட்டன என்பது தெளிவு (யோவா 6:69; காண்க. மத் 16:16). பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு (லூக் 4:1), கிறிஸ்து தன் செயல்களின் வழியாகத் தன்னையே வெளிப்படுத்துகிறார். அவருடைய புதுமைகளும் அருஞ்செயல்களும் அவருடைய புனிதத்தைக் காட்டுவதற்கே தவிர, அச்சத்தை விளைவிப்பதற்கன்று. கடவுள் முன்னிருப்பதுபோல, அவர் முன்னர் ஒருவன்

தன் பாவநிலையை ஆழமாய் உணர்கிறான் (லூக் 5:8; காண். எசா 6:5).

வாழ்வின் ஊற்றாய் இருந்தாலும், சாவை அனுபவித்த புனித ஊழியனாகிய கிறிஸ்து (அ.ப. 4:27.30) ஒப்பற்ற புனிதர் ஆவார் (அ.ப. 3:14தொ). எனவேதான், கடவுள் அவரை மகிமைப்படுத்தியிருக்கிறார் (பிலி 2:9). சாவை வென்று புனிதத்தின் ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்ட கிறிஸ்து (உரோ 1:4) இவ்வுலகைச் சார்ந்தவரல்லர் (யோவா 17:11). இனிமேல் தந்தையின் வலப்புறம் அமர்ந்திருக்கும் அவர் (மாற் 16:19) கடவுளுக்குச் சமமாகப் புனிதரென்று அழைக்கப்படலாம் (திருவெளி 3:7; 6:10). ஆகவே, கிறிஸ்துவின் புனிதம் பழைய ஏற்பாட்டுப் பெரியோர்களின் புனிதத்தைவிட வேறுபட்ட அமைப்பைச் சேர்ந்தது. அஃது, அவருடைய தூய தந்தையான கடவுளுடைய புனிதத்துக்குச் சமமானது (யோவா 17:11). அதே ஆன்மீக ஆற்றலையும், அதே வியப்புக்குரிய வெளிப்பாட்டையும் அதே மறைபொருளான ஆழத்தையும் கொண்டது. அஃது அவரையும் அவருடையவர்களையும் அன்பு செய்யவும், தந்தையிடமிருந்து பெற்ற மகிமையை அவர்களுக்கு அளிக்கவும், அவர்களுக்காகத் தன்னையே பலியாக்கவும் செய்கிறது. இவ்வாறுதான், அவர் தனது புனிதத்தை வெளிப்படுத்துகிறார். "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்" (யோவா 17:19-24).

2. **கிறிஸ்து கிறிஸ்தவர்களைப் புனிதப் படுத்துகிறார்:** பழைய ஏற்பாட்டில் எபிரேயர்கள் தம் வழிபாட்டின் வழியாக வெளிப்படையாகச் சுத்தப்படுத்தப்பட்டதற்கும் (எபி 9:11-14; 10:10), புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து "உண்மையின்" வழியாகி நம்மைத் தூய்மைப்படுத்துவதற்கும் (யோவா 17:19) வேறுபாடுண்டு. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பிலே புனிதம் பெறுகிறார்கள். புனித ஆவி குடிகொள்ளும் நிலையமான அவர்கள் (1 கொரி 3:16தொ; எபே 5:26; 1 யோவா 2:20) கிறிஸ்துவில் புனிதர்களாக விளங்குகிறார்கள் (1 கொரி 1:2; பிலி 1:1). திருமுழுக்கு யோவான் கூறியதுபோல (லூக் 3:16; அ.ப. 1:5; 11:16) அவர்கள் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெறுகிறார்கள்.

3. **தூய ஆவி:** கிறிஸ்தவர்களைப் புனிதப்படுத்துவதில் முக்கிய ஆள் தூய ஆவியே. அவர் முதலில் கிறிஸ்தவ சமூகங்களை அருளாலும், அருங்கொடைகளாலும் நிரப்பினார். திருச்சபையில் அவர் செயலாற்றும்விதம் இறை ஆவி பழைய ஏற்பாட்டில் செயலாற்றிய விதத்திலிருந்து வேறுபடுகிறது. அவருடைய பொழிவின் நிறைவும் உலகளாவிய தன்மையும் கிறிஸ்துவின் உயிர்ப்போடு மெசியாக் காலம் நிறைவேறிவிட்டது என உணர்த்துகின்றன (அ.ப. 2:16-38). ஒருபுறம், அவரது வருகை திருமுழுக்கோடும் மரித்து உயிர்த்த கிறிஸ்துவின் மறையுண்மையில் கொண்டுள்ள விசுவாசத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. மறுபுறம், அவரது பிரசன்னம் நிலையானது. மீட்கப்பட்டோர் "தூய ஆவியின் ஆலயங்கள்" என்றும், "கடவுளின் ஆலயங்கள்" என்றும் (1 கொரி 6:11.20; காண் 3:16தொ), அவர்கள் அவரோடு உண்மையான ஒன்றிப்புக் கொண்டுள்ளனர் (2 கொரி 13:13) என்றும் பவுல் உறுதியாக அறிவிக்கிறார். "கடவுளின் ஆவியால் யார் இயக்கப்படுகிறார்களோ அவர்களே கடவுளின் மக்கள்" ஆவர் (உரோ 8:14-17) என்பதால், கிறிஸ்தவர்கள், ஆவியால் தற்காலிகமாக இயங்கும் இறைவாக்கினர்கள் மட்டுமல்லர் (லூக் 1:15 7:20); அவர்கள் எப்போதும் தங்களுக்குள்ளேயே இறைப் புனிதத்தின் ஊற்றைக் கொண்டிருக்கும் கடவுளின் குழந்தைகளாவர்.

4. **புனிதர்கள்:** வரையறுக்கப்பட்ட பொருளில், புனித அல்லது புனிதர் ஆகிய சொற்கள் பழைய ஏற்பாட்டில் அரிதாகவே பயன்படுகின்றன. இவை இறுதிக்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும் சாற்றிக் கூறப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் புனிதர் என்ற சொல் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. இது முதலில் எருசலேமின் தொடக்கச் சமூகத்திற்கு, குறிப்பாகப்

பெந்தகொஸ்தே நாளின் சிறிய குழுவுக்குச் சாற்றிக் கூறப்பட்டது (அ.ப. 9:13; 1 கொரி 16:1; எபே 3:5). பின்பு இக்கருத்து, யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் (அ.ப. 9:31-34), பின்பு எல்லா விசுவாசிகளுக்கும் (உரோ 16:2; 2 கொரி 1:1; 13:12) விரிவாக்கப்பட்டது. உண்மையில் தூய ஆவி வழியாகக் கிறிஸ்தவன் இறைவனுடைய புனிதத்திலேயே உண்மையான முறையில் பங்கு கொள்கிறான். "புனித மக்களாகவும்", "அரச குருத்துவத் திருக்கூட்டமாகவும்", "புனித ஆலயமாகவும்" அமையும் கிறிஸ்தவர்கள் (1 பேதுரு 2:9; எபே 2:21), புனித பலியில் கிறிஸ்துவோடு தங்களையே காணிக்கையாக்கி, இறைவனுக்கு உண்மையான வழிபாடு செலுத்தவேண்டும் (உரோ 12:1; 15:16; பிலி 2:17).

தேர்ந்து கொண்டதன் விளைவான கிறிஸ்தவர்களின் புனிதம் (உரோ 1:7; 1 கொரி 1:2), அவர்கள் பாவத்திலிருந்தும், பிறமதப் பழக்க வழக்கங்களிலிருந்தும் (1 தெச 4:3) தங்களையே விலக்கிக் கொள்ளவேண்டும் எனக்கோருகிறது. அவர்கள் "உலக ஞானத்தின்படி நடவாமல் கடவுளின் அருளையே பின்பற்றி, கடவுளிடமிருந்து வரும் நேர்மையோடு" நடக்க வேண்டும் (2 கொரி 1:12; காண். 1 கொரி 6:9தொ; எபே 4:30-5:1; தீத் 3:4-7; உரோ 6:19). புனித வாழ்வுக்கான இந்தக் கோரிக்கையே முழுக்கிறிஸ்தவத்துறவு வாழ்வின் பாரம்பரியத்துக்கு அடிப்படையாகும். இது புறத்தே மட்டும் கட்டுப்படுத்தும் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதன்று; "கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்ட கிறிஸ்தவன் அவருடைய உயிர்த்தெழுதலை அடைவதற்காக, அவரது சாவின் சாயலைத் தன்னுள் ஏற்று அவருடைய பாடுகளில் பங்குபெற வேண்டும்" (பிலி 3:10-14).

5. புனித நகர்: உரிமையாக ஏற்கெனவே அடைந்துவிட்டாலும் இறைவனது புனிதம் என்ற உண்மை பாவத்தோடு போராடுகிறது. "இறைமக்கள் இவ்வுலகைத் தீர்ப்பிடும்" காலம் இன்னும் வரவில்லை (1 கொரி 6:2தொ). புனிதர்கள் தங்களையே புனிதப்படுத்தி ஆண்டவரின் இரண்டாம் வருகைக்குத் தயார் செய்யவேண்டும் (1 தெச 3:13; திருவெளி 22:11). அந்நாளில் புதிய எருசலேம், "புனித நகர்" தோன்றும். அதிலே வாழ்வின் மரம் பூத்துக் குலுங்கும்; அதிலிருந்து தூய்மையற்றவை மற்றும் சமயச்சார்பற்றவை யாவும் அகற்றப்படும் (திருவெளி 21-22; காண். செக் 14:20தொ). ஆண்டவர் தனது புனிதர்களில் மகிமைப்படுத்தப் பெறுவார் (2 தெச 1:10; 2:14). ஏனெனில் "இறைவன் அன்பாவார்" (1 யோவா 4:8). இதுவே மனிதருக்கு அளிக்கப்படும் இறைவனது அணுகமுடியாத புனிதத்தின் மறையுண்மையின் இரகசியமாகும்.

புனிதர் (SAINT)

இவர்கள் கடவுளுக்காக ஒதுக்கப்பட்டவர்கள்.

1. பழைய ஏற்பாடு: உடன்படிக்கையின் மக்களாகிய இஸ்ராயேலர் புனித இனத்தைச் சார்ந்தவர்கள்; ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப் பட்டவர்கள். இவர்கள் கடவுளிடம் கொள்ள வேண்டிய உறவை லேவியராகமம் கூறுகிறது. "தூயோராய் இருங்கள். ஏனெனில், நான் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்! தூயவர்!" (லேவி 19:2).

இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டு, அவரது வேலைக்காகப் புனிதப்படுத்தப்பட்டவர்களும் "புனிதர்கள்" என அழைக்கப்படுகின்றனர் (உப 33:2). கடைசி நாளில் இறைவன் தன்னை வெளிப்படுத்தும்போது அவரோடு பரிசுத்தர்கள் அனைவரும் வருவார்கள் (செக் 14:5). தானியேல் தமது காட்சியிலே 'பரிசுத்தர்' ஒருவர் பேசுவதைக் கேட்டார் (தானி 8:13).

பல இடங்களில் இஸ்ராயேலைக் கடவுளின் மக்களெனக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினம் நீங்கள். "மண்ணிலுள்ள எல்லா மக்களினங்களிலும் உங்களையே தம் சொந்த மக்களாக, கடவுளாகிய ஆண்டவர் தேர்ந்து கொண்டார்" (உப 7:6). கடவுள் மக்களை நேசித்தார். புனிதர்கள் யாவரும்

அவருடைய கையில் இருக்கின்றனர் (33:3). எசாயா இறைவாக்கினர், பிரமாணிக்கமுள்ள எஞ்சியிருப்பவர்களைப் புனிதர்கள் என அழைக்கிறார் (எசா 4:3). இவர்கள் அந்தியோக்குவின் கொடுமைகளைச் சகித்து வாழ்ந்தவர்கள், மேலும் பொதுவாக, பக்தியுள்ள, கடவுள் பயம் கொண்ட மனிதரும் புனிதரென அழைக்கப்பட்டனர் (2 சாமு 22:26; சங் 12:1; 85:9). தானியேல் நூலில் இம்மக்களிடம் இறுதி நாளில் இறையரசு அளிக்கப்படுமெனக் கூறப்பட்டுள்ளது (தானி 7:18.21-22). இவர்கள் மக்கபேயர் காலத்தில் புனிதப்போர்க் காலத்திலே மக்க பேயர்களுக்குத் துணைபுரிந்தவர்கள் (1 மக் 2:42; 7:13; 2 மக் 14:6). இச்சொல் சில இடங்களில் குறுகிய பொருளில் குருத்துவத்தையும் குறிக்கிறது (2 நாள் 6:41; சங் 132;9.16).

2. புதிய ஏற்பாடு: கிறிஸ்தவ காலத்திற்குமுன் மரித்த நல்லவர் சிலர் 'பரிசுத்தர்' என அழைக்கப்பட்டன் (மத் 27:52). கிறிஸ்தவர்கள் உடன்படிக்கையின் மக்கள்; பரிசுத்தர்கள். எனவே, கிறிஸ்தவர்கள் புனிதர்கள் என அழைக்கப்படுகின்றனர் (1 பேதுரு 1:15-16; 2:9). கிறிஸ்து இயேசுவுக்குள் வாழ்கின்ற இறைமக்கள் புனிதர்களாவர் (பிலி 1:1). ஏனெனில், இயேசு கடவுளின் மகனானதால் கடவுளின் பரிசுத்தராவார் (மாற் 1:24; லூக் 4:34). இவர்களுடைய புனிதத்தன்மை கடவுளுடைய அழைப்பினால் ஏற்பட்டது. அபிடேகம் செய்யப்பட்ட அவர்களுக்கென ஒரு தனிப்பணி காத்திருக்கிறது. எனவே, பவுல் அவர்களைப் புனிதர்களாவதற்கு அழைக்கப்பட்டவர் எனக் கூறுகின்றார் (உரோ 1:7). கொரிந்து திருச்சபை கிறிஸ்துவில் பரிசுத்தராக்கப்பட்டோரையும், புனிதராயிருக்கும்படி அழைக்கப்பட்டோரையும் கொண்டிருந்தது (1 கொரி 1:2). இப்புனிதர்களின் பட்டியலில் யூதக் கிறிஸ்தவருடன் சேர்ந்த புறவினத்தாரும் அடங்குவர் (எபே 2:19). இயேசு பரிசுத்தர்களோடு வரும்போது கிறிஸ்தவர்கள் குற்றமின்றிப் பரிசுத்தராய் இருக்க பவுல் வேண்டுகிறார் (1 தெச 3:13). இப்புனிதர்கள் இறுதி நாளிலே வானதூதர் உள்பட்ட உலகைத் தீர்ப்பிடுவதில் இயேசுவோடும் தொடர்புபடுத்தப்படுவர் (1 கொரி 6:2-3).

திருச்சபையின் உறுப்பினர்களைப் பொதுவாகப் புனிதர்கள் என அழைப்பது ஆதித் திருச்சபையின் வழக்கம். பவுல் தமது மடல்களில் இதே சொல்லைப் பயன்படுத்துகிறார் (உரோ 1:7; 1 கொரி 1:2; 2 கொரி 1:1; எபே 1:1; பிலி 1:1; கொலோ 1:2). பவுல் எங்குத் தங்கி தனது மடலை எழுதுகிறாரோ அவர்களைப் புனிதர்கள் எனக் கூறி 'அப்புனிதர்கள் வாழ்த்துகின்றனர்' என எழுதுகின்றார் (2 கொரி 13:13). இதே போன்று கிறிஸ்தவர்களைப் புனிதர்கள் என அழைப்பது அப்போஸ்தலர் பணியிலும் (அ.ப. 9:13.32.41; 26:10), கிறிஸ்தவர்கள் எபிரேயர் மடலிலும் (13:24), திருவெளிப்பாட்டிலும் (5:8) ஆகும். மேலும் குறிப்பாக, கிறிஸ்தவ மறைசாட்சிகள் (திருவெளி 16:16; 17:6; 18:24), புனிதர்கள் என்று குறிக்கப்படுகின்றனர். இவர்களது ஆன்ம நலனைக் கவனிப்பது திருச்சபையின் தலையாய பணி (எபே 4:12). இவர்கள் ஒழுக்கத்திலே உயர்ந்தவர்களாக வாழ அழைக்கப்படுகின்றனர் (எபே 5:3). இவர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்தும், நடைமுறையில் பணி வாழ்க்கையில் அதை எண்பித்தும் வாழவேண்டும் (உரோ 12:13; 16:2; எபே 1:15; கொலோ 1:4). இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, பவுல் எருசலேம் திருச்சபையின் புனிதர்கள் நிவாரணத்திற்காகச் சேகரித்த நன்கொடையாகும் (2 கொரி 8:4; உரோ 15:25-26; 1 கொரி 16:1; 2 கொரி 9:1).

புனை பெயர் நூல்கள் (PSEUDEPIGRAPHA)

இவற்றைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லின் சொற்பொருள் பொய் என்பதாகும்; அதாவது, பொய்யாகச் சாற்றிக் கூறப்படுவது. யூதவரலாற்றின் இறுதி நூற்றாண்டுகளில் ஒரு புதுவகையான இலக்கிய வடிவம் தோன்றியது. இது கடந்த காலத்தைச் சேர்ந்த பெரியவர்களின் பெயரால், புனை பெயரில் நூல்கள் எழுதும் வழக்கம். இது விநோதமானதாகவும் ஏமாற்றுத்

தன்மையுடையதாகவும் இருந்தாலும், மக்களிடையே பரவலாகவும் விரும்பத்தக்கதாகவும் விளங்கிற்று. இவ்வாறு எழுதப்பட்ட நூல்களுக்குக் கடந்தகால ஞானியையோ, இறைவாக்கினரையோ, ஒரு குலமுதுவரையோ ஆசிரியர் என்று கூறி, அவர்களை உண்மையான ஆசிரியருக்குப் பதிலாகப் பேசச் செய்வது மரபாகும். இத்தகைய நூல்கள் திருமுறைக்குப் புறம்பான நூல்களில் பல உண்டு. இவற்றில், உண்மையான ஆசிரியர் தம்மைக் கடந்த காலத்தில் வாழ்ந்த ஆளாகப் பாவித்து, ஏற்றுக் கொள்ளப்பட்ட விவிலிய ஆட்களின் அதிகாரத்தோடு பேசுவார். இத்தகைய புனைபெயர் இலக்கிய வடிவம் மக்களிடையே பெரிதும் விரும்பப்பட்டது; நன்கு விரும்பப்பட்ட வடிவமாகிவிட்டது. அதனால் இறையூக்கம் பெற்ற ஆசிரியர்களும் இவ்வடிவத்தைப் பயன்படுத்தினர். இவ்வாறு உன்னத சங்கீதம், திருவுரையாளர், பழமொழி, சாலமோனின் ஞானம் ஆகிய நூல்கள் சாலமோனால் எழுதப்பட்டன என்று கருதப்பட்டது. உண்மையில் இவை புனைபெயர் இலக்கியங்களே. தானியேல், பாரூக்கு நூல்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே.

விவிலியத் திருமுறைப் பட்டியலைச் சேராத புனைபெயர் நூல்கள் பல உண்டு. இவற்றைப் பற்றி விவிலியத்துக்குப் புறம்பான போலி நூல்கள் என்ற தலைப்பின் கீழ்க்காண்க.

புனைபெயர் மத்தேயுவின் நற்செய்தி (PSEUDO-MATTHEW, GOSPEL OF)

இந்நூல் கி.பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டில், இலத்தீன் மொழியின் எழுதப்பட்ட இயேசுவின் குழந்தைப்பருவம் பற்றிய நற்செய்தியாகும். இஃது அடிப்படையில் யாக்கோபின் மூல நற்செய்தி மற்றும் தோமாவின் இயேசுவின் குழந்தைப்பருவம் பற்றிய நற்செய்தி ஆகியவற்றின் மறுபதிப்பாகும். இவற்றிலிருந்து இந்நூலில் சில பகுதிகள் விடப்பட்டுள்ளன. சில சேர்க்கப்பட்டுள்ளன, சில விரிவாக்கப்பட்டுள்ளன. இந்நூல் மத்திய காலத்தில் மிகப் பிரபல்யமாய் இருந்தது. இந்நூலில் காணப்படும் கதைகள், திருச்சபையின் கலையிலும் கதைகளிலும் இடம் பெற்றன.

புனைபெயர் மெலித்தோவின் நிகழ்ச்சியுரை (PSEUDO-MELITO, NARRATIVE OF)

இது மரியாளின் விண்ணேற்புப் பற்றிய ஒரு தொடர் உரை; இலத்தீன் மொழியில் எழுதப்பட்டது.

புன்னை மரம் (POPLAR)

கிளைகளை உடைய, உயரமாக வளரக்கூடிய ஒரு மரம் இது. யாக்கோபு காரானின் ஆட்டு மந்தையை அதிகரிக்கச் செய்ய, தன் மாமன் இலாபானை ஏமாற்றும் திட்டத்தில் கேதுரு, வாதுமை மர இலைகளோடு புன்னை மர இலைகளையும் பயன்படுத்தினார் (ஆதி 30:37). பாலஸ்தீன நாட்டு மலைகளில் கருவாலி, தேவதாரு ஆகிய மரங்களோடு இம்மரங்களும் காணப்படுகின்றன (ஓசே 4:13). இதன் கெட்டியான வேர்ப்பிடிப்பின் காரணமாக, கவிதைகளில் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன் இலைகளின் அடிப்பகுதி சற்றே வெண்மையாக இருக்கும். இதன் பூக்களும் வெண்மையாக இருக்கும்.

பூ

பூகா (PUAH - பெண்)

1.இவள் எகிப்திய மன்னன், எபிரேயர்கட்கும் பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்லும்படி கட்டளையிட்ட மருத்துவச்சிகளில் ஒருத்தி ஆவாள் (யாத் 1:15). உகாரித்து மொழியிலுள்ள 'பெண்' என்னும் பொருளில் உள்ள சொல்லிலிருந்தே இப்பெயர் வந்திருக்குமெனக் கருதப்படுகிறது. பிற்கால யூத மரபு வழிக்கதைகள் இவளை மிரியாமோடு தொடர்புபடுத்திப் பேசின.

2. இசக்கார் இனத்தைச் சேர்ந்த விடுதலை வீரர் (நீதிபதி) தோலாவின் தந்தை (நீதி 10:1). இப்பெயர் ஓர் இனத்தைக் குறிக்கிறது என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

3. பூவா என்ற பெயரின் மற்றொரு வடிவம். இசக்காரின் நான்கு புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:1).

பூசி (BUZI) - (வெறுக்கப்பட்)

எசேக்கியேலினுடைய தந்தை: ஒரு குரு (எசே 1:3).

பூசியர் (BUZITE)

பூசுவில் குடியேறியவர் அல்லது பூசுவைச் சேர்ந்தவர் (இவர் எரே 25:23-இல் தேதான், தேமா ஆகியோருடன் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளார்). அனேகமாக ஓர் அரேபியக் கோத்திரமாகவோ, தேசமாகவோ இருக்கலாம். இதனுடைய இருப்பிடம் இன்னும் நிர்ணயமாகத் தெரியவில்லை. எலிகூவின் தந்தை பூசியரான பாரக்கேல் என்று அழைக்கப்படுகிறார் (யோபு 32:2.6).

பூசு (BUZ - புறக்கணிப்பு, வெறுத்தல்)

1. ஆபிரகாமின் சகோதரனான நாகோருக்கு, மில்கா வழியாகப் பிறந்த இரண்டாம் மகன் (ஆதி 22:21). அதே பெயருடைய வட அராபிய இனத்தின், குல மூதாதையர் (எரே 25:23).

2. காது கோத்திரத்தைச் சேர்ந்த யாகுதோவின் தந்தை (1 நாள் 5:14).

பூச்செடிகள் (FLOWER PLANTS)

இதில் பூக்கள் கொடுக்கும் மரங்கள் செடிகள் மற்றும் கொடிகளும் அடங்கும். தொடக்க காலத்திலிருந்து பாலஸ்தீனத்தில் பல நூறு மலர்கள் இருந்ததாகக் கருதப்பட்டாலும், ஒரு சிலவே குறிப்பாகப் பெயரிடப்பட்டுள்ளன. மலர்களை எபிரேயர் பாராட்டினர் என்பதற்கு மலரைப் பொதுவாகக் குறிக்கும் எபிரேயச் சொற்கள் பலவிருப்பது சான்று பகர்கிறது. வயல் வெளிப் பூக்கள் வசந்த காலத்தின் அடையாளமாகும் (உ.ச. 2:12). மனித வாழ்வின் நிலையின்மையைக் குறிக்க, பூக்கள் அடிக்கடி பயன்பட்டுள்ளன (யோபு 14:2; சங் 103:15; எசா 5:24; 40:6-8; காண்க. யாக் 1:10-11; 1 பேதுரு 1:24). எப்பிராயிமின் மேன்மைமிகு, எழில் வாடுகின்ற மலருக்குக் கேடு அறிவிக்கப்படுகிறது (எசா 28:1.4). லெபனோனின் மலர்கள் இறைவனின் சக்தியின்முன் வாடிப்போகின்றன (நாகூ 1:4). பூக்கள் தோட்டத்தில் நறுமணம் பரவச்செய்கின்றன (உ.ச. 4:16). மத் 6:28; லூக் 12:27-இல் குறிக்கப்படும் "காட்டு மலர்கள்" பல பூக்களைக் குறிக்கின்றன எனலாம். சுமாராக 100 வேறுபட்ட மலர்வகைகள் விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சில மலர்கள் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன. இவையும் ஐயப்பாடுடையவையே.

1. வாதுமை (யாத் 25:33-34; 37:19-20; எண் 17:8; திருவுரை 12:5).
2. அத்தி (உ.ச. 2:13; அப 3:17).
3. சணல் (யாத் 9:31).
4. மருதோன்றி (உ.ச. 1:14).
5. லீலி (உ.ச. 2:1-2.16; 4:5; 6:2.3.11; மத் 6:28; லூக் 12:27).
6. தாமரை (யோபு 40:21-28).
7. அல்லி (1 அர 7:19.22.26).

8. எல்லோரை (யோபு 24:24).
9. ஒலிவ (யோபு 15:33).
10. மாதுளை (உ.ச. 6:11; 7:12).
11. ரோசா (ஞான 2:8).
12. திராட்சை (உ.ச. 2:13. 15; 6:11; 7:12).

பூஞ்சைக் காளான், நச்சுப்பனி (MILDEW)

ஒரு வகையான விவசாயப் பேரழிவு. இதை உறுதியாக அடையாளம் காட்ட முடியவில்லை. இதைக் குறிக்கும் எபிரேயச் சொல்லுக்கு வெளிறிப்போதல் என்பது பொருளாகும். இஃது ஒருவேளை தானியப் பயிர்களில் காணப்படும் காளான் நோயாக இருக்கலாம். இஃது எப்போதும் வெப்புநோய் அல்லது கடுங்காற்றோடு சேர்த்துக் கூறப்படுகிறது. பூஞ்சக்காளான், வெப்புநோயின் விளைவாக இருக்கலாம்.

பூஞ்சைக் காளானும், வெப்புநோயும் வரவிருக்கும் பேரழிவுகள் பட்டியலில் மட்டும் குறிக்கப்படுகின்றன. ஆலயத்தை அர்ப்பணித்துச் சாலமோன் வேண்டிய செபத்தில் இத்தகைய பேரழிவுகள் குறிக்கப்படுகின்றன (1 அர 8:37; 2 நாள் 6:28). உடன்படிக்கைக்குக் கீழ்ப்படியாமைக்கு அளிக்கப்படும் இறைத் தண்டனையின் ஒரு பகுதியாக இவை குறிக்கப்படுகின்றன (உப 28:22). ஆமோ 4:9; ஆகா 2:17-இலிலும் இத்தகைய பேரழிவுகள் இறைத்தண்டனையாக விளக்கப்படுகின்றன.

பூதன்சு (PUDENS - அடக்கமானர்).

இவர் உரோமைத் திருச்சபையிலுள்ள ஒரு கிறிஸ்தவர். திமொத்தேயுவுக்கு வாழ்த்து அனுப்புவதாகக் குறிப்பிடப்படுகிறார் (2 திமொ 4:21).

சிலர், இவர் இலத்தீன் புலவர் மார்சியலின் நண்பர் என்கின்றனர். பூதன்சு ஒரு போர்வீரர். இவரது, மனைவி கிளாதியாவைப் பிறப்பினால் ஓர் ஆங்கிலேயப் பெண்மணி என்கின்றனர். பூதன்சு விழா பைசாந்தியத் திருச்சபையில் ஏப்ரல் 14-இலும், உரோமைத் திருச்சபையில் மே 19-இலும் கொண்டாடப்படுகிறது.

பூத்தியர் (PUTHITES)

யூதாவின் பட்டியலில் குறிக்கப்படும் ஒரு குடும்பம். இவர்கள் யூதாவின் வட எல்லையிலிருந்த கிரியத்-எயாரிமில் வாழ்ந்தனர் (1 நாள் 2:53).

பூமி, நிலம் (EARTH)

I. மனித வாழ்வு மண்ணகத்தின் வளத்தையும் பூமியில் பொதிந்திருக்கும் செல்வத்தையும் சார்ந்திருக்கிறது. இது மனித வாழ்க்கைக்கான இறை பராமரிப்பின் திட்டமாகும். "விண்ணகமோ ஆண்டவருக்கு உரியது; மண்ணகத்தையோ அவர்மானிட மைந்தருக்கு வழங்கியுள்ளார்" (சங் 115:16). ஆயினும், பூமி மனித வாழ்க்கைக்கான பணிச்சட்டம் மட்டுமன்று. அதற்கும் மனிதனுக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு. மனிதன் "நிலத்தின் களிமண்ணிலிருந்து" (ஆதமா) உருவாக்கப்பட்டவன் (ஆதி 3:7; 3:19; காண். எசா 64:7; எரே 18:6); ஆதாம் என்ற தன் பெயரை மண்ணிலிருந்தே பெறுகிறான். பூமிக்கும் மனிதனுக்கும் உள்ள நெருங்கிய உறவை ஒவ்வொரு பழங்காலப் பண்பாடும் நன்கு உணர்ந்து, அதைத் தாய்-பூமி அல்லது பூமி-மங்கை என்ற உயிர்ச்சித்திரமான உருவகங்களில் எடுத்துக்கூறியுள்ளன. இஸ்ராயேலும் இந்த உணர்வைக் கொண்டிருந்தது. இறைவன் உடன்படிக்கை வழியாக இஸ்ராயேலுடன் கொள்ள விரும்பும் பிணைப்பை இஸ்ராயேல் கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காக, உடன்படிக்கை வழியாக மனிதன் பூமியோடு கொள்ளப்போகிற அனுபவத்தை இறைவன் பயன்படுத்துகிறார்.

ஆகவே, வெளிப்பாட்டில் பூமியும் அதைச் சார்ந்த பொருட்களும் முக்கிய இடம் வகிப்பதில் வியப்பொன்றுமில்லை. மீட்பு வரலாறு முழுவதும், காலத்தின் தொடக்கத்திலிருந்து, வரவிருக்கும் அரசின் எதிர்பார்ப்பு வரை, பூமி மனிதனோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

II. பழைய ஏற்பாடு

1. தொடக்கங்களைப் பற்றிய மறையுண்மை

அ) பூமி, இறைவனுடைய படைப்பும் உடைமையும்:

"தொடக்கத்தில் கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார்" (ஆதி 1:1). விவிலியம் இந்தத் தொடக்கம் பற்றி இரு சித்திரங்களை ஒன்றின் பின் ஒன்றாகத் தருகிறது. இந்தத் தொடக்கம் மனிதனுக்கு முந்தியது. ஆனால், மனிதனை நோக்கி அமைக்கப்பட்டது. முதல் விவரிப்பில் இறைவன் நீரிலிருந்து உலர்ந்த தரையைப் பிரித்து அதற்கு "நிலம்" என்று பெயரிட்டார். பின்னர் அதை மக்களால் நிரப்பினார் (1:9-25). இரண்டாவது விவரிப்பில் பூமி வெறுமையாகவும் எதுவும் முளைத்திராத பாழ்வெளியாகவும் இருந்தது (2:4-6). மனிதனை அதில் குடியிருக்கச் செய்ய அப்பூமியில் இறைவன் ஒரு தோட்டத்தை அமைக்கிறார். இரண்டு விவரிப்புகளிலும் பூமி இறைவனையே முற்றிலும் சார்ந்திருக்கிறது. அஃது அவருடைய உடைமையாகும். "மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை" (சங் 24:1; 89:12; காண். லேவி 25:23). கடவுள் பூமியைப் படைத்தவராய் இருப்பதால், அவருக்குப் பூமியின் மேல் முழு உரிமையுண்டு; அதன் பொருட்களை அவர் மட்டுமே பங்கிட்டு அளிக்கிறார் (ஆதி 2:16தொ); அதன் விதிமுறைகளை நிர்ணயிக்கிறார் (எசே 23:10); அதைப் பலனளிக்கச் செய்கிறார் (சங் 65:105). அவரே அதன் ஆண்டவர் (யோபு 38:4-7; எசா 40:12. 21-26). அஃது அவரது கால்மனையாகும் (எசா 66:1; அ.ப. 7:49). மற்றப் படைப்புகளைப்போல் பூமியும் இறைவனைப் புகழ்ந்து போற்ற வேண்டும் (சங் 66:1-4; 96; 98:4; தானி 3:74). இப்புகழ் மனித நாவில் உருவமும் ஒலியும் பெறுகிறது (சங் 104).

ஆ) பூமி மனிதனின் ஆட்சிக்குட்பட்டது:

மனிதனைப் பூமியிலிருந்து இறைவன் உருவாக்கி அவன் நாசியில் உயிர் மூச்சை ஊதி அவனை உயிருள்ளவன் ஆக்கினார் என்றால், அஃது அவனிடம் பூமியை ஒப்படைத்து, அவனை அதன் தலைவனாக்குவதற்கே. மனிதன் அதை ஆட்சி செய்யவேண்டும் (ஆதி 1:28தொ). அப்பூமி ஒரு தோட்டம் போன்றது. அதில் மனிதன் கண்காணிப்பாளனாக நியமிக்கப்பட்டுள்ளான் (2:8.15; சீரா 17:1-4). ஆகவே, மனிதனுக்கும் பூமிக்குமிடையே பரஸ்பரமான உறவுள்ளது. இது பற்றிய பல எதிரொலிப்புகளை விவிலியத்தில் காணலாம். ஒரு புறம் மனிதன் தன் வேலையால் மண்ணகத்தில் தன் முத்திரையை விட்டுச் செல்கிறான். மறுபுறம் பூமியானது மனிதனது மனநிலையைப் பலவகையில் உருவாக்குகிறது. மனிதனின் சிந்தனையும் மொழியும் பூமியை அடிப்படையாகக் கொண்ட உருவகங்களையே தொடர்ந்து கையாளுகிறது. "நீதியை நீங்கள் விதைத்துக் கொள்ளுங்கள்; அன்பின் கனியை அறுவடை செய்யுங்கள் நீங்கள் தீவினையை அறுவடை செய்தீர்கள்" (ஓசே 10:12-13). எசாயா தன் உழுபவன் உவமையில், பயிரிடுவதின் முறைகளில் தொடங்கி, ஆன்மீகப் பலனுடைமைக்கு அவசியமான சோதனைகளை விளக்குகிறார் (எசா 28:23தொ). சங்கீத ஆசிரியர் நீருக்காக ஏங்கும் வறண்ட தரிசு நிலத்திற்கு, இறைவனுக்காக ஏங்கும் கடுந்துயருற்ற ஆன்மாவை ஒப்பிடுகிறார் (சங் 63:2; 143:6).

இ) பாவத்தால் சாபம் பெற்ற பூமி: மனிதனுக்கும் பூமிக்குமிடையே இவ்வளவு நெருங்கிய பிணைப்பு இருக்கும்பொழுது, எல்லாத் தலைமுறைகளும் தொடர்ந்து அனுபவித்து வரும் இரண்டு பேருக்கு மிடையே உள்ள பகைமை தோன்றக் காரணம் என்ன? மனிதனுக்குப் பூமி இனி இன்பவனம் அன்று. மறைபொருளான சோதனை ஒன்று குறுக்கிட்டுள்ளது. பாவம் அவர்கள் உறவைப் பாழ்படுத்தி விட்டது. உண்மையிலேயே தொடக்கத்தில் இறைவன்

ஏற்படுத்திய பராமரிப்புச் சட்டங்கள் இன்னும் பூமியைக் கட்டுப்படுத்தி வருகின்றன (ஆதி 8:22). உலகின் இந்த அமைப்பு படைத்தவருக்குச் சான்று பகர்கின்றது (உரோ 1:19தொ; அ.ப. 14:17). ஆனால், பாவம் ஓர் உண்மையான சாபத்தைப் பூமிக்குக் கொண்டு வந்துள்ளது. அதன் விளைவாகப் பூமி முட்செடிகளையும் முட்புதரையும் மனிதனுக்கு விளைவிக்கும் (ஆதி 3:17-18). எதிலிருந்து மனிதன் தோன்றினானோ அந்த மண்ணுக்கு இறுதியாகத் திரும்பும்வரை (3:19; ஞான 15:8), பூமி மனிதன் துன்புறும் சோதனைக்களமாக இருக்கும். இவ்வாறு, பூமியோடு மனிதன் கொண்ட உறவும் ஒற்றுமையும், நன்மைக்கும் தீமைக்கும், தொடர்ந்து நீடிக்கிறது.

2. இறைமக்களும் அவர்களது நிலமும்: தொடக்கத்திலிருந்து மனிதனோடு இணைக்கப்பெற்ற பூமி, விவிலிய வெளிப்பாட்டில் தன் பங்கைத் தொடர்ந்து கொண்டிருக்கும். அதன் வழியில், மீட்பு வரலாற்றின் மையத்தில் தனது இடத்தைக் கொண்டிருக்கும்.

அ) குலமுதியோரின் அனுபவம்: அச்ச மூட்டும் அன்னிய நாடான பாபிலோனிலிருந்து இறைவன் ஆபிரகாமை அழைக்கிறார் (ஆதி 11:31-12:1). அடிமைத்தனத்திற்கும் சோதனைக்கும் இருப்பிடமான எகிப்திலிருந்து ஆபிரகாமின் வழிவந்தோரை அவர் அழைப்பார் (யாத் 13:9). இவ்விரு நாடுகளுக்கிடையே குலமுதியவர்கள் கானான் நாட்டைத் தற்காலிகமாகத் தங்குமிடமாகக் கொள்வர். அதுதான் அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கு வாக்களிக்கப்பட்ட "பாலும் தேனும் பொழியும் பரந்த நாடாக" (3:8) அமையும். இந்த நாட்டைத் தான் இறைவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தார் (ஆதி 12:7). அவரைப் பின்பற்றி, அந்நாடு அவர்களது உரிமைச்சொத்தாகும் வரை (17:8) இஸ்ராயேலின் முன்னோர்கள் அந்நாட்டில் அலைந்து திரிவர். அவர்கள் அங்கு அன்னியர்களைப்போல் தற்காலிகமான இல்லங்களில் தங்கியிருப்பர். ஏனெனில், அவர்கள் தங்கள் மந்தைகளின் தேவையைப் பொருத்து ஓரிடம் விட்டு வேறிடம் சென்றனர். ஆனால் அங்கு, கிணறுகளையும் மேய்ச்சலுக்கான நிலத்தையும் மட்டும் காணவில்லை; என்றுமுள்ள இறைவன் தம்மை வெளிப்படுத்தும் இடத்தையும் அதில் கண்டனர். கருவாலி மரங்களும் (ஆதி 18), கிணறுகளும் (26:15தொ; காண். 21:3தொ), கட்டிய பீடங்களும் (12:7) இந்த வெளிப்பாட்டு நினைவைப் பாதுகாத்து நிற்கும் சான்றுகளாகும். இவற்றில் சில இடங்கள் இறைவனது பெயரையே கொண்டுள்ளன. பெத்தேல் - "இறைவனின் வீடு" (28:17தொ); பெனுவேல் "இறைவனின் முகம்". மக்கபேலாக் குகையை வாங்குவதோடு (23) இந்த வாக்களிக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதியை ஆபிரகாம் முதல் முறையாகச் சட்டமுறைப்படி தன் உடைமையாக்கிக் கொள்கிறார். ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியோர் அங்கு அடக்கம் செய்யப்பட விரும்பினார். அதன் விளைவாக, கானான் நாட்டைத் தங்கள் தாய் நாடாக ஆக்கினர்.

ஆ) நிலக்கொடை: இறைவனின் புதுப்பிக்கப்பட்ட வாக்குறுதி (ஆதி 26:3; 35:12; யாத் 6:4) எபிரேய மக்களிடையே தாங்கள் குடியேறுவதற்கான நாட்டைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை நிலைத்திருக்கச் செய்தது. அன்னிய நாடான எகிப்திலிருந்து அவர்களை வெளியேறச் செய்கிறார் இறைவன் (காண். ஆதி 46:3). இருப்பினும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்கு, அவர்கள் "வெறுமையான ஓலமிடும் பாலையில்" சுட்டெரிக்கும் தனிமையையும் (உப 32:10), வறுமையையும் அனுபவிக்கவேண்டும். "மண்ணிலுள்ள எல்லா மக்களினங்களிலும் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாகிய இஸ்ராயேல்" (7:6) இறைவனைத்தவிர வேறு எதனையும் உடைமையாகக் கொண்டிருக்கக்கூடாது. தூய்மைப்படுத்தப்பட்ட பின்னரே, "எதிலும் குறைவற்ற நாடான" கானானை (நீதி 18:10) யோசுவாவின் தலைமையின் கீழ் இஸ்ராயேலர் வெல்லமுடியும் இவ்வெற்றியில் இறைவன்

தலையிடுகிறார். அவர் தாம் தம் மக்களுக்கு நாட்டை உடைமையாகக் கொடுக்கிறார் (சங் 135:12). உழைப்பின்றிப் பெற்ற நாடு (யோசு 24:14), அதைப் பெற்றுத் தந்த உடன்படிக்கையைப் போல (ஆதி 17:8; 35:12; யாத் 6:4.8), ஓர் அன்புக்கொடை, அருட்கொடையாகும். இஸ்ராயேல் மக்கள் அந்நாட்டில் பேரார்வம் கொள்கின்றனர். ஏனெனில், இறைவன் தம் மக்களை ஏமாற்றி விடவில்லை. வறட்சியும் சலிப்பூட்டும் தன்மையும் உள்ள பாலைவனத்தோடு ஒப்பிடுகையில் "இஃது ஒரு நல்ல நாடு, மிகச் சிறந்த நாடாகும்" (எண் 14:7; நீதி 18:9). இதுவே அவர்கள் மீண்டும் கண்ட பூவுலக இன்பவனமாகும். "பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலும் பாய்கின்ற ஆறுகளையும், ஊற்றுகளையும், ஏரிகளையும் கொண்ட கோதுமை, திராட்சை, அத்தி, மாதுளை, பார்லி ஆகியவை நிறைந்த, ஒலிவ எண்ணெயும் தேனும் நிறையக் கொண்ட, பஞ்சமின்றி நிறைய அப்பங்களையும் கொண்ட" (உப 8:7-9) அந்நாட்டின் மேல் மக்கள் உடனே பற்றுக் கொண்டனர். தான் ஊழியம் செய்ய விரும்பும் இறைவனிடமிருந்து (யோசு 24:16தொ), உரிமைச் சொத்தாக அந்நாட்டை இஸ்ராயேல் பெறவில்லையா? (உப 15:4). இவ்வாறு பூமியும் அதன் பொருட்களும் இறைவனது அன்பிற்கும் தம் உடன்படிக்கைக்கு அவர் காட்டிய பற்றுறுதிக்கும் நிலையான நினைவுச் சின்னங்களாக இருக்கும். இந்நாட்டை உடைமையாகக் கொண்டிருப்பவன் இறைவனையும் உடைமையாகக் கொள்கிறான். ஏனெனில், மாவே இனிமேல் பாலை வனத்தின் கடவுள் மட்டும் அல்லர். கானான்நாடு அவரது உறைவிடமாக மாறிவிட்டது. ஆண்டுகள் செல்லச்செல்ல, இந்த உறைவிடம் இஸ்ராயேல் நாட்டோடு எவ்வளவு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறதென்று மக்கள் நம்பினார்கள் என்றால், மற்றக் கடவுள்களைத் தொழும் பிறநாட்டில் யாவேயைத் தொழமுடியும் என்று தாவீது நம்பவில்லை (1 சாமு 26:19). எனவேதான், யாவேக்கு வழிபாடு செலுத்த இஸ்ராயேல் நாட்டின் ஒரு சிறு பகுதியை நாமான் தமஸ்குவுக்குக் கொண்டு செல்கிறார் (2 அர 5:17).

இ) தனது நாட்டில் இஸ்ராயேல் ஆடிய நாடகம்:

1) நிலச்சட்டம்: வாக்களிக்கப்பட்ட நாடு இஸ்ராயேலுக்கு உரிமைச் சொத்தாக அளிக்கப்படுகிறது (உப 12:1; 19:14). இந்நாடே இஸ்ராயேலுக்குச் செல்வச்செழிப்பைக் கொண்டு வரும். ஆனால், இதற்கு இஸ்ராயேலின் ஒத்துழைப்புத் தேவை. இறைவனுடைய ஆசீர்களைப் பெற விரும்புகிறவனுக்கு வேலை செய்தல் ஒரு சட்டமாகிறது. "அறுவடைக் காலத்தில் தூங்கும்" சோம்பேறியின் மாட்டு விவிலியம் கடுமையாக உள்ளது (பழ 10:5; 12:11; 24:30-34). இஸ்ராயேல் மக்கள் இறைவன் அளித்த நாட்டில் தங்கும் "அன்னியரும் இரவல் குடிகளுமே" ஆவர் (லேவி 25:23; சங் 119:119). மேலும், இஸ்ராயேல் பல்வேறு கடமைகளை நிறைவேற்ற வேண்டும். முதலில் இறைவனுக்குப் புகழும், நன்றியும் அவரையே நம்பியிருக்கும் மனப்பான்மையையும் இஸ்ராயேல் வெளிப்படுத்தவேண்டும்; இதுவே, வேளாண்மைத் திருவிழாக்களின் பொருளாகும் (யாத் 23:14;...). இவ்விழாக்கள் இயற்கையின் இலயத்தோடு வழிப்பாட்டு வாழ்வையும் தொடர்பு படுத்துகின்றன. இவ்விழாக்கள் புளிப்பற்ற அப்பவிழா, அறுவடை விழா, சேகரிப்பு விழா (யாத் 23:16) ஆகியவையாகும். மேலும், நிலத்தின் விளைபொருட்களின் பயனும் துல்லியமான ஒழுங்குகளுக்கு உட்பட்டவையாகும். ஏழைகளையும் அன்னியர்களையும் கதிர்களைப் பொறுக்க அனுமதிக்கவேண்டும் (உப 14:29; 24:19-21). நிலத்தின் வளமெல்லாம் தீர்ந்து விடாமலிருக்க ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிலம் தரிசாகக் கிடக்க வேண்டும் (யாத் 23:11). நிலம் பற்றிய இந்தச் சட்டம் ஒரேசமயத்தில் சமய, சமூக அடிப்படை கொண்டது. இஃது இறைவனுடைய அதிகாரத்தின் அடையாளம். ஏனெனில், நிலம்

இறைவனுக்கே உரிமையானது. இச்சட்டத்தைக் கடைப்பிடித்தல் அவர்களைச் சூழ்ந்திருந்த பிறமத வேளாளர்களிடமிருந்து இஸ்ராயேலைப் பிரித்துக்காட்டும்.

2) சோதனையும் பாவமும்: இங்குதான் இஸ்ராயேல் சோதனைக்கும் தீய கவர்ச்சிக்கும் உள்ளாகப்போகிறது. தன் வேலையையும் வாழ்வையும் இஸ்ராயேல் நிலத்தோடு பிணைத்துக்கொண்டது. வயல், வீடு, மனைவி இம்மூன்றும் இப்பிணைப்பை வெளிக்காட்டுபவை (உப 20:5தொ). அது நிலத்தோடு இணைந்து நிலைத்து நின்ற பிறகு வயல், திராட்சைத்தோட்டம் போன்ற கோணங்களில் இறைவனைப் புரிந்து கொள்ளும் முறைக்குச் சுலபமாக வந்தடையும். பூமி-தாய், பூமி-மங்கை என்ற உருவகங்களை அவற்றின் பிறமதப் பொருளில் இஸ்ராயேல் அனுபவிக்கும். அதேசமயம், கானானியர்களிடமிருந்து வேளாண்மை வாழ்வின் ஒழுங்குகளைக் கற்றுக்கொள்கிறது. இந்த வாழ்வின் உலகியல் மற்றும் சிலை வழிபாட்டுப் பழக்கவழக்கங்களையும் தனதாக்கிக் கொள்ளத் தொடங்குகிறது. இஸ்ராயேல் மக்களுக்கு, யாவே பெரும்பாலும் ஒரு பாதுகாக்கும் பாகாவலாகவும் (கானானியரின் தெய்வம்), வளப்பத்தை உறுதிப்படுத்துபவராகவும் (நீதி 2:11) ஆகிறார். இதுவே கிதியோனிடமிருந்து கடும் எதிர்ப்பை உண்டு பண்ணுகிறது (6:25-32). "வீட்டோடு வீடு சேர்ப்பவர்களையும், வயலோடு வயலை இணைத்துக் கொள்பவர்களையும்" இறைவாக்கினர் கடுமையாகத் தாக்கினர் (எசா 5:8). நிலவளம் பெற்று நிலைத்து வாழ்வதில் உள்ள ஆபத்துக்களைத் தவிர்த்து வாழத் தூண்டுகின்றனர். ஏனெனில், அதுவே திருட்டுகள் (காண். 1 அர 21:3-19), கொள்ளையடித்தல்கள் (மீக் 2:2), அநீதிகள், வகுப்புப் பிரிவினைகள், அகந்தையும் பொறாமையும் உண்டாக்கும் செல்வப்பெருக்கு (காண் யோபு 24:2-12) ஆகியவற்றிற்குக் காரணமாகும். இவற்றையெல்லாம் எப்படித் தூய இறைவன் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? தங்கள் நாட்டில் இறைவனிடம் மனதை எழுப்புவதற்காக அவருடைய நன்மைத் தன்மையைத் காட்டும் அடையாளங்களைக் காண்பதற்குப் பதிலாக அல்லது அவரோடு உரையாடல் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் காண்பதற்குப் பதிலாக, பாவ மனுகுலத்தைச் சார்ந்த மற்ற மக்களைப்போல இஸ்ராயேலும் சுயநலத்தோடு அந்நாட்டைப் பற்றிக் கொள்கிறது என்பது தெளிவாகிறது. உரையாடலுக்கான இந்த அழைப்பு இறைவாக்கினர் பயன்படுத்தும் பொருள் பொதிந்த சித்திரங்களிலிருந்து தெளிவாகிறது. அவர்கள் பூமி-மங்கை என்ற உருவகத்தைப் பயன்படுத்தவில்லை. மாறாக, பூமி-கணவன் என்ற உருவகத்தைப் பயன்படுத்துகின்றனர் (ஓசே 2:5; எசா 45:8; 62:4; காண். உ.ச. 4:12; 5:1; 6:2.11). இங்கு, பூமி மனிதர்களைக் குறிக்கிறது. இறைவன் அதன் கணவர் என்றால், அது பூமிக்காக அன்று, அவர்களுக்காகவே (காண். 2 மக் 5:19).

3) எச்சரிக்கைகளும் தண்டனைகளும்: ஆயினும், இஸ்ராயேல் இன்னும் அதைப் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே, இந்நிலையில் இறைவாக்கினர்களின் எச்சரிக்கைகள் உப ஆகமத்தின் வேதனைக் குரலோடு கலந்து ஒலிக்கின்றன. "உம் கடவுளாகிய ஆண்டவரை மறந்து போகாதபடி கவனமாய் இருங்கள்" (உப 6:12; 8:11; 11:16). உண்மையிலேயே, வியத்தகு நாட்டை அனுபவிக்கும் மக்கள் (6:10 தொ) அக்கொடைக்கு ஊற்றாகிய இறைவனை மறந்து விட்டனர். "உங்கள் மூதாதையர்க்கு அவர் அன்பு காட்டியதால்... இந்த நாட்டிற்குள் உங்களை இட்டுச் சென்றார்" 4:37தொ; 31:20). முடிவில் இந்நிலக் கொடையைப் பெற்று இறையன்பை அனுபவிக்க அல்லாமல், அன்னிய நாடுகளைக் கடந்து இத்தனை பயணங்களையும் மேற்கொள்ள வேறு என்ன காரணம் இருக்கிறது? "உங்கள் கடவுளாகிய

ஆண்டவர் பாலைநிலத்தில் உங்களைக் கூட்டிச் சென்ற எல்லா வழிகளையும் நினைவில் கொள்ளுங்கள். அதன் மூலமே, அவர் உங்களை எளியவராக்கினார்... உங்கள் உள்ளச் சிந்தனையை அறிந்து கொள்ளவும் சோதித்தார்" (8:2). இந்நிலம் இறைவனுக்குச் சொந்தம்; அவரது அன்பைப்போல், அவரது அதிகாரமும் பொறாமையும் உரிமைக் கோரிக்கை விடுக்கும் தன்மையும் கொண்டது. மனிதன் தாழ்ச்சியுள்ளவனாகவும், பிரமாணிக்கமுள்ளவனாகவும், கீழ்ப்படிதல் உள்ளவனாகவும் இருக்கவேண்டும் (5:32-6:25). அவன் அப்படியிருந்தால் அதற்குப்பதிலாக ஆசீர்களைப் பெறுவான். "உன் கருவின் கனியும், உன் நிலத்தின் பலனும், உன் கால் நடைகளின் ஈற்றுகளும்... ஆசி பெற்றிடும்" (28:4). ஏனெனில், "இஃது உங்கள் கடவுளாகிய ஆண்டவர் கண்காணிக்கும் நாடு! ஆண்டின் தொடக்கம் முதல் ஆண்டின் முடிவு வரை உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கண் காத்திடும் நாடு!" (11:12). அதற்கு மாறாக, இஸ்ராயேல் நெறி தவறினால், சாபம் விளையும் (உப 28:33; ஓசே 4:3; எரே 4:23-28). நிலத்தையே இழக்க நேரிடும் என்ற மிக அச்சமூட்டும் நேரங்களும் உண்டு. "நீங்கள் உடைமையாக்கிக் கொள்ளப்போகும் நாட்டிலிருந்து நீங்கள் பிடுங்கி எறியப்படுவீர்கள்" (உப 28:63). உணர்வேகத்தோடு இறைவாக்கினர் எடுத்துரைத்த இந்த அச்சுறுத்தல் (ஆமோ 5:27; ஓசே 11:5; எரே 16:18), போர் மற்றும் நாடு கடத்தல் போன்ற இடுக்கண்களிடையே கடுமையான இறைத் தண்டனையாக இறுதியில் நிறைவேறுகிறது.

ஈ) வருங்காலத்திற்கான வாக்குறுதிகள்: இந்தத் தண்டனை எவ்வளவுதான் கடினமாக இருந்தாலும், இறைவாக்கினர் அதை முடிவு பெற்றது, முழுமையானது என்று கருதவில்லை. நெடுங்காலத்துக்குமுன் பாலை நிலத்தில் நிகழ்ந்ததுபோல் இதுவும் தூய்மைப்படுத்தும் சோதனையாக இருக்கும். இதற்கும் அப்பால் நம்பிக்கை நிலைத்து நிற்கிறது. பழைய அனுபவத்தின் அடையாளங்களை எல்லாம் எடுத்துரைப்பதுதான் இந்நம்பிக்கையின் நோக்கம். நிலம் இன்னும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இது முதலில் இஸ்ராயேலின் நாடாக இருக்கும். அதற்கு இறைவன் புதிய மக்களை மீட்டுக் கொடுப்பார். தூய்மைப்படுத்தப்பட்டு, முழுவதும் அர்ப்பணிக்குப்பட்டு (எசே 47:13-48:35; செக் 14), இந்தப் "புனிதநாடு" (செக் 2:16; 2 மக் 1:7; ஞான 12:3) அதன் தலைநகரான எருசலேமைப்போல், யாவேயின் மணமகள் என்றழைக்கப் பெறலாம் (எசா 62:4). ஆனால், இப்புனித நிலத்திற்பால், இந்தப்பூமியே மீட்பில் பங்குபெறும். எருசலேமைச் சமயமையமாகக் கொண்டு (எசா 2:2தொ; 66:18-21; சங் 47:8தொ), புதிய மனுகுலத்தின் "இனிய நாடாக" மாறும் (மலா 3:12). தங்கள் மூல ஒன்றிப்பை மீண்டும் கண்டடைய, இப்புதிய மனுகுலத்தில் எல்லா நாடுகளும் இஸ்ராயேலோடு சேர்ந்துகொள்ளும். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமென்றால், தொடக்கங்கள் மட்டுமே உருமாற்றம் பெற்ற பூமியின் போதிய பொருள் விளக்கமாக அமையும். அப்போது இறைவன் படைக்கும் "புதிய வானமும் புதிய பூமியும்" (எசா 65:17), வாழ்க்கையின் வியத்தகு நிலைகளோடும், வளத்தோடும் தொடக்க கால இன்பவனத்தின் தனிப்பட்ட பண்புகளை மனிதர்கள் தங்குமிடத்திற்குக் கொடுக்கும் (ஆமோ 9:13; ஓசே 2:23 தொ; எசா 11:6-9; எரே 23:3; எசே 47:1தொ; யோவே 4:18; செக் 14:6-11).

இத்தகைய முன்னோக்கில் நிலத்தை உடைமையாக்கிக் கொள்தல் இறுதிக்கால இயல் பொருளைக் கொள்கிறது. குழுமட்டத்திலிருந்து தனிப்பட்டோர் நிலைக்கு மாறும்போது இக்கருத்து இன்னும் அதிக அளவில் வலியுறுத்தப்படுகிறது. இஃது எசாயாவால் அறிமுகப்படுத்தப்பட்டு (எசா 57:13; 60:21), ஞானநூல்களில் வளர்ச்சியடைகிறது. அப்போது, பூமி அல்லது நிலம் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டையும், அவர் வழி வந்தோருக்கும்

இறைவனில் தனது முழு விசுவாசத்தையும் வைக்கும் நீதிமானின் பங்காகிய (சங் 25:13; 37:8;...) மற்ற உயர்ந்த, ஆனால், தெளிவற்ற உண்மைக்கும் வாக்களிக்கப்பட்ட நாட்டையும் குறிக்கிறது. படிப்படியாக மண்ணுலக ஈடுபாடுகளிலிருந்து தூய ஆன்மீகப் பேரார்வங்களுக்கு இஸ்ராயேல் உயர்த்தப்பட்டு, "பணிவுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்" (மத் 5:4) என்ற இயேசுவின் நற்செய்தியை ஏற்கும் பக்குவம் பெறுகிறது.

III. புதிய ஏற்பாடு

1. **இயேசுவும் பூமியும்:** இறைவன் பூமியின்மேல் கொள்ளும் மேலாண்மை ஆட்சியில் இயேசுவும் பங்குகொள்கிறார் (கொலோ 1:15; எபே 4:10). ஏனெனில், "உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை" (யோவா 1:3). "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் அவருக்கு அருளப்பட்டிருக்கிறது" (மத் 28:18). இருப்பினும் மனிதர்களுள் ஒருவர் என்ற முறையில், இயேசு இஸ்ராயேல் நாட்டோடு எல்லா வகையிலும் பிணைக்கப்பட்டிருக்கிறார்.

அ) இயேசு உலகளாவிய, யாவர்க்குமுரிய மீட்பின் செய்தியை மனிதர்க்கு வெளிப்படுத்த வருகிறார். ஆனால், அதை ஒரு குறிப்பிட்ட நாட்டின் மொழியில் மற்றும் பண்பாட்டில் வெளிப்படுத்துகிறார். பாலஸ்தீனத்தின் இயற்கைக்காட்சிகளும் பழக்கவழக்கங்களும் அவற்றைப் படைத்தவரின் கற்பனையை ஒருவகையில் உருவாக்கின. இதற்குரிய சான்றுகளில் சில விதைப்பவன், அறுவடை, திராட்சைக்கொடி, அத்திமரம், களைகள், கடுகுவிதை, ஆயன், மந்தை, ஏரியில் மீன் பிடித்தல் போன்ற உவமைகளும் உருவகங்களும் ஆகும். மேலும், வாழ்க்கைக் காட்சிகளைக் கூர்ந்து கவனித்து, அவை வழியாக அவர் அறிவுரை கூறுகிறார். "வானத்துப் பறவைகளைக் கவனமாய் நோக்குங்கள்... காட்டு மலர்கள் எப்படி வளருகின்றன எனக்கவனியுங்கள்" (மத் 6:26.28); கதிர்களைக் கொய்தல் (12:1-8இணை); பலன் கொடா அத்திமரம் (21:19).

ஆ) இந்த உவமைகளுக்கப்பால், இயேசு இவ்வுலகத்தைப் பற்றிய போதகத்தையும் அளிக்கிறார். இயேசுவைப் பொறுத்தமட்டும் நிலத்தை உடைமையாக்கிக்கொள்ளும் ஆவல் ஆன்மீகப் பொருட்களை உடைமை யாக்கிக் கொள்ளும் ஆவல் ஆன்மீகப் பொருட்களை உடைமையாக்கிக் கொள்ளும் ஆர்வமாக மாறுகிறது (மத் 5:4). மண்ணக அரசு, அது முன் சுட்டிக்காட்டிய உண்மையாகிய விண்ணரசுக்கு இடம் விட்டுக்கொடுக்கிறது (5:3). இனிமேல், கிறிஸ்துவுக்காகவும் நற்செய்திக்காகவும், மனிதன் தன் நிலபுலன்களை இழக்கக்கூடியவனாய் இருக்க வேண்டும் (மாற் 10:29தொ). இறைவாக்கினருடைய வாக்குறுதிகளின் குறுகிய பூவுலகக் கூறுகள் இப்போது விஞ்சப்படுகின்றன. அவை கண்டனம் செய்யப்படவில்லை. விண்ணக அரசுக்கான எதிர்பார்ப்போடு ஒப்பிடும்போது இவை எல்லாம் அவற்றிற்குரிய இரண்டாம் இடத்தையே வகிக்கின்றன (மத் 6:33). இவ்வாறு செய்தால் ஒவ்வொன்றும் தனக்குரிய நிலையை அடைகிறது. இறைவனது திருவுளம் "விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறும்" (6;19). இந்த முரண்பாடான முறையில் மனிதரின் நிலத்திற்கு அதன் புனித மதிப்பீட்டை அளிக்கிறார். நிலம் இறைவனது செயலாகவும், அவரது பிரசன்னத்தின் மற்றும் அன்பின் அடையாளமாகவும் உள்ளது. இறைவனி டமிருந்து தங்களையே பகைத்துக் கொள்ளவும், தங்கள் திறமைகளைப் புதைத்துவைக்கவும் (25:8), மனிதர் நிலத்தைப் பயன்படுத்தினர்; இனியும், பயன்படுத்துவர். ஆனால், கிறிஸ்து அதை அன்போடு பொறுப்பேற்று (காண். கொலோ 1:20), தன் மறையுண்மையை ஏற்று நிற்கும் சாதனமாக்குகிறார். கிறிஸ்து எந்த அளவிற்குச் செல்கிறார் என்றால் இவ்வுலகில் தனது உடலின்

பிரசன்னத்தை அடையாளமாக விட்டுச்செல்ல, பூமியின் பலனான (சங் 104:14) அப்பத்தைப் பயன்படுத்துகிறார்.

இ) "மண்ணுலகில் தீ வைக்க வந்தார்" (லூக் 12:49). இத்தீயைப் பரப்புவதற்குக் கலிலேயா மற்றும் யோர்தானுக்கு அப்பாலுள்ள நாட்டுப்புறத்து மக்களிலிருந்து தன் முதல் சீடர்களைத் தேர்ந்தெடுக்கிறார். அவர்கள்தான் "மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறார்கள்" (மத் 5:13). நம் உலகின் ஒரு குறிப்பிட்ட பகுதியில், அதாவது, இஸ்ராயேலுக்கு இறைவன் அளித்த அதே புனித நாட்டில், நற்செய்தி ஆழ்ந்து நட்டுவைக்கப்படுகிறது. அதன் தலைநகரான எருசலேமில் உலகெங்கும் பற்றி எரியச்செய்ய தனது சிலுவையை நடுவார். பிறகு "மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் தன்பால் ஈர்த்துக்கொள்வார்" (யோவா 12:32). இவ்வாறு புனித நாடுதான் எந்நாளும் புவியியல் மையமாகத் திகழும். இங்கிருந்து மனுகுலத்தின் எல்லாரையும் தனதாக்கும் மீட்பு சென்றிடும்.

2. புதிய மக்களும் புதியபூமியும்:

அ) அப்போதிலிருந்து, தொடக்கத்தில் வகுக்கப்பட்ட உலகளாவிய மீட்புத்திட்டம் மீண்டும் அமைக்கப்படுகிறது. இயேசு குறிப்பிட்ட திட்டப்படி, இஸ்ராயேல் நாட்டிலிருந்து உலகம் முழுமைக்கும் நற்செய்தி விரிவாக்கப்படும். "எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அ.ப.1:8; காண். மத் 28:16 தொ).

ஆ) இவ்வாறு, எல்லைகளுக்கு உட்பட்ட இஸ்ராயேல் நாட்டிலிருந்து எல்லா உலகிற்கும் செல்லும் ஒரு வழியை மட்டும் இயேசு காணவில்லை. இம்மண்ணுலகிலிருந்து, அது உருவகமாகச் சுட்டிக்காட்டும் மற்றொரு உலகையும் காண்கிறார். அதுவே, திருச்சபையும் விண்ணுலக அரசும் ஆகும். பழைய ஏற்பாட்டின் மக்கள் இளைப்பாறும் நாட்டை உடைமையாகப் பெறுவதற்கு வாக்குறுதிகளின் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், வரவிருக்கும் மீட்பின் உருவமாக மட்டும் இருந்தது. உண்மையான இளைப்பாறும் நாட்டில் இப்போது நாம் விசுவாசத்தால் நுழைகிறோம் (எபி 4:9). அதுவே விண்ணக வீடு. அங்குதான் இயேசு தன் உயிர்ப்புக்குப்பின் தங்கியிருக்கிறார். அதைப்பற்றி அவருடைய திருச்சபையில் முன்சுவையைப் பெற்றிருக்கிறோம்.

இ) இப்புதிய முன்னோக்கில், மனித வேலையோடும் வழிபாட்டிலும் இனிச் சேர்க்கப்பட்டிருக்கும் பொருள் வெளிப் படுத்தப்படுகிறது. கிறிஸ்துவைப் பின் பற்றி, புதிய மக்கள் தங்களுக்கெனக் குறிக்கப்பட்ட இளைப்பாறும் நாட்டினுள் நம்பிக்கையில் ஏற்கெனவே புகுந்துவிட்டனர். இதற்கு அவர்களுடைய உலகச் செயல்கள் எல்லாம் ஓர் உருமாற்றம் பெறவேண்டும் என்ற உண்மை அடங்கியுள்ளது. இன்னும் இம்மக்கள் பூமியை ஆளவேண்டும். நிலம் கொடுக்கும் செழிப்பில் சிக்கிக் கொள்ளும் ஆபத்து இன்னும் இருக்கிறது (லூக் 12:16-34). ஆனால், விண்ணகம் எழுந்து விட்ட கிறிஸ்துவில் கண்களைப் பதித்து, இம்மக்கள் இனி "மேலுலகிலுள்ளவற்றின் மீதே மனதைச் செலுத்தவேண்டும்" (சொலோ 3:2). இப்படிச் செய்வது அவற்றை இழிவாக் கருதுவதால் அன்று; மாறாக, "இவ்வுலகப் பயனைத் துய்ப்போர் அதிலேயே ஆழ்ந்து விடாமலிருக்கவே" (1 கொரி 7:31). விசுவசிப்பவரின் விண்ணகக் கண்ணோக்கு பூமியை மறுக்கவில்லை; மாறாக, அதற்கு உண்மைப்பொருள் கொடுத்து அதை நிறைவுபெறச் செய்கிறது. வழிபாட்டுச் செபம் உண்மையிலேயே பூமிக்கும், அதிலுள்ள அனைத்திற்கும் வேலையால் பயன்கொடுக்க, அஃது அனுமதிக்கும் அனைத்திற்கும் குரல் கொடுக்கிறது. இந்தச் செபத்தால் மனிதன் ஒருவகையில் பூமியை உயர்த்துகிறான்; இறைவனை நோக்கி எழச் செய்கிறான்.

ஏனெனில், புதிய மக்கள் பூமியின் தொடர்புகளை இழந்துவிடவில்லை. மாறாக, இம்மக்கள் பூமியை ஆட்சி செய்கின்றனர் (திருவெளி 5:10). இவ்வுலகில் தன் திருப்பயணத்தைச் செய்து கொண்டிருக்கும்வரை, இம்மக்கள் மீட்புக்காக ஏங்கும் படைப்புப்பொருள் அனைத்தின் தவிப்புக்குச் செவிமடுக்காது இருக்கமுடியாது (உரோ 8:22).

3. கிறிஸ்தவ நம்பிக்கையில் பூமி: பாவம் புரிந்த மனிதகுல நாடகத்தில் பங்குபெறும் வரை, பூமி புதிய மக்களின் வரலாற்றோடு தொடர்பு கொண்டிருக்கிறது. "படைப்பனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய மகிமையும் விடுதலையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையோடு" கடவுளுடைய மக்கள் வெளிப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு எதிர் நோக்கியிருக்கிறது (உரோ 8:19.21). தொடக்கத்திலிருந்து மனிதனோடு ஒன்றித்து, பூமி இறுதிவரை அவ்வாறே இணைந்துள்ளது. மனிதனைப்போலப் பூமியும், மறைபொருளான விதத்தில் இருந்தாலும், மீட்படைய வேண்டிய பொருளாக உள்ளது. ஏனெனில், பூமி அதன் இன்றைய நிலையில் ஒழிந்துபோகும் (மத் 24:33). "மண்ணுலகும் அதிலுள்ள வேலைப்பாடுகளும் எரிந்து அழிந்துபோகும்" (2 பேதுரு 3:10). பூமியின் இடத்தைப் "புதிய பூமியால்" நிரப்புவதற்காகவே இது நிகழும் (திருவெளி 21:1). "நாமோ நீதி குடிகொள்ளும் புதிய வானமும் புதிய வையமும் இறைவன் வாக்களித்தபடியே வருமென்று காத்திருக்கிறோம்" (2 பேதுரு 3:13).

பூரிம் (PURIM)

அதார் மாதத்தில் (பெப்ரவரி-மார்ச், மாசி), 14-15-ஆம் நாட்களில் கொண்டாடப்படும் இந்த யூதர்களின் விழா, யூதர்களை அழிக்க எண்ணம் கொண்டிருந்த ஆமானிடமிருந்து, மொர்தக்காயும், எஸ்தரும் அவர்களைக் காத்ததன் நினைவாகக் கொண்டாடப்படும் விழாவாகும் (எஸ்த 3:7; 9:24-28). பூரிம் பற்றி யூதச் சட்டத்தில் குறிப்பிடப்பட வில்லை. பாரசீகத்தில் சிதறி வாழ்ந்த யூதர்களிடையே இது வளர்ந்திருக்கவேண்டும். இஃது ஒரு சமயச்சார்பற்ற விழாவாகும்.

'பூரி' எனும் அன்னியச்சொல் திருவுளச் சீட்டைக் குறிப்பதாகும் (3:7; 9:24). "பூரிம்" என்பது எபிரேயப் பன்மைச் சொல்லின் முடிவைக் கொண்டு விழா நாட்களைக் குறிக்கும்.

அன்றைய யூத மதத்தில் 'பூரிம்' கொண்டாடப்பட்டதென நிச்சயமாகக் கூறமுடியாது. மேலும், எஸ்தர் பற்றிக் கூறும் பல கருத்துக்கள், அரச சபையிலுள்ள பழக்க வழக்கங்கள் மற்றும் பாரசீக அரச சபையின் பழக்க வழக்கங்களினின்று முற்றிலும் மாறுபட்டு உள்ளன. எனவே, 'பூரிம்' பாலஸ்தீனாவில் தான் தொடங்கியிருக்க வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், இஃது அவ்வளவு ஏற்கக்கூடிய கருத்தாகத் தென்படவில்லை.

பூரிம் விழாவில் கொண்டாடப்படும் நபர்கள் பாபிலோனியத் தெய்வங்களைப் போன்றுள்ளனர். மொர்தக்காய்-மார்துக்கு, எஸ்தர்-இஸ்தார் போன்ற தெய்வங்களின் வெற்றியைக் கொண்டாடுவதாக அமைந்தது. ஆனால், இதே சொல் 'காவலர்கள்' எனும் பொருள் தருவதால் அன்று பாரசீகத்தில் இறந்தவர்களின் ஆவிகளுக்கான 'அதார்' மாதத்தில் கொண்டாடப்படுவது இதனை ஒத்திருக்கிறது.

இவ்விழா மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெரும் சப்தத்துடனும் கொண்டாடப்பட்டது. அழுகை என்பது எங்கும் இருக்கக்கூடாது. ஒருவன் 'மொர்தக்காய் வாழ்க', 'ஆமான் அழிக' எனும் இரு சொற்களையும், பிரித்தறிய இயலாதநிலை வரும்வரை குடிக்கலாம் என்றபடி கொண்டாடினர். பின்னர், இத்தாலியின் கொண்டாடப்படும் தவக்காலத்தின் முன்வரும் களியாட்டங்களின் (Carnival) பண்புகள் பூரிம் பற்றிய நிகழ்ச்சிகளில் காணக்கிடக்கின்றன.

பூர் (PUR - சீட்டுப்போடுதல்)

காண்க: பூரிம்.

பூல் (BUL)

இஃது எபிரேய நாட்காட்டியில் எட்டாவது மாதத்தின் (அக்டோபர்-நவம்பர், ஐப்பசி) பழைய கானானியப் பெயராகும் (1 அர 6:38). பிற்காலத்தில் மார்கேசவன் என்றழைக்கப்பட்டது. இது பாபிலோனியப் பெயராகும். இம்மாதத்தில் கோதுமையும் வாற்கோதுமையும் விதைக்கப்பட்டன; வட கலிலேயாவில் ஒலிவப்பழங்கள் அறுவடை செய்யப்பட்டன.

பூல் (PUL - ஆண்டவர்)

மூன்றாம் திகிலத்பிலேசர் (கி.மு. 745-727) இப்பெயரின் கீழ்தான் பாபிலோனியாவை ஆண்டான் (2 அர 15:19; 1 நாள் 5:26). இந்த அசீரியப் பெயரின் பொருள் என்னவென்பது தெளிவாக இல்லை. இவனது மகன் ஐந்தாம் சல்மனேசர் உலுலாய் எனும் பெயரில் பாபிலோனியாவை ஆண்டான். இவன் ELULU எனும் மாதத்தில் பிறந்ததால் இப்பெயரில் அழைக்கப்பட்டான். ஆனால், 'பூல்' என எந்தப் பெயரும் எந்த நாளேட்டிலும் குறிப்பிடப்படவில்லை. பாபிலோனிய அரசர்களின் பெயர்ப்பட்டியலில் மட்டுமே இப்பெயர் காணப்படுகிறது.

பூவா (PUVAH)

இவர் இசக்காரின் இரண்டாவது மகன் ஆவார் (ஆதி 46:13). இவர் யாக்கோபுடன் எகிப்துக்குச் சென்று அங்கு ஒரு குடும்பத்தின் தலைவரானார். ஆதியாகமம், எண்ணாகமம், முதலாம் நாளாகமம் ஆகியவற்றில் இவர் தோலாவின் சகோதரராகக் குறிப்பிடப்படுகிறார் (ஆதி 46:13; எண் 26:23; 1 நாள் 7:1). நீதிபதிகள் ஆகமத்திலோ தோலாவின் தந்தையெனக் குறிப்பிடப்படுகிறார் (நீதி 10:1). இவர் பூனியர்களின் குலமூதாதையர் ஆவார் (எண் 26:23). 1 நாள் 7:1-இல் இவர் பூகா (3) என்றழைக்கப்படுகிறார்.

பூற்றியேல் (PUTIEL - இறைவனால் அளிக்கப்பட்டவர்/அருளப்பட்டவர்)

இவர் ஆரோனின் மகனான எலயாசரின் மாமனாரும், பினகாசின் தாத்தாவும் ஆவார் (யாத் 6:25). லேவியர் கோத்திரத்திலுள்ள மற்றப் பெய்களைப்போல், இதன் ஒரு பகுதி எகிப்தியச் சொல்லினின்று பெறப்பட்டதாகும்.

பூற்று (PUT)

நாடுகளின் அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒரு புவியியல் பெயரே இது. லிபியாவின் ஒரு பகுதியாகிய இது, காமின் புதல்வராகிய 'பூற்றைக்' குறிப்பதாகவும் உள்ளது. பூற்றின் சகோதரர் கூசு ஆவார் (ஆதி 10:6; 1 நாள் 1:8). இஃது ஆப்பிரிக்காவிலுள்ள லிபியாவாக இருக்கலாம்.

தீர் நாட்டிற்கு எதிரான இறைவாக்கில் இப்பெயர் பாரசீகத்துடனும் இணைத்துப் பேசப்படுகிறது (எசே 27:10). எகிப்துக்கு எதிரான இறைவாக்கில் எத்தியோப்பியா, பூற்று, லூது, அராபியா ஆகியோர் எகிப்துக்கு எதிராக உள்ளார்கள் எனக் கூறப்படுகிறது (எசே 30:5). மேலும், கோகுக்கு எதிராகப் பாரசீகர், கூசு, பூற்று ஆகியோர் துணை புரிவோராகக் காட்டப்படுகின்றனர் (எசே 38:5). எரேமியா பூற்றின் வீரர்கள் எத்தியோப்பியர்கள் போன்று கேடயம் வைத்துச் சண்டைபுரிவதில் வல்லவர்கள் என்கிறார் (எரே 46:9). இவற்றிலிருந்து பூற்று- எத்தியோப்பியா, எகிப்து, லூது ஆகியவற்றுடன் அமைந்த ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

பூனா (BUNAH - அறிவு)

யூதா கோத்திரத்தைச் சேர்ந்த எரகுமவேலின் மகன் (1 நாள் 2:25).

பூனி (BUNNI - பொன்னி)

1. அசபியாவின் தந்தையான ஒரு லேவியர். செமாயாவின் முன்னோர் (நெகே 11:15); அனேகமாக 2-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

2. எஸ்ரா சட்டத்தை அனைவருக்கும் வாசித்துப்

காட்டிய பொழுது, அதைக் கேட்கச் சென்றிருந்த, அடிமைத் தளையிலிருந்து நாடு திரும்பிய ஒரு லேவியர் (நெகே 9:4).

3. நெகேமியாவின் தலைமையின்கீழ்ப் புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மக்களின் ஒரு தலைவர் (நெகே 10:15).

பூனியர் (PUNITES)

இசக்காருடைய புதல்வர்களில் ஒருவனான புவாவுடைய வம்சத்தின் வழித்தோன்றியவர்கட்கு இடப்பட்ட பெயர் இதுவே (எண் 26:23). கையெழுத்துப் பிரதிகளின்படி பார்க்கும்போது இவர்கள் 'பூவாவியர்' அல்லது பூவியர் என்றே அழைக்கப்படவேண்டும்.

பூனை (CAT)

வீட்டில் வாழும், இறைச்சி உண்ணும், பால்கொடுக்கும் ஒரு விலங்கு. இது பற்றி பாரூ 6:21-இல் மட்டும் ஒரு குறிப்பு உள்ளது. அதில் புறவினத்தாரின் தெய்வச் சிலைகளின் உடல்மீதும் தலைமீதும் வௌவால்களும், குருவிகளும், பூனைகளும் உட்கார்கின்றன. இதை இச்சிலை உணர்வதில்லை. இச்சிலைகள் வெறும் சடப்பொருள்களே. இதைத்தவிர, பூனை பற்றிய எந்தக் குறிப்பும் விவிலியம் முழுவதிலுமே காணப்படவில்லை. இதிலிருந்து விவிலிய காலத்து மேற்காசியாவில் பூனை அதிகமாகக் காணப்படவில்லை என்பது தெரிகிறது. பூனை முதலில் எகிப்தில் வீட்டு விலங்கு ஆகியதாகத் தெரிகிறது. அங்குச் சமய வழிபாட்டிலும் இடம்பெற்றது. இதுவே எகிப்தைச் சேராத நாடுகளில், பூனை ஏற்றுக் கொள்ளப்படாததற்குக் காரணமாய் இருக்கலாம்.

பூனோன் (PUNON - இருள்)

மோவாபின் சமவெளிக்குள் நுழையுமுன் சல்மோனாவுக்கும் ஓபோத்துக்கும் இடையில் இஸ்ராயேலர் தங்கிய இடமாகும் (எண் 33:42-43). ஏதோமில் உலோகத்தாதுக்களை வெட்டி எடுக்கும் ஒரு முக்கியமான இடமான இஃது ஏதோமின் தலைவர்ளுள் ஒருவரின் சொந்த ஊராகவும் இருக்கவேண்டும் (ஆதி 36:41). இது, பெய்னான் என்ற இன்றைய பெயரில் அரபாவுக்குக் கிழக்கே அமைந்த நீர் வளமிக்க பகுதியாகும். தாமிரம் வெட்டி எடுக்கப்படும் கிர்பெத் ஏன்-நகாசு, கிர்பெத் நெகிபு அசைமர் எனும் இரு முக்கிய இடங்களிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். இது வாடி ஏல்-கெவேர், வாடி எஸ்-செகேர் எனும் இரு ஓடைகள் சேருமிடத்தில் அமைந்துள்ளது. ஓடைகளின் கரையில் பல கட்டடங்களையும் தாமிரத்தை மற்ற உலோகங்களிலிருந்து பிரித்தெடுக்கும் தொழில்களையும் கொண்டு விளங்குகிறது.

இந்த இடம் பெத்திராவுக்கு வடக்கில் 35 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த இடத்தில்தான் மோசே வெண்கலப்பாம்பு உருவத்தைச் செய்திருக்க வேண்டும் (எண் 21:4-10). பினோன் என்ற இனப்பெயர் (ஆதி 36:41; 1 நாள் 1:52) இந்த இடத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

சுமார் கி.மு. 2000-இலிருந்தே இவ்விடத்தில் தாமிரம் பிற தாதுப்பொருட்களினின்று பிரித்தெடுக்கப்பட்டு, சுத்தமான தாமிர உலோகம் எகிப்துக்கு அனுப்பப்பட்டது. கி.மு. பதிமூன்றாம் நூற்றாண்டில் இஸ்ராயேலர்கள் இவ்விடத்தில் தங்கியபோது சுமார் 500 ஆண்டளவாய் யாருமே வாழாத இடமாக இருந்தது (எண் 33:43). அதன் பின்னரே தாமிரத்தைப் பிரித்தெடுக்கும் தொழில் நபத்தேயர்களாலும், உரோமையர்களாலும், பைசாந்தியர்களாலும், அரேபியர்களாலும் தொடரப்பட்டு, சிறப்புற்று விளங்கியது. கிறிஸ்தவர்கள், பூனோனில் இத்தாமிரத்தைப் பிரித்தெடுக்கும் சுரங்கங்களில் வேலை செய்யுமாறு வற்புறுத்தப்பட்டார்கள் என யுசேபியு கூறுகிறார். பைசாந்தியர் காலத்தில் ஒரு பேராலயமும், துறவியர் இல்லமும் கட்டப்பட்டன. துறவியர் இல்லத்தின் சிதைவுகளில், ஆயர் தியோடோரின் (கி.பி. 587-88) பெயரைக் கொண்ட கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பெ

பெகமோத்து (BEHEMOTH – ஊமை விலங்கு, நீர்யானை)

இச்சொல் நீர் யானையை அல்லது சதுப்பு நிலங்களில் வாழ்கின்ற யானைகயைக் குறிக்க பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட கற்பனைப்பெயராகும் (யோபு 40:15-24). இது நிலப்பகுதியில் வாழ்கின்ற லேவியத்தானின் இணையாகிய ஆண்விலங்காகும் என்று வெளிப்பாட்டு மற்றும் போலி நூல்களில் குறிப்பிடப்படுகிறது. ஏதேனுக்குக் கிழக்கேயுள்ள தென்தெயின் பாலைவனத்தில் பெகமோத்து இருக்கிறதாக ஏயோக்கு நூலில் குறிக்கப்படுகிறது. ஆனால், வேறுநூல்கள் ‘ஆயிரம் மலைகள் உள்ள இடத்தில்தான்’ பெகமோத்து இருப்பதாகக் குறிப்பிடுகின்றன. இது சங் 50-10-இன் கற்பனையான விளக்கமாகும். ராபிகளின் இலக்கியத்தில் ‘திறந்த வெளியில் அலைகின்ற எருது’ என்று இவ்விலங்கு அழைக்கப்படுகின்றது.

இந்தக் காலக்கட்டத்தின் இறுதியில், லிவியத்தானைப் போலவே பெகமோத்தும் இறைவனோடு போராடி, தோல்வியைச் சந்திக்கும். நேர்மையானவர்களுக்கு இவ்விலங்கின் உடல் உணவாக அளிக்கப்படும். இது சங் 74:14-இன் கற்பனையான விளக்கமாகும். லிவியத்தானைப் போலவே, பெகமோத்து என்ற விலங்கும் இறைவனால் ஐந்தாம் நாள் படைக்கப்பட்ட மிகவும் பயங்கரமான கடல்வாழ் விலங்குகளில் ஒன்றாகக் கருதப்பட்டது (ஆதி 1:21).

பெகலியா (BEALIAH – யாவே தலைவர் ஆவார்)

தாவீது கீசின் மகன் சவுலிடமிருந்து தப்பித் தலைமறைவாய்ச் சிக்லாகு என்னுமிடத்தில் இருந்தபோது, ஆற்றல் மிகக்கொண்டவரும், திறமைமிக்கவருமான படைவீரர் சிலர் அவரிடம் வந்தனர். அவர்களின் பென்யமின் குலத்தவனான ஒருவன் பெயர் பெகலியா (1 நாள் 12:5).

பெகலியாதா (BEELIADA – பாகால் அறிவார்)

இவர் எருசலேமில் பிறந்த தாவீதினுடைய புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 14:7; காண்க. 2 சாமு :16). “பாகால்” என்ற சொல்லைப் பயன்படுத்த விருப்பமில்லாமலிருக்க வேண்டுமென்பதற்காக, பெகலியாதா என்ற பெயரானது “எலியாதா” (இறைவன் அறிவார்) என்று திரித்து அமைக்கப்பட்டிருக்கிறது (2 சாமு 5:16; 1 நாள் 3:8).

பெகலோத்து (BEALOTH – தலைவி)

1. யூதாவின் தென்கோடியில் இருக்கும் நகர்களில் ஒன்றில் பெயர் (யோசு 15:24). இது ‘பாகலாத்-பேயர்’ ஆக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

2. சாலமோனின் அதிகாரத்தின்கீழ் இருந்த 11-ஆம் நிர்வாகப் பிரிவில் இருந்த ஓர் ஊர் (1 அர 4:16). ஆசேர் இனத்தைச் சேர்ந்தது. அதன் சரியான இருப்பிடம் இன்னும் அறியப்படாமலே உள்ளது.

பெகா (BEKA – பாதி)

இஃது ஒரு செக்கேலில் பாதி எடையுடையது அல்லது 5.712 கிராம் எடையுடையது; வயது வந்த ஒவ்வொரு இஸ்ராயேல் ஆணும் திருத்தலத்துக்குக் கொடுக்க வேண்டியதாகும் (யாத் 38:26).

பெகோர் (BEOR – எரிந்து கொண்டிருக்கிற)

1. இவர் பேலாவினுடைய தந்தை ஆவார். பேலா என்பவர், இஸ்ராயேல் மக்களை எந்த அரசனும் அரசாள்வதற்குமுன், ஏதோம் நாட்டின் முதல் அரசராவார் (ஆதி 36:32; 1 நாள் 1:43).

2. இவர் இஸ்ராயேல் மக்களைச் சபிக்குமாறு பாலாக்கினால் அழைத்து வரப்பட்ட குறிசொல்பவராகிய பிலயாமின் தந்தை ஆவார் (எண் 22:5; 24:3.15; 31:8; உப 23:4; யோசு 13:22; 24:9; மீக் 6:5; 2 பேதுரு 2:15). எபிரேய மொழியில்– பிலயாம், பேலா என்ற பெயர்கள் ஒரே மாதிரி இருப்பதால் ஒரே ஆளைக் குறிக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

பெகோன் (BEON)

இது மோவாபிற்கு வடக்கேயுள்ள ஓர் ஊராகும். ரூபன், காது கோத்திரத்தார், பெகோன் என்ற ஊரினைத் தங்களுக்கு உடைமையாகத் தர வேண்டும் என்று மோசேயிடம் வேண்டினர் (எண் 32:3). ஒருவேளை இதுவும் பாகால்-மெகோனும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

பெக்ககியா (PEKAHIAH – யாவே கண் திறந்தார்)

இவர் கி.மு. 738 முதல் 737 வரை இஸ்ராயேலின் மன்னராக இருந்தார். மெனகேமின் மகனான இவர் தன் தந்தைக்குப் பிறகு அரசன் ஆனார். இவர் பெக்காவால் கொலை செய்யப்பட்டார். மெனகேமின் ஆட்சிக் காலத்திலே இருந்த குழப்பமிகுந்த சூழ்நிலை, இவர் மகன் பெக்ககியா காலத்திலும் தொடர்ந்தது. இச்சமயத்திலே, அசீரியர்களைச் சார்ந்தோ, அவர்களை எதிர்த்தோ இரு கட்சிகள் இஸ்ராயேல் நாட்டில் ஆட்சியைப் பிடிக்கப் போட்டியிட்டன. பெக்ககியா தம் தந்தை வழியில் அசீரியர்களுக்குக்கீழ் ஆட்சி செய்தார்.

இரமலியாவின் மகனும், படைத்தலைவனுமான பெக்கா பெக்ககியாவுக்கு எதிராகச் சதிசெய்து அவரைக் கொன்றார். இவரோடு கிலயாதைச் சேர்ந்த ஐம்பது பேர் இந்தக் கொலையில் பங்கெடுத்தனர். எனவே, இந்தப் பெக்கா கிலயாதைச் சேர்ந்தவராகவும், கிழக்கு யோர்தானிலிருந்து வந்தவராகவும் இருக்க வேண்டும். மேலம், இவர் சீரியா அரசனின் உதவியைப் பெற்றிருக்கவேண்டும். ஏனெனில், இவருடைய காலத்திலே சீரியாவும், இஸ்ராயேலும் ஒரே மனதுடன் செயல்பட்டனர் (2 அர 15:37; 16:5 தொ; எசா 7:1 தொ).

பெக்கரியர் (BECHERITE)

எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்த பெக்கரின் வழித்தோன்றல்கள் ஆவர் (எண் 26:35).

பெக்கர் (BECHER – இளம் ஒட்டகம்)

1. பென்யமினின் இரண்டாம் மகன் (ஆதி 46:21; 1 நாள் 7:6.8).

1 நாள் 7:6-12-இல் காணப்படும் பென்யமின் புதல்வர்களின் மரபு முறைப்பட்டியல் மூலத்தில் செபுலோனைச் சேர்ந்ததாக இருந்திருக்க வேண்டும்.

2. மோசேயின் இரண்டாவது கணக்கெடுப்பில் இவர் எப்பிராயிமைச் சேர்ந்தவர் (எண் 26:35). இவர் "பெக்கரியர் குடும்பம்" என்ற குலப்பெயர் முதல்வர் ஆவார். இப்பெயர் 1 நாள் 7:20-இல் பெரேது என்றுள்ளது. ஒருவேளை இதுதான் மூலவடிவமாக இருக்கலாம்.

பெக்கா (PEKAH - யாவே கண் திறந்தார்)

இரமலியாவின் மகனான பெக்கா கி.மு. 737-முதல் 732-வரை இஸ்ராயேலின் அரசனாக இருந்தார். பெக்ககியாவின் படைத்தலைவனாக இருந்த பெக்கா, பெக்ககியாவைக் கொன்றுவிட்டு அவருக்குப்பின் அரியணை ஏறினார். கி.மு. 734-இல் அசீரிய அரசன் மூன்றாம் திகிலத்-பிலேசர் இஸ்ராயேலின்மீது படையெடுத்துவந்து கலிலேயா, கிலயாது போன்ற பகுதிகளைப் பிடித்தார். இதற்கிடையிலே ஓசேயா, பெக்காவுக்கு எதிராகச் சதிசெய்து அவனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினார் (2 அர 15:25-31).

மேலும், எசா 7:1-9-இன்படி பெக்கா, சீரியாவின் அரசன் ரெத்சின் என்பவனுடன் சேர்ந்து கொண்டு, யூதாவின்மேல் படையெடுத்தான். இப்படையெடுப்பு அசீரியர்கள் படையெடுப்பதற்குமுன், அவர்களுக்கு எதிராய் யூதா மன்னன் ஆகாசைக் கூட்டுச் சேர்ப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சியாகும். திகிலத் – பிலேசர் மன்னனின் குறிப்புகளின்படி இந்தப் பெக்கா தோற்கடிக்கப்பட்டு, ஓசேயா திகிலத்-பிலேசரால் இஸ்ராயேலின் மன்னனாக நியமிக்கப்பட்டான். செக்கேமில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முத்திரை, பெக்கா என்ற பெயரைத் தாங்கியுள்ளது. ஆனால்,

இஃது அரசன் பெக்காவைக் குறிக்கிறது என்று உறுதியாகக் கூறமுடியாது. இஸ்ராயேல் அரசின் கடைசிக் காலக்கட்டத்திலே இவ்வரசின் மன்னர்கள் அசீரியர்களைச் சார்ந்தோ, அவர்களை எதிர்த்தோ ஆட்சி செய்தனர். பெக்கா இந்த இரண்டாம் வகை மன்னர்களைச் சார்ந்தவர். இவர் அசீரியர்களை எதிர்த்து ஆட்சி நடத்துவதை விரும்பினார்.

பெக்கோது (PEKOD – சந்தித்தல், தண்டனை)

இது கீழ்த்திகிரீசு ஆற்றின் கிழக்குக் கரையிலே வாழ்ந்த ஒரு சிறு அரமேயன் இனமாகும். இந்த இடம் தற்கால குத்–ஏல்–அமர்னாவுக்கும், கெர்கா கூடுமிடத்திற்கும் இடையில் அமைந்திருந்தது. இம்மக்கள் அசீரியர்களால் குறுகிய காலத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருந்ததாக மூன்றாம் திகிலத்–பிலேசர் (கி.மு. 746-727), 2-ஆம் சார்கோன் (722-705), சனகெரிபு (705-681) ஆகிய அசீரிய அரசர்களின் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

பெக்கோது மக்கள் கிராமத்தலைவர்களால் (Sheiks) நிர்வகிக்கப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும், விவசாயத்தையே நம்பி வாழ்ந்தனர். இரண்டாம் சார்கோன் மன்னன் அவர்கள் பயிரிடுவதற்கு உதவிய தூப்லியா என்ற ஆற்றைத் தடுத்து நிறுத்தி அவர்களைச் சரணடையச்செய்தார். இம்மக்கள் குதிரைகளையும், கால் நடைகளையும் கப்பமாகத் தந்தனர். இரண்டாம் சார்கோன் மன்னனின் வரலாற்றுக் குறிப்பு, இம்மக்களின் நான்கு கிராமத்தலைவர்களின் பெயர்களையும், அந்தக் கிராமங்களின் பெயர்களையும் தருகிறது.

மேலும், எரேமியாவின் பாபிலோனுக்கு எதிரான இறைவாக்கிலே பெக்கோது குறிப்பிடப்பட்டுள்ளது (எரே 50:21).

எசேக்கியேல் இறைவாக்கினர், எருசலேம்மேல் காதல் கொண்டு, பின் அதற்கு எதிராய்க் கிளம்புவோர் பட்டியலில் பெக்கோதுவையும் சேர்த்துள்ளார் (எசே 23:23).

பெக்கோரத்து (BECORATH – முதல் பிறப்பு)

இவர் சவுல் அரசனின் மூதாதையர். அப்பியாவின் மகனும் செரோரின் தந்தையுமாவார் (1 சாமு 9:1).

பெசாய் (BESAI – தாழ்த்தப்பட்ட)

இவர் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலின் தலைமையில் திரும்பி வந்தபின் ஆலயப்பணியாளர்களாக இருந்தவர்களில் ஒரு குடும்பத்தின் தலைவராவார் (எஸ் 2:49; நெகே 7:52).

பெசித்தா (PESHITTA – எளிமையான)

சீரிய மொழியில், மொழி பெயர்க்கப்பட்ட விவிலியத்தின் ஒருவகை மொழி பெயர்ப்புக்குத்தான் எளிமை விவிலியம் என்று பெயர் கொடுத்து அழைக்கிறார்கள். இதைச் சீரிய மொழியில் பெசித்தா என்றழைக்கிறார்கள். சீரிய மொழியில்– பெசித்தா என்றால் எளிமை என்பது பொருள். இம்மொழிபெயர்ப்பில் பல குறிப்புகளும், மேற்கோள்களும், உரை விளக்கங்களும் கொடுக்காமல் எளிமையாக அமைத்திருக்கிறார்கள்.

பெசேக்கு (BEZEK – மின்னல்)

1. இஸ்ராயேலின் மக்கள் மூன்று இலட்சம் பேரும், யூதாவின் புதல்வர்கள் முப்பதாயிரம் பேரும் இருந்ததைச் சவுல் பெசேக்கில்தான் கணக்கிட்டார்; அதன்பின் அம்மோனியர்களை முறியடித்தார். பெசேக்குக்கும், யாபேசுக்கும் இடைப்பட்ட தூரம் ஓர் இரவில் கடக்கக்கூடியதே (1 சாமு 11:8,9). இது நப்லூசுக்கும் (செக்கேம்), பெயிசானுக்கும் (பெத்சான்) இடையிலுள்ள இக்காலக் கிர்பெத் இப்சிக் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இது வாடி ஏல்–யாபிஸ் யோர்தானில் புகும் இடத்திற்கு எதிராக உள்ள மலைகளில் செக்கேமுக்கு வடகிழக்கில் 21 கி.மீ. தொலைவில் உள்ளது.

2. யூதா மற்றும் சீமோன் குலத்தவர்கள் இந்த நகரில்தான் கானானியரையும்,

பெரிசியர்களையும் தோற்கடித்தனர் (நீதி 1:4-5). பெசேக்கிலிருந்து அதோனி பெசக்கு ஓடிப்போக, அவனை விரட்டிப் பிடித்து எருசலேமுக்குக் கொணர்ந்தான். அவன் அங்கே இறந்தான். இந்த இடம் கெசேரின் வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத்-பெஸ்கா என்று அடையாளம் காட்டப்படுகிறது.

பெசோதியா (BESODEIAH - யாவேயின் ஆலோசனைக் குழுவில் உள்ளவர்.)

பெசோதியா என்பவர் நெகேமியாவின் காலத்தில் எருசலேம் மதிலைக் கட்டுவதற்கு உதவியாக இருந்த மெசுல்லாமின் தந்தை ஆவார் (நெகே 3:6).

பெசோர் ஓடை (BESOR, THE BROOK - குளிர்ந்த ஓடை

இது சிக்லாகுவைப் பிடித்துத் தீக்கிரையாக்கிய அமலேக்கியர்களை முறியடிக்க படையெடுத்துச் செல்லும் பொழுது தாவீது கடந்து சென்ற ஓடையின் பெயர் (1 சாமு 30:9-10.12). பேசோர் ஓடையென்பது சிக்லாகுவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள மிகப்பெரிய வறண்ட காட்டாறாகிய வாடி காசே-செல்லாலே என்னும் காட்டாற்றை அனேகமாகக் குறிக்கலாம். இந்த ஆறு காசாவுக்குத் தெற்கில் மத்திய தரைக்கடலில் கலக்கிறது.

பெஸ்து, பொர்க்கியு (FESTUS, PORCIUS)

இவர் யூதேயாவின் ஆளுநராக 60-இலிருந்து 62 வரை இருந்தார். 'புதிய ஏற்பாடு', 'யோசிப்பசு' ஆகிய இரண்டு மூலங்களிலிருந்து இவரை அறியமுடியும். இவரது காலவரிசைமுறை பற்றிய பிரச்சினைகள் பல ஆண்டுகளாக வாக்குவாதத்திற்குட்பட்டவைகளாக இருக்கின்றன.

1. வரலாற்று ஆசிரியர் யோசிப்பசின்படி, பெலிக்சுக்குப் பின்னும் அல்பினுக்கு முன்னும் பெஸ்து ஆளுநராக இருந்தார்.

பெலிக்ஸ் ஆளுநராக இருந்தபோது செசரியாவில் யூதர்களுக்கும், புற இனத்தவர்க்கு மிடையே பெரிய கலகம் மூண்டது. புறவினத்தார் யூதர்களுக்கு நகர ஆட்சியில் பங்குகொடுக்க மறுத்தனர். யூதர்கள் நீரோவிடம் புகார் செய்தது வீணாகியது. பிறகு நிலைமை இன்னும் மோசமாக மாறியது.

உரோமைக்கும் யூதர்களுக்கும் இடையேயான, வளர்ந்து வந்த மோதலைச் சரிசெய்ய உண்மையான பல முயற்சிகளை மேற்கொண்டவர் இவர்தான்.

கலகம் செய்த "சிக்காரிகளையும்" அவர்கள் தலைவனையும் அழித்தொழித்தார் பெஸ்து (காண்க. அ.ப. 21:38).

இரண்டாம் அகிரிப்பாவிற்கும், யூதர்களுக்குமிடையே ஆலயத்தை மறைக்க மதில் சுவர் எழுப்புவதில் மோதல் ஏற்பட்டது. பெஸ்து அகிரிப்பாவுக்கு ஆதரவு தந்தார். ஆனால், யூதர்கள் உரோமைக்குப் புகார் எழுதி மறுப்பு உத்தரவு வாங்கிவிட்டார்கள். இந்த உத்தரவு அறிவிக்கப்படுமுன்பே பெஸ்து இறந்து விட்டதாக, பெரும்பாலான ஆசிரியர்கள் நம்புகிறார்கள்.

2. **அப்போஸ்தலர் பணியில்:** பெஸ்து பெலிக்சுக்குப் பிறகு ஆளுநராக வந்ததையும், பெஸ்துவின் ஆட்சியில் ஏற்கெனவே இரண்டு வருடமாகப் பவுல் சிறைபட்டிருந்ததைப் பற்றியும் அ.ப.24:27 குறிப்பிடுகிறது. அ.ப. 25-26 பெஸ்து எருசலேமிற்கு வந்ததையும், பவுலுக்கு எதிராகச் சாட்சிசொல்ல யூத அதிகாரிகளைச் செசரியாவுக்கு அழைத்ததையும் எடுத்துக் கூறுகிறது. சீசருக்குப் பவுல் புகார் செய்தபிறகு உரோமைக்குச் செல்ல இவன் அனுமதி வழங்கினான்.

2-ஆம் அகிரிப்பாவும் அவனது சகோதரி பெர்னிக்கியும் செசரியாவுக்கு வந்தபோது, பெஸ்து பவுலின் வழக்கை அரசன்முன் வைத்தார். ஆகவே, அகிரிப்பா பவுலைப் பார்க்கவிரும்பினார். அடுத்தநாள் பவுல் கொண்டு வரப்பட்டுப் பேச அனுமதிக்கப்பட்டார்.

பவுலின் உரைக்குப்பிறகு அகிரிப்பா, பவுல் சீசரிடம் புகார் செய்திருக்க வில்லையென்றால், விடுவிக்கப்பட்டிருக்கலாம் என்று பெஸ்துவிடம் கூறினார் (25:24-27; 26:31.32).

யோசிப்பசு பவுலைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. ஆகையால், இந்த நிகழ்ச்சி யோசிப்பசின் நூலில் காணப்படவில்லை.

3. **காலவரிசை முறை பிரச்சனை:** பெஸ்து ஆளுநராகப் பதவியேற்றது, புதிய ஏற்பாட்டுக் காலக்கணிப்பை நிறுவும் முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

நீரோ ஆட்சியின் இரண்டாவது வருடத்தில் பெஸ்து ஆளுநராக நியமிக்கப்பட்டாரென்றும் (56), ஆறு அல்லது ஏழாவது ஆண்டில் (61 - 62) அல்பினு ஆளுநராக நியமிக்கப்பட்டாரென்றும் யுசேபியு அறிவிக்கின்றார். இது பெஸ்துவின் காலம் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் என்று கூறுகின்றது. ஆனால், யோசிப்பசின் கணிப்பின்படி, வெகுசொற்ப காலம்தான் பெஸ்து ஆளுநராக இருந்தார். அல்பினு 62-இல் ஆளுநராக நியமிக்கப்பட்டதை யோசிப்பசு உறுதி செய்கின்றார். இது நிச்சயமானால் பெஸ்து 2 வருட காலமே பணி செய்தார் என்றால், பெஸ்து 56-இல் ஆளுநராக நியமிக்கப்பட்டார் என்று யுசேபியுவும் எரோனிமுவும் கூறுவது தவறாகிவிடும். இக்கால ஆய்வு, பெஸ்து பதவியேற்பை 60-இல் (அல்லது 59-இல்) குறிக்கிறது.

பெட்சலேல் (BEZALEL - இறைவனின் நிழலில் அல்லது பாதுகாப்பில்)

1. இவர் யூதா இனத்தைச் சேர்ந்த கூரின் மகனான ஊரியின் மகன். காலேபின் வழிவந்தவர். இவரும் ஒகோலியாபுவும் திருஉறைவிடத்தையும், அதன் பொருட்களையும் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (யாத் 31:1-11; 35:30-36:3; 37:1; 38:22; 1 நாள் 2:20; 2 நாள் 1:15). இதற்காக "ஞானம், அறிவுக்கூர்மை, அனுபவம், தொழில்திறமை அனைத்தும் உண்டாகுமாறு இறை ஆவியால்" இவர் நிரப்பப்பட்டார் (யாத் 31:3).

2. பகத்-மோவாபுவின் புதல்வர்களில் ஒருவர். இவர் எஸ்ராவின் தூண்டுதலின் பேரில் தான் மனைவியாகக் கொண்ட புறவினப் பெண்களை விலக்கி வைத்தவர் (எஸ் 10:30).

பெட்சேர் (BEZER - அணுகமுடியாத, கோட்டை) - ஆள்

ஆசோர் குலத்தின் சோபகுவின் மகன் (1 நாள் 7:37).

பெட்சேர் (BEZER - அணுகமுடியாத, கோட்டை) - இடம்

இஃது ரூபனுக்கு உரிய அடைக்கல நகரம் (உப 4:43; யோசு 20:8). மெராரிக்கு உரிய ஒரு லேவியர் நகரம் (யோசு 21:36; 1 நாள் 6:78). இது யோர்தானுக்கு அப்பால் இருந்தது. இதுவும் பொட்சராவும் (எரே 48:24) ஒரே இடத்தைக் குறிக்கலாம். இதை மோவாபுவின் மேசா மீண்டும் கட்டினார். இது மெதபாவுக்கு வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் உம் ஏல்-அமாது என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெட்டி (CHEST)

எருசலேம் ஆலயத்தில் நுழைவாயிலின் வலப்பக்கமாக, பீடத்தருகில் வைக்கப்பட்டிருந்த பெட்டியையும் (2 அர 12:9), அரசன் யோசியாவின் காலத்தில் ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக மக்கள் வழங்கிய அர்ப்பணப் பொருட்களைச் சேமிக்க ஆலய வாயிலுக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த பெட்டியையும் (2 நாள் 24:8) இச்சொல் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில், ஆலயக் கருவூலத்தில் இருந்த காணிக்கைப் பெட்டியையும் குறித்தது (மாற் 12:41-43; லூக் 21:1-4; மத் 27:6; யோவா 8:20). இஃது ஒருவேளை பெண்கள் முற்றத்தில் இருந்திருக்கலாம். கருவூலத்தில் கொம்பு அமைப்புடைய பதிமூன்று பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஏழு பெட்டிகள் தனித்தேவைகளுக்காகக் குறிக்கப்பட்டவையாகும்.

பெட்டைக்கோழி (HEN)

வீட்டில் வளர்க்கப்படும் கோழிகளும் பலவகையான பெண் பறவைகளும் இப்பெயரால் அழைக்கப்படுகின்றன. பொதுவாக, எந்தப் பறவையிலும் பெண் இனத்தைக் குறிப்பிடலாம். இறைவன் இஸ்ராயேலரோடு கொண்டிருந்த உறவு இந்தப் பறவை உருவகத்தால் விவரிக்கப்படுகிறது (உப 32:11; சங் 17:8; 37:7; எசா 31:5). "கோழி தன்னுடைய குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் கூட்டிச் சேர்ப்பதுபோல, நானும் உன் மக்களை அரவணைத்துக் கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன். உனக்கு விருப்பம் இல்லையே!" என்று இயேசு எருசலேமைப் பார்த்துப் புலம்புகிறார் (மத் 23:37; லூக் 13:34).

பெண் (WOMAN)

I. பிற பண்டைக்கால மேற்காசிய நாடுகளின் சட்ட விதிகளை போலவே இஸ்ராயேலின் சட்ட விதிகளிலும் பெண்ணின் நிலையானது இன்னும் கீழானதாகவே இருந்தது. தாயாகச் செயல்படும் அளவிற்கே அவளது ஆதிக்கம் வரையறை செய்யப்பட்டிருந்தது. ஆனால், இஸ்ராயேலானது இரு பாலருடைய அடிப்படைச் சமத்துவத்தை வலியுறுத்திய படைத்தலைவராகிய இறைவனில் தங்களுடைய விசுவாசத்தினுடைய காரணத்தினால் முனைப்பாகயிருக்கிறது. ஆயினும், பெண்ணின் உண்மையான நிலையானது கிறிஸ்துவின் வருகையினாலேயே வெளிப்படுத்தப்பட்டது. ஏனெனில், படைப்பின் வரிசைப்படி பெண்ணானவள் மனைவியாகவும், தாயாகவும் உருவாவதில் நிறைவைக் கண்டடைந்தால், இப்புதிய படைப்பின் வரிசைப்படி கன்னிமையின் மூலமாகவும் அவள் இப்போது நிறைவைக் கண்டடையலாம்.

II. பழைய ஏற்பாடு: தாரமும் தாயும்:

1. மண்ணக இன்பவனம்: பாலினங்கள் மனித இயல்பினுடைய அடிப்படை உண்மை. மனிதன் "ஆணும் பெண்ணுமாக"ப் படைக்கப்பட்டான் (ஆதி 1:27). குருக்கள் பாரம்பரியத் தொகுப்பாளரின் இந்தச் சுருக்கமான கருத்தானது யாவே பாரம்பரிய விவரிப்பை உள்ளடக்கியுள்ளது. பின்னதில், மனிதனோடு தொடர்புடைய பெண்ணின் இரட்டை நிலையானது விளக்கப்படுகிறது.

ஆதாமினுடைய நெருக்கமான பகுதியினின்று பெண் எடுக்கப்பட்டாள். எனவே, மற்ற விலங்குகளைப் போலன்றி, ஆதாமைப் போன்ற அதே இயல்பை அவள் கொண்டுள்ளாள். இறைவன் அவனுக்கு முன்பு நிறுத்துகின்ற படைப்பின் முன்னிலையில், மனிதனின் நிலை இதுவே. இது மட்டுமின்றி, "அவனையொத்த துணையை அவனுக்கு அளிக்கும்" (ஆதி 2:18) இறைத்திட்டத்திற்கும் ஆதாம் பதிலளிக்கிறார். தன்னையே அவளில் அவர் அடையாளம் காண்கிறார். அவளுக்குப் பெயரிடுவதின் மூலம், தனக்கும் ஒரு பெயரை அளித்துக் கொள்கிறார். அவள் முன்னிலையில் வெறும் ஆதாமாக மட்டுமின்றி அவர் ஆணாகவும் (இஸ்), அவள் பெண்ணாகவும் (இஸா) ஆகின்றனர். படைப்பின் திட்டத்தைப் பின்பற்றி, அவரைத் தனது துணைவராக ஏற்றுக் கொள்வதன்மூலம் பெண் மனிதனை முழுமைப்படுத்துகிறாள். அவர்களது வேறுபாட்டிலும் இந்த உறவானது முற்றிலும் சமமாக இருந்திருக்கவேண்டும். ஆனால், மனைவியை அவளது கணவனுக்குக் கீழ்படுத்தி, பாவம் இதனை நெறிபிறழச் செய்தது (3:16).

பெண் மனித சமூகத்திற்கு அதனுடைய தொடக்க வாழ்வை அளிப்பதோடு நில்லாமல், வாழ்வோர் அனைவருக்கும் தாயாகவும் இருக்கிறாள். எண்ணற்ற சமயங்கள் பெண்ணைத் தங்குதடையின்றி மண்ணுலகுடன் ஒப்பிடுகின்ற போது, விவிலியமானது அவளை வாழ்வுடன் அடையாளப்படுத்துகிறது. ஏவாள் என்னும் தன்னுடைய இயல்பான பெயரால் அவள் "உயிர் வாழ்பவளாகவும்" இருக்கிறாள் (3:20). பாவத்தின் காரணமாக, அவள் துன்பத்தின் வாயிலாக, வாழ்வை அளிக்கிறாள் என்றால் (3:16), இனத்தின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதன்

வாயிலாக மரணத்தின் மேலும் அவள் வெற்றி கொள்கிறாள். இந்த நம்பிக்கையில் தன்னை நிலைப்படுத்துவதற்கென, ஒருநாள் அவளது சந்ததியினர் தங்களது பரம்பரை எதிரியான பாம்பின் தலையை நசுக்குவார்களென அவள் அறிந்திருக்கிறாள் (3:15).

2. புனிதவரலாறு: இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நாளை எதிர்நோக்கிய நிலையில், பெண்ணின் பங்கானது ஒரு எல்லைக்கு உட்பட்டதாக உள்ளது. குடும்பத்தைப் பொருத்தவரையில், அவள் கல்வி கற்பிக்கின்ற பிள்ளைகளைப் பொருத்தமட்டிலும் அவளது உரிமைகள் கணவனுக்குச் சமமாக உள்ளதாகத் தோன்றுகிறது. ஆனால், சட்டமானது தகுதியில் அவளை இரண்டாவதாகக் கருதுகிறது. வழிபாட்டில் பெண் எந்த அதிகாரபூர்வமான பங்கையும் வகிப்பதில்லை. விழாக்களின்போது அவள் வெளிப்படையாக மகிழ்ச்சி ஆரவாரம் செய்யலாம் (யாத் 15:20-21; உப 12:12; நீதி 21:21; 2 சாமு 6). ஆனால், எந்தவிதக் குருத்துவப் பணியிலும் அவள் ஈடுபடுவதில்லை. ஆடவர் மட்டுமே திருப்பயணக் கடமைகளுக்கு உட்பட்டிருந்தனர் (யாத் 23:17). ஓய்வு நாளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டியவர்களின் அட்டவணையில்கூட மனைவி குறிப்பிடப்படவில்லை (20:10). வழிபாட்டிற்குப் புறம்பே, குறிப்பாக வாழ்விலே, அவளுக்கேயுரிய இடத்தைப் பாதுகாப்பதில் சட்டம் கவனமாக உள்ளது. அவளே இவ்வுலகில் வளமையான வாழ்வின் பிரசன்னமல்லவா (உப 25:5-10)? அவளுக்கேயுரிய வாழ்வின் பாணியில் மனிதன் அவளுக்கு மரியாதையளிக்கவேண்டும் (லேவி 20:18). மனிதன் தன்னை உட்படுத்தாத திருமணத்தில் பற்றுறுதியின் மாதிரியைக் கோருமளவிற்கு அவன் அவளுக்கு மரியாதை அளிக்கிறான்.

உடன்படிக்கை வரலாற்றின் காலத்தில் நன்மைக்காகவோ, தீமைக்காகவோ குறிப்பிட்ட பெண்கள் சிலர் முக்கியப் பங்குவகித்தனர். அன்னியப்பெண்கள் சாலமோனுடைய உள்ளத்தைத் தங்களுடைய தெய்வங்களை நோக்கித் திரும்பினர் (1 அர 11:1-8; காண். திருவுரை 7:26; சீரா 47:19). கணவனுடைய சமயம் மற்றும் ஒழுங்குகளின் மீது ஒரு பெண்ணின் வல்லமையை ஈசபேல் எடுத்துக்காட்டுகிறாள் (1 அர 18:13; 19:1-2; 21:25-26). தாய்மொழியில் சிறந்து விளங்கினாலும், "யூதாவின் மொழியைப் பேச முடியாத" பிள்ளைகளின் எடுத்துக்காட்டுகளும் அங்கு உள்ளன (நெகே 13:23-24). வழிபாட்டில் அதிகாரபூர்வமாகச் செயல்படுத்தாத சமய வாழ்வினைத் தான் விரும்பியவாறு தூண்டுவதாகப் பெண் தோன்றுகிறாள். ஆனால், இந்த எடுத்துக்காட்டுகளுக்கு முரண்பட்ட வகையில், இனப்பெருக்கத்திற்குப் போற்றுதற்குரிய ஆர்வம் காட்டுகின்ற மூதாதையரின் மனைவியரை நாம் காண்கிறோம். இந்த நாயகிகளில் சிலரைப் பற்றிக் கூறுவோம். வழிபாட்டிற்கான உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டாலும், ஆண்டவருடைய ஆவியானவர் பெண்கள் சிலரைப் பயன்படுத்தி, அவர்களை மாற்றி, ஆண்களிடம் செய்வது போல, அவர்களையும் இறைவாக்கினர்களாக்குகிறார். இவ்வாறு, ஆவியின் புகுதலுக்குப் பாலினம் ஒரு தடையன்று என்பதை அவர்கள் காட்டுகின்றனர். சான்றாக, மிரியாம் (யாத் 15:20-21), தெபோரா மற்றும் யாவேல் (நீதி 4:4-5:31), உல்தா (2 அர 22:14-20) என்போரைக் குறிப்பிடலாம்.

3. ஞானிகளின் சிந்தனையில்: பெண்களுக்காக, பெண்களுக்குக் கூறப்பட்ட முதுரைகள் அரிதாகவும், மென்மையற்றனவாகவும் அமைந்துள்ளன (பழ 31:1-9). பெண்ணினுடைய விவிலியச் சித்திரம் எப்போதுமே புகழக் கூடியதாக அமையாவிடினும் ஆசிரியர்கள் பெண்ணின வெறுப்பாளர்கள் என்று அது நிரூபிப்பதில்லை. பெண்களைப் பொறுத்தமட்டிலான ஆணுடைய கடினத் தன்மையானது, மனிதன் அவர்களிடம் கொண்டுள்ள தேவைக்கான விலையாகும். எனவே, மனிதன் பின்வருமாறு தனது கனவை விவரிக்கிறான்: "மனைவியை அடைகிறவன்

நல்வாழ்வு பெறுவான்" (பழ 18:22; காண்க. 5:15-18); "தனக்கு ஏற்ற துணையையும் ஆதரவு தரும் தூணையும்" அடைவான். தான் தங்குவதற்கென ஒரு உறைவிடத்தை, அலைவதற்கான அழைப்பிற்கு எதிரான தங்கும் இடத்தைக் கொண்டிருப்பான் (சீரா 36:24-27). பெண்ணைக் கண்டடைவதென்பது, தனக்கு மனவுறுதி அளிக்கும் ஆண்மையுடன் சேர்த்து ஆட்தன்மைப் படுத்தப்பட்ட அழகினைக் கண்டடைவதாகும் (பழ 11:16). இப்பெண் தைரியசாலியாக இருந்தால், அதைப் பற்றி நாம் என்ன கூறமுடியும் (பழ 12:4; 31:10-31)! உன்னத சங்கீதத்தில் மனைவி பற்றிய விவரிப்பை நினைவு கூர்வதே போதுமானதாகும் (உ.ச. 4:1-5; 7:2-10).

ஆனால், சிறிது அனுபவமுடைய மனிதன் தன்னுடைய துணைவியின் உள்ளியல்பான வலுவின்மையை நினைத்து அச்சப்படுகிறான். அழகு நிறைவளிப்பதில்லை (பழ 11:22). ஆனால், அழகு, தெலீலா போன்ற பெண்ணிடம் தந்திரத்தோடு ஒன்று சேர்ந்து கொள்ளும்போதும் (நீதி 14:15-17; 16:4-21), அல்லது அது சாதாரண மனிதனை நெறிபிறழச் செய்யும்போதும் (சீரா 9:1-9; காண்க. ஆதி 3:6), உண்மையில் மிகவும் அபாயகரமானதாக உள்ளது. இளம் பெண்கள் தங்களுடைய பெற்றோரின் கவலைக்கு ஒரு காரணமாக உள்ளனர் (சீரா 42:9-11). தனது இளம் மனைவியிடமிருந்து விலகிக் கட்டுப்பாடின்றி நடக்கக் துணியும் மனிதன் (பழ 5:15-20), பெண்ணிடம் எழக்கூடிய நிலையற்ற தன்மையையும் விபசாரத்திற்கான அவளது ஆர்வத்தையும் கண்டு அச்சமுறுகிறான் (சீரா 25:13-26:18). அவள் வீண் தற்பெருமை வெளிப்படுத்தும் போதும் (எசா 3:16-24), அல்லது "முட்டாளாக" (பழ 9:13-18; 19:14; 11:22), சண்டைக்காரியாக, சீறி விழுபவளாக மற்றும் எரிச்சலூட்டுபவளாகக் காட்டும்போதும் (பழ 19:13; 21:9,19; 27:15-16) அவன் வெறுக்கிறான்.

ஞானிகள் கொண்டிருந்த பெண்களைப் பற்றிய கருத்தானது ஒழுங்குகள் மற்றும் நடைமுறைகளினுடைய விவரங்களால் மட்டுமே கட்டுப்படுத்தப்படக் கூடாது. ஏனெனில், பெண்ணானவள் உண்மையில் இறை ஞானத்தினுடைய உருவமாவாள் (பழ 8:22-31). தனது மகிமையைப் பெறுவதற்கு வலுவற்ற கருவிகளைப் பயன்படுத்தும் இறைவனுடைய வல்லமையை அவள் வெளிப்படுத்துகிறாள். எளியோரின் ஆண்டவரை அன்னா மகிமைப் படுத்தினாள் (1 சாமு 2). செயல்படும் இறைவாக்கினரைப் போன்று, இறைவனுடைய பாதுகாப்பினை அனைவரும் அடையலாம் என யூதித்து காட்டுகிறாள். அவளது அழகு, விவேகம், திறமை, மனோதிடம், மற்றும் விதவை நிலையிலும் அவளது கற்பு முதலியன, பழைய ஏற்பாட்டில் இறைவனுடைய திட்டத்திற்கேற்ற நிறைவான மாதிரியாக அவளை அமைக்கின்றன.

III. புதிய ஏற்பாடு: கன்னி, மனைவி மற்றும் தாய்:- அழகாக இருந்தாலும் அத்தோற்றமானது பெண்ணுக்கு மாட்சிமிக்க மேன்மையை அளிக்க வில்லை. இந்நாளிலும் யூதனுடைய அன்றாட செபம் கபடின்றி இந்த உண்மையினையே பறை சாற்றுகிறது. "புறவினத்தானாகவோ, பெண்ணாகவோ, அறிவிலியாகவோ என்னை அமைக்காததற்காக, ஓ! இறைவா, நீர் போற்றப் படுவீராக!". அதே நேரத்தில் "உமது சித்தப்படி என்னைப் படைத்த ஆண்டவரே, நீர் புகழப்படுவீராக!" என்று கூறுவதோடு பெண்கள் திருப்தியடையவேண்டும். கிறிஸ்து மட்டுமே பெண்ணை முழு மேன்மையுடன் அர்ப்பணிக்கிறார்.

1. **மீட்பின் தொடக்கம்:** இந்த அர்ப்பணிப்பானது இயேசுவின் பிறப்பு அறிவிப்பின் நாளில் நிகழ்ந்தது. பெண்ணிடம் பிறக்க ஆண்டவர் சித்தமானார் (கலா 4:4). கன்னியும் தாயுமான மரியாள் பலனுடைமையின் பெண்ணின நம்பிக்கையைத் தன்னிலேயே நிறைவேற்றுகிறாள். அதே நேரத்தில், இதுவரை தாழ்த்தப்பட்டு வந்த கன்னிமையின் ஆசையை அவள் வெளிப்படுத்திப் புனிதப்படுத்துகிறாள்.

இந்த ஆசையானது இதற்குமுன் அவமானத்திற்குரிய மலட்டுத் தன்மையுடன் ஒப்பிடப்பட்டு வந்தது. வாழ்வின் அரசனைப் பிறக்கச் செய்ததால், மரியாளில் பெண்மையின் மாதிரியானது ஊன் உரு எடுக்கிறது. ஆனால், மரியாள் மனிதருடைய பிள்ளைகளில் மிக அழகானவருக்குக் கொடுத்த உடல் வாழ்விற்காக ஒரு பெண் அவளைப் பாராட்டும்போது விசுவாசத்தினுடைய கன்னிமையின் மூலமாகப் பிறந்த பலனாகிய ஆன்மீகத் தாய்மை உள்ளதென இயேசு வெளிப்படுத்துகிறார் (லூக் 11:28-29). மரியாளின் மூலமாக, பெண்ணானவள் விசுவாசிக்கும் ஆன்மாவின் அடையாளமாக உருவாகலாம். இதிலிருந்து புனிதப் பெண்கள் தன்னைப் பின் தொடர்வதையும் (லூக் 8:1-3), விசுவாசமிக்க கன்னியரை எடுத்துக்காட்டாகக் கூறுவதையும் (மத் 25:1-12), பெண்களிடம் பணியை ஒப்படைப்பதையும் (யோவா 20:17) இயேசு அனுமதிப்பதை நாம் புரிந்து கொள்ளலாம். எனவே, தொடக்கத் திருச்சபையானது எண்ணற்ற பெண்களால் வகிக்கப்பட்ட நிலையினையும், அவர்கள் ஏற்கும் பங்கினையும் கவனத்திற்குக் கொண்டு வருகிறது (அ.ப. 1:14; 9:36-41; 12:12; 16:14-15). இப்போது முதல் திருச்சபையின் பணியில் உடனுழைக்குமாறு அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

2. **கிறிஸ்து இயேசு:** இந்தப் பங்கு பெறுதலானது கன்னிமை என்னும் பெண்ணின் புதிய பரிமாணத்தினுடைய கண்டுபிடிப்பைக் கருத்தில் கொள்கிறது. எனவே, எந்தப்பொருளில் பாலினப் பிரிவானது மேற்கொள்ளப்பட்டு அர்ப்பணிக்கப்படுகிறது என்பதைக் காட்டுவதற்கென, பவுல் பெண்ணைப்பற்றிய ஓர் இறையியலை உருவாக்கினார். "ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே" (கலா 3:28). இன மற்றும் சமூக அமைப்புகளின் பிரிவுகளைப் போன்று, பாலினங்களிடையிலான வேறுபாடும் ஒரு குறிப்பிட்ட பொருளில் மேற்கொள்ளப்படுகிறது. இயேசு கூறிய இந்த வானதூதர் வாழ்வில் வானக வாழ்வானது முன் காணப்படலாம் (மத் 22:30). ஆனால், விசுவாசம் மட்டுமே இதனை மெய்ப்பிக்க முடியும். "காமத்தால் தீய்வதைவிடத் திருமணஞ்செய்து கொள்வதே நல்லது" என்று விவேகத்தோடு பவுல் கூறுகிறாரெனில் (1 கொரி 7:9), கன்னிமையின் அருங்கொடையை அவர் புகழ்வதேயாகும். "மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று" என்று கூறிய ஆதியாகமத்துடனும் முரண்பட அவர் துணிகிறார் (ஆதி 2:18; 1 கொரி 7:26). இளைஞர்களோ, இளம் பெண்களோ, அனைவருமே அழைக்கப்பட்டால், கன்னிமையுடன் இருக்கலாம். எனவே, ஆண் மற்றும் பெண்ணிற்கு இடையிலான முதல் வேறுபாட்டுடன் திருமணமானவர் மற்றும் ஆகாதவர் இடையிலான ஒரு புதிய வேறுபாடும் சேர்க்கப்படுகிறது. விசுவாசமும் விண்ணக வாழ்வும் உடைய கன்னிமை வாழ்வில், ஆன்மாவானது எரிச்சலின்றி தன்னுடைய ஆண்டவருடன் தன்னைச் சேர்க்கின்ற செயல்முறையான எடுத்துக்காட்டைக் கண்டடைகின்றது (7:35). தனது அழைப்பை நிறைவுசெய்ய ஒரு பெண் மனைவியாகவோ, தாயாகவோ ஆக வேண்டிய அவசியமில்லை. தனது உள்ளத்திலும் உடலிலும் அவள் கன்னியாகவே இருக்கலாம்.

பெண் இப்போது தீர்மானித்து நிறைவேற்றக் கூடிய கன்னிமையின் இந்த மாதிரியானது திருமணத்தின் சாதாரண நிலையைக் கீழ்ப்படுத்துவதில்லை (1 திமொ 2:15). வானகமானது மண்ணுலகைச் சமநிலைப்படுத்தி நிலைநிறுத்துவது போல, அது தன்னுடன் ஒரு சரியீட்டு மதிப்பையும் கொண்டுள்ளது. இறுதியாக மற்றும் மிகவும் ஆழமான நிலையில், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான இயல்பான உறவானது, திருச்சபையுடனான கிறிஸ்துவினுடைய உறவின்மேல் உருவாக்கப்படுகிறது. பெண் நேருக்கு நேராக

ஆதாமுடன் மட்டுமின்றி கிறிஸ்துவுடனும் நிற்கிறாள். இப்போது அவள் திருச்சபையைக் குறித்துக் காட்டுபவளாக உள்ளாள் (எபே 5:22-24).

3. பெண்ணும் திருச்சபையும்: பாலினங்களின் பிரிவானது விசுவாசத்தினால் மேம்படுத்தப்பட்டாலும், காலப்போக்கில் அது மீண்டும் வாழ்விற்கு வந்து, திருச்சபையினுடைய செயல்முறையான வாழ்வின்மேல் தன்னைச் சுமத்துகிறது. படைப்பில் நிலவும் அமைப்பினின்று பவுல் பெண்ணுடைய நடத்தையின் இரண்டு கூறுகளைத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார். வழிபாட்டிற்கான அவையில் ஒரு பெண் முக்காடு அணியவேண்டும். அவளுடைய கிறிஸ்தவச் சிறப்பானது தனது கணவனைச் சார்ந்திருப்பதினின்று தன்னை விலக்கவில்லை என்பதை இந்த அடையாளத்தின் மூலமாக அவள் வெளிப்படுத்துகிறாள் (1 கொரி 11:2-16). மேலும், இஃது அதிகாரபூர்வ போதனையில் அவள் இன்னும் வகிக்கும் இரண்டாம் நிலையினின்றும் விலகவில்லை என்பதையும் காட்டுகிறது. மேலும், அவள் கோயிலில் பேசவும் கூடாது; அதாவது அவளால் போதிக்க இயலாது (1 கொரி 14:34; காண்க. 1 திமொ 2:12). பவுல் பெற்ற "ஆண்டவருடைய கட்டளை" இதுவே (1 கொரி 14:37). ஆனால், இறைவாக்குரைக்கும் வாய்ப்பைப் பவுல் பெண்ணிற்கு மறுக்கவில்லை (11:5). ஏனெனில், பழைய ஏற்பாட்டில் இருந்ததைப் போன்று, ஆவியானவர் பாலினங்களுக் கிடையிலான வேறுபாட்டை அங்கீகரிக்கவில்லை. ஒழுங்குமுறை பின்பற்றப்படுவதற்கென அவள் முக்காடிட்டு மௌனமாக இருந்தாலும், மற்றொரு புறம் வீட்டில் "மரியாதையும் கற்பும் உள்ள வாழ்வினால்" சான்று பகருமாறு ஊக்குவிக்கப்படுகின்றாள் (1 பேதுரு 3:1-2; 1 திமொ 2:9-10). விதவை என்ற நிலையில், அவளது முந்தைய பணியினின்று அவளை விலக்கி வைக்கின்ற முதிர்ந்த வயதை அடைந்தபோது, கிறிஸ்தவ சமுதாயத்தில் அவள் முக்கிய பங்குவகிக்கிறாள் (1 திமொ 5:9).

இறுதியாக திருவெளிப்பாடான, ஈசபேலினுடைய தனிப்பட்ட பங்கையும் (திருவெளி 2:20), புகழ்பெற்ற வேசியினுடைய குற்றங்களையும் (17:1-3; 18:3.9; 19:2) பார்வையினின்று விலக்கிவிடவில்லை. ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, விண்மீன்களை முடியா மூடி, ஆண்குழந்தையை ஈன்றெடுத்து, பாலைவனம் வரை பறவை நாகத்தால் துரத்தப்பட்ட "பெண்ணை" அது புகழ்கிறது; ஆனால், தனது வயிற்றின் வாரிசின் மூலமாக அவள் அப்பறவை நாகத்தின்மேல் வெற்றிகொள்ள வேண்டும் (திருவெளி 12). முதலாவதாக இப்பெண்ணானவள் திருச்சபையே; கிறிஸ்துவின் உடலை ஈன்றெடுத்த புதிய ஏவாள். பின்னர், பாரம்பரிய விளக்கவுரையின்படி அவள் மரியாள் ஆவாள். ஒவ்வொரு பெண்ணும் தான் இவ்வாறு இருக்கவேண்டும் என்று தனது உள்ளத்தில் ஏங்குகின்ற பெண்ணினுடைய மூல முன்மாதிரியை நாம் அவளில் காணலாம்.

பெண்பன்றி (SOW)

"ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவை அறியச் செய்யும் அறிவினால் உலகத்தீட்டிலிருந்து தப்பியபின், இவர்கள் மீண்டும் அதிலே சிக்கி வெல்லப்படுபவருடையவும்," "நீதிநெறியை அறிந்தபின் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட பரிசுத்த கட்டளையை விட்டு விலகுபவருடையவும்" பின்னைய மோசமான நிலையை விவரிக்கப் பயன்படும் இரண்டு உயிரினங்களில் ஒன்றாகும் பெண்பன்றி (2 பேதுரு 2:20-22).

பெண்பேய், கூளி (NIGHT HAG)

பொதுவான, ஆனால் தவறாக "லில்லித்" என்ற எபிரேயச் சொல் எசா 34:14-இல் 'பெண் பேய்' அல்லது கூளி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இஃது "இரவு" என்ற சொல்லோடு தொடர்புடையது. உண்மையிலேயே இஃது ஒரு குறிப்பிட்ட வகைப் பெண்பேயைக் குறிக்கும் சுமேரியச் சொல்லிருந்து வருவதாகத்

தெரிகிறது. அழிந்து பாழ்பட்ட இடத்தை விவரிக்கப்பயன்படும் பல உருவகங்களில் இதுவும் ஒன்றாகும்.

பெண்மான் (HIND)

வளர்ந்த சிவப்புமானின் பெண் இனம். பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் பெண்மானின் அழகையும் (பழ 5:19), அது குட்டி ஈனுதலையும் (யோபு 39:1-4; எரே 14:5; காண்க. ஆதி 49:21; சங் 29:9), அதன் தடுமாறாத கால்களின் வலிமையையும் (2 சாமு 22:34; சங் 18:33; அப 3:19) காட்டுகின்றன. பழ 5:19-இல் மனைவியின் வனப்பு மற்றும் மென்மையை விவரிக்க, பெண்மான் உருவகமாகப் பயன்படுகிறது. ஆதி 49:21-இல் வரும் நப்தலி பற்றிய குறிப்பில் வாசகம் தெளிவாக இல்லை. சங் 22-இன் தலைப்பில் வரும் "காலைப் பெண்மான்" என்பது, அறியப்பட்ட இசைக்குறிப்பாக இருக்கலாம். உ.ச. 2:7; 3:5-இல் வரும் வயல்வெளி பெண்மான்கள் (மரைகள்) இறைவனது பெயருக்குப் பதிலாகப் பயன்பட்டிருக்கலாம் அல்லது இனப்பெருக்க ஆற்றலைக் குறிக்கலாம்.

பெதகேல் (PEDAHEL - இறைவன் மீட்டு விட்டார்)

இவர் நப்தலி கோத்திரத்திலே, அம்மி கூதுவுடைய புதல்வராவார். மேற்கு யோர்தான் நிலத்தைப் பத்துக் கோத்திரங்களிடையே பகிர்ந்து கொள்வதை மேற்பார்க்க யோசுவாவோடு இவரும் நியமிக்கப்பட்டார் (எண் 34:28). இப்பகுதியில் வரும் இவருடைய பெயரும், மற்றவர்களுடைய பெயரும், கானானில் புதிய வாழ்விற்கு இறைவனையே சார்ந்திருந்தனர் என்ற பொருளை வலியுறுத்துகின்றன.

பெதாசூர் (PEDAHZUR - பாறை (இறைவன்) மீட்டுவிட்டார்)

இவர் கமாலியேலின் தந்தை. இந்தக் கமாலியேல் பாலைவனத்தில் மனாசே கோத்திரத்தின் தலைவராக இருந்தார் (எண் 1:10; 2:20; 7:54.59; 10:23).

பெதாது (BEDAD - தனியான)

ஏதோம் நாட்டின் அரசனாகிய அதாதுவின் தந்தை (ஆதி 36:35; 1 நாள் 1:46).

பெதாயா (PEDAIAH - யாவே மீட்டுவிட்டார்)

1. இவர் யூதா அரசன் யோயாக்கிமின் தாய்வழி தாத்தா ஆவார் (2 அர 23:36). இவர் ரூமா என்ற ஊரைச்சேர்ந்தவர்.

2. இவர் தாவீது அரசன் வழிவந்தவர். 1 நாள் 3:18-19-இல் செருபாபேலின் தந்தை எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆனால், எஸ் 3:2.8; 5:2; நெகே 13:1; ஆகா 1:1.12.14; 2:2.23 - ஆகிய வாசகங்களில் செருபாபேல் பெதாயாவின் சகோதரனான செயல்தியேலின் மகன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

3. இவர் யோவேலின் தந்தை. இந்த யோவேல் தாவீது காலத்தில் மேற்கு யோர்தானில் வாழ்ந்த மனாசேயின் பாதிக் கோத்திரத்திற்குத் தலைவராவார் (1 நாள் 27:20).

4. பரோசுவின் மகனான பெதாயா அடிமைத்தனத்திற்குப்பின் எருசலேம் மதிலைப் பழுது பார்க்க உதவினார் (நெகே 3:25).

5. ஆண்டவரின் திருச்சட்டநூலை, எஸ்ரா மக்கள்முன் படிக்கும்போது, எஸ்ராவின் இடப்பக்கத்தில் பெதாயாவும் மற்றவரும் நின்று கொண்டிருந்தனர் (நெகே 8:4).

6. பென்யமின் குலத்தினரான பெதாயா கேலயாவின் மகனும், யோவேதுவின் தந்தையுமாவார் (நெகே 11:7); சல்லூவின் முன்னோர்.

7. கோவிலில் வேலை செய்யும் லேவியர்களுக்குச் செல்ல வேண்டிய வருமானத்தைத் தர, நெகேமியாவால் கருவூல அறைகளுக்குக் கண்காணிப்பாளராய் நியமிக்கப்பட்ட லேவியருள் இவரும் ஒருவர் (நெகே 13:13).

பெதான் (BEDAN - நடுவரின் மகன், தாணின் மகன்)

1. மனாசே இனத்தைச் சேர்ந்த ஊலாமின் மகன் (1 நாள் 7:17).

பெத்காதேர் (BETH - GADER - சுவரின் வீடு அல்லது புனித இடம்)

இது வடயூதாவில் உள்ள ஒரு நகரம் (1 நாள் 2:51). இந்நகர் எவ்விடத்திலிருந்தது என்று அறியப்படவில்லை. கெதோர் என்ற ஊரும், பெத்காதேரும் ஒன்றாக இருக்கலாம்.

பெத்காமுல் (BETH-GAMUL - சன்மான வீடு)

இது மோவாபியரின் மேட்டுச் சமவெளியிலுள்ள ஒரு நகரமாகும். இதற்கு எதிராக எரேமியா தீர்ப்புக் கூறினார் (எரே 48:22). தீபோனுக்குக் கிழக்கில் 13 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள கிர்பெத் ஏல்-எமெயில் என்ற இடம், பெத்காமுல் இருந்த இடமாக அடையாளம் காட்டப்படலாம்.

பெத்கார் (BETH-CAR - செம்மறியின் வீடு)

இது மிஸ்பாவிற்கும், பெலிஸ்தியா நாட்டிற்கும் இடையிலுள்ள இடமாகும். ஆனால், இஃது இருந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை (1 சாமு 7:11). இது பெத்கோரோன் அல்லது அயின் கரீமாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெத்-கில்கால் (BETH-GILGAL - கில்காலின் வீடு)

இது நெகேமியாவின் காலத்தில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட எருசலேம் சுவர்களை அர்ப்பணிப்பதில் பங்கு பெற்ற ஆலயப் பாடகர்கள் தங்கியிருந்த இடமாகத் தோன்றுகிறது (நெகே 12:29). எருசலேமிற்குக் கிழக்கிலுள்ள பென்யமினைச் சேர்ந்த கில்காலாகவும் (யோசு 4:19), யூதாவைச் சேர்ந்த கில்காலாகவும் (15:7) அடையாளம் காட்டப்பட்டாலும், இஃது இருந்த இடம் தெரியவில்லை.

பெத்-கோரோன் (BETH HORON - கவுரோனின் வீடு, குகைகளின் இடம்)

இது 'உயர்வான பெத்கோரோன்', 'தாழ்வான பெத்கோரோன்' என்ற இரண்டு வேறுபட்ட நகர்களின் பெயராகும் (1 நாள் 7:24). இந்த இரண்டு நகர்களும் எருசலேமிற்கு வடமேற்கே 16 கி.மீ. தொலைவிலுள்ள உயர்ந்த பெயித் ஊர் எல்-போகா, 18 கி.மீ. தொலைவிலுள்ள தாழ்ந்த பெயித் ஊர், எத்-தக்தா ஆகிய இரண்டு வேறுபட்ட தற்போதைய நகர்களோடு அடையாளம் காட்டப்படுகின்றன. இந்கரங்கள் அய்யலோன் பள்ளத்தாக்கில் எப்பிராயிம், பென்யமின் எல்லையில் இருக்கின்றன (யோசு 16:3.5; 18:13-14). செபேலா வழியாக மத்திய மேட்டு நிலங்களுக்குச் செல்லும் முக்கியப் பாதைகளில் ஒன்று இந்நகர்கள் வழியாகத்தான் செல்கின்றது. இந்தப் பாதையானது 'பெத்கோரோனுக்குச் செல்லும் வழி' என்றழைக்கப்படுகிறது (யோசு 10:10 தொ). தாழ்வான பெத்கோரோன் கடல்மட்டத்திலிருந்து 1300 அடி உயரத்திலிருந்து, உயர்வான பெத்தோரோன் கடல் மட்டத்திலிருந்து 2000 அடி உயரத்திலும் இருக்கின்றன. எப்பிராயிம், பென்யமினின் எல்லைப்பகுதி தாழ்வான பெத்கோரோன் நகரினைக் கடந்து செல்கிறது (யோசு 16:3.5; 18:13தொ). 1 நாள் 7:24-இல் எப்பிராயிம் கோத்திரத்தாரால் கீழ்ப் பெத்கோரோனும், மேல் பெத்கோரோனும் அரண் சூழக்கட்டியெழுப்பப்பட்டன என்று கூறப்பட்டிருக்கிறது. 1 அர 9:17-இல் கீழ்ப் பெத்கோரோன் சாலமோனால் அரண் சூழக் கட்டி எழுப்பப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாம் நாளாகமம் (8:5) தாழ்வான, உயர்வான பெத்கோரோன் பற்றிக் குறிப்பிடுகிறது. பெத்கோரோன் லேவியர் நகரங்களின் பட்டியலில் இடம் பெறுகிறது (யோசு 21:22; 1 நாள் 6:53). எகிப்து நாட்டு அரசராகிய சிசாக்கினால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீனா நாட்டு நகரங்களின் பட்டியலிலும் இந்நகரம் இடம் பெற்றுள்ளது. இந்நகர் நெகேமியாவின் பகைவனாகிய

"சன்பல்லாற்று" தங்கியிருந்த இடமாகும் (நெகே 2:10.19; 13:28).

ஓலபெரினேக்கு எதிராக யூதர்கள் கொண்டிருந்த சிற்றூர்களில் பெத்கோரோனும் ஒன்று (யூதி 4:4). மக்கபேயர் போர்க்காலத்தில், இவ்விடத்தில் யூதா இருமுறை வெற்றி கொண்டார் (1 மக் 3:16.24; 7:39). யோனத்தானுடன் நடந்த போருக்குப்பின் பாக்கிது இந்த ஊரின் அரண்களை வலுப்படுத்தினார் (1 மக் 9:50).

பெத்-சதா (BETH - ZATHA)

எருசலேமின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஒரு குளம் (யோவா 5:2). இங்கு நடந்த நிகழ்ச்சி பற்றி யோவா 5:1-16-இல் வாசித்தறிக.

பெத்-சாயிது (BETH - ZAITH – ஒலிவ வீடு)

தெமேத்திரியுவின்கீழ் இருந்த தலைவர்களில் ஒருவரான பாக்கிது, எருசலேமில் தான் செய்த அக்கிரமச்செயலுக்குப்பின் தங்கிய நகரம் ஆகும் (1 மக் 7:19). இங்குத் தன்னைக் கைவிட்ட யூதர் பலரைப் பாக்கிது கொன்று குவித்தான். பெத்சூருக்கு வடக்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலப் பெயித்து செயித்து என்ற இடமாக, பெத்சாயிது அடையாளம் காட்டப்படுகிறது. இங்குள்ள ஒரு குளம், பாக்கிது கொன்ற யூதர்களை எறிந்த இடமாகக் காட்டப்படுகிறது.

பெத்-சாய்தா (BETH - SAIDA – மீன் பிடிப்பவன் வீடு)

இஃது இயேசுவால் சபிக்கப்பட்ட கலிலேயாவிலுள்ள ஊர்களில் ஒன்று (மத் 11:21; லூக் 10:13). பேதுரு, அந்திரேயர், பிலிப்பு ஆகியவர்களின் சொந்த ஊராகும் (யோவா 1:44; 12:21). இவ்வூரைச் சேர்ந்த குருடன் ஒருவனுக்கு இயேசு குணமளித்தார் (மாற் 8:22). அப்பம் பலுகின நிகழ்ச்சி பெத்சாய்தாவில் நடந்தது என்பது நற்செய்தியில் தெளிவாக இல்லை. ஏனென்றால், நற்செய்தியாளர் லூக்கா இந்நிகழ்ச்சி நடந்த இடமாகக் காட்டுவது- நற்செய்தியாளர் மாற்கு காட்டுவதிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது (மாற் 6:45; லூக் 9:10).

யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கிலும், கலிலேயாக் கடலுக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலும் உள்ள தற்போதைய எத்தெல் என்பதுதான் பெத்-சாய்தா இருந்த இடமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நான்கில் ஒரு பகுதிக்கு அரசனான பிலிப்பு என்பவர் தமது தலைநகரைப் பெத்சய்தாவில் நிறுவி, அகுஸ்துவின் புதல்வியின் பெயராகிய யூலியா என்ற பெயரையே அந்நகருக்கு இட்டார் என்று வரலாற்று ஆசிரியர் யோசிப்பசு கூறுகிறார். இந்த எத்தெல்தான் பிலிப்பினால் கட்டப்பட்ட புதிய நகரத்தின் இடமாகும் என்றும், ஏரிக்கடையிலுள்ள கிர்பெத் ஏல்-அரசு என்பதுதான் முந்தைய மீன் பிடிக்கும் கிராமம் ஆகும் என்றும் கருதப்படுகிறது.

பெத்சான் (BETH-SHAN – ஓய்வு வீடு, சானின் வீடு)

இது யோர்தான் பள்ளத்தாக்குக்கும், இஸ்ராயேல் பள்ளத்தாக்குக்கும் இடையில் அமைந்த ஒரு நகரம். எசுதிரலோன் பள்ளத்தாக்கின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது எனலாம். இன்று, இது பெய்சான் என அழைக்கப்படுகிறது. இந்நகரம் அமைந்திருந்த திட்டின் பெயர்- தெல் ஏல்-குசன் ஆகும். இது பிலதெல்பியா அருங்காட்சியகத்தினரால் 1921-33-இல் அகழ்ந்தெடுக்கப்பட்டது. கி.மு. 3400-3300 இலிருந்தே இவ்விடத்தில் கட்டடங்கள் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். கி.மு. 2400-ஐ ஒட்டி இந்நகர் அழிக்கப்பட்டு 15-ஆம் நூற்றாண்டில் மீண்டும் எழுப்பப்பட்டது.

கி.மு. 1450-இல் இஃது ஓர் எகிப்தியக் கோட்டையாகியது. எனவே, இஃது எகிப்திய ரின்கீழ் எகிப்தியரின் அதிகாரம் பாலஸ்தீனத்தில் இருந்ததுவரை இருந்தது. ஆயினும், எகிப்தியரின் அதிகாரத்தின்கீழ் இருக்கும்பொழுதே, இருமுறை அழிக்கப்பட்டது. ஆனால், கானானில் இருந்த எகிப்திய நகரங்களில் வளமையானதும்,

செல்வாக்கானதுமாக இருந்தது. இஃது ஒரு முக்கிய வியாபார மையமாக இருந்ததாலும் கடற்கரைச் சமவெளி, மத்திய நிலம் ஆகியவற்றைக் கிழக்குப் பாலஸ்தீனம், சீரியா ஆகியவற்றுடன் இணைக்கும் முக்கியமான சாலையில் இஃது அமைந்திருந்ததாலும் இதன் முக்கியத்துவம் அதிகமானது.

இக்கானானிய நகரம் பல பெரும் கோவில்களைக் கொண்டிருந்தது. தாகோன், அஸ்தார்தே என்பவை இந்நகரின் முக்கியத் தெய்வங்களாகும். தொடக்ககால இஸ்ராயேலில் கலிலேயாவையும், எப்பிராயிமையும் பிரிப்பதாகப் பாலஸ்தீனத்தின் நடுவே அமைந்து, கானானிய வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் இது பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லையெனினும், தாவீதுதான் இந்நகரை அழித்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. பாரசீகர்களின் காலம்வரை இந்நகரம் யாரும் குடியேறாத இடமாக இருந்தது.

ஆனால், கிரேக்கர்கள் காலத்தில் இந்நகரம் படைகளின் இருப்பிடமாக மீண்டும் புதுப்பொலிவு பெற்று ஸ்கூத்தாபொலி என்று அழைக்கப்பெற்றது. கிரேக்கர்களின் பத்து நகரங்களில் மிகப்பெருமை வாய்ந்தது பெத் சான் எனலாம். கி.மு. 108-இல் யோவான் இரிக்கானு இதனை வெற்றி கொண்டார்; கி.மு. 63-இல் பாம்பேயின் காலத்தில் யூதர்களிடமிருந்து இது பிரித்தெடுக்கப்பட்டது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கப் பண்பாட்டு ஆலயத்தின் சிதைவுகள் இவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பழைய ஏற்பாட்டில் யோசு 17:16-நீதி 1:27 ஆகிய இடங்களில் கானானியர்களிடமிருந்து இந்நகர் இஸ்ராயேலரால் கைப்பற்றப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இஃது இசக்கார் கோத்திரத்துக்கு உரியதாக யோசு 17:11-இலும், மனாசேக்கு உரியதாக நீதி 1:27; 1 நாள் 7:29-இலும் கூறப்பட்டுள்ளது. ஆனால், உண்மையிலே இஃது இரு கோத்திரங்களின் எல்லைப் பகுதியில்தான் இருக்கிறது. பெலிஸ்தியர்களின் அதிகாரத்தின்கீழ் இந்நகர் இருந்தபோதுதான் சவுல், அவரது புதல்வர்கள் ஆகியோரின் உடல்கள் இந்நகர மதிலின் மேல் தொங்கவிடப்பட்டன. ஆயுதங்கள் வெற்றிச் சின்னமாக அஸ்தார்தே கோவிலில் தொங்கவிடப்பட்டன (1 சாமு 31:10.12-13). யாபேசு-கிலயாது மக்கள் இவ்வுடல்களை இறக்கி யாபேசுக்குக் கொண்டு வந்து அவற்றைத் தகனம் செய்து, எலும்புகளைப் புதைத்தனர்.

1 மக் 5:52; 12:40-இல் எபிரேயப் பெயர் கிரேக்கப் பெயராக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். யோனத்தானும், திரிபோவும் இவ்விடத்தில்தான் சந்தித்துச் சண்டை நிறுத்தம் அறிவித்தனர். 'ஸ்கூத்தாபொலி' என்ற கிரேக்கப்பெயர் 2 மக் 13:39 தொ-இல் காணப்படுகிறது. கிரேக்கர்கள் தம்முடன் நல்ல மனத்துடன் நடந்து கொள்கின்றனர் என இந்நகர யூதர்கள் சான்று கூறுகின்றனர். யூதி 3:10, தனது கற்பனை நிகழ்ச்சியுரையில் ஸ்கூத்தாபொலியை அறிமுகப் படுத்துகிறது.

பெத் சிற்றா (BETH - SHITTA – வேலமர வீடு)

இஸ்ராயேலராலும், கிதியோனாலும் தோற்கடிக்கப்பட்டபோது, மிதியானியர்கள் ஓடிப்போன இடம் (நீதி 7:22). இஃது இருந்த இடம் தெரியவில்லை. தெல்சிலெய்காத்துக் அருவில் இருந்திருக்கலாம். சிலர், இதை அரோது ஊற்றுகளுக்குக் கிழக்கில் இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் வடபகுதியிலுள்ள இக்காலத்திய சுத்தாவாக அடையாளம் காட்டுவர்.

பெத் சூர் (BETH - ZUR – பாறையின் வீடு)

யூதாவின் ஒரு நகரம் (யோசு 15:58). முதலில் காலேபியர்களால் குடியேறப்பட்டது (1 நாள் 2:45). பின்பு ரெகபயாமால் வலுப்படுத்தப்பட்டது (2 நாள் 11:17). நாடு கடத்தலுக்குப்பின் இது மீளவும் கட்டப்பட்டு, ஒரு மாவட்டத்தின் தலைநகராயிற்று (நெகே 3:16).

மக்கபேயர் போர்களில் இவ்விடம் முக்கியப் பங்கு வகித்தது. கி.பி. 164-இல் யூதா

மக்கபேயுவால் வலுப்படுத்தப்பட்டது (1 மக் 6:26); 162-இல் சீரியர்களிடம் சரண் அடைந்தது (6:31-3.49); 144-இல் யூதா மக்கபேயுவால் மீண்டும் கைப்பற்றிப்பட்டது.

எபிரோனுக்கு வடக்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் எத்-துபெய்க்கா என்ற இடமாகப் பெத்சூர் அடையாளம் காட்டப்படுகிறது. இது கடல் மட்டத்திலிருந்து 1013 மீட்டர் உயரத்தில் உள்ளது. இது பாலஸ்தீனத்தில் மிக உயர்ந்த பழங்கால இடமாகும். ஏலா பள்ளத்தாக்கின் மேல்முனையில், யூதாவின் மேற்குப்பகுதியில் இருந்த ஒரே கோட்டையாகும். ஆகவே, அன்னியர்களின் தாக்குதல்கள் நடந்த இடமாகும். இது பல தடவை அழிக்கப்பட்டுள்ளது. இங்கு, கண்டெடுக்கப்பட்ட நாணயங்களும், சாடியின் கைப்பிடிகளும் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெத்சூர் ஒரு முக்கிய வணிக மையமாக இருந்திருக்கிறது என்று காட்டுகின்றன. இதற்குப்பின் இது கைவிடப்பட்டுக் குடியேறப்படவேயில்லை.

பெத்-செக்கரியா (BETH - ZECHARIAH - செக்கரியாவின் வீடு)

பெத்சூருக்கு வடக்கே காணப்படும் ஓர் இடம் என்று வரலாற்று ஆசிரியர் யோசிப்பசால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. 'பாதை மிகவும் குறுகியதாய்க் காணப்பட்ட இவ்விடத்தில்தான்' 4-ஆம் அந்தியோக்குவின் படை, மக்கபேயரின் படையைத் தோற்கடித்தது (1 மக் 6:32-33). இந்த இடம் பெத்சூருக்கு வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் பெயித் ஸ்கரியாவாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெத்-செமேசியர் (BETH- SHEMITE)

யூதாவிலுள்ள பெத்-செமேசின் குடிமக்கள் (1 சாமு 6:14.18).

பெத்-செமேசு (BETH - SHEMESH - சூரியக் கடவுள் செமேசின் வீடு)

1. யூதாவின் கோத்திர எல்லைக்குள் அமைந்த பெத்செமேசு (யோசு 15:10). யோசு 19:41-இல் கூறப்பட்டிருக்கும் ஈர் செமேசு நகரமாக இருக்க வாய்ப்புண்டு. இஃது ஒரு லேவிய நகரமாகும் (யோசு 21:16; 1 நாள் 6:44). பெலிஸ்தியர்கள் தாங்கள் எடுத்துச்சென்ற உடன்படிக்கையின் பேழையை மீண்டும் திருப்பி அனுப்பியபோது அது வந்து சேர்ந்த முதல் இடம் இதுதான் (1 சாமு 6:9-20). இஸ்ராயேலின் அரசனான யோவாசு, யூதாவின் அரசனான அமட்சியாவைத் தோற்கடித்ததும் இவ்விடத்தில்தான் (2 அர 14:11-13; 2 நாள் 25:21-23). இது சாலமோனின் இரண்டாவது மாவட்டத்தில் அமைந்துள்ளது (1 அர 4:9).

எருசலேமுக்கு மேற்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள இன்றைய அயின் செம்சுக்கு அருகேயுள்ள தெல் எர்-ருமெய்லேதான்-பெத்செமேசு என்று கருதப்படுகிறது. கி.பி. 1912 மற்றும் 1933-இல் இவ்விடம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. இந்நகரம் தொடக்க வெண்கலக் காலத்தில் நிறுவப்பெற்று, கி.மு. 1500 - 918-இல் மிகவும் சிறப்புற்ற விளங்கிற்று. கி.மு. 587-இல் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டபின் இதில் மீண்டும் மக்கள் குடியேறவில்லை.

அகழ்வாராய்ச்சியின் வழியாகச் சில உண்மைகள் தெரியவருகின்றன. பெலிஸ்தியர்களின் பண்பாட்டுக்கும், எபிரேயர்களின் பண்பாட்டுக்கும் அதிகத் தொடர்புண்டு என்பது தெரியவந்துள்ளது. ஏனெனில், பெத்செமேசு இஸ்ராயேலரின் நாட்டுக்கும் பெலிஸ்தியரது எல்லைக்கும் மிக அண்மையில் இருந்தது. ஏற்றச் சிறப்புடைய பெலிஸ்தியக் கலாச்சாரம் இஸ்ராயேலரைப் பாதித்ததில் வியப்பில்லை. மேலும், செல்வந்தர்கள் பல பெரிய மாளிகைகளைக் கட்டினர். எவ்வாறெனில், அகழ்வாராய்ச்சியின் மூலம் இவ்வாறு எழுப்பப்பட்ட மாளிகைகளும், பாதுகாப்புக் கோட்டைகளும் சாலமோன்

காலத்தவை என்பது அறியப்படுகிறது. சில கட்டடங்கள் தாவீதின் காலத்தவையாகும் எனவும் அறியப்படுகிறது.

2. இசக்கார் கோத்திரத்தில் அமைந்த இந்நகரம், யோர்தான் பள்ளத்தாக்கில் பெத்சானுக்கருகே அமைந்துள்ளது (யோசு 19:22).

3. இது பல நகரங்களின் பெயராகவும் இருக்கிறது. நப்தலி கோத்திரத்திற்குரிய இந்நகரம் இஸ்ராயேலர் குடியேறிய பின்னும் கானானியர்கள் வசம் இருந்தது. இஃது இருந்த இடம் தெரியவில்லை (யோசு 19:38; நீதி 1:33).

4. எகிப்திலுள்ள ஓன் நகரம். இது எரே 43:13-இல் பெத் செமேசு என்று குறிக்கப்படுகிறது.

பெத்-தகான், பெத்-ஆகான் (BETH - HAGGAN – தோட்ட வீடு)

யூதா அரசன் அகசியா என்பவர், ஏகூ என்பவரின் பிடியிலிருந்து தப்பிக்க, பெத் தகான் என்ற இந்த நகரை நோக்கித்தான் ஓடினார் (அர 9:27). இந்நகரானது ஏன் கன்னிமோடும் (யோசு 19:21; 21:29), இக்கால எனினோடும் அடையாளம் காட்டப்படுகிறது. இஃது இஸ்ரியேலுக்குத் தெற்கில் 10 கி.மீ. தொலைவில் இபிலயாமுக்கு அருகில் இருந்திருக்கலாம்.

பெத்-தகியா (PETHAHIAH – யாவே திறந்து விடுகிறார்)

1. இவர் பாபிலோன் நாடு கடத்தலுக்குப் பின் வாழ்ந்த குருகுலத்தின் முன்னோர். தாவீதின் காலத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். பத்தொன்பதாவது குருக்கள் பிரிவின் தலைவர் (1 நாள் 24:16).

2. இவர் எஸ்ராவின் கட்டளைப்படி அன்னிய மனைவியரை விலக்கிவிட்டவர்களின் ஒரு லேவியர் (எஸ் 10:23).

3. இவர் எஸ்ராவின் காலத்தில் கூடாரத்திருவிழாவின்போது நடந்த உடன்படிக்கைச் சடங்குகளில் பங்குகொண்ட லேவியர் (நெகே 9:5). 2-இல் குறிக்கப்படுபவராக இருக்கலாம்.

4. நாடு கடத்தலுக்குப்பின் வாழ்ந்த யூதா கோத்திரத்தானும், மெசசபேலின் மகனும், செருபாபேலின் ஆலோசகரும் ஆவார் (நெகே 11:24).

பெத் தக்கரேம், பெத் - அக்கரேம் (BETH - HACCHERIM – திராட்சைத்தோட்ட வீடு)

இஃது எரே 6:1-இல் யூதாவின் ஓர் ஊராகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நெகே 3:14-இல் இஃது ஒரு மாவட்ட முக்கிய நகரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகரானது எருசலேமிற்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள ராமெத் ராகெத்து என்ற ஊராக அடையாளம் காட்டப்படுகிறது. ஒருவேளை இது கரேமாக இருக்கலாம்.

யோயாக்கிம் அரசன் கட்டியதாகக் கருதப்படும் (எரே 22:113-19) கோட்டையையும், அரண்மனையையும் அகழ்வாய்வுகள் வெளிக்கொணர்ந்துள்ளன. மரியாள் பெத்லகேமுக்குச் சென்றபோது இவ்விடத்தில் ஓய்வெடுத்ததாகக் கருதும் பாரம்பரியத்தை நினைவுகூரும் முறையில் இங்கு ஒரு பைசாந்தியர் ஆலயம் உள்ளது.

பெத் தசிமோத்து, பெத் – எசிமோத்து (BETH - JESHIMOTH – கழிவுப்பொருட்கள் வீடு, பாலை வீடு)

இஃது இஸ்ராயேல் மக்கள், கூடாரம் அமைத்துத் தங்கியிருந்த இடத்திற்குத் தென்புறத்தில், மோவாபியருடைய சமவெளிகளில் உள்ள ஒரு நகரம் (எண் 33:49). இஃது ரூபன் கோத்திரத்தாருக்கு உடைமையாகக் கொடுக்கப்பட்டது (யோசு 13:20); பின், மோவாபியர்களின் உடைமையாக இந்நகரம் மாறியது (எசே 25:9). எரிகோவிற்குத் தென்கிழக்கே 19 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள

தெல் ஏல்-அசெயிமேதான் முன்னாளில் பெத்தசிமோத்து என்று அழைக்கப்பட்டிருக்கலாம் (யோசு 12:3).

பெத் தசுபேயா, பெத் - அசுபேயா (BETH - ASHBEA)

யூதாவின் மகனான சேலாவின் தலைமையில் நார்ப்பட்டு நெய்தவர்கள் குடும்பங்கள் தங்கியிருந்த இடமாகும் (1 நாள் 4:21). சில வாசகங்களில் இஃது ஓர் ஆளின் பெயராக உள்ளது. காண்க:- அசுபேயா. இப்பெயர் விவிலியத்தில் வேறெங்கும் குறிப்பிடப்படவில்லை.

பெத் தசுமாவேத்து, பெத் - அசுமா வேத்து (BETH - AZMAVETH)

அசமாவேத்து என்ற இடத்தின் மற்றொரு பெயர் (நெகே 7:28). காண்க. அசமாவேத்து.

பெத் தப்புவாகு (BETH - TAPPUAH - ஆப்பிள் வீடு)

யூதாவின் மலைப்பகுதியில் உள்ள எபிரோன் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு நகரம் (யோசு 15:33). எபிரோனுக்கு மேற்கே 7 கி.மீ. தொலைவில் காணப்படும் இன்றைய தப்புவாக இருக்கலாம். இதுவும் தப்புவாகும் ஒன்றன்று.

பெத் தராபா, பெத் - அராபா (BETH - ARABAH - அராபாவின்வீடு, பாலையின் வீடு)

இது யூதாவின் வட எல்லையிலுள்ள ஓர் எல்லை முனையாகும் (யோசு 15:6). மேலும், இந்நகரமானது பென்யாமினின் தென் எல்லைப்புறத்தின் முடிவாகும் (யோசு 18:18). இந்நகரானது ஏல்-கெல்டு என்ற காட்டாற்றிற்கு வடபுறத்திலுள்ள எரிகோவிற்குத் தென் கிழக்கிலிருக்கின்ற அயின் ஏல்-கர்பாவோடு அடையாளம் காட்டப்படலாம். பென்யாமினுடைய மாவட்டங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் பெத்தராபா, எரிகோ மாவட்டத்திலும் (யோசு 18:22), பாலைவனப் பகுதியிலும் (யோசு 15:61) உள்ள ஒரு நகர் போலத் தோன்றுகிறது.

பெத்தர்போல், பெத் - அர்பேல் (BETH - ARBEL - புதர் வீடு)

இது சல்மானால் அழிக்கப்பட்ட ஒரு நகராகும் (ஓசே 10;14). இந்நகரின் இருப்பிடத்தைப் பற்றி வேறுபட்ட கருத்துகள் அல்லது கணிப்புகள் காணப்பட்டாலும், பொதுவாக முக்கியமான சாலைகள் சந்திக்கின்ற கிலயாது என்ற இடத்திலுள்ள இர்பித்து மலையோடு இவ்விடம் அடையாளம் காட்டப்படுகிறது. புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்களிலிருந்து- இவ்விடமானது முதலாம், இரண்டாம் இரும்புக் காலத்தைச் (1200-600) சேர்ந்தது என்பது தெரிய வருகின்றது.

பெத்தனாத்து, பெத் - அனாத்து (BETH - NATH - அனாத்து தேவதையின் வீடு)

இது நப்தலி கோத்திரத்தாருக்குக் குறிக்கப்பட்ட எல்லைப் பகுதியிலுள்ள ஒரு நகராகும் (யோசு 19:38). இங்குக் குடியிருந்த மக்கள் விரட்டப்படவில்லை. இவர்கள் கட்டாய ஊழியம் செய்ய இஸ்ராயேலரால் கட்டாயப்படுத்தப்பட்டனர் (நீதி 1:33). இப்பெயர் எகிப்தியப் புதிய அரசின் பல பார்வோன்களின் பட்டியல்களில் காணப்படுகிறது. அகோகவுக்குக் கிழக்கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள ஏல்-பனே என்ற இடத்தில் இந்நகர் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பெத்தனோத்து, பெத் - அனோத்து (BETH - ANOTH - அனோத்து தேவதையின் புனித இடம் அல்லது வீடு)

இது பெத்சூர் மாவட்டத்திலுள்ள யூதாவின் ஊர்களில் ஒன்று. இது கல்குல்லுக்குத் தென்கிழக்கே 2 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள கிர்பெத் பெயித் அயினுன் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இஃது எபிரோனுக்கு வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

பெத் தாகோன் (BETH - DAGON - தாகோனின் வீடு)

1. இது யூதாவிலுள்ள இலாக்கிசின் செபேலா

மாவட்டத்திலுள்ள ஓர் ஊராகும் (யோசு 15:41). இஃது இக்காலக் கிர்பெத் தாயூனாக இருக்கலாம்.

2. இது ஆசேர் கோத்திரத்தாருக்கு உடைமையாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஓர் எல்லை முனையாகும் (யோசு 19:27). இந்த ஊர் கர்மேல் மலைக்கு அருகில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஒருவேளை, இஃது எலமெத் ஏல்-அதிக்காக இருக்கலாம்.

3. இஃது அசோத்து நகரிலிருந்து தாகோன் தெய்வத்தின் ஆலயமாகும். யோனத்தான் மக்கபேயு தாகோன் ஆலயத்தையும், அதில் அடைக்கலமாகியிருந்த மக்களையும் கொளுத்திவிட்டார் (1 மக் 10:83-84).

பெத்தாராம், பெத் - ஆராம் (BETH-HARAM உச்சி வீடு)

இது காதுவின் அரண் சூழ்ந்த நகராகும். யோர்தான் பள்ளத்தாக்கோடு சேர்ந்த பகுதியாகிய மோவாபு நாட்டின் சமவெளிகளிலுள்ள பெத்னிம்ராவுக்குத் தென்புறத்தில் எரிகோவுக்கு எதிராக இந்நகரம் உள்ளது (யோசு 13:27). இந்நகரம் காது கோத்திரத்தாரால் படை வலிமைமிக்க நகராகவும், மக்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற நகராகவும் மாற்றப்பட்டது. காட்டாறாகிய வாடி எர்-ரமேசுக்குத் தென்புறத்தில் உள்ள தெல்-இக்தானுதான் 'பெத்தாராம், என்று அழைக்கப்பட்டது. இவ்விடம் சமவெளியால் சூழப்பட்ட பகுதியாகும்.

எண் 32:36-இல் இது பெத்தாரான் என்று அழைக்கப்படுகிறது. பெரிய ஏரோது இதை லீவியா என்றழைத்தார். ஏரோது அந்திபா, அகுஸ்துவின் மனைவியின் பெயரால் இந்த நகரத்தை யூலியா என்றழைத்ததாக யோசிப்பசு கூறுகிறார்.

பெத்தாரான் (BETH - HARAN)

பெத்தாராமின் மற்றொரு பெயர் (எண் 32:36).

பெத்தாவன், பெத் - ஆவென் (BETH - AVEN - தீமையின் வீடு)

'பெத்தாவன்' என்ற சொல்லுக்கு, 'ஒழுக்கக் கேடுகள் நிறைந்த இல்லம்' என்பது பொருள்.

1. இது யோசுவா எரிகோவிலிருந்து ஆட்களையனுப்பிய பெத்தேலுக்குக் கிழக்கிலும், ஆயி நகருக்கு அருகிலுமுள்ள ஒரு நகரமாகும் (யோசு 7:2). பென்யமினுக்குக் குறிக்கப்பட்ட பாலைவனப் பகுதியின் எல்லையோரத்தில் இஃது இருக்கின்றது (யோசு 18:12). 1 சாமு 13:5; 14:23 போன்ற பகுதிகளில் பெத்தேலுக்கும், பெத்தாவனுக்கும் தொடர்பிருப்பதாகக் காட்டப்படவில்லை. ஆனால், சவுலுக்கும் பெலிஸ்தியர்களுக்கும் போர் நடந்த இடமாகிய மிக்மாசிற்கு மேற்கே பெத்தாவன் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நகரின் சரியான இருப்பிடம் தெளிவாக இல்லை. இப்பெயர் ஆயி நகருக்கு வழங்கப்பட்ட பழைய பெயராக இருக்கலாம் என்று அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர்.

2. பெத்தாவன் என்பது சிலைவழிபாடுகள் நிறைந்த இடமாகிய பெத்தேல் நகரை இகழ்ந்துகூறப் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும் (ஓசே 10:5; 4:15; 5:8; ஆமோ 5:5 - ஒன்றுமின்மை).

பெத் தானியா (BETHANY) - துயரத்தின் வீடு, அனனியாவின் வீடு

1. பெத்தானியா என்பது ஒலிவ மலையின் கிழக்குச் சாரலில் எருசலேமிற்குக் கிழக்கே 2.5 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் ஊராகும் (யோவா 11:18). பாஸ்காத் திருவிழாவின்போது இயேசுவும், அவருடைய சீடர்களும் பெத்தானியாவைச் சுற்றியுள்ள பகுதியில்தான் தங்கியிருந்தனர் (மத் 21:17; லூக் 21:37; மாற் 11:19). எருசலேம் நகருக்கு, அதன் கிழக்குப் பகுதியிலிருந்து வரவேண்டுமென்றால், ஒலிவ மலைச்சாரலைக் கடந்து பெத்தானியா வழியாக அங்குச் செல்லலாம். இந்த வழியாகத்தான் இயேசுவைக்

குருத்து ஞாயிறு அன்று அரசராக, கோவேறு கழுதையின்மேல் ஏற்றி எருசலேம் நகருக்கு அழைத்துச் சென்றார்கள் (மாற் 11:1-11; மத் 21:1-11; லூக் 19:28-38; யோவா 12:12-16). தொழுநோயாளி சீமோன் (மாற் 14:3; மத் 26:6), மரியாள், மார்த்தா, இலாசர் (யோவா 11:1-44) முதலியவர்களோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் இங்குதான் நடந்தன. இயேசு இறுதியாக, தம் சீடர்களை விட்டுப் பிரிந்து வானகத்திற்குச் சென்ற நிகழ்ச்சியும் பெத்தானியாவில்தான் நடந்தது (லூக் 24:50-51). பெத்பகு, பெத்தானியா ஆகிய இரு ஊர்களும் ஒன்றுக்கொன்று அருகிலுள்ளன (மாற் 11:1; லூக் 19:29). பழைய ஏற்பாட்டில் பெத்தானியா என்ற இடம் காணப்படவில்லை. ஆனால், நெகே 11:32-இல் குறிக்கப்படும் அனனியா ஊரோடு அடையாளம் காட்டுவர் சிலர்.

இன்று இந்த ஊரானது அங்குத் தங்கி வாழ்கின்ற இஸ்லாமிய சமயத்தவரால் "ஏல் அசிரியே" என்று அழைக்கப்படுகின்றது. இவர்கள் இலாசரை மாபெரும் புனிதராகக் கருதுவதால், இந்நகரையும் அவர் பெயராலேயே அழைக்கின்றனர். இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் இந்தச் சிறிய பகுதியில் ஏராளமான புனித இடங்களைக் குறித்து வைத்திருக்கின்றனர். இலாசருடைய கல்லறை இங்கிருந்ததாக, திருப்பயணி போர்டோ கி.பி. 333-இல் கூறியுள்ளார். மரியாள் இயேசுவைச் சந்தித்த இடத்தில் கி.பி. 383-இல் ஓர் ஆலயம் எழுப்பப்பட்டது. இலாசருடைய கல்லறையின் மேலே ஓர் ஆலயமும், சில ஆண்டுகள் கழித்துத் துறவிகள் மடமும் கட்டப்பட்டன. மரியாள் இயேசுவின் பாதத்தை முத்தி செய்த இடத்தினைக் குறித்துக் காட்டும் பொருட்டு ஆலயம் ஒன்று அங்குக் கட்டப்பட்டது. இவ்வாலயம் இலாசரின் கல்லறைக்குக் கிழக்கிலிருந்தது என்று தானியேல் என்ற துறவியர் இல்லத் தலைவர் கூறியுள்ளார். இன்னும் அங்கு நிலத்திற்குக் கீழேயுள்ள அறை ஒன்றை இலாசரின் கல்லறையாக மக்கள் கருதுகின்றனர். மற்றவையெல்லாம் அழிந்து விட்டன.

2. யோவா 1:28-இன்படி திருமுழுக்கு யோவானின் பணிகளனைத்தும் யோர்தானுக்கு அப்பால் உள்ள பெத்தானியாவில் நடந்ததாகத் தோன்றுகிறு (3:26). ஆனால், யோர்தானுக்கு அப்பால் இப்படிப்பட்ட ஓர் இடம் இருந்ததற்குத் தெளிவான அடையாளங்கள் கண்டுகொள்ள இயலவில்லை. மேலே கூறப்பட்ட வாசகத்தினை (யோவா 1:28) அடிப்படையாகக் கொண்டு, வரையப்பட்ட நாட்டுப்படங்களில் பெத்தானியாவானது யோர்தானுக்குக் கிழக்கிலும், சாக்கடலுக்கு வடக்கிலும் இருப்பதாகக் காட்டப்படுகின்றது. மூன்றாம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த ஓரிசன் என்பவர் யோவா 1:28-இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி யோர்தானுக்கு மேற்குப்புறத்தில் சாக்கடலுக்கு 6 கி.மீ. தொலைவில் உள்ள பேத்த பராவாகும் என்றும், பெத்தானியாவானது எருசலேமிற்கு அருகில் மட்டுந்தான் உள்ளது என்றும் கூறுகின்றார். மேலும், கையெழுத்துப் பிரதிகளில் யோவா 1:28 என்ற பகுதியில் இடம் பெறுவது பெத்தானியா என்ற இடமாகும். ஆனால், இந்நகரானது எருசலேமிற்கு அருகிலுள்ள பெத்தானியாவிலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம் என்ற கருத்து காணப்படுகின்றது.

சில வரைபடங்கள், "யோவான் சலீம் என்னும் இடத்துக்கருகில் உள்ள ஐனோனில் திருமுழுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏனெனில், அங்குத் தண்ணீர் நிறைய இருந்தது" (யோவா 3:23) என்ற வாசகத்தை அடிப்படையாகக்கொண்டு, யோர்தானுக்கு மேற்கே, கலிலேயக் கடலிலிருந்து தெற்கில் 48 கி.மீ. தொலைவில் ஒரு பெத்தானியாவைக் குறிக்கின்றன. இந்தப் பெத்தானியாவை மரியாள் மற்றும் மார்த்தாவின் ஊரிலிருந்து யோவான் வேறுபடுத்துவதால் (யோவா 11:1), திருமுழுக்கு யோவான் யோர்தானுக்குக் கிழக்கில் எரிகோவுக்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் திருமுழுக்குக் கொடுத்திருக்கலாம்.

பெத் திப்லாத்தியம் (BETH - DIBLATHAIM – இரு அத்தி அப்பங்களின் வீடு)

இது மோவாபு நாட்டிலுள்ள ஒரு நகரமாகும் (எரே 48:22). இதுவும், அல்மோன் - திப்லாத்தயிம் (எண் 33:46) என்பதும் அனேகமாக ஒன்றாக இருக்கலாம். மோவாபு நாட்டின் அரசரான மேசா என்பவர் மெதபா, பெத் – திப்லாத்தயிம், பெத் – பாகால் – மெகோன் போன்ற நகர்களைக் கட்டியெழுப்பியதாகக் கூறுகிறார்.

பெத் துவேல் (BETH UEL – இறைவனில் வாழ்பவர்)

1. மில்கா மற்றும் நாகோருக்குப் பிறந்த கடைசி மகன் (ஆதி 22:22). நாகோர் ஆபரகாமின் சகோதரர்; பெத்துவேல், லாபான், ரபேக்கா ஆகியவர்களின் தந்தையுமாவார் (22:23; 24:15.24.47.50). இவர் பதான்–ஆராமைச் சேர்ந்த அரமேயன் என்றழைக்கப்படுகிறார் (25:20; 28:2.5).

2. ஓர்மாவுக்கு அருகில் உள்ள சிமியோனுடைய நகர் (1 நாள் 4:30). இதற்கு இணையான பட்டியலில் (யோசு 19:4) இது பெத்தூல் என்றழைக்கப்படுகிறது. 1 சாமு 30:27–இல் பெத்தேலில் இருந்தவர்களுக்குத் தாவீது பரிசுகளை அனுப்பிவைத்தார் என்று வருகிறது. யூதாவின் நகர்களின் பெயர்ப் பட்டியல்களில் எதிலும் இப்பெயர் இடம் பெறாததால் பெத்துவேல்தான் தவறாகப் பெத்தேல் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது என்பது உறுதி. இதன் சரியான இடம் அறியப்படாவிட்டாலும் பெயேர் செபாவுக்கு மிகவும் தொலைவில் இருக்க வாய்ப்பில்லை; அதன் அருகிலேதான் இருந்திருக்க வேண்டும். இது பெயேர்செபாவுக்கு வடமேற்கில் உள்ள இக்காலக் கிர்பெத் ஏல்–கரியத்தெயின் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெத்துவேல் (PETHUEL – கடவுள் திறக்கிறார்)

இவர் யோவேல் இறைவாக்கினரின் தந்தை ஆவார் (யோவே 1:1)

பெத்தூலியா (BETHULIAH)

இது யூதித்து நூலில் அடிக்கடிக் கூறப்படும் சமாரியாவில் உள்ள ஒரு நகரம். கதையின் நாயகியாகிய யூதித்தின் ஊரும் இதுவே. இப்படிப் பெயர் கொண்ட நகரம் இன்னும் அறியப்படவில்லை. யூதித்து நூலில் தரப்பட்டுள்ள விளக்கங்கள் அதிகம் இருப்பினும், சரியான இடத்தை அடையாளம் காட்டுவது கடினமாயுள்ளது.

இந்த நகரம் தோத்தான் சமவெளிக்கு அருகில், எசுதிரலோனுக்கு எதிராக (யூதி 4:6) போர் முக்கியத்துவம் வாய்ந்த குன்றின் உச்சியில் அமைந்திருந்தது (10:10). மலைகளால் சூழப்பட்டு (6:10–12), அருகில் ஒரு நீரூற்றையும் கொண்டிருந்தது (6:11). எருசலேம் மற்றும் அதன் ஆலயம் ஆகியவற்றின் பாதுகாப்புக்குப் பெத்தூலியாவின் கோட்டை முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது (8:21.24). நெபுகத்னேசரின் அசீரியத் தளபதி ஒலபெரினே நகரை முற்றுகையிட்டபோது (7:1தொ), யூதித்து, விருந்துக்கு வருமாறு தனக்குக் கிடைத்த அழைப்பைப் பயன்படுத்தி அவனைக் கொன்றாள் (13:1–10). இச்செயலால், அசீரியர்களை வெல்லுமாறு யூதர்களைத் தூண்டினாள் (15:3.6).

இப்பெயர் "கடவுளின் வீடு" என்னும் பொருள்பட அழைக்கப்பட்டிருக்கலாம். காரணம், அவ்வூராரும் யூதித்தும் கடவுளை விசுவசித்தவர்கள்; கடவுளின் பலத்தில் நம்பிக்கை வைத்து அவுக்குச் சலியாது தொண்டு செய்தால் எவ்வளவு வல்லமை வாய்ந்த உலக ஆற்றல்களை மேலும் வெற்றி கொள்ளலாம் என்பதை நிரூபித்தவர்கள். இது செக்கேமாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர்.

பெத்தேக்கது, பெத்–ஏக்கது (BETH - EKED) மயிர் கத்தரிக்கும் வீடு)

இஃது இஸ்ரியேலிலிருந்து சமாரியாவிற்குச் செல்லும் சாலையில் உள்ள ஓர் இடம். இவ்விடத்திலுள்ள இடையர்களின் குடிசை ஒன்றில் ஏகூ என்பவன் யூதாவின் அரசரான அகசியாவின்

சகோதரர்கள் இருப்பதைக் கண்டான். உடனே அவன் அவர்களைக் குடிசையின் அருகிலிருந்த ஒரு குழியில் வெட்டிக்கொன்றான் (2 அர 10:12.14). இந்த இடமானது எனினின் வடபுறத்தில் 5 கி.மீ. தொலைவிலுள்ள பெயித்-கத்தாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெத்தேட்செல், பெத் - ஏட்செல் (BETH - EZEL - மேலோரின் வீடு அல்லது புனித இடம்)

இது தென்புற யூதாவின் தென்பகுதியில் உள்ள ஒரு நகராகும். மீக்காவின் சொல்லாடலில் இந்நகரினைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (மீக் 1:11). தேபிருக்குக் கிழக்கே 3 கி.மீ. தொலைவிலும் எபிரோனுக்குத் தென்மேற்கில் 16 கி.மீ. தொலைவிலும் தற்போதுள்ள தெயிர் ஏல் - அசால் என்ற இடமாக அடையாளம் காட்டப்படும்.

பெத்தேதன், பெத் - ஏதன் (BETH - EDEN - ஏதனின் வீடு)

இது யூப்பிரத்தீசு, பாலிக் ஆகிய இரண்டு ஆறுகளுக்குமிடையிலுள்ள ஒரு தனி உரிமையுடைய அரமேய நகர அரசாகும். அசீரிய நாட்டுக் குறிப்புக்களில் இந்நகரானது பித்-அதினியோடு ஒன்றுபடுத்தப்படுகிறது. ஆமோ 1:5-இல் இந்நகர மக்கள் கீருக்கு நாடு கடத்தப்படுவர் என்று கூறப்பட்டிருக்கிறது. 'ஏதனின் மக்கள்' அசீரியாவால் பிடிக்கப்படுவர் என்று 2 அர 19:12; எசா 37:12-இலும் உரைக்கப்பட்டுள்ளது. எசேக்கியேல் ஆகமத்தில் (27:23) தீர் நாட்டோடு வியாபாரம் செய்து வரும் நகரங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் 'ஏதன்' என்பது மட்டும் இந்நகரின் பெயராக இடம் பெற்றுள்ளது.

பெத்தேமக்கு, பெத் - ஏமக்கு (BETH - EMEK - பள்ளத்தாக்கின் வீடு)

இஃது ஆசேர் கோத்திரத்தாருக்கு உடைமையாகத் தரப்பட்ட பகுதியின் எல்லையோரத்தில் அமைந்த ஊராகும் (யோசு 19:27). அக்கோவிற்குக் கிழக்கு, வடகிழக்கில் 10 கி.மீ. தூரத்திலுள்ள தெல் மிமாசாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெத்தேர் (BETHER - மலைவீடு)

இது யூதாவின் பெத்லகேம் மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம் (யோசு 15:59). இந்நகரைப் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சிகளின்படி தொடக்க இரும்புக்காலத்திலிருந்து, உரோமையர்களின் ஆட்சிக்காலம் வரை மக்கள் தொடர்ந்து இந்நகரில் தங்கி வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

இந்நகரமானது பார்-கெச்சேபாவின் தலைநகரம் என்பது அனைவராலும் அறியப்பட்ட ஒன்று. பெத்தேர்- எளிதில் பாதுகாக்கப்பட்ட அல்லது காவல் செய்யப்பட்ட குன்றின்மேல் உள்ள நகரமாகும். யூதர்களுடைய நகரமாகிய பெத்தேர் கி.பி. 135-இல் வீழ்த்தப்பட்டது. பலர் படுகொலை செய்யப்பட்ட பின்புதான், இந்நகரம் வீழ்த்தப்பட்டது. கொலை செய்யப்படாதவர்கள் அனைவரும் வெற்றி வாகை சூடிய உரோமையரால் அடிமையாக விற்கப்பட்டனர் என்று எரோனிமு கூறுகின்றார்.

பெத்தேல் (BETHEL - இறைவனது வீடு) தெய்வம்

பெத்தேல் என்பது மேற்குச் செமித்தியத் தெய்வமாகும். தொடக்கநிலையில் இச்சொல் தெய்வமாக்கப்பட்ட ஏலின் கோயிலைக் குறித்தது. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அசீரியா நாட்டு ஏசர்கத்தோனுக்கும், தீர் நாட்டுப் பாகாலுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டபொழுது இது குறிக்கப்படுகிறது. நெபுகத்னேசர் காலம் தொடங்கி இரண்டாம் தாரியு ஆட்சிக்காலம் வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் பாபிலோனிய ஏடுகளில் ஆட்கள் பெயரின் ஒரு கூறாகக் காணப்படுகிறது. சான்றாக பித்-இலி-தலா, பித்-இலி-செசிபு, பித்-இலி-சேர் முதலிய பெயர்களில் ஒரு பகுதியாக, பெத்தேல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எலிபாண்டையின் யூதர்களில் சிலர், பெத்தேல்-நாதன், பெத்தேல்-தூரி, பேத்தேல்-ஆகாபு முதலிய பெயர்களைக் கொண்டிருந்திருக்கின்றனர். மேலும், எலி பாண்டைன் என்ற இடத்தில் எசேம்- பெத்தேல்,

கெரேம்-பெத்தேல், அனத்-பெத்தேல் போன்ற தெய்வங்கள் வழக்கிலிருந்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இராஸ்-சம்ராவில் தெய்வங்கள் பற்றிய பட்டியலில், பெத்தேலைப் பற்றி இரண்டு முறை கூறப்பட்டுள்ளது. பீலே பிப்லியுவின் பெனிசிய மொழியில் எழுதப்பட்ட தெய்வமரபுக் காவியத்தில் பெய்திலோஸ் என்பது உரானோஸ் (வானம்), கே (பூமி) ஆகிய இருவரின் குழந்தையாகும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, கி.மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெனிசியாவில் இந்தத் தெய்வம் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டில் எரே 48:130-இல் "பெத்தல்" என்ற புனிதப்பெயர் காணப்படுகின்றது. ஆதி 31:13; ஆமோ 5:5 போன்ற பகுதிகளில் இந்தத் தெய்வத்தைப் பற்றிக் கூறப்படுவதாக அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். செக் 7:2-இல் இடம் பெறும் 'பெத்தேல் - சாராசார்' என்பது ஒரு தனி ஆளின் பெயராக இருக்கலாம்.

பெத்தேல் (BETHEL - இறைவனது வீடு) - இடம்

1. இஃது ஒரு நகரம். இன்றைய பெய்டின் என்ற ஊரின் அருகே உள்ள இவ்விடம் எருசலேமுக்கு வடக்கே 22 கி.மீ. தொலைவில் உள்ளது. குலமுதியவர்களுடன் பல வகைகளின் தொடர்புடையது இந்நகரம். இதன் முந்தையப் பெயர் -லூசு ஆகும். ஆபிரகாம், பெத்தேலில் ஒரு பலி பீடத்தைக் கட்டி எழுப்பினார் (ஆதி 12:8; 13:3). யாக்கோபுடன் இந்த இடம் கொண்டிருக்கும் தொடர்பு முதன்மை உடையது. ஆபிரகாமும் இதனுடன் தொடர்புடைய தாகக் காட்ட முயன்றது இரண்டாம் பட்சமே.

பெத்தேலில் ஆண்டவர் யாக்கோபுக்குக் காட்சி தந்ததாகவும், அதன் நினைவாக ஒரு கல்லை நினைவுத் தூணாக நாட்டினார் என்பதும் ஒரு வழிபாட்டு மரபுக்கதை ஆகும் (ஆதி 28:10-22); இதுதான் அங்கு ஒரு வழிபாட்டு மையம் தோன்றிய விதத்திற்கான கதை ஆகும். இஃது எலோகிம் மரபினின்று முதலில் தோன்றினாலும் ஆதியாகமக் கதை யாவே மற்றும் எலோகிம் பாரம்பரியங்களின் இணைப்பாகும். ஆனால், இது பலர் அறிந்த ஒரு விளக்கமே யொழிய, உண்மையான மரபு என்று கூறமுடியாது. ஆதி 35:1-8-இல் யாக்கோபு இவ்விடத்தில் பீடம் எழுப்பித் தம்குலத்தை ஆண்டவரிடம் ஒப்படைப்பதாகக் கூறப்படுவது பின்னைய இஸ்ராயேல் வழிபாட்டு நிகழ்ச்சிகளை முன்வைத்துக் கூறுவதாகும். ஆதி 35:9-13 குருக்கள் பாரம்பரியத்தின் பெத்தேல் இறைக்காட்சியைப் பற்றி விவரிக்கிறது. இக்கதைகளெல்லாம் பின்னர்த் தோன்றியவையாயினும் பெத்தேலின் பழமையையும் அவ்வழிபாட்டு இடத்தின் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கின்றன. ஏனெனில், இஃது ஒன்றுதான் இஸ்ராயேலின் வழிபாடு தொடர்பான முதன்மையான இடமாக அன்று இருந்தது.

'ஆயி' கைப்பற்றப்பட்டபோது பெத்தேலும் அதனுடன் பிடிபட்டதாகக் கூறப்படுகிறது (யோசு 7:2; 8:9.12.17). வெற்றி கொள்ளப்பட்ட அரசர்களின் பட்டியலில் பெத்தேலும் குறிப்பிடப்படுகிறது (யோசு 12:16). நீதி 1:22-25 பெத்தேலை யோசேப்பின் குலத்தவர் வென்றதாகக் கூறுகிறது. இங்கு லூசு என்ற பெயர் பெத்தேலாக மாற்றம் பெறுவது இவ்வெற்றியோடு தொடர்பு படுத்தப்படுகிறது. ஒவ்வொரு கோத்திரமாகப் பிரிக்கப்பட்டபோது எப்பிராயிம், பென்யமின் இனத்தவரின் எல்லையில் பென்யமின் பகுதியில் பெத்தேல் இருந்தது (யோசு 16:1தொ; 18:13.22). 1 நாள் 6:28-இல் இஃது எப்பிராயிம் இனத்திற்குரியதாகிறது. நீதி 20:18.26; 21:2-இல் பெத்தேல் எல்லா இஸ்ராயேலரும் வந்து கூடுமிடமாகிறது. இது பெத்தேலின் வழிபாட்டு முக்கியத்துவத்தைக் காண்பிப்பதாகிறது. சாமுவேல் நீதி வழங்கிய இடங்களில் இதுவும் ஒன்றாகும். எரொபவாம் பெத்தேலில் புதிதாக ஒரு வழிபாட்டுப் பீடத்தை

எழுப்பவில்லை; பழையதைப் புதுப்பித்தார் (1 அர 12:29-33). யூதாவின் அபியா, இஸ்ராயேலிலிருந்து பெத்தலைக் கைப்பற்றினார் (2 நாள் 13:19).

இறைவாக்கினர் பணியிமன் மையமாகவும் பெத்தேல் விளங்கியது. இறைவாக்கினர்கள் பெத்தேலைப் பற்றிக் கூறும் சிறு நிகழ்ச்சிகளிலிருந்தும் (1 அர 13), இறைவாக்கினரின் புதல்வர்கள் பெத்தேலில் இருந்தனர் என்பதிலிருந்தும் இது புலப்படுகிறது (2 அர 2:2). எலிசாவுக்கும் பெத்தேலுக்கும் மிகுந்த தொடர்பு இருந்திருக்கிறது (2 அர 2:23). ஏகூ என்பவரால் இங்குள்ள வழிபாட்டிடம் கவனித்துக் கொள்ளப்பட்டது (2 அர 10:29). ஓசேயா, ஆமோஸ் ஆகியோரால் மிகவும் வெறுத்துக் கண்டிக்கப்பட்ட இடம்- பெத்தேல் (ஓசே 4:15; 5:8; 10:5; ஆமோ 3:14; 4:4; 5:5); அங்கிருந்த கன்றுக்குட்டியின் சிலையையும் வெறுத்தனர். இங்குள்ள வழிபாடு மூடநம்பிக்கை நிறைந்ததாகிப் போனதால் ஓசேயா இதனைத் 'தீமையின் வீடு" (பெத்தாவன்) என்கிறார் (4:15; 5:8; 10:5). இந்த இழிவான பட்டம் மற்ற வரலாற்று நூல்களிலும் புகுந்தது (யோசு 7:2; 18:12; 1 சாமு 13:5; 14:23). குரு அமட்சியா, ஆமோசைப் பெத்தேலிலிருந்து விரட்டும்வரை இவர் அங்குதான் பெத்தேலைக் கண்டித்து இறைவாக்கு உரைத்தார் (ஆமோ 7:10தொ). அசீரியர்களின் வெற்றிக்குப் பிறகு அங்கு வந்து தங்கியவர்கட்கு யாவேயின் வழிபாட்டைப் போதிக்க, குரு ஒருவர் வந்து தங்கினார் (2 அர 17:28). யோசியாவின் சீர்திருத்தத்தின்போது பெத்தேலின் வழிபாட்டிடம் அழிக்கப்பட்டது (2 அர 23:15). ஆனால், எரே 48:13-இல்கூட ,அது பற்றிப் பேசுமளவுக்கு அங்குத் தீமைகள் நடந்துள்ளன.

பாபிலோனிலிருந்து திரும்பியவர்களுள் பெத்தேலைச் சேர்ந்தவர்களும் இருந்தனர் (எஸ் 2:28; நெகே 7:32). நாடு கடத்தலுக்குப்பின் அவர்கள் குடியேறிய நகரங்களுள்- பெத்தேலும் ஒன்று (நெகே 11:31; செக் 7:2). இந்நகர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பாபிலோனியப் படையெடுப்பில் தீயினால் அழிக்கப்பட்டுப் பின்னர் பாரசீக, கிரேக்கர் ஆட்சிக்காலத்தில் மீண்டும் மக்கள் வாழுமிடமாகியது.

வெண்கலக்காலத்தில் மக்கள் இங்குக் குடியிருந்திருக்கின்றனர் என்று அகழ்வாய்வுகள் காட்டுகின்றன. மிகப்பெரிய பருமனான கட்டடங்களும், கோட்டைச்சுவர்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. நகரம் பெரியதாகவும் செழிப்புடையதாகவும் இருந்திருக்கிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் நகரம் எரியூட்டப்பட்டு முழுவதும் அழிக்கப்பட்டிருக்கிறது. இஃது இஸ்ராயேலரின் வெற்றியின் விளைவாகக் கருதப்படுகிறது. இரும்புக்காலத்தின் தொடக்கத்தில் இந்நகரம் மீண்டும் கட்டப்பட்டு, குடியேறப்பட்டது. இக்கண்டெடுப்புகள் இலக்கிய மூலங்களோடு ஒத்துப்போகின்றன.

2. சிமியோன் இனத்துக்கு உரிமையான ஒரு நகரம். இது 1 சாமு 30:27-இல் பெத்தேல் என்றும், யோசு 19:4 இல் பெத்துவேல் என்றும், 1 நாள் 4:30-இல் பெத்தூல் என்றும் அழைக்கப்படுகிறது. இஃது இருந்த இடம் அடையாளம் காட்டமுடியவில்லை.

பெத்தொகர்மா (BETH - TOGARMAH - தோகர்மாவின் வீடு)

இது பாலஸ்தீனத்தின் வட பகுதியாகும். இங்குத் தோகர்மாவின் வழித்தோன்றல்கள் வாழ்ந்தனர் (எசே 27:14; 38:6). இத்திய மூலங்கள் சிறிய ஆசியாவில் ஒரு தோகர்மாவைக் குறிக்கின்றன. இதுவும் கர்க்கமிசுக்கு வடகிழக்கில் 200 கி.மீ. தொலைவிலுள்ள குருன் என்ற இடமும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். காண்க:- தோகர்மா.

பெத்தொகிலா, பெத் - ஒகிலா (BETH - HAGLAH - கவுதாரி வீடு)

இது பென்யமினுக்குக் குறிக்கப்பட்ட எல்லைப் பகுதியில் உள்ள ஒரு நகரமாகும். இந்நகர் எரிகோவிற்குச் சிறிது மேற்கே, பென்யமினுடைய தென்புற எல்லையோரத்தில் இருக்கிறது (யோசு

15:6; 18:19). திருச்சபைத் தந்தையர்கள் செய்த பிழையால் யாக்கோபை நினைத்து மக்கள் அழுது புலம்புகின்ற இடமாகிய ஆத்தாதுவின் சூட்டடிப்புக் களமாக (ஆதி 50:10), பெத்தொகிலா அடையாளம் காட்டப்பட்டது. இதையே மெதேபா வரைபடம் பின்பற்றுகிறது. ஒருவேளை, இஃது இக்கால அயின் அய்லா இருக்கும் இடத்தில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பெத்தோமசுத்தாயிம் (BETOMASTHAIM - எதிரியின் வீடு, சாத்தானின் வீடு)

யூதி 4:6; 15:4 ஆகிய இவ்விரண்டு பகுதிகளிலும் குறிப்பிடப்படும் இடம்; பழைய ஏற்பாட்டு நூல்களில் அறியப்பட முடியாத இடம். எங்கேயும் இவைகள் இடம் பெறவில்லை. சமாரியாவைக் குறிக்கும் அவதூறான பெயராக இருக்கலாம். ஆனால், இவ்விடத்து மக்கள் யூதர்களோடு சேர்ந்து, தப்பியோடிப் புறவினத்தினரைத் துரத்த உதவியவர்கள் எனத் தெரியவருகிறது.

பெத்தோர் (PETHOR)

இது யூப்பிரத்தீசு நதியின் அருகிலிருந்த பிலயாமின் இருப்பிடமாகும் (எண் 22:5; உப 23:5). இது கிழக்கிலுள்ள மலைகளில் ஆராமில் இருந்தது. அசீரிய மன்னன் மூன்றாம் சல்மனேசரின் குறிப்புகளில் கூறப்படும் பித்ரு என்ற இடமும், பெத்தோரும் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. கர்க்கமிசுக்குத் தெற்கில் 19 கி.மீ. தொலைவில் உள்ள தெல் ஏல்-அக்மார் என்பது பெத்தோர் இருந்த இடமாக இருக்கலாம்.

பெத் பகு (BETH - PHAGE – அத்தியின் வீடு)

இஃது எருசலேமிற்கும், பெத்தானியாவிற்கும் அருகிலுள்ள ஓர் ஊராகும். அனேகமாக இவ்வூர் பெத்தானியாவிற்குக் கிழக்கே இருக்கலாம். குருத்து ஞாயிறு அன்று இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைந்ததாக நற்செய்தியில் காட்டப்படும் நிகழ்ச்சியில் பெத்பகு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (மாற் 11:1; மத் 21:1; லூக் 19:29). மாற்கும் லூக்காவும் பெத்பகு, பெத்தானியா என்ற வரிசையில் கூறுகின்றனர். இஃது இயேசு கிழக்கிலிருந்து எருசலேமுக்குச் சென்றார் என்று சுட்டுகிறது.

இன்று 'பெத்பகு' என்ற ஊரானது ஒலிவ மலைச்சரிவிற்குத் தென்கிழக்கிலும், பெத்தானியாவிற்குத் தென்கிழக்கிலுமுள்ள இஸ்லாமியர்களின் ஊராகிய அபுதிஸ் என்ற ஊராக அடையாளம் காட்டப்படுகிறது. இயேசு இவ்வூருக்கு அருகில் வந்தபொழுதுதான், ஒலிவ மலையைக் கடந்து செல்வதற்காக ஒரு கழுதைக் குட்டியை அருகிலிருந்த ஊரிலிருந்து பிடித்து வருமாறு தனது சீடர்களை அனுப்பினார் என்று நற்செய்திகளில் கூறப்படுகிறது.

மத்தியகாலத் திருப்பயணிகள் பெத்பகு என்ற ஊரானது பெத்தானியாவிற்கும், ஒலிவ மலை உச்சிக்கும் இடையில் இருந்ததாகக் கூறுகின்றனர். ஆனால், இதற்கு ஆதாரங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இவ்வூரானது மலையிடுக்குகளுக்குள் உள்ள நகரமாகும் என்றும் இங்குதான் குருக்கள் தங்கியிருந்தனர் என்றும் ஓரிசன் என்பவர் கூறுகிறார்.

பெத்பசேசு (BETH - PAZZEZ – சிதறலின் வீடு)

இஃது இசக்காருக்குக் குறிக்கப்பட்ட பகுதியின் எல்லையோரத்தில் உள்ள ஒரு நகரமாகும் (யோசு 19:2). இந்நகரம் எங்கதாவுக்கும், தாபோர் மலைக்கும் அருகில் இருந்தது. இஃது இருந்த இடம் தெரியவில்லை; ஆனால், கெர்ம் ஏல்-கதித்தே என்று அடையாளம் காட்டப்படும்.

பெத் பரா (BETH - BARAH – கடவுத்துறையின் வீடு)

இது யோர்தான் பள்ளத்தாக்கிற்கு அருகிலுள்ள நகரமாகும். இந்நகரானது கிதியோன் என்பவரின் தலைமையில் சென்ற எப்பிராயிமியர்களால் மிதியானியரிடமிருந்து கைப்பற்றப்பட்டது (நீதி 7:24). யோர்தான் பள்ளத்தாக்கிற்கும் எசுதிரலோன் சமவெளிக்கும் இடையில், யோர் தான் நதிக்கு மேற்கே உள்ள இடமே இந்நகரின் இருப்பிடமாகக் கருதப்படுகிறது. 'பெத்பரா' என்ற இந்நகருக்கும், யோவா 1:28-இல் இடம்

பெறுகின்ற பெத்தராபாவிற்கும், அதாவது, யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள பெத்தானியாவிற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

பெத்-பாகால் மெகோன் (BETH - BAAL - MEON - பாகால் மெகோனின் வீடு)

இஃது ரூபன் கோத்திரத்தாருக்கு உடைமையாகத் தரப்பட்ட ஒரு நகரமாகும். இந்நகர் மோவாபிற்கு வடபுறத்தில் உள்ளது (யோசு 13:17). பொதுவாக, பாகால்-மெகோன் என்றழைக்கப்படுகிறது.

பெத் பாசி (BETHBASI - பாசியின் வீடு, சதுப்புநில வீடு)

இஃது எருசலேமிற்குத் தென்கிழக்கில் உள்ள நகரமாகும். பாக்கீதுவினால் இடிக்கப்பட்ட இந்நகரானது யோனத்தானாலும், சீமோனாலும் அரண் சூழக் கட்டி எழுப்பப்பட்டது (1 மக் 9:62.64). யூதேயா பாலை வனத்தில் தற்போதுள்ள கிர்பெத் பெயித்பாசா என்ற நகர்தான் முன்பு பெத்பாசி என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இது தெக்கோவாவுக்குத் கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

பெத் பிரீ (BETH - BIRI - படைப்பவரின் வீடு)

இது யூதாவிற்குத் தெற்கில் உள்ள ஒரு நகரமாகும். இந்நகர் சிமியோனுக்கு உடைமையாகத் தரப்பட்ட நகரங்களில் ஒன்று (1 நாள் 4:31). பெத்லபவோத்தும் (யோசு 19:6) பெத்பிரீயும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். இது பெயேர்-செபாவுக்குத் தென்மேற்கில் 32 கி.மீ. தொலைவிலுள்ள எபேல் ஏல்-பிரீ என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெத்பெயோர் (BETH - PEOR – பெயோரின் வீடு, திறப்பு வீடு)

இஃது ரூபன் கோத்திரத்தாருக்குச் சொந்தமாகக் கொடுக்கப்பட்ட மோவாபின் நகரமாகும் (யோசு 13:20). இஸ்ராயேல் மக்கள் பெத்தெயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே தங்கியிருந்தனர் (உப 3:29; 4:46). அபாரிம் மலைகளிலே சீகோன், ஓகு ஆகியவர்களோடு இஸ்ராயேல் மக்கள் போரிட்டபொழுது மேற்கூறப்பட்ட இடத்தில்தான் தங்கியிருக்க வேண்டும் (காண். எண் 21:20; 33:47-49). நெபோ மலையிலிருந்து எல்லாப் பகுதிகளையும் பார்த்த பின்பு இறந்த மோசே பெத்பெயோருக்கு எதிராக உள்ள மோவாபின் பள்ளத்தாக்கில் அடக்கம் செய்யப்பட்டார் (உப 34:6). பெத்பெயோர் என்ற இவ்விடம் எஸ்போனுக்குப் போகின்ற வழியில் இருக்கிற லீவியாவிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ளது என்று யுசேபியு கூறுகிறார். நெபோ மலைக்கு வடமேற்கே 5 அல்லது 6 கி.மீ. தொலைவில் இவ்விடம் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இதைக் கிர்பெத் எஸ்-செயிக்கு எயேல் ஆக சிலர் அடையாளம் காட்டுவர்.

பெத் பெலேத்து (BETH - PELET – அடைக்கல வீடு)

இது தென்கோடியில் இருக்கும் ஏதோமின் எல்லை ஓரமாக யூதா புதல்வரின் கோத்திரத்தாருக்குக் கிடைத்த நகர்களில் ஒன்று. இந்நகர் பெயேர்-செபாவிற்கு அருகிலுள்ளது (யோசு 15:27). பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தபின் யூதேயர்களால் கட்டப்பட்ட நகரங்களில் இதுவும் ஒன்று (நெகே 11:26). காசாவிற்குத் தென்புறத்தில் 29 கி.மீ. தொலைவிலுள்ள தெல் ஏல்-பாராதான் இந்நகர் இருந்த இடம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. இஃது இருந்த இடம் தெரியவில்லை; ஆனால், இது தெல் எஸ்-சாக்காத்தியாக அடையாளம் காட்டப்படலாம்.

பெத் - மாக்கா (BETH - MAACAH – மாக்காவின் வீடு)

பெத்மாக்கா என்பது ஒரு கோத்திரத்தின், ஓர் அரச குலத்தின் அல்லது ஓர் ஆட்சிப்பகுதியின் பெயராகும் (2 சாமு 20:14-15). பின், பெத்மாக்கா என்பது ஆபல் என்ற பெயருடைய நகரின் ஒரு பகுதியாக மாறியது.

பெத் மர்க்காபோத்து (BETH - MARCABOTH - தேர்களின் வீடு

இது சிமியோனுக்குத் திருவுளச் சீட்டின் மூலம் கிடைத்த நகரங்களில் ஒன்று. இந்நகரம் சிக்லாகுவுக்கு அருகில் இருக்கின்றது (யோசு 19:5; 1 நாள் 4:31). இந்நகரில் தேர்கள் செய்யப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டன (1 அர 9:19; 10:29). இந்நகரின் பழைய பெயர் மத்மன்னாவாக இருக்கலாம். இது தெல் அபு குரேய்ராவாக அடையாளம் காட்டப்படலாம்.

பெத் மில்லோ (BETH - MILLO நிரப்புதலின் வீடு

இது செக்கேம் மாநகரத்திலுள்ள ஒரு பகுதியாகும் (நீதி 9:6,20).

பெத் மெகோன் (BETH - MEON - குடியிருப்பு வீடு

இது மோவாபியருடைய மேட்டு நிலங்களில் உள்ள ஒரு நகரமாகும் (எரே 48:23). பொதுவாக, இவ்வூர் "பாகால்-மெகோன்" என்றழைக்கப் படுகிறது.

பெத் ராகோபு (BETH - REHOB - மூச்சின் வீடு

இது கானான் நாட்டின் வடபுற எல்லைப் பகுதியின் முடிவில் இருக்கின்ற ஒரு நகரமாகும் (எண் 13:21). இந்நகரம் இலாயிசுக்கு அருகில் உள்ளது. நீதி 18:28-இன்படி தாணுக்கு அருகில் உள்ளது. தாவீதின் ஆட்சிக்காலத்தில், அம்மோனியருக்கு ஆதரவாக, தங்களது படைகளையனுப்பிய அரமேயர்களின் படைவலிமை மிக்க நகர்களில் பெத்ரகோபுவும் ஒன்றாகும் (2 சாமு 10:6). இந்நகரின் சரியான இருப்பிடம் தெரியவில்லை. இது மூன்றாம் துட்மோசின் பட்டியலில் குறிக்கப்படும் இரகோபுவாக இருக்கலாம். அறிஞர் சிலர் இதைக் கேராவுக்குக் கிழக்கில் 27 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால ரிகாபுவாக அடையாளம் காட்டுவர்.

பெத்ரா (PETRA - பாறை)

இது நபத்தேயர்களின் புகழ்பெற்ற தலை நகரமாகும். இது மேற்கு ஏதோமில் அக்காபாவுக்குச் சுமார் 96 கி.மீ. வடக்கிலும், சாக்கடலுக்குத் தெற்கில் 75 கி.மீ. தொலைவிலும் இருந்தது.

சிக் என்ற ஒரு குறுகிய மலையருவி ஓடும் பள்ளத்தாக்கு வழியாகச் சென்றால் சுமார் 1000 ச.அடி பரப்பளவுள்ள இச்சமவெளியை அடையலாம். இது பல்வண்ணச் செங்குத்தான பாறைகளால் சூழப்பட்டது. இங்கு இடிந்த கோயில்களும், வீடுகளும், ஓர் உரோமைப் பேராலயமும், பாறையில் குடையப்பட்ட குகைகளும் உள்ளன. பெத்ரா, விவிலியத்தில் குறிப்பிடப்படவில்லை. முதன் முதலில் இது கி.மு. நான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்டு உரோமையர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. ஆனால், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் முகமதியர்கள் காலத்தில் அழிக்கப்பட்டது.

இதைப் பழைய ஏற்பாட்டிலுள்ள செலாவாகவும் (நீதி 11:36; 2 அர 14:7; எசா 16:1; 42:11), இரக்கேமாகவும் (எண் 31:8) அடையாளம் காண முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், பெத்ரா, காலத்தால் மிகப் பிந்தியதாகும்.

பெத் ராபா (BETH - RAPHA - ராபாவின் வீடு, அரக்கனின் வீடு)

இவர் யூதாவின் தலைமுறை அட்டவணையில் எஸ்தோனின் புதல்வராகக் குறிப்பிடப்பட்டிருக் கின்றார் (1 நாள் 4:12). இப்பெயர் யூதாவிலுள்ள இடத்தின் பெயரா அல்லது குலத்தின் பெயரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பெத்லகேம் (BETHLEHEM - அப்பம் அல்லது உணவு கிடைக்கும் வீடு, சண்டை நடக்குமிடம், லகுமின் வீடு)

1. இது யூதாவிலுள்ள ஒரு நகரம். தாவீதின் உறைவிடமும், இயேசுவின் பிறப்பிடமும் ஆகும். சில சமயங்களில் "பெத்லகேம் யூதா" என்று குறிப்பிடப்படுகின்றது (நீதி 17:7-9; 19:1-2,18; ரூத் 1:1-2; 1 சாமு 7:12). செபுலோன் பகுதியில் இதே பெயரைக் கொண்ட நகரம் இருப்பதால், இதிலிருந்து வேறுபடுத்திக் காட்ட ,பெத்லகேம் யூதா

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நகர் எருசலேமை எபிரோன், நெகேபு முதலிய நகர்களோடு இணைக்கின்ற தென்வடல் சாலைக்கருகில், எருசலேமிற்குத் தெற்கு, தென்மேற்கில் 10 கி.மீ. தொலைவில் இருக்கிறது.

கி.மு. பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த அமர்னாவின் கடிதங்களில் ஒன்றில் முதன் முதலில் 'பெத்லகேம்' பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆதி 35:19; 40:7-இல் பெத்லகேம் நகரானது, ராகேலை அடக்கம் செய்த இடமாகிய எப்ராத்தாவோடு ஒப்புமைப்படுத்தப் படுகிறது. இந்தக் கணிப்பு பெத்லகேம் நகரில் எப்ராத்தா குலத்தவர்கள் வந்து குடியேறிய பின்புதான் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், ராகேலை அடக்கம் செய்த நகராகிய எப்ராத்தா வடபெத்லகேம் நகருக்கு அப்பால் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நகரானது மீக்காவின் குருவாகிய லேவியர் ஒருவரின் உறைவிடமாகும் (நீதி 17:7-9; 19:1தொ). இதுவே ரூத் நூலின் பின்னணியாகும் (ரூத் 1:1-2.19.24; 2:4; 4:11). இது தாவீது குடும்பத்தாரின் உறைவிடமுமாகும் (1 சாமு 16:4தொ; 17:12.15; 20:6.28). இந்நகரில்தான் தாவீது சாமுவேலால் அபிடேகம் பண்ணப்பட்டார் (1 சாமு 16:1-13). இவ்விடத்தில்தான் பெலிஸ்தியர்களின் படைகள் நிறுத்தப்பட்டிருந்தன (2 சாமு 23:14-16; 1 நாள் 11:16-18). இந்நகர் எல்கானான் உறைவிடமாகும் (2 சாமு 23:24; 1 நாள் 11:26). அசாவேல் இங்குதான் புதைக்கப்பட்டார் (2 சாமு 2:32).

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இந்நகரானது ரெகபயாமால் அரண்சூழக் கட்டப்பட்டது (2 நாள் 11:6). ஆளுநர் கெதல்யா கொலை செய்யப்பட்டதால், இஸ்ராயேல் மக்கள் எகிப்திற்குச் செல்லும் வழியில் கல்தேயருக்கு அஞ்சி, பெத்லேகம் என்ற ஊருக்கு அருகில் தங்கிவிட்டனர் (எரே 41:17). பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களின் எண்ணிக்கையைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில், நூறுபேருக்கு மேல் பெத்லகேம் நகரினைச் சேர்ந்தவர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது (எஸ் 2:21; நெகே 7:26). மீக் 5:2-இல், இஸ்ராயேலில் ஆட்சி செலுத்தப் போகிறமெசியா பெத்லகேம் நகரில் தோன்றுவார் என்று கூறப்பட்டிருக்கிறது.

பெத்லகேம் இயேசு பிறந்த இடமாகும் (மத் 2:1-16; லூக் 2:4-15; யோவா 7:42). ஆதிக்கிறிஸ்தவர்கள் இதை ஒரு புனித இடமாகப் போற்றி வந்தனர். இயேசு ஒரு குகையில் பிறந்தார் என்பது மறைசாட்சியான யுஸ்தினால் இரண்டாம் நூற்றாண்டில் கூறப்பட்டது. 325-இல் கான்ஸ்டன்டைன் எண்கோண வடிவம் கொண்ட பேராலயம் ஒன்றை இக்குகையின் மேல் கட்டினார். இந்த ஆலயம் அழிக்கப்பட்டபின் முதல் யுஸ்தினியன் (கி.பி. 527-65), முந்தைய திட்டத்தைப் பெரிதும் மாற்றி பெரிய ஆலயம் ஒன்றை மறுபடியும் கட்டினார். இவரால் கட்டப்பட்ட ஆலயத்தின் அமைப்புத்தான் இன்றும் இருக்கிறது.

2. பெத்லகேம் செபுலோனின் எல்லைப் பகுதியிலுள்ள ஒரு நகரம் (யோசு 19:15). இஸ்ராயேலின் நீதிபதிகளில் ஒருவராகிய இப்சான் என்பவரின் பிறப்பிடமும், அடக்கம் செய்யப்பட்ட இடமும் பெத்லகேம் நகராகும் (நீதி 12:8.10). இந்நகர் பொதுவாக நாசரேத்திற்கு மேற்கு, வடமேற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள பெயித்லகும் ஆக அடையாளம் காட்டப்படுகிறது. ஒரு செபக்கூடம், ஆலயம் ஆகியவற்றின் சிதைவுகள், பழங்காலத்தில் இஃது ஒரு முக்கிய இடமாக இருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன.

பெத் லகேமியர் (BETHLEHMITE)

எருசலேமுக்குத் தெற்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள (1 சாமு 16:18; 17:58) யூதாவின் பெத்லேகம் குடிமகன்.

பெத் லபவோத்து (BETH - LEBAOTH - சிங்கங்களின் வீடு)

சிமியோனுக்குச் சொந்தமான ஒரு நகரமாகும். இந்நகரம் யூதாவின் தென்பகுதியில் இருந்தது (யோசு 19:6). இந்நகரமும் பெத்பிரீயும் ஒரே

இடத்தைக் குறிக்கலாம் (1 நாள் 4:31). இஃது இருந்த இடம் தெரியவில்லை. ஆனால், இந்நகரம் சாருகென்னுக்கு அருகில் இருந்தது என்பது தெளிவு.

பெத்லயபரா, பெத்-லெ-அபரா (BETH-LE-APHRAH – தூசியின் வீடு. அபராவின் வீடு)

இது அடையாளம் கண்டுகொள்ள முடியாத ஒரு நகரம். இந்நகரானது காத்து நகரத்திற்கு இணையாகக் கூறப்படுவதால், பெத்தேல் அல்லது ஒபிராவை மறைவாகச் சுட்டிக் காட்டுகின்ற பெலிஸ்திய நாட்டின் நகரங்களில் ஒன்றாக இந்நகரமிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பெத் னிம்ரா (BETH - NIMRAH – சிறுத்தைப் புலி வீடு)

இது யோர்தான் பள்ளத்தாக்கைச் சேர்ந்த மோவாபியருடைய சமவெளிகளில் உள்ள ஒரு நகரம். காது கோத்திரத்தாரால் இந்நகரமானது அரண்சூழக் கட்டப்பட்டது (எண் 32:36; யோசு 13:27). இந்நகரம் எண் 32:3-இல் நிம்ரா என்றழைக்கப்படுகிறது. யுசேபியுவின் கூற்றுப்படி இது லியாவுக்கு (பெத்தாராமுக்கு) வடக்கில் 8 கி.மீ. தொலைவில் இருந்தது. எரிகோவுக்கு எதிரில் யோர்தானுக்கு அப்பாலுள்ள வாடி நிம்ரின் ஓடையின் கரையிலுள்ள தெல்நிம்ரின் என்ற பெயரில் பெத்னிம்ரா காக்கப்பட்டுள்ளது. தெல்நிம்ரின் பெத்னிம்ராவின், வெண்கலக் காலத்திய பழங்குடியிருப்பாகும். தெல் பிலெயிபில் மலைக்கு அருகில் இருந்தது.

பெந்தக்கொஸ்தே (PENTACOST)

காண்க. ஐம்பதாம் நாள் விழா.

பெத்யசுதரா (BE - ESHTERAH – சோம்பேறியின் வீடு)

இது யோர்தானுக்குக் கிழக்கே மனாசேயின் கோத்திரத்தாருக்குக் குறிக்கப்பட்ட பகுதியில் உள்ள ஒரு லேவிய நகரமாகும் (யோசு 21:27). இது 1 நாள் 6:71-இல் வரும் இணைப்பட்டியலில் அஸ்தரோத்து என்று குறிக்கப்படுகிறது. இது பெத்-அஸ்தரோத்து என்ற பெயரின் சுருக்கமாக அல்லது எழுத்தர்களின் பிழையாக இருக்கலாம்.

பெயர் (NAME)

I. பழைய ஏற்பாடு: பண்டைக்காலத் தவருக்குப் பெயர் என்பது மரபார்ந்த சுட்டுப்பெயராக மட்டுமின்றி, . உலகில் அவ்வுயிரினுடைய நிலையின் வெளிப்பாடாகவும் இருந்தது. இறைவன் தனது படைப்புகளுக்கு நாள், இரவு, விண்ணுலகு, மண்ணுலகு, கடல் என்று பெயரிடுவதன் மூலம் படைப்பை நிறைவுபடுத்துகிறார் (ஆதி 1:3-10). ஒவ்வொரு விண்மீனையும் அவர் பெயரிட்டழைக்கிறார் (எசா 40:26). ஒவ்வொரு விலங்கிற்கும் பெயரிடுமாறு அவர் ஆதாமிற்கும் கட்டளையிடுகிறார் (ஆதி 2:20). பிற்காலத்தில் முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களுக்கு மனிதர்கள் அடிக்கடி பொருளுடைய பெயர்களை இடுவர். இத்தகைய பழக்கக் குறிப்புகள் பாபேல் கோபுரம் முதலிய நம்ப முடியாத காரணக் கதைகளுக்கு இடமளிக்கும் (ஆதி 11:9).

1. மனிதருடைய பெயர்கள்: பிறப்பின் போது அளிக்கப்படும் பெயரானது சாதாரணமாக மனிதனுடைய செயலையோ, ஊழையோ வெளிப்படுத்துகிறது. இவ்வாறு, யாக்கோபு தகாமுறையில் உரிமையைப் பறித்துக் கொள்பவர் (ஆதி 27:36); அறிவிலியாக இருந்ததால் நாபால் சரியான பெயரைப் பெற்றார் (1 சாமு 25:25). பெயரானது பிறப்பின் சூழ்நிலைகளைப் பிரதிபலிப்பதாகவோ, பெற்றோரால் குறிப்பிடப்படும் எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டு வதாகவோ இருக்கலாம். ராகேல் தனது குழந்தையை "எனது துன்பத்தின் மகனே" என்று அழைத்தவாறு இறக்கிறாள்; ஆனால், யாக்கோபு அவனைப் பென்யமின், "எனது வலது கரத்தின் மகனே!" என்று அழைக்கிறார் (ஆதி 35:18). சில நேரங்களில் இப்பெயரானது குழந்தைக்காக இஸ்ராயேலின் இறைவனுடைய உதவியைக் கேட்கின்ற இறைவாக்கு விருப்பத்தின் மாதிரியாக உள்ளது. எசாயா "இறைவன் காப்பாராக!"

பெயரானது "புகழ்" என்றும் பொருள்படுமாறு (எண் 16:2), மனிதனுடைய சமூகத் திறனையும் வெளிப்படுத்துகிறது. பெயரில்லாமல் இருப்பது மதிப்பில்லாமல் இருப்பதாகும் (யோபு 30:8). மற்றொரு புறம் பல பெயர்களைக் கொண்டிருப்பது முக்கியமானவராக இருப்பதாகும்; பல பணிகளைக் கொண்டிருப்பதாகும்; எனவே, சாலமோன் "ஆண்டவரின் அன்பன்" என்றும் அழைக்கப்பட்டார் (2 சாமு 12:25).

பெயரானது ஆளைக் குறிப்பதால், ஒரு பெயரின் மீது ஏதாவது செய்வதென்பது அவ்வுயிரின்மேல் ஒரு பிடிப்பைக் கொண்டிருப்பதாகும். எனவே, குடிக்கணக்கானது ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அடிமைப்பண்பைச் சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுகிறது (2 சாமு 24). பெயர் மாற்றமானது ஆட்தன்மை மாற்றமாகும்; அது முதல் அம்மனி தன் ஒரு குடியாள் என்று அதற்குப் பொருள் (2 அர 23:34; 24:17). அவர்களுடைய வாழ்வை இறைவன் தனக்கு உரிமையாக்கிக் கொள்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கென இறைவன் ஆபிரகாம் (ஆதி 17:5), சாரா (17:15), யாக்கோபு (32:29) ஆகியோருடைய பெயர்களை மாற்றுகிறார். எனவே, மன்னிக்கப்பட்ட எருசலேமிற்கு நீதியின் நகரம், பிரமாணிக்கமுள்ள பட்டணம் (எசா 1:26), ஆண்டவரின் நகரம் (60:14), தேடிக்கொள்ளப்பட்டவள் (62:12), என் அன்புடையாள் (62:4) என்னும் புதிய பெயர்களை இறைவன் அளிக்கிறார். புதிய உடன்படிக்கையால் இதயங்கள் புதுப்பிக்கப்படும் நகரின் புதிய வாழ்வினை இது வெளிப்படுத்துகிறது.

2. **இறைவனின் பெயர்கள்:** எல்லா மக்களிலும் இறைத்தன்மையின் பெயரானது உண்மையில் அதிக பொருளுடையதாக இருந்தது. பாபிலோனியர் படைப்பின் காலத்தில் தங்களது தலைமைத் தெய்வமான மார்துக்கின் வெற்றியைச் சிறப்பிப்பதற்கென, அவருக்கு ஐம்பது பெயர்களை அளிக்கும் அளவிற்குச் சென்றார்களெனில், கானானியர் தங்களது தெய்வங்களின் பெயர்களைத் "தலைவர்" என்று பொருள் படும் பாகால் என்ற பொதுச் சொல்லில் மறைத்து வைத்திருந்தனர்.

இஸ்ராயேலரிடையில், தனக்கே பெயரை அளிக்கக் கூடியவர் இறைவனே. இதற்கு முன்னர், மோசேயின் கடவுள் அவர்களது முன்னோருடைய கடவுள், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு–வினுடைய கடவுள் என்றே அறியப்பட்டார். யாக்கோபுவுடன் போராடிய வான தூதர் தனது பெயரைக் கூற மறுத்துவிட்டார் (ஆதி 32:30). சிம்சோனுடைய தந்தைக்கு "வியப்புக்குரியவர்" என்னும் சார்புப்பெயர் மட்டுமே கூறப்படுகிறது (நீதி 13:18). மூதாதையரின் காலங்களில் சதாய் (மலையைச் சார்ந்தவர்) முதலிய சார்புப்பெயர்கள் மற்றும் ஈசாக்கின் அச்சம் அல்லது யாக்கோபுவின் வலியவர் போன்ற சொல்லமைப்புகள் மூலமாக இஸ்ராயேலின் இறைவன் அடையாளங் காட்டப்படுகிறார். ஆனால், ஒரு நாள் ஓரேபில் இறைவனே தமது பெயரை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். "இருக்கிறவர் நாமே" (யாத் 3:13-16; 6:3) என்ற பயன்படும் வாய்பாடானது யாக்கோபுவிற்கு அளிக்கப்படாமல் இருப்பதற்கென வானதூதர் யாக்கோபுவுக்கு மறுத்ததை ஒத்த மறுதலிப்பாகச் சில நேரங்களில் கருதப்படுகிறது. ஆனால், புனிதவாசகம் இந்த வாய்பாட்டுக்கு ஒரு நேரடிப்பொருளை அளிக்க விரும்புகிறது. உண்மையில் சூழ்நிலையின்படி இப்பெயரானது மோசேயின் பணிக்கு மக்கள்முன் சான்று பகர வேண்டும்; "நானாக இருக்கிறவர் என்னை உங்களிடம் அனுப்புகிறார்," என்று மோசே கூறுவார்; மக்கள் புனித மலையில் அவரை வழிபட வருவார்கள். எவ்வாறாயினும், இறைவன் தமது மக்களிடையில் உள்ளார் என்பதை இப்பெயர் குறிப்பிடுகிறது. அவரே யாவே ஆவார்.

3. **இறைவனுடைய பெயரை அழைத்தல்:** இறைவன் தமது பெயரை வெளிப்படுத்தினாரெனில், அதிகார பூர்வமானதாகிய அவரது உண்மையான ஒரே பெயரின்கீழ் மட்டுமே அவரை

ஆராதிக்க வேண்டும் என்பதற்காகவே (யாத் 3:15). இவ்வாறு, வெற்றியின் போதும், அதற்குப் பின்னும் ஒன்றுபட்ட கோத்திரங்களின் முனைப்பான அறைகூவலாக அஃது இருக்கும் (நீதி 7:20). ஒரே உண்மையான இறைவனுடைய பெயர் இது மட்டுமே எனச் சிறிது காலங்கழித்து இறைவாக்கினர்களும் கூறுவர். "நமக்கு முன் தெய்வம் ஏதும் உண்டானதில்லை; நமக்குப்பின் ஏற்படப்போவதுமில்லை. நாமே கடவுள், நாமே யாவே" (எசா 43:10-11).

பின்னர், அது மட்டுமே இஸ்ராயேலின் உதடுகளில் அங்கீகரிக்கப்பட்ட பெயராக இருக்கும் (யாத் 23:13); தாவீது எருசலேமைத் தனது சமயத் தலைநகராக அமைத்தபோது அந்நகரில் தொழுது வேண்டும் ஒரே பெயராக இருக்கும்; ஏனெனில், "பொறாதவர்" என்பதே ஆண்டவர் பெயர், ஆம். அவர் பொறாத இறைவன்'' (யாத் 34:14). ''ஆண்டவருடைய பெயரைக் கூவியழைப்பதென்பது" இறைவனுக்கு வழிபாடு செலுத்துவதும் அவரை நோக்கிச் செபிப் பதுமாகும். அவர் பெயர் உயர்க எனப் பறைசாற்றப்பட்டது (எசா 12:4). அவர் அழைக்கப்படுகிறார் (சங் 28:1; காண்க. எசா 41:25); அவர் கூவியழைக்கப்படுகிறார் (சங் 99:6). ஆனால், இவ்வாறாக இறைவன் தமக்கு உரிய பெயரை இஸ்ராயேலுக்கு வெளிப்படுத்தினாரெனில், இஸ்ராயேல் ''ஆண்டவருடைய பெயரை வீணாக உச்சரிக்கக்கூடாது'' (யாத் 20:7; உப 5:11). உண்மையில் பழிக்கப்படுவதும், அதன் மூலமாக இறைவனைச் சோதிப்பதும் அவர்களைச் சார்ந்து இருக்கவில்லை. இத்தகைய நிலையானது இனி இறைவனுக்கு ஊழியம் புரிவதாக இல்லாமல், தங்களுடைய நோக்கங்களுக்காக அவரை உபயோகிப்பதாகவே இருக்கும்.

4. **இறைவனாகிய பெயர்:** இறைவன் தன்னையே தனது பெயருடன் எந்த அளவிற்கு ஒன்றுபடுத்தினாரெனில், அதனைப் பற்றிப் பேசும்போது தம்மையே குறிப்பிடுகிறார். இப்பெயரே அன்பு செய்யப்பட்டது (சங் 5:12), புகழப்பட்டது (சங் 7:18), மற்றும் புனிதப்படுத்தப்பட்டது (எசா 29:23). அது பயங்கரமான (உப 28:58), முடிவில்லாப் (சங் 135:13) பெயர். "தன்னுடைய பெருமை மிக்க பெயருக்காக" (யோசு 7:9), தன்னுடைய பெயரின் பொருட்டு (யாத் 20:9), அவர் இஸ்ராயேலின் சார்பில் செயல்படுகிறார். அதாவது, அவரது மகிமைக்காகவும், உயர்ந்தவராகவும் புனித மானவராகவும் அங்கீகரிக்கப்படுவதற்காகவுமே.

அணுகமுடியாத, மறைபொருளான இறைவனுடைய யாவும் கடந்த நிலையை நன்கு வலியுறுத்த, இப்பெயரானது இறைவனைக் குறிப்பிடுவது மட்டும் போதுமானதாகும். இவ்வாறு, இறைவனுக்குத் தகுதியற்ற முறையில் இட எல்லைக்குட்படுத்துவதைத் தவிர்க்க இறைவன் "தமது பெயரைத் தங்கச்செய்த இடமாக" ஆலயம் உள்ளது (உப 12:5). அவரது பெயரைக் கொண்டுள்ள ஆலயத்தில் மட்டுமே (எரே 7:10,14) ஒருவன் அவரது பிரச்சன்னத்திற்குள் வருகிறான் (யாத் 34:23). அதுவே அழிவின் சோதனைக்குள் நாடுகளைக் கடந்து செல்லுமாறு செய்ய, தொலைவிலிருந்து வருகின்ற பெயராகும் (எசா 30:27-38). இறுதியாக ஒரு பிற்காலப் பகுதியில், இராபிகளின் நூலில் காணப்படுவதுபோல், பெயர் என்ற சொல், வேறு எந்த அடைமொழியும் இன்றி யாவேயைக் குறிப்பிடுகின்றது (லேவி 24:11-16). இன்னும் வலியுறுத்தப்பட்ட மரியாதையினால் யூதத்துவம் உண்மையில் ஓரேபில் வெளிப்படுத்தப்பட்ட பெயரை உச்சரிக்கத் துணியாது வாசிக்கப்படும்போது இறைவன் (எலோகீம்) அல்லது பெரும்பாலும் ''என் ஆண்டவரே'' (Adonai) என்று மாற்றியமைக்கப்படும். இவ்வாறு யூதர்கள் யாவே என்ற பெயரை எழுதாமல் ஆண்டவரே என்று எழுதி, புனித இறைவாக்கு நூல்களை எபிரேய மொழியினின்று கிரேக்க மொழிக்கு மொழி பெயர்ப்பர். யாவே என்ற பெயர் பல்வேறு வடிவங்களின்கீழ் மாந்திரீக அல்லது

அவசங்கையான உபயோகத்திற்கு உட்படுவது போல், ஆண்டவர் என்னும் இப்பெயரானது தனது அர்ப்பணிப்பினைப் பெறுவதற்குப் புதிய ஏற்பாட்டுக் காலம் தொடங்கவேண்டும்.

II. புதிய ஏற்பாடு:

1. தந்தை என்ற பெயர்: பழைய ஏற்பாட்டில் இறைவன் தனது பெயருக்காக உண்டாக்கிய வெளிப்பாட்டிற்கு ஒத்தவாறு, இயேசு தனது தந்தையின் பெயரைத் தனது சீடர்களுக்கு வெளிப்படுத்துகின்ற வெளிப்பாட்டை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம் (யோவா 17:6.26). தம்மை மகனாக வெளிப்படுத்திய நிலையில், தந்தை என்ற பெயரானது இறைவனுடைய உள்தன்மையை மிக ஆழமாக வெளிப்படுத்துவது என அவர் வெளிப்படுத்துகிறார். இயேசுவை மகனாக உடைய (மத் 11:25-27) இத்தந்தை, தமது மகனில் விசுவசிப்பவர்கள் அனை வருக்கும் தனது தந்தை நிலையை விரிவுபடுத்துகிறார் (யோவா 20:17).

இயேசு தமது பெயரை மகிமைப்படுத்துமாறு தந்தையைக் கேட்கிறார் (யோவா 12:28); அதனைப் புனிதப்படுத்த அவரைக் கேட்குமாறு அவர் தமது சீடர்களையும் அழைக்கிறார் (மத் 6:9இணை). தமது மகிமையையும் வல்லமையையும் வெளிப்படுத்துவதிலும் (உரோ 9:17; காண்க. லூக் 1:49), தமது மகனை மகிமைப்படுத்துவதிலும் (யோவா 17:1; காண்க. 5:23-24) இந்த இறைவன் இதனைச் செய்வார். இறைவனுடைய பெயரைப் புகழவும் (எபி 13:15), தங்கள் நடத்தை கடவுளுடைய பெயருக்கும் போதனைக்கும் இழுக்கு ஏற்படாதவாறு இருக்கவும் கிறிஸ்தவர்கள் கடமை கொண்டுள்ளனர் (உரோ 2:24; 1 திமொ 6:1).

2. இயேசு என்ற பெயர்: இயேசுவின் பெயரை நோக்கி வேண்டுவதன் மூலம் சீடர்கள் நோயாளிகளைக் குணமாக்குகின்றனர் (அ.ப. 3:6; 9:34); பேய்களை ஓட்டுகின்றனர் (மாற் 9:38; 16:17; லூக் 10:17; அ.ப. 16:18; 19:13); எல்லாவிதப் புதுமைகளையும் செய்கின்றனர் (மத்7:22; அ.ப.4:30). இவ்வாறு, தமது பெயர் சுட்டிக்காட்டு கின்றவாறே இயேசு தோன்றுகிறார்: மீட்கிறவர் (மத் 1:21-25), நோயாளிகளுக்கு உடல்நலத்தை அளிப்பவர் (அ.ப. 3:16), மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, தம்மில் விசுவசிப்பவர்களுக்கு முடிவில்லா மீட்பைப் பெற்றுத் தருபவர் (அ.ப. 4:7=12; 5:31; 13:23).

3. ஆண்டவர் என்ற பெயர்: இயேசுவை உயிர்த்தெழச் செய்து, தமது வலப்புறத்தில் அமரச்செய்ததன் மூலம், எல்லாப் பெயரிலும் பெரிய பெயரை இறைவன் அவருக்கு அளித்துள்ளார் (பிலி 2:9; எபே 1:20-21). இறைவனுடைய பெயரினின்று வேறுபடாத (திருவெளி 14:1; 22:3-4), அவரது மறைபொருளில் பங்கேற்கின்ற (19:12) புதிய பெயராக் (3:12), அஃது உள்ளது. விவரிக்க முடியாத இப்பெயரானது, இறைவனுக்குரிய அதே அளவில் உயிர்த்த இயேசுவிற்கு உரியதாக உள்ள ஆண்டவர் என்ற சிறப்புப்பெயரிலும் (பிலி 2:10-11 = எசா 45:23; திருவெளி 19:13, 16 = உப 10:17), எப்படைப்புடனும் அவர் பகிராத மகன் என்னும் அடையாளப் பெயரிலும் மொழிபெயர்க்கப்படுகிறது (எபி 1:3-5; 5:5; காண்க. அ.ப. 13:33; உரோ 1:4; சங் 2:7). இறைவனைப் பற்றிய பேசும்போது யூதத்துவம் பயன்படுத்தும் சிறப்புப் பெயர்களுள் ஒன்றை இயேசுவிற்கு அளிக்க முதல் கிறிஸ்தவர்கள் தயங்கவில்லை. "பெயருக்காகத் துன்புற, தகுதியுடையவர்களெனக் கருதப்பட்டதற்காக" (அ.ப. 5:41) அப்போஸ்தலர்கள் மனமகிழ்ந்தனர் என்று கூறப்படுகிறது. "கிறிஸ்துவின் பெயருக்காகப் பயணத்தை மேற்கொண்ட" நற்செய்திப் பணியாளர்களும் சுட்டிக் காட்டப்படுகின்றனர் (3 யோவா 7).

அ) கிறிஸ்தவ விசுவாசம்: இறைவன் இயேசுவை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார் என்று விசுவாசிப்பதிலும், இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிடுவதிலும், ஆண்டவருடைய

பெயரைச் சொல்லி மன்றாடுவதிலும் கிறிஸ்தவ விசுவாசம் அடங்கியுள்ளது. இந்த மூன்று சொற்றொடர்களும் செயலளவில் சமமானவை (உரோ 10:9-13). "ஆண்டவருடைய பெயரைச் சொல்லி மன்றாடுவோர்" என முதல் கிறிஸ்தவர்கள் விரும்பி தங்களை அடையாளப்படுத்தினர் (அ.ப. 9:14.21; 1 கொரி 1:2; 2 திமொ 2:22; காண்க. அ.ப. 2:21 யோவே 3:5). இயேசுவை ஆண்டவராக அங்கீகரித்ததையும், அங்கே அவர்கள் குறிப்பிடுகின்றனர் (அ.ப. 2:36). குறிப்பாசு, விசுவாச அறிக்கையானது, ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் (அ.ப. 8:16; 19:5; 1 கொரி 6:11), கிறிஸ்துவின் பெயரால் (கலா 3:27), அல்லது கிறிஸ்து இயேசுவின் பெயரால் (உரோ 6:3) அளிக்கப்படும் திருமுழுக்கின்போது சுமத்தப்படுகிறது. புதுக்கிறிஸ்தவர் ஆண்டவருடைய பெயரைச் சொல்லி மன்றாடுகின்றனர் (அ.ப. 22:16). ஆண்டவருடைய பெயர் அவர்மேல் வேண்டப்படுகிறது (யாக் 2:7). யாருடைய (ஆண்டவர்) தன்மையைத் தாம் ஏற்றுக்கொண்டாரோ, அவரது வல்லமையின்கீழ் அவர் தன்னைக் கண்டடைகிறார்.

யோவானில், கிறிஸ்தவ விசுவாசத்தின் உரிய புறப்பொருளாக ஆண்டவர் பெயரைவிட மகன் பெயரே அதிகமாகச் சிறப்புப் பெறுகிறது. வாழ்வினை அடைவதற்கு இறைவனுடைய ஒரே மகனில் விசுவாசம் கொள்வது அவசியமாகும் (யோவா 3:17-18; காண்க. 1:12; 2:23; 20:30-31; 1 யோவா 3:23; 5:5. 10.13). அதாவது, அவரே இறைவனின் மகன் என்பதை ஏற்றுக்கொள்வதன் மூலம் இயேசுவின் ஆட்தன்மையோடு இணைத்துக் கொள்வதாகும். அவரது உண்மையான தன்மையை வெளிப்படுத்துவது இறைவனுடைய மகன் என்ற பெயரேயாகும்.

ஆ) அப்போஸ்தலிக்கப் போதனை: இயேசு கிறிஸ்துவினுடைய பெயரைப் பறை சாற்றுவதையே இது தனது பொருளாகக் கொண்டுள்ளது (லூக் 24:46-47; அ.ப. 4:17-18; 5:28.40; 8:12; 10:43). போதிப்பவர்கள் இப்பெயருக்காகத் துன்புற வேண்டும் (மாற் 13:13). மகிழ்ச்சி கொள்வதற்கு இஃது ஒரு காரணமாகவும் அவர்களுக்கு இருக்கவேண்டும் (மத் 5:11 இணை; யோவா 15:21; 1 பேதுரு 4:13-16). அவரது பெயருக்காகத் துன்புற்றாலும் (திருவெளி 2:3), அதனை விடாமல் பற்றிக்கொண்டு (2:13) அதை மறுக்காத (3:8) கிறிஸ்தவர்களுக்குத் திருவெளிப்பாட்டு நூல் அளிக்கப்படுகிறது. இயேசுவினுடைய பெயருக்கான பணியானது சிறப்பாகப் பவுலின்மேல் சுமத்தப் பெற்றுள்ளது. அவர் அதனை ஓர் ஆணையாகவும் (அ.ப. 9:15), துன்பத்திற்குக் காரணமாகவும் (9:16) பெற்றார். ஆயினும், அவர் தனது மறைபணியைத் துணிவுடனும் பெருமையுடனும் நிறைவேற்றுகிறார் (9:20.22.27-28). ஏனெனில், அவர் தமது வாழ்வையே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பெயருக்குப் பணயமாக்கி (15:26), அவருக்காகச் சாகவும் தயாராக உள்ளார் (21:13).

இ) கிறிஸ்தவ வாழ்வு: கிறிஸ்தவ வாழ்வானது முழுமையாக விசுவாசத்தினால் வளப்படுத்தப்படுகிறது. இயேசுவின் பெயரால் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன (மத் 18:20). வேடதாரிகள் எச்சரிக்கையாகத் தவிர்க்கப்பட வேண்டுமெனினும் (மாற் 13:6இணை), அவரது பெயரில் வருபவர்கள் வரவேற்கப்படுகின்றனர் (மாற் 9:37 இணை). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயர் புகழப்படுமளவிற்குத் தன்னையே நடத்துவதில் (2 தெச 1:11-12) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் ஒருவன் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறான் (எபே 5:20; கொலோ 3:17). செபத்தில் தந்தையானவர் அவரது மகனுடைய பெயரால் மன்றாடப்படுகிறார் (யோவா 14:13-16; 15:16; 16:23-24, 26-27).

4. மற்றப் பெயர்கள்: ஒவ்வொரு படைப்பும் தனக்குக் குறிக்கப்பட்ட பணிக்கேற்ற பெயரைக் கொண்டுள்ளது. அதனுடைய பணியானது இறைத்தன்மையானதாக இருக்கும்போது

யோவான் போன்று. அதனுடைய பெயர் விண்ணிலிருந்து வருகிறது (லூக் 1:16.63). மனிதரால் அளிக்கப்படும் போதும் அஃது இறைவனுடைய வழிகாட்டுதலின் அறிகுறியாக உள்ளது. செக்கரியா (1:5,72: "இறைவன் நினைவு கூர்ந்தார்"), எலிசபெத்து (1:5,73: "இறைவன் என் உறுதியாவார்"), மரியா (1:27.46.52: "போற்றப்படுகிற, உயர்த்தப்பட்ட"). சீமோனுக்குப் பேதுரு என்னும் பெயரை அளிப்பதில்தான் அவருக்கு அளிக்கும் பங்கையும், அவரில் படைக்கின்ற புதிய மனப்பான்மையையும் இயேசு சுட்டிக்காட்டுகிறார் (மத் 16:18).

நல்ல ஆயன் தனது மந்தையிலுள்ள ஒவ்வொரு ஆட்டின் பெயரையும் அறிவான் (யோவா 10:3). தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பெயர்கள் விண்ணகத்தில் (லூக் 10:20), வாழ்வின் நூலில் பொறிக்கப்பட்டுள்ளன (பிலி 4:5; திருவெளி 3:5; 13:8; 17:6). மகிமையில் நுழைந்தவுடன் புதிய விவரிக்க முடியாத பெயரை அவர்கள் பெறுவர் (திருவெளி 2:17). இறைவனுடைய வாழ்வில் பங்கு பெறுவதன் வழியாக, தந்தை மற்றும் மகனுடைய பெயரை அவர்கள் அடைவர் (3:12; 14:1). இறைவன் அவர்களைத் தனது மக்கள் என்று அழைப்பார் (மத் 5:9). ஏனெனில், அவர்கள் உண்மையில் அவ்வாறே உள்ளனர் (1 யோவா 3:1).

பெயல்செபூல், பெயல் செபூபு (BEEL ZEBUL, BEEL ZEBUB - விண்ணகத் தலைவன், ஈக்களின் தலைவன்)

பேய்பிடித்த ஒருவரை இயேசு சுகமாக்கியபோது (மத் 12:24; மாற் 3:22; லூக் 11:15), பரிசேயர் "பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்" என்று கூறி இயேசுவை ஏளனம் செய்தனர். பெயல் செபூல், பெயல் செபூபு (ஈக்களின் தலைவன்) என்ற பெலிஸ்தியத் தேவதையாக (2 அர 1:2-3) அடிக்கடி அடையாளம் காட்டப்பட்டாலும் பெயல் செபூல் என்ற சொல்லுக்குப் "பாகால் இளவரசன்" என்ற பொருளே மேலானதாகும். பெயல்செபூல் பழைய ஏற்பாட்டில் பேயோடோ, சாத்தானாடோ அடையாளம் காட்டப்படவில்லை. இப்பெயரோடு பழைய ஏற்பாடு கொண்டிருக்கும் தொடர்பு எதுவானாலும், புதிய ஏற்பாட்டில் பெயல்செபூல் பேய்களின் தலைவனாகக் (சாத்தானாகக்) கருதப்பட்டது. இயேசு, தனது செயல்கள் இறை அரசின் தொடக்கத்தைக் குறிக்கின்றன என்றும், அவை சாத்தானின் அரசுக்கு எதிராகச் செய்யப்படுகின்றன என்றும் தெளிவு படுத்துகிறார் (மத் 12:17-28 இணை).

பெயிபா (PHOEBE - ஒளிமயமான)

இவள் ஒரு கிறிஸ்தவப் பெண் திருத்தொண்டர். இவள் கொரிந்துவின் கிழக்கிலுள்ள துறைமுகத்தின் அருகில் உள்ள கெங்கிரேயா நகரில் வாழ்ந்தவள். இவள் உரோமைக்குச் சென்றபோது பவுல் இவளையும் இவள் அப்போஸ்தலர்களுக்குச் செய்த உதவிகளையும் பற்றிக் கூறினார் (உரோ 16:1-2). ஒருவேளை இவள்தான் உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகத்தை அங்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.

பெயுலா (BEULAH - திருமணமான)

எருசலேமின் வளமிக்க எதிர்காலத்தைக் குறிக்கும் இரு உருவகப்பெயர்களுள் இதுவும் ஒன்று (எசா 62:4; காண். 54:1-8). இஸ்ராயேல் யாவேயின் மணமகளாவாள் என்ற கருத்தை எரே 2:2; ஒசே 2:14-20-இல் காணலாம். இக்கருத்து, திருச்சபையும் (எபே 5:23-27), புதிய எருசலேமும் (திருவெளி 21:2.9தொ) கிறிஸ்துவின் மணமகளாவர் என்ற புதிய ஏற்பாட்டுக் கருத்தில் உச்ச நிலையடைகிறது.

பெயுல்லத்தாய் (PEULLATHAI - யாவேயின் கைம்மாறு)

இவர் ஆலய வாயில் காப்போரில் ஒருவர். இவர் லேவியரும், ஓபேது - ஏதோமின் மகனும் ஆவார் (1 நாள் 26:5).

பெயேரா (BEERA – கிணறு)

இவர் ஆசேரின் தலைமுறைப் பட்டியலில் வருகின்ற சோபகுவின் பதினொன்றாவது மகனாவார் (1 நாள் 7:37).

பெயேரா (BEERAH – கிணறு)

பெயேரா என்பவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் மூன்றாம் திகிலத்-பிலேசரால் நாடு கடத்தப்பட்டவராவார். இவர் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பாகாலின் மகன் (நாள் 5:6).

பெயேரியர் (BEERI – கிணற்றைச் சேர்ந்த)

1. ஓர் இத்தியர். ஏசாவின் மனைவியான யூதித்தின் தந்தை (ஆதி 26:34).

2. இறைவாக்கினர் ஓசேயாவின் தந்தை (ஓசே 1:1).

பெயேரேலிம், பெயேர் - ஏலிம் (BEER - ELIM – தலைவர்களின் கிணறு, தெரபித்தின் கிணறு)

இது மோவாபியர்களின் நகரமாகும் (எசா 15:8). இதுவும், பெயேர் (1) என்னும் இடமும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். இங்கு இஸ்ராயேலர் தங்கினர் (எண் 21:16). இது வாடி எத்–தெமேதாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெயரோத்தியர் (BEEROTHITES)

பெயரோத்தின் குடிமக்கள் (2 சாமு 4:3.5.9; 23:37).

பெயரோத்து (BEEROTH – கிணறுகள்)

இது பென்யமினின் ஆட்சிப்பகுதியிலுள்ள நகரமாகும் (2 சாமு 4:2). கிபயோனியர்களைப்போல் இஸ்ராயேலுடன் உடன்படிக்கை செய்து கொண்ட நான்கு இவ்வியர் நகரங்களில் ஒன்றாகும் (யோசு 9:17).

பென்யமின், எப்பிராயிம் ஆகிய இருவருக்கும் குறிக்கப்பட்ட பகுதிக்கு இடையில்தான் பெயரோத்து இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது (2 சாமு 4:2). இந்நகரம் பென்யமினுக்கு உரித்தான பகுதிகளில் ஒன்றாகும் என்று கருதப்படுகிறது. 2 சாமு 4:2-இல் பெயரோத்தியர் கித்தயிமுக்கு ஓடிப்போனார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அனேகமாக, கில்போவா வெற்றிக்குப்பின், பெலிஸ்தியரின் தாக்குதலால் இந்நிகழ்ச்சி நடந்திருக்கலாம்.

பெயரோத்தியரான நகுராய் யோவாபின் படைக்கலன் தாங்குவோனாக இருந்தார் (2 சாமு 23:37; 1 நாள் 11:39). 2 சாமு 4-இல் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சியின்படி பெயரோத்தியரான இரேக்கபு, பாநா என்ற இரண்டு சகோதரர்களும் இசுபொசேத்தின் காவல் தலைவர்களாவர். இவர்கள் இசுபொசேத்தின் ஏழாவது ஆட்சியாண்டில் அவரைக் கொலை செய்தனர். ஏனென்றால், சவுல், இவ்வியர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியதால் அதற்குப் பழிக்குப் பழிவாங்கும் பொருட்டு, இச்செயலை இவர்கள் செய்திருக்கலாம் என்று சிலர் கருதுவர். இந்தக் கருத்திற்கு வாசகத்திலிருந்து எவ்வித ஆதாரங்களும் காணப்படவில்லை. ஆனால், இவர்கள் தாவீதின் தயவைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் இச்செயலைச் செய்திருக்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. ஆனால், தாவீது அவர்கள் இருவரையும் கொலைசெய்யக் கட்டளையிட்டதால், அவர்கள் நம்பிக்கை வீணடிக்கப்பட்டு விட்டது (2 சமு 4:9-12).

இஃது இருந்த இடம் எதுவென்று அடையாளம் காட்ட முடியவில்லை. ஆனால், ராமல்லாவிற்குக் கிழக்கே ஒரு கி.மீ. தொலைவிலுள்ள ஏல்–பிரேவாக இருக்கலாம் என்று சிலர் கூறுவது சரியான இடமாகத் தோன்றவில்லை. மேலும், ஆல்பறைட் என்பவர் தெல் ஏன்-நகேசுக்குத் தென்புறத்தில் ஒரு கி.மீ. தொலைவிலிருந்த முக்கியமான நகரத்தைப் பெயரோத்தாக அடையாளம் காட்டுவார். வேறுசிலர் எருசலேமுக்கு வடமேற்கில் 8 கி.மீ. தொலைவிலுள்ள நெபி சம்வில்லை அடையாளம் காட்டுவர். இங்கு நிறைய தண்ணீர் கிடைத்தது. இது வெறுக்கப்பட்ட சமாரியாவின் பகுதிக்கு வெளியே இருந்தது. ஒரு நாள்

பயணத்திற்குப்பிறகு தங்குவதற்கு வசதியான இடமாக இருந்தது. ஆகவே, எருசலேமிலிருந்து கலிலேயா திரும்பிய திருப்பயணிகள் தங்கிச் செல்லும் இடமாக இருந்தது. பாரம்பரியப்படி, இங்குதான் யோசேப்பும் மரியாளும் வீடு திரும்பும் போது தங்கள் குழுவில் இயேசு இல்லை என்று அறிந்தனர் (லூக் 2:44).

பெயரோத் - பென - யாக்கான் (BEEROTH - BENE - JAAKAN - யாக்கானுடைய மகனின் கிணறு)

இது ஏதோம் நாட்டின் எல்லைக்கருகில் இஸ்ராயேல் மக்கள் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்த இடம். இவ்விடத்திற்கு அருகில்தான் ஆரோன் இறந்து அடக்கம் செய்யப்பட்டாரென்று வரலாறு கூறுகிறது (உப 10:6). எண் 33:31தொ- இல் இது பெனயாக்கான் என்றழைக்கப்படுகிறது. ஒரு வேளை இவ்விடம் ஏல்-அவுயாவுக்குத் தெற்கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள ஏல் - பிரேயின் ஆக இருக்கலாம். 1 நாள் 1:42-இல் குறிப்பிடப்பட்டுள்ள தலைமுறை அட்டவணையில் இவ்விடம் யாக்கான் என்று அழைக்கப்படுகிறது.

பெயேர் (BEER - கிணறு)

1. இஸ்ராயேலர் பாலைவனப் பயணத்தில் பாளையம் இறங்கிய ஓர் இடமாகும். இவ்விடத்தில் இளவரசர்களும், மக்கள் தலைவர்களும் கிணறு ஒன்று தோண்டினார்கள் (எண் 21:16.18). வாடி எத்-தெமேதுதான் கிணறு இருந்த இடமாக இருக்கலாம். ஏனென்றால், குழி தோண்டியவுடன் போதுமான அளவிற்குத் தண்ணீர் தருகின்ற இடமாகும். இவ்விடம் அர்னோன் ஆற்றுக்கு வடபுறத்திலுள்ள இடமாக இருக்கலாம். ஏலிம் கேணிகளும் (எசா 15:8) இதே இடத்தில் இருந்திருக்கலாம். ஆகவே, இதுவும் பெயரேலிமும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

2. கிதியோனின் கடைசி மகன் யோத்தாம் தன்னுடைய கற்பனைக் கதையைக் கூறி, பின்பு ஓடிப்போய்த் தங்கி வாழ்ந்த இடம் (நீதி 9:21). இதுவும் பெயரோத்தும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். சிலர் இவ்விடத்தைப் பெய்சானுக்கு வடக்கிலும், தாபோர் மலைக்குத் தென்மேற்கிலும் உள்ள ஏல்-பிரே என்ற இடத்தோடு தொடர்பு படுத்துகின்றனர். இவ்விடம் எலுதெரப்பொலிக்கு வடக்கே 12 கி.மீ. தொலைவில் இருந்ததாக யுசேபியு கூறுகிறார்.

பெயர் - செபா (BEER - SHEBA - சத்தியத்தின் கிணறு, எழுவரின் கிணறு)

இது நெகேபுவின் முக்கியமான நகரமாகும். இஃது ஆதி காலத்திலிருந்து முக்கியமான, புனித இடமாகக் கருதப்படுகின்றது. இப்பெயருக்கு "எழுவரின் கிணறு" என்று பொருள் கொடுக்கப்படுகிறது. அங்கு ஏராளமான நீரூற்றுக்கள் காணப்படுவதால் இப்பெயர் வந்திருக்கலாம். ஆகார் என்பவள் சாராளிடமிருந்து ஓடியபொழுது பெயேர்-செபா வழியாகத் தான் சென்றிருக்கிறாள் (ஆதி 1:24). இவ்விடத்திலிருந்த கிணற்றிற்கு யார் உரியவர் என்ற குழப்பத்திலிருக்கும்பொழுது, ஆபிரகாம், தாமே வெட்டியதாக அபிமெலக்குமுன் சத்தியம் செய்து கொடுத்தார். பின், அவ்விருவரும் அக்கிணற்றைக் குறித்தே உடன்படிக்கை செய்து கொண்டனர் (ஆதி 21:25-33). மேலும், ஆபிரகாம் ஏழு பெண் ஆட்டுக்குட்டிகளை அபிமெலக்கிற்கு வழங்கியதாலும், அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் சத்தியம் செய்து கொள்வதாலும் பெயேர் - செபா என்ற பெயரின் பொருளானது இரு வகையில் விளக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. மேலும், அபிமெலக்கும், ஈசாக்கும் சத்தியம் பண்ணிக் கொண்டதாகவும், இப்பெயருக்கும் இந்நிகழ்ச்சிக்கும் தொடர்பிருப்பதாகவும், கூறப்பட்டிருக்கிறது (ஆதி 26:31-33).

ஆபிரகாம் (ஆதி 22:19), ஈசாக்கு (26:23; 28:10) ஆகிய இருவரும் சிலகாலங்கள் பெயேர் - செபாவில் தங்கி வாழ்ந்திருந்திருக்கின்றனர். ஆனால் ஆபிரகாம் அங்குத் தங்கியிருந்தபொழுது அவருக்கும் இந்த இடத்திற்குமுள்ள தொடர்புக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரப்படவில்லை. இங்குதான்

ஈசாக்குக்கும் (ஆதி 26:23), யாக்கோபுக்கும் (46:1-5) ஆண்டவரின் காட்சி அருளப்பட்டிருக்கிறது. எனவேதான், இவ்விடம் புனித இடமாகக் கருதப்பட்டது. பெயேர்-செபா யூதாவின் நகரங்களில் ஒன்றாகவும் (யோசு 15:28), அதே நேரத்தில் சிமியோனின் நகரங்களில் ஒன்றாகவும் (1 நாள் 4:28) குறிப்பிடப்பட்டுள்ளது.

யூதா நாட்டின் அரசராகயிருந்த யோவாசின் தாய் சிபியா என்பவள் பெயேர் - செபாவிலிருந்து வந்தவள் (2 அர 12:2; 2 நாள் 24:1). சாமுவேலின் புதல்வர்கள் பெயேர் - செபாவில் நீதிபதிகளாக இருந்தனர் (1 சாமு 8:2). இந்த இரண்டு நிகழ்ச்சிகளைத் தவிர இவ்விடம் இஸ்ராயேல் வரலாற்றில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், இஸ்ராயேலின் வட, தென்புற ஆட்சிப்பகுதியைக் குறிப்பதற்காக, "தாண் முதல் பெயேர்-செபா வரை" என்று அடிக்கடி கூறப்பட்டிருக்கிறது (நீதி 20:1; 1 சாமு 3:20; 2 சாமு 24:15; 17:11; 1 அர 5:5; 1 நாள் 21:2; 2 நாள் 3:5); அல்லது யூதாவின் தென் எல்லையாகக் கூறப்பட்டுள்ளது (2 சாமு 24:7; 1 அர 19:3; 2 அர 23:8. 2 நாள் 19:4). இந்நகரம் கி.மு. 701-இல் சனகெரிபுவால் அழிக்கப்பட்டது. ஆனால், அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தபின், மக்கள் குடியேறிய யூதா நாட்டின் நகரங்களில் பெயேர்-செபாவும் ஒன்றாகும் (நெகே 11:27.30). ஆமோ 5:5; 8:14 - பெயேர்-செபாவில் 'புனித இடம்' இருந்ததாகச் சுட்டுகிறது. ஆனால், இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறுவதற்கு முன்னே "புனித இடம்" அங்கு இருந்ததாகக் குல முதியவர்கள் பற்றி நிகழ்ச்சிக் குறிப்புகள் சுட்டுகின்றன.

இந்நகரின்பெயர் எபிரோனுக்குத் தெற்கில் 45 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலப் பிர் எஸ்-செபா என்ற பெயரில் பாதுகாக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக் குடியிருப்பு இக்கால நகரத்திற்குக் கிழக்கில் 4 கி.மீ. தொலைவில் இருந்திருக்க வேண்டும். இவ்விடம் நெகேபின் பயிரிடப்பட்ட நிலங்கள் மற்றும் புல்வெளிக்குத் தெற்கில் இருந்திருக்க வேண்டும். இது கடல் மட்டத்திலிருந்து 300 கி.மீட்டர் உயரத்திலிருந்தது. இதற்குச் சிறிது வடக்கிலிருந்த யூதாவின் மலைகள் 600 மீட்டர் உயரம் உடையவையாகும். சுற்று வட்டாரத்தில் இங்கு மட்டும் தான் தண்ணீர் அதிகம் கிடைத்ததால், பழங்காலத்திலிருந்தே இங்கு மக்கள் குடியிருந்தனர். இதன் அருகில் வேறு குடியிருப்புகள் காணப்படவில்லை. பாலையிலிருந்து மத்திய மலைப்பகுதிகள் மற்றும் கடற்கரைச் சமவெளிகளிலுள்ள சந்தைகளுக்குச் செல்லும் பாதைகள் பெயேர்-செபா வழியாகச் சென்றன. தொல்பொருள் அகழ்வாய்வுகள், பெரிய கொம்புடைய பீடத்தையும், எசேக்கியாவின் சீர்திருத்தம் நடந்த காலத்தில் அழிக்கப்பட்டிருக்கக்கூடிய கோவிலின் சிதைவுகளையும் கண்டுபிடித்துள்ளன.

பெயேர் - லகய் - ரோயி (BEER - LAHAI - ROI - உயிருள்ள இறைவனின் கிணறு)

சூருக்குச் செல்லும் சாலையில், காதேசு-பர்னேயாவுக்கும் பெரேதுக்கும் இடையிலுள்ள ஒரு கிணறாகும். ஆதி 16:7-14 இப்பெயருக்கு "என்னைக் காண்பவரை, நானும் இங்கே கண்டேன்" என்றும், அக்கிணற்றுக்குக் "காண்கிற இறைவன் நீர்" என்றும் விளக்கம் தருகிறது. ஆண்டவரின் நம்பிக்கையளிக்கின்ற வாக்குறுதியைக் கொடுத்த ஆண்டவரின் தூதரை இந்த இடத்தில் சந்தித்த ஆகாரால் இப்பெயர் கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் இக்கிணற்றுக் கருகில் ஈசாக்கு வாழ்ந்தார் (ஆதி 24:62; 25:11).

பெயோர் (PEOR - திறப்பு)

பெயோர் என்பது ஓர் இடப்பெயர். இப்பெயர் மற்றப் பெயர்களுடன் சேர்ந்தே வருகிறது. சான்றாக, பெத்-பெயோர் (உப 3:29; 4:46; 34:6; யோசு 13:20), பாகால் - பெயோர் (எண் 25:3.5; உப 4:3; சங் 106:28; ஓசே 9:10).

1. பாலாக்கு, இஸ்ராயேல் மக்களைச் சபிக்கும்படி பிலயாமைக் கூட்டிக்கொண்டு போன மலை ஆகும் (எண் 23:27-28). அவர்கள்

பெயோர் மலையின் சிகரத்தை அடைந்தவுடன் அங்கிருந்து, மோவாபியச் சமவெளியிலிருந்த இஸ்ராயேலரின் பாளையத்தைக் காணமுடியும் (எண் 24:12). பெயோர் இருந்த இடம் நெபோ மலைக்கு அருகில்தான் இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

2. பெயோர் என்பது பெயோர் மலையிலுள்ள கடவுளின் பெயர். இப்பெயர், 'பாகால் - பெயோர்' என்ற பெயரின் குறுகிய வடிவமாகும். பிலயாமின் அறிவுரையால், மிதியான் நாட்டுப் பெண்கள் இஸ்ராயேலரை வஞ்சித்து ஆண்டவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யத் தூண்டியதாக எண் 31:16-இல் குறிப்பிடப்படுகிறது. யோசு 22:17-இல் குறிப்பிடப்படும் காது, ரூபன் ஆகிய கோத்திரத்தார் செய்த பாவம், பெயோரில் செய்யப்பட்ட பாவத்தோடு ஒப்பிடப்படுகிறது.

3. பெயோர் யூதாவின் ஒரு பகுதி (யோசு 15:59). இது பெத்லகேமுக்குத் தென்மேற்கிலுள்ள கிர்பெத்-பாகுர் என்ற இடமாக அடையாளம் காட்டப்படும்.

பெரக்கியா (BERECHIAH - யாவே ஆசீர் வழங்கினார்)

1. இவர் தாவீதின் வழிவந்தவர்களின் பட்டியலில் இடம் பெறுகின்ற செருபாபேலின் மகனாகக் கருதப்படுகின்றார் (1 நாள் 3:20).

2. இவர் லேவியர்களின் தலைமுறை அட்டவணையில் ஆசாபுவின் தந்தையாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றார் (1 நாள் 6:39; 15:17).

3. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பிவந்தபின் எருசலேம் நகரில் குடியேறியவர்களில் இவரும் ஒருவர். இவர் ஒரு லேவியர் (1 நாள் 9:16). இதற்கு இணையான நெகே 11-இல் இப்பெயர் காணப்படவில்லை.

4. இவர் கடவுள் திருப்பேழையின் வாயிற்காவலராக இருந்தவர்களில் ஒருவராகிய ஒரு லேவியர் (1 நாள் 15:23).

5. இவர் எப்பிராயிம் மக்கள் தலைவர்களில் ஒருவர் (2 நாள் 28:12).

6. இவர் நெகேமியாவின் காலத்தில் எருசலேம் மதிலைக் கட்டியவர்களில் ஒருவரான மெசுல்லாமின் தந்தையாவார் (நெகே 3:4.30; 6:18).

7. இவர் இத்தோவின் மகனும், இறைவாக்கினர் செக்கரியாவின் தந்தையுமாவார் (செக் 1:1.7; காண். மத் 23:35). சில இடங்களில் செக்கரியாவின் தந்தையாக இத்தோ குறிப்பிடப்படுகிறார் (எஸ் 5:1; 6:14). பெரக்கியா செக்கரியாவின் புதல்வராவார் என்று குறிப்பிடப்படுகின்ற எசா 8:2-இன் பாதிப்பால் செக் 1:1.7-இல், இத்தோவிற்கும், செக்கரியாவிற்குமிடையில் பெரக்கியா என்ற பெயர் புகுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பெரசிம் மலை (PERAZIM MOUNT)

எசாயா இறைவாக்கினரால் விடுக்கப்படும் எச்சரிக்கையில் குறிப்பிடப்படும் நகரங்களில் ஒன்று. "பாகால்-பெராசிம்" மலையில் தாவீது பெலிஸ்தியரை வென்றார். இங்குப் பெயர்களில் மாற்றம் இருந்த போதிலும் எசாயா கடவுளின் அற்புதங்களில் ஒன்றாக இதைக் குறிப்பிடுகின்றார் என்று கருதப்படுகிறது. இப்பகுதி எருசலேமின் தெற்கில் இருந்தது. இன்றைய செயிக்-பெதர் இவ்விடம் இருந்ததாகக் கருதப்படுகிறது. காண்க. பாகால் பெராசிம்.

பெரயா (BEREA - நீர் பாய்ச்சப்பட்ட)

இது யூதேயா நாட்டிலுள்ள ஓர் இடமாகும். ஆனால், இதை அடையாளம் காட்ட முடியவில்லை. எருசலேமிற்கு வடபுறத்தில் 16 கி.மீ. தொலைவில் தற்போதுள்ள ஏல்-பிரேதான் பெராயா இருந்த இடமாகும் என்று கருதாப்படுகிறது.

எருசலேமுக்கு எதிராகப் படையெடுத்த பாக்கிதும், ஆல்கிமுவும் தங்கள் படையுடன் இங்குப் பாளையம் இறங்கினர் (1 மக் 9:4).

பெரயா (PEREA)

யோர்தான் அக்கரைப்பகுதி, பெரிய ஏரோதின் அரசில் இருந்தது. கி.மு. 4-இல் அவருடைய இறப்புக்குப்பின் அப்பகுதி கலிலேயாவுடன் சேர்க்கப்பட்டு ஏரோது அந்திப்பாவின் அரசில் இருந்தது.

யோர்தான் அக்கரைப்பகுதி மாவட்டத்தின் மேற்கில் யோர்தானும் சாக்கடலின் வடகிழக்குப்பகுதியும், கிழக்கில் கெராசா, பிலதெல்பியா, எஸ்போன் மாவட்டங்களும், வடக்கில் பெல்லாவும் தெற்கில் மக்கேருவிலிருந்து அர்னோன் நதிவரையும் எல்லைகளாக இருந்தன. கலிலேயாவிலிருந்து யூதேயாவுக்குச் செல்லும் சாலைகளில் ஒன்று இப்பகுதியின் வழியாகச் செல்கிறது. மத் 19:1-இன்படி இயேசுவும் அவருடைய சீடர்களும் இதன் வழியாகத்தான் சென்றார்கள்.

முற்காலத்தில் கிலயாது, அம்மோன், மோவாபு ஆகிய நாட்டினர் இங்கு வாழ்ந்தனர். மக்கபேயர்களின் காலத்தில் யூதா மக்கபேயு கிலயாதிலிருந்த யூதர்களை விடுவித்து அவர்களை யூதேயாவுக்குக் குடியேறும்படி செய்தார் (1 மக் 5:9-52). யோவான் இரிக்கானு (கி.மு. 135-104) என்பவர் இப்பகுதியை வென்று, யூத மதத்திற்குக் கட்டாயமாக மதமாற்றம் செய்தார் என்று கருதப்படுகிறது. இதே கொள்கை அலக்சாந்தர் யன்னேயு (கி.மு. 103-76) என்பவராலும் பின்பற்றப்பட்டது. இவர் கலிலேயாவையும், யோர்தான் அக்கரைப் பகுதியையும் யூத மதத்திற்கு மாற்றினார். கி.மு. 76-இல், இவர் மலேரியா நோயால் இப்பகுதியில் இறந்தார். இயேசுவின் காலத்தில் இம்மாவட்டம் ஏரோது அந்திப்பாவின் ஆட்சியின்கீழ் இருந்தது. மேலும், யூதர்களே இங்கு அதிக எண்ணிக்கையில் வாழ்ந்தனர். உரோமையருக்கு எதிராக எழுந்த கலகத்தில், இப்பகுதியில் வாழ்ந்த யூதர்கள் கலிலேயாவில் வாழ்ந்த மற்ற யூதர்களுடன் சேர்ந்து கொண்டனர். நீரோவின் ஆட்சியில் இது 2-ஆவது ஏரோது அகிரிப்பாவிடம் கொடுக்கப்பட்டது. இவரது ஆட்சிக்குப் பின் இது சீரியாவின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் இப்பெயர் காணப்படவில்லை. ஆனால், எபிரேய அல்லது அரமேயிக்குச் சொல்லின் மொழி பெயர்ப்பான, “யோர்தான் அக்கரைப்பகுதி” (மத் 4:25; மாற் 3:8) என்ற பெயரே அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. யோவா 1:28-இல் திருமுழுக்கு யோவான் யோர்தானுக்கு அப்பாலுள்ள பெத்தானியாவில் திருமுழுக்குக் கொடுத்துவந்ததாகக் கூறப்படுகிறது. மத் 19:1-இன்படி இயேசுவும் அவருடைய சீடர்களும் கலிலேயாவை விட்டு இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது. மத்தேயு, இயேசு இப்பகுதியில் நோயாளிகளைக் குணமாக்கி மக்களுக்குப் போதித்தார் என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

பெரா (BERA - கொடை)

இவர் சோதோம் நாட்டின் அரசர். இவர் எலாமிய அரசர் கெதர்லகோமரை எதிர்த்துப் போர் புரிந்த பொழுது, அவரால் தோற்கடிக்கப்பட்டார் (ஆதி 14:2.8.10-11 17.22).

பெராக்கா (BERACHA - ஆசீர்)

சிக்லாகு என்னுமிடத்தில் தலைமறைவாயிருந்த தாவீதிடம் வந்துசேர்ந்த ஆற்றலும், திறமையுமிக்க படைவீரர்களில் இவரும் ஒருவர். இவர் பென்யமின் குலத்தினரான சவுலின் குடும்பத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 12:3).

பெராக்காப் பள்ளத்தாக்கு (BERACHA. VALLEY OF - ஆசீரின் பள்ளத்தாக்கு)

இப்பள்ளத்தாக்கு யூதாவின் பாலைவனத்தில் தெக்கோவாவுக்குத் தெற்கில் உள்ளது. இது பெத்லகேமுக்குத் தென்மேற்கில், கிர்பெத் பெரேய்குத்துக் கருகிலுள்ள வாடி ஏல்-அருபாவுடன் அடையாளம் காட்டப்படுகிறது.

யோசபாது அரசரது பகைவர்களாகிய மோவாபியர், அம்மோனியர், செயீர்,

மேலைநாட்டவர் போன்றவர்களை ஆண்டவர் முறியடித்ததற்குப்பின், அரசன் தனது மக்களையெல்லாம் இப்பள்ளத்தாக்கில் (ஆசீரின் பள்ளத்தாக்கு) ஒன்றுகூட்டி, கடவுளைப் போற்றினார் (2 நாள் 20:26).

யோவேல் நூலில் (4:2.12 தொ) கூறப்பட்டுள்ள 'யோசபாத்துப் பள்ளத்தாக்கு' என்பது இந்தப் பள்ளத்தாக்கினைக் குறிப்பிடலாம் அல்லது சுட்டிக்காட்டலாம்.

பெராயா (BERAIAH – யாவே படைத்தார்)

பென்யமின் குலத்தினரான இவர் சிமயியின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8.21). இவர் சகரயிமின் வழித்தோன்றல் ஆவார்.

பெரி (BERI)

இவர் ஆசேர் கோத்திரத்தின் தலைமுறை அட்டவணையில் சோபகுவின் மகனாகக் குறிக்கப்படுகிறார் (1 நாள் 7:36). ஆதி 46:17-18; எண் 26:44-47-இல் உள்ள இணையான தலைமுறை அட்டவணைகளில் இப்பெயர் காணப்படவில்லை. இஃது இனப்பெயர் முதல்வருடைய பெயராக இருக்கலாம். இது நிச்சயமாக, பெரீயர் என்பவர்களோடு தொடர்புடையது அன்று. காரணம், இந்தச் சொல் அதே எபிரேய வேர்ச்சொல்லிலிருந்து வரவில்லை.

பெரிசயு (PERSEUS)

இவர் மூன்றாம் பிலிப்பின் கள்ளத் தொடர்பினால் அவனுக்குப் பிறந்தமகன். பெரிசயு கித்திமிம் அரசன் என்று அழைக்கப்படுகிறான். இவன் கி.மு. 168-இல் எமிலியு பவுலு என்பவரால் பித்னா போரில் தோற்கடிக்கப்பட்டான். இதற்குப் பிறகு மாசிதோனியா உரோமையர் ஆட்சியின்கீழ் வந்தபோது பெரிசயு கைதியாகக் கொண்டு செல்லப்பட்டான் (1 மக் 8:5).

பெரிசியர் (PERIZZITE – கிராமத்தைச் சேர்ந்தவர்கள்)

இவர்கள் இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறுமுன், அங்கு வாழ்ந்தவர்கள். பெரிசியர் என்ற பெயர் பழைய ஏற்பாட்டில் 23 முறை பயன் படுத்தப்படுகிறது. ஆனால், இவர்களைப் பற்றி ஏதும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இவர்கள் கானானியருடன் குறிப்படிப்படுகின்றனர் (ஆதி 13:7; 34:30; நீதி 1:45). இரபாயிம் பெரிசியருடன் குறிப்பிடப்படுகின்றனர் (யோசு 17:15). இதனால் அறிஞர் பலர் பெரிசியர் யோர்தானின் அக்கரைப் பகுதியில் வாழ்ந்ததாகக் கருதுகின்றனர். இங்குக் குறிக்கப்படும் யோசுவாவின் ஆலோசனை, "எப்பிராயிம் மலை நாட்டிலுள்ள மரங்களை வெட்டிவிட்டு நிலங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்" எனவும் பொருள்படும். இவர்கள் மற்ற இனத்தவரான கானானியர், இத்தியர், எமோரியர், இவ்வியர், எபூசியர் ஆகியவர்களுடன் குறிப்பிடப்படுகின்றனர் (ஆதி 15:20; யாத் 3:8.17; 23:23; 34:11; உப 7:11; 20:17; நீதி 3:5; 1 அர 9:20; 2 நாள் 8:7; நெகே 9:8). பெரிசி என்னும் சொல் அமர்னாவின் கடிதங்களில் குறிப்பிடப்படுகிறது. பெரிசி என்ற சொல்லும், விவிலியப் பெரிசியரும் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. 1 அர 9:20 (= 2 நாள் 8:7) – சாலமோன் கொல்லப்படாமலிருந்த பெரிசியரை அடிமைகளின் கட்டாய வேலையைச் செய்யச் செய்தார் என்று கூறுகின்றது.

பெரிய குரு, தலைமைக்குரு (HIGH PRIEST)

பழைய ஏற்பாட்டில் இவர் யாவேக்கும் மக்களுக்கும் இடையீட்டாளர் ஆவார். இவர் மற்றக் குருக்களைப்போல் பலிகளையும் மற்றச் சடங்குகளையும் செய்வதோடு, ஆண்டுதோறும் பாவநீக்க நாளில் நாட்டின் பாவங்களுக்குப் பரிகாரமும் செய்தார். இவர் பெரியகுரு என்றும் தலைமைக்குரு என்றும் அழைக்கப்படுகிறார் (2 அர 25:18; 2 நாள் 19:11; எரே 52:24).

இவர் ஆரோனின் மகன் எலயாசரின் வழித்தோன்றலாய் இருந்தார்; வாழ்வு முழுவதும் பெரிய குருவாய் இருந்தார் (எண் 25:10-13).

ஏழுநாட்கள் சடங்கில் இவர் திருநிலைப்படுத்தப்பட்டார். இதில் இவரது பதவிக்குரிய சிறப்பான ஆடைகள் அளிக்கப்பட்டன. சடங்கில் அபிடேகம் செய்தலும், பலிகளும் உண்டு (யாத் 29:1-37; லேவி 8:5-35).

மற்றச் சாதாரண லேவியர், குருக்களைவிட உயர்ந்த சடங்குத் தூய்மைக்கு உட்பட்டிருந்தார் பெரிய குரு. இறந்த உடல்களை, அஃது அவருடைய பெற்றோர்களுடையதாக இருந்தாலும், பெரிய குரு தொடக்கூடாது. துக்கத்தின் அடையாளமாகத் தம் ஆடையைக் கிழித்துக்கொள்ளவோ, மயிரை வளரவிடவோ கூடாது. இவர் கைம்பெண்ணையோ, விவாகரத்து செய்த பெண்ணையோ, வேசியையோ திருமணம் செய்யக்கூடாது. இஸ்ராயேலின் கன்னிப் பெண்ணைமட்டும் திருமணம் செய்யலாம் (லேவி 21:10-15). பெரிய குரு செய்த எந்தப் பாவமும் நாடு முழுவதின் மேலும் குற்றம் கொண்டுவந்தது. ஆகவே, சிறப்பான பலிகளால் பரிகாரம் செய்ய வேண்டும் (4:1-12). ஒரு பெரிய குரு இறந்தபோது அடைக்கல நகர்களில் தஞ்சம் புகுந்திருந்த கொலையாளிகள் விடுதலை அளிக்கப்பட்டனர் (எண் 35:25.28.32).

யாத்திரைநூல் பெரியகுரு அணிய வேண்டிய உடைகளை விரிவாக விவரிக்கிறது (யாத் 28:2-39). இவை அங்கி அல்லது புற ஆடை, ஏபோது, மார்புப்பட்டை, கோடிட்ட உள்ளாடை, கச்சை ஆகியவையாகும். ஏபோதும் மார்புப்பட்டையும் நிலையாக இணைக்கப்பட்டதாகத் தெரிகிறது (28:38). புற ஆடை -கைகளில்லாததாக இருந்தது. இது நீலநிறத்திலும், குதிக்கால் வரை நீண்டதாயும் முனைகளில் குஞ்சலங்களைக் கொண்டதாகவும் இருந்தது (காண்க. எண் 15:38-4). குஞ்சலங்களுக்கு இடையில் பொன்மணிகளும் இணைக்கப்பட்டன. இந்தப் புற ஆடை ஏபோதுக்கடியில் அணியப்பட்டது. உள்ளாடை கைகளைக் கொண்டிருந்தது. இதுவும் குதிக்கால்வரை நீண்டதாயிருந்தது (யாத் 28:39). "ஆண்டவருக்கு அர்ப்பணம்" என்று பொறிக்கப்பட்ட -பசும்பொன்னால் செய்யப்பட்ட- ஒரு பட்டம் தலைப்பாகையின் முன் நீல நாடாவால் இணைத்துக் கட்டப்பட்டது (28:36). இது "புனித முடி" என்றழைக்கப்பட்டது. இஃது இஸ்ராயேல் மக்கள் அளிக்கும் புனிதப்படையல்கள் ஆகியவற்றிலுள்ள குறைபாடுகளை நீக்கும் (28:38). இந்தப் புனிதமுடி மூன்றடுக்குள்ள மகுடம் கொண்டு தலைப்பாகையின்மேல் அணியப்பட்டது என்று யோசிப்பசு கூறுகிறார்.

தீஸ்ரி மாதம் பத்தாம்நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்ட பாவநீக்க நாள் வழிபாடு இஸ்ராயேலரின் மிகப்பெரிய விழாக்களில் ஒன்றாகும். மோசேயின் சட்டத்தில் குறிக்கப்பட்ட நோன்பு நாள் இஃது ஒன்றுதான். இந்தக் கொண்டாட்டத்தில் பெரியகுரு மையம் வகித்தார். விழாத்தொடங்குவதற்கு ஏழுநாட்கள் முன்பே தம்வீட்டை விட்டு, ஆலயத்தில் ஓர் அறையில் வசித்தார். பாவநீக்க நாளில் நீராடியபின் உள்ளாடை, கச்சை, தலைப்பாகை ஆகிய புனித ஆடைகளை அணிந்து (லேவி 16:4) பலி செலுத்தினார். அதன்பின், நார்ப்பட்டாலான புற ஆடை அணிந்து பாவநீக்கச் சடங்குகளைச் செய்தார். முதலில் ஓர் இளங்காளை அவர் முன் கொண்டு வரப்பட்டது. அதன் மேல் தம் கைகளை வைத்துத் தம்முடையவும், தன் குடும்பத்தினு டையவும் பாவங்களை அறிக்கையிட்டார். பின் அதைப் பலியிட்டு, அதன் இரத்தத்தை ஒரு கையிலும், மற்றொரு கையில் தூபப் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு பெரிய குரு திருத்தூயகத்துள் புகுந்து, அங்குத் தூபம் காட்டினார். பின், இரக்க இருக்கையின்மேல் ஒரு முறையும், பேழையின் முன் ஏழுமுறையும் இரத்தத்தைத் தெளித்தார். இரண்டாவதாக, ஒரே மாதிரியான இரண்டு வெள்ளாடுகளில் திருவுளச் சீட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாகப் பலியிடப்பட்டது. வெள்ளாட்டின் இரத்தத்தோடு மீண்டும் திருத்தூயகத்துள் புகுந்து

முன்புபோலவே செய்தார். பின்பு, மீதியிருந்த இரத்தத்தைத் கலந்து தூபப்பீடத்தின் மேலுள்ள முகப்புகளில் தெளித்தார் (யாத் 30:1-10). முதல் இரண்டு பலிகளும் வழிபாட்டில் ஏற்படக்கூடிய தீட்டை நீக்கப் பயன்பட்டன. மூன்றாவது பலி மக்களின் குற்றத்தை நீக்கப் பயன்பட்டது. அதன்பிறகு, பெரிய குரு தன்கையை இரண்டாம் வெள்ளாட்டின்மேல் வைத்து மக்களின் பாவங்களை அறிக்கையிட்டு, இந்தப் "போக்கு ஆடு" அல்லது பழியாடு பாலைநிலத்திற்குத் துரத்தப்பட்டு அங்குக் கொல்லப்பட்டது. மீளவும், இஸ்ராயேல் குற்றமில்லாது இறைவன் முன் நிற்க முடியும்.

இப்பலிகளை முடித்தபின் பெரிய குரு தன் நார்ப்பட்டாடை உடைகளைக் களைந்து விட்டு, பின் தூய்மையான இடத்தில் குளித்துத் தன் ஆடைகளை அணிந்துகொண்டு, தகனப்பலியையும் மக்களின் தகனப்பலியையும் தனக்காகவும் மக்களுக்காகவும் பாவப் பரிகாரமும் செய்தார். பாவப்பரிகாரப் பலியின் கொழுப்பும் பலிபீடத்தில் எரிக்கப்பட்டது (லேவி 16:24-25). பின்னொரு முறை சடங்குக் குளிப்புச் செய்தபின், நார்ப்பட்டாடை உடுத்தி, திருத்தூயகத்தில் கடைசியாக நுழைந்து, பலிசெலுத்திய காலம் முழுவதும் எரிந்து கொண்டிருந்த தூபப்பாத்திரத்தை வெளியே எடுத்துவந்தார்.

நாடு கடத்தலுக்குப்பின் பெரியகுரு பதவி வெவ்வேறு பரிணாமங்கள் பெற்றது; மதிப்பும் மேன்மையும் பெற்றது. கி.மு. 520-இல் பெரியகுரு யோசுவாவும், தாவீது குலத்தைச் சேர்ந்த ஆளுநர் செருபாபேலும் சமமாக (ஆகா 1:1.12.14;2:2.4), "யாவேயின் அபிடேகம் பெற்ற இருவராக"க் (செக் 4:14) கருதப்படுகின்றனர்.

அரசியல் ஈடுபாடு மேன்மேலும் முதன்மை பெறுகிறது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டைப்போல் தொடக்கத் தலைமைச் சங்கமாகக் கருதப்படும் குருக்கள், மறை நூல் அறிஞர்கள், குடும்பத்தலைவர்கள் ஆகியோர் அடங்கிய குழுவிற்குப் பெரிய குரு தலைமை தாங்குகிறார். கிரேக்கர்கள் காலத்தில் இப்பதவியைப் பெற தீவினை செய்வோரும், பேராசை மிக்கவர்களும் முயற்சி செய்தனர். ஆனால், மக்கபேயர் கிளர்ச்சியின் காலம் பெரிய குருபதவியின் மகிமையை ஓரளவு சீர்ப்படுத்தியது. கிறிஸ்தவர்களுக்கு நாசரேத்தூர் இயேசுவே உண்மையான நிறைவான பெரிய குருவாவார் (காண்க. 5:5-10; 6:20). அவரே முழு உலகின் பாவங்களைத் தன்மேல் ஏற்றுக்கொண்டார்; இறைவனுக்கும் மனுகுலத்திற்கும் இடையில் புதிய உடன்படிக்கையின் இடையீட்டாளர் ஆவார்.

யோவான் 17-இல் வரும் செபமும், உயர் அறையில் அளிக்கப்பட்ட உரையின் கடைசிப்பகுதியும் (யோவா 13-17) பெரிய குருவின் செபம் என்று பொதுவாகக் கூறப்படும்; இயேசுவின் செபமாகப் பதிவு செய்யப்பட்ட நீண்ட செபமாகும். தன் சீடர்களுக்கும், அவர்கள் வழியாக விசுவசிப்பவர்களுக்கும் அவர் காட்டும் பரிவும், கிறிஸ்துவின் வெற்றி பற்றிய வீறார்ந்த எதிர்பார்ப்பும் இச்செபத்தின் சிறப்புப் பண்புகளாகும். 17:1-5-இல், இயேசு அண்மையில் வரவிருக்கும் தனது பாடுகளைப் பற்றிச் செபிக்கிறார்; தன்னில் இறைவனது சித்தம் நிறைவேற வேண்டும் என்று வேண்டுகிறார். 17:6-19 இல், இயேசு தம சீடர்களுக்காக வேண்டுகிறார். இயேசு தம்மை அர்ப்பணிப்பது (17:19), தமது இறப்பினால் இறைவன் தமது சித்தத்தைச் செய்வதற்கு அவரை ஒதுக்கி வைக்கிறது. இறுதியாகச் சீடர்களின் பணியின் விளைவாக, விசுவசிப்பவர்களுக்காகவும் இயேசு மன்றாடுகிறார் (17:20-26). தந்தைக்கும், மகனுக்கும் உள்ள ஒற்றுமைக்கொத்த ஒற்றுமையை அளித்து அவர்களை மகிமைப்படுத்தும்படி மன்றாடுகிறார்.

பெரிய மனிதன் (GREAT)

சக்தியுடன் கூடிய சிறப்புப் பட்டம். மந்திரவாதி சீமோன் சமாரிய மக்களை மயக்கி தான் ஒரு பெரிய

மனிதனாகக் காட்டிக்கொண்டு வந்தான். மாபெரும் சக்தி எனும் கடவுளின் வல்லமை இவனே என்று சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் அவன் சொல்வதைக் கேட்டனர் (அ.ப. 8:9-10). ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு அவன் உரோமைக்குச் சென்றதாகவும், அங்கு அவன் கடவுளாகக் கருதப்பட்டதாகவும், மேலும் சமாரியர்களும், மற்ற நாட்டினரும் முதல் கடவுளாகக் கூறினர் என்றும் யுஸ்தீன் கூறுகின்றார்.

புதிய ஏற்பாடு "இவ்வல்லமையை" வானகத் தூதர்களோடும், பேய்களோடும் தொடர்புபடுத்திப் பேசுகின்றது (உரோ 8:38; 1 கொரி 15:24; எபே 1:21; 1 பேதுரு 3:22). மாற்கு 14:62-இல் வல்லமையைக் கடவுளுக்கு ஆகுபெயராகப் பயன்படுத்துகின்றார். "வல்லமையுள்ள வலப்புறத்தில் வீற்றிருப்பது" லூக் 22:69-இல் "வல்ல கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருப்பார்" என்று விரிவாக்கப் படுகிறது. இவ்வாறு வல்லமை மற்றும் பெரிய என்ற சொற்களைச் சிமியோனுக்குத் தொடர்புபடுத்தி நான்கு விளக்கங்கள் கொடுக்கலாம். அ) இவனே கடவுளின் வல்லமையாக் கருதிக் கொள்ளலாம் ஆ) நிலாவைப் போன்ற கடவுளின் பெரிய வல்லமையாகக் கொள்ளலாம். இ) வானதூதனாகவோ, பேயாகவோ கொள்ளலாம். ஈ) இறைவனாகவே கொள்ளலாம். சீமோனின் சீடர்கள் பிற்காலத்தில் இவ்வாறுதான் விளக்கம் அளித்தனர். ஆனால், இவை பற்றிய மூலங்கள் உறுதியற்றவையாக இருப்பதால் நாம் எதையும் உறுதியாகக் கூறமுடியாது.

பெரிய யாக்கோபுவின் பணி (JAMES, THE GREAT, ACTS OF)

இது, கத்தோலிக்கத் திருமறையினரால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு போலி நூலாகும். இந்நூல் செபதேயுவின் மகன் யாக்கோபுவின் மறைசாட்சி மரணம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நூல் இன்று இலத்தீன் மொழியில் மட்டுமே உள்ளது. உரோமையின் கிளமந்து இந்நூல் பற்றி குறிப்பிடுகின்றார் யாக்கோபு. எர்மோகேன் மற்றும் பிலேத்து ஆகிய மந்திரவாதிகளுடன் நடத்திய நீண்ட போராட்டம் பற்றிக் கூறுகின்றது. யூதர்களுடன் யாக்கோபு புரிந்த தர்க்கப்போரும் இதில் கூறப்படுகிறது. அப்போஸ்தலர் பணிநூலில் யாக்கோபின் மறைசாட்சி மரணம் பற்றி ஒரு சிறு குறிப்பே உள்ளது (அ.ப. 12:1-2). பேதுருவுக்கும் மந்திரவாதி சீமோனுக்கும் ஏற்பட்ட போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு, இந்நூல் தோன்றியிருக்கலாம்.

பெரிய வியாழன் (MAUNDY THURSDAY)

இஃது இயேசு உயிர்த்த விழாவுக்கு முந்திய வியாழக்கிழமையாகும். தொடக்ககாலப் பாரம்பரியப்படி, இயேசுவின் இறுதி இரவு உணவு நடந்ததும் நற்கருணை நிறுவப்பட்டதும் இந்த இரவிலேதான். இன்று இயேசுவைப் பின்பற்றி, கால்களைக் கழுவும் சடங்கு திருச்சபையில் கடைப்பிடிக்கப்படுகிறது. நற்கருணையும் புதிய ஏற்பாட்டுக் குருத்துவம் நிறுவப்படுதலும் நினைவு கூரப்படுகிறது.

பெரிய வெள்ளி (GOOD FRIDAY)

இஃது இயேசு உயிர்த்த விழாவுக்கு முந்திய வெள்ளிக்கிழமையாகும். இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்த நிகழ்ச்சியை நினைவுகூர்கிறது (மாற் 15:42; லூக் 23:54; யோவா 19:31; காண்க. மத் 27:62). திருச்சபையில் இது பாரம்பரியமாக நோன்பும் தபசும் செய்யும் நாளாகும். மாலை மூன்று மணியிலிருந்து, இயேசு சிலுவையில் தொங்கியபோது அனுபவித்த வேதனையை நினைவு கூர்ந்து (மத் 27:45; மாற் 15:33; லூக் 23:44) வழிபாடு செலுத்தப்படுகிறது.

பெரீதா (PERIDA)

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பிய சாலமோனின் ஊழியர் குடும்பம் அல்லது குழுவின் தலைவர் (நெகே 7:57). இதற்கு இணையான விவரிப்பில் இவர் பெருதா என்றழைக்கப்படுகிறார் (எஸ் 2:55).

பெரீயா (BERIAH – சிறப்பு வாய்ந்த, முதன்மை வாய்ந்த)

1. இவர் ஆசேரின் நான்காவது புதல்வர். இவர் எபேருக்கும், மல்கியேலுக்கும் தந்தை (ஆதி 46:17; எண் 26:44.45; 1 நாள் 7:30-31). இவர் பெரீயர் வம்சத் தலைவனாகக் கருதப்படுகின்றார் (எண் 26:44).

2. இவர் எப்பிராயிமின் புதல்வர். எப்பிராயிமினுடைய மற்றப் புதல்வர்கள் காத்தின் மக்களால் கொலை செய்யப்பட்டபின் பிறந்த இவருக்குப் பெரீயா என்ற பெயரிடப்பட்டது. ஏனெனில், "தீங்கு" அவர் வீட்டை வந்தடைந்தது.

3. இவர் எல்பாகாலின் நான்காவது புதல்வர். இவரும் செமாவுடன் சேர்ந்து காத்தின் குடிகளை முறியடித்து, அய்யலோனில் குடியிருந்த மக்களுக்குத் தலைவராய் விளங்கினார். ஒன்பது புதல்வர்களுக்குத் தந்தை (1 நாள் 8:13.16).

4. லேவிய குலத்தினரான, கெர்சோமிய வம்சத்தைச் சேர்ந்த சிமயியின் நான்காவது புதல்வராக இவர் கருதப்படுகின்றார் (1 நாள் 23:10-11). இவருக்கும் இவர் சகோதரர் எயுசுக்கும் புதல்வர் பலர் இல்லாததால் ஒரே மூதாதையரின் குடும்பத்தினராய்க் கணக்கிடப்பட்டனர்.

பெரீயர் (BERIIES)

பெரீயா (1)வின் வழித்தோன்றல்கள் (எண் 26:44).

பெருகை (PERGA)

இது பழைய பம்பிலியாவின் புகழ்வாய்ந்த நகரங்களுள் ஒன்று. இது பம்பிலியாவின் சமவெளியில் அமைந்திருந்தது. இந்நகரம் கடற்கரையிலிருந்து வரும் ஆபத்துகளினின்று அருகிலுள்ள குன்றின் மூலம் பாதுகாக்கப்பட்டது. இந்நகரம் முதன் முதலில் அமைக்கப்பட்ட காலம் தெளிவாகத் தெரியவில்லை. திரோசன் போருக்குப் பிறகுதான் யூதர்கள் இங்குக் குடியேறியிருக்க வேண்டும். பெருகையின் தேவதையான அர்தேமிசு, வனாசா பிரேய்யா என்று அழைக்கப்பட்டது.

பாரசீகர்களின் காலத்தில் பெருகையின் வரலாறு தெளிவாக இல்லை. கி.மு. 334-இல் அலக்சாந்தர் பெருகையிலிருந்து வழிகாட்டிகளைப் பெற்று, கிழக்கில் லீக்கியாவிலிருந்து செல்லும்போது ஒரு முறையும், பிரிகியாவுக்குச் செல்லும்போது மறுமுறையும் பெருகை வழியாகச் சென்றார். கிரேக்கர்கள் காலத்தில் இங்குச் செலூக்கியப் படைகள் இருந்தன. ஆனால், கி.மு. 188-ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்நகரம் சுதந்தரம் பெற்றது. பெருகையின் நாணயங்கள் இக்காலத்திலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை பயன்பட்டன. கி.மு. 80-79-இல் அர்தேமிசுக் கோயிலின் கருவூலம் கொள்ளை அடிக்கப்பட்டது. அங்குள்ள கட்டடங்களும், நினைவுச் சின்னங்களும் இங்கு உரோமையர் ஆண்டதைப் பறைசாற்றுகின்றன.

முதல் மறைபரப்புப் பயணத்தின்போது பவுலும் பர்னபாவும் பாப்போவிலிருந்து பெருகைக்கு வந்தனர் (அ.ப. 13:13). யோவான் மாற்கு அவர்களைப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பினார் (13:14). பெருகையிலிருந்து பயணத்தைத் தொடர்ந்து பிசிதியா நாட்டு அந்தியோக்கியாவை அடைந்தனர்.

இந்நகரம் இருந்த இடத்தில் அகழ்வாராய்ச்சி நடத்தியபோது ஒரு நகர உள்ளரணும், சுவர்களினால் சூழப்பட்ட ஒரு தாழ்ந்த நகரமும், பல நினைவுச் சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. நகரின் கிழக்கு வாயிலில் உரோமையரின் அங்காடி ஒன்றும், நகரில் ஒரு நீச்சல் குளமும் இருந்தன. நகருக்கு வெளியே ஒரு கலையரங்கமும், உரோமையர் கலையில் கட்டப்பட்ட விளையாட்டு அரங்கமும் இருந்தன. இதில் சுமார் 12,000 பார்வையாளர்கள் அமரலாம். அர்தேமிசுத் தேவதையின் கோயில் உயரமான பகுதியில் இருந்தது. நான்கு கிறிஸ்துவ ஆலயங்களும், இரண்டு பேராயலங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இது, செஸ்துருஸ் ஆற்றின் கிழக்கில் 8 கி.மீ. தொலைவிலும் கடற்கரையிலிருந்து 12 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள அந்தாலியாத் துறைமுகத்திற்குக் கிழக்கு-வடகிழக்கில் உள்ள இக்கால மூர்த்தான என்ற கிராமத்துக்கருகில் அடையாளம் காட்டப்படுகிறது.

பெருங்கடல் (GREAT SEA)

மேற்காசிய மக்கள் மத்திய தரைக்கடலை இப்பெயரால் குறிப்பிட்டனர். இக்கடல் பெனிசிய, ஆகியன், அதிரியாத்திக்கு, ஐயோனிய, தீரியக்கடல்கள் என்று பிரிக்கப்பட்டிருந்தது.

இஃது அவர்கள் அறிந்த கடல்களை விடப் பெரியதாய் இருந்ததால், எபிரேயரும் இதைப் பெருங்கடல் என்றே அழைத்தனர் (எண் 34:6; யோசு 1:4; எசே 47:10). இது "மேற்குக் கடல்" என்றும் அழைக்கப்பட்டது (உப 11:24; 34:2; யோவே 2:20; செக் 14:8). பழங்கால எபிரேயர்கள் முக்கிய திசைகளைக் குறிக்க கிழக்கே நோக்கிய போது, பெருங்கடல் அவர்களுக்குப்பின் இருந்தது. இது "யோப்பாக்கடல்" என்றும் குறிக்கப்பட்டது (எஸ் 3:7); பெலிஸ்தியர் கடல் என்றும் அழைக்கப்பட்டது (யாத் 23:31). பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் இது வெறுமனே கடல் என்றும் (யோசு 16:8;1 அர 5:9; 18:43; எரே 46:18; யோனா 1:4), புதிய ஏற்பாட்டில் "கடலோரம்" (அ.ப. 10:6.32) என்றும் குறிப்பிடப்பட்டது.

பெனிசியர்கள் கடல் பயணம் செய்வதில் வல்லவர்கள். அவர்களது கப்பல்கள் மத்தியதரைக் கடல் தீவுகளுக்குச் சென்று வந்தன. இதற்கு மாறாக, எபிரேயர்கள் கடல் பயணத்தில் சிறந்தவர்கள் அல்லர். சாலமோன் காலத்தில் ஒரு கப்பற் படை வைத்திருந்தனர். இது செங்கடலின் கரையில் எட்சியோன்-கெபேரில் கட்டப்பட்டுப் பெனிசியர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது (1 அர 9:26-27). யோசபாத் கட்டிய கடற்படை அங்கேயே அழிந்து போயிற்று (22:47-49).

எபிரேயர்கள் மத்தியதரைக்கடலில் கடல் வாணிபம் செய்தனர் என்பதற்கு ஏட்டுச் சான்றுகள் இல்லை. இதற்குக் காரணம்– அவர்கள் பாலைவன மக்கள் என்பதேயாகும் என்பர் சிலர். அவர்கள் கடற்கரையில் நல்ல துறைமுகங்கள் இன்மையே மேலான காரணமாக இருக்கலாம். பெனிசியாவிலிருந்து பெலிஸ்தியா வரையிலுள்ள பாலஸ்தீனக் கடற்கரையின் நீளம் 160 கி.மீ. ஆகும். ஆனால், இதில் இயற்கையான துறைமுகங்கள் இல்லை. நல்ல பருவகாலத்தில் அதன் கடற்கரை நகர்களில் (தோர், யோப்பா, அக்கோ) கப்பல்கள் தங்கிச் செல்லலாம். சிலசமயம் ஒரு வகையான கப்பல் போக்குவரத்து நடக்கலாம். இவ்வாறு, சாலமோன் காலத்தில், லெபனோனிலிருந்து யோப்பாவுக்குக் கட்டுமரங்களில் மரங்கள் கொண்டு வரப்பட்டன (2 நாள் 2:16). விவசாயத்தை அடிப்படைத் தொழிலாகக் கொண்ட எபிரேயர்கள் தரைவழியை முக்கியமாகக் கருதினர்.

எபிரேயர்கள் கானான் நாட்டின் எல்லைகளைக் குறிக்கும்போது, பெருங்கடலை மேற்கெல்லையாகக் குறித்தனர் (எண் 34:6; யோசு 9:1). யோசு 15:12-இன்படி யூதாவின் மேற்கு எல்லை- பெருங்கடலாகும். இதனை அசீரிய, பாபிலோனியப் போர் ஏடுகள் குறிப்பிடுகின்றன.

செங்கடலின் மேல் யாவே கொண்டிருக்கும் அதிகாரத்தை எபிரேயர்கள் குறிப்பிடுகின்றனர். அதேபோல் அத்தகைய அதிகாரத்தை மத்தியதரைக் கடலின் மேல் யாவே கொண்டிருப்பதாகக் குறிப்பிடவில்லை. ஆயினும், கடலில் யாவே புயலை உண்டாக்குகிறார் (யோனா 1:4); கொந்தளிக்கும் கடல்மீது ஆட்சி செய்கிறார் (சங் 89:9); "கடலுக்கு மேலாக ஆண்டவர் தம் கையை ஓங்கியுள்ளார்" (எசா 23:11). இவையெல்லாம் யாவே, கடல்மேல் அதிகாரம் கொண்டிருந்தார் என்று காட்டுகின்றன.

பெனிசியர்களும் கிரேக்கர்களும் மத்திய தரைக்கடலைக் கடற்பயணத்திற்குப் பெரிதும் பயன்படுத்தினர். உரோமையர்களும் அவ்வாறே பயன் படுத்தினர். அதை "எங்கள் கடல்" என்றழைத்தனர். கி.மு. 63-இல் பாம்பே

பாலஸ்தீனத்தை வென்றபின், கடற் பயணம் இன்னும் அதிகமாயிற்று. தானியங்களை ஏற்றிய கப்பல்கள் அலக்சாந்திரியாவிலிருந்து இத்தாலிக்குச் சென்றன. குளிர்காலப் புயலால் ஏற்படும் ஆபத்துக்களை, கப்பல் தலைவன் எதிர்பார்க்காது புறக்கணிக்கும்போது ஏற்படுவது கப்பல் உடைதலாகும் (அ.ப. 27:6.11). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கப்பல் போக்குவரத்து வளர்ச்சியடைந்தது பவுல், சீலா, பர்னபா போன்ற நற்செய்தி பரப்பாளர்களுக்குப் பெரிதும் உதவியது.

பெருதா (PERUDA – பிளவுபட்ட)

இவர் பாபிலோனின் அடிமைத் தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த சாலமோன் ஊழியர்களின் குடும்பத்தலைவர் (எஸ் 2:15). இப்பெயர் நெகே 7:57-இல் பெரீதா என்றுள்ளது.

பெருந்தீனிக்காரன் (GLUTTON)

இதைக் குறிக்கும் எபிரேயச்சொல்- "அர்பமான," "பயனற்ற" என்ற பொருளுடைய சொல்லிருந்து வருகிறது (உப 21:20; பழ 23:21; 28:7; மத் 11:19; லூக் 7:34; காண்க. தீத் 1:12).

புதிய ஏற்பாட்டில் இச்சொல் பொது இகழுரையாகப் பயன்படுகிறது. தீராப் பெருவேட்கையுடையவன், வீணன் அல்லது ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது செயலில் மட்டு மீறிய ஆசை கொண்டுள்ள போகி ஆகியவர்கள் இச்சொல்லால் குறிக்கப்படுகின்றனர். இந்த இரு பொருளிலும் இச்சொல் இயேசுவை இழிவுபடுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத் 11:9; லூக் 7:38). செல்வரும் இலாசரும் என்ற உவமையில் வரும் செல்வர், ஒரு பெருந்தீனிக்காரராகச் சித்தரிக்கப்படுகிறார் (லூக் 16:19-31).

பெருமை (PRIDE)

I. தாழ்ந்தவர்கள் என்னும் உணர்விலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக, கிரேக்கர்கள், முழுவதும் மனிதப்பண்புடைய ஞானத்தை நோக்கி அடிக்கடி செயலாற்றினர். இறைவனுடைய படைப்பு மற்றும் மகன் என்னும் நிலையில் விவிலியம் மனிதநிலையின் பெருமையினைக் காண்கிறது. பாவத்திற்கு அடிமையாக இல்லாதவரை, மனிதன், இறைவனுக்கு முன்னும் மனிதருக்கு முன்னும் வெட்கப்பட வேண்டியதில்லை. உண்மையான பெருமையானது, அதனுடைய கேலிச்சித்திரமான இறுமாப்பினுடன் எவ்விதத் தொடர்பும் கொண்டிருப்பதில்லை. இது தாழ்ச்சியுடன் முழுமையாக ஒத்திருக்கக்கூடியது. இவ்வாறு கன்னி மரியாள், கடவுளால் மட்டும் படைக்கப்பட்ட தனது தகுதியினை முழுவதுமாய் உணர்ந்தவளாய், புகழ்ப் பாடல் பாடினாள்; எல்லாத் தலை முறைகளுக்கும் முன்பாக அவள் அதை அறிவித்தாள் (லூக் 1:46.50).

பெருமையினைக் குறிப்பிடுவதற்கான உரிய சொல்லை விவிலியம் கொண்டிரா விட்டாலும், இரு மனப்பான்மைகளினின்று கணக்கிடுவதன் மூலம், வருணிக்கிறது. ஒரு மனப்பான்மை எப்போதும் உயர் குணமுடையது; சுதந்தரத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. இதை எபிரேயர்கள், நிமிர்ந்து நிற்கும் நிலை, உயர்த்தப்பட்ட தோற்றத்தைக் கொண்டிருத்தல், ஒருவரை முழுவதுமாக வெளிப்படுத்துதல் என்னும் பொழிப்புரையால் வெளிப்படுத்து கின்றனர். இது, மொழி மற்றும் நடைமுறைப் போக்கு போன்றவற்றினுடைய முழுச்சுதந்தரத்தினால் காட்டப்படும் சுயமரியாதையாகும். மற்றொரு மனப்பான்மையானது நம்பிக்கையோடு தொடர்புடையது; அதன் சுடரொளியாக உள்ளது. இஃது எதனினும் மகிமை கொள்ளும் செயலாகும் அல்லது ஒருவர் தன்னையும், மற்றவரையும், கடவுளையும் எதிர்கொள்ளவும் நல்ல முகத்தோற்றத்தை அணிந்து கொள்ளவும் ஒரு நிலையை எடுத்தல் என்பதாகும். இம்மகிமை கொள்ளுதல் தன்னுடைய உதவியைக் கடவுளிலோ, மனிதனிலோ கண்டடைவதைப் பொருத்து மேன்மையானதாகவோ, வீணான தாகவோ இருக்கலாம்.

II. பழைய ஏற்பாடு:

1. **தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பெருமை:** இஸ்ராயேலானது அடிமைத்தளையினின்று மீட்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பிறகு, அதனுடைய நுகத்தடிகள் முறிக்கப்பட்ட நிலையில், அவர்கள் பெருமையுடன் நிமிர்ந்து நடக்க முடிந்தது (லேவி 26:13). உறுதியான திருநிலைப்பாட்டினின்று பெற்ற பெருமையின் விளைவாக இறைவனின் புனிதத்திலேயே வாழ வேண்டிய கடமைக்கு, இவ்வுயர் நிலையானது மக்களை உட்படுத்தியது (லேவி 19:2). இது மிக எளிதாக அவமதிப்பாகத் தாழக்கூடிய தெனினும் (சீரா 50:25-26), சிலை வழிபாட்டு மக்களிடமிருந்து விலகியிருக்க வேண்டிய அக்கறையினை, இவ்வுணர்வானது இஸ்ராயேலில் நியாயப்படுத்துகிறது (உப 7:1-6). ஆண்டவர் தம்முடைய முகத்தை மறைத்திருப்பதால் இஸ்ராயேலானது தனது உடலை மண்ணோடு ஒட்டிக் கொண்டிருப்பதுபோல் (சங் 44:24-25), பெருமையானது தாழ்ச்சியில் தொடர்ந்து இருந்தாலும், அது பின்னர் இழிவானதாகிறது. ஆனால், இஸ்ராயேல் தன்னையே தாழ்த்திக் கொள்வதால், "கடவுளைப் பார்த்துத் தனது முகத்தைநிமிர்த்தி" (யோபு 22:26), அதனால் மீண்டும் முடியும். பூமியோடு நசுக்கப்பட்டோ, வானத்தை நோக்கித் தமது பார்வையை நிமிர்த்தியோ உள்ள எவ்வழியிலும், தம்முடைய தேர்வின் பெருமையை மக்கள் தமது இதயத்தில் வைத்துப் பாதுகாக்கின்றனர் (பாரூ 4:2தொ; 2:15; சங் 119:46).

2. **பெருமையும் வீண் தற்பெருமையும்:** பெருமையிலிருந்து இறுமாப்படைவது- ஒருபடியே ஆகும் (உப 8:17). அதனுடைய ஆதரவானது பொய்யானதாக இருப்பதால், பெருமையானது பின்னர்த் தற்பெருமையாக உருவாகிறது. படைப்புகளாக உள்ள நாடுகளுக்கு இடையிலும் தமது அழகு, ஆற்றல் அல்லது செல்வங்களில் பெருமை கொள்ளாமல், இறைவனுக்கு மட்டுமே புகழை அளிக்க வேண்டிய நாடுகளுக்கிடையிலும் (எசா 23:47; எசே 26-32) இத்தகைய சீர்கேட்டைக் காணலாம். ஆனால் இதற்கு முரண்பட்டநிலையில், உண்மையான பெருமையானது, இறைவன்மீது மட்டுமே உள்ள நம்பிக்கையின் ஒளி, அவரது உடன்படிக்கைக்கான பிரமாணிக்கத்தின் மலர்ச்சி ஆகும். ஆன்மீக வழிபாட்டினின்று தங்களுக்கு விதிவிலக்கு அளிப்பதாக (எரே 7:4-11), இறைவன் உறையும் ஆலயத்தைத் தாங்கள் கொண்டிருப்பதில் அவர்கள் மகிமை அடைந்தால், அஃது ஒன்றுமற்ற வீணான தற்புகழ்ச்சியே ஆகும். "ஞானி தன் ஞானத்தைக் குறித்துப் பெருமை பாராட்ட வேண்டாம்; வல்லவன் தன்வலிமையைக் குறித்துப் பாராட்ட வேண்டாம்; செல்வன் தன் செல்வத்தைக் குறித்துப் பெருமை பாராட்டவேண்டாம். பெருமை பாராட்ட விரும்புபவன் என்னை அறிந்து புரிந்து கொள்வதிலும், உலகில் பேரன்பும் நீதியும் நேர்மையும் உடையவர் ஆண்டவராகிய நானே என்பதிலும் பெருமை பாராட்டட்டும்" (9:23-24). பெருமைக்கு ஒரே உந்து காரணம் இறை அச்சமேயன்றி (சீரா 1:11; 9:16) செல்வமோ, வறுமையோ அல்ல (10:222) என்று ஞானிகள் இறுதியாக அடிக்கடி கூறுகின்றனர். உண்மையான மகிமையானது ஆண்டவருடைய பிள்ளைகளாக இருந்து (ஞான 2:13), இறைவனைத் தந்தையாகக் கொள்வதாகும் (2:16). இப்போது நீதிமானுடைய பெருமையானது உள்ளார்ந்ததாக மட்டுமில்லாமல், அதனுடைய ஒளிர்வானது இறைப் பற்றற்றவர்களைக் கண்டிப்பதாகவும் உள்ளது. இதற்குப் பதிலடியாக, இறைவனை விசுவசியாதோர் நீதிமான்களைத் துன்புறுத்துகின்றனர். ஒடுக்கப்படுகின்ற நீதிமானின் பெருமையானது, தனது வாழ்வின் காரணராக உள்ளவரை நோக்கி, தனது உரிமைப்படி செய்கின்ற செபத்தில் தன்னையே வெளிப்படுத்துகின்றது. "உம்மை நம்பும் எவரும் வெட்கமுறுவதில்லை" (சங் 25:3; 40:15 தொ).

3. இறைவனுடைய ஊழியனின் பெருமை: சங்கீத ஆசிரியர்கள், தங்களது இழிவிற்கு முடிவைக் கொண்டு வர, ஆண்டவரது உடனடித் தலையீட்டை எதிர் பார்க்கின்றனர். தங்களுடைய பகைவர்களைத் தலைகுனியச் செய்தமைக்காக அவர்கள் நன்றி செலுத்துகின்றனர். "என்னை எதிர்த்தவர்களுக்கு மேலாக என்னை உயர்த்தினீர்" (சங் 18:48); "உம் தயவால் எங்கள் வலிமை உயர்த்தப்பட்டுள்ளது" (சங் 89:17). ஆனால், நாடு கடத்தப்பட்ட காலத்தில், அனைவரின் சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இழிவின் மூலமாக நீதிமான் மீண்டும் தமது பெருமையில் நிலைநிறுத்தப்படலாம் என இஸ்ராயேல் எண்ணுகிறது. இறைவன் தொடர்ந்து தமது ஊழியனுக்கு ஆதரவு அளித்து, அவரது கையைப் பற்றிப் பிடித்து அவரைப் பாதுகாப்பார் (எசா 42:1.6). அவர் துன்புறுத்தப்பட்டாலும், அவமானம் ஏற்படாது என அவருக்குத் தெரியும் (50:7-8). ஆயினும், மக்கள் கூட்டம் அவரைப் பார்த்து அச்சமுற்றது என்று இறைவாக்கினர் அறிவிக்கிறார். மனித சாயலே அவரிடம் இல்லை. அவரது தோற்றம் அவ்வளவு சீர்குலைந்திருந்தது (52:14). கண்டோர் கண் மறைத்து அருவருக்கும் ஒரு மனிதனைப்போல் அவர் இழிவு படுத்தப்பட்டார். புறக்கணிக்கப் பட்டார். நாம் அவரை மதிக்கவில்லை (53:2-3). ஆனால், ஊழியன் மனிதருடைய பார்வையில் தனது முகத்தோற்றத்தை இழந்து விட்டாலும், இறைவன் அவரது நிலையைத் தனது கரத்தில் எடுத்து, மனிதர் முன்பாக அவரை மகிமைப்படுத்துவதன் மூலம், அவரது உள்ளார்ந்த அசைக்க முடியாத பெருமையை நியாயப்படுத்துகிறார், "நம் ஊழியன் சிறப்படைவார், உயர்த்தப்படுவார், மேன்மைப் படுத்தப்படுவார், பெரிதும் மாட்சியுறுவார்" (52:13); "அவரும் வலியவரோடு கொள்ளைப் பொருளைப் பங்கிட்டுக் கொள்வார்" (53:12). ஊழியனுடைய அடிச்சுவடுகளில் ஒவ்வொரு நீதிமானும் இறைவனுடைய தீர்ப்பிற்கு வேண்டுகோள் விடுக்க முடியும். முட்டாளாகவும் துன்புறுபவராகவும் அவர் கருதப்பட்ட நேரத்தில், இதே இறுதி நாளில் "நீதிமான் மிகுந்த துணிவோடு எழுந்து நிற்பார்" (ஞான 5:1-5).

III. புதிய ஏற்பாடு:

1. கிறிஸ்துவின் பெருமை: தான் எங்கிருந்து வந்தார், எங்குச் செல்கிறார் என்பதை அறிந்துள்ள இயேசு, தன்னை இறைமகன் என்று அறிவிக்கும்போது தனது பெருமையை வெளிப்படுத்துகிறார். நான்காவது நற்செய்தி இச்செயல் முறையை ஒரு பெருமையாக விவரிக்கிறது. தமக்கென எந்தச் சிறப்பைப்பற்றிய அக்கறையுமின்றி, தமது தந்தையின் மகிமையை மட்டுமே விரும்பியவராய் (யோவா 8:49-50), அதிகாரிகள் அவரைக் கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்ள வில்லையா என்று மக்கள் கேட்கும் அளவிற்கு (7:25-26), இயேசு உலகை நோக்கி வெளிப்படையாகப் பேசினார் (18:20-21). உலகின் பகட்டான விளம்பரத்துடன் இந்த வெளிப்படையான பேச்சு எத்தொடர்பும் கொண்டிருக்க வில்லையாதலால் (7:3-10) அவர்கள் புரிந்து கொள்ளவில்லை; அவர் ஒதுங்க வேண்டியதாயிற்று (11:54). அந்நாளில் அனைத்தையும் தெளிவாக்கக்கூடிய ஆவியானவருக்கு இயேசு இடமளிக்கிறார் (16:13.25). இச்சொல்லானது பாடுகள் பற்றிய அறிவிப்பிற்கு மட்டுமே பொருந்தியதாகக் காணப்பட்டாலும் (மாற் 8:32), ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவின் நடத்தை மகிமையை வெளிப்படுத்துவதாகச் சித்தரிக்கின்றனர். இவ்வாறு தன் பெற்றோர் (லூக் 2:49), இறைவனுக்கொவ்வாத பழிச்சொற்கள் (மத் 21:12தொ), நிறுவன அதிகாரிகள் (மத் 23), அன்னாவின் சபையில் கன்னத்தில் அறையப்பட்டது (யோவா 18:23) ஆகிய சூழ்நிலைகளில், எல்லா அதிகாரங்களுக்கும் முன்பாக இறைமகன் அல்லது தம் தந்தையின் உரிமைகளுக்கு உரிமை கொண்டாடுகிறார்.

2. விசுவாசியின் பெருமையும் சுதந்தரமும்: தனது விசுவாசத்தின் மூலம்,

இயேசுவை விசுவாசத்துடன் பின் செல்பவர் தொடக்கப் பெருமையைப் பெற்றுள்ளார் (எபி 3:14). அதனுடைய நம்பிக்கையில் மகிழ்வளிக்கக் கூடிய பெருமையாக இறுதிவரை அதைக் கைக்கொள்ள வேண்டும் (3:6). உண்மையில் இயேசுவின் இரத்தத்தின் மூலம், அஃது உறுதி நிறைந்ததாகும் (10:19-20), அருளின் அரியணையை நோக்கி முன்னேறக்கூடும் (4:16). துன்பத்திலும் (10:34-35), இறுதித் தீர்வை நாளில் இயேசு தனக்காக வெட்கப்படுவதைக் காணும் போது ஏற்படும் வலியிலும் (லூக் 9:26) அஃது இவ்வுறுதியை இழக்க முடியாது. ஆனால், விசுவாசமுள்ளவனாக இருந்தால், அவனது இதயத்திற்கு அவன் மீண்டும் உறுதியளிக்கக்கூடும்; ஏனெனில், நமது இதயத்தைவிட, கடவுள் உயர்ந்தவர் (1யோவா 4:17; 2:28; 3:20 தொ).

உயிர்த்த இயேசுவிற்குச் சாட்சியளிக்கின்ற சுதந்தரத்தில், கிறிஸ்தவனுடைய பெருமையானது உலகில் வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வாறு, திருச்சபையின் தொடக்க நாட்களிலிருந்தே கல்வியறிவற்ற அப்போஸ்தலர்கள் (அ.ப. 4:13) பொதுமக்கள் முன்னும் அல்லது அவமதிப்பான பகைவனுக்கு முன்னும் வலுவிழக்காமல் வார்த்தையைப் போதித்தனர் (4:29.31; 9:27-25; 18:25-26). பவுல் இம்மனப்பான்மையினை விசுவாசியினுடைய வெளிப்படையான அறிவிப்பு என்று விவரிக்கிறார். இஃது உயிர்த்த ஆண்டவரின் மகிமையையும் பிரதிபலிக்கிறது (2 கொரி 3:11-12). அப்போஸ்தலிக்கப் பெருமையின் அடித்தளம் இத்தகையதே! "விசுவசித்தேன். ஆகவே, பேசினேன்!" (4:13).

3. பெருமையும் மகிமையும்: ஆண்டவரில் கொண்ட அறிவினைத் தவிர்த்துப் பிற முறைகளில் தன்னைப் பற்றி எவரும் புகழ்ந்து கொள்கின்ற உரிமையை எரேமியா உடனடியாக எடுத்துவிட்டது போன்று, பவுலும் செய்தார் (1கொரி 1:31). ஆனால், போலித் தற்பெருமை போன்ற ஒவ்வொரு சோதனையினின்றும் மனிதனை விடுவிக்க இறைவன் தேர்ந்தெடுத்த அடிப்படைச் சாதனத்தை அவர் அறிவித்திருந்தார். அது விசுவாசமாகும். அதுமுதல், யூதன் என்னும் பெயர், சட்டம், விருத்தசேதனம் போன்ற, சார்ந்திருக்கக்கூடிய சலுகைகள் எதுவும் இனி இல்லை (உரோ 2:17-29). ஆபிரகாமே எந்தவொரு செயலைப்பற்றியும் பெருமை பாராட்டாதிருக்கும் போது (4:2), பாவிகளாகிய நாம் அனைவரும் எவ்வாறு பெருமை பாராட்டிக் கொள்ளக்கூடும் (3:19-20.27)! ஆனால், ஒப்புரவினை வென்றுதந்த இயேசுவினால் விசுவாசிகள் அனைவரும் கடவுள் (5:11), மகிமையின் நம்பிக்கை (5:2), விசுவாசத்தினாலான ஏற்புடைமையின் பலன் ஆகியவற்றில் பெருமை பாராட்டமுடியும். மற்ற அனைத்தும் வெறுக்கத்தக்கவை (பிலி 3:3-9); இயேசுவின் சிலுவை மட்டுமே மகிமையின் ஊற்றாக உள்ளது (கலா 6:14); ஆனால், இந்தச் சிலுவையின் போதனையாளர்கள் அல்லர் (1 கொரி 3:21).

இறுதியாக, கிறிஸ்தவன் தனது இன்னல்களுக்காகப் பெருமைப்படும் போது (உரோ 5:3), தனது பலவீனத்தில் அப்போஸ்தலர் எவ்வளவு பெருமை அடையமாட்டார்! (1 கொரி 4:13; 2 கொரி 11:30; 12:9-10). அவர் உருவாக்கிய திருச்சபைகளே, அவருடைய மகிமையின் மணிமுடியாக இருக்கும் (1 தெச 2:19; 2 தெச 1:4). தனது ஆடுகள் விளைவிக்கிற துன்பங்களுக்கிடையிலும், அவர் அவைகளைப் பற்றிப் பெருமை கொள்ளலாம் (2 கொரி 7:4.14; 8:24). கிறிஸ்தவ மற்றும் அப்போஸ்தலிக்கப் பெருமையின் மறைபொருளானது, இருளை ஊடுருவிச் செல்கின்ற மகிமையினுடைய பாஸ்கா மறைபொருளாகும். பெருமை மிக்க மனிதன் என்பவன், மரணத்தை நேராக நோக்கி, அங்கே வாழ்வைக் கண்டு பிடிப்பவனாவான்.

பெரும் கட்டளை (COMMISSION, THE GREAT)

இயேசு இறுதியாக விண்ணேற்பு அடைவதற்கு முன் தன் சீடர்களுக்கு அளித்த கட்டளையை இது

குறிக்கும். "எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்," "பிதா, சுதன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்" என்ற வாசகம் மத்தேயு கூற விரும்பிய கருத்துக்களைத் தெளிவாகக் கூறுகின்றன. உயிர்த்த ஆண்டவர் உயர்த்தப்பட்டார். ஆண்டவர் அவர்களோடு நிலைத்துள்ளார் (காண்க. மத் 5:1; 7:21-29), புதிதாகத் தொடங்கப்பட்ட மெசியாக் காலத்தின் இறுதியான யாவர்க்கும் உரிய தூதுப் பணியில் தன் சீடர்களை ஆண்டவர் அனுப்புகிறார் (மத் 24:14; யோவா 20:19-23; அ.ப.1:8). ஆதித்திருச்சபை இந்தக் கட்டளையை இயேசுவிடமிருந்து நேரடியாகப் பெற்றதா அல்லது அவர்களின் அனுபவங்கள் வாயிலாக அதை அறிந்தனரா என்பது ஒரு கேள்வியாக உள்ளது (அ.ப. 10:1-11:18; கலா 2:9). திருமுழுக்கு அளிக்கும் வழக்கத்திற்குக் கிறிஸ்து தோன்றியதுதான் தொடக்கமா அல்லது வேறு ஏதேனும் தொடக்கம் இருக்குமா என்பதும் ஒரு கேள்வி (அ.ப. 2:38; 8:16; 1 கொரி 1:14-16). "பிதா, சுதன், பரிசுத்த ஆவியால் திருமுழுக்கு அளிக்கும் வாய்பாடு இங்கு (மத் 28) மட்டுமே கூறப்பட்டுள்ளது. இது தொடக்கத்திலேயே எழுதப்பட்ட நற்செய்தியின் பகுதியா என்பதும் ஒரு கேள்வி.

எவுசேபியுஸ் என்ற ஆதிக்கிறிஸ்தவ அறிஞரின் நூலில், 'என் பெயரால்' என எழுதப்பட்டுள்ளது. இதே போன்ற அமைப்பை மத் 28-இல் அரமேய மொழி பெயர்ப்பிலும் காண்கிறோம். ஆனால் நாம் இன்று நற்செய்தியில் காணும் இந்த அமைப்பு, பல சான்றுகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிதா, சுதன், தூய ஆவி என்ற இந்த அமைப்பு மற்ற மூல விசுவாச அறிக்கையிலும் காணப்படுகிறது (1 கொரி 12:3-6; 2 கொரி 13:14; 1 பேதுரு 1:2).

பெரும் பிளவு (CHASM)

இஃது இரண்டு இடங்களைப் பிரிக்கும் பள்ளம் அல்லது படுகுழியாகும். இச்சொல், செல்வரும் இலாசரும் என்ற உவமையில் லூக் 16:12-இல் மட்டும் பயன்பட்டுள்ளது. இங்கு இஃது இறந்த பின் பாதாளத்தில் வேதனையுறும் செல்வந்தர் இருக்கும் இடத்திலிருந்து ஆபிரகாமின் மடியில் அமர்ந்திருக்கும் இலாசர் இருக்கும் இடத்தைப் பிரிக்கும் பிளவு ஆகும். இப்பிளவை ஒருவரும் கடக்க முடியாது என்பது, இருசாராருக்கும் இடையிலான பிரிவு இறுதியானது என்பதை வலியுறுத்துகிறது. இதனை வாசகச் சூழ்நிலை தெளிவாக்குகிறது. இறுதித் தீர்ப்பின் விவரிப்பில் இப்பெரும் பாதாளம் பயன்படுவதை ஏனோக்கின் நூல் போன்ற பிற்காலப் போலிநூல்களில் காணலாம்.

பெருவாரிநோய், கொள்ளைநோய் (PESTILENCE)

பொதுவான, ஆனால் கொடூரமான முறையில் கடவுளால் அனுப்பி வைக்கப்படும் பெரும் தண்டனை. சாதாரணமாக, இச்சொல் பஞ்சம் மற்றும் கொள்ளை போன்ற மற்றப் பேரழிவுகளுடன் இணைத்துக் கூறப்படும். சாதாரணமாக ஏற்படக்கூடிய கொள்ளை நோயைப் பார்வோனுக்கு எதிரான எச்சரிக்கையாக மோசே பயன்படுத்தினார் (யாத் 9:14). ஆனால், எகிப்திய கொள்ளை நோய்களில் மிகக்கடுமையாக ஏற்பட்டது 'கோமாரி' நோய் ஆகும் (யாத் 9:3).

பாலைவனத்தில் அலைந்து திரிந்தபொழுது கடவுளுக்கு விரோதமாக நடந்துகொண்ட இஸ்ராயேலர்கள், பெருவாரி நோய்களின் மூலம் எச்சரிக்கப்பட்டனர் (எண் 14:12; உப 28:21). இஸ்ராயேலரின் கீழ்ப்படியாமையால் (எண் 11:33; 16:46; 25:8) எண்ணற்ற துன்பங்கள் அவர்களுக்கு ஏற்பட்டன (எண் 11:33; 16:46; 25:8). எண் 14:37-இல் குறிப்பிடப்பட்டுள்ள வாதை எனும் சொல், ஒத்த கருத்தையே குறிக்கிறது.

சாலமோனின் அர்ப்பணிப்புச் செபம் (1 அர 8:37), நாடு முழுவதும் மனம் திரும்பியிருக்கும் நிலையில் கலாபனைகள், கொள்ளை நோய்கள் ஆகியவற்றை விலக்கி விடும்படி இறைவனை

வேண்டுகிறது. ஆமோ4:10-இல் கொள்ளை நோய் என்பது எகிப்திய நோயைக் குறிக்கிறது. ஆனால், அ.ப. 3:5 பெருவாரி நோயை இறைவனது தீர்ப்பின் வருகையினுடைய முன்னறிவிப்பாகக் கூறுகிறது. கொள்ளைநோய் எனும் சொல் இறுதிக்காலம் பற்றிய கூற்றுகளில் பஞ்சத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (மத் 24:7; லூக் 21:11).

கொள்ளைநோய், பெருவாரிநோய் எனும் இரண்டு சொற்களும் ஒரே சமயத்தில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்படுவதால், பழங்காலத்தில் இரண்டிற்கும் இடையில் வேறுபாடு இருப்பதாகக் கருதப்பட்டதாகத் தெரிகிறது. மொழி அறிஞர்கள் ஒருசிலர் குறிப்பிடுவது போல, இண்டும் ஒன்றன்று. வாந்திபேதி, எலும்புருக்கிக் காய்ச்சல், வயிற்றுக் கடுப்பு, அம்மை மற்றும் நரம்புத் தளர்ச்சி போன்றன விவிலிய நாட்டில் காணப்பட்ட பலதரப்பட்ட நோய்களாகும். "பூபானிக்" நோய் போன்றவை கொள்ளைநோய் என்றும், முற்றுகையோடு தொடர்புபடுத்தப்படும் சுகாதாரமற்ற நீரினால் உண்டாகும் வாந்திபேதி, குடல் காய்ச்சல் போன்றவை பெருவாரி நோய்கள் என்றும் கருதப்பட்டன. ஆயினும், அம்மை, அக்குள் நோய் மற்றும் நுரையீரல் நோய் போன்றவையும் அவ்வப்போது குறிப்பிடப்படுகின்றன.

பெருவெள்ளம் (FLOOD IN GENESIS)

காண்க. தொடக்கநூல் அல்லது ஆதியாகமம்: 5 உ: பெருவெள்ளம்.

பெரேசு (PERESH)

மனாசேயின் இனத்தவர், மாக்கிர், மாக்கா ஆகியோருக்குப் பிறந்தவர் (1 நாள் 7:16).

பெரேட்சு (PEREZ – உடைப்பு, பிளவு)

இவர் யூதாவுக்கும், அவருடைய மருமகளான தாமாருக்கும் பிறந்த இரட்டைக் குழந்தைகளுள் ஒருவர் (ஆதி 38:29; 1 நாள் 2:4; 4:1). இவர் எட்சரோன், ஆமூல் ஆகியவர்களின் தந்தை ஆவார் (ஆதி 46:12; எண் 26:21; 1 நாள் 2:5). மேலும், இவர் பெரிசியர் வம்சத்தலைவர் (எண் 26:20). பெரேட்சு வம்சத்தவர், எருசலேமைச் சுற்றி வாழ்ந்ததால் அவர்களின் முக்கியத்துவம் தெளிவாகிறது (1 நாள் 9:4; 27:3; நெகே 11:4-6). தாவீது இந்தக் குலத்தில்தான் பிறந்ததாகப் பாரம்பரியம் கூறுகிறது (ரூத் 4:18-22; மத் 1:3; லூக் 3:33).

பெரேட்சு - உஸ்ஸா (PEREZ - UZZAH – ஊசாவின் பிளவு)

இது தாவீது உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்குக் கொண்டு வரும்போது (2 சாமு 6:8), கீதோனில் (நாக்கோனின்) களத்தருகில் (1 நாள் 13:19-11) ஊசா கொல்லப்பட்ட இடத்திற்குச் சூட்டப்பட்ட பெயர் ஆகும் (2 சாமு 6:8). ஊசா ஆண்டவரின் பேழையைத் தொட்டதால் கொல்லப்பட்டார். இந்த இடம் தெளிவாகத் தெரியாவிட்டாலும் எருசலேமின் மேற்கில், நகரிலிருந்து கிரியத்து எயாரிம் என்னும் இடத்திற்குச் செல்லும் சாலையில் இருந்ததாகக் கருதப்படுகிறது.

பெரேது (BERED – கல்மழை) – ஆள்

1. இவர் சுத்தேலகுவின் மகனும், எப்பிராயிமின் பேரனும் ஆவார் (2 நாள் 7:20). இஃது இனப்பெயர் மூதாதையரின் பெயர் என்பதில் சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை (எண் 26:35). மேலும், 1 நாள் 7:20-க்கு இணையாக உள்ள எண் 26:35-இல் வருகின்றது போலப் பெரேது என்ற பெயரானது 'பெக்கர்' என்றுதான் வாசிக்கப்பட வேண்டும். காண்க. பெக்கர்.

பெரேது (BERED – கல்மழை) – இடம்

இது கானானிலிருந்து எகிப்துக்குச் செல்லும் வழியில் நெகோபுவிலுள்ள ஓர் இடம். இது பெயேர்-லகய்-ரோயிக்கு அப்பால் உள்ளது (ஆதி 16:14). இஃது இருந்த இடம் அறியப்படவில்லை. இதன் பெயர் வாடி உம்-பரேது என்ற பெயரில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இஃது அயின்

கெதேயிசுக்கு வடமேற்கில் 20 கி.மீ. தொலைவிலுள்ள அயின் முவெல்லேவாகவும், பெயேர்-செபாவுக்குத் தென்மேற்கில் 25 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் கலாசேயாகவும் அடையாளம் காட்டப்படுகிறது.

பெரோயா (BEROEA)

1. இது தெசலோனிக்கேயாவுக்கு மேற்கில் 65 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு மாசிதோனிய நகரமாகும். இது பெர்மியுமலை அடிவாரத்தில் இருந்தது. கி.பி. 51-இல் தெசலோனிக்கேயா விலிருந்து விரட்டப்பட்ட பவுலும் சில்வானும் பெரோயாவிலுள்ள செபக்கூடங்களில் போதித்து வந்தனர் (அ.ப. 17:10-11). பலர் இறைவார்த்தைக்கு ஆர்வத்தோடு செவிமடுத்தனர். சோப்பத்தர் உட்பட (20:14) கிரேக்கர் பலர் விசுவாசிகளாயினர். தெசலோனிக்கேயாவிலிருந்து வந்த யூதர்கள் இங்கும் கலகம் உண்டாக்கவே, பவுல் இந்நகரை விட்டுப்போக வேண்டியிருந்தது.

2. இது சீரிய நகரமாகி. அலப்போவிற்கு வழங்கப்பட்ட கிரேக்கப் பெயராகும். அந்தியோக்கு யுபாத்தோர் அரசனின் கட்டளையின்படி இவ்விடத்தில்தான் கொள்கையைக் கைவிட்ட மெனலாவு என்ற தலைமைக் குருவை வெம்மை நிறைந்த சாம்பலில் தள்ளிக் கொலைசெய்தார் (2 மக் 13:4).

பெர்கமு (PERGAMUM – கோட்டை)

இது மேலைச் சிறிய ஆசியாவில் மீசியாவின் நகரங்களில் ஒன்று. இது கிரேக்கர் காலத்தில் புகழ் பெற்றிருந்தது.

பெர்கமு- ஏகியன் கடலிலிருந்து சுமார் 24 கி.மீ. தொலைவிலும், காய்குசு ஆற்றின் வடக்கில் 3 கி.மீ. தொலைவிலும் அமைந்திருந்தது. இந்நகரின் ஆரம்ப கால வரலாறு, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது. அலக்சாந்தருக்குப் பின் வந்தவர்களின் ஆட்சியில் இந்நகரம் சிறப்புற்றிருந்தது. இஃது அந்திக்கோனு கைப்பற்றிய நாட்டின் ஒரு பகுதியாகும். கி.மு. 301-இல் அந்திக்கோனு இறந்தபின் திராக்குவின் அரசன் லிசிமாக்கு மேலைச் சிறிய ஆசியாவை ஆண்டார். லிசிமாக்கு, பிலேத்தேரு என்பவனைப் பெர்கமுவுக்கு அதிகாரியாக்கினார். ஆனால் கி.மு. 282-இல் பிலேத்தேரு, லிசிமாக்குக்கு எதிராகக் கலகம் செய்து செலூக்குவோடு சேர்ந்து கொண்டார். போரில் லிசிமாக்கு கொல்லப்பட்டான். அவனது போட்டியாளனான செலூக்கு திராக்குவில் கொல்லப்பட்டான். அதன்பின் பெர்கமு ஒரு தனி சுதந்தர நாடாயிற்று.

பிலேத்தேரு, கலாத்தியரை வென்ற முதல் பெர்கமு மன்னன் ஆவார். இவருக்குப்பின் வந்த முதலாம் யுமெனசு (கி.மு. 263-241) இச்செயலுக்குப் பரிகாரம்செய்ய விரும்பினார். இவருக்குப்பின் அரியணையேறிய முதலாம் அத்தாலு (கி.மு. 241-197) காட்டுமிராண்டிகளை வென்றார். இரண்டாம் யுமெனசு (கி.மு. 197-159), கி.மு. 167-இல் மற்றொரு போரில் வெற்றி பெற்றான். பெர்கமு நகரின் பொற்காலம் முதலாம் அத்தாலு காலத்தில் தொடங்கியது. இவர் மாசிதோனுக்கு எதிராக, உரோமையர்களுடன் சேர்ந்து கொண்டார். இரண்டாம் யுமெனசு இதே கொள்கையைப் பின்பற்றினார். இருப்பினும், இரண்டாம் அத்தாலு (159-138) காலத்தில் பெர்கமுவின் புகழ் குன்றத்தொடங்கியது. பெர்கமுவில் இரண்டாம் யுமெனசு காலத்தில் பெரிய நூல்நிலையம் இருந்தது.

மூன்றாம் அத்தாலு பெர்கமு நகரை உரோமையர்களிடம் கொடுத்துவிட்டார். அவருடைய செல்வம் உரோமைக்கு அனுப்பப்பட்டது. வரியும் அதிகமாக விதிக்கப்பட்டது. கி.மு. 88-இல் பெர்கமு நகரின் மக்கள், உரோமையருக்கு எதிராக மித்ரா தேத்தசுவின் ஆணையின்படி, பெர்கமு நகரிலிருந்த உரோமையர் அனைவரையும் கொல்ல எழுந்தனர். இச்செயலினால், பெர்கமு சுதந்தரத்தை இழந்த போதிலும் கி.மு. 47-46-இல் சீசர் இதற்குச் சுதந்தரம் அளித்தார். உரோமையர் காலத்தில் இந்நகரம் புகழோடு விளங்கியது.

உரோமை அகுஸ்து வழிபாடு நிறுவப்பட்டது. திரேசனுக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. பெர்கமுவிலிருந்த நூல்நிலையம் கிளியோபத்திராவுக்கு நன்கொடையாக, அந்தோணியால் அலக்சாந்திரியாவுக்கு அனுப்பப்பட்டது. இங்கிருந்த வெண்கலச் சிலைகள் நீரோவின் ஆணையால் உரோமைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நகரம் மிகவும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தது. நகரத்தின் தாழ்வான பகுதியில் குடியிருப்புகளும், உயர்ந்த பகுதியில் பொதுக்கட்டடங்களும், வழிபாட்டு இடங்களும், அரண்மனைகளும் இருந்தன. இங்கிருந்த கோட்டையின் நடுமாடியில் வேறுபட்ட வயதினருக்கென்று மூன்று உடற்பயிற்சி நிலையங்கள் இருந்தன. கோட்டையின் மேல்தளம் மிகவும் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தது. குன்றின் சரிவில், கிரேக்க உத்தியில் அமைக்கப்பட்ட கலை அரங்கமும், அரை வட்ட வடிவமான அங்காடியும், பெரிய பீடமும், அரண்மனைகளும் இருந்தன. இங்கிருந்த பெரிய பீடம் சித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. நகரச் சுவர்களின் தெற்கில் உள்ள தாழ்வான பகுதி, உரோமையர் காலத்தில் விரிவாக்கப்பட்டது.

பெர்கமு நகரிலிருந்த திருச்சபையைப் பற்றியும், அங்கிருந்த கிறிஸ்தவர்கள் அரச வழிபாட்டுக்கு எதிராகப் போராடியதைப் பற்றியும் திருவெளி 1:11; 2:12 குறிப்பிடுகின்றது. இங்கிருந்த திருச்சபை- திருவெளிப்பாட்டு நூலில் கூறப்படும் ஏழு திருச்சபைகளுள் ஒன்று. உரோமையர் காலத்திய பெர்கமு, இன்றைய பெர்கமா நகரின் அடியில் உள்ளது. பைசாந்தியர் காலத்தில் இஃது ஆயர்களின் இருப்பிடமாக இருந்தது.

பெர்சப்பொலி (PERSEPOLIS)

இது பாரசீக மன்னர்களின் இருப்பிடமாக இருந்தது. 2 மக் 9:2, அந்தியோக்கு எப்பிபான் அந்நகரைக் கொள்ளையடிக்க முயன்று தோற்றுப் போனதைக் குறிப்பிடுகின்றது. பெரிய தாரியு (கி.மு. 521-485) பல கட்டடங்களைக் கட்டி அழகு படுத்தினார். இதே பணியை இன்னும் அதிக அளவில் செருசு (485-465) செய்தான். ஆனால், கி.மு. 330-இல் பெரிய அலக்சாந்தர் அழித்தபின் அந்நகரின் புகழ் குன்றத்தொடங்கியது. இப்போது இந்நகரில் படிக்கட்டும், வாயில் கட்டடங்களும், பெரிய தாரியுவின் காலத்தில் அமைக்கப்பட்ட பெரிய தளமும், செருசு காலத்தில் கட்டப்பட்ட நூறுகால் மண்டபமும், அரண்மனையும், கலையரங்கமும் குறிப்பிடத்தக்கவை.

பெர்சி (PERSIS - பாரசீகப்பெண்)

பவுல் வாழ்த்து அனுப்பிய உரோமையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவப்பெண் (உரோ 16:12). இப்பெயர் உரோமையைச் சேர்ந்த விடுதலை பெற்ற பெண்களுடையவும் அடிமைப் பெண்களுடையவும் பொதுப்பெயராகவும் ஏடுகளில் காணப்படுகிறது.

பெர்னிக்கி (BERNICE – வெற்றி வாகைசூடுதல்)

1. இவள் "தென்திசை மன்னனின் மகள்" (தானி 11:6) ஆவாள்; ஆனால், பெயர் குறிப்பிடப்படவில்லை. இவள் எகிப்து நாட்டு அரசராயிருந்த ஐந்தாம் தோலமிபிலதெல்பு (கி.மு. 285-246) என்பவரின் மகள் ஆவாள். சீரியாவிற்கும் எகிப்து நாட்டிற்கும் இடையே அமைதி உறவை ஏற்படுத்தும் முகத்தான், சீரிய நாட்டு மன்னராகிய இரண்டாம் அந்தியோக்குவை இவள் மணந்துகொண்டாள். இவளை மணப்பதற்காக அந்தியோக்கு அவரது முதல் மனைவியாகிய லாவோதீசை விவாகரத்து செய்தார். அந்தியோக்குவின் இறப்பிற்குப்பின் பெர்னிக்கியும், அவள் மகனும் லாவோதீசால் கொல்லப்பட்டனர்.

2. இவள் முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மகளும், கால்கிசின் ஏரோதின் மனைவியும் ஆவாள். கி.மு. 48-இல் இவர் இறந்தபின் பெர்னிக்கி அவளது சகோதரர் இரண்டாம் ஏரோது அகிரிப்பாவோடு தகாத முறையில் உறவு

வைத்திருந்தாள். பெஸ்து என்ற ஆளுநர் பவுலை விசாரித்த போது அகிரிப்பாவோடு பெர்னிக்கியும் அங்கு இருந்தாள் (அ.ப. 25:13.23; 26:30). பின் சிலிசியா நாட்டின் அரசரான போலே மோனை மணந்துகொண்டாள். சிறிது காலம் கழித்து மறுபடியும் தன் சகோதரன் அகிரிப்பாவிடம் திரும்பி வந்தாள். பின், தீத்துவின் வைப்பாட்டியாக வாழ்க்கை நடத்தினாள். இவள் கி.ப. 79-இல் தனது ஐம்பத்தோராவது வயதில் இறந்தாள்.

பெலலியா (PELALIAH – யாவே நீதி வழங்குகிறார்)

இவர் எஸ்ரா காலத்தில் வாழ்ந்த ஒரு குரு ஆவார். அதாயாவின் முன்னோர் (நெகே 1:12).

பெலற்றியா (PELATIAH – யாவே மீட்கிறார்)

1. அனனியாவின் மகனான பெலற்றியா தாவீது மன்னனின் தூரத்து வழித்தோன்றலாவார். நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 3:21).

2. எசேக்கியா மன்னன் காலத்திலே வாழ்ந்த இசீயின் புதல்வரான இவர் சிமியோன் இனப்படைத்தலைவருள் ஒருவராவார். இப்படை, செயீர் மலைக்குச் சென்று அமலேக்கியரில் எஞ்சி இருந்தவரை முறியடித்து, அங்குக் குடியேறியது (1 நாள் 4:42).

3. நெகேமியாக் காலத்தில் உடன்படிக்கையிலே கையெழுத்திட்ட மக்கள் தலைவருள்– இவரும் ஒருவர் (நெகே 10:22).

4. எசேக்கியலின் நீதி வழங்கும் காட்சியிலே வந்த இரண்டு யூதேய இளவரசர்களில்– பெனயாவின் மகனான இவரும் ஒருவர் (எசே 11:1.13). எகிப்தியர்களைச் சார்ந்திருந்த இவ்விருவரும் பாபிலோனியர் எருசலேமைக் கைப்பற்றியபோது தீய ஆலோசனை தந்து அந்நகர அழிவிற்கு உதவினர் (11:2).

பெலாயா (PELAIAH – யாவே வியப்பானவர்)

1. எலியோவெனாயியின் மகனான இவர், தாவீது மன்னனின் தூரத்து வழித்தோன்றலாவார். (1 நாள் 3:24).

2. இந்த லேவியர் கடவுளின் திருச்சட்ட நூலை எஸ்ரா படித்தபோது அங்கிருந்தார். மேலும், அவர் மக்களுக்குப் புரியும்படி அதை விளக்க உதவினார் (நெகே 8:7). நெகேமியாவின் தலைமையில் உடன்படிக்கை முத்திரையிடப்பட்டதில் பங்கெடுத்தார் (10:10).

பெலிக்சு அந்தோனியு (FELIX ANTONIUS)

கூமானுவுக்குப் பிறகு கி.பி. 52-இலிருந்து 60 வரை யூதேயாவின் ஆளுநர். அ.ப. 23:24-24:27-இன்படி, பவுல் கடைசிப் பயணமாக எருசலேமுக்குச் சென்று அங்கு சிறைப்படுத்தப்பட்டபோது பெலிக்சு ஆளுநராக இருந்தார். நீரோவால் பெலிக்சு திரும்ப அழைக்கப்பட்டபோது பவுல் புதிய ஆளுநர் பெஸ்துவிடம் கையளிக்கப்பட்டார்.

1. **வரலாற்று ஆசிரியர் யோசிப்பசின்படி:** பெலிக்சு, பல்லாசு என்ற பெயருடைய செல்வாக்கு வாய்ந்த உரோமையரின் சகோதரர். 52-இல் பெலிக்சு ஆளுநனாகப் பெயர் சூட்ட பெற்றார். “எண்ண முடியாத கூட்டமாக இருந்த கொள்ளைக்காரர்கள் மற்றும் ஏமாற்றுகிறவர்களின் எழுச்சியை அடக்குவதில் கவனம் செலுத்தினார் பெலிக்சு. நம்பிக்கைத் துரோகத்தினால் பெலிக்சு தெனெயாவின் புதல்வன் எலயாசர் என்ற தலைவனை, அவனுக்குத் தீங்கு எதுவும் செய்யவில்லை என்ற வாக்குறுதி கொடுத்தபின், கைதியாக்கினான், யோனத்தான் என்ற பெரிய குருவைக் கொலை செய்ததில் கொள்ளைக்காரர்களின் உதவியைப் பயன்படுத்திக்கொண்டான். பெரும் எண்ணிக்கையுள்ள யூதர்களுக்குத் தலைவனான ஓர் எகிப்திய யூதன் (காண்க. அ.ப. 21:38) பெலிக்சால் தாக்கப்பட்டான்; அதன் பிறகு அந்தத் தலைவனைப் பற்றிக் கேள்விப்படவில்லை. ஆனால், அவனுடைய ஆதரவாளர்கள் நானூறு பேரும் கொல்லப்பட்டார்கள். பெலிக்சு திரும்ப உரோமைக்கு அழைக்கப்பட்டார். யூதர்களின்

தூதுக்குழு பெலிக்சைக் குற்றம் சாட்ட உரோமைக்குச் சென்றது. ஆனால், பல்லாசு தமது செல்வாக்கைப் பயன்படுத்தித் தண்டனையிலிருந்து இவனைக் காப்பாற்றினார். இரண்டாம் அகிரிப்பாவின் சகோதரி துருசில்லாவை அவளது கணவன் எமேசாவின் அரசன் அசிசுவைக் கைவிடச் செய்து, அவளை மணந்து கொண்டார். அவள் இவனுக்கு அகிரிப்பா என்ற மகனைப் பெற்றுக்கொடுத்தாள். இவர், மேலும் இருமுறை மணந்தார்.

2. உரோமைய மூலங்களில்: உரோமைய வரலாற்று ஆசிரியர்களான சியுட்டோனியுசு, தாசித்தசு ஆகியவர்களின் புத்தகங்களில் பெலிக்சைப் பற்றி இங்கொன்றும் அங்கொன்றுமாகச் செய்திகள் உள்ளன. கூமானு கலிலேயாவின் ஆளுநராக இருந்தபோது பெலிக்சு, சமாரியா, யூதேயாவின் ஆளுநராக இருந்ததாக இருவரும் கூறுகின்றனர். ஆனால், யோசிப்பசு, 'பெலிக்சு கூமானுக்குப் பிறகு யூதேயாவின் ஆளுநன்' என்று எழுதுகின்றார். இக்கருத்தில் அறிஞர்கள் பலர் யோசிப்பசுவின் கருத்துக்கே முதலிடம் கொடுக்கின்றார்கள்.

சியுட்டோனியுவின் குறிப்புப்படி பெலிக்சு மூன்று அரசப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டான் என்று குறிப்பிடுகின்றார். அதாவது, முதலாவதாக துருசில்லாவையும், அடுத்து- மாற்கு அந்தோனி-கிளியோபாத்திரா ஆகியவர்களின் பேத்தியையும் மணந்தார். மூன்றாவது மனைவியின் பெயர் தெரியவில்லை.

தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்ற அச்சமின்றி, உரிமையைப் பயன்படுத்தி எல்லாவிதமான தீமையையும் செய்யமுடியும் என்று பெலிக்சு நம்பினதாத்க தாசித்தசு குறிப்பிடுகின்றார். அவனுடைய சகோதரனின் செல்வாக்குதான் சந்தேகமின்றி அவனுடைய கொடுங்கோன்மைக்குத் தூண்டுகோலாக இருந்தது. அவனுடைய செயல்கள் இன்னும் பல இடர்ப்பாடுகளைத் தூண்டிவிட்டது என்று தாசித்தசு கூறுகின்றார். பெலிக்சு திரும்ப அழைக்கப்பட்ட ஆறு வருடங்களுக்குப் பிறகு யூதர்களின் போர் வெடித்தது. பெலிக்சின் ஆட்சிக் காலமும், கொடூரங்களும், அடக்குமுறைகளும் போருக்கு முக்கிய காரணம். பெஸ்துவோ, அவனுக்குப்பின் வந்தவர்களோ இந்த அழிவைத் திசை திருப்ப முடியவில்லை. அவர்களும் அதைப் பற்றிக் கவலைப்படவுமில்லை. இவையெல்லாம் யோசிப்பசின் ஆதாரங்களிலிருந்து கிடைத்தவை. பிற்காலத்தில் இவனுக்காக இவன் சகோதரன் பல்லாசு நீரோவின்முன் பரிந்துரைக்க மறுத்தபோது, பெலிக்சு தன் பதவியைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக உரோமையில் தண்டிக்கப்பட்டார். குடியேற்ற நாட்டைத் தவறாக நடத்துவதில் பெலிக்சு முதன்மையான எடுத்துக்காட்டாவார். இவர் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றவராக இருப்பதுபோல் தெரிகிறது. அந்தோனியு என்ற பெயரை அரசன் கிளாதியுவின் தாய் 'அந்தோனியா' என்ற பெயரிலிருந்து எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

3. அப்போஸ்தலர் பணியில்: பெலிக்சின் ஆட்சின்போது பல கிளர்ச்சிகள் எழுந்தன. அவைகளில் ஒன்றுதான், இறைவாக்கினர் என்று தன்னைக் கூறிக்கொண்ட எகிப்தியன் நடத்திய கிளர்ச்சி. இஃது, அ.ப. 21:38-இல் குறிப்பிடப்படுகிறது. அப்போஸ்தலர் பணி நூல், பவுல் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டபோது பெலிக்சு ஆளுநராக இருந்ததையும் (23:24), துருசில்லாவோடு சேர்ந்து பவுலோடு தனியாகக் கலந்துரையாட ஒத்துக்கொண்டதையும் குறிப்பிடுகிறது. நீதி, சுய கட்டுப்பாடு, வருங்காலத் தீர்ப்பு ஆகியவற்றைப் பற்றிய பவுலின் உரைகள் இவரையும் இவர் மனைவியையும் அச்சப்படுத்தின. இலஞ்சம் கொடுக்காவிடில் பவுலை இவர் விடுதலை செய்யமாட்டார் என அ.ப. 24:26 குறிப்பிடுகிறது. பெலிக்சுக்குப் பிறகு, பெர்க்கியு பெஸ்து ஆளுநராக வந்தும் பவுல் சிறையில்தான்

இருந்தார் (24:27). உரோமைக்குத் திரும்ப அழைக்கப்பட்டதற்குப் பிறகு (கி.ப. 60) யூதர்களால் பெலிக்சு அவருக்கு எதிராகச் சாட்டப்பெற்ற குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப் பெற்றார்.

யோசிப்பசோ, பவுலின் திருமுகங்களோ பவுலுக்கும் பெலிக்சுக்கும் இடையேயுள்ள தொடர்பைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

பெலிஸ்தியர் (PHILISTINES)

இது பாலஸ்தீனத்திலுள்ள ஒரு நாடு. ஆகியனில் தோன்றிய இம்மக்கள் பாலஸ்தீனத்தின் தெற்குக் கடற்கரையில் வாழ்ந்து இஸ்ராயேலரோடு பன்முறை சண்டையிட்டனர். இவர்கள் வாழ்ந்த பகுதிபெலிஸ்தியா என்றழைக்கப்பட்டது.

எகிப்தின் மூன்றாம் ராமசேசு பெலிஸ்தியரைப் பற்றி முதன் முதலாகக் குறிப்பிடுகிறார் (கி.மு. 1196-1165). ராமசேசினால் முறியடிக்கப்பட்ட இவர்கள் பாலஸ்தீனக் கடலோரப் பகுதிகளில் குடியேறினர். இவர்கள் இந்தோ-செர்மானிய அல்லது மத்தியதரைக் கடல் மக்கள் இனத்தைச் சார்ந்தவர்கள். கி.மு. 1200-இல் காட்டுமிராண்டிகள் ஐரோப்பாவைத் தாக்கியதால் இங்கே வாழ்ந்த இவர்கள் மத்தியதரைக் கடலுக்குக் கிழக்கே நோக்கிச் சென்றனர். இவர்களில் சிலர் கானானியக் கலைகளைப் பின்பற்றத் தொடங்கினர்; கானானிய மதத்தைப் பின் பற்றினர். இவர்களது தெய்வங்கள் தாகோன், அஸ்தார்தே, பாகால்-செபூல் ஆகியோராவர். இவர்கள் மந்திரவாதிகளைக் கொண்டிருந்தனர். போரிலே இவர்கள் சிறந்திருந்தனர். இரும்பின் உபயோகத்தைப் பாலஸ்தீனத்தில் புகுத்தினர். இரும்புக் கருவிகளின் வாணிபத்தை ஏகபோக உரிமையாகத் தாங்களே கையாண்டனர் (1 சாமு 13:19-22). தாவீது கி.மு. 1000-இல் அரசுக்கு வந்தபோது இவர்களது ஆளுகை சிதறியது. கி.மு. 715-இல் பிலிஸ்தியாவுக்கு எதிராக இறைவாக்கு உரைக்கப்பட்டது (எசா 14:29-31). மேலும், இவர்கள் அடிமை வியாபாரம் செய்வதாகவும் கண்டனம் செய்யப்பட்டனர் (யோவே 4:4). இவர்கள் இஸ்ராயேலரின் பகைவர்களாக விளங்கினர் (சங் 63:8; 83:7). நாடுகளின் அட்டவணையிலே பெலிஸ்தியரின் கடல் மத்திய தரைக்கடல் ஆகும் (யாத் 23:31). சிம்சோன் வரலாற்றிலே பெலிஸ்தியர்கள் இஸ்ராயேல் நாட்டைப் பிடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. யூதா, பெலிஸ்தியரின்கீழ் இருந்தது (நீதி 13:16). யூதாவுக்கும் பெலிஸ்தியாவுக்கும் இடையில் இருந்த சிம்சோன் குலமான தாண் வடக்கு நோக்கிச் செல்ல வேண்டியதாயிற்று (நீதி 18). பெலிஸ்தியரைத் திறம்பட எதிர்த்த இஸ்ராயேலர் அபேக்கு என்ற இடத்தில் முறியடிக்கப்பட்டு, பேழையும் எடுத்துச் செல்லப்பட்டது (1 சாமு 4-6). மேலும், பெலிஸ்தியர்கள் இஸ்ராயேலின் மையப்பகுதிகளிலும் புகுந்தனர் (1 சாமு 13:3; 10:5). சவுல் முதன்முதலாக மிக்மாசில் பெலிஸ்தியரை வென்றார். மேலும், சவுலின் ஆட்சிக்காலம் முழுவதும் பெலிஸ்தியருடனான சண்டை தொடர்ந்தது (1 சாமு 14:47,32). ஏலாவிலே மறுபடியும் சவுல் அவர்களை முறியடித்தார். ஆனால், பெலிஸ்தியர்கள் தொடர்ந்து இஸ்ராயேலைத் தாக்கினார்கள். கில்போவா மலையில் சவுல் கொல்லப்பட்டபின் பெலிஸ்தியர் கை ஓங்கியது. தாவீது அரியணை ஏறியபின் இந்நிலை மாறியது. தாவீது மன்னருக்கும் பெலிஸ்தியருக்கும் சண்டை மூண்டது. இதிலே தாவீது முழுமையான வெற்றியை அடைந்தார் (2 சாமு 8:1). இந்த ஆதிக்கம், சாலமோன் மன்னர் காலத்திலும் தொடர்ந்தது. இதன் பின்னர், பெலிஸ்தியர் சுதந்தரமாக வாழ்ந்தனர்; பல நேரங்களில் இஸ்ராயேலையும் தாக்கினர் (1 அர 15:27; 16:15); பல முறை தோற்கடிக்கப்பட்டனர் (2 நாள் 26:68; 2 அர 18:8). பல இறைவாக்குகள் இஸ்ராயேல், பெலிஸ்திய பகைமையைக் குறிப்பிடுகின்றன (எசா 14:28-31; எரே 25:20; எசே 16:27; செப் 2:5). நெபுகத்னேசரின் படையெடுப்பிற்குப் பிறகு இவர்களது புகழ் மங்கியது.

பெலுசிம் (PELUSIUM)

இஃது எகிப்தின் வடகிழக்கு எல்லையிலுள்ள அரண்களுடன் கூடிய நகரம். இதைக் குறிக்கும் எபிரேயப் பெயர், எகிப்திய மொழிப்பெயரிலிருந்து பெறப்படுகிறது. இந்நகரம் திராட்சை இரசத்திற்குப் புகழ் பெற்றிருந்தது. வடக்கிலும், கிழக்கிலும் ஆசிய நாடுகள் இருந்ததால் எகிப்தியர்களின் காலத்தில் இந்நகரம் படைச்சிறப்பைப் பெற்றிருந்தது. எரே 3:15-இல் இந்நகரம் 'எகிப்தின் அரண்' என்று அழைக்கப்படுகிறது.

பெலேகு (PELEG - ஓடை, பிரிவு)

ஏபேரின் மகனான இவர் சேமின் வழிவந்தவராவார் (ஆதி 10:25; 11:16-19; 1 நாள் 1:19.25). இவருடைய பெயர்- 'பிரிவு' என்ற பொருளில் விளக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இவருடைய காலத்தில் உலகம் பிளவுபட்டது. இது பாபேல் கோபுர வரலாற்றைக் குறிப்பதாக இருக்கலாம். இந்த உலகம் என்ற சொல் - நிலத்தைக் குறிக்காமல், ஆதியில் தோன்றிய பெலேகு வழிவந்தவரும், யோக்தான் வழிவந்தவரும் ஆகிய இரண்டு முக்கியமான செமித்திய இனங்கள் பெருகக் காரணமாயிருந்ததைக் குறிக்கலாம். இதன்படி பெலேகு வழிவந்தவர் அராபிய மக்களையும், யோக்தான் வழிவந்தவர் ஆராமிலும், மெசபொத்தாமியாவிலும் வாழ்வோரையும் குறிக்கிறது. இன்றைய வாசகங்களில் கொடுக்கப்பட்டுள்ள தகவலில், பெலேகுவின் வழித்தோன்றல்களில் ஆபிரகாமின் முன்னோர் வரிசை மட்டுமே தரப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தைத் தவிர மற்றும் பல விளக்கங்களும் அறிஞர்களால் தரப்பட்டுள்ளன. இவைகளில் ஒன்று பெலேகு என்ற சொல்லுக்கு "ஓடை, கால்வாய்" என்ற பொருளாகும். ஏனெனில், பெலேகு மக்கள் செயற்கையாகக் கல்வாய் வெட்டி விவசாயம் செய்பவராவர். மேலும், இந்தப் பெயர் யூப்பிரத்தீசு, கபோராஸ் ஆறுகளின் சந்திப்பில் உள்ள பால்கா என்ற நகரிலிருந்து வந்த பெயராகவும் இருக்கலாம்.

பெலேத்தியர் (PELETHITE)

பெலேத்தியர்- கெரேத்தியரோடு தொடர்புடைய கூலிப்படையினர். இவர்கள் அயல் நாட்டைச் சார்ந்தவர்கள். இவர்கள் தாவீதின் காலத்தில், பெனாயாவின் தலைமையில் அரசரின் மெய்க்காப் பாளராக வேலை செய்தனர் (2 சாமு 8:18; 20:13; 1 நாள் 18:17). மோந்துகோமெரி என்பவர், "பெலேத்தியர்" என்ற சொல், "பெலிஸ்தியர்" என்ற சொல்லோடு தொடர்புடைய சொல் என்று கருதுகிறார். அப்சலோமின் கலகத்தின்போது, தாவீது எருசலேமை விட்டு ஓடியபோது, பெலேத்தியர் அவரோடு சென்றனர் (2 சாமு 15:18). பென்யமின் கோத்திரத்தானான சேமின் கலகத்தின்போது தாவீதுக்குத் துணை நின்றார்கள் (2 சாமு 20:7). இந்நிகழ்ச்சிகள் பெலேத்தியர் தாவீதிடம் கொண்டிருந்த விசுவாசத்தை விளக்குகின்றன. தாவீதுக்குப் பிறகு, சாலமோன் அரியணை ஏற வேண்டும் என பெனாயா பரிந்துரைத்தபோது, பெலேத்தியர் அவருடன் இருந்தனர். சாலமோன் அரசரின் முடிசூட்டு விழாவில் பெலேத்தியர் இருந்தது. சாலமோனின் எதிரியான அதோனியாவின் முயற்சி வெற்றியடையாமல் போவதற்குக் காரணமாக இருந்தது (1 அர 1:38.44).

பெலேத்து (PELETH - விரைவான)

1. ரூபனின் குலத்தில் தோன்றிய இவர், ஓன் என்பவனின் தந்தையாவார். மோசேக்கு எதிராக, கோரகு செய்த கலகத்தில் இந்த ஓன் கலந்து கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது (எண் 16:1).

2. எரகுமவேலரான இவர், யோனத்தானின் மகனாவார். இவர்களுடைய மூதாதையர் யூதா குலத்தைச் சேர்ந்தவராக இருந்திருக்க வேண்டும் (1 நாள் 2:33). இந்த எரகுமவேலர்கள் தெற்கு யூதாவில் வாழ்ந்துவந்த ஏதோமியர்களிலிருந்து பிரிந்தவர்களாக இருக்கலாமெனக் கருதப் படுகிறது.

பெலேற்று (PELET - விடுவித்தல்)

1. காலேபியரான இவர், எகிதாயின் புதல்வர்களில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார் (1 நாள் 2:47).

2. அசமாவேத்தின் இரு புதல்வர்களில் ஒருவனான பெலேற்று- பென்யமின் குலத்தைச் சார்ந்தவர். தாவீது சவுலிடமிருந்து தப்பித் தலைமறைவாய்ச் சிக்லாகு என்னுமிடத்தில் இருந்தபோது, அவரோடு சேர்ந்து கொண்ட வீரரில் இவரும் ஒருவர் (1 நாள் 12:3).

பெலோனியர் (PELONITE)

'பெலோனியர்', என்பது- ஏலேசு, அகீயா ஆகியவர்களுக்குச் சூட்டப்பட்ட பட்டப் பெயர். இவர்கள் தாவீதுடன், பெலிஸ்தியர்களுக்கு எதிராய்ப் போரிட்ட "வலிமை வாய்ந்தவர்களுள்" இருவர் (1 நால் 11:27.36; 27:10). ஆனால் 2 சாமு 23:26-இல் எல்லேஸ் 'பல்தியார்' என்று அழைக்கப்படுகிறார். அதாவது, இவர் பெத்-பெலேற்று என்னும் இடத்திலிருந்து வந்தவர். 2 சாமு 26:34-இல் குறிப்பிடப்படும் எலியாம் என்பவரும் அகீயா என்பவரும் ஒரே நபராக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

பெல்சாட்சர் (BELSHAZZAR - பேல் அரசனைப் பாதுகாக்கிறார்)

'பெல்சாட்சர்' என்ற சொல்லுக்குப், பேல் இறைவன் மன்னனைப் பாதுகாக்கிறார்' என்று பொருள் கொள்ளப்படுகிறது.

இவர் நபோனிதுவின் மகனும், அவருடன் ஆட்சி செய்தவரும் ஆவார். தானி 5:11தொ; 8:1- இன்படி பாபிலோன் நாடானது சைரசினால் கைப்பற்றப்பட்ட பொழுது பாபிலோனின் கடைசி அரசராக, பெல்சாட்சர் இருந்தார். தானி 5–என்ற பகுதியில் பெல்சாட்சர் என்னும் அரசன் பெருங்குடி மக்களுக்கு அளித்த விருந்தைப் பற்றிய நிகழ்ச்சி கொடுக்கப்பட்டுள்ளது. அவ்விருந்தில், எருசலேம் ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட புனித கலங்களிலிருந்து விருந்தினர் பருகினர். விருந்து நடந்து கொண்டிருக்கும் அரண்மனைக் சுவத்துச் சுவரில் மனித கைவிரல்கள் தோன்றி எழுதத் தொடங்கின. அவ்வாறு எழுதப்பட்ட செய்தியினை விளக்கக் கூடியவர் தானியேல் ஒருவர்தான் இருந்தார். தானியேல் எழுந்து, 'பாபிலோனிய ஆட்சியின் முடிவினையும், அது மேதியர்களுக்கும் பாரசீகர்களுக்கும் மாற்றப்படுவதையும் இவ்வெழுத்துக்கள் உணர்த்துகின்றன' என்று விளக்கினார். அன்றிரவே, பாபிலோனிய நகரானது சைரசினால் கைப்பற்றப்பட்டது; பெல்சாட்சர் கொலை செய்யப்பட்டார்.

பெல்சாட்சர், அவரது தந்தையிருந்தபொழுதே அவரோடு இணைந்து ஆட்சிபுரிந்தார். இவரது தந்தை அராபியாவிலிருந்துபொழுது, எட்டு வருடங்களாக தலைநகரை இவர் ஆண்டு வந்தார். ஆனால், இவர் பாபிலோனியாவின் அரசராக இருக்கவில்லை. இவர் நபோனிதுவின் மகனேயொழிய, நெபுகத்னேசரின் மகனல்லர் (தானி 5:17). பண்டைய அசீரிய மொழி ஆராய்ச்சியாளர்கள் தந்துள்ள ஆதாரங்களில் பெல்சாட்சர் அவரது தந்தையோடு இணைந்து ஆட்சிபுரிந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அவரது இறப்பைப் பற்றிய குறிப்புகள் ஒன்றும் காணப்படவில்லை.

பெல்தசாட்சர் (BELTESHAZZAR - பேல் அவரது வாழ்வைப் பாதுகாப்பாராக)

இப்பெயர் நெபுகத்னேசரின் அண்ணகர்களின் தலைவனால் தானியேலுக்கு வழங்கப்பட்ட பாபிலோனியப் பெயராகும் (தானி 1:7; 2:26; 4:8-9.19; 5:12; 10:1). பெல்தசாட்சர் என்ற பெயரானது "பேல் அவரது வாழ்வைக் காப்பாற்றுவார்" என்று பொருள்படுகின்ற அக்காதிய தெய்வம் பேல்-பலாட்சு-உட்சூர் என்பதைக் குறித்துக் காட்டலாம்; அதன் குறுகிய வடிவமாகவும் இருக்கலாம்.

பெல்தேத்திமு (BELTEHMUS)

இப்பெயர் பாலஸ்தீனத்திலிருந்த பாரசீக அலுவலர் அல்லது அதிகாரியைக் குறிக்கிறது.

இஃது ஓர் ஆளின் பெயரன்று; ஆளுநரின் பட்டமாகத் தெரிகிறது (எஸ் 4:8).

பெல்லா (PELLA)

பெல்லா கிழக்குப் பாலஸ்தீனத்தில் தெக்கப்பொலியின் நகரங்களில் ஒன்று. இது கி.பி. முதல் நூற்றாண்டில் ஆயர்கள் தங்கும் இடமாகவும் இருந்தது. விவிலியத்தில் குறிக்கப்பட வில்லையாயினும், இது நீண்ட வரலாறு கொண்ட முக்கிய மையமாகும். இந்நகரம் அமர்னாவின் கடிதங்களில் பிகிலும் என்று குறிப்பிடப்படுகின்றது. இந்நகரம் மூன்றாம் துத்மோஸ் (கி.மு. 1490-1436). சேத்தி (கி.மு. 1318-1301) ஆகிய மன்னர்களின் குறிப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் ராம்சேசு கி.மு. 1284-இல் செதுக்கிய சாசனத்தின்படி பாகேல், அம்மாத்து ஒரு பக்கமும், பெத்சான், இரகோபு மற்றொரு படையாகவும் இருந்து போரிட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது. இப்போரில் தலையிட பார்வோன் அழைக்கப்பட்டான். பாகேல் தோற்கடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டது. பின் அப்பகுதி மகா அலக்சாந்தரால் கைப்பற்றப்பட்டு அங்குக் கிரேக்கர் குடியேறும்வரை அது கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. அவர்கள் மாசிதோனியாவைச் சேர்ந்தவர் களாதலால், பாகேல் மாசிதோனியாவின் தலைநகரான பெல்லா என்னும் பெயரை அடிப்படையாகக் கொண்டு, இந்நகருக்குப் பெல்லா என்னும் கிரேக்கப் பெயரை இட்டனர்.

கி.பி. 66-இல் உரோமையர்களுக்கு எதிராய்க் கலகம் எழுந்தபோது, எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள். உரோமையர் நகரை அழித்துவிடுவர் என்று எச்சரிக்கப்பட்டு பெல்லாவில் குடியேறினர். இச்சமயத்திலிருந்து இது கிறிஸ்தவ சமயத்தின் மையமாக இருந்தது. கி.ப. 135-இல் இங்கிருந்த கிறிஸ்தவர்கள் பலர் எருசலேமுக்குத் திரும்பிய போதிலும் அதன் முக்கியத்துவம் குறையவில்லை.

இது வாடி யாபிசுக்கு வடக்கில் 6.5 கி.மீ. தொலைவிலுள்ள வாடி யுருமில், யோர் தானுக்குக் கிழக்கில் 3 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலத் தபகத் பாகில் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

பெற்றகு (BETAH - நம்பிக்கை)

இஃது ஒரு நகரமாகும் (2 சாமு 8:8; காண். ஆதி 22:24). தெல் ஏல்-அமர்னா ஏடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற துபிகி நகரும், பெற்றகு நகரும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

பெற்றன் (BETEN - அடிவயிறு)

இஃது ஆசேரின் கோத்திரத்தாருக்குக் குறிக்கப்பட்ட எல்லைப் பகுதியில் உள்ள ஒரு நகராகும் (யோசு 19:25). அக்கோவுக்குத் தெற்கே 18 கி.மீ. தூரத்திலும், கர்மேல் மலைக்குக் கிழக்கு - வடகிழக்கில் 4 கி.மீ. தொலைவிலும் உள்ள அப்துன் என்ற இடத்தில் இந்நகர் இருந்திருக்கலாம்.

பெற்றோனிம் (BETONIM - நாபி, கொப்பூழ்)

காதுக்கு உரிய பகுதியில் வடக்கு எல்லையாக உள்ள ஒரு நகரம் (யோசு 13:26). யோர்தானுக்கு அப்பால், எஸ்-சாட்டுக்குத் தென்மேற்கில் 7 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலக் கிர்பெத் பட்னேயாக இஃது அடையாளம் காட்டப்படுகிறது.

பெனதாது, பென்-அதாது (BEN - HADAD - அதாதின் மகன்)

தமஸ்கு அரசர்கள் பலரின் பெயர் இது. அவர்களுள் இருவர் பெயர் விவிலியத்தில் குறிப்பிடப்படுகிறது.

1. **முதலாம் பெனதாது:** யூதாவின் அரசன் ஆசா என்பவன் பெனதாதுவுக்குக் கையூட்டுக் கொடுத்து, இஸ்ராயேலின் அரசன் பாகசா என்பவன் யூதாவுக்குள் புகுந்து அதனை ஆட்கொள்வதிலிருந்து விடுவிக்குமாறு கேட்கிறார் (1 அர 15:18). இந்தப் பெனதாது அரசன் தபரிம்மோன் என்பவனின் மகனும், எசியோன் என்பவரின் பேரனும் ஆவார். மேலே கூறப்பட்ட

போர்தொடுப்பு கி.மு. 878-இல் நடந்தது. ஆகாபு சமாரியாவிலும், அபேக்கிலும் வெற்றி கொண்டது இவரைத் தானா என்பது தெளிவாக இல்லை (1 அர 20:1தொ). இப்படையெடுப்பின் காரணமாகத் தமஸ்கில் அரமேயருக்கு வியாபாரத்தில் என்னென்ன சலுகைகள் இருந்தனவோ அவை இஸ்ராயேலருக்கும் வழங்கப்பட்டன. ஆல்பிரைட் என்பவர், முதலாம் பெனதாதுவின் காலத்தை கி.மு. 880-842 எனக் கணக்கிடுகிறார். அதன்படி, இப்போர் ஆகாபு, பெனதாது ஆகிய இருவரும் கி.மு. 853-இல் கார்காரில் சந்தித்ததற்கு முன்பே நடந்திருக்க வேண்டும். இப்போரில் அசீரியர்களின் முன்னேற்றம் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டது. இராமோத்து கிலயாத்தை மீட்கப் போரிட்டு ஆகாபு அரசன் இறந்த போரில், இந்தப் பெனதாது அரமேயப் படையின் தளபதியாக இருந்தான் (1 அர 22:1). இப்போர் கார்கார் போருக்கு மூன்று ஆண்டுகட்குப்பின் நடந்தது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஒருசிலர் 1 அர 20:1-இல் குறிப்பிடப்படுவது இரண்டாம் பெனதாது என்று அடையாளம் காட்டினாலும், 2 அர 6:24-இன்படி சமாரியாவைப் பிடித்த முதலாம் பெனதாதே இங்குக் கூறப்படுபவர் என்ற கருத்தே ஏற்றுக் கொள்ளப்படுகிறது 2 அர 8:7-இன்படி அசவேல் என்பவனால் பெனதாது கொலை செய்யப்பட்டான். இது முதலாம் பெனதாது ஆக இருந்தால் இக்கொலை கி.மு. 842-இல் நடந்திருக்க வேண்டும். ஆனால், இது பற்றி சில குழப்பமான தகவல்கள் உள்ளன.

2. இந்தப் பெனதாது அசவேலின் மகன். இவர் இஸ்ராயேல் அரசனான யோவாசுவால் மூன்று முறை தோற்கடிக்கப்பட்டார் (கி.மு. 801-786). இது பற்றி எலிசா இறைவாக்கினர் ஏற்கெனவே முன்னுரைத் திருக்கிறார் (2 அர 13:14.24). இந்தப் பெனதாதுதான் ஆமோ 1:4; எரே 49:27-இல் குறிக்கப்படும் மன்னனாக இருக்க வேண்டும்.

பென-பராக்கு (BENE - BERAK – மின்னலின் மகன்)

இது– தான் கோத்திரத்தாருக்குக் குறிக்கப்பட்ட நகரங்களில் ஒன்று. இந்நகரமானது தற்காலத்தைச் சேர்ந்த இபின் இப்ராகு (புனாய் பராக்கு) என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. இது தெல் அவிவுக்கு வட கிழக்கேயுள்ள புறநகர்ப்பகுதிகளில் ஒன்றாகும்.

பென-யாக்கான் (BENE - JAAKAN – யாக்கானின் மகன்)

ஏதோம் நாட்டின் கடை எல்லைக்கருகிலுள்ள பெனயாக்கானில் இஸ்ராயேல் மக்கள் பாளையம் இறங்கினர் (எண் 33:31-32). காண்க. பெயரோத்து – பெனே – யாக்கான்.

பெனாயா (BENAIAH – யாவே கட்டினார்)

1. பெனாயா குருவாகிய யோயாதாவின் புதல்வர். தென்யூதாவிலுள்ள கப்சவேல் என்ற ஊரைச் சேர்ந்தவர். தாவீதினுடைய புகழ்பெற்ற முப்பது வீரர்களுள் ஒருவர். ஆயினும், பெரும் மதிப்பிற்குரிய "மூவருள்" ஒருவராக இவர் கருதப்படவில்லை. இவர் இரண்டு மோவாபிய வீரர்களைக் கொன்றார்; பனிக்காலத்தில் கேணியில் இறங்கி ஒரு சிங்கத்தைக் கொன்றார்; ஓர் எகிப்திய வீரனையும் கொன்றார். இவை இவரது வீரத்தைப் பறைசாற்றும் செயல்களாகும் (2 சாமு 23:20-23; 1 நாள் 11:22.25). இவரது வீரதீரச் செயல்களும், பிரமாணிக்கமான சேவையும் சாலமோன் ஆட்சிக்காலத்தில் இவருக்கும் படைத்தலைவர் பதவியைக் கொடுத்தன. தாவீதின் மெய்க்காப்பாளராகிய அன்னியக் கூலிப்படையினரான கெரேத்தியருக்கும், பெலேத்தியருக்கும் தலைவராக விளங்கினார் (2 சாமு 8:18; 20:23; 23:23; 1 நாள் 18:17). மேலும், 24,000 படை வீரர்களையுடைய மூன்றாவது பிரிவுக்குத் தலைவராய் விளங்கினார். ஆனால், இவரது மகன் அம்மிசபாதுதான் இப்பிரிவைக் கண்காணித்து வந்தான் (1 நாள் 27:5-6).

தாவீதின் ஆட்சிப் பொறுப்பு நிறைவு பெறப் போகும் காலத்தில், யோவாபின் ஆதரவினால் அதோனியா என்பவன் தான் அரசனாவதற்கு வேண்டிய சதித் திட்டங்களைத் தீட்டினான். ஆனால், தாவீதிற்குப்பின் அவரது மகன் சாலமோன்தான் அரியணை ஏறவேண்டுமென்பதால், பெனாயா சாலமோனுக்கு ஆதரவளித்து, கீகோனில் அவர் அரசராக அபிடேகம் செய்யப்படும்போது அவருக்குப் பிரமாணிக்கமாய் இருந்தார் (1 அர 1:38). மேலும், பெனாயா அரசவைக் காப்பாளர்களின் தலைவர் என்ற முறையில் சாலமோனின் பகைவர்களாகிய அதோனியா, யோவாபு, சிமயி போன்றவர்களைக் கொன்று அழித்தார் (1 அர 2:25.34.46). பிரமாணிக்கமான இப்பணிக்குப் பரிசாக, இவர் சாலமோனால் படைத் தலைவராக்கப்பட்டார் (1 அர 2:35). அகித்தோபல்லுக்குப் பதிலாக, இவரது மகன் யோயாதா அரசரின் ஆலோசகராய்ப் பணி புரிந்தார் (1 நாள் 27:14).

2. தாவீதினுடைய ஆற்றலும், திறமையும் வாய்ந்த முப்பது வீரர்களில் பிராத்தோனைச் சேர்ந்த இவரும் ஒருவர் (2 சாமு 23:30; 1 நாள் 11:31). மேலும், பதினோராம் மாதத்திற்கான பதினோராவது பிரிவிலிருந்து தாவீதின் படைவீரர்களுக்கு இவர் தலைவராக யிருந்தார் (1 நாள் 27:14).

3. எசேக்கியாவின் காலத்தில் தங்கள் மேய்ச்சல் நிலங்களைக் கெதோர் பகுதிகள் வரைக்கும் விரிவுபடுத்தியவருள் ஒருவர். சிமியோனின் வழித்தோன்றல் (1 நாள் 4:36).

4. இவர் தாவீதின் காலத்தில் இசைக்குழுவில் யாழ் வாசித்தவர்களில் ஒரு லேவிய இசை வல்லுநர். கடவுளின் திருப்பேழையானது எருசலேம் நகருக்கு எடுத்துவரப்படும் பொழுது இசை மீட்டிய குழுவாக இக்குழு கருதப்படுகின்றது (1 நாள் 15:18.20; 16:5).

5. கடவுளின் திருப்பேழைக்குமுன் எக்காளம் ஊதிக்கொண்டு வந்த குருக்களில் ஒருவர் (1 நாள் 15:24; 16:6).

6. மோவாபியர்கள், அம்மோனியர்கள், ஏதோமியர்கள் போன்றவர்களால் தாக்கப்படப் போகிறோம் என்று கதிலங்கி நின்ற யோசபாத்து என்ற அரசருக்குச் சாதகமாக ஆண்டவரின் வாக்கைக் கூறிய யாகசியேல் என்பவரின் தாத்தா, ஆசாபுவின் குலத்தைச் சேர்ந்தவர் (2 நாள் 20:14).

7. எசேக்கியாவின் காலத்தில் ஆலயத்திற்குச் செலுத்தப்படுகின்ற உணவுப் பொருட்களைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட துணை மேற்பார்வையாளர்களில் ஒருவர். இவர் ஒரு லேவியர் (2 நாள் 31:13).

8-11. எஸ்ராவின் வேண்டுகோளின்பேரில், தாங்கள் மனைவியராகக் கொண்டிருந்த புறவினப் பெண்களையும், அவர்களது குழந்தைகளையும் தள்ளிவிட்ட அல்லது விலக்கிவிட்ட நான்கு இஸ்ராயேலர்களுள் ஒருவர் (10:25.30.35.43). எஸ்ரா ஆகமத்தில் இவர்கள் ஒரே பெயரைக் கொண்டிருந்தாலும், முதல் எசுதிரா நூலில் பனாயியால், நாயிதுஸ், **(Naidus)** மாம்தாய் **(Mamdai)**, பணாயியாஸ் என்று நான்கு வேறுபட்ட பெயர்களைக் கொண்டிருக்கின்றனர்.

12. இஸ்ராயேல் மக்கள் நாடு கடத்தப்பட்ட பொழுது அவர்களின் தலைவர்களாக விளங்கியவர்களுள் ஒருவராகிய பெலற்றியா என்பவரின் தந்தை. பெலற்றியா எருசலேமுக்குக் கூறிய ஆலோசனை, எசேக்கியேலின் ஆலோசனைக்கு மாறாக இருந்தது. எசேக்கியேல் பேசிக் கொண்டிருக்கும் போதே பெலற்றியா செத்து விழுந்தார் (எசே 11:1.13).

பெனிக்சு (PHOENIX)

பெனிக்சு கிரேத்தா தீவிலுள்ள ஒரு துறைமுகம் (அ.ப. 27:12). இது தெற்குத் திசையையும், மேற்குத் திரையையும் நோக்கி இருந்தது. செந்துறை (27:8) என்ற துறைமுகத்தில் பெரிய கப்பல்கள் தங்கமுடியாது. சிறிய கப்பல்கள் மட்டுமே

தங்கமுடியும். பவுல் உரோமைக்குப் பயணம் செய்தபோது மேலே செல்ல வேண்டாம் என்று கப்பல் தலைவனிடம் கூறினார். ஆனால், இறுதியாக முடிவெடுக்க வேண்டிய நூற்றுவர் தலைவன், பவுல் சொன்னதைக் கேளாமல், கப்பலோட்டியும், கப்பலுக்குரியவனும் சொன்னதை நம்பினான். அதன் விளைவு, கப்பல் கவிழ்ந்து பேராபத்து உண்டாயிற்று (27:8-15). அவர்கள் பெனிக்சு துறைமுகத்தை அடைந்து மாரிக்காலத்தைக் கழிக்க விரும்பினர். இதிலிருந்து, பெனிக்சு துறைமுகம் தூரத்திலிருந்தது என்றும், கப்பல்கள் தங்க வசதியானது என்றும் தெளிவாகிறது.

பெனிசியா (PHOENICIA - கருஞ்சிவப்பு)

கிழக்கு மத்தியதரைக் கடலின் கரையிலும், பாலஸ்தீனத்திற்கு வடக்கிலும் இருந்த நாடு. இது வளமிக்க நாடு; பல இயற்கைத் துறைமுகங்களைப் பெற்றிருந்தது. கி.மு. 1500 முதல் கி.மு.700 வரை பெனிசியர் சிறந்த கடல் வணிகம் செய்தனர். இவர்கள் செமித்திய இனத்தவர்; கானானியரை ஒத்தவர்கள்; இஸ்ராயேலரோடு தொடர்புடையவர்கள். எகிப்து பல ஆண்டுகளாக பெனிசியாவைக் கட்டுப்படுத்திவந்தது. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து பெனிசியா அசீரியா நாட்டிற்குக் கப்பம் கட்டிவந்தது. பின்னர், இது பாரசீகர் ஆட்சியை ஏற்றது. அலக்சாந்தரின் படையெடுப்பிற்குப்பின் பெனிசிய நகரங்கள் அதன் முக்கியத்துவத்தை இழந்தன. கி.மு. 64-இல் பாம்பே இதனை உரோமை அரசோடு சேர்த்துவிட்டார். இந்தப் பெனிசியா ஒன்றுபட்ட அரசாக இல்லை. இதன் நகரங்கள் தனித்தனி ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. இதன் முக்கிய நகரங்கள்- தீர், சீதோன், பிபுலோசு, அர்வாது, உகாரித்து ஆகும். இந்த அரசுகள் பகையுணர்வு கொண்டிருந்தாலும் சமாதானமாகவே இருந்தன. இவர்கள் சண்டையை வெறுத்தனர். வாணிபம் செய்ய சமாதனத்தை நாடினர். விவசாயமும், தொழில்களும் பெரும் அளவில் நடந்தன. நாட்டிலே செல்வம் கொழித்தது. பெனிசியக் கலைஞர்கள் திறமை மிக்கவர்கள். இவர்களது முக்கியத் தொழில் வாணிபமாகும். இதற்காக இவர்கள் பல குடியேற்றங்களை அமைத்தனர். இவர்களுக்கென்று சொந்த நாகரிகமில்லை. ஆனால், மற்றவரது நாகரிகத்தை இவர்கள் கையாள்வதில் வல்லவர்கள். கிரேக்க நாகரிகம் இங்கே வேரூன்றியது. சாலமோன் ஆலயத்திலே பெனிசியக் கலை வல்லுநர்களும் கட்டடக்கலை நிபுணர்களும் பணிபுரிந்தனர்.

இவர்களது சமயம் செமித்திய வகையைச் சார்ந்தது; பழைய ஏற்பாடு குறிப்பிடும் கானானிய வழிபாட்டை ஒத்தது. உகாரித்து நகரப் புதைபொருள் ஆராய்ச்சி மூலம் நாம் கானானிய சமயத்தைப்பற்றி அறிகிறோம். ஒவ்வொரு நகரமும் ஒரு தெய்வத்தையும் தனி வழிபாட்டையும் கொண்டிருந்தது.

புதிய ஏற்பாட்டிலே, தன் மகளுக்குக் குணமளிக்குமாறு வேண்டிவந்த பெண்ணொருத்தி பெனிசிய நாட்டைச் சேர்ந்தவள். இயேசு முதலில் குணம்தர மறுத்தாலும் பின்னர்க் குணமளிக்கிறார் (மாற் 7:24-31). இங்கே, எருசலேமிலிருந்து சென்ற கிறிஸ்தவர்கள் நற்செய்தியை அறிவித்தனர். ஆனால், புறவினத்தார் இந்த நற்செய்தி பரப்புதலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை (அ.ப. 11:19; 15:3).

பெனியேல் (PENIEL - இறைவனின் திருமுகம்)

இந்த இடத்தில்தான் யாக்கோபோடு "ஓர் ஆடவன் பொழுது விடியுமட்டும் மற்போரிட்டான்" (ஆதி 32:25). "நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப்பிழைத்தேன்" என்று சொல்லி, யாக்கோபு அந்த இடத்திற்குப் பெனியேல் என்று பெயரிட்டார் (32:31). மற்ற இடங்களில் இது பெனுவேல் என்றழைக்கப்படுகிறது (நீதி 8:8-9.17; 1 அர 12:25).

பெனினூ (BENINU - நம் மகன்)

இவர் எஸ்ராவின்கீழ் அடிமைத் தனத்திலிருந்து திரும்பி வந்தபின், புதுப்பிக்கப்பட்ட இஸ்ராயேலின் உடன்படிக்கைக்குச் சாட்சியாக இருந்த லேவியர்களில் ஒருவர் (நெகே 10:13).

பெனின்னா (PENINNAH - பவழம்)

இவள் எப்பிராயிம் கோத்திரத்தைச் சார்ந்த எல்கானாவின் மனைவி. இவளுக்குப் பிள்ளைகள் பலர் பிறந்தனர்; ஆனால் எல்கானாவின் மற்றொரு மனைவியான அன்னாவுக்குப் பிள்ளைகள் இல்லை. இவள், அன்னாவின் மலட்டுத் தன்மையைப் பற்றிக் கீழ்த்தரமாகப் பேசியதால், அன்னா மிகவும் வருத்தமுற்று தனக்கு ஒரு மகனைத் தரும்படி கடவுளிடம் வேண்டினாள் (1 சாமு 1:6-11).

பெனுவேல் (PENUEL - இறைவனின் திருமுகம்) - ஆள்

1. இவர் கூரின் மகனும், யூதாவின் பேரனும், கெதோரின் (Gedor) தந்தையும் ஆவார் (1 நாள் 4:4).

2. இவர் பென்யமினின் குலத்தைச் சேர்ந்தவரும் சாசாக்கின் மகனும் ஆவார் (1 நாள் 8:25).

பெனுவேல் (PENUEL - இறைவனின் மகன்) - இடம்

இது கிழக்குப் பாலஸ்தீனத்தில், யாபோக்கு ஆற்றின் கரையிலுள்ள ஓர் இடம், ஆதி 32:24-32-இல் கூறப்படும் செய்திகளின்படி, யாக்கோபு பதான்-ஆரான் என்ற இடத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது யாபோக்கு ஆற்றின் கரையில் இரவைக் கழித்தார். இரவில் வானதூதர் ஒருவர், ஆடவன் உருவில் வந்து, இரவு முழுவதும் யாக்கோபோடு போராடி, அவரை வெல்ல முடியாமல், அவரை ஆசீர்வதித்து அவருக்கு 'இஸ்ராயேல்' என்ற பெயரையும் சூட்டிச் சென்றார். அப்போது யாக்கோபு, 'நான் கடவுளை நேரிலே கண்டிருந்தும் உயிர்தப்பிப் பிழைத்தேன்' என்று சொல்லி அந்த இடத்திற்குப் 'பென்வேல்' என்று பெயரிட்டார் (ஆதி 32:30).

கிதியோன், மிதியான் நாட்டினரை இஸ்ரியேல் பள்ளத்தாக்கில் வென்றபின் பெனுவேல் நகர மக்களிடம் சென்று உணவு கேட்டார். அவர்கள் வெறுப்புடன் உணவு கொடுக்க மறுத்துவிட்டனர். பின் கிதியோன் வெற்றியோடு திரும்பிவந்து பெனுவேலின் கோபுரத்தை அழித்து அங்குள்ள மக்களையும் கொன்றார் (நீதி 8:8-9.17). முதலாம் எரொபவாம் பெனுவேல் நகரை மீண்டும் கட்டிப் பலப்படுத்தினார் (1 அர 12:25). பார்வோன் சிசாக்கால் வெல்லப்பட்ட பாலஸ்தீன நகரங்களுள் ஒன்றாக, பெனுவேல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகரம் யோர்தானுக்கு அப்பால் இருந்ததாகக் கருதப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் பலர், அது சுக்கோத்துக்குக் கிழக்கில் யாபோக்கின் கரையில் இக்காலத் துலூல் எத்-தாகாபு என்னும் இடத்தில் இருந்ததாகக் கருதுகிறார்கள்.

பெனோ (BENO - அவருடைய மகன்)

இவர் மெராரிய லேவியராகிய யகசியாவின் மகன் (1 நாள் 24:26-27). ஓர் ஆளின் பெயராகக் கருதாமல், பழைய வாசகங்கள் வெறுமனே "அவருடைய மகன்" என்று மொழி பெயர்த்துள்ளன.

பெனோனி, பென்-ஓனி (BEN - ONI - என் துயரத்தின் மகன்)

ராகேல் தனது பேறுகால வேதனையின் மிகுதியால் துன்புற்று, தன் உயிர் பிரியப்போகும் வேளையில் தான் பெற்றெடுத்த பிள்ளைக்குப் பெனோனி என்று பெயரிட்டாள். பின், பெனோனியின் தந்தை யாக்கோபினால் இவருக்குப் பென்யமின் என்று மறுபெயர் வழங்கப்பட்டது (ஆதி 35:18).

பென் (BEN - (உடைய) மகன்)

ஒரு சொல்லின் முன் சேர்க்கப்படும் அசை, இஃது ஓர் உறவை அல்லது நிலையைக்

குறிக்கிறது. பெரும்பாலும், நேர் ஆண் வழித்தோன்றலைக் குறிக்கிறது. ஆனால், இஃது ஓர் இனத்தையோ (ஆதி 42:5, இஸ்ரயேலின் புதல்வர்கள்), நாட்டையோ, புவியியல் பகுதியைச் (2 அர 15:10; யாபேசின் மகன்) சேர்ந்த ஓர் உறுப்பினனையோ குறிக்கலாம்; அல்லது சமூகம் மற்றும் தொழிற்குழுவினைச் (1 அர 20:35; 2 அர 2:3, இறைவாக்கினர்களின் புதல்வர்கள்) சேர்ந்தவர்களையும் குறிக்கலாம். "இறைவனின் புதல்வர்கள்" என்பது விசுவாசிக்கும் இறைப் பற்றுடையவர் களையும் (ஆதி 6:2; ஓசே 1:10), வானதூதர்களையும் (யோபு 1:6; 2:1; 38:7) குறிக்கலாம்.

பென்-அபினதாபு (BEN - ABINADAB - அபினதாபின் மகன், தந்தை மேன்மையுள்ளவர்)

இவர் சாலமோன் காலத்தில், அரசருக்கும் அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப்பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப்பாளர்களில் ஒருவர். இவருக்கு நாப்பாத்தோர் மாவட்டப் பொறுப்பு அளிக்கப்பட்டது. இவர் அரசரின் மகள் தாபத்தை மனைவியாகக் கொண்டார் (1 அர 4:11).

பென்-அம்மீ (BEN - AMMI – என் உறவினனின் மகன்)

இவர் லோத்தின் இளைய மகள் வழியாகப் பிறந்த லோத்தின் புதல்வர். இவர் அம்மோனியர்களின் குலப்பெயர் மூதாதையர் ஆவார் (ஆதி 19:38).

பென்கயில் (BEN - HAIL – வலிமையின் மகன்)

இவர் யூதா நகர்களில் போதிக்கும் பொருட்டு மன்னன் யோசபாத்தினால் அனுப்பப்பட்ட மூப்பர்களில் ஒருவர் (2 நாள் 17:7).

பென் – கனான் (BEN - HANAN – அருள் பெற்ற மகன், சலுகை பெற்றவன்)

இவர் யூதாவின் தலைமுறைப் பட்டியலில் சீமோனின் புதல்வராக இடம் பெறுகிறார் (1 நாள் 4:20).

பென்-கூர் (BEN - HUR – கூரின் மகன்)

இவர் அரசர்க்கும், அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க, சாலமோனால் இஸ்ராயேல் நாடெங்கும் நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப் பாளர்களில் ஒருவர். இவரது பகுதி எப்பிராயிம் மலையில் இருந்தது (1 அர 4:8).

பென்-கெசது (BEN - HESED – கெசதின் மகன்)

இவர் அரசர்க்கும், அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க, சாலமோனால் இஸ்ராயேல் நாடெங்கும் நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப்பாளர்களில் ஒருவர். அருபோத்து, சோக்கோ, ஏபர் போன்ற பகுதிகள் இவரது கண்காணிப்பில் இருந்தன (1 அர 4:10).

பென்-கெபர் (BEN - GEBER – கெபரின் மகன்)

இவர் அரசர்க்கும் அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க, சாலமோனால் இஸ்ராயேல் நாடெங்கும் நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப் பாளர்களில் ஒருவர். இராமோத்து-கிலயாது அப்பகுதியின் தலைமையகமாக இருந்தது (1 அர 4:13). கெபருக்கும் பென்-கெபருக்கும் குறிக்கப்பட்ட எல்லைப் பகுதிகள் ஒன்றாக இருப்பதால், ஊரியின் மகனாகிய கெபர் என்பவரும் (4:19), பென்-கெபர் என்பவரும் ஒரே ஆள்தான் என்பது அறிஞர் சிலரின் கருத்து.

பென்-சோகேத்து (BEN - ZOHETH – சேகேத்தின் (வலிமையின்) மகன்)

இவர் யூதாவின் தலைமுறையில் வந்த இசீயின் புதல்வராகக் கருதப்படுகிறார் (1 நாள் 4:20). இச்சொல் தனி ஆளின் பெயரைக் குறிக்கிறது என்பதைவிட, ஒரு விவரிப்பாகும் என்று கருதப்படுகிறது.

பென்-தெக்கர் (BEN - DEKER – தெக்கரின் மகன்)

இவர் அரசர்க்கும், அவரது அரண்மனைக்கும்

வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க, சாலமோனால் இஸ்ராயேல் நாடெங்கும் நியமிக்கப்பட்ட பன்னிரு கண்காணிப் பாளர்களில் ஒருவர். தான் நகரத்திற்குத் தென்புறத்திலுள்ள சாலமோனின் ஆட்சிப்பகுதி இவருக்குப் பொறுப்பாக வழங்கப்பட்டது (1 அர 4:9).

பென்-யமின் (BENJAMIN - வலக் கையின் மகன், நற்பேற்றின் மகன்)

1. இவர் யாக்கோபு, ராகேல் இவர்களின் மகன் (ஆதி 35:18). இஸ்ராயேலின் 12 கோத்திரங்களில் ஒன்றின் குலப்பெயர் மூதாதையர். கானானில் எப்ராத்தாவில் பிறந்த இஸ்ராயேலின் பிள்ளை இவர் ஒருவரே. இவரது பிறப்பிற்குப் பிறகே ராகேல் இறந்தாள் (ஆதி 35:16). ராகேல் இவனுக்குப் 'பெனோனி' அதாவது, எனது துயரத்தின் மகன் என்று இட்ட பெயரை யாக்கோபு, பென்-யமின் என மாற்றினார். எகிப்துக்குத் தானியங்கள் வாங்க யோசேப்பின் சகோதரர்கள் சென்றபோது இறுதி மகனான பென்-யமின் தந்தையோடு வீட்டில் இருந்தார் (ஆதி 42:3). ஆனால், யோசேப்பு உண்மையிலேயே தன்னோடு கூடப் பிறந்த தம்பி பென்-யமினைக் கொண்டு வந்தால்தான் அவர்கள் கூறுவது உண்மையெனத் தாம் ஏற்றுக் கொள்ள முடியும் என்று கூறிவிட்டார் (ஆதி 42:15). பென்-யமினைப் பார்த்தவுடன் யோசேப்பு கண்ணீர் விட்டு அழுதார் (ஆதி 43:29). தமது சகோதரர்களைச் சோதிக்கும் பொருட்டு, தமது வெள்ளிக்கிண்ணத்தைப் பென்யமினின் கோணிப்பையில் வைக்கச் செய்து (ஆதி 44:1) அவர்கள் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டினார். யூதா தமது தம்பிக்காக தாம் தண்டனை ஏற்றுக் கொள்வதாகக் கூறி அதன் மூலம் யோசேப்பை எகிப்துக்கு விற்றபோது போல் அல்லாமல் இப்பொழுது தாங்கள் மாறிவிட்டனர் என்பதை நிரூபித்தனர். அதன் பிறகே யோசேப்பு தாம் யார் என்பதை அவர்கட்கு வெளிப்படுத்துகிறார்.

மாரி ஏடுகளில் "பானு யாமினா" என்ற ஓர் இனம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இதற்கும் இஸ்ராயேல் இனத்திற்கும் எத்தொடர்பும் இல்லை. ஆனால், பெயர் மட்டுமே ஒரே மாதிரி அமைந்துள்ளது. யாக்கோபு பென்-யமினை ஆசீர்வதிக்கும்போது, ஓநாய் போலக் காலையில் தனது இரையையும், மாலையில் கொள்ளையிட்டதையும் பகிர்ந்து கொள்வான் என்பது பென்-யமின் இனத்தின் போரிடும் தன்மை பற்றிக் கூறப்பட்ட ஓர் உருவகமாகும் (ஆதி 49:27). மோசே ஆசீர்வதிக்கும் பொழுது பென்யமின் யாவேயின் அன்புக் குரியவன்; ஏனெனில், அவனது தோள்களில்தான் யாவே உறைகிறார் (உப 33:12) என்பது எருசலேம் நகருக்காக உரைக்கப்பட்ட ஓர் உருவகமாகும். கணக்கெடுப்பின் போதெல்லாம் 35,400 (எண் 1:37) என்றும், 45,600 (எண் 26:41) என்றும் பென்-யமின் கோத்திரம் எண்ணப்பட்டது. எண் 26:38 தொ-இல் பென்-யமின் கோத்திரத்தின் பிரிவுகள் எல்லாம் கூறப்படுகின்றன.

பென்-யமின் கோத்திரத்தின் எல்லைகளும் அதன் நகரங்களும் குறிப்பிடபபிடுகின்றன (யோசு 18:11). யூதாவுக்கும் எப்பிராயிமுக்கும் இடையில் அமைந்துள்ள இதன் (எல்லைப்) பகுதி மேற்காக யோர்தானிலிருந்து எரிகோவரை விரிந்து கிடக்கிறது. இது கிரியத்து எயாரிம்வரை செல்கிறது. இஸ்ராயேலின் கையில் இல்லாத கிபயோன், எருசலேமைச் சுற்றியுள்ள ஐந்து கானானிய நகரங்களையும் இஃது உள்ளடக்கி இருந்தது.

யோசுவா 2-9-இல் கூறப்படும் உட்புகுதல் ஏற்கெனவே நடந்த ஒன்றை மீண்டும் கூறி ஒரு மாதிரியாகக் காண்பிக்கின்றது. இஸ்ராயேலிலே மிகச் சிறிய எண்ணிக்கை கொண்ட இனமாகக் கருதப்படுவது பென்-யமின்தான் என்றாலும், இது போரிடுவதில் தனிச்சிறப்புப் பெற்றது (1 சாமு 9:21; சங் 68:28). மோவாபு நாட்டு எக்லோனைக் கொன்று இஸ்ராயேலை விடுவித்த ஏகூது பென்-யமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர் (நீதி 3:12). பாராக்கு, தெபோரா ஆகியோரோடு சீசராவுக்கு எதிராகப் போரிட்ட இஸ்ராயேலரில் பென்-யமின் இனத்தவரும் இருந்தனர் (நீதி 5:14). இஸ்ராயேலருக்குள் போர் மூளக்

காரணமானவர்களுள் பென்-யமின் இனத்தவரும் இருந்தனர். ஏனெனில், ஒரு லேவியனின் மனைவியைக் கிபயோனியர் கற்பழித்து விருந்தோம்பும் சட்டத்தை மீறி விட்டனர் (நீதி 19:1-21:25). எபிரேயர், ஒழுக்கத்தைக் கட்டிக் காக்க வேண்டுமென்று அதற்காக இணைந்து செயல்பட்டது இங்கு மட்டுந்தான். இதனால், இதன் வரலாற்றுத் தன்மையைச் சிலர் ஐயுற்றுள்ளனர். மேலும், இதில் இஸ்ராயேலரின் எல்லா இனங்களும் கலந்து கொள்வதாகவும், அளவற்ற எண்ணிக்கையில் போர் வீரர்கள் சண்டையிட்டதாகவும் கூறுவது அன்றைய புகழ் பெற்ற பொதுப்பணி மரபுகளிலிருந்து இஃது எடுக்கப்பட்டது என்றாலும், உண்மையிலே இத்தகையதொரு குற்றத்துக்கு எதிராக, போர் மூண்டெழுந்தது உண்மையாக இருந்திருக்கலாம். பென்-யமின் இனத்தவர் ஒரு தந்திரத்தால் தோற்கடிக்கப்பட்டனர். அதன் விளைவாக இருந்தவர் எல்லாம் முழுமையாக அழிக்கப்பட இருந்தனர். இது பிற இனத்தவரை அச்சுறுத்தியது. எனவே, மற்றக் குலத்தவர் எல்லாம் இவர்கட்குப் பெண் கொடுக்கக்கூடாது என முடிவெடுத்தனர். எனவே, போரில் ஈடுபடாத யபேசு-கிலயாதின் பெண்களையும், சீலோவில் இருந்த பெண்களையும் எடுத்துக்கொண்டனர்.

இஸ்ராயேலின் முதல் அரசனான சவுல் பென்-யமின் குலத்தைச் சேர்ந்தவரே. அவர் பென்-யமின் குலத்தின் ஊரான கிபயாவில் தான் தங்கியிருந்தார் (1 சாமு 9:1 தொ). சவுலின் இறப்புக்குப் பிறகு பென்-யமின் குலத்தோர் இசுபகாலுடன் சேர்ந்து கொண்டனர் (1 சாமு 2:9); ஆனால், அப்னேர் தாவீதுடன் சேருமாறு வற்புறுத்தினார் (2 சாமு 3:19). ஆனால், பென்-யமின் தாவீதுக்கு எப்பொழுதுதாவது முழுவதும் பிரமாணிக்கமாய் இருந்தது என்று கூறமுடியாது. சிமயி, தாவீது அப்சலோமிடமிருந்து தப்பி ஓடியதைப் பார்த்து அவரைச் சபித்தார் (2 சாமு 16:5). அப்சலோமின் கிளர்ச்சி அடக்கப்பட்டபின் பென்-யமின் இனத்தைச் சேர்ந்த சேபாவால் கிளர்ச்சி தொடங்கப்பட்டது (2 சாமு 20:1). சாலமோனின் ஆட்சிக்குப்பிறகு நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது ரெகபயாம் பென்யமின் குலத்தின் ஒரு பகுதியைத் தம்மோடு வைத்துக்கொள்ள முடிந்தது (1 அர 12:21). ஆசாவினால் இப்பகுதி விரிவுபடுத்தப் பட்டது (1 அர 15:22). எரேமியா இறைவாக்கினர் பென்-யமின் ஊரான அனதோத்திலிருந்தே வந்தார் (எரே 1:1). பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பி வந்தவர்களுள் பென்-யமின் இனத்தவரும் இருந்தனர் (எஸ் 1:5). பவுல் கூட பென்-யமின் குலத்தைச் சேர்ந்தவர்தான் (உரோ 11:1; பிலி 3:5).

2.யாக்கோபின் கொள்ளுப் பேரனான இவர் பென்-யாமின், எதியவேல், பில்கான் ஆகியவர்கள் வழியாக வந்தவர் (1 நாள் 7:10).

3. எஸ்ரா காலத்தில் வாழ்ந்த இஸ்ராயேலருள் ஒருவரான இவர் தமது அன்னிய மனைவியிடமிருந்து விலகி விடுவதாக வாக்குறுதி அளித்தார் (எஸ் 10:32).

4. நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்த குரு இவர் (நெகே 12:34). நகரின் மதிலைக் கட்டியெழுப்பியவரும் இவர்தாம் என்று கூறலாம் (நெகே 3:23).

பென்யமின்வாயில் (BENJAMIN GATE)

பென்-யமின் வாயில் என்பது எரேமியா நூலில் குறிப்பிட்டுள்ள (37:13;38:7) எருசலேம் நகர் வாயிலைக் குறிக்கிறது. மேலும், இவ்வாயில் நெகேமியா வினுடைய ஆட்டு வாயிலோடு (நெகே 3:1.32; 12:39; யோவா 5:2) அல்லது கணக்கர் வாயிலோடு (நெகே 3:31) அடையாளம் காட்டப்படலாம்.

பே

பே (PE)

எபிரேய நெடுங்கணக்கில் பதினேழாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இன் பதினேழாவது பகுதிக்குத் தலைப்பாக உள்ளது. இப்பகுதியில் ஒவ்வொருவரியும் இதே எழுத்தோடு தொடங்குகிறது.

பேசேசுவடி (CODEX BEZAE)

இது கி.பி. 5-ஆவது அல்லது 6-ஆவது நூற்றாண்டைச் சார்ந்த பழம் ஏடு. இதில் புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்திகளும், அப்போஸ்தலர் பணியும் காணப்ம!படுகின்றன. இவ்வேட்டின் சிறப்பு என்னவென்றால், கிரேக்க வாசகமும், இலத்தீன் வாசகமும் எதிரெதிரே வைத்து எழுதப்பட்டுள்ளன. கிரேக்க வாசகம் பன்னிருபாக எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது.

இச்சுவடியில் நற்செய்தி நூல்கள் மேற்கத்திய முறைப்படி வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அதாவது, மத்தேயு, யோவான், லூக்கா, மாற்கு என்ற வரிசையில் எழுதப்பட்டுள்ளன. இச்சுவடியில் கத்தோலிக்கத் திருமுகங்கள் என்றழைக்கப்படும் பேதுரு, யாக்கோபு, யோவான், யூதா ஆகியவர்கள் எழுதிய திருமுகங்களும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று யூகிக்க இடமுண்டு. ஏனென்றால், யோவான் எழுதிய மூன்றாம் திருமுகத்தின் கடைசிப்பகுதி, அப்போஸ்தலர் பணிக்கு முன்பாக எழுதப் பட்டிருக்கிறது. இச்சுவடி புதிய ஏற்பாட்டிற்குக் கிடைக்கும் மிக முக்கியமான பழைய சான்றுகளுள் ஒன்றாகும்.

இச்சுவடியில் மொத்தம் 406 தோல் ஏடுகள் அடங்கியிருக்கின்றன. மேலும், 9 ஏடுகளும் உள்ளன. ஆனால், அவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். முதலில் இதில் மொத்த 510 ஏடுகள் இருந்திருக்கின்றன. இச்சுவடியில் காணப்படும் ஏடுகள் 10 அங்குல நீளம் 8 அங்குல அகலம் என்ற அளவில் அமைந்துள்ளன. ஒரு பக்கத்தில் ஒரு பத்தி மட்டுமே வைத்து எழுதப்பட்டுள்ளது. ஒரு பத்தியில் 33 வரிகள் இடம் பெற்றுள்ளன. ஆனால், பக்கத்தின் கடைசி வரையிலும் வரிகளை நீட்டாமல், வாக்கியத்தின் பொருளைச சார்ந்து வரியின் நீளத்தை அமைத்து எழுதியிருக்கிறார்கள். இச்சுவடி எவ்விடத்தில் எழுதப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. இச்சுவடியில் இலத்தீன் மொழிபெயர்ப்பும் படிவமாக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இது மேலைய நாடுகளில்தான் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

இங்குக் கிரேக்கமும், இலத்தீன் மொழி பெயர்ப்பும் நேருக்கு நேராக வைத்து எழுதப்பட்டிருப்பது, இதே போன்ற ஒரு அமைப்பைப் (கிரேக்கம், இலத்தீன்) பிரதி செய்ததன்று. ஆனால், வேறுபட்ட இடங்களிலிருந்து கிரேக்க வாசகத்தையும், இலத்தீன் வாசகத்தையும் தனித்தனியாக எடுத்து, பிறகு எதிரெதிரே வைத்து எழுதப்பட்டுள்ளன.

நற்செய்திகள் மற்றும் அப்போஸ்தலர் பணி மேலைய நாட்டில் பின்பற்றப்படும் கிரேக்க வசன முறைகளுக்கு, இந்தச் சுவடி ஒன்றுதான் அழகான பழஞ்சான்றாக நிற்கிறது. போன் சோடன் என்பவர் பழைய ஏடுகளின் தொகுப்பைச் சார்ந்தது இஃது என்று வகைப்படுத்தினார். இந்தத் தொகுப்பில் சீரியக்கு, இலத்தீன் மொழிபெயர்ப்பின் பழஞ் சுவடிகள் நிறைந்துள்ளன. வெஸ்காட், கோர்ட் என்ற விவிலியப் பழஞ்சுவடி அறிஞர்கள், மற்றும் பழஞ்சுவடிகளைவிட இப்பழஞ்சுவடிதான் கி.பி. 3-ஆவது 4-ஆவது நூற்றாண்டுகளில் வழங்கிய படிவத்தை அப்படியே நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்கின்றனர்.

1546-ஆம் ஆண்டு இப்பழஞ்சுவடி திரிதெந்தீன் பொதுச்சங்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வாறு, இதை எடுத்துச் சென்றவர் கிளர்மோந்து என்றவிடத்தின் ஆயர். இதனை, அவர் இலயன்ஸ் நகரிலிருந்த இரனேயஸ் துறவியர் இல்லத்திலிருந்து

பெற்றிருக்க வேண்டும். இச்சுவடியை இவர் அங்கு எடுத்துச் சென்றதன் நோக்கம் என்னவென்றால், இச்சுவடியில்தான் யோவா 21:22 என்ற வசனத்தில் ஒரு குறிப்பிட்ட சொல் காணப்படுகிறது. இச்சொல்லை வைத்துதான் குருக்களின் திருமணமாகாத துறவு நிலைக்கு விவிலிய ஆதாரம் கொடுக்கமுடியும் என்று கருதினார். யோவா 21:22-இல் வரும் வாக்கியம், "நான் வருமளவும் இவன் இப்படியே இருக்கவேண்டும் என்பது எனக்கு விருப்பமாயிருந்தால் உனக்கென்ன" என்று வருகிறது. இதில் வருகின்ற 'இப்படியே' என்ற சொல், கிரேக்கப் படிவங்களில், இச்சுவடியில் மட்டுந்தான் காணப்படுகிறது. இலத்தீன் மொழிபெயர்ப்புகளில் இதே போலவே காணப்பட்டாலும், கிரேக்கப் படிவத்திற்கு, இப்பழஞ்சுவடி மட்டுந்தான் சான்று பகர்கின்றது.

திரிதெந்தீன் சங்கத்திற்குப் பிறகு, இலயன்சு நகர மடத்திற்கு இப்பழஞ்சுவடி திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆனால் 1562- ஆம் ஆண்டு, குகனோத்து என்பவர்களால் இலயன்ஸ் நகரம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இதனிடையில் இச்சுவடி என்ன ஆனதென்று தெரியவில்லை. எப்படியோ இச்சுவடி தியோடோர் பேசா என்பவரிடத்தில் வந்து சேர்ந்தது. இவர் 1581-இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். ஆகவே, இவர் பெயராலேயே இச்சுவடி "பேசே சுவடி" என்று அழைக்கப்படுகிறது.

பேட்சாய் (BEZAI)

இவர் அடிமைத்தனத்திலிருந்து செருபா பேலின் தலைமையில் நாடு திரும்பிய ஒரு குடும்பத்தின் தலைவர் (எஸ் 2:17; நெகே 7:23). புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டவர்களுள் ஒருவர் (நெகே 10:18).

பேதயா (BEDEIAH - யாவேயின் ஊழியன்)

எஸ்ராவின் காலத்தில், இவர் தமது அன்னிய மனைவியை விலக்கிவிடக் கட்டாயப்படுத்தப் பட்டவர்களில் ஒருவர் (எஸ் 10:35).

பேதுரு (PETER - பாறை)

1. அழைப்பு: சீமோனுக்குக் கிறிஸ்து அளித்த "கேபா" என்ற பெயருக்குச் சரியான மொழிபெயர்ப்பு "கல்" அன்று, "பாறை"யாகும் (மத் 16:18; யோவா 1:42; காண்க. 1 கொரி 1:12; 15:5; கலா 1:18). இப்பெயர் இனிமேல் அவருக்குரிய கடமையை உணர்த்துகிறது. இப்புதுப்பெயரின் அருளால், சீமோன் பேதுரு, யாவேயினுடையவும் அவருடைய மெசியாவினுடையவும் நீடித்து நிற்கும் உறுதியிலும், தகர்க்க முடியாத பிரமாணிக்கத்திலும் பங்குபெறுகிறார். இஃது அவரது தனிச் சிறப்பான நிலையைச் சுட்டிக்காட்டும் முறையாகும்.

பேதுருவின் ஆட்தன்மை பிறரை முழுவதும் கவரக்கூடியதாக இருக்கலாம். ஆனால் அவருடைய ஆட்தன்மைக்காகவோ (அவருடைய மறுதலிப்புக்கு முன்புகூட), அவருடைய வேறு எந்தத் தகுதிக்காவோ, பேதுரு தேர்ந்தெடுக்கப்பட வில்லை. இவ்வாறு கைம்மாறு கருதாது தேர்ந்தெடுக்கப்பட்டது அவருக்கு ஒரு மேன்மையை அளிக்கிறது. இந்த மேன்மை, கிறிஸ்து அவருக்கு அளித்த தூதால், அவர் பிரமாணிக்கத்தோடும் அன்போடும் (யோவா 21:15 தொ) நிறைவேற்றவேண்டிய தூதால் அவருக்கு வருகிறது.

2. வாழ்க்கை குறிப்பு: பேதுரு யோனாவின் மகன் ஆவார்; பெத் சாய்தா ஊரைச் சேர்ந்தவர் (யோவா 1:44). பிற்காலத்தில், அவர் கப்பர்நாகுமில் வாழ்ந்தார் (மத் 8:5.14; மாற் 1:21). அவர் திருமணமானவர் (மத் 8:14; 1 கொரி 9:5). அவரும் அவரது சகோதரர் அந்திரேயாவும் மீன் பிடிப்பதில் செபதேயுவின் புதல்வர்களான யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருடன் பங்காளிகளாவர் (லூக் 5:10). எருசலேம் தலைமைக் குருக்களின் கணிப்புப்படி, பேதுரு, யூதத்துவத்தில் பொதுமக்களின் அடிப்படை அறிவை மட்டும் (கல்வியறிவு அற்றவர்) கொண்டிருந்தார் (அ.ப. 4:13). அவர் பேச்சு அவரை ஒரு கலிலேயர் என்று

காட்டிக் கொடுத்தது (மத் 26:73; மாற் 14:70). அவருடைய பின்னணி புற இனத்தவரது பகுதியைச் சேர்ந்தது. இஃது அவர் பிற்காலத்தில் கிரேக்க மொழிபேசும் புற இனத்தவர்களிடையே பணி செய்யப் பெரிதும் உதவியது (1 கொரி 1:12; கலா 2:11-12).

பேதுருவும், அந்திரேயாவும் திருமுழுக்கு யோவானின் சீடர்கள்; யோவானின் வழியாக இயேசுவோடு அறிமுகமானவர்கள் (யோவா 1:35-42). இயேசு பேதுருவை அழைத்தபோது, அவர் இன்னும் மீன் பிடிக்கும் தொழில்தான் செய்து வந்தார் (மாற் 1:16-17). ஆனால், இயேசுவைத் "தலைவரே" என்று மரியாதையாக அழைத்து வந்தார் (லூக் 5:5).

இயேசுவின் பன்னிரு சீடர்களின் பட்டியல்களில் முதல்வராகப் பேதுரு குறிக்கப்படுகிறார் (மத் 10:2; மாற் 3:16; லூக் 6:14; அ.ப. 1:13); நற்செய்திகளில் மற்றச் சீடர்களைவிட அடிக்கடி குறிக்கப்படுகிறார். அவரும், யாக்கோபும் மற்றும் யோவானும் இயேசுவின் நெருங்கிய சீடர்களாவர் (மாற் 5:37; 9:2; 13:8; 14:33; லூக் 22:8). சீடர்களிடையே பேதுருவின் முதன்மை இயேசுவாலும் (மத் 16:16-19), வானதூதராலும் (மாற் 16:7) ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பேதுரு ஆர்வமிக்க ஆளாகவும், இயேசு வின்பால் கொண்ட பற்றுறுதியைக் காட்ட, பேச அல்லது செயலாற்ற எப்போதும் தயாராக இருந்தவராகவும் சித்தரிக்கப் படுகிறார் (மத் 14:28-29; 17:24-25; மாற் 10:28; 11:21; 14:19-31; லூக் 5:8; 8:45; யோவா 6:68-69; 18:10; 21:7). இயேசுவின்பால் கொண்ட பற்றுறுதியால், பேதுரு அவரைத் தவறாகப் புரிந்து கொள்கிறார். அதனால், தலைவரால் கண்டிக்கப்படுகிறார் (மத் 15:15-17; 16:22-23: மாற் 8:29-33; 9:5-6; 14:37-38; யோவா 13:6-11; 18:10-11). இயேசு விசாரிக்கப்பட்டபோதும், ஒரு பெரும் இக்கட்டான நிலையில் பேதுரு தமது பற்றுறுதியில் தவறி விடுகிறார் (14:66-72 இணை). ஆனால் பிற்பாடு உயிர்த்த இயேசுவைப் பார்த்த அப்போஸ்தலர்களில் பேதுருதான் முதலாவதாக உள்ளார் (லூக் 24:34; 1 கொரி 15:5). கலிலேயாவில் மீன்பிடிக்கும் தொழிலுக்குத் திரும்பிய பேதுருவை இயேசு மீண்டும் அழைத்து உன்னதப் பணியை ஒப்படைக்கிறார் (யோவா 21).

இயேசு விண்ணேற்றமானபின், பேதுரு எருசலேம் திருச்சபையில் முக்கிய தலைவராகத் திகழ்கிறார் (அ.ப. 1:13-14). யூதாசுக்குப் பதிலாக மத்தியாவைத் தேர்ந்தெடுத்தலில் பேதுரு முன்முயற்சி எடுக்கிறார் (1:15-26). இதில் அப்போஸ்தலர்களின் வருங்காலத் தூதின் தன்மையை ஓரளவு உணர்ந்துள்ளார் (1:22). ஐம்பதாம் நாள் விழாவன்று திருச்சபை தொடங்கி வைக்கப்பட்டபோது, அந்நிகழ்ச்சியைப் பேதுரு கூடியிருந்த மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறார்; அவர்களுக்கு நற்செய்தியைப் போதிக்கிறார் (அ.ப. 2). அப்போதிருந்து "வேறொரு இடத்திற்குப் போகும்வரை" (12:17-19), பேதுரு பாலஸ்தீனத் திருச்சபையில் முக்கிய இடம் வகிக்கிறார். அவர் மக்களைக் குணப்படுத்துகிறார் (3:1-10; 5:15-16; 9:32-43); மக்கள் கூட்டத்திற்குப் போதிக்கிறார் (3:12-26; 5:21-42); சிறைப்படுத்தப்படுகிறார் (4:1-3; 5:17-18. 26; 12:3-5); வியத்தகு விதத்தில் விடுவிக்கப்படுகிறார் (5:19-20; 12:6-17); அரச அதிகாரிகளிடம் இயேசுவைப் பற்றிப் பேசுகிறார் (4:5-12; 5:27-32).

யூதேய யூதர்களின் மூல எல்லைகளுக்கு அப்பாற்பட்ட திருச்சபையில் நடந்த சில நிகழ்ச்சிகளில் பேதுரு மையப்பாகம் வகிக்கின்றார் (8:14-25; 10:1-11:18; காண்க. கலா 1:18-19). பேதுரு எருசலேமுக்குப் பாதுகாப்பாகத் திரும்பியபின் நடந்த அப்போஸ்தலர் சங்கத்தில், புற இனத்தவர்களுக்கு நற்செய்தியைப் போதிப்பதற்கும், அவர்கள் யூத மரபுகளை அனுசரிக்க வேண்டியதில்லை என்பதற்கும் சார்பாக, பேதுரு முக்கியப் பங்கு வகித்தார் (அ.ப. 15:7-11; காண்க. கலா 2:8-10). இச்சபங்கத்திற்குச் சிறிது காலத்திற்குப்பின் பழமைவாத யூதக்கிறிஸ்தவர்களின் கட்டாயத்துக்குப் பணிந்து,

புற இனக் கிறிஸ்தவர்களின் பந்தித் தோழமையிலிருந்து பின்வாங்கினார் என்பதற்காகப் பவுலால் கண்டிக்கப்படுகிறார் (கலா 2:11-14).

சங்க விவரிப்புக்குப்பின் அப்போஸ்தலர் பணிநூலில் பேதுரு குறிக்கப்படவில்லை. அந்தியோக்கிய நிகழ்ச்சிக்குப்பின் (கலா 2:11-14), புற இன உலகில் மறைபரப்புப் பயணம் செய்தார் என்று தோன்றுகிறது (1 கொரி 1:12; 3:22; 9:5) தொடக்கத் திருச்சபையின் வலுவான சான்றுகளின்படி பேதுரு உரோமைக்குச் சென்று (1 பேதுரு 5:13-இல் வரும் பாபிலோன்) அங்கு நீரோவின் காலத்தில் மறைசாட்சி மரணம் எய்தினார். பிற்காலத்தில் பேதுரு (பவுலோடு சேர்ந்து) உரோமைத் திருச்சபையை நிறுவியவர் என்றும், அதன் ஆயர் என்றும் அழைக்கப்பட்டார்.

3. **முதன்மை:** இயேசு தம்மைப் பின்பற்ற அழைத்தவர்களில், சீமோன் முதல்வராக இல்லாவிட்டாலும், முதலில் அழைக்கப்பட்டவர்களில் ஒருவர் (யோவா 1:35-42). ஒத்தமை நற்செய்தியாளர்கள், பேதுருவுடைய முதன்மையைக் காலத்தில் இடமாற்றி, இயேசு பேதுருவைத்தான் முதன் முதலில் அழைத்தார் என்று காட்டுவது அவர்களுடைய போக்கு (மத் 4:18-22 இணை). இஃது எவ்வாறாயினும், சீடர்களில் பேதுரு ஈடு எடுப்பற்ற முதன்மையான இடம் வகிக்கிறார்; அப்போஸ்தலர் பட்டியலில் முதன்மையானவர் (மத் 10:2); சலுகை பெற்ற மூவரில் முதல்வர் (மத் 17:1 இணை). கப்பர்நாகுமில், பேதுரு வீட்டில்தான் இயேசு சாதாரணமாய்த் தங்கினார் (மாற் 1:29). பிற சீடர் பெயரில் அவர்தான் பதில் கூறுகிறார் (மத் 16:23;18:21; 19:27). குறிப்பாக, இயேசுவின் மெசியாத் தன்மையை அவர் கண்டுகொள்ளும் சிறப்பு மிக்க நேரத்தில், அவர்தாம் பிறர் பெயரால் பதில் அளிக்கிறார் (மத் 16:16 இணை; யோவா 6:68). புனித பெண்களுக்கு உயிர்ப்புப் பற்றி வானதூதர் அளித்த செய்தியில் (மாற் 16:7) பேதுரு சிறப்பாகக் குறிக்கப்பெறுகிறார். கல்லறைக்குள் முதலில் நுழைய பேதுருவை யோவா அனுமதிக்கிறார் (யோவா 20:1-10). இறுதியாக, அனைத்திற்கும் மேலாக, உயிர்த்த கிறிஸ்து பன்னிருவரில் பிறருக்குத் தோன்றும்முன் பேதுருவுக்குத்தான் தோன்றுகிறார் (லூக் 24:34; 1 கொரி 15:5). புதிய ஏற்பாடு முழுவதும் பேதுருவுக்கு அளிக்கப்படும் முதன்மை அழுத்திக் காட்டப்படுகிறது. இருப்பினும், இறைவனுடைய திட்டத்தை அறிவதற்கு (அ.ப. 10:15; கலா 2), அவர் வெகு முயற்சி செய்ய வேண்டியிருந்தது. இந்த முதன்மை, அப்போஸ்தல்களின் குழுப்பொறுப்புடையமையையோ, பவுல் போன்றவரின் தொடக்கச் செயல்களையோ விலக்கவில்லை. பவுல், தாம் மனந்திரும்பியபின், தமது சிறப்பான அழைத்தலை நன்கு உணர்ந்திருந்தாலும் (கலா 1:15தொ), பேதுருவுடன் தொடர்பு கொள்ள எருசலேமுக்குச் செல்கிறார் (1:18). அந்தியோக்கியாவில் ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியில் பேதுரு உறுதியான நிலையெடுக்கப் பயத்தோடு தயங்கியதை நினைவுகூரும் போதும் (கலா 2:11-14), பவுல் பேதுருவைப் பற்றிப் பேசும்போது, திருச்சபை முழுவதையும் தம் அதிகாரத்தால் இட்டுச் செல்பவரிடம் பேசுவதுபோல் பேசுகிறார்.

4. **தூது:** பேதுருவின் முதன்மை அவருடைய தூதின்மேல் நிறுவப்பட்டதாகும். இதைப் பல நற்செய்தி வாசகங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அ) மத் 16:13-23: பேதுருவே புதிய ஆபிரகாம்; உயிருள்ள கற்கள் வெட்டியெடுக்கப்படும் குழியாவார் (எசா 51:1தொ; மத் 3:9); கிறிஸ்து தமது இறுதிக்காலச் சமூகத்தைக் கட்டும் அடிப்படையாவார். பேதுரு, எல்லா மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டிய தூதைப் பெறுகிறார். சாவின் ஆற்றல்களாகிய தீய சக்திகளுக்கு எதிராக, திருச்சபை பேதுருமேல் கட்டப்படுகிறது. அதற்கு வெற்றி உறுதியளிக்கப்படுகிறது. இயேசுவை உயிருள்ள இறைவனின் மகன் என்று பேதுரு அறிக்கையிடுகிறார். மக்களை ஒரு சபையாகக்

கூட்டிச் சேர்க்கும் பெரும் பொறுப்பு பேதுருவுக்கு அளிக்கப்படுகிறது. இத்திருச்சபையின் மக்கள் புனிதமான முடிவில்லா வாழ்வு பெறுவர். உடலில் உயிர்நிலையான செயல்கள் நின்றுவிட முடியாமை போல, உயிருள்ள, உயிர் கொடுக்கும் அமைப்பாகிய திருச்சபையிலும், பேதுரு விசுவாசிகளுக்குக் கிறிஸ்துவின் வாழ்வை இடைவிடாது அளிக்க ஏதாவது ஒரு வகையில் அதில் எப்போதும் நிலையாயிருக்க வேண்டும்.

ஆ) லூக் 22:31தொ; அ.ப.: பேதுருவின் பெயரை ஐயமறச் சுட்டிக்காட்டி, பேதுரு தமது மறுதலிப்பைக் கைவிட்டபின், தம் சகோதரரை உறுதிப்படுத்தவேண்டும் என்று இயேசு பேதுருவுக்கு அறிவிக்கிறார். கிறிஸ்துவின் மன்றாட்டின் பயனாக, அவருடைய விசுவாசம் தவறாது. இதுதான் உண்மையிலேயே பேதுருவுடைய தூதாகும். இதை, லூக்கா அப்போஸ்தலர் பணியில் விவரிக்கிறார். மாடியறையில் கூடியிருந்த குழுவிற்குத் தலைவராகத் தம்மையே காண்கிறார் பேதுரு (அ.ப. 1:13); மத்தியாவின் தேர்தலில் தலைமை தாங்குகிறார் (1:15); அனனியாவுக்கும் சப்பீராவுக்கும் தீர்ப்பு அளிக்கிறார் (5:1-11); தம்மோடு இருந்த பிற அப்போஸ்தலர்கள் பெயரால் உயிர்த்த கிறிஸ்துவின் மெசியா மகிமையைப் பறைசாற்றுகிறார்; ஆவியின் கொடையை எடுத்துரைக்கிறார் (2:14-36); புற இனத்தார் உட்பட (10:1-11:18) யாவரையும் திருமுழுக்கிற்கு அழைக்கிறார் (2:37தொ); எல்லாத் திருச்சபைகளையும் மேற்பார்க்கிறார் (9:32). உயிர்மேல் அவர் கொண்டிருக்கும் ஆற்றலுக்குச் சான்றாக, இயேசுவின் பெயரால் நோய்களைக் குணமாக்குகிறார் (3:1-10); மரித்தவர்களை உயிர்த்தெழச் செய்கிறார் (9:36-32).

திருச்சபை நடந்தது பெரும்பாலும் குழுத் தன்மையுடையது. ஆயினும், கொர்னேலியுவுக்குத் திருமுழுக்கு அளித்த தம் செயலுக்குப் பேதுரு விளக்கம் அளிக்க வேண்டியிருந்த நிகழ்ச்சி (11:1-18), எருசலேம் சங்க நிகழ்ச்சி விவரங்கள் (15:1-35), கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் பவுல் சுட்டிக்காட்டுவது (கலா 1:18-2:14) ஆகியவை எருசலேம் திருச்சபையை நடத்துவதில் யாக்கோபு சிறப்பிடம் வகித்தார் என்றும், அவருடைய சொல்லுக்குச் சிறப்பான செல்வாக்கு இருந்தது என்றும் காட்டுகின்றன. ஆனால், இச்செய்திகளும் அவற்றிடையே உள்ள தொடர்பும், பேதுருவுடைய முதன்மைக்கும், தூதுக்கும் ஊறு செய்யவில்லை. மாறாக, அம்முதன்மையின் மற்றும் தூதின் ஆழ்ந்த பொருளைத் தெளிவாக்குகின்றன. யாக்கோபின் அதிகாரத்திற்கு, உண்மையில், பேதுருவுடையதைப் போன்ற அடிப்படையோ, தெளிவான பொருளோ இல்லை. ஒரு தனிச்சிறப்பான பட்டத்தின் ஆற்றலால், தவறின்றி விசுவாச ஒழுங்கைப் பிறருக்கு அளிக்கும் தூதையும், அதற்குரிய யாவற்றையும் பேதுரு பெறுகிறார் (கலா 1:18). அவர் வாழ்வு பற்றிய வாக்குறுதிகளின் கருவூலமாவார் (மத் 16:18 தொ).

இ) யோவா 21: பகிரங்கமாக, ஒருவேளை சட்ட அமைப்பு முறையில், மும்முறை சொல்லி, உயிர்த்த கிறிஸ்து, ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் கொண்ட முழு மந்தையையும் பேதுருவிடம் ஒப்படைக்கிறார். இந்தத் தூதை, நல்லாயன் உவமையின் ஒளியில் நாம் அறிந்துணரவேண்டும் (யோவா 10:1-28). நல்லாயன், ஒரே மந்தையில் ஒன்று சேர்க்கப்பட்ட ஆடுகளைக் காப்பாற்றுகிறார் (10:6; 11:52). அவை உயிரை மிகுதியாகக் கொண்டுள்ளன. அவற்றிற்காக நல்லாயன் தம் உயிரையே அளிக்கிறார் (10:11). இதைக் கருத்தில் கொண்டே, பேதுருவுக்கு அவருடைய மறை சாட்சி மரணத்தை முன்னறிவித்தபோது, "என்னைப் பின்தொடர்" என்று கிறிஸ்து கூறுகிறார். அவர் தம் குருவின் வழியில் நடக்கவேண்டும் என்றால், அஃது அவர் தம் உயிரைக் கொடுப்பதில் மட்டும் இல்லை; அவருடைய ஆடுகள் ஒருபோதும் அழிந்து போகாமல், அவற்றிற்கு முடிவில்லா வாழ்வை அளிக்க வேண்டும் (10:28).

பாறையும் உயிருள்ள கல்லுமானவரும் (1 பேதுரு 2:4), திருச்சபையினுள் ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் கொண்டுள்ள ஆயனுமாகிய, அதாவது விசுவாசிகளைச் சாவிலிருந்து மீட்டு அவர்களுக்கு முடிவில்லாத வாழ்வு அளிக்க வல்லவருமான, கிறிஸ்துவைப் "பின்பற்றுவதில்", பேதுரு உண்மையிலேயே கிறிஸ்துவின் பிரதிநிதியாக உள்ளார். திருச்சபைக்காக ஓர் அவசியமான அலுவலைத் தொடங்கி வைக்கிறார். இதில் அடங்கியிருக்கிறது அவருடைய தூதும் அவருடைய மேன்மையும்.

பேதுரு எழுதிய திருமுகம் - I (PETER, FIRST LETTER OF)

1. **முன்னுரை:** இது புதிய ஏற்பாட்டின் இருபத்தொன்றாவது நூலாகும். பொதுத் திருமுகங்களில் ஒன்று, கிறிஸ்தவர்கள் என்பதற்காகத் துன்பத்திற்கு உள்ளானவர்களுக்கு உற்சாகமும், ஆறுதலும் அளிக்கவும் அவர்களின் கிறிஸ்தவ அழைப்பின் மேன்மையை எடுத்துக் கூறவும் இந்நூல் எழுதப்பட்டது.

2. **ஆசிரியர்:** "இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலரான பேதுரு" (1 பேதுரு 1:2), சில்வானின் உதவியுடன் (5:12) இந்நூல் எழுதியதாகக் கூறப்படுகிறது. இந்தச் சில்வான், எருசலேம் சங்கத்திற்குப் பிறகு பவுலோடு மறைபரப்புப் பணி செய்தவராக இருக்கலாம் (2 கொரி 1:19; சீலா : அ.ப. 15:40; 16:19; 17:4). திருவெளி 17:5-இல் குறிக்கப்படுவதுபோல், "பாபிலோன்" என்று மறைமுகமாகக் குறிக்கப்படும் உரோமை நகரிலிருந்து (1 பேதுரு 5:13; திருவெளி 17:5) இத்திருமுகம் அனுப்பப் பட்டிருக்கலாம் (ஒருவேளை நெருங்கிய சீடர் என்ற பொருளில்) ஆசிரியரின் "மகன்" என்றழைக்கப்படும் மாற்கும் வாசகர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார் (1 பேதுரு 5:13). இவர் நற்செய்தியின் ஆசிரியராக இருக்கலாம். இவரை, கி.பி. 2-ஆம் நூற்றாண்டில், பாப்பியசு "பேதுருவின் விளக்கவுரையாளர்" என்று குறிப்பிடுகிறார். துன்பங்கள் பற்றி அடிக்கடி வரும் குறிப்புகள் (1:6; 3:14; 4:1.12-19) விசுவாசத்திற்காகக் கொல்லப்படப்போவதை எதிர்நோக்கியிருந்த ஆசிரியரின் அனுபவத்தைப் பிரதிபலிக்கலாம். "கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சி" என்று ஆசிரியர் தம்மைக் குறிப்பிடுகிறார். இஃது இயேசு சிலுவையில் அறையப்பட்டதை நேரடியாகக் கண்டதை உணர்த்தலாம் அல்லது கிறிஸ்துவின் பாடுகளைப் போதித்துச் சான்று பகர்வதைக் குறிக்கலாம்.

எருசலேமில் நடந்த அப்போஸ்தலர் சங்கத்தின் விவரிப்புக்குப்பின் (அ.ப. 15), பேதுரு அப்போஸ்தலர் பணி நூலில் குறிக்கப்படவில்லை. ஆயினும், அந்தியோக்கிய வாசத்திற்குப்பின் (கலா 2:11-14), பேதுரு மறைபரப்புப் பணியாக, பிறவின உலகின் வெகுதூரம் சென்றிருக்கலாம் (காண். 1 கொரி 9:5). பேதுரு தமது இறுதிக் காலத்தை உரோமையில் செலவழித்தார் என்பதற்கும், கி.பி. 64-65-இல் நடந்த நீரோவின் வேதகலாபனையில் மறைசாட்சி மரணம் எய்தினார் என்பதற்கும் வேண்டிய வலுவான இலக்கியச் சான்றுகள் முதல் நூற்றாண்டின் முடிவிலிருந்து கிடைக்கின்றன. சமீப காலத்தில் புனித பேதுரு பேராலயத்தின்கீழ் நடந்த அகழ்வாய்வுகளும் இதற்கு ஆதரவு அளிக்கின்றன.

இரனேயு காலமுதல் சமீபகாலம்வரை இத்திருமுகத்தைப் பேதுருதான் எழுதினார் என்பது பற்றி ஒன்றித்த கருத்து நிலவியுள்ளது. இக்கருத்தைப் பெரும்பாலான கத்தோலிக்க விளக்கவுரையாளர்களும், பிரிவினைச் சபைகளைச் சேர்ந்த சிலரும் ஏற்றுக் கொள்கின்றனர். சமீப காலத்தில் இந்நிலைக்கு எதிரான கருத்துத் தோன்றியுள்ளது. பிற்காலத்தைச் சேர்ந்த ஒருவர், பேதுருவின் பெயரைப் பயன்படுத்தி, சிறிய ஆசியாவில் துன்புற்ற திருச்சபைகளுக்கு அப்போஸ்தலர்களின் போதனையை அளிக்கிறார் என்ற கருத்துத் தோன்றியுள்ளது. இத்திருமுகம் "பேதுரு குழுவின்" பிற்காலப் படைப்பு என்றோ,

ஒரு புனைபெயர்நூல் என்றோ விளக்குவர். இந்நிலைக்குச் சார்பாகப் பின்வரும் காரணங்கள் கொடுக்கப்படுகின்றன.

1) இத்திருமுகம் அழகான கிரேக்க நடையில் அமைந்துள்ளது. நடை கிரேக்க இலக்கணத்தில் புலமையைக் காட்டுகிறது. இதைக் கொச்சை மொழி பேசிவந்த கலிலேய மீன்பிடிப்பவரிடம் எதிர்பார்க்க முடியாது. மேலும், நூலில் கொடுக்கப்படும் பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் நிலையான முறையில் எழுபது நூலிலிருந்து கொடுக்கப்படுகின்றன. பாலஸ்தீனத்தைச் சேர்ந்த "கல்வியறிவு அற்ற" (அ.ப. 4:13) பேதுரு இவ்வாறு பயன்படுத்தியிருக்க முடியாது.

இதற்கு நூலே பதிலைச் சுட்டிக்காட்டுகிறது. 1 பேதுரு 5:12-இல் வரும் சில்வான் (சீலா) வெறும் பிரதி எடுப்பவரோ, வெறும் தூதரோ அல்லர். அவரும் இத்திருமுகத்தை எழுதுவதில் ஈடுபாட்டோடு செயல்பட்டிருக்க வேண்டும். இப்பகுதியை எரோனிமுவே சுட்டிக் காட்டியுள்ளார். இக்காலத்தில் பலர் இதை ஏற்றுக்கொள்வர். கருத்துகளைப் பேதுரு கூற, சில்வான் அவற்றைத் தம் சொந்த நடையில் அமைத்திருக்கலாம். சில்வான் கிரேக்க மொழியிலும், எழுபதுநூல் அறிவிலும் புலமை பெற்றிருந்திருக்கலாம். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கடிதம் எழுதுவதில், செயலருக்குப் போதிய சுதந்தரம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

2) சிந்திக்கும் முறையிலும், சொற் கோவையிலும் இந்நூல் பவுலின் திருமுகங்களோடும் (குறிப்பாக உரோமையருக்கும் எபேசியருக்கும் எழுதப்பட்ட திருமுகங்களோடும்), யூதாவின் திருமுகத்தோடும் தொடர்புடையதாகவும் அவற்றைத் தழுவியதாகவும் தோன்றுகிறது. இப்பண்பின் சில கூறுகள்: கிறிஸ்துவை மூலைக் கல்லாகத் கொண்டு கட்டப்பட்டிருக்கும் ஆலயமாகத் திருச்சபை விவரிக்கப்படுதல் (1 பேதுரு 2:4-5; எபே 2:19-22); "கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கும்" கிறிஸ்துவின் நிகழ்கால நிலை மற்றும் "அதிகாரம் தாங்குவோர், வலிமை மிக்கோர், தூதர் அனைவர் மேலும்" அவர் கொண்டிருக்கும் ஆட்சி (1 பேதுரு 3:22; காண். எபே 1:20-21); ஓர் எடுத்துக்காட்டான வீட்டிலுள்ள அங்கத்தினர் பலருக்கும் அளிக்கப்படும் அறவுரைகள் (1 பேதுரு 2:18; 3:1.17; காண். எபே 5:22.28; 6:1; 4-5.9; கொலோ 3:18-22; 4:1). மேலும், இந்நூல் வடிவ அமைப்புக் கூறுகளிலும் பவுலின் திருமுகத்தை ஒத்துள்ளது. பவுல் பொதுவாகப் பயன்படுத்தும் "கிறிஸ்துவுக்குள்" என்ற சொல்லை இந்நூலும் பயன்படுத்துகிறது (1 பேதுரு 3:16; 5:10.14). எசா 8:14-15; 28:16-ஐப் பேதுருவும் பவுலும் மேற்கோளாகக் காட்டுகின்றனர் (1 பேதுரு 2:6-8; உரோ 9:33).

இக்காரணத்திற்குப் பதில் கூறவும் சில்வானின் உதவி பயன்படுகிறது. இவர் அப்போஸ்தலப் பணியில் பவுலோடு ஒத்துழைத்தவர்; தெசலோனிக் கேயர்களுக்கு எழுதப்பட்ட இரு திருமுகங்கள் எழுதுவதிலும் தொடர்புடையவர். மேலும், இவர் எருசலேம் சகோதரர் குழுவைச் சேர்ந்தவர் (அ.ப. 15:22.27.32). மேற்கூறப்பட்ட பிரச்சனைக்கு விடையாக, சில்வானுடைய செயல்களைச் சுட்டிக்காட்டினாலும், இந்நூலுக்கும் புதிய ஏற்பாட்டின் பிறநூல்களுக்கும் பொதுவான கருத்துக்கள் மூலத்திருச்சபையின் வளர்ச்சியடைந்த மறைக்கல்விப் போதகத் தொகுப்பிலிருந்து வந்திருக்கலாம் என்பதை மனதில் கொள்வது சாலச் சிறந்ததாகும். பவுலின் திருமுகங்களோடு இத்திருமுகம் கொண்டிருக்கும் ஒற்றுமைகள் தொடக்கத் திருச்சபையில் பயன்பட்ட பாரம்பரிய முறைகளை வெறுமனே பிரதிபலிக்கின்றன எனலாம். இவற்றிலிருந்து பேதுருவும், பவுலும் தங்களது மரபைப் பெற்றிருக்கலாம்.

3) எந்தத் திருச்சபைகளுக்குப் பேதுரு இத்திருமுகத்தை எழுதினாரோ அவை இன்னும் தோன்றியிருக்கவில்லை என்பர். மேலும், பேதுரு சிறிய ஆசியாவிலுள்ள விசுவாசிகளை

அறிந்திருப்பாரா என்பதும் ஐயத்திற்குரியது.

இதற்குப் பதிலாக, பித்தினியாவில் தொடக்க காலத் திருச்சபையில் வளர்ச்சியிருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. எவ்வளவு விரைவில் சிறிய ஆசியாவில் திருச்சபை வளர்ச்சியுற்றது என்பது பற்றி நமக்கு அதிகமாகத் தெரியாது. மேலும், பேதுரு உரோமைக்குச் சென்று அங்கு மரித்தார் என்பது உறுதியான செய்தியாகும். கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ, அவர்களோடு ஆசிரியருக்கு நேரடி அறிமுகம் வேண்டியதில்லை. யூதக் கிளர்ச்சி தொடங்கியபின், முன்பு எருசலேம் திருச்சபை கொண்டிருந்த தலைமைப் பதவியை உரோமைத் திருச்சபை செயல்படுத்தத் தொடங்கியிருக்கலாம்.

4) கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்திற்காகத் துன்புற்ற காலத்தில் இந்நூல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், பேதுரு காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு உலகளாவிய கலாபனை நடந்ததாகத் தெரியவில்லை. இத்தகைய நிலை தொமீசியன் அல்லது திரேசன் காலத்தில் நிலவியது. இக்காலத்திற்கு முன்பே பேதுரு இறந்துவிட்டார். எனவே, பேதுரு இத்திருமுகத்தை எழுதியிருக்க முடியாது.

அரசர்க்கும், அரச அதிகாரிகளுக்கும் பணிந்திருக்க வேண்டும் என்று நூலில் கூறப்படுகிறது (1 பேதுரு 2:13-17). இஃது அரசால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட சூழ்நிலையைச் சுட்டவில்லை. ஆனால், அந்தந்த இடத்து மக்களால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டது திருச்சபை முழுவதும் பரவலாக இருந்தது. பிறமதத்தினரால் நீதி மன்றங்களில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டதும் (3:13-17; 4:15-19), கிறிஸ்தவர்கள் என்ற காரணத்திற்காகத் தண்டிக்கப்பட்டதும் (4:16) சாதாரண நிலையில் பல இடங்களில் நடக்கக்கூடியவை; நடந்தவையுமாகும். தனிப்பட்ட மனிதர்களின் வெறுப்பும், பகைமையும், அவதூறும், தப்பெண்ணம் கொண்ட நீதிபதிகளின் ஒத்துழைப்பும் இந்தச் சூழ்நிலைக்குக் காரணமாயிருந்திருக்கலாம். இப்படிப்பட்ட துன்புறுத்தல்களுக்கிடையிலும் தங்களது கிறிஸ்தவ அழைப்பில் உறுதியாக நிற்கும்படி கிறிஸ்தவர்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றனர்.

தொடக்க காலத் திருச்சபையில் புனை பெயரில் நூல்கள் எழுதப்பட்டிருக்கலாம் அல்லது அத்தகைய புனைபெயர் நூல்களைத் திருச்சபை ஏற்றுக் கொண்டிருக்கலாம் என்ற அடிப்படையில், இந்நூலைப் பேதுருதான் எழுதினார் என்பதற்கு எதிரான காரணங்களை மதிப்பீடு செய்ய வேண்டும். இம்முயற்சியிலும் கருத்தொற்றுமை யில்லை. இந்நூல் பேதுருவால் எழுதப்படவில்லையென்றால், பேதுருவோடு அவரது வாழ்நாளில் தொடர்புடைய அல்லது பேதுருவின் பாரம்பரியத்தைச் சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம். ஆனால், பேதுருவுக்கு வெகுகாலத்திற்குப் பின் எழுதப்பட்டிருக்க முடியாது என்பர். இறை ஏவுதல் பெற்ற ஏடு என்ற அளவில், இத்திருமுகத்தின் மதிப்பீடு, இது பேதுருவை ஆசிரியராகக் கொண்டிருப்பதைச் சார்ந்ததன்று என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கதாகும். அக்கால இலக்கிய மரபுகளைக் கவனத்தில் கொண்டு, புனைபெயர் நூல்களில் நேர்மையின்மையையோ, தகுதியற்ற செயல் நோக்கையோ நாம் கற்பனை செய்ய வேண்டியதில்லை.

பேதுருதான் இத்திருமுகத்தை எழுதினார் என்பதற்கு ஆதரவாக, இந்நூலின் மூல இறையியலும் (இறுதிக்கால இயல், ஊழியன் இயல், மெசியா இயல்), திருச்சபை அமைப்புப் பற்றிய இறையியலும் அமைந்துள்ளன. மேலும், பேதுரு இறந்தபின் இந்நூல் எழுதப்பட்டிருந்தால், கி.பி. 65-இல் நீரோவால் தொடங்கப்பட்டு உரோமைத் திருச்சபையில் நிலவிய பயங்கர வேத கலாபனை பற்றியோ, பேதுருவின் இறப்புப் பற்றியோ எக்குறிப்பும் இன்மையை விளக்குவது கடினம். அப்போஸ்தலர் பணிநூலில் வரும் பேதுருவின் உரைகளோடு இந்நூலை ஒப்பிட்டால்

இந்நூலுக்குப் பேதுருதான் ஆசிரியர் என்ற நிலைக்குச் சான்று கிடைக்கும். ஆகவே, இந்நூல் ஒரு புனைபெயர் நூல் என்பவர்கள் அதற்குரிய பின்னணியை நன்கு நிறுவ வேண்டும். ஆகவே, பேதுருவின் மரணத்துக்குமுன் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம்.

3. யாருக்கு எழுதப்பட்டது? இந்நூலில் குறிக்கப்படும் ஐந்து மாகாணங்களும் சேர்ந்து, தவுரசு மலையின் தெற்கிலும், வடக்கிலும் அமைந்திருந்த சிறிய ஆசியாவின் முழுப்பகுதியாகும். இப்பகுதியிலிருந்த கிறிஸ்தவச் சமூகங்களின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு ஆகியவை பற்றி அறிஞர்களிடையே கருத்தொற்றுமையில்லை. இங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இந்நூல் எழுதப்படுகிறது (1 பேதுரு 1:1). இவர்களோடு ஆசிரியர் தனிச் சிறப்பான உறவு கொண்டிருந்ததாகத் தெரிய வில்லை. இந்நூல் பரவலாக வாசிக்கப்பட வேண்டிய சுற்று மடலாகத் தெரிகிறது.

வாசகர்கள் "சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்கள்" (1:1) என்றழைக்கப்படுனர் (சிதறுண்டு வாழ்பவர்கள் என்ற சொற்றொடர், தங்கள் பூர்வீக நாட்டில் வாழாத யூதர்களைக் குறிக்கும். காண். யாக் 1:1). இவர்கள் புறமதத்தினரிடமிருந்து வேறுபடுத்தப்படுகின்றனர் (1 பேதுரு 2:12; 4:3). பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடி மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. இவை யாவும் இந்நூலின் வாசகர்கள் யூதர்கள் ஆவர் என்று சுட்டுகின்றன என்பர் சிலர். 1:14; 2:9-10; 4:2-4-இலிருந்து இவர்கள் பிற இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகின்றனர் வேறு சிலர். இக்கிறிஸ்தவர்கள் பிற மதத்தினரிடமிருந்து வேறுபடுத்தப்படுவது (2:12; 4:3), இவர்களுக்கும் இவர்கள் இதுவரை சேர்ந்து வாழ்ந்த இவர்களது நாட்டைச் சேர்ந்த பிறமத அயலார்களுக்குமிடையே உள்ள வேறுபாட்டைத்தான் சுட்டுகிறது என்பது தெளிவு (காண். கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கு மிடையேயுள்ள வேறுபாடு: 1:14; 4:2-3; காண். 1:18). "சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்" என்பது அவர்களது உண்மையான விண்ணக வீட்டிலிருந்து கிறிஸ்தவச் சமூகங்கள் உலகில் தற்காலிகமாகப் பிரிந்திருப்பதை உருவகமாக உணர்த்துவதாகும் (காண். எபி 11:13; 13:14). "சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்" என்பது சொற்பொருளாக வாசகர்களின் சமூக நிலையைச் சுட்டுகிறது. உலகத்தோடு கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் உறவை உருவகமாகச் சுட்டவில்லை என்பர் விளக்கவுரையாளர் சிலர். ஆனால், 1 பேதுரு 2:11-இல் வாசகர்களின் சமூக நிலையை அன்று, அடிப்படை மனப்பான்மையையே ஆசிரியர் வலியுறுத்துகிறார் என்பது தெளிவாகிறது. இந்தத் திருமுகம் யூதர்களும் பிறவின மக்களும் சேர்ந்த திருச்சபைகளுக்கு எழுதப்பட்டது என்று ஏற்றுக்கொள்வது மேலாகும். ஆசிரியர் இவர்களை நேரடியாக அறிந்திருந்தார் என்பதற்கு நூலில் எந்தச் சான்றும் இல்லை.

4. சூழ்நிலையும் நோக்கமும்: துன்பங்களை எதிர்கொள்ளும்போது எவ்விதம் நடந்து கொள்வது என்பது பற்றி அறவுரை கூறப்படுகிறது. திருமுகம் "சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்களுக்கும்" (1:1), "அன்னியரும் வெளிநாட்டவருமான அவர்களுக்கும்" (2:11) எழுதப்படுகிறது. இச்சொற்றொடர்கள், பிறமத உலகிலே கிறிஸ்தவர்களின் நிலையற்ற மற்றும் இடையூறுகள் மிக்க நிலையைச் சுட்டுகின்றன. அவர்கள் பெரும்பாலும் பிற மதங்களிலிருந்து மனந்திரும்பியவர்கள் (1:14.18; 2:9.10; 4:3-4). ஒருவேளை சமீபத்தில்தான் மனந்திரும்பியவர்களாக இருக்கலாம் (1:14; 2:2; 4:12). பிற மதத்தவர்களின் பகைமையாலும் கொடுமையாலும் தங்கள் விசுவாசத்தை இழந்துவிடும் ஆபத்தில் இருந்திருக்கலாம். அதிகாரபூர்வமான அரசாங்க வேத கலாபனை திருமுகம் எழுதப்பட்ட காலத்தில் சிறிய ஆசியாவில் நிகழ்ந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை (2:13-

17). கி.பி. 64-65-இல் நடந்த நீரோவின் வேதகலாபனை உரோமைக்கு வெளியே பரவியிருந்தது என்று கூறமுடியாது. ஆயினும், அந்தந்த இடங்களில் கிறிஸ்தவர்கள் என்பதற்காகக் கிறிஸ்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கலாம். இத்துன்பங்கள் பற்றி முனைப்பாகத் தோன்றும் பகுதி (4:12-19) முடிவுரைப் போற்றுரைக்குப்பின் (4:11; காண் 5:11) உடனடியாக வருகிறது. இது முந்தைய பகுதிகளில் (குறிப்பாக 2:13-17) காணப்படும் நிலையைவிட அமைதி குலைந்த நிலையைப் பிரதிபலிக்கிறது. ஆகவே, இம்மடல் எழுதப்பட்டிருந்திருக்கும் போது சிறிய ஆசியக் கிறிஸ்தவர்களின் அச்சமய நிலைபற்றிய செய்தி ஆசிரியருக்குக் கிடைத்திருக்க வேண்டும். இது துன்பங்கள் மேலும் அதிகரிக்கலாம் என்ற கருத்தை விரிவாக்க ஆசிரியரைத் தூண்டியிருக்க வேண்டும்.

இச்சூழ்நிலையில், கிறிஸ்தவர்களின் அழைப்பின் மேன்மையை நினைவுபடுத்தியும், வேதகலாபனை அவ்வழைப்பின் அடையாளமாகும் என்று காட்டியும், அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைநிற்க வேண்டும் என்றும் ஆசிரியர் அறவுரை கூறுகிறார்; உற்சாகப் படுத்துகிறார் (5:12). உலகத்தால் அன்னியரும் வெளிநாட்டவருமாகக் கருதப்படும் இவர்கள் கிறிஸ்தவ சமூகத்தில் ஓர் இல்லத்தைக் கண்டுள்ளனர்.

5. **எங்கிருந்து, எப்போது?** 5:13-இல் வரும் "பாபிலோன்" உரோமை நகரைக் குறிக்கிறது என்று உறுதியாகக் கூறலாம் (காண். திருவெளி 14:8; 16:19; 17:5; 18:2.10.21). ஒரே சமயத்தில் பேதுரு, சில்வான், மாற்கு ஆகிய மூவரும் இந்நகரில் இருந்ததற்கு இஃது ஆதரவு அளிக்கிறது. பேதுரு உரோமையில் நீரோவின் வேத கலாபனையில் மறைசாட்சி மரணம் எய்தினார் என்பது உறுதி. இதற்கு வேண்டிய இலக்கியச் சான்றுகள் உள்ளன. அகழ்வாய்வும் ஆதரவு அளிக்கிறது. இத்திருமுகம் பேதுரு இறப்பதற்குமுன் உரோமையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். சிறிய ஆசியாவில் நற்செய்தி ஏற்கெனவே போதிக்கப்பட்டுவிட்டது உரோமையர், எபேசியர், யூதா முதலிய திருமுகங்கள் எழுதப்பட்டுவிட்டன. ஆகவே, இந்நூல் கி.பி. 62-க்கும் 64-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதலாம்.

6. **இலக்கிய அமைப்பு:** கர்னாக்கு என்பவருடைய காலம்வரை இந்நூல் ஒரு திருமுகமாகக் கருதப்பட்டது. ஆனால் இவர், நூலின் முன்னுரையும் முடிவுரையும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்றும், மற்றப் பகுதிகள், பகுதிகள் மூலத்தில் ஒரு மறையுரையாகும்; குறிப்பாக, திருமுழுக்கு மறையுரையாகும் என்றும் கூறினார். இதைப் பின் பற்றி 1:3-4:11-இல் திருமுழுக்கு மறையுரை அல்லது வழிபாட்டைக் காண முயன்றுள்ளனர் சிலர். புல்ட்மன் என்பவர் இதில் ஒரு பாடலையும் (2:21-24). விசுவாச அறிக்கையையும் (3:18-24) காண்பதாகக் கூறியுள்ளார். இப்போக்கைப் பின்பற்றி வேறுசிலர் இதில் நான்கு பாடல்களைக் (1:3-5; 2:22-25; 3:18-22; 5:5-9) கண்டுள்ளனர். ஒரு சிலர், இது திருவழிபாட்டுச் சடங்கு ஆகும் என்றும், 1:21-க்குப்பின் திருமுழுக்கு வழங்கப்பட்டது என்றும் கூறினர். இன்னும் சிலர், 4:11-க்கும் 4:12-க்கும் இடையில் முறிவு இருப்பதாகக் கூறி அதைப் பெரிது படுத்தியுள்ளனர். இதுபற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம்.

ஆனால், இக்கருதுகோள் உறுதியளிப்பதாக இல்லை. அப்போஸ்தலர் காலத்து வழிபாட்டுமுறை பற்றி நமக்கு வெகு சிறிதே தெரியும். ஆகவே, அதன் சுவடுகளைக் காண முயல்வது எளிதன்று. இந்நூல் தன்னைப் பற்றியே 1:1; 5:12-இல் கூறுவதைக் கவனமாக ஏற்றுக்கொள்வதே அறிவுபூர்வமாகும்; அதாவது, வேதகலாபனையை எதிர்கொண்ட கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தும் கடிதமாகும். இதில் கிறிஸ்தவ மூல மறைக்கல்வி, விசுவாச அறிக்கைகள், பாடல்கள், வழிபாட்டுச்

சடங்குகள் ஆகிய கூறுகள் பின்னப்பட்டிருக்கின்றன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இந்நிலையை இக்கால ஆய்வாளர்கள் பலரும் ஏற்றுக்கொள்வர். இதன் அகச்சான்றுகள், இது தனக்கே உரிய ஒற்றுமையும் நோக்கமும் கொண்ட ஓர் உண்மையான கடிதத்தைக் காட்டுகின்றன.

7. **திருமுறைப்பட்டியலில்:** இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்பது பற்றி ஒருபோதும் ஐயம் எழுந்ததில்லை. உரோமையைச் சேர்ந்த கிளமந்து காலம் முதல், தொடக்ககாலத் திருச்சபையில் இந்நூல் மிகுதியாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. திருமுறைப்பட்டியல் பற்றி எல்லா அதிகாரபூர்வமான விவரிப்புகளிலும் இது சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரே விதிவிலக்கு மூராத்தோரியின் துணுக்குகளில் இது காணப்படவில்லை என்பதாகும். கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகுதியான சான்றுகள் உள்ளதால், இவ்விடம் இந்நூல் விடப்பட்டுள்ளது தற்செயலாகவே நடந்திருக்க வேண்டும்.

திட்டம்:

I. முன்னுரை: அறிமுகமும் வாழ்த்தும் (1:1-2).

II. கிறிஸ்தவ அழைப்பின் மேன்மையும் பொறுப்புகளும் (1:3-2:10).

அ) கிறிஸ்தவ அழைப்பு (1:3-25).

1) 1:3-12 : ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டு, மகன் வழியாகத் தந்தையால் ஆற்றப்படும் மீட்பு.

2) 1:13-25 : புனிதத்திற்கு அறவுரை.

ஆ). கிறிஸ்தவ அழைப்பின் பொறுப்புகள் (2:1-10).

1) 2:1-3 : அறவுரை - இறைவனின் பிள்ளைகளாக வாழுங்கள்.

2) 2:4-10 : இறைவனின் புதிய இல்லம், புதிய இனம்.

III. கிறிஸ்தவ வாழ்வின் சாட்சி (2:11-3:12).

அ) பிறமத உலகில் கிறிஸ்தவ நடத்தை (2:11-12).

ஆ) பாரம்பரிய மறைக்கல்வி (2:13-17).

1) 2:13-17 : அரசாங்க அதிகாரிகள்பால்.

2) 2:18-3 : வீட்டில் ஒழுங்குமுறை.

இ) எல்லாவற்றிற்கும் மேலாக அன்பும் தாழ்ச்சியும் (3:8-12).

IV. கிறிஸ்தவனும் வேதகலாபனையும் (3:13-5:11).

அ) கிறிஸ்தவன் கலாபனையை அணுகும் முறை (3:13-4:11).

1) 3:13-17 : கலாபனையில் நம்பிக்கை.

2) 3:18-4:6 : கிறிஸ்துவே நம்பிக்கையின் அடிப்படை

3:18-22 : பாவத்தின்மேல் கிறிஸ்து கொண்ட வெற்றி திருமுழுக்கில் கிறிஸ்தவனுக்கு அளிக்கப்படுகிறது.

4:1-6 : கிறிஸ்தவன் துன்பங்கள் வழியாகப் பாவத்தைக் கைவிடுகிறான்.

3) 4:7-11 : கிறிஸ்தவ வாழ்வும் இரண்டாம் வருகையும்.

ஆ) செயலற்ற முறையில் கலாபனையை எதிர்கொள்ளுதல்.

1) 4:12-19 : நடைமுறையில் துன்பத்தில் மகிழ்ச்சி.

2) 5:1-5 : மூப்பர்களுக்கும் விசுவாசிகளுக்கும் அறவுரை.

3) 5:6-11 : இறுதி அறவுரை; இறைவனை நம்பி; அவர் துன்பங்களின் வழியாக உன்னை மகிமைக்குக் கொண்டுவருவார்.

V. முடிவுரை (5:12-14). இறைவனது அருளில் நிலைத்துநில் ! வாழ்த்துரை.

9. போதனை: இஃது ஒரு மேய்ப்புப்பணி மடலாகும். நூல் முழுவதற்கும் பின்னணியாக உள்ள இரு கருத்துகள் உண்டு. அ) வேத கலாபனையின் கடுமையையும் நெருக்கடி நிலையையும் எதிர்கொண்டவர்களை உற்சாகப்படுத்தி, இத்துன்பங்கள் வழியாக, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறுதலின்

நேர்மதிப்பீட்டை இந்நூல் வலியுறுத்துகிறது. ஆ) கிறிஸ்தவ அழைப்பின் மேன்மையையும், அன்றாட வாழ்வில் அது நிறைவேறுதலைப் பற்றியும் இது விளக்குகிறது. இந்த அழைப்பு "இல்லமற்றவர்களுக்கு" (2:11; காண். 1:17) இறைவன் அளிக்கும் இல்லத்தை (குடும்பம்: 2:5; 4:17) அளிக்கிறது. திருச்சபை என்ற சொல் குறிக்கப்படாவிட்டாலும், இக்கருத்து திருமுகம் முழுவதற்கும் பின்னணியாக உள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு, பின்வருமாறு கருத்துத் தொகுப்பைத் தருகிறோம்.

1. **இறைவன்:** மீட்பு இறைவனின் அழைப்போடு தொடங்குகிறது (1:2.15). இறைவன் இரக்கமிக்கவர் (1:3); தூயவர் (1:15); தந்தை (1:17); பிரமாணிக்கமுள்ள படைப்பவர் (4:19); தீர்ப்புக் கூறுபவர் (1:17; 2:24; 3:18; 4:3); கைவண்மை மிக்கவர் (5:6); மீட்பர் (5:10). இந்த அழைப்புக்கேற்ப, இறைவனது மகன் வழியாக, மனிதர் பாவத்திலிருந்து விடுதலை பெறுகின்றனர் (1:18; 2:24; 3:18: 4:3). இந்த மகன் "உலகம் தோன்றும் முன்னே முன் குறிக்கப்பட்டவர்" (1:20). இவரது ஆவி இறைவாக்கினர்களைத் தூண்டியது (1:11). இவரே "ஆண்டவர்" (2:3; 3:15).

2) **மனிதனது மீட்பு:** இயேசு கிறிஸ்துவின் பாடுகள் (1:2.19; 2:24; 3:18) மற்றும் உயிர்ப்பு (1:3; 3:18.21.22; 4:11; 5:10) ஆகியவற்றால் இம்மீட்பு நிறைவேற்றப்படுகிறது. இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதால் புத்துயிர் அடைவதாலும் (1:2), ஆவியானவரால் புனிதப்படுத்தப்படுவதாலும் (1:2), இறை வார்த்தையை ஏற்றுக் கொள்வதாலும் (1:23) மற்றும் வாக்குறுதியோடு கூடிய திருமுழுக்காலும் திருச்சபையில் நுழைவதால் இந்த மீட்பு அடையப் பெறுகிறது.

இவ்வாறு, கிறிஸ்துவை மூலைக் கல்லாகக் கொண்ட ஆன்மீக ஆலயமாக (2:4-8), "தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்தகுலம், இறைவனுக்குச் சொந்தமான மக்களாக" (2:9), இறைவனுக்கு ஞானப்பலி நிறைவேற்றுபவர்களாக (2:5), நோவாவையும் அவருடைய குடும்பத்தையும் போன்று நீரினால் மீட்கப்பட்ட சிலராக (3:20-21), புதிய உடன் படிக்கையின் மக்கள் உருவாக்கப் படுகின்றனர் (1:2; காண். யாத் 24:8). இந்தப் புதிய இஸ்ராயேலின் அங்கத்தினர்கள் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர் (4:16). அவர்கள் உலகளாவிய சகோதரத்துவம் உடையவர்கள் (5:9; காண். 5:12). அவர்களின் தலைமை ஆயரான கிறிஸ்துவைச் சூழ்ந்து ஒன்றித்த மந்தையாவர் (2:25; 5:4). அவர்கள் தங்கள் சமூகத் தலைவர்கள் (5:1-3) மற்றும் பேதுருவின் (1:5; 5:12) கண்காணிப்பில் உள்ளனர்.

அவர்கள் வாழ்வு புனிதமானதாகவும் (1:15), சகோதரர்களிடம் கள்ளமற்ற அன்பு மிக்கதாகவும் (1:22; 3:8-12; 4:8-11), இறைவனிடமிருந்து அதிகாரம் பெற்றவர்களுக்குப் பணிவு மிக்கதாகவும் (2:13-3:7), பிறமதத் தீய பண்புகளை விலக்கியதாகவும் (1:4; 2:1.11; 3:6; 4:2-3.15) இருக்க வேண்டும்.

3) **கிறிஸ்தவ அழைப்பும் துன்புறுதலும்:** கிறிஸ்துவைப் பின்பற்றித் துன்புறுவது கிறிஸ்தவ அழைப்பின் தன்மையாலான பண்பாகும் (1:6; 2:19-21; 4:1; 5:9). இஃது ஆசீர் அளிக்கிறது (1:7; 3:9.14;4:13). கிறிஸ்து தன் பாடுகளாலும் உயிர்ப்பாலும் வெற்றி அடைந்துவிட்டார் (3:18). இந்த வெற்றி விசுவசியாத உலகில் செயலாற்றும் தீய சக்திகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது (3:19.22; காண். 5:8-9). இந்த வெற்றியில் கிறிஸ்தவன் திருமுழுக்கினாலும் (3:21) விசுவாசத்தாலும் (5:9) பங்கு கொள்கிறான். இவற்றை நன்குணர்ந்து கிறிஸ்தவன் வேதகலாபனையை நம்பிக்கையோடும் (3:14-17) மகிழ்ச்சியோடும்கூட (4:13-14) எதிர்கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திய துன்பங்கள் தீர்ப்பின் தொடக்கமாகும் (4:17). அவை தூய்மைப்படுத்துகின்றன (1:7; 4:12);

பிரமாணிக்கமுள்ள கிறிஸ்தவனை இறுதி மகிமைக்கு இட்டுச்செல்கின்றன (1:4-5. 7-9; 3:9; 4:6.13; 5:4.10). விசுவசியாதவர்களுக்கு அவை தண்டனைத் தீர்ப்பைக் கொண்டுவரும் (2:7-8; 4:5; 17:18). தலைமை ஆயரின் இந்தத் தோற்றம் (5:4), இயேசுவின் இந்த வெளிப்பாடு (1:13) அருகில் உள்ளது (1:5-6; 4:5.7; 5:10).

பேதுரு எழுதிய திருமுகம் - II (PETER, SECOND LETTER OF)

முன்னுரை: இது புதிய ஏற்பாட்டின் இருபத்திரண்டாம் நூலாகும்; பொதுத் திருமுகங்களில் ஒன்று; திருமுக வடிவில் உள்ளது.

2. **ஆசிரியர்:** இத்திருமுகத்தை எழுதியவர் பேதுரு என்று நூல் குறிப்பிடுகிறது. (2 பேதுரு 1:1). இவர் இயேசு தோற்றம் மாறியபோது நேரடிச் சாட்சியாக இருந்தார் (1:16; காண்க. மத் 17:1-8 இணை). இயேசுவின் கூற்றுக்கேற்ப, தனது இறப்பு மிக விரைவில் நடக்குமென்று, நம்பினார் (1:14; காண். யோவா 21:18-19). பெயர் குறிக்கப்படாதவர்களுக்கு ஏற்கெனவே ஒரு கடிதம் எழுதியுள்ளதை நினைவுபடுத்துகிறார் (3:1). பவுலின் சில கடிதங்களை அறிந்திருக்கிறார். அவற்றை "மறைநூல்" என்று குறிப்பிடுகிறார் (3:15-16).

ஆனால், பேதுரு இத்திருமுகத்தை எழுதியிருக்க முடியாது என்பதை நிறுவக் காரணங்கள் காட்டப்படுகின்றன. இவற்றைக் காணும்முன், ஆசிரியத் தன்மை பற்றி சில கருத்துகளைத் தெளிவுபடுத்துதல் மிக முக்கியமாகும்.

3. **ஆசிரியத்தன்மையும், திருமுறைப் பட்டியலும்:** இந்த இரு கருத்துகளையும் வேறுபடுத்துவது மிக முக்கியமாகும். இத்திருமுகம் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்பது திருச்சபையின் அதிகாரபூர்வமான அறிக்கைகள் பல்வற்றால் நிறுவப்பட்டுவிட்டன. ஆனால், இதைப் பேதுரு தான் எழுதினாரா என்ற ஆசிரியத்தன்மை பற்றியது எப்போதும் ஓர் உண்மையான பிரச்சனையாகவே இருந்துள்ளது.

சமீப காலம்வரை, கத்தோலிக்க அறிஞர்கள் இந்த இரண்டு கருத்துகளுக்குமிடையே அவசியமான வேறுபாட்டைக் காணவில்லை. ஆகவே, திருமுறைப்பட்டியலின் தன்மையைப் பாதுகாக்க வேண்டியிருந்ததால் ஆசிரியத்தன்மையையும் உறுதிப்படுத்த காரணங்களைக் கண்டு பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அறிஞர் பலர், பழைய ஏற்பாட்டில் புனைபெயர் நூல்கள் இருப்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. புதிய ஏற்பாட்டில் புனைபெயர் நூல்கள் இருக்கக்கூடுமா என்பது ஒரு பிரச்சனையாகவே இருந்தது. இப்பிரச்சனையைக் காரண காரியவாத முறையில் விலக்கி விட்டால், பேதுருதான் இத்திருமுகத்தை எழுதினார் என்று திருச்சபை ஆசிரியர்களிடமிருந்து வரும் சான்றுக்கு மிகைப்படுத்தப்பட்ட முக்கியம் கொடுக்க வேண்டியிருக்கும். இந்த ஆசிரியர்கள் ஆசிரிய உண்மைத் தன்மை பற்றிய பிரச்சனையை அறிந்திருந்தனர் என்றும், புனைபெயர் ஆசிரியத் தன்மைக்கு எதிராகத் தீர்மானமாகக் கூற விரும்பினர் என்றும் காட்டப்பட்டால் ஒழிய, இவர்களது சான்றுக்கு மதிப்பில்லை. ஆனால், இவர்கள் பொதுவாக மறுசிந்தனையின்றி, நூலில் வரும் "இயேசு கிறிஸ்துவின் ஊழியனும் அப்போஸ்தலனுமான சீமோன் பேதுரு எழுதுவது" (1:1) என்ற கூற்றை வெறுமனே கூறிவந்தனர்.

இந்நூலைப் பேதுரு எழுதினாரா அல்லது இஃது ஒரு பொய்யான ஏடா என்ற பிரச்சனைகளை எதிர்கொள்ளும்போது, இந்த அறிஞர்கள் முதலாவதை நிரூபிக்க உள்ளார்ந்த சான்றுகளைக் காண முயன்றுள்ளனர். இரண்டு திருமுகங்களுக்குமிடையே ஒற்றுமையுள்ளது. முதலாவதை மனதில் வைத்து இரண்டாவது எழுதப்பட்டது என்பது உண்மையே. ஆனால், புனைபெயர் ஆசிரியத்தன்மை ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு, உள்ளார்ந்த சான்றுகள் வேறுவிதமாக மதிப்பீடு செய்யப்படுகின்றன.

காரணகாரிய கோட்பாட்டு நிலை நேர்மையானலும், விவிலிய ஆசிரியர்களிடமிருந்து விரும்பிச் செய்யப்பட்ட பொய்க்கையெழுத்துத் தன்மையை விலக்கினாலும், இந்நிலைக்கு ஆதரவாக உள்ளார்ந்த சான்றுகள் பயன்படுத்தப்பட மாட்டா. அவை அவற்றின் சொந்த மதிப்பிலேயே ஆய்வுக் கண்ணோடு மதிப்பீடு செய்யப்படும். அந்த உள்ளார்ந்த சான்றுகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அறிஞர்களுக்கு உரிமையுண்டு.

4. பேதுருதான் இத்திருமுகத்தை எழுதினார் என்பதற்கு எதிரான காரணங்கள்:

அ) இரண்டாம் பேதுரு, யூதா எழுதிய திருமுகத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கியுள்ளது. இரண்டாம் பேதுருவில் காணப்படும் பல பகுதிகள், யூதாவில் அப்படியே காணப்படுகின்றன. அல்லது யூதாவின் பகுதிகளோடு ஒத்துள்ளன.

பேதுரு II	யூதா
2 : 1.3பின்	4
:4.6	6-7
:5	5
:10-11	8-9
:12	10
:13.15	11-12
:17	12 பின்-13
:18	16
3 :1-4	17-18
:10-13	14-15
:14-18	20-25

இருவரில் யார் யாரைத் தழுவி எழுதுகிறார் என்பது, சிக்கல் மிக்க பிரச்சனையாகும். யூதாவின் வாதப்போக்கு பொதுப்பண்புடையதாகத் தெரிகிறது. அவர் யாரைப் தாக்கி எழுதுகிறார் என்று கூறுவது கடினம். ஆனால், இரண்டாம் பேதுரு இறைவனது நீதி மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகைபற்றிக் கவனமாக எழுதப்பட்ட காப்புரையாகத் தெரிகிறது. ஆகவே, ஒரு பொதுப்பண்புடைய கடிதத்தை, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறு இரண்டாம் பேதுரு மாற்றியமைத்து எழுதுகிறது எனலாம். ஒரு நீண்ட ஏடு குறுகிய ஏட்டிலுள்ளதை ஏற்றுக்கொள்வது புரிந்து கொள்ளக்கூடியதே. யூதா இரண்டாம் பேதுருவின் மூன்றில் இரண்டு பகுதியை ஒதுக்கிவிட்டு, மீதியுள்ளதை பொதுப்பண்புடையதாக எப்படி மாற்றினார் என்பதைப் புரிந்து கொள்வது கடினம். இப்படி இரண்டாம் பேதுரு யூதாவின் பெரும்பகுதியைக் கொண்டிருப்பது அப்போஸ்தலர்களின் தலைவருக்கு விநோதமாக உள்ளது. இது பேதுருதான் எழுதினார் என்ற கருத்தைப் பலவீனப் படுத்துகிறது.

ஆ) அப்போஸ்தலர்களைப் பற்றிய குறிப்புகள் (2 பேதுரு 3:2), ஏதோ பற்பல ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்களைக் குறிப்பிடுவதுபோல் தோன்றுகிறது. முதலாம் நூற்றாண்டின் இறுதியில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் பவுலின் கடிதங்கள் குறிக்கப்படுகின்றன (3:15-16).

இ) பேதுரு எழுதிய முதலாம் இரண்டாம் திருமுகங்களுக்கிடையே தொடர்பு: 3:1-இல் ஆசிரியர் அதே வாசகர்களுக்கு எழுதப்பட்ட முந்தைய மடலைக் குறிப்பிடுகிறார். இது முதல் திருமுகந்தானா? உண்மையாகவோ, இலக்கிய யுக்தியாகவோ பேதுரு எழுதியதாகக் கூறப்படும் இரு மடல்கள் இவை இரண்டுதான். ஆகவே, இரண்டாவதில் கூறப்படும் முந்தைய மடல் முதலாவதுதான் என்று கருதுவது இயற்கையே! இரண்டிற்குமிடையே நடையிலும் சொற்றொகுதியிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருந்தாலும், முதலாவதை மனதிற்கொண்டு இரண்டாவது எழுதப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தொடக்க வாழ்த்து இரண்டிலும் அப்படியே வருகிறது (1 பேதுரு 1:2; 2 பேதுரு 1:2). 2 பேதுரு 1:3-11-இல் வரும் சிந்தனை வளர்ச்சி 1 பேதுரு 1:3-9-ஐப் பெரிதும் நினைவுபடுத்துகிறது. திருச்சபையின்

பாரம்பரியமான போதகத்தை நினைவுகூர்வதாக உரிமை கொண்டாடும் இரண்டாவதின் ஆசிரியர் (1:12.15; 3:2), முதலாவதில் வரும் மறைக்கல்வியைக் குறிப்பிடுகிறார் என்பது அறிவுக்கு ஒத்ததாக உள்ளது. ஆசிரியரது இறப்புக்குப்பின், நினைவு கூரப்பட வேண்டிய அப்போஸ்தலர் போதகத்தை (1:15) வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறார் (1:12). "பரிசுத்த இறைவாக்கினர் முன்னறிவித்த சொற்களையும், ஆண்டவரும் மீட்பவருமானவர் அப்போஸ்தலர்கள் வழியாகத் தந்த கட்டளைகளையும்" (3:2) அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்தச் சாட்சிகள் 1 பேதுரு 1:10-12-இல் குறிப்பிடப்படுகின்றனர். இதற்கேற்றாற் போல் 1 பேதுரு 1:16; 2:6-8; 3:10-12; 5:5-இல் சாட்சியாகப் பழைய ஏற்பாடு கூறப்படுகிறது. அதேபோது 2:21-25-இல் கிறிஸ்து ஓர் எடுத்துக்காட்டாகச் சித்தரிக்கப்படுகிறார். இரண்டாம் பேதுருவின் ஆசிரியரது முதன்மையான நோக்கம் கடவுளின் நீதியையும், இயேசுவின் இரண்டாம் வருகையையும் எண்பிப்பதாகும். இவற்றைப்பற்றிப் போலிப்போதகர்கள் ஐயம் எழுப்பினர் (1:16; 3:4). இந்தத் தமது நோக்கத்திற்குச் சாதகமாக முதல் பேதுருவில் காணப்படும் கூறுகளை இரண்டாம் பேதுருவின் ஆசிரியர் எடுத்துக்கொள்கிறார்.

பேதுருவின் இரண்டு திருமுகங்களுக் கிடையே ஒற்றுமையிருப்பதாகத் தோன்றினாலும், கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, புதிய இஸ்ராயேலாகிய திருச்சபை, பரிசுத்த ஆவி, தவம், திருமுழுக்கு ஆகியவை பற்றி முதல் பேதுருவில் காணப்படும் கருத்துக்கள்- இரண்டாம் பேதுருவில் இடம் பெறவில்ல. நடை, சொற்றொகுதி ஆகியவற்றில் பல வேறுபாடுகள் உள்ளன. 2-ஆம் பேதுருவில் கிரேக்க நடை கடினமாக உள்ளது; செயற்கையான வாக்கிய அமைப்புகள் உள்ளன; கிரேக்கப் பண்பாட்டின் பாதிப்பு அதிகமாகத் தெரிகிறது; ஆனால், முதலாம் பேதுருவின் நடை எளியதாக உள்ளது. அதில் காணப்படும் ஆறுதலோ, அன்புப் பண்போ 2-ஆம் பேதுருவின் ஆசிரியர் எடுத்துக்கொள்கிறார்.

ஈ) புறச்சான்றுகள்: ஆதித்திருச் சபையால் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்படுவது, மற்றப் புதிய ஏற்பாட்டு நூல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதை விடக் கடுமையாக இருந்தது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முடிவுரை இந்நூல் பற்றிய தெளிவான குறிப்புகள் திருச்சபை நூல்களில் இல்லை. முதல் வெளிப்படையான குறிப்பு ஓரிசன் நூல்களில் காணப்படுகிறது. இதைப் பேதுரு தான் எழுதினார் என்று ஓரிசன் ஏற்றுக் கொண்டாலும், இது தர்க்கத்திற்குரியது என்று கூறுகிறார். விவிலியத் திருமுறையின் முதல்பட்டியலான, கி.பி. 170-ஐ ஒட்டி உருவான முராத்தோரியின் பட்டியலிலோ, பழைய இலத்தீன் பட்டியலிலோ, சீரியக்குப் பட்டியலிலோ இந்நூல் இடம் பெறவில்லை. 3-ஆம், 4-ஆம் நூற்றாண்டுகளில் இந்நூல் பரவலாகப் பயன்பட்டுள்ளது; பொதுவாகப் பேதுருவுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. ஆயினும், சிலர் ஐயுறுவர். சான்றாக, யுசேபியு வாதத்திற்குரிய நூல் தொகுப்பில் இந்நூலைச் சேர்க்கின்றார்; ஆனால், இதைப் பேதுரு எழுதினார் என்பது பற்றி ஐயுறுகிறார். இது திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்று ஏற்றுக்கொள்ளும் எரோனிமு, இதைப் பேதுரு எழுதினார் என்பது தர்க்கத்திற்குரியது என்று கூறுகிறார். திருச்சபையின் மேற்குப் பகுதியில் 4-ஆம் நூற்றாண்டின் மத்தியில்தான் இந்நூல் குறிப்படப் படுகிறது; ஆனால், இதன் ஆசிரியர் பேதுரு என்பது ஐயுறப்படுகிறது. திருச்சபையின் கிழக்குப் பகுதியில் இந்நூல் நன்கு அறியப்பட்டிருந்தது; ஆனால், தயக்கத்தோடுதான் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இது பேதுருவால் எழுதப்பட்டது என்பதைவிட, இதன் பொருளடக்கத்தின் அடிப்படையில்தான் திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கி.பி. 392-இல் கார்த்தேசு சங்கத்தால் அமைக்கப்பட்ட திருமுறைப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.

இறுதியாகத் திரிதெந்தின் பொதுச்சங்கத்தால் இந்நூல் திருமுறைப் பட்டியலில் சேர்ந்ததாக அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்சங்கம் இந்நூலின் ஆசிரியர் பற்றிய பிரச்சனையைத் தொடவில்லை. கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் இரு பண்புகளும் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக இந்நூல் அப்போஸ்தலரான பேதுரு எழுதினார் என்று கருதப்பட்டதால், இது திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம். ஆயினும், இந்நூலின் ஆசிரியர் பற்றிய பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவராமல், திருமுறைப்பட்டியலைப் பற்றிய திருச்சபையின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளலாம். கோட்பாட்டுத் தீர்மானங்களே கட்டுப்படுத்தக்கூடியன; அவற்றிற்கு முந்திய தர்க்கவாதங்கள் அல்ல.

இந்நூலின் ஆசிரியர் பேதுருதான் என்பதற்கு எதிரான இக்காரணங்கள் ஒன்று சேர்ந்து வெல்ல முடியாதவையாக உள்ளன. ஆனால், இக்காரணங்களிலிருந்து, இந்நூல் ஒரு பொய்யேடு என்று முடிவு செய்ய வேண்டியதில்லை. சாலமோனின் ஞான நூலோ, திருவுரையாளர் நூலோ பொய்யேடுகள் என்று ஒருவரும் கூறுவதில்லை. ஆயினும், இவை புனைபெயர் நூல்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படும். இதே பாணியில் இந்நூலின் ஆசிரியர் அப்போஸ்தலர் பேதுருவின் சீடராக இருக்கலாம். இவர் அப்போஸ்தலரின் அதிகாரத்தை உத்தியாகக் கையாண்டு கிறிஸ்துவ விசுவாசத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரம்பரியங்களை வலியுறுத்த விரும்பியிருக்கலாம். பேதுருதான் இறையியல் பாரம்பரியத்தின் அடிப்படைப் பாறை என்பது பற்றி வளர்ச்சியடைந்த உணர்விற்கு ஏற்பவும், தொடக்கத் திருச்சபையின் மறைபரப்பு மற்றும் நிர்வாக அமைப்பில் அவரது தலைமைக்கு ஏற்பவும் (காண். மத் 16:16-19) பேதுருவின் பெயரால் இந்த ஆசிரியர் இந்நூலை எழுதுகிறார்.

5. யாருக்கு, எப்போது, எங்கிருந்து: இந்நூல் அப்போஸ்தலரான பேதுருவால் எழுதப்பட்டது என்று ஏற்றுக் கொண்டால், இந்நூல், பேதுருவின் முதலாம் திருமுகத்தைப் பெற்றுக் கொண்ட சிறிய ஆசியாக கிறிஸ்தவர்களுக்கு, பேதுருவின் மறைசாட்சி மரணத்திற்குச் சிறிதுகால முன்பு உரோமையில் எழுதப்பட்டதாகக் கருதப்படும்.

ஆனால், மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக இந்நூல், விவிலியத் திருமுறை சார்ந்த ஒரு புனைபெயர் நூல் என்று ஏற்றுக்கொள்வதே சாலச் சிறந்ததாகத் தெரிகிறது. 2 பேதுரு 3:1-இலிருந்து முதலாம் பேதுருவைப் பெற்றுக் கொண்டவர்களுக்கே இரண்டாம் பேதுருவும் எழுதப்பட்டது என்று முடிவு கட்டமுடியாது. இரண்டாம் பேதுருவைப் பெற்றவர்கள் பற்றி, அவர்கள் ஒரு காலத்தில் பிற மதங்களைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தவிர (காண். 2 பேதுரு 2:18.20-22), வேறொன்றும் அறிவதற்கில்லை. விவரிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையிலிருந்த ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவச் சமூகத்திற்கு இந்நூல் எழுதப்பட்டது என்று நாம் கருதலாம். இவர்கள் எங்கு வாழ்ந்தனர் என்பது பற்றி ஊகிக்கத்தான் முடியும். இந்நூல் யூத, கிரேக்கக் கிறிஸ்தவர்களடங்கிய கலப்புத் திருச்சபைக்கு எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதி. 2-3-இல் கொடுக்கப்பட்டிருக்கும் விவிலிய எடுத்துக்காட்டுகள், கிரேக்க - உரோமை இலக்கியத்தோடு நெருங்கிய இணையமைப்பைக் கொண்டுள்ளன (வானதூதர்கள் மற்றும் அசுரர்கள், நோவா மற்றும் தெயுகாலி யோன், சோதோம் மற்றும் பாத்தோன்). கிரேக்க நடை கடினமாக இருந்தாலும் நல்ல விதத்தில் அமைந்துள்ளது. "இறை இயல்பு" (2 பேதுரு 1:4), நேரடிச்சாட்சி (1:16), கீழுலகத் தண்டனையிடம் (2:4), நான்கு அடிவேரான தீய பண்புகள் போன்ற கலைச்சொற்களில் கவனம் செலுத்தப்படுகிறது. இறைவனுடைய நேர்மையான நீதித் தீர்ப்புக்குச் சாதகமான மற்றும் பாதகமான வாதங்கள்

புளூட்டார்க்கு நூலிலும், தர்கூம், மிட்ராஸ் நூல்களிலும் காணப்படுபவைகளுக்கு ஒத்தனவாக உள்ளன. அண்டத் தீ மற்றும் புதுப்பித்தல் ஆகியவை பற்றிய விவரிப்புகள் ஸ்தோயிக்குகளுக்கும் விவிலியப் பாரம்பரியத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கும் விருப்பமானவையாக அமைந்துள்ளன. இறுதிக்கால இயல் பாரம்பரியத்தை யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் புரியும்படி செய்ய எடுத்துக் கொள்ளப்படும் மேய்ப்புப்பணி அக்கறை, நகரச் சூழ்நிலையைச் சுட்டுகிறது. அங்கு, யூதரும் கிரேக்கரும் ஒரு புதிய கலப்புத் திருச்சபையின் கால ஞானத்தோடு தொடர்ச்சியாகத் தன்னைப் பிரசன்னப்படுத்துகிறது. அது தன் அதிகாரத்தின் சுய உணர்வையும் (1:12-15; 3:1-2), நற்செய்திப் பாரம்பரியம் மற்றும் பவுலின் திருமுகங்கள் அடங்கிய தன் கடந்த காலப் பாரம்பரியத்தின் புனிதத்தையும், தன் பாரம்பரியங்கள் பற்றிய அதிகாரபூர்வமான விளக்கம் எழுதி அவற்றை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் (1:12-15) வெளிப்படுத்துகிறது. இந்நூல் எப்போது எழுதப்பட்டது என்று உறுதி செய்ய வலுவான சான்றுகள் இல்லையென்றாலும் இந்நூல் கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டிருக் கலாம். ஏனெனில், இது கி.பி. 96-இல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் வாதங்களுக்கு ஒத்ததாக உள்ளது. இந்நூல் பவுலின் திருமுகங்களைக் குறிப்பிடுகிறது. இத்தொகுப்பு முதலாம் நூற்றாண்டின் இறுதியில்தான் வடிவெடுத்தது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும், இந்நூல் யூதாவின் திருமுகத்திற்குப் பின்புதான் தோன்றியிருக்கவேண்டும். இஃது எங்கு எழுதப்பட்டது என்று நிறுவப் போதிய சான்றுகள் இல்லை.

6. நோக்கம்: பேதுருவின் பெயரால் எழுதும் ஆசிரியர் "நம் கடவுளும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் நீதிக்கேற்ப, நாங்கள் பெற்ற விசுவாசத்தைப் போலவே மதிப்புள்ள விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு"க் (1:1) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அதன்பின் வரும் இறைவனுடைய நேர்மையான தீர்ப்பு, பாவச் சூழலுக்கிடையே உலகைப் பேணும் இறைவனது நீதியை மெய்ப்பிக்கும் இறைவாதம் ஆகியவற்றின் உறுதியை நினைவுபடுத்துகிறார். ஆகவே, அவர்கள் "நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் முடிவில்லாத அரசில் நுழையும் பேறுபெற" (1:11) விரும்பினால், அவர்கள் உண்மையின் அறிவிலும், கிறிஸ்தவ நற்பண்புகளைக் கடைப்பிடிப்பதிலும் வளர வேண்டும்.

போலிப் போதகர்களின் பாதிப்பு இருந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட விசுவாசத்தில் வாசகர்களை நிலைப்படுத்து வதற்காக இந்நூல் எழுதப்பட்டதாகும். இப்போலிப் போதகர்களை யூதா கண்டித்துரைக்கிறார். இவர்கள் கிறிஸ்தவ அறவொழுக்கத்தை ஒதுக்கியவர்கள்; கிறிஸ்தவத் திருமறையே அறவமைதியின் கட்டுப்பாட்டிலிருந்து கிறிஸ்தவரை விடுவித்து விட்டமையால் கிறிஸ்தவர்களுக்கு அறவொழுக்கம் வேண்டியதில்லை என்றும், சமயப் பற்றுறுதியே போதும் என்றும் நம்பித் தவறு செய்தவர்கள். யூதா கருத்தில் கொண்டிருந்த எதிரிகளை விட, இரண்டாம் பேதுரு கருத்தில் கொண்டிருக்கும் போலிப் போதகர்கள் அதிக மோசமான நிலையில் இருந்தனர். இவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், தீர்ப்பையும் இறை அருள்பாலிப்பையும் கேலி செய்தனர் (3:3தொ). இவர்கள் பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளையும் (1:19-21), நற்செய்திப் பாரம்பரியத்தில் நிறுவப்பட்ட புதிய ஏற்பாட்டுச் சாட்சியங்களையும் (காண். 1:16-18), பவுலின் திருமுகங்களையும் (3:15-16) தவறாக விளக்கினர்.

இந்நூலில், கிறிஸ்து இயலின் குவிமையம் இல்லை; மேலும், சன்மானம், தண்டனை பற்றி மனிதனை மையமாகக் கொண்ட நோக்குக் காணப்படுகிறது என்று கூறி, இந்நூல் இறுதிக்கால இயல் பற்றிய அயர்ச்சி தரும் காப்புரையாகும் என்று சிலர் எதிர்முறையில், இந்நூலை மதிப்பீடு

செய்துள்ளனர். இவர்கள், இந்நூல் இறைவனது அருள்பாலிப்பு, தீர்ப்பு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகியவற்றை மையப் பிரச்சனைகளாகக் கொண்டுள்ளது எனக் காணத் தவறிவிட்டனர்.

கி.பி. முதலாம் நூற்றாண்டில், இறைபாலிப்பு மற்றும் தீர்ப்பு ஆகியவை பற்றிய கிரேக்க, யூதத் தர்க்கவாதங்களின் பின்னணியில் இத்திருமுகம் நோக்கப்பட வேண்டும். இந்த உண்மைகளை எப்பிக்கூரியர்களும், யூதப்பதிதர்களும் எப்படித் தாக்கினர் என்று நாம் அறியவருகிறோம். இவர்கள், இறைவனில் அருள்பாலிப்பு மற்றும் தீர்ப்பு இல்லை; மறு உலக வாழ்வு இல்லை; ஆகவே, மரித்தபின் சன்மானமும், தண்டனையும் இல்லை என்று கூறிவந்தனர். இரண்டாம் பேதுரு இந்த வாதப்போக்கைப் பிரதிபலிக்கிறது. அதற்கு எதிராக, பாரம்பரியக் காப்புரை வடிவில் பதில் அளிக்கிறது. இந்நூலின் பிரச்னை இறைவனின் நேர்மையான தீர்ப்பாகும் (1:3-4; 2:3; -:9; 3:3-7. 8-9), வெறும் கிறிஸ்து இயல் மட்டுமன்று; உலகைப் பேணும் இறைவனது நீதியை மெய்ப்பிக்கும் இறைவாதமாகும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டுமன்று. சிலர், இந்நூலில் ஞானவாதத்துக்கு எதிரான போக்கைக் காண முயன்றுள்ளனர். இஃது இல்லையென்றே கூற வேண்டும். இந்நூலின் சூழ்நிலை இறைவனது அருள்பாலிப்பு மற்றும் நேர்மையான தீர்ப்பு ஆகியவை பற்றிய மாதிரி எடுத்துக்காட்டான வாதமாகும்.

7. **வாசகமும் நடையும்:** புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்நூலின் ஒரு பிரதி, மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கணிக்கப்படுகிறது. இஃது இக்காலத்தில் எகிப்தில் இந்நூல் ஏற்றுக் கொள்ளப்பட்டதைச் சுட்டுகிறது. வாசகங்களில் காணப்படும் வேறுபாடு-பிழைகளின் விளைவாகும். புதிய பிரதி, நூலின் விளக்கத்திற்கு அதிக ஒளி அளிக்கவில்லை.

பேதுரு எழுதிய முதலாம், இரண்டாம் திருமுகங்களுக்கிடையே நடையில் பெரிய வேறுபாடு காணப்படுகிறது. இதற்குக் காரணம் பேதுரு இரண்டு வேறுபட்ட செயலர்களைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று எரோனிமு விளக்கம் அளித்துள்ளார். இக்கருத்து நடை வேறுபாடுகளை விளக்கினாலும், இம்முறையில் விளக்கப்படமுடியாத சிந்தனையிலும் மனப்போக்கிலும் ஆழ்ந்த வேறுபாடுகள் உள்ளன.

8. **திட்டம்:** கடித மரபுமுறை இந்நூலில் காணப்படும் காப்புரையைத் திட்டமிட உதவுகிறது.

I. மடல் முன்னுரை: (1:1-11).

அ) வாழ்த்துரை (1:1-2).

ஆ) இறைவனின் செயல்கள் (1:3-4).

இ) இறுதிக்கால இயலும் ஒழுக்க இயலும் (1:5-11).

1) நல்ல இறையியல் நல்லொழுக்கத்திற்கு இட்டுச் செல்லும் (1:5-7).

2) இரு வழிகள் (1:8-11).

II. கற்பனையான கடிதப் பின்னணி: பேதுருவின் சாட்சி (1:12-15).

III. முதல் காப்புரை: இரண்டாம் வருகை பற்றிய இறைவாக்கு (1:16-21).

அ) இயேசுவின் தோற்ற மாறுதலும் இரண்டாம் வருகையும் (1:16-18).

ஆ) தோற்றம் மாறுதல் இறைவாக்காகும் (1:19).

இ) இறை ஏவுதல் பெற்ற விளக்கவுரை (1:20-21).

IV. பதிதர்களுக்கு எதிரான வாதம் (2:1-22):

அ) இறைவனின் உறுதியான தீர்ப்பு (2:1-11).

ஆ) தவறு தீய பண்புக்கு இட்டுச் செல்கிறது (2:12-16).

இ) பொய்யோ வாக்குறுதிகள் (2:17-19).

ஈ) அருளிலிருந்து வழுவுதல் (2:20-21).

V. இரண்டாம் காப்புரை: உலகின் முடிவு (3:1-

7).

அ) நினைவுபடுத்துதல் (3:1-2).

ஆ) முன்னுரைக்கப்பட்ட தீர்ப்பைத் தாக்குதல் (3:3-4).

இ) மறுப்புரை: வரலாற்றிலிருந்து சான்று (3:5-7).

VI. மூன்றாம் காப்புரை: காலம் தாழ்த்துதல் ஒரு கொடையாகும் (3:8-9).

VII. மீண்டும் இறுதிக்கால இயலும் ஒழுக்க இயலும் (3:10-13).

அ) இரவில் திருடன் (3:10).

ஆ) இறைவனின் நாள் (3:11-13).

VIII. பேதுருவும் பவுலும் (3:14-16).

IX. மடலின் முடிவுரை (3:17-18).

9. போதனை:

அ) இத்திருமுகத்தின் சமயக்கோட்பாடு கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டுக் கலைச்சொற்றொகுதியில், முழுவதும் அசாதாரண முறையில் அவர் கடவுள் என்றழைக்கப்படுகிறார் (2 பேதுரு 1:1; காண். உரோ 9:5; யோவா 20:28). அவரே "தெய்வீக வல்லமையும்" (2 பேதுரு 1:3), "இறை இயல்பும்" (1:4) ஆவார். அவர் கடவுளின் மகன் (1:17); மீட்பர் (1:1.11; 2:20; 3:2.18); (அவர்களைவாங்கி) மீட்ட ஆண்டவர் (2:1); "இன்றும் என்றும் மகிமைப்படுத்தப்பட்டவர்" (3:18). இந்த மகிமை தோற்ற மாறுதலில் முன் வெளிப்படுத்தப்பட்டது (1:16-18). இயேசுவை அடிக்கடி குறிக்கும் பட்டம் "நம் ஆண்டவர்" (1:2.8.11. 14. 16; 2:20; 3:2.15.18) என்பதாகும். அவரே விசுவாசத்தினால் வரும் அறிவின் பொருளாவார் (1:2-3). அவரது அரசு முடிவில்லாதது (1:11). அவர் (இரண்டாம் முறை) வருவது உறுதியாகும் (1:16; 3:4.12). இதில் நம்பிக்கை கொள்வது தோற்றம் மாறுதலின் முன் அனுபவத்திலும் (1:16-18), இறைவாக்கிலும் (1:19) அடிப்படை கொண்டுள்ளது. "ஆண்டவரின் நாள்" காலம் தாழ்த்தப்பட்டுள்ளது; கடவுள் குறித்த நேரத்தில் (3:8-9), திடீரென்று (3:10) ஆனால், வந்தே தீரும் (3:3-7).

ஆ) மூவொரு இறைவன்: இவர் பற்றிய கிறிஸ்தவப் பாரம்பரியத்தின் சான்று தந்தையும், மகனும் (1:17), பரிசுத்த ஆவியானவரும் (1:21) ஆகிய மூவரும் குறிக்கப்படுவதில் அடங்கியுள்ளது. தந்தையே படைப்பவர் (3:5), நேர்மையுள்ள நீதிபதி (2:4-9), உன்னத மாட்சிமை (1:17) ஆவார்.

"துணிச்சல் மிக்கவர்கள்" (2:10) என்றழைக்கப்படும் வானதூதர்கள், மனிதர்களை விட, "ஆற்றலும் வலிமையும்" மிக்கவர்கள் என்றும் (2:11), பாவம் புரிந்தவர்கள் என்றும் (2:4; காண். யூதா 6) பிரிக்கப்படுகின்றனர். பாவம் புரிந்த வானதூதர்கள் தண்டிக்கப்பட்டுவிட்டனர். இறுதித் தீர்ப்புக்காக் காத்திருக்கின்றனர்.

இ) மனிதன்: மனிதன் இயேசு கிறிஸ்துவால் மீட்கப்பட்டு விட்டான்; "வாங்கப்பட்டு விட்டான்" (2 பேதுரு 2:1). அவன் நற்செய்தியின் அப்போஸ்தலப் போதகத்தைப் பின்பற்றி விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும் (1:12; 3:1-2). இந்த விசுவாசம் "கடவுளையும் நம் ஆண்டவராகிய இயேசுவையும் அறியச் செய்யும்" (1:2; காண். 1:3.8). விசுவாசம் கிறிஸ்துவின் வாக்குறுதிகளை ஏற்றுக் கொள்வதையும் (1:4; 3:4.9), அவரது "இறையியல்பில்" (1:4) பங்கு கொள்வதையும் உள்ளடக்கியுள்ளது. அது கிறிஸ்தவப் புண்ணிய வாழ்வில் தன்னையே வெளிப்படுத்துகிறது (1:5-8; 3:11.14.18). அஃது, அவரது (இரண்டாம்) வருகையின் நாளில் (3:9.14), "நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் முடிவில்லாத அரசில் நுழைவதில்" (1:11) நிறைவடைகிறது.

ஈ) போலிப் போதகர்கள்: இவர்கள் "தங்களை மீட்ட ஆண்டவரை" மறுதலிப்பவர்கள். இவர்கள் அழிவது திண்ணம் (2:1). இவர்களுடைய தீய பண்புகள், இவர்கள் மனந்திரும்புதலுக்கு முன்னிருந்த நிலையைவிட மோசமான

நிலைக்கும் (2:20), இறுதி அழிவுக்கும் (2:3.9) இட்டுச் செல்லும். இவர்கள் மனந்திரும்பகாலம் கொடுக்கும்படியாக ஆண்டவரது நாள் காலம் தாழ்த்தப்படுகிறது (3:9).

போலிப் போதகர்கள் தான்தோன்றித் தனமாய்ப் பழைய ஏற்பாட்டுக்கு விளக்கமளிப்பதைத் தடுத்துக் குறையினை நிறைவு செய்ய, ஆசிரியர் மறைநூலின் இறை ஏவுதல் பற்றி மதிப்பு மிக்க கருத்தொன்று தருகிறார். "மனிதர் பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டு, கடவுளின் ஏவுதலால் பேசினர்." ஆகவே, எவனும், தன் விருப்பம் போல் இறைவாக்குக்குத் திரித்து விளக்கம் அளிக்கக் கூடாது (1:20-21). "மறைநூல்" என்ற தலைப்பின்கீழ், பவுலின் திருமுகங்கள் தொகுப்பும் சேர்க்கப்படுகிறது (3:15-16).

பேதுரு மற்றும் அந்திரேயாவின் பணிகள் (PETER AND ANDREW, ACTS OF)

இந்நூல் கிரேக்க மற்றும் ஸ்லவோனிய மொழிகளில் உள்ள நூலாகும். இதற்கு இணையான, ஆனால், சிறிய கதை ஒன்று எத்தியோப்பிய மொழியில் உள்ளது. ஆனால், அதில் அந்திரேயாவுக்குப் பதிலாக, ததேயு இடம் பெறுகிறார். அந்திரேயா மனிதனை உண்ணும் மனிதர் வாழும் இடத்திலிருந்து ஒரு மேகம் வழியாக, பேதுரு போதிக்கும் மலைக்குக் கொண்டு செல்லப்படுகிறார். அங்கு மத்தியா, ஏற்கெனவே தப்பிச் சென்றிருந்தார். இயேசு ஒரு குழந்தை வடிவில் வந்து பேதுருவையும் அந்திரேயாவையும் காட்டுவாசிகளுக்குப் போதிக்கச் செல்லுமாறு பணிக்கிறார். அவர்களும் அதைச் செய்கிறார்கள். தங்களைக் கவனித்துக்கொண்ட ஒரு முதியவருக்குச் சிலநாள் உதவினர். பிறகு, அவர்களின் பகையாளியான ஒனேசிப்போரைச் சந்திக்கின்றனர். பேதுரு இரண்டு முறை ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழையச் செய்கிறார். இதைச் சந்தேகித்த ஒனேசிப்போர் தன் சொந்த ஒட்டகத்தையும், ஊசியையும் கொண்டு வருகிறான். அதிலும், பேதுரு வெற்றி பெறுகிறார் ஆனால், அவன் முயன்றபோது அவனால் ஒட்டகத்தை நுழைக்க முடியவில்லை. காரணம், அவன் இன்னும் திருமுழுக்குப் பெறவில்லை. எனவே, பலர் திருமுழுக்குப் பெறும்போது ஒனேசிப்போரும் திருமுழுக்குப் பெறுகிறான். அவர்களோடு தீய நடத்தையுள்ள ஒரு பெண்ணும் மனந்திரும்பித் திருமுழுக்குப் பெற்று, பல காணிக்கைகள் செலுத்துகிறாள். தனது வீட்டைக் கன்னியர் வாழும் இடமாகத் தருகிறாள். அப்போஸ்தலர்கள், அங்குள்ள ஆலயத்தை அர்ப்பணித்து, குருக்களை ஏற்படுத்தி, இறைவனிடம் மக்களை ஒப்படைக்கின்றனர்.

மக்களுக்கு எடுத்துக்காட்டாக எழுதப்பட்ட இந்நூல், பிற பணிநூல்களிலிருந்து நடையிலும் அழுத்தத்திலும் வேறுபடுகிறது. இந்நூல் கோட்பாட்டில் அக்கறை கொள்ளவில்லை. பிற நூல்களில் காணப்படும் அப்போஸ்தலர்களின் செபங்களும் அறவுரைகளும் இதில் இடம் பெறவில்லை. மாறாக, நூல் முழுவதிலும் வியப்புமிக்க நிகழ்ச்சிகளும், கதைகளிலும் ஆசிரியர் அக்கறை காட்டுவதாகத் தெரிகிறது.

பேதுரு மற்றும் பவுலின் பணிகள் (PETER AND PAUL, ACTS OF)

இது கிரேக்க மொழியில் மட்டும் கிடைத்துள்ளது. மார்செல்லுஸ் என்பவர் இதை எழுதியிருப்பதாகக் கூறப்படுகிறது. கவுதோ மெலேத்து என்ற தீவிலிருந்து பவுல் உரோமைக்கு வந்ததாக இந்நூல் கூறுகிறது. இதைக் கேள்வியுற்ற யூதர்கள் பவுலை உரோமைக்கு வரவிடவேண்டாம் என நீரோவை வற்புறுத்தினர். சிசிலி என்ற தீவில் இருக்கும்போது, பவுலின் நண்பனும், அவரைப் போலவே வழுக்கையான தலையை உடையவருமான கப்பல் தலைவனை, அவ்விடத்துத் தலைவர்கள் வெட்டி, தலையை நீரோவிடம் அனுப்பினர். ஏனெனில், அவர்தாம் பவுல் எனத் தவறாக எண்ணினர். பவுலின் உரோமைப் பயணம் அப்போஸ்தலர் பணி நூலைப் பெரிதும் ஒத்து அமைகிறது. ஆனால், பல

கதைகள் சேர்க்கப்பட்டு, வண்ணம் பூசப்படுகிறது. அவர் உரோமை நகரை அடைந்த நிகழ்ச்சி பற்றிய விவரிப்பும், மற்ற விவரங்களும் பேதுரு மற்றும் பவுலின் பாடுகள் என்ற நூலை மிகவும் நெருங்கியதாக உள்ளன.

பேதுரு மற்றும் பவுலின் பாடுகள் (PETER AND PAUL, PASSION OF)

இது பிற்காலத்தில் தோன்றிய ஆனால், முற்றிலும் மரபு சார்ந்த ஒரு நூல். இது கிரேக்கம், இலத்தீன் ஆகிய இரு மொழிகளிலும் உள்ளது. பேதுரு, பவுல் ஆகியோரின் உறவு மற்றும் ஒற்றுமை பற்றியும், அவர்கள் எவ்வாறு சீமோன் மாகு என்பவனை எதிர்த்தனர் என்றும், அவர்களின் மறைசாட்சி மரணத்தைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது. பழங்காலக் கதைகள் பற்றி இந்நூல் கூறினாலும், இது 5-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னால்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும். இது மார்செல்லுஸ் என்பவரால் எழுதப்பட்டது என்பதற்கு ஆதாரமில்லை. இலத்தீனில் இதே தலைப்பைக் கொண்ட, முற்றிலும் வேறுபட்ட நூல் ஒன்று உள்ளது. இருவரும் உரோமை நகரில் போந்தியு பிலாத்தின் உறவினர் வீட்டில் தங்கினர். அங்கே, தான்தான் கிறிஸ்து என்று உரிமை கொண்டாடிய சீமோன் மாகுவிற்குச் சரியான பதில் அளிக்கக் கூடியவர்கள் இவர்களே என்று பரிந்துரைக்கப்படுகிறது. பின், இருவரும் எவ்வாறு மறைசாட்சி மரணம் எய்தினர் என்று விவரிக்கப்படுகிறது.

பேதுரு மற்றும் பன்னிரண்டு சீடர்களின் பணிகள் (PETER AND TWELVE DISCIPLES, ACTS OF)

இஃது எகிப்தில் 1946-ஆம் ஆண்டு செனோபோஸ்கியோன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஞானவாத நூல். இதற்கும், பேதுருவின் பணிகள் என்ற நூலுக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. எபியோனியர்களின் அப்போஸ்தலர் பணிகள் என்ற நூலோடோ, மானிக்கேயரின் பன்னிரு அப்போஸ்தலர் பணிகள் என்ற நூலோடோ இந்நூல் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

பேதுருவின் ஸ்லாவோனியப் பணிகள் (PETER, SLAVONIC ACTS OF)

ஸ்லாவோனியப் பகுதி என்பது கிழக்கு ஐரோப்பாவைக் குறிக்கும்; அதாவது, பல்கேரியா, பொகிமியா, உருசியா முதலிய நாடுகள். இவர்களின் மொழி ஸ்லாவிய மொழியாகும். புனித பேதுருவைப் பற்றியும் அவரின் இறப்பைப் பற்றியும் கூறும் மற்றொரு நூல் இது.

ஒரு சிறுகுழந்தையின் வற்புறுத்துதல் மூலம் பேதுரு உரோமாபுரி செல்கிறார். அக்குழந்தையைப் பேதுரு வாங்குகிறார். கப்பலில் அந்தக் குழந்தை பல புதுமைகளைச் செய்கிறது; உரோமை நகரிலும் பல புதுமைகள் புரிகிறது. இக்குழந்தையை அராவிஸ்து என்பவருக்குப் பேதுரு விற்றுவிடுகிறார். நீரோ பேதுருவைக் கைது செய்தபின் அக்குழந்தை வந்து மன்னனைத் திட்டுகிறது. நீரோவின் ஆலோசகனான காத்தோ, பேதுருவின் கையில் விலங்கிடும்போது, அவனது கையைச் சூம்பச் செய்கிறது. உடனே, நிலநடுக்கம் ஏற்படுகிறது. இறந்தவர்கள் வெளியே வருகிறார்கள். அவர்கள் மிக்கேல் தூதரின் வருகைக்காகக் காத்திருக்கும்படி அவர்களைக் கல்லறைக்கே பேதுரு அனுப்புகிறார். பின், பேதுரு தலைகீழாகச் சிலுவையில் அறையப்படுகிறார். அக்குழந்தை மீண்டும் தோன்றுகிறது. அது வந்தவுடன் ஆணிகள் கழன்று விழுகின்றன. பேதுரு தம் எதிரிகளை மன்னிக்கிறார். இறுதியாக, அக்குழந்தை இயேசு எனத் தன்னை வெளிப்படுத்துகிறது.

பேதுருவின் நற்செய்தி (PETER, GOSPEL OF)

இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாடுகளைப் பற்றிய இந்நற்செய்தி சீரியா, எகிப்து ஆகிய நாடுகளில் பரவியிருந்தது. இது புனித பேதுருவால் எழுதப்பட்டது எனக் கருதப்பட்டது. இஃது இறைத் தன்மையுடைய கிறிஸ்துவுக்கும், மனித இயேசுவுக்கும் இடையிலான உறவு பற்றிய

தோசேத்திய போக்கைக் கொண்டுள்ளது. யூதர்களுக்கு எதிரான போக்கும் இதில் காணப்படுகிறது.

இந்நூலை மறுத்துக் கூறிய ரோசுஸ் ஆயரான செராப்பியோன் என்ற ஆயரது உரையைக் கொண்டிருக்கும் யுசேபியுவின் நூலிலிருந்துதான் கி.பி. 19-ஆவது நூற்றாண்டுவரை இந்நூல் அறியப்பட்டிருந்தது. செராப்பியோன், இந்நூல் கிறிஸ்தவர்களால் பரவலாக வாசிக்கப்பட்டதை அறிந்து, அதன் உண்மையான தன்மையை எடுத்துக்கூறி, இதற்கு மாறாக எழுதினார். யுசேபியுவில் காணப்படும் செராப்பியோனின் மறுப்புரையில் இந்நூல் தோசேத்தியப் போக்குடையது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதே தலைப்புடைய ஒரு நூலை ஓரிசன் குறிப்பிடுகிறார். இதுவும், "யாக்கோபின் நூலும்", இயேசுவின் சகோதரர்கள் யோசேப்பின் முதல் திருமணத்தின் பிள்ளைகள் என்று குறிப்பிடப்படுகின்றனர். தியோடொரெத்து என்பவர் இதே தலைப்புடைய நூலை நசரேயர்கள் பயன்படுத்தியதாகக் கூறுகிறார்.

கி.பி. 1886-இல் இந்நூலின் சில பகுதிகளும், பேதுருவின் வெளிப்பாட்டிலுள்ள காட்சியாகமத்தின் சில பகுதிகளும் எகிப்திலுள்ள அக்மிமின் கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்டன. இஃதோடு, ஏனோக்கு நூலின் கிரேக்க மொழி அதிகாரங்கள் முப்பத்திரண்டும் காணப்பட்டன. இந்நூல் கி.பி. 1892-இல் வெளியிடப்பட்டது. "விண்ணகத்திலிருந்து இரண்டு உருவங்கள் கீழே வந்து, கல்லறையிலிருந்த இயேசுவை வெளியே கொணர்ந்தன" என்று இதில் கூறப்பட்டுள்ளது. சில இடங்களில் நான்கு நற்செய்தியாளர்களையும் தழுவி எழுதப்பட்டுள்ளது (மாற் 16:8; யோவா 21). சில நிகழ்ச்சிகள் உயர்வுநவிற்சியாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் கி.பி. 125-இலிருந்து 175-க்குள் எழுதப்பட்டிருக்கும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

பேதுருவின் பணிகள் (PETER, ACTS OF)

உரோமையில் பேதுரு செய்தவற்றைப் பற்றியும் அவர் சீமோன் மாகுவோடு போராடியது மற்றும் அவன் செய்த புதுமைகள், அவரது மறைசாட்சி மரணம் ஆகியவை பற்றியும் எழுதப்பட்ட நீண்டதொரு கதை. போலி நூல்களில் ஒன்று. பேதுருவுக்குச் சாற்றிக் கூறப்படும் பல நூல்களில் ஒன்றாக இதை யுசேபியு குறிப்பிடுகிறார். இந்நூலின் பெரும்பகுதி, ஒருவேளை கி.பி. 200-க்கு முன், கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாகும்.

இந்நூலில் பல கதைகள் உள்ளன: 1) விண்ணிலிருந்து வந்த ஒரு காட்சிக்குப் பணிந்து பவுல் ஸ்பெயினுக்குப் புறப்படுதல். 2) சீமோன் மாகு உரோமைக்கு வந்து பல புதுமைகள் செய்தல், பவுலின் பெயரைக் கெடுத்தல். அதன் விளைவாக நர்க்கிசு மற்றும் ஆறு பெண்களைத் தவிர மற்றவர் எல்லாம் விசுவாசம் தவறுகின்றனர். 3) விண்ணகக் காட்சிக்குப் பணிந்து, பேதுரு, தமது பழைய எதிரியாகிய சீமோன் மாகுவோடு போராடுவதற்காக (அ.ப. 8:9-24), புதுமைகள் பல செய்கிறார்; சீமோன் மாகுவோடு போராடித் தோற்கடிக்கிறார். 4) பேதுருவின் போதனையால் அகிரிப்பாவும், சீசரின் ஒரு நண்பனும் தங்கள் வைப்பாட்டிகளை இழக்கின்றனர். இதனால், இருவரும் பேதுருவின்பால் சீற்றம் கொள்கின்றனர். அதன் விளைவாக, பேதுரு மறைசாட்சி மரணம் எய்துகிறார்.

பேதுருவின் மறைசாட்சி மரணம் பற்றிய கதை, தனியாக இரு கிரேக்க ஏடுகளிலும், இலத்தீன், சீரியக்கு, கோப்திக்கு, அரமேயம், அரபிக்கு, எத்தியோப்பிக்கு வாசகங்களிலும் காணப்படுகின்றது. மேற்கூறப்பட்ட கதைகளோடு மற்றக் கதைகள் பலவும் உள்ளன. அவற்றில் ஒன்று, பேதுருவின் குணமாக்கும் ஆற்றலை நிரூபிக்க, அவரது வாதநோயுடைய மகள் தற்காலிகமாகக் குணம்பெற்று, அவள் குளிக்கும் போது பார்த்துவிட்ட தோலமேயுவிடம் இருந்து காப்பதற்காக மீண்டும் நோயாளி ஆகிறார். இக்கதையைக் கொண்டுள்ள கோப்திக்கு ஏட்டில்

ஞானவாதப் பகுதிகளும் காணப்படுகின்றன. இக்கதையை அகுஸ்தீனார் அறிந்திருப்பதாகத் தெரிகிறது. இவர் இக்கதைக்கெத்த தோட்டக்காரன் மகள் பற்றிய மற்றொரு கதையையும் கூறுகிறார்.

இவ்விரு கதைகளும் திருமணத்திற்கு எதிராக உள்ளனவாகத் தெரிகின்றன. துறவு வாழ்வின் சுவடுகள் காணப்படுகின்றன. இன்னும் கதைகள் பல உண்டு. ஆனால், இவை வரலாற்று அடிப்படை கொண்டவை என்பதற்கு ஒரு சான்றும் இல்லை. இவற்றில் எல்லாம் பேதுருவின் மறைசாட்சி மரணம் சிறப்புப் பெறுகிறது. பேதுருவின் நலனைத் தேடுபவர்கள் கட்டாயப்படுத்தியதால் பேதுரு விருப்பமின்றி உரோமையை விட்டுப் புறப்படுகிறார். உரோமையை நெருங்கி வந்து கொண்டிருந்த இயேசுவைப் பேதுரு சந்திக்கிறார். "ஆண்டவரே எங்கே போகிறீர்?" என்ற பேதுருவின் கேள்விக்குச் "சிலுவையில் அறையப்பட உரோமைக்குச் செல்கிறேன்" என்று இயேசு பதில் அளிக்கிறார். பேதுரு உரோமைக்குத் திரும்புகிறார். அங்கே சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு மரணம் அடைகிறார். இக்கதையில் கூட, தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட, பேதுரு ஏன் விரும்பினார் என்பது கடின முயற்சியுடன் விளக்கப்படுகிறது.

பேதுருவின் பாடுகள் (PETER, PASSION OF)

இது பேதுருவின் பணிகள் என்ற நூலின் இறுதிப்பகுதியான பேதுருவின் மறைசாட்சி மரணம் பற்றிய பிற்கால வாசகமாகும். இஃது இலத்தீன் மொழியில் உள்ளது. உரோமை ஆயராகப் பேதுருவுக்குப்பின் வந்த லினுசு என்பவரால் எழுதப்பட்டது என்று பாரம்பரியம் கருதுகிறது. இதன் இலத்தீன் மொழி வாசகம் 6-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதன்று. பெரும் பாலும், மறைசாட்சி மரணம் பற்றிய பாரம்பரியத்தையே கொண்டுள்ளது. இஃதோடு சில விவரங்களையும் கொண்டுள்ளது. சிறைக்காவலர்களின் பெயர்கள் இதில் கூறப்பட்டுள்ளன. பேதுரு சிலுவையில் அறையப்பட்டபோது நிகழ்ந்த சிக்கல் மிக்க காட்சியையும் விவரிக்கிறது. அதில் பேதுரு சிலுவையில் அறையப்பட்டபோது, வானதூதர்கள் பூக்களால் ஆன கிரீடத்தைச் (ரோஜா,லீலி மலர்கள்) சிலுவைமேல் பிடித்துக்கொண்டு நின்றனராம். அப்போது ஒளிமிக்க சிலுவையின் உச்சியில் நின்று கொண்டு, பேதுரு கிறிஸ்து கொடுக்கும் ஒரு புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு அதிலிருந்து வாசித்தாராம்.

பேதுருவின் போதனைகள் (PETER, PREACHING OF)

உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள் என்று இயேசு கூறியதற்கொப்ப, பேதுரு போதிப்பதைப் பற்றி எழுந்த ஒரு நூல் இது (மத் 28:19-20; அ.ப. 1:8). யுசேபியு, இது கத்தோலிக்கப் பாரம்பரியம் அறியாததாகும் என்று விலக்கிவிடுகிறார். ஆனால், அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமந்து உண்மையானதாக இதை ஏற்றுக்கொள்கிறார். மேலும், இதிலிருந்து பல மேற்கோள்கள் காட்டியிருக்கிறார். அவற்றில் இந்நூலின் சுருக்கத்தைக் கொடுக்கிறார்.

பன்னிரு அப்போஸ்தலர்கள் உலகெங்கும் சென்று போதிக்கக் கட்டளை பெறுகின்றனர். இறைவன் ஒருவரே; போதகத்தைக் கேட்டு கிறிஸ்துவில் விசுவசிப்பவர்கள் மீட்புப் பெறுவர். இஸ்ராயேலரில் எவராவது மனந்திரும்பி, கிறிஸ்து வழியாக இறைவனை விசுவசித்தால் அவர் மன்னிப்புப் பெறுவார். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் அப்போஸ்தலர்கள் புற இன உலகை நோக்கிச் செல்கின்றனர். சிலைகளோடும், தெய்வமாக்கப்பட்ட விலங்குகளோடு கூடிய கிரேக்க முறைப்படியும், இறைவனை அறிந்திருப்பதாக உரிமை கொண்டாடினாலும் அவரை அறியாது, வானதூதர்களுக்குப் பணிசெய்து, குறிப்பிட்ட நாட்களையும் பருவங்களையும் கடைப்பிடிக்கும் யூத முறைப்படியும் இறைவனை வழிபடக்கூடாது.

கிறிஸ்தவர்கள் இறைவன் அவர்களோடு செய்து கொண்ட புதிய உடன்படிக்கையின்படி புதிய முறையில் இறைவனை வழிபடவேண்டும். அறியாமல் செய்த தவறுகளை இறைவன் மன்னிப்பார்.

இச்சிறுநூல், பிற்காலத்தில் வரவிருக்கும் காப்புரைகளுக்கு முன்னோடியாகும். ஓரிசன், பேதுருவின் படிப்பினை என்ற ஒரு நூலை அறிந்திருப்பதாகத் தெரிகிறது. இரண்டும் ஒரே நூலைத்தான் குறிக்கின்றனவா என்பதற்கு உறுதியாகப் பதில் கூற முடியாது. விலங்குகளை வழிபடுவதற்கு எதிரான விரிவான எச்சரிக்கைகளும், கிளமந்து இதை அறிந்திருப்பதும் இந்நூல் எகிப்தில் தோன்றியிருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன.

பேதுருவின் வெளிப்பாடு (PETER, APOCALYPSE OF)

இஃது அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டதாகக் கருதப்பட்ட வெளிப்பாட்டு நூல்களில் காலத்தால் முந்தியதாகும். கிழக்கத்திய கிறிஸ்தவர்களால் 2-ஆம் நூற்றாண்டில் உயர்வாகக் கருதப்பட்டது. ஆனால், காலப்போக்கில் நிராகரிக்கப்பட்டது. 5-ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீனத் திருச்சபைகளில் பெரிய வெள்ளியன்று ஆண்டுதோறும் இந்நூல் வாசிக்கப்பட்டதாகச் சொசோமென் கூறுகிறார்.

முராத்தோரியன் பட்டியலில் யோவானின் திருவெளிப்பாட்டு நூலுக்குப்பின் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், "ஆலயத்தில் சிலர் இதை வாசிக்க அனுமதியார்" என்ற எச்சரிக்கையையும் கொண்டுள்ளது. அலக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமந்து, இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்று கருதியதாகத் தெரிகிறது. இதிலிருந்து பல எடுத்துக்காட்டுகளைக் கொடுக்கிறார். கிளாரமொந்தானு வாசகம் இதைக் கடைசி நூலாகக் கொண்டுள்ளது. ஆனால் யுசேபியு, இது கத்தோலிக்கப் பாரம்பரியம் அறியாததொன்று என்று இந்நூலை ஒதுக்கி விடுகிறார். யுசேபியுவைப் பின்பற்றி, எரோனிமுவும் இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேராதது என்று ஒதுக்கிவிடுகிறார். ஆனால், இது பிற்காலப்போலி நூல்கள் பலவற்றில் பயன்படுத்தப்பட்டிருப்பது, இது பொதுமக்களிடையே பரவலாக மதிக்கப்பட்டது என்பதைச் சுட்டுகிறது. இதன் எத்தியோப்பிய மொழிபெயர்ப்பு முழுவதும் 1910-இல் கண்டுபிடிக்கப்பட்டது. இஃது அரபிக் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலின் கிரேக்கத் துணுக்கு 1836-இல் எகிப்திலுள்ள அக்மிமின் கல்லறையில் கண்டெடுக்கப்பட்டது. பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட அரமேய வாசகத்தோடு ஒப்பிடும்போது கிரேக்கத் துணுக்கு ஒரு குறுகிய வடிவின் பாகமாகத் தெரிகிறது.

கிரேக்கத் துணுக்கு, உயிர்த்த இயேசுவின் உரையின் இறுதிப் பகுதியோடு திடீரென்று தொடங்குகிறது. இயேசுவின் கட்டளைக்கிணங்கி அப்போஸ்தலர்கள் ஒலிவ மலைக்குப் போகின்றனர். அங்கு நீதிமான்களின் வருங்கால நிலைபற்றிய காட்சி ஒன்று காண்கின்றனர். இஃது இயேசு உருமாற்றமானதைத் தழுவியதாக உள்ளது. ஆனால், கற்பனையான பல விவரங்களைக் கொண்டுள்ளது. இரண்டாவது காட்சி, பாவிகளின் தண்டனைகளைப் பல விவரங்களுடன் விவரிக்கிறது.

இந்நூல், திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த திருவெளிப்பாட்டு நூலால் உந்தப்பட்டு எழுதப்பட்டதாகவும், கற்பனை வளமிக்கதாகவும், பிற இன சமயக் கூறுகளால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இந்நூல் 2-ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றியது என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும்; பேதுருவின் நற்செய்தி என்ற நூலுக்கு முந்தியதாகும்.

கி.பி. 1946-இல் எகிப்தில் செனோ போஸ்கியோன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஞானவாதக் கோப்திக்கு வாசகங்களில், "பேதுருவின் வெளிப்பாடு" என்றதொரு நூல் குறிக்கப்படுகிறது. ஆனால், இரண்டிற்குமிடையே

பெயரைத் தவிர வேறு ஒற்றுமை இல்லை.

பேத்தபாரா (BETHABARA கடக்கக் கூடிய துறை)

இது யோவான், திருமுழுக்குக் கொடுத்த யோர்தான் நதிக்கு அப்பால் உள்ள, இடமாகும் (யோவா 1:28). பழங்கால வாசக ஏடுகள் இவ்விடத்தைப் பெத்தானியா என்று குறிப்பிடுகின்றன. ஆனால், யோர்தானுக்கு அப்பால் பெத்தானியா என்று ஓர் இடம் இருந்ததற்கு ஆதாரம் எதுவுமில்லை என்று ஓரிசன் கூறுகிறார். எனவே, இச்சொல் பேத்தபாரா என்றுதான் வாசிக்கப்பட வேண்டும் என்பது அவரின் கருத்து.

பேத்து (BETH)

இஃது எபிரேய நெடுங்கணக்கில் இரண்டாவது எழுத்தாகும்: அகரவரிசைச் சங்கீதம் 119-இன் இரண்டாவது பகுதிக்குத் தலைப்பாக உள்ளது. இப்பகுதியில் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தோடு தொடங்குகிறது.

பேபாய் (BEBAI – தந்தைத் தன்மையுடைய)

1. ஓர் இஸ்ராயேலர். இவருடைய வழித்தோன்றல்கள் சிலர், செருபாபேலின் தலைமையிலும் (எஸ் 2:1; நெகே 6:16), சிலர் எஸ்ராவின் தலைமையிலும் (எஸ் 8:11) நாடு கடத்தப்பட்டதிலிருந்து திரும்பினர்.

2. ஓர் இஸ்ராயேலர். மக்கள் தலைவர்களுள் ஒருவர். இவர் நெகேமியாவின்கீழ், புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பம் இட்டார் (நெகே 10:15).

3. அடையாளம் தெரியாத ஓர் இஸ்ராயேல நகர். ஓலபெரினேயின் மரணத்துக்குப்பின், சிதறித் தப்பி ஓடிய அசீரியர்களை அழிப்பதில் பங்கு பெற்றனர் (யூதி 15:14). அறிஞர் சிலர், இது பேல்மாயின் என்ற இடமாய் இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

பேயான் (BAEAN)

யூதா மக்கபேயுவால் அழிக்கப்பட்ட ஒரு மக்களினம். ஏனெனில், "இவர்கள் மக்களைப் பிடித்தற்குக் கண்ணி போலும், படுகுழி போலும் இருந்தனர்" (1 மக் 5:4).

பேய், பேய் இயல் (DEMON, DEMONOLOGY)

1. **மெசபொத்தாமியா:** சுமேரிய மற்றும் அக்காதிய இலக்கியத்தில் காணப்படும் மெசபொத்தாமியப் பேய் இயல் மிகப் பழமையானது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஃது எபிரேயரைப் பாதித்தது; கல்தேயர்களின் வழியாக, கிரேக்க உலகிற்குச் சென்று ஐரோப்பாவை அடைந்தது. இதனுடைய ஒருசில அமைப்புகள் மத்திய மற்றும் நவீன காலம்வரை காணப்பட்டன. மெசபொத்தாமியாவில், பெரிய இயற்கைப் பேரிடர்களுக்குச் சற்று குறைந்த வாழ்வின் தீமைகள், பேய்களின் தீயசக்திகளுக்குச் சாற்றிக் கூறப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை எல்லையற்று இருந்தன. அவற்றின் கொடுமையை ஆற்றல் மிக்க விதத்தில் எதிர்த்துப் போராடுவதற்குப் பேயோட்டுபவர் அவற்றின் பெயர்களை அறிந்திருக்க வேண்டும். எனவே, மெசபொத்தாமிய இலக்கியம் ஏராளமான பேய்களின் பெயர்களைக் கொண்டுள்ளது. இலக்கியம் மற்றும் ஓவியங்களிலிருந்து இவற்றின் பண்புகளையும் தோற்றத்தையும் ஊகிக்க முடியும். தீய பேய் 'உதுக்கு' எனப்பட்டது. மந்திர வாசகங்களில் ஏழு தீய பேய்களைக் கொண்ட ஒரு குழு அடிக்கடி தோன்றுகிறது. அவை மனிதனைத் தாக்கும்பொழுது, 'அசாக்கு' தலையினையும், 'நம் தரு' தொண்டையினையும், 'உதுக்கு' கழுத்தையும், 'அலு' மார்பையும், தீய 'இலு' கடவுளான 'எதிம்மு' சுரத்தையும், 'கால்லு' காலையும் தாக்கும். மற்றப் பெயர்கள் –'ரபிசு' பதுங்குபவன், 'அக்காசு' – பறிப்பவன், மற்றும் மூன்று இரவுப் பேய்களான 'லீலு' (ஆண்), லிலிது (பெண்), 'அர்தத் லிலி' (லீலுவின் ஊழியக்காரி) என்பன. இவை மூன்றும் கனவில் வந்து கிலியூட்டும் வகையினைச் சேர்ந்தவை. 'பசுசு' என்பது மலேரியாக் கிருமிகளைக் கொண்டுவரும் தென்மேற்குக் காற்றாக இருக்கலாம். 'அசாக்கு'

என்பது மரணம் ஆகும். 'நெர்கல்' என்னும் கீழுலகக் கடவுளுடன் இணைந்திருக்கும் 'நம்தரு', மரணதூதன் ஆகும். 'கல்லு' என்பது அமைப்போ, சிறப்போ இல்லாத மறைந்திருக்கும் கொடிய மிருகம் ஆகும். 'எதிம்மு' என்பது ஓர் ஆவி. 'லமஸ்து' என்பது அழகற்ற அச்சத்தை ஊட்டும் கொடிய மிருகம் ஆகும். இது கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு ஆபத்தானது. பெரும்பாலான பேய்களைப் போலவே இது மனித மற்றும் விலங்கு உறுப்புகளை இணைத்து அமைக்கப்பட்டது; சிங்கத்தலை, பெண்ணின் உடல், நாயின் பற்கள் மற்றும் கையிலும் காலிலும் கழுகின் நகங்களைக் கொண்டது. ஒவ்வொரு கையிலும் ஒரு பாம்பைக் கொண்டிருந்தது. மனித மாமிசம் மற்றும் இரத்தம்மீது இது வேட்கை கொண்டிருந்தது. மார்புகளில் நாய்க்கும், பன்றிக்கும் பாலூட்டுவதாகக் காட்டப்படுகிறது. பேய்கள் சில நேரங்களில் வானகத்தின் கடவுளாகிய அனுவின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகின்றன. படைப்புக் காவியத்தில், மார்துக்குடனான போட்டியில் தனக்கு உதவிபுரிய "தியாமத்" இவற்றை ஈன்றதாகக் கூறப்படுகிறது. இவை கல்லறைகளிலும்,தனிமையான மற்றும் பாழடைந்த பகுதிகளிலும் முக்கியமாக இரவு நேரங்களில் அலைந்து திரியும். எல்லாப் பேய்களும் தீயவையல்ல. 'சேடு' மற்றும் 'லாமாய்சு' முதலிய நல்ல பேய்கள், தீய பேய்களை அகற்றுவதற்கு அழைக்கப்பட்டன. இத்தகைய கருணையுள்ள பேய்கள், கோவில் மற்றும் அரண்மனை வாசல்களில் காவல் புரியும் தூதர்களாகக் காட்டப்படுகின்றன. மத்திய கிறிஸ்தவக் கலையில் காணப்படும் பேய்களின் அமைப்பு, மெசபொத்தாமியக் கலை மற்றும் இலக்கியத்திலிருந்தே வந்தது.

2. பழைய ஏற்பாடு: எபிரேயச் சட்டத்தில் உள்ள மாயவித்தைக்கு எதிராகக் கூறப்பட்டுள்ள தடைகள், இப்பழக்கத்தையும் பேயியல் பற்றிய நம்பிக்கையையும் இஸ்ராயேலில் இருந்து விலக்கிவிட்டதாகத் தெரிகிறது. பிரபல மொழிக்கான உருவங்கள் மற்றும் எபிரேயரிடையிலுள்ள சில மூட நம்பிக்கைகள் பற்றிய குறிப்புகளைத் தவிர, பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் இந்த நம்பிக்கை காணப்படவில்லை. சவுல் இஸ்ராயேலிலிருந்து எல்லாச் சூனியக்காரிகளையும் வெளியேற்றி னாலும், சாமுவேலின் ஆவியை எழுப்ப ஒருத்தியுடைய உதவியை நாடினார் (1 சாமு 28:13). அது மனித ஆற்றலுக்கு மேற்பட்ட உயிரினம் என்று பொருள்படும் 'எலோகீம் என்று அழைக்கப்படுகிறது. எசா 8:19, இறந்தோரின் ஆவிகள் தொடர்பால் வருவதுரைத்தலைக் குறிப்பதாக இருக்கலாம். எபிரேயர்கள் பலியிட்ட அறியாத வேற்றுத் தெய்வங்களாகிய பேய்களைப் பற்றி உப 32:17 குறிப்பிடுகிறது. இங்கு, பிற நாடுகளின் கடவுள்களும் பேய்களும் ஒன்றாகக் கருதப்படுகின்றன; பிற்கால எபிரேய இலக்கியத்தில் இது வெளிப்படையாகிறது. குழந்தைகளைப் பேய்களுக்குப் பலியிடுவது பற்றி சங் 106:37 குறிப்பிடுகிறது. கைவிடப்பட்ட பாழிடங்களைக் கொடிய விலங்குகள், நடனமாடும் கூளிகள் (எசா 13:21; 34:14), மற்றும் போலி யூத இலக்கியத்தின் பெண் பேய்களும் (34:14) ஆட்கொள்ளும். கூளிகள் என்பவை செம்மறியாடு போன்ற அமைப்பைக் கொண்டவை. சவுலைப் பைத்தியமாக அலைக்கழித்த இறைவனிடமிருந்து வந்த தீய ஆவி (1 சாமு 16:14) பேயினைப் போன்று உள்ளது. ஆனால், இந்த ஆவி குணத்தாலன்றி விளைவுகளில் மட்டும் தீயதாக இருந்தது. பேயியல் நடை சங் 91:5-6-இல் காணப்படுகிறது. இரவின் திகில்; பகலில் பாய்ந்து வரும் அம்பு; இருளில் உலவும் கொள்ளை நோய் மற்றும் நண்பகலில் தாக்கும் கொடிய வாதை ஆகிய இவற்றிற்கு எதிராகப் பாதுகாப்பு அளிப்பவர் இறைவனே.

3. யூதமரபு: இரு ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பேய்களின் மீது பெரும் நம்பிக்கை காணப்படுகிறது. பல கூறுகளில், இவை மெசபொத்தாமிய பேயியலிலிருந்தும்,

கடவுள்களுக்கும் மனிதர்களுக்கும் இடைப்பட்ட உயிரினங்கள் பற்றிய கிரேக்க நம்பிக்கையிலிருந்தும் உருவானவை. ஆனால், இக்காலத்தில் மெசபொத்தாமிய மூடநம்பிக்கைகள் கிரேக்க நம்பிக்கையைப் பாதித்தன. நோய்கள் மற்றும் துரதிருஷ்டங்களைப் பேய்களின் தீய செயல்களே ஏற்படுத்துகின்றன என்னும் நம்பிக்கை முழுவதுமாகவும் எவ்வித மாற்றமும் இன்றியும் மெசபொத்தாமியாவிலிருந்து யூதர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. விவிலியப் பகுதிகளின் விளக்கவுரைகளால் பேய்களின் தோற்றம் விளக்கப்பட்டது. தவறிய வானதூதர்களே பேய்கள் என, போலி விவிலிய நூல்கள் கூறுகின்றன. மனிதரின் புதல்வியரை மணந்த இறைவனின் புதல்வர்கள் என அவர்கள் கருதப்படுகின்றனர் (ஆதி 6:1-4). இவர்களின் புணர்ச்சியின் விளைவாக, இதிகாசங்கள் மற்றும் நாடோடிப் பாடல்களின் அரக்கர்கள் தோன்றினர். தொடக்கம் அறியப்படாத புராணப் பகுதியை ஆதியாகமம் கொண்டுள்ளதால், இந்த விளக்கம் சரியானதாக இருக்க வாய்ப்புள்ளது. சாத்தான் என்பது, ஆதி 3-இல் உள்ள பாம்பு என்று கருதப்படுகிறது. இந்த நம்பிக்கை ஞான 2:24-இல் பிரதிபலிக்கிறது. "பேயின் பொறாமையால் பாவம் உலகில் நுழைந்தது." நோய் மற்றும் துரதிருஷ்டம் ஆகியவற்றுடன், சோதனையும் பேயின் செயலாகக் குறிக்கப்படுகிறது. மேலும், பேய்கள் அனைத்தும் ஒரே தலைமையின் கீழ் ஒரே அரசாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது. இந்தத் தலைமை மஸ்தேமா, பேலியார் அல்லது சாத்தான் என்று அழைக்கப்படுகிறது.

4. **புதிய ஏற்பாடு**: புதிய ஏற்பாட்டின் பேயியலானது பழைய ஏற்பாடு மற்றும் யூத மரபிலிருந்தும் வருகிறது. பேய்பிடித்திருத்தல் பற்றிய நிகழ்ச்சிகளைத் தவிர்த்து மற்றப்படி பேய்கள் தோன்றுவது புதிய ஏற்பாட்டில் அரிதாக உள்ளது. புறவினத்தாரின் பலிகளின் பலிப்பொருட்கள் பேய்களுக்குக் காணிக்கையாக்கப்பட்டன (1 கொரி 10:20-21). பொய்யான போதனைகளுக்கு ஏமாற்றும் ஆவிகளே பொறுப்பு (1 திமொ 4:1). பேய்கள் விசுவசிக்கும், நடுங்கும் (யாக் 2:19). பேய்களின் ஆவிகள் அருஞ்செயல்களைச் செய்யும் (திருவெளி 16:14). பாபிலோனின் பாழிடங்களைப் பேய்கள் உறைவிடமாகக் கொள்ளும் (18:2). இது பழைய ஏற்பாட்டின் எதிரொலிப்பாகும். பேய்கள் பெரும்பாலும் அசுத்த ஆவிகள்' என்றே அழைக்கப்படுகின்றன. பிலிப்பி நகரப் பெண் ஒருத்தி, குறி சொல்ல ஏவும் ஆவியால் பீடிக்கப்பட்டிருந்தாள். பவுல் அவளைக் குணமாக்கினர் (அ.ப. 16:16). வானதூதரோ, ஆவிகளோ இருப்பதைச் சதுசேயர் மறுத்தனர் (23:8). இவற்றின் வேறுபாடு கடவுளின் தூதர் மற்றும் தீய ஆவி ஆகியவற்றிற்கு இடையில் ஆனதாகும். கிறிஸ்தவர்கள், ஆவிகளைக் கடவுளின் ஆவியா என்று சோதித்த பின்னரே விசுவசிக்க வேண்டும் (1 யோவா 4:1). பேய்களும் சாத்தானின் தூதர்கள் என்று அழைக்கப்படுகின்றன; முடிவில்லாத நரகம் அவைகளுக்காகத் தயாரிக்கப்பட்டு உள்ளது (மத் 25:41).

பேய்களின் அரசு என்னும் கருத்து, யூத மரபின் கருத்துக்கு இணையாக உள்ளது. கடவுளின் அன்பினின்று கிறிஸ்தவரைப் பிரிக்கின்றதாக, தூதருடன் குறிப்பிடப்பட்டுள்ள "தலைமை ஏற்பவர்" (உரோ 8:38) பேய் உலகத்தின் தலைவர்களாக, படிமரபுடைய சக்திகளாக இருக்கலாம். கிறிஸ்து, தந்தைக்குக் கீழ்ப்படுத்தும் தலைமை ஏற்போர், ஆட்சிபுரிவோர், வலிமை மிக்கோர் என்பன இந்தப் படிமரபுடைய சக்திகளையே குறிப்பிட்டிருக்கலாம் (1 கொரி 15:24); கிறிஸ்தவன் போராட வேண்டிய இருளின் ஆட்சியாளர்கள் மேலுள்ள கொடிய ஆன்மீக உயிரினங்களை இதே சொற்கள் எபே 1:21; 3:10; 6:12-இல் தெளிவாகக் குறிப்பிடுகின்றன கொலோ 1:16-இல் வானிலும், பூமியின் மீதும் படைக்கப்பட்ட உயிரினங்கள் என்று இவையே குறிப்பிடப்படலாம். இங்கு

அரியணை சூழ்வோர், ஆட்சி புரிவோர் என்பன சேர்க்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவைத் தலைவராகத் கொண்ட தலைமை தாங்குவோர், ஆட்சிபுரிவோர் (கொலோ 2:10) என்போர் பேய்ச்சக்திகளாக இருக்க முடியாது. ஆனால், கிறிஸ்து தமது சிலுவை மரணத்தினால் தலைமை தாங்குவோர் மற்றும் ஆட்சிபுரிவோரை வலுவிழக்கச் செய்கிறார் (கொலோ 2:15). அவ்வாறே வானதூதர், ஆட்சி புரிவோர், வலிமை மிக்கோர் ஆகியோர் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டனர் (1 பேதுரு 3:22). கிறிஸ்தவர்கள் தீர்ப்பிடப்போகும் வானதூதர்கள் பேய்களாக இருக்கலாம் (1 கொரி 6:3). பவுல் தமது உடல் நோயினைச் சாத்தானுடைய தூதனாகக் குறிப்பிடுகிறார் (2 கொரி 12:7). தங்களது தலைமை நிலையில் நிலைக்காமல், வீழ்ந்து, கட்டுண்டு, தண்டனைக்குக் காத்திருக்கும் வான தூதர்களைப் பற்றி யூதா குறிப்பிடுகிறது. இது யூதரின் போலி இலக்கியத்தை எதிரொலிக்கிறது.

தீமையை உருவகப்படுத்துவதற்குப் புதிய ஏற்பாடு எந்த அளவு புராண உருவங்களையும், மொழியையும் பயன்படுத்துகிறது என்னும் கேள்வி எழுகின்றது. இயற்கை நிகழ்ச்சிகளை விவரிக்க பொதுப்பாணி மொழியை விவிலியம் பயன்படுத்துவது பற்றிய கேள்வியைப் போன்றே இக்கேள்வியும் உள்ளது. இத்தகைய பொதுப்பாணி மொழியானது, தீமையின் அண்டசக்திகள் பற்றிய கோட்பாடு மற்றும் தத்துவ உறுதியை அளிப்பதே இல்லை. யூத நூல்களில் காணப்படும் இத்தகைய மொழியின் ஆரம்பம் கீழ்க்கண்டவற்றின் பின்னணியில் உள்ளதாகத் தெரிகிறது: அ.ப. 16:16; 1 கொரி 10:20; திருவெளி 16:4; 18:2; மத் 25:41; உரோ 8:39; 1 கொரி 15:24; எபே 1:21; 3:10; 6:12; கொலோ 2:15; 1 பேதுரு 3:22-இல் வரும் தீயவனின் அரசு; நோயினைத் தீய ஆவிக்குச் சாற்றிக் கூறுதல் (2 கொரி 12:7); பேய்களுக்கான மாபெரும் தீர்ப்பு (யூதா 6; மற்றும் 1 கொரி 6:3). பொதுப்பாணி உருவங்களைப் பயன்படுத்துவது பேய்களைப் பற்றிய புதிய ஏற்பாட்டுக் கருத்துக்களுக்குப் பின்னணியாய் அமைந்துள்ளது என்று புரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையில், திருச்சபை தனிப்பட்ட தீய ஆவிகள் இருப்பதை என்றும் போதித்துள்ளது. அவை, தீய நிலையில் இருப்பது அவற்றினுடைய சொந்த விருப்பத்தினாலேயேயன்றி, அவற்றினுடைய படைப்பினாலல்ல என்றும் வற்புறுத்திக் கூறுகிறது.

பேய் ஓட்டுதல் (EXORCISM)

அ.ப. 19:13-இல் பேயோட்டுபவரைப் பற்றிய குறிப்பு உள்ளது. பேயோட்டுவது என்பது, தீய ஆவிகளை மனிதர்களிடமிருந்தும், இடங்களிலிருந்தும் சில மந்திரச்சொற்களாலும், சில செயல்களாலும் விரட்டுவதாகும். சுமேரிய - அக்காதிய சமயத்தின் தொடக்க காலத்தில் தீய ஆவிகள், கடவுளோடு தொடர்பற்ற ஒரு தனிப்பட்ட சக்திகளாகக் கருதப்பட்டன. பிற்காலத்தில் அண்டத் தெய்வங்களிடமிருந்து உருவானது, அதிலும் சிறப்பாக, வான தேவன் அனுவிடமிருந்து உருவானது என்று நம்பப்பட்டது. இயற்கையில் நடைபெறும் எல்லாவித இடர்களுக்கும், தீய ஆவிகள்தான் காரணம் என்று நம்பப்பட்டது. மேலும், தீய ஆவிகள் நோய்கள் மற்றும் மனக்கோட்டத்திற்கும் காரணமாகக் கருதப்பட்டன. இப்படிப்பட்ட ஆவி ஒருவனைப் பிடித்துக் கொண்டவுடன் மந்திரிக்கும் குரு ஒன்று அல்லது பல கடவுள்களின் பிரதிநிதியாகச் செயல்பட்டு ,அந்த ஆவியை வெளியேற்றுவது அவரது கடமையாகும்.

தீய ஆவிகளை விரட்டும் முறைகள், ஒத்துணர்வான அல்லது மாதிரியைப் பின்பற்றி நடிக்கும் மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். குரு, மண்ணாலோ, மெழுகாலோ அல்லது இதைப் போன்ற ஒரு பொருளாலோ தீய ஆவியின் (அல்லது மாயத்தால் மயக்கிய சூனியக்காரனின்) உருவத்தைச் செய்து, அதன்மேல் சில மந்திரங்களைக் கூறுவார். பிறகு அதை உடைத்து அழித்துவிடுவார். அதாவது,

இதற்கு நடந்ததுபோல், பேய்க்கோ, சூனியக்காரனுக்கோ நிகழும் என்பதுவே கோட்பாடு. இதனால் பேய் தான் பிடித்திருந்தவனை விட்டு அகலவேண்டும். மற்றொரு முறை என்னவென்றால், நோயாளியைப்போல ஓர் உருவம் செய்து கொள்ளவேண்டும்; துன்பப்படும் உடலிலிருந்து தீய ஆவி வெளியேறிச் செய்யப்பட்டிருக்கும் பொருளுக்குள் செல்லத் தூண்டுவதாகும். சில சமயங்களில், குருவே அந்த ஆவி பிடித்தவனிடம் சில மருந்து கொடுப்பார். இத்தகைய மந்திரங்கள் அசீரிய இலக்கியத்தில் பல உள்ளன.

தீய ஆவிகள் இருப்பதைப் பற்றியும், அவற்றை ஓட்டுவதில் மந்திரவாதிக்கு இருக்கும் ஆற்றல் பற்றியுமான நம்பிக்கை பரவலாக இருந்தாலும் இது பற்றிப் பழைய ஏற்பாடு ஒன்றும் கூறாமல் இருப்பது வியப்பளிக்கிறது. சவுலின் கதையில், அவரைத் தீய ஆவி பிடித்திருந்ததாக ஒரு குறிப்பு இருக்கிறது (1 சாமு 16:14-16; 18:10; 19:9). பிறகு, மனநோயால் பீடிக்கப்பட்ட அரசன் தனது நினைவு இழந்த நிலையிலிருந்து, இளைஞன் தாவீது என்பவரின் யாழிசையால் குணம் பெற்றார். இஃது ஒரு வகையான பேயோட்டும் முறை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. இரப்பாயேல் வானதூதர் தோபியாவைப் பார்த்து "மீனின் இதயம் மற்றும் ஈரலின் ஒரு பகுதியை நெருப்பில் போட்டால், அதிலிருந்து கிளம்பும் புகையானது பேய்களையும் ஓட்டிவிடும். அவை மீண்டும் வரா" என்று அறிவுறுத்தினார் (தோபி 6:7; 16-17; 8:3). யோசிப்பசு என்பவர் "தீய ஆவிகளை விரட்டுவதற்கான சக்தியை, அறிவைக் கடவுள் சாலமோனுக்குக் கொடுத்துள்ளார். இவற்றை மனித நலனுக்கும், குணப்படுத்தவும் பயன்படுத்த அளித்துள்ளார். மேலும், அவர் மந்திரங்கள் பல இயற்றியுள்ளார். இவற்றின் மூலம் சில நோய்கள் குணம் பெறுகின்றன. திரும்ப பேய்கள் வராத அளவுக்கு வெளியேறுகின்றன. இம்மாதிரி சக்தி இன்றைய நாளில் அதிகமாக இருக்கின்றன. வெஸ்பாசியன் முன் எனது நாட்டைச் சேர்ந்த எலயாசர் தீய ஆவியால் பிடிபட்டவர்களை விடுவிப்பதைப் பார்த்துள்ளேன்" என்று எழுதியுள்ளார். சக்காயின் மகனான ராபியோகனான் என்பவர், கீழ்க்காணும் செயல் மூலம் தீய ஆவியை ஓட்டலாம் என்கிறார். "சிறியதாக வளர்ந்த மூலிகையை வேரோடு பிடுங்கி, அதைப் பேய் பிடித்திருப்பவனுக்குக் கீழ் தீயினால் எரிக்கவேண்டும். அவனைச் சுற்றி தண்ணீர் வைக்கவேண்டும். அதன் பிறகு ஆவி அவனை விட்டு ஓடி விடும்" என்கிறார்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவாலும் அவரது சீடர்களாலும் தீய மற்றும் அசுத்தமான ஆவிகள் எவ்வித மந்திரமுமின்றி ஓட்டப்பட்டதாகக் காண்கிறோம்.இயேசு கடவுளின் ஆவியாலும் (மத் 12:28), தமது சொந்த வார்த்தையாலும் (மத் 8:16; மாற் 1:25; 5:8; 9:25) தீய ஆவிகளை விரட்டுகிறார். தீய ஆவிகளை ஓட்டும் அதிகாரத்தை இயேசு தம் சீடர்களுக்கு அளித்தார் (மத் 10:1; மாற் 6:7). அவர்கள், அவரது பெயரால் பேய்களை ஓட்டினர் (மாற் 16:17; அ.ப. 16:18...). அ.ப. 19:13-14-இன்படி, எபேசு நகரில் இயேசு கிறிஸ்துவின் பெயரால் தீய ஆவிகளை ஓட்ட முயன்ற யூதப் பேயோட்டுபவர்கள் சிலர் இருந்தனர். இவர்கள் "பவுல் போதிக்கும் இயேசுவின் பெயரால் ஆணையிடுகிறேன்" என்று சொன்னார்கள்.

பாபிலோனியப் பேயோட்டிகள், பண்டைக்காலத்தில், பேயோட்டும்போது தங்கள் மந்திரத்தில் படைப்புத் தேவதைகளை அழைத்தது போல, பாபிலோனிய மந்திரவாதிகள் கிறிஸ்தவத்தின் முதல் நூற்றாண்டுகளில், தாங்கள் பேயோட்டும்போது, புறவினத் தெய்வங்களின் பெயரை அழைத்தனர். யூதர்கள் யாவேயின் பெயரை அழைத்தனர்.

பேய்க் கொம்மட்டி (WILD GOURDS)

இறைவாக்கின் குழுவினர்க்குக் கூழ்காய்ச்ச, அவர்களில் ஒருவர் ஒரு காட்டுக் கொடியிலிருந்து பறித்து வந்த காய்களாகும் (2 அர 4:38-39). இது கசப்பு ஆப்பிள் என்றும் அழைக்கப்படும்; ஆரஞ்சு

போன்ற மஞ்சள் அல்லது இளம் பச்சை நிறமுடைய கசப்பான பழம். இது வயிற்றுப்போக்கை உண்டாக்கக்கூடியது; அதனால், நஞ்சுத் தன்மையுடையது என்று கருதப்பட்டது.

பேய் பிடித்தவன் (DEMONIAC)

புதிய ஏற்பாட்டில் இந்தச்சொல் 13 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (மத் 4:24; 8:16.28.33; 9:32; 12:22; 15:22; மாற் 1:32; 5:15-16.18; லூக் 8:36; யோவா 10:21; லூக் 8:36).

பேய்பிடித்தவனின் இந்தப் நிலை மூளைக்கோளாறு உள்ளவனின் நிலையைப் போன்றது (மாற் 5:15; லூக் 8:35). இயேசுவிடம் குணம் பெற்றவர்களில் இவர்களும் அடங்குவர். இவர்கள் மற்ற உடல் நோய் உடையவரிலிருந்து வேறுபட்டவர்கள் (மத் 4:24; 8:16; மாற் 1:32). இருந்தபோதிலும் பேய் பிடித்ததன் விளைவாக செவிட்டுத் தன்மையும், குருட்டுத்தன்மையும் ஏற்படலாம் (மத் :32; 12:22).

புதிய ஏற்பாட்டிலே பேய் பிடித்தவன் பற்றிய முக்கியமான நிகழ்ச்சி, கெரசேனர் பகுதியில் பேய்பிடித்தவனைப் பற்றியதாகும் (மத் 8:28-34; மாற் 5:1-20; லூக் 8:26-39). இந்த நிகழ்ச்சியிலே இறைமகன் இயேசு அசுத்த ஆவியின் மேலும், பேய்ச் சக்தியின் மேலும் கொண்டுள்ள அதிகாரம் வெளிப்படுகிறது.

பேரரசர் (EMPEROR)

உரோமைப் பேரரசை ஆண்ட அரசனின் சிறப்புப்பெயர். இலத்தீன் சொல்லான "இம்பராத்தோர்" (தளபதி) என்பதிலிருந்து இச்சொல் வந்தது. இப்பட்டம் போரில் வெற்றி பெற்ற படைத்தலைவனைச் சிறப்பிப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. ஆனால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே, அவர் இப்பட்டத்தைத் தாங்கியிருக்க முடியும். ஆனால், யூலியு சீசர் இப்பட்டத்தைத் தமக்கு நிரந்தரமாக்கிக் கொண்டார். அதிலிருந்து மேலாண்மைப்படைத் தலைமையைக் குறிப்பதற்கு இச்சொல் பயன்பட்டது. அகுஸ்து அரசனும், அவருக்குப்பின் வந்தவர்களும் இப்பொருளிலேயே இச்சொல்லைப் பயன்படுத்தி வந்தனர். பிற்காலத்தில், படை ஒருவரை இம்பராத்தோர் என்று ஆர்ப்பரித்து வாழ்த்தினால் அவர் பேரரசாவதற்குத் தகுதியுடையவரானார்.

பேரரசர்- தளபதியாக அன்று, மாறாக, "நாட்டின் தலைவராக" ஆண்டு வந்தார். இதைப் பற்றி திபேரியு இவ்வாறு கூறுகிறார்: "நான் எனது அடிமைகளுக்கு எசமானன்; எனது படைகளுக்குத் தளபதி; மற்றவர்களுக்குத் (அதாவது சாதாரண சுதந்தரக் குடிமக்களுக்கு) தலைவன்". ஆயினும், பழைய வழக்கு தொடர்ந்து இருந்தது. போரில் வெற்றிக்குப்பின் பேரரசன் "இம்பராத்தோர்" என்று வாழ்த்தப் பெற்றான். அத்தகைய நிகழ்ச்சிகள் ஆவணங்களில் எழுதி வைக்கப்பட்டன; நாணயங்களில் பொறிக்கப்பட்டன.

பேரரசர் வழிபாடு (EMPEROR - WORSHIP)

தேவர்களாகக் கருதப்பட்ட உரோமைப் பேரரசர்களுக்குச் செலுத்தப்பட்ட வணக்கம். பேரரசர்கள் இறந்த பிறகே, அதிகாரபூர்வமாக அவர்கள் தேவர்கள் என அறிவிக்கப்பட்டனர். முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தாங்கள் தேவர்கள் என்று நம்பிய பேரரசர்கள் யாவரும் கொல்லப்பட்டனர் அல்லது தற்கொலை செய்து கொண்டனர் (கலிகுலா, நீரோ, தொமீசியன், கொமோது). அரசர்கள் இறந்தபிறகு, ஆட்சிப்பேரவையின் உறுப்பினர்களால் தேவர்களாக "அபிடேகம்" செய்யப்பட்டனர். மக்கள் கூறும் முகமன்களை நிராகரித்த அரசர்களையே நல்ல அரசர்களாக ஆட்சிப் பேரவையினர் கருதினர்.

மக்கள் தங்களுக்கு நல்லவை செய்யும் பெரியவர்களைத் தெய்வமாகக் கருதிவந்ததால் இத்தகைய வழிபாடு உருவானது. முதலில் கிரேக்கர்களின் ஆட்சிக்காலத்தில் இந்த வழிபாடு மிகவும் பொதுவானதாக இருந்தது. அதன்பின்

கீழைநாடுகளுக்கும் இது பரவியது. இவ்வாறு கிழக்கில், யூலியு சீசர் "வெளிப்படுத்தப்பட்ட கடவுளாகவும், மனித குலத்தின் மீட்பராகவும்" கருதப்பட்டார். இருப்பினும், உரோமையில் அவர் இறந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பே தேவராக அறிவிக்கப்பட்டார். அகுஸ்துவும் மாகாணங்களில் கடவுளாக வணங்கப்பட்டார். ஆனால், அவரது இறப்பிற்குப் பின்னர்தான் அதிகாரபூர்வமாகக் கடவுளாக அறிவிக்கப்பட்டார். அகுஸ்து அவரது வாழ் நாளிலேயே தெய்வமாக அறிவிக்கப்பட்டார் என்று சிலர் வாதாடுகிறார்கள்.

கலிகுலா அரசன் திபேரியுவைத் தேவராக அறிவிக்க வேண்டுமென்று ஆட்சிப் பேரவைக்கு வேண்டுகோள் விடுத்தான். ஆனால், அவ்வேண்டுகோள் மறுக்கப்பட்டது. நாளடைவில் கலிகுலாதான் தெய்வமென்று நம்பினான். கி.பி. 40-ஆம் ஆண்டில் அவனது பெயரால், உரோமையில் ஆலயம் ஒன்று கட்டப்பட்டது. மேலும், தனது பெயரால் சத்தியங்கள் செய்யப்பட வேண்டும் என்று ஆணையிட்டான்.

கிளாதியு அரசன், 41-ஆம் ஆண்டில் அலக்சாந்திரிய நகரத்தினருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், தனது பெயரால் தலைமைக் குருவோ, ஆலயமோ ஏற்படுத்தப்படக் கூடாது என்றும், அது கடவுளர்களுக்கே பொருந்தும் என்றும் எழுதியுள்ளான். ஆனால், பிரிட்டனில் உரோமையர்களின் வெற்றிக்குப் பிறகு கிளாதியு பெயரால் ஆலயம் ஒன்று கட்டப்பட்டது.

நீரோ அரசன் கிளாதியுவைக் கடவுளாக அறிவித்தான். ஆனால், நீரோ ஆட்சிப் பேரவையின் கண்டனத்துக்குள்ளானான். அவனுக்குப் பின் வந்த வெஸ்பாசியன் அரசன் கிளாதியுவுக்கு ஆலயம் ஒன்று எழுப்பினான். வெஸ்பாசியாவின் மகன் தீத்து, வெஸ்பாசியனைத் தெய்வமாகப் பிரகடனப்படுத்தினான். தீத்துவின் மரணத்துக்குப்பின் தொமீசியன் தீத்துவைக் கடவுளாக்கினான்.

கி.பி. 89-ஆம் ஆண்டில், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தொமீசியனைத் தெய்வம் என்றும், தலைவன் என்றும் அழைத்து வந்தனர்; அவன் பெயரால் ஆணையிடவும் செய்தனர். ஆசியாவில் எழுந்த வேத கலாபனைக்கும் இது காரணமாக அமைந்தது. அவனது மரணத்துக்குப் பிறகு ஆட்சிப் பேரவையால் நாட்டின் பகைவன் என்று அறிவிக்கப்பட்டான்.

கி.பி. 112-இல் போந்து, பித்தினியா நாடுகளில் திராசன் அரசரின் பிரதிநிதியாக இருந்தவன் கிறிஸ்தவர்களை விசாரணை செய்யும்போது, பேரரசனின் உருவச் சிலைக்குத் தூபமிட வேண்டுமென்று ஆணையிட்டான். ஆனால், திராசன் இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

பொதுவில் உரோமையர்கள், தேவர்களுக்கும் உயிர்வாழும் பேரரசர்களுக்குமிடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்திருந்தனர். திபேரியுவும், அகுஸ்துவும் இறந்தபின் தாங்கள் கடவுளர்களாக அறிவிக்கப்படுவோம் என்று நம்பியிருந்தனர்.

ஆனால், உரோமைக்கு வெளியே உயிர்வாழும் அரசனைத் தெய்வமாக வழிபட எந்தத் தடையும் இருக்கவில்லை. ஏனெனில், அது நாட்டில் ஒற்றுமையை வளர்த்தது. வழிபட மறுத்தவர்கள் பிரமாணிக்கமற்றவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டனர். பேரரசருக்காக, தாங்கள் செபம் செய்வோம்; ஆனால், ஒருகாலும் பேரரசரிடம் செபம் செய்யமாட்டோம் என்று கிறிஸ்தவர்கள் கூறி வந்தனர்.

பேரவை மலை (MOUNTAIN OF ASSEMBLY)

புராண விவரிப்பில் (எசா 14:12-15) வரும் "வடபுறத்து எல்லைப் பகுதியிலுள்ள" ஒரு மலை. இங்குக் கடவுள்கள் கூடுவதாகக் கருதப்பட்டது. அழிவை நோக்கிய "வைகறைப் புதல்வனாகிய விடிவெள்ளிக்கு" ஒப்பிடப்படும் பாபிலோனிய அரசன் இந்த மலையில் ஏறி, தன் அரியணையை அமைப்பதாக உரிமை கொண்டாடினான் (14:13). கடவுள்கள் மலைகளில் வாழ்வதாக உகாரித்து மற்றும் அக்காதிய இலக்கியங்களில் சித்தரிக்கப்படுகிறது. (காண். சங் 82; 89:5-7; எசே

28:11-19). சங் 48:2-இல் இந்தப் புராண மலையாகச் சீயோன் அடையாளம் காட்டப்படுகிறது.

பேராசை (COVETOUSNESS, CUPIDITY, GREED)

பேராசை என்ற சொல்லானது, எழுபது நூலிலும் புதிய ஏற்பாட்டிலும், மற்றவர்களைப் பற்றிய அக்கறையின்றி, அவர்களைப் பாதிக்கும் விதத்தில் மிகுதியும் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளுதல் என்று பொருள்படும். பேராசையானது பெருமளவிற்குப் பிறர் பொருள்மீது ஆசை, ஆசைகளின் நெறிபிறழ்வு ஆகியவற்றை ஒத்திருந்தாலும், சில குணவியல்புகளை வலியுறுத்துவதாகவும் தெரிகிறது. இஃது ஒரு தீவிரமான மற்றும் கிட்டதட்ட வெறியூட்டப் பட்ட பேரவாவாகும் (எபே 4:19). மேலும், சிறப்பாக அயலார்பால் அன்பிற்கும், எல்லாவற்றையும்விட ஏழைகளின்பால் அன்பிற்கும் எதிரானதாகும். முதலாவதாக இஃது இயலுலகப் பொருட்களாகிய சொத்து மற்றும் பணம் ஆகியவற்றின்மீது அக்கறை கொண்டுள்ளது.

கிரேக்க தத்துவ அறிஞர்களைப் போன்று, விவிலியமானது பேராசையால் விளையும் தீமைகளை விவரிக்கிறது. ஆனால், புறவினத்தார் அடையமுடியாத மிக உச்ச நிலையினின்று அது தீர்ப்பிடும் போது, அக்கருத்தின் சமய மையத்திற்கே அது செல்கிறது. பேராசையானது ஒருவரது அயலாருக்கு இன்னல் விளைவிக்கிறது என்ற உண்மைக்கு அப்பாற்பட்டு, உடன்படிக்கையின் இறைவனுக்கும் வெறுப்பூட்டுவதால், சிலை வழிபாட்டைவிட எவ்விதத்திலும் குறைவானதன்று.

பழைய ஏற்பாடு

1. வெளித்தோற்றமும் விளைவுகளும்:

பேராசை அயலாரின் உரிமைகளைத் தாக்குகிறது. இத்தாக்குதல்களை வரலாற்று ஆசிரியர்கள், இறைவாக்கினர்கள் மற்றும் ஞானிகள் கண்டிக்கின்றனர். பெரும்பாலும், நேர்மையற்றவராக உள்ள வியாபாரிகளை (சீரா 26:29-27:2) நடத்திச் செல்வது இதுதான். குறைந்த அளவையில் கொடுத்து, கொள்ளை லாபத்தில் எல்லா விதத்திலும் எப்படியாகிலும் பணம் தேட நடத்திச் செல்வது இதுவே (ஆமோ 8:5தொ). மேலும், மிரட்டவும் (5:12), சொத்தைச் சேர்க்கவும் (எசா 5:8; மீக் 2:2.9; காண். 1 அர 21), உரிய சம்பளத்தை அளிக்காமலும்கூட (எரே 22:13) ஏழைகளைச் சுரண்டவும் (நெகே 5:1-5; காண். 2 அர 4:1; ஆமோ 2:6), செல்வந்தனை நடத்திச் செல்வதும் இதுவே. நீதியின் போக்கை நெறிபிறழச் செய்வதற்கெனக் (எசா 1:23; 5:23; மீக் 7:3; 1 சாமு 8:3) கைக்கூலி கோருமாறு அரசனையும், நீதிபதியையும் இது தூண்டுகிறது (எசா 33:15; மீக் 3:11; பழ 28:16).

இவ்வாறு, அயலாரின்பால் சிறப்பாக, ஏழைகளின்பால் கொள்ளவேண்டிய அன்பிற்கு நேரெதிரானதாக இஃது அமைகிறது. சட்டமானது இவர்களையே இத்தகைய நிலையினின்று பாதுகாக்க வேண்டியுள்ளது (யாத் 20:17; 22:24-26; உப 24:10-21). "உன்வறிய சகோதரன் மாட்டு உன் உள்ளத்தைக் கடினப்படுத்தாதே; உன் கையை மூடிக் கொள்ளாதே" என ஆண்டவர் கூறுகின்ற வேளையில் (உப 15:7), பேராசை மிக்க மனிதன் தன் ஆன்மாவைச் சருகாக்கிக் கொண்டு (சீரா 14:8-9), இரக்கமற்றவனாக மாறுகிறான் (27:1). தங்களுடைய நலம் மற்றும் ஆதாயத்தின்மீதே ஆர்வம் கொண்டவர்களாய்த் "தங்களுடைய இரையைக் கிழிக்கின்ற ஓநாய்களைப் போன்று பேராசை மிக்க அரசர்கள் தங்களுடைய இலாபத்தை அதிகரிப்பதற்கும்" (அப 2:9; எரே 22:17), அதிகாரத்திற்கான தங்களது மோகத்தை உறுதிப்படுத்தவும் (எசே 22:27) வன்முறையையும் பயன்படுத்துவர்.

2. சமயப்பொருள்: ஆனால், ஓநாய்களால் கிழிக்கப்பட்ட ஆடானது உடன்படிக்கையின் இறைவனாகிய ஆண்டவருக்கு உரியது (எசே 34:6-16). இறுதியில் பேராசையால் வருத்தப்படப் போகிறவர் இறைவனே. "பேராசையுடையவர்

ஆண்டவரைப் பழித்துப் புறக்கணிக்கின்றனர்" (சங் 10:3). மேலும், பழைய ஏற்பாடானது பேராசையைச் சிலைவழிபாடாகும் என்று ஏற்றுக்கொள்கிறது. யாவே பாரம்பரியம் ஆதாமும் ஏவாளும் கடவுளைப்போல இருக்க முயற்சி செய்ததையும் (ஆதி 3:5), இறைவனில் தங்களுடைய நம்பிக்கையை வைக்கவும், படைப்புகளான தங்களுடைய சார்பு நிலையை ஏற்கவும் மறுத்ததையும் பேராசையென விவரிக்கிறது (3:6). இவ்வாறாக, பேராசையானது ஒவ்வொரு பாவத்தின் வேரிலும் உள்ளது என்பதை ஆதியாகமம் சுட்டிக்காட்டுகிறது (காண். யாக் 1:14-15). அவரது பணிக்கென இறைவனிடமிருந்து வருவதைத் தனக்கு மட்டுமே வைத்துக்கொண்டு அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பத்தினால், பாவி இறைவனுடைய இடத்தில் ஒரு படைக்கப்பட்ட பொருளை, முடிவாகத் தன்னையே அமர்த்துகிறான். இதன் காரணமாகவே, பேராசைக்கு எதிரான கட்டளை பற்றிய தனது விளக்கவுரையில் தார்கூம் (யாத் 20:17; உப 5:21), எல்லாவற்றிற்கும் மோசமான பாவிகளாகிய புறவினத்தாரைப் பிறர் பொருள் மீது ஆசைப்படுவோருடன் ஒப்பிடுகிறது (கலா 2:15). பவுல் மொத்த சட்டத்தையும் ஒரே கட்டளையில் சுருக்கும்போதும் (உரோ 7:7), பாலைவனத் தலைமுறையின் அனைத்துப் பாவங்களையும் (1 கொரி 10:6) பிறர் பொருள் மீதான பேராசையாகவும் (எண் 11:4.34), அவர்கள் கடந்து செல்வதற்கென இறைவன் அமைத்த ஆன்மீக அனுபவத்தை நிராகரிப்பதாகக் காணும்போதும் (உப 8:3; காண். மத் 4:4), அவர் ஆதியாகம நிகழ்ச்சியை மனதில் கொண்டிருக்கக் கூடும். பேராசையுடைய மனிதன் நிலையற்ற பொருட்களின் பின்னால் ஓடுபவனாகவும் (திருவுரை 6:2; பழ 23:4-5; 28:22), எப்போதுமே திருப்தியடையாதவனாகவும் உள்ளான் (பழ 27:20; திருவுரை 4:8). இறைவனை வெறுத்தொதுக்கிவிட்டு, தனது அயலானுக்குத் தீங்கு இழைத்தமையின் காரணமாக அவன் தண்டிக்கப்படுவான். "தீயமுறையில் பணம் சேர்க்கும் அனைவரின் முடிவும் இதுவே; அந்தப் பணம் தன்னை வைத்திருப்போரின் உயிரைக் குடித்துவிடும்" (பழ 1:19). ஆனால், "நேர்மையற்ற முறையில் கிடைக்கும் வருவாயை வெறுப்பவன் நீண்டகாலம் வாழ்வான்" (25:16).

புதிய ஏற்பாடு: புதிய ஏற்பாடானது பழைய ஏற்பாட்டின் செய்தியை மூன்று முக்கிய வழிகளில் விவரிக்கிறது. பொருளாசைக்கு முற்றிலும் எதிரான அன்பு விருந்தின் முழுநிலையை வெளிப்படுத்துவதன் மூலமும், பொருளாசையில் மறைவாயுள்ள சிலைவழிபாட்டினை வெளியிடுவதன் மூலமும், பேராசையினுடையவன் மத்தின் மையத்திற்கே அது நேரடியாகச் செல்கிறது. வருங்கால வாழ்வின் மறை பொருட்களை வெளிப்படுத்துவதன் மூலமும், அதனால் உலகப்பொருட்களின் உண்மையான மதிப்பினைக் காட்டுவதன் மூலமாகவும், பொருளாசையுடைய மனிதனின் அணுகுமுறையானது எவ்வளவு முட்டாள் தனமானது என்பதை அது சுட்டிக்காட்டுகிறது.

1. **வெளித்தோற்றமும் விளைவுகளும்:** லூக் 12:15-இல் "பேராசை எதற்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறும்போதும், மாற் 7:22-இல் பாவங்களின் அட்டவணையில் அவற்றின் உள்ளார்ந்த தோற்றத்தைச் சுட்டிக்காட்டும் போதும் மட்டுமே பேராசை என்ற சொல்லானது நற்செய்திகளில் தோன்றுகிறது. லூக்காவிற்கு நெருங்கிய கோட்பாட்டினைச் சுருக்குகின்ற இந்தப் பாதி வசனமானது (லூக் 12:15), சொத்துரிமை பற்றிய பிரச்சனையில் நடுவராயிருப்பதற்குத் தலைவரின் மறுப்பிற்கும் (லூக் 12:13-14), நாளை தனக்குரியது என்ற எண்ணத்தில் பொருட்களைச் சேர்த்து வைக்க விழையும் செல்வனின் அறிவிலித்தன்மை பற்றிய உவமைக்கும் (12:16-21) இடையே ஒரு பாலத்தை உருவாக்குகிறது. எனவே லூக்காவின் கருத்துப்படி, பொருளாசையானது மற்ற மக்களைப் பாதிக்கும் விதத்திலும்கூட, தன் உடைமைகளைப் பெருக்கிக்

கொள்ள விருப்பமும், அதே சமயம் ஏற்கெனவே கொண்டுள்ள உடைமைகளைப் பேராசையால் பற்றிக்கொள்வதும் ஆகும் (காண். 2 கொரி 9:5).

பவுல் இச்சொல்லினைச் சிற்றின்ப முறை கேட்போடு அடிக்கடி இணைத்துக் குறிப்பிடுகிறார் (1 கொரி 5:10-11; 6:9-10; உரோ 1:29; கொலோ 3:5; எபே 5:3.5; காண். 1 தெச 4:6). இங்குக் குறிப்பிடத்தக்க ஒப்புமையைக் காணலாம். பொருட்களால் வரும் ஆதாயமோ, சிற்றின்பமோ, எதுவாயினும் இதன் முக்கிய கருத்தானது. ஒருவரது அயாலருக்குப் பணி செய்வதற்குப் பதிலாக அவரைப் பயன்படுத்துவதாகும். இரு நிலைகளிலும் இது குற்றத்திற்குரிய பொருளாசையைப் பற்றியதாகும். அஃது இறைவனுடைய வார்த்தையை நெருக்கி விடுகிறது (மாற் 4:19); பாவியைப் புறவினத்தார் (உரோ 1:24.29), உலகம் (தீத் 2:12; 1 யோவா 2:16-17; 2 பேதுரு 1:4), தீமை (கொலோ 3:5), ஊனுடல் (கலா 5:16; உரோ 13:14; எபே 2:3; 1 பேதுரு 2:11), பழைய மனிதன் (எபே 4:22) மற்றும் அழியக்கூடிய உடல் (உரோ 6:12) ஆகியவற்றின் பக்கம் நிறுத்துகிறது. பொருளாசைமிக்க மனிதன் தனது இச்சைகளுக்காக, தேவையானால் வன்முறையில் மூலமும் மற்றவர்களைப் பலியிடுகிறான். "பிறர் பொருள்மீது ஆசை வைக்கிறீர்கள்; அதைப் பெறாததால், கொலை செய்கிறீர்கள்" (யாக் 4:2). நம்மீது கொண்ட அன்பினால் "கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதாத" கிறிஸ்துவைப் போலன்றி (பிலி 2:6), தனது ஆசையைத் தூண்டியெழுப்புகின்ற எதனையும் அவன் விடாமல் பிடித்துக்கொண்டு விழிப்புடன் காக்கிறான். "செல்வமிக்கவராய் இருந்தும், தன்னுடைய ஏழ்மையால், நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழையான" இயேசுவைப் போலன்றி (2 கொரி 8:9), அவன் தனது இலாபத்திற்காக ஏழைகளை இழப்புக்குள்ளாக்குகிறான் (யாக் 5:1-6; லூக் 20:47 இணை).

பேராசையானது எந்தக் கிறிஸ்தவனுக்கும் தகுதியற்றதாகும். ஆனால், தனது அழைப்பின்மூலம் "அனைவருக்கும் அடிமையாகத்" தன்னை ஆக்க வேண்டிய அப்போஸ்தலரைப் பொறுத்த வரையில் (மாற் 10:44; 1 கொரி 9:19), இஃது அவதூறானதாகும், கண்டிக்கத் தக்கதுமாகும். பவுல், தன்னைப் பொறுத்தவரையில் தனது மனதில் பொருளாசை பற்றிய எவ்விதச் சிந்தனையும் என்றுமே இருந்ததில்லை என்று அறிவிக்கிறார் (1 தெச 2:5). விசுவாசிகளுடைய உடைமைகளைக் கவர்வதற்கு அப்பாற்பட்டவராய் (அ.ப. 20:33), அவர்களுடைய செலவிலேயே வாழக்கூடிய உரிமையைப் பெற்றிருந்தும், அதனைத் தவிர்ப்பதற்காகத் தனது கரங்களாலேயே உழைத்தார் (20:34; 1 தெச 2:9; 1 கொரி 9:6-14; 2 கொரி 11:9-10; 12:16-18). இவ்வாறாக, தன்னலமற்ற நிலையினைச் சந்தேகத்திற்கிடமின்றி வெளிப்படுத்துகிறார் (1 கொரி 9:12; பிலி 4:17). இந்த நடத்தையானது தாழ்ந்த பதவியுடைய பணியாளர்களுக்கு (அ.ப. 20:34-35) எடுத்துக்காட்டாக அமையவேண்டும். ஆயர்களும் (1 திமொ 3:3; தீத் 1:7), திருத்தொண்டர்களும் (1 திமொ 3:9) பணத்தின் மீதும், வெட்கக்கேடான ஆதாயத்தின் மீதும் நாட்டம் கொள்ளக்கூடாது.

மற்றொருபுறம் போலிப் போதகர்கள் தங்களது பேராசையினால் அறிந்து கொள்ளப்படுவர் (தீத் 1:11; 2 திமொ 3:2). ஏனெனில், தாங்கள் கொண்டிருப்பதில் திருப்தியடையாதவர்களாய், பக்தியின் பெயரால் இலாபம் அடைய அவர்கள் முயல்கின்றனர் (1 திமொ 6:5-6). 2 பேதுரு 2:3.14-இல் பேராசை என்ற சொல் பொய்யான பேச்சுகளை விவரிக்கவும், சில சமயங்களில் நெறியற்ற நோக்குடனும் பயன்படுகிறது (2:2.10.18; 3:3; காண். யூதா 16).

எல்லாவற்றையும் உரிமையாக்கிக் கொள்ளும்போதும் ஒன்றுமற்ற மக்களாகக் கருதப்படுவது, எப்போதுமே, நற்செய்தியினுடைய

உண்மையான ஊழியர்களுடைய மாதிரியாகும் (2 கொரி 6:10).

2. சமய உட்பொருள்: பேராசையானது மிகவும் முக்கியமானதெனப் பவுல் கருதுகிறாரெனில் "பொருளாசையானது சிலை வழிபாடு" (1 கொரி 3:5) என்று பழைய ஏற்பாடு சுட்டிக்காட்டுவதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டார் என்பதே பொருளாகும். இதில் அவர் இயேசுவைப் பின்பற்றுகிறார். இயேசுவைப் பொருத்தவரை "பொருளாசை உடையோர்" (லூக் 16:14) என்பவர், இறைவனுக்கு மட்டுமே உரியதான உள்ளத்தை, படைக்கப்பட்ட பொருட்களின் மீது வைப்பவராவார் (மத் 6:21 இணை). ஒரே உண்மையான தலைவராகிய இறைவனைப் புறக்கணித்துவிட்டு இப்பொருட்களைத் தலைவர்களாகக் கொள்வதாகும் (6:24 இணை).

"பண ஆசைதான் எல்லாத் தீமைகளுக்கும் வேர்'' (1 திமொ 6:10) என்ற பழமொழியானது பின்னர் ஆழமான, அவலமான பொருளைப் பெறுகிறது. பொய்யான தெய்வத்தைத் தேர்ந் தெடுப்பதன் மூலம், ஒருவன் ஒரே உண்மையான இறைவனிடமிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு, அழிவுக்குரியோனாகிய (யோவா 17:12), பொருளாசை மிக்க, காட்டிக் கொடுத்தவனாகிய யூதாசைப் போன்று (12:6; மத் 26:15), தன்னை அழிவிற்கு உட்படுத்துகிறான் (1 திமொ 6:9). மற்றொரு புறம், ஞானிகள் அறியாததிலிருந்த எதிர்கால வாழ்வின் நோக்கில், அழிவுக்குரிய பொருட்கள் அவற்றின் தகுதிக்கேற்பப் பார்க்கப்படுகின்றன (லூக் 6:20.24). எனவே, பொருளாசை மிக்க மனிதனுடைய நடத்தையானது எவ்வளவு பொருளற்றது என்பதை ஞானிகளைவிட மேலான முறையில் புதிய ஏற்பாடானது காட்ட முடியும் (12:20; எபே 5:17; மாற் 8:36). செல்வம் தீட்டுப்படுத்தப்பட்டுள்ளது; ஆகவே "நேர்மையற்றதாகும்" (லூக் 16:9.11); அதாவது, இதற்குப் பின்னணியில் உள்ள அரமேயிக்குச் சொல்லின்படி, பொய்யானதாகவும், ஏமாற்றுவதாகவும் உள்ளது. அழியக்கூடிய பொருட்களைச் சார்ந்திருப்பதென்பது முட்டாள்தனமானதாகும் (மத் 6:19-20). ஏனெனில், செல்வமானது மனிதனை முடிவில்லாத வாழ்வை மறக்கச் செய்கிறது. ஆனால் அவ்வாழ்வின் வாயிலான மரணம் சூழ்நிலையைத் தலைகீழாக மாற்ற வல்லது (லூக் 16:19-26; 6:20-26).

பேரிடர் (CALAMITY)

1. துன்ப துயரங்கள் அனைவருக்கும் பொதுவானவை; மனிதக் குடும்பம் அவைகளை அனுபவித்துக் கொண்டேயிருக்கிறது. மக்கள் எதிர்பாராத நிலையில் திடீரென வந்தும், நெடுங்காலம் வருத்தியும், 'யார் என்ன செய்ய முடியும், அனுபவித்துத்தான் தீர வேண்டும்' என்ற மனநிலைக்குக் கொண்டு வந்தும் அவர்களைத் துன்புறுத்துகிறது. துன்பங்கள், சண்டைகள், பஞ்சங்கள், வெள்ளம், புயல், தீவிபத்து, நோய் நோக்காடு, சாவு முதலான இடர்கள் விவிலிய நூல் முழுவதிலும் பரவி நிற்பதை அறிகிறோம். இவைகளுக்கு அளிக்கப்படும் சாதாரண விளக்கங்கள் மனித மனத்தைத் திருப்திப்படுத்து வதாயில்லை. புலனறிவால் இவைகளை விளக்க முடியாத நிலையில் வெளிப்பாட்டு நூல்கள் புலனறிவுக்கு அப்பாற்பட்ட மறைபொருள் நிலையினைக் காட்டி, மனிதன் ஓரளவு தன்னையே அறிந்துகொள்ளத் துணை செய்கின்றன.

2. இறைவன் திட்டத்தில் பேரிடர்: வெளித்தோற்றத்திலும் சரி, ஆராய்ந்து பார்க்கும்பொழுதும் சரி, பேரிடர் சமநிலையற்ற நிலையாகும். இறுதி ஆய்வில் மனிதனின் பாவத்தினால் அது விளைகிறது என்று உணர்ந்து, தண்டனையோடு இடரை ஒப்பிட்டுப் பார்ப்பினும், படைப்பு அனைத்திற்கும் இடர் ஏற்படுவதால் தண்டனையோடு அதை ஒன்றுபடுத்திவிட முடியாது. சோதனைக் காலத்தே சாத்தானுக்கு அடிமைப்பட்டிருப்பதால், அது சாத்தானின்

முகத்தை வெளிப்படுத்துகிறது (யோபு 1:12; மத் 24:22). பேரிடர் அனைவருக்கும் வரும் துன்பம்; அதன்மூலம், மனித வரலாற்றில் பாவத்தின் விளைவு எத்தன் மையது என்று தெரிகிறது (திருவெளி 6; 8:6-11:19).

யுத்தம், கடும்பஞ்சம், கொடும் வியாதி, கெடுமரணம் முதலிய துயர்களை வெறுமனே அந்தந்தக் காலத்திற்கு உரியவைகளாகத் திருவெளிப்பாடு காட்டவில்லை. திருமுறை நூல்கள் எழுதப்பட்ட வரை முறைகளை ஆராயும்பொழுது, முந்தைய நூல்களில் (யாத் 7-10) காணும் எகிப்தில் ஏற்பட்ட இடர்களிலிருந்து, இறைவாக்கு மொழிகளிலும் (எசே 14:21; 38; எசா 24; செப் 1:24), சங்கீதங்களிலும் (சங் 78; 105), பின்னைய நூல்களிலும் (ஞான 10-19; தானி 9:24-27; 12:1) இக்கருத்து ஒரு சங்கிலியாகத் தொடர்ந்து வருகிறது. இவ்வாறாய் ஆராயும்பொழுது பேரிடரின் பொருள் விளங்குகிறது. இது பாஸ்காவாகிய பெரும் நீதித் தீர்ப்பின் ஒரு பகுதியாகும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இறுதிக்கால விடுதலையின் முன் உருவாக முதல் பாஸ்காவும் முதல் விடுதலைப் பயணமும் அமைந்துள்ளன.

இவ்வாறாய், பாஸ்காவின் ஒளியில் காணும்பொழுது பேரிடரின் முகமூடி அகன்று போகிறது. எக்கணம், பாவத்தின் சாவைத் தரும் சக்தி வெற்றி பெறுவதாகத் தோன்றுகிறதோ, அக்கணமே அதன் தோல்வியும், கிறிஸ்துவின் வெற்றியும் தொடங்குகிறது. சிலுவையினால் செயல்படும் இறைவனுடைய அன்பின் பெயரால், பேரிடர் தன் பொருளை மாற்றிக்கொள்கிறது (உரோ 8:31-39; திருவெளி 7:3; 10:7).

3. மனிதனை எதிர்நோக்கி நிற்கும் பேரிடர்: இதுவே பேரிடர் என்றால், மனிதர் நேர்மையான உள்ளத்தோடு அதை நோக்க வேண்டும். இறைவனை நிந்தித்துப் பேசவோ (திருவெளி 16:9), மீட்பு வேண்டி சிலைகளை அண்டிச் செல்லவோ கூடாது (2 அர 1:2-17; எசா 44:17; 47:13). இந்த இடர்களின் கால அடையாளத்தையும் (லூக் 12:54தொ), பாவத்திற்குத் தான் அடிமைப்பட்டுள்ள தன்மையையும், விரைவில் சந்திக்கவிருக்கும் மீட்பரின் வருகை பற்றிய அறிவிப்பையும் அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும் (மத் 24:33). கடவுளின் தீர்ப்பு நாளின் முன்னறிவிப்பாய் உள்ள பேரிடரை மனந்திரும்ப வேண்டுமெனக் கொடுக்கப்படும் இறுதி எச்சரிக்கையாகவும் (திருவெளி 9:20), விழிப்பாயிருக்கும்படி விடுக்கப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் (மத் 24:44). இதுவே நம் இறுதி விடுதலையின் தொடக்கமாய் அமைகிறது. "இவை நிகழத் தொடங்கும் போது, நீங்கள் தலை நிமிர்ந்து நில்லுங்கள்; ஏனெனில், உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது" (லூக் 21:28) என்று ஆண்டவர் தாமே கூறியுள்ளார்.

அதே இறுதிக்கால இயல் போக்கில் இவ்வுலகைக் காணும்பொழுது, இறைவார்த்தையின் வளர்ச்சியோடு (திருவெளி 11:1-13), எதிர்க்கிறிஸ்துவைப் பற்றிய மறை பொருளும் வளர்வது போலப் பேரிடரும் இவ்வளர்ச்சிகளைத் தொடர்கிறது. இது நாம் எதிர்பாராத ஒன்றன்று. ஆனால், அனைத்திற்கும் மேலாய் "நான் அன்பு செய்யப்படுகிறேன் (லூக் 21:8-19), கிறிஸ்துவில் வல்லமை பெற்றிருக்கிறேன்" (2 கொரி 12:9) என்ற மனநிலையோடு, உளவுறுதியோடு இவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாய், நம்மிடையே எதிர் நோக்கி எதிர்பார்த்திருக்கும் மனநிலையைப் பேரிடர் ஏற்படுத்துகிறது. உண்மையில் அது, புத்துலகத்தின் பிறப்பிற்கும், சகல படைப்புகளையும் முழுமீட்புக்கு உட்படுத்தும் இறை ஆவியின் செயலுக்கும் சான்று பகர்கிறது (மத் 24:6; உரோ 8:19-23).

பேரின்பப் பாடல், உன்னத சங்கீதம் (SONG OF SONGS)

1. முன்னுரை: காதல் கதை நூலின்றி எந்த நூல் நிலையமும் நிறைவு பெறாது. அதேமுறையில் விவிலியம் என்ற நூல்

நிலையத்தில் ஒரு காதல் நூலைக் கண்டால் அது பலருக்கு வியப்பளிக்கலாம். விவிலயத்தில் பல காதல் கதைகள் உண்டு. அவற்றில் நீண்டது "உன்னத சங்கீத" மாகும். இந்நூலை ஞான இலக்கியங்களோடு தொகுப்பது அவ்வளவு பொருத்தமுடையதன்று. இருப்பினும் மனிதனின் நல்வாழ்வில் காதல் ஒரு சிறப்பு அங்கம் வகிக்கிறதென்ற அளவில், பாரம்பரியம் இந்நூலை ஒரு ஞான இலக்கியமாகக் கருதியதுபோலும்.

2. **நூலின் தலைப்பு:** எபிரேயவாசகம் "சாலமோனுடைய தொகுப்பைச் சேர்ந்த (அல்லது சாலமோனால் பாடப்பட்ட) பாடல்களில் சிறந்த பாடல்" என்று பொருள்படும் தலைப்பைக் கொண்டுள்ளது. தலை சிறந்த அரசரை "அரசர்களுக்கு அரசர்" என்று அழைப்பதுபோல், இந்நூல் "பாடல்களுக்குள் பாடல்" என்றழைக்கப்பட்டது. இத்தலைப்பு இந்நூலின் சிறப்பையும் உன்னதத் தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. தமிழில் இந்நூலை "உன்னத சங்கீதம்" என்று அழைத்து வந்தோம். இனி, வரவிருக்கும் புதிய மொழிபெயர்ப்பில் "பேரின்பப் பாடல்" என்றழைக்கப்படும். ஏனெனில், இந்நூல் காதல் பேரின்பத்தைப் பாடுகிறது; அன்பு, காதல் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு நெருக்கமில்லாது ஒன்று சேர்க்கப்பட்ட பல பாடல்களைக் கொண்ட தொகுப்பாகும்.

3. **ஆசிரியர்:** ஆசிரியரது பெயர் தெரியாதாயினும் எபிரேயப் பாரம்பரியம் சாலமோன் இந்நூலை இயற்றியதாகச் சுட்டுவதாகத் தெரிகிறது. இதற்கு, ஆதரவாக, சாலமோனின் பெயர் நூலில் பன்முறை குறிக்கப் பெறுவது (1:5; 3:7.9.11; 8:11 தொ) ஒரு காரணமாய் இருக்கலாம். அர 4:32-இல், சாலமோன் 1005 பாடல்களைப் பாடியதாகக் குறிப்பு உள்ளது. அந்த 1005 பாடல்களில் ஒன்றாகவும் அவற்றில் தலை சிறந்ததாகவும், மிக அழகியதாகவும் இந்நூல் கருதப்படுவது எளிதாகும். நூலுக்குப் பொறுப்பானவர்கள் பிற்கால இஸ்ராயேல் ஞானிகளே. இவர்கள், இந்நூலுக்குப் புகழும் மதிப்பும் அளிக்கும் நோக்கோடு, ஞானத்திற்குப் புகழ் பெற்று விளங்கிய தங்கள் இலக்கியத் தலைவரான சாலமோன்தான் இந்நூலை எழுதினார் என்ற கருத்தை ஏற்படுத்துவது மிக எளிது. மேலும், சாலமோன் காதல் மன்னன் என்று புகழ் பெற்றவர். அவர்தான் காதல் பற்றிய இந்நூலை எழுதினார் என்று கருதுவது எளிது. உண்மையில் இந்நூலுக்குச் சாலமோன் ஆசிரியர் என்பது வெறும் இலக்கிய யுக்தியே தவிர, அதில் உண்மையில்லை.

4. **காலமும் இடமும்:** மொழிக் குறிப்புகளிலிருந்து இவற்றை ஒரளவு நிர்ணயிக்கலாம். மூலநூலில் காணப்படும் அரமேயிக்குப் பண்புகள், இந்நூல் நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றியது என்று சுட்டுகின்றன. நூலில் காணப்படும் பாரசீகச் சொற்கள், பாரசீகப் பேரரசின் காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கலாம் என்று கருதத் தூண்டுகின்றன. அதுபோல் நூலில் காணப்படும் கிரேக்கச் சொற்கள், இந்நூல் தோன்றிய காலத்தை இன்னும் பிற்காலத்திற்குத் தள்ளிப்போடும் போக்கிற்கு ஆதரவு அளிப்பதாய்த் தெரிகிறது. ஆனால், இவ்வாறு கருதுவதற்குப் போதிய காரணங்கள் இருப்பதாய்த் தெரியவில்லை. ஆய்வாளர்கள் பலரின் கருத்துப்படி இந்நூல் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் முடிவிலோ, 4-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ தோன்றியிருக்கலாம். அப்போது யூதசமூகம் வாழ்ந்த எருசலேமிலோ, அதைச் சுற்றியிருந்த பகுதியிலோ இந்நூல் தோன்றியிருக்க வேண்டும்.

நாம் கொண்டிருக்கும் வடிவில், இந்நூல் பிற்காலத்தைச் சேர்ந்ததாயினும் இதில் பழங்காலப் பகுதிகள் பல காணப்படுகின்றன. இவை, நூல் இறுதி வடிவம் எடுக்கும்முன்பே, வழக்கில் இருந்திருக்க வேண்டும். இவற்றில் கானானிய அல்லது மேற்காசியப் பண்புகள் பல காணப்படுகின்றன. சிலரது கருத்துப்படி, இந்நூல் இரண்டு தொகுப்புகளாக முதலில் தோன்றியிருக்க வேண்டும். ஒன்று ஆயர்கள் மற்றும் உழவர்களது

வாழ்வைப் பிரதிபலிக்கிறது. இது வடவரசில் தோன்றியிருக்க வேண்டும். மற்றது அரசவை மற்றும் நகரச் சூழ்நிலையைப் பிரதிபலிக்கிறது. இது தென்னரசில் தோன்றியிருக்க வேண்டும். இந்நூலில் வடவரவசின் பகுதியைச் சேர்ந்த இடங்களும் (திராட்சை, சாரோன், கர்மேல், லெபனோன், அமானா, செனீர், எர்மோன் 3:9;4:3:6;4,...), யூதாவைச் சேர்ந்த இடங்களும் (எருசலேம் 2:7;3:5;... ஏன்கேதி) காணப்படுகின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும். நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் ஞானிகளில் ஒருவர் இரண்டையும் ஒன்றாகத் தொகுத்திருக்க வேண்டும். இவர்தான் 8:6-7 என்ற முடிவுரையையும், 8:8-14 என்ற பிற்சேர்க்கையையும் இயற்றியிருக்க வேண்டும்.

ஞானிகள் இஸ்ராயேலின் அரசியல் அதிகாரத்துக்குப் பணி செய்தனர். இவர்கள் சமயப் பணிகளையும் மேற்பார்த்தனர்; குருக்கள், லேவியர் ஆகியோருடைய கல்விப் பயிற்சியிலும் உதவினர். இறைவனது படைப்புத் திட்டத்தில் காதல், திருமணம் ஆகியவற்றின் இடம் என்ன என்று ஆய்ந்து அறிய வேண்டியிருந்தது. காதல் பற்றி பிற மதத்தினர் கொண்டிருந்த கருத்துக்களையும், பிற மதக் கதைகளோடு அது கொண்ட தொடர்பையும், பாலின வழிபாட்டையும், சடங்கு விபசாரத்தையும், இஸ்ராயேல் சமயம் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆனால், அது தனது தனித்தன்மைக்கேற்ப காதல் சக்தியைப் பற்றி எடுத்துக் கூறவேண்டும். இறுதி ஆசிரியர், ஏற்கெனவே இருந்த காதல் பாடல்களையும், தமது காலப் பாடல்களையும் தொகுத்து ஒரு காதல் பாடல் நூலைத் தருகிறார்; அதில் படைப்பவரான இறைவன் காதலின் ஆற்றலையும் பண்புகளையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் தாராளமாகவும் கொடையாகவும் அளிப்பதாகக் கூறுகிறார்; காதலுக்குப் புதிய பொருள் அளிக்கிறார்.

இவ்வாறு இந்நூல் நாடுகடத்தப்பட்டு திரும்பியபின், எஸ்ரா–நெகேமியா சீர்திருத்தத்தை அடுத்துச் சமய, அரசியல் அணிமைமிக்க காலமாகிய கி.மு. 4–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், எருசலேமை ஒட்டித் தோன்றியிருக்க வேண்டும் எனலாம். அக்காலத்தைச் சேர்ந்த ஞானிகளில் ஒருவர், இந்நூலுக்கு நாம் கொண்டிருக்கும் இறுதி வடிவம் அளித்துப் பதிப்பித்திருக்கலாம்.

5. திருமுறைப் பட்டியலில் உன்னத சங்கீதம்: இந்நூல் யூதத் திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு எதிர்ப்பு இருந்ததாகத் தெரிகிறது. இதற்கு இந்நூலில் காணப்படும் துணிகரமான காதல் அல்லது காமப் பண்புகளும், இதன் சில பகுதிகளை மதுக்கடைகளிலும் விருந்துகளிலும் பாடி மகிழ்ந்து தவறாகப் பயன்படுத்தியதும் காரணமாகலாம். இப்படித் தவறாக இந்நூலைப் பயன்படுத்தியவர்களை அக்கிபா என்ற ராபி சபித்து உயிர்ப்பிலிருந்து விலக்கிவைத்ததாக ஒரு வரலாறு உள்ளது. இவர் "நூல்கள் (என்ற தொகுப்பைச் சேர்ந்தது) எல்லாம் புனிதமானவை; ஆனால், அவற்றில் உன்னத சங்கீதம் மிகப் புனிதமானது" என்று கருதினார். பொதுவாக, யூதர்கள் இந்நூலைப் புனித மிக்கதாகக் கருதியதாகத் தெரிகிறது. கி.பி. 90–ஐ ஒட்டி யாம்னியாவில் நடந்த யூதப் பொதுக்கூட்டத்தில், இந்நூல் திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு எதிர்ப்பு இருந்ததாகவும், இந்நூல் சாலமோனால் இயற்றப்பட்டது என்ற நம்பிக்கையும், யூதர்களிடையே மதிப்பும் சலுகையும் பெற்ற ராபிகளின் வாதமும் ஆதரவும், இது திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்படு வதற்குப் பெரிதும் உதவின என்றும் தால்மூது பாரம்பரியம் கூறுகிறது.

கிறிஸ்தவப் பாரம்பரியம் இந்நூலைத் தனது திருமுறைப்பட்டியலில் தொடக்கத்திலிருந்து ஏற்றுக்கொண்டது. மாப்சுயெட்சியாவின் தியோடோர் என்பவர் (கி.பி. 428) இந்நூலுக்கு ஆன்மீகப் பொருளைப் புறக்கணித்து, சமயச் சார்பற்ற விளக்கம் அளித்ததற்காகவும், இந்நூல் இறை ஏவுதல் பெற்றது என்பதை

மறுத்ததற்காகவும் இரண்டாம் கால்சீதோன் பொதுச்சங்கம், அவரைக் கண்டனம் செய்தது. இதுபற்றி விளக்க முறைகள் பற்றிய பகுதியில் பார்ப்போம்.

எபிரேய விவிலியத்தின் மூன்றாவது பகுதியாகிய "நூல்கள்" தொகுப்பில் இந்நூல் சேர்க்கப்படுகிறது. விழாக்காலங்களில் வாசிக்கப்பட்ட உன்னத சங்கீதம், ரூத்து, திருவுரையாளர், புலம்பல், எஸ்தர் ஆகிய நூல்கள் அடங்கிய "ஐந்து சுருள்களில்" (Megilloth) இந்நூல் முதலிடம் வகிக்கிறது. பாஸ்கு-புளியாத அப்ப விழாவின் எட்டாம் நாளில் இந்நூல் ஆலயத்தில் வாசிக்கப்பட்டது. கிரேக்க மொழி பெயர்ப்பாகிய எழுபதுநூல், பாடல் இலக்கிய வடிவுடைய ஞான நூல்களின் தொகுப்பில் இந்நூலைச் சேர்க்கிறது. இதற்கு, இந்நூல் சாலமோனால் இயற்றப்பட்டது என்ற பாரம்பரியத்தையும், ஞானிகளால் தொகுக்கப்பட்டது என்பதையும் தவிர வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. எழுபதுநூல் வரிசையில் திருவுரையாளர் நூலை அடுத்து இந்நூல் வருகிறது. எழுபது நூலைப் பின் பற்றி வுல்கத்தா வாசகமும் அதைப் பின்பற்றும் மொழி பெயர்ப்புகளும், ஞான இலக்கியங்களின் தொகுப்பில் இந்நூலைச் சேர்த்துத் திருவுரையாளர் நூலை அடுத்து வைக்கின்றன.

6. **இலக்கிய அமைப்பு:** இந்நூலின் இலக்கிய அமைப்பைப் பற்றியும், அதன் விளைவான நூலின் திட்டம் பற்றியும் ஆய்வாளர்களிடையே கருத்து ஒற்றுமையில்லை. இவை பற்றிய பல்வேறு குழுவினர்களுடைய கருத்துகளை இங்குத் தொகுத்துத் தருகிறோம்.

அ. இந்நூல் ஒன்றிணைக்கப்பட்ட அகப்பாடல்கள் அடங்கிய நூலாகும். இது கவனமாய் ஒழுங்கு செய்யப்பட்ட நூலாகும். காதலின் ஏக்கத்தோடு தொடங்கி (1:2-8), காதலூட்டம், மன உறுதி செய்தல் வழியாகத் திருமண வாழ்வுக்குச் செல்கிறது. இக்கருத்துக்கு ஆதரவாக, நூல், நாம்கொண்டிருக்கும் வடிவில் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. சங்கீதங்களைப் போல் ஒன்றிலிருந்து மற்றது பிரிக்கப்பட்டுத் தனித்தனிப் பாடல்களாக அமையவில்லை.

ஆனால், இக்கருத்து அவ்வளவு நிறைவு அளிப்பதாக இல்லை. ஏனெனில் விவிலியத்தின் மற்ற நூல்களிலும்- சான்றாக இறைவாக்கு நூல்களில்- ஒரே தொடராக வரும் வாசகங்கள் பல தனிப்பட்ட பகுதிகளின் தொகுப்பாக அமைந்துள்ளதைக் காண்கிறோம். இந்நூலைப் பொறுத்தமட்டும், ஆட்கள், சூழ்நிலை, மனநிலை, கருத்துகள் ஆகியவற்றில் காணப்படும் மாற்றங்கள், இந்நூல் ஓர் ஒருங்கிணைப்புடைய நூலாக இருக்க முடியாது என்று காட்டுகின்றன.

இந்நூல் ஒருங்கிணைக்கப்பட்ட நூலாகும் என்று கருதும் வேறுசிலர் இந்நூலின் நடையிலும், நோக்கத்திலும் ஒற்றுமை இருப்பதாகவும், இந்நூலை ஒரே ஆசிரியர் இயற்றியிருக்க வேண்டும் என்றும் கூறுவர். ஆனால், இந்நூலின் பகுதிகள் பல்வேறு காலங்களில் தோன்றியவை. ஆகையால், இதை ஒரே ஆசிரியர் இயற்றியிருக்க முடியாது. இதன் நடையிலும் நோக்கத்திலும் காணப்படும் ஒற்றுமை இறுதிவடிவப் பதிப்பாசிரியர் அளித்ததாக இருக்கலாம்.

ஆ. இந்நூல் பொதுப்பாணித் திருமணப் பாடல்கள் அடங்கிய தொகுப்பாகும். இவை திருமண வாரத்தில் பாடப்பட்டிருக்க வேண்டும். இக்கருத்துக்கு ஆதரவாக, சீரியா நாட்டில் காணப்படும் திருமணப்பழக்க வழக்கங்களைச் சுட்டிக் காட்டுவர். ஆனால், இக்கருத்து நூலுக்கு அடிப்படையாக அமையவில்லை. இது காதல் மற்றும் திருமணத்தோடு தொடர்புடையது. ஆனாலும், திருமணச்சடங்குகளோடு தொடர்புடைய பாடல்களாக இந்நூல் அமையவில்லை.

இ. இந்நூல் ஓர் இசை நாடகமாகும். இந்நாடகக் கருத்தை ஓரிசன் (கி.பி. 254) கூறியுள்ளார். இதைப் பலர் ஏற்றனர். சிலர் இந்நாடகத்தில் இரண்டு முக்கிய நடிகர்களைக் காண்கின்றனர். (சூலாமியப்

பெண்ணும், அவரது ஆயர்குலக் காதலனும் அல்லது அப்பெண்ணும், சாலமோனும் ஆகியவர்களால்) இந்நாடகம் காதலில் தொடங்கி, காதலர் கூடலும் பிரிதலும், தேடி அடைதலும் வழியாகக் காதல் அதன் நிறைவை நோக்கி இயங்குகிறது. இதில் உள்ளப் போராட்டத்தைத் தவிர, புறச் செயல் போராட்டம் இல்லை.

வேறுசிலர், இந்நூல், ஆயர்குலக் காதலன், அவனது காதலி சூலாமியப்பெண், சாலமோன் ஆகிய மூன்று முக்கிய நடிகர்களைக் கொண்ட நாடகம் என்பர். இவர்களோடு பாடகர் குழுவையும் சேர்த்துக் கொள்வர். இந்நாடகத்தில் பெண், ஆயர் குலத்தவனோடு காதல் கொண்டுள்ளாள். சாலமோன் தோன்றி, தமது மகிமையையும் பெருமையையும் எடுத்துக் கூறி, பெண்ணைத் தமது அந்தப்புரத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புகிறான். இந்நாடகத்தை மெருகுபடுத்த, சாலமோன் ஆயர்வேடம் பூண்டு, தனது அன்பை எடுத்துக் கூறுகிறான் என்பர் சிலர். சாலமோன் எவ்வளவு முயற்சி செய்தாலும் பெண் தம் ஆயர்குலக் காதலனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கிறாள். இந்தக் கிராமப்புறக் காதலர்களின் அன்பைக் கண்டுவியந்து, சாலமோன் தமது முயற்சியைக் கைவிட்டு, இருவரும் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கிறான்.

இந்நூல் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றும், பாலஸ்தீனத்தைச் சுற்றியிருந்த கிரேக்கப் பகுதிகளில் அராபியப் பாவனைக் கூத்து பரவியிருந்தது என்றும், அது யூதர்களையும் பாதித்தது என்றும் ஏற்றுக் கொண்டு, இந்நூலை ஒரு பாவனைக் கூத்தாகக் காட்டவும் வேறுசிலர் முயன்றுள்ளனர். இக்கூத்து, ஆட்கள் பலருக்குப் பதிலாக, ஒருவரே தனது தொனிமாற்றத்தாலும், சைகைகளாலும் பலருடைய பாகங்களை நடித்துக் காட்டுவதாகும். வேறுசிலர் இந்நூலைப் பலர் நடிக்கும் நாடகமாகக் காண்கின்றனர்.

இந்நூல் ஒரு நாடகமாகும் என்ற கருத்து பெரிய வாதத்துக்குரியது. ஏனெனில், பழங்காலத்துச் செமித்திய இலக்கியங்களில் நாடக வடிவ மாதிரி இல்லை. மேலும், இத்தகைய இலக்கியம் யூதப்போக்கோடு ஒத்துப்போவதாகத் தெரியவில்லை. நாடக அமைப்புக்கு அவசியமான, நடிகர்களிடையேயான போராட்டம் காணப்படவில்லை. நூல் முழுவதும், ஆண்-பெண் காதல் அதே உயர்மட்டத்தில் இருப்பதாகத் தெரிகிறது. பொருளுள்ள செயலைக் காட்டக்கூடிய குறிப்புகள் நூலில் இல்லை. இதை நாடகமாக்க, நூலை மாற்றி, திருத்தி, எழுத வேண்டியிருக்கும்.

இந்நூலில் உரையாடல்களும் தனியுரைகளும் கலந்து காணப்படுகின்றன. இதற்கு எபிரேய வாசகம் ஆதரவு அளிக்கிறது. ஆகையால், சிலநவீன மொழி பெயர்ப்புகள் ஓரத்தில் பேசுபவர்களின் பெயரைக் குறிக்கின்றன. இந்நூலில் உரையாடல் உள்ளது என்ற அளவில், இஃது ஒரு நாடகமாகக் கருதப்படலாம். ஆனால், உரையாடலும் காட்சிமாற்றங்களும் நாடக இயக்கம் அளிப்பதற்குப் போதியவை அல்ல.

ஈ. இந்நூல் அன்பு, காதல், என்ற பொதுத் தலைப்பைக் கொண்ட பல தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இக்கருத்தை ஏற்கெனவே மாப்சுயெட்சியாவின் தியோடோர் (கி.பி. 428) கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இப்போது இக்கருத்துக்கு ஆய்வாளர்களிடையே பெரும் ஆதரவு உண்டு சிலர் சீரியா, பாலஸ்தீனப் பகுதிகளில் காணப்பட்ட காதல் பாடல்களையும், திருமணப் பழக்க வழக்கங்களையும் இந்நூலோடு ஒப்பிட்டு, இந்நூலின் சில பகுதிகள் திருமணக் கொண்டாட்டத்திற்காக இயற்றப்பட்டு, அப்போது பாடப்பட்டிருக்கலாம் என்று கருதுவர். மற்றப் பகுதிகள் வெறுமனே ஆண்-பெண் காதல் உறவைப் பாடுகின்றன; இவையும் திருமணக் காலத்தில் பாடப்பட்டிருக்கலாம். ஆனால், எல்லாப் பாடல்களிலும் திருமண அன்புப் பொருளைக் காண வேண்டியதில்லை. இந்நூல் காதலை வலிமை மிக்க ஓர் ஆற்றலாகப் பாவித்து, அதன் உள்ளார்ந்த பொருளைத் துணிவுடன்

எடுத்துக்கூறி, அதைப் போற்றுகிறது. காதல் திருமணத்தை நோக்கி இயங்குகிறது. நூல் காதலர்களின் வேறுபட்ட மனநிலைகளை ஓவியப்படுத்துகிறது. காதலர்கள் கூடலும், பிரிதலும், தேடலும், அடைதலும் மாறி மாறி அமைகின்றன. இப்பாடல்களை நம் தமிழ் இலக்கியத்திலுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளைச் சார்ந்த பாடல்களோடு ஒப்பிடலாம்.

7. **நூலின் சிறப்புத்தன்மை:** நிகழ்ச்சிகள் எந்த முடிவையும் நோக்கி இயங்குவதாகத் தெரியவில்லை. காதலர்கள் ஒருவர் முன் ஒருவர் இருப்பதையும், பிரிவதையும், அன்பையும், அழகையும், கவர்ச்சியையும் உளமார அனுபவிக்கின்றனர். அவர்களது உணர்ச்சிப் பெருக்கு உருவங்களில் எடுத்துக்கூறப்படுகிறது. உருவகங்கள் நாட்டுப்புறத் தன்மையையே கொண்டுள்ளன. நூல் புலமை சார்ந்த விதத்தில் இயற்றப்பட்டதாகத் தெரியவில்லை. திராட்சைத் தோட்டம், திராட்சைக் கொடிகள், வெளிமான், கலைமான், புறாக்கள், நரிகள், வெள்ளைப் போளம், சாம்பிராணி, மாதுளம்பழம், போதைப் பொருட்கள் ஆகிய உருவகப் பொருட்கள் வயல்வெளிச் சூழ்நிலையை எடுத்துக் காட்டுகின்றன. இச்சிறிய நூல் தனக்கே சொந்தமான பல சொற்களைக் கொண்டுள்ளது. 50-க்கு மேற்பட்ட சொற்கள் பழைய ஏற்பாட்டில் வேறு எங்குமே காணப்படவில்லை.

8. **நூலின் திட்டம்:** நூலின் ஆசிரியர் விரும்பி இந்த நூலைத் திட்டம் செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்நூலைப் பாகங்களாகப் பிரிப்பதில் ஆய்வாளர்களிடையே வேறுபாடு உண்டு. இந்நூலில் வரும் பல்லவிகள் (2:7; 3:5; 8:4), நூலை மூன்று பாகமாகப் பிரிக்கச் சிலரைத் தூண்டியுள்ளது.

வேறு சிலர், முன்னுரை (1:1-3), முடிவுரை (8:5-7), பிற்சேர்க்கை (8:8-14) நீங்கலாக, மீதிப்பகுதியை 1:4-2:7; 2:8-3:5; 3:6-5:1; 5:2-6:2; 6:3-8:4 - என ஐந்து பகுதிகளாகப் பிரித்து, அவற்றில் காதலின் வளர்ச்சியைக் காண முயன்றுள்ளனர். இந்தப் பாடல்கள், போராட்டம், அமைதி என்ற அமைப்பை எடுத்துக் காட்டுகின்றன என்று கூறுவர். போராட்டம் ஒருவர்க்கொருவர் காட்டும் அன்பிலும், ஒருவர் ஒருவரைத் தேடுவதிலும் அடங்கியிருக்கிறது. ஒருவர் மற்றவரை அடைவதில் அமைதி அடங்கியிருக்கிறது. இந்த அமைதி இறுதியில் நிறைவு பெறுகிறது. இந்த அடிப்படையில் நாம் இந்நூலைத் திட்டம் செய்யலாம்.

I. முன்னுரை (1:1-3).

II. காதலி காதலனுக்காக ஏங்குதலும், ஒருவர் மற்றவரைப் புகழ்தலும், கூடுதலும் (1:4-2:7).

1:4-6	: காதலியின் தற்புகழ்ச்சியும், ஏக்கமும்.
1:7 :	காதலி காதலனைத் தேடுதல்.
1:8-10	: காதலன் காதலியைப் புகழ்தல்.
1:11-2:3:	: காதலர்களிடையே உரையாடல்.
2:4-7	: கூடல்.

III. காதலர்களின் கூடலும், பிரிவும் (2:8-3:5).

2:8-17	: வசந்தகாலத்தில் காதலர் சந்திப்பு.
3:1-5	: காதலனைத் தேடுதலும் அடைதலும்.

IV. அரச ஆரவாரப் பகட்டும், காதலன் காதலிபால் மயங்குதலும் (3:6-5:1).

3:6-11	: மணமகனின் அரசநிலை.
4:1-7	: காதலின் அழகுக் கவர்ச்சி.
4:8	: காதலனின் அழைப்பு.
4:9-15	: காதலியை மேலும் புகழ்தல்.
4:16-5:1	: கூடல்.

V. ஒன்றிப்பும், இழப்பும், காதலனைப் பற்றிய விவரிப்பும் (5:2-6:2).

5:2-9	: காதலி காதலனை இழந்து தேடுதல்.
5:10-16	: காதலி காதலின் கவர்ச்சியை

விவரித்தல்.

5:17-6:2 : காதலி காதலனைத் தேடி அடைதல்.

VI. காதலின் அழகும், ஒன்றிப்புக்காக இருவரும் ஏங்குதலும் (6:3-8:5).

6:3-12 : காதலன் காதலியின் அழகைப் போற்றுதல்.

7:1-9 : காதலியின் அழகு.

7:9-13 : காதலின் ஏக்கம்.

8:1-3 : காதலின் ஒன்றிப்பு.

8:4-5 : வீடு திரும்புதல்.

VII. முடிவுரை: காதல்களின் ஒன்றிப்பு (8:5-7).

VIII. பிற்சேர்க்கைகள்: சிந்தனைகள் (8:7-14).

8:7-10 : கற்புடைமையும், அதன் அரணும்.

8:11-12 : மணமகளும், சீதனமும்.

8:13-14 : ஒன்றிய வாழ்வு.

9. **விளக்கங்கள்:** இந்நூலின் இலக்கிய அமைப்பைக் கண்டு பிடிப்பது கடினம் என்றால், அதன் பொருளை விளக்குவது இன்னும் அதிகக் கடினமாகும். இந்நூல் பலமுறைகளில் விளக்கப்பட்டுள்ளது. எந்த விளக்கமும் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ, நிறைவு தருவதாகவோ அமையவில்லை. இங்குக் காலப்போக்கில் தோன்றிய சில விளக்கங்களைத் தொகுத்துத் தருகிறோம். இதற்கு முன் சில கருத்துகளை முன் வைக்கிறோம்.

உவமை ஓர் உயிர்ச் சித்திரமான கற்பனை நிகழ்ச்சியுரையாகும். மற்றொரு உண்மையை எடுத்துக்கூறப் பயன்படுவது. அதன் விவரங்களைப் பொருட்படுத்தாது நிகழ்ச்சியுரையை முழுமையாக எடுத்துக் கொண்டு பொருளைக் காணவேண்டும். இதற்கு மாறாக, உருவகம் ஒரே பொருளைப் பற்றிய தொடர் உவமையாகும். உருவகத்தின் ஒவ்வொரு விவரத்திற்கும் பொருள் உண்டு. உவமையில் இருபகுதிகள் உண்டு. ஒன்று எடுத்துக்காட்டு; மற்றது எடுத்துக் காட்டப்படுவது. இரண்டும் தனித்தனியாக, அருகருகாகவே அமைக்கப்படும். உருவகத்திலோ இந்த இரண்டும் பின்னிப் பிணைத்திருக்கும்; ஒரே அமைப்பாக அமைந்திருக்கும். சில சமயம் உருவகமும் உவமையும் கலந்து, ஒரு கலப்பு அமைப்பைக் கொண்டிருக்கும். உருவகப் பொருளிலிருந்து வேறுபடுவது அடையாளப் பொருளாகும். உருவகப் பொருள் ஆசிரியர் புரிந்து தனது கருத்தில் கொண்டதாகும். அடையாளப்பொருள் உருவகப் பொருளைவிட அதிகமானது. இறைவன் கூற விரும்பியது. அது வெளிப்பாட்டினால் தரப்பட்டால் ஒழிய, ஆசிரியரும் அறியார். அடையாளப் பொருள் எப்போதும் வாசகப் பொருளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அ) **உவமையாக விளக்குதல்:** ராபிகள் காலமுதல் இந்நாள்வரை யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள், இறை ஏவுதல் பெற்ற இந்நூல் வெறும் காதல் பாடலாக இருக்க முடியாது என்ற முன்தீர்மானத்தால், சமயம் சார்ந்த முறையிலேயே விளக்கம் அளித்து வந்துள்ளன; இந்நூலை உவமையாகவோ, உருவகமாகவோ விளக்க முயன்றுள்ளன.

இந்நூல் ஓர் உவமையாகும். இக்கருத்தின் படி, மனிதத் திருமண வடிவில், இந்நூல் இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையேயுள்ள உடன்படிக்கை உறவை எடுத்துக் கூறுகிறது. இந்த விளக்க முறைக்கு இறைவாக்கினர் நூல்கள் அடிப்படை அளிப்பதாகத் தெரிகிறது. ஓசே 1-3; எசா 1:21-23; 62:5; எரே 3:1-10; எசே 16:23.

இம்முறைதான் ஆசிரியரது நோக்கம் என்று சுட்டிக்காட்டும் எவ்விதக் குறிப்பும் நூலில் இல்லை. இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையேயுள்ள உறவைத் திருமண உறவு உவமையால் விளக்கும்போது, அதை இறைவாக் கினர்களே எடுத்துக் கூறுகின்றனர். அத்தகைய விளக்கம் இந்நூலில் காணப்படவேயில்லை.

மேலும், இந்நூல் ஓர் உவமையென்றால், அதிலே ஒற்றுமை இருக்க வேண்டும். மனித அன்பு

அல்லது காதல் பற்றி தற்செயலாகத் தொகுக்கப்பட்ட இந்நூலில் இத்தகைய ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. நூலில் ஒற்றுமை இருப்பதாகக் கூறும் ஆய்வாளர்கள் இந்நூலை ஒரு நாடகமாகப் பாவித்து அதற்கு விளக்கம் அளிக்க முயன்றுள்ளனர். இந்த நாடக அமைப்பைப்பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம். இம்முயற்சிக்கு இப்போது ஆய்வாளர்களிடையே அதிக ஆதரவு இல்லை. இதற்குக் காரணம், இஸ்ராயேலின் பழமை மிக்க இலக்கியங்களில் நாடக வடிவம் இல்லை என்பது மட்டுமன்று, இந்நூலை நாடகமாக்க, அதை மாற்றி அமைக்க வேண்டும். என்பதே, ஆகவே, இந்நூலை ஓர் உவமையாக விளக்குவது அவ்வளவு பொருத்தமுடையது அன்று. ஆனால், இம்முறை திருமணச் சூழ்நிலையையும் தலைப்பையும் சிறப்பித்துக் காட்டுகிறது.

ஆ) யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் இந்நூலை ஓர் உருவகமாக விளக்கியுள்ளன. இதற்கும் மேற்கூறப்பட்ட இறைவாக்கினர் வாசகங்கள் ஆதரவு அளிப்பதாகத் தெரிகிறது. இம்முறைப்படி, இறைவனுக்கும் இஸ்ராயேலுக்கு மிடையேயுள்ள உறவை, ஒன்றிப்பை, இந்நூல் உடனடியாகக் குறிக்கிறது. இம்முறை நூலில் காணப்படும் ஒவ்வொரு விவரத்திற்கும் பொருள் அளிக்கிறது. இவை இறைவன் - இஸ்ராயேல் தொடர்பின் பல்வேறு கூறுகளைக் குறிக்கின்றன. இதற்குத் "தொகுப்பு முறை" அதாவது, திட்டமிட்ட முறையில், முந்தைய விவிலிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட சொற்களையும் பதில்களையும் பயன்படுத்தி நூல் அமைக்கும் முறை பயன்பட்டுள்ளது. முந்தைய நூல்களைச் சுட்டிக்காட்டுவது ஆசிரியரின் நோக்கத்தை எடுத்துக்காட்டுகிறது என்பர் இவ்விளக்க முறையை ஆதரிப்பவர்கள்.

இத்தகைய உருவக விளக்கங்கள் கி.மு. இரண்டாம், முதலாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த யூத இலக்கியங்களில் காணப்படுகின்றன. இந்த முறையைச் சிறிது மாற்றி ஆதித்திருச்சபை பின்பற்றியது. யாவேக்குப் பதிலாகக் கிறிஸ்துவுக்கும், இஸ்ராயேலுக்குப் பதிலாகத் திருச்சபை அல்லது பக்தியுள்ள ஆன்மாவுக்கும் இந்நூலைச் சாற்றிக் கூறியது உருவக விளக்கமுறை. ஆனால், ஆண் - பெண் காதல் உறவை இப்பாடல்கள் முதன்மையாகக் குறிக்கின்றன என்பது ஒருபோதும் மறுக்கப்படவில்லை. மனிதக் காதல் உறவு, கிறிஸ்து - திருச்சபை அல்லது ஆன்ம உறவுக்கு மாதிரியாகும் என்பது எப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த உருவக விளக்கம் இக்காலம் வரை நீடித்துள்ளது. இந்த முறையைக் கத்தோலிக்க விளக்கவுரையாளர்கள் காலம் காலமாய்ப் பின்பற்றியுள்ளனர். அண்மைக் காலத்திலும் பெரும் அறிஞர்கள் இம்முறையைப் பின்பற்றத் தயங்கவில்லை.

இம்முறை பாரம்பரியக் கருத்து என்பதாலும், ஆய்வின் அடிப்படையாலும் நமது கவனத்தைக் கவர வேண்டும். ஆயினும், இந்த இரண்டு அடிப்படையிலும் ஊறுபாடு உண்டு. ஒரு புறம்- இந்த உருவக முறைக்குக் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யூதப் பாரம்பரியம் ஆதரவு அளித்தாலும், கி.பி. 90-இல் யாம்னியாவில் நடந்த யூதப் பொதுச்சங்கம், இந்நூலின் உருவகப் பொருளுக்காக அன்று, அது பிரபல்யம் பெற்றிருந்தது என்பதற்காகவே, அதை யூதத் திருமுறைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதாகத் தெரிகிறது. மறுபுறம்- இம்முறை வாசகத்திற்கு மிகைப்படவும், மனம் போன படியும், தன்னிச்சையாகவும் பொருள் கூறுகிறது. சான்றாக, இடங்கள் பற்றிய பொருள் கட்டாயப்படுத்திக் கூறப்படுவதாகத் தெரிகிறது. இம்முறை விளக்கவுரை வரையறைகளைக் கடந்து செல்வதாயும், கற்பனை மிக்கதாயும் இருக்கிறது.

மேலும் இம்முறைக்கு எதிராக அமைவது, இந்நூல் ஓர் உருவகம் என்று சுட்டிக்காட்ட இந்நூலில் எதுவும் இல்லை என்பதாகும். உவமை விளக்கத்திற்குக் கூறியதுபோல், ஓசேயா, எசாயா,எரேமியா, எசேக்கியேல் நூல்களில்,

திருமண உருவகம் பயன்படுத்தப்படும்போது அதன் உருவகத் தன்மை தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றன. இதில் இறைவாக்கினர்கள் ஒருகட்டுப்பாட்டைக் கடைப்பிடித்துள்ளனர். உருவகத்தையும் வரையறை செய்துள்ளனர். உன்னத சங்கீதங்களில் காணப்படும் மொழி இதற்குப் புறம்பானதாகும். உவமை, உருவக விளக்கங்கள் இந்நூலுக்குப் புறத்திலிருந்து புகுத்தப்படுகின்றன. மேலும், இந்நூல் ஆன்மீக விளக்கம் பெற்றால் ஒழிய, தரக்குறைவானது, தகுதியற்றது என்று கருதப்பட்டால், இந்த உவமை, உருவக அடையாளமே தரக்குறைவானது, தகுதியற்றது இல்லையா? என்று கேட்க வேண்டியிருக்கும். இந்நூலின் பொருளடக்கம் தரக்குறைவாக இருந்தால், அதை இறையன்பை எடுத்துக்காட்டும் அடையாளமாகப் பயன்படுத்துவது தரக்குறைவானது இல்லையா? மேலும், திருமண உருவகம் இறைவாக்குத் தன்மையுடையது. இந்நூலோ, நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் அகப்பாடல்களின் தொகுப்பாகும்; ஞான இலக்கிய வகையைச் சேர்ந்ததாகும்.

தொகுப்பு முறை விளக்கம் பலருக்கு நிறைவு அளிப்பதாக அமையவில்லை. இறைவாக்கினர்கள் திருமண அடையாளத்தைப் பயன்படுத்தும்போது, சில பகுதிகளைத் தவிர (ஓசே 2:18-22; எசா 62:5), மற்றவற்றில் பொதுவாக, இஸ்ராயேலை ஒரு பிரமாணிக்கம் கெட்ட மனைவியாகச் சித்தரிக்கின்றனர். அப்படிப்பட்ட கருத்தே இந்நூலில் இல்லை.

ஆகவே, நவீன விளக்கவுரையாளருள் பலர் இந்த உருவக விளக்கத்தை நிராகரிப்பர். நீண்ட பாரம்பரியத்தையும் மிகச் சிறந்த விளக்கவுரையாளர்களையும் கொண்டிருந்தாலும், உருவக விளக்க முறையை நிறுவுவது கடினம்.

இ) வழிபாட்டுமுறை விளக்கம்: இந்நூலின் தோற்றத்தில், புராண வழிபாட்டுப் பண்புகள் உண்டா என்று ஆய்வாளர்கள் சிலர் ஆராய்ந்து, அதன் அடிப்படையில் விளக்கம் அளிக்க முயன்றுள்ளனர். மனாசே அரசனாய் இருந்த காலத்தில் தம்மூசு, இஸ்தார் போன்ற புராணக்கதைகளோடு தொடர்புடைய சடங்குகள் எருசலேம் ஆலயத்தில் நடந்திருப்பதாகத் தெரிகிறது. இது பிற்காலத்தில் பாஸ்கு விழாவைப் பாதித்திருக்கலாம். இதன் சில கூறுகள் பாஸ்கு விழாவில் புகுந்திருக்கலாம். இதுவே இந்நூல் பாஸ்கு விழாக்காலத்தில் வாசிக்கப்படும் வழக்கிற்குக் காரணமாய் இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். மேலும், பழங்கால ஆசியாவில் சடங்குத் திருமணங்கள் வழக்கில் இருந்துள்ளன. இவற்றின் வடிவமும், பொருளும் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கானானியர்களுக்கும் இஸ்ராயேலர்களுக்குமிடையே இலக்கிய வழிபாட்டுக் கருத்துப் பரிமாற்றம் நடந்திருக்கிறது என்ற அடிப்படையில், இச்சடங்குத் திருமணக் கருத்து உன்னத சங்கீத நூலின் தோற்றத்தைப் பாதித்திருக்கலாம் என்று சிலர் கருதுவர்.

இக்கருத்துக்களுக்கு ஆதரவாகக் கூறப்படும் காரணங்கள் அவ்வளவு பொருந்தியதாகத் தெரியவில்லை. நூலின் இத்தகைய துர்லபமான தோற்றம் பற்றி எதுவும் கூறாமல் விட்டிருக்க மாட்டார்கள் இஸ்ராயேலர்கள். ஆண்-பெண் காதல் உறவு, சடங்குத் திருமணம் பற்றிய கருத்துக்கள் மேற்காசியாவில் எங்கும் காணப்படும் புராணக்கருத்துக்களாகும். இவை மறைமுகமாக இந்நூலின் தோற்றத்தைப் பாதித்திருக்கலாம். இதற்கு மேலும் இந்தப் பாதிப்பை மிகைப்படுத்தக் கூடாது. மேலும், பாலின வழிபாட்டுக் கருத்துக்களை இஸ்ராயேல் பாரம்பரியம் எப்போதும் ஏற்றுக்கொள்ள மறுத்து வந்துள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்விடத்தில் பிறவின இலக்கியப் பாதிப்பைப் பற்றிச் சிறிது கூறுவது நன்று. பழங்கால எகிப்திய இலக்கியங்களில் காதல் பாடல்கள் உள்ளன. இவை இந்நூலின் தோற்றத்தைப்

பாதித்திருக்கலாம் என்று சிலர் கருதுவர். எகிப்திய, இஸ்ராயேல் இலக்கியப் பாரம்பரியங்களில் அன்பு அல்லது காதல் என்னும் தலைப்பை அணுகும் முறையில் ஒற்றுமை இருப்பதாகத் தெரிகிறது. உன்னத சங்கீதத்தில், காதலன் இயற்கையைச் சுட்டிக்காட்டி, வசந்தகாலம் வந்துவிட்டது ஆகவே, தன்னிடம் வருமாறு காதலியை அழைக்கும் பகுதி வருகிறது (2:10-14). இது போன்ற இலக்கிய அமைப்பு எகிப்திய காதல் பாடல்களிலும் காணப்படுகிறது. உண்மையான காதல் எந்தத் தடையையும் பொருட்படுத்துவதில்லை என்பது சாதாரண மனித அனுபவம். "பெருங்கடலும் காதலை அணைக்க முடியாது, வெள்ளப் பெருக்கும் அதை மூழ்கடிக்க இயலாது" (8:7) என்று இந்நூல் கூறுகிறது. இதே கருத்தைத் காதலன்-காதலியை, நதியில் வாழும் முதலைகூடப் பிரிக்க முடியாது என்று எகிப்தியப் பாடல் கூறுகிறது. இரண்டு பாரம்பரியங்களிலும் காதலன், காதலியை "என் தங்காய்" என்றழைக்கும் மரபு காணப்படுகிறது (4:9. 10. 12:5:1). காதலன் அருகில் இல்லாமையால் காதலி வருந்துதல் போன்ற காதல் நோய் பற்றிய விவரிப்புகள் இரு பாரம்பரியங்களிலும் காணப்படுகின்றன (2:5; 3:1தொ; 5:6-8). இதேபோல், இந்நூலின் சில பகுதிகளுக்கும் சீரியா நாட்டுத் திருமணங்களில் மணமக்களைப் போற்றிப் பாடும் பாடல்களுக்கு மிடையேயுள்ள இணையமைப்புத் தன்மை சுட்டிக் காட்டப்படும்.

இவையெல்லாம் பண்பாடுகள் வேறுபட்டாலும், அவற்றில் எல்லாம் காதல்மொழி ஒத்த தன்மையுடையது, அதிகம் வேறுபடுவதில்லை என்று காட்டுகின்றன. இவை பிறவின இலக்கியங்களை இந்நூல் நேரடியாகச் சார்ந்துள்ளது என்று காட்டவில்லை. ஆனால், இவை உன்னத சங்கீத நூலைப் புரிந்துகொள்ள உதவலாம்.

ஈ) நேரடியான பொருள்விளக்கம்: ஆண்-பெண் காதல் உறவையே இந்நூல் எடுத்துக் கூறுகிறது. இந்த உறவைப் போற்றிக் கொண்டாடும் பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூலாகும் இது. இந்த உறவு மனிதனுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய கொடைகளில் ஒன்றாகும். ஆகவே இப்பொருள், ஒருநூல் விவிலியத்தில் இடம் பெறத் தகுதியற்றதாகிறது என்று கருதினால், அது விவிலியத்தின் உண்மைப் பொருளைக் காணத் தவறியதாகும்.

விவிலியம் இறைவார்த்தை என்பது உறுதி. ஆனால், யாருக்காக இந்த வார்த்தை அளிக்கப்படுகிறது? இறைவன் தம் சொந்த இன்பத்திற்காக விவிலியத்தை ஏற்படுத்தவில்லை. அவர் படைத்த மனிதனுக்காகவே இந்நூல் தொகுப்பை ஏற்படுத்தினார். இஃது அவர் அவர்களுக்கு அளித்த கொடையாகும். அவர்தான் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். அவர்தான் திருமணத்தில் உண்மைப்பொருளை அடையும்-ஒருவர்க்கொருவர் கொள்ளும் கவர்ச்சியை அவர்களுடைய தன்மையின் ஆழத்தில் பதித்தார். அவர் அளித்த மற்றக் கொடைகள் போல் இதுவும் தவறாகப் பயன்படுத்தப்படலாம். இளைஞர்களை ஒருவர்க்கொருவரிடம் வலிமையாக ஈர்க்கும், ஒருவர் மற்றவர்க்காகத் தன் வாழ்வையே அர்ப்பணிக்கத் தூண்டும், பிற்காலத்தில் தவிர்க்க முடியாத கவலைகளையும் துன்பங்களையும் தாங்க உதவும் அன்பு -காதல் இறைவனது திட்டத்தில் ஒரு நல்ல கொடையாகும். இறைவன் நல்லது என்று கண்ட அவருடைய படைப்பின் ஒரு பகுதியாகும் (ஆதி 1:31). மனிதர்களுக்கு இறைவன் அளித்த வார்த்தையாகிய விவிலியத்தில் இந்த அன்பு - காதல் விவரிக்கப்பட மேலான தகுதி பெற்றதே. ஆகவே, சமயத் தொடர்பற்ற பாடல்தொகுப்பு எப்படி விவிலியப் பட்டியலில் புகுந்தது என்று கேட்பதற்குப் பதிலாக, பாலினக் கவர்ச்சி, காதல் போன்றவை பற்றி விவிலியம் என்ன கூறுகிறது என்று கேட்பது மேல். இக்கேள்விக்குரிய பதிலின் பெரும் பகுதியை இந்நூலில் காணலாம்.

மேலும், இந்நூல் முறையற்ற காதலைப் பாடவில்லை. திருமணத்தை நோக்கி அமையும் காதலைப் பாடுகிறது. இக்காதல் எந்தச் சீரிய ஒழுக்க முறையிலும் நல்லது மட்டுமன்று; புனிதமானதுமாகும். உடல் அர்ப்பணிப்பை உணர்த்தும் திருமண ஒப்புதல் திருச்சபையில் திருமண அருட்சாதனத்தோடு ஒன்றாக்கப்படுகிறது. ஒழுக்கக் குறைவற்ற ஒன்று, விவிலியத்தில் புகழ்ச்சிக்குரியதாக இருக்கக்கூடாது என்பதற்கோ, காதலில் பங்கு பெறுவோர்க்கு அஃது அளிக்கும் மகிழ்ச்சியைப் பற்றிய போற்றுரையைப் புனிதநூல் கொண்டிருக்கக்கூடாது என்பதற்கோ, காரணமேயில்லை. இக்காதலும் மகிழ்ச்சியும் ஒழுக்கமுறையில் கெட்டது எனக் கருதினால் ஒழிய, அவை பற்றிய புகழ்ச்சியுரை ஒழுக்கமுறையில் கெட்டதாக இருக்கமுடியாது. இந்நூலில் வரும் கவிதைகள் பாலினக் காதலின் நன்மைத் தன்மையையும் மகிழ்ச்சியையும் எடுத்துக் கூறுகின்றன. இது கிறிஸ்தவ ஒழுக்கக் குறிக்கோளுக்கு எவ்விதத்திலும் மாறானதன்று. காதலை இவ்வாறு போற்றுதல் இறை ஏவுதலோடு முழுவதும் ஒத்ததே. ஏனெனில், அக்காதலைப் படைத்தவர் இறைவனே (ஆதி 2:7). ஆகவே, உருவக அல்லது உவமை விளக்கம் அளிக்காமல், பழ 31:10-31-இல் வரும் "வலிமைமிக்க பெண் பற்றிய புகழ்ச்சி"யைப் போல், இந்நூலும் திருமுறைப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இவ்விதம் சமயச் சார்பற்ற முறையில் இந்நூலை விளக்குவது, 2-ஆம் கால்சிதோன் பொதுச் சங்கத்தில் (கி.பி. 533) கண்டனம் செய்யப்பட்டது என்று சுட்டிக்காட்டப்படும். மாப்சுயெட்சியாவின் தியோடோர் என்பவர் (428) இந்நூல் இறை ஏவுதல் பெற்றது என்பதையும், அதற்கு அளிக்கப்பட்ட ஆன்மீகப் பொருளையும் ஏற்க மறுத்தார் என்று கருதப்பட்டது. "பக்தியுள்ளோரின் செவிகளுக்கு வெறுப்பைத் தருவதாய் உள்ளது" என்று அவரது கருத்து கண்டனம் செய்யப்பட்டது. ஆனால், இவரது நூல் கிடைக்கவில்லை. அதில் இவர் என்ன கூறியிருந்தார் என்பது பற்றியும் பொதுச்சங்கம் தனது கண்டனத்தில் சொன்னது என்ன என்பது பற்றியும் ஏட்டுச் சான்றுகள் இல்லை. ஆகவே, இதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்று ஆய்வாளர்கள் சிலர் கருதுவர். உவமை, உருவக விளக்கங்களைத் தவிர வேறு எந்த விளக்கமும் சமயச் சார்பற்றது என்று கூறுவது சரியாகாது. ஏனெனில், நேர்மையான திருமண அன்பைப் போற்றுவதாக இந்நூலைப் புரிந்து கொள்வது, சமயச் சார்பற்றது அன்று. ஏனெனில், அஃது ஒழுக்க முறையில் நல்லதாகும்.

ஆனால், இந்நூலுக்கு இயல்பாக அளிக்கப்படும் ஆண்-பெண் காதலை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீகப் பொருளை விளக்க யூத, கிறிஸ்தவப் பாரம்பரியங்கள் முயன்றுள்ளன. அன்பை, காதலை ஆழ்ந்த முறையில் புரிந்துகொள்ளும் முயற்சியில், இந்நூலின் நிறைவான அல்லது அடையாளப் பொருளை எடுத்துக்கூற பலரும் காலந்தோறும் முயன்றுள்ளனர். ஏனெனில், மனித அன்பு இறையன்பின் பிரதிபலிப்பாகும்; அதில் பங்கு கொள்வதாகும்; அதை நோக்கி இயங்கும் அமைப்புள்ளது. குடும்பம் இறைமக்களைப் பிரதிபலிக்கிறது. ஆகவே, இவ்விளக்கவுரையாளர்கள் இந்நூல் இறைவனுக்கும் அவரது மக்களுக்கு மிடையேயுள்ள அன்பை விளக்குகிறது என்று எடுத்துக்காட்ட முயன்றுள்ளனர். இவ்விளக்கத்திற்குரிய அடிப்படை புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் அடிப்படையை ஒரு திருமண விருந்தாகவும் (மத் 22:1-14), கிறிஸ்துவை ஒரு மணமகனாகவும், கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவைத் திருமண உறவாகவும் (மத் 9:15; யோவா 3:29; 2 கொரி 11:2; எபே 5:23-32; திருவெளி 21:9) விவரிக்கிறது. பெர்நார்து, சிலுவை அருளப்பர் போன்ற ஆழ்ந்த இறை அனுபவம் பெற்ற புனிதர்கள் இந்த அடையாள விளக்கு முறையைப்

பெரிதும் பயன்படுத்தியுள்ளனர். இஃதோடு, விளக்க முறைகள் பற்றிய ஆய்வைக் கைவிடுவது நல்லது.

10. நூலின் செய்தி: விவிலியத்தில் இந்நூல் மனித அன்பை, காதலை உயர்த்திப் பாடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் தனிப்பாடல்களின் தொகுப்பாகவோ, ஒரே நீண்டபாடல் தொடராகவோ கருதப்பட்டாலும், இஃது ஓர் அகப்பாடல் என்பது உறுதி. இந்த அளவில் இந்நூல் எந்தச் சமயக் கோட்பாட்டையும் எடுத்துக் கூறவில்லை; எதையும் குறிப்பாகப் போதிக்கவில்லை. இது மனித மன, இதய நிலைகளை எடுத்துக் கூறுகிறது. திருமணத்தை எதிர்நோக்கி, இளைய பருவத்தினர் இருவர் ஒருவர்க்கொருவர் கொள்ளும் அன்பை, காதலைப் பாடுகிறது. இதன் மொழி காதல் மொழியாகும். இஃது ஓரளவு துணிகரமானதாகத் தோன்றினாலும், பழைய ஏற்பாட்டில் மனித அன்பையும் இறையன்பையும் விவரிக்க அதே சொற்கள் பயன்படுகின்றன என்பதை மனதில் கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டுக்கு வரும்போது, கிறிஸ்தவ ஆசிரியர்கள் கிரேக்க மொழியில் எழுதியபோது, சாதாரண மனித அன்பைக் குறிக்கும் சொற்களைத் தங்கள் சமயக்கருத்துக்களை எடுத்துக்கூறப் பயன்படுத்த முடியவில்லை. ஏனெனில், அச்சொற்கள் அக்காலத்துச் சமூகத்தில் கொண்டிருந்த தொடர்பு, அவர்களது குறிக்கோளுக்கு அவற்றைத் தகுதியுள்ளதாகச் செய்யவில்லை என்பதே காரணமாகும். இக்காலத்திலும் காதலையும் காமத்தையும் ஒன்றாகக் கருதும் போக்கைக் காணலாம்.

"காதல் சாவைப்போல் வலிமை மிக்கது! காதல் வெறி பாதாளம்போல் பொறாதது! காதலுக்காக ஒருவன் தன் வீட்டுச் செல்வங்களை எல்லாம் வாரியிறைக்கலாம்; ஆயினும், அவன் ஏளனம் செய்யப்படுவது உறுதி" (8:6-7) என்ற முடிவுரைக் கூற்று, இந்நூலின் ஆசிரியர் தன் நூலை அதன் இயல்பான நேரடிப் பொருளிலேயே புரிந்துகொண்டார் என்று காட்டுகிறது. பழமொழி நூலில் மனித ஞானம் விவரிக்கப்படுவது போன்றே, இந்நூல் மனித அன்பை விவரிக்கிறது. இந்த அளவில்தான் இந்நூல் யூதத் திருமுறைப்பட்டியலில் இடம்பெற்றது. அதற்குப்பின் யாவேக்கும் இஸ்ராயேலுக்கும் இடையேயுள்ள அன்பை விவரிப்பதாக விளக்கம் பெற்றது.

இந்நூலில் இறைவனது பெயரே இல்லாமை பலருக்கு வியப்பை அளிக்கலாம். அதற்கு மாறாக, எந்தக் தேவர்கள் தேவதைகள் பற்றிய குறிப்பும் இல்லாமைதான் நமக்கு வியப்பு அளிக்கவேண்டும். ஏனெனில், கானானியர்களின் பாலினச் சடங்குகளும், பாலினத் தேவதைகளும் இஸ்ராயேலர்களைக் கவர்ந்தன. காலம் காலமாய் அவர்களுக்குச் சோதனையாக அமைந்தன. அப்படியிருந்தும் இத்தேவதைகளைப் பற்றிய குறிப்பு இக்காதல் நூலில் இல்லாமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இதற்குரிய காரணத்தை ஆதி 2-ஆம் அதிகாரத்தில் காண முயல வேண்டும். முதல் பெண்ணிடம் முதல் மனிதனை ஈர்த்த வியப்புக்கும் (ஆதி 2:23), இந்நூலில் இளைஞர்கள் ஒருவர்க்கொருவர் கொள்ளும் வியப்புக்கும் தன்மையால் வேறுபாடு இல்லை. "இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாக இருப்பர்" (ஆதி 2:24) என்ற ஆதியாகம ஆசிரியரின் கூற்றுக்கும், உ.ச. 8:6-7-இல் வரும் கூற்றுக்கும் இடையே வேறுபாடு இல்லை எனலாம். இரு வாசகங்களும் ஒரே மாதிரி மனித அனுபவத்தின்முன் ஒரேவித மனித மனநிலையை எடுத்துக்காட்டுகின்றன. திருமண அன்பு, தொடக்கம் முதல் இறைவன் படைத்தவற்றுள் ஒன்றாகும். இறைவனது வியப்புக்குரிய படைப்புகளில் ஒன்றாகும். மனிதர்களிடையே நன்றியுணர்வை எழுப்பக்கூடியதாகும்.

இந்நூல், மூலத்தில் காதல்பாடல்கள் அல்லது திருமண விருந்துப் பாடல்கள் அடங்கிய தொகுப்பாகும் என்ற கருத்து தர்க்கத்துக்குரியதாக

இருக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட பாடல்களால் தூண்டப்பெற்று வண்ணம் பெறுகிறது என்பது உறுதி. இந்நூலும் அதன் சூழ்நிலையும் வசந்தகால மகிழ்ச்சி, தோழர்கள், காதல் வயப்பட்ட இருவர், ஒருவர்க்கொருவர் காதலில் மூழ்கிக் கிடக்கும் தம்பதியர் ஆகியவற்றை விவரிக்கின்றன. நூல் முழுவதும் இயற்கை மட்டத்திலேயே அமைந்துள்ளது. இதில் கண்டிக்கப்பட வேண்டியது எதுவுமில்லை. சாதாரணமாக, காதல் உடல் அழகாலும், மனிதப்பண்புகளாலும் தூண்டப்படுகிறது. ஆனால், மனித உடலும், ஆன்மாவும் இறைவன் படைத்தவையே. காதலில் இவற்றின் பாகத்தைக் குறைத்துக் கூறினாலும், இவற்றை ஒதுக்க முடியாது. அப்படி ஒதுக்குவது உண்மைக்குப் புறம்பானதாகும். திருமணத்தின் பாலினத்தன்மையை மறுப்பதாகும். இத்தகைய மனப்போக்கு விவிலியத்தன்மை அற்றதாகும்.

திருமணத்தில் ஈடுபட இருப்போரின் தனிச்சிறப்புக்களை இந்நூல் கவனத்தில் கொள்வதால், அது சமன் செய்யப்பட்ட நோக்கை மட்டும் தரவில்லை, திருமணக் கருத்தையும் வலிமைப்படுத்துகிறது. இந்நூல் திருமணத்தில் ஈடுபடுவோரின் தனிச் சிறப்புக்களை வெளிக்கொணர்வது (2:2 தொ; 5:10;6:8 தொ), ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உண்மையான சமநிலையை உண்டாக்குகிறது. பெண்ணின் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம், இந்நூலில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். திருமணத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்தும், "மணமுறிவு" செய்யலாகாது என்பதும் இந்நூலில் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

மேலும், ஒரு விவிலிய நூல் இளம் தம்பதியரிடையேயுள்ள காதலைப் பெருமைப்படுத்துவதால், அது திருமணத்தின் சமன்பாட்டைத் திருத்தி அமைப்பதுடன், வெளிப்பாட்டு வளர்ச்சியில் அதன் இடத்தையும் தெளிவாக்குகிறது. தன்மையால் சமூகக் குழுத்தன்மையுடைய சீனாய் உடன்படிக்கையை எரேமியா முன்னறிவித்த புதிய உடன்படிக்கையாக (எரே 31:31-34) இந்நூல் மாற்றி அமைக்கிறது. இந்தப் புதிய உடன்படிக்கையில் தனிநபரின் இடமும், மேன்மையும் வெளிப்படையாக உறுதிப்படுத்தப்படுகின்றன. ஏனெனில், அன்பு திருமணத்தின் உள்ளார்ந்த கூறாக ஏற்றுக் கொள்ளப்படும்போது ஒரு குடும்பத்தை நிறுவுவதால் தனிநபர் குழுவில் மூழ்கிப் போவதிலிருந்து விடுதலை பெறுகிறான். ஒவ்வொரு ஆண், பெண்ணின் சொந்த மேன்மையும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஒருவன், தனிநபர் என்பதற்காகவே மதிப்புப் பெறுகிறான்.

11. இக்காலத்திற்கு: அன்பு, காதல் கோரும் பொறுப்புடைமையை இந்நூல் இக்காலத்திற்கும் உரிய பாடமாகக் கற்பிக்கிறது. இஃது அன்பின் புனிதத்தை வலியுறுத்துகிறது; "காதலைக் கலைத்து எழுப்பாதீர்; தானே விரும்பும்வரை அதைத் தட்டி எழுப்பாதீர்" (2:7; 3:5; 8:4) என்பதை அழுத்திக் கூறுகிறது. காதலைக் கவலையற்ற விளையாட்டாகக் கருதுபவர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் இருந்துள்ளனர். இவர்கள் அதைத் தன்னிச்சையாக, போகிற போக்கில், எவ்விதப் பொறுப்புமின்றி அனுபவிக்கும் உடல் மட்டும் சார்ந்த இன்பமாகக் கருதுபவர்கள். அதனால், மனித உணர்வுகள் விரைவில் தூண்டப்பட்டு அடிமையாகிறார்கள். இந்நூலில் வரும் எச்சரிக்கையைக் (2:7) கேட்க மறுக்கிறவர்கள் அதனால், பிறருக்குத் தலைவலியையும் துன்பத்தையும் அளிக்கிறார்கள். இவர்கள் காதலுக்கும் காமத்திற்குமிடையே வேறுபாடு காண்பதில்லை. இஃது இறைவன் திட்டமிட்டதன்று. இறைவனுடைய பிள்ளைகளுக்கெல்லாம் அன்பு சூழ்ந்த இன்பத்தையும், நிலையான மகிழ்ச்சியையும் அளிக்க வேண்டும். அது, பிரமாணிக்கம், நம்பிக்கை, மற்றும் ஆழ்ந்த மரியாதையும் அடங்கிய சூழ்நிலையில்தான் நிகழ முடியும். ஒழுக்கக் கோட்பாடுகள் நலிந்து சரிவுற்ற இக்காலத்தில், எல்லாவற்றையும் பொறுப்பின்றி

அனுமதிக்கும் சூழ்நிலையில் மனித உறவுகளின் புனிதம் பற்றிய உயர்ந்த நியதிகளைப் பாதுகாப்பதில் கிறிஸ்தவர்களுக்குப் பெரும் பொறுப்பும் கடமையும் உண்டு. "நான் உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல் நீங்கள் ஒருவர் மற்றொருவரிடம் அன்புகூர வேண்டும்" (யோவா 15:12) என்ற இயேசுவின் கட்டளையை நாம் அறிவோம். அவரது அன்பு எப்போதும் வளமூட்டிச் செழிப்பளிக்கவல்லது. அஃது எவருக்கும் எத்தகைய துன்பத்தையும் ஒருபோதும் கொடுப்பதில்லை. இந்த வீறார்ந்த நியதியும் உயர்ந்த எடுத்துக்காட்டான கோட்பாடும் நம்முடையதாக இருக்க வேண்டும்.

பேரீச்சை நகர் (CITY OF PALM TREES)

இந்த இடம் எரிகோவின் ஒரு பகுதியாகும் (உப 34:3; 2 நாள் 28:15). இது கேனிர்கள் (நீதி 1:16), எக்லோனியர்கள் (நீதி 3:13) ஆகியவர்களின் உறைவிடமாகும். பாலிஸ்தீனத்தை இஸ்ராயேலர் வெற்றி கொண்ட காலமுதல் ஆகாபு அரசன் காலம்வரை எரிகோ இடிபாடுகளாகக் கிடந்ததாலும், கேனிய மக்கள் கூடாரங்களில் வசித்ததாலும், இப்பெயர் ஒரு நகரைக் குறிக்கவில்லை; மாறாக, அங்குச் செழித்து வளர்ந்த பேரீச்சை மரத்தோப்புகளைக் குறித்தது எனலாம். பழங்கால வரலாற்று ஆசிரியர்களின்படி, இத்தோப்புகளை இவற்றின் நீர்வழிகள் வழியாகக் கடக்க ஐந்து மணிநேரம் எடுத்ததாம்.

பேரீச்சைப்பழம் (DATES)

இது பற்றிய விவிலியத்தில் வரும் ஒரே ஒரு குறிப்பு உ.ச. 7:8-இல் தலைவியின் அழகை விவரிக்கும்போது வருகிறது. இங்கு வரும் குலைகள் பேரீச்சைப்பழம் வளர்ந்த விதத்தைக் குறிக்கின்றன. 7:9 இப்பழம் பறிக்கப்பட்ட விதத்தைப் பிரதிபலிக்கிறது.

பழங்காலத்தில் பேரீச்சைப் பழம் முக்கிய உணவாகப் பயன்படுத்தப்பட்டது. ஏனெனில், பேரீச்சை மரம் அடிக்கடி கூறப்படுகிறது. அதன் பழம் விவிலியத்தில் குறிக்கப்படாமை தற்செயலானதாகவே கருதப்பட வேண்டும்.

பேரீச்சை மரம் (PALM TREE)

எரிகோ பேரீச்சை மாநகர் என்று அடிக்கடி குறிக்கப்படுகிறது (உப 34:3; நீதி 1:16; 3:13; 1 நாள் 28:15). சாக்கடலின் அருகிலுள்ள கும்ரான் பகுதிகளில் கருகிப்போன பேரீச்சை மரத்துண்டுகள் பல அகழ்வாய்வின்போது கிடைத்துள்ளன. பிளினியின் கூற்றுப்படி எஸ்ஸேனியர் பேரீச்சைச் சோலையில் வாழ்ந்து வந்தனர்.

இஸ்ராயேலர் தங்கள் விடுதலைப் பயணத்தின்போது ஏலிமில் எழுபது பேரீச்சை மரங்கள் கொண்ட பாலைவனச் சோலையைக் கண்டனர் (யாத் 15:27; எண் 33:9). அக்காபா வளைகுடாவின் முனையிலுள்ள ஏலாத்து (உப 2:8) தனது பெயரை அங்கிருந்த உயர்ந்த மரங்களிலிருந்து பெற்றதாக நம்பப்படுகிறது. இந்த மரங்கள் பேரீச்சை மரங்களைக் குறிக்கலாம் (2 அர 14:22; 16:6; ஏலோத்து - 1 அர 9:26; 2 நாள் 8:17; 26:2). அக்காபாவில் இன்றும் பேரீச்சை மரங்கள் நிறைந்துள்ளன.

பேரீச்சைமரம் உருவகமாகவும் பயன்பட்டுள்ளது. "நேர்மையாளர் பேரீச்சை மரமெனச் செழித்தோங்குவார்" (சங் 92:12). தலைவியின் விழுமிய தோற்றத்தை விவரிக்கவும் (உ.ச. 7:8-9), இஸ்ராயேல் ஆட்சியாளரின் அடையாளத்தைக் குறிக்கவும் (எசா 9:14), வெற்றியைக் குறிக்கவும் (1 மக் 13:51; 2 மக் 10:7; 14:4; யோவா 12:13; திருவெளி 7:9) இம்மரம் உருவகமாகப் பயன்பட்டுள்ளது. அழிவு பற்றிய இறைவாக்கிலும் (யோவே 1:12) வருகிறது.

பேரீச்சையோடு புனிதத்தைத் தொடர்பு படுத்துவது பழங்கால மேற்காசியா முழுவதும், குறிப்பாக மணிக்கற்களின் செதுக்கு வேலைக் கலையில், காணப்படுகிறது. உருளை முத்திரைகளிலும், மற்றக் கலை வடிவங்களிலும், இது வாழ்வின் மரமாக அடிக்கடி காணப்படுகிறது. தெபோராவின் பேரீச்சை மரம் (நீதி 4:5) ஒரு புனித மரமாக இருந்திருக்கலாம். சாலமோனின்

ஆலயத்திலும் (1 அர 6:29.32.35; 7:36), எசேக்கியலின் காட்சி ஆலயத்திலும் (எசே 40:16.22.26.31.34.37; 41: 18-20.25-26), சுவரிலும், கதவுகளிலும் நிலைகளிலும் மற்றப் பகுதிகளிலும் புடைப்பியல் செதுக்கோவியமாக அடிக்கடி பேரீச்சை மரம் காணப்படுவது இது வெறும் அழகுக்காகச் செய்யப்பட்டதன்று என்று சுட்டுகிறது. இவ்விதம் அணி செய்தல் அசீரியக்கோவில்களிலும் அரண்மனைகளிலும் காணப்படுகின்றன.

கூடார விழாவோடு பேரீச்சை ஓலை கொண்டிருக்கும் தொடர்பிலிருந்து (லேவி 23:40; நெகே 8:15), அது பழங்கால யூதச் செபக்கூடங்களில் புடைப்பியலாகவும், பல்வண்ணப்பட்டையாகவும் அழகு செய்வதற்கும் பயன்பட்டுள்ளது. பேரீச்சை மரம் நாணயங்களில், குறிப்பாக வெஸ்பாசியன் மற்றும் நெர்வா ஆகியோரின் நாணயங்களில், சிறப்பாகக் காணப்படுகிறது.

கிறிஸ்தவப் பாரம்பரியங்களிலும் கதைகளிலும் இம்மரமும் அதன் ஓலையும் அடிக்கடி குறிக்கப்படுகின்றன. யோவா 12:12-13-இல் விவரிக்கப்படும் இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைந்தபோது குருத்தோலை பயன்பட்டதிலிருந்து குருத்து ஞாயிறு தன் பெயரைப் பெறுகிறது. பத்மோசில் யோவான் கண்ட காட்சியில் (திருவெளி 7:9) அரியணைக்கும் செம்மறிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்த மக்கள் திரள் கையில் பேரீச்சையின் குருத்தோலையை ஏந்தியிருந்தனர். கிறிஸ்தவக் கலையில் மறைசாட்சி வெற்றி மரணத்தின் அடையாளமாகப் பேரீச்சைக் குருத்தோலை பயன்படுகிறது.

பல இடங்கள் பேரீச்சை மரப்பெருக்கத்தால் பெயரிடப்படுகின்றன அல்லது அடையாளம் காட்டப்படுகின்றன. பேரீச்சை நகர் (எரிகோ; உப 34:3; 2 நாள் 28:15); ஏலிம் (யாத் 15:27; எண் 33:9); தாமார் (1 அர 9:18; எசே 47:19); தெபோராவின் பேரீச்சை மரம் (நீதி 4:5); அச்சோன்-தாமார் (ஏன் கேதி; 2 நாள் 20:2); பாகால்-தாமார் (நீதி 20:33).

பேரோத்தா (BEROTHAH - கிணறு சார்ந்த)

இஃது இஸ்ராயேல் கோத்திரத்தாரால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்ட பகுதியின் வடவெல்லையிலுள்ள ஓர் ஊராகும் (எசே 47:16). ஒருவேளை பேரோத்தாயாக இருக்கலாம்.

பேரோத்தாய் (BEROTHAI - என் கிணறு)

இது சோபாவின் சீரியா ஆட்சிப் பகுதியிலுள்ள ஒரு நகரம். இந்த நகரிலிருந்துதான் தாவீது, அததேசருக்கு எதிரான போரில் மிகத்திரளான வெண்கலத்தை எடுத்துக்கொண்டு வந்தார் (2 சாமு 8:8). 'பேரோத்தா' (எசே 47:16) என்பதும், 'பேரோத்தாய்' என்பதும் ஒருவேளை ஒரே இடத்தைக் குறிக்கலாம். லெபனோனுக்கு எதிரிலுள்ள மலையடிவாரக் குன்றுகளுக்கு வடபுறத்திலுள்ள பாகால்பேக்குக்குத் தெற்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள பெரேதியன் என்ற ஊர் பேரோத்தாய் என்று அடையாளம் காட்டப்படுகிறது. இதற்கு இணையான விவரிப்பான 1 நாள் 18:18-இல் வரும் கூண் என்ற பெயர் பேரோத்தாயின் மற்றொரு பெயராக இருக்கலாம்.

பேலா (BELA - விழுங்கும் அழிக்கும்) - ஆள்

1. பேலா என்பவர் ஏதோம் நாட்டின் முதல் அரசராவார். பேகோரின் புதல்வர் (ஆதி36:32-33; 1 நாள் 1:43-44). இவருடைய தலைநகரின் பெயர் தின்காபா ஆகும். இவருடைய தோற்றத்தைப் பற்றிய தெளிவான குறிப்புகள் காணப்படவில்லை. இவர் எங்கு வாழ்ந்தார் என்பது பற்றியும் அறியமுடியவில்லை. பேகோரின் புதல்வரான காட்சியாளர் பிலயாமின் பெயரும் பேலாவின் பெயரும் ஒன்றுபோல் தோன்றுகிறது.

2. இவர் பென்யமினின் மூத்த மகன் (ஆதி 46:21). பேலாயியர் வம்சத்தலைவனாகவும் கருதப்படுகின்றார் (எண் 26:38). பென்யமினின் புதல்வர்கள் பட்டியல் மூன்றுமுறை

கூறப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு பட்டியலிலிலும், பெயரிலும், எண்ணிக்கையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன (எண் 26:38.40; 1 நாள் 7:6-7; 8:1-3).

3. இவர் ஆகாசின் மகன். ரூபனின் தலைமுறையில் வந்த யோவேலின் வழித்தோன்றல் (1 நாள் 5:8).

பேலா (BELA - விழுங்கும், அழிக்கும்) - இடம்

சித்திமின் "பள்ளத்தாக்கு நகரங்களில்" ஒன்றான சோவாருக்கு வழங்கப்பட்ட மற்றொரு பெயராகப் 'பேலா' இருக்கலாம். நான்கு நகரங்களின் அரசர்களின் பெயர்கள் மட்டும்தான் தரப்பட்டுள்ளன (ஆதி 14:2). சோவார் நாட்டின் அரசன் பெயர் தரப்படவில்லை. ஆனால், "பேலா அரசன் சோவார்" என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேலாவும் ஓர் ஆளின் பெயராகத் தோன்றுவதால், "சோவாரின் அரசனான பேலா" என்ற வாக்கியமானது, "பேலாவின் அரசனான சோவார்" என்று மாறிவந்திருக்கலாம். பேலா சாக்கடலின் தென்கிழக்குக் கரையில் அமைந்திருந்திருக்கலாம்.

பேலாயியர் (BELAITES)

பேலாவின் வழித்தோன்றல்கள் (எண் 26:38).

பேலியால் (BELIAL - மதிப்பற்ற, பயனற்ற, இழிவான)

பேலியால் என்ற இச்சொல்லானது 'பேலியாலின் புதல்வர்கள்' (உப 13:13; நீதி 19:22; 1 சாமு 2:12) 'பேலியாலின் ஊழியன்' (2 சாமு 20:1; பழ 16:27) என்றும், சில சமயங்களில் வெறுமனே 'பேலியால்' (2 சாமு 23:6; யோபு 34:18) என்றும் பல முறைகளில் வழங்கப்படுகிறது. இஃது ஒழுக்கம் கெட்டவர்களை, நெறிகெட்டவர்களை அல்லது பண்பற்றவர்களைக் குறிக்கிறது. 'பேலியாலின் சாட்சி' என்பது பொய்ச்சான்று பகர்கின்றவனையும் (பழ 19:28) 'பேலியாலின் ஆலோசகர்' என்பது தீய திட்டம் தீட்டுகிறவனையும் (நாகூ 1:11) குறிக்கிறது. மேலும், பேலியாலின் வெள்ளங்கள் என்பது நன்மையையோ, ஆசீரையோ கொண்டு வராத அழிவின் சுழல்களைக் குறிக்கிறது. பாதாளத்தின் ஆறுகளோடு ஒப்பிடப்படுகின்றது (2 சாமு 22:5; சங் 18:4).

நாகூ 2:1-இல் "பேலியால்" (தீயோன்) என்ற இச்சொல் 'தீமை விளைவிக்கும் சக்தியைக்' குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக, இச்சொல் 'பயனற்ற' என்று பொருள்படும்.

திருமுறை சேராத போலி இலக்கியத்தில் பேலியால் என்ற பெயரானது தீமையின் அரசனான சாத்தானைக் குறிக்கின்றது.

புதிய ஏற்பாட்டில் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் மடலில் கிறிஸ்துவுக்கும் பேலியாலுக்கும் உடன்பாடில்லை என்று கூறப்பட்டிருக்கிறது (6:15). மேலும், தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டாம் மடலில் (2:3) கூறப்பட்டுள்ள 'அக்கிரமமே உருவான மனிதன்' என்பது 'பேலியாலின் ஊழியன்' என்பதைச் சுட்டிக்காட்டுவதாகக் கருதப்படுகிறது.

பேல் (BEL - உடையவன், ஆள்பவன்)

'பேல்' என்பது பாபிலோன் நாட்டுத் தெய்வமான மார்துக்குக்கு வழங்கப்பட்ட பெயராகும். பாபிலோனியாவின் வீழ்ச்சியைப்பற்றி எசாயாவும், எரேமியாவும் கூறுகின்ற பகுதிகளில் இத்தெய்வத்தின் வீழ்ச்சியைப்பற்றிக் கூறப்படுகிறது (எரே 50:2; 51:44; எசா 46:1).

'பேல்' என்ற இச்சொல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் முதன்மை நிலையில் வைத்துப் போற்றப்படுகின்ற தெய்வத்தைக் குறிக்கும், அத்தெய்வத்தின் சில குறிப்பிட்ட குணநலன்களைக் குறிக்கும் அல்லது தெய்வங்களின் குறிப்பிட்ட விருப்பத்தைக் குறிக்கும். மேலே கூறப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டுப் பகுதிகளில் இடம் பெறுகின்ற 'பேல்' என்பது பாபிலோனியத் தெய்வமாகிய மார்துக்கைக் குறிக்கிறது. மார்துக்கு என்ற

தெய்வம் கானானியர்களின் பாகால் கடவுளுக்குச் சரிநிகராய் வைத்துப் போற்றப்படுகிறது. பாகால் கடவுளைப் போன்று, இந்தத் தெய்வமும் தான் ஓர் அரசன் என்று ஆர்ப்பரித்து, மார்துக்குக் கடவுளைப் போன்று பாகால் தெய்வமும் படைக்கும் கடவுளாகக் கருதப்பட்டதற்குக் கானானிய வாசகங்களில் ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால், பாகால் தெய்வத்தின் 'அரசன்' என்ற பட்டம் அவர்தான் உலகத்தை உருவாக்கியவர் என்று உணர்த்துகிறது.

பேல் சிலையும் நாகமும் (BEL AND THE DRAGON)

இப்பகுதி எழுபதுநூலிலும், கத்தோலிக்க விவிலியத்திலும், தானியேல் நூலின் 14-ஆம் அதிகாரமாக உள்ளது. பிரிவினைச் சபைகள் இதைத் தங்கள் விவிலியத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. இதில் இரண்டு கதைகள் உள்ளன. இவை தானியேலின் ஞானத்தையும் அறிவுத் திறனையும் வெளிப்படுத்துகின்றன. புற சமயத்தினர் மத அமைப்புகளை இகழ்ந்து கூற வேண்டுமென்பதுதான் இக்கதைகளின் முதன்மையான நோக்கம்.

முதல் கதை: பேல் என்ற மிகப்பெரிய சிலை, இரவு நேரங்களில் அதற்குப் படைக்கப்படுகின்ற உணவுப்பொருட் களையும், மதுபானங்களையும் விழுங்கி விடுவதால் அஃது உயிருள்ள ஒன்று என்று கருதப்பட்டது. ஆனால் தானியேல், பேல் உயிரற்ற பொருள் என்றும், அதற்குப் படைக்கின்ற உணவுப்பொருட்களைக் குருக்கள் அபகரித்துக் கொள்கின்றனர் என்றும் உண்மையை வெளிப்படுத்துகின்றார். எனவே, அரசரால் பேல் சிலையானது அழிக்கப்படுகின்றது; குருக்களும் கொல்லப்படுகின்றனர்.

இரண்டாவது கதையில், தானியேல் பாபிலோனியாவில் தெய்வமாகக் கருதப்பட்ட மிகவும் பயங்கரமான தோற்றத்தையுடைய நாகத்தை வழிபட மறுக்கிறார். இஃது ஒரு பொய்க்கடவுள் என்று தானியேல் அதனை அழித்து விடுகின்றார். எனவே, மக்கள் தங்களது தெய்வம் கொலை செய்யப்பட்டு விட்டது என்று வெகுண்டெழுந்து தானியேலைச் சிங்கங்களின் குகையில் தள்ளிவிடுமாறு முறையிட்டனர். அரசரும் அவ்வாறே செய்தார். ஆனால், சிங்கங்கள் பசியாக இருந்தபொழுதும் தானியேலை ஒன்றும் செய்யவில்லை. அவர் ஆறு நாட்கள் அங்கு தங்கியிருக்கிறார். ஆறாம் நாள், ஆண்டவருடைய தூதர், உணவு வைத்திருந்த அபக்கூக்கைத் தூக்கிச் சென்று தானியேலுக்கு உணவளிக்கச் செய்கிறார். ஏழாம் நாள் அரசர் தானியேலைக் குகையிலிருந்து நீக்கிவிட்டு அவரது பகைவர்களை உள்ளே தள்ளிவிடுகின்றார் என்று கூறப்படுகிறது.

இந்தக்கதைகள் முதல் நூற்றாண்டில் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று அறிஞர்கள் பலர் எண்ணுகின்றனர். மேலும், 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எரகுமவேலின் கதைத்தொகுப்பில் இக்கதைகள் காணப்படுவதால், அரமேய மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். இக்கதைகள் கி.மு. 130-இல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

சிலைவழிபாட்டின் மூடத்தனங்களை எடுத்துக்காட்டி, ஒரே ஓர் உண்மை இறைவனைத்தான் வழிபட வேண்டும் என்ற கருத்தானது இக்கதைகளின் மூலம் வலியுறுத்தப்படுகின்றது. தானியேல் நூலில் வரும் மற்றக் கதைகள் மற்றும் காட்சிகளைப் போல், இக்கதைகளும் இறைவன் தமக்குப் பிரமாணிக்க முள்ளவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்பை அளிக்கிறார் என்று போதிக்கின்றன. யோசுவாவின் மகனாகிய அபக்கூக்கின் இறைவாக்குகளிலிருந்து இக்கதைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஒரு வாசகம் கூறுகிறது.

பாம்பு வழிபாடு எகிப்து நாட்டில் பரவலாகக் காணப்படுவதால் இக்கதைகளும் அங்குதான் தோன்றியிருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து.

பேல்மாயின் (BELMAIN)

'பேல்மாயின்' என்பது சமாரியாவிலுள்ள அடையாளம் கண்டுபிடிக்கப்படாத ஓர் ஊராகும் (யூதி 4:4). அனேகமாக யூதித்து நூலில் குறிப்பிடப்படுகின்ற 'பால்பாயிம்' (7:3) என்பதும், பாலலமோன் என்பதும், ஒருவேளை போமாய் (15:4) என்பதும், பேல்மாயினும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். தாணுக்கு அருகிலுள்ள ஆபல் – பெத் – மாக்கா என்பதும், பேல் மாயின் என்பதும் ஒரே இடத்தினைக் குறிக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. பெத்தூலியா என்பது செக்கேமுக்கு மற்றொரு பெயர் என்றால், பேல்மாயின் தோத்தானுக்கு அருகில் சமாரியாவுக்கு வடக்கில் 14 கி.மீ. தொலைவில் இருந்திருக்கலாம் (7:3).

பேறுகள் (BEATITUDE)

1. வாழ்வு, அமைதி, மகிழ்ச்சி, ஓய்வு, ஆசீர், மற்றும் மீட்பு என்று கூறப்படுகின்ற நற்பேறுகளை மனிதன் விரும்புகிறான். இந்த அனைத்து நலன்களும் ஒருவனை நற்பேறுடையவன் அல்லது நற்பேறற்றவன் என்று அறிவிக்கும் வாய்பாடுகளில் வேறுபட்ட விதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. "எளியோர் நற்பேறுடையோர், செல்வர் நற்பேறற்றவர்" என்று ஞானி அறிவிக்கும் போது, நற்பேற்றை அளிக்கின்ற ஆசியையோ, துக்கத்தை அளிக்கின்ற ஆசியையோ உச்சரிக்க அவர் விரும்பவில்லை. மாறாக, நற்பேறு பற்றிய தனது அனுபவத்தின் பெயரால், அதற்கு நடத்திச் செல்கின்ற பாதைகளைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவுறுத்தவே அவர் விரும்புகிறார்.

நமக்குச் சாதாரணமாகத் தோன்றுகின்ற எண்ணற்ற ஞான மூதுரைகளின் பரப்பையும், பொருளையும் புரிந்துகொள்ள, அவைகள் தெளிவுபடக் கூறப்பட்ட சமயச் சூழ்நிலையிலேயே அவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் பேறானது தன்னுடைய ஆதாரமாக இறைவனையே எப்போதும் கொண்டிருப்பின், அது மண்ணுலகினின்று விண்ணுலகிற்கு ஒரு மெதுவான வளர்ச்சியையே கொண்டுள்ளது.

II. பழைய ஏற்பாடு

1. இறைவனும் பேறுகளும்

அ) இறைவனில் நற்பேறும் மகிமையும்: மனிதனுடைய கனவிற்கு ஊன் உருவம் அளிப்பதன் காரணமாக நற்பேறு என்னும் பட்டத்தால் சாதாரணமாகப் புகழப்படுகின்ற கிரேக்கத் தெய்வங்களுக்கு முரண்பட்ட வகையில், விவிலிய மனிதன் விரும்புவதுடன் பொதுவான எதையும் கொண்டிராத இறைவனுடைய நற்பேறு பற்றி விவிலியம் அதிகம் கூறுவதில்லை (காண். 1 திமொ 1:11; 6:15). எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னுடைய மகிமையை மனிதருடன் பகிர விரும்புகின்ற மகமையின் இறைவனாக யாவேயை அது காண விரும்புகிறது. எனவே, மற்றொரு வேறுபாடும் இங்குள்ளது.மனிதருடைய ஊழோடு, குறிப்பாகத் தங்களைத் தொந்தரவுபடுத்திக் கொள்ளாமல் தங்களுடைய நற்பேற்றிலேயே கிரேக்கத் தெய்வங்கள் மகிழ்ச்சியடையும்போது, யாவே அனைத்து மக்களுடனும், குறிப்பாகத் தனது மக்களுடன் அக்கறையோடு சார்ந்துள்ளார். இறைவனுடைய அருளினின்று பெறப்படுகின்ற மனிதனுடைய பேறானது, அவரது மகிமையில் பங்கு பெறுவதாகும்.

ஆ) இறைவனே பேறு ஆவார்: ஞான இலக்கியத்தில் அளவற்ற விதமாக உள்ள அறிவிப்புக்களைப் பார்க்கும்போது, உண்மையான நற்பேறு எதில் அடங்கியுள்ளது, மற்றும் ஏன் அதை நாட வேண்டும் என்பதை விவிலிய வாசகர்கள் கண்டடைகின்றனர். ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர். அவர் வல்லமைமிக்கவராகவும் ஆசீர்வதிக்கப்பட்டவராகவும் இருப்பார் (சங் 11:102); அவர் எண்ணற்ற பிள்ளைகளைப் பெறுவார் (சங் 128:1-3). வாழ்வு, உடல்நலம், ஆசீர், செல்வம் ஆகியவற்றை அவர் உறுதியாகப் பெற

விரும்பினால் (பழ 3:10), அவர் இறை வழியில் நடக்க வேண்டும் (சங் 119:1); ஞானத்திற்குச் செவி மடுக்க வேண்டும் (பழ 8:34-35); அதனைக் கண்டடைய வேண்டும் (3:13-14); அதில் தன்னைச் செயல்படுத்த கவனித்துக்கொள்ள வேண்டும் (சீரா 14:20); ஏழைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும் (சங் 41:2); ஒரே வார்த்தையில் கூறுவதாயின்- நீதியுள்ளவனாக இருக்க வேண்டும்.

உண்மையான நற்பேற்றின் வழியில் தனது சீடர்களை நடத்திச் செல்லத் தூண்டுகிற இந்த முயற்சிகளின் வளர்ச்சியில், ஞானிகள் உடனடி வெகுமதியின் வாய்ப்பிற்கு அப்பால் நோக்குவதில்லை. இப்படியை முன்னோக்கி அறிவிப்பதானது யாவேயினுடைய பக்தியுள்ளவர்களுக்கும், ஏழைகளுக்கும் உரியதாகும். இறைவனுடன் தாங்கள் அனைத்தையும் கொண்டுள்ளமையால், பிற யாவற்றையும் முழுமையாக விட்டுவிடுதலும் எல்லையற்ற நம்பிக்கையுமே நற்பேற்றிற்கான வழி என்பதை அவர்கள் புரிந்து கொள்வர். இது வெளிப்படுத்தப்பட்ட நோக்கமன்று; ஆனால், ஒரு சாதாரண எளிய உறுதிப்பாடு மட்டுமே. "ஆண்டவருக்காகக் காத்திருப்போர் நற்பேறு பெற்றோர்" (எசா 30:18). "உம்மை நம்பும் மனிதன் நற்பேறு பெற்றவன்" (சங் 84:12; காண். 2:12; 65:5; 146:5). அப்படியானால் உண்மையான இஸ்ராயேலனுக்கு இறை அச்சம், சட்டத்தைக் கடைப்பிடித்தல் மற்றும் ஞானத்திற்குச் செவிமடுத்தல் என்பது, நற்பேற்றை வெகுமதியாக எதிர்பார்ப்பது என்று பொருள்படும். அதிக ஆன்மீக மானவர்களுக்கு அதனை ஏற்கெனவே கொண்டிருத்தல் என்றும் பொருள்படும். "உமது முன்னிலையில் நிறைவான மகிழ்ச்சியைச்" சுவைத்தவாறு இறைவனுடன் என்றும் இருத்தல் என்றும் இது பொருள்படும் (சங் 16:11; காண். 73:23-25).

2. மண்ணுலகினின்று விண்ணுலகை நற்பேற்றிற்கு: இவ்வாறு பேறுகளின் இறை உச்சியானது பகுக்கப்படுகிறது. ஆனால், இறைவன் மட்டுமே நற்பேறு ஆவார் என்பதைக் கண்டடைய, தனது ஆசைகளை மெதுவாய்த் தூய்மைப்படுத்தியவாறு ஒவ்வொரு மனிதனும் ஏமாற்றத்தினின்று ஏமாற்றத்திற்கு நடத்திச் செல்லும் பாதையில் நடந்து செல்கிறான் (சங் 118:8-9; 136:38; 146:3-4).

அ) மண்ணுலகப் பேறுகள்: நற்பேறு என்பது நிலவுலக வாழ்வுடன் நீண்ட காலமாக அடையாளம் காணப்பட்டு வருகின்ற வாழ்வாகும். யாவேயைத் தங்களுடைய இறைவனாகக் கொண்டுள்ள மக்களின் பேறானது பெரிய புதல்வர்களையும், அழகிய புதல்விகளையும், நிறைந்த தானியக் களஞ்சியங்களையும், எண்ணற்ற ஆட்டு மந்தைகளையும், இறுதியாக அமைதியையும் கொண்டிருப்பதாகும் (சங் 144:12-15). புனித வாசகங்கள் மனிதனுடைய இந்தப் பொருட்களைத் தேசிய, குடும்ப அல்லது தனிப்பட்ட சூழல்களில் குறிப்பிடுகின்றன. பெயருக்குத் தகுதியுடைய அரசனைக் கொண்டிருத்தல் (திருவுரை 10:16-17), சிறப்பு மிக்க (சீரா 26:1), அறிவுக்கூர்மை கொண்ட மனைவியை அடைதல் (25:8), நேர்மையுடன் பெறப்பட்ட பெருமளவு செல்வம் பெறுதல், அதற்கு அடிமையாய்ப் போகாமலிருத்தல் (31:8), விவேகமுடையவராய் இருத்தல் (25:9), நாவால் தவறு செய்யாதிருத்தல் (14:1), ஏழைகளுக்கு இரங்குதல் (பழ 14:21), தங்கள் பாவங்களுக்காக மனவுறுத்தல் அற்றவராயிருத்தல் மற்றும் தன் மனச்சான்றால் கண்டிக்கப்படாதிருத்தல் (சீரா 14:1-2) ஆகியவை நற்பேற்றின் கூறுகளாகும். சுருங்கக்கூறின், நற்பேறு என்பது பெயருக்குத் தகுதியான வாழ்வைக் கொண்டிருப்பதும் இறைவனாலேயே அதற்குக் கற்பிக்கப்படுவதுமாகும் (சங் 94:12). இறந்த ஒருவருக்காகத் துக்கப்படுவது உண்மையில் சரியானதே. ஆனால், கண்ணீரானது நீண்ட காலத்திற்கு நீடிக்கக்கூடாது. ஏனெனில், மரணச் சோகமானது இவ்வுலகில் நற்பேற்றை

முழுமையாக அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கும் (சீரா 38:16-23).

ஆ) விண்ணகப் பேற்றினை நோக்கி: ஆண்டவரால் அளிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில், உடன்படிக்கையின் மண்ணுலகப் பொருட்கள் இறைவனுடன் பகிரப்பட்ட வாழ்வின் குறியீடுகளாக இருந்தன. முடிவில்லா வாழ்வின் மீதான நம்பிக்கையானது நிலைப்படுத்தப்பட்ட போது இப்பொருட்களின் குறைபாடுகளும் அபாயங்களும் மிகத்தெளிவாகின. இந்தத் தூய்மைப்படுத்தலின் விளைவாகப் பின்னர் இப்பொருட்கள் முடிவில்லா வாழ்வையே சுட்டிக்காட்டின. அதே நேரத்தில் புதிய நம்பிக்கையானது. குழந்தைகளற்ற ஆண் பெண்களுடைய ஆன்மீகப் பலனுடைமையைப் போன்ற புதிய மதிப்பீடுகளுக்கு இட்டுச் சென்றது. மேலும், இந்த நம்பிக்கையானது மதிப்பீடுகளினுடைய பழைய அமைப்பை எதிர்முறையில் மாற்றி அமைத்தது. மனிதனது நேரத்திற்கு முன்னர் அவனுடைய நற்பேறு தீர்ப்பிடப்படக்கூடாது எனக் கடந்த அனுபவம் காட்டுகிறது (சீரா 11:28). நற்செய்தியை முன்குறித்துக் காட்டுகின்ற, கேள்விப்படாத தைரியத்துடன், பிள்ளைகள் அற்றோர் நீதியுள்ளவர்களாகவும் நற்பண்புடையவர் களாகவும் இருந்தால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என ஞானநூல் அறிவிக்கிறது (ஞான 3:13-15). ஆண்டவரின் மீதான நம்பிக்கையில் முழுமையான நன்மையைக் கண்டு, எளியோரின் சங்கீதங்கள் ஏற்கெனவே அறிவித்து வந்தவற்றை, ஞானிகள் வெறுமனே மீண்டும் எடுத்துக்கூறினர் (சங் 73:23-28).

III. புதிய ஏற்பாடு: கிறிஸ்துவின் வருகையுடன் அனைத்து நன்மைகளும் அளிக்கப்பட்டுவிட்ட நிலையில் நற்பேறு அவரில் தனது மாதிரியையும் நிறைவேறுதலையும் கண்டடைகிறது. ஏனெனில், ஏற்கெனவே பிரசன்னமாகியுள்ள அரசு அவரே. மேலும், அவரே தனது விசுவாசிகளுக்கு உயரிய நன்மையை அளிக்கிறார். விண்ணக உரிமைச் சொத்தின் பிணை ஆகிய தூய ஆவியே இந்த நன்மை.

1. **பேறுகளும் கிறிஸ்துவும்:** இயேசு உயரிய அனுபவத்தின் ஞானி மட்டுமல்லர்; தான் முன்மொழிகின்ற பேற்றினில் முழுமையாக வாழ்கின்றவர் அவரே.

அ) மத் 5:3-12-இன்படி இயேசுவினுடைய தொடக்க உரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்படுகின்ற பேறுகள், கிறிஸ்தவ நற்பேற்றிற்கான திட்டத்தை அளிக்கின்றன. லூக்காவின் வாசகப்படி நற்பேறற்ற நிலையின் அறிவிப்புகளும் அவற்றுடன் இணைந்துள்ளன; இவ்வாறு, அவை வாழ்வினுடைய சில நிலைகளின் மேலான மதிப்பைப் புகழ்ந்துரைக்கின்றன (லூக் 6:20-26). ஆயினும், இவ்விரு விளக்கங்களும் நற்பண்புகளை அல்லது வாழ்க்கை நிலைகளைப் பேறுடையதாக்குவதற்குத் தாழ்த்தப்பட முடியாது. அவை ஒன்றையொன்று நிறைவுபடுத்துகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவே அவற்றிற்கு அளித்த பொருளில் எடுத்துக்கூறப்பட்டால்தான் அவை உண்மையை வெளிப்படுத்தும். பழைய ஏற்பாட்டின் வாக்குறுதிகளுக்கு மாண்புமிக்க "ஆம்" அளிக்கவே இறைவனின் சார்பாக இயேசு வந்தார். விண்ணக அரசு அளிக்கப்பட்டுள்ளது. தேவைகளும், இன்னல்களும் ஒடுக்கப்பட்டுள்ளன. இரக்கமும், வாழ்வும் இறைவனில் ஒப்புரவாக்கப்பட்டுள்ளன. உண்மையில் சில குறிப்பிட்ட பேறுகள் எதிர்காலத்திற்கென உரைக்கப்பட்டால், இயல்பாகவே மற்றவைகளைத் தன்னுள் கொண்டுள்ள முதலாவதானது ("எளியோர் பேறு பெற்றோர்...") இத்தருணத்திலிருந்தே தனது மெய்ப்பிப்பை நோக்குகிறது.

ஆனால், அது மட்டுமே அனைத்துமன்று. பேறுகள் என்பவை இயேசுவில் இறைவனால் அளிக்கப்பட்ட உடன்பாடுகள் ("ஆம்") ஆகும். பழைய ஏற்பாடானது பேறுகளையும் இறைவனையும் ஒன்றுபடுத்தியபோது, தனது முறையில் இயேசு நற்பேற்றிற்கான ஆர்வத்தை

நிறைவேற்றுபவராகத் தன்னையே அளிக்கிறார். விண்ணக அரசானது அவரில் பிரசன்னமாகிறது. பேறுகளை நிறைவாக வாழ்வதன் மூலமும், "இதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் உள்ளவராகத்" (மத் 11:29) தன்னையே காட்டுவதன் மூலமும் பேறுகளை மனுவுரு எடுக்கச் செய்ய இயேசு விரும்பினார்.

ஆ) பேறுகளின் மத்தியில் இயேசு உள்ளார் என்பதைக் காட்ட மற்ற நற்செய்தி அறிவிப்புகளும் சம அளவில் முயல்கின்றன. விசுவசித்ததன் காரணமாக (லூக் 1:45) மீட்பரை ஈன்றவரென மரியாள் பேறுடையவளாகிறாள் (லூக் 1:48; 11:27). அவ்வாறு செய்ததன் மூலம், இறைவார்த்தையைக் கேட்டு (11:28) காணாமலே விசுவசிப்பவர் (யோவா 20:29) அனைவரின் பேறுடைமையை மரியாள் அறிவிக்கிறாள். பரிசேயருக்கும் (மத் 23:13-22), யூதாசுக்கும் (26:24), விசுவசியாத நகரங்களுக்கும் ஐயோ கேடு (11:21)! தந்தையால், இயேசுவில் உயிருள்ள இறைவனின் மகன் பற்றிய வெளிப்பாடு பெற்ற சீமோன் பேறுபெற்றவர் (மத் 16:17)! இயேசுவை நோக்கிய கண்கள் பேறுபெற்றவை (13:16)! எல்லாவற்றிற்கும் மேலாக, ஆண்டவரது மறுவருகையை எதிர்நோக்கி விசுவாசமுள்ளவர்களாகவும், விழிப்பானவர்களாகவும் (மத் 24:46), ஒருவருக்கொருவரான பணியில் ஈடுபட்டவர்களாகவும் (யோவா 13:17) உள்ள சீடர்கள் பேறு பெற்றோர்.

2. **கிறிஸ்துவின் மதிப்பீடுகள்:** பழைய ஏற்பாடானது செல்வம் மற்றும் வெற்றி என்னும் உலக மதிப்பீடுகளுடன் வறுமை மற்றும் தோல்வியிலான நீதியின் மதிப்பீடுகளைச் சேர்க்க அச்சத்துடன் வலிந்து செயல்படுத்தும்போது, இயேசு தனது பங்கிற்குப் பேறுகளினுடைய மண்ணுலக எடுத்துக்காட்டுகளின் இருபொருள் மயக்க நிலையினைக் கண்டனம் செய்கிறார். அதுமுதல் இவ்வுலகின் பேறு பெற்றோர் என்பவர்கள் செல்வந்தரோ, உயர் செல்வாக்குடையவரோ, புகழ் பெற்றவர்களோ அல்லர்; மாறாக, வறியோரும், அழுவோரும், ஏழைகளும், துன்புறுத்தப்படுவோரும், ஆவர் (காண். 1 பேதுரு 3:14; 4:14). எல்லாமதிப்புமாக உடையவருக்கு மதிப்பீடுகளின் இந்த எதிர்மறையான மாற்றமானது இயன்றதே.

நீதி, தாழ்ச்சி, சாந்தம், தூய்மை, இரக்கம் மற்றும் சமாதானத்திற்கான ஆவல் முதலிய செயல்களுடன் கூடிய வறுமை, மற்றும் கிறிஸ்துவின் அன்பிற்கான கலாபனை ஆகிய இரண்டு முதன்மையான பேறுகள் மற்ற அனைத்தையும் தம்முள் கொண்டுள்ளன. இவை அனைத்திற்கும் பொருளளிக்கின்ற இயேசு இல்லாமல் இவை அனைத்தும் ஒன்றுமற்றவையே. தனது விசுவாசத்தின் இதயத்தில் கிறிஸ்துவை நிறுத்துகிறவன் மட்டுமே திருவெளிப்பாட்டின் பேறுகளைச் கேட்கமுடியும். அவற்றைக் கேட்டாலும் (திருவெளி 1:3; 22:7), விழிப்புடன் இருந்தாலும் அவன் பேறுபெற்றவன் (16:15). ஏனெனில், உயிர்ப்பாகிய (20:6) செம்மறியின் திருமணத்திற்கு (19:9), உயிர்ப்பிற்கு (20:6) அவன் அழைக்கப்பட்டுள்ளான். சாட்சியாகத் தனது வாழ்வையே அளிக்க வேண்டியிருந்தாலும் அவன் உறுதி இழக்க வேண்டாம். "ஆண்டவருக்குள் இறப்பவர் பேறு பெற்றோர்" (14:13).

பை

பை, கைப்பை (BAG)

விவிலியத்தில் பலவகைப் பைகள் குறிக்கப்படுகின்றன. இவற்றைக் குறிக்கபல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன.

1. ஒரு தாலந்து கொள்ளக்கூடிய பணப்பை (2 அர 5:23). அதே எபிரேயச் சொல் எசா 5:22-இல் பெண்ணின் கைப்பையைக் குறிக்கிறது. ஏனெனில், இது பெண்ணின் சொகுசுப் பொருள்களோடு குறிக்கப்படுகிறது.

2. மற்றொரு எபிரேயச் சொல்- எடைக்கற்களை வைத்திருக்கும் ஒரு சிறிய பையைக் குறிக்கிறது (உப 25:13; பழ 16:11; மீக் 6:11). இதே சொல் பணப்பையையும் குறிக்கிறது (பழ 1:14; எசா 46:6).

3. வேறொரு எபிரேயச் சொல்- தானியம், பணம், வாசனைப்பொருட்கள் ஆகியவற்றைக் கட்டிவைக்கப் பயன்படும் கோணிப்பையைக் குறிக்கிறது (ஆதி 42:25; 1 சாமு 25:9; "வாழ்வோரின் கட்டுகள்; யோபு 14:17; "மீறுதல்கள் அடங்கிய பை").

4. மற்றொரு எபிரேயச் சொல்- பணப்பெட்டியைக் குறிக்கிறது.

5. வேறொரு எபிரேயச் சொல்- தானியம், உணவு, திராட்சைப்பழம் போன்றவற்றை வைத்திருக்கும் பையைக் குறிக்கிறது (ஆதி 42:25; 43:11; உப 23:25; 1 சாமு 9:7). இச்சொல் இடையனுக்குரிய பையையும் குறிக்கிறது (1 சாமு 17:40.49).

6. மற்றொரு எபிரேயச் சொல் பயணம் செய்வோர், இடையர், பிச்சைக்காரர் ஆகியோர் கொண்டிருந்த பையைக் குறிக்கிறது (மத் 10:10; மாற் 6:8; லூக் 9:3; 10:4; 22:35-36).

பைக்திலத்து (BECTILETH - கொலை வீடு)

வடசிலியாவில் அமைந்ததாகக் கருதப்படும் அடையாளம் கண்டு கொள்ளமுடியாத ஒரு சமவெளி (யூதி 2:21). நினிவேயிலிருந்து மூன்று நாட்கள் பயணம் செய்து பின் தன் படைகளோடு ஓல பெரினே தங்கிய இடம் இதுதான். ஓலபெரினே பயணம் மேற்கொண்ட குறிப்பிட்ட காலம் என்னவென்றோ, அவன் தங்கிய இடம் இஃது என்றோ, குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஏனெனில், நினிவேக்கும் சிலிசியாவுக்கும் இடையிலுள்ள தூரம் 480 கி.மீ. ஆகும். இது பற்றிப் பல கருத்துகள் நிலவுகின்றன. சிலர், இது யூதி 2:22-23-இல் மக்கள் கொல்லப்பட்டதைக் குறிக்கும் அடையாளப் பெயராகும் என்று கருதுகின்றனர்.

பைத்தியம், பித்துப்பிடித்தல் (MADNESS)

பண்டைய மேற்காசிய நாடுகளில், சீர் பட முடியாத தன்மை கொண்ட மூளை நோய்கள் அசாதாரணமானவையன்று. ஆயினும், பித்துப்பிடித்தல் நிகழ்ச்சிகள் சிலவே விவிலியத்தில் இடம் பெற்றுள்ளன. பைத்தியம் பிடித்தல் அல்லது அவ்வாறு நடத்தல் ஆகியவற்றைக் குறிக்கப் பல எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. புதிய ஏற்பாடும், எழுபது நூலும் பயன்படுத்தும் கிரேக்கச்சொற்கள் பொதுவாக மூளைக் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டுள்ளன.

பண்டைக் காலத்திலிருந்தே பித்துப்பிடித்தவனின் நிலையானது பேரச்சத்தைத் தருகின்ற ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. ஏனென்றால், இந்தக் குறைபாடு ஒரு தேவதையுடன், குறிப்பாகப் பேயின் சக்தியுடன் கொண்ட தொடர்பினால் ஏற்படும் விளைவு என்று கருதப்பட்டது. இதன் விளைவாக இத்தகைய மூளை நோய் கொண்டவர்களிடமிருந்து அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இன்னும்கூட மேற்காசிய நாடுகளில் இத்தகையோரின் வாழ்க்கைப் பிரச்சனையில் மிகக் குறைந்த உற்சாகமே காட்டப்படுகிறது.

தோரா அல்லது ஐந்நூலில் இந்த மூளை நோய், கடவுளின் கட்டளைகளை மீறியவர்களுக்கு

அளிக்கப்படும் இறைத் தண்டனையாகவே கருதப்பட்டது (உப 28:28). மற்ற நூல்களில் இந்நோய், இறைவனால் அனுப்பப்பட்ட ஆவியின் செயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (1 சாமு 16:14; காண். 1 அர 22:19-23). சவுலிடம் காணப்பட்ட உளவியல் சீர்கேடு மிகுந்த பித்தவெறிக்கு உட்பட்ட நோயினைக் குறிப்பிடுவதாகவே விளக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அவர், மிகுந்த கேடு விளைவிக்கின்ற அறிவுப்பிறழ்ச்சி ஆகிய முரண் மூளை நோயினால்தான் துன்பப்பட்டார். இந்நோய், மிகுந்த வேதனையையும், மூளையின் பொதுவான நிலையில் பல மாறுதல்களையும், குழப்பங்களையும் உருவாக்கக் கூடியது. இந்த நிலையில் நோயாளியின் நிலைமை மயக்கக் காட்சியைப் போன்றதாக இருக்கும். நோயின் வளர்ச்சி அதிகரிக்கும்போது நோயாளி வன்முறையான செயல்களைச் செய்ய ஆரம்பித்துவிடுவார். இந்த நிலை, அறிவுசார்ந்த அல்லது உணர்ச்சி தொடர்பான சீர்கேடாகக் காட்சியளிக்கும் (காண். 1 சாமு 18:11; 20:30-34; 28:20; 31:5). அன்றைய சிந்தனையின் உள்ளப்பாங்கு, தாவீதின்பால் காத்து அரசன் ஆக்கிசு கொண்டிருந்த எண்ணத்தினையும் நடத்தையினையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது (1 சாமு 21:12-15).

நெபுகத்னேசருக்குச் சாற்றிக் கூறப்படும் மூளைநோய் (தானி-4) வரலாற்றுத் தன்மை கொண்டது என்பதற்கான கூறுகள் உள்ளன. அவர், மனோதத்துவ நோயிலேயே துன்பப்பட்டார். நோயாளி, அறிவுப் பிறழ்ச்சியுடைய மயக்க நிலைக்கான அறிகுறிகளைக் கொண்டிருந்ததோடு, தன்னையே ஒரு விலங்காகக் கருதி, விலங்கைப் போலவே நடந்து கொண்டார். ஹென்றி ராவ்லின்சன் என்பவர் கண்டுபிடித்த, பழுதடைந்த பாபிலோனியக் கல்வெட்டு ஒன்று இத்தகைய சூழ்நிலையைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நோயாளிகள் அனைவரும் அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்டனர். பேயோட்டுதலே இந்த நோயைப் போக்கும் ஒரே வழியாக இருந்தது. இயேசு, இத்தகைய நோயாளிகள் பலரைக் குணப்படுத்தினார் (காண். லூக் 8:2.30; 11:14). தனது சீடர்களையும் இதே பணியைச் செய்யப் பணித்துள்ளார் (மத் 10:1; மாற் 16:17). ஒருவரது பேசும்முறை அல்லது செயலை வைத்து அவரைப் பைத்தியம் பிடித்தவர் என்று கூறுவது வழக்கம் (யோவா 10:20; அ.ப. 12:15; 26:24-25; 1 கொரி 14:23).

பொ

பொகான் (BOHAN - பெருவிரல்)

இவர் ரூபனின் மகனாகவோ, பேரனாகவோ, வழித்தோன்றலாகவோ இருக்கலாம். இவர் பெயரால் ஓர் எல்லைக் கல் இருந்திருக்கிறது. இது யூதா மற்றும் பென்யமின் பகுதிகளைப் பிரிக்கும் எல்லையாக அமைந்திருந்திருக்கிறது (யோசு 15:6; 18:17). இக்கல் மலைப்பகுதியின் ஓரத்தில் யூதாவின் வடகிழக்கு மூலையில் எரிகோவுக்குத் தென்கிழக்கில் அடையாளம் காட்டப்படுகிறது. "பெருவிரலின் கல்" என்ற பெயரின் விவரிப்பு "ரூபனின் மகன் பொகான்" என்று ஆட்பெயரைக் கொண்டிருப்பதாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கலாம். இப்பெயர்- ஒரு காலத்தில் யூதாவின் வடகிழக்கு மூலையில் குடியேறி இருந்தனர் என்பதைச் சுட்டுகிறது.

பொக்கரு (BOCHERU - தலைப்பிள்ளை,அழுபவர்கள்)

பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர். சவுலின் மகன் யோனத்தானின் வழித்தோன்றல். ஆட்சேலின் மகன் (1 நாள் 8:38; 9:44).

பொசிதோனியு (POSIDONIUS)

தங்கள் நாட்டிற்காகப் புரிந்த போர்களில் யூதாவின் வீரர்கள் காட்டிய வீரத்தையும் மனத்துணிவையும் கேள்வியுற்ற நிக்கானோர் அவர்களை வெல்ல முடியாதென்று அஞ்சினான். எனவே யூதா மக்கபேயுவுடன் நட்பு உடன்படிக்கை செய்து வரும்படி அதிகாரமளித்து, நிக்கானோர் மூன்று பேர் கொண்ட ஒரு தூதுக்குழுவை அனுப்பினான். அதில் ஒருவர்- பொசிதோனியு ஆவார் (2 மக் 14:19).

பொட்சகத்து (BOZKATH - உயர்ந்த இடம், உச்சி)

இஃது இலாக்கிசைச் சேர்ந்த செபேலா மாவட்டத்திலுள்ள யூதாவின் ஓர் ஊர் ஆகும் (யோசு 15:39). இஃது இருந்த இடம் இன்னும் தெரியவில்லை. யோசியா அரசனின் தாயான எதிதா பொட்சகத்தைச் சேர்ந்த அதாயாவின் மகள் ஆவாள் (2 அர 22:1).

பொட்சரா (BOZRAH - பாதுகாக்கப்பட்ட இடம், ஆட்டு மந்தை)

1. ஏதோமியரின் முக்கியமான பாதுகாக்கப்பட்ட நகரம். யோபாபு அரசனின் சொந்த நாடு (ஆதி 36:33; 1 நாள் 1:44). சாக்கடலுக்குத் தெற்கு - தென்கிழக்கே ஏறக்குறைய 32 கி.மீ. தொலைவிலும், பெத்ராவிற்கு வடக்கே ஏறக்குறைய 56 கி.மீ. தொலைவிலுமுள்ள இன்றைய புசெயிராதான் இவ்விடம் என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது சமமான உச்சப்பகுதியில் கட்டப்பட்டு, ஆழமான வாடிகளால் (சிற்றாறுகள்) சூழப்பட்டு, கோட்டையினால் பாதுகாக்கப்பட்ட கரைகளால் வெளியுலகோடு சேர்க்கப்பட்டிருப்பதால், இதில் எதிரிகள் யாரும் எளிதில் நுழையவே முடியாது. இது வடக்கு ஏதோமிலிருந்த வலிமை வாய்ந்த நகரம் ஆகும்.

ஏதோமிற்கு எதிராக உருவாக்கப்பட்ட இறைவாக்கில், பொட்சரா ஏதோமின் வலிமைக்கு அடையாளமாகும்; அதனுடைய வீழ்ச்சி தோமினுடைய முழு வீழ்ச்சியையும் குறிக்கும் (எசா 34:16; 63:1; எரே 49:13; ஆமோ 1:12).

2. விரைவில் வரவிருக்கின்ற அழிவை அடையவிரும்புகின்ற மோவாபிலிருந்த ஒரு நகரம் (எரே 48:24). அனேகமாக இது பெட்சேராக இருக்கலாம்.

3. கிலயாதில் யூதா மக்கபேயு (கி.மு. 165 - 160) படையெடுத்த பொழுது, கைப்பற்றிய ஒரு நகரம். செலூக்கியக் கிரேக்கர்களின் கூட்டாளியான அம்மோனியரிடமிருந்து பிரிந்த படைப்பிரிவினர் இங்கு அடைக்கலம் புகுந்திருந்தனர் (1 மக் 5:26,28). தமஸ்குவிற்குத் தெற்கே ஏறக்குறைய 98 கி.மீ. தொலைவிலும், தெராவிற்குக் கிழக்கு, தென்கிழக்குத் திசையில் ஏறக்குறைய 40 கி.மீ. தொலைவிலும் உள்ள இன்றைய புஸ்ரா எஸ்கி சாம் என்ற இடத்தில் இஃது இருந்ததாக

அடையாளம் காட்டப்படுகிறது. கிரேக்க, உரோமையர் காலத்தில், மத்திய தரைக் கடல், தமஸ்கு, அயிலா மற்றும் பாரசீகத் துறைமுகங்களுக்குச் செல்லும் பழங்காலச் சாலைகளின் சந்திப்பு இடமாக இருந்ததால், இது முக்கியம் வாய்ந்தது.

பாம்பே இதை கி.மு. 64-இல் வெற்றி கொண்ட பிறகு, இது நபத்தேயப் பேரரசின் வடகோடி நகரமானது; ஆனால், சில சமயங்களில் இப்பேரரசின் எல்லை தமஸ்கு வரை சென்றது (2 கொரி 11:32-33). திராசன் நபத்தேயர்களை வென்ற பின்பு, பொட்சரா அரேபியாவிலிருந்த உரோமை மாகாணத்தின் தலைநகரமானது. அலக்சாந்தர் செவேரு (கி.பி. 222-235) இதை ஒரு குடியிருப்பாக்கினான். அராபியனான பிலிப்பு (கி.பி. 244-249) இதை ஒரு மாநகரமாக்கினான்.

எழுபது சீடர்களில் ஒருவரால் நற்செய்தி போதிக்கப்பட்டு (லூக் 10:1-20), நீண்ட காலமாக அவுரானின் திருச்சபை மையமாக இருந்தது. பிறகு, இது நெஸ்தோரியன் மையமானது. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முகம்மது தன்னுடைய யாத்திரிகர்களுடன் இவ்விடத்தைப் பார்த்தார். அனேகமாக இங்குதான் அவர் கிறிஸ்தவ மதத்தைப் பற்றி மேலும் அறிந்து கொண்டார். கி.பி. 634-இல் முஸ்லீம்கள் வடக்கே படையெடுத்துச் சென்றபொழுது இது வீழ்த்தப்பட்டது. கி.பி. 1113-இலும், 1119-இலும் சிலுவைப்போர் வீரர்கள் இங்கு வந்தனர்.

பொதுத்திருமுகங்கள் (CATHOLIC LETTERS)

புதிய ஏற்பாட்டில் காணப்படும் யாக்கோபு, பேதுரு, யோவான், யூதா ஆகியோர் எழுதிய ஏழு திருமுகங்களைக் கத்தோலிக்கத் திருமுகங்கள் என அழைப்பது பாரம்பரியம். 'கத்தோலிக்கம்' என்றால் 'பொதுவானது' எனப்பொருள். விவிலியத்தில் காணப்படும மற்றத் திருமுகங்கள் குறிப்பான சபைகளுக்கு எழுதப்பட்டன. ஆனால், கத்தோலிக்கத் திருமுகங்கள் திருச்சபையின் எல்லோருக்கும் பொதுவாக எழுதப்பட்டன. சிரில் என்பவர், திருச்சபை கத்தோலிக்கத் தன்மையுடையது என்கிறார்; இதற்குக் காரணமென்னவென்றால் திருச்சபை உலக முழுவதற்கும் பொதுவானது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் யுசேபியு என்பவர் பவுல் திருமுகங்களைத் தவிர மற்றனைத்தையும் கத்தோலிக்கத் திருமுகங்கள் என அழைத்தார். புதிய ஏற்பாட்டில் இவை எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திற்கும், திருவெளிப்பாட்டு நூலுக்கும் இடையில் அமைந்துள்ளன.

பொதுவாழ்வு (COMMON LIFE)

இது தூய ஆவியால் நிரப்பப்பெற்ற ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தின் ஒரு சிறப்புப் பண்பாகும். உலகு சார்ந்த பிரிவுகளைக் கடந்து, இறைவனோடு கொண்டிருக்கும் குழு ஒன்றிப்பின் விளைவாக உள்ள மனிதர்களுக்கிடையிலான தோழமையை இஃது எடுத்துக்கூறுகிறது (உரோ 15:27; கலா 3:27-29). செயல்முறையில் இஃது ஒருவருக்கொருவர் உதவி செய்வதில் உடைமைகள் அனைத்தையும் பொதுவாகக் கொண்டிருப்பதிலும், பொதுவாக உணவருந்துதலிலும் (காண். அ.ப. 6:1; கலா 2:12) அடங்கியுள்ளது (உரோ 12:13; 15:26; 2 கொரி 8-9). பொதுவாழ்க்கைக்கு எதிரான குற்றம் தூய ஆவிக்கு எதிரானது என லூக்கா கருதினார் (அ.ப. 5:3.9; கலா 2:12). இப்பொது வாழ்வின் ஊற்றும் மையமும் அருட்சாதன நற்கருணை உணவாகும்.

பொதுவான, சாதாரணமான (COMMON)

பழைய ஏற்பாட்டுக் குருக்களின் இலக்கியத்தில், இச்சொல் தூய்மை, புனிதம் என்பதற்கு எதிரானதாகும் (லேவி 10:10; 1 சாமு 21:5- சாதாரண அப்பம்; 1 சாமு 21:6 - சாதாரணப் பயணம்). பொதுமக்கள் என்பவர் (லேவி 4:27) குருக்களும், அரசியல் ஆட்சியாளரும் அல்லாதவர்கள்.

புதிய ஏற்பாட்டில் இச்சொல் முதன்மையாக யாவற்றையும் அடக்கும் பண்பை, அதாவது எல்லாராலும் பகிர்ந்து கொள்ளப்படுவதைக்

குறிக்கிறது (தீத் 1:4-பொதுவான விசுவாசம்; யூதா 3-எல்லாருக்கும் கிடைத்துள்ள மீட்பு; அ.ப. 2:44-தங்கள் உடைமைகள் அனைத்தையும் பொதுப்பொருளாய்க் கொண்டிருந்தனர்). சில இடங்களில் இச்சொல் சடங்கு முறைப்படி தீட்டானவற்றைக் குறிக்கின்றது (அ.ப. 10:14-15.28).

பொதுவுடைமைச் சமூகம் (COMMUNITY OF GOODS)

எருசலேமில் திருச்சபை தோன்றிய காலத்தில் அப்போஸ்தலர்களும் விசுவாசிகளும் சமுதாய வாழ்க்கையில் கருத்தொருமித்து வாழ்ந்தனர். தங்களின் ஆன்மீக மற்றும் உலகச் செல்வங்களை மற்ற விசுவாசிகளோடு பகிர்ந்து கொண்டனர். எல்லாவற்றையும் பொதுவுடைமையாகக் கொண்டிருந்தனர் என லூக்கா இருமுறை குறிப்பிடுகிறார். அ.ப. 2:44-45-இல் தங்கள் உடைமைகளை விற்றுத் தேவைகேற்பப் பகிர்ந்து கொண்டனர். 4:32-35-இல் எவரும் இஃது என்னுடையது, அஃது உன்னுடையது என்ற தன்னல நோக்கோடு எதையும் கருதவில்லை. பர்னபா நன்கொடை அளித்த நிகழ்ச்சியும் (4:36-37), அனனியா சப்பீரா பொய்சொல்லி இறந்த நிகழ்ச்சியும் (5:1-11) இதற்குச் சான்று.

இந்தப் பொதுவுடமைச் சமூகத்தின் தொடக்க நிலையை நாம் இயேசு வாழ்ந்த காலத்திலேயே காணலாம் (லூக் 8:3; மாற் 10:21). ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதில் இவர்கள் பெருமகிழ்வுற்றார்கள். எஸ்ஸேனியர் என்னும் சமூகத்தினரும் இக்காலத்தில் இத்தகைய ஒரு வாழ்க்கையைத்தான் வாழ்ந்தனர். கும்ரான் சுவடிகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்த பொதுவுடைமை வாழ்க்கையை "மார்க்சிசக் கம்யூனிசம்" என்று கூறமுடியாது. ஆதிக்கிறிஸ்தவர்கள் வாழ்ந்த சமுதாய வாழ்க்கை அவர்களாக முன்வந்து நடத்திய ஒன்று. அதிலே ஏழைகள் கவனிக்கப்பட்டனர். கடவுளின் அருளே அவர்களைத் தூண்டியது. முதலில் சில சிக்கல்கள் ஏற்பட்டன (அ.ப. 6:1-6); இவை விரைவில் மறைந்து போயின. ஆனால், ஏழைகள் பிறவழிகளில் உதவிபெற்றனர் (கலா 2:10; 1 கொரி 16:1; 2 கொரி 8:1-15). இம்முறையின் பாதிப்பு வெகுகாலத்திற்கு நீடித்தது. குறிப்பாகத் திருச்சபையின் பொதுவாழ்வுத் துறவுச் சமூகங்களில் இன்றுமுள்ளது.

பொந்தியு பிலாத்து (PONTIUS PILATE)

காண்க. பிலாத்து.

பொய் (LIE)

தனது அயலாருடனான அல்லது இறைவனுடனான மனிதனின் உறவைப்பொருத்துப் பொய் என்ற சொல்லின் விவிலிய வழக்கு இரு வேறுபட்ட பொருள்களைக் கொண்டுள்ளது.

I. அயலாருடனான உறவில் பொய்

1. **பழைய ஏற்பாடு:** சட்டத்தில் பொய்யைத் தடுப்பதானது, விசாரணையில் பொய்ச் சாட்சியம் அளிக்கும் துல்லியமான சமூகப் பின்னணியை அடிப்படையில் குறிக்கோளாகக் கொண்டுள்ளது (பத்துக் கட்டளைகள் : யாத் 20:16; உப 5:20; யாத் 23:1-3.6-8; உப 19:16-21; லேவி 19:11). ஆணையிட்டு அளிக்கப்படும்போது, பொய்யானது இறைவனது பெயருக்கு இழுக்கு ஏற்படுத்துவதாகவும் உள்ளது (லேவி 19:12). வரையறுக்கப்பட்ட பொருளானது இறைவாக்கினர்கள் மற்றும் ஞானிகளுடைய நல்லொழுக்க போதனையில் அடங்கியுள்ளது (பழ 12:17; செக் 8:17). ஆனால், பொய் சொல்லுதல் என்னும் பாவமானது விரிவான பரப்பையும் கொண்டுள்ளது. அது மோசடி, ஏமாற்றுதல், சிந்தனைக்கும் நாக்கிற்கும் இடையிலான உடன்பாடின்மை (ஓசே 4:2; 7:1; எரே 9:7; நாகூ 3:1) என்பனவாகும். யாவே அவை அனைத்தையும் அருவருக்கிறார் (பழ 12:22). அவர் ஏமாற்றுபவரல்லர் (யோபு 13:9). பொய்

பேசுபவனும் அழிவிற்குச் செல்கிறான் (சங் 5:7; பழ 12:19; சீரா 20:25). தந்தையின் ஆசியைப் பெற்றுச் சென்ற சூழ்ச்சிக்கார யாக்கோபுவும் தனது முறைக்கு, மாமனார் லாபானால் ஏமாற்றப்பட்டார் (ஆதி 29:15-30).

2. புதிய ஏற்பாடு: முழு வாய்மை தவறாமையின் கடமையானது இயேசுவால் தெளிவாக எடுத்துக்கூறப்படுகிறது. "நீங்கள் பேசும்போது 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும், 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள்" (மத் 5:37; யாக் 5:12). பவுல் அதனை நடத்தையின் விதியாக அமைக்கிறார் (2 கொரி 1:17-18). பழைய ஏற்பாட்டுப் படிப்பினைகளும் திருப்பி உரைக்கப்படுகின்றன. ஆயினும், அவை ஓர் ஆழ்ந்த செயல்நோக்கம் பெறுகின்றன. "இனி ஒருவரிடம் ஒருவர் பொய் பேசாதீர்கள். ஏனெனில், பழைய இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்து விட்டு... புதிய இயல்பை அணிந்து கொண்டீர்கள்" (கொலோ 3:9-10). "உண்மையையே பேசுங்கள். ஏனெனில், நாம் ஒருவருக்கொருவர் உறுப்புகளாய் இருக்கிறோம்" (எபே 4:25). பொய் பேசுவதென்பது நெறிபிறழ்ந்த இயல்பிற்குத் திரும்புவதாக இருக்கும்; கிறிஸ்துவில் நாம் கொண்டிருக்கும் ஒன்றிப்பிற்கு எதிராக இருக்கும். அப்போஸ்தலர் பணியின்படி அனனியாவும் சப்பீராவும் பேதுருவுடன் பொய் பேசியபோது, உண்மையில் தூய ஆவியிடமே பொய் பேசியதாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. (அ.ப. 5:1-11). கிறிஸ்தவ சமுதாயமானது கவனத்தில் கொள்ளப்படும் போது சமூக உறவுகளின் தோற்றமானது கடந்து செல்லப்படுகிறது.

II. இறைவனுடனான உறவுகளில் பொய்:

1. உண்மை இறைவனைப் புறக்கணித்தல்: யாவேயே உண்மையின் இறைவன். ஏமாற்றுச் சிலைகளிடம் திரும்புவதன் மூலம் அவரைப் புறக்கணிப்பதென்பது மிகப்பெரிய பொய்யாகும். இப்பொய் இனிமேல் உதடுகளினுடையதன்று, வாழ்வினுடையதாகும். புனித ஆசிரியர்கள் இந்த மோசடியை முடிவில்லாமல் கண்டனம் செய்கின்றனர்; அதற்கு எதிராக வஞ்சப்புகழ்ச்சியான பாடல்கள் (எரே 10:1-16; எசா 44:9-20; சங் 115:5-7), ஏளனக் கதைகள் (தானி 14), இழிவான பட்டங்கள், அமைக்கின்றனர்; இச்சிலைகள் ஒன்றுமில்லாதவை (எரே 10:8), அருவருப்பானவை (4:1), வீணானவை (2:5), பயனற்றவை என்று அவற்றைப் பழிக்கின்றனர். அவர்களுடைய பார்வையில் ஒவ்வொரு மனமாற்றமும் முதலாவதாக ஒருவன் பணிபுரிந்த சிலைகளின் பொய்யான மற்றும் ஏமாற்றக்கூடிய இயல்பினை அறிக்கையிட வேண்டும் (16:19). உண்மையான உயிருள்ள இறைவனுக்கு ஊழியம் புரிவதற்கென (1 தெச 1:9), பொய்யான சிலைகளினின்று திரும்புமாறு புறவினத்தாரைத் தூண்டும்போது, பவுல் புரிந்துகொள்வது இதுவே (உரோ 1:25).

2. பொய்யின் பாவமும் சமய வாழ்வும்:

அ) உண்மையான இறைவனைப் புறக்கணிப்பதனுடைய மிக நுட்பமான முறையைப் பழைய ஏற்பாடும் அறிந்திருந்தது. அஃது ஒருவரது வாழ்வில் பொய் பேசும் நிலையான வழக்கத்தைக் கொண்டிருப்பதாகும். மனிதர்க்கும் மற்ற நல்லவற்றிற்கும் எதிரிகளான இறைப்பற்றற்றோரின் நடத்தை இவ்வாறே அமைந்திருந்தது. அவர்கள் பொய்யைத் தவிர வேறு எதையும் வாயில் கொண்டிராத (சங் 59:13; சீரா 51:2; எரே 9:2), இரட்டை நாவுடையவர்கள் (சீரா 5:14). அவர்கள் பொய்யில் நம்பிக்கை கொண்டிருந்தனர் (ஒசே 10:13). மனமாற்றத்தை மறுக்குமளவிற்கு அவர்கள் அதனுடன் நெருக்கமாக இருந்தனர் (எரே 8:5). அவர்களுடைய வெளிப்படையான மனமாற்றங்களும் பொய்யே (3:10). தன்னிலேயே விடப்பட்ட மனிதனைப் பற்றிப் போலி எண்ணம் கொள்வது பயனற்றதாகும். தன்னியலாகவே அவன் ஒரு பொய்யன் (சங் 116:11). மற்றொரு புறம், உண்மையான இறைவனுடனான

ஒன்றிப்பிலேயே இருப்பதற்கென உண்மையான பிரமாணிக்கமுள்ள மனிதன் தனது வாழ்விளின்று பொய்யுரைப்பதை அகற்றுகிறான் (சங் 15:2-4; 26:4-5). இவ்வாறே, இறைவன் தனது மக்களுக்கே விட்டு விடுகின்ற மொத்த எளிய எஞ்சியோரைப் போன்று (செப் 3:13), யாவேயின் ஊழியரும் இறுதிக்காலங்களில் நடந்து கொள்வர் (எசா 53:9).

ஆ) இந்த எடுத்துக்காட்டான மாதிரி கிறிஸ்துவில் நிறைவேறியதைப் புதிய ஏற்பாடு எடுத்துக்காட்டுகிறது (1 பேதுரு 2:22). இதன் காரணமாகவே எல்லாப் பொய்களையும் விலக்கி வைப்பதானது கிறிஸ்துவ வாழ்வின் முதல் தேவையாக உள்ளது (2:1). இதன் மூலமாக உதடுகளின் பொய் மட்டுமின்றி, எல்லாத் தீய பண்புகளும் உள்ளடங்கும் என்று நாம் புரிந்து கொள்கிறோம் (திருவெளி 21:8). கிறிஸ்துவின் தோழர்களாகிய தேர்ந்தெடுக்கப்பட்டோர் இத்தகைய பொய்யை ஒருபோதும் அறிந்ததில்லை (14:5). இயேசுவில் வெளிப்படுத்தப்படும் இறை உண்மையைப் புறக்கணிப்பவன், பொய்யன் என்ற பெயருக்குச் சிறப்பான தகுதியுடையவன் ஆகிறான். இயேசுவே கிறிஸ்து என்பதை மறுப்பவனே எதிர்க்கிறிஸ்து (1 யோவா 2:22). அவனுடன் பொய்யானது இனியும் ஒழுக்க அமைப்பைச் சேர்ந்ததன்று; சிலை வழிபாட்டினைப்போன்று அதுவும் தன்மையால் சமயம் சார்ந்ததாகும்.

3. பொய்யின் ஆதரவாளர்கள்:

அ) எதிர்ப்பின் தன்மையில் இறைவனின் முன்னிலையில் இப்போது இந்தப் பொய் பேசும் உலகில் மனிதனைத் தள்ளுவதற்கு எல்லா நேரங்களிலும் ஏமாற்று வழிகாட்டிகள் உள்ளனர். சில நேரங்களில் இறைவனே இகழ்ந்த பொய்யான இறைவாக்கினர்களைப் பழைய ஏற்பாடு அறிந்திருந்தது (1 அர 19:22-23). எரேமியா (5:31; 23:9-40; 28:15-16; 29:31-32), எசேக்கியேல் (13) மற்றும் செக்கரியா (13:3) முதலிய உண்மையான இறைவாக்கினர்களும் இவர்களை அடிக்கடி கடுமையான சொற்களால் கண்டித்தனர். இறைவார்த்தைக்குப் பதிலாக, பொய்யான செய்திகளை அவர்கள் மக்களுக்குக் கொண்டு சென்றனர்.

ஆ) புதிய ஏற்பாட்டில் இயேசுவும் அவ்வாறே யூத மக்களின் குருட்டு வழிகாட்டிகளைக் கண்டிருக்கிறார் (மத் 23:16....). அவரில் விசுவாசம் கொள்ள மறுக்கும் இந்த வேடதாரிகள் பொய்யர்கள் (யோவா 8:55). நற்செய்தியினின்று மனிதரைத் திருப்புவதற்கென உலகம் முழுவதும் காலந்தோறும் எழவிருக்கின்ற மற்றப் பொய்யர்களுக்கு அவர்கள் முன்னோடிகள். எதிர்க் கிறிஸ்துகள் (1 யோவா 2:18-28), போலி அப்போஸ்தலர்கள் (திருவெளி 2:2), போலி இறைவாக்கினர்கள் (மத் 7:15), போலி மெசியாக்கள் (மத் 24:24; காண். 2 தெச 2:9), போலிப் போதகர்கள் (2 திமொ 4:3-4; 2, பேதுரு 2:1-3; காண். 1 திமொ 4:1-2), நற்செய்தி போதிப்பதைத் தடுக்கும் யூதர்கள் (1 தெச 2:14-16), போலிச்சகோதர்கள் மற்றும் உண்மையான நற்செய்தியின் எதிரிகள் ஆகியோர் பொய்யர்கள் ஆவர் (கலா 2:4). எலிமா மந்திரவாதி சம்பவத்தில் பவுல் செய்தது போன்று (அ.ப. 13:8-10), கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ள வேண்டிய பொய்யின் ஆதரவாளர்கள் ஏராளமாக உள்ளனர்.

III. சாத்தான், பொய்களின் தந்தை: இவ்வாறாக, உலகமானது நன்மை மற்றும் தீமை, உண்மை மற்றும் பொய் என்ற இரு குழுக்களாக, ஒழுக்கம் மற்றும் சமயம் என்ற இருவிதப் பொருளில் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது உறுதியாக இறைவனுடையது. இரண்டாவது உலகனைத்தையும் வஞ்சிக்கும் பழைய பாம்பாகிய (திருவெளி 12:9) சாத்தானைத் தலையாகக் கொண்டுள்ளது. ஏவாளைக் கெடுத்த நாள்முதல் (ஆதி 3:13) வாழ்வின் மரத்தினின்று அவளைப் பிரித்ததனால் "தொடக்கத்திலிருந்தே கொலையாளியாக உள்ளான்" (யோவா 8:44). அனனியாவையும், சப்பீராவையும் தூய

ஆவியிடம் பொய் பேசுமாறு தூண்டியவனும் இவனே (அ.ப. 5:3). மந்திரவாதியாகிய எலிமா இவனது மகன் (13:10). கிறிஸ்துவில் விசுவாசங்கொள்ள மறுக்கின்ற அவநம்பிக்கை வாய்ந்த யூதர்கள் சாத்தானையே சார்ந்துள்ளனர். அவர்கள் பொய்யனாகவும், பொய்களின் தந்தையாகவும் உள்ள பேயின் மக்கள் (யோவா 8:41-44). எனவே, "இயேசு உண்மையை அவர்களிடம் பேசியதன் காரணமாக," இயேசுவைக் கொல்லவும் அவர்கள் விரும்பினர் (8:40). நற்செய்தியினுடைய உண்மையின் பகைவர்களாகிய போலிப்போதகர்களை எழுப்பியவன் அவனே (1 திமொ 4:2). கிறிஸ்தவர்களுக்கெதிராகப் போரிடுவதற்கென (திருவெளி 12:17), இறை நிந்தனைகளை வாய் முழுக்கக் கொண்டுள்ள, பேரரசான கடலின் விலங்கிற்குத் தனது வல்லமைகள் அனைத்தையும் அளித்தான் (13:1-8). மனிதரை ஏமாற்றிப் பொய்யான சிலையை வணங்கச் செய்வதற்கென, போலி இறைவாக்கினர்களின் வேடம் பூண்ட மண்ணுலகின் விலங்கானது இன்னும் அவனையே சார்ந்துள்ளது (13:11-17). உலகின் அச்சானது இந்த இரண்டு குழுக்களுக்கும் இடையில் செல்கிறது. தங்களுடைய விசுவாசம் சிதைக்கப்படும் அளவிற்குப் பேயினுடைய தந்திரங்களால் தவறாக நடத்தப்பட, கிறிஸ்தவர்கள் தங்களை அனுமதிக்காமலிருக்க வேண்டியது மிக முக்கியமானதாகும் (2 கொரி 11:3). எனவே, உண்மையில் நிலைத்திருப்பதற்கென, தீயோனிடமிருந்து விடுவிக்குமாறு அவர்கள் இறைவனை நோக்கிச் செபிக்கவேண்டும் (மத் 6:13).

பொருளைப் பறித்தல் (EXTORTION)

இச்சொல் பிறரைக் கசக்கிப்பிழிதல், பிறரைக் கொடுமைப்படுத்துதல், கொள்ளைப் பொருள் என்று பலவாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'கொடுமை செய்வதில் நம்பிக்கை வைக்க வேண்டாம்; பிறர் பொருளைப் பறிப்பதில் வீண் பெருமை கொள்ள வேண்டாம்' என்று சங்கீத ஆசிரியர் எச்சரிக்கிறார் (சங் 62:10). இத்தகைய செயல்களில் நம்பிக்கை கொள்வது கடவுள் மேல் உள்ள நம்பிக்கைக்கு நேர் எதிர்மாறானது. ஏனெனில், மனிதனின் நல்ல எண்ணங்களை நிறைவாக்குபவர் கடவுளே (சங் 61:1தொ). கொள்ளையடிப்பவன் மீட்பை அடையமாட்டான் (சங் 49:5-15). ஒவ்வொருவனும் அவனவன் செயலுக்கேற்ப, தண்டனை பெறுவான் என்று எசேக்கியேல் கூறும்போது, பிறரைக் கொடுமைப்படுத்திக் கொள்ளையடித்தலை ஒரு பெரிய குற்றமாகக் குறிப்பிடுகிறார் (எசே 18:18). அவர் காலத்தில் கொள்ளையடித்தல் பலரால் செய்யப்படுகின்ற குற்றமாக இருந்தது (எசே 22:7.12.29). இயேசுவும் கொள்ளையடித்த பரிசேயர் கூட்டத்தைச் சாடுகிறார் (மத் 23:25; லூக் 11:39; காண். 18:11).

பொர்த்துனாத்து (FORTUNATUS)

இவர் பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதிய முதல் திருமுகத்தை எழுதியபோது அவரோடு இருந்த கொரிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த ஒரு முக்கியமான உறுப்பினர் (1 கொரி 16:17). இவரோடு இருந்த மற்றக் கொரிந்தியர் ஸ்தேவானா, அக்காய்க்கு ஆகியோராவர். இவர்கள்தான் கொரிந்தியத் திருச்சபை பற்றிய செய்திகளை எபேசிலிருந்த பவுலுக்குக் கொண்டு வந்தவர்களும் (5:9), கொரிந்துக்கு முதல் திருமுகத்தைக் கொண்டு சென்றவர்களும் ஆவர்.

பொவனேர்கேசு (BOANERGES – இடியின் மக்கள்)

செபதேயுவின் புதல்வர்களான யாக்கோபுவுக்கும், யோவானுக்கும் இயேசு அளித்த பட்டப்பெயர் (மாற் 3:17). மாற்கு இச்சொல்லை "இடியின் மக்கள்" என்று மொழிபெயர்க்கிறார். ஆனால், எவ்விதம் இப்பெயர் அவர்களுக்குப் பொருந்தும் என்று சுட்டிக்காட்டவில்லை. இவர்கள் புயல் வேகமுடைய மனப்போக்குடையவர்களா (மாற் 9:37)? இவர்கள் இரட்டையராய் இருந்ததால், இப்பட்டப்பெயர் தியோஸ் கூரி பற்றிய பழங்கால இதிகாசத்தைப் பிரதிபலிக்கிறா?

மூலத்தில் இப்பெயர் அஸ்போஸ்தலர்கள் அனைவரையும் குறித்திருக்கலாம் என்பதற்கு ஓரளவு வாசகச்சான்று உள்ளது.

பொறாமை (ENVY, JEALOUSY)

ஒரே செயலாற்றும் உணர்ச்சியின் இரு கூறுகளில் ஒன்றைக் குறிக்க இச்சொல் பயன்படுகிறது. நேர்பொருளில், பொறாமை ஆர்வத்தைப் போன்றது. இப்பொருளில் இச்சொல் மனிதருக்கும் இறைவனுக்கும் சாற்றிக் கூறப்படும். எதிர்ப்பொருளில் பொறாமை கொள்வது பாவமாகும். அதே எபிரேய மற்றும் கிரேக்கச் சொற்கள் இரு கூறுகளையும் குறிக்கப் பயன்படுகின்றன. ஆகவே, சூழ்நிலைக்கேற்ப இச்சொல்லின் பொருளை வேறுபடுத்த வேண்டும்.

II. **இறைவனது** பொறாமை: பழைய ஏற்பாடு, இறைவன் "பொறாதவர்", சகிக்க மாட்டார் என்று அடிக்கடி உறுதியாகக் கூறுகிறது (யாத் 20:5; 34:14; உப 4:24; யோசு 24:19; நாகூ 1:2). இச்சொல் பெயர்ச்சொல்லாகவும் (எண் 25:11; யோபு 5:2; சங் 79:5), வினைச்சொல்லாகவும் (ஆதி 37:11; எண் 11:29) மனித மற்றும் இறை, நேர்மையான மற்றும் பாவமான, பொறாமையின் இரு பண்புகளையும் குறிக்கப்பயன்படுகிறது. சில இடங்களில் கடவுள் பொறாமைச் சினம் (வெஞ்சினம்) கொள்வதாகவும் (சங் 79:5), பொறாமைக்குத் (ஆத்திரம்) தூண்டப்படுவதாகவும் (78:58) கூறப்படுகிறார். இறைவனது மேலாண்மைக்கு எதிராக எழும் சவாலுக்கு, குறிப்பாக இஸ்ராயேலுடன் கொண்ட உடன்படிக்கையை முறிப்பதற்கு (பிரமாணிக்க மின்மைக்கு), ஏற்ற நேர்மையான பதிலாக, இறைவனது பொறாமை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் விவரிக்கப்படுகிறது. உடன்படிக்கை முறிவு என்ற பொருளில் இறைவாக்கினர்கள் திருமண உருவகத்தைச் சில சமயம் பயன்படுத்துகின்றனர். இதில் இறைவன் பொறாமையுள்ள கணவனாகவும், இஸ்ராயேல் விபசார மனைவியாகவும் விவரிக்கப்படுகின்றனர் (எசே 16:42). இஃது இஸ்ராயேல் சிலைவழிபாட்டில் மீண்டும் மீண்டும் வீழ்ந்ததைக் குறிக்கிறது. இந்தப் பொறாமை இஸ்ராயேலின் பாவத்திற்கு எதிர் நிலையாக இருந்தால், இஃது இரண்டு நேர் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அவை: 1) இறைவனது பிரமாணிக்கமும், இறுதியாக அவரது மக்களோடு அவர் கொண்ட உறவில் அவர்காட்டும் இரக்கமும் ஆகும். இவ்வாறு, இஸ்ராயேலின் போர் வீரனும், பாதுகாவலனும் என்ற அளவில் அவரது "ஆர்வத்தைக்" குறிக்கிறது. 2) இஸ்ராயேலின் சிலைவழிபாட்டில் இறைவனது தனித்தன்மையும், தூய்மையும் பங்கப்படுத்தப்படுகின்றன (எ.க. யோசு 24:19; எசே 39:25). புதிய ஏற்பாடும் சிலைவழிபாடு இறைவனைப் பொறாமைக்குத் (சினம்) தூண்டுவதைச் சுட்டுகிறது.

இறையியல் வல்லுநர்கள், இத்தகைய மொழியமைப்பை இறைவனுக்கு மனித இயல்புகளைச் சாற்றிக் கூறுவதாக விளக்கம் அளித்து, எளிதில் ஒதுக்கி விடுகின்றனர். ஆனால், இறைவனைப் பற்றிய எல்லா மொழியமைப்பும் மனித இயல்புகளை அவருக்குச் சாற்றிக் கூறுவதாக இருப்பது அவசியமாகும். இறைவன் உணர்ச்சி மாற்றம் அடைய முடியாது என்ற கிரேக்கக் கருத்தை ஆய்வு செய்யாமல் ஏற்றுக் கொள்வதால், இறைவனைப் பற்றிய இத்தகைய மொழியமைப்புப் பிரச்சனை திரித்துக் கூறப்பட்டது எனலாம். இறைவனின் பொறாமையின் பொருளை, அவர் தூயவர் என்ற அவரது தன்மையில் தேடவேண்டும். அது படைப்பின்பால் அவர் கொண்டிருக்கும் அன்பு மற்றும் மதிப்பின் ஓர் அளவாக இருக்கலாம். அவரைவிட அளவிடமுடியாத விதத்தில் தாழ்ந்த ஒரு படைக்கப்பட்ட உயிரின் கிளர்ச்சி அவரில் பொறாமையை எழச் செய்கிறது என்று கூறலாம்.

II. மனிதப்பொறாமை: மனிதனது மற்ற எல்லாக் குணங்களையும் போல, பொறாமையும் நேர்முறை உணர்ச்சியாகவோ, பாவமான சீர்கேடாகவோ இருக்கலாம். அதன் நேர்முறைப்

பண்பில் அஃது ஓர் ஆர்வமாகும். இறைவனது பொறாமையைப் போல் அது பிறரது நன்மையில் அக்கறை கொள்கிறது. அஃது இறைவனுக்காகக் கொள்ளும் பொறாமையாகவும் சில சமயம் அமையலாம். இவ்வாறு எலியா, பாகாலின் இறைவாக்கினர்களோடு கொண்ட போராட்டத்தில், ஆண்டவருக்காகப் பொறாமை (பேரார்வம்) கொண்டார் (1 அர 19:10.14); அல்லது அஃது ஒருவர் மற்றொரு ஆளுக்காகக் கொள்ளும் பொறாமையாகும். இவ்வாறு, ஒரு கணவன் தன் மனைவியிடம் பிரமாணிக்கத்தை எதிர்பார்ப்பது அவனது சட்ட உரிமையாகும். இதுவும் ஒருவிதப் பொறாமையாகும் (எண் 5:14). நேர்முறைப் பொறாமையின் அவசியமான, தன்னலமற்ற பண்பை இதில் கடைப்பிடிப்பது கடினம். ஆனால், இஃது உண்மையான சட்ட உரிமையை அடிப்படையாகக் கொண்டதால், இது நேர்மையானது. இவ்வாறு மோசேயின் சட்டம், விபசாரம் செய்ததாகச் சந்தேகிக்கப்படுபவர்களைச் சோதித்தறியும் முறையையும் கொடுக்கிறது (5:11-31). அப்போஸ்தலரான பவுல், கொரிந்தியர்பால் தாம் கொண்டிருக்கும் "தெய்வீகப் பொறாமையைப்" (அன்பார்வத்தைப்) பற்றிப் பேசுகிறார் (2 கொரி 11:2).

மறுபுறத்தில் மனிதப் பொறாமை-அனேகமாக, தவிர்க்கமுடியாத விதத்தில் பாவமானதாகும். நேர்மையான பொறாமைக்கு எதிர்மாறாக, இந்தப் பாவமான சீர்கேடு தனக்கு இயல்பாகவே உரிமையல்லாத ஒன்றின்மேல் உரிமை கொண்டிருப்பதாகக் கொள்ளும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய பொறாமைக்கு எடுத்துக்காட்டுகள் விவிலியத்தில் பல உள. எ.கா. யோசேப்புக்கு யாக்கோபு காட்டிய தனிச்சலுகைகளைப் பற்றி யாக்கோபின் மற்றப் புதல்வர்கள் கொண்ட பொறாமை; இவ்வாறு, தாத்தானும் அபிராமும் மோசேபால் பொறாமை கொண்டனர் (சங் 106:16-18; காண். எண் 16:1-40). ஞான இலக்கியம், பொறாமையால் வரும் ஆபத்துகள் மற்றும் அது தன் விருப்பிழைவோடு அஃது அனேகமாகத் தவிர்க்க முடியாத விதத்தில் கொண்டிருக்கும் தொடர்பு ஆகியவை பற்றி எச்சரிக்கிறது (எ.கா. யோபு 5:2; பழ 6:34; உ.ச. 8:6). புதிய ஏற்பாட்டில் பொறாமை தீய பண்புகளின் பட்டியலில் காணப்படுகிறது. பவுல் இதை "ஊனியல்பின் செயல்களோடு" தொகுக்கின்றார் (கலா 5:20; காண். உரோ 13:8-14). இத்தகைய பொறாமை அழிவுக்கும் பிளவுக்கும் இட்டுச்செல்லும் (1 கொரி 3:3; 2 கொரி 12:20; காண். யாக் 3:14-16). அவருக்கே உரிய விதத்தில் பவுல், மற்றப் பாவங்களைப்போல் பொறாமையும் இறுதி மீட்பு நோக்கத்திற்குப் பயன்படலாம்; இறைவன் தமது அருள் பாலிப்புத் திட்டத்தை நிறைவேற்ற இதைப் பயன்படுத்தலாம்; இவ்வாறு, இஸ்ராயேலைப் பொறாமை கொள்ளச் செய்து, கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ள யூதர்களைத் தூண்டுவதற்காக மீட்பு புறவினத்தாருக்கும் அளிக்கப்பட்டுள்ளது என்று பவுல் விளக்குகிறார் (உரோ 10:9; 11:11.14; காண். அ.ப. 5:17தொ; 17:1-15). இதில் கிறிஸ்தவத் தூதின் வெற்றி யூதத் தலைவர்களிடையே பொறாமையைத் தூண்டியது.

பொறிகளும் கண்ணிகளும் (TRAPS AND SNARES)

பொறிகளும், கண்ணிகளும், பறவைகளையும், விலங்குகளையும் பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் (யோபு 18:8). பவுல் கூற்றுப்படி, எதிர்பார்க்காத திடீர் மரணம், திடீர்த் துக்கச் சம்பவம் ஆகியவற்றிற்குப் பொறிகளும், கண்ணிகளும் உவமைகளாகக் கூறப்பட்டன. விவிலியத்தில் இவைபற்றிக் குறிப்புகள் பல உள்ளன. ஆனால், அவை பெரும்பாலும் உருவக வடிவில் பயன்பட்டுள்ளன. இக்கருவிகள் பற்றிய துல்லியமான விவரிப்புகள் கொடுக்கப்படவில்லை. ஆனாலும், மூன்று வகையான பொறிகளை விவிலியத்தில் நாம் காண்கிறோம்.

அ) பறவைகளைப் பிடிக்கப் பயன்பட்ட பொறிதான் எல்லோரும் அறிந்தது. சங் 90:3;

123:7 ஆகிய பகுதிகள் "வேடர் கண்ணி" என அழைக்கிறது. இன்றும் அரபு நாடுகளில் இது பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பொறி, மனிதர்களால் கையாளப்படுவதாகவும், தானியங்கித் தன்மையதாகவும் இருந்தது.

ஆ) விலங்குகளைப் பிடிக்கப் பயன்பட்ட கண்ணி மற்றொன்றாகும் (சங் 141:9; எசே 12:13). இது கயிற்றுச் சுருக்குகளால் ஆன பொறியாகும். இது புதர்களில் அல்லது விலங்குகள் போகும் வழிகளில் மறைக்கப்பட்டிருக்கும் (பழ 22:5; ஓசே 9:8).

இ) மூன்றாவது வகையானது- குழிகளில் விலங்குகளை விழச்செய்து பிடிப்பதாகும். குழிகள் வெட்டப்பட்டு, அவற்றின்மேல் இலை தழைகளைப் பரப்பி, சமதரைபோல் செய்துவிடுவது. பின்பு விலங்குகள் அதன் மேல் நடந்தால், குழியில் விழுந்து மாட்டிக்கொள்ளும் (எசா 42:22; எரே 18:22; 48:43-44).

மறைந்திருந்து திடீரென்று தாக்கும் இடர் அல்லது சாவை, கண்ணி உருவகமாகக் குறிக்கிறது (யோபு 22:10; சங் 18:5; லூக் 21:34). பகைவன் பொறியை அமைக்கும் போது கொடுநோக்கின் தொனி தெரிகிறது (1 சாமு 28:9; சங் 140:5). பொறியின் தன்மை என்னவெனில், முதலில் கவர்ச்சியான ஒன்று, பிற்பாடு அழிக்கும் கருவியாக மாறிவிடுவதேயாகும். எனவே, பொய்த்தேவர்களை வழிபடுவது முதலில் இன்பகரமாக இருந்தாலும் பிற்பாடு அழிவையே தரும் என்று விவிலியம், பொறிகளோடு இதை ஒப்பிடுகிறது (யாத் 23:33). கோபியான ஒரு மனிதனுடன் நட்புக்கொள்வதும், பொறியில் சிக்கிக் கொள்வதற்கு உவமையாகக் கூறப்படுகிறது (பழ 22:25).

பொறுக்கிச் சேர்த்தல் (GLEANING)

எபிரேயச் சட்டப்படி நிலத்தில் பயிரிட்டதை அறுவடை செய்யும்போது, வரப்போரக் கதிரை அறுக்கக்கூடாது. சிந்திக்கிடக்கும் கதிரையும் பொறுக்கக்கூடாது. திராட்சைத் தோட்டத்தில் பின்னறுப்பு செய்யக்கூடாது. சிந்திக்கிடக்கும் பழங்களைப் பொறுக்கக்கூடாது. இவற்றை எளியோருக்கும், அன்னியருக்கும், விதவைகளுக்கும் விட்டுவிட வேண்டும் (லேவி 19:9-10; 23:22; உப 24:19-22; காண். நீதி 8:2; ரூத் 2:2-3).

பொறுப்புணர்வு (RESPONSIBILITY)

வயது வந்த ஒருவனோ, பண்பாட்டில் முதிர்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஒரு சமுதாயமோ தன் பொறுப்புகளை உணர்ந்து நிறைவேற்றுவது ஒரு பெரிய பிரச்சனையாகும். என்பதை விவிலியம் நன்கு அறிந்திருக்கிறது. ஆனால், இது பற்றிய செய்திகளை எல்லாம் திரட்டிக்கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. ஆகையால், இவை சிறிதளவே இடம் பெறும். மாறாக, கடவுளுக்கு முன்னர் மனிதனுக்கு இருக்கும் பொறுப்புகளைச் சில முக்கிய கோணங்களில் ஆய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கமாகும்.

1. **ஒரு மனிதன் வழியாகப் பாவம் உலகினுள் நுழைந்தது** (உரோ 5:12): மனிதச் சாவுக்கு யார் பொறுப்பு? வாழ்வதைவிடச் சாவதே மேல் என்று எண்ணும்படியான நிலைக்கு யார் பொறுப்பு? இவை போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறுவதற்காகத்தான் ஆதாமின் பாவம் பற்றிய கதை விவிலியத்தில் இடம் பெற்றது (ஆதி 2-3). இவற்றிற்குப் பவுல் பின்வருமாறு பதில் கூறுகிறார். உலகிலுள்ள தீமைகளுக்கு இறைவன் காரணமல்லர்; மாறாக, மனிதனே காரணம் ஆவான். அவனது ஆணவச் செயலே பாவத்தின் அரக்கத்தனமான ஆற்றலை ஆட்சிப் பீடம் ஏற்றியது. உலகிலுள்ள தீமைகளுக்கு மனிதனின் செயல் முழுக்காரணமாக இல்லாவிட்டாலும், அதுவே உண்மையான மூலகாரணமாகும்.

ஆனால், இந்தப்பதில் நம்மைத் திகைக்க வைப்பதோடு, நாம் கேள்விப்படாத ஒன்றுமாகும். ஏனெனில், இஸ்ராயேலைச் சுற்றியிருந்த பெரிய சமயங்களுக்குத் தீமை தேவர்களைப்போல்

பழமையானதாகும். இது தேவர்களிடமிருந்து மனிதர் படித்த பாடமாகும். ஆகவே, மனிதர்களும் தேவர்களும் அதே நேரத்தில் இதற்குப் பொறுப்புள்ளவர்களாகவும் பொறுப் பில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் அவரவர்கள் தன்மைக்கேற்ப நல்லவையும் தீயவையும் சேர்ந்த வாரிசாக, ஆனால் இவற்றை வேறுபட்ட அளவில் கொண்டவர்களாக, இருக்கிறார்கள். இது பிற சமயங்களின் கருத்தாகும். மறுபுறம் கடவுள் நல்லவர்; படைப்புக்கள் நல்லவை; படைப்பிற்குப் பிறகே தீமை தோன்றியது என்ற விவிலியம் கூறும்போது, தீமைக்குரிய பொறுப்பைப் படைக்கப்பட்ட சுதந்தரத்தின் மீது அது சுமத்துகிறது.

இந்தப் பொறுப்புணர்வு மனித தராதரத்தைவிட அதிகமானது. பேயின் சோதனை பற்றிய கதையைக் கூறும்போது விவிலிய விவரிப்பு இதைப்பற்றி உணர்கிறது. மனிதன் தன் பாவநிலையில் தன்னுடைய பொறுப்புணர்வால் திணற அடிக்கப்பட்டாலும், அதற்காக அந்தப் பொறுப்புணர்வை நிராகரிக்க முடியாதென்பதும் விவிலியத்திற்குத் தெரியும். அவன் விரும்பாத தீமையைப் பாவத்திலிருந்து வெளிக்கொணரும் ஊழையும், அதே சமயத்தில் பலவீனமும் (காண். ஊன்) கொடுமையும் சேர்ந்த கலவையான அவனது குற்றங்கள்பற்றிய சரியான விளக்கத்தையும் ஒவ்வொரு பாவியும் இப்பக்கங்களில் காணலாம். உலகில் உள்ள தீமைக்குரிய பொறுப்பில் தன்னுடைய பங்கையும் அவன் இவற்றில் காணலாம்.

2. சட்டம் இல்லாதிருந்தால் பாவம் என்ன என்பதை அறிந்திருக்க மாட்டேன் (உரோ 7:7): இஸ்ராயேலுக்குச் சட்டம் கடவுளால் கொடுக்கப்பட்ட "வழித்துணை" ஆகும் (கலா 3:24). இது மிகவும் ஆழ்ந்த பொறுப்புணர்வை இஸ்ராயேலிடம் தோற்றுவித்தது. "நீ இதைச்செய்ய வேண்டும்...நீ அதைச் செய்யக்கூடாது..." என்று அது கூறியபோது, அஃது ஒவ்வொரு இஸ்ராயேலனின் கண்முன்பாகவும் அவனுடைய பொறுப்புகளைக் கொண்டு வந்ததோடு, அவன் இவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தான் என்பதையும் நிரூபித்துக்காட்டியது. சூழ்நிலை வேறுபாடுகளுக்கும் உள் எண்ணங்களின் பாதிப்புக்கும் இடம் அளிப்பதன் மூலம், சட்டம் அவனது மனச்சாட்சியை நயப்படுத்தித் தூய்மைப் படுத்தியது. இறைவன் விரும்புவது நல்லதை, கண்டிப்பதோ தீயதை என்று காட்டும்போது, அவனது செயலுக்கு அஃது அளவில்லாத மதிப்பளித்தது. சட்டத்தை உடன்படிக்கையோடு சேர்த்துக் கொண்ட போது, வாழ்க்கை முழுவதையும் கடவுளுக்காக அல்லது கடவுளுக்கு எதிராக என்கிற தேர்வில் அடக்கியது. உண்மையில், "சட்டம் இல்லாமலே" பிற மதத்தினர் தங்கள் பொறுப்புகளைத் "தங்கள் உள்ளங்களில்" (உரோ 2:15) கண்டு கொள்ளக்கூடிய தன்மையை உடையவர்களாக இருக்கின்றனர். ஆனால், சட்டம் இஸ்ராயேலரை, மனிதர்களின் செயல்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த "ஞானமும் விவேகமும் கொண்ட" மக்களாக ஆக்கியது (உப 4:6).

3. நீ செய்ததை ஏற்றுக்கொள் (எரே 2:23): சட்டம் பொதுப்படையாகக் கூறியவைகளைச் சில நேர்மையற்ற இளவரசர்களுக்கும், கற்பனை உலகில் நடமாடும் மக்களுக்கும் செயல்முறையில் எடுத்து விளக்கவும், அவர்களது பொறுப்புக்களை உணரவைக்கவும், இறைவாக்கினர் அனுப்பப்பட்டார்கள். சாமுவேல், நாத்தான் (1 சாமு 3:13-14; 2 சாமு 12:10-12) தொடங்கி எசாயாவின் கடைசி வழித்தோன்றல் வரை (எசா 59:8-10), ஏற்கெனவே இருக்கின்ற அல்லது இனிமேல் வரப்போகின்ற கெடுதல்களின் சூழ்நிலையில் இந்த இறைவாக்கினர்கள் ஏறக்குறைய எப்போதும் தலையிட்டார்கள். "இப்படிப்பட்ட தீய செயலை நீ செய்ததால், இப்படிப்பட்ட தீமை உன்னையும் தாக்கிற்று..." ஒவ்வொரு தேசியப் பேரிடரும், மக்களின் பொறுப்புக்களை இன்னும் உன்னிப்பாகப் பார்ப்பதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பமாக அமைந்தது.

எசேக்கியேலைப் பொருத்தமட்டும், நாட்டின் மிகப்பெரிய கேடு நாடு கடத்தப்படுதலாகும். இஸ்ராயேல் தன்னுடைய பொறுப்புகளிலிருந்து தவறிவிட்டதனால் வீழ்ச்சியுற்றது. ஆனால், ஒவ்வொரு தனிப்பட்ட இஸ்ராயேலனுக்கும் எல்லாம் கூடுமானவையாக இருந்தன. தன்னுடைய பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதும், வாழ்வையோ சாவையோ தெரிந்துகொள்வதும் ஒவ்வொருவருடைய கையிலும் இருந்தது. "நீதிமானின் நீதி அவன்மீது இருக்கும்; பொல்லானின் பொல்லாங்கு அவன்மீது இருக்கும்" (எசே 18:20).

(சங் 51:4): சட்டம் கூறப்பட்டவைகளையும், இறை வாக்கினரால் கூறப்பட்டவைகளையும் பிரதிபலிக்கும் பாவங்களை அறிக்கையிடுதல் என்பது, விவிலியத்தில் அது கொள்ளும் தோற்றத்தில், பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அடையாளமாக இருக்கிறது. ஒன்றையும் விட்டுவிட வில்லை என்று உறுதி செய்யும் பொருட்டு பிழைகளின் பட்டியலைச் செய்யவுமில்லை; பாவங்களின் அதிகக் கூடுதலான தொகையை எண்ணிக்கையிடவும் இல்லை. இது கடவுளின் நீதியையும் மனிதனின் அநீதியையும் நேருக்குநேர் கொண்டு வருகிறது (எசா 59:9-14; தானி 3:27-31; சங் 51:6;...). பெற்றுக்கொண்ட தண்டனை தகுந்த தண்டனைதான் என்று ஏற்றுக்கொள்வதற்காக மாத்திரமல்லாது, மிகவும் ஆழ்ந்த நன்றி செலுத்துதலை, அணுகும் பக்கமிருந்து பார்க்கிறது. அதன் விளைவாக, பிழையின் சுமை பாவியின்மேல் தங்குகிறது. கடவுள் இதற்குப் பொறுப்பல்லர் என்று காட்டுகிறது. "என் தலைவரே! நீதி உமக்குரியது. இன்றுவரை எமக்கு வெட்கமே!" (தானி 9:7; பரூ 1:15). ஆதலால், மனமாற்றத்துக்குரிய செபம், மூலக்கதையில் தெளிவாக உள்ள உட்கருத்தைத் திரும்பவும் கண்டுணர்கிறது: கடவுள் நல்லவர், பாவிதான் தீமைக்குப் பொறுப்பு.

5. பவுலைப் பொருத்தமட்டும், நற்செய்தி என்பது கடவுளின் நீதி மற்றும் பாவிகளின் பொறுப்புணர்வு பற்றிய முடிவான வெளிப்பாடாகும். உரோமையருக்கு எழுதிய திருமுகத்தின் முதல் மூன்று அதிகாரங்களும், பாவத்தின் தீவிரமாக அழிக்கும் ஆற்றலையும், மனிதனுக்கு முன்னுள்ள திறனாய்வுத் தேர்வுகளின் சுமையையும் பற்றிப் பேசுகிறது. அதே நேரத்தில் மனிதனுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட இந்த ஊழுக்கு விளக்கமும் அளிக்கிறது. கடவுளின் சினம், மனிதனுடைய செயல்களுக்கு அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்து, அவனுடைய பொறுப்புணர்வு, எதிர்காலத்தில் நடக்கும் என்று அவன் முன்னோக்கக்கூடிய அல்லது அவன் விரும்பும் எதையும் கடந்து நிற்கச் செய்ததால், இந்த முரண்பட்ட ஆனால் உண்மையான ஊழ், கடவுளைப்போன்ற பெரிதான ஓர் அன்பின் மறு பக்கமாகும். ஏனெனில், "அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காக, கடவுள் அனைவரும் கீழ்ப்படியாமையின் கொடுமையால் கட்டுண்டு கிடக்கச் செய்தார்" (உரோ 11:32).

கிறிஸ்துவின் பாடுகளில் இத்திட்டம் வெளிப்படையாகத் தெரிகிறது. இறைமகனது மரணத்தைக் கொண்டு வந்த ஒன்று சேர்ந்த பல்வேறு பொறுப்புகளும் சமமல்லாததுடன் (காண். யோவா 19:11; அ.ப. 3:13-14), அவைகளின் மொத்தமும் அல்ல (அ.ப. 3:17). ஆனால், அவை உண்மையானவை; அவை ஒன்று சேர்ந்து இந்தப் பயங்கரமான குற்றத்தைப் புரிந்தன. ஆகையால், குழந்தைப்பருவத்திலிருந்த திருச்சபையில் போதிக்கப்பட்ட நற்செய்தி, எருசலேமை முழுமையாகக் கருத்தில் கொண்டு, அதனுடைய பொறுப்பை எப்போதும் நினைவுபடுத்தியது. "நீங்கள் அவரைக் கொலை செய்தீர்கள்" (அ.ப. 2:23; 3:14; 4:10; 5:30;...). மனமாற்றத்தின் மூலமும் தன்னுடைய பொறுப்பை உணர்வதன் மூலமும் மாத்திரமே பாவி விசுவாசத்தை அடைய முடியும்.

பொறுமை (PATIENCE)

I. பாவம் நிறைந்த நாடுகளுடன் செயல்படுவது

போலவே, தன்னுடைய "வணங்காக் கழுத்துடைய" மக்களுடன் செயல்படும்போதும், இறைவன் தனது பொறுமையை வெளிப்படுத்துகிறார். ஏனெனில், அவர் அவர்களை அன்பு செய்தார்; அவர்களைக் காப்பாற்ற விரும்பினார். இயேசுவையே உயரிய வெளிப்பாடாகவும், நிறைவான மாதிரியாகவும் கொண்ட இந்த இறைப் பொறுமையானது மனிதரால் பின்பற்றப்பட வேண்டும் (எபே 5:1; மத் 5:45). தனது தலைவரின் எடுத்துக்காட்டைப் பின்பற்றுகிறவராய்ச் சீடன், நம்பிக்கையால் நிரப்பப்பட்டு, தொடர்ந்த மகிழ்ச்சியாலான பற்றுறுதியுடன் துன்பத்தையும் சோதனைகளையும் எதிர்கொள்ள வேண்டும். மேலும், மிக்க தாழ்ச்சியுடன் தனது அயலாரின் தவறுகளையும் சாந்தத்துடனும் அன்புடனும் தினமும் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

II. இறைவனுடைய பொறுமை

1. பழைய ஏற்பாடு: "கடந்த காலத்தில் தம்முடைய திருவருட் செயல்முறையைக் காட்ட விரும்பிய கடவுள் பொறுமையாய் இருந்து, மனிதர் செய்த பாவங்களைத் தண்டிக்காமல் விட்டார்" (உரோ 3:25-26). இக்காலத்தில் தன்னுடைய மீட்பின் நீதியை வெளிப்படுத்தும் எண்ணத்துடன் தனது மக்கள் மற்றும் மற்ற நாட்டினருடைய பாவங்களை இறைவன் சகித்துக் கொண்ட காலமாக, பழைய ஏற்பாட்டைப் பவுல் கருதுகிறார் (1 பேதுரு 3:20; உரோ 9:22-24). அதனுடைய வரலாற்றுக் காலத்தில், இறைவனுடைய இந்தப் பொறுமையினைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மேன்மேலும் ஆழ்ந்துணர்ந்து அறிந்து கொண்டனர். மோசேக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாட்டின் நேரத்தில், "இரக்கமும் தயவும் உள்ள இறைவன் சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர்; ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்; கொடுமையையும், குற்றத்தையும், பாவத்தையும் மன்னிப்பவர்" என்று யாவே அறிவிக்கிறார். ஆனால், அவரே எதனையும் தண்டிக்காமல் செல்ல அனுமதிக்கமாட்டார். தந்தையருடைய கொடுமைக்கான தண்டனைகளைப் பிள்ளைகள் மேலும், பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும், மூன்றாவது மற்றும் நான்காவது தலைமுறை வரை சுமத்துவார் (யாத் 34:6-7; காண். எண் 14:18). தொடரும் வெளிப்பாடுகள் மேன்மேலும் தந்தையின் பொறுமையினையும் இரக்கமிக்க அன்பையும் வலியுறுத்தும். இத்தந்தை நாம் எதனால் அமைக்கப்பட்டுள்ளோம் என்பதை அறிபவர்; சினம் கொள்ளத் தயங்குபவர்; அன்பு நிறைந்தவர். அவர் நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை (சங் 103:8; சீரா 18:8-14). சினம் மற்றும் தீர்ப்பினுடைய கருத்துக்கள் ஒருபோதும் மறையாவிட்டாலும், இறை மன்னிப்பின்மீது இறைவாக்கினர்கள் அதிக அழுத்தம் அளிக்கின்றனர். தன்னுடைய அச்சுறுத்தல்களினின்று மனந்திரும்ப இறைவன் எப்போதும் தயாராக இருப்பதைச் சில பகுதிகள் காட்டுகின்றன (யோவா 2:13-14; யோனா 4:2). ஆனால், இறைவனுடைய பொறுமையானது ஒரு போதும் பலவீனமன்று. அது மனமாற்றத்திற்கு அழைக்கிறது; "உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்; ஏனெனில், அவர் அருள் நிறைந்தவர்; இரக்கமிக்கவர்; நீடிய பொறுமையுள்ளவர்; பேரன்புமிக்கவர்" (யோவே 2:13; காண். எசா 55:6). இப்பொறுமையினால் பயனடைவது தான் மட்டுமன்று என்பதை இஸ்ராயேல் படிப்படியாக அறிந்து கொள்கிறது. நாடுகளும் ஆண்டவரால் அன்பு செய்யப்படுகின்றன. மனந்திரும்பும் அனைத்து மனிதருக்கும் இறைவனுடைய இரக்கம் உரியதாக உள்ளது என்பதை யோனாவின் கதை நினைவூட்டுகிறது.

2. புதிய ஏற்பாடு

அ) இயேசு: பாவிகள்பால் கொண்ட தனது மனப்பான்மையினாலும், தனது போதனையினாலும் இயேசு இறைப் பொறுமையினை விவரித்து அதற்கு மனித உரு அளிக்கிறார். தன்னுடைய பொறுமையற்ற, பழிவாங்கும்

மனப்பான்மையுடைய சீடர்களை அவர் கண்டிக்கிறார் (லூக் 9:55). பாவிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று விரும்புகின்ற இறைவனுடைய பொறுமையின் வெளிப்பாடுகளாக உள்ள கனிகொடா அத்தி மரம் (13:6-9), ஊதாரி மைந்தன் (15), மற்றும் இரக்கமற்ற ஊழியன் (மத் 18:23-35) முதலிய உவமைகள் அவரது சீடர்களுக்கு அளிக்கப்பட்ட பொறுமை மற்றும் அன்பின் படிப்பினைகளாக உள்ளன. லூக்காவினால் சிறப்பு அழுத்தம் அளிக்கப்பட்டுள்ள, பாடுகளில் காணப்படும் இயேசுவின் மன உறுதியானது, துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள அனைத்து மனிதருக்கான பொறுமையின் மாதிரியாக, அமையும்; ஆனால், அவர்கள் தங்களுடைய துன்பங்களின் பொருளையும் மீட்பின் மதிப்பையும் இப்போதுதான் புரிந்துகொள்ள ஆரம்பிக்கின்றனர்.

ஆ) அப்போஸ்தலர்: இயேசுவின் வருகைக் காலம் தாழ்த்தப்படுவதாகத் தோன்றுவதில் அப்போஸ்தலர்கள் இறைவனுடைய பொறுமையின் வெளிப்பாட்டினைக் காண்கின்றனர். "ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்ற காலம் தாழ்த்துவதாகச் சிலருக்குத் தோன்றுகிறது; ஆனால், அவர் காலந்தாழ்த்துவதில்லை; உங்கள் பொருட்டுப் பொறுமையாயிருக்கிறார்; ஒருவரும் அழிவுறக்கூடாது; எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்றிருக்கிறார்" (2 பேதுரு 3:9,15). ஆனால், இறைவனுடைய நன்மைத்தனம், பொறுமை, நீண்ட சகிப்புத் தன்மை ஆகியவற்றை மனிதன் புறக்கணித்தால், தன்னுடைய கடின, மனந்திரும்பா இதயத்தின் மூலம் இறைவனுடைய நீதித்தீர்ப்பு வெளிப்படுத்தப்படும் சினத்தின் நாளில் விழப்போகும் தண்டனையைத் தனக்கெதிராகச் சேர்த்து வைப்பவனாகிறான் (உரோ 2:5). இதன் காரணமாகவே, இன்று இறைவனுடைய அனுதின பொறுமையும், மனமாற்றத்திற்கான அவரது அழைப்பும் நீடித்திருக்கும் வரை, தேர்ந்தெடுக்கப்பட்டோர் அவரது வார்த்தைக்குச் செவி மடுத்து, இறைவனின் சமாதானத்தில் நுழைய முயற்சி எடுக்க வேண்டும் (எபி 3:7-4:11).

III. மனிதனின் பொறுமை: மனிதன் இறைவனுடைய மற்றும் இயேசுவினுடைய பொறுமையினால் தூண்டப்பட வேண்டும். இறைவன் அனுமதிக்கின்ற துன்பத்திலும், துயரத்திலும் மனிதன், நம்பிக்கையும் மீட்பும் அளிக்கின்ற இறைவனிடமிருந்தான தனது வலிமையினைப் பெற வேண்டும். அன்றாட வாழ்வில் தனது சகோதரருடனான. ஒரு மனிதருடைய பொறுமையானது, அவர்கள்பால் அவன் கொண்டிருக்கும் அன்பிற்கு ஓர் அறிகுறியாகும்.

1. இறைவன் முன்னிலையில்: துன்பங்களால் சோதிக்கின்ற அல்லது துயரங்களை அனுமதிக்கின்ற இறைவன் முன்னிலையில் இத்துன்பங்களின் பொருளைப் படிப்படியாகக் கண்டுபிடிக்கின்ற மனிதன், தனக்குப் பலனளிக்கின்ற பொறுமையுடன் அவற்றை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்கிறான்.

துன்பமானது பாவத்திற்கான ஒரு தண்டனையன்று என்பதை யோபு புரிந்து கொள்கிறார். துன்பத்தை எதிர்கொள்ளும்போது தனது பொறுமையினை அவர் காட்டுகிறார். இஃது உண்மையில் அவருடைய விசுவாசத்திற்கான ஒரு சோதனையாகும். இம்மறைபொருளை எதிர்கொண்ட நிலையில் அவர் தாழ்மையுடன் தன்னைக் கையளிக்கிறார். ஆனால், இன்னும் அவர் தன்னுடைய சோதனையின் பொருளையோ, மதிப்பையோ, உணர்ந்துகொள்ளவில்லை. மெசியா அரசினை ஏற்படுத்துவதற்கெனக் குறிக்கப்பட்ட அனைத்துச் சோதனைகளையும் உறுதியோடு மேற்கொண்ட துன்புறுத்தப்பட்ட யூத மக்களின் பொறுமை இத்தகையதே (1 மக்; 2 மக்; தானி 12:12). துன்புறுத்தப்படும் நீதிமான்கள் ஆண்டவருடைய வார்த்தையிலும், அன்பிலும் நீடித்த நிலையில்

நம்பிக்கை கொள்ளலாகாதா (சங் 130:5; 24:3.5.21; சீரா 2)?

"மகிமையில் நுழைவதற்காகக் கிறிஸ்து துன்புற்றிக்க வேண்டும்" என்பதை அறிந்துள்ள கிறிஸ்தவன், அவருடைய மாதிரியைப் பின்பற்றிச் சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் முழு விசுவாசத்துடன் அடிபணிய வேண்டும். இயேசுவினுடைய இரண்டாம் வருகையிலான மீட்பின் நம்பிக்கையுடன் அவர் அவற்றை ஏற்கிறார். தன்னுடைய துன்பங்கள் மற்றும் பொறுமையின் மூலம் தான் மீட்பருடன் ஒத்துழைப்பதையும் அவன் அறிந்துள்ளான். "அவரது சாவின் சாயலைத் தன்னுள் ஏற்று அவருடைய பாடுகளில் பங்கு பெறுகிறான்" (பிலி 3:10; உரோ 8:17). துன்ப நேரத்தில் "துன்பம் மற்றும் பொறுமையின் மாதிரிகளாக, ஆண்டவரது பெயரால் பேசிய இறைவாக்கினர்களை" அவன் ஏற்கிறான் (யாக் 5:10). பொதுவாக, பழைய ஏற்பாட்டில் இறைவனுடைய அனைத்துப் பெரிய ஊழியர்களையும் (எபி 6:12; 11), குறிப்பாக ஆபிரகாம் (6:15) மற்றும் யோபு (யாக் 5:11) ஆகியோரையும் ஏற்கிறான். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, அவன் இயேசுவின் பொறுமையைப் பின்பற்றுவான் (அ.ப. 8:32; எபி 12:2-3; 2 தெச 3:5). தனது கண்களை அவர்மீது பதித்த நிலையில் "தனக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவான்" (எபி 12:1-2). இந்தப் பொறுமையானது அன்பினைப் போன்று ஆவியினுடைய ஒரு கொடையாகும் (கலா 5:22; 1 கொரி 10:13; கொலோ 1:11). சோதனையால் முதிர்ச்சி அடைந்த (உரோ 5:3-5; யாக் 1:2-4), தன்னுடைய முறையின்போது அதில் நிலைத்து நிற்றல் ஏமாற்றாத நம்பிக்கையினை உருவாக்குகிறது (உரோ 5:5).

இவ்வாறாக இறைவனால் வலுப்படுத்தப்பட்டு, இறைவாக்குகளால் ஆறுதலளிக்கப்பட்ட நிலையில் (உரோ 15:4), இயேசுவின் பெயருக்காக நீடித்திருக்கும் சோதனைகளை ஏற்றுக்கொள்வதில் கிறிஸ்தவன் பிரமாணிக்கமுள்ளவனாக இருக்கலாம் (திருவெளி 2:10; 3:21). இவ்வாறு, இறுதிவரை நிலைத்திருப்பவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பேறுகளை அவன் பெறுவான் (மத் 10:22; 5:11-12; யாக் 1:12; 5:11; காண். தானி 12:12). இந்நிலையானது இறுதியான பெரும் இன்னலின்போது சிறப்பான முறையில் உதவியாக இருக்கும் (மாற் 13:13; லூக் 21:19). அப்போஸ்தலர்களைப் பொறுத்த வரையில், கிறிஸ்துவினுடைய பாடுகள் மற்றும் பொறுமையுடன் இன்னும் நெருக்கமாக உள்ள ஒன்றிப்பிற்கு அவர்கள் அழைக்கப்படுகின்றனர். தங்களுடைய இன்னல்கள், துயரங்கள், சோர்வு ஆகியவற்றில் நிலைத்திருத்தல் மூலமாக, அனைத்திலும் கிறிஸ்துவினுடைய பணியாளர்களாக அவர்கள் தங்களைப் பறைசாற்றுகின்றனர் (2 கொரி 6:4; 12:12; 1 திமொ 6:11; 2 திமொ 2:10; 3:10). அவர்களுடைய துன்பம் மற்றும் பொறுமையின் வாயிலாகக் கிறிஸ்து வாழ்வானது அவர்களது உடல்களில் வெளிப்படுத்தப்படுகிறது. மரணமானது தனது வேலையை அவர்களில் செய்வதனால், வாழ்வானது தனது பணியைக் கிறிஸ்தவரில் செய்ய முடியும் (2 கொரி 4:10-12).

2. அயலார் முன்னிலையில்: தனக்குச் சினம் மூட்டுகின்ற தனது அயலாரின் முன்னிலையில், "வலிமை உடையவனை விடப் பொறுமை உடையவனே சிறந்தவன்" என்பதை ஞானி தனக்குத்தானே நினைவுபடுத்திக் கொள்வான் (பழ 16:32; காண். 25:15; திருவுரை 7:8). எல்லாவற்றிற்கும் மேலாக, தனது அப்போஸ்தலர்களுக்கும் பாவிகளுக்கும் இயேசு காட்டிய பொறுமையை அவன் பின்பற்றுவான். இரக்கமற்ற நிலைக்கு அப்பாற்பட்ட நிலையில் (மத் 18:23-35), அவன் சகித்துக்கொள்வான் (5:45). அவனது அனுதினப் பொறுமையானது அவனது அன்பை வெளிப்படுத்தும் (1 கொரி 13:4). தன்னுடைய அழைப்பிற்கேற்ப வாழ்வதற்கென, "தாழ்ச்சியிலும், சாந்தத்திலும், பொறுமையிலும் மற்றவர்களுக்கு அவன் அன்புடன்

ஆதரவளிப்பான்" (எபே 4:2; கொலோ 3:12-13; 1 தெச 5:14). இவ்வாறாக, அவன் அன்பு செய்கின்ற, மன்னிக்கின்ற, காப்பாற்ற விரும்புகின்ற, பொறுமையுள்ள இறைவனின் உண்மையான மகனாகவும், இதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவின் சீடனாகவும் இருப்பான் (மத் 11:29).

பொற்கன்று (GOLDEN CALF)

கன்றுக்குட்டி அல்லது காளையின் வடிவில் அமைக்கப்பட்ட ஓர் உருவம் அல்லது சிலை. பழங்கால மேற்காசிய சமயத்தில் இது பொதுவாகக் காணப்பட்டது. பழைய ஏற்பாட்டில் பதிதத்தைக் குறிக்கும் ஏளனச் சொல்லாகும்.

(சீனாய்) மலையிலருந்து மோசே இறங்கிவரத் தாமதித்ததைக் கண்டு அயர்ச்சியடைந்த இஸ்ராயேலர், அவர்களை வழி நடத்தும் தெய்வங்களை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கும்படி ஆரோனைத் தூண்டினர் (யாத் 32:1-35). யாவேயின் உருவத்தைச் செய்வது இதன் நோக்கமா என்று வாசகம் கூறவில்லை. எது எப்படியிருந்தாலும் ஆரோன் மறுக்கவில்லை; செயல்படத் தயங்கவில்லை. அவர் மக்களிடமிருந்து பொற்காதணிகளைச் சேர்த்து, உருக்கி, வார்ப்பு அச்சில் வடிவம் கொடுத்து ஒரு வார்ப்புக் கன்றுக்குட்டியைச் செய்தார். இதுதான் தங்களை எகிப்து நாட்டினின்று நடத்திவந்த தெய்வங்கள் என்று அறிக்கையிட்டு ஆர்ப்பரித்தனர். இச்சிலைக்குமுன் ஒரு பலிபீடம் கட்டி, யாவேக்கு எடுக்கும் ஒரு விழாவை அறிவித்தனர். அடுத்த நாள் அளிக்கப்பட்ட பலிகள் விரைவில் கட்டுப்பாடற்ற களியாட்டமாக மாறின. மோசேயும், யோசுவாவும் மலையிலிருந்து இறங்கிவந்து பாளையத்தை அடைந்தபோது, இக்காட்சி அவர்களுக்குக் கோபம் மூட்டியது. மோசே தம் கையிலிருந்த பத்துக் கட்டளைகளைக் கொண்ட பலகைகளை மலையடிவாரத்தில் வீசியெறிந்து உடைத்துப்போட்டார் . பின்பு, சிலைகளை நெருப்பில் சுட்டெரித்து மிருதுவான பொடியாக்கி, தண்ணீரில் தூவி, இஸ்ராயேல் மக்களைக் குடிக்கச் செய்தார் (காண். உப 9:15-21). மோசே பிரமாணிக்கமுள்ள லேவியர்களிடம் வாளால் பாளையத்தில் ஒழுங்கமைவு ஏற்படுத்த கட்டளையிட்டபின், நாடு இக்குற்றத்திலிந்து தூய்மைப்படுத்தப்பட்டது. யாவே அடையாளம் தெரியாத கொள்ளைநோயை அனுப்பி, பாவம் செய்தவர்களைத் தண்டித்தார்.

பிளவுபட்ட அரசாட்சிக் காலத்தில் இஸ்ராயேலின் முதலாம் எரொபவாம் (கி.மு. 922-901) பாரம்பரிய புனிதத் தலங்களாகிய தாணிலும், பெத்தேலிலும் (1 அர 12:26-33) பொன்னால் இரு கன்றுக்குட்டிகளைச் செய்து இவ்விடங்களில் வைத்து, "இதோ, உங்களை எகிப்திலிருந்து மீட்டு வந்த உங்கள் தெய்வங்கள்" என்று அறிவித்தான். இஃது அவனுடைய அரசை ஏற்புடையதாக்கச் செய்த திட்டத்தின் ஒரு பகுதியாகும். எரொபவாம் யாவேயின் வழிபாட்டை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், அவனது செயல் பாவமாகக் கண்டனம் செய்யப்பட்டது (1 அர 12:30; 2 அர 10:29; 17:16; 2 நாள் 13:8). யூதாவின் முதல் அரசனான ரெகபயாமும் (கி.மு. 922-915) புனித இடங்களில் கன்றுக்குட்டிகளை வைத்தான் (11:15). கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இறைவாக்கினர் ஓசேயாவின் வாக்குகளில் குறிக்கப்படும் கன்றுக்குட்டி வழிபாடு (ஓசே 8:5-6; 10:5-6; 13:2) இத்தகைய தவறுகளைச் சுட்டிக்காட்டலாம் அல்லது இஸ்ராயேலின் சமயத்தில் புகுத்தப்பட்ட கலப்பு மதப்பண்பைப் பொதுவாகச் சுட்டலாம்.

பொற்கொல்லர் (GOLDSMITH)

பொற்கொல்லர்கள் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றார்கள். இவர்கள் பொற்கொல்லர் சங்கம் வைத்திருந்ததாகத் தெரிகின்றது (நெகே 3:8; 31-32). இவர்கள் ஆபரணங்களும், சிலைகளும் செய்தார்கள். பொற்கொல்லர்கள் சிலைகள் செய்தார்கள் (எசா 40:19; 41:7; 46:6; எரே 10:9. 14; 51:17). மத்திய

வெண்கலக் காலத்தில், தங்கவேலை நுணுக்கங்கள் அதிகமாக இருந்தன.

பொற்சாடி (GOLDEN URN)

எபி 9:4-இல் கூறப்படும் மன்னாவைக் கொண்டிருந்த பொற்சாடியாகும். இதன் வடிவம் பற்றி அகழ்வாராய்ச்சியின்படி எந்தச் சான்றும் இல்லாவிட்டாலும், இங்குக் கூறப்படும் சாடி, யாத்திரைக் காலத்தில் இரண்டாம் ராமசேசுக் காலத்தைச் சேர்ந்த எகிப்திய வடிவம் கொண்டதாக இருக்கலாம்.

பொன், தங்கம் (GOLD)

மற்றெந்த உலோகத்தைக் காட்டிலும் தங்கம் என்ற உலோகம் நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்படுகின்றது. பல முறைகளில் வெள்ளியுடன் சேர்த்துத் தங்கமும் குறிப்பிடப்படுகின்றது. பழைய காலத்தை நினைவுபடுத்தி வெள்ளி முதலில் குறிப்பிடப்படுவது குறிப்பிடத்தக்கது. அப்பொழுது தங்கம் வெள்ளியைக் காட்டிலும் குறைவாக மதிப்பிடப்பட்டது.

தங்கம் என்ற பொதுப்பெயரைத் தவிர்த்து, மற்றும் பல சொற்களும் தங்கத்தைக் குறிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் உண்டு. இப்பெயர்கள் அதன் சுத்தமான தன்மையையும், வண்ணத்தையும் பொருத்திருக்கலாம். ஆனால், அதன் உண்மையான பொருள் தெரியவில்லை. அவையாவன: தூய தங்கம், நல்ல தங்கம், தெரிந்தெடுக்கப்பட்ட தங்கம்.

புதிய ஏற்பாட்டில் ஞானிகளால் காணிக்கைகளாகக் கொடுக்கப்பட்ட பொருட்களில் பொன் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது (மத் 2:11). பன்னிரண்டு சீடர்கள் தூதுரைக்க அனுப்பப்பட்டபோது பொன், வெள்ளி, செம்பு எதையும் அவர்கள் மடியில் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று இயேசு அறிவுரை கூறுகின்றார் (மத் 10:9; காண். அ.ப. 3:6; 20:33). பொன் ஆபரணங்கள் 1 திமொ 2:9; 1 பேதுரு 3:3; திருவெளி 1:13; 18:16 ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்படுகின்றன. புதிய எருசலேம் பழுதற்ற கண்ணாடி போன்ற பசும்பொன்னாலானது (திருவெளி 21:18.27).

அவிலா மற்றும் பர்வயிம் ஆகிய இடங்கள் தங்கம் கிடைக்கும் இடங்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் (ஆதி 2:11-12; 2 நாள் 3:6), ஓபிர் நாடே தங்கத்திற்குப் பாரம்பரிய ஊற்றாக இருந்தது (1 அர 9:28; 10:11; யோபு 22:24). இந்நாட்டில் தங்கம் கிடைத்தது பற்றி கி.மு. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டத் துணுக்குகள் மூலம் தொல்பொருள் ஆய்வுகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொன்தகடு, அடிக்கப்பட்ட வேலை (GEATEN GOLD)

மெல்லிய தகடாக அடிக்கப்பட்ட தங்கம்; கீழ்த்தரமான உலோகங்களின் மேல் மேலுறையாகப் பயன்படுத்தப்பட்டது. சாலமோனால் செய்யப்பட்ட தங்கக் கேடயங்களைக் குறிக்க மட்டும் இந்தச்சொல் பயன்படுத்தப்பட்டது (1 அர 10:16-17; 2 நாள் 9:15-16). இவை முழுவதும் தங்கத்தால் செய்யப் பட்டவையல்ல; ஆனால், தங்கத்தகடால் மூடப்பட்டவை. உடன்படிக்கைப் பெட்டகத்தின் விளக்குத்தூண்கள் தங்கத்தகடால் செய்யபப்பட்டவை (யாத் 25:18.31.36; 37:7.22; எண் 8:4; 10:2). எசா 4:19-இல் சொல்லப்பட்டுள்ளது போல், சிலைகள் வெண்கலத்தால் செய்யப்பட்டு அதன்மேல் தங்கத்தகடு மூடப்பட்டது. இவை தெல் அபு அவாம் மற்றும் மெகிதோவிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பொன் மெழுகு, தைல வகை (BALM)

பழங்காலத்தில் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டாலும், இஃது எதிலிருந்து செய்யப்பட்டது என்று தெளிவாகத் தெரியவில்லை. இஃது ஆறுமுறை விவிலியத்தில்

கூறப்பட்டுள்ளது. ஆதி 37:25; 43:11 ஆகிய இரு பகுதியிலும் கிலயாதிலிருந்து வணிகர்கள் ஒட்டகங்களில் இதை ஏற்றிச் சென்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. எசே 27:17-இல் கிலாயதிலிருந்து தீர் நாட்டிற்கு இஃது ஏற்றுமதி செய்யப்பட்ட பொருளாகும் எனக் கூறப்பட்டுள்ளது. தற்கால எழுத்தாளர்கள் பல பெயர்களில் இதைக் குறிக்கின்றனர். எனினும் சரியான பெயர் கூறக் கடினமாக உள்ளது. எரிகோவில் இஃது அதிகம் இருந்ததாகவும் இங்குள்ள புதர்ச்செடிகள் இம்மரப்பிசினைச் சுரந்ததாகவும் பிளினி கூறுகிறார். ஆனால், கலிலேயக் கடலுக்கு அப்பாலும் இது காணப்பட்டதாக ஸ்ட்ராபோ கூறுகின்றார். இருந்தாலும் இருவரும் அரேபியா, அபிசீனியாவில் உள்ள தைல வகைகளை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார்.

கலிலேயாக் கடலின் தென் கிழக்கே பிசின் மரங்கள் இருந்ததாக விவிலியம் கூறவில்லை. கிழக்கிலிருந்து கிலயாது வழியாகச் சென்ற ஒட்டகங்களில் உள்ள பிசின் அந்த இடத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் என தியோபுரோததசு கூறுகின்றார். ஆனால், அவ்விடத்தில் அப்படிப்பட்ட மரங்கள் வளர்ந்ததாகத் தெரியவில்லை. யாக்கோபு எகிப்திலுள்ள யோசேப்புக்கு (ஆதி 43:11) அனுப்பிய தைல வகைகள் பாலஸ்தீனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். அது கிலயாதில் உள்ள தைலமாக இருக்க முடியாது. எரே 46:11; 51:8-இல் கூறப்படும் பொன் மெழுகு வட ஆப்பிரிக்கவில் உள்ள ஒரு வகையான செடி என்று அடையாளம் காட்டப்படுகிறது. இது புகழ்வாய்ந்த நோய் தீர்க்கும் சக்தி கொண்ட ஓர் எண்ணெயைச் சுரக்கிறது. எனினும் நோய்தீர்க்கும் சக்தி இந்தப் பொன்மெழுகுக்கு இருப்பதாகக் கூறப்படாததால், வேறு வகையைக் குறிப்பதாகத் தெரிகிறது. பழங்காலத்தில் பொன் மெழுகை நறுமணப் பொருள்களிலும், பிணத்தைப் பாதுகாக்கவும், மருந்துகளிலும் பயன்படுத்தினர்.

பொன்விதி (GOLDEN RULE, THE)

இயேசு கூறிய, “பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என்று விரும்புவனவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” என்ற இந்த வரைமுறைதான், இன்று பொன்விதி என எல்லோராலும் அழைக்கப்படுகிறது. இவ்விதி ஒரு வாழ்க்கைக் குறிக்கோளாகும் (மத் 7:12; லூக் 6:31). இயேசு பொதுவாகப் பெறுபவனைவிட, செய்பவனையே அதிகம் போற்றுகிறார். இந்த விதி பின்பற்றுவதற்கு மிகவும் கடினமானது. இதுவே இதன் சிறப்புக்குச் சான்றாகும். இவ்விதி- ஒரு பொதுமறை விதியாகும். இது போன்ற விதிகள் உலகின் பல மறைகளிலும் காணப்படுகின்றன. இவ்விதியின் நோக்கம் என்னவென்றால் 'அனைவரும் நலம் பெறவேண்டும்' என்பதேயாகும்.

போ

போக்கரேத்து-சபாயிம் (POCHERETH-HAZZEBAIM – கலைமான் வேட்டைக்காரன்)

சாலமோனின் பணியாளர்களின் புதல்வர்கள் குடும்பங்களில், ஒரு குடும்பத்தின் தலைவன். இவர்கள் பாபிலோனியாவிலிருந்து திரும்பி வந்தவர்கள் (எஸ் 2:57; நெகே 7:5).

போக்கிம் (**BOCHIM** – அழுவோர்)

கில்காலுக்கும், பெத்தேலுக்கும் இடையில் அமைந்த ஓர் இடம். அங்கே ஆண்டவரின் தூதர் இஸ்ராயேலரைக் கடிந்து கொண்டதனால், அவர்கள் கூக்குரலிட்டு அழுதார்கள். அதன் விளைவாக அவ்விடத்திற்கு அழுகிறவர்கள் இடம் அல்லது கண்ணீரின் இடம் எனப் பெயர் வழங்கிற்று (நீதி 2:1-5).

இஃது இருந்த சரியான இடம் தெரியவில்லையானாலும், எரிகோவுக்கு மேற்கிலுள்ள மலைப்பகுதியில் இருந்திருக்க வேண்டும். அறிஞர் சிலர் இதைப் பெத்தேலாக அடையாளம் காட்டுவர். ஏனெனில், ஆதி 38:8-இல் பெத்தேல் 'அழுகையின் –கருவாலிமரம்' என்று பொருள்படும் அல்லோன் – பாகூத்து என்றழைக்கப்படுகிறது. இங்கு உரத்த அழுகையுடன் (நீதி 20:23.26; 21:2) மக்கள் இறைவன் திருமுன் அடிக்கடி கூடினர் (காண். நீதி 4:5; 20:26-28).

போக்கு ஆடு, பழி ஆடு (SEAPE GOAT)

பாவநீக்க நாளில், மக்களின் பாவப்பரி காரத்திற்கெனப் பாலை நிலத்திற்கு அனுப்பப்படுமாறு சீட்டுப்போட்டுக் குறிக்கப்பட்ட ஆடு (லேவி 16:8.10.26). காண்க. அசாசேல்.

போசோர் (BOSOR – எரிகின்ற)

யூதா மக்கபேயு கைப்பற்றிய கிலயாதின் நகரங்களில் ஒன்று. கி.மு. 165-இல் ஆலயம் மீண்டும் அர்ப்பணிக்கப்பட்ட பின், இங்கு இருந்த பிறமதத்தினர் யூதர்களைக் கொடுமைப்படுத்தினர் (1 மக் 5:26.36). இஃது ஏல்-லெயாவின் தென் ஓரத்திலுள்ள புசர் ஏல்-அரீரி என்று அடையாளம் காட்டப்படுகிறது. இஃது உப 4:43; யோசு 20:8-இல் குறிக்கப்படும் பெட்சேராக இருக்கலாம்.

போட்சேசு (BOZEZ – பளபளப்பான அல்லது சேறான)

யோனத்தான் பெலிஸ்தியர் பாளையம் வரை ஏற முயன்ற, மிக்மாசுக்கும் கெபாவுக்கும் இடையிலுள்ள கணவாயின் இருமருங்கும் செங்குத்தான பாறைகளும், பற்களைப் போன்ற சிகரங்களும் அங்குமிங்கும் இருந்தன; அவற்றில் ஒன்றுக்குப் போட்சேசு என்று பெயர். இது வாடி சுவெநித்துக்கு வடபுறத்தில் இருந்திருக்கலாம். ஆனால், இருந்த சரியான இடம் தெரியவில்லை.

போதகர் (TEACHER)

இச்சொல்– கிரேக்க இலக்கியங்களில் பல முறை பயன்படுத்தப்படுகிறது. இது பெரும்பாலும் 'அரசன்', 'ஆண்டவர்' என்ற சொற்களோடு இணைத்துக் கூறப்படும் மரியாதைக்குரிய சொல்லாகும்.

புதிய ஏற்பாட்டில் இச்சொல் சில இடங்களில் திருமுழுக்கு யோவான் (லூக் 3:12), யூதமத அதிகாரிகள் (2:46; யோவா 3:10) மற்றும் கிறிஸ்தவர் அல்லாத தலைவர்களுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. மோசேயின் சட்டப்போதகர்கள் திருச்சட்ட அறிஞர்கள் என்றழைக்கப்படுகின்றனர். புதிய ஏற்பாட்டில் போதகர் என்ற சொல், 60 முறை வந்தாலும், 30 முறை இயேசுவையே குறிக்கின்றது. இந்தச் சொல் அனேகமாக எந்த அதிகாரப் பதவியையும் குறிக்கவில்லை. மாறாக, அவர் அதிகாரத்தோடு போதித்ததை மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்பதைக் காட்டுகிறது (காண். மத் 7:29; மாற் 1:22; லூக் 4:32).

இதைத் தவிர மற்ற இடங்களில், 'போதகர்' என்பது புதிய திருச்சபையின் தலைவர்களைக் குறிக்கின்றது; அதிகாரப்பதவியையும் சுட்டுகிறது (அ.ப. 13:1; எபே 4:11; 2 திமொ 1:11; யாக் 3:1). பவுல்,

போதகர்களை அப்போஸ்தலர்கள், இறைவாக்கினர்களுக்கு அடுத்தும், புதுமை செய்பவர்கள், குணமளிப்பவர்கள், ஆள்பவர்கள், பலமொழி பேசுபவர்களுக்கு மேலாகவும் கருதுகின்றார் (உரோ 16:6-8; 1 கொரி 12:28-30).

இளந்திருச்சபையில் இந்தப் போதகர் நற்செய்தி அறிவிப்பாளராக இருந்தார். நற்செய்தியைப் போதிப்பதும், அடிப்படையான இறையியல் உண்மைகளை விளக்குவதும் இவருடைய பணியாகும். இந்தப் பணியே அவருக்கு நாள்முழுவதும் சரியாய் இருந்ததால் அங்கிருக்கும் இறைமக்கள் அவருக்குத் தேவையானவற்றைக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

போதித்தல் (PREACH)

மீட்பின் நிகழ்ச்சியைப் பற்றி வெளிப்படையாக அறிவிப்பதையோ, மதம், ஒழுக்கம் முதலியவைகப் பற்றி அறிவுரை கூறுவதையோ, மறைநூல் பாடம் கற்பிப்பதையோ போதனை அல்லது போதித்தல் என இன்று நாம் அழைக்கிறோம். ஆனால், புதிய ஏற்பாட்டில் போதித்தல் என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொற்கள் "கிறிஸ்து ஆண்டவரும் மீட்பருமாயிருக்கிறார்" என்ற உண்மையை வீறார்ந்த முறையில் பறைசாற்றுதலுக்கு மட்டுமே பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன. இருப்பினும், இவ்வரையறையானது போதனை என்ற சொல்லின் பொதுவான பரந்த பொருளை வறுமையாக்கவோ, வலுக்குறைக்கவோ செய்யவில்லை. அதற்கு மாறாக, அஃது எல்லாப் படிப்பினைகளினதும் அறிவுரைகளினதும் ஊற்றாகிய உயிர்ப்பின் நற்செய்தியைத் திறந்து வெளிப்படுத்தி நிற்கின்றது. இப்பிர கடனத்தினுடைய பறைசாற்றுதலின் வேர்களை நாம் பழைய ஏற்பாட்டிலேயே காண்கிறோம். ஏனெனில், பழைய ஏற்பாட்டின் காலத்தில் இறைவாக்கினர் இறைவனது வாக்குகளைப் போதித்துவந்தனர். இறைவனின் ஆவியால் தூண்டப்பட்டு அவர்கள் இறைத்தீர்ப்பைப் பற்றி அக்காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு வெளிப்படையாக எடுத்துரைத்தனர். அவர்களது வாக்குகள் இறைவனது வாக்காக இருந்தன. புதிய ஏற்பாட்டின் காலத்திலும் போதகர்களின் வாக்குகள் கடவுளது வாக்காகவே இருக்கின்றன. அவ்வார்த்தையான கிறிஸ்து மனுவுரு எடுத்த நாளிலிருந்து, தாம் ஒருவரே போதகர்களின் வாழ்வையும் வாக்கையும் தீர்ப்பிடுபவராக விளங்குகிறார்.

1. கிறிஸ்தவப் போதகத்தின் செய்தி: காலம், இடம், கேட்போர் முதலியவற்றிலெல்லாம் வேறுபாடுகள் இருந்தாலும் திருமுழுக்கு யோவான், கிறிஸ்து, பேதுரு, பவுல் ஆகிய எல்லோரும் (1) மக்களை மனந்திரும்ப அழைத்தனர்; (2) வரப்போகிற நிகழ்ச்சி ஒன்றை எடுத்துரைத்தனர். இவ்வாறு அவர்களது போதனைகளிலெல்லாம் ஒரேவிதமான கருத்தையும் நோக்கத்தையும் மக்களுக்கு எடுத்து வழங்கினர்.

1) மனந்திரும்ப அழைப்பு: "மனந்திரும்புங்கள்!" (மத் 3:2; 4:17; அ.ப. 2:38; 3:19; 5:31; 10:43; 13:38தொ) என்ற வார்த்தையுடன் கிறிஸ்துவும் அவரது முன்னோடியாகிய திருமுழுக்கு யோவானும் தமது போதகத்தை ஆரம்பித்தார்கள். "மனந்திரும்புங்கள்!" என்ற அதே வார்த்தை முதல் அப்போஸ்தலப் போதகத்தின் கொடுமுடியாக, சிறப்பம்சமாக அமைகிறது. எனவே, இங்கு வெளிப்படையாக எடுத்துக் கூறப்பெறும் உண்மைக்கும், ஒருவன் விரும்பினால் ஏற்றுக்கொண்டு விரும்பாவிட்டால் தள்ளிவிடும் ஒரு கொள்கைக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. அதற்கு மாறாக, இவ்வுண்மையைக்கேட்டு ஏற்றுக்கொள் பவர்கள் அதற்குத் தம்மை முற்றிலும் கையளிக்க வேண்டும்; அவ்வுண்மையில் ஓர் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், விவிலியப் பொருளின்படி வார்த்தையும் உண்மையும் வாழ்வின் உயர்ந்த மதிப்புகளாகத் திகழ்கின்றன. தவத்தின் அழைப்புக்கு வழிவகுக்காத

எப்போதனையும் நற்செய்தி என்ற பெயரிழந்து வெறும் பேச்சாக மாறக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

2) நிகழ்ச்சி ஒன்றின் அறிவிப்பு: ஒழுக்க வாழ்வைப் பற்றிய அறிவுரையின் வழியாக அன்று, ஆனால் சிறப்பாக மீட்பின் நிகழ்ச்சியைப் பற்றி எடுத்துரைப்பதன் வழியாகப் போதனையானது மனந்திரும்புதலுக்கு அழைக்கின்றது. நற்செய்தியாளர், சிறப்பாக மத்தேயு, எவ்வாறு இயேசு தனது மண்ணுலக வாழ்வின்போதே, அப்போஸ்தலப் போதனையை ஆரம்பித்தார் என எடுத்துக்காட்ட விரும்பினர். தமது முன்னோடியைப் பின்பற்றி (மத் 3:2) இயேவும் "விண்ணரசு நெருங்கிவிட்டது" (4:17) என்று பறைசாற்றினார். அதன் எதிரொளியைப்போல் அவரது சீடர்களும் (10:7) அதே உண்மையைத் தான் எடுத்துரைத்தனர்; "இறைவாக்குகள் எல்லாம் நிறைவேறிவிட்டன". இறைவாக்கினர் எசாயா கூறியுள்ளபடி, திருமுழுக்கு யோவான்தான் "பாலைவனத்தில் ஒலிக்கிற கூக்குரல்" (3,3). ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கும் ஊழியனாக இயேசு தம்மைக் கையளிக்கின்றார்; "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" (லூக் 4:17-21; எசா 61:1தொ).

கடத்தல் நாளை நினைவூட்டும் பாஸ்காப் பண்டிகையன்று, முன்னறிவிக்கப்பட்ட விண்ணரசானது உயிர்த்தெழுந்த இயேசுவின் மகிமையில் வெளிப்படையாக்கப் பெற்றது. ஐம்பதாம் நாள் விழாவாகிய பெந்தகொஸ்தே என்னும் திருநாளன்று தூய ஆவியின் கொடையானது திருச்சபை தோன்றக் காரணமாயிருந்தது. இவ்வாறு விண்ணரசானது மண்ணுலகிலேயே உண்மையாக்கப்பெற்றது. அந்நாளிலிருந்து போதனையானது இயேசுவின் காலத்தில் இருந்தது போல, ஏதோ அண்மை வரும் காலத்தில் நிகழ இருக்கும் ஒன்றைப்பற்றி வெறுமனே அறிவிப்பதில் அடங்கியிருக்க வில்லை; ஆனால், தூய ஆவியானவர் செயல்படுவதை எடுத்துக்காட்டும் ஓர் உண்மை நிகழ்ச்சியைப் பற்றியும், கடந்த கால நிகழ்ச்சி ஒன்றைப் பற்றியும் (அதாவது, கிறிஸ்து மண்ணுலகைக் கடந்து விண்ணுலகு எய்திய பாஸ்கா நிகழ்ச்சியைப் பற்றியும்), வருங்கால நிகழ்ச்சி ஒன்றைப் பற்றியும் (அதாவது, இறுதிநாளில் ஆண்டவர் தம் மகிமையில் தோன்றுவதைப் பற்றியும்) பறைசாற்றுவதாகத் திகழ்கிறது. முதல் போதகங்களின் சுருக்கங்கள் எல்லாம் கிறிஸ்தவ நிகழ்காலத்தில் இப்புதுத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

பெந்தகொஸ்தே என்னும் திருநாளன்று, தாம் பேசியதை மக்கள் எல்லோரும் தத்தம் அயல் மொழிகளில் கேட்டார்கள் என்றால், அதற்கு முக்கிய காரணம், அவர்களுக்கு அருளப்பெற்ற தூய ஆவியே (அ.ப. 2:4.11.15தொ) என்று பேதுரு விளக்குகிறார். இவ்வுண்மையானது முடவன் குணமடைந்ததைப்போன்ற (3:1-10) அல்லது வேதபோதகர்கள் பெற்ற வியத்தகு துணிவைப் போன்ற (4:13;5:28) புதுமைகளைப் பற்றிய வினாவாக இருக்கலாம். போதனையானது அதைக் கேட்பவரை எப்போதும் இவ்வாறு வினாக்களைத் தூண்டி எழுப்பும் ஓர் உண்மையின் முன் நிறுத்துகின்றது. அது "பரிசுத்த ஆவி தரும் ஆற்றலையும், அசையா உள்ளத்துறுதியையும் (1 தெச 1:5) துணையாகக் கொண்டியங்குகிறது. கிறிஸ்துவைப் பற்றிய, அவரைச் சுட்டிக்காட்டி மையமாகக் கொண்டிருக்கும் கடந்தகால, வருங்காலச் சூழ்நிலையில் மட்டுமே, என்றும் மாறாத இந்நிகழ்காலமும், புதுப்பிக்கப்பெற்ற இப்பெந்தகொஸ்தே திருநாளும் (அ.ப. 10:44-47) உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்பட முடியும். இயேசு சாவினின்று உயிர்க்கப்பெற்றார், உயிருடனிருக்கிறார். இவ்வுண்மைக்குத்தான் தூய ஆவியானவர் பெந்தகொஸ்தே திருநாளன்று நிகழ்ந்த புதுமையின் (2:22-31) வழியாகச் சான்று பகன்று நிற்கின்றார். முடவனைக் குணமாக்கியதின் (3:12-16) பொருளும் அதுதான். இயேசு ஆண்டவர், விண்ணுலகில் மகிமைப்படுத்தப்பெற்றவர் (3:21). இறுதித்தீர்ப்பு

நாளன்று அவர் வெற்றிவாகை அணிந்து திரும்புவார் (1 தெச 1:10;2 தெச 1:7). எனவே, உயிர்ப்பின் நற்செய்தியே போதனையின் முக்கியச் சாரமாகும். இவ்வாறு, போதனையானது திருவரலாற்றைப் பற்றிய மறையுண்மையின் வெளிப்பாடாக அமைகிறது.

3) நிகழ்ச்சியின் அறிமுகம்: வீறார்ந்த ஒரு பறைசாற்றுதல், ஓர் உண்மையை முறைப்படி எடுத்துரைக்கும் ஒரு தூதுவனது கூக்குரல் என்பன கிரேக்க மொழியில் "கெரிக்மா" என அழைக்கப்பெறுகின்றன. இங்கு இவ்வுண்மை கிறிஸ்து சாவின்மேல் கொண்ட வெற்றியாக இருப்பதால், இதைக் கேட்போர் இந்நிகழ்காலம் ஈறில்லா முக்கால முழுமைத் தன்மை பெறுவதைக் கண்டுணர்கின்றனர். இதுவே இங்குப் போதுமானது. இருப்பினும் தம் காலம், சூழ்நிலை முதலியவற்றால் வரையறுக்கப்பெற்றிருக்கும் இவ்வுண்மையைக் கேட்போர் அதன் நற்செய்தியைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையிலிருப்பது இன்றியமையாதது. பவுல் "இயேசுவையும் உத்தானத்தைப் பற்றியும்" (அ.ப. 17:18) அறிவித்ததைக் கேட்ட ஏதன்சு நகர மக்கள் இரு புதிய தெய்வங்களைப் பற்றி நினைத்து, பவுலை வீண் கதைகளைப் பரப்புகிறவராகக் கருதி நடத்தினர். எனவே, பவுல் அவர்கள் தன்னைப் புரிந்துகொள்ள வைக்கும் வழிவகைகளைத் தேடுகிறார். இருப்பினும், அவர் தம் நற்செய்தியை மனித அறிவின் துணைகொண்டு எண்பிக்க விரும்பவில்லை. "சொல்வன்மை மிக்கவரான, மறைநூல் வல்லுநரான" (அ.ப. 18-24) அப்பொல்லோ இத்துறையில் முன்மாதிரியான போதகர் எனக் கொரிந்தியர் நம்பினர். பவுல் அவர்களது தவறான எண்ணத்தைப் போக்குகிறார். கிறிஸ்துவின் சிலுவை எங்கே மதிப்பிழந்து, பொலிவிழந்து ஒன்றுமில்லாமையாகிவிடுமோ, பொருளற்றதாய்ப் போகுமோ என்று பயந்து அவர் நாவன்மையில் தம் நம்பிக்கையை வைக்க மறுக்கிறார் (1 கொரி 1:17). எனவே, எல்லாப் போதனையும் மீட்பின் நிகழ்ச்சியை எடுத்துக்கூற வேண்டும். அதே வேளையில் அது புரிந்து கொள்ளக்கூடியதாகவும் அமையவேண்டும். எனவே, நற்செய்தியை அறிவித்து அறிமுகப்படுத்துவதில் மாற்றங்கள் பல தேவைப்படுகின்றன.

அ) இயேசுவைக் கேட்டவர்களைப் போல அப்போஸ்தலரது அவையோரும் கடவுளையும், அவரது மீட்பின் திட்டத்தையும் நம்பினர். எனவே, போதனையானது மீட்பின் நிகழ்ச்சியை எடுத்துரைப்பதற்காக மறைநூலோடு தொடங்கப்பெற்றது. இயேசுவையும் திருமுழுக்கு யோவானையும்போல் இயேசுவின் சீடர்களும் தமது போதனையில் இறைவாக்குகள் நிறைவேறப்பெற்று முழுமை பெற்றிருப்பதை எடுத்துக்காட்டினர். நாம் "இறுதி நாட்களில்" இருப்பதாக யோவேலும் (அ.ப. 2:17), மற்றெல்லா இறைவாக்கினரும் (3:24) எடுத்துரைத்தனர். இவ்வாறாக, கடவுள் நம் முன்னோருக்கு அளித்த வாக்குறுதி நிறைவேறுகிறது (13:33). அவதூறான சிலுவையைப் பற்றிக் கடவுள் தாமே முன்னறிவிக்கிறார் (2:23); அதன் "மரத்தைப்" பற்றிப் பேசுவதுதான் பழைய ஏற்பாட்டின் மரபாக இருந்திருக்கிறது (5:30; 10:39; 13:29; காண். உப. 21:23). மீட்பின் திட்டத்தில் கிறிஸ்துவின் பங்கைப்பற்றி இறைவாக்கினர் (அ.ப. 3:18; 13:27), சிறப்பாக ஊழியனைப்பற்றிய பாடல் (8:32 தொ; 3:13.26), சங்கீதங்கள் (2:25-28.30.34-35), மோசே (3:22) முதலியோர் எடுத்தியம்பினர். மனந்திரும்புதலின் தேவையைப்பற்றிக்கூட இறைவாக்கினர் எடுத்தியம்பியுள்ளனர் (2:21.39). எனவே, போதனையானது சிறப்பாக மறைநூலைப் பற்றியது. "மறை நூல்படி" என்ற சொற்றொடர் மிகப்பழமையான விசுவாச அறிக்கையை நிறுத்தக்குறியிட்டு அழுத்திக்கூறி நிற்கின்றது (1 கொரி 15:3தொ).

ஆ) இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது அவர் காலத்தவரான அனேகர் அவரை அறியாமலிருந்திருக்கலாம். எனவேதான், உயிர்ப்பின் நற்செய்தியானது முதலில் இயேசுவின் வாழ்வை எடுத்துக்காட்டும் எளிய அறிமுக உரையாக அரும்புவிட்டு மலர்கிறது.

எனவேதான், நூற்றுவர் தலைவரான கொர்னேலியு என்பவர்முன். பேதுரு இயேசுவின் வாழ்வைப் பற்றிய நற்செய்தியின் சிறப்பான பகுதிகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறார் (அ.ப. 10:37-42). உண்மையிலேயே உயிர்ப்பைப் பற்றிய நற்செய்தியின் ஒளியில் மட்டுமே இயேசு போதனையின் நடுமையமாக அமைகிறார்.

இ) இறுதியாக, போதனையைக் கேட்போர் உண்மைக்கடவுளை நம்புவதற்குக் கூட முடியாமலிருந்திருக் கலாம். எனவே, மறைநூலில் அடங்கியிருக்கும் விசுவாசத்தைப் பற்றிய அடிப்படை உண்மைகளை அறிவதற்கு வேண்டிய தேவை எழுந்திருக்கலாம். "விண், மண், கடல் யாவற்றையும் அவற்றில் அடங்கிய அனைத்தையும் ஆக்கிய, வானின்று மழையைப் பொழிந்து, செழிப்பு மிக்க பருவங்களை அளித்து வரும் உண்மைக்கடவுளைப்" (அ.ப. 14:15 தொ) பற்றிப் பேசி லிஸ்திரா நகரில் பவுல் தம் அவையோரைக் கவர்கிறார். எவ்வாறு கிறிஸ்துவின் உயிர்ப்பு உலகப்படைப்பிலும் மனிதனுக்கு இயற்கையாகவே உள்ள கடவுள் நாட்டத்திலுமிருந்து பிறக்கும் வரலாற்றுச் சமய ஒழுங்கு திட்டத்தின் முடிவு என ஏதன்சு நகரில் எடுத்துக்காட்டுகிறார் (17:22-31). தெசலோனிக்கேயரோ "உண்மையும் உயிருமுள்ள கடவுளுக்கு ஊழியம் செய்வதற்காக, தெய்வங்களின் சிலைகளை விட்டுவிட்டுக் கடவுளிடம் திரும்பி, வானின்று வரும் மகனுக்காகக் காத்திருந்தனர்; இறந்தோரினின்று இறைவன் உயிர்ப்பித்த இந்த இயேசுவே வரப்போகும் சினத்தினின்று நம்மை மீட்பவர்" (1 தெச 1:9 தொ) என நம்பினர். எல்லா வழியிலும், நேரடியாகவோ சுற்றிவளைத்தோ, போதனையானது வரலாற்றின் ஆண்டவராகிய கிறிஸ்துவிடம் இட்டுச் செல்லவேண்டும்.

4) போதனையிலிருந்து படிப்பினைக்கு: பவுலிடமிருந்து நாம் பெற்றிருக்கும் (1 கொரி 15:3தொ) விசுவாசப் பிரமாணத்தைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது பாஸ்கா மறையுண்மை. இம்மறையுண்மையை விடாது திரும்பத்திரும்ப எடுத்துரைப்பது இன்றியமையாத தேவை. அப்போதுதான் விசுவாசமானது அதன் உண்மையான ஒளிமையத்தைச் சுற்றி அமைந்திருக்க ஏதுவாகும். இப்பாஸ்கா உண்மையுடன் தொடங்கும் போதனையானது படிப்பினையாக மலர்ந்து விரிகிறது. மலை மேலேயோ (மத் 5:2), செபக்கூடங்களிலோ (9:35) "போதித்த" போது இயேசுவே இவ்வாறுதான் செய்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவிடமிருந்து பெற்ற ஆணைப்படி (மத் 28:20; அ.ப. 4:2) அவரது சீடர்களும் அவ்வாறுதான் நடந்துகொண்டனர். பவுலும் அவரது படிப்பினையைப் பாஸ்கா மறையுண்மையுடன் தொடங்கித் தான் விவரித்தார். எடுத்துக்காட்டாக, அவர் சிலுவையின் ஞானத்தைப்பற்றியோ (1 கொரி 1:28), திருமுழுக்கு இயேசுவின் சாவிலும் உயிர்ப்பிலும் நாம் கொள்ளும் பங்கு என்பதைப் பற்றியோ (உரோ 6) கற்பித்தபோது இம்முறையைத்தான் கடைப்பிடிக்கிறார். அதாவது, போதகர் உபதேசியாராகவும் மறைநூல் வல்லுநராகவும் மாறுகிறார். இருப்பினும், பாஸ்கா நற்செய்தியின் பறைசாற்றுதலை இடைவிடாது சுட்டிக்காட்டுவதன் மூலமாக மாத்திரமே, மறைநூல் வல்லுநர் என்ற பட்டத்திற்கு ஒருவர் தகுதிபெறுகிறார்.

2. போதனை என்ற மறையுண்மை: அறிவிக்கும் செய்தியின் உள்ளடக்கத்தின் காரணத்தாலும், அதில் பயன்படுத்தப் பெறும் உருவத்தின் காரணத்தாலும் போதனையானது ஒருமறையுண் மையாகக் கருதப்படுகிறது. எடுத்துரைக்கப் படும் வாக்கைப்பற்றிய மறையுண்மை, வாக்கை எடுத்துரைக்கும் போதகரைப் பற்றிய மறையுண்மை ஆகும்.

1) வாக்கைப் பற்றிய மறையுண்மை: போதனையானது ஒரு செயல். இஃது இறைவனது ஒரு செயல் என்பதால் இச்செயல் மனந்திரும்புதல் என்ற மற்றொரு செயலுக்கு இட்டுச்செல்ல வேண்டும். என வேதான், போதனையானது மனிதனை அது போதிக்கும் மறையுண்மையின் முன் நிறுத்துகிறது என்ற உண்மையைப் பவுல்

பறை சாற்றுகின்றார். இவ்வாறு விசுவாசமானது போதனை வழியாகப் பிறக்க முடியும் (உரோ 10:17). இறந்து உயிர்த்த கிறிஸ்துவின் முன் போதனையைக் கேட்போர் நிறுத்தப்பெறுகின்றனர். கிறிஸ்து வரலாற்றின் ஆண்டவராக வந்துதித்தார்; அவரது வாக்கைக் கேட்டு நம்புவோருக்கு அவர் தமது கொடைகளையும் ஆவியையும் பகிர்ந்தளிக்கிறார்; அதை மறுத்துத் தள்ளுவோரைத் தமது சினத்தினால் பயமுறுத்துகிறார் (1 தெச 1:10). இறைவனின் அரசை ஆடம்பரமாகப் பறைசாற்றித் தொடங்கும் தூதுவனின் அறிவிப்பைப்போல் (எசா 40:9), போதனையானது இவ்வுலகின்மேல் கிறிஸ்துவின் அரசுரிமையைக் கொண்டாடத் தொடங்கும் இறைவனின் ஒரு செயலாகும். அஃது அதைக் கேட்போரின் ஆய்வுக்கு உட்பட்டதன்று. இருப்பினும் அதை அவர்கள் உலகம் முடியும்வரை (மத் 24:14), "கீழ்ப்படிந்து விசுவசிப்பதை" (உரோ 1:5) அவர்களிடமிருந்து கோருகிறது.

2) **இறைவாக்கும் மனித வாக்கும்:** மீட்கப்படுவதற்கு ஒருவன் விசுவசிக்க வேண்டும். விசுவசிப்பதற்கு ஒருவன் போதனையைக் கேட்க வேண்டும். ஆனால், "அனுப்பப்படாமல் எவ்வாறு அறிவிப்பர்?" (உரோ 10:15). எனவே, போதகர் கிறிஸ்துவிடமிருந்து அவரது திருச்சபை வழியாகத் தூதுரைக்கும் திருப்பணியையும் அப்பணியை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்.

அ) **தூதுரைக்கும் திருப்பணி:** இது மட்டுமே மனித வாக்கை இறைவாக்காக மாற்றக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறது. இறைவாக்கினரைப்போல ஆவியானவரால் ஆட்கொள்ளப்படுவதால் மட்டுமன்று, கிறிஸ்துவினால் ஒப்படைக்கப்பெற்றதொரு தூதுப்பணியின் ஆற்றலினாலும், மனித வாக்கானது இறைவாக்காக மாறுகிறது. இறைவனோடு மீண்டும் ஒப்புரவு ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கோடு, "நாங்கள் பேசுவது கடவுளே அறிவுறுத்துவது போலாகும்!" (2 கொரி 5:20). எனவே, ஒரு தூதுவனைப்போலப் போதகரும் நம்பிக்கை நாணயத்தோடு வாக்கை எடுத்துரைக்கவேண்டும். அப்போதுதான், அவர் நேர்மையாக இல்லாவிட்டாலும் அவரது வாக்காவது பயனுள்ளதாக இருக்கும் (பிலி 1:15-18). கிறிஸ்து எல்லா வழிகளிலும் அறிவிக்கப்படுகிறார். அப்படியானால், இங்கு விசுவாசத்தை அறிவிக்கும் ஊழியனது முக்கியத்துவம்தான் என்னே! இன்றியமையாத, அடிப்படையான மூலக்கூறு இயேசு கிறிஸ்துவே. மற்றவை எல்லாம் அத்துடன் சேர்க்கப்படுகின்றன. தீர்ப்பின் தீயானது அவற்றின் மதிப்பை நிரூபிக்கும் (1 கொரி 3:5-15). புதிதாகப் பிறந்த திருச்சபையானது போதனைக்கு அதிகாரம் கொடுப்பதைப் பற்றிக் கவனமாய் இருந்தது. சிலவேளைகளில் அது, தான் முதலில் எடுக்காத பல முயற்சிகளைப் பிறகு உறுதிப்படுத்தியது (அ.ப. 8:14-17; 11:22தொ); வேறுசில வேளைகளில் வேதபோதகர்களின் "மீது கைகளை விரித்து அவர்களை வழி அனுப்பியது" (13:2 தொ).

பாஸ்கா மறையுண்மையைப் பற்றி ஒரு தூதர் கொடுக்கும் சான்றிலிருந்துதான் அவரது அதிகாரம்கூடத் தோன்றுகிறது. இஃது அப்போஸ்தலர்களின் சான்று என நாம் பொதுவில் கூறலாம். இஃது உயிர்த்த ஆண்டவர் விடுத்த ஆணைப்படி (அ.ப. 1:8) பன்னிருவரும் பகர்ந்த இணையற்ற சான்றோடு தொடர்பு கொண்டுள்ளது (2:32; 3:15; 5:32; 10:39.41; 13:31). உண்மைச் சான்றின் இடைபடாத பாரம்பரியத்தால் கிறிஸ்தவப் போதனையானது இறைவனின் வாக்கை உண்மையாகவே எடுத்துரைக்கின்றது.

ஆ) இந்த அப்போஸ்தலிக்கப் பணி அமர்த்தலிலிருந்துதான் போதகரின் மனத் துணிவும் பிறக்கின்றது. போதிப்பதற்குப் போதகருக்கு முழு அதிகாரமுண்டு. எனவே, அவர் முதல் அப்போஸ்தலர்களைப்போல மன உறுதியோடு பேசுகிறார் (2:29;4:13.29.31). "வாய்ப்பு இருந்தாலும் இல்லாவிடினும் அவர் தேவவார்த்தையை அறிவிக்க வேண்டும்" (2 திமொ 4:2). அவர் இப்படிப் பேசுவதன் மூலகாரணம்

அவரது விசுவாசம் (2 கொரி 4:13). இவ்வாறு, அவர் ஒரு பணிக்குத் "தகுதியாக்கப் பெற்றிருக்கிறார்" (2:16தொ; 3:4தொ). அப்படியில்லாவிடில் அவர் பேசுவதெல்லாம் கபட எண்ணத்தோடு கடவுளின் சொல்லை விலைகூறித் திரிவதாக மட்டுமே இருக்கும் (2:17; 1 தெச 2:4). பவுல் தெசலோனிக்கேயருக்கு "நாங்கள் அறிவித்த கடவுளுடைய வார்த்தையை நீங்கள் பெற்றுக்கொண்ட போது அதை மனித வார்த்தையாக ஏற்றுக்கொள்ளவில்லை; கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக்கொண்டீர்கள்" (1 தெச 2:13) என்று கூறினார். அதைப்போல, என்றும் இறைவாக்கை எடுத்துரைப்பதே போதகரின் இலட்சியமாக இருக்கிறது.

3. **போதனையும் மீட்பும்:** போதகர் பெற்றிருக்கும் திருப்பணியின் மேன்மையால் அவரைப் பற்றிய மறையுண்மை முற்றிலும் எடுத்துக் கூறப்படவில்லை. அதற்கு மாறாக, அவரது அலுவலின் பயனை நோக்குவோமானால் அவர் உண்மையிலேயே "கடவுளோடு உழைப்பவர்" (1 கொரி 3:9); "கிறிஸ்துவின் வெற்றிப் பவனியில் அனுப்பப்பெற்றவர்;" "அவர் வழியாகக் கடவுளைப் பற்றிய அறிவு என்ற நறுமணம் எங்கும் பரவுகிறது;" அவர் "மீட்புப் பெறுவோரிடையிலும் அழிவுறுவோரிடையிலும், கடவுள்பால் எழும் கிறிஸ்துவின் நறுமணமாய்த் திகழ்கிறார்;" "சிலருக்கு அது சாவு விளைவிக்கும் நச்சுப்புகையாகும்; வேறு சிலருக்கு வாழ்வளிக்கும் நறுமணமாகும்" (2 கொரி 2:14 தொ) என்ற பல உண்மைகள் வெளியாகின்றன. முதலிடத்தில், தாமே குற்றம் சாட்டப்பெறக்கூடிய இக்கட்டான நிலையிலிருக்கிறார் ஒரு போதகர் (1 கொரி 9:27). ஆனால், தான் யாரின் தூதுவராக இருக்கிறாரோ அவரது விதியில் தானும் சிறப்புப் பங்கு கொள்ள வேண்டியதுதானே முறை! "உள்ளபடியே அப்போஸ்தலராகிய எங்களைக் கடவுள் அனைவரிலும் கடையராக்கினார்" (1 கொரி 4:9). சிலுவையைப் பற்றிப் போதிப்பவர் "உயிரோடிருக்கும் போதே இயேசுவுக்காக எந்நேரமும் சாவுக்குக் கையளிக்கப்படுகிறார்" (2 கொரி 4:7-15; 6:4-10). வீணான பொருட்கள் எதையும் அவர் இன்னும் தேட இயலுமா (காண். அ.ப. 14:12 தொ)? ஆனால், பாவங்களைப் போக்கும் பலியாளாகிய (1 கொரி 4:13) மீட்பரோடு என்றும் இவ்வாறு ஒன்றித்து, அவர்கள் இவ்வாறு உயிரிழந்து கொண்டிருக்கும்போது, அவர்கள் போதிக்கும் கடவுளிடம் உயிர் பிறக்கிறது என்பதை உணர்ந்து அறியக்கூடிய துணிவுடனிருக்க வேண்டும் (2 கொரி 4:12). இவ்வாறு, போதகரின் வாக்கு மட்டும் இறைவனது வாக்காக அமைவதில்லை. ஆனால், அவரது வாழ்வு முழுவதும் பாஸ்கா மறையுண்மையை வெளிப்படையாகத் தோன்றச்செய்யும் நாடக நிகழ்ச்சியாக அமைகிறது.

போத்திபார் (POTIPHAR - ராவின் கொடை)

யோசேப்பை இசுமயேலர்கள் அடிமையாக எகிப்துக்கு முதன் முதலாகக் கொண்டு வந்தபோது, அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிய எகிப்து அரச அலுவலனே போத்திபார் (ஆதி 37:36; 39:1-6). யோசேப்பின் திறமைகளையெல்லாம் அறிந்த போத்திபார், அவனைத் தனக்குரியவற்றிற் கெல்லாம் அதிகாரி ஆக்கினான். போத்திபாரின் மனைவி, அழகும் நல்ல தோற்றமும் உடைய யோசேப்பைத் தவறான வழியில் சோதனைக்கு உட்படுத்த முயன்றதாகக் கூறப்படுகிறது. இவனது மனைவி பொய்க்குற்றம் சாட்டியதன் விளைவாக, இவன் யோசேப்பைச் சிறையிலிட்டான் (39:6-20). ஆதி 39-இல் கூறப்படும் போத்திபார்-யோசேப்புக்குள்ள உறவு எகிப்தில் நிலவிய 'இரு சகோதரர்கள்' பற்றிய உறவை ஒத்ததாக உள்ளது.

போந்து (PONTUS)

வடசிறிய ஆசியாவின் கிழக்குப் பகுதியே போந்து என்று அழைக்கப்படுகிறது. இது கருங்கடலிலிருந்து காகசசுவரை பரவியுள்ளது.

1. **புவியியலும் வரலாறும்:** போந்துவின் கடற்கரைப் பகுதியானது வளமான பல சமவெளிகளைக் கொண்டுள்ளது. இருப்பினும், இதன் இடையிடையே பல மலைத்தொடர்கள்

அமைந்துள்ளமையால் கிழக்கு-மேற்குத் தரைவழித் தொடர்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டு, மிகுதியும் கடல் வழியே பயன்படுத்தப்பட்டது.

கடற்கரைப் பகுதியானது பல கிரேக்கக் குடியிருப்புகளைக் கொண்டிருந்தது. சினோப்பே மற்றும் அமிசுஸ் ஆகிய துறைமுகங்கள் மிக முக்கியம் வாய்ந்தவையாகும். போந்துவின் உள்நாட்டுப் பகுதியானது மலைகள் நிறைந்தவை. அவற்றில் தோன்றும் சிற்றாறுகள் பல கடலை நோக்கிப் பாய்கின்றன. அவற்றில் லீக்குஸ் மற்றும் ஐரிஸ் ஆகிய இரண்டு ஆறுகள் சேர்ந்து போந்துவிலேயே மிகப் பெரிய ஆறாய் ஓடுகின்றன. காலிஸ் ஆறுதான் சிறிய ஆசியாவிலேயே மிக நீளமான ஆறாகக் கருதப்படுகின்றது. உள்நாட்டின் மலைப்பகுதிகள் போந்துவுக்குக் கிரேக்கர்களின் வரவை எதிர்க்கும் இயற்கை அரணாக அமைந்துள்ளன. அமாசியா போந்துவின் பழைய தலைநகராக விளங்கியது.

கி.மு. 302-ஐ ஒட்டி, விடுதலை பெற்ற நாடாக ஆகுமுன், பாரசீகர்களுக்கும் இத்தியர்களுக்கும் அடிபணிந்து வந்துள்ளது. மித்திரிதேதசு போந்து அரசை நிறுவினார். அவரது அரசமரபு கி.பி. 63-வரை இந்த அரசை ஆண்டு வந்தது. பாம்பே இதனைப் பிடித்தபிறகு இதன் ஒரு பகுதி உரோமை மாநிலத்தோடு இணைக்கப்பட்டது. உரோமையர்கள் இதைப் பல பகுதிகளாகப் பிரித்து ஆட்சி செய்தனர்.

அப்போஸ்தலர் காலத்திய போந்து முழுப்பகுதியையோ, உரோமை ஆட்சியில் இருந்த மேற்குப் பகுதியை மட்டுமோ குறிக்கலாம். பீலோ போந்துவில் யூதர்களும் வசித்து வந்தார்கள் என்று கூறுகின்றார். பெந்தகொஸ்தேயின்போது போந்துவிலிருந்தும் வந்த மக்கள் எருசலேமில் இருந்தனர் என்று அ.ப. 2:9 கூறுகிறது. பவுலோடு உழைத்த அக்கிலா, போந்தைச் சேர்ந்தவராவார் (அ.ப. 18:2). பவுலோடு அவர் எபேசு நகரில் குடியேறினார் (18:18.19).

2. போந்துவில் கிறிஸ்வம்: 1 பேதுரு 1:1 குறிப்பிடுவதிலிருந்து இங்குக் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. 1:2-இல் வரும், "நாடுகளில் சிதறுண்டு வெளிநாட்டவரென வாழ்பவர்கள் சிதறுண்டு வாழ்ந்த கிறிஸ்தவர்களையே குறிப்பிடுகிறது. பெந்தகொஸ்தேயின்போது மனந்திரும்பிய யூதர்கள் (அ.ப. 2:9) உடனடியாகப் போந்துவில் கிறிஸ்தவ மதத்தைப் போதித்தார்கள். பவுல் பித்தினியா சென்று அங்குப் போதிக்கும் திட்டத்தைக் கைவிட்டபோது (16:7), அங்கு ஏற்கெனவே கிறிஸ்தவப் போதகர்கள் உள்ளார்கள் என்று அறிந்திருக்க வேண்டும். அங்குப் பேதுரு போதித்ததற்கான சான்று ஏதும் இல்லை. ஆனால், பேதுரு தமது முதல் மடலை எழுதியபோது, ஏற்கெனவே அங்குப் பல வருட வயதுடைய திருச்சபைகள் மூப்பர்களைக் கொண்டிருந்தன (1 பேதுரு 6:1). இவர்களில் பெரும்பாலோர் புறவினத்தார் ஆவார். அவர்கள் கிறிஸ் தவரல்லாதவர்களின் வெறுப்பையும், எதிர்ப்பையும், அச்சுறுத்தலையும் சந்திக்க வேண்டியிருந்தது.

உரோமையில் கி.பி. 64-இல் ஆரம்பித்த வேதகலாபனை சிறிய ஆசியாவிலும் பரவியதா என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது. ஆனால், தோமிசியன் காலத்தில் (கி.பி. 81-90) உரோமில் நிலவிய அதே சூழ்நிலை சிறிய ஆசியாவிலும் இருந்திருக்கலாம். கி.பி. 113-115-இல் இளைய பிளினிதிரேசனால் பித்தினியாவுக்கு அனுப்பப்பட்டபோது (போந்துவின் மேற்குப்பகுதி பித்தினியாவின் ஒரு பகுதியே), ஏற்கெனவே இருபது ஆண்டுகளாகக் கிறிஸ்தவம் அங்குப் பரவி வளர்ச்சி பெற்றதைக் கண்டார்; கிறிஸ்தவத்தை விட்டுவிட்டவர்களைத் தண்டனையிலிருந்து விடுவித்தார்; விசுவாசத்தில் நிலைத்து நின்றவர்களுக்கு மிகுந்த கொடுமைகளை விளைவித்தார். இவையெல்லாவற்றிற்கும் பின்னே, மிகவும் ஆழ்ந்த நற்செய்திப்பணி நடந்திருக்கிறது. இதனால், பிளினி இங்குச் செல்வதற்குப் பல ஆண்டுகட்கு முன்னரே இங்குக் கிறிஸ்தவம் பரவிவிட்டதென்பது தெளிவு.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் மதங்களைப் பொறுத்தவரையில் போந்து மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதிரியான் காலத்தில் வாழ்ந்த அக்கிலா என்ற போந்துவைச் சேர்ந்த யூதர் பழைய ஏற்பாட்டைக் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தார். இக்காலத்தில் அலக்சாந்தர் என்பவன், புதியதொரு மதவழிபாட்டைத் தொடங்கினான். இஃது எவ்வாறு புறவினத்தாரும் தங்கள் வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தினர் என்பதற்குச் சான்றாகின்றது. மார்சியன் தப்பறையான போதகம் ஒன்றைப் போதித்து வந்தார். இவருடைய தந்தை போந்துவில் சினோப்பே என்னுமிடத்தில் ஆயராக இருந்தார் என்று அறிகிறோம்.

போரடிக்கிற களம் (THRESHING FLOOR)

தானியத்தை வைக்கோலிலிருந்து பிரித்தெடுப்பதற்குச் சூட்டடிப்பு என்று பெயர். முதலில் தானியக்கதிர்கள், சூட்டடிப்புக் களத்தில் பரவலாக இடப்படும். இந்த இடம் பொதுவாக நகர வாயிலிலேயோ, ஓரத்திலோ அமைந்திருக்கும் (1 அர 22:10). இந்த இடம் தனியாளுக்கோ, சமூகத்திற்கோ உரியதாகும். சூட்டடிப்பு பல்வேறு முறைகளில் செய்யப்படும். ஒருமுறையில் தானியக் கதிர்கள், பெரிய கழிகளால் அடித்துத் துவைக்கப்படும் (நீதி 6:11). மற்றொரு முறையில் கால்நடைகள், தானியக்கதிர்களை மிதிப்பதன் மூலம் சூட்டடிப்புச் செய்யப்படும் (உப 25:4). பொதுவாக, ஒரு சில இயந்திரங்களும் சூட்டடிப்பில் பயன்படுத்தப்பட்டன. உருளை வண்டிகளும் (எசா 28:27-28), கூர்மையான போரடிக்கும் கருவிகளும் (2 சாமு 24:22; 1 நாள் 21:23; எசா 41:15) கால்நடைகளால் தானியக்கதிர்கள் மேல் இழுத்துச் செல்லப்பட்டன. இவற்றைக் கனமாக்க, கற்கள் பயன்பட்டன. கனமான இவ்வண்டிகள் மிகவும் பயனுள்ளவைகளாகக் கருதப்பட்டன. சூட்டடிப்பு என்பது பல மணிநேரங்கள் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய வேலையாகும். அப்போதுதான் தானியங்கள் முழுவதையும், கதிர்களிலிருந்து பிரித்தெடுக்க முடியும்.

போராசன் (BORASHAN - ஆசானின் கிணறு அல்லது நீர்க்குட்டை)

யூதாவின் தென்பகுதியிலுள்ள ஓர் இடம் (1 சாமு 30:30). இதுவும் ஆசான் என்ற பெயரும் ஒரே இடத்தைக் குறிக்கலாம்.

போராத்தா (PORATHA - சலுகை பெற்ற)

இவர் ஆமானின் புதல்வர்கள் பத்துப்பேரில் ஒருவர். இவர்கள் யூதர்களால் கொல்லப்பட்டனர் (எஸ்த 9:8).

போர் (WAR)

அ) போர் என்பது ஒழுங்குப் பிரச்சனைகளை எழுப்புகின்ற மனித உண்மை மட்டுமன்று. விவிலிய உலகில் அதனுடைய தோற்றமானது, பொதுவான அனுபவத்திலிருந்து தொடங்கி, மனித இனம் ஈடுபட்டுள்ளதும், மீட்பைப் பணயமாக்கக் கொண்டுள்ளதுமான செயலின் முக்கிய கூறுமான, இறைவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான ஆன்மீகப் போராட்டத்தை வெளிப்பாடு அறிவிக்க அனுமதிக்கிறது. இறைவனுடைய திட்டமானது சமாதானத்தைத் தனது முடிவாகக் கொண்டுள்ளது என்பது உண்மையே. ஆனால், இச்சமாதானமே போராட்டத்தின் விலையாகப் பெற்ற வெற்றியை முன்னுரைக்கிறது.

ஆ) பழைய ஏற்பாடு

I. மனிதனின் போர்உலகம் இறைவனின் சண்டைகளும்:

1. போரானது எல்லா நேரங்களிலும் மனித நிலையின் முக்கிய கூறாகும்; பண்டைய மேற்காசிய நாடுகளில் திணையின முறைப்பட்ட நோயாக இருந்தது. ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட காலத்தில் அரசர்கள் போர்க்களம் புகுந்தனர் (2 சாமு 11:1). உயர் கலாச்சாரக் காலங்களில் பேரரசுகள் "இடைவிடாச் சமாதானத்தின்" உடன்படிக்கைகளில் வீணாகக் கையெழுத்திட்டனர். நிகழ்ச்சிகளின் வளர்ச்சி, இந்த வலுவற்ற உடன்பாடுகளை முறியடித்தது.

இத்தகைய பணித்திட்டத்தில் புகுத்தப்பட்ட இஸ்ராயேலின் வரலாறு, சில நேரங்களில் உயர்வானதாகவும், சில நேரங்களில் கொடூரமானதாகவும் உள்ள மனிதப்போராட்டங்களின் அனுபவத்தைத் தூண்டவிருக்கிறது. இறைவனுடைய திட்டத்தின் முன்னோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அனுபவமானது அங்கு ஆன்மீக நோக்கை அடைகின்றது. போரானது இவ்வுலகின் நிரந்தர உண்மையாகவும் தீமையாகவும் உடனடியாக வெளிப்படுத்தப் படும்.

2. ஆயினும், அதனுடைய சமூக அனுபவத்தின் விளைவுகளைச் சமயச் சூழ்நிலைக்குள் மாற்றுவதில், பண்டைய மேற்காசிய நாடுகள் தம்முடைய இறை, உலகின் தோற்றத்தில் போரையும் அறிமுகப்படுத்துவதை விட்டுவிடவில்லை. காலத்தின் தொடக்கத்தில், உலகப் போர்களை நீட்டிப்புகளாகவும், உலகச் சாயல்களாகவும் கொண்ட தெய்வங்களின் போரை அஃது அடிக்கடி கற்பனை செய்தது. இத்தகைய உருவங்களால் ஆதரவு பெற்ற பல தெய்வக்கோட்பாட்டைக் கைவிட்டாலும் இஸ்ராயேலானது போராடும் இறைவனைப் பற்றிய உருவத்தைப் பாதுகாக்கின்றது. தனது இறை ஒருமைக்கோட்பாட்டுக்குப் பொருந்தவும், இறைவனின் திட்டத்தினுடைய உலக நிறைவேற்றத்தில் அதற்கு ஓர் இடம் அளிக்கவும், அஃது உருவத்தை மாற்றியமைக்கிறது.

II. **ஆண்டவருடைய போர்களின் ஊழியத்தில் இஸ்ராயேல்:** சீனாய் உடன்படிக்கையால் திறக்கப்பட்ட பரிமாணங்கள் போராட்டத்திற்குரியவையே அன்றி, சமாதானத்திற்குரியவை அல்ல. இறைவன் தமது மக்களுக்கு ஒரு தாய்நாட்டை அளித்தாலும், மக்கள் அதனை வெல்ல வேண்டும் (யோத் 23:27-33). இது புனிதமானதும், பழைய ஏற்பாட்டின் பார்வையில் நியாயப் படுத்தப்பட்டதுமான தாக்கும் போராகும். தன்னுடைய சிதைந்த நாகரிகத்துடன் இயற்கையின் சக்திகளுடைய வழிபாட்டினால் கீழ்ப்படுத்தப்பட்ட கானான், இஸ்ராயேலுக்கு ஒரு கண்ணியை உருவாக்குகிறது (உப 7:1-2). இனி, இஸ்ராயேலின் போர்கள் "யாவேயின் போர்களாக" இருக்கும் மேலும், இறைவனை வழிபட்டு அவரது சட்டத்தைக் கடைப்பிடிக்கின்ற மக்களின் காரணமாக, இஸ்ராயேலை வரலாற்றில் தோன்றச் செய்யும்போதும், இறைவன் தனது ஆட்சியையே இவ்வுலகில் ஏற்படுத்துகிறார். அன்னிய வலுத்தாக்குபவர்களுக்கு எதிராகத் தனது சுதந்தரத்தைக் காக்கின்ற அதே வேளையில், இஸ்ராயேல் இறைவனின் காரியத்தையும் காக்கிறது. ஒவ்வொரு பாதுகாப்புப்போரும் இன்னும் "யாவேயினுடைய போரே" ஆகும்.

இவ்வாறு நூற்றாண்டுகளின் போக்கில், போராட்ட வாழ்வின் அனுபவத்தை இஸ்ராயேல் கொண்டுள்ளது. அதில், நாட்டின் செயலாற்றும்திறன் சமயப் பணியில் பயன்படுகிறது. சீகோன் மற்றும் ஓகு ஆகியோருக்கு எதிரான தாக்கும் போர்கள் (எண் 21:21-35; உப 2:26-3:17), கானான் மீதான யோசுவாவின் வெற்றி (யோசு 6-12), மதியானியர் (எண் 31) மற்றும் நீதிபதிகள் காலத்து அடக்குமுறையாளர்கள் ஆகியோருக்கு எதிரான பாதுகாப்புப் போர்கள் (நீதி 3-21), சவுல் மற்றும் தாவீதின் மூலமாக நாட்டின் விடுதலைப்போர் (1 சாமு 11-17; 28:30; 2 சாமு 5:8;10) முதலிய நிகழ்ச்சிகளின் மொத்தத்தில் இஸ்ராயேலானது இறைவனின் தூதராக உலகில் தோன்றுகிறது. அதனுடைய அரசன் வரலாற்றில் யாவேயின் ஆட்பேராக உள்ளார். விசுவாசத்தினுடைய ஆர்வத்திற்கு இராணுவ வீரத்தின் செயல்கள் தேவையாக உள்ளன. இறை உதவியினுடைய உறுதியையும், அதே நேரத்தில் அரசியல் மற்றும் சமயம் சார்ந்ததாக உள்ள வெற்றியின் நம்பிக்கையையும் உயிர் ஊட்டுகிறது (சங் 2; 45:4-6; 60:7-14; 110). ஆனால், இறைவனுடைய செயலோடு இஸ்ராயேலின் மண்ணுலகச் செழுமையைக் குழப்பும் சோதனையானது பெரிதாகவே இருக்கும்.

III. வரலாற்றில் யாவேயின் போர்கள்:

1. யாவே தனது மக்களுக்காகப் போராடுகிறார்: ஆயினும், இஸ்ராயேலால் நடத்தப்படும் யாவேயின் போர்கள், மனித வரலாற்றில் இறைவனால் மேற்கொள்ளப்படும் சண்டைகளில் ஒரு கூறு மட்டுமாகவே உள்ளன. தொடக்கத்திலிருந்தே தனது திட்டங்களுக்கு எதிரான தீய சக்திகளுக்கு எதிராக, அவர் தாமாகவே போராடுகின்றார். பல்வேறு எதிரிகள் அவற்றினுடைய தொடக்கத்தினைத் தடுக்க முயலும்போது, அவரது மக்களுடைய வரலாற்றில் இந்த உண்மையானது வெளிக்கொணரப் படுகிறது. பின்னர், நிகழ்ச்சிகளின் மீதான தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்திய நிலையில், தனது மேலாண்மைச் செயலின் மூலம் இறைவன் தலையிடுகிறார்; இஸ்ராயேலானது வியத்தகு விடுதலை அனுபவத்தை அனுபவிக்கின்றது. யாத்திரையின் காலத்தில் யாவே எகிப்திற்கு எதிராகப் போரிட்டு, எல்லா விதமான வியப்புச் செயல்களாலும் அதனைத் தாக்கி (யாத் 3:20), அதனுடைய தலைப்பேறுகளையும் (யாத் 11:4;...), அதனுடைய தலைமையையும் (யாத் 14:18...) தாக்குகிறார். கானானில், இஸ்ராயேல் படைகளுக்கு அவர் துணை புரிகிறார் (நீதி 5:4.20; யோசு 5:13-14; 10:10-14; 2 சாமு 5:24); காலப்போக்கில் அரசர்களுக்குத் துணைபுரிந்து (சங் 20;21), தனது புனித நகரை விடுவிக்கிறார் (சங் 48:4-8; 2 அர 19:32-36). மனிதப் போராட்டங்கள் அவரது துணையின்றித் தங்களுடைய முடிவை அடையா என்பதை இவையனைத்தும் காட்டுகின்றன. மனிதர் போரிட்டாலும் இறைவன் மட்டுமே வெற்றியை அளிக்கிறார் (சங் 118:10-14; 121:2; 124).

2. **இறைவன் பாவிகளுக்கு எதிராகப் போரிடுகிறார்:** இவ்வுலகில் இறைவனுடைய போர்கள், இஸ்ராயேலின் தற்காலிக வெற்றியைத் தங்களுடைய இறுதி முடிவாகக் கொண்டிருப்பதில்லை. இறைவனுடைய மகிமையானது மற்றொரு இயல்புடையது. அவரது அரசு மற்றொரு அமைப்புடையது. அவர் விரும்புவது என்னவெனில், அவரது சட்டம் பகுப்பது போல, செழுமை மற்றும் நீதியினுடைய அரசை அமைப்பதாகும். இதனைச் செயல்படுத்தும் பணியை இஸ்ராயேல் கொண்டுள்ளது. ஆனால், அது தவறினால், புறவினச் சக்திகளுடன்தான் போரிடுவதற்கான அதே காரணத்திற்காக, இறைவன் தனது பாவம் நிறைந்த மக்களுடனும் போரிட வேண்டும். இதன் காரணமாகவே தனது விசுவாசமின்மைக்குப் பரிசாகப் பாலைவனம் (எண் 14:39-44), யோசுவா (யோசு 7:2...), நீதிபதிகள் (1 சாமு 4), சவுல் (1 சாமு 31) ஆகியோருடைய காலங்களில் இஸ்ராயேலானது போரின் எதிர் விளைவுகளையும் சந்திக்கிறது. அரசர்களின் காலத்தில், இந்த உண்மை இடையிடையே நிகழ்ந்தது. பல படையெடுப்புகளின் சூறையாடலுக்குப் பின்னர், இஸ்ராயேலும் யூதாவும் முழுமையான நாட்டின் அழிவில் முடிவுறும். இறைவாக்கினரின் பார்வையில் இவை இறைவனுடைய தீர்ப்பின் விளைவுகள் ஆகும்; தன்னுடைய பாவம் நிறைந்த மக்களை யாவே தண்டிக்கிறார் (எசா 1:4-9). தண்டிக்கும் பொறுப்போடு படையெடுப்பவர்களை அனுப்புபவர் அவரே (எரே 4:5-5:17;6; 5:26-30). பாபிலோனியப் படைகள் அவரது கட்டளைக்குப் பணிகின்றன (எரே 25:14-38). நெபுகத்னேசர் அவரது ஊழியன் (எரே 27:6-8) ஆவான்.

போரானது அடிப்படையிலேயே தீயது என்பதை இந்தப் பயங்கர நிகழ்ச்சிகளின் மூலமாக இஸ்ராயேல் புரிந்து கொண்டது. மனிதர்களிடையிலான சகோதரத்துவ வெறுப்பின் விளைவே இது (ஆதி 4). இது பாவ இனத்தினுடைய முடிவோடு பிணைக்கப்பட்டுள்ளது. இறைவனுடைய தண்டனை என்ற நிலையில், பாவம் மறைகின்ற வரையில், இஃது இவ்வுலகிலிருந்து முழுவதும் மறையாது (சங் 46:10; எசே 39:9-10). இதன் காரணமாகவே, இறைவாக்கினருடைய இறுதிக்கால வாக்குறுதிகள் அனைத்தும் உலகளாவிய சமாதானத்தினுடைய வியத்தகு காட்சியால் நிறைந்துள்ளன (எசா 2:4;

11:6-9). வெற்றி மற்றும் அழிவினுடைய புனிதப் போர்களுக்குப் பதிலாக, இத்தகைய உண்மையான மீட்பையே இஸ்ராயேல் நாட வேண்டும்.

IV. இறுதிக்காலப் போர்கள்

1.எதிரிப்படைகளின் தாக்குதல்: ஆயினும், இந்த மீட்பானது போரின்றி வராது. ஆனால், இப்போராட்டத்தினுடைய இன்றியமையாத சமய இயல்பானது தற்காலிக நிகழ்ச்சிகளினின்று முன்பிருந்ததைவிட மேலான விதத்தில் வேறுபடுத்தப்படும். ஆயினும், இதனுடைய எதிர்பார்க்கப்பட்ட பொருளானது, சந்தேகத்திற்கிடமின்றி எருசலேமிற்கு எதிரான புறவினத்தாருடைய இராணுவத் தாக்குதலின் தோற்றத்தைச் சிறிதாகிலும் கொண்டிருக்கும் (எசே 38; செக் 14:1-13; யூதி 1-7). பேரரசர் அந்தியோக்கினால் கட்டவிழ்த்து விடப்பட்ட, குருதிதோய்ந்த அடக்குமுறையின் போது எழுதப்பட்ட தானியேலின் வெளிப்பாட்டில், கொடிய விலங்குகளின் உருவில் சித்தரிக்கப்படும் பகைச் சக்தியானது தனது முதல் நோக்கமாகப் "புனிதர்களின் மீது போர் தொடுப்பதையும்," இறைவனையே தாக்குவதையும் கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது (தானி 7:19-25; 11:40-45; யூதி 3:8). அரசியல் போரின் பின்னணியில் இறைவனுக்கு எதிரான சாத்தான் மற்றும் அவனது தோழர்களுடைய ஆன்மீகப் போரினையும் அறியலாம்.

2. இறைவனுடைய பதில்: தனது விசுவாசத்திற்கு எதிராக, புறவின ஏகாதிபத்திய சக்தியால் தொடரப்பட்ட இந்தத் தாக்குதலின் முன்னிலையில், புனிதப்போரின் மரபில் புதுப்பிக்கின்ற இராணுவப் போராட்டத்தின் மூலமாக யூத இனமானது இன்னும் எதிர்ச்செயல் புரியலாம் (1 மக் 2-4; 2 மக் 8:10). உண்மையில், இறைவனிடமிருந்து முதலில் உதவியைக் கோரக்கூடிய பெரிய போராட்டத்தில் தான் ஈடுபட்டுள்ளதை இஸ்ராயேல் அறிந்திருந்தது (காண். 2 மக் 15:22-24; யூதி 9). குறிப்பிட்ட காலத்தில் விலங்கினுடைய மரணத்தைத் தீர்மானித்து (தானி 7:11.26), அதனுடைய வல்லமையை முறிப்பவர் ஆண்டவரே (தானி 8:25; 11:45). இந்த முன்னோக்கு தற்காலிகப் போர்களின் திட்டத்திற்கும் அப்பால் செல்கிறது. விண்ணகப்போரில் இது முடிவடையும். இதன் மூலமாக, ஏற்கெனவே வரலாற்றில், தான் காத்தவர்களுக்கும் (காண். எசா 59:15-20; 63:1-6), பகைவர்களுக்கு எதிரான நீதிமான்களுடைய பாதுகாப்பில் உண்மையாகவே காப்பவர்களுக்கும் இறைவன் முடிசூட்டுவார் (சங் 35:1-3). இந்தப் போரானது இறுதித் தீர்ப்பைத் தனது அமைப்பிற்கெனக் கொண்டிருக்கும். அஃது இவ்வுலகிலுள்ள அனைத்து அநீதிகளுக்கும் முற்றுபுள்ளி வைத்து (ஞான 5:17-23), மண்ணுலகில் இறைவனுடைய ஆட்சிக்கு நேரடிப் பீடிகையாக இருக்கும். இதன் காரணமாகவே, முடிவில்லாச் சமாதானம் அதனைத் தொடரும். அதில், அனைத்து நீதிமான்களும் பங்கு பெறுவர் (தனி 12:1-3; ஞான 4:7-9; 5:15-16).

இ) புதிய ஏற்பாடு: இந்த வாக்குறுதிகளைப் புதிய ஏற்பாடு நிறைவேற்றுகிறது. இறுதிக்காலப் போரானது இயேசுவின் மண்ணுலக வாழ்வு, அவரது திருச்சபையின் வரலாறு, மற்றும் இறுதி முடிவு ஆகிய மூன்று நிலைகளில் செயல்படுத்தப்படுகிறது.

I. இயேசு: இறுதிக்காலப் போராட்டத்தினுடைய ஆழ்ந்த இயல்பானது இயேசுவில் நிறைவாக வெளிப்படுத்தப்படுகிறது. இஃது இவ்வுலக அரசிற்கான தற்காலிகப் போரன்று (லூக் 22:50-51; யோவா 18:38). இயேசு தன்னைப் பாதுகாக்க எவ்வித மனித வன்முறையினையும் பயன்படுத்த மறுக்கிறார் (மத் 26:52; யோவா 18:11). இது சாத்தானுக்கு எதிரான, உலகிற்கு எதிரான மற்றும் தீமைக்கு எதிரான ஆன்மீகப் போராட்டமாகும். இவ்வுலகின் அரசனைத் தூக்கியெறிய வந்துள்ள வலியவர் இயேசுவே (மத் 4:1-11; 12:27-29; லூக் 11:18-20). உண்மையில், இவ்வுலக அரசன் அவருக்கெதிரான இறுதித் தாக்குதல் மூலம் எதிர்ச்செயல் புரிகிறான். இயேசுவைச் சாவிற்கு உட்படுத்துவது அவனுடைய கடைசி

முயற்சியாகும் (லூக் 22:3; யோவா 13:2,27; 14:30). ஆண்டவரால் அபிடேகம் செய்யப்பட்டவருக்கு எதிராக வரிசைப் படுத்தப்பட்ட உலக வல்லமைகளின் செயலைத் தூண்டுவது இவனே (அ.ப. 4:25-28; காண். சங் 2). ஆனால், இவ்வாறு செய்வதில் அவன் தனது தோல்வியையே விரைவுபடுத்துகிறான். உண்மையில், முரண்பட்ட நிலையில் இயேசுவின் சிலுவை அவரது வெற்றிக்கு உறுதியளிக்கிறது (யோவா 12:31). அவரது உயிர்ப்பில் தங்களுடைய அதிகாரத்தை இழந்த எதிரான சக்திகள் அவருடைய வெற்றிகரமான ஊர்வலத்தில் தோன்றுகின்றன (கொலோ 2:15). தனது மரணத்தினால் உலகை வென்றவராய் (யோவா 16:33), இனிமேல் வரலாற்றினுடைய ஆட்சியாண்மையை அவர் கொண்டுள்ளார் (திருவெளி 5). ஆனால், அவர் தாமே மேற்கொண்ட போராட்டமானது அவரது திருச்சபையின் வாழ்வில் காலந்தோறும் தொடரும்.

II. இயேசுவின் திருச்சபை:

1. போராடும் திருச்சபை: பண்டைய இஸ்ராயேல் மக்களைப்போல், திருச்சபையானது தற்காலிக அமைப்பின் மாட்சியாக இருக்கவில்லை. எனவே, மனிதருடைய போர்கள் அதனைச் சார்ந்தவையல்ல. ஆனால், இன்றைய உலகின் வரலாறு நிலைத்திருக்கும்வரையில், தனது அளவில் அது போராட்ட நிலையில் உள்ளது. அதன் மூலமாக இயேசு மனிதருக்குக் கொண்டு வருவது என்னவெனில், இறைவனுடனான சமாதானமும், ஒருவர் மற்றொருவருடனான சமாதானமும் ஆகும் (லூக் 2:14; யோவா 14:27; 16:33). ஆனால், இத்தகைய சமாதானமானது இவ்வுலகினுடையதன்று. இவ்வாறு, அவரில் விசுவாசம் கொள்ளும் மனிதர்கள் எப்போதும் உலகின் வெறுப்புக்கு உரியவர்களாகவே இருப்பர் (யோவா 15:18-21). இம்மைக்குரிய நிலையில் இயேசு அவர்களுக்கு வாளையன்றி, சமாதானத்தை ஒருபோதுமே கொண்டு வரவில்லை (மத் 10:34 இணை). ஏனெனில், இறைவனுடைய அரசு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது (மத் 11:12). தனிப்பட்ட அளவில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் போரிட வேண்டும். இஃது உடலும் இரத்தமுமான பகைவர்களுக்கு எதிராக இல்லாமல், சாத்தானுக்கும் அவனது தோழர்களுக்கும் எதிரானதாக இருக்க வேண்டும் (எபே 6:10-12; 1பேதுரு 5:8-9). திருச்சபையானது குழுவாகச் சாத்தானுடைய தோழர்களான இவ்வுலகச் சக்திகளுடைய தாக்குதல்களுக்குக் கையளிக்கப்படும்; உரோமைப் பேரரசும், புதிய பாபிலோனும் இத்தகையவையே (திருவெளி 12:17-13:10;17).

2. கிறிஸ்தவ படைக்கருவிகள்: இப்போரில் திருச்சபையும், அதன் அங்கத்தினர்களும் இம்மைக்குரிய படைக்கலன்களைப் பயன்படுத்தாமல் இயேசு அவர்களுக்கு உரிமையாக விட்டுச்சென்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். கிறிஸ்தவ நற்குணங்களே கிறிஸ்துவினுடைய போர்வீரனால் அணியப்படும் ஒளியின் ஆயுதங்களாகும் (1 தெச 5:8; எபே 6:11; 13-17). கிறிஸ்துவிலான விசுவாசமே தீயோனையும் உலகையும் வெல்கிறது (1 யோவா 2:14; 4:4; 5:4-5). வெளிப்படையாக உலகமானது கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொல்லும்போது, அவர்கள்மேல் வெற்றி கொள்வது போல் தோன்றலாம் (திருவெளி 11:7-10). நிலையற்ற இந்த வெற்றியானது, கிறிஸ்துவின் சிலுவையானது அவரது உயிர்ப்பின் மகிமைக்குப் பீடிகையாக உள்ளது (11:11. 15-18). செம்மறியானது தனது மரணத்தின் மூலம் அலகையை அழித்து விட்டார். அவ்வாறே, அவரது தோழர்களும் தங்களுடைய மறைசாட்சி மரணத்தின்மூலம் தங்கள் பகைவன்மீது வெற்றிகொள்வர் (12:11; 14:1-5). இத்தகைய போர்களின் வீரத்தன்மை பெருமளவில் யாவேயின் பண்டைய போர்களின் வீரத்தை விஞ்சுகிறது; எவ்விதத்திலும் குறையாத வீரதீரத்தைக் கோருகிறது.

III. இறுதிப்போர்.

1. முதல்நிலை அறிகுறிகள்: இயேசுவால் தொடங்கப்பட்ட இறுதிக் காலங்கள் கிறிஸ்து மற்றும்

எதிர்க்கிறிஸ்து என்னும் இரு குழுக்களுக்கிடையிலான மரணம் வரை போராட்டத் தோற்றத்தை இவ்வாறு ஏற்கின்றன. வரலாறு தனது முடிவை அடைகின்ற அளவிற்கேற்ப இப்போராட்டமானது நுண்மையிலும், கொடுமையிலும், தீவிரத்திலும் அதிகரிக்க வேண்டும் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. ஆனால், பாவ உலகாகிய தீய உலகம் உறுதியான இறைத்தண்டனையின்கீழ் உள்ளது. அதனுடைய அடையாளத்தை அதன் முடிவானது இனிக் கொண்டிருக்கும். இந்த இடத்தில் மனிதருடைய போர்கள் தங்களுடைய பொருளின் முழுமையை வெளிப்படுத்துகின்றன. மனிதனுடைய இம்மைக்கால அனுபவத்தின் மையத்தில், வரவிருக்கும் தீர்ப்பின் அறிகுறிகள் எழுதப்பட்டுள்ளன (மத் 24:6; இணை; திருவெளி 6:1-4; 9:1-11). கிறிஸ்துவினுடைய சமாதானத்தை ஏற்க மறுக்கின்ற அளவிற்கேற்ப, பாவம் நிறைந்த மனித இனமான,து குறிக்கப்பட்டுள்ளதற்குரிய உள்ளார்ந்த எதிர்ப்புகளை வெளிப்படுத்துகின்றது.

2. **இறுதிப்போரின் உருவங்கள்:** காலமானது தனது முடிவை நோக்கி, தவறாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒருபுறம் கிறிஸ்து தனது திருச்சபைக்குள் இறைவனுடைய அனைத்துச் சிதறிய மக்களையும் சிறிது சிறிதாக ஒன்று சேர்க்கிறாரெனில் (யோவா 11:52), மறுபுறம் அவரைப்போல் நடிக்கும் சாத்தான், தான் கெடுத்த அனைவரையும் ஒரே அணியில் ஒன்றுசேர்க்க முயல்கிறான். காலங்களின் முடிவில், தங்களது இறுதிப் போரைத் தொடங்குவதற்கென, அவனது தலைமையின் கீழ் மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டவர்களாக அவர்களைத் திருவெளிப்பாடு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. (திருவெளி 19:19; 20:7-9). ஆனால் இம்முறை, வெற்றியாளராகிய கிறிஸ்து தனது ஆட்சியுரிமையைக் காணக் கூடிய விதத்தில் ஒளிவீசச் செய்வார்; இறைவார்த்தையானது மகிமையில் தோன்றி, அழிப்பவரின் பணியைப் புரியும் (19:11-16.21; காண். மத் 24:30). வரவிருப்பதனுடைய இம்மைக்குரிய தோற்றமானது இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட தோற்றத்திற்குப் பின்னால், நம்மிடமிருந்து தன்னையே மறைக்கிறது; சாத்தான் மற்றும் அவனது ஆதரவாளர்களுடைய முடிவில்லாத் தண்டனையுடன், காலத்தின் இறுதியுடன் அது முடிவடையும் (19:20; 20:10). அதன் பின்னர், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலோ, மனிதருடைய பல்வேறுபட்ட குழுக்களுக்கு இடையிலோ உள்ள அனைத்து முரண்பாடுகளும் வெற்றி கொள்ளப்பட்டபின், புதிய எருசலேமினுடைய நிறைவான சமாதானமானது காப்பாற்றப்பட்ட மனித இனத்தை இன்பவனத்திற்குள் மீண்டும் அறிமுகப்படுத்தும் (திருவெளி 21). புனிதர்களின் நிலைத்தன்மை மற்றும் நம்பிக்கையின் அடித்தளமாகிய இறுதி வெற்றியின் காட்சியானது இதுவே (12:10): ஏனெனில், வெற்றி வீரராகிய கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து (3:21-22:7), போராடும் திருச்சபை வெற்றித்திருச்சபையில் எக்காலத்திற்கும் இறந்து போகும்.

போர் இயந்திரம், அரண் தகர் பொறி (BATTERING RAM)

இது போர்க்காலத்தில் ஒரு நகரை முற்றுகையிடுவோர் அதன் கோட்டைச்சுவர்களை இடிக்கப் பயன்படுத்தும் கருவியாகும். இதன் தொடக்க வடிவம் அசீரியர்களிடம் தோன்றியதாகத் தெரிகிறது. இஃது ஒரு சட்ட அமைப்பிலிருந்து நடுவில் தொங்கவிடப்பட்ட கனத்த மரத்துண்டு ஆகும். இச்சட்டம், கோட்டைச் சுவரிலிருந்து பாதுகாக்கும் படையினரால் எய்யப்படும் அம்புகளிலிருந்தும், கற்களிலிருந்தும் முற்றுகையிடுவோர் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் பயன்பட்டது. முழு இயந்திரம் நான்கு அல்லது ஆறு சக்கரங்களில் இழுத்துச் செல்லப்பட்டது.

2 சாமு 20:15-இல் இந்த இயந்திரம் குறிக்கப்பட்டிருக்கலாம். இங்கு யோவாபும், அவருடைய வீரர்களும் ஆபல்–பெத்-மாக்காவின் மதிலைத் தகர்த்தனர் என்று கூறப்பட்டுள்ளது. எசே

4:2-இல் இறைவாக்கினர் முற்றுகையிடப்பட்ட எருசலேமுக்கு ஒரு மாதிரி செய்யக் கட்டளை பெறுகிறார். இவ்விவரிப்பில் இந்த இயந்திரமும் இடம் பெறுகின்றன. எசே 21:27-இல், எருசலேமுக்கு எதிரான முற்றுகையில் பாபிலோனியர் பயன்படுத்திய ஆயுதங்களில் இதுவும் குறிக்கப்படுகிறது. தீர் நகருக்கு எதிரான இறைவாக்கிலும் இப்பொறி இடம் பெறுகிறது (26:9).

போர்க்கருவிகள் (WEAPONS OF WAR)

பல்வகைப்பட்ட போர்க்கருவிகள் மற்றும் அவை பயன்படும் சந்தர்ப்பங்கள் பற்றிய குறிப்புகள் விவிலியத்தில், குறிப்பாகப் பழைய ஏற்பாட்டில் நிறையவுள்ளன. இதைக்கண்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை. ஏனெனில், இஸ்ராயேலர் தங்கள் வரலாறு முழுவதும் ஏதாவது ஒரு போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே ஆயுதங்கள் எல்லாக் கலாச்சாரங்களிலும் ஒரு முக்கியப் பாகம் வகித்தன. இவை வேட்டையாடுவதிலோ, போரிலோ பயன்பட்டன. இவற்றைப் பயன்படுத்தும் திறன் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது. போதிய, தகுந்த ஆயுதங்களைச் செய்வது மக்களினங்களின் ஒரு முக்கிய அலுவலாக இருந்தது. காலப்போக்கில் இக்கருவிகளும் வளர்ச்சியுற்றன; நுண்மயமாக்கப்பட்டன. வளர்ச்சியுற்ற ஆயுதங்களைக் கொண்டிருப்பது பெரும்பாலும் ஒரு கலாச்சாரக்குழு மற்றொன்றின்மேல் ஒரு காலத்திற்கு ஆதிக்கம் கொண்டிருக்க உதவியது. இஃது ஆயுதங்களை ஆற்றல் மிக்க தாக்குவதிலும், பெருக்குவதிலும் போட்டிகளை ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட கலாச்சாரக்குழு அவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களின் தொழில் நுட்பத்தை அடையவோ, அதை விஞ்சவோ கட்டாயப்படுத்தப்பட்டது.

தொடக்க கால ஆயுதங்கள் மரத்தாலும், கற்களாலும் செய்யப்பட்டன. கற்கள் தனியாகவோ மரத்தோடு சேர்த்தோ பயன்படுத்தப்பட்டன. சக்கிமுக்கிக் கல் போன்றவை செதுக்கப்பட்டுக் கூர்மையான முனையுள்ள அல்லது கத்தி போன்ற ஓரங்களுடைய ஆயுதங்களாக்கப்பட்டன. இவை பெரிதும் பயன்படுத்தப்பட்டன. வில், அம்பு, கவண்கள் முதலியவை உலோகம் அல்லாத பொருட்களாலும் செய்யப்பட்டன.

கி.பி. 5-ஆம், 4-ஆம் ஆயிரமாண்டுகளில், உலோக இயல் வளர்ச்சியுற்றது. அஃதோடு போர்க்கருவிகள் செய்யும் தொல்நுட்பமும் பயங்கரமாக வளர்ச்சியுற்றது. இக்காலத்தில், செம்பு உருக்கி அடிக்கப்பட்டு, கருவிகளாகவும் ஆயுதங்களாகவும் செய்யப்பட்டன. ஆனால், கலப்பற்ற செம்பு ஆயுதங்கள் செய்வதற்கு மிகவும் மென்மையாக இருந்ததால், வெண்கலத்தைப் பயன்படுத்தும் தொழில் நுட்பம் வளர்ச்சியுற்றது. செம்பும் தகரமும் சேர்ந்த இந்தக் கலவை, வெறும் செம்பைவிடக் கடினமானதாகவும் வலுவானதாகவும் இருந்தது.

வெண்கலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் போர்க்கருவிகள் செய்ய வெகுவாகப் பயன்பட்டது. பழங்கால உலகின் பெரும் எழுச்சிகளும், தகரத்தின் பற்றாக்குறைகளும் சேர்ந்து வெண்கலத்தை நடைமுறைக்குப் பயனற்றதாகச் செய்தன. ஆகவே, மக்கள் அதிகமாகக் கிடைத்த இரும்பைப் பயன்படுத்தத் தொடங்கினர். இரும்பு ஆயுதங்கள் இக்காலத்திற்கு முன்பே தோன்றியிருக்கலாம். ஆனால், இரு தடைகள் இருந்தன. செம்பைவிட இரும்பை உருக்குவது வெகுகடினம்; மேலும், வெண்கலக்காலக் கொல்லர்கள் இந்தக் கலவையைத் தெரிந்திருக்க வில்லை. ஆகவே, தரத்தில் வெண்கலத்திற்குத் தாழ்ந்த மெல்லிரும்பே பயன்படுத்தப்பட்டது.

வெண்கலக் கால முடிவில் உலோகத் தொழிலாளர்கள் கரித்தீயில் இரும்பைக் காய்ச்சி அடித்து உருவாக்கும் நுட்பத்தைக் கண்டுபிடித்தனர். பரிசோதனைகளின் விளைவாக, அடுத்தடுத்து வெப்பமூட்டிக் குளிரச் செய்வதன் மூலம் சரியான உறுதியும் நீட்டிப்பு ஆற்றலுமுடைய இரும்பைத்

தயாரிக்குமுறையைக் கண்டுபிடித்தனர். இஃது ஒருவகையான எஃது ஆகும். இது, மென்னிரும்பையோ, வெண்கலத்தையோவிட, கருவிகளோ செய்வதற்கு ஏற்றதாக இருந்தது. கூரியமுனை மற்றும் ஓரங்களுடைய ஆயுதங்கள் செய்வதற்கு இது மிக உகந்தாய் இருந்தது. இரும்பிலிருந்து- வாள், குத்துவாள், கத்தி, ஈட்டி, அம்புமுனை மற்றும் பிற கருவிகளும் செய்யப்பட்டன. பெலிஸ்தியர் ஒரு காலத்திற்கு இரும்பை ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்தனர் என்று 1 சாமு 13:19-22 சுட்டுகிறது. இதற்குக் காரணம் தொழில் நுட்பம் சார்ந்ததாக இருக்கலாம். ஏனெனில், இஸ்ராயேலர் இத்தொழிலைக் கற்றுக் கொள்ளவில்லை எனலாம் (காண். நீதி 1:19; 4:3); அல்லது அரசியல் சார்ந்ததாக இருக்கலாம்; ஏனெனில், பெலிஸ்தியர் இரும்புக் கொல்லர்களை இஸ்ராயேலரிட மிருந்து வெற்றிகரமாக விலக்கியிருந்தனர்.

விவிலியத்திலும், அதற்குப் புறம்பேயும் பழங்கால ஆயுதங்கள் தாக்கப் பயன்படுபவை, தற்காப்புக்குப் பயன்படுபவை என்று பகுக்கப்பட்டிருந்தன. தற்காப்பு ஆயுதங்களில் முதன்மையாக மார்புக்கவசமும், அதைச் சேர்ந்தவைகயும் அடங்கும். காத்தைச் சேர்ந்த கோலியத்து வெண்கலத்தால் செய்யப்பட்ட தலைச்சவசமும் மீன் செதிலைப் போன்ற ஒரு மார்புக்கவசமும் அணிந்திருந்தான் (1 சாமு 17:56; காண். 17:38; 2 நாள் 26:14; நெகே 4:16; எரே 46:3-4). பழைய ஏற்பாட்டில் குறிக்கப்படும் ஒரே ஒரு தற்காப்பு ஆயுதம் ஊசியாவின் "ஏவுகணை இயந்திரமாகும்'' (2 நாள் 26:15). இஃது எருசலேமின் கோட்டைக் கோபுரங்களில் வைக்கப்பட்டுத் தாக்குபவர்கள்மேல் அம்புகளையும், பெரும் கற்களையும் வீசுவதற்குப் பயன்பட்டது. இந்த இயந்திரம் தானாகவே அம்புகளையும் கற்களையும் வீசியதா அல்லது இதைப் பாதுகாப்பாகக்கொண்டு வீரர்கள் அம்புகளை எய்து, கற்களை வீசினார்களா என்பது தெளிவாக இல்லை.

தாக்கும் ஆயுதங்கள் பல்வேறு பட்டவையாகும். அவை அடைந்த தூரத்தை வைத்துப் பகுக்கப்பட்டன. குறுகிய தூர ஆயுதங்களில் வாள் அல்லது குத்துவாள் (வெட்டுவதற்கும் குத்துவதற்கும் பயன்பட்டன; யோசு 11:11; நீதி 3:16-22; மத் 26:47-52). தடி, சம்மட்டி மற்றும் போர்க் கோடரி (சிறு பகுதிகளாக உடைப்பதற்குப் பயன்பட்டன; எரே 51:20-23; காண். பழ 25:18; எசா 10:5.15), ஈட்டி (குத்துவதற்குப் பயன்பட்டது; எண்-25:7-8; 2 சாமு 2:23; யோவா 19:34) ஆகியவை அடங்கும். மத்திய தூர ஆயுதங்களில் ஈட்டி மற்றும் அது போன்ற எடைகுறைந்த வேல் (எறிவதற்குப் பயன்பட்டன; 1 சாமு 18:11; 19:10; காண். 17:6-7; அ.ப. 23:23) ஆகியவை அடங்கும். அம்புகளும், கவண்களும் விவிலியத்தில் குறிக்கப்படும் நீண்ட தூர ஆயுதங்களாகும் (1 சாமு 17:49; 1 நாள் 12:2; 2 நாள் 26:14; திருவெளி 6:2). மிகவும் முக்கியமான, இறுதியான தாக்கும் ஆயுதம்- தேர் ஆகும். கானானில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் இஸ்ராயேலர் முன்னேறுவதை இரும்புத்தேர்கள் தடுத்து நிறுத்தின (நீதி 1:19). சாலமோன் தேர்கள் வைத்திருந்த நகரங்களும், அவருடைய 1400 தேர்களும் அவருடைய பெரும் செல்வத்தின் ஒரு பகுதியாகக் கணிக்கப்பட்டன (1 அர 10:14-29).

அதிகம் இல்லாமல் ஆனால் மறைமுகமாக, விவிலியம் ஆன்மீக ஆயுதங்களைக் குறிப்பிடுகிறது. ஆதி 15:1; சங் 3:31-இல் இறைவன் ஒரு கேடயம் என்று குறிக்கப் பெறுகிறார். சங் 7:11-13 இறைவனது நேர்மையான சினத்தின் விளைவுகளை வாள், வில் மற்றும் அனல் பறக்கும் அம்பு ஆகிய சொற்களில் விவரிக்கின்றன. நேர்மை மிக்க நீதிபதியான இறைவன் நேர்மையை- மார்புக்கவசமாகவும், விடுதலையைத் தலைச்சீராவாகவும் அணிந்திருப்பதாக எசா 59:17 விவரிக்கிறது. இவையிரண்டையும் மற்றும் பிறவற்றையும் எபே 6:11-17-இல் கிறிஸ்தவன் அணிய வேண்டிய இறைவனின் படைக்கலன்களை விவரிக்கும்போது, பவுல் பயன்படுத்துகிறார். 2 கொரி 10:14-இல் கிறிஸ்தவனின் ஆயுதங்கள்

உலகத்தைச் சார்ந்தவை அல்ல என்று குறிப்பிடுகிறார். எபி 4:12-இல் ஆசிரியர் இறைவார்த்தையை இருபக்கமும் கருக்கு வாய்ந்த வாளுக்கு ஒப்பிடுகிறார் (காண். திருவெளி 1:16). இஃது இறைவனின் சொல்லை ஆவி தரும் போர்வாளாகப் பவுல் சமன்படுத்துவதற்கு (எபே 6:17) ஒத்ததாகும்.

போர்க்குதிரை (CHARGERS, STEEDS, STALLION)

போர்க்காலத்தில் பகைவனின் படைகளை எதிர்த்துத் தாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் வலிமைமிக்க குதிரைகள். பொதுவாக, இவை வலிமை மிக்கவனவாகவும் முரட்டுத்தன்மையும், வீரமும், வேகமும் ஒருங்கே இணையப்பெற்றனவாகவும் இருந்தன; போரில் பயன்படுத்துவதற்கு ஏற்றனவாக இருந்தன (காண். எசா 30:16; 31:1.3; எரே 8:6.16; 47:3; 50:11; மீக் 1:13; நாகூ 2:4; செக் 6:7; நீதி 5:2; 1 அர 5:8).

போர்க்கைதிகள் (CAPTIVES)

பழங்காலத்தில் போரில் பிடிபட்ட நகரங்களின் மக்கள் கைதியாக்கப்பட்டனர். அரிதான சில சமயங்களில் இக்கைதிகள் நல்ல முறையில் நடத்தப்பட்டாலும் (1 அர 20:39; 2 அர 6:21-22), அனேகர் கொல்லப்பட்டனர் (2 சாமு 8:7; காண். நீதி 8:7). பெண்களும் குழந்தைகளும் கூடக் கொடுமையாகக் கொல்லப்பட்டனர் (2 அர 8:12; 15:16; ஆமோ 1:3; நாகூ 3:10). பெரும்பாலும் இவர்கள், கொள்ளைப் பொருளாகக் கொண்டு செல்லப்பட்டனர் (உப 20:10). கொல்லப்படுவதிலிருந்து தப்பியவர்கள்- கை, கால் சங்கிலியால் கட்டப்பட்டு, அடிமைத்தனத்துக்கோ, கட்டாய வேலைக்கோ கொண்டுசெல்லப்பட்டனர். பெண்கள், சங்கிலியால் கட்டப்படவில்லை யாயினும், அவர்களைக் கூட்டிச்சென்ற வீரர்களால், கற்பழிப்பு போன்ற கொடுமைகளுக்கு உள்ளானார்கள்.

அசீரியர்களும், பிற்காலத்தில் பாபிலோனியர்களும், அவர்கள் வென்ற நாடுகளிலிருந்து மக்களின் பெரும் பகுதியினரைக் குடிபெயரச் செய்து பிற நாடுகளில் குடியேறச் செய்தனர். சமாரியாவின் வீழ்ச்சிக்குப் பின் இஸ்ராயேலும், எருசலேமின் வீழ்ச்சிக்குப் பின் யூதாவும் இத்தகைய கொடுமையை அனுபவித்தன (2 அர 17:24; 24:12-16; 25:11-12). போர்க்கைதிகளை அசீரியர்கள் கொடுமையாக இழிவுபடுத்தினர். கைதியாக்கப்பட்ட அரசன் அசீரியத் தலைநகருக்குக் கொண்டு செல்லப்பட்டு, வெற்றி பெற்ற அரசனின் தேரை இழுக்க வைக்கப்பட்டான். கைதியான அரசனின் மூக்கிலோ, உதட்டிலோ ஒரு வளையம் பொருத்தப்படும்; அல்லது அவன் கூண்டில் அடைக்கப்பட்டு, நகரின் வாயிலில் வைத்து அவமானப்படுத்தப்படுவான்; கேலி செய்யப்படுவான் (காண். எசே 19:9). கிளர்ச்சி செய்யும் கைதிகளின் கை, கால், மூக்கு, காது முதலியன வெட்டப்படும்; கண்கள் பிடுங்கப்படும்; நாக்கு பிடுங்கப்படும். மற்றவர்கள் சிரச்சேதத்தாலோ, தூக்கிலிடுவதாலோ கொல்லப்படுவர். சில சமயம், கைதிகள் தோல் உரிக்கப்பட்டு, அவர்களது தோல் ,நகரச் சுவர்களில் தொங்கவிடப்படும்.

போர்வை (COVERING, COVERLET, RUG)

இது பஞ்சு, கம்பளம் போன்ற பொருட்களால் செய்யப்பட்டது (பழ 7:16; 31:22); பலவாறு பயன்பட்டது. யாயேல் தன் கூடாரத்துக்குள் நுழைந்த சீசராவை ஒரு போர்வையால் மூடினாள் (நீதி 4:18). அசாவேல் ஒரு போர்வையை எடுத்துத் தண்ணீரில் நனைத்துப் பென்-அதாது மன்னன் முகத்தை மூட, மூச்சடைத்து மன்னன் இறந்து போனான் (2 அர 8:15). இது படுக்கை விரிப்பாக, திரையாக அல்லது கனமான உடையாகப் பயன்படலாம்.

போலி அப்போஸ்தலர்கள் (FALSE APOSTTES)

கொரிந்து நகருக்கு வந்த சிலர், தாங்களே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் எனக்கூறினர் (2 கொரி 11:13). பவுல் இவர்களை நீதியின்

பணியாளர்களாக நடிக்கும் சாத்தானின் ஊழியர்கள் என்று பழித்துரைக்கிறார். இவர்கள் தாங்கள் யூதப்பரம்பரையில் தோன்றியவர்கள் எனக் கூறிக் கொண்டனர் (11:13-15.22); மற்றச் சபைகளிலிருந்து பரிந்துரைக் கடிதம் வாங்கி வந்திருந்தனர். இவர்கள் கொரிந்தை விட்டுப் போகும்போது அத்தகைய ஓர் கடிதத்தைக் கேட்டனர் (2 கொரி 3:1; காண். அ.ப. 18:27). இவர்கள் முரண்பாடான கருத்துகளை பரப்பினவர்களா அல்லது யூதமறையைப் பரப்பினவர்களா என்பது தெளிவாக இல்லை. ஆனால், இவர்கள் போதிப்பது வேறோர் இயேசு, வேறு நற்செய்தி, வேறோர் ஆவியில் வாழ்கின்றனர் என்று பவுல் குற்றம் சாட்டுகிறார். இவர்களின் எண்ணங்கள் தன்னலமானவை. அதன் விளைவு சீர்கேடு என எச்சரிக்கிறார் பவுல் (11:4.6. 18-20; 12:20-21) இவர்கள்தான் பவுலுக்கு எதிராகக் கொரிந்து நகரத் திருச்சபையிலே குழப்பமும் கலகமும் விளைவித்தனர்.

போலிகார்பின் திருமுகம் (POLYCARP, EPISTLE OF)

சிமிர்னா நகர ஆயரான போலிகார்பும் அவரோடிருந்த குருகுலமும், பிலிப்பி நகரத் திருச்சபைக்கு எழுதிய திருமுகம் இது. இது திராசன் மன்னனின் இறுதிக்காலத்தில் (கி.பி. 117) எழுதப்பட்டிருக்கலாம். போலிகார்பன் சீடரான இரனேயுதான் முதன் முதலில் இந்நூலைப் பற்றிக் குறிப்பிடுகிறார். கிரேக்க மூலத்தில், இதன் ஒரு பகுதிதான் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. மீதிப்பகுதி பழைய இலத்தீன் மொழியில் உள்ளது. இது நம்பத் தகுந்த சொற்பொருள் மொழிபெயர்ப்பாக உள்ளது. இந்நூல் அப்போஸ்தலிக்கத் தந்தையர்களின் நூல்களில் ஒன்று.

இக்கடிதத்திற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. அ) இஞ்ஞாசியார் மறைசாட்சி மரணத்திற்கு உரோமை செல்லும் வழியில் பிலிப்பி வழியாகச் சென்றார். அவரது முடிவு பற்றிய செய்தியை அறியவும், இஞ்ஞாசியாருடைய கடிதங்கள் ஏதாவது இருந்தால், பிலிப்பியின் திருச்சபை அதை அனுப்பிவைக்கும்படியும் கேட்டுப் போலி கார்பு இக்கடிதத்தை எழுதுகிறார்.

ஆ) பிலிப்பி நகரக் குருவான வலென்சும், அவரது மனைவியும் பணத்தைக் களவாடியதால் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டனர். இதுபற்றி, போலிகார்பின் ஆலோசனையைப் பிலிப்பி திருச்சபையினர் கேட்டிருந்தனர். அதற்கும் பதில் எழுதுகிறார் போலிகார்பு. அதே சமயம், கிறிஸ்து வின் மனிதத்தன்மையை மறுக்கும் தோசேத்தியர்களுக்கு எதிராகப் பிலிப்பியரை எச்சரிக்கிறார். இவற்றோடு மற்ற ஒழுக்கப் போதனைகளையும் எழுதுகிறார்.

விவிலியத்தில் கூறப்பட்டுள்ள பல கருத்துகள் இதில் பிரதிபலிக்கின்றன. இவர் நான்கு நற்செய்திகளையும் அறிந்திருந்தார். ஆனால், இயேசுவின் வார்த்தைகளைப் பல மாற்றங்களோடு மேற்கோள் காட்டுகிறார். பேதுரு, பவுல், யாக்கோபு, யோவான், ஆகியோரின் திருமுகங்களையும் இவர் அறிந்திருந்தார். இவர் இயேசுவின் சீடரான புனித யோவானின் சீடர் எனக்கூறப்படுகிறது (யோவா 5:21; 6:39.44).

போலிகார்பு சிமிர்னா நகரில் கி.பி. 155-இல் உயிரோடு எரிக்கப்பட்டார். மாற்கு அவுரேலியு காலத்தில் இது நடந்தது. இவ்வாறு இவர் மறைசாட்சியாக மரித்தார்.

போலிகார்பின் மறைசாட்சி மரணம் (POLYCARP, MARTYRDORN OF)

இது பிலோமெலியும் நகரத் திருச்சபைக்குச் சிமிர்னா நகரத் திருச்சபை எழுதிய ஓர் கடிதமாகும். இதில் சிமிர்னா நகர ஆயரான போலிகார்பு எவ்வாறு மறைசாட்சியாக மரித்தார் என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது 2-ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம். ஏனெனில், போலிகார்பு, கி.பி. 155-இல்தான் மறைசாட்சியாக மரித்தார். இப்புத்தகத்திலே அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலத்தை ஒட்டிய ஆயர், குருக்கள் பலரின் கருத்துகளும், அவர்களைப் பற்றிய செய்திகளும்

காணப்படுகின்றன. இஃது அப்போஸ்தலிக்கத் தந்தையர்களின் நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

போலிக்கிறிஸ்து (FALSE CHRISTS)

இவர்கள் இயேசுகிறிஸ்துவைப் போலவே நடித்து மக்களை ஏமாற்றுபவர்கள். புதுமைகள் பல செய்து தவறான செய்திகளைப் பரப்பி மக்களை நம்பச் செய்து மக்களைத் தவறான வழிக்கு இட்டுச்சென்றவர்கள் (மாற் 13:22; மத் 24:24; காண். லூக் 21:8). சில கோணங்களில் பார்த்தால் திருவெளி 13:11-இல் வரும் இரண்டாம் விலங்கே இந்தப் போலிக் கிறிஸ்து. ஆனாலும், இந்தப்போலிக் கிறிஸ்து பேய்த்தன்மையுள்ள எதிர்க்கிறிஸ்துவிடமிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும். இந்த எதிர்க் கிறிஸ்துதான் இயேசுவின் இரண்டாம் வருகையின்போது வரும் எதிரி (காண். எதிர்க் கிறிஸ்து).

போலி நற்செய்திகள் (APOCRYPHAL GOSPELS)

புதிய ஏற்பாட்டுத் திருமுறையில் காணப்படும் நற்செய்திகளைப் பின்பற்றி இவை எழுதப்பட்டன. ஆனால், இவை திருமுறைப்பட்டியலைச் சார்ந்தவை அல்ல. இவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

அ) தொடக்க கால நற்செய்திகள்: இவை மேலெழுந்தவாரியாகத்தான் திருமுறை நற்செய்திகளை ஒத்திருக்கின்றன. திருச்சபைத் தந்தையர்கள் தங்கள் நூல்களில் இவை பற்றி அளிக்கும் குறிப்புகள் மற்றும் சுட்டிக் காட்டுதல்களிலிருந்து மட்டுமே இவற்றை அறிகிறோம். இவற்றை நற்செய்தித் துணுக்குகள் என்றழைக்கலாம். இவற்றில் சில:

1. எபிரேயர்களின் நற்செய்தி
2. எபியோனியர்களின் நற்செய்தி.
3. நசரேயர்களின் நற்செய்தி.

ஆ) இயேசுவின் பாலபருவம் பற்றிய நற்செய்திகள்:

1. அரபிக்கில் பாலபருவ நற்செய்தி.
2. அர்மேனியரின் பாலபருவ நற்செய்தி.
3. தச்சர் யோசேப்பின் வரலாறு.
4. தோமாவின் பாலபருவ நற்செய்தி.
5. யாக்கோபின் மூல நற்செய்தி.

இ) பாடுகள் பற்றிய நற்செய்தி:

1. தோமாவின் நற்செய்தி.
2. நற்செய்தியாளர் யோவானின் நூல்.
3. நிக்கொதேமுவின் நற்செய்தி.
4. பசிலிதசின் நற்செய்தி.
5. பார்த்தலமேயுவின் நற்செய்தி.
6. பேதுருவின் நற்செய்தி.

ஈ. பிற நற்செய்திகள்:

1. இயேசுவின் கூற்றுகள் அடங்கிய அக்ரபா.
2. எகிப்தியரின் நற்செய்தி.
3. கன்னியின் விண்ணேற்பு.
4. தோமாவின் நற்செய்தி.
5. பார்த்தலமேயுவின் நற்செய்தி.
6. பிலிப்புவின் நற்செய்தி.
7. போலி மத்தேயுவின் நற்செய்தி.
8. மார்சியனின் நற்செய்தி.
9. மத்தியாவின் நற்செய்தி.
10. மரியாளின் பிறப்புப் பற்றிய நூல்

இவைபற்றி அந்தந்தத் தலைப்பின் கீழுள்ள தனிக்கட்டுரைகளில் காண்க.

போலித்திருமுகங்கள் (APOCRYPHAL EPISTLES)

புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களின் திருமுகங்களைப் பின்பற்றி இவை எழுதப்பட்டன. இவை எண்ணிக்கையில் சிலவே; பொருளடக்கத்தில் அவ்வளவு முக்கியம் உடையன அல்ல. ஆயினும், இவை பரவலாக அறியப்பட்டிருந்தன. இவற்றில் முக்கியமானவை:

1. அப்கார் – கிறிஸ்துவின் திருமுகங்கள்
2. அப்போஸ்தலர்களின் திருமுகம்.
3. இலெந்துலுவின் திருமுகம்.
4. பவுல் எழுதியதாகக் கருதப்படும் இலவோதிக்கேயருக்கு எழுதப்பட்ட திருமுகம்.
5. பவுல் எழுதியதாகக் கருதப்படும் கொரிந்தியருக்கு எழுதப்பட்ட மூன்றாம் திருமுகம்.

6. பவுல் மற்றும் செனேக்காவின் திருமுகம்.
7. பிலாத்து எழுதிய திருமுகங்கள்.
8. தீத்து எழுதிய திருமுகம்.

இவை பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழுள்ள தனிக்கட்டுரைகளில் காண்க.

போலிநூல்கள் (APOCRYPHA)

I. "அப்போகிரிபா" என்ற கிரேக்கச் சொல், சமயப்பண்புடைய சில யூத, கிறிஸ்தவ நூல்களுக்கு அளிக்கப்பட்ட பெயராகும். இந்நூல்கள் ஒரு காலத்தில் இறை அதிகாரமுடையனவாகவும், சில இடங்களில் இறை ஏவுதல் பெற்ற நூல்கள் தொகுப்பில் ஒரு பகுதியாகவும் கருதப்பட்டன அல்லது உரிமை கோரப்பட்டன. ஆனால், காலப்போக்கில் திருச்சபை அதிகாரிகளால் விவிலியத் திருமுறைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

திருமுறைப்பட்டியலில் அடங்கிய நூல்கள் பற்றிக் கத்தோலிக்கர்களுக்கும் பிரிவினைச் சகோதர்களுக்குமிடையே கருத்தொற்றுமை இல்லை. எழுபதுநூல் தொகுப்பில் காணப்பட்டு எபிரேயத் தொகுப்பில் காணப்படாத நூல்களைப் பிரிவினைச் சகோதரர்கள் "அப்போகிரிபா" என்றழைப்பர். இவற்றில் பலவற்றைக் கத்தோலிக்கர்கள் திருமுறைப் பட்டியலைச் சார்ந்தவை என்று கருதி, இவற்றைத் துணைத்திருமுறை நூல்கள் என்றழைப்பர். இதுபற்றி விவிலியத் துணைத்திருமுறைப் பட்டியல் என்ற தலைப்பின் கீழ்க் காண்க.

கத்தோலிக்கர்கள் போலி நூல்கள் அல்லது "அப்போகிரிபா" என்ற பெயரைப் பல நூல்கள் அடங்கிய ஒரு தொகுப்புக்கு அளிப்பர். இவை தோன்றிய வரலாறு பற்றி உறுதியாக ஒன்றும் கூற முடியாது. சில சமயங்களில், ஆசிரியர் பெயரில்லாமல் இவை தோன்றின. பெரும்பாலும் பாவனை செய்யப்பட்ட பெயரில் அல்லது புனைபெயரில் இந்நூல்கள் எழுதப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றின. இவை குலமுதுவர்கள், இறைவாக்கினர்கள் அல்லது அப்போஸ்தலர்களின் பெயரால் எழுதப்பட்டன. இத்தொகுப்பைப் பிரிவினைச் சகோதரர்கள் ஆசிரியர் பெயர் தெரியாத நூல்கள் அல்லது புனைபெயர் நூல்கள் **(Pseudepigrapha)** என்றழைப்பர்.

II. "அப்போகிரிபோஸ்" என்ற கிரேக்கச் சொல்லுக்கு மறைந்திருக்கிற அல்லது இரகசியமான என்பது பொருள். இந்நூல்கள் இப்பெயரால் முதலில் அழைக்கப்பட்டபோது, இப்பெயர் இந்நூல்களுக்குப் பெருமை தருவதாக இருந்தது. அதாவது, சாதாரணப் பொதுமக்களுக்கு அளிக்கப்படக் கூடாத மறையுண்மைகளைக் கொண்டிருப்பதாக இந்நூல்கள் கருதப்பட்டன. ஆனால், காலப்போக்கில், இவை பதிதக் குழுக்களிடையே வளர்ச்சியுற்றதாலும் இவற்றின் ஆசிரியர் பெயர் தெரியாததாலும், இவற்றின் போதகங்கள் பாரம்பரியப் போதகத்திற்கு எதிர்மாறாக அமைந்திருந்ததாலும் பெருமையாகத் தொடங்கிய பெயர் இழிபொருள் பெற்றுப் போலிநூல்களைக் குறிக்கப் பயன்பட்டது. ஓரிசன் இப்பொருளில் இந்த நூல்களுக்கு இப்பெயரைக் கொடுத்தார். ஏனெனில், இவை உண்மை விசுவாசத்திற்கு மாறானவற்றை மற்றும் தவறானவற்றைக் கொண்டிருந்தன. ஆகவே, காலப்போக்கில், இப்பெயர் போலியான, பொய்யான, பதித நூல்களைக் குறிக்கும் பெயராயிற்று. இதே கருத்தைப் புனித அகுஸ்தினார் எதிரொலிக்கிறார். எரோனிமு விவிலியத் துணைத்திருமுறைப் பட்டியலில் அடங்கிய நூல்களைக் குறிக்கவும் இப்பெயரைப் பயன்படுத்தினார். அவரைப்பின்பற்றி கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் பிரிவினைச் சகோதரர்கள் யூதத் திருமுறைப்பட்டியலை ஏற்று, கத்தோலிக்கத் திருமுறைப்பட்டியலிலிருந்து அவர்கள் நிராகரித்த நூல்களை "அப்போகிரிபா" என்றழைத்தனர். நாம் இக்கட்டுரையில் கத்தோலிக்கர்கள் பயன்படுத்தும்

பொருளிலேயே போலி நூல்கள் என்றழைக்கிறோம்.

III. பழைய ஏற்பாட்டுப் போலிநூல்கள்

1. தோற்றமும் நோக்கமும்: கிறிஸ்தவயுகம் தோன்றுவதற்கு முன்னும், தொடங்கியபோதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிய யூதர்களிடையே நிலவிய அவலநிலையும் அவர்களிடையே பரவலாகப் காணப்பட்ட நம்பிக்கையற்ற மனநிலையுமே இந்நூல்கள் தோன்றக் காரணமாயின. அவர்கள் வாழ்ந்த காலத்தில் நம்பிக்கையிழந்து, அவர்கள் அயல் ஆதிக்கத்தில் கடும் சுமையான துன்பங்களை அனுபவித்தனர். அவர்களுடைய அக்கால நிலைக்கும் ஒரு காலத்தில் அவர்கள் உறுதியாக அடைய இருந்த உன்னத நிலைக்கும் இடையிலுள்ள ஏறு மாறான நிலையைக் கடுமையாக உணர்ந்தனர். அவர்களுக்கு வழிகாட்டி உற்சாகப்படுத்த, ஆறுதல் அளிக்க இறைவாக்கினர் ஒருவரும் இருக்கவில்லை. இந்த நிலையில், போலி நூல்களின் ஆசிரியர்கள் வெகுதொலைவில் இல்லாத ஒரு நற்காலத்திற்கு மக்களின் கவனத்தைத் திருப்ப முயன்றனர். அப்போது, தனிப்பட்ட விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்ற அளவில் இஸ்ராயேலர் தங்கள் கதியை அடைவர். இந்த நூல் ஆசிரியர்கள் விரைவில் வரவிருக்கும் மெசியாவின் வெற்றிகரமான ஆட்சியை உயிர்ச் சித்திரமாக எடுத்துக்கூறுவதில் பெருமை அடைந்தனர். அந்த ஆட்சியில் இறைவனுடைய எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறும். நீதிமான்களின் வெற்றி எல்லாருக்கும் வெளிப்படுத்தப்படும். இந்நூல்களின் மையக்கருத்து நம்பிக்கையூட்டுவதாகும். அவர்களின் தவிர்க்க முடியாத மகிமை மிக்க கதியில் யூதர்களிடையே ஆழ்ந்த விசுவாசத்தைத் தூண்டி எழுப்ப இந்நூல்கள் பல வழிகளிலும் முயன்றன; அவர்களின் சோதனைகளில் ஆறுதல் அளித்தன; இறைவாக்கு வழிநடத்துதலை நிறைவு செய்ய முயன்றன. நீதிமான்களின் துன்பம், கடந்த கால இறைவாக்குகள் நிறைவேறலில் இருந்த நம்பிக்கையற்ற நிலை ஆகிய எக்காலத்திலும் நிலவும் பிரச்சினைகளை விடுவிக்க இந்நூல்கள் உதவின; சட்டத்தின் மேலான முதன்மையையும், அதைக் கவனமாய்க் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தின; அதே சமயம் தீயோரின் செழிப்பு, நீதித்தீர்ப்பு மற்றும் தண்டனையின் உறுதிப்பாடு, இறந்தோரின் உயிர்ப்பு ஆகிய இறையியல் பிரச்சினைகள் மீதும் ஒளிவிசின.

இந்த மாற்றத்தை ஏற்படுத்தப் பலமுறைகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு சமயம், இந்த ஆசிரியர்கள் தங்கள் நோக்கத்திற்கு ஏற்றவாறு திருமுறை வாசகத்தை மாற்றி அமைத்து எழுதுவர். மற்றொருசமயம், பழங்காலத்துப் பெரியவர்களில் ஒருவரைக் கட்டுக்கதை விவரங்களுடன் மெருகூட்டிச் சித்தரித்து, அவரைக்கண்டு உற்சாகம் பெறவும், அவரைப் பின்பற்றவும் தூண்டுவர். பெரும்பாலும், இறைவாக்கு அல்லது வெளிப்பாட்டு இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி, மறைந்திருக்கும் வருங்காலத்தை ஆராய்ந்து, அது கொண்டிருக்கும் இரகசியங்களை மறைபொருளான மற்றும் புதிரான வடிவங்களில் எடுத்துரைப்பர். தங்கள் நோக்கை உறுதியாக அடைவதற்குக் கடந்தகாலப் பெரியவர்களைப் பயன்படுத்தி, அவர்கள் கூறுவதாகப் பாவனை செய்து, தமது கால மக்களின் கவனத்தைக் கட்டாயமாக ஈர்க்க முயன்றனர். இப்பெரியவர்கள், இஸ்ராயேலின் தொடக்க காலத்திலேயே எழுதியதாகப் பாவனை செய்து, விரைவில் வரவிருப்பவைகளை இக்கால மக்களுக்கு முன்னுரைப்பதாக ஆசிரியர்கள் எழுதினர் இவ்விதமாக மக்களுக்கு முனைப்பாக எச்சரிக்கை விடுத்தனர்; உற்சாகம் ஊட்டினர். இதில் இவர்கள் பெருமளவிற்கு வெற்றி கண்டனர் என்று உறுதியாகக் கூறலாம். இதன் விளைவாக உரோமை ஆதிக்கத்திற்கு எதிரான கிளர்ச்சிப் போக்கு தோன்றி, மேலும் மேலும் வளர்ந்து கி.பி. 66-70-இல் நடந்த பெரும் கிளர்ச்சியில் உச்சநிலை அடைந்தது. இதற்கு இந்தப் போலிநூல்கள் பெரிதும் உதவின எனலாம்.

இந்நூல்களில் சிலவற்றை வரலாறு சார்ந்தவை, போதக நூல்கள், வெளிப்பாட்டு நூல்கள் என்ற தலைப்புகளில் பின்வருமாறு தொகுத்துத் தருகிறோம்.

2. அ. வரலாறு சார்ந்த நூல்கள்:

1. ஆதாம் ஏவாளின் வரலாறு.
2. ஆசினத்தின் நூல்.
3. எசாயாவின் விண்ணேற்றம்.
4. எசுதிராவின் மூன்றாம் நூல்.
5. மக்கபேயரின் மூன்றாம் நூல்.
6. யூபிலி நூல்.

ஆ. போதக நூல்கள்:

1. சங்கீதம் 151.
2. சாலமோனின் சங்கீதங்கள்.
3. பன்னிரு குலமுதுவர்களின் ஏற்பாடு.
4. மக்கபேயரின் நான்காம் நூல்.
5. மனாசேயின் செபம்.

இ. வெளிப்பாட்டு நூல்கள்:

1. ஆபிரகாமின் வெளிப்பாடு.
2. உவமைகளின் நூல்.
3. எசாயாவின் விண்ணேற்பு.
4. ஏனோக்கின் முதல்நூல் - எத்தியோப்பிய வடிவம்.
5. ஏனோக்கின் 2-ஆம் நூல் - ஸ்லவோனிக் வடிவம்.
6. ஏனோக்கின் 3-ஆம் நூல் - எபிரேய வடிவம்.
7. சிபிலின் வாக்குகள்.
8. பாரூக்கின் வெளிப்பாடு 2-ஆம் நூல் - சீரியக்கு வடிவம்.
9. பாரூக்கின் வெளிப்பாடு 3-ஆம் நூல் - கிரேக்க வடிவம்.

IV. புதிய ஏற்பாடு:

1. புதிய ஏற்பாட்டுப் போலிநூல்கள் என்ற தொகுப்பில், உரோமையைச் சேர்ந்த கிளமந்து, இஞ்ஞாசியார், பர்னபா, ஆயர் ஏர்மாசு போன்ற கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளைச் சேர்ந்த திருச்சபைத் தந்தையர்களின் நூல்கள் சேர்க்கப் படுவதில்லை. இவை அப்போஸ்தோலிக்கத் தந்தையர்கள் என்ற தலைப்பில் தொகுக்கப்படுகின்றன. போலி நூல்கள் என்ற தொகுப்பில் புதிய ஏற்பாட்டையும், திருமுறைப்பட்டியலையும் சேர்ந்ததாக உரிமை கொண்டாடிய நூல்கள் மட்டும் தொகுக்கப்படும். இவற்றில் பல பதிதக் கோட்பாடுகள் உடையன; கற்பனை வளமும் கட்டுக்கதைகளும் மிகுந்தவை.

2. **தோற்றம்:** திருமுறைப்பட்டியலில் உள்ள நூல்களில் கொடுக்கப்படுபவை சுருக்கமானதாகவும், அதிக விவரங்கள் இல்லாதிருப்பதுமே, இப்போலிநூல்கள் தோன்றுவதற்குக் காரணமாயின. இயேசுவின் பிறப்பு மற்றும் இளமைப் பருவம், அவருடைய தாய் மற்றும் நற்செய்தியில் வரும் முக்கியமானவர் களின் வரலாறு ஆகியவை பற்றி மேலும் மேலும் அறிய மக்கள் ஆவல் கொண்டனர். அப்போஸ்தலர்கள் எங்குப் பணிசெய்தனர், அவர்களின் முடிவு என்ன என்பனவற்றை அறிய விரும்பினர். இவை பற்றி அப்போஸ்தலர் பணிநூல் அதிகம் கூறுவதில்லை. இறந்தபின் நேர்வன, வருங்கால மறுவாழ்வு முதலியவற்றை அறிய மக்கள் விநோத ஆவல் கொண்டனர். போலிநூல்கள் இவற்றை நிறைவு செய்ய முயன்றன. ஆண்டவர், அவரது தாய் மரியாள் ஆகியோரின் மறைந்த வாழ்வு மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் பிற்காலப் பணிகள் ஆகியவை பற்றிய கதைகள் பல படைக்கப்பட்டன; வெளிப்பாட்டு நூல்கள் பல தோன்றின அடிப்படை கொண்டவை அல்ல. பதிதக் கொள்கைகளின் போக்கைக் கொண்டிருந்தன. ஆயினும், இவற்றில் சில நம்பக்கூடியவையாகக் கருதப்பட்டன. வெகுசில திருச்சபையின் வழிபாட்டிலும், பொதுமக்கள் பக்தியிலும், கிறிஸ்தவக் கலையிலும் இலக்கியத்திலும் இடம் பெற்றன. இப்போலி நூல்களை நற்செய்திகள், பணிநூல்கள், திருமுகங்கள், வெளிப்பாட்டு நூல்கள் என்ற தலைப்புகளில் தொகுத்துத் தருகிறோம்.

3. போலி நற்செய்திகள்:

காண்க. போலி நற்செய்திகள்.

4. போலிப்பணிநூல்கள்:

காண்க. போலிப்பணிநூல்கள்.

5. போலித் திருமுகங்கள்:

காண்க. போலித்திருமுகங்கள்.

6. போலி வெளிப்பாட்டுநூல்கள்:

காண்க. போலி வெளிப்பாட்டு நூல்கள்.

V. திருச்சபையும் போலிநூல்களும்: திருச்சபையின் மிகத்தொடக்க காலத்தில் இந்நூல்களுக்கு அவ்வளவு எதிர்ப்பு இருந்ததாகத் தெரியவில்லை. ஏனோக்கு நூல், மோசேயின் விண்ணேற்பு ஆகிய நூல்களிலிருந்து, திருமுறைப் பட்டியலைச் சேர்ந்த யூதாவின் திருமுகத்தில் எடுத்துக்காட்டுகள் தரப்படுகின்றன. ஆனால், இந்நூல்கள் இறைஏவுதல் பெற்றவைதான் என்பது பற்றிச் சில இடங்களில் ஐயமும் தயக்கமும் நிலவின. எ.கா. எசுதிராவின் நூல்கள். ஆனால், இந்த இலக்கியம் வெகுவேகமாக வளர்ச்சியுற்றது. இவற்றில் சில பதிதச் சூழ்நிலையில் தோன்றி பதிதர்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டன. இதைக் கண்ட திருச்சபையின் தந்தையர்கள், இந்நூல்களை அதிகக் கவனத்துடன் நோக்கத் தொடங்கினர். அவர்களுடைய தீர்ப்பு இந்நூல்களுக்கு அதிகப் பாதகமாக அமைந்தது. அவர்கள், இவற்றைப் பயன்படுத்துவதைப் பற்றி மக்களை அடிக்கடி எச்சரித்தனர். இரனேயு பதிதர்களையும் அவர்களுடைய நூல்களையும் கடுமையாகக் கண்டனம் செய்தார். ஏனெனில், "இவர்களே பொய்யுரையாக அமைத்த எண்ணற்ற போலிநூல்களை எழுதி, உண்மையின் மறைநூல்களை அறியாதவர்களையும் அறிவில்லாதவர்களையும் திகைப்புறச் செய்கின்றனர்." ஓரிசனும், ஏயுசும் இந்நூல்களை மிகக் கடுமையாகக் கண்டனம் செய்கின்றனர். இவர்களின் கருத்துப்படி, இந்நூல்கள் பதிதர்களின் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டவை. தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் திருச்சபையின் எழுத்தாளர்களால் குறிப்பிடப்பட தகுதி பெறவில்லை. இந்நூல்களின் நடை அப்போஸ்தலர்களின் நடையைச் சேர்ந்ததன்று. இவற்றின் பொருளடக்கம் உண்மையான பாரம்பரியப் போதகத்திற்கு மிகவும் மாறாக உள்ளது. இவையெல்லாம் இந்நூல்கள் பதிதர்களின் பொய்யுரை என்று காட்டுகின்றன. ஆகவே, இந்நூல்கள் போலியானவை என்று கருதப்படவேண்டும்; பயங்கரமானவையும் இறைப் பற்றற்றவையும் என நிராகரிக்கப்பட வேண்டும்.

கி.பி. 393-இல் இப்போவில் நடந்த திருச்சபைச்சங்கம் இப்போலி நூல்கள் பற்றிய அதிகாரபூர்வமான அறிக்கை விடுத்தது. அதன்படி மறைநூலின் திருமுறைப்பட்டியலைச் சேராத எந்த நூலும் மறைநூல் என்ற தலைப்பில் ஆலயங்களில் வாசிக்கப்படக் கூடாது. இந்த அறிக்கை கி.பி. 397-இல் கார்தேசில் நடந்த திருச்சபைச்சங்கத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. செலாசியுவின் சட்டம் நாற்பது நூல்களைத் தொகுத்து இவற்றைப் போலிநூல்கள் என்ற கண்டனம் செய்கிறது. எக்சுப்பெரியுவுக்கு எழுதிய மடலில், முதலாம் இன்னோசந்து இவற்றைக் கண்டனம் செய்கிறார். காலப்போக்கில் இந்தக் கண்டனங்களை மக்கள் மறந்து போயினர். இவை மீளவும் பிரபல்யமாயின. மத்திய காலத்தில் இவை கிறிஸ்தவப் பக்தியிலும், கலையிலும் இலக்கியங்களிலும் பெரும் தர்க்கம் விளைவித்தன.

IV. போலிநூல்கள் பற்றிய மதிப்பீடு: இவற்றின் இறையியல் மதிப்பீடு மிகவும் குறைந்ததே ஆகும். ஏனெனில், இறை வெளிப்பாட்டினைப் பற்றிய அறிவை ஆழப்படுத்தக்கூடிய கருத்துகளை இவை அதிகம் கொண்டிருக்கவில்லை. ஆனால், யூத மற்றும் கிறிஸ்தவப் போலிநூல்கள், அவை எழுதப்பட்ட காலங்களைப் பற்றி அறிய வாய்ப்பளிக்கின்றன. யூதப் போலி நூல்கள் இயேசுவின் காலத்தில் முன்னணிக்கு வந்து, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்தவப்

போலிநூல்கள் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் எவற்றில் ஆர்வமும் அக்கறையும் காட்டினர் என்பதைக் காட்டுகின்றன. எவை அக்காலத்துக் கிறிஸ்தவர்களின் கவனத்தையும், பக்தியையும் வணக்கத்தையும் கவர்ந்தன, இவ்வுலக வாழ்வில் எதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர், மறு உலகவாழ்வில் எதை எதிர்பார்த்தனர் ஆகியவை பற்றி இந்நூல்களிலிருந்து அறிகிறோம். மத்திய காலத்தில் வழிபாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றில் இந்நூல்கள் கொண்டிருந்த தாக்கத்தை நாம் ஒதுக்கிவிடக்கூடாது. மரியாள் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட விழா, அவளுடைய பெற்றோரின் யோயாக்கிம் மற்றும் அன்னா என்ற பெயர்கள் முதலியவற்றை இந்நூல்களிலிருந்துதான் பெறுகிறோம். சில உன்னதமான கலைக்கும் இலக்கியப் படைப்புகளுக்கும் இவை பெரிதும் உதவியுள்ளன. இறுதியாக இவை தவறும்போது கூட இவை மதிப்பில்லாமல் இல்லை. இவற்றை மேலெழுந்தவாரியாக வாசித்தாலுங்கூட, இப்போலி நூல்களில் காணப்படும் கதைகளும், வியத்தகு செயல்களும், தவறான போக்குகளும் உண்மையான மறைநூலைப் போற்றுவதற்கு நம்மை இட்டுச்செல்கின்றன; உண்மையான மறைநூலில் காணப்படும் இறை ஏவுதல் பெற்றவார்த்தையின் எளிமை, மட்டுடைமை, உண்மையான மகத்துவம் ஆகியவை பற்றிய அறிவை ஆழப்படுத்த உதவுகின்றன.

போலிப்பணிநூல்கள் (APOCRYPHAL ACTS)

திருமுறைப்பட்டியில் உள்ள அப்போஸ்தலர் பணிநூலில் காணப்படாத, அப்போஸ்தலர்கள் பற்றிய செய்திகளைக் கொடுக்க முயலும் நூல்கள். தொடக்க காலத்தில் எழுதப்பட்டவைகளில் கொள்கை அழுத்தம் தெரிகிறது. ஆனால், இக்கொள்கைகள் பெரும்பாலும் பதிதக் கோட்பாடுகளாகக் கருதப்படுகின்றன. பிற்காலத்தில் எழுதப்பட்டவைகளில் கொள்கை அழுத்தம் தெரியவில்லை. மாறாக, இவை தங்கள் கதைத் தலைவரின் வீரதீரச் செயல்களையும், புதுமைகளையும், வீர மறைசாட்சி மரணம் பற்றிய விரிவான விவரிப்புகளையும் கொண்டுள்ளன. இவற்றில் முக்கியமானவை:

1. அந்திரேயாவின் பணிநூல்.
2. தோமாவின் பணிநூல்.
3. பவுலின் பணிநூல்.
4. பேதுருவின் பணிநூல்.
5. யோவானின் பணிநூல்.

மற்றும் சில போலிப் பணிநல்கள்:

1. அந்திரேயா மற்றும் பவுலின் பணிநூல்.
2. அந்திரேயா மற்றும் மத்தியாவின் (முத்தேயுவின்) பணிநூல்.
3. அந்திரேயாவின் துணுக்குக் கதைகள்.
4. அப்தியாவின் அப்போஸ்தலர் வரலாறு.
5. ததேயுவின் பணிநூல்.
6. தோமாவின் பணிநூல்.
7. பவுலின் பணிநூல்.
8. பர்னபாவின் பணிநூல்.
9. பிரக்கோரின்படி யோவானின் பணிநூல்.
10. பிலாத்துவின் பணிநூல்.
11. பிலிப்புவின் பணிநூல்.
12. பேதுரு மற்றும் அந்திரேயாவின் பணிநூல்.
13. பேதுரு மற்றும் பவுலின் பணிநூல்.
14. பேதுரு மற்றும் பவுலின் பாடுகள்.
15. பேதுருவின் ஸ்லவோனிக்கப் பணிநூல்.
16. பேதுருவின் பாடுகள்.
17. பேதுருவின் போதகம்.
18. மத்தேயுவின் மறைசாட்சி மரணம்.
19. யாக்கோபின் (பெரிய) பணிநூல்.
20. யாக்கோபின் விண்ணேற்பு.

இவை பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழுள்ள தனிக்கட்டுரைகளில் காண்க.

போலி வெளிப்பாட்டு நூல்கள் (APOCRYPHAL APOCALYPSES)

இவை புதிய ஏற்பாட்டுப் பெரியவர்கள் எழுதியதாகக் கூறப்படும் போலிநூல்களின் சிறு தொகுப்பாகும். இவற்றின் முக்கிய நோக்கம் மறுவுலகம் பற்றிய காட்சிகளைத் தருவதும், உலக

முடிவு பற்றிய இறைவாக்கு உரைப்பதுமாகும். இவற்றில் சில நூல்கள்.

1. கன்னியின் வெளிப்பாடு.
2. ஸ்தேவானின் வெளிப்பாடு.
3. தோமாவின் வெளிப்பாடு.
4. பவுலின் வெளிப்பாடு.
5. பேதுருவின் வெளிப்பாடு.
6. யாக்கோபின் வெளிப்பாடு.

இவை பற்றி அந்தந்தத் தலைப்பின் கீழுள்ள தனிக்கட்டுரைகளில் காண்க.

போவாசு (BOAZ - அழகான்)

1. சொத்தும் குணமும் நிறைந்த இவர் பெத்லகேமைச் சேர்ந்தவர்; எலிமெலக்கு, நகோமி ஆகியோரின் உறவினர்; அவர்களுடைய மருமகள் ரூத்தைப் பிற்காலத்தில் மணந்து கொண்டவர். தம் மாமியார் நகோமியோடு பெத்லகேமை வந்தடைந்தபோது, மோவாபியப் பெண்ணான ரூத்து போவாசின் நிலத்தில் கதிர் பொறுக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவளது நற்குணத்தைப் போற்றும் விதத்தில், அவள் தனது நிலத்திலேயே தொடர்ந்து கதிர் பொறுக்கும்படி போவாசு கேட்டுக்கொண்டார், இந்த அன்புச் செயலால் தூண்டப்பட்டு, தனக்கு உடன்பிறந்தான் கடமையைச் செய்ய வேண்டும் என்று போவாசிடம் கேட்குமாறு நகோமி ரூத்துக்கு ஆலோசனை கூறினாள். இதை ரூத்து செய்த விதத்தையும், அதற்குப் போவாசு அளித்த பதிலையும் செயல்களையும் ரூத் 3-இல் வாசித்தறியலாம். போவாசு ரூத்தை மணந்து, எலிமெலக்கின் உடைமையை மீட்டு, இருவருக்கும் பிறந்த குழந்தையான ஓபேது வழியாக எலிமெலக்கின் குடும்ப மரபு நீடிக்கச் செய்தார். இந்த ஓபேதுதான் தாவீதின் பாட்டனாவார்.

போவாசின் தலைமுறைப் பட்டியல், அவர் யூதா இனத்தைச் சேர்ந்த எட்சரோன் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், தாவீது அரசனின் கொள்ளுப் பாட்டனாராகவும் காட்டுகிறது (ரூத் 4:18-22; 1 நாள் 2:9-15). இயேசுவின் மூதாதையர் பட்டியலில் போவாசு சல்மோனின் மகன் என மத் 1:3-6-இலும், சாலாவின் மகன் என லூக் 3:31-33-இலும் குறிக்கப் பெறுகிறார்.

2. சாலமோனின் ஆலயத்தின் முன் மண்டபத்திலுள்ள இரண்டு தூண்களுள் ஒன்றின் பெயர் (1 அர 7:2; 2 நாள் 3:17).

போற்றிபெரா (POTIPHERA - ராவால் கொடுக்கப்பட்டவர்)

போற்றிபெரா யோசேப்பின் மாமனார். இவர் சூரியக் கடவுள் வழிபாட்டின் மையமான எலியோப்பொலியின் குரு (ஆதி 41:45.50; 46:20). சூரியக்கடவுளைக் குறிப்பதான ரா (Re) எனும் பெயர், இப்பெயரில் இணைந்திருப்பது மிகப் பொருத்தமாகும். ஆனால் எப்படியோ, பெயரின் இவ்வடிவம் 10-ஆம் நூற்றாண்டு வரை எகிப்தில் தோன்றவில்லை.

போற்றுரை, புகழ்ப்பாடல் (DOXOLOGY)

இஃது இறைவனைப் போற்றிப் பாடலின் வாய்பாட்டைக் குறிக்கிறது; இறைவனுடைய அருஞ்செயல்களைப் போற்றிப் பாடுவதாகும் (ஆதி 24:27; யாத் 18:10). யூத வழிபாட்டில் புகழ்ப்பாடல்களின் முடிவில் ஆசீர்களாக வரும் வாய்பாடு (1 நாள் 16:36; சங் 41:13; 72:18; 89:52; 106:48). நீண்ட செபத்தின் முடிவிலும், இறைவன் பெயர் குறிக்கப்படும்போதும் இவ்வித வாய்பாடுகள் வரும். சில சமயங்களில், செபத்தின் தொடக்கத்திலும் இது வரக்கூடும் (1 நாள் 29:10; தானி 2:20; லூக் 1:68; காண். 2 கொரி 1:3; எபே 1:3; 1 பேதுரு 1:3). இப்போற்றுரை பாவங்களின் தண்டனையிலிருந்து போற்றுரை கூறுபவரைக் காப்பாற்றும் (உரோ 1:25; 2 கொரி 11:31).

கிறிஸ்தவப் போற்றுரை தந்தைக்கு (காண். உரோ 9:5; திருவெளி 5:12) மகன் வழியாக (எ.கா. உரோ 16:27; 1 பேதுரு 4:11), பரிசுத்த ஆவியில் செலுத்தப்படுகிறது.

வரைபடம்-i




இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயணம்
மத்தியதரைக் கடல்
செங்கடல்
0 20 40 60 80 100



கானான் நாடு
(இஸ்ராயேலின் 12 கோத்திரங்கள் வாழ்ந்த நிலப்பகுதிகள்)
Scale : 1 700 000
0 5 10 20 40
சீதோன்
சீரியா
தமஸ்கு
தீர்
தாண்
காதேசு
ஆசோர்
மேரோம் ஏரி
பாசான்
கோலான்
கர்மேல் மலை
தாபோர் மலை
தோர்
தானாக்கு
பேத்சான்
தோத்தான்
ஏபால் மலை
கெரிசிம் மலை
செக்கேம்
இராமோத்து
சுக்கோத்து
யோப்பா
சீலோ
எக்ரோன்
பெத்தேல்
ஆயி
எரிகோ
கில்கால்
இராமா
எருசலேம்
பெத்லகேம்
அசோத்து
காசா
எபிரோன்
சிப்பு
தெபீர்
பெயேர் செபா
இரகொபோத்து
தாமார்
ஏதோம்
நெபோ மலை
பெசேர்
இரப்பா
யாசேர்
எமோரியர்
அரேபியர்
இத்தியர்
பெருங்கடல்
சாக்கடல்
மோவாபியர்
1 2 3 4 5 6 7 8 9 10 11 12
1. ரூபன்
2. சிமியோன்
3. மனாசே
4. யூதா
5. தான்
6. நப்தலி
7. காது
8. ஆசேர்
9. இசக்கார்
10. செபுலோன்
11. எப்பிராயீம்
12. பென்யமின்


தாவீது-சலமோனின் பேரரசு
(கி.மு. 1000-930)
சைப்ரஸ்
பெருங்கடல்
இஸ்ரயேல்
அம்மோன்
மோவாபு
ஏதோம்



பாலஸ்தீன் நாடு
(இயேசுவின் காலத்தில்)
Scale: 1 1,700,000
0 5 10 15 20
மத்தியதரைக்கடல்
பெனிக்கியா
கலிலேயா
சமாரியா
யூதேயா
இதுமேயா
தெக்காப்பொலி
பெரயா
திரக்கோனித்து
இதுரேயா
அபிலேன்
சீரியா
சாக்கடல்
தமஸ்கு
செசரியா
நாசரேத்து
அந்திப்பத்திரி
பெத்லெகேம்


பெத்சதா குளம்
இயேசு தீர்ப்பிடப்படுதல்
பிலாத்து அரண்மனை (அந்தோனியா)
கொல்கொத்தா
போதித்தல்
ஆலயம்
கெதுசமனித் தோட்டம் (இயேசு பிடிபடுதல்)
ஏரோது அந்திப்பாவின் அரண்மனை
இயேசு ஆலோசனைக் குழுவின் முன்னிலையில்
கயபா அரண்மனை
பேதுரு மறுதலித்தல்
எருசலேம்—
பாடுகளின் பாதை
இன்னோம் பள்ளத்தாக்கு
மீட்டர்
0 50 100 150


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
முதல் பயணம் கி.பி. 46—48 (அப். பணி 13—14)
உரோமைப் பயணம் கி.பி. 58—62 (அப்.பணி 27—28:16)
கருங்கடல்
மத்தியதரைக்கடல்
அதிரியாக் கடல்
தல்மாத்தியா
இத்தாலியா
சிசிலி
மால்த்தா
கிரேத்து
திராக்கே
ஆசியா
சீரியா
லிபியா
எகிப்து
பம்பிலியா
கப்பத்தோக்கியா
கிலிக்கியா
பிரிகியா
0 100 200 300


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
இரண்டாம் பயணம்
கி.பி. 49—52 (அப். பணி 15:36—18:22)
மூன்றும் பயணம்
கி.பி. 53—57 (அப். பணி 18:22—21:16)
0 100 200 300
கருங்கடல்
பொந்து
மக்கதோனியா
அம்பிப்பொலிஸ்
பிலிப்பி
பெரோயா
பித்தினியா
மீசியா
துரோவா
கலாத்தியா
பிசீதியா
இக்கோனியா
தெர்பை
பம்பிலியா
அத்தலியா
பெர்கா
ஆசியா
எபேசு
மிலேத்து
சீரியா
சிலிசியா
தர்சு
அந்தியோக்கியா
செலூக்கியா
சைப்ரஸ்
பெனிக்கியா
தீர்
செசரியா
எருசலேம்
கிரேத்து
மத்தியதரைக்கடல்
எகிப்து

ஆசிரியரது பிற நூல்கள்

விவிலிய அறிமுக நூல்கள்

1.	"தோரா" அல்லது "ஐந்நூல்"	(ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்)
2.	வரலாற்று நாயகன்	(யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2, அரசர்கள், 1,2 நாள், எஸ்ரா, நெகேமியா, 1,2, மக்கபேயர்கள்)
3.	இஸ்ராயேலின் காவலர்கள் – I	(பொது முன்னுரை, ஆமோஸ் ஒசேயா, மீக்கா)
4.	இஸ்ராயேலின் காவலர்கள் – II	(எசாயா, செப்பனியா, நாகூப், அபக்கூக்கு, எரேமியா, எசேக்கியேல், ஆகாய், செக்கரியா, ஒதியா, மாலக்கி, யோவேல்)
5.	ஞான நூல்கள்	(யோபு, பழமொழி, சங்கீதங்கள், திருவுரை, உன்னத சங்கீதம், ஞானநூல், சீராக்கு)
6.	சில கதைகளும் காட்சிகளும்	(யோனா, ரூத்து, தோபியா, எஸ்தர், புலம்பல், பாரூக்கு, தானியேல், யூதித்து)
7.	நான்கு வடிவ நற்செய்திகள்	(மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகள்)
8.	புனித பவுலின் திருமுகங்கள் – I	(பவுலின் வாழ்க்கை வரலாறு, மற்றும் 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 & 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன் ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்கள்)
9.	புனித பவுலின் திருமுகங்கள் – II	(2–ஆம் தெசலோனிக்கர், கொலோசையர், எபேசியர், தீத்து, 1–ஆம், 2–ஆம் திமொத்தேயு ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்களும், பவுலின் இறையியலும்)

விளக்கவுரை நூல்

10.	லூக்காவின் நற்செய்தி	(அருள்வாக்கு மன்றப்பதிப்பு)
11.	விவிலியச் சித்திரக் கதைகள்	**பழைய ஏற்பாடு:** (காயின் ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சிம்சோன் ரூத்து, சாமுவேல், சவுல், தாவீது, அரசன் தாவீது)
12.	விவிலியக் களஞ்சியம் – I	**புதிய ஏற்பாடு:**
13.	விவிலியக் களஞ்சியம் – II	
14.	விவிலியக் களஞ்சியம் – III	
15.	விவிலியக் களஞ்சியம் – IV	
16.	விவிலியக் களஞ்சியம் – V	

தயாரிப்பில் உள்ளவை :

1. விவிலியச் சித்திரக் கதைகள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)

கிடைக்குமிடம்

தியான ஆசிரமம்

13, மாதா கோவில் தெரு, சென்னை – 600 028.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

"தியாகு"

விவிலியக் களஞ்சியம்

V

விவிலிய அறிமுகம்

தியான ஆசிரமம்

சென்னை -28

விவிலியக் களஞ்சியம்

V

ம, மா, மி, மீ, மு, மூ, மெ, மே, மை,
மொ, மோ, ய, யா, யு, யூ, யோ, ர, ரா,
ரி, ரூ, ரெ, ரே, ரோ, ல, லா, லி, லீ,
லூ, லெ, லே, லோ, வ, வா, வி, வீ,
வெ, வே, வை, வோ, வெள, ன

பதிப்பாசிரியர்
"தியாகு"

விவிலிய அறிமுகம்
தியான ஆசிரமம்
சென்னை-28.

முதல் பதிப்பு : திசம்பர், 1995
மறு பதிப்பு : மார்ச், 2000
மறு பதிப்பு : ஏப்ரல், 2005
மறு பதிப்பு : ஏப்ரல், 2010

Nihil Obstat
P.C. Thomas.

Imprimatur
+ M. Arockiasamy,
Archbishop of Madurai.

விலை : ரூ 250/-

நூல் கிடைக்கும் இடங்கள்

தியான ஆசிரமம்

சென்னை-28.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.

Type Setting : Savithri Laser Printing,
Chennai - 600 028.

Printed at : **Hitech Offset (P) Ltd.,**
11, Srinivasa Nagar Main Road, Koyambedu,
Chennai - 600 107. Phone : 2479 3339 / 2479 7245.
E-mail : hitechoffset@gmail.com

அர்ப்பணம்

இறைவனின் வார்த்தையைத் தன் இதயத்தில் ஏற்று, வார்த்தையாம் இறைவனைத் தன் உதரத்தில் வளர்த்து, மனுவுருவான வார்த்தையை உலகிற்கு அளித்த இறைவனின் அன்னையாம் மரியாளுக்கு, அன்பு கலந்த அர்ப்பணம்.

முன்னுரை

விவிலியக் களஞ்சியம் தொகுப்பின் ஐந்தாம் பாகத்தைத் தமிழ்கூர் நல்லுலகிற்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். தமிழ்க் கிறிஸ்தவர்கள் முதல் நான்கு பாகங்களுக்கு அளித்த ஆர்வமிக்க வரவேற்பு, இம்முயற்சியைத் தொடர்ந்து செய்து இந்த ஐந்தாம் பாகத்தை வெளிக் கொணரப் பெரிதும் உற்சாக மூட்டியது. இவ்வரவேற்பு அளித்த அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றி.

ஆள், இடம் ஆகியவற்றின் பெயர்களின் மூல எபிரேய, கிரேக்க உச்சரிப்புகள் தமிழ் இலக்கண மரபுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இப்பெயர்கள் புதிய பொதுமொழிபெயர்ப்பில் அமைந்த வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. சங்கீதங்களின் எண்கள் எபிரேய முறையில் தரப்பட்டுள்ளன. இறையியல் கட்டுரைகளில் பெரும்பகுதிகள் Xavier Leon-Dufour-இன் Dictionary of Biblical Theology என்ற நூலைத் தழுவி எழுதப் பட்டுள்ளன.

இனி நன்றி நவில்தல் என்ற இனிய கடமைக்கு வருகிறேன். தமிழ்க் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் முதல் முயற்சியான இத்தொகுப்பு பலர் சேர்ந்த கூட்டு முயற்சியாகும். இவர்கள் பல கட்டுரைகளின் பொருட்களையும் செய்திகளையும் தொகுத்துத் தருவதில் பெரிதும் உதவியுள்ளனர். இவர்கள் அனைவரின் பெயர்ப் பட்டியல் பின்பு தரப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

இத்தொகுப்பைத் திட்டம் செய்த காலத்தில், அறிவுரை கூறியும் உற்சாகப்படுத்தியும் பொருள் உதவி நல்கியும் ஊக்கமளித்த மேதகு கர்தினால் சைமன் D. லூர்துசாமி ஆண்டகை அவர்களுக்கு எனது உளம்கனிந்த நன்றி உரியதாகும். தயாரிப்புக் காலத்தில் பொருள் உதவிசெய்த Adam Sehall von Bell E.V., Koln, பதிப்பித்தலுக்குப் பொருள் உதவி செய்த MISSIO, Munchen ஆகிய இரு நிறுவனத்தார்க்கும் எனது மனமார்ந்த நன்றி. இவர்களின் உதவியின்றி இந்நூலை இவ்வளவு மலிவாகக் கொணர்ந்திருக்க முடியாது.

முதல் நான்கு பாகங்களுக்கு அணிந்துரை வழங்கிய, தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர்கள் குழுத் தலைவர், மதுரைப் பேராயர் மேதகு M. ஆரோக்கியசாமி ஆண்டகையே இப்பகுதிக்கும் அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும், Nihil Obstat அளித்துள்ள அருட் தந்தை P.C. தாமஸ் அடிகளார்க்கும், இப்பாகத்தின் தயாரிப்பில் நெடுகலும் பிரதிகளைத் திருத்தியும் பலவாறு உதவிகள் செய்தும் வந்துள்ள தமிழாசிரியர் ப. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கும் சிறப்பான முறையில் நன்றி கூறுகிறேன். இம்முயற்சியில் எனக்கு ஊக்கமளித்த இயேசு சபை மதுரை மாநில முன்னாள் தலைவர் அருட்தந்தை மைக்கில் செயராசு அடிகளார்க்கும், தயாரிப்புக் காலத்தில் எங்கள் குழு தங்குவதற்கு இடமளித்து, விருந்தோம்பி நல்லுதவிகள் செய்த திருச்சிராப்பள்ளி, புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியினருக்கும், அன்போடு பராமரித்து உதவிசெய்த எனது இல்லங்களாகிய லோயோலாக் கல்லூரி, தியான ஆசிரமம் ஆகியவற்றின் இயேசுசபைச் சகோதரர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. வரைபடங்கள் கொடுத்துதவிய திண்டிவனம், தமிழ்நாடு முப்பணி நிலையத்தாருக்கும் எனது மனமுவந்த நன்றி. அச்சு அமைத்த Savithri Laser Printing மற்றும் பதிப்பித்த Hi-Tech Offset Private Ltd, சென்னை, ஆகியோருக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இறைவார்த்தையை நன்குணர்ந்து, அன்பு செய்து, அதன்படி வாழ்வதற்கு இந்த விவிலியக் களஞ்சியம் பெரிதும் துணை செய்யும் என்று நம்புகிறேன். இக்களஞ்சியத்தைத் தயாரிப்பதில் நெடுகலும் ஊக்கமும் உரமும் அளித்து வழிநடத்தி வரும் இறைவன் திருவருள் துணைக்குச் சிரம்தாழ்த்தி நன்றியுடன் வணக்கம் செலுத்துகிறேன். இப்பாகமும் முழுத்தொகுப்பும் விவிலிய அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படும் நம்பிக்கையில் இப்பகுதியை வெளியிடுகிறேன்.

''தியாகு''

விவிலியக் களஞ்சியம்

அணிந்துரை

''தியாகு' அவர்களின் 'விவிலியக் களஞ்சியம்' இப்போது தமிழ் விவிலிய உலகத்தில் - ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும், போதகர்களிடமும் - அறிமுகமாகிவிட்டது.

இதோ, அதன் இறுதிப் பகுதி வெளிவருகிறது. ஒரு சோற்றுப் பானைக்கு ஒரு சோறு பதம். இக்களஞ்சியத்தின் அருமையை உணர, மகரத்தில் வரும் பகுதிமட்டும் இங்கு நோக்கத்தக்கது.

இப்பகுதியில் மத்தேயு, மரியாள் போன்ற நமக்கு அறிமுகமான சொற்கள் விரிவாக விளக்கப்படுகின்றன. மக்கபேயர் பற்றிய கட்டுரை (16-37) 22 பக்கங்களாக விரிந்து செல்கிறது. இதைப் படித்ததும் இந்நூலின் மேல் நமக்குத் தனிப்பற்று உண்டாகும்.

நமக்கு மிகவும் அறிமுகமாகாத மகனயிம், மக்பேலா, மம்ரே போன்ற பெயர்களும் சுருக்கமான, தெளிவான விளக்கம் பெறுகின்றன.

மேலும், மகிமை, மகிழ்ச்சி, மதித்து நடத்தல் போன்ற பண்புகள் விளக்கப்படும்போது அவற்றிற்குரிய விவிலியச் செய்திகள் தரப்படுவதோடு நம் ஆன்ம வாழ்வுக்கும், பொது வாழ்வுக்கும் பயன்படும் கருத்துகளும் இடம் பெறுகின்றன.

சான்றாக, 'மகிழ்ச்சி' என்ற தலைப்பில் ஆவியில் மகிழ்ச்சி, புதுவாழ்வின் மகிழ்ச்சி, ஆன்மீக மகிழ்ச்சி, சோதனை வேளையில் மகிழ்ச்சி, முடிவில்லா மகிழ்ச்சி என்ற சிறு தலைப்புகள் மலர்வது நமக்கு மகிழ்ச்சி தருகின்றது.

'மக்கள்' என்ற சொல்லில் மொழி பற்றிய விழுமிய கருத்து மணக்கின்றது: ''மக்களின் மொழியானது ஒற்றுமையின் ஒரு கூறாகும். அது சிந்திப்பதில் ஒரு பொதுவான முறையை உறுதிப்படுத்துகிறது. அது கலாச்சாரம் மற்றும் உலகம் பற்றிய சிந்தனையை அறிவிக்கிறது. அஃது ஓர் உண்மையான ஆன்மீகத் தாய் நாடாகும்'' (பக்.41).

இந்த விவிலியக் களஞ்சியம் மணங்கமழ் மலர்கள், மரங்கள், செடி கொடிகள் கொண்ட ஒரு பூங்கா. இதைப் பயன்படுத்துவோர் மதுவுண்ட வண்டுபோல் மகிழ்வு பெறுவர்.

எகிப்தில் பஞ்சம் உண்டான போது, யோசேப்பு களஞ்சியங்களைத் திறந்து எகிப்தியருக்குத் தானியங்களை விற்குமாறு செய்தார் (தொநூ.41:56). இதோ, 'தியாகு' என்ற அருள்தந்தை சந்தியாகு தம் விவிலியக் களஞ்சியங்களைத் திறந்துவைத்து வாழ்வுதரும் இனிய தானியங்களைத் தருகின்றார்.

இவர் இத்தனை ஆண்டுகளாக மேற்கொண்ட இம்முயற்சி, எத்தனை இன்னல்களை, இடையூறுகளை, எதிர்ப்புகளைச் சந்தித்திருக்கும்! 'தியாகு' செய்த தியாகங்களுக்காக இறைவன் அவரை ஆசீர்வதிப்பாராக!

விவிலியத்தில் மோசே கூறும் ஆசீர் தந்தை சந்தியாகுக்குப் பொருந்தும்: ''உன் களஞ்சியங்களிலும் நீ மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும், நீ ஆசிபெறும்படி ஆண்டவர் ஆணையிடுவார்'' (இணைச்சட்டம் 28:8).

இந்த விழுமிய விவிலிய ஆசியை அருள்தந்தை சந்தியாகு அடைவாராக.

+ ம. ஆரோக்கியசாமி,
மதுரைப் பேராயர்,
தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர்கள் குழுத் தலைவர்

இந்நூலைத் தயாரிப்பதில் உடன் உழைத்தவர்கள்

1. அந்தோனிசாமி A.
2. அமலராசு M.
3. அமல்ராஜ் P.T.
4. அருள்சாமி S.I.
5. ஆரோக்கியசாமி C.
6. ஆரோக்கிய நாதன் P.
7. ஆன்ட்ரு டிரோஸ்
8. இருதயம் A.
9. இருதயராஜ் A.
10. உபால்டு M.
11. சந்தனசாமி
12. சந்தியாகு M.
13. சார்லஸ் குமார் N.A.
14. சுந்தரம் U.
15. சூசை ஆரோக்கியசாமி
16. சூசை செபஸ்டியன்
17. சேவியர் இளங்கோ
18. சேவியர் இருதயராஜ்
19. ஜான் ஆரோக்கியராஜ் J
20. ஜான்சன் ராஜ் S.
21. ஜெரால்டு S.
22. ஜேம்ஸ் ரொசாரியோ B.
23. ஜோ லாரன்ஸ்
24. ஜோசப் I.M.
25. ஜோசப் லயனல் S
26. ஜோனாஸ் N.
27. ஞானப்பிரகாசம் F.
28. தீஸ்மஸ் P.
29. பால்தோமினிக்
30. பால்ராஜ் B.
31. பீட்டர் சகாயராஜ்
32. பிரான்கோ M
33. பிரான்சிஸ் M.
34. மரிய அருள்ராஜ் A
35. மரியதாஸ் I.
36. ரொசரியோ கோமஸ்
37. லூர்துசாமி A
38. லூர்து ராஜ் G.G.
39. விக்டர் M
40. வின்சென்ட் G

விவிலியத் திருமுறைப் பட்டியலும் சுருக்கக் குறிப்பும்

I. பழைய ஏற்பாடு

1. ஆதி ஆகமம் (தொடக்கநூல்)	ஆதி
2. யாத்திராகமம் (விடுதலைப் பயணநூல்)	யாத்
3. லேவியராகமம் (திருப்பணியாளர் நூல்)	லேவி
4. எண்ணாகமம் (எண்ணிக்கை நூல்)	எண்
5. உப ஆகமம் (துணைச்சட்டநூல்)	உப
6. யோசுவா ஆகமம்	யோசு
7. நீதிபதிகள் ஆகமம் (விடுதலைத் தலைவர்கள் நூல்)	நீதி
8. ரூத்து ஆகமம்	ரூத்
9. 1 சாமுவேல் ஆகமம்	1 சாமு
10. 2 சாமுவேல் ஆகமம்	2 சாமு
11. 1 அரசர்கள் ஆகமம்	1 அர
12. 2 அரசர்கள் ஆகமம்	2 அர
13. 1 நாள் ஆகமம் (ஆட்சிக் குறிப்பேடு)	1 நாள்
1' 2 நாள் ஆகமம் (2 ஆட்சிக் குறிப்பேடு)	2 நாள்
15. எஸ்ரா ஆகமம்	எஸ்
16. நெகேமியா ஆகமம்	நெகே
17. தோபியா ஆகமம்	தோபி
18. யூதித்து ஆகமம்	யூதி
19. எஸ்தர் ஆகமம்	எஸ்த
20. யோபு ஆகமம்	யோபு
21. சங்கீதங்கள் (திருப்பாடல்கள்)	சங்
22. பழமொழி ஆகமம் (நீதி மொழிகள்)	பழ
23. திருவுரையாளர் ஆகமம்	திருவுரை
24. உன்னத சங்கீதம் (பேரின்பப் பாடல்)	உ.ச.
25. ஞான ஆகமம்	ஞான
26. சீராக்கு ஆகமம்	சீரா
27. எசாயா ஆகமம்	எசா
28. எரேமியா ஆகமம்	எரே
29. புலம்பல் ஆகமம்	புல
30. பாரூக்கு ஆகமம்	பாரூ
31. எசேக்கியேல் ஆகமம்	எசே
32. தானியேல் ஆகமம்	தானி
33. ஓசேயா ஆகமம்	ஓசே
34. யோவேல் ஆகமம்	யோவே
35. ஆமோஸ் ஆகமம்	ஆமோ
36. ஒபதியா ஆகமம்	ஒப
37. யோனா ஆகமம்	யோனா
38. மீக்கா ஆகமம்	மீக்
39. நாகூம் ஆகமம்	நாகூ
40. அபக்கூக் ஆகமம்	அப
41. செப்பானியா ஆகமம்	செப்
42. ஆகாய் ஆகமம்	ஆகா
43. செக்கரியா ஆகமம்	செக்
44. மலாக்கி ஆகமம்	மலா
45. 1 மக்கபேயர் ஆகமம்	1 மக்
46. 2 மக்கபேயர் ஆகமம்	2 மக்

II. புதிய ஏற்பாடு

47. மத்தேயு நற்செய்தி	மத்
48. மாற்கு நற்செய்தி	மாற்
49. லூக்கா நற்செய்தி	லூக்
50. யோவான் நற்செய்தி	யோவா
51. அப்போஸ்தலர் பணிநூல் (திருத்தூதுவர் நூல்)	அ.ப.
52. உரோமையர்	உரோ
53. 1 கொரிந்தியர்	1 கொரி
54. 2 கொரிந்தியர்	2 கொரி
55. கலாத்தியர்	கலா
56. எபேசியர்	எபே
57. பிலிப்பியர்	பிலி
58. கொலோசியர்	கொலோ
59. 1 தெசலோனிக்கர்	1 தெச
60. 2 தெசலோனிக்கர்	2 தெச
61. 1 திமொத்தேயு	1 திமொ
62. 2 திமொத்தேயு	2 திமொ
63. தித்து	தித்
64. பிலமோன்	பில
65. எபிரேயர்	எபி
66. யாக்கோபு	யாக்
67. 1 பேதுரு	1 பேதுரு
68. 2 பேதுரு	2 பேதுரு
69. 1 யோவான்	1 யோவா
70. 2 யோவான்	2 யோவா
71. 3 யோவான்	3 யோவா
72. யூதா	யூதா
73. திருவெளிப்பாடு	திருவெளி

துணை நின்ற நூல்கள்

An.!erson G.N. : A Critical Introduction to the O.T.
A History and Religion of Israel
The living World of the O.T.

A New ‹ .tholic Commentary on Holy Scripture

Bright J : A History of Israel.

Claus Schedl : History of the O.T.

Danielou J : The Lord of History

Daniel-Rops : Sacred History

Edman Jacob : God, the Lord of History

Elis P.F : The Men and Message of the O.T.

Grelot i : Introduction to the Bible

Harry Tho··ıas Frank : Discovering the Biblical World

Helmer Ringgren : Israelite Religion

James Hastings : Dictionary of the Bible

Leon-Dufour X : Dictionary of the Biblical Theology

Louis Hartman : Encyclopedic Dictionary of the Bible

Mc Kenzie J.L : Dictionary of the Bible

Moriarty F.L : Introducing the O.T.

Osmund Lewry O.P. : Introducing the O.T.

Robert A & Feuillet A : Introduction to the Bible

Robert A & Tricot A : Guide to the Bible

The Eerdmans Bible Dictionary

The Harper's Dictionary of the Bible

The Interpreter's Dictionary of the Bible 5 Vols

The Jerome Biblical Commentary

The Jerusalem Bible

Weather Head : A Guide to the Bible

William P. Baber : Everyone in the Bible

''இயாகு'' : விவிலிய அறிமுகம் (10 பாகங்கள்)

ம

மகசியோத்து (MAHAZIOTH - காட்சிகள்)

இசைக்கருவிகள் இசைத்து இறைவாக்குரைக்க தாவீது மன்னனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஏமானின் புதல்வர். ஆலயத்தில் லேவிய இசைக்கலைஞர்களில் இருபத்து மூன்றாம் பிரிவுக்குத் தலைவர் (1 நாள் 25: 4-6.30).

மகதலா (MAGDALA - கோபுரம்)

இது கலிலேயாக்கடலின் மேற்குக்சுரையில் உள்ள ஒரு நகரம். மத்தேயு இவ்வூரை மகதா என்றும் (மத் 15:39), மாற்கு இவ்வூரைத் தல்மனுத்தா என்றும் (மாற் 8:10) எழுதியுள்ளனர். மகதலா மரியா இவ்வூரைச் சார்ந்தவள். புதிய ஏற்பாட்டுக் காலத்திலே இந்நகரின் பெயரானது தரிக்கேயா என்று இருந்திருக்கலாம். வளமிக்க இந்த ஊர் மீன்பிடித்துறையில் சிறப்புப் பெற்றிருந்தது.

தற்போதைய மெச்தெல், இந்த மகதலாவாக இருக்கலாமென நம்பப்படுகிறது. இந்நகர் திபேரியு சாலையில் மிக முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. இந்த நகர் திபேரியாவுக்கு அருகில் இருந்ததாகத் தால்மூது கூறுகிறது.

மகதலா மரியா (MARY MAGDALENE)

இறைமகன் இயேசுவின் கலிலேயப் பெண் சீடர்களுள் முக்கியமானவர் (மத் 27:56.61; 28:1; மாற் 15:40. 47; 16:1; லூக் 8:2; 24:10; யோவா 19:25; 20:1.18).

மகதலா நகர் திபேரியுவுக்கு அருகில் இருந்ததாக தால்மூது கூறுகிறது. இது கெனசரத்துச் சமவெளியின் தெற்குக் கோடியில் அமைந்துள்ளது.

மகதான் (MAGADAN)

இது கலிலேயாக் கரையிலுள்ள ஓரிடம். அப்பம் பலுகி நாலாயிரம் பேர் உட்கொண்ட புதுமைக்குப்பின் இறைமகன் இயேசு கூட்டத்தை அனுப்பிவிட்டு மகதா நாட்டுக்கு வந்தார் (மத் 15:39).

மகராய் (MAHARAI - தூண்கள் உள்ள)

தாவீதோடு இருந்த வலிமையுள்ள முப்பது பேரில் இவரும் ஒருவர் (2 சாமு 23:28; 1 நாள் 11:30).

இவர் யூதாவிலுள்ள நெற்றோபா என்ற ஊரைச் சேர்ந்தவர். மேலும், இவர் தாவீதின் படையில் பத்தாம் மாதத்திற்கான பத்தாம் பிரிவிற்குத் தலைவராக இருந்தார். இவர் ஒரு செரகியர் (1 நாள் 27:13).

மகலலேல் (MAHALALEL - இறைவன் ஒளிர்கின்றார்)

1. இவர் கேனானின் மகனும், சேத்தின் வழிவந்தவரும், ஏரேத்து (யாரேத்து)வின் தந்தையுமாவார் (ஆதி 5:12-17; 1 நாள் 1:2; லூக் 3:37).

2. அடிமைத்தனத்திற்குப்பின் வாழ்ந்த யூதா இனத்தையும் பெரேட்சுவின் குடும்பத்தையும் சேர்ந்தவர் (நெகே 11:4).

மகலாத்து (MAHALATH)

1. இவள் இசுமயேலின் புதல்வியும், நெபயோத்துவின் சகோதரியும், ஏசாவின் மூன்றாவது மனைவியும் ஆவாள் (ஆதி 28.9). 36:3-இல் இவள் பாசமத்து என்றழைக்கப்படுகிறாள்.

2. இவள் தாவீதின் பேத்தியும், எரிமோத்து மற்றும் அபிகயில் ஆகியோரின் புதல்வியும், ரெகபயாமின் மனைவிகளுள் ஒருத்தியும் ஆவாள் (2 நாள் 11:18).

3. சங் 53 மற்றும் 88-இல் வரும் மேற்குறிப்பு ஓர் இசைக்குறிப்பாகும். இச்சொல்லின் பொருள் தெளிவாக இல்லை. ஒருவேளை ''நோயுற்று'' என்று பொருள்படலாம். சங் 88-இல் மகலாத்து, ''லெயநோத்து'' என்று ஓர் இசைக்குறிப்பாக வருகிறது. இது ''நோயின் துயரில்'' என்ற மெட்டைக் குறிக்கலாம்.

மகலாபு (MAHALAB)

இஃது ஆசேர் புதல்வரின் கோத்திரத்திற்குக் கொடுக்சப்பட்ட ஓர் ஊர் (யோசு 19:29). இதுவும் அகிலாபும் (நீதி 1:31) ஒன்றே என்று கருதப்படுகின்றன. கி.மு. 701-இல் சனகெரிபின் மூன்றாம் படையெடுப்பில் கைப்பற்றப்பட்ட நகரங்களில் இதுவும் ஒன்று. இது தீர் நகருக்கு வடகிழக்கில் 6 கி.மீ. தொலைவில் லித்தானி ஆற்றின் கரையிலுள்ள கிர்பெத் ஏல்-மகலிபு என்ற இடமாக அடையாளம் காணப்படலாம்.

மகவியர் (MAHAVITE, THE)

எலியேலைக் குறிக்கும் ஓர் இனப்பெயர். இவர் தாவீதின் வலிமை வாய்ந்த முப்பது பேரில் ஒருவர் (1 நாள் 11:46). வாசகம் தெளிவாக இல்லை. இப்பெயர் மகனயிமியர் என்று திருத்தப்படலாம்.

மகள், புதல்வி (DAUGHTER)

இஸ்ராயேலர் இச்சொல்லைப் பல பொருளில் பயன்படுத்தினர். 1) முதன்மையாக, இச்சொல் ஒரு பெற்றோரின் பெண் குழந்தையைக் குறித்தது. இப்புதல்வியர்களின் பட்டியல் விவிலியத்தில் பல உள்ளன (எ.கா.ஆதி 11:29). 2) விரிவான பொருளில், எந்தப் பெண் வழித்தோன்றலையும், பேத்தியையோ (2 அர 8:26; 2 நாள் 22:2), தூர உறவுப் பெண்ணையோ குறிக்கலாம். 3) அடிக்கடி ஒரு நகரின், ஒரு பகுதியின் அல்லது ஒரு நாட்டின் பெண்கள் அதன் புதல்வியர் என்றழைக்கப்படுகின்றனர் (ஆதி 24:3). 4) இச்சொல் ஒரு நகரையோ (எசா 1:8; எரே 4:31), நாட்டையோ (எரே 46:11) உருவகமாகக் குறிக்கலாம். 5) மரபுமுறை பற்றிய பகுதிகள், நகரங்கள் அல்லது கிராமங்கள் புதல்வியர் என்று குறிக்கப்படுகின்றன. இஃது அவை நாட்டோடு கொண்டுள்ள உறவைச் சுட்டிக்காட்டுகிறது (சங் 48:11; 1 நாள் 1:50; 2:3.21.35.49; காண்க. யோசு 15:45; எரே 49:2-3).

புதிய ஏற்பாட்டில் ஒரு பெற்றோரின் உடனடியான பெண் குழந்தையையும் (லூக் 2:36), தூரத்து உறவுப்பெண்ணையும் (1:5; 13:16) இச்சொல் குறிக்கும். ஒரு நகரத்தை அல்லது அதன் குடிமக்களை இச்சொல் குறிக்கலாம் (மத் 21:5; யோவா 12:15; காண்க. லூக் 23:28). மத் 9:22-இல் தன் உதவியை நாடிய ஒரு பெண்ணை இயேசு ''மகளே'' என்று பரிவோடு அழைக்கிறார்.

சமூக வாழ்வில், மகளுக்கு மகனுடையதைவிடத் தாழ்ந்த நிலையே அளிக்கப்பட்டாலும், சமூகத்தில் மகளுக்குச் சில குறிப்பிட்ட சலுகைகளும் உரிமைகளும் உண்டு. குறிப்பிட்ட சூழ்நிலையில் அவள் உரிமைச் சொத்தையும் கோரலாம் (காண்க. எண் 27:1-7).

மகனயிம் (MAHANAIM இரண்டு பாளையம்)

இந்த நகர் கிலயாதுவில், மனாசேயின் பகுதிக்கு அருகில் உள்ளது. காதின் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்டது (யோசு 13:26. 30; 21:38). இது மெராரிக்குரிய ஒரு லேவிய அடைக்கல நகரமாகும் (1 நாள் 6:80). இந்நகருக்கு இப்பெயர் இரு காரணங்களால் வந்திருக்கலாம்.

1. யாக்கோபு கானானுக்குத் திரும்பி வரும் வழியில் யாபோக்கு ஆற்றுக்கு அருகிலுள்ள இந்த இடத்தில் கடவுளின் தூதர்கள் எதிர்கொண்டு வந்தார்கள். யாக்கோபு அவர்களைக் கண்டபோது ''இது தான் கடவுளின் படை'' என்று கூறி அவ்விடத்திற்கு மகனயிம் அதாவது பாளையம் என்று பெயரிட்டார் (ஆதி 32:2-3).

2. யாக்கோபின் சந்ததியை இரு பிரிவுகளாகப் பிரிக்குமளவுக்கு இறைவன் பலுகச் செய்ததால் அவ்விடத்திற்கு அப்பெயர் வழங்கப்பட்டது (32:11).

இந்நகர் வலிமை மிகுந்ததாக இருந்ததால் விவிலிய வரலாற்றில் இருமுறை அரசர்களுக்கு அடைக்கலம் தந்தது.

1. சவுல் கில்போவா மலையில் தோற்கடிக்கப்பட்டபின், சிதறிப்போன படை மகனாயிமுக்கு ஓடிப்போயிற்று. இங்குச்

சவுலின் மகன் இசுபொசேத்து தன் அரசை ஏற்படுத்திக் காலப்போக்கில் இஸ்ராயேலின் பெரும்பகுதியைக் கைப்பற்றினான் (2 சாமு 2:8.12.29). அவனை இரேக்காபும், பாநாவும் கொன்ற பிறகு, தாவீது நாடு முழுவதற்கும் அரசனானார் (4:5-7).

2. தாவீதின் மகன் அப்சலோம் தாவீதிற்கு எதிராகச் செய்த கிளர்ச்சியின்போது எருசலேமை விட்டு ஓடிய தாவீது மகனயிமில் தம் படைகளோடு ஓய்வு எடுத்தார் (17:24-27). அவரது படைகள் அப்சலோமுக்கு எதிராக எப்பிராயிம் காடுகளில் போரிடச் சென்றபோது, இங்குதான் தாவீது காத்திருந்தார் (2 சாமு 18).

மேலும், சாலமோன் அரசர் காலத்தில் மகனயிம் அவரது ஏழாம் மாவட்டத்தின் தலைநகராக விளங்கியது (1 அர 4:1). கி.மு. 925-இல் எகிப்தியர்கள் பாலஸ்தீனத்தின் மேல் படையெடுத்து வரும்போது இந்நகர் தரைமட்டமாக்கப்பட்டது.

இந்த இடம் எங்கிருந்தது என்று கூறமுடியாது. ஆனாலும், அய்லூக்கு அருகிலுள்ள கிர்பெத் மகனே மற்றும் இரட்டை இடங்களான தூலூல் எத்-தகாபு (பழங்காலப் பெனுவேல்) மற்றும் தூலூல் ஏல்-கர்பியே போன்ற பல இடங்கள் அடையாளம் காட்டப்படுகின்றன.

மகனேதாண் (MAHANEH-DAN - தாணின் பாளையம்)

இது கிரியத்து எயாரிமுக்கு மேற்கில் சோராவுக்கும் எசுத்தாவோலுக்கும் இடையில் உள்ள ஓர் இடம். இங்குதான் ''ஆண்டவரின் ஆவி சிம்சோனைத் தூண்டத்தொடங்கியது (நீதி 13:25). தாண் கோத்திரத்தைச் சேர்ந்த போர்க்கோலம் தாங்கிய அறுநூறுபேர், எப்பிராயிம் மலை நாட்டிற்குச் செல்லும் வழியில் இங்குப் பாளையம் இறங்கினர் (18:12).

மகன், புதல்வன் (SON)

இச்சொல் முதன்மைப்பொருளில், ஒரு குறிப்பிட்ட பெற்றோரின் ஆண்குழந்தையைக் குறிக்கும். விவிலிய வழக்கில், முதல் தலைமுறைக்கு அடுத்த ஆண் குழந்தையையும் குறிக்கலாம் (எ.கா. ஆதி 31:28; யாத் 12:24; லூக் 20:41; காண்க. 20:5). ஒரு நாடு முழுவதுமே குலப்பெயர் மூதாதையரின் புதல்வர்கள் என்று அழைக்கப்படும். எ.கா. இஸ்ராயேலரின் புதல்வர்கள் (எ.கா. ஆதி 32:33, இஸ்ராயேலர்); ஏத்தின் புதல்வர்கள் (23:3, ஏத்தியர்). ஓர் இனத்தைக் குறிக்கவும் இச்சொல் பயன்படும் (23:11). புவியியலும் மக்களைக் குறிக்க அடிப்படையாகலாம். அன்னியர் குழந்தைகள், ''அன்னிய நாட்டுப் புதல்வர்கள்'' என்று குறிக்கப்படுவர் (எ.கா. ஆதி 17:12; 2 சாமு 22:45). கீழ்த்திசை மக்கள் கீழ்த்திசைப் புதல்வர்கள் என்றழைக்கப்படுவர் (ஆதி 29:1). குறிப்பிட்ட நகரங்களின் மற்றும் நாடுகளின் மக்கள் அந்நகரங்களின் மற்றும் நாடுகளின் புதல்வர்கள் எனப்படுவர் (எஸ் 2:25-26.29-33; காண்க. 2:16).

''...உடைய மகன்'' என்பது ''... உடைய குணங்களைக் காட்டும் ஆள்'' என்ற பொருளைக் குறிக்கும் செமித்தியச் சொற்றொடராகும். எ.கா. கிளர்ச்சியின் புதல்வர்கள் (எண். 17:25); பேலியாலின் மக்கள் (உப 13:13); வலிமையின் மகன் (1 சாமு 14:52, வலியவன்); அடிமைத்தனத்தின் மக்கள் (எஸ் 4:1); துன்பங்களின் மகன் (பழ 31:5); அரசின் மக்கள் (மத் 8:12); கீழ்ப்படியாத மக்கள் (எபே 2:2); ஒளியின் மக்கள் (5:8); அழிவின் மகன் (2 தெச 2:3). ஒரே தொழிலைக் கொண்டிருப்பவர்கள் அவர்கள் குலப்பெயர் மூதாதையரால் அடையாளம் காட்டப்பட்டனர் (2 நாள் 35:14-15; சங் 42:44-இன் மேல் குறிப்பு; நெகே 3:8; காண்க. 1 அர 20:35; எஸ் 2:61).

''மனிதர்களின் மக்கள்'' (ஆதி 11:5, மானிடர்; பழ 8:4.31; திருவுரை 1:13) மனுகுலம் முழுவதையும் குறிக்கும் ஒரு சொற்றொடராகும். ''மனுமகன்''என்பது மூலத்தில் எந்த மனிதனையும், அவனுடைய மனிதத்தைச் சிறப்பித்துக் காட்டவோ, பெரிய குழுவிருந்து பிரித்துக் காட்டவோ பயன்பட்டது (சங் 8:4; எசே

26:2). இப்பெயர் சிறப்பான முறையில் இயேசுவைக் குறிப்பது பற்றி மனுமகன் என்ற தலைப்பின்கீழ்க் காண்க.

விண்ணக உயிர்கள் ''தெய்வப்புதல்வர்கள்'' என்றழைக்கப்படுகின்றனர் (யோபு 1:6; 38:7; சங் 29:1; 82:1;89:5-7; ஆதி 6:2.4: தானி 3:25). இறைவன் இஸ்ராயேலை ''என் மகன்'' என்றும் (யாத் 4:22-23; ஓசே 11:1), இஸ்ராயேலரை ''என் புதல்வர்கள்... என் புதல்வியர்'' என்றும் (எசா 43:6), ''என் மக்கள்'' என்றும் (45:11), இஸ்ராயேலின் அரசனை ''என் மகன்'' என்றும் (2 சாமு 7:14; சங் 2:7; காண்க. 89:26-27) அழைக்கிறார். இவை இறைவன் இஸ்ராயேலரோடு கொண்டிருக்கும் தனிச்சிறப்பான உடன்படிக்கை உறவைச் சுட்டுகின்றன. இறைமக்கள் பற்றிய இக்கருத்து புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது (உரோ 8:15-17.19; 9:26; கலா 4:5-7; காண்க. மத் 5:45; யோவா 1:2). ''தெய்வப் புதல்வர்'' அல்லது ''இறைமகன்'' என்ற பெயர் இயேசுவுக்கே சிறப்பான முறையில் உரியது என்பது பற்றி ''இறைமகன்'' என்ற தலைப்பின் கீழ்க் காண்க.

மகிமை, மாட்சி (GLORY)

I **பொதுவான நிலையில் மகிமை:** எபிரேய விவிலியத்தில் மகிமையைக் குறிக்கும் சொல்லானது பளுவினுடைய கருத்தைக் கொண்டுள்ளது. வாழும் உயிரின் பளுவானது அதனுடைய முக்கியத்துவத்தையும், அது தூண்டுகின்ற மரியாதையினையும், அதனுடைய மகிமையையும் வரையறை செய்கிறது. எனவே, எபிரேயரைப் பொறுத்த மட்டில் மகிமையானது, அதனுடைய பளுவிற்கு ஏற்பக் கணிக்கப்பட்ட புகழினை உண்மையான மதிப்பாகக் குறிப்பிடவில்லை.

மகிமையின் அடிப்படையானது செல்வங்களாக இருக்கலாம் ஆபிரகாம் ''கால்நடைகளும், வெள்ளியும், தங்கமும்'' கொண்டிருந்த காரணத்தினால் (ஆதி 13:2), ''மிகவும் மகிமைக்குரியவர்'' என்று கூறப்பட்டார். மகிமையானது மனிதன் பெற்றிருந்த உயர்ந்த சமூக நிலையினையும், அது அவனுக்கு அளித்த அதிகாரத்தையும் கூட குறிப்பிடுகிறது. ''நான் எகிப்திலே அடைந்துள்ள மாட்சி (சிறப்பு) அனைத்தையும் என் தந்தைக்குச் சொல்லுங்கள்'' என்று யோசேப்பு தனது சகோதரர்களிடம் கூறுகிறார் (45:13). நொறுக்குண்டு தாழ்த்தப்பட்ட யோபு ''என்னிடமிருந்து என் மகிமையைப் பறித்துக் கொண்டார்'' என்று கூக்குரலிடுகிறார் (யோபு 19:9; 29:1-25). மகிமையானது வல்லமையுடன் (எசா 8:7; 16:14; 17:3-4; 21:16; எரே 48:18) கடரொளியைச் சுட்டுகிறது. அழகின் ஒளிக்கீற்றை அது குறிப்பிடுகிறது. ஆரோனுடைய உடைகள் (யாத் 28:2.40), ஆலயம் (ஆகா 2:3.7.9), எருசலேம் (எசா 62:2), லெபனோன் (எசா 35:1-2; 60:13) ஆகியவற்றின் மகிமை பற்றியும் பேசப்படுகிறது.

தனிச்சிறப்பான முறையில் மகிமையானது அரசனுடைய உடைமையாகும். செல்வங்கள் மற்றும் ஆற்றலுடன் சேர்த்து அவரது ஆட்சியின் மேன்மையை அஃது எடுத்துக்கூறுகிறது (1 நாள் 29:28; 2 நாள் 17:5). ''அரசர்களில் வெறெவரும் பெற்றிராத செல்வங்களையும் மேன்மையையும், புகழையும்'' சாலமோன் இறைவனிடமிருந்து பெறுகிறார் (1 அர 3:9-14; மத் 6:29). படைப்பின் அரசனாகிய இறைவன் மனிதனுக்கு ''மாட்சியையும் மேன்மையையும் முடியாகச் சூட்டினார்'' (சங் 8:5).

II **மனித மகிமை பற்றிய திறனாய்வு:** மனித மகிமையினுடைய வலுவற்ற இயல்பினைப் பழைய ஏற்பாடு கண்டுள்ளது: ''சிலர் செல்வர் ஆனாலோ, அவர்களின் குடும்பச்செல்வம் பெருகினாலோ, அவர்களைக் கண்டு நிலைகுலையாதே! ஏனெனில், சாகும்போது அவர்கள் எதையும் எடுத்துப்போவதில்லை; அவர்களது செல்வமும் (மகிமையும்) அவர்கள் பின் செல்வதில்லை'' (சங் 48:16-17). ஒழுக்க மற்றும் சமய மதிப்பீடுகளுடன் மகிமையை எவ்வாறு இணைப்பதென்பதை விவிலியம் அறிந்திருந்தது (பழ 3:35; 20:3; 29:23). இறைவனுக்குக் கீழ்ப்படிதலானது

அனைத்து மனித மகிமையையும் விஞ்சியது (எண் 22:17-18). மகிமையினுடைய ஒரே உறுதியான அடித்தளமானது இறைவனில் உள்ளது (சங் 61:6.8). இறைப் பற்றற்றவருடைய நிலையற்ற மகிமையைப் பற்றித் தியானித்த ஞானி, தனது மகிமைக்கென இறைவனைவிட அதிகமாக எதையும் கொண்டிருக்க விரும்பவில்லை: ''முடிவில் மாட்சியோடு எம்மை எடுத்துக்கொள்வீர்'' (சங் 72:24). இந்த மனப்பான்மையானது அதனுடைய முழுமையில் கிறிஸ்துவினுடையதாக இருக்கும். ''உலக அரசுகள் அனைத்தையும், அவற்றின் மேன்மையையும்'' சாத்தான் அளிக்கும்போது இயேசு, ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக'' என்று பதிலளிக்கிறார் (மத் 4:8-10).

III ***யாவேயின் மகிமை:*** *யாவேயின் மகிமை என்ற சொற்றொடரானது, இறைவன் தனது சிறப்பான மாட்சிமைத் தோற்றத்திலும், வல்லமையிலும், தூய்மையின் ஒளியிலும், அவரது உயிரின் இயல் ஆற்றலிலும் வெளிப்படுத்தப்படும் அளவிற்கு இறைவனையே உணர்த்துகிறது. எனவே, யாவேயின் மகிமையானது இறை ஆற்றல் தோற்றமுடையது. பழைய ஏற்பாடு இறை மகிமையினுடைய இரு விதமான வெளிப்பாடுகளை அல்லது இறையாற்றல் தோற்றங்களை அறிந்துள்ளது. அவை இறைவனுடைய உயர்ந்த செயல்களும், அவரது வெளிப்பாடுகளும் ஆகும்.*

1. இறைவனுடைய உயரிய செயல்கள்: *தன்னுடைய ஆற்றல் மிக்க தலையீடுகள், தீர்ப்புகள் ''அருங்குறிகள்'' (எண் 14:22) ஆகியவற்றின் மூலமாக இறைவன் தனது மகிமையை வெளிப்படுத்துகின்றார். செங்கடல் புதுமை மிகச்சிறப்பான முறையில் இத்தகைய சிறப்பு மிக்கதே (14:18). மன்னா மற்றும் காடைகளின் புதுமையும் இத்தகையதே: ''காலையில் நீங்கள், ஆண்டவரின் மாட்சியைக் காண்பீர்கள்'' (16:7). இறைவன் தன்னுடையவர்களின் உதவிக்கு வருகிறார். அப்போது மகிமையானது கிட்டத்தட்ட மீட்புடன் ஒத்ததாக உள்ளது (எசா 35:1-4; 44:23; எசா 40:5 மற்றும் லூக் 3:6-ஐ ஒப்பிடுக). உடன்படிக்கையின் இறைவன் தனது மக்களைக் காத்துத் துயர் தணிக்க, தனது மகிமையைப் பயன்படுத்துகிறார். அவரது மகிமையானது அவரது அன்பு மற்றும் பற்றுறுதியினுடைய ஊழியத்திற்கான அவரது வல்லமையாகும்: ''ஆண்டவர் சீயோனைக் கட்டி எழுப்புவார்; அங்கு அவர் தம் மாட்சியுடன் திகழ்வார்'' (சங் 102:16; காண்க. எசே 39:21 29). அவரது படைப்புச்செயலும் இறைவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ''பூவுலகனைத்தும் ஆண்டவருடைய மகிமையினால் நிறைந்திருக்கும்'' (எண் 14:21). இயற்கை நிகழ்ச்சிகளில், அவரது மகிமையை அதிகமாக வெளிப்படுத்துவதில் புயலும் ஒன்று (சங் 20:3-9; காண்க. 97:1-6).*

2. ''யாவேயின் மகிமையினுடைய'' காட்சிகள்: *இறை வெளிப்பாடுகளின் இரண்டாம் வகையில் காணக்கூடிய உண்மையாகிற மகிமையே (யாத் 16:10) இறை உயிரின் பளிச்சிடும் சுடரொளியாக உள்ளது. எனவே, ''உம்முடைய மாட்சிமையை எனக்குக் காண்பித்தருளும்'' என மோசே செபிக்கிறார் (33:18). சீனாய் மலையில், மலையினை நெருப்புச் சூழ்கின்ற ஒரு தோற்றத்தினை யாவேயின் மகிமை எடுத்தது (யாத் 24:15-17; உப 5:22-24). மேகத்தின் அருகில் இழுக்கப்பட்டவராய் மோசே ''ஒளிமயமான முகத்தோற்றத்தோடு'' திரும்புகிறார் (யாத் 34:29). ''இஸ்ராயேல் மக்கள் அவரது முகத்தை உற்றுப் பார்க்கவும் இயலாத அளவிற்கு அந்த மாட்சிமை மோசேயின் முகத்தைச் சூழ்ந்திருந்தது'' என்று பவுல் கூறுகிறார் (2 கொரி 3:7). சீனாய்க்குப் பிறகு மாட்சிமையானது புனித இடத்தை ஆடையாக உடுத்துகிறது: ''அவ்விடம் என் மாட்சிமையால் புனிதம் பெறும்'' (யாத் 29:43; 40:34). ஆண்டவருடைய மகிமையானது உடன்படிக்கைப் பேழையில் அரியணையில் அமர்ந்துள்ளது. அது முதல் இஸ்ராயேலானது இம்மாட்சிமைக்குப் பணிசெய்யும் (லேவி 9:6.23-24). அதனுடைய சுடரொளியின்கீழ் அது*

வாழ்ந்து, இயங்கி, வெற்றி கொள்கிறது (எண் 16:1-17:15; 20:1-13; 40:36-38). பேழையும் மகிமையும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. இஸ்ராயேலைப் பொறுத்தவரை ஒன்றை இழப்பதென்பது, மற்றதையும் இழப்பதாகும் (1 சாமு 4:21-22). பிற்காலத்தில் இந்த மாட்சியானது ஆலயத்தை நிரப்பும் (1 அர 8:10-12). மேலும், நாடு கடத்தப்படும் காலத்தில், கண்டனத்தின் அறிகுறியாக இங்கிருந்தே அது விட்டு விலகும் (எசே 9-11). மாட்சிமை பற்றிய இந்த இடம் மற்றும் சடங்குமுறை சார்ந்த கருத்திற்கும், செயல் திறமும் இயக்காற்றலுமுள்ள கருத்திற்கும் இடையிலுள்ள உறவானது நெருங்கியதாக உள்ளது. இரண்டு நிலைகளிலும் தனது மக்களைக் காக்க, புனிதப்படுத்த, ஆட்சிசெய்ய அவர்களிடையே பிரசன்னமாய் இருப்பவராக இறைவன் வெளிப்படுத்தப்படுகிறார். புனிதத் தலத்தைத் திருநிலைப்படுத்தும்போது இரண்டு கருத்துகளுக்கு இடையிலான பிணைப்பு தெளிவாக உள்ளது. ''அவர்களிடையே குடியிருப்பதற்காக எகிப்து நாட்டினின்று அவர்களை நடத்தி வந்த அவர்களின் கடவுளாகிய ஆண்டவர் நாமே என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வர். ஆம்! நாமே அவர்களின் கடவுளாகிய ஆண்டவர்'' என்று இறைவன் கூறுகிறார் (யாத் 29:46).

அரச மகிமை என்ற கோணத்தில் யாவேயின் மகிமையை, யாவேயின் மாட்சியை எசாயா சிந்திக்கிறார். மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதையும், அவரது தொங்கலாடை புனித இடத்தை நிரப்பி நிற்பதையும், அவரது செராபியக் குழுவினர் அவரது மகிமையை உரத்தகுரலில் கூறிக்கொண்டிருப்பதையும் இறைவாக்கினர் காண்கிறார் (எசா 6:1-3). படைப்பினுடைய நீட்டுகளையும், அதனுடைய ஒன்றுமின்மையையும், அடிப்படை வலுவின்மையையும், திறந்து காட்டும் எரியும் நெருப்பாகவும், புனிதமாகவும் அஃது உள்ளது. ஆயினும், அழிப்பதற்காக இல்லாமல், தூய்மைப்படுத்தி மீண்டும் உயிரளிக்க அது வெற்றி பெறுகிறது. உலகனைத்தையும் ஆட்கொள்ள அது விரும்புகிறது. ஆலயத்தை விட்டு விலகி (எசே 11:22-23), ஆவியால் புதுப்பிக்கப்பட்ட சமுதாயத்தின் மீது சுடர் வீசிப் பரவுகின்ற (36:23-25; 39:21-29) மகிமையின் எல்லை கடந்த விடுதலையைப் பற்றி எசேக்கியேலின் காட்சிகள் கூறுகின்றன.

எசாயா நூலின் இறுதிப்பகுதியானது மகிமையின் இரண்டு கூறுகளையும் ஒன்றிணைக்கிறது: அவரது ஆற்றலால் புது வாழ்வு அளிக்கப்பட்டு, அவரது பிரசன்னத்தால் ஒளிர்விக்கப்படும் புனித நகரத்தில் ஆட்சிசெய்கிறார். ''எருசலேமே, எழு! ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது! ஆண்டவரின் மாட்சிமை உன்மேல் உதித்துள்ளது!'' (எசா 60:1). ''பூவுலகில் நிலைநாட்டப்பட்டுப் புகழ் பெறுவதாக'' எருசலேம் காட்சியளிக்கிறது (62:7; காண்க. பாரூ 5:3). திகைத்து அதனை நோக்கிவரும் அனைத்து நாடுகள் மீதும் இறைவனுடைய மகிமையானது அதனின்றே ஒளிவீசும் (எசா 60:3). நாடு கடத்தப்பட்ட காலத்து இறைவாக்கினரிலும், அரசினுடைய சங்கீதங்களிலும், வெளிப்பாடு நூல்களிலும் மகிமையானது இறுதிக்காலப் பண்பின் ஒரு குறிப்பிட்ட உலகளாவிய பருமானத்தை அடைகிறது: ''வேற்று மொழியினர் அனைவரையும் கூட்டிச்சேர்க்க நாமே வருகிறோம்; அவர்களும் கூடி வந்து நம்முடைய மகிமையைக் காண்பார்கள்'' (66:18; காண்க. சங் 97:6; அப 2:14).

இத்தகைய மின்னுகின்ற பின்னணிக்கு எதிராக, உலகின் கடையெல்லை வரையில் இறைமகிமையை ஒளிரச் செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட ஒருவருடைய ''அழகும் மாட்சியுமற்ற'' உருவமானது (எசா 52:14) பிரித்துக்காட்டப்படுகிறது: ''நீயே நம் ஊழியன், உன் வழியாய் நாம் மாட்சியுறுவோம்'' (49:3).

IV **கிறிஸ்துவின் மகிமை:** புதிய ஏற்பாட்டு வெளிப்பாட்டின் இன்றிமையாத

கூறு இயேசுவுடனான மகிமையின் தொடர் பாகும். இறைவனின் மகிமை அவரில் முழுமையாகப் பிரசன்னமாகியுள்ளது. இறைமகனாகிய அவரே ''கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய உள்ளியல்பின் சாயலாகவும் விளங்குகிறார்'' (எபி 1:3). இறைவனுடைய மாட்சிமை ''அவரது முகத்தில் வீசியது'' (2 கொரி4:6). அவரினின்று அது மனிதர் மேல் ஒளிவீசுகிறது (3:18). அவரே ''மாட்சிமைமிக்க ஆண்டவர்'' (1 கொரி 2:8). எசாயா ஏற்கெனவே சிந்தித்து வந்தது அவரது மகிமையைப் பற்றியே. 'எசாயா பேசியதும் அவரைப் பற்றியே'' (யோவா 12:41).

1. இறுதிக்கால மாட்சிமை: இயேசுவிலான இறைமாட்சியின் முழு வெளிப்பாடானது இறுதி வருகையில் நிகழும். ''மனுமகன் தம் தந்தையின் மாட்சியோடு தூய வான தூதருடன் வந்து'' (மாற் 8:38;காண்க. மத் 24:30; 25:31), ஒரே நேரத்தில் தீர்ப்பாகவும் மீட்பராகவும் தனது பணியை நிறைவுசெய்வதன் மூலம், தனது மாட்சியை வெளிப்படுத்துவார். இறைவன் நம்மை அழைத்திருப்பதும் (1 தெச 2:12), வெளிப்படுத்தப்படவிருப்பதும் (1 பேதுரு 5:1), ''நமது இறைவனும் மீட்பருமாகிய கிறிஸ்து இயேசுவினுடைய மாட்சிமை மிக்க காட்சியை நோக்கியும்'' (தீத் 2:13-14), ''கிறிஸ்துவிலான முடிவில்லா வாழ்வை நோக்கியும்'' (1 பேதுரு 5:10) புதிய ஏற்பாட்டால் பேணி வரப் பட்டுள்ளது. ''ஏனெனில், நொடிப் பொழுதே நீடிக்கக்கூடிய அது நம்மில், அளவிட முடியாத நித்திய மாட்சிமையை ஒப்புயர்வற்ற வகையில் விளைவிக்கிறது'' (2 கொரி 4:17). படைப்பனைத்தும் இம்மகிமையின் வெளிப்பாட்டிற்காக ஏங்குகிறது (உரோ 8:19). ஒளி வீசியவாறு வானின்று இறங்குகின்ற புதிய எருசலேமினை யோவான் காண்கிறார்: ''கடவுளுடைய மாட்சிமை அதற்கு ஒளிவீசியது; செம்மறியே அதன் விளக்கு'' (திருவெளி 21:23).

2. பாஸ்கா மகிமை: உயிர்ப்பினாலும் விண்ணேற்றத்தினாலும் கிறிஸ்து ஏற்கெனவே இறைமகிமைக்குள் நுழைந்துள்ளார் (லூக் 24:26). உலகம் படைக்கப்படுவதற்கு முன்னரே தனது அன்பில், தந்தை அவருக்கு அதனை அளித்துள்ளார் (யோவா 17:24). தந்தைக்குச் சமமான மகன் என்ற அளவில் அஃது அவருக்கு உரியதாக உள்ளது. மனிதனும் இறைவனுமானவர் விண்ணக மேகத்திற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டார்; ''மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார்'' (அ.ப. 1:9.11); ''மகிமையில் எடுத்துக் கொள்ளப்பட்டார்'' (1 திமொ 3:16). ''இறைவன் அவரை உயிர்ப்பித்து மகிமைப் படுத்தினார்'' (அ.ப. 3:13). பழைய ஏற்பாட்டில் யாவேயின் மகிமையைப் போன்ற இந்த மகிமையானது எல்லை கடந்த தூய்மை, புனிதத்துவம், ஒளி, வல்லமை மற்றும் வாழ்வினுடைய சூழலாக உள்ளது. உயிர்த்த இயேசு தனது முழுமையில் இந்த மகிமையை ஒளிர்விக்கிறார். இறக்கின்ற நிலையில் ஸ்தேவான் ''கடவுளின் மாட்சிமையையும், அவரது வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் கண்டார்'' (7:55). அவரது ''மாட்சியினுடைய ஒளியின் மிகுதியால்'' பவுல் பார்வை இழந்தார் (22:11). இஃதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சீனாயின் மாட்சிமை ஒன்றுமற்றதாகும் (2 கொரி3:10). உயிர்த்த இயேசுவின் மகிமையானது, புதிய படைப்பினுடைய ஒளியாக பவுலைக் குருடாக்குகிறது: ''ஏனெனில், 'இருளினின்று ஒளி சுடர்க' என்று சொன்ன கடவுள் தாமே கிறிஸ்துவின் முகத்தில் வீசிய இறைமாட்சிமையின் அறிவொளி மிளிரும்படி, எங்கள் உள்ளங்களிலும் ஒளி சுடரச் செய்தார்'' (4:6).

3. கிறிஸ்துவின் மண்ணகப் பணியிலும் பாடுகளிலும் மாட்சிமை: இறைவனுடைய மாட்சியானது உயிர்ப்பில் மட்டுமின்றி, இயேசுவினுடைய வாழ்விலும், பணியிலும், சாவிலுங்கூட வெளிப்படுத்தப்படுகிறது. நற்செய்தி நூல்கள், சிறப்பாக ஒத்தமை நற்செய்திகளில் லூக்கா, இறைபுகழ் காட்சியாக உள்ளன. இயேசுவினுடைய பிறப்பின்

அறிவிப்புக் காட்சியில், மரியாளின் மீதான தூய ஆவியின் வருகையானது, பழைய ஏற்பாட்டினுடைய புனிதத் தலத்தில் மகிமை இறங்குவதை வெளிக்கொணர் கிறது (லூக் 1:35). பிறப்பின்போது ''ஆண் டவருடைய மகிமையானது தனது ஒளி யால் இடையர்களைச் சூழ்ந்து கொள்கிறது'' (2:9-10). இயேசுவினுடைய திருமுழுக்கின் போதும், உருமாற்றத்தின்போதும் இந்த மகிமையானது காணப்படுகிறது (9:32.35; 2 பேதுரு 1:17-18). அவரது புதுமைகளிலும், வார்த்தையிலும், அவரது வாழ்வின் உன்னத மான புனிதத்துவத்திலும், அவரது சாவி லுங்கூட இது தெரிகிறது. இது, மெசி யாவை அவரது மாட்சிமைக்கு அறிமுகப் படுத்துகின்ற வழிமுறை மட்டுமன்று (லூக் 24:26). அதனுடன் இணைந்துள்ள அருங் குறிகள் சிலுவையில் அறையப்பட்டவரில் ''மகிமையின் ஆண்டவரை'' வெளிப் படுத்துகின்றன (1 கொரி 2:8).

யோவானில், இயேசுவினுடைய வாழ் விலும் சாவிலுமான மகிமையின் வெளிப் பாடானது இன்னும் தெளிவாகத் தோன்று கிறது. மனுவுருவான வார்த்தை இயேசுவே. இறைவனின் ஒரே மகனுடைய மகிமையானது அவரது ஊனுடலில் தங்கி, வெளிப்படுத்தப்படுகிறது (யோவா 1:4.18). முதலாவதான அருங்குறியிலிருந்தே அது தன்னை வெளிப்படுத்துகிறது (2:11). அவரை அனுப்பிய தந்தையுடனான இயேசு வின் இணைப்பில், மேலும் சிறப்பாக அவர்களது ஒன்றிப்பில் அது தோன்றுகிறது (10:30). இயேசுவின் செயல்கள் தந்தையி னுடைய செயல்களே. அவர் அவற்றை மகனில் நிறைவேற்றி (14:10), அங்கே தனது மகிமையையும் (11:40) ஒளியையும், வாழ்வையும் உலகிற்கு வெளிப்படுத்து கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மகிமையானது பாடுகள் முழுவதும் ஒளி வீசுகிறது. அதுவே இறைக்காட்சிகளில் மிக மேன்மையானது, இயேசுவின் நேரமாகும். தந்தைக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக (14:31), மிகத் தெளிவாகத் (13:1.3; 18:4; 19:28) தனது சாவிற்கும் (17:19) தந்தையின் பெயரின் மகிமைக்காக (12:28) இயேசு தன்னையே அர்ப்பணிக்கிறார். தன்னுடைய வர்கள் மீது கொண்ட அன்பினால் (13:1) இயேசு தனது வாழ்வையே ஓர் இலவசக் கொடையாக அளிக்கிறார் (10:18). உருமாற் றப்பட்ட சிலுவையானது மனுமகனுடைய ''உயிர்த்தலின்'' அருங்குறியாக உருவா கிறது (12:23.31). கல்வாரியானது அனைவ ருடைய பார்வைக்கும் (19:37), இயேசுவி னுடைய இறைத் தன்னிலையின் மறை பொருளை அளிக்கிறது (8:27). கிறிஸ்து வின் விலாவினின்று வழிந்த இரத்தமும் நீரும் வாழ்வின் ஊற்றாகிய அவரது சாவின் பலனை அடையாளப்படுத்துகின்றன. அவ ருடைய மகிமை இத்தகையதே (7:37.39; 19:34.36).

4. திருச்சபை மகிமை: *கிறிஸ்து மகிமைப் படுத்துதலானது கிறிஸ்தவர்களில் முழுமை யடைகிறது (யோவா 17:10). தந்தை மற்றும் மகனுடைய மகிமைக்கென இயேசுவின் பலியானது அவர்களில் தனது பலனைக் கொண்டுள்ளது (12:24; 15:8). தந்தை மற்றும் மகனால் அனுப்பப்பட்ட தூய ஆவியானவர், அருட்சாதன இரத்தம் மற் றும் நீருடன் (1 யோவா 5:7) மகிமைப்படுத் துதலின் கைவினைஞராக உள்ளார். அவர் மூலமாகக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவி னுடைய செல்வங்களை அறியவும், பெற வும் செய்கின்றனர் (யோவா 16:14-15;2 கொரி1:22; 5:5). உயிர்த்த கிறிஸ்துவின் மகிமை ஏற்கெனவே அவர்களில் பிரதி பலிக்கிறது; ''மாட்சிமை பெறுவதற்கான மாட்சிமையினுடைய'' அவரது சாயலாக அவர்களை மாற்றுகிறது (3:18; கொலோ 1:10-11; 2 தெச 1:12). ஆவியின் மூலமாக, துன்புறுதலும் உருமாற்றப்படுகிறது (1 பேதுரு 4:14).*

5. கிறிஸ்தவ மேன்மை: *இந்த மாட்சிமை பற்றிய சுய உணர்வானது கிறிஸ்தவத் தகுதி மற்றும் கிறிஸ்தவ மேன்மை பற்றிய உணர்வை அளிக்கிறது. ஏற்கெனவே பழைய ஏற்பாட்டில், இறைவன் தனது மகிமையை வெளிப்படுத்திய மக்களாக இருப்பது இஸ்ராயேலின் பெருமையாகும்.*

மாட்சியானது இஸ்ராயேலுக்கு உரியதாகும் (உரோ 9:4). இறைவனே அதனுடைய மாட்சிமை (சங் 106:20). ஏற்கெனவே இறைவனுக்கான பற்றுறுதியானது இஸ்ரா யேலில், மேன்மை பற்றிய சமய உணர் வினால் வண்ணம் பெறுகிறது. இறைக் கட்டளையானது இஸ்ராயேலின் மாட்சி மையாகும் (சங் 119:5-6). சிலைவழிபாடு மிகப்பெரிய பாவம்; ஆகவே, இஸ்ராயே லானது சிலை வழிபாட்டிற்காக இறை வனது மகிமையைப் பரிமாற்றம் செய்கிறது (106:20). இறைவனுக்குரிய மகிமையை அளிக்க விரும்பாததினால் கதிகெட்டுப் போன உலகினில் (உரோ 1:21-22), கிறிஸ்த வர்கள் காப்பாற்றப்பட்ட விண்ணகக் குடி மக்களாக உள்ளனர் (பிலி 3:20). ''கிறிஸ்து வுடன் உயிர்த்து'' (கொலோ 3:1), ''உலகில் சுடர்விடும் விண்மீன்கள் எனத் துலங்குகின் றனர்'' (பிலி 2:15-16). ''மனிதர் அவர்களின் நற்செயல்களைக் கண்டு, வானகத்திலுள்ள அவர்களுடைய தந்தையை மகிமைப்படுத் துவதென்பது'' அவர்களுக்குரிய மேன்மை யாகும் (மத் 5:16). கிறிஸ்தவப் பெயரி னுடைய மகிமைக்கு முன்னால், சமூகத் தாழ்நிலையின் அனைத்து உணர்வும் மறைந்து விடுகிறது: ''தாழ்நிலையிலுள்ள சகோதரன், தன் உயர்வு எண்ணிப் பெருமை கொள்வானாக! செல்வம் உள்ளவனோ தாழ் நிலையுற்றாலும் பெருமை கொள்வா னாக!'' (யாக் 1:9). ஏனெனில், ''மக்களின் தோற்றத்திற்கு'' அங்கே இனி இடமில்லை (2:1-3). கிறிஸ்தவர்கள் இறைவனை மகி மைப்படுத்த வேண்டிய உடலிற்குங் கூட, கிறிஸ்தவப் பெருமையின் உணர்வானது பரவுகிறது (1 கொரி 6:15.19-20). இறுதி யாக, கிறிஸ்தவப் பெயருக்காகத் துன்புறு வதும் ஒரு மகிமையே (1 பேதுரு 4:15-16). உலக மதிப்பை நாடுதலே, யோவானின் கருத்துப்படி, ஒருவர்க்கு மேற்பட்டோ ருக்கு விசுவாசத்திற்கான உரிமையை மறுத் துள்ளது (யோவா 5:44; 12:43). மேன் மையைக் கிறிஸ்தவ முறையில் புரிந்து கொள்ளுதலுக்கு இயேசுவே வழியைத் திறந்து விட்டார். மனிதரிடையிலான மாட் சிமை பற்றி அக்கறையற்றவராய் (5:41). ''சிலுவையின் நிந்தையை அவர் தாங்கி னார்'' (எபி 12:2). அவரது தனித்துவமிக்க மேன்மை ''தனது மாட்சியை நாடாமல்'', ''தன்னை அனுப்பினவருடைய மாட்சியை நாடி'' (யோவா 7:18), தனது தந்தையின் கரங்களில் மட்டுமே ஒப்படைத்துத் (8:50.54) தன் பணியை நிறைவேற்றுவதில் அடங்கியிருக்கிறது.

V. ***மாட்சிமையின் புகழ்ச்சி:*** *மனித னுடைய கடமையானது இறை மாட் சிமையைக் கண்டுணர்ந்து அதைப் போற்று வதாகும். பழைய ஏற்பாடானது படைத்த வர், அரசர், மீட்பர், மற்றும் இஸ்ராயேலின் புனிதருடைய மாட்சிமையைப் பாடுகின் றது (சங் 147:1). இறைமாட்சிமையின் முன்னால் திரையிடுகின்ற பாவத்தை அது வெறுத்துப் புலம்புகிறது (எசா 52:5; எசே 36:20-22; உரோ 2:24). மொத்த உலகி னாலும் அங்கீகரிக்கப்பட்ட இறை மகி மையைக் காணும் ஆசையால் அது பற்றி யெரிகிறது (சங் 145:10-11; 56:6.12).*

புதிய ஏற்பாட்டில் போற்றுரை கிறிஸ்து வைத் தனது மையமாகக் கொண்டுள்ளது. ''அவர் வழியாகவே இறைவனுடைய மகி மைக்கு 'ஆமென்' என்கிறோம்'' (2 கொரி 1:20). அவர் மூலமாக ஞானமே உருவான கடவுளுக்கு என்றென்றும் மகிமை எழுகின் றது (உரோ 16:27; எபி 13:15). இயேசுவின் பிறப்பிற்காகவும் (லூக் 2:20), புதுமைகளுக் காகவும் (மாற் 2:12...), அவரது மரணத்திற் காகவும் (லூக் 23:47) இறைவனுக்கு மகிமை அளிக்கப்படுகிறது. பவுலின் கோட் பாட்டு விளக்கங்களை வலியுறுத்தும்போது (கலா 1:3-4), போற்றுரைகள் அவரது செய்தியின் வளர்ச்சியை அளவிடுகின்றன (அ.ப. 11:18; 13:48; 21:20). திருவெளிப் பாட்டு நூலினுடைய போற்றுரைகள் மீட்பி னுடைய முழு நிகழ்வினையும் ஆடம்பர வழிபாட்டில் சுருக்கியமைக்கின்றன (திரு வெளி 15:3-4). இறுதியாக, திருச்சபையா னது ''தமது மாட்சிமைக்குப் புகழ்ச்சியாய் இருப்பதற்காக இறைவன் அடைந்த மக்க ளாக இருப்பதால்'' (எபே 1:12), தந்தைக்கே ''திருச்சபையிலும் கிறிஸ்து இயேசுவிலும்.

தலைமுறை தலைமுறையாக என்றென் றைக்கும் மகிமை'' கொடுக்கப்படுகிறது (3:21).

திருவழிபாட்டின் போற்றுரையோடு மறைசாட்சியர் இரத்தத்தின் போற்றுரை யைச் சேர்க்கிறார். ''சாவதற்கும் தயங் காமல் தங்கள் உயிரைப் பொருட்படுத்தா மல்'' (திருவெளி 12:11), இறைவனுக்கான பற்றுறுதியானது, அனைத்து, மனித மாட்சி மையிலும், தகுதியிலும் மேம்பட்டது என்று விசுவாசி அறிக்கையிடுகிறார். பேதுரு வைப் போன்று, தனது இரத்தத்தின் விலையினால் அவர் இறைவனை மகிமைப்படுத்துகிறார் (யோவா 21:18).

வரலாற்றின் முடிவிலான இறுதிப் போற் றுரையானது ''செம்மறியினுடைய திரு மணத்தின்'' பாடலாகும் (திருவெளி 19:7). ''பகட்டானதும், தூயதுமான விலைமிக்க ஆடையை அணிந்தவளாய்'' மணமகள் தோன்றுகிறாள் (19:8). பெரும் துயரி னுடைய நெருப்பில், தனது மணமக னுக்குத் தகுதியுடைய ஒரே மாட்சிமை யாகிய நற்குணங்கள், காணிக்கைகள், புனி தரின் பலிகள் ஆகியவற்றால், முடிவில்லாத் திருமணத்திற்குத் திருச்சபையானது ஆடை அணிந்து கொள்கிறது.

ஆயினும், மணமகளினுடைய மாட்சிமை யானது, முழுவதுமே அவளது கணவரிட மிருந்தே வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட் டோரின் உடைகள் அவரது இரத்தத்தில் தான் வெண்மையாக்கப்படுகின்றன (7:14; 15:2). மணமகள் இத்தகைய கவரும் ஆடையை அணிகிறாளெனில், அவ்வாறு செய்யுமாறு அஃது அவளுக்கு அளிக்கப் பட்டதே அதற்கான காரணமாகும் (19:8). நாம் நடந்து செல்வதற்கென இறைவன் முன்னதாகவே தயாரித்து வைத்த ''நற் செயல்களால்'' தினமும் தன்னை உடுத்திக் கொள்வதற்கென அவள் விடப்பட்டுள் ளாள் (எபே 2:10). கிறிஸ்துவினுடைய அன்பு இந்த மாட்சிமையின் தொடக்கத்தி லுள்ளது. ஏனெனில், ''கிறிஸ்து திருச் சபைக்கு அன்பு செய்து அதற்காகத் தம் மையே கையளித்தார். அத்திருச்சபையைக் கறையோ வேறு எக்குறையோ இன்றி, பரிசுத்தமும் மாசற்றதுமாய்த் தம் திருமுன் மகிமையோடு துலங்கச் செய்ய வேண்டு மென்று அவர் விரும்பினார்'' (5:25.27). அன்பு மற்றும் புனிதத்தின் இந்த மறை உண்மையில் இறைவனுடைய மாட்சிமை யின் வெளிப்பாடனது நிறைவு செய்யப் படுகிறது.

மகிழ்ச்சி (JOY)

படைத்தவராகவும் மீட்பராகவும் இறை வன் தன்னையே வெளிப்படுத்துவதானது மனிதனில் ஒப்பற்ற மகிழ்ச்சியை எழுப்பு கிறது. ''நான் ஆண்டவரில் மகிழ்ச்சி கொள்வேன்'' என்று பறைசாற்றாமலும் (சங் 104:34), ''ஆண்டவர் தாம் செய்த வற்றைக் குறித்து மகிழ்வாராக'' (104:31) என்று விருப்பப்படாமலும் எவ்வாறு ஒரு வன் படைப்பைப்பற்றிச் சிந்திக்க முடியும்? மனித வரலாற்றில் இறைவன் மற்றும் அவரது செயல்களின் முன்னிலையில், உணர்வுடைய ஒவ்வொரு மனிதனையும் மகிழ்ச்சியானது மேற்கொண்டு (92:5-7) தன்னையே அறியச்செய்கிறது: ''வாருங் கள், ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்; நமது மீட்பின் பாறையைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்'' (95:1). ''வானங்கள் மகி ழட்டும், பூவுலகம் களிகூறட்டும்... ஆண்ட வர் திருமுன் அவை பாடும்; ஏனெனில், அவர் வருகின்றார்'' (96:11-13). அவர் வருகிறாரெனில், அது தனது மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுமாறு தனது விசுவாசமிக்க ஊழியரை வரவேற்கவும், அவர்களுக்கான வழியைத் தயாரிப்பதற்குமேயாகும் (மத் 25:21).

பழைய ஏற்பாடு:

I **வாழ்வின் மகிழ்ச்சிகள்:** மனித வாழ்வி னுடைய மகிழ்ச்சிகள், மனிதருக்கான இறைவனுடைய உறுதிமொழிகளில் ஒரு பகுதியாகும் (உப 28:3-8; எரே 33:11). இவையில்லாமல் இருப்பது பிரமாணிக்க மின்மைக்கு ஒரு தண்டனையாகும் (உப 28:30-33.47-48; எரே 7:34; 25:10-11). தான் அன்பு செய்யும் பெண்ணிலும் (திருவுரை 9:9), தனது உழைப்பின் பலனிலும் (3:22),

நல்ல வேளைகளில் உண்பதிலும், பங்கு பெறுதலிலுமான (2:24; 3:12-13) மனிதனுடைய தாழ்மையான மகிழ்ச்சியானது திருவுரையாளரின் இரக்கமற்ற குறை காணுதலிலிருந்து தப்புகிறது. மனிதன் இவ்வாழ்வினுடைய துன்பங்களை மறக்கச்செய்யும் மகிழ்ச்சியை அவர் புகழ்கிறார் (8:15). இஃது இறைவனே அளிக்கின்ற மகிழ்ச்சியாகும் (5:17-19). திராட்சைரசத்தின் நோக்கமானது அதனை மிதமாகப் பயன்படுத்துவோருக்கு (சிரா 31:27) மகிழ்ச்சியைக் கொண்டு வருவதாகும் (நீதி 9:13; சங் 104:15). மேலும், அறுவடைக் காலத்தைப் போலவே (சங் 126:5-6), கொடி முந்திரிப் பழம் கொய்யும் காலமும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும் (எசா 16:10). தனது அழகினாலும், நற்குணத்தினாலும் ஒரு பெண் தனது கணவனுக்குக் கொண்டு வருகின்ற பெரும் மகிழ்ச்சியானது (பழ 5:18; சிரா 26:2.13), இயலக்கூடிய மிக உயரிய மகிழ்ச்சியின் சாயலாகச் சித்தரிக்கப்படுகிறது (எசா 62:5). குழந்தைப் பேறானது, சிறப்பாக மகன் ஞானமுள்ளவனாக இருப்பது (பழ 10:1), கணவன் மனைவியின் மகிழ்ச்சிக்குக் காரணமாகும் (1 சாமு 2:1.5; சங் 113:9; காண்க. யோவா 16:21).

அரசனுடைய முடிசூட்டுவிழா (1 அர 1:40), வெற்றி (1 சாமு 18:6), கைதிகள் திரும்புதல் (சங் 126:2-3) முதலிய ஆரவார மிக்க மகிழ்ச்சியின் விழாக்காலங்களோடு, அன்னியர்களோடு பகிர்ந்துகொள்ள முடியாத நெருக்கமான மற்ற மகிழ்ச்சிகளும் உள்ளன (பழ 14:10). நற்சுகத்தைக் கொண்டு வருகின்ற இதய மகிழ்ச்சியின் மதிப்பை (17:22) ஞானி நன்கறிவார். இந்த மகிழ்ச்சிக்கு அன்பான சொல்லும் (12:25), நட்பான பார்வையும் (15:30) பெருமளவு உதவுகின்றன என்பதையும் ஞானி அறிந்துள்ளார். தீயோனுடைய விபரீதமான மகிழ்ச்சிகளை மட்டுமே (2:14), குறிப்பாக, நீதிமானுடைய விரோதிகள் அவனுடைய தீங்கைப் பார்த்துக் கொள்கின்ற தீய மகிழ்ச்சியினை மட்டுமே, இறைவன் கண்டனம் செய்கிறார் (சங் 13:5; 35:26).

II. ***உடன்படிக்கையின் மகிழ்ச்சிகள்:*** *இவ்வாழ்வின் நலம் தரும் மகிழ்ச்சியின் ஊற்றாகிய இறைவன், இயலக்கூடிய மிக உயரிய மகிழ்ச்சியைத் தனது மக்களுக்கு அளிக்கிறார். இம்மகிழ்ச்சிகள் உடன்படிக்கைக்கான பிரமாணிக்கத்தில் கண்டடையப் படுகின்றன.*

1. சமுதாய வழிபாட்டின் மகிழ்ச்சிகள்: *இஸ்ராயேலின் அரசராக இருக்கத் தயை கூர்ந்தவரும் (சங்149:2), தனது பிரசன்னத்தில் மகிழ்ச்சியடையுமாறு அதனை அழைப்பவருமாகிய (உப 12:18) இறைவனைப் போற்றுவதின் மகிழ்ச்சியை இஸ்ராயேல் அதன் வழிபாட்டில் கண்டடைகிறது (சங் 33:1). இவ்வழியாக, சகோதர ஒன்றிப்பின் இனிமையையும் அஃது அனுபவிக்கிறது (சங் 133). இவ்வாறாக, இறைவனுக்கு அருவருப்பாக உள்ள புலன் சார்ந்த சடங்குகளைக் கொண்ட கானானிய வழிபாடுகளின் சோதனையை எதிர்ப்பதற்கு இஸ்ராயேலானது ஒரு திறனுள்ள சாதனத்தைக் காண்கிறது (உப 12:30-31;23:18-19). ஆர்வம் மற்றும் மகிழ்ச்சியின் சூழலில் கொண்டாடப்படுகின்ற விழாக்கள் (சங் 42:5; 68:4-5; 100:2), அக்களிப்பதற்கும் மகிழ்வதற்கும் ஆண்டவர் குறித்த நாளை (சங் 119:24) மக்களுக்கு நினைவூட்டுகிறது. இந்தக் கொண்டாட்டங்களில் ஒரு சில வரலாற்றிலும் குறிக்கப்பட்டுள்ளன: எ.கா. எசேக்கியாவின் பாஸ்கா (2 நாள் 30:21-26), அடிமைத்தனத்தினின்று திரும்பியதன் கொண்டாட்டம் (எஸ் 6:22), மற்றும் சிறப்பாகக் கூடாரவிழாவும் ஆகும். இவ்விழாவில் சட்ட நூல் வாசிக்கப்பட்ட பின்னர், ''ஆண்டவரின் புனித நாள் இதுவே! எனவே, வருந்த வேண்டாம். ஆண்டவரின் மகிழ்வே உங்களது பலம்'' என்று எஸ்ரா பறைசாற்றுகின்றார் (நெகே 8:10). மகிழ்ச்சியின் இந்த நிறைவைக் காப்பதற்காகவே, இறை ஆசிகளைப் பெறுவதற்காக மக்கள் செல்ல வேண்டிய எருசலேமில் நடைபெறும் மூன்று வருடாந்தரப் பெருவிழாக்களில், தன்னுடைய ஊற்றுகளினின்று அவர்களுடைய மகிழ்ச்சியை எடுத்*

துக்கொள்ளுமாறு, சட்டமானது கட்டளை யிடுகிறது (லேவி 23:40; உப 16:11.14-15). இந்த ஊற்றினின்றே அனைத்து மக்களும் தங்களுடைய மகிழ்ச்சியைப் பெற வேண்டு மென இறைவன் விரும்புகிறார் (எசா 56:6-7).

2. தனிமனிதப் பிரமாணிக்கத்தின் மகிழ்ச் சிகள்: எல்லா மனிதருக்கும் அளிக்கப்படும் இந்த மகிழ்ச்சியானது, இறைவனுடைய உண்மையான மக்களாய் அமைகின்ற எளி யோருடைய சிறப்பான பகுதியாகும் (சங் 149:4-5). எரேமியாவைப் போன்று அவர் களும் தங்களுடைய இதயங்களின் மகிழ்ச்சி யாகிய இறைவனுடைய வார்த்தையால் ஊட்டப்படுகின்றனர் (எரே 15:16). அவர் கள் தங்களுடைய மகிழ்ச்சியை இறைவனி லும் (சங் 33:21; 37:4; யோவே 2:23), அவரது சட்டத்திலும் (சங் 19:9) கண்டடை கின்றனர். அதுவே அவர்களுடைய செல்வ மாகவும் (119:14.111.162), கசப்பான துயரி லும் அவர்களது மகிழ்ச்சியாகவும் உள்ளது (119:143). இறைவனை நாடும் எளியோர் மகிழ்வடைவர் (34:3; 69:33; 70:5; 105:3). ஏனெனில், அவர்கள் இறைவனுடைய அருளினாலும் (32:10-11), இரக்கத்தினாலும் எண்பிக்கப்படுகின்றனர் (51:10.14). அவர் களது ஒரே நன்மையாகிய ஆண்டவருட னான அவர்களின் நம்பிக்கை மிக்க ஒன்றிப் பானது (16:2; 73:25.28) முடிவில்லா மகிழ்ச் சியின் கணநேரத்தோற்றத்தை அவர்களுக்கு அளிக்கிறது (16:9-11). இறை ஞானத்துட னான அவர்களது நெருங்கிய ஒன்றிப் பானது முடிவில்லா மகிழ்ச்சியின் முன் சுவையாகும் (ஞான 8:16).

3. இறுதிக்கால மகிழ்ச்சிகள்: இஸ்ரா யேல் உண்மையிலேயே நம்பிக்கையின் சூழ்நிலையில் வாழ்ந்தது. அவர்களுடைய வழிபாடானது இறைவனுடைய உயரிய செயல்களையும், எல்லாவற்றிற்கும் மேலாக யாத்திரையையும் நினைவுபடுத்து கிறதெனில் அதனுடைய நோக்கமானது, ஒப்பற்ற அளவில் அனைத்து மனிதருக்கு மான மீட்பராக இறைவன் தன்னையே வெளிப்படுத்துகின்ற புதிய யாத்திரைக்கான ஆசையை அவர்களில் தூண்டுவதற்காகவே ஆகும் (எசா 45:5-8. 21-22). அது மெசியா பற்றிய மகிழ்ச்சியின் காலமாக இருக்கும். அதனுடைய மிகு நிறைவளத்தை எசாயா பறைசாற்றியுள்ளார் (9:2): பாலைவெளியும் மகிழ்ச்சியுறும் (35:1); இறைவன் செயல் படும்போது வானங்கள் மகிழ்ந்து பாடும்; மற்றும் பூவுலகம் களிகூறும் (44:23; 49:13). சிறைப்பட்டோர் விடுவிக்கப்பட்டு, மீட்பு மற்றும் நீதியின் ஆடைகளால் உடுத்தப் பட்டு (61:10), அவர்களது நம்பிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றக்கூடிய (25:9) முடிவில்லா மகிழ்ச்சியைச் சுவைப்பதற் கென (61:7) மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டே சீயோனுக்கு வருவர் (35:9-10;51:11). பின்னர், புதுப்பிக்கப்பட்ட படைப்பின் மத்தியில் இறைவனுடைய ஊழியர்கள் உளம் நிறைந்த மகிழ்ச்சியின் பாடல்களில் தங்களது குரல்களை எழுப்பு வர். ஏனெனில், தான் அவர்களில் மகிழ் வுற்று முடிவில்லா மகிழ்ச்சியை அவர் களுக்கு அளிப்பதற்கென இறைவன், எருச லேமை மகிழ்ச்சியாகவும், அதன் மக்களை அக்களிப்பாகவும் அமைப்பார் (65:14. 17-19; 66:10). பரிசுத்தரும் முடிவில்லாதவரு மான இறைவனிடமிருந்து இஸ்ராயேல் எதிர்பார்ப்பது இத்தகைய மகிழ்ச்சியே; அவருடைய இரக்கம் அதனைக் காப்பாற்ற உள்ளது (பாரூ 4:22-23.36-37; 5:9). இந்த மீட்புச்செயலின் தலைமைக் கைவினைஞ ராக எருசலேமின் அரசன் இருப்பார். தாழ்ச்சியுடன் அதனை நோக்கி வருகின்ற அவரை, எருசலேமானது பெருமகிழ்ச்சி யுடன் வரவேற்கும் (செக் 9:9).

புதிய ஏற்பாடு

1 நற்செய்தி நூலின் மகிழ்ச்சி:

இந்த எளிமையுள்ள அரசர் இயேசு கிறிஸ்துவே. அவர் எளியோருக்கு மீட்பின் மகிழ்ச்சியைப் போதித்து, தனது பலியின் வழியாக அவர்களுக்கு அதை அளிக்கிறார்.

1. மீட்பின் மகிழ்ச்சியானது எளியோருக் குப் போதிக்கப்படுகிறது: மீட்பரின் வருகை யானது மகிழ்ச்சியின் சூழலை உருவாக்கு கிறது. மற்ற நற்செய்தியாளர்களைவிட

அதிக அளவில் லூக்கா இதனைக் கோடிட்டுக் காட்டுகிறார். இயேசுவி னுடைய பிறப்பின் மகிழ்ச்சிக்கு முன்னரே (லூக் 1:14), மரியாள் வந்தபோது முன் னோடித் தனது தாயின் உதரத்தில் அக்களிப் பால் துள்ளினார் (1:41.44). வானதூதரின் வாழ்த்தினை மகிழ்ச்சிக்கான அழைப்பாகக் கொண்ட கன்னிகை (1:25), தாழ்ச்சியின் அளவிற்கேற்ற மகிழ்ச்சியுடன், எளி யோரைக் காப்பதற்கென, தனது மகனாக உருவான ஆண்டவரைப் போற்றுகிறாள் (1:42.46-55). இயேசுவினுடைய பிறப் பானது அதனை அறிவிக்கின்ற வான தூதருக்கும் அவர் மீட்க வந்த மக்களுக்கும் பெருமகிழ்ச்சியின் காரணமாக உள்ளது (2:10.13-14; காண்க. மத் 1:21). நீதிமான் களுடைய எதிர்பார்ப்பை இது நிறைவு படுத்துகிறது (மத் 13:17). ஆபிரகாமைப் போன்று, அதைப் பற்றிய சிந்தனை யிலேயே அவர்கள் ஏற்கெனவே மகிழ்ச்சி யுற்றனர் (யோவா 8:56).

இறைவனுடைய அரசு ஏற்கெனவே இயேசுவில் பிரசன்னமாகியுள்ளது (மாற் 1:15; லூக் 17:21). திருமுழுக்காளருக்கு ஆனந்தப் பரவசம் அளிக்கும் குரலையும் (யோவா 3:29), தனது சீடர்களை நோன் பிருப்பதினின்று தடுக்கின்ற பிரசன்னத்தை யும் உடைய மணமகன் இவரே (லூக் 5:34). தங்களுடைய பெயர்கள் விண்ணில் பொறிக்கப்பட்டுள்ளன என்பதை அறி தலின் மகிழ்ச்சியை அவர்கள் கொண்டுள்ள னர் (10:20). ஏனெனில், ஒருவன் அனைத் தையும் விடக்கூடிய செல்வமாகிய (மத் 13:44) இறைவனுடைய அரசுக்கு உரியவ ராக உள்ள எளியவர்களைச் சேர்ந்தவர்கள் அவர்கள் (லூக் 6:20 இணை). இறையரசைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் துன்பப்படுதலானது அவர்களது மகிழ்ச்சியைத் தீவிரமாக்க வேண்டும் என இயேசு அவர்களுக்குக் கற்பித்துள்ளார் (மத் 5:10-12).

இயேசுவின் பணிக்குச் சான்று பகர்கின்ற அவருடைய சீடர்கள் சரியாகவே அக்களிக் கின்றனர் (லூக் 19:37-39). ஆனால், இயேசு அவர்களுக்கு அளித்த அதிசய வல்லமை யில் மகிழ்ச்சியுறுவதில் அவர்கள் தவறு புரிகின்றனர் (10:17-20). இந்த வல்லமை யானது ஒரு சாதனம் மட்டுமே. அத னுடைய நோக்கமானது வெறுமையான இன்பத்துடன் கூடிய எரோது முதலிய அதிசயம் நாடுவோருக்குப் புதுமைகள் செய்வதைவிட (23:8), நீதிமான்களை இறைவனைப் போற்றுவதற்குக் கொண்டு வருவதும் (13:17), பாவிகளை மீட்பரை நோக்கி ஈர்த்து, மகிழ்ச்சியுடன் அவரை ஏற்கவும், மனம் மாறவும் அவர்களை மாற்றுவதுமாகும் (19:6,9). இந்த மனமாற்ற மானது, விண்ணிலுள்ள தந்தைக்கும், வான தூதருக்கும் (15:7.10.24), தனது சிதறிய மந்தையைக் காக்கின்ற அன்பினையுடைய நல்மேய்ப்பனுக்கும் உள்ளது போன்று (15:6; மத் 18:13), சீடர்களுக்கும் உண்மை யான சகோதரரைப் போன்று மகிழ்ச்சியின் காரணமாக உள்ளது (லூக் 15:32). ஆனால், அவரது மகிழ்ச்சியில் பங்குபெற, அவர் அன்பு செய்தது போலவே நாமும் அன்பு செய்ய வேண்டும்.

2. ஆவியின் மகிழ்ச்சி, சிலுவையின் பலன்: *தன் மூலமாகத் தந்தை எளியோருக்குத் தம்மையே வெளிப்படுத்தினார் என மகிழ் வுறும் இயேசு (லூக் 10:21-22), தனது அன்பையே ஊற்றாகக் கொண்டுள்ள மகிழ்ச்சியைச் சிறியோராகிய தன் நண்பர் களுக்குக் கொண்டு வருவதற்கென, தனது வாழ்வையே அவர்களுக்கு அளிக்கிறார் (யோவா 15:9-15). அதே சமயம் அவ ருடைய பகைவர்கள் சிலுவையினடியில் தங்களுடைய நெறிகோணிய மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர் (லூக் 23:35-37). இயேசு சிலுவையின் வழியாகத் தந்தை யிடம் செல்கிறார். சீடர்கள் அவரை அன்பு செய்தால், மகிழ்வுற்று (யோவா 14:28), ஆவியை அனுப்புவதற்கென அவர் செல் லும் நோக்கத்தினைப் புரிந்து கொள்ள வேண்டும் (16:7). ஆவியினுடைய கொடை யின் மூலமாக, இயேசுவினுடைய வாழ்வு டன் அவர்கள் வாழ்வர் (14:16-20). அவரது பெயரால் கேட்பதன் காரணமாக, அனைத்*

தையும் அவர்கள் தந்தையிடமிருந்து பெறுவர். அப்போது, அவர்களது துயரம் மகிழ்ச்சியாக மாறும். அவர்களது மகிழ்ச்சி நிறைவானதாக இருக்கும்; எதுவும் அதனை அவர்களிடமிருந்து எடுத்துவிட முடியாது *(14:13-14; 16:20-24)*.

பாடுகள் உயிர்ப்பிற்கு இட்டுச் செல்கின்றன என்பதைச் சீடர்கள் புரிந்து கொள்ளவில்லை. பாடுகள் அவர்களுடைய நம்பிக்கையை எந்த அளவிற்கு நாசமாக்கியதெனில் (லூக் 24:21), உயிர்ப்பின் மகிழ்ச்சியானது நம்ப முடியாததாகத் தெரிந்தது (24:41). இறைவாக்குகளின் நிறைவேறுதலைச் சுட்டிக்காட்டி, ஆவியின் வலிமையை வாக்களித்தபின் உயிர்த்தவர் விண்ணகம் சென்றவுடனே (24:44.49; அ.ப. 1:8), அவர்கள் மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டனர் (லூக் 24:52-53). ஆவியின் வருகையானது பேசுவதற்கும் (அ.ப. 2:4,11), நிலையாக இருப்பதற்கும் அவர்களுக்கு வலிமை அளித்தது; தாங்கள் சான்று பகர்ந்த மீட்பருடைய ''பெயருக்காகத் தாங்கள் இழிவுபடத் தக்கவர்களாய்க் கருதப்பட்டது பற்றி மனமகிழ்ந்தனர்'' (5:41; 4:21; லூக் 24:46-48).

II. **புது வாழ்வின் மகிழ்ச்சி:** இயேசுவின் வார்த்தையானது அதனுடைய பலனை அளித்து விட்டது. அவரில் விசுவசிப்போர் அவரது மகிழ்ச்சியின் முழுமையைக் கொண்டிருப்பர் (யோவா 17:13). சமுதாயத்தின் வாழ்வானது எளிமையானதும் மகிழ்ச்சியானதுமாயிருக்கும் (அ.ப. 2:46). நற்செய்தியின் போதனையானது எங்கும் மகிழ்ச்சியின் சிறப்பான ஊற்றாக இருக்கும் (8:8). திருமுழுக்கானது விசுவாசிகளை ஆவியின் மகிழ்ச்சியால் நிரப்புகிறது (13:52; காண்க. 8:39; 13:48; 16:34). அது, மோசமான துன்பங்களையும் மகிழ்ச்சியுடன் அப்போஸ்தலர்கள் ஏற்குமாறு செய்கிறது (16:23-25).

1. ஆன்மீக மகிழ்ச்சியின் ஊற்றுகள்: மகிழ்ச்சியானது உண்மையில் ஆவியினுடைய கனியும் (கலா 5:22), இறையரசினுடைய சிறப்பு மிக்க பண்பும் ஆகும் (உரோ 14:17). இது வார்த்தையால் தூண்டப்பட்டு, கலாபனையால் விரைவில் அழிக்கப்படுகின்ற கடந்து செல்லும் ஆர்வமன்று (மாற் 4:16). இது சோதனை நேரத்தில் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற விசுவாசிகளினுடைய ஆன்மீக மகிழ்ச்சியாகும் (1 தெச 1:6-7). இவர்கள் தங்களுடைய தயாள குணத்தின் மகிழ்ச்சியான ஆர்வம் (2 கொரி 8:2; 9:7), நிறைவு (13:9), ஒன்றிப்பு (பிலி 2:2), பணிவிணக்கம் (எபி 13:17), உண்மைக்கான பற்றுறுதி (2 யோவா 4; 3 யோவா 3-4) ஆகியவற்றினால் இப்போதும், ஆண்டவருடைய நாள் வரையிலும் தங்களுடைய அப்போஸ்தலரின் மகிழ்ச்சியாக இருப்பர் (1 தெச 2:19-20).

உண்மையில் விசுவாசிகளை ஒன்றிணைக்கிற அந்த அன்பானது (1 கொரி13:6), அவர்களுடைய செபத்திற்கும் இடைவிடா நன்றி செலுத்துதலுக்கும் ஊட்டமளிக்கின்ற முடிவில்லா மகிழ்ச்சியை அவர்களுக்குக் கொண்டு வருகிறது (1 தெச 5:16; பிலி 3:1; 4:4-6). அவரது அன்பு மகனுடைய அரசிற்குள் கொண்டு வரப்பட்டும் மகிழ்ச்சியால் முழுமைப்படுத்தப்படாமலிருப்பதற்கு எவ்வாறு தந்தைக்கு நன்றி செலுத்த இயலும் (கொலோ 1:11-13)? ஊக்கந்தளராத செபமானது மகிழ்ச்சியின் ஊற்றாக உள்ளது. ஏனெனில், அது நம்பிக்கையால் உயிரூட்டப்படுகிறது; மேலும், விசுவாசியை மகிழ்ச்சியால் நிரப்புவதன் மூலம் நம்பிக்கையின் இறைவன் அதற்குப் பதிலளிக்கிறார் (உரோ 12:12; 15:13). இவ்வாறு, ஆரவாரத்துடன் இறைவனைப் போற்றுமாறு பேதுரு விசுவாசிக்குக் கட்டளையிடுகிறார். ஏனெனில், சோதனையால் நிரூபிக்கப்பட்டு, மீட்பை அடைவதில் உறுதியாக உள்ள அவருடைய விசுவாசமானது, மகிமையின் முன்சுவையாகிய சொல்லுதற்கரிய மகிழ்ச்சியை அவருக்குக் கொண்டு வருகிறது (1 பேதுரு 1:3-9).

2. சோதனை வேளையில் மகிழ்ச்சியின் சான்று: இந்த மகிழ்ச்சியானது நிரூபிக்கப்

பட்ட விசுவாசத்திற்கு மட்டுமே உரியது. கிறிஸ்துவின் மகிமை வெளிப்படுத்தப் படும் போது சீடன் மகிழ்ச்சியடைய வேண்டுமெனில், கிறிஸ்துவின் துன்பங் களில் அவன் பங்கெடுப்பதனுடைய அள விற்கேற்ப அவனுடைய மகிழ்ச்சி இருக்க வேண்டும் (1 பேதுரு 4:13). தனது தலைவரைப் போலவே அவரும் இவ்வாழ் வில் மகிழ்ச்சியைவிட, சிலுவையையே தேர்ந்து கொள்வார் (எபி 12:2). தன் னுடைய உடைமைகள் எடுத்துக் கொள்ளப் படுவதை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார் (10:34). எல்லாவிதச் சோதனை களுக்கும் உட்படுத்தப்படுவதை உயரிய மகிழ்ச்சியாக அவர் கருதுவார் (யாக் 1:2). கிறிஸ்துவைப்போலவே அப்போஸ்தலருக் கும், வறுமையும் கலாபனையும் நிறை வான மகிழ்ச்சிக்கு நடத்திச் செல்பவையாக இருக்கும்.

தன்னுடைய அப்போஸ்தலிக்கப் பணி களின்போது, சிலுவையின் மகிழ்ச்சியைப் பவுல் அனுபவித்தார். உண்மையில் அஃது அவரது சாட்சியத்தின் ஒரு கூறாகும்: துயரமிக்கவராயினும், இறைவனுடைய ஊழியர்கள் என்றுமே மகிழ்ச்சியானவர்கள் (2 கொரி 6:10). தனது சோதனைகளின் போது அப்போஸ்தலர் அளவற்ற மகிழ்ச்சி யால் நிரப்பப்படுகிறார் (2 கொரி 7:41). தன்னைப்பற்றிய அக்கறை சிறிதும் அற்றவ ராய், கிறிஸ்து போதிக்கப்படுமளவும் அவர் மகிழ்கிறார் (சங் 1:17-18). மேலும், அவரது மகிழ்ச்சியானது விசுவாசிகளுக்காகவும், திருச்சபைக்காகவும் துன்புறுவதாகும் (கொலோ 1:24). விசுவாசத்திற்கான இறுதிச் சாட்சியத்தில் சிந்தப்போகின்ற தனது இரத் தத்தில் இருக்கப்போகும் தன்னுடைய மகிழ்ச்சியில் பங்கேற்குமாறு அவர் பிலிப் பியரையும் அழைக்கிறார் (பிலி 2:17-18).

III **முடிவில்லா மகிழ்ச்சியில் ஒன்றிப்பு:** எவ்வாறாயினும் சோதனையானது ஒரு முடிவுக்கு வரும். தனது ஊழியர்களின் இரத்தத்தைக் குடித்து மயங்கிய பாபிலோ னின் மீது தண்டனை விதிப்பதன் மூலம் இறைவன் பழிவாங்குவார். பின்னர், விண் ணகத்தில் மகிழ்ச்சி உண்டாகும் (திருவெளி 18:20; 19:1-4). செம்மறியின் திருமணம் அங்கே கொண்டாடப்படும். அதில் பங்கு பெறுவோர் இறைவனுக்கு மகிமையளிப் பதில் மகிழ்ச்சி கொள்வர் (19:7-9). இப் போதுமுதல் இறைவனுடைய பிள்ளை களுக்கு உரியதாக இருக்கின்ற நிறைவான மகிழ்ச்சியின் முழுமையான வெளிப்பாடு இதுவே. ஏனெனில், அவர்களுக்கு அளிக் கப்பட்ட ஆவியானவர், தந்தையுடனும் அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவுடனு மான ஒன்றிப்பிற்குள் அவர்களைக் கொண்டு வருவார் (1 யோவா 1:2-4; 3:1-2.24).

மகுடம் (DIADEM)

மலர் வளையம் போன்ற முடி. துணியி னாலோ, உலோகத் தகட்டினாலோ தலை யோடு சேர்த்துக் கட்டப்பட்ட ஒரு தலைப் பாகை பழங்கால உலகில் முடியாக இருந் தது; ஆகவே, பழைய ஏற்பாட்டில் அரச தலையணியைத் 'தலைப்பாகை' என்று அழைப்பது மிகவும் பொருளுள்ளதாகும். பாரசீக நாட்டு முடியில் நீலப்பட்டையைக் கிரேக்கர்கள் மகுடம் என்று அழைத்தார் கள்; கிரேக்க அரசர்கள் மலர்வளையம் போன்ற முடியைத் தங்களுடைய அரச அடையாளமாக எடுத்துக் கொண்ட பொழுது, அது மகுடம் என்று அழைக்கப் பட்டது. ஆகவே, மகுடம் என்பது தனிப் பட்ட திறமைக்காகவோ, வெற்றிக்காகவோ அளிக்கப்படும் வெற்றிவாகையிலிருந்து (1 கொரி 9:25; 2 திமொ 4:8; யாக் 1:2;...) வேறுபட்ட ஓர் அரசமுடியாகும். இருப் பினும் இந்த வேறுபாடு எப்பொழுதும் பின்பற்றப்படவில்லை.

மகுடம் உருவகமாக இரண்டு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது. புதிய யுகத்தில் ஆண்டவர் தம் மக்களுள் எஞ்சியோருக்கு எழில்மிகு மணிமுடியாகவும், மாண்புமிகு மகுடமாகவும் இருப்பார் (எசா 28:5). சீயோன் தன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்கும் (62:3).

யோவானின் காட்சியில் சிவப்புப் பறவை நாகமானது தன்னுடைய ஏழு தலைகளிலும் ஏழு மகுடங்களை (முடி களை)க் கொண்டிருந்தது (திருவெளி 12:3). கடலிலிருந்து வெளிவந்த விலங்கு தனது பத்துக்கொம்புகள் ஒவ்வொன்றிலும் ஒரு மகுடம் கொண்டிருந்தது (13:1). வெண் குதிரை மீது ஏறிவந்தவர் (வெற்றி கொள் ளும் கிறிஸ்து) தன் தலையில் மகுடங்கள் பல கொண்டிருந்தார் (19:12).

மகேர்-சலால்-கசுபாசு (MAHER-SHALAL-HASH-BAZ)

எசாயா இறைவாக்கினரின் இரண்டாம் மகனுக்கு இடப்பட்ட அடையாளப்பெயர் (எசா 8:1.3; காண்க. 8:28). இதன் பொருள் 'கொள்ளைப் பொருள் வேகமாகச் செல் கிறது, இரை வேகமாகச் செல்கிறது' என்பதாகும்.

இது சீரியாவும், இஸ்ராயேலும் வீழ்த்தப் படும் என்பதைக் குறிக்கிறது. இந்த வீழ்ச் சியைப் பற்றிய இறைவாக்கு முதலில் கல்லில், சாட்சிகள் முன்னிலையில் எழுதப் பட்டது. பின்பு, எசாயா தம் மகனுக்கு இட்ட பெயரினால் உறுதியாகக் கூறப் பட்டது.

மக்கபேயர்களும் அவர்களின் கிளர்ச்சி யும் (MACCABEES AND THEIR REVOLT)

கிறிஸ்து பிறப்பதற்குமுன் கடைசி இரண்டு நூற்றாண்டுகளில், குறிப்பாக கி.மு. 175-135-க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த யூதேயாவின் தலைவர்கள் மக்க பேயர்கள் என்றழைக்கப்பட்டனர்.

பிலிப்புவின் மகன் அலக்சாந்தர் மா மன்னன் கிரேக்கப் பேரரசை மிக விரை வாக விரிவுபடுத்தினார். தான் கைப்பற்றிய நாடுகளில் கிரேக்கக் கலாச்சாரத்தைப் புகுத் தினார். பலநாடுகள் தங்கள் கலாச்சாரத்தை விடுத்துப் புதிய கிரேக்கக் கலாச்சாரத்தை விரும்பிப் பின்பற்றின. ஆனால், யூதர்கள் மட்டும் தங்கள் கலாச்சாரத்தைத் தனித்தன் மையுடன் காத்து வந்தனர். அலக்சாந்தரும் இம்மக்களையும் அவர்கள் மதத்தையும் மதித்துப் போற்றியதாகவும் அவர்களுக்குப் பல சலுகைகள் அளித்ததாகவும் தெரிகிறது. அலக்சாந்தர் இறந்த பிறகு அரசுக்கு வந்த திறமையற்றவர் பலர், அவர் அமைத்த பேரரசைக் கட்டிக்காக்க முடியவில்லை. பேரரசு நான்கு பகுதிகளாக உடைந்தது. இந்நான்கில் இரண்டு பாகங்களில் நடந்து வந்த அரசுகள்தான் விவிலியத்தோடு தொடர்புடையன. தோலமி என்ற அலக் சாந்தரின் தளபதி எகிப்து நாட்டிற்கும், செலூக்கு என்ற மற்றொரு தளபதி ஆசிய நாடுகளுக்கும் அரசர்கள் என்று அறிவித்துக் கொண்டனர். இரண்டுக்கும் இடைப்பட்ட பாலஸ்தீனம் இரு அரசுகளிடமும் பல தடவை கைமாறியது; பலவாறு அல்லல் உற்றது. கி.மு. 312-11-இல் தொடங்கிய செலூக்கிய அரசு மரபில் கி.பி. 175-இல் அரசுக்கு வந்த நான்காம் அந்தியோக்கு எப்பிபானால் யூதர்களின் இன்னல்கள் பெருகின. இவன் இரண்டு கொள்கை களைத் தீவிரமாகச் செயலாக்க விரும்பி னான். ஒன்று தனது ஆட்சிக்குட்பட்ட மக்களை ஒன்றுபடுத்துவது. இரண்டாவது தன் அரசை விரிவுபடுத்துவது. தன் ஆட்சி யின்கீழ் உள்ள மக்கள் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்றால், அவர்கள் தங்கள் பாரம்பரியக் கலாச்சாரத்தைக் கைவிட்டு, கிரேக்கக் கலாச்சாரத்தையே பின்பற்ற வேண்டும். அதுவே நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தும் என்று வலியுறுத்தினான். அதுவே வளர்ந்து வரும் உரோமையரின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தும் என்று நம்பினான். இந்தக் கிரேக்கக் கலாச்சாரத் திணிப்பே மக்கபேயர்கள் நடத்திய யூதக் கிளர்ச்சிக்கு வழிகோலியது.

அந்தியோக்கு எப்பிபானின் பேராசை மிக்க திட்டங்களுக்கு யூதேயா நாட்டில் நிலவிய சிக்கல்களும் உதவின. எகிப்துக்குச் சார்பான கட்சியினரும் சீரியாவுக்குச் சார் பான கட்சியினரும் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். யூதர்களில் பலர் கிரேக்கக் கலாச்சாரத்தில் மோகம் கொள்ள ஆரம்பித்தனர். அரசனின் அனுமதியுடன் இவர்கள் எருசலேமில் உடற்பயிற்சிக்கூடம்

ஒன்றும் இளைஞர் குழு ஒன்றும் அமைத்தனர் (2 மக் 4:9). நான்காம் அந்தியோக்கு எப்பிபான் எருசலேமைக் கொள்ளையிட்டுத் தீட்டுப்படுத்தினான். இந்தக் கிரேக்க மயமாக்குதலை யூதேயாவில் இருந்த உயர்மட்ட மக்கள் எதிர்க்கவில்லை. ஆனால், சாதாரண மக்கள் அடியோடு வெறுத்தனர். இவர்கள் தங்கள் சமயத்தையும் கலாச்சாரத்தையும் கைவிட்டுவிட விரும்பவில்லை. தங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தனர் (2 மக் 6:18-7:42). கிரேக்கக் கலாச்சாரத்தை எதிர்த்தவர்களில் முதன்மையானவர் குருகுலத்தைச் சேர்ந்த மத்தத்தியா ஆவார். இவரும் இவரது ஐந்து புதல்வர்களும் அந்தியோக்குவின் கொடுமைகளைக் கண்டு ''தங்கள் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு தவச் சட்டைகள் அணிந்து மிகவும் புலம்பினர்'' (1 மக் 2:14). எருசலேமிலிருந்து மோதேயினுக்கு ஓடிப்போயினர். அங்கு அரசனது கொடுமைகளை நிறைவேற்ற வந்த அதிகாரிகளையும் அவர்களுக்குப் பணிந்த யூதர்களையும் மத்தத்தியா கொன்று விட்டு, ''உடன்படிக்கைக் கட்டளைக்குப் பிரமாணிக்கமுள்ளவன் எவனோ அவன் என் பின்னால் வரட்டும்'' (2:27) என்று அறைகூவல் விடுத்தார். இஃதோடு மக்கபேயர் கிளர்ச்சி தொடங்கியது. மத்தத்தியா மற்றும் அவரது புதல்வர்களோடு பலரும் சேர்ந்து கொண்டனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தங்கள் பாரம்பரியங்களைக் கடைப்பிடித்து வாழ்வதில் தீவிரம் காட்டிய கசிதிமியர்கள் ஆவர் (2:42; 7:13). முதலில் இவர்கள் அந்தியோக்கு அரசனின் கட்டளைக்கு எதிர்ப்பின்றிப் பணிந்த யூதர்களைத் தாக்கினர். பிறசமய பீடங்களை அழித்தனர். விருத்தசேதனம் செய்யப்படாத யூதக்குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்தனர். கிளர்ச்சியில் பங்கெடுக்க மக்களைத் தூண்டினர் (2:45-49). புரட்சியைத் தொடங்கி வைத்த மத்தத்தியா கி.மு. 166-இல் இறந்தார். மரிக்குமுன் இவர் தன் புதல்வர்களைப் பார்த்து ''உங்கள் சகோதரன் சீமோன் மிகவும் முன்மதியுள்ளவன். அவன் சொல்வதை எப்போதும் கேளுங்கள். அவன் உங்களுக்குத் தந்தைபோல் இருப்பானாக. இளமை முதல் வலிமை மிக்க படைத்தலைவனாகிய யூதா மக்கபேயு உங்கள் படைத்தலைவனாக இருந்து சண்டைகளை நடத்துவான்'' (2:65-6) என்று கூறிச்சென்றார். யூதா மக்கபேயுவின் பெயரிலிருந்தே இப்புரட்சி தன் பெயரைப் பெறுகிறது.

யூதப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய யூதா மக்கபேயுவை ஒழித்துக் கட்டுவதற்குக் கிரேக்க அரசன் பெரிதும் முயன்றான். ஆனால், யூதா மறைந்திருந்து தாக்கும் கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றிக் கிரேக்கப் படையினரோடு போர் புரிந்தார். யூதா பலமிக்க கிரேக்கப் படையைப் பல இடங்களில் தோற்கடித்தார். அப்பொல்லோனியு மற்றும் சேரோன் தலைமையில் வந்த கிரேக்கப் படைகளை வென்றார். இவ்வாறு கிரேக்கர்களைத் தகர்க்கின்ற வலிமை கொண்ட யூதாவைச் சுற்றி யூத இளைஞர்கள் பலர் ஒன்றிணைந்தனர். தலைமையேற்று நடத்தும் அரிய பண்பினை நிறைவாகப் பெற்றிருந்தார் யூதா (3:4).

கிழக்கில் பார்த்தியர்களுடன் போரிட வேண்டிய அந்தியோக்கு யூதப்புரட்சியை அடக்குவதற்கென லீசியாவை ஆளுநனாக நியமித்தான். லீசியாவோ தோலமி, நிக்கானோர் மற்றும் கோரிக்கியா என்னும் மூன்று தளபதிகளை அனுப்பினான். இவர்களையெல்லாம் யூதா வென்றார். இறுதியாக, பெத்-சூரில் லீசியாவையும் வென்றார். லீசியா அந்தியோக்கியாவிற்கே திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது.

இஃதோடு யூத விடுதலைப் போரின் முதல் கட்டம் முடிவடைந்தது. யூதா அடுத்த கட்டத்தை ஆரம்பித்தார். ''சட்டத்திற்குப் பிரமாணிக்கமுள்ள குற்றமற்ற குருக்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் ஆலயத்தைச் சுத்தி செய்தனர். எருசலேமிருந்த உட்கோட்டையில் கிரேக்க வீரர்கள் பார்த்துக் கொண்டிருக்க, கி.மு. 164-இல் ஆலயத்தின் ''பாழாக்கும் அருவருப்பை''

அகற்றி, ஆலயத்தைத் தூய்மைப்படுத்தி அதை அர்ப்பணம் செய்தார். இந்த விழா (கனுக்கா) ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டது. இதுவரை அடைந்த வெற்றிகள் யூதாவை மேலும் சுதந்தரமடையத் தூண்டியது. பாலஸ்தீனம் மற்றும் யோர்தானுக்கு அப்பாற்பட்ட பகுதிகள் முழுவதும், சிறப்பாகக் கிரேக்க நகரங்களிலும், யூதச் சிறுபான்மைக் குழுக்கள் எஞ்சியிருந்தன. இதுமேயா, அம்மோன், கிலயாது, கலிலேயா மற்றும் பெலிஸ்தியச் சமவெளி முதலிய இடங்களில் பிறமதத்தினருடன் நடத்திய தொடர்ச்சியான போராட்டங்களால் சக யூதர்களுக்கு யூதா உதவினார். அவர்களில் பலரை எருசலேமுக்கு மீட்டுக் கொண்டு வந்தார். அதே சமயத்தில் அவரது சகோதரர் சீமோன் கலிலேயாவில் அவ்வாறே செயலாற்றினார். இதன் நோக்கமானது மக்கபேய வல்லமையைப் பலப்படுத்திப் பரவச்செய்வதாகும்.

இதற்கிடையில் கி.பி. 164-இல் நான்காம் அந்தியோக்கு எப்பிபான் இறந்தான். அவன் மகன் ஐந்தாம் அந்தியோக்கு என்ற பெயரில் அரசனான். லீசியா அவனது பகர ஆளுநனாக ஆட்சி செய்தான். தனது பதவியைத் தக்க வைத்துக்கொள்ள லீசியா யூதர்களுக்குச் சமயச்சுதந்தரம் அளிக்க வேண்டியிருந்தது (6:58-59). இஃதோடு மக்கபேயருடைய புரட்சியின் நோக்கம் நிறைவேறிவிட்டது. ஏனெனில், நான்காம் அந்தியோக்குவால் தொடங்கப்பட்ட அடக்குமுறை முடிந்துவிட்டது. ஆனால், அதிக சுதந்தரம் மற்றும் அரசியல் வலிமை பெற வேண்டிய முன்னோக்கு மக்கபேயரைத் தூண்டிக் கொண்டே இருந்தது.

இதற்கிடையில் அந்தியோக்கியாவில் நடந்த அரசியல் போராட்டத்தின் விளைவாக முதலாம் தெமேத்திரியு புது அரசன் ஆனான். கிரேக்க மரபைச் சார்ந்த யூதர்கள் யூதாவை எதிர்த்தனர். இவர்கள் முதலாம் தெமேத்திரியுவிடம் புகலிடம் தேடினர். அவர்களது பிரதிநிதியான ஆல்கிமுவைத் தலமைக்குருவாக அரசன் நியமித்தான். ஆல்கிமு குருத்துவச் சந்ததியைச் சேர்ந்தவராய் இருந்ததால் கசிதேயரும், சட்ட வல்லுநரும் கூட அவருக்கு ஆதரவு அளித்தனர். ஆனால், யூதா அவரை எதிர்த்தார். கசிதேயரை ஆல்கிமு கொலை செய்தது யூதாவின் நிலையைச் சரியென நிருபித்தது. யூதாவை அடக்க நிக்கானோர் ஒரு பெரும் படையுடன் அனுப்பப்பட்டான். அவனைக் கபர்ச்சலாமிலும் பெத்-கோரோனிலும் யூதா தோற்கடித்தார்.

இதன் விளைவாக ''நிக்கானோரின் நாள்'' அடிக்கடி நிகழும் விழாவாயிற்று (7:49). ஆனால், இந்த வெற்றியைத் தனக்கு ஆதாயமாக்கிக் கொள்ள யூதாவால் இயலவில்லை. ஏனெனில், அதற்குப் பதிலடியாகப் பாக்கிதுவின் தலைமையில் தெமேத்திரியு ஒரு பெரிய படையை அனுப்பினான். எருசலேமிற்கு வடக்கிலுள்ள பெரோயா மற்றும் எலசா பரப்பில் இப்படை யூதர்களைத் தோற்கடித்தது (9:4-5). இப்போரில் யூதா கொல்லப்பட்டார். மக்கபேயர் குழுவிற்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடங்கின.

யூதாவின் இடத்தை அவரது சகோதரர் யோனத்தான் (கி.மு. 160-143) ஏற்றார். அந்தியோக்கியாவில் அலக்சாந்தர் பாலாவுக்கும் முதலாம் தெமேத்திரியுவுக்கும் நடந்த அரசியல் போட்டியில், யோனத்தான் அலக்சாந்தரை ஆதரித்தார். அலக்சாந்தர் தெமேத்திரியுவை வென்று கி.பி. 150-இல் அரசனானான். இவன் யோனத்தானை அரச உடை உடுத்தி யூதேயாவிற்குத் தளபதியாகவும் ஆளுநராகவும் நியமித்தான் (10:65).

மக்கபேயருடைய ஆதிக்க வளர்ச்சியில் ஒரு புதிய காலம் தொடங்கிற்று. செலூக்கிய அரசர்களை ஒருவருக்கொருவர் எதிராகத் தூண்டிவிட யூதத்தலைவரால் முடிந்தது. 148-இல் இரண்டாம் தெமேத்திரியு அரியணையை அடைய முயன்றான். கூலே-சீரியாவின் ஆளுநராகிய அப்பொல்லோனியு அவனுக்கு ஆதரவு அளித்தான். அலக்சாந்தருக்குப் பிரமாணிக்கமாய் இருந்த யோனத்தான் அப்பொல்லோனியுவைத் தோற்கடித்தார். அதற்கு வெகுமதியாக எக்

ரோன் நகரம் யூதர்களுக்கு அளிக்கப்பட்டது. 145-இல் அலக்சாந்தரைக் கொன்று தெமேத்திரியு அரியணைக்கு வந்த பிறகும், வரிவிலக்குக் கோரும் அளவிற்கு வலிமையுள்ளவராக இருந்தார் யோனத்தான். தெமேத்திரியுவுக்கும் திரிபோ என்பவனால் ஆதரிக்கப்பட்ட ஆறாம் அந்தியோக்குவிற்கும் நடந்த அரசியல் போட்டியில், யோனத்தான் அந்தியோக்குவிற்குத் தனது ஆதரவை அளித்து, பல போர்களில் ஈடுபட்டார். இவற்றின் விளைவாக அவர் வலிமை மிக்கவரானார். மேலும், உரோமை மற்றும் ஸ்பார்த்தாவுடன் அவர் அரசியல் தொடர்பும் கொண்டார் (12:1-23). இவற்றையெல்லாம் கவனித்த திரிபோ யோனத்தான் மிகவும் அபாயமானவர் என்று தீர்மானித்து, தந்திரமாய் யோனத்தானைத் தாலமாயில் சிறைப்படுத்தினான் (கி.பி. 143).

யூதர்கள் உடனடியாகச் செயல்பட்டனர். யோப்பா நகரைக் கைப்பற்றியதன் மூலம் மூன்றாவது மக்கபேய சகோதரரான சீமோன் (கி.மு. 143-134) தாக்குதலுக்குத் தயாரானார். ஆனால், யோனத்தானுடைய மரணத்தை அவரால் தடுக்க முடியவில்லை. யோனத்தான் மக்கபேயரின் சொந்த நகரமாகிய மோதேயினில் அடக்கம் செய்யப்பட்டார். யூத சுதந்தரத்தின் அங்கீகாரத்திற்கு ஈடாக, இப்போது சீமோன் இரண்டாம் தெமேத்திரியுவை ஆதரிக்கலானார். 142-இல் சீமோன் தலைமைக்குருவாகவும், ஆளுநராகவும், தளபதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், ''இஸ்ராயேல் மக்கள் புறவினத் தாரின் அடிமைத்தளையினின்று நீங்கினார்கள்'' (13:41). உண்மையான தொரு இறைவாக்கினர் தோன்றும்வரை ஆட்சியாளர் மற்றும் தலைமைக் குருத்துவத்திற்கான மக்கபேயர் உரிமைகள் யூதராலேயே சட்ட நெறிப்படுத்தப்பட்டன (14:4).

சீமோனின் ஆட்சியில் மக்கள் சில ஆண்டுகள் அமைதியாகக் கழித்தனர். செலூக்கிய அரியணைக்கு அந்தியோக்கு சிதெத்தெசு என்னும் புதிய வாரிசு தோன்றினான். அவனது கோரிக்கைகளை மதிக்கச் சீமோன் மறுத்து விட்டார். அதனைத் தொடர்ந்த பேரில் அந்தியோக்குவின் தளபதி கெந்தபேயுவை 138-இல் சீமோனின் புதல்வர்கள் வென்றனர் (1 மக் 16). ஆனால், எரிகோவிற்கு அருகிலுள்ள தோக்குக் கோட்டையில் சீமோன் தன் மருமகன் தோலமியால் தந்திரமாக வெட்டிக் கொல்லப்பட்டார். சீமோனின் மகன் யோவான் இரிக்கானு அவரைத் தொடர்ந்து பதவியேற்றார். இங்கே 1 மக்கபேயர் நூலின் வரலாறு முடிவடைகிறது.

இவ்வாறு செலூக்கியர்களுக்கு எதிரான மக்கபேயர்களின் கிளர்ச்சி ஏற்றத்தாழ்வுகள் மிக்கதொன்றாக அமைந்தது. அதன் விளைவாக யூதர்களுக்குச் சமயச்சுதந்தரமும், அரசியல் சுதந்தரமும் கிடைத்தன. சீமோன் தலைமையில் யூதேயா நாடு முழு விடுதலை பெற்றது. மக்கபேயர் நூல்களின் ஆசிரியர்களின் நோக்கம் தெளிவாக உள்ளது. பிறமதத்தினருடன் கொண்ட நேர்மையான போராட்டத்தில் இறைவன் மக்கபேயர்களுடன் இருந்தார் என்பது உறுதி. ஆனால், மக்கபேயர்களின் வீரதீரச் செயல்களும், சீரியாவுக்கும் எகிப்துக்கும் இடையே நடந்த போராட்டங்களையும், இந்நாடுகளில் நடந்த உள்நாட்டுப் போராட்டங்களையும் விவேகத்தோடு பயன்படுத்தியதும் யூதேயாவுக்குச் சுதந்தரம் அளித்தன. உரோமையரும் இச்சிறிய நாட்டை ஏற்று மதிப்புக்கொடுத்தனர்.

சீமோனுக்குப் பின் வந்த யூதேயாவின் வரலாற்றுக்குக் காண்க: கசமோனியர்கள், அசமோனியர்கள்.

மக்கபேயர் நூல்கள் I, II (MACCABEES - I, II, BOOKS OF)

1. இவ்விரு நூல்களும் கத்தோலிக்க விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூல்களில் இறுதியானவை. கி.மு. 175-இலிருந்து 134-வரையுள்ள இடையிட்ட காலத்திய யூத வரலாற்றைக் கொடுக்கின்றன.

2. **பெயர்:** செலூக்கிய அரச மரபுக்கு எதிராகப் புரட்சி தொடங்கிய மத்தத்தியா

வின் மூன்றாம் மகன் யூதா மக்கபேயுவின் பட்டப்பெயரிலிருந்து இந்நூல்கள் தங்கள் பெயரைப் பெறுகின்றன. இப்பெயருக்குப் பல பொருள் அளிப்பர். 'இறைவனால் நியமிக்கப்பட்டவர்' என்ற பொருளுடைய 'மக்கபியஹூ' (Magqubyahu) என்ற எபிரேயச் சொல்லிலிருந்து 'மக்கபேயோஸ்' (Makkabaois) என்ற சொல் வந்திருக்க வேண்டும். இதுதான் உண்மையான பொருளாக இருக்கக்கூடும். ஏனெனில், யூதாவின் தலைமைப் பதவியும் *(1 மக் 2:66)*, அவர் மக்களிடையே கொண்டிருந்த மேன்மையும் *(15:63-64)* இறைவனது அங்கீகாரம் பெற வேண்டும் *(எசா 62:2)*. இச்சொல்லுக்கு யூதாவின் செயல்களை முன்னிட்டு எதிரிகளை அடிக்கும் 'சம்மட்டி' என்னும் பொருள் கொடுப்பர் *(1 மக் 2:48)*. அல்லது அவரது தலையின் தோற்றத்தைக் கொண்டு 'சம்மட்டி போன்ற தலையை உடையவன்' என்ற பொருளையும் கொடுப்பர். இவற்றில் முதலாவதுதான் உண்மைப் பொருளாக இருக்கக்கூடும். இப்பொருளில்தான் ஓரிசன் இந்நூலைக் குறிக்கிறார். அவர் பயன்படுத்தும் வாசகத் தவறுடைய 'சர்பேத் சபானியேல்' (Sarbethsabaniel) என்ற எபிரேயச் சொல்லை ''சேபேர்-பெத்-சர்-பெனெயேல்', (Seper-bet-sar-bene'el) என்று திருத்தினால் இச்சொல்லுக்கு இந்நூல்கள் 'இறை மக்களின் தலைவர் வீடு பற்றிய நூல்' என்று குறிப்பிடப்படுகின்றன என்று கூறலாம். இது சீமோன் ''இறை மக்கள் தலைவர்'' என்று விவரிக்கப்படுவதோடு *(1 மக் 14:35)* ஒத்துப்போகிறது.

3. எத்தனை நூல்கள்: கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அலக்சாந்திரியா கிரேக்க வாசகம் நான்கு மக்கபேயர் நூல்களைக் கொண்டுள்ளது. கி.பி. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனாயிட்டிகுஸ் கிரேக்க வாசகம் முதலாவது, நான்காவது மக்கபேயர் நூல்களை மட்டும் கொண்டுள்ளது. அதே நூற்றாண்டைச் சேர்ந்த வத்திகானுஸ் விவிலியக் கிரேக்கப் பதிப்பு இவற்றில் எதையும் கொண்டிருக்கவில்லை. மிகப் பழங்காலத்து இலத்தீன் பதிப்பு முதல் இரண்டு மக்கபேயர் நூல்களை மட்டும் கொண்டுள்ளது. இவை இரண்டை மட்டும்தான் திருச்சபை தனது விவிலியப் பட்டியலில் சேர்த்துக் கொண்டுள்ளது. வுல்காத்தா பதிப்பு இதைப் பின்பற்றுகிறது. இந்த மரபைப் புனித எரோனிமு மாற்ற விரும்பவில்லை.

இந்நூல்களைப் பற்றிய, காலத்தால் முந்திய, கிறிஸ்தவக் குறிப்பு மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அலக்சாந்திரியா கிளமெந்து என்பவருடைய நூலில் காணப்படுகிறது. அவர் இந்நூல்களை 'மக்கபேயர் காரியங்களைப் பற்றிய நூல்' என்று குறிப்பிடுகிறார். ஒருவேளை சிரேனே ஊரானான யாசோனால் எழுதப்பட்ட நூல்களில் சுருக்கமான இரண்டாம் மக்கபேயர் நூலுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம். பிற்காலத்தில் இத்தலைப்பு முதல் மக்கபேயர் நூலுக்கும் அளிக்கப்பட்டது. பின் இரு நூல்களுக்கும் இப்பெயர் தலைப்பாயிற்று. கிளமெந்து காலத்திற்குப்பின் கிரேக்க, இலத்தீன் வாசகங்கள் இவ்விரு நூல்களையும் மக்கபேயர் நூல்கள் என்று அழைத்தன.

4. விவிலியப் பட்டியலில் மக்கபேயர் நூல்கள்: மக்கபேயர்களின் வழித்தோன்றல்களான அசமோனிய அரச மரபினர் யூதச் சட்டத்திற்கும் மரபுக்கும் பற்றுறுதியாக இருக்கவில்லை. ஆகவே, மக்கபேயர்களின் பெருமையையும் அருஞ்செயல்களையும் பற்றி எடுத்துக்கூறும் மக்கபேயர் நூல்களைக் கசிதியர்களின் பாரம்பரியத்தில் வந்த பரிசேயர்களும், கும்ரான் குழுவினரும் விரும்பவில்லை; போற்றி ஏற்கவில்லை. இதில் வியப்பில்லை. கும்ரான் குகைகளில் இதுவரை இந்நூல்களின் ஒரு பிரதியும் கண்டுபிடிக்கப்படவில்லை. பரிசேயர் பாரம்பரியத்தில் வரும் ராபிகளின் பாரம்பரியத்திலும் *1* மக்கபேயர் நூலின் எபிரேய வாசகங்கள் பாதுகாக்கப்படவில்லை. வரலாற்று ஆசிரியன் யோசிப்பசு பரிசேயரைச் சேர்ந்தவர். இவர் பரிசேயர் பாரம்பரியத்தைப் பின்பற்றி இந்நூல்களைப் புனித மிக்கதாக ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால், கிறிஸ்துவப் பாரம்பரியம் இந் நூல்களை மேன்மையோடு ஏற்றுக்கொண் டுள்ளது. உரோமைக் கத்தோலிக்கத் திருச் சபை தன் விவிலிய அட்டவணையில் இந்நூல்களையும் சேர்த்துள்ளது. இதில் ஒரு பழம் பெரும் பாரம்பரியத்தையே பின் பற்றுகிறது. இந்நூல்களை எடுத்துப் பயன் படுத்தியவர்களில் அலக்சாந்திரியா கிளெமெந்துதான் முதலானவர். அவருக்குப்பின் வந்த இப்போலித்து தேர்துல்லியன், ஓரிசன், சிப்பிரியன், யுசேபியு அஃரேட்டஸ், எரோனிமு, அகுஸ்தீன், தியேடொரெட் போன்ற திருச்சபைத் தந்தையர் இந்நூல் களை எடுத்துக்காட்டுகின்றனர். இப்போ *(393)*, கார்த்தேசு *(397.414)* ஆகிய இடங் களின் திருச்சபைச் சங்கங்கள் இந்நூல்களின் புனிதத்தை ஏற்றுக்கொண்டன. ஃபலரன்ஸ் *(1441)*, திரிதெந்தின் *(1546)*, முதலாம் வத்திக் கான் *(1870)* பொதுச் சங்கங்கள் இந்நூல் களை இறையூக்கம் பெற்ற நூல்கள் என்று ஏற்றுக்கொண்டன.

பதித பிரிவினைக் கிறிஸ்துவ சபைகள் இந்நூல்களைத் தங்கள் விவிலியப் பட்டிய லில் சேர்த்துக் கொள்வதில்லை. ஆனால், இவற்றிற்கு ஒரு சிறப்பிடம் அளிக்கின்றன.

5. இரு நூல்களுக்குமுள்ள தொடர்பு: மக்க பேயர் நூல்கள் சாமுவேல், அரசர் நூல்கள் போன்ற ஒரு தொடர்ச்சியான வரலாற்றின் இருபாகங்கள் அல்ல; மாறாக, ஒரே வரலாற் றைப்பற்றிய இரு தனித்தனி நூல்கள். இரு நூல்களும் ஒரே காலத்திய வரலாற்றைப் பற்றிக் கூறுகின்றன என்பதைத் தவிர இரு நூல்களுக்கும் தொடர்பில்லை. ஆகையால், இரு நூல்களுக்கும் தனித்தனி அறிமுகங்கள் அளிக்கிறோம்.

6. முதல் மக்கபேயர் ஆகமம்: கி.மு. 175 முதல் 134 வரையுள்ள பாலஸ்தீன யூத வரலாற்று நிகழ்ச்சிகளைப் பற்றியதாகும் இந்நூல். ஒரு புறம் செலூக்கிய அரச மரபைச் சேர்ந்த கொடுமைப்படுத்தியோ ரும், யூதர்களிடையேயான கிரேக்கக் கலாச் சாரப் பித்தர்களும், மறுபுறம் யூத சமயப் பற்றுறுதியுடையோரும் ஆகிய இருசாராருக் குமிடையே நிகழும் சமய, அரசியல் போராட்டங்களையும் அதன் விளைவுகளை யும் எடுத்துக்கூறுகிறது.

7. ஆசிரியர்: இவரைப் பற்றி அதிகம் ஒன்றும் கூற முடியாது. நூலிலிருந்து இவற்றைப்பற்றி சில கூறலாம். இவர் ஒரு யூதன். அதுவும் நாட்டு, சமயப்பற்று மிகுந்த யூதன். இவர் கசிதிமியரை ஆதரித்த வராவர். இவர் பரிசேயரைச் சேர்ந்தவர் என்பர் சிலர். ஆனால், பரிசேயருக்கு விருப்பமான வருங்கால வாழ்வு பற்றி ஒன்றும் கூறவில்லை. மேலும், ஓய்வுநாள் அனுசரிப்பில் விட்டுக்கொடுக்கும் தன்மை காட்டுகிறார். ஆகையால், இவர் சதுசேயர் குழுவைச் சார்ந்தவராக இருக்கக்கூடும். ஏனெனில், இப்பிரிவினர் தெளிவாகத் தோன்றுமுன்னே இவர் இந்நூலை எழுதி யிருக்கக்கூடும். இந்நூலில் காணப்படும் பாலஸ்தீன புவியியல் இவர் எருசலேமின் குடிமகனாக இருந்திருக்க வேண்டும் என்று காட்டுகிறது. அக்கால அரசியல் போர்கள், அரசவைச் சூழ்ச்சிகள், மக்கபேய சகோதரர் கள் ஆகியவை பற்றிய நெருங்கிய அறிவு, விடுதலைப் போராட்டத்தில் பங்கு எடுத்தா ரோடு இவர் தொடர்புடையவராகக் காட்டு கிறது. இவர் இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தவராகத் தெரிகிறது.

8. காலம்: கி.மு. 134-இல் சீமோன் மக்க பேயரது மரணத்துக்குப்பின் இந்த நூல் எழுதப்பட்டது எனக் கருதலாம். இந்நூலின் கடைசிப்பகுதி *(16:23-24)* மூல நூலைச் சேர்ந்தது என்றால் யோவான் கிரிக்கான் மரித்த கி.மு. 104-க்குப்பின் எழுதப்பட்டி ருக்க வேண்டும். உரோமைத்தளபதி பாம்பே கி.மு. 63-இல் எருசலேமுக்குள் புகுந்து ஆலயத்தின் திருத்தூயகத்துள் நுழைந்து யூதர்களின் சமய உணர்வுக்குப் பங்கம் விளைவித்தான். ஆயினும், ஆசிரி யர் 1 மக் 8-இல் உரோமையரைப் போற்றி எழுதுவதால் கி.மு. 63-க்கு முன்னே எழுதி யிருக்க வேண்டும். இவ்வாறு இந்நூல் கி.மு. 104-63-க்கு இடையிட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

9. மொழி: முதலாம் மக்கபேயர் நூல் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. அதனுடைய இலக்கியநடை இதைத் தெளிவு படுத்துகிறது. இது பற்றி இப்போது எந்த விவிலிய அறிஞரும் ஐயுறார். இந்த எபிரேய வாசகத்தை ஓரிசனும் எரோனிமுவும் அறிந்திருந்ததாகத் தெரிகிறது. ஆயினும், இந்நூலின் கிரேக்க மொழி பெயர்ப்புதான் நமக்குக் கிடைத்துள்ளது. இந்தக் கிரேக்க மொழிபெயர்ப்பு எபிரேய மூலத்தைப் பெருமளவுக்கு எதிரொலிக்கின்றது என்பர். ஆனால், எப்போது இம்மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது என்று ஒன்றும் கூறுவதற்கில்லை. வுல்காத்தாப் பதிப்பு பழைய இலத்தீன் வாசகத்தைக் கொண்டுள்ளது. இந்த வாசகம் நாம் கொண்டிருக்கும் கிரேக்க வாசகத்தை விட பழமையான கிரேக்க வாசகத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே, அதன் பதிப்பும் உயர்ந்ததாகும்.

10. மூலங்கள்: இந்நூல் ஆசிரியர் யூதாவின் வீரச்செயல்களை நேரடியாகக் கண்டவர்களின் நினைவேடுகளை ஓரளவு சார்ந்து எழுதுவதாகத் தெரிகிறது. *1 மக் 9:22* யூதாவின் வாழ்க்கை வரலாறு என்ற நூலைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இவ்வாசகம் பொருள் மயக்கமுடையது. பலரும் பலவாறு விளக்கம் அளிப்பர். யோனத்தான், சீமோன் ஆகியவரது வரலாற்றுக்கு ஆலயப் பதிவேடுகளை ஆசிரியர் பயன்படுத்தியிருக்க வேண்டும். இத்தகைய நூல் நிலையம் ஆலயத்தில் நெகேமியா காலத்திலேயே நிறுவப்பட்டிருக்க வேண்டும் *(1 மக் 14:19; 2 மக் 2:13)*. பெரிய குருக்களின் நாளேடுகளையும் இவர் பயன்படுத்தியிருக்கலாம் *(1 மக் 10:21; 14:41; 16:24)*. மேலும், ஆசிரியர் பல மடல்களையும், அரச ஏடுகளையும் பயன்படுத்துகிறார். இவற்றை அறிஞர்கள் சிலர் இலக்கியப் படைப்புகள் என்று கருதினாலும் பெரும்பாலான நவீனகால அறிஞர்கள் இவற்றின் உண்மைத் தன்மையை ஏற்றுக் கொள்வர். *1 மக் 1:45-5*-இல் நாலாம் அந்தியோக்கு தன் மக்களுக்கு விடுத்த ஓலை குறிப்பிடப்படுகிறது.

மற்ற மடல்கள் பின் வருமாறு:

	மடல்கள்	காலம்	வாசகம்
1.	இலயாது யூதர்கள் யூதாவுக்கு எழுதிய மடல்	—	*1 மக் 5:10-13*
2.	உரோமை மேலோர் மன்றம் யூதாவுக்கு எழுதிய மடல்	161	*8:23-32*
3.	முதலாம் தெமேத்திரியு யோனத்தானுக்கு எழுதிய மடல்	152	*10:3-6*
4.	அலக்சாந்தர் பாலாசு யோனத்தானுக்கு எழுதிய மடல்	152	*10:18-20*
5.	முதலாம் தெமேத்திரியு யோனத்தானுக்கு எழுதிய மடல்	152	*10:25-45*
6.	இரண்டாம் தெமேத்திரியு யோனத்தானுக்கு எழுதிய மடல்	145	*11:30-37*
7.	நாலாம் அந்தியோக்கு யோனத்தானுக்கு எழுதிய மடல்	145	*11:57*
8.	யோனத்தான் ஸ்பார்த்தா மக்களுக்கு எழுதிய மடல்	144	*12:6-18*
9	ஸ்பார்த்தா மன்னன் ஆரியு ஒனியாவுக்கு எழுதிய மடல்	—	*12:20-23*
10.	2-ஆம் தெமேத்திரியு சீமோனுக்கு எழுதிய மடல்	142	*13:36-40*
11.	ஸ்பார்த்தர் சீமோனுக்கு எழுதிய மடல்	142	*14:20-23*

12.	சீமோனைப் போற்றும் யூதர்களின் சட்டம்	140	14:27-45
13.	7-ஆம் அந்தியோக்கு சீமோனுக்கு எழுதிய மடல்	139	15:2-9
14.	8-ஆம் தோலமி தூதன் லூசியனுக்கு எழுதிய மடல்	142	15:16-21

ஆய்வாளர்கள் சிலர் அதி. 14-16 என்ற பகுதி பிற்காலச் சேர்க்கை என்று கருதுவர். ஏனெனில், வரலாற்று ஆசிரியன் யோசிப்பசு இந்நூலின் முதற்பகுதியைப் (அதி. 1-13) படிப்படியாகப் பயன்படுத்தியபின் இப்பகுதியைப் பயன்படுத்தவேயில்லை. ஆகவே, ஆய்வாளர்கள் முன்பகுதி சீமோன் இறந்தவுடன் கி.மு. 135-ஐ ஒட்டி எழுதப் பட்டிருக்க வேண்டும் என்பர். இக்காலத்தில் இக்கருத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. யோசிப்பசு இப்பகுதியைப் பயன்படுத்தவில்லை என்பது இதை இந்நூலிலிருந்து பிரித்து விடுவதற்குப் போதிய காரணமன்று. இப்பகுதி கருத்திலும் இலக்கிய நடையிலும் இந்நூலின் மற்றப்பகுதியோடும் ஒத்துப் போகிறது. இறையூக்கம் பெற்ற மற்ற ஆசிரியர்கள் 16:18-24 என்ற பின் பகுதியைச் சேர்த்து நிறைவு செய்திருக்கலாம் என்று கூறலாம்.

மேற்கூறிய மூலங்களோடு, ஆசிரியருக்குச் செலூக்கிய அரச மரபு மூலங்களும் கிடைத்தன. இவை இந்நூலுக்குக் காலக்கணிப்பைக் கொடுக்க உதவின எனலாம்.

11. நூலின் நோக்கம்: இந்நூல் வரலாற்று நூலானாலும் ஒரு போதகத்தையும் கொண்டுள்ளது. இது நாளாகமப் பாரம்பரியத்தில் வரும் நூலாகும். செலூக்கியப் பேரரசில் யூத வரலாற்றில் இறைவனது செயல்களை ஆசிரியர் கண்டவாறு எடுத்துக்கூறுகிறார். இந்நூல் ஒவ்வொரு யூதனுக்கும் எழுதப்படுகிறது. யூதர்கள் மத்தத்தியாவையும் அவரது புதல்வர்களையும் பின்பற்ற வேண்டும். சட்டத்திற்குப் பற்றுறுதியும் இறைவனில் கொண்டுள்ள விசுவாசமும் ஒருவனுடைய சொந்தப் பலத்தினாலோ, சேனையாலோ செய்யக்கூடியதை விட, அதிகமாகச் சாதிக்க முடியும் (2:61-64). யூதாவும் அவருடைய சகோதரரும் இரக்கமிக்க அருள்பாலிப்பின் தூதர்களாவர். இவர்களின் வழியாகப் புற இனக்கொடுமையிலிருந்து யூதத்திற்கு விடுதலை கிடைத்தது (2:48; 4:24-25; 9:21.73;14:26.29). இவர்களின் முயற்சி விடுதலை அளித்தது; ஓர் அரசையும் கொடுத்தது; இறைவனது வருங்கால இடையீட்டுக்குத் தயார் செய்தது (4:46; 14:41). ஆகவே, எல்லா யூதர்களும் இவர்களது மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

12. திட்டமும் பொருளடக்கமும்: இதன் திட்டம் தெளிவாக உள்ளது. இதில் இரு பகுதியுடைய முன்னுரையும், யூதா, யோனத்தான், சீமோன் ஆகியோரின் செயல்களும் அடங்கியுள்ளன.

I முன்னுரை - அந்தியோக்குவின் எழுச்சி (1:1-64).

1. அலக்சாந்தரும் அவன் தளபதிகளும் (1:1-10).
2. கிரேக்க மயமாக்குதல் (1:11-15).
3. எகிப்தின் மேல் அந்தியோக்குவின் முதல் படையெடுப்பு (1:16-19).
4. அந்தியோக்கு ஆலயத்தைக் கொள்ளையடித்தல் (1:20-24).
5. அழுகைப் புலம்பல் (1:25 29).
6. எருசலேமைத் தாக்குதலும் விளைவும் (1:30-42).
7. யூத மதத்தைத் தடை செய்து, புறவின முறைகளைப் புகுத்தல் (1:43-64).

II யூதர்களின் எதிர்ப்பு எழுச்சி (2:1-70).

1. மத்தத்தியாவின் புலம்பல் (2:1-14).
2. எதிர்ப்பு சீற்றம் எடுத்தல் (2:15-28).
3. ஓய்வு நாளில் கொலை செய்யப்படுதலும் அதன் விளைவும் (2:29-41).

4. *கசிதிமியர்கள் (2:42-48).*

5. *மத்தத்தியாவின் இறுதி விருப்பப் பத்திரம் (2:49-70).*

III. ***யூதா மக்கபேயுவின் வீரச்செயல்கள் (3:1-9:22).***

1. *யூதாவுக்குப் புகழ் அஞ்சலி (3:1-9).*
2. *யூதா அப்பொல்லோனியுவையும் செரோனையும் தோற்கடிக்கிறார் (3:10-26).*
3. *அந்தியோக்கு பாரசீகத்திற்கு வருதல் (3:27-37).*
4. *யூதா கோரிக்கியாவையும் நிக்கானோரையும் தோற்கடிக்கிறார் (3:38-4:25).*
5. *யூதா லீசியாவைத் தோற்கடித்தல் (4:26-35).*
6. *ஆலயத்தைச் சுத்தி செய்து திரு நிலைப்படுத்துதல் (4:36-61).*
7. *சுற்றியுள்ள இனத்தவரோடு யூதா போரிடுதல் (5:1-68).*
8. *நான்காம் அந்தியோக்கு எப்பிப்பான் மரித்தல் (6:1-17).*
9. *உட்கோட்டையை முற்றுகையிடுதல் (6:18-27).*
10. *யூதாவின் மேல் லீசியா இரண்டாம் முறைபடை எடுத்தல் (6:28-63).*
11. *பாக்கிதும் ஆல்கிமுவும் படையெடுத்தல் (7:1-25).*
12. *நிக்கானோர் தோல்வியுறுதல் (7:26-50).*
13. *உரோமையரோடு யூதா செய்த உடன் படிக்கை (8:1-31).*
14. *யூதாவின் தோல்வியும் மரணமும் (9:1-22).*

IV. ***யோனத்தானின் வீரச் செயல்கள் (9:23-12:54).***

1. *யோனத்தான் தலைமை ஏற்றல் (9:23-34).*
2. *பழி தீர்த்தல் (9:35-42).*
3. *பாக்கிது யோனத்தானைப் பதுங்கியிருந்து தாக்குதல் (9:43-49).*
4. *பாக்கிது யூதேயாவில் கோட்டை கட்டிப் பலப்படுத்துதலும் ஆல்கிமுவின் மரணமும் (9:50-57).*
5. *யோனத்தான் பாக்கிதின் சூழ்ச்சியிலிருந்து தப்பித்தல் (9:58-73).*
6. *அலக்சாந்தர் பாலாசு அரச உரிமையைக் கொண்டாடுதல் (10:1-14).*
7. *யோனத்தான் அலக்சாந்தரை ஆதரித்துப் பெரிய குருவாதல் (10:15-50).*
8. *யோனத்தான் மகிமைப்படுத்தப்படுதல் (10:51-66).*
9. *2-ஆம் தெமேத்திரியுவின் தளபதி அப்பொல்லோனியுவைத் தோற்கடித்தல் (10:67-89).*
10. *தெமேத்திரியுவுக்கும் தோலமிக்கும் இடையே உடன்படிக்கை (11:1-13).*
11. *அலக்சாந்தரும் தோலமியும் மரித்தல் (11:14-18).*
12. *தெமேத்திரியுவுடன் யோனத்தானின் உடன்படிக்கை (11:19-37).*
13. *திரிபோவின் சூழ்ச்சியும் யோனத்தான் தெமேத்திரியுவை ஆதரித்தலும் (11:38-53).*
14. *திரிபோவோடு யோனத்தானின் உடன்படிக்கை (11:54-62).*
15. *யோனத்தான், தெமேத்திரியு ஆகியோரிடையே போர் (11:63-74).*
16. *உரோமையர், ஸ்பார்த்தர்களோடு நட்பு உடன்படிக்கை (12:1-23).*
17. *யோனத்தான் சீமோன் ஆகியோரின் போர்ச்செயல்கள் (12:24-38).*
18. *யோனத்தான் சிறைப் படுதல் (12:39-54).*

V. *சீமோன் யூதர்களின் தலைவராதல் (13:1-16:24).*

1. *சீமோன் தலைமை ஏற்றல் (13:1-11).*
2. *சீமோன் திரிபோவைத் தடுத்து நிறுத்துதல் (13:12-24).*
3. *மோதயின் நகரத்தில் மக்கபேயர் குடும்பச் சின்னம் (13:25-30).*
4. *சீமோன் தெமேத்திரியுவோடுகூட்டு (13:31-42).*
5. *கசராவையும் உட்கோட்டையையும் கைப்பற்றுதல் (13:43-54).*
6. *தெமேத்திரியு பார்த்தியர்களால் கைது செய்யப்படுதல் (14:1-3).*
7. *சீமோனின் மகிமை (14:4-15).*
8. *உரோமையரோடும் ஸ்பார்த்தர்களோடும் உடன்படிக்கையைப் புதுப்பித்தல் (14:16-24).*
9. *சீமோனை மகிமைப்படுத்தும் யூதச் சட்டம் (14:25-49).*
10. *7-ஆம் அந்தியோக்கு சீமோனுக்குச் சலுகை காட்டி திரிபோவை முற்றுகையிடுதல் (15:1-14).*
11. *உரோமைக்குச் சென்று தூது திரும்புதல் (15:15-24)*
12. *அந்தியோக்கு உடன்படிக்கை தவறுதல் (15:25-36).*
13. *யூதாவும் அவரது மகனும் கெந்தபேயுவைத் தோற்கடித்தல் (15:37-16:10).*
14. *சீமோனும் அவரது இரு புதல்வர்களும் கொலை செய்யப்படுதல் (16:11-22).*
15. *முடிவுரை: யோவான் கிரிக்கான் பெரிய குருவாதல் (16:23-24).*

13. இலக்கியச்சிறப்பு: *இது வரலாற்று நூலானாலும் இலக்கிய யுக்திகளை அதிகம் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. நிகழ்ச்சிகளைக் காலவரைப்படி ஒன்றோடு ஒன்றாக முடித்துப் போடுவதாகத் தெரிகிறது. பொதுமக்கள் மொழியாகிய அரமேயிக்கிலோ, அக்காலப் பண்பாட்டு மொழியாகிய கிரேக்க மொழியிலோ அல்லாது ஆசிரியர் பாலஸ்தீனத்தில் வாழ்ந்து கொண்டு தம் புனித மொழியாகிய எபிரேய மொழியில் எழுதியவராதலால் நீதிபதிகள், சாமுவேல், அரசர் ஆகமங்கள் போன்ற தங்கள் பழங்கால வரலாற்று நூல்களின் இலக்கிய வடிவங்களைப் பின்பற்ற முயல்கிறார். இது கிரேக்க ஆதிக்கம் குறைவான நடையில் எழுத அவருக்கு உதவியது எனலாம். அவரது நடை எளியது; நேரடியானது; ஆனால், உயிர்ச்சித்திரமானது (6:39). அவரது நடையில் அமைதியுண்டு; ஆனால், உற்சாகப் போக்கும் உண்டு (2:48; 4:24; 5:63). சில இடங்களில் தனது உணர்ச்சிகளைக் காவியமாகக் கொட்ட வல்லவர். சிறப்பாக அவரது செபங்கள், நன்றிப் பாடல்கள், தலைவர்களின் சொற்பொழிவுகள் வீரர்கள் பற்றிய போற்றுரைகள் ஆகியவை உணர்ச்சி மிக்கவை (1:26-28. 36-40; 2:7-13; 3:3-9.45; 14:16-25). இவற்றில் ஆசிரியர் பழைய விவிலியக் காவியங்களில் காணப்படும் சொற்றொடர்களைப் பின்பற்ற முயல்கிறார். ஆனால், பெரும்பாலும் அவரது விவரிப்புகள் அமைதியான வரலாற்று ஆசிரியனை எடுத்துக் காட்டுகின்றன.*

14. வரலாற்று மதிப்பீடு: *இந்நூல் கி.மு. 175-இல் அந்தியோக்கு மன்னனானதிலிருந்து 135-இல் சீமோன் மரித்தது வரையுள்ள காலத்தைப்பற்றிய ஒரே வரலாற்று நூலாகும். இஃது ஒன்றே இதன் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்ட வல்லது. இந்நூல் கூறும் வரலாறு நம்பத் தகுந்ததா என்பது பற்றி பல பிரச்சனைகள் உண்டு.*

பாலஸ்தீனத்தைப் பொருத்தமட்டும் ஆசிரியர் கொடுக்கும் புவியியல் காலவரை விவரிப்புகள் துல்லியமானவை. இஃது அவர் பாலஸ்தீனத்தை நன்கு அறிந்திருந்தார் என்பதைக் காட்டுகிறது. ஆனால், பிற நாடுகள் பற்றிய புவியியல், மக்கள் இனங்

கள், நிறுவனங்கள், வரலாறு ஆகியவை பற்றிய ஆசிரியரது அறிவு அவ்வளவு சிறந்தது அன்று. சான்றாக உரோமையர், ஸ்பார்த்தர்கள் பற்றி இவரது அறிவு மிகக் குறைவானதாகும். 4-ஆம் அந்தியோக்கு வின் மரணத்தை, அது நடந்ததுக்கும் பின் அதாவது ஆலயம் திருநிலைப்படுத்தப் பட்ட பின் நிகழ்ந்ததாகக் கூறுகிறார். ''யாரும் அழிவுறாமல்'' (5:54), ''எல்லோ ரையும் கொன்றார்கள்'' (7:46) என்ற சொற் றொடர்கள் உண்மைக்கு நெருங்கியவை அல்ல. இவர் நாட்டுப்பற்று மிக்கவர். யூதேயாவின் நிகழ்ச்சிகளுக்கு மிகைப் படுத்தி முக்கியத்துவம் கொடுக்கிறார் (1:4-43; 3:27-31; 6:5-13). இவர் செலூக்கிய அரச மரபுக்கு எதிரியானவர் (1:9-10). இவை எல்லாம் இவ்வாசிரியரது வரலாற்று உண்மைத் தன்மையை ஐயுறச் செய்கின்றன.

ஆயினும், நவீன கால வரலாற்றியலும் ஆய்வும் இந்நூல் மிகவும் நம்பிக்கைக்குரிய வரலாற்று மூலமாகும் என்று காட்டுகின் றன. யூதர்களின் தோல்வியும், அவர்களின் துரோகமிக்க சூழ்ச்சிகளும் மறைக்கப்பட வில்லை; மாற்றிக் கூறப்படவில்லை. செலூக்கிய ஆட்சியின் விளைவாக யூதர் சுதந்தரம் அடைந்தனர் என்று இவரிடமி ருந்து அறிகிறோம். ஆசிரியர் தம் காலத்துக் குரியவர்; முழுவதும் சார்பு அற்றவர் அல்லர். அவருடைய நூலில் முழுவதும் புறப்பொருள் தன்மையை எதிர்பார்க்க முடியாது. ஆயினும், தனது காலத்தில் நிலவிய கலாச்சாரச் சூழ்நிலை, வரலாற்று இயல் விதிகளுக்கு ஏற்றவாறு எழுதுகிறார். அக்கால மனிதர்கள், நிகழ்ச்சிகள் ஆகி யவை பற்றி நம்பிக்கையுள்ள சாட்சியா வார். இடங்கள் பற்றியும் (7:19; 9:2.3.33) யூதகாலவரை பற்றியும் (1:54; 4:52;....) அவர் காட்டும் கவனம் அவர் தம் ஆற்றலுக்கும் நோக்கத்திற்கும் உரிய வரை யறைகளைத் துல்லியமாக எடுத்துக் காட்டு வதற்குச் சான்றாக உள்ளது. அவர் அந்தி யோக்கு மரித்த ஆண்டு பற்றிக் கூறும் போது தவறியிருக்கலாம். ஆனால் அவரது விவரிப்பு மெகலாப்பொலியைச் சேர்ந்த போலிபியஸ் என்ற வரலாற்று ஆசிரிய ருடையதற்கு ஒத்ததாக உள்ளது.

இஸ்ராயேலுக்கு மீட்பைக் கொண்டு வந்தவர்களாக மக்கபேயர்களைப் போற்றி ஆசிரியர் எழுதுவதால் அவர் வரலாறு எழுதினாலும், ஒரு பிரச்சாரம் செய்பவர் போல் வரலாறு எழுதுகிறார். பழங்காலத்து வரலாற்று ஆசிரியர்களைப்போல இவர் மிகைப்படுத்திக் கூறத் தயங்கவில்லை. தனது வீரர்களின் வெற்றியையும் தோல்வி யையும் எடுத்துக் கூறினாலும் அவர்களின் தோல்வியைக் குறைத்துக் கூறும் போக்கு இவரிடம் உண்டு. மக்கபேயர் புரட்சியை உலகுக்கு அதிர்ச்சி அளிக்கும் நிகழ்ச்சியாக வும், உரோமையர்களுக்கும் ஸ்பார்த்தர் களுக்கும் முக்கியம் வாய்ந்ததாகவும், செலூக்கிய அரசியலின் சுழல் அச்சாகவும் இவர் கருதுகிறார். இக்காலத்துக் கருத்துப் படி இந்நூல் வரலாற்றுப் புறப்பொருள் தன்மையில்லாமல் இருக்கலாம். இந்நூல் அடிப்படை வரலாற்றுத் தன்மையுடையது என்பதை ஐயுற இடமில்லை. அறிஞர்கள் கருத்துப்படி, எந்த விவிலிய வரலாற்று நூல்களோடும், ஆசிரியரது காலத்துக் கிரேக்க வரலாற்று நூல்களோடும், வர லாற்றுத் தன்மையில் இந்நூல் ஒப்பிடத் தக்கதாகும்.

15. சமய போதகம்: இந்நூலில் சமயமும் நாட்டுப்பற்றும் இரண்டறக் கலந்துள்ளன. ஒரே இறைவன் மேலுள்ள விசுவாசம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றால் யூத சமூகமும் தொடர்ந்து இருக்க வேண்டும். சமயத்திற்காக உயிரை நீத்தவர்களை இந் நூலாசிரியர் போற்றினாலும் இந்நூலின் வீரர்கள் இவர்கள் அல்லர். மாறாக, சமயத் திற்காக உயிர் நீத்தலை அவசியமற்றதாகச் செய்த போர் வீரர்களும், அரசியல்வாதி களும்தான் இந்நூலின் காவியத் தலைவர் கள்.

இந்நூலின் ஆசிரியர் உபாகம இறையி யலைப் பின்பற்றுகிறார். 'சட்டத்தை அனு சரி. பூமியை உடைமையாக்கிக் கொள்

வாய்'. சட்டமே எல்லாம். சட்டத்தை அனுசரிப்பதுதான் மக்களை இரு கட்சி களாகப் பிரிக்கிறது. இந்நூலில் வரும் போராட்டம் செலூக்கியர்களுக்கும் மக்கபே யர்களுக்குமன்று; புற இனத்தவர்களுக்கும், யூதர்களுக்குமன்று; மாறாக, இப்போராட் டம் சட்டத்தை அனுசரிப்பவர்களுக்கும் அனுசரியாதவர்களுக்குமிடையே நடை பெறுகிறது. கிரேக்கர் தாங்கள் செய்ய வேண்டுமென்று நினைப்பதையே செய்கின் றனர். இவர்களோடு தொடர்பு கொள்ள மக்கபேயர்கள் தயங்கவில்லை. ஆனால், சட்டத்தை அனுசரியாத யூதர்கள்தான் இறை வனுக்கும் இஸ்ராயேலுக்கும் எதிரான துரோகிகள். இவர்களோடு மக்கபேயர் எத்தொடர்பும் கொள்ளார். யூதர்கள் சட்டத் திற்குப் பற்றுறுதியாக இருப்பது இப்போ ராட்டத்தின் உயிர் நிலையானதாகும் *(1:11-2:68; 3:47-53;13:3-8)*. யூதத்துவமும் சட்டத்தை அனுசரிப்பதும் ஒன்றாகக் கருதப் படுகிறது. சீயோனுக்கும் ஆலயத்திற்கும் காட்டும் பற்றுறுதி சட்டத்தை அனுசரிப்ப தோடு ஒன்றானதாகும் *(3:43.45-49; 4:36-60; 7:33-38. 41-42)*. ஆசிரியர் சிதறிக் கிடந்த யூதர்களின் சமயத்தை நிராகரிக்கவில்லை. பாலஸ்தீன யூதத்துவமும் சிதறிக் கிடந்த யூதர்களின் யூதத்துவமும் சீயோனையும் ஆலயத்தையும் மையமாகக் கொண்டிருந் தால்தான் தொடர்ந்து இருக்க முடியும் என்று ஆசிரியர் உறுதியாகக் கருதுவதாகத் தெரிகிறது.

மக்கபேயர்கள் உடன்படிக்கையின் வாக் குறுதிகளை உறுதியாக நம்பினாலும், எல் லாம் விதி என்று அமைதியாக இருக்க வில்லை. ஓய்வு நாள் அனுசரிப்புக்காக தங்களைக் கொலை செய்ய அனுமதிப்பவர் களை ஆசிரியர் போற்றுவதாகத் தெரிய வில்லை. சட்டத்தை அனுசரிக்கும் சூழ் நிலை ஏற்படுவதற்காகப் போரிடுவது மேல். சட்டத்தின் பாதுகாப்புக்காக கையில் போர்க்கருவிகளோடு மரிப்பதுதான் மிகப் பெரிய மகிமையாகும். இவ்வாறு இந்நூல் மனித மதிப்பீடுகளையும் போற்றுகிறது. அதே சமயம் இயற்கை கடந்த ஆன்மீக மதிப்பீடுகளையும் போற்றுகிறது. விசு வாசம் தீரச்செயல்களுக்கு இட்டுச் செல் கிறது. நாட்டுச் சேவை இறை சேவை யோடு இரண்டறக் கலந்ததாகிறது.

இந்நூலில் காணப்படும் வீரர்களின் செபம், சொற்பொழிவுகளின் வழியாகவும், சிந்தனைப் பகுதிகளாலும் நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளிக்கிறார் ஆசிரியர் *(1:37-40; 2:7-12. 19-22. 49-68; 3:18-22. 45. 58-60; 4:9-11. 30-33; 6:11-13; 7:17. 41-42; 9:10; 13:3-6; 16:2-3)*. பாவத்தின் விளைவாகத் தான் இஸ்ராயேலுக்குத் துன்பம் வருகிறது. சட்டத்தை அனுசரித்தால் இத்துன்பங்கள் நீங்கிவிடும் என்று ஆசிரியர் போதிக்கிறார். இறைவன் தனது தீர்ப்பால் உலகின் நிகழ்ச் சிகளைக் கட்டுப்படுத்துகிறார். ஆனால், ஆசிரியர் இறைவனின் அருஞ்செயல்கள் எதையும் எடுத்துக் கூறவில்லை. இதில் இந்நூல் 2-ஆம் மக்கபேயரிலிருந்து வேறு படுகிறது.

இந்நூலில் கடவுளின் பெயரே காணப் படவில்லை. வுல்காத்தாப் பதிப்பில் சில இடங்களில் 'கடவுள்', 'ஆண்டவர்' என்ற சொற்கள் காணப்படுகின்றன. ஆனால், கிரேக்கப்பதிப்பில் காணப்படவில்லை. கட வுளின் பெயர் காணப்படாதது, இந்நூல் இறையூக்கம் பெற்றதா என்ற ஐயத்தை எழுப்பியது. பலர் இதை ஒரு சமயச் சார்பற்ற நூலாகவே கருதுவர். இறைவன் பால் கொண்டுள்ள மரியாதையும் பற்றும் எவ்வளவு தூரம் மிகைப்படுத்தலாமென் றால் அவரது யாவும் கடந்த தன்மையை எடுத்துக் காட்டுவதற்காக அவரது பெய ரையே சொல்லுவது தடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூதர்களிடையே இப்பண்பு மிகுந்திருந்த தாகத் தெரிகிறது. ஆனால், இந்நூல் இறை வனை மற்ற விதத்தில் குறிப்பிடுகின்றது. சான்று: 'வானம்' *(3:18-19; 4:10. 40; 9:46;12:15; 16:3)*; அவரைக் குறிக்கும், சுட்டுமுன்னிலைப் பெயர்ச் சொற்களாகிய ''அவர்'' ''நீர்'' *(2:61; 3:22; 7:37. 40; 16:3)*.

இந்நூலின் வீரர்கள் போருக்குச் செல்லு முன் செபம் செய்கின்றனர் *(3:46-54; 4:10-11; 7:37-38; 9:49; 11:71)*. ஆசிரியர் இறைவனை இஸ்ராயேலின் மீட்பர் என்று

குறிக்கிறார் (2:61; 3:19; 4:30;12:15; 16:3). தமது படைப்பிலிருந்து இறைவன் தூரத்தி லிருந்தாலும் அவரைச் செபத்திலும் *(3:50-53; 4:30-33)*, சட்டத்திலும் *(3:48)* கண்டடையலாம். இவற்றில், முன்பு இறை வாக்கினரின் சொற்களில் கேட்கப்பட்டது போல (எரே 1:9) இப்போதும் இறைவனது குரலைக் கேட்கலாம்.

'மெசியா' என்ற கருத்து இந்நூலில் இல்லை. சுதந்தர இஸ்ராயேல் நாடு நிறு வப்படுவது இறையரசு நிறுவப்படுவதற்குச் சமம் அன்று. தாவீது அரச மரபு என்ற கருத்துக்கு இந்நூலில் இடமேயில்லை. மறு உலக வாழ்வு பற்றிய கருத்தும் இல்லை. இறைவாக்கினர் இந்நூலிலிருந்து முழு வதும் மறைந்து விட்டதாகத் தெரிகிறது. சட்டத்தை மிகைப்படுத்திக் கூறுவதும் இறைவாக்கினர் இல்லாதிருத்தலும் சில ஆபத்துக்களை விளைவித்தன. புவியை உடைமையாகக் கொண்டிருத்தல் நம்பிக் கையை வரையறுத்தது. சிமியோனைப் பற்றிய போற்றுரை இதைச் சுட்டுகிறது. பிற்காலத்தில் பதவி ஆசை தலைவிரித்தாடு வதற்கு இது வழி கோலும். தொடக்கத்தில் எவ்வளவோ மேன்மையான மக்கபேயர் புரட்சியின் விளைவாக வந்த அரச மரபு இதுமேயனான ஏரோதை அரசனாக்கும். இது விநோதமானதே.

இந்நூலில் ஆசிரியர் இறை செயலைவிட மனித செயலையே அழுத்திக் கூறுவதாகத் தோன்றினாலும் ஓர் ஆழ்ந்த சமயக் கருத்து நூல் முழுவதும் பரவியிருக்கிறது. இறை வனே வரலாற்றை நடத்துகிறார். தமது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் நிலையை நிர்ணயிப்பவரும் அவரே. ஆசிரியர் மக்க பேயப் புரட்சி வீரர்களின் பண்புகளை வாசகர்களுக்கு எடுத்துக் கூற பெரிதும் விழைகிறார். அவை : இறைவன்பால் அன்பு, நாட்டுப்பற்று, சட்டத்திற்குப் பற் றுறுதி, எப்படியும் மனிதனை விட இறைவ னுக்கு மட்டுமே ஊழியம் செய்ய உறுதி. சட்டம் உடன்படிக்கையைத் தொடர்கிறது *(1:15; 2:20-21.50)*. சட்டத்தை அனுசரிப்பது மேன்மை தரும் *(2:49.64; 3:3; 9:10)*. பழங்கால வாக்குறுதிகளைச் செயல்படுத் தும் (எரே 31:31: பாரூ 2:35). சட்டத்திற்குப் பற்றுறுதியின்மை சாவையும் தண்டனை யையும் கொண்டு வரும் *(1 மக் 3:21-22; 3:49)*. யூதாவும் அவரது சகோதரர்களும் மீட்பைக் கொண்டு வந்தனர் *(9:21; 14:29)*; நீதிபதிகளாக விளங்கினர் *(9:72)*. இஸ்ரா யேலை விடுவித்து அவர்களது பழம் பெரும் உரிமையை மீட்டுத் தந்தனர் *(15:33-34)*. இறைவனுக்கும் மக்களுக்கும் இணைப்பான சட்டத்தின் மேல் ஆர்வம் கொண்டு அவர்கள் தங்களைக் கொடுமைப் படுத்திய புற இனத்தாரோடும், அவர்களின் கூட்டாளிகளான யூதத் துரோகிகளோடும் போரிட்டனர். இந்த மக்கபேயரின் சமய ஆர்வத்தையும் தாராளப் பண்பையும், வாச கர்கள் பின்பற்ற வேண்டும் என்பதே ஆசிரியரது மறைமுகமான அழைப்பாகும். இதையே நிலையான அறைகூவலாக இந் நூல் கொண்டுள்ளது.

16. இரண்டாம் மக்கபேயர் ஆகமம்: இந்நூல் முதலாம் மக்கபேயர் ஆகமத்தின் தொடர்ச்சி அன்று. ஓரளவு அதே காலத்திய வரலாற்றை இந்நூல் கொடுக்கிறது. ஆனால் பல நிலைகளில் முதல் நூலிலிருந்து வேறு படுகிறது. இந்நூல் கி.மு. 176 முதல் 160 வரையுள்ள யூத வரலாற்றை எடுத்துக் கூறுகிறது. அதாவது வேத கலாபனைத் தொடக்கத்திலிருந்து நிக்கானோரை வெற்றி கொண்டது வரையுள்ள வரலாற்றைக் கூறு கிறது.

17. ஆசிரியர்: இந்நூல் ஆசிரியரைப் பற்றி ஒன்றும் தெரியாது. அறிஞரது கருத் துப்படி, இவர் அலக்சாந்திரியாவைச் சேர்ந்த யூதராய் இருக்க வேண்டும். இவர் ஏற்கெனவேயிருந்த ஐந்து பாக நூலைச் சுருக்கித் தருவதாகக் கூறுகிறார். இந்நூ லுக்கு மூல நூலை எழுதியவர் சிரேனான யாசோன் என்பவராவார். இவர் யூத சமயத் திலும் பாரம்பரியத்திலும் ஊறிப்போனவர். அதே சமயம் சொற்றிறம் வாய்ந்த விவரிப்பு டைய கிரேக்கக்கலையில் ஆற்றல் மிக்கவர். இவரது நூலைச் சுருக்கி எழுதிய இறையூக் கம் பெற்ற ஆசிரியரை விட இவரது

ஆட்தன்மைதான் இந்நூலில் காணப்படுகிறது. இந்நூலில் காணப்படும் பரிசேய மனப்போக்கு எந்த அளவுக்கு யாசோனுடையது, எந்த அளவுக்குப் பெயர் தெரியாத ஆசிரியருடையது என்று கூறுவது கடினம். இந்நூலைச் சுருக்கி எழுதியவரது முதல் இரண்டு மடல்களும் உண்மையானவையென்று கருதப்படுவதால் இவரைத் தவிர வேறு ஓர் ஆசிரியர் இருந்திருக்கக்கூடும் என்று கருத வேண்டியதில்லை.

18. காலம்: தெமேத்திரியு என்ற அரசனின் தலையான பிரபுக்களில் ஒருவனும், யூதர்களை அடக்க அரசனால் அனுப்பப்பட்டவனுமான நிக்கானோரின் இறப்புத்தான் இந்நூலில் குறிக்கப்படும் இறுதி நிகழ்ச்சியாகும். இது கி.மு. 160-இல் நடைபெற்றது. இதற்குச் சிறிது காலத்திற்குப்பின் நிகழ்ந்த யூதாவின் மரணம் குறிக்கப்படாததால் யாசோனின் ஐந்து பாக நூல் 160-இன் முன் பகுதியில் முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஆனால், நிக்கானோரின் இறப்புக்குப்பின் நடந்த நிகழ்ச்சிகள் அவரது நோக்கத்திற்கு அவ்வளவு முக்கியம் வாய்ந்தவை என்று ஆசிரியர் கருதாமலிருந்திருக்கலாம்.

இந்நூலோடு சேர்ந்த எகிப்திலுள்ள யூதர்களுக்கு எழுதப்பட்ட முதல் மடல் (1:1-9), இந்நூல் முதலில் பதிப்பிக்கப்பட்ட போது அனுப்பப்பட்டது என்றால், இந்நூல் கி.மு. 124-இல், அல்லது அதற்குச் சிறிது முன், எழுதி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், இக்கடிதம் தெளிவாக தேதி குறிக்கப்பட்டிருக்கிறது (1:9). ஆனால் பலர், இந்நூல் முதலாம் மக்கபேயருக்குப் பின்தான் எழுதி முடிக்கப்பட்டது என்பர்.

19. மொழி: யாசோனுடைய ஐந்துபாக நூலும் அதன் சுருக்கமாகிய 2-ஆம் மக்கபேயரும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. சுருக்கி எழுதியவர், யாசோனின் பெரிய நூலிலிருந்து பொறுக்கியெடுத்துத் தொகுத்ததால், இந்நூலில் காணப்படும் கிரேக்க நடை யாருடையது, யாருடைய செல்வாக்கு அதிகமானது என்று கூறுவது கடினம். இந்நூல் பல விவிலியத் தொகுப்பில் காணப்படவில்லையாதலால் பழைய இலத்தீன் வாசகத்திலிருந்து வரும் வுல்காத்தாப் பதிப்பு பெரும் மதிப்புள்ளதாகும்.

20. மூலங்கள்: ஆசிரியரின் முதன்மையான மூலம் யாசோன் எழுதிய ஐந்து பாகங்களைக் கொண்ட நூலாகும். இதை ஆசிரியர், தனது சமயபோதகத்திற்கேற்பச் சுருக்கி எழுதுகிறார். யாசோன் தனது நூலை எழுத முதல் மக்கபேயர் மூலங்களையே, அதாவது யூதாவின் வரலாற்றுப் பாரம்பரியம், செலூக்கிய வரலாற்று ஏடுகள், ஆலயப்பதிவேட்டு நிலையத்திலிருந்த ஏடுகள் ஆகியவற்றையே பயன்படுத்தியிருக்க வேண்டும்.

கி.மு. 124-இல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் முதல் மடல் (1:1-9),143-இல் எழுதப்பட்ட மற்றொரு மடலைச் சுட்டிக் காட்டுகிறது (1:7-8). நாள் குறிக்கப்படாத 2-ஆம் மடலில் (1:10-2:9) உண்மைத்தன்மை பற்றிய பிரச்சனை உண்டு. அதே சமயம் பொருளடக்கத்தில் இம்மடல் நம்பத் தகுந்தது என்று சாதிப்பாரும் உளர். இம்மடல் கி.மு. 164-இல் எழுதப்பட்டதாக சிலர் கருதுவர்.

இந்நூலில் காணப்படும் பிற மடல்கள்:

மடல்கள்	காலம்	வாசகம்
1. யூதர்களுக்கு 4-ஆம் அந்தியோக்கு எழுதிய மடல்.	164	2மக் 9:19-27
2. யூதர்களுக்கு லீசியா எழுதிய மடல்.	164	2மக் 11-16-21
3. லீசியாவுக்கு 4-ஆம் அந்தியோக்கு எழுதிய மடல்.	163	2மக் 11:22-26
4. யூதர்களுக்கு அந்தியோக்கு எழுதிய மடல்.	164	2மக் 11:27-33
5. யூதர்களுக்கு உரோமைத் தூதுக்குழு எழுதிய மடல்.	164	2மக் 11:34-38

இம்மடல்களை மக்கபேயர் ஆய்வேடு கள் நிலையத்திலிருந்து யாசோன் பெற்றிருக்க வேண்டும். அறிஞர்கள் பலர் இம் மடல்கள் வெறும் கற்பனைப் படைப்புகளே என்று கருதுவர். பெரும்பாலோர் பொருளடக்கத்தில் இம்மடல்கள் உண்மைத் தன்மையுடையன என்று ஏற்றுக் கொள்வர். யூதர்கள் தங்கள் சட்டத்தைப் பின்பற்ற இம்மடல்கள் சுதந்தரம் அளிப்பதால் இவை முக்கியத்துவம் வாய்ந்தவை யாகும். 11:27-33-இல் காணப்படும் மடல் வரிசை மாற்றிக் காணப்படுவதாகக் கருதப் படுகிறது.

21. நூலின் நோக்கம்: இந்நூல் யூத மக்களுக்குப் போதகம் அளிக்கவும் அவர்களது விசுவாசத்தை வளர்க்கவும் எழுதப்பட்டதாகும். இதில் அவ்வளவு அரசியலைக் காண முடியாது. அதற்கு மாறாக ஆலயத் துக்கும், சமயக் கருத்துகளுக்கும் சிறப்பிடம் அளிக்கப்படுகின்றது. புற மதத்தைச் சேர்ந்த கொடுமைப்படுத்துபவர்களுக்கு எதிராக பாலஸ்தீன யூதர்கள் அடைந்த வெற்றிகளை எடுத்துக்காட்டி, துன்புற்ற அவர்கள் சகோதரரின் வீரமிக்க முன்மாதிரிகளைக் கொண்டு எங்கும் உள்ள, சிறப்பாக எகிப்திலுள்ள யூதர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்த ஆசிரியர் விழைகிறார். இதற்காக மூன்றாம் ஓனியா, எலயாசர், உயிரை அளித்த ஏழு சகோதரரும் அவர்களுடைய தாயும், யூதா மக்கபேயர் ஆகியோருடைய வாழ்க்கையைப் பெரிதும் போற்றுகிறார். அதே சமயம் கெலியோதோர், 4-ஆம் அந்தியோக்கு, நிக்கானோர் புறவினத் தளபதிகள், யாசோன், மெனலாவு போன்ற தீய பெரிய குருக்கள் போன்றவர்களைக் கண்டனம் செய்கிறார். நீதிமான்களின் உயிர்த்தெழுதல் போன்ற பரிசேயர்களுக்கு மிக விருப்பமான கொள்கைகளையும் பரப்ப முயற்சிப்பதாகத் தெரிகிறது.

22. திட்டமும் பொருளடக்கமும்:
I *முற் சேர்க்கை (1:1-2:18).*

எகிப்து யூதர்களுக்கு எழுதப்பட்ட இரு மடல்களைக் கொண்டுள்ளது.

1. முதல் மடல். *(1:1-9).*
2. இரண்டாவது மடல் *(1:10-2:18).*

இந்நூல் எழுதப்பட்டபின் இறையூக்கம் பெற்ற ஒரு பதிப்பாசிரியரால் இம்மடல்கள் இந்நூலின் தொடக்கத்தில் சேர்க்கப்பட்டன என்று அறிஞர் பலர் கருதுவர். மக்கபேயர் காலத்தில் பாலஸ்தீன யூதர் பட்ட இடுக் கண்களைப் பற்றிய விவரங்களை இம் மடல்கள் கொடுக்கின்றன. இம்மடல்கள் எகிப்திலுள்ள அலக்சாந்திரியா யூதர் களுக்குப் பாலஸ்தீன யூதர்களால் எழுதப் பட்டது. எருசலேம் ஆலயம் திருநிலைப் படுத்தப்பட்ட விழாவில் எருசலேமுக்கு வந்து, விழாவைக் கொண்டாடும்படி எகிப் திய யூதர்களை இம்மடல்கள் அழைக்கின் றன. இவை எபிரேய மொழியிலிருந்து இரேக்க மொழிக்கு மொழி பெயர்க்கப் பட்டனவாகும்.

II சுருக்கி எழுதிய ஆசிரியரது முன்னுரை *(2:19-32).*

இது இவரது நோக்கத்தையும் முறையையும் எடுத்துக்கூறுகிறது.

III யூதர் கொடுமைப் படுத்தப்படுதலும் யூத எழுச்சியும் *(3:1-10:9).*
அ. பெரிய குரு பதவியின் வீழ்ச்சி *(3:1-4:50).*

1. கெலியோதோர் நிகழ்ச்சி *(3:1-40).*

2. ஓனியாவுக்கு எதிராக சீமோனின் சூழ்ச்சி *(4:1-6).*

3. பெரிய குரு யாசோனால் இரேக்க மயமாக்கும் முயற்சி *(4:7-20).*

4. அந்தியோக்கு யாசோனால் வரவேற் கப்படுதல் *(4:21-22).*

5. பெரிய குரு மெனலாவு *(4:23-50).*

ஆலயம் மீறக்கூடாததாகும் என்று கெலி யோதோர் கண்டுணருகிறான். பெரிய குரு பதவி சூழ்ச்சிக்காரரின் பிணையாகிறது.

ஆ. நான்காம் அந்தியோக்கும் இரேக்கப் பித்தரும் *(5:1-7:42).*

1. அந்தியோக்கு எருசலேமைப் பாழாக்குதல் (5:1-14).

2. அந்தியோக்கு ஆலயத்தைக் கொள்ளையடித்தல் (5:15-23).

3. அப்பொல்லோனியு எருசலேமைத் தாக்குதல் (5:24-27).

4. அந்தியோக்கு கிரேக்கத் தன்மையை மக்கள் மேல் புகுத்துதல் (6:1-11).

5. ஆசிரியரின் மதிப்பீடு (6:12-17).

6. எலயாசரின் சாட்சி மரணம் (6:18-31).

7. தாய் மற்றும் ஏழு சகோதரரின் சாட்சி மரணம் (7:1-42).

மக்களின் பாவம் இறைவனின் கோபத்தைக் கொண்டு வருகிறது. ஆலயம் கொள்ளையடிக்கப்படுகிறது; தீட்டுப்படுத் தப்படுகிறது. பற்றுறுதியிலுள்ள யூதர்கள் தங்கள் உயிரையே பரிகாரமாக ஒப்புக் கொடுக்கிறார்கள். இஃது இறைவனின் கோபத்தை மட்டுப்படுத்துகிறது.

இ. யூதா மக்கபேயுவின் தலைமையில் யூதத்துவம் வெற்றி பெறுகிறது (8:1-10:9).

1. கொடுமைகளுக்கு எதிராக எதிர்ப்பை எழுப்புகிறார் யூதா (8:1-7).

2. நிக்கானோரையும் கோரிக்கியாவை யும் தோற்கடித்தல் (8:8-29. 34-36).

3. யூதாவின் மற்ற வெற்றிகள் (8:30-33).

4. அந்தியோக்குவின் மரணம் (9:2-29).

5. யூதா ஆலயத்தைத் தூய்மைப்படுத்து தல் (10:1-9).

இறைவனின் கோபம் இரக்கமாக மாறு கிறது. யூதா பிற இனத்தவரைத் தோற்கடிக் கிறார் என்ற உணர்வோடு அந்தியோக்கு இறக்கிறான். யூதா ஆலயத்தைச் சுத்தி செய்கிறார்.

IV யூதாவின் வெற்றிப் போர்கள் (10:10-15:39).

1. தோலமி மக்கரோன் தற்கொலை (10:10-13).

2. இதுமேயாவில் யூதாவின் போர்கள் (10:14-23).

3. திமொத்தேயுவை யூதா தோற்கடித்தல் (10:24-38).

4. லீசியாவின் மேல் வெற்றி (11:1-15; 12:1).

5. மடல்கள் (11:16-38).

6. அயலாரோடு சண்டைகள் (12:2-45).

7. யூதாவின் மேல் லீசியா இரண்டாம் முறை படையெடுத்தல் (13:1-20).

8. தெம்மத்திரியு அரசனாதல் (14:1-2).

9. ஆல்கிமுவின் பகைமை (14:3-11).

10. யூதாவும் நிக்கானோரும் (14:12-36).

11. இராசியின் மறைவு (14:37-46).

12. நிக்கானோரின் தோல்வி (15:1-37).

13. ஆசிரியரின் முடிவுரை (15:38-40).

யூதா எல்லாப் பக்கத்திலும் போரிடு கிறார். அரச சேனைகள், கிரேக்க மோகம் பிடித்த நகர்கள், சுற்றியிருந்த புற இனத்த வர் ஆகியவர்களோடு போராடுகிறார். அதன் விளைவாக வழிபாட்டுச் சுதந்தரம் பெறுகிறார். யூப்பாத்தோர் என்னும் அரச னின் உறவினனும் செயலனுமான லீசியா ஆலயத்தில் பலிகள் நடக்கும்படி செய் கிறார். பிறர் யூதர்களைத் தொந்தரவு செய் யக்கூடாது என்று கட்டளை இடுகிறார்.

சூழ்ச்சிக்காரர் மெனலாவு கொல்லப்படு கிறார். தெமேத்திரியுவின் ஆட்சியின் கீழ் ஆல்கிமு பெரிய குருவாக முயல்கிறார். நிக்கானோர் ஆலயத்துக்கு எதிராக இறை நிந்தனை செய்கிறான். யூதா அவனை வென்று கொல்கிறார். அவ்வெற்றியைக் கொண்டாட ஆண்டுதோறும் விழா நிறுவப் படுகிறது. இறுதியாக ஆசிரியர் விடை பெறுகிறார்.

23. இலக்கியச் சிறப்பு: விவிலியத்தி லேயே இந்நூல் ஆசிரியர்தான் தான் பயன் படுத்தும் இலக்கிய வடிவைப்பற்றி தானே

வெளிப்படையாகக் கூறுகிறார் (2 மக் 2:20-33). அவர் வேறு ஒரு வரலாற்று நூலைச் சுருக்கித் தருகிறார். வரலாறு எழுதுகிறவனுடைய கடமை நிகழ்ச்சி களைச் சேர்ப்பதும், ஒழுங்காய்ச் சொல் வதும், ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தீர ஆராய்வதும் ஆகும். வாக்கியத்தைச் சுருக்கிச் சொல்வதும் நீண்டபேச்சுக்களை நீக்குவதும் போன்ற செயல்களைச் சுருக்கி எழுதுபவர் செய்ய வேண்டும். வாசிக்க விருப்பம் உள்ளவர்களுக்கு மன நிறைவு உண்டாகும்படியும், கவனிப்பவர்களின் மனதில் எளிதாய்ப் பதியும்படியும், வாசிப் போர் அனைவருக்கும் பயன் உண்டாகும் படியும், ஆசிரியர் சன ரஞ்சகமான நடையைப் பயன்படுத்துகிறார்.

இந்நூல் நிகழ்ச்சியுரை முறையிலன்றி, சொற்பொழிவு முறையில் அமைக்கப்பட்டி ருக்கிறது. நூலைச் சொற்பொழிவுகளின் தொகுப்பாகக் கருதலாம். இச்சொற்பொழி வுகள் உள்ளத்தை உருக்கவும், செயல்படத் தூண்டவும் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ் வொரு சொற்பொழிவும் தனக்குரிய முறை யில் எல்லாம் வல்ல இறைவனின் மகி மையைப் பறைசாற்றுகின்றது. அவர் ஆல யத்தில் தம்மை வெளிப்படுத்துகிறார். எருச லேமில் தம் உறைவிடத்தைக் கொண்டுள்ள இறைவனின் மகிமைக்காக எல்லாம் செயல்படுகின்றன (2 மக் 3:38; 7:37; 10:7; 13:23; 15:34).

இந்நூலின் ஆசிரியர் ஒரு சட்ட வல்லுநரைப் போல் வாதாடுவதைப் பார்க் கிறோம். நிகழ்ச்சிகளைக் கலைப் பண்போடு தேர்ந்தெடுக்கிறார். உணர்ச்சி வசத்தோடு எடுத்துரைக்கிறார். எதிரொலிக் கும் அடைமொழிகள், கடுமையான சொற் கள் முதலியவற்றை அவரது சொற்பொழிவு களில் காணலாம்.

கிரேக்க இலக்கியத்தில் பரவலாக இருந்த ஓர் இலக்கிய வடிவை இந்த நூலில் காண்கிறோம். இஃது ''இரங்கல் வரலாறு'' (Pathetic History) *என்று பொதுவாகக் கூறப் படும். இந்த இலக்கிய வடிவு வாசகர்களின் கற்பனையையும் உணர்ச்சிகளையும் தூண்ட எல்லாச் சாதனங்களையும் பயன்படுத்தும். இவற்றில் சில வண்ணமிக்க விவரிப்புகள், சொற்பொழிவான அறை கூவல்கள், வேண்டுகோள்கள், மிகைப்படுத்தப்பட்ட எண்ணிக்கைகள், விண்ணக வெளிப்பாடு களோடு கூடிய வியப்புக்குரிய அருஞ் செயல்கள், நிகழ்ச்சிகளை நேரடியாக விவ ரிப்பதற்குப் பதிலாக நாடகப்பாணியில் எடுத்துக்கூறுவது, எடுத்துக்காட்டாக உள்ள வற்றை எடுத்துக் கூறுவதும் ஆகும்.*

நாளாகம ஆசிரியரைப் போன்று இவர் தன் கதைகளை மிகச் சிறந்த கருத்தியலாக்கு கிறார். காலவரையைத் தன் நோக்கிற்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்கிறார். பல வற்றை நீக்கிவிட்டு, சிலவற்றில் மட்டும் தமது கவனத்தை ஒருங்குவிக்கிறார். எடுத்துக் கூறப்படும் நிகழ்ச்சிகளின் பொருளையும் சமய நோக்கத்தையும் தெளிவு படுத்துவதில் கவனம் செலுத்துகிறார். தான் தேர்ந்தெடுப்பவைகளை மிகைப்படுத்திக் கூறுவார். 'வானகத்திலிருந்து வரும் உதவி' (1 மக் 16:3) இந்நூலில் விண்ணக அடை யாளங்களாக மாறுகிறது (2 மக் 3:24-26; 10:29-30; 11:8; 12:22; 15:11-16). சிரேனான யாசோன் பின்பற்றும் 'இரங்கல் வரலாறாகிய' கிரேக்க இலக்கிய வடிவில் காணப்படு பவைகளோடு இத்தகைய விண்ணக அடை யாளங்கள் ஒத்துப்போகின்றன. இந்நூலின் யூத ஆசிரியர் வானகத் தூதர்கள் வழியாக உலகை ஆளும் இறை அருள்பாலிப்பில் தான் கொண்ட விசுவாசத்திற்கு ஒத்தவாறு இவற்றிற்கு உருவமாற்றம் அளிக்கிறார். இறையூக்கம் பெற்ற ஆசிரியர் இக்கதை களை யாசோனின் நூலிலிருந்து எடுத்துப் பயன்படுத்துகிறார்.

24. வரலாற்று மதிப்பீடு: *மேற்கூறப்பட்ட இலக்கியப் பண்புகளைக் கொண்டிருந் தாலும், இந்நூல் ஒரு வரலாற்று நூலாகும். அதில் காணப்படும் நிகழ்ச்சிகள் நடந்த காலத்துக்கு அண்மையிலேயே எழுதப் பட்டதாகும். இந்நூலை முதல் மக்கபேய ரோடு ஒப்பிட்டால் இது தெளிவாகும். 2 மக் 3.4 இல் விவரிக்கப்படும் நிகழ்ச்சி*

களுக்கு இப்பகுதியைத் தவிர வேறு மூல மேயில்லை. பெரிய குருபதவிக்கு 3-ஆம் ஓனியா, யாசோன், தெய்வ பக்தியற்ற மெனலாவு ஆகியோரிடையே போராட்டம் பற்றியும், 4-ஆம் அந்தியோக்கு அரியணை ஏறுமுன் நடந்த நிகழ்ச்சிகள் பற்றியும் இந்நூலிலிருந்துதான் அறிகிறோம். 2 மக் 8:15-இல் இந்நூல் 1 மக்கபேயருக்கு இணை யாகவுள்ளது. 1 மக்கபேயரில் காணப்படாத நிகழ்ச்சிகள் சிலவற்றை மட்டுமே இந்நூல் கொண்டுள்ளது. முதலாம் மக்கபேயர் 4:26-7:50-இல் லீசியாவின் மேல் வெற்றி, ஆலயம் திருநிலைப்படுத்தப்படுதல், அய லாரோடுபோர், அந்தியோக்குவின் மரணம் என்ற வரிசையைக் கொடுக்கிறது. இது தவறானது என்று ஏற்கெனவே சுட்டியுள் ளோம். 2-ஆம் மக்கபேயர் 9:12-இல் அந்தியோக்குவின் மரணம், ஆலயம் திரு நிலைப்படுத்தப்படுதல், லீசியாவின் மேல் வெற்றி, அயலாரோடு போர் என்ற வரிசை யைக் கொடுக்கிறது. 2-ஆம் மக்கபேயர், செலூக்கிய அரசர் பட்டியலோடு ஒத்துப் போகிறது. இதன்படி 4-ஆம் அந்தியோக்கு 164-இல் இறந்தான். லீசியாவின் மேல் வெற்றி பற்றி இந்நூல் தவறுகிறது. சில இடங்களில் சமயச் சார்பற்ற வரலாறு 2-ஆம் மக்கபேயருக்குச் சிறு விவரங்களில் கூட ஆதரவு அளிக்கிறது. யோசிப்பசு இந்நூலை அறிந்திருந்ததாகத் தெரிய வில்லை. எனவே இந்நூலை அவர் பயன் படுத்தவில்லை எனலாம். இந்நூலில் காணப்படும் மடல்களும் ஆணைகளும் கற்பனைப் படைப்புகள் ஆகும் என்று கருதப்பட்டது. ஆனால், இவற்றின் உண்மைத் தன்மையை ஐயுற இடமில்லை என அறிஞர் உணரத் தொடங்கியுள்ளனர். இவை முக்கியத்துவம் வாய்ந்தவையும் ஆகும். இவை இந்நூல் வரலாற்றுத் தகுதி யுடையது என்று காட்டும். இந்நூலில் காணப்படும் மிகைப்படுத்தப்படும் எண் ணிக்கைகள், அசாதாரண நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளை மாற்றி வரிசைப்படுத்துதல் ஆகியவை ஆசிரியரது இறையியல் நோக்க ஒளியில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

25. சமய போதகம்: இந்நூலின் சமய போதகம் முதலாம் மக்கபேயருடையதை விட மேம்பாடு உடையதாகவும், வளமிகுந் ததாகவும் உள்ளது. கிரேக்கக் கலாச்சாரப் புகுத்துதலுக்கும் யூதத்துவத்திற்கும் (யூத நெறி, யூத மறை) இடையே நடக்கும் உயிர்ப் போராட்டமாக வரலாற்றை இந் நூல் போதிக்கிறது (4:13). (யூத மதத்தையும் கலாச்சாரத்தையும் குறிக்கும் யூதத்துவம், யூத நெறி அல்லது யூத மறை என்ற சொல் முதன் முதலில் இந்நூலில் காணப்படுகிறது 8:1; 14:38). இரண்டும் முற்றிலும் எதிராக நிற்கின்றன. விட்டுக் கொடுத்தல் பேரழி வில் முடியும் (4:7-17). புறவின அரசர்களின் தயவில் பெரிய குரு பதவியைப் பெறு தலுக்கு இடமேயில்லை (11:2-3). சிதறிக் கிடந்த யூத சமூகத்தைச் சேர்ந்தவராதலால் ஆசிரியர் சமயப்பற்றையும் நாட்டுப்பற்றை யும் ஒன்றாகக் கருதவில்லை. ஒருவேளை அதே காரணத்திற்காகப் போரிட்டு நாட்டைக் காத்தவர்களுக்கு முதன்மை அளிக்காமல் மறைக்குச் சாட்சியாக மரித்த வர்களுக்கு மேன்மை அளித்து முதலிடம் அளிக்கிறார்.

இச்சமயத்தின் விட்டுக்கொடுக்காத தன் மையும் அதன் பரிசுத்தத்திலிருந்து வரு கிறது. இறைவனது பெயர் அடிக்கடி கூறப் படுகிறது. செமித்தியப் பாணியில் யோனத் தான் இறைவனது பண்புகளை விவரித்து, அவரது மகிமையை 1:24-25-இல் எடுத்துக் கூறுகிறார். இறைவன் ஒருவரே அரசர்; அன்பானவர்; அருளிரக்கம் உடையவர்; நேர்மையானவர்; எல்லாம் வல்லவர். அவர் ஒருவரே நித்தியமானவர். அவர் எவ்வளவு ஆற்றல் மிக்கவர் என்றால் ஏற்கெனவே இருக்கும் பொருட்களிலிருந்து அவர் தம் படைப்புக்களைப் படைக்க வில்லை (7:28). ஒன்றுமின்மையிலிருந்து அவற்றை உண்டாக்குகிறார். தம் மக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பாதுகாப்பதில் அவரது அருள்பாலிப்பு தெரிகிறது (1:25). அவர் தமது ஆலயத்தில் உறைகிறார் (14:35-36). உலகிலேயே இந்த ஆலயம்தான் மிகப்பெரியது; மிகப்பரிசுத்தமானது; மிகப்

பெயர் பெற்றது (2:19-22; 5:15; 14:31; 15:41). ஆசிரியர் ஆலயத்தின் புனிதத்தை வலியுறுத்திக் கூறுகிறார். இந்நூலின் பெரும் பகுதி ஆலயம் தீட்டுப்பட்டு, சுத்தி செய்யப்பட்டு, திருநிலைப்படுத்தப் படுதலைச் சுற்றி அமைகிறது. ஆலயத்தைத் திருநிலைப்படுத்துதல், நிக்கானோர் நாள் (1 மக் 7:48-49;2 மக் 15:36) என்ற அண்மையில் நிறுவப்பட்ட இரு விழாக் களை விளக்கும் நூலாக அமைந்துள்ளது இந்நூல் என்றால் ஓர் அளவுக்கு இது பொருந்தும். யூதத்துவம் தொடர்ந்து இருத் தல் இந்த இரு நிகழ்ச்சிகளைப் பொருத்த தாகும். மக்கபேயர் புரட்சியில் போற்றப் படக்கூடியவற்றில் இவை இரண்டும்தான் சிறப்பானவை என்று ஆசிரியர் கருதுவ தாகத் தெரிகிறது.

யூதர்களுக்கு இறைவனின் சட்டம் இருக் கிறது. அதை அனுசரித்தால், சிறப்பாக ஓய்வு நாள் சட்டத்தை அவர்கள் அனுசரித் தால் (8:27; 15:1-4), இறைவன் அவர்கள் மீது இரக்கம் காட்டுவார். இறைப்பற்றற்ற வர்களுக்கு அவர் நேர்மை மிக்க நீதிபதி யாக இருப்பார் (12:6). அவர்களிடையே பேரழிவு ஏற்படும்போது அவர்களே அதற்குப் பொறுப்பு (4:10-17; 6:12-16; 7:18; 10:4; 12:40-41). பரிகாரம் செய்தால், தபசு செய்தால் இறைவனோடு கொண்ட நட்பை யும் ஒற்றுமையையும் திரும்ப அடையலாம் (7:32-33.37-38; 8:5; 12:42-45). நேர்மையான சுயபாதுகாப்புக்குக் கூட சட்டத்தை மீறக் கூடாது (5:25; 6:23.28; 15:3). எல்லாம் தூய்மையான இறைவன் பரிசுத்த நாட்டின் மீதோ, தம் பரிசுத்த மக்கள் மீதோ கறைபடிய அனுமதியார் (14:36). யூதாவின் வாளும், இறைவனிடமிருந்து வருவதால் பரிசுத்தமானதாகும் (15:16). ஆகவே, போரில் விண்ணக சேனைகளும், பங் கெடுத்தால் அதில் வியப்பில்லை.

இறைவன் தமது நீதிமான்களை உதவி யின்றி விட்டு விடுவதில்லை. அவர்களுக்கு எப்போதும் பாதுகாப்பு அளிப்பார் (7:6; 8:36; 12:11). அவருடைய உதவியைச் செபத்திலும், பலியிலும் நாடலாம் (3:22). தம் மக்களுக்காகப் போரிட விண்ணக சேனைகளை அனுப்புகிறார் (3:23-30; 10:29-31; 11:6-10). நேர்மையாகப் போரிட் டும் (12:45), மறைக்குச் சாட்சியாகவும் (அதி 6-7) மரிக்கிறவர்கள் எல்லாரும் நிறைவாழ்வுக்கு (7:11; 14:46) உயிர்த்தெழுப் பப்படுவர் (7:9.28; 14:46). இதற்கு மாறாக இறைப்பற்றற்றவர்கள் தண்டிக்கப்பட்டு வேதனை அடைவர் (5:9-10; 6:13-14.17.19.35; 9:18; 13:7-8). மன்றாட்டுச் செபங்கள் விண்ணகத்திற்கும் புவிக்கு மிடையேயுள்ள உறவை அதிகப்படுத்துகின் றன. ஏனெனில், வானதூதர்கள் மட்டு மல்லர், கடந்த காலப் புனிதர்களும், இஸ்ரா யேலுக்காக இறைவனை மன்றாடுகின்றனர் (15:12-16). உலகிலுள்ளோர் தங்கள் செபத் தாலும் பலிகளாலும் மரித்தவர்களுக்கு உதவி செய்ய முடியும் (12:44-45).

இந்நூலில் காணப்படும் போராட்டங் களின் பயணம் உண்மையிலேயே இவ் வுலகைக் கடந்ததாகும். தானியேல் குறிக் கும் புனிதர்களின் அரசின் வருகைக்காக யூதா போராடுகிறார் என்று கூடச் சொல்ல லாம். உயிர்ப்பில் கொண்டிருந்த விசுவாசம் வாக்களிக்கப்பட்ட நன்மைகளைத் துய்த் தலை மற்றொரு உலகிற்கு மாற்றுகிறது (7:14-16). இந்நல்விளைவிற்காகக் காத்திருக் கும்போது அரசின் வருகைக்காக எல்லாப் புனிதர்களும் ஒரே சீராய் உழைக்க வேண் டும். செபங்கள், சடங்குப்பலிகள், தங்கள் உயிரையே அளிக்கும் சுயபலிகள் ஆகியவற் றின் பலன்கள் இவ்வுலகிற்கு மட்டும் உரியதல்ல (7:32-38; 12:39-45; 15:11-16). இத்தகைய யூதத்துவம் உலக மதிப்பீடு களைக் கடந்து செல்வதால் அரசியல் இலக்கியங்களில் கவனத்தைத் திருப்பி ஏமாறக்கூடாது.

இரண்டு மக்கபேயர் ஆகமங்களையும் பிரித்துக்காட்டும் ஒரு கூறு உண்டென்றால், அது மறைக்காக உயிரைத் தியாகம் செய்ப வர்களைப் பற்றி இரு நூல்களும் காட்டும் கருத்து வேறுபாடு ஆகும். முதல் மக்க பேயரின்படி இஸ்ராயேலின்மேல் வந்த மறைசாட்சிகளின் மரணம் இறைக் கோபத்

தின் விளைவாகும். போர்க் கருவிகள் தாங்கிய எதிர்ப்புதான் இக்கோபத்தை நீக்க வல்லது. அதை யூதா செயல்படுத்துவார் (1 மக் 3:8). 2-ஆம் மக்கபேயரின்படி இப்பாடுகள் தண்டனைதான் என்றாலும் அதை விரும்பி ஏற்றல் ஒரு பரிகாரமாக அமைந்து இறைவனது கோபத்தை மாற்றுகிறது. யூதாவின் பலி ஏற்கப்பட்டதால்தான் அவர் வெற்றி பெறுகிறார் (2 மக் 7:36; 8:5).

ஆசிரியரின் இத்தகைய சமயக்கருத்துக்கள் அவரது நூலின் அமைப்பையும் பாதித்துள்ளன. அதன் விளைவாக சில பகுதிகளில் வரலாற்றுத் தன்மையை விட கற்பனைத் தன்மையே மிகுந்து காணப்படுகிறது. எலயாசர், ஏழு சகோதரர் போன்றவரின் பாடுகள் (அதி 6-7) ஐயமுற மிகைப்படுத்திக் கூறப்படுகின்றன. இந்த மறை சாட்சிகளின் அறவுரை அவர்களின் விசுவாச அறிக்கையாக அமைகிறது. வரலாறு பற்றிய ஆசிரியரது கருத்துபடி, வரலாறு மனிதர்களுடைய செயலைவிட இறைவனது செயலாகும். இதில் முதலாம் மக்கபேயரிலிருந்து இந்நூல் சிறப்பான விதத்தில் வேறுபடுகிறது. முதலாம் மக்கபேயரில் அருஞ்செயல்களைக் காணவில்லை. ஆனால், இந்நூலின் பல இடங்களில் அவை காணப்படுகின்றன. இவ்வருஞ் செயல்கள் பல இடுக்கண்களில் யூதர்களுக்கு உதவியாய் அமைகின்றன (2 மக் 3:24-30; 10:29-30; 11:8; 15:12-16). போர்களின் விளைவுகள் போர்கருவிகளால் உறுதி செய்யப்படவில்லை; மாறாக, செபத்தால் உறுதி செய்யப்படுகின்றன. செபத்தால் எதிரி பலமற்றவனாக்கப்படுகிறான். இறைவனது அருள்பாலிப்பைப் பற்றியும் ஆசிரியர் கண்டிப்பான கருத்தைக் கொண்டுள்ளார்.

சமய போதகத்தில் இவ்வாசிரியர் பரிசேயர்களைச் சேர்ந்தவராகத் தெரிகிறது. இக்காலத்திய யூதத்துவத்தின் விசுவாசத்தை இந்நூல் எடுத்துக்கூறுகிறது. அதற்கு வரலாற்றை ஒரு சாதனமாகப் பயன்படுத்துகிறது. ஆசிரியர் தனது நோக்கத்திற்காக வரலாற்றை முழுச்சுதந்தரத்துடன் பயன்படுத்துகிறார்.

26. இரு மக்கபேயர்களிடையே ஒப்பியல்: கீழே கொடுக்கப்படும் பட்டியல் இரு ஆகமங்களுக்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக்காட்டும். அஃதோடு காலவரையறையில் 2-ஆம் மக்கபேயர் எடுத்துக்கொண்ட சுதந்தரத்தைக் காட்டும். காலக்குறிப்பு சமயச் சார்பற்ற மூலங்களிலிருந்து எடுக்கப்பட்டது. அடைப்புக் குறிகளுக்குள் தரப்படும் நிகழ்ச்சிகளின் காலத்தைக் கணிக்க முடியாது. அவை வரிசைக் கிரமத்திற்குப் புறம்பானவை.

நிகழ்ச்சிகள்	1 மக்கபேயர்	2 மக்கபேயர்
4-ஆம் அந்தியோக்கு அரியணை ஏறுதல் (செப்டம்பர் 175). எருசலேமில் கிரேக்கம்.	1:10-15	4:
ஆலயத்தைக் கொள்ளையிடுதல் (169).	1:16-28	5:1-20
ஆளுநர்களின் தீச் செயல்கள்.	1:29-32	5:21-26
கிரேக்கத்தின் பலமிக்க உட்கோட்டை.	1:33-40	
கிரேக்கம் புகுத்தப் படுதல்.	1:41-55	6:1-9
பீடம் பாழ்படுத்தப் படுதல்.	1:54-55	
விசுவாசிகள் கொல்லப் படுதல்.	1:56-63	6:10-11
இறைக்கோபம்.	1:64	6:12-17
எலயாசர், ஏழு சகோதரர்கள் மறைசாட்சி மரணம்.		6:18-7:42
மத்தத்தியாவும் அவரது புதல்வர்களும் எதிர்க்கிறார்கள்.	2:1-28	5:27

ஒய்வுநாளை அனுசரித்தவர்கள் கொல்லப்படுதல்.	*2:29-38*	*5:25; 6:1*
எதிர்ப்பு உருவெடுக்கிறது.	*2:39-48*	
மத்தத்தியாவின் மரணமும் அவரது இறுதி விருப்பமும்.	*2:49-70*	
யூதா தனது போராட்டத்தைத் தொடங்குகிறார்.	*3:1-26*	*8:1-7*
4-ஆம் அந்தியோக்குவுக்குப் பதிலாக லீசியா ஆட்சி செய்கிறான்.	*3:27-37*	*10:10-13*
யூதா நிக்கானோரையும் கோரிக்கியாவையும் எம்மாவுவில் தோற்கடிக்கிறார்.	*3:38-4:25*	*8:8-29. 34-36*
(மற்றப் போர்கள்)		*8:30-33*
லீசியாவின் முதல் படையெடுப்பு.	*4:26-35*	*11:1-12*
உடன்படிக்கையும் சமரசமும்.		*11:13-21. 27-38*
ஆலயத்தைச் சுத்திசெய்தலும் திருநிலைப்படுத்துதலும்.	*4:36-61*	*10:1-8*
அயலாரோடு போராட்டம்.	*5:1-67*	*10:14-23; 12:1-45*
(காசாவில் திமொத்தேயு கொல்லப்படுதல்).		*10:24-32*
4-ஆம் அந்தியோக்கு மரித்தல். (திசம்பர் 164)	*6:1-16*	*9;1.13-17*
யூப்பாத்தோரின் அமைதிச்சட்டம்.		*11-22-26*
லீசியா அரசனுக்குப் பதிலாக ஆளுகிறான்.	*6:17*	*10:9-11*
உட்கோட்டைக்கு எதிராக யூதா போராடுதல்.	*6:18-27*	
லீசியாவின் 2-ஆம் படையெடுப்பு.	*6:28-54*	*13:1-22*
அமைதி ஏற்படுகிறது; லீசியா ஒய்வு எடுக்கிறான்.	*6:55-63*	*13:23-26*
தெமேத்திரியு, அரியணை ஏறுகிறான் (நவம்பர் 162)	*7:1-4*	*14: 1-2*
ஆல்கிமு, பாக்கிது ஆகியோரின் சூழ்ச்சிகள்.	*7:5-25*	*14:3-4*
ஆல்கிமு, நிக்கானோரின் புதுத்தாக்குதல்.	*7:26-32*	*14:5-30*
நிக்கானோர் ஆலயத்துக்கு எதிராகச் சிந்தனை செய்கிறான்.	*7:33-38*	*14:31-36*
(இராசியின் வீரச் செயல்கள்)		*14:37-40*
நிக்கானோரின் நாள்	*7:39:49*	*15*

இரண்டு நூல்களிலும் லீசியாவின் முதற் படையெடுப்புக் கடிதங்கள், 4-ஆம் அந்தியோக்குவின் மரணம் ஆகியவைகளின் வரிசை ஒரு பிரச்சனைக்குரியதாகும். இதை வேறுபட்ட காலவரைக் கணிப்புகளைக் கொண்டு விடுவிக்க அறிஞர் முயல்வர். இப்படிச் செலூக்கிய மரபினர் சில சமயங்களில் வசந்த காலத்திலிருந்தும், சில சமயம் இலையுதிர் காலத்திலிருந்தும் ஆண்டைக் கணித்தார்கள். முதலாம் மக்கபேயர் இலையுதிர் காலத்திலிருந்து ஆண்டைக் கணிப்பதாகவும் தெரிகிறது. 2-ஆம் மக்கபேயர் லீசியாவின் முதல் படையெடுப்பை யூப்பாத்தோரின் ஆட்சிக் காலத்தில் தருகிறது. இது தவறாகும். ஆகையால் லீசியாவின் முதல் படையெடுப்பு 4-ஆம் அந்தியோக்குவின் காலத்தில் வைக்கப்பட வேண்டும். ஆகவே, 2 மக் 11, 2 மக் 8-ஐ அடுத்துவர வேண்டும். 4-ஆம் அந்தியோக்குவின் மர

ணம் 1 மக்கபேயரில் வரும் வரிசை, அதாவது ஆலயம் திருநிலைப்படுத்தலுக் குப்பின் வருவது தவறாகும். ஆலயம் திருநிலைப்படுத்தலுக்கு முன் 4-ஆம் அந்தி யோக்குவின் மரணத்தை வைத்துச் சரியான வரிசையை 2-ஆம் மக்கபேயர் கொடுக் கிறது. இதன்படி நிகழ்ச்சிகளின் சரியான வரிசை:-எம்மாவு சண்டை (165); லீசியா வின் முதல் படையெடுப்பு; 4-ஆம் அந்தி யோக்குவின் இறப்பு; 5-ஆம் அந்தியோக்கு யூப்பாத்தோர் அரியணை ஏறுதல் (164); ஆலயம் மீட்கப்பட்டு திருநிலைப்படுத்தப் படுதல் (164); யூதா அயலாரோடு போராடு தல் (163).

இரு நூல்களுக்குமிடையே உள்ள சமயக் கருத்துக்களின் ஒற்றுமை வேற்றுமைகளை ஏற்கெனவே கட்டியுள்ளோம்.

27. மக்கபேயரும் திருச்சபையும்: புதிய ஏற்பாட்டில் எபி 11:35 என்ற பகுதி 2 மக் 6-7-ஐச் சுட்டுவதாகத் தெரிகிறது. திருச்சபையின் தந்தையர்கள் கி.பி. மூன் றாம் நூற்றாண்டிலிருந்து இந்நூல்களிலி ருந்து எடுத்துக்காட்டு கொடுக்கின்றனர். இலத்தீன் வழிபாட்டு முறை கொண்டாடும் ஒரே பழைய ஏற்பாட்டுப் புனிதர்கள் மறை சாட்சிகளான ஏழு சகோதரர்கள் ஆவர் (2 மக் 7). இப்பக்தி 4-ஆம் நூற்றாண்டில் அந்தியோக்கியாவில் தொடங்கியிருக்க வேண்டும். ஏனெனில், இவர்களைப் பற்றி புனித கிறிசோஸ்தம் யோவான் இரு அறவுரைகள் வழங்கியுள்ளார். மக்கபேயர் களின் குடும்பக் கல்லறை பாலஸ்தீனத் திலுள்ள மோதயினில் இருந்தாலும் (1 மக் 9:19; 13:25), மறைசாட்சிகளான ஏழு மக்கபேயச் சகோதரர்களின் திருப்பண்டம் அந்தியோக்கியாவில் மரியாதை செய்யப் பட்டதாக பாரம்பரியம் உள்ளது. திருச்சபை யின் வழிபாட்டில் முதலாம் மக்கபேயரை விட 2-ஆம் மக்கபேயர் அதிகமாகப் பயன் படுத்தப்படுகிறது.

மக்கபேயு (MACCABEUS)

இது மத்தத்தியாவின் மகனான யூதாவின் பட்டப்பெயர். இவரும் இவருக்குப்பின் வந்தவரும் சீரியா அரசர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இப்பெயரின் பொருள் பற்றி மக்கபேயர் நூல்கள் I,II என்ற தலைப்பின் கீழ், பெயர் என்ற உப தலைப்பைக் காண்க.

மக்கலோத்து (MAKHELOTH - கூடி வருதல்)

மக்கலோத்து இஸ்ராயேலர்கள் பாலை வனத்தில் தங்கிச்சென்ற ஓரிடம். இஃது அராதாவுக்கும், தாகத்துக்கும் இடையில் இருந்தது (எண் 33:25-26). எண் 33:22-23-இல் குறிக்கப்படும் கெகேலாத்து வுக்கும் இதற்குமிடையே ஒற்றுமை காண் கின்றனர் அறிஞர் சிலர். இஃது இருந்த இடம் தெரியவில்லை.

மக்கள் (PEOPLE)

I இஸ்ராயேலினுடைய வாழ்க்கையின் அனைத்துப் பண்புக்கூறுகளும் ஒன்றாக்கப் படுகின்ற இறைமக்கள் என்ற கருத்தானது பழைய ஏற்பாட்டில் மையமாக இருப்பது போன்று, புதிய ஏற்பாட்டிலும் இறைவ னுடைய புதிய மக்கள் மற்றும் கிறிஸ்து வின் உடலான திருச்சபை என்ற கருத்து மையக்கருத்தாக இருக்கிறது. இந்த இறை வாக்கு இறுதிக்கால இயலானது இவை யிரண்டிற்கும் இடையே ஒரு தொடர்பு நிலையாகச் செயல்படுகிறது. பழைய உடன்படிக்கையின் பணித்திட்டத்தினுள், ''காலத்தின் முடிவில்'' எதிர்பார்க்கப்படும் புதிய உடன்படிக்கையின் மக்களைப்பற்றி முன்னதாகவே அறிவித்து, காலத்திற்கு முன்னரே விவரிக்கிறது.

II **பழைய உடன்படிக்கையின் மக்கள்:** குறிப்பிட்ட அளவிலான மனிதக் குழுக் களைக் குறிக்க இரண்டு அடிப்படைக் கூறுகளை எபிரேயச் சொற்கள் ('அம்' -'am, கோய் - Goy) வலியுறுத்தின. அவை இரத்த சமுதாயம் மற்றும் நிலையான சமூக அமைப்பு என்பன. ஆனால், படிப்படியாக அவை பழைய ஏற்பாட்டில் மொழியில் சிறப்புற்றவையாக உருவாகின. ஒருமை யில் அச்சொல்லானது ('am) இறைவ னுடைய மக்களாகிய இஸ்ராயேலை அடை

யாளப்படுத்தினாலும், பன்மையில் அச் சொல் (Goyim) அன்னிய நாடுகளுக்கும், புறவினத்தாருக்கும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது (எண் 23:9). ஆயினும், இந்த உபயோகமானது சில விதிவிலக்குகளை அனுமதித்தது. எபிரேய மொழி வழக்கத்திற்கு இணையாக கிரேக்க விவிலியத்தில் ஒருமைச் சொல்லானது (laos) இறைவனுடைய மக்களையும், பன்மைச்சொல்லானது (ethne) புறவின நாடுகளையும் அடையாளங்காட்டின; ஆனால், மீண்டும் அங்கே விதிவிலக்குகள் உள்ளன. இந்த மொழி சார்ந்த உண்மையானது, இஸ்ராயேலின் இயல்பை வெளிப்படுத்த ஒரு சிறப்பான சொல் தேவை என்பதை மக்கள் உணர்ந்ததைக் காட்டுகிறது. அதனுடைய அழைப்பின் மறைபொருளின் காரணமாக இம்மக்கள் மற்றவரினின்று வேறுபட்டு இருந்தனர். அதனால் அதனுடைய தேசிய அனுபவமானது ஒரு சமயப்பொருளை பெற்றது, மற்றும் மீட்புத் திட்டத்தினுடைய ஓர் இன்றியமையாத் தன்மையானது தன்னையே அங்கு வெளிப்படுத்தத் தொடங்கிற்று.

1. இறைமக்களின் அளவு கடந்த நிலை

அ. தேர்வு, அழைப்பு, உடன்படிக்கை: மற்ற அனைத்து நாடுகளைப் போன்று இஸ்ராயேலும் மனித வரலாற்றைச் சேர்ந்தது. ஆனால், அதனுடைய தொடக்கங்களினின்றே, வரலாற்று அமைப்பினைக் கடந்து செல்வதாக வெளிப்பாடு அதனைக் காட்டுகிறது. அஃது இருக்கின்றதெனில் அதற்குக் காரணம், இறைவன் அதனைத் தேர்ந்தெடுத்ததும் (உப 7:7; எசா 41:8), அழைத்ததுமேயாகும் (எசா 48:12). அதனுடைய மக்கள் தொகைக்காகவோ, வலிமைக்காகவோ, தகுதிகளுக்காகவோ இல்லாமல் (உப 7:7;8:17; 9:7), அன்பினால் அதனை அழைத்தார் (உப 7:8; ஓசே 11:1). இவ்வாறு அதனை மற்றவற்றினின்று வேறுபடுத்திய பின்னர், அவர் இஸ்ராயேலை மீட்டு யாத்திரையில் அதற்கு விடுதலை அளித்தார் (உப 6:12; 7:8; 8:14;...; 9:26). சுதந்தரமான நாடு என்ற அளவில் அதனை அமைத்த பின்னர், ஒரு பொருளில் அதைப் படைத்து (காண்க. எசா 48:15), தாயின் உதரத்தில் உள்ள சிசுவைப்போன்று (44:2.24), அதனை உருவாக்கினார். முற்றிலும் இறைவனைச் சார்ந்த நிலை பற்றிய ஒரு நாட்டினுடைய உயிருள்ள உணர்விலிருந்து, தானும் ஒரு நாடு என்ற உணர்வை இஸ்ராயேல் பெற்றிருந்தது. அதன்பின் உடன்படிக்கை வந்தது. அதுமுதல் இந்த அடிப்படைச் செயலானது, இஸ்ராயேலுக்கு வரலாறு மற்றும் விசுவாசம் என்னும் இருவிதத் திட்டத்தில் அனைத்தும் தீர்மானிக்கப்படும் என்பதை வலியுறுத்தியது. பன்னிரண்டு கோத்திரங்களைப் பங்காளிகளாகக் கொண்ட ஒரு புனித உடன்பாடானது ஒரு பலியின் இரத்தத்தில் முத்திரையிடப்படுகிறது (யாத் 24:8). இந்நிலையில் யாவே இஸ்ராயேலின் இறைவனாகவும், இஸ்ராயேல் யாவேயின் மக்களாகவும் உருவாகின்றனர் (உப 29:12; லேவி 26:12; எரே 7:23; எசே 11:20). இம்முறையில் இறைவனுக்கும் ஒரு மனித சமூகத்திற்கும் இடையில் ஒரு தனிச்சிறப்பு மிக்க பிணைப்பு ஏற்படுத்தப்பட்டது. விருத்தசேதனத்தின் மூலமாக இந்தச் சமூகத்தில் சேர்கின்ற அனைவரும் இந்தப் பிணைப்பிலும் பங்கேற்பர் (காண்க. ஆதி 17:10;..).

ஆ) இறைமக்களின் பட்டங்களும் பணிகளும்: இஸ்ராயேலானது யாவேக்கென அர்ப்பணிக்கப்பட்ட, அவருக்கென ஒதுக்கப்பட்ட புனித மக்கள் (உப 7:6; 14:2); அவருக்கேயுரிய உடைமை (யாத் 19:5; எரே 2:3), அவரது உரிமைச்சொத்து (உப 9:26). அஃது அவருடைய மந்தை (சங் 80:2; 94:7), அவரது திராட்சைக்கொடி (எசா 5:1; சங் 80:9), அவரது மகன் (யாத் 4:22; ஓசே 11:1), அவரது மணமகள் (ஓசே 2:4; எரே 2:2; எசே 16:8). அது ''குருக்களின் அரசு'' (யாத் 19:6). அதில் தனது பணிக்கென உறுதி மொழி எடுத்துக்கொண்ட மக்கள் மீது இறைவன் ஆட்சி புரிகிறார். உடன்படிக்கையில் அடங்கியுள்ள வழிபாட்டின் இறுதிநிலையானது அதே சமயத்தில், மற்ற நாடுகளைப் பொறுத்தமட்டில் இஸ்ராயேல் என்ன பணியை நிறைவேற்றுகிறது என்பதையும் காட்டுகிறது. மற்ற அனைத்தை

யும் கடந்த இறைவனின் சாட்சி என்ற அளவில் (எசா 44:8), இறைவனுக்கும் அனைத்து மனித சமூகத்திற்கும் இடையில் பிணைப்பினை மீண்டும் உருவாக்கக்கூடிய இடைப்பட்ட மக்களாக அஃது உள்ளது. உலகமனைத்தினுடைய போற்றுரையும் (எசா 45:14-15. 23-24) இறைவனை நோக்கி எழும்புகிறது, மற்றும் அனைத்து நாடுகளும் இறைவனுடைய ஆசியில் ஒரு பங்கினைக் கொண்டுள்ளன என்ற உணர்வில் இது செயல்படுகிறது (ஆதி 12:3; எரே 4:2; சீரா 44:21).

2. தேசிய அனுபவத்தின் சமயச்சிறப்பு: உடன்படிக்கையின் பலனாக இஸ்ராயேலானது மனித வரலாற்றின் மையத்தில் ஒரு முரண்பாட்டினை நிறைவேற்றுகிறது. இயல்பாகவே கடந்த நிலையுடைய, இறைமக்களாகிய ஒரு குறிப்பிட்ட சமய சமூகமானாலும், அதே நேரத்தில் இவ்வுலகைச் சேர்ந்த மெய்ம்மையாகவும் உள்ளது. கீழுலக மக்களின் வாழ்வை அமைக்கின்ற அனைத்துத் தற்காலிகக் கூறுகளையும் அது தன்னுள் கொண்டுள்ளது. இதன் விளைவாக, மற்ற அனைவரும் தங்களை அறிந்து கொள்ளக்கூடிய அதனுடைய தேசிய அனுபவமானது, விசுவாசத்தின்மேல் ஒளிவீசக் கூடிய சமயப்பொருளை ஏற்க உள்ளது.

அ) இனச் சமூகம்: இஸ்ராயேலின் மக்களினமானது, அதனுடைய தொடக்கத்தின் ஒற்றுமையினின்று பெறப்பட்டதாக, தனக்கேயுரிய உள்ளார்ந்த ஒற்றுமையினைக் கருதுகிறது. எபிரேய மூதாதையரே இனத்தின் தந்தையாவார். யாத்திரைக்கு முற்பட்ட வரலாற்று நினைவுகள், ஆபிரகாம் முதல் ஈசாக்கு வழியாக, பன்னிரு கோத்திரங்களுக்குத் தங்களுடைய பெயர்களை அளித்தவர்களின் தந்தையாகிய யாக்கோபு - இஸ்ராயேல் வரை நடத்திச் செல்கின்ற தலைமுறையின் வரைமுறைக்குள் தெளிவாகக் காட்டப்படுகின்றன. காலப்போக்கில் இந்த இனமானது எகிப்திலிருந்து வெளியேறியது முதல் (யாத் 12:38), பாலை நிலம் வரை (எண் 11:4; நீதி 4:11), கானானின் வெற்றிக்குப் பின்னர் ஆகிய காலங்களில் (யோசு 9; நீதி 3:1...) எண்ணற்ற முரண்பட்ட கூறுகளை ஏற்றுக் கொண்டது. ஆனால் பிற்காலங்களில், யூத இரத்தத்தினுடைய தூய்மையின் மீதான அக்கறையினைக் காண்கிறோம். தங்களுடைய இரத்தத்தில் சிலை வழிபாட்டினைக் கொண்டுள்ள புறவின மக்களுக்கு எதிராக ''புனித இனத்தை''க் காப்பதற்கென (எஸ் 9:2) அன்னிய திருமணங்களை அவர்கள் தடை செய்தனர். காலேபிய குலத்தவர் போன்ற சில குறிப்பிட்ட அன்னியரை, அவர்கள் இஸ்ராயேலுக்குள் ஏற்றுக்கொள்வதற்கு வெகுமுன்னரே, மூதாதையரின் தலைமுறைப்பட்டியலில் எண்ணிக்கையிடுவதன் மூலம் அவர்கள் மாதிரிப்படுத்தினர் (1 நாள் 2:18; காண்க. எண் 32:12; ஆதி 15:19). இஸ்ரோயேலினுடைய தேர்வானது அதனுடைய தந்தையரின் வழியாக வருவதே இதற்குக் காரணமாகும். தங்களுடைய தலைமுறைப்பட்டியலின் ஒவ்வொரு படியிலும், அன்னிய மக்கள் மீட்புத்திட்டத்தினின்று தங்களுடைய மூதாதையர் மரபில் பிரிக்கப்படுவதை எவரும் காண்பதில்லையா (ஆதி 19:30; 21:8...; 25:1...; 36)? இறை உடன்படிக்கையிலும் வாக்குறுதிகளிலும் பங்கு பெறுவதற்கு இறைவனுடைய நண்பராகிய ஆபிரகாமின் இனத்தவராக இருக்க வேண்டியது அவசியமாகும் (எசா 41:8; 51:2; காண்க. 63:16; எரே 33:26; சங் 105:6; 2 நாள் 20:7). ஆபிரகாம் ''எண்ணற்ற மக்களின் தந்தையாக'' (ஆதி 17:5-6) உருவாக வேண்டியதன் காரணமாக, சிந்தனையளவில் ஒரு குறிப்பிட்ட உலகளாவிய தன்மை நிலவுகிறது. ஆனால் செயலளவிலோ, யூத இனத்திற்கு மாற்றப்பட்ட அன்னியர், ''ஏனையோர்'' (எசா 56:8) முதலியோர், உண்மையில் சமயச் சலுகைகளில் பங்கேற்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்திற்குள் ஒன்று சேர்கின்றனர். இறைவனுடைய மக்களாவதற்கு, இன்னும் பொதுவான விசுவாசம் போதியதாகவில்லை. செயல்முறையான அடிப்படையாக, பிறமக்களிடையேயிருந்து இறைவன் தேர்ந்துகொண்ட இனத்தை அது கொண்டுள்ளது.

ஆ) நிறுவனங்களைக் கொண்ட சமூகம்: மூதாதையரின் இனமானது ஒரு வடிவமற்ற தொகுப்பாக இல்லாமல், ஒருங்கமைக்கப் பட்ட சமூகமாக உள்ளது. அதனுடைய அடிப்படை அங்கங்கள் இரத்தத்தின் சமுதா யம் காணக்கூடிய குடும்பமும் குலமும் ஆகும். இவை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து இருந்தன. சிதறிப்போதலையும் கடந்து நிலைத்து நின்றன (எஸ் 2; நெகே 7). ஆனால் பொருளாதார விவகாரங்களில் ஆட்டு மந்தை, நிலம், பயிரிடும் உரிமை ஆகியவற்றின் உரிமம் மீது இவை ஆதிக்கம் செலுத்தின. இரத்தப்பழி (எண் 35:19), உடன் பிறந்தார் மணக்கும் உரிமை (உப 25:5...), மீட்கும் உரிமை (ரூத் 4:3) முதலிய வழக்கங்களை இவை கட்டுப்படுத்தின. இவைகளின் மூலமாகவே ஒவ்வொரு தனி நபரும் பாதுகாத்து அதேசமயம் பொறுப் புடையவனாக்குகின்ற சமூக உரிமையினை உணர்கின்றனர். அடிப்படை அரசியல் ஒன் றிப்புகளான கோத்திரங்களாகக் குலங்கள் தாமாகவே இணைகின்றன; ஒன்றிக்கின் றன. ஒழுங்கமைக்கப்பட்ட நாடானது ஏற் கின்ற முதல் வடிவமானது, உடன்படிக்கை யின் உடன்பாட்டினால் ஒன்றாகப் பிணைக் கப்பட்ட பன்னிரு கோத்திரங்களின் கூட் டமைப்பாகும் (யாத் 24:4; யோசு 24). இஸ்ராயேல் நாடானது அதிக நிலையான வடிவத்தை ஏற்கும்போது, கூட்டமைப்பை விலக்கி விடாமல், மையப்படுத்தப்பட்ட முடியாட்சியானது அதன்மேல் சுமத்தப் படும் (2 சாமு 2:4; 5:3). அதனால் முடியாட்சியின் வீழ்ச்சிக்குப்பின், நாடு சிதறுண்டு போன நிலையில் கோத்திரங் களின் கூட்டமைப்பு யூக மீட்சியாளர் களுக்கு உகந்த மாதிரியாக இருந்தது (எஸ் 48). அமைப்புகளின் உருவாக்கமானது பல தரப்பட்ட வரலாற்று நிலைகளால் தூண்டப் பட்டாலும், அது எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நிலைகளின் தாக்கத்தைக் கடந்து உள்ள ஒரு கோட்பாட்டைச் சார்ந் திருக்கும். அது சட்டமே ஆகும். சட்டத்தின் முக்கிய அடிப்படைகளை மோசே பெற்ற ளித்தார். அது, காலப்போக்கில் தனது வளர்ச்சியில், வழிகளிலும் பழக்கங்களிலும் அதே போக்கு நிலைத்திருப்பதை உறுதிப் படுத்துகிறது (காண்க. நெகே 8). இதன் வழியாக இஸ்ராயேலின் அனைத்து அமைப்புகளும், இறைவனுடைய திட்டத் தின் செயல்பாட்டில் ஒரு பொருளையும், மதிப்பையும் ஏற்கின்றன. உடன்படிக்கை மக்களுக்கான நற்பேறான வழித்துணை இதுவே (கலா 3:24).

இ) ஊழ் கொண்ட சமூகம்: நாட்டை உருவாக்குகின்ற அமைப்புகளுக்கு ஒத்த அளவில், ஊழ்கொண்ட சமூகமானது தனது உறுப்பினர்களுக்கு ஒரு பொது ஆன்மா வினை அளிக்கின்றது. நாடோடி வாழ்வு, அடக்குமுறை மற்றும் விடுதலை, பாலை வனத்தின் அலைச்சல், தாய்நாட்டை அடை வதற்கான போர்கள், அதிக விலை கொடுத்துப் பெற்ற தேசிய ஒற்றுமை மற்றும் நாட்டை இரண்டாகப் பிரித்து அழிவை முன் குறித்துக் காட்டும் அரசியல் பிளவு, பேரழிவு மற்றும் சிதறிப்போதல், ஆகியவற்றின் அனுபவமாக இந்த ஆன்மா உள்ளது. ஆனால், இந்த அனுபவங்கள் ஒரு சமய உட்பொருளையும் கொண்டுள்ளன. இவை தமக்கேயுரிய வழியில் இறைவ னுடைய வழிகளின் செயல்முறையான அனுபவமாக உள்ளன. அவற்றினுடைய ஒளிரும் தோற்றமானது இறைவனுடைய கொடைகளை அவரது மக்களுக்குத் தெளி வாகக்காட்டி, அவரது இரகசிய எண்ணங் களை முன்னோக்குமாறு செய்கிறது. அவற் றினுடைய துயரமிகுந்த பகுதியானது எடுத்துக்காட்டான தீர்ப்புகளில் வெளிப் படுத்தப்படும் இறைசினத்தை அவர்சுள் உணரச்செய்கிறது. அதற்குப்பிறகு, வெளிப் பாடாக உருவாகிறது. அவர்கள் சமயம் சாராத அனுபவங்களிலிருந்து, அவர்கள் பிற்காலத்தில் பெற்ற அனுபவங்களை வடி வமைக்கின்ற சிந்தனையின் அடிப்படை முறைகளை இறைமக்கள் பெறுகின்றனர் (1 மக் 2:51..; 2 மக் 8:19). அது, தன்னுடைய வருங்காலத்தைத் தனக்கே காட்டவும், தனது நம்பிக்கைகளின் புறப்பொருளை வெளிப்படுத்தவும் வேண்டிய ஆய்வுக்குரிய செய்திகளின் வரையறையைத் தன் கடந்த காலத்திலேயே காண்கிறது (எசா 63:8...).

ஈ) தாய் நாட்டில் வேரூன்றுதல்: மூலக் குடியிருப்பாகிய பாலைவனத்திலிருந்து இறைவனின் மக்கள் கானானுக்குள் நடத்திச்செல்லப்பட்டனர். அவர்களுடைய மூதாதையர் வாழ்ந்த இடமும், அவர்கள் தங்களுடைய கல்லறைகளைக் கொண்டுள்ள இடமும் இதுவே (ஆதி 23;25:9...). பிற் காலத்தில் உரிமைச்சொத்தாக இறைவனால் அளிக்கப்பட்ட (யாத் 23:27...; உப 9:1...; எரே 2:7; சங் 78:54-55). வாக்களிக்கப்பட்ட நாடு இதுவே (ஆதி 12:7; 13:15). இறைவனுடைய திட்டத்தை நிறைவேற்றிய மனிதத் துணிவு வினையால் வெல்லப்பட்ட நாடு இதுவே (யோசு 1:13.... 24:11..). ஆகவே, இஃது இனியும் ஒரு புறவின நாடான கானான் அன்று. இஃது இனி இஸ்ராயேலின் நாடு; தனது மக்களிடையே பிரசன்னமாகியுள்ள இறைவனே தனது உறைவிடத்தைக் கொண்டுள்ள புனித நாடாகும் (1அர 8:15). யாவேயின் உறைவிடமாகவும், அரசியல் தலைநகராகவும் உள்ள எருசலேமானது, ஒட்டுமொத்தமான தேசிய சமய ஒற்றுமையின் காணக்கூடிய அடையாளமாகும் (சங் 122). இவ்வாறு, நாட்டின் பேரழிவுக்குப்பின் வந்த சிதறிப்போதல், தனது நாட்டின் மீதான இறைவனுடைய மக்களின் நெருக்கத்தை வலுப்படுத்துகிறது. சைரசினுடைய கட்டளையின்போது தோன்றிய சீயோன் மறைபொருளானது (எஸ் 1:2) தொடரும் நூற்றாண்டுகளில் உயிர்ச்சித்திரமாக இருக்கும் (எஸ் 7). அன்னியர்களிடையே தங்கியிருந்த காலத்திலும், வேரோடு நீக்கப்பட்டதாக யூதர்கள் எப்போதுமே நினைக்கவில்லை. ஏனெனில், அவர்களுடைய மூதாதையரின் (நெகே 2:3), அவர்கள் நோக்கிச் செபிக்கக் கூடிய (தானி 6:11) தாய்நாட்டை அங்கே இன்னும் சொண்டிருந்தனர்.

உ) மொழியின் சமூகம்: புனித நாட்டை வென்றதன் மூலம் இஸ்ராயேலானது ''கானான் மொழி''யிலிருந்து (எசா 19:18), தனக்கென ஒரு மொழியை உருவாக்கியது. மக்களின் மொழியானது ஒற்றுமையின் ஒரு கூறாகும். அது சிந்திப்பதில் ஒரு பொதுவான முறையை உறுதிப்படுத்துகிறது. அது கலாச்சாரம் மற்றும் உலகம் பற்றிய சிந்தனையை அறிவிக்கிறது. அஃது ஓர் உண்மையான ஆன்மீகத் தாய் நாடாகும். ஆனால், இஸ்ராயேலில் எபிரேயத்தில், இறை வெளிப்பாடே வெளிப்படுத்தப்படுகிறது. அது செமித்தியக் கலாச்சாரத்தினால் அமைக்கப்பெற்ற சிந்தனை வகைகளோடு தன்னைப் பிணைத்து எபிரேயத்தினுடைய வலிமையான, செயல்திறம் மிக்க பண்புகளிலிருந்து பலன் பெறுவதாக உள்ளது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஓர் உண்மையான தேசிய கலாச்சாரம் உருவெடுக்கிறது. அதில் வேறுபட்ட மனிதப் பங்கீடுகள் அடையாளம் காணப்படுகின்றன (கானானிய, அசீரிய-பாபிலோனிய, ஈரானிய மற்றும் கிரேக்கப் பங்கீடுகள்). ஆனால், வெளிப்பாடானது ஒரு வடிகட்டுதலை எப்போதுமே செயல்படுத்துகிறது. இறைவனுடைய திட்டத்துடன் இணைந்த முறையில் மனதினுடைய சொற்களுக்கும் கருத்துகளுக்கும் ஒரு புதிய உட்பொருளை அளித்து, தன்னியலாக்க முடியாத கூறுகளை விலக்குகிறது. இறுதியாக, யூதர்கள் அரமேயிக்கு அல்லது கிரேக்க மொழிகளைப் பேசும்போதும், எபிரேயமானது புனித மொழியாகவே உள்ளது. ஆயினும் தார்கூம்கள் மற்றும் எழுபது நூல் மொழிபெயர்ப்பு ஆகியவற்றின் மரபுகள் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாட்டினைப் பிழையின்றி அறிவிக்க அரமேயிக்கு மற்றும் கிரேக்க மொழிகளைப் பயன்படுத்துகின்றன. இவ்வாறு இஸ்ராயேலின் கலாச்சார வளர்ச்சியானது புனித மறைநூல்களில் நிலைப்படுத்தப்பட்ட இறைவனுடைய வார்த்தையால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. ஆனால், தன்னையே அறிவுபூர்வமானதாக ஆக்கிக்கொள்ள இறைவனுடைய வார்த்தையானது யூத அச்சுக்குள் பொழியப்பட்டு வடிவெடுக்கிறது.

ஊ) வழிபாட்டு சமூகம்: பண்டைய மேற்காசியச் சமூகங்களில், வழிபாடானது நகர வாழ்வினுடைய இன்றியமையாத கூறாக இருந்தது. இஸ்ராயேலில் ஒரே இறை

வனை வழிபடுவதென்பது, உடன் படிக்கைக் காலத்திலிருந்தே நாட்டின் ஒப்பற்ற மேலான பணியாக இருந்தது. வழிபாட்டுச் செயலில் குழுமியிருந்தவர்களாக மக்களை விவரிப்பதற்கென எபிரேய மொழியானது கலைச் சொற்களைக் கொண்டுள்ளது. சமுதாயத்தையும் (edāh), புனிதக் கூட்டத்தையும் (migera), சபையையும் (qāhāl) அது வடிவமைக்கிறது. இச்சொற்கள் கிரேக்க மொழியில் கூட்டம் (Synagōgō), சபை (ekklēsia) என்ற சொற்களை உருவாக்கின. ஐந்நூல் விவரிப்பது போன்று பாலைவன புனித சமூகத்தில் இதனுடைய புனித மாதிரியைத் தேடுவதில், யூத மதமானது, அச்சொல்லின் முழுப் பொருளில் ஒரு திருச்சபையாக இன்னமும் உருவாகவில்லை. ஏனெனில், அஃது ஒரு தனிப்பட்ட நாட்டினுடைய தற்காலிக அமைப்புடன் கட்டுப்பட்டதாக உள்ளது. ஆனால், திருச்சபையினுடைய தனிக்கூறுகளை அஃது ஏற்கெனவே தன்னில் கோடிட்டுக் காட்டுகிறது. ஏனெனில், இஸ்ராயேல் மக்களுடைய சிறப்பான பண்புகள் வழிபாட்டுச் சமூகத்தின் (qāhal, ekklesia) பண்புகளில் மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

3. பழைய உடன்படிக்கை: மதிப்பும் வரையறைகளும்: பழைய உடன்படிக்கையின் காலத்திலிருந்தே, இறைவனுடைய திட்டத்தின் சமூக அமைப்பானது ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வரலாற்றின் இடர்களிலிருந்து தன்னையே விடுவித்துக் கொள்வதால் மனிதன் இறைவனால் மீட்கப்பட முடியாது. உலகினின்று துண்டிக்கப்பட்ட சமய வாழ்வின் தனிமையில் அவன் இறைவனைக் காணமாட்டான். தமது மக்களென இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாயத்தினுடைய வாழ்விலும் ஊழிலும் பங்கேற்பதன் மூலம் அவன் இறைவனுடன் ஒன்றிக்கப்படுவான். இந்த இறைத்திட்டமானது அதனுடைய நிறைவேற்றத்தின் தொடக்கத்தை இஸ்ராயேலில் கொண்டிருக்கிறது. ஏனெனில், இந்த உடன்படிக்கையின் மக்கள் ஏற்கெனவே செயலளவில் விசுவாச வாழ்வைக் கொண்டுள்ளனர். இந்த விசுவாச வாழ்வு தன்னுடைய துணையாக, நாட்டின் அமைப்புகள் மற்றும் நாட்டின் வரலாறு ஆகியவற்றுடன் இறைவனுடைய வார்த்தையையும், வழிபாட்டின் குழுக்களையும் கொண்டுள்ளது. ஆயினும், இந்தத் தயாரிப்பு மற்றும் தற்காலிக நிறைவேற்றத்தின் நிறைவற்ற இயல்பு இங்குதான் தோன்றுகிறது. இறைவனுடனான உடன்படிக்கையின் உறவினுடைய ஓர் அனுபவம் என்ற அளவில் விசுவாச வாழ்வானது, இறுதி மீட்பினுடைய வாக்குறுதியைத் தன்னுள் கொண்டுள்ள ஓர் உடன்பாட்டு மெய்ம்மையை இங்கு ஏற்கெனவே கொண்டுள்ளது. ஆனால், இரு கோணங்களில் இதனைக் கட்டுப்படுத்துகின்ற நிலைகளுக்குக் கட்டுப்பட்டதாக இஃது இன்னும் உள்ளது. உலகப் பொருட்களின் அமைப்பிற்கோ, ஒரே நாட்டினுடைய எல்லைக்கோ அப்பால் இது நோக்குவதில்லை. மேலும், தொட்டுணரத்தக்க ஆதரவைக் கண்டடையக்கூடிய தேசிய மற்றும் தற்காலிக மெய்ம்மையுடன் இந்த யாவும் கடந்த மெய்ம்மையை (''இறை மக்கள்'') இணைப்பதன் மூலம், ஓர் ஆழமான மறைபொருளானது மனிதருக்கு அறியப்படக் கூடியதாகிறது. இவ்வுலகின் மக்கள் என்ற அளவிலான இஸ்ராயேலின் அனுபவங்களினின்று தொடங்கி, மீட்புத்திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய புனித சமூகத்தின் பல்வேறுபட்ட கூறுகள், சிறிது சிறிதாக உருவங்களின் மறைவில் கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

III புதிய மக்களின் வாக்குறுதி: பழைய உடன்படிக்கையின்மீது அமைக்கப்பட்ட அமைப்பு மேலே கூறப்பட்ட வரையறைகளை மட்டும் கொண்டிருக்கவில்லை. எதையும் நிறைவுள்ளதாக்க சக்தியற்றதும் ஆகும் (எபி 7:19; 9:9; 10:1). ''புனித மக்களாக'' இஸ்ராயேல் பெற்ற அழைப்பைச் செயல்படுத்த சக்தியற்றதும் ஆகும். இஸ்ராயேலின் பாவங்களே, தம்மீது நாடு கடத்தப்படல் மற்றும் சிதறிப்போதல் ஆகிய அடிப்படைத் தண்டனைகளை வருவித்துக் கொண்ட நிகழ்ச்சிகளே, இதை

மெய்ப்பித்துள்ளன. இறைவனுடைய திட்டமானது இவற்றிற்காக மடிந்து போகவில்லை. இறைவாக்கு இறுதிக்கால இயலானது இறுதிக்காலங்களுக்கென ஒரு புதிய திட்டத்தின் வருகையை அறிவித்தது. அதில் பண்டைய நிலையை, ஒரு வரைபடமாகக் கொண்ட நிறைவுடைய மக்களை இறைவன் காண்பார்.

1. புதிய உடன்படிக்கையின் மக்கள்

அ) புதிய உடன்படிக்கையின் மேன்மை: பழைய இஸ்ராயேலைப் போன்று புதிய மக்களும் இறைவனுடைய முன் முயற்சியால் பிறக்க வேண்டும். ஆனால், இம்முறை இறைவன், தனது திட்டத்திற்கு எதிராகச் செயல்பட்ட பாவத்தின்மீது வெற்றிகொள்வார். அவர் தனது மக்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களது இதயத்தை மாற்றி, தனது ஆவியை அவர்கள் மீது பொழிவார் (எசே 36:26...). தாழ்ச்சி மிக்க நீதியுள்ள எஞ்சியோரைப் பாதுகாப்பதற்கென அவர் பாவிகளை அதனின்று பிரிப்பார் (எசா 10:20-21; செப் 3:13; யோபு 3:5). தன்னால் படைக்கப்பட்ட இம்மக்களுடன் (எசா 65:18), அவர் ஒரு புதிய உடன்படிக்கை செய்வார் (எரே 31:31..; எசே 37:26). இம்மக்களே யாவேயினுடைய ''புனித மக்களாகவும்'' (எசா 62:12), மந்தையாகவும் (எரே 31:10), மணப்பெண்ணாகவும் (ஒசே 2:21) இருப்பர். இவ்வாறு விவரிக்கப்பட்ட உள்ளார்ந்த நீதியானது, பாவமக்களாகிய இஸ்ராயேலின் ஆன்மீக நிலையோடு ஒப்பிட்டு வேறுபடுத்தப்படுகிறது. மனித இனத்தினுடைய முதல் தந்தையின் பாவத்திற்கு முற்பட்ட நிலையை இது நினைவூட்டுகிறது (ஆதி 2).

ஆ) புதிய மக்களின் உலகளாவிய தன்மை: அதே நேரத்தில், இறைவனுடைய திட்டத்தின் எல்லைகள் விரிவுபடுத்தப்படுகின்றன. ஏனெனில், நாடுகள் தங்களை இஸ்ராயேலுடன் சேர்த்துக் கொள்ளப்போகின்றன (எசா 2:2). அவர்கள் அதனுடன் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசிரையும் (எரே 4:2; காண்க. ஆதி 12:3), யாவேயின் மறைபொருளான ஊழியனை இணைப்பாளராகக் கொண்ட உடன்படிக்கையையும் (எசா 42:6) பங்கிடுவர். இவ்வாறு இஸ்ராயேலை ஒதுக்கி வைப்பதென்பது இறைத்திட்டத்தை வெளிப்படுத்துவதில் ஒரு தற்காலிக நிலையாகத் தோன்றுகிறது. காலத்தின் முடிவில் பண்டைய உலகளாவிய நிலையானது மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும்.

2. புதிய மக்களின் அடையாள உருவம்: செயல்முறை வடிவில் புதிய மக்களைக் கருத்தியலாய் அமைப்பதற்கு இஸ்ராயேல் மக்களுடைய கடந்தகால அனுபவங்களைத் தேடவேண்டியவர்களாக மட்டுமே இறைவாக்கினர்கள் உள்ளனர். அவர்கள் அதனின்று குறைபாடுகளையும் நிழல்களையும் நீக்கிவிட்டால், இறுதிக்காலங்களை எதிர்பார்த்தலின் உருவத்தில் உள்ளவாறு அது தோன்றுகிறது.

அ) புதிய இனம்: ஆபிரகாமின் இனமாக இருப்பதன் காரணமாக, இஸ்ராயேலானது புதிய மக்களாக மாறும் (எசா 41:8). தங்களுடைய முறையில் தாங்களும் பிதாப்பிதாக்களின் ஆன்மீகச் சந்ததியாக உருவாவதற்கென நாடுகளும், ஆபிரகாமினுடைய இறைவனின் மக்களுடன் ஒன்று சேர்க்கப்படும் (சங் 47:10). புனித மக்களின் அடையாளத் தாயாகிய சீயோனை நோக்கி அனைவரும் ''அம்மா'' என்று கூறுவர் (சங் 87). இவ்வாறாக, பாபேல் ஊழாற்றல் முதல் சிதறிப்போன நாடுகளின் எஞ்சியோர் அனைவரும் ஒன்று சேர்க்கப்படும் போது, மனித இனம் முழுவதும் தனது மூல ஒன்றிப்பினை மீண்டும் கண்டடையும் (எசா 66:18-20; காண்க: ஆதி 10-11; செக் 14:17).

ஆ) சில புதிய அமைப்புகள்: புதிய மக்களை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு என முன்கூட்டியே விவரிப்பதற்கு, உருவகமான அமைப்புகளே தேவையாக உள்ளன: இதயத்தில் எழுதப்பட்ட சட்டம் (எரே 31:33; எசே 36:27); பன்னிரு கோத்திரங்களின் மறுஒன்றிப்பு (எசே 48) மற்றும் இஸ்ராயேலுக்கும் யூதாவிற்கும் இடையிலான வெறுப்

புணர்வின் முடிவு (37:15..); தாவீதினுடைய வித்தின் அரசுரிமை (எசா 9:11; எரே 23:5; எசே 34:23; செக் 9:9) ஆகியவை இந்த உருவக அமைப்புகளாகும். மீண்டும் இங்கு உலகளாவிய நிலையானது பழைய அமைப்புகளின் எல்லைகளைக் கடந்து செல்கிறது. தாவீதின் மகனாகிய அரசர் அனைத்து நாடுகளின்மீதும் அரசாள்கிறார் (சங் 2:72); சிறப்பாக, அவை அனைத்தும் ஒரே இறைவனை அரசனாக ஏற்றுக்கொள்ளும் (செக் 14:16; சங் 95:10); அவைகளை ஒளிக்குக் கொணர்வதற்கென அவரது சட்டம் அவைகளுக்குக் கற்பிக்கப்படுகிறது (எசா 2:2...; 42:1.4). இவ்வாறு, தங்களுடைய ஆட்தன்மையை இழந்துவிடாமல், அவை இறைவனுடைய மக்களுடன் உறுப்பாண்மை முறையில் ஒன்றிக்கப் படுகின்றன.

இ) மீட்பின் நிகழ்ச்சிகள்: அவ்வாறே இஸ்ராயேலின் வரலாற்று அனுபவங்களும் மீட்பின் நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டும் சாதனங்களை அளிக்கின்றன. அவை முதல் மீட்பு மற்றும் விடுதலையைப் போன்ற புதிய யாத்திரை (எரே 31:11; எசா 41:16...; 44:23); பழையதின் வியத்தகு செயல்களைப் புதுப்பிக்கின்ற, பாலைவனத்தின் மீதான புதிய பவனி (ஓசே 2:16; எரே 31:2; எசா 40:3; 43:14; 48:21; 49:10); வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குத் திரும்புதல் (ஓசே 2:17; எரே 31:12; எசே 37:21); சமாதானத்தின் ஆட்சியைத் தொடங்குவதற்கென அண்டைய பகைவர்கள் மீதான அரசனுடைய வெற்றி (எசா 9) முதலியனவாகும். ஆனால், எல்லைகள் மீண்டும் ஒருமுறை விரிவாக்கப்படுகின்றன. சமாரியா மட்டுமின்றி பாவத்தினுடைய நகரின் உருவமாகிய சோதோமும் வாக்களிக்கப்பட்ட மீட்சியில் பங்கேற்கும் (எசே 16:53...). இவ்வாறாக, மீட்பின் வரலாற்றின் முடிவில் மீண்டும் நிறுவப்படும் உலகளாவிய சமாதானமானது (எசா 2), காயினுடைய பாவத்திற்குப்பின் அறிந்திராத ஒரு நிலைக்கு மனித இனத்தை இட்டுச்செல்லும் (காண்க. ஆதி 4:8).

ஈ) புதிய புனித நாடு: இயல்பாகவே புனித நாடானது புதிய இஸ்ராயேல் ஒன்று சேரும் இடமாக இருக்கும் (எசே 34:14; எரே 31:10...). ஆனால், அஃது உப ஆகமத்தினுடைய மிக ஆர்வமுள்ள வர்ணனைகளை விஞ்சக்கூடிய வியத்தகு வளத்தைக் கொண்டிருக்கும் (எசே 47:12; யோவே 4:18). உண்மையில் இது மீண்டும் பெறப்பட்ட இன்பவனமாக இருக்கும் (எசே 36:35; எசா 51:3). அதன் தலைநகராகிய எருசலேம், உலக முழுமைக்கும் மையமாகும் (எசா 2). இவ்வாறு மீண்டும் படைக்கப்பட்ட உலகில் (65:17), தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இன்பவன சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்கென, இறைவன் அனைத்து நாடுகளின் ஒன்றிப்பை வலியுறுத்துவார் (ஓசே 2:20; எசா 65:17-25).

உ) எல்லா மொழிகளின் ஒன்றிப்பு: கானானினுடைய மொழியினின்று இறைவன் புனித மொழியினை உருவாக்கியது வீணானதன்று. இறுதிக்காலங்களில் எகிப்து மனமாற்றப்படும்போது அது புனித மொழியில் இறைவனை மன்றாடும் (எசா 19:18...). ஆனால், இறைவாக்கு இறுதிக்கால இயலானது மேலும் தொடர்ந்து செல்கிறது. ஒவ்வொருவரும் தன்னுடைய மொழியிலேயே அவரைப் போற்றுவதற்கென, இறைவன் எல்லா மக்களுடைய உதடுகளையும் தூய்மையாக்குவார் (செப் 3:9). இவ்வாறாக, மீண்டும் ஒன்றிக்கப்பட்ட வழிபாட்டில், நாடுகளையும் மொழிகளையும் ஒன்று சேர்ப்பது நிறைவேற்றப்படும் (எசா 66:18). மனித இனத்தின் முறிவிற்கு இஃது ஒரு முற்றுப்புள்ளி வைக்கும். மேலும், இறைத் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்தது போல மீண்டும் கண்டடையப்பட்ட ஆன்மீக ஒன்றிப்பிற்கு அறிகுறியாகவும் இருக்கும் (ஆதி 11:1).

ஊ) இறைவனுக்குப் புதிய வழிபாடு: இறுதிக்கால வழிபாடானது இஸ்ராயேல் வழிபாட்டினுடைய பண்புகளில் தெளிவாக விவரிக்கப்படுகிறது (காண்க. எசே 40-48). ஆனால், உலகளாவிய தன்மையானது

அடிக்கடி உறுதிப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். ஒரே இறைவனுடைய பொதுவான பணியின் மூலமாக மனுகுலமானது தனது ஒன்றிப்பைக் கண்டடையும் (எசா 2:2;...; 55:6 தொ; 66:20 தொ). அதனுடைய இறுதியான ஒருங்கு கூடுதலானது, கூடார விழாவிற்கென இறைமக்கள் அனைவரும் மீண்டும் ஒன்று சேர்கின்ற, திருப்பயணங்களின் வடிவை ஏற்கும் (செக் 14:16). வழிபாட்டு உணவிற்கென மக்கள் ஒன்று சேர்வர். அதன் மூலமாக இறைவனில் ஒன்றிப்பர் (எசா 25:6). இப்பகுதியில் இந்தச் சொல் தோன்றாவிடினும், பாலைவன சபைக்கு (qāhāl elkklesia) ஒத்த ஒரு புதிய ''புனித சபை'' எதிர்நோக்கப்படுகிறது; அதனில் நாடுகள் அனைத்தும் இஸ்ராயேலில் எஞ்சியோருடன் மீண்டும் ஒன்று சேரும்.

3. இறுதிக்கால மக்களும் வரலாற்று இஸ்ராயேலும்: எனவே, இஸ்ராயேலின் வரலாற்று அனுபவத்தில் பங்கேற்பதாகப் புதிய உடன்படிக்கையின் மக்கள் முன்னதாகவே கற்பனை செய்யப்படுகின்றனர். இந்த முன்னடையாளத்தின் மதிப்பை நாம் தெளிவாகக் காண்கிறோம். ஆயினும், அனுபவத்தினுடைய உண்மைகள் இருமுனைகளில் எல்லை கடந்து செல்கின்றன; நாட்டுப் பணித்திட்டம் கடந்து செல்லப்படுகிறது; புனித மக்கள் அனைத்து மனுகுலத்திற்கும் திறந்தவர்களாக உள்ளனர்; மனித இனமும் உலகமும், மனித பாவத்தினால் இழந்து விட்ட, தங்களுடைய மூல நிறைவினை மீண்டும் கண்டடைகின்றன.

ஆனால் இந்த அடையாளச் சித்திரத்தில், இஸ்ராயேலின் அனுபவம் ஓரளவு காரணமாக உள்ள சில குறிப்பிட்ட தெளிவற்ற நிலைகளும் உள்ளன. பண்டைய உடன்படிக்கையின் மக்கள், அதன் அரசன், அதன் புனித நகரம் ஆகியவற்றைச் சூழ்ந்துள்ள மனுகுலத்தினுடைய ஒன்றிப்பு மீண்டும் அமைக்கப்படுதலானது சில நேரங்களில் குறுகிய தன்மையையும் (காண்க. எசா 52:1), சில தேசியத் தொனியையும் (60:12), போர்த்தன்மையுடைய கூறுகளையும் கூடக் கொண்டிருக்கின்றது (சங் 2; 72). இவை இறுதிக்காலப் போரின் உருவில் வளர முயலும் (எசே 38-39). எல்லாவற்றிற்கும் மேலாக, புதிய மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட மகிழ்ச்சியானது அனைத்து ஒழுக்க மற்றும் உடல் சார்ந்த தீமைகளை விலக்குவதை வெளிப்படுத்தினாலும் (துன்பம்: எசா 65:19; மரணம்: எசா 25:8), வரையறைகள் உலக மகிழ்ச்சியின்மீது நிலையாய்த் திருப்பப்பட்டதாய், பெரும்பாலும் தற்காலிகமானதாய் உள்ளன. இந்த எல்லைகளைக் கடந்துசென்று எல்லை கடந்த தோற்றத்தை ஏற்க முயல்கின்ற ''மிக உன்னதருடைய புனிதர்கள் அடங்கிய மக்களும்'' (தானி 7:22.27), இவ்வுலகின் வல்லமைகளைப் பிரதிபலிக்கின்ற ஆதிக்கம் அளிக்கப்பட்டவர்களாகத் தெரிகின்றனர் (தானி 7:27; காண்க. 14).

இந்தத் தெளிவின்மையை நீக்குவதற்கு, இறுதிக்கால மக்கள் தங்களுடைய முறையில் கிறிஸ்துவுடனும் அவருடைய திருச்சபையுடனும் மனித அனுபவத்திற்குள் நுழைவது அவசியமாகும்.

IV **புதிய உடன்படிக்கையின் மக்கள்:** எழுபதுநூல் மொழிபெயர்ப்பைவிட, புதிய ஏற்பாட்டுக் கிரேக்க மொழிபெயர்ப்பில் இறைமக்கள் (laos), புறவின நாடுகள் (ethnē), என்னும் சொற்கள் சிறப்பான முறையில் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம். ஆனால், புதிய உடன்படிக்கையால் இறைவனோடு பிணைக்கப்பட்ட மீட்பின் சமுதாயத்தை விளக்குவதற்கு மற்றச் சொற்களைவிட ''வழிபாட்டுச் சபை'' (ekklesia) என்ற சொல் தனிச்சிறப்பான முறையில் பொருத்தமாக உள்ளது. ஆயினும், கிறிஸ்துவின் திருச்சபைக்குள் நுழைய பழைய உடன்படிக்கையின் மக்களும் அவர்களைப் பின்பற்றி பிறநாடுகளும் அழைக்கப்படுகின்றன. மக்கள் என்ற சொல்லின் முழுப்பொருளில், கிறிஸ்துவின் திருச்சபை ஓர் உண்மையான மக்களினமாக இருக்கிறது. தன்னுடைய முன்னடையாளங்களை நிறைவேற்றுவதில் இறுதிக்கால மெய்ம்மையானது அவற்றினுடைய பொருளை

அழித்து விடாமல், அவற்றை முழுமைப் படுத்துகிறது.

1. புதிய மக்கள்: எனவே, இயேசுவின் இரத்தத்தினால் முத்திரையிடப்பட்ட புதிய உடன்படிக்கையால் இறைவன் புதிய மக்களைப் படைத்தார். இவர்களைப் பொருத்த மட்டும், ''அவர்களுக்கு நான் கடவுளாய் இருப்பேன்; அவர்கள் என் மக்களாய் இருப்பர்'' என்ற இறைவாக்கு (2 கொரி 6:16; காண்க.லேவி 26:12; எரே 31:33; எபி 8:10; திருவெளி 21:3) முழுமையாக நிறைவேறுகிறது. இவர்களுடைய பாவங்களுக்காகவே இயேசு பரிகாரம் செய்தார் (எபி 2:17), தனது இரத்தத்தினால் இவர்களைப் புனிதப்படுத்தினார் (13:12), விசுவாசத்தினால் நாம் இவர்களில் ஒருவராகிறோம் (கலா 3:7; உரோ 4:3...). இவ்வாறாக, இறைவனுடைய சிறப்பான மக்கள் (தீத் 2:14; காண்க. உப 7:6), தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், புனித நாடு, விலைக்கு வாங்கப்பட்ட மக்கள் (1 பேதுரு 2:9; காண்க: யாத் 19:5 மற்றும் எசா 43:20-21), மந்தை (அ.ப. 20:28; 1 பேதுரு 5:2; யோவா 10:16), ஆண்டவரின் மணமகள் (எபே 5:25; திருவெளி 19:7; 21:2) என்னும் இஸ்ராயேலின் பெயர்கள் இப்போது இந்தப் புதிய மக்களுக்கு மாற்றப்படுகின்றன. மேலும், பழைய உடன்படிக்கையின் மக்கள் தம்முடைய வரலாற்றின் நிகழ்ச்சிகளிலேயே இறைவனுடைய வழிகளை அனுபவித்ததன் காரணமாக, புதிய மக்களுக்கு அளிக்கப்பட்ட மீட்பின் அனுபவமானது இந்த உருவக நிகழ்ச்சிகளை நினைவு கூர்கின்ற சிந்தனைக் கூறுகளில் வடிவமேற்கிறது. வாக்களிக்கப்பட்ட நாடு முன்குறித்துக்காட்டுகின்ற இறை அமைதிக்குள் மக்கள் நுழைய வேண்டும் (எபி 4:9); அது தீமையின் நகரமாகிய பாபிலோனை விட்டு விட்டு (திருவெளி 18:4), இறைவனது உறைவிடமாகிய எருசலேமில் ஒன்று சேர வேண்டும் (திருவெளி 21:3).

ஆனால் இம்முறை, நாடுகள் இயங்குகின்ற தற்காலிக வாழ்வின் மட்டம் கடந்து செல்லப்பயன்படுகிறது. இறைவனுடைய மக்களின் அளவுகடந்த நிலையானது முழுமையாக உள்ளது: ''குருத்துவ அரசானது'' (1 பேதுரு 2:9), இவ்வுலகைச் சேர்ந்ததன்று (யோவா 18:36); அதனுடைய தாயகம் விண்ணிலுள்ளது (எபி 11:13...); அதனுடைய குடிமக்கள் குடியுரிமையை அங்கே கொண்டுள்ளனர் (பிலி 3:20); ஏனெனில், அவர்கள் விண்ணிலுள்ள எருசலேமின் மக்கள் (கலா 4:26). அதே எருசலேம் காலத்தின் இறுதியில் விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கி வரும் (திருவெளி 21:1 தொ). ஆயினும், இம்மக்கள் கீழுலகில் தொடர்ந்து இருப்பர். இதன் மூலமாக, ஆன்மீக மற்றும் இறுதிக்கால மக்கள் தற்காலிக மற்றும் வரலாற்று மக்களுடன் இணைவர். இஸ்ராயேலின் முரண்பாட்டுக்குப் பின்னர், திருச்சபையின் முரண்பாட்டை நாம் கொண்டுள்ளோம். அதனுடைய மண்ணுலக நிலையில், காலப் போக்கில் தன்னையே வளர்க்க அழைக்கப்பட்ட காணக்கூடிய மக்களாக திருச்சபை இருக்கும்.

2. புதிய மக்களில் இஸ்ராயேலும் நாடுகளும்: புதிய மக்களின் ஒரு பகுதியாக அமையுமாறு முதலாவதாக அழைக்கப்பட்டதாக இஸ்ராயேல் இருப்பது இயல்பானதே. இது முதல் உடன்படிக்கையிலிருந்து வரும் அழைப்பாகும். ''மோசேயைப் பிரதிபலிக்கும் இறைவாக்கினராக'' (அ.ப. 3:23) தனது மக்களைக் காக்கவும் (மத் 1:21), அதற்கு ஒளி (மத் 4:15 தொ), மீட்பு (லூக் 1:68), மீட்பின் அறிவு (லூக் 1:77), மகிழ்ச்சி (லூக் 2:10) மற்றும் மகிமை (லூக் 2:32) ஆகியவற்றைக் கொணரவும் இயேசு அனுப்பப்பட்டார். அவர் அதனை ஆளும் தலைவராக இருந்து (மத் 2:6), இறுதியில் அதற்காக மரிப்பார் (யோவா 11:50). ஆனால், இயேசுவைச் சுற்றியும் பின்னர் நற்செய்தியின் அறிவிப்பைச் சுற்றியும் ''வணங்காக் கழுத்துடைய மக்களின்'' நாடகம் புதுப்பிக்கப்படுகிறது. இவர்களைப்பற்றி பழைய ஏற்பாடு ஏற்கெனவே வியப்பூட்டும் எடுத்துக்காட்டுகளை அளித்துள்ளது (மத் 13:15; 15:8; அ.ப. 13:45; 28:26; உரோ 10:21; 11:1 தொ).

இவ்வாறு மீட்புத்திட்டமானது தனது முழுமையான குறிக்கோளை அடையும். இதன் விளைவாக, தனது மரணத்தின் முழுமையில் பழைய உடன்படிக்கையின் மக்களுடைய பாவத்தைச் சுமந்த இயேசுவின் மரணமானது (மத் 23:32-36; காண்க. அ.ப. 7:51 தொ) இந்த முதல் திட்டத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறது. இஸ்ராயேலை மற்ற நாடுகளுக்கு அப்பாற்படுத்தி வைக்கின்ற தடையினை இஃது உடைக்கின்றது (எபே 2:14). இயேசு இறந்தது ''தம் இனத்தினருக்காக மட்டுமன்று, சிதறி வாழ்ந்த கடவுளின் பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்க்கும் நோக்கத்திற்காகவே'' (யோவா 11:52). இறைவனுடைய முதல் மக்களில் எஞ்சியோரில் ஒரு பகுதியினர் மனமாற்றப் பட்டு, புதிய மக்களுக்குள் சேர்வர்; ஆனால், ''புறவினத்தாரிடையே தமக்கென மக்களைத் தேர்ந்து கொள்ளவும்'' இறைவன் தீர்மானித்துள்ளார் (அ.ப. 15:14). ''அனைவரும் அர்ச்சிக்கப்பட்டவர்களோடு பங்கு அடைவதற்கென'' (அ.ப. 26:18), தன்னுடையவரல்லாதோரினின்றும் தன்னுடைய மக்களை உருவாக்க அவர் இப்போது விரும்புகிறார் (உரோ 9:25 தொ; 1 பேதுரு 2:10).

இஸ்ராயேல் மற்றும் நாடுகளுக்கிடையிலான இந்த ஒன்றிப்பின் மூலம் புதிய மனுகுலத்தின் இறுதிக்கால மறுஒன்றிப்பு நிறைவேற்றப்படுகிறது (எபே 2:15). தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் (1 பேதுரு 2:9) இன்னும் ஆன்மீக அளவில் ஆபிரகாமின் இனமாகவே உள்ளது (உரோ 4:11 தொ); ஆனால் உண்மையில், இப்போது புதிய ஆதாமாகிய கிறிஸ்து, முதல் ஆதாமினுடைய அனைத்து வாரிசுகளையும் தன்னில் ஒன்றுபடுத்துவதால் (1 கொரி 15:45; உரோ 5:12..), மனித இனம் முழுவதையும் தன்னுள் கொண்டுள்ளது. இதுமுதல் புனித மக்கள் ''அனைத்துக் கோத்திரங்கள், மக்கள், நாடுகள் மற்றும் மொழிகளின்'' (திருவெளி 5:9; 7:9; 11:9; 13:7; 14:6) மனிதர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் பழைய இஸ்ராயேலும் அடங்கும். திருவெளிப்பாட்டுக் காட்சியாளர் விண்ணகத்தில் தியானிக்கின்ற திருச்சபையினுடைய முடிவில்லாத் தோற்றம் இத்தகையதே. மண்ணுலக மெய்ம்மையும் இத்தகையதே. ஏனெனில், முதல் நூற்றாண்டின் கிறிஸ்துவர்கள் கூறுவது போல அஃது இனிக் கிரேக்கரென்றோ, யூதரென்றோ குறிப்பிடப்படுவதில்லை (கலா 3:28).

3. முழுநிறைவை நோக்கி இயங்கும் புதிய மக்கள்: இவ்வாறு திருச்சபையானது வரலாற்றில் வேரூன்றிய மக்களினமாக உள்ளது. இஸ்ராயேலின் பிள்ளைகளைப் போன்று இதனுடைய உறுப்பினர்களும் தோற்றம், அமைப்புகள் மற்றும் ஊழியனுடைய சமுதாயம், பயணம் செய்கின்ற எல்லையாகிய தாயகத்தின் சமுதாயம் (எபி 11:16), இறைவனுடைய வாக்கினால் உறுதியளிக்கப்பட்ட மொழிச்சமுதாயம், திருச்சபையினுடைய உயரிய நோக்கமாகிய வழிபாட்டுச் சமுதாயம் ஆகியவற்றையும் கொண்டுள்ளனர் (காண்க. 1 பேதுரு 2:9; திருவெளி 5:10). தனித்து வைக்கப்பட்ட இம்மக்களினுடைய மண்ணுலக ஊழ் இஸ்ராயேலுடனான குறிப்பிடத்தக்க ஒப்புமைகளை இன்னும் கொண்டுள்ளது. அவை அதனுடைய பாவ உறுப்பினர்களுடைய அதே பற்றுறுதியின்மை (காண்க. எபி 3:7...); கொடிய விலங்கினை உருவாக்குகின்ற உலக சக்திகளினின்று வருகின்ற அதே அடக்குமுறைகள் (திருவெளி 13:1-7; காண்க. தானி 7); அச்சுறுத்துகின்ற அழிவினின்று தப்பிப்பதற்கென பாபிலோனை விட்டு விலக வேண்டியதன் அதே அவசியம் (திருவெளி 18:4...; காண்க. எசா 48:20) ஆகியவையாகும். தங்களுடைய விண்ணக நிறைவை நோக்கியுள்ள வரையில் புனித வரலாறும், பழைய ஏற்பாட்டினுடைய இறைவாக்கு நூல்களும் புதிய மக்களுக்குப் பொருள் பொதிந்ததாக உள்ளன.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு
(CENSUS)

எபிரேயர்கள் மற்றப் பழங்கால மேற்காசிய மக்களைப்போல் கோத்திரம், குடும்பம் மற்றும் வழிமரபு வாரியாக மக்கள்

தொகைக் கணக்கெடுத்தனர் (யாத் 30:12-14; எண் 1; 3; 4; 26; 2 சாமு 24; 1 நாள் 21; 27; 2 நாள் 2; எஸ் 2; நெகே 7; லூக் 2:1-5). போர் வீரர்களின் தொகையைக் கணிப்பதற்கும் (எண் 1:3; 26:2; 2 சாமு 24:9), லேவியர்களுக்கு வழிபாட்டுப் பணிகளைக் குறிப்பதற்கும் (எண் 3:4) இக்கணக்கெடுப்புகள் செய்யப்பட்டன.

முதல் கணக்கெடுப்பு: இஃது எகிப்திலிருந்து விடுதலைப் பயணம் தொடங்கிய இரண்டாம் ஆண்டு இரண்டாம் மாதத்தில் சீனாய் மலையில் நடந்தது. இதன்படி, இஸ்ராயேலில் மூதாதையர் வீடுகள் வாரியாக இருபது வயதுக்கும் அதற்கு மேலும் போருக்குப் போகத்தக்கவர்களாக 6,03,550 பேர் இருந்தனர் (எண் 1:46; 11:21). இவர்களில் லேவியர் எண்ணப்படவில்லை (1:47-45). இவர்கள் தனியாக எண்ணப்பட்டனர். இதன்படி, ஒரு மாதமும் அதற்கு மேலுமான லேவிய ஆண்கள் 22,000 பேர் இருந்தனர் (3:15.39). இவர்கள் இஸ்ராயேலின் தலைப் பேற்றாண்களுக்குப் பதிலாக ஆண்டவர் முன் பணி செய்ய வேண்டியவர்களாவர் (1:50-51; 3:5-13. 25-26). அப்போது, இஸ்ராயேலில் இருந்த தலைப்பேற்றாண்கள் 22,273 பேர் ஆவர் (3:43). கோகாத்தியர், கெர்சோமியர், மெராரியர் ஆகியவர்களும், முப்பது வயது முதல் ஐம்பது வயதுவரையிருந்த ஆண்கள், சந்திப்புக் கூடாரப் பணிக்கெனக் கணக்கெடுக்கப்பட்டனர். இவர்களின் தொகை 8,580 ஆகும் (4:34-39).

இரண்டாம் கணக்கெடுப்பு: இது பாலைவனப் பயணத்தின் முடிவில் மோவாபிலுள்ள சித்திமில் நடந்தது (எண் 26:2-51). இதன்படி இருபது வயதும் அதற்கு மேலும் உள்ள போருக்குச் செல்லத்தக்க இஸ்ராயேலர் 6,01,730 பேர் இருந்தனர் (26:2.51). இந்தக் கணக்கெடுப்பு, கானானில் உரிமைச் சொத்து வழங்க அடிப்படையாக அமையும் (26:54). இப்போதும் லேவியர் தனித்து எண்ணப்பட்டனர். லேவியருள் ஒரு மாதமும் அதற்கு மேலும் வயதுடைய ஆண்கள் 23,000 பேர் இருந்தனர் (26:62).

இந்த விவரிப்புகளில் வரும் எண்ணிக்கைகள் மிகவும் மிகைப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பாலைவன வாழ்க்கையைக் கருத்தில் கொண்டால், மிக உயர்ந்த இனப்பெருக்க வீதத்தின்படியும் இவை மிகைப்படுத்தப்பட்டவையாகும். இதற்கு, அறிஞர்கள் பல்வேறு விளக்கங்கள் அளிக்க முயன்றுள்ளனர். இஸ்ராயேலுக்கு இறைவன் காட்டிய தனிச்சிறப்பான ஆதரவை எடுத்துரைக்க இந்த எண்ணிக்கைகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன என்பர் சிலர். வேறு சிலர் அரசர்கள் காலத்தில் இருந்த மக்கள் தொகை, காலமயக்கமாக, இந்த விவரிப்புகளில் புகுத்தப்பட்டிருக்கலாம் என்பர். இவற்றைவிட நம்பத்தகுந்த விளக்கமாக, ஆயிரம் என்று மொழிபெயர்க்கப்படும் ''ஏலபு'' என்ற சொல்லைத் ''தலைக்கட்டு'' என்று மொழி பெயர்த்தலாகும்.

தாவீது காலத்துக் கணக்கெடுப்பு: தனது ஆட்சி முடிவில், தாவீது, தாண் முதல் பெயர்செபா வரை வீரர்களைக் கணக்கெடுக்கும்படி, யோவாபுக்கும் மற்ற படைத்தலைவர்களுக்கும் கட்டளையிட்டார் (2 சாமு 24:1-9; 1 நாள் 21:1-7). 2 சாமு 24:9-இன்படி, இக்கணக்கெடுப்பில் இஸ்ராயேலில் 800,000 வீரர்களும், யூதாவில் 500,000 வீரர்களும் இருந்தனர். 1 நாள் 2:5-இன்படி, இஸ்ராயேலில் 1,100,000 வீரர்களும் யூதாவில் 470,000 வீரர்களும் இருந்தனர்.

சாமுவேல்நூல் விவரிப்பில், இறைவனே இந்தக் கணக்கெடுப்பை எடுக்கத் தூண்டினார் என்று வாசிக்கிறோம் (2 சாமு 24:1). நாளாகம விவரிப்பில், சாத்தான் தூண்டியதாக வாசிக்கிறோம் (1 நாள் 21:1). இரண்டு விவரிப்புகளிலும், இந்தக் கணக்கெடுப்பை எடுக்க வேண்டாம் என்று தாவீதைத் தடுக்க யோவாபு முயல்கிறார். ஆனால் வெற்றி அடையவில்லை. இரண்டிலும் இறைவன் ஒரு கொள்ளை நோயை அனுப்பித் தண்டிக்கிறார். கணக்கெடுப்பது பற்றி யாத் 30:11-16-இல் கொடுக்கப்பட்டிருக்கும் முறையைத் தாவீது புறக்கணித்ததால் அவர் தவறு செய்தார் என்று யோசிப்பது விளக்

கம் அளிக்கிறார். இரண்டு விவரிப்புகளிலும், யோவாபு அளிக்கும் அறிக்கையில் உள்ள எண்ணிக்கை வேறுபாடுகளும் கவனிக்கத்தக்கது. இந்தக் கணக்கெடுப்பிலும் லேவியர் தனித்து எண்ணப்படுகின்றனர். இவர்கள் 38,000 பேர் இருந்தனர் (1 நாள் 23:3).

மற்றக் கணக்கெடுப்புகள்: சாலமோன் காலத்தில், இஸ்ராயேலரிடையே வாழ்ந்த அன்னியர்கள், ஆலய வேலைக்காக, கணக்கெடுக்கப்பட்டனர் (2 நாள் 2:17-18; காண்க. 1 அர 5:13; 9:21). எஸ் 2; நெகே 7-இலும் குறிக்கப்படும் கணக்கெடுப்புகள், நாடு கடத்தலிலிருந்து திரும்பியவர்களுள் உண்மையான இஸ்ராயேல் வழித்தோன்றல்களைப் பதிவு செய்யும் நோக்கம் கொண்டவை.

புதிய ஏற்பாட்டில், அகுஸ்து பேரரசனின் கட்டளைப்படி, கிரேனியு என்பவன் சீரியாவில் ஆளுநனாக இருந்தபோது எடுத்த கணக்கெடுப்பைக் கொடுக்கிறார் லூக்கா (லூக் 2:1-5; காண்க. அ.ப. 5:37). இஃது இயேசுவின் பிறப்பிடம் மற்றும் காலத்தோடு தொடர்புடையது.

மக்கேதா (MAKKEDAH - ஆடு மேய்ப்பவர்களின் இடம்)

மக்கேதா ஒரு கானானிய அரச நகரமாகும். இந்நகரத்திற்கு அருகேயுள்ள குகையில்தான் யோசுவா தம்மை எதிர்த்து ஒன்று சேர்ந்து வந்த ஐந்து கானானிய அரசர்களை அடைத்து வைத்தார். பின் தம் எதிரிகளோடு தொடர்ந்து போரிட்டார். போரின் இரண்டாவது கட்டம் முடிந்தபின் இந்த ஐந்து அரசர்களையும் வெளிக்கொணர்ந்து, அவர்கட்கு மரண தண்டனையிட்டு, சூரியன் உதயமாகும் வரை அவர்களின் உடல் மரத்தில் தொங்குமாறு செய்து, பின்பு அதே குகையில் அவர்களைப் புதைக்கச் செய்தார். மக்கேதா நகரத்தின் மக்கள் வாள்முனைக்குப் பலியாக்கப்பட்டனர் (யோசு 10:16-30). யூதாவின் செபேலா மாவட்டத்தோடு பின்னர் மக்கேதாவும் இணைக்கப்பட்டது. இம்மாவட்டத்தின் தலைநகரம் 'இலாக்கிசு' ஆகும் (யோசு 15:41). மக்கேதா இருந்த இடம் எதுவென்று தெரியவில்லை. யுசேபியு எலுதெராப்பொலிக்குக் (பெயித்து இப்பிரின்) கிழக்கில் 12 கி.மீ. தொலைவில் இதற்கு இடம் சுட்டுகிறார். ஆனால், அண்மைக்கால அறிஞர் சிலர் தெல்எஸ்-சாபி அல்லது பெயித்து இப்பிரினுக்கு வடக்கில் இடம் குறிக்கின்றனர்.

மக்கேரு (MACHAERUS)

இஃது அக்காலத்தில் எருசலேமிற்கு அடுத்தபடியாக இருந்த வலிமையான கோட்டையாகும். இந்த மக்கேரு சாக்கடலுக்குக் கிழக்கில் மோவாபு மலைப்பகுதியில் உள்ளது. இக்கோட்டையின் அரண்கள் அலக்சாந்தர் யன்னேயு அரசனால் கட்டப்பட்டு, பின்பு உரோமையரால் இடிக்கப்பட்டன. ஏரோது மன்னன் மறுபடியும் இதற்கு அரண்கள் எழுப்பி இங்குத் தங்கினான். இவனுக்குப்பின் ஏரோது அந்திப்பா இதைத் தனக்குச் சொந்தமாக்கினான். திருமுழுக்கு யோவான் இங்கேதான் சிறையில் அடைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என யோசிப்பசு கூறுகிறார் (காண்க. மாற் 6:14-29). கி.பி. 66-இல் யூதர்கள் உரோமையர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது எருசலேம் வீழ்ந்தபின்னும் உரோமையர்களை எதிர்க்கப் பயன்பட்ட மூன்று கோட்டைகளில் இதுவும ஒன்றாகும். கி.பி. 71-இல் இங்கிருந்த யூதர்கள் உரோமையரிடம் சரண் அடைந்தனர்.

இஃது இக்கால முக்கவேர் என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

மக்சேயா (MAHSEIAH - யாவே என் தஞ்சமாவார்)

இவர் எரேமியாவின் செயலர் பாருக்குக்கும் (எரே 32:12) அரச பயணவிடுதிப் பொறுப்பாளருமான செராயாவுக்கும் (51:59) தாத்தா ஆவார்.

மக்தியேல் (MAGDIEL - *இறைவன் தேர்ந்தெடுத்த கொடை)*

இவர் ஏதோமிய இனத்தலைவரும் ஏசாவின் வழித்தோன்றலும் ஆவார் (ஆதி 36:43; 1 நாள் 1:45).

மக்பன்னாய் (MACHBANNAI - *ஆடை அணிந்திருத்தல்)*

இவர் தாவீது சவுலிடமிருந்து தப்பித் தலைமறைவாய்ச் சிக்லாகு என்னுமிடத்தில் இருந்தபோது அவருடன் சேர்ந்து கொண்ட காது கோத்திரத்தைச் சேர்ந்தவர்; காதின் புதல்வன் ஆவார் (1 நாள் 12:13). திறமை மிக்க போர் வீரனான இவர் தாவீது மன்னனின் படையில் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

மக்பியாசு (MAGPIASH - *பூச்சிக்கொல்லி)*

இவர் நெகேமியாவின் தலைமையில் எஸ்ராவின் புதிய உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மக்கள் தலைவர்களுள் ஒருவர் (நெகே 10:20).

மக்பீசு (MAGBISH - *தடித்த)*

நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்தவர்களில் சிலர் குடியேறிய யூதாவைச் சேர்ந்த ஓர் இடம் (எஸ் 2:30). இஃது இருந்த இடமாக அதுல்லாமுக்குத் தென்மேற்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத் ஏல்-மக்பியே கருதப் படுகிறது.

மக்பேலா (MACHPHELAH - *இரட்டைக்குகை)*

மம்பிறேய்க்கு எதிரேயுள்ள இரட்டைக் குகைகளையுடைய இந்நிலத்தை ஆபிரகாம் தம் குடும்பத்தின் கல்லறை நிலமாக இத்தியனான எப்ரோனிடமிருந்து வாங்கி னார் (ஆதி 23). ஆபிரகாம் (25:8-9), சாரா (23:19), ஈசாக்கு, ரபேக்கா, லேயா (49:31), யாக்கோபு (50:13) ஆகியோர் இங்கே அடக்கப்பட்டனர். இவ்விடத்தை வாங்கி யதன் மூலம் ஆபிரகாம் சொந்த நிலமுடையவராகவும், எபிரோனைச் சார்ந்தவராகவும் மாறினார்.

இப்பெயர் முதலில் இந்த இரட்டைக் குகையையும், பின்னர் அதைச் சுற்றியிருந்த நிலத்தையும் (ஆதி 23:19; 50:13), பகுதியையும் (23:17; 49:30) குறித்தது. இதுதான் பாலஸ்தீனத்தில் ஆபிரகாம் உரிமையாகக் கொண்ட முதல் இடம். இறைவனின் வாக்குறுதிகள் நிறைவேறுதலின் (காண்க. 12:7) தனிச்சிறப்பான முன் உருவமாகும். பிற்கால யூதப்பாரம்பரியப்படி, ஏதேன் தோட்டப்பாதை இக்குகைக்குள்தான் தொடங்கியது.

இஃது இருந்த இடமாகப் பாரம்பரியமாகச் சுட்டிக்காட்டப்படும் இடம் ஏரோது கட்டிய சுற்றுச் சுவரைக் கொண்டுள்ளது. எபிரோனில் இஃது இருந்த இடத்தில் முதலில் ஒரு பைசாந்தியக் கோவில் கட்டப் பட்டது. அதன் அழிவின்மேல் இப்போது ஒரு மாஸ்கு உள்ளது.

மக்பேனா (MACHBENAH)

இது யூதாவிலுள்ள ஒரு நகரம் (1 நாள் 2:49). இஃது இருந்த இடத்தை அறிவதற் கில்லை. இது கபோனாகவோ (யோசு 15:40), மெக்கோனாகவோ (நெகே 11:28) அடையாளம் காட்டப்படும்.

மக்ரோன் (MACRON - *நீண்ட தலையை யுடையவன்)*

தோலமியின் ஒரு பெயர். 2 மக் 10:12-இன்படி இவர் ஆறாம் தோலமி பிலோமேத்தேர் காலத்தில் சைப்ரஸ் நாட்டின் ஆற்றல் மிக்க ஆளுநராகத் திகழ்ந்தார். இவர் பிலோமேத்தேரைக் கைவிட்டு, நான்காம் அந்தியோக்கு எப்பிபானுக்குத் தன் ஆதரவை அளித்தார். இவர் யூதருக்குச் செய்யப்பட்ட அநியாயத்தை முன்னிட்டு அவர்களை நீதியாய் நடத்தும் போக்கைக் கொண்டிருந்தார் (2 மக் 10:12). இதைப் பற்றி அந்தியோக்கு யூபாத்தோரிடம் அரசனின் நண்பர்களால் ஒருவேளை லீசியாவால், குற்றம் சாட்டப்பட்டார். தன்னுடைய பதவியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாமையால், இவர் நஞ்சுண்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

சிலர் இந்த மக்ரோன் தோரிமேனின் மகனாக (1 மக் 3:38) இருக்கலாம் எனக் கருதுகின்றனர். ஆனால், இவன் யூதர்கள் மேல் பாதகமாக நடந்து கொண்டதால், இக்கருத்து ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது. இவன், யூதர்கள் கிரேக்க வழிபாட்டை மேற்கொள்ள வேண்டுமென ஆணை பிறப்பித்தான் (2 மக் 6:8).

மக்லா (MAHLAH - பலவீனமான, நோயுற்ற)

1. இவள் செலோபுகாது என்பவரின் ஐந்து புதல்விகளுள் ஒருத்தி. இவர்கள் மோசே வாயிலாக மேற்கு மனாசேயில் தங்கள் உரிமைச் சொத்தைப் பெற்றனர். ஏனெனில், செலோபுகாதுக்கு ஆண் குழந்தை இல்லை (எண் 26:33; 27:1; 36:11;யோசு 17:3). இவர்களின் பெயர்கள் மூலத்தில் கானானிய நகர்களின் பெயர்களாக இருந்ததாகத் தெரிகிறது. மக்லா இருந்த இடம் தெரியவில்லை.

2. இப்பெயர் மனாசே வழிவந்த அம்மோலக்கேத்துவின் புதல்வன் அல்லது புதல்வியைக் குறிக்கிறது (1 நாள் 7:18).

மக்லி (MAHLI - புத்திக்கூர்மையுள்ள, தந்திரமுள்ள)

1. லேவியரான இவர், மெராரியின் மகன். இவர் சகோதரர் மூசியாவார். மேலும், இப்பெயர் மக்லியர் குரு வம்சத்தைக் குறிக்கும் இனப்பெயரும் ஆகும் (யாத் 6:19; எண் 3:20.33; 26:58; 1 நாள் 6:19.29; 23:21; 24:26.28; எஸ் 8:18).

2. மூசியின் மகனான இந்த லேவியர் மெராரியின் பேரன் ஆவார் (1 நாள் 6:47; 23:23; 24:30).

மக்லோன் (MAHLON - நோயுள்ளவன்)

இவர் எலிமெலக்கு, நகோமி ஆகியவர்களின் இரண்டு புதல்வரில் ஒருவர். இவர்கள் குடும்பத்தோடு மோவாபு நாட்டிற்குச் சென்றனர். ஆங்கே மக்லோன், ரூத்து என்ற மோவாபியப் பெண்ணை மணந்தார். வாரிசு இல்லாமல் இறந்தார் (ரூத் 1:2.5; 4:9-10).

மக்னதபாய் (MACHNADEBAI)

இவர் அன்னிய மனைவியை விலக்கி விட வேண்டிய ஓர் இஸ்ராயேலர் ஆவார் (எஸ் 10:40).

மசாதா (MASADA - மலை அரண்)

சாக்கடலின் மேற்குக்கரையில் ஏன்-கேதிக்குத் தெற்கே 16 கி.மீ. தொலைவில் யாரும் எளிதில் நுழைய முடியாத குன்றின் மேலமைந்த கோட்டையே இந்த மசாதா. இஃது உரோமைக்கு எதிராகச் செய்த கிளர்ச்சியில் யூதர்களுக்கு மிகவும் பாதுகாப்பான கடைசி இடமாக கி.பி. 66 வரை இருந்தது. மிகவும் கடின முயற்சிக்குப் பிறகு கி.பி. 73-இல் உரோமையர்களால் பிடிக்கப்பட்டது. இக்கோட்டை, சுற்றியுள்ள தரைமட்டத்திலிருந்து 180 முதல் 250 மீட்டர் அளவுக்குச் செங்குத்தாக எழுந்த பாறையின்மேல் கட்டப்பட்டிருந்தது.

புதிய ஏற்பாட்டில் இக்கோட்டை எந்த வித முக்கியப்பங்கு வகிக்கவில்லையெனினும், வரலாற்று அறிஞரான யோசிப்பசு இதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார். யூதா மக்கபேயுவின் சகோதரனும், தலைமைக் குருவுமாகிய யோனத்தானால் இக்கோட்டை அரண் செய்யப்பட்டது. கி.மு. 42-இல் கிரிக்கானு ஆட்சிபுரிந்த போது, ஏலிக்ஸ் என்பவன் இதனைக் கைப்பற்றினான். இச்சமயம் ஏரோது சீரியாவில் இருந்தான். ஆனால், விரைவில் திரும்பி வந்த ஏரோது மீண்டும் அதைக் கைப்பற்றி தனது உறவினர்கள் தங்கும் மிகச் சிறந்த இடமாக்கினான். பின் தனது அரசுரிமையைத் தருமாறு வேண்டி உரோமை சென்று திரும்பினான். பிறகு இக்கோட்டையை மிகச் சிறந்த நினைவுச் சின்னமாகவும், தன் உறவினர்கள் குடும்பம் தங்க வசதி மிக்கதாகவும் மாற்றி அமைத்தான்.

இது கி.பி. 6-66-இல் உரோமை ஆளுநனின் கீழ் இருந்தது. கி.பி. 66-இல் ''சிக்காரி'' எனும் புரட்சி இயக்கத்தினர் இதைக் கைப்பற்றினர். கி.பி. 68-க்குள், வெஸ்பாசியனின் படை நான்கு இடங்

களில் உள்ள கோட்டைகளைத் தவிர பாலஸ்தீனத்திலுள்ள மற்றக் கோட்டை களை எல்லாம் அழித்து விட்டது. இந்த நான்கு கோட்டைகளில் ஒன்று மசாதா வாகும். கி.பி. 73-இல்தான் பிலேவியு சில்வா என்ற படைத்தலைவன் பெரும் முயற்சிக் குப்பின் மசாதாவைக் கைப்பற்றினான். ஆனால் அங்கு அவன் கண்ட காட்சி உரோமையரைத் திகைக்க வைத்தது. அங் கிருந்த 960 பேரும், (7 பெண்களும் ஆறு குழந்தைகளும் தவிர), அனைவரும் தற் கொலை செய்து கொண்டு இறந்து கிடந்தனர்.

இவ்விடத்தில் நடந்த தொல்பொருள் ஆய்வில் ஏரோது கட்டிய கட்டடங்களின் சிதைவுகள் காணப்பட்டன. இக்கோட்டை யில் பின்னர் பல கட்டடங்கள் எழுப்பப் பட்டாலும், ஒரு பைசாந்தியன் கோவிலின் சிதைவுகளும், மற்றொரு துறவற மடத்தின் சிதைவுகளுமே காணப்படுகின்றன. யோசிப்பசு கூறும் பல உண்மைகள் மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றினா லும், மசாதா ஏரோதின் மிக உறுதியான கோட்டை என்பதை யாரும் மறுக்க முடியாது.

மசு (MASH - விரிவாக்கப்பட்ட)

இவர் ஆராமின் மகன் (ஆதி 10:23). இவர் ஓர் அரமேயிக்கு இனத்தின் குலப் பெயர் மூதாதையர். இப்பெயர் ஒரு மலை யைக்கூட சுட்டலாம். அக்காதிய ''மாசு'' என இதைக் கொண்டால், இது லெப னோன் - எதிர்- லெபனோன் ஆக இருக்க லாம். ஆதி 10:23-க்கு இணையான 1 நாள் 1:17-இல் இது மெசேக்கு என்றுள்ளது.

மசுரேக்கா (MASREKAH - திராட்சைத் தோட்டம்)

ஏதோம் நாட்டின் அரசனான சம்லா என்பவனின் சொந்த ஊராகும் (ஆதி 36:36; 1 நாள் 1:47). இஃது, இஸ்மே பள்ளத்தாக் கின் அருகில் ''மாகான்'' என்ற இடத் துக்குத் தெற்கு - தென்மேற்கில் 32 கி.மீ. தொலைவில், நபத்தேய இடமான கிர்பெத் எத்-தெலாயே என்ற இடத்துக்கு அருகி லுள்ள இக்கால எபெல் ஏல்-முஸ்ராகுவாக இருக்கலாம். யூசேபியு ஏதோம் நாட்டின் வட பகுதியிலுள்ள கெபலேனேயில் இதற்கு இடம் குறிக்கிறார்.

மஸ்கில் (MASKIL)

சங்கீதங்களின் வகையைக் குறிக்கும் ஒரு சொல்லாகத் தெரிகிறது. இச்சொல் சங் 32; 42; 44-45; 52-55; 74; 78; 88-89; 142 ஆகியவற்றின் தலைப்பில் வருகிறது. இச் சொல்லுக்கு ''ஆற்றல் மிக்க பாடல்'', ''போதகப்பாடல்''. ''தியானம்'' போன்ற பல பொருள்கள் கூறப்படுகின்றன.

மஞ்சள் (SAFFRON)

சமையலுக்கும் மருந்துகளுக்கும் பயன் படும், காரத்தன்மையுடைய ஒரு செடியும் அதன் காய்ந்த கிழங்கும் ஆகும். உ.ச. 4:12-14-இல் மணப்பெண் ஒரு பூங்கா அல்லது தோட்டத்துக்கு ஒப்பாவாள் என்று சித்தரிக்கப்படுகிறாள். இப்பூங்காவில் மணங்கமழ் மரங்களும், செடி கொடிகளும் உண்டு. அவற்றுள் மஞ்சள் செடியும் ஒன்றாகும். ஊதா நிறப்பூவுடைய இச்செடி இப்போது பாலஸ்தீனத்தில் வளர் வதில்லை. விவிலியக் காலங்களில் வளர்ந் திருக்கலாம்.

மடமை, மூடத்தனம் (FOLLY)

ஞானத்திற்கு எதிரானதாக மடமையை விவிலியம் கருதுகிறது (எ.கா. பழ 10:1.14). ஞானத்தைப்போல் மடமையும், வாழ்க்கை முறை மற்றும் அறிவு ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பை அடிப்படை யாகக் கொண்டு விளக்கப்படுகிறது. ஆகவே, மடையன் ஒரு மூடன், விவேகமற்ற வன், இறைப்பற்றில்லாதவன் ஆவான் (பழ 1:22-32; சீரா 22:9-18). இவன் சட்டத் தையோ, கிறிஸ்துவையோ ஏற்றுக்கொள்வ தில்லை.

1. ஞானிகள், வாழ்க்கை அனுபவம் குறைந்த இளைஞனுக்குப் பல காரியங் களைப் பற்றி எச்சரிக்கின்றனர். வேசியின் சோதனைக்கு இடங்கொடேல் (பழ 7:5-27). இறைப்பற்றின்மை ஆட்தன்மைப்படுத்தப்

பட்ட அறிவில்லாத பெண்ணின் சொற்களில் மயங்கிவிடாதே (9:13-18). ஏனெனில், இவை இளைஞனை மதியீனச் செயல்களுக்கு இட்டுச்செல்லும். கட்டுப்பாடு, ஒழுங்கு முறைகளைப் புறக்கணிக்கும்போது என்ன நேரிடும் என்பதைத் தங்கள் சீடர்களுக்குக் காட்ட, ஞானிகள் அறிவிலியின் பண்புகளை எடுத்துக் கூறுகின்றனர் (சீரா 21:14-20). இறைவன் நீதியோடு செயலாற்றவில்லை அல்லது அவர் எதையும் கண்டு கொள்வதில்லை என்று மூடன் கருதுகிறான் (16:17-23). இதன் விளைவாக நீதிமானின் வாழ்க்கை மடமையானது என்றும் (ஞான 5:4), அவர்களுடைய மரணம் சரி செய்ய முடியாத பெருந்துன்பம் (3:2) மற்றும் இழிவானது (5:4) என்றும் மூடன் கருதுவான்.

2. கிறிஸ்துவில் பிரசன்னமாக உள்ள இறையரசை எதிர்கொள்ளும்போது, மடமை என்பது இறைவனது சட்டத்தை நிராகரிக்கும் இறைப்பற்றின்மையில் மட்டும் அன்றி, இறை அருளிலிருந்தே தன்னைப் புறம்பாக்கிக் கொள்ளும் ஒரு போலி ஞானத்திலும் அடங்கியுள்ளது. கிறிஸ்துவின் சொற்களைக் கேட்கவும், அவற்றைக் கடைப்பிடிக்கவும் அடிப்படையான மனமாற்றம் எல்லாருக்கும் அவசியமாகும். அப்படிச் செய்யத் தவறுவது ஒருவனை அறிவிலியாக்குகிறது (மத் 7:26). ஒருவன் தன் செல்வங்களில் ஆதரவு தேடுவது மடமையாகும் (லூக் 12:20). மணப்பெண்ணின் அறிவிலித் தோழியர்களைப் போன்று (மத் 25:1-13) இறைவனுடைய கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்காமையும் பரிசேயர்களைப் போன்று இறைவனது கட்டளைகளைத் திரித்துக் கூறுவதும் (23:17) மடமையாகும். நோய், பாவம் மற்றும் தீய ஆவிகளுக்கிடையேயுள்ள தொடர்பை ஏற்றுக்கொள்ளும் எவரும், கெரசேனர் என்ற இடத்துப் பைத்தியக் காரன் நிகழ்ச்சியுரையில் அன்பாக மாறும் மடமையின் அடையாளத்தைக் காண்போம். சுற்று வட்டாரத்தையெல்லாம் நடுநடுங்கச் செய்து கொண்டிருந்த அவன், தன்னையும் கூட்டிச் செல்லும்படி இயேசுவிடம் மன்றாடினான் (மத் 8:28-33 இணை). பவுலைப் பொருத்தமட்டும், சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவில் தம்மையே வெளிப்படுத்தும் இறைவனின் ஞானத்தையும், கிறிஸ்துவின் போதனையின் மடமையையும் விசுவசியாதிருப்பதே உண்மையான மடமையாகும் (1 கொரி 1:18-29). கிறிஸ்துவைப் பின்பற்றி (மாற் 3:21), இவ்வுலகின் நோக்கில் மடையனாகக் கருதப்படுவதற்கு விசுவாசி தன்னைக் கையளிக்க வேண்டும் (1 கொரி 3:18 தொ). பவுலும் இவ்வாறே மடையனாகக் கருதப்பட்டார் (1 கொரி 4:10; அ.ப. 26:24). சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் போதிக்கும் ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் இதே கதிதான் கிடைக்கும். ஏனெனில், அவர் போதிக்கும் மீட்பு, இறைவனுடைய மடமையில் விளைந்த கனியாகும்; இறைவனுடைய அன்பின் மடமையாகும். ஆனால், இதுவே மேலான ஞானமாகும் (1 கொரி 1:25).

மண ஒப்பந்தம் (BETROTHAL)

காண்க. திருமணம்.

மணங்கொள்ளா நோன்பு (CELIBACY)

இஃது ஒருவன் சுயமாக விரும்பி, சமயப்பொருத்தனையாகத் திருமணம் செய்து கொள்ளாமையாகும். பழங்கால இஸ்ராயேலில் இப்பழக்கம் மிகவும் அரிதாகவே இருந்து. காண்க. எஸ்ஸேனியர்கள்.

புதிய ஏற்பாட்டில், இயேசு, இந்நிலை ஒரு சிறப்பான கொடை என்கிறார். ஏனெனில், இது விண்ணரசை முன்னிட்டு ஏற்றுக்கொள்ளும் நிலையாகும். அருள் பெற்றவர் மட்டுமே இதை ஏற்றுக்கொள்ளலாம் (மத் 19:11-12). இந்நிலையைச் சுயமாக விரும்பி ஏற்கும் அர்ப்பணமாகக் கருதுகிறார் பவுல் (1 கொரி 7:6-7). பவுலும் இந்நிலையைக் கடைப்பிடித்தார்.

கீழையத்திருச்சபையில், நீசேயாப் பொதுச்சங்கம் (கி.பி. 325), குருக்களும் தியாக்கோன்களும் திருநிலைப்படுத்தப்படு

முன் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால், அதற்குப்பின் திருமணம் செய்யக் கூடாது என்றும், ஆயர்கள் திருணமாகாத வர்களாகவே இருக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டது. மேற்கத்திய திருச்சபை யில் எல்வீராச் சங்கம் (கி.பி. 306) குருக்கள் திருமணமாகாதவர்களாய் இருக்க வேண் டும் என்று கட்டளையிட்டது. ஆனால், பெரிய லியோ என்ற பாப்பு (440-461), திருநிலைப்படுத்தலுக்குப்பின் குருக்களின் திருமண முறிவைத் தடை செய்தார். பதினொன்றாம் நூற்றாண்டிலிருந்துதான், திருச்சபையில் குருக்களிடமிருந்து இந்தத் திருமணம் கொள்ளா நிறைவான கற் புடைமை நோன்பு கோரப்பட்டது.

மணமகள் (BRIDE)

இச்சொல், மண ஒப்பந்தம் செய்யப்பட்ட பெண்ணையோ, அண்மையில் திருமணம் செய்து கொண்ட பெண்ணையோ குறிக்கும்.

கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையி லுள்ள உறவை விளக்க மணப்பெண் என்ற உருவகம் பயன்பட்டுள்ளது. பழைய ஏற் பாட்டில், யூதா (எசா 54:5; காண்க. ஓசே 2:19) அல்லது எருசலேம் (எசே 16:8தொ) இறைவனோடு கொண்டுள்ள உறவு திரு மண அன்பு மொழிச் சொற்களில் விவரிக் கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில்தான் இந்த உருவகம் அதன் நிறைவான பொருளைப் பெறுகிறது. கிறிஸ்து மணமகனாவர். திருச் சபை மணமகள் ஆவாள். சிறப்பான முறையில் பவுல்,திருச்சபை கிறிஸ்துவோடு கொண்டுள்ள உறவை 2 கொரி 11:2-இலும் கணவன்-மனைவியரிடையேயுள்ள மனித அன்பின் பின்னணியில் எபே 5:25-இலும் விவரிக்கிறார். யோவானின் கருத்துப்படி விசுவாசிகள் வெட்டப்பட்ட செம்மறியான கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்யப்பட் டுள்ளனர் (திருவெளி 19:7-9). வரவிருக்கும் மறுவாழ்வில் புதிய எருசலேம் மண மகளுக்கு ஒப்பிடப்படுகிறது (21:2; 22:17).

மணமாகா ஆண் பெண் கலவி (FORNICATION)

இது திருமணமாகா ஆண்-பெண் கலவி யாகும்; திருமணப் பந்தத்திற்குப் புறம்பே செய்யப்படுவது. ஊனைச்சார்ந்த ஒழுக்கக் கேடாகக் கருதப்பட்டது. தமிழில் இது பரத்தமை, கெட்ட நடத்தை என்ற சொற் களால் மொழி பெயர்க்கப்படுகிறது (மத் 15:19; மாற் 7:21; காண்க. கலா 5:19; எபே 5:3; கொலோ 3:5). பழைய ஏற்பாட்டில் வேசித்தனத்தைக் குறிக்கவல்லது (ஆதி 38:24; உப 22:21). ஆகவே, சிலை வழி பாட்டைக் குறிக்கவும், இஸ்ராயேல், உடன் படிக்கையைக் கைவிடுவதை விவரிக்கவும் இக்கருத்து பயன்பட்டுள்ளது (எசா 23:17; எசே 16:26; காண்க. திருவெளி 17:2.4; 18:3; 19:2). புதிய ஏற்பாட்டில், திருமணத்துக்குப் புறம்பான எல்லாவிதமான பாலின உறவைக் குறிக்கவும் இச்சொல் பயன் பட்டுள்ளது.

மணல், சிறுகற்கள் (GRAVEL)

வஞ்சகத்தின் விளைவுகளைக் குறிக்க, இச்சொல் உருவகமாகப் பயன்படுகிறது (பழ 20:17). ஆண்டவரிடமிருந்து சீயோன் அடைந்த துன்பங்களை விவரிக்கவும் இச் சொல் பயன்படுகிறது (புல 3:16). இறைமக் களின் எண்ணிக்கையைக் குறிக்கவும் இச் சொல் பயன்படுகிறது (எசா 48:19).

மணவிலக்கு, விவாகரத்து (DIVORCE)

I. பழைய ஏற்பாடு: மணவிலக்கைப் பற்றிய பழைய ஏற்பாட்டுப் போதனை யைத் திருமண நிறுவனப் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டும். ஆதி 2:18-24-இன்படி, மனிதனிடமிருந்தே படைத்த பெண்ணை அவனுக்குத் துணை யாக இறைவன் அளித்தார். அதன்பின் ஆதியாகம ஆசிரியர் அவர்களுடைய அன் புறவை ஒருவன் - ஒருத்தி என்ற மண ஒருமைக்கு அடிப்படையாக அமைக்கிறார். இருவருக்குமிடையே முழு ஒன்றிப்பு வேண்டும்: ''இருவரும் ஒரே உடலாய் இருப்பர்'' (2:24).

மெசபொத்தாமியச் சட்டங்களோடு ஒப்பிடும்போது, எபிரேயச் சட்டம் மணவிலக்கைப்பற்றி தெளிவான சட்டங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆதியாகம நிகழ்ச்சியுரை மணவிலக்கு பற்றிய பகுதியைக் கொண்டிருக்கவில்லையாயினும், எபிரேயர்கள், மணவிலக்கு செய்து வந்தனர். இது, சட்டம் மணவிலக்கைக் கட்டுப்படுத்துவதிலிருந்து தெரிகிறது. ஒருவன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவளோடு கூடியபின், ''அவளது அருவருக்கத்தக்க செயலைக்கண்டு அவள் மேல் அவனுக்கு விருப்பமில்லாமல் போனால், அவன் முறிவுச்சீட்டு எழுதி, அவள் கையில் கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடுவான்'' (உப 24:1). மெசபொத்தாமியாவோடு கொண்டுள்ள ஒப்புமை மற்றும் பழைய ஏற்பாட்டுப் பொதுச்சூழ்நிலை ஆகியவற்றிலிருந்து மணவிலக்கு உரிமை கணவனுக்கு மட்டுமே உரியதாகத் தெரிகிறது. ஆனால், தன் மனைவி திருமணத்துக்குமுன் பாலின உறவு கொண்டிருந்ததாக, பொய்க்குற்றம் சாட்டியவனுக்கும் (22:13-19) திருமணத்துக்குமுன் அவளைக் கற்பளித்த கணவனுக்கும் இந்த மணவிலக்கு உரிமையில்லை (22:28-29). மணவிலக்கு பெற்ற பெண் வேறொருவனை மணந்து கொள்ளலாம். ஆனால், இந்த இரண்டாம் திருமணம், கணவனது மரணத்தாலோ மணவிலக்காலோ முடிவுக்கு வந்தால், அவள் தன் முதல் கணவனை மணம் செய்ய முடியாது (24:104). மணவிலக்கு பெற்ற பெண் ஒரு குருவைத் திருமணம் செய்ய முடியாது (லேவி 21:4).

மோசே சட்டம் மணவிலக்கை அனுமதித்தாலும், ''அருவருக்கத்தக்க செயல்'' என்ற சொற்றொடரின் பொருள் யூத பிரிவுகளுக்குள் வேறுபட்டது. சம்மாயின் இராபிகளின் குழுவினர் இச்சொற்றொடர் கற்பின்மை அல்லது விபசாரத்தைக் குறிப்பதாகப் பொருள் கொண்டனர். இவர்கள் மனைவி பாலின முறையில் தன் கணவனுக்குப் பிரமாணிக்கமாய் இல்லாதபோது மட்டும் தான் மணவிலக்கை அனுமதித்தனர். இதற்கு மாறாக, இல்லேலின் குழுவினர், இச்சொற்றொடர் கணவனுக்கு விருப்பமில்லாத எந்தவொரு குறை அல்லது தவறைக் குறிப்பதாகக் கருதினர். இவர்கள், மனைவி சரியாகச் சமைக்கவில்லை போன்ற சிறிய குற்றங்களுக்காகவும் மனைவியை விலக்கிவிட அனுமதித்தனர். ஆகவே, ''அருவருக்கத்தக்க செயல்'' என்ற சொற்றொடரின் பொருள் தெளிவாக இல்லை. இது விபசாரத்தைக் குறிக்க முடியாது. ஏனெனில், இக்குற்றம் மரணத்தால் தண்டிக்கப்பட வேண்டியது (உப 22:22). ஆகவே, விபசாரம் மணவிலக்குக்கு ஒரு காரணமாய் இருக்க முடியாது.

எரே 3:1-8 மோசே சட்டத்தை எதிரொலிக்கிறது. இது, மக்களிடையே பரவலாக இருந்த ஒரு பழக்கத்தைக் கண்டனம் செய்து அதைக்கட்டுப்படுத்துகிறது. இந்தப் பழக்கம் இரண்டாம் கணவனால் விலக்கிவைக்கப்பட்ட பெண்ணை முதல் கணவன் மணம் செய்து கொள்வதாகும். கானானியத் தேவதைகளோடு இஸ்ராயேலர் கொண்ட ஆன்மீக விபசாரத்திற்கு மணவிலக்கு என்ற உருவகத்தைச் சாற்றிக்கூறி, இறைவன் தமது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு ஆன்மீக முறிவுச்சீட்டு கொடுத்துவிட்டதாக எரேமியா குறிப்பிடுகிறார் (ஆனால் பிரமாணிக்கமற்ற இஸ்ராயேலுக்கு இறைவன் முறிவுச்சீட்டு கொடுக்கவில்லை என்று எசா 50:1 கூறுவதை நோக்குக). மனித சட்டத்திற்கு மாறாக, இஸ்ராயேலின் ஆன்மீக மணவிலக்கு மற்றும் கானானுடன் செய்து கொண்ட இரண்டாம் மணத்தின் விளைவுகளை அழித்து விட விரும்பினால், இஸ்ராயேல் உண்மையாக மனம்வருந்தி அதன் உடன்படிக்கை இறைவனிடம் திரும்பி வரவேண்டும் (எரே 3:11-14).

மணவிலக்கு வாய்பாடு ஓசே 2:4-இல் கொடுக்கப்படுகிறது: ''அவள் எனக்கு மனைவியுமல்லள், நான் அவளுக்குக் கணவனுமல்லன்''. மோசே சட்டம் மணவிலக்கு உரிமையைக் கணவனுக்கு மட்டும் அளித்தது. ஆனால் இராபிகளின் விளக்கங்கள், கணவன் தொழுநோயால் பிடிக்கப்பட்

டிருப்பது போன்ற சில குறிப்பிட்ட சூழ் நிலையில் மனைவிக்கும் மணவிலக்கு உரிமை அளித்தன. ஆயினும் பிற்காலத்தி லும், மணவிலக்கு கணவனுக்கு மட்டும் உரிய சலுகையாக இருந்தது.

நாடு கடத்தப்பட்டபின், மணவிலக்குக்கு எதிர்ப்பு இன்னும் வலுவாயிற்று. ஒருவன் தன் இளமையில் மணந்த மனவியை விலக்கி வைப்பதை மலாக்கி கண்டிக்கிறார் (மலா 2:14-16). அவ்விதமே சீராக்கும் கண்டனம் செய்கிறார் (சீரா 7:26). ஆனால், இவர் தீய பெண்ணை மணவிலக்கு செய்யு மாறு ஆலோசனை கூறுகிறார் (25:26). மணவிலக்கை மலாக்கி கண்டனம் செய் வது யூதர்களுக்கும் பிற மதத்தினருக்கும் இடையிலான திருமணம் பற்றிய நெகேமி யாவின் சீர்திருத்தத்தையும் (நெகே 13:23-27), யூதர்கள் அன்னிய மனைவியரை விலக்கிவிட வேண்டும் என்று எஸ்ரா வலியுறுத்தியதையும் (எஸ் 9-10) பிரதி பலிக்கிறது.

II. புதிய ஏற்பாடு

1. நற்செய்திகள்: ஒத்தமை நற்செய்திகள் மூன்றும் மணவிலக்கு பற்றிய இயேசுவின் கூற்றைக் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு நற்செய்தியாளரும் இயேசுவின் சொற் களைத் தனக்கே உரிய வடிவில் கொண்டுள்ளனர்.

அ). மாற்கு (10:3-12): காலத்தால் முந்திய இந்த நற்செய்தியிலிருந்து, இயேசு திரு மணம் மற்றும் மணவிலக்கு பற்றி கடுமை யான கருத்துக் கொண்டிருந்ததாகத் தெரி கிறது. அவர் மணவிலக்கையும், மண விலக்குச் சான்றிதழைக் கொடுப்பதையும் ஏற்றுக்கொள்கிறார். ஏனெனில், இஸ்ராயே லின் ''கடின உள்ளத்தின் பொருட்டே'' சட்டம் எழுதி வைக்கப்பட்டது என்பதை உணர்ந்திருந்தார் (ஆனால் படைப்புச் கட் டம் இதை அனுமதிக்கவில்லை). ஆயினும் குற்றத்தைப் பொருட்படுத்தாது, மணவிலக் கும் மறுமணமும் விபசாரத்திற்கு ஒப்பாய் இருப்பதால், மணவிலக்கை உற்சாகப் படுத்த முடியாது என்று இயேசு உறுதி யாகக் கூறுகிறார் (10:11-12). இவ்வாறு இயேசு, ஏரோது தன் சகோதரனின் மனை வியை மணந்து கொண்டதைக் கண்டனம் செய்கிறார். திருமுழுக்கு யோவான் ஏரோதைத் துணிவாக எதிர்த்ததை மறைமுக மாக ஆதரிக்கிறார்.

ஆ. லூக்கா: இந்நற்செய்தி மத்தேயு வோடு கொண்டிருப்பதைவிட மாற்கோடு நெருங்கிய ஒற்றுமை கொண்டுள்ளது. லூக்கா, திருமணம் மற்றும் மணவிலக்கு பற்றிய இயேசுவின் கூற்றை வெறுமனே தருகிறது. இங்கு, எந்த மணவிலக்கும், அது சட்டத்தால் அனுமதிக்கப்பட்டாலும், விப சாரமாகும் என்று கூறி இயேசு மோசே சட்டத்தைக் கூர்மைப்படுத்துகிறார் (லூக் 16:18).

இ) மத்தேயு(5:31-32; 19:3-9): இதில் மணவிலக்கு பற்றி இயேசு ஓரளவு எளிதில் இசைவிணக்கமுடையவராகத் தோன்று கிறார். மத்தேயு இயேசுவின் மூன்று கூற்றுக் களைத் தருகிறார். 1) திருமணம் ஒரு படைப்புக் கட்டளையாகும். இச்சட்டம் முறிப்பை அனுமதிக்கவில்லை (மத் 19:4-6). 2) இஸ்ராயேலரின் ''கடின உள்ளத் தின் பொருட்டே'' மோசே சட்டம் மண விலக்கை அனுமதித்தது (19:8). 3) மண விலக்குக்குப் பரத்தமை காரணமாயிருந் தால் அன்றி,மணவிலக்கு விபசாரத்திற்குச் சமமானதாகும் (19:9). இந்த மூன்று கூற்று களுக்கிடையேயுள்ள இணைப்பு பற்றி அறிஞர்களுக்கிடையே கருத்தொற்றுமை யில்லை. இயேசு எவ்வகை மணவிலக்கை யும் அனுமதிக்கவில்லை என்று கூறுவர் சிலர் (ஏனெனில் முதல் கூற்று மூன்றாவது கூற்றை வெறுமையாக்குகிறது). வேறு சிலர், சம்மாயின் குழுவினரைப் போன்று, மத்தேயுவின் விவரிப்பு விதிவிலக்குக்கு இடமளிக்கிறது என்பர் (இந்த விதி விலக்கு, திருமணத்திற்குப்பின் செய்யப் பட்ட பாலினப் பிரமாணிக்கமின்மை அல் லது பரத்தமையாகும்). ஆகவே, மத்தேயு வின் விவரிப்பு மணவிலக்கை நேர்மை யெனக் காட்டுகிறது என்பர் (காண்க. 5:31-32).

மத்தேயுவில் வரும் இரு பகுதிகளும் (5:31-32; 19:3-9) சமமாகவும் தெளிவாகவும் இல்லை. விளக்கவுரையாளர்களால் பெரிதும் தர்க்கிக்கப்பட்டுள்ளன. மத் 5:32-இல், மாற்கு மற்றும் லூக்காவில் வரும் கூற்று, ''எவரும் தம் மனைவியைப் பரத்தமைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவும் விலக்கிவிடக்கூடாது'' என்று வரையறை செய்யப்படுகிறது. மாற் 10:3-12-க்கு இணையான மத் 19:3-9 என்ற பகுதியும் இதே வரையறையைக் கொண்டுள்ளது.

மத்தேயுவில் பரிசேயர் கேட்ட ''எக்காரணத்திற்காகவாவது ஒருவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?'' என்ற கேள்வி, முன் கூறப்பட்ட இல்லேல் மற்றும் சம்மாயைச் சேர்ந்த இராபிகளின் குழுக்களிடையே நிலவிய தர்க்கத்தைச் சுட்டுவதாக அமைகிறது. தமது போதகத்தின் விவிலிய அடிப்படையாக இயேசு ஆதி 1:27; 2:24-ஐ எடுத்துக் கூறுகிறார்.

மத்தேயுவில் வரும் வாசகம் தொடக்கத் திருச்சபைச் சமூகத்தில் நிலவிய வேறுபட்ட பாரம்பரியத்தைக் கொடுக்கிறது என்று விளக்கவுரையாளர் பலர் கருதுவர். தொடக்கக்காலத்திலிருந்து இந்தப் பாரம்பரியம் கிரேக்கத் திருச்சபையில் இருந்து வந்துள்ளது. மத்தேயுவின் வாசகத்தைவிட மாற்கு மற்றும் லூக்காவின் வாசகம் மூலப்படிவமாகும் என்பதைச் சிலரே ஐயுறுவர். போன்சிர்வென் என்ற அறிஞர் ஒன்றைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். ''கெட்ட நடத்தைகள்'' என்று மொழிபெயர்க்கப்படும் ''போர்னேயா'' (Porneia) என்ற கிரேக்கச் சொல் சாதாரணமாய்ப் பரத்தமையைக் குறிக்கப் பயன்படுவதில்லை. இச்சொல் வைப்பாட்டியோடு கொள்ளும் தகாத உறவைக் குறிப்பதாகும். இதைத் தர்க்கத்திலிருந்து இயேசு நீக்குகிறார். இது தோற்றத்திற்குத்தான் திருமணமாகும்; உண்மையான திருமணமன்று. மாற்கு மற்றும் லூக்காவில் வரும் வாசக வடிவு, அறியக்கூடிய எந்த யூத விளக்கத்திற்கும் முரணாக உள்ளது. இஃது இயேசுவின் ஒழுக்க போதனையின் மிகப் புரட்சிகரமான கூறுகளில் ஒன்றாகும்.

2. பவுல்: 1 கொரி 7-இல், பவுல் மணமாகாத தனிமை வாழ்வை விரும்பினாலும், திருமணத்தையும் அதன் முறிவுபடாத் தன்மையையும் ஏற்றுக் கொள்கிறார். உரோமைச் சட்டத்தின்கீழ் மனைவியரும் மணவிலக்கு செய்ய அனுமதிக்கப்பட்டாலும் கணவனோ மனைவியோ மணவிலக்குச் செய்யலாகாது (7:10-11). மனைவி கணவனை மணவிலக்குச் செய்தாலும், அவள் தன் கணவனுடன் ஒப்புரவாக முடியவில்லையென்றால், அவள் தனித்து வாழவேண்டும் (7:11). இவ்வாறு பவுலும் மணவிலக்கு விபசாரத்திற்குச் சமமானது என்று கருதுகிறார். இப்போதகம் பவுலினுடையதன்று, ஆண்டவருடையதே ஆகும்.

கொரிந்திய விசுவாசிகளான பெண்களுக்கும், விசுவசியாதவர்களுக்குமிடையிலான திருமணம் ஒரு சிறப்பான பிரச்சனையாகும். விசுவசியாத கணவன் அவளோடு கூடிவாழ உடன்பட்டால், அவள் கணவனைக் கைவிடலாகாது. அவள் தன் நன்மாதிரியால் அவனை மீட்கும் நம்பிக்கை உள்ளது. விசுவாசியல்லாதவர் பிரிந்துபோனால் போகட்டும். அப்போது விசுவாசி திருமணப்பிணைப்பால் கட்டுப்பட்டவர் அல்லர் (7:12-16). இப்போதகம் பவுலின் பரிந்துரையாகும், ஆண்டவருடையதன்று.

மணி (BELL)

1. இதைக் குறிக்கும் எபிரேயச் சொல்லின் பொருள், 'முழக்குவது', 'பறையடிப்பது' ஆகும். தலைமைக் குருவின் ஆடையில் பொருத்தப்பட்டிருந்த ஒரு பொருள் (யாத் 28:33-34; 39:25-26; சீரா 45:9). இதற்காகச் செய்யப்பட்ட மணிகள் பொன்னால் ஆனவை. இவையும், மாதுளங்கனிகளும் ஒன்றுவிட்டு ஒன்றாக தலைமைக் குருவின் ஆடையில் பொருத்தப்பட்டன. ''ஒரு பொன்மணியும், ஒரு மாதுளம்பழமும், மறுபடி ஒரு பொன்மணியும் ஒரு மாதுளம் பழமுமாக இருக்க வேண்டும்'' (யாத் 28:34). இந்த மணிகளுடைய குறிப்பிட்ட நோக்கம் வேறுபடுகின்றது (யாத்

28:35; சீரா 45:9). மணிகள் இடியையும் மாதுளங்கனிகள் மின்னலையும் குறித்தன என்று யோசிப்பசு கூறுகிறார்.

2. குதிரைகளுக்கு அணிவிக்கப்பட்ட ஒரு அழகு ஆபரணம். இதைக்குறிக்கும் எபிரேயச் சொல்லின் சொற் பொருள், 'கிலுகிலுப்பது' என்பதாகும் (செக் 14:20).

மணி, நேரம் (HOUR)

இரவைக் ''காவல் நேரங்கள்'' என்று பிரிப்பதுபோல், சூரிய உதயமுதல் அது மறையும் வரையுள்ள பகலைப் பிரிக்கும் முறையாகும். நாடு கடத்தப்பட்டு, திரும்பிய காலத்தில் நிழற்கடிகையின் உதவியால் எபிரேயர் பகலைப் பன்னிரண்டு சம பாகமாகப் பிரித்தனர் (யோவா 11:9). இச்சம பாகத்தின் நீளமும் பருவ காலத்திற்கேற்ப வேறுபடும். ஒரு குறிப்பிட்ட மணிநேரம் பற்றிய குறிப்புகளைத் தோராயமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். சான்றாக, மூன்றாம் மணி (காலை 9-ஆம் மணி) (மத் 20:3; மாற் 15:25; அ.ப. 2:15); 6-ஆம் மணி (மதியம்) (மத் 20:5; 27:45; மாற் 15:33); 9-ஆம் மணி (பிற்பகல் 3-ஆம் மணி) (மத் 20:5; 27:45-46; மாற் 15:33-34; அ.ப. 3:1; 10:30). பதினோராவது மணி பகலின் கடைசிப்பகுதியையம், மறைந்து போகும் வாய்ப்பையும் குறிக்கிறது (மத் 20:6.9; காண்க. 1 யோவா 2:18).

மேலும் நேரம் என்ற சொல் ஒரு முக்கிய பொழுதையோ, குறிப்பிட்ட காலத்தையோ குறிக்கலாம் (தானி 3:6.15; மத் 8:13; காண்க. எரே 46:17; லூக் 22:53; யோவா 5:28; உரோ 13:11; திருவெளி 3:10). நற்செய்திகளில், இவ்விதம் குறிக்கும் வழக்கு பெரும்பாலும் இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு ஆகிய நிகழ்ச்சிகளைக் குறிக்கிறது (மத் 25:13; மாற் 14:35.41; யோவா 2:4; 7:30;17:1).

மணிக்கல், கடல் வண்ணக்கல் (JASPER)

இது பச்சைநிற அல்லது பழுப்பு நிறமுடைய மணிக்கல்லாகும். இது மூன்று எபிரேய, கிரேக்கச் சொற்களை விவரிக்கிறது.

இது தலைமைக்குருவின் தீர்ப்பு கூறும் மார்புப் பட்டையில் பதிக்கப்பட்ட கற்களில் ஒன்று (யாத் 28:20). தீர்நாட்டு அரசனின் ஆடையை அழகுபடுத்திய கற்களில் ஒன்று (எசே 28:13). மேலும், இஃது, அரியணை விவரிப்பிலும் (திருவெளி 4:3), கடவுளுடைய மாட்சிமை விவரிப்பிலும் (21:11), நகரின் மதில் விவரிப்பிலும் (21:18) பயன்பட்டுள்ளது. புதிய எருசலேமின் அடிக்கற்களில் இது முதலாவதாகும் (21:19).

மணிமுடி (CROWN)

உயர்பதவியில் உள்ளவர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் அவர்களுடைய உயர்வைக் குறிக்க அளிக்கப்படும் தலை அணியாகும்.

யாத் 29:6-இன்படி தலைமைக்குரு திருநிலைப்படுத்தும் சடங்கில், அவர் தலைமேல் தலைப்பாகையை வைத்து, அதன் மேல் புனித முடியையும் வைக்க வேண்டும். இந்த மணிமுடி பசும்பொன்னால் செய்யப்பட்டு அதன்மேல் ''ஆண்டவருக்கு அர்ப்பணம்'' என்று முத்திரைபோல் பொறிக்கப்பட்டிருக்கும். அஃது ஒரு நீல நாடாவால் தலைப்பாகை மேல் இணைத்துக் கட்டப்பட்டு, தலைப்பாகையின் முன்புறம் நிற்கும் (28:37). இந்தப் புனித மணிமுடி, தலைமைக் குருவை மக்களின் புனிதப் பிரதிநிதியாக அடையாளம் காட்டியது. மக்களின் புனிதப் படையல்கள் ஆகியவற்றிலுள்ள குறைபாடுகளைத் தலைமைக் குரு சுமந்து கொள்ளவும், இதனால் யாவும் ஆண்டவர் திருமுன் ஏற்கப்பெறவும், மணிமுடி எப்போதும் தலைமைக் குருவின் நெற்றியின் மேல் நிற்கும் (28:38).

அரசர்கள் அணியும் முடி தங்கத்தால் ஆனது (சங் 21:3; எசே 2:26). இந்த முடியிலே விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருந்தன (செக் 9:16; 2 சாமு 12:30; திருவெளி 21:1). இந்த முடி அரசனின் அதிகாரம் மற்றும் மதிப்பின் அடையாளமாகும். அரசன் தன் அரச அரியணையில்

அமரும்போதும் போர் புரியச் செல்லும் போதும் இதை அணிந்திருப்பான் (2 சாமு 1:10). சங் 21:3-இல் இறைவன் அரசன் தலையில் பசும்பொன் முடி சூட்டுகிறார். சங் 132:18-இல், தாவீதின் மீது அவரது மணிமுடி ஒளிவீசும்போது, அவருடைய எதிரிகள் இகழ்ச்சி எனும் உடையை உடுத்திக்கொள்வர்.

முதுமை மணிமுடிக்கு ஒப்பிடப்படுகிறது. அது மதிப்பிற்குரியதும் நேர்மையான வாழ்வின் பயனும் ஆகும் (பழ 16:31). சாலமோனின் திருமணத்தில், அவரது அன்னை அவருக்கு அணிவித்த மணிமுடி (உ.ச. 3:11), மேன்மையின் மாலையாகவும், பதவியைக் குறிக்கும் மகுடமாகவும் இருக்கலாம் (காண்க. எசே 23:42). தலைமைக் குரு யோசுவாவின் தலையிலே சூட்டப்படும் முடி அவரது அதிகாரத்தை அடையாளமாக உணர்த்துகிறது (செக் 6:11).

பொதுவாக மணிமுடி அரசிகளாலும் (எரே 13:18),பெருங்குடி மக்களாலும் (எஸ் 8:16), மணமகனாலும் (உ.ச. 3:11) அணியப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் ''ஸ்தேவானோஸ்'' என்ற கிரேக்கச் சொல் விளையாட்டு வெற்றி வீரனுக்கு அளிக்கப்படும் வெற்றி வாகையையோ, மணிமுடியையோ குறிக்கலாம். 1 கொரி 9:25-இல் பவுல் முன்னதைக் குறிக்கிறார். பந்தயத்தில் போட்டியிடுபவர்கள் எல்லாரும் தங்களை எல்லாவகையிலும் ஒடுக்குகிறார்கள். அவர்கள் அழிவுறும் வெற்றி வாகையைப் பெறுவதற்காக இப்படிச் செய்கிறார்கள். விசுவாசிகளோ அழியாத வெற்றி வாகையை அடைவதற்காக இப்படிச் செய்கிறார்கள். தான் எதிர்பார்க்கும், நல்வாழ்வின் பரிசான வெற்றி வாகையைப் பற்றி பவுல் பேசுகிறார். இதை அவருக்கு மட்டுமன்று, ஆண்டவரது பிரசன்னத்தை ஆர்வத்தோடு எதிர்பார்க்கும் அனைவருக்கும் ஆண்டவர் இறுதி நாளிலே அருள்வார் (2 திமொ 4:8). ஆண்டவரது வருகையின்போது, தெசலோனிக்கேயர்கள் பவுலுக்கு வெற்றிவாகையாக இருப்பர் (1 தெச 2:19). தலைமை ஆயர் தோன்றும் போது, பிரமாணிக்கமுள்ள மூப்பர்கள் மகிமையின் வாடாத வெற்றிவாகை சூட்டப் பெறுவர் (1 பேதுரு 5:4). சோதனைகளை மனவுறுதியோடு தாங்குபவன், இறைவன் வாக்களித்த வாழ்வை வெற்றிவாகையாகப் பெறுவான் (யாக் 1:12; திருவெளி 2:10). பிலதெல்பியாத் திருச்சபை, அதன் அதிகாரத்தின் அடையாளமான வெற்றி வாகையை எவனும் பறித்துக் கொள்ளாத படிக்கு உண்மையான போதகத்தில் நிலைத்திருக்கும்படி எச்சரிக்கப்படுகிறது. ஏனெனில், அது பெருந்துன்பம் வந்து விழும் நேரத்தில் அதைக் காப்பாற்றும் (திருவெளி 3:11).

இறைவனுடைய அரியணையைச் சூழ்ந்திருக்கும் மூப்பர்கள் தங்கள் தலையில் சூடியிருக்கும் பொன்முடியை (4:4), அரியணை முன் வைத்தனர் (4:10). விண்ணகத்தில் அரியதோர் அறிகுறியாகத் தோன்றிய பெண் தன் தலைமீது பன்னிரு விண்மீன்களை முடியாகச் சூடியிருந்தாள் (12:1). இதற்கு மாறான வேறொரு அறிகுறியான பறவை நாகம் தன் ஏழு தலைகளிலே ஏழு முடிகளைக் கொண்டிருந்தது (12:3). கடலிலிருந்து வெளிவந்த ஏழு தலைகளையும், பத்துக்கொம்புகளையும் கொண்ட விலங்கு தன் கொம்புகளில் பத்து முடிகளைக் கொண்டிருந்தது (13:1). வெண் குதிரையில் ஏறி வந்தவர் தலையில் மகுடங்கள் பல சூடியிருந்தார் (19:1-2). ஏனெனில், அவர் எல்லா அரசர்கள் மேலும் அதிகாரம் கொண்டிருந்தார்.

மண்கல உடைசல் (POTSHERD)

இது மட்கலத்தின் உடைந்த ஒரு துண்டாகும் (யோபு 41:30). மண்கல உடைசல் அல்லது ஓட்டாஞ்சில் என்பது உலர்ந்த, வெறுமையான, காய்ந்த நிலைக்கு ஓர் அடையாளமாகும் (சங் 22:15). இஃது எதற்குமே பயன்படாத ஒரு நிலைக்கு அடையாளமாகும் (எசா 45:9).

இஸ்ராயேல் மக்கள் மீது கடவுள் வழங்கப் போகும் நியாயத்தீர்ப்பு, எதற்கும் பயன்படாத அளவுக்குக் கொடுமையாக உடைக்கப்படும் மட்பாண்டத்திற்கு ஒப் பிடப்படுகிறது (எசா 30:14).

எருசலேமில் இன்னோம் பள்ளத்தாக் கிற்கு அருகில் ஒரு நகர வாயில் உள்ளது. இதன் பெயர் மண்கல உடைசல் வாயில் என்பதாகும் (எரே 19:2). இங்கிருந்துதான் குயவர்கள் தங்களின் வீணான மண் கலங் களை நகர மதில்களுக்கு அப்பால் தூக்கி எறிவர்.

யோபு சாம்பல் மேட்டில் அமர்ந்து தன் புண்களைச் சொறிந்து கொள்ள இந்த ஓட்டாஞ்சில்லையே பயன்படுத்தினார் (யோபு 2:8).

எசே 23:34-இல் எருசலேம் குடிக்கவிருக் கும் சமாரியாவின் கிண்ணத்தின் உடைந்த சில் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஆனால், வாசகம் தெளிவாக இல்லை.

புராணத்தில் வரும் கவசமிடப்பட்ட வேதாளத்தின் கீழ்ப்பகுதி ஓட்டாஞ்சில் போலக் கூர்மையாக இருப்பதாகக் கூறப் பட்டுள்ளது (யோபு 41:30).

மண்கல உடைசல் வாயில் (POTSHERD GATE)

எருசலேமின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்த ஒரு வாயில் இது. இந்த வாயில் இன்னோம் பள்ளத்தாக்குக்கும், அங்கிருந்து குயவன் நிலத்துக்கும் இட்டுச்செல்கிறது (எரே 19:2). சிலர் இதைக் ''குப்பைமேட்டு'' வாயிலாக அடையாளம் காட்டுகின்றனர்.

மண்கலத் தொழில் (POTTERY)

மண்பாண்டம்தான் மனிதன் முதன் முத லில் பல பொருட்களைச் சேர்த்துத் தயா ரித்த முதல் பொருளாகும். இது குயவன் சக்கரத்தில் அமைப்புக் கொடுக்கப்பட்டு, இக்களிமண் அமைப்பு தீயில் ஓர் குறிப் பிட்ட வெப்பநிலையில் சுடப்படுகிறது. இவ்வாறு சுடப்படும்போது அதன் வேதி யல் கூறுகள் அதன் இயல்புகள் முதலியன மாறுபடுகின்றன. இன்றும் இத்தொழில் வளர்ந்த நாடுகளின் ஓர் முக்கிய தொழிலாகும்.

விவிலியத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சி கள் நடந்த காலத்தில் மண்பாண்டங்கள் நல்ல தரமான சிவப்புக் களிமண்ணால் செய்யப்பட்டன. இவ்வாறு உருவாக்கப் பட்ட கலங்கள் குயவன் வெளியில் உலர்த் தப்பட்டு, பின் கழுவப்படும். இக்குயவன் நிலத்திலிருந்துதான் கலங்கள் செய்ய களி மண்ணை எடுப்பர். குயவன் நல்ல தரமான களிமண்ணைத் தேடிக் கண்டுபிடிக்க வேண் டும். பின், அதைக் கழுவி, தேவையான அளவு நீரைச் சேர்க்க வேண்டும். இதற்குத் தனித் திறமை வேண்டும் (எசா 41:25). ஆனால், செங்கல் செய்வது யார் வேண்டு மானாலும் செய்யலாம் (நாகூ 3:14).

குயவன் ஒரு களிமண் உருண்டையை எடுத்துச் சக்கரத்தின் மேல் வைத்து வேக மாகச் சுற்றுவான். சில நேரங்களில் சுற்று வதற்கு ஓர் உதவியாளன் இருப்பான். அச் சமயத்தில் குயவன் தன் கையால் பானையை உருவாக்குகிறான் (எரே 18:3; சீரா 38:29-30). நன்றாகப் பதப்பட்ட களி மண்ணாக இருந்தால் நல்ல சீரான அமைப்பு கிடைக்கும். உலர்த்திய பின், இது சூளையில் இடப்பட்டுச் சுடப்படும்.

மண்பாண்டம் தயாரிக்கும் மற்றொரு முறையின்படி முன்பே செய்யப்பட்ட அச் சின்மேல் களிமண் பூசப்படும். இவ்வாறு அந்த அச்சின் உருவத்தை அக்களிமண் உருண்டை பெற்றவுடன் அதைச் சுட்டு பானையாக்குவர் (யோபு 38:14). கானானி யர்கள் இம்முறையையே கையாண்டனர். இவ்வாறுதான் புதிய ஏற்பாட்டுக் காலத்து விளக்குகள் செய்யப்பட்டன.

மூன்றாவது முறைப்படி குயவன் தன் விருப்பத்தின்படி கையால் உருவத்தைக் களிமண் கொண்டு அமைப்பான். ஆனால், இஃது அதிகமாக இஸ்ராயேலில் பயன் படுத்தப்படவில்லை. சில உருவங்கள், பொம்மைகள், அடுப்புகள், பழமையான பாத்திரங்கள் போன்றவை இவ்வாறு கையால் குயவன் விருப்பப்படி செய்யப் பட்டன.

இவ்வாறு செய்யப்பட்ட கலங்களைச் சூளையில் இட்டு எரிப்பதற்குத் தனித் திறமை தேவை. ஏனெனில், வெவ்வேறு வகைக் களிமண்ணுக்கு வெவ்வேறு நிலை வெப்பமும், அதன் தரத்திற்குத் தக்கவாறு தகுந்த வெப்பமும் தேவைப்படுகிறது. எந்த நிலை வெப்பத்தில் எரிப்பது என்பது குயவனின் தொழில் இரகசியம். இதிலும் சில வேளைகளில் மண்பாண்டங்கள் சரி யாக வருவதில்லை. இவ்வாறு வீணான மண்பாண்டங்கள் விற்கப்படும் அல்லது தூக்கி எறியப்படும்.

இஸ்ராயேல் மக்கள் தங்கள் அலங்காரங் களுக்குத் தோல் போன்றவற்றைப் பயன் படுத்தவில்லை. மாறாக, தங்கள் அரச இருக்கையை அலங்கரிக்க வர்ணங்களைப் பயன்படுத்தினர். அரசு இஸ்ராயேல், யூதா எனப் பிரிந்தபின் இத்தகைய அலங்காரங் கள் வளர்க்கப்பட்டன.

முதன் முதலில் மண்பாண்டங்கள் புதிய கற்காலத்திய எரிகோ கண்டுபிடிப்புகளில் தான் காணப்பட்டன. பொதுவாக, தானி யம் போன்றவற்றைச் சேமித்து வைக்கவே இது பயன்படுத்தப்பட்டது. ஏனெனில், உலோக, சாக்கு, மரக் கொள்கலன்கள் அக்காலத்தில் மிக விலை உயர்ந்தவை. குயவன் வீடு என்பது அவன் மண்பாண்டம் செய்யும் இடத்தைக் குறிக்கும். இம்மண் பாண்டங்கள் பொற்கொல்லனுக்கும் மற்றத் தொழிலாளிகளுக்கும் பயன்பட்டன. ஏனெ னில், மண்பாண்டங்கள் அதிக வெப்பத் தைத் தாங்கும் தன்மையுடையன.

கானானியக் கலாச்சாரத்தில் அஸ்தார்தே எனப்படும் தேவதையின் உருவம் இத்த கைய களிமண்ணால்தான் செய்யப்பட்டது (ஆதி 31:19-55). ஆனால் பாகாலின் உருவம் உலோகத்தால் ஆனது. கானானியர்களின் பலிபீடங்கள் பாம்பு போன்ற உருவங் களால் அணி செய்யப்பட்டிருந்தன.

கண்ணாடி கிடைக்கும் முக்கிய இடங் களில் பாலஸ்தீனமும் ஒன்று (யோபு 28:17). இது தங்கத்தைபோல் விலையுயர்ந்தது. நவீன கண்ணாடிகளை விட அவை சற்று மாறுபட்டவை. புதிய ஏற்பாட்டுக் காலத் தில் கண்ணாடி செய்யும் தொழில் சற்று முன்னேற்றமடைந்தது (திருவெளி 4:6; 21:21; காண்க. பழ 26;23).

வழிபாட்டிலே பயன்படுத்தப்பட்ட பல பாத்திரங்களில் பெரும்பாலானவை உலோகப் பாத்திரங்கள். இதில் சில மண்பாண்டங் களும் பயன்படுத்தப்பட்டன. தொழுநோ யாளியைக் கழுவுவதற்கும் (லேவி 14:5), பொறாமைச்சட்டத்திலும் (எண் 5:17) மண் கலங்கள் பயன்பட்டன. பானையின் மேல் அசுத்தமான ஊர்வன ஏறினால் அஃது அசுத்த மாகிறது. எனவே, உடைக்கப்பட வேண் டும். ஆனால், விலையுயர்ந்த பாத்திரங்கள் கழுவியபின் பயன்படுத்தப்பட்டன (லேவி 11:32; செக் 14:20-21).

ஆதி 2:7-இல் கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கினார் என எழுதப்பட் டுள்ளது. குயவன் பொம்மை செய்வதற் கும், கடவுள் மனிதனைச் செய்ததாகக் கூறப்படுவதற்கும் வேற்றுமை என்னவென் றால், கடவுள் தம் உயிரின் ஆவியை அதனுள் ஊதினார்.

கடவுளைக் குயவனாக உருவகப்படுத்தி யிருப்பதை நாம் பார்க்கிறோம் (எரே 18:1-6; எசா 29:16; 4:8; உரோ 9:20-24; புல 4:2; எசா 45:9; லேவி 26:26). உருவகமாக பல நிகழ்ச்சிகளைக் கூறுவ தற்கு இம்மண்பாண்டங்கள் பயன்படுத்தப் பட்டன (யோபு 29:3; 2 நாள் 21:7; திருவெளி 21:23; பழ 20:20; சங் 119:105).

மண்டி (LEES)

இது திராட்சை ரசம் வைத்திருக்கும் தோல்துருத்தி அல்லது சித்தையில் தங்கி யிருக்கும் மண்டியாகும். விவிலியக் காலங் களில் திராட்சை ரசத்தை மண்டியோடு சேர்த்து வைத்தல் பழக்கமாகும். இப்படிச் செய்வது இரசத்தின் திடத்தையும் வாசத்தை யும் அதிகப்படுத்தும். வருங்காலத்தில், யாவே மக்களினங்கள் அனைவருக்கும் ஏற்பாடு செய்யும் விருந்தில், மண்டி வடிகட்டப்பட்டு பக்குவப் படுத்திய திராட்சை ரசம் பரிமாறப்படும் (எசா

28:6). அமைதி குலைவுற்ற மக்களைக் குறிக்க உருவகமாக இச்சொல் எபிரேய மொழியில் பயன்பட்டுள்ளது. இவ்வாறு ''ஆண்டவர் நன்மையும் செய்யார், தீமையும் செய்யார்'' என்று தங்கள் உள்ளங்களில் சொல்லிக்கொண்டு கொழுத்திருப்போரை (செப் 1:12), இச்சொல் குறிக்கிறது. மோவாபு மண்டியை அடியில் கொண்ட பழந்திராட்சைரசத்திற்கு ஒப்பாகும். அது கலத்தினின்று கலத்திற்கு மாற்றப்படவில்லை; அதாவது, நாடு கடத்தப்படவில்லை (எரே 48:11).

மண்டை ஓடு (SKULL)

காண்க. கொல்கொதா.

மண்ணின் மைந்தர்கள் (PEOPLE OF THE LAND)

காண்க. ''அம்கா அரேசு''

மண்ணைச்சார்ந்த உடல்கள் (TERRESTRIAL BODIES)

பவுல், 1 கொரி 15:40-இல் விண்ணைச் சார்ந்த உடலையும், மண்ணைச் சார்ந்த உடலையும் ஒப்பிடுகின்றார். மண்ணைச் சார்ந்த உடல்கள் மண்ணில் இவ்வுலகத்தில் இருப்பவை ஆகும். விண்ணைச் சார்ந்த உடல்கள் விண்ணுலகில் உள்ளன. இவை வேறு பொருளால் ஆனவை. பல வகையான உடல்கள் இருக்கின்றன என்றும், உயிர்ப்பிக்கப்பட்ட உடல் தனித்தன்மை வாய்ந்தது என்பதையும் எடுத்து இயம்புகிறார் பவுல்.

மண் தகடு (CLAY TABLETS)

மெசபொத்தாமியாவில் எழுதுவதற்குச் சாதாரணமாய்ப் பயன்பட்ட பொருள். எகிப்தில் கிடைத்த புல்தாள் ஏட்டைப் போலன்றி, மண் நிறையக் கிடைத்தது; மலிவானதும் கூட. மெதுவாக இருக்கும் போது மண், தகடாகச் செய்யப்பட்டு, அதில் ஆப்பு எழுத்துக்கள் பொறிக்கப்படும். பின், இது காய வைக்கப்படும் அல்லது சூளையில் சூடு படுத்தப்படும். தகடு கடினமாகும்; எளிதில் அதை அழிக்க முடியாது. இவ்விதம் எழுதும் முறை சுமேரியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்பு, இதைச் செமித்திய, அக்காதியர்கள் பயன்படுத்தினார்கள். பின்பு கூரியர்கள், இத்தியர்கள், எலாமியர்சுள் மற்றும் கானானியர்கள் போன்ற மேற்காசிய மக்கள் இம்முறையில் எழுதுவதை ஏற்றுக் கொண்டனர்.

மண்பாண்ட ஏட்டுத்துணுக்குகள் (OSTRACA)

இவை எழுதுவதற்குப் பயன்பட்ட மண்பாண்டத் துணுக்குகளாகும். புள்தாளைவிட மலிவானதால், இவை பயன்பட்டன. இவற்றின்மேல் மையால் எழுதப்பட்டது. இவை வரவுசெலவுக் கடிதங்கள், கணக்குகள், பள்ளி நூல்கள் ஆகியவை எழுதுவதற்குப் பரவலாகப் பயன்பட்டன. இவ்வகை முக்கியமான ஏடுகள் சமாரியாவிலும் இலாக்கீசிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மண்வெட்டி (HOE, MATTOCK)

இஃது ஒரு மண்ணைக் கொத்தவும் பண்படுத்தவும் பயன்படும் கருவி. இதன் ஒரு முனை பட்டையாகவும், அகன்றும், கூராகவும் இருக்கும். மறுமுனையில் நீண்ட கைப்பிடி பொருத்தப்பட்டிருக்கும். இஃது அதிகம் பயன்படுத்தப்பட்டால் அடிக்கடி கூர்மையாக்கப்பட வேண்டும் (1 சாமு 13:20-21; 2 நாள் 34:6; எசா 6:25). களைகளை வெட்டி நிலத்தைப் பண்படுத்தவும் பயன்பட்டது (எசா 5:6).

மதகுரு யோவானின் உரை (DISCOURSE OF SAINT JOHN THE DIVINE)

இது மரியாளின் விண்ணேற்பு என்ற நூலின் கிரேக்க மொழிபெயர்ப்பு.

மதித்து நடத்தல், மரியாதை அளித்தல் (RESPECT OF PERSONS)

பிறருக்குரிய வலிமை, உரிமை, சிறப்பு இவற்றை நினைவு கூர்ந்து ஏற்றுக்கொள்ளுதலே பிறருக்கு மரியாதை அளித்தலாகும் (லேவி 19:32; புல 5:12; காண்க. மாற் 12:6; 19:43; உரோ 13:7; 1 தெச 4:12; 5:12; 1 திமொ 3:4; 1 பேதுரு 2:18).

பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் எந்தெந்த இடத்தில் ஒருவரின் மரியா

தையைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்பதைக் குறிப்பிடுகின்றன. தூய்மையைப் பற்றிய சட்டங்களில் ஒருவனைத் தீர்ப்பிடும்போது ('ஒருவனின் முகத்தைப் பார்த்தோ, மரியாதைக்காகவோ) பாகுபாடு எதுவுமின்றி இருக்க வேண்டும் (லேவி 19:15). ஒருவனை ஏற்றுக்கொள்ளும்போது அது தனிச்சலுகை அளிப்பதாகவும் இருக்கலாம். அதுவே பாகுபாடு காண்பிப்பதாகவும் ஆகிறது. ''நீர் சொல்வதும், கற்பிப்பதும் சரியே. நீர் ஆள் பார்த்துச் செயல்படாதவர்'' (லூக் 20:21) என்று இயேசுவைப் பற்றிக் கூறப்பட்டது. கடவுள் மனிதர்களிடம் எந்த முகதாட்சண்யமும் காண்பிப்பது இல்லை; ஏனெனில், அவர் மனிதர்களைத் தனித்தனியே வேற்றுமை பாராட்டி நோக்குபவரல்லர் (அ.ப. 10:34; உரோ 2:11; கலா 2:6; எபே 6:9; கொலோ 3:25). யாக்கோபு ''சகோதரர்களே, மக்களின் தோற்றத்தைப் பார்த்து அவர்களை நடத்தாதீர்கள்'' என்று அறிவுறுத்துகிறார் (யாக் 2:1).

மதிப்பீடு செய்பவர் (ASSAYER)

கனி உலோகக் கலவையைத் தங்கத்திற்காகவோ, வெள்ளிக்காகவோ சோதித்துப் பார்ப்பவராவர் இவர். மக்களை ஆய்வு செய்து மதிப்பீடு செய்வதே எரேமியாவின் இறைவாக்குப் பணியாகும் (எரே 6:27). எரேமியா மக்களைத் தாழ்ந்த உலோகத்துக் கொப்பானவர்களாகக் கண்டார்.

மதி மயங்கியோர் (LUNATICK)

இதன் மூல கிரேக்கச் சொல் தருகின்ற வினைச்சொல், 'சந்திரனால் பாதிக்கப்படல் அல்லது சந்திரனின் ஆதிக்கத்தினால்' என்ற பொருளை அளிக்கின்றது.

இதேபோல இலத்தீன் சொல்லும் பொருள்தர வல்லது. இது பொதுவாக வலிப்பு நோயுள்ளோரைக் குறிக்கப்பயன்பட்டது.

மத் 4:24 ''பேய் பிடித்தோர், மதி மயங்கியோர்'' என்று வரிசைப்படுத்தி இரண்டிற்கும் வேறுபாடு இருப்பதாகச் சுட்டுகிறது. ஆனால் 17:15-இல் அசுத்த ஆவி விரட்டப்பட்டபோது வலிப்பு நோய் குணம் அடைந்ததாக எழுதப்பட்டுள்ளது. எனவே 4:24 வாக்கு, அசுத்த ஆவியின் சக்தியைக் குறிப்பிடாமல் இல்லை என்பது தெளிவாகிறது. மாறாக, சந்திரனின் ஆதிக்கத்தினால்தான் அசுத்த ஆவி உள்ளே நுழைகின்றது என்ற பொதுவான நம்பிக்கை இருந்திருக்க வேண்டும்.

மத் 17:15, மாற் 9:17-இல் வரும் விவரிப்போடு ஒப்பிடப்பட வேண்டும். ஏனென்றால், மாற் 9:17-இல் குறிப்பிடப்படும் சிறுவனுக்கு 'உமை பேய்' பிடித்திருந்ததாக எழுதப்பட்டுள்ளது. லூக் 9:39-இல் குழந்தைக்குப் பேய் பிடித்திருந்ததாக எழுதப்பட்டுள்ளது. இவை பற்றிய கிரேக்கர்களின் பொதுக் கருத்துக்களைப் பற்றிய விளக்கத்தை இப்போகிரத்தசு என்பவர் தந்துள்ளார்.

மதிரி (MATRITES - மழையான)

இது பெஞ்சமின் கோத்திரத்தில் ஒரு குடும்பம். அரசனைத் தேர்ந்தெடுக்கும்போது இவர்கள் பெயருக்குச் சீட்டு விழுந்தது. அவர்களில் ஒருவரான சவுல் இஸ்ராயேல் மக்களின் முதல் அரசராக முடிசூட்டப்பட்டார் (1 சாமு 10:21).

மதிரேது (MATRED - ஈட்டி, வெளியேற்றுதல்)

இவள் மேசகாபுவின் மகளும், மெகேற்றபேலின் தாயும், ஏதோம் நாட்டு அரசன் அதாதின் மனைவியும் ஆவாள் (ஆதி 36:39; 1 நாள் 1:50). எழுபது நூலும், சீரியக்கு வாசகமும் இவரை மெகேற்றபேலின் தந்தை எனக் குறிப்பிடுகின்றன.

மதில் அரண் (BULWARK)

இதைக் குறிக்கும் மூல எபிரேயச் சொல், சீயோனின் மதில் சுவர்கள் என்றும் (சங் 48:13), கோட்டைகளின் மூலைகள் என்றும் (2 நாள் 26:15), கொத்தளங்கள் என்றும் (எரே 50:15; 51:32) தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உப 20:20; திருவுரை 9:14-இல், இச்சொல் முற்றுகையிடுவோர் அமைக்கும் கொத்தளங்களைக் குறிக்கிறது.

உருவகமாக, இறைவன் தம் மக்களைக் காக்கும் கொத்தளமாக விவரிக்கப்படுகிறார் (எசா 26:1). 1 திமொ 3:15-இல் திருச்சபை உண்மைக்குத் ''தூணும் அரணும் (அடிப் படையும்)'' ஆகும் என்று கூறப்படுகிறது.

மது பரிமாறுவோன் (BUTLER)

அரச உணவு மேசையில் திராட்சைரசம் பரிமாறும் பொறுப்புடைய ஓர் அலுவலன் ஆவான். எனவே, அரசனுக்கு அருகில் இருந்த உயர்ந்த பதவியில் உள்ளவன் இரசம் கொடுப்பது ஒரு வெளியடை யாளமே. யோசேப்போடு சிறையிருந்த ஒரு சிறைக்கைதியை மட்டும் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஆதி 40:1தொ). இவன் தலைமை மதுபரிமாறுபவன். இவன் இன்னும், அரசனுக்குரிய இரசத்தைச் சுவைத்து, அதற்குப் பொறுப்பாய் இருப்ப தாகக் கனவு காண்கிறான் (40:11.13.21). இவன் யோசேப்பைப் பற்றி பார்வோ னிடம் நல்லதைச் சொன்னதால்தான், யோசேப்பு விடுதலை செய்யப்பட்டு, நாட் டின் மேற்பார்வையாளனாக்கப்பட்டார் (41:9.40-41).

மதுபானம் (STRONG DRINK)

இச்சொல் எல்லாச் செமித்திய மொழிகளி லும் பயன்படுத்தப்படுகிறது. இது பழங் காலத்தில் பார்லியிலிருந்து தயாரிக்கப் பட்ட பீர் என்னும் பானத்தைக் குறித்தா லும், பிற்காலத்தில் தானியங்களிலிருந்தோ, பழங்களிலிருந்தோ தயாரிக்கப்பட்ட எல் லாப் பானங்களையும் குறிக்கும் சொல் லாகப் பயன்படுத்தப்பட்டது. இது குருக் களுக்கும் (லேவி 10:9), நசரேயர்களுக்கும் (எண் 6:3; காண்க. நீதி13:4.7.14; லூக் 1:15) விலக்கப்பட்ட பானமாகும். இஃது, ஒரே ஓர் இடத்தில் மட்டுமே பானபலியின் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்படுகின்றது (எண் 28::7).

'மதுபானம்', திராட்சைரசத்துடன் இணையாகக் கூறப்பட்டு எல்லாப் போதைப் பொருட்களையும் குறிக்கின்றது. எனவே எசாயா, ''விடியற்காலையிலேயே விழித்தெழுந்து, போதை தரும் மதுவை நாடி அலைந்து இரவுவரை குடித்துப் பொழுதைப் போக்குகிறவர்களுக்கோ ஐயோ கேடு!'' என்று சபிக்கின்றார் (எசா 5:11). இதைப்போலவே, தான் எந்த வகை யான மதுபானமும் அருந்தவில்லை என்று அன்னா குருவிடம், சீலோவில் கூறினாள் (1 சாமு 1:15). ஞானி, ''திராட்சைரசம் ஏளனம் செய்யும் அரக்கன்; போதை தரும் குடி அமளி செய்யும் கலகக்காரன்; அதில் நாட்டங் கொள்பவன் மடையனே!'' என்று கூறுகின்றார் (பழ 20:1; காண்க. 31:4.6).

மத்தத்தியா (MATTATHIAS - ஆண்டவரின் கொடை)

1. முதலாம் மத்தத்தியா எருசலேமைச் சார்ந்தவர்; மோதயின் மலைநாட்டில் வாழ்ந்தவர்; யூதா மக்கபேயுவின் தந்தை (1 மக் 2:4). அந்தியோக்கு எப்பிபானின் அதிகாரிகள் மோதயினுக்கு வந்து அங்கு வாழ்ந்தவர்களை யூத சட்டத்திற்கு எதிராக, பலியிடத் தூண்டியபோது, மத்தத்தியா அதிகாரிகளையும், அவ்வாறு பலியிட்ட ஒரு யூதனையும் கொன்றார். அவரோடு சேர்ந்து யூதர் பலர் யோர்தானுக்கு அருகி லுள்ள பாலைவனத்திற்கு ஓடிப்போயினர். அவர்கள் ஓய்வுநாளில் போரிட மறுத்த போது கொலை செய்யப்பட்டனர். ஆகவே, ஓய்வுநாளிலும் போரிடத்தயாராக இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். இவர் கி.மு. 168 - 167-இல், தம் 146-ஆம் வயதில் இறந்து மோதயினில் அடக்கம் செய்யப்பட் டார் (1 மக் 2). இவர் முடிவில்லா வாழ்வைப் பற்றிப் பேசியதாக யோசிப்பசு கூறுகிறார். மத்தத்தியா கசமோனியர் ஆட் சியைத் தொடங்கி வைத்தார் எனலாம்.

2. இரண்டாம் மத்தத்தியா சீமோன் மக்க பேயுவின் மூன்றாம் மகனாவார். தோலமி சீமோனையும் அவன் புதல்வர்களையும் கொன்றபோது, மத்தத்தியாவும் அவனால் கொலை செய்யப்பட்டார் (1 மக் 16:14-16).

3. மத்தத்தியா அப்சலோமின் மகன் ஆவார். இவர் யோனத்தானின் படைத் தலைவர்களுள் ஒருவர். தெமேத்திரியு வின் தலைமையில் சீரியாவின் படை

கள் கசமோனியர்களைத் தாக்கியபோது அவர்கள் ஆட்சோர் நகரத்துக்கு ஓடினார்கள். ஆனால், யோனத்தான் சிரியர்களை மீண்டும் தோற்கடித்தார் (1 மக் 11:70).

4. யூதா மக்கபேயுவிடம் நிக்கானோர் அனுப்பிய ஒரு தூதன் (2 மக் 14:19).

5. இயேசுவின் முன்னோர்களில் ஒருவர். ஆமோசின் மகனும் யோசேப்பின் தந்தையும் ஆவார் (லூக் 3:25).

6. இயேசுவின் முன்னோர்களில் ஒருவர். செமேயின் மகனும் மாத்தின் தந்தையும் ஆவார் (லூக் 3:26).

மத்தனாய் (MATENAI - இறைவனின் கொடை)

1. ஆசமின் புதல்வர்களில் ஒருவர். இவர் தன் அன்னிய மனைவியை விலக்கிவிட வேண்டியிருந்தது (எஸ் 10:33).

2. அன்னிய மனைவியை விலக்கிவிட வேண்டிய மற்றொரு இஸ்ராயேலர். இவர் பானியின் மகன் ஆவார் (எஸ் 10:37).

3. யோயாக்கிம் தலைமைக் குருவாக இருந்த காலத்தில் யோயாரிபு வீட்டைச் சேர்ந்த ஒரு குருக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் (நெகே 12:19).

மத்தனியா (MATTANIAH - யாவேயின் கொடை)

1. மத்தனியா என்பது செதேக்கியா அரசனின் (2) முந்தையப்பெயர். இப்பெயர் பாபிலோனிய அரசன் நெபுகத்னேசரால் கொடுக்கப்பட்டது (2 அர 24:17). இவர் யோசியா அரசனின் மகனும், யோயாகினின் சிற்றப்பனும், யூதாவின் கடைசி அரசனும் ஆவார்.

2. இவர் ஆசாபு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லேவியர். நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் வாழ்ந்தவர் (1 நாள் 9:15). செருபாபேலோடு நாடு திரும்பிய பாடற்குழுவின் தலைவர் (நெகே 11:17; 12:8.35).

3. ஏமானின் மகன். இவர் ஆலய பாடற்குழுவின் ஒன்பதாவது பிரிவின் தலைவர். தாவீது காலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 25:4.16).

4. இவர் ஒரு லேவியர். இவர் ஆசாபின் குலத்தைச் சேர்ந்தவர். யாகசியேலின் முன்னோர் (2 நாள் 20:14).

5. இவர் ஒரு லேவியர். ஆசாபின் மகனாவார். இவர் யூதாவின் மன்னன் எசேக்கியாவின் காலத்தில் ஆலய வழிபாட்டுச் சீர்திருத்தங்களில் பங்கு கொண்டவர் (2 நாள் 29:3).

6. இவர் செருபாபேலின் காலத்தில் ஆலய பாடற்குழுவின் தலைவராக இருந்தவர் (நெகே 11:17.22; 12:8).

7. லேவியர் குலத்தவரான இவர் எருசலேமில் ஆலய வாயில்களையும், கருவூலங்களையம் காத்து வந்தவர் (நெகே 12:25).

8. லேவியரான இவர் செமாயாவின் தந்தை. குரு செக்கரியாவின் முன்னோர் (நெகே 12:35).

9. இவர் நெகேமியாவின் காலத்தில், லேவியரின் கருவூலக் காப்பாளரான அனானின் தாத்தாவும், சக்கூரின் தந்தையும் ஆவார் (நெகே 13:13).

10. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பிய நால்வருக்கு இப்பெயர் கொடுக்கப்படுகிறது. இவர்கள் அயல் நாட்டு மனைவியரை மணந்ததால் கடவுளின் உடன்படிக்கையை மீறியதாகக் கருதப்பட்டவர்கள் (எஸ் 10:26.27.30.37). ஆகவே, அன்னிய மனைவியரை இவர்கள் நீக்க வேண்டியிருந்தது. இவர்களில் ஒருவர் ஏலாமின் புதல்வர்களில் ஒருவர் (10:26). இரண்டாம் நபர் சத்துவின் புதல்வர்களில் ஒருவர் (10:27). மூன்றாவது நபர் பகத் - மோவாபின் புதல்வர்களில் ஒருவர் (10:30). நான்காம் நபர் பானியின் புதல்வர் ஆவார் (10:37).

11. ஊசியின் முன்னோர். இவர் நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் லேவியர்களை மேற்பார்த்து வந்தவர்களில் ஒருவர் (நெகே 11:22).

மத்தாத்தா (MATTATTAH - ஆண்டவரின் கொடை)

மத்தாத்தா, எஸ்ராவால், அவருடைய அன்னிய மனைவியை விவாகரத்து செய்யும்படி கூறப்பட்டவர்களுள் ஒருவர் (எஸ் 10:33).

மத்தாத்தா (MATTATHA - ஆண்டவரின் கொடை)

தாவீது குலத்தைச் சேர்ந்த மத்தாத்தா இயேசுவின் மூதாதையர்களில் ஒருவர். தாவீதின் ஒரு புதல்வரான நாத்தான் இவருடைய தந்தையாவார் (லூக் 3:31).

மத்தாத்து (MATTHAT)

1. இயேசுவின் முன்னோர்களில் ஒருவர். யோசேப்பின் தாத்தா (லூக் 3:24). இவர் மத் 1:15-இல் மத்தான் என்று அழைக்கப் படுகிறார்.

2. நாடு கடத்தலுக்குப்பின் வந்த காலத்தைச் சேர்ந்த இயேசுவின் முன்னோர்களில் ஒருவர் (லூக் 3:29).

மத்தானா (MATTANAH - கொடை)

மத்தானா, இஸ்ராயேல் மக்கள் அர்னோனிலிருந்து புறப்பட்டுச் சென்று எமோரியர்களின் அரசனான சீகோனின் நாட்டினுள் நுழையுமுன் தங்கி இருந்த இடமாகும் (எண் 21:18-19). கிர்பெத் ஏல்-மெதெயினே இவ்விடம் இருந்த இடமாகக் கருதப்படுகிறது. இவ்விடம் மதபாவின் தென்கிழக்கில் 20 கி.மீ. தொலைவில் இருந்ததாக யுசேபியு கூறுகிறார். இக்குன்றைச் சுற்றிலும் பாதிச் சரிவில் சிறு அகழி இருந்தது. இம்மேட்டின் உச்சியில் நகரச் சுவர்கள் இருந்தன. அங்குக் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களிலிருந்து கி.மு. 1200 முதல் 800 வரை மக்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது தெளிவாகிறது.

மத்தான் (MATTAN - கடவுளின் கொடை)

1. இவர் புரட்சியாளர்களால் பீடத்தின் முன் கொலை செய்யப்பட்ட பாகாலின் குருக்களில் ஒருவர். இவர்கள் அரசி அத்தாலியாவைக் கொன்று, யோவாசை யூதாவின் அரியணையில் அமர்த்தினார்கள் (2 அர 11:18).

2. இவர், இறைவாக்கினர் எரேமியாவின் காலத்தில் அரசனாக இருந்த செதேக்கியாவிடம் சிற்றரசனாக இருந்த செபற்றியாவின் தந்தையாவார் (எரே 38:1).

மத்தான் (MATTHAN - கொடை)

இயேசுவின் மூதாதையர்களுள் ஒருவர். யோசேப்பின் தாத்தா (மத் 1:15). இவர் லூக் 3:24-இல் மத்தாத்து என்று அழைக்கப் படுகிறார்.

மத்தித்தியா (MATTITHIAH - யாவேயின் கொடை)

1. கோராகிய லேவியரும், சல்லூமின் மகனுமான இவர் ஆலயத்திற்குத் தேவைப் படும் அப்பங்களைத் தயாரிப்பவராக இருந்தார் (1 நாள் 9:31).

2. இவர் லேவியரும், எதுத்தூனின் மகனும் ஆவார் (1 நாள் 25:3). உடன்படிக்கைப் பெட்டகத்தின் முன் பணிபுரியும் பாடகர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டவர் (1 நாள் 15:18.21; 16:5; 25:21). ஆலயப்பாடற் குழுவின் பதினான்காம் பிரிவின் தலைவர் (25:3.21).

3. இவர் எஸ்ராவின் காலத்தில் அன்னிய மனைவியை விலக்கிவிட வேண்டியவர் (எஸ் 10:43).

4. எஸ்ரா சட்டங்களை மக்களுக்கு வாசித்தபோது அவருக்கு உதவி செய்தவர்களுள் ஒருவர் (நெகே 8:4).

மத்தியா (MATTHIAS - யாவேயின் கொடை)

மத்தியா பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரான யூதாஸ் இஸ்காரியோத்தின் இடத்தை நிரப்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர். யூதாசின் துரோகத்தைப் பற்றிக் கூறப்பட்ட இறைவாக்குச் சங் 69:25, அவனுடைய இடம் வேறு ஒருவரால் நிரப்பப்படும் என்றும் கூறுகிறது (அ.ப. 1:20) என்று பேதுரு போதித்தார். எனவே, பதினொருவருடன் இன்னும் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் அப்போஸ்தலர் திருமுழுக்கு யோவான் திரு

முழுக்கு கொடுத்ததிலிருந்து, இயேசுவின் உயிர்ப்புவரை, இயேசுவுடன் இருந்தவராகவும், இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று பகரக்கூடியவராகவும் இருக்க வேண்டும். இருவர் தகுதியுள்ளவர்களாகக் கூறப்பட்டனர். அவர்களுள் ஒருவர் பர்சபா என்ற யோசேப்பு. இவர் யுஸ்து என்றும் அழைக்கப்பட்டார். மற்றவர் 'மத்தியா' (அ.ப. 1:23). சீட்டைப்போடுமுன், அப்போஸ்தலர்கள் தங்களை வழிநடத்தும்படி ஆண்டவரை மன்றாடினர். இதன்பின் யூதர்களின் வழக்கப்படி (காண்க. லேவி 16:8; பழ 16:3) சீட்டுப்போட்டார்கள். பொதுவாக, அவர்கள் கற்களில் பெயர்களை எழுதி, அவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு, ஒரு கல் வெளியில் வந்து விழும்வரை நன்கு குலுக்குவார்கள்.

யுசேபியுவும், எப்பிபானியுவும் மத்தியா 72 சீடர்களில் ஒருவர் என்று கூறுகின்றனர். அவர் யூதேயாவில் நற்செய்தியைப் போதித்தார் என்றும், யூதர்களால் கல்லால் எறிந்து கொலை செய்யப்பட்டார் என்றும் ஒரு பாரம்பரியம் கூறுகிறது.

மத்தியாவின் பாரம்பரியங்கள் (MATHIAS, TRADITIONS OF)

அலக்சாந்திரிய கிளமந்துவின் நூலிலிருந்து அறியப்படும் நூல். இந்நூலிலிருந்து அவர் கருத்துக்களை மும்முறை சுட்டிக்காட்டுகிறார். உடலைத் தவறாகப் பயன்படுத்துவது பற்றிய ஞானவாத போதகத்தை இந்நூல் கொண்டிருக்கலாம் என்று கிளமந்து கூறுகிறார். கூறப்படும் கருத்துக்களை வழங்கிய 'ஓரிசன்' மத்தியா எழுதிய பிரிவினைவாத நற்செய்தி என்னும் நூலைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அப்புரோசும், எரோனிமுவும் இந்நூலைக் குறிப்பிடுகின்றனர். செலாசியன் கட்டளையில் இத்தலைப்புடன் கூடிய நூல் கண்டனம் செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலும், பாரம்பரியங்களும், நற்செய்தியும் ஒரே நூலையே குறிக்கலாம். இக்கருத்து உறுதியானது என்று கூறுவதற்கோ, நூல்களின் அமைப்பைப் பற்றிக் கூறுவதற்கோ, நமக்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

மத்தேயு (MATTHEW - யாவேயின் கொடை)

காண்க. மத்தேயு எழுதிய நற்செய்தி: 2. ஆசிரியர்.

மத்தேயு எழுதிய நற்செய்தி (MATTHEW GOSPEL OF)

1. எப்படித் தோன்றின? ''நற் செய்தியின் தோற்றம்'' என்ற தலைப்பின்கீழ் நமது நான்கு வடிவ நற்செய்தி தோன்றிய வரலாற்றைப் பற்றிச் சிறிது ஆராய்ந்தோம். அதையே பிறிதொரு கோணத்திலிருந்து நோக்குவது சாலச்சிறந்தது. ''ஐம்பதாம் நாள்'' விழாவில், பரிசுத்த ஆவியார் அப்போஸ்தலர்கள் மேல் எழுந்தருளிய அந்நாளில், என்ன நடந்தது என்றும், எவ்விதம் முதல் நற்செய்தி வடிவெடுத்தது என்றும் சிறிதுநோக்குவோம். தங்களது தலைவர் இயேசுவின் ஆணைக்கு இணங்கி, மேலறையில் அப்போஸ்தலர்கள் கூடி, இயேசுவின் அன்னை மரியாளோடு ஒன்றித்து, செபத்தில் செலவழித்தனர் சில நாட்களை. பரிசுத்த ஆவியரால் நிரப்பப்பட்டு, தேவ ஆற்றலால் ஏவப்பட்டு அப்பெருநாளில் போதிக்கத் தொடங்கினர். ஒரு மாபெரும் செய்தியை, நற்செய்தியைப் பறை சாற்றினர். யூதர்களைப் பார்த்து, ''தீயோர்களைக் கொண்டு, நீங்கள் கொலை செய்த அதே இயேசு மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்துள்ளார். அதற்கு நாங்கள் யாவரும் சாட்சிகள். அவரே மெசியா, இறைவனின் மகன்'' என்று முழங்கினர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி கூறினர். அதைத் தங்களின் தலையாய கடமையாகக் கருதினர். கிறிஸ்தவத்தின் இத்தொடக்கத்தையே அப்போஸ்தலர் பணியில் இரண்டாம் மூன்றாம் அதிகாரங்களில் காண்கிறோம்.

இந்த முதல் பறைசாற்றலுக்குப்பின், கிறிஸ்தவச் சமூகம் பெருகியது. கிறிஸ்துவின் உயிர்ப்போடு அவரது இறப்பைப் பற்றியும் பேசினர். அவ்விறப்பின் சூழ்நிலைகளைப் பற்றி விரிவாக எடுத்துக்கூறினர். இவ்விறப்பிற்குப் பொருள்தரக்கூடிய விவிலிய வாசகங்களைத் தேடி, பொருத்தமான விளக்கம் அளித்தனர். கிறிஸ்துவின்

கட்டளைப்படி அப்பத்தைப் பிட்கவும், இரசக்கிண்ணத்தை ஆசீர்வதிக்கவும் செய்தனர். அப்படிச் செய்தபோது, கிறிஸ்து தமது இறுதி இரவுணவின்போது செய்த, எளிதில் மறக்கமுடியாத செயல்களையும், கூறிய வார்த்தைகளையும் நினைவு கூர்ந்தனர். அவரது பாடுகளையும் உயிர்ப்பையும் கொண்டாடினர். இறந்து உயிர்த்து விண்ணெழுந்த கிறிஸ்து, மீண்டும் வரவிருக்கின்றார் என்ற உண்மையையும் எடுத்துக் கூறினர். இதையொட்டி, உலக முடிவைப் பற்றிக் கிறிஸ்து உரைத்தவற்றையும் ஞாபகத்திற் கொண்டனர்.

சில மாதங்கள் கடந்தன. சில ஆண்டுகள் உருண்டன. கிறிஸ்துவின் போதகத்தைப் பின்பற்றுவோர் குழு பெருகியது, பரவியது. ஆனால், கிறிஸ்துவின் வருகையைத்தான் காணவில்லை. அவரது வருகை சமீபத்தில் அன்று ஏதோ தூரகாலத்தில் வரவிருப்பதாகத் தோன்றியது. அதுவரை, கிறிஸ்தவக் குழு இவ்வுலகிலேயே வாழ்ந்தாக வேண்டும். அதற்கு ஓர் ஒழுங்குமுறை, ஒரு சட்டம் அவசியமாயிற்று. ஆண்டவர் மீண்டும் மீண்டும் போதித்தவைகள் அப்போஸ்தலர்களின் மனதில் ஆழமாய்ப் பதிந்திருந்தன. அவர்கள் அப்போதகங்களைக் கிறிஸ்தவர்களுக்குப் போதித்தனர். அவை எழுத்து வடிவம் எடுத்தன.

விசுவாசிகளின் தேவைகள், வழிபாட்டுச் சடங்குகள், ஒரு சிலரது தீங்கு விளைக்கும் போக்குகளை நீக்குதல், விரோதிகளின் தாக்குதல்களை எதிர்த்தல், கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்துதல் முதலியவற்றிற்கு ஏற்ப ஆண்டவருடைய போதகங்கள் எடுத்துக் கூறப்பட்டன. சிறிது சிறிதாக ஆண்டவரது போதகம், அவருடைய புதுமைகள், பயண விவரங்கள், அவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றோடு சேர்த்து எழுதப்பட்டது. இப்படி எழுதியபோது, எழுதியோரும் கிறிஸ்தவச் சமூகமும், உண்மைத்தன்மைக்கும் அதிகார பூர்வத் தன்மைக்கும் மரியாதை கொடுத்தனர் (லூக் 1:1-4). இவ்விதம் எழுதப்பட்ட நூல்கள், கிறிஸ்தவச் சமூகங்களிடையே பரவின. இவற்றில் வெகு சில அரமேயிக்கு மொழியில் எழுதப் பெற்றவை. மற்றவை கிரேக்க மொழியில் எழுதப்பெற்றவை. அரமேயிக்கு மொழியில் எழுதப்பெற்றவை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதும் உண்டு. இந்த மூல நூல்களைச் சிலர் தொகுத்து எழுதினர். இவர்கள் அப்போஸ்தலர்களாகவோ, அவர்களை நன்கு அறிந்த சீடர்களாகவோ இருந்தனர். இப்படித் தொகுக்கப் பெற்றவைகளில் சிலவற்றைக் கிறிஸ்தவச் சமூகம் உண்மையானவை என்று ஏற்றுக்கொண்டது. அப்படி ஏற்கப்பெற்றவைதான், நாம் கொண்டிருக்கும் நற்செய்தியின் நான்கு வடிவங்கள். இவை, நற்செய்தியாளர்கள், தாங்கள் கிறிஸ்துவின் வாழ்வில் நேரே கண்டவைகளையும், பிறரிடமிருந்து கேட்டறிந்ததையும், மூலநூல்களையும் அக்காலத்து முறைப்படி ஆராய்ந்து எழுதியவை.

நற்செய்தியாளர், இப்படித் தொகுத்து வரைந்தபோது, கிறிஸ்துவின் வாழ்வு, போதகம் ஆகியவற்றைப் பிரமாணிக்கமாகக் கூறினர். இப்பெரும் கடமையைச் செய்ய, பரிசுத்த ஆவியரின் ஏவுதலும், உதவியும், ஆசீரும் உறுதுணையாக இருந்தன. இப்படி எழுதியபோது, ஒவ்வொரு நற்செய்தியாளரும் தமது சிறப்பு நோக்கத்திற்கும், தமது வாசகர்களின் தேவைக்கும் ஏற்ப எழுதினர். கிறிஸ்து பயணம் செய்துகொண்டே போதித்தார். ஆகையால், ஒவ்வொரு சமயமும் கேட்பவர்கள் புதியவர்கள். ஆகையால் அவர் ஓர் இடத்தில் கூறியவற்றை மற்றோர் இடத்திலும் கூறியிருக்கக்கூடும். அதனோடு, அவரது போதகம் ஏறக்குறைய இரண்டரை ஆண்டுகள் நீடித்தது. கிறிஸ்து, நாடு முழுவதும் இங்குமங்கும் போவதற்கும், தமது புதுமைகளையும் இரக்கமிக்க செயல்களையும் நிறையச் செய்வதற்கும், தமக்குச் செவிமடுப்போருக்கும் தமது போதகத்தை மிகுந்த அளவில் பொழிவதற்கும் போதிய காலம் இருந்தது. இவற்றையெல்லாம், தங்களுடைய குறிக்கோளுக்கு ஏற்ப, நற்

செய்தியாளர்கள் தொகுத்து வரைந்தனர். ஒருவர் யூத கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தி வரைந்தார். மற்றொருவர் யூதரல்லாத கிறிஸ்தவர்களுக்கு எழுதினார். இன்னும் ஒருவர் காலவரைப்படி எழுதினார். ஒருவர் ஒரு நிகழ்ச்சியை அழுத்திக் கூறினால், மற்றவர் மற்றொரு நிகழ்ச்சியைச் சிறப் பித்துக் காட்டுவார். ஒருவர் தப்பறைகளைத் தகர்ப்பதற்கு வேண்டிய போதகங்களையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்துத் தருவார். மற்றவரோ, புறமதத்தினர் கிறிஸ்துவை விசுவசிப்பதற்கு வேண்டியவைகளைத் தொகுத்துத் தருவார். ஒருவர் ஒரு சூழ் நிலையில் கூறியவற்றை, மற்றொருவர் பிறிதொரு சூழ்நிலையில் முழுவதையும் அல்லது அதில் ஒரு பகுதியைக் கூறுவார். இவை யாவும் நம்மை வியப்பில் ஆழ்த்தக் கூடாது. இவை கண்டு நாம் வெட்கப்பட வும் வேண்டியதில்லை. அதற்கு மாறாக, நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். ஏனெ னில், இவ்விதம் எழுதப்பட்டதால், இந் நூல்களில் கிறிஸ்துவைப் பல கோணங் களில் இருந்து அறிகிறோம். பெரிதும் பயன்பெற இவை ஏதுவாகின்றன.

மேற்கூறப்பட்டவாறு தொகுக்கப்பட்ட பலவற்றில் நமது தாயாகிய திருச்சபை நான்கு நூல்களை உண்மையானவைகளாக வும், அதிகார பூர்வமானவைகளாகவும் ஏற்றுக்கொண்டது. அவை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதிய நற்செய்திகளாகும். நாம் கொண்டி ருக்கும் வடிவில் காலத்தால் முந்தியது மாற்கு எழுதிய நற்செய்தியாகும் என அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் பாரம் பரிய நற்செய்தியாளர் பட்டியல் மத்தே யுவை முதல்வராகக் கொண்டுள்ளது.

2. ஆசிரியர்: முதல் நற்செய்தியின் ஆசிரி யர் தாம் எழுதியதாகவோ, தமது பெயர் இதுதான் என்றோ ஓர் இடத்திலும் கூற வில்லை. ஆனால் பாம்பரியம், நாம் கொண்டிருக்கும் நற்செய்தியின் முதல் வடி வத்தின் ஆசிரியர் மத்தேயு என்று ஒருமுக மாகக் கூறுகிறது. பாப்பியஸ், இரனேயு, தேர்த்துல்லியன், ஓரிசன் ஆகிய திருச்சபைத் தந்தையரது இச்சான்றை நாம் எளிதில் தள்ளிவிட முடியாது.

''மத்தானியா'' அல்லது ''மத்தத்தியா'' என்ற எபிரேய வார்த்தையின் சுருக்கம் 'மத்தாய்' என்ற அரமேயிக்குச் சொல். இச்சொல்லின் கிரேக்க வடிவமே ''மத்தா யோஸ்'' என்ற சொல். ''மத்தாயோஸ்'' என்றால் ''இறைவனின் (யாவேயின்) கொடை'' என்று பொருள்படும்; சிலர் ''பிரமாணிக்கமுள்ளவர்'' என்றும் பொருள் கொள்வர். இப்பெயர், அப்போஸ்தலர் பட்டியலில், மாற்கிலும் *(3:18)*, லூக்காவி லும் *(6:15)* ஏழாவதாகவும், மத்தேயுவிலும் *(10:3)*, அப்போஸ்தலர் பணியிலும் *(1:13)* எட்டாவதாகவும் காணப்படுகிறது. மத்தேயு வின் அழைப்பு பற்றிய நிகழ்ச்சியுரையில், மாற்கும் *(2:13-17)*, லூக்காவும் *(5:27-32)* சுங்கவரி நிலையத்திலுள்ள அதிகாரியான லேவி என்பவரைக் குறிக்கின்றன. முதல் நற்செய்தி வடிவம் இந்த அதிகாரியை மத்தேயு எனக்குறிக்கிறது *(மத் 9:9-13)*. இந்நிகழ்ச்சியுரைகள் மற்ற விவரங்களில் ஒத்துள்ளமையால் லேவி என்பவரே மத் தேயு என்று நாம் உய்த்துணரலாம். இவரது தந்தை ஆல்பேயு ஆவார் *(மாற்கு 2:14)*. இவர் எங்கு தமது அப்போஸ்தலத்துவத்தை நடத்தினார் என்று நாம் ஒன்றையும் உறுதி யாய் அறிவதற்கில்லை. முதலில் யூதேயா விலும், பின் எத்தியோப்பியா, பெர்சியா, பார்த்தியா முதலிய நாடுகளிலும் நற்செய் தியைப் போதித்ததாகச் சில குறிப்புகள் உள்ளன. அவற்றின் உண்மையை நாம் ஆராய்ந்து கூறுவதற்கில்லை. அவர் எப் போது இறந்தார் என்பதற்கும் சான்று ஒன்றுமில்லை. இவ்விதம் புகழ் பெறாத, நன்கு அறியப்படாத மத்தேயுதான் நற்செய் தியின் முதல் வடிவத்திற்கு ஆசிரியர் என்று ஆதியிலிருந்து ஒருமுகமாகப் பாரம்பரியம் கூறுகிறது. மேற்கூறியவை மத்தேயுதான் இந்நூலுக்கு ஆசிரியர் என்ற கருத்தை வலியுறுத்தும்.

மத்தேயு தமது தொழிலின் காரணமாக இயேசுவின் வாழ்வையும், செயல்களை யும், வாக்குகளையும் தொகுத்து எழுதுவ

தற்குத் தகுதிவாய்ந்தவராகத் தோன்றுகிறார். அவர் சுங்க வரித்துறையில் அலுவல் புரிந்ததால் அவருக்கு அரமேயிக்கிலும், கிரேக்க மொழியிலும் போதிய அறிவும் எழுத்து வன்மையும் இருந்திருக்க வேண்டும். சிறிது இலத்தீன் மொழிகூட அவர் அறிந்திருக்க வேண்டும். அவர் எண்ணிக் கைகளில் காட்டும் ஆர்வமும், அவரது நற்செய்தியில் காணப்படும் ஒழுங்கும் திட்டமும், வேண்டாத சிறு காரியங்களை நீக்கிச் சுருக்கி எழுதுவதும், ஒரு கணக்கனது மனப்போக்கைக் காட்டுகின்றன. இயேசுவின் வரலாற்றைப் படிப்படியாக எழுதும் விதம், ஆசிரியரது பதிவு செய்யும் வழக்கத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. எசாயாவின் சீடர்கள் அவருடைய வார்த்தைகளைப் பின்வரும் மரபினர்க்குப் பயன்படும்படி பதிவு செய்தனராம் (எசா 8:16). அதுபோலவே இயேசுவின் வாழ்வையும், வார்த்தைகளையும் பதிவு செய்ய தாம் அழைக்கப்பட்டிருப்பதாக மத்தேயு உணர்ந்திருக்கலாம். அதனால்தானோ என்னவோ, எசாயா இறைவாக்கிலிருந்து அடிக்கடி எடுத்துக்காட்டு கொடுக்கின்றார். இந்நூலை எழுதுபவர் ''விண்ணரசுக்காகப் பயிற்சி பெற்ற மறைநூலறிஞன்'' (மத் 13:52) என்பது இந்நூலிலிருந்து தெரிகிறது.

இவரை ஒரு வேதசாட்சியாகத் திருச்சபை கொண்டாடுகிறது. இவரது திருநாளை இலத்தீன் திருச்சபை செப்டம்பர் மாதம் 21-ஆம் நாளன்றும், கிழக்கத்தியத் திருச்சபை நவம்பர் மாதம் 16-ஆம் நாளன்றும் கொண்டாடுகின்றன. ஓவியத்திலே மத்தேயு ஓர் ஈட்டியைக் கையிலேந்தித் தோன்றுவார். இஃது அவரது வேதசாட்சியத்தைக் குறிப்பதாக இருக்கலாம். அவரது நற்செய்தியின் அடையாளம் இறக்கையுள்ள மனிதனாகும். அவரது அருளிக்கம் 1080-இல் சலெர்னோ என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

3. அரமேயிக்கு மத்தேயுவும், கிரேக்க மத்தேயுவும்: *முதல் நற்செய்தியை மத்தேயு தான் எழுதினார் என்றும் அவர் அரமேயிக்கு மொழியில் எழுதினார் என்றும் பாரம்பரியம் ஆதியிலிருந்து ஒருமுகமாகச் சான்று கூறுகிறது. இச்சான்று மிகத் தெளிவாக உள்ளது. ஆனால், மத்தேயு அரமேயிக்கில் எழுதிய நற்செய்தி நமக்குக் கிடைக்கவில்லை. நாம் கொண்டிருக்கும் வடிவில், மத்தேயு எழுதிய நற்செய்தி கிரேக்க மொழியில் எழுதப்பெற்றுள்ளது. அரமேயிக்கு மொழி நற்செய்திக்கும், கிரேக்க மொழி நற்செய்திக்கும் உள்ள தொடர்பு என்ன என்று அறிவது அவசியம். அதற்குமுன் பாரம்பரியம் கூறுவது என்ன என்று பார்ப்போம்.*

பாப்பியஸ் (கி.பி. 130 இறப்பு): ''மத்தேயுவும் (ஆண்டவருடைய) சொற்பொழிவுகளை (அல்லது வார்த்தைகளை) அரமேயிக்கு மொழியில் ஒழுங்கு முறையோடு சேகரித்தார்..... அதை மற்றவர்கள் தங்களால் முடிந்த மட்டும் மொழி பெயர்த்தனர்''.

இரனேயஸ் (கி.பி. 203 இறப்பு): ''பேதுருவும் பவுலும் உரோமையில் போதித்து, அங்குத் திருச்சபையை நிறுவிய காலத்தில், மத்தேயு, எபிரேய (அரமேயிக்கு) மொழியில் நற்செய்தியை எழுதினர்''.

ஓரிசன் (கி.பி. 185-254): ''சுங்கவரி வசூலிப்பவரும் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலருமான மத்தேயுவால், மனந்திரும்பிய யூதர்களுக்கென அரமேயிக்கு மொழியில் முதல் நற்செய்தி எழுதப்பெற்றது''.

யுசேபியு (கி.பி. 263-340): ''மத்தேயு, எபிரேய மொழியில் (அதாவது அரமேயிக்கில்) ஒரு நற்செய்தியை எழுதினார்''.

''அப்போஸ்தலரான மத்தேயு, பாலஸ்தீனத்தில் மனந்திரும்பிய யூதர்களுக்காக, அரமேயிக்கு மொழியில் ஒரு நற்செய்தி எழுதினார்'' என்று திருச்சபையின் பாரம்பரியம் தீர்ப்பு கூறுகிறது.

மேற்கூறியவற்றுள், பாப்பியசின் கூற்று பல ஆராய்ச்சிக்கும் தர்க்கங்களுக்கும், இடமளித்துள்ளது. ''மத்தேயு ஆண்டவருடைய வாக்குகளைச் சேகரித்தார்'' என்று கூறும் போது பாப்பியஸ் என்ன பொருள் கொண்

டார் என்பது நாம் அறிய வேண்டியதொன்றாகும். மேலும், மாற்கைப் போலல்லாமல், மத்தேயு ஒழுங்கு முறையுடன் எழுதியதாக அவர் கூறுகிறார். ஒருவேளை, ''ஒழுங்கு முறை'' என்பது கால வரைமுறையைக் குறித்திருக்கலாம். ஆனால், மத்தேயுவில் காணப்படுவதுபோல் காலவரை ஒழுங்கு மாற்கிலும், லூக்காவிலும் காணப்படுவதால் பாப்பியஸ் இவ்விதம் பொருள் கொண்டிருக்க முடியாது. ஆகையால், புதுமைகள், நிகழ்ச்சியுரைகள், வாதங்கள், பிற நிகழ்ச்சியுரைகள் ஆகியவற்றைக் கொண்ட, நாம் அறியும் மத்தேயுவின் நற்செய்தியையன்று, இயேசுவின் வாக்குகளின் தொகுப்பை மட்டுமே பாப்பியஸ் குறிக்கின்றார் என்றும், அதைப் பயன்படுத்தி முதல் மூன்று நற்செய்தியாளர்களும் தங்களது நற்செய்திகளை எழுதினர் என்றும் அறிஞர் பலர் கருதுகின்றனர்.

ஆனால் சந்தர்ப்பத்தைப் பொருத்திப் பார்த்தால், பாப்பியஸ் ஆண்டவருடைய வாக்குகளை மட்டுமல்ல, அவருடைய செயல்களையும் குறிப்பிடுகிறார் என்று கொள்ளவேண்டும். ஏனெனில், அவர் ''ஆண்டவருடைய வாக்குகளுக்கு விளக்கவுரை'' எழுதும்போது, ஆண்டவருடைய வாக்குகளையும் செயல்களையும் பற்றி எழுதுகிறார். பாரம்பரிய விளக்கப்படி, பாப்பியஸ் அரமேயிக்கில் எழுதப்பெற்ற மத்தேயுவைக் குறிக்கிறார் எனலாம். வேறு சிலர் பாப்பியசின் கிரேக்கமொழி அமைப்பையும் நடையையும் ஆராய்ந்து, ''மத்தேயு ஆண்டவருடைய வாக்குகளை அரமேயிக்கு மொழியில் சேகரித்தார்'' என்பதற்குப் பதிலாக ''அரமேயிக்கு மொழிநடையில் எழுதினார்'' என்று கொள்கின்றனர். இதன்படி மத்தேயு கிரேக்க மொழியில்தான் எழுதினார். ஆனால், அவரது கிரேக்க மொழி அரமேயிக்கு மொழிநடையையும் அமைப்பையும் கொண்டிருந்தது. ஆகையால், பாப்பியஸ் கிரேக்க மத்தேயுவைத்தான் குறிக்கிறார் என்பர். இந்த அரமேயிக்கு நடை கொண்ட கிரேக்க மொழி நற்செய்தியைத்தான், அரமேயிக்கு மொழியில் எழுதப்பட்டதாகப் பாப்பியஸ், இரனேயு ஆகியோர் கருதினர் என்பர் சிலர். ஆனால், ஓரிசன் ஒரு கடுமையான நுண்ணாய்வாளர். வெறுமனே பாப்பியசின் கூற்றை ஏற்று அதை மீண்டும் அவர் கூறவில்லை. பாரம்பரியம் முழுவதுமே மத்தேயு அரமேயிக்கு மொழியில் ஒரு நற்செய்தியை எழுதியதாகக் கருதுவதைத், தாமும் கருதுவதாகக் கூறுகிறார். யுசேபியு, வழக்கமாக, பாப்பியசின் சான்றை எளிதில் ஏற்றுக்கொள்பவர் அல்லர். ஆனால், இப்பிரச்சனையில் மட்டும் பாப்பியசின் சான்றை ஏற்றுக்கொள்வதாகத் தெரிகிறது.

மேற்கூறியவற்றிலிருந்து, மத்தேயு எந்த மொழியில் தமது நற்செய்தியை எழுதினார் என்று முடிவு காண்பது அரிதென்பது தெளிவு. மத்தேயு அரமேயிக்கு மொழியில் எழுதிய நற்செய்தியை ஒருவரும் பார்த்ததில்லை. ஆயினும், ஆதிப் பாரம்பரியம் அவர் அரமேயிக்கு மொழியில்தான் எழுதினார் என்று ஒருமுகமாக உறுதியாகக் கூறுகின்றது. இஃது உண்மையென்றால் இந்நூல் அப்போஸ்தலர்களின் போதகத்தின் சுருக்கமாக இருந்திருக்க வேண்டும்.

இனி, மத்தேயுவின் கிரேக்க நற்செய்திக்கு வருவோம். இந்நூல் முதல் நூற்றாண்டு முடிவிலே வழக்கில் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், ''திதாகே'' (கி.பி. *70-90 இடையில் எழுதப்பட்டது)* என்று அழைக்கப்படும் வேதவிளக்க நூலிலும், உரோமையில் வாழ்ந்த கிளமந்து (கி.பி. *101,* இறப்பு), அந்தியோக்கிய இஞ்ஞாசியார் (கி.பி. 117, இறப்பு) ஆகியோருடைய திருமுகங்களிலும் இந்நூலிலிருந்து மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன. அலக்சாந்திரியா கிளமந்தும், தேர்த்துல்லியனும், இந்நூலை மத்தேயுதான் எழுதினார் என்று கூறுகின்றனர்.

இக்கூற்று எவ்வளவு உண்மையானது? மத்தேயு எழுதிய அரமேயிக்கு நற்செய்தியை, ''ஒவ்வொருவரும் தங்களால் இயன்றமட்டும் மொழிபெயர்த்தனர்'' என்று கூறுகிறார் பாப்பியஸ். இப்படிப்

பட்ட மொழிபெயர்ப்புகளில் ஒன்றாக இருக்கக்கூடுமோ கிரேக்க மத்தேயு? ஆரா யுங்கால், அப்படி இருப்பதாகத் தோன்ற வில்லை. ஏனெனில், மத்தேயுவின் கிரேக்க மொழிச் சொல்லோட்டம் ஒரு மொழி பெயர்ப்பாகத் தோன்றவில்லை. மாறாக, கிரேக்க மொழியில் நேரடியாக எழுதப் பட்ட மாற்கைவிட மத்தேயுவின் கிரேக்க மொழிநடை மேலானது. சொற்களின் அமைப்பும் தொகுப்பும் கிரேக்க மொழிக்கே உரியனவாகும். இந்நூல் ஒரு மொழிபெயர்ப்பாக இருக்க முடியாது. இதில் எடுத்துக்காட்டாகக் கூறப்படும் பழைய ஏற்பாட்டு வசனங்கள் பல ''எழு பது நூல்'' என்ற கிரேக்கப் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பெற்றவை அல் லது அதைச் சார்ந்தவை. இவற்றிலிருந்து, இந்நூல் கிரேக்க மொழியிலேயே நேரடி யாக எழுதப்பட்டது, மொழிபெயர்ப்பன்று எனக் கொள்ளலாம். ஆனால், அரமேயிக்கு மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட ஒரு நூலை அடிப்படையாகக் கொண்டது எனலாம். ஏனெனில், இந்நூலில் மற்ற நற்செய்திகளை விட அதிகமாகச் செமித் திக்கு மரபும் சொற்களும் காணப்படுகின் றன (செமித்தியர் யூதர், பெனிசியர், அராபி யர், அசீரியர் ஆகியோரைக் கொண்ட பேரினம்). மத்தேயுவுக்கே உரிய பழைய ஏற்பாட்டு வசனங்கள் எபிரேயப் பழைய ஏற்பாட்டைச் சார்ந்தவையாகத் தோன்று கின்றன. ஆராயுங்கால், கிரேக்க மத்தேயு பல மூலங்களைச் சார்ந்துள்ளது. இவை: 1) அரமேயிக்கு மத்தேயுவிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட நூல், 2) மாற்கு எழுதிய நற்செய்தி, 3) மத்தேயுவுக்கும் லூக்காவுக் கும் பொதுவான மூலம் ஆகியவையாகும். இவை யாவும் கிரேக்க மூலங்கள் (நற்செய் தியின் மூல நூல்கள் பற்றியும், முதல் மூன்று வடிவ நற்செய்திகளின் ஒத்தமை இயல்பு பற்றியும் ஒத்தமை நற்செய்திகள் என்ற தலைப்பின் கீழ்க் காண்க). ஆகை யால் கிரேக்க மத்தேயு அரமேயிக்கின் நேரடி மொழிபெயர்ப்பு என்று கொள்ள முடியாது. ஆனால், மத்தேயு எழுதிய அரமேயிக்கு நூலை முழுவதும் தன்னுள் கொண்டது; அதனோடு ஒத்தது. ஆகையால் தான் இந்நூலை மத்தேயு எழுதியதாகப் பாரம்பரியம் ஏற்றுக்கொண்டுள்ளது.

அரமேயிக்கு மூல நற்செய்தியைப் புனித மத்தேயு எழுதினார் என்று பாரம்பரியம் கூறுகிறது. ஆனால், நாம் கொண்டிருக்கும் மத்தேயுவின் நற்செய்திக்கும் அப்போஸ் தலர் மத்தேயுதான் ஆசிரியரா? உறுதியாக ஒன்றும் கூற முடியாது. தொடக்கத்தில் சிறிது குழப்பத்தையும் ஐயத்தையும் உண் டாக்கலாம். இப்படி உறுதியாகக் கூற முடியாமை இன்றியமையாத ஒன்றன்று. அவ்வளவு முக்கியம் வாய்ந்ததுமன்று. இது பற்றி நாம் கவலைப்பட வேண்டுவ தில்லை. தாயாகிய திருச்சபை, இந்நற்செய் தியை அதிகார பூர்வமானதாகவும், அதன் ஆசிரியர் தேவ ஏவுதல் பெற்றவர் என்றும் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்நூலுக்கு ஆசிரி யர் யார் என்று தெரியாவிட்டாலும், மேற்கூறிய காரணத்தின் பொருட்டும் (வச திக்காகவும்), இந்நூலை மத்தேயு எழுதிய தாகக் கூறுவோம். பாரம்பரியமும் இவ் விதமே கூறிவந்துள்ளது அல்லவா?

4. ஆசிரியர் ஒரு யூதர், யூதர்களுக்கு எழுதுகிறார்; அவரது நோக்கம்: அரமே யிக்கு மத்தேயு அம்மொழி பேசிய யூதர் களுக்காக எழுதப்பட்டது என்றால், கிரேக்க மத்தேயு அம்மொழி பேசிய யூதர்களுக்காக எழுதப்பட்டது எனலாம். பாலஸ்தீன யூதர் களுக்காக மத்தேயு எழுதப்பட்டது என்றால் அதில் பாலஸ்தீன இயல்பும் சுவடுகளும் மற்ற நற்செய்திகளைவிட அதிகமாகக் காணப்பட வேண்டும். சிறிது ஆராய்ந்தால் இஃது உண்மையே என்று அறிகிறோம். மத்தேயு, மற்ற நற்செய்தியாளர்களைவிட, யூதர்களையும் பாலஸ்தீனத்தையும் சார்ந்து தம் நற்செய்தியை எழுதியுள்ளார். மறை நூல் அறிஞர்கள், பரிசேயர்கள் ஆகியோரு டன் இயேசு கொண்ட தொடர்பை அவர் அதிகமாக விவரித்துள்ளார். மத்தேயுதான் இயேசு சட்டத்தோடு கொண்ட தொடர்பைப் பற்றி அதிக சிரத்தை காட்டு கிறார். மாற்கிலும், லூக்காவிலும் கூறப் படாத யூதப் பழக்க வழக்கங்களை இவர்

கூறுகிறார் (மத் 5:19-31; 6:1-6. 16-18;12:5; 15:2-5;23:5. 23. 27). இப்பழக்க வழக்கங்களை அவருடைய வாசகர்களாகிய யூதர்கள் ஏற்கெனவே அறிந்திருந்ததால் அவர் இவற்றிற்கு விளக்கம் தராது கூறுகின்றார். இலக்கிய இயல்பை ஆராயுங்கால், பரிசேயர்களிடையே பழக்கத்தில் உள்ள சொற்களும் (6:1; 11:29; 16:17-19; 18:18) பாரம்பரியமான சொற்களும் (5:22; 10:25) செமித்திக்கு நடையும் இந்நூலில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை யாவும் இந்நூலை ஒரு யூதர், யூதர்களுக்காக எழுதுகிறார் என்று காட்டுகின்றன. இந்நூலைப் படிக்கும்போது இவ்வுண்மையை மனதில் கொள்ளுதல் மிக அவசியம்.

ஆசிரியரது நோக்கம் என்ன? இயேசுவே முன் அறிவிக்கப்பட்டவர் என்று யூதர்களுக்குக் காட்ட ஆசிரியர் விழைகிறார். இதை எண்பிக்கப் பல பழைய ஏற்பாட்டு வசனங்களைச் சான்றாக எடுத்துக் கூறுகிறார். இயேசுவை ஏற்க மறுத்ததால், யூதர்கள் மெசியாவினால் ஏற்பட்டுள்ள மீட்பிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றனர். இந்நோக்குடன் இந்நூலை ஆராய்ந்தால், இது யூதக் கிறிஸ்தவர்களுக்காகவும் யூதர்களுக்காகவும் எழுதப்பட்டது எனத் தெரிகிறது. இவர்கள் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தனர். ஆகையால், இந்நூல் எழுத்து வடிவம் எடுத்த இடமும் பரிசுத்த நாடான பாலஸ்தீனமாயிருத்தல் வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர்.

இந்நூலில் காணப்படும் பூகோள அறிவு, இட விவரங்கள், அரசியல் நிறுவனங்கள், கட்சிகள், சமய சமூகப் பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றிய அறிவு முதலியவைகளை நோக்கும்போது இந்நூலின் ஆசிரியர் ஒரு பாலஸ்தீன யூதராய் இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இந்நூலாசிரியரிடம், பொருளாதாரக் காரியங்களில் வரி வசூலிப்போருக்கு இருக்க வேண்டிய அறிவைக் காணலாம். பணம், நாணயம் பற்றிய செய்திகள், மற்ற நற்செய்திகளில் காணப்படுவதைவிட, இந்நூலில் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்நூலில் மட்டும் தான், மாற்கும் லூக்காவும் லேவி என்று குறிக்கும் ஆயக்காரர்தான் மத்தேயு என்று குறிக்கப்படுகிறது (9:9). இந்நூலின் அப்போஸ்தலர் பட்டியலில் மத்தேயு ஆயக்காரர் என்று அழைக்கப்படுகிறார் (10:3). அதனோடு, இந்நூலாசிரியர், பரிசேயருக்கு மாறான இயேசுவின் கொள்கைகளையும் நிகழ்ச்சிகளையும் கூறுவதுடன், பாவிகளிடமும் ஆயக்காரரிடமும் இயேசு காட்டிய பரிவையும், இரக்கத்தையும், மிகுந்த சிரத்தையுடன் எடுத்துக்கூறுகிறார் (9:13; 9:2; 11:19; 21:31).

இவற்றையெல்லாம் நோக்கின், மத்தேயு, ஒரு யூதக்கிறிஸ்தவரால், யூதக் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்ட நூல் என்று ஐயமின்றிக் கூறலாம். ஆசிரியர் பாலஸ்தீனத்தைச் சார்ந்தவர்; அவர் பாலஸ்தீனத்தைச் சார்ந்தவர்களுக்கே எழுதினார்.

5. எப்போது எழுதப்பட்டது?: மத்தேயுவின் நற்செய்தி எப்போது எழுதப்பட்டது என்பது பற்றி பாரம்பரியம் ஒன்றுமில்லை. நமக்குக் கிடைத்துள்ள சான்றுகளும் பரிசீலனைக்கு உகந்தவைகளாகவும் இல்லை. இயேசு ஏறக்குறைய கி.பி. 30-இல் மரித்தார் என்றால், வாய்மொழிப் பாரம்பரியத்தின் வளர்ச்சியை மனதில் கொண்டால், அரமேயிக்கு மத்தேயு கி.பி. 40-50-இல் எழுதப்பட்டிருக்கலாம். அதன் கிரேக்க வாசகம் அதற்குப்பின் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

திருச்சபைத் தந்தையர்களுள் ஒருவரான யுசேபியு, மத்தேயு அப்போஸ்தல அலுவல் பொருட்டு பாலஸ்தீனத்தை விட்டுச் செல்லுமுன், அரமேயிக்கு நற்செய்தியை எழுதியதாகக் கூறுகிறார். இந்தப் பாரம்பரியம் எப்போது யாரால் தொடங்கப்பட்டது, இதன் உண்மை என்ன என்பனவற்றுள் ஒன்றையும் அறுதியிட்டுச் கூற முடியாது. இப்பாரம்பரியம் உண்மையானால், அரமேயிக்கு நற்செய்தி ஏறக்குறைய கி.பி. 42-இல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இரனேயு வழியாக வரும் மற்றொரு பாரம்பரியச் செய்தியுள்ளது. இதன்படி, பேதுரு, பவுல் ஆகியோர் உரோமையில்

திருச்சபையை நிறுவியபோது, அதாவது ஏறக்குறைய கி.பி. 60-ஐ ஒட்டி, மத்தேயு நமது நற்செய்தியை எழுதியதாகக் கொள்ள வேண்டும். இந்தப் பாரம்பரியம் யுசேபியுவின் பாரம்பரியத்தைவிடக் காலத்தால் முந்தியது. இஃது ஒருவேளை, கிரேக்க மத்தேயுவைக் குறிக்கலாம். நாம் முன்பு கூறியபடி, கிரேக்க மத்தேயு மாற்கைச் சார்ந்து எழுதப்பட்டிருந்தால், அது கி.பி. 65-க்கு முன் எழுதப்பட்டிருக்க முடியாது. ஏனெனில், ஆராய்ச்சியாளர் கருத்துப்படி, இவ்வாண்டை ஒட்டி, மாற்கு தமது நற்செய்தியை எழுதியிருக்க வேண்டும். மத் 22:7 தொ; 24:15-20 ஆகிய வசனங்களை மனதில் கொண்டு, நமது விவிலிய அறிஞர் சிலர், கி.பி. 70-க்கு முன்னும், மற்றும் சிலர் அதற்குப் பின்னும், மத்தேயு எழுதப்பட்ட காலத்தைக் கணிக்கின்றனர். இந்தக் காலப் பிரச்சனையை நன்கு ஆராய்ந்த அறிஞர்கள், கிரேக்க மத்தேயு கி.பி. 65-க்கு முன்னும் கி.பி. 80-க்குப் பின்னும் எழுதப்பட்டிருக்க முடியாது என்று கூறுகின்றனர். இடையிட்ட காலத்தில் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இக்காலப் பிரச்சனையை நாம் தெளிவாகவும் உறுதியாகவும் தீர்க்க முடியாது. இப்பிரச்சனை அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததுமன்று. யார் எழுதினாலும், எப்போது எழுதினாலும் என்ன? நமது நற்செய்தியின் நான்கு வடிவங்களும் அப்போஸ்தலர் காலத்தியத் திருச்சபையின் போதனையைக் கொண்டிருக்கின்றன. அக்காலத் திருச்சபையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டு, பிற்காலத்தில் திருச்சபையால் போற்றப்பெறுகின்றன.

யார் எழுதியது, எப்போது எழுதப்பட்டது என்ற பிரச்சனைகளை எழுப்பி, ஓர் அறுதியற்ற நிலையோடு முடிக்கிறோம். இதைக் கண்டு சிலர் மனத்தளர்ச்சி அடையக்கூடும். இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது அவ்வளவு எளிதன்று; இவை நமக்கு அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையுமன்று. இனி வரும் பகுதிகளில் மத்தேயுவின் நற்செய்தியைச் சிறிது ஆராய்வோம். இந்நூலின் பிரிவுகள், பொருளடக்கம், இலக்கிய அமைப்பு, சிறப்பியல்புகள், இறையியல் கொள்கைகள், சிறப்புப்போதகங்கள் ஆகியவை பற்றிப் பார்ப்போம். இவை இந்நூலை உய்த்துணரப் பெரிதும் பயன்படும்.

6. பிரிவுகளும் பொருளடக்கமும்: இந்நற்செய்தியின் பிரிவுகளைப் பலர் பல கோணங்களில் நோக்குவர். நாம் இதை விண்ணரசின் வருகையைப் பற்றிய ஏழு காட்சி கொண்ட ஒரு மாபெரும் நாடகமாக நோக்குவோம்.

I இயேசுவின் பிறப்பும் குழந்தைப் பருவமும் (அதி. 1-2).

மீட்பரின் பகிரங்கப் பணியாகிய வரலாற்றிற்கு முன்னுரையாக அமைந்துள்ளது.

1:1-17 சட்ட முறைப்படி இயேசுவின் தந்தையான யோசேப்பின் மரபுமுறை செயற்கை முறையில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் 14 பேர்களைக் கொண்ட மூன்று பட்டியலைக் கொண்டுள்ளது.

1:18-25 கன்னியிடம் வியத்தகு முறையில் இயேசு பிறந்தது.

2:1-12 ஞானிகளின் வருகை.

2:13-18 எகிப்திற்குச் சென்றதும் குழந்தைகள் கொலையுண்டதும்,

2:19-23 எகிப்திலிருந்து திரும்பியது.

II விண்ணரசு அறிவிக்கப்படல் (அதி. 3-7).

அ) இயேசுவின் திருப்பணிக்கு ஆயத்தம்.

3:1-12 திருமுழுக்கு யோவானின் போதகம்.

3:13-17 இயேசுவின் திருமுழுக்கு.

4:1-11 இயேசு சோதிக்கப்படுதல்.

ஆ) கலிலேயாவில் பணி தொடங்கல்.

1. முதல் நிகழ்ச்சியுரை:

4:12-17 பணியின் தொடக்கம்.

4:18-22 முதல் சீடரை அழைத்தல்.

4:23-25 அருஞ்செயல்கள்.

2. முதல் அறவுரை - மலைப்பொழிவு; விண்ணரசின் உரிமைப்பத்திரம், பேரறிக்கை:

5:1-12 பேறுபெற்றோர்.

5:13-16 சீடர்களின் அழைத்தலின் தன்மை.

5:17-48 இயேசுவும் சட்டமும்; ஆறு எதிர் நிலைகள்; நீதி.

6:1-18 பிச்சையிடுதல், செபித்தல், நோன்பு இருத்தல்.

6:19-34 உண்மைச் செல்வம்; விண் ணரசைத் தேடுதல்.

7:1-5 தீர்ப்பிடல்.

7:6-11 நம்பிக்கையோடு செபித்தல்.

7:12 பொன்விதி.

7:13-14 இருவழிகள்.

7:15-20 போலி இறைவாக்கினர்.

7:21-29 தன்னையே ஏமாற்றிக் கொள்ளல்; உவமை.

III விண்ணரசு போதிக்கப்படுகிறது (அதி. 8-10)

1. இரண்டாவது நிகழ்ச்சியுரை:

8:1-15 மூன்று புதுமைகள் : தொழுநோயாளி, நூற்றுவர் தலைவனது ஊழியன், பேதுருவின் மாமியார் ஆகியோர் குணமடைதல்.

8:16-22 இரு நிகழ்ச்சிகள் : இயேசுவைப் பின்பற்றுதல்.

8:23-9 மூன்று புதுமைகள்: புயலை அடக்குதல்; பேய் பிடித்தவர் களையும், திமிர்வாதக்காரனையும் குணமாக்குதல்.

9:9-17 இரு நிகழ்ச்சிகள் : மத்தேயுவை அழைத்தல்; நோன்பு பற்றிய தர்க் கம்.

9:18-34 நான்கு புதுமைகள் : சிறுமி உயிர்த்தது; பெரும்பாடுள்ளவள், இரு குருடர், ஊமையன் ஆகியோர் குணமடைதல்.

இந்நிகழ்ச்சியுரைப் பகுதி முதல் அறவுரையையும், இரண்டாம் அறவுரையையும் இணைக்கிறது. நற்செய்தியாளர் பத்து அருஞ்செயல்களை விவரிக்கின்றார். இவை, எதிர்பார்த்த அரசு, கிறிஸ்துவால் உரிமைப்பத்திரம் அளிக்கப்பட்ட அரசே என்று நிரூபிக்கின்றன. இவை கிறிஸ்து அருஞ்செயல் செய்ய வல்லவர் என்று காட்டுகின்றன. இவற்றால் மக்களிடையே எழும்பிய ஆர்வத்தைக் காண்கிறோம். ...ினும், இவர்கள் ஆயனில்லா ஆடுகள். மக்களின் இந்த அவல நிலையில், அப்போஸ்தலத்துவத்தின் அவசியத்தை வாசகர்கள் கண்டுணரும்படி 9:35-38 என்ற பகுதி அமைகிறது.

2. இரண்டாம் அறவுரை:

அதிகாரத்துடனும் வல்லமையுடனு் அப்போஸ்தலர்களை வேதபோதக அலுவலுக்கு இயேசு அனுப்புகிறார். அவ்வா.. யம் வேதபோதகத்தைப் பற்றி அவர்களுக்கு இயேசு அளித்த அறவுரைகள்.

10:1-16 பன்னிருவரை அனுப்பியதும் அறவுரையும்.

10:17-25 அப்போஸ்தலர் துன்புறுவர்.

10:26-39 அஞ்சாது கிறிஸ்துவுக்குச் சாட்சி கூறுதல்.

10:40-11:1 முடிவுரை.

IV விண்ணரசுக்கு எதிர்ப்பு: அரசின் தன்மை (அதி. 11-18:52).

1. மூன்றாம் நிகழ்ச்சியுரைப் பகுதி:

11:2-19 திருமுழுக்கு யோவானின் கேள்வியும் இயேசுவின் பதிலும்; இயேசு யோவானைப் போற்றுதல்.

11:20-24 கலிலேயா நகரங்களுக்குச் சாபம்.

11:25-30 இயேசுவும் அவரது தந்தையும்; மீட்பிற்கு அழைத்தல்.

12:1-14 ஓய்வுநாள் பற்றிய இரு தர்க்கங்கள்.

12:15-21 இயேசு விலகிச் செல்லல்.

12:22-37 இயேசுவும் பெயல்செபூலும்; பரிசேயருடன் தர்க்கம்.

12:38-42 அருங்குறி அளிக்க மறுத்தல்.

12:43-45 பின்னைய நிலை முன்னைய நிலையினும் மோசமானது. எச்சரிக்கை.

12:46-50 இயேசுவின் உண்மையான உறவினர்.

இப்பகுதி மூன்றாவது அறவுரைக்கு இட்டுச் செல்லுகிறது. மூன்றாவது அறவுரையிலே, தாழ்ச்சியுடையோர், இதயத் துக்கமுள்ளோர், நேர்மையுடையோர், பக்திமான்கள் ஆகியோர் கடைப்பிடித்து வாழும் தெய்வீகமறை உண்மையே விண்ணரசு என்று காண்கிறோம். அவ்விண்ணரசிலே அகந்தையுடையோர்க்கும், போலிப் பக்தியுடையோர்க்கும் இடமில்லை. இவர்களால் தெய்வீக மறை உண்மைப்படி வாழமுடியாது. ஆகையால் இத்தன்மைத்தோர் கிறிஸ்துவுக்கும் அவரது போதகத்திற்கும் எதிராக எழுவது இயல்பு. விண்ணரசைச் சார்ந்தவர்களுக்கும், அதன் எதிரிகளுக்கும் உவமை வாயிலாகவே போதிக்கக் காரணமாகிறது பரிசேயரது எதிர்ப்பு. கிறிஸ்து தம்மையே மெதுவாக வெளிப்படுத்துவது கண்டு திருமுழுக்கு யோவான் கூட வியப்பில் ஆழ்கிறார்; ஐயம் கொள்கிறார். இப்பகுதியில் பரிசேயர் காட்சியில் நுழைகின்றனர். அவர்களுக்கு எதிரான நிலையைக் கிறிஸ்து தெளிவாகக் கையாள்கிறார். இறுதியாக இயேசுவின் உறவினர் கூட அவர்மேல் நம்பிக்கையற்றவர்களாகக் காட்சி அளிக்கின்றனர்.

2. மூன்றாம் அறவுரை - உவமைகள்:

13:1-3 முன்னுரை.

13:4-9 விதைப்பவன் உவமை.

13:10-17 உவமை மூலம் போதிப்பது ஏன்?

13:18-23 விதைப்பவன் உவமையின் விளக்கம்.

13:24-30 கோதுமையிடையே களைகள்.

13:31-33 கடுகு விதை, புளித்தமாவு - உவமைகள்.

13:34-43 கோதுமையிடையே களைகள் என்ற உவமைக்கு விளக்கம்.

13:44-50 புதையல், முத்துக்கள், மீன்வலை ஆகிய உவமைகள்.

13:51-52 முடிவுரை.

இவ்வுவமைகள் விண்ணரசின் தன்மையை விவரிக்கின்றன. அதன் எளிமையையும் மறைந்த தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றன. அரசைச் சேர்ந்தவர்களை அதனோடு சேராதவர்களிடமிருந்து பிரித்துக் காட்டுகின்றன. தேசியப்பற்றுடைய மெசியாத் தன்மையை ஏற்க மறுத்து அதற்கு மாறான தன்மையை விளக்குகின்றன. பின் விசுவாசிகள் மட்டுமே அறிந்து கொள்ளும் விதத்தில் போதகம் அளிக்கப்படுகிறது.

V **விண்ணரசின் தொடக்கம்** (அதி. 13:53-18:35)

1. நான்காம் நிகழ்ச்சியுரைப் பகுதி:

13:53-58 நசரேத்தூரார் இயேசுவை ஏற்க மறுக்கின்றனர்.

14:1-12 திருமுழுக்கு யோவான் கொல்லப்பட்டது.

14:13-15:20 ஐயாயிரம் பேருக்கு உண்டியளித்தல், ஏரியின் மீது நடத்தல், புதுமைகள், தர்க்கங்கள்.

15:21-16:12 வட பாலஸ்தீனத்தில் இயேசு, புதுமைகள், நாலாயிரம் பேருக்கு உணவு அளித்தல், தர்க்கம், எச்சரிக்கை.

16:13-20 பேதுருவின் விசுவாச அறிக்கை.

16:21, 17:27 பாடுகளை முதன்முறையாக முன்னறிவித்தல், ஒளியுருவாதல், பேயோட்டல், இரண்டாம் முறையாகப் பாடுகளை முன்னறிவித்தல், கோவில் வரி செலுத்துதல்.

இப்பகுதி மூன்றாம் அறவுரையின் முடிவுரையாகவும், நான்காம் அறவுரைக்குத் தயாரிப்பாகவும் அமைந்துள்ளது. உவமைகளின் வழியாய் விண்ணரசின் தன்மை உணர்ந்த சிலர், இயேசுவோடு கொண்டிருந்த தொடர்பை அறுத்துக் கொண்டனர். இதுவரை இயேசுவைப் போற்றியவர்கள் இப்போது பிரிந்து சென்றனர். அவரிடம் மக்கள் முன்போல் உற்சாகமும் ஆர்வமும் கொள்ளவில்லை. கிறிஸ்துவே பின் வாங்குபவர் போலத் தோன்றுகிறார் (13:53). மக்கள் சலுகையிலிருந்து வீழ்ந்து விட்டவரைப் போன்று ஒதுங்கி வாழ்கிறார். தமது அப்போஸ்தலர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும், அவர்களுக்குப் போதிப்பதிலும், திருச்சபை அமைப்பதிலும் தமது கவனத்தைச் செலுத்துகிறார். இருமுறை உணவுப் பொருளைப் பெருக்கிப் பலருக்கு உண்டியளிக்கிறார். பிலிப்புச் செசரியாவில் அப்போஸ்தலர் பெயரால் சீமோன் பேதுரு விசுவாச அறிக்கையிடுகிறார். திருச்சபைக்கு அடிக்கல் இடப்படுகிறது. பேதுருவின் முதன்மையை எடுத்துக்காட்டும் பொருட்டு நீரின்மேல் நடத்தல், ஆலய வரி செலுத்துதல் ஆகிய புதுமைகள் நடைபெறுகின்றன. இருமுறை தமக்கு வரவிருக்கும் தாழ்வு, இகழ்ச்சி, பாடுகள், உயிர்ப்பு, சிறப்பு ஆகியவற்றைப் பற்றி தமது சீடர்களுடன் இயேசு பேசுகிறார். அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், தம்மைப்பற்றியவைகளை அவர்கள் அறியும்படிக்கும், சிறப்புச் சலுகை பெற்ற மூன்று அப்போஸ்தலர்களுக்கு மட்டும், ஒளியுருவாகித் தமது மகிமையோடு தம்மையே வெளிப்படுத்துகிறார். இப்பகுதியானது பேதுரு விசுவாச அறிக்கை, பாடுகளை முன்னறிவித்தல், இயேசு ஒளியுருவாதல் ஆகியவற்றில் உச்சநிலை அடைகிறது.

2. நான்காம் அறவுரை - திருச்சபை பற்றிய பொழிவு:

18:1-4- முதன்மை பற்றி அப்போஸ்தலர்களுக்குள் தர்க்கம்.

18:5-11 இடறலாய் இருப்போர்க்கு ஓர் எச்சரிக்கை.

18:12-14 உவமை - காணாமற்போன ஆடு.

18:15-18 சகோதரனைத் திருத்தல்.

18:19-22 பொதுச் செபமும் குற்றங்களை மன்னித்தலும்.

18:23-35 இரக்கமற்ற ஊழியன் உவமை.

இப்பகுதி இயேசுவைப் பின்பற்றுவோருக்கு அளிக்கப்படும் அறவுரையாகும். தாம் அடிக்கல் இட்ட சமூகத்திற்குக் கிறிஸ்து சட்டம் அளிக்கின்றார். அதன் அங்கத்தினரிடையே இருக்க வேண்டிய உறவு பற்றியும் விவரிக்கின்றார். அப்போஸ்தலர்களுக்கு, தாழ்ச்சி, அன்பு, ஒருவர்க்கொருவர் உதவி செய்தல் ஆகியவை பற்றிப் போதிக்கின்றார். அப்போஸ்தலர்களாகிய இச்சிறு மந்தைவழியாக விண்ணரசு வளரும். இயேசு மரித்தோரிடமிருந்து உயிர்த்தபின் இவர்கள் வழியாக விண்ணரசு உலகெங்கும் பரவும்.

VI விண்ணரசின் இறுதித் தோற்றத்திற்கு முன் வரவேண்டிய நெருக்கடி நிலை (அதி. 19-25).

1. ஐந்தாம் நிகழ்ச்சியுரைப் பகுதி:

19:1-2 கலிலேயாவில் பணி முடிந்து யூதேயாவில் பணி தொடங்குகிறது.

19:3-12 மணமுறிவும் கன்னிமையும்.

19:13-15 இயேசுவும் குழந்தைகளும்.

19:16-26 பணக்கார வாலிபன்.

19:27-30 இயேசுவைப் பின்பற்றுவோர்க்குப் பரிசு.

20:1-16 திராட்சைத் தோட்ட ஊழியர்கள் - உவமை.

20:17-19 மூன்றாம் முறையாகப் பாடுகளை முன்னறிவித்தல்.

20-20-35 செபதேயுவின் மக்கள்; இரு குருடர் குணமாதல்.

21:1-11 எருசலேமில் பணி தொடங்குகிறது; குருத்து ஞாயிறு.

21:12-17 ஆலயத்தைச் சுத்தி செய்தலும், சிறுவர்களின் ஆரவாரிப்பும்.

21:18-22 காய்க்காத அத்திமரம்.

21:23-27 தர்க்கம் - இயேசுவின் அதிகாரம்.

21:28-22:14 மூன்று உவமைகள்: இரு மக்கள், கொடிய குத்தகைக்காரர்கள், திருமண விருந்து.

22:15-46 தர்க்கங்கள் : சேருக்கு வரி செலுத்தலாமா? உயிர்த்தெழுதல் உண்டா? சட்டத்தில் பெரிய கட்டளை யாது? மெசியா தாவீதின் மகனும் ஆண்டவருமாய் இருப்பது எப்படி?

23:1-36 பரிசேயரின் வெளிவேடத்தைக் கண்டித்தல்.

23:37-39 எருசலேமைக் கண்டித்தல்.

இப்பகுதி ஐந்தாம் அறவுரைக்கு இட்டுச் செல்கிறது. இயேசு தமது எருசலேம் பயணத்தின்போது மணமுறிவு, கன்னிமை, செல்வம் ஆகியவை பற்றி தமது கருத்தைத் தெரிவிக்கின்றார். பாடுகளை மூன்றாம் முறையாக முன்னறிவித்துத் தமது பயணத்தின் நோக்கம் என்ன என்று எடுத்துக்காட்டுகிறார். இரு குருடர்களைக் குணமாக்குகிறார். எருசலேமில் நுழைந்து, ஆலயத்தைச் சுத்தி செய்கிறார். கனிகொடாத அத்திமரத்தைச் சபிக்கிறார். பரிசேயருக்கும் அவருக்குமிடையே தர்க்கங்களும் வாதங்களும் வலுக்கின்றன. இயேசு, யாவரும் அறிய பரிசேயர்களைக் கண்டிக்கிறார். இருவருக்குமிடையே நெருக்கடி நிலை மிகுகின்றது. ஓர் உச்சநிலையை நோக்கி இவ்வாழ்க்கைச் சித்திரம் இயங்குகிறது. இயேசு பரிசேயர்களைக் கண்டித்துச் சபித்தல், அவரே தமது சாவுத்தீர்ப்பிற்கு வழி கோலுகிற மாதிரி அமைகிறது.

2. ஐந்தாம் அறவுரை - இறுதிக்காலம் பற்றிய பொழிவு

24:1-3 அறவுரையின் சந்தர்ப்பம்.

24:4-14 முடிவின்முன் அடையாளங்கள்.

24:15-22 துன்பங்களின் உச்சநிலை; எருசலேமின் அழிவு.

24:23-31 போலி இறைவாக்கினரும், மனுமகனின் வல்லமை மிகுந்த வருகையும்.

24:32-36 இவை எப்போது நிகழும்?

24:37-25:30 விழிப்பாயிருங்கள்; உவமைகள் : இரவில் திருடன்; பிரமாணிக்கமற்ற மேற்பார்வையாளன்; பத்துக் கன்னியர்; தாலந்து (பணம்).

25:31-46 பொதுத்தீர்வை.

தாம் பரிசேயர்களைக் கண்டித்ததால் வரக்கூடிய விளைவுகளிலிருந்து அப்போஸ்தலர்களின் கவனத்தை அகற்றி, விண்ணரசு இறுதியில் எவ்வாறு பெறப்படுகிறது என்பது பற்றிப் பேசுகிறார் இயேசு. புதிய ஏற்பாட்டிலே மறை பொருள் மிகுந்த இறுதிக்காலம் பற்றிப் பேசுகிறார். பழைய சட்டத்தின் மக்கள் இயேசுவை ஏற்க மறுத்ததும், கிறிஸ்துவை விசுவசிக்கும் மக்களைத் தேர்ந்தெடுத்தலும், எருசலேமின் அழிவும், இறுதித் தீர்ப்பும் ஆகிய இரட்டைக் கருத்துக்கள் பின்னிப் பிணைந்து விவரிக்கப்படுதலும் இப்பகுதியில் காண்கிறோம். யாவரும் விழிப்பாய் இருக்க வேண்டியதன் அவசியம் அழுத்திக் கூறப்படுகிறது.

VII **விண்ணரசின் வருகை - முடிவுரை** *(அதி. 26-28)*

அ) 26:1-5 இயேசுவைக் கொல்ல யூத நீதிமன்றம் முடிவு செய்கிறது.

26:6-16 பரிமளத்தைலம் பூசுதலும், யூதாசின் சதியும்.

26:17-35 இயேசுவின் இறுதிப் பாஸ்கு விழா; இறுதி இரவுணவு; பேதுருவுக்கு எச்சரிக்கை.

26:36-46 கெத்சமனித் தோட்டத்தில்.

ஆ) 26:47-75 இயேசு பிடிபடல், நீதிமன்றம் இயேசுவை விசாரணை செய்தல், தலைமைச் சங்கம் விசாரித்தல், பேதுரு மறுதலித்தல்.

இ) உரோமையர் நீதிமன்றம் இயேசுவை விசாரணை செய்தது.

27:1-2 இயேசு பிலாத்துவிடம் கையளிக்கப்படுகிறார்.

27:3-10 யூதாசின் சாவு.

27:11-26 விசாரணையும் மரணத் தீர்ப்பும்.

27:27-31 வீரர்கள் இயேசுவை எள்ளி நகையாடுதல்.

27:32-56 சிலுவைப்பாதை, சிலுவையில் அறைதல், இயேசு உயிர் நீத்தல்.

27:57-66 இயேசுவின் அடக்கமும், கல்லறைக்குக் காவல் இட்டதும்.

ஈ) இயேசுவின் உயிர்ப்பும் முடிவுரையும்.

28:1-8 வானதூதர் பெண்களுக்கு உயிர்ப்பை வெளியிடுதல்.

28:9-11 இயேசு பெண்களுக்குத் தோன்றுதல்.

28:11-15 யூதர்களது சூழ்ச்சி.

28:15-20 இயேசு அப்போஸ்தலர்களுக்குத் தோன்றலும், யாவருக்கும் போதிக்கப் பணித்தலும்.

கிறிஸ்துவின் பாடுகள், மரணம், வெற்றி உயிர்ப்பு முதலியவைகளின் வழியாக விண்ணரசு உலகிற்கு வருகிறது. அங்கு நிலவுகிறது, வளருகிறது, விண்ணக எருசலேமாக வளர்ந்து கொண்டே இருக்கிறது.

மேற்கூறப்பட்ட பிரிவுகளில் பால பருவமாகிய முதற் பகுதியையும், பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய இறுதிப் பகுதியையும் நீக்கிவிட்டு, மத்தேயு எழுதிய நற்செய்தியை நோக்கின், அஃது ஐந்து பாகங்களைக் கொண்டதாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு பாகமும் ஒரு நிகழ்ச்சியுரைப் பகுதியையும் ஓர் அறவுரைப் பகுதியையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு அறவுரைக்கும் சுருக்கமான முன்னுரை ஒன்றுளது; மத் 5:12; 10:1-5; 13:1-3; 18:1-2; 24:1-3. ஒவ்வொரு அறவுரையும், ''இயேசு இவ்வார்த்தைகளைச் சொல்லி முடித்ததும்....'' என்று ஏறக்குறைய ஒரே விதமாய் முடிகின்றது (மத் 7:28; 11:1; 13:53; 19:1; 26:1). பரிசேயர், மறைநூலறிஞர் ஆகியோரைப்பற்றிய கண்டனத்தைக் கொண்டுள்ள 23-ஆம் அதிகாரம் இத்திட்டத்தில் சரியாகப் பொருந்துவதாகத் தெரியவில்லை. 24-25-ஆம் அதிகாரங்களில் வரும் அறவுரையும் 19-22-ஆம் அதிகாரங்களில் வரும் நிகழ்ச்சியுரையும் சேர்ந்ததாக இருக்கிறது. 23-ஆம் அதிகாரத்தை நற்செய்தியாளர், தாம் வகுத்த முதல் திட்டத்துள் வேண்டுமென்றே புகுத்தியுள்ளதாகக் கருதுகின்றனர் அறிஞர்கள். விவிலியத்தின் முதல் ஐந்து புத்தகங்களாகிய ''ஐந்நூலைப்'' பின்பற்றி, நற்செய்தியாளர் தமது நற்செய்தியை இவ்வாறு ஐந்து பெரும் பிரிவுகளாக எழுதியுள்ளனர் என்றும் சிலர் கருதுகின்றனர். இவ்வைந்து பிரிவுகளும் தொடர்பற்ற பகுதிகள் அல்ல. இவற்றிடையே நெருங்கிய தொடர்புள்ளது. நிகழ்ச்சியுரைப் பகுதிகள், கிறிஸ்துவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை முறையாக எடுத்துக் கூறுகின்றன. அறவுரைப் பகுதிகளோ விண்ணரசைப் பற்றிய மெசியாக் கொள்கையைத் தெளிவாக விளக்குகின்றன. நிகழ்ச்சியுரைப் பகுதிகள் அறவுரைப் பகுதிகளை இணைக்கும் பகுதிகளாகவும், அவற்றிற்கு விளக்கமாகவும் அமைந்துள்ளன. மத்தேயு எழுதிய இயேசுவின் நற்செய்தியைக் கவனத்துடன் வாசித்தால் இதனை நன்கு உணரலாம். மேற்கூறிய ஐந்து பகுதிகளையும் கருத்தில் கொண்டால், இதற்கு ''விண்ணரசு பற்றிய போதகமும் அதன்

வெளிப்பாடும்'' என்ற தலைப்பைக் கொடுக்கலாம். அறவுரைகளுக்குச் சிறப்பு அளித்திருப்பது, மற்றப் போதகர்களை விட இயேசு மேலானவர் என்று காட்ட மத்தேயு விழைகிறார் என்பதைக் காட்டுகிறது.

7. இலக்கிய நயமும் சிறப்பியல்புகளும்: மத்தேயுவின் கிரேக்கநடை, மாற்கின் கிரேக்க நடையைவிடச் சிறந்தது. நிகழ்ச்சியுரைப் பகுதியில், அறவுரைப் பகுதியை விட, ஆசிரியரது கிரேக்கநடை சிறந்து விளங்குகிறது. நிகழ்ச்சியுரைப் பகுதிகளை விட, அறவுரைப் பகுதிகளில் அரமேயிக்கு நடையும், அரமேயிக்குப் போக்கும் அதிகமாயுள்ளன. இஃது அரமேயிக்கு மூலத்தைச் சுட்டிக்காட்டுவதாகத் தெரிகிறது. மாற்கு அரமேயிக்கு வார்த்தைகளுக்கு விளக்கம் தருவார். ஆனால், மத்தேயு யூதர்களுக்கு நற்செய்தியை எழுதினார். ஆகையால், அரமேயிக்கு சொற்களுக்கு விளக்கம் தருவதில்லை.

மத்தேயு எழுதிய நற்செய்தியில் ''செமித்திக்கு'' நடை பரவிக் கிடக்கிறது. அதற்குச் சான்றுகள்: 1) தூண்டுசொல் பயன்படுத்துதல் (சிறார்கள் 18:4-6; ஒளி-விளக்கு 5:14; போன்றவை). 2) எண் தொகுப்புகள்: இயேசுவின் மரபு முறை கூறுங்கால் 14 பேர் கொண்ட மூன்று தொகுப்புகள். இந்நூலை ஏழு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்; ஆண்டவரது செபத்தில் ஏழு மன்றாட்டுகள்; உவமைப் பொழிவில் ஏழு உவமைகள்; பரிசேயருக்கு மாறாக ஏழு கேடுகள்; எழுபதுதடவை ஏழுமுறை பாவங்களை மன்னிக்க வேண்டும்; இயேசுவின் சோதனைகள் மூன்று; இவை போன்றவையாகும் (மத் 1:1-17; 6:9-13; 13:1-50; 23:13-32; 18:22; 4:3-10; 23:23; 7:17-19; 8:28; 9:27; 26:61). 3) உட்சேர்க்கை அல்லது உள்ளமைவு: ஒரே வாக்கியத்தை அல்லது சொல்லை ஒரு பகுதியின் முன்னும் பின்னுமாகக் கூறுதல் (5:3-10; 6:19-21; 7:16-20; 12:39-42; 15:2-20; 16:6-12; 18:1-4; 18:10-14). 4) நேர் நிலை இணைநடை, எதிர்நிலை இணைநடை (7:24-27; 10:41; 7:16; 6:25). 5) ''இறைவாக்கினர் கூறியது நிறைவேறிற்று'' என்ற எடுத்துக்காட்டு வாய்பாடுகளை மத்தேயு மற்ற நற்செய்தியாளர்களைவிட அதிகமாகப் பயன்படுத்துகிறார். இதுபற்றி, பின்னர்ச் சிறிது விரிவாகப் பார்ப்போம். இச்செய்திக்கு நடையின் நயத்தை நாம் தமிழ் மொழி பெயர்ப்பில் உணர்வது கடினம். அக்கால இலக்கியத்தில் இவை சிறப்புபெற்று விளங்கின. மத்தேயு எழுதிய நற்செய்தியில் அரமேயிக்கு நடை கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டாலும், மொழிநடை நன்முறையில் அமைந்துள்ளது.

மத்தேயுவின் நற்செய்தி கலையமைப்புடன் அமைக்கப்பட்டிருக்கிறது எனலாம். தமக்குக் கிடைத்த மூல நூல்களிலிருந்து தேவைக்கு ஏற்றவாறு தேர்வு செய்து நமக்கு அளிக்கிறார். சில சமயங்களில் பொருள் ஒற்றுமையின் அடிப்படையிலும், மற்றச் சமயங்களில் முக்கிய சொற்களின் அடிப்படையிலும் ஒரு தனிப்பட்ட முறையில் நிகழ்ச்சிகளையும் அறவுரைகளையும் தொகுத்து வரைகிறார். சிறப்பாக அறவுரைப்பகுதிகளில், மலைப்பொழிவு (அதி. 5-7), அப்போஸ்தலர்களுக்குப் புகட்டிய போதனை (அதி. 10), விண்ணரசு பற்றிய உவமைகள் (அதி. 13) ஆகிய பகுதிகளில் இவ்வாறு திட்டமிட்டுத் தொகுத்துத் தரலைக் காணலாம். இவற்றில் சிந்தனைத் தொடர்ச்சி ஒரு சில சிறப்பான சொற்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதில் முக்கியமாக அடங்கியிருக்கிறது. இவ்விதம் செபத்தைப்பற்றிய இயேசுவின் போதனைகள் யாவற்றையும் ஒரே இடத்தில் ஒன்று சேர்த்துத் தருகிறார் மத்தேயு. இதில் ஆண்டவரது செபமும் அடங்கியிருக்கிறது. ஆனால், லூக்கா இச்செபத்தைப் பிறிதொரு இடத்திலும், இயற்கையான பிறிதொரு சூழ்நிலையிலும் தருகிறார் (லூக் 11:24). இவ்விதமே வேதகலாபனையைப் பற்றிய எச்சரிக்கைகள் தொகுக்கப்பட்டு (மத் 10:16-39), அப்போஸ்தலர்களுக்குப் போதகம் அளிக்கும் சூழ்நிலையில் (மத் 10:1-42) கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இவை லூக்காவில் பல இடங்களில் சிதறிக் கிடக்

கின்றன (லூக் 6:40; 8:17; 9:24-26; 12:2-9. 51 தொ;14:26 தொ). மத்தேயுவில் அருஞ் செயல்களும் ஒரு திட்டமான முறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்விதம் செயற்கை முறையில் தொகுக் கப்பட்டிருப்பதால், மத்தேயுவில் காணப் படும் ஒழுங்குமுறை காலவரைப்படி அமைக்கப்பட்டது என்று கூற முடியாது. மத்தேயுவில் அடிக்கடி காணப்படும் ''அப் போது'' (ஏறக்குறைய 90 தடவை) கால வரைத் தொடர்பைக் குறிப்பதாக நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அப்படி எடுத் துக்கொண்டால் பல முரண்பாடுகளைக் காண்போம். இச்சொல் ஓர் இணைக்கும் சொல்லேயன்றி வேறன்று. ''மலையின் மேல்'', ''கடற்கரையிலே'' போன்ற சொற் றொடர்களும் பல நிகழ்ச்சிகளைச் செயற்கை முறையில் இணைக்கவே பயன் படுத்தப்பட்டுள்ளன.

மத்தேயுவின் கலையமைப்புத் தன் மையை, கதை சொல்பவனைப் போன்று ஒரே விதமாய்த் தொடங்குவதிலும் (மத் 4:23; 5:21.27.33.38.43; 13:24. 31.33.44.45.47), ஒரே விதமாய் முடிப்ப திலும் (24:42; 25:13; 24:51; 25:30) காண லாம். ஐந்து அறவுரைகளும் ஒரே சொற் றொடருடன் முடிவதை ஏற்கெனவே சுட் டிக்காட்டியுள்ளோம். ஒவ்வொரு அறவுரை யும், சிறப்பாக மலைப்பொழிவு, ஒரு திட்டத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திலும் கலையமைப்புத் தன்மை யைக் காணலாம்.

மற்ற நற்செய்திகளில் காணப்படுவது போல், மத்தேயுவில் சிறு விவரங்கள் காணப்படுவதில்லை; கால, இடச் சூழ் நிலைகள் சுட்டப் படுவதில்லை. இவற்றைப் பற்றி நற்செய்தியாளர் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. இக்குறை இந்நற்செய்தியைப் புரிந்து கொள்ளுவதற்குச் சில சமயங்களில் தடை யாக இருக்கிறது. மற்ற நற்செய்திகள் இல்லையெனில் மத்தேயு சிலவற்றை ஏன் கூறுகிறார் என்று அறிவது கடினம். சான் றாக, ''மாலை வேளையில்'' (8:16) குண மடைவதற்காக நோயாளிகள் இயேசுவிடம் வந்தனர் என்று மத்தேயுவில் காண்கிறோம். ஏன் மாலையில் மட்டும் வந்தனர் என்று கூறப்படவில்லை. இதற்கு மாற்கும், லூக் காவும் விளக்கம் அளிக்கின்றனர் (மாற் 1:21-32; லூக் 4:31-40). அன்று ஓய்வுநாள். ஆகையால், மாலையில்தான் பயணம் செய்ய முடியும். இச்சூழ்நிலையில் குண மாக்கும் பேரன்பலுவல் நடைபெறுகிறது. மற்றோர் இடத்தில், கூட்டம் அதிகமாக இருந்ததால் கூரை வழியாகத் திமிர்வாதக் காரனை இயேசுமுன் இறக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று மாற்கும் (2:1-12), லூக்காவும் (5:19-26) கூறுகின்ற னர். இச்சிறு விவரத்தை அறியாது போனால், கப்பர்நாகுமில் திமிர்வாதக் காரனைக் கொண்டு வந்தவர்களின் விசுவா சத்தை ஏன் ஆண்டவர் வியந்தார் (மத் 9:1-8) என்பதை நாம் எளிதில் அறிய முடியாது.

இப்படிச் சிறு விவரங்களைக் கூறாது விட்டுவிடுதல், அல்லது செயற்கை முறை யில் ''மலையின் மேல்'', ''கடற்கரையிலே'' போன்ற சொற்றொடர்களைச் சேர்த்தல் ஆகியவை, நற்செய்தியாளரால் வேண்டு மென்றே கையாளப்படுகின்றன என்று ஓர் அறிஞர் கருதுகின்றார். இம்முறையைக் கையாளுவதன் நோக்கம் என்ன? அருஞ் செயல்களின், பொதுவாக ஒரு நிகழ்ச்சி யின், உண்மையான அடையாளப் பொருள் தெளிவாகத் தோன்ற வேண்டும்; கால, இடச்சூழ்நிலைகளிலிருந்து பிரிக்கப்பட்டு, அருஞ்செயல்கள் விண்ணக உண்மைகளின் மண்ணகத் தோற்றங்களாகத் தோன்ற வேண்டும். இதுவே ஆசிரியரது நோக்கம். இதன் விளைவாக, மத்தேயுவின் விவரிப்பு, மாற்கின் விவரிப்பைப் போன்று அவ்வளவு உயிருள்ள சித்திரமாக அமைவதில்லை. ஆயினும், ஆசிரியர் தாம் கூறக் கருதியதைத் தெளிவாகவும், விளக்கமாகவும் கூறுகிறார்.

இந்நற்செய்தியில், நிகழ்ச்சியுரைகளும் அறவுரைகளும் தொகுத்து வரையப்பட் டாலும் ஒன்றிற்கொன்று விளக்கமாக

அமைந்துள்ளன. திருச்சபையிலே, இந்நற்செய்திக்குத் தனிச்சிறப்பையும் முக்கியத்துவத்தையும் அளிப்பது இதில் காணப்படும் மாபெரும் அறவுரைத் தொகுப்புகளே. இந்நற்செய்தியின் பெரும்பகுதி, கிறிஸ்துவின் வாழ்க்கை, போதனை பற்றிய திருச்சபையின் போதகத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. நமது வழிபாட்டுக் கொண்டாட்டங்களில் பெரிதும் இந்நூல் பயன்படுகிறது. ஆண்டவரது செபம், பெரும்பேறுகள், இந்நூலில் உள்ளபடியே வழக்கில் இருந்து வந்திருக்கின்றன. பேதுருவின் தலைமைக்கும், பிற்காலத்தில் பாப்புவின் தலைமைக்கும் அடிப்படையான, ''உன் பெயர் பாறை...'' (மத் 16:17-18) என்ற பகுதி இந்நூலில் மட்டுமே காணப்படுகிறது. இப்பகுதியின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் நன்குணர்வர். பண்டைய இலக்கியங்களிலும், இக்கால இலக்கியங்களிலும், திருச்சபையின் போதனைகளிலும், மற்ற நற்செய்தி நூல்களைவிட அதிகமாக எடுத்தாளப் படுவது இந்நற்செய்தியே. இதனைத் திருச்சபையின் நற்செய்தி என்பர் பலர்.

ஆகவேதான், ஓர் அறிஞர் பின்வருமாறு கூறுகிறார்: ''மாற்கில் காணப்படுவது போல், மத்தேயுவில் காணப்படும் கிறிஸ்து அவ்வளவு எளியவர் அல்லர். லூக்காவில் காட்டப்படுவதுபோல், கிறிஸ்து உலகின் மீட்பர் என்று மத்தேயுவில் தெளிவாகக் காட்டப்படவில்லை. யோவானில் அழைக்கப்படுவதுபோல், இந்நற்செய்தியில் கிறிஸ்து வார்த்தையானவர் என்று அழைக்கப்படவில்லை. மத்தேயுவில் நாம் காணும் கிறிஸ்து தன்மையாலே ஆன்மீகமானவர்; சாந்தமும் தாழ்ச்சியுமுடைய இதயத்தவர்; புகையும் திரியை அணையார்; போலித்தனத்திற்குச் சவால்விட்டு, அதன் வேடத்தைக் கலைத்து உண்மையை வெளிப்படுத்துபவர்; வாழ்வளிக்கும் அரும் போதகங்களை வழங்குபவர். அவர் மெசியா. அவர் சட்டம் அளிப்பவர். மோசேயைப்போல் மற்றொருவர் பெயரால் அன்று; தாம் கடவுள் என்ற காரணத்தால் சட்டம் அளிப்பவர். அவரே இறைவனின் ஒரே மகன்; பேதுருவின் மேல் கிறிஸ்தவ சபையை நிறுவினவர். அவரை இஸ்ராயேலர் ஏற்க மறுத்தனர்; திருச்சபை ஏற்றிப் போற்றுகின்றது. மாற்கில் காணப்படும் இயல்வாய்மை, மத்தேயுவின் நிகழ்ச்சியுரையில் நாம் காணாது போகலாம். லூக்காவில் காணப்படும் கனிவுடைக் கவர்ச்சி இந்நூலில் அவ்வளவு இல்லாதிருக்கலாம். யோவானைப்போல், மத்தேயுவின் நோக்கு இறைக் காரியங்களில் நிலைத்திராமலிருப்பதாகத் தோன்றலாம். ஆனால், மற்றவர்களுடைய நூலைவிட இந்நற்செய்தியில் கிறிஸ்துவின் வாக்குகள் அதிகமாக உள்ளன. இவ்வார்த்தைகள் எளியவை, ஒழிவு மறைவு அற்றவை. இவை எவ்வளவு ஊடுருவிச் செல்லும் தன்மையுடையவை என்றால், கிறிஸ்துவின் உதடுகளிலிருந்து வந்த அதே உச்சரிப்பு, அதே ஒலி கேட்பது போல் தோன்றும்! ஆகவேதான், திருச்சபைப் பாரம்பரியத்தின் மிகப்பழைய சான்றாளரான பாப்பியஸ், மத்தேயுவில் மற்றவை எல்லாவற்றையும்விட இறை வார்த்தைகளையே மிகுதியாகக் காண்கிறார். இதுவே ஆசிரியரின் தனிச் சிறப்பாகும். ஆசிரியரின் சுருங்கச் சொல்லும் திறனும், நடையும் கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு மிகுந்த வலிமையையும் ஆற்றலையும் அளிக்கின்றன. ஆகவேதான், திருச்சபைக்கும், போதகர்களுக்கும், புனிதர்களுக்கும் அன்புக்குரியதொன்றாக விளங்கி வந்துள்ளது இந்நூல். ஆகையால், மத்தேயுவை வாசிக்கும்போது அங்கு உயிரளிக்கும், உய்வளிக்கும், உயிர்ப்பு அளிக்கும் கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் தேட வேண்டும்; அறிய வேண்டும்; அதற்குத்தக நடக்க வேண்டும்''.

8. மத்தேயுவில் பழைய ஏற்பாட்டு வாசகங்கள்: நற்செய்தியாளர் நால்வரும், பழைய ஏற்பாடு கிறிஸ்துவில் நிறைவு பெறுகிறது, முழுமையடைகிறது என்று காட்ட விழைகின்றனர். இந்த முயற்சியில் யாவரையும் மிஞ்சியவர் மத்தேயுதான். மற்றவர்களைவிட, மத்தேயுதான் அதிக

மாகப் பழைய ஏற்பாட்டு வாசகங்களைக் கையாள்கிறார். மாற்கு இருபத்து மூன்று முறையும், லூக்கா இருபத்தைந்து முறையும் பழைய ஏற்பாட்டு வாசகங்களை எடுத்துக்காட்டுகின்றனர். மத்தேயுவோ அறுபது முறை பழைய ஏற்பாட்டு வாசகங்களை நேரடியாக எடுத்துக்கூறுகிறார். மேலும், பல இடங்களில் மறைமுகமாகவும் எதிரொலிப்பாகவும் பழைய ஏற்பாட்டு வாசகங்களைச் சுட்டுகின்றார். இவற்றில் இருபத்தொரு வசனங்கள் முதல் மூன்று நற்செய்திகளுக்கும் பொதுவானவை. மத்தேயுவுக்கு மட்டும் உரிய எடுத்துக்காட்டு வசனங்களில் பதினொரு வசனங்கள், கிறிஸ்து பழைய ஏற்பாட்டு வசனங்களை நிறைவேற்றினார் என்று காட்டுகின்றன. இவை ஆசிரியரது சிந்தனையோடு கூடிய எடுத்துக்காட்டுகள். இவை பாலபருவ நிகழ்ச்சியுரையில் ஐந்தும் (மத் 1:22-23; 2:5-6. 15. 17-18. 23), மத்திய பகுதியில் ஐந்தும் (மத் 4:14-16; 8:17; 12:17-21;13:35; 21:4-5), பாடுகளின் நிகழ்ச்சியுரையில் ஒன்றுமாக எடுத்தாளப்பட்டுள்ளன. இவை யாவும் மேற்கூறியது போல் மத்தேயுவுக்கு மட்டும் உரியவை. மேலும், இவை ஆசிரியரது சொந்தச் சிந்தனைகளாகும். இவ்விதம் கூறுவது மத்தேயுவுக்குரிய சிறப்பாகும். இதில் யூத ராபிகளின் நடையைப் பின்பற்றுகிறார் ஆசிரியர். மற்ற எடுத்துக்காட்டுகள் இயேசுவின் வழியாகவோ, மற்றவர்களின் வழியாகவோ கூறப்படுகின்றன. இவை யாவும் ''ஆண்டவர்... இறைவாக்குரைஞர் எசாயாவின் வாக்கு நிறைவேறும் பொருட்டு...'', அல்லது ''ஆண்டவர்... இறைவாக்குரைஞர் எசாயாவின் வாக்கு நிறைவேறிற்று'' என்ற ஒரே விதமான முன்னுரையுடன் தொடங்குகின்றன. மத்தேயுவில் மட்டும் முப்பத்தேழு பழைய ஏற்பாட்டு வசனங்கள் ''நிறைவேறும்படியாக...'' என்ற சொற்றொடருடன் காணப்படுகின்றன. இந்த வாக்கியங்களை இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் பொருத்திக்காட்டும் விதம் செயற்கை முறையாகக் காணப்படுகிறது. செயற்கை முறையில் ஆசிரியரால் சேர்க்கப்பட்டமையால் இவைகளை எளிதாய் இவற்றின் சூழ்நிலையினின்று எடுத்துவிடலாம்.

பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகள் ''எழுபது நூலிலிருந்து'' எடுக்கப்பட்டுள்ளன. ஓர் இடத்தில், பழைய ஏற்பாட்டில் காணப்படாத ஒரு வாக்கியத்தைப் பழைய ஏற்பாட்டு வாசகமாக எடுத்துக்காட்டுகிறார்: ''நசரேயன் எனப்படுவார்'' (2:23). இது கண்டு ஆராய்ச்சியாளர் சிலர் தயக்கமுறுவர். சில இடங்களில் வேறுபட்ட பழைய ஏற்பாட்டு வசனங்களைத் தமது நோக்கத்திற்கு ஏற்ப இணைத்துக் கூறுவார். சில இடங்களில் தமது சொந்தச் சிந்தனையாகப் பழைய ஏற்பாட்டு வசனங்களை எடுத்துக் கூறுவார். இவை செயற்கை முறையாக நமக்குத் தோன்றலாம். ஆனால், இம்முறையைக் கையாள்வதன் மூலம் தாம் ராபிகள் முறையில் நல்ல தேர்ச்சியுடையவர் என்று காட்டுகிறார் ஆசிரியர். இம்முறைகள் யூத வாசகர்களுக்குச் சிறிதும் வியப்பை அளித்திருக்கா.

பழைய ஏற்பாட்டு வசனங்களை ஆசிரியர் பயன்படுத்திய முறைக்குச் சில சான்றுகள் ஈண்டுத் தருவோம். மத் 1:23-இல் எபிரேய வாசகத்திற்குப் பதிலாக, கிரேக்க ''எழுபது நூலின்படி'' எடுத்துக்காட்டு தருகிறார். ''இதோ! கன்னி கரு தாங்கி மகனைப் பெற்றெடுப்பாள், அவருக்கு எம்மானுவேல் என்று பெயரிடுவர்'' (எசா 7:14). எபிரேய வாசகத்தில், ''கன்னி''க்குப் பதிலாக, ''இளமங்கை'' என்றும், ''பெயரிடுவர்'' என்பதற்குப் பதிலாக ''அவள் பெயரிடுவாள்'' என்றும் கூறப்பட்டுள்ளன.

மத் 2:15-இல், யூதர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்ற ''கடத்தல்'' நிகழ்ச்சியைக் குறிக்கும் ''எகிப்திலிருந்து என் மகனை அழைத்தேன்'' (ஓசே 11:1) என்ற வசனத்திற்குப் பிறிதொரு பொருள் கொடுத்து, அது மெசியாவைப் பற்றியதாக எடுத்துக் கூறுகிறார்.

மத் 4:15-16-இல் ''செபுலோன் நாடே! நப்தலி நாடே! பெருங்கடல் வழிப் பகுதியே! யோர்தானுக்கு அப்பாலுள்ள

நிலப்பரப்பே! பிற இனத்தவர் வாழும் கலிலேய நாடே! காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது'' (எசா 9:1-2) என்று எசாயா நூலிலிருந்து எடுத்துக்காட்டு கிறார். மத்தியதரைக் கடற்பகுதிகளையும், அசீரியர்களையும் மனதில் கொண்டு இறை வாக்குரைஞர் எசாயா இதைக் கூறுகிறார். இதே வசனங்களை மத்தேயு, தமது நோக்கத்திற்கேற்ப பொருள் கொடுத்து எடுத்துக் காட்டுகிறார். நாசரேத்திலிருந்து கலிலேயாக் கடற்கரையிலுள்ள கலிலேயாவுக்குத் தமது உறைவிடத்தை இயேசு ஏன் மாற்றினார் என்பதற்கு இறையியல் காரணம் காட்டும் நோக்கோடு, இதைத் தமது சிந்தனையோடு கூடிய எடுத்துக்காட்டாகத் தருகிறார்.

மத் 11:10-இல் ''*வழியில் உன்னைப் பாதுகாக்கவும், நான் ஏற்பாடு செய்துள்ள இடத்தில் உன்னைக் கொண்டு சேர்க்கவும், இதோ நான் உனக்கு முன் ஒரு தூதரை அனுப்புவேன்*'' என்ற பகுதியையும் *(யாத் 23:20)*, ''இதோ நான் என் தூதரை அனுப்புகிறேன். அவர் எனக்கு முன் வழியைத் தயாரிப்பார்'' *(மலா 3:1)* என்ற பகுதியையும் இணைத்துச் சிறிது மாற்றி, திருமுழுக்கு யோவானைக் குறிக்கும்படியாக, ''இதோ, என் தூதரை உமக்கு முன் அனுப்புகிறேன். அவர் உமக்கு முன் உம் வழியைத் தயார் செய்வார்'' என்று எடுத்துக் கூறுகிறார் நற்செய்தியாளர். இதே போன்று *மத் 21:4-5*-இல் ''*சீயோனிடம் சொல்லுங்கள்; இதோ, உன் மீட்பு வருகின்றது*'' *(எசா 62:11)* என்ற பகுதியையும், ''மகளே சீயோன்... இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார்.... கழுதையின் மேல், கழுதைக் குட்டியாகிய மறியின் மேல் ஏறி வருகிறார்'' *(செக் 9:9)* என்ற பகுதியையும் இணைத்து, ''*இதோ உன் அரசர் கழுதையின் மேலும், கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் அமர்ந்து சாந்தமாக உன்னிடம் வருகிறார் எனச் சீயோன் மகளுக்குச் சொல்லுங்கள்*'' என்று கூறுகிறார்.

மத் 27:9-10-இல் யூதத் தலைவர்களின் செயலால் எவ்வாறு எரேமியாவின் இறைவாக்கு நிறைவேறியது என்று கூறுங்கால், *எரே 32: 6-15; 18:2-3; செக் 11:12-13* ஆகிய பகுதிகளைச் சேர்த்துச் சுருக்கி, ''இஸ்ராயேல் மக்களால் விலைமதிக்கப் பெற்றவருடைய விலையாகிய முப்பது வெள்ளிக் காசுகளை எடுத்து ஆண்டவர் எனக்குக் குறித்தபடியே குயவன் நிலத்திற்குக் கொடுத்தார்கள் என்று இறைவாக்குரைஞர் எரேமியா கூறியது அப்போது நிறைவேறிற்று'' என்று கூறுகிறார் ஆசிரியர்.

எசாயாவிலிருந்து எடுத்துக்காட்ட, ஆசிரியர் பெரிதும் விரும்பியதாகத் தெரிகிறது. தமது நோக்கத்திற்கு ஒத்த பழைய ஏற்பாட்டு வசனங்களை மட்டுமே எடுத்துக் காட்டுகிறார். இதில் அவரது நோக்கம் யாது என்பது பற்றி அடுத்த பகுதியில் பார்ப்போம்.

9. இறையியல் போதனைகள்: மத்தேயு இந்நூலை ஓர் ஆதார அல்லது காப்புரையாக எழுதினார். இந்நோக்கு இந்நற்செய்தியின் பொருளடக்கத்தைப் பெரிதும் வரையறை செய்கிறது. மனந்திரும்பாத யூதர்கள் அளித்த எதிர்ப்புகளுக்கும் அவதூறுகளுக்கும் யூதக்கிறிஸ்தவர்கள் பதில் அளிக்க ஏதுவாகும்படி இந்நூலில் நிகழ்ச்சிகளும், கருத்துகளும், தலைப்புகளும் அமைந்துள்ளன. இயேசு யூதர்கள் ஏக்கத்துடன் எதிர்பார்த்த மெசியா; அவரே தாவீதின் தவப்புதல்வன்; கடவுளின் ஒரே மகன்; அவர் நிறுவிய விண்ணரசே திருச்சபை என்பவை மத்தேயுவில் காணப்படும் சிறப்புமிக்க கொள்கைகளாகும். இவை பற்றிச் சிறிது காண்போம்.

அ) இயேசுவே மெசியா அல்லது கிறிஸ்து: ''மெசியா'' என்ற எபிரேயச் சொல்லும், ''கிறிஸ்து'' என்ற கிரேக்கச் சொல்லும் ''அபிடேகநாதன்'' அல்லது ''தைலத்தால் திருநிலைப் படுத்தப்பட்டவர்'' எனப் பொருள்படுவன. இப்பெயர் குருக்களுக்கும், இறைவனது மீட்புத்திட்டத்தில் சிறப்பு அலுவல் பெற்றவர்களுக்கும், யூத

அரசர்களுக்கும் பழைய ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. சிறப்பாக, தாவீதின் குலத்தில் வழி வழியாக வந்த அரசர்களுக்கு இப்பெயர் வழங்கப்பட்டது. இப்பெயர், இறைவன் இவ்வரசர்களுக்கு அளித்த வல்மையையும், தேவ ஆவியின் ஆற்றலையும் குறித்தது. ஆனால், இவ்வரசர்கள் எப்போதும் இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கவில்லை; நாட்டை இழந்தனர்; நாடு கடத்தப்பட்டனர். இந்நிலையில், வரவிருக்கும் ஒரு மாபெரும் மன்னனைப் பற்றிப் பேசினர் இறைவாக்குரைஞர்கள். யூதர்கள் நாடு கடத்தப்பட்டுத் தொல்லையுற்ற காலத்தில் வரவிருக்கும் மெசியாவைப் பற்றிய கருத்து வளர்ச்சியடைகிறது. சிலர் அரசுத் தன்மையுடைய மெசியாவை எதிர்பார்த்தனர். வேறு சிலர் குருத்துவத் தன்மையையுடைய மெசியாவை எதிர்பார்த்தனர். மற்றும் சிலர் இவ்விரு தன்மைகளையும் உடைய மெசியாவை எதிர்பார்த்தனர். அவர் அடையும் இன்னல்களையும் வெற்றிகளையும் பாடி மகிழ்ந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததெல்லாம் உலகைச் சார்ந்த அரசரையே. ஆயினும் சில இடங்களில், மெசியாவின் உண்மைத்தன்மை தரப்படுகிறது. அவர் இறையாட்சியை நிறுவுவார் என்றும், யாவேயின் ஊழியன், மனுமகன் என்ற பெயரில் மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுவார் என்றும் கூறப்படுகிறது. ஆனால் மெசியாவைப் பற்றி ஒரு கருத்தும் தெளிவாக இல்லை. ஐயமும், மயக்கமுமே நிறைந்துள்ளன. இவை, இயேசுவின் வருகையாலும், அவரது போதகத்தாலும், வாழ்க்கையாலும், நீங்குகின்றன. தெளிவும் பிறக்கிறது.

மெசியா என்ற கருத்து நற்செய்தியின் முதல் வடிவத்தில் முதன்மை பெற்று விளங்குகிறது. பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டு, வாக்குத்தத்தம் செய்யப்பட்டவர் இயேசுவே. இவரது வருகைக்காகவே யூதர்கள் காத்திருந்தனர். ஆயினும், அவர் வந்தபோது அவருடைய மக்களே அவரை ஏற்க மறுத்தனர். இக்கருத்துக்கள் இந்நூல் முழுவதிலும் பரவிக் கிடக்கின்றன.

இயேசுவே வாக்குறுதி செய்யப்பட்ட மெசியா என்பது பழைய ஏற்பாட்டிலிருந்து, சிறப்பாக இறைவாக்குகளிலிருந்து, எடுத்துக்காட்டப்படும் சான்றுகளால் நிரூபிக்கப்படுகிறது. மாற்கையும், லூக்காவையும் விட அதிகமாக மத்தேயு பழைய ஏற்பாட்டு வாசகங்களைக் கையாள்கிறார் என்பதையும், அவர் கையாளும் முறையையும் பற்றி ஏற்கெனவே பார்த்துள்ளோம். இவ்விறை வாக்குகளுக்குச் சொந்த முறையில் விளக்கம் அளித்து, இயேசு அபிடேக நாதன் எனப் பொருள்படும் கிறிஸ்து அல்லது மெசியா என்று திருச்சபை பறைசாற்றுதல் சரியே என்று ஆசிரியர் நிரூபிக்கின்றார். இவ்விதம் செயற்கை முறையில், சிந்தனையோடு கூடிய எடுத்துக்காட்டுகளைக் கையாண்டாலும், தனிப்பட்ட அறிவொளி பெற்று, அவற்றைப் பயன்படுத்துகிறார். இவற்றில் திருச்சபையின் சிந்தனைகளையும் விசுவாசத்தையுமே எதிரொலிக்கின்றார்.

இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கும், அவரது நடத்தைக்கும், பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கம் அளிக்கிறார் ஆசிரியர். பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகள் இயேசுவின் ஒவ்வொரு வாழ்க்கை நிகழ்ச்சிக்கும் புதிய ஒளி தருகின்றன. இயேசு கன்னியிடம் பிறந்தவர் (மத் 1:22-24); பெத்லகேமில் பிறந்தவர் (2:5-6); எகிப்தில் அடைக்கலம் புகுந்தவர் (2:15). பெத்லகேமில் சிறு குழந்தைகள் கொல்லப்பட அவரே காரணம் (2:7-10). அவர் நாசரேத்தூரில் வாழச் சென்றார் (2:13). அவரது பணியின் பெரும் பகுதி, எருசலேமில் அன்றி, கப்பர்நாகுமிலும், புற இனத்தவரது கலிலேயாவிலும் நடைபெற்றது (4:14-16). அவர் யாவேயின் ஊழியனைப்போல் நமது பிணிகளையெல்லாம் சுமந்து கொண்டார்; நமது நோய்களைக் குணப்படுத்தினார் (8:17); அறத்தை அறிவித்தார் (12:17-21); உவமைகள் மூலம் போதித்தார் (13:3); முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டார். ஆகையால், இயேசுவே பழைய ஏற்பாட்டில் முன்னறி

விக்கப்பட்ட கிறிஸ்து அல்லது மெசியா. ஆனால், யூதர்களோ மெசியாவைப் பற்றித் தவறான கருத்துக்களைக் கொண்டிருந்தனர்; ஆகையால், உண்மை மெசியாவை ஏற்க மறுத்தனர்; அவரது செய்திக்குச் செவி மடுக்க மறுத்தனர். திருமுழுக்கு யோவான், வரவிருப்பவர் நீர் தாமோ என்று தமது சீடர் வாயிலாகக் கேட்டபோது, இயேசு தமது செயல்களைச் சுட்டிக்காட்டுகிறார் (11:2-6). இச்செயல்கள் யாவும் மெசியாவின் செயல்களாகும் (எசா 26:19; 29:18 தொ; 35:5 தொ; 61:1). இதைக் கேள்வியுற்ற திருமுழுக்கு யோவான், இயேசுதான் வரவிருக்கும் மெசியா என்று கண்டு பிடித்திருக்கக்கூடும், கண்டுணர்ந்திருக்க வேண்டும். இயேசுவின் போதகத்திலிருந்தும் அருஞ் செயல்களிலிருந்தும், அவர்தான் மெசியா என்று அறிய வாய்ப்பிருந்தும், அவரை ஏற்க மறுத்தனர் யூதர்களும் அவர்களுடைய தலைவர்களும். மெசியாவின் விண்ணரசிலிருந்து தங்களைத் தாங்களே பிரித்துக் கொண்டனர்.

சட்டத்தை அழிக்கவன்று, நிறைவேற்றவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார் (மத் 5:17-19). சட்டத்தையும் அதைச் சார்ந்தவைகளையும் பற்றி கிறிஸ்து மரியாதையுடன் பேசுகிறார் (5:31 தொ; 7:12; 8:4; 12:5-7; 15:5). இயேசு இஸ்ராயேலருக்குத் தனிப்பட்ட விதத்தில் அனுப்பப்பட்டவர் (15:24-26) என்பதையும் மத்தேயு சுட்டிக் காட்டுகிறார். ஆனால், இயேசுவை ஏற்க இஸ்ராயேலர் மறுத்ததால், அவரது அரசு புற இனத்தவருக்கு அளிக்கப்படுகிறது (3:8 தொ; 21:43-46). ஞானிகளின் வருகை நிகழ்ச்சி (2:1-12), இயேசுவை முதலில் வணங்க வந்தவர்கள் புற இனத்தவர் என்று காட்டுகிறது. மத்தேயு மட்டும் குறிக்கும் பிலாத்து கைகழுவும் நிகழ்ச்சி (27:24-25), யூதர்கள் இயேசுவை ஏற்க மறுத்ததை அழுத்திக் காட்டுகிறது.

சட்டத்தின் நிறைவும் இயேசுவே; ஆகையால், அதற்கும் மேலானவர். அவர் ஓய்வு நாளின் ஆண்டவர் (12:8); ஆலயத்தைவிடப் பெரியவர் (12:6). மலைப் பொழிவில் வரும் ஆறு எதிர்நிலை வாக்கியங்கள் (5:21-48), இயேசு மோசேயை விடப் பெரியவர் என்றும், பழைய ஏற்பாட்டுச் சட்டத்திற்கும் மேலான புதுச் சட்டத்தை அளிக்கும் புதிய மோசே என்றும் காட்டுகின்றன. லூக்கா, ''தரைமட்டமான இடத்தில்'' (லூக் 6:17) என்று கூறும்போது, மத்தேயு ''மலையின் மேல்'' (5:1) என்று கூறுவது, கிறிஸ்து அளித்த புதிய சட்டம் சீனாய்-ஓரேபு மலையில் அளிக்கப்பட்ட முதல் சட்டத்தோடு கொண்டுள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டுகிறது; அதன் நிறைவு என்றும் காட்டுகிறது.

இவ்வாறு பலவாறாக, இயேசுவை வாக்குறுதி செய்யப்பட்ட மீட்பர், மெசியா என்று மத்தேயு காட்டுகிறார்.

ஆ) தாவீதின் குமாரன்: இப்பெயர் மெசியாவின் பெயர்களுள் ஒன்று. மெசியா தாவீதின் குலத்தில் தோன்றுவார் என்று மக்கள் எதிர்பார்த்தனர். இதைக் கருத்தில் கொண்டு, மெசியாவான இயேசு, உண்மையாகவே தாவீதின் வழித்தோன்றல் என நிரூபிக்க முயல்கிறார் மத்தேயு. தமது நற்செய்தியின் முதல் வரியிலேயே, மரபு முறை கூறுங்கால், இயேசு தாவீதின் வழித்தோன்றல் என்று காட்டுகிறார் (மத் 1:1). மீக்காவின் இறைவாக்குப்படி (மீக் 5:1) இயேசு தாவீதின் நகரான பெத்லகேமில் பிறந்தார்* (மத் 2:5). தாவீதின் மகனானால், அவர் யூதர்களின் அரசரல்லவா? ஆகையால்தான், அவரைக் கொல்ல பெரிய ஏரோதன் பெரிதும் முயன்றான் (2:3-13). குருடனும் ஊமையுமானவனை இயேசு குணப்படுத்தியதைக் கண்ட மக்கள், இவர்தான் தாவீதின் மகனோ என்று வினவுகின்றனர் (12:23). இரு குருடர்களும் (9:27), புற இனப்பெண்ணும் (15:22) அவரைத் ''தாவீதின் மகனே'' என்றழைக்கின்றனர். அவர் எருசலேமில் நுழைந்தபோது, மக்கள் அவர்தான் தாவீதின் மகன் என்று ஆர்ப்பரித்து எதிர்கொண்டழைத்தனர் (21:9). சிறுவர்கள்கூட இப்பட்டத்தைப் பறைசாற்றி அவருக்கு அஞ்சலி செய்கின்றனர் (21:15). ஆனால் இதே

மக்கள், அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லும் என்று கூக்குரலிடுவர் (27:22-25). இந்த நிராகரிப்பு ஒரு துன்பமிக்க வரலாறு ஆகும். இச்செயல் பவுலைப் பெரிதும் பாதித்தது எனலாம் (உரோ 11).

பிறர் தம்மை மெசியா என்றழைக்க இயேசு அனுமதித்ததில்லை. ஆனால், மெசியாவின் மற்றொரு பெயரான ''தாவீதின் மகன்'' என்று மக்கள் தம்மை அழைத்ததை அவர் தடுக்கவில்லை. ஆயினும், இப்பட்டம் அவரது தன்மையை முழுமையாக விவரிக்கவல்லதன்று. தாவீது அரசனுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற இயேசு வந்தார். அதன் பயனாக அவர் தாவீதை விடப் பெரியவர். அவர் தாவீதின் ஆண்டவர் (மத் 22:42-45). இயேசு யூத மக்கள் எதிர்பார்த்த மெசியா; அவரே மக்கள் எதிர்நோக்கிய ''தாவீதின் மகன்''. இவற்றிற்கு மேலாக, அவரே இறைமகன்.

இ) இறைமகன் இயேசு: மற்ற நற்செய்தியாளர்களைப்போல் மத்தேயுவும் இயேசுவைக் ''கடவுளின் மகன்'' என்று பன்முறை குறிப்பிடுகிறார். இச்சொற்றொடர் தன்னிலேயே தெய்வீகத் தன்மையைக் குறித்துக் காட்டுகிறது என்று சொல்ல முடியாது. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருக்குப் பணி செய்யும் அல்லது அவரோடு தனிப்பட்ட தொடர்பு கொள்ளும் யாரையும் குறிக்க இச்சொற்றொடரைப் பயன்படுத்தலாம். சான்றாக பழைய ஏற்பாட்டில், ''கடவுளின் மகன்'' என்ற சொற்றொடர் வானதூதர்களுக்கும் (உப 32:8; யோபு 1:6), தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் (யாத் 4:2; ஞான 18:13), இஸ்ராயேலருக்கும் (உப 14:1; ஓசே 2:1), அவர்களுடைய தலைவர்களுக்கும் (சங் 83:6), அரசர்களுக்கும் (2 அர 7:14; சங். 89:27) பொருத்திக் கூறப்படுகிறது. பிற்காலத்தில் பக்தியுள்ள எந்த மனிதனும் இறைமகன் என்றழைக்கப்பட்டான் (திருவுரை 4:10; 23:1; ஞான 2:16). இச்சொற்றொடர் மெசியா என்ற பட்டத்தோடு கூடியதாயிருக்கலாமா? யூத இலக்கியங்களை ஆராயுங்கால் இவ்வனுமானத்திற்கும் இடமில்லை.

பேதுரு தமது விசுவாச அறிக்கையில், ''நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்'' (மத் 16:16) என்று கூறுகிறார். இதே நிகழ்ச்சியில் மாற்கு, ''நீர் கிறிஸ்து'' (மாற் 8:29) என்றும், லூக்கா, ''நீர் கடவுளின் கிறிஸ்து'' (லூக் 9:20) என்றும் கூறுகின்றனர். கிறிஸ்து என்பது மெசியா என்பதன் கிரேக்கச் சொல்லாகும். சிலர், மத்தேயு தமது கூற்றில், இயேசுவின் தெய்வீக மகன் தன்மையைக் குறிக்கிறார் என்பர். மாற்கு, லூக்கா ஆகியோரின் வாசகங்களைக் கவனிக்கும்போதும் சாதாரணமாய் அப்போஸ்தலர்கள் காட்டிய அறிவுக்கூர்மையின்மையை எண்ணும்போதும், இயேசுவின் மெசியாத் தன்மையையே குறிக்கிறார் மத்தேயு என்பர் சிலர். இவ்விதம் இல்லையெனில், தமது விசுவாச அறிக்கைக்குப் பின், பேதுரு இயேசுவைக் கண்டிப்பதை ஏற்பது நமக்குக் கடினமாயிருக்கும். இயேசுவின் உலகச் சார்பற்ற ஆன்மீக மெசியாத் தன்மையைப் புரிந்துகொள்ள வெகுவாய்ச் சிரமப்பட்ட அப்போஸ்தலர்கள் ''கடவுளின் மகன்'' என்பதில் அடங்கியுள்ள தெய்வீகத்தை எப்படிப் புரிந்து கொள்வர்? அப்படிப் பேதுரு ஏற்றுக்கொண்டிருந்தால் உண்மையிலேயே இறைவெளிப்பாடு அவசியமானதாயிருக்கும் (மத் 16:17). சாத்தானும் (4:3-6), பேய்களும் (8:29) இயேசுவைக் கடவுளின் மகன் என்றழைத்ததில் அச்சொற்றொடரின் முழுப்பொருளும் பதிந்துள்ளதா? கடவுள் மகன் என்றால், மாபெரிய ஆற்றலையும், பிறர் கெடுதல் செய்ய முடியாத கடவுளின் பாதுகாப்பையும் கொண்டிருக்க வேண்டும் எனச் சாத்தான் கருதியதாகத் தெரிகிறது. இயேசுவோ, கடவுளின் மகன் என்றால் கடவுளின் சித்தத்தில் தனது உணவையும் ஆதரவையும் காணவேண்டும் என்று கூறுவதாகத் தெரிகிறது (4:4-7). இயேசு திருமுழுக்குப் பெற்றபோதும் (3:17), ஒளியுருவானபோதும் (17:5), ''இவர் என் அன்பார்ந்த மகன்'' என்ற குரலொலியைக் கேட்டோருக்கு அதன் பொருள் புரிந்திருக்கக் கூடுமா? உறுதியாக ஒன்றும் நம்மால் கூறுவதற்கில்லை.

ஆனால், நற்செய்தியாளர் எப்போது இவ்விதம் எழுதுகிறார்? கிறிஸ்து உயிர்த்து, விண்ணிற்கு எழுந்தபின், திருச்சபையின் விசுவாசம் வளர்ந்தபின் எழுதுகிறார். இயேசுவே மெசியா, கிறிஸ்து, அபிடேக நாதன், அவரே கடவுளின் மகன் என்ற விசுவாசம் கிறிஸ்தவ மக்களிடையே ஆழப் பதிந்தபின், கிறிஸ்தவர்களுக்காக இவ்விதம் நற்செய்தியாளர் தமது நற்செய்தியை வரைகிறார். ஆசிரியருடையவும் கிறிஸ்தவர்களுடையவும் விசுவாசக்கண்ணோடு ''கடவுளின் மகன்'' என்ற சொற்றொடரை நோக்க வேண்டும். இச்சொற்றொடர் இயேசுவின் காலத்தில், மெசியாத் தன்மையைத் தவிர வேறு பொருள் காட்டியிராவிட்டாலும், நற்செய்தியாளர் மத்தேயு தமது நூலை எழுதியபோது, இதில் பொதிந்துள்ள தெய்வீகத்தன்மையைக் காட்டியது என்றும், இதனை மனதில் கொண்டே மத்தேயு இச்சொற்றொடரைப் பயன்படுத்தினார் என்றும் கூறலாம்.

இனிமேல், கிறிஸ்துவின் வார்த்தைகளைப் பார்ப்போம். தம்மையே மகன் எனக்குறிக்கிறார் இயேசு (17:25-27; 21:37-39). மத் 7:21-இல் கடவுளை ''என் தந்தை'' என்றழைக்கிறார். அவர் கற்பித்த செபத்தில் தவிர, மற்ற நேரங்களில் அவர் ஒருபோதும் ''நம் தந்தை'' என்று கடவுளைக் குறிப்பதில்லை. அதற்கு மாறாக, ''என் தந்தை'', ''உங்கள் தந்தை'' என வேறுபடுத்திக் குறிப்பிடுகிறார். இயேசுவின் பாடுகளின்போது ''தலைமைக் குரு அவரை நோக்கி, 'உயிருள்ள கடவுளின் பெயரால் ஆணையிட்டுச் சொல்லுமாறு உம்மைக் கேட்கிறேன், 'நீர் கடவுளின் மகனான மெசியாவோ?' என்றார். இயேசு 'நீரே சொன்னீர்...'' என்றார் (26: 63-64). இக்கூற்றில் வரும் கடவுளின் மகன் என்ற சொற்றொடரில் தெய்வீகத்தன்மை குறிக்கப்படவில்லையெனில் தலைமைக்குரு ஆடை கிழித்து ஆரவாரம் செய்து, ''இவன் கடவுளைப் பழித்துரைத்தான்'' என்று கூற வேண்டியதில்லை. ''என் தந்தை எல்லாவற்றையும் எனக்குக் கையளித்துள்ளார். தந்தையன்றி வேறெவனும் மகனை அறியான். மகனும், மகன் எவனுக்கு வெளிப்படுத்துவாரோ அவனுமன்றி வேறெவனும் தந்தையை அறியான்'' (11:27) என்ற கிறிஸ்துவின் கூற்று, நற்செய்தியாளர் எந்தப் பொருளில் ''கடவுளின் மகன்'' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார் என்று ஐயமறக் காட்டுகிறது. இதையே ஆதிக் கிறிஸ்தவர்களின் விசுவாசமும் உறுதிப்படுத்துகிறது. இச்சொற்றொடரில், இயேசுவின் தெய்வீகத் தன்மை எடுத்துக் கூறப்படுகிறது. இக் கருத்து நற்செய்தியின் நெடுகிலும் காணக் கிடக்கிறது.

இறைமகன் இயேசு ''நம்மோடு உறையும் கடவுளான,'' ''எம்மானுவேல்'' ஆவார் (மத் 1:23). இக்கருத்தும் இந் நற்செய்தியின் பின்னணியாக அமைந்துள்ளது. இக்கருத்தை நற்செய்தியின் தொடக்கத்திலேயே கூறும் மத்தேயு, தன் முடிவிலும் ஞாபகப்படுத்துகின்றார். மகிமைப் படுத்தப்பட்ட கிறிஸ்து திருச்சபை வழியாக என்றென்றும் நமது எம்மானுவேலாக இருப்பார். ''நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்'' (28:20) என்று இறுதி உறுதியளிக்கின்றார் இறைமகன் இயேசு கிறிஸ்து.

ஈ) விண்ணரசு: நாம் மத்தேயு எழுதிய நற்செய்தியின் பிரிவுகளைப் பற்றி எழுதிய போது, விண்ணரசை அடிப்படையாகக் கொண்டு இந்நூலைப் பல பிரிவுகளாகப் பிரித்தோம். அஃதொன்றே, இக்கருத்தின் முக்கியத்துவத்தைக் காட்டும். மாற்கும், லூக்காவும் ''கடவுளின் அரசு'' என்று கூறும்போது, மத்தேயு மட்டும் ''விண்ணரசு'' என்று கூறுகிறார். இதில் பொருள் வேறுபாடுண்டோ? அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. மத்தேயு யூதக் கிறிஸ்துவர்களுக்காக எழுதுகிறார். அவர்களில் பலர் கடவுளின் பெயரை, மரியாதையின் காரணமாக உச்சரியார். சிலர் உச்சரிக்க அஞ்சுவர். ஆகையால் மத்தேயு, ''கடவுள்'' என்பதற்குப் பதிலாக ''விண்'' என்பதைப் பயன்படுத்துகிறார். இப்படிக் கையாளுதல் ராபிகளின் மரபுமாகும். அவர்களிடையே

''விண்ணரசு'' என்பதுதான் வழக்கிலிருந்தது. ஆகவே, இச்சொற்றொடரையே இயேசுவும் பயன்படுத்தியிருக்கக் கூடும்.

''விண்ணரசு'' என்ற சொற்றொடர் ''கடவுளது ஆட்சி'', ''கடவுளது ஆதிக்கம்'' என்ற பொருள்களைக் குறிக்கிறது. இப்பொருள்களைக் குறிக்க இயேசு பயன்படுத்திய அரமேயிக்கு சொல்லுக்கு அரசுரிமை, அரசாட்சி, பேரரசாட்சி எனப் பல பொருள்கள் உண்டு. ஆட்சியைக் குறித்தாலும் ஆளப்படுபவைகளைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டும். இச்சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் அரிதாக வழங்கினாலும், இயேசு இதற்கு விளக்கம் தரவில்லை. தமக்குச் செவிமடுத்தோருக்கு ஏற்கெனவே தெரிந்த ஒன்றாகக் கருதி அதைப் பற்றிப் போதிக்கிறார்.

இயேசுவின் போதகப்படி, விண்ணரசு என்பதற்கு முதன்மையானதும் தலை சிறந்துமான பொருள், வரலாற்றில் கடவுள் உட்புகுந்தார், குறுக்கிட்டார், தலையிட்டார் என்பதாகும். இறைவன் வரலாற்றில் தலையீடு செய்தலைப் பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் காணலாம். இது புதிய ஏற்பாட்டில் சிறந்த முறையில் நடைபெறுகிறது. இத்தெய்வீகத் தலையீடு கடவுளுடைய மகனின் வருகையில் வெளிப்படுகிறது. வரலாற்றில் கடவுள் தன் மகன் வழியாகத் தலையிடுகிறார். அரசை நிறுவுபவர் அவரே. அஃது அவரது செயல். அவர் விதை விதைப்பவனைப் போன்றவர். திராட்சைத் தோட்டச் சொந்தக்காரனைப் போன்றவர். விருந்தளிக்கும் அரசனைப் போன்றவர். விதை முளைத்துத் தளிர்த்து வளர்ந்து பெருஞ் செடியாவது போல் விண்ணரசு தோன்றி வளர்ந்து பெருகுகிறது. இதனைத் தோற்றி வளர்த்துப் பெருக்குபவரும் அவரே. நொதி (காடி) மாவு முழுவதையும் புளிக்க வைப்பது போல் உலகம் முழுவதையும் விண்ணரசாக மாற்றுபவரும் அவரே. அரசுக்கு உயிர் அளிப்பவரும் அவரே. அது தடுக்க முடியாத விதத்தில் பரவச் செய்பவரும் அவரே. விண்ணரசு கடவுளது செயலானாலும், வரலாற்றிலே அஃது இயேசு கிறிஸ்துவின் செயலாகும்.

இவ்வரசு ஏற்கெனவே உள்ளதா? அல்லது முழுவதும் இனிமேல் வரவிருப்பதா? இயேசுவின் போதகத்தை ஆராயுங்கால், இவ்விரு கூறுகளையும் காண்கின்றோம். பல நிகழ்ச்சிகளில் விண்ணரசு வரவிருக்கும் ஒரு நிகழ்ச்சியாகத் தோன்றுகிறது (மத் *5:1-10.19*தொ; *7:21; 8:11*தொ; *13:43; 18:3; 19:23*தொ; *24:14*). பல உவமைகள் விண்ணரசு ஏற்கெனவே உளது என்பதை உணர்த்துகின்றன. ஆனால், அது முழுமை அடைய வேண்டும்; நிறைவு பெற வேண்டும் (*3:2; 4:7.23; 9:35; 10:7; 12:28; 13:24-32. 36-43. 47-50*). கடுகு விதை முளைத்து வளர்வது போல், கோதுமை முதிர்வதுபோல், எவ்வளவு தடை ஏற்படினும் இவ்வரசு முழுமை பெறும், நிறைவு பெறும். கிறிஸ்துவில் இவ்வரசு தொடங்குகிறது; தனது முழுமையை, நிறைவை நோக்கி இயங்குகிறது. தொடக்கத்திற்கும் நிறைவிற்கும் இடையில் திருச்சபை அமைந்திருக்கிறது. விண்ணரசு தனது வளர்ச்சியில் திருச்சபையாகத் திகழ்கிறது. திருச்சபை உலகிலுள்ள இயேசுவின் சமூகமாகும். சீடர்கள் அதன் நிகழ்கால உறுப்பினர்களும், வருங்கால ஆளுநர்களும் ஆவர். இதில் பல குறைகள் இருக்கலாம். அதன் வளர்ச்சிக்குப் பல தடைகள் நேரிடலாம். ஆயினும், விண்ணரசின் நிறைவு நோக்கி எதிர்க்க முடியாத விதத்தில் திருச்சபை இயங்குகிறது. திருச்சபை என்ற சொல்லை நற்செய்தியாளர்களுள் மத்தேயு மட்டுமே பயன்படுத்துகிறார் (*16:18; 18:17*). இவ்வரசின் இறைவாக்குரைஞர்கள் அப்போஸ்தலர்களே என்று கருதுகிறார் ஆசிரியர் (*15:12; 10:41; 28:34*). ஆகையால், அவர்களுடைய குறைபாடுகளையும் நுண்ணறிவின்மையையும் மறைத்து அவர்களைப் பற்றி மரியாதையுடன் பேசுகிறார்.

மக்களிடையே தமது ஆட்சியை நிறுவுகிறார் கடவுள். உலகிலே அரசை நிறுவுகிறார். இதிலே அவர் அரசர் என ஏற்றுக் கொள்ளப்படுவார். அவரது ஆட்சிக்கு முடி

விராது. இவ்வாட்சியில் உட்பட விரும்புவோர், இதனுள் புக வேண்டும் (5:20; 7:21; 18:3). இவ்வரசு ஒரு விருந்துக்கு ஒப்பானது. இதிலே அரசைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இடமுண்டு. ஆனால், இதனுள் புக தகுதி வேண்டும். விண்ணரசு கடவுள் தாமாக அளிக்கும் கொடையானாலும், ஒவ்வொருவரும் விரும்பி அதை ஏற்க வேண்டும். தீவினைகளில் நிலைத்து நிற்கும் பாவிகளுக்கு அங்கே இடமில்லை. விண்ணரசுக்குள் புக விரும்புவோர் எளிய மனத்தோராய் இருத்தல் வேண்டும் (5:3); குழந்தைகளாக மாற வேண்டும் (18:1-4); கடவுளின் அரசையும் அவருடைய நீதியையும் முதலில் தேடவேண்டும் (6:33); நீதியினிமித்தம் துன்பப்பட வேண்டும் (5:10); விண்ணரசிற்காக யாவற்றையும் துறக்கத் தயாராக இருத்தல் வேண்டும், துறக்க வேண்டும் (13:44தொ; 19:23). மறைநூல் அறிஞர், பரிசேயர் நீதியைவிட அவர்களது நீதி மிகுந்திருத்தல் அவசியம் (5:20). சுருங்கச் சொல்லின், பிதாவின் விருப்பப்படி நடத்தல் வேண்டும், அதைப் பிறர் அன்பில் காட்ட வேண்டும் (7:21; 25:34). இவ்வரசுக்குள் புக, யூதனாய் இருக்க வேண்டுவதில்லை. தகுதியுடைய யாவரும் உட்புகலாம் (8:11தொ). அழைக்கப் பெற்றவர் பலராயினும் தெரிந்து கொள்ளப்பட்டவர் சிலரே. ஏனெனில், திருமண உடை அணியாத விருந்தாளி ஒவ்வொருவனும் வெளி இருளில் தள்ளப்படுவான் (22:11-14).

விண்ணரசு தனது தொடக்கத்தில் எளிமை மிக்கது. அதன் உறுப்பினராவது எப்படியென்றும், அதற்கு வேண்டிய பண்புகளாகிய முன்பு கூறப்பட்ட மன உறுதி, பற்றற்ற தன்மை, தாழ்ச்சி, அன்பு, கடவுட்பற்று ஆகியவை பற்றியும் மலைப்பொழிவில் காண்கிறோம். கிறிஸ்து தமது அருஞ்செயல்கள், இறப்பு-உயிர்ப்பு ஆகியவற்றால் எவ்விதம் இவ்வரசை நிறுவினார் என்று காட்டுகிறார் மத்தேயு. உலக முடிவிலே கிறிஸ்து எவ்விதம் இவ்வரசை நிலையாக நிறுவுவார், முழுமைப்படுத்துவார் என்றும் இறுதிக்காலம் பற்றிய அறவுரையில் காண்கிறோம். ஆனால், இவ்வரசு எப்போது முழுமைபெறும்? மண்ணிலே யாருக்கும் தெரியாது. ஆனால், நிச்சயமாய் வரும்; நாம் எதிர்பார்க்காத விதத்தில் வரும்; மனிதர் யாவருக்கும் தோன்றும் விதத்தில் வரும். கடவுளின் சித்தப்படி அவரது ஆற்றல் மிக்க செயலால் அது நிகழும். ''மனுமகன்'' வானதூதர் புடைசூழ வல்லமையோடு மேகங்களின் மீது வரும்போது நிகழும். இந்த மனுமகன் இயேசுவே. உலகில் வாழ்ந்த போது இகழப்பட்டவராகவும், தாழ்த்தப்பட்டவராகவும் தோன்றியிருக்கலாம். ஆனால், விண்ணரசு நிறைவுறும்போது, தமது அரசத் தன்மையையும், தெய்வீக வல்லமையையும் வெளிப்படுத்துவார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு, பரிசுத்த ஆவியரின் வருகை ஆகியவற்றிற்குப்பின், இயேசுவினுடைய மீட்பின் சமூகமான திருச்சபை தோன்றியது. மகிமைப்படுத்தப்பட்ட ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய கடவுளின் வலப்பக்கத்தில் (அ.ப. 2:30-35) அமர்ந்து தமது ஆவியின் வழியாகத் திருச்சபையை நடத்துகிறார். பிதாவாகிய இறைவன், இயேசுவை ''அரசர்களுக்கெல்லாம் அரசராகவும், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவராகவும்'' ஏற்படுத்தியுள்ளார் (திருவெளி 19:16). உலகில் இறையாட்சி திருச்சபை வழியாக நடைபெறுகிறது. அகத்திலே அருள் வளர்ச்சியிலும், புறத்திலே வேத போதக அலுவலிலும் இவ்வாட்சி நடைபெறுகிறது. திருச்சபை மேலும், திருச்சபை வழியாக உலகின் மேலும், கிறிஸ்து செய்துவரும் ஆட்சியின் மூலம் தற்போது கடவுளின் அரசு அதாவது, விண்ணரசு நிறைவெய்தி வருகிறது. கால முடிவிலே கிறிஸ்து தமது பகைவர்கள் யாவரையும் வென்று பிதாவாகிய இறைவனிடம் அரசை ஒப்புவிப்பார் (1 கொரி 15:24). அப்போது இவ்வரசு ''நமது ஆண்டவருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் சொந்தமாயிருக்கும்'' (திருவெளி 11:15). விசுவாசிகள் ''கிறிஸ்துவினுடையவும் கடவுளுடையவும் அரசிலே'' தங்களது பிறப்புரிமை பெறுவர்

(எபே 5:5). அப்போது விண்ணரசு முழுமை பெறும், நிறைவு அடையும். அப்போது ''யாவும் வல்ல நமது ஆண்டவராகிய கடவுள் ஆட்சி செலுத்துவார்'' (திருவெளி *19:6).*

10. வரலாற்று நோக்கம்: மேற்கூறிய அமைப்பு, பிரிவுகள், பொருளடக்கம் ஆகியவற்றிலிருந்து, மத்தேயு நமது காலத்தில் மக்கள் கருதுவது போன்ற வரலாற்றையோ, வாழ்க்கைச் சித்திரத்தையோ எழுதவில்லை என்பது தெளிவு; அவரது நோக்கம் அஃதன்று. அவரது நடையில் நேரடிச் சான்றுத் தன்மை தோன்றவில்லை. அவர் மாற்கையும், பிற மூலங்களையும் சார்ந்து எழுதுவதாகத் தோன்றுகிறது. இவ்வாறு பிற நூல்களைச் சார்ந்து எழுதியமையோ, வரலாறு எழுத வேண்டும் என்ற நோக்கமின்மையோ, இந் நற்செய்தியை வரலாற்று மூலமாகயிருக்கத் தகுதியற்றதாக ஆக்கி விடவில்லை. நற்செய்தியின் பிரிவுகளிலோ, தலைப்புக்களைப் பொறுக்கி எடுப்பதிலோ, அழுத்திக் கூறும் விதத்திலோ, தம்முடைய வாசகர்களுக்கு ஏற்ற முறையில் கூறுவதிலோ ஆசிரியர் தமது விருப்பம் போல் செய்தாலும், அவர் வரலாற்று உண்மையிலிருந்து வழுவவில்லை என்று கூறலாம். ஆசிரியர் கருத்து முறைப்படி தமது நூலை அமைத்திருப்பதால், காலவரையைப் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. இயேசுவின் வாழ்வின் காலவரை அமைப்பை அறிய விரும்பினால், நாம் லூக்கா எழுதிய நற்செய்தியை வாசித்தல் நலம். மாற்கு, லூக்கா ஆகியோருடன் ஒப்பிடக் கூடிய பகுதிகளில் இயேசுவைப் பற்றிய நிகழ்ச்சிகளையோ, பிற நிகழ்ச்சிகளையே உருமாறாது கூறுகிறார் மத்தேயு. இந்நூல் பொதுமக்களுக்குச் சொல்லப்படும் வரலாற்றுத் தன்மையைக் கொண்டது. ஆனால், தமது மூலங்களுக்கு முரணாக ஒன்றும் கூறவில்லை ஆசிரியர். நற்செய்திகளை வரலாற்று நூல்களாகக் கருதும் போது, நாம் நோக்க வேண்டிய விதத்தைப் பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம். மத்தேயுவின் நற்செய்தி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது; வரலாற்று மூலமும் ஆகும் என்று கூறினோம். மேலும், அது வரலாறு பற்றிய ஒருவித இறை நூலும் ஆகும். இறைவன், கிறிஸ்துவின் வழியாக உலகக் காரியங்களில் புகுத்தியுள்ள நிலையான, ஊடுருவிச் செல்ல வல்ல இறை ஆற்றலின் தோற்றம், தன்மை, அன்றாட நிலை, அதன் இறுதிநிலை ஆகியவை பற்றிய தொடர் சிந்தனையாகும்.

முடிவாக, மத்தேயு எழுதிய நற்செய்தி திட்டமுறை கொண்டது என்று கூறினோம். இதில் சமநிலையும், அமைதியும் நிறைந்துள்ளன. இதிலே படிமரபு வாய்ந்த மிடுக்கு உண்டு. இதிலே ஆழ்ந்த மத உணர்ச்சியும், போதகத் தெளிவும் உண்டு. மத வழிபாட்டிற்கும், மறைக்கல்விக்கும் உகந்தது. ''அப்போது...'' என்று தொடங்கும் பகுதிகள், மதவழிபாட்டிற்குப் பெரிதும் உதவுகின்றன. இந்நூலிலே கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள ஒற்றுமையை உணர்கிறோம். இவ்வுலகில் நிலவி இறுதியில் நிறைவு பெறும் இறையரசைப் பற்றி இந்நற்செய்தி பேசுகிறது. இச்சிறப்புகளால், திருச்சபை இந்நற்செய்தியை மற்றவற்றை விட அடிக்கடி பயன்படுத்துகிறது. இதற்குத் தனிச்சிறப்பு அளிக்கிறது. இது ''திருச்சபையின் நற்செய்தியாகும்''. இஃது ஒன்றே இந்நற்செய்தியின் சிறப்பைக் காட்டுகிறது.

மத்தேயுவில் கீழ்த்திசை ஞானிகள் (MAGI, WISEMEN FROM THE EAST IN MATHEW)

பெத்லகேமில் இயேசு பிறந்ததை விவரிக்கும்போது, மத்தேயு கிழக்கிலிருந்து ஞானிகள் வந்து குழந்தை இயேசுவைக் கண்டதை எடுத்துக்கூறுகிறார். இவர்கள் பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் ஆகிய விலையுயர்ந்த கொடைகளைக் கொண்டு வந்தனர் *(மத் 2:1-12).* இவர்கள் கிறிஸ்துவின் விண்மீனைக் கிழக்கில் கண்டனர்; குழந்தையைத் தேடி யூதேயாவுக்கு வந்தனர் *(2:2).* இவர்கள் ஏரோதின் ஆலோசனையைக் கேட்டனர். இவர்களின் தேடுதல் பெத்லகேமுக்கு இட்டுச் சென்றது. இது, மத்தேயுவின் கூற்றுப்படி, மெசியாவின் பிறப்பிடம்

பற்றிய மீக்காவின் இறைவாக்கை நிறைவேற்றியது (மீக் 5:2; மத் 2:5-6). விரைவில், இவர்கள் குழந்தையையும் அதன் குடும்பத்தையும் கண்டுபிடித்துக் குழந்தையை வணங்கினர். அரசனுக்குரிய கொடைகளைக் குழந்தைக்கு அளித்தனர். இவர்களது வருகை, இடையர்கள் பற்றிய லூக்காவின் விவரிப்புக்குப்பின் (லூக் 2:8 தொ) நிகழ்ந்திருக்க வேண்டும். இதற்குப் பின் ஏரோது இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றான் (மத் 2:16). இது, ஞானிகள் வந்தபோது, இயேசு புதிதாகப் பிறந்த குழந்தை அல்லர், சிறிது வயதுடையவர் என்று காட்டுகிறது.

இந்த ஞானிகளை அடையாளம் காட்ட அறிஞர் சிலர் முயன்றுள்ளனர். மாய வித்தை, கனவுகளுக்கும் காட்சிகளுக்கும் விளக்கம் அளித்தல், சோதிடம் ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தவர்களையும் இறைவாக்கினர்களையும் பழங்கால மேற்காசிய மக்கள் அறிந்திருந்தனர். இவர்களை ஞானிகள் என்றழைத்தனர். இப்படிப்பட்டவர்களின் ஆதிக்கத்திற்குத் தானியேல் நூல் (தானி 1:20; 2:2), யோசிபஸ் மற்றும் பல உரோமையரின் நூல்கள் சான்று கூறுகின்றன. பெரும்பாலும் இவர்கள் மோசமாக விவரிக்கப்படுகின்றனர் (காண்க. அ.ப. 8:9-13; 13:6-12). ஆனால், மத்தேயுவின் விவரிப்பில் இந்த ஞானிகள் உயர்ந்த மேன்மை மிக்கவர்களாகத் தோன்றுகின்றனர்.

மத் 2:2-இலிருந்து இவர்கள் விண்மீன்கள் பற்றிய ஆய்வைப் பின்வரும் நிகழ்ச்சிகளை முன்னறிவிப்பதற்குப் பயன்படுத்திய சோதிடர்களாகத் தோன்றுகின்றனர். இவ்விதச் செயல்கள் பாரசீகத்தில் (அல்லது பார்த்தியாவில்) வெகுவாகப் பயன்பட்டதாகத் தெரிகின்றன. இதிலிருந்து இந்த ஞானிகள் எங்கிருந்து வந்திருக்கக்கூடும் என்று ஊகிக்க வாய்ப்புள்ளது. இவர்கள் அளித்த கொடைகள் இவர்கள் அரேபியாவிலிருந்து வந்திருக்கக்கூடும் என்று சுட்டவல்லன. இவர்கள் பாபிலோனியாவிலிருந்து வந்திருக்கக்கூடும் என்று கருத இடமுண்டு. இங்கு யூதர்களின் பெரும் குழுக்கள் வாழ்ந்து வந்தன. அவர்களிடமிருந்து இந்த ஞானிகள் மெசியாவின் பிறப்பைப் பற்றி அறிந்திருக்கக்கூடும்.

ஞானிகளின் வருகையில், புற இன நாடுகளிலிருந்து இஸ்ராயேலின் புதிதாகப் பிறந்துள்ள அரசனுக்கு வணக்கம் செலுத்த அரச தூது வந்தது என்று விவரிப்பதிலேயே மத்தேயு அக்கறை கொள்கிறார். இதில்தான் இஸ்ராயேலின் அக்கால அரசனான ஏரோது அக்கறை காட்டுகிறான். இதுவே அவனைக் கடும் சினம் கொள்ளச் செய்கிறது (மத் 2:1-2). இலக்கிய அளவில், ஏரோதும் இயேசுவும் போட்டியாளர்கள் ஆவர். ஞானிகளின் வருகை, அன்னிய ஆட்சியாளர்களிடமிருந்து கூட மதிப்பும் மேன்மை ஏற்பும் பெறத்தகுதியுள்ளவர் யார் என்று முனைப்பாக வெளிப்படுத்துகிறது.

காலப்போக்கில் ஞானிகள் அளித்த காணிக்கைகளின் எண்ணிக்கை (மத் 2:11), இவர்களை மூன்று பேராகவும், எசா 60:3-இன் பின்னணியில், அரசர்களாகவும், கருதத்தூண்டியது. பொதுப்பாணிப் பாரம்பரியம் இவர்களுக்குப் பல்தசார், மெல்கியோர், காஸ்பார் என்ற பெயர்களையும் கொடுத்தது. மேலும், இவர்களின் திருப்பண்டங்களின் பெரும்பகுதி பெரிதும் மதிக்கப்பட்டு, கொலோன் பேராலயத்தில் காப்பாற்றப்படுகிறது.

இந்த ஞானிகளின் வருகை நிகழ்ச்சி சனவரி 6-ஆம் நாள் வழிபாட்டில் ஆண்டவரின் திருக்காட்சி விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் புற இனத்தவருக்கு இயேசு வெளிப்படுத்தப்படுவது நினைவுகூரப்படுகிறது. இந்தப் புறவினத்தாருள் இந்த ஞானிகளே முதன்முதல் இயேசுவுக்கு வணக்கம் செலுத்தியவர்களாகக் கருதப்படுகின்றனர்.

மத்தேயுவின் மறைசாட்சி மரணம்
(MATTHEW, MARTYRDOM OF)

இது பிற்காலத்தில் தோன்றிய மத்தேயு மறைசாட்சியாக மரித்த நிகழ்ச்சியைப் பற்

றிய ஒரு நூல். கிறிஸ்து கட்டளையிட்ட ஓர் ஊருக்கு மத்தேயு செல்கிறார். அங்கு நரமாமிசம் உண்ணுபவர்களின் அரசன் அவரைக் கொன்று விடுகிறான். இந்நூல் அந்திரேயா மற்றும் மத்தியா ஆகியோரின் பணிகள் என்ற நூலைச் சார்ந்து அமைந்துள்ளது.

ஆயக்காரனாய் இருந்த மத்தேயு இயேசுவால் அழைக்கப்பட்டதால் அவரின் 12 அப்போஸ்தலர்களுள் ஒருவர் ஆகிறார். மத்தேயு ஓர் ஊருக்கு வருகிறார். கிறிஸ்து அவருக்கு அளித்த குச்சி ஒன்றைத் தரையில் ஊன்றி வைக்கிறார். அது பெருமரமாக வளர்ந்து பல அற்புதங்களைச்செய்கிறது. எனவே, இவர் அரசனால் நெருப்பில் இடப்பட்டார். ஆனால், அஃது அவருக்குப் பனிபோல் இருந்தது. அந்த நெருப்பு சிலைகளை எரித்தது; அரசனை அவன் அரண்மனை வரை துரத்திச் சென்றது. பின், அந்த அரசன் மத்தேயுவிடம் மன்றாட அவன் காப்பாற்றப்படுகிறான். மற்றொரு நாள் மத்தேயு கொல்லப்பட்டபின் அவர் உடல் இரும்புப் பெட்டியில் வைக்கப்பட்டு ஈயத்தால் முத்திரையிடப்பட்டு, கடலில் எறியப்பட்டது. ஆனால், மறுநாள் ஒளிரும் ஆடையணிந்த இருவர் இயேசு குழந்தை வழிநடத்த அந்தப் பெட்டியைக் கடலிலிருந்து தூக்கி வந்தனர். அதன்பின் அந்த அரசன் மனம் மாறினான் என்றும், பின்பு இவர் அந்நகரத்தின் ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டார் என்றும் இந்நூலில் கூறப் பட்டுள்ளது.

இத்தகைய பழங்காலப் போலி நூல்களில் பல கட்டுக் கதைகளைக் காணலாம். அவர்கள் சமயத்தையோ உண்மை நிகழ்ச்சியையோ, இறையியலையோ கருத்தில் கொள்ளாமல் ஏதோ ஓர் புதுமையான கதை சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு இதை எழுதினார்கள்.

இது கிரேக்கத்திலும், இலத்தீனிலும் எழுதப்பட்டுள்ளது. இவைகளில் கூட பல வேறுபாடுகள் அந்த நூல்களிலேயே காணப் படுகின்றன.

மத்மன்னா (MADMANNAH - சாணிக்குன்று)

இவர், யூதாவின் தலைமுறைப் பட்டியலின்படி (1 நாள் 2:49) காலேபுக்கு மாக்காவின் வழியாகப் பிறந்த வழித்தோன்றல்களில் ஒருவரான சாபுவின் மகன் ஆவார்.

சிக்லாகுக்கு அருகில் உள்ள ஒரு நகரத்தையும் இப்பெயர் குறிக்கிறது. இந்த நகரானது யூதா புதல்வருக்குக் கொடுக்கப் பட்டது (யோசு 15:31). சிமியோனுக்குத் தரப்பட்ட நகர்களின் இணைப்பட்டியலில் இது பெத்மர்க்காபோத்து என அழைக்கப் படுகிறது (யோசு 19:5). இவ்விரு பெயர்களும் ஒரே நகரைக் குறிக்கலாம். 1 நாள் 2:49-இன்படி இந்நகரானது, காலேபின் மகனாகிய சாபினால் நிறுவப்பட்டதாகக் கருதலாம். இந்தச் சாபு மத்மன்னாவின் தந்தை. எனவே, இந்நகருக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. ஆனால், இப்பெயர் சாலமோன் மன்னனால் மாற்றப்பட்டது. இவ்விடத்தைச் சாலமோன் தேர்களைச் செய்யவும், நிறுத்தி வைக்கவும் பயன்படுத்தினார் (காண்க. 2 நாள் 7:25).

அறிஞர் சிலர் இதை மெக்கோனாகவும் (நெகே 11:28), மக்பேனாகவும் (1 நாள் 2:49) அடையாளம் காட்ட முயன்றுள்ளனர். மத்மன்னா, பெத்-மர்க்காபோது, மெக்கோனா, மக்பேனா ஆகிய நான்கு பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். இஃது இருந்த இடமாக, பெயேர் செபாவுக்கு வடகிழக்கில் 16 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத் உம் எத்-தேயிம்னேயும், அதன் அருகிலுள்ள கிர்பெத் தத்ரீத்தாவும் அடையாளம் காட்டப்படுகின்றன.

மத்மேனா (MADMENAH - எருக்குவியல்)

இஃது எருசலேமின் வடக்கில் உள்ளது. இதன் வழியாக அசீரியர்கள் படையெடுத்து வருவார்கள் என்று எசாயா முன்னுரைத்தார் (எசா 10:31). கி.மு. 701-இல் சனகெரிபு எருசலேமை நோக்கிப் படையெடுத்து வருகையில் இவ்வழியே வந்ததாகக் கூறப் படுகிறது. இஃது எருசலேமுக்கு வடக்கில்

3 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலச் சுபாத்து என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

மத்மேன் (MADMEN - எருக்குழி)

எரேமியா இறைவாக்கினர், மோவாபின் அழிவு பற்றி எழுதிய புலம்பற் பாடலில் மத்மேன் என்ற இந்த நகரையும் குறிப்பிட்டுள்ளார் (எரே 48:2). இதுவும் தீமோனும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். இது ராபாவிற்கு வடமேற்கில் 5 கி.மீ. தொலைவிலும், சாக்கடலுக்குக் கிழக்கில் 13 கி.மீ. தொலைவிலும், அர்னோன் ஓடைக்குத் தெற்கிலும் உள்ள கிர்பெத் திம்னே என்ற இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

மந்திர உச்சரிப்புகள் (INCANTATIONS)

மந்திரவாதிகளால், பேய்களை ஓட்டவும் நோய்களைக் குணமாக்கவும் பயன்படுத்தப்பட்டவை இந்த மந்திர உச்சரிப்புகள். பேய்களை ஓட்டும் இம்முறையில் இரு பிரிவுகள் உண்டு. 1. சக்திமிக்க மந்திர உச்சரிப்புகளைச் சொல்வது, 2. மாந்திரீக சக்தியுள்ள சில பொருள்களைக் கொண்டு சில செய்கைகளைச் செய்வது. பேய்களை ஓட்டுவது மட்டுமல்லாமல், நோய்களைக் குணப்படுத்தவும் மருத்துவர்கள் மந்திர உச்சரிப்புகளைப் பயன்படுத்தினர். இந்தப் பழக்கம் உலகெங்கிலும் காணப்படுகிறது. குறிப்பாக, பாபிலோனியர்களிடம் இப்பழக்கம் ஒரு காலத்தில் பிரசித்தி பெற்றிருந்தது. இந்த முறையில் கடவுள்களின் பெயர்கள் வரவழைக்கப்படும். கடவுள்களின் பெயர்கள் சக்தி மிக்கவையாகக் கருதப்பட்டன. மேலும், கடவுளின் இருப்பிடமும் மந்திர உச்சரிப்பில் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக, பேய்களை ஓட்ட ''வானின் பெயரால் சொல்கிறேன்; இவனை விட்டு விடு! மண்ணின் பெயரால் சொல்கிறேன்; இவனை விட்டுவிடு'' என்ற வாக்கியங்கள் பயன்படுத்தப்பட்டன. பாலஸ்தீனத்திலும் மந்திர உச்சரிப்புகள் பயன்படுத்தப்பட்டன (சங் 58:53). இயேசுவின் பெயரால் பேய்கள் ஓட்டப்பட்டன (அ.ப. 19:13). பேயோட்டுதல்.... காண்க.

மந்திரக்காப்புக் கயிறுகள் (MAGIC BANDS)

இவை குறி கூறுவதுடன் தொடர்புடையதாகத் தெரிகின்றன (எசே 13:18.20). ஆனால், எவ்வாறு இவை பயன்பட்டன என்பது தெளிவாக இல்லை. பிற்கால அரமேயிக்கு வாசகங்கள், மனிதர்கள் மாய வித்தையால் தீமையைத் தடுத்து நிறுத்தியதாகக் கூறுகின்றன.

மந்தை மேய்ப்பவர் (HERDSMAN)

மந்தையாக இருக்கும் வீட்டு விலங்குகளைப் பாதுகாப்பவர். இதன் எபிரேயச் சொல் ''இடையன்'' அல்லது ''மேய்ப்பவர்'' என்று மொழி பெயர்க்கப்படுகின்றது (ஆதி 13:7 8; 26:20; 1 சாமு 21:7). ஆமோ 7:14 இல் 'ஆடுமாடு மேய்ப்பவன்' என்ற சொல் 'எருமை' என்று பொருள்படும் எபிரேயச் சொல் ஒன்றிலிருந்து வந்தது என்று சிலரும், அஃது 'இடையர்' (ஆமோ 1:1; 2 அர 3:4) என்ற சொல்லின் எழுத்துப் பிழையாகும் என்று சிலரும் கருதுகிறார்கள். ஆமோஸ் தான் குருகுலத்தைச் சாராதவன் என்பதை வலியுறுத்துவதற்காகவே தன்னை 'ஆடுமாடு மேய்ப்பவர்' என்று கூறுகிறார். உகாரித்து மொழியிலும், அக்காதிய மொழியிலும் உள்ள இது போன்ற சொற்களை ஆராய்ந்த வல்லுநர்கள் சிலர் 'இடையன்', 'மேய்ப்பவர்' என்ற சொற்கள் பணிபுரியும் குருக்களுக்குக் கொடுக்கப்பட்ட வழிபாட்டுப் பதவியைக் குறிக்கும் சிறப்புப் பெயர்களாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

மந்தை வாயில், ஆட்டு வாயில் (SHEEP GATE)

எருசலேமுக்கு வடக்குப் பக்கத்திலுள்ள நகரின் ஒரு வாயில், நெகமியாவால் புதுப்பிக்கப்பட்டது (நெகே 3:1.32; 12:39). இது யோவா 5:2-இல் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மமோன் (MAMMON - செல்வம்)

செமித்திய மரபுச் சொல்லான இஃது எப்படித் தோன்றியது என்பது அவ்வளவு தெளிவாக இல்லை. இச்சொல்லுக்கு 'செல்வம்', 'பணம்', 'சொத்து', 'வரவு

எனப் பல பொருள்கள் உண்டு. இச்சொல் விளக்கவேண்டிய அவசியமில்லாத அளவுக்கு நன்கு அறியப்பட்டிருந்தது. இந்தச் சொல் புதிய ஏற்பாட்டில் மட்டுமே இயேசுவின் பேச்சில் வருகின்றது (*மத் 6:24; லூக் 16:9.11.13*). இச்சொல் சீரா 31:8-இலும், ஏனோக்கு நூலிலும், தர்கூமிலும் காணப்படுகிறது.

1) மத் 6:24; லூக் 16:13-இல் இறைவனுக்கு ஊழியம் செய்தல் செல்வத்துக்கு ஊழியம் செய்தலைத் தடுக்கிறது. எவனும் இரண்டு தலைவர்கட்கு ஊழியம் செய்ய முடியாது. செல்வம் வைத்திருப்பதாலன்று, ஒருவன் செல்வத்தினால் தான் கடவுளுக்கு ஆற்ற வேண்டிய முழுமையான கடமையிலிருந்து தவறுகிறான். எனவே, ஒருவன் முடிவாகக் கடவுளுக்கு மட்டுமே உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும்.

2) லூக் 16:9.11-இல் செல்வம் மேலே கூறப்பட்ட ஊழியனைப் போலவே நீதியற்றதாகவும் வருணிக்கப்படுகிறது. ஏனெனில் ஒருவன் செல்வம் சேர்க்க நினைக்கும் போது 'அநீதி', 'கெட்ட வழி'களில் அதனை அடைய முயல்வதால் அது கறைபட்ட செல்வமாகிறது. ஆனால், அநீத செல்வத்தைக் கொண்டு விண்ணுலகில் செல்வத்தைச் சேருங்கள். உலகச் செல்வத்துக்கு நம்பத்தக்கவனாய் இருப்பவனிடம் ''உண்மையான செல்வம்'' ஒப்படைக்கப்படும்.

மம்ரே (MAMRE - பலம்) - ஆள்

இவர் ஓர் எமோரியர். ஆனேர், எசுக்கோல் என்பவர்கள் இவரது சகோதரர்கள். இவர்கள் மூவரும் கெதர்லகோமரை முறியடிப்பதில் ஆபிரகாமின் கூட்டாளிகள் ஆவர் (*ஆதி 14:13.24*).

மம்ரே (MAMRE - பலம்) - இடம்

எபிரோனுக்கு வடக்கே 2 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் இடமாகும். ஆபிரகாம் வாழ்ந்த முக்கிய இடம் இதுதான். இது மம்ரே எனப்பட்ட எமோரியரின் பெயரை வைத்து அழைக்கப்பட்டது (*ஆதி 14:13*). ஆபிரகாம் இங்கே ஒரு பலிபீடத்தை எழுப்பினார் (*13:18*); பின்பு சோதோம், கொமோராவைக் காப்பாற்றும்படி கடவுளிடம் வேண்டியதும் இந்த இடத்தில் தான் (*18:1தொ*). மம்ரேக்குக் கிழக்கே 'மக்பேலா' நிலத்தில் உள்ள குகையை ஆபிரகாம் விலைக்கு வாங்கினார். அதில் தான் சாராவும், அவரும், முதுபெரும் தந்தையரும், அவர்கள் மனைவியரும் அடக்கம் செய்யப்பட்டனர் (*23:17 தொ; 25:9; 35:27; 49:30; 50:13*).

தங்கள் மூதாதையர் அடக்கம் செய்யப்பட்டதால் யூதர்களுக்கு இது மிகவும் புனிதமான இடமாகும். கி.மு. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டின் தளம் ஒன்று இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து அவர்கள் கூறுவது உண்மையென்பது தெரிகிறது. ஆபிரகாமின் கிணற்றுக்கு வடகிழக்கேயுள்ள இத்தளத்தின் பிளவு இங்கு ஆபிரகாமின் 'ஓக்' மரம் இருந்ததைக் காட்டுகிறது.

மக்பேலா குகையைச் சுற்றி எழுப்பப்பட்ட சுற்றுச் சுவருக்கும், ஏரோது எருசலேம் கோவிலில் எழுப்பிய சுற்றுச் சுவருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. தென்பாலஸ்தீன மக்கள் இதன் சுற்றுச் சுவர், பீடம், கிணறு ஆகியவற்றை மூட நம்பிக்கைக்குரிய பல வழிபாடுகளுக்குப் பயன்படுத்துகின்றனர். இவ்விடம் பல ஆயிரம் ஆண்டுகளாக மக்கள் கூடுமிடமாக இருந்திருக்கிறது. புதிய எபிரோன் நகரம் இதனை மறைத்தாலும் அதன் புனிதத்துவத்தால் இன்றும் இது சிறப்பாகப் போற்றப்படுகிறது.

மயக்குதல் (BEWITCH)

இச்சொல் உருவகமாக, கலா *3:1*-இல் பயன்பட்டுள்ளது. அறிவுத்திறனை இழக்கும் அளவுக்கு வாதத்திறமையால் வயப்படுதலைக் குறிக்கிறது.

மயில் (PEACOCK)

இது நெடுவால் பகட்டு வண்ணக் கோழிவகையில் ஒரு பெரிய பறவை. இந்திய, இலங்கைக் காடுகளிலும் மலைகளிலும் அதிகம் காணப்படும் பறவை.

பெண் பறவை அவ்வளவு அழகியதன்று. ஆண் பறவை, நீலம் மற்றும் பச்சை நிற இறகுகளுடன் தலையில் கொண்டையும் கண்கள் போன்ற புள்ளிகள் நிறைந்த நீண்ட வாலையும் கொண்டு, பார்ப்பதற்கு அழகு மிக்கதாகும்.

இந்தியாவைச் சேர்ந்த மயில், சாலமோன் காலத்திலேயே பாலஸ்தீன நாட்டில் அறி முகப்படுத்தப்பட்டதா என்பது ஐயத்திற்குரி யது *(1 அர 10:22; 2 நாள் 9:21)*. கிரேக்க இலக்கியத்தில் கி.மு. 5-ஆம் நூறாண்டில் தான் இப்பறவை அறிமுகப்படுத்தப்படு கிறது. உரோமையர் மயிலின் இறைச்சியை, குறிப்பாக அதன் மூளையையும், நாக்கை யும் விரும்பி உண்டதாகத் தெரிகிறது. இஸ்ராயேலில் இப்பறவையின் உருவம் அழகு சாதனமாகப் பயன்பட்டிருக்கலாம்.

1 அர 10:22 மற்றும் *2 நாள் 9:21* ஆகிய குறிப்புகளில் மயிலுக்குப் பதிலாகக் 'குரங்கு' எனும் சொல்லை மொழி பெயர்ப் பாளர்கள் சிலர் பயன்படுத்துகின்றனர். இந்த விலங்கு ஆப்ரிக்காவிலிருக்கும் பழங் காலக் குரங்கு வகையாகும்.

மரகதம் (EMERALD)

ஒளிமிக்க பச்சை இரத்தின வகை. வட எகிப்தில் சபாராவில் குறிப்பாக கிளியோப் பத்திரா காலத்தில் அரிதாகக் காணப்பட்ட மணிக்கல். இதைக் குறிக்கும் எபிரேயச் சொல் பொதுவாகப் பச்சைக் கனிமம் ஆகும். இது பெரிய குருவின் தீர்ப்பைக் கூறும் மார்புப் பட்டையில் முதல்வரிசை யில் பதிக்கப்பட்ட கற்களில் மூன்றாவதா கும் *(யாத் 28:18; 39:11)*. தீர் அரசனை அழகுபடுத்திய விலையுயர்ந்த கற்களில் இதுவும் ஒன்று *(எசே 28:13)*. ஏதோமுக்கும் தீருக்குமிடையே நடந்த வாணிபத்தில் இது வும் இடம் பெற்றது *(எசே 27:16)*. அரியணையில் அமர்ந்திருந்தவரைப் பற்றிய விவரிப்பில் மரகதம் குறிக்கப்பட்டுள்ளது *(திருவெளி 4:3)*. புதிய எருசலேம் மதிலின் அடிக்கற்களுள் மரகதம் நான்காவதாகக் குறிக்கப்படுகிறது *(21:19)*.

மரக்கட்டை (LOG)

மரக்கட்டை என்ற தலைப்பு கொடுக்கப் பட்டாலும், இந்தச்சொல் பல பொருட் களைக் கொண்டதாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

அடிமரத்தின் ஒரு பகுதியைக் குறிப்பிடு வதற்காகவும் இந்தச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில்தான் சில எபிரேய, கிரேக்கச் சொற்களின் மொழி பெயர்ப்பு அமைந்துள்ளது *(2 அர 6:2.5; திருவுரை 10:9; எசே 24:1.10; மத் 7:3-5; லூக் 6:41-42)*.

தீரின் மன்னரான ஈராம், சாலமோன் கோயில் கட்டுவதற்குத் தேவையான கேதுரு மரங்களையும், நூக்கு மரங்களை யும், தெப்பங்களாகக் கட்டி கடல் வழி யாய்ச் சாலமோனுக்கு அனுப்பினார் *(1 அர 5:8-9; 2 நாள் 2:8.16)*.

மத் 7:3-5; லூக் 6:41-42 ஆகியவற்றில் காணப்படும் இயேசுவின் சொற்கள், பாபி லோனியத் தால்மூதிலும் காணப்படு கின்றன.

மரக்கால் (BUSHEL)

மாவு போன்ற வறண்ட பொருட்களை அளக்கும் கருவி. இது *மத் 5:15; மாற் 4:21; லூக் 11:33*-இல் விளக்கை மறைக்கப் பயன்படும் பாத்திரத்தைக் குறிக்கிறது.

மரபு, பாரம்பரியம் (TRADITION)

I. எல்லா மனித சமூகங்களுக்கும் மரபு என்பது பொதுவானது. எண்ணங்கள், கருத் துக்கள், பழக்கவழக்கங்கள் போன்றவை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்ததிற்கு மாறாத வடிவில் கையளிக்கப்படுவது அவற்றின் ஆன்மீகத் தொடர்ச்சியை உறு திப்படுத்துகிறது. மத சம்பந்தமானவைகள் குறிப்பாக நம்பிக்கைகள், ஆசார முறைகள், செப, வழிபாட்டு முறைகள் போன்றவைகள் தனிப்பட்ட கவனத்துடன் மரபுவழி கை அளிக்கப்படுகின்றன. விவிலிய உலகைச் சூழ்ந்துள்ள சமுதாயங்களில் சமய மரபு, நாகரிகத்தை அமைக்கும் மனித மரபுகளில் இணைந்தே உள்ளது.

மரபு என்பதை இக்கால வழக்கு இரு வகையாகக் காண்கிறது. ஒன்று, காலம் காலமாய்த் தொடர்ந்து வரும் கையளிக்கப் படும் காரியங்களைப் (எ.கா. எகிப்திய வழிபாட்டு மரபு) பற்றியதாகும். மற்றொன்று கையளிக்கப்படும் முறை பற்றியது. முக்கியமாக இதில் நிலைத்தன்மை உண்டு. இதில் நாடகம் எழுதுவது இரண்டாந்தர முக்கியமானது. அல்லது இடமே பெறுவதில்லை (இதன்படி சுமேரியப் பண்பாடு, வாய்மொழி நாகரிகமானாலும் மரபு வகையைச் சார்ந்ததேயாகும்). விவிலிய வெளிப்பாட்டிற்குரிய மரபில் மேற்கண்ட இரண்டின் சாயல்களும், மூலச் சிறப்புகளும் இடம் பெறுகின்றன.

II. **பழைய ஏற்பாடு:**

1. புனிதசேமிப்பு கையளிக்கப்படுதல்: பழைய சட்டத்தின் கீழ் இஸ்ராயேலில் புனித சேமிப்பு கையளிக்கப்படுதல். ஆகவே, ஒரு மரபு ஏற்படுகிறது என்பது பற்றி ஐயமில்லை. இறைமக்களின் தனித்துவத்திற்கு ஏற்றவாறு இந்தப் புனித சேமிப்பு வாழ்வின் எல்லா அம்சங்களையும் தழுவுகிறது. சரித்திர நினைவலைகள் மற்றும் அவற்றில் ஊன்றியுள்ள கோட்பாடுகள், செபமுறைகள் மற்றும் வாழ்க்கை மாலுமியாகும் ஞானம், வழிபாட்டுச் சடங்குகள், சைகைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் சட்டம் ஆகிய அனைத்தையும் தழுவுகிறது. இந்தச் சேமிப்பு கையளிக்கப்படுவதுதான் இஸ்ராயேலுக்குத் தனித்தன்மை அளிக்கிறது. குல முதுதந்தையர் முதல் புதிய ஏற்பாட்டு நுழைவாயில் வரை அதன் ஆன்மீகத் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.

இந்தச் சேமிப்பு புனிதமானது என்றால் மற்ற மனித மரபுகளைப்போல் கடந்த தலைமுறைகளிலிருந்து வருவதால் மட்டும் அன்று. மாறாக, இது தெய்வீகத் தொடக்கம் கொண்டது என்பதால்தான். இந்த விசுவாசத்தின் அடிப்படையில், கடவுளின் தூதர்கள் இஸ்ராயேலுக்கு அளித்த, வெளிப்பாடு உண்டு. சட்டம், சட்டம் கட்டுப்படுத்தும் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் கடவுளின் சித்தத்தை அறிந்து காப்பவர்களால் கடவுளின் பெயரால் அறிவித்த நேரடிக் கட்டளைகள் உள்ளன. வெளிப்பாட்டிலிருந்து பெற்ற இந்த நேரடிக் கூறுகள், மேற்காசியச் சூழ்நிலையிலிருந்து கடன் வாங்கப்பட்டு வெளிப்பாட்டிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட காலத்தால் பழமை வாய்ந்த கூறுகளை விலக்குவதில்லை.

வெளிப்பாட்டோடு இணைக்கப்பெற்று, தனித்தன்மை பெற்று விளங்க இறைமக்களின் மரபில் ஒன்றையொன்று நிறைவு செய்யும் இரு பண்புகள் இழையோடுகின்றன. அதற்கு நிலையான தன்மை உண்டு. அதனுடைய அடிப்படைக் கூறுகளான விசுவாசக்கோட்பாடுகள், சட்டம், வழிபாடு (இறையொருமை உடன்படிக்கைக் கோட்பாடு, குலமுது தந்தையரிடமிருந்தும் மோசேயின் சட்டத்திலிருந்தும் வரும் பழக்கங்கள்) போன்றவை நிலையான வடிவம் பெற்றவையாகும். அத்துடன் ஒரு முன்னேற்றமும் உண்டு. தங்களின் காலத்திற்கேற்ற செயல்முறையான தேவைகளை நிறைவு செய்யும் முறையில், முன்னோரின் அலுவலைப் புதிய இறைதூதர்கள் நிறைவு செய்யும் நேர் விகிதத்தில் வெளிப்பாடு வளர்கிறது. சரித்திர அலையையொட்டி இந்த வளர்ச்சியும் இயற்கையான நடைபோடுகிறது. ஆனால், கலப்புத்தன்மையை ஒழுங்காகக்கொண்ட மற்ற மறை மரபுகளில் இருப்பதுபோல் பண்பாட்டுப் படிமுறை வளர்ச்சிக்கு இஃது அடங்கவில்லை. மாறாக, இங்கும் இஸ்ராயேலின் மரபின் தனித்துவம் ஓங்குகிறது.

2. கையளிக்கப்படும் முறை:

அ. இலக்கிய அமைப்புகளும் வாழ்க்கைச் சூழலும்: இப்புனித சேமிப்பு, தன்னையே கையளிக்க இலக்கிய வடிவு எடுப்பது அவசியமாகிறது. நிகழ்ச்சி உரைகள், சட்டங்கள், அறவுரைகள், பாடல்கள், வழிபடு முறைகள் போன்றவைகள்தாம் இதை வெளிப்படுத்தும் முறைகளாகும். இந்த வடிவங்களே பழக்கத்தால் நிர்ணயிக்கப்படுவதால் இவை பாரம்பரியங்களாகும். அருகிலிருந்த நாடுகளின் (கானான், மெசபொத்

தாமியா, எகிப்து) இலக்கிய அமைப்புக் களைப் பெரும்பாலும் ஒத்தே உள்ளன. இருந்தாலும் இஸ்ராயேலின் கோட்பாட்டு மரபு தனித்தன்மை பெற்று ஒளிர்கிறது. சட்டங்கள் அல்லது இறைவாக்கு மொழி கள் போன்ற பொதுவானவற்றைக் கையாள் வதில் விவிலிய மரபு தனிப்பாங்கு கொண் டதாகும். தனக்கென்றே உரிய தனிமொழி கள், சொற்றொடர்கள் கொண்டுள்ளதால் வேண்டிய அளவிற்கு அதிகமாகவோ, குறைவாகவோ அதன் ஆசிரியர்கள் அவற்றைக் கையாள்கின்றனர். தான் கை யளிக்கும் செய்திக்குப் பொருத்தமான வடி வங்களைக் கொண்டுள்ளது. மரபு பற்றித் தெரியவேண்டுமென்றால் இந்த அமைப்பு கள் பற்றியும் அறிவது அவசியமாகிறது. இதனால்தான் மரபு அமைந்த வரலாற்றைக் கண்டுபிடிக்க ஏதுவாகிறது.

ஆண்டாண்டாக இந்த மரபு எவ்வாறு கையளிக்கப்படுகிறது என்பதைக் காணவும் இந்த ஆய்வு வழி அமைக்கிறது. இறை மக்களின் வாழ்க்கையில் உள்ள அதன் செயல்முறைகளையும், மரபை ஏற்றுள்ள வாழ்க்கைச் சூழ்நிலையையும் நேரிடையாக அனுசரித்தே மரபு ஏற்கும் அமைப்புகள் உள்ளன. இந்த அலுவல்கள் சட்டத்திற்கும், வழிபாட்டிற்கும் காவலர்களான குருக் களின் போதனையும், இறைவாக்கினரின் போதனையும், சட்டஅறிஞரின் செயல் முறையான ஞானமும் ஆகும். வாழ்க்கைச் சூழ்நிலையைப் பொறுத்தமட்டில், ஒவ் வொன்றும் தனிப்பட்ட மரபுகளையும் விரும்பி ஏற்றுக்கொண்ட அமைப்புகளை யும் (வடிவங்களையும்) கொண்டுள்ளது. பல்வேறுபட்ட சூழ்நிலைகள் மற்றும் இஸ் ராயேல் மரபில் அடிப்படையான ஒற்றுமை ஆகியவற்றின் தொடர்பால் அடிக்கடி நிக ழும் குறுக்கீடுகளையும் காண்கிறோம்.

வாய்மொழி மரபுக்கு ஏதுவான வடிவங் களில் மரபுப்பொருள் வாயமொழி மூலம் கையளிக்கப்படுவதைத் தொடக்கத்தில் காண்கிறோம். தூயகம் அல்லது திருவிழாக் கள் சார்ந்து மறை நிகழ்ச்சியுரைகள், நீதி மொழிகள், வழிபாட்டு முறைகள், பாடல் கள், செப அமைப்புக்கள், குருக்கள் அல் லது இறைவாக்கினரின் விளக்கவுரைகள், ஞான மொழிகள் போன்றவை இத்தகைய வடிவங்களாகும். இறுதியாக, எழுத்து வடி வம் வாய்மொழி மரபுச் சூழ்நிலையில் பிறக்கிறது. அதனால் பெருமளவுக்குக் காப் பாற்றப்படுகிறது. இவ்வாறு விவிலிய மரபு படிப்படியாக நூல் வடிவம் எடுக்கிறது. காலப்போக்கில் நூல்வடிவம் முக்கியத்து வத்தில் வளர்கிறது. தூய ஆவியானவரின் தூண்டுதலால் இயற்றப்பட்டு, அவை இறைமக்களின் விசுவாசத்திற்கும் வாழ்க் கைக்கும் ஒரு தெய்வீக ஒழுங்காக அமை கின்றன.

ஆ. நூலும் மரபும்: யூதத்துவத்தில் பழங் கால மரபுச்சொத்து, கிறிஸ்து காலத்தருகில், எழுத்து வடிவில்தான் பாதுகாக்கப்பட்டது. இருந்தபோதிலும், இறைமக்கள் ஒரு புத்த கத்தை மட்டும் கைக்கொள்ளும் கூட்டம் அல்லர். அவர்கள் ஒழுங்குபட்ட ஒரு நிறுவனம் ஆவர். இதன் காரணமாக, அதற்குள்ளேயே திருநூலுக்குச் சமமான உயிருள்ள மரபு மறைந்தோடுகிறது. திரு நூல் கொண்டுள்ள சட்டத்தின் அதிகாரம் அதற்கு இல்லை என்றாலும், அதற்குரிய பாணியில் கடந்த காலங்களை மரபு தொடரச் செய்கிறது. குருத்துவ வாழ்க்கைச் சூழலிலும், மறைநூல் அறிஞர்களிடையே யும், யூதமறையில் பிளவுண்டான குழுக்களி லும் இந்த மரபைக் காண்கிறோம். அதில் ஆசானுக்கும், சீடனுக்கும் இடையே உள்ள அந்தரங்கத் தொடர்பால் கையளிக்கப்படும் உண்மையான வழிமுறை தெளிவாகிறது. ஆசான் மரபைக் கையளித்துத் தொடர் நிலை உண்டாக்குகிறார். அதைச் சீடன் பெற்று, தன் தவணை வரும்போது, அதைப் பிறருக்குக் கையளிக்க வேண்டும். இதுதான் கண்டிப்பான பொருளில் மரபு என்றழைக்கப்படுவதாகும். புதிய ஏற்பாடு இதை அறிந்திருக்கிறது. ''மூதாதையர் மரபுப்படி'' (7:5), ''பெற்றுக்கொண்ட மரபு'' (7:13) என்று மாற்கு சுட்டிக்காட்டுகிறார். ''முன்னோர் மரபில் ஆர்வம் மிக்கவனாய்'' (கலா 1:14) என்று பவுல் மொழிகிறார்.

''மோசே... காட்டிய முறைமைகளை'' (அ.ப. 6:14) ஏற்படுத்த இந்த வழிமுறைச் சொத்து திருநூலோடு சேர்கிறது. ஏனென்றால், தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்த, சட்ட அறிஞர்கள் இந்த மரபுகள் வெகு காலத்திற்கு முன்பே தோன்றியதாகக் கூறுவர். மேலும், அவர்கள் வாய்மொழியாகக் கையளித்தவை, விவிலியத்தைச் சுற்றி வளர்ந்த புதிய இலக்கியங்களை உருவாக்கின. கிரேக்க (எழுபதுநூல்) மற்றும் அரமேயிக்கு (தார்கும்) மொழிபெயர்ப்புகள், இராபிகளின் நூல்கள், பிரிவினைக் குழுக்களின் (கும்ரான்) இலக்கியப்படைப்புகள், போலி நூல்கள் ஆகியவை இந்தப் புதிய இலக்கியங்களில் அடங்கும். இந்த நூல்கள் சான்று கூறும் பிற்கால மரபைத் திருமுறைநூல்கள் தோன்றக்காரணமான முந்தைய மூல வாய்மொழி மரபுடன் குழப்பிவிடக்கூடாது.

III. புதிய ஏற்பாடு:

1. கிறிஸ்தவத் தொடக்கங்களில் மரபு.

அ. இயேசுவும் ''மூதாதையர் மரபும்'': அவர் காலத்திய யூத மரபிலிருந்து அவருக்கு இருக்கும் சுதந்தரத்தை இயேசு தொடக்கத்தில் இருந்தே சுட்டிக்காட்டுகிறார். திருநூலில் பொதிந்துள்ள அத்தியாவசியமான மரபுச் சொத்து பற்றிக் கேள்வி இல்லை. திருச்சட்டமோ, இறைவாக்குகளோ அழியாமல் நிறைவேற வேண்டும் (மத் 5:17). ஆனால் ''மூதாதையர் மரபு'' இந்தச் சலுகை பெறவில்லை. இந்த மரபு மனிதர்களுடையது. சட்டத்தையே அகற்றிவிட அச்சுறுத்துகிறது (7:8-13). அதைப் புறக்கணிக்கவும் தன் சீடர்களை இயேசு அனுமதிக்கிறார். அதனுடைய சரிவையும் பறைசாற்றுகிறார்.

அதே சமயத்தில் இயேசுவோ தனிப்பட்ட தலைவர்போல் செயல்படுகிறார்; மறைநூல் அறிஞர்போல் பெற்ற மரபைக் கிளிப்பிள்ளை போல் திரும்பச் சொல்லாமல் அதிகாரமுள்ளவராகப் போதிக்கிறார் (காண். மாற் 1:22.27). அவருடைய சீடரும் அவருடைய போதனையைத் திரும்பச் சொல்லப் பணிப்பொறுப்பு பெறுகிறார்கள் (மத் 28:19 தொ). மேலும், அவரின் செயல்களிலும் புதுமை புகுத்துகின்றவர் அவர். அவர் பாவங்களை மன்னிக்கிறார் (மத் 9:1-8); மீட்பின் அருளை மனிதர்க்கு வழங்குகிறார்; புதிய அடையாளங்களைத் தொடங்கி வைக்கிறார்; அவரைப் பின்பற்றி அவைகளைத் திரும்பவும் செய்யச் சொல்கிறார் (1 கொரி 11:23 தொ); தமது சொற்களாலும் செயல்களாலும் புதிய மரபைத் தோற்றுவிக்கிறார். திருநூலின் விளக்கமாகப் பழையவைகள் என்பதை இஃது அறவே அகற்றுகிறது.

ஆ. அப்போஸ்தல மரபு: யூதத்துவத்திலிருந்து கடன் வாங்கப்பட்ட சொற்றொகுதியில் எடுத்துக்கூறப்படும் இந்த மரபு இருத்தலைத் திருச்சபைக்குள்ளேதான் உண்மையிலேயே நிரூபிக்க முடிகிறது. முக்கியமாக, இது பவுலில் துலங்குவது கண்கூடாகும். அவரின் பயிற்சி முறை யூதக் கல்வி முறையில்தான் அமைந்திருந்தது. ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் தெசலோனிக்கேயருக்கு அவர் கட்டளை கொடுத்தார் (1 தெச 4:2). அதையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர் (4:1). ''வாய்மொழியாகவோ, கடிதத்தின் வழியாகவோ அவரிடமிருந்து கற்றறிந்த மரபுப் படிப்பினைகளை''க் (2 தெச 2:15) கடைப்பிடிக்க வலியுறுத்துகிறார். ''நீங்கள் என்னிடம் கற்றுக் கொண்ட போதனைகள், பெற்றுக்கொண்ட படிப்பினைகள், என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்க்கையில் நீங்கள் பார்த்தவை அனைத்தையும் கடைப்பிடியுங்கள்'' (பிலி 4:9) என்று பிலிப்பியருக்கு உரைக்கிறார். ''நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானதாக உங்களுக்குக் கையளித்ததும்'' (1 கொரி 15:3) என்று குறிப்பிட்டுக் கொரிந்தியருக்குப் பேசுகிறார். ''நான் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டது இதுவே -அதையே நான் உங்களுக்குக் கையளித்தேன்'' (11:23). கிறிஸ்துவின் சாவு, உயிர்ப்பு பற்றிய மறையுண்மைக் கருக்கம் பற்றி முதலாவது மேற்கோள் குறிக்கிறது. இறுதி இரவுணவின் வழிபாட்டு நிகழ்ச்சி பற்றி இரண்டாவது சுட்டுகிறது. எனவே, செயல்களிலும் சொற்களிலும் அப்போஸ்தல மரபு அடங்கியுள்ளது.

பவுலுக்கு முன்பும் அவரின் போதனை அமைப்பிலும், மரபின் முக்கியமானவைகள், யூத மரபை ஒத்த கையளிக்கும் நுணுக்கத்தைத் தழுவியே சென்ற நிலையைக் காண்கிறோம். ஆனால், திருச்சபையின் வாழ்க்கைச் சாரத்தையும், நற்செய்தியின் உட்பொருளையும், கிறிஸ்தவ விசவாசம் மற்றும் ஒழுக்கத்தின் ஒழுங்கினையும் இவைகள் அகப்படுத்தி உள்ளன. ''நம்மிடையே நிறைவேறிய (நற்செய்தி) நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி ஒரு வரலாறு எழுத பலர் முயன்றுள்ளனர். தொடக்க முதல் நேரில் கண்டும் இறைவார்த்தையை அறிவித்தும் வந்த ஊழியர் நம்மிடம் ஒப்படைத்தவாறே எழுத முயன்றுள்ளனர்'' (லூக் 1:1-2) என்று லூக்கா தமது முன்னுரையில் எழுதுகிறார். ஆகவே, ஏற்கெனவே பழக்கத்திலிருந்த மரபின் எழுத்து வடிவே நற்செய்தித் தொகுப்புகளாகும். இத்தொகுப்புகளுக்கு இணையாக, கிறிஸ்து விட்டுச் சென்ற, அப்போஸ்தலர்கள் பயன்படுத்திய செயல்களையும் பழக்கங்களையும் திருச்சபையின் வாழ்க்கை பாதுகாக்கிறது.

இ. மரபிலிருந்து திருநூலுக்கு: *தொடர்பு நிலை பரவ அப்போஸ்தலிக்க மரபு இவற்றைக் கையளிக்கும் அமைப்புகளைக் கொண்டுள்ளது. கிறிஸ்துவிடமிருந்தே மரபைப் ''பெற்றுக்கொண்ட'' அப்போஸ்தலர்களே முதன்மையானோர். தமஸ்கு வழியில் கிடைத்த வெளிப்பாட்டினால் பவுலும் இவர்களில் ஒருவர் (கலா 1:1.6). அடுத்தபடியாக அப்போஸ்தலர்கள் நியமித்து, அந்தந்தக் கிறிஸ்தவ சபையின்மேல் அதிகாரம் செலுத்தும் தலைவர்கள் (1 திமொ 1:3 தொ; 4:11; 2 திமொ 4:2; தீத் 1:9; 2:1; 3:1.8). கிறிஸ்தவக் கூட்டமைப்புகளின் இயலோடும், பற்பல பங்குகளோடும் இணைந்தே இந்த மரபு நடைபோடுகிறது. இயேசு பற்றிய நிகழ்ச்சி வருணனைகளிலிருந்து விசுவாச அறிக்கைக்கும் (1 கொரி 15:1 தொ), வழிபாட்டு அமைப்புகளிலிருந்து (11:23 தொ; 28:19) பொதுச் செபங்களுக்கும் (மத் 6:9-13), கிறிஸ்து பற்றிய பாடல்களுக்கும் (பிலி 2:6-11; எபே 5:14; 1 திமொ 3:16; திருவெளி 7:12 போன்றவை), இயேசுவிடமிருந்து வெளியாகும் வாழ்க்கை நெறிகளிலிருந்து திருமுழுக்கு மறையுரைகளுக்கும் (1 பேதுரு 1:13...) உள்ள இது போன்றவற்றில் இந்த மரபு அடங்கும். புதிய ஏற்பாட்டில் புலப்படும் இலக்கிய வடிவங்களை அப்போஸ்தல மரபு பற்றி அறிய விழையும்போது எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். துணை நிற்கும் அருட்கொடையின் கீழ்தான் இந்த ஏற்பாட்டில் உள்ள மரபின் பல்வேறு உரு அமைப்பானது உறுதியான முறையில் வெளிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவிடமிருந்து புறப்படும் மரபு, அப்போஸ்தலர் வழியாய் வந்து இறுதியில் பழைய ஏற்பாட்டில் உள்ளதுபோல் திருநூலாக வடிவெடுக்கிறது.*

2. கிறிஸ்தவ மரபின் பண்பு.

அ. மரபின் மூலம்; கிறிஸ்துவின் அதிகாரம்: *பழைய ஏற்பாட்டில் பொதிந்துள்ள மரபு கடவுளின் தூதர்களின் அதிகாரத்தால் அமையப்பெற்றது. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் அதிகாரத்தால் அமையப் பெறுவதால் மரபானது ''மூதாதையர் மரபிலிருந்தும்'' (மத் 15:2), ''மனித மரபிலிருந்தும்'' (கொலோ 2:8) வேறுபடுகிறது. கிறிஸ்து போதித்தார்; செயல் புரிந்தார் (அ.ப. 1:1). சீடருக்கு முந்தையத் திருநூல்களின் சட்ட ரீதியான விளக்கத்தையும் கொடுத்தார் (மத் 5:20-48). அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தமது வாழ்க்கை மூலமே எடுத்துக்காட்டிய அவர் (யோவா 13:15; பிலி 2:5; 1 கொரி 11:1), தம் பெயரால் (மத் 28:20) என்ன போதிக்க வேண்டும் என்றும் அவர்களுக்குக் கற்பித்தார். அவருடைய போதனை அவருடையதன்று, அவரை அனுப்பியவருடையதேயாகும் (யோவா 7:16). இதேபோல் அப்போஸ்தல மரபும் கிறிஸ்து மீட்பரின் உள்ளம், கட்டளைகள், செயல்முறை அனைத்தையுமே அப்படியே பாதுகாக்கிறது. குறிப்பிட்ட பிரச்சனை பற்றி கிறிஸ்து குறிப்பிட்டுச் சொல்லாத நிலையில் (காண். 1 கொரி 7:25) ஓர் அப்போஸ்*

தலர் தனிப்பட்ட அறிவுரை கூறி அப் பிரச்சனையைத் தீர்க்க முன்வரும்போது அதே அதிகாரத்தாலேயே செயல்படுகிறார். ஏனெனில், அவருக்கும் ''கிறிஸ்துவின் மனம்'' *(1 கொரி 2:16)* இல்லையா? அவருக்குரியவருக்கு உயிர்த்த கிறிஸ்துவின் ஆவி ''அனைத்தையும் கற்றுத்தரவும்'' *(யோவா 145,26)*, ''முழு உண்மையை நோக்கி அவர்களை வழிநடத்தவும்'' *(16:13)* அவர்களிடையே செயலாற்றி வாழ்கின்றார். எனவே, அப்போஸ்தலர்களின் அதிகாரத் திற்கும், அவர்களின் ஆண்டவரின் அதி காரத்திற்கும் வேறுபாடே இல்லை. ''உங் களுக்குச் செவிசாய்ப்பவன் எனக்குச் செவி சாய்க்கிறான். உங்களைப் புறக்கணிப்பவன் என்னைப் புறக்கணிக்கிறான். என்னைப் புறக்கணிப்பவனோ என்னை அனுப்பின வரையே புறக்கணிக்கிறான்'' *(லூக் 10:16)*.

ஆ. அப்போஸ்தல மரபும் திருச்சபையின் மரபும்: தனிச்சிறப்பான அதிகாரம் கொண் டது அப்போஸ்தல மரபு. இதே போக்கில் தான் திருநூலிலும் இது பொதிந்துள்ளது. ஆனால், இது மனித பரம்பரையாகி, கிறிஸ்து அழித்த யூத பரம்பரைக்கு இணை யாக, திருச்சபையின் அதிகாரத்தை எதிர்க் கும் அளவிற்கு அதை முழுவதும் மனித மரபாக ஆக்கிவிடக் கூடாது. அப்போஸ்தல மரபிலிருந்து திருச்சபை மரபுக்கு உண்மை யான தொடர்பு இருக்கிறது.

1) கையளிக்கப்படும் பொருளில் தொடர்ச்சி: இயேசுவின் போதனைகளை யும் செயல்களையும் விளக்க முயன்ற அளவிற்கு, அப்போஸ்தலர் காலத்தில் ஒரு மரபு ஏற்பட்டது. இஃது அப்பட்டமாய்ப் புதிதில்லை என்றாலும் திருவெளிப்பாடு இதில் வளர்ந்து வந்த விதம் கண்கூடானது. ''ஒப்படைத்துள்ளதைப் பாதுகாப்பதே'' *(1 திமொ 6:20; 2 திமொ 1:13 தொ)* புதிய ஏற்பாட்டில் காணும் நிலைத்த கொள்கை யாகும். இதைப் பாதுகாப்பதே திருச்சபை யின் மரபாகும் என்பது தெளிவாகும். இந்த ஒப்படைக்கப்பட்டுள்ளவையே அப்போஸ் தல மரபாகும். இனிமேல் புதிய அம்சங் களை அது பெற இயலாது. வெளிப்பாடு முடிந்துவிட்டது. திருச்சபை வரலாற்றில் அதன் வளர்ச்சி வேறொரு அமைப்பைச் சேர்ந்ததாகும். அப்போஸ்தலர் ஒப்படைத்த வற்றில் மறைந்துள்ளதைத் தெளிவாக்கு வதே இந்த வளர்ச்சியாகும். ஒப்படைத் ததை விசுவாசத்தோடு பாதுகாப்பதில் அப் போஸ்தல மரபுக்கு இறையூக்கம் பெற்ற சாட்சியாக அமையும் திருநூலே முதலிடம் வகிக்கிறது. திருநூல்தான் அவசியமான உறைகல்லாகும். ஆயினும், மூலத்தில் ஒப் படைக்கப்பட்ட அத்தனையும் அதிலே வெளிப்படையாகவே அப்படியே பதிவாகி யுள்ளன என்பது நமக்கு நிச்சயமில்லை. மேலும், இறையூக்கம் பெற்ற பகுதிகளை ஆழ்ந்துணரும் உயிருள்ள மரபுதான் திரு நூல் அளிக்காதவைகளைக் காப்பாற்று கிறது. திருச்சபையில் செயல்புரியும் ஆவி யானவரின் பணி இதுதான். இதனால் அன்றோ திருநூலில் நிலைபெற்ற வார்த்தை ஆண்டவராகிய கிறிஸ்துவின் எப்போதும் உயிருள்ள வார்த்தையாக உள்ளது!

2) கையளிக்கும் அமைப்புகளின் தொடர்ச்சி: பெயரில்லாக் கூட்டத்தினால் அல்லாமல் படிமரபுடைய சமூக அமைப் பால் திருச்சபையின் மரபு கையளிக்கப்படு கிறது. இது வெறும் மனித அமைப்பன்று; ஆவியால் நடத்தப்பெறும் கிறிஸ்துவின் உடலேதான். அப்போஸ்தலர்களின் அதிகா ரத்தைக்கொண்டு, ஆளுகையின் பணிகள் காலந்தோறும் நிலைபெறுகின்றன. இதி லும் மேய்ப்புப்பணித் திருமுகங்கள் வழி முறைகளை அமைக்கின்றன *(எ.கா. 1 திமொ 4:6தொ.16; 5:17தொ; 6:2-14; 2 திமொ 1:13தொ; 2:14 தொ; 3:14-4:5; தீத் 1:9 தொ; 2:1.7தொ)*. இந்தப் பகுதிகள் காட்டுவது இரண்டு. திருச்சபையின் மரபில் உள்ள அப்போஸ்தலர் ஒப்படைத்தவை உண்மையானதா என்று காண திருநூல் மட்டும் போதாது; இஃதோடு சேர்ந்து, அதைக் கண்காணிக்கவும் நிறைவேற்றவும் அருள் பெற்றுள்ளவர்களின் உத்தரவாதமும் தேவையாகும். திருநூலைத் தூண்டியுள்ள அதே ஆவி இவர்களுக்கும் துணையாகத் தொடர்ந்து வருகிறார் *(1 திமொ 4:14; 2 திமொ 1:6)*.

3). அடிப்படையானதும் நிலைபெற்றது மான மரபின் இலக்கிய வடிவங்களில் தொடர்ச்சி: திருச்சபையில் பணிகள் மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகள் ஆகியவற்றின் நிலைத்த தன்மையைப் பொருளுள்ள விதத்தில் இலக்கிய வடிவங்களின் நிலைத்த தன்மை எடுத்தியம்புகிறது. காலப்போக்கில், பண்பாடுகளில் இலக்கிய வடிவங்கள் திருச்சபையின் இலக்கியத்தில் உருவாகி, வளர்ச்சிபெறும் என்பதற்கு ஐயமேயில்லை. இந்த வளர்ச்சிக்கு அப்பால், புதிய ஏற்பாட்டில் வடிவங்களால் நிலை புகுந்துள்ள அப்போஸ்தல மரபின் வடிவங்களால் பல்வகைப்பட்ட நூல்களும் முத்திரையிடப்படும். திருநூலின் அதிகாரத்திற்கு இணையான அதிகாரத்தைக் கொள்ளாவிட்டாலும், சில முந்தைய ஆவணங்கள் (அப்போஸ்தலர்களுக்குப் பிந்திய காலத்திய, விசுவாச சம்பந்தமான வழிபாடு சம்பந்தமான வாய்பாடுகள்), அதிக நேரிடையாக அப்போஸ்தல மரபையே எதிரொலிக்கின்றன.

இவ்வளவு சொன்னபின் இரண்டு குறிப்புகள் அவசியமாகும்:

அ) ஒப்படைக்கப்பெற்றவை கையளிக்கப்படும் காலத்திற்கும், பெறுகின்ற மனிதருக்கும் ஏற்றபடி அப்போஸ்தலர் ஒப்படைத்தவற்றைக் காப்பாற்ற, திருச்சபை மரபானது நிகழ்கால வடிவங்களை உருவாக்கி வளர்க்க வேண்டும்.

ஆ) எல்லா நிகழ்கால வடிவங்களையும் திருச்சபையின் மரபுக்குச் சாற்றிக் கூறாதிருப்பது முக்கியமானதாகும். பல்வேறு நிகழ்கால மரபுகளையும், பிற்காலத்தில் எழுந்த ஒவ்வொரு மரபையும் அவ்வாறு செய்யக்கூடாது. இத்தகைய மரபுகள் மிகவும் வேறுபட்ட மதிப்பீடு உடையவையாகும். திருச்சபை மரபு எழுப்பும் எல்லா மறையியல் பிரச்சனைகளுக்கும் புதிய ஏற்பாட்டில் நேரிடையான தீர்வு காண முடியாது என்பதும் தெளிவாகும். ஏனெனில், இறையூக்கம் பெற்ற நூல்கள் பட்டியல் முடிவு செய்யப்பட்டுவிட்டன என்று திருச்சபைச் சட்டம் வந்தபின்தான் இந்த மரபு தோன்றியது. இதுதான் மரபின் விளக்கமும் ஆகும்.

மரபுச் சின்ன முறைமை (TOTEMISM)

இது தொடக்ககால சமூக முறை. இதன்படி மக்கள் தங்கள் விலங்குகளுடனோ, தாவரங்களுடனோ குருதித் தொடர்பு கொண்டிருந்ததாக நம்பினர். இவற்றிலிருந்து மறைபொருளான முறையிலே தோன்றியவர்கள் எனக் கருதினர். இந்தக் குலம் அந்தத் தாவர அல்லது விலங்கின் பெயரைத் தாங்கி நிற்கும். இதைக் குல அடையாளமாகக் கொள்வர். அதை உடலில் பதித்துக் கொள்வர். அந்த விலங்கைப் புனிதமானதாகக் கருதினர். ஆகவே, அதைச் சாதாரணமாக உண்ண மாட்டார்கள். ஆனால், அது பலிப்பொருளாகப் பயன்படுத்தப்படும். குருதித் தொடர்பு தாயின் வழியாகக் கணிக்கப்பட்டது. திருமணம் ஒருவனது இனத்திற்குப் புறம்பே நடைபெற்றது.

இந்த இனமரபுச் சின்ன முறை செமித்திய இனத்தவர் மத்தியிலும், தொடக்க கால எபிரேயர் மத்தியிலும் இருந்ததாக அறிஞர்கள் கருதுவர்.

1. விலங்கு மற்றும் தாவரப்பெயர்கள்: பல குலத்திற்கு விலங்கின் பெயர்கள் இடப்பட்டுள்ளன. ஏதோமியர் சந்ததியிலே பல குலப்பெயர்கள் விலங்கின் பெயர்களே யாகும் (ஆதி 36). சில இஸ்ராயேலர் குலங்கள் தாவர, விலங்கின் பெயர்களைக் கொண்டிருந்தன: எ.கா. அரோத்திய குலம் (கழுதைக்குலம்: எண் 26:17); தோலாயர் குலம் (புழுக்குலம்: எண் 26:23). எலோனியர் குலம் (கருவாலி: எண் 26:26); பெக்கரியர் (ஒட்டகம்: 26:35); சூபாமியர் (விரியன்: 26:39). காலேபியர் (நாய்: 1 சாமு 25:3). இவை மரபுச்சின்ன முறைமையின் சுவடாக இருக்கலாம்.

2. விலங்குகள் வழிபாடு: விலங்கு வழிபாடு இன மரபுச்சின்ன முறையோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எகிப்தியர் நடுவிலே இப்பழக்கம் பரவியிருந்தாலும், செமித்தியர் நடுவே இஃது அவ்வளவாக

இல்லை. பழைய ஏற்பாட்டிலே எசேக்கியேல் ஆகமம் இதை எதிரொலிக்கிறது (எசே 8:7-11).

3. இனத்திற்குப் புறம்பாகத் திருமணமும், தாயின் வழியாகக் குருதி வழித்தொடர்பும்:- பழைய ஏற்பாட்டிலே பிற மக்களிடையே திருமணங்கள் குலத்திற்குப் புறம்பாக நடந்தாலும், பொதுவாக எபிரேயர் மணங்கள் ஒரே குலத்திற்குள் நடந்தன. நீதிபதிகள் ஆகமம் புறக்குல மணத்தைக் குறிப்பிடுகிறது (நீதி 12:9). தாயின் வழியாகக் குருதித் தொடர்பைப் பெறுவதைப் பற்றி பழைய ஏற்பாடு பல இடங்களில் குறிக்கிறது (ஆதி 22:22; நீதி 8:19; ரூத் 1:8; 2 சாமு 17:25; உ.ச. 1:6).

4. உணவுத்தடைகள்: இஃது இனமரபுச் சின்ன முறைமையிலே முக்கியமானது. பழைய ஏற்பாட்டு உணவுத்தடைகள் இதிலிருந்தே தோன்றியிருக்க வேண்டும். (லேவி 11; உப 15).

5. குல முத்திரைகள்: உடலில் முத்திரையிடுவது அல்லது பச்சை குத்திக்கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ளது (லேவி 19:28). இருப்பினும் இத்தகைய பழக்கம் இஸ்ராயேலர் நடுவில் இருந்தது (ஆதி 4:55; எசா 44:5; எசே 9:4; செக் 13:6). ஆனால், இந்த முத்திரை குத்துதலுக்கும் இனமரபுச் சின்ன முறைக்கும் தொடர்பு இருந்ததாகச் சொல்ல சான்றுகள் இல்லை. விலங்கு ஆராதனையை விலக்கியவர்களை அடையாளம் கண்டு கொள்ள முத்திரை பயன்பட்டது (எரே 9:4). திருவெளிப்பாட்டில் இறைவனை வழிபடுபவர்களையும் (திருவெளி 14:1; 22:4), விலங்கை வழிபட்டவர்களையும் (13:16-17; 17:5) வேறுபடுத்த இந்த அடையாளங்கள் முத்திரையிடப்பட்டுள்ளன. இஃது அடிமைகளை முத்திரையிடுவதோடு தொடர்புடையதாகத் தெரிகிறது (7:3).

இஸ்ராயேலர் இனக் கொடிகளைக் கொண்டிருந்தனர் (எண் 1:52; 2:2). இவற்றில் பல விலங்கு அடையாளங்களைக் கொண்டிருந்தன. இவை தங்கள் அடையாளப்பொருளை யாக்கோபு (ஆதி 49) மற்றும் மோசேயின் (உப 33) ஆசீர்களிலிருந்து பெறுகின்றன என்று கருத இடமிருக்கிறது.

மரபுவழிக் கதை (LEGEND)

இது பலவகை நிகழ்ச்சியுரை வடிவங்களுக்கு அளிக்கப்படும் பொதுப்பெயராகும். இந்த வடிவங்களில் காணப்படும் நிகழ்ச்சியுரைகளின் வரலாற்று மதிப்பைக் குறைத்துக் கூறுவதாக இதைப் புரிந்து கொள்ள அவசியமில்லை. மரபுவழிக் கதை என்பது பரந்த பொருளில் பயன்படுவதால் இப்பெயர் மரபுவழிக்கதைகள், குல மூதாதையரின் வீரகாவியங்கள், வழிபாட்டுக் காரண காரியக் கதைகள், மற்றக் காரண காரியக் கதைகள் முதலியவற்றை உள்ளடக்கும். இந்த வடிவங்கள் ஒவ்வொன்றும், பெரிய நிகழ்ச்சியுரைகளில் இடம் பெறும் முன், ஒரு காலத்திற்கு வாய்மொழியாகக் கையளிக்கப்பட்ட கதைகளைக் கொண்டிருந்தன.

மரபுவழிக் கதைகள் ஊக்குவிப்பதற்கும், பக்தி, நற்பண்புகளை எடுத்துக்கூறவும் அல்லது வீரர்களின் வலிமையைச் சிறப்பித்துக்காட்டவும், வியத்தகு மற்றும் புதுமையான செயல்கள் பற்றிய நிகழ்ச்சியுரையாக அமைக்கப்பட்டன.

இக்கதைகளின் வீரர்களாக பினகாசு (எண் 25:6-18), சிம்சோன் (நீதி 16), மற்ற விடுதலை வீரர்கள் (3:31; 9:26-49), எலியா (2 அர 2:33-34), எலிசா (6:1-7.8-10), மற்ற இறைவாக்கினர்கள் (1 அர 14:1018), தாவீது (2 சாமு 8:1-14), சாலமோன் (1 அர 3:16-28), இயேசு (மாற் 11:12-14.20; லூக் 2:41-51; 7:36-50) மற்றும் பவுல் (அ.ப. 19:12-13; 28:3-6) ஆகியோர் தோன்றுகின்றனர்.

குலமூதாதையரின் வீர காவியங்கள் இனம், குலம் மற்றும் நாடுகளால் பாதுகாக்கப்பட்டன. இவை தாங்கள் ஒரு மக்களினம் என்ற அளவில் அவர்களின் பழமை, வழிமரபு, நேர்மை மற்றும் தன்மை ஆகியவற்றைப் பற்றிய அறிக்கையாகும். லாமேக்கு (ஆதி 4:19-24), யூதா மற்றும் தாமார் (ஆதி 38), மற்றக் குலமூதாதையர்

ஆகியோர் பற்றிய கதைகள் இத்தகைய மரபு வழிக்கதைகளுக்கு எடுத்துக்காட்டாகும்.

பெத்தேல் போன்ற இடங்களின் புனிதத்தை விளக்கும் கதைகள் (ஆதி 28:11-22), ஓய்வுநாள் போன்ற நிறுவனத்தோற்றத்தை விளக்கும் கதைகள் (1:1-2:3), லேவியர் திருநிலைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியுரைகள் போன்றவை வழிபாட்டுக் காரண காரியக் கதைகளுக்கு எடுத்துக்காட்டாகும். மற்றக் காரண காரியக் கதைகள், இடப்பெயர்கள் (ஆதி 11:1-9; யாத் 17:7), உடைமை உரிமை ஒழுங்குகள் (யோசு 15:16-19), தொடைச் சந்து தசை நாரை உண்ணாமை (ஆதி 32:25-33) போன்றவற்றை விளக்குகின்றன.

மரப்பின்னல் வேலைப்பாடு (TRELLIS)

சங் 75:5-இல் வரும் இச்சொல், ஆலயத்தின் புனித இடத்திற்குச் செல்லும் முக்கிய வாயிலில் விரிவாகச் செதுக்கப்பட்ட மர வேலைப்பாட்டைக் குறிக்கிறது. இதன் மேல் வேயப்பட்டிருந்த தங்கத்திற்காக, படையெடுப்பவர்கள் இந்த மரப்பின்னல் வேலைப்பாடுகளை வெட்டி எடுத்தனர்.

மரம் (TREE)

படைப்பவர் இயற்கை முழுவதும் நிறைத்து வைத்துள்ள, உயிர் சார்ந்த சக்தியின் காணக்கூடிய அடையாளமாக மரத்தைப் பார்க்கிறான் மனிதன் (காண்க. ஆதி 1:11). ஒவ்வொரு வசந்த காலத்திலும் இயற்கையின் மறுபிறப்பை மரம் அறிவிக்கின்றது (மத் 24:32). வெட்டி எறிந்தாலும், அதன் கிளைகள் மீண்டும் தளிர்க்கின்றன (யோபு 14:7 தொ). வறண்ட பாலைவனங்களில் எங்கே நீரும், அதன் வழியாக வாழ்வும் முடியும் என்பதைக் காட்டுகிறது (யாத் 15:27; எசா 41:19). அதன் கனிகளால் மனிதனை வளப்படுத்துகிறது (காண்க. தானி 4:9). இறைவன் ஆசீர்வதித்துள்ள நீதிமானையோ (சங் 1:3; எரே 17:7 தொ), அவர் சலுகைகளால் நிறைத்துள்ள மக்களையோ (ஒசே 14:6தொ) ஒரு பசுமையான மரத்திற்கு ஒப்பிடப் போதுமான ஒத்த தன்மையுடைமை இங்கு உள்ளது. நல்ல தீய மரங்களை அவற்றின் கனிகளைக் கொண்டு தீர்ப்பிட்டு, தீய மரங்கள் வெட்டப்பட்டு தீயிலே போடப்படுவது போல மனிதர்களும் ஆண்டவர் தீர்ப்பிடும் நாளில் தீயோர் வெட்டப்பட்டு நெருப்பிலே போடப்பட வேண்டியவர்களாகின்றனர் (மத் 7:16-20 இணை; காண்க. 3:10; லூக் 23:31). இதைத் தவிரவும் விவிலியத்தில் மரம் பற்றிய அடையாள முறை, பொருள் என்பன மூன்று வகைகளில் புரிந்து கொள்ளப்படுகின்றன.

1. **வாழ்வின்** *மரம்:* மெசப்பத்தோமியா புராணங்களில் வெகுவாகப் பேசப்படும் ஓர் அடையாளமாகிய **'வாழ்வின் மரத்தை'** இன்பவனத்தில் வைத்து அதன் கனிகள் சாகாமையைத் தரக்கூடியது என்று ஆதியாகமம் பேசுகிறது (ஆதி 2:9; 3:22). இந்த முதல் அடையாளத்தை ஒட்டியே விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டால்தான் நல்லது எது, கெட்டது எது என்பதைப் புரிந்து கொள்வேன் எனத் தவறாக நினைக்கிறான் மனிதன் (ஆதி 2:16 தொ). இம்மரத்தின் ஏமாற்றும் தோற்றத்தால் வழிதவறி நடத்தப்பட்ட மனிதன் இந்த மரத்தின் கனியை உண்கிறான் (ஆதி 3:2-6). அதன் விளைவாக வாழ்வின் மரத்திற்கான பாதை அடைபட்டுவிட்டது (ஆதி 3:22 தொ). ஆனால், மீட்பின் வரலாறு எவ்வாறு மனிதனுக்கு வாழ்வின் மரத்தை அடையும் வழி மீண்டும் கடவுளால் திறந்துவிடப்பட்டது என்பதைக் கூறுகிறது. இறுதிக்காலத்தில் புனிதநாடு மீண்டும் அடையப்பட்ட இன்பவனமாக இறுதிக்கால இறைவாக்கு இலக்கியங்களில் பேசப்படுகிறது (எசே 47:12). இன்றிலிருந்து ஞானத்தைப் புரிந்து கொள்பவனுக்கு அஃது அவனுக்கு மகிழ்ச்சி தரும் ஒரு மரமாகிறது (பழ 3:18; 11:30; காண்க. சீரா 24:12-22). இறுதியாக, புதிய ஏற்பாட்டிலே தன்னிடம் பிரமாணிக்க முள்ளவன் இறைவனின் இன்பவனத்தில் இருக்கும் வாழ்வு தரும் மரத்தின் கனியை உண்பான் என்று கிறிஸ்து உறுதியளிக்கிறார் (திருவெளி 2:7).

2. **இறையரசின்** *மரம்:* அகிலத்தையே ஒரு மரமாகப் பார்க்கும் தன்மை மேற்

காசியப் புராணப் பார்வை ஆகும். இந்த அடையாளம் அப்படியே விவிலியத்தில் எடுத்தாளப்படவில்லை. ஆனால், வானத்தைத் தன் கிளைகளால் எட்டிப்பிடிக்கும் ஓர் அசாதாரணமான மரத்தைப் பற்றிப் பேசுகிறது. அதன் நிழலில் அளவற்ற மனிதர்கள், பறவைகள், விலங்குகள் வந்து தங்குவதாகக் கூறி இந்த மரம் போன்றது மனித அரசுகள் என ஒப்பிடுகிறது (எசே 31:1-9 தானி 4:7 தொ). இஃது ஒரு போலியான பெருமைதான். ஏனெனில், இஃது அகந்தையின்மேல் நிறுவப்பட்டுள்ளது. ஆண்டவரின் தீர்ப்பு இந்த மரத்தை வீழ்த்தும் (எசே 31:10-18; தானி 4:10-14). ஆனால், இறையரசு சாதாரண ஓர் எளிய சிறு விதையினின்று தோன்றி, மிகப்பெரிய மரமாகி எல்லாப் பறவைகளும் வந்து தங்கும் இடமாகும் (மத் 13:31).

3. சிலுவை மரம்: மரம் இழிவின் சின்னமாகிறது. அதாவது சாவிற்குத் தீர்ப்பிட்டவர்களைத் தூக்கிலிடப் பயன்படுத்தப்படும் பொழுது அவமானத்தின் சின்னமாகிறது மரம் (ஆதி 40:19; யோசு 8:29; 10:26; எஸ்த 2:23; 5:14). அது சுமக்கும் பாரம் இந்த மண்ணைப் பாழாக்குவதால் அது கடவுளின் சாபமாகிறது (உப 21:22 தொ). இயேசு இதே சாபத்தைத்தான் வேண்டுமென்றே தன்மீது ஏற்றுக்கொள்கிறார் (ஆதி 3:13). அவர் சிலுவை மரத்திமேல் நமது பாவங்களைத் தன் உடலில் சுமந்தார் (1 பேதுரு 2:24). நம்மீது சுமத்தப்பட்ட சாவின் தண்டனையை அவர் சிலுவையில் அறைந்து விட்டார் (கொலோ 2:14). ஆனால், சிலுவையின் மரம் ''நீதியை உருவாக்கும்'' மரமாகிவிட்டது (காண்க. ஞான 14:7). விண்ணகத்தில் உள்ள பலன் தரும் மரம் உள்ள மீண்டும் அடையப்பட்ட இன்பவனத்தை அடைய நமக்கு வழி திறக்கப்பட்டுள்ளது (திருவெளி 22:2.14). பழங்கால அவமானத்தின் சின்னம் வாழ்வின் மரமாகிவிட்டது.

மரம், செடி, கொடிகள் (FLORA)

விவிலிய நாடுகளில் காணப்படும் தாவரங்களின் எண்ணிக்கை 2300-க்கு மேற்பட்டதானாலும், விவிலியத்தில் குறிக்கப்படும் தாவரங்கள் நூற்றுக்கு மேல் இல்லையென்றால், அது வியப்பளிக்கலாம். விவிலியம் வரலாறு, சட்டங்கள், இலக்கியங்கள் அடங்கிய ஒரு தொகுப்பு என்ற அளவில், அது மனிதர்களுக்கும் தாவரச்சூழ்நிலைக்குமிடையேயுள்ள உறவை முழுவதும் பிரதிபலிக்க வேண்டியதில்லை என்பதை நாம் நினைவில் கொள்வது அவசியமாகும். ஆகவே, மிகவும் சாதாரண மரஞ், செடி கொடிகள்கூடச் சிறப்பிடம் பெறவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

தாவரங்களின் எண்ணிக்கை அவ்வளவு முக்கியத்துவமுடையதன்று. தாவர உலகோடு தொடர்புடைய வாழ்வின் பல கூறுகளைப் பற்றி ஆழ்ந்த உட்கருத்துக்களை விவிலியம் அளிக்கிறது. உழவுத் தொழில் மட்டுமன்று; சமயம், பழக்கவழக்கங்கள், சட்டம், வணிகம், உற்பத்தி செய்தல், கட்டடக்கலை, மருத்துவம், உடல் நலம், நறுமணப்பொருட்கள், மற்றும் அன்பும் கூட தாவர வாழ்வோடு தொடர்பு கொண்டுள்ளன; அதனால் ஒளியூட்டப்படுகின்றன.

தாவரங்களைப் பாகுபடுத்தி அடையாளம் காட்டுவது அவ்வளவு எளிதான வேலையன்று. அடையாளம் காட்ட முடியாத தாவரங்களின் எண்ணிக்கை மிகப்பெரிதாகும். இவை பற்றி விவிலிய ஆய்வாளர்களிடையே கருத்தொற்றுமை இல்லை. இதற்குக் காரணம் தாவரங்கள் பற்றிய விவரிப்பு தெளிவில்லாமல் இருப்பதும், ஒரே வகையான விவரிப்பு பல தாவரங்களுக்குப் பொருந்தக் கூடியதாக இருப்பதும் ஆகும். பல பெயர்கள் தாவரத்தொகுப்புகளைக் குறிப்பதாக அமைந்துள்ளன; எ.கா. முட்புதர்கள், நாணல். இவை தனிப்பட்ட வகைகளைக் குறிக்கவில்லை. சில பெயர்கள் பல மொழிகளிலும், சொற்றொடர்களிலும் இடம் பெற்று வாழையடி வாழையாகப் பயன்பட்டுள்ளன. ஆனால், அவற்றின் பொருள் காலப்போக்கில் மறைந்து போயிற்று. பல தாவரங்களின் பெயர்கள் மொழி பெயர்க்கப்படும்போது

ஒரே சீராக மொழி பெயர்க்கப்படுவதும் இல்லை. ஆகவே, தாவரங்கள் பற்றிய விரிவான கட்டுரை அளிப்பது இங்கு நமது நோக்கமன்று. பல தாவரங்களின் தொகுப்பை மட்டும் கொடுக்கிறோம். சில வற்றிற்கு அப்பெயரின் தலைப்பிலுள்ள கட்டுரைகளைக் காண்க.

1. தானிய வகைகள்: கோதுமை; சாமை (எசே 4:9); தினை (4:9); மாக்கோதுமை (யாத் 9:32); வாற்கோதுமை (யாத் 9:31; எண் 5:15; யோபு 31:40).

2. பயறு வகைகள்: அவரை (2 சாமு 17:28); சிறு பயறு (எசே 4:9); பயறு (ஆதி 25:34; 2 சாமு 17:28); பெரும் பயறு (எசே 4:9); மொச்சை (2 சாமு 17:28).

3. பழ மரங்கள்:

அத்தி: (ஆதி 3:8; எண் 13:23; நீதி 9:11; 1 சாமு 30:12; 1 அர 5:15; 2 அர 18:31; 20:7; உ.ச. 2:13; எசா 28:4; 36:16; 38:21; எரே 5:17; 24:1-2; ஒசே 2:12; யோவே 1:7.12; ஆமோ 4:9; மீக் 4:4; 7:1; நாகூ 3:12; செக் 3:19; மத் 21:18-21; 24:32; மாற் 11:13-14; லூக் 13:6-9; யோவா 1:48.50; திருவெளி 6:13).

ஒலிவ மரம்: (ஆதி 8:11; உப 6:11; 8:8; 28:40; நீதி 9:8-9; 1 அர 6:23. 31-33; நெகே 8:15; யோபு 15:33; சங் 128:3; எசா 32:10; எரே 11:16; உரோ 11:17.24).

காட்டு அத்தி: (1 அர 10:27; 1 நாள் 27:28; 2 நாள் 1:15; 9:27; ஆமோ 7:14).

கிச்சிலி: (உ.ச. 2:3; 7:9; 8:5).

திராட்சை: (உப 6:11; எண் 13:23; நீதி 9:13.26-27: 14:5; 1 அர 5:5; 21:1; 2 அர 18:31; சங் 128:3; உ.ச. 1:14; 7:13; 8:2; சீரா 39:26-27; எசா 16:8-9; 36:16; எரே 31:5; 48:32; யோவே 1:12; மீக் 4:4. 7:1; செக் 3:10...).

பேரீச்சை: (லேவி 10:9; 23:40; எண் 6:3; உப 14:26; 29:6; நீதி 13:4; நெகே 8:15; யோவே 1:12).

பேரிலந்தை: (யோவே 1:12).

மாதுளை: (யாத் 28:33-34; எண் 13:23; 20:5; உப 8:8; யோசு 15:32; 19:45; 21:28; 1 அர 7:18.20.42; 2 அர 25:17; உ.ச. 4:3; 7:13; 8:2; யோவே 1:12; ஆகா 2:19;....).

முகக்கொட்டை: (2 சாமு 5:23-24; 1 மக் 6:34; லூக் 17:6; 19:4).

வாதுமை: (ஆதி 30:37; 43:11; யாத் 25:33-34; 37:19-20; எண் 17:8; எரே 1:11-12; திருவெளி 12:5;...).

4. காய்கறிகள்: கீரை (எண் 11:5);
கொம்மட்டிக்காய் (எண் 11:5);
வெங்காயம் (எண் 11:5);
வெள்ளரிக்காய் (எண் 11:5);
வெள்ளைப்பூண்டு (எண் 11:5).

5. சுவையூட்டும் நறுமணப்பொருள்கள்:
உளுந்து (எசா 28:25.27);
கடுகு (மத் 13:31-32 இணை; 17:20 இணை);
கறியிலை (லூக் 11:42);
கொத்துமல்லி (யாத் 16:31; எண் 11:7);
சீரகம் (எசா 28:25.27; மத் 23:23);
சோம்பு (மத் 23:23);
புதினா (மத் 23:23; லூக் 11:42);
மஞ்சள் (உ.ச. 4:14).

6. தைல, மருத்துவ, நறுமணச்செடிகள்: அகில் (சங் 45:8; பழ 7:17; உ.ச. 4:14; யோவா 19:39); இலவங்கம் (யாத் 30:23; பழ 7:17; உ.ச. 4:14; திருவெளி 18:13); கருவப்பட்டை (யாத் 30:23); குங்கிலியம் (யாத் 30:34); கெல்பான் (யாத் 30:34); தைலவகை (பொன்மெழுகு) (ஆதி 37:25; 43:11; எரே 8:12; 46:11); நரந்தம் (உ.ச. 1:12; 4:14; மாற் 14:3; யோவா 12:13); நறுமண நாணல் (எசா 43:24; எரே 6:20); நறுமண வகைகள் (ஆதி 2:12; யாத் 25:6; 30:23; 35:8; எண் 11:7; 1 அர 10:10); மருதோன்றி (உ.ச. 1:14; 4:13; 7:12); வசம்பு (யாத் 30:23; உ.ச. 4:14; எசே 27:19); வெள்ளைப்போளம் (ஆதி 37:25; உ.ச. 5:13; மாற் 15:23; யோவா 19:39).

7. மலர்ச் செடிகள்:
ரோசா (சீரா 24:14; 39:13; 50:8);

லீலி (உ.ச. 2:1-2.16; 4:5; 6:2-4; சீரா 39:14; 50:8).

8. நச்சுச்செடிகள்: எட்டிக்காய் (எரே 28:15); கசப்புக்கீரை (யாத் 12:8; எண் 9:11); நச்சுத்திராட்சை (உப 32:32); நச்சுப்பூண்டு (உப 29:18; ஒசே 10:4); பாலுணர்வுக்கனி (ஆதி 30:14-16); பேய்குமட்டி (2 அர 4:39).

9. புல், முள், களை வகைகள்: களை (யோபு 31:40; மத் 13:24-30); காஞ்சொறி (செப் 2:9); கோரைப்புல் (ஆதி 41:2; யாத் 2:3; யோபு 8:11; எசா 19:6; 35:7); நாணல் (1 அர 14:15; 2 அர 18:21; யோபு 8:11; 9:26; 40:21; சங் 68:30; எசா 9:13; 19:6.15; 35:7; 36:6; 42:3; 58:5; மத் 11:7); முட்செடி (யோபு 30:7; 31:40; சங் 58:9; ஒசே 10:8; மீக் 7:4; மத் 27:29; யோவா 19:2); முட்புதர் (ஆதி 3:18; யாத் 3:2-4; நீதி 9:14-15; எசா 34:13; ஒசே 10:8).

10. மரங்கள்: அசோகா (எசா 44:14); அர்மோன் (ஆதி 30:37; எசே 31:8); அலரி (லேவி 23:40; நெகே 8:13-18; யோபு 40:22; சங் 137:2; எசா 44:4); ஈசோப்பு (யாத் 12:22; லேவி 14:4.6.49-52; எண் 19:6.18; 1 அர 4:33; சங் 51:7; யோவா 19:29; எபி 9:19); ஊசி இலை (எசா 41:19; 60:13); ஏசல் (தாமாரிஸ்கு) (ஆதி 21:23; 1 சாமு 22:6; 31:13); ஒலிவா (ஆதி 8:11; யாத் 23:11; லேவி 24:2; உப 6:11; 8:8; 20:19-20; 24:20; 28:40; நீதி 9:8-9; 1 அர 6:23.31-33; 2 அர 3:25; நெகே 8:15; யோபு 15:33; சங் 128:3; எசா 17:6; 24:13; 32:10; 41:19; எரே 11:16; ஒசே 14:6; ஆமோ 4:9; மீக் 6:15; செக் 4:3.11-12; உரோ 11: 17-24; திருவெளி 11:4); கருங்காலி (எசே 27:15); கருவாலி (ஆதி 35:4-8; யோசு 24:26; எசா 2:13; 6:13; 44:14-17; எசே 27:6; ஒசே 4:13; ஆமோ 2:9; 4:18); காட்டு ஒலிவா (நெகே 8:15); கேதுரு (லேவி 14:4.6. 49-52; எண் 19:6; 2 சாமு 5:11; 1 அர 4:33; 5:10-11; 6:8; 7:1-8; 2 அர 14:9; 2 நாள் 14:1; 2:16; எஸ் 3:7; சங் 29:5; 37:35; 80:10; 92:12; 104:17; 148:9; உ.ச. 1:17; எசா 41:19; 44:14; எசே 27:24; 31:1-18); கோபெர் (ஆதி 6:14); சித்தீம் (யாத் 25:5-27; 7:30; 35:7-38:6; உப 10:3; எசா 41:19); தேவதாரு (சீரா 24:16; எசா 6:13; 41:19; 60:13; எசே 27:6; ஒசே 4:13; 14:8); நூக்கு (1 அர 5:8); புன்னை (எசா 41:19; 60:13); மருதமரம் (எசா 44:14); மிருது (நெகே 8:15; எசா 41:19; 55:13; செக் 1:8.19-11); வாசனை மரம் (1 அர 10:11-12; 2 நாள் 2:8; 9:10-12).

11. பிற செடி கொடிகள்: ஆமணக்கு (யோனா 4:6-7); உப்புக்கீரை (யோபு 30:4); சணல் (யாத் 9:31; 26:1.31.36; 28:39; லேவி 6:10; 16:4.23; 19:19; உப 22:11; நீதி 14:12; 15:14; 16:9; பழ 7:16; 31:13.34; எசா 19:9; 42:3; 43:17; எசே 27:7; 44:17); சூரைச்செடி (1 அர 19:4; யோபு 30:4; சங் 120:4; எசா 14:23). பஞ்சு (2 சாமு 6:14; எசா 19:9; மத் 27:59; மாற் 15:46; லூக் 16:19).

மரம் வெட்டுபவர்கள் (HEWERS OF WOOD)

அடிமையின் தாழ்ந்த வகுப்புகளிலே ஒன்று. கிபயோனியர் சாவதற்குப் பதிலாக இத்தகைய ஓர் அடிமைத்தனத்தைத் தேர்ந்தெடுத்தார்கள் (யோசு 9:21.23.27). இவ்வூழியர்கள் கட்டடங்கள் கட்ட தச்சனால் பயன்படுத்தப்படும் மரங்களை வெட்டும் ஊழியர்களிடமிருந்து வேறுபட்டவர்கள் (2 நாள் 2:9-10; எரே 46:22). முடிவற்ற அயர்ச்சி தரும் கடின வேலையான அடுப்பெரிக்கும் விறகு வெட்டிகள் இவர்கள். உப 29:11-இல் உடன்படிக்கை மக்கள் வரிசையில் இவர்கள் கடைசியாகக் குறிக்கப்படுவதிலிருந்து, இவர்களின் தாழ்நிலை தெளிவாகிறது.

மரிசா (MARISA)

மாரேசா என்ற இடப்பெயரின் கிரேக்க வடிவம் (1 மக் 5:66; 2 மக் 12:35). காண்க. மாரேசா (இடம்).

மரியலா (MAREAL - நடுகின்றன)

செபுலோன் நாட்டின் எல்லையிலுள்ள ஒரு நகரம். மெகிதோவுக்கு வடக்கே இஸ்ரியேல் பள்ளத்தாக்கில் நாசரேத்துக்குத் தென்மேற்கில் 10 கி.மீ. தொலைவில் அமைந்த தெல் கல்தா என்ற இடமாக அடையாளம் காட்டப்பட்டாலும் இந்நகரத்

தின் நிச்சயமான இடம் எதுவென்று தெளிவாகத் தெரியவில்லை.

மரியா (MARY)

இயேசுவின் தாயும், மற்றும் பெண்கள் பலரும் புதிய ஏற்பாட்டில் மரியா எனும் பெயருடன் வருகின்றனர். மோசேயின் சகோதரி மிரியாமின் பெயரால் இஃது எல்லோரும் அறிந்த ஒன்றாகியது (யாத் 15:20; எண் 26:59).

1. மகதலா மரியா: இயேசுவைப் பின்பற்றிக் கலிலேயாவிலிருந்து வந்த பெண்களுள் ஒருத்தி.

கெனசரேத்துச் சமவெளியின் தெற்கு எல்லையில் அமைந்த மகதலா நகரம் விவசாயம், மீன்பிடித் தொழில், கப்பல் கட்டுதல், வியாபாரம் எனப் பல வழிகளில் சிறந்து விளங்கி செல்வமிக்கதாய் விளங்கியது. இங்குப் பெரும்பாலும் பிற மதத்தினரே வாழ்ந்தனர். இந்நகரம் தனது மோசமான வாழ்க்கையால் சீரழிந்தது என ராபிகள் கூறுகின்றனர்.

இயேசு மகதலா மரியாவை அவளது ஊரில் சந்தித்தாரா அல்லது எப்பொழுது சந்தித்தார் என்பது தெரியவில்லை. அவர் இந்நகரத்திற்குச் சென்றார் என்று கூறப்படவில்லை. ஆனால், அதன் சூழ்நிலைகள் கூறப்படுகின்றன (மாற் 6:53; மத் 14:34).

இயேசு இவளிடமிருந்து ஏழு பேய்களை ஓட்டியதாகக் கூறுகிறார் லூக்கா (8:2; மாற் 16:9). ஆனால், அன்று உடலில் உள்ள நோய்கள் அனைத்திற்கும் பேய்பிடித்தலையே காரணமெனக் கூறியதால் அவளது மோசமான நிலையைக் குறிப்பதற்காக இவ்வாறு கூறப்பட்டதா (லூக் 8:30), அல்லது மீண்டும் மீண்டும் வரும் அதன் தன்மையைக் குறிக்க இப்படிக் கூறினாரா எனத் தெரியவில்லை (லூக் 11:26).

லூக் 7:36-50 கூறும் விபசார பெண்தான் மகதலா மரியா என்று கூற எந்த உறுதியான காரணமும் இல்லை. லூக் 8:2-இல் இவளை அறிமுகப்படுத்தும்போது அந்த எண்ணத்தோடு செய்யவில்லை என்றும் தெரிகிறது.

மேலும், மகதலா மரியாவைப் பெத்தானியாவில் வாழ்ந்த மரியாவோடு குழப்பிக் கொள்ளக்கூடாது. ஏனெனில், மகதலா மரியா கலிலேயாவினள் (மாற் 15:40-41; காண்க. லூக் 8:1-3). பெத்தானியாவின் மரியாளோ யூதாவின் பெத்தானியாவைச் சேர்ந்தவள் (யோவா 11:1-12:8; லூக் 10:38-42). இவள் மார்த்த இலாசரோடு எருசலேமுக்குக் கிழக்கிலுள்ள பெத்தானியாவில் வாழ்ந்து வந்தாள். மேலும் மகதலா மரியாவின் தீவிரமான பங்குக்கும், மரியாளின் அமைதியான தன்மைக்கும் அதிக வேறுபாடு காணலாம் (யோவா 11: லூக் 10:38-42).

மேலைத் திருச்சபையில் மகதலா மரியாவும், பெத்தானியா மரியாவும் ஒருவரே என ஏற்றுக் கொள்கின்றனர். ஒருவேளை இருவரும் இயேசுவைப் பரிமள தைலத்தால் அபிடேகம் செய்ததை வைத்து இப்படி ஏற்றுக்கொள்ள வாய்ப்புண்டு (லூக் 7:36-50; யோவா 12:1-8). அதே நேரத்தில் மகதலா மரியாவைப் பிடித்திருந்த ஏழு பேய்களும் கற்புக்கு எதிரானவையெனக் கொண்டனர். மகதலா நகரத்தின் மோசமான பெயரும் இக்கருத்தை வலியுறுத்தும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. ஆனால், கீழைத்திருச்சபை இப்படி ஒன்றாகக் கருதப்படுவதை ஏற்பதில்லை.

இயேசுவின் கலிலேயப் பணிக்கு இவள் செய்த உதவிகளும், ஒத்துழைப்பும் யாராலும் குறைத்து மதிப்பிடப்பட முடியாது (லூக் 8:1-3; மாற் 15:40-41). இவள் இயேசுவின் அப்போஸ்தலர்களுடன் எருசலேமுக்கு அவரின் இறுதிப் பயணத்தில் பங்கு பெற்றாள் (மாற் 15:41). இவள் இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது அங்கு இருந்தாள் (மாற் 15:40; யோவா 19:25); இயேசுவின் உடலில் தைலங்கள் பூச வந்தாள் (மாற் 16:1; லூக் 23:55-24:1); காலியான கல்லறை பற்றிய வானதூதர்களின் செய்தியைப் பதினொருவருக்கும் அறிவித்தாள் (லூக் 24:1-11). இயேசு உயிர்த்த பின் முதன் முதலில் இவளுக்கே தனிப்பட்ட முறையில் காட்சியளித்தார் (யோவா 20:11-18).

2. பெத்தானியாவின் மரியாவை லூக் 7:36-50-இல் கூறும் பாவியான பெண்ணோடோ, மகதலா மரியாவோடோ தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடாது. இவள் பெத்தானியாவில் மார்த்தா, இலாசர் என்பவர்களின் சகோதரியாக வாழ்ந்தவள் (லூக் 10:38-42; யோவா 11:1-12:8). இவ்விரு சகோதரிகளுமே இயேசுவை மிகவும் அன்பு செய்தவர்கள் என்பதும் உண்மை. இவர்கள் வாழ்ந்த ஊராகிய பெத்தானியா தென் கலிலேயாவில் உள்ளதெனவும், எருசலேமுக்குத் தெற்கே உள்ளதெனவும் கூறப்படுவதும் சிறிது சந்தேகத்துக்குரியதாக இருந்தாலும், லூக்கா நற்செய்தியில் இப்பகுதியின் காலம், இடம் பற்றிய கணிப்பு சரியாக இல்லாததால் இதைப் பற்றிப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

உலக காரியங்களைப் பற்றி அதிகமான கவலையற்றவளாகவும், இறை அரசு பற்றிய உண்மையில் முழுமையான ஈடுபாடு கொண்டவளாகவும், தனது சகோதரனின் மரணத்தினால் அளவுக்கதிகமான துயரம் கொண்டவளாகவும் (யோவா 11:20.31), இயேசுவின் சக்தியில் நம்பிக்கை கொண்டு, பின் அவர் செய்த அரிய செயலுக்காக அவர் மேல் அளவு கடந்த நன்றி செலுத்தியவளாகவும் (யோவா 12:1-3) மரியா சித்தரிக்கப்படுகிறாள்.

மரியா இயேசுவை அபிடேகம் செய்தது காலிலா, தலையிலா எனும் கேள்வியெழுந்தாலும், மாற் 14:8-இல் கூறுவது போல் அவரது இறப்பை நினைந்து முன்னரே செய்யப்பட்ட அபிடேகமே இது. எனவே இந்த ஒரே நிகழ்ச்சி பல வகைகளிலும் கூறப்படுகிறது. ஆனால், நற்செய்தி முழங்கப்படும் இடங்களில் எல்லாம் மரியாவின் இச்செயல் எடுத்துக்கூறப்படும்; நினைவுகூரப்படும் (14:9).

3. சின்ன யாக்கோபு, யோசே ஆகியோரின் தாயாவாள் இந்த மரியா. இயேசுவைப் பின்பற்றிய கலிலேயப்பெண்களில் ஒருத்தியான இவள், பணிக்குப் பண உதவியும் செய்தாள் (மாற் 15:40; லூக் 8:3). இவள் இயேசுவுடன் எருசலேம் சென்றாள் (மாற் 15:41; மத் 27:55); சிலுவையினடியில் நின்றாள் (மாற் 15:40; மத் 27:55-56; லூக் 23:49); இயேசு அடக்கம் செய்யப்பட்டதைக் கண்டாள் (மாற் 15:47; மத் 27:61; லூக் 23:55); நறுமணத் தைலங்களால் இயேசுவை அபிடேகம் செய்யச் சென்றவர்களில் இவளும் ஒருத்தி (மாற் 16:1; லூக் 23:56); வான தூதர் அறிவித்த உயிர்ப்புச் செய்தியைக் கேட்டவள் (மாற் 16:2-7; மத் 28:1-7; லூக் 24:1-7); தான் கண்டதையும், கேட்டதையும் அப்போஸ்தலர்களுக்கு அறிவித்தாள் (மத் 28:8; லூக் 24:9-11); உயிர்த்த இயேசுவையும் கண்டாள் (மத் 28:9-10).

கிளயோப்பாவின் மனைவியான மரியாள், இவளெனக் கொள்ளவும் வாய்ப்புண்டு.

4. சிலுவையினடியில் நின்ற பெண்கள் பலருள் கிளயோப்பாவின் மனைவியான மரியா ஒருத்தி (யோவா 19:25).

கிளயோப்பாவை, மாற்கு 2:14; 3:18-இல் கூறப்படும் அல்பேயுவாகக் கொள்ளலாம். யோவா 19:25-இல் கூறுவதின்படி, மரியாளைக் கிளயோப்பாவின் மகளெனவும் கொள்ளலாம்.

5. மாற்கு யோவானின் தாயான இவளது வீட்டில் தான் ஆதிக்கிறிஸ்தவர்கள் கூடிச் செபித்தனர் (அ.ப. 12:12).

6. பவுல் ஏற்படுத்திய திருச்சபைகளில் பணியாற்றி, பவுலால் பாராட்டப் பெற்றவள் (உரோ 16:6). இவள் யூத வழிவந்தவளாக இருக்க வேண்டும்.

மரியாவின் நற்செய்தி (MARY, GOSPEL OF)

இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானவாதப் போலி நூல். இது மகதலா மரியாவோடு தொடர்புபடுத்தப்படுகிறது. இஃது இரு தனிப்பட்ட நூல்களின் தொகுப்பாகத் தோன்றுகிறது. இதன் முதல் பகுதி படைப்பின் வருங்காலம், மற்றும் பாவத்தின் தன்மை ஆகியவை பற்றிக் கிறிஸ்துவுக்கும் அவருடைய சீடர்களுக்கும் இடையில் நடந்த உரையாடலை எடுத்துக் கூறுகிறது.

இரண்டாவது பகுதியில், கோள்களிடையே ஆன்மாவின் பயணத்தோடு தொடர்புடைய இயேசுவின் காட்சிகளைப் பற்றி மரியா பேதுருவுக்கும் சீடருக்கும் விவரிக்கின்றாள்.

மரியாவின் வெளிப்பாடு (MARY, REVELATION OF)

இஃது எப்பிபானியு நூலில் எடுத்துக் கூறப்படும் ஞானவாதப் போலி நூலாகும். இதில் பெரிய கேள்விகள், சிறிய கேள்விகள் என்ற இரு பகுதிகள் உள்ளன. பெரிய கேள்விகள் என்ற பகுதி ஞானவாதப் பிரிவினரிடையே நற்கருணையோடு தொடர்புடைய பாலினச் செயல்களைப் பற்றி மகதலா மரியாவுக்குக் கிறிஸ்து இரகசிய போதகம் அளிப்பதாக அமைந்துள்ளது. எப்பிபானியு எடுத்துக் கூறும் மரியாவின் சிறிய கேள்விகள் பிஸ்திஸ் சோபியா என்ற நூலைப் போன்றுள்ளன.

மரியாளின் பாடல் (MAGNIFICAT)

லூக் 1:46-55 என்ற பகுதி மரியாளின் பாடல் என்றழைக்கப்படுகிறது. லூக்கா நற்செய்தியில் இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றிய நிகழ்ச்சியுரையில் வரும் மூன்று பாடல்களில் இது முதலாவதாகும். இப்பாடலின் கருத்தும், தொனியும், சொற்றொகுதியும் அன்னாவின் பாடலை (1 சாமு 2:1-10) ஒத்திருக்கின்றன. மரியாளின் பாடல் சங்கீதங்களையும், பழைய ஏற்பாட்டுப் பாடல்கள் பலவற்றையும் எதிரொலிக்கிறது. அன்னாவின் பாடலைப் போன்று, இப்பாடல் இறைவன் ஏழை எளியவர்களுக்குக் காட்டும் சலுகைகளுக்காக அவரைப் போற்றுவதாகவும், வறியவர்களை உயர்த்தி, அதாவது இஸ்ராயேலை உயர்த்தி, செல்வந்தர்களைத் தீர்ப்பிடுவதற்காக நன்றி கூறுவதாகவும் அமைந்துள்ளது. இப்பாடலின் வடிவத்தையும் நடையையும் கவனிக்கும்போது, இது தனிப்பட்டவரின் நன்றிக் கீதமாகத் தோன்றுகிறது. இப்பாடல் உண்மையிலேயே பழைய ஏற்பாட்டின் தொகுப்பு எனறு கூறலாம். இறைவனின் மீட்பு, எளிய கன்னி மரியாளின் வயிற்றில் உதித்த இயேசுவின் வழியாக, நிறைவேறும்.

நற்செய்தியாளர் மரியாளின் சொற்களை அப்படியே கூறுகிறார் என்று கொள்ள வேண்டியதில்லை. சூழ்நிலைக்குப் பொருத்தமாக மரியாள் கூறுவதாக அமைக்கப்பட்ட பாடலாகும். வாசகச் சூழ்நிலை ஆசிரியரின் கைவேலையாகும். ஆசிரியர் இயேசுவின் குழந்தைப்பருவம் பற்றித் தனக்குக் கிடைத்த மூலங்களிலிருந்து எடுத்து இப்பாடலைப் பயன்படுத்துகிறார். ஏற்கெனவே இருந்த ஒரு பாடலையோ, பாரம்பரியக் கருத்துகளைக் கொண்டு தாமே அமைத்த பாடலையோ ஆசிரியர் இங்கே பயன்படுத்துகிறார். ஒருவேளை யூதர்களிடையே இருந்த ஒரு பாடலை எடுத்துத் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் அதை மாற்றியமைத்துப் பயன்படுத்தியிருக்கலாம். பாடலைக் கூறுபவர் இஸ்ராயேலே. தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் தங்களை ஒரு புதிய, உண்மையான இஸ்ராயேலாகக் கருதினர். இந்தப் புதிய இஸ்ராயேலில் மிக உன்னத அங்கத்தினரான மரியாளின் வாயிலிருந்து இப்பாடல் வருவதாக அவர்கள் கருதியிருந்தால் அதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

சில பழைய இலத்தீன் கையெழுத்துப் பிரதிகளும், இரனேயு போன்ற திருச்சபைத் தந்தையருள் சிலரும், இப்பாடலை எலிசபெத்துக்குச் சாற்றிக் கூறுகின்றனர். அன்னாவுக்கும் எலிசபெத்துக்கும் இடையிலுள்ள வாழ்க்கைச் சூழ்நிலை ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு தற்கால ஆய்வாளர்களில் சிலர் இக்கருத்துக்கு ஆதரவு அளிப்பர். ஆனால், லூக் 1:48-இல் வரும் கருத்தையும் எண்ணற்ற கையெழுத்து ஏட்டுச் சான்றுகளையும் கவனத்தில் கொண்டு, 1:46-இல் வருவதுபோல், மரியாளுக்கே இப்பாடலைச் சாற்றிக் கூறுவதே மேலானதாகும். மேலும், இப்பாடலை மரியாளே பாடியிருக்கக்கூடும் என்பதை மறுக்க அறிவுக்குப் பொருத்தமான காரணங்கள் எதுவுமில்லை.

கீழையத் திருச்சபை வழிபாட்டில் இப்பாடல் காலை வழிபாட்டில் பயன்படுகிறது. மேலையத் திருச்சபை வழிபாட்டில்

மாலை வழிபாட்டில் இப்பாடல் பயன் படுத்தப்படுகிறது.

மரியாளின் பிறப்பு (MARY, BIRTH OF)

இலீது எப்பிபானியுவின் நூலில் வரும் ஒரு குறிப்பின் மூலம் அறியப்படும் ஞான வாதப்போலி நூலாகும். இது யூதருக்கு எதிரான போக்கு உடையதாகும். செக்கரியா தூபக் காணிக்கையைச் செலுத்தும் போது யூதர்களின் கடவுளைக் கழுதை வடிவத்தில் பார்த்தமையே, அவர் முதலில் ஊமையாக்கப்பட்டுப் பின்னர்க் கொல்லப் பட்டதன் காரணமாகக் கூறப்படுகிறது. தலைமைக் குரு தனது உடையின்மேல் எப்போதும் மணிகளை அணியுமாறு மோசே கட்டளையிட்டதன் காரணம், இறைத்தன்மையின் வடிவம் காணப்படாத வாறு அது மறைக்கப்பட வேண்டும் என்று எச்சரிக்கை செய்வதற்கே என்றும் கூறப்படு கிறது. இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

மரியாளின் பிறப்பு நற்செய்தி (MARY, GOSPEL OF THE BIRTH OF)

மரியாளின் பிறப்பு, வாழ்க்கை முதல் இயேசுவின் பிறப்பு வரை விவரிக்கும் போலி மத்தேயு நற்செய்தியைப் பெரு மளவு திரும்பவும் எடுத்துரைக்கும் இலத்தீன் மொழி நற்செய்தி நூல்.

மரியாள் நாசரேத்தில், தாவீதின் குலத்திலே பிறந்தாள். தூதரின் கட்டளைப்படி மரியாள் என்னும் பெயர் அவளுக்கு அளிக்கப்பட்டது. மூன்று வயதில் அவளது பெற்றோர் அவளை ஆலயத்துக்கு அழைத்துச் சென்றபோது, முழுவயதினை அடைந்த பெண்ணைப்போல, அவள் பீடத்தின் படிகளை ஏறிச் சென்றாள். தாவீதின் குலத்திலும், குடும்பம் முழுவதிலும் திரு மணம் ஆகாமல் திருமணத்திற்குத் தகுதி யானவராய் இருந்தவர் யோசேப்பு மட்டுமே.

மரியாளுக்கு மங்கல வார்த்தை சொன்ன பிறகு, ஆசிரியர் கீழ்க்கண்ட வார்த்தை களுடன் விலகிக்கொள்கிறார். ''இறைவ னின் பிறப்பிற்கு முன்னும், பின்னும் நடந்தவற்றை இச்சிறு நூலில் எழுதுவது, சிலருக்கு நீண்டதாகவும், சலிப்பூட்டுவதாக வும் இருக்கும்; எனவே, நற்செய்தியில் கூறப்பட்டுள்ளவற்றை விட்டுவிட்டு, முக்கி யமற்றவை என விடப்பட்டவற்றை இங்கு நோக்குவோம்''. முக்கியமற்ற பகுதிகள் எனப்பட்டவை, மூன்று மாத இடை வெளிக்குப்பின் மரியாளை மணக்க யோசேப்பு திரும்பி வருவதைப் பற்றியன. அவர் அவளைக் கர்ப்பிணியாகக் கண்டார்; கெட்டுப்போனவள் எனச் சந்தேகப்பட் டார்; கனவில் இறைவனின் தூதரால் உண்மை அறியப்பெற்றார்; மனைவியாக ஏற்றுக்கொண்டு, கன்னியாகவே அவளை இருக்கச் செய்தார். அவளது நாட்கள் நிறைவுற்றபின், தூய நற்செய்தியாளர்கள் கூறுவது போலத் தனது முதல் மகனை ஈன்றெடுத்தாள்.

இந்நூலை எரோனிமு எழுதினார் என்ற பாரம்பரியத்திற்கு அடிப்படையே இல்லை. அங்கீகரிக்கப்பட்ட நற்செய்தி நூல்களைத் தவிர்த்து, இந்தச் சிறிய இலத்தீன் நூலுக்கு அடிப்படை நூலாக உள்ளது போலி- மத்தேயு நற்செய்தி ஆகும். இதனுடைய தகுதியின்படி நோக்கும்போது, மத்திய காலத்தின் மீது இதனுடைய தாக்கம் மிகைப்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. ஏனெனில், இது யாக்கோபு தேவோரகின் என்பவரது பொன்னான கதை என்னும் நூலில் 13-ஆம் நூற்றாண்டிலேயே இணைக் கப்பட்டது.

'மரியாளின் பிறப்பு' என்னும் ஞானவாத நூலிலிருந்து இது முற்றிலும் வேறுபட்ட ஒன்று.

மரியாளின் விண்ணேற்பு (MARY ASSUMPTION OF)

காண்க. கன்னியின் விண்ணேற்பு.

மரியாளின் வெளிப்பாடுகள் (MARY REVELATIONS OF)

காண்க. கன்னியின் வெளிப்பாடுகள்.

இத்தொகுப்பில் கிரேக்கப்பகுதிகள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையுப்

பேதுரு மற்றும் பவுலின் வெளிப்பாடுகள் என்ற நூலைத் தழுவியனவுமாகும். எத்தியோப்பிய மொழியில் உள்ள பகுதி கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது; பவுலின் வெளிப்பாடுகள் என்ற நூலைத் தழுவியது.

மரியாள், இயேசுவின் தாய் (MARY, MOTHER OF JESUS)

I. கிறிஸ்துவப் பாரம்பரியத்தில் இயேசுவின் தாய் வகிக்கும் முக்கிய இடத்தை வேதாகம அடிப்படையில் காணலாம். ஆனால், தொடக்கத்திலேயே இது தெளிவாக இருந்தது என்று கூற முடியாது. அப்போஸ்தலர் பன்னிருவரும் முதலில் திருமுழுக்கிலிருந்து உயிர்த்தெழுதல் வரையுள்ள இயேசுவின் திருப்பணியை மட்டும் பறைசாற்றி வந்தனர் (அ.ப. 1:22; 10:37தொ; 13:24தொ). தங்கள் அனுபவத்தில் காண முடியாததை அவர்கள் பேசுவது எங்ஙனம்? அவர்கள் இயேசுவின் பொதுவாழ்க்கையிலும், உயிர்த்த வாழ்க்கையிலுமே பங்கு பெற்றிருந்தனர். எனவே, அதைப் பற்றி மட்டுமே ஆரம்பத்தில் பேசி வந்தனர். அஃதொன்றே அவர்களுடைய மறைப்பணியில் எழுந்த பிரச்சனைகளையும் தீர்க்க உதவியது. சிறிது காலம் கழிந்த பின்னரே, இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றியும் மக்கள் பேசத் தொடங்கினர் என்பதில் வியப்பில்லை. மாற்கு இயேசுவின் பிறப்பு, வளர்ப்பினைப் பற்றிப் பெரிதும் பொருட்படுத்தவில்லை; எனினும், இயேசுவின் தாயைப் பற்றி இரு முறை குறிப்பிட்டுள்ளார் (மாற் 3:31-35; 6:3). மத்தேயு குழந்தை இயேசுவின் தோற்றம் பற்றி அறிந்துள்ளார். தான் அறிந்த செய்தியை யோசேப்பை மையமாக வைத்துக் கூறியுள்ளார். தாவீதின் வாரிசான யோசேப்புதான் மரியாளின் குழந்தை பற்றிய வானுலகச் செய்தியைப் பெறுகிறார் (மத் 1:20 தொ; 2:13.20.22). அவரே கன்னியின் மகனுக்கு இயேசுவென்று பெயர் சூட்டுகிறார் (1:18-25). லூக்காவினுடைய ஏடுகளில் மரியாளுக்கென்று தனிச்சிறப்பான இடமுண்டு. அவரெழுதிய நற்செய்தியின் தொடக்கம் மரியாவின் கதையாகவே அமைந்துள்ளது. இங்கு அவளுடைய தோற்றமும் செயலும் தெற்றெனப் புலனாகின்றன. திருச்சபையின் தொடக்கத்திலும் மரியாள் இடம் பெறுகிறாள். இயேசுவின் சீடர்களோடு அவளும் கூடி இறையருளை வேண்டுகிறாள் (அ.ப. 1,14). யோவான் எழுதிய நற்செய்தியில், மரியாள் பற்றிய இரு காட்சிகளுக்கிடையில் இயேசுவின் பொதுவாழ்வு அமைகிறது (யோவா 2:1-12; 19:25 தொ). இயேசுவின் பொது வாழ்க்கை கானாவில் மரியாள் முன்னிலையில் தொடங்கி, கல்வாரியில் அவள் கண்முன் முடிவுறுகிறது. இவ்விரு தருணங்களிலும் இயேசு மரியாளின் பணியைத் தெளிவாக்கியுள்ளார். முதல் நிகழ்ச்சியில் மரியாளின் பணிவும், இரண்டாம் நிகழ்ச்சியில் அவளின் பொதுத் தாய்மையும் வெளிப்படுகின்றன. இவ்வாறு மரியாளின் முக்கியத்துவம் படிப்படியாக வளர்ந்தது. இவ்வளர்ச்சிக்குக் காரணம் மனித உளவியல் மனப்பாங்கு என்று மட்டும் கூறி விடலாகாது. உண்மையில் மரியாளின் வாழ்க்கைப்பணி இயேசுவின் மறையுண்மையைத் தெளிவுறுத்துகிறது. ஏனெனில், எவளின் மகனாகப் பிறக்க இயேசு விரும்பினாரோ (கலா 4:4) அப் ''பெண்ணோடு'' இயேசுவின் மறைபொருள் பின்னிப் பிணைந்துள்ளது. புதிய ஏற்பாட்டில் மரியினைப்பற்றி ஆங்காங்கே காணப்படும் குறிப்புக்களனைத்தையும் சில தலைப்புகளில் தொகுத்துக் காண்போம்.

II. *மரியாளைப் பற்றிய புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள்:* மரியாள் நாசரேத்தில் வாழ்ந்து வந்தாள். அவளது பெற்றோரின் பெயர்கள் புதிய ஏற்பாட்டில் தரப்படவில்லை. அவள் தச்சராகிய யோசேப்புக்குத் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாள். அவர்கள் கூடி வாழுமுன், வானதூதர் கபிரியேல் மரியாளுக்குத் தோன்றி, கடவுளின் சொந்த மகனாக இருக்கும் ஒரு மகவை அவள் பெற்றெடுப்பாள் என்று அறிவிக்கிறார் (லூக் 1:26-28; காண்க. மத் 1:18). இதற்குப் பின் மரியாள் யூதேயா மலைப்பகுதியிலுள்ள அவளுடைய உறவினளான எலிசபெத்து வீட்டுக்குப் பயணம் செய்கிறாள்

(லூக் 1:39-40). அங்கு எலிசபெத்து வான தூதரின் செய்தியை உறுதிப்படுத்துகிறாள் (1:41-45). அவளது மகன் பிறக்கும் முன், அகுஸ்து சீசர் கட்டளையிட்ட கணக்கெடுப் பின் பொருட்டு, மரியாள் யோசேப்போடு சேர்ந்து யூதேயாவுக்கு மீண்டும் பயணம் செய்கிறாள்; அங்குப் பெத்லகேமில், அசா தாரணச் சூழ்நிலையில், ஒரு தொழுவத் தில், தன் மகன் இயேசுவைப் பெற்றெடுத் தாள். ஏனெனில், விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை (2:1-7). இயேசு கருத்தரிக்கப்பட்டது பற்றிய நிகழ்ச்சியுரை கள் (மத் 1:18-25; லூக் 1:26-28), மனிதத் தந்தையின் உதவியோடு இயேசு கருத்தரிக் கப்படவில்லை என்று தெளிவாக உறுதி செய்கின்றன. இவ்வுரைகளிலும், மரியாள் எலிசபெத்தைச் சந்திக்கச் சென்றது பற்றிய உரையிலும் (லூக் 1:36-56), இயேசுவின் மெசியாத் தன்மை அறிவிக்கப்படுகிறது.

குழந்தை பிறந்த செய்தி அறிந்த இடை யர்கள் ''விரைந்து சென்று மரியாளையும், யோசேப்பையும், தீவனத்தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டனர்'' (2:16). எட்டாம் நாளில் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்து அதற்கு இயேசு என்று பெயரிட்டனர் (2:21). நாற்பது நாள்களுக்குப்பின் குழந்தையை ஆண்டவ ருக்கு அர்ப்பணிக்கவும், மரியாளுக்குத் தூய்மைச் சடங்கை நிறைவேற்றவும் குழந் தையை எருசலேம் ஆலயத்திற்குக் கொண்டு சென்றனர் (2:22-39). இதற்குப் பின், ஞானிகளின் வருகையும் (மத் 2:1-12), யோசேப்பு குழந்தையையும் அதன் தாயை யும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப் போனதும் (2:13-15), பெத்லகேமைச் சுற்றி யுள்ள பகுதிகளில் ஏரோது குழந்தைகளைப் படுகொலை செய்ததும் (2:16-18) நடந் திருக்க வேண்டும். சிறிது காலத்திற்குப்பின் இக்குடும்பம் எகிப்திலிருந்து திரும்பி வந்து, நாசரேத்தில் குடியேறியது. இவ் விடமே இனி இயேசுவின் வீடும் ஊரும் ஆயிற்று (மத் 2:19-23; காண்க. 2:39). இயேசுவுக்குப் பன்னிரண்டு வயது நடக் கும்போது, மரியாளும் யோசேப்பும் பாஸ்கு விழாவைக் கொண்டாட, சிறுவன் இயேசுவை எருசலேமுக்குக் கூட்டிச் சென்ற னர். அவர்கள் திரும்புகையில் இயேசு அவர்களோடு திரும்பாததைக் கண்டுபிடித்த போது, பெற்றோர் கவலையுற்று, எருசலே முக்குத் திரும்பித் தேடினர். மூன்று நாள் களுக்குப்பின் சிறுவனைக் கோவிலில் கண் டனர். அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து, அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும், அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருப்பதைக் கண்ட பெற்றோர் வியப்பில் ஆழ்ந்து போயினர் (லூக் 2:41-47). சிறுவன் இயேசுவை மரி யாள் கடிந்து கொண்டபோது, அவர் அளித்த பதில், தான் கடவுளின் மகன் என்பதைப் போதிய மட்டும் உணர்ந்திருந் தார் என்று காட்டுகிறது. ஆனால், பெற் றோர் புரிந்து கொள்ளவில்லை (2:49-50). இந்த நிகழ்ச்சிகளையும் கூற்றுகளையும் எல்லாம் மரியாள் தன் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துப் பதித்து வைத்திருந்தாள் என் பதை லூக்கா சிறப்பான முறையில் அழுத் திக் கூறுகிறார் (2:19.51). ஆலய நிகழ்ச்சிக் குப்பின் யோசேப்பு நற்செய்திகளில் தோன்ற வில்லை. ஒருவேளை, இயேசு தன் பொதுப்பணியைத் தொடங்கும் முன்பே, மரியாள் கைம்பெண்ணாகி இருக்கலாம்.

அடுத்து, இயேசுவோடும் அவருடைய சீடர்களோடும், மரியாளைக் கானாவில் நடந்த ஒரு திருமணத்தில் காண்கிறோம். அங்கு, இயேசு தன் முதல் அரும் பெரும் அடையாளம் செய்ய, மரியாள் தூண்டுதலா கிறாள் (யோவா 2:1-11). அதன் பிறகு இயேசுவோடு மரியாள் கப்பர்நாகும் செல் கிறாள். இஃது அவள் இனி நாசரேத்தில் வாழவில்லை என்று சுட்டலாம் (2:12). இதற்குப்பின் ஒத்தமை நற்செய்திகளில் இருமுறைதான் மரியாள் குறிக்கப்பெறு கிறாள். மத் 12:46-50; மாற் 3:31-35; லூக் 8:19-21-இல் மரியாளும் இயேசுவின் உற வினர்களும் இயேசுவைக் காண வருகின்ற னர். இவர்கள் இயேசுவை மக்கள் கூட்டத் திலிருந்து விடுவிக்க வந்ததாகத் தெரிகிறது. ஏனெனில், அவர் மதிமயங்கி இருக்கிறார்

என்று மக்கள் பேசிக்கொண்டனர் (மாற் 3:21). இந்நிகழ்ச்சி, ''என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரர், சகோதரி, தாய்'' என்று இயேசு கூற வாய்ப்பாயிற்று. மத் 13:55; மற் 6:3 (காண்க. யோவா 6:42)-இல் நாசரேத்தூர் மக்கள் மரியாளை நன்கு அறிந்திருந்தனர் என்று தெரிகிறது.

யோவா 19:25-27-இல் சிலுவை அருகில், இயேசுவின் தாய் நிற்பதைக் காண்கிறோம். இயேசு, தான் இறக்குமுன், தன் தாயைத் தன் அன்புச் சீடரிடம் ஒப்படைக்கிறார். அந்நேரம் முதல், அச்சீடர் அவளைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டார். அ.ப. 1:14-இல் அப்போஸ்தலர்கள் பெண்களோடும், இயேசுவின் தாயோடும், அவர் சகோதரரோடும் ஒரே மனதாய்ச் செபத்தில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம். புதிய ஏற்பாடோ, வேறு எந்த மூலமுமோ, மரியாளின் பிற்கால வாழ்க்கை மற்றும் மரணம் பற்றிய நம்பத் தகுந்த செய்திகளைக் கொடுக்கவில்லை.

2. புதிய ஏற்பாட்டில் வரும் இந்தச் சில செய்திகளை வைத்து இயேசுவின் தாய் மரியாளின் வாழ்க்கை வரலாற்றை எழுத முடியாது. ஆனால், இவை யூத வாழ்க்கை முறைக்கும் விவிலிய வரலாற்றுத் தன்மைக்கும் ஒத்தவையாகவே உள்ளன. இவற்றில் பெண்கள் பொதுவாக சிறிய பங்கே கொள்கின்றனர். பெண்களின் பங்கு, தாய் மற்றும் மனைவி என்ற அளவில் வரையறை செய்யப்பட்டதாகவே உள்ளது. மரியாள் பேசிய சொற்கள் சிலவே; அவையும் விளக்குவதற்குக் கடினமானவையாகும். இவ்வாறு யோசேப்புக்கும், மரியாளுக்குமிடையே உள்ள திருமணநிலை பற்றிய மத் 1:18 தொ என்ற பகுதியை விளக்குவது கடினம். அதைத் திருமணம் என்பதை விட, திருமண ஒப்பந்தம் என்று விளக்குவதே சாலச் சிறந்தது. லூக் 1-2-இல் அடிக்கடி வரும் மெசியா பற்றிய வாசகங்களை மரியாள் கொள்ளும் வியப்போடும் (2:33.48), புரிந்து கொள்ளாமையோடும் (2:50) ஒத்துப்போகச் செய்வது கடினம். மரியாள் பற்றிய இரு வேறுபட்ட மூலங்களை லூக்கா பயன்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. ஒன்றில், மரியாள் தன் மகனின் மெசியாத் தன்மையை ஓரளவு அறிந்திருந்தாள்; மற்றதில், அவள் அதை அறிந்திருக்கவில்லை. இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்ச்சியுரைகளைத் தொடக்ககாலக் கிறிஸ்தவப் போதகர்கள் விரிவாக்கியபோது மெசியா பற்றிய வாசகங்கள் இடம் பெற்றிருக்கலாம். லூக்கா தனது முன்னுரையில், ''தான் யாவற்றையும் தொடக்கத்திலிருந்து கருத்தாய் ஆய்ந்து'' எழுதுவதாகக் கூறினாலும், இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றி அவர் அளிக்கும் செய்திகளுக்கு மரியாள் தான் மூலம் என்று காட்ட நேரடிச் சான்றுகள் இல்லை.

நற்செய்திகளில், இயேசு மரியாளிடம் கூறுபவைகள் விளக்குவதற்கு ஓரளவு கடினமாக உள்ளன. பொதுவாக இவ்விருவருக்கும் இடையேயுள்ள உறவு எந்தத் தாய்க்கும் மகனுக்கும் இடையேயுள்ள உறவிலிருந்து வேறுபட்டதன்று. ஆனால், மத் 12:49தொ; மாற் 3:34தொ; லூக் 2:49; 8:21; யோவா 2:4-இல் இயேசு மரியாளிடம் பேசுவது அல்லது அவளைக் குறித்துச் சொல்வது, வயது வந்த மகனுக்கும் தாய்க்கும் இடையே சாதாரணமாய் இருக்கக் கூடிய ஒதுங்கிய நிலையை விட அதிகமானதாகத் தோன்றுகிறது. இயேசு தன் தாயைப் ''பெண்ணே'' என்று விளிப்பது (யோவா 2:4; 19:25) கிரேக்க இலக்கியத்தில் ஒப்புமையற்றது. இரண்டிலும் கண்டிக்கும் போக்கு இல்லை என்பதைக் கவனிப்பது முக்கியமானதாகும். ஏனெனில், அவற்றைப் பற்றி எக்குற்றமும் கூறப்படவில்லை. இயேசுவில் கொள்ள வேண்டிய விசுவாசத்திற்கு மாற்றுப் பொருளாகக் கூடிய அவரோடு கொண்ட எந்த ஊன் உறவையும் விலக்குவதை நோக்கமாகக் கொண்ட தொடக்ககாலப் போதனையின் ஒரு பகுதியாக இக்கூற்றுக்கள் அமையலாம் என்ற கருத்து தோன்றக் கூடலாம். கலிலேயாவைச் சேர்ந்த யூதனும், புதிய ஏற்பாட்டில் கூறப்படும் ''சகோதரர்களுடன்'' உறவு கொண்ட

வருமான இயேசு, அவரில் விசுவாசம் கொண்டவர்களுக்கு மெசியா - மீட்பராக இருப்பது போலவே, யூதர்களுக்கும் அவரது உறவினர்களுக்கும் மெசியா - மீட்பர் ஆவார். ஆதித்திருச்சபையில் இயேசுவின் உறவினர் பலர் இருந்திருக்கலாம். இவர்கள் இந்த ஊன் உறவு தங்களுக்குத் தனிச்சலுகை அளிப்பதாகக் கருதியிருக்கலாம்.. பவுல் ''கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள்'' என்று கூறிக் கொண்ட ஒரு கட்சியினரைக் குறிப்பிடுகிறார் (1 கொரி 1:12). இயேசுவின் சகோதராகளைப் பற்றி ''ஆண்டவரின் சகோதரர்கள்'' என்ற தலைப்பின் கீழ்க் காண்க.

மரியாளைப் பற்றி மட்டுமன்று, இயேசு திருமுழுக்குப் பெறுவதற்கு முந்திய அவரது வாழ்க்கை, அவரது குடும்பம் மற்றும் அவர் தன் ஊரில் கொண்டிருந்த தொடர்புகள் ஆகியவை பற்றி தொடக்கப் போதகத்தில் காணப்படும் இந்த மௌனப்போக்கு, ஊன் உறவு அடிப்படையில் கோரக்கூடிய எந்தச் சலுகைக்கும் எதிராக அமைந்துள்ளது. இந்த மௌனப்போக்கின் விளைவாக, மரியாளையும் அவளது வாழ்க்கையையும் பற்றிய எந்த உண்மையான செய்தியும் கிடைக்காமல் போயிற்று எனலாம்.

III **கத்தோலிக்க விசுவாசம்:** மரியாள் பற்றிய இரு அடிப்படையான கிறிஸ்தவ விசுவாச உண்மைகள் அவள் இறைவனின் தாய் என்பதும், கன்னிமை நிலையில் இயேசுவைக் கருவுற்றாள் என்பதுமாகும். இந்த இரு உண்மைகள் நற்செய்திகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து மரியாளைப் பற்றிய பிற உண்மைகள் வளர்ச்சியடைந்துள்ளன. அல்லது திருச்சபையின் உயிருள்ள விசுவாசப் பாரம்பரியத்திலும் வழிபாட்டிலும் காணப்படுகின்றன. நற்செய்திகளில் வருபவற்றைச் சொற்பொருளில் அப்படியே ஏற்றுக்கொண்டு, கீழ்த்திசை நாடுகளில் உறவுமுறை பற்றிய வழக்குகளையும், திருச்சபையின் உயிருள்ள விசுவாச வளர்ச்சியையும், கோட்பாட்டு வளர்ச்சியையும் புறக்கணிக்கும் பிரிவினைக் கிறிஸ்தவர்களுக்கு மரியாளைப் பற்றிய உண்மைகளைப் புரிந்து கொள்வதும் ஏற்றுக்கொள்வதும் மிக மிகக் கடினமானதாகும்.

இயேசுவைக் கருத்தரித்தபோது மரியாள் கன்னியாக இருந்தாள் என்ற உண்மை புதிய ஏற்பாட்டில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது (மத் 1:18-23; லூக் 1:31-35). ''ஆண்டவரின் அடிமையான'' (லூக் 1:38) மரியாள் தன் வாழ்வு முழுவதும் கன்னியாகவே இருந்தாள் என்ற விசுவாசம் ஆதித்திருச்சபையிலேயே தொடங்கியது எனலாம். கத்தோலிக்கத் திருச்சபை இவ்வுண்மையைத் தொடர்ந்து விசுவசித்து வந்துள்ளது. இதற்கேற்ப, இயேசுவின் ''சகோதரர்கள்'' (மத் 12:46 இணை; 13:5 இணை; யோவா 2:12; 7:3-5.10; அ.ப. 1:14; 1 கொரி 9:5; கலா 1:19). மரியாள், தன் ''தலை மகனுக்குப்'' பிறகு (லூக் 2:8; காண்க. மத் 1:25) பெற்ற புதல்வர்கள் அல்லர். அவர்கள் யோசேப்பின் முந்தைய திருமணத்தில் பிறந்தவர்களாகவோ, உறவினர்களாகவோ இருக்கலாம். காண்க. ஆண்டவரின் சகோதரர்கள்.

பாவமற்ற இயேசுவின் தாய் என்ற அளவில், மரியாள் தன் மகனுக்கு மரபுரிமையாகப் பெறும் பாவத்தை அளிப்பவளாக இருக்க முடியாது. ஆகவே, அவளும் தனிச்சிறப்பான இறையருளால் பாவமற்றவளாகக் கர்ப்பந்தரிக்கப் பட்டிருக்க வேண்டும். கத்தோலிக்க விசுவாசத்தில் இந்த உண்மை கி.பி. 1439-இல் எடுத்துக் கூறப்படுகிறது. 1483-இல் பாப்புவின் ஒப்புதல் பெற்றது. 1854-இல் விசுவாச உண்மையாக அறிவிக்கப்பட்டது. மேலும், மரியாள் சாவின் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டாள். ஆன்ம உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள். இந்த உண்மை திருச்சபையின் போதகத்தில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலேயே காணப்படுகிறது. 1950-இல் இது விசுவாச உண்மை என்று பாப்புவால் அறிவிக்கப்பட்டது.

மேலும், இறைவனுடைய திருவுளத்துக்கு மரியாள் அளித்த ஒத்துழைப்பு, அத்திருவுளம் நிறைவேறுவதற்கு வழிவகுத்

தது. ஆகவே, மீட்பின் வருகையில் அவள் தனிச் சிறப்பான, இன்றியமையாத இடத்தைக் கொண்டுள்ளாள் என்று கத்தோலிக்க விசுவாசம் கற்பிக்கிறது. மீட்பு வரலாற்றில் மரியாள் அளித்த ஒத்துழைப்பு (லூக் 1:38), திருச்சபையின் கீழ்ப்படிதலுக்கு ஒரு மாதிரி ஆகிறது. கிறிஸ்துவில் எல்லாக் கிறிஸ்தவர்களும் இருக்கின்றனர் என்பதற்காகவும் இந்தப் பொருளில், மரியாள் ''எல்லாக் கிறிஸ்தவர்களின் தாய்'', ''திருச்சபையின் தாய்'' ஆவாள் என்று விசுவசிக்கப்படுகிறாள். தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவினால், மனுகுலத்திற்கான இணைப்பாளரும், பரிந்துரைப்பவரும் என்ற அளவில், மரியாள் தனிச்சிறப்பான பங்கைக் கொண்டுள்ளாள். இந்த விசுவாசம், கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் இணையற்ற ஒரே இணைப்பாளர் மனிதனான இயேசுவே என்ற விசுவாசத்தை மறைப்பதுமில்லை; குறைப்பதுமில்லை. கிறிஸ்துவின் இணையற்ற இணைப்பாளர் பணி மரியாள் கொண்டுள்ள தாய்மைக்குரிய பணி வழியாக வெளிப்படுகிறது. மரியாளின் இந்தப் பணி அவளது மகனின் இணைப்பாளர் பணியை அடித்தளம் கொண்டுள்ளது; முற்றிலும் மகனின் பணியைச் சார்ந்தே உள்ளது; அதிலிருந்தே தன் ஆற்றல் அனைத்தையும் பெறுகின்றது. கிறிஸ்துவுடன் விசுவாசிகள் கொண்டுள்ள நேர்முக ஒன்றிப்பை இச்செல்வாக்கு எவ்வகையிலும் தடுப்பதில்லை; மாறாக, அதைப்போற்றி வளர்க்கின்றது.

IV. **இறையியல் சிந்தனை.**

1. சீயோன் மகள்:

அ. முதற்கண், மரியாள் தன் காலத்து மக்களை ஒத்தவள்; அவர்களுக்கு வெளிப்படையாக வேறுபட்டவளன்று. அவளுடைய பெயர் மோசேயின் தங்கை கொண்டிருந்த பழம்பெயர் (யாத் 15:20); இயேசுவின் காலத்தில் வழக்கிலிருந்த மிகச் சாதாரணப் பெயர். புதிய ஏற்பாட்டில் எத்தனையோ பெண்டிர் மரியாள் என்ற பெயருடன் தோன்றுகின்றனர். அன்றைய கல்வெட்டுக்களும் இதனை என்பிக்கின்றன. 'மரியாள்' என்ற பெயரின் அரமேயிக்கு மூலம் 'மிரியாம்'; இதன் பொருள் 'இளவரசி', 'பேரிடத்துப் பெண்மணி' அல்லது தேவி என்று கூற இடமுண்டு. பாலஸ்தீனப் பாரம்பரியத்தின் அடிப்படையில் மரியாளைப் புண்ணியமுள்ள யூதப் பெண்ணாகக் காண்கிறார் லூக்கா. இறைச்சட்டத்திற்கு அமைந்து ஒழுகிய மரியாள் (லூக் 2:22.27.39) இறைத்தூதருடன் பேசும் பொழுது பழைய ஏற்பாட்டு மொழிகளையே தங்கு தடையின்றி எடுத்தாள்வது (1:38) நோக்கற்பாலது. சங்கீத மொழிகள் எதிரொலிக்கும் அவளது பாடல் அன்னாளின் பாடலால் முதன்மைத் தூண்டுதல் பெற்றதாகத் தெரிகிறது (1:46-55; காண்க. 1 சாமு 2:1-10).

ஆ. மரியாள் எளிய பெண்ணாயினும் ஏற்றமுற்றவள் என்று லூக்கா உணர்த்துகிறார். அவள் மங்களச் செய்தியைப் பெறும் காட்சியிலும், பின்னர் எலிசபெத்தைக் காணும் நிகழ்ச்சியிலும் (லூக் 1:26-56) சீயோன் மகளாகக் காட்டப் பெறுகிறாள். பழைய ஏற்பாட்டில் சீயோன் மகள் என்ற தொடர் இறைமக்களைக் குறிக்கும் உருவகப் பெயராக அமைந்திருந்தது. வானதூதர் ''மகிழ்ந்திடுக'' என்று மொழிந்து (1:28) மரியாளை வாழ்த்துவதில் மறைபொருளுண்டு. இந்த வாழ்த்து மொழி இறைமீட்பர் புனித நகரத்தினுள் எழுந்தருள்வார் என்ற உறுதிமொழியினையும் (செப் 3:14-17; செக் 9:9) சுட்டிக் காண்பிக்கிறது. மரியாள் ''அருட்பேறு பெற்றவரே'' -இறையன்பிற்கு இணையற்ற முறையில் உகந்தவள் - என்ற புகழ்மொழி உன்னத கீதத்தின் தலைவியை மனத்தில் எழுப்புகிறது. இத்தலைவியும் கடவுள் தேர்ந்தெடுத்த மக்களின் உருவகமாகக் கருதப்பட்டாள். இத்தகைய வேதாகமக் குறிப்புக்கள் மரியாளின் தலைமைப் பணியைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன. அவள்தான் யாக்கோபின் குலச் சார்பில் மீட்பின் நற்செய்தியை மனமுவந்து ஏற்றாள். அவளுடைய ஒத்துழைப்பினால்தான் நற்செய்தி நற்செயலாக நிறைவுற முடிந்தது. எனவே

தான் தன்னுடைய நன்றிப்பாடலில் தன் பெயரில் மட்டுமின்றி (1:46-49) ஆபிரகாம் வழிவந்த தன் குலப்பெயரிலும் (1:50-55) இறைவனுக்கு நன்றியையும் மகிழ்ச்சியை யும் நவில்கிறாள்.

2. கன்னிப்பெண்:

அ. மரியாள் கன்னிமையில் கருவுற்றாள் என்று மத் 1:18-23; லூக் 1:26-38 குறிப்பிடு கின்றன. ''இவர்கள் இரத்தத்தினாலோ, உடல் இச்சையினாலோ, ஆண் மகன் விருப்பத்தினாலோ பிறந்தவர்கள் அல்லர்; மாறாகக் கடவுளால் பிறந்தவர்கள்'' என்ற யோவா 1:13-இலும் இக்கருத்தினைக் காண லாம். மத்தேயுவின் நற்செய்தியும், லூக்கா வின் நற்செய்தியும் இந்த விவரிப்பில் ஒன்றையொன்று சாராத பாரம்பரியங்களி லிருந்து எழுந்துள்ளதை மறுக்க முடியாது. இவ்விரண்டும் மரியாளின் கன்னிமையைக் குறிப்பிடுவதால் இச்செய்தி மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் மூலமாக அமைந்த மிகப் பண்டைய பாரம்பரியத்திலேயே வழக்கிலி ருந்தது என்று கூற வேண்டும்.

ஆ. மெசியாவின் வருகையோடு கன்னி மையை, இணைத்துக் கூறும் வழக்கு பாலஸ்தீன மக்கள் மத்தியில் புதிதாகத் தோன்றியதொன்றாகும். இதுகாறும் விவி லிய நூலில் கன்னிமைக்குச் சமய மதிப்பு அளிக்கவில்லை எனலாம் (நீதி 11:37 தொ). யூதர் மத்தியில் முதன் முதலாக விரதத் துவத்தைப் பூண்டவர் எஸ்ஸேனியர் ஆவர். இஃது அவர்களுடைய புது ஒழுக்கக் குறிக்கோளின் சட்டத் தூய்மையன்றி வேறன்று.

இ. மரியாள் கன்னிமையில் கருவுற்றது எசாயா (7:14) கூறிய இறைவாக்கினை (கிரேக்க வாசகத்தைப் பின்பற்றி அமைந் துள்ள இறைவாக்கினை) நிறைவேற்று கிறது என்று குறிப்பிடுவதுடன் அமைந்து விடுகிறார் மத்தேயு.

ஈ. லூக்காவோ மரியாளின் கன்னிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இஃதோடு, பொதுவாகத் தனது நூல்களில் விரதத்துவத் திலும் (லூக் 2:36; 14:26; 18:29), கன்னிமை யிலும் (அ.ப. 21:9) ஈடுபாடு காட்டுகிறார். இருப்பினும், மரியாள் யோசேப்பின் மணப் பெண் என்று குறிப்பிட்டுள்ளார் (லூக் 1:27; 2:5). யோசேப்பின் வழியாகவே இயேசு மெசியாவாக உரிமை பாராட்ட முடியும் என்று லூக்கா இவ்வாறு குறிப்பாக உணர்த் தியுள்ளார் (3:23. தொ). இந்த இளம் மணப்பெண்ணைப் பற்றி அவர் கூறும் முதல் செய்தி அவள் ஒரு கன்னியாவாள் என்பதாகும் (1:27). பாலஸ்தீன வழக்குப் படி மரியாள் தன் கணவன் வீட்டிற்குப் புகுமுன்பே மணம் நடந்தேறியிருக்க வேண் டும் (காண்க. மத் 25:1-13).

மங்களச் செய்தியைப் பெறும்பொழுது, மரியாள் கன்னியாக இருந்தனள் என்பது நற்செய்தியில் நன்கு வலியுறுத்தப்படுகிறது. ஏனெனில், தான் மெசியாவின் தாயாகப் போவதைப் பற்றி வானதூதரிடமிருந்து அறிந்தவுடன், ''இஃது எப்படி நிகழும்? நான் கணவரோடு உறவு கொள்ள வில்லையே'', (லூக் 2:34) என்று மரியாள் மறுப்புத் தெரிவிக்கிறாள். விவிலிய மொழி யில் 'கணவனை அறிவது' பாலினத் தொடர்பைக் குறிக்கும் (ஆதி 4:1.17.25; 19:8; 24:16). எனவே, மரியாள் இயேசுவைக் கருவுறும் நிலையில் கன்னியாக இருந்தாள் என்பதையே லூக்கா இவ்வாறு அழுத்திக் கூறுகிறார்.

மங்களச் செய்தியைப் பெறுமுன்னரே மரியாள் என்றும் கன்னியாக வாழ விரும்பி னாள் என்று கூற லூக்கா முயல்கிறாரா? ஆம், என்று கருதினார் புனித அகுஸ்தீனார். அவருக்குப்பின் பலர் அதே கருத்தை ஏற்று வந்துள்ளனர். மரியாள் தாவீதின் மகனான யோசேப்பின் துணைவியானதால், அவள் மெசியாவின் தாயாவதற்குத் தன் கணவ னோடு பாலினத் தொடர்பு கொள்ள வேண்டும்; மரியாள் இதற்கு இணங்காத தற்குக் காரணம் அவள் கன்னியாக வாழ விரும்பினாள் என்று அவர்கள் விளக்கி வந்துள்ளனர். இக்கருத்திற்குச் சாதகமாக அவர்கள் மரியாளின் வினாவினைப் பின் வருமாறு அமைக்கின்றனர்: **''நான் ஆண் மகனை அறிய விரும்பாததால், இது நிறை வேறுவது எங்ஙனம்?''**

இவ்விளக்கத்தின் அடிப்படையில் ஓர் இடைஞ்சல் எழுகிறது. மரியாள் தனது விருப்பத்திற்கு மாறாக யோசேப்பை மணந்தாளா என்ற கேள்வி எழுகிறது. மேலும், மரியாளின் மறுப்பு அவள் கடந்த காலத்தில் யோசேப்புடன் பாலினத்தொடர்பு கொள்ளாததையே குறிப்பிடுகிறது. உண்மையில் லூக்கா கருத்து பின்வருமாறு அமைகிறது. மரியாள் தான் உடனடியாகத் தாயாகப் போவதை உணர்கிறாள். ஆனால், தான் இதுகாறும் கணவனைத் தொடாத நிலையில், எவ்வாறு கருவுறக் கூடும் என்று புரியாது தவிக்கிறாள். இந்நிலையில்தான் அவள் தான் கன்னியாக இருந்தவாறே கருவுறப் போவதை வானதூதர் கூறக் கேட்கிறாள். அஃதோடு தான் பெறப் போகும் மகவு இறை மகவு என்றும் அறிந்து கொள்கிறாள். அவள் கன்னிமை அவள் பெறும் குழந்தையின் இறைத் தன்மையைப் புலப்படுத்தும் அடையாளமாகும். படைப்பின் தொடக்கத்தில் உலவிய இறையாவி (ஆதி 1:2), இப்பொழுது இயேசுவின் கர்ப்பத்தோடு புதுப் படைப்பைத் தோற்றுவிக்கிறது.

இவ்வாறு இயேசுவின் இறைத்தன்மை தான் மரியாள் கன்னிமையில் கருத்தரிப்பதற்கு மூல காரணமாகும். தனது வியப்புக்குரிய தாய்மையைப் பற்றி அறியும் நிலையில்தான் இறைவன் தன்னை நிரந்தரக் கன்னியாகக் காண விரும்புகிறார் என்று மரியாள் அறிந்து கொண்டாள்.

உ. புதிய ஏற்பாட்டில் சில பகுதிகள் இயேசுவின் சகோதரர் பற்றிக் குறிப்பிடுகின்றன (மாற் 3:31 இணை; 6:3 இணை; யோவா 7:3; அ.ப. 1:14; 1 கொரி 9:5; கலா 1:19). இதன் அடிப்படையில் இயேசு பிறந்த பின்னர், மரியாள் தன் கன்னிமையைப் போற்றிப் பேணவில்லை என்று ஆய்வாளர் சிலர் கருதி வந்துள்ளனர். ஆனால், இக்கருத்தினைத் தொன்மையான மறைப்பாரம்பரியத்தில் எங்கும் காண்பதற்கில்லை. இன்னும், மத் 13:55-இல் இயேசுவின் சகோதரராகத் தோன்றும் யாக்கோபும், யோசேப்பும் (மத் 27:56 இணை) வேறொரு மரியாளின் மக்களாகக் கருதப்படுகின்றனர். இயேசு இறக்கும் நிலையில் தன் தாயைச் சீடரொருவர் கையில் ஒப்படைப்பதிலிருந்தும், அவளுக்கு வேறு மக்கள் இல்லை என்று கூறத் தோன்றுகிறது. மேலும், 'சகோதரர்' என்ற சொல் செமித்திய நாடுகளில் உறவினரையும், பங்காளிகளையும் குறிக்கலாம் என்று நாம் அறிந்திருக்க வேண்டும். காண்க. ஆண்டவரின் சகோதரர்கள்.

3. தாய்:

நற்செய்தி பற்றிய பாரம்பரியம் அனைத்தும் மரியாளை எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவின் தாய் என்று நோக்குகிறது. புதிய ஏற்பாட்டின் பல பகுதிகள் அவளை 'இயேசுவின் தாய்' என்றுதான் அழைக்கின்றன (மாற் 3:31 தொ; லூக் 2:48; யோவா 2:1-12; 19:25 தொ). இக்காரணப் பெயர் மீட்புப்பணியில் மரியாளுடைய பங்கினை விளக்கமாகச் சித்தரிக்கிறது.

அ. மரியாள் தானே விரும்பி தாய்ப் பணியை ஏற்றாள். மங்கல மொழியைக் கூறும் பகுதி (லூக் 1:26-38) இதனைத் தெளிவாக உணர்த்துகிறது. வானதூதர் கொணர்ந்த வியத்தகு அழைப்பைக் கேட்டவுடன் மரியாள் உடனடியாக இசையவில்லை. இதனை லூக்கா நன்கு வலியுறுத்துகிறார். இறைவன் தனக்கு உணர்த்தும் புது அழைப்பு அவர் முன்னரே விடுத்த அழைப்போடு எவ்வாறு ஒவ்வும் என்று மரியாள் சிந்தித்தாள். தான் கன்னி நிலை வழுவாது கருவுற்று இறைவனின் ஈரழைப்பையும் நிறைவேற்றக் கூடும் என்று தூதரிடமிருந்து அறிந்து கொண்டாள். இவ்வாறு இறையழைப்பினைத் தவறாது உணர்ந்த பின்னரே மரியாள் அதனை மனமுவந்து ஏற்று இறையடிமையானாள். முன்னாள் ஆபிரகாம், மோசே, இன்னும் இறைவாக்கினர் பலருடைய அடிச்சுவட்டில் மரியாளும் வழிநடந்தாள். இறைப்பணி தம் சொந்த இயல்பிற்கு உறுதுணையாக அமைவதை அவர்கள் உணர்ந்தனரெனின், அவர்களைப்போல, அவர்களைவிட அதிகமாகவும் மரியாள் தன் வாழ்வில் அவை

இரண்டையும் ஒன்றெனக் கண்டாள்: 'பணியே சுதந்தரமாகும்.'

ஆ. தாயாரின் பணி தம் சேயின் பிறப் போடு தொடங்குகிறது. மரியாளும் தன் மகவை ஈன்ற தருணத்திலே தனது தாய்மைப் பணியைத் தொடங்கினாள். இயேசுவைப் பெற்ற அவள் அவரை வளர்க்கக் கடமைப்பட்டவள். அவளுடைய பிள்ளையை வளர்க்கும் பொறுப்பில் யோசேப்புக்கும் பங்குண்டுதான். இரு வரும் குழந்தை இயேசுவைக் கோவி லுக்குத் தூக்கிச் சென்றனர். அங்கு குழந் தையைக் கடவுள் முன்னிலையில் கிடத்தி அதன் சொந்த அர்ப்பணத்தை - ஆனால் அந்நிலையில் தன் குழந்தையால் ஆற்ற முடியாத அர்ப்பணத்தை - மரியாள்தானே நிறைவேற்றினாள். சிமியோன் இயேசுவின் வாழ்க்கைப் பணியை முன்னறிவித்த பொழுது அதனைத் தன் குழந்தை பெயரில் தானே ஏற்றுக்கொண்டாள் (லூக் 2: 29-32,34தொ). குழந்தை இயேசு வளர்பிரா யம் முழுதும் காண்பித்த பற்று மற்றும் கனிந்த பணிவைப் பெறவும் மரியாள் பாக்கியம் பெற்றாள். எனவே, தனது தாய்மைக்குரிய அதிகாரத்துடன் (லூக் 2:48) தனது தமையனுக்குப் பாடம் புகட்ட அவள் தவறவில்லை. இயேசு மரியாளுக் கும் யோசேப்புக்கும் பணிந்து நடந்தார் (2:51).

இ. இயேசு வயது வந்த பருவத்தைக் கடந்த பின்னரும் மரியாள் அவருடைய தாயாராக விளங்கினாள். அவருடைய வாழ்க்கையின் சோகக் கட்டங்களில், மரி யாள் தன் மகனருகே நிற்கத் தயங்க வில்லை (மாற் 3:21,31; யோவா 19:25 தொ). மரியாளின் தாயுணர்வு ஒரு பொழு தும் மாறவில்லையெனினும் அவள் தாயுறவு சிறது மாற வேண்டியிருந்தது; புது வடிவம் எடுத்தது. இம்மாற்றத்திற்குக் கார ணம் தன்னுணர்வில் முதிர்ச்சியுறும் இயேசு தான். இவ்வளர்ச்சியின் இரு பெரும் நிகழ்ச்சிகளை லூக்காவும், யோவானும் குறிப்பிடுகின்றனர். பன்னிரண்டு வய தடைந்த இளைஞர் இயேசு, ஒருமுறை இஸ்ராயேல் குல மகனுக்குரிய புது உரிமை யில், தான் எல்லாவற்றிற்கும் மேலாக, பரமதந்தைக்கு மட்டுமே சொந்தம் என்று தன் பூவுலகப் பெற்றோரிடம் தயங்காது கூறினார் (லூக் 2:49). கானாவில் தன் பணியைத் தொடங்கிய பொழுதும் அங் கிருந்த மரியாள் திகைக்கும் வண்ணம், பரம தந்தையின் சொந்தத் தூதர் என்ற முறையில் தனது நடத்தை வேறுபட்டிருக் கும் என்று உணர்த்துகிறார். ''அம்மா, நீர் ஏன் குறுக்கிடுகிறீர்?'' என்ற மொழிகள் மகன் தாய்க்குக் கூறுபவை அல்ல; இறை யாட்சி பற்றிய பொறுப்புடைய இறை வனின் தூதுவர் என்ற முறையில் சுதந்தரம் கோரினார். நாளடைவில் மரியாளும் தனது தாய்மையை மறைத்து, கிறிஸ்துவைப் பின் பற்றிய விசுவாசமிக்க தோழனின் தோற்றத் தில் காட்சியளித்தாள் (காண்க. மாற் 3:32-35 இணை; லூக் 11:27தொ).

ஈ. மரியாளின் இம்மறைவான வாழ்க்கை சிலுவையடியில் முற்றுப்பெறுகிறது. அவள் மகனுக்கு வரப்போவதை முன்பு ஒருமுறை அவளிடம் கூறிய சிமியோன், அவளுக்கு நேரிடப் போவதையும் குறிப் பிட்டார். தன் குல மக்களிடையே இயேசு வின் காரணமாக ஏற்படும் பிளவு தன் ஆன்மாவையும் தாக்கும் (லூக் 2:34 தொ) என்று அவள் அறிந்திருந்தாள். கல்வாரியில் தான் மரியாளின் தாய்மை எதிர்பாராத முறையில் நிறைவுபெறுகிறது. யோவான் பொருள் பொதிந்த விவரங்களுடன் வரைந் துள்ள காட்சி ஒன்று இவ்வுண்மையைச் சித்தரிக்கின்றது (யோவா 19:25 தொ..). சிலுவையருகில் நிற்கும் மரியாளை மீண் டும் ஒருமுறை ''பெண்ணே'' என்று இயேசு வீறார்ந்த முறையில் அழைக்கிறார். வினோதமான இவ்வழைப்பு விண்ணரசில் அவருக்குரிய அதிகாரத்தைக் குறிக்கிறது. மேலும், அங்கு நிற்கும் தன் சீடரைத் தன் தாயிடம் ஒப்படைத்து, ''இதோ உன் மகன்'' என்று அவளுக்குப் பணித்த இயேசு, தன் தாய்க்குப் புதியதொரு தாய் மையினை வழங்குகிறார். இப்புதிய தாய் மையே அவள் இறைமக்களின் மத்தியில்

ஆற்றி வரும் திருப்பணியாகும். மரியாள் சீடரோடு கூடி தூய ஆவியின் வருகைக்கு இறைஞ்சி நிற்பதை லூக்கா விவரிக்கும் காட்சியிலும் (அ.ப. 1:14), மரியாளின் புது முறைத் தாய்மை அடிப்படைக் கருத்தாக அமைந்திருக்கலாம். மரியாளை இறை மக்களின் உருவமாகவும், சீயோனின் நங் கையாவும் கண்ட லூக்காவின் கருத்தோடு மரியாளின் இந்த உலகளாவிய தாய்மை ஒத்துப்போகிறது (லூக் 1:26-55).

4. முதல் விசுவாசி:

மரியாளின் மேன்மை அவளுடைய தனிச் சிறந்த ஒளிமயக் கொடைகளில் அமைய வில்லை. நற்செய்தியாளர் அவளுடைய பெருமையை விசுவாசத்தில் காண்கின்ற னர். மரியாள் மற்ற எளிய விசுவாசிகளைப் போன்று தன் வினாக்களுக்கு விடை காணாமலே இறைவனை நம்பினாள். நமது தெளிவற்ற நம்பிக்கை வளர்வது போன்று அவளுடைய நம்பிக்கையும் வளர்ச்சி யுற்றது.

அ. மரியாள் பெற்ற வெளிப்பாடு: மங்களச் செய்தியைக் கேட்ட நொடியி லிருந்து மரியாளின் விசுவாசப் பொருளாக இயேசு அவளுக்கு அளிக்கப்படுகிறார். அவ்விசுவாசத்தைச் சிறிது தெளிவாக்கும் வண்ணம் வானதூதருடைய மொழிகள் பழைய ஏற்பாட்டு வாக்குகளை எதிரொ லித்தன. எடுத்துக்காட்டாகக் குறிப்பிடத் தக்கவை பின்வருமாறு: குழந்தைக்கு இயேசு என்று பெயரிட வேண்டும்; அவர் இறைமகன் எனப்படுவார்; அவரே தாவீ தின் மகனும், இஸ்ராயேலின் அரசனும் ஆவார்; இறுதியாக, இறைவன் வாக்களித்த மெசியாவும் அவரே. ஆலயத்தில் குழந்தை யோடு இறைவன் முன்னிலையில் தோன் றிய பொழுது, யாவேயின் ஊழியனைப் பற்றிய வேத வாக்குகள் இயேசுவுக்குப் பொருந்துவனவென்று சிமியோனிட மிருந்து மரியாள் அறிந்து கொண்டாள். இயேசுவே மக்கள் அனைவரின் ஒளியா வார்; இருப்பினும் அவரைக் குறித்து மக்கள் பிளவுபட்டு நிற்பர்; எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருப்பார் என்று மரி யாளுக்குக் கூறப்படுகிறது. இவ்வாறு தெளிந்த சில விவிலிய வாக்குகளால் மரியாளின் விசுவாசம் வளர்ந்தாலும் மரி யாளைப் பற்றி நற்செய்தி கூறாத செய்திகள் பல உண்டு. அவள் தன் வயிற்றில் கருவுற்ற குழந்தையான மெசியாவின் ஏழ்மையை, அவருடைய துன்பமிக்க மௌனமான வாழ்வில் கண்டு கற்றுக்கொள்ள வேண்டி யிருந்தது. அவள் தன் மெசியா மகனுடன் கொண்ட ஒன்றிப்பினால் அமைதியுடனும் எளிமையுடனும் விளங்கினாள். இயேசு தன் தாயிடம் பேசும்பொழுது அவர் மொழிந்த சொற்களில் இறைவாக்கினரின் முரடான தொனி கேட்கிறது. அவற்றி லிருந்து தன் மகனுடைய சுதந்தரத்தையும் அதிகாரத்தையும் மரியாள் உணர்ந்திருக்க வேண்டும். தன் உடல் தாய்மையை விட, தனது உள்ள விசுவாசத்தின் மேன்மையை உணர்ந்து பெரிதும் போற்றியிருந்திருக்க வேண்டும்.

ஆ. மரியாளின் பிரமாணிக்கம்: இறை வன் மரியாளுக்குத் தம்மை வெளிப்படுத் தும் சூழ்நிலை ஒவ்வொன்றிலும் அவளி டம் தோன்றும் உணர்ச்சியினை லூக்கா கூர்ந்து கவனித்துள்ளார். வானதூத் தூதினைக் கேட்டவுடன் அஞ்சித் தவித்து நிற்கிறாள் (லூக் 1:29); ஐயமொன்றினைக் களைய விரும்புகிறாள் (1:34); சிமியோன் வாக்கினைக் கேட்டு வியப்படைகிறாள் (2:33); ஆலயத்தில் இயேசு மகனின் வினா வினைக் கேட்டுத் திகிலடைகிறாள்; அவ ளால் புரிந்து கொள்ள முடியவில்லை (2,50). தனது அறிவிற்கு எட்டாத மறை நிகழ்ச்சியை எதிர்கொள்ளும்போது, அவள் அதன் உட்பொருளை உன்னிப் பார்க்கிறாள் (1:29; 2:33); கடந்த நிகழ்ச்சியை மனத்தி லிருத்தித் தொடர்ந்து சிந்திக்கிறாள்; புதிரா கத் தென்பட்ட பழைய அனுபவங்களை மீண்டும் மீண்டும் ஆய்ந்து பார்க்கிறாள்; அவற்றைத் தன் உள்ளத்தில் பதித்து வைக் கிறாள் (2:19.51).

இறைவார்த்தைக்குக் கவனம் கொடுக்கும் மரியாள், அதனை என்றும் மனமுவந்து

ஏற்கிறாள். தனது திட்டத்தைச் சிதைத்து, யோசேப்பின் மனத்தை வதைக்கும் இறை வார்த்தையினையும் அவள் ஏற்கிறாள் (மத் 1:19 தொ). இறையழைப்பிற்கு அவள் செவிமடுக்கும் சூழ்நிலை ஒவ்வொன்றிலும் இயேசுவே தன் தாய் மூலம் செயற்படு கிறார். மரியாள் எலிசபெத்தம்மாளைக் காணச்செல்லும் பொழுது, இயேசு தனது முன்னோடியைப் புனிதப்படுத்துகிறார். மரி யாள் தன் மகனை இறைவன் முன்னிலையில் அர்ப்பணித்தபோது, இயேசு தம்மை இறைத்தந்தைக்குக் கையளிக்கிறார். பிர மாணிக்கமுள்ளவளாய் மரியாள் தன் மகன் பொது வாழ்க்கையை மேற்கொள்ளும் போது மௌனம் காத்து புனித நெறிப்படி ஒழுகினாள். சிலுவையடியிலும்கூட அவள் தான் மௌனம் காப்பதில் பிறழவில்லை.

இ. மரியாளின் பாடல்: இப்பாடலில், மரியாளின் சொற்களை எடுத்துக்கூறுவதை விட சமூகத்தின் நன்றியறிதலை எடுத்துக் கூறுவதில் அக்கறை கொண்டு பாலஸ்தீனப் பாரம்பரியத்தையே லூக்கா பாடலாக வடி வமைக்கிறார். ஆனால், லூக்கா அதை (குறிப்பாக 1:48-ஐ) மரியாளின் செபமாக மாற்றுகிறார். நன்றிப்பாடல் வடிவினில் அமைந்துள்ள இப்பாவினில் மரியாள் தனக்கு நேர்ந்த நேர்த்தியான புது நிகழ்ச்சி யினைச் சங்கீத நூல்களில் காணப்படும் கருத்துக்களைக் கொண்டு விளக்குகிறாள். இறையரசு பிரசன்னமாகியுள்ளது. மரியாள் இறைமக்களுக்குப் பணி செய்து கிடப்ப தற்கு முழுமையும் தயாராக உள்ளாள். அவளிலும் அவள் வழியாகவும் மீட்பு அறிவிக்கப்படுகிறது; வாக்குறுதி நிறை வேறுகிறது. அவளுடைய ஏழ்மையில் பேறுகள் பற்றிய மறைபொருள் நனவா கிறது. இவ்வனைத்திற்கும் அடிப்படை யான மரியாளின் விசுவாசம் இறைமக்க ளுடைய விசுவாசத்தினை ஒத்தது. இருட் சோதனைகளின் அனுபவத்தினாலும், மீட்பு பற்றிய சிந்தனையினாலும், தாராள உணர்வு படிந்த சேவைப் பயிற்சியினாலும் நம்மைப் போன்று அவளும் விசவாசத்தில் மேன்மேலும் வளர்ந்தாள் (யோவா 3:21; 7:17; 8:31தொ). இறைவார்த்தையினைப் போற்றிக் காத்த அவளுடைய விசுவாசத் தினைப் புகழும் வண்ணம், இயேசு தம்மை (வயிற்றில்) உதரத்தில் தாங்கிய மரி யாளைப் பெரும் பேறு பெற்றவள் என்று புகழ்ந்துரைத்தார் (லூக் 11:27 தொ).

5. மரியாளும் திருச்சபையும்:

இதுகாறும் நாம் தொட்டுணர்ந்தவற்றை ஒன்று கூட்டினால் விவிலிய இறையிய லையே ஒரு முறையில் தொகுத்துக் காண லாம்.

அ. கன்னி: விசுவாசிகளனைவருடைய உயர் மாதிரியாக மரியாள் விளங்குகிறாள். பிறரைப் போன்று அவளும் கடவுளின் அருளால் விசுவாச வழியில் நின்று தன் மீட்பை அடைய அழைக்கப்பட்டாள். அவ ளுடைய திருமகனின் பலியினால் மனித இனத்தைச் சேர்ந்த பிறரைப் போன்று அவளும் மீட்கப்பட்டாள். இருப்பினும் திருச்சபையில் அவளுக்குத் தனிச்சிறந்த இடமுண்டு. இறைவார்த்தையை அவள் நிறைவிசுவாசத்துடன் ஏற்பதனால், அவ ளிடம் திருச்சபையின் மறைபொருள் நிறை வுறுவதை நாம் காணலாம். திருச்சபை கிறிஸ்துவின் மணப்பெண்ணாகும் (எபே 5:32); கன்னிமை குறையா மணப்பெண்ணா கும் (திருவெளி 21:2). அவளைக் கிறிஸ்துவே தூய்மைப்படுத்திப் புனிதப் படுத்தினார் (எபே 5:25 தொ). இறைவனிட மிருந்து திருச்சபை பெறுகின்ற அழைப் பினில் பங்கு பெறுகின்ற ஒவ்வொரு கிறிஸ்தவ ஆன்மாவும் கிறிஸ்துவோடு நிறை கன்னிகையாக மண ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது (2 கொரி 11:2). இந்த இறையழைப்பிற்குப் பிரமாணிக்கமாய் இருக்கும் திருச்சபையின் பண்பு முதன் முதல் மரியாளிடமே தோன்றுகிறது; அது வும் அவளிடமே மிகவும் நிறைவான முறையில் தென்படுகிறது. இறைவன் மரி யாளைக் கன்னிமைக்கு அழைத்ததின் நிறை பொருள் இதுவேயாகும். இக் கன்னிமையைத் தாய்மை குறைக்கவில்லை. மாறாக, அர்ப்பணம் செய்து புனிதப்படுத்து கிறது. எனவே, மரியாளின் மூலம் கன்னித்

திருச்சபை வரலாற்றினில் புகுந்து வெளிப் படுகிறாள். இக்கன்னித் திருச்சபை ஏவா ளின் இயல்பிற்கு எதிர்முகமாக அமைந்துள் ளாள் (2 கொரி 11:3).

ஆ. தாய்: இயேசுவோடு தான் கொண்ட உறவின் உரிமையில் மரியாள் தனி இடம் வகிக்க முடிகிறது. இப்பெருமைக்குத் திருச் சபையில் வேறெவருக்கும் உரிமை கிடை யாது. அவள் ஒரு தாய். இறைமகன் மனுமகனாகத் தோன்றுவதற்கு மனித குலம் ஈந்த ஊனிடமே மரியாள். அவளுக்கு மட்டும் உரித்தான இப்பெருமைப் பணியைக் கருதி, அவளைச் சீயோன் மகளோடும் (செப் 3:14; காண்க. லூக் 1:28), புதிய எருசலேமோடும் ஒப்பிடலாம். தலை யாகிய கிறிஸ்துவை முதல் மகவாகக் கொண்ட புதிய மனித குலத்தை ஒரு மாதுக்கு ஒப்பிடும்பொழுது (திருவெளி 12:5) இதையொத்த மறை நிகழ்ச்சி செயல் முறையான விதத்தில் மரியாளிடம் நிறை வுறுவதை நாம் மறக்க முடியாது. ''திரு வெளிப்பாட்டில்'' தோன்றும் மாதும் தாயும் மனித குலத்தின் உருவகச் சின்னம் என்று மட்டும் கொள்ளலாகாது; உண்மை யில் அவள் மரியாளின் வாழ்க்கையில் ஊனும் உயிரும் பெற்றவள். எனவே, பறவை நாகத்தின் சீற்றத்தினின்று இறை யருளால் தப்பியோடும் அவ்வியத்தகு மங்கை (திருவெளி 12:13-16) ஆதியில் அதே மாற்றானால் ஏமாற்றப்பட்ட ஏவாளுக்கு மாறுபட்ட மங்கை (2 கொரி 11:3; ஆதி 3:13)-திருச்சபையுமாவாள், தாயான மரியா ளும் ஆவாள். இவ்வாறு திருச்சபைக்கும் மரியாளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பு வலியுறுத்தப்படுகிறது. உண்மையில் இதுவே மீட்புத்திட்டத்தில் மரியாளின் பங்கு. எனவேதான் இயேசுவைப் 'புதுமை ஆதாமாகக்' கொண்ட மறைப் பாரம்பரியம் மரியாளையும், திருச்சபையையும் ஒன்று சேர்த்துப் 'புதுமை ஏவாளாக' நோக்குகிறது.

இ. மரியாள் எனும் மறைபொருள்: திருச் சபையின் மறைபொருளுடன் மரியாள் கொண்ட இந்தத் தொடர்பினால், மரியா ளின் மறைபொருளே விவிலிய நூலின் துணையால் மிகவும் தெளிவுறுகிறது. மரி யாளிடம் மறைந்த முறையில் நடைபெற்ற தைத் திருச்சபை தெற்றென வெளிப்படுத்து கிறது. திருச்சபையிலும் மரியாளிடமும் கன்னிமை மறைபொருளும், இறைவனை மணமகனாகக் கொண்ட மறைபொருளான விவாகமும் வெளிப்படுகின்றன. மேலும், தாய்மை வளமும் திருச்சபைக்கும், மரியா ளுக்குமுரிய பொது வளமாகும். தூய ஆவியின் துணையால் (லூக் 1:35; மத் 1:20; உரோ 8:15) அவர்கள் பெறும் மகப்பேறு முதற்கண் கிறிஸ்துவையும் (லூக் 1:31; திருவெளி 12:5), இரண்டாவதாக அவரது உடலின் உறுப்புக்களையும் (யோவா 19:26 தொ; திருவெளி 12:17) கொண்டுள்ளது. கன்னிமையின் மறைபொருள் தூய்மையின் முழுமையை உள்ளடக்குகிறது. இதனைச் செயற்படுத்துவது கிறிஸ்துவின் அருளா கும். இவ்வருள் ஆன்மாவை அதன் அடித் தளத்திலேயே தொட்டு அதைப் ''பரிசுத்த மும் மாசற்றதுமாக்குகிறது'' (எபே 5:27). இதுவே மரியாளின் மாசற்ற உற்பவத் திற்குப் பொருள் அளிக்கிறது. மரியாளின் தாய்மையில் இலங்கும் மறைபொருள், அனைத்திற்கும் மேலான மறைபொருளா கிய இயேசுவோடு அவளை முற்றிலும் இணைக்கிறது. சோதனை சூழ்ந்த உலக வாழ்வினில் இயேசுவோடு கல்வாரி வரைக் கும் (லூக் 2:35; யோவா 19:25தொ; காண்க.திருவெளி 12:13) ஒன்றித்து வாழ்ந்த மரியாள், அவருடைய மகிமையிலும் உயிர்ப்பிலும் கூட தொடர்ந்து ஒருமித்து நின்றாள் (திருவெளி 21). இதுவே அவ ளுடைய விண்ணேற்பின் பொருளாகும். மரியாளின் மாசற்ற உற்பவம் பற்றியோ, விண்ணேற்பைப் பற்றியோ விவிலியம் வெளிப்படையாகக் கூறுவதில்லை. ஆனால், திருச்சபையின் மறைபொருளைப் பற்றி விவிலியம் கூறுவதில் மரியாளின் நலன்களும் பேறுகளும் அடங்கியுள்ளன. எனவேதான் திருச்சபையின் விசுவாசம் அவற்றைக் காண முடிந்தது. இங்கு மரி யாளை இயேசுவின் உன்னத நிலைக்கு அவரருகில் நின்று அவரோடு கூடட்

பரிந்து பேசும் தரத்திற்கு - நாம் உயர்த்துவதில்லை. கடவுள் முன் மரியாள் ''அருட்பேறுபெற்றவள்'' (லூக் 1:28); திருச்சபையின் அங்கத்தினர்களின் முன்னோக்கில் ''அன்பு மகனுக்குள் அருளின் மாட்சிமை'' நிறைந்தவளாகவே உள்ளாள். இருப்பினும், அவள் துணையால்தான் இறைமகனும் தனிச் சிறப்பான இணைப்பாளருமான இயேசு மாந்தரின் சகோதரராகி அவர்களுடன் ஒன்றுபட்டு இணைய முடிந்தது. இதே போன்று, மக்கள் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின்றி (கொலோ 1:18) அவரோடு தொடர்பு கொள்ள முடியாது. இவ்வடிப்படை உண்மைதான் கிறிஸ்தவ மக்களிடம் மரியின்பால் பற்றுதலைத் தூண்டுகிறது. எனவேதான் கிறிஸ்தவ மக்கள் அன்னைத் திருச்சபையோடும், அன்னை மரியாளோடும் கொண்டுள்ள உறவு ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது (காண்க.சங் 87:5; யோவா 19:27).

மருத மரம் (HOLM TREE)

விறகுக்காகவும், சிலைகள் செய்வதற்காகவும் பயன்படும் ஒருவகை மரம். இஃது எப்போதும் பசுமையாக உள்ள சிறிய கருவாலி மர இனத்தைச் சேர்ந்தது என்று சில தாவரயியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

எசா 44:14-இல் ''மருத மரம்'' என்று மொழி பெயர்க்கப்பட்டிருப்பது குழப்பத்தைத் தருகிறது. ஏனெனில், உண்மையான மருதமரம் என்பது இலையுதிர்க்காத புதர்ச்செடி வகையைச் சேர்ந்தது. இதைக் குறிக்கும் எபிரேயச் சொல்லின் கருப்பொருள் ''மெலிதாக இருத்தல்'' என்பதால் இது கெட்டியான கட்டையும், திண்பச்சை இலைகளுமுள்ள ஒல்லியான தேவதாரு மரமாக இருக்கலாம். விவிலிய நாட்டில் இம்மரம் அதிகமாகக் காணப்படுகிறது.

மருதோன்றி (HENNA)

மேற்காசியாவில் சாதாரணமாகக் காணப்படும் நறுமணப் பூக்கள் பூக்கும் பூண்டு அல்லது மரமாகும்.

உ.ச. 1:14-இல், காதலர் ''ஏங்கேதி தோட்டங்களில் உள்ள மருதோன்றி'' மலர்க் கொத்துக்கு ஒப்பிடப்படுகிறார். உ.ச. 4:13-14-இல், மருதோன்றி பிற நறுமணச்செடிகள், மரங்களோடு மணமகளைப் போற்ற உருவகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

மருத்துவக்கலை (MEDICINE)

நோயாளிகள் கவனிக்கப்பட்ட விதத்தைப் பற்றிய குறிப்புகள், ஆரம்பகாலத்திய விவிலிய நூல்களில் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. பண்டைய மேற்காசியப் பாரம்பரியத்தில், பலவிதமான நோய்களைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்காகக் குருக்கள் பயிற்றுவிக்கப்பட்டு, அதற்கான வசதிகளும் அளிக்கப்பட்டன. இதே முறையைத்தான் எபிரேயர்களும் பின்பற்றினர். முதல் ஐந்து விவிலிய நூல்களின் விளக்கத்தின்படி, குருக்கள், மருத்துவப்பெண் ஆகியோர் சமூக நலத்தினைக் கவனிக்க வேண்டிய கடமையைப் பெற்றிருந்தனர். முடியாட்சிக் காலம் தொடங்கும்வரை மருத்துவர்கள் தனிப்பட்ட பிரிவினராக ஓர் அமைப்பு ஏற்படவேயில்லை.

1. தொல்பழமைக் காலத்தில் குரு-மருத்துவர்.

அ. மெசபொத்தாமியா: பண்டைய மெசபொத்தாமியாவில் நோயினைத் தடுத்தல் நோயிலிருந்து காத்தல் ஆகியவற்றிற்கான பொறுப்பு இரு வேறுபட்ட வகுப்பைச் சார்ந்த பேயோட்டும் குருக்களிடம் இருந்தது. அதிக மூட நம்பிக்கை கொண்ட மெசபொத்தாமிய மக்கள், வலிமையான பேய்களின் தாக்குதலால்தான் வியாதி வருகின்றது என்று எண்ணி வந்ததால், திறமை மிக்க பேயோட்டிகளின் பணி அதிகம் தேவைப்பட்டது. பண்டைய காலத்தில், கல்வியும், மருத்துவத்துறையும் குருக்களுக்கு மட்டுமே உரிமையானதாகக் கருதப்பட்டது.

நோயாளிகள், கோவில்களின் சூழிடங்களில் கவனிக்கப்பட்டனர். மந்திரித்தல் போன்ற பலவகையான மருத்துவ முறை

கள் பயன்படுத்தப்பட்டன. ''கேப்பர்'' என்னும் ஒருவகை முட்செடி, வெள்ளைப் பூண்டு, கறியிலை மற்றும் உறக்க மருந்துப் பூண்டு வகை போன்ற கீரைகள் மந்திரத் தன்மை கொண்டவையாகக் கருதப்பட்டன. பாபிலோனிய மருத்துவத்தில் விளக்கெண் ணெய் அதிகம் பயன்படுத்தப்பட்டது. கமு ராபி சட்டத்தொகுப்பேட்டில், மருத்துவருக் குரிய பதவித் தகுதியும், அவருடைய பதவி கொடுக்கப்பட்டதற்கான கட்டுப்பாடுகளும் தரப்பட்டுள்ளன. மெசபொத்தாமியாவில் காணப்பட்ட பலவிதமான நோய்களைப் பற்றியும், அவற்றைக் குணப்படுத்துவதற் காகப் பயன்படுத்தப்பட்ட மருத்துவத்தின் சிறந்த வளர்ச்சி பற்றியும் எழுதப்பட்ட விளக்கமான குறிப்புகள் ஆப்பு எழுத்து ஏடுகளில் காணப்படுகின்றன.

ஆ. எகிப்து: *பண்டைய எகிப்திய குரு குலத்தில் மருத்துவத் துறைக்கேற்ற ஒரு பிரிவு ஆரம்ப காலத்திலிருந்து இருந்து வந்தது. எகிப்தின் மருத்துவப் பாரம்பரியங் கள், மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை சார்ந்த புள்தாள் ஏடுகளின் சில பகுதி களைக் காத்து வந்துள்ளன. இத்தகைய ஆதார மூலங்களின் வழியாக, மெசபொத் தாமியாவிலிருந்ததைப் போலவே எகிப் திலும் நோயின் தன்மையைக் கண்டுபிடிக் கும் முயற்சியில் மந்திர - சமயப் (Magico -religious) பங்கு மிக உயர்ந்த இடத்தை வகித்தது என்று தெரிகிறது. அசுத்த ஆவி களின் செயலால்தான் நோய் உருவாகிறது என்ற நம்பிக்கை இருந்து வந்ததால், நோயினைப் போக்குவதற்கு மந்திரக்கலை அதிகம் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக. எகிப்திய குரு - மருத்துவர் கள், கண்நோய், பெண் நோய்கள், சுடு புண், காயங்கள் போன்ற பல நோய்களை அகற்றுவதற்காக மந்திரக்கலையைப் பயன் படுத்தினர்.*

கீரைகளும், விலங்குகளின் பொருட் களும் வெளிப்படையாகப் பயன்படுத்தப் பட்டாலும், பொதுவாக மந்திரிப்புச் செயலின் உதவிதான் அதிக வலிமையுடை யதாகக் கருதப்பட்டு பயன்படுத்தப்பட்டது. அறுவைச் சிகிச்சை சார்ந்த ஒரு புள்தாள் மட்டும் இத்தகைய மந்திரக்கலையின் ஆதிக்கம் இல்லாமல் உள்ளது. ஆனால், மந்திரிப்பு வார்த்தைகள் எழுதப்பட்டுள் ளன. ஆதி ஆகமத்தில் (50:2) குறிப்பிடப் பட்டிருக்கும் மருத்துவர்கள், பிணத்தை நறுமணமூட்டிப் பேணி வைப்பவர்களாக இருந்தனர். அவர்களின் செயல்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருந்தன. இவர்கள் பின்பற்றிய சடங்குமுறைகள், நுணுக்கங்கள் ஆகியவற்றை எரோதோத்தசு என்பவர் குறித்து வைத்துள்ளார். பண்டைய எகிப்தில் இருந்த மற்ற மருத் துவ நிபுணர்களைப் போலவே இவர்களும் ஒரு தனிக் குருத்துவக் கிளையாகச் செயல் பட்டனர்.

இ. இஸ்ராயேல்: *முதல் ஐந்து விவிலிய நூல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல, ஆரம்பகால எபிரேயர்களின் மருத்துவத் தத்துவங்கள், மிகுந்த முன்னேற்றத்தை அடைந்திருந்தன. மந்திரக்கலையின் உத வியை அகற்றிவிட்டு, செயலறிவின் மூல மும், கடவுளுக்கும் துன்புறுவோனுக்கும் இடையே நிலவும் ஆன்மீக உறவின் மூலமும், நோயினைக் கண்டுபிடித்துத் தீர்க்க முயன்றனர். லேவியர் ஆகமத்தி லுள்ள மருத்துவப் பகுதியில் விளக்கப் பட்டிருக்கும் தனிமனித மற்றும் சமூக சுகாதாரம் பற்றிய தத்துவங்கள் பழங்காலத் தில் மிகவும் தனித்தன்மையுடையன. இந்தத் தத்துவங்களைப் பரப்பவும், செயல் படுத்தவும் வேண்டிய கடமையும், பொறுப் பும் குருக்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நோயும் எந்த வகையில் கை யாளப்பட வேண்டுமென்றும், குறிப்பாகத் தொழுநோயினைப் பற்றிய விளக்கங்களும் லேவியர் ஆகமத்தில் தெளிவாகக் கொடுக் கப்பட்டுள்ளன.*

நாளாகமத்திலும் மருத்துவர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது (2 நாள் 16:12). இதுதான் ஐந்நூலுக்குப் புறம்பே மருத்துவர் பற்றிய முதல் குறிப்பாகும். மருத்துவரைக் குறிக்கும் எபிரேயச் சொல் ''பழுதுபார்ப் பவர்'', ''ஒன்றாகச் சேர்த்துத் தைப்பவர்''

என்ற பொருள் கொண்டதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இது புண்கள், காயங்களைக் குணப்படுத்துவதையும் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. கடவுள் ஒருவரே குணமளிப்பவராகக் (யாத் 15:26) கருதப்பட்டதால், மனித மருத்துவர்களெல்லாம் வெறும் மருந்து கொடுப்பவர்களாகவும், மருத்துவ, கிரையியல் வல்லுநர்களாகவும் விளங்கினர். எரே 8:22-இல் மருத்துவர்கள், மருத்துவப் பொருட்களுடன் தொடர்பு படுத்தப்பட்டு, பேசப்படுகிறார்கள். ஒரு மருத்துவனின் பிரசன்னம், நோய் குணமாவதற்கான ஒரு நம்பிக்கையை அளித்தது. களிம்பு போன்ற மணம் கமழும் மருந்து வகைகள் பயன்படுத்தப்பட்டன.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் மருத்துவரின் பெருமையும், முக்கியத்துவமும் அதிகம் உயர்ந்துவிட்டன. இந்தக் காலக் கட்டத்தில் எழுதப்பட்ட சீராக்கு ஆகமத்தில் மருத்துவர்களைப் பற்றிய குறிப்புக்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. கடவுள்தான் குணமளிப்பவர் என்பது உண்மையானாலும், குணமளிக்கும் அருளையும், மருந்துகளையும் கடவுள் மனிதர்களுக்கு அளித்துள்ளார். ஆனால், இறைவனுக்கு எதிராகச் செயல்படும் ஒரு மனிதன், மருத்துவருக்கு முன்னரும் அரக்கத்தனமாகவே நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்கப்படுகிறது (சீரா 38:1-15).

இயேசு தனது போதனையிலும் மருத்துவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (மத் 9;12; லூக் 4:23). பொதுவாக இந்த மருத்துவர்கள் நல்ல திறமையுடையவர்களாகவே விளங்கினார்கள். சிலசமயங்களில் அவர்களால் குணப்படுத்த இயலாத நிலையும் ஏற்பட்டதுண்டு (மாற் 5:26). ''அன்புமிக்க மருத்துவர்'' என்று அழைக்கப்பட்ட புனித லூக்கா இயேசுவின் மருத்துவப் பணியைப் பற்றிய தெளிவான விவரங்களை அளித்துள்ளார். மற்ற ஆசிரியர்கள் பயன்படுத்தாத சில மருத்துவச் சொற்களை இவர் பயன்படுத்தியிருப்பதால், இவர் கிரேக்க மருத்துவப் பாரம்பரியத்தில் பயிற்சி பெற்றிருப்பார் என்று எண்ணப்படுகிறது.

2. குருக்கள், இறைவாக்கினர் ஆகியோரின் மருத்துவப்பணி: ஆரம்பகால எபிரேயக் குருக்களின் மருத்துவப் பொறுப்புகள், அவர்களின் சமயக் கடமைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக இருந்தன. லேவியர் ஆகமத்தில் ஏழு வகையான தூய்மைப்படுத்தும் வடிவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் மருத்துவ, சமயக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. லேவியர் ஆகமத்திலுள்ள சுத்திகரச் சடங்குகள், பேறுகாலப் பெண்களைத் தூய்மைப் படுத்துதல் (அதி 12), தொழுநோய் (அதி 13), உடலில் ஏற்படும் தூய்மையற்ற ஒழுக்கு (15:2-15), விந்து கழிதல் (15:16-18), கணவன் -மனைவி உடல் உறவு (15:18), மாதவிலக்கு (15:19-30) மற்றும் இறந்த உடலைத் தொடுதல் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்துதல் ஆகும். சடங்கு முறைகள், கி.மு. இரண்டாம் ஆயிரம் ஆண்டுகளில் பாபிலோனிய குரு-மருத்துவர்கள் மேற்கொண்ட சடங்குகளை ஞாபகப்படுத்துவதாக அமைகின்றன. பானங்கள் அல்லது மருந்துகளின் வாய்வழி நிர்வாகத்திற்கான ஒரே விவிலியக் குறிப்பு எண் 5:11-31-இல் வரும் வெஞ்சினத்தின் உணவுப் படையலாகும்.

அன்று மருந்துகளில், நாட்டுப்புற மருத்துவத்தில், வெள்ளைப்போளம், சாம்பிராணி, நறுமணப்பிசின், சோத்துக் கற்றாழை, கருவாய்ப்பட்டை, இலவங்கப்பட்டை, தாவர வாசனைப்பொருட்கள் போன்றவை பரவலாகப் பயன்படுத்தப்பட்டாலும், பரிமளத் தயாரிப்பாளர்களின் கலை இவற்றை மருத்துவத்திற்காக மட்டும் பயன்படுத்தவில்லை (யாத் 30:35). மேற்காசிய நாடுகளில் காணப்பட்ட, மயக்கும் தன்மை கொண்ட பொருட்களைப் பற்றிய எந்தக் குறிப்பும் பழைய ஏற்பாட்டில் இல்லை. இவ்வகைப் பொருட்கள் மற்றப் பொருட்களுடன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம்.

இறைவாக்குப் பணியில், நோயினை முன்னறிவித்தலானது ஒரு பகுதியாகக் கருதப்பட்டது என்பதற்குச் சில சான்றுகள் உள்ளன: நாத்தான் (2 சாமு 13:14), எலியா

(1 அர 17:17; 2 அர 1:4), அகியா (1 அர 14:4) மற்றும் எலிசா (2 அர 5:3; 8:7). எலிசா, நச்சுத்தன்மை கொண்ட கீரைகளின் விளைவுகளை அகற்றுதல் (2 அர 4:41), எரிகோ தண்ணீரைச் சுத்தம் செய்தல் (2 அர 2:20-21), நாமான் (5:3-14), சுனாமியளின் மகன் (4:18-37) ஆகியோரைக் குணப்படுத்துதல் ஆகியவற்றில் அசாதாரண மருத்துவ முறைகளைக் கையாண்டுள்ளார்.

இத்தகைய பணியில் மிக முக்கியமான தாகக் கருதப்படுவது, எசேக்கியாவின் கொப்புளம் குணமாக்கப்பட்டதாகும் (2 அர 20:1-7). புண், அழுகிப் போன காயங்கள் ஆகியவற்றிற்குத் தைலம், எண்ணெய் போன்ற பலவிதமான மருத்துவ உதவிகள் செய்யப்பட்டன (எசா 1:6). ஆரம்ப காலத்தில் எலும்பு முறிவுகளுக்கு மருத்துவ உதவி செய்யப்படவில்லை என்ற எண்ணம் இருந்துவந்தாலும் (லேவி 21:19) பிற்காலத்தில் இத்தகைய முறையிலும் முயற்சிகள் செய்யப்பட்டன என்பதற்கு விவிலிய ஆதாரம் உள்ளது (எசே 30:21). எசேக்கியேல், சிம்பு (அண்டை) வைத்துக் கட்டும் முறை பொதுவானதாக நடைமுறைப்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடவில்லை. ஆனால், சுற்றிக் கட்டுப்போடும் போது இம்முறை பின்பற்றப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கிறிஸ்துவுக்கு முந்தைய இரு நூற்றாண்டுகளில் மருத்துவனின் உயர்வைப் பொருத்தே, வியாதிக்குப் பயன்படுத்தப்பட்ட மருந்துகளின் பங்கும் பெருமைப் படுத்தப்பட்டது. மருந்துகள், இயற்கையான உற்பத்திப் பொருட்களாகக் கருதப்பட்டதால், மனிதனுக்கு மிகுந்த நன்மை பயக்கக்கூடியனவாக எண்ணப்பட்டன. விவேகமுள்ள அறிவாளி, தன்னை மருத்துவரிடம் காட்டி, தன் நோய்க்குத் தேவையான மருந்தினைப் பெற்று, குணம் பெற்றான் (சீரா 38:1-15). தால்மூதிலிருந்து, நோயாளிகள் மந்திரத் தாயத்துக்களை அணிந்து, பலவிதமான மந்திரக்கலை பழக்கங்களைச் செய்து, மூடநம்பிக்கையின் அடிப்படையிலான பல மருத்துவ முறைகளையும் பின்பற்றினர் என்ற விளக்கத்தைப் பெறுகின்றோம். இத்தகைய நிலை தான், 12 ஆண்டுகளாய்ப் பெரும்பாட்டினால் வருந்திய பெண்ணுக்கும் ஏற்பட்டிருக்கலாம் (மாற் 5:25) என்று கருதப் படுகிறது.

3. புதிய ஏற்பாட்டில் மருத்துவ முறைகள்: *புதிய ஏற்பாட்டில், மருத்துவ முறை பற்றி மிகக் குறைந்த அளவிலான குறிப்புக் களே உள்ளன. அவையும் தற்செயலானவையே. நல்ல சமாரியன், அடிபட்டுக் கிடந்த வழிப்போக்கனின் காயங்களுக்கு எண்ணெய் பூசி, கட்டுப் போட்டு மிகச் சிறந்த முதலுதவி செய்தான் (லூக் 10:34). லூக்கா நற்செய்தியில் (7:37-38) கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சி, நறுமணப் பொருட்களைப் பூசுவதற்கு அடையாளமாக இருந்ததேயன்றி, மருத்துவ முறையாகக் கருதப்பட முடியாது. இயேசுவின் இறந்த உடலை அடக்கம் செய்வதற்கு முன்பாக அதனடையாளமாகச் செய்யப்பட்ட பல செயல்களில் இதுவும் ஒன்று (லூக் 23:56). எச்சில் பூசிய நிகழ்ச்சி, அடையாளத் தன்மை கொண்டதாகவே (யோவா 9:6) கருதப்படுகிறது. இதை மருத்துவ முறையாக எண்ணக் கூடாது.*

சிலுவைத் தண்டனையைப் பெற்றவர்களின் துன்பம் மிகக் கொடியதாக இருந்தமையால் அவர்களின் துன்பத்தைக் குறைக்க வேண்டுமென்ற அன்பு ஆர்வம் கொண்டவர்கள், வெள்ளைப்போளம் கலந்த இரசத்தைக் குடிக்கக் கொடுத்தனர் (மாற் 15:23). இந்தப் பானத்தில் மதுவைப் போன்ற மயக்க சக்தி இல்லாமல் இருந்தால் இதைத் துன்புறுபவர்களுக்குக் கொடுப்பதில் பயனில்லாமல் போய்விடும்.

பவுல் திமொத்தேயுவுக்கு அளித்த அன்பு அறிவுரை நாட்டுப்புற மருத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது (1 திமொ 5:23). வயிற்றுப்பொருமலுள்ள, உணவு செரியாமல் துன்பப்பட்டுக்கொண்டிருந்த திமொத்தேயு அதிலிருந்து தற்காலிகமாக விடுபடுவதற்காக, சிறிது திராட்சைரசத்தை

அருந்த வேண்டுமென்று பவுல் உரைத்துள்ளார். இத்தகைய வயிற்றுப் பிரச்சனையானது, நோய்க்குறி அமைப்பின் பெரிய பிரச்சனையின் ஒரு பகுதியாகக் கருதப் பட்டது. கடவுளின் பெயரால் நோயாளியின்மீது எண்ணெய் தடவும் செயல் ஓர் அடையாளச் செயலாகவே செய்யப் பட்டது. விசுவாசத்தின் அடிப்படையிலான செபத்துடன் ஒன்றான செயலாக விளங்கியது. எனவே, இதை மருத்துவ முறையாகக் கருதுவதில்லை.

4. அறுவைச் சிகிச்சை: விவிலியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரே அறுவைச் சிகிச்சை விருத்தசேதனமேயாகும். இத்தகைய பழக்கம், யூதரல்லாத மற்ற மக்களிடையே, குறிப்பாக எகிப்தில், நாகரிகமான வாழ்க்கையின் அடையாளமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால், யூதர்களிடையே இருந்ததுபோல் சமயப் பொருளைக் கொண்டிருக்கவில்லை. ஆபிரகாமுக்குத்தான் முதன் முதலில் இந்தச் சிகிச்சை செய்யப்பட்டதாக பழைய ஏற்பாடு கூறுகின்றது. ஆனால், இந்தச் சிகிச்சை முறை மிகப்பழமையானதாக விளங்கியது எனலாம். வெண்கல மற்றும் இரும்புக் காலங்களில் வாழ்ந்த செமித்தியர்கள் அறுவைச் சிகிச்சைக்காக சிக்கிமுக்கிக் கல்லால் ஆன கத்திகளைப் பயன்படுத்தினர். இஃது அவர்கள் செய்துவந்த சடங்கின் பழமைக்கு ஆதாரமானதாக அமைகின்றது. இஸ்ராயேல் குழந்தைகள் அனைத்திற்கும் பிறந்த எட்டாம் நாளில் நுனித்தோல் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது (லேவி 12:3). இதே போன்ற சிகிச்சை ஆபிரகாம் வீட்டின் அடிமைகளுக்குச் செய்யப்பட்டது (ஆதி17:11). எபிரேயர்களிடையே சமயப் பொருளே முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. அவர்கள் இதை ஒரு சுகாதாரப் பழக்கமாகவோ, வருநோய்க்குக் காவலாகவோ செய்யவில்லை.

ஊழியக்காரனின் காதில், தோல் தைக்கப் பயன்படுத்தப்பட்ட பெரிய ஊசியைக் கொண்டு போடப்படும் ஓட்டையே சிறிய அறுவைச் சிகிச்சையாகக் கருதப்பட்டது (யாத் 21:6). இந்தச் சடங்கின் மூலம் ஊழியக்காரன் தலைவனுக்குத் தன் வாழ்நாள் முழுவதும் பணிவிடை புரிவதாக உடன்படிக்கை செய்துகொண்டு உறவினை உறுதிப்படுத்திக் கொண்டான். இது சமய-சமூகத் தன்மையுடையதாகச் செய்யப் பட்டது; மருத்துவத்தன்மையில் அன்று.

5. அறுவைச் சிகிச்சைக்கடுத்த நோயும், விபத்தும்: அறுவைச் சிகிச்சை வேண்டிய நோய் பற்றிய விவிலியக் குறிப்புக்கள் மிகக் குறைவாகவே உள்ளன. இருவரிடையே ஏற்படும் சண்டையில் ஒருவன் மற்றவனைக் காயப்படுத்திவிட்டானாகில், காயப்பட்டவனின் முழுச் சுகத்தையும் பெற்றுத் தர வேண்டியது காயப்படுத்தியவனின் கடமை. அஃதோடுகூட, அவனுக்கு ஏற்பட்ட வேலை நேர இழப்பிற்கான ஈடும் செய்யப்பட வேண்டும் (யாத் 21:18-19). இத்தகைய காயங்களை அகற்றுவதற்காக குருக்கள் எந்த முறையில் செயல்பட்டனர் என்பது தெரியவில்லை. ஆனால் பிற்காலத்தில், எலும்பு முறிவுகளைக் குணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர் என்பது தெரிகிறது (எசே 30;21).

கூனல் முதுகைக் கொண்டவர்களும், குள்ளமானவர்களும் குருத்துவத்திலிருந்து விலக்கப்பட்டனர். குள்ளமானவனுக்கு உடல் குறைபாடு இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. ஆனால் கூனல் முதுகு என்னும் குறைபாடு, முதுகெலும்புத் தண்டில் ஏற்படும் பாதிப்புகளின் காரணமாகவே உருவாகின்றது.

பதினெட்டு ஆண்டுகளாகப் பேயால் நோயுற்றிருந்த பெண் ஒருத்தி, நிமிர்ந்து பார்க்கவும் முடியாத ஒரு கூனி. அவளின் முதுகெலும்புத்தண்டில் ஏற்பட்ட பாதிப்பின் காரணமாகவே இந்த நோய் உருவாகியிருக்க வேண்டும் (லூக் 13:11).

மற்றொரு விவிலிய எடுத்துக்காட்டையும் இங்குக் குறிப்பிடலாம். இயேசு பிடிபட்டபோது பேதுரு, மால்கு என்ற வீரனின் வலக் காதை வெட்டினார்

(யோவா 18:10). பேதுரு தலைமைக் குருவின் ஊழியனது தலைக்குக் குறி வைத்துத் தாக்க முயன்றார் என்பதில் ஐயமில்லை. ஆனால், குறி தவறி காது மட்டுமே துண்டிக்கப்பட்டது. காதின் பகுதி முற்றிலுமே துண்டிக்கப்பட்டிருந்தால் அதைக் குணமாக்கியது ஓர் அருஞ்செய லாகவே கருதப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளில் அறுவைச் சிகிச்சை பயன் படுத்தப்பட்டிருக்க இயலாது.

6. தாய்மை மருத்துவம்: *பண்டைய குறிப் புகளில் சில இத்தகைய மருத்துவத்திற்கு ஆதாரமாக உள்ளன. பேறுகால மருத்துவப் பெண்ணின் பங்கு அன்றைய சமுதாயத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருந் தது. இத்தகைய மருத்துவப்பெண்ணே, விவிலியத்தில் முதன்முதலாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் மருத்துவப் பணியாளர் ஆவார். பொதுவாக மேற்காசியப் பெண் கள், பொதுப்பணியில் ஈடுபடுவதிலிருந்து தடுக்கப்பட்டார்கள். பேறுகால மருத்துவப் பெண்கள் ஒன்றிணைந்து முறையாகச் சங் கம் அமைத்து ஒரே வகுப்பினராகச் செயல் பட்டனர். இரண்டு தலைமை மருத்துவப் பெண்களின் பெயர்கள் மிகவும் புகழ் பெற்றதாக எகிப்தில் குறிப்பிடப் பட்டுள்ளன (யாத் 1:15).*

பார்வோன் வெளியிட்ட சட்டம் இந்த மருத்துவப்பெண்களின் சிறப்பான சேவை களுக்கு எதிராகவும், மனிதாபிமானமற்ற வகையிலும் அமைந்தது (யாத் 1:16). ஆயினும், இந்த மகளிர், தாங்கள் செல்வ தற்கு முன்பே குழந்தை பிறந்து விட்டது என்ற ஒரு காரணத்தைச் சொல்லி சட்டத் திலிருந்து தப்பித்து வந்தனர். எபிரேய மருத்துவப்பெண்கள், எகிப்தியப் பெண் களுக்கும் இத்தகைய பணியினைச் செய்த னர். இந்த மருத்துவத்தின்போது தாய் ஒரு தாழ்ந்த இருக்கையில் அமர்த்தப்படுவாள். இத்தகைய பொருட்கள் இன்றும் எகிப்திய உழவர்களிடையே பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய மருத்துவத்தின்போது தாய் இறந்துவிடுவதும் உண்டு என்பதற்கு இரண்டு விவிலியச் சான்றுகள் உள்ளன. இறக்குமுன் அடையாளப் பெயர்களையும் அவர்கள் வெளிப்படுத்தினர். 1. ராகேல் பேறுகால வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த போது தன் உயிர் பிரியப் போகும் வேளையில் தன் பிள்ளைக்குப் பெனோனி அதாவது 'என் வேதனைப் புதல்வன்' என்று பெயரிட்டாள் (ஆதி 35:16-19). 2) பினகாசின் மனைவி பேறு கால வேதனையைப் பெற்றிருந்தபோது, கடவுளின் பேழை பிடிபட்டதையும், தன் மாமனாரும், கணவனும் இறந்துபட்டதை யும் கேள்விப்பட்டுத் துன்பம் அதிகரித்த நிலையில் குனிந்து ஒரு மகவை ஈன்றெடுத் தாள். இஸ்ராயேலரை விட்டுப் புகழ் நீங்கினது என்று சொல்லி, தன் குழந்தைக்கு இக்கபோத்து என்று பெயரிட்டாள் (1 சாமு 4:19-22).

இரட்டைக் குழந்தைகள் பிறந்ததற்கான சான்றுகள் இரண்டு ஆதி ஆகமத்தில் இடம் பெற்றுள்ளன. 1. ரபேக்காளுக்கு ஏசா, யாக்கோபு என்ற இரு குழந்தைகள் பிறந் தன (ஆதி 25:21-26). 2. தாமாருக்கும் இதே போன்று இரட்டைக் குழந்தைகள் பிறந்தன (ஆதி 38:27-30). பிரசவச் சூழ்நிலையின் இக்கட்டான நிலையும் இதில் குறிப்பிடப் பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் மருத்துவப்பெண்ணின் திறமை மிக்க பணி மிகவும் பாராட்டப்படும் வகையில் அமைந்தது.

முதிர்ந்த வயதிலும் கடவுளின் ஆசீரால் கருவுற்றுக் குழந்தைகளைப் பெற்றெடுத்த வர்களைப் பற்றிய சான்றுகளும் உள்ளன: சாரா (ஆதி 21:2), மனோவாவின் மனைவி (நீதி 13:24), எல்கானாவின் மனைவி அன்னா (1 சாமு 1:20) மற்றும் எலிசபெத்து (லூக் 1:36).

குழந்தை பிறந்த பின்னர் (எசே 16:4-5), கொப்பூழ்க்கொடியை அறுத்தல், குழந்தை யைத் தண்ணீரால் கழுவுதல், உப்பால் கருப்பை சம்பந்தமானவற்றை அகற்றுதல், துணிகளால் சுற்றப்படுதல் போன்ற பணி கள் செய்யப்பட்டன. குழந்தை ஆறு

மாதங்களை அடையும்வரை துணிகளால் சுற்றப்படுதல் தொடர்ந்து செய்யப்படும். குழந்தைக்கு அடிக்கடி எண்ணெயும், மாவும் தடவப்பட்டன.

7. விவிலியத்தில் மருத்துவம் பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள்: இத்தகைய மருத்துவ முறைக்குச் சில எடுத்துக்காட்டுகள் உள்ளன. யாக்கோபு தன் சொந்தக் குடும்பத்திற்குப் பொருள் ஈட்ட எண்ணி (ஆதி 30:31) மந்தையில் மிகப்பழைய முறையைப் பின்பற்றினார். கறுப்பு நிறம் கொண்ட மற்றும் புள்ளியோ, கலப்பு நிறமோ கொண்ட ஆட்டுக்குட்டிகளை யாக்கோபுக்குத் தருவதாக உறுதி அளித்த லாபான், அவற்றின் இனப்பெருக்கத்தைத் தடை செய்யும் எண்ணத்தில் இவ்வகையைச் சேர்ந்த ஆண் ஆடுகளை அகற்றிவிட்டார். எனவே யாக்கோபு புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் பசிய கொப்புகளை வெட்டி, அவற்றின் இடையிடையே பட்டையைச் சீவி உரித்து அவற்றில் வெள்ளை, பச்சை நிறங்களை உருவாக்கினான். மேலும், தன் மந்தைகள் நீர் குடிக்க வரும்போது, ஆடுகள் மேற்படி வரியுள்ள கொப்புகளை எதிரில் கண்டு பொலிந்து சினைப்படும் பொருட்டு, அவன், நீர் வார்க்கப்படும் தொட்டிகளில் அக்கொப்புகளைப் போட்டு வைத்தான். இதன் பயனாக, புள்ளியும், வரியும், கலப்பு நிறமுமுள்ள குட்டிகளை ஈன்று வந்தன. இன்று கூட சிலர், சில குழந்தைகளுக்கு ஏற்படும் பிளவுபட்ட உதடுகளுக்குக் காரணம், பேறு காலத்திற்கு முன்னர் எலி அல்லது முயலுடன் தாய் கொள்ளும் தொடர்புதான் என்ற எண்ணம் கொண்டுள்ளனர். உண்மையில், இத்தகைய குறைபாடுகள் ஏற்படுவதற்குக் காரணம் உயிர் அணுக்களில் ஏற்படும் பாதிப்புதானே அல்லாமல் வெறும் பார்வையினால் ஆகாது.

சிறிது காலம் மலடியாக இருந்த லேயா, ராக்கேல் இருவருமே, ரூபன் கொண்டு வந்த தூதாயிக் கனிகளை உண்டனர் (ஆதி 30:14-16). ஏனென்றால், இவற்றின் மந்திர சக்தியால் மலடிகளும் கர்ப்பம் அடைவர் என்ற தவறான நம்பிக்கை இருந்தது. உண்மையில் இவற்றை உண்பதால் கர்ப்பம் அடைவதில்லை. மாறாக, மனோதத்துவ நிலையில் ஏற்படும் பாதிப்புகளின் பயனாகவே நன்மை உருவாகியது.

தாவீது அரசர் முதிய வயதை அடைந்த போது, அவர் முன் நிற்கவும், அவருக்குச் சூடு உண்டாகும்படி அவரது மார்பின்மீது படுத்துறங்கவும் ஓர் இளங்கன்னியைக் கூட்டிவந்தனர் (1 அர 1:1-4). ஏனென்றால், அப்பெண்ணின் உடல் சூட்டையும், மூச்சையும் பெற்று, தனது வாழ்வை மன்னர் நீண்டதாக்கிக் கொள்ள முடியும் என்று மக்கள் நம்பினார்கள். மன்னரின் ஆற்றலை மந்திரச் சடங்குகளின் மூலமாகச் சோதித்துப் பார்ப்பதற்குக்கூட இப்படிச் செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சந்திரனால் தீய விளைவுகள் மனிதனில் ஏற்படுத்தப்படுகின்றன என்ற பரவலான கருத்து மக்களிடையே இருந்து வந்தது. சங் 121:6-இல் ''இரவில் நிலாவும் உம்மைத் தீண்டாது'' என்று எழுதப்பட்டுள்ளது. மத் 4:24; 17:15-இல் வரும் கிரேக்கச் சொற்கள் மனிதனின் மூளை சந்திரனின் ஆதிக்கத்தால் பாதிக்கப்படுகின்றது என்ற பாரம்பரியக் கருத்தை வலுப்படுத்தியுள்ளன.

பெத்சாயிதா குளத்தின் தண்ணீரைக் கலக்கிவிடும் செயல்பற்றிய (யோவா 5:4) விளக்கம் சில மொழிபெயர்ப்புகளில் காணப்படுகின்றது. இந்தக் குளத்தின் குணப்படுத்தும் தன்மை தெய்வீக சக்தியினாலானது. இதைப் போன்ற புனித கிணறுகளும், ஊற்றுகளும் பல இருந்திருக்கின்றன. பெத்சாயிதா குளத்தின் அடியில் இருந்த இயற்கை வாயுவைக் கலக்கிவிடுவதன் மூலம் நோயாளிகள் குணம் பெற்றனர் என்று விளக்கம் தரப்படுகின்றது. உண்மையில் இங்கு வந்து குணம் பெற்றவர்கள் பலர் மனநோய் கொண்டவர்களாக இருந்திருக்கலாம்.

மருத்துவப்பெண், தாதியர் (MIDWIFE)

இவள் பிள்ளைப்பேற்றுக் காலத்தில் உதவி செய்பவள் (ஆதி 35:17; 38:27-30).

இவர்களைப் பற்றிய குறிப்புகள் யாத்திரை ஆகமத்தில் தரப்பட்டுள்ளன. சிப்ரா, பூகா என்ற இரு எபிரேயப் பெண்கள் பேறு காலத்தில் எபிரேயப் பெண்களுக்கு உதவி செய்து வந்தனர். இவர்கள் பிறக்கும் ஆண் குழந்தைகளை மட்டும் கொன்று விடும்படி கட்டளையிடப்பட்டிருந்தனர். இவர்கள் இக்கட்டளையை நிறைவேற்றாமல் இருந்த தால் கடவுள் அவர்களை ஆசீர்வதித்தார் (யாத் 1:15-21). பிள்ளைப்பேறு இல்லாத மலடிகள் மருத்துவச்சிகளாக இருந்தனர் என்ற கருத்தும் நிலவி வந்தது. பினகாசின் மனைவி பேறுகால வேதனையால் துடித்துக் கொண்டிருக்கையில் அருகிலிருந்த பெண் கள் ''அஞ்சாதே, நீ ஒரு மகனைப் பெற்றெடுத்துள்ளாய்'' என்றார்கள் (1 சாமு 4:20; காண்க. ஆதி 35:17). இவர்கள் இவ்வாறு உதவி செய்கையில், குழந்தை ஆணா, பெண்ணா என்பதை உடனே முடிவு செய்துவிடுவர்.

மருத்துவர் (PHYSICIAN)

தொடக்கத்தில் காயங்களைக் கவனித்துப் பழுதுபார்ப்பவர்; எனவே, கட்டுப்போடு பவர் மற்றும் குணமாக்குபவர் என்று இச்சொல்லுக்குப் பொருள் அளிக்கலாம்.

அரசர்கள் ஆட்சிக்காலம் வரை மருத்து வத்தைச் சிறப்புத் தொழிலாகக் கொண்ட வர்கள் காணப்படவில்லை (எ.கா. 2 நாள் 16:12). மருத்துவரின் முக்கிய கடமைகள் புண்களுக்குக் கட்டுப்போடுதல் (எ.கா. எசா 1:6; ஓசே 6:1), தைலம் பூசுதல் (எரே 8:22), முறிந்த எலும்புகளுக்குக் கட்டுப் போடுதல் (காண்க. எசே 30:21; 34:4) ஆகியவையாகும். காலப்போக்கில் மருத்து வர் மற்றத் தொழில் செய்பவர்களிடமிருந்து வேறுபடுத்தப்பட்டனர், அவரது மதிப்பும் சிறப்பும் வளர்ந்தன (சீரா 38:1-15). ஆயி னும், அவர்களது மருத்துவ முறை பற்றிய நம்பிக்கையுறுதியற்ற மனப்போக்கும் மக்க ளிடையே காணப்படுகிறது. இதை, இயேசு குணப்படுத்திய பெண் பற்றிய நிகழ்ச்சி யுரையும் (மாற் 5:26), இயேசு எடுத்துக் கூறிய பழமொழியும் (லூக் 4:23) பிரதிபலிக் கின்றன. மருத்துவர் உதவியின்றியே, மிகச் சாதாரணமான மருத்துவமுறைகள் மக்க ளிடையே பழக்கத்தில் இருந்தன (எ.கா. மாற் 15:23; லூக் 10:34; 1 திமொ 5:23).

மருந்து, கண் மருந்து (SALVE)

பசையாக்கப்பட்டு, கண்ணுக்கு இடப் படும் மருந்துப்பொடி (திருவெளி 3:18). இலவோதிக்கேயா மருத்துவ நிலையங் களுக்குப் புகழ் பெற்றது. அங்கு இவ் வகைப் பொடிகள் செய்யப்பட்டன. ஆகவே, இலவோதிக்கேயக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆன்மீகக் குருட்டுத் தன்மையைப் போக்கிக் கொள்ள கண் மருந்து வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆலோசனை வஞ்சப் புகழ்ச்சி மிக்கதாகும்.

மருமகள் (DAUGHTER-IN-LAW)

மகனின் மனைவி. ஒரு மனிதன் தன் னுடைய மருமகளுடன் உடலுறவு கொள்ளக் கூடாதென லேவியர் ஆகமம் கூறுகிறது (லேவி 18:15). இந்தக் கட்டளையை மீறினால் அவர்கள் இருவருக் கும் சாவே தண்டனையாகும்.

மருமகள் தன் கணவரோடு சேர்ந்து அவருடைய வீட்டிலேயே வாழவும், அஃதோடு சேர்ந்து புதிய நாட்டிற்குக் குடியேறவும் கடமைப்பட்டுள்ளாள் (ஆதி 11:31). இச்சொல் மணமகள் என்ற பொரு ளைப் பெறும்போது, அது திருமணம் ஒப்பந்தம் செய்யப்படும் காலம், மணக் காலம் ஆகியவற்றில் அவளது நிலையைக் குறிக்கிறது.

மரை, பெண்மான் (HIND)

செந்நிற மான் பிணை. இந்த மானைப் பற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் அது குட்டி போடுவதைப் பற்றியும் (யோபு 39:1; எரே 14:5; ஆதி 49:21; சங் 29:9), அதன் தடுமாறாத் தன்மையைப் பற்றியும் (2 சாமு 22:34; சங் 18:33; அப 3:19) கூறுகின்றன. இவைகள் காடுகளும், புல் வெளிகளும் நிறைந்த இடத்தில் வாழும். இதன் அழகு, மிருதுவுமான தன்மைக்கு மனைவி ஒப்பிடப்படுகிறாள் (பழ 5:19). 22-ஆம் சங்கீதத்தின் தலைப்பில் ''காலைப்

பெண்மான்'' என்று கூறப்பட்டிருப்பது, அனேகமாக ஒரு புகழ்வாய்ந்த இசை மெட்டைக் குறிப்பதாகும். உன்னத சங்கீதத்தில் (2:7; 3:5) மரைகள் மேல் ஆணையிடுவதில் இறைப்பெயருக்குப் பதிலாக மரைகள் பயன்பட்டிருக்கலாம்; அல்லது இதன் இனப்பெருக்க ஆற்றல் குறிக்கப்படலாம்.

மர்கேசவன் (MARCHESHVAN)

இஃது 'அரசம்னா' எனும் அக்காதிய பாபிலோனியப் பெயரின் எபிரேய வடிவமாகும். இதற்கு 'எட்டாவது மாதம்' என்பது பொருள். யூதர்களின் அரமேய நாணல் தாள் சுருளில், கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் எகிப்தில் இச்சொல் முதன் முதலில் வருகிறது. இஃது அக்டோபர் - நவம்பர், ஐப்பசி மாதங்களுக்கு இணையானது.

மர்செனா (MARSENA - தகுதியுள்ள)

இவர் அகசவேர் மன்னனின் ஆட்சியில் பாரசீகம், மேதிய நாடுகளில் சிற்றரசர்களாய் விளங்கிய எழுவருள் ஒருவர். இவர் அகசவேருக்கு அடுத்து அவரது நாட்டில் அதிக அதிகாரம் உள்ளவர்களில் ஒருவர் (எஸ்த 1:14).

மலட்டுத்தன்மை (STERILITY)

இறைவனின் மக்கள் பிள்ளைப் பேற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறார்கள். இதில்தான், படைத்தவர் தொடக்கத்தில் விடுத்த அழைப்பு முழுமையாக நிறைவேறுகிறது. இதன் வழியாகத்தான் ஆபிரகாமின் சந்ததி கடற்கரை மணலைப் போல் பெருகியது. ஆனால், மலட்டுத் தன்மை படைத்தவரின் திட்டத்திற்கு முரண்பாடாக இருக்கிறது; இஸ்ராயேல் மக்கள் மலட்டுத் தன்மை எனும் தீமைக்கு எதிராக இடைவிடாது போராடுகிறார்கள். இதன் பொருளைச் சிறிது சிறிதாகக் கடவுள் வெளிப்படுத்துகிறார்.

I **மலட்டுத்தன்மைக்கு எதிரான போராட்டம்:**

1. மலட்டுத்தன்மை ஒரு தீமை: சாவு, துன்பம் போல் மலட்டுத் தன்மையும் ஒரு தீமையாகும். உண்மையிலே படைத்தவரின் கட்டளையான பலுகிப் பெருகி, பலன் தாருங்கள் என்பதற்கு முரணாகச் செல்வது போலத் தோன்றுகிறது மலட்டுத்தன்மை. ஒருவனின் பெயர் நிலைக்க வாரிசு இல்லையேல் அஃது இழிவுக்குரியதாகக் கருதப்பட்டது. நான் குழந்தையின்றி இறந்தால் தத்தெடுத்த ஊழியக்காரன் இருந்து என்ன பயன்? என ஆபிரகாம் கேட்கிறார் (ஆதி 15:2). சாரா தனது கணவன் வழியாகப் பிள்ளை பெற்ற ஊழியக்காரியால் இழிவுபடுத்தப்படுகிறாள் (16:4தொ). ராகேல் தன் கணவனிடம் எனக்குக் குழந்தை கொடு. இல்லையேல் நான் இறப்பேன் என்கிறாள் (30:1). அதற்கு யாக்கோபு ''நான் என்ன கடவுளா? அவரல்லவா உனக்குத் தாய்மைப் பேறு தராதிருக்கிறார்'' என்றார் (30:2). கடவுள் ஒருவரே மலட்டு வயிற்றைத் திறந்து வளமுள்ளதாக்க முடியும் (29:31; 30:22).

2. இத்தீமைக்கெதிராகப் போராடுவது அவசியம்: ராகேல் தன் மாமியார் சாரா போலவே தன் வேலைக்காரிகளில் ஒருத்தியைத் தன் கணவனுக்குத் தருவதன் மூலம் (ஆதி 30:3-6) சுமுராபியின் சட்டமுறைப்படி குழந்தையைப் பெற்றுக்கொள்கிறாள். லேயா, நான்கு குழந்தைகளைப் பெற்ற பின், தற்காலிக மலட்டுத்தன்மையை வெல்ல முயற்சி செய்கிறாள் (30:9-13). இவ்வாறு மலட்டுத்தன்மையின் தீமையை மனிதன் வெற்றிகொள்ள முயல்வதைப் பார்க்கிறோம்.

3. கடவுள், மலட்டுத்தன்மையை வென்றவர்: வாழ்வு மரபு மரபாகத் தொடர்வதைத் தடுக்கும் தடைகளைச் சட்டபூர்வமாகவோ, அதற்குப் புறம்பாகவோ வெற்றிகொள்ள முயன்ற வழிகளே இவை. முற்றிலும் மலட்டுத் தன்மையை வெற்றி கொள்வது கடவுளுடைய கரங்களிலேதான் இருக்கின்றது. அவரும் தான் வாக்களித்தபடி பிரமாணிக்கமாய் இருந்து அதனை நிறைவேற்றி (யாத் 23:26; உப 7:14), ஒரு மாபெரும் மறைபொருளை அறிவிக்கிறார். மறைநூலின் திரு ஆசிரியர்கள் வேண்டுமென்றே முதுபெரும் தந்தையர்களில் முதல் மூவரின்

மனைவியரை மலட்டுத்தன்மை கொண்டவர்களாகக் காட்டுகிறார்கள்: சாரா (ஆதி 11:30), ரபேக்கா (25:21), ராகேல் (29:31). பிறகே, அவர்கள் குழந்தைப் பேறு அடைகின்றனர் (காண்க. 13:2-5). ஈசாக்கின் பிறப்பைப் பற்றி வரும் நீண்ட விவரிப்பு இறைவன் தாமாகவே முன்வந்து தேர்ந்து கொள்ளுதலையும் அவரது அருளின் பலனையும் காட்டுகிறது. பவுல், ஒருவன் தன்னை மலடு என அறிக்கையிட்டு, கடவுள் பாலை நிலத்திலிருந்தும் உயிரை எழுப்ப முடியும் என விசுவாசத்தை எடுத்துச் சொல்லும்போது இறைவன் பலனளிக்கிறார் என, மேலே கூறிய கருத்திற்குப் பொருளளிக்கிறார். ஒருவன் மலடாகவே இறந்தாலும், விசுவாசம் அதையும் வென்று அங்கு வாழ்வைத் தரக்கூடியது (உரோ 4:18-24). மலடியான அன்னா இந்த இறைவனே முன்வந்து தேர்ந்து கொள்ளும் தன்மையினைப் புகழ்கிறாள் (1 சாமு 2:1-11). ''மலடி எழுவரைப் பெற்றெடுத்தாள், புதல்வர் பலரைப் பெற்றவளோ தனியள் ஆனாள்'' (2:5; காண்க. சங் 113:9).

II மலட்டுத்தன்மை ஏற்றுக்கொள்ளப்படல்: கடவுள், மலட்டுப் பெண்களைச் சந்தித்து மனிதர் நினைப்பது போல மலட்டுத் தன்மை ஒரு தண்டனை அன்று என்று காட்டுகிறார். எரேமியா கன்னிமையைக் காக்க கடவுள் ஆணையிட்டு தன் வழியாக பாவநிலையில் உள்ள மக்களின் மலட்டுத் தன்மையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறார் (எரே 16). கைவிடப்பட்ட மணப்பெண் திரும்ப வரும்போது, ''பிள்ளைபெறா மலடியே மகிழ்ந்து பாடு; ஏனெனில், கைவிடப்பட்டவளின் பிள்ளைகள் கணவனோடு வாழ்பவளின் பிள்ளைகளைவிட ஏராளமானவர்கள்'' (எசா 54:1) என்று ஆண்டவர் பெயரால் அவளுக்கு இறைவாக்கினர் ஆறுதல் கூறுகிறார். தன் பாவத்தை அறிக்கையிட்டபோது எருசலேம் தான் கடவுளிடமிருந்து பிரிந்து நிற்பதையும் அதனால் மலட்டுத்தன்மையில் வாழ்வதையும் உணர்ந்து வியக்கும் முறையில் அதிகப் பலன் கொடுக்க தன்னையே தயாரிக்கின்றது. எனவே, நாடுகளைத் தனது குழந்தையாகக் கருதுகின்றது (காண். கலா 4:27).

சமூகத்திற்கு மலட்டுத் தன்மை என்ன பொருள் தந்ததோ, அது தனி மனிதர்கட்கும் பொருந்துவதாக அமைகிறது. இது மெதுவாகத்தான் புரிந்து கொள்ளப்படும். சட்டம், அதிகம் அன்பு செய்யப்படாத பெண்கள் சார்பாக இருந்தாலும் (உப 21:15 தொ), அண்ணகர்கள் பலி செலுத்துவதை அனுமதிக்கவில்லை (லேவி 21:20). அவர்களை வேசிக்குப் பிறந்தவர்களாகக் கருதுகிறது (உப 23:3தொ). அவர்களை மக்களிடமிருந்து முழுவதும் விலக்கி வைக்கிறது (23:2). நாடு கடத்தப்பட்ட பிறகுதான் உடல் சார்ந்த பலனளித்தலே உயர்ந்தது என்ற கருத்து மாற்றம் அடைகின்றது. ஒரு புதிய கொள்கை மலர்கிறது. ஓர் அண்ணகன் 'நான் வெறும் பட்ட மரம்' என்று கூறாதிருக்கக்கூடும். ஆண்டவர் கூறுவது இதுவே; என் உடன்படிக்கையை உறுதியாகப் பற்றிக்கொள்ளும் அண்ணகர்களுக்கு என் இல்லத்தில், என் சுற்றுச்சுவர்களுக்குள் நினைவுச்சின்னம் எழுப்புவேன். புதல்வர் புதல்வியரைவிடச் சிறந்ததொரு பெயரை வழங்குவேன். ஒருபோதும் அழியாத என்றுமுள பெயரை அவர்களுக்குச் சூட்டுவேன் (எசா 56:3 தொ). இவ்வாறு உடலளவில் பலன் தருவது தொடர்ந்து ஒருவனுக்கு அத்தியாவசியமானது அன்று என்பதை மனிதர் உணர்ந்து கொண்டனர்.

ஞானிகள் மத்தியிலும் இக்கருத்து தொடர்ந்து வளர்ந்தது. ''ஓராயிரம் பிள்ளைகளைவிட ஒரே பிள்ளை சிறந்ததாய் இருக்கலாம்; இறைப்பற்றில்லாத பிள்ளைகளைப் பெறுவதைவிட, பிள்ளையின்றி இறப்பது நலம்'' (சீரா 16:1-4). உண்மையான ஆன்மீகப் பலனுடைமையைக் கண்டுணர்ந்து அறிக்கையிடுகிறார்: ''தூய்மை இழக்காத, தவறான உடலுறவு கொள்ளாத மலடி பேறு பெற்றவள்; மனிதரைக் கடவுள் சந்திக்க வரும்போது அவள் கனி தருவாள். நெறி கெட்ட செயல்களைச் செய்யாத... அண்ணகனும் பேறு பெற்றோன்... ஒருவனுக்கு மகப்பேறு இல்லாவிடினும், நற்

பண்பு இருந்தால் அதுவே சிறந்தது. அதன் நினைவு என்றும் அழியாது'' (ஞான 3:13 தொ; 4:1). இவ்வாறு விசுவாசியின் பார்வை மண்ணின் பலனுடைமையில் மட்டும் பதிக்கப்படுவதில்லை. மாறாக, மனிதனைச் சாகாதவனாக்கும் நற்பண்புகள் விளைவிக்கும் பலன்களின் மேலும் அவனது பார்வை திரும்பியது. இது நிகழ மலட்டுத்தன்மை எனும் தீமை ஏற்றுக் கொள்ளப்பட்டு மாற்றி அமைக்கப்பட வேண்டியது அவசியமாயிற்று.

III **பிள்ளைப்பேறற்றிருக்க அல்லது மலடாக இருக்க வலிய முன்வருதல்:** இப்தகுவின் மகள் தான் பிள்ளைப் பேறின்றி இறக்க நேரிடும் அவலத்தை நினைத்துத் தனது கன்னிமைக்காக அழுகிறாள் (நீதி 11:37 தொ). இறைப்பணிக்காக தான் இறுதிவரை கன்னிமையோடு வாழ்தலை எரேமியா வரவேற்கிறார் (எரே 16:1தொ). ஆனால், இது மக்களின் குற்றத்துக்குரிய மலட்டுத் தன்மையின் எதிர்மறைக்கூற்றினை அடையாளமாகவே உணர்த்துகிறது (காண்க. லூக் 23:29). அதே நேரத்தில் பழைய ஏற்பாடு பலன் தரும் கன்னிமை பற்றியும் பேசுகிறது. மரியாள் தனக்கு இயேசுவின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டபோது பெற்ற அடையாளம், அவளது உறவினள் எலிசபெத்து வியத்தகு முறையில் கர்ப்பம் அடைந்ததே. ஏனெனில், மலடியாக இருந்து கடவுள் அவர்களைச் சந்தித்ததால் பிள்ளைப் பேறுடையவர்களாக மாறிய பெண்களின் வரிசையில் எலிசபெத்தம்மாளும் சேர்கிறார் (லூக் 1:7.25). அது மரியாளின் கன்னிமை கெடாத தாய்மையைச் சிறப்பாக அவளுக்குச் சுட்டிக் காட்டுகிறது. இவ்வாறு மரியாளோடு புதிய காலம் தொடங்கப்படுகிறது. அவள் தந்த கனியாகிய இயேசு கடவுளின் மகனாவார். அவரே பலனுடைமையின் நிறைவாவார்.

இந்தப் புதிய காலத்தில் ''இறையரசுக்காகத் தங்களையே அண்ணகராக்கிக் கொள்வதில்'' தன்னையே பின்பற்றுமாறு இயேசு பலரை அழைக்கிறார் (மத் 19:12). எது ஒரு காலத்தில் சாபமாக, இழிவாக, தீமையாக எண்ணப்பட்டதோ அதுவே பவுலால் ஓர் அருங்கொடையாகக் கருதப்படுகிறது (1 கொரி 7:7). ஆதியாகமம், ''மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதன்று'' என்கிறது (ஆதி 2:18). ஆனால், பவுலே ''மணமாகாத ஒருவன் தான் இருக்கும் நிலையில் இருந்து விடுவதே நல்லது (1 கொரி 7:26) என்று சில எச்சரிக்கைகளுக்கு உட்பட்டு, துணிவோடு அறிக்கையிடுகிறார். அதாவது திருமணமாகாமல், குழந்தைகளின்றி தனியாக இருப்பது நல்லது. இத்தகைய நிலை அடையும்போது தானே விரும்பி ஏற்றுக் கொள்ளும் மலட்டுத்தன்மை கன்னிமையில் நிறைவடையக்கூடும்.

மலாக்கி (MALACHI - எனது தூதர்)

இறைவாக்கு நூல்களுக்கு ஆசிரியர்களாகக் கருதப்படும் இறைவாக்கினர் இவர்களுள் கடைசியானவர். இவரைப் பற்றி எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை (மலா 1:1). இவரது பெயரே உறுதியானதன்று. அறிஞர் பலர் இப்பெயர் ஒரு பட்டம் அல்லது அடையாளப் பெயர் என்று கருதுகின்றனர் (காண்க. 3:1). பிற்கால ராபிகளின் பாரம்பரியம் இவர் எஸ்ரா அல்லது மொர்தக்காய் ஆக இருக்கலாம் என்று சுட்டுகிறது. காண்க. மலாக்கி திருநூல்.

மலாக்கி திருநூல்(MALACHI, BOOK OF)

1. **நூலின் பெயரும் ஆசிரியரும்:** இந்நூலின் ஆசிரியரது பெயர் தெரியவில்லை. மலாக்கி என்பது அவரது சொந்தப் பெயர் அன்று. 3:1-இலிருந்து இருசொற்கள் ஆசிரியரது பெயராகின்றன. இந்த எபிரேயச் சொல்லுக்கு ''என் தூதன்'' என்று பொருள் கூறலாம்.

சிறிய இறைவாக்கினர் தொகுப்பின் முடிவில் ''ஓர் இறைவாக்கு'' (செக் 9:1; 12:1; மலா 1:1) என்ற தலைப்போடு கூடிய மூன்று இறைவாக்குத் தொகுப்புகள் வருகின்றன. இக்கால விவிலிய அறிஞர்களின் பொதுவான கருத்துப்படி, இந்த மூன்று இறைவாக்குத் தொகுப்புகளும் பெயர் தெரியாத இறைவாக்கினர்களால் எழுதப்பட்ட

வையாகும். பிற்காலத்தில் இவை சிறிய இறைவாக்கினர் நூல்களின் தொகுப்புக்கு முடிவுரையாக அமைந்தன. காலப்போக்கில் சிறிய இறைவாக்கினரின் நூல்களைப் பன்னிரண்டாக அமைக்கும்போது, முதல் இரண்டு பகுதிகள் செக்கரியாத் திருநூலோடு சேர்க்கப்பட்டன. இதை நாம் இரண்டாம் செக்கரியா என்றழைப்போம். மூன்றாவது பகுதி பன்னிரண்டாவது நூலாகப் பிரிக்கப்பட்டு, முன்னுரை விரிவாக்கப்பட்டு, மலாக்கியின் நூலாகக் கருதப்பட்டது (1:1; 3:1). பிற்காலத்தில், இந்நூல் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டபின், இப்பகுதியின் பெயர் தெரியாத ஆசிரியர் ''மலாக்கி'' என்று அழைக்கப்பட்டார்.

இந்த இறைவாக்கைத் தவிர, இந்த ஆசிரியரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. மலாக்கி, தனது மூதாதையரின் பாரம்பரியங்களை (உபாகமம், எசேக்கியேல்) நன்கு அறிந்தவர் என்று நூலின் வாயிலாக உணர்கிறோம். இவர் பெரும் நாட்டுப்பற்றுடையவர். பிற இனத்தவரிடையே நிலவிய ''அருவருக்கத்தக்க'' பாலின வழிபாட்டு முறைகள், கலப்பு மணம் போன்றவை யூத மக்களைக் கெடுத்துத் ''தீட்டுடையவர்''களாக்குவதால், அவற்றைப் பொறுத்துக் கொள்ளார், இடம் கொடார்; தனது சமயத்தின்பால் உறுதியான பற்றுறுதி கொண்டிருந்ததால் குருக்களின் அறியாமையையும், அவர்கள் சலுகை தேடுவதையும், பேராசை கொள்வதையும் கண்டு வாளா இரார்; வன்மையாகக் கண்டிப்பார். இவர் இறைவாக்கினர் செயல் முறையான ஆர்வமிக்கவராகத் தோன்றுகிறார்; மக்களது வாழ்க்கைப் பிரச்சனைகளை இறைவன் பெயரால் தீர்த்து வைக்கிறார். சமய காரியங்களில் ஆர்வமற்ற மக்களை அவர்களது உறக்கத்திலிருந்து இவர் தமது போதனையால் எழுப்புகிறார்; ''மரித்துக் கொண்டிருந்த'' யூத சமூகத்தைத் தீர்ப்பு நாள் பற்றிய எக்காள ஒலியால் எழுப்புகிறார்.

2. நூல் எழுதப்பட்ட காலம்: மலாக்கி பணி செய்த காலத்தையும், நூல் எழுதப்பட்ட காலத்தையும் துல்லியமாகக் கணிக்க முடியாது; ஆனால், நூலில் காணப்படும் குறிப்புகளிலிருந்து ஓரளவு ஊகிக்கலாம். யூத சமூகம் ஏழ்மையும் பலவீனமும் மிக்கதாக விவரிக்கப்படுகிறது. ஒரு பாரசீக ஆளுநன் யூதாவை ஆண்டு வந்தான் (1:8). இக்குறிப்பு நாடு கடத்தலுக்குப் பின் யூதாவில் பாரசீக ஆட்சி நிலவியதைச் சுட்டுகிறது. ஆலயங் கட்டி முடிக்கப்பட்டு (கி.மு. 516) வழிபாடு திரும்ப அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அஃதோடு அர்ச்சகர்கள் வழிபாடடில் சலிப்படையும் அளவுக்கு நீண்ட காலம் கடந்து விட்டது. ஆகவே, வழிபாட்டில் தவறுகளும் முறையற்ற போக்கும் புகுந்திருந்தன. யூதர்கள் சிலர் தங்களது இளமைக்கால மனைவியரை நீக்கி விட்டு (2:14), அழகிய அன்னியப் பெண்களை மணந்தனர் (எஸ் 9-10). பணத்தாசை பிடித்து ஏழைகளையும், எளியவர்களையும் அடிமைகளாக விற்றனர் (நெகே 5). பற்றுறுதியான விசுவாசிகளை விட, சமயப்பற்றற்றவர்களே நலம் பெறுகின்றனர் என்ற இடறலான முறைப்பாடு எழுந்தது (மலா 3:14-15). ஆலய வழிபாட்டில் புறச்சடங்குகள் கூட சரியாக இல்லை. பலியிடப்பட்ட விலங்குகள் மாசுமறுவுடையனவாய் இருந்தன போல், வழிபாடும் சீர்கெட்டிருந்தது (1:7-8:1; நெகே 13:15-25). சமயப்பற்று குறைந்தது; அமைதியின்மையும் அநீதியும் நாட்டில் பரவியிருந்தன. இவற்றிற்கெல்லாம் தலைவர்களே சிறப்பாக, குருக்களே பொறுப்பாயிருந்தனர் (மலா 2:1-3—8:9; எசே 10:15-16.18-25; நெகே 13:4-13.22.28-31). மக்களிடையே நிலவிய இந்தச் சமய, சமூகத் தீமைகளுக்கு எதிராக எஸ்ரா, நெகேமியா ஆகியோர் போராடினர். நூலில் காணப்படும் இந்தப் பிரச்சனைகள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் மத்தியில் யூதாவில் நிலவிய நிலையை விவரிக்கின்றன. இதனால் இந்நூல் ஓரளவு வரலாற்று முக்கியத்துவம் உடையதாகும். இந்த விவரங்கள் எஸ்ரா, நெகேமியா திருநூல்களிலிருந்து நாம் அறிவதை உறுதிப்படுத்துகின்றன, நிறைவு செய்கின்றன. எஸ்ரா, நெகேமியா ஆகியோரின் சீர்திருத்

தங்களுக்கு மக்களை மலாக்கி தனது போதனையால் தயாரித்தார் எனலாம்.

மலாக்கி உபாகமத்தைத் தழுவிய குருத்துவத்தைப் பற்றிப் பேசுகிறார். குருக்கள் லேவியர்கள் என்று குறிக்கப்படுகின்றனர். ஆனால், ஆரோனின் மரபு பற்றி எக்குறிப்பும் இல்லை. ஆகவே, குருக்கள் பற்றிய எஸ்ராவின் சட்டத்துக்கு முன் (நெகே 8) இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு கி.மு. 460-430-க்கு இடைப்பட்ட காலத்தில் குறிப்பாக நெகேமியாவின் இரு தூதுகளுக்கிடையில், கி.மு. 430-ஐ ஒட்டி மலாக்கி தனது இறைவாக்குப் பணியைச் செய்திருக்க வேண்டும்; இந்நூலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

3. இலக்கிய அமைப்பு: இந்நூலில் காணப்படும் ஆறு இறைவாக்குகளும் கேள்வி-பதில் என்ற அமைப்பில் உள்ளன. ஒவ்வொரு இறைவாக்கிலும் இறைவாக்கினர் முதலில் ஒரு செய்தியை அறிவிக்கிறார். இது செவிமடுப்பவர்களிடையே முறைப்பாட்டையும் கேள்வியையும் எழுப்புகின்றது. அவர்கள் சவால் விடுகின்றனர். அதற்கு இறைவாக்கினர் விடை அளிக்கிறார்; விவாதம் செய்கிறார்; தெளிவு அளிக்கிறார். இந்த விவாத முறை அமைப்பு இறைவாக்கினரது இலக்கிய யுக்தியுமாகும். இஃது அவர் காலத்து மக்களிடையே நிலவிய ஆர்வமற்ற, பகுத்தறிவுவாத சமயப் பற்றற்ற போக்கைப் பிரதிபலிக்கிறது. இஃது இறைவாக்கினர் தனது செய்தியை நேரடியாக எடுத்துக்கூற ஒரு வாய்ப்பு அளிக்கிறது. பொதுவாக இந்நூலின் எபிரேய வாசகம் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளது.

4. நூலின் மூலம்: குருவும் இறைவாக்கினருமான எசேக்கியேலின் நூலுக்கும் ஐந்நூலில் காணப்படும் குருக்கள் பாரம்பரியத்தின் இறுதிப் பதிப்புக்கும் இடையில் தொகுக்கப்பட்டுள்ள இறைவாக்கு நூலாக மலாக்கி அமைகிறது. மலாக்கியில் ஆலயம் சமய வாழ்வின் மையமாக அமைந்துள்ளது. இது நாடுகடத்தலுக்கு முன்வந்த இறைவாக்கினர்களின் போதனையிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது (எசா 1;எரே 7). மேலும், மலாக்கி எசேக்கியேலைத் தழுவி எழுதுகிறார் (1:7-12-ஐ எசே 44:16-ஒடும், 1:11-ஐ எசே 30:23-ஒடும், 2:3-ஐ எசே 5:10; 6:5; 12:15; 30:36-ஒடும், 3:2-ஐ எசே 44:27-ஒடும் ஒப்பிடுக). குருக்களின் சட்டம் (லேவியர் திருநூல்) இன்னும் முழுமையுற்று அமுல் படுத்தப்படவில்லை. பிற்காலத்தில்தான் எஸ்ரா குருக்களின் சட்டத்தை (P) நாட்டின் சட்டமாக்கினார். ஆகவே, இதற்குமுன் பணிசெய்த மலாக்கி உபாகமச்சட்டத் தொகுப்பைத் தழுவி எழுதுகிறார். நாடு கடத்தப்பட்ட காலத்தில் இந்தச் சட்டம் யூத சமூக சமய வாழ்வில் ஆதிக்கம் செலுத்தியது (1:9-ஐ உப 10:7-ஒடும், 1:12-ஐ உப 7:8-ஒடும், 2:1-4-ஐ உப 18:1-ஒடும், 2:6-ஐ உப 33:10-ஒடும், 3:22-ஐ உப 4:10-ஒடும் ஒப்பிடுக). நாடு கடத்தலுக்குப் பின், எஸ்ராவின் வலிய முயற்சியால் உபாகமச் சட்டம் முக்கியம் குறைந்து, குருக்கள் சட்டம் மக்களின் வாழ்வில் சிறப்புப் பெற்றது.

5. நூலின் திட்ட அமைப்பு

I. **தலைப்பு (1:1).**

II. இறைவாக்குகள் (1:2-3-21).

அ. 1:2-5:-முதலாவது வாக்கு - ஏதோமியரைப் புறக்கணித்து இஸ்ராயேலரைத் தேர்ந்தெடுத்தலில் இறைவனது அன்பு.

ஆ. 1:6-2:9:-இரண்டாவது வாக்கு - குருக்களின் பாவம்.

இ. 2:10-16:-மூன்றாவது வாக்கு - மக்களின் பாவங்கள் கலப்பு மணமும், திருமண முறிவும்.

ஈ. 2:17-3:5:-நான்காவது வாக்கு - யாவே நீதியின் தேவன்.

உ. 3:6-12:-ஐந்தாவது வாக்கு - சடங்குக் குற்றங்கள்.

ஊ. 3:13-21:-ஆறாவது வாக்கு - யாவேயின் நாள்; நீதிமான்களின் வெற்றி.

III. இரு பிற்சேர்க்கைகள் (3:22-23)

6. சிறப்புக் கருத்துக்கள்

அ. இஸ்ராயேலின்பால் இறைவன் கொண்ட அன்பு:- தாயகம் திரும்பிய இஸ்ராயேலர் சிலரே. அவர்கள் எருசலேமைச் சுற்றிக் குடியேறினர். நிலம் நல்ல பலனை அளிக்கவில்லை. மழை உரியகாலத்தில் போதுமான அளவு பெய்யவில்லை. வெட்டுக்கிளிக் கொடுமை, வாடச்செய்யும் நோய், வறட்சி, பஞ்சம் ஆகியவற்றோடும், அண்டை நாட்டாரின் எதிர்ப்போடும் போராட வேண்டியிருந்தது. நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய காலத்து உற்சாகம் மறைந்து போயிற்று.

மக்கள் ஊக்கம் இழந்தனர், நம்பிக்கை இழந்தனர். பலர் சமயப்பற்று அற்றவர்களாகவும், குறைகூறுபவர்களாகவும் ஆயினர். பக்தியுள்ளவர்கள் கூட தங்கள் நிலை கண்டு திகைத்துப்போய் ஐயுறத் தொடங்கினர். பகுத்தறிவு வாதம் வளர்ந்தது. பரம்பரையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைகளைப் பற்றி மக்கள் கேள்வி எழுப்பினர்; 'எங்களுக்கு நீர் எவ்வாறு அன்பு காட்டினீர்?'' (1:2); ''நீதியின் இறைவன் எங்கே?'' (2:17); ''ஆண்டவர் திருமுன் மனம் வருந்தி நடந்துகொள்வதால் நமக்கு என்ன பயன்?'' என்பன போன்ற கேள்விகளை எழுப்பினர்.

இஸ்ராயேலின்பால் இறைவன் காட்டிய அன்பு பற்றி ஐயுற்றவர்களுக்குச் சான்றோடு மலாக்கி பதில் அளிக்கிறார் (1:2-5). இஸ்ராயேலை இறைவன் தேர்ந்தெடுத்து, தனிச் சிறப்பான முறையில் அன்பு செய்கிறார் என்ற இறைவாக்குப் போதகம் உண்மையானது அன்று என்று, அவர்களது அவல நிலை காட்டவில்லையா? இல்லை என்கிறார் மலாக்கி. இதற்குச் சான்றாக, யூதாவுக்குத் தென்கிழக்கிலுள்ள அண்டை நாடாகிய ஏதோமின் கேட்டைச் சுட்டிக் காட்டுகிறார். இஸ்ராயேல், ஏதோமியரின் மூதாதையரான யாக்கோபும், ஏசாவும் இரட்டைச் சகோதரர்கள். ஆகவே, இரு இனத்தவரும் நெருங்கிய இரத்த உறவுடையவர்கள். ஆயினும், கி.மு. 587-இல் பாபிலோனியர் எருசலேமை அழித்தபோது ஏதோமியர் அக்களித்தனர். யூதாவின் அழிவைப் பயன்படுத்தி அதன் ஒரு பகுதியைத் தங்கள் நாட்டோடு சேர்த்துக் கொண்டனர். யூதாவுக்கு இன்னும் பல கொடுமைகள் செய்தனர். இது சகோதரத் துரோகம் ஆகும். பிற்காலத்தில் நபத்தேய அராபியர்கள் ஏதோமின்மேல் படையெடுத்து அதைக் கைப்பற்றி அடிமைப்படுத்தினர்; மலை நாட்டிலிருந்து ஏதோமியரை விரட்டியடித்தனர். இவற்றை யாவேயே அனுமதித்தார்; ஏனெனில், ஏதோமியரை அவர் வெறுத்தார்; ஒபதியாவைப்போல் மலாக்கியும் நபத்தேயப் படையெடுப்பை, ஏதோமின் சகோதரத் துரோகத்திற்கும் மனிதத்தன்மையின்மைக்கும் அளிக்கப்பட்ட இறைத்தீர்ப்பாகக் காண்கிறார். இதற்கு மாறாக, யாக்கோபுவை ஏசாவைவிட விரும்பித் தேர்ந்தெடுத்து இறைவன் அன்பு செய்தது போல், இஸ்ராயேலரை, ஏதோமியரை விட விரும்பித் தேர்ந்தெடுத்து அன்பு செய்கிறார் இறைவன். நாடு கடத்தலுக்குப்பின்னும், இஸ்ராயேலரது நாட்டைத் திரும்ப அமைத்துத் தந்துள்ளார். இஃது இஸ்ராயேலர்பால் அவர் கொண்டுள்ள அன்பை எடுத்துக் காட்டுகிறது என்கிறார் மலாக்கி.

6. ஆ. குருக்களும் - ஏற்கப்படாத பலிகளும்: நாம் காணும் நிகழ்ச்சிகளிலும், வரலாற்று ஏடுகளிலும், மக்களின் வாழ்விலும், நாடுகளின் வரலாற்றிலும் முறைமைக் கைம்மாறு நியதி (Law of Retribution) செயல்படுவதைப் பார்க்கறோம். காலப் போக்கில் தீய நாடுகள் (ஏதோம்) தீர்ப்பிலிருந்து தப்புவதில்லை. ''தீச்செயல் புரிவோர் அனைவரும் ஆண்டவர் கண்ணோக்கில் நல்லவரே; அவரும் அவர்கள் மட்டில் பூரிப்படைகின்றனர்'' (2:17) என்பது உண்மை அன்று என்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஒரு சிலர் தங்கள் நடத்தைக்கு ஏற்ற கைம்மாறு பெறுவதில்லை என்பது, மனிதர் பெரும்பாலும் தங்கள்

நடத்தைத் தகுதிக்கு ஏற்றவாறே பெறுகின்ற னர் என்ற உண்மையை இல்லையென்றாக் குவதில்லை. இதை மலாக்கி பலவாறு எடுத்துக்கூறுகிறார். சில துன்பங்கள் சமூகத் தினது பாவத்தால் விளைவதாகும் என்பது தெளிவான உண்மையாகும். நாம் முறையி டும் ஏமாற்றங்களுக்கும், செயல் குறைவுக் கும் பெரும்பாலும் நம்மையே நாம் குற்றம் கூறவேண்டும். தாங்கள் அனுபவித்த துன் பங்கள், ஏமாற்றங்கள் ஆகியவற்றை, இறை வனது நீதியைக் குறைகூறக் காரணமாக்கிய இஸ்ராயேலரைப் பார்த்து, குருக்களும் மக்களும் தங்கள் நடத்தைத் தகுதிக்கு ஏற்றவாறே பெறுகின்றனர் என்று மலாக்கி உறுதியாக அறிவிக்கிறார்.

இந்நூலின் நீண்ட பகுதி (1:6-2:9) குருக்க ளைக் கண்டனம் செய்கிறது. குருக்கள் பலி ஒப்புக்கொடுக்கவும் இறைவனது சித்தத்தை மக்களுக்கு விளக்கிக்காட்டவும் இறைவ னால் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் ஆவர். மகன் தந்தைக்கு மதிப்புத்தர வேண் டும்; ஊழியன் தலைவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். ஆனால், இவ்விரண் டையும் இறைவனுக்கு அளிக்க, குருக்கள் தவறினர். இறைவனுக்கு அளிக்கப்படும் பலிப்பொருட்கள் மாசு மறுவற்றதாக இருக்க வேண்டும் என்று சட்டம் கூறியது (லேவி 22:20-22; உப 15:21; 17:1). மிக முதல்தரமானதையே இறைவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். ஆனால், அற்பப்புத்தி யுடைய மக்கள் குறையுடைய பலிப்பொ ருட்களையே ஒப்புக்கொடுக்கக் கொண்டு வந்தனர். குருக்கள் இவற்றை நிராகரிக் காது, குருடான, முடமான, நோயுள்ள விலங்குகளை மக்களிடமிருந்து ஏற்று இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தனர். சடங்கு களை மனம்போன போக்கில் கவனமற்ற முறையில் செய்து, பீடத்தை இழிவாகக் கருதினர். இறைவனை அவமதித்தனர். இத்தகைய கீழ்த்தரமான இரண்டாம் தரப் பொருட்களை அளித்துப் பாரசீக ஆளு நனை அவமதிக்கத் துணிய மாட்டார்கள். இப்படிப்பட்ட காணிக்கைகளை அளித்து இறைவனிடமிருந்து சலுகை பெற எப்படித் துணிந்தனர்? இத்தகைய அருவருக்கத்தக்க காணிக்கைகளை அளித்து இறைவனை அவமதிப்பதைவிட, ஆலயத்தையே மூடி விடுவது எவ்வளவோ மேல்! எருசலேமின் குருக்கள் அளிக்கும் இந்த அவமதிப்புமிக்க ஏளனச் செய்கையை விட, உலகின் எல் லாப் பாகங்களிலும் பிற இனத்தவர் அளிக் கும் நேர்மைமிக்க வழிபாடு, மிகுந்த மேன்மை மிக்கதாகும். இந்தக் குருக்கள் ஆலயப்பணியை எழுச்சியற்ற, அயர்ச்சி தரும் வழக்கமாக மாற்றி வெறுத்து, குறை யுள்ள பலிகளால் இறைவனை அவமதித்த னர். மாசு மறுவுள்ள பலிப்பொருட்களை ஒப்புக்கொடுத்து நேர்ச்சிக் கடனை நிறை வேற்றும் மனிதன் மேலும், இத்தகைய பழக்கத்தை ஊக்குவிக்கும் குருக்கள் மேலும் இறைவனது சாபம் விழும். குருக்கள் தங்கள் வழிமுறைகளைச் சீர்திருத் தினால் ஒழிய, இறைவன் அவர்களுக்குத் தமது ஆசீர்களையும், நன்மைகளையும் வழங்கார். அவர்கள் இழிவடைவர்; நிராக ரிக்கப்படுவர்.

குருக்களின் மூதாதையரான லேவிய ரோடும் அவரது இனத்தவரோடும் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படை யில் மலாக்கி எச்சரிக்கிறார். சிறப்பு மிக்க இந்த உடன்படிக்கையின்படி, லேவியர் களுக்கு இறைவன் அமைதியும் வாழ்வும் அளித்தார். அதற்குப்பதிலாக, அவர்கள் அச்சத்தோடும் பக்தியோடும் இறைவனுக் குப் பணிசெய்யக் கடமைப்பட்டிருந்தனர். கடந்த காலங்களில் குருக்கள் இந்தக் கடமையைப் பிரமாணிக்கமாய் நிறைவேற் றினர்; நேர்மையோடு வாழ்ந்தனர். தீமை அவர்கள் உதடுகளில் காணப்படவில்லை. இறைவனுக்கு அஞ்சி, மக்களுக்கு உண்மை யான போதகத்தை அளித்தனர்; வழிகாட்டி னர். அதனால் பலரைத் தீநெறியிலிருந்து மனம் திருப்பினர். குருக்கள் மெய்யறிவைக் காத்தனர். அவர்களிடமிருந்து திருச்சட்டத் தைக் கேட்க மக்கள் அவர்களை நாடினர். ஏனெனில், மக்களுக்கு ஆசிரியராய் இருக்க வும், ஆண்டவரது தூதராய் இருக்கவும் குருக்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இவ்

வாறு ஒழுகிய முந்தைய தலைமுறைகளைச் சேர்ந்த குருக்களைப் போல் அல்லாமல், மலாக்கி காலத்துக் குருக்கள் சட்டத்தைப் புறக்கணித்தனர்; மக்களுக்கு அறிவு புகட்டவும், அவர்களை நல்வழிப்படுத்தவும் தவறினர்; தங்களது தவறான போதகத்தால் பலரை நெறிதவறச் செய்தனர்; இறைவன் லேவியரோடு செய்த உடன்படிக்கையைத் தகர்த்தனர்; தங்களது ஓரவஞ்சனையால் அனைவரின் வெறுப்புக்கும் ஆளாகினர்.

லேவிய குருத்துவத்தைப் பற்றி மலாக்கி கூறுவது யாவும் கிறிஸ்தவத் திருச்சபையாகிய ''அரச குருத்துவத்திற்கும்,'' அதன் பரிசுத்த பணிக்கென அபிடேகம் பெற்ற எல்லாருக்கும் பொருந்தும். இறைவன் நம்மிடமிருந்து மாசுமறுவற்ற காணிக்கைகளைக் கோருகிறார். முதல் தரமானவற்றையே அவருக்கு நாம் அளிக்க வேண்டும்; அதற்கு அவர் தகுதியுடையவரே. நாம் ''ஞான இல்லமாக'' அமைக்கப்பட்டிருக்கிறோம்; அதில் ''இயேசு கிறிஸ்துவின் வழியாக இறைவனுக்குகந்த ஞானப்பலி நிறைவேற்றும் குருத்துவத் திருக்கூட்டமாக'' *(1 பேதுரு 2:5)* அமைந்திருக்கிறோம். ஆனால் நாம் செய்வது என்ன? மனப்போக்கில், தான்தோன்றித்தனமாக அமைக்கப்பட்டு, கருத்தாழமில்லாமல் வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டுமே முதன்மையளிக்கும் பாடல்கள், கவனமில்லாது அரைமனதோடு செய்யப்படும் போற்றுரைகள், பக்தியில்லாமல் அவசர அவசரமாக உளறப்படும் செபங்கள், எழுச்சியற்ற மறையுரைகள், குறைமிகுந்த காணிக்கைப் பொருட்கள், புறச்சடங்குகளை மட்டும் நுணுக்கமாக அனுசரிக்கும் சமய உணர்வற்ற, உள்ளார்வமற்ற சடங்குகள், அருட்சாதனங்கள், பொதுச் செபக்கூடங்கள், மனதை ஒருங்கே செலுத்தாது கவனத்தைச் சிதறடிக்கும் சமயச்செயல்கள், திருச்சபை நிர்ணயித்துள்ள சடங்கு முறைகளில் சலிப்பு அடைந்த தான்தோன்றித்தனமான செபங்கள், சடங்கு முறைகள்... இவற்றைப் பற்றியெல்லாம் நாம் என்ன கூறலாம்? நமது குற்றங்களுக்காக மட்டுமன்று, நமது குறையுள்ள ஞானப்பலிகளுக்காகவும் நாம் மனத்துக்கம் கொள்ள வேண்டும். இறைவனுக்கு நாம் அளிப்பவை முதல் தரமானதாயிருந்தாலும், அவை அவர் திருமுன் குறையுள்ளதாகவே இருக்கும். ஆனால், நாம் அளிப்பவை, நமக்கு முடிந்த அளவு முதல்தரமானவையாக இருந்தால், அவை இயேசுகிறிஸ்துவின் ஒரே ஒரு நிறைவான பலியால் இறைவனுக்கு ஏற்புடையதாகும்.

மலாக்கியின் கருத்துப்படி குருவின் முதன்மையான கடமை ''படைத்திரள் ஆண்டவரின் தூதராக'' இருப்பதாகும். இது குறிப்பிடத்தக்கதொன்றாகும். லேவியின் குருத்துவத்தின் இரட்டைக் கடமை பற்றிய பழங்கால விவரிப்பு, பலி ஒப்புக்கொடுத்தலுக்கு முன் இறை வார்த்தையைப் போதிப்பதற்கு முதன்மை அளிக்கிறது. ''அவர்கள் யாக்கோபுவுக்கு உமது நீதிச்சட்டத்தையும், இஸ்ராயேலுக்கு உமது கட்டளையையும் போதிப்பார்கள்; ஆண்டவரே! அவர்கள் உமக்குத் தூபம் காட்டி உம்முடைய பலிபீடத்தில் முழுத்தகனப் பலியை இடுவார்கள்'' *(உப 33:10)*. ஆகவே, இறைவாக்கினருக்கும் குருவுக்குமிடையே போலியான முரண்பாட்டை உண்டாக்குவது தவறாகும் என்பதை இதைவிடத் தெளிவாக எடுத்துக் காட்ட முடியாது. ஏனெனில், இருவரும் வெவ்வேறு விதத்தில் இறைவார்த்தைக்கு ஊழியம் புரிகின்றனர். புதிய உடன்படிக்கையில் இறைமக்களை வழிநடத்தவும், போற்றுரை, மன்றாட்டு ஆகிய ஞானப் பலிகளை ஒப்புக் கொடுக்கவும், நியமிக்கப்பட்டவர்கள் வார்த்தையின் பணிக்கு முதன்மை அளிக்க வேண்டும். ''ஏனெனில் அவர்கள் படைத்திரள் ஆண்டவரின் தூதர்கள்''.

6. இ. உடன்படிக்கை உறவும் மணமுறிவும்: யூதாவில் சிலர் உடன்படிக்கையை முறித்தனர்; அதன் முக்கிய கடமைகளைப் புறக்கணித்தனர். நாடு கடத்தப்பட்ட போதும், அதற்குப்பின்னும் அன்னியர் பலர் பாலஸ்தீனத்தில் குடியேறினர்; இஸ்ராயேலரோடு திருமண உறவு கொண்டனர். அதன் விளைவாகத் தோன்றிய கலப்பு

இனம் யூதசமூகத்தின் தூய்மைக்கு ஆபத்தாயிற்று. யூதர்கள் சிலர் தங்களது யூத மனைவியரைத் தள்ளிவிட்டு அன்னியப் பெண்களை மணந்தனர். இதில் இவர்கள் இஸ்ராயேலை இறைவனோடு பிணைத்த உடன்படிக்கையை மீறினர். ''நம் அனைவருக்கும் தந்தை ஒருவரன்றோ? நம்மைப் படைத்தவர் ஒரே இறைவனன்றோ? பின்னர் ஏன் நாம் ஒருவருக்கொருவர் நம்பிக்கைத் துரோகம் செய்கிறோம்? நம் மூதாதையரின் உடன்படிக்கையை ஏன் களங்கப்படுத்துகிறோம்?'' *(2:10)*. இறைவனைத் தங்கள் தந்தையாகவும், படைத்தவராகவும் கொண்டிருப்பதால், உடன்படிக்கைச் சமூகத்தின் அங்கத்தினர்கள் ஒரே குடும்பத்தின் சகோதர சகோதரிகளாவர். யூத விசுவாசத்தைச் சேர்ந்த ஆண்கள், அன்னியக் கடவுள்களை வணங்கும் பெண்களை மணப்பது, உடன்படிக்கை உறவைத் துரோகமாக முறிப்பதாகும். எருசலேமைச் சுற்றிப் பிற இனப் பெண்கள் இருப்பது, புனிதத் தலத்தைத் தீட்டுப்படுத்துவதாகும்.

''நம் அனைவருக்கும் தந்தை ஒருவரன்றோ?'' என்று இறைவாக்கினர் கேட்கும்போது, யூத சமூகத்தை மட்டுமே கருத்தில் கொண்டு கேட்கிறார். ''இறைவன் யாவர்க்கும் தந்தை; ஆகவே, மனிதர் அனைவரும் சகோதரர்கள்'' என்று மலாக்கி அறிவிப்பதாகக் கூற முடியாது. ஆயினும், இஸ்ராயேலர்களை மட்டுமே வரையறுக்கும் குறுகிய நோக்கிலிருந்து இயேசுவால் விடுவிக்கப்பட்டு மலாக்கியின் இந்த உட்கருத்து மனிதர்களையும், நாடுகளையும் மன உறவு கொள்ளச் செய்து தொடர்ந்து இயங்குகிறது. எல்லா மனிதரும் ஒரே இறைவனால் படைக்கப்பட்டவர்கள். இயேசுவில் கொள்ளும் விசுவாசத்தால் எல்லோரும் ஒரே தந்தையின் பிள்ளைகளாக முடியும். இக்காரணத்திற்காக எல்லா மனிதரோடும் பிரமாணிக்கமுள்ள அன்போடு வாழவும் நடக்கவும் நம் அனைவருக்கும் கடமையுண்டு.

ஆண்டவரோடு செய்த உடன்படிக்கையையும் அதன் விளைவான சகோதர உறவையும் முறித்த யூதர்கள் திருமண உடன்படிக்கையையும் முறித்தனர் என்று மலாக்கி தொடர்ந்து குற்றம் சாட்டுகிறார். மணமுறிவு, தள்ளிவைக்கப்பட்ட மனைவிக்குச் செய்யும் துரோகமாகும்; சுதந்தரமாக, மனமுவந்து ஏற்றுக்கொண்ட கடமையை மரத்துப்போன விதத்தில் புறக்கணிப்பதாகும்; பற்றுறுதியற்ற செயலாகும். இறைவனால் சாட்சி கூறப்பட்டு, ஒரு மனிதனுக்கும் அவன் இளம் வயது மனைவிக்கும் இடையேயுள்ள திருமண உடன்படிக்கையை, இன்ப நாட்டத்திற்காகவோ, சுய நலத்திற்காகவோ தள்ளிவைக்கலாகாது. பிற இனப் பெண்களால் கவரப்பட்டு, ஒருவன் தான் இளமையில் மணந்து கொண்டவளை, பிள்ளைகளைப் பெற்றளித்து இறைவனது நோக்கை நிறைவேற்றிய மனைவியை, அவள் முதியவள் ஆகிவிட்டாள் - என்பதற்காகத் தள்ளி விடக்கூடாது. மணமுறிவையும் அதனால் விளையும் கொடுமைகளையும் இறைவன் வெறுக்கிறார். மணமுறிவு செய்து அன்னியப் பெண்களை மணப்பவன், ஆலயத்தையே தீட்டுப்படுத்துகிறான்; ஆண்டவரது பீடத்தைக் கண்ணீராலும், அழுகையாலும், பெருமூச்சுகளாலும் நிரப்புகிறான். ஆகவே, ''மணமுறிவை நான் வெறுக்கிறேன்'' என்று யாவே அறிவிக்கிறார். இவ்வாறு திருமணத்தின் புனிதத்தை மீண்டும் நிலைநாட்ட முனைகிறார் மலாக்கி. இதில் அவர், திருமணம், அதன் முறிவு பற்றிய இயேசுவின் போதனைக்கு முன்னோடியாக அமைகிறார். மோசே சட்டம் மணமுறிவை அனுமதித்தது *(உப 24:1-4)*. அது மனித பலவீனத்திற்கு அளிக்கப்பட்ட சலுகையாகும் என்று இயேசு போதித்தார். திருமணத்தை நிறுவிய இறைவன், படைப்பின் தொடக்கத்திலிருந்தே, திருமணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள உறவை நிலையானதாகவும், முறிக்கமுடியாததாகவும் அமைத்தார். ''ஆகவே இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' *(மாற் 10:9)* என்ற இயேசுவின் கூற்றில் திருமணம் பற்றிய இறைவாக்கினரது போதகம் நிறைவுபெறுகிறது.

6. ஈ ''எந்த அளவையால் அளப்பீர்களோ....'': மக்களின் அற்பத்தனத்தைக் கண்டனம் செய்யும்போது, மலாக்கி அடிப்படை முக்கியத்துவமுடைய ஓர் உண்மையையும் எடுத்துக் கூறுகிறார். ஐந்தாவது இறைவாக்கில் (3:6-12), இறைவனது பிரமாணிக்கத்தை யூதர்களுடைய பிரமாணிக்கத்தோடு ஒப்பிட்டு வேறுபடுத்துகிறார். இஸ்ராயேல் எப்போதும் பிரமாணிக்கம் தவறியிருக்கின்றது. ஆலயப்பணியைப் பராமரிக்கச் சட்டம் கோரிய தசம பாக வரியை (எண் 18:21) முழுமையாகவோ, ஒரு பகுதியையோ கட்டாது இறைவனைக் கொள்ளையிட்டுள்ளனர் யூதமக்கள். இப்பாவத்திற்காக மனம் வருந்தும்படி மலாக்கி மக்களை அழைக்கிறார். தசமபாகவரியைக் கட்டாததற்கு, மக்கள் தங்கள் வறுமை நிலையை ஒரு சாக்காகக் காட்டலாம். ஆனால், அதை இறைவனுக்கு அளிக்கும் உள்ளார்ந்த அவமதிப்பாக மலாக்கி விளக்குகிறார். ஆகாயைப்போல், இறைவனது காரியங்களுக்கு முதன்மை அளிக்காமைக்கும் சமூகத்தின் பொருளாதார அவலநிலைக்கும் தொடர்பு இருப்பதாக மலாக்கி கருதுகிறார். சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமையை முழுமையாக நிறைவேற்றினால் இறைவன் அபரிமிதமாக மழை பொழியச் செய்வார்; பயிரை அழிக்கும் வெட்டுக் கிளிகளை அழிப்பார்; நிலத்தை மிகுதியாகப் பலன் கொடுக்கச் செய்வார். நாம் எவ்விதம் விதைக்கிறோமோ அவ்விதமே அறுப்போம். அற்பத்தனமாய், நாம் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருப்பதால், நாமே வறுமையில் உழல்வோம். தாராளமாய்க் கொடுப்பவர்கள் அதனால் தவிர்க்க முடியாதபடி பெரும் செல்வந்தர்கள் ஆவர். இது போன்ற கருத்துக்கள் எபிரேய ஞானநூல்களில் அடிக்கடி எடுத்துக் கூறப்படுகின்றன (பழ 11:24-25). இவை இயேசுவின் போதகத்திலும் (மத் 7:2), பவுலின் போதகத்திலும் (2 கொரி 9:6) இடம் பெறுகின்றன. கிறிஸ்தவர்கள் என்ற முறையில் இறைவனுக்குக் காணிக்கை கொடுப்பது பற்றி எந்தச் சட்டமும் இல்லை; வழிகாட்டும் ஆலோசனைகள் உண்டு. ஆண்டவருடைய நாளிலும், அதாவது, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் நமது வருவாய்க்கு ஏற்பக் கொடுக்க வேண்டும். இந்தக் காணிக்கை கிறிஸ்துவப் பணியைத் தொடர்ந்து நடத்தவும், பிறரது தேவைகளை நிறைவு செய்யவும், உலகில் கிறிஸ்துவத் தூதை வளரச் செய்யவும் பயன்படும். விவரிப்புக்கு அப்பாற்பட்ட கொடையாக கிறிஸ்துவைப் பெற்றதற்கு நன்றியாகவே இக்காணிக்கைகளைக் கொடுக்க வேண்டும்.

*6. உ. **எவ்விடத்திலும் தூய பலி:*** குருக்களைக் கண்டனம் செய்யும் இரண்டாம் இறைவாக்கில், மனிதஇனம் முழுவதும் மீட்படையும் என்ற கோட்பாட்டைப் பழைய ஏற்பாட்டிலேயே இதுவரை கண்டிராத முறையில் தெளிவாக மலாக்கி எடுத்துக்கூறுகிறார். எருசலேமில் யூதசமூகம் ஒப்புக்கொடுத்த வழிபாட்டில் அக்கறையற்ற குருக்கள் குறையுள்ள பொருட்களை ஒப்புக்கொடுத்தனர். இந்த வழிபாடு இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. இதற்கு மாறாக, ''கதிரவன் தோன்றும் திசை தொடங்கி மறையும் திசைவரை, பிறஇனத்தாரிடையே என் திருப்பெயர் புகழ்மிக்கது. எவ்விடத்திலும் என் திருப்பெயருக்குத் தூபமும், காணிக்கையும் செலுத்தப்படுகின்றன. ஏனெனில், பிற இனத்தாரிடையே என் திருப்பெயர் புகழ்மிக்கதே'' (மலா 1:11). இந்தக் கூற்று, உலகெங்கும் நிறைவேறும் கிறிஸ்துவ வழிபாட்டை, சிறப்பாக நற்கருணை வழிபாட்டை, முன்னறிவிப்பதாக விளக்கவுரையாளர்கள் பலர் கூறுவர்.

மலாக்கி தனது காலத்து நிலையையே விவரிக்கிறார் என்றும், சிதறிக்கிடந்த யூதர்களிடையே நிலவிய வழிபாட்டையே இக்கூற்று குறிக்கிறது என்றும் சிலர் கூறுவர். ஆனால், இவ்வழிபாடு உலகெல்லாம் பரவியதன்று; பலிவழிபாடும் அன்று. மலாக்கியின் காலத்தில் எல்லாம் வல்ல ''விண்ணக இறைவனின்'' வழிபாடு பாரசீகப் பேரரசு முழுவதும் பரவியிருந்தது.

இக்கூற்றில், இறைவாக்கினர், உலகெல்லாம் பிற இனத்தவர் ஒப்புக் கொடுத்த பலி வழிபாட்டைக் குறிக்கிறார். எல்லா நேர்மையான, மேன்மை மிக்க வழிபாடும் எந்தப் பெயரிலும் எந்தக் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டாலும், அஃது உண்மையில் உண்மையான ஒரே இறைவனுக்கே ஒப்புக்கொடுக்கப்படுகிறது. அவ்விதமே இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது (அ.ப. 10:34-35). இறைவனது பெயரை அறியாதபோதும் மனிதர் ஒரே ஓர் இறைவனையே வழிபடக்கூடும் என்ற உண்மை வாழ்வில் பரந்த விளைவுகளை உண்டாக்க வல்லது. இது கிறிஸ்து வழியாகத்தான், எந்த வழிபாடும் இறைவனுக்கு ஏற்புடையதாகும் என்ற உண்மைக்கு எதிரானது என்று கருதக்கூடாது. ஏனெனில், கிறிஸ்துவத்திற்குப் புறம்பான அமைப்புகளில் மேன்மையானதெல்லாம், - சிந்தனையோ, நடத்தையோ, வழிபாடோ -எதுவானாலும் அஃது அவர்கள் மேலும், அவர்களிடையேயும் கிறிஸ்து ஆற்றும் செயலின் விளைவாகும். எந்த வழிபாடும், அது கிறிஸ்துவுக்கு முன்னோ, பிறகோ ஒப்புக் கொடுக்கப்பட்டாலும், உலகின் மீட்பராகிய கிறிஸ்துவின் பலியின் நிமித்தம் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

6. ஊ. ஆண்டவரின் நாள்: மலாக்கி, ஆறாவது இறைவாக்கில் அளிக்கும் ஆண்டவரது நாள் பற்றிய போதகத்தில் இறைவனது நீதியை மறுக்கும் சமயப்பற்று அற்றவர்களுக்கும், அவரது அன்பை ஐயுறும் விசுவாசிகளுக்கும் பதில் அளிக்கிறார். அந்தக் காலத் தவறுகளைச் சரி செய்ய இறைவன் வந்து கொண்டிருக்கிறார். ஆலயத்தையும், குருத்துவத்தையும் தூய்மைப்படுத்தி அவரது வழியைத் தயாரிக்க தமது தூதரை முன்னதாகவே அனுப்புவார். இறைமக்கள் குடும்பம் சரி செய்யப்பட்டபின், அவர்களிடையே யாவே மகிமையோடு தங்குவார். நடுவராகிய இறைவன் திடீரென்றுதோன்றி தீமை செய்பவர்களையெல்லாம் அழிப்பார். இங்கு இறைவாக்கினர் குறிப்பிடும் பாவங்கள் பெரும்பாலும் சமூகப்பாவங்களாகும். அவற்றில் எளியவர்களையும், உதவியற்றவர்களையும் கொடுமைப்படுத்துதலும் அடங்கும். மலாக்கி, சமயச் சடங்குக் குற்றங்களில் மட்டுமன்று, மனிதன் மனிதனுக்குக் காட்டும் மனிதத்தன்மையின்மையிலும், சமூகக் குற்றங்களிலும் அக்கறை காட்டினார். தீயவர்கள் தழைத்தோங்குவது போலும், நல்லவர்களின் மன்றாட்டுகள் கேட்கப்படவில்லை போலும், பக்திக்குரிய சன்மானம் கிடைக்கவில்லை போலும் தோன்றினாலும், இறைவன் தமக்கு அஞ்சுவோரை மறப்பதில்லை. அவர் வானகத்தில் ஒரு நினைவுநூல் வைத்துள்ளார். அதில் நேர்மையானவர்களின் பெயரும் செயல்களும் எழுதப்பட்டிருக்கும். அவர் வரும் நாளில் நேர்மையுள்ளவர்களைத் தீயவர்களிடமிருந்து பிரித்து, தமது உரிமைச் சொத்தாக எடுத்துக்கொள்வார். தீயவர்களுக்கு அந்நாள் கட்டெரிக்கும் நெருப்பாக இருக்கும். விசுவாசிகளுக்கு அந்நாள் குணமளிக்கும், உயிர் அளிக்கும் சூரிய உதயம் போல் இருக்கும். இந்தக் கதிரவன் எழுச்சி, கிறிஸ்தவர்களுக்கு உண்மையான ''நேர்மையின் சூரியன்'' ஆன கிறிஸ்துவுக்கு ஓர் அடையாளமாகும். அவர் தமது வருகையாலும், வெளிப்பாட்டாலும் அஞ்சி, தம்மை வழிபடுபவர்களுக்குக் குணமளிப்பார்; ஒளி கொண்டு வருவார். இந்த உலக வாழ்வைக் கடந்து வரவிருக்கும் உலகின் வாழ்வை நாம் நோக்காவிடில், இந்த வாழ்வுக்குப் பொருளே இல்லை. இந்த உலகிலேயே ஆண்டவரின் நாள் உதயமாவதையும், மெசியாக் காலத்தையும் மலாக்கி எதிர்பார்த்தாலும், விசுவாசிகளின் பெயரும் செயல்களும் எழுதப்பட்டிருக்கும் ''நினைவு நூல்'' என்ற அவரது கருத்து, நித்திய வாழ்வு பற்றிய கிறிஸ்துவ நம்பிக்கையின் முன்னோடியாக உள்ளது.

ஆண்டவரது நாள் பற்றிய மலாக்கியாவின் விவரிப்பு, பிற இறைவாக்கினர்களில் காணப்படாத கூறு ஒன்றைக் கொண்டுள்ளது. ஆண்டவரது வருகைக்கு மக்களைத் தயாரிக்க, ஆண்டவர் ஒரு தூதனை முன்ன

தாகவே அனுப்புவார். மலாக்கியாவுக்கு இந்த முன்னோடி ஆண்டவரின் தூதராவார். ஆனால், பன்னிரு சிறிய இறைவாக்கினர்களைச் சேர்த்துப் பதிப்பித்த பிற்காலப் பதிப்பாசிரியர்கள் இத்தூதர் எலியா என்று அடையாளம் குறிப்பிட்டனர் (3:23). இந்த எலியா மக்களை இறைவன்பால் திருப்புவார். சில நூற்றாண்டுகளுக்குப்பின் வாக்களிக்கப்பட்ட இறைவாக்கினர் திருமுழுக்கு யோவான் ''எலியாவின் ஆவியோடும், வல்லமையோடும்'' (லூக் 1:17) யூதாவின் பாலைப்பகுதியில் தோன்றினார்; எல்லா வகை மக்களையும் உண்மையான மனத்துக்கம் கொள்ளத்தூண்டினார் (மத் 3:1-10; 11:14; 17:7-15). உலகின் பாவங்களைப் போக்குபவராக இயேசுவை அடையாளம் காட்டுவதில் யோவானது வாழ்வும் தூதும் உச்சநிலை அடைகின்றன. யோவான் ஒரு முன்னோடி; மக்களைத் தூண்டும் குரலாக இருப்பதில் மன நிறைவு அடைந்தார் (யோவா 1:6-8; 3:27-28). அவரது முன்னோடியான இறைவாக்கினர் மலாக்கியைப் போல், இறைவனால் ''எனது ஊழியன்'' என்று ஏற்றுக் கொள்ளப்படுவதே அவருக்குப் போதுமானதாகும். மலா 3:23 என்ற வாசகம் திருமுழுக்கு யோவானில் நிறைவேறுகிறது என்று இயேசுவே தெளிவாகக் கூறியுள்ளார் (மத் 11:14; 17:9-13; லூக் 1:17-76; 7:27; மாற் 1:2).

7. இக்காலத்திற்கு: மலாக்கி இறைவாக்கினரும், குருவும் ஆவார். இறைவாக்கையும் வழிபாட்டு மரபையும் முரணானவைகளாக வேறுபடுத்துவது ஒரு காலத்தில் வழக்கமாக இருந்தது. ஆமோஸ், ஒசேயா, மீக்கா, எசாயா, எரேமியா போன்ற இறைவாக்கினர்களை வழிபாட்டை எதிர்ப்பவர்களாகக் காட்டுவது மரபு. பாரசீகப் பேரரசின் காலத்து இறைவாக்கினர்கள் தங்கள் முன்னோரின் செய்தியை இவ்வாறு புரிந்து கொள்ளவில்லை; இவ்வாறு விளக்கவும் இல்லை. ஆகாயும், செக்கரியாவும் ஆலயத்தை மீண்டும் கட்டுவதில் ஆர்வம் காட்டினர். மலாக்கி ஆலயத்தில் குற்றமற்ற பலியை ஒப்புக்கொடுப்பதில் அக்கறை காட்டினார். முந்தைய இறைவாக்கினர்களில் சிறப்புப் பெறும் ஒழுக்க வாழ்வு பற்றிய போதகம், பிற்கால இறைவாக்கினர்களில் இல்லாமல் இல்லை. மலாக்கி ஆலயத்தையும், அதன் வழிபாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய முறையையும், தரத்தையும் பற்றி முதன்மையான அக்கறை கொண்டார். அவர் ஆலயப்பணியின் இறைவாக்கினர் ஆவார். ஆலயம், பலி ஆகியவை பற்றிய அவரது போதகம் இக்காலக் குருக்களுக்கும், மக்களுக்கும் பொருந்தும். இதை ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளோம்.

மலை (MOUNTAIN)

I பெரும்பான்மையான மதங்களில் மலைகள், அவற்றினுடைய உயரம் மற்றும் அவற்றைச் சூழ்ந்துள்ள மறைபொருளான தன்மை ஆகியவற்றின் காரணமாக, விண்ணுலகும் மண்ணுலகும் சந்திக்கின்ற இடமாகக் கருதப்படுகின்றன. உலகம் படைக்கப்பட்ட, தெய்வங்கள் உறைகின்ற, அல்லது மீட்பு வருகின்ற புனித மலையினைத் தாங்கள் கொண்டுள்ளதாகக் கருதும் நாடுகள் பல உள்ளன. விவிலியமானது இந்த நம்பிக்கைகளைக் கொண்டிருந்தாலும் அவற்றைத் தூய்மைப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டில் படைக்கப்பட்ட பொருள்கள் பலவற்றில் ஒன்றாக மட்டுமே மலைகள் உள்ளன. இவ்வாறாக யாவே, சந்தேகத்திற்கிடமின்றி, ''மலைகளுடைய இறைவனாகவும்'' (ஏல்-சத்தாய் என்பதன் பொருள்), பள்ளத்தாக்குகளின் இறைவனாகவும் உள்ளார் (1 அர 20:23.28). கிறிஸ்துவின் வருகையோடு சீயோன் உலக மையமாக இருப்பது முடிவுறுகிறது (எசே 38:12). ஏனெனில், இந்த மலையிலோ, அந்த மலையிலோ தொழப்படுவதை இறைவன் இனி விரும்பவில்லை; மாறாக, ஆவியிலும் உண்மையிலும் வழிபட விரும்புகிறார் (யோவா 4:20-24).

II இறைவனுடைய படைப்பு:

1. நிலைத்தன்மை: மனிதர்கள் கடந்து செல்கின்றனர்; ஆனால், மலைகள் நிலைத்

திருக்கின்றன. இந்த அனுபவம், மலைகள் ஏன் இறைவனுடைய பிரமாணிக்கமுள்ள நீதியின் அடையாளமாக உள்ளன என்பதைக் கண்டுணர்வதை எளிதாக்குகிறது (சங் 36:7). மூதாதையருக்கு நன்கு அறிமுகமாகியிருந்தவை ''என்றுமுள மலைகள்'' என்று அழைக்கப்பட்டன (ஆதி 49:26; உப 33:15). ஆனால், போற்றத்தக்கவையாயினும், இக்காரணத்திற்காக இந்த எளிய படைப்புகள் இறைத்தன்மை உடையனவாக மாற்றப்படக் கூடாது. ''மலைகள் தோன்றுமுன்பே... ஊழி, ஊழிக்காலமாக உள்ள இறைவன் நீரே!'' (சங் 90:2; காண்க. பழ 8:25). ''மலைகளை நிறைகோலாலும், குன்றுகளைத் தராசாலும் நிறுத்தவரே'' (எசா 40:12) படைத்தவர். அவரே ''தமது ஆற்றலால் மலைகளை உறுதிப்படுத்துகின்றார்'' (சங் 65:6). தனது விருப்பத்திற்கேற்ப அவர் அவற்றை அகற்றுவார் (யோபு 9:5). இந்த வல்லமையினை மிகவும் தன்னடக்கமுள்ள விசுவாசிக்கு அளிக்கிறார் (மத் 17:20; காண்க. 1 கொரி 13:2). ''மலைகளே, குன்றுகளே, ஆண்டவரைப் போற்றுங்கள்'' என்று அனைத்து மனிதரும் பறைசாற்றட்டும் (தானி 3:75; சங் 148:9).

2. ஆற்றல்: பேரிடர்களால் சூறையாடப்பெற்ற சமவெளிகளினின்று உயர்த்தப்பெற்றுள்ள நிலையில் மலையானது துன்ப வேளையில் லோத்திற்கு அடைக்கலம் அளித்தது (ஆதி 19:17). பறவையைப் போலத் தப்பிப்பறந்தோட விரும்பிய துன்புறுத்தப்பட்ட நீதிமான்களை மீண்டும் அது கவர்ந்தது (சங் 11:1; காண்க. எசே 7:16; மத் 24:16). ஆனால், நீதிமான் தனது கண்களை மலைகளை நோக்கி உயர்த்துவதில் கவனமாயிருக்க வேண்டும். ஏனெனில், விண்ணையும், மண்ணையும் படைத்த யாவேயிடமிருந்து மட்டுமே, அவர் உதவியை அடைவார் (சங் 121-2; காண்க. எரே 3:23). இல்லாவிடில், ஒரு படைக்கப்பட்ட பொருளின்மீது நம்பிக்கை வைப்பார்; ஏனெனில், ஆற்றலின் அடையாளமாக மட்டுமே இருக்கின்ற அஃது (தானி 2:35.45) உலகை ஆள்கின்ற இறுமாப்பு மிக்க பாபிலோனைப்போன்று அடையாளமாகிவிடும். இறுமாப்பின் அனைத்துப் பெருமையும் தாழ்த்தப்பட வேண்டும். இறைவன் மட்டுமே உயர்த்தப்பட வேண்டும் (எசா 2:12-15).

3. இறைவன் முன்னிலையில்: ''தாபோர் மலையும் எர்மோன் மலையும் உம் பெயரைக் களிப்புடன் புகழ்கின்றன'' (சங் 89:12). ஆண்டவர் உலகைச் சந்திக்கும் போது, ''மலைகளே.. களிப்புற்று முழங்குங்கள்'' (எசா 44:23); அவரது ஆற்றல் மிக்க செயல்களின் முன் மகிழ்ச்சியால் துள்ளட்டும் (சங் 29:6); குன்றுகளிலெல்லாம் புதிய இரசம் வழிந்தோடட்டும் (ஆமோ 9:13); மலைகளின் உச்சிகளில் கதிர்கள் அசைந்தாடட்டும் (சங் 72:16). ஆனால், சமப்படுத்தப்படுவதையும் அவை எதிர்நோக்கியிருக்கட்டும் (எசா 45:2; 49:11; பாரூ 5:7; லூக் 3:5). பின்னர், சினத்தின் நாளில் அடைக்கலம் தரும் பாதுகாப்பான இடமாகத் தங்களை அளிக்க அவைகளால் இயலுமா (ஓசே 10:8; லூக் 21:21; 23:30; திருவெளி 6:14-16)? ''நான் மலைகளைப் பார்த்தேன், இதோ அவை அதிர்ந்தன; குன்றுகள் அனைத்தும் அசைந்தன'' (எரே 4:24). மலைகளை அவர் தொட அவை புகைக்கும் (சங் 104:32; உப 32:22). அவரது பாதங்களின்கீழ் (மீக் 1:4), அவரது திருமுன் (எசா 63:19), அவை மெழுகு போல உருகின (சங் 97:5), அவை நடுங்கின (நீதி 5:5); ''என்றுமுள மலைகள் பிளவுண்டு போயின'' (அப 3:6), சரிந்தன (எசே 38:20), மற்றும் காலத்தின் இறுதியில் இருந்த இடம் தெரியாமல் போய்விடும் (திருவெளி 6:14; 16:20).

III ***சலுகை பெற்ற மலைகள்:*** மற்றப் படைப்புக்களைப் போல முழுமாற்றத்திற்கெனக் குறிக்கப்பட்டிருந்தாலும், சில குறிப்பிட்ட மலைகள் நிலையான மகிமைக்குரிய பங்கிற்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

1. மற்றவற்றிற்கு அப்பாற்பட்ட வெளிப்பாட்டின் இடம்: சீனாயில் இறைவனுடைய மலையாகிய ஒரேபானது மோசே அழைக்

கப்பட்ட புனித நிலமாகும் (யாத் 3:1.5). தமது சட்டத்தின் கொடையினாலும் (24:12-18), தனது மகிமையின் பிரசன்னத்தி னாலும் (24:16) இறைவன் அதனைப் புனிதப்படுத்தினார். எலியா சென்றதும் அதே இடமே (1 அர 19:8); இறைவன் தன்னுடன் பேசுவதற்குச் செவி மடுக்க அவர் விரும்பினார்; மலை உச்சியில் இளைப்பாறிச் செபிக்க விரும்பிய இறை வாக்கினர்களால் சந்தேகத்திற்கிடமின்றி எதிர்பார்க்கப்பட்ட முடிவு இது. சீனாய் மலையில் மோசேயும் (யாத் 17:9-10), கர்மேல் மலையில் எலியாவும், எலிசாவும் (1 அர 18:42; 2 அர 1:9; 4:25) இவ்வாறே செயல்பட்டனர்.

2. வழிபாட்டினுடைய சிறப்பிடம்: தரைக்கு மேலாக உயர்த்தப்பெற்றுள்ள மலையானது ஆண்டவருடனான சந்திப்பை அனுமதித்தது. பலியானது நிறைவேற்றப் பட வேண்டியது சிறிய, உயர்த்தப்பட்ட இடம் (பீடம்) அல்லவா (யாத் 24:4-5)? கெரிசிம் மற்றும் எபால் மலைகளின் மீதிருந்து ஆசிகளும், சாபங்களும் உரைக் கப்பட வேண்டும் (உப 11:29; யோசு 8:30-35). அவ்வாறே, பெலிஸ்தியரிட மிருந்து திரும்பப்பெற்ற பேழையும் ஒரு மலையின்மேல் வைக்கப்பட்டது (1 சாமு 7:1). வணக்கத்திற்குரிய மரபின் உரிமை யாளர்கள் என்ற அளவில் கிதியோன் (நீதி 6:26), சாமுவேல் (1 சாமு 9:12), சாலமோன் (1 அர 3:4), மற்றும் எலியா (18:19-20) ஆகிய அனைவரும் மக்களுடன் உயர்ந்த இடங்களில் பலி நிறைவேற்றினர் (1 அர 3:2).

இவ்வாறாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கானானியச் சடங்குகள் ஒரே உண்மையான இறைவானகிய யாவேக்கு ஈடுபடுத்தப்பட் டன. ஆனால், இந்த உயர்ந்த இடங்களின் எண்ணிக்கை பெருகியபோது அது சிலை வழிபாட்டின் அபாயத்தையும் கொணர்ந் தது (எரே 2:20; 3:23). இதைத் தடுக்க ஒரிடத்திலான வழிபாட்டு மையம் உருவா யிற்று (உப 12:2-9). இது வானங்களை அளப்பதற்கென மனிதனால் கட்டப்படாத ஒரு மலை (ஆதி 11); கரடுமுரடான மலைகளினின்று இறைவன் தேர்ந்தெடுத்த விண்ணோக்கி பெருமையோடு உயரும் ஒரு மலை (சங் 43:2-3; 68:17) இங்குள்ளது. இப்போது அனைத்து மலைகளும் கடலுக் குள் கவிழ்ந்தாலும் (சங் 45:3), சீயோனா னது அடைக்கலத்தின் உறுதியான இடமாக வும் (யோவே 3:5), எளிதில் அசைக்க முடியாததாகவும் உள்ளது (சங் 125:1).

''நான் விண்ணுலகிற்கு ஏறிச்செல்வேன்; இறைவனின் விண்மீன்களுக்கும் மேலாக, உயரத்தில் என் அரியணையை ஏற்படுத்து வேன்; மேகத்திரள் மேல் ஏறி உன்னதமான வருக்கு ஒப்பாவேன்'' என்று மனிதன் கூறக்கூடாது (எச 14:13-14). ஏனெனில், பாதாளத்தின் ஆழத்திற்குள் அவன் விழு வான். ''சீயோனில் தன் திருமலையில் இறைவனே தனது அரசை ஏற்படுத்தினார்'' (சங் 2:6), மோரியா மலையில் ஆபிரகாம் தனது மகனைப் பலியிடத் துணிந்த, அதே இடத்தில் ஏற்படுத்தினார் (2 நாள் 3:1; காண்க. ஆதி 22:2). எண்ணற்ற இறை உதவிகளின் நினைவுகளில் ஆழ்ந்து தோய் வுற்றவர்களாக, மலைகளின் புகழ்ப்பாடல்க ளைப் பாடியவர்களாக (சங் 120-134) மக்கள் ஏற வேண்டிய புனித மலையாகும் இது (சங் 24:3). ஆண்டவருடன் தனது எஞ்சிய நாட்களில் வாழ வேண்டிய நம்பிக்கை யுடன் (சங் 15:1;74:2), விசுவாசிகள் இம் மலைக்குத் தொடர்ந்து திரும்பி வரவேண் டும் (சங் 43:3).

3. காலத்தின் முடிவில்: அப்போது இறை வனாலேயே திருநிலைப்படுத்தப்பட்ட இந்த இடங்களுக்கு என்ன நேரும்? இறுதிக் கால இலக்கியத்தில் இனி, சீனாய்க்கு இடமில்லை. முன்னர் மனிதருக்கு வாழ் வின் வார்த்தைகள் அளிக்கப்பட்டதும் (அ.ப. 7:38), தனது உண்மையான புனித இடமாகிய சீயோனை அடைவதற்கென இறைவன் புறப்பட்டதுமாக (சங் 68:16-18) இருந்த நிலையில் இவ்விடம் இனி இல்லை.

கடந்த காலத்தில் இழந்துபோன சீயோனுக்கு முரண்பட்ட நிலையில், சீயோன் மலையானது இறுதிக்கால மதிப்பை மீண்டும் பெற்றுள்ளது. ''இறுதி நாள்களில் ஆண்டவரின் திருக்கோயில் அமைந்துள்ள மலை எல்லா மலைகளுக்கும் உயர்ந்ததாய் நிலை நிறுத்தப்படும்; எல்லாக் குன்றுகளுக்கும் மேலாய் உயர்த்தப்படும். மக்களினங்கள் யாவும் அதை நோக்கி, சாரை சாரையாய் வருவார்கள். 'புறப்படுங்கள், ஆண்டவரின் மலைக்குச் செல்வோம்' (எசா 2:2-3). அதுவே புனித மலையாகும் (11:9; தானி 9:16). அங்கு யாவே அரசனாவார் (எசா 24:23). இறுதியாக ஒன்று சேர்ந்த சிதறிப்போன மக்களுக்காகவும் (27:13; 66:20), அன்னியருக்கும் கூட (56:6-7) அங்கு அவர் பெரிய விருந்தொன்றைத் தயாரிப்பார் (25:6-10). நிலமானது சமவெளியாக மாற்றப்படும். எருசலேம் உயர்த்தப்பட்டு தன்னுடைய முதன்மையின் இடத்தை மீண்டும் அடையும் (செப் 14:10). அனைத்து மக்களும் எப்போதும் சீயோனை நோக்கிச் செல்ல வேண்டியிருக்கும் (14:16-18).

IV. **கிறிஸ்துவும் மலைகளும்:**

1. இயேசுவின் வாழ்வில் மலைகள்: ஒத்த நற்செய்திகளால் இவை பல்வேறுபட்ட விதங்களில் கருதப்படுகின்றன. செபம் செய்ய இயேசு மலைகளை நோக்கி விலகிச் சென்றார் என்றும் (மத் 14:23 இணை; லூக் 6:12; 9:28), பாலைவனம் போன்ற தனிமையை நாடியும் அங்குச் சென்றார் என்றும் (லூக் 15:4-ஐ, மத் 18:12-ஒடு ஒப்பிடுக) காட்டுவதில் அவர்கள் கருத்தொற்றுமை கொண்டுள்ளனர். இவற்றில் வசைக்குரிய சப்தம் மற்றும் ஆரவாரம் ஆகியவற்றிலிருந்தான இடைக்கால ஓய்வைத் தேடினார் என்பதில் சந்தேகமில்லை (யோவா 6:15). மேலும், சீயோன் மலையை ஒதுக்குவதிலும், ஒலிவ மலைக்கும் உருமாற்ற மலைக்கும் தனிமைச் சிறப்பளிப்பதிலும் ஒத்த நற்செய்தியாளர்கள் ஒத்திருக்கின்றனர். ஆனால், பின் குறிப்பிடப்பட்ட இரண்டிற்கும் வேறுபட்ட முன்னோக்கு அளிக்கப்படுகின்றது.

மத்தேயுவைப் பொறுத்த மட்டில் மீட்பருடைய வெளிப்பாடுகளைக் காணுவதற்கான சலுகை பெற்றவை கலிலேயாவின் மலைகளே. இயேசுவினுடைய வாழ்வானது இரு மலைக்காட்சிகளுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ளது. மலையில்தான், தொடக்கத்தில் உலகம் முழுவதன் மீதான வல்லமையைச் சாத்தான் இயேசுவிற்கு அளிக்க முன் வருகிறான் (மத் 4:8). வாழ்வின் முடிவில் இயேசு தந்தையிடமிருந்து தான் பெற்ற வல்லமையைத் தனது சீடருக்கு அளிக்கின்றார் (28:16). இந்த இரண்டு காட்சிகளுக்கும் இடையில் மக்களுக்குப் போதிப்பதிலும் (5:1), அவர்களது துயரங்களைக் குணமாக்குவதிலும், வியத்தகு அப்பத்தை அவர்களுக்கு அளிப்பதிலும் (15:29...), இறுதியாக உருமாறித் தோன்றுவதிலும் (17:1-2) ''ஒரு மலையில்'' இயேசுவை நாம் மீண்டும் காண்கிறோம். ஆனால், இம்மலைகளில் ஒன்றும் ஒரு குறிப்பிட்ட பெயரைக் கொண்டிருக்கவில்லை. இம்மலைகளில் ஏதாவதொன்றில் தனது கூடாரத்தை நிறுவுகின்ற சோதனைக்கு எதிராக சீடனுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்படுவதாக இஃது உள்ளது. அவரது மாட்சிமையின் கண்கூடான சாட்சிகளிடையில் நினைவு மட்டுமே உயிருள்ளதாக எஞ்சியிருக்க வேண்டும். இறைவாக்குகள் புனித மலையில் நிறைவேற்றப்படுகின்றன (2 பேதுரு 1:16-19). இயேசு தனது செய்தியை இவ்வுலகிலுள்ள எந்த ஓரிடத்துடனும் இணைக்காமல் தன் ஆட்தன்மையிலேயே வெளிப்படுத்துகிறார்.

லூக்காவைப் பொறுத்தமட்டில், எருசலேமை நோக்கிச் செல்வதானது, சிலுவையின் மூலமாக மகிமையை நோக்கிச் செல்லும் பாதையினைக் குறித்துக்காட்டுகிறது. அஃது இனியும் பக்தியுள்ள ஓர் இஸ்ராயேலன் மேற்கொள்கிற ஒரு திருப்பயணம் மட்டுமன்று (லூக் 2:42); மாறாக, இயேசு வாழ்வின் ஒரு காலப்பகுதியை உள்ளடக்கும் உன்னதமான ''முன்னோக்கிச் செல்லுதலாகும்'' (9:51-21:38; காண்க.

18:31). இயேசுவின் போதனைகளைக் கேட்டு, அவருடைய புதுமைகளைக் கண்ட கலிலேய மலைகளை ஒதுக்கியவராய் லூக்கா ஒலிவ மலையின் மேல் தனது கவனத்தை நிலைப்படுத்துகிறார். தன்னுடைய இறுதிக்கால உரையை இயேசு அங்கே அறிவித்தார் என்ற உண்மையை அவர் கட்டிக்காட்டவில்லை (மத் 24:3=மாற் 13:3). ஆனால், அவரைப் பொறுத்த மட்டில் எருசலேமை நோக்கிச் செல்வதானது அங்கேயே முடிவடைகிறது (லூக் 19:29). வெளிப்பாட்டு மரபின்படி (செக் 14:3-4), அங்கிருந்து உலகை வெல்ல ஆண்டவர் புறப்பட வேண்டியுள்ளது. அங்கு அவர் மகிமையுடன் போற்றப்பட்டாலும் (லூக் 19:37), அங்குதான் அவர் வேதனையால் துன்புற்றார் (22:39); இறுதியாக அங்கிருந்து தான் விண்ணிற்கு எழுந்தருள்கிறார் (அ.ப. 1:12). ஒரு குறிப்பிட்ட மலையானது மீண்டும் குறிப்பிடப்படுகிறதெனின், அது விண்ணகத்தை நோக்கி நமது கண்களை உயர்த்துவதற்காகவும், அல்லது சற்று மேம்பட்ட விதத்தில் யோவானின் இறையியல்படி மண்ணுலகிற்கு மேலாக உயர்த்தப்பட்டவரை நோக்க கண்களை உயர்த்துவதற்கும் (யோவா 3:13-14; 19:37) என்று தெரிகிறது (19:37).

2. புதிய ஏற்பாட்டின் பிறநூல்கள்: இவை பழைய ஏற்பாட்டினுடைய சலுகைக்குரிய மலைகளைப்பற்றிய ஒருமித்த போதனை எதையும் அளிக்கவில்லை. பவுலின் தர்க்க வாதங்களில் சீனாய் மலையானது அடிமைத்தனத்தின் வீட்டிற்கு ஒப்பிடப்படுகிறது (கலா 4:24-26). மனிதன் இப்போது நெருங்கக்கூடிய சீயோனை நோக்கிய இயக்கமானது அது முதல் தொடர்கிறது (எபி 12:18.22). அதே பொருளில் திருவெளிப்பாடானது, காலத்தின் இறுதியில் சீயோன் மலையில் அமைக்கப்பட்டிருப்பதாக செம்மறியைக் காட்டுகிறது (திருவெளி 14:1). ஆயினும், ஒரு வேறுபாடு உள்ளது. வெளிப்பாட்டு ஆசிரியர் இப்புனித இடத்தைப் பற்றி உரியதொரு திறனாய்வினை மேற்கொள்கிறார். மலையானது எசக்கியேலின் காட்சியில் உள்ளது போன்று, நகரானது கட்டப்படுவது போல் தோன்றுகின்ற இடமாக இனியும் உருவகிக்கப்படவில்லை (எசே 40:2). விண்ணக எருசலேமானது விண்ணிலிருந்து இறங்கி வருவதை எதிர்பார்க்கும் ஒரு வாயில் காவலாகவே இஃது உள்ளது (திருவெளி 21:10).

மலை ஆடு (MOUNTAIN SHEEP)

காட்டு வெள்ளாடு என்பது ஆட்டின் இயல்புடைய ஒரு வகையான ஐரோப்பிய வரைமான் (CHAMOIS). இது சற்று வெறித் தன்மை கொண்டதாக இருக்கும். இக் காட்டு வெள்ளாடு இன்னும் மத்தியதரைக் கடல் பகுதியில் வாழ்ந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. நற்செய்தித் தொடர்புடைய பாலஸ்தீன நாட்டிலோ, அதன் அருகிலுள்ள நாட்டிலோ இக்காட்டு வெள்ளாடு வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. இஃது உண்ண அனுமதிக்கப்பட்ட விலங்குகளில் ஒன்று (உப14:5).

மலை நாடு (HILL COUNTRY)

மலை, குன்று என்பனவற்றைக் குறிக்க எபிரேயச் சொற்கள் பல பயன்பட்டுள்ளன. இவை பொதுவாக உயரிய திணை நிலத்தைக் குறிப்பதற்கும் (ஆதி 49:26), குறிப்பிட்டு மேட்டு நிலத்தைக் குறிப்பதற்கும் (யாத் 17:9), கானானியர் வழிபாடு நடத்திய இயற்கையாக அமைந்த குன்றுகளைக் குறிப்பதற்கும் (உப12:2; 1 அர 14:23) பயன் படுத்தப்பட்டுள்ளன. மலையைக் குறிக்கும் எபிரேயச் சொல் மலை என்றே மொழி பெயர்க்கப்பட்டாலும் (ஆதி 31:54; யாத் 3:11), குன்று என்ற பொருளிலும் பயன்படுத்தப்படலாம் (நீதி 16:3; சங் 2:6; 121:1). குன்று என்ற சொல் 2 அர 5:24; எசா 32:14; மீக் 4:8 ஆகியவற்றில் கையாளப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் மத் 5:14; லூக் 3:5; 4:29; 9:37; 23:30-இல் வரும் கிரேக்கச் சொற்கள் குன்று என்றே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

விவிலியத்தில் மலைநாடு என்பது, பாலஸ்தீனத்தின் மையத்தில் படிப்படியாக உயர்ந்து மேடுபள்ளங்கள் மிகுந்த மலைத் தொடர்ப் பகுதியாகும். இது கடற்கரைச் சமவெளிக்கும் யோர்தான் பள்ளத்தாக்கிற்கும் இடையில் அமைந்துள்ளது. இதன் தென் எல்லையாக நெகேபின் பாலைவனமும், வட எல்லையாகக் கலிலேயா நிலப் பரப்பும் அமைந்துள்ளன.

கானானைக் கைப்பற்றிய வரலாற்றில் இந்த மலைநாடு முக்கிய பங்கு பெறுகிறது. மோசே, யோசுவாவின் தலைமைக் காலத்தில் கானானை வேவு பார்க்கச் சென்ற இஸ்ராயேலர்கள் இந்த மலைத்தொடர் வழியாகத்தான் சென்றனர். மோசேயின் ஆலோசனைக்கு எதிராக இம்மலை நாடு வழியாக வடக்கு நோக்கி நடந்த மடத் துணிச்சலான தாக்குதல், கானானியர் மற்றும் அமலேக்கியரால் ஓர்மாவில் படு தோல்வி அடைந்தது (எண் 14:44-45). கானானைக் கைப்பற்றிய வரலாற்றின் பல கட்டங்களில் இந்த மலைநாடு குறிக்கப் படுகின்றது. ஆயி மற்றும் எரிகோ போர் களுக்குமுன், யோசுவாவும் இஸ்ராயேலரும் இந்த மலை நாட்டிலிருந்து இறங்கி வந்துதான் யோர்தான் ஆற்றைக் கடந்தனர் (யோசு 3:14-17). பிற்பாடு, எருசலேமைச் சேர்ந்த அதோனிசெதேக்கு என்ற அரசனின் தலைமையில் ஐந்து கானானிய அரசர்களின் கூட்டணியின் தாக்குதலிலிருந்து கிபயோனியர்களைப் பாதுகாக்க யோசுவாவின் தலைமையில் இம்மலைப்பகுதி வழியாக இஸ்ராயேலர் தெற்கு நோக்கி முன்னேறித்தாக்க வழிவகுத்தது. எலிசபெத்து அவளது மூத்த வயதில் கருவுற்று இருப்பதை அறிந்த மரியாள், யூதேயா மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்று எலிசபெத்தை வாழ்த்தினாள் (லூக் 1:39).

மலைப்பொழிவு (SERMON ON THE MOUNT)

மத்தேயுவும் லூக்காவும்: மத்தேயுவின் நற்செய்தியில் இயேசுவின் ஐந்து அறவுரைகள் உள்ளன (மத் 5-7; 10; 13; 18; 24-25). இவற்றில் மிக நீண்டதான மத் 5-7 என்ற பகுதி மலைப்பொழிவு என்றழைக்கப் படும். ஏனெனில், இவ்வுரையின் பின்னணியாக ஒரு மலை அமைந்துள்ளது. ''இயேசு மக்கள் திரளைக் கண்டு மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரருகே வந்தனர். அவர் திருவாய் மலர்ந்தருளிக் கற்பித்தவை'' (5:1-2). இதற்கொத்த உரை லூக்காவிலும் உண்டு (லூக் 6:20-49). ஆனால், மிகக் குறுகியது. இது சமவெளிப் பொழிவு என்றழைக்கப்படும். ஏனெனில் ''இயேசு (அப்போஸ்தலர் மற்றும் சீடர்களுடன் மலையிலிருந்து) இறங்கி வந்து சமவெளியான ஓரிடத்தில் நின்றார் (மக்கள் கூட்டம் பெருந்திரளாய் இருந்தது). இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை'' (லூக் 6:17.20). மத்தேயுவின் மலைப்பொழிவு நீண்டதாகவும், மூன்று அதிகாரங் களையும் 111 வாக்குகளையும் கொண்டதாகவும் உள்ளது. லூக்காவின் சமவெளிப் பொழிவு குறுகியது; ஓர் அதிகாரம் கூட இல்லை; 30 வாக்குகளை மட்டுமே கொண்டது.

நீளம், இடம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டும் வேறுபாடுகள் இருந்தாலும் இரண்டிற்குமிடையே அதிக ஒற்றுமையுண்டு. இரண்டும் பேறுகளோடு தொடங்குகின்றன; இருவகை அடித்தளங்கள் பற்றிய உவமையோடு முடிகின்றன. லூக்கா கொண்டிருக்கும் அனைத்தும், கேடுகள் பற்றிய பகுதியைத் தவிர (லூக் 6:24-26), மத்தேயுவில் காணப்படும். இரண்டிலும் இயேசு தம் சீடர்களின் வாழ்க்கை முறை பற்றிப் பேசுகிறார். அயலாருக்கு, பகைவர்களுக்கும் கூட அன்பு காட்டுதலை வலியுறுத்துகிறார். இரண்டும் இயேசுவின் பொதுப்பணி வாழ்வின் தொடக்கத்தில் இடம் பெறுகின்றன. இரண்டின் முடிவிலும் செந்தூரியன் அல்லது நூற்றுவர் தலைவனின் ஊழியன் குணமடைதல் குறிக்கப்படுகின்றது.

2. மத்தேயுவும் மாற்கும்: மாற்கு எழுதிய நற்செய்தியில் காணப்படும் இடவரிசை மற்றும் காலவரிசையை மத்தேயு பெருமளவில் பயன்படுத்துகிறார். மாற்கின் திட்ட

அமைப்பை மத்தேயு தனது நூலின் அடிப்படையாகப் பயன்படுத்துகிறார்; ஆனால், தனது நூலின் முதல் பகுதியில் வரும் பகுதிகளை அமைப்பதில் சுதந்தரத்துடன் செயல்படுகிறார்; சில பகுதிகளை விரிவாக்குகிறார்; சில புதிய பகுதிகளைச் சேர்க்கிறார்; சில பகுதிகளைத் தொகுத்துத் தருகிறார்.

மத் *4:12-11:1* என்ற பகுதியில், மாற்கில் காணப்படும் வரிசை முறையில் மத்தேயு அடிப்படை மாற்றம் செய்கிறார். மாற்கின் வரிசை முறையில், மத்தேயு மலைப்பொழிவை எங்குப் புகுத்தினார் என்று கூற முடியுமா? இதுபற்றி ஆய்வாளர்களிடையே கருத்தொற்றுமை இல்லை. இதுபற்றி மாற் *1:16-20*-ஐ மத் *4:18-22*-ஒடும், மாற் *1:21*-ஐ மத் *5:2*-ஒடும், ' மாற் *1:22*-ஐ மத் *7:28-29*-ஒடும், மாற் *1:40-45*-ஐ மத் *8:1-4*-ஒடும் ஒப்பிட்டு, மத்தேயு மலைப்பொழிவை மாற் *1:21* (மத் *5:2*)-க்கும் மாற் *1:22* (மத் *7:28-29*)-க்கும் இடையில் புகுத்தினார் என்பது பொருத்தமுடைய கருத்தாகும். இதனால் மலைப்பொழிவுக்கு முன் வரும் பகுதியில் மாற்கில் பின் வருவனவற்றை மத்தேயு கையாளவில்லை என்று கூறமுடியாது (காண்க. மாற் *3:7-13*; மத் *4:23-25*). மாற் 1-இல் நிகழ்ச்சியுரைப் பகுதிகளை (கலிலேயாவுக்குத் திரும்புதல், போதிக்கத் தொடங்குதல், முதல் நான்கு சீடர்களை அழைத்தல், கலிலேயாவில் பணி) மத்தேயு திருத்தி அமைத்து, இயேசு சோதிக்கப்பட்ட நிகழ்ச்சியுரைக்குப்பின் (மத் *4:1-11*) மலைப்பொழிவுக்கு நீண்ட அறிமுகம் அளிக்கிறார் (*4:12-25*).

3. மூலங்கள்: நற்செய்திகள் இறுதி வடிவம் எடுக்குமுன், அவை வாய்மொழிப் பாரம்பரியங்களாகவும், பின் சிறுசிறு தொகுப்புகளாகவும் வளர்ந்து, இறுதி வடிவம் எடுத்தன. இந்த வளர்ச்சி ஒத்தமை நற்செய்திகளில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கவல்லன. மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்திகளுக்கு மாற்கின் நற்செய்தி ஒரு மூலமாக அமைந்தது என்று ஏற்றுக்கொள்ளப்படும். நற்செய்திகளின் வளர்ச்சியில், மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் பொதுவான, குறிப்பாக இயேசுவின் வாக்குகள் அடங்கிய ஒரு தொகுப்பு இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுவர். இதன் கிரேக்க வடிவம் கிறிஸ்து உயிர்த்தபின் இருபது ஆண்டுகளுக்குப்பின் தோன்றியிருக்கலாம். இதன் அரமேயிக்கு வடிவம் இதற்கு முன்னே தொகுக்கப்பட்டிருக்கலாம். இந்தத் தொகுப்பு Q-என்ற எழுத்தால் குறிக்கப்படும். மத்தேயுவுக்கே உரிய பகுதிகள் M-தொகுப்பு என்றும், லூக்காவுக்கே உரிய பகுதிகள் L-தொகுப்பு என்றும் குறிக்கப்படும்.

இவற்றில் மத்தேயு தனது மலைப்பொழிவுப் பகுதியைத் திட்டமிட்டுத் தொகுத்த போது Q-தொகுப்பையும், M-தொகுப்பையும் பயன்படுத்தியிருக்கிறார் எனலாம்.

4. மலைப்பொழிவின் திட்டம்: இறையரசையும், இறையரசில் புகும் தம் சீடர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளையும் இயேசு இம்மலைப்பொழிவில் அறிவிக்கிறார். ''மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும்'' (*5:20*). இப்பொழிவைப் பலரும் பலவாறு திட்டம் செய்ய முயன்றுள்ளனர். அவற்றுள் பின்வருவது பொருத்தமாக உள்ளது எனலாம். மத்தேயுவின் மலைப்பொழிவின் திட்டம் லூக்காவின் சமவெளிப்பொழிவோடு ஒத்தமைத்துக் காட்டப்படுகிறது. மத்தேயுவில் காணப்படும் பல கருத்துக்கள் லூக்காவில் பிற இடங்களில் காணப்படுகின்றன.

தலைப்புகள்	மத்தேயு	லூக்கா	லூக்கா
I. நிகழ்ச்சியுரைத் தொடக்கம்	5:1-2	6:20அ	
II. மலைப்பொழிவு	(5:3-7:27)		
1. முன்னுரை	(5:3-16)		
பேறுகள்	5:3-12	6:20ஆ-23	
(கேடுகள்)			6:24-26

உப்பும் ஒளியும்	5:13.14-16		14:34-35;
			11:13;
2. மத்திய பகுதி	(5:17-7:12)		
அ) எதிர்நிலைகள் (5:17-48)			
சட்டத்தின் நிலையான மதிப்பீடு	5:17-20		16:17
அயலார்பால் நெறி,	5:21-26		
கொலை, சினம் கொள்ளுதல்			
நடுவரிடம் போதல்	5:25-26		12:57-59
விபசாரம்	5:27-30		
திருமண முறிவு	5:31-32		16:18
ஆணையிடுதல்	5:33-37		
பழிவாங்குதல்	5:38-42	6:29-30	
பகைவருக்கு அன்பு	5:43-45	6:27-28.	
	46.48	32-36	
ஆ) இறைவன்பால் நெறி	(6:1-18)		
தருமம் செய்தல்	6:1-4		
இறை வேண்டல்	6:5-15		
கர்த்தர் கற்பித்த செபம்	6:9-13		11:2-4
நோன்பு இருத்தல்	6:16-18.		
இ) கவலையின்மையும் அர்ப்பணமும்	(6:19-7:12)		
உண்மையான செல்வம்	6:19-21		
கண்-விளக்கு	6:22-23		11:33-36
இரு தலைவர்கள்	6:24		16:13
கவலை வேண்டாம்	6:25-34		12:22-34

தீர்ப்பிடாதீர்	7:1-2	6:37-38	
(குருட்டு வழிகாட்டி)		6:39	மத் 15:14
(குருவும் சீடனும்)		6:40	மத் 10:24-25.
துரும்பும் மரக்கட்டையும்	7:3-5	6:41-42	
தூய்மையானதும் நாய்களும்	7:6		
வேண்டுதலின் விளைவு	7:7-11		லூக் 11:9-13
பொன் விதி	7:12	6:31	
III முடிவுரை	7:13-27		
இடுக்கமான	7:13-14		13:24
வாயில் போலி	7:15-20	6:43-45	
இறைவாக்கினர் மரமும் கனியும் சொல்லும் செயலும்	7:21-23	6;46	
உங்களை அறியேன்	7:22-23		13:26-27
இருவகை அடித்தளங்கள் - வீடும்-புயலும்	7:24-27	6:47-49	
IV. நிகழ்ச்சியுரை முடிவு	7:28-29		7:1

5. போதகச் சுருக்கம்: இயேசு உரையை இறைமகன் (மத் 3:16-17) என்ற முறையில் அறிவிக்கிறார். அவரது அதிகாரம், மறை நூல் அறிஞருடையதைவிட (7:29), ஏன் மோசேயினுடையதைவிடவும் (5:21-48) பெரியது. இவ்வுரை, அவரது போதகத்தின் ஒப்புயர்வற்ற தன்மைக்கு எடுத்துக்காட்டாகும் (4:23; 5:2; 7:28-29; 9:35; 11:1). இதன் பின்னணி பெயர் குறிக்கப்படாத ஒரு மலையாகும். மக்கள் திரளுக்கும் சீடர்களுக்கும் இவ்வுரை அளிக்கப்படுகிறது (5:1-2; 7:28-29).

பேறுகள் (5:3-12), இறைவனின் இறுதிக் கால அரசு வருங்காலத்தில் செயல்படுத்தப் பட்ட உண்மையாகும்போது ஏற்படும் நிலைகளின் மாற்றத்தை விவரிக்கிறது. இந்த இறைவனது இறுதிக்கால அரசு மறைமுகமாக இருந்தாலும் ஏற்கெனவே இயேசுவில் பிரசன்னமாய் இருப்பதால், முன்னறிவிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் நிறை வேறிக் கொண்டிருக்கின்றன என்ற உறுதி யின் விளைவாக எழும் மிக உயர்ந்த மகிழ்ச்சியை எடுத்துக் கூறும் அறிவிப்பாக பேறுகள் அமைந்துள்ளன.

பேறுகள் முன்னோக்கும் ஆட்கள் கிறிஸ் துவின் சீடர்களைக் கொண்ட புதிய சமூக மாகும். இவர்கள் ''மண்ணுலகிற்கு உப்பா யும்'', ''உலகிற்கு ஒளியாயும்'' இருப்பர் (15:13-16). இவர்கள், தங்கள் வாழ்க்கை முறையின் வழியாக இறைவனைப்போற்ற, அதாவது இயேசுவின் சீடர்களாகி இறுதிக் கால அரசுச் சூழலில் வாழ, பிறரை அழைக்கின்றனர்.

சட்டத்திற்கு நிலையான மதிப்பீடு உண்டு என்று இயேசு போதிக்கிறார். சீடர்களின் வாழ்வை வேறுபடுத்திக் காட்டு வது அவர்களது நெறி பிறரது நெறியைவிட சிறந்திருப்பதேயாகும் (5:17-20). இந்த நெறி சிறந்திருத்தல் இருபடிக் குவிமையம் கொண்டுள்ளது. ஒன்று அயலர்பாலும் (5:41-48), மற்றது இறைவன்பாலும் (6:1-7:12) காட்டும் செயல்முறையான நடத் தையாகும். இந்நடத்தையின் சிறப்பு அடை யாளம் அன்பாகும் (5:44-45; 7:12). உண்மை யில் இறைவன் அன்பு செய்வதுபோல் அன்பு செய்வது சீடர்களுக்கு நிறைவுள்ள வர்களாக இருப்பதாகும் (5:48). அதாவது, இயேசு விளக்கிக் காட்டும் முறையில் இறைவனது திருவுளத்தைச் செய்வதில் முழுமனதினராய் இருப்பதாகும் (7:21). இயேசு போதிப்பதைக் கேட்டு அதன்படி நடப்பவனே ஞானமிக்க சீடனாவான் (7:24-27).

6. யாருக்குப் போதிக்கப்பட்டது?: மத் 5:1-2-ஐ மட்டும் கருத்தில் கொண்டால், மலைப்பொழிவு சீடர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டதாகத் தோன்றலாம். 5:13-16 சீடர்களுக்கு மட்டுமே கூறப்பட்டதாகத் தெரிகிறது. அவர்கள்தான் மக்களுக்குச் சாட்சியாக விளங்கக் கடமைப்பட்டவர்கள் என்பது தெளிவு. ஆனால், இதை மிகைப் படுத்தி விடக்கூடாது. மக்கள் மத் 7:28-29-இல் குறிக்கப்படுகின்றனர். பாடு களுக்கு முன்பு வரை (27:55), மக்கள் பொதுவாக இயேசுவின்பால் நல்லெண் ணம் கொண்டுள்ளனர் (9:33; 12:23). ஆகவே, மலைப்பொழிவு அளிக்கப்பட்ட வர்களில் சீடர்கள் உள் வட்டத்தைச் சேர்ந்த வர்களாகவும் மக்கள் புறவட்டத்தைச் சேர்ந் தவர்களாகவும் வருங்காலச் சீடர்களாகவும் உள்ளனர் என்று கொள்வது மேல்.

7. விளக்கமுறைகள்: மலைப்பொழிவின் உயர்ந்த, சிலரது கருத்துப்படி செயல்படுத்த முடியாத, ஒழுக்கக் கோரிக்கைகளின் விளைவாக, இந்த உரை பலவாறு விளக்கப் பட்டுள்ளது. லூக்காவின் உரையைவிட, இது காலந்தோறும் கிறிஸ்தவச் சிந்தனை யால் விளக்கங்களும் மறு விளக்கங்களும் பெற்றுள்ளது. காலத்திற்கு ஏற்றவாறு விளக்கங்களும் வேறுபட்டுள்ளன.

அ) ஒழுக்கவியல் விளக்கமுறை: இது காலத்தால் முந்தியது. இதன்படி மலைப் பொழிவு கிறிஸ்துவின் சீடர்களுக்குரிய புதிய சட்டமாகும். இது கிறிஸ்தவ ஒழுக்க வியலின் சுருக்கத்தைத் தருகிறது. இயேசு தம் சீடர்களிடமிருந்து என்ன எதிர்பார்க் கிறார். அவர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது, எவ்வாறு அவர்கள் வாழ வேண்டும் என்பனவற்றைத் தெளி வாகக் கூறுகிறார். இவ்விளக்கமுறை மலைப்பொழிவின் கட்டளைகள் செயல் முறைப்படுத்தக் கூடியவை என்று கருதி யது. இந்த உரையில் இயேசு சட்டம் அளிப்பதில் ஒப்பற்றவராகத் தோன்று கிறார். இயேசு ஒழுக்கவியலின் முழு நிறைவுப் பண்பின் மேல்வரிச் சட்டத்தை விரும்பி எடுத்துக் கூறுகிறார். இந்த ஒழுக்க வியல் விளக்க முறை திருச்சபையின் தொடக்க காலமுதலே, குறிப்பாக யுஸ்தீன்,

யோவான் சிறிசோஸ்தம் போன்ற திருச் சபைத் தந்தையர்களால் எடுத்துக் கூறப் பட்டுள்ளது.

ஆ) மத்தியகால விளக்கமுறை: இக்காலத் தில் சாதாரணக் கிறிஸ்தவர்களுக்கு ஒன்றும், துறவிகளுக்கு ஒன்றுமாக இருவகை ஒழுக்க வியல் இருப்பதாகக் கருதப்பட்டது. சாதா ரணக் கிறிஸ்தவர்கள் மீட்படைய கட்டளை களைக் கடைப்பிடித்து வாழ வேண்டும். துறவிகள் முழுநிறைப் பண்பை அடை வதற்கான ஏழ்மை, கற்புடைமை, கீழ்ப்படி தல் ஆகிய நற்செய்தியின் அறநெறிக் கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இப்பாகுபாட்டிற்கு ஆதாரமாக, நற்செய்தி யில் மக்களும் சீடர்களும் வேறுபடுத்தப்பட் டிருப்பது எடுத்துக்கூறப்பட்டது. மலைப் பொழிவு கோருபவைகளில் பெரும்பா லானவை சாதாரணக் கிறிஸ்தவர்களால் அடைய முடியாததாகத் தோன்றின. அவை முழுநிறைவு நிலையில் வாழ விரும்புபவர் களுக்கே உரியன என்று கருதப்பட்டன. இவர்கள்தான் மலைப்பொழிவை வினைத் திட்பமுடன் ஏற்று அதைச் செயல்படுத்தி வாழவேண்டும்.

இ) பயிற்சிநிலை விளக்கமுறை: இது லூத்தரோடும், அவரைப் பின்பற்றும் பிரி வினைச் சகோதரர்களோடும் தொடர்புடை யது. லூத்தர் தனது நூல்கள் சிலவற்றில், மலைப்பொழிவு எல்லார்க்கும் அளிக்கப் பட்டது என்றும், ஆனால் அதன் கோரிக்கை கள் செயல்முறையில் வாழ முடியாதவை என்றும் கருதினார். ஆகவே, மலைப்பொழி வின் கோரிக்கைகள் துறவிகளுக்குரிய அற நெறிமுறையாகும் என்ற விளக்கத்தை லூத் தர் நிராகரித்தார். இவரின் கருத்துப்படி, இயேசு தனது அடிப்படைப் போதகம் மற்றும் கட்டளைகளை அளிப்பதில் மிக வும் குறிப்பிட்டதோர் நோக்கத்தைக் கொண்டிருந்தார். இவற்றைக் கடைப் பிடிக்க முடியாமையால், நாம் நமது முழுப் பாவத்தன்மையை ஏற்றுக்கொள்ளக் கட்டாயப்படுத்தப்படுகிறோம். மலைப் பொழிவை எதிர்கொள்ளும்போது, நாம் பாவிகள் என்றும், பாவிகளாகவே இருக்கி றோம் என்றும் உணர்கிறோம். நாம் முழு அவநம்பிக்கை அடையக்கூடும். இது மீட் புத் தன்மையுடையதாகும். அப்போது, நமது அகந்தையையும் இயலாமையையும் கண்டுணர்ந்து, உண்மையான விசுவாசத்தில் இறைவனது அருளுக்கு நம்மையே திறக்கக் கூடும். நெறிமுறையும், ஆகவே கட்டளை களை நிறைவேற்றும் ஆற்றலும் இலவச மாக அளிக்கப்பட வேண்டும். பவுலின் போதகப் பின்னணியில், மலைப் பொழிவை லூத்தர் விளக்கினார். கலா 3:23-24-இல் சட்டம் விளக்கப்படுவதுபோல் மலைப் பொழிவும் விளக்கப்பட்டது. அடைய முடியாத குறிக்கோளை அளிப் பதன்மூலம், மக்கள் தங்கள் சொந்தச் செயல்களையன்று கிறிஸ்துவையே நம்ப வேண்டும். பழைய ஏற்பாட்டில் சட்டம் கொண்டிருப்பதுபோல், புதிய ஏற்பாட்டுச் சட்டமும் உண்மையான அதிகாரபூர்வமான நற்செய்திக்கு ஒரு தயாரிப்பாக மட்டுமே அமைந்துள்ளது. இயேசு மனத்துக்கத்தைப் போதிக்கும் பெரும் போதகர் ஆவார். மக்களைத் தயாரிக்க ஒரு வழியாகவே மலைப்பொழிவை அழித்தார். அஃது, அறிவு பெறுதலையும் மன மாற்றத்தையும் முன் னோக்குகிறது. இது பயிற்சிநிலை விளக்க முறையாகும். மலைப்பொழிவைச் செயல் படுத்த முடியாமை அருளுக்கு இட்டுச் செல்கிறது.

ஈ) இறுதிக்கால இயல் விளக்கமுறை: இதன்படி, இயேசு இறையரசு அண்மை வருங்காலத்தில் வரவிருப்பதாகப் போதித் தார். இறையரசு அருகில் உள்ளது; வெகு விரைவில் தோன்றும். குறுகிய கால இடைவெளியே இருந்தது. ஆகவே, மலைப்பொழிவு இந்த இடைக்காலத்திற் குரிய ஒழுக்க முறையைக் கொண்டுள்ளது. அதன் அடிப்படைக் கோரிக்கைகள் தனிச் சிறப்புடையவை; இறுதி இடுக்கண் கால மாகிய துன்பக் காலத்திற்குரியவை. ஒவ் வொருவரது இந்தச் சூழ்நிலையின் உள் ளார்ந்த சிறப்புத்தன்மையை உணர வேண் டும். இறுதிக்காலம் வருமுன், கடைசி வாய்ப்பைப் பற்றிக்கொண்டு மனந்திரும்ப

வேண்டும். இறைவனது உறுதியான இடையீட்டின் முன் உடனடியாக அமையும் தபசு இயக்கத்தில் நாம் சேர்ந்து கொள்ள வேண்டும். இந்த விளக்க முறையில் இயேசு முழுவதும் வெளிப்பாட்டு இலக்கிய உருவாகத் தோன்றுகிறார். இதன்படி மலைப்பொழிவு ஓர் இடைக்கால ஒழுக்கமுறையாகும். தொடர்ந்து இருக்கும் சமூகத்திற்கு உரியதன்று. ஓர் இடுக்கண் நிலையில் அசாதாரணமானவை கோரப்படலாம்.

உ. மற்றும் சில விளக்கமுறைகள்: மலைப்பொழிவு இக்காலத்திற்குரியதன்று. இயேசுவின் மறுவருகைக்குப் பின்வரும் ஆயிரமாண்டுக் காலத்திற்குரியதாகும் என்பது ஒரு விளக்கம்.

மற்றொரு விளக்கப்படி, மலைப்பொழிவின் முகப்பு மதிப்பில், அஃது, இக்காலத்திற்குரியதான எல்லாக் கிறிஸ்தவர்களுக்குமுரிய மேல்வரிச் சட்டத்தை எடுத்துக்கூறுகிறது. ஆனால், அதன் கோரிக்கைகளை அவற்றின் சொற்பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இயேசு, குறிப்பிட்ட ஒழுங்கு முறைகளை அளிக்கவில்லை; மாறாக, பொதுக் கோட்பாடுகளையே அளிக்கிறார். மலைப்பொழிவு ஒரு மனப்போக்கைக் கோருகிறது; ஒரு குறிக்கோளை அளிக்கிறது. அதை அடைய முயற்சித்தால் போதும். ஆனால், அஃது ஓர் அடிப்படை மனமாற்றத்தைக் கோருகிறது. அதில், எக்காலத்திற்கும் எல்லாருக்கும் உரிய கட்டளைகளைக் காண முயல்வது தவறாகும் என்று இந்த விளக்கம் கருதும். கட்டளை வடிவில் கொடுக்கப்பட்டுள்ளவை விரும்பப்படும் முயற்சியின் முன்னோக்கையே சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறு, மலைப்பொழிவு பற்றிய பல விளக்க முறைகளைக் கூறிக்கொண்டே போகலாம். அவற்றின் விளைவாகப் பின்பற்றப்பட்ட செயல்முறைகளும் உண்டு. சான்றாக, கால்வின் இயேசுவை ஒரு புதிய சட்டம் அளிப்பவராகக் கருதவில்லை. இவரது கருத்துப்படி, இயேசு பழைய ஏற்பாட்டுச் சட்டத்தைத் தவறான பரிசேயர் விளக்கத்திலிருந்து தூய்மைப்படுத்தி, அதன் மேன்மையை மீண்டும் அமைத்தார். ஆகவே, சட்டத்திற்கும் நற்செய்திக்கும் தொடர்ச்சியுண்டு. லூத்தரும், சீர்திருத்தவாதிகள் என்று கோரிக்கொண்டவர்களைப் போன்று கால்வினும், வெளிப்பாட்டு இலக்கியத் தீவிரக் கருத்துடைய அனாபாப்டிஸ்டுகளின் அரசியல் குழப்பத்தையும் ஒழுக்க அடிப்படை வாதத்தையும் எதிர்த்தனர். மலைப்பொழிவை அடிப்படையாகக் கொண்டு, அனாபாப்டிஸ்களைப் போன்றவர்கள் படைகளில் பணிபுரியவும், ஆணையிடவும், நீதித்துறை அலுவல்களைச் செய்யவும் மறுத்தனர். இவர்கள் அரசுக்கும் திருச்சபைக்கும் இடையே கடுமையான பிரிவைக் கோரினர். உண்மையான கிறிஸ்தவர்கள் என்ற முறையில், அரசோடு எதுவும் செய்ய மறுத்தனர். இவர்கள் தங்களுக்காகச் சிறு குழுக்களை அமைத்துக் கொண்டனர். காலந்தோறும் பிரிவினைக் குழுக்கள் மலைப்பொழிவின் கட்டளைகளை, அவற்றில் சிலவற்றையாவது, அவற்றின் சொற்பொருளில் கடைப்பிடிக்க முயன்றுள்ளனர்.

லூத்தரும், இறைவனது அரசு, உலக அரசு என்று இருவகை அரசுகளை வேறுபடுத்தினார். மலைப்பொழிவு இறைவனது அரசுக்கு மட்டுமே உரியது என்று கருதினார். இறைவனே, சமயசார்பற்ற அரசு தனது சட்டங்களுக்கு ஏற்றவாறு தனது அதிகாரத்தைச் செயல்படுத்த விரும்புகிறார். தனி நபரின் மீட்பைப்பற்றி அக்கறை கொள்ளும் லூத்தர், கிறிஸ்தவர்கள் சமயசார்பற்ற அமைப்புகளில் பங்கெடுக்கலாம் என்றும், பதவி வகிக்கலாம் என்றும், ஆனால் உள்ளத்தில் மலைப்பொழிவுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

ஆய்வாளர்களில் சிலர் மலைப்பொழிவில் மிக ஆழ்ந்த மனித மதிப்பீடுகளைக் கண்டு அவற்றை வலியுறுத்தினர். வேறு சில சமூகத்தை ஆய்வுக்கண்ணோடு நோக்கும் பகுதிகளை வலியுறுத்தினர். இன்னும் சில சமூகப்புரட்சிக்கு ஏதுவான கருத்துக்களை மலைப்பொழிவில் காண முயன்றுள்

ளனர். இவ்வாறு மலைப்பொழிவை விளக்கும் பல முறைகள் உண்டு.

3. இக்காலத்திற்கு மலைப்பொழிவு: போன்கோப்பேர் தனது நூலில் கூறுவது போல், வேறுபட்ட ஆயிரமுறைகளில் நாம் மலைப்பொழிவைப் புரிந்து விளக்கம் அளிக்கலாம். இயேசு ஒரே ஒரு சாத்தியத்தைத்தான் அறிவார். எளிய சரண் அடைதலும், கீழ்ப்படிதலுமே அது. விளக்கிக் காட்டுவதும், பொருத்திக் கூறுவதுமன்று; செயல்படுத்துவதும் கீழ்ப்படிதலுமே ஆகும். அவரது வாக்குக்குச் செவிமடுப்பதற்கு இஃது ஒன்றே வழியாகும். அதை ஒரு குறிக்கோளாகத் தர்க்கிப்பது அன்று; மாறாக, அதைச் செயல்படுத்துவதில் முனைந்திருப்பதேயாகும்.

நற்செய்தியாளர் அளிக்கும் எடுத்துக்காட்டுகள் கிறிஸ்தவர்களுக்கும், அவர்களுக்குப் பணிசெய்யும் திருத்தொண்டர்களுக்கும் வழிகாட்டுகின்றன. மறைநூலால் வழிநடத்தப்படுபவர்கள், அவர் ஆணோ பெண்ணோ, தழுவி அமைப்பர், மாற்றி அமைப்பர், செயல்படுத்துவர். அஃது, இக்கால நபர் தன்னைச் சூழ்ந்துள்ள செயல்முறையான சூழ்நிலையைப் பெரிதும் பொருத்தது. கொள்கை அளவில், காலத்தாலும் தேவைகளாலும் வேறுபடும் பரந்துள்ள தேர்வு வாய்ப்புகள் உள்ளன. இறைவனைப் பற்றிய இயேசுவின் செய்திக்குச் செவிமடுத்து, அந்த மெசியாத் தன்மையுடைய நற்செய்தியையே நாமும் மேலும் பறைசாற்றலாம். நாம் எதையும் செய்து முடிக்குமுன் இறைவனே நம்மிடம் திரும்புகிறார். நாம் எதையும் உழைத்துப் பெறாமலே, இறைவன் இலவசமாக அளிக்கிறார். மற்றொரு காலத்தில், பிறிதொரு சூழ்நிலையில் அதே கிறிஸ்தவன் இறையியல் கருத்துக்கு ஓய்வு அளித்து மனிதவியல் கூறுகளை வலியுறுத்தலாம். இறைவனின் கொடை மனிதப்பதிலைக் கோருகிறது. இந்தப் பதில் தெளிவாக மலைப்பொழிவில் எடுத்துக் கூறப்படுகிறது.

இறைவனின் உறுதியான இடையீட்டின் காலத்தில் உள்ளோம். நாம் ஏற்கெனவே பேறுபெற்றவர்கள். வாக்குறுதிகளின் காலத்தில் நாம் வாழவில்லை. நிறைவேற்றத்தின் மெசியாக் காலத்தில் வாழ்கின்றோம். ஆனால், லூக்காவோடு சேர்ந்து நாமும் துன்பங்கள், கொடுமைகள், போலி உறுதிப்பாடுகள் மற்றும் வலிமையுள்ள கய நிறைவுடைமை ஆகியவற்றோடு கூடிய நிலையற்ற, கடந்து போகும் ''இப்பொழுதைப்'' பற்றிப் பேசலாம். இந்த ''இப்பொழுதை'' முடிவில்லா வாழ்வின் எதிர்காலத்தால் எதிர்கொள்ளலாம்.

இவையெல்லாம் உண்மையான கிறிஸ்தவ, பாரம்பரிய உண்மைகள். இவை இயேசுவின் செய்தியோடு பொருந்தியுள்ளன. எல்லாவற்றையும் எப்போதும் ஒரே சமயத்திலும் கருத்தில் கொள்ள முடியாது அல்லது எடுத்துக்கூற முடியாது. அவற்றை அப்போஸ்தல முறையிலும், தங்களுக்காகவும், சுதந்தரமாகவும் தகுவழி காணும் திறனுடனும் பொருத்தமுடையதாக்கிச் செயல்படுத்தும் கிறிஸ்தவர்கள் பேறு பெற்றோர். இத்தகைய கிறிஸ்தவர்களைக் கொண்ட திருச்சபையும் பேறுபெற்றது.

மலைப்பொழிவைக் கவனமாய் வாசித்தால், அதன் அடிப்படை மாற்றத் தன்மை நம்மைப் பாதிக்காது போகாது. இரு கூற்றுகள் நமது கவனத்தை ஈர்க்கலாம்; மனதை உறுத்தலாம். ''மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில் நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்'' *(5:20)*. ''என்னை நோக்கி 'ஆண்டவரே ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை; மாறாக, விண்ணுலகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்'' *(7:21)*. இதே அடிப்படை மாற்றம் வீடு பற்றிய இறுதியான உவமையிலும் காணப்படுகிறது. காலமுடிவில் மக்கள்

பிரிக்கப்படுவர். அதற்குப் பயன்படும் ஒரே ஒப்பளவு சாதனம் இயேசுவின் வார்த்தைகளைக் கடைப்பிடிப்பதாகும்; அதாவது சிறந்த நெறியை வாழ்க்கையில் செயல்படுத்துவதாகும். இதுவே வாழ்வுக்கு ஒரே வழியாகும். செயல்படுத்தாமல் வெறுமனே செவிமடுப்பது அழிவிற்கு இட்டுச்செல்லும். இஃது ஆசீர்கள் மற்றும் சாபங்கள் மற்றும் உடன்படிக்கை வாய்பாடுகளின் முடிவுகளை (உப 27-30) நமக்கு நினைவுபடுத்தும்.

நற்செய்தியாளர், அவரது காலம் மற்றும் உயிர்ப்புக்குப் பின்னுள்ள திருச்சபையின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இயேசுவின் வாக்குகளை மாற்றியமைத்துக் கூறுகிறார். நாம் இப்போது அனுபவிக்கும் மற்றும் காண்பனவற்றிலிருந்து வேறுபட்டவை அந்தச் சமூகத்திலும், கலாச்சாரத்திலும் உண்டு. மத்தேயு எடுத்துக்கூறும் முறை, இயேசுவின் வாக்குகளை மாற்றியமைத்து, நமக்குப் பொருந்தியதாக்கும் நமது சுதந்தரத்துக்கு வழிகாட்டுகிறது; அதை உறுதிப்படுத்துகிறது. மலைப்பொழிவின் அடிப்படைக்கூறுகள் எக்காலத்திற்கும் தூண்டவல்லன என்பதை யாரும் மறுக்க முடியுமா? ''சிறந்த நெறியை'' இயேசு வலியுறுத்துவது எக்காலத்திற்கும் உரியதாகும். சட்டத்தின் சொற்களுக்குப்பின் தங்களையே மறைத்துக் கொண்டு இறைவனது கட்டளையைக் குறைத்துக்கூறும், அதை உருத்திரித்துக் கூறும் மக்கள் இன்றும் உள்ளனர். பிறர் பார்க்க வேண்டுமென்று வெளிவேடம் போடுதலுக்கு எதிரான இயேசுவின் எச்சரிக்கைகள், நலந்தரும் கவலையற்ற நிலையைப் பரிந்துரைத்தல், அதே சமயத்தில் இறையரசையும் ''சிறந்த நெறியையும்'' தேடுதலுக்கு முதன்மை அளித்தலை வலியுறுத்துதல், பெயரளவுக்குக் கிறிஸ்தவர்களாக இருக்கும் நேர்மையற்ற கிறிஸ்தவர்களைத் தாக்குதல் ஆகியவை இன்றும் பொருந்தும். உள்ளார்ந்த நிலையும் புறச்செயலும் சேர்ந்து போக வேண்டும். ஒவ்வொருவனும் இறைவன்பால் முழு நேர்மை காட்ட வேண்டும். அதுபோலவே தன் அயலானுக்கும், சமூகத்திற்கும் கவனம் செலுத்த வேண்டும். இரண்டிற்கும் அளிக்கப்படும் அழுத்தங்கள் சேர்ந்து அமைய வேண்டும்.

இயேசு தீர்ப்பின் முன்னோக்கையும் எடுத்துக் கூறத் தவறவில்லை. அப்போது ஈடு செய்வதற்குக் காலந்தவறிவிடும். செயல்பட உறுதி எடுப்பதைத் தள்ளிப் போடுவது தவறானதும் ஆபத்தானதுமாகும் என்று வாசகர்கள் நன்கு உணர்வர். இந்த உலகில் வாழும் இப்போதே தேர்வு செய்யப்பட வேண்டும். அதைச் செயல்படுத்த வேண்டும். கிறிஸ்தவனாய் இருப்பது கிறிஸ்தவனாக வாழ்வதாகும்.

இப்பகுதியைப் போன்கேப்பரின் கருத்தோடு தொடங்கினோம்; அவரது கருத்தோடு முடிக்கலாம். அவர் மலிவான அருள் மற்றும் விலைமிக்க அருள் பற்றிக் கூறுவது இங்குச் சாலப் பொருந்தும். ''மலிவான அருள் நமது திருச்சபையின் கொடிய எதிரியாகும். பாவி பாவத்திலிருந்து அகல வேண்டும். பாவம் அவனிடமிருந்து அகல வேண்டும். இவ்வாறு பாவி ஏற்புடையவனாவது இல்லாது பாவத்தை நியாயப்படுத்துவது மலிவான அருளாகும். அது மனத்துக்கம் கோராமல் மன்னிப்பைப் போதித்தலாகும். திருச்சபையின் ஒழுங்குமுறையில்லாது திருமுழுக்காகும்; பாவ அறிக்கையில்லாது நற்கருணையில் பங்கு பெறுவதாகும்; சொந்தப் பாவ அறிக்கையில்லாது மன்னிப்புப் பெறுவதாகும். அது சீடர் தன்மையில்லாத அருளாகும்; சிலுவையை உள்ளடக்காத அருளாகும்; மனிதனான உயிருள்ள இயேசு கிறிஸ்து இல்லாத அருளாகும். விலைமிக்க அருள் இயேசுவின் அழைப்பாகும். அதன் விளைவாக சீடர் தன் வலைகளையும் விட்டுவிட்டு அவரைப்பின் செல்வர். அது விலைமிக்கது; ஏனெனில், அஃது ஒருவருடைய உயிரையே விலையாகக் கோருகிறது. அது மனிதனுக்கு ஒரே உண்மையான வாழ்வை அளிப்பதால் அஃது அருளாகும்.''

மல்கிசுவா (MALCHISHVA - என் அரசன் காப்பாற்றுகிறார்)

இவர் அபினோவாம் வழியாக, சவுலுக்குப் பிறந்த மூன்று புதல்வர்களில் கடைசியானவர். கில்போவா மலையில் நடந்த போரில் இவர் பெலிஸ்தியரால் கொல்லப்பட்டார் (1 சாமு 14:49; 31:2; 1 நாள் 8:3; 9:39; 10:2).

மல்கியா (MALCHIAH, MALCHIJAA - யாவே அரசனாவார்)

1. இவர் ஒரு கேர்சோமிய லேவியர் ஆவார். ஆலயத்தின் இசையாளராக இருந்த ஆசாபின் மூதாதையர் ஆவார் (1 நாள் 6:40).

2. இவர் தாவீது அரசன் காலத்தில் வாழ்ந்த ஒரு குருவாகவோ, குருவின் குடும்பமாகவோ இருக்க வேண்டும். ஆலயத்தில் குருக்களின் ஐந்தாவது பிரிவிற்குத் தலைவர் (1 நாள் 24:9). குரு அதாயாவின் முன்னோர். இவரது குடும்பத்தினர் பாபிலோனிய நாடு கடத்தலுக்குப்பின் உள்ள எருசலேமின் குடிகளாக இருந்தனர் (1 நாள் 9:12; எஸ் 2:38; நெகே 11:12).

3. இவர் ஓர் இளவரசன். இவரது சிறையில்தான் எரேமியா அடைத்து வைக்கப்பட்டிருந்தார் (எரே 38:6). எரே 21:1;38:1-இல் கூறப்படும் குருவும் ஆலய முக்கிய அதிகாரியுமான பஸ்கூரின் தந்தையாக இருக்கலாம்.

4. எஸ்ராவின் காலத்தில் அன்னிய நாட்டு மனைவியை விலக்கிவிட வேண்டியிருந்த யூதர்களில் இவரும் ஒருவர்; பரோசுவின் புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:25).

5. எருசலேமின் சுவர்களைக் கட்டியெழுப்ப நெகேமியாவுக்கு உதவியவர்களில் ஒருவர். இவர் ஆரிமின் மகன் (நெகே 3:11). இவர் எஸ்ரா 10:31-இல் கூறப்படும் அன்னிய மனைவியை விலக்கிவிட்டவர்களில் ஒருவராக இருக்கலாம்.

6. நெகேமியா கட்டிய சுவருக்கு உதவியவர்களில் இவரும் ஒருவர். இவர் இரேக்கபுவின் மகன் (நெகே 3:14).

7. நெகேமியாவின் காலத்தில் எருசலேம் சுவரில் வேலைப்பாடுகள் செய்த ஒரு பொற்கொல்லர் இவர் (நெகே 3:31).

8. நெகேமியா ஆளுநராக இருந்த போது மீண்டும் எழுப்பப்பட்ட எருசலேம் சுவர் புனிதப்படுத்திய சடங்கில் பங்கு பெற்ற குரு இவர் (நெகே 12:42).

9. எஸ்ரா மக்கள் முன்னிலையில் சட்டங்களை வாசித்தபோது அவர் அருகில் நின்றவர்களில் இவரும் ஒருவர் (நெகே 8:4). அவர்களனைவரும் பொது நிலையினராக இருந்திருக்க வேண்டும்.

10. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஒருவர், அல்லது குரு குலத்தின் பிரதிநிதிகளில் ஒருவர் (நெகே 10:3).

மல்கியேல் (MALCHIEL)

இவர் பெரியாவின் மகனும், ஆசேரின் பேரனுமாவார் (ஆதி 46:17; 1 நாள் 7:31). மல்கியேலியரின் முன்னோராவார் (எண் 26:45).

மல்கிராம் (MALCHIRAM - எனது அரசர் உயர்த்தப்பட்டார்)

இவர் எக்கோனியாவின் மகன் (1 நாள் 3:18).

மல்க்காம் (MALCAM)

இவர் பென்யமின் இனத்தைச் சேர்ந்தவர். சகரயிம், ஓதேசு ஆகியோரின் புதல்வன் (1 நாள் 8:9).

மல்யுத்தம் (WRESTLING)

போர்களில் ஆயுதங்கள் வளர்ச்சியுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்ட காலத்திலும் கூட, முன்பு நடந்த சண்டைகளைப்போல, கைகளே பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. நேருக்குநேர் கை கலந்து போராடி வீரர்கள் வெற்றிவாகை சூடினர் அல்லது தோல்வியுற்றனர். கைகளால் செய்த இப்போர் முறை பிற்கால மக்களால் வீர விளையாட்டாக நடத்திக் காட்டப்பட்டது. யாக்கோபு வானகத் தூதர் ஒருவருடன் மல்யுத்தம் செய்கிறார் (ஆதி 32:25-33).

மல்யுத்தத்திற்கென ஆண்கள் சிறப்பான தொரு இடைவாரை அணிந்திருந்தனர் (ஆதி 38:18). இந்த இடைவாரே மல்யுத்தத்தில் பிடிபோடும் இடமாகக் கருதப்பட்டது. இந்த இடைவார் நேரிய வழிக்கு ஒப்பிடப் படுகிறது (எசா 11:5).

மல்லூக்கி (MALLUCHI)

யோயாக்கிம் காலத்தில் யோனத்தான் தலைமையில் இருந்த குருக்களின் ஒரு குடும்பமாகும். ஒருவேளை இப்பெயரை நெகே 12:2-இல் உள்ளபடி 'மல்லூக்கு' (6) என வாசிக்க வேண்டும்.

மல்லூக்கு (MALLUCH - ஆலோசகர், ஆளுநர்)

1. சாலமோனின் ஆலயத்தில் உள்ள ஒரு பாடகரின் மூதாதையர். இவர் ஒரு மெராரி லேவியர்; ஏத்தானின் முன்னோர் (1 நாள் 6:44).

2. இவர் பானியின் மகன். அன்னிய மனைவியை நீக்கிவிடக் கோரப்பட்டவர் (எஸ் 10:29).

3. இவர் ஆரிமின் மகன். அன்னிய மனைவியை விலக்கிவிடக் கோரப்பட்டவர் (எஸ் 10:32).

4. எஸ்ரா உடன்படிக்கையைப் புதுப்பித்தபோது கையொப்பமிட்டவர்களில் ஒருவர் (நெகே 10:4).

5. இவர் மக்களின் தலைவராக இருந்தவர். இவர் செருபாபேலோடு பாபிலோனிலிருந்து திரும்பியவர் (நெகே 10:27). இவர் 2 அல்லது 3-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

6. பாபிலோனிலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஒரு குரு (நெகே 12:2). இவர் 4-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

மல்லூசு (MALLUS)

இது 'பிராமு' ஆற்றின் முகத்துவாரத்தில், சிலிசியாவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்த ஒரு நகரம். அந்தியோக்கு எப்பிபான் மல்லூசு மற்றும் தர்சு நகர்களையும் தனது வைப்பாட்டிகளுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதை எதிர்த்து, இவ்விரு நகரங்களும் கிளர்ச்சி செய்தன (2 மக் 4:30).

மல்லோத்தி (MALLOTHI)

ஏமானின் மகன்களில் ஒருவராகிய இவர் ஆலயத்தில் குருக்களோடு, இசையுடன் இறைவாக்குரைக்க நியமிக்கப்பட்டவர். ஆலயப்பாடகர்களின் பத்தொன்பதாவது பிரிவின் தலைவர் (1 நாள் 25:4.26). ஆனால் இந்த வரியில் உள்ள பெயர்கள் வழிபாட்டுச் செபத்திற்குரியவை போல் தெரிவதால் ஆட்களைக் குறிப்பதாக இல்லாமலும் இருக்கலாம்.

மழித்தல் (SHAVING)

முகத்தையும், தலையையும் மழிக்கும் வழக்கம் எகிப்தியர்களிடையேயும், உரோமையர்களிடையேயும் இருந்ததைவிட எபிரேயர்களிடையே குறைவாக இருந்தது. மேலும், மழித்தல் பழக்கம் எபிரேயர்களிடையே, குறிப்பாக ஒருசில சூழ்நிலைகளில் இருந்தது. துக்கத்தின் அடையாளமாக யோபு தன் தலையை மழித்துக் கொண்டார் (யோபு 1:20). ஆனால் இதைக் குறிக்கும் எபிரேய, கிரேக்கச்சொற்கள் முடி வெட்டுதலையும் குறிக்கும் (ஆதி31:19; உப 15:19; எரே 7:29; மீக் 1:16; அ.ப. 21:24; 1 கொரி 11:5-6). ''உடல் முழுவதும் சிரைத்துக்''கொள்ளும்படியாக லேவியர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர் (எண் 8:7). யோசேப்பு, பாரவோனின் அவையில் தோன்றுமுன், முடி திருத்திக் கொண்டு வருவது பொறுத்தமானதாகக் கருதப்பட்டது (ஆதி 41:14). தலையில் தொழுநோய் அடையாளம் உள்ளவன், நோயுள்ள பகுதியை விட்டுவிட்டு, முடியை மழித்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது (லேவி 13:33; 14: 8-9). குருக்கள் தங்களுடைய தாடியினுடைய விளிம்புகளை மழித்தலுக்கு எதிராக எச்சரிக்கப்பட்டனர் (லேவி 21:5). நசரேய விரதத்தை எடுத்துள்ளவர் தங்களுடைய முடியை வளரவிட வேண்டும்; ஆனால், இறந்த உடலைத் தொட்டுவிட்டாலோ நசரேய நோன்பு முடிவதற்கு வந்தவுடனேயோ அவனுடைய

தலை முடி சிரைக்கப்பட வேண்டும் (எண் 6:9.18) போரில் பிடிபட்ட பெண்கள் இஸ்ராயேலர்களை மணம் செய்து கொள்வ தற்கு முன் தங்களுடைய பெற்றோர் களுக்குக் காட்டும் வருத்தத்தின் அடையாள மாக, தங்களுடைய தலைகளைச் சவரம் செய்து கொள்ள வேண்டும் (உப 21:12-13). சிம்சோனுடைய தலைமுடியை மழித்தல் அவனை இழிவுபடுத்தும் அடையாளமாக ஆகும் (நீதி16:17. 19.22). அதேபோல தாவீதின் பணியாளனின் ஒருபக்கத் தாடியை அம்மோனியர்கள் சிரைத்தனர் (2 சாமு 10:4-5; 1 நாள் 19:4). இறைவாக்கினர் கள் சவரம் செய்த தலைகளை உடனடியாக வரவிருக்கும் பேரழிவின் அடையாளமாகக் கருதினர் (எசா 6:10; எரே 41:5; 48:37). லேவிய குருக்கள் தங்களுடைய முடியை மழிக்கவும் கூடாது; நீண்ட முடி வளர்க்க வும் கூடாது (எசே 44:20).

மழை (RAIN)

(காற்றுடன் கூடிய மழை என லூக்கா நற்செய்தியில் கூறப்படுகிறது).

ஒவ்வொரு வருடமும் பாலஸ்தீனத்தில் மழை திசம்பர்த் தொடக்கத்திலிருந்து மார்ச்சு மாதத் தொடக்கம் வரை பெய்யும். இந்த மழைக் காலத்திற்கு முன்னும் பின்னும், மழை பெய்வதுண்டு. இவை முன்மாரி, பின்மாரி அல்லது வசந்தகால மழை என்று அழைக்கப்படும். கோடை காலம் பெரும் பாலும் மழையற்றதாகவே இருக்கும். பாலஸ்தீனத்தில் மேற்கிலிருந்து மேகம் எழும்புவது மழை வருவதற்கு அடையாள மாகும் (லூக் 12:54).

மறதி நிலவும் உலகு (FORGETFULNESS, LAND OF)

மனிதகுலம் போல (சங் 31:12; திருவுரை 9:5-6) கடவுள் இறந்தவர்களை மறந்துவிடு கிறார் (சங் 88:5); இறந்தவர்கள் புறக்கணிக் கப்படுவார்கள் என்று கூறும் மறதி நிலவும் உலகு என்ற காவியச் சொற்றொடர் செயோலை அல்லது இறந்தோர் உலகைக் குறிக்கிறது. இதற்கு மாறாக யோபு 14:21-22-இன்படி, இறந்தவர்கள் அவர் களுடைய வழித்தோன்றல்களால் மறக்கப் பட்டாலும் இறந்தவர்கள் ஒருவித உளவி யல் உணர்வைக் கொண்டிருப்பர்; தங்கள் விதியை நினைத்துக் கடுந் துயர் அனுப விப்பர்.

மறுத்தல், மறுதலித்தல் (DENY)

பொதுவான பொருளைத் தவிர்த்து (காண். அ.ப.4:16), இச்சொல் இரு சிறப் பான முறையில் பயன்பட்டுள்ளது. 1) கிறிஸ்துவை அறிக்கையிடுவதற்குப் பதி லாக அவரை மறுதலித்தல் (மத் 10:32-33). எருசலேமைச் சேர்ந்தவர்கள், பிலாத்துவின் முன் "புனிதமும் நீதியுமுள்ளவரை" மறு தலித்தனர் (அ.ப. 3:13-14). அவரைத் தெரியாது என்று கூறியதன் மூலம், பேதுரு உதட்டளவில் மறுத்த குற்றத்திற்கு ஆளாகி றார் (மாற் 14:16). ஆனால், அவரது இதயம் மாற்றமில்லாததாயும், அவரது நிலை மீட்பை மீண்டும் அடையக்கூடியதுமாயும் இருந்தது; ஆனால், கிறிஸ்துவை மறுதலிப் பவர்கள் மனுமகனால் அவரது தந்தையின் முன் மறுதலிக்கப்படுவர் (மத் 10:33; லூக் 12:9; 2 திமொ 2:12; தீத் 1:16; யூதா 4; 2 பேதுரு 2:1). தன்னை நம்பியுள்ளவர் களைக் காக்காத கிறிஸ்தவன் விசுவாசத் தையே மறுதலிக்கிறான் (1 திமொ 5:8). திருவெளி 2:13-இல் இதே சொற்றொடர், துன்பத்தின் கீழ், தடுமாறுவதைக் குறிப்பிடு கிறது (காண். திருவெளி 3:8). இறைப் பற்றின் ஆற்றலை மறுப்பது (2 திமொ 3:5) பக்தியின் வெளித்தோற்றத்தைக் கொண்டிருப்பதாகும். உண்மைக்கு ஒத்துப் போவதில் 1 யோவா 2:22-23-இன்படி தந்தையையும் மகனையும் மறுதலிப்பது, கிறிஸ்துவினுடைய உண்மையான மனிதத் துவத்தையே மறுப்பதாகும் (காண். 1 யோவா 4:2-3).

2. தன்னையே மறுப்பது (மத் 16:24; மாற் 8:24; லூக் 9:23) என்பது கிறிஸ்து தனது பிறப்பிலும், சிலுவை மரணத்திலும் தன் னையே வெறுமையாக்கியது போல் (பிலி 2:7-8), ஒருவர் தன்னலத்தையும், தனிப் பட்ட விருப்பங்களையும், கிறிஸ்துவின் மீது கொண்ட தங்குதடையற்ற பற்றுறுதி

யில் விட்டுவிடுவதாகும். ஆனால், கடவுள் தன்னையே மறுதலிக்க முடியாது (2 திமொ 2:13); அதாவது அவர் தமது பண்புக்கும் வாக்குறுதிக்கும் என்றும் உண்மையுள்ள வராய் இருக்கிறார்.

மறை சாட்சியர் (MARTYR)

1. மறைசாட்சி என்பது, சரித்திர வாயிலா கட்டும், நீதியின்படியாகட்டும் அல்லது மறை அர்ப்பணிப்பாகட்டும் வாழ்க்கை யினை எவ்வகையேனும் தியாகம் செய்யும் போது, இது சொல்லிலக்கணப்படி சாட்சி பகர்தல் என்றாகிறது. ஆனால், கிறிஸ்துவ மரபில் மறைசாட்சியர் என்னும் பெயர் இரத்தம் சிந்திச் சாட்சி பகர்ந்தவர்களுக்கு மட்டுமே கூறப்பட்டு வந்துள்ளது. புதிய ஏற்பாடு இந்தப் பொருளுக்கே சான்று பகர்கிறது (அ.ப. 22:20;திருவெளி 2:13; 6:9; 17:6). இயேசுவுக்கெனச் சான்று பகர்ந்து, அதில் பிரமாணிக்கத்தோடு ஊன்றி நின்று அதற்காக உயிரையும் அளிப்பவரே மறை சாட்சியர் (காண்க. அ.ப. 6:56) ஆவார்.

2. **கிறிஸ்து ஒரு மறைசாட்சியர்:** இயேசு வும், மிகவும் மேலான முறையில் கட வுளின் மறைசாட்சியர் ஆவார். அதன் விளைவாக மறைசாட்சியர்களுக்கெல்லாம் மூல மாதிரி ஆவார். தந்தையால் தனக்கு அளிக்கப்பட்ட திருப்பணிக்கு உண்மை யான அளவிடற்கரிய சாட்சியாகத் தம் மையே உவந்தளித்துப் பலியாக்குகிறார். புனித யோவான் கூறுவதுபோல, இயேசு தம் மரணத்தை ஏற்கெனவே அறிந்தவர் மட்டுமல்லர். தந்தைக்கு அளிக்கும் ஓர் உன்னத வணக்கமாக அதை அவராகவே ஏற்றுக்கொண்டார் (யோவா 10:18); தனக்கு மரணத்தீர்ப்பு அளிக்கப்பட்டபோது, "உண் மையை எடுத்துரைப்பதே என் பணி; இதற்காகவே பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன்" (18:37; காண். திரு வெளி 1:5; 3:14) என்று அறிவிக்கிறார்.

லூக்கா இயேசுவின் பாடுகளைக் கூறும் போது, மறைசாட்சியர் என்பதை விளக்கும் பண்புகளைச் சிறப்பித்துக் கூறுகிறார்: ஆழாத் துயருற்றபோது கடவுளின் அரு ளால் வலுப்படுத்தப்படுதல் (லூக் 22:43); பொல்லாப்புக்களுக்கும் குற்றச்சாட்டுகளுக் குமிடையே மௌனமாக, பொறுமையாக இருத்தல் (23:9); பிலாத்தும் ஏரோதும் அவருடைய மாசற்ற தன்மையை ஏற்றுக் கொள்ளுதல் (23:4.14தொ.22); தம்முடைய துன்பங்களைக்கூட பெரிதுபடுத்தாத தன்மை (23:28); மனம் திரும்பிய பாவியை ஏற்றுக்கொள்ளுதல் (23:43); பேதுருவுக்கும் (22:61), ஏன் தம்மைக் கொடுமைப்படுத்தும் கொலையாளிகளுக்குமே (22:51; 23:34) மன்னிப்பு வழங்கல் இவையனைத்தும் மறைசாட்சியரின் பண்புகளாக அமை கின்றன.

இன்னும் ஒரு படி ஆழ்ந்து நோக்கும் போது, புதிய ஏற்பாடு முழுவதுமே இயேசுவை முன்னர் எசாயா முன்னுரைத்த துன்புறும் ஊழியனாகக் காண்கிறது. இந்த முன்னோக்கில், இயேசுவின் பாடுகள் அவ ருடைய பணிக்கு அவசியமாகிவிடுகின்றன. அந்த ஊழியன் துன்புற்று மரணமடைந்து அதனால் 'பலரை நீதிமான்களாக்குவது' போல் (எசா 53:11), இயேசுவும் இறப்பின் வழிநின்று 'மக்களுக்குப் பாவத்தின் விடு தலையாக மீட்பினைக் கொணர' வேண்டியி ருந்தது (மத் 20:28). 'நான் இதற்காகவே வந்தேன்' என்று பல தருணங்களில் கூறும் இயேசு இதையே விளக்குகிறார். கடவு ளுடைய மீட்புத்திட்டம் அவருடைய சாட் சியின் பாடுகளினாலும், மரணத்தினாலும் நிறைவேறுகிறது (மத் 16:21; காண். 26:54.56; லூக் 17:25; 22:37; 24:7.26.44). மேலும், இறைவாக்கினர்கள் எல்லாரும் கொடுமைப்படுத்தப்பட்டு, கொலை செய் யப்படவில்லையா (மத் 5:12 இணை; காண். 23:30தொ; இணை; அ.ப. 7:52; 1 தெச 2:15; எபி 11.36தொ)? இஃது ஏதோ தற்செயலாக நடந்த ஒன்றாகக் கருத வாய்ப் பில்லை. இயேசு இதைக் கடவுளின் திட்டத் தின் பகுதியாகவும், இத்திட்டம் தம்மில் முழுமை அடைவதாகவும், காண்கிறார் (மத் 23:31தொ). எனவேதான் அவர் ஒரு 'மனத்துணிவோடு' எருசலேம் நோக்கிச் செல்கிறார் (லூக் 9:51); ஏனெனில், 'எருச

லேமுக்கு வெளியே ஓர் இறைவாக்கினரும் மடிவதில்லை' *(13:33).*

இயேசுவின் பாடுகள், பழைய பலிப் பொருள்கள் அனைத்திற்கும் பதிலாக, இயேசுவையே பாவத்தின் பரிகாரப் பலிப் பொருளாக்கின (எபி 9:12 தொ) ''இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு என்பது இல்லை'' (எபி 9:22) எனும் மறைசாட்சிக் கான விதியினை அவரில் விசுவசிப்பவர் ஒவ்வொருவரும் அறிவதொன்றாகும். கிறிஸ்துவ மறைசாட்சியருக்கெல்லாம் அரசியாக மரியாள் பின்னர்ப் போற்றப்பட்டாள் என்றால், அஃது இயேசுவின்பாடுகளில் அவளுக்கிருந்த மிகவும் நெருங்கிய தொடர்புதான் (யோவா 19: 25-27; காண். லூக் 2:35) காரணம் என்று அறிகிறோம்.

3. கிறிஸ்துவ மறைசாட்சி: கிறிஸ்துவினுடைய மாட்சிமை மிக்க மறைசாட்சி திருச்சபையை நிறுவியது. இயேசுவே ''நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்'' (யோவா 12:32) என்று கூறியிருக்கிறார். கிறிஸ்துவின் உடலாகும் திருச்சபை தன்னுடைய பங்காக மனித மீட்பின் தேவைக்கு இறைவனுக்கு முன் இரத்தம் சிந்தி சாட்சி பகர அழைக்கப்பட்டுள்ளது. முன்னர் யூதகுலத்தில், முக்கியமாக மக்கபேயர் காலத்தில் பலர் வேதசாட்சியினர் இருந்தனர் (2 மக் 6-7). ஆனால், கிறிஸ்துவ திருச்சபையில் மறைசாட்சிக்குப் புதிய பொருள் தோன்றியது. இயேசுவே வெளிப்படுத்தியது போல, மறைசாட்சியென்பது கிறிஸ்துவை முழுவதுமே பின்பற்றி, அவருடைய சாட்சிக்குச் சான்று பகர்ந்து அவருடைய மீட்புப் பணியில் பங்குகொள்வதாகும். ''பணியாளர் தலைவரை விடப் பெரியவர் அல்லர்... என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள் என்றால் உங்களையும் துன்புறுத்துவார்கள்'' (யோவா 15:20). அவரோடு நெருங்கிப் பழகிய மூன்று தோழர்களிடம், அவர்கள் தம்முடைய பாடுகளின் வழியைப் பின்பற்றப் போவதாக முன்னுரைத்தார் (மாற் 10:39 இணை; காண். யோவா 21:18 தொ). விதை விழுந்து மடிந்தால் மட்டுமே மிகுந்த பலனளிக்க வல்லதாயிருக்கிறது (யோவா 12:24) என்று எல்லோருக்குமே விளக்கம் கூறினார். பாடுகளைத் திரும்பவும் உயிர்ச்சித்திரமாகச் செயல்படுத்திய முதல் மறைசாட்சியான ஸ்தேவான் தம் மரணத்தினால் முதன்முதல் திருச்சபையைப் பரவச்செய்தார் (அ.ப. 8:4தொ; 11:9), பவுலை மனந்திருப்பினார் (22:20). புதிய ஏற்பாட்டின் கடைசியில் காணப்படும் திருவெளிப்பாடு நூல் முழுமையும் மறைசாட்சியர்களின் புத்தகமாக அமைந்துள்ளது. உண்மையானதும் உயரியதுமான ஒரே சாட்சியின் வழிநின்று (திருவெளி 3:14), தம் உயிரையும் ஈந்து திருச்சபைக்கும் உலகுக்கும் சான்று பகர்ந்தவர்கள் இவர்கள். ஆண்டவரின் சாட்சிகளான இருவரைப் பற்றியதாக அவர்கள் படும் துயர்களையும் அடையும் மகிமையையும் எடுத்துக்கூறுவதில் (திருவெளி 6:9தொ; 7:14-17; 11:11தொ; 20:4தொ) மறைசாட்சிகள் அனைவருடைய துன்பங்களையும், அவர்கள் அதனால் அடைந்த மாட்சியையும் பற்றிப் புகழ்பாடும் ஒரு நூலாக அமைந்துள்ளது.

மறைநூல் வாசகப்பட்டை (PHYLACTERIES)

மறைநூலின் வசனங்கள் வைக்கப்பட்டு, செபிக்கப்படும்பொழுது முன்நெற்றியிலும், கைகளிலும் கட்டிக்கொள்ளும் ஒருவித சிறிய கூடு. இதைக் குறிக்கும் கிரேக்கச் சொல், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும், அதற்கு முன்னும் ஒரு பாதுகாப்புப் பொருளை, தாயத்தைக் குறித்தது. மறைநூல் அறிஞரும் பரிசேயரும் ''தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்கவேண்டும் என்றே செய்கிறார்கள். அவர்கள் தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகின்றார்கள்; அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகின்றார்கள்'' (மத் 23:5) என்று இயேசு குற்றஞ் சாட்டுகிறார். வீண் ஆடம்பரத்திற்காகவே அவர்கள் தேவையில்லாமல் மறைநூல் வாசகப்பட்டைகளையும், குஞ்சங்களையும் பெரிதாகக் கட்டுகிறார்கள் என்று இயேசு குறிப்பிடுகிறார். மறைநூல் வாசகப்பட்டைகளைக் கட்டும் பழக்கத்தை

அவர் கண்டிக்கவில்லை; மாறாக, அப்பழக்கத்தைக் கெடுக்கும் தீய எண்ணத்தையே கண்டிக்கிறார்.

மறைநூல் வாசகப்பட்டைகள் என்பதன் மூலம் மத்தேயு, சிறிய தோல் செபக் கூட்டைக் குறிக்கும் எபிரேயச் சொல்லின் அரமேயப் பன்மைச் சொல்லையே குறிப்பிடுகிறார். பதின்மூன்று வயதுக்கு மேற்பட்ட யூத ஆண்கள் அனைவரும் காலைச் செபத்தின்பொழுது செபத் தாயத்தினை அணிய வேண்டுமென மிஷ்னா கூறுகிறது. இவை தோலால் செய்யப்பட்டவையாகும். இவை தலையிலும், இடக்கையிலும் அணியப்பட்டன.

தலையில் அணியும் பட்டை யாத் 13:1-10.11-16; உப 6:4-9; 11:13-21 எனும் நான்கு விவிலியப் பகுதிகளை வைப்பதற்காக, நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை வைக்கப்படும் வரிசைக் கிரமம் குறித்துச் சந்தேகம் நிலவுகிறது. இந்த நான்கு வாசகப்பகுதிகளில், இப்பட்டையை அணியவேண்டியதன் கட்டளைகளை யூதர்கள் கண்டு பிடித்தனர். உறுதியுடைய கெட்டியான தோலுடன், இந்தப் பட்டை, பன்னிரு இஸ்ராயேல் கோத்திரங்களைக் குறிக்கும் பொருட்டு, பன்னிரு தையல்களால் தைக்கப்பட்டிருந்தது.

கையில் அணியும் பட்டை, ஒரேயொரு பிரிவுடன் ஒரு தோல் கூட்டில் சில விவிலியப் பகுதிகள் எழுதப்பெற்று, அதனில் கொண்டிருந்தது.

இப்பட்டைகளில் உள்ள வாசகங்கள் தோரா முழுவதையும் நினைவுபடுத்துவதாகக் கருதப்பட்டது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூதர்கள் சிலர் இப்பட்டைகளைத் தீமையிலிருந்து காக்கும் தாயத்தாகக் கருதியதாகத் தெரிகிறது.

மறைந்திருந்த புதையல் (HIDDEN TREASURE)

விண்ணரசு நிலத்தில் மறைந்துள்ள புதையலுக்கு ஒப்பாகும் (மத் 13:44-45). இறையரசு மனித எதிர்பார்ப்புகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவனது அருட்கொடை. இந்த இறையரசு இயேசுவிலே வந்துவிட்டது. இருப்பினும் இறுதி நாளிலே அது முழுமையாக வெளிப்படும். அந்நாளை நினைத்து நாம் ஆவலோடு காத்திருக்க வேண்டும். இறையரசை இயேசு புதையலுக்கு ஒப்பிட்டு அதன் மூலம் நமக்குக் கிடைக்கும் அளவற்ற பலனை நினைவுபடுத்துகிறார். அதனை அடைய எத்தகைய தியாகத்தையும் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும் எனவும் விரும்புகிறார்.

மறையுண்மை (MYSTERY)

I கிரேக்கமொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தில் மறையுண்மையைக் குறிக்கும் 'மிஸ்டேரியோன்' என்ற கிரேக்கச் சொல் காலத்தால் பிந்திய சில நூல்களில் தான் காணப்படுகின்றது (தோபி, யூதித்து, ஞானம், சீராக்கு, தானியேல், 2 மக்கபேயர்). இதன் அடிப்படையான பொருள் ''இரகசியம்''. புதிய ஏற்பாட்டில் ஏற்கெனவே இஃதோர் இறையியல் கலைச் சொல்லாகக் கையாளப்படுகின்றது. ஆனால், கிரேக்கப் பண்பாட்டில் இச்சொல் பரவலாக ஆளப்படுகின்றது. ஆனால், கிரேக்கப் பண்பாட்டில் இச்சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுவதால் (தத்துவம், மறைவழிபாடு, அறிவுநெறி, மாயவித்தை) இதன் சரியான பொருளைக் கருத்தில் கொண்டு தவறான விளக்கங்களைத் தவிர்க்க வேண்டும்.

II **இறை இரகசியங்களின் வெளிப்பாடு:** இறைவாக்கினர் காலத்திலிருந்து இறை இரகசியங்களைப் பற்றி இஸ்ராயேலர் அறிந்திருக்கின்றார்கள். இவை பெரும்பாலும் மனித வரலாற்றில் இறைவன் செயல்படுத்தும் மீட்புத்திட்டத்தைப் பற்றியன. இறைவெளிப்பாடும் இந்த இரகசியங்களைப் பற்றியதே. ''தம் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களுக்குத் தம் மறைபொருளை (இரகசியத்தை) வெளிப்படுத்தாமல், இறைவனாகிய ஆண்டவர் ஏதும் செய்வதில்லை'' (ஆமோ 3:7; காண். எண் 24:4.16). இக்கருத்து சிறப்பாக இரண்டாம் எசாயா நூலில் காணப்படுகின்றது. இஸ்ரா

யேலரின் வரலாற்றின் ஊழ் இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்ட இறைத்திட்டத்தை ஒட்டியே இருக்கும். இதுவே காலத்தின் இறுதியில் மீட்பு வருவதை உறுதிப்படுத்துகிறது (எசா 41:21-28). தானியேல், ஞானாகமம் என்ற நூற்களிலே காணப்படும் மறையுண்மை என்பதின் கலைச்சொல்லியல் மற்றும் சமயக்கருத்தின் முன்வரலாறு இத்தகையதாகும்.

2. தானியேலும் ஞானாகமும்:

அ) தானியேல் ஆகமம்: இறை இரகசியங்களை வெளிப்படுத்தும் ஒரு வெளிப்பாட்டு நூலாகும் (தானி 2:18 தொ. 27 தொ. 47; 4:6). மற்றப் போலிநூல்களுக்கு மாறாக, இந்த இரகசியங்கள் உலகின் தோற்றத்தைப் பற்றியன அல்ல; மாறாக ஒரு திட்டமான முடிவை நோக்கிச் செல்லும் வரலாற்றுப் போக்கிலே நிகழப்போவதைப் பற்றியன; அதாவது, மீட்புத் திட்டத்தின் மறையுண்மைகளாகும். இந்த இரகசியங்கள் வானுலகில் எழுதப்பட்டிருக்கின்றன. இவை தப்பாமல் நிறைவேறும். இறைவன் அவற்றைக் கனவுகளிலோ, காட்சிகளிலோ, தேவதூதர்கள் வழியாகவோ வெளியிடலாம் (காண் 2; 4; 5; 7; 8; 10-12). மனித அறிவினால் எதிர்காலத்தைப் பற்றி இந்த அளவில் தெரிந்து கொள்ள முடியாது; இறைவனே ''மறையுண்மைகளை வெளிப்படுத்துபவர்'' (2:28. 47). இறுதி நாட்களில் நிகழப்போவது என்ன என்று அவர் முன்கூட்டியே அறிவிக்கின்றார் (2:28). வெளிப்பாட்டிலே பொதுவாக மனிதருக்குப் புரியாத புதிர்கள் பல இருந்தாலும், குறிப்பிட்ட சிலருக்கு ஞானமும் (காண். 5:11), தனிப்பட்ட திறனும் தருகின்றார். இவர்களை எந்த இரகசியமும் குழப்பமடையச் செய்வதில்லை (4:6). மீட்பிற்கு முன்னோடியாக இருக்கும் தன் தீர்ப்புக்களையே அவர் இவ்வாறு வெளிப்படுத்துகின்றார். இவைகூட இறைவாக்கினரின் நூல்களில் வெகுகாலமாக மறைந்திருக்கின்றன. எரேமியாவின் நூலைப் படித்துக் கொண்டிருக்கும் தானியேலுக்குக் கபிரியேல் என்ற தலைத்தூதுவர் எண் குறிகளின் அடிப்படையில் அமைந்த எழுபது வாரங்களைப் பற்றிய இரகசியத்தை (தானி 9) வெளிப்படுத்துகின்றார். ஆகவே, இறைவனது இரகசியத் திட்டங்களைப் புதிரான அடையாளங்களாக மாற்றும் கனவுகள் அல்லது காட்சிகள்போல மறைநூலும் சோதித்தறியப்படுகிறது.

ஆ) ஞானாகமம்: இது மற்ற சமயத்தினரின் வழிபாட்டில் ''மறையுண்மைகள்'' (ஞான 14:15.23) இருப்பதை அறிந்திருக்கின்றது. ஆனால், தானியேல் ஆகமத்தைப் போலவே ஞானாகமமும் இறைவனால் வெளிப்படுத்தப்படும் இவ்வுலகைக் கடந்த உண்மைகளையே, அதாவது நல்லோர்களுக்குக் கைம்மாறு அளிப்பதில் இறை இரகசியங்கள் (2:22), இறைஞானத்தின் தோற்றத்திற்கு உறவான இரகசியங்கள் ஆகியவற்றையே மறையுண்மை என்று குறிக்கிறது. இம்மறையுண்மைகள் மீட்பியலையும் (மீட்புத்திட்டத்தின் நிறைவான ''மறு உலகு''), இறையியலையும் (இறைவனின் உட்பொருள்) சார்ந்தன. போலி நூல்களும் இவற்றைப் பற்றியே பேசுகின்றன.

3. வேதாகமத்திற்குப் புறம்பான யூத மரபு:

அ) போலி வெளிப்பாட்டு நூல்கள்: தானியேல் ஆகமத்தைப் போல, போலி நூலாகிய ஏனோக்கு ஆகமமும் ''புனிதர்களின் இரகசியங்களை அறிந்திருந்ததாய்'' எண்ணப்படுகின்றது. வருங்கால நிகழ்ச்சிகளையெல்லாம் வர்ணித்த வானக ஏடுகளை அவர் வாசித்திருந்தார். அதன் மூலமாக, நல்லோர்க்கும் தீயோர்க்கும் என்ன முடிவு என்ற மறையுண்மையை அவர் அறிந்திருந்தார். மறையுண்மை என்பது இந்நூலில் இறைத்திட்டத்தின் இறுதிக்காலச் செயற்பாட்டைக் குறிக்கின்றது. எஸ்ரா, பாரூக்கு ஆகியோரின் வெளிப்பாட்டு நூல்கள் இச்சொல்லை அதே பொருளிலேயே எடுத்தாள்கின்றன.

ஆ) கும்ரான் ஏடுகள்: நல்லோர் தீயோர் இவர்களின் முடிவைத் தீர்மானிக்கும் வகை

யில் இறைவனின் வருகையின்போது நிகழக்கூடிய மறையுண்மைகளை அறிவதில் கும்ரான் வாசகங்களும் பேரார்வம் காட்டுகின்றன. நீதியின் போதகர் அவர்களுக்குத் தந்துள்ள விளக்கத்தின்படி அவற்றின் வர்ணனையை இறைவாக்கு நூல்களில் தேடுகின்றனர். ஏனெனில், இறைவன் தன்னுடைய ஊழியர்களாகிய இறைவாக்கினரின் மொழிகளில் பொதிந்துள்ள மறையுண்மைகள் எல்லாவற்றையும் அவருக்குக் கற்பித்திருக்கின்றார். இறையூக்கம் பெற்ற இந்த விளக்கவுரையானது ஒரு புதிய வெளிப்பாட்டிற்கு ஒத்ததாகும். ''இறைவனின் மறையுண்மைகள் பெரும் வியப்புக்குரியவை; ஆகவே, இறுதி நாட்கள் இறைவாக்கினர் முன்னறிவித்ததைவிட நீண்டிருக்கும்''. ஆனால், ''நேர்வழி நடப்பவர்கள்'' மட்டுமே இவ்வுண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். இது தீயோருக்கும் குழுவைச் சேராதவர்களுக்கும் அறிவிக்கக் கூடாத மறைபொருளான வெளிப்பாடாகும்.

III **புதிய ஏற்பாடு**

1. இயேசுவின் படிப்பினை: ஒத்தமை நற்செய்தி நூல்களில் 'மறையுண்மை' என்ற சொல் ஒரே ஒரு முறைதான் பயன்பட்டிருக்கின்றது; யோவான் நற்செய்தி நூலில் அதுகூட இல்லை. ''இறையாட்சியின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. புறத்தே இருப்பவர்களுக்கோ எல்லாம் உவமைகளாய் இருக்கின்றன'' (மாற் 4:11) என்று விதைப்போனின் உவமையைப் பற்றி விளக்கம் கேட்ட சீடர்களுக்கு இயேசு மறுமொழி கூறுகிறார். அவர் தனக்குச் செவிமடுப்போரிடையே இரு சாராரைக் காண்கின்றார். மறையுண்மையைப் புரிந்து கொள்பவர்கள்; எசாயா கூற்றுப்படி (6:9 தொ; காண். மாற் 4:12) தங்களுடைய கடின மனத்தால் புரிந்து கொள்ள இயலாது ''புறத்தே இருப்பவர்கள்.'' இவ்விரண்டாம் சாராருக்கு இறையரசின் வருகை ஒரு புதிராகவே இருக்கின்றது. உவமைகளால் கூட அவர்களுக்கு உதவி இல்லை. ஆனால், அவருடைய சீடர்களுக்கு மறையுண்மை அறிவிக்கப்படுகின்றது; உவமைகள் விளக்கப்படுகின்றன. இம்மறையுண்மை யாது? முன்னாள் இறைவாக்கினர் அறிவித்த இறைத்திட்டத்தின்படி இறையரசின் வருகைதான் இம்மறையுண்மை ஆகும். இங்கு யூதரின் வெளிப்பாட்டு நூல்களில் உள்ள ஓர் அடிப்படையான கருத்தை எடுத்தாள்கின்றார் இயேசு: இவ்வுலகிலே இறை அரசை நிறுவி, ''உலகத்தோற்ற முதல் மறைந்திருந்த'' (மத் 13:35) அதையடுத்த இறை இரகசியங்களை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துவதுதான் இயேசுவின் பணி. அவர் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார். அவரோடு இறைவெளிப்பாடு நிறைவடைகிறது. இறையரசின் மறையுண்மை இவ்வுலகில், இயேசுவில் பிரசன்னமாகின்றது. ஆனால், அதே சமயத்தில் மனுகுலம் இரண்டு பகுதியாகப் பிரிகின்றது. சீடர்கள் அவரை ஏற்றுக்கொள்கின்றனர்; ''புறத்தே உள்ளவர்'' ஏற்றுக்கொள்ளவில்லை. மறையுண்மை மறைவானதன்று; அனைவருக்குமே அறிவிக்கப்படுகின்றது (காண். மாற் 1:15 இணை; 4:15 இணை). ஆனால், உவமைகளின் உட்பொருள், புரிந்து கொள்ள முடிந்தவர்களுக்கு மட்டுமே விளக்கப்படுகின்றது (காண். மத் 13:9.43). இவர்கள் கூட தங்கள் அறிவினால் அன்று, இறைவனின் அருட்கொடையினாலேயே மறை உண்மைகளைப் புரிந்துகொள்கின்றார்கள்.

2. பவுலின் படிப்பினை: யூதர் வெளிப்பாட்டு இலக்கியத்தின் பின்னணியில்தான் பவுலும் 'மறையுண்மை' என்ற சொல்லை எடுத்தாள்கின்றார். இச்சொல் கரைகாணாக் கடல்போன்ற ஓர் ஆழ்ந்த, எடுத்துரைக்க முடியாத உண்மையைக் குறிக்கின்றது. இதன் உட்பொருளும் நற்செய்தியின் உட்பொருளும் ஒன்றுதான்: அதாவது, இயேசுவின் இறப்பாலும் உயிர்ப்பாலும் மீட்புப் பணி நிறைவேறி, வார்த்தையின் அறிவிப்பால் வரலாற்றில் நிலைபெறுதல். இஃது இறைவெளிப்பாட்டின் துணையின்றி மனிதரால் அறியமுடியாத இறை இரகசியமாகும்

(காண். 1 கொரி 14:2). அறிவிக்கப்பட்ட மீட்பின் இறுதி நிலையை மட்டுமன்று, அது சிறிது சிறிதாக நிறைவேறும் பல படிகளையும் இது குறிக்கின்றது. இப்படிகள் இவ்வுலகில், இயேசுவின் வருகை, திருச்சபையின் காலம், காலத்தின் நிறைவு ஆகியவையாகும். ஒவ்வொரு கிறிஸ்துவனும் அறியவும், தியானிக்கவும் விரும்பும் மறையுண்மை இதுதான் *(கொலோ 2:2; எபே 1:15தொ; 3:18 தொ).*

அ) காலத்தில் மறையுண்மை மலர்தல்: தான் எழுதிய முதற் கடிதங்களில் மறையுண்மையின் பல அம்சங்களை ஒவ்வொன்றாக பவுல் கூறுகிறார் *(2 தெச; 1 கொரி; உரோ).* பவுலுக்கு, இறைவனின் மறையுண்மையை எடுத்தியம்புதலும் *(1 கொரி 2:1),* சிலுவையில் அறையப்பட்ட *(காண். 1:23; 2:2)* இயேசுவின் நற்செய்தியை *(1:17)* அறிவித்தலும் ஒன்றே. யூதருக்கு இடையூறாகவும், கிரேக்கர்களுக்கு மடமையாகவும், விசுவசிப்போருக்கு ஞானமாகவும் தோன்ற, அவர் கொரிந்தியருக்கு அறிவித்த நற்செய்தி இதுதான் *(1:23 தொ).* மறையுண்மையாகும் இத்தெய்வீக ஞானம் *(2:7)* அதுவரை மறைத்து வைக்கப்பட்டு இருந்தது. இவ்வுலகில் ஆதிக்கம் செலுத்துவோர் யாரும் அதைக் கண்டுகொள்ளவில்லை *(2:8தொ).* இறையின் உள்ளாழத்தையும் உய்த்துணரும் ஆவியால் நமக்கு வெளிப்படுத்தப்பட்டது *(2:10தொ).* தமது ஆற்றலை மட்டும் நம்பியிருக்கும் உடல் சார்ந்த மனிதருக்கு எட்டாத அஃது, ஆவியால் கற்பிக்கப்பெறும் ஆன்மீக மனிதருக்குப் புலப்படும் *(2:15).* ''கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளராகிய'' *(4:1)* பவுல் விசுவாசத்தில் முதல்நிலையைக் கடந்தவர்களுக்கன்று *(3:1தொ),* நிறைவு பெற்றவர்களிடையே *(காண். 2:6)* ''தேவ ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு ஆவிக்குரியவற்றை விளக்கி உரைக்கிறார்'' *(2:13).* அவர்கள் இம்மறையுண்மையிலே புதைந்திருக்கும் அருட்கொடைகள் *(2:12)* அனைத்தையும் தெரிந்துகொள்கிறார்கள். நற்செய்தி அனைவருக்கும் அறிவிக்கப்படுகின்றது. ஆனால், அதன் உட்பொருளைப் படிப்படியாக ஆழ்ந்து உணர கிறிஸ்துவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

விசுவசிப்போரின் மீட்புக்காகச் செயலாகும் இம்மறைத்திட்டம் ''அக்கிரமத்தின் மறைந்த ஆற்றலோடு'' *(2 தெச 2:7)* போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது. இந்த ஆற்றல் சாத்தானோடு தொடங்கி எதிர்க்கிறிஸ்துவின் வெளிப்பாட்டிலே முடிவுறும். மீட்புத்திட்டம் வரலாற்றில் பல புதிரான வழிகளில் செயல்படுகின்றது. யூதரல்லாதார் ஈடேற்றமடைய யூதரில் ஒரு பகுதியினருடைய உள்ளங்கள் கடினமாக வேண்டியிருந்தது *(உரோ 11:25).* ஆனால், தெரிந்தெடுக்கப்பட்ட மக்களின் வீழ்ச்சியை நல்லதொரு விளைவுக்குப் பயன்படுத்தியது அறிவுக்கு எட்டாத இறைஞானம் *(11:33).* திட்டத்தின் முடிவில் கிறிஸ்து வெற்றி பெறுவார்; இறந்தோர் உயிர்ப்பர்; வாழ்வோர் அவரது விண்ணக வாழ்வில் பங்கு பெறும் வகையில் புத்துருப் பெறுவர் *(1 கொரி 15:51 தொ).* கிறிஸ்துவின் வருகையிலிருந்து அவருடைய இறுதி வெற்றிவரையுள்ள புனித வரலாறுதான் ''இறைவனின் மறைத்திட்டமாகும்''. ''ஊழி ஊழிக்காலமாக மறைவாயிருந்து இப்பொழுது வெளியாக்கப்பட்டு முடிவில்லாக் கடவுளின் திட்டத்திற்கொப்ப, புறவினத்தார் அனைவரும் கீழ்ப்படிந்து விசுவசிக்குமாறு இறைவாக்குகளின் மூலமாய் அறிவிக்கப்பட்ட மறைபொருளை வெளிப்படுத்துவதே'' நற்செய்தியாகும் *(உரோ 16:25தொ).*

ஆ) கிறிஸ்துவினுடையவும் திருச்சபையினுடையவும் மறையுண்மை: சிறைக்கூடமடல்களில் *(கொலோ; எபே)* பவுல் இறைமறையுண்மையின் *(கொலோ 2:2)* தற்கால நிலைபற்றியே அதிகம் எண்ணுகின்றார். அதாவது, ''கிறிஸ்துவின் மறையுண்மை'' *(கொலோ 4:3; எபே 3:4)* திருச்சபையின் வழியாக, தன் மீட்புப் பணியை நிறைவேற்றுகிறது. ஊழியமிக்க காலமாக இறைவனில் மறைந்திருந்த இத்திட்டத்தை *(கொலோ 1:27; எபே 3:9; காண். 3 5)* அப்போஸ்தலருக்கும் இறைவாக்கினருக்

கும், சிறப்பாக பவுலுக்கும் (எபே 3:4 தொ) இறைவன் வெளிப்படுத்துகின்றார் (கொலோ 1:26), அறிவிக்கின்றார் (எபே 1:9), தெளிவாக்குகின்றார் (3:9). நற்செய்தி அறிவிப்பதும் இதுதான் (3:6; 6:19). வரலாற்றின் இறுதியில் நிறைவேறுவதற்கென முன்கூட்டியே உருவாக்கப்பட்ட இறைத் திட்டத்தின் இறுதிமொழி இதுதான். ''விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்க வேண்டும்'' (1:9தொ). யூதரின் வெளிப்பாட்டிலக்கியம் படைப்பின் வியப்புகளை ஆராய்ந்தது; கிறிஸ்தவத் திருவெளிப்பாடு அதன் ஆழ்ந்த உட்பொருளை விளக்குகின்றது. படைப்பின் முதற்பிறப்பாகிய கிறிஸ்துவில் எல்லாப்பொருட்களும் தங்கள் தங்கள் நிலையை உணர்ந்து (கொலோ 1:15 தொ) ஒப்புரவு அடைகின்றன (1:20). வெளிப்பாட்டிலக்கியங்கள் மனித வரலாற்றில் இறைவனின் வழிகளை ஆராய்ந்தன. இவையெல்லாம் கிறிஸ்துவில் இணைவதைக் கிறிஸ்தவத் திருவெளிப்பாடு காட்டுகின்றது. கிறிஸ்துவால் அவரது திருச்சபையின் மூலம் வரலாற்றிலே மீட்பு பிரசன்னமாகின்றது. இனி யூதரும் பிறரும் அதே உரிமைகளைப் பெறுகின்றார்கள், ஒரே உடலின் அங்கங்கள் ஆகின்றனர்; அதே வாக்குறுதியின் பலனை அடைகின்றார்கள் (3:6). இம்மறையுண்மையின் ஊழியனாகத்தான் பவுல் தேர்ந்தெடுக்கப்படுகின்றார் (3:7தொ). இம்மறையுண்மையில் எல்லாமே ஒரு மறைபொருளைப் பெறுகின்றன. ஆண் பெண் இணைப்பு கிறிஸ்து திருச்சபையின் இணைப்பின் அடையாளமாகிறது (5:32). யூதரும் மற்றவரும் தங்கள் நம்பிக்கைக்கு அவரில் ஓர் ஆதாரத்தைக் காண்கின்றனர் (கொலோ 1:27). நமது ''விசுவாசத்தின் மறைபொருள்'' (1 திமொ 3:9) எவ்வளவு பெரியது! ''ஊன் உருவிலே அவர் தோன்றினார். தேவ ஆவியின் செயலாலே அவர் இறைவனுக்கு ஏற்புடையவரென விளங்கினார்; வானதூதர்க்குத் தம்மைக் காண்பித்தார்; புறவினத்தார்க்கு அறிவிக்கப்பெற்றார்; விசுவாசத்தோடு உலகில் ஏற்கப்பெற்றார்; மாட்சிமையிலே அவர் விண்ணேற்பு அடைந்தார்'' (1 திமொ 3:16).

இவ்வாறு யூத வெளிப்பாட்டிலக்கியம் எதிர்நோக்கிய மறையுண்மையிலிருந்து, இயேசு வெளிப்படுத்திய ''இறையரசு'' வழியாக, பவுல் அறிவித்த ''கிறிஸ்துவின் மறையுண்மை'' வரை ஒரே இறைத்திட்டம் படிப்படியாகத் தெளிவு பெறுகின்றது. கிரேக்கர் மற்றும் கீழ்நாட்டு மறை வழிபாட்டிற்கும், கிறிஸ்தவ மறையுண்மைக்கும் ஒரு தொடர்பும் இல்லை. அக்கிரமத்தின் மறைபொருளை எதிர்ப்பதற்காகச் சொல்லாட்சியின் சில அம்சங்கள் ஒத்திருந்தாலும், உட்பொருள் வேறுபட்டது (காண். 2 தெச 2:7). இதேபோலக் கிறிஸ்துவின் சிலுவையில் வெளிப்பட்ட இறைஞானம் மனிதரின் ஞானத்திற்கு மாறானது (காண். 1கொரி 1:17-25).

IV ***யோவானின் திருவெளிப்பாடு:*** திருவெளிப்பாட்டில் இருமுறை ''மறையுண்மை'' என்ற சொல் அருங்குறிகளின் உட்பொருளைக் குறிக்கின்றது. இதைக் காட்சியாளரோ (திருவெளி 1:20) அவரோடு பேசும் தேவதூதரோ (17:7) விளக்குகின்றனர். வேறு இரண்டு இடங்களில் அதன் பொருள் பவுல் அதற்குத் தந்த பொருளுக்கு நெருங்கியிருக்கின்றது. உரோமை நகரைக் குறிக்கும் பெரிய பாபிலோன் நகரின் முன் ஒரு பெயர், ஒரு மறைபொருளால் எழுதப்பட்டிருக்கின்றது (17:5). அதனுடைய வரலாற்றில் பவுல் பழித்துக் கூறிய ''தீமையின் மறைத்திட்டம்'' (காண். 2 தெச 2:7) செயல்படுவதே இதன் காரணம். இறுதி நாளில் ஏழாவது தேவதூதர் இறுதித் தீர்வையை எக்காளத் தொனியால் அறிவிக்கும்போது ''கடவுளின் மறைவான திட்டம் நிறைவேறியிருக்கும். இறைவாக்கினரான தம் ஊழியர்களுக்குக் கடவுள் அறிவித்த நற்செய்தியின்படியே அவை நிறைவேறும்'' (திருவெளி 10:7; காண். 1 கொரி 15:20-28).

இந்த நிறைவைத்தான் திருச்சபை எதிர்நோக்கியிருக்கின்றது. இம்மறையுண்மையைத்தான் அஃது ஏற்கெனவே வாழ்ந்து

வருகின்றது. ஆனால், இவ்வுலகில் உள்ள வரை இறையாற்றலுக்கும் தீயசக்திகளுக்கும் இடையே அது மாட்டிக்கொண்டிருக்கும். தீய சக்திகள் அறவே ஒடுக்கப்படும் நாள் ஒன்றுவரும் (காண். திருவெளி 20; 1 கொரி 15:26தொ); அன்று திருச்சபை ''வரவிருக்கும் உலகிலே'' நுழையும். அப்பொழுது இறைவனின் மறையுண்மை புத்துயிர்பெற்ற உலகிலே தனித்திருக்கும் (திருவெளி 21; காண். 1 கொரி 15:28தொ). கிறிஸ்தவ வெளிப்பாட்டின் நிறைவு இது தான்.

மனச்சான்று, மனச்சாட்சி (CONSCIENCE)

I மனச்சான்று என்ற சொல் உள்ளுணர்வாலறியப்படும் மனத்திறனைக் குறிக்கும். இதைக் கொண்டு ஏற்கெனவே செய்யப்பட்டு விட்ட அல்லது செய்யப்படப் போகிற ஒரு செயலைத் தீர்ப்பிடுகிறோம். இது நன்மை தீமை பற்றிய கருத்தியலான அறிவைவிட அதிகமானது. ஒன்று எனக்கு நல்லதாய் அல்லது கெட்டதாய் இருக்கிறது (இருந்தது) என்று நாம் கூறும் செயல்முறையான தீர்ப்பாகும். இந்த உணர்வு ஒருவனை அவனது செயல்களுக்குப் பதில் கூறச் செய்கிறது. அவனையும், அவன் அயலானையும் சமூகம் முழுவதையும் கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்களுக்கேற்ப கணக்குக் கொடுக்கும்படி அவனை அழைக்கிறது.

இக்கருத்துக்கேற்ற துல்லியமான சொல் எபிரேய மொழியில் இல்லை. கிரேக்க உலகோடு தொடர்புகொள்ளும்வரை விவிலியத்திலும் காணப்படவில்லை. ஆனால், இந்த உணர்வை விளக்கும் சொற்றொடர்கள் உள்ளன. இக்கருத்தைக் குறிக்கும் ''சினேய்தேசிஸ்'' என்ற கிரேக்கச்சொல் நற்செய்திகளில் காணப்படவில்லை. ஆனால், பவுலால் சிறப்பாகக் கையாளப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் மனச்சான்று என்ற சொல் முப்பத்தாறு தடவை காணப்படுகிறது. இவற்றில் கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம், இரண்டாம் திருமுகங்களில் மட்டும் பன்னிரண்டு தடவை வருகிறது. இச்சொல் குறிக்கும் உண்மை விவிலியம் முழுவதும் காணப்படுகிறது. இதுதான் இந்த உண்மை பற்றிய பவுலின் சிந்தனைக்கும், கிரேக்க மனப்போக்கிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்ட இடமளிக்கிறது.

II **என் உள்ளம் உறுத்தவேயில்லை:** இக் கருத்து தெளிவாகக் கூறப்படும்போது, மனச்சான்றின் செயல், இதயம், உளம், மனம் அல்லது இடுப்புக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. ஆண்டவர் அபிடேகம் செய்த சவுலின் மேலங்கியின் தொங்கலை அறுத்தபின் அதற்காக தாவீது மனம் வருந்தினார் (1 சாமு 24:6). நாபலும் அவனுடைய ஊழியர்களும் கொல்லப்பட்டால், தாவீதுக்கு மனவருத்தம் உண்டாகும் (25:31). மக்கள் தொகையைக் கணக்கெடுத்த பிறகு தாவீது மனம் வருந்தினார் (2 சாமு 24:10). முதலில் மனவருத்தம் ஆண்டவரோடு செய்து கொண்ட உடன்படிக்கையோடு தொடர்புபடுத்தப்படுகிறது. ஏனெனில், யாவேயின் முன்னிலையில்தான் அரசர்களின் செயல்கள் தீர்ப்பிடப்படுகின்றன (1 அர 16:7). இந்த யாவேதான் ''உள்ளுணர்வுகளையும் இதயச் சிந்தனைகளையும் சோதித்தறிகிறார்'' (எரே 11:20; 17:10; சங் 7:10). அவருக்கு மனிதர்களின் செயல்கள் எல்லாம் தெரிந்திருக்கின்றன (சங் 139:3).

ஆனால் மனச்சான்றின் தீர்ப்பு, இறைவனுக்கு அருகில் இருப்பது என்ற கருத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதா? இல்லையென்று யோபுவின் வரலாறு சுட்டிக்காட்டுகிறது. தன்னைக் குற்றம் சாட்டுபவர்களுக்கும், இறைவனுக்கும்கூட, யோபு தனது உள்ளம் தூய்மையாக உள்ளது என்று உரத்து முழங்குகிறார்: ''என் நேர்மையை நான் பற்றிக்கொண்டேன்; விடவே மாட்டேன்; என் வாழ்நாளில் எதைக்குறித்தும் என் உள்ளம் உறுத்தவில்லை'' (யோபு 27:6). அதாவது அவரது மனச்சான்று அவரைக் குற்றம் சாட்டவேயில்லை. இருப்பினும், அவர் புழுதியிலும் சாம்பலிலும் இருந்து மனம் வருந்தவேண்டும் (42:6). மனச்சான்று ஒரு மனிதனுள் எவ்வளவு ஆழமாய் இருந்தாலும், சட்டத்தில் எடுத்துக்

கூறப்படும் இறைவனுடைய சித்தத்தைப் பற்றி அறிவுக்கேற்ப இறைமறையுண்மையை அஃது அளவிட முடியாது.

நீதி, நேர்மைபற்றி இயேசு கடிந்துரைக்கும் பரிசேயர்கள், யோபுவிடமிருந்து வேறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் நீதி பற்றிய உணர்வைச் சட்டத்தின் புறக்கடைப்பிடிப்பாக மாற்றிவிட்டனர். இயேசு சட்டத்தை அகற்றவில்லை. ஆனால், அதைக் கடைப்பிடிப்பதில் எண்ணத்தூய்மை இருக்க வேண்டும் என்று கற்பிக்கிறார். நலமுடன் இருக்கும் கண்ணின் உதவியுடன் (லூக் 11:34), மறைவாய் உள்ளதைக் காணும் தந்தையின் முன் (மத் 6:4. 6.18), உள்ளத்திலிருந்து தீர்ப்பிடுமாறு மக்களுக்கு இயேசு கற்பிக்கிறார் (15:1-20). இப்படிச் செய்யும்போது இயேசு சுதந்தர மனச்சான்றுக்கு வழியைத் தயாரிக்கிறார். சட்டம் மனிதனுக்குப் புறம்பானதன்று, மாறாக, மனிதர் உள்ளத்தில் பொழியப்படும் ஆவியின் துணையால், சட்டத்தின் உண்மையான பொருளும் ஆற்றலும் கண்டுணரப்படும் பவுலின் காலத்திற்கு இயேசு தயாரிக்கிறார்.

III பவுலின் கருத்துப்படி மனச்சான்று:

1. பவுல் ''சினேய்தேசிஸ்'' என்ற சொல்லை எந்த இலக்கிய மூலங்களில் இருந்தோ, ஸ்தோயிக்கு தத்துவத்திலிருந்து அல்லாமல், அக்காலத்திய சமய மொழி மரபிலிருந்து எடுத்துக் கையாள்கிறார். உள்ளம் பற்றிய விவிலியக் கருத்தைச் சேர்ந்த கருதாத் தன்னியல்புத் தீர்ப்பை எடுத்துக் கூற இச்சொல் பயன்பட்டது. ஒரு கருத்திலிருந்து மற்றதற்குச் செல்லும் வழி, திமொத்தேயுவுக்குக் கூறப்படும் ஆலோசனையில் தெளிவாகக் காணப்படுகிறது. ''தூய உள்ளம், குற்றமற்ற மனச்சாட்சி, நேர்மையான விசுவாசம் இவற்றினின்று பிறக்கும் அன்பைத் தூண்டுவதே அக்கட்டளையின் (போதகத்தின்) நோக்கமாய் இருக்கட்டும்'' (1 திமொ 1:5). உள்ளம், மனச்சான்று, விசுவாசம் ஆகியவை வெவ்வேறு வழிகளில் ஒவ்வொரு அன்புச் செயலின் பிறப்பிடமாக அமைகின்றன. கருத்து நேர்மையாக இருந்தால், விசுவாசம் நிலையான உறுதிப்பாட்டை அளித்தால், அப்போது மனச்சான்று திருப்தி அடையும். இவ்வாறு, கிறிஸ்தவன் ''தண்டனையை நினைத்தது மட்டுமின்றி, மனச்சாட்சியின் பொருட்டும்'' ஆளும் அதிகாரம் கொண்டவர்களுக்கு அடங்கியிருத்தல் வேண்டும் (உரோ 13:5). ஏனெனில், அவனது விசுவாசம் எப்படி இந்த அதிகாரம் இறைவனின் பணியில் உள்ளது என்று அவனுக்குக் காட்டும். ஆகவே, தனது மனச்சான்று நேர்மையாக உள்ளது என்று அடிக்கடி பவுல் கூறுகிறார் (2 கொரி 1:12; காண். அ.ப. 23:1; 24:16).

ஸ்தோயிக்குகள் கருதியதுபோல், இந்த மனச்சான்று தன்னாட்சியானது என்று இயல்பான முடிவாய் அமையவில்லை. இயற்கையின் விதிகள் பற்றிய அறிவின் காரணமாக மனச்சான்று சுதந்தரமானது என்று அவர்கள் கருதினார்கள். பவுலைப் பொருத்தமட்டும், மனச்சான்றின் தீர்ப்பு எப்போதும் இறைவனது தீர்ப்புக்குக் கட்டுப்பட்டதாகும். ''என் மனச்சாட்சி என்னை எதிலும் குற்றம் சாட்டவில்லை. ஆயினும், இதனால் நான் குற்றமற்றவன் என்று சொல்ல முடியாது. எனக்குத் தீர்ப்புக் கூறுகிறவர் ஆண்டவர்தாம்'' (1 கொரி 4:4). நேர்மையான மனச்சான்றுக்கு அவர் கோரும் உரிமை, பொதுவாக, இறைவனை (2 கொரி 4:2) அல்லது பரிசுத்த ஆவியின் சாட்சியைப் பற்றிய (உரோ 9:1) குறிப்பைத் தொடர்ச்சியாகக் கொண்டுள்ளது. மனச்சான்று இறையாட்சியுடையதாகும். அது, நேர்மையானது, தூய்மையானது என்று விவரிக்கப்படும்போது, உண்மையான விசுவாசத்தால் அடிப்படையிலேயே ஒளியூட்டப்படுகிறது (1 திமொ 1:5.19; 3:9; 4:1தொ; 2 திமொ 1:3; காண். எபி 13:18; 1 பேதுரு 3:16).

2. விசுவாசி நிறைவான விடுதலை அடைகிறான்: உணவுகளுக்கிடையேயும், விழாக்களுக்கிடையேயும் தேர்ந்தெடுத்தலைச் சட்டம் யூதர்கள் மேல் சுமத்தியது. கிறிஸ்தவனுக்கு ''யாவும் தூயவைதான்'' (உரோ 14:20; தீத் 1:15). தடை செய்யப்பட்டது

எதுவுமில்லை (1 கொரி 6:12;. 10:23). விசுவாசம் அளிக்கும் அறிவால் (8:1) மனிதன் ஒவ்வொரு படைப்பின் நன்மைத் தன்மையைக் கண்டுணர்கிறான் (3:21-23; 8:6; 10:25 தொ). ஒளியூட்டப்பட்ட மனச் சான்றைக் கொண்டிருக்கும் கிறிஸ்தவன், மோசே சட்டத்தின் சடங்கு விதிகளிலிருந்து தான் விடுதலையடைந்துள்ளதைக் காண் கிறான்; ''ஆண்டவரின் ஆவியானவர் எங் கிருக்கிறாரோ, அங்கு விடுதலையுண்டு'' (2 கொரி 3:17). ஆனால் இந்த விடுதலை மற்றொருவருடைய மனச்சான்றைத் தழுவி யதன்று (1 கொரி 10:29). ஸ்தோயிக்கு களைப் போல் அவன் சுதந்தரமுடையவன். ஆனால் வேறுபட்ட விதத்தில், வரையறைக் குள் சுதந்தரமுடையவன். இந்த வரையறை கள் விளக்கப்பட வேண்டும்.

தடை செய்யப்பட்டது எதுவுமில்லை (எதையும் செய்ய உரிமையுண்டு என்பது உண்மைதான்) என்று கூறும் பவுல், உடனே ''ஆனால் எல்லாமே ஞானவளர்ச்சி தராது'' என்றும் கூறுகிறார் (10:23). உண் மையில், அதே அளவு அல்லது தரத்தில் வளர்ச்சியடையாத மனச்சான்றுகளுக் கிடையே போராட்டம் எழலாம். விசுவாசி களில் சிலருக்குச் சிலைகளுக்குப் படைக் கப்பட்ட புலால் மாசுபட்டதாகும்; இத னால், அவர்கள் அதை உண்ணக்கூடாது. இதுவே, அவர்கள் மனச்சாட்சியின் தீர்ப்பு. இப்படிப்பட்ட வலிமையற்றவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்காமல் இருக்க மன வலிமையுள்ளவர்கள் (உரோ 15:1) பெரி தும் முயற்சி எடுக்க வேண்டும். ''நீ உண்ணும் உணவு உன் சகோதரன் மனதைப் புண்படுத்தினால், நீ அன்பு நெறியில் நடப்பவன் அல்லன் அற்ப உணவை முன்னிட்டு அவனை அழிவுறச் செய்யாதே. அவனுக்காக கிறிஸ்து உயிர் துறக்க வில்லையா?'' (14:15). ''உணவின் பொருட்டுக் கடவுளின் வேலையைத் தகர்க்கத் துணியாதே; யாவும் தூயவைதான்; ஆனால், இடைஞ்சலுக்கு இடம் தருமானால், உண்ப வனுக்கு யாவும் தீயவையே;.... இது போன்ற வேறெதையும் செய்வதைச் செய் யாமல் விடுவது நல்லது'' (14:20; 1 கொரி 8:9-13). ஆகவே, அறிவு பிறர் அன்புக்கு வழிவகுக்க வேண்டும்.

மனச்சான்று, அதற்குப் பொருள் அளிக் கும் இறைப்பிரசன்னத்தின் பொருட்டும், அதன் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்த வேண் டும். ''எதையும் செய்ய உரிமையுண்டு என்பது உண்மைதான்'' என்று கூறிய பவுல், ''எதற்கும் நான் அடிமையாக மாட்டேன்'' (1 கொரி 6:12) என்றும் கூறுகிறார். விபசாரியுடன் உறவு வைத்துக் கொள்ள எனக்கு அனுமதியில்லை. எனது உடல் எனக்குச் சொந்தமன்று. இங்கும் அறிவும் சுதந்தரமும் வேறொருவரால் கட்டுப்படுத்தப்படுகிறது. இவர் முதலில் எனக்குப் புறம்பானவராகத் தோன்றுகிறார். ஆனால், எனது உண்மையான நிறைவாக தன்னையே விசுவாசத்தில் படிப்படியாக வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு, பவுல் எழுதப்பட்ட மற்றும் மாற்ற முடியாத விதிகளின் ஆட்சிக்குட் பட்டவரல்லர். அவரது மனச்சான்றைக் கட்டுப்படுத்துபவை அவர் ஆண்டவரோ டும், சகோதரர்களோடும் கொண்டுள்ள உறவுகளே ஆகும். அவர் கண்டுணர்வது, எழுதப்பட்ட சட்டத்தால் சுமத்தப்படும் வளைவு நெளிவற்ற பணிச்சட்டமன்று, இறைவார்த்தையோடும் மற்ற மக்களோ டும் கொண்டுள்ள இசைவிணக்கமும், அதிக மாகக் கட்டாயப்படுத்தும் உறவுமேயாகும். மேலும், இஃது எழுதப்பட்ட சட்டங்களின் பயனுடைமையைப் பாதிக்கவில்லை; வலு வற்றவர்களின் கண்முன் அவை கொண்டி ருக்கும் விட்டுக்கொடாப் பண்பை அவற்றி லிருந்து நீக்குகிறது.

3. கிறிஸ்துவில் பெறப்பட்ட புதிய சுதந்த ரத்தைப் பற்றி பவுல் நெடுங்காலம் சிந்தித் திருக்க வேண்டும் என்பது தெளிவு. இது வும் பிறசமய உலகோடு அவர் கொண்ட தொடர்பால் விளைந்த அனுபவமும் சேர்ந்து, பவுலைப் பின்வருமாறு கூறச்செய் கின்றன: ''திருச்சட்டத்தைப் பெற்றிராத புறவினத்தார் அதில் உள்ள கட்டளைகளை

இயல்பாகவே நிறைவேற்றும்போது, அவர்களுக்குத் திருச்சட்டம் இல்லாத போதிலும் அவர்கள் உள்ளம் சட்டமாக அமைகிறது. திருச்சட்டம் கற்பிக்கும் செயல்முறை தங்கள் உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் எண்பிக்கிறார்கள்; ஏனெனில், அவர்களுடைய மனச்சான்று அதற்குச் சாட்சியாய் நிற்கிறது. பிறர் செய்வது குற்றமா, குற்றமில்லையா என அவர்கள் தங்கள் மனத்திற்குள் தீர்ப்பிடுவது அதற்குச் சாட்சி'' (உரோ 2:14-15).

இந்தச் சூழ்நிலையிலிருந்து நோக்கும்போது, இறைவனது தீர்ப்பு நன்மை, தீமை பற்றிய அறிவின்மேல் விழவில்லை; மாறாக, அதைக் கடைப்பிடிப்பதின் மேல் விழுகிறது என்பதுதான் முதன்முதலில் இக்கூற்றின் பொருளாகும். இறுதிநிலையில், இது, வெளிப்படுத்தப்பட்ட சட்டத்தாலன்று, நன்மை, தீமை என்பதன் உள்ளுணர்வால் தீர்மானிக்கப்படுகிறது. இதில் இறைவனது சித்தம் வெளிப்படுகிறது. இதன்படிதான் ஆதாம் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் போன பின்பு, தான் ஆடையின்றி இருப்பதை அறிந்து, இறைவன் திருமுன்னின்று ஓடி ஒளிந்து கொள்கிறார் (ஆதி 3:8தொ). பவுலின் கருத்துப்படி, இது, வெளிப்பாடு இறைவனது திட்டத்தை வெளிப்படுத்தும் முன்பே, அது ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் எழுதப்பட்டிருக்கிறது என்பதை முன் உணர்த்துகிறது. இறைவன் படைப்பவராக ஏற்றுக் கொள்ளப்படா விட்டாலும் (உரோ 1:19 தொ), வெளிப்படுத்தப்பட்ட சட்டம் இல்லையென்றாலும், மனிதன் இறைவனுடன் உரையாடலில் பிறந்துள்ளான்; அவரது முன் முயற்சியால் எதிர்கொள்ளப்படுகிறான்; அவரது திட்டத்திற்கேற்ப பதில் அளிக்கிறான்.

IV **வழிபாட்டின்வழி மனச்சான்று தூய்மைப்படுதல்:** எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் மனச்சான்று என்ற சொல்லை, பொதுவாக, பலிச் சூழ்நிலையில் பயன்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டுப் பலிகள் மனச்சாட்சியைப் பொறுத்தமட்டில் வழிபடுபவர்களை நிறைவுள்ளவர்களாக்க இயலாதவைகளாகும் (எபி 9:9). இல்லையென்றால், வழிபாட்டில் ஈடுபடுவோர், பாவ உணர்வு கொண்டிருந்திருக்க மாட்டார்கள்; வழிபாடும் முடிவுக்கு வந்திருக்கும் (10:2). இதற்கு மாறாக, ''கிறிஸ்துவின் இரத்தம், நாம் உயிருள்ள கடவுளுக்கு வழிபாடு செலுத்தும்படி நம்முடைய மனச்சாட்சியைச் சாவுக்குரிய செயல்களிலிருந்து மேலாகத் தூய்மைப்படுத்துகிறது'' (9:14). இந்தத் தூய்மைப்படுத்தல் திருமுழுக்கில் செயல்படுகிறது (10:22). ஏனெனில், பேதுருவின் கூற்றுப்படி, இந்தத் திருமுழுக்குத்தான் ''நல்ல மனச்சாட்சியுடன் கடவுளுக்குத் தரும் உறுதிவாக்கை'' உறுதிப்படுத்துகிறது (1 பேதுரு 3:21). இறுதியாக கிறிஸ்துவின் இரத்தமும் உயிர்ப்பும் மட்டுமே நேர்மையான மனச்சான்றை இயலக் கூடியதாக்குகிறது.

மனத்துணிவு (BOLDNESS)

புதிய ஏற்பாட்டில் மனத்துணிவு என்பது ஆவியின் வல்லமையால் துணிந்து நின்று பேசக் கூடிய மனநிலையைக் குறிப்பிடுகின்றது. இயேசு தனது பாடுகள் பற்றி மனத்திடத்துடன் வெளிப்படையாகவே பேசுகிறார் (மாற் 8:32). பேதுருவும், யோவானும் துணிச்சலுடன் பேசுகிறார்கள் (அ.ப. 4:13; காண்க. 4:31). அந்தியோக்கியாவில் உள்ள பிசிதியாவில் பவுலும் பர்னபாவும் மனத்துணிவுடன் பேசுகிறார்கள் (அ.ப. 13:46).

நம்பிக்கையிலும், மன உறுதியிலும் புதுக் கிறிஸ்தவர்கள் கடவுளை ஏற்றுக்கொள்கிறார்கள் (2 கொரி 3:4-5. 12.18; எபி 4:16; 10:19). இறுதி வருகையின்போது மனிதன் பயப்படவோ, வெட்கப்படவோ தேவையில்லை; மாறாக, நம்பிக்கையோடும் மனத்திடத்தோடும் இருக்க வேண்டும் (1 யோவா 2:28;4:17). இந்த மனத்திடம் தன்னை நம்புவதிலிருந்து பிறப்பது அன்று; மாறாக, கடவுளுடைய வாக்குறுதிகளை நம்புவதிலிருந்து பிறக்கின்றது. கிறிஸ்துவினால், நமக்குக் கடவுளிலும், மனிதனிலும் புது நம்பிக்கை பிறக்கிறது.

மனம், உள்ளம் (MIND)

இச்சொற்கள், பல எபிரேய மற்றும் கிரேக்கச் சொற்களை மொழிபெயர்க்கப் பயன்பட்டுள்ளன. இவை பல்வேறுபட்ட மனிதப்பண்புகளையும் அலுவல்களையும் உணர்த்துகின்றன (எ.கா. உப 6:5). இவை இதயத்தை மனித உணர்ச்சி, அறிவுத்திறன் மற்றும் மனத்திட்பம் ஆகியவற்றின் இருப்பிடமாகக் கருதுகின்றன (எ.கா. எரே 19:5). இதற்கேற்றவாறு, மக்கள் இறைவனது செயல்களையும் (எசா 65:17), உடன்படிக்கை மேற்கோள்களையும் (உப 30:1) உள்ளத்தில் வைத்துச் சிந்தனை செய்கின்றனர். மனதின் வழியாக அவர்கள் ஞானத்தை (1 அர 3:12) அல்லது திறமையை (யாத் 28:3) வெளிப்படுத்துகின்றனர். ஒருவன் தனது வாழ்வை நடத்திச் செல்ல மனம் ஆற்றலுள்ளவனாக்குகிறது (1 சாமு 2:35; 1 அர 8:48).

புதிய ஏற்பாட்டில் மனம் அல்லது உள்ளத்தைக் குறிக்கும் கிரேக்கச் சொற்கள் மனிதவாழ்வு, உணர்வுநிலை மற்றும் செயல்படும்முறை ஆகியவற்றின் பல்வேறு கூறுகளைச் சுட்டுகின்றன. ஆனால், அவற்றில் துல்லியமான வேறுபாடுகளை உணர்த்துவதில்லை. ஒருபுறம் முழு ஆளையும் உணர்த்த சில இடங்களில் பல சொற்கள் பயன்படுகின்றன (மத் 22:37; எபே 2:3; பிலி 4:7; திருவெளி 2:23). மறுபுறம், ஒப்பீட்டடிப்படையில் பல சொற்களைப் பயன்படுத்தி மனித இருதலை வாதநிலை உணர்த்தப்படுகிறது (உரோ 7:22-25; 8:5; 1 கொரி 14:14).

மனித வாழ்வு மற்றும் உணர்வின் சிந்திக்கும், பகுத்தறியும் மற்றும் திட்டமிடும் கூறுகளைக் குறிக்க மனம் அல்லது உள்ளம் என்ற சொற்கள், குறிப்பாக பவுலின் திருமுகங்களில் முதன்மை பெறுகின்றன. இவற்றில், ஒரு குறிப்பிட்ட நோக்கில் முழுமனித வாழ்வையும் அனுபவத்தையும் குறிக்கின்றன. மனிதவாழ்வின் மற்றக் கூறுகளைப் போல் மனமும் பாவத்தால் சீர்கெட்டு விட்டது (உரோ 1:28; எபே 4:17-19; கொலோ 2:18; காண்க. 1 திமொ 6:5; 2 திமொ 3:8). மனம் தனது இயல்பால் நன்மையைப் புரிந்து கொள்ள முடியும்; ஆனால், அதை நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளது (உரோ 7:22-25). இறைவனது சித்தத்திற்கேற்ற வாழ்வில் ஒருவர் தாம் புதுப்பிக்கப்படுவதற்கு அவர் மனம் உருநிலை மாற்றம் அடைய வேண்டும் (உரோ 12:2; எபே 4:23). மனம் கிறிஸ்துவின் மனதோடு ஒத்திருக்க முடியும்; உயிர்த்த ஆண்டவர் வழியாக, கிறிஸ்துவின் சீடன் ஆண்டவரது ஆற்றலையும் ஞானத்தையும் அனுபவிக்க முடியும் (1 கொரி 12:16). மனதின் பகுத்தறிவு ஆற்றல்களைப் பரவசப்பேச்சு ஆன்மீக அனுபவத்தால் கடந்து செல்லலாம்; ஆனால், அவற்றை விஞ்சக்கூடாது, அகற்றக்கூடாது (14:13-19).

மனவருத்தம் / மனமாற்றம் (REPENTENCE / CONVERSION)

I கடவுள் மனிதர்களைத் தன்னோடு உறவுகொள்ள அழைக்கிறார். பிறப்பிலிருந்தே பாவிகளாக இருக்கும் மனிதர்களுக்கே இந்த அழைப்பு விடப்படுகிறது (சங் 51:7). அவர்களின் முதல் தந்தையின் குற்றத்தால் பாவம் உலகில் நுழைந்தது (உரோ 5:12). அன்றிலிருந்து பாவம் அவர்களில் மிக ஆழமாகக் குடிகொண்டுள்ளது (7:20). அவர்கள் பாவிகளாக இருப்பதற்கு அவர்களும் காரணம்தான். ஏனெனில், தாங்களாகவே ''பாவத்திற்கு அடிமையாக விற்றுவிட்டனர்'' (7:14); தங்களது இச்சையினால் பாவத்தின் நுகத்தை விரும்பி ஏற்றுக்கொண்டனர் (காண்க. 7:5). கடவுளின் அழைப்புக்குப் பதில் கொடுக்க வேண்டுமெனில் அவர்கள் தொடக்கத்திலிருந்தே மனமாற்றம் பெற வேண்டும். அதுபோலவே தங்கள் நிலையை நினைத்து மனம் வருந்தும் தன்மை வாழ்வு முழுவதும் இருக்க வேண்டும். அதனால்தான் விவிலிய வெளிப்பாட்டிலே மனமாற்றமும், மனவருத்தமும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

இக்கருத்துக்களை வெளிப்படுத்தும் சொற்கள் அவற்றின் முழுப்பொருளை மிகத் தாமதமாகவே பெற்றுக்கொண்டன.

எப்பொழுது பாவத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதல் ஆழப்பட்டதோ அப்பொழுது மனமாற்றம், மனவருத்தம் என்பனவற்றின் பொருளும் ஆழப்பட்டது. ''யாவேயைத் தேடுதல்'' *(ஆமோ 5:4; ஓசே 10:12)*, ''அவரது முகத்தைத் தேடுதல்'' *(ஓசே 5:15; சங் 24:6; 27:8)*, அவர் முன் தன்னைத் தாழ்த்துதல்'' *(1 அர 21:29; 2 அர 22:9)*, ''முழு உள்ளத்தோடு ஆண்டவரிடம் திரும்புதல்'' *(1 சாமு 7:3)* என்ற சொற்றொடர்கள் இறைவனை நோக்கி தன் வாழ்வை விரும்பி அமைத்துக்கொள்ளும் மனிதனது மனநிலையைக் காட்டுகின்றன. ஆனால், ஒருவன் தனது வழியை மாற்றுதல், தன் பாதைகளை மாற்றிக்கொள்ளல் என்பதைக் குறிக்கும் எபிரேய வினைச்சொல் ''சூப்'' (Sûb) இதன் பொருளை முழுமையாகக் கொணர்கிறது. ஒரு சமயப் பின்னணியில் இது தீமையிலிருந்து விலகி, கடவுளை நோக்கித் திரும்புவதைக் குறிக்கும். இஃது ஒருவன் நடத்தையிலும், முழு மனிதனிலும் நிகழும் மாற்றத்தை உள்ளடக்கும். எனவே, முழுமனிதனும் ஒரு புதிய பார்வையோடு வாழ்வை அமைக்கிறான். இதுவே மனமாற்றத்தைக் குறிப்பதாகும். பிற்காலத்தில் உள்ளார்ந்த மனவருத்தத்திற்கும் அது கோரும் வெளி அடையாளச் செயலுக்குமுள்ள வேறுபாடு தெளிவாகக் காட்டப்பட்டது. ''எப்பிஸ்ட்ரேபெயின்'' (Epistrephein) என்ற கிரேக்க வினைச்சொல் இறைவனிடம் திரும்பி வருதலையும், அதன் விளைவாக செயல்முறையான நடத்தையில் மாற்றத்தையும் உணர்த்துகிறது. விவிலியப் பகுதிகளை அலசிப் பார்ப்பதன் வழியாக இந்த இரண்டு வேறுபட்ட ஆனால், ஒன்றையொன்று நிறைவு செய்யும் கருத்துக்கள் நமக்குத் தெளிவாகும். ''மெட்டானோயின்'' (metanoein) என்ற கிரேக்க வினைச்சொல் உள்ளார்ந்த மாற்றத்தை (metanoia - *மனவருத்தம்*) உணர்த்துகிறது.

II *பழைய ஏற்பாடு*

1. மனவருத்தம் கொள்வதைக் குறிக்கும் வழிபாடுகளின் தொடக்கம்:

அ. தொடக்க காலத்திலிருந்தே உடன் படிக்கையின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், தனி மனிதனோ, சமூகமோ பாவம் செய்யும்போது கடவுளுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உறவின் பிணைப்பு முறிக்கப்படலாம் என்பது தெளிவாகிறது. தனிமனிதனது பாவம் ஒரு விதத்தில் குழுத் தன்மையையும் கொண்டுள்ளது. சமூகத் தீமைகள் நிகழும்போது அவை ஒரு மனச்சான்றின் சோதனைக்கு நம்மையே ஆட்படுத்திக்கொள்ளும் தருணமாகிறது *(யோசு 7; 1 சாமு 5-6)*. பாவத்தைப் பற்றிய கருத்து மிகப் பக்குவமுறாததாக, இறைவனது கோரிக்கையை நிறைவேற்றாத ஒவ்வொரு உடல் சார்ந்த தவறும் இறைவனைச் சினமூட்டக்கூடியதாகப் புரிந்து கொள்ளப் பட்டது. மீண்டும் அந்த யாவே கடவுளோடு உறவை, ஒன்றிப்பை ஏற்படுத்த அந்தப் பிரிவுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இது மரண தண்டனைவரை கூட போகலாம் *(யாத் 32: 25-28; எண் 25:7 தொ; யோசு 7:24 தொ)*. ஏனெனில், பாவிகட்கு மீட்பு இல்லை என்ற எண்ணம் இருந்தது *(1 சாமு 14:36-35)*. குற்றமுள்ளவன் தெய்வ தண்டனைக்குத் தன்னையே தருவதால் அவன் வாழும் சமூகம் தண்டனையிலிருந்து தப்ப வாய்ப்புண்டு.

ஆ. மேலும் துயரம் நீடிக்கும்வரை, அல்லது அதை நிறுத்த, இறை மன்னிப்பைப் பெற வேண்டி பல தவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உண்ணா நோன்பு *(நீதி 20:26. 1 அர 21:8 தொ)*, சாக்கு உடை தரித்தல் *(1 அர 20:31 தொ; 2 அர 6:30; 19:1 தொ; எசா 22:12; காண்க. யோவா 3:5-8)*, சாம்பலைப் பூசிக்கொள்ளல் *(எசா 58:5; காண்க. 2சாமு 12:16)* ஆகியவை கடைப்பிடிக்கப்பட்டன. வழிபாட்டுக்காகக் கூடும்போது அழுகையும், புலம்பலும் கேட்டது *(நீதி 2:4; யோவே 1:13; 2:17)*. புலம்பலுக்கான வாய்பாடுகளும், வடிவங்களும் வகுத்துக் கொடுக்கப்பட்டன. இத்தகைய அமைப்புகள் நமது சங்கீதங்கள் பலவற்றில் காணப்படுகின்றன *(காண்க. சங் 60; 74; 79; 83; புல 5;...)*. பாவப்பரிகாரப் பலிகள், சடங்கு

கள் நிறைவேற்றப்பட்டன (எண் 16:6-15). எல்லாவற்றிற்கும் மேலாக, பொதுப்பாவ அறிக்கையிடல் நடைபெற்று (நீதி 10:10; 1 சாமு 7:6), அதன்பின் மோசே போன்ற ஒரு தலைவர் அல்லது இறைவாக்கினர் மக்களுக்காகப் பரிந்து மன்றாடுதல் நடைபெற்றது (யாத் 32:30 தொ).

இ) இது போன்ற நடைமுறைகள் எல்லாக்காலங்களிலும் இருந்திருக்கின்றன. இறைவாக்கினர் எரேமியா ஒரு பாவ மன்னிப்பு வழிபாட்டில் இடையாளராக இருந்து பரிந்து பேசுவதைப் பார்க்கிறோம் (எரே 14:1-15:4). நாடு கடத்துதலுக்குப் பிறகு இந்த நடைமுறைகளில் மிகுந்த வளர்ச்சிகளைப் பார்க்கிறோம். ஆனால் இதில் உள்ள பிரச்சனை என்னவென்றால், இது வெறும் வெளி ஆசாரச் சடங்காக மாறி விடும் ஆபத்தும் இருக்கிறது. மனவருத்தம் அடைவது செயலில் வெளிப்படவில்லையெனில் அது பொருளற்றதாகும். எனவே, இத்தகைய வெற்றுச் சடங்காக மாறும் அபாயத்தைக் கண்டித்து இறைவாக்கினர்கள் மனமாற்றத்தின் செய்தியை அறிவிக்கின்றனர்.

2. இறைவாக்கினர்கள் தந்த மனமாற்றச் செய்தி:

அ) தாவீதின் ஆட்சிக்காலத்திலே, நாத்தான் தலையிட்டு, விபசாரம் செய்த அரசனைக் கண்டித்தபோது, இறைவாக்கினரின் மனமாற்றச் செய்தி அறிவிக்கப்படுகிறது. தாவீது அவரது பாவத்தை அறிக்கையிடக் கட்டாயப்படுத்தப்படுகிறார் (2 சாமு 12:13). பிறகு சட்டப்படி பரிகாரம் செய்து தெய்வ தண்டனையைப் பெற்றுக்கொண்டார் (12:14-23). சிறப்பாக எட்டாம் நூற்றாண்டிலிருந்தே, மக்கள் அனைவருக்கும் மனமாற்றத்திற்கான செய்தியை இறைவாக்கினர்கள் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இஸ்ராயேலர் உடன்படிக்கையை முறித்து ''இஸ்ராயேலின் தூயவரைக் கைவிட்டு விட்டனர்; அவருக்கு அன்னியராய் ஆகிவிட்டனர்'' (எசா 1:4). அவர்கள் மனமாற்றம் பெறும்வரை அவர்களைக் கைவிட யாவேக்கு உரிமை இருந்தது. மனம் வருந்துதலுக்கான அழைப்பு இறைவாக்கினர் போதனையில் முக்கிய அங்கம் வகித்தது (காண்க. எரே 25:3-6).

ஆ) ஆமோசும் ஓசேயாவும்: நீதியின் இறைவாக்கினரான ஆமோஸ் மக்களின் பாவங்களைக் கண்டிப்பதோடன்றி கடவுளைத் தேடுங்கள் என்கிறார் (ஆமோ 5:4.6). அப்படியென்றால் தீமையை வெறுத்து நன்மையைத் தேடுவதாகும் (5:14தொ). இது நடத்தையில் திருத்தத்தையும், நீதியைப் பிரமாணிக்கமாகக் கடைப்பிடித்தலையும் உள்ளடக்கும். இத்தகைய திரும்புதல்தான் ''யோசேப்பின் வீட்டாரில் எஞ்சியிருப்போர்க்கு இறைவன் காட்டுவார்'' (5:15). ஓசேயா இறைவாக்கினர் தீவினை அனைத்தையும் அகற்றி, குறிப்பாகச் சிலை வழிபாட்டை விட்டுவிட்டு, கடவுளிடம் திரும்பிவர அழைக்கிறார். அப்பொழுது கடவுள் தனது கோபத்தை விட்டு, அவர்கள்மீது தமது நன்மையைப் பொழிவார் என்கிறார் (ஓசே 14:2-9). பலனளிக்காத மேலோட்டமான மனமாற்றத்தை விட்டு அன்பினால் உந்தப்படும், இறை அறிவு மற்றும் அன்பால் உந்தப்படும் உள்ளார்ந்த மனமாற்றத்தை வலியுறுத்துகிறார் (6:1-6; காண். 2:9).

இ) எசாயா: யூதாவைச் சேர்ந்தவர்களிடமிருந்த எல்லாப் பாவங்களையும் வன்மையாகக் கண்டிக்கிறார் எசாயா. நீதியை ஒழித்தல், வழிபாட்டில் தீமை, அரசியலில் அக்கிரமம் இது போன்ற எல்லாப் பாவங்களையும் விட்டு மனமாற்றம் பெற்றால்தான் மீட்புப் பெறலாம். இறைவனது திருவுளத்துக்குச் செயல்முறையாகப் பணியாத வழிபாடு பயனற்றது (எசா 1:11-15; காண்க. ஆமோ 5:21-25) ''உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள்; உங்கள் தீச்செயலை என் திருமுன்னிலிருந்து அகற்றுங்கள்; தீமை செய்தலை விட்டொழியுங்கள்; நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்; நீதியை நாடித்தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்; கைம்பெண்ணுக்காக வழக்காடுங்கள்'' (எசா 1:16-17).

அப்பொழுது உங்கள் பாவங்கள் கருஞ் சிவப்பாக இருந்தாலும், வெண்பனி போல் மாறும்; இரத்தச்சிவப்பாய் இருந்தாலும் பஞ்சைப்போல் வெண்மையாகும் (எசா 1:18). ஆனால், எசாயாவின் இந்தச் செய்தி அவர்களது கடின இதயத்தைத் தொட வில்லை (6:10). ''நீங்கள் என்னிடம் திரும்பி வந்து அமைவுற்றால் விடுதலை பெறுவீர்கள்... நீங்களோ ஏற்க மறுத்தீர்கள்'' (30:15). இஸ்ராயேல் தம்மையே பேரழி வுக்கு இட்டுச்சென்றனர். ஆயினும், எசாயா உறுதி குன்றாமல் எஞ்சியோர் வல்லமை யுள்ள இறைவனிடம் திரும்பிவருவர் (10:21. காண்க. 7:3); மனமாற்றம் பெற்ற வரே இறைவனின் மீட்பைப் பெறுவர் என்கிறார்.

ஈ) எரேமியா: இறைவன்பால் இந்த உள் ளார்ந்த மனநிலை வலியுறுத்துவது விரை வில் இறைவாக்கினர் போதகத்தின் ஒரு பொதுக்கூறாக மாறுகிறது. ''நேர்மை, இரக் கம், தாழ்ச்சி'' என்று மீக்கா அறைகூவல் விடுக்கிறார் (மீக் 6:8); இதைத் தாழ்ச்சி, நேர்மை என்று செப்பனியாவும் (செப் 2:3; 3:12 தொ) எதிரொலிக்கிறார். ஆனால், ஓசேயாவின் வழியில் நின்று எரேமியாதான் மனமாற்றத்தின் செய்தியைப் பெரிதும் வளர்ச்சியுறச் செய்கிறார். யூதாவை அச் சுறுத்தும் தீமைகள் பற்றி இறைவாக்கினர் முன்னறிவித்து, ஒவ்வொருவனும் தன் தீய வழியை விட்டுத் திரும்ப வந்தால் கடவுள் நிச்சயம் மன்னிப்பார் (எரே 36:3). உண்மை யில், திரும்பி வருதலுக்கான அழைப்பு நூல்முழுவதும் சுடர்வீசுகிறது. ஆனால், இந்தத் திரும்புதலுக்கான நிபந்தனைகளை யும் குறிப்பிடுகிறது. பற்றுறுதியற்ற இஸ்ரா யேல், இறைவன் அதன் மேல் இனிச் சினம் கொள்ளாமல் இருக்க விரும்பினால், தன் குற்றத்தை அஃதே ஏற்றுக்கொள்ள வேண்டும் (3:11-13; 2:23). கலகம் செய்த மக்கள் தங்கள் பாவங்களை ஏற்று அறிக்கையிடும் போது அழுகையோடும் வேண்டலோடும் திருப்தியடைந்து விடக்கூடாது (3:21-25); தங்கள் நடத்தையை மாற்றிக்கொள்ள வேண்டும்; தங்கள் இதயத்தில் விருத்தசேத னம் செய்து கொள்ள வேண்டும் (4:1-4).

மனமாற்றத்தின் செயல் முறையான விளைவுகளைப் பார்த்த இறைவாக்கினர் நிலையான உண்மையான மனமாற்றம் சாத்தியமா என்று ஐயுறுகிறார் (காண்க. 7:3-11). மனமாற்றத்திற்கு அவர் அழைத்த வர்களில் பலர் தங்கள் பாவ வழியை விட்டு விலகுவதற்குப் பதிலாக, தங்கள் இதயத்தின் பிடிவாதப்படியே செயல்பட்ட னர் (18:11-12; காண்க. 2:23தொ). தங்கள் தீச்செயலுக்காக வருந்தாமல், அதிலே இன் னும் அதிகம் மூழ்கிப் போகின்றனர் (8:4-7). அதனால்தான் மாற்ற முடியா எருசலேமுக்குத் தண்டனை காத்திருக்கிறது என்று அறிவிக்கிறார் (13:20-27). வருங் காலம் பற்றிய முன்னோக்கில் அவர் நம்பிக்கை கொள்கிறார். ஆனால், ஒருநாள் வரும். அன்று மக்கள் தண்டனையை ஏற்று, 'நான் திரும்பிச் செல்லும் வழியை எனக் குக்காட்டும்' என்று மக்கள் வேண்டுவார் கள் (31:17). அன்று யாவே அவர்களது தாழ்மையான வேண்டுதலைக் கேட்டு, அக்காலத்தின் புதிய உடன்படிக்கையின் சட்டத்தை அவர்களது இதயத்தில் எழுது வார் (31:33). ''நானே ஆண்டவர் என்பதை அறிந்துகொள்ளும் உள்ளத்தை நான் அவர் களுக்குக் கொடுப்பேன். அவர்கள் என் மக்களாக இருப்பார்கள். நான் அவர்கள் கடவுளாய் இருப்பேன். ஏனெனில், அவர் கள் தங்கள் முழு உள்ளத்தோடு என்னிடம் திரும்பி வருவார்கள்'' (24:7).

உ) எசேக்கியேல்: இந்தப் பாரம்பரி யத்தைப் பின்பற்றும் எசேக்கியேல், இறை வனது அச்சுறுத்தல்கள் செயல்படுவதை யும், அவசியமான மனமாற்றத்தையும் தனது செய்தியின் மையமாக்குகிறார். ''எனக்கெதிராக நீங்கள் இழைத்த குற்றங் கள் அனைத்தையும் விட்டுவிடுங்கள். புதிய இதயத்தையும் புதிய மனதையும் பெற்றுக் கொள்ளுங்கள். ஓ, இஸ்ராயேல் வீட்டாரே! நீங்கள் ஏன் சாக வேண்டும்? எவனுடைய சாவிலும் எனக்கு விருப்பமே இல்லை. எனவே, மனம் மாறி வாழ்வு பெறுங்கள்''

(எசே 18:31-32). இறைவனுடைய நிபந்தனைகளைக் குறிப்பிடும்போது, முன்பு இருந்த இறைவாக்கினர்களைவிட எசேக்கியேல் வழிபாட்டுக் கடமைகளுக்கு அதிக இடம் அளிக்கிறார் *(22:1-31).* ஆனால், அவர்களை விட அதிகமாக மனமாற்றத்தில் ஒவ்வொருவனுடைய சொந்தப் பொறுப்பை வலியுறுத்துகிறார். ஒவ்வொருவனும் தனக்காக மட்டுமே பதில் கூற முடியும். ஒவ்வொருவனும் அவனுடைய சொந்த நடத்தைக்கேற்ப சன்மானம் பெறுவான் *(3:16-21; 18; 33:10-20).* இஸ்ராயேல் ''கிளர்ச்சி செய்யும் இனம்'' என்பதில் ஐயமில்லை *(2:4-8).* இந்தக் கடின இதயமுடைய மனிதர்களுக்கு, இறைவன், அவர்களிடமிருந்து அதிகாரத்துடன் கோரியதையே அவர்களுக்கு ஓர் அருளாகக் கொடுக்கக்கூடும். புதிய உடன்படிக்கைக் காலத்தில், அவர் அவர்களுக்கு ஒரு புதிய இதயத்தை அளிப்பார். அவரது ஆவியை அவர்களுக்குள் புகுத்துவார். அப்போது அவரது நியமங்களைக் கடைப்பிடிக்கவும் அவரது நீதித் தீர்ப்புகளைக் கவனமாய்ச் செயல்படுத்தவும் செய்வார்கள். அவர்களது தீய வழிகளையும் தகாத செயல்களையும் எண்ணித் தங்களையே வெறுப்பார்கள் *(36:26-31; காண்க. 11:19 தொ).*

ஊ) இவ்வாறு, ஆமோசிலிருந்து எசேக்கியேல் வரை, மனமாற்றம் பற்றிய கோட்பாடு, பாவத்தைப் புரிந்து கொண்டதற்கு இணையாகத் தொடர்ந்து, ஆழப்படுத்தப் படுகிறது. நாடுகடத்தலின் இறுதியில், ஆறுதலின் செய்தி, இஸ்ராயேலின் அல்லது எஞ்சியோரின் செயலாற்றல் மிக்க மனமாற்றத்தைக் குறிப்பிடுகிறது. அறிவிக்கப்பட்ட மீட்பு, ''நீதியைத் தேடுவதில் ஆண்டவரைத் தேடுபவர்களுக்கும்'' *(எசா 51:1),* ''சட்டத்தை இதயத்திலே தாங்குபவர்களுக்கும்'' *(51:7)* உரியதாகும். இவர்கள் தங்கள் அடிமைவேலை முடிந்து போயிற்று என்றும் பாவங்கள் பரிகாரம் செய்யப்பட்டு விட்டன என்றும் உறுதிபெறலாம் *(40:2).* யாவே தன் ஊழியனான இஸ்ராயேலுக்கு ''உன் குற்றங்களைக் கார்மேகம் போலும், உன் பாவங்களைப் பனிப்படலம் போலும் அகற்றி விட்டேன். என்னிடம் திரும்பவா, நான் உனக்கு மீட்பளித்து விட்டேன்'' *(44:22)* என்று கூறுகிறார். இறைவனுடைய மக்கள் தங்கள் பிரமாணிக்கத்தில் வலுவாய் உள்ளனர் என்று முன்கருதும் இந்தப் புதிய முன்னோக்கில், இறைவாக்கினர் மீட்புப் பற்றிய வாக்குறுதி இதுவரை கேட்டிராத அளவுக்கு விரிவடைவதைக் காண்கிறார். இஸ்ராயேலர்களைத் தொடர்ந்து, பிறநாடுகளும் மனமாற்றம் பெறப்போகின்றன. இவர்கள் தங்கள் சிலைகளை விட்டுவிட்டு, உயிருள்ள இறைவன்பால் திரும்பிவருவர் *(45:14 தொ. 23தொ; காண்க. எரே 16:19 தொ).*

இங்குக் குறிக்கோளானது முன்னேற்றம் அடைகிறது. நாடு கடத்தலுக்குப்பின் வந்த யூதத்துவம் பிற மக்களிலிருந்து மனந்திரும்பியவர்களை ஏற்றுக்கொள்வது மட்டுமின்றி *(எசா 56:3.6),* இறுதிக்காலக் காட்சி ஓவியம் மனித இனம் முழுமைக்கும் மீட்புக் கிடைக்கும் என்ற சமயக் கோட்பாட்டையும் குறிக்கத் தவறுவதில்லை *(காண்க. சங் 22:28).* யோனா நூல் பிற இன மக்களுக்கும் மனமாற்றத்தின் செய்தியை நேரடியாக அறிவிப்பதைக் காணலாம். ஏனெனில், அவர்களும் மனமாறி வாழ்வு பெறுவதே இறைவனின் விருப்பம். இத்தகைய கோட்பாட்டு வளர்ச்சியின் முடிவில், மனவருத்தம் என்ற கருத்து எவ்வாறு ஆழம் பெறுகின்றது என்பதையும், பழங்கால இஸ்ராயேலில் இன்னும் இடம் பெற வேண்டிய கலப்பற்ற வெறும் சடங்கு முறையிலிருந்து எவ்வாறு தூர விலகியிருக்கிறது என்பதையும் காணலாம்.

3. மனம் வருந்துதலின் வழிபாடும் இதய மனமாற்றமும்:

அ. இறைவாக்கினரின் இடைவிடாத போதனையும், நாடு கடத்தப்பட்ட சோதனையும் இஸ்ராயேலின் தேசிய மனமாற்றத்தை விளைவித்தன எனலாம். அவர்கள் தங்கள் பாவத்தை உணரவும் உண்மையாக அறிக்கையிடவும் நாடுகடத்தல், இறையருள் பாலிப்பு அளித்த வாய்ப்பாகும். இதை

உபாகம இலக்கியமும் (1 அர 8:46-51), குருக்கள் இலக்கியமும் (லேவி 26:39தொ) கருத்தொற்றுமையுடன் கட்டிக்காட்டுகின் றன. நாடு கடத்தலுக்குப்பின், யூதர்களின் முழு ஆன்மீக வாழ்வைப் பாதிக்கும் அளவிற்கு, மனவருத்த உணர்வு அவர் களிடையே நிலைபெறுகின்றது. பழைய நோன்புமுறைக்குரிய வழிபாடுகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகின்றன (காண்க. யோவேல் 1-2); ஆனால், இறை வாக்குக் கோட்பாடு அவற்றின் பொருளடக் கத்தைப் புதுப்பிக்கின்றது. தொடக்கத்தி லிருந்து செய்யப்பட்ட தேசிய பாவங்களை அறிக்கையிட்டு, இறைவனது மன்னிப்பை யும் மீட்பின் வருகையையும் மன்றாடும் மக்களைப் பற்றிக் கூறும் நூல்கள் ஒரே மாதிரியான வாய்பாடுகளைக் கொண்டுள் ளன (எசா 63:7-64:11; எஸ் 9:5-15; நெகே 9; தானி 9:4-19; பாரூ 1:15-3:8). சங்கீதங் களில் காணப்படும் குழுப்புலம்பல்களும் இந்த மாதிரியைப் பின்பற்றுகின்றன (சங் 79; 106). மனம் வருந்தாத கடந்த காலத்தை நினைவு கூர்தல் இன்னும் அதிகமாகக் காணப்படுகிறது (காண்க. சங் 95:8-11). எப்போதும் புதுப்பிக்கப்பட்ட ஆழ்ந்த மன மாற்றத்திற்கு இஸ்ராயேல் இட்டுச் செல்லப் படுகிறது. பாவம் பற்றிய வெட்டகம் எவ்வளவு அதிகமாய் இருந்ததென்றால் (லேவி 4-5:16), இக்காலத்தில்தான் பாவப் பரிகார வழிபாடுகள் பரவலாகின.

ஆ) தனிநபர் அளவிலும், இத்தகைய முயற்சி எசேக்கியேலின் போதகத்தில் காணப்படுகிறது. நோய் மற்றும் துன்புறுத் தப்படுதல் பற்றிய சங்கீதங்கள் பாவ அறிக்கையைக் கொண்டுள்ளன (சங் 6:2; 32; 38; 103:3தொ; 143:1தொ). யோபு நூல் ஆசிரியர், அடிப்படையிலேயே மனிதனது தூய்மையற்ற தன்மை பற்றிய ஆழ்ந்த உணர்வை வெளிப்படுத்துகிறார் (யோபு 9:30தொ; 14:4). இந்த உணர்வுகள் சங் 51-இல் நிறைவாக எடுத்துக் கூறப்படுகின் றன. இதன் முழுவதிலும் மனமாற்றம் பற்றிய இறைவாக்கு போதகம் செபமாக, இறைவனோடு கொள்ளும் உரையாடல் வடிவில் (காண்க. 51:6) அமைந்துள்ளது. இச்சங்கீதத்தில் குற்றங்களை ஏற்றுக்கொள் ளுதல் (51:5தொ), உள்ளார்ந்த தூய்மை பெறுதல் பற்றிய கோரிக்கை (51:3தொ.9), இதயத்தை மாற்றக்கூடிய அருளுக்காக வேண்டுதல் (51:12 தொ), புனிதமிக்க வாழ்வை நோக்கிய மனநிலை (51:15-19) ஆகிய கூறுகள் உள்ளன. மனவருத்த வழிபாட்டில் ''நொறுங்கிய நெஞ்சின்'' பலி மையம் வகிக்கிறது (51:18தொ). இந்தப் பாரம்பரியத்தில் வந்த கும்ரான் பிரிவினர் பாலைவனத்திற்குச் சென்று, இறைவனுக்கான ''வழியைச் செம்மைப் படுத்தக்'' கடவுளின் சட்டத்திற்கு உண்மை யாகவே மனம் மாறுவதை எதிர்நோக்கினர். அவர்களின் முயற்சியில் ஓரளவு சட்டத் தன்மை இருந்தாலும், புதிய ஏற்பாட்டில் காணப்பட இருக்கும் முயற்சியிலிருந்து அஃது அதிகம் வேறுபட்டதன்று.

III **புதிய ஏற்பாடு.**

1. இறுதி இறைவாக்கினர்: புதிய ஏற் பாட்டின் தொடக்கத்திலேயே மனமாற்றம் பற்றிய இறைவாக்கினரின் செய்தி, திரு முழுக்கு யோவானின் போதகத்தில், அதன் தூய்மையான வடிவில் காணப்படுகிறது. யோவானின் தூதை லூக்கா மிகச்சுருக்க மாக, ''இஸ்ராயேல் மக்களுள் பலர், தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வரச் செய்வார்'' என்று கூறுகிறார் (லூக் 1:16தொ; காண்க. மலா 2:6; 3:24). ''மனமாற்றம் அடையுங்கள்; ஏனெனில், விண்ணரசு நெருங்கிவிட்டது'' (மத் 3:2) என்ற வாக்கு அவரது செய்தியைச் சுருக்க மாகத் தருகிறது. இறையரசின் வருகை நம்பிக்கையின் முன்னோக்கத்தைத் திறந்து விட்டாலும், அதற்குமுன் வரும் தீர்ப்பை யோவான் வலியுறுத்துகிறார். யாவேயின் நாளில் (மத் 3:7.10.12) ஆபிரகாமின் இனத் தைச் சேர்ந்தவர் என்பதால் எப்பயனு மில்லை (3:9). மனிதர் எல்லாரும் தாங்கள் பாவிகள் என்று ஏற்று, மனமாற்றம் அடைந் தவர்கள் என்பதை அதற்கேற்ற செயல் களால் காட்ட வேண்டும் (3:8); இந்நிலைக் கேற்ற புதிய வாழ்க்கை முறையைக் கடைப்

பிடிக்க வேண்டும் (லூக் 3:10-14). இந்த மனமாற்றத்தின் அடையாளமாகவே யோவான் தண்ணீரால் திருமுழுக்கு கொடுத்தது; தூய ஆவி என்னும் நெருப் பால் மெசியா கொடுக்கவிருக்கும் திரு முழுக்குக்குப் பாவிகளைத் தயாரித்தது (மத் 3:11 தொ).

2. மனமாற்றமும் இறையரசில் நுழை தலும்:

அ) இறையரசைப் போதிப்பதோடு நிறைவடையாமல், இயேசு அதை உண்மை யாக்க ஆற்றலோடு முயன்றார். அவரோடு அரசு தொடங்கிவிட்டது. ஆனால், அது மறைபொருளான நிறைவை நோக்கியே இயக்கப்படுகிறது. திருமுழுக்கு யோவான் போதித்த மனமாற்றத்திற்கான அழைப்பு, இயேசு தனது பணியின் தொடக்கத்தில் அதைத் தனதாக்கிக் கொண்டதால், அதன் உண்மைத்தன்மை குறைந்து விடவில்லை (மாற் 1:15; மத் 4:17). இயேசு ''பாவிகளை மனமாற்றம் அடையுமாறு அழைக்கவே வந்தார்'' (லூக் 5:32). இஃது அரசு பற்றிய நற்செய்தியின் ஒரு முக்கியமான கூறாகும். தன் பாவநிலையை உணரும் மனிதன், இப்போது நம்பிக்கையோடு இயேசுவிடம் திரும்பலாம். ஏனெனில், ''மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகன் அதிகாரம் கொண்டுள்ளார்'' (மத் 9:6 இணை). ஆனால், மனமாற்றம் பற்றிய செய்தி செல்வத்தின்பால் கொண்ட பற்று முதல் (மாற் 10:21-25) பரிசேயர்களின் அகந்தை மிக்க உறுதிவரை (லூக் 18:9) எல்லா வடிவங்களிலும், மனித நிறை வோடு மோதியது. கடந்த காலத்தில் நினிவே இருந்ததைவிட (லூக் 11:29-32 இணை) இறைவன்பால் நல்லுணர்வு கொள்ளாத தீய தலைமுறை மத்தியில் ''யோனாவின் அடையாளமாக'' இயேசு உயர்த்தப்படுவார். தீய தலைமுறைக்கு எதிராக எழுந்து நினிவேமக்கள் அதைக் கண்டனம் செய்வர் (11:32). கொரசீத்து ஏரிக்கரை நகர்கள் பெறும் தண்டனையை விட, தீரும் சீதோனும் பெறுவது எளிதா கவே இருக்கும் (லூக் 10:13-14 இணை). உண்மையில், இஸ்ராயேல் மனமாற்றம் கொள்ளாமை அதன் கடின இதயத்தின் அடையாளமாகும் (மத் 13:15 இணை; காண்க. எசா 6:10). இஸ்ராயேல் தனது நடத்தையை மாற்றிக் கொள்ளாவிட்டால், காய்க்காத அத்திமரத்தைப்போல் (லூக் 13:6-9; காண்க. மத் 21:18-22 இணை) இயேசுவுக்குச் செவிமடுக்க மனமாற்றம் கொள்ளாதவர்கள் அழிய வேண்டியதுதான் (லூக் 13:1-5).

ஆ. மனமாற்றத்திற்கு அழைத்தபோது, இயேசு பாவமன்னிப்பு வழிபாடுகள் பற்றி எதுவும் பேசவில்லை. பகட்டான வெளி யடையாளங்கள் எதையும் அவர் நம்ப வில்லை (மத் 6:16 தொ). அவசியமானது எதுவென்றால், ஒருவன் குழந்தையாக மாறும் இதயமாற்றமே (18:3 இணை). அதன் பிறகு ''இறைவனது அரசையும் நீதியையும் நாடுவதில்'' (6:33) தொடர்ந்து முயல வேண்டும். அதாவது, ஒருவன் தன் வாழ்வை இறையரசின், புதிய சட்டத்தின் படி அமைத்துக்கொள்ள வேண்டும். மன மாற்றம் என்ற செயல் பல உவமைகளிலும் மிக அழகாகச் சித்தரிக்கப்படுகிறது. ஒழுக்க மாற்றத்தின் விருப்பத்தை உள்ளடக்கினா லும் மனமாற்றம் ஒரு தாழ்மையான நம்பிக்கை மிக்க வேண்டுதலாய் அமை கிறது; ''கடவுளே பாவியாகிய எனக்கு இரங்கும்'' (லூக் 18:13). மனமாற்றம் ஒரு அருள் எனலாம். ஏனெனில், கடவுள்தான் முதலடி எடுத்து வைக்கிறார். காணாமல் போன ஆட்டைத் தேடிச் செல்வது ஆயன் தான் (லூக் 15:4தொ;காண்க. 15:8). கடவுள் எடுத்துவைக்கும் முதலடிக்கு மனிதன் தரும் பதில் என்ன என்பதுபற்றி ஊதாரி மைந்தன் உவமையில் மிகத்தெளிவாக அலசப்படு கிறது (லூக் 15:11-32). மனந்திரும்பத் தேவையில்லாத தொண்ணூற்று ஒன்பது நீதிமான்களைவிட, மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து விண்ணகத்தில் அதிக மகிழ்ச்சி உண்டாகும் என்ற மன உலைவு தரும் வெளிப்பாட்டை நற்செய்தி கொடுக் கிறது (லூக் 15:7.10). பரிசேயர்களுக்கு இடறலாக இருக்குமளவுக்குப் பாவிகளை

இயேசு வரவேற்றார் (மத் 9:10-13 இணை; லூக் 15:2). ஆனால், அது மனமாற்றத்தை அவர்களில் விளைவித்தது. லூக்காவின் நற்செய்தி மனமாற்றத்தின் சில நிகழ்வு களை மிகத் தெளிவாக விளக்குகிறது. பாவம் செய்த பெண் (லூக் 7:36-50)-மற்றும் சக்கேயுவின் கதை (19:5-9) நல்ல சான்று களாகும்.

3. மனமாற்றமும் திருமுழுக்கும்:

அ) இயேசு தான் வாழ்ந்த காலத்தில் இறை அரசின் நற்செய்தியை அறிவிக்கவும், அதற்கான மனமாற்றத்தின் செய்தியை எடுத்துரைக்கவும் தனது அப்போஸ்தலர் களை அனுப்பினார் (மாற் 6:12); உயிர்ப் புக்குப் பிறகு அவர்களது அந்தப் பணி யைப் புதுப்பித்தார். உலகெங்கும் அவரது பெயரால் பாவமன்னிப்பின் நோக்கோடு மனமாற்றத்தின் நற்செய்தியை அறிவிக்க (லூக் 24:47) வேண்டுமென்றார். ஏனெனில், எவருடைய பாவங்களை மன்னிப்பார் களோ அவை அவருக்கு மன்னிக்கப்படும் (யோவா 20:23). அப்போஸ்தலர் பணி யிலும், திருமுகங்களிலும் இந்தக் கட்டளை நிறைவேறுவதைக் கண்கூடாகப் பார்க்கி றோம். ஆனால் மனமாற்றம் என்பது யூதர்களைப் பொறுத்தும், புறவினத்தார் களைப் பொறுத்தும் மாறுபடுகின்றது.

ஆ) யூதர்களுக்குத் தேவையானது என்ன வென்றால் இயேசு ஏற்கெனவே அழைப்பு விடுத்த ஒழுக்க வாழ்வில் ஏற்படும் மாற்ற மாகும். அவர்கள் மனம் மாறினால் கடவுள் அவர்களுக்கு மன்னிப்பளிப்பார் (அ.ப. 2:38; 3:19; 5:31). இந்த மன்னிப்பு திருமுழுக் கையும், தூய ஆவியின் கொடையையும் பெறுவதால் முத்திரையிடப்படும் (2:38). மனமாற்றம் என்பது ஓர் ஒழுக்க மாற்ற மாகும்போது அது கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் செயலையும் உள்ளடக்க வேண் டும். யூதர்கள் ஆண்டவரிடம் திரும்புவர் (அ.ப. 3:19; 9:25). பவுல் குறிப்பிடுவது போல இவ்வாறு கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ளுதல் அடைவதற்குக் கடினமாகும். ஏனெனில், யூதர்கள் தங்கள் இதயத்தைச் சுற்றி ஒரு திரையைப் போட்டிருக்கிறார்கள். மனம் மாறினால் அத்திரை கிழேவிழும் (2 கொரி 3:16 தொ). ஆனால், எசாயாவின் கூற்றுக்கேற்ப (எசா 6:9 தொ) அவர்களது கடின இதயம் மன மாற்றத்தை முழுவதும் பெறாமல் போகுமாறு செய்து விட்டது (அ.ப. 28:24-27). புறவினத்தாரைப்போல் இவர்களும் இறைக் கோபத்தால் அச்சுறுத் தப்பட்டாலும், இவர் மனம் வருந்த வேண் டும் என்பதற்காகவே கடவுள் பொறுமை காட்டியதை இவர்கள் புரிந்து கொள்ள வில்லை (உரோ 2:4). அவர்களில் எஞ்சி யோரே அப்போஸ்தலர்களின் போத னைக்குச் செவி மடுத்தனர் (உரோ 11:1-5).

இ) நற்செய்தி புறவினத்தார் நாடுகளிலே மிகச் சிறப்பான வரவேற்பைப் பெற்றது. கொர்னேலியு திருமுழுக்குப் பெற்றபோது யூதக் கிறிஸ்தவர்கள் வியந்து குறிப்பிட்டதா வது, ''வாழ்வுக்கு வழியாகும் மனமாற்றத் தைக் கடவுள் நமக்கும், புறவினத்தாருக்கும் கூட அருளினார்'' (அ.ப. 11:18. காண்க. 17:30). உண்மையிலேயே நற்செய்தி அந்தி யோக்கியாவிலும் மற்ற இடங்களிலும் வெற்றியோடு போதிக்கப்பட்டது (11:21; 15:3.19). பவுலின் சிறப்புப் பணியே புற வினத்தார் மத்தியில்தான் (26:18:20). ஆனால், இங்கு மனமாற்றம் ஒருவனைச் சிலைவழிபாட்டிலிருந்து உயிருள்ள கட வுளை நோக்கி வருமாறு அழைப்பு விடுக் கிறது (14:15; 26:18; 1 தெச 1:9). எனவே, முதல் முயற்சி எடுக்கப்பட்டவுடன் புற வினத்தாரும் யூதர்களைப்போல ''அவர்கள் தம் ஆன்மாக்களில் ஆயரும் காவலருமான வரிடம் திரும்பி வந்தனர்'' (1பேதுரு 2:25).

4. திருச்சபையில் பாவமும், மனம் வருந் துதலும்:

அ) திருமுழுக்கால் முத்திரையிடப்பட்ட மன மாற்றச் செயல் உறுதியாக என்றென்றுக்கும் செயல்பட்டதாகும். இந்த அருள் திரும்ப வும் புதுப்பிக்க முடியாத ஒன்றாகும் (எபி 6:6). ஆனால், திருமுழுக்குப் பெற்றவர்கள் மீண்டும் விழக்கூடியவர்கள். இதை அப் போஸ்தலர் குழு பாவத்தில் விரைவில் கண்டது. எஃது எப்படியிருந்தாலும் மீட்பில் பங்குபெற மனம் வருந்துதலின் அவசி

யத்தை உணர்ந்தனர். எனவே, பேதுரு சீமோன் எனும் மந்திரவாதியை மனம் வருந்தத் தூண்டினார் (அ.ப. 8:22). உண்மையை விட்டு விலகித் திரிபவர்களை மனம் திருப்புமாறு பக்தியுள்ள கிறிஸ்தவர்களை யாக்கோபு தூண்டுகிறார் (யாக் 5:19-20). பவுல், கொரிந்தியர்கள் மனம் வருந்தியதைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றார் (2 கொரி 7:9); தவறுபவர்களைத் திருத்துமாறு திமொத்தேயுவைக் கேட்கின்றார்; ஏனெனில், கடவுள் அவர்கட்கு மனம் வருந்தும் அருளைத் தருவார் என நம்புகிறார் (2 திமொ 2:25). திருவெளிப்பாட்டு நூலின் தொடக்கத்தில் வரும் ஏழு சபைகளுக்கு அளிக்கப்பட்ட செய்திகள், மனம் வருந்துதலுக்கான தெளிவான அழைப்பைக் கொண்டுள்ளன. இது முதல் ஆர்வத்தியிலிருந்து வீழ்ச்சியுற்றதைச் சுட்டுகிறது (திருவெளி 2:5.16.21தொ; 3:3.19). பாவ மன்னிப்புத் திருவருட் சாதனத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசாவிடினும், இந்த வாசகங்கள், திருமுழுக்கு மனமாற்றத்தை நீட்டிப்பதில், பாவமன்னிப்பு என்னும் நற்பண்பு கிறிஸ்தவ வாழ்வில் அதற்குரிய இடத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றன.

ஆ. மனம் வருத்தம் கொள்தலே இறைவனின் தீர்ப்பை ஒருவன் சந்திக்க அவனைத் தயாரிக்கிறது (காண்க. அ.ப. 17:30 தொ). இப்பொழுது வரலாறு அந்தத் தீர்ப்பை நோக்கியே போய்க் கொண்டிருக்கிறது. அதன் வருகை தாமதமாகிறதென்றால் அதற்குக் காரணம் ''கடவுள் பொறுமையாக இருக்கிறார்; ஒருவரும் அழிவுறக் கூடாது, முடிந்தால் எல்லாரும் மனந் திரும்ப வேண்டுமென்றிருக்கிறார்'' (2 பேதுரு 3:9). இறைவாக்கினரின் காலத்திலும் சரி, இயேசு வந்தபோதும் சரி, அப்போஸ்தலர்களின் போதனைகளைக் கேட்ட பின்பும் சரி யூதர்கள் மனம் மாறாமல் தங்கள் இதயங்களைக் கடினப் படுத்திக் கொண்டனர். அது போலவே இன்று வரலாற்றில் நிகழும் அருங்குறிகளைக் கண்டபின்பும் மனமாற்றமோ, மன வருத்தமோ இன்றி வாழ்பவர்கள் (திருவெளி 9:20 தொ), தெய்வநிந்தனை செய்து, கடவுளுக்கு மகிமை செலுத்தாமல், மனமாற்றமின்றி அழிவார்கள் (16:9.11). இதற்குக்காரணம் திருச்சபையின் அங்கத்தினர்கள் அல்லர். புறவினத்தாரும் கொள்கை துறப்பவர்களுமே காரணம் (காண்க. 21:8). இத்தகைய சூழலில் கிறிஸ்தவர்கள் மனவருத்தம் கொண்டு, மனமாற்றம் பெற்று இந்த நெறிகெட்ட இந்தத் தலைமுறையினரிடமிருந்து தங்களையே காத்துக் கொள்வார்களாக (அ.ப. 2:40).

மனவுறுதி (ENDURANCE, STEADFASTNESS)

இது, புதிய ஏற்பாட்டில் காணப்படும் கிறிஸ்தவ வாழ்வின் நற்பண்புகளில் ஒன்றாகும். குறிப்பாக, இறைவன் பொருட்டுக் கொடுமைப்படுத்தப்படும் போது வெளிப்படும் நற்பண்பாகும். இது மனத்திண்மையை விளைவிக்க வல்லது (லூக் 21:19; உரோ 5:3-4; 2 கொரி 6:4; கொலோ 1:11; எபி 10:36; திருவெளி 1:9; 2:2. 19; 3:10; 13:10; 14:12). இதைக் குறிக்கும் கிரேக்கச்சொல் விட்டுக்கொடுத்தல், பொறுமை, விடாமுயற்சி போன்ற பொருள்களைச் சுட்டவல்லது.

கிறிஸ்தவர்கள் இயேசுவைப் போன்று மனவுறுதியுடன் வாழவேண்டும் என்று உரோமையர்களுக்குப் பவுல் கூறுகிறார் (உரோ 5:3-4). மேலும், தெசலோனிக்கேயர்கள் வேதனைகளை மனவுறுதியோடு தாங்கிக்கொள்வதை நினைத்துத் தான் பெருமைப்படுவதாகவும் கூறுகிறார் (2 தெச 1:4). தனது திருமுகத்தில், யாக்கோபு விசுவாசம் சோதிக்கப்படுவதால் மனவுறுதி விளையும் என்று கூறுகிறார் (யாக் 1:3-4).

மனாசே (MANASSEH - மறக்கச் செய்தல்)

1. மனாசே, யோசேப்பின் முதல் மகனும், எகிப்தியக் குருவின் மகளான ஆசினத்துக்குப் பிறந்தவருமாவார் (ஆதி 41:51; 46;20). யாக்கோபால் தன் புதல்வராய் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் (48:5). ஆனால், யாக்கோபின் புதல்வர்களின் பெயர் வரிசையில் மனாசேயின் பெயர் காணப்பட்டதே

யில்லை; யோசேப்பின் பெயரே வருகிறது. மற்ற இடங்களில் இவர் தனி நபராக வருகிறார் (ஆதி 50:23). இவரே மனாசே கோத்திரத்தின் இனப்பெயர் முதல்வர். மனாசே கோத்திரத்தின் தலைவராக இவ ரின் பங்கு முக்கியமானது. இவர் யாக்கோ பின் புதல்வராக ஏற்றுக்கொள்ளப்பட்டா லும் முதல் மைந்தனான இவர் எப்பிராயி முக்குப் பின்தான் வைக்கப்படுகிறார். இஃது எப்பிராயிம் கோத்திரத்துக்கு அளிக் கப்பட்ட முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

கோத்திரங்களுக்கிடையே ஏற்பட்ட பல குழப்படியான உறவுகளைச் சரிசெய்யவே எப்பிராயிமும், மனாசேயும், யாக்கோபின் புதல்வர்களாகத் தத்து எடுக்கப்பட்டார்கள். எண் 1:34-இன்படி, மனாசேக்குப் போருக்குப் போகத்தக்கவர் 32,200 பேர் கொடுக்கப்பட் டனர். எண் 26:29-34-இன்படி 52,700 போருக்குப் போகத்தக்கவர்கள் கொடுக்கப் பட்டனர். மனாசேயின் இனம் எண்ணிக்கை நூலில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது (எண் 26:29-34; 1நாள் 7:14-29). யாக்கோபு ஆசி அளிக்கும்போது அங்கு மனாசே காணப்பட வில்லை (ஆதி 49). ஆனால், மோசே ஆசி அளிக்கும்போது யோசேப்பின் குடும்பத் தில் எப்பிராயிமுடன் மனாசே இடம் பெறுகிறார் (உப 33:17).

மனாசே, யோர்தானின் கிழக்கிலும், பாசானிலும், கிலயாதின் வடபாதியிலும், வாழ்ந்ததாகப் பரம்பரை ஒன்று கூறுகிறது (உப 3:13-14; யோசு 13:29-31; 17:1-6). மனாசே கோத்திரத்தின் ஒரு பிரிவான மாக்கீர், வட கிலயாதில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. எரிகோவின் அருகே கீழ்த் திசையிலுள்ள பகுதி மோசே பிரித்துக் கொடுத்ததின்படி மனாசேயின் கோத்திரத் தாருக்குக் கிடைத்தது (எண் 32:33. 39தொ; 34:14; உப 3:13-14; யோசு 1:12; 12:6; 18:7). மனாசேயின் கோத்திரத்தார், இஸ்ராயேலர் கானான் நாட்டுக்குள் நுழையுமுன்பே, பாலஸ்தீனத்தில் குடிபுகுந்து வாழ்ந்ததாக உரிமை கொண்டாடினர். ஆனால், இஃது ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. ஏனெனில், மனாசேயும், எப்பிராயிமும், இஸ்ராயேலர் களாக எகிப்திலிருந்து கானான் நாட்டுக்கு மற்றெல்லோருடனும் சேர்ந்தே வந்தனர். மேற்குப் பாலஸ்தீனத்திலிருந்து, கிழக்குப் பாலஸ்தீனத்துக்கு மனாசேயின் கோத்திரத் தார் சென்றதால் இவ்வாறு கூற வாய்ப் புண்டு. மேலும், மனாசே கோத்திரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாக்கீர் இனம், பாலஸ்தீனத்தில் இஸ்ராயேல் புகுமுன்பே, குடியேறி இருக்கலாம். எண்ணாகமம் 32:33. 89-40-இல் மனாசேயின் கோத்திரம் காத்து, ரூபன் கோத்திரங்களோடு சேர்த்துக் கூறப் படுகிறது. இதற்கு முன்பகுதியில் இவ்வாறு கூறப்பட்டதில்லை. ஆனால், மனாசேயின் கோத்திரத்தார் பலிபீடம் பற்றிய சச்சரவில் கூறப்படுகின்றனர் (யோசு 22). மேற்குப் பாலஸ்தீனத்தில் எப்பிரயிமின் வடபுறத் தில், மனாசேக்குரிய நாடு அமைந்துள்ளது. இது செக்கேமையும் உள்ளடக்கியுள்ளது (யோசு 17:7-13). அதன் கானானிய நகரங் கள் எல்லாம் மேற்குப் பாலஸ்தீனத்திலே உள்ளன (நீதி 1:27). மனாசேயின் குடும்பத் தினரையெல்லாம் போருக்கு ஒன்று சேர்த்த கிதியோன் மேற்குப் பாலஸ்தீனத்திலே வாழ்ந்தார் (நீதி 6:15.35; 7:23). எப்பிரயிமுக் கும் மனாசேக்குமிடையே ஏதாவது எல்லை இருந்ததா என்பது நிச்சயமாக இல்லை; எப்பிரயிம் கோத்திரத்தார் மனாசேயின் நாட்டிலே வாழ்ந்தனர் எனவும் கூறப்படு கிறது (யோசு 16:9; 17:7-13). மனாசேயில் இருந்த கானானிய நகரங்கள் (நீதி 1:2) எப்பிரயிமின் நகரங்களாயின (1 நாள் 7:29). இந்த மாற்றம் போரினாலா அல்லது ஒப்பந் தத்தாலா என்பது கூறப்படவில்லை.

எப்பிரயிமும், மனாசேயும் வட அரசைக் குறிப்பதாக எசா 9:20-இலும், மனாசேயைக் கிழக்குப் பாலஸ்தீனத்திலுள்ள கில்யா தோடு தொடர்புபடுத்தி சங் 60:9; 108:9-இலும் கூறப்படுகின்றன. நாள் ஆகம மும் எப்பிரயிமும், மனாசேயும் வட வரசையே குறிப்பதாகக் கூறுகிறது (2 நாள் 15:9; 30:1. 18; 31:1). கி.மு. 734-இல் அசீரியர்கள் மனாசேயின் கோத்திரத்தை மெசபொத்தாமிய நகரங்கட்கு இட்டுச் சென்றதாக 1 நாள் ஆகமம் ஒரு மரபுவழிச் செய்தியைக் கொண்டிருக்கிறது.

2. மனாசே கி.மு. 687-642 வரை யூதாவை ஆண்ட அரசன் ஆவான். இவன் எசேக்கியா வின் மகன் (2 அர 20:21; 2 நாள் 32:33). இவனது காலத்தில் அன்னியக் கடவுளை வழிபட்டதாகவும், எல்லாவகை மூடநம் பிக்கைகளையும் கொண்டிருந்ததாகவும், அடக்குமுறையும், கொலைகளும் நிரம்பி யிருந்தன எனவும் கூறுகின்றனர். எனவே, யூதாவின் அரசர்களில் மிகவும் மோசமான வனாகக் கருதப்படுபவன் இவன் (2 அர 21:1-17). இவனது ஆட்சிக்காலமே ஆண்ட வர் யூதாவை அழிக்க முடிவு செய்வதற்கு ஏதுவாகிறது. 2 நாள் 33:1-10- இதே போன்ற குறைகளை எடுத்துக் கூறியபோதி லும், 33:11-20-இல், தனக்கேயுரிய சில குறிப்புகளையும் சேர்த்துக் கொள்கின்றது. இதில் மனாசே அசீரியாவுக்குக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு அவன் மனம் மாறி, தனது மூடநம்பிக்கை, சிலைவழிபாடு ஆகியவற்றை விட்டு விட்டதாகவும் கூறினாலும் இது வரலாற்று உண்மை போல் தெரியவில்லை. இவனது சீர்கேடுகளே யாவே இஸ்ராயேலைத் தண் டிப்பதற்கு ஏதுவான காலமாகியது என்பதற் குப் பல சான்றுகள் உள்ளதால் மேலே கூறியதை வரலாற்று உண்மையாக ஏற்றுக் கொள்ள இயலாததாய் இருக்கிறது (2 அர 23:26; 24:3; எரே 15:4).

2 நாளாகமத்தின் அடிப்படையில் எழுதப் பட்ட கற்பனை நூலே 'மனாசேயின் செபம்' எனும் போலி நூலாகும். மனாசே கேடு கெட்டவனாயினும் அவனது மனந் திரும்புதலின் பயனாக அவன் நெடிய அமைதியான அரசாட்சியைப் பெற்றிருந் தான்; எத்துன்பமுமின்றி இயற்கையான மரணமடைந்தான் என நாளகமமும் கருது கிறது. ஒரு மரபுச்செய்தியை இறையியலாக் குவதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும். எருசலேமைச் சுற்றி மனாசே அரண் அமைத் தான் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன் றாகும் (2 நாள் 33:14).

மனாசே அசீரியர்களுக்குப் பணிந்து ஆட்சி செய்ததால், அவனது மதக்கொள்கை கள் பல ஒழுங்கற்றனவாக இருந்தாலும் நாட்டில் அமைதி நிலவியது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே. சனகெரிபின் படையெடுப்பு யூதாவை முற்றிலும் அடி மைப்படுத்தியது. மனாசே யூதா முழுவதை யும் பண்பாட்டு, மத அளவில் அசீரியா வுக்குக் கீழ்ப்படுத்த விரும்பினான். தன்னை எதிர்க்கும் யாவேயின் ஊழியர்களையும் துன்புறுத்தி வன்முறையில் அடக்கி வைத் தான். கி.மு. 680-630 வரை அசீரியர்களின் கீழ் சிற்றரசனாக இருந்தான். இவன் பாபி லோனில் சிறை வைக்கப்பட்டிருந்தான் என்ற கதை, மெசபொத்தாமியாவுக்குச் சென்ற பயணத்தின் விளைவாக வந்த கருத்தாக இருக்கலாம்.

3. பகத் மோவாபின் புதல்வர்களில் ஒரு வர். இவர் தன் அன்னிய மனைவியை விலக்கிவிட வேண்டியிருந்தது (எஸ் 10:30).

4. ஆசமின் புதல்வர்களில் ஒருவர். இவர் தன் அன்னிய மனைவியை விலக்கிவிட் டார் (எஸ் 10:33).

5. யூதித்தின் கணவன்; செல்வந்தர்; சிமி யோன் இனத்தைச் சேர்ந்தவர். இவர் கடும் வெயிலால் தாக்குண்டு இறந்துபோனார் (யூதி 8:2-3.7).

மனாசேயின் செபம் (MANASSEH, PRAYER OF)

2 நாள் 33:11-13-ஐ அடிப்படையாகக் கொண்டு மனாசேயின் செபமாகக் கூறப் படுவது. 15 வரிகளைக் கொண்ட ஒரு மனம்வருந்துதலின் சங்கீதம். 2 அர 21-24-இல் கூறப்பட்டதற்கு மாறாக, இவர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுச் சிறை யிலடைக்கப்பட்டதாகவும், அங்கு மனந் திரும்பி மன்னிப்பு வேண்டிச் செபித்ததே இச்செபம் எனவும் உரைப்பர்.

இச்செபம், இறைவனை நீதியுள்ளவர்கள் மற்றும் முதுபெரும் தந்தையர்களின் தந்தை யாகவும், அனைத்தையும் படைத்து நடத்து பவராகவும், பாவத்தை மன்னிப்பவராக வும், இரக்கம் காட்டுபவராகவும் விளித்துத் தொடங்குகிறது. அவர் மனந்திரும்புதலை நீதிமான்களுக்கன்று, பாவிகட்கே அளித்

தார். மனாசே தன் பாவங்கள் கடலின் மணலைப் போன்றதென்றும், தனக்கு மன்னிப்பருளுமாறும் உருக்கமாக வேண்டுகிறார். கடவுள் தன் இரக்கப் பெருக்கத்தில் தன்னை மன்னிப்பாரேயாகில் வாழும்நாள் எல்லாம் அவரையே புகழ்வதாக வாக்குறுதி அளிக்கிறார்.

இச்செபம் நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட யூதர்களின் செபம் போன்றுள்ளது. இதில் பொது, தனி மனிதப்பண்புகள் காணப்படுவதோடு, மறு வாழ்வு பற்றிப் பேசுகையில் பாதாளம் (செயோல்) என்று கூறுவதால் சங் 51, அசரியாவின் செபம் முதலிய வற்றைப் போன்றுள்ளது. மனாசேயின் செபம் இவற்றோடு ஒப்பிடும்போது தரத்தில் சிறிது குறைவாகத் தோன்றினாலும் உண்மையான பக்தியும், கடவுட்பற்றும் உள்ளதாக இருக்கிறது.

மனாசேயின் மனந்திரும்புதல் என்பது உண்மையை விட, கற்பனை என்றே கூறத் தோன்றுகிறது. ஏனெனில், அவன் மனந்திரும்பி வந்து மேற்கொண்ட சீர்திருத்தங்களெல்லாம் 2 அரசர்கள் நூல், அரசன் யோசியா செய்ததாகக் கூறுகிறது. யோசியா பல சீர்திருத்தங்களைச் செய்தாலும், மனாசேயின் சீர்கேட்டினால் விளைந்த பாபிலோனியப் படையெடுப்பு எவ்வளவு தீமைகளை விளைத்துள்ளது எனக் குற்றம் சாட்டுகிறது இந்நூல் (2 அர 21:13-14; 23:26-27; 24:3-4). ஆனால், நாளாகமம் செதேக்கியா அரசன்தான் இத்தகைய சீர்கேடுகளுக்குக் காரணமெனக் கூறுகிறது (2 நாள் 36:14-21). போலிநூல்கள் மட்டுமே மனாசேயின் மனந்திரும்புதலின் செபம் பற்றிப் பேசுகின்றன.

இச்செபத்தின் முதன்மை மொழி எது வென்பது தெளிவாக இல்லை. கிரேக்கம் என்று பலர் கூறுகின்றனர். இச்செபம் திரிதெந்தின் சங்கத்திற்குமுன் 2 நாளாகமத்தின் முடிவில் வைக்கப்பட்டது. பின், புதிய ஏற்பாட்டின் பிற்சேர்க்கையில் வைக்கப்பட்டது. லூத்தர் போன்றோர் தமது விவிலியத்தில் ஏற்றுக்கொண்டனர். ஸ்விங்லி இதனை ஒதுக்கிவிட்டார். கத்தோலிக்கத் திருச்சபை தனது விவிலியத்திலிருந்து இதனை எடுத்துவிட்டது.

மனாயேன் *(MANAEN - ஆறுதல் அளிப்பவர்)*

பர்னபா, நீகர் எனும் சிமெயோன், சிரேனே ஊரான் லூக்கியு, அந்தியோக்கு திருச்சபையைச் சேர்ந்த சவுல் ஆகியவர்களில் ஒருவராக, அப்போஸ்தலர் பணி நூலில் மனாயேன் காட்டப்படுகிறார் (அ.ப. 13:1).

மனாயேன் ஏரோது அந்திப்பாவுடன் வளர்ந்தவர் எனக் கூறப்படுகிறது. ''கூட வளர்ந்தவன்'', என்பதைக் குறிக்கும் கிரேக்கச்சொல் புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே வருகிறது. இந்தச் சொல்லை 'அரசவையின் உறுப்பினர்', 'நெருங்கிய நண்பர்' என மொழிபெயர்க்கலாம். எனவே, மனாயேன் சிறுவயதிலிருந்தே ஏரோதின் நண்பனாக இருந்திருக்க வேண்டும்.

மனிதப் பண்பேற்றிக் கூறுதல் *(ANTHROPOMORPHISM)*

இஃது ஒப்புமை மொழியைச் சேர்ந்த சொற்றொடராகும். மனிதப்பண்புகளையும் உணர்ச்சிகளையும் ஒப்புமை முறையில் இறைவனுக்குச் சாற்றிக் கூறுவதாகும். இச்சொற்றொடர் இறைவன் மனிதவடிவில் தம்மை வெளிப்படுத்துவதையும் உணர்த்துகிறது. விவிலியம் அடிக்கடி இறைவனை மனிதச் சொற்களில் விவரிக்கிறது. அவருக்குக் கைகளும் (யாத் 6:6), கால்களும் (24:10) இருப்பதாக விவரிக்கிறது. அவர் கோபம் (4:14), அன்பு (20:6) போன்ற மனித உணர்ச்சிகளை அனுபவிப்பதாக விவரிக்கிறது.

அதன் வரலாற்றின் தொடக்கத்திலிருந்து இஸ்ராயேலுக்கு இறைவன் மனிதத்தன்மையோடு தோன்றுகிறார். தன் கோபத்தை மிகவும் மனிதத்தன்மையான சொற்களில் எடுத்துரைக்கிறார். அதே சமயம் தமது இறைத்தன்மையை மோசே மறந்துவிட அனுமதிக்கவில்லை. அவரது பின்புறத்தை மோசே காணலாம்; ஆனால் அவர்

முகத்தைக் காணமுடியாது (யாத் 33:21-23). இஸ்ராயேலின் பிற்கால வரலாற்றில் எசாயா இறைவனது மகிமையை அறிவிக்கிறார் (எசா 40:12-13). இஃது இஸ்ராயேலின் படைப்பவரும் மீட்பவருமானவரை மிகுந்த மனிதப்பண்பில், ஆகவே வரையறைக்குட்பட்ட, பாவமான கருத்தில் விவரிப்புக்கு எதிராகப் போராடும் முயற்சியாகத் தெரிகிறது.

புதிய ஏற்பாட்டில் இறைவன் தம் மகனில் தம்மை வெளிப்படுத்துகிறார். இயேசுவில் இறைவன் ''தம்மை வெறுமையாக்குகிறார்'' (பிலி 2:7). இயேசுவில் அவர் தம்மை மனிதர் காணச் செய்கிறார் (யோவா 14:9). இறைவன் தம்மைத் தூய முடிவில்லாதவராக, வரையறைக்குட்பட்ட வீழ்ச்சிக்குப் பின், பாவமிக்க, மனிதர்களுக்குத் தம்மை வெளிப்படுத்த விரும்பியதால், அவர் மனித மொழிக்கும், உணர்ச்சிகளுக்கும் பொருட்களுக்கும் தம்மை இசைவுபடுத்த வேண்டியிருந்தது எனலாம். இந்த மனிதப் பண்பேற்றிய சுயவெளிப்பாடுகள் உண்மையான இறைவெளிப்பாடுகளே என்று விவிலியம் ஐயமின்றிச் சுட்டுகிறது.

இம்முறையில் வெளிப்பாடு அளிக்கப்படுவது பற்றி கிறிஸ்தவர்களிடையே எப்போதும் பிரச்சனை இருந்து கொண்டேயிருக்கும். சிலர் இந்த உடல் சார்ந்த உருவங்களைச் சொற்பொருளில் எடுத்துக் கொண்டு இறைவனை ஒரு வரையறைக் குட்பட்ட உயிராய்க் கொள்வர். இதற்கு மாறாக வேறுசிலர், இறைவனுக்குச் சாற்றிக் கூறப்படும் மனிதக்கூறுகளை மறுத்து,அவர் அறிய முடியாதவர் என்று வலியுறுத்துவர். ஆனால், மறைநூல் அவரது இறைத்தன்மை, மனித செயற்களத்தில் பங்குபெற அவர் விருப்பம் கொள்ளுதல் ஆகிய இரு கூறுகளையும் வலியுறுத்துகிறது.

மனிதப்பேச்சு (HUMAN SPEECH)

பழங்காலத்தில் பொதுவாக இருந்த ஒரு கருத்தைப் பின்பற்றி மனிதப் பேச்சானது காலியான, பொருளற்ற ஒலி மட்டுமே, என்றும் மனிதர்கள் தங்களிடையே தொடர்பு கொள்ளப்பயன்படுத்தும் எளியதொரு கருவி என்றும் விவிலிய உலகு கருதவில்லை. மாறாக, மனிதப்பேச்சானது ஓர் ஆளைப் பற்றி நமக்கு வெளிப்படுத்துகிறது; அவரது இயக்க ஆற்றலில் பங்கு கொள்கிறது; ஒருவாறு பயனிறைவுடையதாக இருக்கிறது என்று விவிலிய உலகு கருதுகிறது. எனவே, அது மனித நடத்தையில் சிறப்பிடம் பெற்று நிற்கிறது.

ஒருவனது மரியாதையும் மகிமையும் அல்லது அவன் அடையும் குழப்பமும் சிறுமையும் அவனது சொல்லின் தன்மையைப் பொறுத்தது (சீரா 5:13). சாவும் வாழ்வும் ஒருவனது சொல்லாற்றலிலிருந்தே விளைகின்றன (பழ 18:21). ஒருவனது வாயினின்று புறப்படும் சொற்கள் அவனது மதிப்பை நிர்ணயிக்கக்கூடிய உரைகல்லாகப் பயன்படுத்தப்படும் (சீரா 27:4-7). பயனுள்ள பேச்சை ஞானிகள் நம் மனதிற் பதியுமாறு கற்பிக்கின்றனர் என்பதையும், பயனற்ற பேச்சைப் பலரறியப் பழித்துக் கூறியிருக்கின்றனர் என்பதையும் நாம் அறிவோம். பழைய ஏற்பாடு கற்பிக்கும் இக்கருத்தைத்தான் புதிய ஏற்பாடும் நமக்கு மீண்டும் எடுத்துக்கூறுகிறது.

1. **பயனற்ற பேச்சு:** ஓயாது ஒழியாது பேசுவதற்குத் துடிக்கும் வாயாடியானவன் (பழ 10:8.19; 13:3; 20:19; 29:20) தன்னைத் தானே வெறுப்புக்கும் பகைமைக்கும் ஆளாக்கிக் கொள்கிறான் (சீரா 20:5-8). சூதுவாதுள்ள சொல்லுள்ளவனை அறிவிலி என்று நாம் கண்டு கொள்கிறோம் (20:18-தொ). வெறுமையான, பயனற்ற சொற்களை ஆறுதலாகக் கூறுபவன் உண்மை நண்பனல்லன் (யோபு 13:4). இவற்றிற்கு எல்லாம் மேலாக இன்னும் மோசமானது என்ன வென்றால், தீயோனது பேச்சாகும். அது பிறர் இரத்தத்தைச் சிந்துவதற்காகப் பயன்படுத்தப்பெறும் சூழ்ச்சிப் பொறியாகும் (பழ 12:6).

அறிவாளியானவன் அவதூறான பேச்சிலிருந்து தன்னைத் தானே பாதுகாத்துக்

கொள்ளவேண்டும் *(சீரா 5:14)*. ஏனெனில், ஒரு வாளைவிட நாவானது பலரைக் குத்திக் கொல்லக் காரணமாயிருக்கிறது *(பழ 12:18; சீரா 28:17 தொ)*. புறங்கூறுபவர் களது சொற்கள் பல வேளைகளில் இனிப்புப் பண்டங்களைப்போல ஏற்றுக் கொள்ளப்படுகின்றன *(பழ 26:22)*. ஆனால், அவை கொடூரமாகக் காயப்படுத்துகின்றன. அதிகத் துன்ப வேதனைகள் அடைந்திருக் கும் மக்களைப் பற்றிப் பேசும்போதெல் லாம், அவர்களை மீண்டும் துன்பத்துக்குள் ளாக்கும் பழிச்சொற்களையும் அவதூறு களையும் பலரறியப் பழித்துக் கூறிக்கொண் டேயிருக்கிறார் சங்கீத ஆசிரியர் *(சங் 5:10; 19:7)*. புதிய ஏற்பாட்டில், புனித யாக்கோ பின் திருமுகமும் தவறான பேச்சைப் பற்றிய இந்த அறிவுரைகளைத்தான் ஆழ்ந்து ஆய்கிறது *(யாக் 3:2-12)*. நாவடக்கமாய் இருப்பது கிறிஸ்தவ ஞானத்தின் முதல் கோரிக்கைகளில் ஒன்றாகும் *(காண்க. 1:26; 3:2)*.

அஞ்சித் தவிர்க்க வேண்டிய மற்ற ஆபத்துகள் என்ன வென்றால், தூய்மை யற்ற இழிவான பேச்சும் *(சீரா 23:12-21)*, பொய் ஆணையும் ஆகும். பொய் ஆணையை மோசேயின் சட்டம் தடுத்திருக் கிறது *(யாத் 20:6; எண் 30:3; உப 23:22...)*. சிந்திக்காமல் மக்கள் ஆணைகளைப் பயன் படுத்தலாம் என்று அஞ்சுகிறார் சிராக்குநூல் ஆசிரியர். எனவே, ஆணைகளின் எண்ணிக் கையைக் கட்டுப்படுத்த வேண்டும் என அறிவுறுத்துகின்றார் *(சீரா 23:7-11)*. அதற்கு மாறாக, ஆணைகளைப் பயனற்றதாக்கக் கூடிய உண்மை கூறுதல் பற்றிய கொள்கை ஒன்றைப் போதித்தார் இயேசு *(மத் 5:33-37)*. இதே எடுத்துக்காட்டை அப் போஸ்தலர்கள் போதனையிலும் காணலாம் *(யாக் 5:12; 2 கொரி 1:17 தொ)*.

பேச்சினால் விளையும் பயனை மாய வித்தை எனக் கருதி அதில் நாம் அளவற்ற குருட்டு நம்பிக்கை வைக்கும் நிர்ப்பந்தமும் ஏற்படலாம். ஆனால், இஃது ஒரு பாவம். இப்பாவத்தையும் நாம் பேச்சைப் பற்றிய பாவங்களின் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்பாவம் பழங்காலக் கீழ்த் திசை நாடுகளில் பொதுவாக வழக்கிலிருந் திருக்கிறது; வேதாகமச் சூழ்நிலையிலும் காணப்படுகிறது (கேடுகாலம் பற்றிய சொற்கள்: *எண் 22:6*; கற்பனைத் தோற்ற மான சொற்கள்: *எசா 29:4)*. மாயவித் தையைச் சார்ந்த மற்ற மாயவித்தைச் சடங்குகளைப்போல இதையும் சட்டம் தடுத்திருக்கிறது. இப்பாவத்தைக் கட்டிக் கொள்வோர்க்கு மரணதண்டனை விதித் திருக்கிறது *(லேவி 29:6.27)*.

2. பயனுள்ள பேச்சு: பாவிகளுக்கும் அறி விலிகளுக்கும் மாறாக, அறிவுள்ளவன் தனது பேச்சை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்பதை நன்கறிந்திருக்க வேண் டும். தகுதியான ஒருபேச்சு அல்லது தக்க சமயத்தில் தரப்படும் ஒருவிடை ஒரு பெரும் செல்வமாக எல்லாரையும் மகிழ் விக்கின்றது *(பழ 15:23; 25:11)*. ஏனெனில், ''பேசுவதற்கு ஒரு காலம் உண்டு; பேசாதி ருப்பதற்கு ஒரு காலம் உண்டு'' *(திருவுரை 3:7)*. அறிவுள்ளவன் தனது பேச்சைக் கட்டுப்படுத்த வேண்டும் *(சீரா 1:24)*. தனது சொற்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தனது வாய்க்கு ஒரு தாழ்ப்பாள் போட வேண்டும் *(சீரா 28:25; சங் 39:2; 141:3)*. சிந்தித்து ஆற அமரப் பேசவேண்டும் *(யாக் 1:19)*. மேலும், இலட்சியப் பெண்ணைப் போல் ஞானத்தையும், நன்மைத்தனத்தை யும் மேற்கூறியவற்றோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் *(பழ 31:26)*.

மனிதப்பேச்சானது ஆழ்கடலைப் போன்ற தொன்றாகும்; பாய்ந்தோடும் நீரோட்டம் போன்றதாகும்; வாழ்வின் ஊற்றைப் போன்றதாகும் *(பழ 18:4; காண்க. உப 32:1தொ)*. ஏனெனில், உள்ளத்தின் நிறை வையே வாய் பேசும். எனவே, நல்லதொரு மனிதன் தன் உள்ளமாகிய நல்ல கருவூலத் திலிருந்து நல்ல செல்வத்தை வெளிக் கொணர்கிறான் *(லூக் 6:45)*. தூய ஆவியின் ஆற்றலினால் பேசுபவனால் பிறருக்கு முன் மாதிரியாக இருக்கமுடியும்; அறிவுரை கூற முடியும்; தன் சகோதரர்களுக்கு ஆறுத லளிக்க முடியும் *(1 கொரி 14:3)*. ஏனெனில்,

அப்போது அவனது பேச்சானது இறை வார்த்தையை வெளிப்படுத்தி நிற்கிறது.

மனிதனாதல் (INEARNATION)

இஃது ஓர் இறையியல் சொல். காலங்களுக்கு முந்திய இறைமகன் நாசரேத்தூர் இயேசுவில் மனிதன் ஆனதைக் குறிக்கும். இதைக் குறிக்கும் நேரடிக் கலைச்சொல் புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. ஆனால், இக்கருத்தின் வளர்ச்சி பல கட்டங்களிலும் காணப்படுகிறது.

தொடக்ககாலக் கிறிஸ்தவ அறிவிப்பில், இயேசுவை அடையாளம் காட்டுவதில் அவர் மரித்தோரிலிருந்து உயிர்ப்பது மிக முக்கிய நிகழ்ச்சியாகும். இந்த அறிவிப்பின் படி, இறைவன், இயேசுவை ஆண்டவரும் மெசியாவாகவும் ஆக்கி (அ.ப. 2:32-36), அவரை ஈன்றெடுத்துத் தம் புதல்வராக்கினார் (13:32-33; உரோ 1:3-4). ஆனால் இந்தப் போதகம், இயேசு தனது வாழ்வுக் காலத்தில் ஏற்கெனவே இறைமகனாக இருந்தார் என்ற உண்மையை விளக்கவில்லை.

நான்கு நற்செய்திகளில் மாற்கு இயேசுவின் பிறப்பு விவரிப்பை விட்டுவிடுகிறது. அதற்குப் பதிலாக, இறையரசை யோவான் போதிப்பது மற்றும் இயேசுவின் திருமுழுக்கோடு இயேசுவின் பொதுப்பணி ஏட்டைத் தொடங்குகிறது (மாற் 1:1-11). திருமுழுக்கின்போதும் (1:11), உருமாறியபோதும் (9:7) இயேசுவைத் தன் ''அன்பார்ந்த மகனாக'' இறைவன் அறிவிக்கிறார்.

மத்தேயுவும் லூக்காவும், இயேசுவின் குழந்தைப்பருவம் பற்றிய தங்கள் நிகழ்ச்சியுரையில் அவரது கன்னிப் பிறப்பைக் கூறும்போது இயேசுவின் இறைத்தன்மைத் தோற்றத்தை இன்னும் பின் தள்ளுகின்றனர் (மத் 1:18-23; லூக் 1:26-38). இயேசுவின் பொதுப்பணியைக் கூறுமுன் இயேசுவின் பிறப்புப் பற்றிய விவரிப்பைக் கொடுக்கின்றனர். இயேசு மரியாளின் மகனாகப் பிறந்தவர். ஆகவே, அவர் ஒரு மனிதன் என்பதைச் கட்டிக்காட்டுகின்றனர் (மத் 1:16; 2:1; லூக் 2:6-7). ஆயினும், அவருக்கு மனிதத் தந்தையில்லாததால் அவர் ஓர் அசாதாரண மனிதன் என்பதையும் உறுதியாகச் சுட்டிக்காட்டுகின்றனர் (மத் 1:18; லூக் 1:34). அவரது பிறப்பை இறை ஆவியின் பிரசன்னத்தோடு தொடர்புபடுத்துகின்றனர் (மத் 1:20-23; லூக் 1:35). இந்த இரு நற்செய்தியாளர்களின்படி, இயேசு தன் பிறப்பில் இறைத்தன்மையும் மனிதத் தன்மையும் உடையவர். அதே நிலையைத் தனது வாழ்க்கை முழுவதும் கொண்டிருந்தார் (இயேசு தந்தையாகிய இறைவனுடன் கொண்டிருந்த தனித்தன்மையுடைய உறவுக்குக் காண்க. மத் 11:25-27; லூக் 10:21-22).

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்று நற்செய்தியாளர்களும் இயேசுவை இறைவனின் இறுதியான நீதிபதியாக விண்ணிலிருந்து மீண்டும் வரவிருக்கும் மானிட மகனாகக் குறிப்பிடுகின்றனர் (மத் 25:31-46; மாற் 13:24-27; லூக் 21:25-28). இம்மூவரும் இயேசுவின் காலத்திற்கு முந்திய வாழ்வு பற்றிய பிரச்சனையைப்பற்றி ஒன்றும் கூறவில்லை.

பவுல் மனிதன் ஆதல் பற்றி நேரடியாக ஒன்றும் கூறவில்லை. ஆனால், அவரது திருமுகங்களில் பல பகுதிகள் இறைமகனின் காலத்திற்கு முந்திய வாழ்வை உள்ளடக்குவதாகத் தோன்றுகின்றன. இதன்படி, ''கடவுள் தன் மகனை... அனுப்பினார்'' என்றும் (கலா 4:4; உரோ 8:3), ''இயேசு கிறிஸ்துவிடமிருந்தே எல்லாம் வந்தன;..... அவராலேயே எல்லாம் உண்டாயின'' என்றும் (1 கொரி 8:6) பவுல் கூறுகிறார். மேலும்,கிறிஸ்துவே ''கடவுளின் ஞானம்'' ஆவார் என்று கூறும்போது (1:24), காலத்திற்கு முந்திய ஞானம் என்ற பழைய ஏற்பாட்டுக் கருத்தை நினைவுபடுத்துகிறார். பிலி 2:6-11; கொலோ 1:15-20 ஆகிய பாடல்கள் மிக முக்கியமானவையும் தர்க்கத்திற்கு உரியவையும் ஆகும். பிலி 2:6-11, கிறிஸ்துவின் காலத்திற்கு முந்திய இறை வாழ்வைக் குறிப்பதாக உள்ளது. கொலோ 1:15-20, கிறிஸ்துவைக் ''கட்புலனாகாக் கடவுளின் சாயல், படைப்புகளுக்கெல்லாம் தலைப்பேறானவர்... முழு நிறைவு அவரில்

குடிகொள்ள வேண்டும் என்று இறைவன் திருவுளம் கொண்டார்'' என்று பாடுகிறது *(1:15.19; காண்க. 2:9).*

கிறிஸ்துவின் காலத்திற்கு முந்திய வாழ்வு பற்றிய கருத்து எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் மேலும் தெளி வாகிறது. இறைவன் தம் மகன் வழி யாகவே உலகங்களையெல்லாம் படைத் தார் என்று ஆசிரியர் கூறுகிறார் (எபி 1:2). மேலும், அவரை வான தூதர்களுக்கும் மேலானவர் என்றும் *(1:5-2:8)*, பாவமற்ற வர் என்றும் *(4:5; 7:26)* விவரிக்கிறார்.

மனிதன் ஆதல் என்ற கோட்பாட்டை நற்செய்தியாளர் யோவான்தான் சிறந்த முறையில் எடுத்துக்கூறுகிறார். இயேசுவின் இறைத்தன்மைக்கு முன் அவரது மனிதத் தன்மையை எடுத்துக்கூறும் மத்தேயு மற் றும் லூக்காவுக்கு நேர்மாறுபட்ட நிலை யில், கிறிஸ்துவின் காலத்திற்கு முந்திய விண்ணக வாழ்வோடு யோவான் தனது நற்செய்தியைத் தொடங்குகிறார் (வாக்கு கடவுளோடு இருந்தார். யோவா 1:1). பின்பு, ''வாக்கு மனிதர் ஆனார்'' என்று உறுதியாகக் கூறுகிறார் *(1:14)*. மூலத்தில் ''மனிதன் ஆதல்'' என்ற கலைச்சொல்லைப் பயன்படுத்தாவிட்டாலும், யோவான் இயேசு வின் மனிதத்தன்மை பற்றிய உண்மையை வெளிப்படையாகக் கூறுகிறார். யோவா னின் அணுகுமுறை மீபெளதிகத் தன்மை யுடையதாயினும் அவர் மத்தேயு மற்றும் லூக்கா கூறுபவற்றை மறுத்துக்கூறவில்லை.

கிரேக்க மறைபொருள் சமயங்கள் மற் றும் ஞானபோதகம் ஆகியவை கொண்டி ருந்த மனிதஅவதாரம் பற்றிய கருத்துக்கள் வாக்கு மனித உடல் எடுத்தல் என்ற கருத்தை எடுத்துக்கூற யோவானைத் தூண் டின என்பர் அறிஞர் சிலர். இதைவிட, யோவான் இயேசுவின் இறப்புப் பற்றிய பொருளின் ஆழத்தைக் காண முயன்ற போது, இயேசுவின் பிறப்பின் உட் பொருளைப் புரிந்துகொண்டார் என்று ஏற்றுக்கொள்வது ஏற்புடைய நிலையாகும். காலத்திற்கு முந்திய இறைவாக்கு ''மனி தன் ஆகி நம்மிடையே குடிகொண்டதை'' *(1:14)* அறிவிக்கும் பாடலோடு யோவா னின் நற்செய்தி தொடங்குகிறது. இக்கருத் திற்குப் பின்னணி பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியச் சிந்தனையில் காணப்படுகிறது (பழ *8;* சீரா *24;* ஞான *8*). மேலும் இந்த நற்செய்தி இயேசுவின் முந்திய வாழ்வு (யோவா *6:62; 8:38*), அவர் விண்ணிலிருந்து இறங்கியது *(3:13; 6:33)*, அவர் இறைனிடமிருந்து வருவது *(16:27; 17:8)*, அவர் உலகிற்கு வருவது *(10:36; 12:46)* ஆகியவை பற்றிப் பேசுகிறது. மேலும், இந்த நற்செய்தியில் மட்டும்தான் இயேசு ''ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன்'' *(8:58)* என்று உறுதி யாகக் கூறுகிறார். யோவானின் காலத்தில் இயேசுவின் காலத்திற்கு முந்திய வாழ்வு பற்றிய கருத்துகள் எவ்வளவு வலுப்பெற்றி ருந்தன என்றால், இயேசுவின் மனிதத்தன் மையை மறுக்கும் போக்கை எதிர்த்து யோவானின் திருமுகங்கள் போராட வேண் டியிருந்தன (1 யோவா *4:2-3*). மனிதன் ஆதல் என்ற மறையுண்மையை ஆழ்ந்து ஆய்வு செய்யவில்லையானாலும், கிறிஸ்து வின் மனிதத்தன்மைக்கும் (காண்க. யோவா19:34) இறைத்தன்மைக்கும் யோவான் ஆதரவு அளிக்கிறார். கிறிஸ்து மனிதன் ஆதல் அவரது இறைத்தன்மையை அகற்றிவிடவில்லை (தந்தைக்கும் மகனுக் கும் உள்ள ஒருமைப்பாடு பற்றிக் காண்க. *14:10;* யோவான் நற்செய்தியின் குறிக் கோளுக்குக் காண்க. *20:31*). மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த திருச் சபைத் தந்தையர்கள் காலத்தில்தான் மனி தன் ஆதல் என்ற கோட்பாடு முழுவளர்ச்சி அடைந்தது.

மனிதன் ஆதல் கோட்பாட்டுக்கு ஒத்த ஒப்புமைகளைப் பிற மதக் கலாச்சாரங்களி லும் காணலாம். இந்துக்கள் விஷ்ணுவின் மனித அவதாரத்தை விசுவசிப்பர். புத்தர் விஷ்ணுவின் மனித வடிவம் என்று புத்த மதத்தினர் சிலர் நம்புவர். பார்வோன் ரே என்ற கடவுளின் மனித அவதாரம் என்று எகிப்தியர் நம்புவர். பழங்கால மக்களில்

பலர் தங்கள் அரசர்கள் இறைத்தன்மை யுடையவர்கள் என்று நம்பினர். ஆனால், அப்போஸ்தலரான யோவான் இறைவனின் நிலையான ஒரே மனிதன் ஆதல் இயேசு மட்டுமே என்று பறைசாற்றுகிறார் (1:14).

மனிதன் ஆதல் பற்றிய யோவானின் போதனையை அவர் காலத்து யூதர்கள் நிராகரித்திருக்கலாம் (காண்க. 6:41-42; 10;31). இப்போதுகூட கிறிஸ்தவர்கள் சிலர் இறைவன் மனிதன் உருவில் தோன்றுதலின் சூழ்நிலை மற்றும் விளக்கம் பற்றித் தர்க்கிக் கலாம். ஆனால், அத்தனேசியு (கி.பி. 330) உணர்ந்து கூறியதுபோல், பரிகாரம் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு, மனிதன் ஆதல் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

மனிதன் (MAN)

I. விவிலிய மனித இன இயல் பற்றிய கருத்துக்களை ஆன்மா, இதயம், ஊன், உடல், ஆவி என்ற தலைப்புகளின் கீழ்க் காணலாம். இத்தொகுப்பான நோக்கு முழு மனிதனை அவனது வெவ்வேறு கோணங் களில் காண்கிறது. ஆனால், இது மனிதனை உடல், ஆன்மா என்ற இருபகுதிகள் இணைந்த ஒன்றாகக் கருதுகிறது. இன்றைய பொதுவான மனப்போக்கிலிருந்து இது வேறுபட்டது. ஆன்மா உயிர் ஆவியால் உந்தப்படுகிற மனிதனை உணர்த்துகிறது. அவன் அழிந்து போகக்கூடிய படைப்பு என்று சுட்டுகிறது. ஆவி இறைவனை நோக்கிய அவனது சிறந்த தன்மையைக் குறிக்கிறது. உடல், அவனது வெளி அடை யாளமாய் விளங்குகிறது. இவ்வேறு பாடான நோக்கங்களுக்கிடையே ஆழமான வேறு ஒன்றையும் கூற வேண்டும். கிரேக்க தத்துவம் மனிதனை ஆவி, பருப்பொருள் தன்மையுடைய இரு உலகை இணைக்கும் சிறு அண்டமாகக் கருதுகிறது.

மறுபுறம் விவிலிய இறையியல் மனி தனை இறைவனோடு தொடர்புபடுத்தி, இறைவனின் சாயலாகக் காண்கிறது. மனி தனைக் குறுகிய இயற்கைவுலகிலே அடைத்து விடாது, விவிலியம் வரலாற்றின் முதன்மைக் கதாநாயகனாகிய இறைவனை, மனிதனை உண்டாக்கிய இறைவனை, மனி தனை மீட்க வந்த மனுவுரு எடுத்த இறைவனைக் கண்முன் நிறுத்துவதன் மூலம், மனித வரலாற்றின் ஆழ்ந்த உண் மையை எடுத்தியம்புகிறது. ஏற்கெனவே இறையியலோடு இணைக்கப்பெற்ற இந்த மனித இன இயல் கிறிஸ்து இயலிலிருந்து பிரிக்க முடியாததாகிறது. எனவே, மனித வரலாற்றில் வாழ்கின்ற பல்வேறு வாழ்க்கை முறைகளையும் இரு பகுதிகளில் தொகுத்துப் பாவி, புது மனிதன் என்று பிரித்துவிடலாம். இவை புனித வரலாற் றின் சிறப்பான இரு காலங்களில் வெளிப் படுத்தப்படும் ஆதாம் மற்றும் யாவேயின் ஊழியன் என்ற இரு உருவங்களில் உண் மையாகின்றன. இவை இயேசு கிறிஸ்து வால் நிறைவு பெறுகின்றன. எனவே, வாழும் மனிதனின் உண்மையான மாதிரி ஆதாம் அன்று கிறிஸ்து இயேசுவே; மண் ணிலிருந்து வந்த மனிதன் அன்று, விண்ணி லிருந்து வந்தவரே. இயேசு கிறிஸ்துவே ஆதாமின் முன் அடையாளமாக இருந்தார். இந்த விண்ணக ஆதாமே, மண்ணக ஆதா மில் உருவகப்படுத்தப்பட்டவர்.

II இறைவனின் சாயல்

1. மண்ணக ஆதாம்: ஆதியாகமத்தின் இரண்டாம் அதிகாரம் ஒரு தனிப்பட்ட மனிதனின் வரலாற்றைப் பற்றி மட்டு மன்று, மாறாக அது மனித இனத்தின் வரலாறு முழுவதையும் கருத்தில் கொள் கிறது. ஏனெனில், ஆதாம் என்கிற சொல் லின் பொருள் அதுவே. ஆதாம் என்றால் 'மனிதன்'. அக்கால செமித்திய மக்களின் மனப்பான்மையின்படி ஓர் இனத்தின் முன் னோர், தன்னுள் தன் இனத்தையே அடக்கி உள்ளனர், அவர் வழிவருவோர் அனை வரும் அவரில் வெளிப்படுகின்றனர், அவ ரில் உள்ளடக்கப்படுகின்றனர் என்று கருதப் பட்டு வந்தது. இதைத்தான் 'குழுவைத் தன்னுள் அடக்கிய ஆட்தன்மை' அல்லது குழு ஆட்தன்மை என்று அழைக்கிறோம். ஆதியாகமத்தின் இரண்டாம் அதிகாரம் மனிதனை இறைவன், உலகு, தன் சகோத

ரன் ஆகிய மூன்றுடன் ஆதாமில் முத் தொடர்பு கொண்டவனாகச் சித்தரிக் கின்றது.

அ) படைத்தவருடன் மனிதன்: ஆதாம், வீழ்ச்சியடைந்த கடவுளோ, விண்ணி லிருந்து வந்து உடல் புகுந்துள்ள ஆவியின் துகளோ அல்லன். அவன் இறைவனோடு எப்போதும் ஆழ்ந்த முறையில் நிலையான தொடர்பு கொண்ட சுதந்தரப்படைப்பு. இதை அவனது ஆதித்தொடக்கத்திலிருந்து காணலாம். பூமியிலிருந்து உதித்தாலும் அவன் அதனால் வரையறுக்கப்பட்டவன் அல்லன். அவன் கொண்டுள்ள உயிர், இறைவன் அவனுள் உயிர் மூச்சை ஊதியத னால் பெற்றுள்ளான். இதனால் அவன் ஓர் உயிருள்ள ஆன்மாவாக, அதாவது ஆட் தன்மையுடைய உயிராக அதே நேரத்தில் அவருக்குட்பட்டவனாக ஆகின்றான். எனவே, மதம் என்பது முன்னமே உள்ள மனித இயற்கையுடன் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு நிரப்புக் கூறாக அமைவது அன்று, மாறாக அவனது மனித இயற்கை இயல்பிலிருந்து பிறக்கும் ஒன்று. எனவே, இறைவனிலிருந்து பிரித்து மனிதரின் இயல்பைப் பற்றிப் பேசுவது மடமை யாகும்.

மனிதனுக்கு உயிருட்டும் மூச்சோடு இறைவன் தன் வார்த்தையை இணைக் கிறார். இந்த முதல் வார்த்தை ''தோட்டத் திலிருக்கும் எல்லா மரத்திலிருந்தும் உன் விருப்பம்போல் நீ உண்ணலாம்; ஆனால் நன்மை, தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெ னில், அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்'' (ஆதி 2:16.17) என்ற கட்டளை வார்த்தையாகப் பிறந்தது. மனி தன் தன் வாழ்வு முழுவதும் தன்னைப் படைத்தவராகிய இறைவனுக்கு அடி பணிந்து அவர் சித்தப்படி நடக்க வேண்டிய வன். இக்கட்டளை மனிதனுக்கு ஒரு தடை உத்தரவாக, கட்டுப்படுத்தலாகத் தோன்று கிறது. உண்மையில் இஃது அவன் முழு மைபெற இன்றியமையாத ஒன்றாகும். இவ்வுண்மைதான் அவன் கடவுள் அல்லன், அவனுக்கு வாழ்வு தரும் இறைவனைச் சார்ந்து இருக்க வேண்டும், அவர் அளிக் கும் உயிர்மூச்சால்தான் உயிர் கொண்டுள் ளான் என்று அவனுக்குக் காண்பிக்கிறது.

எனவே, மனிதன் தன்னைப் படைத்தவரு டன் உயிருள்ள, அடிப்படையான முறை யில் இறைவனைத் தழுவி வாழ்கிறான் என்பதை அவனது சுதந்தரம் இறைவ னுக்குக் கீழ்ப்படிதல் மூலம் எண்பிக்க வேண்டும். மனிதன் இதயத்தில் எழுதப் பட்ட இச்சட்டமே, மனச்சாட்சி. இம்மனச் சாட்சி மூலம்தான் இறைவன் மனிதனுடன் பேசுகிறார்.

ஆ) மனிதன் அகிலத்திற்கும் தலைவன்: இறைவன் மனிதனைத் தன் சீரிய, உயர்ந்த, அழகான படைப்பின் தலைவனாக நிய மித்து, அவற்றைக் காத்து, வளர்த்து வளப் படுத்தும்படி அவனைத் தன் பணியாளனாக வைத்துள்ளார் (ஆதி 2:9). ஆதாம், விலங்கு களுக்குப் பெயர் கொடுப்பதன் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தி நடத்த வேண்டு மென இறைவன் விரும்புகிறார் (2:19-20; காண்க. 1:28 தொ). இதன் மூலம் இயற் கையை இறைமயமாக்க அன்று அதை ஆண்டு நடத்திக் கட்டுப்படுத்தவே வேண்டு மென்பதைக் காட்டுகிறார். நிலத்தில் உழைக்க வேண்டுமென்ற கடமை, நாம் இறைவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற நியதி-நின்று பிறக்காவிடினும் அத னோடு நிலையான தொடர்புடையதாகும். இதையே படைப்புப் பற்றிய முதல் விவ ரிப்பு, அதற்கே உரிய பாணியில் குறிக் கிறது. படைத்தவராகிய இறைவன் செயல் முறையைப் பிரதிபலிக்கும் வண்ணம் ஏழாம் நாள் ஓய்வு நாள். அந்நாளில் மனிதன் தன் வேலைகளுக்கு முடிவு கட்டவேண்டும்.

இ) சமூகத்தில் மனிதன்: மனிதன் இயற் கையாகவே ஒரு சமூகப் பிறவி. இது வெளியிலிருந்து திணிக்கப்பட்ட ஓர் கட்ட ளையால் விளைவதன்று. பால் உணர்வு வேறுபாடுகள் சமூகத்தில் வாழ்வின் மாதிரி யும் ஊற்றுமாகும். இச்சமூகம் அன்பில்

தோன்றுவது, கட்டாயத்தில் அன்று. இறைவன் இப்பாலியல் தொடர்பு ஒருவர்க்கொருவர் உதவியாக, உறுதுணையாக அமைய வேண்டுமென விரும்புகிறார். ஆண், இறைவன் தனக்குத் தந்த பெண்ணில் தன் முழு இயல்பை உணர்ந்து தன்னை மறந்த, தன்னையே தியாகமாகத் தரும் தியாக அன்பிற்கும் தயாராகயிருக்கிறான். நாம் பிறருடன் கொள்ளும் ஒவ்வொரு தொடர்பிலும் இந்த முதல் மனப்பான்மை வெளிப்படுகிறது. இஃது எவ்வளவு உண்மை என்றால் இறைவனும்கூட தாம் மக்களுடன் கொண்டுள்ள உடன்பாட்டினைத் திருமண உருவகத்தின் மூலம்தான் வெளிப்படுத்துகிறார்.

ஆடையில்லா நிலையிலும் ஆணும், பெண்ணும் ஒருவர் மற்றவர் முன் ''ஆடையின்றி இருந்தனர். ஆனால், அவர்கள் வெட்கப்படவில்லை''. இதனுடைய முக்கியத்துவம் என்னவென்றால் சமூகத் தொடர்பு இன்னும் நிழலற்று இருக்கிறது. ஏனென்றால், இறைவனுடன் நாம் கொள்ளும் தொடர்பு மகிமையுடன் மிளிரும் முழுமையாகும். இவ்வாறு மனிதன் கடவுளுக்குப் பயப்படுவதற்குப் பதில் அவருடைய தோட்டத்தில் நண்பனைப்போல் நடக்கிறான்; அமைதியில் உள்ளான். அவன் தன் துணையோடு, விலங்குளோடு, படைப்பு முழுவதுடன் மறைப்பற்ற உரையாடல் கொண்டுள்ளான்.

ஈ) இறைவனின் சாயலில்: படைப்பு பற்றிய குருக்கள் பாரம்பரிய விவரிப்பு (ஆதி 1), யாவே பாரம்பரிய விவரிப்பைத் தொடர்ந்து மனிதன் படைப்பின் மணிமகுடம் என்பதே கடவுளின் குறிக்கோள் என்று காட்டுகிறது: ''மனிதனை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். நீங்கள் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்... நிலத்தில் உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்'' (ஆதி 1:26-28) என்று விவரிக்கிறது. கடவுளின் சாயலில் படைக்கப்பட்டதால் மனிதன் இறைவனுடன் உறவாட முடிகிறது. மனிதன் கடவுள் அல்லன், ஆனால், எப்படி ஓர் மகன் தன் தந்தையைச் சார்ந்து வாழ்கின்றானோ, அது போல மனிதன் கடவுளைச் சார்ந்து வாழ்கின்றான் (காண்க. 5:3). ஆனால் இந்த வேறுபாடு உண்டு, அதாவது யாருடைய சாயலாகத் தோன்றினானோ அவரில்லாது மனிதன் தானாய் இருக்கமுடியாது. படைப்பு விவரிப்பில் மூச்சு என்ற சொல்லின் பொருளும் இதுவே. மனிதன் இச்சாயலை இருமுறைகளில் செயல்படுத்துகிறான். அவன் தெய்வீகத் தந்தையின் சாயல் என்ற அளவில் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்ப வேண்டும்; அவன் தெய்வீக ஆட்சி உரிமையின் சாயல் என்ற அளவில் அவன் மண்ணுலகைக் கட்டுப்படுத்தி ஆண்டு நடத்த வேண்டும். மனிதனே மண்ணுலகில் தலைவன். அவனே பூமியில் இறைவனின் பிரசன்னம்.

2. விண்ணக ஆதாம்: மேலே கூறியதே இறைவனின் திட்டம். ஆயினும், இத்திட்டம் இறைமகன் இயேசு கிறிஸ்துவில்தான் முழுமையாக நிறைவேறுகிறது. கிறிஸ்து ''இறவா ஒளியின் சுடர். கடவுளுடைய செயல்திறனின் கறைபடியாக் கண்ணாடி; அவருடைய நன்மையின் சாயல்'' (ஞான 6:25) என்ற ஞானத்தின் பண்புகளைத் தனதாக்கிக் கொள்கிறார். ஆதாம் இறைவனின் . சாயலில் படைக்கப்பட்டான். ஆனால், கிறிஸ்துதான் கடவுளின் சாயலாகத் திகழ்கின்றார் (2 கொரி 4:2; காண்க. எபி 1:3). இதையே பவுலும், ''அவர் கட்புலனாகாக் கடவுளின் சாயல், படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர்; ஏனெனில், அவரில் அனைத்தும் உண்டாயிற்று. விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாவன, கட்புலனாகாதன, அரியணை ஆள்வோர், ஆட்சி புரிவோர், தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர் ஆகிய வானதூதர் அனைவரும் உண்டானது அவரிலேதான். அவராலேயே அவருக்காகவே அனைத்தும் ஆயின. அனைத்தும் அவரில் இணைந்து நிலைக்கும், திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் அவரே, ஆதியானவரும் அவரே''

(கொலோ 1:15-18) என்று விளக்குகிறார். ஆதாமின் மூவகைத் தொடர்பு மறுபடியும் தெளிவாக, ஆனால் பன்மடங்கு உயர்ந்த வகையில் தோன்றுகிறது.

அ) தந்தையின் முன்னிலையில் மகன்: கடவுளின் திருமகன் இயேசுதான், அவரின் உண்மையான சாயல் என்று பவுல் கூறினார் (கொலோ 1:13). அவர் காணமுடியாக் கடவுளின் காணும் சாயல் மட்டுமன்று, அவர்தான் தந்தையோடு என்றும் இணைந்திருக்கும் திருமகன். அவரே தன்னைப் பற்றிக் கூறுகிறார்: ''மகன் தாமாகவே ஒன்றும் செய்ய இயலாது, தந்தையிடம் தான் காணும் செயல்களையே செய்ய இயலும். தந்தை செய்பவற்றை மகனும் அவ்வாறே செய்கிறார். என் விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன்'' (யோவா 5:19.30). ஆதாம் எப்படி இருந்திருக்க வேண்டுமோ, அதாவது மகனுக்குரிய வாஞ்சையோடு இருக்க வேண்டிய தொடர்பை, இயேசு நிறைவேற்றுகிறார். இயேசுவைப் பார்ப்பவர்கள் தந்தையைப் பார்க்கிறார்கள் (யோவா 14:9).

ஆ) கிறிஸ்துவும் அகிலமும்: மனிதன் தன் கையால் செய்யக்கூடிய வேலைகளை நிறைவேற்றுகிறான். ஆயினும், இயேசு தந்தையின் வேலைகளை நிறைவேற்றுகிறார்: ''என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார், நானும் செயலாற்றுகிறேன்'' (யோவா 5:17). படைப்பே உண்மையில் இவ்வலுவல், ''அனைத்தும் அவரால் உண்டாக்கப்பட்டது'', அவரது பார்வையின்கீழ் படைப்பு முழுவதும் வாழ்வு பெறுகிறது, விண்ணரசின் உவமையாகத் திகழ்கிறது. படைப்பு விவரிப்பில், எல்லாம் மனிதனுக்காகப் படைக்கப்பட்டது என்பதுபோல, இங்கு ''அனைத்தும் அவருக்காகப் படைக்கப்பட்டது.'' உண்மையில் அவரது அரசுரிமை விலங்குகள் மட்டுமல்ல, படைப்புகள் அனைத்தையும் உள்ளடக்குகிறது.

இ) கிறிஸ்துவும் மனித இனமும்: இறுதியாக அவரே ''முதல்வர், உடலின் தலை!'' அதாவது முதன்முதலில் அவர்தான் அதற்கு உயிர் அளிப்பவர் - இரண்டாம் ஆதாம் (1 கொரி 15:45). இந்த விண்ணக ஆதாமின் சாயலைத்தான் நாம் அணியவேண்டும் (15:49). அவரே நிறைவான மனித சமூக அமைப்பான திருச்சபை என்ற குடும்பத்தின் தலைவர். இன்னும் சொல்லப் போனால் அவரே மனித சமுதாயத்தை இணைக்கும் இணைப்புத் தத்துவம்.

நம்மையெல்லாம் இறைமக்களாக்க மனிதனாய்ப் பிறந்த இறைமகன் இயேசு கிறிஸ்துவில்தான், ஆதாமின் வாழ்வுக்கு, மனிதனாய் இருப்பதற்குப் பொருள் உண்டு. (ஆதி 4:4).

III உருக்குலைந்த சாயல் வழியாக: படைப்பின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட, நாம் அடிக்கடி அடைக்கலம் புக வேண்டிய இலட்சியம், அடைய முடியா ஒன்றாய் விட்டது; ஏன், நேரடியாக அதை அடைய முயற்சிக்கக்கூட முடியாததாகி விட்டது. இனிமேல், மனிதன், உருக்குலைந்த பாவச் சாயலிலிருந்து, கடவுளின் ஊழியனின் உண்மையான இலட்சியச் சாயலுக்கு மாற வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் மனித வாழ்வு தொடங்குகிறது.

1. பாவியான ஆதாம்: ஆதியாகமத்தின் ஆசிரியர், ஓர் தோல்வியைப் பற்றி சித்திரம் தீட்ட விழையவில்லை; மாறாக, போருக்குப் பின் வெற்றியையே அறிவிக்க ஆசிக்கிறார் (ஆதி 3). மூன்று முறைகளில் மனிதனை மாற்றப்போவதாகக் கூறுமுன், இறைவன் மனித இதயத்தில் நம்பிக்கையை விதைக்கிறார்; பெண்ணின் சந்ததி வருவோர், எதிரியின் குதிங்காலால் தீண்டப்பட்டாலும், அவர்கள் பாம்பின் வர்க்கத்தை நசுக்குவர் (ஆதி 3:15). இந்த மூல நற்செய்தி பின் வரும் மங்கலான செய்திகளை மெருகு ஊட்டி, இறைவன் இறுதியில் வெற்றி வாகை சூடுவதை மனிதனுக்குப் பறை சாற்றுகிறது.

அ) மனித குடும்பத்தில் பிளவுகள்: பாவியான பின் ஆதாம் உணர்ந்த முதற்காரியம் தான் ஆடையின்றி இருப்பதுதான் (ஆதி

3:7.11). அதுவரை அடையாளமாய் மட்டும் இருந்தது, இப்போது பிரிவினையாக மாறுகிறது. இறைவன் ஆதாமை வினவும்போது அவன் தன் மனைவி மீது குற்றம் சாட்டுகிறான். இதன் மூலம் தன் மனைவியிடம் இருந்து தன்னைப் பிரித்துக் கொள்கிறான் (ஆதி 3:12). அப்போது இறைவன் அவர்களுக்குக் கூறுகிறார். அவர்களின் ஒற்றுமை அழிந்துவிட்டது; அவர்களது தொடர்பு இனிமேல் இயல்புணர்ச்சியாலும் பொறாமையாலும், ஆதிக்கத்தாலும் ஆளப்படும். அவர்கள் அன்பின் பலன், துன்பமிக்க குழந்தைப் பிறப்பு என்னும் விலைக்குத்தான் கொடுக்கப்படும் (ஆதி3:16). அதன் பின் ஆதியாகமத்தில் தொடரும் அதிகாரங்கள் முதல் ஜோடியின் பிரிவால் எல்லாச் சமூகத் தொடர்புகளும் பெரும் அளவு பாதிக்கப்படுகின்றன என்று காட்டுகின்றன. காயின், ஆபேல் சகோதரராயினும், விரோதிகள் (ஆதி 4). பாபேலிலுள்ளோர் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியவில்லை (ஆதி11:1-9). சமய வரலாறு பிளவுகளின் இழை மூலமாக மக்களிடையே, நாடுகளிடையே, இந்த மக்களுக்குள்ளேயே கூட, ஏழை பணக்காரர்களிடையே எழும் சண்டைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. ஆயின், வெற்றி பற்றிய வாக்குறுதி நிலைத்து நிற்கிறது. இஃது இரவுக்குப் பின் அதிகாலை போன்றது. இறைவாக்குரைப்போர் அமைதியின் இளவரசன் அனைவரையும் ஒன்றுபடுத்த வருவார் என்று தொடர்ந்து அறிவிப்பர்.

ஆ) மனிதனுக்கெதிரான அகிலம்: ஆதாமின் பாவத்தால் பூமி, சபிக்கப்பட்டதாகி விட்டது. இனிமேல் மனிதன் தன் உணவைப் பூமி தன்னியல்பாக அளிக்கும் பலனாக இல்லாமல், கடின உழைப்பின் மூலம், நெற்றி வியர்வை நிலத்தில்விழ, பாடுபட்டுத்தான் பெறமுடியும் (ஆதி 3:17). படைப்பு தன் இயல்புக்கெதிராய்ப் பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது (உரோ 8:20). மனிதனுக்கு அடிபணிவதை விட்டு அவனுக்கெதிராய் எழுகிறது. இப்படிப்பட்ட நிலையில் பூமி நடுக்கமுற்று, வாழத்தகா முட்புதராய்ச் சுடுகாடாகி இருக்கலாம். ஆனால் இம்முட்புதர்களோ, இடர்ப்பாடுகளோ இப்போது உலகம் பாழ்பட்டுப் போய் விட்டது என்பதை விட மனிதன் பாவியாயிருக்கிறான் என்பதையே காட்டுகின்றன. இவ்வாறு இருந்தும் இறைவாக்குரைப்போர் இன்பவன நிலையைப் பறைசாற்றுகின்றனர் (எசா 11:6-9); அதாவது இன்றும் மனிதனிடத்தில் இறைவனிடமிருந்து பிறந்த இயற்கை அழியாதிருக்கிறது என்று காட்டுகிறது. நம்பிக்கை மடிந்து விடவில்லை (உரோ 8:20).

இ) மனிதன் சாவுக்குக் கையளிக்கப்பட்டவன்:- ''நீ மண்ணாயிருக்கிறாய்; மண்ணுக்கே திரும்புவாய்'' (ஆதி 3:19). இறைவனிடமிருந்து பெற்ற வாழ்வைக் கொடையாகக் கருதுவதற்குப் பதில் ஆதாம் தன் வாழ்வைத் தன் விருப்பம்போல் நடத்தி விலக்கப்பட்ட கனியைத் தின்றதின் மூலம், தன்னை ஒரு தேவனாக்கிக் கொள்ள விழைந்தான். இக்கீழ்ப்படியாமையால் வாழ்வின் ஊற்றிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டான் மனிதன். இம்மனித வாழ்விலிருந்து இறைவாழ்வுக்கு ஒரு சாதாரண நிலைமாற்றமாகயிருக்க வேண்டிய சாவு, இனி ஓர் இயற்கையான நிகழ்ச்சியாக இருக்காது. இப்போது சாகும் தன்மை தண்டனைக்கும், நித்திய மரணத்திற்கும் அடையாளமாய் உள்ளது. இது தான் இன்பவனத்திலிருந்து விரட்டப்பட்ட தன் அடையாளமுங்கூட. இறைவனின் பிரசன்னமான நம் இதய உள் நியதியை, சட்டத்தை மீறி, மனிதன் தவறக்கூடிய தன்னாட்சிக்குக் கையளிக்கப்படுகிறான். உலக வரலாறு திரும்பத் திரும்ப, தன்னைத் தெய்வத்திற்கிணையாக நினைத்துச் சாவுக்குரியவர்களானவர்கள் மீண்டும் மீண்டும் தோல்வியடைந்ததை எடுத்துக் கூறுகிறது. இருப்பினும் இதை மனிதன் முழுவாழ்வு அடையக் காணும் கனவின் முடிவு என்று கூறிவிட முடியாது. மறுபடியும் இறைவன் வாழ்வின் மரத்திற்கு வழியைத் திறந்து விடுகிறார் (பழ 3:18; 11:30). அவரது கட்டளைகள், அவரது ஞானம் ஆகியவைகளை வாழ்வில் கடைப்பிடிப்போர்க்கு, அவை பலனுடைமையின் ஊற்றாக இருக்

கின்றன. ஆனால் இச்சட்டம் மனித உள்ளத்தை விட்டு அகன்று விட்டது. இப்போது, எப்போதும் தனக்குப் புறம்பாய் இருப்பதாக அவனுக்குத் தோன்று கிறது.

ஈ) மனச்சாட்சியின் பிளவு: இப்போது இறைச்சட்டமானது மீட்பைக் கொடுக்க முடியாவிட்டாலும், மீட்புக்கு அடிகோலு கிறது. இது மனிதனுக்குள்ளே பிளவை உண்டாக்குகிறது. இந்தப்பிளவு ஒரே சமயத்தில் சாவைத் தருவதாகவும், நலன் அளிப்ப தாகவும் உள்ளது. படைத்தவரோடு இணைந்திருந்த ஆதாம், இறைவனிட மிருந்து தப்பித்து ஓட முனையும்போது தன்னிடமிருந்து ஓடுகிறான். தன்னை அழைப்பவரிடமிருந்தே மறைந்து கொள்ள முற்படுகிறான் *(ஆதி 3:10)*. உண்மையான தெய்வ பயத்திற்குப் பதிலான இப்போலிப் பயம் ஒரு தொற்றுநோய். இது மனிதனிடம் பிளவுபட்ட மனச்சாட்சியைக் காட்டுகிறது.

உள்ளத்தில் ஒருங்கிணைந்த மனிதனே, இவ்வளவு முரண்பாடான பிளவுகளைக் கட்டுப்படுத்தி ஆளமுடியும். தூய ஆவியின் ஏவுதல் பெற்ற பவுல் இதை எடுத்துக்கூறு கிறார். உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் பாவத்தின் ஆதிக்கத்திற்குக் கையளிக் கப்பட்ட தனக்கு அத்தியாவசியமான ஆவிக்குப் புறம்பே வாழும் ''நான்'' என்பதை விவரிக்கிறார். தலைவெட்டுண்டும் உயிர்பிரியாத நிலைபோல் தன் பிளவு பட்ட அவல நிலையை ''நான் பாவத்திற்கு அடிமையாக விற்கப்பட்டவன்; சீரழிந்த இயல்புள்ளவன்; ஏனெனில், செய்வது என்னவென்று எனக்கே தெரியவில்லை. எதைச் செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை. எதை வெறுக்கி றேனோ அதைச் செய்கிறேன்'' என்று விளக்குகிறார் *(உரோ 7:14-15)*. கடவுளுடைய சட்டத்தை மனச்சாட்சியில் பரிவுடன் நோக்குவதற்குப் பதிலாக, தன்னுள் பாவம் ஆதிக்கம் செலுத்த இடம் அளித்து விட்ட மனிதன், ஊன் அதன் இயல்பு சார்ந்த முறையில் தீர்ப்பிடுவதையும் *(கொலோ 2:18)*, அதன் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்வதையும் *(எபே 4:18)*, தீய செயல்களை உண்டாக்கும்வரை அதன் உடலைக் கொடுமைப்படுத்துவதையும் *(உரோ 8:13)* காண்கிறான். மரணத்தை நோக்கி மீட்கமுடியாத விதத்தில் அவன் செல்வதாக அவனுக்குத் தோன்றுகிறது. ஆனால், இது தவறு. ஏனென்றால், ஓர் ஊனின் ஆதிக்கத்திலிருந்து பாவியை மீட்க முடியும். ஆனால், இவ்வாறு விசுவாச முயற்சி மேற்கொள்ளும் வரை, பாவப் பிரிவு நிலையிலேயே வாழ்கிறான். அவனிடம் ஒன்றுபடுத்தும், ஆள்தன்மை அளிக்கும் ஆவியில்லை. பழைய ஏற்பாடு முழுதும் திரும்பத்திரும்பக் கேட்ட அதே வேண்டுகோளை மீட்பருக்காக பாவி, பவுலின் வாக்கின்மூலம் விண்ணப்பிக்கின் றான்: ''ஆழ்துயரில் மூழ்கியுள்ள மனிதன் நான், சாவின் பிடியிலுள்ள இந்த உடலிலிருந்து என்னை விடுவிப்பவர் யார்?'' *(உரோ 7:24)*.

இவ்வழைப்புடன் பாவி தன் பயணத்தை முடிக்கின்றான். வாழ்வைக் கொடையாகப் பெற மறுத்தவன், தன் சக்தி கொண்டே தன்னை வழிநடத்த வழி தெரியாதவன், இறுதியாக அருள் தருபவரிடம் அண்டு கிறான். இங்கு மீண்டும் ஒரு படைக்கப் பட்ட பொருளின் அடிப்படை மனப்பான்மையை மனிதன் கொள்கிறான். ஆனால் இனித்தொடங்கும் உரையாடல், பாவிக்கும் அவரது மீட்பருக்குமிடையேயுள்ள ஒன்றாகும்.

2. இறைவனின் ஊழியன்: ஆதித் திருச்சபை உணர்ந்ததுபோல், இறை ஊழியன் என்று எசாயாவால் அறிவிக்கப்பட்டவராக இம்மீட்பரைப் பவுல் கண்டுகொண்டார். மாண்புமிக்க மனுமகன் என்ற மீட்பர் பற்றிய விவரிப்புகளைப் பொருட்படுத்த வில்லை. அவர்களுக்கு ஆற்றல் மிகுந்த ஓர் உயர்மனிதன் தேவைப்படவில்லை. அவர்கள் விரும்பியதெல்லாம், உலகின் பாவத்தை ஏற்று அப்பாவத்திலிருந்து மீட்கும் மனிதனைத்தான்.

அ) சாகும்வரை இறைவனுக்குப் பிரமாணிக்கம்: தன் ஊழியர் மீது திருப்தியடைந்த இறைவன், ''இதோ என் ஊழியன், அவருள் என் ஆவியைத் தங்கும்படி செய்தேன். அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்'' *(எசா 42:1)* என்று கூறுகிறார். தன் சக்தியெல்லாம் செலவழித்து இலாபம் கருதாது உழைத்துக் களைக்கும்போது இறை ஊழியன், இறைவன் தன்னை இடைவிடாமல் மகிமைப்படுத்துவதை அறிகிறார் *(49:4)*. காலைதோறும் இறைவன் அவரது செவியில் புகட்டும்போது, கீழ்ப்படிதலுள்ள சீடனாக நடந்து கொள்கிறார். அவர் அவமதிக்கப்படும்போதும் கூட எதிர்ப்பதோ, தடுப்பதோ இல்லை. ஏனென்றால், இறைவன்மேல் அவர் கொண்டுள்ள நம்பிக்கை அசைக்க முடியாதது *(57:4-7)*. பலி ஒப்புக்கொடுக்கும் நேரம் வரும்போது, ''அவர் கொடுமையாய் நடத்தப்பட்டார்; தாழ்மையாய் அதைத் தாங்கிக் கொண்டார். அவர் வாய்கூட திறக்கவில்லை, கொல்வதற்காக இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டியைப் போலும், மயிர்கத்திரிப்போர், முன்னலையில் கத்தாத செம்மறியைப்போலும் அவர் வாய்திறக்கவில்லை'' *(53:7)* என்ற விவரிப்புக்கேற்ப நடந்துகொள்கிறார். கயவர்களின் கொடுமை அவரின் மேல் விழுந்தபோதும், அஃது இறைவனின் திருச்சித்தம் என்று ஏற்று, தன்னையே சாவுக்குக் கையளிக்கிறார் *(53:12)*. அப்படிப்பட்ட நம்பிக்கைக்குரிய ஊழியர்தான், மனித குலத்தின் இறுதியாக எஞ்சியவர்தான் இவர். தனது கீழ்ப்படிதலால், ஆதாமில் முறிந்த இணைப்பை இணைத்து வைத்து மரணம் மேற்கொள்வதன் மூலம், இந்தப் பந்தத்தின் முழுமையான பண்பை வெளிப்படுத்துகிறார்.

ஆ) துன்பங்கள் சூழ் மனிதன்: பாவியான ஆதாம் துன்பங்களாலும், துயரங்களாலும் பீடிக்கப்பட்டவர் என்பது தெளிவு. இறை ஊழியன் நமது துன்பங்களையும், துயரங்களையும் தன் மீது ஏற்றுக்கொள்கிறார் *(எசா 53:3)*. இதற்கு மேலும் விலங்குகளை ஆண்டு நடத்த வேண்டியவர், அவைகளைப் போலாகிவிட்டார்; ''அவரிடம் மனிதச் சாயலே இல்லாதிருந்தது'' *(52:14)*, ''அவர் மனிதர் அல்லர், ஒரு புழு'' *(சங் 22:6)*.

இ) சமூகத்தின் முன்: ''காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் இருந்த'' *(எசா 53:3)*, இறை ஊழியன் இறுதியாக எல்லோராலும் நிராகரிக்கப்படுகிறார். அவருடைய காலத்தவர் அவரைக் கண்டு திகைப்புற்றனர்; அவரை ஒரு தோல்வியாகவே கருதினர் *(52:14)*. ஆனால், தனது இறைவாக்கினர் மூலம் இறைவன், அவர்களை இப்பலியின் மீட்புச் சக்தியையும் பாவப் பரிகார நிலையையும் உணரவும், ஏற்றுக்கொள்ளவும் செய்கிறார். ''நம் குற்றங்களுக்காகக் காயம் அடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நம்மை நலமாக்கும் தண்டனை அவர்மேல் விழுந்தது. நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர்தம் காயங்களால் நாம் குணமடைகிறோம்'' *(53:5)*. இந்தத் துன்பம் நிறை மனிதரில் இறைவாக்கினர், பாவங்களுக்காகப் பரிந்து பேசும், மக்களை ஏற்புடையவராக்கும் மீட்பரைக் காண்கிறார் *(53:11)*. இறை ஊழியர் மரணத்தின் மூலம் ஆதாம் தன் பாவத்தால் தோல்வியுற்றதை ஏற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு தன் சுயநீதியைக் கைவிடும் போதுதான் மீட்பு உதயமாகிறது. மனிதர்களால் கைவிடப்பட்ட மனிதரின் இறுதிப் பாடுகளால்தான் இறைவனின் மீட்புச் செயல் ஆற்றலுடையதாகிறது. உண்மையில் வாழ்வு பேராசையின் விளைவன்று; மாறாக, பயன்கருதாக் கொடையின் எப்போதும் புதிய பலனாகும்.

ஈ) இறை ஊழியர் இயேசு கிறிஸ்து: ஆதித்திருச்சபையின் பல இசைப்பாக்கள் ஊழியர் பற்றிய இறைவாக்கின் அடிப்படையில் எழுந்தவை. இவைகள் ஏற்றத்திலும், தாழ்விலும் மனிதனுடைய நிலையைக் காட்டும் வரைபடமாக இயேசுவைச் சித்தரிக்கின்றன. அவருடைய தாழ்வே அவரின் மகிமை *(பிலி 2:6-11; எபி 1:3;*

உரோ 1:3 முதலியன). தன் வாழ்வு முழுவதும், தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதிலே நிறைவு கண்ட அவர், கடவுளுக்கு இணையான நிலைக்கு உரிமையிலிருந்தும், அதை விடாமல் பிடித்துக்கொண்டிராமல், அடிமையின் தன்மை பூண்டார். மனிதனாக வந்தவர், எவ்வளவு தாழ்ச்சி கொண்டவர் என்றால் சிலுவை மரணம் மேற்கொள்ளும் அளவிற்குக் கீழ்ப்படிபவர் ஆனார். முழுமையான கீழ்ப்படிதலினால் இயேசு, உண்மையான ஆதாமாக விளங்கினார். இப்படித் தனிமை நிலை புகுந்து புதிய மனிதகுலத்தின் தந்தையாகவும் பேரின்ப வாழ்வின் ஊற்றாகவும் ஆனார். இவரைத்தான் பிலாத்து ஏளனமாகக் கூறினான்: ''இதோ மனிதன்'' (யோவா 19:5). மகிமையின் பாதை இப்படிப்பட்டதே. பாவத்தால் பாதிக்கப்பட்ட உருவிழந்த இந்த உருவத்தில், மனிதன் ''கடவுளுடைய அருள் தன்மையோடு நாமும் கிறிஸ்துவுக்குள் விளங்கும்படி, பாவமே அறியாத, நமக்காக பாவ உருவாகிய'' (2 கொரி 5:21) இறைமகனைக் காணவேண்டும்.

IV. **கிறிஸ்துவின் உருவில்:** பாவியான ஆதாம், ''இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவன்''. மறுபடியும் அவன் முதலிலிருந்த நிலைக்கு உரிமை கொண்டாட முடியாது. அவன் இப்போது வார்த்தையானவர்போல் இல்லாவிடினும், சிலுவையில் அறையுண்ட மரணத்தை வென்ற கிறிஸ்துவின் சாயலில், புதுப்பொலிவுடன் படைக்கப்பட்டுள்ளான். ஆதியாகமத்தின் இரண்டாம் அதிகாரத்தில் காணப்படும் அதே மதிப்பீடுகள் இப்போது கிறிஸ்துவில் மிளிரும்.

1) கிறிஸ்துவில் விசுவாசம்: இப்போது மனிதன், தன் கீழ்ப்படிதலையும், வணக்கத்தையும், நேரடியாக கடவுளுக்கோ, பாவ மனிதனுக்கு இரக்கத்தால் கொடுக்கப்பட்ட சட்டத்திற்கோ அளிக்க வேண்டியதில்லை; மாறாக, மனித உருவெடுத்த கிறிஸ்துவுக்கே அளிக்க வேண்டும் (உரோ 10:5-13). நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம் கடவுள் அனுப்பியவரிடம் விசுவாசம் கொள்வதே (யோவா 6:29). ஏனென்றால் கடவுளுக்கும், மனிதனுக்குமிடையே பரிந்து பேசுபவர் கிறிஸ்து ஒருவரே (1 திமொ 2:5). ஒரே தந்தையிடமே விசுவசிப்போர் அனைவரும் அபரிமிதமாகவும் எப்போதும் வாழ்வு பெற, மகன் வழியாக இட்டுச் செல்லப்படுகின்றனர்.

2) கிறிஸ்துவின் முதன்மை: இயேசு தந்தையின் வாழ்வை அளிக்கிறார் என்றால் அஃது ''ஆதியானவரும் அவரே, அனைத்திலும் முதன்மை பெறும்படி இறந்தோரிடமிருந்து பிறந்த தலைப்பேறும் அவரே. முழுநிறைவும் அவரில் குடிகொள்ள வேண்டுமென்று, இறைவன் திருவுளங் கொண்டார். சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால், சமாதானம் உண்டாக்கி விண்ணிலும், மண்ணிலும் உள்ள யாவற்றையும் அவர் வழியாக தம்மோடு ஒப்புரவாக்க விரும்புகிறார்'' (கொலோ 1:18-20) என்பதால்தான். பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் மனித குலத்தின் பிளவுகள் புறக்கணிக்கப்படவில்லை; மாறாக, அவைகள் வெல்லப்பட்டு ஒரு புதிய மனிதராம் கிறிஸ்துவில் ஒரு புதிய ஆழத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. ''இனி யூதர் என்றும், கிரேக்கர் என்றும் இல்லை; அடிமையென்றும் உரிமைக்குடி மகனென்றும் இல்லை; ஆணென்றும் பெண் என்றும் இல்லை; கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே'' (கலா 3:28). ஆண், பெண் பால் முறைகளிடையே பிணக்கு ஏற்பட்டது; கணவன், மனைவி பிரிவு, சமூக இன வேறுபாட்டிற்கும் பரவியது. கிறிஸ்துவில் தன் இணைப்பைத் திரும்பவும் உணரும்போதுதான் மனிதன், மனிதச் சூழ்நிலைகளை ஆதிக்கம் செலுத்தமுடியும். சுதந்தரம் அல்லது அடிமைத்தனம், திருமணம் அல்லது கன்னிமை ஒவ்வொன்றும் கிறிஸ்துவில் பொருளையும், மதிப்பீட்டையும் கொண்டுள்ளது.

பிளவின் பிணக்கத்தின் அடையாளமாய் விளங்கும் மொழிகளின் குழப்பம், கிறிஸ்து தவறாது தரும் ஆவியின் மொழியில்

வெல்லப்படுகிறது. இந்த அன்பு, தந்தையின் மகிமைக்காக, பல்வேறு அருட்கொடைகள் மூலம் வெளிப்படுகிறது.

3) புது மனிதன்: இப்புதிய மனிதன் முதன்முதலில் கிறிஸ்துவேதான் (எபே 2:15). அவர் மட்டுமல்லர் அவரில் விசுவாசம் கொள்ளும் அனைவருமே ஆவர். அவருடைய வாழ்வு இப்போது ஊன் உடலுக்கு உட்பட்டதன்று, ஊனின்மேல் ஆவிகொள்ளும் தொடர்ந்த வெற்றியான தொன்று (கலா 5:16-25; உரோ 8:5-13). ஊனுடல் எடுத்த கிறிஸ்துவோடு இணைந்து (கொலோ 1:22), அவருடைய மரணத்துள் திருமுழுக்கில் பங்குபெற்று (உரோ 6:5), கிறிஸ்துவனின் உடல் பாவத்திற்கு மடிகிறது (8:10). துன்பநிறைவுடலானது, மகிமைமிக்க உடலாக (பிலி3:21), ஆன்ம உடலாக (1 கொரி 15:44) மாறும். அவனில் புது ஒளியும் மனப்பான்மையும் தோன்றும் (உரோ 12:2; எபே 4:23). ஆவியின் ஒளியில் ஒவ்வொன்றையும் எப்படித் தீர்மானிப்பது என்று அறிகிறான். இவ்வாறு ஏற்படும் அனுபவத்தை எப்படிப் பிறருக்கு வெளிப்படுத்துவது என்பதையும் அறிகிறான். அவன் கிறிஸ்துவின் மனதைக் கூட கொண்டிருக்கவில்லையா? (1 கொரி 2:16). மனிதன் இப்போது வெறும் மடியக் கூடியவன் மட்டும் அல்லன்; மாறாக, விசுவாசத்தால் இதயத்தில் சாகாத் தன்மையைக் கொண்டுள்ளான். எல்லா மனிதருக்காகவும் ஒரே தடவை மரித்த கிறிஸ்துவோடு இணைந்து மனிதன் இடைவிடாது தனது ''பழைய மனிதனை'' மடிய வைக்க வேண்டும். அப்போது அவனுடைய வாழ்வு பொலிவுமிக்க புதுவாழ்வாக அமையும். இப்போது நம் முகத்தை மறைக்கும் திரையில்லாததால், நம் ஆண்டவரின் மகிமையைக், கண்ணாடியைப் போல் காட்டுகின்றோம். அதனால் மேன்மேலும் மாட்சிமை ஒளிபெற்று, அதன் சாயலாகவே உருமாற்றம் அடைகிறோம். இவையெல்லாம் நம்மில் ஆவியான ஆண்டவரின் செயலே, இயக்கமே (2 கொரி 3:18). கிறிஸ்துவாகிய தனித்தன்மையுடைய சாயலால் ஆட்கொள்ளப்பட்ட புதுமனிதன் முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட வேண்டும். பழைய மனிதனின் உரு இழந்த சாயல்மூலம், மகிமைமிக்க, பேரொளிமிக்க சாயல் கொண்ட புதுமனிதனாம் கிறிஸ்து இயேசு தோன்றுகின்றார். இவ்வாறாக, மனிதன் மறுபடியும் படைத்தவரின் சாயலில் நிலைநிறுத்தப்படுகிறான் (கொலோ 3:9-10).

4) படைப்பு: இறுதியாக, படைப்பு, தன்னையுமறியாது பயனற்ற நிலைக்கு உட்படுத்தப்பட்டு, தன்னுள்ளே பேறுகால வேதனையால் இந்நாள்வரை தவித்தபோதிலும், அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, இறைமக்களுக்குரிய மகிமையையும், விடுதலையையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கை கொண்டுள்ளது. உழைப்பு இன்னும் பாவத்தின் காரணமாக துன்பமிக்க சுமையாக இருந்தாலும், அதே நேரத்தில், இறுதி மகிமையில் உருமாற்றம் பெறும் நம்பிக்கையால் உழைப்பு புது மதிப்பீடு பெறுகிறது (உரோ 8:18-20). மனிதனின் இறுதிப் பகைவனான மரணம் அழிக்கப்படும்போது இறைமகன் தன் அரசுரிமையை இறை-தந்தைக்கு அளிப்பார். அப்போது கடவுளே அனைத்திலும் அனைத்துமாய் இருப்பார் (1 கொரி 15:24-28).

மனுமகன், மானிட மகன், (SON OF MAN)

I. நான்கு நற்செய்திகளின் பல பகுதிகளில் இயேசு பல தடவை தம்மைத் தாமே ''மனுமகன்'' என்று குறிப்பிட்டு அழைக்கிறார். புதிர்ப்பொருள் தன்மையுடைய இப்பெயர் இரு பண்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்பு வாய்ந்த பெயராக விளங்குகிறது. ஒருபுறம் யாவும் கடந்த அவரது தெய்வீகத்தை மறைத்து நிற்கும் திரைச்சீலையாகத் திகழ்வதோடு, மறுபுறம் அத்தன்மையைத் தொனிக்கும் பண்புகளையும் காட்டி நிற்கிறது. இவ்வாறு கருத்துச் செறிவு ததும்ப நற்செய்திகள் நான்கிலும் ''மனுமகனின்'' உட்பொருளை உய்த்து உணர வேண்டுமாயின் பழைய ஏற்பாட்டிலும், யூதமத வழக்கிலும் கண்

டுள்ள அதே ''மனுமகன்'' என்ற சொல்லின் பொருளினைப் பகுத்து அறிவது இன்றியமையாதது.

II பழைய ஏற்பாடு

1. விவிலியக் காலத்தில் பழக்கத்தில் இருந்த ''மனுமகன்'':

எபிரேய, அரமேய நடைமுறை மொழிகளில் ''மனுமகன்'' எனும் சொல் பொதுவாக ''மனிதன்'' (காண்க. சங் 80:18) எனப் பொருள்படும். ''மனிதன்'' என்பது மனித இனத்தில் ஓர் உறுப்பினன் (அதாவது, மனுகுலத்து மகன்) எனும் கருத்தைக் குறிக்கும். ஆதாம் மனுகுலத்துக்கு முதல்வராகவும் தந்தையாகவும் விளங்குவதோடு, மனித வர்க்கத்தின் பெயரையே தன்னுள் தாங்கி நிற்கும் காரணத்தால் (ஆதாம்-மனிதன்-காண். யோபு 14:1) மனிதன் எனும் சொல்லுக்கு ''ஆதாமின் மகன்'' என்று பொருள் கொடுத்துச் சிறப்பிப்பது தகும். பழைய ஏற்பாட்டின் ஏடுகளைப் புரட்டுவோமாயின் அங்கே இச்சொல் மனித இயல்பின் பல பண்புகளைக் கொண்டு சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்; மனிதனின் நிலையற்ற வாழ்வு (எசா 51:12; யோபு 25:6), இறைவன் திருமுன் அவனது சிறுமைத்தனம் (சங் 11:4), அவனது பாவநிலை (14:2தொ. 31:20), மரணத்திற்குத் தீர்ப்பிடப்பெற்ற அவனது பரிதாப நிலை (89:48; 90:3)- என்ற பல்வேறு அம்சங்களையும் பழைய ஏற்பாடு 'மனிதன்' என்னும் சொல்லில் வலியுறுத்துகிறது. எசேக்கியேல் இறைவாக்கினர் மகத்துவம் நிறைந்த, மாட்சிமை மிக்க கடவுள் திருமுன் குப்புற வீழ்ந்து வணங்குங்கால், அவரை, ''மனுமகன்'' (எசே 2:1. 3;...) என்று யாவே அழைக்கின்றார். இப்பெயர் மனிதனுக்கும் மனிதனைப் படைத்த பரம்பொருளுக்குமிடையே நிலவும் இடைவெளியை எடுத்தியம்புவதோடு, மனிதனின் நிலையற்ற நிலைமையையும் இறைவாக்கினருக்கு நினைவுறுத்துகிறது. சுருங்கக் கூறின், இவ்வம்சங்கள் அனைத்தும் ஒருசேர மனிதன் இறைவன் திருவடி முன் வலிமையிழந்து நிற்பதை வலியுறுத்துகின்றன.

எனினும், தம்மால் படைக்கப்பட்ட காரணத்தால் இதே மனிதனை இறைவன் சிறப்புற நடத்துகிறார் என்பதையும் ''மனிதன்'' எனும் சொல் தெளிவாக்குகிறது. இதனால் அவன் தனித்தன்மை வாய்ந்தவனாகவும் காணப்படுகிறான். மனிதனின் நலனையே விரும்பும் இறைவன் அவனுக்குப் பன்மடங்கு நன்மைகளை வாரி வழங்குகிறார் (சங் 107:8). அவரது ஞானம் மனுகுலத்தில் குடியிருப்பதில் அக்களிப்புக் கொள்கிறது (பழ 8:31). வலிமை குன்றிய ஆற்றலற்ற மனிதன் கடவுளின் கருணையால் அனைத்துப் படைப்புகளுக்கும் கொடுமுடியாகச் சிறப்புற்றுத் திகழ்வதை நெஞ்சம் நிறைய நினைந்துருகிக் கவிதை வடிவில் வடிக்கும் சங்கீத ஆசிரியர் தம்மையே வியப்பில் மெய்ம்மறந்து கூறுகிறார்: ''மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப்பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்'' (சங் 8:4; ஆதி1). பரம்பொருளின் பாதத்தில் மனிதன் ஒரு தூசி. இறைவனின் ஆவிதான் அவனை இயக்குகிறது. இருப்பினும், அதே கடவுள் அவனுக்கு நன்கொடைகள் பல நல்கி அவனை மகிமைப்படுத்துகிறார்.

2. வெளிப்பாட்டு இலக்கியத்தில் மனுமகன்.

அ) தானியேல் நூல்: விவிலிய வெளிப்பாட்டு இலக்கியத்தைச் சேர்ந்த தானியேல் நூலில் ''மனுமகன்'' தோன்றுகிறார் (தானி 7). விண்ணரசின் வருகைக்கு வழிவகுக்கும் பொருட்டு, தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் நிலையற்ற மனித குலப் பேரரசுகள், இறுதியில் சரிந்து மடிந்து மறைந்து போகும் காட்சியை இறைவாக்கினர் தானியேல் வருணிக்கும் விதம் குறிப்பிடத்தக்கது. கொடிய விலங்குகளையொத்த வல்லரசுகள் ஆழ்கடலிலிருந்து உருப்பெற்று உதயமாகின்றன. வயது முதிர்ந்தவரைப் போன்று தோற்றமளிக்கும் ''தொன்மை வாய்ந்தவராகிய'' இறைவனின் அரியாசனத்திற்கு முன் எழும் வல்லரசுகளின் பலமும் பெருமையும், புக

மும் மாட்சியும், ஆற்றலும் அதிகாரமும் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகின்றன. அப்பொழுது வானத்து மேகங்கள்மீது மனுமகனைப் போன்ற ஒருவர் நீண்ட ஆயுள் உள்ளவரின் அருகில் வருகிறார்; ஆட்சியும் மகிமையும் அரசுரிமையும் அவருக்கு அளிக்கப்படுகின்றன (7:13 தொ).

தானியேல் 7-ஆம் அதிகாரத்தில் மனுமகனுக்கு நேர் எதிரிடையாக விலங்குகளையும், தெய்வத்தன்மைக்கு எதிரிடையாக தீய சக்திகளையும் காண்கிறோம். மனுமகனின் ஆட்சிக்குள் தீய சக்திகளின் அதிகாரமும் ஆணவமும் அடங்கி ஒடுங்கி நிற்கின்றன வென்று, இதற்கு நாம் பொருள் கொள்ளலாம். பின்வரும் வசனங்கள் (7:15 தொ), காட்சியின் உட்பொருளை விவரிக்குங்கால், ''உன்னதமானவரின் புனிதர்கள் அரசுரிமை பெறுவர்'' என்று கூறுகின்றன (7:18.22.27). முன்னைய வசனத்தையும் (7:13 தொ), பின்னைய விளக்கத்தையும் ஒருங்கிணைத்து நோக்குங்கால் தானியேல் நூலிலே முக்கியமாகக் கூறப்படும் கருத்தொன்று நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது. ''மனுமகன்'' எனும் சொல் தனி நபரைக் குறிக்காமல், ''கடவுளின் புனிதர்கள்'' எனப்படும் ஒரு குழுவினைச் சுட்டிக் காட்டுகிறது. இங்குத் தோற்றமளிக்கும் மனுமகன் துன்புறுத்தப்பட்டு, துயரில் தோய்ந்து கிடக்கும் சாதாரண மனிதனல்லன்; அவைகளை வென்று வெற்றிவாகை சூடிய வேந்தனாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

மேலும், இறைவாக்கினர் காட்சியில் தென்படும் கொடிய விலங்குகள் வல்லரசுகளை மட்டுமல்லாது, அவைகளை ஆட்சி புரியும் பேரரசர்களையும் குறிக்கின்றன. ஆதலால் ''மனுமகன்'' ஒரு குழுவைச் சுட்டிக்காட்டுவதோடு, அதற்குத் தலைவனாகத் திகழும் ஒரு தனிநபரையும் குறிப்பதாகக் காண்கிறோம். மாட்சிமிகு மனுமகன் இறுதிக்காலத்தில் முழுமைபெறும் விண்ணரசில் இறைவனின் புனிதர்களுக்குத் தலைமை வகித்து ஆட்சி புரிவார்.

இறுதியாக, மெசியா எனப்படும் தாவீது மன்னனின் மகனைவிட மிகச் சிறந்த குணாதிசயங்களை மனுமகன் கொண்டிருப்பதையும் அறிகிறோம். இக்காட்சிப் பகுதி முழுவதிலும் மனுமகன் மனுவுலகைச் சார்ந்தவராகவும் இறைத் தன்மையைத் தன்னகத்தே கொண்ட நாயகனாகவும் திகழ்கிறார்.

ஆ) யூத மக்களின் மரபுவழியில் மானிடமகன்: விவிலிய நூலுக்குப் புறம்பான யூத வெளிப்பாட்டு இலக்கிய மரபிலும் ''மனுமகனைப்'' பற்றிய பகுதிகள் உள்ளன. தானியேல் நூலுக்குப் பின் எழுதப்பட்ட இந்நூல்கள் கண்டுணர்ந்த மனுமகன் ஒரு தனிப்பட்ட குழுவைச் சுட்டிக் காட்டாமல், தனி மனிதனாக மட்டும் சிறப்புற்று விளங்குகிறார். ஏனோக்கு நூல் எடுத்துரைக்கும் மனுமகன் ஒரு மர்ம மனிதர்; இறைவனோடு வாழ்பவர்; நீதி நிறைந்தவர்; இறுதிநாளில் மீட்புக்குரிய நல்லனவற்றை வெளிப்படுத்துவார்; இறுதி நாளில் வையகத்து நீதிபதியாகவும், மீட்பராகவும், உயிர்த்தெழுந்த நல்லோரின் நாயகனாகவும் அரியாசனத்தில் அமர்ந்திருப்பார். அரசகுல மெசியாவுக்கும், யாவேயின் ஊழியனுக்கும் (''இதோ நம் ஊழியன்... நம்மால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்... மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்...''காண். எசா42:1) உரிய சில கருத்துக்கள் ஏனோக்கு நூலில் வரும் மனுமகனில் காணக்கிடக்கின்றன. ஆனால், தானியேல் நூல் மனுமகனைப் போலல்லாமல் இம்மனுமகன் வேறுபட்டுக் காட்சியளிக்கிறார். இவர் பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்; மண்ணுலகுக்குரிய மானிடப் பிறவியும் அல்லர்.

ஏனோக்கு நூல் எழுதப்பட்ட காலத்தை விவிலிய வல்லுநர்களால் இன்றும் கணிக்க முடியவில்லை. எனினும், தானியேல் நூலுக்குப் பிறகு வடிவெடுத்த இந்நூலில் காணும் மனுமகனைப் பற்றிய கருத்துக்கள் சற்றுத் தெளிவாகவும், விளக்கமாகவும் வளர்ச்சி பெற்றிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இயேசு தமது மீட்புப் பணியைத் தொடங்கவிருக்கும்

காலத்திற்குச் சற்றுமுன் இக்கருத்துக்கள் யூத மக்கள் சிலரிடையே பரவலாகப் போதிக் கப்பட்டு ஏனோக்கு நூலுக்கு மூலமாக அமைந்திருக்க வேண்டும்.

தானியேல் நூலில் இடம்பெறும் மனு மகன் பற்றிய மறைபோதனை எஸ்ராவின் நான்காம் நூல் எனும் மற்றுமொரு யூத வெளிப்பாட்டு ஏட்டிலும், யூத ராபிகளின் விரிவுரை இலக்கியத்திலும் காணப்படு கிறது. இவையனைத்தையும் படித்தும் போதித்தும் வந்த யூத மக்களின் உள்ளங் களில் வானுலகிலிருந்து இறங்கி வரும் மானிட மீட்பரின்மேல் நம்பிக்கை வளர்ந்து வளம் பெற்றிருக்க வேண்டும். நாளடை வில் நற்செய்திகள் நவிலும் மனுமகனைச் சிறப்புறச் சித்தரிக்க இக்கருத்துக்கள் உறு துணையாக அமைந்திருக்க வேண்டும்.

III புதிய ஏற்பாடு

1. நற்செய்திகள்:

அ) ''மனுமகன்'' என்ற சொற்றொடர் நற்செய்திகளில் எழுபது முறை கையாளப் பட்டுள்ளது. சில சமயங்களில், இத்தொடர் 'நான்' என்பதைச் சுட்டுவதாக உள்ளது *(காண். 5:11; லூக் 6:22; மத் 16:13-21; மாற் 8:27-31).* இறைவனின் வலப்புறம் நின்றி ருக்கும் மனுமகனைக் காண்பதாக ஸ்தே வான் கூறியது (அ.ப. 7:56), ஆதித்திருச் சபையின் சில பகுதிகளில் இந்தச் சிந்தனை வழக்கத்திலிருந்ததை உணர்த்துகிறது. ஆனால், இதுதான் நற்செய்தியில் இத் தொடர் காணப்படுவதற்குக் காரணம் என்று கூற முடியாது. நற்செய்திகளில் இத்தொடர், இயேசுவே தம்மைக் குறிக்கும் படி பயன்படுத்துவதாகத்தான் உள்ளது. அவரது உயிர்ப்புக்குப் பின்னால் அப் போஸ்தலர்கள் இயேசுவை வேறு சில சிறப்புப்பெயர்களால் அழைப்பதையே விரும்பினர். இயேசுவும் தம்மை வெளிப் படையாக மனுமகனுடன் ஒன்றுபடுத்த வில்லை என்பதும் இங்கு நோக்கத்தக்கது *(மத் 6:27;24:30 இணை).* ஆனாலும், வேறு சில இடங்களில் மனுமகன் என்று இயேசு தம்மையே அழைக்கிறார் *(மத் 8:20இணை; 11:19; 16:13; யோவா 3:13 தொ; 12:34).* இவ்வித முரண்பாட்டுக்குக் காரணம் உண்டு. புதிய ஏற்பாட்டிலே வரும் ''மனு மகன்'' என்ற சொல் ''இறைத்தன்மை பூண்ட தலைவன்'' பற்றிய இருவேறு கருத்துக்களைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. இவ்விரு பண்புகளும் இயேசுவுக்குப் பொருந்தும். ஆதலால், தம்மியல்புக்கு ஏற்ற இப்பெயரை இயேசு தமதாக்கிக் கொண்டதில் வியப்பில்லை. இதனைப் பின்வரும் விளக்கம் நன்கு தெளிவு படுத்தும்.

ஆ) ஒத்தமை நற்செய்திகள்:

1) இம்மூன்று நற்செய்திகளில் காணக் கிடக்கும் இறுதிக் காலத்தைச் சித்திரிக்கும் பகுதிகளை மேலே விளக்கியுள்ள வெளிப் பாட்டு இலக்கிய மரபுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, கருத்துக்கள் பல ஒத் திருப்பதை அறிவோம். மனுமகன் வான மேகங்கள்மீது வருவார் *(மத் 24:30 இணை);* மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார் *(10:28);* ஒவ்வொருவனுக்கும் அவனவன் செயலுக்கேற்ப கைம்மாறு அளிப்பார் *(16:27 இணை).* அறிஞரும் மூப்பரும் கூடிய தலைமைச் சங்கம் முன்னிலையில் குற்றவாளியாகக் கொணர்ந்து நிறுத்தப் பட்ட இயேசுவை நோக்கி, ''நீ கடவுளின் மகனான மெசியாவோ?'' என்று தலைமைக் குரு வினவ, ''மனுமகன் வல்லமையுள்ள இறைவனின் வலப்பக்கத் தில் அமர்ந்து *(காண். சங் 110:1)* வான மேகங்கள்மீது வருவதை நீங்கள் இனிக் காண்பீர்கள்'' *(காண். தானி 7:13; மத் 26:64இணை)* என்று இயேசு பதில் பகர் வதை நாம் காண்கிறோம். தம்மையும் இம்மனுமகனையும் ஒருங்கிணைத்துக் கூறு வதன் மூலம் தாம் கடவுளின் மகன் என்பதை இயேசு மறைமுகமாக அறிவிக் கிறார். யூத மரபுப்படி எவனொருவன் தன்னைத்தானே இறைமகனென்று இயம்பு கிறானோ, அவன் இறை நிந்தைக்கு ஆளா கிறான். அவன் அவமானப்படுவதோடு, மரண தண்டனைகளையும் அனுபவிக்க நேரிடும். ஆதலால்தான் யூத மதத்

தலைமைச் சங்க அங்கத்தினர் அனைவரும் ''இவன் சாவுக்குரியவன்'' என்று கூக்குர லிட்டனர் *(மத் 26:26)*.

மேலே கூறியுள்ள ஒத்தமை நற்செய்தி வசனத்திலிருந்து புலப்படும் கருத்துக்களை வெளிப்பாட்டு இலக்கியக் கண்கொண்டு நோக்குவோமாயின், நமக்குத் தென்படுவது கீழ்க்காணும் கருத்துத்தான்: யூத மக்க ளிடையே பிறந்து வளர்ந்து, வையகம் முழு வதையும் தமது ஆட்சிக்குள் கொணர்ந்து, யூதமக்களுக்கு மகிமையைத் தேடித் தரும் மாவேந்தர்தாம் மெசியாவாக இருக்க வேண்டுமென்ற தவறான எண்ணம் யூத மக்களிடையே புகுந்துவிட்டது என்பதை எடுத்துக்காட்டி, மனுவுலகில் உதித்து மனு குலத்தை ஆட்சி செய்யும் மன்னர்தாம் மெசியா என்று யூதர்கள் வகுத்த இலக் கணத்தை இயேசு தகர்த்தெறிகிறார். தனது யாவும் கடந்த தன்மையைத் தோன்றச் செய்கிறார்.

2. ஒத்தமை நற்செய்திகளின் வேறுசில பகுதிகளில், வெளிப்பாட்டு இலக்கியக் கருத்துக்களுக்கு மாறாக, தாம் ஒரு சாதா ரண மனிதன் என்று பொருள்பட இயேசு இயம்புவதையும் காண்கிறோம். இம்மண் ணில் இயேசு மனிதனாகப் பிறந்தார். ஆனால், இவ்வையகத்து வேந்தர்களின் மகிமை பெருமையைத் தேடி அலையா மல், ''யாவேயின் ஊழியன்'' எனும் தமது இறையழைப்புக்கிணங்க வெறுத்துப் புறக்க ணிக்கப்படச் சித்தமானார்; இறுதியாக மகி மையோடு மனுகுலத்தை மீட்கும் பொருட்டு, சிலுவையில் மரித்தார். மனு மகன் என்ற முறையில் இவையனைத்தையும் அவர் அனுபவிக்க வேண்டியவராய் இருந் தார் *(மாற் 8:31 இணை; மத் 17:9 இணை.22இணை; 20:18 இணை; 26:2. 24இணை. 45 இணை)*. தானியேல் நூலின் படி இறைவனின் புனிதர்கள் மாட்சிமை மிக்க மறுவுலகின் அரசுரிமைகளில் பங்கு கொள்ளும்முன் இவ்வுலகின் துன்ப நிலையை அனுபவிக்க வேண்டும். அது போன்று இறுதிநாளில் மகிமையில் தோன் றும்முன்பு மனுமகன் மண்ணகத்தில் துன்பு றுத்தப்பட்டு துக்கத்தில் துவள வேண்டும். இதனால் இயல்பான அவரது தெய்வீகத் தன்மை தாழ்ந்த நிலைக்குட்பட்டு மரணம் மட்டும் மூடி மறைக்கப்பட்டிருந்தது. இதி லிருந்து நாம் அறிவது என்னவென்றால், தாம் மனிதனென்று மொழிந்தவர் யூதமக் கள் எதிர்பார்த்த மண்ணுலகின் மாட்சிமிகு மெசியா அல்லது மாவீரன் என்று தம்மைக் கருதவுமில்லை, போதிக்கவுமில்லை என்ப தும், மனுகுலத்தின் துன்பத்தில் பங்கு கொள்ளும் பண்பை அழகாகவும் ஆழமாக வும் எடுத்துக்காட்டவல்ல ''மனுமகன்'' என்ற நாமத்தையே தமதாக்கிக் கொண்டு, அப்பெயரால் தம்மைத் தாமே அழைத்துக் கொள்ள விரும்பினார் *(காண். மாற் 8:29 தொ)* என்பதுமாகும்.

3) மனுமகனின் தெய்வீகம் அவரது வாழ் வில் மூடிமறைக்கப்பட்டிருந்த போதிலும் *(காண். மத் 8:20 இணை; 11:19)*, இயேசு மனுமகனுக்குரிய அதிகாரங்களுக்குச் செயல் உருவம் கொடுக்கத் தயங்கிய தில்லை. அவர் தம்மை அண்டிவரும் மக்களின் பாவங்களை மன்னித்தார் *(மத் 9:6 இணை)*; மனுமகன் ஓய்வு நாளுக்கு ஆண்டவர் என அதிகாரத் தொனியில் பதிலளித்தார் *(மத் 12:8 இணை)*; மனுமகன் இறைவாக்கினைப் போதிப்பவரென்று தமது சிறப்புரிமையை விளக்கினார் *(மத் 13:37)*. இயேசுவின் வாழ்நாளில் மறைந்தவண்ணம் அறிமுகப்படுத்தப்பட்ட இத்தெய்வீக மகிமை இறுதி நாளில் வெளிப்படும் அவரது முழு மகிமைக்கு அறிகுறியாகத் தென்பட்டதென்று நாம் கண்டுணர்கிறோம்.

இ) **யோவானின் நற்செய்தி:** யோவா னின் ''மனுமகன்'', ஒத்தமை நற்செய்திகள் நவிலும் (மனுமகனுக்குரிய) எல்லாப் பண் புகளையும் கொண்டுள்ளார். இறுதிநாளில் இறைமகன் மனுமகனுக்குரிய அதிகாரத் தோடு இறந்தோருக்குத் தீர்ப்பிடுவார் *(யோவா 5:26-29)*. அப்பொழுது ''கடவுளு டைய தூதர்கள் மனுமகனிடமிருந்து ஏறுவ தையும் அவரிடம் இறங்குவதையும் காண் பீர்கள்'' *(1:51)*; மனுமகன் முன்னர் இருந்த இடத்துக்குச் செல்வார் *(6:62)*; இறுதி

நாளில் மனுவுலகில் இவருக்கு மகிமையும் மாட்சியும் அளிக்கப்படும். இவைகளனைத்தும் மனுமகன் வானத்திலிருந்து வந்தவர் என்பதை வெளிப்படுத்துகின்றன (3:13) என்றெல்லாம் யோவான் ''மனுமகனின்'' மகிமைக்குரிய பண்பினைப் பற்றிக் கூறுகிறார்.

ஆனால் மாட்சிமையின் வாயிலில் நுழையுமுன், அதே மனுமகன் மனிதவுடல் பூண்டு மரிக்க வேண்டிய தாழ்நிலையை அனுபவிக்க வேண்டும் (9:35). ஆதலால், மக்களினங்கள் இவரை இறைமகன் என்று கணித்துக் கண்டுணர்ந்து விசுவாசம் கொள்ள இயலாத நிலை ஏற்படும். தமது உடலை உணவாக உண்டு, இரத்தத்தைப் பானமாக அருந்தி (6:53), உண்மை உயிர் பெற்று உய்யும் வண்ணம் தம்மையே தகனப்பலியாக அர்ப்பணிக்க வேண்டும் (காண். 6:51).

ஆனால், ஒத்தமை நற்செய்திகளில் கண்டறியாத ஓர் அரிய கருத்தை யோவான் தமது நற்செய்தி நூலில் வலியுறுத்துகிறார். இயேசுவின் சிலுவை மரணம், அவரது விண்ணுலகம் எய்துதலோடு பின்னிப் பிணைத்துச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. மனுமகன் சிலுவையில் உயர்த்தப்பட வேண்டும் (3:14தொ; 12:34). அவர் கழுமரத்தில் ஏற்றப்பட்டது அவரது உயிர்ப்புக்கு வாயிலாக விளங்குவதோடு, அடையாளமாகவும் அமைந்து, விண்ணுலக மாட்சிமைக்கு உயர்த்தப்பட்டதற்கும் ஒப்பாகுமென்று யோவான் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார் (12:23; 13:31). சிலுவைச் சின்னத்தில்தான் இயேசுவின் திருவெளிப்பாடு நிறைவு பெற்றது. ''மனுமகனை நீங்கள் உயர்த்திய பின்பு இருக்கிறவர் நானே என்று அறிந்து கொள்வீர்கள்'' (8:28). அவரது மாட்சிமை இறுதிக்காலத்தில்தான் முழுவடிவம் பெற்றாலும், முன் கூட்டியே இவ்வுலகில் அவரது ஆற்றல் மிக்க செயல்களின் வழியாக வெளிக்கொணரப்படுகிறது. மனிதனுக்குத் தீர்ப்பு வழங்கி (5:21 தொ), தமது ஊனை உணவாக ஈந்து (6:53), முடிவற்ற வாழ்வை அளிக்கிறார் (5:25 தொ). நிலையான உணவை மனுமகன் தாம் கொடுக்க முடியும்; ஏனெனில், தந்தையாகிய கடவுள் அவர்மீது தம் முத்திரையைப் பொறித்துள்ளார் (6:27).

2. திருமுகங்களில் மலரும் மனுமகன்: வெளிப்பாட்டு இலக்கியத்தைச் சார்ந்த சில வசனங்களைத் தவிர, மனுமகனைப் பற்றிய குறிப்புக்களைப் பொதுவாகத் திருமுகங்களில் காண்பது அரிது. மனுமகன் என்ற முறையில் (அ.ப. 7:55தொ) இயேசு கடவுளின் வலப்பக்கத்தில் மாட்சியுடன் (காண்க. சங் 110:1) வீற்றிருப்பதை ஸ்தேவான் காண்கிறார். அதுபோன்று இறுதிநாள் அறுவடைக்காக (திருவெளி 14:14 தொ) அவரது மறுவருகையினை எதிர்நோக்கும் காட்சியாளரைப் பற்றி யோவானின் திருவெளிப்பாட்டு நூல் கூறுகிறது (திருவெளி 1:12-16). பவுல் இயேசுவை விண்ணிலிருந்து வந்த ஆதாம் என்று பெயரிட்டு, அவரது சாயலை உயிர்த்தெழுந்த மக்கள் வெளிப்படுத்துவார்கள் என்று விவரிக்கும் பொழுது (1 கொரி 15:45-49), மனுமகனைத் தான் குறிப்பிடுகிறார் என்று கூறலாம். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகமும் இயேசுவை எட்டாவது சங்கீதத்தின் கண்ணோட்டத்தில் நோக்கி ''அந்த மனிதன்'' அல்லது ''மனுமகன்'' மாட்சிமைக்கு அழைக்கப்படுவதற்குமுன், மிகத் தாழ்ந்த நிலைக்குள்ளாக்கப்பட்டார் என்று காட்டுகிறது (எபி 2:5-9).

சங்கீதங்கள் முழங்கும் ''ஆதாமின் மகன்,'' வெளிப்பாட்டு இலக்கியம் கூறும் ''மனுமகன்,'' பவுலின் திருமுகங்கள் பறைசாற்றும் ''புதிய ஆதாம்'' (அல்லது ''இரண்டாவது மனிதன்'') - இம்மூவரையும் மறையியல் அறிஞர்கள் ஒன்று சேர்த்து ஒப்பிட்டு நோக்கி, இம்மூவருக்குமிடையே உள்ள உறவின் நெருக்கத்தை உறுதிப்படுத்தினார். மேலும், இம்மூன்று பெயரும் சேர்ந்து இயேசுவின் முழு உருவத்தை வருணிக்கவல்ல பிணைப்பைப் பெற்றிருப்பதையும் அறிவித்தார்கள். ஆதாமின் மகன் என்ற முறையில் இயேசு மனிதனின்

தாழ்வுநிலையிலும், துன்பத்திலும் பங்கு கொண்டார். வானத்திலிருந்து இறங்கி வந்த மனுமகன் என்ற நிலையில் இயேசு உலக முடிவில் தீர்ப்பளிக்கும் பொருட்டு, திரும்பி வருவார். அவரது பாடுகளும், மரணத்தின் வழியாக அடைந்த உயிர்ப்பும் மாட்சியும் அவரைப் புதிய ஆதாமாகத் திகழச் செய்வதோடு, அவற்றினால் புதிதாக உருவாக்கப்பட்ட மனுகுலத்துக்கு நாயகனா கவும் விளங்கும்படி சிறப்பிக்கின்றன. இறுதிக் காலத்தில் அவர் தம்மை முழுமை யாக வெளிப்படுத்துவார். அப்பொழுது இன்று நம்மை அண்டிவரும் அவரது சின்னஞ்சிறிய சகோதரர்களில் அவரையே கண்டதாக உணர்வோம். இவ்வனுபவம் நம்மை வரம்பில்லா வியப்பில் மூழ்கச் செய்யும் (காண். மத் 25:31 தொ).

மனோவாகு (MANOAH - ஒய்வு)

இவர் சிம்சோனின் தந்தை. இவருடைய குழந்தையற்றிருந்த மனைவிக்கு ஒரு காட்சி யில் அவளுக்குப் பிறக்கும் மகன் வாழ்க்கை முழுதும் நசீராக இருப்பானென்றும், அவன் இஸ்ராயேலர்களைப் பெலிஸ்தியர் களின் பிடியினின்று மீட்பானென்றும் கூறப் பட்டது (நீதி 13:5). குழந்தையை எவ்வாறு வளர்க்க வேண்டுமென்று மனோவாகு மன்றாடியதைக் கேட்டு மீண்டும் தோன்றிய ஆண்டவரின் தூதரிடம் கேட்டபோது, தாய் தீட்டான உணவையும், மயக்கமளிக்கும் மதுவையும் தவிர்க்க வேண்டுமென உறுதிப்படுத்ினார் (13:14). அவரை உண வுண்ண அழைத்தபோது அதனைப் பலி யாகத் தருமாறு கேட்டார். பலியாக உணவை அளித்தபோது அப்பிழம்பில் ஆண்டவரின் தூதர் மேல்நோக்கிச் சென்று மறைந்தார். தனக்குத் தோன்றியவர் ஆண்ட வரின் தூதர் என்று மனோவாகு அறிந்து, தான் கடவுளை நேரில் கண்டேனே என மரணபயத்தால் துடித்தார். இறைவன் அவ ரது பலியை ஏற்றுக்கொண்டதால் அஞ்ச வேண்டியதில்லை என அவரது மனைவி அவரைத் தேற்றினாள்.

சோராவுக்கும், எசுத்தாவோலுக்குமிடையே மனோவாகுவின் கல்லறை இருந்த தாகக் கருதப்பட்டது. இங்குச் சிம்சோனின் எலும்புகளும் அடக்கம் செய்யப்பட்டன (நீதி 16:31).

மன்னா (MANNA)

1. மன்னா என்பது இஸ்ராயேலர் பாலை வனத்தில் அலைந்தபோது இறைவனால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட உணவாகும் (யோசு 5:12). நமது கவனத்திற்குரியதென் பது அஃது என்ன என்பது பற்றிய பகுப்புரை யன்று; மாறாக, அதனுடைய அடையாள மதிப்பீட்டின் பொருளாகும். ''இஃது என்ன?'' (யாத் 16:15) என்ற பெயரின் விளக்கமானது அதனுடைய மறைபொரு ளான பண்பை வெளிக்கொணர்கிறது. இறைவன் தனது மக்களுக்கு உயிர்வாழத் தேவையானதை அளிக்கின்ற அதே வேளை யில், அவர்களைச் சோதனைக்கு உட்படுத்த வும் விரும்புகிறார் (16:4.28). இந்த வியப்பு மிகு கொடையானது பாரம்பரியத்தில் பல விளக்கவுரைகளுக்கு இடமளித்தது. ஐந்நூல் (யாத் 16;எண் 11:4-9), சங்கீதங்கள், ஞான நூல் (ஞான 16:20-29) ஆகியவற்றின் நிகழ்ச்சி யுரைகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இவ்வாறாக, விண்ணகத்தின் உண்மையான அப்பத்தினுடைய வெளிப்பாட்டிற்கு இது தயாரிக்கிறது. விண்ணக அப்பத்திற்கு மன்னா வாக்குறுதியாகவும் மாதிரியாகவும் உள்ளது (யோவா 6:31-32).

2. **மன்னா பற்றிய விவரிப்பு:** அது ''மிருது வான பாளமாக மெல்லிய உறைபனிக்கு ஒத்த சிறிய பொருளாகும்'' (யாத் 16:14). அது ''கொத்தமல்லி போன்று வெண்ணிற மாய்த் தேன் கலந்து ஆக்கிய பணியாரம் போன்ற சுவையுடையதாகும்'' (16:31). ''அதன் தோற்றம் முத்துப் போன்றதாகும்'' (எண் 11:7). அதைச் சுட்டோ, வேக வைத்தோ உண்ணலாம் 16:23). பணியார மாகச் செய்து சாப்பிடலாம் (16:31). இயற்கை உணவுப் பொருட்களில் ஏதாவது ஒன்றை மன்னாவாக அடையாளம் காட்ட முயன்றுள்ளனர் அறிஞர் பலர். காற்றில் அடித்துச்செல்லப்படும் காளான்வகைப் பூண்டாகவோ, பல செடிகளில் காணப் படும் பிசினாகவோ, சில பூச்சிகள் சுரக்கும்

பசையாகவோ மன்னாவை அடையாளம் காட்ட முயன்றுள்ளனர். ஆனால், இவை யெல்லாம் மன்னாவைவிட விந்தையாக உள்ளன.

3. மன்னாவும் பாலைவனச் சோதனையும்: பாலைவனத்தில் தங்களின் நிலையற்ற சூழ் நிலையை எதிர்கொண்டவர்களாய், விசு வசியாதவர்கள் இறைவனைச் செயல்படு மாறு வற்புறுத்தினர்; ''ஆண்டவர் தங்க ளோடு இருக்கிறாரா, இல்லையா?'' (யாத் 17:7) என்று ஐயுற்றனர். மற்ற வழிகளிடை யில் மன்னாவினுடைய கொடையினால் தனது மகிமையைக் காட்டுவதன் மூலம் இறைவன் பதிலுரைத்தார் (16:7.10-12). தனது முறையில் இறைவன் தனது மக் களைப் படிப்பிக்கவும், சோதிக்கவும் மன் னாவினால் ஒரு கேள்வியை எழுப்பினார். ''எனது கட்டளைக்கு உடன்படுவதன் மூலம் நாமே உங்கள் கடவுள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளப் போகிறீர்களா, இல்லையா?'' (16:4.28).

இஸ்ராயேலுக்கு வாழ்வதற்கான இந்த உணவை அளிப்பதில் இறைவன் தனது ஆற்றலுள்ள பிரசன்னத்தை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார் (16:21). இந்த அறிகுறி யானது எந்த அளவிற்குப் பொருளுடைய தெனின், உடன்படிக்கைப் பேழையில் சட்டப் பலகைகளுடன் ஒரு பாத்திரத்தில் மன்னாவையும் வைப்பதன் மூலம் அத னுடைய நினைவை இஸ்ராயேல் பாது காக்க வேண்டும் (16:32-34; காண்க. 25:21; எபி 9:4). ஆனால், ஒவ்வொரு அறிகுறியும் ஒரு பதிலை எதிர்பார்க்கிறது. மன்னா என்ற கொடையோடு, கொடுத்தவர்மேல் கொண்டுள்ள விசுவாசத்தைச் சோதிப்பதற் கான கட்டளையும் கொடுக்கப்பட்டது. ஓய்வு நாளின் ஓய்வை மதிப்பதற்கென ஓய்வு நாளுக்கு முந்தின தினம் இரண்டு நாளுக்குத் தேவையானதைச் சேகரிக்க வேண் டும். மற்றப்படி ஒவ்வொரு முறையும் அன்றன்றைக்குத் தேவையானதை மட்டுமே அவர்கள் சேகரிக்க வேண்டும். இவ்வாறு மன்னாவானது இறைவனுக்குக் கீழ்ப்படி தலையும் அவரது வார்த்தையில் நம்பிக் கையைக் காட்டுவதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது (யாத் 16:16-30). மேலும், சுவையற்றவையாக இல்லாத நிலையில் சமைக்கப்பட்ட மன்னாவின் துண்டுகள் எப்போதும் ஒரே சுவையைக் கொண்டிருந் தன (எண் 11:8). சோதனையையும் அத னுடைய படிப்பினையையும் அறியத் தவ றிய நிலையில், இஸ்ராயேலர் மன்னாவில் சலிப்புற்று, முறையிடத் தொடங்கினர். மண்ணக உணவை மட்டுமே சார்ந்தவனாக இல்லாமல் (11:4-6), மன்னாவை அடை யாளமாகக் கொண்ட மறை உணவாகிய விண்ணிலிருந்து வருகின்ற இறைவார்த்தை யின் மீது மனிதன் முதலில் நம்பிக்கை வைக்க வேண்டும் (உப 8:2-3).

4. மன்னாவும் இறுதிக்கால எதிர் பார்ப்பும்: இறைவன் முன்னிலையிலான செபத்தில் தன்னுடைய பழமையைப் பற் றிச் சிந்திக்கும்போது, இஸ்ராயேலானது மன்னாவின் உதவியைப் பற்றிப் பாடியது: ''விண்ணிலிருந்து வந்த கோதுமை அப் பத்தை,'' வானதூதரின் ''வலியோருடைய அப்பத்தை'' (சங் 78:23-25; 105: 40; நெகே 9:15) அவர்கள் மீது யாவே பொழிந்தார். இந்த வியத்தகு கொடையினைப் புகழும் போது, இறுதிக்கால விருந்தின்போது படைத்தவர் தனது பிள்ளைகளுக்கு அளிக் கக்கூடிய விண்ணக உணவு கொண்டிருக்க வேண்டிய பண்புகளைப்பற்றி ஞானிகள் கற்பனை செய்தனர். இஸ்ராயேலின் எதிர் பார்ப்பாகிய இந்த உணவைப் பற்றியே ஞானநூல் ஆசிரியர், யாத்திரை மீதான தன்னுடைய விளக்கவுரையில் சிந்திக்கின் றார். எதிர்கால மன்னாவானது ஒவ்வொரு நபரினுடைய சுவைக்கேற்ப அமையும். இறைவனுடைய பிள்ளைகளின் ஆசை களுக்கேற்ப அஃது அமையும். அதனைச் சுவைப்பதில், தன்னில் விசுவாசங் கொள்ப வரின் பணிக்குத் தன்னுடைய படைப்பை உட்படுத்துகின்ற படைத்தவரின் வள்ளன் மையை அவர்கள் மேலும் சுவைப்பர் (ஞான 16:20-21. 25-26). திருவெளிப்பாட்டு நூல் அதே மன்னா பற்றிப் பேசுகிறது. யாருடைய விசுவாசமும் சாட்சியமும்

அவர்களைச் சாத்தான் மற்றும் உலகத்தின் மீதான வெற்றியாளர்களாக மாற்றுகிறதோ, அவர்களுக்கு அது வாக்களிக்கப்படுகிறது (திருவெளி 2:17; காண்க. 1 யோவா 5:4-5).

5. மன்னாவும், இறைவனுடைய உண்மையான அப்பமும்: கிறிஸ்து பாலைவனத்தில் பழைய ஏற்பாட்டின் படிப்பினையை வாழ்ந்து காட்டி உறுதிப்படுத்துகிறார்: ''மனிதர் அப்பத்தினால் மட்டுமன்று, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்'' (மத் 4:1-4இணை; காண்க. 8:3). அவர் புதுமையான உணவினால் இறைவனுடைய மக்களுக்கு உணவு அளித்தபோது, இந்தப் படிப்பினையைப் புதுப்பிக்கிறார். மக்களைத் திருப்திப்படுத்திய இந்த அப்பமானது (மத் 14:20; 15:37இணை; காண்க. சங் 78:29), இயேசு கோரிய விசுவாசத்துடன் எவ்விதத் தொடர்புமற்ற ஓர் ஆர்வத்தைக் கிளறியது (யோவா 6:14-15). சீடர்கள் கூட்டத்தினரை விட எந்த விதத்திலும் அதிகமாக கொடை மற்றும் புதுமையின் பொருளைப் புரிந்து கொள்ளவில்லை. விசுவசியாத பரிசேயர், சதுசேயரைப் பொறுத்தவரை, அத்தருணத்தில் ''விண்ணிலிருந்து அடையாளம் ஒன்றைக்'' கோரினர் (மத் 16:1-4 இணை; காண்க. யோவா 6:30-31; சங் 78:24-25).

ஆனால் ''விண்ணிலிருந்து வருகின்ற'' உண்மையான அப்பமானது மரணத்தை அனுமதிக்கின்ற மன்னாவாக இல்லாமல் விசுவாசத்தினால் பெறப்படுகின்ற (யோவா 6:35-50) இயேசுவே ஆவார் (6:32-33). ''உலகம் வாழ்வதற்காகவே கொடுக்கப்படும்'' அவரது சதையே (6:51-58). அதே ''ஆன்மீக உணவானது'' பாலைவன மன்னாவினால் முன்குறித்துக் காட்டப்படுவதாகப் பவுலும் கண்டார் (1 கொரி 10:3-4). எனவே, உரிய காரணத்துடன் நற்கருணை வழிபாடானது மன்னாவைக் குறிக்கின்ற விவிலிய உருவங்களை எடுத்துக் கொள்கிறது. தோற்றத்திற்கு மன்னாவைப் போன்று எப்போதும் ஒரேவிதமாக உள்ள நற்கருணை உண்வினுடைய மறைபொருளான அப்பத்தைப் பெறும்போது, இறைவனுடைய அறிகுறிக்குக் கிறிஸ்தவன் பதிலளித்து, விண்ணிலிருந்து இறங்கிய அவருடைய வார்த்தையிலான தனது விசுவாசத்திற்குச் சான்று பகர்கிறான். எனவே, இக்காலம் முதல் அவன் ''வழிப்போக்கர்களின் அப்பமான வான தூதருடைய அப்பத்தினால் உணவூட்டப்படுகிறான்''. இறைவனுடைய மக்களின் புதிய யாத்திரையின்போது, அஃது அவர்களுடைய தேவைகள் அனைத்தையும் நிறைவுபடுத்தி, அவர்களது சுவைகளுக்கேற்றதாக அமைகிறது. மேலும், விசுவாசி, போரில் ஏற்கெனவே வென்றவர் என்ற அளவில், தனது பயணத்திலும் அதனைத் தொடர வேண்டும். ஏனெனில், அவர் ஏற்கெனவே இறைவனுடைய அப்பத்தினால் ஊட்டப்பட்டு, அவரது முடிவில்லா வாழ்வினால் வாழ்கிறார் (யோவா 6:33.54.57-58; திருவெளி 2:17).

மன்னிக்க முடியாத பாவம் (UNFORGIVABLE SIN)

இது மாற்கு 3:29-30-இலிருந்து வருகிறது: ''தூய ஆவியாரைப் பழித்துரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப் பெறார்; மேலும், என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவார்'' என்று இயேசு கூறினார். ஏனெனில் ''இவனைத் தீய ஆவி பிடித்திருக்கிறது'' என்று அவர்கள் சொல்லி வந்ததால் இயேசு இவ்வாறு கூறினார்.

மாற்கின் இந்த வாசகத்தை ஆய்வு செய்யும்போது சூழ்நிலை தூய ஆவியாரைப் பழித்து உரைப்பது அவ்வளவு எளிதில் செய்யப்படுவதன்று எனத் தெரிகிறது. இயேசு இங்கு மறைநூல் வல்லுநர்களைக் குறிப்பிடுகிறார். இவர்கள் பயிற்சி பெற்ற மறைநூல் அறிஞர்களும் மக்களின் தலைவர்களும் ஆனவர்கள். தங்கள் காலத்தில் தூய ஆவி ஆற்றும் செயல்களைக் கண்டுணர வேண்டிய பொறுப்புடையவர்கள். இவர்கள் மன்னிக்க முடியாத பாவத்தைச்செய்யும் ஆபத்திலிருந்தனர். இயேசு பேய்களை ஓட்டுவதில் வெளிப்பட்ட தூய ஆவியின் ஆற்றல் பெற்ற செயல்கள் சாத்தானின் ஆற்றலால் செய்யப்பட்டவை என்று மீண்

டும் மீண்டும் கூறி வந்தனர். இத்தகைய கூற்று இறைவன்பால் எதிர்ப்பு மிக்க பகைமையையும், இறைவனது ஆவி செயலாற்றுவதைக் காண வேண்டுமென்று மறுப்பதையும் காட்டுகிறது. இயேசுவின் எச்சரிக்கை மக்களைப் பார்த்துக் கூறப்பட்டதன்று; பொறுப்புடைய மறைநூலறிஞர்களுக்குக் கூறப்பட்டதாகும்.

இந்தப் பகுதியும் 2 தெச 1:8-9-இல் வரும் பவுல் கூறுபவையும் சேர்த்துப் பேசப்படுகின்றன. ஆங்கே நற்செய்தியை நம்பாதவர் முடிவில்லா அழிவை அடைவர் என்று பவுல் கூறுகிறார். எபிரேயருக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர், ஒருமுறை விசுவாச ஒளிபெற்றுப் பின் பதிதர்கள் ஆனவர்கள் இறைமகனைத் தாங்களே சிலுவையில் அறைந்து அவரை வெளிப்படையாக இகழ்கின்றனர்; அவர்கள் விசுவாசத்தை மீண்டும் சீர்திருத்த முடியாது என்று கூறுகிறார் (எபி 6:4-6). திருமுழுக்குக்குப்பின் செய்த பாவம் மன்னிக்கப்பட முடியாது என்றும், இறைமகனையும், உடன்படிக்கையின் இரத்தத்தையும் அருள்தரும் ஆவியையும் நிராகரித்தவன் பெரிய தண்டனைக்குத் தகுதியுள்ளவன் (10:26-31) என்றும் கூறுகிறார். முதலாம் யோவான் திருமுகம் எழுதிய ஆசிரியர் பாவம் செய்பவனுக்காகச் செபிக்க ஆலோசனை கூறத் தயங்குகிறார் (1 யோவா 5:14-17).

எனவே, மன்னிக்க முடியாத பாவம் விவிலியத்தின் ஒரே இடத்தில் மட்டுமல்லாமல், பல இடங்களிலும் கடுமையான தண்டனையோடு குறிப்பிடப்படுகிறது (எண் 15:30-31; மத் 11:21-24; மாற் 14:21; லூக் 10:13-15; திருவெளி 14:9-11). இருப்பினும், இப்பாவத்தை வலியுறுத்திக் கூறுதல் இஃது இறைவனுடைய அளவு கடந்த இரக்கத்தைக் குறைவுபடுத்தக் கூடாது. கர்த்தர் கற்பித்த செபத்தில் நம் பாவங்களை மன்னிக்க நாம் வேண்டுகிறோம். இயேசு தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகவும் வேண்டினார். பேதுரு இயேசுவை மும்முறை மறுதலித்த பின்னும் மன்னிப்புப் பெற்றார்.

மன்னிக்கமுடியாத பாவமானது, முடிவில் தண்டனை பெறவல்ல ஒரே ஒரு செயலை மட்டும் குறிக்கவில்லை. இது மனிதன் புரியாமல், தெரியாமல் செய்யும் பாவமன்று. மேலும், இது நற்செய்தியை அறியாத பிறமதத்தினரின் செயல்களையும் குறிப்பிடவில்லை. மாறாக, இப்பாவம், மனிதன் இயேசுவை முழுமையாக அறிந்த பின், வேண்டுமென்று, தொடர்ந்து வெறுத்து, அவரது செயல்களை இறைவனது செயல்களாக ஏற்க மறுப்பதாகும். இறைவனை வெளிப்படுத்துபவர் என்ற அளவில் சொல்லிலும் செயலிலும் வாழ்வு மற்றும் சாவின்மேல் இயேசு கோரிய உரிமையை நிராகரிப்பதாகும். அவரை அறிந்தவன் அவரை நிராகரிப்பது நற்செய்தி உண்மைக்குத் தன்னையே புறம்பாக்கி, அழிவிற்குத் தன்னையே தீர்ப்பிட்டுக் கொள்வதாகும். இந்த அளவில், இந்தக் கடுமையான இறைவாக்குகள் இப்பெரிய வெளிப்பாட்டை நிராகரிக்க வேண்டாம் என்று மனிதர்களை எச்சரிக்கிறது. கிறிஸ்துவில் நிறைவைத் தரும் அருளை நிராகரித்தால் இழப்பும் அழிவுமே மிஞ்சும்.

ஆவி அளிக்கும் சாட்சியத்தை மறுக்கும் மனிதன் இறைவனைப் பொய்யராக்குகிறான் (1 யோவா 5:10). இது முழு ஆன்மீக அமைப்பைச் சீர்கெடச் செய்கிறது. ஒருவனை ஏற்புடைமையின் அரசுக்குப் புறம்பாக்குகிறது. இந்த நெறிபிறழ்வு, இறைவன் இலவசமாக அளிக்கும் அருளை ஏற்றுக்கொள்வதற்கு ஒருவரை ஆற்றல் இழக்கச் செய்கிறது.

மன்னிக்காத ஊழியன் (UNFORGIVING SERVANT)

என் சகோதரனை எத்தனை முறை மன்னிப்பது? எனக்கேட்ட பேதுருவுக்குப் பதிலாக இயேசு இந்த நீதிக்கதையைக் கூறுகின்றார் (மத் 18:23-35). தலைவனிடம் மன்னிப்புப் பெற்றவன் தன் உடனூழியனை மன்னிக்க மறுக்கிறான். எனவே, தலைவன் அந்த மன்னிக்காத ஊழியனைத் தண்டிக்கிறான். இந்த நீதிக்கதை விண்ணரசில் நுழைய வேண்டிய குணநலனைக்

குறிப்பிடுகிறது. மற்றவரை மன்னிக்க மறுப்பது பாவத்திலே கொடிய பாவம். நமது கொடிய பாவங்களையெல்லாம் இறைவன் மன்னிக்கக் காத்திருக்கும்போது அயலாரின் சிறிய குற்றங்களை நாம் மன்னிக்க மறுக்கலாகாது. நாம் மறுத்தால் தந்தையும் நம் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

மன்னிப்பு (FORGIVENESS, PARDON)

I விவிலியத்தில் பாவியானவன் ஒரு கடனாளியாகவும், இறைவன் தனது மன்னிப்பினால் அவனுடைய கடனை நீக்குபவராகவும் உள்ளார் (எண் 14:19). இந்த நீக்குதல் எந்த அளவிற்கு ஆற்றல் மிக்கதெனில் பாவங்களை அவரது முதுகுக்குப் பின்னால் எறிந்துவிட்டு (எசா 38:17), அவற்றை நீக்கிவிட்டு (யாத் 32:32), பரிகாரம் செய்து அவற்றை அழித்த (எசா 6:7) இறைவன் பாவத்தினை இனி ஒருபோதும் பார்ப்பதில்லை. அதே சொற்றொகுதியைப் பயன்படுத்தி, இந்தப் பாவநீக்குதலானது, கைம்மாறு கருதாததாகும் என்றும், கடனாளி கடன் தீர்க்கப்பட முடியாதவன் ஆகிறான் என்றும் கிறிஸ்து வலியுறுத்துகிறார் (லூக் 7:42; மத் 18:25-27). முதன்மையான போதனையானது ஆவியின் கொடையுடன் சேர்த்து, அதன் முதல் விளைவாகிய பாவமன்னிப்பை முக்கியமானதாகக் கொண்டுள்ளது (லூக் 24:47; அ.ப. 2:38). தூய்மைப்படுத்துதல், கழுவுதல், நியாயப்படுத்துதல் போன்ற மற்றும் சில சொற்கள் மன்னிப்பை உணர்த்துகின்றன. மன்னிப்பின் நேரடிக் கூறுகளான ஒப்புரவையும் ஒன்றிப்பையும் வலியுறுத்துகின்ற அப்போஸ்தலிக்க நூல்களில் இவை தோன்றுகின்றன.

II. **மன்னிப்பின் இறைவன்:** பாவத்துடனான நேருக்குநேர் சந்திப்பில், சகித்துக் கொள்ளாத இறைவன் (யாத் 20:5) மன்னிப்பின் இறைவனாக தன்னை வெளிப்படுத்துகிறார். உடன்படிக்கைக்கு வாய்ப்பளித்து மக்களுக்கு அழிவினைப் பெற்றுத் தந்த பதிதம் (யாத் 32:30-32), ''இரக்கமும் தயவும் உள்ள இறைவன் சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர்; கொடுமையையும், குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர்; ஆனால், தண்டிக்காமல் எதையும் விட்டு விடுவதில்லை'' என்று இறைவன் தன்னைப் பற்றி பறைசாற்றுவதற்கு வாய்ப்பாக அமைகிறது. இவ்வாறு ''இம்மக்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள் எனினும், என் தலைவா! நீர் எங்களோடு வந்தருளும். எங்கள் கொடுமையையும் பாவத்தையும் மன்னித்து எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ளும்'' (34:6-9) என்று மோசே நம்பிக்கையோடு மன்றாடுகிறார்.

மனித மற்றும் சட்டரீதியான பார்வையில் மன்னிப்பானது நியாயப்படுத்தப்படவில்லை. தூய இறைவன் தனது தூய்மையை நீதியால் வெளிப்படுத்தி (எசா 5:16) தன்னை இகழ்பவரைத் தண்டிக்கக் கூடாதா (5:24)? உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமற்ற, தனது வேசித்தனத்திற்காக வெட்கமடையாத துணைவி எவ்வாறு மன்னிப்பை எதிர்பார்க்கலாம் (எரே 3:1-5)? ஆனால், இறைவனுடைய இதயம் மனிதனுடைய இதயத்தைப் போன்றதன்று. தூயவர் அழிக்க விரும்பவில்லை (ஓசே 11:8-9). பாவியினுடைய மரணத்திற்குப் பதிலாக, தன்னுடைய மன்னிப்பை அவன் மேல் பொழிவதற்காக அவனுடைய மனமாற்றத்தினை அவர் எதிர்பார்க்கிறார் (எசே 18:23); ஏனெனில், ''அவருடைய வழிமுறைகள் நம் வழிமுறைகளல்ல... மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்திருப்பது போல நம் எண்ணங்களை விட அவருடைய எண்ணங்கள் மிக உயர்ந்திருக்கின்றன'' (எசா 55:7-9).

தனது குற்றத்தை அறிக்கையிடுகின்ற பாவியை இறைவன் மன்னிப்பதன் காரணமாக, சங்கீத ஆசிரியரின் செபம் நம்பிக்கை மிக்கதாக உள்ளது (சங் 32:5; காண்க. 2 சாமு 12:13). இறைவன் அவனை இழக்க விரும்பவில்லை (சங் 78:38). அவனை வெறுப்பதற்குப் பதிலாக, மகிழ்ச்சியால் அவனுடைய வருந்துகின்ற தாழ்ந்த இதயத்தினைத், தூய்மைப்படுத்தி நிரப்புவதனால், அவர் அவனை மீண்டும் படைக்கிறார் (சங்

51:10-14.19; காண்க. 32:1-11). அவர் தனது அனைத்துப் பிள்ளைகளையும் மன்னிக்கின்ற தந்தையாக இருப்பதனால், இறைவன் மீட்பினுடைய அளவற்ற ஊற்றாக இருக்கிறார் *(சங் 103:3.8-14).* நாடு கடத்தப்பட்ட பின்னர் ''தயையும்'' *(நெகே 9:17)* மற்றும் ''இரக்கமும், மன்னிப்பும் உள்ள இறைவன்'' *(தானி 9:9)* என இறைவன் இடைவிடாமல் அழைக்கப்படுகிறார். பாவியானவன் மனமாறினால் தான் அச்சுறுத்திய தீமைகள் அனைத்தையும் விலக்கிக்கொள்ள அவர் என்றும் தயாராக உள்ளார் *(யோவே 2:13).* ஆனால், இஸ்ராயேலினுடைய ஒதுங்கி வாழும் தனித்துவத்தின் முன்மாதிரியான யோனா, இம்மன்னிப்பு அனைவருக்கும் அளிக்கப்படுவது கண்டு கலக்கமுறுகிறார் *(யோனா 3:10; 4:2).* யோனாவிற்கு முரண்பட்ட விதத்தில் ஞான நூலானது தான் படைத்த அனைத்தையும் அன்பு செய்கிற, அனைவர் மீதும் தயவு கொண்ட, மனந்திரும்புவதற்கென மனிதருடைய பாவங்களை விலக்குகின்ற, சிறிதுசிறிதாக அவர்களைத் தண்டித்து, அவரில் விசுவாசங்கொள்வதற்காக அவர்கள் எவ்வாறு பாவம் புரிகின்றனர் என்பதை நினைவுபடுத்துகின்ற இறைவனுக்குப் புகழ்ச்சிப் பண் இசைக்கின்றது *(ஞான11:23-12:2).* இவ்வாறாக, மன்னிக்கும் சிறப்புப் பண்புடைய எல்லாம் வல்லவர் தானே என்பதை அவர் காட்டுகிறார் *(ஞான11:23.26).*

III கிறிஸ்து வழியாக இறைவனுடைய மன்னிப்பு:

1. இஸ்ராயேலைப் போன்று *(லூக் 1:77)* திருமுழுக்கு யோவானும் பாவங்கள் நீக்கப்படுதலை எதிர்நோக்கியுள்ளார். இந்த நீக்குதலுக்கு நிபந்தனையான ஒரு திருமுழுக்கினை அவர் போதிக்கிறார்; தவம் செய்யுங்கள் அல்லது வரவிருப்பவர் தீயினால் உங்களுக்குத் திருமுழுக்கு அளிப்பார். யோவானைப் பொறுத்தமட்டில் இத்தீயானது நல்ல தானியம் பிரிக்கப்பட்ட பின் பதரைச் சுட்டெரிக்கின்ற கோபத்தீயாகவும் மற்றும் தீர்ப்பாகவும் உள்ளது *(மத் 3:1-12).* இயேசுவைப் பின்பற்றிய யோவானின் சீடர்களும் இதே கருத்தைக் கொண்டுள்ளனர். போதகருடைய போதனைக்குச் செவிகொடுக்க மறுப்பவர்கள் மீது வானங்களினின்று நெருப்பு விழ வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர் *(லூக் 9:54).* இயேசு பாவிகளை மனந்திரும்பி விசுவசிக்குமாறு அழைப்பதோடு மட்டுமன்றி*(மாற் 1:15)*, அவர்களைக் குணப்படுத்தி மன்னிக்க மட்டுமே வந்ததாகக் கூறுவதைக் கேள்விப்பட்டு, திருமுழுக்கு யோவானும் வியப்புறுகிறார் *(லூக் 7:19-23).*

2. **மன்னிப்பின் செய்தி:** உண்மையில் இயேசு மண்ணுலகில் தீ வைக்க வந்தாரெனில் *(லூக் 12:49)*, அவர் தனது தந்தையால் நீதிபதியாக இல்லாமல், மீட்பராகவே அனுப்பப்பட்டார் *(யோவா 3:17-18; 12:47).* மனமாற்றம் தேவையாக உள்ள அனைவரையும் மனம் மாற அவர் அழைக்கிறார் *(லூக் 5:32 இணை).* இறைவன் மன்னிப்பதில் மகிழ்கிற தந்தை *(லூக் 15)*, மற்றும் எவரும் தொலைந்து போவதை விரும்பாதவர் என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் *(மத் 18:12-14)* அவர் இந்த மன மாற்றத்தைத் தூண்டிவிடுகிறார் *(லூக் 19:1-10).* செருக்கானது புறக்கணிக்கின்ற வேளையில் தாழ்மையான விசுவாசமானது ஏற்கின்ற மன்னிப்பை மட்டும் இயேசு போதிக்கவில்லை *(லூக் 7:47-50; 18:9-14).* அவர் மன்னிப்பின் வல்லமையைச் செயல்படுத்துகிறார். இறைவனுக்கு மட்டுமே உரிய ஒரு வல்லமையை அவர் கொண்டுள்ளார் என்பதற்கு அவரது செயல்கள் சான்று பகர்கின்றன *(மாற் 2:5-11 இணை; காண்க. யோவா 5:21).*

3. **பாவங்களை நீக்குவதற்கான பலி:** பாவிகளுக்காக தனது தந்தையின் மன்னிப்பைப் பெறுவதன் மூலம் கிறிஸ்து தனது பணியை உச்ச நிலையடையச் செய்கிறார். அவர் பாவங்களை நீக்குவதற்காகச் *(மத் 26:28)* செபிக்கிறார் *(லூக் 23:24)*; இரத்தம் சிந்துகிறார் *(மாற் 14:24).*இறைவனுடைய உண்மையான ஊழியன் என்ற நிலையில் அவர்களுடைய பாவங்களைத்

தன்மீது ஏற்றுக்கொள்வதன் மூலம் அவர் மக்கள் திரளை ஏற்புடையதாக்குகிறார் (1 பேதுரு 2:24; காண்க. மாற் 10:45; எசா 53:11-12). ஏனெனில், உலகைக் காப்பாற்றுவதில் உலகின் பாவங்களைப் போக்குகின்ற செம்மறி அவரே (யோவா 1:29). அவரது இரத்தத்தினால் நாம் தூய்மைப் படுத்தப்பட்டு, நமது தவறுகளினின்று சுத்தப்படுத்தப்படுகிறோம் (1 யோவா 1:7; திருவெளி 1:5).

4. மன்னிக்கும் ஆற்றலை அளித்தல்: விண்ணிலும் மண்ணிலும் அனைத்து வல்லமையும் கொண்டவராய், பாவங்களை நீக்கும் ஆற்றலை உயிர்த்த கிறிஸ்து, அப்போஸ்தலர்களுக்கு அளிக்கிறார் (யோவா 20:22-23; காண்க. மத் 16:19; 18:18). முதல் பாவ விலக்கானது, மனம் மாறி இயேசுவின் பெயரில் விசுவாசங்கொள்ளும் அனைவருக்கும் திருமுழுக்கின்போது அளிக்கப்பட வேண்டும் (மத் 28:19; மாற் 16:16; அ.ப. 2:38; 3:19).

பாவத்தை விலக்குவதைப் பற்றி அப்போஸ்தலர்கள் போதிக்கின்றனர் (அ.ப. 2:38; 5:31; 10:43; 13:38; 26:18). ஆனால் அவர்கள் தங்களுடைய திருமுகங்களில் மன்னிப்பினுடைய சட்டரீதியான தன்மையைவிட இயேசுவின் மூலமாக நம்மைக் காப்பாற்றிப் புனிதப்படுத்துகின்ற இறை அன்பினை அதிகமாய் வலியுறுத்துகின்றனர் (உரோ 5:1-11). ஒருவரது பாவங்களுக்கான மன்னிப்பை அடைவதற்கான வழிமுறையாக ஒருவர்க்கொருவர் பாவங்களை அறிக்கையிடுதல் மற்றும் திருச்சபையினுடைய செபம் ஆகியவற்றினுடைய பங்கு குறிப்பிடத்தக்கது (யாக் 5:15-16).

IV **குற்றங்களுக்கான மன்னிப்பு:** பழைய ஏற்பாட்டில் சட்டமானது ஏற்கெனவே பழிக்குப் பழி விதியின் மூலம் பழி தீர்த்தலின்மீது ஒரு கட்டுப்பாடு விதித்ததோடு (யாத் 21:15), சகோதரன் மீதான வெறுப்பையும், அயலார் மீதான பழிவாங்குதலையும், கடுவெறுப்பையும் தடை செய்கிறது (லேவி 19:17-18). இவ்விதிகளைப் பற்றித் தியானித்த சீராக்கு என்னும் ஞானி, அயலானுக்கு மனிதன் அளிக்கும் மன்னிப்பிற்கும் அவன் இறைவனிடம் கேட்கும் மன்னிப்பிற்கும் இடையிலான பிணைப்பைக் கண்டுபிடித்தார் (சீரா 27:30-28:7). ''அடுத்தவர் செய்த அநீதியை நீ மன்னித்துவிடு; அவ்வாறெனில் நீ மன்றாடும்போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும். மனிதர், மனிதர் மீது சினம் கொள்கின்றனர்; அப்படியிருக்க, ஆண்டவர் தங்களுக்கு நலம் அளிப்பார் என எப்படி எதிர்பார்க்க முடியும்? மனிதர் தம்மை ஒத்த மனிதர்மேல் இரக்கம் கொள்வதில்லை; அப்போது அவர்கள் தம் பாவமன்னிப்புக்காக எப்படி மன்றாட முடியும்?'' (சீரா 28:2-4). நீதிமான்கள் தாங்கள் தீர்ப்பிடும்போது இறைவனுடைய இரக்கத்தை எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும் என நினைவுறுத்திய வாறு ஞான நூலானது இப்படிப்பினையை நிறைவு செய்கிறது (ஞான 12:19.22). இந்த இருவிதப் படிப்பினையை இயேசு ஏற்று, அதனை மாற்றியமைப்பார். சீராக்கு நூல் ஆசிரியரைப் போன்று, தனது சகோதரனை மன்னியாதவனை இறைவன் மன்னிக்க மாட்டாரென அவர் கற்பிக்கிறார். இரக்கமற்ற கடனாளியின் உவமையானது இந்த உண்மையை ஆற்றலுடன் மனதில் பதிய வைக்கிறது (மத் 18:23-35). இந்த உண்மையைக் கிறிஸ்து வலியுறுத்தி ''வானிலுள்ள எம் தந்தாய்'' என்னும் செபத்தில் அதனை அடிக்கடி கூறச் செய்து, அதனை மறப்பதினின்று நம்மைத் தடுக்கிறார். நாங்கள் மன்னிக்கிறோம் என்று கூறக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். இக்கூற்று ஓரிடத்தில், சொற்களில், இறை மன்னிப்பினுடைய நிபந்தனையாக மன்னித்தலை அமைக்கின்றது (லூக் 11:4); மற்றோரிடத்தில் அதை அளவையாக நிறுவுகிறது (மத் 6:12). இது நமது வேண்டுதலுடன் இணைந்துள்ளது.

இயேசு மேலும் தொடர்கிறார். ஞான நூலினை ஒத்தவாறு, தான் தந்தையாக இருப்போருக்கும், தனது பிள்ளைகளாக இருப்பதற்குத் தன்னைப் பின்பற்ற வேண்டி

யவர்களுக்கும் (மத் 5:43-45;48) அவர் இறைவனை இரக்கத்தின் மாதிரியாக எடுத்துக்கூறுகிறார் (லூக் 6:35-36). மன்னிப்பு என்பது புதிய வாழ்வினுடைய தொடக்க நிலை நிபந்தனை மட்டுமன்று; அஃது அதனுடைய அத்தியாவசியக் கூறுகளில் ஒன்றுமாகும். எனவே, மன்னிப்பதில் சோர்வடையக்கூடாதென இயேசு பேதுருவுக்குக் கட்டளையிடுகிறார். தனது பழிவாங்குதலின் முழு அளவினை வலியுறுத்துகின்ற பாவிக்கு முற்றிலும் எதிரான நிலை இது (மத் 18:21-22; காண்க. ஆதி 4:24). நம்முடைய ஆண்டவரைப் பின்பற்றியவாறு (லூக் 23:34), தன்னைக் கல்லால் எறிபவர்களை மன்னித்தவாறு ஸ்தேவான் மரித்தார் (அ.ப. 7:60). ஸ்தேவான் மற்றும் இயேசுவைப் போல இருப்பதற்கும், தீமையை நன்மையால் வெல்வதற்கும் (உரோ 12:21; காண்க. 1 பேதுரு 3:9) கிறிஸ்தவன் எப்போதும் மன்னிக்க வேண்டும். மேலும், கிறிஸ்துவைப் போலவும் (கொலோ 3:13), அவரது தந்தையைப் போலவும் (எபே 4:32) அன்பினால் மன்னிக்க வேண்டும்.

மா

மாகதாய் (MAADAI - அணிகலன்கள்)

புறவின மனைவிமார்களை விட்டு விடும்படி எஸ்ராவால் கட்டாயப்படுத்தப் பட்டவருள் இவரும் ஒருவர் (எஸ் 10:34).

மாகாக (MAAZ - கோபமுள்ள)

யூதாவைச் சேர்ந்தவர். இராமின் மகனும், எரகுமவேலின் பேரனும் ஆவார் (1 நாள் 2:27).

மாகாத்து (MAHATH - பிடிப்புள்ள)

1. இவர் கோகாத்திய லேவியர்; அமாசா யின் மகனும் சாமுவேல் மற்றும் ஆலயப் பாடகர் ஏமான் ஆகியோரின் முன்னோரும் ஆவார் (1 நாள் 6:35).

2. எசேக்கியா காலத்தில் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தியதில் பங்கெடுத்த ஒரு கோகாத்திய லேவியர்; அமாசாயின் மகன் (2 நாள் 29:12). மேலும், இவர் கோயில் காணிக்கைகளை மேற்பார்க்கவும் நியமிக் கப்பட்டார் (31:13).

மாகோகு (MAGOG)

இது கோகுவின் நாடு (எசே 38:2; 39:6). மோசேக்கு மற்றும் தூபால் ஆகியவர்களின் முதன்மைத் தலைமையைக் கொண்டது (38:3). நாடுகளின் பட்டியலில் எப்பேத்தின் மகன் (ஆதி 10:2; 1 நாள் 1:5), மேசேக்கு மற்றும் தூபால் ஆகியவற்றோடு மாகோகு கொண்டிருக்கும் தொடர்பு, கருங்கடலின் தென்கரையில் அஃது இருந்திருக்கலாம் என்று கருத இடம் தருகிறது. கோகு மற்றும் மாகோகு என்ற பெயர்களில் காணப்படும் ஒலியியைவு காரணமாக, எசேக்கியேலின் மூல வாசகத்தில் மாகோகு செருகப்பட்டிருக்கிறது என்று நவீன ஆய் வாளர்கள் கருதுகின்றனர். திருவெளி 20:8-இல் கோகு மற்றும் மாகோகு என்ற பெயர்கள் ஆட்களின் பெயர்களாக உள் ளன. இறுதிக்கால இயலில், இவ்விருவரும் இறைவன் மற்றும் அவருடைய மக்களின் எதிரிகளைக் குறிக்கும் பொது அடையாள மாக உள்ளனர்.

மாகோர் - மிசாபிபு (MAGOR - MISSABIB - சுற்றிலும் பேரச்சம் எப்பக்கமும் திகில்)

எருசலேம் நகர அழிவைப் பற்றி இறை வாக்குரைத்த எரேமியாவை இம்மேர் என்ப வரின் மகன் பஸ்கூர் சிறையில் அடைத் தான். அவனது பெயரை மாற்றி, எரேமியா ''எப்பக்கமும் திகில்'' அல்லது ''சுற்றிலும் பேரச்சம்'' என்று பொருள்படும் மாகோர்-மிசாபிபு என்ற பெயர் கொடுத்து அழைத் தார் (எரே 20:3). இந்தச் சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் மேலும் பல இடங் களில் காணப்படுகிறது (சங் 31:13; எரே 6:25; 20:10; 46:5; 49:19; புல 2:22). இப்பெயர் யூதாவுக்கு வரவிருக்கும் அழிவைச் சுட்டிக்காட்டுவதாக அமைந் துள்ளது.

மாகோல் (MAHOL - நடன அரங்கம்)

ஏமான், கல்கோல், தர்தா (ஒருவேளை எசுராகியரான ஏத்தான், காண்க. சங் 88-89 மேல்குறிப்பு) ஆகியவர்களின் தந்தையாவர் மாகோல். இவரது இந்தப் புதல்வர்கள் அறிவில் மற்ற மனிதர்களைவிட, சிறந்து விளங்கினர். ஆனால், சாலமோன் அரசர் இவர்கள் எல்லோரையும் விட ஞானத்தில் சிறந்து விளங்கினார் (1 அர 5:11). ஆனால், 'மகோலின் புதல்வர்' என்பதற்கு உண்மை யான பொருள் இசைச்சங்க உறுப்பினர் என்றிருக்கலாம். ஏமான் ஆலய இசைக் கலைஞர் (1 நாள் 6:33). ஏத்தான், ஏமான், கல்கோல் மற்றும் தர்தா ஆகியோர் செரகு வின் புதல்வர்களாகக் குறிக்கப்படுகின்றனர் (2:6). ஞானமும், இசையும் ஒன்றோ டொன்று பின்னிப் பிணைந்திருப்பதாக எபிரேய மக்கள் கருதியதால் ஞானமுற் றுள்ளோரைப் பழங்கால இசைச்சங்கத் தோடு சேர்த்தனர் (1 நாள் 25:2; 2 நாள் 29:30).

மாக்கா (MAACAH - மந்தமான, அறிவில் லாத) - ஆள்

1. ஆபிரகாமின் சகோதரர் நாகோருக்கும், இரயுமாவுக்கும் பிறந்த மகன் (ஆதி 22:24).

இது மாக்கா அரசின் குலப்பெயர் மூதாதை யரின் பெயர்.

2. தாவீது அரசனின் மகனான அப்சலோ மின் தாயும், கெசூரின் அரசனான தல்மாயின் மகளும் ஆவாள் (2 சாமு 3:3; 1 நாள் 3:2).

3. காத்தின் அரசனான ஆக்கிசுவின் தந் தையும் சாலமோன் அரசனின் சமகாலத்த வரும் ஆவார் (1 அர 2:39).

4. யூதாவின் அரசனான ரெகபயாமின் அன்பு மனைவியும், அபியாம் அரசனின் தாயும் ஆவாள் (1 அர 15:2-3). 2 நாள் 13:2-இல் அபியாமின் (அபியா) தாய் மீக்காயா என்றழைக்கப்படுகிறாள். ஆனால், வாசகங்களில் சிறிது குழப்பம் உள்ளது. அபியாமின் தாய்வழிப் பாட்டன் (மாக்காவின் தந்தை) 2 நாள் 13:2-இல் கிபயாவின் உரியேல் என்றும், 1அர 15:2; 2 நாள் 11:20-21-இல் அபிசலோம் (அதாவது தாவீது, மாக்கா ஆகியோரின் மகனான அப்சலோம்) என்றும் குறிக்கப்படுகிறார். இக்குழப்பத்தைத் தீர்க்கும் வழியாக, அபி யாமின் தாயாகிய மாக்கா உரியேல், தாமார் ஆகியோரின் மகள் (1 சாமு 14:27) என்றும் ஆகவே அப்சலோமின் பேத்தி என்றும் கருதப்படுகிறாள். அபியாமின் மகன் ஆசா (1 அர 15:8), அபிசலோமின் (15:10) மகன் அல்லது பேத்தியான மாக்காவின் மகன் என்றழைக்கப்படுகிறான். உண்மையில் அவளது பேரனாவான். ஆசாவின் ஆட்சிக் காலத்தில் தாய் அரசி என்ற முறையில் மாக்கா முக்கியத்துவம் பெற்றிருந்தாள். ஆனால், கானானிய பாலினப்பெருக்க வழி பாட்டுக்கு எதிராக ஆசா சீர்திருத்தம் செய்தபோது மாக்கா பதவி இழந்தாள் (1 அர 13:2; 2 நாள் 15:16).

5. இவள் காலேபு(2)வின் வைப்பாட்டி. காலேபியரின் முன்னோர் (1 நாள் 2:48).

6. 1 நாள் 7:14-19 என்ற பழுதுபட்ட வாசகத்தின்படி, இவள் மனாசேயின் மக னும் கிலயாதின் தந்தையுமான (காண்க. எண் 26:29) மாக்கிரின் சகோதரி (1 நாள் 7:15) அல்லது மனைவி (7:16) ஆவாள்.

7. இவள் கிபயோன் மற்றும் அரசன் சவுல் போன்ற பென்யமினியரின் முன்னோ ரான எயியேலின் மனைவி (1 நாள் 8:29; 9:35) ஆவாள்.

8. இவர் தாவீதின் வலிய வீரர்களுள் ஒருவரான அனானின் தந்தை ஆவார் (1 நாள் 11:43).

9. இவர் தாவீது ஆட்சியில் சிமியோன் இனத்தின் படைத்தலைவரான செபற்றியா வின் தந்தை ஆவார் (1 நாள் 27:16).

மாக்கா (MAACAH - மந்தமான, அறிவில் லாத) - இடம்

இது கோலான் முகடுகளில் அமைந் திருந்த சிறிய அரமேய (சீரிய) அரசாகும். இஃது எர்மோன் மலைக்குத் தெற்கிலும், பாசானுக்கு மேற்கிலும், யோர்தான் தோன் றும் பகுதிக்குக் கிழக்கிலும், கெசூருக்கு வடக்கிலும் அமைந்திருந்தது. இது கெசூர் அரசோடு சேர்ந்து இஸ்ராயேல் படை யெடுப்பை ஓரளவு எதிர்த்து நின்றது (உப 3:14; யோசு 12:5; 13:11). இது யோசு 13:13-இல் மாக்காத்து என்று குறிக்கப்படு கிறது. தாவீது காலத்தில் மாக்கா அரசு மீண்டும் சுதந்தரமாய் இருந்தது. அப்போது இது மற்ற அரமேய அரசுகளோடும் அம் மோனியர்களோடும் கூட்டணியாகத் திகழ்ந் தது. இந்தக் கூட்டணி இஸ்ராயேலரால் தோற்கடிக்கப்பட்டது (2 சாமு 10:6). மாக்காத்தியர் என்றழைக்கப்படும் தனிநபர் கள் மாக்கா அரசைச் சேர்ந்தர்களாகவோ, அருகில் உள்ள ஆபல்-பெத்-மாக்கா நகரைச் சேர்ந்தவர்களாகவோ இருந்தனர். இந்நகரம் தொடக்கத்தில் மாக்கா அரசைச் சேர்ந்ததாக வும் பிற்காலத்தில் நீண்ட காலத்திற்கு இஸ்ராயேலரின் உடைமையாகவும் கருதப் பட்டது (2 சாமு 20:15-19).

மாக்காசு (MAKAZ - முடிவு, எல்லை, வெட்டித்தள்ளு)

இது சாலமோனின் ஆட்சிக்குட்பட்ட இரண்டாவது மாவட்டத்தில் உள்ள ஒரு நகரமாகும் (1 அர 4:9). இஃது எக்ரோ னுக்குத் தெற்கே 6 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் ஏல்-முக்கெயிசின் என்ற இடமாக இருக்கலாம்.

மாக்கி (MACHI - குறைதல்)

கானான் நாட்டை வேவு பார்க்க அனுப்பப்பட்ட கெயுவேலின் தந்தை. இவர்கள் காத்துக் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் (எண் 13:15).

மாக்கிர் (MACHIR - வாங்கப்பட்டவர்)

1. இவர் மனாசே (1)க்கும், அவரது வைப்பாட்டியான அசிரியேலுக்கும் பிறந்த முதல் மகனாவார் (யோசு 17:1; காண்க. 13:31; எண் 26:29). இவர் மாக்கிரியர்களின் குலப்பெயர் மூதாதையரும் கிலயாதியர்களின் முன்னோரான கிலயாதின் தந்தையுமாவார் (ஆதி 50:23; எண் 26:29; 1 நாள் 7:14).

மாக்கிரியர்களின் குடியிருப்பின் இரு கூறுகள் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுகின்றன. இவர்கள் கிலயாதைச் சேர்ந்த எமோரியப் பகுதியை வென்றனர். அங்கே குடியேற அனுமதி பெற்றனர் (எண் 32:39.40; உப 3:15; யோசு 13:31; 17:1; காண்க. 1 நாள் 2:21-23). கிலயாதின் பேரனான செலோபுகாது புதல்வியர்களை மட்டுமே கொண்டிருந்தார். அவர்களும் நாட்டில் பங்கு நிலம் பெறுவதற்கு வழி வகை செய்யப்பட்டது (எண் 26:33; 27:1-11; 36:1-12; யோசு 17:3-6; 1 நாள் 7:15). யோசு 5:14-இல் யோர்தான் ஆற்றுக்கு மேற்கே மாக்கிரியரின் ஒரு பகுதியைக் குறிக்கும் இடப்பெயராக மாக்கிர் பயன்பட்டுள்ளது. யோசு 27:1-இல் வரும் யோர்தானுக்கு மேற்கிலுள்ள சில இடங்களின் பெயர்கள் செலோபுகாதின் புதல்வியர் சிலரைக் குறிக்கலாம்.

2. இவர் லோதபாரில் வாழ்ந்தவர். இவரது வீட்டில் யோனத்தானின் மகன் மெபிபொசேத்து ஒரு காலத்திற்கு வாழ்ந்து வந்தார் (2 சாமு 9:4-5). அப்சலோமிடமிருந்து தாவீது தப்பி ஒடியபோது மாக்கிர் அவருக்கு உதவி செய்தார் (17:27).

மாக்கேது (MAKED)

இது கிலயாது நாட்டிலுள்ள ஒரு நகரம். இங்கிருந்துதான் யூதா மக்கபேயு கிரேக்கர்களால் அச்சுறுத்தப்பட்ட யூதர்களைக் காப்பாற்றினார் (1 மக் 5:26.39). இஃது இருந்த இடம் தெரியவில்லை.

மாசா (MASSA - பல்லவி, வாக்கு)

மாசா, இசுமயேலின் ஏழாவது மகனும், வட அரேபிய இனத்தாரின் குலப்பெயர் மூதாதையும் ஆவார் (ஆதி 25:4; 1 நாள் 1:30). மூன்றாம் திகிலத்பிலேசர் இசுமயேலின் மற்றக் குலப்பெயர்களுடன் மாசாவையும் குறிப்பிடுகின்றார்.

மாசா என்னும் இதே சொல் பழ 30:1; 31:1-இல் தலைப்பின் ஒரு பகுதியாகக் கூறப்படுகிறது. அனேகமாக இது மாசாவில் வாழ்ந்தவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல்லாக இருக்கலாம். ஆனால் பழ 31:1-இல் 'மாசா' என்ற சொல் சுட்டுச் சொல்லுடன் வராததால் இதை 'மாசாவின் அரசர்' என்று பொருள் கொள்ளலாம். இவ்வாறு பழ 30:1; 31:1-இல் வரும் 'மாசா' என்ற சொல் ஆதி 25:4; 1 நாள் 1:30-இல் வருவது போல வட அராபிய இனத்தைக் குறிக்கும்.

மாசா மற்றும் மெரிபா (MASSAH AND MERIBAH - சோதனை, கலகம் அல்லது வழக்காடுதல்)

இவை இஸ்ராயேலின் பாலைவன வாழ்க்கையோடு தொடர்புடைய இரு இடங்களின் பெயர்கள். இரண்டு பெயர்களும் சேர்ந்து மூன்று பகுதிகளில் குறிக்கப்படுகின்றன (யாத் 17:7; உப 33:8; சங் 95:8).

ஆய்வாளர் சிலர் இரு பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கின்றன என்று கருதினர். ஆனால் நவீன ஆய்வுகள், இவை இஸ்ராயேலர் ''ஆண்டவரைச் சோதித்த இரு ஒத்த நிகழ்ச்சிகளின் விவரிப்பைக் குறிக்கின்றன என்று காட்டுகின்றன. இரண்டிலும் ஆண்டவர் பாறையை அடிக்க மோசேக்குக் கட்டளையிடுகிறார். அதன் விளைவாகப் பாறையிலிருந்து தண்ணீர் புறப்படுகிறது (யாத் 17:5-6; எண் 20:5.8-9). முதல் நிகழ்ச்சி, பாலைவன வாழ்க்கையின் தொடக்கத்தில், சீன் பாலைவனத்தில்

ஒரேபு மலைக்கு அருகில் இரபிதிம் என்ற இடத்தில் நடந்தது (யாத் 17:1-7). இவ்விடம் மாசா என்றும் மெரிபா என்றும் அழைக்கப்பட்டது. இவ்விடம், உப 6:19; 9:22-இல், மாசா என்று மட்டும் அழைக்கப்படுகிறது. இரண்டாவது நிகழ்ச்சி, பாலை வன வாழ்க்கையின் இறுதியில் மெரிபாவில் நடந்தது. இந்த இடம் சீன் பாலை, வனத்திலுள்ள காதேசு பர்னேயாவாக அடையாளம் காட்டப்படலாம் (எண் 20:1-13; காண்க. உப 9:23).

உப 33:8-இன்படி, மாசா/மெரிபாவில், இறைவன்தான் லேவியரைச் சோதித்து வழக்காடினார் (காண்க. சங் 83:7). ''மெரிபாவின் தண்ணீர் அருகில்'' இஸ்ராயேலர் கலகம் செய்தனர்; மோசே இறைவனில் நம்பிகை கொள்ளவில்லை. ஆகவே, ஆரோனும் மோசேயும் வாக்களிக்கப்பட்ட நாட்டில் புகவில்லை (எண் 20:12; 27:14; உப 32:51; காண்க. சங் 106:32-33).

மாசாய் (MAASAI - யாவேயின் வேலை அல்லது செயல்)

பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த ஒரு குருவின் பெயர். இவர் இம்மேரின் வழித்தோன்றல் (1 நாள் 9:12). இவரும் நெகே 11:13-இல் வரும் அமச்சாயும் ஒரே ஆளைக் குறிக்கலாம்.

மாசால் (MASHAL)

ஆசேர் பகுதியிலுள்ள ஒரு லேவியர் நகரம் (1 நாள் 6:74). காண்க. மீசால்.

மாசிதோனியா (MACEDONIA)

கிரேக்க நாட்டிற்கு வடபகுதியில் உள்ள இந்நாட்டு மக்களைக் கிரேக்கர்கள் காட்டுமிராண்டிகள் என அழைத்தனர். மாசிதோனிய மன்னன் பிலிப்பு அரசனானபின் கிரேக்க நாட்டைக் கைப்பற்றினார். அவரது மகன் அலக்சாந்தர், மேற்காசியா முழுவதையும் கைப்பற்றினார். இவர்கள் காலத்தில் மாசிதோனியா வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்தது. இவர்களை மக்கபேயர் நூல்களின் ஆசிரியர் அறிந்திருக்கின்றார் (1 மக் 1:1; 6:2). புதிய ஏற்பாட்டுக் காலத்திலே இப்பகுதி தெசலோனிக்கேயாவைத் தலைநகராகக்கொண்டு ஓர் உரோமை மாகாணமாக விளங்கியது. பவுல், தமது முதலாம் (அ.ப. 16:9 தொ), மூன்றாம் மறைபரப்புப் பயணத்தின்போது (20:2தொ) இந்த மாசிதோனியாவிற்குச் சென்றார். மாசிதோனியாவிலுள்ள பிலிப்பி, தெசலோனிக்கேயா ஆகிய இடங்களில் திருச்சபைகளைப் பவுல் நிறுவினார். பவுல் மாசிதோனியாவில் தான் அடைந்த தொந்தரவுகளைச் சுட்டிக்காட்டுகிறார் (2 கொரி 7:5). ஆனால், அவர்கள் தங்கள் வறுமையிலும் தாராள மனதுடன் உதவி செய்ததைப் பாராட்டத் தவறவில்லை (2 கொரி 8:1 தொ).

மாசியா (MAAZIAH - யாவே புகலிடமாவார்)

1. தாவீதின் ஆட்சிக்காலத்தில் குருக்களில் இருபத்தி நான்காம் பிரிவை நிறுவிய குலப்பெயர் மூதாதையர் (1 நாள் 24:18).

2. நெகேமியாவின் தலைமையில் புதிய உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு குரு (நெகே 10:8).

மாசில்லாக் குழந்தைகள் கொலை செய்யப்படுதல் (INNOCENTS, SLAUGHTER OF THE)

இது மத் 2:16-18-இல் கூறப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சி. ஞானிகள் வாயிலாக 'யூதர்களின் அரசன்' பெத்லகேமில் ஒரு குழந்தையாகப் பிறந்துள்ளார் எனக் கேள்விப்பட்ட ஏரோது அரசன், தனது அரசைப் பறிப்பதற்கு அக்குழந்தை பிறந்துள்ளதாக நினைத்தான். ஞானிகள் தன்னிடம் திரும்பி வராமல் சென்றதைக் கண்டு கடுங்கோபம் கொண்டு, ஆட்களை அனுப்பி பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் இரண்டு வயதும் அதற்கு உட்பட்டதுமான ஆண் குழந்தைகளை எல்லாம் கொன்றான் (கொலையுண்டவர்களின் எண்ணிக்கை தொடக்ககாலத் திருச்சபையில் பல்லாயிரமாக இருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனால், தொல்பொருள் செய்திகளிலிருந்து இந்த எண்ணிக்கை ஏறக்குறைய 20 அல்லது 30 இருக்கும்). இதன் மூலம் எரே 31:14-இல்

கூறப்பட்டுள்ள இறைவாக்கு நிறைவேறியதாக மத்தேயு கூறுகிறார். ஆனால், இந்த வசனத்திற்கும் பெத்லகேமுக்கும் இடையே உள்ள தொடர்பு தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில், ராகேல் அடக்கம் செய்யப்பட்ட இடமான ராமா, எருசலேமிற்கு வடக்கே ஏறக்குறைய 16 கி.மீ. தொலைவில் இருக்கிறது (காண்க. ஆதி 35:17; 48:7).

யாத் 1-2-இல் பார்வோனைப் பற்றியும், மோசேயைப் பற்றியும் விவரிக்கப்படுவதை இந்நிகழ்ச்சி நினைவுபடுத்துகிறது. எனினும், இந்நிகழ்ச்சிக்கு வேறுசான்றுகள் இல்லாவிடினும், ஏரோது அரசனின் குணமும், செயல்களும், குறிப்பாக அவனது கடைசி ஆண்டுகளில் அவன் செய்தவைகளும், இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம் என்றே காட்டுகின்றன. யோசிப்பஸ் இதைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. இஃது அவர் பொதுவாகவே மெசியாவைப்பற்றிய செய்திகளைத் தவிர்ப்பதின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால், அவர் ஏரோது அரசன் செய்த இதைப் போன்ற, இதைவிடக் கொடூரமான செயல்களை எல்லாம் தன்னுடைய நூலில் விவரிக்கிறார். சான்றாக, தனது இறப்பைக் குறிப்பதற்கு ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு உறுப்பினரைக் கொலை செய்ய வேண்டுமென்று ஏரோது ஆணையிட்டிருந்தான் என்று யோசிப்பஸ் கூறுகிறார்.

மாசின்மை (INNOCENCE)

கடவுளைத் தன் பாவத்தால் நோகச் செய்யாத ஒரு நிலை, அல்லது பாவத்தினின்று விடுதலை பெற்ற ஒரு நிலையை இது குறிக்கும்.

பழைய ஏற்பாட்டிலே இது மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (ஆதி 20:5; சங் 26:6; 73:13). இதன் எபிரேய மூலச்சொல்லுக்குத் 'தூய்மையான' என்பது பொருள். அதாவது பாவத்திலிருந்து தூய்மை (யாத் 23:7; 2 அர 24:4), மாசற்றவன் எனப்படுபவன் கடவுளுக்கும் மனிதருக்கும் எதிராக பாவம் புரியாதவன் என்பதைக் குறிக்கும் (யாத் 20:7; உப 5:11; எரே 2:34). இதற்குக் குற்றமற்றவன், ஏற்புடையவன் எனவும் பொருள் கூறலாம் (ஆதி 7:1; யோபு 1:1; சங் 17:23). இதற்கு முழுமையான என்ற பொருளும் கூறலாம் (லேவி 22:21).

பழைய ஏற்பாட்டில் மாசின்மை என்பது ஒழுக்கத்தின் கண்ணோட்டத்தில்தான் கூறப்பட்டது. கடவுளின் திட்டமே ஐந்நூல் (தோரா) என்ற கருத்து பரவி வந்ததால் இந்த ஐந்நூலைக் கடைப்பிடிப்பவனே மாசற்றவன் எனக் கருதப்பட்டது. கடவுள் மட்டுமே நல்ல உள்ளத்தை உருவாக்கி, பாவத்தை நீக்க முடியும் என நம்பினர்.

புதிய ஏற்பாட்டிலே இச்சொல் எட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கே நான்கு கிரேக்கச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை கலப்பற்ற, தூய்மையான (மத் 10:6; பிலி 2:15), நீங்கிய அல்லது விடுதலை பெற்ற (மத் 27:4.24), நீதியுள்ள, நேர்மையான (மத் 23:35; லூக் 23:), தூய்மையான (அ.ப. 18:6; 20:26) ஆகிய பொருள்களில் பயன்பட்டுள்ளன. இதற்குக் குற்றமற்ற, கபடற்ற என்ற பொருள் உண்டு (மத் 27:24). பவுல் போதித்தவைகளைக் கேட்டும் கேளாதவராய் இருப்போரின் விதியைப் பற்றி தான் குற்றமற்றவன் என்கிறார் (அ.ப. 18:6).

புதிய ஏற்பாட்டிலே இயேசு கிறிஸ்து மூலம் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் திருவுளத்தோடு தொடர்புடையதாகும். இது வெறும் ஒழுக்கத்தோடு மட்டுமின்றி இறுதிக்காலத் தன்மையோடும் தொடர்புடையதாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்தவன் ஒரு வகையில்தான் மாசற்றவன் எனலாம். ஏனெனில், கிறிஸ்து மட்டுமே உண்மையிலேயே மாசற்றவர். அதாவது, எல்லா வகையான பாவத்திலிருந்தும் குற்றத்திலிருந்தும் - சுதந்தரம் கொண்டவர் அவர் ஒருவரே (லூக் 23:47 காண்க. 1 பேதுரு 1:19). ஆதாமோடு கிறிஸ்துவன் தன் மாசின்மையை இழந்ததை வெளிப்படுத்தும் குற்ற உணர்வுடைய படைப்பா

வான். ஆனால் இரண்டாம் ஆதாமான கிறிஸ்துவில் இறைவனின் ஒரே பிரமாணிக்கமுள்ள மனிதனின் மாசின்மையில் மீண்டும் அமைக்கப்படும் வாய்ப்பை எதிர்கொள்கிறான். அவன் கிறிஸ்து வழியாக மன்னிக்கப்பட்டுப் புதுப்படைப்பாகும் அளவில், மாசில்லாதவன் என்றழைக்கப்படலாம். இந்த இறுதிப்பொருளில் மாசில்லாது இருத்தல் என்பது கிறிஸ்துவில் ஏற்கெனவே தொடங்கிவிட்ட புதிய காலத்தின் முழுமையாக நிறைவேறலை உள்ளடக்குகிறது. கிறிஸ்து மட்டும்தான் அவனை ''மாசு மறுவும் குறைபாடுமின்றிப் புனிதனாகவும்'' (கொலோ 1:22; காண்க. எபே 5:27), ''இயேசு கிறிஸ்துவின் நாளில் குறைபாடற்றவனாயும்'' (1 கொரி 1:8; காண்க. 1 தெச 5:23), இறைவன் முன் பிரசன்னப்படுத்த முடியும். இறுதிப் பொருளில், கிறிஸ்தவனைப் பொருத்தமட்டும், மாசின்மை என்பது அவன் அடைவதன்று, உரிமை கொள்வதன்று அல்லது உடைமையாகக் கொண்டிருப்பதன்று. அஃது இயேசு கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தால் வெளிப்படுத்தப்பட்டு அளிக்கப்படும் இறைவனது கொடையாகும் (எபே 1:4). அதன் முழுப்பொருளும் விளைவுகளும் ஆண்டவர் நாளில் இறுதி வெளிப்பாட்டிற்குக் காத்திருக்கின்றன.

மாசு, கனிம்பு (DROSS)

உலோகங்களிலிருந்து, குறிப்பாக வெள்ளியிலிருந்து, உருக்கு உலையில் பிரித்தெடுக்கப்படும் கழிவுப்பொருளாகும் (பழ 25:4). பழைய ஏற்பாட்டில் மாசு பொதுவாக ஒழுக்கச் சீர்கேட்டின் அடையாளமாகையால், ''வெள்ளி களிப்பேறுதல்'' சீர்கெட்ட ஒழுக்கத்தின் விளைவாகும் (எசா 1:22; எசே 22:18-19; காண்க. சங் 119:119).

மாசேயா (MAASEIAH - யாவேயின் செயல்)

இப்பெயரைக் கொண்டவர் பலர் உள்ளனர்.

1. இஃது உடன்படிக்கைப் பேழை எருசலேமுக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அதன் முன் தம்புராவை இசைத்த ஒரு லேவிய இசை வல்லுநர் பெயர் (1 நாள் 15:18.20).

2. அத்தலியா அரசிக்கு எதிராகக் கலகம் செய்த குரு யோயாதாவுக்கு ஒத்துழைத்த ஓர் இராணுவ அதிகாரியின் பெயர். அதன் விளைவாக யோவாசு அரியணை ஏறினார் (2 நாள் 23:1).

3. ஊசியா அரசனுக்குப் போர் வீரர் அட்டவணை தயார் செய்தளித்த யூதாவைச் சேர்ந்த அதிகாரி (2 நாள் 26:11).

4. இவர் யூதாவின் அரசன் ஆகாசின் மகனோ, சகோதரனோ ஆவார். இவர், இஸ்ராயேலின் அரசன் பெக்கா படையெடுத்தபோது சிக்ரியால் கொல்லப்பட்டார் (2 நாள் 28:7).

5. இவர் யோசியா அரசன் காலத்தில் எருசலேம் நகரத் தலைவராக இருந்தவர். ஆலயம் பழுதுபார்க்கப்பட்டபோது மேற்பார்த்தவர்களுள் ஒருவர் (2 நாள் 34:8).

6. எஸ்ரா காலத்தில் வாழ்ந்த அன்னிய மனைவியை நீக்கிவிட வேண்டியிருந்த ஒரு குருவின் பெயர். ஏசுவா (5)வின் புதல்வர்களில் ஒருவர் (எஸ் 10:18).

7. ஆரிம் குடும்பத்தில் பிறந்த இக்குரு எஸ்ரா காலத்தில் அன்னிய மனைவியை விலக்கிவிட வேண்டியிருந்தது (எஸ் 10:21).

8. பஸ்கூரின் குடும்பத்தில் தோன்றிய குரு. அன்னிய மனைவியை விலக்கிவிட்டவர் (எஸ் 10:22).

9. எஸ்ரா காலத்தில் அன்னியப் பெண்ணை மணந்த ஒருவரின் பெயர் (எஸ் 10:30).

10. அசரியாவுக்குப் (20) பிறந்த இவர் எருசலேம் மதிலைப் பழுதுபார்க்க உதவினார் (நெகே 3:23).

11. எஸ்ரா திருச்சட்டத்தைப் படிக்கும் போது மேடையில் அருகில் நின்றவர்களுள் ஒருவர் (நெகே 8:4).

12. திருச்சட்ட நூலை விளக்க எஸ்ராவுக்கு உதவி செய்த லேவியருள் ஒருவர் (நெகே 8:7).

13. நெகேமியாவின் தலைமையில் புதிய உடன்படிக்கையில் கையொப்பமிட்ட மக்கள் தலைவருள் இவரும் ஒருவர் (நெகே 10:25).

14. அடிமைத்தனத்திற்குப்பின் எருசலேமில் வாழ்ந்த யூதாவைச் சேர்ந்த ஒருவர் (நெகே 11:5). இவர் 1 நாள் 9:5-இல் அசாயா என்றழைக்கப்படுகிறார்.

15. பென்யமின் குலத்தைச் சார்ந்தவர். அடிமைத்தனத்திற்குப்பின் எருசலேமில் வாழ்ந்தவர் (நெகே 11:7). இவர் 1 நாள் 9:7-8-இல் குறிக்கப்படவில்லை.

16. புதிதாய்க் கட்டப்பட்ட எருசலேம் மதில் சுவர்களை அர்ப்பணிக்கும் வழிபாட்டில் கலந்து கொண்ட ஒரு குருவின் பெயர். இவர் எக்காளம் தாங்கியவர்களுள் ஒருவர் (நெகே 12:41).

17. புதிதாய்க் கட்டப்பட்ட எருசலேம் மதில்கள் அர்ப்பணிக்கப்பட்டபோது, அதில் பங்கெடுத்த ஓர் இசை வல்லுநர் (நெகே 12:42).

18. இவர் இறைவாக்கினர் எரேமியா மற்றும் செதேக்கிய அரசன் காலத்தில் வாழ்ந்தவர். குரு செப்பானியாவின் தந்தை (எரே 21:1; 29:25; 37:3).

19. பொய்யை இறைவாக்காக உரைத்ததாக இறைவாக்கினர் எரேமியாவால் குற்றம் சாட்டப்பட்ட போலி இறைவாக்கினர். செதேக்கியாவின் தந்தை ஆவார் (எரே 29:21).

20. எரேமியா காலத்தில் எருசலேம் தேவாலய வாயில் காப்போனாக இருந்தவர் (எரே 35:4).

மாசோரா (MASORA - பாரம்பரியம்)

பாரம்பரியமாகக் கையளிக்கப்படுவதைப் பாதுகாக்க மாசோரேட்டிக் வாசகத்தின் மேலும், கீழும், பக்கங்களிலும் எழுதப்பட்ட குறிப்புகள் இப்பெயரால் அழைக்கப்படுகின்றன. காலப்போக்கில் இவை தனித் தொகுப்பாக ஒன்று சேர்க்கப்பட்டன.

மாசோரேட்டிக்கு வாசகம் (MASORETIC TEXT - மரபுரையினர் ஏடு)

எபிரேய வேதாகமம்; தற்போது அச்சிடப்பட்டுள்ள ஆதாரச் சுவடியாய் இருக்கும் ஏட்டுத் தொகுப்பிற்குப் பெயர்தான் மாசோரேட்டிக்கு வாசகம் என்பதாகும்.

எபிரேய எழுத்துகள் மெய்யெழுத்துகளாக மட்டும் முதலில் பயன்படுத்தப்பட்டன. அதாவது புள்ளிகள், கொம்புகள் ஆகியவை இல்லாமல் இருந்தன. சில மெய்யெழுத்துக்களைச் சேர்த்து நெடிலாக மாற்றினர். எடுத்துக்காட்டாக, கா என்பதற்குப் பதிலாக கஆ என்று எழுதப்படுவதைப்போல. இவ்வாறு மெய் எழுத்துக்களை மட்டும் பயன்படுத்தி எழுதும் முறையில், விவிலியம் கி.பி. 100-ஆம் ஆண்டுவாக்கில் எழுதப்பட்டது.

ஆனால் கிரேக்கர், அசீரியர், பாபிலோனியர் ஆகியவர்கள் தொடர்ந்து பாலஸ்தீனத்தைத் தங்கள் ஆட்சியின் கீழ் வைத்திருந்த காரணத்தால், எபிரேய மொழி அழிய ஆரம்பித்தது. யூதர்களுக்குத் தங்கள் மூல மொழியான எபிரேய மொழியை எழுதவும் வாசிக்கவும் தெரியாமல் இருந்தனர். இவையெல்லாம் நடந்தது கி.மு. 3-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு. இந்நிலையில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தங்கள் பூர்வீக மரபைக் காத்திட வேண்டும் என்ற கொள்கையுடன் பிறந்தது ஓர் இயக்கம். அவர்கள் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட மெய் எழுத்தை மட்டும் பயன்படுத்தி எழுதிய முறையைச் சற்று மாற்றினர். புள்ளிகள், துணையெழுத்துக்கள் கொடுத்து, மக்கள், தாங்கள் மறந்துவிட்ட, தங்களின் சொந்த மொழியை எழுதவும் வாசிக்கவும் வகை செய்தனர். இவர்களைத் தான் நாம் மாசோரேத்தியர் (மரபுரையினர்) என்று அழைக்கிறோம். இவர்கள் அளித்துச் சென்ற வாசகத்தை மாசோரேட்டிக்கு வாசகம் என்கிறோம்.

இவ்வாறு தோன்றிய இயக்கம் மூன்று திசைகளில், மூன்று விதமாக வளர்ந்து வந்தது. இவை பாலஸ்தீனம், பாபி

லோனியா, திபேரியா ஆகிய இடங்களில் வளர்ச்சியுற்றன. பாலஸ்தீனம், பாபிலோனியா ஆகிய இடங்களில் வளர்ந்த எழுத்து முறைப்படி, புள்ளிகள், அடையாளங்கள் மெய்யெழுத்தின் மேல் வைக்கப்பட்டன. ஆனால், திபேரியாவில் வழங்கிய முறைப்படி, இப்புள்ளிகள் மெய்யெழுத்துகளின் கீழே எழுதப்பட்டன.

தற்போது அச்சிடப்பட்டுள்ள எபிரேய விவிலியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள முறை திபேரியாவில் விளங்கிய முறையாகும். இம்முறை கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பென் அசேர் என்பவராலும், அவர் அமைத்த பள்ளியிலும் பயன்படுத்தப்பட்டது. அதைப் பின்பற்றிதான், தற்போது அச்சிடப்பட்டிருக்கும் எபிரேய விவிலியம் அமைந்திருக்கிறது.

தற்போது இரண்டுவித முக்கிய எபிரேய விவிலியங்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவைகளின் பெயர்கள் எபிரேய விவிலியம், ஸ்டுட்கார்ட் எபிரேய விவிலியம் என்பனவாகும். இந்த இரண்டு அச்சிடப்பட்ட விவிலியங்களும் லெனின் கிரோடு ஏட்.டுத் தொகுதி என்பதன் படிவமாகும். இந்த லெனின் கிரோடு ஏட்டுத் தொகுதி கி.பி. 1008-இல் எழுதப்பட்டது. ஆனால், பக்கங்களின் ஓரங்களிலும், கீழும், மற்றப் பழஞ்சுவடிகளில் காணப்படும் மாற்று வசனங்கள் தரப்பட்டுள்ளன.

இந்த மரபுரையினர் அறிமுகப்படுத்திய உயிரெழுத்துக் குறியீடுகளில் முக்கியமானவைகள்: புள்ளி, கேரே என்ற குறியீடு, தாக்கேஷ் என்று எழுத்தின் நடுவில் புள்ளி வைத்தல் (இதனால் அந்த மெய்யெழுத்து அழுத்தி இரட்டிப்பாக உச்சரிக்கப்படும்), வாசிக்கும்போது நிறுத்தப்பட வேண்டிய இடத்தைக் குறிக்கும் குறியீடு, பக்கங்களின் ஓரத்திலும் பக்கங்களின் கீழேயும் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளைக் குறித்துக் காட்டும் குறியீடுகள் முதலியன.

மாடப்புறா (PIGEON - சிறிய பறவை)

பல்வேறு இனங்களைச் சேர்ந்த பறவைக் கூட்டத்தில் இஃது ஒன்று. 'புறா' எனும் சொல் பல சிறு பறவைகளுக்குப் பாகுபாடற்ற நிலையில் கூறப்பட்டுள்ளது. பாலஸ்தீனத்தில் ஏராளமான புறாக்கள் காணப்பட்டாலும், இரண்டு வகைப் புறாக்கள் மட்டுமே அங்கு ஆண்டு முழுவதும் வாழ்ந்து வந்தன (எரே 49:28); காட்டுப்புறா குளிர்காலத்திலும், மாடப்புறா வெயில் காலத்திலும் காணப்பட்டன.

வழிபாட்டுச் சடங்கிற்குரிய பொருளாகவோ, பலிப் பொருளாகவோ இப்பறவைகள் பயன்பட்டபோது அவற்றைக் குறிக்க மாடப்புறா அல்லது புறாக்குஞ்சுகள் என்ற சொற்கள் பொதுவாகப் பயன்பட்டன (காண்க. ஆதி 15:9). லேவியராகமத்தில் உயிரினக் காணிக்கைகளில் புறா, மாடப்புறா காணிக்கைகளே விலை குறைந்தவையாகவும், பொதுவானவையாகவும் எண்ணப்பட்டன. அவை தகனப்பலியாகவும், பாவப்பரிகாரப் பலியாகவும் பயன்பட்டன (லேவி 1:14; 5:7.11). குழந்தை பெற்றபின் பெண்ணைத் தூய்மைப்படுத்துதல் (12:6.8), குணமான தொழுநோயாளியைத் தூய்மைப்படுத்துதல் (14:22.30), உடலில் ஏற்படும் தூய்மையற்ற ஒழுக்கிலிருந்து குணமடைந்தவனைத் தூய்மைப்படுத்துதல் (15:14.29) ஆகிய சடங்குகளில் புறாவும் பங்கு வகிக்கிறது. தீட்டுப்பட்ட நசரேயரைத் தூய்மைப்படுத்த காட்டுப்புறாக்களோ, புறாக்குஞ்சுகளோ உபயோகப்படுத்தப்பட்டன (எண் 6:10). இப்படிப்பட்ட சட்டங்களின்படியே, மரியாள் இயேசுவின் பிறப்பிற்குப் பின் மாடப்புறாக்களைக் காணிக்கையாக அளித்தாள் (லூக் 2:24). இயேசுவின் காலத்தில் இத்தகைய தேவைகளுக்காக வியாபாரிகள் கோவில் வளாகத்தில் புறாக்களை விற்க அனுமதிக்கப்பட்டனர் (மத் 21:12; மாற் 11:15; யோவா 2:14.16). தனிக்கோவில் அதிகாரியின் கண்காணிப்பில் நடைபெற்ற இந்தப் பறவைக் காணிக்கைகள் காலப் போக்கில் குழப்பத்திற்குட்பட்டன. ராபி இஸ்மா என்பவரின் கூற்றுப்படி, ''பறவைக் காணிக்கைகள் மற்றும் மாதவிடாய் பற்றிய சட்ட திட்டங்களே 'அலகோத்திற்கு' இன்றியமையாதவைகளாகும்''.

மாடி, மேல்தளம், கூரை (ROOF)

பழங்கால மேற்காசிய வீடுகள், மண்ணால் பூசி மூடப்பட்ட சமதளக் கூரையைக் கொண்டவையாக இருந்தன. இந்த இடத்தில்தான் குடும்பத்து உறுப்பினர்கள் பல மணி நேரங்கள் செலவழிப்பார்கள் (யோக 2:6; 1 சாமு 9:25; 2 சாமு 11:2; மாற் 2:4; அ.ப. 10:9).

மாட்டுக்கொட்டில் (MANGER)

விலங்குகளுக்கு உணவு அளிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொட்டி அல்லது பெட்டி. இஃது ஒரே கல்லில் செய்யப்பட்டதாகவோ, கட்டுமான வேலையாகவோ, தொழுவமாகப் பயன்பட்ட குகைகளின் சுவர்கள் குடையப்பட்டதாகவோ இருக்கும்.

புதைபொருள் ஆராய்ச்சிச் சான்றுகள், நவீன கால அராபிய முறைகள் ஆகியவற்றில் இந்தக் கொட்டில்களின் இரு வகையான அமைப்பு பற்றிய கருத்துக்கள் உள்ளன.

1. பாலஸ்தீனில் உள்ள பெரும்பான்மையான ஏழை வீடுகளில், மேடான, தாழ்வான இரு பிரிவுகளைக் கொண்ட ஒரே அறை இருந்தது. நுழை வாயிலின் அருகில் தரைமட்டத்திற்கு நிகரான தாழ்வுப் பிரிவு அமைக்கப்பட்டு அங்கு விலங்குகளுக்குத் தங்கவும், உணவிடவும் வசதி செய்யப்பட்டது. இதைவிட, 45 செ.மீ. உயரம் மேடான மற்றொரு பகுதியில், குடும்பத்தில் உள்ளவர்கள் வாழ்ந்தனர். இத்தகைய வீடுகளில் மாட்டுக்கொட்டில், கற்களால் செய்யப்பட்ட பெட்டியாகவோ, பாறையில் செய்யப்பட்டதாகவோ அமைக்கப்பட்டு தாழ்வுப்பகுதியில் வைக்கப்பட்டிருந்தன. கல் தொட்டிகள் மெகித்தோவில் காணப்பட்டன. இவை சுண்ணாம்புக்கல் பாறையிலிருந்து எடுக்கப்பட்ட ஒற்றைக் கல்லால் செய்யப்பட்டன. இது ஏறக்குறைய 225 செ.மீ நீளம், 45 செ.மீ. அகலம், 150 செ.மீ. ஆழம் என்ற அளவினைக் கொண்டிருந்தது. சுமார் கி.மு. 1200-ஆம் ஆண்டைச் சேர்ந்த சாந்து வேலைப்பாடாலான கொட்டில்கள் இலாக்கீசில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2. மற்றொரு கருத்தின்படி, வீட்டிற்கு அருகில் இருந்த இயற்கையான குகையிலோ, வீட்டுக்கு அடியில் இருந்த சுண்ணாம்புக்கல் அடித்தளத்திலோ தொட்டி அமைக்கப்பட்டிருந்தது. இலாக்கீசில் இஸ்ராயேலின் ஆரம்பகாலத்திலிருந்தே இத்தகைய தொட்டிகளின் அடையாளங்கள், குகைகளில் இருந்துள்ளன. குகைகள் மீது கட்டப்பட்டிருந்த தங்கு வீடுகளில் விலங்குகளுக்கான கொட்டில் இருந்ததாகத் தெரிகிறது., இத்தகைய வீடுகளில் குகையின் சுண்ணாம்புக்கல் சுவரிலேயே கொட்டில்கள் செய்யப்பட்டன.

குகைத் தொழுவத்தில் இயேசு பிறந்தார் என்பதைச் சுமார் கி.பி. 150-ஐச் சேர்ந்த யுஸ்தீன் என்பவர் குறிப்பிடுகிறார். முதல் நூற்றாண்டுகளைச் சேர்ந்த போலி நற்செய்திகளிலும் இதைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இயேசு, பிறந்தபின் அவர் தீவனத் தொட்டியில் வைக்கப்பட்டது (லூக் 2:7.12.16) வறுமையையோ, விடுதி உடைமையாளனின் இதயமற்ற தன்மையையோ காட்டவில்லை எனலாம். அகுஸ்துவின் கணக்கெடுப்புக் கட்டளையால் ஏற்பட்ட இயேசுவின் பிறப்பையொட்டிய அசாதாரணச் சூழ்நிலையைச் சுட்டுகிறது எனலாம். மாட்டுக்கொட்டில் மும்முறை குறிக்கப்படுவதோடு, ஓர் அடையாளமாகவும் ஆக்கப்படுகிறது (லூக் 2:12). ஒருவேளை இஃது எசா 1:3-ஐச் சுட்டலாம். மாட்டுக்கொட்டிலில் காணப்படும் ஆண்டவர் இஸ்ராயேல் இழந்து விட்ட இறைவனைப் பற்றிய அறிவை இறைவன் அவர்களுக்கு மீண்டும் அளிக்கிறார் என்பதற்கு அடையாளமாகும்.

நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன், இயேசு பிறந்த குகையின்மீது ஓர் ஆலயத்தைக் கட்டி எழுப்பினார். இதுவே பெத்லகேமின் சிறப்பு மிக்க ஆலயமாகியது. பின்னர், இதைச் சுற்றி மேலும் பல ஆலயங்கள் தோன்றியுள்ளன. லூக்காவின் சான்று இது வீட்டினுள்ளோ, அருகிலோ இருந்த எளிமையான தங்குமிடத்தைக் குறிப்பிடுகின்றது.

மாதயா (MAADIAH - *யாவே ஒன்றுகூட்டு கிறார், யாவே வாக்குறுதி தருகிறார்)*

பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலின் தலைமையில் நாடு திரும்பி வந்த ஒரு குருவின் அல்லது குருக்கள் குடும்பத்தின் பெயர் (*நெகே 12:5*). *நெகே 12:17*-இல் வரும் மோவாதியா அல்லது *நெகே 10:8*-இல் வரும் மாசியா வும் இவரும் ஒரே ஆளைக் குறிக்கலாம்.

மாதாய் (MADAI - மேதியா)

எப்பேத்தின் புதல்வர்களில் ஒருவர் (*ஆதி 10:2; 1 நாள் 1:5*). மேதியாவின் குலப்பெயர் மூதாதையர் பெயர் (*காண்க. 2 அர 17:6; எசா 21:2*).

மாதிரி (FIGURE)

I ***பழைய ஏற்பாடு:*** ஒவ்வொரு சமய மொழியினைப் போன்று, பழைய ஏற்பாட் டின் மொழியும் அடிக்கடி அடையாள வியலைப் பயன்படுத்துகிறது. அதனுடைய இயல்பு மற்றும் அடிப்படைகள் விளக்கம் பெறும்வரை காத்திருப்பதில்லை. ஆனால், இந்த அடையாளவியல் தோன்றக் காரணங்களாக அடிப்படைக் கருத்துக்களை நாம் எளிதாக அடையாளம் காட்டலாம். இங்கு நமக்கு வேண்டியது இது மட்டுமே.

1. முன்மாதிரியான அடையாளவியல்: ***விண்ணக மாதிரியும் அதன் மண்ணக நகல்களும்:*** அனைத்துப் பழங்காலச் சமயங் களையும் பின்பற்றி, பழைய ஏற்பாடு அமைக்கப்பட்ட சாயலுக்கான புனித மூல முன்மாதிரியாக இறை உலகை, விண்ணக உலகு குறித்துக்காட்டுகிறது. ஓர் அரசனைப் போன்று, இறைவன் விண்ணக அரண் மனையில் தங்கியுள்ளார் (*மீக் 1:3*). அவர் பணியாளர் அவையால் சூழப்பட்டுள்ளார் (*எசா 6:1தொ*). வழிபாட்டின் முடிவானது மனிதனை இறைவனோடு உறவு கொள்ளச் செய்வதாகையால், விண்ணக உலகானது மனிதனுக்கு எட்டுகிற விதத்தில் அமைக்கப் பட வேண்டும் என்பதற்காக, இம்மாதிரி யான இந்தக் கருத்தியலான மாதிரி மீண்டும் அமைக்க முயற்சி செய்யப்படு கிறது. இவ்வாறே, எருசலேமும், அதன் ஆலயமும், ஒரு குறிப்பிட்ட அளவில் ஒப்பிடப்படுகின்ற, இறை அரண்மனையின் நகலாக உள்ளன (*சங் 47:1-4*). இதன் காரணமாகவே, சீனாய் மலையில் இறை வன், ஆசாரக்கூடாரம் பொருந்தியிருக்க வேண்டிய மாதிரி அமைப்பினை மோசேக்கு அறிவிப்பதாக குருக்கள் பாரம்பரியம் காட்டுகின்றது (*யாத் 25:9.25*). இம்மாதிரி யானது தமது உறைவிடத்தைப் பின்பற்றி, இறைவனாலேயே அமைக்கப்பட்ட கட்டடக் கலைஞருடைய திட்டத்தைப் போன்றதா கும் (*1 நாள் 28:11*). அவ்வாறே ஞான 9:8-இன்படி சாலமோனால் கட்டப்பட்ட ஆலயமானது, ''தொடக்கத்திலிருந்தே இறைவன் தயாரித்திருக்கும் பரிசுத்த கூடா ரத்தின் மாதிரியாக'' உள்ளது.

2. இறுதிக்கால அடையாளவியல்: ***மீட்பின் வரலாறும் அதன் இறுதி நிறைவும்:*** *அ)* ***புனித வரலாற்றின் விவிலியக் கருத்து:*** பழமையான புராணக்கதைகள் இதே முன்மாதிரியான கோட்பாடுகளை அண்ட கழற்சிக்கும் (நாட்கள் மற்றும் காலங்கள் மீண்டும் மீண்டும் வருதல்), மனித வரலாற்றின் அடிப்படை அனுபவங் களுக்கும் (அரியணை ஏறுதல், போர், போன்ற பல) சாற்றிக்காட்டின. எல்லாக் காலத்திற்கும் முன்பாக நடந்த இறைவர லாற்றின் மண்ணக பிரதிபலிப்புகளை அவைகள் இங்குமங்கும் கண்டன. இந்தப் பிரதிபலிப்புகளே எல்லா அண்ட எதிர் காலத்திற்கும், எல்லா மனிதச்செயல்களுக் கும் தொடக்கத்திலுள்ள மூல உருவமாகும். காலத்தில் அறுதியிட முடியாத முறையில் பின்பற்றப்பட்ட இந்த மூல உருவம் உலகப்பொருட்களுக்கு அவற்றின் புனிதப் பொருளை அளித்தது. இதன் காரண மாகவே, தெய்வங்களின் செயல்களோடு மனிதனைத் தொடர்புபடுத்துவதற்காக, புராணக்கதையானது வழிபாட்டில் சடங்கு முறையினால் செயல்படுத்தப்பட்டது. இப் போது விவிலிய வெளிப்பாடு, பல கடவுள் கோட்பாட்டினை நிராகரிப்பதன் மூலம் அண்டைப் புறவினத்தார் அறிந்திருந்த ஒரே புனித வரலாற்றின் உட்பொருளை வெறு

மையாக்கியது. அவர்களுக்கு இறைவனின் செயலானது அவரது படைப்புடன் வரையறுக்கப்பட்டது. ஆனால், ஒரு புதிய முன்னோக்கில் புறவினத்தார் முற்றிலும் அறியாமலிருந்த மற்றொரு வகையான புனித வரலாற்றை அவர்கள் கண்டுபிடித்தனர். அஃது இறைவனது திட்டத்தின் வரலாறு ஆகும். அது, வட்டவடிவமாக இல்லாமல் நேர்வரிசையில் முழுமையாக நிறைவேறும்வரை, காலத்தில் வளர்ச்சியுறுகிறது. எல்லாப் பொருட்களும் முடிவுக்கு வருகின்ற போது காலத்தின் முடிவில் நிறைவேறும்.

ஆ) புனித வரலாற்றில் நிகழ்ச்சிகளின் பொருள்: இறைவனுடைய திட்டத்தின் முடிவானது, இறுதிக்கால நிகழ்ச்சியில் அவர் உடலெடுக்கும்போது மட்டுமே தெளிவாக வெளிப்படுத்தப்படும். ஆயினும், அவர்களது வரலாற்று நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலிருந்தே, அதைப் பற்றிய ஒரு தெளிவற்ற அறிவினை அளிக்க ஏற்கெனவே தொடங்கி விட்டார். யாத்திரை, சீனாய் உடன்படிக்கை, வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைதல் போன்ற நிகழ்ச்சிகள் ஏதோ பொருளெதுவும் அற்ற தற்செயலான நிகழ்ச்சிகள் அல்ல. மனித வரலாற்றில் இறைவனின் செயல்கள் என்ற அளவில் வரலாற்றில் நடைமுறையை நடத்துவதில், அதனுடைய சிறப்பியல்புகளை வளர்ச்சியடைகின்ற விதத்தில் சித்தரிப்பதில், இறைவன் பின்தொடர்கின்ற நோக்கத்தின் அடையாளத்தை அவை தம்முள் கொண்டிருந்தன. இதன் காரணமாகவே அவை ஏற்கெனவே இறைமக்களின் விசுவாசத்திற்கு ஊட்டம் அளிக்க முடிந்தது. இதன் காரணமாகவே, இறைவாக்கினர்களும், இறைவனுடைய திட்டத்தின் நோக்கத்தினைத் தங்களுடைய இறுதிக்கால இறைவாக்குகளில் வெளிக்கொணர்வதன் மூலம், புதிய யாத்திரை (எசா 43:16-21), புதிய உடன்படிக்கை (எரே 31:31-34), புதிய எருசலேமை நோக்கி வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் புதிதாய் நுழைதல் (எசா 49:9-23) போன்றவை பழைய அனுபவங்களின் மிக முழுமையான மீண்டும் தொடர்தலாகக் காட்ட முடிந்தது. எனவே, இவ்வாறு, புனித வரலாறானது தனது எல்லா உட்பொருள்களுடனும் (நிகழ்ச்சிகள், நபர்கள், அமைப்புகள்) இறுதிக்கால அடையாளவியலைக் கொண்டுள்ளது. இஃது, இதுவரையில் முழுமையற்று இருந்த இறைவனது திட்டத்தின் ஒரு பகுதி வெளிப்பாடாகும். இஃது, இத்திட்டத்தின் முடிவைத் திரையிடப்பட்ட முறையினில் காட்டுகிறது.

இ) இறுதிக்காலமும் தொடக்க காலமும்: புனித வரலாற்றின் தொடக்கமாகிய படைப்பிற்கும் இதே மூலக்கோட்பாடானது மிகச் சிறந்த முறையில் சாற்றிக் கூறப்படுகிறது. ஏனெனில், இறைத் தொடக்க வரலாற்றினைப் பற்றி விவிலிய வெளிப்பாட்டில் அதிகமாக வேறு ஒன்றும் இல்லையெனில், கீழுலகில் இறைவன் தொடர்ந்து நிறைவேற்ற விரும்பிய நோக்கத்தைத் தொடக்கத்திலிருந்து வெளிப்படுத்தி, இறைவன் தமது திட்டத்தைத் தொடங்கிய மூலத்தொடக்கச் செயலை உயிருள்ளதாகக் காத்துவருகிறது. இறைவனின் இறுதிச் செயலாகிய இறுதிக்கால இயல், இறைவனின் தொடக்கச் செயலில் தனது சிறப்பியல்புகளைக் கண்டறிய வேண்டும். இறைவாக்குக் கூற்றுகளின்படி அஃது ஒரு புதிய யாத்திரையாக மட்டுமே இருக்காது. முதல் படைப்பினைப் போன்ற புதுப்படைப்பாக இருக்கும் (எசா 65:17). ஏனெனில், அதே திட்டத்தைக் கொண்டிருக்கும். இறைவனுடைய முதல் திட்டங்கள் தோல்வியடைவதற்குக் காரணமாக இருந்த பாவம் மற்றும் மரணம் முதலிய தடைகளை இது நீக்கிவிடுவதால், இஃது அதிக முழுமையானதாக இருக்கும். எனவே, அவை காலத்தின் இரு எல்லைகளிலும் தொடக்ககால இன்பவனத்தையும், மீண்டும் பெறப்பட்ட இன்பவனத்தையும் (ஓசே 2:20-24; எசா 11:5-9; 51:3; 65:19-25; எசே 36:35) எடுத்துக்காட்ட உதவும் முழுமை மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றின் சாயல்களாக உள்ளன. இந்த இரண்டு இன்பவனங்களுக்கிடையில் புனித வரலாறு வளர்

கிறது. அதைப் பழைய உடன்படிக்கையின் மக்கள் தன்னுணர்வோடு வாழ்ந்தனுபவித்த னர். அது புதிய உடன்படிக்கையில் நிறைவு பெறுவதைக் காணக் காத்திருக்கின்றனர்.

ஈ) வழிபாடும் புனித வரலாறும்: பழைய ஏற்பாட்டில் வழிபாடு என்பது மனிதரை வரலாற்றில் பங்கெடுக்கச் செய்வதற்காக, சமயச்சடங்கு நாடகத்தில் பிரசன்னப்படுத் தப்படும் தெய்வங்களின் புராண வரலா றன்று. மனித காலத்தில் நிறைவேற்றப் பட்ட இறைசெயலாக புனித வரலாறு, வழிபாட்டு விழாக்கள், அவற்றில் அடங்கி யுள்ள உன்னதச் செயல்களின் கொண் டாட்டச் செயல்களின் நினைவு கூர்தலாக சிறிது சிறிதாக மாறின. இவ்வாறு ஓய்வு நாளானது படைப்பின் நினைவாகவும் (ஆதி 2:2-3; யாத் 31:12 தொ), பாஸ்காவா னது யாத்திரையின் நினைவாகவும் (யாத் 12:26-27), பெந்தகோஸ்தே சீனாய் உடன் படிக்கையின் நினைவாகவும் (விவிலிய காலத்திற்குப் பிற்பட்ட யூத மதத்தில்), ஆசாரக் கூடாரங்கள், பாலைவனத்தில் அலைந்து திரிந்ததன் நினைவாகவும் (லேவி 23:42-43) உருவாயின. மற்றொரு புறத்தில், இப்பழைய நிகழ்ச்சிகள் இறுதி மீட்பின் முன் அறிகுறிகளாக இருந்ததால், அவற்றின் சடங்குக் கொண்டாட்டமானது நம்பிக் கையைக் கொண்டதாக உள்ளது. இஸ்ரா யேலர், உயர்ந்த விசுவாசத்துடன் இறுதிக் கால ஆசியினைப் பெறுவதற்காகவே, இறைவனின் வரலாற்று ஆசிகளை நினைவு கூர்கின்றனர். அவர்கள் இந்த இறுதிக்கால ஆசீர்களின் வரலாற்றில் பின்னிப்பிணைக் கப்பட்ட திரையிடப்பட்ட அறிவிப்புகளாக உள்ளனர்.

3) ஒழுக்க முன்மாதிரி: இறுதியாக, கடந்த காலத்தைச் சேர்ந்த மாதிரிகையான மனிதர்கள், தனது மக்களுக்கு அறிவுறுத்து வதற்கென இறைவனால் அளிக்கப்பட்ட முன்மாதிரியாக உள்ள ஒழுக்க முன்மாதிரி யினைப் பழைய ஏற்பாடு அறிந்திருந்தது. இவ்வாறு, ஏனோக்கு, தவத்திற்கு மாதிரி கையாக இருந்தார் (சீரா 44:16). இவ்வகை யான எடுத்துக்காட்டுகளை ஞான நூல்கள் அடிக்கடி பயன்படுத்துகின்றன. நாம் மேலே விளக்கியதற்கேற்ப, அது புனித வரலாற்றின் இறுதிக்கால அடையாள வியலை அடிப்படையாகக் கொண்டிருக் கும்போது, அது தனி வலிமை பெறுகிறது (ஞான 10-19).

முன்குறித்துக் காட்டுதல் பற்றிய கோட் பாடானது ஏற்கெனவே பழைய ஏற்பாட் டில் இருந்தது என்பது தெளிவான ஒன்று. விவிலிய வெளிப்பாட்டிற்கு மட்டுமே உரிய புனித வரலாற்றின் கருத்தினின்று வெளிப்படும் நிலையில் இது, பழைய ஏற்பாடு நன்கு அறிந்து, வாய்ப்பு கிடைக் கும்போதெல்லாம் பயன்படுத்திய சாதாரண முன்மாதிரி அடையாளவியலினின்று, முற் றிலும் வேறுபட்டு உள்ளது. மீட்பைப் பற்றிய மறைபொருளை முன்னதாகவே வெளிக்கொணர்வதற்கென, இஃது இறை வாக்குக் கூற்றுகளுக்கு ஒரு மொழியினைத் தருகின்றது. வெளிப்பாட்டினுடைய வாத முறையோடும் இஃது இணைக்கப்பட் டுள்ளது. புதிய ஏற்பாடானது விளக்கத் தினை நிறைவுசெய்யும்.

II புதிய ஏற்பாடு

1. இயேசுவின் மனப்போக்கு: தயாரிப் பின் காலத்தை முடிவுக்குக் கொண்டு வருவதையும் (மாற் 1:15), இறைவாக்குக் கூற்றுகளால் அறிவிக்கப்பட்ட பொருட் களின் நிலையைக் கீழுலகில் தொடங்கு வதைப்பற்றியும் (மத் 11:4தொ; லூக் 4:17 தொ) இயேசு அறிந்திருந்தார். அதுமுதல், முதல் உடன்படிக்கையினுடைய விதியின் கீழ் நிகழ்ந்தேறிய முழுப் புனித வரலாறும், அவர் நிறைவேற்றுகின்ற செயல்களிலும், நிறுவிய அமைப்புகளிலும், வாழ்கின்ற நாடகத்திலும், தனது உண்மையான பொருளை அடைகின்றது. இவ்வாறு தனது பணியினை விளக்கி, அதனைத் தெளிவு படுத்துவதற்கென, அவர் அதனை அவ்வர லாற்றில் அடங்கியுள்ள உருவகக் கூறு களோடு விரும்பி ஒப்பிடுகிறார். அவரால்

உருவாக்கப்பட்ட சமூகம் திருச்சபை என்றழைக்கப்படும் (மத் 16:18). அதாவது, பாலைவனத்தில் இஸ்ராயேலர் கொண்டிருந்ததற்கு ஒப்பான வழிபாட்டிற்கான சபை (அ.ப. 7:38) ஆகும். அஃது இஸ்ராயேல் மக்களின் அடிப்படை அமைப்பான பன்னிரு கோத்திரங்களை நினைவிற்குக் கொணர்கின்ற பன்னிரு அப்போஸ்தலர்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் (மத் 19:28). தனது சிலுவையின் பொருளை விளக்கி, அருட்சாதன அடையாளங்களின் கீழ் உண்மையைத் தோன்றச் செய்கின்ற இரவுணவிற்கும் இதே முறையில் பொருள் கூறப்பட வேண்டும்; இதைப் பாஸ்காவுடனும் (லூக் 22:16), சீனாய் உடன்படிக்கையுடனும் (லூக் 22:20) தொடர்புபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்வின் வாக்களிக்கப்பட்ட உணவாகிய அவரது உடல் தனது விளைவுகளில், அதன் மறைமுகமான சாயலாக இருந்த மன்னாவை விட மேலோங்கி உள்ளது (யோவா 6:38). புனித வரலாற்றின் இறுதிக்கால அடையாளங்களை ஏற்றுக்கொண்டு காலமுடிவில் மீட்பு மறைபொருளும் வரும் என்ற செயல்முறையாக எடுத்துக் கூற அவற்றைப் பயன்படுத்துகிறார். இந்த மறைபொருள் அவரது ஆளிலும் வாழ்விலும் தொடங்கப்பட்டு, அவரது திருச்சபையின் வரலாற்றில் பிரசன்னமாக்கப்பட்டு, மனித காலமானது முடிவிற்கு வருகின்ற நித்தியத்தில் நிறைவேறும். இதை மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டுகள் காட்டுகின்றன. இதன் மூலமாக, இதுவரை ஓரளவு திரையிடப்பட்டு, இப்போது முன்னேறிச் செல்கின்ற நிகழ்ச்சியால் திரை நீக்கப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளும் அமைப்புகளும் தங்களின் முழுப் பொருளை, எவ்வாறு தம்மில் அடைகின்றன என்பதை அறியுமாறு அவர் செய்கின்றார்.

2. விவிலிய உருவங்கள் வளர்ச்சியுறுதல்: இயேசுவைப் பின்பற்றி புதிய ஏற்பாட்டின் புனித ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, உருவகக் கோட்பாட்டைத் தொடர்ந்து பயன்படுத்தியுள்ளனர். சில நேரங்களில் மீட்பின் மறைபொருளானது மறைநூலுக்கேற்ப வளர்கிறது என்பதைக் காட்டுவதற்கும், சில நேரங்களில் சமயப் பொருளால் செறிவுற்ற மொழியில் அதை விளக்குவதற்கும் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு யோவான், சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவிற்கு, பாஸ்கா செம்மறி பற்றிய விவரிப்பைப் பயன்படுத்தும்போது (யோவா 19:36), ஓசேயா, இஸ்ராயேலைப் பற்றிக் கூறிய 'இறைமகன்' என்ற சொல்லை மத்தேயு இயேசுவிற்குச் சாற்றிக் கூறுகிறார் (மத் 2:15; ஓசே 11:1). இவ்விரண்டு சம்பவங்களிலும் மறைநூல் நிறைவேறுவது விவிலிய முன்னடையாளங்கள் நிறைவேறுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பல இடங்களில் புதிய ஏற்பாட்டினுடைய கோட்பாட்டு மொழியானது, அஃது இறைவாக்குக் கூற்றுக்கள் தங்களுடைய குறிப்புகளை இறுதிக்கால இயலைக் குறிப்பிடும் விதமாக மாற்றியமைத்தாலும் (திருவெளி 21 ஆனது, ஏசா 62-ஐ ஏற்கிறது), அல்லது இந்த வாசக மாற்றமானது புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தாலும் (1 பேதுரு 2:9 ஆனது, யாத் 19:5-6-ஐக் குறிக்கிறது) இஸ்ராயேல் மக்களுடைய வரலாற்று அனுபவத்தில் தனது தொடக்கத்தைக் கொள்ளாது. ஆயினும், முன்னடையாளங்களின் இறையியல் கோட்பாட்டின் தெளிவான விளக்கத்தைப் பவுலின் திருமுகங்களிலும், எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலும் காண்கிறோம்.

3. புனித பவுல்: பவுலைப் பொறுத்தவரையில், புனித வரலாற்றின் நபர்களும் உண்மைகளும், கிறிஸ்து மற்றும் கிறிஸ்தவ உண்மைகள் பற்றிய மறைபொருளை அறிவிக்கின்ற உருவங்களைக் கொண்டுள்ளன. ஆதியிலிருந்தே ஆதாம், வரவிருக்கும் ஆதாமின் உருவமாக இருந்தார் (உரோ 5:14). பின்னர், யாத்திரை நிகழ்ச்சிகள் முன் அடையாளமாக நிகழ்ந்தன (1 கொரி 10:11). உலகின் முடிவுகள் வரவிருக்கும் நம்மீது அக்கறை கொண்ட உருவங்களாக அவை உள்ளன (1 கொரி 10:6). இந்த மாதிரிகை

களால் முன் குறிக்கப்பட்ட உண்மையானது, கிறிஸ்தவ அருட்சாதனங்களால் உறுதிப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் மறைபொருளில் நாம் பயனுள்ள விதமாகப் பங்கேற்பதாகும். 1 பேதுரு 3:21-இல் திருமுழுக்கானது வெள்ளத்தின் எதிர்மாதிரிகையாகக் கூறப்படுகிறது. ஒழுக்க முன் மாதிரியானது, புனித வரலாற்றினுடைய இந்த உருவகமான விளக்கவுரையினின்று எளிதாக வெளிவருகின்றது. பாலைவனத்தில் நமது தந்தையருக்கான தண்டனைகள் நமக்கொரு பாடமாக உள்ளன (1 கொரி 10:7தொ). விசுவாசமற்ற கிறிஸ்தவர்களுக்குரிய உறுதியான தண்டனையையும் அவை அறிவிக்கின்றன. சோதோமின் அழிவும், லோத்தைக் காப்பாற்றியதும், வருங்கால இறைப்பற்றற்றவர்களுக்கான எடுத்துக்காட்டாகும் (2 பேதுரு 2:6). விசுவாசத்தை அறிக்கையிடுவோர் ஆபிரகாமின் மக்களாகும்படி (கலா 3:7), ஆபிரகாமின் விசுவாசமானது ''நம்மையும் குறிக்கின்றது'' (உரோ 4:23).

இத்தகைய மாதிரிகையியலை நீட்டிப்பதன் மூலம் பவுல் மறைநூலின் சில பகுதிகளை உருவகப்படுத்துகிறார். அவற்றில் கிறிஸ்தவ உண்மைகளின் அடையாளங்களைக் காண்கிறார். வாக்குறுதியின் பிள்ளையாகிய ஈசாக்கைப் பற்றி ஆதியாகமம் கூறியதைக் கிறிஸ்தவர்களுக்கு மாற்றியமைக்கும்போது, கலா 4:24-இல் அவர் இதனை வெளிப்படையாகவே கூறுகின்றார். இந்த உருவகப்படுத்தல் அதனுடைய அடித்தளமாகிய மாதிரிகை இயலோடு குழப்பப்படுவதில்லை. இது விவிலிய வாசகங்களை அவை முதலில் கொண்டிருந்த பொருளைத் தவிர்த்து மற்றொரு பொருளுக்குத் தழுவியமைக்கவும், அவை கொண்டுள்ள அனைத்து விபரங்களின் மீதும் இரண்டாந்தர பொருளைத் தடையின்றி அமைக்கவும் பயன்படுத்தப்பட்ட செயல் முறையாக உள்ளது. மேலும், விவிலிய உருவங்கள் இப்போது திரை நீக்கப்பட்ட உண்மைகளைப் பொருத்தமட்டில் முழுமையற்ற உருவங்களே என்று பவுல் அறிந்திருந்தார். இவ்வாறு, யூத வழிபாடானது, வரவிருப்பவற்றின் வெறும் நிழலையே கொண்டிருந்தது. அதன் உண்மைப் பொருளோ கிறிஸ்துவின் உடல் தான் (கொலோ 2:17).

4. எபிரேயருக்கான திருமுகம்: பவுலில், இறைவாக்குக் கூற்றுக்களில் ஏற்கெனவே பயன்பட்டிருந்த இறுதிக்கால அடையாளவியலானது மாதிரி/எதிர்மாதிரி நிழல்/நிஜம் என்னும் சோடியான சொற்களால் வெளிப்பட்டது. எபிரேயருக்கான திருமுகத்தில் இந்த இறுதிக்கால அடையாளவியலானது மேற்காசிய மதங்களுக்கும், பிளேட்டோவிற்கும், பழைய ஏற்பாட்டிற்கும் பொதுவாக உள்ள முன்மாதிரி அடையாளவியலுடன் குறுக்கிடுகிறது. கிறிஸ்து நிறைவேற்றுகின்ற பலியும், கொண்டு வருகின்ற மீட்புமாகிய கிறிஸ்துவின் மறைபொருளானது தன்மையாலே முடிவில்லாததும் (எபி 5:9; 9:12; 13:20) விண்ணகப் பொருட்களாகவும் (8:5; 9:23; 12:22) உள்ளது. அதே சமயம், காலங்களின் இறுதியில் (9:26) வரவிருக்கும் பொருட்களாகவும் (6:5; 10:1) இருப்பதே இதற்குக் காரணமாகும். இவையே உண்மையான மெய்மைகள் (8:2; 8:24). பழைய ஏற்பாட்டு மனிதர்களாகிய, நமது விசுவாசத்தின் தந்தையர்கள் இவற்றிற்காக ஏங்க மட்டுமே முடிந்தது (11:16,20). திருமுழுக்கின் மூலமாக கிறிஸ்தவர்களாகிய நாம் ஏற்கெனவே இவற்றைச் சுவைத்துவிட்டோம் (6:4). உண்மையில் முதல் உடன்படிக்கையானது, அவற்றினுடைய எதிர்பார்க்கப்பட்ட மறுபதிப்புகளையும் (8:5; 9:23), கீழுலகில் கிறிஸ்துவால் மட்டுமே வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தாலும், அப்போது விண்ணகத்திலிருந்த மாதிரியின் நிழல்களையும் (8:5), முன்னடையாளங்களையும் (9:24) மட்டுமே கொண்டிருந்தது. ஆசாரக் கூடாரத்தைக் கட்டியபோது மலையில் மோசேக்குக் காட்டப்பட்ட இம்மாதிரியானது (8:5; யாத் 25:40; அ.ப. 7:44), புதிய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கென வரவிருக்கும் ஆசீர்களின் தலைமைக் குருவாக, விண்ணக

புனித இடத்தில் நுழைந்த கிறிஸ்துவின் பலியே ஆகும் (9:11-12). இந்தத் திருச்சபை உண்மைகள் இனிமேல் வரவிருக்கும் ஆசீர் களின் நிழலை மட்டும் கொண்டிராமல், அவற்றின் உட்பொருள் அனைத்தையும் தன்னுள் கொண்டு, அவற்றிற்குள் மறை வான பங்கேற்பினை அனுமதிக்கின்ற சாய லையும் கொண்டுள்ளது. இவ்வாறு, பழைய நடைமுறை மற்றும் அதனுடைய உருவகமான வழிபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலையில், புதிய உடன்படிக்கை யின் அருட்சாதன நடைமுறையினை நாம் வரையறுத்துள்ளோம்.

இந்தக் கலைச்சொல் மொழியில், மாதிரிகை என்ற சொல்லுக்கு, பவுலின் திருமுகங்களில் கொடுக்கப்பட்டதற்கு வேறான பொருள் கொடுக்கப்படுகிறது. ஏனெனில், இது பழைய ஏற்பாட்டில் உள்ள புதிய ஏற்பாட்டின் முன்னடையாளங் களைக் குறிக்காமல் காலத்தின் இறுதியில் மீட்பின் நிகழ்ச்சியை நிறைவேற்றுகின்ற கிறிஸ்துவின் செயலை மட்டுமே குறிப்பிடு கிறது. கிறிஸ்துவின் மறைபொருளுடனான பழைய ஏற்பாட்டின் உறவானது, உலகின் சமயச் சடங்குகள் தங்களது விண்ணக மூல மாதிரியுடன் கொண்ட உறவினைப் போன்றே இருப்பதால், முன்மாதிரி அடை யாளவியலின் தெளிவான சுவடு இங்கே உள்ளது. ஆயினும், இம்மூல மாதிரியானது அதே நேரத்தில் புனித வரலாற்றின் முடி வாகவும் இருப்பதால், பழைய ஏற்பாட்டின் பொருட்கள் மறுபதிப்பாக உள்ள இறுதிக் கால அடையாளவியலின் துணையால் அவ்வாறு இருக்கிறது. ஒரே சமயத்தில் காலத்தையும் நித்தியத்தையும் சேர்ந்த கிறிஸ்துவில், விண்ணகத்துடன் மண்ணகம் கொண்டுள்ள உறவும், உருவக வரலாறு அதன் முடிவோடு கொண்டுள்ள உறவும் கலந்துள்ளன அல்லது இதைவிட ஒன்றாக் கப்படுகின்றன. உண்மையில் ஆசிரிய ருடைய மொழியானது எல்லாவற்றிற்கும் மேலாக, செங்குத்தான பருமனைச் சுட்டிக் காட்டினாலும், பவுலைப் போன்றே இத் திருமுக ஆசிரியரும் மாதிரிகை இயலின் தளமட்டப் பருமனிலும் அக்கறையுள்ளவ ராக உள்ளார் என்பதை நாம் மற்றப் பகுதிகளில் காணலாம். அவர் உண்மையில் பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளில் மீட்புச் செயலின் முன்னடையாளங்களைக் கண்டு பிடிக்கிறார். இறந்து உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாக ஈசாக்கு உள்ளார் (11:19). நமது மூதாதையர் நுழைந்த வாக்களிக்கப் பட்ட நாட்டின் ஓய்வமைதி, கிறிஸ்தவ வாழ்வுமுறை நம்மை அறிமுகப்படுத்து கின்ற இறை அமைதிக்கு அடையாளமாக உள்ளது (4:9-10; 12:23). இந்த இறுதிக்கால அடையாளவியலிலிருந்து இயற்கை யாகவே ஓர் ஒழுக்க முன்மாதிரியியல் தோன்றுகிறது. பாலைவனத்தில் இருந்த எபிரேயர்கள் கீழ்ப்படியாமையின் எடுத்துக் காட்டாக நமக்கு உள்ளனர் (4:11). அவர் களுடைய தண்டனையானது, நாமும் அவர் களைப்போலப் பிரமாணிக்கமற்றவர்களாய் இருந்தால், நமக்கெனக் காத்திருப்பதை முன்னறிவிக்கின்றது. இதற்கு மாறாக, பழைய ஏற்பாட்டின் புனிதர்கள் நமக்கு விசுவாசத்தின் எடுத்துக்காட்டுகளாக உள்ள னர் (4:11).

பழைய ஏற்பாட்டில் முதலில் வரையப் பட்டு, புதிய ஏற்பாட்டில் அடிக்கடி பயன் படுத்தப்படும் முன்னடையாளங்களின் கோட்பாடு பவுலாலும் (பாராட்டத்தக்க நுட்ப வேறுபாடுகளுடன்) எபிரேயருக்கான திருமுகத்தாலும் வெளிப்படையாக விளக் கப்படுகிறது. அது விவிலிய வெளிப்பாட் டிற்கு அத்தியாவசியமானதாக உள்ளது. அதனுடைய வளர்ச்சியைப் பற்றிப் புரிந்து கொள்ளவும் அது நம்மை அனுமதிக்கின் றது. ஒன்றிலிருந்து மற்றொரு ஏற்பாட் டிற்குப் பல்வேறு நிலைகளில் இறைமக்க ளால் நடத்தப்பட்ட விசுவாச வாழ்வின் தொடர்ச்சியின் மீது அஃது ஒளியைப் பொழிகிறது. அவ்விசுவாசத்தைப் பற்றிப் பின் வரவிருக்கும் உருவங்களின் மூலமாக முதல் ஏற்பாடானது முன்னறிவித்தது.

மாதுளை (POMEGRANATE - யாவே புகலிட மாவார்)

இது புதர்ச்செடி போன்ற ஒருமரவகை. இதன் பழங்கள் உண்ணக்கூடியவை. குருக்கள் அணியும் எபோது என்னும் ஆடையின் அலங்காரங்களைப் பற்றிக் கூறும்போது மாதுளம் பழத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. ஒரு பொன்மணி, ஒரு மாதுளைத் தொங்கல் என மாறிமாறி அந்த எபோது என்னும் ஆடையின்கீழ் தைக்க வேண்டும் (யாத் 28:33-34; 33:24-26; காண்க. சீரா 45:8).

சாலமோனின் அரண்மனையில் உள்ள இரு வெண்கலத் தூண்களின் மேல் இருந்த போதிகையைச் சுற்றிலும் வலைப்பின்னலின் மேல் இரு வரிசையாக மாதுளம்பழ வடிவங்கள் அமைக்கப்பட்டிருந்தன (1அர 7:18.20.42; 2 நாள் 3:16; 4:13; காண்க. 2 அர 25:17; எரே 52:22-23). பாலஸ்தீனா நாட்டின் வளமைக்கும் செழிப்புக்கும் அடையாளமாக உளவு பார்க்கச் சென்ற உளவாளிகள் அந்நாட்டிலிருந்து மாதுளை, திராட்சை, அத்தி ஆகிய பழங்களை மோசேயிடம் கொண்டு வந்து காட்டினர் (எண் 13:23). வாக்களிக்கப்பட்ட நாட்டைப் பற்றி மோசே கூறும்போது இப்பழங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (உப 8:8; காண்க. எண் 20:5).

சவுல் கிபயாவின் எல்லையில் ஒரு மாதுளை மரத்தின்கீழ் காத்திருந்தார் (1 சாமு 14:2). உன்னத சங்கீதம் 4:3.13; 6:7-இல் மணப்பெண்ணைப் பற்றிக் கூறும் போது மாதுளம் பழத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இதன் பூக்கள் வசந்த காலத்தின் அடையாளமாகும் (6:11; 7:13). இப்பழத்திலிருந்து இரசம் செய்யப்பட்டது. யோவேல் வெட்டுகிளிகளால் அழிக்கப்பட்ட மரங்களில் இதையும் ஒன்றாகக் குறிப்பிடுகிறார் (யோவே 1:12).

கடவுளின் இரக்கத்தைப் புதுப்பிக்கும் அடையாளமென திராட்சை, அத்திப்பழங்களோடு மாதுளம் பழங்களையும் ஆகாய் சேர்க்கிறார் (ஆகா 2:19). நகரங்களின் பெயர்களில் இதைப்பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. ரிம்மோன் பாரேசு (எண் 33:19.20), ரிம்மோன் (யோசு 15:32; காண்க. எசா 10:27), கத்ரிம்மோன் (எசா 21:25), ஏன் ரிம்மோன் (நெகே 11:29). பழங்கால சித்திரக்கலையிலும் புராணங்களிலும் இது பெரும் பங்கு வகிக்கிறது. புராணங்களில் மாதுளை மரம் வளமையின் அடையாளமாகும். இது வாழ்வின் மரம் என்று கூட அழைக்கப்பட்டது.

மாதோன் (MADON - போராட்டம்)

இது கலிலேயாவில் உள்ள கானானிய ஊர். இதன் அரசன், யாபீன் அரசனோடு இஸ்ராயேலுக்கு எதிராகக் கூட்டுசேர்ந்தான். இந்தக் கட்டணி தோல்வியுற்றது (யோசு 11;1; 12:19). திபேரியாவுக்கு வடமேற்கில் 8.5 கி.மீ. தொலைவிலுள்ள கரன் காட்டின் இஃது இருந்து இடமாகக் கருதப்படுகிறது.

மாத்து (MAATH - சிறிய)

இறைமகன் இயேசுவின் முன்னோர்களில் இவரும் ஒருவர். நாடு கடத்தலுக்குப் பிற்காலத்தைச் சேர்ந்தவர் (லூக் 3:26).

மாநிலம் (PROVINCE)

ஒரு நாட்டின் நிர்வாக வசதிக்காக பல பகுதிகளாக நாடு பிரிக்கப்பட்டிருந்தது. அதில் மாநிலம் என்பது ஒரு பகுதி. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தலைவர் இருந்தார்.

1) பழைய ஏற்பாட்டில் ஆகாபின் காலத்தில் இஸ்ராயேல் நாடு ஆளுநர்களைக் கொண்ட பல மாநிலங்களாக அல்லது மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது (1 அர 20:14). பிற்காலத்தில் பாபிலோனிய, பாரசீக ஆட்சியின்போதும் இப்பிரிவே காணப்பட்டது (எஸ்த 4:11 புல 1:1; எசே 19:8; தானி 8:2).

2) புதிய ஏற்பாட்டில் உரோமையர்களின் நிர்வாக வசதிக்காக நாடு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது (அ.ப. 23:34; 25:1). உரோமைக்குடியரசில் மாநிலத் தலைவர்கள் திருவுளச் சீட்டு அல்லது குலுக்கல் சீட்டு (lots) மூலம் நிர்ணயிக்கப் பட்டார்கள்.

அந்தந்த மாநிலத்தில் உள்ள படைகளுக்கு அத்தலைவரே பொறுப்பு.

கி.மு. 27-இல் அகுஸ்து தன் நேரடிப்பார்வையில் சில மாநிலங்களை ஏற்படுத்தினான். நிர்வகிப்பதற்குச் சற்றுக் கடினமான மாநிலங்களையும் தன் நேரடிப் பார்வைக்குக் கொண்டு வந்தான் (அ.ப. 13:7). ஒவ்வொரு மாநிலத்திலும் அதன் தலைவரது அதிகாரத்தில் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இம்மாநிலத் தலைவர்கள் மக்களிடமிருந்து வரியையும் வசூலித்தனர். முரட்டுத்தனமான மக்கள் கொண்ட மாநிலங்கள், உதாரணமாக யூதேயா மற்றும் பிற்காலப் பாலஸ்தீனம், திராக்கு, எகிப்து, மௌரேட்டானியா ஆகியவை, அரசனின் நேரடி ஆட்சியில் இருந்தன. அதாவது அரசனால் அனுப்பப்பட்ட ஆளுநன் அதைக் கவனித்து வந்தான். இரண்டாம் எரோது அகிரிப்பாவிற்குப்பின் பாலஸ்தீனம் சீரியா மாநிலத்தோடு இணைக்கப்பட்டது.

3) உரோமையரின் முக்கிய மாநிலங்கள்: மேலோர் சபையின் கீழ் இருந்த மாநிலங்கள்:

அ) மாசிதோனியா (கி.மு. 146), அக்காயா (கி.மு. 146), ஆசியா (133), கிரேத்து (74), சைப்பிரசு (22).

ஆ) பேரரசன் நேரடிப் பார்வையில் இருந்த மாநிலங்கள் பம்பிலியா (கி.மு. 101), சிசிலியா (கி.மு. 67), சீரியா (கி.மு. 64), எகிப்து (கி.மு. 31), கலாத்தியா (25), யூதேயா (கி.பி. 6), கப்பதோக்கியா (17), லீக்கியா (43).

மாய வித்தை (MAGIC)

1. மாய வித்தையும் மந்திரவாதிகளும்: தன்னைத் திணரடிக்கிற உலகை, தன்னை அச்சுறுத்துகின்ற உயிர்களை அல்லது தான் ஆதிக்கம் செலுத்த விரும்புகின்ற உயிர்களை எதிர்கொள்ளும்போது, தனது வலிமைக்கு அப்பாற்பட்ட, இறைத்தன்மைக்கும் தனது ஊழிற்கும் தலைவணங்குகின்ற வல்லமையினை அடைய மனிதன் முயல்கிறான். இப்போது செயல்முறைகள் மாறியிருந்தாலும், முன்பின் அறியாததைக் கட்டுப்படுத்தும் போக்கும், ஆசையும் மனிதனுடைய இதயத்தில் வேரூன்றியுள்ளது; பழைய முறைகளுக்கொத்த செயல்முறைகளுக்கு நடத்திச் செல்கிறது.

குறிகூறுதல் (எசே 22:28) மற்றும் சூனியம் வைத்தல் (மீக் 5:11; உப 18:10; ஞான 12:4; திருவெளி 18:23) முதலியவற்றைக் கொண்டது மந்திரவாதக் கலையாகும் (ஞான 17:7). ஞானிகளுடைய வானஇயல் அறிவியலுடன் இவற்றைக் குழப்பிவிடக் கூடாது (மத் 2:1-12). மந்திரங்கள் (சங் 47:6; எரே 8:17; திருவுரை 10:11), காப்புகள் மற்றும் முக்காடுகளை உபயோகித்தல் (எசே 13:17-23), தீமையின் கவர்ச்சி (ஞான 4:12; 2:24; கலா 3:7) முதலியன இந்த மாய நடைமுறைகளில் அடங்கும். எகிப்திய மற்றும் கல்தேய மந்திரவாதிகள் (யாத் 7-9; எசா 47:12-13), குறி சொல்வோர் (ஆதி 41:8.24; எசா 44:25), ஞானிகள் மற்றும் சூனியக்காரர்கள் (யாத் 7:11) ஆகியோருடன் எபிரேயரும் யூதரும் தொடர்பு கொண்டிருந்தனர். இஸ்ராயேல் உட்பட அனைத்து நாடுகளிலும் மாயவித்தைக்கான ஆதாரம் உள்ளது.

ஒரு மாதிரி நிகழ்ச்சி விரிவாக விவரிக்கப்படுகிறது; அது சவுலினுடைய பயங்கர மரணத்தைப் பற்றி அவனுக்கு முன்னுரைப்பதற்கென, சாமுவேலின் ஆவியைத் தோன்றச் செய்கின்ற ஏந்தோரைச் சேர்ந்த குறிசொல்பவள் பற்றிய சம்பவம் ஆகும் (1 சாமு 28:3-25). ஈசபேலின் மாயவித்தைகளும் (2 அர 9:22), ஆகாசு (16:3) மற்றும் மனாசே (21:6) ஆகிய அரசர்களுடைய அருவருப்பான மூட நடைமுறைகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. இவற்றை யோசியா எதிர்த்துப் போராடினார். இருளின் சக்திகள் மாயவித்தை மற்றும் குறிசொல்லுதல் போன்றவற்றைப் பயன்படுத்தின. இச்சக்திகள் மேல் யாவேயும், பிற்காலத்தில் ஆண்டவராகிய இயேசுவும் கொண்டிருக்கும் மேலாண்மையை எடுத்துக்காட்டும் விதத்தில் நிகழ்ச்சியுரைகள் அமைந்துள்ளன.

2. மாயவித்தைக்கு எதிரான போராட்டம்: இம்முக்கிய கருத்தைப் பற்றிய இறை வெளிப்பாட்டினுடைய தீர்ப்பைக் காட்டுவ தாய்ச் சட்டங்கள் அமைக்கப்பட்டு வருங் காலத்திற்குக் கையளிக்கப்பட்டதற்குக் கார ணம் உண்மையில் இதுவே.

அ) தடைகள்: மோசே சட்டத்தின் மூன்று பெருந்தொகுப்புகள் மாயவித் தைக்கு மரணதண்டனை அளித்து அதைத் தடுக்கின்றன (லேவி 19; உப 18; யாத் 23). அவ்வாறே மாயவித்தையுடன் தொடர் புடைய செயல்முறைகளும் தடை செய்யப் பட்டுள்ளன (உப 22:5.11; லேவி 19:19). எடுத்துக்காட்டாக, தாயின் பாலில் கன்றுக் குட்டியைச் சமைக்கும் கானானியச் சடங்கு (யாத் 23:19; 34:26; உப 14:21). குழந்தை களைப் பலியிடுதல் (உப 18) குறிப்பாக, நகர்களுக்கு அடித்தளமிடும் சடங்குகள் (1 அர 16:34), நகர்களைப் பாதுகாத்தல் (2 அர 3:27) அல்லது புதுமுகம் செய்யப்படும் சடங்குகள் (ஞான 12:3-5) ஆகியவற்றில் குழந்தைகளைப் பலியிடுதல் தடை செய் யப்பட்டு அருவருப்பானதொன்றாகக் கரு தப்பட்டது. மேலும் இறுதியாக, இரத் தத்தைப் பயன்படுத்துதல் பற்றியும் பல தடைகள் உள்ளன. ஏனெனில், இரத் தத்தைக் குடிப்பதென்பது இறைவனுக்கு மட்டுமே உரிய உயிர்நாடியான வல்ல மையைத் தனக்காக எடுத்துக் கொள்வதா கும் (ஆதி 9:4; லேவி 3:17; அ.ப. 15:29). இத்தகைய நடைமுறைகள் சிலைவழிபாட் டுடன் ஒன்றுபடுத்தப்படுகின்றன (கலா 5:20; திருவெளி 21:8).

ஆ) எண்ணற்ற சுதைகளில் மந்திரவாதி கள் இறைவல்லமையால் வெல்லப்படு கின்றனர். இவ்வாறாக, யோசேப்பு குறி சொல்வோர் மேலும் (ஆதி 41), மோசே எகிப்திய மந்திரவாதிகள் மேலும் வெற்றி கொள்கின்றனர் (யாத் 7:10-13. 19-23; 8:1-3. 12-15; 9:8-12). தனது பெண் கழுதையுடன் யாவேக்கும் எபிரேய மக்களுக்கும் ஊழி யம் புரியுமாறு பாலாம் வற்புறுத்தப்படு கிறார் (எண் 22-24). கல்தேய ஞானிகளைத் தானியேல் திகைப்புறச் செய்கிறார் (தானி 2; 4; 5; 14). தேவையானால் இயன்னே, இயம்பிரே ஆகியவை பற்றிய கதை போன்ற (2 திமொ 3:8) பாரம்பரியக் கதைகளை, ஒழுக்க மேம்பாட்டை நோக்க மாகக் கொண்டு மீண்டும் எடுத்துக்கூறுதல் புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்றது. மந்திரவாதி சீமோன் தாழ்மையுடன் பேதுரு விடம் மன்னிப்பு வேண்டுகிறான் (அ.ப. 8:9-24), பர்யேசு-எலிமா பவுலினால் தண் டிக்கப்படுகிறான் (13:6-11). பிலிப்பியில் குறிசொல்ல ஏவும் ஆவியால் பீடிக்கப்பட்ட பணிப்பெண் (16:16-18) அல்லது எபேசு வின் யூதப் பேயோட்டுபவர்கள் (19:13-20) ஆகியோருடைய நிலையும் இத்தகையதே.

மாயவித்தையின் உதவி இன்றியே செயல்பட புதுமைகளும் இறைவாக்கு களும் மனிதரை அனுமதிக்கின்றன. ஏனெ னில், அவை இறை பிரசன்னத்தை உறுதி யான வழியில் உணரச்செய்கின்றன (உப 18:9-22; காண்க. எண் 23:23). மற்றொரு புறத்தே சூனியக்காரர்கள் உண்மை இறை வனிடமிருந்து மனிதரைத் திசை திருப்பு கின்றனர் (உப 13:2-6); புதுமை புரிவோர், கோட்பாட்டினைப் பொய்யாக்குகின்றனர் (மத் 24:34; திருவெளி 16:12-16). எனவே, இறைவாக்கினர்கள் நாட்டிலுள்ள மந்திரவா திகளை முழு முனைப்புடன் எதிர்க்கின்ற னர் (எசா 19:1-3; 44:25; 47:12-13; எரே 27:9. எசே 21:34).

மாய வித்தையைப் பயன்படுத்துவதற்குச் சோதனை வலியது. ஒரளவிற்கு இயேசு இச்சோதனைக்கு உட்பட்டார். தன்னுடைய இறை வல்லமையால் பசியைத் தணித்துக் கொள்ளவும் யூதரை வியப்பிலாழ்த்தவும் சாத்தான் அவரை அழைக்கிறான். ஆனால், இயேசுவோ உலகின் மீதான வல்லமையை அவனிடமிருந்து ஏற்றுக்கொள்ள விரும்ப வில்லை: ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணிசெய்வா யாக'' (மத் 4:1-11).

இ) மாய வித்தை முறைகளும் சடங்கு களும்: பழைய ஏற்பாட்டின் சடங்குமுறை யானது, மாய வித்தையினின்று தூய்மைப்

படுத்தப்பட்ட பின் பெறப்பட்ட சில குறிப்பிட்ட நடைமுறைகளைக் கொண்டிருந்தது என்பது உறுதி. உண்மையான இறைவனை வழிபடுவதற்காக அவற்றைக் கீழ்ப்படுத்தும் ஒருவித வழி இது. இரத்தத்தைச் சமயச்சார்பற்ற முறையில் பயன்படுத்துவது தடை செய்யப்பட்ட வேளையில், இறைவனுடைய பெயரால் குரு, இரத்தத்தினால் பரிகாரம் (லேவி 17:11) மற்றும் உடன்படிக்கையின் சடங்குகளை நிறைவேற்றுகிறார் (யாத் 24:8). இறைவனை நோக்கிக் கூக்குரலிடும் குரலை இரத்தமானது மூழ்கடிக்க வேண்டும் (எரே 17:1; லேவி 4). இந்தப் பின்னணியின் நோக்கில் சடங்கானது தனது பொருளை மாற்றுகிறது. எவ்வாறாயினும் ஒரு சடங்கானது குருட்டு நம்பிக்கைக்குரியதாகும் போது, அஃது உடனடியாக நீக்கப்படுகிறது. வெண்கலப் பாம்பானது சிலைவழிபாட்டுப் பொருளாக ஆன உடனே அழிக்கப்பட்டது (2 அர 18:4). முதலில் அனைத்து மக்களுக்கும் அளிக்கப்பட்ட இறைப் பெயரின் உபயோகமானது (எகிப்திய தெய்வங்களைப்போல, குறிசொல்வோரின் ஆதிக்கத்தில் விழுவது பற்றி யாவே அஞ்சவில்லை) இறுதியில் குருவிற்கே ஒதுக்கப்பட்டுள்ளது (எண் 6:27). இறைவனுடைய பெயரை வீணாக உரைக்கின்றவாறு இந்த இறைப்பெயரை உபயோகிக்க பண்டைய மந்திரவாதிகள் தயங்கவில்லை என்பதை எகிப்தில் கண்டெடுக்கப்பட்ட கிரேக்க ஏட்டுச் சுருள்களினின்று அறிகிறோம் (யாத் 20:7).

மனிதன் சுதந்தரமாகப் படைக்கப்பட்டு இறைவனைத் தேர்ந்தெடுக்கக்கூடியவனாக இருக்கிறான். உலகின் மீதான தலைமையை இறைவனிடமிருந்தே அவன் பெற்றான். சமயத்தையும் மறைபொருளான அறிவையும் செயற்கையான முறையில் ஒன்றுபடுத்தும், ஆனால் உண்மையில் இயற்கையைக் கேலிக்குரியதாக்குவதாகவும், விசுவாசத்தின் விளைவுகளைச் சிதைக்கக் கூடியதாகவும் மட்டுமே இருக்கக்கூடிய கலப்படமான கலையாகிய மாயவித்தையுடன் அவன் தொடர்பு கொண்டிருக்க வேண்டியதில்லை.

மாரனாதா (MARANATHA - வாரும் ஆண்டவரே)

பவுல், 1 கொரி 16:22-இல் வாழ்த்துரையில் பயன்படுத்தியுள்ள அரமேயச் சொல்லின் கிரேக்க எழுத்துப் பெயர்ப்பே இது. 'ஆண்டவரே வாரும்' என்றோ, 'இயேசு ஆண்டவரே வாரும்' என்றோ (திருவெளி 22:20) பொருள் கொள்ளலாம். இச்சொற்றொடரை ஆண்டவர் அகரமும், னகரமுமாய் இருக்கிறார் எனும் கிரேக்க அரமேய மொழிப் பொருளில் கொள்ளலாமென அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

பவுல் புறவினத்தாரை வாழ்த்தும் பொழுது அரமேய மொழிச் சொற்றொடராகிய இதனைப் பயன்படுத்துவதிலிருந்து, இயேசுவின் இரண்டாவது வருகையை விசுவாசத்துடன் எதிர்பார்த்திருந்த அன்றைய கிறிஸ்தவர்கள் அனைவரும் நன்கறிந்த ஒன்றாகவே இஃது இருந்திருக்க வேண்டும். இஃது அவர்கட்கு நம்பிக்கையும், உற்சாகமும் அளிக்கும் ஒரு சொற்றொடராக இருந்தது. திதாக்கே, தனது நற்கருணைச் செபத்தில் 'ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்' (காண்க. பிலி 4:5) என்று பயன்படுத்தியுள்ளது. இஃது ஆழ்ந்த இறுதிக்காலத் தொனியைக் கொண்டுள்ளது.

மாரா (MARA - கசப்பு) - ஆள்

தன்னை ஆண்டவர் கசப்புத் தன்மையால் நிறைத்திருக்கிறார் எனும் பொருள்பட 'நகோமி' தன்னைக் 'கசப்பி' எனப் பிறர் அழைக்குமாறு கூறினாள் (ரூத் 1:20).

மாரா (MARAH - கசப்பு) - இடம்

சூர்ப் பாலைவனத்தில் மூன்று நாட்கள் இஸ்ராயேலர்கள் பயணம் செய்தபின் முதலில் கிடைத்த நீரூற்றே இவ்வாறு அழைக்கப்பட்டது (யாத் 15:23). இதனை எத்தாம் பாலைவனமெனவும் கூறுவர் (எண் 33:8). கசப்பானதும், சுவைக்க முடியாததுமான பல நீர்க்குட்டைகளும், கிணறுகளும் பாலை

வனத்தில் காணப்படுவது இயற்கை. இந்த இடம் எப்படித் தன் பெயரைப் பெற்றது என்று விளக்கும் காரணகாரியக் கதையே இந்நிகழ்ச்சி. மூன்று நாட்களாக நீரின்றி அலைந்த இஸ்ராயேலர்கள் முடிவில் இந்த நீரருகே வந்தபோது, குடிக்க முடியாத அளவுக்கு அது கசப்பானதாக இருந்ததால் அதனைக் 'கசப்பு' என அழைத்தனர். அவர்கள் மோசேக்கு எதிராக முறையிட, அவர் ஆண்டவர் கூறியபடி ஒரு மரத்தை நீரில் போட, அது குடிப்பதற்கேற்றதாக மாறியது. இது நடந்த இடம் எதுவென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

சூயெஸ் வளைகுடாவின் வடமுனைக்குத் தெற்கே 72 கி.மீ. தொலைவிலும், 11 கி.மீ. தொலைவில் உள்நாட்டிலும் உள்ள அயிகவரா என்ற இடம்தான் இது என்று சிலர் அடையாளம் காட்டுவர்.

மாராத்து (MAARATH - *தரிசு நிலம், திறந்தவெளி*)

இது யூதா மலைநாட்டின் பெத்சூர் மாவட்டத்திலுள்ள சிற்றூர் (யோசு 15:59). இதுவும் மாரோத்து நகரமும் (மீக் 1:12) ஒரே இடத்தைக் குறிக்கலாம். இது, பெயித்-உம்மருக்கு வடகிழக்கில் பெத்சூருக்கு 3 கி.மீ. தொலைவிலும், எபிரோனுக்கு வடக்கில் 10.5 கி.மீ. தொலைவிலும் உள்ள கிர்பெத் குபினாக இருக்கலாம்.

மாரி (MARI)

அபுகெமாலுக்கு அருகேயுள்ள இன்றைய தேல் ஏல் கரீரியின் அண்மையில் யூப்பிரத்தீசுக்கு நடுவில் அமைந்த மிகப் பழமையான மெசபொத்தாமிய நகரமே இந்த 'மாரி'. இந்நகரம் பற்றி விவிலியத்தில் கூறப்படவில்லை. கி.பி. 1933-39-இல் இவ்விடம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அகழ்வாராய்ச்சியாளர்கள் இவ்விடத்தில் அரச மாளிகையொன்றைக் கண்டனர். இது 15 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த அன்றைய நிலைக்குப் பிரம்மாண்டமான ஒரு மாளிகையாக இருந்தது. இங்கு மிகப்பெரும் கலைப் படைப்புகள், பழங்காலத்தைச் சேர்ந்தவை கண்டுபிடிக்கப்பட்டன.

வரலாற்றின் மிக முக்கியமான 20,000 ஆப்பு எழுத்து ஏடுகள் இங்குக் கிடைத்தன. இவை அரச கடிதங்களையும், சட்ட, பொருளாதார, மத சம்பந்தமான பல முக்கிய கோட்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தன. இவை மாரியின் மக்கள் வாழ்க்கையையும், சமூகத்தையும் பெருமளவு மாற்றி அமைக்க உதவியிருக்குமென்பது தெரிகிறது. மேலும், இஸ்ராயேலரின் முதுபெரும் தந்தையர்கள் காலத்துப் பழக்க வழக்கங்களையும், சட்டங்களையும் பிரதிபலிப்பதுபோல் பல கோட்பாடுகள் இதில் காணப்படுகின்றன. கி.மு. மூன்றாம் ஆயிரமாண்டுத் தொடக்கத்தில் இங்கு மக்கள் வாழ்ந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

மத்திய தரைக்கடலுக்கும், மெசபொத்தாமியாவுக்கும் இடையில் இயற்கையிலே அமைந்த ஒரு சிறந்த வியாபார மையமாக இருந்ததால் மாரியைப் பலர் தமதாக்க முயன்றனர். இது கமுராபியால் பிடிக்கப்பட்டது. மக்கள் இவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்ததால் அவர் இதனை அழித்ததோடு இந்நகரம் கைவிடப்பட்டது.

மாரேசா (MARESHAH - *தலைமை இடம்) - ஆள்*

1. இவர் காலேபுக்குப் பிறந்த முதல் மகன்; எபிரோன், சீபு ஆகியவர்களின் தந்தை (1 நாள் 2:42). ஆனால், இப்பகுதி சிறிது தெளிவற்றதாகவும், குழப்பம் தருவதாகவும் இருக்கிறது. எபிரேயப் படிவத்தில் காலேபின் முதல் மகன் மேசா எனவும், பின்னர் மாரேசா என்றும் உள்ளது. சில மொழி பெயர்ப்புகளின்படி, மாரேசாவின் தந்தையும், எபிரோனின் பாட்டனும் ஆன சீபுவின் தந்தையாவார். மேசா அல்லது மேசா மற்றும் மாரேசா என்பவர்கள் சீபு மற்றும் எபிரோன் என்ற நகர்களை நிறுவியவர்கள் ஆவார்.

2. இவர் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த இலாதாவின் மகன் ஆவார் (1 நாள் 4:21).

மாரேசா (MARESHAH - *தலைமை இடம்) - இடம்*

பெயின் இப்பிரினுக்குத் தென்கிழக்கேயுள்ள இன்றையத் தேல் சன்தகனாவே

மாரேசாவாகும். இஃது ஒரு கானானிய நகரம்; யூதாவைச் சேர்ந்த செபேலா மாவட்டத்தின் தலைநகரம் ஆகும் (யோசு 15:44).

ரெகபயாம் மன்னர் இதனைச் சுற்றி மதில் சுவர் அமைத்தார் (2 நாள் 11:8). ஆசா இதனை உறுதிப்படுத்தினார். மாரேசாவுக்கு 48 கி.மீ. தொலைவில் தென்மேற்கே உள்ள கெராருக்கு யூதாவை எதிர்த்து வந்த எத்தியோப்பியர்களை மன்னன் ஆசா துரத்தியடித்தார் (2 நாள் 14:9-14). இந்நகரம் எலியேசரின் சொந்த ஊராகும். இவர்தான் இஸ்ராயேலின் மன்னனான அகசியாவும், யோபாத்தும் இணைந்து செயற்படுத்த நினைக்கும் 'வியாபாரக் கப்பல்கள்' ஒன்றுமில்லாமல் போகும் என்று மிகச் சரியாகச் சொன்னார் (2 நாள் 20:37). மீக்கா உரைத்த இறைவாக்கின்படி அழியப்போகும் நகரங்களில் ஒன்றாகக் கூறப்பட்டது இந்த மாரேசா (மீக் 1:15).

மக்கபேயர் காலத்தில் மாரேசா மிக முக்கியான நகரமாகத் துலங்கியது. இது மேயர் காலத்திலிருந்து இது மரிசா என்றழைக்கப்பட்டது. இதுமேய ஆளுநராகிய கோரிக்கியா கி.மு. 164-இல் இதனை அடைக்கலத்திற்குரிய இடமாகப் பயன்படுத்தினான் (2 மக் 12:35; காண்க. 1 மக் 5:66). ஏறத்தாழ கி.மு. 110-இல் யோவான் இரிக்கானு இதனைப் பிடித்து, விருத்தசேதனம் செய்து கொள்ளத் தயாராக இருந்த இதுமேயர்களை இங்கு வசிக்க அனுமதித்தார். கி.மு. 40-இல் மாரேசா பார்த்தியர்களால் பிடிக்கப்பட்டு, அழிவுற்றது. அதன்பின் இது மீண்டும் கட்டப்படவேயில்லை.

மாரோத்து (MAROTH - கசப்பு)

இது யூதாவிலுள்ள ஒரு நகரம் (மீக் 1:12). இதுவும் மாராத்தும் (யோசு 15:59) ஒரே இடத்தைக் குறிக்கலாம் என்று கருதப்படுகிறது.

மார்சியோனுடைய நற்செய்தி (MARCION, GOSPEL OF)

மார்சியோன், கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; ஞானவாதக் கோட்பாட்டைச் சேர்ந்த ஒரு பதித வகுப்பைத் தோற்றுவித்தவர்; யூதர்களைச் சார்ந்த எதையும் வெறுத்தவர்; ஆகவே, பழைய ஏற்பாட்டை முழுவதையும் நிராகரித்தார். நற்செய்தி நான்கு வடிவம் கொண்டிருப்பதையும் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, அவற்றை ஒரே நூலாக்க முயன்றிருக்கின்றார். இந்த ஒரே-நற்செய்தி லூக்காவின் நற்செய்தியின் சுருக்கப் பதிப்பு போல் தோன்றுகிறது. இந்தப் பதிப்பில் இவரது கைவேலைப்பாடு எவ்வளவு என்று உறுதி செய்ய முடியாது. இதில் லூக் 1-2 ஆகிய பகுதிகள் காணப்படவில்லை. மேலும், தனது பதிதக் கோட்பாட்டுக்கு எதிராக லூக்கா நற்செய்தியில் காணப்படுபவற்றை மாற்றி எழுதியிருக்கிறார். இவரது விவிலியத்தில் இவரால் பதிப்பிக்கப்பட்ட ஒரே நற்செய்தியும் பவுல் எழுதியதாக இவர் கருதிய பத்துத் திருமுகங்களும் அடங்கும்.

இவர் ஞானவாதத்தைச் சேர்ந்தவர் என்று கருதப்பட்டாலும், தோசேத்திய கிறிஸ்து இயலைப் பின்பற்றினார். அதாவது கிறிஸ்து இயேசு உண்மையான மனிதனும் ஆவார் என்பதை மறுத்தார். திருச்சபை பழைய ஏற்பாட்டு நூல்களை ஏற்றுக்கொண்டதும், இயேசு இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்ட மெசியா என்று நம்புவதும் தவறு என்று சாதித்தார். விவிலிய நூல்கள் பற்றிய பல தவறுகளையும் போதித்து வந்தார். இதற்கு மாறாக, விவிலியத்தைப் பதிப்பிக்கும்போது, ஒரு முன்னுரை எழுதும் வழக்கு 3-ஆம், 4-ஆம் நூற்றாண்டுகளில் திருச்சபையில் இருந்து வந்தது. இவர் கடுமையான துறவு வாழ்க்கை வாழ்ந்ததாகத் தெரிகிறது.

கி.பி. 144-இல் மார்சியோனைத் திருச்சபை தனது ஒன்றிப்பிலிருந்து விலக்கி வைத்தது. ஆனால், இப்பதிதம் மிக விரைவில் பரவியது. நான்காம் நூற்றாண்டில் கட்டுப்படுத்தப்பட்டது.

மார்துக்கு (MARDK - சூரியனின் கன்று)

இது பாபிலோன் நாட்டுக் கடவுள்களிலே முதன்மையானது. கி.மு. 1700-இல் கமுராபி

காலத்தில் புயல் கடவுள், படைக்கும் கடவுள் ஆகியோரின் செயல்கள் இந்தக் கடவுளுக்குச் சாற்றிக் கூறப்பட்டன. எபிரேயத்தில் இப்பெயர் 'மெரோதாக்கு' எனப் பட்டது. புது வருட விழாவின்போது இக்கடவுள் சூனிய நீரின்மேலும், பிற சக்திகள் மீதும் கொண்ட வெற்றியே வசந்தமென்றும், இது எல்லாக் கடவுளர்களது வெற்றியென்றும், அவரது படைப்பாகிய இயற்கையையும், மனிதனையும் நினைத்துப் பெரும் விழா எடுத்து இக்கடவுளை அரசனாகக் கொண்டாடினர். இது புராணக்கதை மற்றும் சடங்குகளில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது. இது சீரிய நாட்டுப்பாகாலின் வழிபாடுகளிலும், புராணங்களிலும் வெளிப்பட்டு, எபிரேயத்தில் யாவேயின் அரசப்பண்பில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மார்த்தா (MARTHA - குடும்பத்தலைவி)

பெத்தானியாவில் வாழ்ந்த இலாசர், மரியா ஆகியவர்களின் சகோதரியே மார்த்தா (லூக் 10:38-42; யோவா 11:1-12:2).

மார்த்தா, மரியா மற்றும் இலாசர் எனும் இருவரோடு பிறந்தவர், பெத்தானியா ஊரினள் எனும் விவிலிய மரபு நான்காவது நற்செய்தியாளராலே உறுதி செய்யப்படுகிறது. ஆனால், லூக்கா தென் கலிலேயாவில் இவர்கள் வாழ்ந்திருக்க வேண்டுமெனச் சுட்டினாலும் (லூக் 9:51; 10:38-42; 17:11), இப்பகுதிகளில் கூறப்படும் கருத்துக்கள் கால, இடம் பற்றிச் சரியாக அறிந்து எழுதப்படாததால் அது சரியென்று ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. யோவான் இச் சகோதரிகள் பற்றித் தரும் பல விளக்கமான உண்மைகள், மூன்று நற்செய்திகளும் தரும் தெளிவற்ற விளக்கங்களைத் தெளிவுபடுத்துகின்றன (மாற் 11:1-12; லூக் 21:37).

மார்த்தாவின் குணத்தைப் படம் பிடித்துக் காட்டுவதில் யோவானிடமும், லூக்காவிடமும் பெரிய ஒற்றுமை காணப்படுகிறது. மார்த்தா உலக காரியங்களில் அக்கறையுள்ள குடும்பத் தலைவியாக (லூக் 10:38; யோவா 12:2), இயேசுவின் தேவைகளை நிறைவு செய்து வைப்பதில் கண்ணும் கருத்தும் உள்ளவளாக (லூக் 10:40; யோவா 12:2), தனது சகோதரியின் தியானித்துக் கொண்டிருக்கும் சோம்பல் மனநிலையைக் கண்டு பொறுமையிழப்பவளாக (லூக் 10:40), தன் சகோதரன் இறந்தபோது தன்னையே திடப்படுத்திக் கொண்டு ஊரின் எல்லையிலே போய் இயேசுவைச் சந்திப்பவளாக (யோவா 11:20), உடல் அடக்கம் செய்து நான்கு நாட்கள் ஆனதால் அது கெட்ட மணம் வீசுமே என அக்கறை கொண்டவளாகக் (11:39) காட்டப்படுகிறாள்.

இயேசு இவ்விரு சகோதரிகளையுமே அன்பு செய்தார். நான்காவது நற்செய்தியாளர் மிகத் தெளிவாக, ''மார்த்தாவிடமும், அவளது உடன் பிறப்பான மரியாவிடமும், இலாசரிடமும் இயேசு அன்பு கொண்டிருந்தார்'' (யோவா 11:5) என்கிறார். மார்த்தா செய்த உபசாரங்களையெல்லாம் இயேசு முழு மனதுடன் ஏற்றுக்கொண்டார். அதே நேரத்தில் அவள் உலக காரியங்கள்மீது கொண்டிருந்த அளவற்ற அக்கறையைக் கண்டிக்கிறார். எனவே, இறை அரசின் மதிப்பீடுகளே எல்லாவற்றிற்கும் மேலானதென்றும், அதையே முதலில் தேட வேண்டுமென்றும் அறிவுரை கூறுகிறார்.

யோவா 12:1-8-இல் பெத்தானியாவில் நடந்த விருந்து ஒன்றில் மார்த்தா இயேசுவுக்கு விருந்து பரிமாறுவதாகவும், அவரது சீடர்களும், இலாசரும் அவருடன் இருந்தார்களெனவும், மரியா இயேசுவின் பாதங்களை நறுமணத் தைலத்தால் பூசினாள் எனவும் கூறப்படுகிறது. மாற் 14:3-9 (பெத்தானியாவில்) தொழுநோய்ச் சீமோன் வீட்டில் இயேசு விருந்துண்ணும்போது இயேசுவின் தலையில் ஒரு பெண் நறுமணத் தைலத்தை ஊற்றியதைக் கூறுகிறது. ஆனால், அப்பெண்ணின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இவையெல்லாம் பெத்தானியாவில் நடந்த ஒரே நிகழ்ச்சியின் வெவ்வேறு வடிவங்களாக இருக்கலாம். தொழுநோயுடையவனாக இருந்த சீமோன் இயேசுவால் குணப்படுத்தப்பட்டிருக்க

லாம். அவன் மார்த்தாவின் தந்தை அல்லது கணவனாக இருந்திருக்கலாம். அல்லது அவன் இறந்த பின்னும் அவன் பெயரால் அந்த வீடு அழைக்கப்பட்டிருக்கலாம்.

மார்புக்கவசம் (COAT OF MAIL)

பாதுகாப்பிற்காக கழுத்திலிருந்து இடுப்பு வரைக்கும் அணியப்படுகின்ற மார்புக்கவச மாகும். கோலியத்து என்பவன் இதைப் போன்ற வெண்கலத்தால் செய்யப்பட்ட போர்க்கவசத்தை அணிந்திருந்தான் (1 சாமு 17:5). அந்தக் கவசத்தின் நிறை ஐயாயிரம் செக்கேல் வெண்கலமாம். தாவீது சவுலி னுடைய மார்புக்கவசத்தை அதனுடைய அதிகமான எடையளவினால் அணிய மறுத்து விட்டார் (17:38). லேவியாத்தானின் மேல் தோலானது இருமடங்கான மார்புக் கவசத்திற்குச் சமமாகக் கூறப்படுகின்றது (யோபு 41:4). மார்புக்கவசம் போருக்குப் பயன்படும் பொருள்களில் ஒன்றாகும் (காண்க. 2 நாள் 26:14; நெகே 4:16; எரே 46:4; 51:3).

மாலுமி (PILOT)

எசே 27:8.27-29-இல் குறிப்பிடப்படும் மாலுமிகள் தீர் நாட்டுக் கடல் வாணிபத் துடன் தொடர்புடைய பெனிசியர்கள் ஆவர். யாக் 3:4-இல் உடலின் ஒரு சிறிய பகுதியான நாவானது கப்பலோட்டிக்கு ஏற்ற திசையில் கப்பலைச் செலுத்த உதவும் சிறிய சுக்கானுடன் ஒப்பிடப்படுகிறது.

மால்கு (MALCHUS - அரசன்)

இவர் பேதுருவால் காது துண்டிக்கப் பட்ட தலைமைக் குருவின் ஊழியன் ஆவார் (யோவா 18:10).

இந்த அடிமை தலைமைக் குருவின் வீட்டு ஊழியர்களில் தலைமைக் குரு வுக்குப் பணி செய்பவராக இருந்திருக்க வேண்டும் (18:13); மேலும், கோவில் காவலர்களின் தலைவனாகக் கூட இருந்தி ருக்கலாம். இவர் சீரியா நாட்டினனாகவோ, நபத்தேயனாகவோ இருந்திருக்கலாம்.

இயேசுவைக் கைது செய்ததில் இவர் முக்கிய நபராக இருந்தாரா, இல்லையா என்பது தெளிவாக இல்லை. பேதுரு இவரது காதைத் துண்டித்தது இயேசுவுக்கு முன்னால் நடந்திருக்க வேண்டும். அத னால்தான் உடனே இயேசு அவரைக் குணப்படுத்துகிறார் (லூக் 22:51). இவர் தலைமைக் குரு காயபாவின் பிரதிநிதியாக அங்கு வந்திருந்தால், அவன் தலைமைக் குருவுக்கு இணையாக மதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அன்றைய எபிரேயப் பாரம்பரியம். அப்படியிருந்தால் பேதுரு செய்தது பெருங்குற்றமாகும். எனவேதான், இயேசு உடனே அதனைச் சரி செய்திருக் கிறார்.

நான்காவது நற்செய்தி தனிப்பட்ட பாரம் பரியச் சான்று ஒன்றைக் கொண்டிருந்ததா லேயே, அது மட்டும் தாக்கியவர், தாக் குண்டவர் ஆகிய இருவர் பெயரையும் தருகிறது.

மால்தா (MALTA)

மால்தா, சிசிலிக்குத் தெற்கே அமைந்த ஒரு தீவாகும். கி.மு. முதலாம் நூற் றாண்டைச் சேர்ந்த தியோதோரசு கூறும் விளக்கப்படி சிசிலிக்கு அப்பால் மூன்று தீவுகள் இருந்தன. இவை ஒவ்வொன்றும் ஒரு நகரையும் புயல்காலத்தில் பாதுகாப் பளிக்கும் துறைமுகத்தையும் கொண்டிருந் தன. இத்தீவுகளில் 'மால்தாவும்' ஒன்று. மால்தா சிரக்கூசா துறைமுகத்திலிருந்து 144 கி.மீ. தொலைவிலும், சிசிலியின் மிக நெருங்கிய முனையிலிருந்து 96 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

மத்தியதரைக்கடல் வழியாக கிழக் கினின்று மேற்கே செல்பவர்களுக்கும், மேற்கினின்று கிழக்கே செல்பவர்க்கும் மால்தா அமைந்த இடம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. பெனீசியர்கள் இதனைக் கைப்பற்றியது மேற்குக் கடலின் வியாபாரத்திற்கு இஃது ஒரு பாதுகாப்பான துறைமுகமாக இருந்ததுதான் காரணம். மேலும், இம்மால்தாவின் மக்கள் வியா பாரிகளால் ஆதரிக்கப்பட்டனர் எனவும் தியோதோரசு கருதுகிறார்.

மால்தா 29 கி.மீ. நீளமும், 13 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் உயரமான

பகுதி கடல் மட்டத்திலிருந்து 254 மீட்டர் உயரமுள்ளதே. மால்தாவின் மிகப் பெரிய துறைமுகம் இன்றைய வலேத்த என்ற நகரமாகும். புனித பவுல் வளைகுடா என அழைக்கப்படுமிடமே அப்போஸ்தலர் பணியில் கூறப்படும் கப்பற் சிதைவு நடந்த இடமென்பர்.

பவுல் நோன்பு இருந்தபின், கிரேத்தாத் தீவைக் கடந்து சென்ற பின்புதான் கப்பல் சிதைவு ஏற்பட்டது (அ.ப. 27:9). அதாவது, ஏழாம் மாதம் 10-ஆம் நாளுக்குப்பின் (லேவி 16:29), கப்பல் 13 நாட்கள் புயலில் சிக்கியது (அ.ப. 27:27). அக்டோபர் மாதத்தில் இது நடந்திருக்க வேண்டும். அப்படியென்றால் குளிரும் மழையும் நிறைந்த காலமாகும் (28:2). மால்தாவில் பவுல் மூன்று மாதங்கள் தங்கினார். அப்போது ஒரு பாம்பின் தாக்குதலிலிருந்து புதுமையாகத் தப்பினார். அதனால் மால்தா மக்கள் பவுலை ஒரு கடவுளாகக் கருதினர் (8:3-6). பவுல் தீவின் தலைவனான புப்லியுவின் தந்தையையும் பலரையும் குணப்படுத்தினார் (8:7-10).

யூத, கிறித்தவக் கல்லறைகள் பல மால்தாவில் உள்ளன. கிறிஸ்தவக் கல்லறைகள் 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பர்.

மாவாய் (MAAI - இரக்கமுள்ள)

எருசலேமின் மதிற் சுவர் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டபின் அம்மதிலை ஆண்டவனுக்கு அர்ப்பணித்தனர். அந்த ஊர்வலத்தில் மாவாய் என்ற பாடகரும் கலந்து கொண்டார் (நெகே 12:36).

மாவு (FLOUR)

இது நல்ல மாவு என்றும் அழைக்கப்பட்டது. இது உமியுடன் அரைக்கப்பட்ட மாவிலிருந்து வேறுபட்டதாகும். இந்த மாவு கோதுமை மணியின் உள் பருப்பிலிருந்து மட்டும் அரைத்து எடுக்கப்பட்டது. இவ்வாறு தானியத்திலிருந்து தயாரிக்கப்படும் மாவு ''கொழுமையான கோதுமை'' என்று அழைக்கப்படுகிறது (உப 32:14; சங் 81:16; 147:14). எனவே, இஃது ஒரு சொகுசு உணவு ஆகும் (2 அர 7:1; எசே 16:13; திருவெளி 18:13). அப்படியிருந்த போதிலும் சாதாரண மக்களும் இதைப் பயன்படுத்தினார்கள். சாராள் இந்த மாவிலிருந்து மூன்று அன்னியர்களுக்கு ரொட்டி செய்தாள் (ஆதி 18:6). இஃது உணவுக் காணிக்கைகளில்தான் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது (யாத் 29:2; லேவி 2; 7; எண் 15: 28-29). இம்மாவு எண்ணெயோடு கலக்கப்பட்டு காணிக்கையாக்கப்பட்டது.

மாவோக்கு (MAOCH - ஏழ்மையான, நெஞ்சோடு கட்டப்பட்ட)

மாவோக்கு ஆக்கிசின் தந்தையும், காத்தின் அரசனுமாவார் (1 சாமு 27:2). தாவீது, தன்னை இடைவிடாது துரத்தி வந்த சவுலை விட்டு ஓடி அடைக்கலம் தேடி இவரிடமே சென்றார். இவர் ஆக்கிசின் தந்தையாகிய மாக்கா (3) எனக் கூறுவதும் உண்டு (1 அர 2:39). ஆனால், மாக்கா முதலாவது ஆக்கிசின் மகனாகவும், மாவோக்கின் பேரனாகவும் இருப்பதே சாத்தியம். ஏனெனில், மாக்காவின் காலம் பிந்தியது.

மாவோன் (MAON - குடியிருப்பு) - ஆள்

காலேபின் வழிவந்த இவர் சம்மாயின் மகனும், பெத்சூரின் தந்தையும் (1 நாள் 2:45) ஆவார். நாளாகமத்தின் மற்றொரு பகுதியில் இதனை ஒரு கிராமத்தையோ, நகரத்தையோ குறிக்கும் சொல்லாகவோ, அங்கு வாழ்ந்தவர்களிடையே நிலவி வந்த உறவைக் குறிப்பதாகவோ கொள்ளலாம்.

மாவோன் (MAON - குடியிருப்பு) - இடம்

யூதாவின் மலைநாட்டு மாவட்டத்தின் முக்கிய நகரம் இது (யோசு 15:55). யூதாவின் கர்மேலுக்குத் தெற்கே 2 கி.மீ. தொலைவிலும், எபிரோனிலிருந்து 14 கி.மீ. தொலைவிலும் உள்ள தேல் மயிம் என்ற இடமே இஃது எனக் கூறுகின்றனர். இதன் குன்றுப்பகுதிகளில் காணப்படும் சில சிதைந்த பகுதிகள் தாவீதின் காலத்தில் சிலர் இவ்விடத்தில் வாழ்ந்ததைக் காட்டுகின்றன. இப்பகுதிகளில் சுவர் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. மாவோன் இதனைச் சுற்றியுள்ள சமவெளியின் நிலங்

களைப் பாதுகாப்பதற்குரிய இடமாகப் பயன்பட்டிருக்கலாம் (1 சாமு 25:27தொ).

தாவீது சவுலிடமிருந்து தப்பி மாவோனுக்குக் கிழக்கேயுள்ள மாவோன் பாலை வனத்தில்தான் அடைக்கலம் புகுந்தார். அவரைத் தொடர்ந்து வந்த சவுல் பெலிஸ்தியரின் திடீர்ப் படையெடுப்பைப் பற்றிக் கேள்விப்பட்டதும்தான், தாவீதைத் தொடர்வதைக் கைவிட்டு, திரும்பிச் சென்றார் (1 சாமு 23: 24-25). மாவோனில் இருந்த நாபால் ஒரு காலேபியர்; நிலங்கள் அழியாமல் பாதுகாத்த தாவீதுக்கு அவ்விடத்தில் தங்க வசதி தர மறுத்தார் (1 சாமு 25:2 தொ).

மாற்கு எழுதிய நற்செய்தி (MARK, GOSPEL ACCORDING TO)

1. முன்னுரை: ஆதிக் கிறிஸ்தவப் பாரம்பரியம், நற்செய்தியின் இரண்டாவது வடிவத்தை மாற்கு எழுதியதாக ஒருமுகமாகச் சான்று கூறுகிறது. இந்நூல் நாம் கொண்டிருக்கும் நான்கு நற்செய்திகளில் சிறியதாகும். ஆனால், அவைகளில் காலத்தால் முந்தியது. ஆயினும், அரமேயிக்கு மொழியில் புனித மத்தேயு முதல் நற்செய்தியை எழுதியதாகப் பாரம்பரியம் கூறுவதால், கிரேக்க மத்தேயு முதலாவதாகவும், மாற்கு இரண்டாவதாகவும் எண்ணப்பட்டது. இந்நூல் மத்தேயுவின் சுருக்கம் என்று பல காலமாகக் கருதப்பட்டதால், இஃது அவ்வளவு முதன்மை பெறவில்லை; முக்கியத்துவம் அடையவில்லை. ஆனால், சமீப காலத்தில் அறிஞர்கள் இந்நூலின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் ஆராய்ந்து அறிந்துள்ளனர்.

2. பாரம்பரியச் சான்றுகள்: ஆதித் திருச்சபையின் பாரம்பரியம் இந்நூலை மாற்குதான் எழுதினார் என்று ஒருமுகமாகக் கூறுகிறது என்றோம். அப்பாரம்பரியத்தினின்று சில சான்றுகள் தருவது சாலச் சிறந்தது. காலத்தால் முந்திய சான்றாளர் பாப்பியசு என்பவராவர். இவரை மத்தேயுவைப் பற்றிக் கூறுங்கால் சாட்சியாகச் சுட்டிக்காட்டினோம். இவர் யார்? பிரிகியாவிலுள்ள எராப்போலியின் ஆயராவர். இவர் கி.பி. 130-க்கு முன் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இவர் ''ஆண்டவருடைய வாக்குகளுக்கு விளக்கம்'' என்ற தலைப்பில் ஐந்து நூல்களை எழுதினார். அவை நமக்குக் கிடைத்தில. ஆனால், அவற்றிலிருந்து சில பகுதிகளை யுசேபியு என்ற திருச்சபை வரலாற்று ஆசிரியர் தமது நூலில் தருகிறார். பாப்பிசு, யோவான் என்ற முதியோரின் (இவர் அப்போஸ்தலரான யோவானா, வேறொருவரா என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை) கூற்றைச் சான்றாகத் தருகிறார்: ''மாற்கு பேதுருவின் (மொழிபெயர்ப்பாளர்) போதனையை விளக்கிக் கூறியவர். தாம் நினைவிற் கொண்ட ஆண்டவருடைய சொல், செயல் யாவற்றையும் கவனத்தோடு எழுதினார். ஆனால், ஒழுங்கு முறையுடன் எழுதவில்லை'', என்று யோவான் என்ற முதியோர் கூறினார். மேலும், இக்கூற்றுக்கு விளக்கமாகவும் மாற்கின் நற்செய்தியில் ஒழுங்குமுறையில்லை என்று குறை கூறியவர்களுக்குப் பதில் அளிக்கும் முறையில், அதே யோவான் என்ற முதியோர் பின் வருமாறு கூறுகிறார்: ''இவர் (மாற்கு) ஆண்டவருடைய போதனையை நேரில் கேட்டதுமில்லை; அவரோடு அப்போஸ்தலர்களைப்போல் வாழ்ந்ததுமில்லை; ஆனால், பிற்காலத்தில் பேதுருவைப் பின்பற்றினார். பேதுருவோ, ஆண்டவருடைய வாக்குகளை ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையுடன் போதிக்கவில்லை. தமக்குச் செவிமடுப்போரின் தேவைக்கு ஏற்பத் தமது போதகத்தை அமைத்துக் கொண்டார். ஆகவே, மாற்கும் தாம் நினைவில் கொண்டிருந்த அளவு, இவற்றைத் தவறில்லாது எழுதிவைத்தார். ஏனெனில், தாம் கேட்டவற்றில் ஒன்றையும் விட்டுவிடாதிருக்கவும், தவறான ஒன்றையும் கூறாதிருக்கவும் மிகவும் கவனமாயிருந்தார்''.

இக்கூற்றில், மாற்கு பேதுருவைச் சார்ந்து எழுதினார், அவரது போதக முறையைப் பின்பற்றி எழுதினார், தவறில்லாது துல்லியமாக எழுதினார் என்பவை தெளிவு. இக்

கூற்றில் அடங்கியவை எவ்வளவு உண்மை யானவை என்று உறுதியுடன் கூறுதல் கடினம். இன்று அறிஞர் பலர் இக்கூற்றை உண்மை என்று ஏற்றுக்கொள்வர். இது பற்றி அறிஞரிடையே முன்பு காணப்பட்ட ஐயம் இப்போது காணப்படுவதில்லை. பேதுரு கிரேக்க, இலத்தீன் மொழிகளை அறிந்திருக்க முடியாது. ஆகையால், அவருக்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் அவசிய மாகும். இப்பெரும் அலுவலை மாற்கு ஏற்றுக்கொண்டார் எனலாம். ''ஒழுங்கு முறைப்படி அல்ல'' என்ற சொற்றொடர் கால வரை முறையைக் குறிக்கலாம். அல்லது அறிஞர் பலர் கருதுவதுபோல் குறிப்பிட்ட கருத்துக்கள் தழுவிய முறை யான திட்ட அமைப்பைக் கொண்டிருக்க வில்லை என்பதைக் குறிக்கலாம். ஏனெனில், மாற்கில் திட்ட அமைப்பு அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும், மாற்கு தவறின்றிக் கவனமாய் எழுதினார்.

பாப்பியசுக்கு முன், மாற்கின் நற்செய்தி பற்றிய புறச்சான்று ஒன்றும் நமக்குக் கிடைத்திலது. ஆயினும், உரோமைக் கிளமந்து, போலிக்கார்ப்பு ஆகியோருடைய நூல்களிலும், பர்னபா முதலியோருடைய கடிதங்களிலும் மாற்கின் கடிதங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. லூக்காவின் நற்செய்தியை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்ற நற்செய்திகளை ஏற்க மறுத்த மார்சியனுக்கு எதிராக, ஒவ்வொரு நற்செய்திக்கும் ஒரு முன்னுரை எழுதுவது இரண்டாம் நூற்றாண்டின் வழக்கம். அதிலே ''மாற்கு, பேதுருவின் மொழி பெயர்ப்பாளர். பேதுரு மரணத்துக்குப் பிறகு இவர் இத்தாலிய தேசப்பகுதியில் இந்நற்செய்தியை எழுதினார்'' என்று காணக்கிடக்கிறது. இதே கூற்றைத் திருச்சபையின் தந்தையராகிய கிளமந்து, ஓரிசன் ஆகியோர் தெளிவாகக் கூறுகின்றனர்.

இவற்றையெல்லாம் ஆராயுங்கால் இந்நற்செய்தியை மாற்குதான் எழுதினார் என்றும், அவர் பேதுருவின் சீடர் என்றும் ஐயமற அறியலாம். ஓர் அறிஞர் கூறுவது போல், நற்செய்திகள் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டன என்று கூற விரும்பும் பாரம்பரியத்திலே, மாற்குதான் இந்நற்செய்தியை எழுதினார் என்று கூறுவதற்குப் போதிய அடிப்படையும், சான்றும் இருந்திருக்க வேண்டும். இல்லையெனில் இப்பாரம்பரியம் எழுந்திருக்க முடியாது; நீடித்திருக்க முடியாது.

3. ஆசிரியர்: புதிய ஏற்பாட்டில் பல தடவைகள் மாற்கு என்னும் பெயர் வருகின்றது *(அ.ப. 12:25; கொலோ 4:10; பில 24; 2 திமொ 4:1; 1 பேதுரு 5:13).* இவ்வாறு பலதடவை குறிப்பிடப்படும் மாற்கு என்றழைக்கப்பட்ட யோவான்தான் இந்நற்செய்தியை எழுதியவர் என்பதனை ஐயுறக் காரணங்கள் இல்லை. இவர் யூதர்களிடையே யோவான் என்றும், புற இனத்தவரிடையே மாற்கு என்றும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இவர் எருசலேமில் வாழ்ந்த மரியா என்ற பெண்மணியின் மகனாவர் (அ.ப. 12:12). முதலாம் ஏரோது அக்கிரிப்பா, பேதுருவைச் சிறைப்படுத்திய போது, மாற்கின் வீட்டில் பலர் செபம் செய்வதற்குக் கூடியதாக வாசிக்கிறோம். இவர் பர்னபாவுக்கு உறவினர் (கொலோ 4:10). பர்னபா லேவியர் ஆகையால், மாற்கும் லேவியராக இருக்க வேண்டும் என்பர் சிலர். பாப்பியசின் கூற்றுப்படி, இவர் இயேசுவைப் பார்த்ததில்லை; சந்தித்ததில்லை. ஆனால், விவிலிய விரிவுரையாளர் சிலர் இயேசு கெத்சமனித் தோட்டத்தில் பிடிபட்டபோது, மேல் ஆடையை விட்டு விட்டுத் தப்பி ஓடிய, பெயர் குறிக்கப்படாத இளைஞன் (மாற் 14:51-52) மாற்காக இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். ஏனெனில், இந்நிகழ்ச்சி மாற்கின் நற்செய்தியில் மட்டும்தான் காணக்கிடக்கிறது.

பர்னபாவின் வழியாக, மாற்கு பவுலை அறிந்திருக்க வேண்டும். ஏரோது அக்கிரிப்பாவின் வேதகலாபனைக்குப்பின், பர்னபாவும் பவுலும் அந்தியோக்கியாக் கிறிஸ்தவர்களின் காணிக்கையைப் பஞ்சத்தால் வருந்திய எருசலேம் கிறிஸ்தவர்களுக்கு அளித்தபின் மாற்கைத் தங்களோடு கூட்டிச்

சென்றனர் (அ.ப. 12:25). அவர்களின் முதல் வேதபோதகப் பயணத்தில் மாற்கை ''உதவியாளனாகச்'' சைப்பிரசுக்குக் கூட்டிச் சென்றனர் (அ.ப. 13:5). அவர்களோடு சைப்பிரஸ், பம்பிலியா, சிறிய ஆசியா ஆகிய பகுதிகளுக்குச் சென்றார் மாற்கு. பம்பிலியாவிலுள்ள பெருகை என்னுமிடத்தில், ஏதோ ஒரு காரணத்தினால் அவர்களை விட்டு எருசலேமுக்குத் திரும்பினார் (அ.ப. 13:13). இந்நிகழ்ச்சி பவுலுக்கும் பர்னபாவுக்குமிடையே மனவருத்தம் ஏற்படக் காரணமாயிற்று. பவுல் மாற்கின்பால் கொண்ட நம்பிக்கையை இழந்தார். பவுல், பர்னபா ஆகியோரின் இரண்டாம் வேதபோதகப் பயணத்தில், பவுல் மாற்கைக் கூட்டிப் போக மறுத்துவிட்டார் (அ.ப. 15:36-38). பர்னபாவோ மாற்கைக் கூட்டிப் போக விரும்பினார். அதனால் மனவேற்றுமையின் விளைவாக, பவுலும் பர்னபாவும் பிரிந்தனர். மாற்கு பர்னபாவோடு சைப்பிரசுக்குச் சென்றார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, மாற்கு பவுலின் நன்மதிப்பை மீண்டும் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் உரோமையில் பவுல் கைதியாக இருந்தபோது மாற்கும் அவரோடு இருந்ததாக, பவுல் கைதியாக இருந்த காலத்தில் எழுதிய திருமுகங்களில் வாசிக்கின்றோம். பவுல் மாற்கைத் தம் ''உடன் உழைப்பாளி'' என்று குறிப்பிடுகிறார் (பில 24). கொலோ 4:10 பவுலோடு மாற்கு உரோமையில் இருந்தார் என்றும், 2 திமொ 4:11 பவுலோடு மாற்கு தொடர்பு கொண்டிருந்தார் என்றும் கூறுகின்றன. பேதுரு, (ஒருவேளை) உரோமையிலிருந்து எழுதிய முதல் திருமுகத்தில் தமது ''மகன்'' என்று குறிப்பிடுவது ஒருவேளை மாற்காக இருக்கலாம் (1 பேதுரு 5:14). பேதுருவையும் மாற்கையும் இணைக்கும் புதிய ஏற்பாட்டுச் சான்று இஃது ஒன்றுதான். ஆயினும், ஒரு தலைமுறை பிந்திய பாப்பியசு, மாற்கு பேதுருவின் மொழிபெயர்ப்பாளர் என்றும், மாற்கு எழுதிய நற்செய்தி பொருளளவில் பேதுருவின் போதகத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறுகிறார். இப்பாரம்பரியம் இதுநாள் வரை நிலைத்துள்ளது. மாற்கு அலக்சாந்திரியாவில் ஆயராக இருந்ததாக யுசேபியு கூறுகிறார். இக்கூற்றின் உண்மை ஐயத்திற்குரியது. இக்கூற்றிற்கு ஆதாரம் ஒன்றுமில்லை. ஏனெனில், அந்நகரின் ஆயர் பட்டியலில் மாற்கின் பெயர் காணப்படவில்லை. மற்றபடி, மாற்கைப் பற்றிய விவரங்கள் புதிய ஏற்பாட்டில் எங்கணுமில்லை. தாம் யார் என்றோ, தம்மைப்பற்றிய விவரங்களையோ மாற்கு தமது நற்செய்தியில் கூறவில்லை.

கிறிஸ்தவ ஓவியங்களில் மாற்கு நற்செய்தியுடன் தோன்றுகிறார். பல இடங்களில் மாற்கிற்கே உரியதாகக் கருதப்படும் அடையாளமான இறக்கையுள்ள சிங்கமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வடையாளம் இரு விவிலியக் கருத்துக்களைக் கொண்டுள்ளது. மாற்கு தமது நற்செய்தியின் தொடக்கத்தில் திருமுழுக்கு யோவானைப் ''பாலை நிலத்தில் குரல் ஒன்று கேட்கிறது'' (1:3) என்ற தொடரால் சுட்டிக்காட்டுகிறார். இதை ஓவியர்கள் கர்ச்சிக்கும் சிங்கத்திற்கு ஒப்பிட்டனர். எசேக்கியேல் காட்சியில் காணப்படும் இறக்கையுள்ள நான்கு விலங்குகளில் ஒன்று இந்நற்செய்தியாளரைச் சுட்டுவதாகப் பாரம்பரியம் கருதியது. இவ்விரண்டையும் உள்ளடக்கிய இறக்கையுள்ள சிங்கத்தை மாற்கின் அடையாளமாகப் பாரம்பரியம் கருதியது. ஓவியர் சிலர் மாற்கைப் பேதுருவோடு ஒன்றித்துக் காட்டுகின்றனர். இவரது திருநாளை ஏப்பிரல் மாதம் 25-ஆம் நாள் கொண்டாடுகிறோம். இவ்விழா கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து கொண்டாடப்படுகிறது.

4. மாற்கும் பேதுருவும்: இருவரையும் இணைத்துக் கூறும் பாரம்பரியச் சான்றுகளில் சிலவற்றைப் பார்த்தோம். இக்கூற்றுக்கு மாற்கின் நற்செய்தியில் சான்றுகள் உளவா? இதற்குச் சார்பாகப் பல காரணங்கள் காட்டப்படுகின்றன. பாலஸ்தீனத்தைப் பற்றியும், சிறப்பாக எருசலேமைப் பற்றியும் பரந்த அறிவைக்

கொண்டுள்ளார் ஆசிரியர். அடிக்கடி பேதுருவின் பெயர் கூறப்படுகிறது. பேதுருவுக்குச் சிறப்பு வருவிக்காத விவரங்கள் (8:33; 14:37) மத்தேயு, லூக்காவில் காணப் படாது மாற்கில் மட்டும் காணப்படுகின் றன. மாற்கின் நற்செய்தி தனது இலக்கியத் தன்மையிலும், திட்ட அமைப்பிலும் அப் போஸ்தலர் பணியில் பேதுரு கொடுக்கும் கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய சுருக்கத் தோடு நெருங்கிய ஒற்றுமை கொண்டிருக் கிறது (அ.ப. 1:21; 10:37-43). இந்நற்செய்தி யில் காணப்படும் நிகழ்ச்சியுரைகள் நேரே கண்டவர் கூறுவதுபோல் உயிருள்ள விதத் தில் அமைந்துள்ளன. இதில் காணப்படும் சிந்தனையும் மொழி நடையும் பேதுருவின் திருமுகங்களில் காணப்படுபவைகளோடு சிறிது ஒற்றுமை கொண்டுள்ளன. ஆகை யால், இந்நூல் பேதுருவின் போதகத்தை அடிப்படையாகக் கொண்டது என்பர்.

ஆனால், மாற்கு எருசலேமில் வாழ்ந்த வர். ஆகவே, பாலஸ்தீனத்தைப் பற்றியும், எருசலேமைப் பற்றியும் நன்கு அறிந்திருப் பதில் தனிச்சிறப்பு ஒன்றுமில்லை. இதற்கு அவர் பேதுருவைச் சார்ந்து எழுத வேண்டி யதில்லை. பேதுரு சீமோன் என ஆறு முறையும், பேதுரு என்று பத்தொன்பது முறையும் பதினேழு நிகழ்ச்சிகளில் குறிக் கப்படுகிறார். இதுவும் இருவருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்த தாகக் காட்டும் விதத்தில் அமையவில்லை என்று கூறலாம். பேதுரு அப்போஸ்தலர் பட்டியலில் முதல்வராகக் கூறப்படுவது எல்லா நற்செய்திகளுக்கும் பொதுவானது. மாற்கு பேதுருவுக்குச் சிறப்பு வருவிக்காத வைகளைக் கூறுதல் பேதுருவுக்கு இழிவைத் தரவில்லை. ஏனெனில், ஏற்கெனவே பேதுருவின் பதவியும் பெரு மையும் யாவராலும் ஏற்கப்பட்டு உறுதி பெற்றிருந்தது. மாற்கு வாய்மொழிப் பாரம் பரியத்தைக் கூறுகிறாரே ஒழிய, பேதுருவைப் பற்றித் தமக்கு மட்டும் தெரிந்த ஒரு நிகழ்ச்சியையும் கூறவில்லை. உயிருள்ள விதத்தில் கூறுதலோ, கருத் தோன்றிப்போ ஆதி அப்போஸ்தல மறை போதகத்திற்கு உரியவையாகும்.

ஏற்கெனவே பாரம்பரியம் கூறுவது தவ றாகுமா? ஆகாது. மேற் கூறியவற்றிலிருந்து சிலவற்றை நாம் யூகிக்கலாம். காலத்தால் முந்திய, அப்போஸ்தலர்கள் எளிய போத கத்தை அளிக்கிறது மாற்கின் நற்செய்தி. பாரம்பரியம் பேதுருவையும் மாற்கையும் இணைத்துக் கூறுவதிலிருந்து பேதுரு நிறு விய திருச்சபைகளிலுள்ள, சிறப்பாக உரோமைத் திருச்சபையிலுள்ள வாய்மொழி மறைபோதக மரபை, மாற்கு பொருளள வில் அப்படியே காத்து நமக்கு அளிக்கிறார் எனக் கொள்ளலாம்.

5. யாருக்காக எழுதப்பட்டது?: *மாற்கு, உரோமையில், புற இனக் கிறிஸ்தவர்களுக் காக, அவர்கள் சூழ்நிலைக்கேற்ப தமது நற்செய்தியை எழுதினார் என்று பாரம்பரி யம் ஒருதலையாகக் கூறுகிறது. இக்கூற் றுக்கு இந்நூலில் அகச் சான்றுகள் பலவுள. அரமேயிக்கு சொற்களுக்கும் சொல் வழக்கு களுக்கும் விளக்கம் அளிக்கப்படுகிறது. அரமேயிக்கு மொழியை அறியாதோர்க்கு இவ்விளக்கம் அளிக்கப்படுகிறது என்பது வெளிப்படை. யூதப் பழக்க வழக்கங்களும் விளக்கப்படுகின்றன. இவ்விளக்கங்கள் மற்ற நற்செய்திகளில் காணப்படுவதைவிட மாற்கில் அதிகமாகக் காணப்படுகின்றன (2:26; 3:17; 5:41; 7:3; 11:34; 14:12-36; 15:22.34.42).*

புதிய ஏற்பாட்டின் எந்த நூலையும்விட மாற்கில் இலத்தீன் சொற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆகையால், இஃது உரோமையருக்காக எழுதப்பட்டது என்று முடிவுகட்டி விடக்கூடாது. ஏனெனில், இவற்றில் பல அக்காலத்திய படைத்துறைச் சொற்களும், கலைச்சொற்களும் ஆகும். உரோமையில் இலத்தீனை விட கிரேக்க மொழியே அதிகம் பேசப்பட்டது. ஆயி னும் படைத்துறை, நீதி வழங்கல், பொரு ளாதாரம் ஆகியவை சார்ந்த சொற்கள் கிரேக்க மொழிமட்டும் பேசப்படும் இடங் களில்கூட, இலத்தீன் மொழியில்தான் வழக் கில் இருந்தன. ஆயினும், இரண்டு இடங் களில் கிரேக்கச் சொற்களுக்கு இலத்தீனில் விளக்கம் அளிக்கப்படுகிறது (12:42; 15:16).

இவை மாற்கின் நற்செய்தி உரோமையில் எழுதப்பட்டது என்ற பாரம்பரியத்திற்கு ஆதரவாக இருக்கின்றன.

பழைய ஏற்பாட்டிலிருந்து, மத்தேயுவை விட மாற்கு குறைந்த அளவிலேயே வாசகங்களை எடுத்துக் காட்டுகின்றார். மோசேயின் சட்டத்துக்கும், இயேசுவின் முதன்மையான அலுவல் யூதர்களிடையே உழைப்பதே என்ற உண்மைக்கும் இந்நூல் முக்கியத்துவம் அளிக்கவில்லை. இயேசுவுக்கும் பரிசேயர், மறைநூலறிஞர் ஆகியோருக்குமிடையே நடந்த தர்க்கங்கள், மற்ற நற்செய்திகளில் கூறப்படுவதுபோல் அழுத்திக் கூறப்படவில்லை. இவை யாவும், இந்நற்செய்தி புற இனக் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது என்பதை வலியுறுத்துகின்றன.

இந்நூல் எகிப்தில் எழுதப்பட்டது என்றும், அந்தியோக்கியாவில் எழுதப்பட்டது என்றும் ஒரு சிலர் கூறியுள்ளனர். ஆனால், இக்கூற்றுகளுக்கு ஆதாரம் ஒன்றுமில்லை.

6. எப்போது எழுதப்பட்டது?: மாற்கின் நற்செய்தி எப்போது எழுதப்பட்டது என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. இந்நூல் பேதுரு, பவுல் ஆகியோர் மரணத்திற்குப் பின் (கி.பி. 64) எழுதப்பட்டது என்று இரனேயு கூறுகின்றார். மார்சியனுக்கு மாறாக எழுதப்பட்ட முன்னுரையும் இதனையே கூறுகிறது. பேதுரு வாழ்ந்தபோதே உரோமைக் கிறிஸ்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மாற்கு தமது நூலை எழுதியதாக அலக்சாந்தரியாவின் கிளமந்து கூறுகிறார். பேதுரு பார்த்து ஒப்புதல் அளித்ததாகவும் கூறுகிறார். உரோமைத் திருச்சபை ஒப்புதல் அளித்து ஏற்றுக் கொண்டதையே அவர் இவ்வாறு கூறியிருக்கலாம். இவ்விரு கூற்றுகளில் எது உண்மை என்று கண்டறிதல் கடினம். இக்கால விவிலிய ஆய்வாளர்கள் மாற்கு கி.பி. 60-70-க்குள் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். இந்நூல் கி.பி. 70-க்குப் பின் எழுதப்பட்டிருக்க முடியாது என்பர் சிலர். அப்படி எழுதப்பட்டிருந்தால் கி.பி. 70-இல் நடந்த எருசலேம் அழிவைப் பற்றித் தெளிவாகக் கூறியிருந்திருப்பார் ஆசிரியர். அதைப் பற்றி விவரங்கள் காணப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு காணப்படவில்லை. ஆகையால், 70-க்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பர். ஆனால், ஒன்று கூறப்படவில்லை, ஆகையால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூறுதல் எப்போதும் உறுதியற்ற வாதமாகும். கி.பி. 70-க்கு முன்னே நிலையான வடிவம் பெற்ற வாய்மொழிப் பாரம்பரியத்தைப் பிரமாணிக்கமாய்க் கூறுவதால் எருசலேம் அழிவைப் பற்றி மாற்கு ஒன்றும் கூறாதிருக்கலாம். ஆயினும், ஆய்வாளர்கள் மாற்கு, 70-க்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று ஒருமனதாகக் கூறுகின்றனர். மேலும் லூக்கா, தமது நற்செய்தியில் மாற்கின் நற்செய்தியைப் பயன்படுத்தியிருப்பதால், மாற்கு லூக்காவுக்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும். இவற்றிலிருந்து கி.பி. 65-70-க்குள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் கூறினால், அதனை உண்மை என்று கொள்வதில் தவறொன்றுமில்லை.

7. மூலங்கள்: பேதுருவின் மொழிபெயர்ப்பாளராக மாற்கு விளங்கினார் என்ற பாரம்பரியத்தைக் கூறினோம். அதனால் மாற்கு கையில் ஏட்டை வைத்துக் கொண்டு பேதுரு சொல்லச் சொல்ல எழுதினார் என்று கருதக்கூடாது. மாற்குக்குப் பேதுருவின் போதகமானது மூலம் என்பது உண்மையே. ஆனால், பல மூலங்களில் இதுவும் ஒன்று; ஒரே மூலம் அன்று. பல இலக்கிய மூலங்களை மாற்கு பயன்படுத்தியிருக்க வேண்டும். அவற்றில் சிறப்பானவை இரண்டு. இரண்டும் பேதுருவின் போதகத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றுள் ஒன்று மத்தேயுவின் அரமேயிக்கு நற்செய்தியின் மொழிபெயர்ப்பு. இஃது அப்போஸ்தலர்களின் போதகத்தின் சுருக்கமாகும். இது பொருளளவில் பேதுரு பாலஸ்தீனத்தில் போதித்த நற்செய்தி அறிக்கையாகும். மற்றொன்று பேதுரு உரோமையருக்குப் போதித்த நற்

செய்தியறிக்கையாகும். பின்னதன் காரண மாக மாற்கின் நற்செய்தியில் ஒருவித விறுவிறுப்பு இருக்கிறது; நேரில் கண்டவர் கூறுவதாகத் தோன்றுகிறது. முன்னதன் காரணமாக மாற்கில் மொழி நயமும் சில இடங்களில் காணப்படுகிறது.

இந்நற்செய்தியை ஆராயுங்கால் இந் நூலுக்குப் பிற மூலங்களும் இருந்திருக்க வேண்டும் எனத் தெரியவருகிறது. ஓர் அறிஞர் இந்நூலை முப்பெரும் பகுதி களாகப் பிரிக்கின்றார். 1) ஏற்கெனவே பாரம்பரியத்தின் அடிப்படையில், அமைக் கப்பட்ட நிகழ்ச்சியுரை, வாக்குகள் அடங் கிய தொகுதி. இவை 1:1-13; 9:30-35; 10:1-31; 10:32-55; 11:1-25. 2) ஆள் சான்றின் அடிப்படையில், ஒருவேளை பேதுருவின் நேரடிச் சான்றின் அடிப்படையில், அமைக் கப்பட்ட நிகழ்ச்சியுரைத் தொகுதி. இவை 1:21-39; 4:35-5:43; 6:30-56; 7:24-37; 8:27-9:29; 14:1-16. 3) வாக்குகள், அறிவிப்புகள் அடங் கிய நிகழ்ச்சியுரைத் தொகுதி. இவை 2:1-3:6; 3:19-35; 4:1-35; 11:27-12:44; 13:5-37. முதலாவது மூன்றாவது தெகுதிகளை வகுக்க ஏதுவான இயேசுவின் வாக்குகள், செயல்கள் அடங்கிய வாய்மொழிப் பாரம் பரியம் ஏற்கெனவே இருந்திருக்க வேண் டும். இவைகளில் சில எழுத்து வடிவமும் எடுத்திருக்கக்கூடும். ஆயினும், மாற்கின் நற்செய்தியில் இவை தொகுக்கப்பட்டிருக் கும் முறைக்கு மாற்கே பொறுப்பாளி. 1:14 தொ; 3:7-12 ஆகிய பகுதிகளில் காணப் படும் இணைப்புப் பகுதிகள் மாற்கி னுடையவையாகும்.

மாற்குக்கு மட்டும் உரிய பகுதிகள் சிலவே. அவை: செவிடனும் ஊமையனு மானவனைக் குணப்படுத்துதல் (7:31-37); பெத்சயிதாவைச் சார்ந்த குருடனுக்குப் பார்வை அளித்தல் (8:22-26); விதையின் உவமை (4:26-29); இயேசுவின் உறவினர் பற்றிய நிகழ்ச்சி (3:20 தொ); கெத்சமனித் தோட்டத்து இளைஞன் (14:51 தொ)

மாற்கு தமக்குக் கிடைத்த மூலங்களை எவ்வாறு பயன்படுத்தினார் என்று ஆராயுங் கால், கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றி யிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்ற னர். 1) பாரம்பரியத்திலிருந்து பெற்ற தனி நிகழ்ச்சிகளையும், ஏற்கெனவேயுள்ள தொகுப்புகளையும் சிறிதும் மாற்றாது, ஏறக்குறைய அப்படியே தமது நற்செய்தி யில் ஏற்றுக்கொள்கிறார். 2) வெகு அரி தாகச் சில இடங்களில் சில பகுதிகளுக்கு விளக்கம் அளிக்கிறார். 3) பாரம்பரியத்தில் சில பகுதிகள் ஏற்கெனவே பொருள் சார்ந்த தலைப்பு அடிப்படையில் தொகுக்கப்பட்டி ருந்தால், அவைகளுக்கு நிகழ்ச்சியுரை அமைப்பைக் கொடுக்கமாட்டார். 4) ஒரு நிகழ்ச்சியைப் பற்றி இருவகைப் பாரம்பரி யம் இருந்தால், அவற்றை ஆராய்ந்து தேர்ந்தெடுக்காது அல்லது ஒற்றுமைப் படுத்திக் கூறாது இரண்டு பாரம்பரியத்தை யும் கூறுவார். அப்பம் பலுகியது இரு முறை கூறப்படுவது (6:30-44; 8:1-10) மேற்கூறிய முறை அமையப் பெற்றதற்குச் சான்றாகும். மாற்கின் நற்செய்தி இரட்டை விவரிப்புகளைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. பேதுரு மட்டும்தான் மாற் குக்கு மூலம் என்றால் இவ்விதநிலை அவரது நூலில் காணப்பட மாட்டாது. மேற்கூறியவற்றிலிருந்து, மாற்கு பல மூலங்களைப் பயன்படுத்தினர் என்றும், அவற்றில் நிகழ்ச்சிகள் பல வேறுபாடு களுடன் காணப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறியலாம்.

8. குறிக்கோள்: மாற்கே கூறுவதுபோல் ''கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்து வின் நற்செய்தியை'' (மாற்கு 1:1) மக்க ளுக்கு அளிப்பதே அவரது குறிக்கோளா கும். அப்போஸ்தலர்களின் போதகத்தின் குறிக்கோளும் இதுவே. இயேசு, கடவுளின் மகன் ஆகிய சொற்களின் பொருளை மாற்கின் வாசகர்கள் ஒரு சிறிது அறிந்திருந் தனர் என்றே கூற வேண்டும். இதற்கு, மாற்கிற்கு முன் எழுதப்பட்ட பவுலின் திருமுகங்கள் சான்று கூறுகின்றன (உரோ 1:7; 1 கொரி 1:3; பிலி 2:5-11; கொலோ 1:15-20). இயேசுவே மீட்பர், இறைமகன். இதுவே திருச்சபையின் விசுவாசம். இவ்

விசுவாசத்திற்கு விளக்கம் அளிப்பதே இந் நூலின் முதல் நோக்கம்.

மேலும், இந்நூல் புற இனத்தவருக்காக எழுதப்பட்டது. ஆகவே, இந்நூலில் மறை போதகத் தன்மை மிளிர்வதைக் காணலாம். இவ்விரண்டு நோக்கங்களும் இந்நற்செய்தி யில் அருஞ்செயல்களுக்கு ஏன் முக்கியத் துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியத் துணை செய்கின்றன. அதனோடு நற்செய்தியின் திட்டத்தையும் நிர்ணயிக் கின்றன.

9. திட்டம்: தலைப்பு: 1:1-முதல் வச னத்தைப் பலர் முழுநூலுக்கும் தலைப் பாகக் கொள்வர். அறிஞர் சிலர் அதை 2,3-ஆவது வசனங்களோடு சேர்த்து வாசிப் பர். இதன்படி, இயேசு கிறிஸ்துவிடம் கொண்ட விசுவாசத்தினால் வரும் மீட்பின் நற்செய்தி எனப்பொருள் கொள்வர். 2,3-ஆம் வசனங்களில் வரும் எசாயாவின் இறைவாக்கு நிறைவேறுகிறது என்று இந் நூல் காட்டுவதாகக் கொள்வர். ஆனால், முதலாம் வசனத்தை நூலின் தலைப்பாகக் கொள்ளுதல் மேலாகும். ஏனெனில், இது நற்செய்தியின் நோக்கத்தை எடுத்துக் காட்டு கிறது. அதாவது, இறை மகனான இயேசு கிறிஸ்துவின்பால் கொண்ட விசுவாசத்தின் விளைவாக வரும் மீட்பின் போதகம் திருமுழுக்கு யோவான், இயேசு ஆகியோ ரின் பணியால் செயல்படுகிறது என்று காட்டுகிறது.

முன்னுரை: 1:2-13 திருமுழுக்கு யோவான் போதித்தல்; இயேசுவின் திருமுழுக்கு; அவர் சோதிக்கப்படல்.

இம்முன்னுரை திருமுழுக்கு யோவானை யும், இயேசுவையும் அறிமுகப்படுத்து கிறது. வரலாற்றிலே இருவரையும் இணைக்கிறது. இவ்விருவரின் வழியாக இறைவன் வரலாற்றில் புகுகின்றார். சாத்தா னின் ஆதிக்கத்தை அழித்தொழிக்கும் அலு வல் தொடங்குகிறது.

அ) கலிலேயாவில் இயேசுவின் திருப் பணி: (1:14-6:6).

1:14-45 கப்பர்நாகுமிலும், அதை அடுத்த பகுதிகளிலும் இயேசுவின் திருப்பணி: முதல் சீடர்களை அழைத்தல்; அவரது போதகம் கேட்டு மக்கள் மலைத்தல்; கப்பர்நாகுமில் இயேசுவின் பணி; நோய் களைக் குணப்படுத்துதல்; பேய் ஓட்டு தல்; இயேசுவின் புகழ் பரவுதல்; தொழு நோயாளி குணமடைதல்.

2:1-3:6 இயேசுவுக்கும் மறைநூலறிஞர்களுக் குமிடையே சச்சரவுகளும் தர்க்கங்களும்; மறைநூல் அறிஞரும் பரிசேயரும் திகைக் கின்றனர்; சினம் கொள்கின்றனர்; ஐந்து தர்க்க அறவுரைகள்.

3:7-35 மக்கள் திரள் இயேசுவைப் பின்பற் றல்; பன்னிரு அப்போஸ்தலர்களைப் பொறுக்கி எடுத்தல்; மறைநூல் அறி ஞரின் குற்றச்சாட்டுகள்.

4:1-34 உவமைகள்

4:35-5:43 கலிலேயாக் கடலருகில் அருஞ் செயல்கள்; அருஞ்செயல்கள் வழியாக அப்போஸ்தலர்களின் விசுவாசத்தை உறு திப்படுத்துகிறார்.

6:1-6 நாசரேத்தூரார் இயேசுவை ஏற்க மறுத்தல்.

ஆ) இயேசுவின் பயணங்கள்: (6:6-10:52).

6:6-13 அப்போஸ்தலர்களை அனுப்புதல்.

6:14-29 ஏரோதின் அச்சமும், திருமுழுக்கு யோவானின் மரணமும்.

6:30-56 5,000 பேருக்கு உணவு அளித்தல்.

7:1-23 மாசுபடுத்துதல் பற்றிய பிரச்சனை.

7:24-8:12 பயணமும் திரும்புதலும்; தீர், சீதோன் என்ற பகுதிகளுக்குச் செல்லல்; 4,000 பேருக்கு உணவு அளித்தல்; பல அருஞ்செயல்கள்.

8:13-9:50 பயணமும் திரும்புதலும்;பேதுருவின் விசுவாச அறிக்கை;பாடுகளை முன்னறிவித்தல்; இயேசு ஒளியுருவாதல்; போதகங்கள்.

10-1-52 பெரயா, யூதேயா வழியாக எருசலேமுக்குச் செல்லல்; போதகங்கள்; தர்க்கங்கள்; குருடனுக்குப் பார்வை அளித்தல்.

இ) எருசலேமில் இயேசுவின் பணி: (11:1-13:37).

11:1-26 எருசலேமில் வெற்றி நுழைவு: ஆலயத்தைத் தூய்மையாக்கல்.

11:27-12:44 யூதத் தலைவர்களுடன் தர்க்கம்.

13:1-37 உலக இறுதிக்காலம் பற்றிய அறவுரை.

ஈ) பாடுகளும் உயிர்ப்பும்: (14:1-16:8).

14:1-42 இயேசுவும் அவரது சீடர்களும்; இறுதி இரவு உணவு.

14:43-72 யூத நீதிமன்றத்தின் முன் இயேசு.

15:1-47 உரோமையரின் நீதிமன்றத்தின் முன் இயேசு; சிலுவையில் உயிர் நீத்தல்.

16:1-8 உயிர்த்த இயேசு.

16:9-20 முடிவுரை : பிற்சேர்க்கை.

மேற்கூறப்பட்டதிட்டம் மேலெழுந்தவாரியான பிரிவாகும். இந்நூலில் திட்டம் இல்லாதிருப்பதுபோல் தோன்றுகிறது. ஆயினும், இந்நூலின் மூலங்கள் அறிவிக்க விழைந்தவற்றைப் பிரமாணிக்கமாய் நமக்கு அளிக்கிறது. நன்றாக ஆராய்ந்தால், அதில் ஒரு திட்டம் இருப்பது நன்கு விளங்கும். நற்செய்தியின் திட்டம் (அமைப்பு) இயேசுவைப் பிறர் ஏற்க மறுத்தல், அவரைப் பிறர் தவறாகப் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றைச் சுற்றி அமைகிறது. அவரை ஏற்க மறுத்தல், கலிலேயப் பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் காணப்படுகிறது. இது கலிலேயப் பணியின் முடிவில் நாசரேத்தூரார் இயேசுவை ஏற்க மறுக்கும் செயலிலே உச்சநிலை அடைகிறது. அவரைத் தவறாகப் புரிந்துகொள்ளுதல் சீடர் குழுவிலே தொடங்குகிறது. பாடுகளை மும்முறை அறிவித்தலில் வளர்கிறது. இந்நூலின் அமைப்பின் இரண்டாவது படி பேதுருவின் விசுவாச அறிவிப்பைக் கொண்டுள்ளது. இது வருங்காலத்தில் இயேசுவையும் அவரது போதகத்தையும் சரியானபடி புரிந்து கொள்ளத் துணை செய்கிறது.

இயேசுவின் உண்மையான குணவியல்புகள் கலிலேயப்பணி,பயணங்கள், எருசலேம் பணி ஆகியவற்றில் படிப்படியாகக் காட்டப்படுகின்றன. ஆனால், மாற்குக்கோ, உண்மையான இயேசுவின் முழுவெளிப்பாடு அவரது பாடுகளிலும், உயிர்ப்பிலும் காணப்படுகிறது. இவையின்றி நாம் அவரை அறிந்து கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியாது. இந் நற்செய்தியில் இஃது ஒரு சிறப்பான உறுப்பாகும்.

சிலர் இந்நூலை வேறு விதமாய்ப் பிரிவு செய்வர்: முன்னுரை (1:1-13); திருப்பணி (1:14-13:37); பாடுகள் (14:1-15:47); முடிவுரை (16:1-8). மேலும் திருப்பணியை இரு பிரிவுகளாகக் கொள்வர். முதல் பிரிவு (1:14-8:30): இயேசுவையும் அவரது போதகத்தையும் பற்றிய பல்வேறு கருத்துக்கள் தரப்படுகின்றன. பேதுருவின் விசுவாச அறிக்கையில், இப்பிரிவு உச்சநிலை அடைகிறது எனலாம். இரண்டாம் பிரிவு (8:31-13:47): இயேசுவின் வரவிருக்கும் மரணம் பின்னிலையாக அமைகிறது; அவரது மரணத்துக்கு இட்டுச் செல்கிறது. மேலும், மாற்கு 1:14-15-இலும், 14:1-2-இலும் ஆசிரியர் அளிக்கும் சிறிய முன்னுரைகள், ஆசிரியர் இந்நூலை இரு பகுதிகளாகப் பிரிக்கக் கருதினார் என்று காட்டுவதாக அமைந்துள்ளன. முதல் பிரிவு இயேசுவின் போதக அலுவலை விவரிக்கின்றது (1:14-13:37). இரண்டாம் பிரிவு அவரது பாடுகளையும் மரணத்தையும் விவரிக்கின்றது (14:1-15:47).

மேலும் இயேசு யார் என்ற கேள்விக்கு விடையளிக்கும் வாயிலாக இந்நூலை இரு பகுதியாகப் பிரிப்பர். முதல் பகுதி

இயேசுவே மெசியா என்று காட்டுகிறது (1:14-8.30). இப்பகுதி பேதுருவின் விசுவாச அறிக்கையில் உச்சநிலை அடைகிறது எனலாம். இரண்டாம் பகுதி இயேசுவே மனுமகன் என்று அறிவிக்கிறது (8:31-16:8). இப்பகுதி இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பில் உச்ச நிலை அடைகிறது.

பலரும் பலவாறு இந்நூலைப் பிரித்துத் திட்டம் செய்வதை எடுத்துக் கூறினோம். ஆனால், ஒன்றும் நிறைவுடைய விளக்கமாக அமையவில்லை. மாற்கு எந்தக் கருத்தை மையமாகக் கொண்டு தமது நூலை எழுதினார், எவ்விதத் திட்டத்தை மனதில் கொண்டு தமது நூலை எழுதினார் என்பன பற்றி அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை எனலாம். இஃது அவர்களது ஆய்வுத்திறனுக்குச் சவால் விடுவதாக அமைந்துள்ளது.

10. முடிவுரை பற்றி: முடிவுரை பற்றிக் குறிப்பு எழுதுவது வினோதமாகத் தோன்றலாம். ஆனால், இந்நூலுக்கு இஃது அவசியமாகிறது. ஏனெனில், மாற்கு 16:9-20 என்ற பகுதியைப் பற்றி ஒரு பிரச்சனை உண்டு. இப்பகுதி பல கையெழுத்துச் சுவடிகளில் காணப்படவில்லை. சிலவற்றில் இப்பகுதிக்குப் பதிலாகச் சுருக்கமான முடிவுரை காணப்படுகிறது; சிலவற்றில் நீண்ட முடிவுரை காணப்படுகிறது. திருச்சபையின் தந்தையருள் பலர் இப்பகுதியை அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. இப்பகுதி முதன் முதலாக வேதசாட்சியான யுத்தீன் (இறப்பு 165) எழுதிய நூல்கள், தேசியன் (இறப்பு 170) எழுதிய ஒத்தமை நற்செய்தி, இரனேயு (இறப்பு 202) எழுதிய நூல்கள் ஆகியவற்றில் காணப்படுகிறது.

பொருளடக்கத்திலும், அமைப்பிலும், சொற்றொகுதியிலும், நடையிலும், இப்பகுதி மாற்கு எழுதிய நற்செய்தியின் மற்றப் பகுதிகளோடு ஒத்ததாகத் தோன்றவில்லை. இதன் பொருளடக்கத்தை ஆராயும் பொழுது, இது மற்ற நற்செய்திகளில், சிறப்பாக லூக்காவிலும் (24), யோவானிலும் (2) காணப்படும் காட்சிகளோடு ஒற்றுமையுடையதாகவும் அவற்றின் சுருக்கமாகவும் அமைந்திருக்கிறது. இவை யாவும் இப்பகுதி மற்றொருவரால் எழுதப்பட்டது என்பதைச் சுட்டுவதாக அமைகிறது.

மாற்கு 16:8-ஆம் வசனத்தோடு தமது நற்செய்தியை முடித்தாரா? ''கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக்'' கூற முனைந்தவர், ''அச்சம் அவர்களை மேற்கொண்டது'' என்று முடித்தார் என்றால் அஃது அவ்வளவு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. மேலும், பேதுருவுக்கும் மற்றச் சீடர்களுக்கும் உயிர்த்த இயேசு தோன்றப்போவதாகக் கூறப்படுகிறது (16:7).16:8-ஆம் வசனத்தோடு இந்நற்செய்தி முடிந்தால், இக்காட்சிகளைக் கூறுவதற்கு வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவே, மாற்கின் முடிவுரை தவறிவிட்டதா? அல்லது வேண்டுமென்றே சிலர் நீக்கி விட்டனரா?

மாற்கு தமது நற்செய்தியை முடிக்கு முன்னரே இறந்துபோனார்; ஆகவே, பிறிதொருவர் அதை நிறைவு செய்தார் என்பர் சிலர். இரனேயு இப்பகுதியைக் கையாளும் விதம், இப்பகுதி அப்போஸ்தலர்கள் காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும் என்று காட்டுகிறது. எது எப்படியிருந்தாலும், நமது தாயாகிய திருச்சபை இப்பகுதியும் விவிலியப் பட்டியலுள் முற்றிலும் அடங்கியது என்று ஏற்றுக்கொண்டுள்ளது. இப்பகுதியும் இறையூக்கம் பெற்றது.

11. சிறப்பியல்புகள்: மாற்கின் நடையில் இலக்கிய நயம் இருப்பதாகத் தோன்றவில்லை. அதிலே பேச்சு வழக்கும், பேச்சு வழக்கிலுள்ள சொற்களும் அதிகமுண்டு. இலக்கிய நயம் பற்றி ஆசிரியர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், கதை நடையில் எழுதுவதில் வல்லவர் எனத் தெரிகிறது.

ஆசிரியர் பயன்படுத்தும் சொற்றொகுதி அதிகமில்லை. சொற்செறிவு சில இடங்களில் மிகுந்தும் சில இடங்களில் குறைந்தும் காணப்படுகிறது. அணியழகு அதிகமில்லை. சொல்ல வேண்டியதை நேரடி

யாக எளிமையுடன் சொல்கிறார். ஆனால், அதிலே ஒரு தனிக்கவர்ச்சி உண்டு. நேரே நிகழ்ச்சிகளைக் கண்டவர் கூறுவதுபோல் பல விவரங்களுடன் நிகழ்ச்சிகளை விவரிப்பார். ஆனால், சில இடங்களில் தமக்கு ஓர் ஈடுபாடும் இல்லை என்ற முறையில், உணர்ச்சியற்ற, விறுவிறுப்பற்ற முறையிலும் நிகழ்ச்சிகளை விவரிப்பார்.

ஆயினும், மற்ற நற்செய்தியாளர்களை விட, மாற்கிடம் உயிர்த்தோற்றச் சித்திரிப்பும், புலன்கவர் வண்ணநடையும் உண்டு. இது, மத்தேயு, லூக்கா ஆகியவற்றில் காணப்படாத பல சிறுவிவரங்கள் கூறப்படுவதிலிருந்து அறியக்கிடக்கிறது. அறிஞர், பலர் இச்சிறு விவரங்கள் மாற்கினுடையவை அல்ல; பாரம்பரியத்திலிருந்து அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும்; மரபு மூலங்களில் பற்றுடைய மாற்கு அப்படியே தமது தொகுப்பில் அவற்றைச் சேர்த்திருக்க வேண்டும் என்பர். நேரடிச் சான்றாளர்கள் உயிர்த்தோற்றக் காட்சிகளையும், சிறுசிறு விவரங்களையும் அளித்திருக்க வேண்டும். கிறிஸ்தவச் சமூகம் திட்ட அமைப்பை அளித்திருக்க வேண்டும்.

சாதாரண மக்களுக்குக் கூறுவதுபோல் கதை சொல்லும் முறையில் தமது நூலைத் தருகிறார் ஆசிரியர். ஒரு நிகழ்ச்சியை விவரிக்கையில் சில சொற்றொடர்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி நமது மனதில் பதிய வைப்பார். சில சமயத்தில் இன்றியமையாத சொல்லை அல்லது சொற்றொடரைச் சிறப்பான விதத்தில் அழுத்திக் கூறி அதன் முக்கியத்துவத்தை உணர வைப்பார். தெளிவற்ற முறையில் பொதுப் படையான கூற்றுக்குப்பின், தெளிவாகப் பல செய்திகளைத் தருவார் (1:28). இடையில் விளக்கங்கள் சில தருவார் (2:5.10). சில சமயம், நிகழ்ச்சிகளை நிறைவுபடுத்த வேண்டுமென்றே சிறு விவரங்களைப் புகுத்துவார் (5:42). சிலவற்றில், சிறப்பாக அருஞ்செயல் நிகழ்ச்சிகளில், ஒரு திட்டமான அமைப்பு உண்டு. அவை: கட்டளை, விளைவு, காண்போரிடம் கண்ட பயன், அவர்களின் வியப்பு. அருஞ்செயல் காண்போரின், அறவுரை கேட்டோரின் உணர்ச்சிகளைப் பலமுறை எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். சிறு விவரங்கள் அளிக்கப்படும் தன்மையையும் அதன் விளைவையும் 2:1-13; 5:1-20. 21-43; 7:31-37 போன்ற பகுதிகளில் காணலாம். இவைகளோடு ஒத்த பகுதிகளை மத்தேயு, லூக்கா ஆகியவற்றில் வாசித்தால் இது விளங்கும். இந்த நற்செய்தி மிகச் சிறியதாயினும், சில இடங்களில் சிறுவிவரங்களைக் கூறப் பல சொற்களை ஆசிரியர் பயன்படுத்துவார்.

மாற்கில் காணப்படும் வாக்கிய அமைப்பு, மிகச் சாதாரணமானது. ஒரே தன்மையுடைய வாக்கிய உட்பிரிவுகளைத் தொகுத்து இணைத்து அமைப்பது அவருக்கு உரிய சிறப்பியல்பாகும். ஆசிரியர் அடிக்கடி வரலாற்று நிகழ்காலத்தைப் பயன்படுத்துகிறார். அது நிகழ்ச்சிகளுக்கு உயிர்ச் சித்திரத் தன்மையை அளிக்கிறது; வாசகர்களை நிகழ்ச்சியோடு ஈடுபடுத்துகிறது. ''அவ்வேளையில்'', ''உடனே'' போன்ற சொற்களை அடிக்கடி பயன்படுத்துகிறார். இவையும், வரலாற்று நிகழ்காலமும், தொடங்கிய வாக்கியத்தை முடிக்காது விடலும், இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் யாவும் வெகு வேகமாய்த் தங்களது முடிவை நோக்கி இயங்குவதாக வாசகர்களுக்கு ஒருவித உணர்ச்சியளிக்கின்றன. தொடர்ந்து இந்நூலை ஒரே மூச்சில் வாசித்தோமென்றால், நாமே அந்நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருப்பது போலவும், கூட்டங்கள் நம்மைச் சூழ்ந்திருப்பது போலவும், அவைகளின் இரைச்சலும், பேரொலியும் நமது செவியைத் தாக்குவதுபோலவும் நாம் உணர்வோம். இயேசுவின் வாழ்நாட்கள் அறவுரைகளும், அருஞ்செயல்களும் தர்க்கங்களும் நிறைந்து விளங்கிய நாட்களாக இந்நூலில் காணப்படுகின்றன. இப்படிப் பல நாட்கள் கிறிஸ்துவின் வாழ்வில் இருந்திருக்கக் கூடும்.

மேலும், செமித்திக்குப் பேச்சு வழக்கில் காணப்படும் இணை அமைப்புகள் மாற்கில் காணப்படுகின்றன (1:7 தொ; 11:9 தொ.28; 12:14; 13:4; 15:29); அரமேயிக்கு

சொற்கள் உள்ளன (*3:17; 5:45; 7:11.34; 14:36; 15:34*). இவை ஆசிரியர் பாலஸ்தினத்தைச் சேர்ந்தவர் என்றும், இந்நூலுக்கு அரமேயிக்கு பின்னிலை உண்டு என்றும் காட்டுகின்றனவேயொழிய, சிலர் கூறுவது போல் மாற்கின் நற்செய்தி அரமேயிக்கில் எழுதப்பட்டுக் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது என்று காட்டவில்லை. பற்பல இலத்தீன் சொற்கள் காணப்படுகின்றன. இவை பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம்.

இந்நூலில் உள்ள பல குறைகள் நமது கவனத்தைக் கவரலாம். அவற்றில் சில: தன்மையால் ஒத்த நிகழ்ச்சிகளை ஒரே அமைப்புடன் விவரித்தல், தேவையின்றிக் கூறியது கூறல், தொடங்கிய வாக்கியத்தை முடிக்காது விடல், இலக்கணச் சிதைவுகள் - இவை கிரேக்க மாற்கில் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றை ஆசிரியர் வேண்டுமென்றே பயன்படுத்தியிருக்கலாம். பொதுவாக ஆசிரியர் பொதுமக்களுக்குக் கதை சொல்லும் முறையில் இந்நூலைத் தருகிறார் என்பதைக் கருத்தில் கொண்டால் மேற்கூறப்பட்ட குறைகள் நமது கண்ணையும் கருத்தையும் உறுத்தா.

*12. **இறையியல் கருத்துக்கள்:*** இந்நூலில் மாற்குக்கு மட்டும் உரிய தனிப்பட்ட போதகம் இல்லையென்பர். இந்நூல் அப்போஸ்தலர்களின் போதகத்தைத் தருவதால் இதில் காணப்படும் போதகங்கள் யாவும் புதிய ஏற்பாடு முழுவதற்கும் உரியனவாகும். ஆனால், மாற்கு சிலவற்றை அழுத்திக் கூறுகிறார். அவற்றில் சிறப்பான சிலவற்றை நாம் இங்குப் பார்ப்போம்.

அ) கடவுளின் மகன்: மாற்கின் சிறப்பான போதனைகளில் ஒன்று முதல் வரியிலேயே கொடுக்கப்படுகிறது: ''கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை''ப் (மாற்கு *1:1*) பறைசாற்றலாகும். மத்தேயு, லூக்காவுடன் ஒப்பிடுகையில், இது மாற்குக்குச் சிறப்பாக உரியதொன்றாகும். மற்ற நற்செய்தியாளரைவிட, இயேசுவின் வார்த்தைகளை மிகச் சொற்பமாகவே கொடுக்கிறார் ஆசிரியர். அவர் கிறிஸ்துவினுடைய அறவுரைகளில் இரண்டை மட்டும் கொடுக்கிறார் (*4:1-34; 13:1-37*). இயேசு போதித்தவைகளைக் கூறாமல், ''இயேசு போதித்தார்'' என்று அடிக்கடி கூறுகிறார். அவருக்கு வேண்டியது இயேசுவின் செயல்களே. இவற்றை மற்ற நற்செய்தியாளரைவிட அதிகமான சூழ்நிலை விவரங்களுடன் கூறுவார். அவர் சித்திரிக்க விரும்புவது மனிதனும் இறைமகனுமான இயேசுவையே. அவரது போதகப் பகுதிகளிலும் இயேசுவே முதன்மையும் அடிப்படையுமானவர். இயேசு இறைமகன் என்பது விசுவாச சத்தியம் பற்றிய அறிக்கையிடலிலோ, போதகத்திலோ தோன்றவில்லை. அவர் செய்யும் இறையாற்றல் மிக்க செயல்களில் வெளிப்படுகிறது: பாவம் மன்னித்தல் (*2:10-12*); பேய்களை ஒட்டுதல் (*1:23-34; 3:11* தொ); ஓய்வு நாளின்மேல் அதிகாரம் கொண்டிருத்தல் (*2:27-28; 3:4*); மறை பொருள்களைப் பற்றிய அறிவைக் கொண்டிருத்தல் (*2:8; 8:17; 12:15*); வரவிருப்பவற்றை முன்னறிவித்தல் (*8:31; 10:39; 13:1*தொ). இறைமகன் அல்லது கடவுளின் மகன் என்ற பட்டம் முக்கியமான பகுதிகளில் வருகின்றது: முன்னுரை (*1:1*); ஒளியுருவாதல் (*9:2*); நூற்றுவர் தலைவனது விசுவாசப் பிரமாணம் (*15:39*). இப்பட்டத்தை ''மனுமகன்'' என்ற பட்டத்துடன் சேர்த்துப் பார்த்தால் அதன் சிறப்பு, மேன்மை தெரியும்.

மாற்கின் நற்செய்தியில் இறைமகனாய்த் திகழும் இயேசு உண்மையான மனிதனாகவும் விளங்குகின்றார். மற்ற நற்செய்திகளில் காணப்படுவதை விட இந்நூலில் இயேசுவின் மனிதப்பண்பு அதிகமாகக் காணப்படுகிறது. இயேசு மதிமயங்கி விட்டதாகப் பிறர் கூறுகின்றனர் (*3:21*). அவர் ஒரு தச்சன். அவரது குடும்பத்தைப் பலர் அறிந்திருந்தனர் (*6:3*). இயேசு, மரியின் மகன் என, புதிய ஏற்பாடு முழுவதிலுமே இந்த ஓர் இடத்தில்தான் கூறப்படுகிறார். பிறரிடம் விசுவாசமின்மையால் அவரால் அருஞ்செயல்கள் செய்ய முடியவில்லை

(6:5-6); பிறரைக் கண்டு வியப்புறுகிறார் *(10:18).* இறுதித் தீர்ப்பின் நேரத்தை அவர் அறியார் *(13:32);* மனித உணர்ச்சிகள் அவரிடம் உண்டு *(3:5;6:34; 8:1-12; 10:14-21; 14:41).* படிப்படியாக அருஞ் செயல்கள் செய்கிறார் *(7:31-35; 8:22-26).* கேள்விகள் கேட்டு அறிகிறார் *(5:30; 8:5; 9:16-21).* அவர் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாது மறுக்கப்படுவதற்கும், உண்மையான முறையில் மரித்து உயிர்த்து வெல்வதற்கும் இயேசுவின் உண்மையான மனிதத் தன்மை இன்றியமையாததாகும். இந்நூலைப் படிக்கும்போது, இயேசுவின் இறப்பு மீட்பளிக்க வல்லது என்பது தெளிவாகிறது *(10:45; 14:24);* ஆயினும், அஃது ஒரு விசுவாச சத்தியமாக விவரிக்கப்படவோ, வெளிப்படுத்தப்படவோ இல்லை. இந்நூலில் இயேசுவின் சிறப்பான அலுவல் அவர் இறப்பதும் உயிர்ப்பதுமாகும்.

உண்மையான மனிதனும், இறை மகனுமான இயேசு தம்மை இறை மகன் என்று கூறாது, ''மனுமகன்'' என்றே குறிப்பிடுகிறார். இக்கருத்தைப் பற்றி நாம் நன்கு அறிதல் இன்றியமையாதது.

ஆ) மனுமகன், மானிட மகன்: இச்சொற்றொடர் மறைபொருள் மிக்கது. இப்பட்டம் நற்செய்திகளில் அடிக்கடி வருகிறது. தம்மைக் குறிக்க, இயேசுவே இச்சொற்றொடரை விரும்பிப் பயன்படுத்துகிறார். மாற்கின் நற்செய்தியில் இச்சொற்றொடர் பதினான்கு முறை வருகிறது; மாற்கு *2:10-28*-ஐத் தவிர, மற்றப்படி இந்நற்செய்தியின் பிற்பகுதியிலேயே காணப்படுகிறது; அதுவும் செசரியா பிலிப்பியில் பேதுரு விசுவாச அறிக்கையிட்ட பின்னர்தான் *(8:29)* காணப்படுகிறது. ''மனுமகன்'' என்ற சொற்றொடர் வரும் இடங்கள்: *2:10-28; 8:31.38 9:9.12.31; 10:33.45; 13:26; 14:21* (இருமுறை). *41.62.*

இச்சொல் இருவகைச் சூழ்நிலையில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவதாக மனுகுலம் முழுவதையும் தீர்ப்புச் செய்ய உலக முடிவிலே வரவிருக்கும் மாட்சிமை மிக்க இயேசுவைக் குறிக்க ''மனுமகன்'' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது *(8:38; 13:26; 14:62).* இவைகளில் மனுமகனது மகிமை காணப்படுகிறது. இச்சொற்றொடரின் உண்மைப் பொருளை இயேசு சனேத்திரின் முன் தம்மைக் குறிக்க இதனைப் பயன்படுத்தியபோது நாம் உணர்கிறோம். ''போற்றுதற்குரிய கடவுளின் மகனாகிய மெசியா நீதானோ?'' என்று கேட்ட தலைமைக் குருவுக்கு இயேசு, ''நானே அவர்; மேலும், மானிட மகன் வல்லவரின் வலப்புறத்தில் வீற்றிருப்பதையும் வான் மேகங்கள் சூழ வருவதையும் காண்பீர்கள்'' என்றார் *(14:62).* இக்கூற்று நம்மைத் தானியேலது இறைவாக்குக்கு இட்டுச் செல்கிறது. தானியேல் இறைவாக்கு ஏழாம் அதிகாரத்திலே, தீர்ப்புக் காட்சியிலே, தானியேல், நான்கு விலங்குகளுக்கிடையே ''மனுமகன் போன்ற'' ஒருவரை அதாவது மனித உருவத்தைக் கண்டார். உலகப் பேரரசுகளைக் குறிக்கும் நான்கு விலங்குகளும், கடலிலிருந்து தோன்றுகின்றன. ஆனால் ''மனுமகன்'' போன்றவரோ, ''வான மேகங்களிடையே'' தோன்றுகிறார். இம்மனுமகன் கடவுளின் முன் சென்று யாவற்றையும் உள்ளடக்கும் முடிவில்லா ஆட்சியைப் பெறுகிறார். தானியேலது இறைவாக்கில் *(7:13. தொ)* நாம் காணும் உருவம் ஒரு தனிப்பட்ட மனிதரையே குறிக்கிறது. ஆயினும் காட்சியின் விளக்கத்தில் *(7:26தொ)* ''மனுமகன்'' என்பது மெசியாவைச் சார்ந்த மக்களை, இஸ்ராயேலின் தூய்மையாக்கப்பட்ட எஞ்சியோரைக் குறிக்கிறது. இச்சொற்றொடர் தனிப்பட்ட நபரையும் குழுவினரையும் ஒரே சமயத்தில் குறிப்பதாகத் தோன்றுகிறது. இக்காட்சியை மனதில் கொண்டால் இயேசுவின் பதிலைக் கேட்ட தலைமைக் குரு ஆடையைக் கிழித்து ஆர்ப்பாட்டம் செய்து இயேசுவுக்கு மரணத் தீர்வையிட்ட நிகழ்ச்சியின் காரணத்தை நாம் நன்கு உணரலாம்.

இரண்டாவதாக, தமது பாடுகளைக் குறிக்கும்போதோ, முன்னறிவிக்கும் போதோ இயேசு தம்மையே மனுமகன் என்று

கூறுகிறார் *(8:31; 9:9.12-31; 10:33-45; 14:21-41)*. அவரே துன்புறும் ஊழியன். துன்பங்கள் நிறைந்த மனிதன். கிறிஸ்துவின் பாடுகள், நம்மை எசாயா இறைவாக்குக்கு இட்டுச் செல்கின்றன. எசா *42:1-9; 49:1-6;50: 4-9; 52:13-53:12* என்ற பகுதிகளில் ''யாவேயின் ஊழியர்'' எனப்படும் மர்ம மிக்க ஒருவரைக் காண்கிறோம். இவர் யார் என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தாலும் யாவரும் இப் பகுதிகள் மெசியாவைப் பற்றியன என்று ஏற்றுக்கொள்வர். ''மனுமகன்'' என்ற சொற்றொடரைப் போல் ''யாவேயின் ஊழியர்'' என்ற சொற்றொடரும் மெசியாவை யும் மெசியாவைச் சார்ந்த மக்களையும் குறிக்கும் நிலையில் காணப்படுகிறது. இந்த ஊழியரது அலுவலை இயேசு தம தாக்கி அதை நிறைவேற்றுகிறார். ''துன் புறும் ஊழியராகத் திகழ்கிறார்''; அவர் பிறருக்காகவும், அவர்களுக்குப் பதிலாக வும் துன்புறுகிறார் *(எசா 53:3-6)*.

மாட்சிமை நிறைந்த மாபெரும் நீதிபதி, துன்புறும் ஊழியர் என்ற இரு கருத்துக் களும் ஒன்றுக்கொன்று முரணானவை களாகத் தோன்றலாம். ஆயினும், இரண் டையும் தம்மைக் குறிக்கப்பயன்படுத்தி, இரண்டும் தம்மில் ஒன்றிக்கின்றன என்று காட்டினார் இயேசு. அதற்கு அவர் பயன் படுத்தும் சொற்றொடர் ''மனுமகன்''. எசா 53; தானியேல் 7, ஆகிய இரு பகுதிகளும் ஐயமின்றி மெசியாவைக் குறித்தாலும், மெசியாவைக் குறிக்க மனுமகன் என்ற சொல்லை யூத மக்கள் அவ்வளவு அதிக மாகப் பயன்படுத்தவில்லை. அவர்கள் எதிர்பார்த்ததோ, ஓர் உலக அரசன், தாவீ தின் குலவழி வந்தவர்; தமது எதிரிகளைப் போரில் வென்று, தமது அரசை நிறுவு பவர். மாறாக, வான மேகங்களில் வந்து, யாவற்றையும் அடக்கி முடிவில்லாத அரசைப் பெறும் மறைபொருள் மிக்க ஆளை அறியார். வானின்று தோன்றி, யாவற்றையும் கடந்தவராய்த் திகழ்ந்து, இறைவனின் நேரடி இடையீட்டாலும் அதிகாரத்தாலும் அரசு பெறும் தலைவரை அவர்கள் மனதில் கொள்ளவில்லை. இதை விட, பெரும்பாலான யூதர்களுக்கு மெசியா துன்புறுவார் என்ற கருத்து கனவிலும் கருதவொண்ணாததாகும். ஆயினும், சில குழுக்கள் மகிமை நிறைந்த மெசியாவும், துன்புறும் மெசியாவும் ஆகிய மனுமகனை எதிர்பார்த்தனர். ஆனால், பெரும்பாலான யூதர்கள் இவற்றை அறியார்.

இயேசுவின் திருப்பணியின் தொடக்கத் தில் மாற் *2:10-28* என்ற வசனங்களில் வரும் மனுமகன் என்ற சொற்றொடர் இயேசு இறைத்தன்மையுடையவர் என்று காட்டு கின்றது. இப்பகுதிகளில் தாம் வானின்று வந்தவர் என்றும், இதுவரை வானில் மட்டும் இருந்த பாவ மன்னிப்பின் ஊற் றையே பூவுலகுக்குத் தாம் கொண்டு வந்துள்ளதாகவும் உரிமை பாராட்டுகிறார். ''மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் உணருமாறு'' *(2:10)* முடக்குவாதக்காரனுடைய பாவங்களை மன்னித்து உடல் நலம் அளிக்கிறார். ''ஓய்வுநாளும் மானிட மகனின் கட்டுப் பாட்டுக்கு உட்பட்டதே'' *(2:28)*. அப் போஸ்தலர்களுக்கு ஓய்வு நாள் அனுசரிப்பி லிருந்து விதிவிலக்கு அளித்துப் புதியதொரு திட்டத்தை ஏற்படுத்துகிறார். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் மனுமகன் என்ற சொற் றொடர் மெசியாவையே குறிக்கின்றது.

இயேசுவே மெசியா, இறைமகனும் மனு மகனுமாவர். இரு பெயரும் மறைபொருள் மிக்கவை. ஆயினும், மனுமகன் என்ற பெயராலே தம்மைக் குறித்தார் இயேசு. யூத மக்கள் இப்பெயரைக் கேட்டுத் திகைத் தனர். ஆனால், யூதத்தலைவர்கள் இயேசு தாமே உண்மையான மெசியா என்று உரிமை கொண்டாடுகின்றார் என்பதை நன்கு அறிந்தனர். தானியேல் இறைவாக் கில் காணப்படும் ''மனுமகன்'' என்ற பட்டத்தைத் தம்முடையதாக்கி இயேசு தம்மையே உண்மையில் இறைமகனாக்கு கிறார் என்று நன்கு அறிந்தனர். ஆனால், இஃது அவர்களது கடவுள் ஒருவரே என்ற கொள்கைக்கு மாறானதாகும். ஆகவே, இயேசு இறை நிந்தை செய்தார் என்று

குற்றம் சாட்டினர்; மரணத்தீர்ப்பு அளித்த னர். அப்போஸ்தலர்கள் இப்பெயரின் பொருளைப் புரிந்து கொண்டனரா? இல்லை என்றே கூற வேண்டும். ஒரு வேளை மற்றவர்களைவிட, சிறிது அதிக மாகத் தெரிந்திருக்கலாம். ஆனால், அவர் கள் ''மனுமகன்'' என்ற புதிரின் பொருளை முழுவதும் இயேசுவின் காலத்தில் அறிய வில்லை. தமது தாழ்ச்சியினாலும் பாடுகளி னாலும் உலக மக்களை நீதிமான்களாக்கும் ''துன்புறும் ஊழியர்'' இயேசுவே என்று அவர்கள் அறிய, இயேசுவின் பாடுகள் அவசியமாயின. இயேசு மரித்தோரினின்று உயிர்த்ததும், பரிசுத்த ஆவியரை அனுப்பி யதும், இயேசுவே மனுமகன், இறை மகன் என்று அவர்களுக்கு உணர்த்தின.

இ) மெசியா பற்றிய மறைபொருள்: இயேசு தம்மைச் சுட்டிக்காட்ட ''மனுமகன்'' என்ற மறைபொருள் மிக்க பெயரைப் பயன்படுத்தினாலும், இயேசுவே மெசியா என்ற உண்மை மாற்கில் தெளிவாகக் காணப்படுகிறது. ஆயினும், இதைப் பிறரி டமிருந்து மறைத்து வைக்கும் போக்கு காணப்படுகிறது. இந்நற்செய்தி முழுவதி லும் இயேசு தாமே மெசியா என்பதை மறைக்க முயலுவதாகத் தோன்றுகிறது. அசுத்த ஆவிகள் ''நீர் கடவுளின் பரிசுத்தர்'' என்று உரக்கக் கூவுகின்றன. அவைகள் பேசாதிருக்க இயேசு கட்டளையிடுகிறார் *(1:25-34; 3:11* தொ); மாபெரும் அருஞ் செயல்கள் செய்தபின், அவற்றைப் பிற ருக்குத் தெரிவிக்கக்கூடாது என்று கட்டளை யிடுகிறார் *(1:44; 5:45; 7:36; 8:26)*. செசரியா பிலிப்பியில் பேதுரு, இயேசுவை மெசியா என்று விசுவாச அறிக்கையிட்ட பின்னும், ஒளியுருவான பின்னும், தாமே மெசியா என்பதைத் தாம் மரித்தோரினின்று உயிர்க் கும்வரை பிறருக்குக் கூறலாகாது என்று பணிக்கிறார் *(8:30; 9:9)*. சில சமயம் கூட்டத்திலிருந்து பின்வாங்கி இரகசிய மாகப் பயணம் செய்கிறார் *(7:24; 9:30)*. தமது சீடர்களுக்கு மட்டும் தனியாகப் போதகம் அளிக்கிறார் *(4:10-11.33-34; 7:17-23; 8:31; 9:27*தொ.*31; 10:32*தொ; *13:3-37)*.

இப்படி மறைத்து வைப்பது செயற்கை யாகத் தோன்றுகிறது. அருஞ்செயல்களைப் பிறர் அறியா வண்ணம் மறைத்து வைப்பது கூடுமானதா? அப்படியிருந்தும் அவ்வருஞ் செயல்களைப் பிறருக்கு அறிவிக்காதிருக் கும்படி கட்டளையிடுகிறார் இயேசு. இக் கருத்தை மாற்கு தாமாகப் புனைகிறாரா? இக்கருத்து மத்தேயுவிலும் காணப்படுகிறது *(மத் 9:27-31)*. இதற்கு விளக்கம் கூறுவது அவசியமாகும்.

மேற்கூறிய கருத்துக்கு விளக்கம் கூறப் பலர் முயன்றுள்ளனர். தோல்வியே கண்ட னர் என்று கூற வேண்டும். ''ரீடு'' என்பவர் விநோத விளக்கம் அளிக்கிறார். இயேசு, உயிர் வாழ்ந்தபோது, மெசியா என்ற பட்டத்திற்கு உரிமை கொண்டாடவில்லை. இயேசுவின் மரணத்திற்குப் பின் இக்கருத்து ஆதிக்கிறிஸ்தவர்களுக்கிடையே எழுந்தது. அதை இயேசுவுக்குச் சூட்டி நற்செய்தியில் இங்குமங்குமாகப் புகுத்தி விட்டது ஆதித் திருச்சபை என்றார் அவர். இக்கூற்றிலே நற்செய்தியாளர்கள் பொய்யர்கள், உண்மை யைக் கூறவில்லை என்ற குற்றச்சாட்டு தொக்கி நிற்கிறது. அதனோடு இயேசு மரித்தோரிடையிலிருந்து உயிர்த்தல் முடி யாத காரியம் என்ற கருத்து பின்னணியாக அமைந்திருக்கிறது.

நற்செய்தியாளர்கள் வாய்மைக்கும், நமது உண்மைகளுக்கும் ஊறுவிளையாதபடி கீழ்க்கண்ட விளக்கம் அளிக்கலாம். இயேசு தான் மெசியா. ஆனால், அவர் மெசியா வைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கும் பொது மக்கள் கொண்டிருந்த கருத்துக்கும் பெரிய வேறுபாடு உண்டு. முன் கூறியது போல், பொதுமக்கள் அரசியல், பொருளா தார விடுதலை அளிக்கும் மெசியாவை எதிர்பார்த்தனர். எத்தனை பேர் தாங்களே மெசியா என்று பொய்ப்பட்டம் சூட்டிக் கொண்டு மக்களிடையே தோன்றினர்! இயேசுவின் காலத்தில் மெசியாவைப் பற்றிய கருத்து சிதைந்து இழிவடைந்து உருமாறியிருக்கவில்லையா? இச்சூழ்நிலை யில் பொதுமக்களிடம் சென்று ''நான்தான் மெசியா'' என்று கூறியிருந்தால் தவறாகப்

புரிந்து கொண்டிருப்பர். துன்புறும் ஊழிய ரான மெசியாவை ஏற்றுக் கொள்ளார். மகிமை மிக்க ஆண்டவராகிய மெசியாவை அறிந்து கொள்ளும் மனப்பக்குவம் அவர்கள் கொண்டிருக்கவில்லை. இரண்டையும் கொண்டுள்ள ஆன்மீக மெசியாவை அறிந்து கொள்ளும் மனநிலை அவர்களிடத்தில் இல்லை. அவர்களைப் படிப்படியாக மெசியாவின் உண்மைப் பண்பை அறியும்படி செய்ய வேண்டியிருந்தது. அப்படிச் செய்ய தாம் மெசியா என்பதை இயேசு மறைத்து வைப்பது அவசியமாயிற்று. அஃது அவர் கையாண்ட ஒரு தந்திரமன்று; தாம்தான் உண்மையான மெசியா என்று வெளிப்படுத்த ஒரு நிபந்தனையாகும். இயேசுவைப் போலவே, அவரின் மெசியா என்ற பெயரும் இறைத்திட்டத்தில் மறை பொருள் மிக்கதாகும். இயேசு பாடுபட்டு உயிர்க்கும்முன், அப்போஸ்தலர்களே இப் பட்டத்தின் உண்மைப்பொருளை அறியாத போது, பொதுமக்கள் எப்படி அறிவர்? ஆகையால், பொதுமக்களிடமிருந்து இப் பட்டத்தை மறைத்துத் தமக்குச் சான்றாளர்களாக விளங்கப்போகிற சீடர்களுக்கு இக் கருத்தைப் பற்றிப் போதிக்கிறார்; அவர்களுக்குத் தெளிவாக்குகிறார். அவர்களும், இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு வரை இதன் உண்மைப்பொருளை நன்கு உணரவில்லை என்றே கூறவேண்டும். பிற்காலத்தில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றுடன் அவருடைய சொற்களையும் ஒத்துப்பார்த்து உண்மைப் பொருளை உணர்கின்றனர். தாங்கள் மந்த புத்தி உள்ளவர்களாயிருந்தும், பின்னர் ஆவியரின் அருட்பொழிவால் இயேசுவை உண்மையான விதத்தில் அறிந்து போதித்ததையே நற்செய்தியாளர் மாற்கு நமக்கு அளிக்கிறார்; தாமாக ஒன்றையும் புனைந்து கூறவில்லை. இந்த மறைவுமுறை ஆதித் திருச்சபையின் தந்திரமும் அன்று. ஆகையால்தான், நல்லெண்ணத்துடன் வாசிக்கும் எவரும், மறைபொருளிலிருந்து உண்மைப் பொருளை அறிவதாக உணர்வர்; இருளிலிருந்து ஒளிக்குச் செல்வதாகவும், அறியாமையிலிருந்து உண்மை அறிவை அடைவதாகவும் உணர்வர். இவ்விதம் வாசகர்களிடையே தெளிவை உண்டாக்கவே, இயேசுவைப் பின்பற்றி, மறைவு முறையைப் பயன்படுத்தி, விரிவாகவும் நுணுக்கமாகவும் தமது நூலை எழுதுகிறார் நற்செய்தியாளர் மாற்கு. அதிலே ஆழ்ந்த கருத்துடைய வரலாறும், இறையியல் நோக்கமும், இயேசுவே மீட்பர், மெசியா என்ற மெய்யான வெளிப்பாடும் உள.

13. வரலாற்று மதிப்பீடு: மாற்கின் நற்செய்தி, நாம் இக்காலத்தில் கருதுவது போல் ஒரு வரலாற்று நூல் அன்று; வாழ்க்கை வரலாறும் அன்று. கிறிஸ்துவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காலவரையுடன் இதிலே காணமுடியாது. அதில் ஆசிரியருக்கு அக்கறையுமில்லை. ஆதிக் கிறிஸ்தவர்களுக்குப் பல இன்னல்கள் விளைந்தன. எதிர்ப்புகளும் எழுந்தன. அவற்றை வெல்ல அவர்களுக்கு ஒரு காப்புரை வேண்டும். அதற்கு ஏற்ற நூலை மாற்கு வழங்குகிறார். கிறிஸ்தவர்களின் விசுவாசத்தைப் புதுப்பிக்கவும், ஆழமாக வேரூன்றச் செய்யவும் ஒரு நூல் வேண்டியிருந்தது. அதற்கு ஏற்ற ஒரு மறைபோதக நூலை இந்நற்செய்தியில் காணலாம் (ஆதிக் கிறிஸ்தவர்களின் நிலையை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதில் அடங்கியிருக்கிறது இந்நூலின் வரலாற்றுப் பயன்). இதை நிறைவேற்ற என்ன செய்கிறார்? இயேசுவே கிறிஸ்து அல்லது மெசியா என்ற வரலாற்று உண்மையை மையமாகக் கொண்டு ஒரு நூல் எழுதுகிறார். இயேசுவைப் பற்றிய அப்போஸ்தலர்களின் போதகம் மற்றப் பாரம்பரியங்கள் முதலியவற்றைச் சேர்த்து அளிக்கிறார். இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை மீட்பெனும் மாபெரும் நாடகத்தின் முக்கிய கட்டங்களாக அமைத்து விவரிக்கின்றார். இயேசு விண்ணரசைப் போதித்தார். அருஞ்செயல்கள் பல செய்தார்; பாடுகள் பட்டு மரணம் எய்தினார்; உயிர்த்தெழுந்தார். இவரே இறைமகனார். இதுவே யாவருக்கும் மீட்பளிக்கும் நிகழ்ச்சி. இதுவே வரலாற்று உண்மை. இந்நூலை ''விசுவாசிகளுக்கு ஒரு விசுவாச நூலாக''

அளிக்கிறார் ஆசிரியர். இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றிலிருந்து வரும் அறிவு ஆகியன விசுவாசத்தால் புது உருவெடுத்து மிளிர்கின்றன.

நடையையும் கருத்தையும் நோக்கினால், சாதாரண மக்களுக்காக எழுதப்பட்டது போல் தோன்றுகிறது இந்நூல். மாற்கின் நற்செய்தியோ, அதன் மூலங்களோ துல்லியமாய், திறன் ஆய்வுடன் விவரங்கொடுக்கும் நோக்கம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, பாரம்பரியம் என்ன கூறியதோ அதைத் தொகுத்துத் தருவது ஆசிரியரது வெளிப்படையான நோக்கமாகத் தெரிகிறது. இதில் அடங்கியிருக்கிறது இந்நூலின் வரலாற்றுப் பயன். இதைக் கருத்தில் கொண்டுதான் ''அமைப்புத்திறன் ஆய்வாளர்கள்'' இந்நூலின் முக்கியத்துவத்தை அறிந்து, இந்நூலைக் கவனத்துடன் ஆராயத்தலைப்பட்டனர். இவ்வாராய்ச்சியில் ஆதிக் கிறிஸ்துவத்தின் வரலாற்றையும் மரபுகளையும் காண முற்பட்டனர். அவர்களை எதிர்நோக்கிய இன்னல்களையும் ஊகிக்க முயன்றனர்.

14. முடிவுரை: இந்நூல் பலகாலமாகப் புகழ்பெறாது மங்கிப் போயிருந்தது எனலாம். மத்தேயுவின் சுருக்கமென இந்நூலைக் கருதியதே இதற்குக் காரணம். வெகுசிலரே இந்நூலுக்கு விளக்கவுரை எழுதினர். நமது வழிபாட்டுச் சடங்கிலும் இந்நற்செய்தி அதிகமாக இடம் பெறவில்லை. மற்ற நற்செய்திகளோடு ஒப்பிடுகையில் இந்நற்செய்தி மிகச் சிறிய அளவில் தான் நமது வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டது. முந்திய வாசக முறைப்படி பதினேழு முறைதான் இந்நூலிலிருந்து வாசகங்கள் எடுக்கப்பட்டன. ஆயினும் உயிர்ப்பு, ஆண்டவர் விண்ணெழுச்சி விழாக்களில் நற்செய்தியை முழங்கும் பெருமை இந்நூலைச் சார்ந்ததாகும்.

இந்த மங்கிய நிலையிலிருந்து இந்நூலை மேற்கூறிய ஆய்வாளர்கள் ஒளிக்குக் கொணர்ந்தனர் எனலாம். இதில் காணப்படும் உணர்ச்சியோடு சொல்லும் முறையும், அணியற்ற முறையும் உளநூல் ஆய்வாளரைப் பெரிதும் கவர்ந்தன. பகுத்தறிவு வாதிகள் இந்நூலில் காணப்படும் அருஞ்செயல்களை வெறும் புனைகதைகள் என்று ஒதுக்கினாலும் இயேசுவைப் பற்றிய மூல வாழ்க்கை விவரங்கள் இந்நூலில் காணப்படுவதாகக் கருதுகின்றனர். விசுவாசிகள் இந்நூலில் இறைமகனான இயேசுவைக் காணுகின்றனர்; ஆதித்திருச்சபையின் மூல பாரம்பரியத்தைக் காணுகின்றனர்; அப்போஸ்தலர்களின் மூல போதகத்தைக் காணுகின்றனர். இதுவே இந்நூலின் சிறப்புகளில் தலையாயது எனலாம்.

மாற்கு என்னும் யோவான் *(JOHN MARK)*

காண்க. மாற்கு எழுதிய நற்செய்தி. 3. ஆசிரியர்.

மானகத்தியர் *(MANAHATHITES)*

1 நாள் 2:54-இல் மட்டுமே குறிப்பிடப்படும் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பிரிவாகும். இதனால்தான் மானகத்து எனுமிடம் யூதா கோத்திரத்துக்கேயுரியதாகக் கணக்கிடப்பட்டது.

மானகத்து *(MANAHATH - ஒய்வு எடுக்கும் இடம், குடியிருப்பு) - ஆள்*

மானகத்து சோபாலின் இரண்டாவது மகன். இவர், ஏதோமிலுள்ள ஓரியர் வம்சத்தின் ஒரு பிரிவின் மூதாதையர் (ஆதி *36:23; 1 நாள் 1:40*).

மானகத்து *(MANAHATH - ஓய்வு எடுக்கும் இடம், குடியிருப்பு) - இடம்*

பென்யமீன் குலத்தைச் சேர்ந்த சிலர் கெபாவிலிருந்து மானகத்துக்கு நாடு கடத்தப்பட்டனர் (*1 நாள் 8:6*). எனவே, ஒருவேளை மானகத்து யூதாவிலுள்ள ஓரிடமாக இருக்கலாம். இதே பெயரையுடைய ஓரியர் வழித்தோன்றலுடன் தொடர்புபடுத்தப்பட்டால் மானகத்து ஏதோமில் இருந்திருக்கலாம். இதைவிட மேலாக, இது மானகத்தியர்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம். அப்படியாயின் இது யூதாவில் இருந்திருக்க வேண்டும். எருசலேமுக்கு மேற்கு, தென்மேற்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால மல்காவாக இஃது அடையாளம் காட்டப்படுகிறது.

மானி (MANI)

மானிகேயிசம் எனும் சமய இயக்கத்தை நிறுவியவரே இவர். பாபிலோனியாவில் பிறந்து ஈரானிய வழிவந்தவராகிய இவர் சசானியப் பரம்பரை ஆண்ட காலத்தில் வாழ்ந்தவர் (கி.பி. 216-77). இவர் உலகில் பல இடங்களுக்குப் பயணம் செய்ததால் இவரது சமூகங்கள் பாரசீகத்திலும், இந்தியாவிலும் உருவாக்கப்பட்டன. வட ஆப்பிரிக்காவிலிருந்து சீனா வரை பரவியிருந்த இவரைப் பின்பற்றுவோர்க்குப், பல மடல்களையும், புனித நூல்களையும் எழுதினார். சசானிய அரசரான முதலாம் சாபுர் இவருக்கு அரசியல் ஆதரவு தந்தார். ஆனால், சொராஸ்டிரியக் குருக்களால் சமயமுரண்பாட்டுக்காகக் குற்றம் சாட்டப்பட்டு மிகவும் கொடுமையான மரணமடைந்தார் இவர்.

மானிகேயிசம் (MANICHEISM)

இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே மானி என்பவரால் தொடங்கப்பட்ட சமய இயக்கம்.

1. மூலங்கள்: (Sources) மானிக்கேயிச மூலங்கள் பலவகைப்பட்டன. அண்மைக் காலம் வரை இந்தச் சமயத்திற்கு எதிராக எழுதப்பட்ட செய்திகளின் மூலம் இந்தச் சமயத்தை அறிந்த நமக்கு, தற்போது அசல் மானிக்கேயிசக் குறிப்புகள் கிடைத்துள்ளன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிடைத்த இந்தக் குறிப்புகள் மூன்று ஈரானிய மொழிகளிலும், சீன மொழியிலும், உய்கூர் (பழைய துருக்கிய) மொழியிலும். உள்ளன.

2. மானியின் நூல்கள்: மானியின் புத்தகங்கள் முதன் முதலில் அரமேயிக்கு மொழியில் எழுதப்பட்டன. இப்புத்தகங்களில் சில (பெரிய உயிருள்ள) நற்செய்தி, வாழ்க்கையின் புதையல், வரலாற்றுநூல், இரகசியங்களின் நூல், அசுரர்களின் நூல், கடிதங்கள், சங்கீதங்கள் மற்றும் செபங்கள் ஆகியவையாகும்.

3. மானியின் கோட்பாடு:

அ) சமயச் சூழ்நிலை: மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கு ஈரான் பல சமயக்கொள்கைகளும் கோட்பாடுகளும் சஞ்சரிக்கும் இடமாக இருந்தது. இவைகளுள் முக்கியமானவை யூத, கிறிஸ்தவ, சொராஸ்டிரிய மதங்களாகும். மற்றும் கிரேக்க மெய்யியலும், பிற மதங்களும் இங்கே தஞ்சம் புகுந்தன. மேலும், புத்த, இந்து மதங்களும் இங்கே ஓரளவு செல்வாக்கைப் பெற்றிருந்தன. எனவே, இந்த மதங்களின் கூற்றுக்கள் மானியின் சமயக் கொள்கைகளைப் பாதித்திருக்க வேண்டுமென்பது ஓர் உண்மை.

ஆ) அடிப்படைக் கொள்கைகள்: மானி தனது சமயம் அனைவருக்கும் பொதுவான ஒன்று என்கிறார். மானி இதன் நிறுவனர்; இதன் இறுதி வெளிப்பாடு அளிப்பவர். இந்தச் சமயம் மறைபரப்புப் பணியை மையமாகக் கொண்டது. உலகின் பல பகுதிகளுக்கும் சென்று மறையைப் பரப்புவது பக்தனது கடமை. மேலும், இந்த மதத்திற்கு எழுத்து வடிவம் இன்றியமையாதது. எனவே, மானி தனது மதக் கருத்துக்களைப் புத்தகங்களாக எழுதினார்.

இ) அண்டப்பிறப்புக் கோட்பாடு: உலகில் மனிதனின் நிலையையும், எங்கிருந்து வந்தான், ஏன் தவறி விழுந்தான், அவன் யார், எங்கே செல்கிறான் என்பதையும் உணர்த்த மானி அண்டம் பற்றிய ஒரு புராணத்தைத் தொகுத்தார். இதன்படி நன்மை மற்றும் தீமை, ஒளி மற்றும் இருள், இறைவன் மற்றும் சடப்பொருள் ஆகிய முரண்பாடுள்ள இரு கோட்பாடுகள் தொடக்கத்தில் இருந்தன. இந்த இருமைக் கோட்பாடு மானிக்கேயிசத்திற்கு அடிப்படையான ஒன்றாகும். மேலும், அவர் மூன்று காலங்களைப் பற்றியும் பேசுகின்றார். இருளின் தாக்குதலினால் ஒளி அணு, இருள் பொருளுடன் கலந்து சிறைப்பட்டது. சிறைப்பட்ட அணுவை மீண்டும் அதன் இடத்திற்கு அனுப்ப ஓர் உலகக் காலம் தேவைப்படுகிறது. இந்த உலக

மானது இறைவனால் பழைய நிலையை நோக்கிச் செல்லுமாறு அமைக்கப்பட்டுள்ளது. சடப்பொருள் இந்த முயற்சிக்கு எதிராகச் செயல்பட்டு ஆதாம் ஏவாளைப் படைத்தது. ஆதாம் தனது ஆன்மாவின் இறைமூலத்தை ஒரு மீட்பரால் உணர்ந்தாலும் அவர்தம் பிள்ளைகள், சடப்பொருளின் சூழ்ச்சிக்கு அடிபணிந்தனர். இதுவே தற்போது மனிதனின் நிலை. மானிக்கேயிசப் புரணத்தின் மூன்றாம் காலத்திலே பல திருவெளிப்பாடுகள் நிகழும். ஓர் இறுதித் தீர்வைக்குப்பின் உலகம் 1486 ஆண்டுகள் எரியும். ஒளிப்பொருள் ஒன்று கூடும். இவ்வுலகம் முடிவுபெறும். இருள் அதனிடத்திலேயே இருக்கும். இந்த இரண்டு அடிப்படைக் கொள்கைகளும் தனித்தனியாகப் பிரிக்கப்படும்போது ஒரு சுற்று முடிகிறது.

ஈ) மீட்பு: மேலே கூறப்பட்ட புராணத்திலிருந்து மனிதன் இந்த இரண்டு கொள்கைகளை அறியும்போது மீட்புப் பெறுகிறான் எனத் தெரிகிறது. உலகிலுள்ள பல பொருட்களில் ஒளிப்பொருள் இருப்பதால் மனிதன் அதற்குத் தீங்கிழைத்தல் கூடாது. எனவே, இந்த மதம் கொலை, குடித்தல், மாமிசம் உண்ணுதல், உடல் உறவு கொள்ளுதல் ஆகியவற்றைத் தடுக்கிறது. உயர்ந்தோர் குழுவுக்கே இக்கடினமான ஒழுங்குகள் உரியன. இவர்கள் தங்கள் மரணத்தின் போது ஒளியின் சுவர்க்கத்திற்குத் திரும்புவர். மற்றவர்களுக்கு விதிவிலக்கு உண்டு. ஆனால், இவர்கள் மறுபிறப்பைத் தவிர்க்க முடியாது.

3. வளர்ச்சியும், நிலைத்தலும்: இந்தக் கலப்பு மதமானது வட ஆப்பிரிக்கா, சீனா நாடுகள் வரை வளர்ந்தது. கி.மு. 8,9-ஆம் நூற்றாண்டுகளிலே சில நாடுகளில் இஃது அரசாங்க மதமாகவும் விளங்கியது. உரோமை அரசு இதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. சீனாவின் தென் மேற்குப் பகுதியில் இது பல இன்னல்களுக்கிடையில் நிலைத்திருந்தது. அகுஸ்தீனார் தொடக்கத்தில் இப்பிரிவைச் சேர்ந்தவர். மத்தியகாலத்தில் கிறிஸ்தவப் பிரிவினைச் சபைகளில் சில இக்கலப்பு மதத்தால் பாதிக்கப்பட்டன.

மானியு தீத்து (MANIUS TITUS)

கி.மு. 165-இல் யூதருக்கு வாழ்த்துக் கொணர்ந்த உரோமையத் தூதுவர்களில் ஒருவர் (2 மக் 11:34). கி.மு. 163-இல் அந்தியோக்கு எப்பிபானுக்குத் தூதுவராக வந்த மானியு செர்கியுவைப் பற்றி போலிபியு குறிப்பிடுகிறார். தீத்து மான்லியு தோர்காத்து என்பவர் 164-இல் ஒரு பணியினிமித்தம் எகிப்துக்குச் சென்றார் என்று லிவி கூறுகிறார். எனினும் மானியுதீத்து யாரென்று காட்டுவது இயலாததாய் உள்ளது. காண்க. தீத்து-1.

மி

மிக்கேல் (MICHAEL - இறைவனைப் போன்றவர் யார்?)

1. இவர் வாக்களிக்கப்பட்ட நாட்டினை உளவறிந்து வர மோசே அனுப்பியவர்களில் ஒருவரான செதூரின் தந்தை. இவர் ஆசேர் குலத்தைச் சேர்ந்தவர் (எண் 13:13).

2. காத்து கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தலைவர் (1 நாள் 5:13).

3. 'காத்து' கோத்திரத்தைச் சேர்ந்த அபிகயிலின் மூதாதையர் (1 நாள் 5:14).

4. ஒரு லேவியப் பாடகர். ஆசாபுவின் முன்னோர் (1 நாள் 6:40).

5. இசக்காரின் பரம்பரையில் வந்த இகராகியாவின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 7:3).

6. பென்யமீன் குலத்தைச் சேர்ந்த பெரீயாவின் புதல்வர் (1 நாள் 8:16).

7. மனாசேயில் ஆயிரவர்க்குத் தலைவனாக இருந்தவர் மிக்கேல். சிக்லாகுக் கருகில் இவர் தனது தலைவரை விட்டு, தாவீதின் படையில் சேர்ந்து ஒரு படைத் தலைவராக ஆனவர் (1 நாள் 12:20-21).

8. இசக்காரின் இனத்தைச் சேர்ந்த ஒம்ரீயின் தந்தை (1 நாள் 27:18).

9. யூதாவின் அரசனான யோசபாத்துக்குப் பிறந்த புதல்வர்களில் ஒருவர் (2 நாள் 21:2-4). இவர் இவரது சகோதரன் யோராம் ஆட்சிக்கு வந்தபோது, இவரது மற்றச் சகோதரர்களுடன் சேர்த்துக் கொல்லப்பட்டார்.

10. எஸ்ராவோடு பாபிலோனிலிருந்து திரும்பியவர்களுள் ஒருவரான செபதியாவின் தந்தை (எஸ் 8:8).

11. அதிதூர்: யூதர்களின் விண்ணகப் பாதுகாவலர் (தானி 10:13.21; 12:1). தானியேலின் இறுதிக்காட்சியின் மையப்பகுதி (தானி 10-12) மற்றும், மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதியின் அரசியல் வரலாறு பற்றியதாகும். இது பாரசீகப் பேரரசின் வீழ்ச்சியையும் (11:2-3), செலூக்கியப் பேரரசன் நான்காம் அந்தியோக்கு எப்பிபானின் ஆட்சியையும் (11:21-45) எடுத்துக்கூறுகிறது. மிக்கேல் யூதேயாவை ஆண்டு வந்த பாரசீக மற்றும் கிரேக்க நாடுகளின் காவலனாகிய தூதனுடன் விண்ணகத்தில் போராடுகிறார் (10:13.20-21). தோலமி மற்றும் செலூக்கியப் பேரரசுகளுக்கிடையே நடந்த போராட்டக் குழப்பத்திலிருந்து (11:40-45) யூதர்களின் விடுதலைக்கு இட்டுச் செல்வதில் மிக்கேலின் வருகை இடம் பெறுகிறது (12:1). இந்தப் போராட்டங்களிலும் மக்களின் துன்பங்களிலும் விண்ணகம் ஈடுபட்டிருக்கிறது என்பதும், இறைவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் விண்ணகத்தில் வல்லமை மிக்க பரிந்துரையாளரைக் கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கவை.

விவிலியத்துக்குப் பிந்திய யூத நூல்களில் மிக்கேல் ஏழு அதிதூதர்களில் ஒருவராகவும் (காண்க. திருவெளி 8:2), எல்லா நோய்கள் மற்றும் குழந்தைகளின் புண்களின் மேலும் அதிகாரம் கொண்டுள்ளவராகவும் கருதப்பட்டார். இவர் இஸ்ராயேலருக்காகப் பரிந்துரைக்கும் இஸ்ராயேலின் ஆதரவாளராகவும் பாதுகாப்பாளராகவும் இக்கால இறுதியில் அவர்களின் எதிரிகளைப் பழிவாங்குபவராகவும் அடிக்கடி சித்திரிக்கப்படுகிறார். இவர் வானக வீட்டின் வாயில் காப்பாளராகவும், வானம் பூமி ஆகியவற்றைத் திட்டம் செய்து அமைக்கும் ''மறை பொருள்களின்'' காவலராகவும் உள்ளார்.

மோசேயின் உடலைப் பற்றி பேய்க்கும் அதிதூதரான மிக்கேலுக்குமிடையே நடந்த தர்க்கம் பற்றிய யூதப் பாரம்பரியத்தை யூத 9 சுட்டிக்காட்டுகிறது. ஓரிசன் கருத்துப்படி, இப்பாரம்பரியம் மோசேயின் விண்ணேற்பு என்ற நூலில் காணப்படுகிறது.

பறவை நாகம் (சாத்தான்) மற்றும் அதன் தூதர்களுக்கு, எதிராகப் போராடும் வான தூதர்களின் தலைவராக மிக்கேல் போராடு கிறார் (திருவெளி 12:7-9). சில சமயம், சீனாயில் சட்டம் கொடுக்கப்பட்டபோது இறைவனுக்கும் மோசேக்கும் இடையில் நடுவராக இருந்த தூதராக மிக்கேல் குறிக் கப்படுகிறார். இவர் அ.ப. 7:38-இல் குறிக் கப்படும் தூதனாக இருக்கலாம். மிக்கேல் திருச்சபையைக் காப்பவராகவும் இறந்தவர் களின் ஆன்மாவை வானக வீட்டிற்கு இட்டுச் செல்பவராகவும் உள்ளார் என்ற ஒரு பாரம்பரியம் திருச்சபையில் உண்டு.

மிக்தலேல் (MIGDAL-EL - *ஏலின் கோட் டைக்கோபுரம்)*

இது நப்தலி நாட்டிலுள்ள மதிலால் சூழப்பட்ட ஒரு நகரம் (யோசு 19:38). இஃது அமைந்த இடம் எதுவென்று தெரிய வில்லை. ஆனால், இது கலிலேயாவின் வடபகுதியில் ஈரோனின் சுற்று வட்டாரத் தில் தீருக்குக் கிழக்கு, தென்கிழக்கில் 26 கி.மீ. தொலைவிலுள்ள இக்கால மெச்தெல் இஸ்லிமாக இருக்கலாம்.

மிக்தல்காது (MIGDAL-GAD - *காத்தின் கோபுரம்)*

இலாக்கீசின் செபேலா மாவட்டத்தி லுள்ள யூதாவின் சிற்றூர்களில் ஒன்று (யோசு 15:37). பெயித்-இப்ரினுக்குத் தெற்கே 8 கி.மீ. தொலைவில் இருக்கும் கிர்பெத் ஏல்-மெச்தெலேவாக இருக்கலாம்.

மிக்தாம் (MIKTAM - *பரிகாரச் சங்கீதம்)*

சங் 16:56-60-இன் தலைப்பாகும் இது. இஃது எசா 38:9-இல் உள்ள பாடலின் தலைப்பாகவும் இருக்கலாம். பாவத்தை மறைக்கும், அல்லது பாவப்பரிகாரத்துக் கான சங்கீதம் எனக்கொள்ளலாம்.

மிக்தோல் (MIGDOL - *கோபுரம்)*

பழைய ஏற்பாட்டில் வெவ்வேறு இடங் களில், சூழலில் கூறப்படும் எகிப்தின் தென்பகுதியில் உள்ள ஒரு நகரமாகும்.

அ) இஃது எகிப்திலிருந்து பாலஸ்தீனத் துக்கு இஸ்ராயேலர் பயணம் செய்த வழியில் பிக்கிரோத்து, பாகால்-செபோன் மற்றும் கடலுக்கு அருகில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆ) இது மெம்பிசு, தகபனகேசு ஆகிய வைகளோடு ஒன்றாக எரேமியாவால் குறிப் பிடப்படும், எகிப்தில் யூதர்கள் வாழ்ந்த நகரம் (எரே 44:1; 46:14).

இ) எசே 29:10; 30:6-இல் குறிப்பிடுவது போல் வட எகிப்தில் உள்ள நகரமாகவும் இருக்கலாம்.

இவை மூன்றும் ஒரே இடங்கள் தானா அல்லது வெவ்வேறு இடங்களா என்ப தற்குத் தெளிவான சான்றில்லை. இந்தச் சொல்லின் பொருள் 'கோட்டை', அல்லது 'கோபுரம்'. இஃது எகிப்தியரால் செமித்திய மொழியிலிருந்து பெறப்பட்டு 'கோட்டை' அல்லது இராணுவம் அமைந்த இடங் களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டது.

எசேக்கியேலில் வரும் மிக்தோல் தெல் ஏல்-எயிரோடு அடையாளம் காட்டப்பட லாம். அதே இடமோ, அதே கழிமுகப் பகுதியிலுள்ள மற்றொரு மிக்தோலோ இஸ்ராயேலர் நாணல் கடலைக் கடக்கு முன் தங்கிச் சென்ற இடமாக இருக்கலாம் (யாத் 14:2; எண் 33:7).

மிக்மத்தாத்து (MICHMETHATH - *பாறை யான, கல்லான)*

மிக்மத்தாத்து செக்கேமுக்கு அருகில் எப்பி ராயிம், மனாசேயின் எல்லையில் அமைந்த ஓரிடமாகும். யோசுவா 16:6-இன்படி எப்பி ராயிமின் வட எல்லையில் மிக்மத்தாத்து இருக்கிறது; 17:7-இன்படி செக்கேமுக்குக் கிழக்கிலும், ஏன்-தப்புவாகுக்கு வடக்கிலும் மனாசேயின் எல்லையில் இருக்கிறது. அப் படியானால், மிக்மத்தாத்து எப்பிராயிம், மனாசேயின் பொது எல்லை இருக்க முடியாது. இவற்றை ஒத்துபோகச் செய்வது கடினம்.

இஃது இருந்த இடமாக இரு இடங்கள் அடையாளம் காட்டப்படுகின்றன. ஒன்று செக்கேமின் தென்கிழக்கில் 8 கி.மீ.

தொலைவிலுள்ள கிர்பெத் மக்னே ஏல்-போகாவாகும். மற்றது செக்கேமின் கிழக்கில் உள்ள கிர்பெத் யுலெசில் என்பதாகும்.

மிக்மாசு (MICHMAS - மறைத்து வைக்கப் பட்ட)

இஃது எருசலேமுக்கு வடகிழக்கே 12 கி.மீ. தொலைவிலும், எரிகோவுக்கு மேற்கில் 17 கி.மீ. தொலைவிலும் பெத்தேலின் மலைநாட்டில் அமைந்த பென்யமினின் நகரமாகும். 1 சாமு 14:4-இன்படி, மிக்மாசின் சுற்றுவட்டாரத்தில் போட்சேசு, செனே என்ற பெயர்களுடைய இரு செங்குத்தான பாறைகள் இருந்தன.

விவிலிய வரலாற்றில் முதன் முதலாக மிக்மாசு, பெலிஸ்தியர்கள் சவுலுக்கு எதிராக வந்து பாளையம் இறங்குமிடமாகக் காட்டப்படுகிறது (1 சாமு 13-14). இங்கு சவுல் தன்னோடு ஈராயிரம் பேரை மிக்மாசில் வைத்துக்கொண்டு, ஓராயிரம் பேரைக் கெபாவில் இருந்த யோனத்தானுக்குக் கொடுத்தார் (13:2-3). யோனத்தான் மிக்மாசில் பாளையம் இறங்கியிருந்த பெலிஸ்தியருக்கு எதிராகப் போய் அங்கு இருந்த காவலர்களைக் கொன்றதனால் அவர்களிடையே குழப்பம் விளைந்தது. இதனைப் பயன்படுத்தி சவுலும், அவரது ஆட்களும் பெலிஸ்தியர்களைக் கொன்று குவித்துப் பெரும் வெற்றி அடைந்தனர் (14:5.13). முதலில் மிக்மாசில் இருந்த சவுல் பின்னர் எவ்வாறு அவ்விடம் விட்டு அகன்றார் என்பது தெளிவாக இல்லை.

தலைநகரை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் அசீரியப் படையெடுப்பு பற்றிய எசாயாவின் விவரிப்பில், எருசலேமுக்கு வடக்கிலுள்ள நகரங்களில் ஒன்றாக மிக்மாசு குறிக்கப்படுகிறது (எசா 10:28). செருபாபேலோடு நாடு கடத்தலிலிருந்து திரும்பிய பென்யமின் குழுவினருள் மிக்மாசைச் சேர்ந்த மக்கள் குறிப்பிடப்படுகின்றனர் (எஸ் 2:27; நெகே 7:31; 11:31). அந்தியோக்குவுக்கு ஒட பாக்கீதைக் கட்டாயப்படுத்தியபின், அசமோனிய யோனத்தான் ஒரு காலத்திற்கு மிக்மாசில் வாழ்ந்து வந்தார் (1 மக் 9:73).

மிக்ரி (MICHRI - மதிப்பு மிகுந்த, விலையுயர்ந்த)

நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பென்யமின் இனத்தைச் சேர்ந்த ஏலாவின் முன்னோர் (1 நாள் 9:8).

மிக்ரோன் (MIGRON - செங்குத்தான பாறை)

இது பென்யமின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் எல்லையிலுள்ள நகரங்களில் ஒன்று. இதற்கருகேயுள்ள மாதுள மரத்தின் கீழிருந்துதான் சவுல் நாட்டில் உட்புகுந்த பெலிஸ்தியர்களைக் கவனித்தார் (1 சாமு 14:2). அசீரியர்கள் எருசலேமை நோக்கிப் படையெடுக்கும்போது இவ்விடத்தில் தங்கள் சுமைகளை இறக்கி வைத்துச் சென்றனர் (எசா 10:28). இஃது இருந்த இடம் எதுவென்று தெரியவில்லை. இது வடி எஸ்-சுவேனித்தின் வடபகுதியிலுள்ள கெபாவுக்கு வடக்கிலும், மிக்மாசுக்குத் தென் மேற்கிலும் உள்ள தெல் மிரியாமாக அடையாளம் காட்டப்படலாம். எசாயாவின் குறிப்பிலிருந்து, இது மிக்மாசுக்கு வடக்கில் இருந்ததாக அறிஞர் சிலர் கருதுவர்.

மிக்லோத்து (MIKLOTH - பிரம்பு, தடி)

1. இவர் கிபயோனில் வாழ்ந்து வந்த பென்யமின் குலத்தவர். இவர் எயியோவின் வழித்தோன்றலும், சிமயாவின் தந்தையும் ஆவார் (1 நாள் 8:32; 9:37-38).

2. அகோகியரான தோதாயின் தலைமையில், இரண்டாம் மாதத்திற்குரிய தாவீதின் படைப்பிரிவுக்கு அதிகாரியாக இருந்தவர் (1 நாள் 27:4).

மிக்னேயா (MIKNEIAH - யாவே படைக்கிறார் அல்லது கொண்டிருக்கிறார்)

தாவீதால் அமர்த்தப்பட்ட யாழ் மீட்டும் தலைவர்களில் ஒருவர். லேவியர்களில் இரண்டாம் நிலைக்குரியவர் (1 நாள் 15:18.21). இதற்கு இணையான பட்டியலாகிய 1 நாள் 16:5-இல் இப்பெயர் விடப்பட்டிருக்கிறது.

மிசா (MIZZAH - திகில், பேரச்சம்)

இவர் இரகுவேலின் புதல்வர் நால்வரில் கடைசியானவர். இவர் ஏதோமிய இனத் தலைவர்களில் ஒருவர் (ஆதி 36:13.17; 1 நாள் 1:37).

மிசாம் (MISHAM)

பென்யமின் குலத்தினனான மிசாம் ஓனோ, லோது எனும் சிற்றூர்களைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். எல்பாக லின் புதல்வர் (1 நாள் 8:12).

மிசால் (MISHAL)

ஆசேரின் எல்லையிலுள்ள மிசால் ஒரு லேவிய நகரம் (1 நாள் 6:74). இது மூன்றாம் துத்-மோசால் 39-ஆவதாகக் கைப் பற்றப்பட்ட நகரம். இஃது அமைந்த இடம் எதுவென்று சரியாகத் தெரியவில்லை. ஒரு வேளை இஃது அக்கோ சமவெளியில் கர்மேல் மலைமுகடுக்கு அருகில் இருந் திருக்கலாம். அக்கோவுக்குத் தென் கிழக் கில் 10 கி.மீ. தொலைவிலுள்ள தெல் கிசான் என்ற இடமாக இருக்கலாம்.

மிசாவேல் (MISHAEL - இறைவன் இருப் பதைப் போல் உள்ளவர் யார்?)

1. உசியேலின் மகனான மிசாவேல் ஒரு லேவியர். இவன் ஆரோனுக்குச் சிற்றப்பா மகன் (யாத் 6:18:22). மிசாவேலையும், அவரது சகோதரர் எல்சாபானையும் மோசே அழைத்து, ஆரோனின் புதல்வர்களான நாதாபு, அபிகூ ஆகியோர், ஆண்டவருக்கு அன்னிய நெருப்பைச் சமர்ப்பித்து இறந்த போது அவர்களின் உடலை எடுத்துப் பாளையத்திற்கு வெளியே போடுமாறு கூறினார் (லேவி 10:4).

2. எஸ்ரா பொதுமக்கள் முன்பாகச் சட் டத்தைப் படித்துக் காண்பித்தபோது அவர் அருகே இடப்புறத்தில் நின்றவர்களில் ஒரு வர் (நெகே 8:4).

3. தானியேலின் மூன்று நண்பர்களில் ஒருவர் (தானி 1:6-7.11.19; 2:17; 1மக் 2:59); பாபிலோனியர் இவரை மேசாக்கு என அழைத்தனர் (தானி 1:7). சதிராக்கு, ஆபது நெகோ ஆகியோருடன் பாபிலோன் மாநி லத்தில் முக்கியமான அரசாங்கப் பதவிக்கு நியமிக்கப்பட்டார் (3:12). நெபுகத்னேசரால் எழுப்பப்பட்ட சிலையை வணங்க அவர் கள் மறுத்ததால், மூவரும் தீச்சூளையில் எறியப்பட்டனர். அங்கே இறைவனது வானதூதரால் காப்பற்றப்பட்டனர் (தானி 3.).

மிசிராயர் (MISHRAITES)

கிரியத்து எயாரீமைச் சேர்ந்த, யூதாவைச் சேர்ந்த, ஒரு குடும்பம். இதிலிருந்து சொராத்தியர் மற்றும் எசுத்தாவோலியர் தோன்றினர் (1 நாள் 2:53).

மிசுகாபு (MISGAB - உயர்ந்த இடம்)

எரே 48:1-இல் பேசப்படும் மோவாபில் உள்ள ஓரிடம் இது. இது நகரைச் சூழ்ந் திருக்கும் கோட்டையைக் குறிப்பதற்கான பொதுப்பெயர் எனவும் கொள்ளப் படுகிறது.

மிசுமன்னா (MISHMANNAH - தடித்த, கொழுத்த)

காத்து இனத்தைச் சேர்ந்த ஆற்றல் மிக்க வரும், திறமை மிக்கவருமான போர்வீரர் களில் சிலர் 'சிக்லாகு' எனுமிடத்தில் தாவீது மறைந்திருக்கும்போது அவருடன் வந்து சேர்ந்து கொண்டனர். அவர்களில் மிசுமன்னா ஒருவர். அவர் பின்னர் தாவீ தின் படையில் ஓர் அதிகாரி ஆனார் (1 நாள் 12:10).

மிசுமா (MISHMA)

1. இசுமயேலின் புதல்வர்களுள் ஒருவன். ஓர் அரேபிய இனத்தின் குலப்பெயர் மூதாதையர் (ஆதி 25:14; 1நாள் 1:30). சில வரைபடங்களில், தெயிமா மற்றும் ஏபெல் சமார் ஆகிய இடங்களுக்கு இடையிலுள்ள ஏபெல் மிசுமா குறிக்கப்படுகிறது.

2. இவர் சிமியோனுடைய வழிவந்த, மிப்சாம் என்பவரின் மகன் (1 நாள் 4:25-26). மிப்சாம், மிசுமா எனும் பெயர்கள் இந்தத் தலைமுறை அட்டவணையிலும் இசுமயேலின் தலைமுறை அட்டவணை யிலும், வருவது (1:29-30; 4:25). இந்த இரு அராபிய இனங்களும் சிமியோன் இனம் தெற்கு நோக்கிப் பரவியபோது சிமியோ

னுடைய இனத்தோடு சேர்க்கப்பட்டு விட்டன என்பதைக் கட்டுகின்றன.

மிஸ்பரத்து (MISPERETH)

மிஸ்பார் என்ற பெயரின் மற்றொரு வடிவம் (நெகே 7:7).

மிஸ்பா, மிஸ்பே (MIZPAH, MIZPEH - *காவல் கோபுரம்)*

இவை பாலஸ்தீனத்திலும் அதன் அண்டை நாடுகளிலும் உள்ள பல நகரங்களின் பெயர்களாகும். மிஸ்பா, மிஸ்பே என இருவகையிலும் இப்பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன. எந்த நாட்டில் இப்பெயருடைய ஊர் இருக்கிறதோ அந்த நாட்டோடு இணைத்துக் கூறப்படும். எடுத்துக்காட்டு: மோவாபின் மிஸ்பே (1 சாமு 22:3); கிலயாதின் மிஸ்பே (நீதி 11:29). எழுபது நூல் பல இடங்களில் இப்பெயர்களைப் பொதுப்பெயராகவே மொழிபெயர்க்கிறது (நீதி 10:17; 11:29).

1. யாக்கோபு, தனக்கும் லாபானுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைக்கு அடையாளமாக இப்பெயரை இட்டார் (ஆதி 31:49). கற்குவியலுக்கு இப்பெயர் இடப்பட்டதாக மாசோரேட்டிக்கு வாசகம் கூறுகிறது. சமாரியர் வாசகம் இது தூணுக்கு இடப்பட்டதாகக் கூறுகிறது; ஆகவே மிஸ்பா என்ற பெயர் 31:45-இல் வரும் தூணின் பெயராகக் கருதப்படுகிறது. மிஸ்பா ஆசீர்கள் என்றழைக்கப்படும் 31:49 இந்நிகழ்ச்சிகளோடு தொடர்புடையது. யாக்கோபு யாபோக்கு ஓடையை இன்னும் கடக்கவில்லை என்பதால் (32:22), யாக்கோபு மிஸ்பா என்று கொடுப்பது வட இலயாதில் நடந்திருக்க வேண்டும்.

2. மிஸ்பா நாடு (யோசு 11:3) அல்லது மிஸ்பே பள்ளத்தாக்கு (11:8):- வட கலிலேயாவில் இந்த இடத்தில் எர்மோன் மலையடிவாரத்தில் இவ்வியர் சிலர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஆட்சோரின் யாபீன் அரசனின் தலைமையில் இஸ்ராயேலருக்கு எதிராக அமைக்கப்பட்ட கூட்டணியில் சேர்ந்தனர். இந்தக் கூட்டணி படுதோல்வியுற்றது. இந்த இடம் இஸ்ராயேலரின் கட்டுப்பாட்டில் இல்லாத வட எல்லையில் இருந்திருக்கலாம். ஆனால், இஃது இருந்த இடத்தைத் துல்லியமாகக் கணிக்க முடியவில்லை.

3. யூதாவின் மிஸ்பே:- இது யூதாவின் செபேலா பகுதியிலுள்ள ஒரு நகரம் (யோசு 15:38). இது தெல் எஸ்-சாபியாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. ஆனால், இது காத்து இருந்த இடமாக இருக்கலாம். யுசேபியுவும், எரோனிமுவும் இப்பகுதியிலுள்ள ஓர் இடத்தை அடையாளம் குறிக்கின்றனர்.

4. பென்யமினின் மிஸ்பா:- இது பென்யமின் இனப்பகுதியில் உள்ள ஒரு நகர் (யோசு 18:26). இந்த மிஸ்பாவில்தான் பென்யமினியர் லேவியரின் மறுமனைவியைக் கற்பழித்துக் கொன்றனர். இதற்குப் பழிவாங்க இஸ்ராயேலின் வீரர்கள் ஒன்று கூடினர் (நீதி 20:1.3; 21:1.5.8). பிற்காலத்தில் சாமுவேல் இஸ்ராயேலருக்கு நீதிவழங்கிய மூன்று இடங்களில் இதுவும் ஒன்றாகும் (1 சாமு 7:16). இங்குதான், சாமுவேல் பெலிஸ்தியருக்கு எதிராகப் போராட இஸ்ராயேலரின் படையை ஒன்று கூட்டினார் (7:5-12). யூதாவின் அரசன் ஆசா இந்த மிஸ்பாவைக் கோட்டைகளுடன் கட்டி எழுப்பினான் (1 அர 15:22; 2 நாள் 16:6); இதனால் தன் நாட்டின் வட எல்லையை விரிவுபடுத்தினான். கெதல்யா ஆளுநராக இருந்த குறுகிய காலத்தில் மிஸ்பா யூதா நாட்டிற்குத் தலைநகராக இருந்தது (2 அர 25:23.25; எரே 40-41). நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் எருசலேம் சுவரை மீண்டும் கட்டுவதில் மிஸ்பாவின் ஆட்கள் உதவி செய்தனர் (நெகே 3:7. 15.19). அசமோனியர் காலத்தில் மிஸ்பா (மாஸ்பா) செபக்கூட்மையமாகத் திகழ்ந்தது (1 மக் 3:46). இஃது இந்த இடம் சாமுவேல் காலத்தில் இஸ்ராயேல் சபை கூடும் இடத்தை நினைவுபடுத்தலாம்.

இந்த இடம் எருசலேமுக்கு வடக்கில் 12 கி.மீ. தொலைவில் உள்ள தெல் ஏன்-நஸ்பே என்று பலரால் அடையாளம்

காட்டப்படுகிறது. எருசலேமுக்கு வடமேற்கில் 8 கி.மீ. தொலைவில் உள்ள நெபிசம்வில் என்று வேறு சிலர் அடையாளம் காட்டுகின்றனர். தெல் ஏன்-நஸ்பேயில் நடந்த அகழ்வாய்வுகளில், குறிப்பாக ஆசா குலத்தைச் சேர்ந்த அதிகம் பாதுகாப்புடைய கோட்டைச் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டன. ஒருவேளை 2 அர 25:23; எரே 40:8-இல் குறிக்கப்படும் யாசானியாவின் முத்திரை இவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது எனலாம். பொதுவாக, தெல் ஏன்-நஸ்பே பற்றிய செய்திகள் மிஸ்பாவோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளோடு ஒத்துப்போகின்றன.

5. தென் கிலயாதின் மிஸ்பா:- இஃது அம்மோனியர்களுக்கு எதிராகப் போரிட இஸ்ராயேலர் படைகள் கூடிய இடமாகும். இப்தாகு, போரை நடத்த கிலயாதுக்கு மீண்டும் அழைக்கப்பட்டு, அங்குத் தங்கி வாழ்ந்தார் (நீதி 10:17; 11:11.29.34). இராமாத்து-மிஸ்பே (யோசு 13:26) இந்த நிகழ்ச்சிகளோடு தொடர்புடைய மிஸ்பேயுடன் ஒத்துப்போகிறது. ஆனால், யாக்கோபோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளோடு ஒத்துப் போகாது. ஆகவே, இது யாபோக்கு ஓடையின் தெற்கில் இருந்திருக்க வேண்டும்.

6. மோவாபின் மிஸ்பே:- சவுலிடமிருந்து ஓடிய போது தாவீது இங்குதான் மோவாபின் அரசனைச் சந்தித்துத் தன் பெற்றோருக்கு மோவாபில் அடைக்கலம் தருமாறு வேண்டினார் (1சாமு 22:3). இஃது இருந்த இடம் தெரியவில்லையானாலும், மெதேபாவுக்குத் தென்மேற்கில் மிக முனைப்பாக உள்ள உயரமான பகுதியான ரசும் ஏல்-மெஸ்ரிப என்ற இடம் அடையாளம் காட்டப்படுகிறது.

7. ஒசேயா 5:1-இல் குறிக்கப்படும் ஓர் இடம். இது மேலே 4 அல்லது 5-இல் குறிக்கப்படும் இடங்களாக இருக்கலாம்.

மிஸ்பார் (MISPAR)

இவர் செருபாபேலோடு பாபிலோன் அடிமைத்தனத்தினின்று நாடு திரும்பியவர்களில் ஒருவர் (எஸ் 2:2). இவர் நெகே 7:7-இல் மிஸ்பரத்து என்று அழைக்கப்படுகிறார்.

மிஸ்ரபோத்து-மயிம் (MISREPHOTH-MAIM)

இது பெனிசியக் கடற்கரையில் சீதோனுக்கு அண்மையிலுள்ள ஓர் இடம் (யோசு 11:8; 13:6). இங்கு வெப்ப ஊற்றுகள் உள்ளன. இவ்விடம் இன்று அயின் மிஸ்ரேபி எனப்படுகிறது. ஒருசிலர் 'கிர்பெத் ஏல்-முசெய்ரேபெ'' என்ற இடத்தை இதற்கு அடையாளம் காட்டினாலும், அயின் மிஸ்ரேபிதான் இந்த இடம் என்று கருதுவது மேலானதாகும்.

இப்பெயருக்குச் ''சுண்ணாம்பு, நீரில் வெந்து கொண்டிருக்கிறது'' எனும் பொருள் கொடுக்கலாம். யோசுவா கானானியர்களை, மேரோம் எனும் ஏரிக்கருகில் திடீரென அவர்கள் மேல் தாக்கித் தோல்வியுறச் செய்து, மிஸ்ரபோத்து-மயிம் ஏரி வரை அவர்களைத் துரத்திக் கொண்டு வந்தார். ஏறக்குறைய சீதோன் நாட்டு எல்லை வரை துரத்தி வந்தார்.

மிஸ்ராயிம் (MIZRAIM - செம்மண்)

இவர் காமின் மக்களில் ஒருவர் என ஆதி 10:6.13-இல் கூறப்படுகிறது. இஃது எகிப்தைக் குறிப்பதற்குப் பயன்பட்ட எபிரேயச் சொல்லாகும் (ஆதி 12:10; 3:10; 25:18; 47:20). ஆனால், சில இடங்களில் இஃது எகிப்தையன்று 'முஸ்ரி' நாட்டைக் குறிப்பதாக இருக்கிறது (2 அர 10:28; 2 அர 7:6; 2 நாள் 1:16-17). இது மூன்றாம் சல்மனேசரின் குறிப்புகளில் காணப்படுகிறது. அவர் முஸ்ரியிலிருந்து பல ஒட்டகங்கள் தனக்குத் திரையாகச் செலுத்தப்பட்டதாகக் கூறுகிறார். இந்தப் பாக்டிரியன் ஒட்டகங்கள், முஸ்ரி ஆசியாவில் இருந்திருக்க வேண்டுமெனச் சுட்டுகின்றன. இப்பெயர் பல பொருள்களில், பல எல்லைகளில் உள்ள நாட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால், இது சிறிய ஆசியாவிலோ, எகிப்திலோ இருந்திருக்க வேண்டும்.

மிஸ்ராயிமிலிருந்தும், கேவேயிலிருந்தும் சாலமோனுக்குக் குதிரைகள் வந்தன (1 அர

10:28). இது மிஸ்ராயிம் சிறிய ஆசியாவில் இருந்தது என்பதற்குச் சான்றாக இருக்கலாம்.

மிஷ்னா (MISHNA - திரும்பக்கூறுதல்)

இஃது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அளிக்கப்படும் யூதச் சட்டத்தின் வாய்மொழி விளக்கத் தொகுப்பு ஆகும். இது கி.பி. 135-இல் பிறந்த யூதா ஹாநாசி எனும் ராபியால் தொகுக்கப்பட்டது.

இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டுவரையுள்ள சட்ட விளக்கங்களைக் கொண்டுள்ளது. இது ஆறு நூல்களாகவும், அறுபத்து மூன்று பாகங்களாகவும் பின்னவை அதிகாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இதைத் தொகுத்தவர் காலம் வரையில் பாலஸ்தீனப் பள்ளிகளில் போதிக்கப்பட்ட யூதசமய, சட்ட அமைப்பு முழுவதையும் கொண்டுள்ளது. இதில் விவசாயம் பற்றிய சட்டங்கள், ஓய்வுநாள் மற்றும் திருவிழாக்கள் பற்றிய சட்டங்கள், பலிகள் மற்றும் சடங்குத் தூய்மை பற்றிய சட்டங்கள், குடும்பச்சட்டங்கள், சமூகம் மற்றும் குற்றங்கள் பற்றிய சட்டங்கள் ஆகியவை அடங்கியிருந்தன. காலப்போக்கில், இது பிற்கால விளக்கவுரைகளால் விரிவாக்கப்பட்டது; அதன் விளைவாக பாலஸ்தீன மற்றும் பாபிலோனியத் தால்மூதுகள் தோன்றின.

மிட்சார் (MIZAR - சிறிய தன்மை)

இது யோர்தான், எர்மோன் பகுதிகளோடு தொடர்புபடுத்திப் பேசப்படும் மலையாகும் (சங் 42:6). யோர்தான் புறப்படுமிடம் பற்றி இச்சங்கீதம் பேசுவதால் தாண் எனுமிடத்திற்கு, இவ்விடம் அண்மையில் உள்ளதாக இருக்க வேண்டும். அல்லது இந்தச்சொல் எர்மோன் மலைக்கும், மிட்சார் மலைக்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துவதற்கும் அதாவது அவ்வளவு உயர்ந்த எர்மோனின் முன் இம்மலை எவ்வளவு சிறியது என்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இஃது அமைந்த இடம் எதுவென்று காண இயலவில்லை.

மிட்ராஷ் இலக்கியம் (MIDRASHIC LITERATURE)

1. முன்னுரை: கி.மு. 587-இல் இஸ்ராயேலர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு கி.மு. 538-இல் யூதேயாவுக்கு மீண்டும் திரும்பிக் குடியேற அனுமதிக்கப்பட்டனர். இக்காலம் இஸ்ராயேலின் வரலாற்றில், குறிப்பாக அதன் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இக்காலத்திற்கு முன்பே இஸ்ராயேலில் பல நூல்கள் தோன்றத் தொடங்கியிருந்தன. ஆனால், இக்கட்டத்திற்குப் பின்வந்த நூற்றாண்டுகள் இஸ்ராயேலின் இலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். ஏனெனில், இக்காலத்தில் இஸ்ராயேல் ஆசிரியர்களின் இலக்கிய நடவடிக்கைகள் செழித்தோங்கின.

நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலத்திற்குப் பின்புதான் தோரா அல்லது ஐந்நூல் தொகுப்பு இறுதி வடிவம் எடுத்தது. இறைவாக்கினர்களின் கூற்றுகள் தொகுக்கப்பட்டு முழு நூல் வடிவம் எடுத்தன. சங்கீதங்களின் பல்வேறு தொகுப்புக்களும் ஒன்றிணைக்கப்பட்டு, நாம் கொண்டிருக்கும் வடிவில் நூல்வடிவம் எடுத்தன. இவற்றோடு இறை ஏவுதல் பெற்ற புதிய நூல்களும் தோன்றின. கி.மு. 6-ஆவது அல்லது 5-ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் இஸ்ராயேலர், எக்காலத்திலும் எல்லா மக்களுக்கும், மன உலைவைத் தரும் தீமை பற்றிய பிரச்சனையை, யோபுவுக்கும் அவரது நண்பர்களுக்குமிடையே நடக்கும் காவிய உரையாடலாக, நாடகப் பாணியில், எடுத்தியம்பினார். கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு கவிஞர் உன்னத சங்கீதம் அல்லது பேரின்பப்பாடல் என்ற நூலில் ஆண்-பெண் அன்புறவைச் சிறப்பித்துப் பாடினார். அந்த அன்புறவு வழி, இறைவனுக்கும் அவரது மக்களுக்குமிடையேயுள்ள அழிவற்ற அன்பை நாடகப்படுத்தினார். கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலமை மிக்க குரு ஒருவர் நாளாகமம், எஸ்ரா, நெகேமியா ஆகிய நூல்கள் அடங்கிய பழைய ஏற்பாட்டுத் திருச்சபை வரலாற்றை ஒரு புதிய இலக்கிய வடிவில்

எழுதினார். இக்காலத்தில்தான், யோனா என்ற வகை இலக்கியமும், நற்பண்புடைய வாழ்வு பற்றிய தோபியா நூலும், ரூத்து, எஸ்தர் யூதித்து போன்ற துணை வரலாற்று (Para-historical) நூல்களும், தானியேல் என்ற ஊழியிறுதி வெளிப்பாட்டு நூலும், விவிலியத்திலுள்ள மற்றும் சில நூல்களும் தோன்றின.

இவற்றோடு, இறைமக்களுக்குப் போதிக்கவும் உற்சாகம் அளிக்கவும் அவர்களை உறுதிப்படுத்தவும் ஆசிரியர்கள் சிலர் புதிய இலக்கிய வடிவங்களை வளர்த்தனர். இவ் வடிவங்கள் முந்தைய நூல்களில் இங்கு மங்குமாகப் பயன்பட்டிருந்தன. ஆனால், நாடு கடத்தலுக்குப் பின்வந்த காலத்தில் இவை சிறப்பான முறையில் வளர்ந்து முன்னுக்கு வந்தன. இவற்றில் ''மிட்ராஷ்'' அல்லது துணை வரலாற்று இலக்கியம், ஊழியிறுதி வெளிப்பாட்டு (apocalyptical) இலக்கியம் ஆகிய இரண்டும் முக்கிய மானவை; சிறப்பானவையுமாகும். இவற் றில் ஒன்றான மிட்ராஷ் இலக்கியம் பற்றி இப்போது பார்ப்போம்.

2. ஆய்வின் அவசியம்: மிட்ராஷ் இலக் கிய வகையைச் சேர்ந்த விவிலிய நூல்கள் பெரிதும் வியப்பளித்துள்ளன; தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகை நூல்களில், ஒரு வரலாற்றுக் கரு, பல கற்பனை விவரங்கள், மன்றாட்டுக்கள், உரைகள் ஆகியவற்றால் விரிவாக்கப்பட்டு போதக வடிவில் எடுத்துக் கூறப்படும். அதன் நோக்கம் ஒரு குறிப்பட்ட சபை யினருக்குப் போதித்து அவர்களை உற்சாகப் படுத்துவதும், அறிவுறுத்துவதும், உறுதிப் படுத்துவதுமாகும்.

இந்த இலக்கியம் தோன்றிச் செழிப்புற்ற காலத்தில், அதைக் கேட்ட அல்லது வாசித்த மக்கள் வியப்படையவில்லை; தவறாகப் புரிந்து கொள்ளவுமில்லை; அதை அதற்குரிய விதத்திலேயே சரியாகப் புரிந்து கொண்டனர். ஆனால், காலப்போக் கில் இந்த இலக்கிய வடிவைச் சரியாகப் புரிந்து கொள்ளும்முறை தவறிப் போய் விட்டது. அதன் விளைவாக இவ்வகை இலக்கியத்தைச் சேர்ந்த நூல்கள் அப்படியே வரலாற்று நூல்களாகக் கருதப்பட்டன. இவற்றின் வரலாற்றுப் பின்னணிகள் மறை வாக இருந்த மட்டும் இவற்றிற்கு எதிர்ப்பு கள் எழவில்லை. புனித எரோனிமு இந்நூல் களைக் கண்டு மலைத்தார்; ஆனால், ஒரு முடிவுக்கும் வரவில்லை. லூத்தரும் பிற கிறிஸ்தவச் சபைகளின் சமயச் சீர்திருத்த வாதிகளும் இந்நூல்களை ஐயுற்றனர்; ஆகவே, திருமுறைப் பட்டியலிலிருந்து தள்ளுபடி செய்தனர். கத்தோலிக்க அறிஞர் கள் மலைப்பும், குழப்பமும் கொண்டனர்; ஆனால், விசுவாசத்தால் வரும் உறுதியால் இந்நூல்களை ஏற்பதில் நிலைத்து நின்றனர். இந்நிலை அண்மைக்காலம் வரை நீடித்தது.

நவீன காலத்தில் கிடைத்துள்ள, பழங் கால மேற்காசிய வரலாறு பற்றிய தெளி வான அறிவும், விவிலிய இலக்கிய வடி வங்கள் பற்றிய துல்லியமான அறிவும், கத்தோலிக்க விசுவாசத்தை முன்கூறப்பட்ட குழப்ப நிலையிலிருந்து விடுவித்தன; இந் நூல்களை அவை முறையாகச் சேர்ந்த இலக்கிய வடிவங்களோடு சேர்த்தன. ஆகவே, இவ்விலக்கிய வடிவங்கள் பற்றிய ஆய்வு அவசியமாகியது. இந்தக் கட்டுரை யில் மிட்ராஷ் என்ற சொல்லின் பொருள், இந்த இலக்கியத்தின் வகைகள், பண்புகள், அதன் தோற்றம், வளர்ச்சி, புதிய ஏற்பாட் டில் அதன் பாதிப்பு ஆகியவற்றைப் பார்ப் போம்.

3. மிட்ராஷ் என்ற சொல்: அலசியாராய் தல், தேடுதல், நுணுகி ஆராய்தல் என்று பலவாறு பொருள் கொடுக்கக் கூடிய 'தராஷ்' (darash) என்ற எபிரேயச் சொல்லி லிருந்து மிட்ராஷ் என்ற சொல் வருவதாகத் தெரிகிறது. தராஷ் என்ற சொல் இறை வாக்கு வழியாக இறைவனிடமிருந்து பதில் தேடுவதைக் குறிக்கிறது. ஒருவேளை இப் பொருள் வேதாகமப் படிப்பைக் குறிக்க அடிப்படையாக அமைந்திருக்கலாம். இதி லிருந்து மிட்ராஷ் என்ற சொல் ஆராய்தல், தேடுதல் என்று பொருள்படும். இவற்றி லிருந்து இச்சொல் விளக்கவுரை என்றும்

பொருள் பெறுகிறது. இச்சொல்லின் வினைச்சொல் வடிவம் தேடுதல், படித்தல், ஆய்வு செய்தல் என்ற பொருட்களில் விவிலியத்தில் பல இடங்களில் வருகிறது. ஆனால், பழைய ஏற்பாட்டில் இச்சொல்லின் பெயர்ச்சொல் வடிவம் மூன்றே இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. இறைவாக்கினர் இத்தோவின் நூல் (மிட்ராஷ். 2 நாள் 13:22), அரசர்களின் வரலாறு (மிட்ராஷ். 2 நாள் 24:27) ஆகியவற்றை நாளாகமம் குறிப்பிடுகிறது. இவை இரண்டும் அந்த ஆசிரியர் பயன்படுத்திய மூல நூல்களைக் குறிப்பிடுகிறது. ஆனால், அவற்றின் தன்மை பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. சீராக்கு ஆசிரியர் தனது பள்ளியை 'bet-ha-midrash'-(மிட்ராஷ் வீடு) (சீரா 51:31) என்று குறிப்பிடுகிறார். இதைக் கத்தோலிக்கத் தமிழாக்கம் ''நன்னெறியின் வீடு'' என்று மொழிபெயர்த்துள்ளது. இஃது ஒருவேளை வேதாகமத்துக்கு விளக்கம் அளிக்கப்படும் பள்ளியாக இருக்கலாம். இங்கு வேதாகமத்தைப் படித்தலும், ஆராய்தலும், விளக்கம் அளித்தலும் நடந்திருக்க வேண்டும்.

யூத ராபிகளின் நூல்களில் மிட்ராஷ் என்ற சொல்லின் வினை, பெயர்ச் சொல்லின் வடிவங்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் ராபிகளின் போதக விளக்கவுரைகளைக் குறிக்க, இச்சொல்லின் பன்மை வடிவம் ''மிட்ராஷிம்'' (Midrashim) என்ற சொல் பயன்பட்டுள்ளது. இம்மரபுக்குக் கும்ரான் ஏடுகள் சான்று பகர்கின்றன. ராபிகளின் இலக்கியத்தில் மிட்ராஷ் என்ற சொல் பொதுவாக, வேதாகமப் படிப்பையும், போதகத்தன்மையுடைய விவிலிய விளக்கவுரையையும், விவரிப்பையும் குறித்தது. வேதாகமம் பற்றிய நவீன ஆய்வுகளில் யூதராபிகள் தங்கள் விளக்கவுரைகளில் பழைய ஏற்பாட்டு வாசகங்களைப் பயன்படுத்திய தனிப்பட்ட முறையை, இச்சொல் ஒரு கலைச் சொல்லாகக் குறிக்கிறது. இச்சொல்லுக்கு விளக்க முறை என்பதைவிடப் பயன்படுத்தும் முறை அதாவது வேதாகம வாக்குகளைப் பயன்படுத்தும் முறை என்று பொருள் கொள்வதே சிறந்தது என்று மெக்கென்சி என்ற அறிஞர் கூறுவார்.

சுருக்கமாக, 1) ஒரு விவிலிய வாசகத்திற்கு அளிக்கப்பட்ட தனி விளக்கக் குறிப்பையோ, அத்தகைய குறிப்புகளின் தொகுப்பையோ குறிக்க மிட்ராஷ் என்ற சொல் பயன்பட்டது. 2) கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் விவிலியத்தில் நேரடியான, எளிய பொருளில் (plain sense) அக்கறை காட்டப்பட்டது. இதில் போதக விளக்கம் முக்கியத்துவம் பெற்றது. இப்பொருளில் மிட்ராஷ் பயன்பட்டது. இத்தகைய விளக்கமுறை பிற்கால அறிவியல் விளக்கமுறையிலிருந்து வேறுபட்டது. சொற்பொருளைக் (literal sense) கடந்து சென்று வேதாகமத்தின் மறைந்த, ஆழ்ந்த பொருளைத் தேடும் விவிலிய விளக்கத்தைச் சில சமயம் இச்சொல் குறித்தது. 3) இப்போது இச்சொல், ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையைக் குறிக்கப் பயன்படுகிறது. கி.பி. 2-13-ஆம் நூற்றாண்டுகளில் யூத ராபிகள் பயன்படுத்திய விளக்கவுரை இலக்கியத்தையும் ஒத்த பண்புடைய முந்தைய யூத இலக்கியங்களையும், புதிய ஏற்பாட்டுப் பகுதிகளையும் இச்சொல் ஒரு கலைச்சொல்லாகக் குறிக்கிறது.

4. மிட்ராஷ் வகைகள்: மிட்ராஷ் நூல்கள் விவிலிய வாசகங்களைப் பற்றியவையாகும். விளக்கம் கூறப்படும் விவிலிய வாசகத்தின் தன்மைக்கேற்ப, அலாக்கா (halakkah), அக்காதா (haggadah) என இரு வகையாக மிட்ராஷ் இலக்கியத்தைப் பிரிக்கலாம்.

அ) அலாக்கா மிட்ராஷ்: இப்பெயரால் விவிலியத்தின் சட்டப்பகுதிகளுக்கு அளிக்கப்பட்ட விளக்கவுரைகள் குறிக்கப்படுகின்றன. அலாக்கா என்ற சொல் நடத்தல் என்று பொருள்படும். ஆகவே, இவ்வகை மிட்ராஷ் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டது. யூத ராபிகள் மோசே சட்டத்தைப் படித்தனர்; ஆய்வு செய்தனர்; அதன் உதவி கொண்டு

வாழ்க்கை முறையை வரையறை செய்த னர்; புதிய வேறுபட்ட காலத்திற்கும் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு மோசே சட்டத்திலிருந்து புதிய சட்டங் களையும் ஒழுக்க முறைகளையும் கண்டு பிடிக்க முயன்றனர். இவ்வாறு, மோசே ஒழுக்கச் சட்டங்களிலிருந்தும், சடங்குக் கட்டளைகளிலிருந்தும் அதிகாரபூர்வமான வாழ்க்கை முறையை எடுத்துக்கூறுவது அலாக்கா மிட்ராஷ் ஆகும். இஃது எஸ்ரா வில் தொடங்கி, இடையீடற்ற யூத போதகத் தலைமுறை மரபு, விவிலியச் சட்டங்களுக்கு அளித்த விளக்கம், மறு விளக்கம் ஆகியவற்றிலிருந்து எடுக்கப் பட்ட யூத போதனைகள், சட்டங்கள், மரபுகள் ஆகியவற்றைக் கொண்ட தொகுப் பாகும். இஃது அந்தக் காலத்தில் ஏற்படும் பொருளாதார, குடும்ப, அரசியல், சமூக, சமய மாற்றங்களுக்கு ஏற்ப யூத ஆன்மீகத் தலைவர்கள் அளித்த மாற்றங்கள், தழுவிய விளக்கங்கள் (adaptation) ஆகியவற்றை உள்ளடக்கியது. சட்டத்தன்மையுடைய தாயினும், அலாக்கா மிட்ராஷின் நோக்கம் மனிதனது எல்லாக் கூறுகளையும், அலுவல் களையும் இறைவனது சேவையோடு தொடர்புபடுத்துவதாகும்; இறைவனது திருவுளத்தின் மேலாண்மையை மனித வாழ்வின் மேலளவையாக நிறுவுவதாகும்.

இப்படிச் சட்டத்திற்கு விளக்கம் அளிப் பது மிகைப்படுத்துவதும் உண்டு. இஃது எந்த அளவுக்குப் போகக்கூடும் என்பது நற்செய்தியில் விரிவாகச் சித்திரிக்கப்படு கிறது (மாற் 7:9-13). அலாக்கா விளக்கவுரை கள் பல நூற்றாண்டுகளாக வாய்மொழி யாகவே தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டன. பிற்காலத்தில் இவை மிஷ்னா (Mishna), தால்மூது (Talmud) என்ற இரு தொகுப்புகளாக வடிவம் எடுத்தன. கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரையுள்ள அலாக்கா விளக்கவுரைகள் மிஷ்னாவில் அடங்கியுள்ளன. இது யூத ஹா-நாசி (judaha-Nasi) என்ற ராபியால் தொகுக்கப் பட்டது. கி.பி. 3-6ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய அலாக்கா விளக்கவுரைகளின் தொகுப்புகள் தால்மூது என்றழைக்கப் பட்டன. இவை எருசலேம் தால்மூது, பாபிலோனியத் தால்மூது என்று இருவடி வில் உள்ளன. மத் 19:3-12-இல் வரும் விவாகரத்து பற்றிய தர்க்கம் அலாக்கா விளக்கவுரைப் பண்புகளைக் கொண் டுள்ளது. அலாக்கா விளக்கவுரைக்கு ஒத்த பகுதிகள் புதிய ஏற்பாட்டில் அரிதாகவே காணப்படுகின்றன.

ஆ) அக்காதா மிட்ராஷ்: இது, சட்ட மல்லாத விவிலியப் பகுதிகளுக்கு அளிக்கப் படும் விளக்கமாகும். இதில் இஸ்ராயே லின் வரலாற்றுக்கு யூத ராபிகள் விளக்கம் அளிக்க முயன்றனர். யூதவரலாற்றிலிருந்து, விசுவாசிகளின் ஆன்மவாழ்வுக்கு நலம் தரும் பாடங்களையும், எடுத்துக்காட்டு களையும், அறிவுரைகளையும் வெளிக் கொணர முயன்றனர். குறுகிய அல்லது நீண்ட வரலாற்றுக் கருவை அடிப்படை யாகக் கொண்ட ஒரு கதை பல கற்பனை விவரங்களுடன் சுதந்தரமாகவும் தாராள மாகவும் விவரிக்கப்பட்டு, ஆசிரியரின் நோக்கத்திற்கேற்ப வாசகர்களுக்குப் போத கம் அளிக்கப்பட்டது; அறிவுரை வழங்கப் பட்டது. அவர்களது விசுவாசம் உறுதிபெற உதவி அளிக்கப்பட்டது. இது பற்றி பின்பு விரிவாகப் பார்ப்போம்.

இந்த அக்காதா மிட்ராஷில் வரலாறு ஒரு நிரூபணமாகவோ, ஆதாரமாகவோ பயன் படவில்லை. அஃது ஒரு முகப்புத் தோற்றமே. முக்கியமில்லாத ஒரு பின் னணி, கதைக்குப் பயன்படும் ஒரு பணித் திட்டம். ஆயினும், இவ்வாறு விளக்கும் முறை ஒரு வரலாற்று நிகழ்ச்சியை அடிப் படையாகக் கொண்டது. இக்காரணத்திற் காக அக்காதா மிட்ராஷைப் பரந்த பொரு ளில் ஒரு வரலாற்று இலக்கிய வடிவம் என்று கருதலாம். சரியாக, இஃது ஒரு துணை வரலாற்று (Para-historical) வடிவ மாகும்.

அக்காதா விளக்கங்கள் அடங்கிய தொகுப்புகள் எதுவும் நூல் வடிவம் எடுத்த தாகத் தெரியவில்லை. கி.பி. முதல் நூற்

றாண்டில் பழைய ஏற்பாட்டு வரலாற்று நூல்களுக்கு அளிக்கப்பட்ட யூதப் புனை பெயர் நூல்களிலும், யோசிப்பசு, போலி பீலோ ஆகியோரின் நூல்களிலும், கும்ரான் ஏடுகளிலும் இத்தகைய விளக்கங்கள் பரந்த அளவில் காணப்படுகின்றன. அக்காதா வுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு ஞானம் 10-14-இல் காணப்படுகிறது. யோனா, தோபியா, யூதித்து, எஸ்தர், பாரூக்கு ஆகிய நூல்களும் தானியேலில் சில பகுதிகளும் (1-6; 13-14) ஒரு வேளை ரூத்து என்ற குறுநூலும் அக்காதாவுக்குத் தொடக்க மாதிரியாக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ı அலாக்கா கடமையை எடுத்துக் கூறு கிறது என்றால் அக்காதா அந்தக் கடமையை ஆர்வத்தோடு கடைப்பிடிக்க உள்ளத்தைத் தூண்டுகிறது எனலாம். இந்த இரண்டையும் தவிர்த்து, பெஷர்மிட்ராஷ் (Pesher midrash) என்ற மூன்றாம் வகை மிட் ராஷ் உண்டு என்பர் சிலர். இது விவிலிய வாசகங்களுக்குச் சொற்பொருள் (literal sense) அளிப்பதில் அக்கறை கொள்கிறது என்பர். சிறப்பாக, நிகழ்கால நிகழ்ச்சிகளின் ஒளி யில் இறைவாக்கினர்களின் கூற்றுகளுக்கு விளக்கம் அளித்து, அவற்றை நிகழ்காலச் சபையினருக்குப் பொருத்தமுடையதாகக் காட்டுவதாகும். இவ்விளக்கவுரைகள் அடங்கிய எந்தத் தொகுப்பும் கிடைக்க வில்லை.

ஆனால் தானி 9, அபக்கூக்கு ஆகியவை பற்றிய கும்ரான் ஏடுகள் இந்த விளக்க முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். புதிய ஏற்பாட்டில் மத்தேயு, உரோமையர், எபிரேயர், திருவெளிப்பாடு ஆகிய நூல்கள் இந்த வகையைப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. பெஷர் விளக்கவுரை உண்மை யில் அக்காதா விளக்கவுரைதான்.

மிட்ராஷ் இலக்கிய வகையும் ஊழியிறுதி வெளிப்பாட்டு இலக்கியமும் இணைந்த இலக்கிய நூல்களும் உண்டு. சிலர் தொகுப்பு முறையை (anthological-method) மிட்ராஷ் என்று கூறியுள்ளனர். ஆசிரியர் தமது சொந்த சிந்தனையை எடுத்துக் கூற விவிலியத்திலிருந்து எடுக்கப்பட்ட சொற் களையும் சுட்டிக்காட்டல்களையும் பயன் படுத்துவதாகும் இந்தத் தொகுப்புமுறை. சில சமயம் விவிலியச் சுட்டிக் காட்டல் களும், சொற்களும் ஒரு புதிய இலக்கி யத்தைப் படைக்க மட்டுமே உதவியுள்ளன. அவற்றின் மூலப்பொருள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இது மிட்ராஷ் அன்று. இதற்கு மாறாக, சில சமயங்களில் தொகுப்புமுறை புதிய படைப்புக்கு வேண் டிய சொற்களையும் உருவகங்களையும் மட்டும் தரவில்லை; புதிய படைப்பு நிறைவுபெற்ற வடிவில் மூல வாசகங் களைப் புரிந்து கொள்ள உதவும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய தொகுப்பு முறை மிட்ராஷ் ஆகும். இதற்குத் தானி 1-9-இல் காணப்படும் எரேமியாவின் எதி ரொலிகளும், சாக்கடல் ஏடுகளும் சான்றா கும். இத்தொகுப்பு முறை மிட்ராஷ்ஆம் அக்காதா விளக்கவுரையில் அடங்கும் எனலாம்.

5. மிட்ராஷ் இலக்கியம் தோன்றிய வர லாறு: இந்த இலக்கிய வடிவம் தோன்றி வளர, இஸ்ராயேல் வரலாற்றின் சில காரியங்கள் காரணமாயின. அவை, இஸ்ரா யேலேர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்படு தல், செபக்கூட வழிபாடு, வேதாகமத் திருமுறைப்பட்டியல் படிப்படியாக நிர்ண யிக்கப்படுதல், புலமை பெற்ற குருக்களும் சட்ட வல்லுநர்களும் தோன்றுதல் ஆகிய வையாகும்.

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட போது இஸ்ராயேல் தனது நாட்டையும், அரசையும், உடைமைகளையும் இழந்தது. எருசலேம் அழிக்கப்பட்டது. ஆலயம் தரை மட்டமாக்கப்பட்டது. ஆகவே, வழிபாடும் இல்லை. இஸ்ராயேலுக்கு எஞ்சியதெல் லாம் அதன் ஆன்மீக மரபுச்சொத்து ஒன்று தான். இதுவே இஸ்ராயேலுக்கு ஆறுதலும், ஆதாரமுமாய் இருந்தது. இந்த மரபுச் சொத்து அதன் எழுதப்பட்ட, எழுதப்படாத பாரம்பரியங்களாகும். இவற்றின்மேல் இஸ் ராயேல் தனது கவனத்தையும், ஆர்வத்தை

யும் செலுத்தியது. தனது சட்டங்களையும், வரலாற்றையும், இறைவாக்கு நூல்களையும் ஆராய்ந்து தனது நிகழ்காலத் துன்பங்களுக்கு விளக்கம் காணவும், மகிழ்ச்சிமிக்க வருங்காலத்திற்கு வழிகாட்டத் தேவையான வெளிப்படுத்தப்பட்ட வழிமுறைகளைக் கண்டு பிடிக்கவும் முயன்றது.

நாடு கடத்தப்பட்ட காலத்தில் பாபிலோனிலும், பிறநாடுகளிலும் சிதறிக் கிடந்த இஸ்ராயேலர்களிடையே அவர்களது சமய மரபுகளைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. மாறிய சூழ்நிலைக்கேற்ப அவற்றை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. அக்காலத்தில் ஓய்வுநாள் கடைப்பிடிப்பு, விருத்தசேதனம், பாரம்பரிய நாட்களில் நோன்பு போன்ற சில புறச்சடங்குகள் அதிகம் முக்கியத்துவம் பெற்றன. அந்தந்த இடங்களில் வாழ்ந்த யூத சமூகத்தினர் குறிப்பிட்ட நாட்களில் வழிபாடு செய்ய ஒன்று கூடினர். இதுவே செபக்கூட வழிபாட்டின் தொடக்கமாகும். இச்செபக் கூட்டங்களில் பழங்கால வழிபாட்டின் எல்லாக் கூறுகளும் முடிந்த அளவு பாதுகாக்கப்பட்டன. அவற்றில் சில, தோராவிலிருந்தும் புனித வரலாற்று நூல்களிலிருந்தும் சில பகுதிகளை வாசித்தல், அவற்றுக்கு விளக்கம் அளித்தல், அறிவுரை வழங்குதல், மன்றாடுதல், சங்கீதங்கள் பாடுதல், குரு அல்லது முதியவர் சபையினருக்கு ஆசீர் வழங்குதல் ஆகியவையாகும்.

இந்தச் செபக்கூட்டங்கள் திருமுறைப் பட்டியல் நூல்கள் நிர்ணயிக்கப்படுவதில் முக்கிய இடம் வகித்தன. ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்கள் வாசிக்கப்பட்டன, பாதுகாக்கப்பட்டன. இது பழங்கால நூல்கள் பாதுகாக்கப்பட்ட விதத்தை ஓரளவு விளக்குகிறது. நாடுகடத்தப்பட்ட காலத்திலும் அதற்குப் பின்வந்த நூற்றாண்டுகளிலும் இஸ்ராயேலின் வரலாற்று ஆசிரியர்களுடைய பழங்கால ஏடுகளும், இறைவாக்கினர் நூல்களும் படிப்படியாகச் சேர்க்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டன. இவை உயிருள்ள பாரம்பரியத்தின் ஒப்புதலோடு ''இறைவனுடைய வார்த்தை'' என்று முத்திரையிடப்பட்டன. ஒருவேளை எஸ்ரா காலத்தில் தோரா திருமுறைப் பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம் (நெகே 8:1-9). பாரசீகர் காலத்தில் பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான நூல்கள் திருமுறைப் பட்டியலில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இக்காலத்திலிருந்து இஸ்ராயேல் ''புத்தகத்தின் மக்களாக'' மாறியது எனலாம்.

இறை ஏவுதல் பெற்ற நூல்களைப் பதிப்பிக்கவும், அவற்றைச் செபக்கூட வழிபாட்டில் வாசித்து விளக்கவும் ஆட்கள் வேண்டியிருந்தது. ஏனெனில், விளக்கம் அளிக்கும் வழக்கம் பரவலாகப் பயன்பட்டது. இது புதிய நூல்கள் தோன்ற வாழ்க்கைச் சூழ்நிலையாக அமைந்தது. சான்றாக, யாத்திரை நிகழ்ச்சி செபக்கூட வழிபாட்டில் வாசிக்கப்பட்டிருக்க வேண்டும். அதுபற்றிய புதியவிளக்கம் எசா 63:7-64:12-இல் வரும் நோன்பு வழிபாட்டிலும், எசா 43:16-21-இல் வரும் நம்பிக்கை அறிவுரையிலும், சங் 78; 105; 106-இல் வரும் தியானங்களிலும் காணப்படுகிறது. இவற்றில் கடந்த காலம் நிகழ்காலத்திற்கு உரியதாக மாற்றியமைக்கப்பட்டு, புதிய விடுதலையின் நம்பிக்கை வெளிக்கொணரப்படுகிறது. இது, சோதனைக் காலத்தில் இஸ்ராயேலுக்கு ஆறுதலாக அமைந்த வேதாகமத்தைப் பற்றிய தியானத்தின் விளைவாகத் தோன்றியதாகும். செபக்கூடங்களில் வேதாகமத்துக்கு விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் புலமைமிக்க குருக்களும், சட்டவல்லுநர்களும் தோன்ற ஏதுவாயிற்று (எஸ் 7:6.10). குருக்களும், சட்டவல்லுநர்களும், பாடகர்களும், செபக்கூட வழிபாட்டில் ஒன்று கூடினர். இவர்கள் வேதாகமத்தைப். படிப்பதிலும், விளக்குவதிலும் தங்கள் வாழ்வைச் செலவிட்டனர். அதே சமயம் உள்ளத்திலும், அறிவிலும் வளர்ச்சி பெற்றனர். பழங்கால நூல்களைச் சேகரித்தனர்; பிரதி எடுத்தனர்; சிறுசிறு விளக்கங்களோடு அவற்றைப் பதிப்பித்தனர்; அவற்றைத் தங்கள் காலத்துக்குப் பொருத்தமாக எடுத்துக் கூறினர்; காலப்போக்கில் போதக உரைகளையும் விளக்கவுரைகளையும் படைத்தனர். இவையெல்லாம் சேர்ந்து மிட்ராஷ் இலக்கியமாயின.

மேற்கூறப்பட்ட வரலாற்றுக் காரியங்களோடு, மூன்று உளவியல் காரியங்களும் மிட்ராஷ் இலக்கியத் தோற்றத்தை விளக்க வல்லன. 1) வேதாகமம் இறை ஏவுதல் பெற்றது, என்ற இஸ்ராயேலின் தளராத விசுவாசம். 2) வேதாகமம் இறைவனைப் பற்றிய எல்லா உண்மைகளையும், எல்லாச் சூழ்நிலைகளுக்குமுரிய பாடங்களையும் கொண்டிருக்கிறது என்ற இஸ்ராயேலின் மன உறுதி. 3) தனிப்பட்ட வாசகம் தன்னிலேயே முழுப்பொருளைக் கொண்டிருப்பதில்லை; மாறாக, வேதாகமப் பாரம்பரியம் அடங்கிய பின்னணியில் கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கை. இந்த விசுவாச அடிப்படையில்தான் இஸ்ராயேலின் ஆசிரியர்கள் வேதாக்மத்தை ஆராய்ந்தனர். இணைப் பகுதிகளையும், உருவகங்களையும், ஒப்புவமைகளையும் தேடினர். ஒரு வாசகத்தை மற்றொன்றோடும், ஒரு நூலை மற்றொன்றோடும் ஒப்பிட்டுச் சமநிலை உண்டு பண்ணினர். இதில் எல்லாம் வேதாகமம் தங்கள் அன்றாடப் பிரச்சனைகளுக்கு இறைவனது விடையைக் கொடுக்கும் என்றும், தங்களது நாட்டு வாழ்வில் இறைவனது வழியைக் காட்டும் என்றும் இஸ்ராயேலர் உறுதியாக நம்பினர்.

6. மிட்ராஷ் இலக்கிய வளர்ச்சி: தங்கள் அன்றாட வாழ்வுக்கு வேண்டிய ஆன்மீக உணவையும், செயல் முறையான ஒழுங்குகளையும் வேதாகமத்திலிருந்து கண்டுணர இஸ்ராயேல் தொடர்ந்து செய்த ஆய்வு, காலப்போக்கில், பல்வேறுபட்ட பெரும் இலக்கியங்களை உருவாக்கியது. இந்த இலக்கியங்களின் தொடக்கம் இஸ்ராயேலின் மிக முந்திய வரலாற்றிலேயே இடம் கொண்டிருந்தது. இந்த இலக்கியப்போக்கு இஸ்ராயேலில் எப்போதும் இருந்தது என்று கூறலாம். இதற்கு இறைஏவுதல் பெற்ற ஆசிரியர்களே சான்று அளிக்கின்றனர். உபாகம ஆசிரியர் உடன்படிக்கையைப் புதுப்பித்தல் போன்ற முந்தைய வாசகங்களைத் தமது காலத்து மக்களின் தேவைக்கு ஏற்றதாகச் செய்கிறார். இஃது உடன்படிக்கையையும், உடன்படிக்கைச் சட்டங்களையும், இன்னும் முந்திய காலத்து இஸ்ராயேலுக்குப் பொருத்தமுடையதாகச் செய்யப்பட்ட முந்தைய முயற்சிகளுக்கும் சான்று பகர்கிறது. ஆமோசை எசாயாவும், ஓசேயாவை எரேமியாவும், ஆமோஸ், எசாயா மற்றும் எரேமியாவை எசேக்கியேலும், ஓசேயா மற்றும் எசாயாவை இரண்டாம் எசாயாவும் தழுவி எழுதியுள்ளனர்.

நாடு கடத்தலுக்குப்பின், பாரம்பரியத் தொடர் முந்தைய வேதாகம நூல்களோடு மிக நெருங்கிய தொடர்புகொள்கிறது. இறைஏவுதல் பெற்ற புதிய ஆசிரியர்கள் மேலும் மேலும் முந்தைய ஆசிரியர்களைத் தழுவி எழுதும் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். முந்தைய நூல்களுக்குப் பொழிப்புரை வழங்குவது, அவற்றைச் சுதந்தரமாக எடுத்துக்காட்டுவது எவ்வளவுக்குப் போகிறதென்றால், நாடு கடத்தலுக்குப்பின் தோன்றிய சில நூல்கள், முந்தைய நூல்களிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளின் தொகுப்பாக அமைகின்றன. இவ்வாறு பழ 1-9 என்ற பகுதி உபாகமம், எசாயா, எரேமியா ஆகிய நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுகளைக் கொண்ட தொகுப்பாக அமைகிறது.பழ 8-ஐ, சீரா 24 தழுவியுள்ளது.ஞானம் 10-14, யாத்திரை நிகழ்ச்சியைப் பொழிப்புரையாகத் தருகிறது. அதை விளக்கவும் செய்கிறது. இப்பழக்கம், இறை ஏவுதல் பெற்ற நூல்களின்பால் கொண்ட பேரன்பையும், வணக்கத்தையும் மட்டும் காட்டவில்லை. இஸ்ராயேல் அந்தந்தக் காலத்துக்குரிய விதத்தில் தனது போதகத்தை எடுத்துக்கூறுவதில் இறைஏவுதல் பெற்ற வார்த்தையை உயிருள்ள பாரம்பரியம் பயன்படுத்துவதை வலியுறுத்துகிறது.

நாடுகடத்தலுக்குப் பின் வந்த ஆசிரியர்கள் இறைஏவுதல் பெற்ற முந்தைய ஆசிரியர்களின் நூல்களைப் பயன்படுத்துதல், அவற்றின் பொருளை விளக்குதல் ஆகியவற்றோடு நின்றுவிடவில்லை. இதற்கு மேலும் செயல்பட்டனர். பாரம்பரியத்தில் நம்பிக்கை வைத்து, முந்தைய வாசகங்களைப் புதிய வெளிப்பாடு, புதிய சூழ்

நிலை ஆகியவற்றின் ஒளியில், மறுஆய்வு செய்தனர். அவற்றில் உள்ளடங்கிய செய்திகளை வெளிக்கொணர்ந்தனர். இவ்வாறு ஓசேயாவில் காணப்படும் பிரமாணிக்கமற்ற மனைவி என்ற உருவகத்தைப் பயன்படுத்தி, குல முதியவர்கள் காலம் தொடங்கி அவர் காலம் வரையிலுள்ள இஸ்ராயேலின் வரலாற்றுக்கு உருவக விளக்கம் அளிக்கிறார் எரேமியா (எரே 16; 23). இவ்வாறே உன்னத சங்கீத ஆசிரியர் ஓசேயாவின் போதகத்தை, நாடு கடத்தலுக்குப்பின் வந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு கூறுகிறார். நாளாகம ஆசிரியர் தோராவில் வரும் குருக்கள் பாரம்பரியமும், இறைவாக்கினர்களும் இஸ்ராயேலின் கதி, ஆலயம், தாவீது மரபு ஆகியவற்றோடு எவ்விதம் பொருத்தமுடையன என்று கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் காட்டுகிறார். தானியேல், யூதித்து ஆகிய நூல்களின் ஆசிரியர்கள்; ஊழியிறுதி வெளிப்பாட்டு மிட்ராஷ் இலக்கியத்தைப் பயன்படுத்தி, ஆமோஸ், எசேக்கியேல், செக்கரியா ஆகிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளை மாற்றியமைத்துத் தொகுத்துத் தருகின்றனர்.

7. மிட்ராஷ் இலக்கியத்தின் பண்புகள்: இந்த இலக்கிய வகை நிகழ்காலத்தை விளக்க, பழங்கால வாசகங்களை ஆய்வு செய்கிறது; அவற்றைப் பயன்படுத்துகிறது. இந்த ஆய்வு நமது காலத்து ஆய்வுப்போக்கின் வரையறைகளுக்குக் கட்டுப்பட்டதில்லை. காலத்தையும், இடத்தையும் புறநிலையாக மீண்டும் அமைக்கும் முயற்சி கோரும் பொருளை, வாசகத்திற்களிப்பதை நமது ஆய்வுமுறை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மிட்ராஷ் ஆய்வு இதற்கு மாறானதாகும். மிட்ராஷ் வேதாகமத்தின் சொற்பொருளையோ, துல்லியமான பொருளையோ கண்டுபிடிக்கும் முயற்சியன்று. நாம் புரிந்து கொள்ளும் விதத்தில் சொற்பொருள் காணும் கருத்து, ராபிகளின் நூல்களிலோ, விவிலிய நூல்களிலோ காணப்படவில்லை. மிட்ராஷ் எடுத்துக்காட்டான பாடங்களை எவ்வளவு தேட வேண்டுமோ அவ்வளவு தேடியது. அது வேதாகமத்தைப் பற்றிய தியானமாகும். அல்லது எடுத்துக்கொண்ட காட்சியையோ, நிகழ்ச்சியையோ கற்பனையாக மீண்டும் அமைத்தலாகும். அதன் குறிக்கோள் வேதாகமத்தைச் செயல்முறையான விதத்தில் எப்போதும் நிகழ்காலத்திற்குப் பொருத்திக் காட்டுவதாகும். இவ்வாறு ஒரு கட்டளை மீண்டும் எடுத்துக்கூறப்படலாம். ஒரு நிகழ்ச்சியுரை அதன் மூல வரலாற்றுச் சூழ்நிலையில் இல்லாமல், நூல் எழுதப்படும் தலைமுறை மக்களுக்கு ஒளி காட்டும் விதத்தில் வழிகாட்டும் முறையில் எழுதப்படலாம். இவற்றில் எல்லாம் மிட்ராஷ் ஆய்வின் நோக்கம் வாசகத்தின் துல்லியமான பொருளைக் காண்பதைவிட, எண்பித்தல், உறுதிப்படுத்துதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு, பல்வேறுபட்ட கருத்துக்களை வெளிக்கொணர்வதாகும். இறைவார்த்தை, மனிதமொழி என்னும் ஆடை அணியும்போது, அஃது உள்ளடக்கும் எந்தப் பொருளையும் இழந்து விடக் கூடாது. ஏனெனில், அஃது அறிவுத்திறனையெல்லாம் கொண்டுள்ளது; யாவர்க்குமுரிய ஞானத்தைக் கொண்டுள்ளது. அதை நாம் அறிவோடும், கற்பனையோடும் அணுக வேண்டும். இவ்வாறுதான் மிட்ராஷ் ஆசிரியர்கள் செயல்பட்டனர். மிட்ராஷ் நூல்கள் தத்துவஇயல், சட்ட, இறைஅனுபவப் பண்புகளைக் கொண்டுள்ளன. இவ்வாறு மிட்ராஷ் ஒரே சமயத்தில் ஒருவகை அறிவு சார்ந்த ஊகமும், வேதாகமத்தையும் பாரம்பரியத்தையும் அடிப்படையாகக் கொண்ட கற்பனை விவரிப்புமாகும்.

மிட்ராஷ் இலக்கியம் பல கோணங்களைக் கொண்டது. இஃது எல்லாவகை நூல்களிலும் இடம் பெறுகிறது. ஞானநூல்களில் சட்டப்பகுதிகள் ஒருவகை மொழி மாற்றங்களுக்கு வாய்ப்பளித்தன. சில பழமொழிகளில் யாவே தத்துவத்தைப் பரப்பும் நோக்கோடு சட்டத்தை நிகழ்காலத்துக்குரிய தாக்கும் போக்கைக் காணலாம். பழங்கால விவரிப்புக்கள் கற்பனை விவரிப்புகளுக்கு

இடம் அளிக்கின்றன. இவ்வாறு யாத்திரை நிகழ்ச்சியை நினைவுகூறும் ஞானம் 10:15-12:7 என்ற பகுதியையும், எகிப்தின் வாதனைகள் பற்றிய ஞானம் 16:1-19:22- என்ற பகுதியையும், அவை பற்றிய தோரா வில் வரும் நிகழ்ச்சியுரைகளோடு ஒப் பிட்டுப் பார்க்கலாம். இவற்றில் மிட்ராஷ் ஒரு வகையில் வரலாற்றையே விவரிக் கிறது. இறைவாக்கு இலக்கியங்களில் வருங்காலம் இறைவாக்கினர்களின் மனப் போக்கிற்கேற்ற வண்ணம் பெறும்போது, வரலாற்றுக்கு ஒரு புதிய பொருள் அளிக்கப் படுகிறது (காண்க. எசே 16;40-45; எசா 40 தொ; தானி 1-6). சட்ட நூல்களில் பழங்கால வரலாற்று - சட்ட வாசகங்கள் பல விவரங்களையும், ஒழுக்கக் கட்டளை களையும் அதிகம் கொண்டுள்ளன. இது குருக்கள் பாரம்பரியத்தை யாவே, எலோ யீம், உபாகமப் பாரம்பரியங்களோடு ஒப் பிட்டால் தெளிவாகும். இறுதியாக வர லாற்று நூல்களில், திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த -சேராத மூலங்கள் பயன்பட் டுள்ளன; அல்லது அப்படியே கையாளப் பட்டுள்ளன. இவை, அக்கால விளக்க முறைக்கேற்ப ஒரு நிலையை ஆதரிக்க, தழுவி எழுதப்பட்டுள்ளன; அணி செய்யப் பட்டுள்ளன. இதற்குத் தோபித்து, யூதித்து போன்ற நூல்கள் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றன. நாளாகம ஆசிரியர் சில புறநிலை உண்மைகளைப் பயன்படுத்து கிறார். இந்த அளவில் அவர் ஒரு வரலாற்று ஆசிரியர். ஆனால், சில சமயம் அந்த உண்மைகளைத் தமது கருத்துக்கேற்பப் பயன்படும் முறையில் வரிசைப்படுத்து கிறார். இந்த அளவில் அவர் ஒரு மிட்ராஷ் ஆசிரியர். அவரது புறநிலை விளக்கம் அவரது விசுவாசத்தால் பாதிக்கப்படுகிறது.

மிட்ராஷ் இலக்கியம் எப்போதும் நிகழ்ச் சியுரை வடிவம் எடுப்பதில்லை. இவ்வாறு வரலாற்றுச் சங்கீதங்கள் என்றழைக்கப்படும் சங் 78; 105; 106 ஆகியவை மிட்ராஷ் வகையைச் சேர்ந்தவையே. இவை கடந்த காலம் பற்றிய திட்டமிட்ட நிகழ்ச்சியுரை யில் முடிவதற்குப் பதிலாக, தியானத்திலும் மன்றாட்டிலும் வளம்பெறுகின்றன. இதே முறையில் பொதுவாகப் பெயர் தெரியாத ஆசிரியர்களின் ஊழியிறுதி பற்றிய வாசகங் கள், இறைவாக்கு நூல்களிலிருந்து தலைப் புகளையும், சொற்றொகுதிகளையும் எடுத்து விளக்குவதுடன், அவற்றை மீண்டும் அறிவிக்கின்றன. பழங்கால வாச கங்களுக்குத் திட்டமிட்ட முறையில் மறு விளக்கம் அளிப்பதும் மிட்ராஷ் வகையே. அதாவது வாசகங்கள் கவனமாய் ஆய்வு செய்யப்பட்டு, மற்ற வாசகங்களின் ஒளி யில், அவற்றின் பொருள் தெளிவாக்கப்படு கிறது.இறுதியாக, இந்த விளக்கங்கள் புதிய வேதாகம நூல்கள் தோன்ற வழிவகுத்தன. இவ்வாறுதான் அலாக்கா, அக்காதா, பெஷர் என்ற மிட்ராஷ் வகைகள் தோன்றின.

மிட்ராஷ் இலக்கியங்களில் காணப்படும் பண்புகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம். 1) மிட்ராஷ், தன்மையாலே இலக்கியம் பற்றிய இலக்கியமாகும்; வேதாகம வாக்குகள் பற்றிய சிந்தனை அல்லது தியானமாகும்; அவற்றின் பொருளைத் தேடுவதாகும். ஏற்கெனவே இருந்த வேதாகம நூல்களில் கூறப்பட்டபடி இறைவனது திருவுளத்தைத் தேடுவதாகும். 2) விவிலியத்தின் ஒளியில் விவிலியத்தைப் படிப்பதாகும். இதற்கு அடிப்படை, விவிலி யம் ஒற்றுமையுடையது; அதன் விளைவாக விவிலியத்தின் சிறந்த விளக்கம் விவிலி யமே என்ற யூதராபிகளின் மன உறுதியா கும். 3) மிட்ராஷ் போதக உரைத்தன்மை யுடையது. அதாவது செபக்கூட வழிபாட் டில் வேதாகம வாசகத்திற்குப்பின் அளிக்கப் படும் விளக்கமாகும். 4) இது கருத்திய லானதன்று; செயல்முறையான சமயபோதக மாகும். அதாவது வேதாகமத்தின் பொரு ளையும், படிப்பினையையும் சபையினரின் உடனடி ஆன்மீகத் தேவைக்கு ஏற்றவாறு விளக்குவதாகும். வேதாகம வாசகத்தை இங்கு, இப்போது பொருத்தமுடையதாக்கு கிறது. வாசகத்தில் எக்காலத்துக்கும் மதிப் பீடும் பொருளும் உடைய இறைவார்த் தையைக் காண்கிறது. அதே சமயத்தில்

வாசகத்தின் நிகழ்காலத்திற்குரிய பாடங்களையும் உய்த்துணரும்படி செய்கிறது. 5) மிட்ராஷ் சுதந்தரமானது. இது சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். அல்லது கற்பனை மிக்கதாக, அணிசெய்யப்பட்டதாக இருக்கலாம். இவை யாவும் வாசகர்களின் விசுவாச வளர்ச்சியையும் உறுதிப்பாட்டையும் நோக்கமாகக் கொண்டவை.

இவற்றில் எல்லாம் ஆதிக்கிறிஸ்தவர்கள், திருச்சபைத் தந்தையர்கள் ஆகியோரைப் போல், யூதராபிகளும், ''இறைவனுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல்மிக்கது. இருபக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளினும் கூர்மையானது. உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது'' (எபி 4:12) என்று உறுதியாக நம்பினர்.

8. பழைய ஏற்பாட்டில் மிட்ராஷ் எடுத்துக்காட்டுகள்: ஏற்கெனவே இவற்றை இங்குமங்குமாகச் சுட்டிக்காட்டியுள்ளோம். இப்போது இங்கு இவற்றைத் தொகுத்துத் தருகிறோம். சில, முந்தைய விவிலிய வாசகத்தைப் பற்றிய தியானமாக அமைந்துள்ளன. சில நிகழ்ச்சியுரைகள், கற்பனை மிக்க விதத்தில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. சில, விவிலியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டுக்கதையாக உருவெடுத்துள்ளன. ஐந்நூலில் குருக்கள் பாரம்பரியம், படைப்பு, பெருவெள்ளம், குலமுதியவர்கள் பற்றிய நிகழ்ச்சியுரைகள், யாத்திரை, உடன்படிக்கை ஆகியவற்றைத் தனக்கே உரிய விதத்தில் விரிவாக்குகிறது. இவை பற்றிய முந்தைய பாரம்பரியங்களோடு குருக்கள் பாரம்பரியத்தை ஒப்பிடும்போது, கடந்த காலத்தை அப்படியே எடுத்துக்கூறுவதன்று; அதைப் போதகமுறையில் மீண்டும் எடுத்துக் கூறி, பாரம்பரியத்திலிருந்து பாடங்களை வெளிக்கொணர்வதே குருக்கள் பாரம்பரியத்தின் நோக்கமாகும் என்பது தெளிவாகும். இம்முறையிலேயே சாமுவேல் ஆகமம், அரசர் ஆகமங்கள் ஆகிய நூல்களின் நிகழ்ச்சியுரைகளை நாளாகமம் விளக்குகிறது. கடந்த காலத்தைப் பற்றிய மிட்ராஷ் விளக்கத்தை சங் 78; 105; 106; சீரா 44-50; ஞானம் 16-19 ஆகிய பகுதிகளில் காணலாம். இஸ்ராயேலின் தொடக்க வரலாற்றை எசே 16 உருவகமாக விவரிக்கிறது. எசா 40-55-இல் வரும் உரைகளை எசா 60-62 எருசலேமுக்குப் புதிய முறையில் சாற்றிக் கூறுகிறது. பழ 8:22-க்குப் பின்வரும் பகுதியைச் சீரா 24 சட்டமே ஞானம் என்று விளக்குகிறது. ரூத்து, யோனா, தோபியா, யூதித்து, எஸ்தர், பாரூக்கு, தானியேல் போன்ற நூல்கள் சட்டத்திலிருந்தோ, யூத விசுவாசத்திலிருந்தோ ஒன்றை எடுத்துக்கற்பனையான நிகழ்ச்சியுரையாக அமைக்கப்பட்டவையே. இது பற்றி இந்நூல்களுக்குரிய தனி அறிமுகங்களில் காணலாம். ஆள், இடம், பெயர்கள் பற்றிய பொதுப்பாணி விளக்கங்கள் சொல்லியல் அடிப்படை கொண்ட விளக்கங்கள் அன்று. ஒலியியைபு அடிப்படையில் பெயர்களின் பொருள் கொடுக்கப்படுகின்றது. எழுபது நூலில் வரும் வாசகங்கள், பல இடங்களில் எபிரேய மொழியின் மொழி பெயர்ப்புக்கள் அல்ல; மாறாக, பொழிப்புரையாகவோ, விரிவாக்கமாகவோ அமைந்துள்ளன. இப்படிச் செய்யப்பட்டிருப்பது, எபிரேய மொழியை அறியாமையாலோ, வேண்டுமென்று செய்த மாற்றத்தினாலோ, விளைந்ததன்று. மாறாக, கி.மு. 3-ஆம் நூற்றாண்டு கிரேக்க மொழி பேசிய யூதர்களுக்கு விவிலிய வாசகத்தைப் பொருளுள்ள விதத்தில் விளக்க விரும்பியதின் விளைவேயாகும்.

9. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மிட்ராஷ்: வேதாகமத்தை உரக்க வாசித்து அதற்கு விளக்கம் அளிக்கும் இந்த மிட்ராஷ் இலக்கியவகை இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்ட காலத்தில் தோன்றியது. அஃது எஸ்ரா காலத்தில் வளர்ந்து உறுதியாக நிலைபெற்று விட்டது என்பதற்கு நாளாகமப் பாரம்பரியம் சான்று கூறுகிறது (நெகே 8:1-13). கி.மு. 444-இல் சட்டத்தை யூத மக்களுக்குப் பொதுவில் வாசித்துக் காட்டியபோது, எஸ்ரா, மிட்ராஷ் முறையையே

பின்பற்றினர் எனலாம். இந்த இலக்கிய வகை எஸ்ராவோடு கி.மு. 5-ஆம் நூற்றாண்டில்தான் தோன்றியிருக்கலாம். அல்லது அதற்கு முன்பே வழக்கில் இருந்திருக்கலாம். யூதர்களிடையே மட்டுமன்று, ஆதிக் கிறிஸ்தவர்களிடையேயும் இதற்கு ஒரு பெரும் பொற்காலம் காத்திருந்தது.

காலப்போக்கில் யூதர்களிடையே வேதாகமத்தைப் பொதுவில் வாசித்து விளக்கம் அளிப்பது யூதச் செபக்கூட வழிபாட்டின் முக்கிய மையச் சடங்காக விளங்கியது (லூக் 4:14-30; அ.ப.13:15; 17:2-3). இப்பழக்கம் காலப்போக்கில் விவிலியத்தைவிட, ராபிகளின் பெரும் இலக்கியங்கள் தோன்ற வாய்ப்பளித்தது. தொடக்கத் திருச்சபையில் வேதாகமத்தை வாசித்து அதற்கு மறையுரை அளிப்பது யூதச் செபக்கூடங்களிலிருந்து வந்த மரபாகும். புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் செபக்கூடங்களில் அளிக்கப்பட்ட இந்த விளக்கமுறையில் வளர்ந்தவர்கள். ராபிகளின் விளக்கமுறையில் தேர்ச்சிபெற்றவர்கள். அதன் விளைவாகப் பழைய ஏற்பாடு பற்றிய தங்கள் விளக்கவுரைகளில் அதே முறையைப் பின்பற்றினர். திருச்சபையின் தந்தையரும் இதே முறையைப் பின்பற்றினர். பழைய ஏற்பாட்டு வரலாற்றையும், காப்புரையாக இறைவாக்கினர்களின் கூற்றுக்களையும் பயன்படுத்தினர். யூத ராபிகளைப் பின்பற்றி, அதே நோக்கத்திற்காக, புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் திருச்சபைத் தந்தையரும் விவிலியத்தைக் கொண்டே விவிலியத்தை விளக்கினர். இவ்விளக்கவுரைகள் அலாக்கா, அக்காதா, பெஷர் மிட்ராஷ்கள் என்ற யூதக் கலைச்சொற்களால் அழைக்கப்படவில்லை; பொதுவாக மறையுரை விளக்கங்கள் என்றழைக்கப்பட்டன.

காலப்போக்கில் கிரேக்கச் சிந்தனை ஆதிக்கத்தின் விளைவாக, விவிலியத்தைக் கொண்டே விளக்கும் மரபு குறைந்து, அறிவைக் கொண்டு விவிலியத்தை விளக்கும் முறை அதிகம் வளர்ந்தது. விவிலியத்தை விளக்குவதில், எப்போது விவிலியத்திற்கும் அறிவுக்குமிடையே விரும்பத்தக்க சமநிலை ஏற்பட்டது என்றும், அஃது எப்போது மறைந்து போயிற்று என்றும் கூற முடியாது. இது தர்க்கத்திற்குரிய ஒரு பிரச்சனையாகும். ஆனால், இது விவிலிய நோக்குடைய இறையியலிலிருந்து அறிவை அடிப்படையாகக் கொண்ட இறையியல் தொடங்கியதைக் குறிக்கிறது. இஃது இரண்டையும் பாதித்தது. இதன் விளைவாக மிட்ராஷ் இலக்கியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளும் முறை மறைந்து போயிற்று. அண்மைக் காலம் வரை சில விவிலிய நூல்களைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது விளக்கவுரையாளர்கள் மலைத்தனர். ஆனால், அண்மைக்காலத்தில் விவிலிய இலக்கியவகைகள் பற்றிய ஆய்வுகள் இக்குறையை ஓரளவு நீக்கி, அந்நூல்களைச் சரியான முறையில் புரிந்து கொள்ள வாய்ப்பளித்துள்ளன.

புதிய ஏற்பாட்டிலும் பல மிட்ராஷ் பகுதிகள் காணப்படுவதாகத் தோன்றுகின்றன. குறிப்பாக மத்தேயு நற்செய்தி இம்முறையைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதாய்த் தோன்றுகிறது. எண் 24:17-க்கு மத் 2:1-12-ம், ஓசே 11:1-க்கு மத் 1:13-15-ம், எரே 31:15-க்கு மத் 2:16-18-ம், மறுவிளக்கமாகத் தோன்றுகின்றன. மத் 2:23, நாசீர் என்ற சொல்லின் ஒலியியைபு அடிப்படையில் நீதி 13:5-உடன் நெசெர் (கிளை) என்ற சொல்லின் ஒலியியைபு அடிப்படையில் எசா 11:1-உடன் நசரேத்தை இணைக்கிறது. செக் 11: 12-13-ஐயும் எரே 32:6-15-ஐயும் இணைத்து, மத் 27:3-10, அது எடுத்துக் கூறும் நிகழ்ச்சிக்குச் சாற்றிக் கூறுகிறது. விவாகரத்துப் பற்றிய மத் 5:32;19:9 அலாக்கா மிட்ராஷுக்குச் சான்றாகும். இந்த மிட்ராஷ் புதிய ஏற்பாட்டில் அரிதாகவே காணப்படுகிறது.

லூக் 1-2-இல் வரும் நிகழ்ச்சியுரை மிட்ராஷ் முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பர். இங்குக் குறிக்கப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய அடிப்படை உண்மையான நினைவுச் செய்திகள் பாதுகாக்கப்பட்டுள்ளன; ஆனால் நிகழ்ச்சியுரை,

மெசியா பிறப்புக்கு ஏற்றவாறு, பழைய ஏற்பாட்டுச் சுட்டிக்காட்டுத் தொகுப்புகளால் நிரப்பப்பட்டுள்ளன என்பர். இப்பகுதியை மிட்ராஷுக்கு ஒப்பிட்டால், இப்பகுதியின் நிகழ்ச்சியுரைகள் விவிலிய வாசகங்களின் விளக்கங்களாக அமைந்திருக்க வேண்டும். ஆனால், நாம் காண்பது என்ன? திருமுழுக்கு யோவான், இயேசு ஆகியோருடைய குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளை விவரிக்கும்போது, ஆசிரியர் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒப்புமைகளையும், மொழி நடையையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தியுள்ளாரே தவிர பழைய ஏற்பாட்டு வாசகங்களுக்குக் கால, இடச் சூழ்நிலைக்கேற்ப விளக்கமாக தம் நிகழ்ச்சியுரைகளை அமைக்கவில்லை. ஆகவே, லூக் 1-2-இன் இலக்கிய வடிவம் தனிப்பட்டது என்றே கொள்ள வேண்டும். நற்செய்தி முழுவதிலும், சிறப்பாக, இந்தப் பிள்ளைப் பருவ நிகழ்ச்சியுரையிலும், நிகழ்ச்சிகளை மட்டும் கருத்தில் கொண்டு லூக்கா எழுதவில்லை. அவற்றின் பொருளைக் கருத்தில் கொண்டு எழுதுகிறார். அப்போதும் முந்தைய வேதாகம வாசகங்களுக்கு விளக்கம் அளிக்கவில்லை. புதியதொரு வாழ்க்கை நிகழ்ச்சியுரையையே எழுதுகிறார்.

புனித பவுல் பலமுறை மிட்ராஷைப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. இதை ஆபிரகாம், சாராள், ஆகார் ஆகியோர் பற்றிய கலா 3-4-இலும், ஆபிரகாமின் விசுவாசம் பற்றிய உரோ 4-இலும் யாத்திரைப் பாரம்பரியங்கள் பற்றிய 1 கொரி 10:1-13-இலும் காணலாம். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் முழுவதும், குறிப்பாக எபி 7:1-10-ம்; எபி 11-இல் வரும் விசுவாச வீரர்கள் பற்றிய விவரிப்பும், மிட்ராஷ் முறையைப் பயன்படுத்தியுள்ளன. பழைய ஏற்பாட்டில் காணப்படாத பல மிட்ராஷ் பாரம்பரியங்களைப் புதிய ஏற்பாடு எடுத்துக்கூறுகிறது. இவை வரலாற்று மதிப்பீடு உடையவை அல்ல. சான்றுகள்: அ.ப. 7:22-32; பாலையில் இஸ்ராயேலைப் பின்தொடர்ந்த பாறை பற்றிய 1 கொரி 10:4; உடன்படிக்கையை அறிவித்த வானதூதன் பற்றிய கலா 3:19; எகிப்திய மந்திரவாதிகள் பற்றிய 2 திமொ 3:8; மிக்கேலுக்கும், அலகைக்கு மிடையே வாதம் பற்றிய யூதா 9. திருவெளிப்பாட்டு நூல் பழைய ஏற்பாட்டின் பல வாசகங்களுக்கு, குறிப்பாக எசாயா, செக்கரியா, தானியேல் ஆகிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்களுக்கு மிட்ராஷ் விளக்கமாக அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது.

இவ்வளவு கூறியபின் ஓர் எச்சரிக்கை அவசியமாகிறது. புதியஏற்பாடு, வேதாகம விளக்கமன்று; அலாக்கா மிட்ராஷோடு தொடர்பு கொண்டிருக்கவில்லை; மிட்ராஷோடு, அதன் கலைச்சொல் பொருளில் தொடர்பு கொண்டிருப்பதாகக் கூற முடியாது.

மிதியடிகள், காலணிகள் (SANDALS OR SHOES)

விவிலியக்காலங்களில் பலவகையான மிதியடிகள் பயன்பட்டன. அவற்றையும் அவற்றைக் குறிக்கும் சொற்களையும் துல்லியமாக வேறுபடுத்துவது கடினம்.

மிதியடிகளின் தரமும் பாணியும் (காண்க. எசே 16:10), அவற்றை அணிந்திருப்பதும் வெறுங்காலோடு இருப்பதும் (காண்க. லூக் 15:22) ஒருவருடைய சமூக நிலையைப் பிரதிபலித்தன.

இறையாற்றல் தோற்றக்காட்சிகளில், அவ்விடங்களின் புனிதத்தன்மையின் பொருட்டு மிதியடிகள் அகற்றப்பட்டன (யாத் 3:5; யோசு 5:15). வெறுங்காலோடு செல்லல் துக்கச்சடங்கின் ஒரு பண்பாகும் (2 சாமு 15:30; காண்க. எசே 24:17.23). கைதிகள் வெறுங்காலோடு நடத்திச் செல்லப்பட்டனர் (2 நாள் 28:15; எசா 20:2-4). வீட்டில் நுழையுமுன் விருந்தினரின், மிதியடிகள் அகற்றப்படுவது வழக்கம் (காண்க. லூக் 7:38.44). ஆனால், இது வீட்டுச் சொந்தக்காரனால் செய்யப்படவில்லை. வேலையாட்களால் செய்யப்பட்டது (காண்க. 15:22). மிதியடிகளை

அணிந்துகொள்வது ஒரு பயணம் செய்யத் தயாராக உள்ளார் என்பதை உணர்த்தும் (யாத் 12:11; மற் 6:9; அ.ப. 12:8). ஆனால், ஏழைகளும் துறவிகளும் நீண்ட பயணத்தைக்கூட வெறுங்காலோடே செய்தனர் (மத் 10:10; காண்க. லூக் 9:1-5).

உடன்பிறந்தான் திருமணத்தால் ஏற்கெனவே பிறந்த குழந்தைகளின் சொத்துரிமையைக் குறைக்கும்போது நிலச்சொத்துரிமையைத் துறக்கும் சடங்கின் ஒரு பகுதியாக மிதியடிகளை அகற்றுவது அமைந்தது (உப 25:9-10; ரூத் 4:6-10). மிதியடியைத் தரையில் எறிவது உடைமைக்கு உரிமை கொண்டாடுவதைக் குறித்தது (காண்க. சங் 60:8). அரசர்கள் மற்றும் மேல் குடிமக்களின் பணியாளர்களில் கீழ் மட்டத்திலுள்ளவர்கள் மிதியடிகளைச் சுமந்து சென்றனர். இயேசுவோடு தன்னை ஒப்பிடும்போது, திருமுழுக்கு யோவான் இந்தத் தாழ்மையான செயலைச் செய்யக்கூட தான் தகுதியற்றவன் என்று கூறுகிறார் (மத் 3:11; மாற் 1:7; அ.ப. 13:25). ''சமாதான நற்செய்தியை அறிவிக்கும் ஆர்வத்திற்கும்'' அஃது அளிக்கும் பாதுகாப்பிற்கும் மிதியடிகள் உருவகமாயின (எபே 6:15).

மிதியான் (MIDIAN - போராட்டம்)

இஃது ஒரு நாடோடி இனம். இவர்களுக்கும் இஸ்ராயேலர்களுக்கும் இரத்த உறவு, ஆபிரகாம் மணந்த செத்தூராள் என்பவள் மூலம் ஏற்பட்டது. அவள் மூலம் அவருக்குப் பிறந்த மிதியானே இந்த இனத்தின் இனப்பெயர் முதல்வர் ஆவார் (ஆதி 25:2-4; 1 நாள் 1:32 தொ). இவர்கள் வியாபாரிகளாகவே காணப்படுகிறார்கள் (ஆதி 37:28.36; எசா 60:6). எகிப்திலிருந்து மோசே ஓடியது இந்த மிதியான் நாட்டுக்குத்தான் (யாத் 2:15); இங்கேதான் எரியும் முட்புதரில் ஆண்டவர் இவருக்குக் காட்சி யளித்தார் (யாத் 3:1). மோசேயின் மாமனார் எத்திரோ அல்லது இரகுவேல் மிதியான் நாட்டுக் குரு ஆவார் (யாத் 18:1). இரகுவேலின் மகன் ஒபாபு இஸ்ராயேலர்கள் பாலைவனத்தைக் கடக்க வழிகாட்டினான். ஆனால், இந்தத் தொடக்க கால நட்புறவு தொடரவில்லை.

எண் 22:4-7-இல் பிலயாம் பற்றிய நிகழ்ச்சியில் மோவாபியர்களோடு மிதியானியரின் முதியவர்களும் வருகின்றனர். மோவாபியப் பெண்ணோடு விபசாரத்தில் ஈடுபட்ட இஸ்ரயேலன் ஒருவனைப் பினகாசு என்பவர் சொன்றார். பெயோர் பாகாலின் சிற்றின்ப வழிபாட்டில் ஈடுபட்டான் (எண் 25). எண் 31 பாகால் பெயோரை மிதியானியரோடு தொடர்புபடுத்துகிறது. ஆனால், அவர்களை இஸ்ராயேலர்கள் பழிவாங்கிய போர் வரலாற்றுண்மையென ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

யோசு 13:21-இல் மோவாபின் மன்னனாகிய சீகோனுக்கு மிதியான் நாட்டுத் தலைவர்கள் சிற்றரசர்களாக இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. நீதிபதிகள் 6-8-இல் கூறப்படும் மிதியானியர் இஸ்ராயேலர்கள் மேல் கொண்ட தாக்குதல்கள், ஆண்டவர் அவர்கட்கு அளித்த தண்டனை ஆகும். இங்குதான் முதன் முதல் பழக்கப்பட்ட ஒட்டகங்கள் பற்றி பழைய ஏற்பாட்டில் பேசப்படுகிறது. கிதயோனின் வெற்றி, யாவே இஸ்ராயேலர்களைக் காப்பாற்ற மேற்கொண்ட வெற்றிச் செயலாகக் கருதப்பட்டது (எசா 9:3; 10:26; சங் 83:10). மிதியானியர், ஏதோம் நாட்டினருக்கு அண்டை நாட்டவர் என்றும் (1 அர 11:18), அவர்களை ஏதோமியர் வென்றதாகவும் (ஆதி 36:35; 1 நாள் 1:46) கூறப்படுகிறது.

எப்பொழுதும் மிதியானியர் ஒரு நாடோடி இனத்தவராகவே காட்டப்பட்டதால் இவர்கட்கென்று எந்தச் சொந்த நிலமும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், இவர்கள் சில மேய்ச்சல் நிலங்கள் மேல் உரிமை கொண்டாடினர். எகிப்துக்குச் செல்லும் வழியில், ஏதோமுக்கும், பாரானுக்குமிடையே சீனாய்க்கு அருகில் உள்ள இடமே இஃது என விவிலியக் கருத்துக்கள் கூறுகின்றன. வட அரேபியாவில் உள்ள மிதியான் நாடே இந்த மிதியான் நாடு

எனச்சிலர் கருதுகின்றனர். இந்த மிதியான் அன்றைய கிரேக்க, அரேபிய புவியியலார் கள் கருத்துப்படி அடையாளம் காட்டப்படு கிறது. விவிலியத்தில் தவிர வேறு எந்தக் குறிப்புகளிலும் மிதியானைப் பற்றிக் குறிப் பெதுவுமில்லை. மிதியானின் ஒரு கிளை யான எப்பா என்பவர்கள், அரேபியப் பாலைவனத்தின் இனமான கையப்பு தான் என அறிஞர் எபேல் கருதுகிறார் (ஆதி 25:4; 1 நாள் 1:33). மூன்றாம் திகிலத்பிலே சர் (கி.மு. 745-727) இந்த அரேபிய இனத்திடமிருந்து கப்பம் பெற்றுக்கொண்டி ருந்தார். பின்னர் சார்கோன் (கி.மு. 721-705) இவர்களை வென்று, சமாரியாவில் குடி யேற்றினார்.

கொடுமைப்படுத்துபவர்களை அழிக்க யாவேக்குள்ள ஆற்றலின் எடுத்துக்காட்டாக எசாயாவின் இறைவாக்கில் மிதியானியர் குறிக்கப்படுகின்றனர் (எசா 9:4). மிதியானி யர் மகிமைப்படுத்தப்பட்ட சீயோனுக்கு ஒட்டகங்களை அளிப்பர். இது மீண்டும் அமைக்கப்பட்ட நகரின் செல்வத்திற்கு அடையாளமாகும் (66:6).

மிதின் (MIDDIN - அளவைகள்)

யூதாவின் பாலைவனப் பகுதியிலுள்ள ஓர் ஊர் (யோசு 15:61). இது சாக்கடலின் வட முனைக்கு மேற்கிலுள்ள ஆக்கோர் பள்ளத்தாக்கிலுள்ள கிர்பெத் அபுதபாக்கு என்ற இடமாக அடையாளம் காட்டப்படு கிறது.

மிதுனம் (TWIN BROTHERS -இரட்டையர்கள்)

மால்தா தீவிலிருந்து உரோமைக்குப் பயணம் செய்த புனித பவுல் ஏறிச் சென்ற அலக்சாந்திரியக் கப்பலின் முன் பகுதியில் உள்ள சின்னத்தைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்ட சொல்லாகும் (அ.ப. 28:11). சேயூக, லீடா ஆகியவர்களின் இரட்டைக் குழந்தை களான கஸ்த்தோர், பொல்லுக்ஸ் ஆகிய இரட்டைச் சகோதரர்களின் உருவமே அது. கிரேக்க மூல வாசகம் ''இரட்டைச் சகோத ரர்கள்'' என்றே குறிப்பிடுகிறது. கப்பலுக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டிருப்பவர்களாக அவர்கள் கருதப்பட்டார்கள். ஏனென்றால், மோசமான தட்பவெப்ப நிலையில், நட்சத் திரக் கூட்டத்தைப் பார்ப்பது நல்ல நிமித்த மாக இருந்திருக்க வேண்டும்.

மித்கா (MITHKAH - இனிப்பு)

இஃது இஸ்ராயேலர்கள் அட்சரோத்துக்கு அடுத்துத் தங்கிய பாலைவனத்திலுள்ள இடம் (எண் 33:28-29). இஃது அவர்கள் பாளையம் இறங்கிய இடங்களில் ஒன்று. ஆனால், இஃது அமைந்த இடம் எது வென்று தெரியவில்லை.

மித்தன்னி (MITANNI)

ஏறக்குறைய கி.மு. 15-ஆம் நூற்றாண்டள வில் வடமெசபொத்தாமியாவில் ஆட்சி புரிந்த முக்கிய அரசு ஆகும். ஊரியர்களே இவ்வரசில் வாழ்ந்த அதிக மக்களாதலால் தேசிய மொழியாக ஊரிய மொழியே பயன்படுத்தப்பட்டது. ஆனால், ஆட்சி புரிந்த இனமோ இந்தோ-ஈரானியர்களாகவும், குதிரை பூட்டிய தேர்ப் படை கொண்டு போர்புரிந்தவர்களாகவும் இருந்தனர். கி.மு. 1502 - 1448-இல் எகிப்தியப் பேரரசையும், மித்தன்னி அரசை யும் யூப்பிரத்தீசு ஆறு பிரிக்கும் எல்லையாக இருந்தது. அதன் பிறகு இந்த அரசின் இளவரசர்கள் பார்வோனிய மன்னர்கள் மத்தியில் தங்கள் திறமையினால் பெயர் பெற்று அவ்வரசில் முன்னேற்றம் கண்டனர்.

விவிலிய உலகில் இவர்களின் பண் பாட்டுத் தாக்கம்போல், அரசியல் தாக்கம் ஏற்படவில்லை. தங்கள் எல்லைக்கு அப் பாற்பட்டும் இவர்களின் ஆட்சியும், அதன் தாக்கமும் நிலவி வந்தன. 2 சாமு 24:16-இல் எபூசிய எருசலேமின் ஆட்சியாளர் ''தலை வர், ஆட்சியாளர்'' (அரவுனா) என்ற ஊரியப் பட்டத்தைக் கொண்டுள்ளார்.

மித்திலேன் (MYTHLENE - வரை செய்யப் பட்ட, சுருக்கப்பட்ட)

இது பவுலின் மூன்றாவது நற்செய்திப் பயணத்தின் வழியில் உள்ள ஊர். இந்நகரம் சிறிய ஆசியாவின் தென்கிழக்குக் கடற் கரையில் வெஸ்போசின் ஆகியன் தீவில் உள்ள முக்கியமான நகரமாகும்.

இந்நகரம் உரோமையர்கள் விடுமுறை நாட்களில் வந்து தங்குமிடமாக இருந்தது. அரசுக்கு எதிராகப் புரட்சி செய்ததால் பல தண்டனைகளை அனுபவித்தது. கி.மு. 80-இல் அவர்கள் வரிவசூலித்ததை எதிர்த்த தால் நகரமும் சுவர்களும் உரோமையரால் அழிக்கப்பட்டன. ஆனால், பாம்பே யூலியு சீசருக்குத் தப்பி அடைக்கலம் தேடியபோது இதனைக் கைப்பற்றி இதற்குச் சுதந்தரம் அளித்தார். கி.பி. 151-52-இல் ஏற்பட்ட பெரிய நிலநடுக்கத்தால் இந்நகரம் தரை மட்டமாக்கப்பட்டது. மத்திய காலத்தில் இந்நகரத்தின் பெயரே அஃது இருந்த தீவு முழுவதற்கும் வழங்கப்பட்டது.

அக்காயாவிலிருந்து சிரியாவுக்குப் பவுல் திரும்பிச் செல்லும்போது (அ.ப. 20:2), ஆசோவின் மேற்குக் கடற்கரைத் துறை முகத்திலிருந்து சென்று, பின் அங்கிருந்து மித்திலேன் நகரை அடைந்தனர். மறுநாள் கீயுத் தீவுக்கும், பின் சாமுத் தீவுக்கும் சென்று இறுதியில் மிலேத்துத் துறை முகத்தை அடைந்தனர் (20:13-16).

மித்ரதாத்து (MITHREDATH - மித்திராவின் கொடை)

1. இவர் பாரசீக அரசன் சைரசின் கரு வூலக் கண்காணிப்பாளர். எருசலேம் கோவி லுக்குரிய பாத்திரங்களை யூதத் தலைவரான சேசுபட்சரிடம் திருப்பிக் கொடுத்தார் (எஸ் 1:8).

2. இரண்டாம் அர்த்தக்சஸ்தாவின் ஆட்சி யின்போது எருசலேம் மீண்டும் கட்டி யெழுப்பப்படுவதை எதிர்த்து அரசனிடம் மனு கொடுத்த மூன்று பாரசீக அதிகாரி களில் ஒருவர் (எஸ் 4:7).

மித்னியர் (MITHNITE)

தாவீதின் படையில் உள்ள யோசப்பாத் துக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப்பெயர் மித்னியர். ஆனால், இப்பகுதியில் வாசகம் கேள்விக்குரியதாக இருக்கிறது.

மிந்தோசு (MYNDOS)

இஃது ஆசியாவில், காரியாக் கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு நகரம். இது வெள்ளிச் சுரங்கங்களுக்குப் பெயர் பெற்ற இடம். கி.மு. 139-இல் உரோமையருடைய தூதர் லூக்கியு இந்நகரத்திற்கும் மற்ற நகரங்களுக் கும் யூதருக்கு நன்மை விளையும் வகையில் கடிதங்கள் எழுதியதாகக் கூறப்பட்டுள்ளது (1 மக் 15:23). எனவே, யூதர்கள் இந்நகரிலே வெள்ளி வியாபாரம் காரணமாகக் குடியேறி யிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

மிப்கார் (MIBHAR - தேர்ந்தெடுக்கப்பட்ட, மிகச்சிறந்த)

இவர் அக்ரியின் மகன். தாவீதின் ''வலிமை வாய்ந்த முப்பது பேர்களில்'' ஒருவர் (1 நாள் 11:38).

மிப்சாம் (MIBSAM - இனிய மணம்)

1. இவர் இசுமயேலின் புதல்வருள் ஒரு வர் (ஆதி 25:13; 1 நாள் 1:29). ஓர் அரேபிய இனத்தாருடைய குலப்பெயர் மூதாதையர்.

2. இவர் சிமயோனின் வம்சத்தைச் சார்ந் தவரும், மிசுமாவின் தந்தையும் ஆவார் (1 நாள் 4:25).

மிப்சார் (MIBZAR - கோட்டை, அரண்)

மிப்சார் ஏதோமிய குடும்பத் தலைவர் (ஆதி 36:42; 1 நாள் 1:53). இஃது ஒருவேளை இடப்பெயராக இருக்கலாம். யுசேபியு, இஃது ஏதோமின் வடபகுதி யிலுள்ள மப்சாராவாக இருக்கலாம் என் கிறார். வேறு சிலர் இது மோவாபில் உள்ள பொட்சராவாக இருக்கலாம் என்று கருது கின்றனர்.

மிய்யாமின் (MIJAMIN - வலக்கை)

புதிய பாபிலோனிய, பாரசீக வியாபாரப் பத்திரங்களில் காணப்படும் ஒரு பெயரா கும். ஆகவே, இதனைப் பென்யமினாகக் கருதமுடியாது. அதே நேரத்தில் எஸ் 10:25 மிய்யாமினுக்குப் பதிலாக பென்யமின் என்று கொண்டுள்ளது.

1. தாவீது காலத்தில் வாழ்ந்த குருக்களின் ஆறாவது குழுவுக்குத் தலைவர் (1 நாள் 24:9). நாடுகடத்தலுக்குப் பிற்பட்ட ஒரு குருத்துவக் குடும்பத்தின் மூதாதைய ரெனக் கருதப்படுகிறார்.

2. பாரோசின் மகனாகிய இவர் அன்னிய மனைவியரை விலக்கி விடுமாறு எஸ்ராவால் கோரப்பட்டார் (எஸ் 10:25).

3. இவர் எஸ்ராவின் கீழ் நடந்த புதிய உடன்படிக்கையில் கையொப்பமிட்ட குருக்களில் ஒருவர் (நெகே 10:7). இவர் மினியமின் (3) ஆக இருக்கலாம்.

4. நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த குரு இவர் (நெகே 12:5).

மிரியாம் (MIRIAM - கிளர்ச்சி)

1. மிரியாம் யோக்கபேதுவின் மகளும், ஆரோன், மோசே ஆகியவர்களின் சகோதரியுமாவாள். இவளது பெயர் குறிப்பிடப்படவில்லையெனினும் 'எலோகிம்' பாரம்பரிய ஏட்டில் இவள், கூடையில் வைத்து நதியில் விடப்பட்ட மோசேயைக் கவனித்திருந்து, பார்வோனின் மகள் குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்க யார் வருவார் எனக் காத்திருக்கும்போது, தானே முன்சென்று மோசேயின் தாயைக் கூட்டி வந்தவள் (யாத் 2:4.7-8). நாணல் கடலைக் கடந்ததன் வெற்றியை நினைந்து வெற்றிக்கீதம் பாடியதால் இவள் ஓர் இறைவாக்கினளாக நினைவு கூரப்படுகிறாள் (யாத் 15:20-21). இப்பாடல் ஓர் எபிரேயப் பாடலின் தொடக்க காலப் பகுதிகளைக் கொண்டுள்ளது. கூசியப் பெண்ணை மோசே மணந்தபோது ஆரோனும், மிரியாமும் சேர்ந்து கொண்டு, எங்களைக் கொண்டும் ஆண்டவர் பேசவில்லையாவென எதிர்த்துப் பேசியதால் மிரியாமின் உடலெங்கும் தொழுநோய் உண்டாயிற்று. எனவே, அவள் ஏழுநாட்கள் பாளையத்துக்குப் புறம்பாக்கப்பட்டாள். மோசேயின் மன்றாட்டைக் கேட்டு அவளை யாவே குணப்படுத்தினார் (எண் 12). காதேசில் அடக்கப்பட்டது பற்றியேயன்றி, இதன்பின் வேறெங்கும் மிரியாமைப் பற்றிக் கூறப்படவில்லை (எண் 20:1). பின்னர் இவள் கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு தலைவராகவும் (மீக் 6:4), தொழுநோயால் துன்பப்படுபவர்கட்கு ஒரு மாதிரியாகவும் கூறப்படுகிறாள் (உப 24:9). யூதர்களின் பிற்காலக் கதைகளில் மூன்று குழந்தைகளில் மூத்தவளாகவும், காலேபின் மனைவியான இவள் ஓர் இறைவாக்கினள் எனவும், இவளே மோசே இஸ்ராயேலைக் காக்க வருபவர் என முன்னறிவித்தாள் எனவும் கூறுகின்றனர்.

மிரியாம் எனும் பெயர் 'கசப்புத்தன்மை', 'கடலின் மீன்' எனப் பலவகைகளில் விளக்கப்படுகிறது. ஆனால், இது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எல்லோரும் நன்கறிந்த ஒரு பெயராக இருக்கின்றது. ஏரோதின் மனைவியான மரியம்னே உள்பட்ட ஆறுபேர் இப்பெயரைக் கொண்டிருந்தனர் என்று யோசிப்பசு குறிப்பிடுகிறார்.

2. சம்மாய், இசுபாகு ஆகியவர்களின் உறவினளே இந்த மிரியாம்; எஸ்ராவின் வழித்தோன்றல்களில் யூதாவைச் சேர்ந்தவள் (1 நாள் 4:17). இவளது தந்தை, தாய் பெயர் கொடுக்கப்படவில்லை. திருத்தி அமைக்கப்பட்ட வாசகத்தின்படி பாரவோ, மெரேது ஆகியோரின் புதல்வியான பித்தியாவின் மகனோ, மகளோ ஆவர் மிரியாம்.

மிருதுச்செடி (MYRTLE)

இஸ்ராயேலர் கூடார விழாவின்போது தங்கள் கூடாரங்களை அமைக்க மிருதுக் கிளைகளைப் பயன்படுத்துவர். காஞ்சொறிச் செடிக்குப் பதிலாக மிருதுச்செடி தளிர்த்து வளர்வது, இறுதிக்காலவியல் அடையாளத்தின் ஒரு பகுதியாகும் (எசா 41:19; 55:13). மிருதுச் செடிகளுக்கிடையே சிவப்புக் குதிரை மேல் ஏறி வந்த மனிதன் பற்றிய காட்சியில், செக்கரியாவுக்கு ஆண்டவருடைய தூதர் தோன்றினார் (செக் 1:8.10-11).

மிருது எப்போதும் பசுமையாக இருக்கும் புதர்ச்செடியாகும். இது கருத்த நீண்டவட்ட இலைகளையும், வெள்ளை அல்லது ஊதாப்பூக்களையும் கொண்டிருக்கும். இதன் கருப்பான பழம், சீரியா, பாலஸ்தீனம் மற்றும் மத்தியதரைக் கடற்பகுதிகளில் சாதாரணமாகக் காணப்படும்.

மிர்மா *(MIRMAH - மோசடி)*

இவர் பென்யமின் குலத்தைச் சேர்ந்த சகரயிம் என்பவருக்கு அவரது மனைவி ஒதேசிடம் பிறந்த புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 8:10).

மிலலாய் *(MILALAI - வாய்ச்சாலக்கமுடைய)*

நெகேமியா எழுப்பிய எருசலேம் சுவரின் அர்ப்பணிப்பு விழாவில் கலந்து கொண்ட பாடகர்களில் ஒருவர் (நெகே 12:36). இவரது பெயர் கிரேக்க வடிவத்தில் காணப் படவில்லை.

மிலேத்து *(MILETUS)*

சிறிய ஆசியாவின் மேற்குக் கடற்கரை யில் அமைந்த துறைமுகப் பட்டினமே மிலேத்து.

இங்கு அப்போஸ்தலர்களின் காலத்தில் திருச்சபை நிறுவப்பட்டிருக்கலாம்; ஆனால், இங்கு திருச்சபை நிறுவப்பட்ட தற்கு எந்தச் சான்றும் இல்லை. பவுல் எபேசு நகரத்தின் மூப்பர்களை மிலேத்துத் துறைமுகத்தில் சந்தித்துப் பிரியாவிடை பெகிறார் (அ.ப. 20:15. 17). அவரோடு பயணம் செய்த துரோபிம் நோயுற்றதால் அவரை மிலேத்துவிலே பவுல் விட்டுச் சென்றார் (2 திமொ 4:20).

இஃது ஒரு பெரிய துறைமுகமாகவும், வியாபார மையுமாகவும் விளங்கியது. இப் பகுதியை இன்று அகழ்ந்து பார்க்கும்போது உரோமையர் காலத்துப் பெரிய அரங்குகள், செனட்டர்களின் மாளிகை, சந்தை கூடு மிடம், சில கோவில்களின் அடித்தளங்கள் எனப் பல இந்நகரத்தின் கலாச்சாரத்தைப் பறைசாற்றின. மத்திய காலத்துக்குப்பின் ஆற்றின் முகத்துவாரத்தில் படிந்த படி மானங்களால் இத்துறைமுகம் பயனற்றுப் போயிற்று.

மில்கா *(MILCAH - இளவரசி)*

1. இவள் ஆபிராமின் சகோதரனாகிய ஆரானின் மகள். இவள் பின்னர் ஆபிரா மின் சகோதரன் நாகோரை மணந்து கொண் டாள் (ஆதி 11:29); இவள் நாகோருக்கு எட்டுப் புதல்வர்களைப் பெற்றாள் (22:20-23). இவளின் மகனான பெத்துவே லின் புதல்வியே ரபேக்கா (24:15. 24.47).

2. செலோப்புகாதின் ஐந்து புதல்விகளில் ஒருத்தியே இவள். இவர்கள் தங்கள் தந்தை இறந்தபின், மோசேயின் வழியாக வடமனா சேயில் உரிமைச் சொத்து பெற்றனர் (எண் 26:33; 27:1; 36:11; யோசு 17:3). செலோப்புகா தின் புதல்வியர் பெயர்கள் அன்றைய கானானிய நகரங்களின் பெயர்களாக மூலத் தில் இருந்திருக்கலாம். மில்கா இருந்த இடம் எதுவென்று தெரியவில்லை.

மில்கோம் *(MILCOM - அரசன்)*

அம்மோனியர்களின் தேசக் கடவுளின் பெயர் இது. இது மோலேக்கு என்ற பெயரின் திரிபு ஆகும்.

எபிரேய வாசகத்திலிருந்து மில்கோம் என்ற பெயர் மனித அரசனைக் குறிக்கிறதா, தேவதையைக் குறிக்கிறதா என்று நிர்ணயிப் பது கடினம். யோவாபு அம்மோனியத் தலைநகர் இரபாவைத் தோற்கடித்தபோது, மில்கோமின் மணிமுடி தாவீதின் தலையில் வைக்கப்பட்டது (2 சாமு 12:30; 1 நாள் 20:2). இங்குத் தேவதை குறிக்கப்பட்டால், முடி சிலைக்காகச் செய்யப்பட்டதாக இருக் கலாம். சாலமோன் வழிபட்ட அன்னியத் தேவதைகளில் அம்மோனியர்களின் மில் கோமும் ஒன்று (1 அர 11:5.33). ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த யூதாவைச் சேர்ந்த வர்கள் யாவேயின் பெயராலும் மில்கோ மின் பெயராலும் சத்தியம் செய்ததாகச் செப் 1:5 கூறுகிறது.

மற்ற தேசத் தேவதைகளைப் போன்று, மில்கோம் அதன் நாட்டின் விதியோடு (அதாவது அம்மோனியர்களின் விதியோடு) நெருங்கித் தொடர்புபடுத்தப்படுகிறது. ஆனால் எரே 49:1-இன்படி, இரபாவின் தோல்வியோடு மில்கோம் நாடு கடத்தப் படுவார். ஆமோ 1:15, இரபாவின் தோல்வி யால் மில்கோம் நாடு கடத்தப்படுதலைக் குறிப்பிடலாம்.

மில்கோம் என்பது மோலேக்கு என்ற பெயர் வேண்டுமென்ற திரித்துக் கூறப்பட்

டது என்று பொதுவாகக் கருதப்படும். சாலமோனின் வழிபாட்டுக் குறிப்பில் மில்கோம் மோலேக்கு என்று ஒருமுறை அழைக்கப்படுகிறது (1 அர 11:7). ஆனால் 2 அர 28:10.13-இல் சாலமோனின் மில்கோம் மற்றும் மோலேக்கு ஆகியோரின் புனித இடங்களில் மக்கள் வழிபட்டது தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளது. காண்க. மோலேக்கு.

மில்லோ (MILLO - *நிரப்புதல்*)

1. காண்க. பெத்மில்லோ.

2. தாவீதின் நகரத்தில் கோட்டைப் பாதுகாப்பின் ஒரு பகுதி. தாவீது எருசலேமைக் கைப்பற்றிய பின் நகரைக் கட்டியெழுப்பும் போது அதனோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது (2 சாமு 5:9; 1 நாள் 11:8). மில்லோவைக் கட்டியெழுப்பியவர் சாலமோனே என 1 அர 9:15.24; 11:27 கூறுகின்றன. யோவாசின் இறப்பு பற்றிக் கூறும்போது ''மில்லோ-பெத்'' (மில்லோவின் வீடு) எனக் கூறப்படுகிறது (2 அர 12:21). தாவீதின் நகரத்தின் வடமேற்கில் 'மில்லோ' இருந்ததாகக் கூறப்படுவது நிரூபிக்கவியலாத ஒன்றாக இருக்கிறது. உறுதியான சம தரையின் மீது எழுப்பப்பட்ட மேடையில் அமைந்த ஓர் அமைப்பே 'மில்லோ' என இப்பெயரினின்று பொருள் கொள்ள முடிகிறது.

3. செக்கேம் நகரின் ஒரு பகுதியின் பெயர் (நீதி 9:6.20).

மினாசோன் (MINASON)

பவுல் இறுதி முறையாக எருசலேம் வந்தபோது மினாசோன் வீட்டில்தான் தங்கினார் (அ.ப.21:16). இப்பெயர் கிரேக்கத்தில் 'நாசோன்' எனவும், யூதர்களிடையே யாகோன் எனவும் வழங்கப்பெற்ற பொதுப் பெயராகும். அப்போஸ்தலர் பணியின் கிரேக்கப் படிவத்திலிருந்து மினாசோன் எருசலேமில் வாழ்ந்தாரா, செசரியாவுக்கும், எருசலேமுக்குமிடையேயுள்ள ஒரு கிராமத்தில் வாழ்ந்தாரா என்று முடிவு செய்ய இயலவில்லை. ஆனால், இரண்டுவகைப் படிவங்களிலும் அ) இவர் சைப்ரசுத்தீவைச் சேர்ந்தவர்; ஆ) பழைய சீடர் எனும் கருத்து உள்ளன. இஃது அவர் தொடக்கத்திலே மனந்திருப்பப்பட்டவராக இருக்க வேண்டும் எனச்சுட்டுகிறது எனலாம்.

மினா நாணய உவமை (MINA, PARABLE OF)

கிரேக்க உரோமையர் உலகில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களுள் ஒன்று மினா ஆகும். இஃது ஏறக்குறைய நூறு திராக்குமா மதிப்புடையது.

இயேசு எருசலேமை நெருங்கிக் கொண்டிருந்தார். மக்கள் இறையரசு உடனடியாக மலரப்போகிறது என்று எதிர்பார்த்தனர். அப்போது இயேசு இந்த மினா நாணய உவமையைக் கூறினார் (லூக் 19:11-27). இதே உவமையைச் சிறிது மாற்றி தாலந்து உவமையாக மத்தேயு தருகிறார் (மத் 25:14-20).

இறைவன் ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கே உரிய ஆற்றல்களை அளித்துள்ளார். அவற்றை அவர்கள் வளர்த்துப் பெருகச் செய்ய வேண்டும்; கணக்குக் கொடுக்க வேண்டும். தங்கள் ஆற்றல்களைப் பெருகச் செய்பவர்கள் கணக்குக் கொடுக்கும் நாளில் பாராட்டுப் பெறுவர். இதற்கு மாறாக, தங்கள் ஆற்றல்களைப் புதைத்து வைத்து வாழாயிருப்பவர்கள், அவற்றை இழந்து விடுவர். இவ்வாறே இயேசுவின் சீடர்கள் தங்களது ஆன்மீகக் கொடைகளை வளர்த்துப் பெருகச் செய்ய வேண்டும். இறையரசின் வருகைக்காக எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

மினியமின் (MINIAMIN - *வலக் கைப்பட்ட, நற்பேறுடைய*)

1. இவர் எசேக்கிய அரசன் காலத்தில் ஆண்டவருக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த கோரே என்ற லேவியருக்கு உதவியவர் (2 அர 31:15).

2. யோயாக்கிம் தலைமைக் குருவாக இருந்தபோது இருந்த ஒரு குருத்துவக் குடும்பமே இது (நெகே 12:17).

3. இவர் நெகேமியா எழுப்பிய மதிலை அர்ப்பணமாக்கும் நாளில் அதில் கலந்து கொண்டு எக்காளம் ஊதியவர் (நெகே 12:41).

மின்னி (MINNI)

இக்கால ஈரானிலுள்ள உரிமா எனும் ஏரிக்குத் தென்பகுதியில் அமைந்த ஓர் அரசே மின்னி (எரே 51:27).

மின்னி அரசு பற்றி பழைய ஏற்பாட்டில் பேசப்படுவது இந்த ஒரே இடத்தில்தான். பாபிலோனை அழிக்க யாவேயால் அழைக் கப்பட்ட அரராத்து, அஸ்கனாசு போன்ற நாடுகளில் மின்னியும் ஒன்று. மின்னியை யும், மன்னேயனையும், ஆர்மேனியாவில் உள்ள மினியாவையும் தொடர்புபடுத்திப் பேசுகிறார் அறிஞர் ஒருவர். ஆனால், இஃது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

மின்னித்து (MINNITH - பிரிவு)

அம்மோனின் புதல்வர்களோடு இப்தாகு போரிட்டு அவர்களின் 20 நகரங்களைப் பிடிக்க அவருடன் ஒத்துழைத்த ஒரு நகரத் தினரே இவர்கள் (நீதி 11:29-33). இஃது அமைந்த இடம் எதுவென்று தெளிவாகத் தெரியவில்லையெனினும், இது பாலஸ் தீனத்தின் கீழ்ப்பகுதியில் இன்றைய அம் மான் இருக்கும் இடமான இரபாவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் இருந் திருக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது. எஸ்போனுக்கு வடகிழக்கே 7 கி.மீ. தொலைவில் அமைந்த ஒரு கிராமமே மின்னித்து என யுசேபியு குறிப்பிடுகிறார்.

மீ

மீக்கா (MICA - இறைவனைப் போன்றவர் யார்?)

1. மீக்கா, மிபிபொசேத்தின் மகனும். சவுலின் மகனான யோனத்தானின் பேரனும் ஆவார் (2 சாமு 9:12). யோனத்தானின் காரணமாக, மீக்காவும் அவரது தந்தையைப் போல் தாவீதின் அன்பைப் பெற்றார்; சீபாபின் கபட நாடகத்தால் தண்டிக்கவும் பட்டார் (16:1-4; 19:24-30). இவர் இஸ்ராயேலின் புகழ்வாய்ந்த குடும்பத்தின் தலைவராகவும், நான்கு மக்களின் தந்தையாகவும் குறிப்பிடப்படுகின்றார் (1 நாள் 8:34-35; 9:40-41).

2. மீக்கா ஆசாபின் குலத்தவரும் சிக்ரியின் மகனும் ஆவார் (1 நாள் 9:15). இவர், நாடுகடத்தப்பட்டுத் திரும்ப வந்தபின் நன்றிப்பாடல் இசைப்பதில் பொறுப்பாளராய் இருந்த மத்தனியாவின் தந்தையும் ஆவார் (நெகே 11:17; 12:8). எருசலேமில் லேவியரின் தலைவராயிருந்த உசி (நெகே 11:22), எருசலேமின் சுவர்களை மீண்டும் அர்ப்பணித்தபோது எக்காளம் ஊதுபவராக இருந்த செக்கரியா (12:35) ஆகியவர்கள் மீக்காவின் வம்சத்தைச் சார்ந்தவர்கள்.

3. மீக்கா, நெகேமியாவின் காலத்தில் செய்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களில் ஒருவர் (நெகே 10:12).

மீக்கா (MICAH - யாவேயைப் போன்றவர் யார்?)

1. மீக்கா, நீதிபதிகள் காலத்தில் எப்பிராயிம் கோத்திரத்தைச் சார்ந்தவர் (நீதி 17-18). மீக்காவின் தாய், அவருக்கு 200 வெள்ளிக் காசுகள் கொடுத்து, அவரது வீட்டில் ஒரு புனித இடம் அமைக்க, ஒரு செதுக்கிய சிலையையும், வார்க்கப்பட்ட சிலையையும் செய்தாள்; மேலும், ''ஏபோதையும்'' ''தெராபீம்களையும்'' செய்தாள். மீக்கா தன் வீட்டில் அத்தேவதைகளுக்கு ஒரு கோவில் அமைத்தார். தன் புதல்வர்களில் ஒருவனை அர்ச்சகனாகவும் நியமித்தார் (17:1-5). பின்பு யூதாவின் பெத்லகேமிலிருந்து வந்த ஓர் இளைஞனுக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுத்து அவனைத் ''தந்தையாகவும், அர்ச்சகனாகவும்'' ஆக்கிக் கொண்டார் (17:7-12). தாண் கோத்திரத்தாருக்குச் சொந்தமாக நிலம் இல்லாததால் அவர்களில் ஐவர் தங்குவதற்கு இடம் தேடிக் கொண்டு எப்பிராயிமுக்கு வந்தனர். அங்கு லேவியன் இருப்பதை அறிந்து கொண்டபின் (18:1-4), 600 ஆட்களுடன் வந்து, லேவியனை அழைத்துக் கொண்டு இலாயிசுக்குப் போயினர். அப்போது அவர்கள் மீக்காவின் ஏபோத்தையும், தெராபீம்களையும், செதுக்கப்பட்ட சிலையையும் எடுத்துக் கொண்டு போயினர் (18:14-20). மீக்கா இதை எதிர்த்த போதும் அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை (18:21-26). தாணியர்கள் இலாயிசைக் கைப்பற்றி அங்கு ஒரு புனித இடத்தில் சிலையை நிறுவினர். கெரிசோமின் யோனத்தானை அர்ச்சகனாக நியமித்தனர் (18:27-31).

2. மீக்கா ரூபன் வம்சத்தில் பிறந்தவர். சிமயியின் மகனும் இரயாயாவின் தந்தையும் ஆவார் (1 நாள் 5:5).

3. மீக்கா, மெரிபாகாலின் (மெபிபோசேத்தின்) மகன் (1 நாள் 8:34-35; 9:40-41; 2 சாமு 9:12).

4. தாவீதின் கடைசிக் காலத்தில் வாழ்ந்த ஒரு கோகாத்திய லேவியர். உசியேலின் புதல்வர்களுடைய தலைவர் (1 நாள் 23:20; 24:24-25).

5. இவர் அப்தோனின் தந்தை (2 நாள் 34:20). இவர் 2 அர 22:12-இல் மீக்காயா என்றழைக்கப்படுகிறார்.

6. இவர் மோரசேத்தைச் சேர்ந்தவர்; இறைவாக்கினர். இவருடைய இறைவாக்குகள் அவர் பெயர் கொண்ட நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. காண்க. மீக்கா திருநூல் - 3. வாழ்க்கை வரலாறு.

மீக்கா திருநூல் (MICAH, BOOK OF)

1. முன்னுரை: எசாயாவின் சம காலத்தவராகிய மீக்காவின் நூலுக்கு அறிமுகம் வழங்குகிறோம். எசாயாவைப் போல், மீக்காவும் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் தென் அரசாகிய யூதாவுக்கு இறைவாக்குரைத்தார். நாட்டில் நிலவிய ஒரே சூழ்நிலையிலும், ஒழுக்கக் கேட்டிலும் இருவரும் போதித்தனர். ஆனால், அவர்கள் நோக்கிய கோணங்கள் வேறுபட்டன. எசாயா நகர வாசியாகவும், மீக்கா நாட்டுப்புற வாசியாகவும் நாட்டில் நிலவிய சமூகத்தீமைகளை நோக்கினர்.

2. பெயர்: மீக்கா என்ற பெயர் ''யாவேயைப்போல் யார்?'' என்ற பொருளுடைய ''மீக்காயாஹே'' (mikayahe) என்ற சொல்லின் சுருக்கமாகும். நூல் முழுவதும் இப்பெயர் அறிவிக்கும் விசுவாச அறிக்கை பரவிக் கிடக்கிறது. அதன் விளைவாக, இறைவாக்கினரின் வாழ்க்கைக் குறிப்புகள் அவ்வளவு முக்கியமில்லாதவையாகக் கருதப்பட்டு, பின்னணிக்குத் தள்ளப்பட்டு, முழுவதும் மறைந்து போவது போல் தோன்றுகிறது. இஃது உண்மையான இறைவாக்குப் பணியின் பண்பாகும். இறைவாக்கினரும் அவரது வார்த்தைகளும் முக்கியமானவை அல்ல. யாவேயும் அவரது வார்த்தைகளும் மட்டுமே முக்கியமானவை.

மீக்கா என்ற பெயரை விவிலிய கிரேக்க மொழியாக்கமாகிய எழுபது நூல், மிக்கேயஸ் என்று அழைத்தது. ஆகவே, மீக்கா வேறு; 1 அர 22-இல் வரும் இம்லாவின் மகனான மீக்காயா வேறு என்பதை நினைவில் கொள்ளுதல் இன்றியமையாதது.

3. வாழ்க்கை வரலாறு: மீக்கா யூதாவிலுள்ள மோரசேத்து என்ற நாட்டுப்புற ஊரில் தோன்றியவர். இந்த ஊர் ''காத்து'' அருகில், பெலிஸ்தியச் சமவெளியோரத்திலுள்ள தாழ்ந்த பகுதியான செபேலாவில், எருசலேமுக்குத் தென்மேற்கில் 40 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சிறிய நகரமாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் சாலமோனின் மகனான ரெகபயாம் இவ்வூரை ஒரு கோட்டை நகரமாக மாற்றி அமைத்தான். நாட்டின் எல்லையிலிருந்த இவ்வூர், அன்னியர் படையெடுப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இது மீக்காவையும் பாதித்திருக்கக் கூடும்.

இதைத் தவிர, மீக்காவின் வாழ்க்கை, அவரது ஆட்தன்மை, அவர் இறைவாக்குப் பணிக்கு அழைக்கப்படுதல் ஆகியவை பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. அவரது தந்தையின் பெயர் கொடுக்கப்படவில்லை. அவர், ஆமோசைப்போல், ஒரு சாதாரண கிராம வாசியாக இருந்திருக்க வேண்டும். அவரது எளிய நயமில்லாத நடையும், சொகுசான வாழ்வையும் பெரும் நகரங்களில் பரவியிருந்த இழிநிலையையும் அவர் தாக்குவதும் அவர் ஒடுக்கப்பட்ட விவசாயிகள், இடையர்கள் சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று காட்டுகின்றன. நாட்டுப்புறத்தில் துன்புறும் மனிதனது நோக்கில், நாட்டின் அவல நிலையை அனுபவித்தவராக, சமய, சமூகத்தீமைகளை எடுத்துக் கூறிக் கண்டனம் செய்கிறார்.

இந்நூலில் காலக்குறிப்பு தெளிவாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால், மீக் 1:1-இன்படி இவர் யோத்தாம் (கி.மு. 742-35), ஆகாசு (735-15), எசேக்கியா (715-687) ஆகிய அரசர்களின் ஆட்சிக் காலத்தில் போதித்தார். இதன்படி கி.மு. 742-687-க்கு இடையிட்ட காலத்தில் மீக்கா இறைவாக்குரைத்திருக்க வேண்டும். ஆகவே, மீக்கா வட அரசில் போதித்த ஓசேயாவோடு ஓர் அளவு சமகாலத்தவர்; தென் அரசில் போதித்த எசாயாவோடு பெருமளவு சமகாலத்தவர். அவருக்குப் பின்னும் போதித்திருக்க வேண்டும் என்று எண்ண இடமிருக்கிறது. மீக்கா ஆகமம் எசாயா ஆகமத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது (1:10-16.-ஐ எசா 10:27-28-ஒடும்; 2:1-5-ஐ எசா 5:88-ஒடும்; 4:1-5-ஐ எசா 2:2-5-ஒடும்; 5:9-14-ஐ எசா 2:6-7- ஒடும் ஒப்பிடுக). அதி. 2-இல் செல்வந்தர்களையும், அதி. 3-இல் இறைவாக்கினர்களையும், அர்ச்சகர்களையும், அவர்கள் தங்கள் கடமைகளைப் புறக்

கணிப்பதையும், அவர்களுடைய பேராசையையும், அதி. 5-இல் பிறஇன வழிபாட்டையும், 3:1-4:11-இல் போலியான சமயப் பாதுகாப்பையும் மீக்கா தாக்குதல், இவை பற்றி எசாயா செய்யும் கண்டனத்தோடு ஒத்துப் போகிறது. இவையெல்லாம் மீக்கா எசாயாவை அறிந்திருக்க வேண்டும் என்றும் அவரது பாணியில் இறைவாக்குரைத்திருக்க வேண்டும் என்றும் காட்டுகின்றன. 1:2-7-கி.மு. 721-இல் நடந்த நிகழ்ச்சியையும், 1:8-16-கி.மு. 701-இல் நடந்த நிகழ்ச்சியையும் கட்டுகின்றன. ஆகவே, இந்த இடைக்காலத்தில் மீக்கா போதித்தார் என்று உறுதியாகக் கூறலாம்.

மீக்கா, தனது வாழ்க்கையைப் பற்றியோ, அழைத்தலைப் பற்றியோ, ஆமோ 7; ஓசே 1-3 ஆகியவற்றில் காணப்படுவது போன்ற, எக்குறிப்பையும் கொடுக்கவில்லையானாலும், தன்னைப் பற்றி இருமுறை பேசுகிறார். ''நான் யாக்கோபுக்கு அவன் குற்றத்தையும், இஸ்ராயேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்க வல்லமையாலும், ஆண்டவரின் ஆவியாலும், நீதியாலும் ஆற்றலாலும் நிரப்பப்பட்டுள்ளேன்'' (3:8); ''நானோ, ஆண்டவரை விழிப்புடன் நோக்கியிருப்பேன்; என்னை மீட்கும் என் கடவுளுக்காகக் காத்திருப்பேன். என் கடவுள் எனக்குச் செவிசாய்த்தருள்வார்'' (7:7). இந்த இரு சுயவரலாற்றுக் குறிப்புகள் அவரது மன உறுதி மிக்க, ஆற்றல் மிக்க ஆட்தன்மையைக் காட்டுகின்றன. மேலும் இவை, இறைவாக்குரைக்க தம்மை இறைவன் அழைத்துள்ளார் என்று மீக்கா உறுதியாக உணர்ந்தார் என்றும், அதன் விளைவாக அச்சமில்லாது இறைவாக்குரைத்தார் என்றும் காட்டுகின்றன. போலி இறைவாக்கினர் இப்பண்புகளைக் கொண்டிருக்கவில்லை (2:6-11; 3:5-7).

வட அரசின் மீது மிக விரைவில் வரவிருந்த அழிவு மீக்காவை மிகவும் பாதித்திருக்க வேண்டும். ஆகவே எசாயாவைப் போல், பேரழிவை எடுத்துக் காட்டும் முறையில் மீக்கா ஓலமிட்டுக் கதறி அழுதார்; வெறுங்காலோடும், ஆடையின்றியும் திரிந்தார் (1:8). ஆகவே கி.மு. 722-க்கு முன்பே இறைவாக்கு ஆவி மீக்காவை ஆட்கொண்டிருக்க வேண்டும் (3:8). இந்த அழைப்பு அவரது ஊராகிய மோரசேத்திலேயே நிகழ்ந்திருக்க வேண்டும். அசீரியர்கள் படை எடுத்தபோது எருசலேமுக்குச் சென்று, நாட்டின் இடுக்கண் நிலையை உணர்ந்தவராய்ப் போதிக்கத் தொடங்கினார். ஆளும் தலைவர்களின் ஊழலை எடுத்தியம்பினார்.

மீக்காவைப் பற்றிய மற்றொரு குறிப்பு எரேமியா ஆகமத்தில் காணக்கிடக்கிறது (எரே 28:18-20). எருசலேமுக்கும் ஆலயத்துக்கும் எதிராக மீக்கா உரைத்த வாக்குகள், கி.மு. 715-701க்கு இடையில் எசேக்கியா செய்த சீர்திருத்தத்திற்குக் காரணமாயிற்று (2 அர 18:3-6: 2 நாள் 29:8-11). அந்த அளவுக்கு அவரது போதகம் பயனுள்ளதும் முக்கியம் வாய்ந்ததும் என்று அறிகிறோம். எரேமியாவின் கூற்று, மீக்காவுக்கு எதிராக எழுந்த இயக்கம் (2:6-8) அவர் போதிப்பதைத் தடுக்க முடியவில்லை என்றும், அவர் தமது இறைவாக்குப் பணியில் ஓரளவு வெற்றி பெற்றார் என்றும் காட்டுகிறது. அவர் இறைவாக்குரைத்தலைத் தொழிலாகக் கொண்ட இறைவாக்கினர்களைத் தாக்குவது, அவர் அக்குழுவைச் சேர்ந்தவர் அல்லர் என்று காட்டுகிறது.

4. வரலாற்றுப் பின்னணி: ஊசியாவின் ஆட்சி உன்னத நிலையில் இருந்தது. அவனுக்குத் தொழு நோய் கண்டதால், அவனது மகன் யோத்தாம், தன் தந்தையின் பிரதிநிதியாக ஆட்சி செய்தான்; பின்பு அரசனானான். அவனது ஆட்சிக்காலமும் செழிப்பு மிக்கதாய் இருந்தது. அவன் பல கட்டடங்களைக் கட்டினான்; சில போர்களில் வெற்றி கண்டான். யோத்தாமின் மகன் ஆகாக ஏறக்குறைய கி.மு. 735-இல் ஆட்சி செய்யத் தொடங்கினான். அப்போது இஸ்ராயேலும் யூதாவும் அஞ்சிய ஒரே அபாயம் அசீரியப் பேரரசின் படையெடுப்பாகும். அசீரியர்களின் தாக்குதலால் வட அரசாகிய இஸ்ராயேல் அழிந்து கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் மீக்கா தனது

இறைவாக்குப் பணியைத் தொடங்கினார் எனலாம்.

ஆமோஸ் இஸ்ராயேலுக்கு அளித்த செய்தி, நெருப்பைப்போல் சூடாகவும், இரும்பைப்போல் கடினமாகவும் இருந்தது. ஓசேயா, இஸ்ராயேல் மனந்திரும்ப வேண்டுமென்று அன்பு மொழியில் மன்றாடினார். இருவருக்கும் இஸ்ராயேல் செவிசாய்க்கவில்லை. ஆகவே, இறைவனின் நீதியின் கருவியாக, அசீரியா நாடு வடஅரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கி எழுந்தது. சீரியாவும் இஸ்ராயேலும் தாங்கள் அசீரியர்களுக்கு எதிராக அமைத்த எதிர்ப்புக் கூட்டணியில் சேரும்படி யூதாவை அழைத்தன. இதை ஆகாசு நிராகரித்தபோது, இஸ்ராயேலும் சீரியாவும் யூதாவுக்கு எதிராகப் போர் தொடுத்தன; ஆனால், வெற்றியடையவில்லை. இஃது ஆகாசின் ஆட்சியின் தொடக்கத்தில் கி.மு. 735-ஐ ஒட்டி நடந்தது எனலாம். இந்நிகழ்ச்சி பற்றிய விவரிப்பை எசா 7-இல் வாசித்தறியலாம். கி.மு. 732-இல் அசீரிய மன்னன் மூன்றாம் திகிலத் பிலேசர் சீரியாவை வென்றான். கி.மு. 722-இல் இரண்டாம் சார்கோன் என்ற அசீரிய மன்னன் வடஅரசின் தலைநகரமான சமாரியாவை அழித்தான் (2 அர 17:1தொ). அவனது நாளேட்டிலிருந்து அவன் சமாரியாவிலிருந்து 27,000 பேரை நாடு கடத்தியதாக அறிகிறோம். இப்பேரழிவுக்குச் சிறிது முன்பாக, மீக்கா தனது இறைவாக்குப் பணியைத் தொடங்கி, தனது செய்தியை வடஅரசுக்கு அளித்திருக்க வேண்டும்.

சமாரியாவின் வீழ்ச்சி யூதாவைப் பாதுகாப்பற்றதாக்கியது. யூதாவின் அரசன் ஆகாசு பலவீனமானவன்; அசீரியர்களுக்கு அடிபணிந்து சிற்றரசன் ஆனான். அவனுக்குப் பின் வந்த எசேக்கியா ஆற்றல் மிக்க சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தான். யூதாவின் நல்ல அரசர்கள் சிலருள் எசேக்கியா ஒருவன். அசீரிய அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு, யூதாவின் சமய வழிபாட்டு முறையைச் சுத்தி செய்தான்; சீர்திருத்தினான். எரே 26:18-20-இன்படி, இச்சீர்திருத்தம், மீக்காவின் போதனையின் விளைவாகும்.

கி.மு. 705-இல் சார்கோன் கொல்லப்பட்டான். அவனை அடுத்து சனகெரிபு அசீரியா நாட்டு அரசுக்கட்டில் ஏறினான். இவன் கி.மு. 701-இல் யூதாவின் மீது படையெடுத்தான்; அதில் வெற்றியடைந்தான்; ஆனால், எருசலேமைக் கைப்பற்றவில்லை. அனேகமாக, இக்காலத்தில் மீக்கா இறைவாக்குப் பணியைத் தொடர்ந்து செய்திருக்க வேண்டும் (1:9-11.14). இப்பொழுதோ, பத்து வருடங்களுக்குப் பின்போ இது போன்ற ஒரு சூழ்நிலையில் சனகெரிபு எருசலேமை முற்றுகையிட்டான். நாட்டின் நிலை யூதாவுக்கு நம்பிக்கையற்றதாக இருந்தது. ஆனால், ஒரு கொடிய நோயால் அசீரியர்கள் சிதறடிக்கப்பட்டனர். இவ்விடுதலை எசா 37:37-38; 2 அர 19:35-36- ஆகிய பகுதிகளில் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இந்தக் கொந்தளிப்பான அரசியல் பின்னணி, போர்ப் பின்னணியில் மீக்கா ஆகமத்தை வாசிக்க வேண்டும்.

ஆமோஸ், ஓசேயா ஆகியோர் காலத்தில் வடஅரசில் நிலவியதும், இவ்விரு இறைவாக்கினரால் கண்டனம் செய்யப்பட்டதுமான சமய, சமூக அவல நிலையே யூதாவிலும் நிலவியது (1:9).

5. யார், எப்போது எழுதினார்?: அழிவு பற்றி மீக் 1-3-இல் வரும் பகுதிகள் மீக்காவினுடையது என்று எல்லா ஆய்வாளர்களும் ஏற்றுக்கொள்வர். இஃதோடு இந்நூல் முடிவடைந்து விடுவதாகச் சிலர் கருதுவர். மீட்புச் செய்தியை அளிக்கும் பகுதிகள் மீக்காவினுடையனவா என்று பலர் ஐயுறுவர்; ஏற்றுக்கொள்ள மறுப்பர். இவற்றில் சில பகுதிகளாவது மீக்காவினுடையன என்று இக்காலத்தில் ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வர். இப்பகுதிகள் உண்மைத் தன்மையுடையனவா? மீக்காவின் போதனையைப் பிரதிபலிக்கின்றனவா? இப்பிரச்சனைக்கு 2:12-13; 4:6-7-ஆகிய பகுதிகளுக்குரிய பகுப்பாராய்ச்சியில் ஓரளவு விடை காணலாம்.

பெரும்பாலான இறைவாக்கு நூல்கள், இறைவாக்கினர்களால் எழுதப்படவில்லை. அவை அவர்களுடைய சீடர்களின் ஆர்வத்தின் விளைவாகும். இறைவாக்குகள் முதலில் சிறு சிறு தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு, பிற்காலத்தில் பெயர் தெரியாத பதிப்பாசிரியரால் திட்டம் செய்தோ, அவருக்குக் கிடைத்தவாறு அப்படியேயோ தொகுத்துப் பதிப்பிக்கப்பட்டன. இதில் இலக்கிய நோக்கு முக்கியத்துவம் பெறவில்லை; மாறாக, சமய நோக்கே சிறப்புப் பெற்றது. இப்படித் தொகுக்கப்பட்டவை வெறும் உயிரற்ற வார்த்தைகளை மட்டும் கொண்டிருக்கவில்லை; உயிருள்ள விசுவாசத்தைக் கொண்டிருந்தன; வழிபாட்டில் ஆர்வத்தோடு பயன்படுத்தப்பட்டன. வாழ்க்கைச் சூழ்நிலைக்கேற்ப, திருத்தி அமைத்தல் அவசியமாயிற்று. ஆனால், இதில் பதிப்பாசிரியர்கள் இறைவாக்கினரின் போதகத்தைப் பிரமாணிக்கமாய்க் காப்பாற்றினர் எனலாம்.

நாம் கொண்டிருக்கும் வடிவில் மீக்கா ஆகமம், நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலத்தைச் சேர்ந்த பெயர் தெரியாத ஒரு பதிப்பாசிரியருடைய வேலைப்பாடாகும். ஆகவே, மீக்கா எதையும் எழுதினாரா, அப்படி எழுதியிருந்தால் எதை எழுதினார் என்று உறுதியாகக் கூறுவது கடினம். இப்பிரச்சனையை எச்சரிக்கையோடு அணுக வேண்டும். ஏனெனில், இஃது ஒரு தீராத பிரச்சனையாகும்; ஆய்வாளர்களின் தொடர்ச்சியான அயரா உழைப்புக்குரியது.

மீக்கா ஆகமம் ஏறத்தாழ கி.மு. 200-இல் பதிப்பிக்கப்பட்டது என்பர் சிலர். இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நூறு ஆண்டுகளுக்குப்பின், மீக்காவின் வாக்குகள் எரேமியாவுக்கு எதிராக எடுத்துக் கூறப்படுகின்றன (எரே 26:18-20). இவ்வாதம் மீக்காவின் நூல் ஏற்கெனவே வழக்கில் இருந்தது என்று உறுதியாக நிரூபிக்காவிட்டாலும், ஒரு முக்கியமான சான்றாகும். எடுத்துக் கூறப்படும் வாசகம் மீக்காவின் போக்குக்கு ஏற்றதாயுள்ளது. அதனால் இது, பாரம்பரிய வாசகத்தின் உண்மைத் தன்மைக்குச் சான்று பகர்கிறது.

6. யாருக்காக எழுதப்பெற்றது?: *மீக்காவின் தூது முதன்மையாக யூதாவுக்கே உரியது. நூலின் பெரும்பகுதி யூதாவையே சாடுகிறது. ஆனால், மீக்கா இஸ்ராயேலர் மீது அக்கறை செலுத்தினார்; சமாரியாவை மிக விரைவாக நெருங்கி வரும் அழிவைப் பற்றி எச்சரித்தார் (1:5-7); அதன் சிலை வழிபாடு (1:7) அதனை முழுவதும் அழித்து விடும் என்று அறிவித்தார். கி.மு. 722-இல் அப்படியே நடந்தது. சமாரியாவின் வீழ்ச்சி, மீக்காவுடைய வாக்கின் மேன்மையை உணர்த்திற்று.*

ஆமோஸ் இஸ்ராயேலுக்குச் செய்த பணியையே, மீக்கா யூதாவுக்குச் செய்தார் என்று நூலிலிருந்து அறிகிறோம். ஆமோசைப் போல் மீக்கா ஒளிவு மறைவு இன்றிப் பேசினார். ஆமோசின் பாணியில் சமூக அநீதிகளைத் தாக்கினார். ஆமோஸ் இஸ்ராயேலில் கண்ட அதே சமய சமூகச் சிதைவு, யூதாவிலும் பரவிவிட்டதைக் கண்டார் இஃது இறைவனின் தீர்ப்பைக் கோரியது (2:3; 6:9-16). சிறிதும் விட்டுக் கொடுக்காத முறையில், யாவேயின் தீர்ப்பை எடுத்துரைக்கிறார் மீக்கா. அவர், ஆமோசையும் மிஞ்சி, இறைவன் அளிக்கவிருக்கும் தண்டனையைக் கடந்து, மெசியா வரவிருக்கும் எதிர்காலத்தை நோக்குகிறார். மெசியா வந்து யூதாவை மட்டுமின்றி, உலகநாடுகள் அனைத்தையும் ஆள்வார் (4-5).

7. இலக்கியச் சிறப்பு: *இந்நூலின் சிறப்புக்களில் ஒன்று அதன் அமைப்பாகும். இது கருத்து அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது; காலவரை அடிப்படையில் அன்று. இறைவழிபாட்டில் பயன்படுத்துவதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கலாம். கேடுகளை, அழிவை அறிவிக்கும் அச்சுறுத்தல்களும், மீட்பை அறிவிக்கும் வாக்குறுதிகளும் சமன்படுத்து முறையில் மாறி மாறி வருகின்றன.*

1:1-3:12 —கேடுகளை அறிவிக்கும் அச்சுறுத்தல்கள்.

4:1-5:14 —மீட்பை அறிவிக்கும் வாக்குறுதிகள்.

6:1-7:7 —கேடுகளை அறிவிக்கும் அச்சுறுத்தல்கள்.

7:8-20 —மீட்பை அறிவிக்கும் வாக்குறுதிகள்.

அச்சுறுத்தல்களுக்கும், வாக்குறுதிகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் மிகவும் வலியுறுத்தப்படுகின்றன. இந்தச் சமன் செய்யும் செவ்வொழுங்கு, பதிப்பாசிரியருடைய வேலையாக இருக்கலாம்.

மீக்கா ஆகமத்தின் நடை எளியது; நாட்டுப்புற வாசனை உடையது; புலனீடான, கரடுமுரடான பேச்சுத்தன்மையுடையது. இதில் நகரம் பற்றி ஆசிரியர் கொண்ட ஐயம் வெளிப்படுகிறது. ஆசிரியர் உருவகங்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகிறார். சொற்களைக் கொண்டு விளையாடுவதில் இன்பம் காண்கிறார்.

இந்நூலின் எபிரேய வாசகம் பெரும்பாலும் கரடுமுரடானது. இறைவாக்கு நூல்களில் ஓசேயாவுக்கு அடுத்தபடி, இந்நூல் தான் மிகவும் பழுதுபட்ட நிலையில் உள்ளது. பல இடங்களில் பொருள் தெளிவாக இல்லை. மொழி பெயர்க்கும்போது, ஆய்வாளர்கள் பல இடங்களில் மூல வாசகத்தை ஊகிக்க வேண்டியிருக்கிறது.

8. அமைப்பு: நூலின் திட்டம் எளியது. அதை அச்சுறுத்தல்கள் - வாக்குறுதிகள் அடிப்படையில் நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

I. யூதாவுக்கு எதிராக அழிவை அறிவிக்கும் இறைவாக்குகள் (1-3).

1:2-9: சமாரியாவின் பாவங்களுக்காக அதன்மேல் வரவிருக்கும் அழிவை முன்னறிவிக்கிறது (கி.மு. 721-க்கு முந்தியது).

1:10-16: யூதாவுக்கு எதிரான இறைவாக்குகள், சமாரியாவுக்கு எதிரான தீர்ப்பு, எருசலேமுக்கு ஓர் எச்சரிக்கையாகும்.

2:1-11: யூதாவின் சமூக அநீதிகளுக்கு எதிரான இறைவாக்குகள், மீக்காவின் போதனைக்கு எதிர்ப்பு.

2:12-13: அழிவு பற்றிய இறைவாக்குகளுக்கிடையில் மீட்புப் பற்றிய இறைவாக்குகள். இஸ்ராயேலரின் ''எஞ்சியோரை'' மீண்டும் ஒன்று சேர்ப்பதை அறிவிக்கிறது.

3:1-12: நீதிபதிகள், இறைவாக்கினர்கள். ஆளும் தலைவர்களுக்கு எதிரான இறைவாக்குகள். இத்தலைவர்களின் குற்றங்கள் எருசலேமை அழிக்கும்.

II. புதிய இஸ்ராயேலின் மகிமை (4-5).

4:1-5: புதிய எருசலேம் மகிமையோடு அமைக்கப்படும்.

4:6-8: சீயோனில் ஆண்டவர் ஆட்சி செய்தல்.

4:9-10: நாடு கடத்தப்படுதலும் திரும்புதலும்.

4:11-14: சீயோனின் எதிரிகள்.

5:1-5: விடுதலை அளிப்பவர் பெத்லகேமிலிருந்து தோன்றுவார்.

5:6-8: நாடு கடத்தப்பட்டவர்களுள் எஞ்சியோர்.

5:9-14: தண்டனைத் தீர்ப்பும் இஸ்ராயேல் சுத்தி செய்யப்படுதலும்.

III. இஸ்ராயேலுக்கு எதிராக ஆண்டவரின் வழக்கு (6:1-7:7).

6:1-2: வழக்காட அழைப்பு.

6:3-5: யாவேயின் வழக்கு.

6:6-8: உண்மையான சமயம்.

6:9-16: சமூக அநீதிகளும் அவற்றிற்குரிய தண்டனையும்.

7:1-7: நாட்டில் நிலவிய அநீதி, பிரமாணிக்கமின்மைக்காக இறைவாக்கினர் புலம்புகிறார்.

IV. விசுவாசத்தின் வெற்றி (7:8-20).

7:8-10: இஸ்ராயேல் தனது பாவங்களை அறிக்கையிடல்.

7:11-13: நாடு கடத்தப்பட்டோர் திரும்புதல்; வாக்குறுதி.

7:14-17: யாவேயை நோக்கி மன்றாட்டு.

7:18-20: இஸ்ராயேல் மன்னிப்புக் கோரி மன்றாடுதல்.

9. சிறப்புக் கருத்துக்கள்:-

அ. அழிவை அறிவிக்கும் இறைவாக்கினர்: மீக்காவின் காலம், யூதா இஸ்ராயேல் ஆகிய இருநாடுகளிலும் அரசியல் குழப்பமும் கொந்தளிப்பும் மிக்க காலமாகும். இந்நிலை, மக்களிடையே உன்னத உணர்வுகளைத் தட்டியெழுப்புவதற்குப் பதிலாக, அவர்களில் இழிவான உணர்ச்சிகளையே வெளிப்படுத்தியது. இறைவாக்கினர், மக்களின் ஒவ்வொரு பிரிவினரையும் ஆய்வு செய்து அவர்களது குற்றங்களை எடுத்துக் கூறிக் கண்டனம் செய்கிறார். ஏனெனில், யாவே அவர்களைச் சோதித்தார் *(1:2; 6:1தொ)*; அவர்களைக் குற்றமுள்ளவர்களாகக் கண்டார். அவர்களது சமயமும் ஒழுக்கமும் தூய்மை கெட்டு அழுகிப் போயிருந்தன. இந்நிலை இறைவனை வருத்தியது. இதை உணர்ந்த மீக்காவால் வாளாயிருக்க முடியவில்லை; வன்மையாகக் கண்டனம் செய்கிறார்.

தலைவர்கள் செல்வமும், செல்வாக்கும், அதிகாரமும், ஆட்பலமும் உடையவர்கள்; தங்களுக்குள்ளேயே பிளவுபட்டிருந்தனர்; எளியோரையும் ஏழைகளையும் துன்புறுத்தினர். பெரும் நிலக்கிழார்கள் சிறுகுடியானவர்களைக் கொடுமைப்படுத்தினர். அரசியல் அமைதியின்மை காரணமாக நாட்டில் பாதுகாப்பின்மை என்ற உணர்வு பரவியிருந்தது. பெண்களிடமும் சிறுவர்களிடமுமிருந்து வீடும், குடும்பமும் அபகரிக்கப்பட்டன *(2:9-10)*. ஒருவரும் மற்றவரை- தனது சொந்த மனைவியையோ, தந்தையையோ, மகனையோ கூட-நம்பவில்லை *(7:1-6)*.

பணம் படைத்த முதலாளிகள், மனம் இரங்கா வட்டிக்கடைக்காரர்கள், மோசடி செய்யும் வணிகர்கள், நாட்டில் மலிந்திருந்தனர் *(6:10-11)*. இவர்கள் இரவு முழுவதும் விழித்திருந்து அடுத்தநாள் செய்யப்போகும் பேராசைச் செயல்களைத் திட்டம் செய்யும் தீயோராவர் *(2:1)*.

நீதிபதிகளும் தலைவர்களும் மக்களுக்கு நீதி வழங்கவேண்டும். ஆனால், கைக்கூலி வாங்கிக் கொண்டு நீதியைத் திரித்துக் கூறினர் *(3-1-3.9-12)*. குருக்கள் புறச்சடங்கையே பெரிதும் வளர்த்தனர். சமய ஒழுக்க முறைகளை முழுவதும் புறக்கணித்தனர். பேராசை பிடித்த, சுய ஆதாயம் தேடும் பணப்பை உடைய இறைவாக்கினர்களை மீக்கா வெறுத்து ஒதுக்குகிறார். இவர்கள் தங்கள் வயிற்றை உணவாலும் பானத்தாலும் நிரப்பியவர்களுக்கும், பணம் கொடுத்தவர்களுக்கும் நல்ல செய்தி கூறுவர். இறைவனது செய்தியைத் திரித்துக் கூறுவர். புரட்டு செய்வர் *(2:11; 3:5-7; 11)*. ஆனால், இறைவனின் உண்மையான செய்தியைத் தேடவில்லை. இவர்கள் தேடியதெல்லாம் பணம் ஒன்றே.

இவ்வாறு மேற்கூறப்பட்ட யாவரும், இறைவனது சட்டம் கோரும் ஒழுக்க முறையைப் பற்றிக் கவலைப்படவில்லை. மக்களுக்குப் பாதுகாப்பாளர்களாகவும் வழிகாட்டுபவர்களாகவும் இருக்க வேண்டிய இவர்களே மக்களைச் சிறுமைப்படுத்தினர்; கொடுமைப்படுத்தினர். இவர்கள் பிறருக்கு மனிதத்தன்மையைக் காட்டவில்லை. இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட அயலானது ஆட்தன்மையை மதிக்க விரும்பவில்லை. இறைவாக்கினரின் சிந்தனையில் புனிதமானவற்றிற்கும், உலகியல் சார்ந்ததற்கும், சமயத்திற்கும், ஒழுக்கத்திற்கும் இடையே வேறுபாடு இல்லை. யாவும் ஒன்றே. இறைவன் நேர்மையுள்ளவராய் இருப்பதால் அவரது மக்கள் நேர்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர் பரிசுத்தராய் இருப்பதால் அவர்களும் பரிசுத்தராய் இருக்க வேண்டும். இறைவன் தமது மக்களுக்கு அன்பு செய்து அவர்களுக்கு வேண்டியதை அளிப்பது போல் அவர்களும் ஏழைகள், விதவைகள், அனாதைகள் அன்னியர்கள் ஆகியோரைப் பேண வேண்

டும். இது மோசே சட்டத்தின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும் (*யாத் 22:21-24; உப 24:17-22*). இக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமை, இறைவனை வருத்துவதாகும்.

ஆகவே ஏழைகளைக் கொடுமைப்படுத்துதல், ஆளும் வர்க்கத்தினரின் ஊழல், எளியோரைச் சட்டம் என்ற இயந்திரத்தில் அரைத்து நசுக்குதல் ஆகிய சமூகத்தீமைகளுக்கு எதிராகப் போராடுகிறார் மீக்கா. அவரது இந்தப்போராட்டம் மனிதனது மேன்மையையோ, தனி நபர் என்ற அளவில் அவனது தனித்தன்மையையோ, உரிமைகளையோ அடிப்படையாகக் கொண்டதன்று; இறைமக்கள் பற்றிய மீக்காவின் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இறைமக்கள் ஓர் அரசியல் - பொருளாதார சக்தியல்லர். அவர்கள் யாவேயால் தேர்ந்தெடுக்கப்பட்டு மீட்கப்பட்ட, தனிச்சலுகையால் அவரோடு சிறப்பான முறையில் ஒன்றிக்க அழைக்கப்பட்டவர்கள். இவ்வுண்மையிலிருந்து அவர்களது மீட்பராகிய யாவேக்குக் காட்ட வேண்டிய கடமையும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களிடையே நிலவ வேண்டிய மனித உறவும் தோன்றுகிறது. இக்கடமையும் உறவும் மீண்டும் அமைக்கப்பட மீக்கா போராடுகிறார்.

சமூக ஒழுக்கமுறை சீர்கெட்டிருந்தது போல், இஸ்ராயேலரிடையே சமய வாழ்வும் இழிவுபட்டிருந்தது. சிலை வழிபாடு பரவியிருந்தது. ''அதன் சிலைகளையெல்லாம் உடைத்துக் கற்குவியலாக்குவேன்'' (*1:7*). மீக்கா இஸ்ராயேலின் எல்லைக்கருகில் வாழ்ந்தவர். ஆன்மீக ஊழல் நிறைந்த வட அரசில் நிலவிய சிலை வழிபாட்டையும், சமயத்தின் பெயரால் செய்யப்பட்ட இழிசெயல்களையும் அறிந்திருந்தார். இதே நிலை யூதாவிலும் பரவியிருந்தது (*1:9*). இதற்காக இறைவன் யூதாவின் புனித இடங்களைத் தீர்ப்பிடுவது பற்றி எடுத்துக் கூறுகிறார். தீமைகளைக் கண்டனம் செய்து உடனடியாக வரவிருக்கும் அழிவை எடுத்துக்கூறி உண்மையான மனமாற்றத்தை மக்களிடமிருந்து அச்சமின்றிக் கோருகிறார்.

இப்படி மீக்கா கண்டனம் செய்வது, தன் சொந்த வாழ்வில் ஏற்பட்ட கசப்பாலோ, நாட்டு மக்களின் அற்பத்தனத்தின்பால் கொண்ட வெறுப்பாலோ அன்று; தான் பணியும் இறைவனது நீதி பற்றிய உண்மையான அறிவின் விளைவால்தான் (*3:8*). மக்களிடையே நிலவிய சிதைவுக்கு உண்மையான காரணம் அவர்கள் கொண்டிருந்த போலிச் சமயப் பாதுகாப்புத்தான் என்பதைத் தெளிவாகக் கண்டுணர்கிறார். இறைவனது பிரசன்னம் தங்களிடையே இருப்பதால் தீமைகளிலிருந்தும் கேடுகளிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கும் என்று மக்கள் நம்பியதுதான் இந்தப் போலிச் சமயப் பாதுகாப்பு (*3:11* தொ). இது மாயவித்தைத் தன்மையுடையது. இஃது இறைவன் கோரும் உண்மையான சமயத்தை (*6:8*) ஏற்றுக்கொள்ளும் உணர்வை மக்களிடையே மந்தமாக்கியது; அழித்தது. சமயம் உள்ளார்ந்ததாக இருக்க வேண்டும். செயலால் நிரூபிக்கப்பட வேண்டும். இறைவனை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். இவற்றிலிருந்து மீக்கா காலத்துச் சமய முறைகள் தவறிவிட்டன.

இறைவனது கோரிக்கைகளுக்கு நேர் மாறாகச் செயலாற்றும் தலைவர்களையும், வணிகர்களையும், நீதிபதிகளையும், அர்ச்சகர்களையும் மீக்கா வன்மையாகக் கண்டிக்கிறார். அவர்களது குற்றங்களுக்காக அவர்கள் மேல் வரவிருக்கும் தீர்ப்பையும் அழிவையும் வலியுறுத்துகிறார். அவர்களுடைய குற்றங்களுக்காக இறைவன் அவர்களைத் தீர்ப்பிடுவார்; தண்டிப்பார் (*1:3-4*). சமாரியா அழியும் (*1:6-7*); மீக்கா வாழ்ந்த சமவெளி நகரங்களும் (*1:10-16*) எருசலேமும் கூட (*3:12*) அழிவுக் குவியலாகும். இவை யாவற்றையும் யாவே செய்வார்.

சமூக, சமயத் தீமைகளைக் கண்டனம் செய்யும்போது இறைவனது சீற்றத்தையும் தீர்ப்பையும் மீக்கா வலியுறுத்துகிறார். ஆனால், இறைவனது இரக்கத்தைப் புறக்கணிக்கவில்லை. இறைவனது ''உடன்படிக்கை அன்பை,'' அன்பிரக்கத்தை எடுத்

துக்கூறுகிறார். இறைவனது இந்தப் பயன் கருதாத அன்பே உடன்படிக்கையின் ஊற்றும் உயிருமாகும். அதற்கேற்றவாறு, மக்களின் சமய, சமூக வாழ்வு ஒழுக்கமிக்கதாக இருக்கவேண்டும்.

ஆ. மீட்புச் செய்தி - மெசியா: ஆமோசைப் போல், கண்டனங்களையும் தீர்ப்பையும் அழிவையும் மீக்கா போதித்தார். ஆனால், அஃதோடு நின்று விடவில்லை. ஆமோசையும் கடந்து சென்று, யாவேயின் ஆட்சியையும் சீயோனின் வெற்றியையும் முன்னோக்குகிறார் மீக்கா. நற்காலத்தை எதிர்பார்க்கும், அறிவிக்கும் பகுதிகள் இந்நூலில் நிறைய உண்டு. வருங்காலம் பற்றிய மீக்காவின் காட்சி, தாவீதோடு செய்த உடன்படிக்கை நிறைவேறுதலிலும், யாவேயின் திட்டம் இறுதியில் செயல்படுவதிலும் அவரது நம்பிக்கையை எடுத்துக்கூறுகிறது.

வரும் நற்காலத்தில் மக்கள் சிலைவழிபாட்டை விட்டு விடுவர். எருசலேமில் ஏற்புடைய உண்மையான வழிபாட்டை இறைவனுக்கு அளிப்பர் *(4:1-2)*. சமயப் பற்றுறுதி பெருகும் *(5:11-13)*. அக்காலத்தில் படையெடுப்பு, போர் ஆகியவை பற்றிய அச்சுறுத்தல் இராது. நாட்டில் அமைதி நிலவும் *(4:3-5)*. இஸ்ராயேலின் எதிரிகள் அவர்களுக்குரிய தண்டனை பெறுவர் *(4:11-13; 5:14; 6:10. 16-17)*. பாவங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனையிலிருந்து தப்பிய, துன்பங்களால் சுத்தி செய்யப்பட்ட மக்களாகிய எளியோர், நாட்டிற்குத் திரும்பி வருவர் *(2:12; 4:7;5:6தொ)*. நாடு மீண்டும் அமைக்கப்படும் *(2:12தொ; 4:6-8. 10-13; 5:1-14; 7:8-20)*. மீக்கா காலத்திலிருந்து கடவுள் பற்றற்ற, பேராசை மிக்க, அகந்தையுள்ள, அநீதி மிக்க ஆளுபவர்களுக்குப் பதிலாக, நேர்மைமிக்க ஆளுபவர், ஆயரும் அரசருமாக, தாவீதின் குடும்பத்திலும் தாவீதின் நகரமான பெத்லகேமிலிருந்தும் தோன்றுவார் *(5:1-4)*. இந்த மகிமை மிக்க இறைவாக்கு கிறிஸ்து பிறப்பில் நிறைவேறும். இறைவன்து எஞ்சியோர் அவருக்குப் பிரமாணிக்கமாய் இருப்பர். அவரது தலைமையை ஏற்றுக்கொள்வர். சீயோனில் இறைவனது அரசு மகிமையோடு நிறுவப்படும்.

இந்த, நம்பிக்கையும் ஊக்கமும் ஊட்டும் பின்னணியில், இறைவனிடம் திரும்பி வருமாறு தனது கால மக்களை உருக்கத்தோடு வேண்டுகிறார் மீக்கா. இதை இறைவன் தமது மக்களோடு வழக்காடுவதாக எடுத்துக்கூறுகிறார். இறைவன் அவர்களைக் கைவிட்டதாலா, புறக்கணித்ததாலா, அவர்கள் பிற கடவுள்களிடம் சென்றனர் *(6:1-5)*? தமக்கு ஏற்புடைய வழிபாடு எது என்று அவர்களுக்கு இறைவன் போதிக்கவில்லையா? தங்களது அயலாரோடு நீதியோடு நடந்து இறைவனைப் பிரியப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்கள் நீதி நேர்மையற்றவர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் விளங்கினர் *(6:9-7:6)*. அவர்களைச் சுத்தி செய்யும் ஒரே வழி, அவர்களைத் தண்டிப்பதும் துன்புறுத்தலும் ஆகும். அது நாடுகடத்தலில் வரும் *(7:15-17)*. மீக்காவின் செய்தி, பழைய ஏற்பாட்டிலேயே உருக்கம் மிக்க ஒரு வேண்டுகோளில் உச்சநிலை அடைகிறது. மனத்துக்கம் கொள்ளும் அவர்களை இறைவன் மன்னிப்பார். அவர்களது பாவங்களை ஆழ்கடலில் தள்ளிவிடுவார். அவரது வாக்குறுதி ஒருபோதும் தவறாது *(7:18-20)*.

மீக்காவின் மீட்புச் செய்தி மற்றொரு முக்கிய கருத்தையும் கொண்டுள்ளது. மீட்பு யூதர்களுக்கு மட்டும் உரியதொன்று அன்று. அது யாவர்க்கும் உரியதாகும். இந்த விவிலிய உண்மையை மீக்கா, எசாயாவைப் பின்பற்றி *(எசா 2:2-4)*, மக்கள் யாவர்க்கும் ஆண்டவரது வழிகளில் போதிக்கப்படும் வருங்காலத்தை *(மீக் 4:1-2)* அறிவிக்கிறார். இஃது ஆபிரகாமின் வழியாக எல்லா மக்களும் ஆசீர்வதிக்கப்படுவர் *(ஆதி 12:3)* என்று இறைவன் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதியின் வளர்ச்சியாகும்.

11. மீக்காவும் விவிலியத்தின் பிறநூல்களும்: விவிலியத்தில் மீக்கா ஆகமத்தின் செல்வாக்கு வரைக்குட்பட்டதே; ஆனால், நிலையானதாகும். ஆமோஸ், ஓசேயா,

எசாயா ஆகியோரை மீக்கா நன்கு அறிந்திருந்தார். அவர்களது போதகம் மீக்கா ஆகமத்தில் பிரதிபலிக்கிறது. எரேமியா காலத்தவர் மீக்காவை அறிந்திருந்தனர். மீக்காவின் கூற்றை எரேமியாவுக்கு எதிராக எடுத்துக்காட்டினர் (எரே 26:18).

புதிய ஏற்பாட்டில், மத் 2:6; யோவா 7:42 ஆகிய வாசகங்கள் எப்ராத்தா எனப்படும் பெத்லகேமில் மெசியா பிறப்பது பற்றிய மீக்காவின் வாசகத்தை (மீக் 5:2) எடுத்துக் கூறுகின்றன. மத் 10:35 தொ; லூக் 12:53 ஆகியவை மீக் 7:6-இல் வரும் துன்பத்தைக் கிறிஸ்துவக் காலத்திற்குப் பொருத்திக் கூறுகின்றன.

12. முடிவுரை: மீக்காவின் செய்தி இன்றும் மக்களுக்குப் பொருத்தமுடையது. நமது அலுவலகங்களில், தொழிற் கூடங்களில் நடப்பவை பற்றியும் இறைவன் அக்கறை கொள்கிறார் என்ற உண்மையை நாம் சில சமயம் மறந்து விடுகிறோம். நாம் நம் அயலாருக்கு எதிராகத் தீயன செய்யும்போது இறைவனையே வருத்துகிறோம், அவருக்கு எதிராகக் குற்றம் செய்கிறோம். நமது பாவங்களை நாம் நேர்மையாய்ச் சிந்தித்து மனத்துக்கமடைந்து அவரது மன்னிப்பைப் பெற்று உய்வு பெற அவர் சில சமயம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், மனத்துக்கப்பட்டு அவரிடம் திரும்ப வரும்பொழுது மீட்பு உறுதியாக நம்மை ஆட்கொள்ளும். மீக்கா போதித்த உண்மையான சமயம் எக்காலத்திற்கும் உரியதாகும். ''ஓ! மானிடனே, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கிறாரே! நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுளுக்கு முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார்?'' (6:8).

மீக்காயா (MICAIAH - யாவேயைப் போன்றவர் யார்?)

1. இவர் இம்லாவின் மகன். ஆகாபு இஸ்ராயேலை ஆண்டபோது இறைவாக்கு உரைத்தவர் (1 அர 22:8-28; 2 நாள் 18:7-27).

இவர் ஆகாபின் ஆட்சியின்போது அரசனுக்கு எதிராகவே இறைவாக்குரைத்தார். ஒரு கட்டத்தில் ஆகாபு போருக்குச் செல்லலாமென மற்றவர்களெல்லாம் கூற, இவர் தோல்வி, மரணம் ஆகிய அழிவுச் செய்தியையே எடுத்துரைத்ததால் சிறை வைக்கப்பட்டார். ஆனால், அவர் உரைத்தபடியே ஆகாபு போரில் இறந்தான். இந்த இறைவாக்கு மூலம் மூன்று கருத்துக்கள் தெளிவாகின்றன. அன்று இஸ்ராயேலர் யாவே இறைவனைத் தன் அவையோரால் சூழப்பட்ட ஓர் அரசனாகவே கண்டனர். நல்லவை, தீயவை எது நடந்தாலும் அதற்குக் காரணம் இறைவனே எனக் கருதினர். மேலும், 'பொய் சொல்லும் ஆவி' இறைவனின் ஆவி எனப் பிரித்துப் பார்த்ததால், போலித்தீர்க்கதரிசிகள், இறைவனின் தீர்க்கதரிசிகள் எனும் பாகுபாடு ஏற்பட்டது.

2. இவர் அக்போரின் தந்தை (2 அர 22:12). 2 நாள் 34:20-இல் மீக்காயா மீக்கா என்றும், அக்போர் அப்தோன் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

3. இவர் யூதா அரசனான அபியாவின் தாயும், கிபயா ஊரானான உரியேலின் மகளும் ஆவார் (2 நாள் 13:2).

4. யூதாவின் யோசபாத்து ஆட்சி செய்த காலத்தில் யூதத் தலைவர்களில் ஒருவர் (2 நாள் 17:7). இவர் மற்றத் தலைவர்களோடு யூதாவின் நகரங்களுக்கு ஆண்டவனின் திருச்சட்டத்தை எடுத்துரைக்க அரசனால் அனுப்பப் பெற்றார்.

5. இவர் நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்த ஒரு குரு. மத்தனியாவின் தந்தையும் செக்கரியாவின் முன்னோரும் ஆவார். எருசலேம் சுவர் அர்ப்பணிக்கப்பட்ட சடங்கில் பங்கெடுத்தார் (நெகே 11:17.22; 12:35).

6. இவர் நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்த ஒரு குரு (நெகே 12:41). எருசலேமின் மதிலை அர்ப்பணிக்கும் நாளில் அங்கு எக்காளம் ஊதிச்சென்றவர்களின் குழுவில் ஒருவராக இருந்தார்.

7. கெமாரியாவின் மகனும் சாபனின் பேரனுமான இவர் எரேமியாவின் சமகாலத்தில் வாழ்ந்தவர். யோயாக்கிம் அரசனின் ஐந்தாம் ஆண்டில், எரேமியா கூறிய வாக்குகள் அடங்கிய சுருளை நோன்பு நாளில் ஆலயத்தில் பாருக்கு வாசித்ததை இவர் தலைவர்களிடம் அறிவித்தார் (எரே 36:11-13).

மீக்கால் (MICHAL - இறைவனைப் போன்றவர் யார்?)

சவுலின் இளைய புதல்வியே மீக்கால் (1 சாமு 14:49). இவள் தாவீதை அன்பு செய்வதை அறிந்து, அவன் நூறு பெலிஸ்தியர்களைக் கொன்று வந்தால் அவனுக்கு மணமுடித்து வைப்பதாகக் கூறினார் சவுல் (1 சாமு 18:20-25). ஆனால் தாவீது எதிர்பார்த்ததுக்கு எதிராக, இந்தச் சோதனையில் மக்களிடையே பிரபலம் பெற்றார்; மீக்காவை மணந்தார். இது சவுலின் பொறாமையைக் கொண்டு வந்தது. சவுல் அவரைக் கொல்லத் தேடும்போது மீக்கால் அவரைத் தப்பிக்கச் செய்தாள் (19:11-17). பின் சவுல் மீக்காலை இலாயிசின் மகன் பல்தியேலுக்கு மணம் முடித்துக் கொடுத்தார் (1 சாமு 25:44; 2 சாமு 3:15). பின்பு தாவீது அப்னேருடன் உடன்பாட்டுக்கு வருவதற்கு முன், மீக்காலைத் தன்னிடம் திருப்பி அனுப்பினால் மட்டுமே அவனுடன் நட்பும், ஒத்துழைப்பும் கொள்வதாகக் கூறினார். அவ்வாறே அப்னேர் செய்தார் (2 சாமு 3:13-16). எருசலேமுக்கு உடன்படிக்கையின் பேழை கொண்டு வரப்பட்டபோது தெருவில் தாவீது ஆடிய நடனத்தைப் பற்றி அவரிடம் கடிந்து பேசி, மீக்கால் அவனை நிராகரித்தாள். இதற்குப் பதிலாக சாகும்வரை தாவீது அவளுக்குக் குழந்தைப்பேறு அருளவேயில்லை (6:16-23).

2 சாமு 21:8-இல் வரும் மீக்கால், அவளுடைய மூத்த சகோதரியும் அதிரியேலின் மனைவியுமான மேராபாக இருக்க வேண்டும்.

மீசியா (MYSIA)

இது சிறிய ஆசியாவின் வடமேற்கில் உள்ள இடம். இதன் மேற்கில் ஆகியன் கடலும், வடக்கில் எல்லெஸ்போந்தும் புரோபோந்தும் கிழக்கில் பித்தினியாவும், பிரிகியாவும், தெற்கில் லீதியாவும் அமைந்துள்ளன. இது சிறிய ஆசியாவின் மற்றப் பகுதிகளைவிட நீர் வளம் குன்றிய பகுதியாகும். கி.மு. 133-இல் இப்பகுதி ஆசியாவில் உரோமை மாகாணத்தின் ஒரு பகுதியாக மாறியது. புதிய ஏற்பாட்டில் மீசியாவின் நகரங்களாகக் கூறப்பட்டுள்ளவை அலக்சாந்திரியா, துரோவா, ஆசோ, அஸ்ஸோஸ் அதிராமித்தியம் மற்றும் பெர்கமு ஆகியவையாகும்.

பவுல் மீசியாவிற்குச் செய்த முதல் பயணம் அ.ப. 16:6-11-இல் கூறப்பட்டுள்ளது. தேவ ஆவி அவரைத் தேவ வார்த்தையை ஆசியாவில் போதிக்காதபடி தடுக்கவே, அவர் மீசியாவின் எல்லைக்கு வந்தார். இயேசுவின் ஆவி தடை செய்ததால் மீசியாவைக் கடந்து துரோவா நகருக்கு வந்தபோது மாசிதோனியாவுக்குப் போகும்படி கனவில் அறிவிக்கப்பட்டார். இந்த மீசியாப் பகுதியில் சிலர் கிறிஸ்தவர்களாக மாறினர். பின்னர், இப்பகுதியில் நற்செய்திப்பணி செய்ய நல்ல வாய்ப்பு இருப்பதைக் கண்டார் (2 கொரி 2:12). இன்னும் பிற்காலத்தில் அங்குள்ள கிறிஸ்தவர்களைச் சந்திக்கச் சென்றார் (அ.ப. 20:5-14).

மீட்பரின் உரையாடல் (SAVIOR, DIALOGUE OF THE)

மறையியல் ஞானக் கோட்பாடுடைய முற்கால கிறிஸ்து சமயக் கிளையினரின் ஆய்வுக்கட்டுரை அண்டம் தோன்றியதைப் பற்றி இயேசுவும் அவருடைய சீடர்களும் உரையாடுவதாக அமைந்துள்ளது. இந்நூலின் பல ஏடுகளில் ஒன்று வடஎகிப்தில் 1946-இல் செனோபோஸ்கியோன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

மீட்பு, மீட்பர் *(REDEMPTION, REDEEMER)*

I இறைவன் தம் மக்களை விடுதலை செய்யும் அல்லது பணம் கொடுத்து விடுவிக்கும் ஆற்றலான மீட்பு என்ற கருத்தும், இதையொத்த கருத்தான அவர்களை விலை கொடுத்து வாங்கும் ஆற்றலான ஈட்டிக் கொள்ளுதலும் வீடுபேறு பெறுதல் என்ற கருத்தோடு விவிலியத்தில் நெருங்கிய தொடர்புடையன. இஸ்ராயேலை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் பொருட்டும் (*யாத் 12:27; 14:13;* காண்க. *எசா 63:9*), இஸ்ராயேலை ஒரு ''தனிச்சிறப்பான மக்களாக'' அமைக்கவும் (*யாத் 19:5; உப 26:18*) இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சலுகை பெற்ற சாதனங்களாக இவை குறிக்கப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் மூலஞான உபதேசத்தைப் பிரதிபலிக்கும் வாசகமான *தீத் 2:14*தொ, கிறிஸ்துவின் செயலை விவரிக்கும்போது ஆசிரியர் சுட்டிக்காட்டும் மூலத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது; ''நம்மை எல்லா அக்கிரமத்திலிருந்தும் மீட்டு, நம்மைத் தூயவர்களாக்கித் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார்'' என்ற அளவில் இயேசு மீட்பராவார். இவ்வாறு கடவுளின் மீட்புத் திட்டம் தொடர்ச்சியாக நிறைவேறி வருகிறது. இதில் புதியதும் எதிர்பாராததுமாய் இருப்பவை ஒவ்வொரு உண்மையான இறைவாக்கும் நிறைவேறுவதை எவ்வழியிலும் தடை செய்வதில்லை.

II ***பழைய ஏற்பாடு:***

1. விடுதலைப் பயணமும் உடன்படிக்கையும்: விடுதலைப் பயணத்தின் தொடர்பில் தான் பழைய ஏற்பாடு மீட்பைப் பற்றி அடிக்கடி பேசுகிறது. இஸ்ராயேல் அனுபவித்த இந்தச் சமய அனுபவம் மீட்பு என்பதின் பொருளைப் புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது. ஏனெனில், யூத சமய சமூக உணர்வில் விடுதலைப்பயணம் உடன்படிக்கையிலிருந்து பிரிக்க முடியாதது. இறைவன், மக்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்ளவே, அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார்; ''நானே ஆண்டவர்... உங்களை அடிமைப்படுத்துவதிலிருந்து விடுவிப்பேன். ஓங்கிய கையாலும் மாபெரும் தீர்ப்புகளாலும் நான் உங்களுக்கு மீட்பளிப்பேன். உங்களை நான் என் மக்களாகத் தெரிந்தெடுப்பேன். உங்களுக்குக் கடவுளாக நான் இருப்பேன்'' (*யாத் 6:6-7;* காண்க. *2 சாமு 7:23*தொ). இந்த உடன்படிக்கையினால், இஸ்ராயேல், ''தூய மக்களினமாகவும்,'' ''யாவேக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாகவும்,'' ''இறைவனுடைய சொந்த மக்களாகவும்'' மாறினர் (*யாத் 19:5-6*). தூய மக்கள், யாவேயால் மீட்கப்பட்டவர்கள் என்ற இரு சொற்றொடரும் சம பொருளுடையவையாகும் (*எசா 62:11*தொ). ''அவர்களை எகிப்து நாட்டினின்று விடுவிப்பதற்காக, அவர்களை இறைவன் கைப்பிடித்து நடத்தி வந்த'' நாளிலிருந்து உடன்படிக்கைக்கு எரேமியா காலம் குறிக்கிறார் (*எரே 31:31*).

இவ்வாறு மீட்பு என்ற கருத்து நேர்தன்மையுடையதாகும். பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையைப்போல இறைவனோடு ஒன்றிப்பும் உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும், ஒன்றிப்பையும் ஒப்புரவையும் அது மூலப்பொருளாகக் கொண்டுள்ளது.

2. மெசியாவின் மீட்பு: நாடு கடத்தப்பட்டதிலிருந்து விடுதலை பெறுவதை உணர்த்த இறைவாக்கினர்கள் அதே வாய்பாட்டை விரும்பிப் பயன்படுத்துகின்றனர். இதற்கேற்றவாறு, குறிப்பாக இரண்டாம் எசாயாவில் மீட்பர் என்பது யாவேயின் மிக அன்புக்குரிய பட்டங்களில் ஒன்றாகிறது. இதனால்தான் பெரும் மெசிய நம்பிக்கைகள் எல்லாம் மீட்பு என்ற சொல்லால் எடுத்துக் கூறப்படுகின்றன என்பது வியப்பைத் தர வேண்டியதில்லை. ''பேரன்பு ஆண்டவரிடமே உள்ளது! அவரிடமே மிகுதியான மீட்பும் உண்டு. அவரே இஸ்ராயேலரை அவர்களுடைய எல்லாத் தீவினைகளிலிருந்தும் மீட்பார்'' (*சங் 130:7-8*). மற்றவர்களையெல்லாம் விட, பாவிகளுக்கு அளிக்கப்படும் அத்தகைய மீட்பின் முழு இலவசத்தன்மையை எசேக்கியேல் வலியுறுத்துகிறார் (*எசே 16:60-63; 36:21* தொ). இதற்கப்பால், புதிய உடன்

படிக்கையின் தன்மையைத் தெளிவாக்குகிறார். எரே 31:32-இல் ''என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன்'' என்று கூறும் யாவே, எசே 36:27-இல் ''என் ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன்'' என்றும் கூறுகிறார். மீட்பு, சட்டத்தின் இடத்தில், யாவேயின் சொந்த ஆவியை அளிப்பதில் அடங்கியுள்ளது (காண்க. யோவா 1:17.29.33; 7:37தொ; உரோ 8:2-4).

III. ***புதிய ஏற்பாடு:***

1. பழைய ஏற்பாட்டின் தொடர்ச்சி: *இந்த மெசியாச் சூழ்நிலை பற்றிய குறிப்பு சில இடங்களில் வெளிப்படையாக உள்ளது. செக்கரியா ''அவர் தம் மக்களைத் தேடி வந்து விடுவித்தருளினார்'' என்று இறைவனைப் போற்றுகிறார் (லூக் 1:68). ''எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த யாவரிடமும்'' இறைவாக்கினள் அன்னா இயேசு குழந்தையைப் பற்றிப் பேசினாள் (2:38). பழைய ஏற்பாட்டிலிருந்து வரும் மெசியாவைப் பற்றிய சொற்களில் பெரும்பாலானவை கிறிஸ்துவின் முதல் வருகைக்கோ, இரண்டாம் வருகைக்கோ சாற்றிக் கூறப்படலாம். அதே போன்று மீட்பு என்னும் சொல், கல்வாரியில் கிறிஸ்துவால் நிகழ்த்தப்பட்ட செயலைக் குறிக்க மட்டும் பயன்படவில்லை. அதே அளவில் காலமுடிவில் அவர் நிகழ்த்தப் போவதற்கும் சாற்றிக் கூறப்படலாம். அதன் விளைவாக இரண்டாம் வருகைக்கும், உடலின் மகிமை மிக்க உயிர்ப்புக்கும் சாற்றிக் கூறப்படலாம் (லூக் 21:28; உரோ 8:28; எபே 1:14; 4:30; ஒருவேளை 1 கொரி 1:30). இரண்டு வருகையிலும் விடுதலை உண்டு, மீட்பு உண்டு. இவற்றைவிட அஃது இறைவனால் சேர்த்துக் கொள்ளுதலும், உடைமையாக்கிக் கொள்ளுதலுமாகும். அப்போது உடலும் ஆன்மாவும் கொண்ட மனிதன், அவனோடு படைப்பனைத்தும் ''கடவுளுடைய முழு நிறைவால் நிரப்பப்படுவர்'' (எபே 3:19); ''கடவுளே அனைத்திலும் அனைத்துமாய் இருப்பார்'' (1 கொரி15:28); ''படைப்பு முழுவதும் அவரால் நிறைவாக்கப்பெறும்'' (எபே 1:23).*

இதனால்தான் புதிய ஏற்பாடு இதே கருத்தை ''விலை கொடுத்து வாங்கப்பெறுதல்'' என்ற சொற்றொடரால் எடுத்துக்கூற முடிகிறது (1 கொரி 6:20; 7:23; காண்க. கலா 3:13; 4:5). நடுநிலை நேர்மைச் சட்டத்தாலோ, பரிமாற்ற நீதிச்சட்டத்தாலோ ஒழுங்கு செய்யப்படும் வியாபாரத் தொழில் நடைமுறையில் ஈடுபடுபவர் தான் இழப்புறுவதில்லை என்ற ஒரே நிபந்தனையின் பேரில் சிறைக்காவல் கைதியை விடுவிக்கிறார். வியாபாரி தனது பொருட்களை விற்கிறார். ''விலை கொடுத்து வாங்கப்பெறுதல்'' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும்போது, புதிய ஏற்பாட்டு ஆசிரியர் மீட்பை மேற்கூறப்பட்ட வியாபாரத்தொழில் நடைமுறையோடு ஒன்றிணைக்க விரும்பவில்லை. ஆனால் இச்சொற்றொடர், நிபந்தனைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட ஓர் உடன்படிக்கையின் விளைவாக நாம் கடவுளின் உடைமையாக மாறவிட்டோம் என்பதை ஐயமற உணர்த்துகிறது. கொடுக்கப்பட்ட விலை என்ற ஒரு சிறப்பான நிபந்தனை எப்போதும் சுட்டிக்காட்டப்படுகிறது (1 கொரி 6:20; 7:23; காண்க. 1 பேதுரு 1:18). ஆனால், உருவகம் இந்த அளவிலேயே நின்று விடுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். விலைகொடுத்தலைக் கோரும் அல்லது ஏற்கும் ஆள் பற்றிய பிரச்சனை இங்கு ஒருபோதும் இல்லை. இவ்வாறு இந்த நோக்கிலும், பழைய ஏற்பாடு பழக்கப்பட்டிருந்த விலை கொடுத்து வாங்குதல் என்ற கருத்தைப் புதிய ஏற்பாடு செயலுருப்படுத்துவதாகத் தோன்றுகிறது. மற்றவை எப்படியிருப்பினும், திருவெளிப்பாட்டு நூல் விலை கொடுத்து வாங்குதல் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும்போது சீனாய் உடன்படிக்கையை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுகிறது. முற்காலத்தில் உடன்படிக்கையின் விளைவாக இறைவனுடைய உடைமையாகியதுபோல், செம்மறியின் இரத்தத்தில் எல்லா மக்களினங்களும் இறைவனுடைய தனிச்சிறப்பான உடைமையாகின்றன. இரண்டும் இரத்தத்தில் முத்திரையிடப்படுகின்றன (திருவெ

5:9). இதே உண்மையை நினைவுகூரும் போது, *அ.ப. 20:28*, இச்சொற்றொடரைப் பழைய ஏற்பாட்டுக்கு உரிய முறையில் பயன்படுத்தி, ''கடவுள் தமது இரத்தத்தி னால் சொந்தமாக்கிக் கொண்ட இறைவ னுடைய திருச்சபையைப் பற்றிப்'' பேசு கிறது (*காண்க. 1 பேதுரு 2:9; தீத் 2:14*).

மேலும், இந்த விளக்கம் கிறிஸ்துவை நோக்கித் தடம் கண்டுபிடிக்கத் தக்கது. விரும்பித்தேர்ந்தெடுக்கப்பட்ட பாஸ்குச் சூழ்நிலையையும் உடன்படிக்கை இரத் தத்தை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டு தலும் இதில் நாம் தவறு செய்ய முடியாது என்பதைப் போதிய அளவு தெளிவாக்கு கின்றன (*மத் 26:28 இணை; 1 கொரி 11:25*).

2. கிறிஸ்துவின் விரும்பி முன்வந்து ஏற்ற மரணம்: மாதிரியையும் அதன் நிறைவேற்ற லையும் பிரிக்கும் இடைவெளியைப் புதிய ஏற்பாடு தெளிவாக வரைபடம் செய்கிறது. பழையதைப் போன்று புதிய உடன்படிக் கையும் இரத்தத்தில் முத்திரையிடப்படு கிறது. ஆனால், புதிய உடன்படிக்கையின் இரத்தம் இறைவனது ஒரே மகனுடையதா கும் (*1 பேதுரு 1:18தொ; எபி 9:12; காண்க. அ.ப. 20:28; உரோ 3:25*).

விலைமதிப்பற்ற மீட்பு: அறிவற்ற விலங் குகளின் பலிகளை யாவேயின் ஊழிய னுடைய சுயமான விரும்பி ஏற்ற பலி பின் தொடர்கிறது. அவர் ''தன்னையே சாவுக்குக் கையளித்தார்'' (*எசா 53:13*), ''தமது அறிவால் பலரை நீதிமானாக்கினார்'' (*53:11*). இயேசு ''தொண்டு ஏற்பதற்கு அன்று; மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்'' (*மத் 20:28; மாற் 10:45*). அவரது பலி நமது விடுதலையின் கருவியாகும். கிறிஸ்துவினுடைய சாவின் இந்த விரும்பி ஏற்கும் பண்பைத்தான் பாடுகள் பற்றிய யோவானின் விவரிப்பு நன்கு புலப்படுத்துகிறது (*எ.சா. யோவா 18:48*). இதைவிடத் தெளிவாகக் கூறக்கூடு மெனில், கிறிஸ்து தனது சாவுக்குத் தன்னை முன்னதாகவே அர்ப்பணிக்கும் நற்கருணை விருந்து பற்றிய ஒத்தமை நற்செய்திகளின் விவரிப்பில், கிறிஸ்துவின் விரும்பி ஏற்கும் துன்பம் என்ற அதே கருத்து வலியுறுத்தப் படுகிறது.

3. சாவின் மீது கிறிஸ்துவின் வெற்றி: கிறிஸ்துவின் சீடர்களுக்கு அவரது சாவு ஓர் இடறலாகியது; அவர்தான் எதிர்பார்க் கப்பட்ட மீட்பர் அல்லர் என்பதற்குச் சான்றாயிற்று (*லூக் 24:21*). அவர்களது மனம் உயிர்ப்பு மற்றும் ஐம்பதாம் நாள் விழா அனுபவத்தால் ஒளியூட்டப்பட்டும், உயிர்ப்புக்குச் சாட்சிகளாகிய பின்னும் (*அ.ப. 1:8; 2:31தொ*), அவர்களுடைய போதகரின் பாடுகளும் சாவும், இறைவனது மீட்புத் திட்டத்திற்கு ஒரு தடையாக இல் லாமல், மறைநூலில் உள்ளபடி அதை நிறைவேற்றின என்று புரிந்து கொண்டனர் (*1 கொரி 15:4*). ''வீடு கட்டுவோரால் விலக்கப்பட்ட கல் மூலைக்கல்லாக'' (*அ.ப. 4:11; சங் 118:22; 1பேதுரு 2:7*), புதிய ஆலயத்தில் அடிப்படையாக (*மத் 21:42*) ஆயிற்று. *எசா 52:13* என்ற வாசகச் சொற்களில் ஊழியர் உண்மையிலேயே உயர்த்தப்பட்டார் (*அ.ப. 2:33; 5:31*); மகிமைப்படுத்தப்பட்டார் (*3:13*). இன்னும் அதிகமாக அவர் தன்னையே சாவுக்குக் கையளிக்கும் பொருட்டு ஊழியன் ஆனார் (*எசா 53:12; பிலி 2:8*). தோல்வியாகத் தோன்றிய கிறிஸ்துவின் சாவு, சாவின் மேலும், சாவின் காரணனான சாத்தான் மேலும் உண்மையில் வெற்றியாகும் (*யோவா 12:31தொ; காண்க. எபி 2:14*).

4. சாவும் உயிர்ப்பும்: மீட்பு மறை பொருள் பற்றிய தொடக்கப் போதகத்தில், உயிர்ப்பு இரண்டாம் தர பாகத்தைத்தான் கொண்டிருந்தது. இரண்டாம் வருகையின் தொடர்பில் (*1 தெச 1:10*), உயிர்ப்பு சில சமயங்களில் குறிப்பிடப்படுகிறது (*எ.கா. 1 பேதுரு 1:3*). ஆனால் பரிசுத்த ஆவியால் வழிகாட்டப்பட்டு, பாடுகள் மற்றும் சாவு ஒருபுறமும், உயிர்ப்பு மற்றும் விண்ணேற் றம் மறுபுறமுமாய் அமைவதை அப்போஸ் தலர் தேர்ந்து தெளியத் தொடங்கினர். நிகழ்ச்சிகளின் இந்த இரு தொகுப்பும்

ஒன்றொடொன்று தொடர்புடையன மட்டு மல்ல (எ.கா. பிலி 2:9). ஆனால், அவை எவ்வளவு ஒன்றொடொன்று ஊடுருவிப் பிணைந்துள்ளன என்றால், அவை மீட்பு எனும் தனிச்சிறப்பான மறையுண்மையின் இரு பிரிக்க முடியாத பண்புக்கூறுகளாக அமைந்துள்ளன.

இவ்வாறு விண்ணேற்ற முன்னோக்கில், இயேசு எருசலேமை நோக்கிச் செய்யும் நீண்ட பயணத்தின் விவரிப்பை எடுத்துக் கூற லூக்கா கவனமாய் உள்ளார் (லூக் 9:51). அதை நிறைவு செய்யும் விதத்தில் கிறிஸ்துவின் மகிமை மிக்க வாழ்வை விவரிக்கும்போது, அவரது பாடுகளையும் சாவையும் வேண்டுமென்றே வலியுறுத்து வதையும் லூக்கா நினைவுபடுத்துகிறார் (24:7.26.39.46; காண்க. 9:31). இதேபோல், பவுல் சாவைப் பற்றிக் கூறாதபோதும், உயிர்ப்பைப் பற்றிக் கூறுவதைத் தவிர்ப்ப தில்லை. அவர் அடிக்கடி சுட்டிக்காட்டும் வாழ்வு உயிர்த்த கிறிஸ்துவின் வாழ்வில் பங்கு கொள்ளுதலாக எப்போதும் கருதப் படுகிறது (எ.கா. கலா 2:20; 6:14தொ; உரோ 6:4.11; 8:25). இறுதியாக, யோவானில், மூல ஞான உபதேசத்தில் இயேசுவின் உயிர்ப்பைக் குறிக்கும் சொற்கள் கிறிஸ்து வின் பாடுகள் மற்றும் மகிமை ஆகிய இரண்டிற்கும் சாற்றிக் கூறப்படுகின்றன (யோவா 12:23.32.34). மேலும், பத்முவின் காட்சியாளருக்குத் தோன்றும் திருவெளிப் பாட்டின் செம்மறி உயிர்ப்புக்குச் சான்று கூறும் விதத்தில் உயிருள்ளதாயும், ஆயி னும் பலியின் அடையாளமாகக் கொல்லப் பட்டதாயும் தோன்றுகிறது (திருவெளி 5:6).

5. அன்பின் மறைபொருள்:

அ) யோவான்: இவரைப் பொருத்தமட் டும், மீட்பின் மறைபொருள் தன்மையாலே அன்பின் மறைபொருளாகும்; ஆகவே, இறைவாழ்வின் மறைபொருளாகும். ஏனெ னில், அன்பே கடவுள் (1 யோவா 4:8). அது, ''தன் மகனையே அளிக்கும் அள வுக்கு உலகின்மேல் அன்பு கூர்ந்த'' (யோவா 3:16; 17:23; 1 யோவா 4:9) தந்தையின் அன்பாகும் என்பது உறுதி. அதே போன்று அது மகன் தந்தைக்கும் (யோவா 14:31), மனிதர்க்கும் (10:11; 1 யோவா 3:16; திருவெளி 1:5) காட்டும் அன்பாகும். அது தந்தையிடமிருந்து மகன் பெறும் அன்பாகும். மகன் எல்லாவற்றிற் கும் தந்தையையே சார்ந்துள்ளார். ஆகவே, அது ''கீழ்ப்படிதலுள்ள'' அன்பாகும் (யோவா 14:31). இறுதியாக, அதைவிடப் பெரிய அன்பில்லை (15:13). ஏனெனில், கிறிஸ்துவின் வாழ்வு முழுவதும் ''அவரைச் சார்ந்தோர் மேல்'' காட்டிய அன்பானால், பாடுகள் ''அவர்கள்மேல் இறுதிவரையும் அவர் அன்பு செலுத்திய'' நேரமாகும்; அவரது முழுநிறைவு வரை செலுத்திய நேரமாகும் (13:1). செயலள வில், பன்னிருவரில் ஒருவர் தன்னைக் காட்டிக் கொடுக்கவும் (18:2தொ), அவரது குழுவின் தலைவரால் மறுதலிக்கப்படவும் (18:25தொ), சட்டத்தின் பெயரால் இறைநிந் தனை செய்தவராகத் தீர்ப்பிடப்படவும் (19:7), மிகவும் இழிவான சாவுக்கு உட்பட வும், அதுவும் சிலுவைச் சாவுக்கு உட்பட வும் (19:31) தன்னையே கையளித்தார். இந்த நேரத்தில்தான் அவர் ''எல்லாம் நிறைவேறிற்று'' என்று உண்மையிலேயே கூறமுடியும் (19:30). மறைநூலில் வெளிப் படுத்தப்பட்டு இயேசுவின் மனித இதயத் தில் மனு உரு எடுத்த தந்தையின் அன்பை உன்னதமான முறையில் செயல்படுத்துவதா கும். அன்பின் பொருட்டு அவர் மரித்தால், அஃது அந்த அன்பை மனிதர்க்கு, அவரது சகோதரர்களுக்கு அளிப்பதற்காகவே. குத்தித் திறக்கப்பட்ட விலாவிலிருந்து (19:37; செக் 12:10), ''பாவத்தையும் தீட்டை யும் நீக்கித் தூய்மையாக்கும் நீரூற்று தாவீ தின் குடும்பத்தாருக்கெனவும் எருசலேமில் குடியிருப்போருக்கெனவும் தோன்றுவதாக'' (செக் 13:1; காண்க. எசே 47:1தொ) யோவான் காண்கிறார். இது திருமுழுக்கின் போது ''மெசியாவின்மேல் இறங்கித் தங்கிய தாக'' (யோவா 1:32தொ) திருமுழுக்கு யோவான் கண்ட ஆவி பொழியப்படுவ தின் (20:22) பிடிகையாகும்.

ஆ) பவுல்: இந்நோக்கு பவுலில் தெளிவாக உள்ளது. அவரும் கிறிஸ்துவின் மரணத்தில் முதலில் அன்பின் மறைபொருளைக் காண்கிறார். ''நாம் பாவிகளாய் இருந்தபோதே'' (உரோ 5:8) அவரது பகைவர்களாய் இருந்தும் (5:10) தந்தை நம்மீது கொண்டுள்ள அன்பை எண்பித்தார் (உரோ 5:5-8; 8:39; எபே 1:3-6; 2:4; காண்க. கொலோ 1:13). ஒருபுறம், கீழ்ப்படிதல் வழியாகத் தந்தைபால் மகன் கொண்டுள்ள அன்பையும், அதன் விளைவாக முதல் ஆதாமின் கீழ்ப்படியாமையைச் சீர்ப்படுத்தியதையும் (உரோ 5:19; பிலி 2:6), அதேபோல் மக்கள்பாலுள்ள மகனது அன்பையும் (உரோ 5:8 தொ; 8:34) பவுல் காண்கிறார். இதைப் பொருத்தமட்டும் பவுல் மூல ஞான உபதேச வாய்பாட்டை மட்டும் (காண்க. மாற் 10:45) பயன்படுத்தவில்லை; எசா 53:10.12 என்ற வாசகத்தால் தூண்டப்பட்டு, ''கிறிஸ்து நம் பாவங்களுக்காகத் தம்மையே கையளித்தார்'' (கலா 1:4; 1 திமொ 2:6; தீத் 2:14) என்று அறிவிக்கிறார். ''நம்மேல் கிறிஸ்து அன்பு கூர்ந்ததால்'' இவ்வாறு கையளித்தார் (கலா 2:20; எபே 5:2.25) என்று விளக்குகிறார்.

யோவானைப்போல், பவுலும் ''தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விடச் சிறந்த அன்பு இல்லை'' (யோவா 15:13) என்று அறிவார். விளக்கமாக, ஒவ்வொரு மனித அன்பும் நிபந்தனைக்குட்பட்டது. அது செயல்படும் சூழ்நிலையால் இணக்கம் செய்யப்படுகிறது. அசாதாரண சூழ்நிலை அசாதாரண அன்புக்கு ஒத்திருக்கும். மேலும் துல்லியமாக, தந்தையிடமிருந்து இந்த அன்பை ஏற்றுக்கொள்வதில், தந்தை அவரை வைத்திருந்த சூழ்நிலை காரணமாக, கிறிஸ்து அந்த அன்பை முழுமையாக ஏற்றுக் கொண்டார். இவ்வாறு, ''தம் மகன் என்றும் பாராமல், நம் அனைவருக்காகவும் அவரைக் கையளித்தார் கடவுள்'' என்ற கூற்றில் (உரோ 8:32) கிறிஸ்துவினுடைய அன்பின் முனைப்பான சான்றை (8:35), இன்னும் மேலான ''நம் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்ட இறை அன்பின்'' சான்றைப் பவுல் காண்கிறார்.

உடன் செல்லுகின்ற எல்லாச் சூழ்நிலைகளிலும், யோவானைப்போல், பவுலும், சிலுவையில் அறையப்பட்டுத் தண்டிக்கப்படும் கேவலமான சூழ்நிலையைச் சுட்டிக் காட்டுகிறார். இந்த இழிவான மரணம் கிறிஸ்தவர்களைச் சிறப்பாக உருகச் செய்கின்றது (காண்க. 5:30; 10:39). முற்காலத்தில் ''கடவுளால் வதைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு'' மக்கள் பார்த்த ஊழியனைப் போன்று (எசா 53:4), நீதிமானாகிய அவர், உலகின் கண்களில், சட்டத்தை மீறுபவராக நமக்காகச் சாபமாகினார் (கலா 3:13). கிறிஸ்துவுக்கு இதைவிட மோசமான இழிவை நாம் கற்பனை செய்து பார்க்க முடியாது (பிலி 2:8). அதே காரணத்திற்காக, இதைவிட மிக உன்னதமான கீழ்ப்படிதலையும், அன்புச் செயலையும் கற்பனை செய்ய முடியாது. இத்தகைய மரணத்தை ஏற்ற நொடியிலிருந்து அதை விரும்பித் திட்டம் செய்தார். இவ்வாறு கிறிஸ்து மனுகுலத்தை மீட்டார். அதைத் தந்தைக்கு, அடைந்து, தந்தார்.

6. ஊனில் பாவத்தின்மேல் வெற்றி: மறுபுறம், இது மனுகுலத்தைச் சேர்ந்த ஒருவரால் செய்யப்பட்டது. இவ்வாறு அதைக் கடந்த நிலையிலும் கூட, நமது மனித நிலையில் நிறைவாகப் பங்கு கொள்கிறார். இவ்வாறு, மனிதகுலம், உள்ளார்ந்த மாற்றத்தால், மீட்படைந்ததாக, இறைவனுக்கு ஈட்டப்பெற்றதாகத் தன்னைக் காண்கிறது. யோவானின் கருத்துப்படி, சிலுவையில், ''இவ்வுலகின் தலைவன் தண்டனை பெற்றுள்ளார்'' (யோவா 16:11). அதாவது, அவர் ''வெளியே துரத்தப்படுவார்'' (12:31; காண்க. திருவெளி 12:9 தொ); அவரது அரசிலிருந்து நீக்கப்படுவார். ''ஊனிலே பாவத்திற்குத் தண்டனைத் தீர்ப்பளித்தார்'' (உரோ 8:3) என்று பவுல் கூறும்போது, எசே 38-39-இல் (காண்க. 38:22தொ; 39:21 தொ) முன்சொல்லப்பட்ட ''இறுதிக்காலப் போரில்'' உள்ளதுபோல், மெசியாக் காலம் நிறுவப்படுவதின் பீடிகையைக் குறிப்பிடுகிறார். சாவின்மேல் கிறிஸ்து வழியாக இறைவன் கொள்ளும் வெற்றி, ஊனிலே

சாத்தானை மேலாண்மையுடையவனாக நம் பியபோதுதான், நிறைவேறுகிறது. ''கட வுள் சாகும் இயல்புடைய ஊனைப் போன்ற இயல்பில் தம் சொந்த மகனை அனுப்பினார்'' என்பதை இது விளக்கு கிறது. அதாவது, அது நமது ஊனைப்போல் பாவத்தின் கருவியாக ஆகாமல், கிறிஸ்து வின் ஊன் பாவத்தின் காரணமாக நமது இறப்பைப்போல், கீழ்ப்படுத்தப்பட்டு சாகும் தன்மையுடைய நிலையை விளக் கும். அப்போஸ்தலரின் நோக்கில், ஆவி யின் வாழ்வை ஊனுக்கு அளிப்பதில் அதே ஊனில் பாவத்தின்மேல் கடவுள் வெற்றி பெற்றார் என்று சூழ்நிலை காட்டுகிறது (உரோ 8:2.4). கிறிஸ்து தனது சாவு மற்றும் உயிர்ப்பு வழியாக உயிர்தரும் ஆவியானவர் (1 கொரி 15:45). நமக்கும் ஆவியின் வாழ்வு அளிக்கப்படுகிறது. ஏனெனில், நாம் ஊனி யல்புக்கு உட்பட்டவர்கள் அல்லோம்; ஆவியின் செயல்களுக்கு உட்பட்டவர்கள்'' (உரோ 8:9; காண்க. 8:4). கிறிஸ்து ஊனியல்பிலிருந்து ஆவியின் இயல்புக்குக் கடந்து சென்று விட்டதில், ''இறைவனிடம் திரும்புதல்'', மீண்டும் நிறைவேறுகிறது. நாமும் கிறிஸ்துவோடு சேர்ந்து கடந்து சென்று விட்டோம்.

மற்ற இடங்களில், ''கடவுளுடைய அருள் தன்மையோடு நாமும் கிறிஸ்துவுக் குள் விளங்கும்படி, பாவமே அறியாத அவரை நமக்காக பல உருவாக்கினார்,'' என்று பவுல் துணிந்து கூறுகிறார். அடிக்கடி தவறாக விளக்கப்படும் இத்தகைய கூற்று கள் அதே சூழ்நிலையில் விளக்கப்படக்கூடி யதாகத் தோன்றுகின்றன. நம்மோடு ஒன் றாகிவிட்ட கிறிஸ்துவோடு கொண்டிருக் கும் கூட்டொருமை வழியாக, அவரில் நாம், வாழ்வின் இந்த ஆற்றலின் நலம் தரும் விளைவுகளுக்கு ஆட்பட வேண்டும். இதை விவிலியமும் பவுலும் ''இறைவனது நீதி'' என்றழைக்கின்றனர். பாவ மனித னுடன் கொண்டிருக்கும் கூட்டொருமை யால், தந்தை, தன்மகன் பாவம் எனும் சாவின் ஆற்றலின் தீய விளைவுகளுக்கு அடங்கியிருக்க வேண்டும் என்று விரும்பி னார். இந்த விளைவுகள் அன்பு மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் பெரிய செயல் களின் விரும்பத் தக்க தகுதியாகின்றன.

இவ்வாறு பாவத்தின் அழிவு உண்டாக் கக்கூடிய செயல் செப்பம் செய்யப்படு கிறது. மனித இனம் மீண்டும் அமைக்கப் படுகிறது; மீட்கப்படுகிறது. இறைவனோடு மீண்டும் ஒன்றிக்கப்படுகிறது; மீண்டும் இறைவாழ்வை உடைமையாகக் கொள் கிறது. பழங்கால இறைவாக்கின்படி (எசே 36:27) யாவேயின் ஆவியே ஊனுக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் இந்த இறை வாக்கு, அன்பின் மேலாண்மை மிக்க செயலில் மனிதனான இறைவனின் ஒரே மகன் இடையீட்டால், எதிர்பார்க்காத மகி மையோடு நிறைவேறியது.

மீண்டும் அமைத்தல், புதுப்பித்தல் (RESTORATION)

மீண்டும் அமைத்தல் என்பது பழைய ஏற்பாட்டில், இஸ்ராயேலின் அரசு மீண்டும் அமைக்கப்படுவதைக் குறிக்கும் கலைச் சொல்லாகப் பயன்படுகிறது (சங் 16:5; எரே 15:19; 16:15; 23:8; 24:6; எசே 16:55; ஓசே 11:11). இக்கருத்து மலா 3:23-இல் எலியா வுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இதில், ''நான் வந்து உலகைச் சபித்துத் தண்டிக்காத படி, அவர் (எலியா) தந்தையரின் உள்ளங் களைப் புதல்வரிடத்தும், புதல்வரின் உள் ளங்களைத் தந்தையரிடத்தும் திருப்புமாறு செய்வார்'' என்று கூறப்பட்டுள்ளது. எலியா ''யாக்கோபின் குலங்களைத் திரும்ப நிலைநிறுத்துகிறார்'' (சீரா 48:10). ''எலியா வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத் தும்'' பிரச்சனையைத் திருமுழுக்கு யோவா னுடன் ஒத்துப்போகச் செய்வது மத் 17:11; மாற் 9:11-13-இல் எடுத்துக் கூறப்படுகிறது. ''இஸ்ராயேலுக்கு அரசாட்சியை நீர் மீட்டுத் தருவது'' பற்றிய இந்த யூதக் கருத்தை லூக்கா மற்றொரு இடத்தில் உயிர்த்தெழு தலில் சீடர்கள் வாயிலாக எடுத்துக் கூறு கிறார் (அ.ப. 1:6). இஃது, அரசு நெருங்கி வருவதையும் இதை இஸ்ராயேலுக்கு மட்டு வரை செய்வதுமாகிய கருத்தைத் திருத்துவதற்கும், வாய்ப்பளித்தது. ''அனைத்தும் புதிதாக்கப்படுதல்'' என்பது

அ.ப. 3:21-இல் வருகிறது. இதுவும், எலியா பாரம்பரியம் பற்றிய மற்றச் சுட்டல்களும், வாசகச் சூழ்நிலையில் இத்தகைய தொடர்பு, லூக்காவின் மூலங்களிலேயே இருந்திருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன. ஆயினும் இதன் லூக்கா வடிவில், ''தொன்றுதொட்டு வந்த தம் பரிசுத்த இறைவாக்கினர்களின் வாயிலாகக் கடவுள் அறிவித்த அனைத்தும் புதுப்பிக்கப்படும் காலம் வரை'' இயேசு விண்ணகத்தில் காத்திருக்கிறார் என்பதை விட அதிகமாகக் கூறவில்லை.

புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவின் வெற்றியின் முழுமை பற்றிய நோக்கு (யோவா 1:29; 4:42; 12:32; உரோ 5:18; 8:19 தொ; 11:32; 1 கொரி 15:22-28; 2 கொரி 5:19; பிலி 2:10; 1 திமொ 2:4; 1 யோவா 2:2; 4:14) உண்மைத் தன்மையுடைய நீதித் தீர்ப்புப் பற்றிய யூதக்கருத்தைத் தள்ளி விலக்குவதில்லை. மாறாக, வேர் நிலையான தீர்மானம் செய்யும் அழைப்பிற்கு நேர்நிலை அடிப்படையாக அமைகிறது.

மீரா (MYRA - *அழுகின்ற*)

இது லீக்கியா நாட்டிலுள்ள முக்கியமான துறைமுகம். இத்துறைமுகம் மத்தியதரைக் கடற்கரையிலிருந்து 4 கி.மீ. தொலைவில் அந்திரியாக்கு ஆற்றின் கரையில் அமைந்திருந்தது. இது லீக்கியா மாகாணத்துக்குத் தலைநகராக விளங்கியது.

கடல் பயணத்தில் மீரா துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றி அ.ப. 27:2-6 விரிவாகக் கூறுகிறது. பவுலும் கைதிகள் வேறு சிலரும் இத்தாலிக்குப் போன பயணத்தில் அவர்களைச் சிறிய ஆசியாத் துறைமுகமான அதிராமித்தியம் செல்லும் கப்பலில் ஏற்றி அனுப்பினார். இக்கப்பல் சீதோனை அடைந்த பின் எதிர்க்காற்று வீசியதால் சைப்ரசு தீவின் ஒதுக்கிலே சென்றது. பின்னர் இக்கப்பல் லீக்கியா நாட்டு மீரா நகரை அடைந்தது.

மீன் (FISH)

விவிலியத்தில் மீன்பற்றிய குறிப்புகள் பல உள்ளன. விவிலியத்தில் நீரில் வாழும் எல்லா உயிர்களும் மீன் என்றழைக்கப்படுகின்றன. ஆனால், அவை வகைப்படுத்தப்படவில்லை. கடல்களும் ஆறுகளுமாகிய நீர் நிலைகளில் இருப்பனவற்றில் துடுப்பும் செதிலுமுள்ளவை அனைத்தும் தூய்மையானவையும் உண்ணத்தக்கவையுமாகும். அவற்றில் துடுப்பும் செதிலும் அற்றவை தூய்மையற்றவையும் அருவருப்பானவையுமாகும் (லேவி 11:9-12; உப 14:9-10).

மீன் இறைவனால் படைக்கப்பட்டது (ஆதி 1:20-22). அவருடைய திருவுளத்துக்குப் பணிந்தது (எசா 50:2; எசே 38:20; செப் 1:3). பறவைகள், விலங்குகள், ஊர்வன ஆகியவற்றோடு சேர்ந்து மீனும் உயிரினமாகக் கருதப்பட்டது (ஆதி 1:26; யோபு 12:7-8;...). இவற்றையெல்லாம் பற்றி சாலமோன் கருத்துரை வழங்கினார் (1 அர 4:33). சிலைகள் செய்யத் தடை செய்யும் பகுதியில் நீரில் வாழும் மீன்களும் உள்ளடங்கும் (உப 4:15-18).

பழைய ஏற்பாட்டில் எகிப்திய மீன் குறிக்கப்படுகிறது (எசே 29:4-5). எகிப்தில் தங்கியிருந்தபோது எபிரேயர் மீனை உண்டனர் (எண் 11:5). மோசே காலத்தில் முதல் வாதனையில் மீன்கள் அழிந்தன (யாத் 7:18.21; சங் 105:29).

இஸ்ராயேலுக்கு இறைவன் அளிக்கவிருக்கும் மகிமை மிக்க வருங்காலம் பற்றிய எசேக்கியரின் காட்சியில் ஆலயத்திலிருந்து ஓடி வரும் உயிர்தரும் ஆறு சாக்கடலோடு கலந்து, அதன் தண்ணீரை நல்ல தண்ணீராக்கும். அதன் விளைவாக மிகுந்த மீன்கள் வளரும் (எசே 47:7-10).

விவிலியத்தில் இலக்கியப்புகழ் பெற்ற மூன்று மீன்கள் உள்ளன. 1) யோனா நூலில் வரும் பெரிய மீன் (யோனா 2:1). 2) திகிரீசு நதியில் தோபியா கண்ட மீன். அதன் உள் அங்கங்கள் பெரிய தோபியைக் குணமாக்க உதவின (தோபி 6:1-5). 3) இயேசுவுக்காகவும் பேதுருவுக்காகவும் ஆலயவரி கட்டிய மீன் (மத் 17:27).

பாலஸ்தீனத்தில் குளங்களில் மீன்கள் வளர்க்கப்பட்டாலும், அவற்றின் இயற்கையான இடங்கள் நல்ல தண்ணீர் கொண்ட கலிலேயக் கடலும், யோர்தான் ஆறும், அதன் உப ஆறுகளுமாகும். கூலே ஏரியும், அதற்குத் தெற்கிலுள்ள சதுப்பு நிலமும் மீன் வளர்வதற்குச் சிறந்த இடமாகும். அங்கு நெருக்கமாக வளர்ந்துள்ள நாணல், மீன்களைப் பிடிப்பதற்குத் தடையாக இருந்தன. அங்கு மிகுதியாக உள்ள கொசுக்களும் பூச்சிகளும் மீன்களுக்குப் போதிய உணவை அளித்தன.

பாலஸ்தீனத்தில் பொதுவாகக் காணப்படும் மீன்கள் நைல்நதியிலும் ஆப்பிரிக்காவின் வடகிழக்குப் பகுதியிலும் காணப்படும் மீன்களோடு தொடர்புடையன. கலிலேயாக்கடல், பலவகை மீன்களைக் கொண்டுள்ளது. அவற்றில் ஒன்று ''புனித பேதுருவின் மீன்'' என்றழைக்கப்படும் திலாப்பியாவாகும். யோர்தான் ஆற்றில் காணப்படும் மீன்கள் கலிலேயாக்கடலில் காணப்படுபவைகளிலிருந்து அதிகம் வேறுபடவில்லை. யோர்தான் ஆற்றில் அடித்துப் போகப்படும் மீன்கள் சாக்கடலை அடைந்து, மடிந்து, அப்பகுதியிலுள்ள பறவைகளுக்கு உணவாயின. சாக்கடலில் ஒரு மீனும் உயிர் வாழ முடியாது (காண்க. எசே 47:7-10). ஆனால், அதைச் சுற்றியுள்ள உப்பு ஊற்றுக்களிலும் சவர் நீருடைய ஓடைகளிலும் பல சிறிய மீன்கள் காணப்படும்.

எகிப்தில் வாழ்ந்தபோதே, இஸ்ராயேலரின் உணவில் மீனும் இடம் பெற்றிருந்தது (எண் 11:5.22). நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்னும் (காண்க. நெகே 13:16), புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் (மத் 14:17 இணை; 15:37; லூக் 24:42; யோவா 21:9-13) மீன்கள் உணவில் இன்னும் அதிகமாகப் பயன்பட்டன.

உருவக வழக்கில், உலகில் மனிதனது இயலாமை, வலையில் அகப்படும் மீனுக்கு ஒப்பிடப்படுகிறது (திருவுரை 9:12; அ.ப. 1:14). யோனாவை விழுங்கும் பெரிய மீன் மீட்பின் அடையாளமாக உள்ளது (யோனா 1:17). கடலில் வீசப்பட்டு எல்லாவகையான மீன்களையும் வாரிக்கொண்டு வரும் வலைக்கு இறையரசு ஒப்பாகும் (மத் 13:47-48).

திருச்சபையின் தொடக்கத்தில், மீன் கிறிஸ்துவத்தின் ஓர் அடையாளமாகும். அடிநிலக் கல்லறைச் சித்திரங்களில் மீன்கள் காணப்படுகின்றன. மீனைக் குறிக்கும் ICHTHYS என்ற கிரேக்கச் சொல்லின் எழுத்துக்கள் ''இயேசு கிறிஸ்து, இறைமகன், மீட்பர்'' (Jesus Christ, Son of God, Savior - Jesous Christes Theon Huios Soter) என்ற விசுவாச அறிக்கையின் தலைப்பெழுத்துச் சொல்லாகும். இப்படி அடையாளப்படுத்துவது எப்போது நிகழ்ந்தது என்று கூற முடியாது. ஆனால் இந்த அடையாளப்படுத்தப்படுதல் செய்யப்பட்டபின் மீன் ஓர் எடுத்துக்காட்டான கிறிஸ்தவ அடையாளமாயிற்று.

மீன் பிடித்தல் (FISHING)

இத்தொழில் பொழுது போக்கிற்காகவோ, வருமானத்திற்காகவோ, உணவுப் பொருள் சேகரிப்பதற்காகவோ செய்யப்படும் தொழிலாகும். எகிப்திய அரசர்கள் மீன்பிடித்தலை ஒரு விளையாட்டாகக் கருதி ஈடுபட்டனர். இஸ்ராயேலரின் தொடக்க காலத்தில் பெனிசியர்கள் மீன் பிடிப்போராய் இருந்தனர். பாபிலோனிய நாடு கடத்தலுக்குப்பின், தீர் நகர மக்கள் மீன்வளத் தொழில் துறையில் முதன்மை பெற்று விளங்கினர் (நெகே 13:16).

விளையாட்டாகவோ, பொழுதுபோக்காகவோ இஸ்ராயேலர் மீன் பிடித்தலில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. எகிப்தில் இருந்தபோதே இஸ்ராயேலர் மீனை உண்டு வந்தனர் என்றாலும் (எண் 11:5.22), வியாபாரத்திற்காகவோ, வாழ்க்கைத் தொழிலாகவோ அவர்கள் மீன் பிடித்தலில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்குப் பழைய ஏற்பாட்டில் சான்றுகள் அரிதாகவே உள்ளன. இதற்குக் காரணம் மத்தியதரைக் கடற்கரையின் பெரும்

பகுதி பெலிஸ்தியர், பெனிசியரின் கட்டுப் பாட்டில் இருந்ததும், தங்களுக்கு வேண் டிய மீன்களுக்கு இஸ்ராயேலர் அன்னிய வியாபாரத்தைச் சார்ந்து இருந்ததுமே ஆகும் (நெகே 13:16). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வியாபாரத்திற்காக மீன்பிடித்தல் கலிலேயாக் கடலில் பரவலாக நடைபெற் றது. மீன்பிடிப்போர் சங்கங்களாகவோ, குழுக்களாகவோ சேர்ந்து இத்தொழிலில் ஈடுபட்டனர் (காண்க. லூக் 5:7.10).

மீன் பிடித்தலைத் தொடர்ந்து, உப் பிட்டுப் பதப்படுத்தி மீன்களை விற்பதும், வலைகளைப் பின்னுவதும், கடற்பயணம் செய்வதும், படகுகளைப் பழுதுபார்ப்பதும் வேலைவாய்ப்புத் தரும் தொழில்களாக இருந்தன (எசே 26:5; மத் 4:21). கடலில் வீசப்பட்ட வலை நிறைந்ததும், அதை இழுத்துக்கொண்டு போய்க் கரையில் உட் கார்ந்து நல்லவற்றைக் கூடையில் சேர்த்து வைப்பர்; கெட்டவற்றை, அசுத்தமான வற்றை வெளியே எறிவர் (மத் 13:48). மீன் பிடிப்போர் கூடைகளில் மீன்களைச் சந்தைக்குக் கொண்டு சென்றனர். எருசலே மில் மீன்வாயில் என்ற ஒரு வாயில் இருந்தது. ஒருவேளை இங்கு மீன் விற்கும் சந்தை இருந்திருக்கலாம் (2 நாள் 33:14). எருசலேமுக்குத் தூரத்திலிருந்து கொண்டு வரப்பட்டால் பெரும்பாலும் மீன்கள் உப் பிடப்பட்டுப் பதப்படுத்தப்பட்டிருக்கும் (நெகே 13:16). ஏதன்சு போன்ற நகரங்களில் இத்தகைய மீன் சந்தைகள் இருந்திருக்கின் றன. மீன்பிடிப்போர் பெரும்பாலும் குழு வாகத் தொழில் செய்தனர் (யோபு 41:6; லூக் 5:10). அவர்கள் சில வேளைகளில் இரவிலும் தொழில் செய்தனர் (லூக் 5:5; யோவா 21:3). மீன்பிடிக்கும் தொழில் நைல்நதி (எசா 19:8), மத்திய தரைக்கடல் (நெகே 13:16), கலிலேயாக் கடல் (மத் 4:18), யோர்தான் ஆறு, கூலே ஏரி, ஒரோன்தசு, யூப்பிரத்தீசு, திகிரீசு நதிகள், ஆகியன் கடல் ஆகியவற்றில் நடைபெற்றது.

விவிலியத்தில் மீன்பிடிக்கும் பல்வேறு முறைகள் குறிப்பிடப்படுகின்றன (அ.ப. 1:15). பாலஸ்தீனத்திலும் எகிப்திலும் முற் காலத்திலிருந்தே மீன்கொக்கிகள் பயன் படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இவை எலும்பு, இரும்பு போன்றவற்றால் ஆன வையாகவும் அல்லது வெறும் முள்ளாக வும் இருக்கலாம். இவை நூல்கயிற்றோடு இணைக்கப்பட்டிருக்கும் (யோபு 41:1-2; எசா 19:8; ஆமோ 4:2; அ.ப. 1:15). நத்தூபியன் குடியிருப்புகளில் எலும்பினால் செய்யப்பட்ட மீன் கொக்கிகள் கண்டெடுக் கப்பட்டுள்ளன. ஈரான் நாட்டுக் கொக்கிகள் சாலமோன் காலத்திய எசியோன் கெபேரில் காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் கொக்கிகள் பழக்கத்தில் இருந் தன (மத் 17:27). இதிகாச விலங்கான லேவியத்தானைக் கொக்கிகளால் பிடிக்க முடியாது (யோபு 41:1-7). இப்பகுதியும், ஆமோ 4:2-ம் முன்பெல்லாம் ஒரு முள் தான் மீன்கொக்கியாகப் பயன்பட்டது என்று சுட்டுகின்றன. பெரிய மீன்களைப் பிடிப்பதற்கு ஈட்டி போன்ற எறிஆயுதம் பயன்பட்டது (யோபு 41:7). எசா 19:8-இல் மீன்கொக்கியும், வலையும் குறிக்கப்படு கின்றன. தூண்டில் தடியைப் பற்றி எக்குறிப் பும் இல்லை.

மீன் வலைகள் பரவலாகக் குறிக்கப்படு கின்றன. இவை மூன்று வகைப்படும்.

அ) எறிவலை: இது பொது நோக்குடை யது; வேட்டையாடுவதற்குப் பயன்படும் வலை போன்றது; நான்கு மீட்டர் விட்ட முடையது; வலையை விரைவில் படியச் செய்யக் கூடிய கல்லால் ஆன விளிம்புடை யது. இந்த வலையைத் தரையிலிருந்தோ, படகிலிருந்தோ, தண்ணீரில் நின்று கொண்டோ பயன்படுத்தலாம் (திருவுரை 9:12; மத் 4:18; மாற் 1:16). தயாராகக் கையில் பிடித்துக்கொண்டு மீன்கள் காணப் படும் பகுதிகளில் பரந்த அளவில் படியு மாறு இவ்வலை எறியப்படும். ஆகவே, இது பகலில்தான் பயன்படும். ஒருவேளை பேதுருவும் அந்திரேயாவும் இவ்வகை வலையைப் பயன்படுத்தியிருக்கலாம் (மத் 4:18).

ஆ) இழுவலை அல்லது வாரிக்கொண்டு வரும்வலை: 200-250 மீட்டர் நீளமும் 5 மீட்டர் அகலமும் உடையது. அடியோரத்தில் கனமான எடைகளும், மேல் ஓரத்தில் மிதப்புகளும் இணைக்கப்பட்டிருக்கும். இரண்டு படகுகளுக்கிடையில் தொங்க விடப்பட்டு கயிறுகளால் கரைக்கு இழுக்கப்படும் (எசா 19:8; அப 1:15-16; மத் 13:47-48). இவ்வகை வலை மெதுவாகச் சரியும் கடற்கரைகளில் மீன்பிடிக்க மிகவும் ஏற்றது. ஒருவேளை செபதேயுவின் புதல்வர்கள் இவ்வகை வலைகளைப் பயன்படுத்தியிருக்கலாம் (மத் 4:21).

இ) இணை வலைகளின் தொடர்: மிகவும் சிக்கலானது. குறுகிய பின்னலுடையது (அ.ப.1:15-17; மத் 4:20; மாற் 1:18; லூக் 5:2.4-7). படகுகளுக்கிடையில் பார வலையாகத் தங்கவிடப்படும். மற்றொரு படகு மீன்களை விரட்டிவிட உதவும். கடற்கரைக் கருகிலுள்ள ஆழமான நீர் நிலைகளில் இது மிகவும் பயன்படும் (யோவா 21:8).

அடிமைப்படுத்தப்பட்ட இஸ்ராயேலரைக் குறிக்க மீன்பிடித்தல் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (திருவுரை 9:12; எசே 29:4; அப 1;14). இஸ்ராயேலருக்கு எதிரான இறைவனின் தீர்ப்பு, கிளர்ச்சி செய்யும் மக்களைப் பிடிக்க மீன்பிடிப்போர் மற்றும் வேட்டையாடுபவர் பலரை அனுப்புவதற்கு ஒப்பாகும் (எரே 16:16; எசே 47:10).

இயேசு மீன்பிடிக்கும் அருஞ்செயல்களை நிகழ்த்தினார் (லூக் 5:1-11; யோவா 21:1-8; காண்க. மத் 14:13-21). இறையரசுக்கு மீன்பிடித்தலை ஒப்பிட்டார் (மத் 13:37-48). ஐயாயிரம் பேருக்கு உணவளித்ததில் மீன் பயன்பட்டது (யோவா 6:1 தொ). புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சீடர்களில் பலர் மீன் பிடிப்பவர்களாக இருந்தனர் (மத் 4:18.21; மாற் 1:16; லூக் 5:2). புதிய ஏற்பாட்டுப்பணி முழுவதுமே ஒரு மீன் பிடிக்கும் நிகழ்ச்சியாகும் என்று உருவகமாகக் கூறலாம். சீடர்களும் அவர்களைப் பின்பற்றி வருபவர்களும் "மனிதரைப் படிப்போராக" இருக்க இயேசுவால் அழைக்கப்படுகின்றனர் (மத் 4:19; மாற் 1:17; லூக் 5:2.10). இவர்கள் இயேசுவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு மீன்பிடிக்கும் உரிமைகளையும், வலைகளையும், உபகரணங்களையும் கைவிட்டு இயேசுவைப் பின்பற்றினர். மனிதரைப் பிடிப்போராய் இருக்கும் கிறிஸ்தவப் பணிக்கு மீன் இசைந்த அடையாளமாக உள்ளது.

மீன் வாயில் (FISH GATE)

எருசலேமின் வடசுவரில் அமைந்துள்ள ஒரு வாயில். இது மீன் சந்தைக்கு அருகில் இருந்ததால் இப்பெயர் பெற்றிருக்கலாம் (காண்க. நெகே 13:16). மனாசே தாவீதின் நகரில் கீகோன் பள்ளத்தாக்கின் மேற்புறம் தொடங்கி, மீன் வாயிலின் தொடக்கம் வரையிலும், வெளிப்புற மதிலை எழுப்பினார்; இம்மதில் ஓபேலைச் சுற்றிலும் உயர்ந்திருக்கச் செய்தார் (2 நாள் 33:14). யோசியா ஆட்சியின் தொடக்கத்தில் இறைவாக்குரைத்த செப்பனியா, இரண்டாவது பகுதி அல்லது மிஸ்னேயோடு தொடர்புபடுத்தி மீன் வாயிலைக் குறிப்பிடுகிறார் (செப் 1:10). அனானேல் காவல் மாடத்துக்கு மேற்கில் அமைந்த மீன்வாயில், நெகேமியா மீண்டும் கட்டிய எருசலேம் சுவருக்குள் அடங்கியதாக அமைந்தது (நெகே 3:3; 12:39).

அறிஞர் சிலர் மீன்வாயிலை எப்பிராயிம் வாயிலாக அடையாளம் காட்டுவர். எப்பிராயிம் வாயில் எப்பிராயிமியர் பகுதிக்கு இட்டுச் சென்றது (செக் 14:10-முன்னைய வாயில்).

இயேசுவின் சிலுவையைச் சுமக்கக் கட்டாயப்படுத்தப்படுமுன் (மாற் 15:21; லூக் 23:26), சிரேனாகிய சீமோன் மீன் வாயில் வழியாக எருசலேமுக்குள் நுழைந்தார் என்று கிறிஸ்தவப் பாரம்பரியம் நெடுங்காலமாகக் கருதி வந்திருக்கிறது. ஆனால் இது, பிலாத்துவின் நீதிமன்றம் (பிரேத்தோரியம்) அந்தோனியாக் கோட்டைக்குள் அமைந்திருந்தால்தான், இயலக் கூடிய தாகும்.

மு, மூ

முகடு (PINNACLE)

புதிய எருசலேமில், சூரிய ஒளியில் பளிச்சிடும், கட்டடங்களின் ஒரு பகுதியைக் குறிப்பிடும் எபிரேயச் சொல் (எசா 54:12). புதிய ஏற்பாட்டில் இச்சொல் கோவிலின் ஒரு பகுதியைக் குறிக்கிறது (மத் 4:5; லூக் 4:9). புதிய மொழிபெயர்ப்பில் ''உயர்ந்த பகுதி'' என்றமைந்திருக்கிறது.

முகம் (FACE)

1. முகமும் இதயமும் : ''நீரில் ஒருவன் தன் முகத்தைக் காண்பான்; அது போல, தன் உள்ளத்தில் ஒருவன் தன்னைக் காண்பான்''(பழ 27:19). நீரின் கண்ணாடியானது மனித முகத்தோற்றத்தினுடைய முரண்பாட்டினைத் திறந்து காட்டுகிறது. நபருக்கு அது பார்க்க உதவுவதாகவும், அதே நேரத்தில் பார்க்கப்படுவதாகவும் உள்ளது. நேருக்கு நேர் நிகழும் மனிதச் சந்திப்புகள் இதயங்களில் உள் அங்கீகாரத்தை அடையாளப் படுத்தி, தூண்டியெழுப்புகின்றன.

முகமே இதயத்தின் கண்ணாடி. அங்கு ஒருவன் கவலை (எரே 30:6; எசா 13:8), தளர்ச்சி (தானி 1:10), வேதனை (நெகே 2:2) ஆகியவற்றை மட்டுமின்றி, ஓய்வு நாளில் ஒருவன் அடையும் (சீரா 13:26; சங் 104:15) மகிழ்ச்சியையும் கண்டடைகிறான் (பழ 15:13). மகள்களிடம் தந்தை வெளிப்படுத்த வேண்டிய கண்டிப்பை மட்டுமின்றி (சீரா 7:24), தற்பெருமையுடன் உறுதியாக உள்ள தந்தையினுடைய (எசே 2:4; தானி 8:23) இரக்கமற்ற கடினத்தன்மையினையும் அது வெளிப்படுத்துகிறது (உப 28:50). சுருக்கமாக, ''மனிதனின் உள்ளம் நன்மைக்கோ, தீமைக்கோ முகத் தோற்றத்தை மாற்றி விடுகிறது'' (சீரா 13:31). ஆனால், முகத்தின் கண்ணாடியானது தவறாக நடத்திச் செல்வதாகவும் இருக்கும். இறைவன் மட்டுமே இதயத்தை உற்று நோக்கி (1 சாமு 16:7; யாக் 2:9) அதற்கேற்ப மனிதச் செயல்களுக்குத் தீர்ப்பிடுகிறார் (சீரா 35:22; மத் 22:16).

2. அரசனுடைய முகம்: அரசனுக்கும் அவனுக்குக் கீழ் உள்ளவர்களுக்குமிடையேயுள்ள உறவுகள் முகத்தோற்ற மாற்றங்களில் தங்களை வெளிப்படுத்துகின்றன. அரசனுடைய முகத்தைக் காணுமாறு ஒருவன் கேட்கிறான் (2 சாமு 14:32). ஆனால் அவரது முன்னிலையில் அவன் ''தலைகுப்புற'' தரையில் தெண்டனிடுகிறான் (2 சாமு 1:2; 14:33). அரசனுடைய முகத்தைக் காணமுடிவதென்பது (எஸ்த 1:14) தெளிவானதொரு சலுகையாகும். மேலும், மிக ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகின்ற உதவியானது, அவரில் புன்னகை ஒளிவீசுவதைக் காண்பதாகும் (யோபு 29:24-25). ஏனெனில், ''அரசனின் முக மலர்ச்சி வாழ்வு அளிக்கும்'' (பழ 16:15).

3. இறைவனுடைய முகத்தை நாடுதல்: இறைவன் மனிதனாக இல்லாவிட்டாலும் (எண் 23:19), அவரது மகிமையைப் பற்றி எந்தப் படைப்புமே கருத்துக் கூற இயலாவிடினும் (எசா 40:18; 46:5), மனிதன் செய்வது போலவே அவரும் திட்டங்களையும் எண்ணங்களையும் கொண்டுள்ளார். மனிதனுடன் தொடர்புகொள்ள அவர் விரும்புகிறார். எனவே, அவரும் ஒரு முகத்தைக் கொண்டுள்ளார். தனது முறையில் தனது இரக்கத்தில் தனது திருமுகத்தைக் காட்டவும் (சங் 4:7; 80:4.8.20), தனது சினத்தில் அதனை மறைத்துக் கொள்ளவும் கூடியவராக அவர் உள்ளார் (எசா 54:8; சங் 30:8; 104:29).

இந்த இறை முகமானது இஸ்ராயேலின் நடுவில் உறைகின்றது. காண இயலாததாயினும், உயிருள்ள இறைவனுடைய அசாதாரண ஆற்றல் நிறைந்ததாக இஃது உள்ளது. இந்த இறைமுகத்தினுடைய தோற்றமே அவரது மக்களுடைய பலமாகும் (யாத் 33:14; 2 சாமு 17:11; உப 4:37; எசா 63:7). இதுவே இறைவனுடைய முகத்தைக் காண்பதற்கும் (சங் 42:3),

''இறைவனுடைய முகத்தை நாடுவதற்கும்'' (ஆமோ 5:4; சங் 27:8;105:4) உரிய வழி பாட்டு ஆவலுக்குப் பொருள் அளிக்கிறது. ஆனால், யாவேயின் முகமானது தூய, நீதியுள்ள இறைவனுடைய முகமாக இருப்பதன் காரணமாக, ''நேர்மையுள்ளவர்கள் மட்டுமே அவர் முகத்தைக் காண்பார்கள்'' (சங் 11:7).

4. நேருக்கு நேர்: மனிதனுடைய பாவத்தின் காரணமாக (எசா 6:5; சங் 51:11) இறைவனுடைய முகமானது மனிதனுக்குச் சாவுக்குரிய அச்சமூட்டுவதாக உள்ளது (நீதி 13:22; யாத் 33:20). ஆயினும், அதுவே மனிதனுடைய வாழ்வும் மீட்புமாகும் (சங் 51:13-14). விதிவிலக்காக, ''ஒருவன் தன் நண்பனோடு பேசுவது போல ஆண்டவர் மோசேயோடு நேரிலே உரையாடிக்கொண்டிருப்பார்'' (யாத் 33:11). ஆனால், இறைவனுடைய மகிமையைக் காண்பதற்கென மோசே கேட்கும் போது, இறைவனுடைய பின் புறத்தை மட்டுமே காண்கிறார் (33:18-23). ''ஒருவரைப் பின்தொடர்வதென்பது அவரைப் பின்னிருந்து பார்ப்பதாகும்.'' இறைவனுடைய முகத்தைக் காண்பதற்கெனப் பற்றியெரிந்த மோசே, இறைவனைக் காண்பது எவ்வாறு என்பதைப் புரிந்துகொண்டார்: ''அவர் செல்லுமிடமெல்லாம் அவரைப் பின்தொடர்வது- இவ்வாறாகவே, ஒருவன் இறைவனைக் காண்கிறான்'' (நீசா கிரகோரியார்).

5. கிறிஸ்துவினுடைய முகத்தின் மேல்: இறைவனே தனது திருமுகத்தை நம்மேல் ஒளி வீசச் செய்து, நமக்கு அருளுடையதாக இருக்கச் செய்தார்(எண் 6:24). இம்முகத்தின் மேல் இறைவனுடைய முகமானது ஒளி விசுகிறது (2 கொரி 4:6). உருமாற்ற மகிமை (மத் 17:2 இணை) இயேசுவில் இறைவனே ஒரு முகத்தை ஏற்கிறார் என்பதற்கு ஓர் அடையாளமாகும் (திருவெளி 1:16). மற்றும் அவரில் ''இதுவரை எவரும் கண்டிராத'' முகம் இப்போது அவரில் தோன்றுகிறது (யோவா 1:16). ''என்னைக் கண்டவன் தந்தையையே கண்டான்'' (14:19). அது துப்பப்பட்ட, கண்கள் கட்டப்பட்ட (மாற் 14:65), விகாரப்படுத்தப்பட்ட (எசா 52:14) ஒரு மனித முகம். ஆனால், அதுவே ''அவருடைய இறைத்தன்மையின் சாயலாகும்'' (எபி 1:3).

இம்முகத்தினுடைய மகிமையை ஒரு முறை கண்ட பின்னர், தன்னுள் தங்கியிருக்கும் தூய ஆவியின் மூலமாக கிறிஸ்தவன் தொடர்ந்து ஒளிர்விக்கப்பட்டவனாகவும், மாற்றப்பட்டவனாகவும் உள்ளான். ஆனால், இந்நிலையானது மோசேயின் முகத்திற்கு உண்மையாக இருந்த கடந்து செல்லும் வெளிப்பாட்டினால் மட்டுமின்றி (2 கொரி 3:7-8) வாழ்வு மற்றும் மீட்பினுடைய கதிரினால் அமைக்கப்பட்டுள்ளது. ''இப்பொழுது நாமனைவரும் மூடு திரையில்லா முகத்தினராய், ஆண்டவரின் மாட்சிமையைக் கண்ணாடி போல் காட்டுகிறோம். அதனால் மேன்மேலும் மாட்சிமை ஒளி பெற்று, அதன் சாயலாகவே உருமாற்றம் அடைகிறோம். இவையெல்லாம் ஆவியாகிய ஆண்டவரின் செயலே'' (2 கொரி 3:28). ''கிறிஸ்துவின் முகத்திலுள்ள இறைவனுடைய இந்த மகிமையினை'' நற்செய்தியினுடைய ஊழியமானது ''ஒவ்வொரு மனித உள்ளத்திலும்'' சுடரிடச் செய்கிறது (2 கொரி 4:2-6).

இவ்வாறாக, ஆண்டவருடைய மகிமையால் ஆவியில் உருமாற்றப்பட்ட கிறிஸ்தவர்கள், இதுவரை கண்ணாடியில் மட்டுமே அறிந்திருந்தவரை ஒரு நாள் நேருக்கு நேராகவே காண்பர்; தாங்கள் அறியப்பட்டவாறே, தாங்களும் அறிவர் (1 கொரி 13:12). மற்றும் தாங்கள் ''இறைவனைக் காண்போம்'' (மத் 5:8) என்ற உறுதிப்பாட்டைக் கொண்டுள்ளனர். இவ்வாறாக, இஸ்ராயேலை ஆலயத்திற்கு ஈர்த்த ஆசையானது நிறைவேற்றப்படும். ''கடவுளும் செம்மறியானவரும் வீற்றிருக்கும் அரியணை அங்கே இருக்கும். அவருடைய ஊழியர்கள் அவரைத் தொழுவார்கள்; அவரது முகத்தைக் காண்பார்கள்'' (திருவெளி 22:3-4).

முகம் பார்க்கும் கண்ணாடி (MIRROR)

பண்டைய முகம் பார்க்கும் கண்ணாடிகள் பளபளப்பாக்கப்பட்ட உலோகங்களிலிருந்தே செய்யப்பட்டன. யாத்திராகமத்தில் இதைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது (யாத் 38:8) ''சந்திப்புக் கூடார நுழைவாயிலில் பணியாற்றும் பெண்கள் கொண்டுவந்த வெண்கலக் கண்ணாடிகளைக்கொண்டு அவர் வெண்கல நீர்த் தொட்டியையும், அதன் வெண்கல ஆதாரத்தையும் செய்தார்.'' யோபு ஆகமத்தில் (37:18), ''வார்ப்படக் கண்ணாடியை ஒத்த திண்ணிய விசும்பு'' என்று கூறுகிறார் ஆசிரியர்.

உரோமையர்களின் காலம் வரை கண்ணாடிகள் பயன்படுத்தப்படவில்லை, கண்டுபிடிக்கப்படவுமில்லை. எனவே, முகக் கண்ணாடி என்ற பொருளைத் தருவதாகப் பயன்படுத்தப்படும் எபிரேய, கிரேக்கச் சொற்கள் புதைபொருள் ஆராய்ச்சியின் காலமயக்கமாக ஏற்பட்ட விளைவு என்று கருதப்படுகிறது.

பெண்களின் ஒப்பனைப் பொருள்களில் ஒன்றாக முகம்பார்க்கும் கண்ணாடியும் இருந்திருக்கலாம். ஆனால் அது பளிங்கினாலானதன்று. பளிங்கினால் செய்யப்பட்டவையாக இருந்தால் அவை முகக் கண்ணாடி அல்ல; மாறாக, பளிங்கு மணிகளாகவும், சிறிய அணிகலன்களாகவும் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

தொடக்க காலத்தில் முகக்கண்ணாடிகள் மிக உயர்ந்த மதிப்புக் கொண்டவையாகக் கருதப்பட்டன. அரசர்கள், இளவரசர்கள் ஆகியோர் தங்களுக்குள் கொடுத்துக் கொண்ட அன்பளிப்புப் பொருட்களில் இவை மிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. எகிப்திய மன்னன் நான்காம் அமெனோபிஸ் என்பவர், புர்ராபுரியாசுக்கு என்பவருக்கு முப்பது பளபளப்பாக்கப்பட்ட வெண்கலக் கண்ணாடிகளை அன்பளிப்பாக அளித்ததற்கான ஆதாரங்கள், அமர்னா ஏடுகளில் காணப்படுகின்றன. அந்த ஏட்டில் இத்திய அரசனால் அளிக்கப்பட்ட வெள்ளிக் கண்ணாடியைப் பற்றிய ஆதாரமும் உள்ளது.

கிரேக்க நாகரிகத்தின் ஆதிக்கம் அதிகமானதால், கண்ணாடிகளைப் பயன்படுத்தும் பழக்கம் அதிகமாகப் பரவியது. இதனால், அரச பெண்களும், உயர்ரக விபசாரப் பெண்களும் மட்டுமே பெருமையுடன் பயன்படுத்தி வந்த நிலைமை மாறியது.

பாலஸ்தீனத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் வெண்கலக் கண்ணாடிகளின் மாதிரிகள் கிடைத்துள்ளன. இவற்றுடன் பலவகையான ஒப்பனைப்பொருள்களும் கிடைத்துள்ளன. அவை வட்டவடிவினில், மரக்கட்டை அல்லது தந்தத்தாலான கைப்பிடியைக் கொண்டதாகவோ, இல்லாமலோ காணப்பட்டன. காசாவுக்கு அருகிலுள்ள தெல் ஏல்-அச்சூல் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கண்ணாடியின் கைப்பிடியில் தாமரை மலர் போன்ற வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. ஒருவேளை இஃது எகிப்திலிருந்து பதினெட்டாவது அரசமரபின் ஆட்சிக்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பாலஸ்தீனம் மற்றும் சீரியா பகுதிகளில் அதிகமான எண்ணிக்கையில் கண்ணாடிகள் கிடைத்துள்ளன. இவை, நாடுகடத்தலுக்குப் பிற்பட்ட காலம் தொடங்கி உரோமையரின் காலம்வரைக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. இவற்றின் கைப்பிடிகளில் புள்ளிகள், வட்ட வடிவ அமைப்பு, திருச்சுருள் வடிவம் போன்ற பல அழகு அமைப்புகள் செய்யப்பட்டிருந்தன. இவ்வமைப்பு மத்தியத்தரைக் கடல் பகுதியில் விளங்கிய கலையழகினைப் பிரதிபலித்தது. மேலும், இஃது எகிப்திய, மெசாபொத்தாமிய, ஆகிய, அனதோலிய பாரம்பரியப் பண்புகளின் கூட்டுக்கலவையாகவும் காட்சியளித்தது. இந்தக் கண்ணாடிகளில் பளபளப்பு செய்யப்படாத பக்கத்தில் எந்தவொரு அழகு அமைப்பும் செய்யப்படவில்லை. ஆனால், கெசேரில் கிடைத்த ஒரு

மாதிரிக் கண்ணாடியின் பின்பக்கமும் திராட்சை போன்ற அமைப்பு காணப் பட்டது.

முக்கவட்டியாழ் (TRIGON)

இந்த யாழைப் பற்றி தானியேல் ஆகமம் 3:5.7.10.15 கூறுகிறது. புதுமொழிபெயர்ப் பில் கின்னரம் என்று மொழிபெயர்க்கப் படுகிறது. இது தரங்கெட்ட பாடகர்களா லும், விலை மாந்தராலும் பயன்படுத்தப் பட்டது. பிளேட்டோ இந்த யாழ் வாசிப் பதைத் தடை செய்தார். இதன் வடிவம் ஒரு கப்பலையும், ஏணியையும் சேர்த்தது போல் இருக்கும். இத்தகைய கருவி ஊர் என்ற இடத்திலே கிடைக்கப் பெற்றது. இந்த இசைக்கருவி பாபிலோனிய இசைக் குழு கொண்டிருந்த ஒன்றாகும்; இஸ்ரா யேலரின் கருவி அன்று.

முக்காடு (VEIL)

பழைய ஏற்பாட்டில் பெண்கள் அணிந்த முக்காட்டில் எந்தவிதக் குறிப்பிடத் தகுந்த பொருளும் இல்லை. தால்மூது எந்தவிதக் குறிப்பும் தரவில்லை. பலசொற்கள் 'முக் காடு' என்று மொழிபெயர்க்கப்படுகின்றன.

அ) திருமணத்திற்கு முன் ரபேக்கா ஈசாக்கைக் கண்டவுடன் ஒட்டகத்தை விட் டிறங்கி, தன் முகத்தை முக்காடிட்டுக் கொண்டாள் (ஆதி 24:65). இங்கு இந்த முக்காடு ஒரு திருமண வயது வந்த பெண்ணின் அடையாளமாக இருக்கின்றது. திருமணச் சடங்கின்போது இது நீக்கப்பட் டது. யூதாவைத் தன்வசப்படுத்த இத்தகைய முக்காட்டைத்தான் தாமார் பயன்படுத்தி னாள் (ஆதி 38:14. 19). இது முகத்தை மூடும் பொருளாகும்.

ஆ) சல்லா முக்காடு: இஃது எருசலேம் நகரத்து மகளிராலும் (எசா 3:23), உன்னத சங்கீதத்தில் கன்னிப் பெண்களாலும் அணி யப்பட்டது (உ.ச. 5:7).

இ) முகத்திரை: அனேகமாக இஃது ஓர் அணிகலனாகப் பயன்படுத்தப்பட்டது (உ.ச. 4:1.3; 6;7; எசா 47:2).

ஈ) முக்காடு: மோசே ஆண்டவரோடு உரையாடிவிட்டுத் திரும்பிய பின், அவர் முகத்தில் வீசிய ஒளியைத் தடுக்க அவர் ஒரு முக்காடு அணிந்தார் (யாத் 34:33-34).

உ) தலையை மூடும் துண்டு (kerchief) ஒவ்வொருவர் தலைக்கும் ஏற்ப முக்காடு செய்யும் போலி இறைவாக்கினிகளுக்கு (sorceresses) ஐயோ, கேடு! என்கிறார் எசேக்கி யேல் (எசே 13:18).

முசுக்கட்டை மரம் (SYCAMINE, MULBERRY)

இச்சொல் 2 சாமு 5:23-24; 1 நாள் 14:14-15-இல் குறிக்கப்படுகிறது. 1 மக் 6:34-இல், கருமுசுக்கட்டை மரத்தின் இரத்தச் சிவப்புச் சாற்றை மக்கபேயர் களுக்கு எதிராக அந்தியோக்குவின் யானை களைத் தூண்டக் கொடுக்கப்பட்டது என்ற குறிப்பு உள்ளது.

இயேசு விசுவாசத்தைப் பற்றிப் பேசுகை யில் முசுக்கட்டையைக் குறிப்பிடுகின்றார்: ''கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந் தால் இம்முசுக்கட்டை மரத்தை நோக்கி 'நீர் வேரோடே பெயர்ந்து போய்க் கடலில் வேரூன்றி நில்' எனக் கூறினால் அஃது உங்களுக்குக் கீழ்ப்படியும்'' (லூக் 17:6). இப்பொருளில் கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டும் பயன்பட்டுள் ளது. எழுபது நூல் காட்டு அத்தி மரத்தைக் குறிக்க இக்கிரேக்கச் சொல்லை வழக்க மாகப் பயன்படுத்துகிறது. லூக் 19:4-இல் காட்டு அத்தி மரம் குறிக்கப்படலாம். லூக்கா, லூக் 17:6; 19:4 ஆகிய இடங்களில் வரும் மரங்களின் தன்மையைப் பற்றிக் கூறாததால், இவை இரண்டையும் வேறு படுத்த லூக்கா விரும்பவில்லை என்று எண்ணப்படுகிறது.

கருமுசுக்கட்டை மரம் பாலஸ்தீனத்தில் சாதாரணமாகக் காணப்பட்டது. அதன் சாறு மிகவும் மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்டது. பட்டுப்புழு வளர்ச்சிக்கு மிக முக்கியமான வெண்முசுக்கட்டை பாலஸ்தீனத்தில் நாடு கடத்தலுக்குப்பின் தான் அறிமுகம் செய்யப் பட்டது.

முடக்கு வாதம் (PARALYSIS)

இயேசுவாலும் (மத் 4:24; 9:2-7 இணை), தொடக்கத் திருச்சபைத் தலைவர்களாலும் (அ.ப. 8:7) குணப்படுத்தப்பட்ட நோய்களில் ஒன்று. ஆனால், இந்த நோய் விவரிக்கப்படவில்லை. ஒரு நிகழ்ச்சியில் ஒருவர் முடக்கு வாதத்தில் மட்டுமன்று, ''மிகுந்த வேதனையுடன் கிடந்தான்'' என்றும் விவரிக்கப்படுகிறார். ஒரு வேளை அவனது மூச்சு பாதிக்கப்பட்டிருக்கலாம் (மத் 8:6; காண்க.லூக் 7:2; யோவா 4:52). பேதுரு குணமாக்கிய முடக்கு வாதக்காரன் எட்டு ஆண்டுகள் படுக்கையாய்க் கிடந்தான் (அ.ப. 9:33).

முடமாக்குதல், உறுப்புகளைக் குறைத்தல் (MUTILATION)

விவிலியக் காலங்களில் உயிரின் புனிதத் தன்மை போற்றிப் பாதுகாக்கப்பட்டதால் மனிதன் அல்லது மிருகங்களின் உறுப்புகளை வெட்டி முடமாக்குவது இல்லாதிருந்தது. உடலில் குறையுள்ளவர்கள் யாரும் குருவாகி இறைவனுக்கு ஊழியம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இவர்களில் ''முடவன், குறைந்த அல்லது நீண்ட உறுப்பு உடையவன்'' ஆகியோர் உள்ளடங்குவர் (லேவி 21:18). இந்தத் தடை உடல் குறைவு இயற்கையாக ஏற்பட்டவர்களுக்கா, விபத்தினால் உண்டானவர்களுக்கா அல்லது தானே உடல் குறைவு செய்துகொண்டவர்களுக்கா என்பது புரியவில்லை. ''குறையுள்ளவற்றை ஆண்டவருக்குச் செலுத்தக் கூடாது'' (லேவி 22:22) என்று கூறுகின்றது. ஆனால், பாகாலின் தீர்க்கதரிசியின் ''வழக்கப்படி வாளினாலும், வேலினாலும் இரத்தம் கொட்டும் வரை, தங்களையே கீறிக் கிழித்துக் கொண்டார்கள்'' (1 அர 18:28) என்று பார்க்கின்றோம். எபிரேய இறைவாக்கினர்கள் தாமே உடலை முடமாக்குதலைக் கண்டனம் செய்தனர் (எரே 47:5; ஓசே 7:14). உடலை முடமாக்குகின்ற செயல் செக்கேம், சிலோவா, சமாரியா (எரே 41:5), மோவாபு (எரே 48:37) மக்களிடையே துக்கத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது.

எதிரிகளின் உடலை ஊனமாக்குதல் என்பது போரில் வழக்கமாக இருந்ததாக அதோனி பெசக்கு பற்றிய நிகழ்ச்சியுரையிலிருந்து தெரிய வருகின்றது (நீதி 1:6-7); பெலிஸ்தியர் சிம்சோன் கண்களைப் பிடுங்கினார்கள் (16:21); அம்மோனியர்கள் யாபேசு மனிதர்களின் கண்களைப் பிடுங்கி விடுவதாக மிரட்டினர்(1 சாமு 11:2); இசுபொசேத்தின் தலையை வெட்டியவர்களின் கை கால்கள் ஒருவேளை சாவுக்குப் பின், வெட்டப்பட்டன (2 சாமு 4:12); நெபுகத்னேசர் தனது ஊழியர்களைக் கண்டந்துண்டமாய் வெட்டி விடப் போவதாக மிரட்டினான் (தானி 2:5).

பவுல், இரு பகுதிகளில், விருத்தசேதனத்தை முடமாக்குதலாகக் கருதுவதாகத் தோன்றுகிறது. போலி விருத்தசேதனக்காரர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறார் (பிலி 3:3). கலாத்தியர் உள்ளங்களில் குழப்பம் உண்டாக்குகிறவர்கள் தங்களையே அண்ணகராக ஆக்கிக் கொள்ளட்டும் என்று கூறுகிறார் (கலா 5:12).

முடம், கால் ஊனம் (LAME, CRIPPLED)

இஃது ஒருவர் நடக்க முடியாமல் செய்யும் உடல் ஊனமாகும். இது பிறவி ஊனமாகவோ, பிற்பாடு வந்த ஊனமாகவோ இருக்கலாம். ஒரு குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் போது ஏற்படும் சத்துக் குறைவினால் இத்தகைய ஊனம் ஏற்படலாம்.

குருக்களைச் சந்திப்பின் கூடாரத்திலும், ஆலயத்திலும் பணிசெய்வதில் பங்கு பெறுவதற்குத் தகுதியற்றவர்களாக்கிய குறைகளில் முடமும் ஒன்றாகும் (லேவி 21:18). இத்தகைய தடைகள் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விலங்குகளுக்கும் பொருந்தும் (உப 15:21; மலா 1:8.4). பொதுவாக முடமானவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டனர். முடமானவர்கள் போர்ச் சேவையோ, மற்றச் செயல்களோ செய்ய முடியாது என்பதால் அவர்கள் இழிவாக நோக்கப்பட்டனர் (காண்க.

2 சாமு 5:6; சங் 35:15; எசா 33:23). இரண்டு கைகளோடு அல்லது இரண்டு கால்களோடு முடிவில்லா நெருப்பில் தள்ளப்படுவதை விட, கை ஊனனாய் அல்லது கால் முடவனாய் வாழ்வில் நுழைவது நலம் என்று இயேசு எச்சரிக்கிறார் (மத் 18:8 இணை). ஆயினும், முடம்தான் இசுபொசேத்துக்குத் தாவீதின் அவையில் பாதுகாப்புப் பெற்றுத் தந்தது (2 சாமு 4:4; 9). நீதிமான்கள் முடவர்களுக்கு உதவ வேண்டும் (யோபு 29:15; எசே 34:4).

இறைவாக்கு இறுதிக்கால இயல், இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்படுதலுக்கு முடவர்கள் குணமாகுதல் ஓர் அடையாளமாகும் என்கிறது (எசா 35:6; எசே 34:16). இறுதிக் காலத்தில் இறை மக்கள் ஒன்று சேர்க்கப் படுவதில் முடவர்களும் உள்ளடங்குவர் (எரே 31:8; மீக் 4:6-7; செப் 3:19; காண்க. லூக் 14:13.21). முடவர்கள் இயேசுவாலும் (மத் 15:30-31; 21:14), தொடக்ககாலத் திருச்சபைத் தலைவர்களாலும் (அ.ப. 3:1-8; 4:7-10; 8:7; 14:8-10) குணமாக்கப்படுதல், பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் நிறைவேறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்டது (காண்க. மத் 11:5 இணை). இயேசு பெத்சதாவில் முடவனைக் குணமாக்கியதை ஓய்வுநாள் அனுசரிப்பை மீறுவதாக யூதர்கள் குற்றம் சாட்டினர் (யோவா 5:3).

முடியாலான ஆடை (HAIRCLOTH)

ஒட்டக முடியாலான ஆடை அணிந்தவராய் விவரிக்கப்படுகிறார் திருமுழுக்கு யோவான் (மத் 3:14; மாற் 1:6). 2 அர 1:8-இல் எலியா மயிரடர்ந்த மனிதராக விவரிக்கப்படுகிறார்.

முடிவு, இறுதி (END)

இச்சொல் பொதுவாக, பல பொருட்களில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், சிறப்பாக நிகழ்கால முடிவைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத் 24:13-14; மாற் 13:7; 1 கொரி 15:24; 1 பேதுரு 4:7).

இச்சொல் நிறுத்திவைத்தலையும், நோக்கத்தையும் குறிக்க வல்லது. உரோ 16:21-22-இல் சாவில் முடியும் பாவ வாழ்வை, முடிவில்லா வாழ்வைப் பெற்றுத் தரும் பணியின் புனிதப்படுத்தப் பட்ட வாழ்வோடு பவுல் ஒப்பிட்டு வேறுபடுத்தும் போது, நோக்கம் அல்லது குறிக்கோள் உள்ளடங்கியுள்ளது. உரோ 10:4 இருபொருளையும் உள்ளடக்கியுள்ளது எனலாம். விசுவாசத்தின் வழியாக மனிதன் ஏற்புடையவனாவதற்குரிய கோரிக்கைகளையெல்லாம் கடைப்பிடித்து, கிறிஸ்து மோசே சட்டத்தை நிறைவேற்றுவதோடு, ஏற்புடைமைக்கு ஒரு சாதனம் என்ற அளவில் பழைய உடன்படிக்கையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறார்.

''இறுதிவரை'' என்ற சொல் கிறிஸ்துவுக்காகத் துன்பப்படுவதின் முடிவைக் குறிக்கலாம் (மத் 10:22; 24:13; காண்க.மாற் 13:13; திருவெளி 2:26). ''உலக முடிவு'' (மத் 24:3) இறையரசு தொடங்கி வைக்கப்படும் காலமாகும். ''தொடக்கமும் முடிவும் நானே'' என்ற சொற்றொடர் இறைவனுக்கும் கிறிஸ்துவுக்கும் சாற்றிக் கூறப்படுகிறது (திருவெளி 21:6; 22:13). இஃது இறைவனின் மேலாண்மை மிக்க, வரையில்லா மாட்சிமையின் மற்றொரு விளக்கமாகும்.

முட்செடியும் முட்புதரும், காஞ்சொறி (THORNS AND THISTLES, BTAMBLES, NETTLES)

இவ்வகையைச் சார்ந்த காட்டுச் செடிகளின் தண்டுகளிலும், இலைகளிலும் முட்கள் காணப்படுகின்றன. எபிரேய மொழியில் ஏறக்குறைய பதினேழு பெயர்கள், இச்செடிகளுக்கு வழங்கப்படுகின்றன. விவிலியத்தை ஆதாரமாகக் கொண்டு நாம் பார்க்கும் போது முட்களும் புதர்களும் பாவத்தண்டனையின் உருவகங்களாகப் பயன்படுத்தப்பட்டன (ஆதி 3:18; யோசு 23:13; யோபு 31:40; எசா 5:6; 32:13; 34:13; எசே 9:6; 10:8; மீக் 7:4). இவை, ஒன்றுக்கும் உதவாதவை என்றும் கருதப்படுகின்றன (2 சாமு 23:6; 2 அர 14:9; 2 நாள் 24:18; பழ 15:19; எசா 7:23-25; 55:13; எபி 6:8). இவை தீமையின் அடையாளமாகச் சித்தரிக்கப்படுகின்றன (மத் 7:16; காண்க. பழ 22:5; எரே 4:3; 12:13; எசே 2:6). இவை

துன்பத்தின் அடையாளமாகக் காணப்படு கின்றன (பழ 26:9; எசே 28:24; 2 கொரி 12:7). புதிய ஏற்பாட்டில் விதை விதைப்ப வன் உவமையில் முட்கள் உலகக் கவலை களையும், பண ஆசையையும் குறிக்கின்றன (மத் 13:7; மாற் 4:7. 18; லூக் 8:7.14).

இஸ்ராயேல் மக்கள் முட்களையும், முட் புதர்களையும், நெருப்பில் இட்டு எரிப்ப தற்கு மட்டுமே பயன்படுத்தினர். எனவே, முட்களைத் தீமைக்கும், அதை எரிக்கும் நெருப்பைத் தண்டனைத் தீர்ப்புக்கும் ஒப் புமைப்படுத்துவது மிகவும் எளிதானது (எசா 9:18; 10:17; 33:1; நாகூ 1:10). நல்ல பயிர்கள் வளரும் இடத்தில் முட்கள் தேவையற்றன, தீமையானவை என்ற கருத் தும் விவிலியத்தில் காணப்படுகிறது (பழ 24:31). முட்புதர் யோத்தாமின் உவமை யிலும் (நீதி 9:8-5), இயேசுவின் உவமை யிலும் (லூக் 6:44) வருகிறது.

முட்செடியில் காஞ்சொறி என்பது ஒன்றா கும். இது மயிரிழை போன்ற இலைகளை யுடையது. இது நச்சுத் தன்மையுடைய நீரைச் சுரக்கக் கூடியது. இச்செடியைத் தொட்டால், கடுப்பு உண்டுபண்ணும். பாழ் வெளியில் வளர்வது, அதை அடையாள மாக உணர்த்தும் (எசா 34:13; ஓசே 9:6; செப் 2:9).

முட்டை (EGG)

கி.மு ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் பாலஸ்தீன மக்கள் முட்டையை உணவாக உண்ண ஆரம்பித்தார்கள். குருவி, புறா போன்ற சிறிய பறவைகளின் முட்டை கள் உணவுக்காகச் சேகரிக்கப்பட்டன (உப 22:6; எசா 10:14). லூக் 11:12-இல் வீட்டில் வளர்க்கும் பறவைகளின் முட்டையைப் பற்றியே கூறப்பட்டிருக்கிறது. எசா 59:5-இல் தீயவர்களின் திட்டங்களுக்கு நச்சுப் பாம்பின் முட்டைகள் உருவகப் படுத்திப் பேசப்படுகின்றன. தீக்கோழி தன் முட்டைகளைத் தரைமேலேயே இட்டு வைத்து, மண்ணிலேயே அவை வெப்ப முறும்படி செய்து விடுகிறது என்று யோபு ஆகமம் கூறுகிறது (யோபு 39:14). யோபு 6:6-இல் 'முட்டையின் வெண்கரு' என்று கூறப்பட்டிருப்பது ஒரு சிறிய பறவையின் முட்டையைக் குறிக்கலாம்.

பிற்காலத்தில் தகனப் பலியைக் குறிப்ப தற்குப் பாஸ்கா விழாவின் போது மற்றப் பொருட்களுடன் ஒரு வறுத்த முட்டையை யும் மேசையில் யூதர்கள் வைத்திருப்பார் கள். மிஸ்னாவின் படி, அக்காலத்தில் முட்டையை அவித்தும், பொறித்தும், எண் ணெயோடு சேர்த்துப் பொறித்தும், மீனோடு சேர்த்தும் உண்டனர்.

முணுமுணுத்தல் (MURMUR)

திருப்தியற்ற நிலையையோ, கோபத் தையோ, முறையீட்டையோ மெல்லிய குரலில் வெளிப்படுத்துவது (மத் 20:11; 1 கொரி 10:10).

யாத்திரை நிகழ்ச்சிகளில் இச்செயல் அடிக்கடி குறிக்கப்படுகிறது (யாத் 15:22-25; 16:1-36; 17:1-7; எண் 11:1-34; 20:1-13; 21:4-9).

முணுமுணுத்தல் பற்றிய மற்றக் குறிப்பு கள்: எண் 16-17; உப 9:6-29; யோசு 9:18; நெகே 9:16-31; சங் 78;106; எசே 20; 1 கொரி 10:9-10).

முதலில் பழுத்த (FIRST-RIPE)

(எண் 13:20; 18:13; எசா 28:4; எரே 24:2; மீக் 7:1; நாகூ 3:12). முதலில் முற்றிய அல்லது பழுத்த தானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவைகளைச் சித்திரிக்கும் ஓர் உரிச்சொல். அறுவடைக்காலம் நெருங்கி விட்டது என்பதை இவை முன்னறிவிக்கின் றன. முதற்கனிகளும் எல்லா உயிர்களிலும் தலைப்பேறும் எல்லா உயிரையும் படைத்தவ ரான கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். முதற்கனிகளைக் காணிக்கை யாக்குவது இஸ்ராயேலருடைய குழு வழி பாட்டிலும் (லேவி 23:9-21), தனி வழிபாட் டிலும் (யாத் 23:19; உப 26:1-11) சிறப்பிடம் பெறுகிறது. ''முதலில் பழுத்த'' அல்லது ''முதற் பலன்கள்'' என்ற சொற்றொடர்கள் பல புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் உருவகமாகக் கையாளப்படுகிறது; • பிரபல

மாகிவிட்ட இறையியல் பொருளிலும் பயன்பட்டுள்ளது (உரோ 8:23; 11:16; 16:15; 1கொரி 5:20. 23; 16:15; யாக் 1:18; திருவெளி 14:4).

முதலும் இறுதியும் (FIRST AND LAST)

இது யாவேயின் முடிவில்லாத புகழை யும் ஆற்றலையும் குறிப்பதற்காக இரண்டா வது எசாயா (எசா 41:4; 44:6; 48:12; காண். 40:28; 43:10-11) பயன்படுத்துகிற சிறப்புப் பெயர் அல்லது பட்டம் ஆகும். அடிமைத் தனக் காலத்து இறைவாக்கினர் ''முடி வில்லா'' என்பதைப் புரியாத, வரலாற் றுக்குப் புறம்பான, கருத்தியலான சொற் களில் நினைத்துப் பார்க்க முடியாது. மாறாக, உலக மொழியை அதனுடைய குறைகளோடு பயன்படுத்துகிறார்.

> ''நமக்கு முன் தெய்வம் ஏதும் உண்டான தில்லை; நமக்குப்பின் ஏற்படப்போவது மில்லை'' (எசா 43:10).

திருவெளிப்பாட்டு நூலில் 1:17; 2:8; 22:13-இல் இந்தச் சிறப்புப்பெயர் காணப் படுகிறது.

முதலை (CROCODILE)

யோபு 40:25-41:26-இல் வரும் லேவியாத் தானின் விவரிப்பு, முதலையைப் பற்றிய தாக இருக்குமென பொதுவாக எண்ணப் படுகிறது. 40:25-41:3 வரையுள்ள விவரிப்பு பெரிய நீர்வாழ் விலங்கைக் குறிக்கிறது. 41:4 முதல் உள்ள விவரிப்பு முதலையைச் சிறப்பாக விளக்குகிறது. இந்த முதலையை உலகத்திலேயே பெரிய விலங்காக எபிரே யர் கருதினர். யோபு ஆகம ஆசிரியர் எகிப்திய முதலையைப் பற்றிக் கேட்டு அறிந்திருந்தாலும், அவரது முதலையைப் பற்றிய அறிவு பாலஸ்தீன நாட்டிலிருந்தே கிடைத்திருக்க வேண்டும். ஏனெனில், இங்கே முதலைகள் அதிகமாக இருந்த ஓர் ஊர் அம்முதலையின் பெயரைக் கொண்டே அழைக்கப்பட்டது.

முதற்பலன்கள் (FIRST FRUITS)

I முதற்கனிகள்

1. சட்டம்: விளைச்சலில் சிறந்தவை என்று நாம் கருதுகின்ற, மண்ணின் முதல் படைப்புகளின் மீது விதிக்கப்படுகின்ற வரிகளினின்று, முதற்பலன்கள் என்னும் சொல்லை நாம் பெறுகிறோம். மற்ற மக்களைப் போலவே (எகிப்தியர், பாபி லோனியர், கிரேக்கர், மற்றும் உரோமை யர்) இஸ்ராயேலிலும் மக்கள் இந்த முதற் கனிகளை இறைவனுக்கு அளித்தனர். எபி ரேயச் சட்டமானது மெதுவாக இந்தச் சட்டத்தினையும், முதலில் எவ்விதத் துல்லி யமான சடங்குமின்றி நிறைவேற்றப்பட்ட இந்தக் காணிக்கையினுடைய பண்புகளை யும் தீர்மானித்தது (ஆதி 4:3-4). பல்வேறு காலங்களைப் பற்றிய நூற்பகுதிகளில், இந்த வளர்ச்சியின் படிகளை நாம் காண லாம்: யாத் 22:29; ''உன் பெருகிய விளைச்சலும் வழிந்தோடும் இரசமும்'' மற்றும் ''உன் நிலத்தின் முதற்கனிகளில் முதன்மையானவை'' (யாத் 23:19; காண்க. 34:26) ஆகிய காணிக்கைகள்; உப 26-இல் சடங்கினுடைய விரிவான விவரிப்புகள்; முதற்கனிகளிலிருந்து செய்யப்பட்ட அல் லது எடுக்கப்பட்டதற்குரிய சட்டத்தி னுடைய நீட்டிப்பு (எண் 15:20; எசே 44:30; லேவி 23:17.20; 2 அர 4:42; உப 18:4; காண்க. தோபி 1:6). குருத்துவச் சட்ட நெறியானது, பாஸ்கா வார காலத்திய பார்லியின் முதற் கட்டு (லேவி 23:10-11), மற்றும் ஐம்பதாம் நாள் விழாக் காலத்துக் கோதுமை அறு வடையின் முதற்பலன்கள் (யாத் 34:22; லேவி 23:17) என்னும் உயரிய உன்னத வகையான இரு காணிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடு கிறது. இதன் காரணமாகவே அந்நாள் ''முதற்பலன்களின் நாள்'' என்று அழைக் கப்படுகிறது (எண் 28:26).

2. சடங்கின் பண்புக் கூறுகள்: லேவி 2:12-இல் உள்ள ஒரு பலியுடன் இணைந்த வழிபாட்டுச் சடங்கானது ஒரு பல்கூட்டான பொருளைக் கொண்டுள்ளது. இந்தக் காணிக்கையானது, இயற்கையின் தலை வராகவும் அனைத்துப் பலன்களின் ஊற் றாகவும் உள்ள இறைவனுக்கு நன்றி செலுத்தும் செயலுக்குச் சமமாக உள்ளது. உப 26:3-இன்படி சடங்கு முறையின் பொருளை வெளிப்படுத்துகின்ற விசுவாச

அறிக்கையானது முக்கியமானதொரு நுட்பத்தினைச் சேர்க்கிறது. இஃது எகிப்திலிருந்தான பயணத்தையும், உரிமைப்படுத்திய கானான் நாட்டில் நுழைவதையும் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது: ''ஆண்டவரே, இதோ நீர் எனக்குக் கொடுத்த நிலத்தின் முதற்பலன்களைக் கொண்டு வந்துள்ளேன்'' (உப 26:10). எபிரேயரின் காணிக்கையானது வரலாறு முழுதும் இறையின் தயாள குணத்திற்கான பதிலாகும். இறைவனுடைய கொடையானது மனிதனுடைய கொடையைக் கோருகிறது. உலக முக்கியத்துவமிக்க கோட்பாடு ஒன்று இங்கு உள்ளது.

இச்சடங்கானது மற்றொரு பண்பையும் கொண்டுள்ளது. இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும் முதற்பலன், இப்பகுதி முழுமையினையும் குறித்து நிற்பதால், முழு விளைச்சலையும் புனிதப்படுத்துகிறது (உரோ 11:16). எனவே, இந்த அடையாளச் சைகையின் மூலமாக, பூமியின் பொருட்கள் தங்களுடைய முழுமையில் திருநிலைக்குப் புறம்பான அமைப்பினின்று, புனிதத்தின் ஆளுகைக்குக் கடந்து செல்கின்றன; புனித மக்களுக்கெனப் புனிதப்படுத்தப்பட்ட பலன் ஆகின்றன! ஒருமுறை புனிதப்படுத்தப்பட்ட ஒரு பகுதியானது மொத்தத்தின் மீதும் புனிதப்படுத்தும் ஆதிக்கத்தைச் செயல்படுத்துகிறது என்ற எண்ணமானது விவிலியத்தில் மற்ற இடத்தில் காணப்படுகிறது. மேலும், அஃது உயர் மட்டத்தில் எடுத்துக் கூறப்படுகிறது. இவ்வாறு, இஸ்ராயேல் (எரே 2:3), கிறிஸ்தவர்கள் (யாக் 1:18) மற்றும் சிறப்பாக முதலில் மனம் மாறியவர்கள் (உரோ 16:5; 1 கொரி 16:15) அல்லது கன்னியர் (திருவெளி 14:4) முதலியோர், மொத்தப் பொருட்களின் மீது வரியாக விதிக்கப்பட்டு, இறைவனுக்கு அல்லது கிறிஸ்துவிற்கு அர்ப்பணிக்கப்படுகின்ற முதற்கனிகளுடன் ஒப்பிடப்படுகின்றனர். மீட்பின் திட்டத்தில், ஓர் அர்ப்பணிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் உலகைப் புனிதப்படுத்துதலில் ஆற்றல் மிக்க பங்கு வகிக்கிறார். 1 கொரி 15:20.23-இன்படி, இப்போது உறங்குவோர் அனைவரும் மகிமையில் அவரைப் பின்தொடரும்படி முதற்கனியாக கிறிஸ்து எழுகிறார். பவுல் கொலோ 1:15-17-இல், இறை ஞானமானது இறைசெயல் அல்லது ஆற்றல் என்று அழைக்கப்படுகின்ற பழ 8:22-ஆல் தூண்டப்பட்டிருக்கலாம். மீட்பின் அமைப்பில் உள்ளது போலவே படைப்பின் அமைப்பிலும், முதற்கனிகளின் கருத்தில் அடங்கியுள்ள முன்னுரிமை மற்றும் செல்வாக்கு என்னும் இரு பண்புகளையும் கிறிஸ்து நிறைவேற்றுகிறார். ஆவியின் முதற்பலன்கள் கிறிஸ்தவரின் முடிவான மீட்பினுடைய முன்குறித்தல் மற்றும் உத்தரவாதம் ஆகியவற்றை விளக்குகின்ற உரோ 8:23-இல் இச்சாயல் வெளிப்படுகின்றது.

3. தசமபாகம் அல்லது பத்திலொரு பங்கு: பழைய ஏற்பாடு அடிக்கடி பத்திலொரு பங்கினை முதற்பலன்களுடன் தொடர்புபடுத்துகிறது. ஆனால், நீண்ட நெடுங்காலமாகவே வழக்கில் இருந்தாலும் (ஆமோ 4:4; ஆதி 28:22), மிகப்பழைய சட்டம் இதனைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை (யாத் 20-23). பத்திலொரு பங்கானது முதலில் முதற்பலன்களுடன் குழப்பப்பட்டதாகத் தெரிகிறது (உப 12:6.11.17; 14:22). ஆனால் மற்றொரு புறம், சில குறிப்பிட்ட பிற்கால வாசகங்களில் (எசே 44:30; எண் 18:12;...) முதற்பலன்கள் காணிக்கையின் பலிப்பண்பு குறைந்து முதற்பலன்கள் குருக்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட வரி எனத் தாழ்த்தப்பட்டது (மலா 3:10; சீரா 45:20; நெகே 10:36...). இறுதியாக, பத்திலொரு பங்கானது முதற் பலன்களிலிருந்து தெளிவாக வேறுபடுத்தப்பட்டு, பூமியின் பலன்களில் பத்திலொரு பங்கையும், மந்தையில் பத்திலொரு பங்கையும் கொண்டிருந்தது.

II *தலைப்பேறு, தலைமகன்:* அதாவது கருப்பையைத் திறக்க விலங்குகளுடைய மற்றும் மனிதருடைய, தலைப்பேற்றைக் காணிக்கையாக அளித்தல், முதற்பலன்கள் பற்றிய சட்டத்தினைச் சிறப்பான முறையில் செயற்படுத்தலாகும். உடன்படிக்கைச் சட்

டம் மனிதன், விலங்கு மற்றும் ஆட்டு மந்தையினுடைய முதற்பிறப்பினைக் கொடையாக யாவேக்கு வகுத்துத் தருகிறது (யாத் 22:28-29). வழிபாட்டுச் சட்டம் பின்வரும் காரணத்தை அதற்குக் குறிப்பிடு கிறது: ''கருப்பையைத் திறக்கும் தலைப் பேறு அனைத்தும் என்னுடையன. ஆடு, மாடு, கால்நடைகளின் ஆண் தலையீற்று அனைத்தும் எனக்குரியனவே'' (யாத் 34:19). ஆனால், முதற்பலன்களைப் போலவே, இறைவனுடைய முழுமையான மேலாண்மையின் அடிப்படைக் கோட்பாட் டின் மீது ஒரு வரலாற்று நோக்கம் சுமத்தப்படுகிறது. தனது மக்களை விடுவித் தவராகிய ஆண்டவருக்கு இக்கொடை அளிக்கப்படுகிறது. மேலும், ''எகிப்து நாட் டிலுள்ள மனிதருள் தலைப்பேறு தொடங்கி, கால்நடைகள் தலையீற்று ஈறாக ஆண் தலைப்பிறப்பு அனைத்தையும் சாகடித்த'' இரவின் நினைவையும் இது நிலைக்கச் செய்கிறது (யாத் 13:15).

சட்டமானது ஒரே சமயத்தில் விலங்குகள் மற்றும் மனிதருடைய தலைப்பிறப்பிற்குச் செயற்படுத்தினாலும் அதன் நோக்கம் இரண்டில் ஒவ்வொன்றுக்கும் வேறுபட்ட தாகும். விலங்குகளின் ஒவ்வொரு தலைப் பிறப்பும் பலியிடப்படுகிறது (யாத் 13:15; உப 15:20; எண் 18:17), அல்லது மீட்கப்படு கிறது (யாத் 13:13; 34:20; லேவி 27:27). முதல் குழந்தையைப் பொருத்தமட்டில் மனிதன் அதனை அளிக்கிறான்; அதாவது, யாத் 13:2-இன் விளக்கப்படி, ஆண்ட வருக்கு அர்ப்பணிக்கிறான். எவ்வாறு? அவர்கள் விருத்தசேதனத்தைப்பற்றி எண் ணினார். கெசேர் மற்றும் தானாக்கு ஆகிய இடங்களில் செய்யப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிகளினால் சான்று பகரப்பட்ட குழந்தைகளைப் பலியிடும் கொடுமையான பழக்கமானது, இஸ்ராயேலிலும் இருந்ததை ஆய்வாளர்கள் சிலர் ஏற்றுக்கொள்கின்றனர். பண்டைக்காலங்களில் அவர்கள் அவற்றைச் சட்டமுறைப்படியானவை என்று கருதி யிருக்கலாம். பெனிசியரின் செல்வாக்கின் கீழ் கலப்புச் சமய காலத்தில் இத்தகைய செயல்முறைகள் இஸ்ராயேல் மக் களிடையே அறிமுகப்படுத்தப்பட்டன (1 அர 16:34) என்பது உறுதி. ஆகாசு ''தனது மகனை நெருப்பைக் கடக்கச் செய்கிறார்'' (2 அர 16:3); மனாசே அவரைப் பின்பற்று கிறார் (2 அர 21:6). மீக் 6:7 இப்பழக்கத் தினை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. ஆனால், இஸ்ராயேல் சடங்கானது இந்தத் தீங்கினை வெளிப்படையாகவே கண்டிக் கிறது (உப 12:31; 18:10-12; எரே 7:31; 19:5; 32:35; லேவி 18:21; 20:2-4). வாழ்வின் முதற் பலன்களுக்கு ஆண்டவர் உறுதியாக உரிமையுள்ளவர் (ஆதி 22:2). ஆனால், மனிதனுடைய பிள்ளைகளைப் பலியிடு வதை அவர் மறுக்கிறார். எனவே, தலை மகன் பலியிடப்படுவதற்குப் பதிலாக, மீட்கப்படுகிறான். ஈசாக்கினுடைய பலி யின் நிகழ்ச்சி, யாத் 13:13; 34-20-ஆல் குறிக்கப்பட்ட மீட்பு மாற்றினுடைய சட்டத் தினை எடுத்துக்காட்டுகிறது. பிற்காலத்தில் முதற்பிறப்பினுடைய இடத்தினை ஏற்ற லேவியரால் இந்த மீட்பு உறுதிப்படுத்தப் படுகிறது (எண் 3:11-13; 8:16). மனித இனத்தின் முதற்கனியாகிய இயேசு, மரியா ளுடைய கரங்களின் மூலமாக தன்னையே தந்தைக்கு அளித்தபோது, அந்த நாளும் வந்தது (லூக் 2:22-24). அப்போது அவர் பழைய சட்டத்தின் கட்டளைகளுக்கு முழு மதிப்பையும் அளித்தார்.

முதுமை (OLD AGE)

1. நீண்ட காலம் வாழவேண்டும் என் பதே தனது உறவினருடன் மகிழ்ச்சியுடன் வாழும் ஒவ்வொருவருடைய விருப்பமு மாகும். ஆனால், முதுமை அனுபவத்திலும் ஞானத்திலும் மிகுந்த வளப்பம் உடைய தாக இருக்கக்கூடுமானாலும், தளர்ந்து போனவர்களும், பொறுமை இழந்தோர் களுமான துரதிர்ஷ்டசாலிகள் மீது அது கனமான சுமையாக அடையும் (சீரா 41:1-2). இவ்வாறாக, முதிர்ந்த வயதானது மரணத்தை நோக்கிய வீழ்ச்சிப் பாதை அல்லது முடிவில்லா இன்பத்தை நோக்கிய வளர்ச்சிப்பாதை என்ற நோக்கிற்கு ஏற்ப, வேறுபட்ட பொருளைக் கொண்டுள்ளது.

2. நீண்ட வாழ்வும் மரணம் அணுகுதலும்: மரணத்தினால் அச்சுறுத்தப்பட்டாலும், வாழ்வானது இறைவனின் கொடையாகும். இவ்வாறாக, நீண்ட வாழ்வானது ஆசிக்கப் பட வேண்டும். தங்களுடைய பெற்றோரை மதிப்பவருக்கு இது வாக்களிக்கப்படுகிறது *(யாத் 20:16)*. இதன் வழியாக, தன்னுடைய பிள்ளைகளின் பிள்ளைகளைக் காணுகின்ற மகிழ்ச்சியடையும் நீதிமானுக்கு *(பழ 17:6)* இது மணிமுடியாக உள்ளது *(10:27; 16:31)*. நிறைந்த வாழ்நாள்களை உடையவரான ஆபிரகாமைப் போன்று *(ஆதி 25:9)*, தனது வாழ்வு முழுமையானது என்பதை உணர்ந்த வனாய் *(ஆதி 15:15; தோபி 14:1; சீரா 44:14)*, நீதிமான் மகிழ்ச்சியும் வளமுமான முடிவில்லா வாழ்விற்குப் பின்னர் அமைதி யாக இறக்கலாம் *(சங் 92:15)*. ஆனால், முதியவர் தனது வலிமை தளர்வதை உணரும்போதும் *(சங் 70:9; திருவுரை 12:5)*, எதுவுமே அவருக்கு ஆர்வமுடையதாக இல்லாதபோதும் *(2 சாமு 19:36)*, மரணம் ஒரு விடுதலையாகப் பார்க்கப்படுவதும் நிகழலாம் *(சீரா 41:2)*.

3. ஆண்டுகளின் அனுபவமும் ஞானத்தில் முன்னேற்றமும்: அனைத்து மக்களும் அதி காரத்தினை வயதுடனும் அது கொணர் கின்ற அனுபவத்துடனும் தொடர்புபடுத்தி யுள்ளனர். விவிலியத்திலும், முதிர்ந்தோர் சமுதாயங்களின் தலைவர்களாக உள்ளனர் *(யாத் 3:16; 18:12; 2 சாமு 5:3; எஸ்த 6:7; அ.ப. 11:30; 15:4)*. முதியோர் சிலர் அவதூறான, அநீதியான வாழ்வு வாழ்ந்தா லும் *(சீரா 25:2; தானி 13:5)*, நரை திரண்டவர் மரியாதைக்கு உரியோராவர் *(லேவி 19:32; 1 திமொ 5:1-2)*. தங்களுடைய பெற்றோரின் வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளைகள் அவர்களுடைய உதவிக்கு வர வேண்டும் *(சீரா 3:12)*. தனது ஞானத்தின் காரணமாகவும் *(25:4-5)*, பாரம்பரியத்தின் சாட்சி என்ற நிலையிலும், முதியவர் அதிகாரத்துடன் பேசமுடியும். ஆயினும், அவர் இதனை விவேகத்துடன் செய்ய வேண்டும் *(32:3; 42:8)*. உண்மையில் முதியோரை அச்சுறுத்துகின்ற அபாயம் ஒன்றுண்டு. புதியவற்றிற்கு அவர்கள் தங்க ளுடைய மனங்களைத் திறவாமல் மூடிக் கொள்வர் என்பதே அந்த அபாயமாகும். மரபிற்கான இந்தப் போலியான பற்று றுதியே *(மத் 15:2-6)* கிறிஸ்துவினுடைய எதிரிகளோடு சேர்ந்துகொண்டு, அவர் சிலு வையில் தொங்கியபோது ஏளனம் புரியு மாறு மக்களில் முதியோரை இட்டுச் சென்றது *(27:1.41)*. ஆகவே, முதியவருக்கு அளிக்கப்படுகின்ற மரியாதைக்கு அவரை உரியவராக்குவதற்கு நீண்ட வயது மட்டும் போதுமானதாயில்லை. உண்மையில் ஞான மானது இளையோருக்கு உரிமையானதா கும் *(சங் 119:10; ஞான 4:8-9. 16)*. மேலும், விண்ணக அரசில் நுழையும் தகுதியை அடைவதற்கு, ஒவ்வொருவரும் அதனை ஒரு சிறு குழந்தையைப்போல ஏற்றுக் கொள்ள வேண்டும் *(மாற் 10:15)*. எனவே, முதிய கிறிஸ்தவர்கள் முதிய பவுலின் அறிவுரையைப் பின்பற்றி *(பில 9)*, தங்க ளுடைய நற்குணங்களால் ஒளிவீசட்டும் *(தீத் 2:2-5)*.

இறுதியாக, முதிர்ந்த வயதானது முடி வில்லாமையின் அடையாளமாகும். முடி வில்லாதவர் ஒரு முதியவரின் வடிவத்தில் தானியேலுக்குத் தோன்றுகிறார் *(தானி 7:9)*. திருவெளிப்பாட்டில் இருபத்து நான்கு பெரியோர்களும், முடிவில்லாமல் இறைவ னுடைய மகிமையைப் பாடிக்கொண்டிருக் கின்ற இறைவனுடைய அவைக்காக நிற் கின்றனர் *(திருவெளி 4:4; 5:14;...)*.

முத்தம் (KISS)

ஒருவர் தனது உதடுகளால் மற்றொரு வரின் உதடுகளையோ, கன்னத்தையோ, கைகளையோ, காலையோ தொடுதலே முத்தம் ஆகும். இஃது அன்பின் அடையாள மாகவோ, மரியாதையின் அடையாள மாகவோ, வாழ்த்தி வரவேற்கவோ, வழிய னுப்பவோ, எந்தவித உடல் இன்ப நோக்கு மின்றிப் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இது திருமண உறவினால் அல்லது நெருங்கிய, தூர இரத்த உறவினர்களிடையே பரிமாறிக் கொள்ளப்பட்டது *(ஆதி 27:26-27: 29:11.13; 31:28; 32:1; 33:4; 45:15; 48:10; 50:1; யாத்*

4:27; 18:7; 2 சாமு 14:33; 1 அர 19:20; ரூத் 1:9.14); நண்பர்களிடையே பரிமாறிக் கொள்ளப்படலாம் *(1 சாமு 20:41; 2 சாமு 19:40; பழ 24:26)*. பகைவனின் முத்தம் வஞ்சகமானது *(பழ 27:6)*. யோவாபு, அமாசாவைக் கொல்வதற்கு முன் அத்தகைய வஞ்சக முத்தம் கொடுத்தே வரவேற்றான் *(2 சாமு 20:9)*. காதலர்களுக்கிடையேயும் முத்தம் பரிமாறிக்கொள்ளப்பட்டது *(உ.ச. 1:2; 8:1)*. அப்சலோம் நீதிகோரி அரசரிடம் வந்த அனைவரையும் கையை நீட்டிக் கட்டி அணைத்து முத்தமிட்டான். இவ்வாறு தம்மைவிடத் தாழ்ந்தவரை முத்தமிடுவது வழக்கத்திற்கு மாறானதாகும் *(2 சாமு 15:5)*. சவுலை அரசனாக எண்ணெய் ஊற்றி அபிடேகம் செய்யும்போது சாமுவேல் அவரை முத்தமிடுகிறார் *(1 சாமு 10:1)*. விலைமகளின் முத்தம் இதற்கு விதிவிலக்காகும் *(பழ 7:13)*.

வழிபாட்டில் தெய்வச்சிலைகளை முத்தமிட்டனர் *(1 அர 19:18; யோபு 31:27; ஓசே 13:2)*. வேசி தன்னோடு பாவம் செய்ய வருபவனை முத்தமிடுகிறாள் *(பழ 7:13)*. வழக்கமாக வாழ்த்துக் கூறி இடும் முத்தத்தையே யூதாச இயேசுவுக்குக் கொடுத்து, இரவில் அவரைக் காட்டிக்கொடுக்கிறான் *(மத் 26:48; மாற் 14:44; லூக் 22:47)*. விருந்தாளியை முத்தமிட்டு வரவேற்க வேண்டியது விருந்தளிப்பவர் காண்பிக்க வேண்டிய மரியாதையாகும் *(லூக் 7:45)*. ஆதிக்கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் சமாதானத்தின் முத்தம் கொடுத்தனர் *(உரோ 16:16; 1 கொரி 16:20; 2 கொரி 13:12; 1 தெச 5:26; 1 பேதுரு 5:14)*; உரோமைக் கிறிஸ்தவ வழிபாட்டு முறையிலான திருப்பலியில் இன்றும் சமாதானத்தின் முத்தம் அளிக்கும் பகுதி உண்டு.

முத்திரை (SEAL)

1. முத்திரையின் பொருளும் உபயோகமும்: முத்திரையானது திறமையாகச் செதுக்கப்பட்ட ஆபரணம் மட்டுமன்றி *(சீரா 32:5-6)*, ஓர் ஆள் *(ஆதி 38:18)* மற்றும் அவரது அதிகாரம் *(ஆதி 41:12; 1 மக் 6:15)* ஆகியவற்றின் அடையாளமாகவும் உள்ளது. முக்கிய காரணத்திற்காக அன்றி வேறுவிதத்தில் விலக்கப்படாத மோதிரத்தில் இது பெரும்பாலும் பதிக்கப்படுகிறது *(ஆகா 2:23; காண்க. எரே 22:24)*. ஒரு நபர் தனது முத்திரையைப் பதிக்கின்ற பொறிப்பானது, அப்பொருள் அவருக்குரியது *(உப 32:34)*, ஒரு செயல் அவரிடமிருந்து தோன்றுகிறது *(1அர 21:8)*, அவரது உடைமைகளுக்குள் நுழைவு பெறுதல் தடை செய்யப்பட்டுள்ளது என்பதற்குச் சான்று பகர்கிறது *(தானி 14:14)*. இந்தப் பொறிப்பானது ஓர் ஆணவத்தின் ஏற்புடைமையை உறுதிப்படுத்துவதாலும் *(எரே 32:10)*, அதனுடைய சேரிடத்தைச் சுட்டிக் காட்டுவதாலும் *(காண்க. உரோ 15:28)* அது கையெழுத்தாகவும் உள்ளது. முத்திரையை உடைக்கும் உரிமையை உடையவர் மட்டுமே படிக்கக்கூடிய முத்திரையிடப்பட்ட சுருளைப்போன்று, சில நேரங்களில் அஃது இரகசியப் பண்பை அதற்கு அளிக்கிறது *(எசா 29:11)*.

2. இறைவனுடைய முத்திரை:

அ) இறைவனுடைய முத்திரையானது தனது படைப்புகளின் மீதும் வரலாற்றின் மீதுமான அவரது தலைமையின் கவிதை வடிவ அடையாளமாகும். அவர் விண்மீன்களையும் முத்திரையிடலாம் *(யோபு 9:7)*. அஃது இருளார்ந்த இரவாகும். அவர் தனது திட்டங்களின் நூலுக்கும் முத்திரையிடுகிறார் *(திருவெளி 5:1-8:1)*. அவருடைய திட்டங்களைச் செயல்படுத்துகின்ற செம்மறியானவரைத் தவிர வேறெவரும் அதனுடைய இரகசியத்தைக் கண்டுபிடிக்க முடியாது. ஒரு கட்டுப்பாடு விதிக்கின்ற அளவில், தனிப்பட்ட பாவங்களையும் *(யோபு 14:17)* குழுப்பாவங்களையும் *(தானி 9:24)* இறைவன் முத்திரையிடுகிறார். இறுதி நிகழ்ச்சியில், இறைவன் அதே நேரத்தில் இறைவாக்கையும் முத்திரையிடுகிறார். அதாவது, அதனை நிறைவேற்றுதலின் மூலம் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

ஆ) தனது தந்தையாகிய இறைவனுடைய முத்திரையால் தான் குறிக்கப்பட்

டிருப்பதாக கிறிஸ்து கூறும்போது, அடையாளவியலானது புதிய மதிப்பீட்டை ஏற்கிறது (யோவா 6:27). மனுமகனின் மீதான தந்தையினுடைய இந்த முத்திரையானது, அவரது பணியை நிறைவேற்றுவதற்காக அவருக்கு அளிக்கப்படும் வல்லமை மட்டுமின்றி (காண்க. யோவா 5:32.36), அவரை இறைவனுடைய மகனாக்குகின்ற திருநிலைப்படுத்தலுமாகும் (10:36). ஆவிக்கான பற்றுறுதியைக் கோருகின்ற கொடையாகிய (எபே 4:30) ஆவியை அளிப்பதன் மூலம் இறைவன் கிறிஸ்தவனைத் தனது முத்திரையால் குறிக்கும்போது அவன் இந்தத் திருநிலைப்படுத்தலில் பங்கேற்கிறான் (2 கொரி 1:22; எபே 1:13 தொ). இந்த முத்திரையே இறைவனுடைய ஊழியர்களின் குறியாகும். முடிவான சோதனையின் போது இதுவே அவர்களுடைய பாதுகாப்பாக உள்ளது (திருவெளி 7:2-4; 9:4). இதன் மூலமாக, பவுலால் முத்திரை என்று அழைக்கப்படும் இறைவார்த்தைகளுக்கு விசுவாசமிக்கவர்களாக இருக்க அவர்களால் முடியும். உண்மையில் அவற்றின் மூலமாகவே மீட்பு அடையப்பெறுகின்ற நிலைகளை இறைவன் மாற்ற முடியாத அளவில் குறிப்பிடுகிறார் (2 திமொ 2:19).

முத்து (PEARL)

சிப்பிகளின் ஓடுகளுக்கு உட்புறம், அசாதாரண நிலையில் உருவாகும் ஒரு கெட்டியான பொருள்.

''ஞானத்தின் விலை முத்துக்களிலும் உயர்ந்தது'' (யோபு 28:18). அலக்சாந்தரின் வெற்றிக்கு முன்னர்க் கிரேக்க உலகம் முத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை. கிரேக்க மற்றும் உரோமை நாடுகளில் புகழ்பெற்று விளங்கிய முத்துக்கள் செங்கடல், பாரசீக வளைகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலிலிருந்து எடுக்கப்பட்டவை. புதிய ஏற்பாட்டில் முத்துக்கள் உருவகமாக உபயோகிக்கப்படுகின்றன. விண்ணரசைப் பற்றி மதிப்பீடு செய்ய முத்து உபயோகப்படுத்தப்படுகிறது (மத் 13:46). இறை உண்மைக்கு உருவகமாக முத்து கூறப்படுகிறது (மத் 7:6). அஃது, அடக்க ஒடுக்கமான பெண்டிர் அணியக் கூடாத அணிகலன் (1 திமொ 2:9); வேசியின் அணிகலன் (திரு 17:4) மற்றும் பாபிலோனின் அணிகலன் (18:16). அது பாபிலோனின் ஏற்றுமதிப்பொருள் (18:12). புதிய எருசலேமின் ஒவ்வொரு வாயிலும் ஒவ்வொரு முத்தாலானது (21:21).

முத்லபேன் (MUTH-LABBEN - மகனின் இறப்புப் பற்றி)

சங் 9-இன் மேற்குறிப்பாகும். இதன் பொருள் ''மகனுக்காக உயிரைக் கொடு'' என்பதாகும். இஃது இச்சங்கீதம் பாடப்பட வேண்டிய, எல்லாரும் அறிந்த, ஓர் இசை மெட்டின் பெயராக இருக்கலாம்.

முந்திரி விளைச்சல், திராட்சை விளைச்சல் (VINTAGE)

1. அரை நாடோடிகளாக இருந்த இஸ்ராயேலர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைந்தவுடன் ஓரிடத்தில் தங்கி கோதுமை, திராட்சை பயிரிடும் விவசாயிகளாக மாறினர். அறுவடையைப் போலவே திராட்சை அல்லது கொடி முந்திரி சேகரிப்பதும் ஒரு மகிழ்ச்சியான செயலாகும். அதே நேரத்தில் அது துரதிர்ஷ்டத்தின் அடையாளமாகவும் இருக்கிறது.

2. **இறைவனின் ஆசீர்வாதம்:** அறுவடையின் திருவிழா (யாத் 23:16; 34:22) கூடாரத் திருவிழாவாகிறது (உப 16:33). இதுதான் திருவிழாக்களில் மிகச் சிறந்ததும் திருவிழா எனச் சொல்லக் கூடிய அளவுக்குப் பெருமைக்குரியதுமாகும் (1 அர 8:2.65). ஒரு வேளை இது மக்கள் செல்வாக்குப் பெற்றது இதற்குக் காரணமாக இருக்கலாம். இது பாக்கசு வழிபாட்டுடன் எத்தொடர்பும் அற்றது. அதே நேரத்தில் கானானியர்களின் முந்திரி விளைச்சலின் திருவிழாவிலிருந்து வந்திருக்கலாம் (நீதி 9:27). முந்திரி அறுவடையில் கடவுளின் ஆசீர்வாதத்தை உணர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினர். தங்கள் மகிழ்வை நடனமாடுவதின் மூலமும் (நீதி 21:19), வேலையாட்கள் திராட்சைத் தோட்டத்திற்கு உள்ளும், புற

மும் குத்துவதன் மூலமும், திராட்சை பிழியப்படும் இடத்தில் கத்துவதாலும் (எசா 16:10; எரே 48:33), குடித்து மயக்க முறுவதிலும் (1 சாமு 1:14) வெளிப்படுத் தினர். இந்த மகிழ்ச்சிப் பெருக்கெல்லாம் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருப்பவர்களுக்குத்தான். ஆனால் உடன் படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இல்லாத வர்கட்கு இஃது ஒரு சாபக்கேடு. திராட்சைச் செடிகள் வீணாகும் (2 ஓசே 21:14; எசா 7:23); அறுவடை இருக்காது (உப 28:39); திராட்சைக் கொடி தவிக்கின்றது (எசா 24:7); நடனமும் குடியும் இருக்குமிடத்தில் அழு கையும், கண்ணீரும் இருக்கும் (எசா 32:10-13; யோவேல் 1:5); அகந்தைமிக்க மோவாபில் பெருமையோடு கூக்குரலிடு வது இல்லாமல் போகும் (எசா 16:9; எரே 48:32 தொ). ஆனால், மக்கள் தங்கள் பாவத்திற்குப் பரிகாரம் செய்த போது வெட்டுக்கிளிகள் திராட்சைக் கொடியைப் பலனற்றுப் போகும்படி செய்யாது (மலா 3:11); வளம்மிக்க திராட்சைத் தோட்டங்கள் (எரே 31:12; ஆகா 2:19) மீண்டும் தரமான இரசம் கொடுக்கும் (எசே 14:8). சுருங்கக் கூறவேண்டுமென்றால் மெசியாவின் காலத் தில் இருக்கும் மகிழ்ச்சியின் வெளிப் பாடாக திராட்சை அறுவடையின் மகிழ்ச்சி அமையும் (ஆமோ 9:13; எசே 28:26; யோவேல் 2:24; எசா 25:6).

3. இறைத் தண்டனையின் அடையாளம்: அறுவடையின் போது பதரெல்லாம் நீக்கப் படுவது கடினமனம் கொண்ட பாவி தண்டிக்கப்படுவதை முன்னுணர்த்துகிறது. எனவே, திராட்சை அறுவடை விசுவாசமற் றவர்களுக்குரியதாக உருவகப்படுத்தப்படு கிறது. முதலில் திராட்சைக் கொடியின் கிளையிலிருந்து பிரிக்கப்பட்டு பின் திராட்சை பிழியப்படுகிறது. இறைவனை மறுதலித்தவர்களைக் களைந்தெறிய வெளி நாட்டவரை இஸ்ராயேலில் புகுந்தழிக்க அழைக்கிறார் (எரே 6:9). கடவுளே இஸ்ரா யேல் எனும் கன்னிப்பெண்ணை இரசம் பிழிவது போலத் துன்புறுத்துகிறார் (புல 1:15). திராட்சைக் கொத்துக்களைச் சேகரித் தல், இனம் பிரித்தல், திராட்சை பிழியப் படுதல் போன்ற உருவகங்கள் எல்லாம் நாடுகளை, குறிப்பாக எருசலேம் பிடிபட்ட போது உதவிசெய்யாத ஏதோமை, இறை வன் தண்டிப்பதை உணர்த்துகின்றன. திராட்சைப் பழம் சேகரிப்பவர்கள் ஏதோ மில் எதையும் விட்டுவைக்க மாட்டார்கள் (எரே 49:9; ஒப 5 தொ). யாவே இறைவனே திராட்சையைப் பிழிவது போல ஏதோமை மிதிப்பார். அதிலிருந்து பீச்சியடிக்கும் இரத் தம் அவரது உடையை இரத்தச் சிவப்பாக் கும் (எசா 63:1-6). இவ்வாறு திராட்சை அறுவடை உருவகம் மிகப் பொருத்தமாக கடவுளின் இறுதித் தீர்ப்பை அடையாள முறையில் உணர்த்துகிறது. யாவே வெறி யூட்டும் பானத்தைப் புறவினத்தார் குடிக்கச் செய்வர்; இஃது அவர்களின் துரதிர்ஷ்ட மாக அமையும் (எரே 25:15-30). அல்லது திருவெளிப்பாட்டின் படி, இறைவனின் தூதர் அரிவாளால் திராட்சைக் குலை களைக் கொய்து கடவுளின் கோபமாகிய திராட்சை பிழியுமிடத்தில் போடுவார் (திரு வெளி 14:17தொ; 19:15) என்று கூறப்படு கிறது.

முப்பிம் (MUPPIM - பாம்பு)

இவர் பென்யமினின் புதல்வர்களில் ஒருவர் (ஆதி 46:21). இவர் எண் 26:39-இல் செபுபாம் என்றும், 1 நாள் 8:5-இல் செபுபான் என்றும் அழைக்கப்படுகிறார்.

முயல் (HARE)

இலை தின்னும் விலங்குகளில் ஒன்று. பழைய ஏற்பாட்டில லேவி 11:6; உப 14:7-இல் இது குறிப்பிடப்பட்டுள்ளது; சுத்தமில்லாத விலங்கு. இஃது அசை போட்டாலும் இதற்கு விரிகுளம்பு இல்லை. பாலஸ்தீனத்திலும், சிரியாவிலும் பலவகையான முயல்கள் இருக்கின்றன.

முரணுரை (PARADOX)

விவிலியத்தில் முரணுரை உண்மை நிகழ்ச்சிக்கு எதிர்மாறாகவும் பொருந்தாத தாகவும் உள்ள, ஆனால் ஓரளவு உண்மைக் கூறுகளைக் கொண்டிருக்கும் கருத்துகளை மிகைப்படுத்திக் கூறுவதாகும். எனவே,

முரணுரைகள் மிகைப்படுத்துதலோடு தொடர்பு படுத்தப்படுகின்றன. தனது பார்வையின் முக்கியத்துவத்தை உணர்த்தவே, இயேசு அடிக்கடி தனது போதனையில் முரணுரையைப் பயன்படுத்துகிறார். எதிராளிகளுடன் விவாதிக்கும்பொழுது, அல்லது பற்றற்றும் கொள்கையற்றும் வாழ்வோருடன் பேசும்பொழுது, கிறிஸ்து தனது எண்ணத்தைக் கூர்மைப்படுத்தித் தெளிவாக இதனைப் பயன்படுத்துகிறார்.

பரிசேயருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டும் பொழுது, இயேசு அவர்களைக் ''கொசுவை வடிகட்டி அகற்றி, ஒட்டகத்தை விழுங்குபவர்கள்'' (மத் 23:24) எனவும், ''தன் கண்ணில் உள்ள மரக்கட்டையைப் பாராது அடுத்தவர் கண்ணிலுள்ள துரும்பைக் கூர்ந்து கவனிப்பவர்கள்'' (மத் 7:3-5) எனவும் கண்டனம் செய்கிறார். கொடுப்பதும் எடுப்பதும் (மாற் 4:25) பற்றி பல்வேறு நற்செய்தியாளர்கள் பல்வேறு பின்னணியினைத் தருவதால், அவ்வுண்மை பரிசேயருக்கு எதிரான ஒன்று எனக் கூற இயலாத நிலையில் உள்ளது (மத் 13:12; 25:29; லூக் 8:18; 19:26).

விரைவில் வரவிருக்கும் இறைவனின் அரசைப் பற்றிய நற்செய்தியின் முக்கியத்துவத்தை மனிதனுக்கு உணர்த்த, இயேசுவும் தனது பேச்சில் முரணுரையைப் பெரிதும் கையாள்கின்றார். கடவுளது அரசின் வருகையானது மனிதனது கடமைகளையும், அழைப்புகளையும் மாற்ற வேண்டும். ''செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது'' (மாற் 19:25) என்று கூறுவதன் மூலம் செல்வர்களின் தன்னிறைவுணர்ச்சியைத் தாக்குகிறார். கடவுளின் அரசிற்காக தனது வாழ்வையே முற்றிலும் கையளிப்போருக்கு அளிக்கப்படும் நிபந்தனைகள்: ''இறந்தோர் தங்கள் இறந்தோரை அடக்கம் செய்வர்'' (மத் 8:22); ''தியாகப் பணிக்காக தன் வாழ்வை இழப்பவன் அதை மீண்டும் கண்டடைவான்'' (மத் 10:39); பிறரது தேவைகளில் உதவுவோர் தங்களது உயர்வைக் கண்டடைவர் (மாற் 10:43). பவுலின் சமய வாழ்விற்கு இந்த முரணுரைக்கருத்து அடிப்படையானதாகும். ஏனெனில், கிறிஸ்துவுக்கு அடிமையாயிருந்து, அவரது சகோதரருக்குச் சேவை செய்வதன் வழியாய் இதுவரை அடையாத விடுதலையை அவர் அடைந்தார்.

முராத்தோரியின் சிதைந்த ஏடு
(MURATORIAN FRAGMENTS)

இஃது இலத்தீன் மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் புதிய ஏற்பாட்டு நூல்களின் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய ஏற்பாட்டு நூல்களை எழுதியவர் பற்றியும், அவைகள் எவ்வாறு நமக்கு உண்மையுடன் வந்து சேர்ந்துள்ளன என்பதைப் பற்றியும் சிறிது விளக்கம் தருகிறது. இது கிரேக்க மொழியிலிருந்த வாசகத்தை, இலத்தீனில் மொழி பெயர்த்ததாகும். இந்த இலத்தீன் மொழிபெயர்ப்பு கொச்சையான மொழியிலேயே செய்யப்பட்டிருக்கிறது. இந்த இலத்தீன் மொழிபெயர்ப்பு கி.பி. எட்டாம் நூற்றாண்டில் போபியோ என்ற இடத்தில் செய்யப்பட்டது. ஆனால் மொழிபெயர்ப்பின் மூலமான கிரேக்க வாசகம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே உரோமையில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என அறிஞர்கள் கணிக்கின்றனர். இந்த இலத்தீன் சுவடி, சிதைவுகளுக்கு உள்ளாகி, மிலான் நகரிலுள்ள அம்புரோசியார் நூலகத்தில் காக்கப்பட்டு வந்தது. இதை லூதோவிகோ அந்தோனியோ முராத்தோரி என்பவர் 1740-இல் கண்டுபிடித்து வெளியிட்டார். அவர் பெயராலேயே இந்தச் சிதைந்த ஏடு பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

இதில், நற்செய்தி நூல்களைப் பற்றிக் கூறுவதுடன் வாசகம் ஆரம்பமாகிறது. ஆனால் முதல் வசனமே சிதைவுக்குள்ளாகியிருக்கிறது. லூக்கா, யோவான் ஆகியவர்களின் நற்செய்திகள் மூன்றாவது, நான்காவது நற்செய்திகள் என இரண்டாம் வசனம் கூறுகிறது. எனவே, முதல் வசனம் மத்தேயு, மாற்கு நற்செய்திகளைப் பற்றிதான் கூறியிருக்க வேண்டும் என்பது தெளிவு. நான்கு நற்செய்திகளின் ஒற்றுமையைப்

பற்றி கீழ்க்கண்ட முறையில் இவ்வேடு விளக்குகிறது. ''பல்வேறு அடிப்படைக் கருத்துக்களை, நற்செய்தி ஒவ்வொன்றும் தங்களுக்கு ஏற்ற முறையில், வற்புறுத்திக் கூறினாலும், விசுவாசிகளுக்கு இவை எவ் விதத்திலும் குழப்பத்தைத் தரமுடியாது. ஏனென்றால், எல்லா நற்செய்திகளிலும் இயேசுவின் பிறப்பு, அவரின் பாடுகள், உயிர்ப்பு இவைகளுடன் அவர் தன் சீடர் களுடன் செய்த உரையாடல், அவரது இரண்டாம் வருகை இவைகளைப் பற்றி தான் நாம் பார்க்கின்றோம். இவை அனைத் தும் ஒரே ஆவியின் வழித்துணையுடன் எழுதப்பட்டவை''. இவ்வாறு புதிய ஏற் பாட்டு நூல்கள் பரிசுத்த ஆவியின் ஏவுத லால் எழுதப்பட்டன என்பதற்கு விளக்கம் தருகிறது இவ்வேடு.

நற்செய்தி நூல்களையடுத்து அப்போஸ் தலர் பணி வைக்கப்படுகிறது. இதை யடுத்துப் புனித பவுல் எழுதிய 13 திருமுகங்கள் பட்டியல்படுத்தப்படு கின்றன.

இதையடுத்து, புனித பவுலின் பெயரைப் புனைபெயராக வைத்து எழுதப்பட்ட நூல் களின் பட்டியலும் தரப்படுகிறது. புனித பவுல் இலவோதிக்கேயர்களுக்கும் அலக் சாந்திரியர்களுக்கும் எழுதிய திருமுகங்கள் மார்சியனின் தோழர்களால் புனித பவுல் பெயரால் எழுதப்பட்டவை என்று விளக்கு கிறது இவ்வேடு. மற்றும் பல நூல்களை இவ்வேடு ஏற்றுக்கொள்ள முடியாதவை எனச் சுட்டிக்காட்டுகிறது. இவைகளை ஏன் கத்தோலிக்கத் திருச்சபையில் ஏற்றுக்கொள் ளக்கூடாது என்பதற்கான காரணத்தையும் ஓர் உதாரணத்தின் வழியாக விளக்குகிறது. நஞ்சை எப்படித் தேனுடன் கலக்க முடியும் என்று கேள்வி கேட்கிறது.

இதையடுத்து யூதா எழுதிய திருமுகம், யோவா எழுதிய இரண்டு திருமுகங்கள் (1, 2 யோவா). இவைகளும், சால மோனைச் சிறப்புச் செய்ய சாலமோன் நண்பர்களால் எழுதப்பட்ட ஞானாகமமும் கத்தோலிக்கத்தில் (திருச்சபையில்) ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்றும் இவ்வேடு தெரிவிக்கிறது.

இவைகளுடன் பேதுரு, யோவான் ஆகி யவர்கள் எழுதிய திருவெளிப்பாடு என்ற நூல்களும் திருச்சபையில் அங்கீகாரம் பெற்ற நூல்கள் என்று தெரிவிக்கிறது. இதில் எபிரேயருக்கு எழுதப்பட்ட திரு முகம், யாக்கோபு, பேதுரு ஆகியோர் எழுதிய திருமுகங்கள் குறிப்பிடப்பட வில்லை.

ஆயர் எர்மா என்பவர் எழுதியவை களைத் தனிப்பட்ட முறையில் படிக்கலாம். ஆனால், ஆலயங்களில் பொதுவாக வாசிக் கக்கூடாது என்ற ஒழுங்கினையும் இம் முராத்தோரியின் ஏடு தெரிவிக்கிறது. அதற் கான காரணங்களையும் இவ்வேடு விளக்கு கிறது. ''எர்மா அண்மையில்தான், உரோ மையில், அவரது சகோதரன் பத்திநாதர் ஆயராயிருக்கும்போது எழுதினார். எனவே இறைவாக்கினர், அப்போஸ்தலர்கள் இவர் கள் எழுதிய நூல்களோடு, இதைச் சமமாகக் கருதக்கூடாது'' என்று தெளிவுபடுத்துகிறது. இந்த முராத்தோரியின் அட்டவணை திருச் சபைக்கு எவ்வாறு குறிப்பிட்ட புத்தகங் களை அங்கீகரித்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள உதவுகிறது. ஞானவாத, மார்சி யோன் குழுவைச் சேர்ந்த மற்றும் மோன் தானிச நூல்களைப் பொதுவாக நிராகரிக் கிறது. இத்தகைய தப்பறையான நூல்கள் இருந்ததுதான் திருச்சபை புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலை வரையறை செய்யத் தூண்டியது என்று இத்துணுக்குகள் வலி யுறுத்துகின்றன.

முழங்கால் (KNEE)

1. முழங்காலிடுதல்: ஒருவர்முன் முழங் காலிடுதல் என்பது அவருடன் நிற்பதற்குச் சரிசமமற்ற தனது நிலையினை அடை யாளம் மூலமாக வெளிப்படுத்துதலாகும்; மேலும், ஒருவரது தாழ்நிலையை அறிவிப் பதும், பணிவைக் குறிப்பதுமாகும். இவ் வாறு, ஆமானைக் கடந்து செல்லும்போது அனைவரும் முழங்காலிட்டுத் தலைகுனிய

வேண்டும் (எஸ்த 3:2). இறைமனிதராகிய எலியாவிற்கு முன் நிகழ்ந்ததுபோல், இந்தச் சைகைக்குச் சமயப் பொருளையும் தரலாம் (2 அர 1:13). முழங்காலிட்ட (மாற் 1:40) அல்லது முகங்குப்புற விழுகின்ற (லூக் 5:12) தொழுநோயாளியின் மனநிலையில் போர்வீரருடைய கேலியான, அவதூறான அணிவகுப்பிலும் (மத் 27:29இணை) ஆராதனையின் உண்மையான சைகையை முதல் கிறித்தவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது (மத் 8:2). ''பாகாலுக்கு முன் முழங்காலிடாதவர்களுடைய'' பார்வைக்கும் (1 அர 19:18; உரோ 11:4), அல்லது அது தனக்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டுமென யாவே விரும்பும்போதும் (எசா 45:23; காண்க. மத் 4:9) இந்தச் சைகையானது வெளிப்படையாகவே ஆராதனையைச் சுட்டிக்காட்டுகிறது. இறுதியாக, இயேசுவே ஆண்டவர் என்பதை ஏற்றுக்கொள்ள இயேசுவின் பெயருக்கு அனைவரும் மண்டியிட வேண்டும் (பிலி 2:10) என்பதை ஒவ்வொரு கிறித்தவனும் அறிந்துள்ளான்.

2. செபவேளையில் முழங்காலிடுதல்: மிகவும் எளிய முறை என்ற அளவில் முகம் குப்புற வணங்குதலைவிட மிக எளிய வடிவமான இது நிற்கும்போதும் அமரும் போதும் ஒருவர் கொண்டுள்ள ஆன்மாவின் மாறுபட்ட ஒரு நிலையைச் சிறப்பித்துக் காட்டுகிறது. அப்போது ஒருவர் செய்யும் செபமானது விளக்கத்தையோ, தூண்டுரையையோ, ஆசீரையோ கொண்டிருப்பதில்லை. இஃது ஓர் இறைஞ்சுகின்ற, சில நேரங்களில் அமைதியான, ஆழமான மன்றாட்டாகும். அதிகாரபூர்வமான அல்லது தனிப்பட்ட இத்தகைய செபத்தின் நான்கு சந்தர்ப்பங்கள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்றன. ஆலயம் திருநிலைப்படுத்தலின் முடிவில், நிற்கின்ற மக்கள் திரளை நோக்கித் திரும்பும் சாலமோன், அதனை ஆசீர்வதித்துச் சிற்றுரை ஆற்றுகின்றார் (1 அர 8:14-21): பின்னர் பீடத்தை நோக்கித் திரும்பியவராய் நீண்ட செபம் முழுவதும் (8:22-53) ''முழந்தாட்படியிட்டு, வானத்தை நோக்கித் தம் கைகளை விரித்திருந்தார்'' (8:54). இறுதியாக அவர் எழுந்து நின்று மக்களுக்கு அறிவுரை கூறும்போது அவர்களை ஆசீர்வதிக்கிறார் (8:55-61). பாகாலின் குருக்கள் மீதான தன்னுடைய வெற்றிக்குப் பின்னர், இஸ்ராயேலின் இறை நிந்தையைத் தண்டித்த பஞ்சம் முடிவுக்கு வந்துவிட்டதை எலியா உணர்கிறார். ''எலியா கர்மேல் மலையின் உச்சிக்கு ஏறிச் சென்று, அங்கே தரையில் மண்டியிட்டுத் தம் முழங்கால்களுக்கு இடையே முகத்தைப் புதைத்துக் கொண்டார்'' (1 அர 18:42); மழை பெய்தது. பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் அன்னியருடன் யூதரால் மேற்கொள்ளப்பட்ட திருமணத்தினுடைய செய்தியைக் கேட்டு, எஸ்ரா ''மாலைப்பலி வரை துயரோடு செயலற்று அமர்ந்திருந்தார்''. பின்னர், ''நோன்பை விடுத்துக் கிழிந்த ஆடையோடும், மேலுடையோடும் முழந்தாளிட்டு என் கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக் கைகளை விரித்து'' (எஸ் 9:4-5) செபித்தார். இச்செபத்தில் மக்கள் அழுகையுடன் சேர்ந்து கொண்டனர் (10:1). இறுதியாக, தானியேல் தன் வீட்டு மேல் அறையில் தனியாக, ''வழக்கப்படி நாள் தோறும் மூன்று வேளையும் தம் கடவுளுக்கு முன்பாக முழந்தாளிலிருந்து மன்றாடி அவருக்கு நன்றி செலுத்துவார்'' (தானி 6:11).

இயேசு கெத்சமனித் தோட்டத்தில் மரண வேதனையில் முழங்காலிலிருந்து (லூக் 22:41), ''தரையில் விழுந்து'' (மாற் 14:35), ''முகங்குப்புற விழுந்து'' (மத் 26:39) செபித்தார். மற்றப்படி, அவர் முழந்தாளிடுவதை நாம் காண்பதில்லை. வீறார்ந்த சூழ்நிலைகளில் முழந்தாளிடுதலை அடிக்கடி சுட்டிக்காட்டுகிறார். தன்னைக் கல்லெறிபவர்களை மன்னிக்கின்ற வேளையில் ஸ்தேவானும் (அ.ப. 7:60), தபித்தாவை உயிர்ப்பிப்பதற்கு முன் பேதுருவும் (9:40), எபேசு நகரப் பெரியோர்களுக்கான தனது நீண்ட பிரியா விடை உரைக்குப்பின் பவுலும் (20:36), பிரியும் நேரத்தில் கடற்கரையில் கிறித்தவர் அனைவரும் ஒன்றுபட்

டும் (21:5) முழந்தாளிட்டும் செபிக்கின்றனர். ஆராதனையில் வேண்டுதலை வெளிப்படுத்துவதற்கான இயல்பான நிலையாக முழந்தாளிடுதல் உள்ளது (எபே 3:14).

முழுமை, நிறைவு (FULLNESS PLEROMA)

1. இது மிகுதியான நிறைவுடைமையைக் குறிக்கும். விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரங்களையும் பெற்றுள்ள கிறிஸ்துவின் மீட்பு ஆற்றலை விவரிக்கப் பொருத்தமான சொல்லாகும். இதைக் குறிக்கும் கிரேக்கச் சொல் பல பொருள்கள் அளிக்கக்கூடியது. அடிப்படையில், கடல் (1 நாள் 16:32) அல்லது பூமி (சங் 24:1; 1 கொரி 10:26) போன்ற இடங்களை நிரப்புவனவற்றையோ, ஏதாவது ஒன்றை நிறைவு செய்வதையோ (மத் 9:16; மாற் 2:21; கொலோ 1:24) இஃது உணர்த்தும். சமமாக, இது கொள்கலத்தையோ, முழுத் தொகையையோ (உரோ 11:12), மிகுதியையோ (15:29), நிறைவையோ (13:10) உணர்த்தலாம்.

2. காலத்தின் முழுமை: எலிசபெத்துக்கும் (லூக் 1:57) மரியாளுக்கும் (2:6) பேறுகாலம் வந்ததுபோல், உலகிற்குக் காலம் நிறைவேறுகிறது (மாற் 1:15). நாம் மெசியா மற்றும் இறுதியியல் காலங்களைப் பற்றிப் பேசலாம் (கலா 4:4; எபே 1:10). இறுதியாக நிறைவடையும் இந்த அளவை, மணலால் நிரப்பப்பட்ட பெட்டியின் உள்ளடக்கத்தைப் பற்றி நம்மை நினைக்கச் செய்யலாம். ஆனால், இது மனிதரால் அடையப்படும் முதிர்ச்சியோடோ, நிறைவுடைமையோடோ ஒத்திருப்பதில்லை. ஆனால், இறைவனால் குறிக்கப்பட்ட காலத்தோடு ஒத்துப்போகிறது. இவ்வாறு இயேசு நிரப்புகிறார், இறைவாக்குகளை நிறைவேற்றுகிறார்.

3. கிறிஸ்துவில் உள்ள முழுமை: ''முழு நிறைவும் அவரில் (உயிர்த்த கிறிஸ்துவில்) குடிகொள்ள வேண்டுமென்று இறைவன் திருவுளம் கொண்டார்'' (கொலோ 1:19). இச்சொற்றொடரை விளக்கும் பலவற்றுள் இருவிளக்கங்கள் கவனிக்கத்தக்கவையாகும். முதலாவது விளக்கம் இயக்கமற்ற நிலையுடையது. இதில் முழுமை என்பது இறைப்பிரசன்னத்தால் நிறைவடைந்துள்ள உலகமுழுமையுமாகும். இக்கருத்தைப் பொருத்தமட்டும், அக்காலத்தில் பரவலாக இருந்த ஸ்தோயிக்கு கொள்கையாலும், ஞான இலக்கியத்தாலும் பவுல் பாதிக்கப்பட்டிருக்கலாம். செயலளவில், ஞானம் ''உலகை நிரப்பியுள்ளது; அனைத்தையும் ஒருங்கிணைக்கிறது'' (ஞான 1:7). இரண்டாவது விளக்கம் இயக்க ஆற்றலுடையது. இதில் ஞான இலக்கியத்தின் மற்ற உருவங்களைப் பவுல் பிரதிபலிக்கிறார். பெரும் நதிகளின் நீர் போன்று, ஞானம் தனது கரைகளின் உயரம்வரை பெருகி, வழிந்தோடுகிறது. அது கடலை விடப் பெரியது, பாதாளத்தை விட ஆழமானது. ஞானம் ஞானியை நிரப்புகிறது. முதலில் ஓடையாகவும் கிளை ஆறாகவும் உள்ள அவர் நதியாகவும் கடலாகவும் மாற்றப்படுகிறார் (சீரா 24:25-31; காண்க. பழ 8:12 தொ). மற்ற வாசகங்களில், இறைவன் ஞானத்தை இஸ்ராயேலில் வாழச்செய்கிறார் (சீரா 24:8-12). துல்லியமாக கிறிஸ்துவில்தான் நிறைமுழுமை குடிகொள்கிறது (கொலோ 1:19; 2:9). அவரில்தான் இறைவனின் ஞானமும் அறிவுமாகிய செல்வம் எல்லாம் காணப்படுகின்றன (2:3). இந்தச் செல்வங்கள் பதுக்கிவைக்கப்பட்டு, பேராசையுடன் பாதுகாக்கப்படும் செல்வங்களோடு சேர்ந்தவையல்ல; மாறாக, பரவிடும் உயிருள்ள நீர்போல, அவை சாவின் வெறுமைக்கு எதிரான வாழ்வின் முழுமையும் (பிலி 2:7), எல்லாப்பெயருக்கும் மேலான பெயரிலிருந்து (2:9) வரும் மீட்பளிக்கும் மிக மிகுதியான ஆற்றலுமாகும். இந்த மிக மிகுதித்தன்மை பவுலின் திருமுகங்களில் எல்லாம், குறிப்பாக உரோ 5:15-21; 8:31-39; 11:33-36; பிலி 2:9தொ ஆகிய பாடல் பகுதிகளில் தெளிவாகக் காணப்படுகிறது. இஃது இன்னும் மிகக்குறிப்பாக எபேசியர் திருமுகத்தில் வரும் பாடலில் காணப்படுகிறது (எபே 1:3-14). இதில் தன் அன்பு மகனில் நமக்கு முடிசூட்ட இறைவன் பயன்படுத்திய அருளின் வழிந்தோடும்

வளமையை மொழி பெயர்க்க குறையாத நிறைவளமுடைய நடை போராடுகிறது.

4. திருச்சபை கிறிஸ்துவின் முழுமையாகும்: கிறிஸ்து இறைவனின் எல்லா வல்லமையை முழு உடைமையாகக் கொண்டிருக்கிறார் (கொலோ 1:19; 2:9); விசுவாசிகள் அவரது முழுமையில் பங்கு கொள்கின்றனர் (2:9; 3:19). உண்மையில் கிறிஸ்துவின் மகிமைப்படுத்தப்பட்ட உடலில் குடிகொள்ளும் புறவாழ்வும் மிக மிகுதியான புனிதப்படுத்தலும் அவரது உலகாக மாறும் (2:9) திருச்சபையால் பங்கு கொள்ளப்படுகின்றன. இதனால்தான் இக்காலமுதல் திருச்சபை கிறிஸ்துவின் முழுமை என்றழைக்கப்படலாம் (எபே 1:23). உடல் மற்றும் முழுமையாகிய இரு பட்டங்களும் உலகம் முழுமைக்கும் சாற்றிக் கூறப்படுவதில்லை. மாறாகத் திருச்சபைக்கு மட்டும் சாற்றிக் கூறப்படுகிறது. ஆனால் திருச்சபை கிறிஸ்துவினுடைய, முழுமையின் முதிர்ச்சியை அடைய (4:13) இன்னும் வளரவேண்டும். இந்த வளர்ச்சியில் ஆழமும் பரப்பும் கொண்டிருக்க வேண்டும் (4:14-16). உண்மையில், எல்லாவற்றையும் ஒன்றுகூட்டி மீட்கும் பொருட்டு, ஏக்கத்தோடு எதிர்பார்த்திருக்கும் படைப்பு முழுமைக்கும் சென்றடைய திருச்சபை முன்கூட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (காண்க. உரோ 8:19-23). இந்த முறையில், கிறிஸ்து, திருச்சபை வழியாக தமது முழுமையால் படைப்பு முழுவதையும் முன்னேற்றமாக நிரப்புகிறார் (எபே 1:20தொ; 4:10).

யோவான், தமது முன்னுரையில், இந்தக் கோட்பாட்டை எளிய சொற்களில் எடுத்துக் கூறுகிறார். தமது மகிமையில் ''அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய'' (யோவா 1:14) ஒரே மகன், இறை நன்மையின் வற்றாத நனி மிகுதியை மனிதர்மேல் பொழிகிறார். ''இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம்'' (1:16).

முளை (PEG, TENT PEG)

உறுதியான சுவரில் பொருட்களைத் தொங்கவிட அடிக்கும் முளை (எசா 22:23.25; எசே 15:3), அல்லது உறுதியாக தரையில் கூடாரம் அமைக்க உதவும் முளை. போரிலிருந்து தப்பி ஓடிவந்த கானானியப் படைத்தளபதி சீசராவிற்கு யாவேல் தனது கூடாரத்தில் அடைக்கலம் அளித்து, பின்னர் முளையைச் சுத்தியல் கொண்டு அவன் தலையில் அடித்து, அவனைக் கொன்றான் (நீதி 4:21-22; 5:26). கடவுளின் அருள் மற்றும் வல்லமையால் எருசலேம் பாதுகாப்பாகவும், வலிமையானதாகவும் உருவாக்கப்பட்டதென விளக்க இச்சொல் சிறந்த உருவகமாக விளங்குகிறது (எசா 30:20; 54:2; காண்க. எஸ் 9:8; செக் 10:4).

முள் கரண்டி (FORK)

விவிலியத்தில் உணவு உட்கொள்வதற்கு முள்கரண்டி பயன்பட்டது என்பதற்குக் குறிப்புகள் இல்லை. இது பாலஸ்தீனத்திலும் பழையமேற்காசியாவிலும் மக்கள் கையாலே உண்டனர் என்பதைச் சுட்டலாம். மூன்று பல் கொக்கிகள், பலியில் அவர்களுக்குரிய பகுதிகளைக் குருக்கள் எடுத்துக்கொள்ளப் பயன்பட்டன (1 சாமு 2:13-14). இதையொத்த, பொன்னால் அல்லது பளபளப்பாக்கப்பட்ட வெண்கலத்தால் செய்யப்பட்ட (1 நாள் 28:17; 2 நாள் 4:16) முள்கரண்டி சந்திப்புக் கூடாரத்திலும், ஆலயத்திலும், பீடத்தில் பலி ஒப்புக் கொடுக்கும்போது பயன்பட்டதாகத் தெரிகிறது (யாத் 27:3; 38:3; எண் 4:14).

ஆறு கவர்முள் உள்ள முறம் அல்லது சுளகு தானியங்களிலிருந்து பதரைப் பிரித்தெடுப்பதற்குப் பயன்பட்டது (எரே 15:7; மத் 3:12; லூக் 3:17). இத்தகைய கருவி தாற்றுக்கோலையும் குறிக்கலாம் (1 சாமு 13:21).

முள்முடி (CROWN OF THORNS)

பிலாத்து இயேசுவைச் சாவிற்குக் கையளித்த பின்பு, உரோமை வீரர்கள் இயேசுவை ஏளனம் செய்தபொழுது, இயேசுவின் தலையில் அழுத்திய முள்ளால் ஆன ஒரு வட்டவடிவ அமைப்பு (மாற் 15:17). இயேசு தன்னை அரசன் என்று சொல்லிக் கொண்டதால், சட்டப்பிரகாரம் சதி செய்த

தாக அல்லது கலகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். உரோமையச் சட்டத்தில் மாட்டிக்கொண்ட எவனுக்கும் உரோமைய வீரர்கள் செய்த ஒரு செயலாகத்தான் இஃது இருந்திருக்கலாம். லூக்கா இதைப் பற்றிச் சொல்லவில்லை.

'முட்கள்' என்ற சொல்லைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட கிரேக்கச் சொல்லின் பொருள் நெருஞ்சி என்பது. இயேசுவி னுடைய போதனைகளில் இச்சொல் கெட்ட பொருளில் உவமைகளில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது (*மத் 7:16; மாற்கு 4:7; காண்க.எபி 6:8*).

முள்ளம் பன்றி (HEDGEHOG, PORCUPINE)

இஃது ஒரு பாலூட்டி வகை உயிரினம். 25 முதல் 30 செ.மீ நீளமுள்ளது. முட்களோடு கூடிய தோலையுடையது. தாக்கப் படும்போது பந்துபோல் சுருட்டி அமைத் துக்கொள்ளும் தன்மையுடையது. இதன் முதன்மையான தீனி பூச்சிகளாகும். ஆனால் எலிகள், தவளைகள், தாவரங்கள் ஆகியவற் றையும் தின்னக்கூடியது. இது பெரும்பா லும் இரவில்தான் வெளிவரும். வெற்றிடங் களிலும் பாறையின் இடுக்குகளிலும் வாழும். நகரங்கள் அழிக்கப்பட்ட பகுதி களில் இது வாழ்வதாகச் சித்தரிக்கப்படு கிறது (*எசா 14:23*). இஃது ஒரு கொரிக்கும் வகையாகும்.

முறுக்கேற்றி நெய்த நார்ப்பட்டு (TWINED LINEN)

இஃது ஒரு சிறந்த துணியாகும். இதைக் கொண்டுதான் திருஉறைவிடத்தின் திரைகள் (*யாத் 26:1; 36:8*), கூடார வாயில்களின் திரைகள் (*26:36*), பெட்டகத்தின் திரைகள் (*36:37*), முற்றத்தின் திரைகள் (*27:9; 38:9.16*), முற்றத்து வாயில்களின் திரைகள் (*27:16.18; 38:10*) மேலும் ஏபோது என்னும் மேலாடை மற்றும் அதன் சுயிறுகள் (*28:6.15; 39:5. 8.29*), மார்புப்பதக்கம் (*28:15; 39:8*) ஆகியன செய்யப்பட்டன.

முறை தவறிய புணர்ச்சி (INCEST)

இது சாதாரணமாக, திருமணத்திற்கும் மிக நெருங்கிய உறவுடையவர்களுக்கிடையே ஏற்படும் புணர்ச்சியாகும். இப்பழக்கம் *லேவி 18:6-18*-இல் தடைசெய்யப்பட்டுள் ளது. இத்தகைய புணர்ச்சி கொள்பவர்களுக் குரிய தண்டனை, அவர்கள் பிள்ளையில்லா தவர்களாக ஆக்கப்பட வேண்டும் (*லேவி 20:19-21*). ஆனால், இதை எப்படிச் செய் வது என்பது கொடுக்கப்படவில்லை. ஆயி னும், இத்தகைய புணர்ச்சி பற்றிய குறிப்பு கள் விவிலியத்தில் பல இடங்களில் காணப் படுகின்றன (*ஆதி 19:31-35; 20:2. 12; 35:22; 49:4; 2 சாமு 13:14; எசே 22:10-11; 1 கொரி 5:1*).

யூபிலி நூல் ஆதாமின் புதல்வர்கள் தங்கள் சகோதரிகளை மணந்து கொண்ட னர் என்று கூறுகிறது. இந்தக் குறிப்பும், லோத்தும் அவரது புதல்வியர்களும் பற்றிய கதையும் (*ஆதி 19:31-35*), இத்தகைய முறை தவறிய புணர்ச்சிக்கு, மக்கள் தொகையைப் பெருக்குவது ஒரு காரணமாகும் என்று சுட்டுகின்றன. காமவெறியைக் காரண மாகக் கொண்ட நிகழ்ச்சியுரைகள் உள்ளன. மேலும், பல மனைவியர்களைக் கொள் ளும் சமூகத்தில் ஒரு மகன், தன் தந்தையின் உரிமைச் சொத்தைப் பெற்றபோது, தனது தாயைத் தவிர தன் தந்தையின் மற்ற மனைவியரையும் உரிமையாகக் கொண் டான் (*2 சாமு 3:6-11*).

''இரத்த உறவாயிருப்பவர்'', தாய், தந் தையின் மற்ற மனைவியர், சகோதரிகள், தந்தைக்கோ, தாய்க்கோ, வீட்டிலோ, வெளி யிலோ பிறந்த மகளான சகோதரி, தந்தை யின் அல்லது தாயின் சகோதரி, தந்தையின் சகோதரன் மற்றும் அவன் மனைவி, மரு மகள், சகோதரனின் மனைவி, மனைவியின் சகோதரி ஆகிய நெருங்கிய இரத்த உறவின ரோடும் (*லேவி 18:6-16*), மாமியார் (*உப 27:23*) ஆகியோரோடும் ஒருவன் உடல் உறவு கொள்வது தடை செய்யப்பட்டுள் ளது. இத்தகைய குற்றங்களுக்குரிய தண் டனை அவனைப் பிள்ளையற்றவனாக ஆக்குவதும் (*லேவி 20:21*), சாவும் (*20:11-13*) ஆகும். ஒருவன் ஒரு பெண்ணை யும் அவள் தாயையும் மணம் செய்தால் அவர்கள் அனைவரும் நெருப்பில் சுட்

டெரிக்கப்பட வேண்டும் *(20:14)*. இத்தகைய தகாத புணர்ச்சி கொள்பவர்கள் யூத இனத்தில் இராதபடி அழிக்கப்பட வேண்டும் *(18:29)*.

1 கொரி 5:1-13-இல் ஒருவன் தன் தந்தையின் மனைவியோடு (ஒருவேளை மாற்றாந் தாயாக இருக்கலாம்) பாலின உறவு கொண்டதாகவும் இது கொரிந்தியக் கிறிஸ்தவர்களால் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதைப் பவுல் கடுமையாகக் கண்டனம் செய்கிறார். ''இச்செயல் செய்தவனை உங்களிடமிருந்து அகற்றி விட்டிருக்க வேண்டும்... அத்தகையவனைச் சாத்தானுக்குக் கையளிக்க வேண்டும்'' *(1:2.5)*. பவுல் அளிக்கும் தண்டனை கொரிந்தியத் திருச்சபைக்கும் உரியதாகும். ஏனெனில், அவர்கள் தங்கள் அகந்தையில் இப்பாவத்திற்குக் குருடாகிப் போய்விட்டனர். ஒருவன் தனது குலத்துக்குப் புறம்பே தான் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று கட்டுப்படுத்தும் மரபும் கானானியர்களின் சிலைவழிபாட்டில் இருந்த முறை தகாத புணர்ச்சி மரபும் (லேவி 20:23), இதுபற்றிய விவிலியப் போக்கை விளக்குகின்றன எனலாம்.

முற்றத்தின் நடுப்பகுதி (MIDDLE COURT)

எருசலேமில் அரச மாளிகைக்கும் ஆலயத்திற்கும் இடையிலுள்ள ஒரு வளாகம் *(2 அர 20:4)*. ஒருவேளை இது நீதி வழங்குவதற்கென்று அரியணை மண்டபத்திற்குப் பின்புறம் இருந்த முற்றமாக இருக்கலாம் *(1 அர 7:7-8)*.

முன்குறித்தல் ((PREDESTINE))

1. புதிய ஏற்பாட்டில் மட்டுமே முன்குறித்தல் என்ற கருத்து காணப்படுகிறது. இஃது அப்போஸ்தலர் பணிநூலில் *(4:28)* ஒரு முறையும், பவுலின் மடல்களில் ஐந்து முறையும் *(உரோ 8:29.30; 1 கொரி 2:7; எபே 1:5.11)* வருகிறது. முன் குறித்து வைத்தல் பற்றிய பெயர்ச்சொல் பயன்படுத்தப்படவில்லை. ஆனால், திட்டம், உருவரை முன்மாதிரி, முன்னறிவு, தேர்ந்து கொள்ளுதல் போன்ற சொற்கள் பயன்பட்டுள்ளன. இங்கு இறை செயல் மட்டுமே முக்கியத்துவம் பெறுகிறது. நாம் கூறும் எந்தக் கொள்கையும் அன்று. ''முன்குறித்தல்'' என்பது பற்றிய தன்விளக்கமான ஒரு கோட்பாடு விவிலியத்தில் இல்லை. ஆனால், பவுல், இறைவனின் திட்டத்தைப் புரிந்து கொள்வதில் இந்த இறைசெயலுக்கு முக்கியபங்கு அளிக்கிறார். எனவே தான் அது பற்றிய விவிலிய முன் கருத்துகளையும் யோவானில் வரும் இணைக் கருத்துகளையும் காணும்முன், இது பற்றிய பவுலின் சிந்தனையைத் தருகிறோம்.

2. அவரது சுவிகாரப் பிள்ளைகளாக அன்பினால் முன்குறித்து வைத்தார்: கடவுளின் திட்டம் பற்றிய தனது இறைவாக்கு விளக்கத்தின் முடிவில் *(உரோ 1-8)*, பவுல் விசுவாசிகளை அவர்கள் நம்பிக்கையில் உறுதிப்படுத்த விரும்புகிறார். அதற்காக, ''கடவுளின் ஞானத்தையே பேசுகிறோம். அதுவோ மறைபொருளான ஞானம். நமது மகிமைக்காக உலகம் உண்டாகும் முன்பே கடவுளின் திட்டத்தில் இருந்தது'' *(1 கொரி 2:7)* என்றும், ''கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு ஆவியானவர் அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பதும் நமக்குத் தெரியும். ஏனெனில், கடவுள் யாரை முன்பே தேர்ந்துகொண்டாரோ, அவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்ற உருவைத் தாங்கும்படி முன் குறித்திருக்கிறார்; சகோதரர் பலருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்றே இப்படிக் குறித்தார். யாரை முன்குறித்தாரோ அவர்களை அழைத்திருக்கிறார்; யாரை அழைத்தாரோ அவர்களைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கினார். யாரைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கினாரோ அவர்களுக்குத் தம் மாட்சிமையில் பங்குதந்தார்'' *(உரோ 8:29-30)*. இறைவனுடைய திட்டத்தில், அதை முழுமையாக நோக்கி, பவுல் இரு பண்புகளை வேறுபடுத்துகிறார். அவற்றில் ஒன்று கடவுள் முன்பே அறிவார் என்பது. மற்றது கடவுள் முன்பே குறித்து

வைக்கிறார் அல்லது தீர்மானித்துள்ளார் என்பது ஆகும். இந்த இரு கருத்துகளையும் குழப்பிவிடக் கூடாது.

அ) விவிலிய நோக்கில், அறிவு என்பது ஆழ்ந்த ஆராய்ச்சிச்செயலில் அடங்கியிருக்க வில்லை. மாறாக, இரண்டு உயிர்களுக் கிடையே உள்ள உறவிலிருந்து எழுகிறது. படைப்புக்கு முன்னிருந்தே, இறை உள்ளத்தில் இறைவனுக்கும் மனிதர் சிலருக்கும் இடையே அன்புறவு இருக்கிறது. ''அவர்களை அவர் அறிந்திடுவார்'' (1 கொரி 8:3; கலா 4:9; காண்க. மத் 2:13). ''தந்தையாகிய கடவுளின் முன்னறிவுக் கேற்பத் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்'' (1 பேதுரு 1:1) இருக்கின்றனர். ஆகவே, முன்குறித்து வைத்தலுக்குப் பின்னணியாக முன்னறிவும், தேர்ந்து கொள்ளுதலும் அமைந்துள்ளன.

ஆ) இப்போது கடவுளது திட்டத்தின் இரண்டாவது பண்புக்கு வருவோம். இஃது ஒரு முடிவை நோக்கி, அதாவது துல்லிய மான சேரிடம் நோக்கித் தேர்வு செய்யப் படுகிறது. இதுவும் தொடக்கத்திலிருந்தே செய்யப்படுகிறது; ஆகவே முன் குறித்து வைத்தல் என்றே அழைக்கப்படலாம். ஆனால் தொடக்கத்தைப் பின்னோக்கிச் செல்லும்போது, இப்போது நாம் கால முடிவை அறிவதனால், அதைப் புரிந்து கொள்ள மட்டுமே முடியும். மீட்கும் பலி இறைவனோடு ஒப்புரவையும் மகன்களாக சுவிகாரத்தையும் அடைந்துவிட்டது. ''அவர்தம் திருவுள விருப்பத்திற்கேற்ப... இயேசு கிறிஸ்து வழியாகவே நம்மைத் தம் பிள்ளைகளாக்கிக் கொள்ள, அன்பினால் நம்மை முன்குறித்து வைத்தார்'' (எபே 1:5-6). திருவுளம் (எபே 1:9), அருள் (உரோ 11:5; எபே 1:6-7; 2:5 தொ), இரக்கம் (உரோ 11:28; எபே 1:4) ஆகியவைதான் பவுலின் இறையியல் அமைந்திருக்கும் சூழ்நிலையாகும். ஆகவே, முன்குறித்து வைத்தல் என்பது இறைவனால் அன்பு செய்யப்படுவது என்றால், இந்த மறை பொருளில் அச்சுறுத்துவது ஒன்றுமில்லை. மாறாக மனிதன், இறைத்திட்டத்தின் தொடக்கத்தை மட்டுமன்று, முடிவையும் அறியும் மகிழ்ச்சியைக் கொண்டுள்ளான். சமய வரலாறு பொருளுள்ளதாகிறது. தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் ''முன்பிருந்தே இதற் காகத் தயாரிக்கப்பட்டிருந்தனர்'' (உரோ 9:23).

3. தன்னுரிமையில் முன்குறித்து வைத்தல்: பவுல், இறைத்திட்டத்தின் இம்மைக் குரிய இரு கட்டங்களை அடுத்ததாக விவரிக்கிறார். ''யாரை முன் குறித்தாரோ அவர்களை அழைத்திருக்கிறார்; யாரை அழைத்தாரோ, அவர்களைத் தமக்கு ஏற் புடையவர்களாக்கினார்; யாரை ஏற்புடைய வர்களாக்கினாரோ, அவர்களுக்குத் தம் மகி மையில் பங்கு தந்தார்''(உரோ 8:30). முன்குறித்து வைத்தலின் தொடர்ச்சியாக இக்காலத்தில் செயல்முறையான அழைத்த லும் ஏற்புடையவராக்குவதும், வருங்காலத் தில் மகிமைப்படுத்தப்படுதலும் உள்ளன. இறைவனின் மாறாப்பொருளில் நிலை கொண்டு பவுல், கடந்த காலத்தில் வினைச் சொற்களைப், பயன்படுத்தித் தனது முழு உறுதிப்பாட்டை எடுத்துக்கூறுகிறார். இந்த இரு செயல்களை வேறுபடுத்தும் நுணுக் கங்களை ஒதுக்கிவிட்டு, பவுல் நமக்களிக் கும் சூழ்நிலையை ஆய்வுசெய்வோம். எல் லாமே முழுவதும் இறைவனின் செயலா கும். ''தம் திருவுளக் கருத்திற்கேற்ப அனைத்தையும் செய்து முடிக்கும் இறை வனின் திட்டப்படி முன் குறிக்கப்பட்ட நாங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் பங்கு பெற்றுக் கொண்டோம்'' (எபே 1:11).

ஆனால் இந்தத் திட்டத்தில் மனிதனின் சுதந்தரம் என்னவாயிற்று? அதற்கு இடமே இல்லை போல் தோன்றுகிறது. பவுல் மற்றொரு இடத்தில் கூறுகிறார்: ''அப்படி யானால் கடவுள் ஒருவன் மீது எவ்வாறு குற்றம் சாட்டமுடியும்? அவருடைய விருப் பத்தை யார் எதிர்க்கக்கூடும்? நீ கேள்வி கேட்கலாம்'' (உரோ 9:19). இங்குத் தனி நபர்களைப் பற்றியன்று, கிறிஸ்துவை ஏற்க மறுத்த இஸ்ரயேல் மக்கள் அனைவரையும் பற்றியே பவுல் இப்பிரச்சனையை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. இறைவனின்

மறைபொருளான, ஆராய்ந்தறியக் கூடாத ஞானத்தை எடுத்துக் கூறி இப்பிரச்சனையை இறுதியாக விடுவிக்கிறார். இந்த ஞானத்தின் முன் மனிதன் வியப்படைய வேண்டும்; மௌனம் காக்க வேண்டும். ஆயினும், பவுல் மனுகுலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மற்றவர்கள் என இரு குழுக்களைத் தெளிவாக வேறுபடுத்துகிறார். இரு குழுக்களையும் இறைவன் திட்டத்தில் ஒரே விதமாய்ப் பவுல் கருதுவதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ''இந்த மகிமைக்காக'' முன்னதாகவே தயாரிக்கப்பட்டிருக்கும் போது (9:32), மற்றவர்கள் ''அழிவிற்குத் தயாராக'' மட்டுமே உள்ளனர் (9:32). இறைவன் அழிவிற்கு முன்குறித்து வைப்பதில்லை.

ஆகவே, பவுல் கொண்டிருக்கும் நோக்கு நமக்குக் கடினமாக இருக்கலாம். நாம் தனிநபர்களைப் பற்றி எண்ணுகிறோம். அவரோ இஸ்ராயேலைப் பற்றிஎண்ணுகிறார். அவருக்கு, வரலாற்றின் ஆட்கள் அஃது ஏசாவோ, பார்வோனோ மூல முன்மாதிரியாவர். அவர்களின் சொந்த மீட்பு விவாதத்திற்குரியதன்று. ஆகவே, இறை மற்றும் மனிதச் செயல்களுக்குமிடையே யுள்ள உறவு பற்றிய பிரச்சனை இங்கு விடுவிக்கப்படவில்லை. ஆனால் இரண்டுக்குமிடையே எந்த முரண்பாட்டையும் காணாது, இரண்டையும் எடுத்துக் கூறும் அமைதியான முறையில் ஒரு விடுவிப்பைக் காணலாம். எடுத்துக்காட்டாக அவர் சூழ்நிலையைச் சுட்டிக்காட்டுதலையும் (இதனால் இந்த உண்மையின் நிலையை எடுத்துக் கூறுகிறார்), கடைப்பிடிக்கக் கோரும் கட்டளையையும் (இதனால் செயலாற்ற வேண்டிய கடமையை எடுத்துக் கூறுகிறார்) சேர்த்துக் கூறுகிறார். ''நீங்கள் கிறிஸ்துவில் இறந்துவிட்டீர்கள்; ஆகவே, வாழுங்கள்''. இதில் நாம் ஒரு மொழிப் பிரச்சனையைக் காண்கிறோம். ஆனால், பவுல் காணவில்லை. ஆகவே, அவர் கூறுகிறார்; ''அச்ச நடுக்கத்தோடு உங்கள் மீட்புக்காக உழைத்து வாருங்கள். நீங்கள் எதையும் விரும்பவும் செயலாற்றவும் தம் திருவுளம் நிறைவேற, உங்களில் செயலாற்றுபவர் கடவுளே'' (பிலி 2:12-13). ''நாம் செய்ய வேண்டுமென்று கடவுள் முன்னேற்பாடு செய்த நற்செயல்களில் நாம் ஈடுபடுவதற்கே கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் படைக்கப்பட்டோம்'' (எபே 2:10). ஆகவே, முடிவில்லாக் காலத்திலிருந்து கடவுளால் முன்னறியப்பட்டவைகளைச் செயல்படுத்துவதிலேயே மனித சுதந்தரம் அடங்கியிருப்பதுபோல் இவ்வுலகில் எல்லாம் நடந்தேறுகிறது. இதுவே வெளிப்பாட்டின் காட்சிப் பணித்திட்டமாகும். சமகாலத்திய சிந்தனை, இறைவனில் அன்பின் முதன்மையை அறிந்துணர்ந்ததென்றால், விதிவசம் என்ற கோட்பாட்டோடு குழப்பாது.

4. பவுலின் சிந்தனைக்கு விவிலிய மூலம்: முன்குறித்து வைத்தலின் அடிப்படை ஏற்கெனவே பழைய ஏற்பாட்டில், அதாவது எல்லாவற்றையும் முன்னரே காணும், உடனுழைக்கும் இறைவனின் செயலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. உண்மையில், எல்லாம் (சீரா 11:4) இடர்ப்பாடுகள்கூட (ஆமோ 3:6; எசா 45:7) ஆண்டவரிடமிருந்தே வருகின்றன. கடவுள் எப்போதும் ஒரு திட்டம் கொண்டிருந்தார் (எசா 37:26). அதை வரலாற்றுப் போக்கில் (14:24) குறிப்பிட்ட காலங்களில் (அ.ப. 17:26.31) நிறைவேற்றுகிறார். இதே கருத்து இயேசுவை இறைமகனாகவும் (உரோ 1:4), மேலாண்மையுடைய நடுவராகவும் (அ.ப. 10:42) ஏற்படுத்திய கடவுளின் செயலை விவரிக்கும்போது வருகிறது. இறைவனால் முன்னறியப்படாத அல்லது தீர்மானிக்கப்படாத எதுவும் நடப்பதில்லை (அ.ப. 4:28; காண்க. மத் 25:14). இறைவன் தமது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் நன்மைக்காக எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துள்ளார்; தயாரித்துள்ளார் (மத் 20:23; 25:34). இறைவனைப் பொருத்தமட்டும் எதுவும் தற்செயலாக நிகழ்வதில்லை. எதுவும் அவரது கட்டுப்பாட்டுக்குப் புறம்பாக நடப்பதில்லை (பழ 16:33). ஏனெனில், ''ஆண்டவர் படைத்த ஒவ்வொன்றிற்கும் குறிப்

பிட்ட ஒரு முடிவுண்டு'' (16:4). ஆனால், இதுவரை கூறியவை எல்லாம் முன்னறிவையும் பரிபாலிப்பையும் பற்றியவையாகும். முன்குறித்து வைத்தலைப் பற்றிப் பேச, இன்னும் அதிகமாக அறிய வேண்டும்.

இக்கருத்துக்கு நெருங்கிய ஒரு விசுவாசம் உண்டு. அது வாழ்வின் நூலில் எழுதப்பட்டிருப்பதாகும். இஃது இறுதித் தீர்ப்பை நோக்காகக் கொண்டு நற்செயல்களின் பட்டியலைக் கொண்டிருக்கும் கணக்குநூல் அன்று (தானி 7:10; திருவெளி 20:12). இது, சங்கீத ஆசிரியர் பேசும், காலத்திற்கு முந்திய நூலாகும். ''நீர் எனக்குக் குறித்து வைத்துள்ள நாள்கள் எல்லாம் உமது நூலில் எழுதப்பட்டுள்ளன. எனக்கு வாழ்நாள் எதுவும் இல்லாத காலத்தில் நீர் எனக்கு நாட்களைக் குறித்தீர்'' (சங் 139:16). இது ''முன்குறித்து வைக்கப்பட்டவர்களின் நூல்'' என்றழைக்கப்படலாம். ''வாழ்வு நூலில் உலகத் தொடக்க முதல் பெயர் எழுதப் படாத மண்ணுலகினர், அந்த விலங்கைக் காணும்போது வியப்படைபவர்களும்'' உண்டு (திருவெளி 17:8; காண்க. 13:18; தானி 12:1). இயேசுவும் ''உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்'' என்று கூறும்போது, இதே கருத்தில் பங்கு கொள்ளுகிறார்.

இக்கருத்துகளோடு பவுலின் கருத்துகளை ஒப்பிடும்போது, இயேசுவால் நிறைவேற்றப்பட்ட மீட்பு என்பது நழுவி விடுகிறது. மீட்பு வரலாற்றின் முடிவுக்கு வழியைத் திறந்துவிடும்போது, இயேசு அதன் மூலத்திற்குத் திரும்பப் போகவும், இறைவனது மனதைப் பின்பற்றவும் அனுமதிக்கிறார். இறைவன் தமது அன்பில் தாம் தேர்ந்தெடுத்தவர்கள் தமது மகனது சாயலுக்கு ஒத்திருக்க முன்குறித்து வைத்துள்ளார்.

5. யோவானில் இணையான கருத்துகள்: நற்செய்திகளில், பவுலின் சிந்தனைக்கு இணையான மற்றும் அதற்கு ஆதரவு அளிக்கும் கருத்துகள் இல்லையென்றால் அது வியப்பளிக்கலாம். முன்குறித்து வைக்கப்பட்டவர்களின் நூலைக் குறிப்பிடும்போதும் (லூக் 10;20), தேர்ந்தெடுத்தலைக் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்தும்போதும் (மத் 7:23; 25:12), இயேசுவின் சிந்தனை வேரூன்றியுள்ள பேரச்சம் பற்றிய விவிலியக் கருத்தைப் பற்றி நாம் பேசவில்லை. மிகவும் வெளிப்படையாக, யோவானில், தந்தைதான் விசுவாசிகளை மகனுக்கு அளிக்கிறார் (யோவா 10:29; 17:2. 6.9.24); ''என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது'' (6:44). இங்கு மக்களைப் பொருத்தமட்டுமன்று, தனி நபரைப் பொருத்தமட்டும் முன்குறித்து வைத்தல் என்ற பிரச்சனையைக் காண்கிறோம். விசுவாசி தன்னைச் சூழ்ந்திருந்து எல்லாப் பக்கங்களிலும் வளைந்து கொள்ளும் உலகில் வைக்கப்பட்டுள்ளான். விதிவசக் கோட்பாட்டு உணர்வைத் தவிர்ப்பதற்கு ஒரேவழி இறைப்போக்கிற்குப் பின்னால் உள்ள உலகளாவிய அன்பைக் கண்டுணர்வதாகும்.

6. மொழியும் விளக்கமுறையும்: ஒத்திசைவானதும் ஆறுதல் அளிப்பதுமான இந்த விவிலியமொழி இன்று புரிந்து கொள்ளக் கூடியதா? இக்கால விசுவாசிக்கு, விவிலிய எபிரேயத்தில் காணப்படும் தெளிவின்மையை ஏற்றுக்கொள்வது கடினமாக உள்ளது. எபிரேயம் நோக்கத்தையும் விளைவையும் தெளிவாக வேறுபடுத்துவதில்லை. அது ''கடவுள் விரும்புகிறார்'' என்று சொல்லும்போது அவரது விருப்பத்தை அன்று, மாறாக அவர் ஒன்றை அனுமதிப்பதைக் குறிக்கலாம். ஆனால், இந்த இலக்கணக்குறிப்பு தன்னிச்சையான விளக்கங்களுக்கு இடமளிக்கிறது. இது கோட்பாட்டின் பொருளைப் பலவீனப்படுத்தலாம். இதைத் தவிர இரு இடுக்கண்கள் குறிப்பிடப்பட வேண்டும். முதலாவது புறத்தைச் சார்ந்தது. இது தனி நபர்களை விடக் குழுவை முதன்மையாகக் கொண்ட சொற்களில் கூறப்படும் முன்குறித்து வைத்தல்

பற்றிய பிரச்சனையை நாம் சிந்திக்க முடியாது என்ற உண்மையிலிருந்து எழுகிறது. இதன் காரணமாகத்தான் உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் வரும் பவுலின் கடினமான சொற்கள் பல தவறுகள் எழ வாய்ப்பளித்துள்ளன. மேலும், சில சமயங்களில் தாங்கள் முடிவில்லா அழிவிற்கு முன்குறித்து வைக்கப்பட்டவர் என்று மக்களை இட்டுச் செல்லும் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. ஒரு சமய அனுபவத்தை எடுத்துக்கூற விவிலிய மொழி இடம், காலம் ஆகிய கூறுகளைப் பயன்படுத்துகிறது. இம்முறையில் இறைவனுக்கு மனித நடத்தையைச் சாற்றிக் கூறுகிறது என்பதை ஆழ்ந்த மட்டத்தில் நாம் பெரும்பாலும் மறந்து விடுகிறோம். இந்த மொழியை மீபௌதீக அல்லது இயல் கடந்த கோட்பாடாக ஆக்குவது, தன்மையால் இம்மைக் காலத்தைச் சேர்ந்ததை முடிவில்லாக் காலத்திற்குரியதாக்குவதாகும்.

''இறைவன் தாம் தேர்ந்து கொண்டவர்களைத் தம் சுவிகாரப்பிள்ளைகளாக முன்குறித்து வைத்தார்'' என்று கூறும்போது, கடவுளுக்கு மனிதப்பண்புகளைச் சாற்றிக் கூறும் மொழிநடையைப் பயன்படுத்துகிறோம். மனித மொழியமைப்பின் ஒரு பகுதியாகவும், நமது சுதந்தரத்தின் ஆற்றல்களை எடுத்துக்கூறும் முயற்சியில் பயன்படுத்தப்படுபவைகளுமான கூறுகளால் இறைவன் கட்டுப்பட்டுள்ளார் என்று நாம் கூறுவதாக இதற்குப் பொருளில்லை. இவ்வாறு, நமது இம்மைக்கால நிலையின் ஒளியில் நோக்கும்போது, முன்தேர்வு ''முன் குறித்து வைத்தலாகத்'' தோன்றலாம். இது தேர்ந்து கொள்ளப்படாதவர்களை நிராகரிப்பதையும் மற்றும் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள மறுப்பதையும் கூட உள்ளடக்கலாம். ஆனால், இஃது ஒரு பேச்சு முறையாகும். காலம், இடம் ஆகியவற்றுக்குக் கட்டுப்படாத ஒன்றை அவற்றுக்குள் மாற்றி வைப்பதாகும். முன்னறிவு முன்காணுதல், முன்தேர்வு, முன் குறித்தல் ஆகிய அனைத்துமே முதல் முயற்சி மனிதனிடமிருந்தன்று, மாறாகக் கடவுளிடமிருந்தே வருகிறது என்று கூறும் மனித முயற்சிகளின் அடையாளம் மட்டுமே ஆகும். தனி மனிதருக்குரிய சொற்களில் இந்த விதத்தில் மாற்றி அமைக்கும்போது, காலத்தின் மொழி அதன் உண்மைப் பொருளை உணர்த்துகிறது. இதை ''அவரே நமக்கு அன்பு செய்ததால் நாமும் அன்பு செய்வோமாக'' *(1 யோவா 4:19)* என்று யோவான் நன்கு எடுத்துக் கூறுகிறார்.

முன்மாரி (EARLY RAIN)

மழைக் காலத்தைத் தொடக்கும் இலையுதிர்கால முதல் மழை. இம்மழை உழுவதற்கு ஏற்றதாக நிலத்தை நன்கு மென்மையாக்குகிறது. பின் மாரியோடு இஃது இணைக்கப்பட்டு இறைவனின் நன்மைத் தனத்திற்குச் சான்றாக இவை விளங்குகின்றன *(உப 11:14; சங் 84:6; எரே 5:24; யோவேல் 2:23)*.

முன்னறிதலும் முன்னறிவும் ((FOREKNOW AND FOREKNOWLEDGE)))

1. இச்சொற்கள் விவிலியத்தில் அடிக்கடி காணப்படாவிட்டாலும் இக்கருத்துகள் விவிலியம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இவை தேர்ந்தெடுத்தல், முன்குறித்து வைத்தல், பரிபாலிப்பு ஆகிய கருத்துகளோடு பிரிக்கமுடியாத விதத்தில் இணைந்துள்ளன.

இக்கருத்து பிற்காலத்தில் நடக்க இருப்பவைகளை நிகழ்காலத்தில் அறிந்திருப்பதைக் குறிக்கும். இதைக் குறிக்கும் கிரேக்கச் சொல், மருத்துவ இயலில் கலைச் சொல்லாகப் பயன்பட்டது. விவிலியத்தில் இறைவனுக்கு மட்டும்தான் இக்கருத்து சாற்றிக் கூறப்படுகிறது. நடைமுறையில் காணப்படுபவைகளை ஆதாரமாகக் கொண்டு, மனிதன் ஒரு சில காரியங்களை முன்னறியலாம். இதிலிருந்து வேறுபட்டதாகும் இறைவனுடைய முன்னறிவு. ஏனெனில், அவர் மட்டுமே காலங்களின் ஆண்டவர். அவரது நோக்கம் வரலாற்றின் தொடக்க முதல் முடிவு வரை எல்லா நிகழ்ச்சிகளையும் தன்னுள் அடக்கியுள்ளது. ஞானநூல்

காலத்திற்கு அப்பாற்பட்ட ஞானம் இந்த முன்னறிவைக் கொண்டிருப்பதாகக் கூறினாலும் இறைவன் மட்டும் முன்னறிவைக் கொண்டுள்ளார்.

2. இறைவனின் அறிவு : இறைவனின் முன்னறிவையும் அத்துடன் தொடர்புடைய முன்குறித்து வைத்தலையும் விதிவசக்கோட்பாடு அல்லது முன் தீர்மானக் கோட்பாட்டோடு சேர்த்துத் தவறாகப் புரிந்து கொள்ளுதலைத் தவிர்க்க, விவிலியத்தில் அறிதல், அறிவு என்ற சொற்களின் பொருளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மனிதன் தான் எதிர்கொள்ளும் புறப்பொருளிலிருந்தோ, காலமில்லா உண்மைகளிலிருந்தோ சிந்தனையால் அறிவைப் பெறுகிறான். இந்தப் பொருளில், இறைவனது சிந்தனையின் விளைவாகும் அவருடைய அறிவு. அது முடிவில்லாக் காலத்திற்கும் இருப்பவற்றை, அல்லது எல்லாவற்றையும் பற்றி அறியக் கூடிய அனைத்தையும் ஒரு கலைக் களஞ்சியம் போல் அறிகிறது.

விவிலியத்தில் அறிவு என்பது காலமில்லா உண்மைகளைக் கருத்தியலாக அல்லது புறப்பொருள்களைப் புலனறிவால் பெற்றுக்கொள்வதன்று. அஃது ஆட்களுக்கிடையிலான உறவில் தோன்றுவதாகும். இத்தோற்றம் மனிதனைப் பற்றிய இறைவனது அறிவுக்கும், இறைவனைப் பற்றிய மனிதனது அறிவுக்கும் சாலப்பொருந்தும். மனிதனது அறிவுக்குத் தொடக்கம் உண்டு, வளர்ச்சியுண்டு. இறைவனது அறிவு அவரோடே என்றும் இருக்கிறது. அனைத்தையும் அறிந்தவர் இறைவன். விசுவாசமுள்ள மனிதன் தன்னை இறைவன் முழுவதும் அறிவதாக விசுவாச அறிக்கையிடுகிறான் (சங் 139:1; எரே 1:5; 1 கொரி 8:3; 13:12; கலா 4:9). அதாவது மனிதனைப் பற்றிய உண்மைகளை மட்டும் இறைவன் அறியவில்லை. அவர் அவனைச் சந்தித்து, நிபந்தனைகள் இட்டு, தீர்ப்பிட்டு, ஆசீர்வதித்து, அவனோடு உறவு கொள்கிறார் என்பதாகும். இறைவன் அறிவது, 'அவருடைய திருவுளத்தை எடுத்துக் காட்டுவதாக இருப்பதால், தேர்ந்தெடுக்கும் செயலும் ஆகும் (ஆதி 18:19; ஓசே 13:5; ஆமோ 3:2; 2 திமொ 2:19). இந்த உண்மை ''பெயர் உட்பட உன்னை எனக்குத் தெரியும்'' என்ற கூற்றில் (யாத் 33:12; காண்க. எசா 43:1; 445:3-4; 49:1) வெளிப்படுகிறது. இறைவனோடு ஆட்தன்மை உறவு கொண்ட விவிலிய மனிதன், தொடக்கமுதல் முடிவு வரையுள்ள தன் முழுவாழ்வும் இறைவனால் அறியப்பட்டிருக்கிறது என்று உறுதியாகக் கூறலாம். அதே நோக்கில் மனித வரலாற்றின் அனைத்தும் இறைநோக்கத்தினுள் அடங்கியுள்ளன என்பதையும் கண்டுணர்கிறான்.

இறைவனால் அறியப்படும் அனுபவத்திலிருந்து, இறைவன் எல்லாம் அறிந்தவர் என்ற விசுவாச அறிக்கை தோன்றுகிறது. தமக்குத் தெரியாத ஒன்றை உறுதிப்படுத்தயாவே செயலாற்றுவதுபோல் சில பகுதிகள் சுட்டினாலும் (ஆதி 3:9; 11:5; 18:21), இறைவன் எல்லாம் அறிந்தவர் என்பது விவிலிய விசுவாசத்தின் மையக் கோட்பாடாகும். இந்த அறிவு எல்லாவற்றையும் உள்ளடக்குகிறது. யாரும், எதுவும் அவரது ஆட்தன்மையுடைய ஆட்சியிலிருந்து தப்ப முடியாது. அவருடைய பார்வையிருந்து எதுவும் மறைந்திருக்க முடியாது. முட்டாள்கள் மட்டும்தான், இறைவனுக்குத் தெரியாது தங்கள் செயல்களைச் செய்யக் கூடும் என்று எண்ணுவர் (யோபு 21:27; சங் 10:4.11; 11:4-6; 33:13-15; 51:6; 138:6; எசா 29:15-16). ''பாதாளமும் படுகுழியுமே ஆண்டவர் பார்வையில் இருக்க, மனிதரின் உள்ளம் அவர் பார்வைக்கு மறைவாய் இருக்குமா?'' (பழ 15:11; காண்க.யோபு 26:6). மனிதனது சிந்தனையையும் (சங் 94:11), அவனது ஒழுக்கப் பலவீனத்தையும் (103:4) இறைவன் அறிவார். ஆகவே தன்மை முழுவதும் அறியும் இறைவனிடத்திருந்து தப்பியோட படைப்புக்கு ஒரு மறைவிடமும் இல்லை (139:1-6). ''ஆண்டவரின் கண்கள் கதிரவனைவிடப் பத்தாயிரம் மடங்கு ஒளி பொருந்தியவை. அவை மாந்தரின் வழிகளை எல்லாம் காண்கின்றன; மறைந்திருப்பவற்றை அறிகின்றன'' (சீரா 23:19).

இறைவனுடைய தப்ப முடியாத தீர்ப்புப் பற்றிய உறுதிப்பாடு அவரது முன்னறிவு பற்றிய குறிப்பால் வலியுறுத்தப்படுகிறது. ''அனைத்தும் படைக்கப்படும் முன்பே ஆண்டவர் அவற்றை அறிந்திருந்தார். அவற்றைப் படைத்து முடித்த பின்னும் அவற்றை அறிந்துள்ளார்'' (23:20). புதிய ஏற்பாட்டில், இறைவனது அக்கறையி லிருந்து ஏதும் விலக்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது (மத் 10:29-31). மேலும், இருபக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளினும் கூர்மையானதான இறைவ னுடைய வார்த்தை மனித வாழ்வின் உள்ளாழ மையத்தையும் ஊடுருவுகிறது; ஏனெனில், ''அவரது பார்வைக்கு மறைந் திருக்கும் படைப்பெதுவும் இல்லை. யாருக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண் டுமோ, அவரது கண்ணுக்கு அனைத்தும் வெளிப்படையாகவும், திறந்தவையாகவும் உள்ளன''(எபி 4:12-13).

இவ்வாறு இறைவனுடைய ஆட் தன்மையுடைய ஆட்சி என்பது அவரிட மிருந்து எதுவும் மறைந்திருப்பதில்லை என்பதை உணர்த்துகிறது. வானின் கீழுள்ள யாவற்றையும் கண்டு, நிகழ்காலத்தை அவர் கண்கள் ஆய்வு செய்வதுபோல், கடந்த காலமும் வருங்காலமும் அவர் முன் திறந்தனவாக உள்ளன. விசுவாச நோக்கில், இறைவனுடைய அறிவு முன்னறிவும் ஆகும்.

*3. **நிகழ்ச்சிகள் பற்றிய முன்னறிவு:*** பழங் கால நோக்கின்படி கடவுள்கள், தங்களின் மேலான அறிவாலும் சாகாத்தன்மையா லும், மனிதர்களிடமிருந்து வேறுபடுத்தப் பட்டனர் (காண்க. ஆதி 3:22). மனிதனது அறிவு, குறிப்பாக வருங்காலத்தைப் பற்றிய அவனது அறிவு, கடுமையாக வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அவன் தன் ஊழைப் பற்றி அறிய விரும்பினால் கடவுள் களின் உதவியை நாட வேண்டும். குறி சொல்லும் பலவகை உத்திகளை வளர்த்துக் கொண்டு, அவற்றின் உதவியால், மனிதன் தன் வருங்காலத்தை அறியவும் கட்டுப்படுத் தவும் முயன்றான். கனவுகளுக்கு விளக்கம் அளித்தல் (ஆதி 41), ஆவிகள் தொடர்பால் வருவதுரைத்தல் (1 சாமு 28), சீட்டுப் போட்டுத் தீர்மானித்தல் (30:7-8), இறை வாக்குரைகள் (1 அர 22:1-36) போன்ற உத்திகள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப் படுகின்றன.

எபிரேயர் இறைவாக்குரைத்தல், சோதி டம் கூறுதலாகிய தனது தாழ்மை மிக்க தோற்றத்திலிருந்து மேலான நிலைக்கு உயர்ந்தாலும் (1 சாமு 9-10), வருங் காலத்தை முன்னுரைக்கும் பண்பை ஒரு போதும் கைவிட்டதில்லை. இறைவாக்கு, அதன் உன்னத நிலையில், தனது ஊழைக் கட்டுப்படுத்த மனிதனுக்கு உதவும் நோக் கோடு இறை இரகசியங்களை அறியும் ஆர்வத்தோடு துருவி ஆராய்வதன்று. ஆயி னும், பெரிய இறைவாக்கினர்கள் விண்ணக அவையில் யாவேயின் தீர்மானங்களைக் கேட்டவர்களாகப் பேசினர் (எரே 2:18.22; காண்க. எசா 6:8; 40:6; ஆமோ 3:7). நிகழ்காலத்திற்கு அவர்கள் அளித்த செய்தி, யாவே தமது திட்டத்தை நிறைவேற்ற, செய்யவிருப்பதை அறிவிப்பதையும் கொண்டிருந்தது. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், இறைவனது முன் னறிவானது, வரவிருப்பவை பற்றிய இறை வாக்குச் செய்தியை முன் கருத்தாகக் கொண்டிருந்தது.

இறைவனது வரலாற்று மேலாண்மை பற்றிய விசுவாச அனுபவத்திலிருந்து முன் னறிவு என்ற கருத்து பிரித்தெடுக்கப்படும் போது விரைவில் அஃது ஒரு கோட்பாடாக மாற்றப்படுகிறது. இந்தக் கோட்பாடு சிந் தனையைப் பிரதிபலிக்கும் பொருட்டு மனித சுதந்தரத்தையும், வரலாற்றுப் படைப்புத் தன்மையையும் மதிப்புக்குறை யச் செய்வதாகத் தோன்றுகிறது. ஆயினும், இறைவனது முன்னறிவு விதிவசம் அல்லது மனிதச் செயல்களின் புறத்தூண்டுதலால் தீர்மானிக்கப்படுகின்றன என்ற கோட்பாடு களோடு எத்தொடர்பும் கொண்டிருக்க வில்லை. அது, வரலாற்றில் ஏற்கெனவே எழுதப்பட்டுவிட்டது என்றும், இறைவ னால் வகுக்கப்பட்ட காலவரையை வர

லாறு பின்பற்றுகிறதென்றும் பொருள் அளிப்பதில்லை. மனித சித்தம் ஆட்தன்மை யற்ற விதிவசத்தாலோ, ஆட்தன்மையற்ற சட்ட அமைப்புகளாலோ தற்செயலாக நிர்ணயிக்கப்படுகிறது என்று பொருள் அளிப்பதில்லை. மாறாக, மனிதவாழ்வை, அதன் தொடக்கமுதல் முடிவு வரை, தம் திருவுளத்தால் ஆட்சிசெய்கின்ற ஆட்தன் மையுடைய ஆண்டவரோடு கொள்ளும் மனித உறவின் அனுபவத்திலிருந்து எழும் இறைமுன்னறிவை உறுதியாக எடுத்துக் கூறுவதாகும். விசுவாச முன்னோக்கில் எதுவும் தற்செயலாகவோ, தான் தோன்றித் தனமாகவோ நிகழ்வதில்லை. ஏனெனில், இறைவனது திருவுளம் எல்லாவற்றையும் - ஒரு நகருக்கு ஏற்படும் தீமையைக் கூட (ஆமோ 3:6) - உள்ளடக்குகிறது. மீண்டும் மீண்டும் இறைவாக்கினர்கள் யாவேயின் மேலாண்மை நோக்கை வலியுறுத்துகின்ற னர். ''நான் எண்ணியவாறு யாவும் நடந் தேறும்; நான் தீட்டிய திட்டமே நிலைத்து நிற்கும்'' (எசா 14:24; காண்க. 5:19; 19:17; 28:29; எரே 50:45; ஆமோ 3:7; மீக் 4:12). எந்த ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும் மனிதனது விசுவாசம் இறைவனது நோக் கின் முதன்மையை உணர்கிறது. இதை இவ்வுலகச் சொற்களில், ஒரு நிகழ்ச்சி முன்னதாகவே திட்டம் செய்யப்பட்டது; ஆகவே, இறைவனுக்கு முன்னதாகவே தெரிந்தது என்று கூறலாம். எதிர்பாராத சூழ்நிலையை நல்லதாக மாற்றி, தமது செயலுக்குள் உள்ளடக்குகிறார் இறைவன் என்று இதற்குப் பொருளன்று. மாறாக, விசுவாசக் கோணத்தில் அச்சூழ்நிலை இறைவனது முன்னறிவு நோக்கத்தைத் தன்மையாலேயே சார்ந்தது ஆகும் (காண்க. ஆதி 45:44-8; சங் 50:20; பழ 16:4; 2 பேதுரு 3:9).

இறைவனது நோக்கத்திற்கு முதன்மை அளிப்பது, இரண்டாம் எசாயா நூலின் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும். பிற இன மக்களின் கடவுள்கள் வருவதை முன்னுரைக்க முடியாது. ஏனெனில், மனித னில் காணப்படும் அதே பலவீனத்திற்கும் வரையறைகளுக்கும் இக்கடவுள்கள் உட் பட்டவர்களாவர்; இக்கால நடைமுறை களில் இவர்களும் சிக்கியுள்ளனர். இதற்கு மாறாக யாவே முடிவில்லாதவர். அவரே முதலும் முடிவும் ஆவார். அவரது நோக்கம் தொடக்கமுதல் முடிவு வரை வரலாற்றை உள்ளடக்குகிறது. இந்த இறைவாக்கினரின் படி யாவேயின் தனித்தன்மையுடைய இறைத்தன்மைக்கு அவரது முன்னறிவே சான்றாகும். வரவிருப்பவற்றை அவர் மட்டுமே முன்னறிவிக்க முடியும். வரலாறு அவரது நோக்கைப் படிப்படியாகத் திறந்து காட்டுகிறது. இது வாக்குறுதியிலிருந்து நிறைவேறுதலுக்குச் செல்லும் இயக்க மாகும். ''நாங்கள் அறியும்படி தொடக்கத்தி லிருந்தே அறிவித்தது உங்களுள் யார்? 'அது கூறியது சரி' என்று நாங்கள் சொல்லும்படி முன்னரே உரைத்தது யார்?'' (எசா 41:26; காண்க. 41:2-26; 43:8-13; 44:6-8; 48:8-11; 48:3-8). மேலும், வரலாற்றில் புதியதொன்றைச் செய்து, புதிய படைப்புச் செயலைச் செய்து, யாவே தமது நோக்கை நிறைவேற்றுகிறார். ''முன்னர் நான் அறி வித்தவை நிகழ்ந்துவிட்டன; புதியன வற்றை நான் அறிவிக்கிறேன். அவை தோன்று முன்னே உங்களுக்குத் தெரியப் படுத்துகிறேன்'' (42:9; காண்க. 43:18-19). இவ்வாறு சைரசின் எழுச்சியால் அறிவிக் கப்பட்டதும், நாடு கடத்தப்பட்டோர் உட னடியாக விடுதலைபெறுதல் ஆகிய புதிய யுகம் யாவேயின் திருவுளத்தில் மாற்றம் இருக்கிறது என்று காட்டவில்லை. மாறாக, முன்பே அறிவிக்கப்பட்ட அவரது மீட்பு நோக்கம் நிறைவேறுகிறது என்று காட்டு கிறது.

தானியேல் நூல், இறைவாக்குக் காட்சி களால் அளிக்கப்பட்ட இறை முன்னறிவு, வரலாற்று விவரங்கள் பற்றிய முன்னறிவை உள்ளடக்கியுள்ளது என்ற தோற்றத்தை அளிக்கிறது. வெளிப்பாட்டு இலக்கிய ஆசிரியர்கள் இம்முறையில் சிந்திக்கும் போக்கைக் கொண்டிருந்தனர் என்பது தெளிவு. ஆனால், இந்நூல் மக்கபேயர்கள் காலத்தில் எழுதப்பட்டது என்பதையும்,

இறைவாக்கு முன்னறிவிப்புகள் பெருமளவிற்கு வரலாற்று நிகழ்ச்சிகளைப் பின்னோக்காக எடுத்துரைப்பதாகும் என்பதையும், ஆசிரியர் தனது காலத்தை நெருங்கும்போது நிகழ்ச்சியுரை மிகவும் துல்லியமாக உள்ளது என்பதையும் மனதில் கொள்ளும்போது, தானியேல் வெளிப்பாட்டின் பல இறையியல் பிரச்சனைகள் மறைந்து போகின்றன. இந்நூல், வரலாற்றின்மேல் இறைவன் கொண்டுள்ள மேலாண்மை ஆட்சி பற்றிய அனுபவற்றிற்குச் சான்று பகர்கிறது. பின்னோக்காக, வரலாறு பொருந்தாத தற்போக்காலோ, நாடுகளில் வலிமையான பேராசையாலோ ஆட்சி செய்யப்படுவதில்லை; மாறாக, இறைவனின் முன்னோக்குக் குறிக்கோளால் மட்டுமே ஆட்சி செய்யப்படுகிறது என்பது தேர்ந்து தெளியப்படுகிறது. மனிதச் செயல்களைச் செயலறச் செய்வதற்குப் பதிலாக, யூதர்களுக்கு எதிராகச் சமாளிக்க முடியாத எதிர்ப்புகள் எழுந்த மக்கபேயர்கள் காலத்தில், இறைவனது எல்லாவற்றையும் வெல்லும் மேலாண்மை பற்றிய உணர்வு செயல்களுக்கு ஊற்றாகவும் விசுவாசத்தில் ஆதரவாகவும் விளங்கியது (*காண்க. தானி 11:32*). அதே போல், யூதித்து நூலின் கதையிலும், நடக்கின்றவைகளையும் நடக்கப்போவதையும் இறைவன் முன்னதாகவே திட்டம் செய்துள்ளார் என்ற உறுதியில் கதைத் தலைவி செயல்படுகிறாள். ''ஏனெனில் உம் வழிகளை எல்லாம் நீர் முன்னேற்பாடு செய்து, முன்னறிவுடன் உம் தீர்ப்புகளை அளித்து வருகிறீர்'' (*யூதி 9:5*). வரவிருப்பவை பற்றிய இறைவாக்கு முன்னறிவு, *யூதி 11:19* போன்ற பகுதிகளிலும் கூறப்பட்டுள்ளது (*காண்க. ஞான 18:6; 2 பேதுரு 3:17*).

இறைவன் தன் வாக்குறுதிகளை நிறைவேற்றவிட்டார் என்ற அறிவிப்பு புதிய ஏற்பாட்டில் ஆதிக்கம் செலுத்துவதால், இறை முன்னறிவு பற்றிய கருத்து பலவகையில் எடுத்துக் கூறப்படுகிறது. ''தம் வாக்குரைப்போர் வழியாய்ப் பரிசுத்த நூல்களிலே ஏற்கெனவே வாக்களித்திருந்த'' (*உரோ 1:2*) இறைவனது நற்செய்தியைப் பவுல் அறிவிக்கிறார். நற்செய்தி ஆசிரியர்கள் அடிக்கடி ''இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறுகிறது'' என்று மெசியாவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறுகின்றனர் (*மத் 1:22-23; 2:5-6.15.17;...*). பழைய ஏற்பாட்டு வாசகங்கள் போதிய சுதந்தரத்துடன் கையாளப்பட்டாலும், இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, மரணம், உயிர்ப்பு ஆகியவற்றில் இறைவனது முந்திய நோக்கு வெளிப்படுத்தப்படுகிறது என்ற உறுதி எடுத்துக்காட்டுகளில் தெளிவாக்கப்படுகிறது. நற்செய்திகளின் படி, இயேசுவும் கூட முன் அமைக்கப்பட்ட இறைவனது திட்டத்தை நிறைவேற்றுவதே தமது பணி என்று நம்பினார். இந்த நம்பிக்கை, ''மானிட மகன் பல துன்பங்கள் படவும்...வேண்டும்'' (*மாற் 8:31*), ''மானிட மகன் தமக்கென்று குறிக்கப்பட்டபடியே போகிறார்'' (*லூக் 22:22*), அவரது குறிக்கப்பட்ட ''நேரம்'' நெருங்கிவிட்டது (*மத் 26:45; லூக் 12:40.46; யோவா 7:30; 12:27; 17:1*) போன்ற கூற்றுகளை ஒரளவிற்கு விளக்குகிறது. தொடக்ககாலத் திருச்சபையின் விசுவாச அறிக்கையின்படி ''கடவுளின் திட்டத்திற்கும் முன்னறிவுக்கும் ஏற்ப'' (*அ.ப. 2:23; காண்க. 4:28*), இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டார், சிலுவையில் அறையப்பட்டார். இவையும், இவை போன்றனவுமான புதிய ஏற்பாட்டுக் கூற்றுக்களிலிருந்து இயேசுவின் பணி முன்னதாகவே வரைபடம் செய்யப்பட்டிருந்தது என்றும், அவர் முன்னேற்பாடாய் அமைக்கப்பட்ட விதிக்குப் பணிந்தார் என்றும் முடிவு செய்வது தவறாகும். இதைவிட மேலாக, புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இயேசுவின் பணியை விசுவாசநிலையில் நோக்கி, இந்த நிகழ்ச்சிகளில் இறைவனது முந்திய நோக்கைத் தேர்ந்து தெளிகிறார். மெசியாவின் வருகை பற்றிய நிகழ்ச்சி இறைவனின் பின் சிந்தனையன்று, தற்செயலானது அன்று, வரலாற்றில் எதிர்பார்க்காத நிகழ்ச்சியன்று; மாறாக, இறைவாக்கினர் வாயிலாக முன்னதாகவே அறிவிக்கப்பட்ட இறைவனது மீட்பு நோக்கின் முக்கியபாக

மாகும். படைப்பு முதலே மோசே தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று யூத பாரம்பரியம் கூறுவது போல், புதிய ஏற்பாடும் ''தேர்ந்து கொண்டவர்'' தொடக்கமுதலே கருத்தில் கொள்ளப்பட்டார் என்று கூறுகிறது (லூக் 9:35; 23:35; காண்க. 1 பேதுரு 2:4).'' உலகம் தோன்று முன்னே முன்னறியப் பெற்ற இவர் உங்களுக்காக இந்த இறுதிக் காலத்தில் வெளிப்பட்டார்'' (1 பேதுரு 1:20; யோவா 17:24). இவ்வாறு இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் மீட்புச் செயல், வரலாற்றுச் சூழ்நிலைக்கு ஒத்துப் போவதன்று; மாறாக, இறைவனது முடிவில்லா நோக்கை வெளிப்படுத்துகிறது. முன்னறிவு மற்றும் முன்குறித்து வைத்தல் ஆகியவை பற்றிய மொழியமைப்பு, இயேசு கிறிஸ்து வழியாக இறைவனது மேலாண்மை ஆட்சி பற்றிய அனுபவத்தைச் சேர்ந்தது. ஆகவே, ''விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்குப்'' போகிறது என்பது எப்போதும் வலியுறுத்தப்பட வேண்டும். விசுவாசச் சூழ்நிலைக்குப் புறம்பாகக் கருத்தியலான அறிவு வகைகளாக மாற்றினால், அதன் பொருள் தவிர்க்க முடியாதவிதத்தில் செறிவு குன்றுகிறது அல்லது பொய்யாக்கப்படுகிறது.

4) **முன்னறிவும் தேர்ந்தெடுத்தலும்:** *முன் கூறியது போல, இறை முன்னறிவும் இறை தேர்தலும் மிக நெருங்கிய விதத்தில் தொடர்புடையன. தனிப்பட்டவர்களுக்கோ, ஓர் இனத்திற்கோ இடப்படும் இறைவனது அழைப்புப் பற்றிய உணர்விலிருந்து, விசுவாச அறிக்கையாக இறைமுன்னறிவு பற்றிய மொழியமைப்பு எழுகிறது. இஃது இறைவாக்கினர் அல்லது அப்போஸ்தலர் அழைக்கப்படுவதில் தெளிவாகக் காணப்படுகிறது. இறைவனது அழைப்பு இறைத்திட்டத்திற்குள் ஒரு பணியைச் செய்ய அழைப்பது மட்டும் இன்றி, அவரது சொந்த வரலாற்றில் இறைநோக்கின் முன்னறிவையும் வெளிப்படுத்துகிறது. எரேமியா, தனது ஆழமான உள்ளார்ந்த போராட்டத்திலிருந்து தீர்மானம் செய்கிறார்; யாவேயின் அழைத்தலுக்குப் பதில் அளிக்கிறார்; விசுவாசத்தின் சாதகமான நோக்கில், எப்போதும் தான் ஓர் இறைவாக்கினராக இருக்க வேண்டும் என்று யாவே விரும்புகிறார் என்பதைக் கண்டுணர்கிறார். அவர் தன் தாய் வயிற்றில் இருக்கும் போதே யாவே அவரை அறிந்திருக்கிறார்; அவரை அவரது பணிக்கு நியமித்திருக்கிறார் (எரே 1:5). அதேபோல், பவுல், தன்வாழ்வைப் பின்னோக்கி, இறைவன் ''தாயின் வயிற்றில் இருந்தபோதே என்னைத் தேர்ந்தெடுத்து தமது அருளால் என்னை அழைத்தார்''(கலா 1:15) என்று கூறுகிறார். இந்த எடுத்துக்காட்டுதல்களில், இறை அழைப்புக்கு, இறைவனே முன் முயற்சி எடுக்கிறார் என்றும், அவரது நோக்கம் ஒருவரது வாழ்வைத் தொடக்க முதல் ஒவ்வொரு நொடியிலும் பாதிக்கிறது என்றுமான அனுபவ உணர்வைத் தூண்டுகிறது. ''உம் கண்கள் கருமுளையில் என் உறுப்புகளைக் கண்டன; நீர் எனக்குக் குறித்து வைத்த நாள்கள் எல்லாம் உமது நூலில் எழுதப்பட்டுள்ளன. எனக்கு வாழ்நாள் எதுவுமே இல்லாத காலத்தில் நீர் எனக்கு நாட்களைக் குறித்தீர்'' என்று சங்கீத ஆசிரியர் யாவேயிடம் விசுவாச அறிக்கையிடுகிறார் (சங் 139:16).*

இறைவனது மக்களும் ஒரு பொது அழைத்தலில் பங்குபெறுகின்றனர். இஸ்ராயேலின் தேர்ந்தெடுக்கப்படுதல், எகிப்திலிருந்து இறைவன் தம் மக்களை விடுவித்தலில் முதன்மையான அடிப்படை கொண்டுள்ளது (யாத் 19:3-6; எரே 2:2-7; ஓசே 2:16-17; 11:1; ஆமோ 3:1-2; 9:7; மீக் 6:4). ஆதியாகம நூலில் காணப்படும் பாரம்பரியங்கள், நாம் கொண்டிருக்கும் வடிவில், யாத்திரை மற்றும் சீனாய் வெளிப்பாடுகளுக்கு முன்பே, யாவே ஒரு மக்கினத்தை அழைத்துக் கொண்டிருந்தார் என்றும், குலமூதாதையர்களின் வாழ்வில், தமது முந்திய நோக்கை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார் என்றும் அழுத்திக் கூறுகின்றன. இரண்டாம் எசாயாவின்படி, இஸ்ராயேலை இறைவன் படைப்பதும், தமது மக்களைப் பெயர் சொல்லி அழைப்பதும்,

இஸ்ராயேல் வரலாற்றுக்குப் பின்னணியாக வும் அந்த வரலாற்றுக்குள் செயல்படும் இறைமுன் முயற்சியையும் அருளையும் எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளன (எசா 43:1). மேலும், ஊழியன், ''கருப்பையில் இருக்கும் போதே ஆண்டவர் என்னை அழைத்தார்; என் தாய் வயிற்றில் உருவா கும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்'' என்று சாட்சி கூறுகிறார் (49:1; காண்க.எரே 1:5). புதிய ஏற்பாட்டில் பவுல், ''முன்பு தேர்ந்தெடுத்த தம் மக் களைக் கடவுள் தள்ளிவிடவில்லை'' என்றும், ''அருளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வராய் எஞ்சியோர் சிலர் உள்ளனர்'' என்றும் குறிப்பிடுகிறார் (உரோ 11:2.5). தாயின் வயிற்றில் யாக்கோபும் ஏசாவும் இருந்தபோதே யாக்கோபின் தேர்தலை எடுத்துக் கூறி இறைவனது நோக்கின் முன் ஏற்பாடு வலியுறுத்தப்படுகிறது (9:6-18).

சிறப்பான பொருளில், திருச்சபை, இறை அழைப்பால், ஒன்றிணைக்கப்படு கிறது. ''கடவுள் யாரை முன்பே தேர்ந்து கொண்டாரோ, அவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்ற உருவைத் தாங்கும்படி முன் குறித்திருக்கிறார்'' என்று பவுல் கூறுகிறார் (உரோ 8:29). இச் சூழ்நிலையில் (8:18-39), கிறிஸ்தவர்கள் இக்கட்டான சூழ்நிலை களை எதிர்கொண்டிருந்த போது, பவுல், மிகவும் நடைமுறை சார்ந்த விதத் தில், இறைபாலிப்புக் கோட்பாட்டை விளக்குகிறார். ''இறைவனது திட்டத்திற் கேற்ப அழைக்கப்பட்டவர்கள்'' எல்லாவற் றிலும் இறைவன் தங்கள் நன்மைக்காகச் செயலாற்றுகிறார் என்று அறிக்கையிடுகின் றனர். ஆகவே, விசுவாசம் இறைவனின் முன் முயற்சியிலும் அருளிலும் மட்டுமே அடிப்படை கொண்டுள்ளது. அது மாறு படும் மனித நற்பேறுகளையோ, நற்செய் திக்கு உலகம் அளிக்கும் பதிலின் தன்மை யையோ அடிப்படையாகக் கொண்டிருக்க வில்லை. இத்தச் சிந்தனைச் சூழலில்தான் மற்றப் புதிய ஏற்பாட்டு உறுதிப்பாடுகள் இடம் பெறுகின்றன. பலநாடுகளில் சித றுண்டு வெளி நாட்டவரான கிறிஸ்தவர்கள் ''தந்தையாகிய கடவுளின் முன்னறிவுக் கேற்பத் தேர்ந்து கொள்ளப்பட்டவராவர்'' (1 பேதுரு 1:2). ''மீட்பு அடைவதற்கென்று கடவுள் அவர்களைத் தொடக்க முதல் தேர்ந்து கொண்டுள்ளார்'' (2 தெச 2:13). இறைவன் ''உலகம் உருவாகும் முன்னரே நம்மைக் கிறிஸ்துவுக்குள் தேர்ந்து கொண் டார்; அவர் தம் திருவுளத்திற்கேற்ப... இயேசு கிறிஸ்துவின் வழியாகவே, நம்மைத் தம் பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் நம்மை முன் குறித்துவைத்தார்'' (எபே 1:4-7). பழைய ஏற்பாட்டு மக்கள் விசுவாசத்தால் வாழ்ந்தாலும், இறைவன் ''நம்மை மனத்திற்கொண்டு மேலான தொரு திட்டம் வகுத்திருந்தார்'' (எபி 11:40). விசுவாசிகளின் பெயர்கள் உலகத் தொடக்கமுதல் வாழ்வு நூலில் எழுதப்பட் டுள்ளன (திருவெளி 17:8).

முன்னறிவு மற்றும் முன்குறித்துவைத் தல் பற்றிய இக்கூற்றுகள் அகந்தையாலோ, விலகியிருக்கும் போக்காலோ கூறப்பட் டவை அல்ல; மாறாக, எல்லாவற்றிற்கும் மேலான முதன்மை கொண்டுள்ள இறைத் திட்டத்திற்கு மனிதன் அளிக்கும் பதிலுக்கு முந்திய இறை முன்முயற்சிக்குச் சாட்சியம் அளிக்கின்றன. ''பெற்றுக் கொள்ளாதது உன்னிடத்தில் என்ன உண்டு? நீ பெற்றுக் கொண்டவனாய் இருக்கும்போது, பெற்றுக் கொள்ளாதவனைப்போல் ஏன் பெருமை பாராட்டிக் கொள்கிறாய்?'' (1 கொரி 4:7). இவ்வாறு மீட்பு, மனித மற்றும் இக் காலத்தைச் சார்ந்த எதற்கும் அப்பால் கடந்து, இறைவனது முடிவில்லா நோக்கத் திற்குத் தடம் காட்டுகிறது. இந்த நோக்கு தொடக்க முதல் முடிவு வரை வரலாற்றை உள்ளடக்குகிறது; இயேசு கிறிஸ்துவைத் தன் மையமாகக் கொண்டுள் ளது. இந்தக் கூற்றுகள் மனித சுதந்தரத்தை அழிக்கும் நோக்கம் கொண்டவையல்ல. மாறாக, மனிதனது மீட்பு இறைவனின் கையிலுள்ளது என்ற உறுதி உலகக் கவலை களிலிருந்து விசுவாசியை விடுவிக்கிறது. ''நம்மேல் அன்பு வைத்தவரின் செயலால் நாம் இவை அனைத்திலும் மாண்புமிக்க

வெற்றி அடைகிறோம்'' (உரோ 8:37) என்ற உறுதிப்பாட்டைக் கூற வல்லவனாக்கு கிறது.

முன்னோடி (FORERUNNER)

பிறருக்கு வழியை ஆயத்தம் செய்ய முன்னால் அனுப்பப்படுபவர். போர்த் துறையில் எதிரியிடமிருந்து புலன்காண முயல்பவரைக் குறிக்கும் கலைச்சொல்லா கும். எபி 6:20-இல் இயேசு, தமது சீடர்களுக்கு விண்ணகப் புனிதத்தலத்தை ஆயத்தம் செய்ய, அவர்கள் சார்பாக முன் னோடியாகச் சென்றுள்ளார் என்று கூறப்படு கிறது (காண்க. யோவா 14:2). இச்சொல் காணப்படாவிட்டாலும் இக்கருத்து எசா 40:3-11; மலா 3:1-இல் காணப்படுகிறது. இக்கருத்து திருமுழுக்கு யோவானின் பணிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது (மத் 11:10; மாற் 1:2-8;லூக் 7:27-28).

மற்றொரு பொருளில், முன்னோடி ஒரு தூது அறிவிப்பவனாகவும் இருக்கலாம் (காண்க. 1 சாமு 8:11; 2 சாமு 15:1; 1 அர 1:5; 18:46; எஸ்த 6:9). இப்பொருளும் திருமுழுக்கு யோவானுக்குப் பொருந்தும்.

மூக்குத்தி (NOSE RING)

''வளையம்'' என்ற சொல்லானது பெரும்பாலும் ''மூக்குத்தியையே'' குறிக் கின்றது. ஆபிரகாமின் வேலையாட்கள் ரபேக்காவுக்குக் கிணற்றருகில் பொற் காதணிகளை அளித்ததாகக் காண்கின்றோம் (ஆதி 24:22.30). அதுவும் மூக்குத்திகளை அளித்ததாக ஆதி 24:47-இல் பார்க்கின் றோம். ஒருவரின் மூக்கில் வளையங்கள் மாட்டுவது இறைவன் இஸ்ராயேல் மக்க ளுக்கு அளிக்கும் ஒரு நன்கொடை போன் றது என்று உருவகமாக எசே 16:12-இல் கூறப்படுகிறது.

மூசி (MUSHI - கைவிடப்பட்ட)

இஃது எபிரோனைச் சுற்றியுள்ள பகுதி யில் வாழ்ந்த லேவிய குருக்கள் குடும்பத் தின் பெயர் (எண் 26:58தொ).

குருக்கள் பாரம்பரியமும், நாள் ஆகம மும் மூசி மெராரியின் மகன் எனவும், மெராரி வழியாக வந்த இரண்டு லேவியர் பிரிவுகளில் ஒன்றின் குலப்பெயர் மூதாதை யரும் ஆவார் என்றும் கூறுகின்றன (யாத் 6:19; எண் 3:20.33; 1 நாள் 16:19.47; 23:21.23; 24:26.30).

மூச்சு (BREATH)

யோபு 41:13-இல் இது லேவியாத்தான் என்ற கடல் விலங்கின் மூச்சுக் காற்று பற்றிப் பேசும் போது கூறப்படுகிறது. மூச்சு பொதுவாக, காற்று என்று மொழி பெயர்க் கப்படும்.

வாழ்வின் மூச்சு பொதுவாக உயிரினங் களைக் குறிக்கும் (ஆதி 1:30). ஆதி 2:7-இல் மனிதமூச்சு இறைவனின் கொடையாக விவரிக்கப்படுகிறது. மூச்சு வாயோடும் (யோபு 41:21; சங் 135:17), மூக்கோடும் (யோபு 27:3; புல 4:20) தொடர்புபடுத்தப் படுகிறது.

ஆனால் உளவியல், இறையியல் மற்றும் உருவகக் கண்ணோட்டத்தில் இதை 'ஆவி' என்றும் மொழிபெயர்ப்பர். இது மனித மற்றும் இறை ஆவியாக இருக்கலாம் (யோபு 27:3; 34:14-15; காண்க. 15:30). யோபு 32:8-இல் ''மனிதனில் இருக்கும் ஆவி'' இறைவனது ஆவிக்கு ஒப்பானது; ஞானத்துக்கும் உய்த்துணர்தலுக்கும் ஊற்றா கிறது. இறைவனின் மூச்சு மனுகுலத்தின் மேல் தண்டனை அளிக்கவல்லது (யோபு 4:9; எசா 11:4; 30:28; 2 தெச 2:8; காண்க. தானி 5:23). எசேக்கியேலின் காட்சியில் காய்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு இறை வனின் மூச்சால் உயிருள்ளதாக்கப்படுகிறது (எசே 37:9).

மூதாதையர்கள் (PARTIARCHS)

இவர்கள் இஸ்ராயேலரின் மூதாதையரா வர். இந்தச் சொல் விவிலியத்தில் பெரும் பாலும் பன்மையிலேயே வருகிறது (அ.ப 2:29; உரோ 9:5). மேலும், 'நம் முன்னோர்' (யூதி 8:25), 'தந்தையார்' (ஆதி 48:17; உப 1:11; லூக் 1:55.;72) போன்ற சொற்களும், இந்த மூதாதையரைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டன.

விவிலியத்தில் மூதாதையர் என்ற சொல் குறுகிய கண்ணோட்டத்துடன் நோக்கும் போது, ஆதி ஆகமத்திலே வருகின்ற முன்னோர்களைக் குறிக்கிறது. இவர்கள், வெள்ளப்பெருக்கிற்கு முன்பு வாழ்ந்தவர்களாகவோ, அதற்குப்பின் வாழ்ந்தவர்களாகவோ இருக்கலாம். இந்த இரண்டாம் வகையில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு முதலானோர்களுக்கு இந்த மூதாதையர் என்ற சொல் சாலப் பொருந்தும் (எபி 7:4). இந்தக் குழுவில் யாக்கோபின் 12 புதல்வர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் (அ.ப 7:8-9).

பரந்த நோக்குடன் பார்க்கும் போது இஸ்ராயேல் வரலாற்றில் வாழ்ந்த பலரும் இப்பெயரால் அழைக்கப்படுகின்றனர். அ.ப 2:29 தாவீதை மூதாதையர் என அழைக்கிறது. 1 மக் 2:51-60 ஆபிரகாமில் இருந்து தானியேல் வரை 11 பேரை இத்தகைய மூதாதையராகக் கருதுகிறது. சீரா 44-50-இல் மற்றொரு பட்டியலைக் காண்கிறோம். எபி 11 மூதாதையரின் மற்றொரு பட்டியலைக் கொடுக்கிறது.

1. வெள்ளப்பெருக்குக்கு முன் வாழ்ந்தவர்கள்: ஆதி ஆகமம் வெள்ளப்பெருக்கிற்கு முன் வாழ்ந்த தந்தையர்களின் பெயர்கள் இரண்டு தலைமுறை வரலாற்று அட்டவணையைத் தருகிறது. ஒன்று, காயின் வழி வந்தவர்களின் பட்டியல் (ஆதி 4). இது யாவே பாரம்பரியத்தைச் சேர்ந்தது. மற்றது சேத்தின் வழி வந்தவர்களின் பட்டியல் (ஆதி 5). இது குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்தது. இந்த இரண்டிலும் பெயர்கள் ஏறக்குறைய ஒரே வகையாக இருப்பதால் இதன் ஆசிரியர்கள் ஒரே மூலத்திலிருந்து மொழி பெயர்த்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

2. வெள்ளப் பெருக்குக்குப் பின் வாழ்ந்தவர்: இந்தக் காலத்தில் வாழ்ந்த மூதாதையர்கள் மத்திய வெண்கலக் காலத்தைச் சேர்ந்தவர்கள் (கி.மு. 2000-1500). உகாரித்து, மாரி, நூசி ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ஏடுகள் இந்தக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அழகாகப் பதிவு செய்திருக்கின்றன. இவைகளும் ஆதி ஆகமத்திலே கொடுக்கப்பட்டுள்ள செய்திகளும் இணையாக உள்ளன. ஆகவே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் இந்த மத்திய வெண்கலக் காலத்தில் வாழ்ந்தவர் என்பது உறுதி.

ஆதி ஆகமத்திலுள்ள மூதானதயர்களைப் பற்றிய வரலாறு, பழங்காலந்தொட்டு பேச்சு வழக்கில் இருந்த கதைகளின் வடிவமாகும். இந்தக் கதைகள் வரலாறு, சமூக, சமய முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மூதாதையர்களின் வரலாறு இஸ்ராயேல் நாட்டை உருவாக்கியதில் உள்ள பங்கு முக்கியமானதாகக் கருதப்பட்டது. பழங் காலக் குறிப்புகள் இந்த மூதாதையர் ஒவ்வொருவரையும் பற்றிக் குறிப்பிடாவிட்டாலும் அவர்கள் அந்தக் காலத்திலே வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

3.மூதாதையர்களின் மதம்: இந்த மூதாதையர்கள் தங்களுக்குத் தோன்றி, வாக்குறுதி அளித்த ஆண்டவனைத் தொழுதனர். அந்தக் கடவுள், ''ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்'' என அழைக்கப்படுகிறார் (ஆதி 24:12; 26:24; 28:13; 32:9; 40:24; யாத் 30:6). மூதாதையரை ஆசீர்வதித்து அதன் மூலமாக பூமியிலுள்ள இனத்தையெல்லாம் அவர் ஆசீர்வதித்தார் (ஆதி 12:2-3; 18:18; 26:4; 28:14). இந்த ஆசீர்வதித்துத் தந்த வாக்குறுதி கானான் நாட்டையும், சந்ததியையும் தருவதில் அடங்கியுள்ளது (ஆதி 12:7; 13:14-17; 15:4.18; 17:6-8; 22:16-18; 24:7; 26:3; 28:3; 28:13; 50:24). அவர் பாதுகாத்துக் காப்பாற்றுகிறார் [(ஆதி 19 (லோத்து); ஆதி 21 (இசுமயேல்); ஆதி 22 (ஈசாக்கு); ஆதி 28 (யாக்கோபு)];துன்புறுவோரின் கூக்குரலைக் கேட்கிறார் (ஆதி 18:20-21; 19:13; 21:15-19; 32:9-12). அவர் தம் பெயரைக் கூவியழைத்து விண்ணப்பிக்க விரும்புகிறார் (ஆதி 18:22-33).

இந்தக் கடவுள் மனிதனோடு தொடர்பு கொண்டுள்ள கடவுள். தனி மனிதனோடும், குடும்பத்தோடும் உறவு கொண்டிருக்கும்

இவர், மற்றக் கானானியத் தெய்வங்களினின்று மாறுபட்டவர். இடங்களோடு இவர் ஒன்றுபடாவிட்டாலும், இவர் தோன்றிய இடங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றன (ஆதி 12:7; 16:13-14; 22:14; 26:23-25; 28:10-22; 32:1-2; 22-32).

இக்கடவுள் மனிதனைத் தன்னோடு பிணைக்கப் பயன்படுத்தும் கருவி 'உடன்படிக்கை உறவு' ஆகும். பக்தன் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டால் (ஆதி 15:7-21; 17), அவன் இந்த உடன்படிக்கையின் கடமைகளான வழிபாடு, பிரமாணிக்கம், ஒழுக்கம் முதலியவைகளைக் கொண்டு ஒழுகவேண்டும்.

மூதாதையர் பட்டியல் (GENEALOGY)

1. இஃது ஓர் ஆள், குடும்பம் அல்லது இனத்தின் மரபுக் கொடி விவரிப்பாகும். விவிலிய மூதாதையர் பட்டியல் இரு வகைப்படும். ஒன்று நேர் கோடான அமைப்பைக் கொண்டுள்ளது. இஃது உயிர் வாழும் ஒருவரிடம் தொடங்கி அவரது மூதாதையருக்குச் செங்குத்தாகத் தலைமுறைத் தடம் காண்பதாகும் (லூக் 3:23-38; ரூத் 4:18-22). அல்லது ஒரு மூதாதையரிடம் தொடங்கி உயிர்வாழும் ஒருவருக்குச் செங்குத்தாகத் தலைமுறைத் தடம் காண்பதாகும் (மத் 1:1-17). மற்றொன்று பகுதி பகுதியாகப் பிரித்துக் கூறுவதாகும். இது பல உயிர்வாழும் நபர்களை ஒரு மூதாதையருடன் தொடர்புபடுத்துவதாகும் (யாத் 6:14-15). இரண்டிலும் இடைப்பட்ட பெயர்கள் விடப்படலாம், மாற்றி அமைக்கப்படலாம், உறவு முறைகள் மாற்றப்படலாம். இப்படிப்பட்டவைகளைச் சுமேரிய ஏடுகளில் காணலாம்.

இந்த மூதாதையர் பட்டியல்கள் குடும்பங்கள், நாடுகள், இனங்கள் போன்றவற்றுக்குள்ளான உறவுகளைக் கூறுகின்றன. இப்பட்டியல்களின் நோக்கம்: அ) உரிமைச் சொத்து போன்ற சட்டநோக்கோடு தனி நபரை அடையாளம் காட்டுவது; ஆ) மேல்குலத்தோர், அரசர்கள், குருக்கள் போன்றோரின் உரிமைகளையும் அவற்றிற்குரிய சலுகைகளையும் நிறுவுவது; இ) இனத்தூய்மைக்குச் சான்று அளிப்பது; ஈ) கடந்த காலத்தைச் சேர்ந்த மேன்மைமிக்க ஒருவரோடு உள்ள தொடர்பைப் பெருமையோடு எடுத்துக் காட்டுவது; உ) கடந்த காலத்தில் ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட முக்கியமான நியமனத்துக்குத் தடம் கண்டு நிகழ்காலத்தில் அப்பதவியைப் பலப்படுத்துவது என்பனவாகும்.

2. **பழைய ஏற்பாடு:** எபிரேய வரலாறு, எல்லாருக்கும் மூதாதையரான ஆதாம் வரை தடம் காட்டுகிறது (ஆதி 51 தொ). நாடுகடத்தலுக்கு முந்திய பட்டியல்களும் ஆதாம் வரை செல்கின்றன. ஐந்நூலில் காணப்படும் பட்டியல்கள் பெரும்பாலும் தனிநபர் பற்றியதல்ல. அவை நாடுகள், நகரங்கள், ஆசிரியருக்குத் தெரிந்த மக்களின் தோற்றம், உறவுகள் பற்றிக் கூறுகின்றன; ஆனால் அவற்றைத் தனிநபர் மூதாதையர் பட்டியல் வடிவில் தருகிறது.

பழைய ஏற்பாட்டு மூதாதையர் பட்டியல்கள் முதன்மையாக ஆதியாகமத்திலும், முதலாம் நாளாகமத்திலும் காணப்படுகின்றன. ஆதியாகமப்பட்டியல் ஆதாம் (ஆதி 5), நோவா (ஆதி 10), ஈசாக்கு, யாக்கோபு வழியாக ஆபிரகாமின் தலைமுறைகளைக் கொடுக்கிறது. யாக்கோபின் பட்டியல் அவரின் மனைவிகள், வைப்பட்டிகளின் அடிப்படையில் பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது (46:8-27). யாத்திரை ஆகமம், லேவியரின் மூதாதையர் பட்டியலைக் கொடுக்கிறது. இதில் லேவியில் தொடங்கி, கோகத்தின் வழியாக, ஆரோன், மோசே ஆகியோரின் தந்தையான அம்ராம் வரை கொடுக்கப்படுகிறது (6:16-20). எண்ணிக்கை நூல் இஸ்ராயேலின் மக்கள் தொகைக் கணக்கெடுப்போடு தொடர்கிறது (எண் 26:5-50). முதலாம் நாளாகமம், ஆதாமில் தொடங்கி நாடு கடத்தல் வழியாக, மிகவும் பரந்த மூதாதையர் பட்டியல் வரிசைகளைக் கொண்டுள்ளது (1 நாள் 1-9). எஸ்ரா, நெகேமியா நூல்கள் நாடு திரும்பிய எஞ்சியோரின் மூதாதையர் பட்டியலோடு

இந்த விவரிப்பை முடிக்கின்றன (எஸ் 2:1-70; நெகே 7:6-63).

பண்டைய மேற்காசிய மக்களைப்போல, எபிரேயர்களும் இப்பட்டியல்களைத் தங்களது உரிமைச் சொத்தின் உரிமைகளை எண்பிக்கப் பயன்படுத்தினர் (எண் 27:1-11); புறத்திலிருந்த வந்தவர்களின் சமூக நிலையை மேன்மைப்படுத்தவும் (எண் 32:12; யோக 14:6; 15:13; 1 நாள் 2:18), அரச, வழிபாட்டு வரிசைமுறையை நிறுவவும் (1 நாள் 3; 2 நாள் 31:16-19; நெகே 7:43-45.46-56), அவர்கள் சமூகப் புவியியலை அமைக்கவும் (ஆதி 10), இப்பட்டியல்களைப் பயன்படுத்தினர்.

பொதுவாக ஆண்களின் பெயர்களே இடம்பெறுகின்றன. பெண்கள் மனைவி, வைப்பாட்டி என்ற முறையில் இடம் பெறுகின்றனர். இவர்களின் நிலை பின் வரும் சந்ததியினருக்குள்ளே உள்ள உறவையும் பதவி நிலையையும் சுட்டிக் காட்டுகின்றது. மனைவியின் பிள்ளைகள், வைப்பாட்டியின் பிள்ளைகளைவிட முக்கியமானவர்கள் ஆவர் (ஆதி 35:22-26). அரிதாகவே இப்பட்டியலில் பெண்கள் சுதந்தரமான நிலை கொண்டுள்ளனர் (எண் 26:23; 1 நாள் 2:16; 3:19). நாடு கடத்தலுக்குப் பின் எபிரேயர்கள் என்று உரிமை கொண்டாடியவர்களின், உடல் சார்ந்த தலைமுறையை (நெகே 7:61) அல்லது குருகுலச் சந்ததியை (7:63-65) எண்பிக்க இப்பட்டியல்கள் பயன்பட்டன. கலப்புமணத்திலிருந்து மக்களைத் தூய்மைப்படுத்த எஸ்ரா இந்தப் பட்டியல்களைப் பயன்படுத்தினார் (எஸ் 10).

முதலாம் நாளாகமம், பழைய ஏற்பாட்டின் மிகவும் நிறைவான பட்டியலைக் கொடுக்கிறது. இந்தச் சிக்கலான விவரிப்பை அமைக்க மறைநூல் (ஆதி 5:10-11; 9:2-16; நெகே 11:3-22), அதிகாரபூர்வமான மூதாதையர் பட்டியல்கள் (காண்க. 1 நாள் 4:33; 5:17; 9:1), படைக்கணக்கெடுப்பு ஏடுகள் (காண்க. 5:24), அரச நாளேடுகள் போன்ற அதிகாரபூர்வமான ஏடுகள் (காண்க. 27:24), திருமுறை சேராத இறைவாக்கு நூல்கள் (2 நாள் 12:15) போன்ற மூலங்களைப் பயன்படுத்துகிறது. அதன் மிகவும் பகுதி பகுதியாக்கப்பட்ட விவரிப்பு முறை பிற நாடுகளிலிருந்து இஸ்ராயேல் தேர்ந்தெடுக்கப்பட்டதையும் (1 நாள் 1), இறை மக்கள் என்ற அளவில் பன்னிரண்டு கோத்திரத்தின் சீர்மை நிலையையும் (1 நாள் 2-9) எடுத்துக் கூறுகிறது. இப்பட்டியல், நாடுகடத்தலுக்குப்பின் எஞ்சியோர் (யூதா, லேவி, பென்யமின்) இஸ்ராயேலின் வரலாற்றையும் தேர்ந்தெடுக்கப்படுதலையும் வழிபாட்டையும் தொடர்கின்றனர் என்ற உறுதிப்பாட்டை எடுத்துக் கூறுகிறது. இங்கு நாளாகம ஆசிரியர், இஸ்ராயேலின் தூய்மையைவிட, முடிந்த அளவுக்குப் பெரும் எண்ணிக்கையில் பலர் இறைமக்களுடன் சேர்ந்து கொள்ளும் பொருட்டு, இஸ்ராயேலின் விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறார். இந்த மூதாதையர் பட்டியல்கள் தாவீது அரசமரபு மற்றும் ஆலயத்தின் தொடர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன.

இந்தப் பட்டியல்களைத் தயாரித்தவர்கள், காலவரை பற்றிய வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும். அதாவது, எத்தனை ஆண்டுகளை உள்ளடக்கிய பட்டியல் என்றும், ஒரு தலை முறையின் காலம் என்னவென்றும் வரையறை செய்து கொள்ள வேண்டும். இத்துறையில் யூதர்கள் சிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்களின் கணக்குப்படி ஒரு தலைமுறையின் காலம் 30-இலிருந்து 40-ஆண்டுகள் வரை குறிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, பாலைவன யாத்திரையிலிருந்து சாலமோனின் ஆலயம் எழுப்பப்படும் வரை 480 ஆண்டுகள் எனக் குறிக்கப்பட்டது (1 அர 6:1). இது பன்னிரண்டு தலைமுறைகளைக் கொண்டதாகும். குறிப்பிட்ட இந்தக் கால இடைவெளிக்குள் குறிப்பிட்ட பெயர்கள் இணைக்கப்பட வேண்டும். இது பட்டியலின் ஆசிரியரது விருப்பப்படி அமைக்கப்பட்டது. இப்பட்டியல்களில் காணப்படும் முரண்பாடுகள், வெவ்வேறு மூலங்களிலிருந்து இவை தோன்றுவதால் ஏற்படுகின்

றன. விவிலியத்தில் காணப்படும் மூதாதையர் பட்டியல்கள் துல்லியமானவை அல்ல. அவற்றில் வருபவர்களின் உறவுகளைப் புரிந்துகொள்வது கடினம். ஏனெனில், உறவுகள் பல பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன (ஆதி 46:12; எண் 26:19-20; 1 நாள் 4:21; 2:34; 2:31; 3:19; எஸ் 5:2; ஆகா 2:2; மத் 1:12; லூக் 3:37).

3. **புதிய ஏற்பாடு:** இயேசுவின் மூதாதையர் பட்டியல்கள் மத்தேயு, லூக்கா நற்செய்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை பற்றி, **கிறிஸ்துவின் தலைமுறை அல்லது மரபு முறை** என்ற தலைப்பைக் காண்க.

மூதாதையர் மரபு (TRADITION OF THE ELDERS)

இது யூதப் பெரியோர்களின் வாய்மொழிப் போதகம் ஆகும். இது விவிலியத்தில் காணப்படும் எழுதப்பட்ட சட்டங்களுக்கு அளிக்கப்பட்ட யூத வாய்மொழிச் சட்டமாகும். இவை காலப்போக்கில் வெறும் சடங்கு, பாரம்பரியங்களுக்கான விளக்க உரைகளாக மாறிவிட்டன இச் சொற்றொடர் மத் 15:2; மாற் 7:3.5 (காண்க. அ.ப. 6:14; கலா 1:14) ஆகிய பகுதிகளில் வருகிறது. மத் 15:2-இல் இயேசுவைப் பற்றிய புகார் ஒன்று குறிப்பிடப்படுகிறது. அதாவது அவர் அவருடைய மூதாதையரின் மரபுகளை மீறுவதாகக் கூறப்படுகிறது. அதற்கு இயேசு கூறும் பதில்: ''இவ்வாறு உங்கள் மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்கி விடுகிறீர்கள். வெளிவேடக்காரரே உங்களைப் பற்றிப் பொருத்தமாகவே எசாயா இறைவாக்கு உரைத்திருக்கிறார்...'இம்மக்கள் என்னை உதட்டினால் போற்றுகின்றனர். அவர்கள் உள்ளமோ என்னைவிட்டுத் தொலைவில் இருக்கிறது. மனிதக் கட்டளைகளைக் கோட்பாடுகளாகக் கற்பிக்கின்றனர். இவர்களது இறையச்சம் வீண் என்கிறார்' என்றார்'' (மத் 15:6-9). இயேசு பலமுறை ராபிகளின் வாய்மொழிப் பாரம்பரியத்தை அலட்சியம் செய்திருக்கிறார் (மாற் 2:13-17). இயேசு வாய்மொழிப் பாரம்பரியத்தை முழுமையாக வெறுக்கவில்லை (மாற்கு 1:44). ஆனால் அவற்றின் தீமையான விளைவுகளை எதிர்த்துக் கண்டிக்கிறார். யூதர்களிடம் காணப்பட்ட மரபுகளில் மூதாதையர்களின் மரபு ஒன்றாகும்.

மூப்பர், பெரியோர் (ELDER)

1. இதைக் குறிக்கும் எபிரேயச் சொல், பெரிய தாடியையுடைய ஒருவரைக் குறிக்கும். எனவே மூப்பர்கள் வயது மிகுந்த, வளர்ச்சி பெற்ற மனிதர்களாவர், தாங்களாகவே அதிகாரம் உள்ளவர்கள். தங்கள் ஆட்தன்மையாலும், வீரத்தாலும், பதவியாலும் அதிகாரம் உள்ளவராவர். வலிமைமிக்க குடும்பங்களில் ஆதிக்கம் செலுத்துபவராக இருப்பர். ஒரு சமூகத்தின் தலைவர். இவர்கள் அந்தந்த இடங்களில் உயர் பதவியாளராகவும், ஆட்சி செய்பவராகவும் இருப்பர். பழங்கால கிரீசிலும் உரோமையிலும், எகிப்திலும் (ஆதி 50:7), மோவாபிலும், மிதியானிலும் (எண் 227) மூப்பர்கள் இருந்திருக்கின்றனர்.

2. **பழைய ஏற்பாடு:** மூப்பர்கள், குடும்பங்களின் தலைவர்களாவர்; கோத்திரங்களின் பிரதிநிதிகளாகவும் தலைவர்களாகவும் இருந்தனர். விடுதலைப் பயணம் தொடங்குமுன் மோசே இஸ்ரயேலர் மூப்பர்களுக்கு விடுதலை பற்றிய இறைவனது திட்டத்தை விளக்கிக் காட்டுகிறார் (யாத் 4:29). பிற்காலத்தில் பாலையில் பயணம் செய்தபோது மூப்பர்களோடு மோசே ஆலோசனை செய்கிறார் (லேவி 16:25). லேவி 4:15; 9:1-இல் மூப்பர்கள் வழிபாட்டுச் சடங்குகளில் உதவி செய்கின்றனர் (காண்க. யாத் 24:1.14). தனது மாமனாரின் ஆலோசனைப்படி, மோசே, நீதிவழங்குவதற்குத் தனக்கு உதவி செய்யும்படி, மக்கள் மேல் தலைவர்களை நியமிக்கிறார் (யாத் 18:24-26). பிற்காலத்தில் இறைவனின் தூண்டுதலின் பேரில், தனது பரந்த நீதிப் பொறுப்புகளைக் குறைக்க, மோசே எழுபது மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கிறார் (எண் 11:16.24).

பாலஸ்தீனத்தைக் கைப்பற்றியபின், பலவகையான மூப்பர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் சமூக அமைப்பில் கொண்டிருக்

கும் நிலைக்கு ஏற்ப முக்கியத்துவம் பெறுகின்றனர். இவர்கள் குடும்பங்களுக்கும் (2 சாமு 12:17; காண்க. ஆதி 50:7), நகரங்களுக்கும் (நீதி 8:14; ரூத் 4:2.4; 1 சாமு 11:3; 2 அர 10:1), பல கோத்திரங்களுக்கும் (நீதி 11:6. 7-8), வட, தென் இனக் கூட்டுகளுக்கும் (1 சாமு 30:26) தலைமை தாங்குகின்றனர். கோத்திரங்களின் மூப்பர்கள் அல்லது பெரியோர்களிடமிருந்து (உப 29;9; 31:28) அதிகாரிகளும் (யோசு 23:2; 24:1), தலத்து தனது நீதிபதிகளும் (உப 21:2; யோசு 8:33) வேறுபடுத்தப்படுகின்றனர். மூப்பர்கள் பல சட்டப்பிரச்சனைகளைத் தீர்மானித்தனர் (உப 21:2 தொ. 19 தொ; 22:15-18; 25:7-9); சட்டத்தை வாசிப்பதில் பங்கெடுத்தனர் (31:9). நீதிபதிகள் காலத்தில், உடன்படிக்கைப் பேழையைப் போர்க்களத்திற்குக் கொண்டுவர மூப்பர்கள் பரிந்துரைத்தனர் (1 சாமு 4:3). இவர்கள் இஸ்ராயேலில் அரசாட்சி முறை நிறுவப்படுவதற்குக் கருவியாக இருந்தனர் (8:4). இஸ்ராயேலின் மூப்பர்கள் தாவீதைத் தங்கள் அரசனாக ஏற்றுக்கொண்டனர் (2 சாமு 5:3). அரசாட்சிக்காலத்திலும் (1 சாமு 15:30; 2 சாமு 17:4.15), பிளவுபட்ட அரசாட்சிக்காலத்திலும் (1 அர 21:16) செல்வாக்குள்ளவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் அரசனின் ஆலோசகர்களாக விளங்கினர் (1 அர 20:7-8). தாவீது (நாள் 15:25) மற்றும் சாலமோன் காலத்தில் (1 அர 8:1.3 இணை) வழிபாட்டுச் சடங்குகளிலும், மோசே சட்டத்தை வாசிப்பதிலும் (2 நாள் 34:29 இணை) பங்கெடுத்தனர்.

யூதாவைச் சேர்ந்தவர்கள் பாபிலோனுக்கு நாடுகடத்தப்படுதலுக்கு, இம் மூப்பர்களும் ஓரளவு பொறுப்பாவர் (புல 4:16; காண்க யோவேல் 1:14). நாடு கடத்தப்பட்ட காலத்தில் மூப்பர்கள் தனித்துத் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தது (எரே 19:1). இவர்கள் அடிக்கடி எசேக்கியேலோடு காணப்படுகின்றனர்; ஆனால் இறைவனது வழிகாட்டுதலை எப்போது நேர்மையோடு விரும்பவில்லை (எசே 20:3). நாடுகடத்தலிலிருந்து திரும்பியபின் சீர்திருத்தப் பணிகளில் எஸ்ராவுக்கு மூப்பர்கள் உதவி செய்தனர் (எஸ் 10:8.14). இவர்கள்தான் ஆலயம் மீண்டும் கட்டப்பட்டபோது குறிக்கப்படும் ''யூத மூப்பர்களாக'' இருக்கலாம் (5:5.9; 6:14).

3. புதிய ஏற்பாடு: யூத உயர் ஆட்சிக் குழுவான சனேத்ரினில், மூப்பர்களும் இருந்தனர் (மத் 16:21 இணை). இவர்கள் சட்டம் (21:23) மற்றும் பாரம்பரியங்கள் (15:2 இணை) கடைப்பிடிக்கப்படுவதை மேற்பார்த்தனர். இயேசுவைக் கைது செய்து (26:3) விசாரணை செய்ததிலும் (26:57 இணை; 27:1), அப்போஸ்தவர்களை விசாரணை செய்ததிலும் (அ.ப. 4:5) மூப்பர்கள் பங்கெடுத்தனர்.

போற்றத் தகுந்த ஞானமிக்க முதியவர்களுக்கு அதிகாரம் வழங்கும் யூத வழக்கத்தைக் கிறிஸ்தவத் திருச்சபையும் பின்பற்றியது (1 திமொ 5:1; எபி 11:2). திருச்சபையின் தொடக்கத்திலிருந்தே தலைமைப் பொறுப்பு அளிக்கப்பட்ட மூப்பர்கள் இருந்தனர் (அ.ப. 11:30; 21:18; காண்க. யாக் 5:14). அப்போஸ்தலர் பணிநூல் எருசலேமில் நடந்த அப்போஸ்தவர் சங்கத்திலும் (அ.ப. 15:6.22), அதற்குப் பின்னும் (16 4) இவர்களின் செல்வாக்குக்குச் சான்று கூறுகிறது. திருச்சபை வளர்ச்சியில் எந்தக் கட்டத்தில் மூப்பர்கள், தியாக்கோன் மற்றும் ஆயர்களோடு சேர்ந்து பதவி வகிப்பவர்கள் ஆனார்கள் என்பது தெளிவாக இல்லை. பவுல் தம் காலத்தியத் திருச்சபைகளில் மூப்பர்களை நியமித்தார் (14:23); எபேசிய மூப்பர்களோடு உரையாடினார் (20:17). அப்போஸ்தலர் கால முடிவிலிருந்து, மூப்பர் பதவி இருந்தது என்பது உறுதியாகும் (1 திமொ 5:17; தீத் 1:5). 1 திமொ 4:14-இன்படி மூப்பர்கள், தங்கள் கைகளைத் தலைமேல் விரிப்பதால் கொடைகள் அளிக்கும் அதிகாரம் கொண்டிருந்தனர்.

தொடக்ககாலக் கிறிஸ்தவப் பாரம்பரியம், திருவெளிப்பாட்டில் வரும் இருபத்திநான்கு மூப்பர்களை (திருவெளி 4:4.10),

இஸ்ராயேல் மற்றும் திருச்சபையின் மூதாதையரான பன்னிரண்டு குல மூதாதையருடனும், பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடனும் தொடர்புபடுத்தியது. இதைவிட மேலாக, இவர்கள் 24 குருக்கள் மற்றும் 24 லேவியர் அமைப்புகளில் வானகத்தூதர்களின் சரிநிகர் படிவமாக உள்ளனர் எனலாம்.

மூலக் கட்டிகள் (TUMOURS)

இஃது ஒரு வகையான கொடிய தொற்று நோய். கொடிய நோய். கடவுள் இந்நோயினால் பெலிஸ்தியரை வதைக்கிறதை விவிலியத்தில் நாம் காண்கிறோம் (1 சாமு 5:6.9.12; 6:4-5.11.17). இந்நோய் எலிகளால் பரப்பப்படுகிறது. இந்நோய் குறிப்பாக மறைவிடங்களில் (அக்குளிலும், தொடை இணைப்புப் பகுதியிலும்) ஏற்படுகிறது.

மூலைக்கல் (CORNER STONE)

இரண்டு சுவர்கள் சேருமிடத்தை உறுதியாக்க அடித்தளத்தில் வைக்கப்படும் ஒரு பெரிய கல். சில இடங்களில் பாதுகாப்புக் கோபுரத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள கல்லைக் குறிக்கும். பழைய ஏற்பாட்டில் உறுதியாயிருப்பதையும், விசுவாசத்தையும் குறிக்கலாம். புதிய ஏற்பாட்டில் இயேசுவைக் குறிக்க மட்டுமே இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. பழைய ஏற்பாட்டில்: சாதாரணமாக இஃது அடிதளக் கல்லைக் குறிக்கின்றது (யோபு 38:6). இது குறிப்பிடத்தக்க முறையில் எசா 28:16-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தீயவர்கள் கட்டும் பொய்மையின் கட்டடத்தை யாவே கட்டும் விசுவாசிகளின் கட்டடத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. இப்பகுதியில் வரும் மூலைக்கல்லானது யாவேயாகவும், சாலமோனின் ஆலயமாகவும் புதுப்பிக்கப்பட்ட சமூகமாகவும், ஒரு மெசியா உருவமாகவும், புதுப்பிக்கப்பட்ட இஸ்ராயேலின் விசுவாசமாகவும் விளக்கப்பட்டிருக்கின்றது.

எசா 19:13-இல் வரும் இச்சொற்கள் கோத்திரங்களை உறுதியாக வைத்திருக்கும் தலைவர்களைக் குறிக்கின்றன (காண்க. நீதி 20:2). சங் 118:22-இல் உள்ள 'மூலைக்கல்' அனேகமாக 'மூலையின் மேலுள்ள' அல்லது கொத்தளத்தின் மேலுள்ள கல்லைக் குறிக்கலாம் (காண்க. செக் 4:7). செக் 10:7-இல் வரும் மூலைக்கல் புதிரானதாகும்.

2. புதிய ஏற்பாட்டில்: புதிய ஏற்பாட்டில் காணப்படும் 'மூலைக்கற்கள்' அனைத்தும் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டவை அல்லது பழைய ஏற்பாட்டின் பிரதிபலிப்புகள் ஆகும். சங் 118:22 என்ற பகுதி மத் 21:42; மாற் 12:10 லூக் 20:17; 1 பேதுரு 2:7; அ.ப. 4:11-இல் எடுத்துக் கூறப்படுகிறது. எசா 28:16 என்ற பகுதி 1 பேதுரு 2:6-இல் எடுத்துக் காட்டப்படுகிறது. இங்கு மூலைக்கல் கிறிஸ்துவே.

எபே 2:20, எசா 28:16-ஐ எதிரொலிக்கின்றது. இங்கே அடிப்படையாக அப்போஸ்தலர்களும் இறைவாக்கினர்களும், மூலைக்கல்லாகக் கிறிஸ்துவும் உள்ளனர். யூதப் பாரம்பரியத்தைப்போல், புதிய ஏற்பாட்டு விளக்கவுரையாளர்களும் இந்தப் பழைய ஏற்பாட்டு வாசகங்களுக்கு மெசியாப் பொருள் அளிக்கின்றனர். திருச்சபையின் விசுவாசம் நிலைகொள்ளும் அடித்தளம் கிறிஸ்துவே. இதை யூதர்கள் நிராகரித்துவிட்டனர். ஆனால், இஃது ஒன்றே நிலையான அடித்தளமாகும் என்று இந்த அடையாளம் கட்டி நிற்கிறது.

மூலையிலிருந்த மேல்மாடி (UPPER CHAMBER OF THE CORNER)

எருசலேமின் சுவர்கள் மீண்டும் அமைப்பது பற்றிய நெகேமியாவின் விவரிப்பில் வரும் இறுதியான பொருளாகும் (நெகே 3:31). இது நகரின் வடகிழக்கில் இருந்தது.

மூலை வாயில் (CORNER GATE)

இஃது எருசலேம் நகரத்தின் வாயில்களில் ஒன்று. நகரத்தின் வடமேற்கு மூலைக்கருகில் இஃது அமைந்துள்ளது. எப்பிராயிம் வாயிலுக்குக் கிழக்கே 400 முழத்தொலைவில் உள்ளது (2 அர 14:13; 2 நாள் 25:23). இதன் கோபுரங்கள் உசியா என்பவரால் கட்டப்பட்டன (2 நாள் 26:9).

எருசலேம் நகர் திரும்பக் கட்டப்படுவது பற்றிய நெகேமியாவின் விவரிப்பில் இதைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை.

மூன்றாம் நாள் (THIRD DAY)

இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என ஆதித் திருச்சபை நம்பியது. புதிய ஏற்பாட்டின் இரு குறிப்புகள் இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தாரெனக் குறிப்பிடுகிறது (அ.ப. 10:40; 1 கொரி 15:3-4).

இயேசு, தான் மூன்றாம் நாள் உயிர்த்தெழப் போவதை முன்கூறுவதாக நற்செய்திகள் கூறுகின்றன (மத் 16:21; 17:23; 23:19; லூக் 9:22; 18.33). இந்தக் கூற்றுகள் இயேசு கூறியதா அல்லது பிற்சேர்க்கையா என உறுதியாகக் கூற அறிஞர்களுக்கிடையே கருத்தொற்றுமை இல்லை.

மாற்கு 'மூன்று நாளைக்குப்பிறகு' என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார் (8:31; 9:31; 10:34). மூலத்தில் 'மூன்றுநாளைக்குப் பிறகு', 'மூன்றாம் நாள்' போன்ற சொற்றொடர்கள் ஒரே பொருளைத் தந்திருக்க வேண்டும். முதலாவது துல்லியமில்லாமல் இருக்கிறது. ஆகவே, இரண்டாவது சொற்றொடரே சரியானதாக இருக்க வேண்டும்.

யோவான் இந்தச் சொற்றொடரை உயிர்ப்போடு தொடர்புபடுத்தாமல் ''மூன்றாம் நாள்...இயேசு...தம் மகிமையை வெளிப்படுத்தினார்'' எனக் கூறுகிறார் (யோவா 2:1.11).

மூன்று இளைஞர்களின் பாடல் (SONG OF THE THREE YOUNGMEN)

இப்பாடல் எபிரேய வாசகத்தில் இல்லை. கிரேக்க, இலத்தீன் வாசகங்களில் தானி 3:23-க்கும் 3:24-க்கும் இடையில் காணப்படுகிறது. ஆகவே, பிற்சேர்க்கை யாகக் கருதப்படும்.

இப்பாடல் அசரியாவின் செபத்திற்குப் பின் வருகிறது. இதில், தானியேலின் தோழர்களான சதிரக்கு, மேசாக்கு, ஆபது நெகோ (அனனியா, மிசாவேல், அசரியா) ஆகிய மூவரும் தங்களைத் தீச்சூளையில் வியத்தகு முறையில் பாதுகாத்த இறைவனைப் புகழ்கின்றனர். ஆனால், அவர்கள் தீச்சூளையில் தள்ளப்பட்டது பற்றிப் பாடலில் குறிக்கப்படவில்லை. ஒரு வரியில் மட்டும் மூவருடைய பெயர்களும் எபிரேய வடிவில் குறிக்கப்படுகின்றன. மற்றப்படி இது, படைப்பவராயும் ஆலயத்தில் வழிபடப்படுபவராயுமுள்ள இறைவனுக்கு ஒரு போற்றுரைப் பாடலாகும். இதில் இஸ்ராயேல் மேல் பேரழிவு ஏற்படும்போது இறைவனின் நீதி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இறைவனுடைய பெயருக்காகவும், இஸ்ராயேலை அவர் அழிக்கமாட்டார் என்று குல மூதாதையர்களுக்கு அளித்த வாக்குறுதியின் பொருட்டும், விடுதலைக்காக மன்றாடப்படுகிறது. இப்பாடல் எதிரிகளைத் தண்டிக்கும் படியும் மன்றாடுகிறது.

இப்பாடல் சங் 103; 136; 148 ஆகியவற்றைத் தழுவி எழுதப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இஃது எங்கு, எப்போது, யாரால் எழுதப்பட்டது என்பது தெரியவில்லை. ஒருவேளை இஃது அந்தியோக்கு எப்பிபான் காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். கடந்த காலத்தில் மூதாதையர்களைக் கடவுள் காப்பாற்றியது போல், நிகழ்காலத்திலும் கடவுள் காப்பாற்றுவார் என்று இஸ்ராயேலருக்கு நம்பிக்கையூட்டுவது ஆசிரியரின் நோக்கமாகும்.

மூன்று விடுதி (THREE TAVERNS)

உரோமைக்குச் செல்லும் வழியில் உள்ள ஒரு தங்கும் இடம். இதன் வழியாக பவுல் பயணம் செய்திருக்கிறார் (அ.ப. 28:15).

மூன்று விடுதி, உரோமிலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ளது. சிசரோ, பல முறைகள் மூன்று விடுதியைக் குறிப்பிடுகிறார்; மேலும், அந்தியம் செல்லும் பாதை, ஆப் வழியை ஊடுருவிச் செல்லும் இடத்தில் உள்ள ஓர் இடம் என்றும் குறிப்பிடுகிறார்.

மெ

மெகிதா (MEHIDA - வாங்கப்பட்டவன்)

இவர் ஆலய ஊழியர்களான நெத்தினியரின், ஒரு குடும்பத் தலைவர்; இவர்கள் நாடுகடத்தலிலிருந்து செருபாபேலோடு நாடு திரும்பினர் (எஸ் 5:52; நெகே 7:54).

மெகிதோ (MEGIDDO - கூட்டமான, நெருக்கமான)

மெகிதோ, கடற்கரைச் சமவெளியையும், எசுதிரலோன் சமவெளியையும் இணைக்கும் கர்மேல் மலைத்தொடர் வழியாகச் செல்லும் பாதையில் உள்ளது. இது போர் முக்கியத்துவம் வாய்ந்த நெடுஞ்சாலையில் இருப்பதால் முந்திய காலத்திலிருந்தே மிகவும் முக்கியம் பெற்றிருந்தது. மெகிதோ மூன்றாம் துத்மோசு, முதலாம் சேத்தி, சிசாக்கு ஆகியவர்களால் கைப்பற்றப்பட்ட நகரங்களில் ஒன்றாகும். இவ்விடத்தில் கானானியர் துத்மோசை எதிர்த்தார்கள். எகிப்தைச் சார்ந்து இப்பகுதியில் வாழ்ந்த சிற்றரசர்கள் எகிப்துடன் கொண்டிருந்த கடிதத் தொடர்புக்கு அமர்னா கடிதங்கள் சான்று பகர்கின்றன.

யோசுவாவால் வெல்லப்பட்ட நகரங்களின் அட்டவணையில் மெகிதோவும் குறிப்பிடப்பட்டுள்ளது (யோசு 12:21). இந்த அட்டவணையில் பிற்காலத்தில் வெல்லப்பட்ட நகரங்களும் இடம் பெறுகின்றன. யோசு 17:11, மெகிதோ மனாசேயால் கானானியர்களிடமிருந்து கைப்பற்றப்படாமலிருந்த நகரங்களில் ஒன்று என்று கூறுகிறது (காண்க. நீதி 1:27). நீதி 6:19 மெகிதோவின் நீர்துறையைப் பற்றிக் கூறுகிறது. இச்சமயத்தில் இப்பகுதியில் மக்கள் வாழ்ந்தனர் என்று அறிஞர் பலர் கருதுகின்றனர். இதுவும் தொல்பொருள் ஆய்வுகளும் தெபோரா, பாராக்கு ஆகியோரின் போருக்குக் காலம் குறிக்க உதவுகின்றன. சாலமோன் அரசர் மெகிதோவைத் திரும்பவும் கட்டி (1 அர 9:15; 1 நாள் 7:29), அதைத் தன்னாட்டின் ஒரு மாவட்டத்தின் தலைமையகமாக்கினார் (1 அர 4:12). யூதா அரசன் அகசியா ஏகூவிடமிருந்து தப்பித்துச் செல்லும்போது மெகிதோவில் இறந்தான் (2 அர 9:27). யோசியா மெகிதோவில் நெக்கோ என்னும் அரசனால் கொலை செய்யப்பட்டார் (2 அர 23:29தொ; 2 நாள் 35:22 தொ); மெகிதோ சமவெளியில் அதாது - ரிம்மோனின் புலம்பல் பற்றிய குறிப்பு (செக் 12:11) தெளிவாக இல்லை.

மெகிதோ இருந்த இடம் தெல் ஏல்-முத்தேசெலீம் ஆகும். அங்கு அகழ்வாராய்ச்சி நடத்தியவர்கள் 20 குடியேற்ற நிலைகளைக் கண்டுள்ளனர். கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன் செப்புக்காலத்தில் அங்கு மக்கள் வாழ்ந்தார்கள் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் ஆயிரமாண்டுக் காலத்தில் பாதுகாக்கப்பட்ட சுவர்கள் தோன்றியுள்ளன. கி.மு. 2500-ஐ ஒட்டி இந்நகரம் அழிக்கப்பட்டது. ஆனால் காரணம் தெளிவாகத் தெரியவில்லை. இங்குக் கி.மு. 2100-க்கும், 1850-க்கும் இடைப்பட்ட மத்திய வெண்கலக் காலத்தில் கட்டப்பட்ட மூன்று கானானியக் கோவில்களும் ஒரு பீடமும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட எகிப்தியச் சிலையின் அடிப்பகுதி, எகிப்தியர்களின் செல்வாக்கு இங்குப் பழங்காலத்திலிருந்தே இருந்திருக்கிறது என்பதைத் தெளிவாக்குகிறது. சுமார் கி.மு. 1479-இல் இந்நகரம் துத்மோசால் அழிக்கப்பட்டு பின்கட்டப்பட்டு, வட பாலஸ்தீனத்தில் எகிப்தியர் ஆட்சியின் தலைமையகமாக்கப்பட்டது. பின் கி.மு. 1300-இல் முதலாம் சேத்தி என்பவனால் அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டது. பிற்கால வெண்கலக்காலத்தில், கி.மு. 1150-ஐ ஒட்டி இந்நகரம் வன்மையாக அழிக்கப்பட்டு, கி.மு. 1050-இல் குடியேறப்பட்டது. இந்த இடைவெளியை விளக்குவது கடினம். இக்காலத்தில் பாராக்கு, தெபோரா ஆகியோரின் போரை வைக்கின்றனர் அறிஞர் சிலர். இந்த அழிவு யாரால் ஏற்பட்டது என்பதற்கு வரலாற்று ஏடுகள் இல்லை.

ஆனால், இஃது இஸ்ராயேலரால் ஏற்பட்டது என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். இங்கு, சுமார் கி.மு. 1050-950-க்கு இடைப்பட்ட காலத்தில் பெலிஸ்தியர் வாழ்ந்தனர். பின் அது தாவீதால் கைப்பற்றப்பட்டது.

இந்நகர் இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்த காலத்தில் நன்கு கட்டப்பட்டிருந்தது. நகரின் சுவர்கள் கற்களால் கட்டப்பட்டன. இச்சுவரில் ஒரு வாயிலும், பல கோபுரங்களும் அமைக்கப்பட்டன. இங்கு ஆளுநனின் பெரிய அரண்மனையும், சுமார் 480 குதிரைகள் இருக்கக் கூடிய குதிரை இலாயமும் உண்டு. இந்நகரம் மூன்றாம் திகிலத் பிலேசரால் அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டது. சுமார் கி.மு. 350-இல் இப்பகுதி கைவிடப்பட்டது.

மெகிதோ சமவெளி (MEGIDDO, PLAIN OF)

மெகிதோவின் அருகிலுள்ள இஸ்ரியேல் சமவெளியின் ஒரு பகுதி. இது பெரும் புலம்பல்களின் இடமாகும். இறைவாக்கினர் செக்கரியாவின் புலம்பல் யோசியாவின் (2 நாள் 35:22) இறப்பையோ, போர்க்களத்தில் இறந்தவர்களையோ குறிக்கிறது (செக் 12:11).

மெகிதோவின் நீர்நிலை (MEGIDDO, WATERS OF)

மெகிதோவின் நீரூற்று, மெகிதோவின் அருகிலுள்ள ஒரு வற்றாத நீரோடை ஆகும். சீசராவுக்கும், பாராக்குக்கும் இங்குதான் போர் நடந்தது (நீதி 5:19).

மெகில்லோத்து (MEGILLOTH - புல் தாள் சுருள்)

முக்கியமான 5 சுருள்கள், திருவிழா நாட்களில் வாசிக்கப்பட்டன. இவை உன்னத சங்கீதம் (பாஸ்கா), ரூத்து (ஐம்பதாம் நாள்), புலம்பல் ஆகமம் (அபுமாதம், ஒன்பதாம் நாள்), திருவுரை நூல் (கூடாரத்திருவிழா), எஸ்தர் (பூரிம்) ஆகியவையாகும்.

மெகீர் (MEHIR - விடை, வாடகை)

யூதாவின் வம்சத்தாரில் ஒருவர். கெலூவின் மகனும், எஸ்தோனின் தந்தையுமாவார் (1 நாள் 4:11).

மெகுமான் (MEHUMAN - உண்மையான)

இவர் அகசவேர் அரசனுக்குப் பணிபுரிந்த ஏழு அண்ணகர்களில் ஒருவர் (எஸ்த 1:10).

மெகுயாவேல் (MEHUJAEL - அடிபட்ட)

இவர் இலாமேக்கின் மூதாதையரும், ஈராதின் மகனும், மெத்துசாவேலின் தந்தையும் ஆவார் (ஆதி 4:18). அறிஞர் சிலர் இவரையும் மகலலேலோடு ஒன்றாக்குகின்றனர் (5:12-13.15-17).

மெகேற்றபேல் (MEHETABEL - இறைவன் நன்மை செய்கிறார்)

1. இவள், ஏதோமின் அரசனான அதாரின் (அதாதின்) மனைவி ஆவாள் (ஆதி 36:39; 1 நாள் 1:50). இவள் மதிரேதின் மகளும், மேசகாபுவின் வழித்தோன்றலும் ஆவாள்.

2. இவள் பொய்த் தீர்க்கதரிசியான செமாயாவின் மூதாதையருள் ஒருத்தி. தோபியா, சன்பல்லாற்று ஆகியவர்கள் நெகேமியாவைக் கொலை செய்ய செமாயாவைப் பயன்படுத்தினர் (நெகே 6:10).

மெகோலாயர் (MEHOLATHITE)

இது சவுலின் மகளான, மேராபின் கணவனான அதிரியேலின் இனப்பெயராகும் (1 சாமு 18:19; 2 சாமு 21:8). இவர் பர்சில்லாயின் மகன். இப்பெயர், இவர் ஆபல் - மெகோலாவின் குடிமகனன்று என்று கட்டுகிறது. மேலும், சவுல் தனது அரசைப் பலப்படுத்த, கிலயாதைச் சேர்ந்த இந்த நகரத்தின் தலைவனோடு திருமண உறவு ஏற்படுத்திக் கொண்டதாகத் தெரிகிறது.

மெக்கராத்தியர் (MECHERATHITE)

மெக்கராத்தியர் என்பது 'ஏபர்' என்பவருக்குக் கொடுக்கப்பட்ட இனப்பெயராகும். இவர் தாவீதின் படை வீரர்களுள் ஒருவர். இச்சொல் அனேகமாக 'மாக்காத்தியர்' என்றுதான் இருந்திருக்க வேண்டும் (2 சாமு 23:24).

மெக்கோனா (MECONAH - அடித்தளம், ஓய்வு இடம்)

மெக்கோனா, யூதா நாட்டின் தென்பகுதியில் சிக்லாகு, அயின் - ரிம்மோன் ஆகிய

ஊர்களுக்கு இடையே உள்ள ஓர் ஊர் (நெகே 11:28). இவ்வூர் இருந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை. ஒருவேளை மத்மன்னாவுடன் அடையாளம் காட்டப் படலாம்.

மெசசபேல் (MESHEZABEL - இறைவன் விடுவிக்கிறார்)

1. நெகேமியாவின் காலத்தில், எருசலேமின் சுவரை மீண்டும் கட்டியவர்களில் ஒருவரான மெசுல்லாமின் மூதாதையர் (நெகே 3:4).

2. எஸ்ராவின் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மக்கள் தலைவர்களில் ஒருவர் (நெகே 10:21).

3. யூதாவின் குடும்பத்தைச் சேர்ந்த செரகுவின் வழிவந்த பெத்தகியாவின் தந்தை ஆவார் (நெகே 11:24).

மெசபொத்தாமியா (MESOPOTAMIA - ஆறுகளுக்கிடையிலுள்ள நாடு)

மெசபொத்தாமியா என்பது யூப்பிரத்தீசு, திகிரீசு நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியாகும். இதனுடைய நீண்ட வரலாற்றில் இதன் அரசியல் எல்லைகள் வேறுபட்டு இருந்தன. இது கிழக்கில் ஏலாம், மேதியா வரையிலும், வடக்கில் இக்காலத் துருக்கி வரையிலும், மேற்கில் கானான், எகிப்து வரையிலும் பரவியிருந்தது. ஏறக்குறைய இக்கால ஈராக்கு மற்றும் தென்கிழக்கு சீரியாவுக்குச் சமமானது. இங்கு முதன் முதலில் நாகரிகத்தைக் கொடுத்தவர்கள் சுமேரியர்கள் ஆவர் (கி.மு. 3000). இவர்கள் பொருளாதாரத்திலும், உலோக வேலைகளிலும், கற்களைச் செதுக்குவதிலும் சிறந்திருந்தனர். மற்ற நாடுகளோடு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். மெசபொத்தாமிய வணிகர்கள் அரசர்களின் ஆதரவினால் சட்டம், இலக்கியம் முதலியவற்றைப் பரவச் செய்தனர். எபிரேயர்கள் சமயம், இலக்கியம், வரலாறு முதலியவற்றில் மெசபொத்தாமியர்களைவிடச் சிறந்திருந்த போதிலும், வாணிபத்திலும், சட்டத்திலும் அவர்களை விடத் தாழ்ந்தவர்களாகவே இருந்தனர்.

எபிரேயர்கள், அவர்களுடைய வரலாறு முழுவதும் மெசபொத்தாமியாவுடன் தொடர்பு கொண்டிருந்தனர். குல மூதாதையர் பலர் காரானில் வாழ்ந்தார்கள் (ஆதி 11:31-12: 4; 24:10; 28:6தொ). நீதிபதிகள் காலத்தில் மெசபொத்தாமியாவின் அரசர் இஸ்ராயேலரை அடிமைப்படுத்தினர் (நீதி 3:8). அம்மோனியர், தாவீதுக்கு எதிராகப் போர் புரிந்த போது, மெசபொத்தாமியாவின் தேர்களையும், குதிரைகளையும், வாடகைக்கு அமர்த்தியிருந்தனர் (1 நாள் 19:6). அரக பிளவுபட்டிருந்தபோது அசீரியர்கள் இஸ்ராயேலரை மெசபொத்தாமியாவின் பல பகுதிகளுக்கு நாடு கடத்தினர். பாபிலோனில்தான் பழைய ஏற்பாட்டின் பெரும் பகுதியும், தால்மூதும் எழுதப்பட்டன. பெந்தகோஸ்தே நாளில் மெசபொத்தாமியாவைச் சார்ந்தவர்களும் அங்கு இருந்தனர் (அ.ப. 2:9). ஸ்தேவான், ஆபிரகாம் காரானுக்குமுன் மெசபொத்தாமியாவில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார் (7:2).

மெசலேமியா (MESHELEMIAH - யாவே சன்மானம் அளிக்கிறார்)

மெசலேமியா லேவியரும், கோரேயின் மகனும் ஆவார். இவர் வாயில் காப்போனாகப் பணிபுரிந்தார். இவர் செக்கரியாவின் தந்தை (1 நாள் 9:21; 26:1.2.9). 1 நாள் 26:14-இல் குறிப்பிடப்படும் 'செலேமியா' மெசலேமியா என்ற பெயரின் குறுகிய வடிவமாகும். 1 நாள் 9:7. 19. 31; எஸ் 2:42-இல் கூறப்படும் சல்லூம் இதே பெயரின் மறு வடிவம் ஆகும். இதுவும் ஒரே நபரைத்தான் குறிக்கும்.

மெசலோத்து (MESALOTH)

பாக்கீது, ஆல்கிமு ஆகியவர் யூதர்களின் மீது படையெடுத்தபோது, அர்பேலாவிலுள்ள மெசலோத்து என்னும் இடத்தைக் கைப்பற்றினர் (1 மக் 9:2).

மெசியா, கிறிஸ்து (MESSIAH. CHRIST)

I எபிரேயம், அரமேயிக் ஆகிய மொழிகளின் சொல்லான 'மெசியாவும்', கிரேக்கச் சொல்லான 'கிறிஸ்து'வும் 'அபிடேகம் செய்யப்பட்டவர்' என்ற ஒரே பொருளைத்

தருவன. அப்போஸ்தலர்கள் காலத்தில் இஃது இயேசுவுக்கே உரிய பெயராக மாறியது. அவருக்குரிய பிற சிறப்புப் பெயர்களின் சாரத்தையெல்லாம் இப்பெயர் தன்னகத்தே கொண்டு விளங்கியது. தாவீதின் மகனான மெசியாவின் வருகையை எதிர்பார்த்திருந்த யூத மக்களின் ஓராயிரங் கால நம்பிக்கைக்கும் இயேசுவுக்குமுள்ள நிலையான பிணைப்பை வெளிக்காட்டுவதும் இப்பெயரே. எனினும், கிறிஸ்து என்ற சொல்லுக்குப் புதிய ஏற்பாடு தரும் பொருட்செறிவு பழைய ஏற்பாட்டிலும் யூத மக்கள் பயன்படுத்திய 'அபிடேகம் செய்யப்பட்டவர்' என்ற சொல்லிலும் இல்லை. இயேசுவின் வாழ்க்கையிலும், வார்த்தைகளிலும் பொதிந்திருந்த சிந்தனைகளின் அடிப்படையில் புதிய ஏற்பாடு இப்பெயருக்கு இவ்விதக் கருத்துச் செறிவு அளித்தது. இப்பொருட் செறிவின் தன்மையைப் புரிந்துகொள்ள மூலச்சொற்களை ஆராய்வது அவசியமாகின்றது.

II *பழைய ஏற்பாடு:*

பழைய ஏற்பாட்டில் ''அபிடேகம் செய்யப்பட்டவர்'' என்ற சொல் அரசனுக்கே முதற்கண் இடப்பட்டது. ஆனால் பின்னர், வேறு சிலரையும், சிறப்பாக, குருக்களையும் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் பட்டது. எனினும், யூத மக்களின் இறையரசு நிறுவப்படும் இறுதிக்காலத்தைப் பற்றிய சிந்தனைகளிலும், நம்பிக்கையிலும் அதிகமான அடிச்சுவடுகளை விட்டுச் சென்றது முதல் வழக்கேயாகும்.

1. அரசனும் மெசியாவும்:

அ) வரலாற்றில் யாவேயால் அபிடேகம் செய்யப்பட்டவர்: இறை ஆவியால் பதவியில் அமர்த்தப்படுவதைக் குறிக்க அரசன் எண்ணெயால் அபிடேகம் செய்யப்பட்டான் (1 சாமு 9:16; 10:1.10; 16:13). இவ்வபிடேகம் இஸ்ராயேல் மக்களின் மத்தியில் இறைவனின் பிரதிநிதியாக ஆட்சிபுரியும் பணிக்காக மன்னனை அர்ப்பணித்தது. மன்னனின் முடிசூட்டு விழாவில் அபிடேகச் சடங்கு முக்கியமான இடத்தினைப் பெற்றிருந்தது (காண்க. நீதி 9:8). சவுல் (1 சாமு 9-10), தாவீது (2 சாமு 2:4; 5:3), சாலமோன் (1 அர 1:39), (அரசியல் நெருக்கடியில் பதவி ஏற்ற) சாலமோனின் சந்ததியார் (2 அர 11:12; 23:30) ஆகியோரின் முடிசூட்டு விழாக்களில் இச்சடங்கு முக்கிய இடம் வகித்தது. இவ்வாறு மன்னன் ''யாவேயால் அபிடேகம் செய்யப்பட்டவனானான்'' (2 சாமு 19:22; புல 4:20); அதாவது விசுவாசமுள்ள ஒவ்வொரு குடிமகனின் தனிப்பட்ட மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிமையுடைய புனித ஆளாகிறான் (1 சாமு 24:7.11; 26:9.11.23; 2 சாமு 1:14.16). ''இஸ்ராயேலின் எதிர்காலமே தாவீதின் அரச வம்சத்திலே தான் அடங்கியிருக்கின்றது என்று மொழிந்தார் நாத்தான் இறைவாக்கினர் (2 சாமு 7:12-16); அந்நாள் முதல் தாவீதுக்குப்பின் அரியணை அமர்ந்த ஒவ்வொரு அரசனும் நடைமுறையில் 'மெசியா'வாகத் திகழ்ந்தான். இம்'மெசியா'வின் மூலமே இறைவன் தம் மக்களின் நலன் கருதி வகுத்திருந்த திட்டத்தை நிறைவேற்றவும் விரும்பினார்.

ஆ) செபத்தில் அபிடேகம் செய்யப்பட்டவர்: பாபிலோனிய அடிமைத்தனத்திற்கு முன் எழுதப்பட்ட சங்கீதங்கள், அரச மெசியா இஸ்ராயேல் மக்களின் வாழ்விலும் விசுவாசத்திலும் சிறப்பான இடம் வகித்ததாகக் குறிப்பிடுகின்றன. மெசியா பெற்ற அபிடேகம், இறைவன் அவரிடம் காட்டும் தனிச்சலுகையின் அடையாளமாகும் (சங் 45:8); அவரை யாவேயின் சுவிகார மகனாக்குவதும் இவ்வபிடேகமே (சங் 2:7; காண்க. 2 சாமு 7:14). இனி இறைவனே அவரது வலிமையும் பாதுகாப்பும் என்பதும் உறுதி (சங் 18:51; 20:7; 28:8). அவருக்கு எதிராகச் சதிசெய்வது மடமையாம் (சங் 2:2); ஏனெனில், அவரை மீட்கவும் (அப 3:13), அவர் கரத்தை உயர்த்தவும் (1 சாமு 2:10) ஆண்டவர் தவறமாட்டார். அவர் நலனுக்காக மக்கள் மன்றாட்டு எழுப்பத் தவறவில்லை (சங் 84:10; 132:10). ஆனால், தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளின் அடிப்

படையில், அவருடைய அரச வம்சத்தை இறைவன் என்றும் நீடிக்கச் செய்வார் என்று நம்பப்பட்டது (சங் 132:17). இதனால் தான் எருசலேம் நகர வீழ்ச்சிக்குப்பின் யாவேயால் அபிடேகம் செய்யப்பட்டவர் புறவினத்தாரால் சிறைப்படுத்தப்பட்ட போது (புல 4:20), மக்கள் பெரிதும் குழப்பத்தில் ஆழ்ந்தனர்; புறவினத்தார் பழிக்கவும் தூற்றவும் ஆண்டவர் தம் மெசியாவைப் புறக்கணித்ததேன் என்று அங்கலாய்த்தனர் (சங் 89:39.52). தாவீது மன்னர் குலத்திற்கு நேர்ந்த இவ்வவமானம் மக்களின் இறைப்பற்றுக்குப் பெரும் சோதனையாக அமைந்தது. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தபின் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்குப் பின்கூட இச் சோதனை நீங்கியபாடில்லை. செருபாபேல் அரியணையேறியபோது மீண்டும் தாவீதின் அரசர்குலம் நிலைநாட்டப்பெறும் - என்ற நம்பிக்கை சிறிது உயிர் பெற்றது. ஆனால் செருபாபேல் ஒரு பொழுதும் மணிமகுடம் சூடவில்லை (ஆனால் செக் 6:9-14 இதற்கு எதிர்மாறாகக் கூறுகின்றது). எனவே, யூத மக்களுக்குத் தலைமை தாங்கிட இதற்குப் பின் அரச மெசியாவுக்கு இடமேயில்லை என்று தெரிந்ததும், எரிய ஆரம்பித்த நம்பிக்கை தீபமும் அணைந்து போயிற்று.

இ) இறுதிக்கால இயலில் யாவேயின் அபிடேகம் பெற்றவர்: தங்கள் காலத்து அபிடேகம் செய்யப்பட்ட மன்னர் நெறி தவறிய போதெல்லாம், இறைவாக்கினர் அவர்களைக் கடிந்து கொள்ளத் தவறவில்லை எனினும், அவ்வரியணையில் எதிர்காலத்தில் அமரவிருக்கும் மன்னன் ஒருவன்தான் இஸ்ராயேலுக்கு நல்வாழ்வளிப்பான் என்று நம்பிக்கையூட்டவும் அவர்கள் தவறவில்லை. ஆனால், அம்மன்னனை அவர்கள் மெசியா என்று பெயரிட்டு அழைக்கவில்லை என்பது உண்மைதான். பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பிவந்து இவ்வாறு இறைவாக்கினர் மக்களுக்கு உறுதி கூறும் இந்நாட்களில்தான் அரச மெசியாவைப் பற்றிய சிந்தனைகள் புதுவளம் பெறுகின்றன. தங்கள் காலத்து அபிடேகம் செய்யப்பட்டவரைக் குறித்து முன்பே பாடப்பெற்றிருந்த அரச சங்கீதங்களை மக்கள் புதிய கோணத்தில் காண ஆரம்பிக்கின்றனர். இப்புதிய சிந்தனைகளே பிற்காலத்தில் மெசியாவைப் பற்றித் திட்டவட்டமான கருத்துக்களை உருவாக்க வழிகோலின. மேலும், இச்சங்கீதங்கள் அவருடைய புகழ், போராட்டங்கள், வெற்றிகள் (காண். சங் 2) ஆகியவற்றை முன்னதாகவே எடுத்துரைக்கின்றன. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூதர்களில் அனேகர் (குறிப்பாக பரிசேயர்கள்) இத்தகைய பழைய ஏற்பாட்டுப் பகுதிகளின் அடிப்படையில் மெசியா வருவார் என்று நம்பி வாழ்ந்தனர். சாலமோனின் சங்கீதங்கள் என்ற நூலின் ஆசிரியர் (கி.மு. 63) தாவீதின் மகனான மெசியா வரவேண்டுமென (சால சங் 17:18) மன்றாடினார். யூத ராபிகளின் இலக்கிய உலகிலும் இதே கருத்து பரவலாகக் காணப்படுகிறது. இந்நூல்கள் அனைத்திலும் மெசியாவும் பண்டைய இஸ்ராயேல் மன்னர்களுக்குச் சரிசமமாகக் கருதப்படுகிறார். அவரது அரசு இறையாட்சி அமைப்புப் பணித்திட்டத்தில் நிகழ்கிறது. ஆனால் சாதாரண அரசியல் அமைப்பு கொண்ட அரசைத்தான் மக்கள் வெகுவாகப் புரிந்து கொண்டனர்.

2. 'அபிடேகம் செய்யப்பட்டவர்' என்ற சொற்றொடரின் பிற பொருட்கள்:

அ) பரந்த பொருளில் "யாவேயின் அபிடேகம் பெற்றவர்": தம் மக்களின் நலன் கோரி இறைவன் வகுத்துள்ள திட்டத்தை நிறைவேற்றும் பணிக்காக அபிடேகம் மன்னனைத் திருநிலைப்படுத்தியது. எவ்வித அபிடேகச் சடங்குமின்றி ஒருவர் ஒரு பணியை மட்டுமே மேற்கொள்ள அனுப்பப்படும்போது கூட குறிப்பாக, இவ்வேளைகளில் இறை ஆவி கொடையாக அளிக்கப்பட்டால், அவர் அபிடேகம் செய்யப்பட்டதாக பழைய ஏற்பாடு சிற்சில சமயங்களில் குறிப்பிடுகின்றது. இச்சந்தர்ப்பங்களில் அபிடேகம் என்ற சொல் பரந்த பொருளிலும், பொதுப்படையாகவும், உருவகப் பொருளிலும் பயன்படுத்தப்படு

கின்றது. இவ்வுருவகப் பொருளில்தான் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேலை மீட்க இறைவனால் அனுப்பப்பட்ட சைரசு ''யாவேயால் அபிடேகம் செய்யப்பட்டவர்'' என்று அழைக்கப்படுகிறார் (எசா 45:1). அவன் தன் நாட்டில் அரியணையேறியபோது பெற்ற வழக்கமான அபிடேகம், இறைவனின் பராமரிப்பில் எழுந்த இப்பணிக்காக அவரைத் தயார் செய்தது போல் அமைகிறது. மேலும், இறைவாக்கினர் எவரும் தங்கள் பணியை மேற்கொள்ள எண்ணெயால் அபிடேகம் செய்யப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டாரல்லர். எனினும் ''தனக்குப் பதிலாக எலிசாவை இறைவாக்கினராக அபிடேகம் செய்ய'' (1 அர 9:16), எலியா பணிக்கப் பெறுகிறார். எலியா தமது ஆவியின் இருமடங்கை எலிசாவுக்குக் கொடுப்பார் (2 அர 2:9) என்பது மேற்கூறிய அபிடேகத்திற்கு விளக்கமாக அமையக்கூடும். உண்மையில், ''எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க ஆண்டவர் என்னை அனுப்பியுள்ளார்'' என்று எசாயா இறைவாக்கினர் தாம் பெற்றதாகக் குறிப்பிடும் ஆவியின் அபிடேகம் இதுவே (எசா 6:1). ''யாவேயின் இறைவாக்கினர்'' என்ற தகுதியின் பொருட்டே இறைமக்கள் அனைவரும் அபிடேகம் செய்யப்பட்டவர்களாக அழைக்கப்படுகின்றனர் (சங் 105:15; காண்க. சங் 28:8; அப 3:13). ஆனால், இவ்வாறு மேலே கூறப்பட்ட வண்ணம் ''அபிடேகம் செய்யப்பட்டவர்'' என்ற சொல் வெவ்வேறு விதங்களில் பயன்படுத்தப்படுவது சிற்சில சமயங்களில் மட்டுமேயாகும்.

ஆ) அபிடேகம் செய்யப்பட்ட குருக்கள்: பாபிலோனிய அடிமைத்தனத்திற்கு முன் எழுதப்பட்ட நூல்களில் குருக்கள் அபிடேகம் செய்யப்பட்டதாக நாம் வாசிப்பதில்லை. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பித் தாயகம் வந்தபோது குருக்களின் செல்வாக்கு உயர்ந்தது. ஆட்சிபுரிய அரசன் இல்லாத அந்நாட்களில் தலைமைக் குரு சமுதாயத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கின்றார். எனவே, அவர் பதவிக்கென அர்ப்பணிக்கப்பட அபிடேகமும் செய்யப்படுகிறார். இச்சடங்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வண்ணம், ஆரோன் முதற்கொண்டே இது வழக்கிலிருந்ததாகப் பிற்காலத்துக் குருக்கள் பாரம்பரிய வாசகங்கள் குறிப்பிடுகின்றன (யாத் 29:7; 30:22-33; காண்க. சங் 133:2). பிற்காலத்தில் தலைமைக் குரு மட்டுமின்றி குருக்கள் யாவரும் அபிடேகம் செய்யப்படுவர் (யாத் 28:41; 30:30; 40:15). இக்காலமுதல் தலைமைக் குரு அபிடேகம் செய்யப்பட்ட குருவாகத் திகழ்கின்றார் (லேவி 4:3. 5. 16; 2 மக் 1:10); பிறகு, முற்கால மன்னர்களைப் போல் நடைமுறையில் 'மெசியா'வாகவே ஆகின்றார் (காண்க. தானி 9:25). இறுதிக்கால இயலில் குருத்துவமும் அரசும் இணைந்து செயல்புரியும் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. சில இறைவாக்கு வாசகங்களை நீடித்து (எரே 33:14-18; எசே 45:1-8; செக் 4:1-14; 6:13) சில குழுக்கள் எல்லாவற்றிற்கும் முதன்மை வகிக்க குருத்துவ மெசியாவும், இவ்வுலக காரியங்களுக்குப் பொறுப்பேற்க அரச மெசியாவும் ஆக இரண்டு மெசியாக்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்தனர் (12 பிதாப்பிதாக்களின் ஏற்பாடுகள், கும்ரான் ஏடுகள்). குறிப்பாக எஸ்ஸேனியர் குழுவினர் இரு மெசியாக்களை எதிர்ப்பதாகத் தெரிகின்றது. இதில் குருக்களின் செல்வாக்கு சிறப்புப் பெற்றுள்ளது.

இ) இறுதிக்கால இயலும் மெசியா கோட்பாடும்: யூதர்களின் இறுதிக்காலவியல் மெசியாவின் எதிர்பார்ப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தது. அரச மெசியாவைப் பெரும்பாலோரும், குருத்துவ மெசியாவை ஒரு சிலரும் எதிர்பார்த்தனர். யூதர்கள் கனவு கண்ட மெசியா அவர்களின் அன்றாட அல்லல்களிலிருந்து விடுவிக்கும் விடுதலை வீரர் ஆவார். ஆனால் மறைநூல்கள் கூறும் மெசியா, அதற்கு அப்பாற்பட்டவராய்த் திகழ்கின்றார். மறைநூல்கள், மெசியாவின் கீழ் இறையரசு நிலைநாட்டப்படுவதையும், அவர் ஆண்டவரின் ஊழியனாகவும், மனுமகனாகவும், மீட்பராகவும் தோன்றுவதையும் அறிவிக்கின்றன. இத்

தகைய பலவகையான சிந்தனைகளையும் மெசியாவின் (மெசியாக்களின்) எதிர்பார்ப்போடு ஒன்றுபடுத்திப் பார்க்கும் செயல் எளிதாகவோ, தெளிவாகவோ அமையவில்லை. இதையொட்டி இறைவாக்கினர் எழுப்பும் ஐயங்களை இயேசுவின் வருகையே தீர்த்து வைக்கும்.

III புதிய ஏற்பாடு:

1. இயேசுவும் மெசியாவை எதிர்நோக்கலும்:

அ) இயேசு பெற்ற பட்டம்: இயேசுவின் புனிதத்தையும், அதிகாரத்தையும், வல்லமையையும் கண்டு வியப்புற்ற (காண். யோவா 7:31) மக்கள் ''அவர் மெசியாவாக இருப்பாரோ?'' (யோவா 4:29; 7:40தொ), ''தாவீதின் மகன் இவரோ?'' (மத் 12:23) என்று தங்களையே கேட்டுக் கொண்டனர். மேலும், அவர் தம்மைப் பற்றித் தெளிவாகச் சொல்லும்படி அவரை வற்புறுத்தினர் (யோவா 10:24). எனவே, அவரைக் குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது (காண்க. 7:43). யூதத் தலைவர்களோவெனில், அவரை மெசியாவாக எவனாவது ஏற்றுக்கொண்டால், அவனைச் செபக்கூடத்திற்குப் புறம்பாக்க முடிவு செய்தனர் (9:22). ஆனால், அவருடைய அதிசய வல்லமையின் பயனை அடைந்தோரோ 'தாவீதின் மகனே' என்று உலகறிய உரக்கக் கூவினர் (மத் 9:27; 15:22; 20:30தொ). மேலும் 'நீரே மெசியா' என்று பலர் வெளிப்படையாக விசுவாச அறிக்கையிடலாயினர். இயேசுவின் திருமுழுக்கு நிகழ்ச்சிக்குப்பின் முதற் சீடர்கள் 'மெசியாவைக் கண்டோம்' என்றனர் (யோவா 1:41.45.49). 'உயிர்ப்பும் உயிரும் நானே' என்று இயேசு விளம்ப (11:27), மார்த்தாள் விசுவாச அறிக்கையிடுகின்றாள். ''நீங்களோ என்னை யாரென்று சொல்லுகின்றீர்கள்?'' என்ற கேள்விக்கு, ''நீர் மெசியா'' (மாற் 8:29) என்ற பேதுருவின் விசுவாச அறிக்கையை ஒத்தமை நற்செய்தியாளர்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றனர். இவர்கள் அனைவரின் விசுவாசமும் உண்மையானது; ஆனால், அவ்விசுவாசம் பக்குவம் பெற வேண்டியிருந்தது. ஏனென்றால், அவரைப் பிடித்துக்கொண்டு போய் அரசனாக்கும் (காண்க. யோவா 6:15) எண்ணங்கள் இன்னும் நீங்கவில்லை.

ஆ) இயேசுவின் மனநிலை: இது பற்றி இயேசுவோ தன்னடக்கமான போக்குடையவராக உள்ளார். மேலும், தமக்குத்தாமே அவர் மெசியா என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டாரல்லர். யோவா 4:25தொ இதற்கு ஒரு விதிவிலக்கு. (ஆனால், இங்கு மெசியா என்ற சொல் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் சமாரியர்களின் விசுவாசத்தைச் சுருங்கக் கூறுவதாக அமைகின்றது). 'தாவீதின் மகனே' என்று தம்மைக் கூவி அழைக்க அனுமதி அளித்தாலும், மெசியா வென்று தம்மைப் பேய் பிடித்தோர் அறிவிப்பதைத் தடை செய்கின்றார் (லூக் 4:41). சாதாரணமாக மற்றவர்கள் விடுக்கும் விசுவாச அறிக்கைகளை ஏற்றுக் கொள்கின்றார். ஆனால், பேதுருவின் விசுவாச அறிக்கைக்குப் பின் தான் மெசியா என்பதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென தம் சீடர்களைக் கேட்டுக்கொள்கிறார் (மத் 16:26). அக்கட்டத்திலிருந்து மெசியாவைப் பற்றித் தம் சீடர்கள் கொண்டிருந்த கருத்துக்களைத் தூய்மையாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றார். பாடுபடும் ஊழியனைப்போல் தமது மெசியாப் பணியை ஆரம்பித்து, மனுமகனைப் போன்று தமது உயிரைக் கையளித்து மகிமையில் புகுவார் (மாற் 8:3 இணை; 9:31 இணை; 10:33 தொ.இணை) என்று உணர்த்துகின்றார். இப்பொழுது சீடர்கள் மனச்சஞ்சலமடைகின்றனர். பிறகோ 'மனுமகன் உயர்த்தப்படும்' (யோவா 12:34) நிகழ்ச்சியை உரைக்கும்போது, யூதர்கள் தங்கள் மன அமைதியை இழப்பார்கள்.

எனினும், குருத்து ஞாயிறன்று தம்மைத் ''தாவீதின்மகனே'' என்று மக்கள் ஆர்ப்பரிக்க வேண்டுமென்று விட்டு விடுகின்றனர் (மத் 21:9). பிறகு, பரிசேயர்களோடு வாதாடும்போது 'தாவீதின் மகன்' (தாவீதுக்கு ஆண்டவராய் இருப்பதால்) தமது மூதாதையரைக் காட்டிலும் உயர்ந்தவர் என்பதை வலியுறுத்துகின்றார் இயேசு (மத் 22:41-46 இணை). இறுதியில் சமயத்தலை

வர்கள் அவரை விசாரணை செய்தபோது 'நீர் மெசியாவா' என்பதற்கு இயேசு பதில் சொல்லும்படி தலைமைக் குரு கட்டளை யிடுகிறார். இயேசுவோ அப்பட்டத்தை மறுக்காது 'தாம் இறைவன் வலப்பக்கத்தில் அமர்வதற்கென்றே பிறந்த மனுமகன்' என்று எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட கண்ணோட்டத்தில் விளக்கமளிக்கின்றார் (மத் 26:63 தொ). பாடுகளின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையே இறுதி யில் அவரை மரணத் தீர்ப்புக்குள்ளாக்குவ தற்கும் காரணமாக அமைந்தது. இவ்வாறு அவருடைய மெசியாப் பட்டத்தோடு (26:68; மாற் 15:32; லூக் 23:35.39) அரசர் பட்டமும் ஒரே சமயத்தில் இகழ்ச்சிக்குள் ளாயின. சீடர்கள் அவருடைய உயிர்ப் புக்குப் பின்னரேதான் அவர் எதை மறைத்துக் கொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ''மெசியா தாம் மாட்சி அடைவதற்குமுன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா?'' (லூக் 24:26). மெசியா பெற்ற மகிமை உலக மகிமையிலிருந்து உயர்ந்தது என்பதை உணர்ந்தனர். மெசியா பாடுபட்டு இறந்தோரிடமிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார்; பாவமன்னிப் படைய மனந்திரும்ப வேண்டுமென்று புறவினத்தார் அனைவருக்கும் அவர் பெய ரால் அறிவிக்கப்படும் (24.46) என்று மறைநூல் பகர்கின்றது.

2. இயேசுகிறிஸ்துவில் திருச்சபை காட்டிய விசுவாசம்:

அ) உயிர்த்த இயேசுவே கிறிஸ்து ஆவார்: பாஸ்கு அனுபவம் மெசியாவைப் பற்றிய தவறான கருத்துக்களைத் தகர்த்தெறியவே இளந்திருச்சபை இயேசுவே மெசியா - கிறிஸ்து என்று பறை சாற்றியது. இவ்விதம் பறைசாற்றுவதற்குக் காரணங்கள் இருந்தன. 'இயேசு உருவில் வந்தவரே அவர்கள் எதிர்பார்த்த கிறிஸ்து' என்று யூதர்களுக்குக் காண்பிக்க வேண்டியிருந்தது. இவ்விதம் காட்டுவதற்குப் பழைய உடன்படிக்கையும் புதிய உடன்படிக்கையும் தொடர்ச்சியானவை; அத்துடன், பழைய உடன்படிக்கையின் நிறைவே புதிய உடன் படிக்கை ஆகும் என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தனர். இச்சிந்தனைகளின்படி, தாவீதின் உண்மையான மகன் இயேசு ஆவார் (காண். மத் 1:1; லூக் 1:27; 2:4; உரோ 1:3; அ.ப. 2:29தொ; 13:23). அவர் தூய ஆவியின் வல்லமையால் தாயின் வயிற்றில் உருவான தருணத்திலிருந்தே (லூக் 1:35), தமது தந்தையான தாவீதின் அரியணையில் அமர நிச்சயிக்கப்பட்டவர் (1:32). அவரே இஸ்ராயேலரின் அரசுக்கு நிறைவு அளிக்கும் வகையில் வையகத்தில் இறையரசை நிலைநாட்டப் பிறந்தவர். ''வாக்களிக்கப்பட்ட தூய ஆவியைப்'' பெற்றவர் அவர் (அ.ப. 2:33). பிறகு, ''உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரான இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும், மெசியாவுமாக ஆக்கினார்'' (2:36). இவ்வாறு தமது உயிர்ப்பின் மூலம் இன்று இயேசு மன்னருக்குரிய மகிமையில் விளங்குகின்றார். இம்மகிமை இறைவனின் புதிய படைப்பைச் சார்ந்ததாகும். பழைய ஏற்பாட்டில் யாவேயினால் அபிடேகம் செய்யப்பட்டவர் பெற்ற சிறப்புகள் இம் மகிமையின் மங்கிய, தூர மாதிரியே ஆகும்.

ஆ) இயேசு கிறிஸ்து பெற்ற பட்டங்கள்: 'இயேசு' என்ற சொந்தப் பெயரோடு 'கிறிஸ்து' என்ற சொல் பிரிக்க முடியாதவாறு இணைந்தது. இதிலிருந்து 'கிறிஸ்து' என்ற சொல்லின் உட்பொருள் வெகுவாக விரிவடைந்தது. ஏனெனில், இயேசுவின் பண்புகளை எடுத்துரைத்த பிற பட்டங்கள் இச்சொல்லையே மையமாகக் கொண்டன. இறைவன் அபிடேகம் செய்தவரே ஆண்டவரின் புனித ஊழியனாகிய இயேசு (அ.ப. 4:27). எசாயா (53) கூறும் மாசுமறுவற்ற செம்மறியும் அவரே (1 பேதுரு 1:19; காண்க. 1 கொரி 5:7). இக்காரணத்தினால் தான் அவர் பாடுபட வேண்டுமென (அ.ப. 3:18; 17:3; 26:22தொ) முன்பே எழுதப் பட்டிருந்தது; இதையொட்டியே 2-ஆம் சங்கீதம் ''யாவேக்கும் அவர்தம் மெசியாவுக்கும் எதிராக'' (அ.ப. 4:25தொ; காண்க. சங் 2:1தொ) எழுந்த மாநில மன்னர்களின் சதியை முன்னதாகவே விவரித்தது. சிலு

வையில் அறையுண்டு (1 கொரி 1:23; 2:2), பாவிகளுக்காக இறந்த கிறிஸ்துவையே (உரோ 5:6தொ) பவுலின் நற்செய்தியாக அறிவிக்கின்றார். பேதுருவின் முதல் மடலும் வெகுவாக விவாதிக்கும் தலைப்பு மெசியாவின் பாடுகளாகும் (1 பேதுரு 1:11; 2:21; 3:18; 4:1.13; 5:1). அடுத்தபடியாக இறை ஊழியனின் பணியானது துன்புறுத்தப்பட்ட இறைவாக்கினரின் வாழ்க்கையைப் போன்று அமையும் என்று எசாயா நூல் எடுத்துரைக்கின்றது. இயேசுவும், இறைவாக்கினர் பெற்ற ஆவியின் அபிடேகத்தையே தாமும் பெற்றதாகத் தெளிவாகக் கூறுகின்றார் (லூக் 4:16-22; காண்க. எசா 61:1). அப்போஸ்தலர் பணியில் பேதுருவும், ''கடவுள் இயேசுவுக்குப் பரிசுத்த ஆவியையும் வல்லமையையும் அளித்து அபிடேகம் செய்தார்'' (அ.ப. 10:38) என்று குறிப்பிடுகின்றார்.

அடுத்தபடியாக, தமது சாவுக்கு முந்திய தினத்தில் இயேசுவும் தமது மனுமகன் பட்டத்தின் மேன்மையை எடுத்தியம்புகின்றார் (மத் 26:63தொ). அப்போஸ்தலர்களும் புதிய உலகை நிலைநாட்டும் மனுமகனாக இறுதிக்காலத்தில் இயேசு திரும்பிவரும் உண்மையை வலியுறுத்திப் போதித்தனர் (அ.ப. 1:11; காண்க. 3:20தொ; மத் 25:31.24). மேலும், மனுமகனுக்குரிய தகுதியில்தான் இயேசு இறைவனின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார் (அ.ப. 7:55தொ; திருவெளி 1:5.12-16; 14:14). மேலும், திருவெளிப்பாட்டுப் புத்தகம் இயேசுவை ஒரு குருவின் உருவில் படம் பிடித்துக் காட்டுகின்றது (திருவெளி 1:13). இத்தகைய உருவில்தான் மெசியா தோன்றுவார் என்று பிற்கால யூதர்கள் எண்ணினர். எபிரேயருக்கு எழுதப்பட்ட மடல் வெறும் சாயலான ஆரோனின் குருத்துவத்திற்குப் பதிலாக நிலையான வகையில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட இயேசுவின் குருத்துவத்தை வானளாவப் புகழ்கின்றது (எபி 5:5;...;7). அடுத்து ''இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்'' (லூக் 2:11; 2 கொரி 4:5 தொ) என்றும், ''நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து'' (அ.ப. 15.26) என்றும் குறிப்பிடுவது, இயேசுவுக்குத் தலைசிறந்த பட்டமாகிய ''ஆண்டவர்'' என்னும் பட்டத்தை அளிக்க யாரும் தயங்கவில்லை (காண்க. அ.ப. 2:36) என்பதைக் காட்டுகின்றது. மேலும், மானிட மகிமையைக் காட்டிலும் உயர்ந்த மகிமையை இயேசு பெற்றுள்ளார் என்பதற்கு அவருடைய உயிர்ப்பே மிகத்தெளிவாகச் சான்று பகர்ந்தது. எனவே, கிறிஸ்துவே உண்மையான இறைமகன் ஆகிறார் (உரோ 1:4); இதனால் அவரே கடவுளும் ஆகிறார் (உரோ 9:5; 1 யோவா 5:20). இவ்வாறு 'கிறிஸ்து' என்பது இயேசு பெற்ற பல பட்டங்களில் ஏதோ ஒன்று என்ற நிலை திருந்தி ஏனைய பட்டங்களையெல்லாம் சுருக்கித் தன்னகத்தே கொண்டு விளங்கும் அவருடைய சொந்தப் பெயராக மாறிவிடுகின்றது (1 கொரி 15:12-23-இல் எவ்விதப் பெயரடையுமின்றித் தனித்துப் பயன்படுத்தப்படுகின்றது). அவரால் மீட்புப் பெற்றவர்களுக்குக் ''கிறிஸ்தவர்கள்'' என்ற சிறப்புப்பெயர் தகுதி வாய்ந்ததே ஆகும் (அ.ப. 11:26).

மெசியா பற்றிய இரகசியம் (MESSIANIC SECRET)

புதிய ஏற்பாட்டு நூல்களின்படி இயேசு கடவுளின் மகனும், மெசியாவும் ஆவார் என்ற செய்தி அவர் உயிர்த்தெழும்வரை ஒரு சிறிய குழுவான சீடர்களைத் தவிர வேறு யாருக்கும் வெளிப்படுத்தப்படவில்லை என்று தோன்றுகிறது. இச்செய்தியைப் பிறரிடமிருந்து மறைத்து வைக்கும் போக்கு, குறிப்பாக மாற்கில், காணப்படுகிறது.

மாற்கின் நற்செய்தியின்படி, அசுத்த ஆவிகள் ''நீ கடவுளுக்கு உரித்தாக்கப்பட்டவர்'' என்று உரக்கக் கூவுகின்றன. அவைகள் பேசாதிருக்கும்படி இயேசு கட்டளையிடுகிறார் (மாற் 1:24-25; 3:11-12). மாபெரும் அருஞ்செயல்கள் செய்தபின், அவற்றைப் பிறருக்கு அறிவிக்கக்கூடாது என்று கட்டளையிடுகின்றார் (1:44; 5:43; 7:36; 8:26). செசரிய பிலிப்பியில் பேதுரு இயேசுவை மெசியா என்று விசுவாச அறிக்கை

யிட்டபின்னும், ஒளியுருவானபின்னும், தாமே மெசியா என்பதைத் தாம் மரித்தோரினின்று உயிர்க்கும்வரை பிறருக்குக் கூறலாகாது என்று பணிக்கிறார் (8:27-30; 9:9). அதேபோது தாமே துன்புறும் மானிட மகன் என்று போதிக்கிறார். ஆனால், இப்போதகத்தின் பொருளைச் சீடர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை (8:31-32; 9:30-32). இயேசு தமது உவமைகளைச் சீடர்களுக்கு விளக்கிக்காட்டும்வரை அவர்களுக்கு அவை மறைவாகவே உள்ளன (4:10-13.33-34). சிலசமயம் கூட்டத்திலிருந்து பின்வாங்கி இரகசியமாகப் பயணம் செய்கிறார் (7:24; 9:30). தமது சீடர்களுக்கு மட்டும் தனியாகப் போதகம் அளிக்கிறார் (4:10-11.33-34; 7:17-23; 8:21; 9:27 தொ. 31; 10:32 தொ; 13:3-37). பெரிய குருவின் முன் விசாரிக்கப்படும்போதுதான் மெசியா பற்றிய இரகசியம் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படுகிறது (14:62).

இந்தப் போக்கு, இயேசு நிராகரிக்கப்படுதலையும், அவரது போதனைகளில் சில தெளிவற்றவையாகத் தோன்றுவதையும் விளக்குவதாக நற்செய்தியாளர்கள் உணர்வதாகத் தெரிகிறது. சில பகுதிகள் அவர் நிராகரிக்கப்படுவதையும், மெசியா பற்றிய இரகசியத்தையும் அழுத்திக் கூறுவதாகத் தெரிகிறது (மத் 11:2-30=லூக் 7:18-35; 10:12-15.21-24). இந்த இரகசியம் புறவினத்தாருக்கும் யூதர்களுக்கும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் (உரோ 11:25; 1 கொரி 1:18-24; 2:6-9), ஆனால் கிறிஸ்தவர்களுக்கு இஃது ஒருபோதும் மறைபொருள் அன்று என்றும் (2 கொரி 3:12-18) பவுல் நம்புகிறார். லூக்காவின்படி, மெசியா பற்றிய பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் உயிர்ப்புக்குப்பின் வரை புரிந்து கொள்ளப்படவில்லை (லூக் 24:25-27. 44-48). யோவானின் நற்செய்தியில், திருமுழுக்கு யோவான் இயேசுவை உடனே அடையாளம் கண்டு கொள்கிறார். இயேசு தொடக்கத்திலிருந்தே சீடர்களுக்குத் தம் வரவை வெளிப்படுத்துகிறார் (1:29-51). ஆனால் அவர்கள் இப்போதகத்தின் பொருளை மெதுவாகவே புரிந்து கொள்கின்றனர். மேலறையிலிருந்து யூதாசு வெளியேறிய பின், இந்த இரகசியத்தை இயேசு விளக்கிக் காட்டுவதை யோவா 13-17-இல் காண்கிறோம்.

மெசியா பற்றிய இரகசியத்தை மறைத்து வைப்பது செயற்கையாகத் தோன்றுகிறது. அருஞ்செயல்களைப் பிறர் அறியா வண்ணம் மறைத்து வைப்பது கூடுமானதா? அப்படியிருந்தும் அவற்றைப் பிறருக்கு அறிவிக்காதிருக்கும்படி கட்டளையிடுகிறார் இயேசு. இக்கருத்து, மாற்கில் மட்டுமன்று, மத்தேயுவிலும் காணப்படுகிறது (மத் 9:27-31). இதற்கு விளக்கம் கூறுவது அவசியமாகும்.

இதற்கு விளக்கம் கூற முயன்ற பலரும் தோல்வியே கண்டனர் என்று கூற வேண்டும். ''ரீடு'' என்பவர் ஒரு வினோத விளக்கம் அளிக்கிறார். இதன்படி, இயேசு உயிர் வாழ்ந்தபோது மெசியா என்ற பட்டத்திற்கு உரிமை கொண்டாடவில்லை. இயேசுவின் மரணத்திற்குப் பின்புதான் இக்கருத்து ஆதிக்கிறிஸ்தவர்களுக்கிடையே எழுந்தது. அதை இயேசுவுக்குச் சூட்டி நற்செய்திகளில் இங்குமங்குமாகப் புகுத்திவிட்டது ஆதித்திருச்சபை என்றார் ரீடு. இக்கூற்றில் நற்செய்தியாளர்கள் பொய்யர்கள், உண்மையைக் கூறவில்லை என்ற குற்றச்சாட்டு தொக்கி நிற்கிறது. அஃதோடு இயேசு மரித்தோரிடையிலிருந்து உயிர்த்தல் முடியாத காரியம் என்ற கருத்தும் பின்னணியாக அமைந்திருக்கிறது.

நற்செய்தியாளர்கள் வாய்மைக்கும் நமது உண்மைகளுக்கும் ஊறு விளையாதபடி கீழ்க்கண்ட விளக்கம் அளிக்கலாம். இயேசுதான் மெசியா. ஆனால், மெசியாவைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்கும், பொதுமக்கள் கொண்டிருந்த கருத்துக்கும் பெரிய வேறுபாடு உண்டு. பொதுமக்கள் அரசியல், பொருளாதார விடுதலை அளிக்கும் மெசியாவை எதிர்பார்த்தனர். எத்தனை பேர் தாங்களே மெசியா என்று பொய்ப் பட்டம் சூட்டிக்கொண்டு மக்களிடையே

தோன்றியுள்ளனர்! இயேசுவின் காலத்தில் மெசியாவைப் பற்றிய கருத்து சிதைந்து இழிவடைந்து உருமாறியிருந்தது. இச்சூழ் நிலையில் பொதுமக்களிடம் சென்று ''நான் தான் மெசியா'' என்று கூறியிருந்தால் தவறாகப் புரிந்து கொண்டிருப்பர். துன் புறும் ஊழியரான மெசியாவை ஏற்றுக் கொள்ளார். மகிமை மிக்க ஆண்டவராகிய மெசியாவை அறிந்துகொள்ளும் மனப்பக்கு வம் அவர்கள் கொண்டிருக்கவில்லை. இரண்டையும் கொண்டுள்ள ஆன்மீக மெசி யாவை அறிந்து கொள்ளும் மனநிலை அவர்களிடம் இல்லை. அவர்களைப் படிப் படியாக மெசியாவின் உண்மைப் பண்பை அறியும்படி செய்ய வேண்டியிருந்தது.

அப்படிச் செய்ய தாம் மெசியா என்பதை இயேசு மறைத்து வைப்பது அவசிய மாயிற்று. அஃது அவர் கொண்ட ஒரு தந்திரமன்று; தாம்தான் உண்மையான மெசியா என்று வெளிப்படுத்த ஒரு நிபந் தனையாகும். இயேசுவைப் போலவே, அவரின் மெசியா என்ற பெயரும் இறைத் திட்டத்தில் மறைபொருள் மிக்கதாகும். இயேசு பாடுபட்டு உயிர்க்குமுன், அப் போஸ்தலர்களே இப்பட்டத்தின் உண்மைப் பொருளை அறியாதபோது பொதுமக்கள் எப்படி அறிவர்? ஆகையால் பொதுமக்களிட மிருந்து இப்பட்டத்தை மறைத்துத் தமக்குச் சாட்சிகளாக விளங்கப்போகிற சீடர்களுக்கு இக்கருத்தைப் பற்றிப் போதிக்கிறார்; அவர் களுக்குத் தெளிவாக்குகிறார். அவர்களும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு வரை இதன் உண்மைப்பொருளை நன்கு உணரவில்லை என்றே கூற வேண்டும். பிற்காலத்தில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றுடன் அவருடைய கூற்றுகளையும் ஒத்துப்பார்த்து உண்மைப்பொருளை உணர்கின்றனர். தாங் கள் மந்தபுத்தி உள்ளவர்களாயிருந்தும், பின்னர் ஆவியின் அருட்பொழிவால் இயே சுவை உண்மையான விதத்தில் அறிந்து போதித்ததையே நற்செய்தியாளர்கள் நமக்கு அளிக்கின்றனர்; தாங்களாக ஒன்றை யும் புனைந்து கூறவில்லை. இந்த மறைவு முறை ஆதித்திருச்சபையின் தந்திரமும் அன்று. ஆகையால்தான் நல்லெண்ணத் துடன் வாசிக்கும் எவரும் மறைபொருளி லிருந்து உண்மைப்பொருளை உணர்வதாக உணர்வர். இருளிலிருந்து ஒளிக்குச் செல்வ தாகவும், அறியாமையிலிருந்து உண்மை அறிவை அடைவதாகவும் உணர்வர். இவ் விதம் வாசகர்களிடையே தெளிவை உண் டாக்கவே, இயேசுவைப் பின்பற்றி, மறைவு முறையைப் பயன்படுத்தி, விரி வாகவும் நுணுக்கமாகவும் நற்செய்திகளை நற்செய்தியாளர்கள் எழுதினர். அதிலே ஆழ்ந்த கருத்துடைய வரலாறும், இறை யியல் நோக்கமும், இயேசுவே மீட்பர், மெசியா, கிறிஸ்து என்ற மெய்யான வெளிப்பாடும் உள.

மெசிலமோத்து (MESHILLEMOTH - ஈடுசெய் தல்)

1. இவர் எப்பிராயிம் கோத்திரத்தில் முன்னணியிலிருந்த ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர்; பெரக்கியாவின் தந்தை (2 நாள் 28:12).

2. ஒரு குரு. இம்மேரின் மகன் (நெகே 11:13). 1 நாள் 9:12-இல் இவர் மெசில்லமித்து என்றழைக்கப்படுகிறார்.

மெசுசா (MEZUZAH - கதவுநிலை)

இந்த எபிரேயச் சொல்லுக்கு, ''வாயில் நிலை'' அல்லது 'நிலை' (post) என்று பொருள். 1 அர 7:5-இல் இது 'சன்னல்' (window) என்று கூறப்படுகிறது. வழிபாட்டு இடத்தின் நிலைகளைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது (யாத் 12:7. 22-23; உப 6:9; 11:20). பழ 8:34, எசே 43:8-ஆகிய இரண்டிலும் இச்சொல் வீட்டின் நிலை களைக் குறிக்கின்றது. நீதி 10:3-இல் இச் சொல் நகரவாயிலின் நிலைகளைக் குறிக் கின்றது. இவற்றைத் தவிர மற்ற இடங் களில் இச்சொல் ஆலயத்தின் வாயில் நிலைகளைக் குறிக்கின்றது (1 அர 6:33; 1 சாமு 1:9; எசே 4:21; 43:8; 45:19). முற்றத்தைப் போலவே கதவு நிலைகளும் புனிதமாகக் கருதப்பட்டன. இவற்றில் இரத்தம் தெளிக்கப்பட்டது (யாத்

12:7.22-23); விவிலியத்தின் சில பகுதிகளும் பொருத்தப்பட்டன *(உப 6:9; 11:20)*.

மெசுல்லமேத்து (MESHULLEMETH - ஒப்புரவாதல், இறந்த குழந்தைக்கு ஈடு)

இவள், யூதாவின் அரசனான மனாசேயின் மனைவியும், ஆமோனின் தாயும் ஆவாள் *(2 அர 21:19)*.

மெசுல்லாம் (MESHULLAM - நண்பன், ஒப்புரவாதல்)

1. யூதாவின் அரசன் யோசியா ஆட்சியில் செயலாளனாக இருந்த சாபானின் தாத்தா ஆவார் *(2 அர 22:3)*.

2. இவர் செருபாபேலின் புதல்வர்களில் ஒருவர் *(1 நாள் 3:19)*.

3. இவர் பாசானில் வாழ்ந்த காத்தின் புதல்வர்களில் ஒருவர் *(1 நாள் 5:13)*.

4. இவர் பென்யமின் குலத்தைச் சேர்ந்த எல்பாகாலின் மகன் ஆவார் *(1 நாள் 8:17)*.

5. இவர் பென்யமின் குலத்தைச் சேர்ந்த சல்லூவின் தந்தை அல்லது முன்னோர் ஆவார் *(1 நாள் 9:7)*. இவரும் 4-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

6. இவர் பென்யமின் குலத்தைச் சேர்ந்த செபற்றியாவின் மகன். நாடு கடத்தலிலிருந்து முதலில் திரும்பியவர்களுள் ஒருவர் *(1 நாள் 9:8)*.

7. இவர் சாதோக்கின் மகனும், இலிகியாவின் தந்தையும் ஆவார் *(1 நாள் 9:11)*. குரு அசரியா *(9:11)* மற்றும் செராயா *(நெகே 11:11)* ஆகியோரின் மூதாதையர். இவரும் சல்லூமும் *(9)* ஒரே ஆளாக இருக்கலாம் *(1 நாள் 6:12-13; எஸ் 7:2)*.

8. இவர் சாதோக்கின் குடும்பத்தில் பிறந்த இம்மேரின் வீட்டைச் சேர்ந்த ஒரு குரு *(1 நாள் 9:12)*.

9. யோசியா அரசன் காலத்தில், ஆலயம் செப்பனிடப்பட்டபோது மேற்பார்வையாளர்களாய் இருந்த கோகாத்தின் புதல்வர்களுள் ஒருவர்; ஒரு லேவியர் *(2 நாள் 34:12)*.

10. இவர் லேவியர்களை அழைத்துவர எஸ்ராவால் கசிப்பியாவிலுள்ள இத்தோவுக்கு அனுப்பப்பட்ட மக்கள் தலைவர்களில் ஒருவர் *(எஸ் 8:16)*.

11. அன்னிய மனைவியரை நீக்கிவிடும் எஸ்ராவின் கோட்பாட்டை எதிர்த்தவர்களுக்கு ஆதரவு அளித்தவருள் ஒருவர் *(எஸ் 10:15)*. இவரும் 10-இல் குறிக்கப்பட்டவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

12. அன்னிய மனைவியை நீக்கிவிடக் கோரப்பட்டவருள் ஒருவர் *(எஸ் 10:29)*. இவர் 10-இல் அல்லது 11-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

13. இவர் பெரக்கியாவின் மகனும், எருசலேமின் சுவர்களைக் கட்டியவர்களில் ஒருவரும் ஆவார் *(நெகே 3:4.30)*. இவர் தன் மகளைத் தோபியாவின் மகன் யோகனானுக்கு மணமுடித்து வைத்தார் *(6:18)*.

14. இவர் பெசோதியாவின் மகனும், எருசலேமின் பழைய வாயிலைப் பழுது பார்த்தவர்களுள் ஒருவரும் ஆவார் *(நெகே 3:6)*.

15. இவர் எஸ்ரா, ஆண்டின் 7-ஆம் மாதம், சட்டங்களை மக்களுக்குப் படித்த போது, அவருடைய இடப் பக்கத்தில் நின்றிருந்தவர்களுள் ஒருவர் *(நெகே 8:4)*.

16. பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து திரும்பியபின், கடவுளுக்கும், மக்களுக்கும் இடையே செய்யப்பட்ட உடன்படிக்கையில் கையொப்பமிட்டவருள் ஒருவர் *(நெகே 10:7)*.

17. பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து திரும்பியபின், செய்யப்பட்ட உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மக்கள் தலைவர்களில் ஒருவர் *(நெகே 10:20)*.

18. யோயாக்கிம் தலைமைக் குருவாய் இருந்தபோது எஸ்ராவின் ஒரு குருகுலக் குடும்பத்துக்குத் தலைவராய் இருந்தவர் *(நெகே 12:13)*.

19. யோயாக்கிம் தலைமைக் குருவாய் இருந்தபோது கின்னத்தோனின் குருகுலக்

குடும்பத்தின் தலைவராய் இருந்தவர் *(நெகே 12:16).*

20. யோயாக்கிமின் காலத்தில் கருவூலங் களைக் கவனித்து வந்தவர் (நெகே 12:25).

21. இவர் எருசலேமின் புதிய சுவர் அர்ப்பணமாக்கப்பட்ட போது ஊர்வலத் தில் கலந்து கொண்டவர்களுள் ஒருவர் (நெகே 12:33).

மெசோசின் வெளிப்பாட்டுநூல் (MESSOS APOCALYPSE OF)

இது பண்டைக்கால எகிப்திய மொழி யில் ஞானவாத கோட்பாட்டினர் எழுதிய ஓர் நூல். இது 1946-இல் செனோபோஸ்கி யேன் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட் டது. இது பிளேட்டினு எதிர்த்துப் போரா டிய ஐந்து வெளிப்பாட்டு நூல்களில் ஒன்று எனப் போர்பெரி கூறுகிறார். இந்நூலின்படி மெசோஸ் என்பவர் பல காலமாக புரியாத புதிரான ஓர் ஆள். இவர் மோசேயும் அல்லர்; ஒரு மறைஞானி இடையாளரும் அல்லர். மாறாக, இவர் ஞானவாதக் கோட்பாட்டுக்காட்சியாளர் அல்லது ஒரு தீர்க்கதரிசி ஆவார்.

மெசோபாபு (MESHOBAB - *சீர்திருத்துதல், மீண்டும் அமைத்தல்)*

இவர் சிமியோனுடைய புதல்வர்களில் ஒருவர். இவர் தம் குலத்தவருடன் எசேக் கியா காலத்தில் கெதோரில் உள்ள மேய்ச் சல் நிலங்களை உடைமையாகக் கொண் டார் (1 நாள் 4:34-41).

மெட்சோபயா (MEZOBAITE)

தாவீதின் படையிலிருந்த வலிமை மிக்க வீரர்களுள் ஒருவரான யகசியேலுக்குச் சூட்டப்பட்ட பெயர் (1 நாள் 11:47).

மெதக்கம்மா (METHEG - AMMAH)

இது 2 சாமு 8:1-இல் வரும் பொருள் விளங்காத சொற்றொடர். இஃது ஒரு வேளை தாவீது பெலிஸ்தியரை வென்ற இடமாக இருக்கலாம். இதற்கு இணையான 1 நாள் 18:1, இதைக் ''காத் நகரையும் அதன் கிராமங்களையும்'' என்று கொண் டுள்ளது.

மெதான் (MEDAN - *போராட்டம்)*

மெதான், ஆபிரகாம் - கெத்தூராள் ஆகியவர்களின் மூன்றாம் மகன் (ஆதி 25:2; 1 நாள் 1:32). ஆகவே, ஓர் அராபியக் குழுவின் பெயர். மெதான் என்னும் இப் பெயர் 'மிதியான்' என்னும் பெயருக்கு முன் குறிப்பிடப்பட்டு இருப்பதால், அது மிதியான் என்பதன் திரிபு அடைந்த படிவ மாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. 'மதான்' என்று அழைக்கப்படும் அராபியக் கடவுள் இருந்ததாக அப்து-அல்மாதான் என்னும் குடும்பப் பெயரிலிருந்து தெரிய வருகிறது. மூன்றாம் திகிலத்பிலேசர் கி.மு. 732-இல் சீரியாவில் 'பதான்' (Badan) *என் னும் நகரைக் கைப்பற்றினார். இது தேமா என்னும் ஊரின் தெற்கே உள்ளது. அராபிய மொழியில், பல சமயங்களில் மெய்யெழுத் துகள் 'ப'* (B) *வும், 'ம'* (m) *வும் மாற்றிக் கொள்ளப்படுவதால் 'பதான்' என்பது 'மெ தான்' என்று அழைக்கப்படலாம் என்று எண்ணப்படுகிறது.*

மெத்துசவேல் (METHUSHAEL)

காயின் மரபுவழியில், மெகுயாவேலின் மகனும், இலாமேக்கின் தந்தையுமாவார் (ஆதி 4:18). அறிஞர் சிலர் குருக்கள் பாரம்பரிய மெத்துசேலாவுக்கு யாவே பாரம்பரிய சரிநேர் படிவமாக இவரைக் கருதுகின்றனர்.

மெத்துசேலா (METHUSELAH - *வேலின் மனிதன், சேலாவை வழிபடுபவர்)*

இவர் சேத்து வழியாக ஏனோக்கின் மகனும், இலாமேக்கின் தந்தையும் ஆவார் (ஆதி 5:21-27; 1 நாள் 1:3). பெரும் வெள்ளத்திற்கு முன், மிக நீடிய காலம் (969 ஆண்டுகள்) வாழ்ந்தவராகக் கருதப் படுபவர். இயேசுவின் மூதாதையருள் ஒரு வராவார் (லூக் 3:37).

மெபிபொசேத்து (MEPHIBOSHETH - *மானக் கேட்டைத் தூவுபவன், மானக்கேட்டின் வாயிலிருந்து)*

1. இவர் சவுலுக்கும், அவரது வைப் பாட்டியும் அய்யாவின் மகளுமான இரிசா பாவுக்கும் பிறந்தவர். இவரையும் இவரது

சகோதரர் அர்மோனியையும், சவுலின் மக ளான மேராபுக்குப் பிறந்த 5 புதல்வர் களையும் தூக்கிலிடும்படி, தாவீது கிப யோனியர்களிடம் கையளித்தார். மெபிபொ சேத்தின் தாய், கடவுளின் கோபம் போய் விட்டது என்பதற்கு அறிகுறியான மழை விழும் வரை, பிணங்களைப் பாதுகாத்து வந்தாள். பின் எலும்புகளை எல்லாம் ஒன்றாகக் கூட்டி கீசின் கல்லறை அருகில் புதைத்தனர் *(2 சாமு 21:10-14; காண்க. யோசு 9).*

2. இவர் சவுலின் மகன் யோனத்தானின் மகன். சவுலின் வழித்தோன்றிய இவன் இயற்பெயர் மெரிபகால் என்று கருதப்படு கிறது *(1 நாள் 8:34).* மெபிபொசேத்துக்கு ஐந்து வயது நடக்கும்போது அவனுடைய தந்தை இறந்தார். இதைக் கேட்ட அவ னுடைய செவிலித்தாய் ஆபத்தினின்று தப்பிக்க விரைந்தாள். அப்போது அவன், அவளின் கைகளிலிருந்து தவறிக் கீழே விழவே இரண்டு கால்களும் முடமாயின *(2 சாமு 4:4).* இதன்பின் அவன் தாவீதின் அரண்மனையில் வளர்ந்தான். அவனுடைய சிற்றப்பன் இசுபகால் இறந்த பின், ஆட் சிக்கு வரக்கூடிய வாரிசு மெபிபொசேத்து என்றாலும், அதை அவன் பொருட்படுத்தா மல், இருக்கும் பாதுகாப்பே போதும் என்று இருந்தான். தாவீது, தம் கருணை யால் மெபிபொசேத்தை அழைத்து, சவு லின் சொத்து முழுவதையும் அவனுக்குத் தந்து, அவனைச் சவுலின் ஊழியர்களுள் ஒருவனான சீபாவின் பாதுகாப்பில் இருக்கச் செய்தார் *(2 சாமு 9).* எருசலேமில் அப்சலோமின் கலகம் நடக்கும் வரை மெபிபொசேத்துக்கு எல்லாம் நன்றாக அமைந்தது. எருசலேமிலிருந்து தப்பித்துச் சென்றபோது, தாவீதுக்குச் சீபா ஏராளமான அன்பளிப்புப் பொருட்களைக் கொடுத்தான். சீபாவின் கொடைகளில் தாவீது மயங்கி, மெபிபொசேத்தின் எல்லாச் சொத்துகளையும் சீபாவுக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டான் *(2 சாமு 16:1-4).* தாவீது அப்சலோமின் கலகத்தை அடக்கிய பின் மெபிபொசேத்து போரி னின்று திரும்பிவரும் தாவீதை யோர்தா னின் அருகில் சந்தித்து, தன் வருத்தத்தைத் தெரிவித்தான். அவன் ஏன் எருசலேமி லேயே தங்கியிருந்தான் என்று தாவீது கேட்டபோது, மெபிபொசேத்து, சீபாவின் சதியை வெளிப்படுத்தி, தாவீது அவனுக் குக் காட்டிய தனிப்பட்ட அன்புக்கு நன்றி கூறினான். சீபா, மெபிபொசேத்துக்கு இளமையில் பல பணிகளைச் செய்ததால், சொத்தை ஆளுக்குப் பாதியாகக் கொடுக்க தாவீது கட்டளையிட்டான். அதற்கு மெபி பொசேத்து ''என் தலைவராகிய அரசர் சமாதானமாய்த் தம் வீடு திரும்பி வந்திருக் கும்போது அவன் எல்லாவற்றையுமே எடுத் துக் கொள்ளட்டும்'' என்றான் *(2 சாமு 19:30; காண்க. 19:24-29).*

யோனத்தானும், தாவீதும் சேர்ந்து எடுத்த வாக்குறுதியின்படி தாவீது சவுலின் மற்ற மக்கள் அனுபவித்த இறப்பினின்று மெபி பொசேத்தை விடுவித்தார் *(2 சாமு 21:7; 1 சாமு 20:12-17).* மெபிபொசேத்துக்கு மீக்கா என்ற மகன் இருந்தான் *(2 சாமு 9:12).* இவனிலிருந்து ஒரு புகழ் மிக்க குடும்பம் தோன்றியது *(1 நாள் 8:35; 9:41).*

மெபுன்னாய் (MEBUNNAI - *பலமாகக் கட்டப்பட்ட)*

இது தாவீதின் 30 வலிமை மிக்க போர்வீரர்களின் குழுவில் ஒருவரின் பெயர் *(2 சாமு 23:27).* இவருக்கு ஊசாயியர் என்ற பட்டப்பெயரும் அளிக்கப்படுகிறது. மற்ற இடங்களில் இவர் சிபகாய் என்றழைக்கப் படுகிறார் *(2 சாமு 21:18; 1 நாள் 11:29; 20:4; 27:11).*

மெமுக்கான் (MEMUCAN - *தேற்றுபவர்)*

அகசவேர் அரசனின் அவையில் அரச னுக்கு ஆலோசனை கூறி வந்த, பாரசீகம், மேதியா ஆகிய நாடுகளைச் சார்ந்த 7 இளவரசர்களில் இவரும் ஒருவர் *(எஸ்த 1:14.16.21).*

மெம்பிசு *(MEMPHIS)*

மெம்பிசு, நைல் நதியின் மேற்குக் கரையிலுள்ள இக்காலக் கைரோ என்னும்

நகரிலிருந்து தெற்குத்திசையில் சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ளது. இது வட எகிப்தின் மிகவும் பழைமை வாய்ந்த நகரங்களுள் ஒன்று.

மெம்பிசு, பாரம்பரியத்தின்படி, மெனஸ் என்பவரால் சுமார் கி.மு. 2800-இல் கட்டப்பட்டது. மெம்பிசு என்ற சொல்லுக்குப் பல பொருள் கொள்ளப்பட்டாலும், 'நல்லது நிலைத்திருக்கிறது' என்றுதான் பொருள் கொள்ளப்படுகிறது.

முதல் இரண்டு எகிப்திய அரச மரபு காலத்தில் இந்நகரம் அரசியல் செல்வாக்குப் பெற்ற நகரமாக இருந்தது. மூன்றாம் நான்காம் அரச மரபின்போது இஃது எகிப்தின் தலைநகரமாகவும், அரசர்களின் உறைவிடமாகவும் இருந்தது. பிற்காலத்தில் இஃது அரசர்களின் உறைவிடமாக இல்லாவிட்டாலும் முக்கியத்துவம் உடையதாக இருந்தது. அந்நகரத்தின் இடுகாடு பல பார்வோன்களால் கட்டப்பட்ட பிரமிடுகளைக் கொண்டுள்ளது. இவை 18 மற்றும் 19-ஆம் அரசமரபு பார்வோன்களால் கட்டப்பட்டவை. இது பலமுறை எத்தியோப்பியர்களாலும், அசீரியர்களாலும், பாரசீகர்களாலும் கொள்ளையடிக்கப்பட்டது. மகா அலக்சாந்தர் கி.மு. 332-இல் எகிப்தை வென்று அலக்சாந்திரியா நகரை அமைத்தது, மெம்பிசுவின் அழிவிற்கு முக்கிய காரணமாகும். பின்னர் கி.பி. 638-இல் அராபியர்களால் கைரோ அமைக்கப்பட்டது. மெம்பிசுவின் மீதம் இருந்த பொருட்கள் கைரோவைக் கட்டப்பயன்படுத்தப்பட்டன.

மெம்பிசு, எசா 19:13; எரே 2:16, ஓசே 9:6-இல் குறிப்பிடப்படுகின்றது. எரே 46:14-இல் குறிப்பிடப்படும் பாபிலோனியப் படையெடுப்பு நடந்ததாகத் தெரியவில்லை. மெம்பிசுவின் அழிவு எரேமியா, எசேக்கியேல் ஆகிய இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்டது (எரே 46:19; எசே 36:3.16). ஆனால், இங்கு மெம்பிசு என்று பெயரைக் குறிப்பிடாமல் எகிப்தின் ஒரு நகரம் என்று குறிப்பிடப்படுகின்றது. எரே 44:1, மெம்பிசுவில் யூதர்கள் வாழ்ந்தார்கள் என்று கூறுகின்றது. கி.மு. 587-இல் யூதாவின் வீழ்ச்சிக்குப் பின் யூதர்கள் குடியேறிய நகரங்களில் இதுவும் ஒன்று.

மெம்மியு குவிந்து (MEMMIUS, QUINTUS)

இவர் உரோமைத் தூதுவர் ஆவார். தித்து மானியு என்னும் தூதுவருடன், யூத மக்களுக்கு ஒரு கடிதத்தைக் கொண்டு வந்தார் (2 மக் 11:34). இவர்களைப் பற்றிய வேறு குறிப்புகள் வரலாற்றில் இல்லை. கடிதம் பற்றிய நிகழ்ச்சியை ஒரு கட்டுக்கதையாகச் சிலர் கருதுவர்.

மெயாரா (MEARAH - குகை)

சீதோனின் கிழக்கிலுள்ள மூகார் ஏசின் என்று வழங்கப்படும் குகையும், மெயாராவும் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இது யோசுவாவால் கைப்பற்றப்படாது விடப்பட்ட இடங்களில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது (யோசு 13:4).

மெயோனத்தாய் (MEONOTHAI - என் குடியிருப்பு)

இவர் யூதாவின் கோத்திரத்தைச் சார்ந்த ஒத்னியேல் என்பவரின் மகனும், ஒபிராவின் தந்தையும் ஆவார் (1 நாள் 4:13-14.)

மெயோனியர் (MEUNIM, MEUNITES - குடியிருப்பு)

இவர்கள் பெத்ராவிலிருந்து தென்கிழக்காக 20 கி.மீ. தொலைவிலுள்ள மாஆன் என்னும் இடத்தில் வாழ்ந்த அரேபிய இனத்தவர்கள். ஒருவேளை இவர்களும் மாவோனியர்களும் ஒரே குழுவைக் குறிக்கலாம் (நீதி 10:12). இவர்கள் அம்மோனியருடன் சேர்ந்து கொண்டு யூதாவுக்கு எதிராகப் படையெடுத்தனர். யோசபாத்து படையைத் திரட்டி தெக்கோவாவின் கிழக்கில் சீசு ஏற்றத்தின் அருகே வென்றார் (2 நாள் 20:1-23). மெயோனியரின் தாய்நாடு, ஏதோமின் கிழக்கு எல்லையிலுள்ள கோட்டைக்கருகில் உள்ளது. ஊசியா இவர்களை நசுக்கினார் என்னும் குறிப்பிலிருந்து இவர்கள் மீண்டும் தொல்லை கொடுத்தனர் என்பது தெளிவாகிறது (26:7). இதிலிருந்து

அவர்கள் யூதாவின் தெற்குப் பகுதியில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. எருசலேமிலிருந்து நாடு கடத்தப்பட்டு, திரும்பி வந்தவர்களின் பட்டியலில் இந்தப் பெயரும் குறிப்பிடப்படுகிறது (எஸ் 2:50; நெகே 7:52).

மெய்க்காப்பாளர் (BODYGUARD)

ஒரு மனிதனைக் காப்பதற்காக படைக்கலமேந்திய இன்னொரு மனிதன். சாதாரணமாக, ஓர் அரசனுக்கு மெய்க்காப்பாளன் இருப்பான். அவன் நேரடியாக அரசனுக்குப் பொறுப்புடையவன் ஆவான். சவுலின் மெய்க்காப்பாளர்களுக்குத் தாவீது தலைவனாக இருந்தார். காத்தின் அரசன் ஆக்கிகவிற்குத் தாவீது மெய்க்காப்பாளனாக இருந்தார் (1 சாமு 22:14; 28:2). யோயாதாவின் மகன் பெனாயா என்பவர் தாவீதின் வீரமிக்க முப்பதின்மரில் ஒருவர். இவர் தாவீதின் மெய்க்காவலர்களுக்குத் தலைவனாகவும் இருந்தார் (2 சாமு 23:23; 1 நாள் 11:25). பார்வோனின் மெய்க்காப்பாளருக்குப் போத்திபார் தலைவனாக இருந்தார் (ஆதி 37:36; 39:1). நெபுசரதான், அரியோக்கு ஆகியோர் நெபுகத்னேசருடைய மெய்க்காப்பாளரின் தலைவர்கள் என அழைக்கப்படுகின்றனர் (2 சாமு 25:8; எரே 39:9 தொ; 52:12 தொ; தானி 2:14). செதேக்கியா தனிப்பட்ட அரண்மனைப் பாதுகாவலர்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. இவர்கள் தங்கியிருந்த இடத்தில்தான் எரேமியா ஒரு காலத்திற்குச் சிறை வைக்கப்பட்டிருந்தார் (எரே 32:2; காண்க. நெகே 3:25; 12:39).

மெய்க்காப்பாளர் தலைவன் (SENTRY)

ஆயுதம் ஏந்திய காவலாளி; நுழைவாயிலின் குறிப்பிட்ட இடத்தில் நின்றுகொண்டு உள்ளே வருபவர்களையும், வெளியே செல்பவர்களையும் கண்காணித்து வருபவன். விவிலியத்தில் அனனியாவின் பேரனும் செலேமியாவின் மகனும் ஆன இரிய்யா மட்டுமே மெய்க்காவலர் தலைவன் என்று அழைக்கப்படுகின்றான் (எரே 37:13-14).

மெரமோத்து (MEREMOTH - உயர்ச்சி, உச்சி)

1. இவர் எஸ்ரா, நெகேமியா ஆகியவர்கள் காலத்தில் வாழ்ந்த ஒரு குரு. இவர் உரியாவின் மகனும் அக்கோசின் பேரனும் ஆவார். முதன் முதலில் இவருடைய குடும்பம் குருகுல வம்சத்தைச் சார்ந்தது என்பதை எண்பிக்க முடியவில்லை (எஸ் 2:61; காண்க. நெகே 3:4). பிற்காலத்தில் அவர்களுடைய குடும்பம் அங்கீகரிக்கப்பட்டு, ஆலயத்தில் பணி செய்யவும், எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டியெழுப்பவும் அனுமதிக்கப்பட்டனர் (எஸ் 8:33; நெகே 3:4. 21).

2. இவர் பானியின் மகன். எஸ்ரா அவர்களுடைய அயல் நாட்டு மனைவியரை விலக்கிடுமாறு கேட்டுக் கொண்டவர்களுள் ஒருவர் (எஸ் 10:36).

3. நெகேமியாவின் தலைமையில் புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படுவதில் பங்கு பெற்ற ஒரு குரு (நெகே 10:5). இவரும் 1-இல் குறிக்கப்படுபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

4. இவர் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த ஒரு குரு (நெகே 12:3).

மெரயோத்து (MERAIOTH - கிளர்ச்சி செய்யும், பிடிவாதமுடைய)

1. இவர் ஆரோனின் குலத்தில் பிறந்த ஒரு குரு (1 நாள் 6:6-7.52). அனேகமாக இதே நபர்தான் 1 நாள் 9:11; நெகே 11:11 ஆகியவற்றில் குறிப்பிடப்படுகிறார் எனக் கருதப்படுகிறது. நாளாகமப் பாரம்பரியம் அவரைச் சாதோக்கு மற்றும் எஸ்ராவின் மூதாதையருள் ஒருவர் எனக் குறிப்பிடுகின்றது (எஸ் 7:3).

2. ஒரு குரு. அகித்தூபுவின் மகனும் சாதோக்கின் தந்தையும் அசரியா (1 நாள் 9:11) அல்லது செராயாவுக்கு (நெகே 11:11) முன்னோர். அறிஞர் சிலர், இவரை 1-இல் கூறப்பட்டவரோடு அடையாளம் காண்கின்றனர்.

3. நாடு கடத்தலுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த பெரிய குரு யோயாக்கிம் காலத்தில், எல்காய் தலைமை தாங்கிய ஒரு குரு குலம் (நெகே 12:15).

மொராத்தயிம் (MERATHAIM - இரட்டிப்புக் கிளர்ச்சி செய்யும்)

யூப்பிரத்தீசு, திகிரீசு ஆகிய நதிகள் சேர்ந்து பாரசீக வளைகுடாவில் கொட்டும் வாயிலின் அருகில் தெற்குப் பாபிலோனில் உள்ள ஒரு பகுதி (எரே 50:21). பாபிலோனியப் பெயர் ''இரட்டிப்புக் கிளர்ச்சி'' என்று பொருள்படும். இங்கு, சொல்லாடலாகப் பயன்பட்டுள்ளது.

மெராயா (MERAIAH - யாவே வாக்களித்துள்ளார்)

பெரிய குரு யோயாக்கிமின் காலத்தில் ஒரு குருகுலத்தின் தலைவராய் இருந்த செராயாவின் புதல்வர்களில் ஒருவர் (நெகே 12:12).

மெராரி (MERARI - கசப்புத்தன்மை)

1. இவர் லேவியின் மூன்றாவது மகனும், கேர்சோன் மற்றும் கோகாத்து ஆகியோரின் தம்பியும் ஆவார் (ஆதி 46:11; யாத் 6:16; எண் 3:17; 1 நாள் 6:1.16; 23:6). இவருடைய புதல்வர்களான மக்லி, மூசி (யாத் 6:9; எண் 3:20; 1 நாள் 6:19) ஆகியவர்களிலிருந்துதான் மெராரியர்கள் தோன்றினர்.

2. இவர் யூதித்தின் தந்தை ஆவார்; ஓசுவின் மகன் (யூதி 8:1; 16:7).

மெராரியர்கள் (MERARITES)

மெராரியர்கள், மெராரியின் வம்சத்திலிருந்து தோன்றிய லேவியர் குலம். இவர்களைப் பற்றிய செய்திகள் குருக்கள் பாரம்பரிய ஆசிரியராலும் நாளாகமத்தின் ஆசிரியராலும் தரப்படுகின்றன.

1. யாத்திரை மற்றும் நாட்டை வெற்றி கொண்ட காலம்: பாலைவனத்தில் உடன்படிக்கைக் கூடாரம் அமைக்கப்பட்டபோது, மூன்று முக்கிய குடும்பங்களான கேர்சோனியர்களும், கோகாத்தியரும், மெராரியர்களும் கூடாரத்தைக் கவனித்துக்கொள்ளவும், தூக்கிச்செல்லவும் வசதியாக, கூடாரத்தைச் சுற்றி வாழ்ந்தனர். மக்லியர், மூசியர் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட மெராரியின் குடும்பத்தில் ஒரு மாதமும் அதற்கு மேற்பட்ட வயதுமுடைய 6200 ஆண்களும், 30 வயது முதல் 50 வயது வரையுள்ள 3200 ஆண்களும் இருந்தனர் (எண் 3:33-34; 4:42-45). இவர்கள் உடன்படிக்கைக் கூடாரத்தின் வடக்கே வசித்தனர். இவர்கள் கூடாரப்பலகைகளையும், அதன் தண்டுகளையும், பாதங்கள், தூண்கள், மண்டபத்தைச் சுற்றியுள்ள தூண்கள், பாதங்கள், முளைகள், கயிறுகள் ஆகியவற்றையும் கவனித்துக் கொள்ள வேண்டும் (எண் 3:35-37; காண்க. 4:29-33). இதைச் செய்ய அவர்கள் 4 வண்டிகளையும், 8 மாடுகளையும் பெற்றார்கள் (எண் 7:8; காண்க. 10:17). இஸ்ராயேல் மக்கள் பாலஸ்தீனத்தில் நுழைந்தபின், மெராரி வம்சத்தார் ரூபன், காது, செபுலோன் ஆகிய கோத்திரங்களிடமிருந்து 12 நகரங்களையும், ஓர் அடைக்கல நகரையும் பெற்றார்கள் (யோசு 21:7; 34-40;காண்க. 1 நாள் 6:63.77-81).

2.முடியாட்சியின்போது: தாவீது உடன்படிக்கைப் பெட்டகத்திற்குத் தனி இடத்தைத் தயாரித்துக் கூடாரத்தை அமைத்த பின், மெராரியின் புதல்வர்களில் 220 பேரைப் பெட்டகத்தை எருசலேம் வரை தூக்கிவர அசாயாவின் தலைமையில் நியமித்தார் (1 நாள் 15:6). மெராரி வம்சத்தைச் சார்ந்த சிலர் வாயில் காப்போராகவும் பணிபுரிந்துள்ளனர் (1 நாள் 26:10.19). கி.மு. 725-இல் எசேக்கியா வழிபாட்டு முறைகளைத் தூய்மைப்படுத்தும்படி கட்டளையிட்டபோது, இதில் கீசும், அசாரியாவும், மெராரி வம்சத்தின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர் (2 நாள் 29:12). இதைப் போலவே கி.மு. 621-இல் யோசியா ஆலயத்தைச் செப்பனிட்டபோது மெராரியின் புதல்வர்கள் யாகத்தும், ஒபதியாவும் மேற்பார்வையாளர்களாய்ப் பணிபுரிந்தனர் (2 நாள் 34:12).

3. நாடுகடத்தப்பட்ட பின்: மக்லியின் வம்சத்தவரான செரேபியாவும் மற்ற மெரா

ரியரும் எஸ்ராவுக்கு ஆலய ஊழியத்தில் உதவி செய்தனர் (எஸ் 8:18-19).

மெரிபத்து - காதேசு (MERIBATH - KADESH)

இது காதேசு பர்னேயா என்ற பெயரின் மற்றொரு வடிவம் (எண் 20:1-3; 27:14; உப 32:2.51; எசே 47:19; 48:28). காண்க. மெரிபா.

மெரிபா (MERIBAH - போராட்டம், வாக்கு வாதம்)

மெரிபா, சின் பாலைவனத்தில் மோசேக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் வாக்குவாதம் நடந்த இடமாகும் (எண் 20:1-13). இங்கு மோசே பாறையினின்று நீர் வரச் செய்தார். இங்குதான் பாரம்பரியத்தால் பாதுகாக்கப்படாத இரகசியமான தவற்றை மோசே செய்தார் (எண் 20:12). காதேசும், மெரிபாவும் ஒன்று என்று கருதப்படுகிறது. மெரிபத்து - காதேசு என்பதும் இவ்வொற்றுமையை எண்பிக்கிறது (எண் 27:74; உப 32:51; எசே 47:19; 48:28). சங் 81:9 மெரிபாவில் நடந்த சோதனை பற்றிப் பேசுகிறது. சங் 95:8-இல் மெரிபாவும், மாசாவும் இணையாகக் கூறப்படுகின்றன. உப 33:8-இல் லேவிக்குக் குருத்துவம் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்நிகழ்ச்சி பாரம்பரியத்தால் உறுதி கூறப்படவில்லை. மெரிபா என்னும் சொல் வாக்குவாதத்தையும், சண்டையையும் குறிக்கும். எனவே, இச்சொல் காதேசின் பொருளான 'தீர்ப்பின் நீரூற்று' என்பதுடன் ஒத்துப்போகின்றது. எசே 47:19; 48:28-இல் இது தெற்கில் ஓர் எல்லையே ஆகும்.

மெரிபாகால் (MERIBBAAL)

மெரிபாகால், மெபிபொசேத்தின் இயற்பெயர். இப்பெயரின் உண்மைப்படிவம் மெரிபாகால். முடியாட்சியின்போது பாகால் என்னும் பெயருடன் மற்றப் பெயர்களைச் சேர்த்து வைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்தது. கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் பாகால் வழிபாட்டோடு நடந்த போராட்டத்துக்குப்பின் ''பாகாலால் அன்பு செய்யப்பட்டவன்'', என்னும் பொருள் படும் பெயர், ''பாகாலின் எதிரி'' என்று பொருள்படும்படி மாற்றப்பட்டது. இது பிற்காலத்தில் திரிபு அடைந்து மெபிபொசேத்து என்றாயிற்று. இதைப் போலவே எருபாகால் என்பது எருபொசேத்து என்றும், இகபாகால் என்பது இகபொசேத்து என்றும் மாற்றப்பட்டன.

மெருகூட்டிப் பளபளப்பாக்கு (GLAZING)

சீரா 38:30-இல் வரும் குறிப்பு, குயவன் கலன்களின் மேல் வண்ணக்குழம்பைத் தெளித்துக் கலத்தை மெருகூட்டிப் பளபளப்பாக்குதலை விவரிக்கிறது. இந்த மெருகூட்டிப் பளபளப்பாக்குதல் நீதி 26:23-இல் உருவகமாகத் தீய நெஞ்சத்தை விவரிக்கிறது.

மெரேசு (MERES - தகுதியுள்ள)

அகசவேர் அரசனுக்கு அடுத்தபடியாக அதிகாரம் கொண்ட, பாரசீகம், மேதியா ஆகிய நாடுகளைச் சார்ந்த ஏழு அமைச்சர்களுள் மெரேசும் ஒருவர் (எஸ்த 1:14).

மெரேது (MERED - கிளர்ச்சி செய்பவன், கலகக்காரன்)

இவர் பார்வோனின் மகளையும், மற்றொரு யூதப் பெண்மணியையும் மணந்தவர் (1 நாள் 4:17-18). இவர் யூதா கோத்திரத்தைச் சார்ந்தவர்; எஸ்ராவின் மகன். பார்வோன் என்ற சொல் எகிப்திய அரச பரம்பரையைக் குறிக்கின்றதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இங்கு, இவருடைய எகிப்திய மனைவியின் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

மெரொதாக்கு (MERODACH)

இது பாபிலோனில் வணங்கப்பட்டு வந்த பேல் என்னும் கடவுளின் மற்றொரு பெயர் (எரே 50:2). இப்பெயர் 'மெரொதாக்கு-பலாதான்' (2 அர 20:12; எசா 39:1), அவில் மெரொதாக்கு என்னும் பெயர்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது (2 அர 25:27; எரே 52:31).

மெரொதாக்கு - பலாதான் (MERODACH - BALADAN - மார்துக்கு ஒரு மகனைக் கொடுத்துள்ளார்)

இவர் பித்யாக்கின் என்னும் குலத்தின் தலைவராவார். இவர் இருமுறை பாபிலோ

னின் அரசராக இருந்தவர் (கி.மு. 721 -710; 704-703).

மெரொதாக்கு, மூன்றாம் திகிலத் பிலே சருக்குப் பணிந்திருந்ததாக அவருடைய சாசனங்கள் கூறுகின்றன. மற்ற அசீரியர் களின் காலத்தில் இவர் முதன்மைக் கலகக் காரராக விளங்கினார். இவரை அசீரிய மன்னர்களால் அடக்க முடியவில்லை. பின் னர் இரண்டாம் சார்கோனின் காலத்தில் கி.மு. 721-இல் ஏலாமிலிருந்து கிடைத்த படையின் உதவியால் அரசர் ஆனார். சார்கோன் ஏலாமியரைத் தேர் என்னும் இடத்தில் சந்தித்தபோது மெரொதாக்கு -பலாதான் தாமதமாக வந்தான். சார்கோன் கி.மு. 710 வரை படையெடுக்க முடியாத தால் மெரொதாக்கு - பலாதான், பாபி லோனில் எவ்விதப் பயமும் இன்றி ஆண் டான். அசீரிய மன்னன் பாபிலோனியாவை வென்று அரசாட்சியைக் கைப்பற்றிய போதிலும் மெரொதாக்கு - பலாதானை அங்கிருந்து வெளியேற்ற முடியவில்லை. மெரொதாக்கு - பலாதான் மீண்டும் சன கெரிபின் காலத்தில் தோன்றி, அசீரியாவின் சிற்றரசர்களைக் கலகம் செய்யும்படி தூண்டினான். இதற்காக யூதாவின் அரசன் எசேக்கியாவுக்கு ஒரு கடிதம் எழுதினான் (2 அர 20:12). எசாயா இறைவாக்கினர் கூறிய அறிவுரையைக் கேளாமல், அவ ருக்கு எதிராக மெரொதாக்கு - பலாதா னோடு எசேக்கியா சேர்ந்து கொண்டான். மீண்டும் கி.மு. 704-இல் அரசனான். இம் முறை அவனுடைய ஆட்சி குறுகியதாக இருந்தது. ஏனெனில், கி.மு. 689-இல் சனகெரிபு மீண்டும் பாபிலோனியாவைத் தாக்கி அதனைக் கொள்ளையடித்தபோது பலாதான் தன் நாட்டுக்குத் திரும்பிவிட் டான். இதன்பின் சனகெரிபின் மகன் அசூர்னதின்சுமி அரசனானான். கல்தேயா வின் அகதிகள் தெற்குப் பாபிலோனியா வில், பாரசீக வளைகுடாவில் கலகம் செய்ய சதி செய்தபோது சனகெரிபு இக் கடற்கரை நகரைத் தாக்கி அதனை அழித் துப் பலாதானின் மகன் நபுசுமிஸ்குமைச் சிறைப்பிடித்துச் சென்றார். மெரொதாக்கு - பலாதான் கி.மு. 692-க்கு முன்பே இறந்திருக்க வேண்டும் என்று கருதப் படுகிறது.

மெரொனோவியர் (MERONOTHITE - மெரோனோத்திலிருந்து வந்தவன்)

கிபயாவுக்கு அருகிலுள்ள மெரொனோத் தைச் சார்ந்த எதுதியா, யாதோன் ஆகியவர் களுக்கு இடப்பட்ட பட்டப்பெயர் (1 நாள் 27:30; நெகே 3:7).

மெரோசு (MEROZ - தஞ்சம்)

இது தெபோரா, பாராக்கு ஆகியோர் சீசராவுக்கு எதிராகப் போரிட்டபோது அப் போரில் பங்கேற்று அவர்களுக்கு உதவி செய்யாததால், தெபோராவின் நன்றிப் பாட லில் சபிக்கப்பட்ட நகரங்களில் ஒன்று (நீதி 5:23). ஆட்சோரின் வடமேற்கில் சுமார் 5 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத்து - மாருசில் மெரோசு இருந்த இடமாகக் கருதப்படுகிறது. மெரோசு என்பது மெரோன் என்பதன் திரிபு அடைந்த பெய ராக இருக்கலாம். மெரோசு இஸ்ரியேல் பள்ளத்தாக்கில் அல்லது அதன் அருகில் இருந்ததாகக் கருதப்படுகிறது.

மெர்க்குரி (MERCURIUS)

மெர்க்குரி என்பது எர்மகக் கடவுளின் இலத்தீன்மொழிப் பெயராகும். பிரிகியர் களுக்கு சேயுசுவும், எர்மசும் மனித உருவில் தோன்றியது பற்றிய, சிறிய ஆசியாவில் உலவி வந்த கதையை அடிப்படையாகக் கொண்டு, லிஸ்திராவின் மக்கள், முக்கிய பேச்சாளரான பவுலை எர்மசு (மெர்க்குரி) ஆகக் கருதினர் (அ.ப. 14:12).

மெர்னெப்தா (MER-NE-PTAH - மெம்பிசு வின் கடவுளால் அன்பு செய்யப்பட்டவன்)

மெர்னெப்தா எகிப்தின் 19-ஆம் அரச மரபைச் சார்ந்த பார்வோன் (கி.மு. 1224-1214). மெர்னெப்தா என்னும் பார் வோன்தான் இஸ்ராயேல் மக்கள் எகிப்தை விட்டு வெளியேறியபோது ஆட்சியில் இருந்த பார்வோன் என்று கருதப்படுகிறது. ஏனெனில், அவருடைய தந்தை இரண்டாம் இராமசேசுதான் இஸ்ராயேல் மக்களைக்

கொடுமைப்படுத்தியதாகப் பாரம்பரியம் கூறுகின்றது. மெர்னெப்தா விபியாவுக்கு எதிராகத் தன் நாட்டின் வடமேற்கு எல்லையைப் பாதுகாக்க வேண்டியிருந்தது.

மெலற்றியா (MELATIAH - *யாவே மீட்டார்*)

இவர் கிபயோன் ஊரைச் சார்ந்தவர். இவர் நெகேமியாவின் காலத்தில் எருசலேமின் சுற்றுச் சுவர்களை மீண்டும் கட்ட உதவி செய்தவர் (நெகே 3:7).

மெலேக்கு (MELECH - *அரசன்*)

இவர் மீக்கா (3)வின் புதல்வர்களில் ஒருவரும் மெரிபாகாலின் பேரனும், சவுலின் மகன் யோனத்தானின் கொள்ளுப் பேரனும் ஆவார் (1 நாள் 8:35; 9:41).

மெலேயா (MELEA - *நிறைவான*)

இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (லூக் 3:31).

மெல்கி (MELCHI - *என் அரசன்*)

1. இயேசுவின் மூதாதையருள் ஒருவர். இயன்னாயின் மகனும் லேவியின் தந்தையுமாவார் (லூக் 3:24).

2. நாடுகடத்தப்பட்டதற்குப் பிந்திய இயேசுவின் மூதாதையருள் ஒருவர். அதியின் மகனும் நேரியின் தந்தையுமாவார் (லூக் 3:28).

மெல்கிசெதேக்கு (MELCHIZEDEK - *என் அரசர் நீதியாவார்*)

மெல்கிசெதேக்கு என்பவர் பழைய ஏற்பாட்டுக் கதாபாத்திரம் ஆவார். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலும் இவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

I ***பெயர்:*** *மெல்கிசெதேக்கு என்பதற்கு ''நீதியின் அரசர்'' என்பது பொருள் (எபி 7:2). சரியான பொருள் தெளிவாக அறியப் படாவிட்டாலும், இச்சொல்லுக்கு, ''செதேக்கு என்பவர் அரசர்'', ''மெல்கி (அரசன்) நீதியானவர்'' அல்லது ''என் அரசர் நீதியுள்ளவர்'' என்பன போன்ற பல பொருள்கள் கூறப்படுகின்றன.*

II வாசகங்கள்:

அ) பழைய ஏற்பாட்டில்: *வரலாற்று ரீதியாக, மெல்கிசெதேக்கு, இஸ்ராயேல் மக்கள் எருசலேமுக்கு வருமுன் எருசலேமின் அரசராக இருந்தவர். இவர் பழைய ஏற்பாட்டில் இரண்டு இடங்களில் குறிப்பிடப்படுகின்றார். ஆதி 14:18-20-இல் அபிராம், நான்கு அரசர்களை வென்று வெற்றியோடு திரும்பியபோது, மெல்கிசெதேக்கு அவரைச் சந்தித்து, அவருக்கு அப்பமும், திராட்சை இரசமும் அளித்து அவரை ஆண்டவர் பெயரால் ஆசீர்வதித்தார். பின் அபிராமிடமிருந்து, அவர் கொள்ளையடித்த பொருட்களில் பத்தில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டார். சங் 110:4-இல் குருவான இவருடைய முறைப்படிதான் தாவீது குல அரசர் அபிடேகம் செய்யப் பட்டார்.*

1) ஆதி 14:18-20: *முதலில் மெல்கிசெதேக்கு சாலேமின் அரசர் என்றும், சாலேமும், எருசலேமும் ஒன்று என்றும் கருதப் படுகிறது (சங் 77:2). இரண்டாவது அவர் ''உன்னத கடவுளின் குரு''. மெல்கிசெதேக்கு என்பது, இஸ்ராயேல் மக்களுக்கு முன் எருசலேமில் கானானியர் வழிபட்ட தெய்வத்தின் பெயரால், இவருக்கு இடப்பட்ட பெயராக இருக்கலாம். இவர் பிற்காலத்தில் இஸ்ராயேல் மக்களுக்குப் புனித நகரமாக விளங்கிய எருசலேமில், அரச மற்றும் குருவின் அதிகாரங்களைக் கொண்ட புனித அரசராக விளங்கினார். அவருடைய தனித்தன்மை வாய்ந்த பணியின் காரணமாக இவ்வதிகாரத்தில் கூறப் படும் எல்லாரையும்விட மெல்கிசெதேக்கு தனிச்சிறப்புடன் சித்திரிக்கப்படுகிறார். இவருக்கு மட்டுமே அபிராம் பணிகிறார்.*

2) சங் 110:4: *மெல்கிசெதேக்கு அரசரான தாவீதின் குலத்தைச் சேர்ந்த மெசியாவுடன் தொடர்புபடுத்திக் காட்டப்படுகிறார். இங்கு மெல்கிசெதேக்கு யாவேயின் சுவிகாரம் செய்யப்பட்ட மகனும் (சங் 2:7) அபிடேகம் செய்யப்பட்டவருமாகக் (18:50; 132:7) கருதப்பட்ட தாவீது குல அரசருக்கு மூல மாதிரியாகத் தோன்றுகிறார். தாவீதின்*

மகன் எடுத்துக்காட்டான அரசன் என்ற அளவில் நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுகிறார் (சங் 72:1-7; 99:4). எடுத்துக்காட்டான குரு என்ற அளவில், இஸ்ராயேல் மக்கள் வழிபாட்டுக்குத் தலைமை தாங்கி (2 சாமு 6:12; 1 நாள் 13:15-16), கடவுளுக்கும், மக்களுக்கும் இடையே இணைப்பாளராக இருக்கிறார் (1 அர 8; சங் 132:9-10). இந்தக் குருத்துவம் முடிவில்லாத தன்மையுடையது (சங் 110:4). எனவே, இஃது ஆரோனின் குருத்துவத்தைக் கடந்து செல்கிறது; அதைவிட மேலானது.

ஆ) புதிய ஏற்பாடு: எபிரேயருக்கு எழுதப்பட்டுள்ள திருமுகத்தில் மட்டும் தான் மெல்கிசெதேக்கு குறிப்பிடப்பட்டுள்ளார் (எபி 5:6.10; 6:20; 7:1.10-11.15.17). கிறிஸ்து எல்லாப் படைப்புகளுக்கும் மேலானவர் என்பதும், கடவுளுக்கு ஊழியம் செய்பவர்களில் தலைசிறந்தவர் என்பதும் எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலின் முக்கிய கருத்துகளாகும். இதை எண்பிக்க பழைய ஏற்பாட்டு மெல்கிசெதேக்கு ஒரு நிரூபணமாகப் பயன்படுத்தப்படுகிறார். கிறிஸ்து மெல்சிசெதேக்கின் முறைப்படி தலைமைக் குரு ஆவார் (எபி 5:5-10; 6:20; காண்க. 7:21; சங் 110:4). நீதி, சமாதானம் ஆகியவற்றின் அரசராகவும், தனித்தன்மையும் தொடக்கமும் முடிவும் இல்லாத தன்மையும் கொண்டிருப்பதால் மெல்கிசெதேக்கு கடவுளின் மகனைப் போல் உள்ளார் (7:1-17). மெல்கிசெதேக்கு ஆபிரகாம், குருவாகிய ஆரோன் ஆகியவர்களைவிட உயர்ந்தவராகையால் இவர் அரசரும் குருவுமான இயேசுவின் 'மாதிரியாக' உள்ளார் (7:23-28; 8:1-10:8).

III **இறையியல் சிந்தனை:** மெல்கிசெதேக்கு விவிலியத்தில் ஆபிரகாமின் பாதுகாப்பாளராகவும், தாவீதின் முன்னோடியாகவும், இயேசுவின் முன் மாதிரியாகவும் தோன்றுகிறார்.

1. மெல்கிசெதேக்கும் ஆபிரகாமும் (ஆதி 14): சாலேமின் அரசரும் குருவுமாகிய மெல்கிசெதேக்கு (சங் 75:3-ஆல் எருசலேமுடன் ஒப்பிடப்படுவது) உடன்படிக்கையின் சடங்காகிய அப்பமும், திராட்சை இரசமும் அடங்கிய உணவை ஆபிரகாமுக்கு அளிக்கிறார் (ஆதி 31:44-46; யோசு 9:12-15). அவர் ஆபிரகாமின் மீது ஆசியுரைக்கிறார். தனது பாதுகாப்பிற்குப் பதிலாக ஆபிரகாமிடமிருந்து ஒரு பங்கைப் பெறுகிறார்.

செமித்திய இனத்தவரின் பண்டைய இறைவனும், மிக உயர்ந்த கடவுளுமாகிய 'ஏல் ஏலியோன்' முன்னிலையில் இச்செயல்கள் நிகழ்கின்றன. இவரை மெல்கிசெதேக்கு உயரிய கடவுளாகவும், ஆபிரகாம் ஒரே கடவுளாகவும் கருதுகின்றனர். இந்நிகழ்ச்சியில் முக்கிய பங்கானது எபிரேயரல்லாத குருவாகிய மெல்கிசெதேக்குவினால் நிகழ்த்தப் பெறுகிறது. அவரின் முன்னிலையில் லேவிய குருக்களின் மூதாதையராகிய எபிரேய ஆபிரகாம் தாழ்வான இடத்தையே வகிக்கிறார். ராபிகளின் விளக்கவுரை இந்த உண்மையை மறக்க முயலும்; ஆனால், கிறிஸ்தவ விளக்கவுரை இதனை நினைவுகூரும்.

2. மெல்கிசெதேக்கும் தாவீதும் (சங் 109):-தாவீது எருசலேமில் தன்னை நிலைப்படுத்திய போது, தன்னியற்படுத்தும் கோட்பாட்டினைச் செயல்படுத்தி வந்தார். இஸ்ராயேல் அரசர் புகழ்பெற்ற மெல்கிசெதேக்குவின் பங்கினைத் தொடர்ந்து செயல்படுத்தி வருவதை சங் 109-எடுத்துக்காட்டுகிறது. எருசலேமின் அரசர் என்ற அளவில் ''மெல்கிசெதேக்குவைப் போல நீர் என்றென்றும் குருவே'' என்று தன்னுடைய அபிடேகம் செய்யப்பட்டவருக்கு யாவே உறுதியளிக்கிறார். நிலையற்ற மெசியாக்களைப் பொருத்தமட்டில் மிகைப்படுத்தப்பட்டுள்ள இந்தக் கூற்று இறுதி மெசியாவிற்கு உண்மையாகப் பொருந்தும். அவர்பால் நாடு கடத்தப்பட்டதற்குப் பின்னர் சங் 110 ஆனது இஸ்ராயேலின் நம்பிக்கைகளைத் திருப்பும். உண்மையில் இதனை வாசிப்பவர்கள், தன்னில் குருத்துவத்தையும் அரச தன்மையையும் இணைத்து எழுகின்ற மீட்பரைக் காண்பதைக் கற்பனை செய்வர்.

வரவிருக்கும் காலங்களில் அரச வல்லமையும் குருத்துவ வல்லமையும் ஒன்றாகக் கொணரப்படும் என இறைவாக்கினர்கள் அறிவித்துள்ளனர் (எரே 33:14-22; செக் 3-6). சிலர் தலைமைக் குருவிற்கு அரச நிலையைக் கோரினர். மக்கபேயருக்கு இது பொருந்தும் (1 மக் 10:20.65; 14:52.57). ''பன்னிரு மூதாதையருடைய உடன்படிக்கைகள்'' (குறிப்பாக, லேவியின் ஒப்பந்தம்) யூத நூலின் தொகுப்பாளர்களுக்கு ஒரு நம்பிக்கையாக உள்ளது. இதற்கு மாறாக, மெல்கிசெதேக்கு மற்றும் தாவீதினால் பரிந்துரைக்கப்பட்ட முறைக்கு விசுவாசமாக உள்ள மற்றவர்கள் அரச குருத்துவத்தை எதிர்கால அரசருக்குச் சாற்றிக் கூற விரும்புகின்றனர். உண்மையில் தூய்மையாக்கப்பட்ட அரச நிலை மற்றும் உண்மையான குருத்துவம் ஆகியவற்றின் இணைப்பானது இயேசு கிறிஸ்துவில் மட்டுமே வரும்.

3. மெல்கிசெதேக்கும் இயேசுவும் (எபி 7; காண்க. 5:6-10; 6:20): மனிதனாகிய இயேசு ஆபிரகாமினிடமிருந்து மட்டுமின்றி, முதலில் ஆதாமிடமிருந்தும் இறங்கி வருகிறார் (லூக் 3:23-38). எபிரேயருக்கான திருமுகத்தின்படி குருவாகிய இயேசு நிறைவான குருத்துவத்தைச் செயல்படுத்துகிறார். இது லேவியின் குருத்துவத்துடன் இணைக்கப்படாமல் (எவ்வாறாயினும் இயேசு யூதா குலத்தைச் சேர்ந்தவர்), மெல்கிசெதேக்கின் வாரிசாகிய தாவீதின் வழிவந்த மெசியாவினுடைய அரச குருத்துவத்தை நிறைவுபடுத்துகிறது (சங் 110). ஆதியாகமம் முதல் இந்த அரச குரு லேவிய குருக்களைவிட உயரியவராகப் பார்க்கப்படுகிறார். ஏனெனில், அவர்களது முன்னோராகிய ஆபிரகாமில், லேவியின் மக்கள் இவருக்கு முன் மரியாதையுடன் வணங்கி, இவரது ஆசியைப் பெற்று, இவருக்குக் காணிக்கை அளிப்பதை இவர் கண்டார்.

மேலும், மெல்கிசெதேக்குவினுடைய குணம், பெயர் மற்றும் பதவிகள் முதலியன சில வழிகளில் இயேசுவின் குணவியல்புகளை முன்குறித்துக் காட்டுகின்றன. அவர் ''தொடக்கமும் முடிவும் அற்றவராக''த் தோன்றி, அதன் வழியாக முடிவில்லாக் குருவாகிய கிறிஸ்துவை முன்குறித்துக் காட்டுகிறார். மெல்கிசெதேக்கு என்னும் அவருடைய பெயர் ''எனது அரசர் நீதியானவர்'' என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. சாலேமின் அரசர் என்பது கிட்டதட்ட சலோமின் அரசர், அதாவது சமாதானத்தின் அரசர், என்பதை யொத்ததே. ஆனால், இயேசு உலகிற்குச் சமாதானத்தையும் நீதியையும் கொண்டுவரவில்லையா? சங் 110-இன் பயபக்தியுடன் கூடிய உறுதிமொழியானது லேவிய குருக்களுக்கு உரியதாக இல்லை. ஏனெனில், அவர்கள் பாவிகளாகவும், அழியக் கூடியவர்களாகவும் இருப்பதால் பலராகவும், ஒரு தலைமுறை முதல் மறுதலைமுறை வரை ஒருவரையொருவர் தொடர்பவர்களாகவும், பழமையாக்கப்பட்ட உடன்படிக்கையின் ஊழியர்களாகவும் உள்ளனர். இஃது அரச குருவும், தாவீதின் உண்மையான மகனும், மாசற்ற, முடிவில்லாத ஆகவே தனித்துவமிக்கவரும், முன்னொரு காலத்தில் மெல்கிசெதேக்குவுடனான உடன்பாடு இருந்தது போல அப்பத்தினாலும் திராட்சை இரசத்தினாலும் குறிப்பிடப்படுகின்ற புதிய இறுதி உடன்படிக்கையின் பணியாளருமாகிய இயேசுவிற்குக் குறிக்கப்பட்டுள்ளது.

எனவே இஸ்ராயேலில் அன்னியரும், நாடுகளின் உறுப்பினரும், இறைவனைப் பற்றிய அறிவில் சுயமாகக் கற்றறிந்த சமயநபரும், ஆபிரகாமின் வல்லமை மிக்க நண்பரும், தாவீதினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவரும், இயேசுவை முன்குறித்துக் காட்டுபவருமாகிய மெல்கிசெதேக்கு, அசாதாரணமான உயர்வின் குடிமகனாக உள்ளார். அவரது பெயரானது திருச்சடங்கு நூலிலும் (பீடங்களை அபிடேகம் செய்வதில்), உரோமைத் திருப்பலி நூலிலும் (முதல் நற்கருணை வழிபாடு) தோன்றுகிறது. நம்மைக் கிறிஸ்துவிடம் இட்டுச் செல்வதற்கென இஸ்ராயேலை மட்டுமின்றி மற்ற நாடுகளையும் பயன்படுத்துகின்ற இறைவனுடைய திட்டங்களின் உலகளாவிய தன்மைக்கு அவரே இன்னும் சாட்சியாக உள்ளார்.

மெல்கியேல் (MELCHIEL)

மெல்கியேல், கார்மியின் தந்தை ஆவார். இவர் பெத்துலியாவின் தலைவர்களில் ஒருவர். இவரிடம்தான் யூதித்து உதவி கேட்டு வந்தாள் (யூதி 6:11).

மெல்கியோர்(MELCHIOR - ஒளியின் அரசன்)

மேற்கத்திய திருச்சபைப் பாரம்பரியப் படி, குழந்தை இயேசுவுக்குக் காணிக்கைகள் அளித்த ஞானிகளில் முதல்வரானவர் (மத் 2:11). இவர் நரைதிரை மிகுந்தவராயும் தாடியுடையவராகவும் சித்திரிக்கப் படுகிறார். ஒருவேளை இவர் சேமின் வழித்தோன்றலாக இருக்கலாம். மற்றப் பழைய மூலங்கள் இவரை ஒரியராகவோ பாரசீக மன்னனான ஓர்மிசுதாவாகவோ அடையாளம் காட்டுகின்றன. கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இயேசுவின் பால பருவம் பற்றிய அர்மேனிய நற்செய்தியில் இவர் மெல்கோன் என்றழைக்கப் படுகிறார். இந்நூல், கடவுள் ஆதாமுக்கு எழுதிய ஒரு கடிதத்தை இவர் இயேசுவுக்கு அளித்ததாகக் கூறுகிறது.

மெல்கோன் (MELKON)

பிற்காலப் பாரம்பரியத்தின்படி மெல்கோன் மூன்று ஞானிகளுள் (Magi) ஒருவர் (மத் 2:1-12). இயேசுவைக் காணவந்த ஞானிகள் 'மூவர்' என்று குறிப்பிடும் பழங்காலப் பாரம்பரியம் மெல்கோனைப் பல சமயங்களில் பாரசீகத்தின் அரசராகவும், சில சமயங்களில், அவருடன் இயேசுவைக் காண வந்த இந்தியாவின் அரசரான கஸ்பார், அரேபியாவின் அரசரான பல்தசார் ஆகியவர்களின் சகோதரர் என்றும் கூறுகின்றது. திருச்சபையில் அங்கீகரிக்கப் படாத இயேசுவின் பாலபருவம் பற்றிய அர்மேனிய நற்செய்தியின்படி, மெல்கோன், குழந்தை இயேசுவுக்கு அன்பளிப்பு கொடுத்ததோடல்லாமல், ஆதாமுக்கு எழுதப்பட்டு, கடவுளால் முத்திரையிடப்பட்டு பாரசீக மன்னனின் ஆவணக்களரியில் வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தையும் கொடுத்தார் என்று கூறப்படுகிறது. இவர் மேற்கத்திய நாடுகளில் ஒரு புனிதராகக் கருதப்படுகின்றார். விசித்திரமான கற்பனைப் பாரம்பரியத்தின்படி இந்த ஞானிகள் தோமையாரிடம் ஞானஸ்நானம் பெற்று பாரசீகத்தில் வேதபோதகர்களாக இருந்தார்கள் என்று கருதப்படுகிறது. காண்க. மெல்கியோர்.

மெல்லிய துணி (SHROUD)

மரித்த உடலைச் சுற்றி அடக்கம் செய்யப் பயன்பட்ட மெல்லிய துணியாகும். இது ''சின் தோன்'' என்ற கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும் (மத் 27:59; மாற் 15:46; லூக் 23:53). இச்சொல் சில இடங்களில் போர்த்திக் கொள்ளப்பயன்படும் ஆடையையும் குறிக்கலாம் (மாற் 14:51-52).

மெழுகு (WAX)

விவிலியம் மெழுகினுடைய சாதாரண உபயோகங்களைப் பற்றிய குறிப்புகள் ஒன்றும் தருவதில்லை. விவிலியத்தின் பாடல்களில் மட்டும்தான் காணப்படுகிறது. மெழுகினுடைய உருகிக் கரைந்து மறைந்து போகும் தன்மை மட்டுமே உவமைப் பொருளிலும், உருவகப் பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றது. தேய்ந்து போவதையும், அழிவையும் உணர்த்தப் பயன்படுத்தப்படுகிறது. துன்புறுத்தப்படுவோனின் இதயமும் (சங் 22:14), கடவுளின் தீர்ப்புக்கு முன் தீயவனும் (சங் 68:2), இறைவனின் முன்னிலையில் மலைகளும் (சங் 97:5; மீக் 1:4; யூதி 16:18) மெழுகினைப் போல் உருகுவார்கள் என்று விவிலியம் குறிப்புகள் தருகின்றது.

மெனகேம் (MENAHAM - ஆறுதல் அளிப்பவர்)

மெனகேம், சுமார் கி.மு. 745-738 வரை ஆண்ட இஸ்ராயேல் மக்களின் அரசனாவார். இவர் சல்லூமைக் கொன்று அரியணை ஏறினார். வலிமை வாய்ந்த இரண்டாம் எரோபவாமின் இறப்புக்குப் பின் வடநாட்டில் குழப்பம் ஏற்பட்டது. எரோபவாமுக்குப் பின் அவனுடைய மகன் செக்கரியா அரியணை ஏறினான். அவன் ஆறு மாதம் ஆண்டபின் சல்லூமால் கொலைசெய்யப்பட்டான் (2 அர 15:8-10).

சல்லூம் ஒரு மாத ஆட்சிக்குப் பின் மெனகேமால் கொல்லப்பட்டான் (எசே 7:7; 8:4).

செக்கரியா இறந்தபின் அரியணையைக் கைப்பற்ற பலர் விரும்பினர். சல்லூம் ஒரு கட்சியின் தலைவராகவும், மெனகேம் மற்றொரு கட்சியின் தலைவராகவும் இருந்தனர். மெனகேம் 10 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகிறது (2 அர 15:17). ஆனால், எப்போது இறந்தான் என்பது தெளிவாகத் தெரியவில்லை. கி.மு. 738-இல் அவன் மூன்றாம் திகிலத்பிலேசருக்குக் கப்பம் கட்டிய போது உயிருடன் இருந்திருக்க வேண்டும்.

மெனகேமின் காலத்தில் மேற்கு அசீரியர்கள் செல்வாக்கு மிகுந்திருந்தது. ''அசீரியாவின் அரசன் பூல் இஸ்ராயேல் நாட்டின் மீது படையெடுத்து வந்தான். அப்போது மெனகேம் பூலின் உதவியால் தன்னாட்சி நிலைபெறும் பொருட்டு ஆயிரம் தாலந்து நிறையுள்ள வெள்ளிக் காசுகள் கொடுத்தான்'' என்று 2 அர 15:19 கூறுகின்றது. இந்நிகழ்ச்சியிலிருந்து இரண்டு முக்கிய உண்மைகள் புலனாகின்றன. முதலாவது பூல் என்பதும், திகிலத்பிலேசர் என்பதும் ஒரே நபரைக் குறிக்கும். மேலும், மூன்றாம் திகிலத்பிலேசர் கி.மு. 729-இல் பாபிலோனில் அரியணை ஏறியபோது ''பூலு' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார் என்பது பாபிலோனிய ஏடுகளிலிருந்து புலனாகிறது. இரண்டாவதாக, மெனகேமின் ஆட்சி பலமுள்ளதாக இல்லை என்பதும் தெளிவாகிறது.

மெனகேம், திகிலத்பிலேசருக்கு, 1000 தாலந்துகள் நிறையுள்ள வெள்ளிக்காசுகளைக் கப்பம் கட்டியதாக திகிலத்பிலேசரின் ஏடுகள் கூறுகின்றன. மெனகேம் ஆள் ஒன்றுக்கு 50 செக்கேல் வெள்ளிவீதம் வரி வசூலித்தான். இவ்வாறு வரி கொடுக்கக் கூடியவர்கள் சுமார் 60,000 பேர் இருந்தனர். எனவேதான் ஆமோஸ், ஓசேயா போன்ற இறைவாக்கினர்கள் செல்வம் சேர்ப்பதைச் சாடினர். மெனகேம் அமைதியான மரணம் அடைந்தான் என்று கூறப்படுகிறது (2 அர 15:22). ''இவன் ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதைச் செய்தான். மேலும், இவன் தன் வாழ்நாள் முழுவதும் இஸ்ராயேலைப் பாவத்திற்கு உள்ளாக்கிய நெபாற்றின் மகன் எரொபவாமின் பாவ வழியை விட்டு விலகவில்லை'' (15:18) என்பது இவனது ஆட்சி பற்றிய அரசராகம ஆசிரியரின் தீர்ப்பாகும்.

மெனத்தேயு (MENESTHEUS)

இவர் கூலே-சீரியா மற்றும், பெனிசியா ஆகிய பகுதிகளின் ஆளுநராய் இருந்த அப்பொல்லோனியு என்பவரின் தந்தை ஆவார் (2 மக் 4:4).

மெனலாவு (MENELAUS-எதிர்த்து நிற்கும் மனிதர்கள்)

மெனலாவு, அந்தியோக்கு எப்பிபானின் ஆட்சியில் வாழ்ந்த நீதி நெறிகளுக்குக் கட்டுப்படாத தலைமைக் குரு. கி.மு.171 இல் தலைமைக் குருவாயிருந்த யாசோன் கப்பத்தை மெனலாவிடம் கொடுத்து அந்தியோக்கியாவிற்கு அனுப்பினார். ஆனால், மெனலாவு இன்னும் அதிகமாக அந்தியோக்கு அரசனிடம் கப்பம் கொடுத்து, யாசோனைக் கவிழ்த்துவிட்டு தலைமைக் குருவானார் (2 மக் 4:23தொ). யாசோன் உயிருக்காக எருசலேமை விட்டு ஓடினார். மெனலாவு குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தாததால், கணக்கை ஒப்புவிக்க அந்தியோக்கியாவிற்கு அழைக்கப்பட்டார். இச்சமயத்தில் இவருக்குப் பதிலாக, இவருடைய சகோதரர் லிசிமாக்கு தலைமைக் குருவாக இருந்தார். மெனலாவு அந்தியோக்கியாவை அடைந்த போது அரசன் அங்கு இல்லை. இதைப் பயன்படுத்திக் கொண்டு, மெனலாவு ஆலயத்திலிருந்து திருடிக்கொண்டு போன பொன்னையும், பாத்திரங்களையும், அந்தியோக்குவின் உதவியாளன் அந்திரோனிக்கு என்பவனிடம் கையூட்டாகக் கொடுத்து அவனது ஆதரவைப் பெற்றார். பின், மெனலாவுவின் ஊழல்களை வெளிப்படுத்த முயன்ற மூன்றாம் ஒனியா என்ற தலைமைக் குருவைக் கொன்றுவிடும்படி அந்திரோனிக்கைக்

கேட்டுக்கொண்டான். இவ்வாறு ஒனியா அநியாயமாகக் கொலை செய்யப் பட்டதைக் கண்ட யூதர்களும், கிரேக்கர்களும் அந்தியோக்குவிடம் சென்று முறையிட்டனர். இதைக் கேட்டுக் கோபமுற்ற அரசன், ஒனியா கொலை செய்யப்பட்ட இடத்திலேயே அந்திரோனிக்கைக் கொன்றான். எருசலேமில் லிசிமாக்கு ஆலயத்தில் பல ஊழல்கள் செய்ததால், மக்களால் கொல்லப்பட்டார். லிசிமாக்கு ஊழல் செய்ததற்கு மெனலாவுதான் காரணம் என்று தீர் நகரத்திலிருந்த அந்தியோக்குக்கு மக்கள் செய்தி அனுப்பினர். மெனலாவு தண்டனைக்கு உள்ளாகப் போவதை அறிந்து, தனக்குப் பரிந்துரை செய்ய, தோலமி தொரிமேனுக்குக் கையூட்டுத் தருவதாக வாக்களித்தான். தோலமியின் பரிந்துரையால் அந்தியோக்கு, மெனலாவுவை விடுவித்தது மட்டுமல்லாது அவனுக்கு எதிராகச் சாட்சி கூறியவர்களையும் கொன்றான். அந்தியோக்கு எகிப்திலிருந்த போது யாசோன் மறுபடியும், எருசலேமில் தோன்றி அந்நகரைத் தாக்கினார். இதைக் கேட்ட அரசன் எருசலேமுக்கு வந்து நகரைத் தாக்கி மெனலாவுடைய உதவியுடன் ஆலயத்தையும் சூறையாடினான். இதன்பின் மெனலாவு தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டார் (*2 மக் 5:1-20*). கி.மு. *164*-இல் அந்தியோக்கு அரசனால் யூதருக்கு எழுதப்பட்ட கடிதத்தில், மெனலாவு குறிப்பிடப்படுகின்றார் (*2 மக் 11:29.32*). எல்லாத் தீமைகளுக்கும் மெனலாவுவே காரணம் என்று லீசியா அரசனிடம் சொல்ல, கி.மு. *163*-இல் மெனலாவு கோபுரத்திலிருந்து சாம்பலினுள் தள்ளிக் கொல்லப்பட்டான் (*2 மக் 13:3-8*).

மெனி (MENI - எண்ணுதல், பங்கிடுதல்)

பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்ட பின், இஸ்ராயேல் மக்கள் உணவும், பானமும் படைத்து வழிபட்ட நற்பேற்றுத் தேவதை (*எசா 65:11*). இஸ்லாம் மதம் வருமுன், அரேபியாவில் வணங்கப்பட்ட தெய்வம் மன்னாத்து என்று குரான் கூறுகிறது.

மெனுகோத்து (MENUHOTH - ஓய்வெடுக்கும் இடங்கள்)

மெனுகோத்து தெளிவாக அறியமுடியாத ஒரு குடும்பம் (*1 நாள் 2:52*). இதை மனகத்தியர் என்று கொண்டால், இச்சொல் *1 நாள் 2:54*-இல் குறிப்பிடப்படும் எருசலேமின் தெற்கில் வாழ்ந்த 'சால்மா' குலத்தைச் சார்ந்த மனகத்தியர்களையும், *1 நாள் 2:52*-இல் குறிப்பிடப்படும், எருசலேமின் வடமேற்கில் கிரியத்-எயாரிம் அருகில் வாழ்ந்த சோபால் குலத்தைச் சார்ந்த மனகத்தியரையும் குறிக்கும்.

மெனே, மெனே, தெக்கேல், பார்சின் (MENE, MENE, TEKEL, PARSIN)

இவை பெல்சாட்சர் அளித்த விருந்தின் போது சுவரில் அரேபிய மொழியில் எழுதப்பட்ட சொற்கள். அங்கிருந்தவர்கள் ஒருவராலும் இச்சொற்களைப் படிக்க முடியவில்லை. இச்சொற்களை ''மினா, மினா, செக்கேல், அரைச் செக்கேல்'' என்றும் ''எண்ணப்பட்டது, எண்ணப்பட்டது, எடைபோடப்பட்டது, பிரிக்கப்பட்டது'' என்றும் மொழிபெயர்க்கலாம். இந்த எடைகள் பொருட்கள் மட்டும் நிறுக்கப் பயன்படாமல் மனிதனின் நடத்தையையும் கணிக்கப் பயன்படுத்தப்பட்டதாக தால்மூது குறிப்பிடுகின்றது. இச்சொற்கள் 'பாபிலோனிய மன்னர்களின் உண்மையான மதிப்பு என்ன?' என்ற கேள்விக்கு விடையளிக்கப் பயன்படுத்தப்பட்டன. 'கடவுள் அவர்களை நிறுத்து அவர்கள் இலேசாய் இருக்கிறார்கள் எனக் கண்டார்' என்பதே விடையாகும். இச்சொற்களின் உட்பொருள்: மெனே-''கடவுள் உமது அரசின் நாள்களை எண்ணி வரையறுத்து முடிவாக்கிவிட்டார்''. தெக்கேல்-''நீர் தராசில் நிறுக்கப்பட்டீர்; எடையில் மிகவும் குறைந்துள்ளீர்''. பார்சின்-''உமது அரசு பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பாரசீகருக்கும் கொடுக்கப்பட்டது'' (*தானி 5:25-28*). இஃது ஒரு பழமொழியாக இருக்கலாம். பாபிலோனியர்கள் இதை விளக்க முடியாத போது தானியேல், இறைத்தீர்ப்பாக விளக்கம் அளிக்கிறார். பாபிலோனியப் பேரரசு கி.மு. 539-இல் மேதியர்

மற்றும் பாரசீகர்களால் தோற்கடிக்கப் பட்டது. இவ்வாறு சொற்களின் ஒலியியை பைக் கொண்டு விளக்கம் அளிப்பது இறைவாக்கினர்களிடம் காணப்படுகிறது (எரே 11:11 தொ; ஆமோ 8:1 தொ). இது ஞானத்தின் எடுத்துக்காட்டாகும்.

மெனோரா (MENORAH - ஒளி)

இச்சொல் எபிரேய மொழியில் விளக்குத் தண்டைக் குறிக்கும். ஆனால், பழைய ஏற்பாட்டில் இது கலைச்சொல்லாக, உடன் படிக்கைப் பெட்டகத்தின் முன் வைக்கப் படும் ஏழு கிளைகளுள்ள விளக்குத் தண்டையும், செக்கரியாவின் காட்சியில் வரும் விளக்குத் தண்டையும் குறிக்கும் (செக் 4:2.11).

மென்னா (MENNA)

இவர் இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (லூக் 3:31).

மே

மேகம் (CLOUD)

1. இரவு அல்லது இருளைப் போலவே மேகமும் இரண்டு வகையான சமய அனு பவங்களை வெளிப்படுத்த முடியும். நன்மை தரும் கடவுளின் அண்மையையும் அவரது முகத்தை மறைத்து அவர் தரும் தண்டனையையும் குறிக்கலாம். இறைப்பிர சன்னத்தின் மறைபொருளைக் குறித்துக் காட்டும் பேறுபெற்ற ஓர் அடையாளம் மேகமாகும். ஏனெனில், இஃது அவரை முழுமையாக மறைத்து அதே நேரத்தில் நமக்கு இறைவனை வெளிப்படுத்துகிறது. எல்லாம் வல்ல ஞானத்தைத் தியானிக்க உதவும் மேகத்தின் இயற்கையான அடை யாளம் *(யோபு 36:22-37:24)* இறைப்பிரசன் னத்தின் அனுபவத்தை அளிக்கவும் உதவ வேண்டும். மேகங்கள் இரண்டு முக்கிய பண்புகளைக் கொண்டுள்ளன. அவை மிக இலகுவாகவும் வேகமாகவும் செல்லக் கூடிய தன்மையும் *(எசா 60:8)*, சில சமயங்களில் பொய்த்தோற்றமுடையவை யாயினும் *(யோபு 7:9; ஓசே 6:4; 13:3; யூதா 12)*, பல சமயங்களில் மழையைக் கொண்டுவரும் தூதுவர்களாகவும் இருக் கின்றன *(1 அர 18:44* தொ; *எசா 5:6; சங் 8:23)*. இதிலிருந்து இவை யாவேயைச் சுமந்துவரும் தேராக முடியும் என்பது தெரிகிறது *(சங் 104:3)*. மறுபக்கம் பார்த் தால் விண்ணகத்தை ஊடுருவிப் பார்க்க முடியாதவாறு மறைக்கும் முக்காடாகவும் *(யோபு 22:13)*, பயங்கரமான நிழலால் பூமி முழுவதையும் மறைத்து *(எசே 34:12; 38:9.16)*, புயல் வரும் என்ற அச்சத்தை உண்டாக்குகிறது *(எரே 4:13; நாகூ 1:3)*.

2. **மேகத் தூணும், நெருப்புத் தூணும்:** யாவே பாரம்பரிய ஆசிரியரின் விளக்கப் படி விடுதலைப் பயணத்தில் எபிரேயர்கள் பகலில் மேகத் தூண் வழியாக அவர்களுக் குப் பாதை காட்டியும், இரவில் நெருப்புத் தூண் வழியாகவும் யாவே இறைவன் வழி நடத்தினார் *(யாத் 13:21)*. அவர்கள் தொடர்ந்து பயணம் செய்யும் வண்ணம் கடவுள் அவர்களோடே எப்போதும் இருக் கிறார். அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு மேகத்தூண் ஒருபக்கம் மிக ஒளியாகவும், மறுபக்கம் இருளாகவும் இருந்து பகைவர்களுக்குப் பாதகமாக இருப்பதையும் பார்க்கிறோம் *(யாத் 13:21)*. இம்மாற்றம் காலத்திற்கு ஏற்றவாறு இல் லாது மனிதர்களுக்கு ஏற்றவாறு அமை கிறது. இவ்வாறு மேகத்தூணும், நெருப்புத் தூணும் *(யாத் 14:24)* இறைவனின் இரு ஒப்பற்ற தன்மைகளைக் காட்டுகின்றன. பாவிகளுக்கு அணுகமுடியாத தூரத்தில் உள்ளவராகவும், தேர்ந்து கொள்ளப் பெற்றவர்கட்கு அருகிலிருக்கும் அருளாக வும் இருக்கிறார். கடவுளிடம் முரண்பாடு கள் இல்லை. மனிதனிடம் இது பாவத் தையோ, அஃது இல்லாத நிலையையோ குறித்துக்காட்டும். இறை அனுபவப் பக்திக்கு மிகவும் விருப்பமான, மேகமும் நெருப்பும் சேர்ந்திருத்தல் பிற்காலப் பாரம் பரியத்திலும் காணப்படுகிறது *(உப 1:33; நெகே 9:12; சங் 78:14; 105:39; 2 மக் 2:8; ஞானம் 17:20-18:4)*. மனிதன் படைத்த உருவத்திலிருந்து இறைவன் பேசவில்லை; மாறாக, ''நெருப்பு, மேகம், காரிருள் நடுவிலிருந்து பேசுகிறார்'' *(உப 5:22)*.

3. **மேகமும் யாவேயின் மகிமையும்:** சீனாய் மலையிலிருந்து கடவுள் பேசினார். அப்பொழுது ஒரு மேகம் மலை முழுவதை யும் ஆறுநாட்கள் சூழ்ந்து கொண்டது. யாவே அங்கு நெருப்பு வடிவிலே இறங்கி வந்தார் *(யாத் 19:16)*. எலோகிம், குருக்கள் பாரம்பரியங்களின்படி, ''யாவேயின் பரிசுத்த ஆவி பிரசன்னமாயிருக்க ஒருவன் காத்திருக்கும்போது *(எசா 63:14)*, மேகத் தூண் இறைவனின் தூதனாகிறது *(யாத் 14:19)*. இவ்வாறு இறைவனது யாவும் கடந்த தன்மையை உயர்த்திக் காட்ட மேகம் உதவுகிறது. இனி நெருப்பும் மேகமும் இல்லை; மாறாக, மேகத்தில் நெருப்பு உள்ளது. அச்சத்தப் பார்வைகளி

னின்று இறைவனின் மகிமையை மூடி மறைக்க மேகம் திரையாகிறது. இதில், மனிதர்களுக்குள்ள வேறுபாட்டை அன்று, இறைவனுக்கும் மனிதருக்குமிடையே யுள்ள தூரத்தை அழுத்திக்கூறும் விருப்பம் உள்ளது. அணுகக் கூடிய அதே நேரத்தில் ஊடுருவமுடியாத மேகம், சாவை வருவிக்கக் கூடிய காட்சியான இறைவனை நேருக்கு நேர் காணாது *(யாத் 33:20)*, இறைவனோடு தொடர்புகொள்ள அனுமதிக்கிறது. மலையை மூடியுள்ள மேகத்தினின்று மோசேயை அழைக்கிறார். அவர் மட்டுமே மேகத்தை ஊடுருவிச் செல்லக் கூடும் *(24:14-18)*. மறுபுறம், மேகம் இறைவனது மகிமையைப் பாதுகாக்கிறது என்றால், அதுவே அம்மகிமையை வெளிப்படுத்தவும் செய்கிறது. ''ஆண்டவரின் மாட்சிமை மேகத்தில் தோன்றியது'' *(16:10)*. மேகத் தூண் இறங்கிவந்து கூடார நுழைவாயிலில் நின்று கொள்ளும் *(33:4-10)*, அல்லது மக்களின் பயணத்தை நிர்ணயிக்கிறது *(40:34-38)*. முந்தைய அடையாளத்தைச் சிறிது விரிவாக்கினால், நெருப்பாகிய மாட்சிமையோடு மேகம் தொடர்புபடுத்தப் படுகிறது *(எண் 9:15)*. இரவில் மேகத்தின் மாட்சிமை நெருப்பாக இருக்கும் *(யாத் 40:38)*.

பிற்காலத்தில் சாலமோன் ஆலயத்தைத் திருநிலைப்படுத்திய பின், ஒரு மேகமும், ஆண்டவரின் மாட்சிமையும் அவர் இல்லத்தை நிரப்பின *(1 அர 8:10-11; காண்க. 6:4 தொ)*. ஆலயத்தை விட்டகலும் மாட்சிமையை மேகம் பாதுகாப்பதாக எசேக்கியேல் காண்கிறார் *(எசே 10:3 தொ; காண்க. 43:4)*. அதே மாட்சிமையோடு மேகம் திரும்புதலை யூதத்துவம் கனவு காணும்.

4. இறுதிக்கால மேகங்கள்: யாத்திரையின் இறையாற்றல் தோற்றங்களில் காணப்படுவதுபோல், யாவேயின் நாள் மஞ்சு மற்றும் மேகங்களோடு வருகிறது; மேகம், அதன் இயற்கையான அடையாளப் பொருளிலோ, விண்ணக வானகம் என்ற உருவகத்திலோ, இறைவன் நடுவராக வருவதை உணர்த்துகிறது *(காண்க. எண் 17:7)*. எடுத்துக்காட்டாக, இருள் *(யோசு 24:7)* ஆண்டவர் வருவதை விவரிக்க உதவுகிறது. அஃது ''இருட்டும் காரிருளும் கவிந்த நாளாகும்'' *(செப் 1:15; எசே 30:3.18; 34:12; நாகூ 1:3; யோவே 2:2)*. இங்கு மேகம் புயலை முன்னறிவிக்கிறது *(எரே 4:13)*. புயல் கடந்தபின் யாவேயை மறைத்திருக்கும் திரையைப் பற்றிய நினைவை விட்டுச்செல்கிறது. ''எங்கள் மன்றாட்டு உம்மை வந்தடையாதபடி மேகத்தால் உம்மை மூடிக் கொண்டீர்! *(புல 3:44)*. நலந்தரும் புதிய யாத்திரைக் காலத்தைச் சுட்ட வல்லது மேகம் *(எசா 4:5)*. மீட்பின் நம்பிக்கையை உறுதிப்படுத்தவல்லது; ''மேகங்கள் மாரியென நீதியைப் பொழியட்டும்'' *(45:8)*.

அவரைச் சூழ்ந்துள்ள *(2 சாமு 22:12; சங் 97:2)* மேகத்தின் மேல் ஏறி *(எசா 19:1)*, தமது தேரில் வரும் யாவேயைச் சித்தரிக்கும் *(சங் 104:3)* உருவகத்தோடு, மற்றொரு உருவம் வெளிப்பாட்டு இலக்கிய முறையில் சித்திரிக்கப்படுகிறது. என்றுமே நீடிக்கும் பேரரசையுடையவர் ''வானத்தின் மேகங்கள் மீது மனுமகனைப் போன்றவராகத்'' *(தானி 7:13)* தோன்றுவார்.

5. கிறிஸ்துவும் மேகமும்: வானத்தில் மேகத்தின் மீது வருமுன் மனுமகன், தூய ஆவியின் நிழலாலும் உன்னதக் கடவுளின் வல்லமையாலும் போர்த்தப்பட்டு, கன்னி மரியாளால் கர்ப்பம் தரிக்கப்படுவார் *(லூக் 1:35)*. இயேசு உருமாறியபோது, பழைய ஏற்பாட்டில் காணப்படுவதுபோல், மேகம் இறைவனது பிரசன்னத்தையும் மகனின் மாட்சிமையையும் வெளிப்படுத்துகிறது *(மத் 17:1-8 இணை)*. அப்போது அது சீடர்களின் பார்வையிலிருந்து அவரை அகற்றி, அவர் எல்லாக் காணக்கூடிய பொருள்களுக்கும் அப்பால் வானகத்தில் வாழ்கிறார் என்றும் *(அ.ப. 1:9)*, ஆனால் அவரது சாட்சிகளுக்குப் பிரசன்னமாய் உள்ளார் என்றும் *(7:5 தொ)*காட்டுகிறது. பழைய ஏற்பாட்டில் உள்ளதுபோல், மானிட மகன், இறுதி நாளில் மேகங்களோடோ, மேகங்களின் மேலாகவோ

வரும்போது, மேகம் அவரது விண்ணகத் தேராக இருக்கும் (மத் 24:30 இணை; 26:64 இணை). இதற்கிடையில், வெளிப்பாட்டு நூலின் காட்சியாளர் மானிடமகனை ''வெண்மேகத்தில் அமர்ந்தவராயும்'' (திரு வெளி 14:14), மேகங்கள் சூழ வருபவ ராயும் (1:7) காட்சி காண்கிறார். இத்தகையவையே வரலாற்றின் ஆண்டவ ரது உபகரணங்கள்.

6. மேகத்தில் கிறிஸ்தவர்கள்: இயேசு வின் உருமாற்றத்தின் போது இயேசுவை யும் வானகத்திலிருந்து வந்தவர்களையும் மட்டுமன்று சீடர்களையும் மேகம் மூடியது (லூக் 9:34). அது விண்ணகத்தையும் மண் ணகத்தையும் இணைக்கிறது. தமது வார்த் தையைச் சுற்றி இயேசுவால் தொடங்கி வைக்கப்பட்ட சீடர்கள் குழுவையும் திரு நிலைப்படுத்துகிறது. விண்ணக மேகத்தி னுள் நுழைந்தவுடன் அதிலிருந்து இயேசு வின் வார்த்தைக்குச் செவிமடுக்குமளவுக்கு, இயேசுவோடும் விண்ணகத்தோடும் கூட, ஒரே சமூகமாக ஆகின்றனர் என்பதைச் சீடர்கள் அறிகின்றனர். மற்றொரு பாரம் பரியப்படி, உருவங்கள் உண்மைக்கு இடங் கொடுக்கின்றன. எபிரேயர் மோசேயில் (மோசேயின் பெயரில்) மேகத்திலும், கடலிலும் திருமுழுக்குப் பெற்றனர் (1 கொரி 10:1-2). ஆனால் கிறிஸ்தவன் கிறிஸ் துவில் (கிறிஸ்துவின் பெயரில்) தூய ஆவியிலும், நீரிலும் திருமுழுக்குப் பெறு கின்றான். உண்மையான மேகம் வெளிப் படுத்தும் (யோவா 14:26), வழிநடத்தும் (16:24) ஆவியே ஆவார். மேகத்தைப்போல், மோசேயின் முகத்தை முடிய திரை தற் காலிகமாக மாட்சிமையை ஒளிர்வித்தது. ஆனால், ஆவியான ஆண்டவரிடம் திரும்பு வோருக்கு இத்திரை விழுந்துவிடுகிறது (2 கொரி 3:12.18). ஆனால், இறுதிக்கால மேகங்களின் உருவம் அதன் மதிப்பீட்டைத் தக்கவைத்துக் கொள்கிறது. இறுதிநாளில் ஆண்டவர் வரும்போது அவர் முன் செல்வ தற்காக விசுவாசிகள் உலகத்தினின்று மேகங்கள் மீது தூக்கிச் செல்லப்படுவர் என்பதை மேகம் உணர்த்துகிறது (1 தெச 4:17; காண்க. திருவெளி 11:12).

மேசகாபு (MEZHAB - பொன்னீர்)

இவர் மதிரேதின் தந்தையும் ஏதோமின் அரசன் அதாரின் மனைவியான மெகேற்ற பேலின் தாத்தாவும் ஆவார் (ஆதி 36:39; 1 நாள் 1:50). இப்பெயர் ஓர் இடத்தையும் குறிக்கலாம் என்று அறிஞர் சிலர் கருது கின்றனர்.

மேசா (MESHA) - ஆள்

1. இவர் இஸ்ராயேலர், யூதா மற்றும் ஏதோமுக்கு எதிராக கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் போரிட்ட மோவாபிய அர சன் (2 அர 3:4). கி.மு. 865-இல் மேசா இதுவரை இஸ்ராயேலின் அரசன் ஆகாபின் கைவசமிருந்த மோவாபின் ஆட்சியைக் கைப்பற்றினார். ஆனால், தமது சொந்தச் சொத்திலிருந்து இஸ்ராயேலருக்குக் கப்பம் செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டார். ஆகா பின் சாவுக்குப்பின் மேசா கப்பம் செலுத்து வதை நிறுத்திவிட்டார் (2 அர 1:1; 3:4-5). இது போருக்கு இட்டுச் சென்றது (3:6-27). மோவாபியக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள மேசாவின் சொந்த அறிக்கையின்படி தான் இஸ்ராயேலர் மேல் உறுதியான வெற்றி யடைந்ததாகக் கூறுகிறான். ஒரு போராட் டத்தை மட்டும் கூறும் விவிலிய விவரிப்பு போர் மேசாவுக்குப் பாதகமாக அமைந்தது என்று கூறுகிறது (3:24-26). ஆனால், இறுதியில் இஸ்ராயேலர் பின் வாங்க வேண்டியிருந்தது. இஃது, அவன் தன் வாரிசைக் கெமேசு கடவுளுக்குப் பலியிட்டதின் விளைவாகக் கருதப்பட்டது (3:27). 2 நாள் 20-இல் குறிக்கப்படும் இஸ்ராயேலருக்கும் மோவாபியக் கூட் டணிக்கும் இடையே நடந்தபோர், முந்தையப் போரின் ஒரு பகுதியாக இருக்க லாம். இதில் கூட்டணியினர் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் வீழ்த்தி அழித்துக் கொண்டனர் (20:23). யூதா போரின் கொள்ளைப் பொருள்களைச் சேர்த்துக் கொண்டது.

2. மேசா, சீபுவின் தந்தை (1 நாள் 2:42).

3. மேசா, என்பவர் பென்யமின் குலத்தைச் சார்ந்தவர். இவர் சகரயிம்-ஒதேசு ஆகியோரின் மகன். இவர் மோவாபில் வாழ்ந்தவர் (1 நாள் 8:9).

மேசா (MESHA) - இடம்

இது யோக்தானின் வழித்தோன்றல்கள் வாழ்ந்த பகுதியின் ஓர் எல்லையாகும் (ஆதி 10:30). இதுவும் இசுமயேலர் குழுவின் மாசாவும் ஒரே இடத்தைக் குறிக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர் (ஆதி 25:14; பழ 31:1). அனேகமாக, மேசா சீரிய அல்லது அராபியப் பாலைவனத்தில் ஓர் இடத்தைக் குறிக்கலாம். உண்மையில் பல யோக்தானியப் பெயர்கள் அராபியத் தோற்றத்தைச் சுட்டுகின்றன.

மேசாக்கு (MESHACH - அகூ இருப்பது போல் இருப்பவர் யார்?)

இவர் தானியேலின் தோழர்களில் ஒருவர் (தானி 1:7; 2:49; 3:12-30). மேசாக்கு என்பது பாபிலோனியப் பெயராகும். இவரது எபிரேயப் பெயர் மிசாவேல் ஆகும். காண்க. சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேதுநெகோ.

மேசேக்கு (MESHECH - நீட்டப்பட்ட, உயர்ந்த)

1. இது, சிறிய ஆசியாவிலுள்ள ஓர் இடத்தையும், இனத்தையும் குறிக்கும். மேசேக்கு, எப்பேத்தின் புதல்வர்களான கோமேர், யாவான், தூபால் ஆகியவர்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளார் (ஆதி 10:2; 1 நாள் 1:5). யாவான், தூபால், மேசேக்கு ஆகிய நாடுகளின் வணிகர்கள் வெண்கலப் பாத்திர வாணிகம் செய்தனர் (எசே 27:13). மேசேக்கை, வெற்றி கொள்ளப்பட்ட நகரங்களில் ஒன்றாக எசேக்கியேல் கூறுகின்றார் (எசே 32:26). இது கோகு என்பவனால் ஆளப்பட்ட பகுதிகளுள் ஒன்று (எசே 38:2 தொ; 39:1). இது கேதாரோடு குறிக்கப்படுகிறது (சங் 120:5). இக்கருத்துகள், மேசேக்கும் முசுக்கியும் ஒன்று என்ற கருத்தை வலியுறுத்துகின்றன. முதலாம் திகிலத் பிலேசர் (கி.மு. 1112-1074) யூப்பிரத்தீசின் கிழக்கில் முசுக்கியைத் தோற்கடித்தார். இவர் அவர்களை வலிமை வாய்ந்த மக்கள் என்று குறிப்பிடுகின்றார். சார்கோனின் ஆட்சியில் (கி.மு. 721-705) இவர்களின் அரசன் மித்தா ஆவான். இவன் சார்கோனின் எதிரிகளுள் ஒருவன். சார்கோனின் படையெடுப்புகள் பின்வருவன: கி.மு. 717-இல் மித்தாவுடன் உடன்படிக்கை செய்திருந்த கார்கெமிசின் அரசன் பிசிரிசைத் தண்டித்தார். கி.மு. 715-இல் மித்தா, குவேயில் கைப்பற்றியிருந்த மூன்று நகரங்களை வென்றார். கி.மு. 713-இல் சார்கோனிடமிருந்து மித்தாவிடம் ஒப்பந்தத்தை மாற்றிய அம்பாரிசு அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டார். இதற்குப்பின் அசீரிய மன்னர்கள் நாட்டைப் பலப்படுத்தினர். கி.மு. 709-இல் குவேயின் ஆளுநன் மித்தாவின் மீது படையெடுத்து அவனுடைய இரு கோட்டைகளைக் கைப்பற்றினான். முசுக்கி இனத்தவரும், பிரிகியா நாட்டினரும் ஒன்றாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. கிரேக்கப் பாரம்பரியத்தில் கூறப்படும் மிதாசும், முசுக்கியின் மித்தாவும் ஒன்றாக இருக்கலாம். பிரிகியாவின் பாறைகளில் மிதாசு என்ற பெயர் 'மிதா' என்று எழுதப்பட்டுள்ளது. சங் 120:5-இல் தவிர, மற்ற இடங்களில் மேசேக்கு எப்போது தூபலுடன் குறிப்பிடப்படுகிறது.

2. மேசேக்கு என்ற பெயர் அரமேய இனத்தைக் குறிக்கும். ஆராமின் மகன் ஓர் அரமேய இனத்தின் குலப்பெயர் மூதாதையர் (1 நாள் 1:17). இணைப்பகுதியான ஆதி 10:23-இல் இவர் மசு என்றழைக்கப்படுகிறார்.

மேடையிருக்கை (GALLERY)

எசேக்கியேலின் ஆலய விவரிப்பில் ஒரு கட்டட அம்சம் (எசே 41:15.16; 42:3.5). இதன் பொருள் தெளிவாக இல்லை.

மேதபா (MEDEBA)

மேதபா, யோர்தான் நதி சாக்கடலோடு கலக்கும் இடத்திலிருந்து சுமார் 24 கி.மீ. தொலைவில் தென்கிழக்கிலும், அர்னோன் ஆற்றுக்கு வடக்கில் 30 கி.மீ. தொலைவிலும், எஸ்போனுக்குத் தெற்கில் 11 கி.மீ. தொலைவிலும் உள்ள நகரம். மோவாபியர்களின் நகரமான மேதபா, எமோரிய அரச

னான சீகோன் என்பவனால் கைப்பற்றப் பட்டது. பின் இந்நகரம் இஸ்ராயேல் மக்களால் பிடிக்கப்பட்டது (எண் 21:30). மோசேயால் ரூபன் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களில் மேதபா பீட பூமியும் அடங்கும் (யோசு 13:9.16). தாவீதின் காலத்தில் மேதபா அம்மோனியர்களின் கைகளில் இருந்தது. ஏனெனில் அம்மோனிய சிற்றரசர்கள் யோவாபால் தோற்கடிக்கப்படுமுன் அங்கு பாளையம் இறங்கி இருந்தார்கள் (1 நாள் 19:7). மோவாபியர் கல்லின்படி, மேதபா, மோவாபியர்களுக்குச் சொந்தமானது. இவர்களிடமிருந்து இஸ்ராயேல் மன்னன் ஓம்ரி திரும்பவும் கைப்பற்றினான். இவனுடைய ஆட்சியிலும், இவனுடைய மகனின் ஆட்சியிலும் இஸ்ராயேல் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர். மோவாபிய மன்னன் மேசா அதை இஸ்ராயேல் மக்களிடமிருந்து கைப்பற்றி அதனைப் புதுப்பித்தான். இரண்டாம் எரொபவாம், ஆமாத்து கணவாய் முதல், அராபாக் கடல்வரை இஸ்ராயேலுக்குரிய நிலப்பகுதிகளை மீண்டும் இணைத்துக் கொண்டான் (2 அர 14:25). மோவாபுக்கு எதிராக இறைவாக்கு கூறும்போது எசாயா மேதபாவையும் சேர்த்துக் கொள்கிறார் (எசா 15:2).

மக்கபேயர்களின் காலத்தில் மத்தத்தியாவின் மூத்தமகன் யோவான் யாம்ரியின் மக்களால் மேதபாவுக்கு வெளியில் மறைந்திருந்து தாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டார் (1 மக் 9:36). யோவானின் சகோதரர்களான யோனத்தானும், சீமோனும் மேதபாவிற்கு வெளியே காத்திருந்து, அங்கிருந்து வந்த எதிரிகளின் ஒரு திருமணக் கூட்டத்தைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டார்கள் (1 மக் 9:35-42). பிற்காலத்தில் ஆறு மாத முற்றுகைக்குப் பின் சீமோனின் மகன் யோவான் இரிக்கான் மேதபாவைக் கைப்பற்றினார். மேதபா கிறிஸ்தவர்கள் தொடக்க காலத்தில் வாழ்ந்த இடங்களில் ஒன்று. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கலைஞன் ஒருவன் அங்கிருந்த ஆலயத்தின் தரையில் பாலஸ்தீனத்தின் வரைபடம் ஒன்றைப் பல வண்ணத்தில் அமைத்தார். கி.பி. 1890-இல் புதிய ஆலயம் கட்டப்பட்ட போது, அவ்வரைபடத்தின் பெரும் பகுதி அழிந்துவிட்டது. இன்றும் 'மேதபா' என்றே அழைக்கப்படும் இப்பகுதியில் மக்கள் வாழ்கிறார்கள்.

மேதாது (MEDAD - அன்புக்குரியவர்)

பாலைவனத்தில் இறைவாக்குரைத்த ஓர் இஸ்ராயேலர். மோசேக்கு உதவியாக நியமிக்கப்பட்ட 70 மூப்பர்கள் மேல் ஆண்டவரின் ஆவி இறங்கி வந்தபின், சந்திப்புக் கூடாரத்துக்குப் புறம்பே, பாளையத்தில் இருந்த எல்தாது, மேதாது ஆகியவர்கள் மேலும் ஆண்டவரின் ஆவி இறங்கியது (எண் 11:26-20).

மேதியா, மேதியர் (MEDIA, MEDES)

மேதியா, வடமேற்கு ஈரானின் ஒரு பகுதியாகும். இஃது எல்புரூ மலைத்தொடர்களுக்கும், உப்புப் பாலைவனத்திற்கும், பாரசீகம் மெசபொத்தாமியா ஆகியவற்றுக்குமிடையே அமைந்துள்ளது. பிற்காலத்தில் இது வடக்கு மேதியா, தெற்கு மேதியா என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

கி.மு. 1400-க்கும் 1000-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஈரானிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேறிய இனத்தவர்களில் மேதியரும், பாரசீகரும் இருந்தனர் (எஸ்த 1:19; தானி 5:28; 6:8.12.15 காண்க.எஸ்த 1:3.14.18; 10:2). ஆதி 10-இல் கூறப்படும் நாடுகளின் பட்டியலில் எப்பேத்தின் புதல்வனான மாதாய், அவருடைய மற்றப் புதல்வர்களான கோமேர், மாகோகு, யாவான், தூபால், மேசேக்கு, திராசு ஆகியவர்களுடன் குறிப்பிடப்படுகின்றார் (ஆதி 10:2; 1 நாள் 1:5).

பழங்கால மேதியர்களைப் பற்றிய முக்கிய குறிப்புகள் யாவும் அசீரிய சாசனங்களிலிருந்து கிடைக்கின்றன. அசீரியாவின் அரசன் மூன்றாம் சல்மனேசர் வடக்கு நோக்கிப் படையெடுத்த போது பார்சுவாவை வென்று தென்கிழக்குப் பகுதியில் மேதியாவில் நுழைந்தார். ஐந்தாம் சம்சி அதாது (கி.மு. 823-810), மூன்றாம் திகிலத்

பிலேசர் (கி.மு. 745-727), இரண்டாம் சார்கோன் (கி.மு. 721-705), சனகெரிபு (கி.மு. 705-681) ஆகியவர்களின் சாசனங்களி லிருந்து சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக மேதியாவிற்கும் அசீரியாவிற்கும் தொடர்பு இருந்தது என்பது புலனாகிறது. சார்கோன் இஸ்ராயேல் மக்களை நாடுகடத்தப் பயன் படுத்திய நகரங்களில் ''மேதியர் நகரங்க ளும்'' உள்ளடங்கும் (2 அர 17:6; 18:11).

தேயியோக்கெசு அரசன் மேதியர்களை ஒன்று கூட்டி நகரத்தை மீண்டும் கட்டி யெழுப்பினான் என்று எரோதோத்து என்பவரால் எழுதப்பட்ட குறிப்பு ஒன்று கூறுகிறது (காண்க. எஸ் 6:2; தோபி 3:7). கி.மு. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிமிரியர்களும், சித்தியர்களும், மேதியர்க ளுடன் தொடர்பு கொண்டு அசீரியாவுக்கு எதிராக இருந்தனர். எசா 13:17-18; எரே 5:11-இல் கூறப்பட்டுள்ள மேதியா பாபி லோனைத் தாக்கும் நிகழ்ச்சி நடக்கவே இல்லை. மேதிய மன்னன் அஸ்த்யாகு பெரிய சைரசு அரசனால் தோற்கடிக்கப் பட்டதால் மேதியா பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாயிற்று. இப்பகுதி அலக்சாந்தரால் வெல்லப்பட்டது (தானி 8:1-8.20-21). பின்பு செலூக்கியர் ஆட்சிக்கும் (1 மக் 6:56), பார்தியர்களின் ஆட்சிக்கும் (14:1-3) உட் பட்டது. யூதர்கள் பாபிலோனிலிருந்து யூதா வுக்குத் திரும்பி, எருசலேமை மீண்டும் கட்ட சைரசு அனுமதித்திருந்தாலும், மேதியா போன்ற இடங்களில் சிதறிக் கிடந்த யூதர்கள் பலர், கி.மு. முதலாம் நூற்றாண்டில் தங்கியிருந்தனர் என்று அறிகி றோம் (அ.ப. 2:9).

கி.மு. 539-இல் பழைய ஏற்பாட்டில் மேதியர்களும் (பாரசீகர்களும்) புதிய பாபி லோனியப் பேரரசை வென்ற சூழ்நிலை யில் கூறப்படுகின்றனர் (எசா 13:17; 21:2; எரே 51:11.28; தானி 5:28). மேதியர்களின் சட்டத்தின் மாறும் இயல்பற்ற தன்மை ஒரு முதுமொழியாயிற்று (தானி 6:8.12.15; காண்க. 1:19.).

மேபாத்து (MEPHAATH)

மேபாத்து ரூபன் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு நகரம் (யோக 13:18). இது மெராரியர்களுக்குக் குறிக்கப்பட்டதாக வும் கூறப்படுகிறது (யோசு 21:37; 1 நாள் 6:79). எரேமியா இறைவாக்கினரின் காலத் தில் இது மோவாபியரின் பிடியில் இருந் தது (எரே 48:21). இந்நகரம் அனேகமாக ஆமானின் தெற்கில் சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ள யாவா என்ற இடமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மேம் (MEM)

இஃது எபிரேய நெடுங்கணக்கில் பதி மூன்றாவது எழுத்து. இஃது அகரவரிசைச் சங்கீதம் 119-இல் பதிமூன்றாவது பகுதிக் குத் தலைப்பாக உள்ளது. இப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தோடு தொடங்குகிறது.

மேயர்க்கோன் (ME-JARKON - *யர்க்கோன் நீர், வெளிறிய பச்சைநீர்*)

இது தாண் நாட்டின் ஒரு பகுதி. அனேகமாக இப்பெயர் ஓர் இடத்தைக் குறிக்காமல் யோப்பா நகருக்கு வடக்கில் சுமார் 6 கி.மீ. தொலைவில் மத்தியதரைக் கடலோடு கலக்கும் நீரோடையைக் குறிக்க லாம். இந்நீரோடை, நகர் ஏல்-அவுயா ஆகும். இஃது உள்நாட்டில், கடலிலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் ராஸ் ஏல்-அயின் என்னும் இடத்தில் உற்பத்தி யாகிறது. இது சாரோன் சமவெளியையும், யூதேயா-சமாரியா பீடபூமியையும் வளமாக் கும் வற்றாத ஐந்து நீரோடைகளில் ஒன்று. முதலில் இது சதுப்பு நிலத்தின் வழியாகப் பாய்ந்து பெரிய ஆழமான கால்வாயின் வழியாக கடலில் கலக்கிறது.

''மேயா காவல்மாடம்'' (TOWER OF MEAH, TOWER OF THE HUNDRED)

எருசலேமின் வட சுவரில், மீன் வாயிலுக் கும் ஆட்டுவாயிலுக்கும் இடையேயுள்ள ஒரு கோபுரம் (நெகே 31:1; 12:39). நெகேமியா மீண்டும் கட்டியெழுப்பிய சுவரின் ஒரு பகுதியாகும். இது அனனே லின் காவல்மாடத்திற்கு முன் குறிக்கப்படு

கிறது. இஃது ஒபேல்-மோரிய முகட்டின் வடமேற்குப் பகுதியிலிருந்து , ஆலயத்தை மேலிருந்து நோக்கியிருந்திருக்கவேண்டும். இது பிற்காலத்தில் பெரிய ஏரோது கட்டிய அந்தோனியாக் கோட்டையிருந்த இடத்தில் இருந்திருக்கலாம்.

மேய்ச்சல் நிலம் (PASTURE LAND)

கிராமங்களைச் சுற்றியுள்ள பரந்த நிலம். கிராமத்திலுள்ள ஆடு, மாடு மேய்ப்போரால் எல்லோருக்கும் பொதுவாக, இலவசமாகப் பயன்படுத்த வேண்டிய சமவெளி. ஐந்நூல் (எண் 35:7), யோசு (14:4) மற்றும் எசேக்கியேல் (45:2) ஆகிய நூல்களில், லேவியருக்கு நிலங்களைப் பிரித்தளிக்கும் பொழுது மேய்ச்சல் நிலங்கள் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன.

மேய்ப்புப்பணித் திருமுகங்கள் (PASTRORAL LETTERS)

திமொத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரு திருமுகங்களும் தீத்துவுக்கு எழுதப்பட்ட ஒரு திருமுகமும், ஒத்த தன்மையும் பொதுவான அக்கறைகளையும் கொண்டிருப்பதால் ஒரே தொகுப்பாகக் கருதப்படும். இத்தலைப்பு கி.பி. 175-இல் அந்தோன் என்பவரால் முதன்முதலில் பயன்படுத்தப் பட்டது. இதன் நோக்கம் இத்திருமுகங்களில் காணப்படும் மேய்ப்புப்பணி மற்றும் திருச்சபையின் அக்கறைகளை வலியுறுத்துவதாகும். இந்நோக்கோடு திருச்சபைகளின் தலைமை மேய்ப்பனும் நிர்வாகியும் என்ற அளவில் பவுல் தன் தோழர்களுக்கு இத்திருமுகங்களை எழுதுகிறார்.

இவை பவுலின் தோழர்களுக்குத் தனிப்பட்ட மடல்களாக எழுதப்பட்டாலும் பொதுத் தன்மையும் உடையனவாகும். திருச்சபையின் ஏடு என்ற அளவில் அதன் அதிகாரபூர்வமான தன்மை, ஒவ்வொரு மடலின் இறுதியில் வரும் வாழ்த்துதலால் வெளிப்படுகிறது. மூன்று மடல்களிலும் மிகவும் தனிநபர்த் தன்மையுடைய திமொத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகம் கூட, ''இறையருள் உங்களோடு இருப்பதாக'' (2 திமொ 4:22) என்று பன்மையில் வாழ்த்துதலைக் கொண்டிருக்கிறது. திருச்சபையை நிலைப்படுத்துவது என்ற முதன்மையான அக்கறையைக் கொண்டுள்ளார் ஆசிரியர். ஆகவே, அவர் கிறிஸ்தவ விசுவாசத்திற்குக் கீழ்ப்படிதலைச் செயல்படுத்துமாறு தமது தோழர்களுக்கு அறவுரை கூறுகிறார். வழிபாடு, விசுவாச அறிக்கை, பணி, திருநிலைப்படுத்துதல், திருச்சபையின் நிர்லாக அமைப்பு முதலியவற்றைப் பொருத்தமட்டும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறும் தப்பறையை எதிர்த்துப் போராடுமாறும் கூறுகிறார்.

மேராபு (MERAB - பெருகுதல்)

மேராபு சவுலின் மூத்தமகள் (1 சாமு 14:49). பவுல் இவளைத் தாவீதுக்கு மணம் முடித்து வைப்பதாக வாக்குறுதி கொடுத்தார். அதிக வீரத்தோடு தாவீது பெலிஸ்தியரோடு போராட வேண்டும் எனவும் நிபந்தனை விதித்தார். இதனால் தாவீது கொல்லப்படுவான் என நினைத்தார். சவுல், தாவீதை ஏமாற்றி, மேராபை அதிரியேலுக்கு மணமுடித்து வைத்தார். இதனால் மேராபின் தங்கை மீக்கால் தாவீதின் மனைவியானாள் (1 சாமு 18:17-27). பிற்காலத்தில் தாவீது, சவுலின் ஏழு புதல்வர்களைக் கொன்ற போது, அந்தக் குழுவில் மேராபின் 5 புதல்வர்களும் இருந்தனர் (2 சாமு 21:8).

மேரான் (MERRAN)

மேரான் என்பது ஓர் இடத்தின் பெயர் (பாரூ 3:23). மிதியான் என்பதை எழுத்துப் பெயர்ப்பு செய்யும் போது எழுந்த தவறால் தோன்றிய பெயர்.

மேரோம் நீரோடை (MEROM, WATERS OF)

மேரோம், கலிலேயாவின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு வறண்ட காட்டாறு (வாடி). இவ்விடத்தில்தான் யோசுவா ஆட்சோரின் அரசர் யாபீனைத் தோற்கடித்தார் (யோசு 11:5,7). மேரோமைக் குறிக்க பல இடங்களின் பெயர்களைக் கூறுகின்றனர். பரம்பரையாக மேரோம் என்பது கூலே ஏரி என்று கருதப்படுகிறது. ஆனால், அது

யோக 11:1-9-இல் கூறப்படும் போருக்கும், அந்தச் சதுப்புநிலப் பகுதிக்கும் ஒத்துவர வில்லை. எபெல் எர்மாகின் பாதிச்சரிவில், சாபெத்தின் மேற்கு வடமேற்கில் சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ள மேய்ரோன் கிராமம்தான் மேரோம் இருந்த இடமாக, பெரும்பாலோரால் கருதப்படுகிறது. இந்த இடமானது இசிரியேல் பள்ளத்தாக்கு கிழக்கிலிருந்து மேற்காகச் செல்லும் வழி யில் உள்ளது. அவ்விடத்தில் ஆராய்ச்சி நடத்திய போது மேய்ரோனில், பிற்கால வெண்கலக் காலம், இரும்புக்காலம், கிரேக்க-உரோமானியக் காலம், பைசாந்தி யர் காலம், இஸ்லாமியர் காலம் ஆகியவற் றில் மக்கள் வாழ்ந்தனர் என்று அறியப் பட்டுள்ளது. யோசுவாவின் போர், பிற்கால வெண்கலக் காலத்தில் நடந்ததால் இந்த இடம் யோசு 11:1-9-இல் கூறப்படும் நிகழ்ச்சியோடு ஒத்துப் போகின்றது. குன் றின் கிழக்குச் சரிவில் அழிந்து போன செபக்கூடத்தின் சில பகுதிகளும், கல்லில் குடையப்பட்ட பல கல்லறைகளும் உள் ளன. பாரம்பரியத்தின் படி, இவற்றில்தான் இல்லேல், சம்மாய் போன்ற பல ராபிக்கள் அடக்கம் செய்யப்பட்டனர். மேய்ரோனின் கீழே, குன்றின் தெற்கு அடிவாரத்தில் வடி மேய்ரோன் என்ற பள்ளத்தாக்கு உள்ளது. இதன் வழியாக வற்றாத நீரூற்றிலிருந்து தண்ணீர் பாய்கிறது. இது கிழக்கு முகமாகச் சென்று, பின் தெற்கு முகமாகத் திரும்பி, வடி ஏல்-தவாகின் என்னும் பெயரைப் பெறுகிறது. இங்குள்ள கரடுமுரடான குன்றுகள் இஸ்ராயேல் மக்களுக்குப் போர் புரிய வசதியாக இருந்தது.

மேரோம், கர்னாக்கு அட்டவணை யில் கி.மு. 15-ஆம் நூற்றாண்டில் மூன்றாம் துத்மோசு வென்ற நகரங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இஃது இரண்டாம் ராம்சேசால் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் அழிக்கப்பட்ட நகரங்களில் ஒன்றாகவும் குறிப்பிடப்படுகிறது.

மேற்குக் கடல், மத்திய தரைக்கடல் (WESTERN SEA)

மத்திய தரைக் கடலைக் குறிக்கும் சொல் (உப 11:24; 34:2; யோவே 2:20; செக் 14:8).

மேற்கோள் (QUOTATION)

வெளிப்படையான நேரிடையான மேற் கோள்கள் பழைய ஏற்பாட்டில் மிகச் சொற்பமாகவே காணப்படுகின்றன. ஆனால், புதிய ஏற்பாட்டில் சற்று அதிகம் காணப்படுகின்றது.

1. பழைய ஏற்பாட்டில்: அழிந்துபோன பழங்காலப் புத்தகங்களிலிருந்து அரிதாக, நேரிடையாக உள்ள மேற்கோள்கள் எடுக் கப்பட்டன. இருமுறை யாசார் நூலிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கின்றன (யோசு 10:12-13; 2 சாமு 1:19-27; காண்க. யாசாரின் நூல்). எழுபது நூலின்படி "பா டல் புத்தகத்திலிருந்து" (1 அர 8:12-13;8:53) எடுக்கப்பட்டிருக்க வேண்டும். புவிஇயல் குறிப்புகளுக்குப் பயன்படும் எண் 21:14-15 என்பது "யாவேயின் போர்கள்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது.

வெளிப்படையான, ஆனால் மறைமுக மான, மேற்கோள்கள் நிரம்பி இருக்கும் 1,2 அரசர்கள் நூல் அழிந்து போன அரசர்களின் ஆட்சிக்குறிப்பேடு என்ற இரு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண் டும். ஒன்று இஸ்ராயேலர் அரசர்களின் ஆட்சிக் குறிப்பேடு. மற்றொன்று யூதா அரசர்களின் ஆட்சிக் குறிப்பேடு. இந்த ஆட்சிக் குறிப்பேடுகள் அரசர்கள் பலரின் அரசாட்சியைச் சுருங்கக் கூறும் நூல்களா கும். 1,2 நாள் ஆகமம் ஒரு நூலிலிருந்து பல மேற்கோள்களை மறைமுகமாக, பல பெயர்களோடு கூறுகின்றது. ஒருவேளை இந்நூல் "அரசர்கள் நூலின் விளக்கவுரை" (2 நாள் 24:27) என்று அழைக்கப்பட்டிருக்க லாம். ஆனால், இப்புத்தகம் உண்மை யானதா, போலியானதா என்பது ஆராய வேண்டி உள்ளது.

மறைமுகமான மேற்கோள்கள் பல நெகேமியாவில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதிகாரபூர்வமான ஏடுகள் எஸ்ரா - நெகேமியாவில் குறைவாகவே எடுத்துக் காட்டப்படுகின்றன. பழைய ஏற்பாட்டிலி ருந்து பழைய ஏற்பாட்டில் கூறப்படும் மேற்கோள்கள், சாமுவேல், அரசர்கள் நூல்

களிலிருந்து பெரும்பகுதிகள், நாளாகமத்தி லும் முற்காலச் சட்டத்தொகுதியிலிருந்தும் பிற்காலச் சட்டத் தொகுதியில் எடுத்துக் கூறப்படுவது ஆகியன தெளிவாக உள்ளன. உரைநடையில் கொடுக்கப்படும் கவிதைப் பகுதிகள் மேற்கோள்களாக அல்லாமல் ஏடுகளாகவே கருதப்படவேண்டும். பழைய ஏற்பாட்டுக்கும், மெசபொத்தா மியா, எகிப்து, கானான் நாடு, கிரேக்க நாடு ஆகியவைகளின் இலக்கியங்களுக்கும் கருத்துகளிலும், தோற்றத்திலும் எடுத் துரைக்கும் முறைகளிலும் தொடர்பு இருக் கின்றன. இவை இலக்கியத் தழுவலாகக் கூட இருக்கலாம்; ஆனால், மேற்கோள்கள் அல்ல. சட்டங்கள், பழமொழிகள், புரா ணங்கள், தத்துவங்கள் ஆகியன அரசிய லையோ, பண்பாட்டையோ பொருத்து எழவில்லை.

2. புதிய ஏற்பாட்டில்: புதிய எற்பாட்டில் பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் நேரிடை யாக 150 முறையும், மறைமுகமாக 1100 முறையும் காட்டப்பட்டிருக்கின்றன. பழைய ஏற்பாடு யூதர்களால், கிறிஸ்துவர் களால், கடவுள் பயமுள்ள புற இனத்து மக்களால் ஏற்கப்பட்டு வந்தது. புதிய ஏற்பாடும் அதையே கூறுகின்றது என் பதைக் காட்ட பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாட்டில் மேற்கோள்கள் காட்டப் படுகின்றன. பழைய ஏற்பாட்டு மேற்கோள் கள் சில நேரங்களில் அதற்கு எதிராகவே புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டிருக்கின் றன (மாற் 10:2-9); அல்லது நறை கூறப்பயன்படுகின்றன (மத் 5:38-39) அல் லது வேறொரு விளக்கத்திற்கு மாறாக வாதமுறையில் கூறப்பட்டுள்ளன (மாற் 9:12; 1 கொரி 9:9). பொது விதிமுறைகள் (மத் 15:8-9) அல்லது இறையியல் கருத்துக் கள் (உரோமை 3:10 18) ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன. மத்தேயு நற்செய்தி யில் பல இடங்களிலும் யோவானில் சில இடங்களிலும், மற்ற நூல்களில் இங்குமங்கு மாகவும் இறைவனால் பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்டவை இப்பொழுது நடைபெறுகின்றன என்று காட்டப்படு கின்றது. பழைய ஏற்பாட்டிலுள்ள மேற் கோள்கள் பல எவ்வித விவாதமும் இன்றிப் புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளன (மத் 12:40; 1 கொரி 10:7). பழைய ஏற்பாட்டுச் சுட்டிக்காட்டுதல்கள் புதிய ஏற் பாட்டு ஆசிரியர்களிடம் தோன்றிய பொதுப் பண்பாட்டினைப் பிரதிபலிக்கின் றன. அல்லது யாருக்காக நூல்கள் எழுதப் பட்டனவோ, அவர்கள் அறிந்த இலக்கியத் தையும் பிரதிபலிக்கின்றன. குறிப்பாக, பவுலின் மடல்கள், அப்போஸ்தலர் பணி, திருவெளிப்பாடு ஆகிய நூல்கள்.

புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தும் பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் பெரும் பாலானவை எழுபது நூலைச் சார்ந்தவை. இதில் வாசகம் எபிரேய வாசகத்தை அரி தாகவே பிரதிபலிக்கிறது. மத்தேயு நற்செய் தியில் காணப்படும் நாற்பத்துமூன்று மேற் கோள்கள் இதற்கு விதிவிலக்காகும். இவை மத்தேயுவுக்கே உரியன. இவற்றில் பதி னொன்று எழுதும் நூலோடு ஒத்துப்போ கின்றன. மற்ற முப்பத்திரண்டும் எழுபது நூலிலிருந்தும் மற்றக் கிரேக்க வாசகங்களி லிருந்தும் வேறுபடுகின்றன; எபிரேய வாச கத்துக்கு நெருங்கியவையாக உள்ளன. இது மத்தேயுவின் ஆசிரியர் எபிரேய வாசகத்தி லிருந்து நேரடியாகவோ, இப்போது தொலைந்துபோன ஒரு கிரேக்க வாசகத்தி லிருந்தோ மேற்கோள்களை எடுத்திருக்க வேண்டும் எனச் சுட்டுகிறது.

புதிய ஏற்பாட்டில் புனித யூதா எழுதிய திருமுகத்தில் எழுதப்பட்டிருக்கும் 14 ஆவது வசனம் யூத திருமுறை சாராத நூலான ஏனோக்கு நூலிலிருந்து (1:9) எடுக்கப்பட்டி ருக்கின்றது. ஆனால் இத்தகைய சுட்டிக் காட்டுதல்களில் எதிரொலி பல உண்டு. புறவினத்து ஆசிரியர்கள் பலர் புதிய ஏற்பாட்டில் குறிக்கப்படுகின்றனர். மெனான்டர் (1 கொரி 15:33), கிறிஸ்து வுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த தர்சுவைச் சேர்ந்த அராத்து என்னும் கிரேக் கப்புலவன் (அ.ப. 17:28), கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எபிமெனிதஸ் என்பவர் (தீத்து 1:12) ஆவார்கள். புறவினத்

தாரின் இலக்கிய வடிவங்கள் எல்லாம் புண்ணியங்கள், பாவங்கள் என்ற தலைப்பில் உள்ள குடும்பத்தின் கடமைகளில் பவுல் குறிப்பிடுவதைப் பார்க்கின்றோம். ஸ்தோயிக்கு நன்னடத்தைகள் எல்லாம் பவுலின் திருமுகங்களில் இடம் பெறுவதைப் பார்க்கின்றோம். சில சமயங்களில் பவுல் தான் எழுதிய மடல்களையே சுட்டிக்காட்டுகிறார் (1 கொரி 7:1;...) 1 கொரி 6:12; 8:1 நேரிடையாகக் காட்டப்பட்ட மேற்கோள்களாகக் கருதப்படுகின்றன. 2 கொரி 10 நேரிடையாகக் காட்டப்பட்ட மேற்கோளாய் இருந்தாலும் பவுலால் சற்று வேறுவிதமாகக் கூறப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் ஒரு நூலை மற்றொரு ஆசிரியர் வெளிப்படையாக எடுத்துக் கூறுவதற்குச் சான்று இல்லை. ஆனால், நிகழ்ச்சிகள் பற்றிய எடுத்துக்காட்டுகள் உள்ளன. இவ்வகையானவைதான் மத்தேயு மற்றும் லூக்காவில் காணப்படும் மாற்கின் பகுதிகளின் இரட்டிப்பு விவரிப்பு; பேதுருவின் இரண்டாம் திருமுகம் யூதாவைப் பயன்படுத்துவது; எபேசியரில் கொலோசியர் பயன்பட்டிருப்பது. புதிய ஏற்பாட்டில் வரும் பாடல் பகுதிகள் மேற்கோள்கள் அல்ல; மாறாக, இதுவரை எழுதப்படாத பாடல்களுக்கு எழுத்து வடிவம் அளிப்பதேயாகும். இவ்வகையைச் சேர்ந்தவையே 1 கொரி 13; எபே 5:14; பிலி 2:6-11; கொலோ 1:15-18; 1 திமொ 3:16; மற்றும் திருவெளிப்பாட்டு நூலில் சிதறிக் கடக்கும் விண்ணக வழிபாட்டின் பல பகுதிகள். எழுதப்படாத மற்றும் ஆள்பெயர் தெரியாத பாரம்பரியம் மேற்கோள் என்று கருதப்பட்டால், இத்தகைய எடுத்துக்காட்டல்களை இருமுறையும் (1 கொரி 11:23; 15:3) மறைமுகமாகப் பலமுறையும் பவுல் தருகிறார். இத்தகைய மேற்கோள்கள் புதிய ஏற்பாட்டின் முதல் ஐந்து நிகழ்ச்சியுரை நூல்களில் பல முறை காணப்படுகின்றன.

மேற்பார்வையாளர் (CHAMBERLAIN OVERSEER)

அரசனது அரண்மனை அல்லது மேல் குலத்தோரின் வீடுகளில் தனி நிலைப்பகுதிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் (2 அர 23:11; எஸ் 1:10; அ.ப. 12:20). பானம் அளிக்கும் கடமையுள்ளவர்கள் போன்றவர்கள் அரசனது நம்பிக்கையைப் பெற்று, அவருக்கு நெருக்கமாக இருந்தனர். நாத்தான் - மெலேக்கு யோசியா காலத்தில் மேற்பார்வையாளராக இருந்தார் (2 அர 23:11). இந்த அதிகாரிகள் அரண்மனையின் பெண்கள் பகுதிகளுக்கும் செல்ல வேண்டியவர்களாய் இருந்ததால், பெரும்பாலும் இவர்கள் அண்ணகர்களாக இருந்தனர்.

ஏதாவது ஒரு குழுவைக் கவனித்துக் கொள்ளும் அதிகாரிகளும் மேற்பார்வையாளர் என்றே குறிக்கப்படுகின்றனர் (ஆதி 39:4; 41:34; யாத் 1:11; 2 சாமு 20:24; 2 நாள் 2:18; 34:13.17; நெகே 11:9; 12:42; பழ 6:7; அ.ப. 20:28).

மேன்மை, நன்மதிப்பு (HONOUR)

இஃது ஒருவருக்குச் செய்யப்படும் அல்லது ஒருவரிடமிருந்து பெறப்படும் நன்மதிப்பு, மரியாதை, சிறப்பு, வணக்கம் ஆகும். பழைய ஏற்பாட்டில், நன்மதிப்பு ஒருவனின் உயர் பதவியோடு இணைந்தது. ஒருவனுடைய ஆற்றல், சொத்து, செல்வம், ஞானம், உயர் பதவி போன்றவையே ஒருவனுடைய நன்மதிப்புக்கும் சிறப்புக்கும் அடையாளமாகக் கருதப்பட்டன (ஆதி 45:13).

விவிலியத்தில், நன்மதிப்பும் புகழும் மிகவும் தொடர்புடையனவாகும். பெருமை (ஆதி 30:20), மாண்பு (1 சாமு 2:8) போன்ற சொற்களும் பயன்பட்டன.

பழைய ஏற்பாட்டில் இச்சொல் பெரும்பாலும் மனிதனின் நன்மதிப்பையே குறிக்கிறது. ஏனெனில், முன்பே கூறியதுபோல, இச்சொல்லுக்குப் பதிலாகப் 'புகழ்', 'மாட்சி', 'சிறப்பு' போன்ற சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கடவுளின் மேன்மையைப் பற்றிக் கூறும் போது புகழ், மாட்சி சிறப்பு, மேன்மை போன்ற சொற்களை மொழிபெயர்ப்பாளர்கள் கையாளுகிறார்கள். மனிதனின் நன்மதிப்பு, மேன்மை என்பன கடவுளின் கொடையா

கும் (சங் 8:6; 61:7; 70:21). மனிதனின் இப்புகழ், அவனது ஆட்தன்மையை வளர்க்கும் கொடைகளாகிய சொத்து, செல்வம், ஞானம், ஆற்றல் ஆகியவற்றில் அடங்கும். தன்னுடைய மேன்மையை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதன் மூலம் மனிதன் தனது மேன்மையை வெளிப்படுத்துகிறான். கடவுளுக்குக் கீழ்ப்படிய மறுப்பதன் மூலம் மனிதன் தனது மேன்மையை இழக்கிறான். தங்களுக்காக நன்மதிப்பைத் தேடிக் கொள்பவர்களை இறைவாக்கினர்கள் கண்டிக்கிறார்கள் (எசா 1:23; ஆமோ 5:11-12; 8:4-5). மனிதனின் நன்மதிப்பு சமுதாயத்தின் நலனுக்காகப் பயன்படுத்தப் பட வேண்டும். இவ்வாறு, மனிதனின் நன்மதிப்பு நீதி, நேர்மை, சமாதானம் முதலியவற்றோடு இணைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, அவமதிப்பு, அவமானம் என்பன பாவத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. தாய் தந்தையர்களுக்குரிய மதிப்புக்குப் பழைய ஏற்பாடு முக்கியத்துவம் கொடுக்கிறது (யாத் 20:12; உப 5:16). இக்கட்டளை புதிய ஏற்பாட்டில் ஆறு தடவை வருகிறது.

புதிய ஏற்பாடும் 'நன்மதிப்பு' என்ற சொல்லை முதன்மையாக மனிதனின் மேன்மையைக் குறிப்பதற்கே பயன்படுத்துகிறது. இருப்பினும், தங்களுக்கே நன்மதிப்பைத் தேடி அலைபவர்களைப் புதிய ஏற்பாடு எச்சரிக்கிறது. குறிப்பாக, விருந்தினர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தேடுதல் (லூக் 14:7-8; 20:46; எபி 5:4), பதவியின் பெயரால் உயர்நிலை தேடுதல் (எபி 5:4) ஆகியவற்றை எச்சரிக்கிறது. யாருக்கெல்லாம் மதிப்பு உரியதோ, அவர்களுக்கெல்லாம் ஒரு கிறிஸ்தவன் சுதந்தரமாகவும், மகிழ்ச்சியோடும் மதிப்புக் கொடுக்க வேண்டும் (2 உரோ 12:10; பிலி 2:29; 1 திமொ 5:3; 6:1). சில வேளைகளில் அவன் தனது நன்மதிப்பை இழக்க நேரிட்டால் அஃது அவன் மனிதன் என்ற அளவில் தனது அழைத்தலுக்குக் காட்டிய பிரமாணிக்கமின்மையையோ இறைபால் பற்றுறுதியின்மையையோ சுட்ட வேண்டியதில்லை. மாறாக, அவன் கடவுளின் பணியாளர் என்று காட்டுவதற்காக அவ்வாறு நேரலாம் (2 கொரி 6:8).

எல்லாப் புகழும், மாட்சியும், வல்லமையும் பெறத் தக்கவர் இறைவனே (1 திமொ 1:17; 6:16; திருவெளி 4:9; 7:12). ஏனெனில், எல்லா மேன்மையின் ஊற்றும் அவரே (2 பேதுரு 1:17; திருவெளி 4:11). இயேசு பாடுபட்டு இறந்ததால் மகிமையும், மாட்சியும் அவருக்கு முடியெனச் சூட்டப்பட்டன (எபி 2:9). பலியான செம்மறி வல்லமையும், செல்வமும், ஞானமும், பலமும், மாட்சியும், மகிமையும், போற்றியும் பெறத் தகுதியுள்ளவர் (திருவெளி 5:12-13). ''தன் உடலில் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதும்'' (பிலி 1:20), ''கடவுளுக்கு மகிமை செலுத்துவதும்'' (அ.ப. 12:23) கிறிஸ்தவனின் கடமையாகும். இஃது இறைவனுடைய மேலான்மையையும் மகிமையையும் ஏற்பதாகும் (யோசு 7:19). கடவுளுக்கு அல்லது அவரது மகனுக்கு மதிப்புக் கொடுக்க மறுப்பது பாவமாகும்.

மை

மை (INk)

பழங்காலத்தில் எரிக்கப்பட்ட மரப் பிசினின் கரி, நிலக்கரி, ஊசியிலை, மரத்தூள் ஆகியவற்றைக் கலந்து அல்லது விளக்குப் புகைபோக்கியிலுள்ள கருவண்ணப் பொருள், பிசின், நீர் அல்லது மற்ற திரவப் பொருட்களைக் கலக்கிக் கருமை செய்யப் பட்டது. பொதுவாக, மை கடினப் பொருளாகக் காயவைக்கப்பட்டது; பயன்படுத்தப் படும் போது ஈரமாக்கப்படும். சிவப்புமை செய்வதற்குப் பிசின்கரிக்குப் பதிலாக மஞ்சள் களிமண் அல்லது இரும்பு ஆக்சைடு சேர்க்கப்படும். இத்தகைய மைகள் எகிப்தில் பயன்பட்டுள்ளன; பிற்காலத்தில் பாலஸ்தீனத்தில் சாக்கடல் ஏடுகளில் பயன்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டில் எரே 36:18-இல் மட்டும்தான் மை வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் மறைமுகமாகவே குறிக்கப்படுகிறது. மை அழிக்கப்படலாம் (யாத் 32:33; சங் 69:28), அல்லது கழுவப்படலாம் (எண் 5:23). ராபிகளின் நூல்கள், அழிக்கப்படக் கூடிய மைக்கும் அழியாத மைக்கும் உள்ள வேறுபாட்டை வலியுறுத்துகின்றன.

புதிய ஏற்பாட்டில் பொதுவாக, கருமை பயன்பட்டதாகச் சுட்டிக்காட்டப் படுகிறது (2 யோவா 12; 3 யோவா 13). அழிந்து போகும் மையால் எழுதப்பட்ட செய்தியை மனித இதயங்களில் அழியாமல் எழுதப்பட்ட தூய ஆவியின் செய்தியோடு ஒப்பிட்டு வேறுபடுத்த பவுல் மையைப் பயன்படுத்துகிறார் (2 கொரி 3:3).

எபிரேய எழுத்தாளர்கள் மரம், கொம்பு, தந்தம் அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட பெட்டிகளில் அல்லது கூடுகளில் மை, எழுதுகோல் முதலியவற்றை வைத்திருப்பர். இவை இடைக் கச்சையோடு இணைக்கப்பட்டிருக்கும் (எசே 9:2).

மொ

மொகுமூர் (MOCHMUR)

இது தோதாயிமுக்குத் தென்கிழக்கில் உள்ள சிற்றேடை (யூதி 7:18). இது தற்போதைய வாடி மக்பூரியேவாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மொசா (MOZAH - பிரிந்து செல்லுதல்)

பென்யமினுக்குக் கொடுக்கப்பட்ட நகர்களில் கெபிராவுக்கு அடுத்தபடியாக வரும் நகர் இது (யோசு 18:26).

இந்நகரின் பெயரானது எரிகோவிலும் தெல் ஏன்-நாஸ்பேவிலும் தோண்டியெடுக்கப்பட்ட மட்பாண்டத்தின் கைப்பிடியில் எழுதப்பட்டுள்ளது. கி.பி. 66-73-இல் நடைபெற்ற போருக்குப்பின் வெஸ்பாசியன் 800 படை வீரர்களை இங்கு தங்க வைத்தான். இதை எம்மாவு குடியிருப்பு என்று அழைத்தான். இந்த இடம் எருசலேமிற்கு வடமேற்கில் 6.5 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலக் கலோனியேவாக இருக்கலாம்.

மொட்டை, வழுக்கை (BALDMESS)

இயற்கையாக தலைமுடி முழுவதும் இல்லாமல் இழப்பது விவிலியத்தில் உள்ள மக்களிடையே இல்லாத ஒன்று. பழைய ஏற்பாட்டில் இதைப் பற்றிய குறிப்பு அரிது; புதிய ஏற்பாட்டில் ஒன்றும் இல்லை. கிழக்கத்திய நாடுகளில் உள்ள ஓவியங்கள் நீண்ட தலைமுடியும், தாடியும் கொண்ட செமித்திய இன மக்களைக் காட்டுகிறது.

லேவி 13:41-43-இல் மொட்டைத் தலையைப் பற்றிய குறிப்பு உள்ளது. அது தொழுநோயின் அறிகுறியானால் அவன் விலக்கப்பட்டவன் ஆவான் என்கிறது சட்டம்.

புலம்பலுக்கு அறிகுறியாகவும் (ஆமோ 8:10), அடிமையாவதற்கு அறிகுறியாகவும் (எசா 3:24), மொட்டையடிக்கப்பட்டது. இதிலிருந்து கோராகு என்ற பெயர் வந்திருக்கலாம் (ஆதி 36:5; யாத் 6:21; எண் 16:1). ''வழுக்கைத் தலையன்'' என்று எலிசா ஏளனம் செய்யப்பட்டார் (2 அர 2:23). இஃது இயற்கையாக உள்ளதா, இறைவாக்கினருக்குரிய தலையில் உள்ள வட்டமா எனத் தெரியவில்லை. எபிரேயர்கள் தலை முடியை மழிக்க அனுமதிக்கப்படவில்லை (உப 14:1), ஏனெனில், அண்டை நாட்டவர்கள் இப்படிச் செய்தனர் (எரே 9:26; 25:23). தலையில் நடுவட்டம் எடுக்க குருக்கள் அனுமதிக்கப்படவில்லை (லேவி 21:5). எனினும், மொட்டைத்தலை எனப் பெயர் இல்லையெனினும், நாசரேயர் தன் பொருத்தனையின் முடிவில் தலைமுடியை மழிப்பதும் அம்முடியை எரிப்பதும் வழக்கில் இருந்தது (எண் 6:19; காண்க. அ.ப. 18:18; 21:24). குருக்களின் சட்டம் செயற்கையாக மொட்டையடிப்பதைத் தடை செய்கிறது. ஆனால், இறைவாக்கினர் இதை அழுது புலம்புவதற்கு அறிகுறி என்கின்றனர் (எசா 15:2; 22:12; எரே 47:5; 48:37; எசே 7:18; மீக் 1:16). இதை இறைவாக்கினர்கள் ஒரு சடங்காக ஏற்றுக் கொண்டார்களா, எபிரேயர்களிடம் இந்தப் பழக்கம் பொதுவாக இருந்ததா என்று தெளிவாக இல்லை. ஆனால், இறைவாக்கினர்கள் உடனடியாக வரவிருக்கும் அழிவையும், அடிமைத்தனத்தையும் உருவகமாகக் குறிக்க மொட்டைத்தன்மையைச் சுட்டிக் காட்டுகின்றனர் (காண்க. எசே 29:18). இதில் அடிமை வேலையாட்களின் தலைகள் யாவும் மொட்டை அடிக்கப்பட்டன.

மொட்டை வெட்டுக்கிளி (BALD LOCUST)

நேரான, குறுகிய முள் இறகுகள் கொண்ட வண்டு இனத்தைச் சேர்ந்த ஒரு பூச்சி. இது சுத்தமானதால், உண்ணக் கூடியதாகும் (லேவி 11:22).

மொர்தக்காய் (MORDECAI)

இது மார்துக்கு என்ற பாபிலோனியத் தெய்வத்திலிருந்து வந்த பெயர்.

1. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்த யூதர்களில் ஒருவர் (எஸ் 2:2; நெகே 7:7).

2. இவர் எஸ்தர் ஆகமத்தின் கதாநாயகன். இவரும், அகசவேரு மன்னனின் அரசியாகிய இவரது சகோதரன் மகள் எஸ்தரும் மன்னனின் அமைச்சரான ஆமானின், யூதருக்கு எதிரான சதித்திட்டங்களை முறியடித்தனர். இவர்கள் இவ்வாறு யூத குலத்திற்காகப் போராடவில்லையெனில் இவர்களும், பாரசீகத்திலுள்ள அனைத்து யூதர்களும் கொல்லப்பட்டிருப்பார்கள் (எஸ் 2:5-10:3).

மொர்தக்காய், அகசவேரு மன்னனுக்கு எதிராக கபத்தா, தாரா ஆகியோர் அரசனைக் கொல்லும் பொருட்டுச் செய்த சதியை அரசனுக்கு அறிவித்தார் (எஸ் 12:1-2). இவர் அரசனின் அமைச்சனான ஆமானை மண்டியிட்டு வணங்க மறுத்தார். இதைக் காரணமாகப் பயன்படுத்தி ஆமான் யூதர்களை அழிக்கத் திட்டமிட்டான் (எஸ் 3). மொர்தக்காய் எஸ்தரிடம் யூத மக்களுக்காக மன்றாடினார் (எஸ் 4). ஒருநாள் அகசவேரு மன்னன் தனக்கு மொர்தக்காய் செய்த உதவியை நினைந்து அவனைக் கௌரவித்தான் (எஸ் 6). ஆமானுக்குப் பின் மொர்தக்காய் அமைச்சனாக நியமிக்கப்பட்டு, யூதரின் எதிரிகளை அழிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டது (எஸ் 8). இத்தகைய யூதரின் எதிரிகளை அழிக்கும் நாளை மொர்தக்காய் பூரிம் என்ற திருவிழாவாக ஏற்படுத்தினார். இது மொர்தக்காயின் நாள் என மக்கபேயர் ஆகமத்தில் வழங்கப்படுகிறது (2மக் 15:36; எஸ்த 9).

மோ

மோசரோத்து (MOSEROTH)

மோசேரா என்ற பெயரின் மற்றொரு வடிவம் (எண் 30:30-31).

மோசே (MOSES - *மகன், பிறக்க வேண்டிய வன்)*

I **விவிலியத்தில் மோசே:** *யாத் 2:10-ஐ அடிப்படையாகக் கொண்டு இப்பெயருக்கு ''எடுத்தல்'' என்று பொதுப்பாணி விளக்கம் அளிக்கப்படும். ஆனால், இப்போது ''பிறத் தல்'' என்ற பெயருடைய எகிப்தியச் சொல்லாக அடையாளம் காட்டப்படுகிறது. யாத் 2:1 தொ-இல் வரும் தொடக்கக் கதையில் மோசேயின் பெற்றோரின் பெயர் கள் கொடுக்கப்படவில்லை. யாத் 6:14தொ-இல் கொடுக்கப்படும் மூதாதையர் பட்டியல், அவர்களின் பெயர் அம்ராம், யோக்கபேது என்று கொடுக்கிறது. இது பிற்காலத்தைச் சேர்ந்த செயற்கையான பட்டியலாக இருக்கலாம்.*

1. **மூலங்கள்:** *விவிலியத்துக்குப் புறம்பே மோசேயைப் பற்றிய செய்திகள் இல்லை. விவிலியச் செய்திகளும் தரத்தில் ஒரே சீராக இல்லை. இவற்றில் தொடக்க காலத்தைச் சேர்ந்த நிகழ்ச்சியுரைகள் முதன்மை முக்கி யத்துவம் உடையனவாகும். ஐந்நூலின் பிற்கால நிகழ்ச்சியுரைகள் வரலாற்றுச் செய் திக்குத் தொடக்ககால நிகழ்ச்சியுரையைச் சார்ந்துள்ளன. இவை மிட்ராஷ் தன்மை யுடையனவாகத் தெரிகிறது. தொடக்ககால நிகழ்ச்சியுரைகள் எழுதப்பட்ட காலத்தை கி.மு. 10-ஆம் நூற்றாண்டுக்கு முன் குறிக்க முடியாது என்பது முக்கியமாகும். ஐந்நூ லின் இப்போதைய வடிவத்திற்கு அடிப் படையான நூலுக்கு இன்னும் ஒரு நூற் றாண்டு பின் குறிக்கலாம். ஐந்நூலின் தொகுப்புக்கு கி.பி. 400-க்கு முந்திய காலம் குறிக்க முடியாது. ஆகவே, மோசேயின் பாரம்பரியங்கள் பற்றிய இலக்கிய வரலாறு கூட சிக்கல் மிக்கதாகும்; ஒரே சீரான, எளிய, ஒன்றிணைந்த நிகழ்ச்சியுரை அன்று. மோசேயின் காலத்திற்கும் பாரம்பரியங்க ளின் எழுத்து வடிவத் தொகுப்புக் காலத்திற் கும் இடையில் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகள் கடந்திருக்க வேண்டும். ஆய்வின் முடிவுகளின்படி, இஸ்ராயேலர்க ளிடையே வாய்மொழிப் பாரம்பரியம் இரண்டு, மூன்று அல்லது நான்கு வடிவங் கள் எடுத்தன. எழுதப்படும் முன் தேர்வு செய்தல், விவரித்தல், விளக்கம் அளித்தல் ஆகியவை நடைபெற்றன. ஆகவே, தாவீது அல்லது சாலமோனைப் போல் மோசே ஒரு வரலாற்று ஆள் இல்லை எனலாம். இதனால் அவர் இருந்ததைப் பற்றியோ, இஸ்ராயேலையும் அதன்படி பல அமைப்பு களையும் நிறுவியவர் மோசே என்பது பற்றியோ ஒரு பிரச்சனையுமில்லை. இக் கால வரலாற்று ஆசிரியர் எவரும் இவற்றை மறுக்கமாட்டார். அவரது வாழ்வு பற்றிய விவரங்கள் குறித்த பிரச்சனைகளுக்கு உறுதி யான பதில் கூறுவது அவ்வளவு எளிதன்று. ஆனால், ஓரளவு அவரது வாழ்க்கை வரலாற்றை மீண்டும் அமைக்கலாம்.*

2. **வாழ்க்கை வரலாறு:** *விவிலிய ஏட்டின் படி, பார்வோனுக்கு எபிரேயர்கள் அடி மைப் பட்டிருந்தபோது, மோசே எகிப்தில் பிறந்தார். இது புதிய அரச மரபுக்காலத்தின் (கி.மு. 1550-1085) பிற்பகுதியில் நடந்திருக்க லாம். மோசேயின் பெற்றோர் லேவி இனத்தைச் சேர்ந்த அம்ராம் - யோக்கபேது ஆவர் (யாத் 2:1; 6:20).*

மோசேயின் பிறப்பும், பார்வோனின் கட்டளைப்படி நைல்நதியில் மூழ்கிச் சாவதி லிருந்து காப்பாற்றப்பட்டதும், யாத் 2:1-10-இல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இறைவன் மோசேயைத் தேர்ந்தெடுத்தார் என்று நம்பி (காண்க. எபி 11:23), அவரது பெற்றோர் மூன்று மாதங்களுக்கு மறைத்து வைத்து, கோரைப்புல் பேழையில் வைத்து நைல்நதிக் கரையிலுள்ள நாணல்க ளிடையே ஒரு குளிக்குமிடத்தில் விட்டு வைத்தனர். பார்வோனின் மகளால் கண் டெடுக்கப்பட்டு, தன் தாயால் வளர்க்கப் பட்டு, பின்பு மோசே பார்வோனின்

மகளால் தத்து எடுக்கப்பட்டார். இந்நிகழ்சியுரை மோசே என்ற பெயரை நீரிலிருந்து எடுக்கப்படுதலோடு தொடர்புபடுத்துகிறது. இதற்கு ஒத்த பிறப்பு வரலாறு பழைய மேற்காசியாவில் காணப்படுகிறது (எ.கா. அக்காதின் சார்கோன்).

மோசே எகிப்திய அரண்மனையில் வளர்ந்தார். ''எகிப்து நாட்டுக் கல்வி கேள்விகள் அனைத்தையும் கற்று, சொல்லிலும் செயலிலும் வல்லவராய்த் திகழ்ந்தார்'' (அ.ப. 7:22). ஆயினும் தான் ஓர் எபிரேயன் என்பதையும் தனது மக்களின் அவல நிலையையும் அறிந்தார். அதன் விளைவாக, அவர்களுக்கு உதவி செய்யவும் விடுவிக்கவும் தனக்கு இறை அழைப்பு இருப்பதாக உணர்ந்தார். நாற்பது வயதை அடைந்தபோது ஓர் எகிப்தியன் ஓர் எபிரேயனை அடிப்பதைக் கண்டார். மோசே எகிப்தியனைக் கொன்று பழிவாங்கினார் (யாத் 2:11-2). மோசே தங்கள் காரியங்களில் தலையிடுவதை எபிரேயர் வெறுத்தனர் (2:14). பார்வோன் தன்னைக் கொல்லக் கூடும் என்று அஞ்சி மோசே மிதியானுக்கு ஓடிப்போனார் (2:15).

மிதியானிலும் விடுதலை அளிப்பவராக மோசே செயல்படுகிறார். குரு இரகுவேலின் (இவர் இத்திரோ என்றும் ஒபாபு என்றும் அழைக்கப்படுகிறார்) ஏழு புதல்வியர்களை அவர்கள் எதிரிகளான இடையர்களிடமிருந்து காப்பாற்றுகிறார். இரகுவேலுடன் தங்கி, அவரது புதல்வி சிப்போராவை மணந்து கேர்சோம், எலியேசர் என்ற இரு புதல்வர்களுக்குத் தந்தையாகிறார் (2:22; 18:3-4; 1 நாள் 23:15).

ஓரேபு பாலைவனத்துக்கு அருகில் இத்திரோவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, மோசே அழைப்பையும் பணிக்கட்டளையையும் பெறுகிறார். தீய்ந்து போகாது எரிந்து கொண்டிருந்த முட்புதரால் ஈர்க்கப்படுகிறார். அங்கு ஆண்டவரின் தூதரும், கடவுளும் மோசேயிடம் பேசுகின்றனர். நீண்ட உரையாடலுக்குப்பின், எகிப்திலிருந்து எபிரேயர்களை நடத்திச் செல்லும் விடுதலையளிப்பவராக ஆக இணங்கச் செய்கின்றனர் (3:1-4:17). இச்சூழ்நிலையில் இறைவன் யாவே என்ற தமது பெயரை வெளிப்படுத்துகிறார் (3:14 தொ). மோசே திக்குவாயனாக இருந்ததால், மோசேயின் சகோதரன் ஆரோனை, மோசேக்குப் பேச்சாளனாக உதவ, இறைவன் தேர்ந்தெடுக்கிறார் எனலாம் (4:14).

பார்வோனுக்கு முன் அருஞ்செயல்கள் புரிந்து மக்களின் விடுதலையைக் கோர, யாவே மோசேக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனால், பார்வோனின் இதயத்தைக் கடினப்படுத்தப் போவதையும், அதனால் அவன் விடுதலை அளிக்கமாட்டான் என்றும் அறிவித்தார். யாவேக்குப் பலி ஒப்புக் கொடுக்க எபிரேயர்களுக்கு மூன்று நாள் விடுதலை அளிக்குமாறு மோசே கேட்க, அவர்களின் நிலை இன்னும் கடினமாயிற்று. பார்வோன் மறுத்ததோடு அல்லாமல் அவர்களுக்கு வேண்டிய வைக்கோலை அவர்களே தேடிக்கொள்ளவும், ஆனால் அதே அளவு செங்கல் தயாரிக்கவும் கட்டளையிட்டான் (5:1-19). இதனால் மோசே உற்சாகம் இழந்தார். ஆனால் ''ஓங்கிய கையாலும் மாபெரும் தீர்ப்புகளாலும்'' எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேலரை மீட்டு, வியத்தகு முறையில் மீட்கப்பட்ட தமது மக்களாக்கி வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கொடுப்பதாக இறைவன் மீண்டும் வாக்களிக்கிறார் (5:22-6:8).

பத்து வியத்தகு பெருந் துன்பங்களால் யாவே எகிப்தியரை நசுக்கி, எபிரேய அடிமைகளை விடுவிக்கிறார். மக்களை விடுவிக்குமாறு பார்வோனை மோசேயும் ஆரோனும் கேட்ட ஒவ்வொரு முறையும், பார்வோன் மறுத்தான். பத்து முறை மோசே தனது கரத்தை நீட்டி, பேரழிவு கொண்டு வரும் பெருந்துன்பங்கள் நிகழச் செய்தார் (7:8-11:10; 12:29-32). எகிப்திய ஆண்பால் தலையீற்றுகளின் மரணமாகிய இறுதிப் பெருந்துன்பம், விவிலியத்தில் பாஸ்கு விழாவோடு தொடர்புபடுத்தப்படுகிறது. இந்த விழா இஸ்ராயேலரைக் கடந்து சென்றதில் இறைவனுடைய இரக்கத்தை நினைவு கூர்ந்தது (12:1-28).

பார்வோனிடமிருந்து விடுதலையும், செங்கடலைக் (நாணல் கடலை) கடந்ததும் (அதி 14-15), மோசேயால் நடத்தப்பட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு இஸ்ராயேலர் செய்த கடுமையான பயணத்தின் தொடக்கமே ஆகும். மாராவில் கசப்பான தண்ணீரின் பொருட்டு மக்கள் மோசேக்கும் இறைவனுக்கும் எதிராக முணுமுணுத்த போது, மோசே தண்ணீரைச் சுவையுள்ள தாக்கினார் (15:22-25). ஆயினும், தொடர்ச்சியான கிளர்ச்சி மனப்போக்கால் (எ.கா. 17:1-4; எண் 14:1-4), மோசே உட்பட்ட இஸ்ராயேலரின் இந்தத் தலைமுறை முழுவதும், வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையாமல், பாலைவனத்திலே மடிவர் (எண் 14:26-35; காண்க. எபி 3:7-19).

இஸ்ராயேலுக்குச் சட்டம் அளிப்பவர் என்ற மோசேயின் அலுவல் தனிச்சிறப்பான முக்கியத்துவம் உடையதாகும். சீனாய் அல்லது ஓரேபு என்ற ''ஆண்டவரின் மலையில்'' மோசே இறையாற்றல் தோற்றத்தை அனுபவித்தார்; யாவேயிடமிருந்து பத்துக் கட்டளைகளைப் பெற்றார் (யாத் 19:1-20:7; உப 5). இந்தச் சமயத்தில்தான் உடன்படிக்கைச் சட்டத்தின் பல்வகைச் சட்டங்களையும் (யாத் 20:22-23:33), லேவியர் நூலிலுள்ள வழிபாட்டு ஒழுங்குகளையும் (காண்க. எண் 5:1-6:21; 15; 18-19), உபாகமச் சட்டங்களையும் (எ.கா. உப 12-26), மிஸ்னாவிலும் தால்மூதிலும் உள்ள வாய்மொழிச் சட்டங்களையும் மோசே பெற்றார் என்பது பாரம்பரியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மோசே வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைய அனுமதிக்கப்படவில்லையெனினும் நெபோ மலையுச்சியிலிருந்து அதைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார் (உப 34:1-4). அவர் மோவாபில் தனது 120 வயதில் இறந்தார். பெத்போகாருக்கு எதிரில் யாரும் அறியாத ஓர் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார் (34:5-7).

யாவேக்கும் இஸ்ராயேலருக்கும் இடையில் பரிந்துரைக்கும், மன்றாடும் பாகம் கொண்டிருந்ததால், மோசே எபிரேயர்களின் மிகப் பெரிய இறைவாக்கினர்களுள் ஒருவரும் முதன்மையானவருமாகக் கருதப்படுகிறார் (34:10; 18:15-18; காண்க. யாத் 20:19; எண் 11:25; 12:7-8). ஆனால் இஸ்ராயேலர்களுக்குள்ளே நடுவராகச் செயல்பட்டார் (எ.கா. யாத் 18:13-16; காண்க. எண் 27:1-11; 36:1-12). போர்களுக்குத் தலைமை தாங்கியதாக (யாத் 17:8-13; எண் 31), பல மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தியதாக (எண் 1; 4; 26), மக்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுத்ததாக (எண் 32), சந்திப்புக் கூடாரத்தை அமைத்ததாக (யாத் 25-31) மோசே கூறப்படுகிறார். எபிரேயப் பாடல்களின் இரண்டு மிகப்பழைய மாதிரிகளை மோசே கூறியதாகக் கருதப்படுகிறது. ஒன்று மோசேயின் பாடல் (உப 32:1-43; காண்க. 2 மக் 7:6); மற்றது மோசேயின் ஆசிகள் அல்லது ஏற்பாடு (உப 33:2-29). சிலரால் மிரியாம் பாடியதாகக் கருதப்படும் பாடல் சில சமயம் மோசே பாடியதாகக் கூறப்படும் (யாத் 15:1-18; காண்க. 15:3).

3. பழைய ஏற்பாட்டின் பிற நூல்களில் மோசே: ஐந்நூலுக்குப் புறம்பே பழைய ஏற்பாட்டில் மோசே வெகு அரிதாகக் குறிக்கப்படுகிறார். சிலமுறை அபக்கூக்கு நூலிலும், சாமுவேல் நூலில் இருமுறையும், அரசர்கள் நூலில் 10 முறையும், தானியேல் நூலில் இரு முறையும், சங்கீதங்களில் எட்டு முறையும், எஸ்ரா - நெகேமியா - நாளாகமம் நூல்களில் 31 முறையும் மோசே குறிக்கப்படுகிறார். எஸ்ரா - நெகேமியா - நாளாகமம் ஆகிய நூல்களுக்குப் புறம்பே மோசேயைப் பற்றிய குறிப்புகள் அவரை எகிப்திலிருந்து விடுதலை அளித்தவராகவும் (1 சாமு 13:6.8; சங் 77:21; 105:26; எசா 63:11தொ; மீக் 6:4), தோராவையும் (1 அர 2:3; 2 அர 23:25; மலா 3:22), கட்டளைகளையும் (2 அர 18:6.12; 21:8) அளித்தவராகவும், உடன்படிக்கையின் இடையாளராகவும் (1 அர 8:9.53. 56; சங் 99:6), இஸ்ராயேலுக்குப் பரிந்து பேசுபவராகவும் (சங் 106:23; எரே 15:1) கூறுகின்றன. ஐந்நூல் தொகுக்கப்பட்ட காலத்தை ஒத்த எஸ்ரா, நெகேமியா,

நாளாகம நூல்களில், அவர் சட்டநூலின் ஆசிரியராக முதன்மையாகத் தோன்றுகிறார். இவையெல்லாம் ஐந்நூலில் காணப்படும் பாரம்பரியங்களை ஒத்த ஒரு பாரம்பரியத்தைச் சார்ந்தவை. எண் 2:6-9-இல் வரும் வெண்கலப் பாம்பைப் பற்றிய கதையை 2 அர 18:4 நினைவு கூர்கிறது.

பிற்காலத்தைச் சேர்ந்த பழைய ஏற்பாட்டுக் கிரேக்க நூல்கள் ஐந்நூல் தொகுப்பின் செல்வாக்கைக் காட்டுகின்றன. மோசே முதன்மையாகச் சட்டம் அளிப்பவராகத் தோன்றுகிறார் (பாரு 2:2.28; தோபி 7:11-13). சீரா 45:1-5-இல் வரும் புகழுரை மோசேயை வியத்தகு செயல் செய்பவராகவும், வெளிப்படுத்துபவராகவும், சட்டம் அளிப்பவராகவும் போற்றுகிறது. 2 மக்கபேயர் நூல் மோசேயைச் சட்டம் அளிப்பவராகவும், சட்டநூலின் ஆசிரியராகவும் அறிந்திருப்பதோடு ஐந்நூலிலிருந்து பல எடுத்துக்காட்டுகளைத் தருகிறது (2 மக் 1:29-இல் யாத் 15:17; உப 30:5-உம், 2 மக் 2:10-இல் லேவி 9:14.உம், 2 மக் 2:11-இல் லேவி 10:16தொ-உம், 2 மக் 7:6-இல் உப 32:36-உம் எடுத்துக் கூறப்படுகின்றன). 2 மக்கபேயர் மேகத்தின் மாட்சிமையையும் (2:8), மோசே சட்டத்தையும் (7:8) சுட்டிக்காட்டுகிறது.

4. யூதத்துவத்தில் மோசே: யூதத்துவத்தில் சட்டத்திற்கு அளிக்கப்பட்ட முதன்மை, மோசேக்கு அளிக்கப்பட்ட பெருமையைப் பெரிதும் பெருகச் செய்தது. இது போலி நூல்களில் காணப்படும் யூதத்துவத்திலும், ராபிகள் குழுவின் யூதத்துவத்திலும் காணப்படுகிறது. இதை யூபிலி நூல், மோசேயின் விண்ணேற்பு ஆகிய நூல்களில் காணலாம்.

5. புதிய ஏற்பாட்டில் மோசே: மோசே புதிய ஏற்பாட்டில் 80 தரம் குறிக்கப்பெறுகிறார். இவற்றில் பல, ஐந்நூல் அல்லது சட்டத்தைக் குறிப்பதாகவும், மோசே சட்டத்தை அளிப்பவராகவும் காட்டுகின்றன (மத் 8:4; 19:7தொ; 22:24; 23:2; மாற் 1:44; 7:10; 10:3தொ; 12:9.16; லூக் 2:22; 5:14; 20:28; யோவா 1:17; 19:22 தொ). மத் 23:2-இல் மோசேயின் இருக்கை சட்டத்திற்கு விளக்கமளிப்பதற்குள்ள அதிகாரத்தைக் குறிக்கிறது. இவ்வதிகாரத்தை மறைநூல் அறிஞரும் பரிசேயரும் கொண்டிருப்பதாக இயேசு ஏற்றுக்கொள்கிறார். தாங்கள் இறைவன் பேசிய மோசேயின் சீடர்கள் என்று யூதர்கள் பெருமை பாராட்டிக் கொள்கின்றனர் (யோவா 9:28 தொ). ஸ்தேவானின் உரை (அ.ப. 7:20-45) யூதர்களிடையே நிலவிய கதைகள் பலவற்றைப் பிரதிபலிக்கிறது. இதன்படி, மோசே கடவுளுக்கு உகந்தவராய் இருந்தார் (7:20); எகிப்திய நாட்டுக் கல்வி கேள்விகள் அனைத்தையும் கற்று, சொல்லிலும் செயலிலும் வல்லவராய்த் திகழ்ந்தார் (7:22); சீனாயில் வானதூதரிடமிருந்து வெளிப்பாட்டைக் கேட்டார் (7:38). ஆனால், தொடக்க காலத்திருச்சபையின் நிலை ஸ்தேவானின் உரைப்படி வடிவம் எடுக்க ஏற்கெனவே தொடங்கிவிட்டது. மோசே வெளிப்பாட்டின் இடையாளரும் விடுதலை அளிப்பவரும் ஆவார். ஆனால், ஸ்தேவான் மோசேயின் சட்டம் அளிக்கும் அலுவலைக் குறிப்பிடவேயில்லை.

யோவானிலும் மற்ற அப்போஸ்தல நூல்களிலும் மோசே ஒரு மாதிரி உருவமாகிறார். மோசே இயேசுவின் மாதிரியாகிறார். இயேசுவே இரண்டாம் மோசே; முதலாம் மோசேயைவிடப் பெரியவர். பழைய இஸ்ராயேலில் மோசே கொண்டிருந்த நிலையை இயேசு புதிய இஸ்ராயேலாகிய திருச்சபையில் கொண்டுள்ளார். அதாவது இயேசு நிறுவியவர், இடையாளர், வெளிப்பாடு அளிப்பவர். மெசியாவின் உண்மையைச் சுட்டிக்காட்டும் இறைவாக்கினர் ஆவார் மோசே (லூக் 24:27.44; யோவா 1:45; 5:45தொ; அ.ப. 3:22; 26:22). ''சட்டத்தைக் கடைப்பிடிப்பவனே இறைவனுக்கு ஏற்புடையவனாக வாழ்வான்'' என்று மோசே எழுதினார். ஆனால் கிறிஸ்துவினால் வரும் ஏற்புடைமை முழுமையானது; எல்லா மனிதருக்கும் அஃது அளிக்கப்படுகிறது (உரோ 10:5தொ). கடல் வழியாக இஸ்ராயேல் கடந்து சென்றது ''மோசேயில்''

அளிக்கப்பட்ட திருமுழுக்காகும் (1 கொரி 10:2). உருமாற்ற நிகழ்ச்சியில் சட்டத்தின் பிரதிநிதியாக மோசேயும், இறைவாக்கின் பிரதிநிதியாக எலியாவும், இயேசுவோடு தோன்றுகின்றனர். இயேசு இறைவார்த்தை யான மகன் என்ற அளவில் சட்டம் மற்றும் இறைவாக்கு ஆகிய இரண்டின் நிறைவாக உள்ளார் (மத் 17:1-8; மாற் 9:2-8; லூக் 9:28-36). சட்டத்தின் சமய மாட்சி எவ்வளவு என்றால், மோசே தனது முகத்தைத் திரை யால் மூட வேண்டியிருந்தது. ஏனெனில், இஸ்ராயேலர் அதன் ஒளியைப் பார்க்க முடியவில்லை. கிறிஸ்துவினுடைய வெளிப்பாட்டின் மாட்சி முன்னதைவிட மிகப் பெரியது. ஆனால் அதை எதுவும் மறைக்க வேண்டாத முறையில் முழுமை யாக வெளிப்படுத்தப்படுகிறது (2 கொரி 3:7-18). மோசே சட்டத்தை அளித்தார்; ஆனால் இயேசு அருளையும் உண்மையை யும் அளித்தார் (யோவா 1:17). மோசே மன்னாவை அளித்தார்; இயேசுவோ வாழ் வின் அப்பத்தை அளித்தார் (6:32). இஸ்ரா யேல் வாழ்வதற்காக மோசே பாம்பை உயர்த்தினார்; இயேசு, விசுவாசிகள் முடி வில்லாத வாழ்வைப் பெறும் பொருட்டுத் தன்னையே (சிலுவையில்) உயர்த்தினார் (3:14). மோசே வீட்டின் கண்காணிப்பவர்; இயேசுவோ வீட்டையே கட்டுபவர் (எபி 3:2 தொ). மோசேயின் குருத்துவத்தையும் உடன்படிக்கையையும், இயேசுவின் குருத் துவமும் உடன்படிக்கையும் விஞ்சுகிறது. புதிய உடன்படிக்கை எரேமியாவால் வாக்களிக்கப்பட்டது (8:5 தொ). மோசே பலிகளின் இரத்தத்தால் உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார்; இயேசுவோ தமது சொந்த இரத்தத்தால் புதிய உடன்படிக் கையை உறுதிப்படுத்துகிறார் (9:11-22). மோசேயின் சட்டத்தை மீறுவது சாவால் தண்டிக்கப்பட்டது; இறைமகனது சட்டத்தை மீறுவது அதைவிடக் கடுமை யான தண்டனைக்குரியதாகும் (10:28தொ). யூதர்களோடும் யூதமயமாக்க முயற்சித்த கிறிஸ்தவர்களோடும் கொண்ட போராட் டம் இயேசுவின் மற்றும் அவரது வெளிப் பாட்டின் மேன்மையை வலியுறுத்திக் கூற கிறிஸ்தவர்களைக் கட்டாயப்படுத்தியது. இதனால் மோசேவையும் அவரது சட்டத் தையும் சிறிது குறைத்துக் கூற வேண்டியது அவசியமாயிற்று என்பது தெளிவு. இது மோசேவைக் குறைத்துக் கூறுவதற்கன்று, இயேசு புதிய இஸ்ராயேலை நிறுவுவதால் மோசேயின் வேலையை முடித்து வைக் கிறார், நிறைவேற்றுகிறார் என்பதை வலி யுறுத்தவே. இந்த நிறைவேறுதலை ஏற்றுக் கொள்ளாதவர்கள் முழுமையற்ற, நிறை வுறாத ஒன்றைக் கடைப்பிடிக்கின்றனர் என்று சுட்டிக்காட்டுவது அவசியமாயிற்று.

II **இறையியல் சிந்தனை:** இஸ்ராயே லைப் பொருத்தமட்டில் மோசே ஈடிணை யற்ற இறைவாக்கினராவார் (உப 34:10-12). இவர் வழியாக இறைவன் தனது மக்களை விடுவித்தார். அவருடன் இறைவன் தனது உடன்படிக்கையை ஏற்படுத்தி உறுதிப்படுத் தினார் (யாத் 24:8). அவருக்கு இறைவன் தனது சட்டத்தை வெளிப்படுத்தினார் (யாத் 24:3; 34:27). இயேசுவிற்கு அப்பாற்பட்டு மோசேவுக்கு மட்டுமே புதிய ஏற்பாடானது இணைப்பாளர் என்ற பட்டத்தை அளிக் கிறது. ஆனால், இறைவன் தனது விசுவாச மிக்க ஊழியனாகிய மோசேயின் மூலம் தனது சட்டத்தைத் தனது மக்கள் இஸ்ராயே லுக்கு மட்டுமே அளித்தாலும் (எபி 3:5; கலா 3:19). தனது மகனாகிய இயேசு கிறிஸ்து (1 திமொ 2:4-6) நடுவராய் இருந்து இணைக்கும் செயல்மூலமாக அனைத்து மனிதரையும் அவர் மீட்கிறார் (எபி 3:6). மோசே மற்றும் இயேசு ஆகியோரிடையே யுள்ள இணைவுத் தன்மை இரு உடன்படிக் கைகளினுடைய வெளிப்படையான வேறு பாடுகளைக் குறித்துக்காட்டுகிறது.

1. **இறைவனுடைய ஊழியனும் நண்பனும்:** மோசேயினுடைய அழைப்பானது நீண்ட, இறைசெயலான, தயாரிப்பின் உச்சக்கட்ட நிகழ்ச்சியாக உள்ளது. ஒடுக்கப்பட்ட இனத் தில் பிறந்திருந்தாலும் (யாத் 1:8.22), ஒடுக்கு கின்ற பார்வோனுடைய மகளால் நீரி னின்று காப்பாற்றப்பட்டு வாழ்வளிக்கப் பட்டதோடு மட்டுமல்லாமல் (2:1-10), தலைவர் என்ற நிலைக்கு அவரைத் தயா

ரித்த கல்வியையும் அவளிடமிருந்தே மோசே பெற்றார் (அ.ப. 7:21-22). எவ்வாறாயினும், இவ்வாறு பெறப்பட்ட ஞானமோ, வல்லமையோ, பெருமையோ (யாத் 11:3) தனது மக்களின் மீட்பாளராக அவரை அமைக்கப் போதுமானவையாக இல்லை. அவர் தன்னுடைய மக்களின் வெறுப்பையும் அடைந்து (யாத் 2:11-15; அ.ப. 7:26தொ), பாலைவனத்திற்கு ஓடுமாறு துரத்தப்பட்டார். அங்கு அவர் தனது அழைப்பைப் பெற்றார். இறைவன் அவருக்குத் தோன்றி, தனது பெயரையும், மீட்புத் திட்டத்தையும் அதே நேரத்தில் அவருக்கு வெளிப்படுத்தி, தனது பணிக்கான திட்டங்களை நன்கு அறியச் செய்து, அதனை நிறைவேற்றுவதற்கான செயல்முறையினையும் அவருக்கு அளித்தார் (யாத் 3:1-15). இறைவன் அவருடன் இருப்பார் (3:12). வீணாக அப்பணியை மறுக்க மோசே முயல்கிறார். நான் யார்? (3:11). இவ்வளவு பெரிய பணியின்முன் முதலில் தயங்கச் செய்த அவரது தாழ்ச்சியானது (4:10-13) பின்னர், தனது மக்களுடைய எதிர்ப்பிற்கும் அப்பாற்பட்டு இணையற்ற எளிமை மற்றும் சாந்தத்துடன் அதனைச் செய்து முடிக்க அவரை மேம்படுத்தும் (எண் 12:3.13). அவரது விசுவாசம் சற்று வலுக்குறைவை வெளிப்படுத்தினாலும் (20:10), இறைவன் தனது ஊழியனை மிகவும் பிரமாணிக்கமிக்கவர் என்று (12:7-8) நண்பனைப்போல அவருடன் செயல்பட்டார் (யாத் 33:11). ஒரே அருளின் மூலமாக தனது மகிமையை அல்லாவிடினும், தனது பெயரையாகிலும் இறைவன் அவருக்கு வெளிப்படுத்தினார் (33:17-23). மோசேவுடன் மேகத்தினின்று உரையாடும் வேளையில், இறைவன் அவரைத் தனது மக்களின் தலைவராக முறைப்படி ஏற்படுத்தினார் (19:9; 33:8-10).

2. விடுதலை அளிப்பவரும் உடன்படிக்கையின் இணைப்பாளரும்: *தலைவர் என்ற அளவில் அவருடைய பணியின் முதற்செயலானது தனது மக்களை விடுவிப்பதாகும். பார்வோன் அங்கீகரிக்க மறுத்த கடவுளை வழிபடுவதினின்று இஸ்ராயேலைத் தடுத்த அடக்கு முறைக்கு மோசே ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டி இருந்தது (யாத் 4:22-23; 5:1-18). ஆனால், இந்த முடிவை அடைவதற்காக இறைவன், தடுக்க முடியாத அடிகளால் எகிப்தியரைத் தாக்குவதின் மூலம் தனது கரத்தின் வலிமையைக் காட்ட வேண்டியிருந்தது. இறைத் தீர்ப்பை வெளிப்படுத்துகின்ற இந்தப் பேரழிவுகளைத் திட்டமிடுபவர் மோசேதான். இறுதிக்கொள்ளை நோயின்போது இறைஞானத்தினால் நிரம்பப்பெற்றவராய்ப் பாஸ்காவைக் கொண்டாடுமாறு இஸ்ராயேலுக்குக் கட்டளையிட்டவரும் மோசேதான் (ஞான 10:16-20). அதன் பிறகு, தொடரும் எகிப்தியரிடமிருந்து ''மோசேயின் கரத்தினால் இறைவனுடைய மக்கள் விடுவிக்கப்படுகின்றனர்'' (சங் 77:21). தொடர்பவரை மூழ்கடிக்கும் கடலை இஸ்ராயேலர் கடக்கின்றனர் (யாத் 14). பின்னர், யாத்திரையின் முதல் நோக்கமானது இவ்லாறு அடையப்படுகிறது. அவர்களுடன் உடன்படிக்கையை முத்திரையிடுவதன் மூலம் (24:3-8; காண்க. எபி 9:18-20) இஸ்ராயேலரை இறைவனுடைய மக்களாக்குகின்ற பலியை மோசே சீனாயில் அளிக்கிறார் (யாத் 19:4-6).*

மோசேயில் திருமுழுக்கு அளிக்கப்பட்ட அனைவரும் உடன்படிக்கையின் மக்களுடன் சேர்க்கப்படுகின்றனர் (1கொரி 10:2). அதாவது, அவரது வழிகாட்டுதலுக்குத் தம்மையே அளிப்பவர்கள் மேகத்தினுடைய வழிகாட்டுதலால் கடலைக் கடந்து மீட்பினை அனுபவித்தனர். இவ்வாறு அவர்களது ''தலைவரும் மீட்பருமாகிய'' மோசே (அ.ப. 7:35) புதிய முழுநிறைவான உடன்படிக்கையினுடைய இணைப்பாளராகிய கிறிஸ்துவை முன்குறித்துக் காட்டுகிறார் (எபி 8:6; 9:14-15). தனது பெயரில் திருமுழுக்குப் பெற்றோரைப் பாவத்தினின்று விடுவிக்கின்ற மீட்பரும் இக்கிறிஸ்துவே (அ.ப. 2:38; 5:31).

3. இறைவாக்கினர், சட்டம் அளிப்பவர் மற்றும் மன்றாடுபவர்: *உடன்படிக்கை மக்களுடைய தலைவர் என்ற நிலையில்,*

இறைவனின் பெயரால் மோசே அவர்களுடன் பேசுகிறார் (யாத் 19:6-8; 20:19; உப 5:1-5). ஒவ்வொரு உண்மையான இறைவாக்கினரைப்போலவே இவரும் இறைவனுடைய பேச்சாளராக (வாயாக) உள்ளார் (உப 18:13-20). அவர் இறைச் சட்டத்தினை இஸ்ராயேலுக்கு வெளிப் படுத்தி, அவர்கள் தங்களுடைய நடத்தையை அதற்கேற்ப எவ்வாறு அமைப்பது என்பதை அவர்களுக்குக் கற்பிக்கிறார் (யாத் 18:19-20; 20:1-17 இணை). எந்நாளும் அவர்களோடு இருப்பவரும் (உப 6), அன்புடனும் சுதந்தரமாகவும் அவர்களைத் தேர்ந்தெடுத்துக் காத்தவருமான யாவும் கடந்த ஒரே கடவுளுக்குப் பிரமாணிக்கமாக இருக்குமாறு அவர் அவர்களுக்கு அறவுரை கூறுகிறார் (உப 7:7-9).

இறைவாக்கினர் என்ற அளவில் அவருடைய பங்கானது உடன்படிக்கையை நிலைப்படுத்தி, கிளர்ச்சி செய்யும் மக்களுக் குப்பயிற்சி அளிப்பதாகும் (ஓசே 12:14). இவ்வாறு, அப்பணியின் செயல்பாடானது அவரை இறைவனுடைய துன்புறுத்தப் பட்ட ஊழியர்களில் முதலாவதானவராக ஆக்குகிறது (காண்க. அ.ப. 7:52-53). சில நேரங்களில் இதைப் பற்றி அவர் இறைவனிடமும் முறையிடுகிறார்: ''இந்த மக்களையெல்லாம் நானா கருத்தரித்தேன்? நானா இவர்களைப் பெற்றெடுத்தேன்? 'பாலுண்ணும் குழந்தையை ஏந்திச் செல்பவள் போன்று இவர்களை மார்போடு ஏந்தி, அவர்கள் மூதாதையருக்கு வாக்களித்திருந்த நாட்டிற்குக் கொண்டு செல்' என்று நீ எனக்குச் சொல்வானேன்? நான் தனியாக இம்மக்கள் அனைவரையும் கொண்டு செல்லவே முடியாது. எனக்கு மிகப்பெரும் பளு'' (எண் 11:12-14). ஒருநாள் தனது மக்களின் பிரமாணிக்கமின்மையால் அமிழ்ந்து இணறியவராய் (எண் 20:10-12; சங் 106:33), ஆழ்ந்த தனது விசுவாசத்தையும் சாந்தத்தையும் தளரவிட்டார் (சீரா 45:4; எபி 11:24-29). இந்தத் தவறுக்காக அவர் தண்டிக்கப்பட்டார் (உப 3:26; 1:21).

தான் ஓர் இறைவாக்கினர் என்ற காரணத்தினால் தன் மக்களோடு கொண்டிருக்கும் கூட்டொருமை உணர்வால் தூண்டப்பட்டு அவர்களுக்காக மோசே மன்றாடுகிறார். மன்றாடுபவரின் பங்கில் அவர் போற்றத்தக்கவராக உள்ளார். அவரது செபங்களின் மூலமாக, அதன் பகைவரின் மீதான வெற்றியானது இஸ்ராயேலுக்கு உறுதிப் படுத்தப்படுகிறது (யாத் 17:9-13); அதனுடைய பாவங்களுக்கான மன்னிப்பும் பெறப்படுகிறது (32:11-14; எண் 14:13-20; 21:7-9). இறைக்கோபத்தின் முன் ''உடைமதில் காவலராக நின்று'' அவர் தனது மக்களை மரணத்தினின்று காப்பாற்றுகிறார் (சங் 106:23). ''நீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளும். இல்லையேல் நீர் எழுதிய உம் நூலிலிருந்து என் பெயரையும் நீக்கி விடும்'' (யாத் 32:31-32). இந்த ஆர்வமிக்க அன்பின் மூலமாக, பாவிகளுக்காக மன்றாடி அவர்களது குற்றத்தைத் தன்மேல் ஏற்றுக்கொள்கின்ற துன்புறும் ஊழியனின் குணங்களை அவர் முன்குறித்துக் காட்டுகிறார் (எசா 53:12). எவருடைய வருகையைப் பற்றி முன்னுரைக்கின்றாரோ அந்தத் ''தன்னையொத்த இறைவாக்கினரையும்'' அவர் முன்குறித்துக் காட்டுகிறார் (உப 18:15-18). ஸ்தேவான் அந்த இறைவாக்கினை நினைவுகூர்வார் (அ.ப. 7:37). இயேசுவில் அதன் முழுநிறைவைப் பேதுரு அறிவிப்பார் (3:22-23). ஒப்பற்ற இந்த இறைவாக்கினருக்கு (யோவா 1:21; 6:14) இறைவாக்குகளில் மோசே சான்று பகர்கிறார் (யோவா 5:47; லூக் 24:27). இதன் காரணமாகவே உருமாற்றத்தின்போது இயேசுவின் பக்கத்தில் மோசே தோன்றுகிறார் (லூக் 9:30-31). ஆனால், புதிய மோசேயாகிய கிறிஸ்து சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அதைக் கடந்து செல்கிறார் (மத் 5:17). ஏனெனில், பழைய சட்டத்தின் முடிவு அவரே (உரோ 10:4). மோசேயின் சட்டத்தில் அவரைப் பற்றி எழுதப்பட்டிருந்த அனைத்தையும் நிறைவேற்றிய பின்னர், மனிதருக்குத் தூய ஆவியை அளிப்பதற்கென, தனது தந்தையின் மூலமாக அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் (லூக் 24:44-49).

4. மோசேயும் இறைவனுடைய மகிமையும்: இறைவனுடனான சந்திப்புகளுக்குப் பின்னர் மோசேயின் முகத்தை ஒளிர்வித்த (யாத் 34:29-35) மாட்சியானது இப்போது கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்படுகிறது (யோவா 1:14). கணநேரத்தில் தோன்றி மறைவதாக இருந்தாலும் இப்பிரதிபலிப்பின் ஒளியினைப் பழைய உடன்படிக்கையின் மக்களால் தாங்க முடியவில்லை (2 கொரி 3:7). எனவே, அவரது முகத்தை ஒரு திரையால் மோசே மூடிக்கொண்டார். பவுலைப் பொருத்தமட்டில் இத்திரையானது யூதருடைய குருட்டுத்தன்மையை அடையாளங்காட்டுகிறது. மோசேயின் செயல்களை வாசித்த அவர்கள் அவற்றைப் புரிந்து கொள்ளவுமில்லை. அவை முன்னுரைத்த கிறிஸ்துவிடம் மனம் மாறவுமில்லை (2 கொரி 3:13-15). ஏனெனில், மோசேயில் உண்மையாகவே விசுவாசங் கொள்ளும் எவரும் கிறிஸ்துவிலும் விசுவாசங்கொள்கின்றனர் (யோவா 5:45-47). அவரது மாட்சியானது மோசேயினுடையதைப் போன்று, அவரைத் தனது சாயலாக மாற்றுகின்ற ஆண்டவருடைய மாட்சியைப் பிரதிபலிக்கின்றது (2 கொரி 3:18). விண்ணகத்தில், மீட்கப்பட்டோர் இறைவனுடைய ஊழியனாகிய மோசேயின் புகழ்ப்பாடலையும், மோசே முன் உருவமாக உணர்த்திய தனித்துவமிக்க மீட்பருடைய தனித்துவமிக்க பாஸ்காவின் புகழ்ப் பாடலாகிய செம்மறியின் புகழ்ப் பாடலையும் பாடுவர் (திருவெளி 15:3; யாத் 15).

மோசேயின் இருக்கை (SEAT OF MOSES)

மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் இருக்கையில் அமர்ந்திருப்பதாக இயேசு கூறுகிறார் (மத் 23:2). இங்கு இருக்கை அதிகாரத்தை உருவகமாக உணர்த்தவல்லது. இஃது இவர்கள் மோசேயின் சட்டத்திற்குச் சரியான விளக்கம் அளிக்க தங்களுக்கு அதிகாரமும் ஆற்றலும் உண்டு என்று உரிமை பாராட்டியதைக் குறிக்கலாம். இங்கு இருக்கை நீதி வழங்கும் அதிகாரத்தை உருவகமாகவும், பல செபக் கூடங்களில் அமைக்கப்பட்டிருந்த கல்லினால் செய்யப்பட்ட இருக்கையையும் குறிக்கலாம். அதிகாரபூர்வமான சட்ட வல்லுநர்கள் இந்த இருக்கையிலிருந்து போதிப்பர். பரிசேயர் எனப்பட்ட பெரிய குழுவில் சிலரே மறைநூல் அறிஞர் ஆவர். மத்தேயு எல்லோரையும் சேர்த்துக் கண்டனம் செய்கிறார்.

மோசேயின் விண்ணேற்பு (MOSES, ASSUMPTION OF)

1. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பழுதுற்ற கையெழுத்துப் பிரதியின் இலத்தீன் பதிப்பாகத் தோன்றிய ஒரு போலி யூதநூல் மோசேயின் ஏற்பாடு மற்றும் மோசேயின் விண்ணேற்பு என்னும் இரண்டு முந்தைய நூல்களின் இணைப்பாக இருக்கலாம். இணைக்கப்பட்ட நூலானது மோசேயின் ஏற்பாடு என்றே பெயரிடப்பட்டிருக்கலாம். ஏனெனில், மோசேயின் விண்ணேற்பு பற்றிய குறிப்பே இதில் இல்லை. ஆனால் மோசே சாதாரணமாகவே மரித்து, அடக்கம் செய்யப்பட வேண்டுமென அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது (1:15; 10:12-14; 11:8).

மோசேயின் விண்ணேற்பு என்ற ஒருநூல் ஒரு காலத்தில் இருந்ததாக ஓரிசன் உறுதியாகக் கூறுகின்றார். மோசேயின் உடலுக்காக மிக்கேலுக்கும், சாத்தானுக்கும் இடையே ஏற்பட்ட விவாதத்தினைப் பற்றிக் குறிப்பிடும் யூதா 9, மோசேயின் விண்ணேற்றம் என்னும் சிறுநூலிலிருந்து எடுக்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். இதற்கும் சிறிது காலம் முந்திய அலக்சாந்திரிய கிளமெந்து யூதா 9-ஐ மோசேயின் விண்ணேற்புடன் தொடர்புபடுத்துகிறார். உரு மாற்ற மலையில் எலியாவோடு மோசே தோன்றியதும் (மாற் 9:4இணை), திருவெளி 11:3-இல் கூறப்படும் இரு விண்ணக சாட்சிகளை மோசே மற்றும் எலியாவாக அடையாளம் காட்டுவதும், இந்நூல் இருந்ததைக் குறிப்பிடாவிட்டாலும், அத்தகைய கதைகள் இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன. மோசேயோ எலியாவோ விண்ணகம் செல்லவில்லை என ராபிகள் மறுப்பது, இப்பாரம்பரியம் யூதர் சிலரிடையேயாவது

பரவி இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

மோசேயின் ஏற்பாடு மற்றும் மோசேயின் விண்ணேற்பு என்னும் இரு நூல்களும், அங்கீகரிக்கப்படாத போலி நூல்களின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்விரு நூல்களும் தொடக்க காலத்திலேயே இணைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. யூதா 9 விண்ணேற்பைப் பிரதிபலிப்பது மட்டுமல்லாமல் யூதா 16, மோசே ஏற்பாட்டிலுள்ள 7:7.9; 5:5- ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகத் தெரிகிறது. இரண்டு நூல்களும் இணைக்கப்பட்டபோது மோசேயின் விண்ணேற்பு என்னும் ஒரே பெயர் அவற்றிற்கு அளிக்கப்பட்டிருக்கலாம்.

2. பொருளடக்கம்: மோசே, மரணம் நெருங்குகையில், யோசுவாவிற்கு ஒரு பணியை அளிக்கிறார். நாட்களின் இறுதியில் இஸ்ராயேலின் எதிர்காலம் முழுமை அடையும் என்றும், மனந்திரும்பும் காலத்தால் இது குறிக்கப்படும் என்றும் அவர் விரிவாக முன்னுரைக்கின்றார். முதலில், மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை (கானான்) உரிமையாக்கிக் கொள்வர்; பின்னர் தமது தலைவர்களாலும் (நீதிபதிகள்), அரசர்களாலும் ஆளப்படுவர். அரசு இரண்டாகப் பிளவுபடும்; கிழக்கிலிருந்து வரும் ஓர் அரசனால் (நெபுகத்னேசர்) அவர்கள் அடிமைகளாக்கப்பட்டு, 77 ஆண்டுகள் அன்னிய நாட்டில் வாழ்வர். அவர்களில் ஒருவர் (தானியேல்) கடவுளின் இரக்கத்திற்காக செபம் செய்வார். கருணை கொண்ட ஓர் அரசன் (சைரசு) அவர்களை அவர்களது நாட்டிற்குத் திருப்பி அனுப்புவான். சிலர் திரும்புவர். ஆனால், பத்துக் குலத்தவர் புற இனத்தாருடனேயே தங்கிவிடுவர். தீய அரசர்கள் சிலரின் கீழ் (செலூக்கியர்) அழிவின் நாள் ஏற்படும்; குருக்கள் சிலர் (கிரேக்கமுறை விரும்பும் பெரிய குருக்கள் யாசோன், மெனலவு) புதிய கடவுள்களை நோக்கித் திரும்புவர். ஆனால், மக்கபேயரைப் பற்றி இங்குக் குறிப்பிடப்படவே இல்லை; அவர்களது வாரிசுகள், தீய குரு - அரசர்கள் (அசமோனியர்கள்) மற்றும் அடுத்து வரும் குரு அல்லாத அகந்தை மிக்க அரசன் (ஏரோது) ஆகியோரைப் பற்றி முன்னுரைக்கப்படுகிறது. அவனது 34 ஆண்டுகால ஆட்சி, அவனுடைய மகன்களின் ஆட்சியைவிட நீண்டதாக இருக்கும். அடுத்து மேற்கிலிருந்து ஒரு வல்லமைமிக்க அரசன் தோன்றி அவர்களை வெல்வான்; கோவிலின் ஒரு பகுதியை எரித்து அவர்களில் சிலரையும் சிலுவையில் அறைவான் (சீரியா ஆளுநனாகிய வாரிசு என்பவன் கி.மு. 4-இல் தோன்றிய ஒரு புரட்சியை அடக்கினான்).

இது முதல், ஆட்களையும், நிகழ்ச்சிகளையும் கண்டுபிடிப்பது இயலாத ஒன்றாக உள்ளது; ஆசிரியர் (மோசே பெயரால்) தனது, காலத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றியும் முன்னுரைக்கத் தொடங்குகின்றார். இவ்வாறு, அறியப்பட முடியாத பக்தியற்ற ஆட்சியாளர்கள், தங்களை நேர்மையானவர்கள் என்று கூறிக்கொண்டு ஆட்சி புரிவார்கள். இதுவரை நாட்டில் ஏற்படாத பழியும், கோபமும் யூதர்கள் மேல் எழும் (காண்க. தானி 12:1). உலகிலுள்ள அரசர்க்கெல்லாம் அரசன் அவர்களைத் துன்பப்படுத்தி, சித்ரவதை புரிவான். தாக்ஸோ எனும் லேவியன் ஒருவன் கடவுளின் நீதிமுறைகளை மீற மறுப்பான்; ஆனால், தனது ஏழு மகன்களுடன் நோன்பிருந்து, பின்னர் மரணத்தை எதிர்பார்த்து ஒரு குகைக்குள் செல்வான். இப்படிச் செய்வதால் ஆண்டவர்முன் அவர்களுக்காகப் பழிவாங்கப்படும் என்று எதிர்பார்த்தனர். இத்துன்ப காலம் முடிந்த பின்னர், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள, ஒரே வெளிப்பாட்டுப் பகுதியாகிய மூன்று வரிகளுடன் அமைந்த பத்துப் பல்லவிகளைக் கொண்ட பாடல் பின்தொடரும்.

உலகை ஆளுகின்ற பேயானது வானதூதர் ஒருவரால் (மிக்கேல்) அடக்கப்படும் என்றும், அதன் பின்னர்த் துன்பமே இராது என்றும் முன்னுரைக்கப்படுகிறது. உடந்தையாயிருப்பதன் மூலம் துன்பத்திற்கெல்லாம் காரணமாய் இருப்பது இவனே. தன்

மக்களைக் காப்பாற்ற கடவுளே நேரடியாக ஈடுபடுவார். பெரிய நிலநடுக்கங்கள் ஏற்படும்; சூரியன் இருளடையும்; நிலா இரத்தமாக மாறும்; விண்மீன்களின் பாதைகள் அலைக்கழிக்கப்படும்; கடல் மற்றும் ஆறுகளில் உள்ள நீர் அனைத்தும் மறைந்துவிடும்; புறவினத்தாரின் சிலைகளைக் கடவுள் அழித்துவிடுவார்; இஸ்ராயேல், கழுகினுடைய (உரோமை) இறக்கைகளின் மீதும், கழுத்தின்மீதும் அமரும்; பின்னர், கடவுள் தான் உறையும் விண்ணகத்திற்கு இஸ்ராயேலை உயர்த்துவார்; இஸ்ராயேல் உலகிலுள்ள (கேகன்னா), தனது எதிரிகளைக் கீழ்நோக்கிப் பார்த்து மகிழ்வர்.

மோசேயின் இறப்பிற்கு 1,750 ஆண்டுகளுக்குப் பிறகு, (கி.பி. 75-107) இவை அனைத்தும் நிறைவடையும் என யோசுவாவிடம் கூறப்படுகிறது. இவற்றைக் கேட்டு, யோசுவா துயரப்படுகிறார்; ஆயினும், கடவுளின் பரிபாலிப்புக்கு ஏற்ப அனைத்தும் நிறைவேறும் என மோசே உறுதியளிக்கிறார் (இவ்வாக்கியம் இடையிடையே நின்றுவிடுகிறது).

3. முக்கிய பிரச்சனைகள்:

அ) வாசகம்: இலத்தீன் பகுதியானது முழுமையற்றதும், குழப்பமானதுமாக உள்ளது. மொழிபெயர்ப்பாளர்கள் பல்வேறு திருத்தங்களைச் சார்ந்து உள்ளனர். முடிவுரை காணப்படவில்லை. இலத்தீனின் மூலமாகிய கிரேக்கப் பகுதி, எபிரேய மூலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கலாம். சில சிறு கருத்துக்களைத் தவிர்த்து, விண்ணேற்றம் பற்றி ஓரிசன் கூறிய எந்தப் பகுதியும் தற்சமயம் வரை பாதுகாக்கப்படவில்லை.

ஆ) காலம்: இந்நூலானது 2-ஆம் பாரூக்கு நூலுக்கு மூலமாய் இருக்குமேயானால், இதனுடைய காலம் கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதிக்குப் பிந்தியதாக இருக்க முடியாது. இவற்றின் நிறைவு மோசேயின் இறப்பிற்கு 1,750 ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி. 75-107-இல் ஏற்படும் என்னும் கணிப்பின்படியும் இஃது உறுதிப்படுத்தப்படுகிறது. ஆயினும், இதற்கு முந்தைய எல்லைகளும் அமைக்கப்படலாம். ஏரோதினுடைய 34-ஆண்டு ஆட்சி அவனுடைய மகன்களின் தனிப்பட்ட ஆட்சியைவிட நீண்டதாக இருக்கும் என்று முன்னுரைக்கப்பட்டது. ஆனால், இஃது ஒரு தவறு. அர்க்கெலா கி.பி. 6-இல் நீக்கப்பட்டு சிறிது காலமே ஆட்சி புரிந்தான்; ஆனால், பிலிப்பு 37 ஆண்டுகளும், அந்திப்பா 43 ஆண்டுகளும் ஆட்சிபுரிந்தனர். எனவே, இப்பகுதி ஏரோதின் மகன்கள் அதிக காலம் ஆட்சி புரிவதற்கு முன்னரோ, கி.பி. 30-க்கு முன்னரோ எழுதப்பட்டது. அவ்வாறாயின், இஃது இயேசுவின் காலத்தில் எழுதப்பட்டு இருக்க வேண்டும்.

இ) ஆசிரியர்: இந்நூலின் ஆசிரியர் கடவுளுக்கும், இஸ்ராயேலுக்கும், ஆலயத்திற்கும் சட்டத்திற்கும் அவரது தலைவனாகிய மோசேவுக்குப் பிரமாணிக்கமுள்ள பாலஸ்தீன யூதனாக இருக்கக்கூடும். இவர் ஒரு சதுசேயன் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை; உரோமை ஆட்சியை வெறுத்தாலும், தீவிரவாதிகளைப்போலப் போராட்டத்திற்கு உடன்படவில்லை; ஆலயத்தின் மீது அவருக்கு உள்ள பற்று அவர் எஸ்ஸேனியக் குழுவைச் சேர்ந்தவரல்லர் என்று சுட்டுகிறது. இவர் ஓர் அமைதியான பரிசேயன் எனப்படுகிறார். ஆனால், அவரது வெளிப்பாட்டுப் பகுதி அவர் பரிசேயனல்லர் என உணர்த்துகிறது. இன்னும் சொல்லப்போனால், இவர் எந்தப் பொதுவான குழுவிலும் இணையாத, ஒரு வெளிப்பாட்டு யூதன் ஆவார்.

ஈ) தாக்ஸோ: மர்மமாக விளங்கும் தாக்ஸோ என்னும் பெயர், ஒரு குழூஉக் குறி என சிலரால் கருதப்படுகிறது. இப்பெயரானது மக்கபேயர் காலத்து மறைசாட்சியான எலயாசாரையும், மக்கபேயரின் தந்தையும் அசமோனியரின் மூதாதையருமான மத்தத்தியாவையும் குறிப்பிடுவதாகக் கூறப்படுகிறது. தாக்ஸோ என்பவர் ஆசிரியரின் காலத்தில் வாழ்ந்த அறிய இயலாத ஒருவரைக் குறிப்பதாக, ஒரு கருத்து கூறுகிறது. காலத்தின் நிறைவிற்கு முன்னர்

வரப்போகும் துன்பங்களைப் பொறுமை யுடன் ஏற்கவிருக்கும் நேர்மையான யூதர் களைக் குறிக்கும் சின்னமாக தாக்ஸோவும் அவரது பிள்ளைகளும் இருக்க முடியுமா? இஃது உண்மையாயின் தாக்ஸோ பற்றிய பகுதி மக்கபேயர் காலத்தைக் குறிப்பதாக வும் (அதி 5-6), அதிகாரம் 6-இல் அசமோ னியர் பற்றிக் குறிப்பிடுவதற்கு முன்னர் இணைக்கப்பட வேண்டும் என்றும் கூறும் சார்லசின் கருதுகோள் தேவையற்றது.

உ) மோசே: உலக ஆரம்பத்திலிருந்தே, கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களான இஸ்ராயேலருடன் செய்யப்பட்ட உடன் படிக்கையின் இடைநிலையாளராக இருக்க, மோசே அங்கீகரிக்கப்பட்டிருந்தார்; ஏனெ னில் இவர்களுக்காகவே உலகம் படைக்கப் பட்டது. இறைவாக்கினராக இருந்தமை யால் வருங்காலத்தைப் பற்றி அறிவதற்கு வானதூதரின் செய்தியோ, விண்ணகப் பயணமோ அவருக்குத் தேவைப்பட வில்லை. அவரைப் புதைப்பதற்கு ஏற்ற இடம் எதுவுமில்லை; உலகம் முழுவதுமே அவரது கல்லறையாக இருக்கும்.

ஊ. இறுதிக்கால இயல்: திருவெளிப் பாட்டு நம்பிக்கையானது தானி 12:1-ஐ அடிப்படையாகக் கொண்டது. உலகம் இதுவரை கண்டிராத அளவு பழிவாங்கும் காலம் ஒன்று இருக்கும். மீட்பர் இருக்க மாட்டார்; மாறாக, ஒரு வானதூதர் (மிக் கேல்) பேயினை வெற்றி கொள்வார். கடவுள் புறஇனத்தாரைத் தண்டிப்பார். தானியேலில் உள்ளது போல, நேர்மை யாளர்கள் முடிவற்ற வான்வெளியை அனு பவிப்பார்கள் (அவர்களது எதிர்கால இல் லம் மண்ணில் இருக்காது); தீயவர்கள் முடிவில்லாக் கேகன்னாவில் துன்புறுவர்.

மோசேரா (MOSERAH - பிணைப்பு, கட்டுப் பாடு)

இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வரும் வழியில் பெயரோத்-பெனே-யாக்கானைக் கடந்து மோசேராவுக்கு வந்து தங்கினர் (உப 10:6). இங்கே ஆரோன் இறந்து அடக்கம் செய்யப்பட்டார். அவர் புதல்வனாகிய எலயாசார் அவருக்குப் பதி லாகத் தலைமைக்குரு ஆனார். எண் 30:30-31, இவ்விடத்தை மோசரோத்து என்று குறிப்பிடுகிறது. எண் 30:38 முந்தைய திலிருந்து வேறுபட்ட பாரம்பரியத்தைக் கொடுக்கிறது. இதன்படி ஆரோன் ஓர் மலையில் இறந்து அடக்கம் செய்யப்படுகி றார். 30:30-இன்படி இஸ்ராயேலர் மோச ரோத்திலிருந்து பெயரோத்-பெனே-யாக்கானுக்குச் செல்கின்றனர்.

மோட்சா (MOZA - சூரிய உதயம்)

1. இவர் யூதா குலத்தினர். காலேபுடைய வைப்பாட்டி ஏப்பாகு வழியாகப் பிறந்தவர் (1 நாள் 2:46).

2. இவர் யோனத்தான் வழியாக சவுலின் வழி வந்தவர். சிம்ரியின் மகனும் பினயா வின் தந்தையும் ஆவர் (1 நாள் 8:36-37; 9:42-43).

மோதயின் (MODEIN அறிவிப்பவர்கள்)

இஃது ஆரம்பகால மக்கபேயத் தலைவர் களின் இருப்பிடமும், அவர்கள் புதைக்கப்பட்ட இடமுமாகும்.

கி.மு. 167-இல் யூதகுரு மத்தத்தியா மோதயினிலிருந்து நான்காம் அந்தியோக்கு மன்னனின் கிரேக்கக் கலாச்சாரத் திணிப்பை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்; மற்ற மக்களையும் கிளர்ச்சி செய்யத் தூண்டினார் (1 மக் 2:1-28). இக்கிளர்ச்சியின் விளைவாக யூத மக்கள் மத, சமூக சுதந்தரத்தைப் பெற்றனர். இப்போராட்டத்தின்போது மோதயின், வீரர்களுக்குப் பாதுகாப்பிட மாகவும், எதிரிகளை எதிர்கொள்ளும் இட மாகவும் அமைந்தது (1 மக் 16:4-10; 2 மக் 13:14-17). இத்தகைய புகழ் வாய்ந்த இந்த இடம் வீரமிக்க மத்தத்தியாவையும், அவர்தம் புதல்வரையும் அடக்கம் செய்ய சாலச்சிறந்தது எனக்கருதி யூதமக்கள் அவர் களை இங்கு அடக்கம் செய்தனர் (1மக் 2:70; 9:18-21; 13:25-26). இந்த இடத்திலே சீமோன் ஞாபகச் சின்னமாக குடும்பக் கல்லறை ஒன்றைக் கட்டி எழுப்பினார் (1 மக் 13:27-30).

மேலும், ராபி எலயாசர் தோன்றியது இவ்விடத்தில்தான். இது தற்போதைய ராஸ் மேடியேவாக இருக்கலாம். இஃது எருசலேமுக்கு வடமேற்கில் 29 கி.மீ. தொலைவிலும், லோதுக்கு (லித்தாவுக்கு)க் கிழக்கில் 6 கி.மீ. தொலைவிலும் மலைப் பகுதியில் உள்ளது. இது பழைய எருசலேம் - யாப்பா சாலையின் மேலே அமைந்துள்ளது.

மோரசேத்து (MORESHETH - உடைமை)

இஃது இறைவாக்கினர் மீக்காவின் ஊர் (எரே 26:18; மீக் 1:1). இவரது இறைவாக்கில் சொல்லாடல் பகுதியில் வரும் நகரங்களில் ஒன்று (1:14). இது பொதுவாகத் தெல் எச்-யூதேயிதே ஆக அடையாளம் காட்டப்படும். இது பெயித்-இப்ரினுக்கு வடக்கு-வடகிழக்கில் 2.5 கி.மீ. தொலைவிலும், இலாக்கீசுக்கு வடகிழக்கில் 9.7 கி.மீ. தொலைவிலும் உள்ளது. 2 நாள் 11:8-இல் குறிக்கப்படும் காத்து இந்நகரமாக இருக்கலாம். உலோகக் காலத்தில் தோன்றிய மோரசேத்து பின்பு புறக்கணிக்கப்பட்டு கி.மு. 750-இல் மீண்டும் குடியேறப் பட்டது.

மோரசேத்துக் காத்து (MORESHETH - GATH - காத்தின் உடைமை)

இது மீக்காபின் புலம்பலில் பேரழிவை எதிர்கொள்ளப்போகும் நகரங்களில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது (மீக் 1:14). காண்க. மோரசேத்து.

மோரியா (MORIAH)

1. பெயேர்செபாவிலிருந்து மூன்று நாள் பயணம் செய்து அடையும் இடம் மோரியா மலைநாடு (ஆதி 22:2). கடவுள் ஆபிரகாமை இம்மலைமீது ஈசாக்கைப் பலி கொடுக்கக் கட்டளையிடுகின்றார். அவரும் அப்படியே செய்தார். ஆபிரகாமின் விசுவாசத்தைக் கண்ட இறைவன் ஈசாக்கிற்குப் பதில் ஓர் ஆட்டுக்கிடாயைப் பலியாகக் கொடுக்கக் கட்டளையிடுகின்றார்.

இந்த இடத்தை அடையாளம் காட்டுவது கடினம். மோரியா என்ற சொல் ''பார்த்தல்'' அல்லது ''கொடுத்தல்'' என்ற பொருளுடைய வேர்ச்சொல்லிலிருந்து வருவதாகத் தெரிகிறது. ஆபிரகாம் இந்த இடத்திற்கு ''ஆண்டவர் பார்த்துக் கொள்வார்'' என்ற பொருளுடைய ''யாவே ஈரே'' என்று பெயரிடுகிறார் (22:14). வுல்கத்தா வாசகம் மோரிய என்ற பெயருக்குக் ''காட்சியின் நிலம்'' என்று விளக்கம் அளிக்கிறது.

2. சாலமோன் அரசர் எருசலேமின் மலையுச்சியில் தம் தந்தை தாவீதுக்கு, ஆண்டவரால் காட்சியில் காண்பிக்கப்பட்ட மோரியா மலையில், ஆண்டவருக்கு ஆலயம் கட்டினார் (2 நாள் 3:1). தாவீதே அந்த இடத்தை எபூசியர் ஓர்னானிடமிருந்து வாங்கியிருந்தார் (2 நாள் 21:16-26; 2 சாமு 24:16-25).

மோரே (MOREH - போதனை இடம், சோதிடம் பார்க்கும் இடம்)

1. இது செக்கேமிற்கு அருகில் ஒரு புனித கருவாலி மரமுள்ள இடம். இங்கே ஆபிரகாம் தனக்குத் தோன்றிய ஆண்டவருக்கு ஒரு பீடத்தைக் கட்டினார் (ஆதி 12:6-8). இந்த இடத்திலே ஆபிரகாம் இம்மரத்தை ஊன்றாத காரணத்தால் இது கானானியர்களின் வழிபாட்டு இடமாக இருந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. யாக்கோபு அன்னிய சிலைகளைச் செக்கேம் நகருக்கு வெளியே இருந்த ஒரு கருவாலிமரத்தின் கீழே புதைத்தார் (35:4). உப 11:30-இல் இந்த இடம் கெரிசிம், எபால் மலைகளுக்கு அருகில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. செக்கேமில் யோசுவா ஆண்டவரின் சட்டங்களைக் கூறியபின் ஒரு பெரியகல்லை எடுத்துப் புனித இடத்திற்கு அருகிலிருந்த கருவாலி மரத்தின் கீழே அதை நாட்டினார் (யோசு 24:26).

2. இது மிதியானியர் பாளையம் இறங்கியிருந்த பள்ளத்தாக்கிற்கு அருகிலிருந்த குன்று (நீதி 7:1). இதுதான் இசிரியேல் பள்ளத்தாக்காகும். இது தற்போதைய ஏபெல் தாகி குன்றாக இருக்கலாம்.

மோலதா (MOLADAH - பிறப்பு, சந்ததி)

இது தெற்கு யூதேயாவிலுள்ள சிமியோனுக்குரிய நகரமாகும் (யோசு 15:26;

19:2). இப்பெயரானது, பெண்கள் தமக்குப் பிள்ளைப்பேறு கிடைப்பதற்காக வேண்டும் ஒரு திருத்தலத்தைக் குறிக்கிறது. எரகுமவேலின் சந்ததியினர் ஒருவர் இப்பெயரைப் பெற்றிருந்ததால் இப்பகுதி எரகுமவேலியர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது (1 நாள் 2:29; 1 சாமு 27:10).

அடிமைத்தனத்திற்குப்பின் திரும்பி வந்த யூதரில் சிலர் மோலதாவுக்கு வந்து தங்கினர் (நெகே 11:26). பிற்காலத்தில் எதோமியர்கள் இந்நகரைக் கைப்பற்றினர். இது பெயேர்செபாவுக்குக் கிழக்கு - வடகிழக்கில் 12 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கிர்பெத் ஏல்-வாட்டன் என்றும், பெயேர் செபாவுக்குக் கிழக்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள தெல் ஏல்-மில்கா என்றும் அடையாளம் காட்டப்படுகிறது.

மோலிது (MOLID - பெற்றெடுப்பவர்)

இவர் யூதா குலத்தினர். இவரது தந்தை பெயர் அபிசூர். தாயின் பெயர் அபிகயில் (1 நாள் 2:29).

மோலேக்கு, மோலோக்கு (MOLECH, MOLOCH - அவமானம்)

இஃது அரசன் என்ற பொருளில் ஒரு கடவுளுக்கு அளிக்கப்பட்ட பெயராகும்; எபிரேய வாசகத்தில் வேண்டுமென்றே ஓர் உயிரெழுத்தை மாற்றி அவமானம் என்ற பொருள்படும் சொல்லாக மாற்றப்பட்டது. இதன் வேர்ச்சொல், பொருத்தனையாக அளிக்கப்படும் பலியைக் குறித்தது. பிற்காலத்தில்தான் இச்சொல் ஒரு கடவுளின் பெயராகப் பொருள் கொள்ளப்பட்டது. யாவே உட்பட்ட பல கடவுள்கள், அரசன் என்ற பொருளில், மெலேக்கு என்று அழைக்கப்பட்டனர். மோலேக்கு, அம்மோனியக் கடவுளான மில்கோமோடு ஒற்றுமை கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இரண்டும், 2 அர 23:10. 13-இல், தனித் தனியாகக் கூறப்படுகின்றன.

குழந்தைகளைப் பலியிடுவது சில சமயங்களில் இஸ்ராயேலிலும் யூதாவிலும், குறிப்பாக எருசலேமுக்கு அருகிலுள்ள இன்னோம் பள்ளத்தாக்கில், கடைப் பிடிக்கப்பட்டது (2 நாள் 28:3; 33:6; எரே 7:31; 19:5-6). சில சமயங்களில் இப்பழக்கம் மோலேக்கோடு தொடர்புபடுத்தப்படுகிறது (2 அர 23:10; எரே 32:35). இப்பழக்கத்தை ஐந்நூல் வன்மையாகக் கண்டித்துத் தடை செய்கிறது (லேவி 18:21; 20:2-5).

சில வாசகங்கள் மோலேக்குக்குப் பதிலாக மோலோக்கு என்று கொண்டிருக்கின்றன (ஆமோ 5:26; அ.ப. 7:43).

மோலோக்கு (MOLOCH)

காண்க. மோலேக்கு.

மோவாதியா (MOADIAH - யாவே வாக்களிக்கிறார்)

இது பெரிய குரு யோயாக்கீம் காலத்தில் வாழ்ந்த ஒரு குருகுலக் குடும்பம் (நெகே 12:17).

மோவாபு (MOAB - தந்தையின் வித்து)

இது சாக்கடலுக்குக் கிழக்கிலும், அர்னோன் ஆற்றுக்குத் தெற்கிலும் அமைந்திருந்த நாடு. பழைய ஏற்பாடு மட்டுமே இந்த நாட்டைப் பற்றிய தகவலைத் தருகிறது. நெல்சன் குளுயெக்கு இந்தப் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி செய்தார். அதன்படி கி.மு. 23 முதல் 20-ஆம் நூற்றாண்டுகள் வரை இப்பகுதியில் நாகரிகம் சிறந்து விளங்கியது. ஆனால், இது கி.மு. 1900-இல் திடீரென அழிந்தது. காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் மறுபடியும் இங்கே மக்கள் நாகரிகத்தை வளர்த்தனர். இஃது இஸ்ராயேலர்களின் அரசர் காலம் வரை நிலைத்தது. இஸ்ராயேலருக்கு முன்னரே இவர்கள் மன்னர் ஆட்சியைக் கொண்டிருந்தனர். இவர்களது மொழி எபிரேய மொழியை ஒத்தது. மேலும் மோவாபியரும், எபிரேயரும் ஒரே பண்பாட்டைப் பெற்றிருந்தனர். கி.மு. 13-ஆம் நூற்றாண்டிலே மோவாபியர் அரண்களைக் கட்டியிருந்தனர். எனவே, அவர்கள் இஸ்ராயேலரைத் தங்கள் நாட்டின் வழியாகச் செல்ல அனுமதிக்கவில்லை. இவர்

களது சமயம் பற்றி அதிகமாக அறியப்பட வில்லை. இவர்களது தலைமைத் தெய்வம் கெமோசு ஆகும். இந்த நாடு இரண்டாம் இராமசேசு பிடித்த ஆசிய நாடுகளில் ஒன்றாகும் (கி.மு. 1301 - 1234). அசீரிய மூன்றாம் திகிலத்து பிலேசர் (கி.பி. 745 - 727) தனக்குக் கப்பம் கட்டிய அரசர்களுள் மோவாபின் சலமானைக் கூறுகிறார். சார் கோன் மன்னர் (கி.மு. 721-705) மோவா பிடம் கப்பம் வசூலித்தார். மேலும் சனகெரிபு, ஏசர்கத்தோன், அசூர்பானிப் பால் போன்ற அரசர்களும் மோவாபியரிட மிருந்து கப்பம் வசூலித்தனர்.

ஆதி ஆகமம் மோவாபியர் லோத்தும் அவரது மூத்த மகளும் கூடிப் பிறந்தவர் எனக்கூறுகிறது (ஆதி 19:37). இக்கதை மோவாபியருக்கும் இஸ்ராயேலர்களுக்கும் இடையிலுள்ள உறவைச் சுட்டுகிறது. ஏதோமிய அரசர் அட்டவணை மோவாபு நாட்டிலே மிதியானியர் தோற்கடிக்கப்பட்ட தாகக் கூறுகிறது (ஆதி 36:35). எண்ணிக்கை நூல் இஸ்ராயேலர் வருமுன் மோவாபிய ரின் வரலாறு பற்றிக் கூறுகிறது (எண் 21:13-19). மோவாபியர் அர்னோனுக்கு வடக்கிலுள்ள பகுதிக்கு உரிமை கொண்டா டினர். ஆனால், சீகோனின் எமோரிய அரசால் ஆற்றுக்குத் தெற்கே விரட்டப்பட்ட னர். இங்கே குறிப்பிடப்படும் பாடல் இப்போரில் மோவாபியரின் தோல்வியைச் சுட்டுகிறது. இஸ்ராயேலர் எமோரிய அரசை வெற்றி கொண்டபோது, அர்னோ னுக்கு வடக்கிலுள்ள பகுதிக்கு உரிமை கொண்டாடினர். இப்பகுதியின் உரிமை இஸ்ராயேலருக்கும் மோவாபியருக்கு மிடையே ஒரு தொடர் பிரச்சனையாயிற்று. இதில் இஸ்ராயேலரே பெரிதும் வெற்றி பெற்றனர். மோவாபு இஸராயேலைவிடச் சிறிய நாடு. இஸ்ராயேலர் தங்களது படையை ஒன்று கூட்ட முடியாதபோது தான் மோவாபியர் வெற்றி பெற்றனர். பாலாக்கு அரசன் இஸ்ராயேலருக்கு எதி ராகக் குறி சொல்லும்படி பிலயாமிடம் வேண்டுகிறான் (எண் 22-24). எண் 25, இஸ்ராயேலர் மோவாபிய பெயோரின் பாகாலை வழிபட்டதை எடுத்துக்கூறு கிறது. இது மோவாபியருக்கு எதிரான பழிவாங்கும் போர் பற்றிய கதைக்கு வாய்ப்பாயிற்று (எண் 31). இது, உப 2:9-இல் குறிக்கப்படும் நட்பு மனப்பான் மைக்கு மாறாக உள்ளது. இது யாவேயால் உறுதி செய்யப்பட்ட பகுதிக்கு மோவாபிய ரின் உரிமையையும், இஸ்ராயேலருக்கும் மோவாபியருக்குமிடையேயுள்ள உறவை யும் கூறுகிறது. உப 2:10 எமியர் மோவா பின் தொடக்ககாலக் குடிகளாவர் என்று கூறுகிறது. உப 23:4-இன் சட்டம் நட்புற வைக் காட்டவில்லை. இச்சட்டம் மோவா பியப் பெண்களை இஸ்ராயேலர் மணக்கக் கூடாது என்றும், இஸ்ராயேலர் சமூகத்துக் குள் மோவாபியரை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் கூறுகிறது. இது பாலாக் கோடு கொண்ட பகைமையை நினைவுகூர் கிறது. மோசேயின் இறப்பும் அடக்கமும் மோவாபில் நிகழ்ந்தன (உப 34). நீதி 3:11-30, மோவாபிய எக்லோனால் பென்யா மின் இனத்தவர் தோற்கடிக்கப்பட்டதை யும், எகூதால் மீட்கப்பட்டதையும் கூறு கிறது. சீகோனின் எமோரிய அரசை இஸ்ரா யேலர் வெற்றி கொண்டதை அடிப்படை யாகக் கொண்டு, அர்னோனுக்கு வடக்கி லுள்ள பகுதிக்கு உரிமை கொண்டாடும் இப்தாகுவின் பேச்சு வினோதமாகவுள்ளது (நீதி 11:15-27). சவுல் மோவாபியரை வெற்றி கொண்டார். ஆனால் விபரங்கள் கொடுக்கப்படவில்லை (1 சாமு 14:47). தாவீதுக்கும் மோவாபிய மன்னனுக்கு மிடையேயுள்ள நட்புறவு ஓரளவு மலைப் பைக் கொடுக்கிறது (1 சாமு 23:3தொ). ரூத்தின் கதை, தாவீதின் குடும்பம் மோவா பியத் தொடர்புடையது என்று காட்டுகிறது. ஆனால் இந்த உறவின் தரம், இக்கதை சுட்டுவதைவிட, அதிகமாக இருக்கலாம். தாவீது அரசனானபின் இந்த உறவு நீடிக்க வில்லை. இதற்குக் காரணம் தெரிய வில்லை. ஏனெனில், தாவீது மோவாபைப் பயங்கரமான முறையில் வெற்றி கொண்டு தனது அடிமை நாடாக மாற்றினார் (2 சாமு 8:2). மோவாபின் மேல் இஸ்ராயேலர் கொண்டிருந்த ஆதிக்கம் ஆகாபின் ஆட்சி

வரை நீடித்தது. பழைய ஏற்பாடும் (2 அர 1:1; 3:4தொ), மோவாபுக்கல்லும் கூறுவது போல் மேசாவின் கிளர்ச்சி வெற்றியடைந்தது. இவற்றிலிருந்து வட அரசாகிய இஸ்ராயேல் அல்லாமல், யூதாதான் மோவாபியர் மேல் ஆதிக்கம் செலுத்தியது என்பது தெரிகிறது. யோவாக காலத்தில் மோவாபிய கொள்ளைக் கூட்டத்தினர் இஸ்ராயேலையும் (2 அர 13:20), அனேகமாக நெபுகத்னேசரின் கூட்டாளியாக, யோயாக்கிம் காலத்தில் யூதாவையும் (24:2) கொள்ளையடித்தனர். யோசபாத்தின் ஆட்சிக்காலத்தில் (2 நாள் 20) மோவாபியர் யூதாவின் மேலும் மற்ற நாடுகளின் மேலும் படையெடுத்தனர்.

எசா 15-16; எரே 48-இல் வரும் மோவாபுக்கு எதிரான வாக்குகள் பழைய ஏற்பாட்டிலேயே மிகவும் தெளிவில்லாத பகுதிகளாகும். மோவாபின் அழிவு மிகைப்படுத்தப்படும்; மிகவும் கடுமையாகவும் விவரிக்கப்படுகிறது; வென்றவர் பெயர் கொடுக்கப்படவில்லை. அவர் இஸ்ராயேல் அல்லர். ஆமோ 2:1 தொ ஏதோமுக்கு எதிரான போரில் மோவாபியர் செய்த காட்டுமிராண்டித்தனத்தைக் கூறுகிறது. எரேமியா மோவாபின் வீழ்ச்சியை முன்னறிவிக்கிறார் (எரே 9:25; 25:21). பாபிலோனுக்கு எதிரான கிளர்ச்சியில் சேர வேண்டாம் என்று எரேமியா எச்சரித்த நாடுகளில் மோவாபும் ஒன்று (27:3). இந்நாடுகளின் அரசர்கள் செதேக்கியாவின் ஆட்சிக்காலத்தில் எருசலேமில் தங்கள் தூதுவர்களைக் கொண்டிருந்தனர். நெபுகத்னேசருக்கு எதிரான கிளர்ச்சியில் யூதாவோடு மோவாபு சேர்ந்து கொண்டதற்குச் சான்றுகள் இல்லை. செப் 2:8தொ, தோல்வியுற்ற யூதாவைப் பழித்துரைத்ததற்காக மோவாபை அச்சுறுத்துகிறது. இஃது இந்தக் கிளர்ச்சியில் மோவாபு சேரவில்லை என்று கட்டுகிறது. எசே 25:8தொ, யூதாவின் அண்டை நாடுகளுடன் சேர்ந்து மோவாபு தோல்வியுற்ற யூதாவைக் கொள்ளை அடித்தது, அதன் ஒரு பகுதியை அபகரித்துக் கொண்டது என்று கூறுகிறது. யூதாவின் வீழ்ச்சிக்குப் பின் மோவாபு வரலாற்றில் தோன்றவில்லை. ஒருவேளை, ஏதோமைப் போன்று மோவாபும் அராபியாவிலிருந்து வந்த நபத்தேயக் குடியேற்றத்தில் மூழ்கிப் போயிருக்கலாம்.

மோவாபுக்கல் (MOABITE STONE)

இது மோவாபின் அரசனான 'மேசா' இஸ்ராயேல் மீது தான் கொண்ட வெற்றியைப் பொறித்து வைத்துள்ள 112 x 71 x 36 செ.மீ. அளவுள்ள பகமை நிறத் தீக்கல்.

இக்கல் 1868-இல் கிளெயின் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவர் அதனை அப்பொழுது எடுக்காததால் அங்கு வாழ்ந்த மக்கள் அதனை உடைத்து விட்டனர். ஆனால், அது மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டு அதன் எழுத்துக்கள் படிக்கப்பட்டன.

இதில் உள்ள எழுத்துக்கள் மோவாபியரின் மொழியாகக் கருதப்படுகிறது. அஃது எபிரேய மொழியையொத்ததாக இருக்கிறது. இதில் பொறித்துள்ளவை இஸ்ராயேலின் மீது தாங்கள் கொண்ட வெற்றிக்காக கெமோசு எனும் கடவுளுக்கு நன்றி செலுத்துவதாக அமைந்துள்ளன. 1 அர 16-இல் கூறப்பட்டிருப்பது போல், அவர்களின் தெய்வம் அவர்கள் மேல் கொண்ட கோபத்தினால் ஓம்ரியினால் தண்டிக்கப்பட்டு துயரப்படுகிறார்கள். ஆனால், மீண்டும் மேசா எனும் மோவாபிய அரசனால் அவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

இவ்வாறு இந்தக் கல் அக்கால மதச் சடங்கு, மக்கள் பழக்கவழக்கங்கள் பற்றிய பல உண்மைகளை எடுத்துரைக்கிறது.

மோவாபு நகர் (CITY OF MOAB)

பிலயாமைச் சந்திக்க பாலாக்கு அரசன் சென்ற இடம். இது பாலாக்கு நாட்டின் எல்லையில், அர்னோன் ஆற்றை ஒட்டி அமைந்திருந்தது (எண் 22:36). இது யோசு 13:9-இல் குறிக்கப்படும் நகரமாக இருக்கலாம். இந்நகரை ஆர் என்ற இடமாக அடையாளம் காட்டுகின்றனர் அறிஞர் பலர். ஒரு சிலர் இஃது இக்கால ஏல்-மெதேயினாக இருக்கலாம் என்கின்றனர் (காண்க. எண் 21:14-15).

மௌ

மௌனம் (SILENCE)

பேச்சில் முற்படுதல், குறுக்கிடுதல் அல்லது தொடருதல் ஆகியவற்றில் மௌன மானது தனக்கேயுரிய வழியில் இறைவனுக் கும் மனிதனுக்கும் இடையிலான உரை யாடலை ஒளிமயமாக்குகிறது.

1. இறைவனுடைய மௌனம்: ''ஆதியிலே வார்த்தை கடவுள் தன்மை கொண்டிருந் தார்'' (யோவா 1:1); ஆனால், மனிதனுக்கு வெளிப்படுத்தப்படும் வரையில் ''ஊழி ஊழிக் காலமாக (மௌனத்தில்) மறை வாயிருந்தது'' (உரோ 16:25). வார்த்தையி னுடைய இந்த மறைவான முதிர்ச்சியானது உரிய காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவ ருடைய முன் குறிக்கப்பட்ட நியதியால் வெளிப்படுத்தப்படுகிறது. அவர்களுடன் பேசுவதற்கும் முன்னர், அவர்களுடைய தாயின் உதரத்திலிருந்தே இறைவன் அவர் களை அறிந்திருந்தார் (எரே 1:5; காண்க. உரோ 8:29). ஆனால் இறைவனுடைய மற்றொரு மௌனமும் உள்ளது. அஃது இனியும் அன்பின் மறைபொருளால் நிறைந்ததாய்த் தோன்றாமல், இறைசினத் தால் நிறைந்ததாய் உள்ளது. தனது பாவமக் களை அமைதிகுலையச் செய்ய இறைவன் இனியும் தனது இறைவாக்கினர்கள் மூல மாகப் பேசுவதில்லை (எசே 3:26). ஏன், அடிக்கடியும் வலிமையாகவும் இவ்வாறு பேசிய பின்னர், பக்தியின்மையின் வெற்றி யின் முன்னால் இறைவன் மௌனமாக உள்ளார் (அப 1:13)? யோபுவினுடைய (யோபு 30:20) அல்லது சங்கீத ஆசிரியர்க ளுடைய (சங் 83:2; 109:1) செபத்திற்கு அவர் இனிமேல் பதிலளிக்காமல் இருப்பது ஏன்? தன்னுடைய இறைவனின் குரலைக் கேட்க ஆசிக்கும் இஸ்ராயேலுக்கு மௌன மானது ஒரு தண்டனையாகும் (எசே 64:11). ஏனெனில், அதனுடைய ஆண்டவரின் பிரிவை அது சுட்டிக்காட்டுகிறது (சங் 35:22). இந்த மௌனமானது மரண தண் டனைக்குச் சமமானது (காண். சங் 28:1). இறைவனும் மனிதனும் இனி ஒருவரோ டொருவர் பேசாதிருக்கும் ''பாதாளத்தின் மௌனத்தினையும்'' இஃது அறிவிக்கிறது (சங் 94:17; 115:27). ஆயினும், இந்த உரையாடலானது முற்றிலுமாக முறிந்து விடவில்லை. ஏனெனில், இறைவனுடைய மௌனமானது, மனிதருடைய பற்றுறுதி யின்மையின் நாட்களில் அவருடைய பொறுமையின் பிரதிபலிப்பாகவும் இருக்க லாம் (எசே 57:11).

2. மனிதனுடைய மௌனம்: ''பேசாதிருப் பதற்கு ஒரு காலமுண்டு; பேச ஒரு காலமுண்டு'' (திருவுரை 3:7). இம்மூதுரை யானது பல்வேறுபட்ட ஆழமான நிலை களில் புரிந்து கொள்ளப்படலாம். காலப் போக்கில் மௌனமானது உறுதியின்மை (ஆதி 24:21), சம்மதம் (எண் 30:5-16), குழப்பம் (நெகே 5:8), பயம் (எஸ்த 4:14) முதலியவற்றையும் குறிப்பிடலாம். மனி தன் பாவத்தை விலக்குவதற்கென, குறிப் பாக வம்புச் செய்தி அல்லது தவறான முடிவு ஆகியவற்றினிடையில் (பழ 11:12-13; 17:28; காண்க. யோவா 8:6) தனது நாவினைக் கட்டுப்படுத்துவதன் மூலம் (பழ 10:19) தனது சுதந்தரத்தைக் காட்டு கிறான்.

முற்றிலும் மனிதத்தன்மையான இந்த ஞானத்திற்கு அப்பால், மனிதனுக்கான மௌனம் மற்றும் பேச்சின் நேரங்களை ஏற்படுத்துபவர் இறைவனே. இறைவன் முன்பான மௌனமானது பாவத்திற்குப் பிற்பட்ட வெட்கக்கேட்டை (யோபு 40:4; 42:6; காண்க. 6:24; உரோ 3:19; மத் 22:12) அல்லது மீட்பிலான உறுதியை வெளிப் படுத்துகிறது (புல 3:26;யாத் 14:14). மனித னுடைய அநீதிகளை எதிர்கொண்ட நிலை யில் பிரமாணிக்கமுள்ள ஊழியனாகிய கிறிஸ்து (எசா 53:7), தனது நிலையை இறைவன் முன்னிலையில் சமர்ப்பித்தார் என அது குறிப்பிடுகிறது (மத் 26:63 இணை; 27:12.14 இணை). ஆனால், மற்றச் சூழ்நிலைகளில் பேசாமலிருப்பதென்பது நம்பிக்கையில் தவறுவதும், இறைவனை அறிக்கையிடாததும் ஆகும் (மத் 26:64

இணை; அ.ப. 18:9; 2 கொரி 4:13). அப்போது மனிதன் மௌனமாயிருக்க முடியாது (எரே 4:19; 20:9; எசா 62:6; லூக் 19:40).

இறுதியாக, இறைவன் மனிதனைச் சந்திக்கச் செல்லும்போது, மண்ணுலகம் மௌனம் சாதிக்கிறது (அப 2:20; செப் 1:7; எசா 41:1; செக் 2:17; சங் 76:9; திருவெளி 8:1); அவர் வந்தவுடன், பயம் அல்லது மரியாதையின் மௌனமானது மனிதனுடைய ஆராதனையை வெளிப்படுத்துகின்றது (புல 2:10; யாத் 15:16; லூக் 9:36). தனது இதயத்தில் தியானிப்பவனுக்கு (லூக் 2:19.51) இந்த எளிய மௌனமானது அமைதிக்கான வழியாக மட்டுமின்றி (சங் 13:2), சிறியோருக்கு ஆண்டவரால் வாக்களிக்கப்பட்ட வெளிப்பாட்டிற்கான வழியாகவும் உள்ளது (மத் 11:25).

ய

யகசியா (JAAZIAH - யாவே பலப்படுத்துவாராக)

லேவியர் மெராரியின் மகன்; பெனோ, சோகாம், சக்கூர், இப்ரி ஆகியோரின் தந்தை (1 நாள் 24: 26-27). யாத் 6:19; 1 நாள் 23:21-இல் வரும் மெராரியின் புதல்வர்களுள் இவரும் இவரது வழித் தோன்றல்களும் குறிக்கப்படவில்லை.

யகசியேல் (JAASIEL - இறைவன் செயலாற்றுகிறார்)

1. இவர் ஒரு மெட்சோபாயர். தாவீதின் வலிமை மிக்க முப்பது வீரர்களில் ஒருவர் (1 நாள் 11:47).

2. இவர் தாவீது காலத்தில் பென்யமின் இனத்துக்குத் தலைவர். அப்னேரின் மகன் (1 நாள் 27:21). ஒன்றில் குறிக்கப்படுபவரும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

யகசியேல் (JAAZIEL - இறைவன் பலப்படுத்துவாராக)

இவர் இரண்டாம் தர லேவியர். தாவீதின் காலத்தில் வாயில் காப்போராகவும் பாடகராகவும் இருந்தவர் (1 நாள் 15:18). இப்பெயர் 1 நாள் 15:20-இல் அசியேல் என்றும், 16:5-இல் எயியேல் என்றும் வாசிக்கப்பட வேண்டும்.

யகசு (JAASU - யாவே செயலாற்றுவாராக)

அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தவர்களில் புறவின மனைவியரை நீக்கிவிட எஸ்ராவால் கட்டாயப்படுத்தப்பட்டவர்களில் இவரும் ஒருவர் (எஸ் 10:37).

யகபேசு (JABEZ - வருந்துதல்) - ஆள்

யூதாவைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் குலப்பெயர் மூதாதையர் (1 நாள் 4:9-10). பொதுப்பாணிச் சொல்லிலக்கணத்தின்படி, இவர் கடினமான பிறப்பிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இஃது அவருடைய மன்றாட்டில் காணப்படுகிறது.

யகபேசு (JABEZ - வருந்துதல்) - இடம்

யூதாவில் உள்ள ஓர் ஊர். இது பெத்லகேமுக்கு அருகில் இருந்திருக்கலாம். இங்கு எழுத்தர்கள் பலர் குடியிருந்தனர் (1 நாள் 2:55).

யகரே - ஓர்கிம் (JAARE - OREGIM -நெசவாளர் நாடு)

இவர் எல்கானானின் தந்தையாவார் (2 சாமு 21:19). இணைப்பகுதியாகிய 1 நாள் 20:5-இல் இவர் யாயீர் என்றழைக்கப்படுகிறார். இப்பொழுதுள்ள வடிவம் நெசவாளர் என்று பொருள்படும் ''ஓர்கீமை'' என்ற சொல்லை வாசகத்தின் முடிவிலிருந்து எழுத்தர்கள் தவறாகப் புகுத்தியதின் விளைவாகும்.

யகரேசியா (JAARESHIAH - யாவே நடுவாராக)

எருசலேமில் வாழ்ந்த ஒரு பென்யமின் குடும்பத் தலைவர் (1 நாள் 8:27). எரொகாமின் புதல்வர்.

யகுதாய், எகுதாய் (JAHDAI - யாவே வழி நடத்துவாராக)

இவள் யூதாவின் வழித்தோன்றல்களில் ஒருத்தி. ஒருவேளை இவள் காலேபின் வைப்பாட்டியாக இருக்கலாம். இவள் வழியாக ஆறு புதல்வர்கள் பிறந்தனர் (1 நாள் 2:47).

யகுதியேல், எகுதியேல் (JAHDIEL - இறைவன் மகிழ்வாராக)

மனாசேயின் பாதிக்கோத்திரத்தில் ஒரு குடும்பத் தலைவர் இவர் (1 நாள் 5:24).

யம்பிரே, இயம்பிரே (JAMBRES)

2 திமொ 3:8-இன்படி, மோசேயை எதிர்த்த இரு சூனியக்காரர்களுள் ஒருவரின் பெயர் (காண்க. யாத் 7:11.22). யாத்திரை நூலில் வரும் மூல விவரிப்பில் இந்தச் சூனியக்காரர்களின் பெயர் குறிக்கப்படவில்லை (யாத் 7:11-12.22; 8:7; 9:11). ஆனால் தர்கூமிலும், கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த நூல்களிலும் இவர்களின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. யன்னே மற்றும் யம்பிரேயின் போலிநூல்

செலாசியன் சட்டத்தால் கண்டனம் செய்யப்படுகிறது (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு). காண்க. யன்னே, இயன்னே.

யன்னாய், இயன்னாய் (JANNAI - ஆண்டவரால் கொடுக்கப்பட்டது)

இவர் இயேசுவின் மூதாதையர்களில் ஒருவர்; மெல்கியின் மகன் (லூக் 3:24). இப்பெயர் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை.

யன்னே, இயன்னே (JANNES)

2 திமொ 3:8-இன்படி, எகிப்திய அரசவை மந்திரவாதிகளில் ஒருவன். இவன் யம்பிரேயுடன் சேர்ந்து மோசேயை எதிர்த்தான். இவர்கள் செயல்கள் பற்றிய மூலவிவரிப்பில் (யாத் 7:11-12.22; 8:7; 9:11) இவர்களது பெயர்கள் கொடுக்கப்படவில்லை. இவர்களைப் பற்றிய போலிநூல் செலாசியன் சட்டத்தால் கண்டனம் செய்யப்பட்டுள்ளது.

யன்னேயு (JANNEUS)

கி.மு. 103-76-இல் யூதேயாவின் அரசனாக இருந்த இவன் அலக்சாந்தர் எனவும் அழைக்கப்படுகிறான். இவன் யோவான் கிரிக்கானுவின் மகன். முதலாம் அரிஸ்தோபுல் என்பவன் அரசனானவுடன் இவனைச் சிறையிலிட்டான். ஆனால், ஒரு வருடத்தில் அரிஸ்தோபுல் இறந்தவுடன் அலக்சாந்தர் மீண்டும் அரசனாகி, குழந்தையற்ற விதவையையும் மணந்து கொண்டான். இதன் பின்னரே இவன் தலைமைக் குருவானான். இவ்வாறு தலைமைக் குருவான பின் ஒருவன் விதவையை மணத்தலாகாது எனும் சட்டத்தை மீறவில்லை.

இவன் பெலிஸ்தியா, காசா இவற்றோடு போரிட்டு வென்றான்; பரிசேயர்க்கும் சதுசேயர்க்குமிடையே நடந்த போட்டியை, சண்டையைத் தீர்த்து சமரசப்படுத்தினான்.

பரிசேயர்களுக்கும், யன்னேயுவுக்கும் பிரச்சனை ஏற்படலாயிற்று. மத சம்பந்தப் பட்டவைகளில் போருக்கான தந்திரங்களை இவன் கையாள்வதையும், அரசன் எனும் பெயரை அவன் வைத்துக் கொள்வதையும் அவர்கள் விரும்பவில்லை. இவன் பணத்துக்கு ஆட்களை ஏவி ஆறாயிரம் பரிசேயர்களைக் கோவிலில் கொன்றான்.

பரிசேயர்கள் இவனுக்கு எதிராகப் போரிட முடிவு செய்து மூன்றாம் தெமேத்திரியு என்பவனுடன் சேர்ந்து கொள்ள நினைத்துப் பின் தம் செயலுக்காக மனம் வருந்தி அதனைக் கைவிட்டனர். ஆனால், அலக்சாந்தரோ எண்ணூறு பரிசேயர்களை அவர்களது மனைவியர், குழந்தைகள் முன் கொன்றான். தான், தன் அரசவையுடன் அதற்காக விருந்துண்டு மகிழ்ந்தான்.

தனது போர் செய்யும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்த அலக்சாந்தர் அராபிய அரசன் அரேத்தாவுடனும் சண்டையிட்டான். ஆனால், பெருந்தோல்வியுற்றான். நோயால் துன்புற்றாலும், சண்டை செய்வதைத் தொடர்ந்து கொண்டிருந்ததால், தனது இறுதிக்காலத்தில் அதிகத்துன்புற்றான். நிர்வாகம் இவரது மனைவி சலோமையிடம் விடப்பட்டது. தனது மரணப் படுக்கையில், பரிசேயர்களுடன் நட்புறவு கொண்டிருக்கும்படி தனது மனைவியைக் கேட்டுக் கொண்டான். இவனது கொடுங்கோன்மையைப் பொருட்படுத்தாமல் பரிசேயர்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

யூதேயாவின் எல்லையை விரிவுபடுத்த வேண்டுமென்பதே இவனது முக்கியமான நோக்கம். இதனால் இவன் பரிசேயர்களுடன் அரசியல் காரியங்களில் வேறுபட்டு நிற்கவேண்டியதாயிற்று. இவன் பெற்ற வெற்றிகளெல்லாம் தற்காலிகமானதாய் இருந்ததால், இவனது சூட்சியின் பின்விளைவுகள் மக்கட்குப் பெருந்துயர் அளித்தன.

சிமோன் பென் செதா எனும் இவரது மைத்துனருக்கும் (சனத்திரின் சங்கத்தின் தலைவர்களில் ஒருவர்) அலக்சாந்தர் யன்னேயுவுக்குமிடையே இருந்த தொடர்புகளைப் பற்றி தால்மூது குறிப்பிடுகின்றது; பல செயல்களில் இருவரும் சேர்ந்து செயல்பட்டதைச் சுட்டிக்காண்பிக்கிறது. இவனுக்குப் பிறகு அவனது மனைவி சலோமை அரசியானாள். இவளது ஆட்சி பரிசேயர்களுக்குச் சாதகமாய் அமைந்தது.

யா

யாகசியேல் (JAHAZIEL - இறைவன் பார்ப்பாராக)

1. இவர், தாவீது சிக்லாகு எனுமிடத்தில் இருந்தபோது அவரிடம் வந்து சேர்ந்து கொண்ட ஆற்றல் மிக்க வீரர்களில் ஒருவர். பென்யமின் வந்த ஆற்றல் மிகக் கொண்டவரும், திறமை மிக்கவருமான போர் வீரர் இனத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 12:4).

2. உடன் படிக்கையின் பேழையின் முன் எக்காளம் ஊத, தாவீதினால் நியமிக்கப் பட்டவர்களுள் ஒருவர் (1 நாள் 16:6).

3. கோகாத்திய லேவியரான இவர் தாவீதின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தவராவார்; எபிரோனின் மூன்றாம் மகன் (1 நாள் 23:19; 24:23).

4. இவர் செக்கரியாவின் மகன். ஆசாபின் குலத்தில் உதித்த ஒரு லேவியர் (2 நாள் 20:14). மோவாபியர் மேலும், அம்மோனியர் மேலும் யூதா வெற்றிபெறும் என்று அரசன் யோசபாத்துக்கு இவர் இறைவாக்குரைத்தார் (20:14-17.20-30).

5. இவர் பாபிலோனிலிருந்து எஸ்ராவோடு திரும்பி வந்தவர்களுள் ஒருவராகிய செக்கனியாவின் தந்தையாவார் (எஸ் 8:5).

யாகசு (JAHAZ - திறந்தவெளி, மிதிபட்ட இடம்)

யோர்தானின் அக்கரைப் பகுதியிலுள்ள இந்நகரத்தில்தான், எமோரிய அரசனான சீகோன் அவனது நாட்டின் வழியாக இஸ்ராயேலர் செல்ல வழி மறுத்தபோது தோற்கடிக்கப்பட்டான் (எண் 21:23; உப 2:32; நீதி 11:20). ரூபன் கோத்திரத்துக்கு இந்நகர் மோசேயால் கொடுக்கப்பட்டது (யோசு 13:18). இந்நகரமும் அதனுடன் கூடிய மேய்ச்சல் நிலங்களும் மெராரிய லேவியர்கட்குக் கொடுக்கப்பட்டன (யோசு 21:36; 1 நாள் 6:78). சீகோனுடைய வெற்றிக்குமுன் இதன் சொந்தக்காரர்களாகிய மோவாபியரே பின்னர் இதனைப் பிடித்துக் கொண்டனர் (எசா 15:4; எரே 48:21.34). மேசா இஸ்ராயேலின் அரசன் யாகசில் ஒரு கோட்டை கட்டி அங்குத் தங்கி மோவாபியருக்கு எதிராகப் போரிட்டதைக் குறிப்பிடுகிறான். கெமோக எனும் மோவாபிய அரசன் இஸ்ராயேலின் மன்னனை இங்கிருந்து துரத்தினான். மேசா யாகசைக் கைப்பற்றி தீபோனுடன் இணைத்தான். இஃது எரே 48:21-இல் யாகுசா என்றுள்ளது.

யாகசு அர்னோனுக்கு வடக்கே, தீபோனுக்கு அண்மையில் இருந்திருக்க வேண்டும். ஆனால், இஃது அமைந்த இடம் தெரியவில்லை. இது மேதபாவுக்குக் கிழக்கே 6.5 கி.மீ. தொலைவில் அமைந்த யாலூல் ஆக அடையாளம் காட்டப்படுகிறது. மேலும், மேதபாவுக்குத் தென்மேற்கில் 1.5 கி.மீ தொலைவில் உள்ள கிர்பெத் எத்-தெயிம் அல்லது 12 கி.மீ. தொலைவு தென்கிழக்கே அமைந்த உம்மா ஏல்-வலீது ஆகவும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

யாகத்து (JAHATH - இறைவன் பறித்து விடுவார்)

1. யூதாவின் வழித் தோன்றல்களில் ஒருவர். இராயாவின் மகனும், அகுமாய் மற்றும் இலகாது ஆகிய சோராவிய குடும்பங்களின் மூதாதையரும் ஆவார் (1 நாள் 4:2).

2. லிப்னியின் மகனும் கேர்சோமின் வழித்தோன்றலுமான ஒரு லேவியர்; குலப் பெயர் மூதாதையர் (1 நாள் 6:20.43).

3. கேர்சோமின் வழித்தோன்றல் சிமயியின் புதல்வர்களுள் தலைவர் (1 நாள் 23:10-11).

4. செலமோத்தின் மகனும், இட்சகாரின் வழித்தோன்றலுமான ஒரு லேவியர் (1 நாள் 24:22).

5. யோசியா அரசன் ஆண்ட காலத்தில் ஆலயத்தைப் பழுது பார்த்தவர்களை மேற்பார்வையிட்ட மெராரிய லேவியர் (2 நாள் 34:12).

யாகர் (JAAR - காடு)

இஃது உடன்படிக்கைப் பேழை கண்டு பிடிக்கப்பட்ட இடமாகக் கருதப்படுகிறது (சங் 132:6). எப்ராத்து இணையாகக் காணப் படுகிறது. இருபது ஆண்டுகள் உடன்படிக் கைப் பேழை தங்கியிருந்த இடமாகிய கிரியத்-எயாரிமின் மற்றொரு வடிவமாக இருக்கலாம் இப்பெயர் (1 சாமு 7:1-2; 2 நாள் 1:4).

யாகிசியா (JAHZEIAH - யாவே பார்ப்பாராக)

புறவினப் பெண்களைக் கொண்டிருந்த வர்கட்கு எதிராக எஸ்ரா செயல்பட்டபோது அதனை எதிர்த்த நால்வரில் ஒருவர் இவர்; திக்வாவின் மகன் (எஸ் 10:15).

யாகிசேரா (JAHZERAH - விவேகமுள்ள)

பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவர்க ளுள் ஒரு குருவின் மூதாதையர் இவர் (1 நாள் 9:12). இவரும் நெகே 11:13-இல் வரும் அகிசாயும் ஒரே ஆளாக இருக்கலாம்.

யாகுசா (JAHZAH)

மோவாபியச் சமவெளியிலுள்ள ஓர் ஊரான யாகசு என்பதின் மற்றொரு வடி வம் (எரே 48:21).

யாகுட்சியேல் (JAHZIEL)

இது யாகுட்சேல் என்ற பெயரின் மற் றொரு வடிவம் (1 நாள் 7:13). நப்தலியின் மகன்.

யாகுட்சேல் (JAHZEEL - இறைவன் அருள் கிறார் அல்லது பங்கீடு செய்கிறார்)

நப்தலியின் மகன். இவர் ஓர் இனப் பெயர் முதல்வர் (ஆதி 46:24; எண் 26:48). இவர் 1 நாள் 7:13-இல் யாகுட்சியேல் என்றழைக்கப்படுகிறார்.

யாகுதாய், எகிதாய் (JADAI - யாவே நடத்துவாராக)

இவர் ஒரு காலேபியர். ஒருவேளை காலேபின் மனைவியாகவோ, வைப்பாட்டி யாகவோ இருக்கலாம். இவள் வழியாக ஆறுபேர் பிறந்தனர் (1 நாள் 2:47).

யாகுதியேல், எகுதியேல் (JAHDIEL - இறைவன் மகிழ்வாராக)

பாதி இனமான மனாசே இனத்தின் ஒரு குடும்பத் தலைவர் (1 நாள் 5:24).

யாகுதோ [JAHDO - (இறைவன்) மகிழ்வா ராக]

இவர் காத்து கோத்திரத்தைச் சேர்ந்த பூசுவின் மகன் (1 நாள் 5:14).

யாகுமாய் (JAHMAI - யாவே காப்பாற்றுவா ராக)

இவர் தோலாவின் மகனும், இசக்காரின் வழிவந்தவரும் ஆவார் (1 நாள் 7:2).

யாகுலவேல் (JAHLEEL - இறைவனுக்காகக் காத்திரு)

இவர் செபுலோனின் மூன்றாவது மகன் (ஆதி 46:14); யாகுலவேலியரின் குலப் பெயர் மூதாதையர் (எண் 26:26).

யாகூர் [JAGUR - (இறைவன் அவர்களோடு) தங்குவாராக]

ஏதோமின் எல்லைக்கருகே, யூதாவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்த ஒரு நகரம் (யோசு 15:21). இது கூர்பாகாலாக வும் இருக்கலாம். மேலும், பெயேர் செபா வுக்குக் கிழக்கே 16 கி.மீ தொலைவில் அமைந்த தெல் கூர் என்ற இடமாக இருக்கவும் வாய்ப்புண்டு.

யாக்கன் (JACAN - வருத்தம் தருகிறது)

காது இனத்தைச் சேர்ந்தவர். பாசானில் வாழ்ந்தவர் (1 நாள் 5:13).

யாக்கான் (JAAKAN)

இவர் ஓர் ஓரியர்; குலத்தலைவன் எட்சே ரின் மூன்றாம் மகன் சேயிரின் வழித்தோன் றல் (1 நாள் 1:42). இவர் ஆதி 36:27-இல் ஆக்கான் என்றழைக்கப்படுகிறார். இது பென-யாக்கான் என்ற பெயரிலும் (எண் 33:31-32), பாலைவனப் பயணத்தில் இஸ்ரா யேலர் தங்கிச் சென்ற இடமாகிய பெய ரோத் பென-யாக்கான் என்ற பெயரிலும் (உப 10:6) காணப்படுகிறது.

யாக்கிம் (JAKIM - (இறைவன்) நிறுவுவாராக]

1. பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்த சிமயியின் மகன் (1 நாள் 8:19).

2. ஆரோனின் வழித்தோன்றலான இவர் ஒரு குரு (1 நாள் 24:12). தாவீது காலத்தில் குருக்களின் பன்னிரண்டாவது பிரிவுக்குத் தலைவர்.

யாக்கின் (JACHIN - அவர் நிறுவுகிறார்)

1. இவர் யாக்கோபின் பேரனும், சிமியோனின் ஆறு புதல்வர்களுள் நான்காமவரும் ஆவார் (ஆதி 46:10; யாத் 6:15). இணைப்பட்டியலான 1 நாள் 4:24-இல் சிமியோனின் புதல்வனாகச் சொல்லப்பட்டிருக்கின்ற யாரிபாக இருக்கலாம். யாக்கினியர் வம்சத் தலைவனாகவும் கருதப்படுகிறார் (எண் 26:12).

2. தாவீது, குருக்களைச் சீட்டுப் போட்டுப் பிரிக்கின்ற பொழுது, ஆலய ஊழியர்களில் இருபத்தொன்றாவது பிரிவுக்கு யாக்கின் தலைவரானார் (1 நாள் 24:17). எருசலேமில் தங்கியிருந்த ஒரு குருகுலத்தின் குலப்பெயர் மூதாதையரும் ஆவர் (1 நாள் 9:10; நெகே 11:10).

யாக்கின் மற்றும் போவாசு (JACHIN AND BOAZ - அவர் நிறுவுகிறார்; அதில் வலிமையுள்ளது)

சாலமோனின் ஆலயத்தின் நுழைவாயிலில் இரண்டு பக்கங்களிலும் வைக்கப்பட்டிருந்த இரண்டு வெண்கலத் தூண்கள் யாக்கின் மற்றும் போவாசு என்று அழைக்கப்பட்டன (1 அர 7:15-22.41-42; 2 அர 25: 16-17; 2 நாள் 3:13. 15-17; எரே 52:17. 20-23). இவை தீரின் மன்னன் ஈராமால் செய்யப்பட்டவை. இந்தத் தூண்களைப் பற்றிய விளக்கங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை. ஒவ்வொரு வாசகமும் இத்தூண்களின் நீளம், அகலம், உயரம், சுற்றளவு ஆகியவற்றைப் பொருத்தவரை வேறுபட்ட அளவுகளைத் தருகின்றன.

இத்தூண்களின் உட்புறம் குழாய் போன்று இருந்தது. அதன் தடிப்பு நான்கு விரல்களின் (7.5 செ.மீ) அளவாகும் (எரே 52:21). தூண்களின் உச்சியில் ஐந்து முழ உயரமான வெண்கலக் கும்பம் ஒன்று இருந்தது. அதைச் சுற்றிப் பலவிதமான சித்திரங்கள் செதுக்கப்பட்டிருந்தன. இத்தூண்கள் மிகவும் அழகாகவும், அடையாளத்தன்மை மிக்கதாகவும், வழிபாட்டிற்குரியதாகவும் விளங்கின. இத்தூண்கள் கோர்சபாது, தீர், பாப்போ போன்ற இடங்களில் இருந்த ஆலயங்களின் முன் இருந்த தூண்களோடு ஒப்பிடப்படுகின்றன.

ஆட்சோரில் தொல்பொருள் ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட கானானிய ஆலயத்தின் முன் வட்டவடிவமான தூண்கள் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இத்தூண்களின் அளவையும் அமைப்பையும் வைத்துப் பார்க்கும் பொழுது இவைகள் நறுமணப் புகை எழுப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட தூண்களாக இருக்கலாம் என்பது ஆல்பிரைட்டின் கருத்தாகும். ஆனால், இத்தூண்கள் வழிபாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டதைப் பற்றி விவிலியத்தில் குறிப்புகள் இல்லை. எனவே, இவைகள் வெறும் அலங்காரப் பொருளாக இருந்திருக்கலாம். இத்தூண்கள் விண்ணகத்தின் தூண்களைப் பிரதிபலிக்கின்றன என்று (யோபு 26:11) கருதப்பட்டிருக்கலாம். சாலமோனின் ஆலயத்தில் காணப்பட்ட தூண்களின் பெயர்கள், அரசகுலத்தைப் பற்றிய கல்வெட்டுகளில் காணப்பட்ட சொற்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். ஆதி ஆகமம் 31:45.49-இல் பெயரிடப்பட்ட ஒரு தூண் ஆபிரகாம் செய்த உடன்படிக்கைக்கு அழியாத சான்றாக நிறுத்தப்படுகின்றது. இரண்டாம் அரசர் ஆகமத்தில் 11:14; 23:3 என்ற பகுதிகளில் அரசன் படியில் நின்று கொண்டு என்று கூறப்பட்டிருப்பது ஓர் உள்ளார்ந்த பொருளை உணர்த்துகின்றது.

யாக்கே (JAKEH - விவேகமுள்ள, தேர்ந்து தெளிதல்)

ஞானியான ஆகூரின் தந்தை அல்லது மூதாதையராக இருக்கலாம். இவர் அறிவு முதிர்ந்த அறிவர். பழமொழி ஆகமத்தில்

வரும் இந்த வரி பின்னால் வரும் பகுதிக்கு ஒரு தலைப்பு போல் அமைகிறது. மேலும், இது பல வகையில் விளக்கப்படுகிறது.

யாக்கோபா (JAAKOBAH - இறைவன் பாதுகாப்பாராக)

இவர் சிமியோன் குலத்தில் ஓர் இளவரசன் (1 நாள் 4:36).

யாக்கோபு (JACOB OT - ஏய்த்தல், பிறர் உரிமை பறித்தல்) - பழைய ஏற்பாடு

1. யாக்கோபு-இஸ்ராயேல்-காண்க.

2. மத்தேயு அளிக்கும் இயேசுவின் மூதாதையர் பட்டியலின்படி, யாக்கோபு, மரியாளின் கணவர் யோசேப்பின் தந்தை ஆவார் (மத் 1:15-16).

யாக்கோபு (JAMES) - புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டில் இது பலருடைய பெயராகும்.

1. யாக்கோபு ஓர் அப்போஸ்தலர்; செபதேயுவின் மகன்; யோவானின் மூத்த சகோதரர். தங்கள் தந்தையுடன் மீன்பிடிக்கும் படகில் இருந்தபோது இருவரும் இயேசுவால் அழைக்கப்பட்டனர் (மத் 4:21; மாற் 1:19; காண்க. லூக் 5:10). அப்போஸ்தலர்களுக்குள்ளே பேதுரு, யோவான் ஆகியோருடன் இவரும் இயேசுவுக்கு மிகவும் நெருங்கியவர் (மத் 17:1; 26:37; லூக் 8:51). ஆனால் இவரைப் பற்றி விவிலியம் அதிகம் கூறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இவரது தந்தை செபதேயு ஒரு மீன் பிடிப்பவர். யாக்கோபும் யோவானும் தொழிலில் அவருக்கு உதவி செய்தனர். பேதுருவும் அந்திரேயாவும் அவர்களின் தொழில் கூட்டாளிகள் (மத் 4:21; லூக் 5:10). இவரது தாய், இயேசுவின் தாய் மரியாளின் சகோதரியான சலோமியாக இருக்கலாம். இது யாக்கோபை இயேசுவின் சகோதரன் ஆக்குகிறது (மத் 27:56; காண்க. மாற் 15:40; 16:1; யோவா 19:25). யாக்கோபும் யோவானும் குறிக்கப்படும் போதெல்லாம், யாக்கோபு முதலில் குறிக்கப்படுகிறார் (ஆனால், காண்க. லூக் 9:28; அ.ப. 1:13). இஃது இவர்தான் மூத்தவர் என்று சுட்டுகிறது. இதனால்தான் பெரிய யாக்கோபு என்று பொதுவாகக் குறிக்கப் படுகிறார். பேதுரு மற்றும் அந்திரேயாவின் வீட்டிற்கு இவர் இயேசுவோடு சென்றார் (மாற் 1:29). யாக்கோபும் யோவானும் இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுத்த சமாரியர்கள் மேல் வானத்திலிருந்து தீயைக் கொண்டுவந்து அழிக்கட்டுமா? என்று கேட்கிறார்கள் (லூக் 9:54). மாற்கு இந்த நிகழ்ச்சியைக் குறிக்கவில்லை என்றாலும் இவர்களின் இந்த மனநிலையின் காரணமாகத்தான், இயேசு இவர்களுக்கு ''இடியைப் போன்றோர்'' என்று பொருள்படும் ''பொவனேர் கேசு'' என்ற பட்டப் பெயரை அளித்திருக்கலாம் (மாற் 3:17). யாக்கோபு மற்றும் யோவானின் தாய் அவரது அரசில் அவரது அருகில் அவர்கள் அமரவேண்டும் என்று இயேசுவிடம் கேட்ட போது, தான் குடிக்கப் போகும் கிண்ணத்தில் குடிப்பீர்களா என்று இயேசு கேட்டார். அதற்கு ''முடியும்'' என்றனர் (மத் 20:20-28; மாற் 10:35-45).

இயேசுவின் வாழ்க்கையில் நடந்த சில சிறப்பு நிகழ்ச்சிகளில் பேதுரு, யோவானுடன் யாக்கோபும் பங்குகொண்டார். யாயிரின் மகளை உயிர்ப்பித்தல் (மாற் 5:37; லூக் 8:51); இயேசுவின் உருமாற்றம் (மத் 17:1; மாற் 9:2); கெத்சமனியில் வேதனையுறல் (மத் 26:37; மாற் 14:33). பன்னிருவர் பட்டியலில் யாக்கோபு வருகிறார் (மத் 10:2; மாற் 3:17; லூக் 6:14; அ.ப. 1:13). இயேசு உயிர்த்து விண்ணேற்றமானபின் மற்ற அப்போஸ்தலர்களுடன் யாக்கோபுவும் எருசலேம் சென்றார் (அ.ப. 1:13). ஆனால் விரைவில் ஏரோது அகிரிப்பாவால் சிரச்சேதம் செய்யப்பட்டார் (12:2).

விவிலியத்துக்குப் புறம்பே, யாக்கோபைப் பற்றிச் சில கதைகளே காணப்படுகின்றன. அவற்றை யுசேபியு, அலக்சாந்திரியா கிளமந்து எடுத்துக்காட்டுகின்றனர். அதில் யாக்கோபு ஏரோதை மன்னித்துவிட்டதாய்க் கூறப்பட்டுள்ளது. அப்தியாவின் அப்போஸ்தலர் வரலாறு என்ற போலிநூலில்

யாக்கோபு செய்த அருஞ்செயல் சிலவற்றின் விவரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. பிற்காலப் பாரம்பரியம், யாக்கோபு ஸ்பெயினுக்குச் சென்று போதித்து, மரித்து அடக்கம் செய்யப்பட்டார் என்று கூறுகிறது.

பாரம்பரியம், செபதேயுவின் மகனான யாக்கோபைப் ''பெரிய யாக்கோபு'' என்றும், அல்பேயுவின் மகனான யாக்கோபைச் ''சின்ன யாக்கோபு'' என்றும் அழைக்கிறது.

2. இந்த யாக்கோபு, அல்பேயுவின் மகன்; இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர் (மத் 10:3; மாற் 3:18; லூக் 6:15; அ.ப. 1:13). இவர் சின்ன அல்லது இளைய யாக்கோபு என்றழைக்கப்படுகிறார்.

இவர் பன்னிருவர் பட்டியலில்தான் குறிக்கப்படுகிறார். நான்கு பேர் அடங்கிய மூன்றாவது குழுவில் முதல்வராக இவரது பெயர் வருகிறது. இதற்கு மேல் இவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவர், அல்பேயுவின் மகன் என அழைக்கப்படும் லேவியோடு (மாற் 2:14) தொடர்புபடுத்தப்படுகிறார். நற்செய்தியில் இருவரும் இணைத்துக் கூறப்படாமையால் இந்த யூகம் சரியாக இருக்க முடியாது. இவர் மரியாளின் மகனான யாக்கோபாக இருக்கலாம். காண்க. 4-இல்.

3. இயேசுவின் சகோதரன் அல்லது ஒன்றுவிட்ட சகோதரரான யாக்கோபு (மத் 13:55 இணை; மாற் 6:3; கலா 1:19). காண்க. ஆண்டவரின் சகோதரர்கள். இவர் நாசரேத்தைச் சேர்ந்த யோசேப்பு அல்லது யோசே, சீமோன், யூதா ஆகியோரின் சகோதரராகக் கருதப்படுகிறார்.

புதிய ஏற்பாடும், தொடக்ககாலக் கிறிஸ்தவ ஆசிரியர்களும் இந்த யாக்கோபை இயேசுவின் சகோதரர் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் பழங்காலத் திருச்சபைப் பாரம்பரியத்தின் பெரும்பகுதி இதை நிராகரிக்கிறது. இதற்குக் காரணம், மரியாளின் நிலையான கன்னிமையில் கொண்ட விசுவாசம் ஆகும். இவற்றை ஒத்துப்போகச் செய்ய, பல கருத்துகள் கூறப்படுகின்றன. முதலாவது கருத்து யாக்கோபு இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரன் என்பது. இரண்டாவது கருத்து, யோசேப்பு மரியாளை மணக்குமுன், ஏற்கெனவே பிள்ளைகள் பலரைப் பெற்றிருந்தார்; இவர்கள் இயேசுவின் சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டனர் என்பதாகும்.

மற்ற அப்போஸ்தலர்கள் மறைபரப்புப் பயணத்தில் சென்றபோது, இந்த யாக்கோபு எருசலேம் திருச்சபைக்குத் தலைமை தாங்கினார். செபதேயுவின் மகன் யாக்கோபு ஏற்கெனவே கொல்லப்பட்டுவிட்டார். இந்த யாக்கோபு குறிக்கப்படும் வாசகச் சூழ்நிலையில், இவர் அல்பேயுவின் மகன் என்று ஒருபோதும் கூறப்படவில்லை. பன்னிருவருள் ஒருவராக இல்லாவிட்டாலும், இயேசுவின் சகோதரன் இத்தகைய தலைமைக்கு அவசியமான உயர்வு கொண்டிருந்திருக்கலாம்.

எருசலேம் சங்க விவரிப்பில் யாக்கோபு ஆதிக்கம் செலுத்துகிறார். புற இனக் கிறிஸ்தவர்கள் மற்றும் யூதத்துவத்தை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற பிரச்சனையில், யாக்கோபின் கருத்து முடிவாக அமைகிறது. புற இனக் கிறிஸ்தவர்களின் சுதந்தரத்திற்குக் காப்புரை வழங்குகிறார்; நான்கு யூத வழக்குகளை மட்டும் கடைப்பிடித்தால் மட்டும் போதும் என்றார். இது சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது (அ.ப. 15:13-33). தனது மூன்றாவது மறைபரப்புப் பயணத்துக்குப்பின் பவுல் எருசலேமுக்குச் சென்று யாக்கோபையும், மூப்பர்களையும் சந்தித்துத் தனது வெற்றிகளை எடுத்துக் கூறினார் (21:18). தான் தமஸ்கு செல்லும் வழியில் மனந்திரும்பிய பின்னும் முன்பு இவ்விதமே பவுல் செய்தார் (கலா 1:19; காண்க. 2:9.12). ஆலயப்பலியில் சேர்ந்து கொள்ளும்படி பவுலுக்கு ஆலோசனை கூறியவர்கள் இந்த யாக்கோபுவும் திருச்சபை மூப்பர்களும் தான் (21:17-26). ''யாக்கோபின் ஆட்கள் சிலர்'' பவுல் மனந்திருப்பியவர்கள் யூதத்துவத்திலிருந்து விடுதலை அடைவதை எதிர்த்தனர்; பவுலுக்கு எதிராக

பேதுருவுக்கு ஆதரவு அளித்தனர் (கலா 2:12). யாக்கோபின் அங்கீகாரத்தையும் உரையையும் (அ.ப. 15:13 தொ) பவுல் கோருவது, இந்த ஆட்கள் யாக்கோபின் எண்ணத்தைப் பிரதிபலிக்கவில்லை என்று காட்டுகிறது. உயிர்த்த இயேசு யாக்கோபுக்குத் தனியாகக் காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது (1 கொரி 15:7). பேதுரு தான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது, அதை யாக்கோபுக்கும் சகோதரர்களுக்கும் அறிவிக்கச் செய்கிறார் (அ.ப. 12:17).

இயேசுவின் சகோதரரான யாக்கோபு முதலில் இயேசுவின் மெசியா உரிமையை நம்பவில்லை எனத் தெரிகிறது (காண்க. யோவா 7:5). ஆனால், சிலுவை மரணத்திற்குப்பின் அப்போஸ்தலர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் (அ.ப. 1:14). ஆகவே யாக்கோபுக்கு, உயிர்த்த இயேசு காட்சியளித்ததாகக் கூறப்படுவது (1 கொரி 15:7) இயேசுவின் சகோதரரான இந்த யாக்கோபுவுக்குத் தான் என்று கருதலாம்.

யாக்கோபு எழுதிய பொதுத்திருமுகத்திற்கு இந்த யாக்கோபுதான் ஆசிரியராக இருக்கலாம். திருச்சபைப் பாரம்பரியப்படி, யாக்கோபு எருசலேமின் முதல் ஆயராவார். யூதக்கிறிஸ்தவர்கள் அவரைப் பேதுரு மற்றும் பவுலுக்கும் உயர்ந்தவராகக் கருதியதாகத் தெரிகிறது. பல மூலங்களிலிருந்து இவர் கி.பி. 62-இல் மறைசாட்சியாக மரித்தார் எனத் தெரிகிறது.

மத் 27:56; மாற் 15:40 என்ற வாசகங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை. யாக்கோபு, யோசேப்பு என்பவர்களின் தாயாகிய மரியா, ஆண்டவர் சகோதரர்களின் தாயான மரியாவாக இருக்கலாம். மாற் 15:40-இல் யாக்கோபுக்குச் ''சின்ன'' என்ற அடைமொழி கொடுக்கப்படுகிறது. ''சின்ன யாக்கோபு'' என்ற பட்டம் பொதுவாக 2-இல் குறிக்கப்படுபவருக்குக் கொடுக்கப்படுகிறது. மாற் 16:1-இல் ''யாக்கோபின் மரியா'' என்று வருகிறது. இது மரியாவின் மகனைக் குறிப்பதை விட, வழக்கமாக அவளது கணவனைக் குறிக்கிறது.

திருச்சபைத் தந்தையர் காலத்திலேயே 2-இலும் 3-இலும் குறிக்கப்படுபவர்கள் ஒரே ஆளா, வெவ்வேறானவர்களா என்ற பிரச்சனை எழுந்தது. பாரம்பரியமாக இருவரும் ஒரே ஆளையே குறிக்கின்றனர் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால், இக்கால ஆய்வாளர்களில் பெரும்பாலோர், இருவரும் வேறுபட்டவர்கள் என்று கருதுகின்றனர். ''இயேசுவின் சகோதரர்'' பன்னிருவருள் ஒருவர் என்றோ அப்போஸ்தலர் என்றோ எங்கும் தெளிவாகக் கூறப்படவில்லை. யாக்கோபு எழுதிய திருமுகத்தின் முன்னுரையில் ஆசிரியர் அப்போஸ்தலர் என்று உரிமை கோரவில்லை (யாக் 1:1). 1 கொரி 15:7-இல் அப்போஸ்தலர்களுக்கும் யாக்கோபுவுக்கும் இடையில் வேறுபாடு சுட்டிக்காட்டப்படுகிறது.

4. இந்த யாக்கோபு மரியாவின் மகனாவார் (மத் 27:56; மாற் 15:40; 16:1; லூக் 24:10).

5. இந்த யாக்கோபு, பன்னிருவருள் ஒருவரான யூதாவின் தந்தையாவார் (லூக் 6:16; அ.ப. 1:13). இவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

யாக்கோபு - இஸ்ராயேல் (JACOB -ISRAEL)

1. யாக்கோபு என்பவர் ஈசாக்கு - ரபேக்கா ஆகியோரின் இளைய மகனும், ஏசாவின் இரட்டைச் சகோதரரும் லேயா, ராகேல் ஆகியோரின் கணவரும் ஆவார் (ஆதி 25:21-26; 29:21-30). இவர் இஸ்ராயேல் என்றும் அழைக்கப்படுகிறார் (32:28; 49:2). இவரது பன்னிரண்டு புதல்வர்களும் இஸ்ராயேலின் இனப்பெயர் மூதாதையர் ஆவர்.

2. பெயர்:- இச்சொல்லுக்குப் பொருள் கூறுவது கடினம். இது குதிங்காலோடு தொடர்புடையதாகத் தெரிகிறது (ஆதி 25:26). இச் சொல் ''கால்வாரி விடுதல், பிறர் உரிமை பறித்தல்'' என்பன போன்ற பொருள் அளிக்கும். இவை மூதாதையர் யாக்கோபின் வாழ்வில் வரும் நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டதாகத் தெரிகிறது. தன் பிறப்பில் இவர் தன்

சகோதரன் ஏசாவின் குதிங்காலைக் கையால் பற்றிக் கொண்டு வெளிவந்தார் (ஆதி 25:26; காண்க. ஓசே 12:4). இவர் ஏசாவின் தலைமகனுரிமையைப் பறித்துக் கொண்டார் (ஆதி 27:36; காண்க. எரே 9:3). விவிலிய ஆசிரியர் இச்சொல்லுக்குத் தெளிவான பொருள் கொடுக்கவில்லை. ஒருவேளை, யாக்கோபு என்ற பெயருக்கு ''இறைவன் காப்பாற்றுவாராக'' அல்லது ''இறைவன் காப்பாற்றுகிறார்'' என்ற பொருள் இருந்திருக்கலாம். எகிப்திய பார்வோன் மூன்றாம் துட்மோசு பாலஸ்தீனத்தில் கைப்பற்றிய இடங்களில் சில இப்பொருளுடைய பெயரைக் கொண்டிருந்தன. கைக்சோஸ் காலத்தைச் சேர்ந்த பொருள்களில் இப்பெயர்கள் காணப்படுகின்றன. கி.மு. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மெசபொத்தாமியக் களிமண் ஏடுகளில் இத்தகைய பெயர்கள் காணப்படுகின்றன. யாக்கோபு இஸ்ராயேல் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார். இச்சொல்லுக்கும் தெளிவான பொருள் அளிக்க முடியாது. இதில் விவிலிய ஆசிரியருக்கு அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை. ''கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கண்டவன்'' (ஆதி 32:29) என்ற பொருள் அளிக்கலாம். யாக்கோபை இறைவன் தேர்ந்தெடுத்தலையும் அவரது வழிவந்தோரான இஸ்ராயேலர்களை உயர்த்தியும், ஏசாவையும் அவரது வழிவந்தோரான ஏதோமியரையும் தாழ்த்தி, அவர்களின் பிறப்புரிமை பறிபெற்ற நிகழ்ச்சியைச் சிறப்பித்துக் கூறவுமே ஆசிரியர் விழைகிறார் எனலாம்.

3. **வாழ்க்கை வரலாறு:-** ஆதியாகமத்தில் யாக்கோபின் வரலாறு மைய நிலையைக் கொண்டுள்ளது (ஆதி 25-50). குழந்தைகளின் பிறப்புக்கு முன்பே ''மூத்தவன் இளையவனுக்குப் பணிந்திருப்பான்'' என்று ரபேக்காவுக்கு ஆண்டவர் கூறியிருந்தார் (25:23; காண். உரோ 9:12). ஏசாவின் குதிங்காலைப் பற்றிக்கொண்டு யாக்கோபு பிறந்தார் (25:26). அவர் வளர்ந்த போது யாக்கோபு பண்புடையவனாய்க் கூடாரத்தில் உறைபவனாய் வாழ்ந்து வந்தார். ஏசாவோ வேட்டையில் வல்லவனாய்த் திறந்த வெளியில் வாழ்ந்து வந்தார் (25:27); முரட்டுத் தன்மையுடையவராயும் உணர்ச்சி வசப்படக் கூடியவராகவும் இருந்தார். ஒரு முறை, ஏசா கடுமையான பசியால் வருந்திய போது, ''கொஞ்சம் அப்பம் மற்றும் சுவையான பயற்றங்காய்க் கூழுக்காகத்'' தலைமகனுரிமையை விற்றுவிட யாக்கோபால் கட்டாயப்படுத்தப்பட்டார் (25:29-34). மேலும், தனது தாயால் தூண்டப்பட்டு, யாக்கோபு மாறுவேடமிட்டு தலைமகனுக்குரிய ஆசீரையும் தன் தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்டார் (27:1-45). ஏசா, தான் உடனடியாக எதிர்பார்த்த தன் தந்தை ஈசாக்கின் இறப்புக்குப்பின், யாக்கோபைக் கொல்லத்திட்டமிட்டிருந்தார். ஆனால், ரபேக்கா தன் பிரியமான மகனான யாக்கோபைக் காரானிலுள்ள அவனது மாமன் லாபானிடம் ஓடி விடும்படி கட்டளையிட்டாள் (27:41-28:5).

பெயேர்-செபாவிலிருந்து காரானுக்குப் பயணம் செய்தபோது யாக்கோபு பெத்தேலில் ஓய்வெடுத்தார். இவ்விடம் பழங்காலப் புனித இடமாகு இருந்திருக்கலாம். அங்கு ஒரு கனவில், நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனி மேலே வானத்தைத் தொட்டுக்கொண்டிருப்பதையும், அதில் கடவுளின் தூதர்கள் ஏறுவதும் இறங்குவதுமாய் இருப்பதையும், ஆண்டவர் அதற்கு மேல் நின்று கொண்டிருப்பதையும் கண்டார் (28:10-17). யாக்கோபு பாவியானாலும், அவர் கானானுக்குப் புறம்பே வாழும்போது, தான் யாக்கோபுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும், கானானுக்கு யாக்கோபைத் திரும்பிவரச் செய்வதாகவும் அவரைக் கைவிட மாட்டார் என்றும் ஆண்டவர் வாக்களிக்கிறார். பேரம் பேசுவதில் வல்லவரான யாக்கோபு ''கடவுள் என்னோடு இருந்து நான் போகிற இந்த வழியில் எனக்குப் பாதுகாப்பளித்து உண்ண உணவும் உடுக்க உடையும் தந்து என் தந்தை வீட்டிற்கு நான் நலமுடன் திரும்பச் செய்வாராயின்'' ஆண்டவருக்குப் பணி செய்வதாக வாக்களிக்கிறார் (28:20-22).

லாபானோடு யாக்கோபு தங்கியிருந்த காலம், இருவரும் ஒருவர் மற்றவரைத் தந்திரத்தால் வெல்ல விழையும் போக்கைக் கொண்டிருந்தது. லாபானின் இரண்டாவது மகளான வடிவழகும் எழில் தோற்றமும் உள்ள ராகேலை மணக்க விரும்பி, அவளை அடைய, யாக்கோபு லாபானுக்கு ஏழு ஆண்டுகள் வேலை செய்தார். ஆனால் லாபான் தந்திரமாக, திருமண இரவில் ராகேலுக்குப் பதிலாக மூத்த மகள் லேயாவை யாக்கோபுக்கு மணம் செய்து வைத்தார் *(30:15-26)*. திருமணப்படுக்கையில் கூட மணமகள் முகமூடித்திரை அணிந்திருந்ததால் இத்தந்திரம் கூடுமானதாக இருந்தது. இன்னும் ஏழு ஆண்டுகள் தனக்குப் பணிசெய்தால் ராகேலையும் மனைவியாகத் தருவதாக லாபான் யாக்கோபுக்கு வாக்களித்தார் *(30:27-30)*. மெசபொத்தாமியாவில் யாக்கோபு பதினொன்று புதல்வர்களுக்கும், ஒரு புதல்விக்கும் தந்தையானார். லேயா வழியாக ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் மற்றும் மகள் தீனாவுக்கும், லேயாவின் பணிப்பெண் சில்பா வழியாக காத்து, ஆசேர் ஆகியோருக்கும், மலடியான ராகேவின் பணிப்பெண் பில்கா வழியாக தாண், நப்தலி ஆகியோருக்கும், இறுதியாக ராகேல் வழியாக யோசேப்புக்கும் யாக்கோபு தந்தையானார் *(29:31-30:24)*. யாக்கோபு தன் மனைவிகளுக்காக மட்டுமன்று, தன் மந்தைக்காகவும் ஊழியம் செய்ய வேண்டும் என்று லாபான் கோரினார். இருவரும் தந்திரங்களையும், குறுக்கு வழிகளையும் பயன்படுத்தினர். ஆனால் இதில் யாக்கோபு லாபானைப் பாதிக்கும் முறையில், செல்வத்தில் பெருகினார் *(30:25-43)*. தனது செல்வப் பெருக்கினால், லாபானும் அவரது புதல்வர்களும் தன்மேல் பொறாமை கொள்வதை உணர்ந்த யாக்கோபு, இரகசியமாக தன் குடும்ப முழுவதோடும் காரானிலிருந்து ஓடிவிட்டார் *(31:17-21)*. மேலும், ராகேல் குடும்பத் தேவதைகள் சிலைகளையும் எடுத்துச் சென்றுவிட்டாள் என்பதை அறிந்த லாபான் கோபங்கொண்டு, யாக்கோபைத் துரத்திச் சென்றார். ஆனால், யாக்கோபுக்கு எவ்விதத் தீமையும் செய்யக் கூடாது என்று லாபான் ஆண்டவரால் கனவில் எச்சரிக்கப்பட்டார் *(31:22-24)*. பின்பு லாபானும் யாக்கோபும் ஒருவர் மற்றவர்க்குத் தீங்கு செய்வதில்லை என்று கிலயாது மலைகளில் உடன்படிக்கை செய்துகொண்டனர். பின்பு, யாக்கோபு தன் நாட்டிற்குத் திரும்பினார் *(31:44-32:1)*.

யாக்கோபுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு அளிப்பதாக இறைவன் உறுதி அளித்திருந்தாலும் *(32:2-3)*, சேயீர் வழியாகத் திரும்பிய போது, யாக்கோபு தன் சகோதரன் ஏசாவைச் சந்திக்க அஞ்சினார். ஏசா நானூறு பேருடன் வருவதைக் கேள்வியுற்ற யாக்கோபின் அச்சம் இன்னும் அதிகமாயிற்று. ஆகவே, யாக்கோபு மிகவும் அஞ்சிக் கலங்கி தம்முடன் இருந்த ஆள்களையும், ஆடு மாடு ஒட்டகங்களாகிய மந்தைகளையும் இரு பகுதிகளாகப் பிரித்தார். ஏனெனில், ஏசா வந்து ஒரு பகுதியைத் தாக்கினாலும் எஞ்சிய பகுதியாவது தப்புமே என்று நினைத்துக் கொண்டார் *(32:4-9)*. மேலும், தன் சகோதரன் ஏசாவுக்கு நிறைய அன்பளிப்பு அனுப்பிவைத்தார் *(32:15-22)*. தனக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு இறைவனிடம் மன்றாடியது *(32:10-14)* அவரது வாழ்வின் உறுதியான உச்சக்கட்ட நிகழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. பெனியேல் (கடவுளின் முகம், *32:31*) என்ற இடத்தில், ஓர் ஆடவன் பொழுது விடியுமட்டும் யாக்கோபோடு மற்போரிட்டார். தொடைச் சந்து விலகியதால் முடமானவனானாலும், யாக்கோபு, தன்னை ஆசீர்வதிக்கும் வரை அந்த ஆடவனைப் போகவிடவில்லை. ஆசீரிலிருந்து, அந்த ஆடவன் இறைவனே என்பது தெளிவாயிற்று. அவர் யாக்கோபுக்கு இஸ்ராயேல் (''கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டவன்'', *32:29*; காண்க. ஓசே *12:4-5*) என்ற புதுப் பெயர் அளித்தார். ஏசா அமைதியோடும் சகோதரப் பாசத்தோடும் யாக்கோபைச் சந்தித்தார். ஆனால், வாக்களித்தபடி யாக்கோபு செயீருக்குத் தன் சகோதரனைப் பின்பற்றிச் செல்லாது, சுக்கோத்துக்குச் சென்று செக்கேமுக்கு அருகில் குடியேறினார் (ஆதி *33*). செக்கேமில் ஆமோரின் புதல்வர்கள் தீனாவைத் தாக்கி அவமானப்படுத்தினர் (ஆதி *34*). அவ

னுடைய சகோதரர்கள் சமாதான ஒப்பந்தத்திற்கு உடன்படுவது போல் பாசாங்கு செய்து, செக்கேமின் ஆண்கள் அனைவரையும் விருத்த சேதனம் செய்யச் செய்தனர். இவர்கள் வலியால் வருந்திக் குணமாகிக் கொண்டிருந்தபோது, தீனாவின் சகோதரர்கள் சிமியோனும் லேவியும் நகரைத் தாக்கி ஆண்கள் அனைவரையும் கொன்று தீர்த்தனர்; நகரைக் கொள்ளையிட்டனர். குழந்தைகள் பெண்டிர் அனைவரையும் கைதிகளாக்கினர் *(ஆதி 34)*.

முதலில் யாக்கோபோடு இருந்தவர்கள் தங்களிடமிருந்த வேற்றுத் தெய்வங்களின் சிலைகளையும் தாயத்துகளையும் யாக்கோபிடம் கொடுக்க, அவர் அவற்றைச் செக்கேம் அருகிலுள்ள ஒரு கருவாலி மரத்தின் அருகே புதைத்தார். பின்பு இறைவனது கட்டளைப்படி, யாக்கோபும் அவரது குடும்பமும் பெத்தேலுக்குச் சென்றனர் *(35:1-7)*. அங்கு இறைவன் யாக்கோபுக்கு மீண்டும் தோன்றி ஆசீர்வதித்து, இஸ்ராயேல் என்ற புதிய பெயரை உறுதிப்படுத்தினார். யாக்கோபிடமிருந்து, ''ஓரினமும், மக்களின் கூட்டமும் தோன்றும்'' என்று வாக்களித்தார். ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் வாக்களித்த நாட்டை, யாக்கோபுக்கும் அவரது வழிமரபினருக்கும் அளிப்பதாக வாக்களிக்கின்றார் *(35:9-12)*. இதற்குச் சிறிது காலத்திற்குப்பின், அவர்கள் எப்பிராத்துக்குச் (பெத்லகேமுக்குச்) செல்லும் போது, ராகேல் தனது கடைசி மகன் பென்யமினைப் பெற்றெடுத்தபின் மரித்தாள் *(35:19)*.

ஆதியாகமத்தின் பின்வரும் பகுதியில், யோசேப்பின் வரலாறு முதன்மை பெறுகின்றது; யாக்கோபு பின்னணிக்குச் செல்கிறார். ஏசாவின் பொறாமையைப் போன்ற பொறாமை கொண்ட யோசேப்பின் சகோதரர்கள் அவரை அடிமையாக விற்றனர் *(37:1-28)*. யோசேப்பு ஒரு விலங்கால் கொல்லப்பட்டதாக நம்பிய யாக்கோபு, தனது சாவு வரை யோசேப்புக்காகத் துக்கம் கொண்டாடப் போவதாக உறுதி எடுக்கிறார் *(37:29-35)*. இறுதியில் தன் மகன் யோசேப்பு உயிரோடு இருப்பதாகவும், எகிப்தை ஆட்சி செய்வதாகவும் யாக்கோபு செய்தி அறிகிறார் *(45:26)*. தான் இறப்பதற்கு முன் தன் மகன் யோசேப்பைப் பார்க்கும் உறுதியுடன், யாக்கோபு கானானைவிட்டு எகிப்துக்குச் செல்கிறார். செல்லும் வழியில் பெயேர் செபாவில் யாக்கோபு, 'எகிப்தில் ஒரு பெரிய இனமாக வளர்வார்' என்று இறைவன் வாக்குறுதி அளிக்கிறார் *(46:1-4)*. யாக்கோபு எகிப்துக்கு வந்து பார்வோனைச் சந்தித்த போது *(47:1-12)*, அவருக்கு 130 வயதாகும். பத்து ஆண்டுகளுக்குப் பின் இறந்தார். அதற்குமுன் அவர் யோசேப்பின் புதல்வர்களான எப்பிராயிம், மனாசேயை ஆசீர்வதித்தார் *(48:8-20)*. பன்னிரண்டு புதல்வர்களின் வருங்காலத்தை முன்னறிவித்தார் *(ஆதி 49)*. அவர் யூதாவை வாக்குறுதியின் வாரிசாக்கினார் *(49:10)*. அவருடைய விருப்பப்படி, ஆபிரகாம் அடக்கம் செய்யப்பட்ட மக்கபேலாக் குகையில், யாக்கோபு அடக்கம் செய்யப்பட்டார் *(49:29-32; 50:13)*. எகிப்தியர் அவருக்காக எழுபது நாள் துக்கம் கொண்டாடினர். அவரது அடக்கத்திற்குப் பிறகு அவரது புதல்வர்கள் எகிப்துக்குத் திரும்பினர் *(50:3.14)*.

4. காலமும் வரலாற்றுப் பின்னணியும்:- யாக்கோபின் வாழ்க்கை பற்றிய காலத்தைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியாது. மத்திய வெண்கலக் காலத்தின் (கி.மு. 2000-1700) மத்திய நூற்றாண்டுகளை இந்நிகழ்ச்சிகள் நடந்த காலமாக பொதுவாகக் குறிக்கலாம். ஆல்பிரைட் இந்நிகழ்ச்சிகளுக்கு கி.மு. 1750-ஐக் குறிக்கிறார். மற்றச் சான்றுகளும் இதைக் குறிப்பதாக உள்ளன. இக்காலத்தை ஒட்டிய நூசி ஏடுகளில் யாக்கோபு வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு இணையானவை காணப்படுகின்றன. இந்த ஏடுகள் மூதாதையர்கள் தங்கள் வாழ்வைத் தொடங்கிய வட மெசபொத்தாமியாவைச் சேர்ந்தவையாகும். இவ்வகை இணைத்தன்மையுடைய நிகழ்ச்சிகளுக்குச் சான்றுகள், தலைமகனுரிமையைக் குறைந்த விலைக்கு விற்றல், வாய் மொழி ஆசீர்களும் ஏற்பாடுகளும், யாக்கோபுக்கும் லாபானுக்குமிடையே உறவு ஆகியவையாகும். ஆண் வாரிசு அற்ற லாபான் யாக்கோபைத் தத்து எடுத்துக் கொள்கிறார் *(காண்க. ஆதி 31:43)*.

அதன் விளைவாக, யாக்கோபின் குடும்பத்தின் மேல் லாபான் மூதாதையர் உரிமை கோருகிறார். ராகேல் திருடிச் சென்ற குடும்பத் தேவர்களின் சிலைகள் நூசியில், குடும்பத்தின் தலைமையையும் வாரிசு உரிமையையும் அடையாளமாக உணர்த்துகின்றன.

உப *26:5*-இல் யாக்கோபின் இனப் பின்னணி அரமேயம் என்று கூறப்பட்டுள்ளது. அரமேயனான லாபானோடு யாக்கோபு கொள்ளும் உறவோடு இஃது ஒத்துப்போகிறது. பிற்கால இஸ்ராயேலர் அரமேயர் அல்லர். ஆனால், அரமேயர்களோடு கொண்ட உறவு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. யாக்கோபுக்கும் லாபானுக்கும் இடையிலான உடன்படிக்கைக் கதை, கிலயாதின் பழங்கால எல்லைப் பாரம்பரியத்துக்கு வரலாற்றுத் தன்மை அளிக்கிறது என்பதில் ஐயமில்லை. இஸ்ராயேல் மற்றும் ஏதோமின் உறவு யாக்கோபு மற்றும் ஏசா ஆகியோரின் கதைகளில் பிரதிபலிக்கிறது. இக்கதைகள் சிலவற்றில் தனிப்பட்ட கதாநாயகன், தான் மூதாதையராக உள்ள இனத்தின் பண்புகளை ஏற்றுக் கொள்கிறார். தலைமகனுரிமை, மற்றும் ஆசீர் பற்றிய கதைகள், ஏதோம் மூத்தவராக இருந்தாலும் அவர் மேல் இஸ்ராயேல் கொண்ட மேலாண்மையை எடுத்துக் கூறுகின்றன. இவை ஏதோமைத் தாவீது வென்ற காலத்தின் நிலையைப் பிரதிபலிக்கலாம். இரட்டையர் பிறப்புபற்றிய கதையும் இதே தன்மை கொண்டிருக்கலாம். யாக்கோபு என்ற பெயரின் விளக்கத்திலிருந்து பிறப்புபற்றிய கதை தோன்றியிருக்கலாம்.

5. யாக்கோபின் சமயம்:- ஆபிரகாம் பாரம்பரியத்தில் அவரது சமயம் கொண்டிருப்பதுபோல், யாக்கோபு பாரம்பரியத்தில் அவரது சமயம் அவ்வளவு முதன்மை பெற்றிருக்கவில்லை எனலாம். ஆபிரகாம் பாரம்பரியத்தில், ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை யாக்கோபு உரிமைச் சொத்தாகப் பெறுகிறார் (ஆதி *28:13-15; 48:3*தொ). ''யாக்கோபின் வலியவர்'' அல்லது ''இஸ்ராயேலின் வல்லவர்'' போன்ற இறைப்பட்டங்களின் (ஆதி *49:24*; எசா *1:24; 49:26; 60:16*; சங் *132:2.5*) பொருள் தெளிவாக இல்லை. வல்லவர் என்ற பொருளைக் குறிக்கும் மூலச் சொல், உகாரித்தில் காளையைக் குறிக்கும். ஆனால், இது பிற்கால இஸ்ராயேலுக்கு வெறுப்பைத் தருவதாகும். பெனியேலில் இறை ஆளோடு யாக்கோபு போராடியது பற்றிய கதையில் மூலக்கருத்தைக் கண்டு பிடிப்பது கடினமாகும். இஃது எல்லையில் நடக்கிறது. உட்புகுபவரான யாக்கோபு, கானான் நாட்டில் நுழைய இறை எதிர்ப்பை மேற்கொள்ள வேண்டும். பிறப்புரிமை மற்றும் ஈசாக்கின் ஆசீர் பற்றிய கதைகளைப் போல், இது நாட்டில் நுழைய யாக்கோபு குழுவினரின் உரிமையை நேர்மைப்படுத்துகிறது. பெத்தேல் (ஆதி *28*), செக்கேம் (*33:20*) ஆகிய இடங்களில் உள்ள புனித இடங்களோடு யாக்கோபு தொடர்புபடுத்தப்படுகிறார். பெத்தேலில் யாக்கோபு புனித நினைவுத் தூணை நாட்டுகிறார். இத்தகைய தூண்கள் கானானிய வழிபாட்டின் ஒரு பகுதியாகும். ஆனால், யாவேயின் பிற்காலப் புனிதத் தலங்களில் இவை முழுவதும் புறம்பாக்கப்பட்டன. யாக்கோபைப் பற்றிய இந்தக் கதையை ஒளிவு மறைவு இன்றிக் கூறும் எபிரேயப் பாரம்பரியம் போற்றப்பட வேண்டியதொன்றாகும். ஆபிரகாமின் சமயத்தோடு யாக்கோபின் சமயம் கலந்து ஒன்றுபடுதல் கானானில் இஸ்ராயேலர் குடியேறியதற்குமுன் நடக்கவில்லை.

6. விவிலியத்தின் பிறபகுதிகளில் யாக்கோபு:- தனிப்பட்ட ஆள் என்ற அளவில் யாக்கோபு அரிதாகவே குறிக்கப்படுகிறார். சலுகை பெற்ற குழந்தையாகவும் (மலா *1:2*; உரோ *9:10-13*), இறைவாக்குறுதியின் வாரிசாகவும் (எபி *11:9*), ஆசீரின் மனிதனாகவும் (எபி *11:20-21*) குறிக்கப்படுகிறார்.

இஸ்ராயேலைக் குறிக்கும் பொதுப்பெயராக யாக்கோபு என்ற பெயர் பயன்பட்டுள்ளது. இஸ்ராயேலுக்குச் சமமதிப்புள்ளதாகப் பயன்பட்டுள்ளது: உப *32:9; 33:28*; சங் *44:4; 59:13; 79:7; 87:2; 99:4; 147:19*; எசா *27:9; 48:20; 59:20*; எரே *10:25; 30:7. 18; 31:6.10; 46:27*தொ; ஒப *10*; மீக் *2:12; 5:6*தொ. இஸ்ராயேல் என்ற பெயருக்கு இணையாகப் பயன்பட்டுள்ளது: ஆதி *49:7*;

எண் 23:2.7.10.21.23; 24:5.17.19; உப 33:10; சங் 14:7; 53:6; 105:10; 135:4; எசா 9:7; 27:6; 40:27; 41:8.14; 42:24; 43:1.22.28; 44:1.5.21.23; 45:4; 48:12; 49:5.6; எரே.30:10; 46:2; மீக் 3:8; நாகூ 2:3. யாக்கோபின் வீடு என்ற தொடரில்: யாத் 19:3; எசா 2:5; 8:17; 10:20தொ; 14:1; 29:22; 46:3; 48:1; 58:1;எரே 2:4; 5:20; எசே 20:5; ஆமோ 3:13; 9:8 (வட அரசைக் குறிக்கிறது); சங் 114:1; ஒப 17தொ; மீக் 2:7; 3:1.9. யாக்கோபின் திருக்கூட்டம்: உப 33:4. யாக்கோபின் மரபினர்: சங் 22:23; எசா 45:19; எரே 33:26. யாக்கோபின் புதல்வர்கள்: 1 அர 18:31; 2 அர 17:34; சங் 77:15; 105:6; மலா 3:6. யாக்கோபு என்ற பெயர் வட அரசைக் குறிக்கிறது: ஓசே 10:11; ஆமோ 6:8; 7:2.5; மீக் 1:53. யாவே யாக்கோபின் இறைவனாவார்: சங் 20:1; 46:7.11; 75:9; 76:6; 81:1.4; 84:8; 94:6; 114:7; 146:5; எசா 2:3; மீக் 4:2. யாக்கோபின் பெருமை: ஆமோ 8:7. யாக்கோபின் தூயவர்: எசா 29:23. யாக்கோபின் அரசர்: எசா 41:21; 44:6. இது யாக்கோபு என்ற பெயர் இஸ்ராயேல் என்ற பெயருக்குச் சமமாகப் பயன்பட்டுள்ளது என்று காட்டுகிறது. ஆனால், ஈசாக்கு, 'ஆபிரகாமோடு இணையாகப் பயன்படுத்தப்படவில்லை. ஓசே 12:2-4.12 யாக்கோபை இஸ்ராயேல் மக்களோடு அடையாளம் காண்கிறது. இப்பகுதி ஏசாவை யாக்கோபு ஏமாற்றுதல், அவர் விண்ணக ஆடவனோடு போராடுதல், அவர் ஆராமுக்கு ஓடிப்போதல் ஆகியவற்றில் இறைவனது வெறுப்பின் அடையாளத்தைக் காண்கிறது. ஆனால், யாக்கோபைப் போல் இஸ்ராயேலும் இரக்கத்தையும் மன்னிப்பையும் பெறலாம். யாக்கோபுக்குப் பாதகமான இந்தத் தீர்வு ஆதியாகமப் பாரம்பரியத்தில் உள்ளடங்கியுள்ளது.

புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள், யாக்கோபை ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் தொடர்புபடுத்துகின்றன. அவரது வாழ்வு பற்றிய குறிப்புகள் குறிப்பாக ஸ்தேவானின் உரையில் (அ.ப. 7:8தொ) சுட்டிக்காட்டப்படுகின்றன. பெத்தேலில் யாக்கோபு காட்சியில் கண்ட ஏணிக்கு, விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையாளராக, இயேசு தன்னை ஒப்பிடுகிறார் (யோவா 1:51). மலா 1:2-இல் வரும் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு, பிறப்புரிமையை ஏசாவிடமிருந்து யாக்கோபுக்கு மாற்றுவதை, பவுல் இறைவனது சுதந்தரமான தேர்வுக்கு ஒரு எடுத்துக்காட்டாகக் காட்டுகிறார்.

*7. **இறையியல் பொருள்:-** யாக்கோபின் வாழ்க்கை வரலாறு போராட்டங்கள் நிறைந்ததாகும். அவரது பிறப்புக்கு முன்னேயே தோன்றும் போராட்டம் பற்றிய குறிப்பு (ஆதி 25:22-23) வாழ்க்கை வரலாறு முழுவதும் எதிரொலிக்கிறது. ஏசாவை இருமுறை ஏமாற்றியதன் விளைவாக அவர் காரானுக்கு ஓடவேண்டியிருந்தது. அங்கு லாபானுடன் தொடர்ந்து போராட வேண்டியிருந்தது. இப்போராட்டம் அவர் பாலஸ்தீனத்திற்குப் புறப்பட்ட பின்புதான் முடிவுக்கு வந்தது. ஏசாவைச் சந்திக்க வரும்போது, பகைமையால் அச்சுறுத்தப்படுதலும் பயமும் யாக்கோபை ஆட்கொண்டன. யோசேப்பு பற்றிய பகுதியில் கூட, தன் புதல்வர்களுடன் கொண்ட உறவில் கூட, கவலை மற்றும் மனத்துக்கத்திற்கு யாக்கோபு உள்ளானார். கருங்கக் கூறின் இயற்கையிலிருந்தும் (பஞ்சம்), மனிதர்களிடமிருந்தும் (ஏசா, லாபான்), இறைவனிடத்திலிருந்தும் (போராடிய ஆடவன்), எல்லாப் பக்கத்திலிருந்தும் யாக்கோபை ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தன. ஒவ்வொரு சமயத்திலும் ஆசீருக்கு அவர் கொண்டிருந்த உரிமை அச்சுறுத்தப்பட்டது.*

இவ்வரலாறு, யாக்கோபின் ஆட்தன்மையால் மேலும் சிக்கலாக்கப்படுகிறது. அவர் கெட்டிக்காரர்; பொய் சொல்லக் கூசாதவர்; பிறர் உரிமை பறிப்பவர். இவையெல்லாம் நிகழ்ச்சியுரைகளில் முனைப்பாகக் காட்டப்படுகின்றன. இவை இந்த வரலாற்றைச் சரியான முறையில் மதிப்பீடு செய்வதைக் கடினமாக்குகின்றன. இந்த ஏமாற்றுப் பேர்வழி கைவிடப்படத் தகுதியுள்ளவன் என்றும் அவர் எதிர்கொண்ட ஆபத்துக்களின் முழுப்பாதிப்பையும் தனியே அனுபவிக்க

வேண்டியவர் என்றும் வாசகர்கள் உணர்கின்றனர். எந்த மற்ற மூதாதையர் வரலாறும் மனிதனது ஆட்தன்மையின் ஆதிக்கத்தால் இந்த அளவுக்குப் பாதிக்கப்படவில்லை. இந்த உணர்வு நிகழ்ச்சிகளை மதிப்பீடு செய்வதைக் கடினமாக்குகிறது.

ஆனால், யாக்கோபின் வரலாற்றில் காணப்படும் முரண்பாடு என்னவெனில் வாசகர்களுக்கு வெறுப்பூட்டி மதிப்பீட்டைக் கடினமாக்கும் மனித ஆட்தன்மை மற்றும் சமயச் சார்பற்ற அக்கறைகள் ஆதிக்கம் செலுத்துவதே, பின்னணியாக அமைந்துள்ள இறையியலைச் சுட்டிக்காட்டும் திறவு கோலையும் அளிக்கிறது. மற்ற மூதாதையர்களோடு இறைவன் நேரடியாகச் செயல்படுகிறார். யாக்கோபின் வரலாற்றில் நேரடியாகச் செயல்படுவதிலிருந்து இறைவன் பின்வாங்கியவராகத் தோன்றுகிறார். ஆயினும், இறைவன் செயலாற்றாமல் இல்லை. தமது குறிக்கோளுக்காக வரலாற்றைத் திட்டமிட்டு நடத்துகிறார். இதைப் பெத்தேல், பெனியேல் நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. இறைவன் தகுதியற்றவர்கள் மற்றும் விரும்பத்தகாத சூழ்நிலைகள் வழியாகவும் செயலாற்றுகிறார். போராட்டங்களையும் அவல நிகழ்ச்சிகளையும் கொண்டு யாக்கோபு தானே அமைத்து அதிலே தானே விழுந்து கொள்ளும் சிக்கல் மிக்க வலையில் இறைவனே வழிநடத்துகிறார் என்பது இஸ்ராயேலின் விசுவாசமாகும். இவற்றில் எல்லாம் இறைவன் பாதி மறைந்தவர் போல் தோன்றினாலும், அவர் பிரசன்னமாக இருக்கிறார். இவ்வாறு, மூதாதையர் வரலாற்றில் எங்கும் காணாத முறையில், தனது கண்பார்வையற்ற தந்தையிடம், தான் விரைவில் வேட்டைப் பொருளை அடைந்ததற்கு ''உன் கடவுளாகிய ஆண்டவரால்தான் இது நிகழ்ந்தது'' என்று காரணம் கூறும் யாக்கோபின் இறைநிந்தனையில், தன் வாழ்வின் மிகவும் ஆழ்ந்த உண்மையான விளக்கத்தையும் கூறுகிறார்.

யாக்கோபின் வரலாற்றில் பல வெறுக்கத்தக்கவையானாலும், மற்றவை மகிழ்ச்சி மிக்கவையாக உள்ளன. தனிப்பட்ட பகுதிகளின் மூலநோக்கம் எதுவானாலும், நாம் கொண்டிருக்கும் வடிவில் யாக்கோபின் வரலாறு வேடிக்கையாகவோ, பொழுது போக்காகவோ எழுதப்பட்டதன்று. வாசகர்களுக்குப் போதகம் அளிப்பதற்காகவே எழுதப்பட்டது. யாக்கோபு தந்திரத்தாலும் மனிதக் கணிப்பினாலும் வெற்றி பெறத் திட்டமிட்டார். ஆனால், விவிலியம் அவரை ஏமாற்றுபவன் என்று சித்திரிக்கிறது. அவர் காலத்திய சமூக அமைப்பின் சூழ்நிலையில், அவரது குறிக்கோள் மிக உயர்ந்தது. அது தலைமகனுக்குரிய ஆசீராகும். இது வெறும் நல்லெண்ண வெளிப்பாடு மட்டுமன்று, தன்னியலான கொடையாகும். ஒரு தடவை இதைக் கூறிப் பின் அதை எடுத்துக் கொள்ள முடியாது. யாக்கோபுக்கு இது கானானை உரிமைச் சொத்தாக அடைவது மட்டுமன்று, ஆபிரகாம் மற்றும் ஈசாக்குக்கு அளிக்கப்பட்ட மீட்பு வாக்குறுதியை அடைவதுமாகும். யாக்கோபின் வாழ்வின் முரண்பாடு என்னவென்றால் அவரது சூழ்ச்சிகளும் முயற்சிகளும் விரும்பிய விளைவுகளை ஏற்படுத்தின, வெற்றிபெற்றார். அவர் தலைமகனுக்குரிய ஆசிரைப் பெற்றார். லாபான் வீட்டில் கடின உழைப்பும் சூழ்ச்சிகளும் அவருக்குச் செல்வச் செழிப்பைத் தந்தன. பெனியேலில், தோற்றத்திற்கு, அவர் இறைவன் மேல் கொண்ட வெற்றி அவருக்கு இறைவனது ஆசீரையும், இஸ்ராயேலாக அடையாளப் பெயர் மாற்றத்தையும் மிக உறுதியாகத் தந்தது. ஆயினும் தனது மரணத்தில், எல்லா ஆசீர்களும் ஆண்டவரிடமிருந்து மட்டுமே வருகின்றன என்று கண்டுணர்ந்தார் (காண்க. 49:14). ''உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார்; நானோ இதை அறியாதிருந்தேன்'' (28:16) என்று தான் முன்னர் அறிந்ததின் உண்மையை முழுவதும் கண்டுணர்ந்தார். யாக்கோபு விசுவாசத்தின் வீரராகக் கருதப்படலாம் (எபி 11:21). அவரது வாழ்வு இறைவனுடைய பிரமாணிக்கத்திற்கும் அருளுக்கும் சான்று பகர்கிறது. யாவே ''யாக்கோபின் கடவுள்'' என்றும் (சங் 20:1; 46:7;

எசா 2:3; மீக் 4:2; காண்க. யாத் 3:6.15-16; மத் 22:32 இணை; அ.ப. 3:13), ''யாக்கோபின் அரசர்'' என்றும் *(எசா 41:21)* குறிக்கப்படுவது, இஸ்ராயேலர் சமய வளர்ச்சியில் யாக்கோபின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

யாக்கோபு எழுதிய திருமுகம் (JAMES, LETTER OF)

1. ஆசிரியர்:- ''உலகெங்கும் சிதறுண்டு வாழும் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும், கடவுளுக்கும் ஆண்டவராகிய இயேசுவுக்கு ஊழியனான யாக்கோபு வாழ்த்துக் கூறி எழுதுவது'' *(யாக் 1:1)* என்று இத்திருமுகம் தொடங்குகிறது. இந்த யாக்கோபு யார்? புதிய ஏற்பாட்டில் இப்பெயருடன் ஐந்து பேர் வருகின்றனர்.

இவர் செபதேயுவின் மகனான பெரிய யாக்கோபுவாக இருக்க முடியாது. தன் தம்பி யோவானுடன் ஒரே நேரத்தில் இயேசுவால் அழைக்கப்பட்டுப் பன்னிருவருடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட *(மத் 4:21; மாற் 1:19)* இவர் கி.பி. 42-இல் ஏரோது அகிரிப்பாவால் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டார். அல்பேயுவின் மகனும் சின்ன யாக்கோபு என்று அழைக்கப்படுபவரும் இத்திருமுகத்துக்கு ஆசிரியராக இருக்க முடியாது. இவரும் பன்னிருவருள் ஒருவரானாலும், ஆதித்திருச்சபையில் எந்த முக்கிய பங்கும் கொண்டதாகத் தெரியவில்லை. இவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. மரியாளின் மகன் யாக்கோபும் *(மத் 27:56;மாற் 15:40; 16:1; லூக் 24:10),* பன்னிருவருள் ஒருவரான யூதாவின் தந்தையுமான யாக்கோபும் *(லூக் 6:16; அ.ப. 1:13)* இத்திருமுகத்திற்கு ஆசிரியராக இருக்க முடியாது. இவர்களைப் பற்றி ஒன்றும் அறிவதற்கில்லை.

ஆகவே, இத்திருமுகத்திற்கு ஆசிரியர் ஆண்டவரின் சகோதரர் என அழைக்கப்படும் யாக்கோபாக இருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. இவர் நாசரேத்தூர் யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோரின் சகோதரனாக இருக்கலாம் *(மத் 13:55; மாற் 6:3).* பேதுருவுக்குப்பின் எருசலேமில் ஆதித்திருச்சபைக்குத் தலைவராக இருந்தவர் *(காண்க. அ.ப. 12:17).* ஆதித் திருச்சபையில் நல்ல செல்வாக்கு இவருக்கு இருந்தது. எருசலேமில் அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் கூடி அக்காலத்துத் திருச்சபையின் பிரச்சனைகளை ஆராய்ந்தபோது, இவரது கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது *(15:13-23).* பவுலின் பணிகளிலும் திருமுகங்களிலும் யாக்கோபின் முக்கியத்துவம் தெரிகின்றது. தம்பணியின் வெற்றிகளை யாக்கோபிடமும் எருசலேம் மூப்பர்களிடமும் பவுல் அறிவிக்கின்றார் *(21:18).* உயிர்த்த இயேசுவின் காட்சிகளில் அவர் யாக்கோபுவுக்குத் தனியாகத் தோன்றியதாகவும் கூறப்படுகிறது *(1 கொரி 15:7).* வரலாற்று ஆசிரியர் யோசிப்பசின் கூற்றுப்படி இந்த யாக்கோபு கி.பி. 62-இல் யூதர்களால் கொல்லப்பட்டார். இவரும் அல்பேயுவின் மகனான யாக்கோபும் ஒருவரே என்று சிலர் கருதுவர். இவர்கள் ஒருவர் அல்லர்; வெவ்வேறானவர்கள் என்பர் வேறு சிலர். இவர் அப்போஸ்தலர்களில் ஒருவர் இல்லையெனினும், பரந்த பொருளில் இவர் அப்போஸ்தலராகக் கருதப்படலாம் *(காண்க. அ.ப. 15:13; கலா 1:19).* இத்திருமுகம் புனைபெயர் நூல் என்றும், ஒரு வேளை முந்தைய யூத நூல் மாற்றி எழுதப்பட்டிருக்கலாம் என்றும், வேறு ஒரு யாக்கோபு இந்நூலை எழுதியிருக்கலாம் என்றும் கருதும் அறிஞர்கள் உண்டு.

ஆசிரியர் ஓர் அப்போஸ்தலராய் இருந்திருந்தால் ''உலகெங்கும் சிதறுண்டு வாழும் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு'' அதிகாரத்துடன் எழுதுபவர் அப்பட்டத்தை முன்னுரையில் சுட்டிக் காட்டியிருப்பார். அவர் காட்டும் அதிகாரத்தொனியும் *(காண்க. 1:2.13; 3:1.13 தொ; 4:13தொ; 5:7),* இந்நூல் திருமுறைப் பட்டியலுக்குள் இடம் பெற்றிருப்பதும், இந்நூலின் ஆசிரியர் ஏதாவது ஒரு விதத்தில் ஆதித் திருச்சபையில் முக்கியமானவராய் இருந்திருக்க வேண்டும் என்று காட்டுகின்றன. பவுல் ''திருச்சபையின் தூண்கள் எனக் கருதியவர்

களுள்'' எருசலேம் திருச்சபையின் யாக்கோபும் ஒருவராவார் (கலா 2:9).

ஆசிரியர் ஒரு யூதர் என்று தெரிகிறது. அவர் பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்திருக்கிறார். எபிரேய இலக்கிய முறைகளையும் (எ.கா. இணையமைப்புகள்) எடுத்துக் காட்டான யூதச் சொற்ளையும் பயன்படுத்துகிறார். கிரேக்கர்களின் கருத்தியலான மனப் போக்கில் அல்லாமல், பழைய ஏற்பாட்டின் செயல் முறையான மனப்போக்கில் தனது கருத்துகளை அமைக்கிறார். இந்நூல் பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியப் போக்கைப் பல இடங்களில் எதிரொலிக்கிறது.

அதே சமயத்தில் ஆசிரியர் ஒரு கிறிஸ்தவர் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. புதிய ஏற்பாட்டின் பிற நூல்களுக்கும் இந்நூலுக்கும் பொருள் அளவில் தொடர்புகள் பல உள்ளன. இதற்குச் சான்றாக, பின் வருவனவற்றைச் கட்டிக் காட்டலாம்.

யாக் 1:2 தொ.12=மத் 5:11தொ; உரோ 5:3தொ; 1பேதுரு 1:6தொ; யாக் 1:12=மத் 7:24தொ; 2 திமொ 4:7தொ; யாக் 1:13=1கொரி 10:13; யாக் 1:17-21=1 பேதுரு 1:22-2:2; யாக் 1:22தொ=உரோ 2:13தொ; யாக் 2:1தொ=மத் 25:31; யாக் 2:5=மத் 5:2.3; லூக் 6:20 தொ; 1 கொரி1:27; யாக் 2:13=மத் 5:7; யாக் 4:3=1யோவா 5:14; யாக் 4-6-10=1 பேதுரு 5:5-9; யாக் 5:1-11=மத் 24; யாக் 5:12= மாற் 5:4தொ; யாக் 5:15=மத் 12:32.

இவை இந்நூல், புதிய ஏற்பாட்டின் பிறநூல்களைத் தழுவி எழுதப்பட்டுள்ளது என்று சுட்டவில்லை; மாறாக, தான் வாழ்ந்த காலத்துத் திருச்சபையின் கோட்பாடுகளில் ஊறிப்போய், அத்திருச்சபையின் உயிருள்ள போதனையின் பின்னணியிலேயே இந்நூலை ஆசிரியர் எழுதுகிறார் என்று காட்டுகின்றன. எனவே, ஆசிரியர் ஒரு கிறிஸ்தவராக இருந்திருக்கவேண்டும்.

எருசலேம் திருச்சபையின் தலைவராகவும் ஆண்டவரின் சகோதரராகவும் கருதப்படும் யாக்கோபு இந்நூலுக்கு ஆசிரியர் ஆவார் என்று கருதினால், சில பிரச்சனைகள் எழும்.

அ) அக்காலத்து வரலாற்று ஆசிரியரான யூசேபியு, கெகசிப்பு போன்றோரும், மற்றும் போலிக் கிளமந்துவின் அறவுரைகளும், எருசலேம் யாக்கோபு யூதச் சட்ட முறைகளில் மிகவும் கண்டிப்பானவர் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்நூல் அத்தகைய சடங்கு, சட்டங்களைப் புறக் கணிப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்து எருசலேம் யாக்கோபு இந்நூலை எழுதியிருக்க முடியாது என்று கூறத் தேவையில்லை. ஏனெனில், பாரம்பரியம் அவரைச் சட்டத்தின்பால் பேரார்வம் மிக்கவராகக் காட்டவில்லை. எருசலேம் சங்கத்தில் யாக்கோபு மிதமான, சகித்துப்போகும் போக்கையே காட்டுகிறார் (அ.ப. 15:1.5. 19தொ.22; 21:18தொ; கலா 2:1-11). மேலும், ஆசிரியர் யூதக் கிறிஸ்தவர்களுக்காகவும், அவர்கள் சூழ்நிலையில் அவர்களுக்குத் தேவையானவற்றையே எழுதுகிறார். தம்முடைய தத்துவங்கள் கோட்பாடுகளை எல்லாம் எழுதுவது அவரது நோக்கமன்று. மேலும், இந்நூலில் வருபவை எதுவும் யாக்கோபின் நிலைக்கு மாறானவை அல்ல.

ஆ) மேற்கூறப்பட்டதைவிட முக்கியமான பிரச்சனை, இயேசுவுக்கும் அவரது பணிக்கும் அதிகக் கவனம் கொடுக்கப் படாமையாகும். இரு இடங்களில் மட்டும் தான் இயேசுவின் பெயர் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது (யாக் 1:1; 2:1தொ). 5:7.14-இல் வரும் ''ஆண்டவர்'' என்னும் சொல் இயேசுவைக் குறிக்கலாம். 2:7-இல் வரும் ''அவருடைய திருப்பெயர்'' இயேசுவின் பெயரையே சுட்டுகிறது எனலாம். இவற்றைத் தவிர இந்நூலில் இயேசுவைப் பற்றிய குறிப்பு ஏதுமில்லை. அப்போஸ்தலர் ஒருவராலோ, ''ஆண்டவரின் சகோதரர்களுள்'' ஒருவராலோ இந்நூல் எழுதப் பட்டிருந்தால், இது வினோதமாகத் தோன்றுகிறது. இலக்கிய அமைப்பைப் பற்றி விளக்க முறையைத் தவிர, ஆய்

வாளர்கள் இப்பிரச்சனைக்குத் தெளிவான விளக்கம் தரவில்லை. இவர்கள் கருத்துப் படி இந்நூல் பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியப்பாணியில் எழுதப்பட்டுள்ளது. ஒழுக்க முறை சார்ந்த செயல்முறைக் காரியங்களைப் பற்றி ஆசிரியர் எழுது கிறாரே ஒழிய, இயேசுவையும் அவரது பணிகளைப் பற்றியும் எழுதுவது ஆசிரி யரது நோக்கமன்று.

இ) இன்னும் அதிகச் சிக்கல் மிக்க பிரச்சனை மொழி நயத்தை அடிப்படை யாகக் கொண்டதாகும். யாக்கோபு ஒரு கலிலேயர். அவர் பாலஸ்தீனத்தைவிட்டு அதிகம் வெளியே போயிருக்க வழி யில்லை. ஆனால், அவருடைய கிரேக்க நடை மிகுந்த நயம் மிக்கதாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் எபிரேயருக்கு எழுதப் பட்ட திருமுகத்தைத் தவிர வேறு எந்த நூலிலும் இவ்வளவு தெளிவான, அழகான கிரேக்க நடையையும், சொற்றொகுதிகளை யும் காண்பது அரிது. எருசலேமில் வாழ்ந்த ஒரு சாதாரண கலிலேயர் இந்த அளவுக்குக் கிரேக்க மொழியில் புலமை பெற்றிருந் தாரா? இப்பிரச்சனைக்குப் பதில் கூறுவது கடினமன்று. யாக்கோபு தானாகக் கைப்பட இந்நூலை எழுதியிருக்கத் தேவையில்லை. யாக்கோபு தன் கருத்துகளைக் கூற, கிரேக்க மொழியில் புலமைபெற்ற வேறொருவர் எழுதியிருக்கலாம்.

மேற்கூறப்பட்ட காரணங்கள் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில், ''ஆண்ட வரின் சகோதரர்'' எனக் கருதப்படும் எருசலேம் யாக்கோபு இத்திருமுகத்தை எழுதியிருக்கலாம். இதுவே பாரம்பரியக் கருத்துமாகும். ஆனால், இந்நூல் ஒரு புனைபெயர் நூல் என்று கருதுபவர்கள் உள்ளனர்.

2. யாருக்காக, எப்போது எழுதப் பட்டது?: ''உலகெங்கும் சிதறுண்டு வாழும் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு'' என்று இத்திருமுகம் தொடங்குகிறது (யாக் 1:1). இச்சொற்றொடர் கிரேக்கர்களிடையே வாழ்ந்த யூதர்களைக் குறித்தது (காண்க. யோவா 7:25). ஆனால், இங்கு இச்சொற் றொடர் இவர்களைக் குறிக்கவில்லை. ஏனெனில், யூதர்களுக்காக மட்டும் எழுதப் பட்ட ஒரு திருமுகம் கிறிஸ்தவத் திரு முறைப்பட்டியலில் இடம் பெற்றிருப்பது முடியாத காரியமாகும். ஆசிரியர் கிறிஸ்தவ சமூகம் முழுவதையும் குறிக்க ''பன்னி ரண்டு கோத்திரங்கள்'' என்ற சொற் றொடரை உருவகமாகப் பயன்படுத்துகிறார் எனலாம் (காண்க. மத் 19:28). ''சிதறுண்டு வாழும்'' என்னும் சொற்கள் எருசலேமி லிருந்து ஓரளவு தூரத்தில் வாழ்ந்தவர் களைக் குறிக்கலாம் (காண்க. 1 பேதுரு 1:1). ஒருவேளை, ஏரோது அகிரிப்பா திருச்சபையைத் துன்புறுத்திய காலத்தில் (காண்க. அ.ப. 11:19) சீரிய அந்தியோக்கி யாவுக்கு ஓடிப்போன யூதக் கிறிஸ்தவர் களுக்கு இந்நூலை யாக்கோபு எழுதி யிருக்கலாம்.

''ஆண்டவரின் சகோதரர்'' எனக் கருதப் படும் யாக்கோபு இந்நூலை எழுதியிருந் தால், யாக்கோபு மறைசாட்சி மரணம் எய்திய கி.பி. 62-க்குச் சிறிது முன் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும். நூலில் புற வினத்தாருக்கும் விரிவாக்கப்பட்ட வாக் குறுதி பற்றிய குறிப்பு இல்லை. யூத- புறவினப் பிரச்சனைகளும் குறிப்பிடப்பட வில்லை. ஆகவே, இந்நூல் பவுலின் நூல்களுக்கு முந்தியது. ஆகவே கி.பி. 50-ஐ ஒட்டி இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண் டும் என்பர் சிலர். இந்நிலை சரியென்றால் புதிய ஏற்பாட்டு நூல்களிலேயே இந்நூல் தான் முதலாவது ஆகும். எளிய வாழ்வு மற்றும் திருச்சபை அமைப்புகள் பற்றிய குறிப்புகள் (யாக் 2:2; 3:1; 5:14) இந்நூல் முற்காலத்தில் (கி.பி. 35-50) தோன்றியது என்பதற்கு ஆதரவாக உள்ளன. அப்படி யானால் இந்நூல் எருசலேமிலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டும். கிரேக்க நடையையும், ஆசிரியர் பவுலின் நூல்களை அறிந்திருக்கக்கூடும் என்பதையும் (உரோ மையரில் ஏற்புடைமையும் விசுவாசமும்) அடிப்படையாகக் கொண்டு, இந்நூல் பிற் காலத்தில் (கி.பி. 70-130) தோன்றியிருக்க

லாம் என்று கூறுபவரும் உள்ளனர். இந்நிலையை ஏற்றுக்கொள்ளத்தேவையில்லை. நூலின் தொன்மைத்தன்மை, இந்நூல் இவ்வளவு பிந்தித் தோன்றியிருக்கக்கூடும் என்று கட்டவில்லை.

3. திருமுறைப் பட்டியலில் யாக்கோபின் திருமுகம்: மத்தேயு நற்செய்தியைத் தவிர்த்து, மற்ற யூதக்கிறிஸ்தவ நூல்களைப் போலவே, இந்நூலும் எல்லாராலும் எல்லா இடங்களிலும் திருமுறைப் பட்டியலில் சேர்ந்ததாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நூலின் ஆசிரியர் பற்றிய ஐயம், செமித்தியப் பின்னணி, கோட்பாடுகள் இல்லாமை, பவுலுக்கு எதிரான போக்கு இருப்பதாகத் தோன்றுதல் ஆகிய காரணங்களுக்காக இந்நூல் ஓரிசன் வரை திருமுறைப்பட்டியலில் இடம் பெறவில்லை. ஓரிசன்தான் முதன் முதலில் திருமுறைப்பட்டியலில் சேர்க்கிறார். இந்நிலைக்கு எதிரான போக்கைச் சில திருச்சபைகள் கொண்டிருந்தன என்று யூசேபியு கூறுகிறார். மேலைத் திருச்சபையின் திருமுறைப் பட்டியலில் கி.பி. 350-க்குப்பின்தான் இந்நூல் தோன்றுகிறது. இதற்கு எதிரான போக்குடைய "சீர்திருத்த வாதிகள்" சிலரும் பின்பு இதை ஏற்றுக் கொண்டனர். திரிதெந்தீன் பொதுச்சங்கங்கள் இந்நூலும் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தது என்று உறுதியாகக் கூறியது.

4. இலக்கிய நடை: நூலின் முன்னுரையில் திருமுகங்களுக்குரிய வாழ்த்துக் கூறுதல் உள்ளது (யாக் 1:1). ஆனால் முடிவுரையில் வாழ்த்தும் ஆசீரும் கூறுதல் இல்லை. நூலில் திருமுகத் தொனியும் இல்லை எனலாம். புதிய ஏற்பாட்டின் பிற திருமுகங்களில் சிறப்பாகக் காணப்படும் கோட்பாடுகளும், அவற்றின் விளக்கங்களும் இந்நூலில் காணப்படவில்லை. நூல்முழுவதும் ஒழுக்க முறை பற்றிய அறவுரையாக, ஊக்கவுரையாக அமைந்துள்ளது. இந்நூல், பழைய ஏற்பாட்டு ஞான இலக்கிய நூல்களோடும், பன்னிரண்டு மூதாதையர்களின் ஏற்பாடு, முதலாம் ஏனோக்கு, 4-ஆம் மக்கபேயர், கும்ரானின் சில ஏடுகள் போன்ற போலி நூல்களில் காணப்படும் செபக்கூட அறவுரைகளோடும் தொடர்புடையதாகத் தெரிகிறது. ஆசிரியர், ஸ்தோயிக்குகளின் வாதமுறைகளையும், கேள்விபதில் முறையையும், கற்பனை உரையாடல் முறையையும் அறிந்திருப்பதாகத் தெரிகிறது (யாக் 2:4தொ; 8.14தொ 18தொ; 3:11தொ; 4:4தொ 5:13தொ). வழிபாடு மற்றும் திருமுழுக்குப் போதக வாசகங்களின் கவடுகள் காணப்படுகின்றன. தமது காலத்தில் நிலவிய யூத, கிரேக்க அறவுரை வடிவங்களையெல்லாம் ஆசிரியர் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. நூலில் கிரேக்க நடை நயமிக்கதாக உள்ளது. இதுபற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம்.

5. நோக்கம்: இந்த நூல் எழுதப்பட்டதற்கு எந்தக் குறிப்பிட்ட நோக்கமும் இருந்ததாகத் தெரியவில்லை. எந்தக் கோட்பாடும் இதில் தனிப்பட்ட முறையில் விளக்கப்படவில்லை. கிறிஸ்தவர்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சில காரியங்களைப் பற்றியே அறவுரை தருகிறார் ஆசிரியர். அவர் தரும் குறிப்புகளும் எடுத்துக் காட்டுகளும் ஒன்றிற்கொன்று தொடர்பற்றவையாகத் தோன்றுகின்றன.

இந்நூல் ஒரு கடிதமன்று, ஓர் அறவுரையாகும். வெறும் தத்துவம் பேசும் கிறிஸ்தவத்தால் பயனில்லை; அதை வாழ்ந்து காட்ட வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்தின் பொருள் வாழ்ந்து காட்டுவதில்தான் அடங்கியிருக்கிறது. அப்படியில்லையெனில் அவ்விசுவாசம் பொருளற்றது, பயனற்றது. இக்கருத்தையே மையமாகக் கொண்டு, அதைப் பற்பல கோணங்களில் விளக்குகிறார் ஆசிரியர்.

6. நூலின் திட்டம்

1) வாழ்த்துரை (1:1).
2) துன்பத்திலும் சோதனையிலும் பொறுமை (1:2-18).
   அ. துன்பத்தில் மகிழ்ச்சி (1:2-12).
   ஆ. சோதனையின் காரணம் (1:12-15).
   இ. இறைவார்த்தையில் நமது பிறப்பு (1:16-18).

3) உயிருள்ள விசுவாசம் (1:19-27).
அ. கோபத்தை அடக்குதல் (1:9-21).
ஆ. இறைவார்த்தையின்படி நடப்பவர்கள் (1:22-25).
இ. இறைவனின் தொண்டன் (1:26-27).

4) ஏழைகளை மதித்தல் வேண்டும் (2:1-13).

5) விசுவாசமும் நற்செயல்களும் (2:14-26).
அ. மையக்கருத்து (2:14-17).
ஆ. சில எடுத்துக்காட்டுகள் (2:18-26).

6) நாவடக்கம் (3:1-12).

7) மெய்ஞ்ஞானம் (3:13-18).

8) சண்டை சச்சரவு (4:1-2).

9) பணக்காரருக்கு எச்சரிக்கை (4:13-5:1-6).
அ. எதிர்காலத்தின் நிச்சயமின்மை (4:13-17).
ஆ. எச்சரிக்கை (5:1-6).

10) இறுதி அறவுரை (5:7-20).
அ. ஆண்டவர் வருகைக்குக் காத்திருத்தல் (5:7-12).
ஆ. நோயில் பூசுதல் (5:13-15).
இ. பாவ அறிக்கையும் செபமும் (5:16-18).
ஈ. பாவிகளின் மன மாற்றம் (5:19-20).

8. இறையியல் போதகம்: ''இறை வார்த்தையின்படி நடப்பவர்களாய் இருங்கள்; அதைக் கேட்பதோடு மட்டும் நின்றுவிடாதீர்கள்'' (யாக் 1:22); அன்றாட வாழ்வை இறைவனது திருவுளத்தின் ஒளியில் வாழுங்கள் (4:14-15) என்ற கருத்துகளின் அடிப்படையில் இந்நூலின் இறையியலைப் புரிந்துகொள்ள வேண்டும். பவுலின் இறையியலைப் போன்று அவ்வளவு ஆழமுடையதன்று யாக்கோபின் இறையியல்

இறைவன் நமது தந்தையாவார் (யாக் 1:27). அவரின் சாயலில் மனிதன் படைக்கப்பட்டுள்ளான் (3:9). இறைவன் நன்மையான கொடைகளையும், நிறைவான வரத்தையும் அளிக்கிறார் (1:17). துன்பமாகிய கொடையையும்கூட அவரே அளிக்கிறார். அது விசுவாசத்தை மனவுறுதியாக மாற்றுகிறது (1:3). அது விசுவாசிகளை அவரது அரசுக்குள் சேர்த்துக் கொள்கிறது (2:5). இறைவன் •விசுவாசியைச் சோதனைக்கு உட்படுத்துவதில்லை; பாவத்திற்கு இட்டுச் செல்வதில்லை (1:13).

இயேசு ''மாட்சிமை மிக்க ஆண்டவர்'' என்றழைக்கப்படுகிறார் (2:1). அவர் உலகைத் தீர்ப்பிட விரைவில் திரும்புவார் (5:7-9). விண்ணின்று வரும் ஞானம் மண்ணுலகைச் சார்ந்த ஞானத்தோடு ஒப்பிட்டுக் கடுமையாக வேறுபடுத்தப்படுகிறது. இதுவே இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வெனும் கனியை விளைவிக்கிறது (3:13-17). இதன் வழியாக விசுவாசி இறைவனோடு தோழமை கொள்கிறான் (4:8). இறைவன் முன் ஏற்புடைமை பற்றிய பவுலின் போதகத்தை, விசுவாசமும் நற்செயல்களும் பற்றிய யாக்கோபின் போதகம் மறுத்துக் கூறுவதாகச் சிலர் (எ.கா. லூத்தர், பார்த்து) சர்ச்சை செய்வர். ஏற்புடைமை பற்றிய பவுலின் போதகத்தை யாக்கோபு நிறைவுசெய்கிறார் என்று புரிந்து கொள்வதே மேலான விளக்கமாகும்.

மூப்பர்கள் நோயில் பூசுதல் பற்றி, உரோமைக் கத்தோலிக்கரும் பிரிவினைச் சகோதரரும் வெவ்வேறு விதத்தில் விளக்கம் அளித்துள்ளனர் (5:14). இதைப் பற்றி திரிதெந்தீன் பொதுச்சங்கம் அளிக்கும் விளக்கம்: மூப்பர்கள் நோயாளிகளைச் சந்தித்தல் வெறும் அன்புச் செயல்மட்டுமன்று. தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் குருத்துவ ஆற்றலால் நோயாளியின் மீது எண்ணெய் பூசுதல் ஓர் அருட்சாதனச் சடங்காகும். யாக்கோபு எழுதிய திருமுகம் இப்படி வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், பொதுச்சங்கம் பாரம்பரியப் போதகத்தை எடுத்துக் கூறுகிறது. இப்பூசுதலின் விளைவுகளான பாவமன்னிப்பு, குணம்

பெறுதல் ஆகியவை அருட்சாதனத்தைச் சேர்ந்தவையாகும்.

யாக்கோபுவின் ஆசிர் (JACOB, BLESSING OF)

ஆதி 49-இல், யாக்கோபு தன் வாழ்வின் இறுதியில் தன் புதல்வர்களுக்கு ஆசி அளித்து வாழ்த்துரை கூறியதை இத் தலைப்பு குறிக்கும். இந்த ஆசிர்கள் ஒன்றிப்புடைய இலக்கியப்படைப்பு என்று இக் கால ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. வேறுபட்ட தோற்றத் தொடக்கமுடைய தனிப்பட்ட கூற்றுகளின் தொகுப்பாகக் கருதுகின்றனர். இவற்றை யாக்கோபுக்கோ, அவர் காலத்திற்கோ சாற்றிக் கூறமுடியாது. சாகும் மனிதனுக்கு வருங் காலத்தைப் பற்றிய தனிச் சிறப்பான உள்நோக்கு அளிக்கப்பட்டதாக பழங்காலத்தில் கருதப்பட்டது. சாகும் மனிதனது சொற்கள், சிறப்பாக அவை ஆசிராகவோ, சாபமாகவோ இருந்தால், சாதாரண ஆசிர் மற்றும் சாபத்தை விட, அதிக ஆற்றல் மிக்கதாகக் கருதப்பட்டன. இந்த வாய்பாடுகள் ஆசீர்களும் அன்று, முன்னறிவிப்புகளும் அன்று. இக்கூற்றுகள் கூறப்பட்ட காலத்தை நிர்ணயிக்க முடியாது. யூதாவுக்கு அளிக்கப்படும் ஆசீர் தாவீது ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. இவற்றில் காலத்தால் முந்திய கூற்று தாவீதுக்கு 300 ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கலாம். இஸ்ராயேலின் நாட்டு மற்றும் வரலாற்று உணர்வு எழுச்சியுற்று, இலக்கியப் படைப்புகள் தோன்றித் தொகுக்கப்பட்ட தாவீதின் ஆட்சிகாலம், அனேகமாக இந்த ஆசீர்கள் தோன்றிய காலமாக இருக்கலாம்.

யாக்கோபுவின் ஏணி (JACOB'S LADDER)

பெத்தேலில் யாக்கோபு கனவில் கண்ட ஏணி (ஆதி 28:12). படிகளை உடைய ஏணியாகக் கருதப்பட வேண்டியதில்லை. அது மெசபொத்தாமிய கோவில் கோபுரம் போன்ற (காண்க. பாபேல் கோபுரம்) விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையிலான இணைப்பாக இருக்கலாம். பாபிலோனிலுள்ள மார்துக்கின் கோவில் கோபுரம் ''விண்ணையும் மண்ணையும் இணைக்கும் வீடு'' என்ற பொருளுடைய சொல்லால் அழைக்கப்பட்டது. இந்த ஏணியில் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்த கடவுளின் தூதர்கள், இறை விருப்பத்தைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

யாக்கோபுவின் ஏற்றம் (JAMES, ASCENTS OF)

இஃது ஒரு போலி நூல். எப்பிபானியு என்ற ஆதித்திருச்சபை எழுத்தாளர் இதைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இஃது எபியோனியர் என்ற யூதக்கிறிஸ்தவப் பிரிவினையாளர்களால் பயன்படுத்தப்பட்டதாகும். இந் நூலின் கதைத்தலைவன் இயேசுவின் சகோதரரான யாக்கோபு ஆவார். இந்நூல் ஆலயம், மற்றும் பலிகளைக் கண்டனம் செய்கின்றது; ஆனால், விருத்தசேதனத்தை ஆதரிக்கிறது. தர்சுவைச் சேர்ந்த ஒரு பவுலை இந்நூல் கடுமையாக விமர்சிக்கிறது. பவுல் ஒரு கிரேக்கர்; தலைமைக்குருவின் மகளை மணக்க விருத்தசேதனம் செய்து கொண்டார். பின்னர் தலைமைக் குருவின் மகளை அடைய முடியாமல், யூதர்களை வெறுத்து விருத்த சேதனத்துக்கு எதிராக எழுதினார் என்று கூறப்படுகிறது.

இங்கு ''ஏற்றம்'' என்பது படிகளை உணர்த்துகிறது. ஏனெனில், ஆலயப் படிகளிலிருந்து மக்களுக்குப் போதித்தார்.

யாக்கோபுவின் கிணறு (JACOB'S WELL)

கெரிசிம் மலை அடிவாரத்திலிருந்து வடகிழக்கிலும், செக்கேமுக்குத் (இக்கால தெல் பலாத்தாவுக்குத்) தென் கிழக்கில் 76 மீட்டர் தொலைவிலும் உள்ள ஒரு கிணறு. இது பற்றிய ஒரே ஒரு விவிலியக் குறிப்பு யோவா 4:6-12-இல் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு இயேசு ஒரு சமாரியப் பெண்ணைச் சந்தித்து உரையாடுகிறார். ''யாக்கோபு தன் மகன் யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த ஊராகிய'' (காண்க. ஆதி 33:18-19; யோசு 24:32) சாமாரியாவிலுள்ள சிக்காரில் ((யோவா 4:5) இக்கிணறு இருந்தது. ''பிர்

யாக்கூப்பு'' என்று பாரம்பரியமாக அழைக்கப்படும் இக்கிணறு முக்கிய வியாபாரச் சாலைகளின் சந்திப்பில் அமைந்திருக்கிறது. இஃது ஒரு கிணறும், நீர்த் தொட்டியுமாகும். இது 41 மீட்டர் ஆழமுடையது; குளிர்ந்த நீரையுடையது.

இங்குப் பைசாந்தியர் கோவில் ஒன்று கட்டப்பட்டது. இது சிலுவைப்போர் வீரர்களால் மீண்டும் கட்டப்பட்டது. இங்கு இக்காலத்தைச் சேர்ந்த முற்றுப்பெறாத கிரேக்கத் திருச்சபைக் கோவில் ஒன்றும் உள்ளது.

யாக்கோபுவின் திருவெளிப்பாடு (JAMES, APOCALYPSE OF)

இஃது ஒரு ஞானவாதப் போலி நூல். இது கி.பி. 1946-இல் எகிப்திலுள்ள செனோபோஸ்கியன் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இது கோப்திக்கு மொழியில் எழுதப்பட்டது. இந்நூல் ஆதிகால மனிதன் மற்றும் அண்டசராசரத்தின் மூன்று கோட்பாடுகள் போன்றவற்றினை விளக்குகின்றது. இதை இப்போலித்து எனும் அறிஞர் தனது நூலில் குறிப்பிடுகின்றார். இதை மரியாம்னேக்கு இயேசுவின் சகோதரர் யாக்கோபு அளித்ததாகக் கூறப்படுகிறது.

இந்நூல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம். இயேசுவின் உயிர்ப்பு மற்றும் விண்ணேற்றம் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட 550 நாட்களில் (அ.ப. 1:3-க்கு மாறாக), இயேசுவின் விண்ணேற்றம் பற்றிய வெளிப்பாட்டை ஆசிரியரும் பேதுருவும் பெற்றதாக உரிமை கொண்டாடுகிறார். மற்ற அப்போஸ்தலர்கள் இந்த வெளிப்பாட்டைப் பெறவில்லை. யாக்கோபும் பேதுருவும் விண்ணேற்றத்தைக் கண்டனர்; வானதூதர்களின் மன்றாட்டுகளையும் பாடல்களையும் கேட்டனர். இறைமக்களுக்கு இந்த இரகசிய உண்மையை அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தனர்.

யாக்கோபுவின் மூல நற்செய்தி (JAMES, PROTOEVANGLIUM OF)

மரியாளின் வரலாறு மற்றும் இயேசுவின் பிறப்பு ஆகிய நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கும் பக்தியும் கற்பனையுமிக்க நற்செய்திகளில் மிகவும் தொன்மையானது யாக்கோபின் மூல நற்செய்தியாகும். ஒரிசன் தனது நூலில் இதை யாக்கோபின் நூல் எனக் குறிப்பிடுகிறார். இந்நூல் மரியாளின் பிறப்பினைப் பற்றிக் கூறுகிறது. இது பழைய ஏற்பாட்டில் காணப்படும் சாமுவேலின் பிறப்பு நிகழ்ச்சியை ஒத்திருக்கின்றது. யோவாக்கிம், அன்னாவின் கண்ணீர்மிக்க செபங்களால் மரியாள் உற்பவித்தாள் எனக் கூறப்படுகின்றது. மரியாள், மூன்று வயதிலேயே ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டாள் எனவும், யூதர்களின் முறைப்படி கன்னிகையாக வளர்க்கப்பட்டாள் எனவும் கூறப்படுகிறது. பின்பு அவள் யோசேப்புக்கு மண ஒப்பந்தம் செய்யப்படுகிறாள். ஆனால், திருமணத்திற்கு முன்பே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று இயேசுவைக் கருவில் தாங்குகிறாள். இதை அறிந்த யோசேப்பின் கலக்கமும் மனமாற்றமும் கூறப்படுகிறது. பின்பு, இயேசுவின் பிறப்பு பற்றிக் கூறப்படுகிறது. இது, மரியாளுக்குப் பிரசவம் பார்த்த தாதிப் பெண் கூறுவது போல அமைந்திருக்கின்றது. பின்பு இயேசுவின் வளர்ச்சி, திருமுழுக்கு, யோவான் ஏரோதிடமிருந்து தப்பித்தல் போன்ற நிகழ்ச்சிகள் வருணிக்கப்படுகின்றன. செக்கரியா மரணம் பற்றிக் கூறப்படுகிறது. இப்புத்தகத்தில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. சான்றாக, மரியாளுக்கு 12 வயதில் திருமணம் நடப்பதாக ஓர் இடத்தில் கூறப்படுகிறது. மற்றுமோர் இடத்தில் 16-ஆவது வயதில் அவள் கருத்தரிக்கிறாள் என்னும் செய்தியை நாம் காண்கிறோம். இந்நூல் முந்தைய இரு திருமுறை நற்செய்திப் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. நாட்டுப்புறப் பாடல்களின் நடையிலேயே இந்நூல் அமைந்திருக்கின்றது. இந்நூல் ஆதித்திருச்சபை மக்களிடையே மிகவும் பிரபலமானதாக இருந்திருக்கலாம்.

இந்நூலின் முதன்மையான நோக்கம் மரியாளை மகிமைப்படுத்துவதாகத் தெரி

கிறது. திருமுறை நற்செய்திகளில் இயேசுவுக்குச் சாற்றிக் கூறப்படும் பண்புகளில் பல இந்நூலில் மரியாளுக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. மரியாளின் நிலையான கன்னிமையை மற்ற எல்லா விவிலியச் செய்திகளோடும் ஒத்துப்போகச் செய்வதில் ஆசிரியர் கவனமாய் இருக்கிறார்.

மரியாள் பக்தியின் வளர்ச்சியில் இந்நூல் முக்கிய இடம் வகிக்கிறது. பல போலி நூல்களில் இந்நூலின் ஆதிக்கம் தெரிகிறது. பல ஓவியங்களுக்கு இந்நூல் அடிப்படையாக இருந்துள்ளது.

இந்நூல் கிரேக்கமொழியில் இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் எகிப்தில் எழுதப்பட்டதாகும் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

யாசனியா (JAAZANIAH - யாவே செவிமடுக்கிறார்)

கி.மு. 6-ஆம் நூற்றாண்டுக் காலத்தில் இஃது ஒரு பொதுவான பெயர்.

1. இவர் எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின், யூதாவில் ஆளுநன் கெதல்யாவின் அவையில் இருந்த ஒரு போர்த் தலைவர்; மாகாத்தியரின் மகன் (2 அர 25:23; எரே 40:8). எரே 42:1-இல் வரும் ஓசயா மாகாத்தியரானால், அவரது மகன் அசரியாவும் யாசனியாவும் ஒரே ஆளாக இருக்கலாம் (43:2).

2. இவர் இரேக்காபியர் எரேமியாவின் மகன். இவர் யோயாக்கிமினின் ஆட்சிக் காலத்தில் இறைவாக்கினர் எரேமியாவால் சோதிக்கப்பட்டவர் (எரே 35:3).

3. எசேக்கியேல் காட்சி கண்ட பொழுது இஸ்ராயேல் மக்களில் சிலை வழிபாடு செய்வோரிடையே சாபானின் மகன் யாசனியாவும் நின்று கொண்டிருந்தான் (எசே 8:11).

4. எசேக்கியேல் கண்ட காட்சியில் யூதேயாவின் 25 தலைவர்களைக் கண்டார். இவர்கள் எருசலேமில் தீய ஆலோசனை செய்து கொண்டிருந்தனர். இவர்களில் ஒருவர் அசூரின் மகனான யாசனியா ஆவான் (எசே 11:1).

யாசாரின் நூல் (JASHAR, BOOK OF)

இஃது ஓர் எழுதப்பட்ட பதிவேடு. யோசுவா சூரியன், சந்திரனைப் பார்த்துக் கூறும் செய்யுள் நடைப்பகுதியிலும் (யோசு 10:12-13), தாவீது சவுல் மற்றும் யோனத்தான் மேல் புலம்பும் பகுதியிலும் (2 சாமு 1:17-27) நன்கு அறியப்பட்ட நூலாக இது குறிக்கப்படுகிறது. ஆலய அர்ப்பணம் பற்றிய சாலமோனின் சொந்த வார்த்தைகளிலும் இக்குறிப்பு உண்டு என்றும் கூறலாம் (1 அர 8:12-13).

மேலே கூறப்பட்டுள்ள, யோசுவா, தாவீது இவர்களின் செய்யுள் நடைக் குறிப்புகள், ''யாசாரின் நூலில் எழுதப் பட்டுள்ளன'' என்று உள்ளது (யோசு 10:13; 2 சாமு 1:18). எழுபது நூல் ஆசிரியர் யோசு 10:13-இன் மொழி நடையைப் பயன்படுத்தி, சாலமோனின் மேற்கோள் ''பாடல் புத்தகத்தில்'' எழுதப்பட்டிருக்கவில்லையா என்று கேட்கிறார். அறிஞர்கள் பலரின் கருத்துப்படி, 1 அர 8:12-13, காணாமல் போன யாசார் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாய் இருக்கும் என்று கருதப் படுகிறது.

'யாசார்' என்ற எபிரேயச் சொல்லுக்கு, ''நேராக, நேர்மையாக, நீதியாக, இருப்பவர்'' என்பது பொருள். எனவே ''நீதிப் புத்தகம்'' என்ற தலைப்பு, வரலாற்றில் சில தனிப்பட்ட நபர்களையும் அல்லது, இஸ்ராயேல் குலத்து எல்லாரையும் குறிக்கலாம். இஸ்ராயேலைக் குறிப்பதாக இருந்தால், இத்தலைப்பு எசுரூனோடு தொடர்புடையது.

யாசாரின் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள மூன்று மேற்கோள்களும், எல்லாம் செய்யுள் நடையாய் உள்ளன. எனவே பலர், இதை ''நீதிப் புத்தகம்'' என்று கூறுவதைவிட, ''பாடல் புத்தகம்'' என்று கூறலாம் என்கின்றனர்.

இப்புத்தகத்தில், பல வேறுபட்ட பாடல்கள் இருந்திருக்கலாம். ஏனெனில், நமக்குக் கிடைத்திருக்கும் பகுதிகள் ஒன்று மற்றொன்றுக்கு வேறுபட்டதாக இருக்கின்றன.

முதலாவது, யாவேயின் விண்ணக உடல்களுக்குப் பகல் ஒளியை நீட்டித்து வைக்க எழுந்த ஒரு பழைய மந்திரவாசகமாக இருக்கலாம் (அல்லது) மாலை இருளைத் தள்ளிவைப்பதற்காக இருக்கலாம். இரண்டாவது, தாவீதின் கவிதைத் திறமையைப் பற்றிய ஆணித்தரமான ஓர் இலக்கிய நினைவுச் சின்னம். இது, நாட்டைச் சார்ந்தவற்றிலும், தனிப்பட்ட நட்பு சார்ந்தவற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. மூன்றாவது, உகாரித்து இணைப்பகுதிகளை நினைவூட்டுவதாக இருக்கலாம். ஆனால், சாலமோனின் அதிகாரபூர்வமான கூற்றாகவும் இருக்கலாம். இது, கடவுள் மற்றும் இயற்கைச் சடங்குகளின் மேல் கொண்ட மேலாண்மை பற்றிய பழங்காலப் பாடலாகும்.

யாசார் நூலின் தொடக்கம் பற்றியவை ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. இதை அரசாட்சிக்கு முந்திய காலத்தில் எழுதப்பட்ட தொகுப்பாக சிலர் கருதுகின்றனர். வேறு சிலர், சாலமோனின் காலத்திற்குப் பிறகு எழுந்த வாய்மொழி மரபாகும் என்கின்றனர். ஒருவேளை இதுதான், பரிசுத்த இலக்கியத்தின் தொடக்கமாக இருக்கலாம். இஃது இஸ்ராயேலின் மரபுகளைப் பாதுகாக்க எழுந்தவையாக இருக்கலாம். இஃதோடு இணைத்தன்மையுடைய மற்றொன்று ''ஆண்டவரின் போர்கள் புத்தகமாக'' இருக்கலாம் (எண் 121:14). அறிஞர்கள் சிலர் இந்த இரண்டையும் ஒன்றாகக் கருதுகின்றனர். தெபோராவின் பாடலும் (நீதி 5), மிரியாமின் பாடலும் (யாத் 15:21) இஃதோடு சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று ஒரு கருத்து உள்ளது. ஆனால், எழுத்து ஆதாரம் எதுவும் இல்லை.

விளக்கவுரையாளர் சிலர் இந்தப் புத்தகத்தை, தோராவோடு தொடர்புடையது என்று கருதுகின்றனர்.

யாசிசு (JAZIZ - நகர்த்தப்பட்ட)

அக்ரியரான இவர் தாவீதின் மந்தைகளைக் கண்காணித்து வந்தார் (1 நாள் 27:31).

யாசுபிலசேம் (JASHUBI - LEHEM - லகேமிலிருந்து திரும்பியவர்)

ஒரு மொழிபெயர்ப்பு இது யூத குலத்தில் ஒரு மனிதனின் பெயர் என்று கூறுகிறது. (1நாள் 4:22). ஆனால் மற்றவை ''அவர்கள் லகேமுக்குத் திரும்பினார்'' என்று மொழி பெயர்க்கிறது. சரியான மொழி பெயர்ப்பு ''ஆனால் அவர்கள் திரும்பினர்'' என்பதாகும்.

யாசூபு (JASHUB - அவர் திரும்புவாராக)

1. ஆசேரின் வழித்தோன்றல்களில் ஓர் இனப்பெயர் முதல்வர் (எண் 26:24; 1 நாள் 7:1). ஆனால் ஆதி 46:13-இல், இவர் யோபு என்று அழைக்கப்படுகிறார். இஃது எழுத்துப் படி எடுத்தவரின் தவறாகும்.

2. தனது புறவின மனைவியை விலக்கிவிடுமாறு எஸ்ராவால் வற்புறுத்தப்பட்டவர்களில் ஒருவர் (எஸ் 10:29).

யாசேர் [JAZER - (இறைவன்) உதவுவாராக]

எமோரியர்கள் வாழ்ந்த அரணுள்ள நகரம். இது கிலயாதில் இருந்தது. இஸ்ராயேல், மோவாபியர், அம்மோனியர் ஆகியவர்கள் இதற்கு உரிமை கொண்டாடினர்.

1. **வரலாறு:** எமோரியர்களின் அரசனான சீகோன் தோற்கடிக்கப்பட்டபின், யாசேருக்கு மோசே ஒற்றர்களை அனுப்பி, பிறகு அந்நகரைக் கைப்பற்றினார் (எண் 21:32). இந்நகர் காத்துகோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்டது (எண் 32:1.34-35). பிற்காலத்தில் இஃது ஒரு லேவியர்களின் நகரமானது (யோசு 21:39). இப்பகுதி மேய்ச்சல் நிலங்களுக்கும், பழவகைகளுக்கும், திராட்சைக்கும் பேர் போனதாகும் (எசா 16:8-9; எரே 48:32). அம்மோனியர்கள் தாக்கிய போது யாசேர் நகரம் எல்லைக் கோட்டை அரணாகச் செயல்பட்டது. தாவீது அரசனின் காலத்தில் எபிரோனிலிருந்து யூதா குலத்தைச் சேர்ந்த படைவீரர்கள் இந்நகரில் அமர்த்தப்பட்டனர் (1 நாள் 26:31). ஆகாபு இறந்த பிறகு (கி.மு. 853) மோவாபு நாட்டு மன்னனாகிய மேசா இப்பகுதியைக் கைப்பற்றினான். அதிலிருந்து, எரேமியா ஆகமத்

திலும் எசேக்கியேல் ஆகமத்திலும் யாசேர் நகரம் மோவாபு நாட்டின் ஒரு முக்கிய நகரமாகக் கூறப்பட்டுள்ளது. கிரேக்கர்களின் காலத்தில் இந்நகரம் அம்மோனியர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. யூதா மக்கபேயு அதை அம்மோனியர்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றினார் (1 மக் 5:8).

2. அமைந்துள்ள இடம்: யாசேர் நகரம் அம்மோனியர்களின் எல்லையான யாபோக்கு ஆற்றிலிருந்து வெகு தூரத்தில் அமைந்திருக்கவில்லை. எழுபது நூல் மொழி பெயர்ப்பு ''அம்மோனியர்களின் எல்லை வலிமையானது'' (எண் 21:24) என்பதை ''அம்மோனியர்களின் எல்லை யாசேர்'' என்று மொழி பெயர்க்கிறது. யூசேபியுவும், எரோனிமுவும் அம்மோனியர்களின் ஊரான ராபாவிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ள ஆசேர் அல்லது இயாசேர் என்ற ஒரு நகர் இருந்ததாகக் கூறுகிறார்கள். வாடி கொம்முக்கும் வாடி யாயூசுக்கும் இடையிலுள்ள கொம் யாயூக என்ற இடிபாடுகள் உள்ள இடமே இந்நகராக இருக்கலாம். பிலதெல்பியாவுக்கு (இக்கால அம்மான், அம்மோனியர்களின் இரபா) மேற்கில் 15.5 கி.மீ. தொலைவிலுள்ள கிர்பெத் எஸ்-சாரும், அதன் வடகிழக்கில் 2.5 கி.மீ. தொலைவில் உள்ள கிர்பெத் எஸ்-சீரேயும், எஸ்-சால்துவுக்குத் தெற்கில் 4 கி.மீ. தொலைவில் வாடிசயிப்பில் அமைந்துள்ள கிர்பெத் யாசீரும் யாசேர் இருந்த இடமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

யாசேன் (JASHEN - தூங்குகிற)

'முப்பது பேர்' என்று அழைக்கப்பட்ட தாவீதின் வலிமை மிகுந்த படைவீரர்களில் ஒருவர் (2 சாமு 23:32). இதில் ''யாசேன் மகன்'' என்று காணப்படுகிறது. ஆனால் அதற்கு இணையான பகுதியான 1 நாள் 11:34-இல் 'கிசோனியனான ஆசேமின் புதல்வர்' என்று உள்ளது. இவ்விரு பகுதிகளிலும் 'புதல்வர்' என்பது எழுத்துப் படியெடுக்கும் போது தற்செயலாக ஏற்பட்ட பிழைபட்ட இரட்டுறு பகர்ப்பாகும். 2 சாமு 23:32-இல் எழுதாமல் விடப்பட்ட கிசோனியனான என்பது 1 நாள் 11:34-இல் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இப்பட்டியலில் உள்ள படைவீரனின் பெயர் யாசோன் அல்லது கிசோனியனான ஆசேம் என்பதாகும்.

யாசொபயாம் (JASHO BEAM - மக்கள் (இறைவனிடம்) திரும்பட்டும்)

1. அக்மோனியின் குலத்தைச் சேர்ந்த சப்தியேலின் மகன். இவர் பெரேட்சின் வழி வந்தவர். இவர் தாவீதின் படையில் சக்தி வாய்ந்த 'முப்பது பேருக்கு'த் தலைவர்களாக இருந்த மூவரில் ஒருவர். தன் ஈட்டியால் ஒரே நேரத்தில் முந்நூறு பேரைக் குத்திக் கொன்றவர் (1 நாள் 11:11). தாவீதின் படையில் முதல் மாதத்தில் முதல் பிரிவுக்குத் தலைவனாக இருந்த இவருக்குக் கீழ் இருபத்து நாலாயிரம் பேர் இருந்தனர் (1 நாள் 27:2-3).

2 சாமு 23:8-இல் கூறப்பட்டிருப்பவை 1 நாள் 11:11-இல் கூறப்பட்டிருப்பதிலிருந்து வேறுபடுகிறது. இதைக் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கலாம். ''யோசேபு பசபேத்து'' என்பதைச் சில மொழிபெயர்ப்புகள் ''இருக்கையில் வீற்றிருந்தவன்'' என்று மொழி பெயர்க்கின்றன. அனேகமாக இசுபாகால் என்ற பெயரே மருவி இவ்வாறு வந்திருக்கலாம். இனப்பெயரான ''தாக்மோனியர்கள்'' என்பது ''அக்மோனியர்கள்'' என்று வாசிக்கப்பட வேண்டும் (1 நாள் 11:11). 2 சாமு 23:8-இல் காணப்படும் ''எண்ணூறு பேர்'' என்பதை விட 1 நாள் 11:11-இல் காணப்படும் ''முன்னூறு பேர்'' என்பது மிகவும் விரும்பத்தக்கது.

கருங்கக் கூறின், அக்மோனியனான இசுபாகால், தாவீதின் படைத்தலைவர்கள் மூவரில் முதல்வராக இருந்தார். இவர் ஒரே நேரத்தில் முந்நூறு பேரை ஈட்டியால் குத்திக்கொன்றார்.

2. தாவீது சிக்லாகில் இருக்கும் போது அவருடைய படையில் சேர்ந்த பென்யமின் குலப் போர் வீரர்களில் ஒருவர் (1 நாள் 12:6). இவர் ஒரு கோராகியர்.

யாசோன் (JASON - யாவே மீட்பாவார், குணப்படுத்துதல்)

இப்பெயர் கிரேக்க யூதர்களிடையே ஒரு சாதாரணப் பெயர். கிரேக்க மொழியில் யோசுவா, இயேசு என்ற பெயர்களுக்கு மாற்றுப் பெயர்.

1. ஓர் எலயாசரின் புதல்வர் இரண்டாம் யாசோன் என்பவராவார். உரோமையர்களோடு நட்பும் சமாதானமும் செய்து கொள்வதற்காக யூதா மக்கபேயுவால் உரோமைக்கு அனுப்பப்பட்டவர்களில் ஒருவர் (1 மக் 8:17).

2. அந்திபாத்தரின் தந்தை; கி.மு. 144-இல் உரோமைக்குத் தூதுவனாக யோனத்தானால் அனுப்பப்பட்டவர் (1 மக் 12:16). இவரும் 1-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

3. முதலாம் யாசோன் என்பவர் கி.மு. 174 முதல் 171 வரை தலைமைக் குருவாக இருந்தார். இவர் இரண்டாம் சீமோனின் புதல்வர். மூன்றாம் ஓனியா என்பவரின் சகோதரரான இவர் ஓனியாவை அகற்றி விட்டு தலைமைக் குருவானார். மூன்றாம் ஓனியா எகிப்து நாட்டுக்கு ஓடிச் சென்ற போது யாசோன் தலைமைக் குருவானார். உண்மையில், தலைமைக் குரு பதவி மூன்றாம் ஓனியாவின் மகனாகிய நான்காம் ஓனியாவுக்கே கிடைத்திருக்க வேண்டும். ஆனால், யாசோன் இதற்கு இணங்காததால் குருத்துவம் வீழ்ச்சியுற்று, யோசேப்பின் புதல்வர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டது. யாசோன் தனது பதவியை உறுதி செய்வதற்காக எருசலேமில் உடற்பயிற்சிக் கூடங்கள் கட்டுவதாகவும், அந்தியோக்கு மன்னனுக்கு அதிக பணம் கொடுப்பதாகவும் வாக்களித்தார். எருசலேமில் இருப்பவர்களை அந்தியோக்கியாவின் குடிமக்கள் என்று ஏற்றுக் கொள்ளச் செய்தார் (2 மக் 4:8தொ). ஐந்தாண்டுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் விளையாட்டுக்கள் தீர் நகரில் கொண்டாடப்பட்ட போது, தீயொழுக்கம் நிறைந்த யாசோன் கெரிக்குலிசிற்குப் பலி செலுத்த முந்நூறு வெள்ளித் திராக்மா நாணயங்களைக் கொடுத்து, தியவரை எருசலேமிலிருந்து அனுப்பினார். ஆனால், அவைகளைக் கொண்டு போனவர்களோ, பலிகளுக்காக அவைகளைச் செலவிடுவது சரியன்று என்றும், வேறு செயல்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். அவைகளை அனுப்பினவனால் அவை கெரிக்குலிசிற்குப் பலிக்காகக் கொடுக்கப்பட்டன; கொண்டு போனவர்களாலே கப்பல்களின் வேலைக்குக் கொடுக்கப்பட்டன (2 மக் 4:18-20).

சீமோனின் சகோதரனான மெனலாவுவை யாசோன் அந்தியோக்கு அரசனுக்குப் பணம் கொண்டு போகும்படி அனுப்பிய போது, மெனலாவு அரசனுடைய தயவை அடைந்து, தலைமைக் குருத்துவத்தைத் தானே கைப்பற்றிக் கொண்டான். அந்தியோக்கு அரசன் இறந்துவிட்டானென்று ஒரு பொய் வதந்தி எங்கும் பரவிய போது, யாசோன் எருசலேமைத் தாக்கி, தன் நகரத்தாரை இரக்கமில்லாமல் கொன்றார்; பிறகு மெனலாவுக்கு எதிராகப் போரிட்டு அவனை எருசலேமை விட்டு விரட்டினார். ஆனால், உரோமையர்களின் தலையீட்டால் எகிப்தில் போரைக் கைவிட்ட அந்தியோக்கு எருசலேமைத் தாக்கி மெனலாவுக்கு உதவினான். யாசோன் யோர்தானுக்கு அப்பாலுள்ள அம்மோனியர்களின் நாட்டுக்கு ஓடினார்.

இறுதியில், அரேபிய நாட்டு அரசரான அரேத்தாவின் முன் குற்றம் சாட்டப்பட்டு யாசோன் ஒரு நகரினின்று மற்றொரு நகர் ஓடி எல்லோராலும் பகைக்கப்பட்டு, எகிப்து நாட்டுக்குத் துரத்தப்பட்டார். எகிப்தில் ஓனியா இருந்ததாலும், யாசோன் கிரேக்க ஆதரவாளன் என்பதாலும் அவரால் அங்கே தங்க முடியவில்லை. இலக்கதேமோனியாவில் அடைக்கலம் புகுந்த அவர் அந்த அன்னிய நாட்டிலே மாண்டார்; அழுவாரில்லாமல், அடக்கமில்லாமல் எறியப்பட்டார்; தன்னுடைய தந்தையர்களின் கல்லறையிலே புதைக்கப்படாமல் சபிக்கப்பட்டார் (2 மக் 5:10).

4. சிரேன் ஊரைச் சேர்ந்தவர். யூதா மக்கபேயுடையவும். அவருடைய சகோதரர் களுடையவும் வரலாற்றை ஐந்து பாகங் களில் எழுதினார். இவையே இரண்டாவது மக்கபேயர் நூலின் அடிப்படையாயிற்று. அந்தியோக்கு நகரைச் சேர்ந்த ஒரு யூதர் இவற்றைச் சுருக்கி எழுதினார். யாசோன் அடிப்படை உண்மைகளை இவருக்கு எடுத் துச் சொல்லியிருக்கலாம். இந்நூல் யூத-கிரேக்க இலக்கியத்தின் அழகிய நடையைக் காட்டுகிறது.

யாசோன் எப்போது வாழ்ந்தார் என்று யாருக்கும் தெரியாது. அசமோனியர்களுக்கு முன்னால் யூதர்களிடையே நடந்த உள் நாட்டுப் போர்களுக்கு யாசோனின் நூல் மட்டுமே ஆதாரமாகும் (2 மக் 2:23தொ).

5. தெசலோனிக்கேயில் பவுலையும் சிலா வையும் வீட்டில் விருந்தாளியாக ஏற்றுக் கொண்டவர் (அ.ப. 17:5-7.9). யூத கூட்டத் தினர் பவுலைக் காண முடியாத போது இவரை நகராட்சிக் குழுவினரிடம் இழுத்து வந்து குற்றம் சாட்டினர். அமைதி காக்க உறுதி அளித்தபின் இவர் விடுதலை செய்யப்பட்டார். உரோ 16:21-இல் வாழ்த் துக் கூறுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் யாசோன் என்பவர் இத்திருமுகம் எழுதப் பட்டபோது கொரிந்து நகரில் இருந்தார். ஆனால், அப்போஸ்தலர் பணியில் கூறப் பட்ட யாசோனும் இவரும் ஒரே ஆளாக இருக்கலாம். அப்படியாயின், அவர் ஒரு யூதராக இருக்க வேண்டும்.

6. உரோமைத் திருச்சபைக்கு வாழ்த்துக் கூறுபவர் (உரோ 16:21). இவர் பவுலுக்கு உடன் உழைப்பாளியும் ''உறவினரும்'' ஆவார். இவரும் 5-இல் குறிக்கப்பெறுபவ ரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

யாதா [JADA - (இறைவன்) அக்கறை கொண்டார்]

இவர் யூதாவைச் சேர்ந்த ஓர் எரகும வேலர். ஓனாமின் மகனும், சம்மாயின் சகோதரனும், எத்தேர் மற்றும் யோனத்தான் ஆகியோரின் தந்தையுமாவார் (1 நாள் 2:28.32).

யாதாய் (JADDAI - அன்புசெய்கிற)

புறவின மனைவியரை விலக்கிடக் கோரப்பட்ட ஓர் இஸ்ராயேலர் (எஸ் 10:43). நெபோ வழிமரபில் வந்தவர்.

யாதுவா (JADDUA - அறியப்பட்ட)

1. மக்களுக்குள் ஒரு தலைவர்; நெகேமி யாவின் தலைமையில் புதிய உடன்படிக் கையில் கையெழுத்திட்டவர் (நெகே 10:21).

2. யோனத்தானுக்கு மகனாகவும் ('யோ னத்தான்' என்ற இச்சொல் 'யோகனான்' என்ற சொல்லுக்குப் பதிலாக தவறுதலாக வந்திருக்கலாம்), எல்யசீபுவுக்கு மூன்று தலைமுறைகளுக்குப் பிறகு தலைமைக் குருவாகவும் இருந்தவர் (நெகே 12:11.22). பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டு இருப் பதன்படி, இவர் தான் கடைசி தலைமைக் குரு. நெகே 12:22-இன்படி பெரிய அலக் சாந்தரால் வெற்றி கொள்ளப்பட்ட பாரசீக அரசன் மூன்றாம் தாரியு கொதொமானுவின் காலத்தில் இவர் தலைமைக் குருவாக இருந்திருக்கலாம்.

யாதோன் (JADON - யாவே ஆள்கிறார்)

கிபயோனிய மெலத்தியாவோடும் கிப யோன் மற்றும் மிஸ்பாவின் ஆட்சுளோடும் நெகேமியக் காலத்தில் எருசலேம் நகரச் சுவர்களைப் பழுது பார்த்த ஒரு மெரொ னோவியர் (நெகே 3:7).

யாத்தனியேல் (JATHNIEL - இறைவன் அருள்வார்)

கோராகிய குலத்தைச் சேர்ந்த ஆலய வாயிற்காவலாளி. மெசலேமியாவின் நான் காவது புதல்வர் (1 நாள் 26:2).

யாத்தான் (JATHAN)

செமாயாவின் மகனும் அனனியாவின் சகோதரனுமாவார் (தோபி 5:13). இவர்கள் தோபியாவின் உறவினர்கள். தன்னோடு எருசலேமிற்குத் தொழுவதற்காக வந்த அனனியாவையும் யாத்தானையும தோபியா அன்புடன் நினைவுகூர்கின்றார்.

யாத்திரை அல்லது புறப்பாடு (EXODUS)

1. இந்தச் சொல் வெளியே போகும் வழி என்று பொருளுடையது. எனவே வெளி

யேறிச் செல்லும் செயலையும், புறப்பாட்டையும் குறிக்கிறது. விவிலியத்தில் எபிரேயர் எகிப்திலிருந்து புறப்பட்டுச் சென்றதைச் சிறப்பாக உணர்த்துகிறது. விரிந்த பொருளில் இச்சொல் நாற்பதாண்டுகளாய் எபிரேயர் செய்த நீண்ட பயணத்தைக் குறிக்கிறது. இப்பயணம் எகிப்திலிருந்து பாலை வழியாக வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு எபிரேயரை இட்டுச் சென்றது. இப்பயணத்தின் பல்வேறு கட்டங்களை விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களில் முக்கியமாக யாத்திரை, எண், உபாகமங்களில் காண்கிறோம். யூதர்களும் கிறிஸ்தவர்களும் சிந்திக்கின்ற படி, இப்பயணம், இறைவன் இனித் தம் மக்கள் சார்பாக ஆற்ற இருக்கும் மீட்புச் செயல்களுக்கெல்லாம் மாதிரியும் பிணையமுமாய் விளங்குகிறது.

2. பழைய ஏற்பாடு

அ) முதல் யாத்திரை:- இவ்யாத்திரையில் இறை மக்கள் தோன்றினர். இத்தோற்றம் இரத்தத்தில் நிகழ்ந்தது (எசே 16:4-7). இந்த யாத்திரையில்தான் இறைவன் இஸ்ராயேலைப் பெற்றெடுப்பார் (உப 32:5-10). ஆபிரகாமுக்குக் காட்டியதை விட மேலான விதத்தில் இஸ்ராயேலுக்கு இறைவன் அன்பும் அக்கறையும் நிறைந்த தந்தையாகத் திகழ்வார் (ஓசே 11:1; எரே 31:9; எசா 63:16; 64:7). இறையன்பின் அடையாளம் என்ற அளவில், யாத்திரை தன்மையாலே, மீட்பின் வாக்குறுதியாகிறது. எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து தம் மக்களை ஒரு முறை மீட்டதுபோன்று, அசீரியாவிலிருந்து ஆபத்தும் பாபிலோனியாவிலிருந்து இடரும் வரும்போது இறைவன் அவர்களைக் காப்பாற்றுவார் (எசா 10:26தொ; மீக் 7:14தொ; எரே 16:14தொ; எசா 63-64; காண்க. சங் 107:31-35; ஞான 19). ஆனால் இறைவன் காட்டிய அக்கறைக்குப் பதிலாக இஸ்ராயேல் காட்டியதெல்லாம் செய்நன்றி மறத்தலே (ஆமோ 2:10; மீக் 6:3 தொ; எரே 2:1-8; உப 32; சங் 106; மேலும், பெரிய வெள்ளிச் சிலுவை ஆராதனையில் பயன்படும் ''என் மக்களே'' என்னும் பாடல்). பாலையில் காட்டப்பட்ட உன்னத வாழ்வில் அவர்கள் பிரமாணிக்கமாய் இருக்கவில்லை (ஓசே 2:16; எரே 2:21).

ஆ) புதிய யாத்திரை:- தங்களுடைய பிரமாணிக்கமின்மையின் விளைவாக அடிமைப்படுத்தப்பட்டுப் பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட மக்களுக்கு யாத்திரையின் புதுப்பித்தலாக விடுதலை அறிவிக்கப்படுகிறது. மீளவும் இறைவன் தம் மக்களை மீட்பார் (எசா 63:16). தளர்ந்து போனவர்களும் ஊனமுற்றோரும் வலிமைபெற்று உறுதியடைந்து யாத்திரைக்கு ஆயத்தம் செய்வர் (எசா 35:3-6; 40:1தொ; 41:10; 42:7-16; செப் 3:18தொ). பாலையிலே அவர்களுக்கு ஒரு வழி அமைக்கப்படும் (எசா 35:8தொ; 40:3; 43:19; 49:11; 11:16). முன்பு, மெரிபாவில் செய்ததுபோல், இறைவன் நீரூற்றுக்கள் பீறிட்டுக் கிளம்பச் செய்வார் (எசா 35:6தொ; 41:18; 43:20; 44:3; 48:21; காண்க. யாத் 17:1-7). பாலைவனம் இன்கனிச்சோலையாக மாற்றப்படும் (எசா 35:7; 41:19). பழங்காலத்தில் செங்கடல் பிளந்து வழிவிட்டது போல், யூப்பிரத்தீசு பிரிந்து புதிய யாத்திரையின் வாகனங்கள் செல்ல வழிவிடும் (11:15தொ; 43:16தொ; 51:10). இறைவன் தம் இறக்கைகளில் இக்குழுவைத் தூக்கிச் செல்வார் (46:3தொ; 63:9; காண்க. யாத் 19:4; உப 32:11); அவர்களுக்கு வழிகாட்டியுமாய் இருப்பார் (எசா 52:12; காண்க. யாத் 14:19).

3. புதிய ஏற்பாடு:-

''ஆண்டவரது வழியை ஆயத்தப்படுத்துங்கள்.... என பாலைவனத்தில்'' ஒலிக்கின்ற கூக்குரலுக்கு உரியவராகத் திருமுழுக்கு யோவானை ஆக்கியதில் (மத் 3:3 இணை; எசா 40:3) கிறிஸ்துவில் செயல்படும் மீட்புப்பணி, யாத்திரையால் முன்னுருவாக உணர்த்தப்பட்ட மீட்பு மறைபொருளின் நிறைவாகும் என்றுகாட்ட அப்போஸ்தோலிக்கப் பாரம்பரியம் விழைகிறது. அதே நோக்கோடு, பாரம்பரியம், உப 18:18-இல் முன்னறிவிக்கப்பட்ட புதிய மோசே இயேசுவைக் காண்கிறது (அ.ப. 3:15.22;5:31;7:35தொ).

அ) புனித பவுல் இக்கருத்தைச் சுட்டிக் காட்டுவதோடு நிறுத்தி விடுகிறார். இயேசுவே நமக்காகப் பலியிடப்பட்ட உண்மையான பாஸ்குச் செம்மறி; (செங்கடலைக் கடத்தல், மன்னா, பாறை போன்ற) யாத்திரையின் வியத்தகு செயல்கள் கிறிஸ்துவால் படைக்கப்படும் ஆன்மீக உண்மைகளின் அடையாளங்களாகும் *(1 கொரி 10:1-6).*

ஆ) புனித பேதுரு, யாத்திரையைத் திருச்சபையின் முன்னிலை நோக்கில் விவரிக்கிறார். கிறிஸ்துவர்கள் மாசுமறுவற்ற செம்மறியின் இரத்தத்தால் மீட்கப்பட்டிருக்கின்றனர் *(1 பேதுரு 1:18தொ; காண்க. யாத் 12:5; எசா 52:3).* இருளிலிருந்து ஒளிக்கு *(1 பேதுரு 2:9; காண்க. ஞான 17-18)* அழைக்கப்பட்டிருக்கின்றனர் *(1 பேதுரு 1:14தொ; காண்க. ஓசே 11:1).* ஒருகாலத்தில் அஞ்ஞானத்தில் வாழ்ந்த ஒழுக்கக்கேடான வாழ்விலிருந்து விடுவிக்கப்பட்டு *(1 பேதுரு 1:14:18; 4:3),* இறைவனின் புதிய மக்களாக மாற்றப்பட்டு *(2:9தொ; காண்க. யாத் 19:6; எசா 43:20தொ),* புனிதத்தின் சட்டத்தால் ஆட்சி செய்யப்படுகின்றனர் *(1 பேதுரு 1:15தொ; காண்க. லேவி 19:2).* கிறிஸ்துவின் இரத்தத்தெளிப்பால் தூய்மையாக்கப்பட்டு, அக்காலத்திலிருந்து இறைவனுக்குக் கீழ்ப்படிய வாக்குறுதி அளித்தனர் *(1 பேதுரு 1:2.14.22; காண்க. யாத் 4:23).* தங்களின் இடைகளை வரிந்துகட்டிக் கொண்டு *(1 பேதுரு 1:13: காண்க. யாத் 12:11)* வானுலகத்திலுள்ள தங்கள் தந்தை நாட்டிற்கு இட்டுச் செல்லும் வழியில் நடந்து செல்ல ஆயத்தமாய் இருக்கிறார்கள் *(1 பேதுரு 1:17).*

இ) புனித யோவான் நீண்ட விரிவான இறையியலைத் தருகிறார். பாஸ்குச் செம்மறியின் இரத்தத்தால் கிறிஸ்துவர்கள் பேயின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் *(யோவா 1:29; 19:36; 8:34தொ; 8:44; 1 யோவா 3:8);* இப்போது விண்ணரசுக்கு இட்டுச் செல்லும் வழியில் சென்றுகொண்டிருக்கின்றனர். அவர்கள் வானின்று இறங்கிய உயிருள்ள அப்பமாகிய கிறிஸ்துவால் உணவு ஊட்டப்பெறுகின்றனர் *(யோவா 6:30-58; காண்க. யாத் 16);* அவருடைய விலாவிலிருந்து புறப்படும் நீரால் தாகம் தீர்க்கப்படுகின்றனர் *(யோவா 7:37தொ; 19:34; காண்க. யாத் 17:1-7);* காயம்பட்டபோது, சிலுவையில் உயர்த்தப்பட்ட கிறிஸ்துவைப் பார்த்துக் குணமடைகின்றனர் *(யோவா 3:14; 19:37; காண்க. எண் 21:4-9).* உலகின் ஒளியான கிறிஸ்துவைப் பின்பற்றி *(யோவா 8:12; காண்க. யாத் 13:21தொ),* அவர்கள் ஒருநாள் தந்தையின் முன்வந்து சேர்வர் *(யோவா 12:26;13:8;14:3;17:24).* உண்மையிலேயே, அவரது உயிர்ப்புக்குப்பின், இயேசு இவ்வுலகைவிட்டுத் தந்தையிடம் செல்லுதலாகிய *(13:1)* கடந்துபோகும் நிகழ்ச்சியைச் செய்துமுடித்த முதல்வராவார். அப்போது ''பூமியின்மேல் உயர்த்தப்பட்டு'' எல்லாரையும் தன்னிடமே ஈர்த்துக்கொள்கிறார் *(12:32).* அவர்கள் குறிக்கப்பட்ட காலத்தில், தங்களது இறுதி யாத்திரைக்கு வந்து சேர்வர். அப்போது இவ்வுலகத்திலிருந்து வானுலகத்திற்குக் கடந்து செல்லுவர்.

4) திருவெளிப்பாடு:- பேதுருவின் முதல் திருமுகத்தில் காணப்படும் கருத்துக்களைக் கொண்டுள்ளது இந்நூல். செம்மறியின் இரத்தத்தால் சாத்தானுக்கு அடிமையான உலகாகிய மண்ணுலகிலிருந்து கிறிஸ்தவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் *(திருவெளி 14:13).* அதன் விளைவாக, யாத் 19:6-இல் இறைவனால் முன்னறிவிக்கப்பட்ட குருக்களின் அரசாக மாறுவார் *(5:9தொ).* இது பழைய உடன்படிக்கையின் புதுப்பித்தலாகும் *(11:19; காண்க. யாத் 19:16).* வேதகலாபனைக் காலத்தில் எழுதப்பட்ட நூலானாலும், திருவெளிப்பாட்டு நூல் ஒரு வெற்றிப் பாடலாக ஒலிக்கிறது. செங்கடல் பற்றிய நினைவுகள் *(திருவெளி 15:3தொ; காண்க. யாத் 14-15),* இறைமக்களின் எதிரிகளை அழிவு மிக நெருங்கிக்கொண்டிருக்கிறது என்னும் சிந்தனையைத் தூண்டுகின்றன. இவ்வெதிரிகள், எகிப்தின் தலைப் பேற்றாண்கள் அழிக்கப்பட்டதுபோல, இறைவனுடைய வார்த்தையால் அழிக்கப்

படுவர் (திருவெளி 19:11-21; காண்க. ஞான 18:14-18). இறைவன் ''அவர் இருக்கிறவர்'' என்றழைக்கப்படுவதாலும், அவர்முன் மற்றப்படைப்புகள் யாவும் ஒன்றுமின்மை யாவதாலும் (திருவெளி 11:17;16:5; காண்க. யாத் 3:14) தம்மக்களிடையே வாழவும் (திருவெளி 15:8), அவர்களுக்கு வெற்றி கொணரவும் வருகிறார். பாஸ்கு இரவுத் திருவிழிப்பில் கிறிஸ்துவர்கள், இக்காலத் தில்கூட, ''அகமகிழ்வதாக'' என்ற பாட லில் யாத்திரை என்னும் வீரக்காப்பியத்தை நினைவுகூர்கின்றனர்.

யாத்திரை ஆகமம் (EXODUS, BOOK OF)

காண்க: விடுதலைப் பயண நூல்

யாத்திர் (JATTIR - மேம்பாடுடைய, உயரியநிலை)

தெபீர் மலைப்பகுதியில் யூதாவைச் சேர்ந்த லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு நகரம் (யோசு 15:48; 21:14; 1 நாள் 6:57). அமலேக்கியரிடமிருந்து தாவீது கொள்ளையடித்திருந்த பொருட்களில் யாத் திர் நகரமும் ஒரு பகுதியைப் பெற்றது (1 சாமு 30:27). இப்போது எபிரோனுக்குத் தென்மேற்காக 21 கி.மீ. தொலைவில் இருக்கும் இக்காலக் கிர்பெத் அத்திர் நகரம் யாத்திர் இருந்த இடமாக அடையாளம் காட்டப்படுகிறது. யூசேபியுவின் கூற்றுப் படி யாத்திர் பைசாந்திய காலத்தில் ஒரு முக்கிய கிறிஸ்தவக் குடியிருப்பாகும்.

யாபால் (JABAL - ஓடை)

இவன் இலாமேக்கின் ஒரு மனைவியான ஆதாவுக்குப் பிறந்தவன். நாடோடி வாழ்க்கை நடத்தி வந்த இடையர் கூட்டம் ஒன்றிற்குக் குலப்பெயர் மூதாதையர் (ஆதி 4:20).

யாபீன் (JABIN - இறைவன் காட்டுகிறார் அல்லது தெளிவாக உணர்கிறார்)

1. ஆட்சோரின் அரசன் யாபீனை யோசுவா வெற்றி கொண்டு கொலை செய்தார் (யோசு 11:1). கானானில் மற்ற இடங்களில் யோசுவா வெற்றி கொண்டதை அறிந்த யாபீனால் அமைக்கப்பட்ட கானா னியக் கூட்டணியினர் கலிலேயாக் கடலின் மேற்கிலும் வடக்கிலும் யோசுவாவை எதிர்த்தனர். கானானியர்கள் குதிரை களோடும், தேர்களோடும் போரிடப் புறப் பட்டனர். ஆனால், இஸ்ராயேலர்களால் மேரோம் நீரோடைக்கருகில் தோற்கடிக்கப் பட்டார்கள். யாபீனின் நகரமாகிய ஆட்சோரைத் தீயால் சுட்டெரித்தனர். மற்றப் பகுதிகள் அழிக்கப்படாவிட்டாலும் இஸ்ராயேலர் அவற்றை ஆக்கிரமித்துக் கொண்டார்கள்(11:1-15).

2. இவன் ஆட்சோர் நகரை ஆண்டு வந்த கானான் நாட்டு அரசன். இவனிடம் இஸ்ரா யேலரை இறைவன் கையளித்தார். அவன் அவர்களைத் துன்புறுத்தினான். அவன் படைத்தலைவன் சீசரா புறவினத்தாரின் நகரான அரோசத்து ககோயிமில் வாழ்ந்து வந்தான். ''யாபீனின் படைத்தலைவன் சீசராவையும் அவன் தேர்களையும், படை கள் அனைத்தையும் கீசோன் ஆற்றங்கரை யில் உன் கையில் ஒப்படைப்போம்'' என்று ஆண்டவர் கூறுவதாக தெபோரா, பாராக் கிடம் உரைத்தாள் (நீதி 4:2.7.17.23-24; சங் 83:9). இவ்விருவர் தலைமையில் இஸ்ரா யேலர் யாபீனின் படைகளைத் தோற்கடித் தனர்.

யாபேசு (JABESH - வறண்ட) - ஆள்

இவர் இஸ்ராயேல் அரசன் சல்லூம் என்பவரின் தந்தை (2 அர 15:10.13-14). யாபேசு என்பது ஒரு தனிப்பட்ட ஆளின் பெயர் அன்று புவியியல் சார்ந்த இடப் பெயராகும் என்று அறிஞர் சிலர் கருது கின்றனர். ''யாபேசின் மகன்'' என்பதற்கு யாபேசு என்ற ஊரைச் சேர்ந்தவன் என்றும் பொருள் கொள்கின்றனர்.

யாபேசு (JABES - வறண்ட) - இடம்

கிலயாதின் முக்கிய நகரம். காண்க. யாபேசு-கிலயாது.

யாபேசு - கிலயாது (JABESH - GILEAD - கிலயாதின் யாபேசு)

யாபேசு என்பது கிலயாது நாட்டிலுள்ள ஒரு நகரமாகும். பென்யமினுக்கு எதிராக

நடத்தப்பட்ட போரில் யாபேசு-கிலயாது பங்கெடுக்கவில்லை (நீதி 19-21). ஆகவே, இஸ்ராயேல் மக்கள் இந்நகரைச் சேர்ந்த கன்னிப் பெண்களைத் தவிர மற்ற எல்லா ஆண்களையும், திருமணமான பெண்களையும் கொன்று குவித்தனர் (நீதி 21:8-12). பின் கொலை செய்யப்படாத நானூறு கன்னிப் பெண்களை அழைத்துக் கொண்டு போய் எஞ்சியிருந்த பென்யமின் குலத்தவர்கள் மணந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியின் வரலாற்றுத் தன்மை சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. ஆனால், யாபேசு-கிலயாதுக்கும் சவுலுக்கும் உள்ள உறவு பற்றிக் கூறும் பொழுது இந்நகரத்திற்கும் பென்யமினுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அம்மோனின் அரசனாகிய நாகசு யாபேசுக்கு எதிராக போரிடத் தொடங்கிய பொழுது, யாபேசு நகரத்திலுள்ளவர்கள் சவுலின் உதவியை நாடினார்கள். சவுல் இஸ்ராயேல் மக்கள் எல்லாரையும் திரட்டிக் கொண்டுபோய் அம்மோனியரை முறியடித்து யாபேசு நகரை மீட்டுக் கொடுத்தார் (1 சாமு 11:1 தொ). இதற்கு நன்றிக் கடனாக பெத்சான் நகர் மதிலில் தொங்கிக் கொண்டிருந்த சவுலின் இறந்த உடலை யாபேசு-கிலயாது மக்கள் எடுத்துக் கொண்டு வந்து அடக்கம் செய்தனர் (1 சாமு 31:11 தொ). யாபேசு-கிலயாது நகர மக்களின் இச்செயலைக் குறித்து தாவீது அவர்களுக்கு நன்றிச் செய்தி அனுப்பினார் (2 சாமு 2:4 தொ). அடக்கம் செய்யப்பட்ட சவுல், அவரது புதல்வர்களின் உடல்கள் கல்லறையிலிருந்து எடுக்கப்பட்டு பென்யமினில் உள்ள கல்லறையில் தாவீதால் அடக்கம் செய்யப்பட்டன (சாமு 21:12 தொ).

யாபேசு-கிலயாதிலிருந்து பெத்சானுக்கு இரவில் மக்கள் நடந்து சென்றார்கள் என்பது இந்நகர் இருந்த எல்லைப் பகுதியைக் குறித்துக்காட்டப் பயன்படுகின்றது. யோர்தான் பள்ளத்தாக்கில் பெத்சானுக்குத் தென்கிழக்கே சில மணி நேரத்தில் நடந்து செல்லக்கூடிய தூரத்தில் இருக்கும் தெல் அபு கராசு அல்லது தெல் ஏல்-மெக்பெரே என்பன யாபேசு-கிலயாது இருந்த இடமாக இருந்திருக்கலாம். எலியாவைத் திசபேயர் என்று அழைப்பது தவறு என்றும் அவரை யபேசியர், அதாவது யாபேசு கிலயாதைச் சேர்ந்தவர் என்று அழைப்பதே சரியென்றும் அறிஞர் சிலர் கருதுவர் (1 அர 17:1 தொ).

யாபோக்கு (JABBOK - ஆற்றொழுக்காகச் செல்கிற)

கிழக்கிலிருந்து யோர்தான் ஆற்றுக்குள் பாயும் கிளை ஆறுகளில் முக்கியமானது. இஃது இப்போது ''நீல ஆறு'' என்று பொருள்படும் எஸ்-செர்கா என்றழைக்கப்படுகிறது. ஏனெனில், இதன் நீர் மிகக் குளிர்ச்சியானதாகும். இஃது (விவிலிய இரபாவாகிய) அம்மானுக்கு வடக்கிலுள்ள ஊற்றிலிருந்து தொடங்கி, முதலில் வடக்காக ஓடி, பின் வடமேற்காகப் படிப்படியாக ஆழமாகும் ஆற்றுக் குடைவுகள் வழியாக ஓடி, (விவிலிய ஆதமாகிய) தெல் எத்-தமியேவுக்கு வடக்கில், சாக்கடலுக்கு வடக்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள இடத்தில் யோர்தானுடன் சேர்கிறது. இதன் மொத்த நீளம் ஏறக்குறைய 80 கி.மீ. ஆகும். இதன் நீர் வேகமாக, ஆனால் ஒரே சீராக ஓடும்.

விவிலியக் காலத்தில், இந்த ஆறு எஸ்போனின் எமோரிய அரசனான சீகோன் நாட்டையும் அம்மோன் மற்றும் பாசான் நாடுகளையும் பிரிக்கும் எல்லையாக இருந்தது. மேலும், இது கிலயாதை இரு பகுதிகளாகப் பிரித்தது (எண் 21:24; உப 2:37; 3:12.16; யோசு 12:2-6; நீதி 11:13.22).

பதான்-ஆராமிலிருந்து யாக்கோபு தன் குடும்பத்துடன் திரும்பியபோது, இந்த ஆற்றைக் கடந்து சென்றார். அப்போதுதான் யாக்கோபு ''ஓர் ஆடவனுடன்'' பொழுது விடியுமட்டும் போராடி, அந்த ஆடவனிடமிருந்து ஆசீரும் இஸ்ராயேல் என்ற புதுப் பெயரும் பெற்றார் (ஆதி 32:22-29).

யாப்பியா [JAPHIA - (இறைவன்) ஒளிரட்டும்] - ஆள்

1. எருசலேமுக்குத் தென்மேற்கேயுள்ள இலாக்கீசின் அரசனே இவன் (யோசு 10:3). யோசுவா தங்கள் நாட்டில் நுழைவதைத் தடுக்க ஒன்று சேர்ந்த ஐந்து அரசர்களில் ஒருவன். இவர்கள் பெத்-கோரோனில் யோசுவாவால் தோற்கடிக்கப்பட்டு (10:3), பின்பு கொல்லப்பட்டனர் (10:22-27).

2. தாவீது எருசலேமின் அரசனானபின் அவருக்குப் பிறந்த மகன் இவர் (2 சாமு 5:15; 1 நாள் 3:7; 14:6). இவரது தாயின் பெயர் கொடுக்கப்படவில்லை. ஒரு வேளை இவள் ஒரு வைப்பாட்டியாக இருந்திருக்கலாம்.

யாப்பியா [JAPHIA - (இறைவன்) ஒளிரட்டும்] - இடம்

செபுலோனின் எல்லை நகரமிது (யோசு 19:13). நாசரேத்துக்குத் தென்மேற்கே 2.5 கி.மீ. தொலைவுக்குள் அமைந்த ''யாப்பா'' இஃது அமைந்த இடமாக இருக்கலாம் என்கின்றனர். பழைய செபக்கூடத்தின் சிதைவுகள் இவ்விடத்தில் காணப்பட்டன.

யாப்பேத்து, எப்பேத்து [JAPHETH - (இறைவன்) பெருகச் செய்வாராக]

நோவாவின் மூன்றாவது மகன் இவர் (ஆதி 5:32;6:10;7:13;9:18). நாடுகளின் அட்டவணையில் யாப்பேத்து, கோமேர், மகோகு, மதாய், யாவான், தூபால், மெசேக்கு, திராசு ஆகியோரின் தந்தையாகக் காட்டப்படுகிறார். இவர்கள் செமித்திய இனத்தவரல்லர்; பெரும்பாலும் கருங்கடல் பகுதியில் வாழ்ந்தவர்கள் (ஆதி 10:1 தொ). யாப்பேத்துக்கு நோவா அளித்ததாகக் கூறப்படும் ஆசீர் அவ்வளவு தெளிவாக இல்லை (ஆதி 9:27). இங்குக் கூறப்படும், செமித்திய மக்களின் பகுதிக்குச், சிறிய ஆசியாவைச் சேர்ந்த செமித்தியர் அல்லாதார் செல்வது, குடியேறிய இயக்கத்தைக் குறிக்கலாம். வரலாற்றில் இத்தகைய நிகழ்ச்சிகள் பல தடவை நடந்துள்ளன. இந்த வரியோடு (9:27) தொடர்புபடுத்தக் கூடிய குறிப்பிட்ட நிகழ்ச்சி இல்லை. யாப்பேத்தும் சேமும் அமைதியான நல்லுறவு கொண்டிருப்பர் என்பதை உணர்த்துகிறது. ஆனால் ''கானான் இவனுக்கு அடிமையாய் இருப்பான்'' எனும் வாக்கியம் மூல வாசகத்தைச் சேர்ந்ததாக இருக்க முடியாது.

யாப்லேற்றியர் (JAPHLETITES)

ஆசேரின் இனத்தைச் சேர்ந்த யாப்லேற்றின் வழித்தோன்றல்கள். இவர்கள் வாழ்ந்த பகுதி கெசேருக்குக் கிழக்கில் எப்பிராயிமின் தென் எல்லையைக் குறிக்க உதவுகிறது (யோசு 16:3).

யாப்லேற்று (JAPHLET - (இறைவன்) விடுவிப்பாராக)

இவர் ஆசேரின் குடும்பத்தைச் சேர்ந்த எபேரின் மகன் (1 நாள் 7:32-33). இவர் யாப்லேற்றியரின் மூதாதையராக இருந்திருக்கலாம். இக்குழுவினரின் பகுதி யோசேப்பு இனத்தின் தென்எல்லையில் அமைந்திருந்தது (யோசு 16:3).

யாப்னவேல் (JHABNEEL - இறைவன் கட்டச் செய்கிறார்)

1. இது யூதாவின் வடக்கு எல்லையில் அமைந்துள்ளது. இது, மத்திய தரைக்கடலுக்கு வடக்கே 6.5 கி.மீ. தொலைவிலும், ஆசோத்தின் வடக்கு, வடகிழக்கில் 14.5 கி.மீ. தொலைவிலுமாக உள்ள இக்கால எப்னவாக இருக்கலாம். இது 2 நாள் 26:6-இல் யாப்னே என்றும், கிரேக்கர்கள் காலத்தில் யாம்னியா (காண்க. 1 மக் 4:15) என்றும் அழைக்கப்பட்டது.

ஊசியா (கி.மு. 783-742) ஆண்ட காலத்தில் பெலிஸ்தியரிடமிருந்து யாப்னே திரும்பவும் கைப்பற்றப்பட்டது (2 நாள் 26:6 தொ). யூதா மக்கபேயர் யாம்னியாவைக் கி.மு. 164-இல் கைப்பற்றி எரித்துவிட்டார்கள். கி.மு. 80-இல் அலக்சாந்தர் யன்னேயுவின் ஆட்சியின்கீழ் இந்த நகரம் இருந்தது.

கி.மு. 63-இல் யாம்னியாவைப் பாம்பே கைப்பற்றினார். சில வருடங்களுக்குப் பிறகு கபினியு அதைப் பழுதுபார்த்து திரும்பவும் கட்டச் செய்தார். கிளியோபத்திராவின் இறப்பிற்குப் பின், இந்நகரை

ஏரோது தன்னுடைய ஆட்சியில் இணைத்துக் கொண்டான். ஏரோது இதை முதலில் தன்னுடைய சகோதரி சாலோமேக்குக் கொடுத்தான்; பின்பு, பேரரசி லீவியாவுக்குக் கொடுத்தான். திபேரியு (கி.பி. 14-37) காலத்தில் அது பேரரசின் அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டது.

உரோமைக்கு எதிரான முதல் கிளர்ச்சிக் குப்பின் யாம்னியா சனத்திரினின் மையமாக விளங்கியது. கி.பி. 100-ஐ ஒட்டி யாம்னியாவில் கூடிய யூகப் பொதுச் சங்கத்தில் யூகப் புனித நூல்கள் பற்றிய வரையறைகள் செய்யப்பட்டன. இவை யூத மற்றும் கிறிஸ்தவ விவிலியத் திருமுறைப் பட்டியலுக்கு முக்கியமானவையாகும்.

2. நப்தலியின் தெற்கில் உள்ள ஓர் ஊர் (யோசு 19:33). இது கலிலேயாக் கடலின் மேற்கிலும், தென் மேற்கிலும், திபேரியாவுக்குத் தென்மேற்கில் 11 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள இக்காலக் கிர்பெத் எம்மாவாக இருக்கலாம். வெண்கலக் காலத்திலிருந்து அராபியர் காலம் வரை இங்கு மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

யாப்னே (JABNEH - அவர் கட்டச் செய்கிறார்)

இது யாப்னவேல் என்ற பெயரின் மற்றொரு வடிவம் (2 நாள் 26:6).

யாமலேக்கு (JAMLECH - (இறைவன்) ஆள்வாராக)

சிமோனின் கோத்திரத்தைச் சேர்ந்த இவர் ஒரு குடும்பத்தின் தலைவர் ஆவார் (1 நாள் 4:34).

யாமின் (JAMIN - வலக்கரம், நற்பேறு)

1. சிமியோனின் புதல்வராகிய இவர் ஓர் இனப்பெயர் முதல்வர் (ஆதி 46:10; யாத் 6:15; எண் 25:12; 1 நாள் 4:24).

2. இவர் யூதாவைச் சேர்ந்தவர். இராமின் மகனும், எரகுமவேலின் வழித்தோன்றலும் ஆவார் (1 நாள் 2:27).

3. எஸ்ரா மக்களுக்குமுன் சட்டத்தைப் படித்துக் காண்பித்தபோது அதனை விளக்குவதற்கு உதவிய லேவியர்களில் ஒருவர் (நெகே 8:7).

யாம்பிரி, இயாம்பிரி (JAMBRI)

யோர்தானுக்கு அப்பாலுள்ள மேதபாவைச் சேர்ந்த கொள்ளைக் கூட்டத்தார் ஆவார். இவர்கள் யூதா மக்கபேயுவின் சகோதரன் யோவானைச் சிறைப்பிடித்துக் கொன்றனர் (1 மக் 9:36). யோவானின் சகோதரன் யோனத்தான் ஒரு திருமண விருந்தின்போது இக்கொலைக்குப் பழி வாங்கினார் (9:37 தொ). இயாம்பிரியர்கள் எமோரியராக இருக்கலாம் (காண்க. எண் 21:30-31).

யாம்னியா (JAMNIA)

யூதாவின் கடற்கரையில் இருந்த ஒரு நகரம். இது மத்தியதரைக் கடலிலிருந்து 6 கி.மீ. தொலைவிலும், எருசலேமிலிருந்து 48 கி.மீ. தொலைவிலும் இருந்தது. இஃது இப்போது எப்னா என்றழைக்கப்படுகிறது. அசமோனியர்களுக்கு எதிராகப் போரிட்ட செலூக்கியப் படைத்தவர்களான கோரிக்கியா (1 மக் 4:15; 5:58), அப்பொல்லோனியு (10:69), கெந்தபேயு (15:40) ஆகியோரின் போர்ச்செயல்களின் மையமாகத் திகழ்ந்தது யாம்னியா. யாம்னியா மக்கள் அங்கு இருந்த யூதர்களை அழித்தொழிக்கத் திட்டமிட்டிருந்ததை அறிந்த யூதா மக்கபேயு, இந்தக் கடற்கரை நகரையும் படையையும் எரித்து அழித்தார் (கி.மு. 165; 2 மக் 12:8-9). யூதாவின் சகோதரன் சீமோன் கி.மு. 142-இல் இதைக் கைப்பற்றினார். கி.மு. 63-இல் பாம்பே யாம்னியாவை விடுவித்துச் சீரியாவோடு சேர்த்து, இதை யாம்னியர்களுக்குக் கொடுத்ததுவரை இந்நகர் யூதர்கள் ஆட்சியிலேயே இருந்தது. உரோமையரிடமிருந்து இஃது ஏரோதின் ஆட்சிக்குள் வந்தது. ஏரோது இதைத் தன் சகோதரி சலோமிக்குக் கொடுத்தார். இவள் இந்நகரைப் பேரரசி யூலியாவுக்கு அளித்தாள். இக்காலம் முழுவதும் இது யூதர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகராகவே இருந்தது. பீலோவின் கருத்துப்படி, இந்நகரில் செங்கல்லால் கட்டப்பட்ட ஒரு பீடத்தை யூதர்கள் அழித்ததுவே,

எருசலேம் ஆலயத்தில் தன்னுடைய பொற் சிலையை அமைக்க காயுவைத் தூண்டியது (கி.பி. 40).

தால்மூது பாரம்பரியப்படி, யூதப் போர்களின் காலத்தில் (கி.பி. 66-70) எருசலேமின் பரிசேயரின் முக்கிய தலைவரான யோகனான் பென் சக்காய் என்பவர், வெஸ்பாசியன் பாளையத்திற்குத் தப்பிச் சென்று, யாம்னியாவில் ஒரு பள்ளியை அமைக்க அனுமதி கேட்டார். கி.பி. 70-இல் எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின் எருசலேம் சனத்திரினின் அதிகாரம் யாம்னியாவிலுள்ள பெத்-தின்னால் (சட்டமன்றம்) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இங்கு யோகனானின் தலைமையின்கீழ் யூதத்துவம், நாட்டின் பேரழிவுக்குப்பின், மீண்டும் அமைக்கப்பட்டது. இவ்வாறு கி.பி. 70-132-இல் யாம்னியா யூதத்துவத்தின் ஆன்மீக மற்றும் அறிவியல் மையமாகத் திகழ்ந்தது. இக்காலத்தில் ராபிகளின் யூதத்துவம் நிறுவப்பட்டது.

யாம்னியாவில் கி.பி. 90-இல் நடந்த சங்கம் யூதத்திருமுறைப் பட்டியலை நிர்ணயித்தது என்று அறிஞர்கள் கருதி வந்திருக்கின்றனர். இத்தகைய சங்கம் கூடியதற்கோ, இத்தகைய குறிப்பிட்ட முடிவுகள் எடுக்கப்பட்டதற்கோ சான்றுகள் தெளிவாக இல்லை என்று அண்மைக்கால ஆய்வுகள் காட்டியுள்ளன. கி.பி. 132-இல் கோக்பாவின் தலைமையில் நடந்த கிளர்ச்சியோடு, யூத மையம் என்ற அளவில் யாம்னியாவின் முதன்மை முடிவுக்கு வந்தது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் யாம்னியா கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகராகத் திகழ்ந்தது. காண்க. யாப்னவேல்-1.

யாயிர் *(JAIRUS - அறிவுடைய, விழித்தெழு)*

1. இயேசு செபக்கூடத் தலைவனான இவரது மகளையே இறந்தபின் உயிர்பெறச் செய்தார் (மாற் 5:21-24.35-43; லூக் 8:40-42.49-56; மத் 9:18-19. 23-26, மத்தேயு யாயிரின் பெயரைக் குறிப்பிடவில்லை).

மூன்று நற்செய்தியாளர்களும் இந்த நிகழ்ச்சிகளை விளக்கும் போது 12 ஆண்டுகளாக இரத்தப்போக்கினால் வருந்திய பெண்ணைப் பற்றிப் பேசுகின்றனர். இவை மூன்றுமே விசுவாசம், 12 வருடம் எனும் பொதுவான இரு உண்மைகளைக் கொண்டிருப்பதோடு, அதனைத் தொடர்ந்துவரும் நிகழ்ச்சிக்கு இஃது ஒரு தயாரிப்பு போலும், முக்கியத்துவத்தை அதிகரிப்பது போலும் தோன்றுகிறது.

மாற் 5:35-36.38.40-இல் பெயர் மீண்டும் மீண்டும் வந்திருக்கலாம்; ஆனால், அவ்வாறு வரவில்லை. இரண்டு முக்கியமான கையெழுத்துப் பிரதிகள் மாற் 5:22-இல் யாயிரின் பெயரைக் குறிப்பிடவில்லை. லூக்கா இந்நிகழ்ச்சியில் பெயரைக் குறிப்பிடுகிறார். இது மூல பாரம்பரியத்தில் இல்லாத ஒரு மரபாகும். அதாவது, முன்னர் மரபில் தெரியாத பெயர்களைப் பிற்காலத்தில் ஆட்களுக்குக் கொடுப்பதாகும். அதன்படியே லூக்காவும் பெயர் கொடுத்திருக்கிறார் எனக் கருதப்படுகிறது.

மத்தேயு நற்செய்தியில் 10 புதுமைகளில் ஒன்றாக மிகச் சுருக்கமாக வருகிறது. லூக்காவும் மாற்கும் தராத சில தகவல்களோடு நிகழ்ச்சியைத் தருகிறார். மாற் 5:41 இல் இயேசு, ''தலித்தாகூம்'' அதாவது, ''சிறுமியே உனக்குச் சொல்கிறேன் எழுந்திரு'' என அரமேய மொழியில் கூறுவதாகக் காட்டுகிறார். ஆனால் மத்தேயுவும், லூக்காவும் இந்த அரமேயச் சொல்லை எடுத்தாளவில்லை. லூக்கா, ''சிறுமியே எழுந்திரு'' எனவும், மத்தேயு ''கையைப் பிடித்துத் தூக்கி விட சிறுமி எழுந்தாள்'' எனவும் கூறுகின்றனர். அ.ப. 9:36-43-இல் பேதுரு 'தபீத்தா' எனும் பெண்ணை உயிர் பெறச்செய்வதும், இச்சிறுமியை உயிர் பெறச் செய்வதும் ஒன்றுபோல் உள்ளதைப் பலர் குறிப்பிட்டுக் காட்டுகின்றனர்.

''யாயிர்'' என்பதன் எபிரேயப் பொருள் 'அவன் விழித்தெழுவான்' என்பதால் இதிலிருந்து இந்நிகழ்ச்சி ஒரு கட்டுக்கதையாக இருக்க முடியாதெனத் தெரிகிறது.

நற்செய்தி விளக்கவுரையாளர்கள் சிறுமி மயக்கநிலையில் இருந்தாளேயொழிய சாக வில்லை எனக் கருதுகின்றனர். ஆனால் நற்செய்தியாளர் வேறுசிலர் 'சிறுமி தூங்கு கிறாள்' என்பதை அப்படியே எடுத்துக் கொள்ளவில்லை. அவ்வாறெனில் அஃது அருஞ்செயலாகாது. ''உயிர் மூச்சு திரும்பி வரவே, அவள் உடனே எழுந்தாள்'' என்று லூக்கா கூறி, உயிர் பெறுவதைச் சுட்டிக் காட்டுகிறார். எஃது எவ்வாறு இருப்பினும் மூன்று நற்செய்தியாளர்களும், இயேசு ஓர் அருஞ்செயலைச் செய்தார் என்பதைக் காண் பிக்க விரும்புகின்றனர் என்பது தெளிவு.

2. மொர்தக்காயின் தந்தை (எஸ்த 11:2). காண்க. யாயீர்-4.

யாயீரியர் (JAIRITE)

இது தாவீதின் குருவாக இருந்த ஈராவைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்ட இனப் பெயராகும் (2 சாமு 20:26). இவர் கிலயாதில் வாழ்ந்து வந்த மனாசே யின் மகன் யாயீரின் வழித்தோன்றல் (எண் 32:41; உப 3:14). எழுபது நூலையும் சில வாசகங்களையும் பின்பற்றி யாயீரியருக்குப் பதிலாக யாத்திரியா அதாவது யாத்திரின் குடிமகன் என்று இருக்க வேண்டும் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர் (எ.கா. 1 சாமு 30:27; காண்க. 2 சாமு 23:38: இத்ரியரான ஈரா).

யாயீர் [JAIR - (இறைவன்) ஒளிர்வாராக அல்லது பொங்கியெழுவாராக]

1. மனாசேயின் புதல்வர்களுள் ஒருவ ரான யாயீர் ஒரு இனப்பெயர் முதல்வர் (2 சாமு 20:26). இவர் அர்கோபு நாட்டி லுள்ள கிலயாதின் கிராமங்களை ஆட் கொண்டார் (எண் 32:41; உப 3:14; யோசு 13:10; 1 அர 4:13). 1 நாள் 2:22-இல் இவர் யூதாவைச் சேர்ந்தவர்; செகுபுவின் மகனும், எட்சரோனின் பேரனும் ஆவார். இவரது பாட்டி, மனாசேயைச் சேர்ந்த மாக்கிரின் புதல்வியாவாள். யாயீர் என்ற பெயர் ஓர் இடப் பெயராகவும் இருக்க லாம். அர்கோபு அல்லது கிலயாதைச் சேர்ந்த பத்து நகரங்களான அவ்வோத்து யாயீரோடு தொடர்புடையதாக இருக்க லாம்.

2. கிலயாதைச் சேர்ந்த இவர் இஸ்ராயே லில் 20 ஆண்டுகள் நீதி வழங்கினார் (நீதி 10:3.5); இவரது புதல்வர்களும் 40 நகரங் களைக் கொண்டிருந்தனர். இவரும் ஒன்றில் குறிக்கப்பட்டவரும் ஒரே ஆளைக் குறிக்க லாம். இவர் காமோனில் அடக்கம் செய்யப் பட்டார்.

3. எல்கனானின் தந்தையான யாயீர் 1 நாள் 20:5-இன்படி கோலியாத்தின் சகோதர னான இத்தியர் இலகுமியைக் கொன்றவர் ஆவார். 2 சாமு 21:19-இன்படி இவரே கோலியாத்தைக் கொன்றார் என்று கூறப் படுகிறது. இங்கு இவர் யகரே ஓர்கிம் என்று குறிப்பிடப்படுகிறார். இது பிரதி எடுத்தவரின் தவறாக இருக்கலாம்.

4. பென்யமின் குலத்தைச் சேர்ந்த இவர் 1-இல் குறிப்பிடப்படும் யாயீரின் உறவின னாக இருக்கலாம். இவர் எஸ்தரின் பாது காவலரான மொர்தக்காயின் மூதாதையர் ஆவார் (எஸ்த 2:5).

யாரா (JARAH - தேன் கூடு)

இவர் சவுலின் வழித்தோன்றல்களில் ஒருவர். இவர் ஆகாசின் புதல்வனும் ஆலமேத்து, அசமாவேத்து, சிம்ரி ஆகியோ ரின் தந்தையும் ஆவார் (1 நாள் 9:42). 1 நாள் 8:36-இல் இவர் யோகதா என்றழைக்கப்படுகிறார்.

யாரிபு (JARIB - அவர் எதிர்த்துப் போராடு வாராக)

1. 1 நாள் 4:24-இன்படி இவர் சிமியோ னின் மகன். ஆனால் ஆதி 46:10; யாத் 6:15; எண் 26:12-இல் இவர் யாக்கின் என்றழைக்கப்படுவதால் இப்பெயர் எழுத் தர்களின் தவறாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

2. எஸ்ரா ஆலயப் பணியாளர்களைச் சேகரிக்க பாலஸ்தீனத்துக்கு வருவதற்கு முன், அவருக்கு உதவிய தலைவர்களில் ஒருவர் (எஸ் 8:16).

3. எஸ்ரா, அன்னிய மனைவியை விட்டு விடுமாறு கட்டாயப்படுத்திய ஒரு குரு (எஸ் 10:18).

யாரேது, எரேது (JARED - கீழே போதல்)

சேத்தின் குடும்ப முதுபெரும் தந்தையர்களில் ஒருவரான யாரேது பெரும் வெள்ளத்துக்கு முந்தியவர். இவர் ஏனோக்கின் தந்தை (ஆதி 5:15-20; 1 நாள் 1:2; லூக் 3:37). ஆதி 5:20-இன்படி இவர் 962 ஆண்டுகள் வாழ்ந்தார். காண்க. எரேது, ஈராது.

யாரேபு (JAREB - எதிரி)

ஓசே 5:13;10:16-இல் உள்ள ஓர் அரசனின் பெயர் எனக் கொள்ளலாம். அசீரிய அரசனுக்கான மாமன்னன் எனும் அடைமொழியைக் குறிப்பதாகவே இதனைக் கொள்வது சரியானது. இச்சொல் ஓர் அடைமொழியென்பது சரி.

யாரோவாகு (JAROAH - மென்மையான)

இவர் காத்தின் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் பாசானில் வாழ்ந்தவர். இவர் கிலயாதின் மகனும் ஊரியின் தந்தையுமாவார் (1 நாள் 5:14).

யார்கா (JARHA)

இவர் எரகுமவேலியரான சேசானின் எகிப்திய அடிமையாவார் (1 நாள் 2:34). சேசானுக்கு ஆண் பிள்ளைகள் இல்லாததால் வாரிசு உண்டாக்க யார்காவுக்குச் சேசான் தன் பெண்ணை மணமுடித்து வைத்தார் (2:35; காண்க. யாத் 21:4).

யார்முத்து (JARMUTH - உச்சி, முடி)

1. இது யூதாவின் செபேலாப் பகுதியில் அமைந்துள்ள ஒரு நகரம் (யோசு 15:35). சகரியேவுக்கு அருகில் ஏலாப் பள்ளத்தாக்கில் பெத்லகேமுக்கு மேற்கில் 24 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலக் கிர்பெத்-யார்முக்காக அடையாளம் காட்டப்படுகிறது. இது எளிதில் தற்காத்துக் கொள்ளும் வகையில் ஒரு குன்றின் மேல் அமைந்திருந்தது. எலுத்தெரோபோலிக்கு (இக்கால இப்ரின்) வடக்கு வடகிழக்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள இடமாக இதை யூசேபியு குறிப்பிடுகிறார். இங்குச் சுவர்களும், வெண்கல மற்றும் இரும்புக் காலத்திய பாண்டத் துணுக்குகளும் கிரேக்க, பைசாந்தியர் காலத்திய பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கானானிய அரச நகரங்களின் ஒன்றான இது, யோசுவா உட்புகுவதைத் தடுக்க முயற்சித்தது (10:3-27; 12:11). பின்னர், இதனுடன் கூட்டுச் சேர்ந்த பிற அரசர்களும் தோற்கடிக்கப்பட்டதால் இதன் அரசனும் தோற்கடிக்கப்பட்டு மக்கேதாவில் கொல்லப்பட்டான் (10:3.5.22; 12:11). பின்னர் சோர-அசேக்காவின் செபேலோ மாநிலத்தின் ஒரு பகுதியாகியது (15:35). பிற்காலத்தில், பாபிலோனிலிருந்து திரும்பிய யூதர்கள் இப்பகுதியில் வாழ ஆரம்பித்தனர் (நெகே 11:29).

இங்குக் கண்டெடுக்கப்பட்ட கி.மு. 1365-ஐச் சேர்ந்த ஆப்பு எழுத்து ஏடுகள், கொள்ளையர் தலைவர் ஒருவனால் இந்நகரம் ஆளப்பட்டதாகவும், அவன் எகிப்தியருக்கு மட்டுமே பொறுப்பானவனாக இருந்தான் என்றும் கூறுகிறது.

2. இஸ்ஸாக்கு இசக்காரில் உள்ள ஒரு லேவியர் நகரம் (யோசு 21:29). 1 நாள் 6:73-இல் வரும் இராமோத்தும் அல்லது யோசு 19:21-இல் வரும் இரமேத்தும் இந்த யார்முத்தும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். இது பெத்சானுக்கு வடக்கில் 11 கி.மீ. தொலைவிலுள்ள இக்காலக் கோகாபு ஏல்-காவா ஆகவோ விவிலிய ஏன்-கன்னீமாகிய எனினினுக்குத் தெற்கில் 17 கி.மீ. தொலைவிலுள்ள எர்-இராமேயாகவோ அடையாளம் காட்டப்படுகிறது.

யாலா (JAALA - பெண் மலையாடு)

அடிமைத் தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பி வந்தவர்களில் சாலமோனின் ஊழியர்களில் ஒருவர். குலப்பெயர் மூதாதையர் (நெகே 7:58). இவர் எஸ் 2:56-இல் யாலாகு என்றழைக்கப்படுகிறார்.

யாலாகு (JAALAH - பெண் மலையாடு)

இது யாலா (நெகே 7:58) என்ற பெயரின் மற்றொரு வடிவம் (எஸ் 2:56).

யாலாம் *(JALAM - இளைஞன்)*

ஏதோமிய குலப்பிரிவொன்றின் தலைவனான இவர் ஏசாவுக்கும் ஒகோலிபாமாவுக்கும் பிறந்தவர் (ஆதி 36:5.14.18; 1 நாள் 1:35).

யாலோன் *(JALON - யாவே ஒய்வெடுத்தார்)*

யூதா இனத்தைச் சேர்ந்த எஸ்ராவின் புதல்வர் (1 நாள் 4:17).

யாவான் *(JAVAN - களிமண்)*

ஆதி 10:2.4; 1 நாள் 1:5.7; எசா 66:19; எசே 27:13; தானி 8:21; 10:20: 11:2; யோவே 4:6; செக் 9:13-இவைகளில் யாவானின் வழித்தோன்றல்களைப் பற்றியும் அவர்களின் நாடுகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இவர் நோவாவின் புதல்வனாகிய யாப்பேத்து என்பவரின் நான்காவது புதல்வர் (ஆதி 10:1-2). இவர் எலீசா, தர்சிசு, கித்திம், தோதானீம் என்பவர்களின் தந்தை யாவார் (ஆதி 10:4; 1 நாள் 1:5.7). யாவான் என்ற பெயர் யாவானின் வழியாக யாப்பேத்தின் வழிவந்தவர்களையும், அவர்கள் தங்கியிருந்த மேற்கு நாடுகளையும் குறிக்கின்றது (ஆதி 10:5).

தொலைதூர நாடான யாவான் இறைவனின் மாட்சிமையைக் காணும் என்று எசாயா கூறுகிறார் (எசா 66:19). யாவானியர்களின் மக்கள் (கிரேக்கர்கள்) பெனிசியர்களிடமிருந்தும், பெலிஸ்தியர்களிடமிருந்தும் யூத அடிமைகளை விலைக்கு வாங்கி விற்கும் வியாபாரிகள் என்று யோவே 4:6 குறிப்பிடுகின்றது. யாவானியர்களின் அடிமை வியாபாரத்தைப் பற்றியும், மற்ற வியாபாரத்தைப் பற்றியும் தீர் நகரின் வீழ்ச்சியைப் பற்றிய புலம்பலில் குறிப்பு காணப்படுகிறது (எசே 27:13). செக் 9:13-இன்படி, சீயோனின் மக்களாகிய யூதாவும் எப்பிராயிமும் யாவான் மக்களுக்கு (கிரேக்கர்கள்) எதிராக கடவுளின் போர் வீரர்களாகப் பணியாற்றுவார்கள். தானியேல் நூலில் காணப்படும் கிரேக்க அரசன் (8:21), இளவரசன் (10:20), யாவான் அரசு (4:2) முதலியவை கிரேக்க-மாசிதோனியப் பேரரசைக் குறிப்பதோடு, சிறிய ஆசியாவில் உள்ள அயோனியக் குடியேற்றத்தையும் யாவானியர்களையும் ஒன்றுபடுத்துகின்ற கருத்தையும் பிரதிபலிக்கிறது.

எபிரேய விவிலியத்தில் எசே 27:19-இல் யாவானியர்கள் தீர் நகரத்தோடு வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிலர் யாவான் என்பது ஒரு கிரேக்கர்களின் குடியிருப்பு அல்லது அராபியாவிலுள்ள ஓர் அராபிய இனம் என்று கூறுகிறார்கள். அசீரிய ஆவணங்களிலும், தாரியு காலத்து ஆப்பு எழுத்துப் பொறிப்புகளிலும், இரண்டாம் ராமசேசின் காலத்திலிருந்து எகிப்திய ஆவணங்களிலும் அயோனியர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

யாவே *(YAHWEH)*

யாவே என்ற பெயர் கடவுள் தனக்குத் தானே கொடுத்துக் கொண்டது. இதனால் கடவுள் இந்த ஒரே வழியில்தான் தன்னை வெளிப்படுத்த வேண்டுமென்பதன்று. ஏனெனில், இஸ்ராயேலுக்கு வெளியிலும் கடவுள் யார் என்பதை மனிதன் அறிந்து கொள்ள முடிந்தது. கடவுள் தன்னையே மற்றச் சமயங்களில் ''ஏல் எலியேன்'' என்ற பெயரால் அழைக்கும்படி வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால், யாவே என்ற பெயரால் அவரை வெளிப்படுத்திக் கொண்டதில் சிறப்பம்சம் இருக்கிறது. அவரே இப்பெயரை முதலில் உச்சரித்தது, இந்தப் பெயரை அறிவித்ததால் அவர் யார் என்பதை வெளிப்படுத்தியது என்பன மட்டுமல்ல, அந்தப் பெயர் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களது செபங்களிலும் வழிபாடுகளிலும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. அதற்குரிய பொருளையும் அவரே கொடுக்கிறார் (யாத் 3:13-15; 34:6). இந்தப் பெயருக்கு ஓர் ஆழமான பொருளும், அது கொணர்ந்த மீட்பையும் குறிக்கும் ஒரு பின்னணியில் இப்பெயர் தரப்பட்டது. 'ஏல்' என்ற பெயர் மூதாதையர்கட்கு அவர்களது சொந்த நாட்டிலே சாதாரண சூழ்நிலையிலே உணர்த்தப்பட்டது. ஆனால் 'யாவே' என்ற பெயரையோ பாலைவனத்தில் மோசேக்குக் கடவுள்

நெருப்பு வடிவில் வந்து வெளிப்படுத்து கிறார். ஆனால், இக்கடவுள் பரிவும், இரக்கமும் உடையவராதலால்தான் தம் மக்கள்படும் துயரங்களையும், சுமைகளை யும் கண்டு அவர்கள் குற்றங்களை மன் னித்து அவர்களுக்குச் செவிமடுக்கிறார் (யாத் 34:6; 3:7).

யாவே என்ற பெயர், அதன் தோற்றம், பொருள், அது பிற்காலத்தில் பயன்படுத்தப் பட்ட முறை ஆகியவைபற்றிக் காண்க. விடுதலைப் பயணநூல்: சிறப்புக் கருத்துக் கள்: 4) இறைவனின் திருப்பெயர்.

யாவேல் (JAEL - மலை வெள்ளாடு)

இவள் இஸ்ராயேலர்களிடம் தோல்வி யுற்று யாவேலின் கூடாரத்துக்கு வந்த கானானியப் படைத்தலைவனைக் கொன் றாள் (நீதி 5:2-31). கேனிய இனத்தைச் சேர்ந்த இவள் நாடோடி இனத்தவரைப் போலவே சீசராவை உபசரித்து, தாகத் துக்குப் பால் கொடுக்கிறாள். அவன் அதனை எடுத்துக் குடிக்கும்போது யாவேல் அவனைக் கொன்றிருக்க வேண்டும். ஆனால் (நீதி 4:17-22), மற்றொரு பகுதி இவனைத் திட்டமிட்டு யாவேல் கொலை செய்வது போல் வேறுவிதமாகக் காட்டி யுள்ளது. இது பாடலின் உட்கருத்தைத் திசை திருப்புவதாக உள்ளது.

யாவேலைக் கேனிய எபேரின் மனைவி யாக (5:24) நீதி 4:17-ஆம் பாடலில் புகுத்தியிருக்கலாம். எபேரின் மனைவியின் சில வீரச்செயல்கள் யாவேலுடையதாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம். யாவேல் ஒரு கேனியப் பெண்; கேனியர் அன்றைய யூதா நாட்டினருடன் நட்புறவுடன் திகழ்ந்தவர் கள் (நீதி 1:16). போர் நடந்த இடத்தையும், யூதாவின் கோத்திரம் போரிட்டவைகளில் ஒன்றாகத் தரப்படவில்லை என்பதையும் கருத்தில் கொண்டால் யாவேல் வட பகுதியைச் சேர்ந்தவள் என்று கருத இட மிருக்கிறது.

பொதுவாக நீதி 5:6-இல் குறிப்பிடப் படும் யாவேல் வரலாற்றளவிலும், இப் பாட்டளவிலும் கேள்விக்குரிய ஒரு பாத்திர மாகவே இருக்கிறாள்.

யாழ், வீணை (HARP, LUTE, LYRE)

இவை நரம்பிசை இசைக் கருவிகளாகும். இவை விவிலியத்தில் தெளிவாக விவரிக் கப்படவில்லை. மொழிபெயர்ப்புகளும் ஒரே சீரான சொற்களைப் பயன்படுத்த வில்லை. காண்க. இசைக் கருவிகள்.

யானாய் (JANAI - யாவே பதில் அளிப் பாராக)

இவர் பாசானில் வாழ்ந்து வந்த காத்தின் வழித்தோன்றல் (1 நாள் 5:12).

யானிம் (JANIM - தூங்குகிற)

யூதாவின் மலைப்பாங்கான எபிரோன் நாட்டில் உள்ள யூதாவின் கிராமங்களில் ஒன்று; எசான் மற்றும் பெத்-தப்புவாகு சுற்றுவட்டாரத்தில் இருந்தது (யோசு 15:53). எபிரோனுக்குக் கிழக்கே 6 கி.மீ. தொலை வில் உள்ள பெனி நயிம் ஆக இஃது இருக்க வேண்டும்.

யானை (ELEPHANT)

இந்திய வகை, அதைவிடப் பெரிய ஆப்பிரிக்க வகை என இருவகை யானை கள் உண்டு. இந்திய வகை பழக்கப்பட்ட தாகும். ஆண் யானையின் தந்தத்திற்காக யானை பெரிதும் மதிக்கப்பட்டது. இந்திய யானைகளின் பிறப்பிடம் இமாலய மலை யடிவாரம் முதல் சுமத்திராத் தீவு வரையி லுள்ள தென்கிழக்கு ஆசியாவாகும். இங் கிருந்து ஆசியாவின் பல பகுதிகளிலும் யானைகள் பரவியிருக்கவேண்டும். கி.மு. 15-ஆம் நூற்றாண்டில், வடசீரியாவில் யானைகள் வேட்டையாடப் பட்டதாக அசீரிய, எகிப்திய மூலங்கள் குறிப்பிடுகின் றன. 8-ஆம் நூற்றாண்டில் மூன்றாம் திகலத் பிலேசருக்கு அளிக்கப்பட்ட கொடைகளில் யானைத்தோலும், தந்தமும் குறிக்கப்படு கின்றன. நாகரிகமும் தந்தத்தின் தேவையும் வளர வளர, யானைகளின் எண்ணிக்கை குறைந்து, காலப்போக்கில் மேற்காசியா வில் யானைகள் மறைந்து போயின. பழைய ஏற்பாட்டில் யானைகள் குறிக்கப்

படாமையை இது விளக்கலாம். ஒரு வேளை, யூதாவைச் சேர்ந்த எசேக்கியா கி.மு. 701-இல் சனகெரிபுக்கு அனுப்பிய யானைத்தோல்களும், தந்தப்பதிப்புகளும் எத்தியோப்பியா அல்லது எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக இருக்கலாம். கிரேக்கர்கள் போரில் யானையைப் பயன் படுத்த அறிந்திருந்தனர். கிரேக்கர்களுக்கு எதிரான யூதர்களின் விடுதலைப் போரில், 5-ஆம் அந்தியோக்கு யுபாத்தோர் யானை களைப் பயன்படுத்தினான் (1 மக் 3:34; 6:30.45-47).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இந்திய யானைகளின் தந்தம் தரை வழியாகவோ, பெனிசியர்களின் கப்பல்கள் வழியாகவோ ஆசியாவிலிருந்து பாலஸ்தீனத்திற்கும் அதைச் சுற்றியுள்ள நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. சாலமோனின் தர்சிசு கப்பல்படை ஆப்பிரிக்கத் தந்தத்தை இறக்கு மதி செய்திருக்கலாம் (1 அர 10:22 இணை). அதைக் கொண்டு சாலமோன் தன் அரண் மனையை அழகுபடுத்தினார் (10:18). இவ்வாறே வட அரசின் அரசர்களும் உயர் குடி மக்களும் செய்தனர் (22:39; ஆமோ 3:15; 6:4). காண்க. தந்தம்.

யானோவாகு (JANOAH - ஓய்வு எடுக்கும் இடம்)

1. எப்பிராயிமின் வட எல்லைப் புற நகரம் இது (யோசு 16:6-7). இது செக்கே முக்குத் தென்கிழக்கே 11 கி.மீ. தொலை வில் அமைந்த கிர்பெத் யாமுன் எனும் இடமாக அடையாளம் காட்டப்படுகிறது.

2. அசீரிய அரசன் திகிலத்பிலேசர் பிடித்த வட கலிலேய நகரங்களில் ஒன்று (2அர 15:29). இஃது அமைந்த இடம் தெளிவாக இல்லையெனினும் ஆபல்-பெத்-மாக்கவுக்கும், காதேசுக்கும் இடையில் இருக்கும் தெல் ஏன்-நயிமே ஆக இருக்க லாம் என்று கருதப்படுகிறது (யோசு 13:37).

யு, யூ

யுஸ்து (JUSTUS - *நேர்மையான, நீதியான*)

(1) இது யோசேப்பு பர்சபாவின் சிறப்புப் பெயராகும். பன்னிரு அப்போஸ்தலர்களில் யூதாசு இஸ்காரியோத்து இருந்த இடத்தை நிறைவு செய்ய மத்தியா, யுஸ்து ஆகிய இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று சீட்டுப் போட்டு மத்தியாவைத் தேர்ந்தெடுத்தார்கள் *(அ.ப. 1:23.)*.

(2) அ.ப. *18:7*-இன்படி தித்திய யுஸ்து கடவுளுக்கு வழிபாடு செலுத்துகிறவர். கொரிந்து நகரக் கிறிஸ்தவர்களைச் செபக் கூடத்திலிருந்து தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார். பவுல் தங்குவதற்கும், சபையினர் கூடுவதற்கும் இடமளித்த காயு (உரோ *16:23*) என்பவராக இருக்கலாம்.

(3) யுஸ்து எனப்படும் இயேசு (கொலோ *4:11*). விருத்த சேதனம் பெற்றவர்களில் இவர்தான் பவுலோடு இணைந்து கடவுளுடைய அரசுக்காக உழைத்தவர். இவர் பவுலுக்கு ஆறுதலாக இருந்தவர்.

யூக்கால் (JUCAL - *யாவே வல்லவர்*)

செதேக்கியாவின் அவையிலிருந்த செலேமியாவின் மகன். இறைவாக்கினர் எரேமியாவின் எதிரி. எரேமியாவைப் பாழுங் கிணற்றில் தள்ளிக் கொல்ல யூக்கால் முயற்சி செய்தார் (எரே *38:1-6*). எரே *37:3*-இல் இவர் எகுக்கால் என்று அழைக்கப்படுகிறார்.

யூசபு-கெசேது (JUSHAB - HESED - *நிலையான அன்பு பலன்பெறும்*)

செருபாபேலின் புதல்வன் (1 நாள் *3:20*).

யூசேபியு (EUSEBIUS)

செசரியாவின் ஆயர், பெருமளவு எழுதிய வரலாற்று ஆசிரியர், விவிலிய அறிஞர், கிறிஸ்தவக் காப்புரையாளர். அலக்சாந்திரியப் பாரம்பரியத்தில் பம்ப்பிலியு என்ற மூப்பரிடம் பயிற்சி பெற்றவர். அதனால் யூசேபியு பம்ப்பிலியு என்றும் அழைக்கப் பட்டார். வாசக-ஆய்வுகளில் ஆற்றல் பெற்றிருந்தார். அதனால் கான்ஸ்டண்டையின் பேரரசன் கீழ் எழுத்தாளராகப் பணி புரிந்தார். இவருடைய 10 பகுதிகள் அடங்கிய ''திருச்சபையின் வரலாறு'' என்ற நூல், அப்போஸ்தலர் காலத்திலிருந்து கி.பி. 323 வரையிலுள்ள திருச்சபை வரலாற்றை எடுத்துரைக்கிறது. அதில் காணப்படும் எடுத்துக் காட்டுகளும், விரிவுரைகளும், பழங்கால நூல்களின் பகுதிகளைக் காத்து நிற்கின்றன. இல்லையெனில் அவை மறைந்து போயிருக்கும். அவரது ''நாளேடு'' என்ற நூல் பழங்கால மேற்காசிய, கிரேக்க, விவிலிய வரலாறு ஆகியவற்றின் ஒப்புமைக் காலக் கணிப்பைக் கொண்டுள்ளது. இவர் விரிவான விவிலிய விளக்கவுரைகள் எழுதியிருந்தாலும், விவிலிய ஆய்வுக்கு இவர் அளிக்கும் முக்கியமான நூல்கள், விவிலிய இடங்களின் பட்டியலைக் கொண்ட ''ஒனோமாஸ்டிக்கோன்'' என்ற நூலும், நற்செய்திகளின் இணையான பகுதிகளைச் சுட்டிக்காட்டும் திட்டம் அடங்கிய யூசேபியசின் திருமுறைப்பட்டியலும் ஆகும்.

யூதத்துவம் (JUDAISM)

இது யூதர்களின் விசுவாசமும் வாழ்க்கை முறையும் ஆகும். இந்தச் சொல் கோட்பாடுகளைக் குறிக்கவில்லை. மாறாகக் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரோடு, உடன்படிக்கை உறவு கொண்ட யூதசமூகத்தின் முழு வாழ்க்கை முறையைக் குறிக்கிறது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதர்களிடையே நம்பிக்கையிலும், வாழ்க்கை முறையாலும் வேறுபட்டிருந்த குழுக்களைக் காணலாம். அவர்களில் பரிசேயர்கள், சதுசேயர்கள், தீவிரவாதிகள், எஸ்ஸேனியர் ஆகியோர் அடங்குவர். ஆனால், எல்லாப் பிரிவினரும் இஸ்ராயேலின் கடவுளை ஒரே கடவுளாக ஏற்று, சட்டத்தையும் ஏற்றுக்கொண்டார்கள்.

யூதப்பெண் (JEWESS)

இச்சொல் விவிலியத்தில் ஒரே ஒரு தடவை பயன்பட்டுள்ளது. பெலிக்சுவின்

மனைவி துருசில்லா ஒரு யூதப்பெண் என்று குறிக்கப்படுகிறாள் (அ.ப. 24:24). திமொத்தேயுவின் தாய் ''யூத இனத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவப் பெண்'' என்று குறிக்கப்படுகிறாள் (16:1). பித்தியாவிடமிருந்து, மெரேதுவின் மற்றொரு மனைவியை வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு ''அவரின் யூத மனைவி'' என்று கூறப்பட்டுள்ளது (1 நாள் 4:18). ''யூதப்பெண்'' என்று பொருள்படும் யூதித்து ஏசாவின் மனைவியும், இத்தியனான பெயேரியின் மகளும் ஆனவளின் பெயராகும்; யூதித்து நூலின் கதைத் தலைவியின் பெயருமாகும்.

யூதராக்குதல் (JUDAIZING)

அந்தியோக்கியாவில் பேதுரு புறவினத்தாரோடு சாப்பிட மறுத்ததைப் பவுல் கண்டிக்கின்ற சமயத்தில் பயன்படுத்தப்படுகிறது இச்சொல் (கலா 2:14). புறவினத்தார்கள் யூதச் சட்டங்களை ஏற்றுக் கொண்டிருந்தால் பேதுரு அவர்களோடு உணவருந்தியிருப்பார். புறவினத்தாரை யூதர்களைப் போல வாழ வேண்டும் என்று பேதுரு தனது நடத்தையால் கட்டாயப்படுத்துவதாகத் தெரிகிறது. இன்னும் சில இடங்களில் இந்தக் கிரேக்கச் சொல் பயன்படுத்தியிருக்கின்ற இடத்தில் இதுதான் பொருள்.

யூதர்களுக்குப் பயந்து அனேக புறவினத்தார் மக்கள் யூதச் சட்டங்களை ஏற்றுக் கொண்டு அவர்களைப் போல் வாழ்ந்தனர் (எஸ்த 8:17).

இச்சொல் பயன்படும் ஒவ்வொரு பகுதியும் முறைப்படி வாழுகின்ற புறவினத்தாரையே குறிக்கின்றது. யூதர்களோடு ஒத்துணர்வுகொள்வதும், அவர்களைப் பின்பற்றுவதும் அதற்குப் பொருளன்று; யூதர்களைப் போல் வாழ்வதுதான் அந்தச் சொல்லுக்குப் பொருள். மோசேயின் சட்டத்தை யூதப் பழக்கவழக்கங்களோடு ஏற்றுக் கொண்டார்கள்.

புறவினத்தாரை யூதர்களைப்போல் வாழக் கட்டாயப்படுத்தும் பொழுது, அவர்கள் கிறிஸ்தவத்தையே விட்டுவிடுவதற்கு வழி வகுக்கும் என்று பவுல் கூறினார். அந்தியோக்கியாவிலும், எருசலேமிலும் யூதேயாவிலிருந்து வந்த சிலர் ''மோசேயின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்து கொள்ளாவிட்டால் மீட்படைய முடியாது'' என்றார்கள். புறவினத்தார் விருத்த சேதனம் பெற வேண்டும், மோசேயின் சட்டத்தைப் பின்பற்ற கட்டளையிடவும் வேண்டும் என்றார்கள். அவர்களது சட்டமானது நிரந்தரமான மதிப்புடையது என்பதுதான் அவர்களது வாக்குவாதம். யூதப் பழக்கவழக்கங்களையே அது குறித்துக்காட்டியது. இதைக் கடைப்பிடிக்காதவன் எவனும் விண்ணரசில் நுழைய முடியாது. ஆனால் பவுல், எவனும் தன்னிலே சட்டத்தை, நிறைவேற்றுவது கடினம்; முழுவதுமாக ஆண்டவருடைய மீட்பை அடைவதற்கு அவருடைய அருளைக் கிறிஸ்து வழியாக நமக்கு வழங்குகிறார்; புறவினத்தார்கள் யூதர்களைப் போல் வாழ்ந்தால் தான் மீட்பு உண்டு என்று கட்டாயப்படுத்தக் கூடாது என்கிறார். இந்தப் பிரச்சனை பற்றி பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமடலிலும், உரோமையருக்கு எழுதிய திருமடலிலும் எருசலேம் சங்கத்திலும் தர்க்கிக்கப்பட்டு தெளிவாக்கப்படுகிறது.

யூதன் (JEW)

1. விவிலிய வழக்கில், இச்சொல், யூதாவின் தென்பகுதியைச் சேர்ந்தவர்களையோ (நெகே 1:2; எரே 32:12; 40:11), நாடுகடத்தலுக்குப் பின் புற இனத்தாரிடமிருந்து இஸ்ராயேல் மக்களை வேறுபடுத்திக் காட்டவோ (எஸ்த 9:15-19; தானி 3:8; செக் 8:23; யோவா 4:9; அ.ப. 14:1), நாடுகடத்தலுக்குப்பின் யாவேயை வழிபடுவோரைக் குறிக்கவோ (எஸ் 3:4-6; தானி 3:8) பயன்படுகிறது.

2. **பழைய ஏற்பாடு:** யூதன் என்ற சொல் யூதாவின் இனத்தைச் சேர்ந்தவர்களைக் குறிக்கவோ, தென் அரசைச் சேர்ந்தவர்களிடமிருந்து வட அரசைச் சேர்ந்தவர்களை வேறுபடுத்திக் காட்டவோ (காண்க. 1 சாமு 11:8; 2 சாமு 2:4; 2 அர 16:6) பயன்படுத்தப்படவில்லை. வட இஸ்ராயேல் அரசு அழிந்து, யூதாவின் அரசு தப்பிப்பிழைத்தது

வரை இச்சொல் அரிதாகவே பயன்பட்டுள்ளது (2 அர 25:25; எரே 38:19; 52:28-30). நாடு கடத்தலுக்குப்பின், யூதா என்னும் பாபிலோனிய அல்லது பாரசீக மாகாணத்தில் வாழ்ந்தவர்கள், அல்லது மக்கபேயர் நாட்டில் வாழ்ந்தவர்கள் இப்பெயரால் குறிக்கப்படுகின்றனர் (எஸ்த 9:15-19; நெகே 3:33; செக் 8:23; 1 மக் 8:20). இப்பெயரால் புறவினத்தாரிடமிருந்து அவர்கள் வேறுபடுத்தப்படுகின்றனர். யூத மக்களையோ, சமயத்தையோ சேர்ந்தவர்களைக் குறிக்க இச்சொல் பயன்படுகிறது (எஸ் 4:12; 5:5; எஸ்த 2:5; 8:17).

3. புதிய ஏற்பாடு

I. புதிய ஏற்பாட்டின் தொடக்க காலத்தில் யூதன் என்பது இஸ்ராயேல், எபிரேயன் என்ற சொற்களுக்குரிய அதே பொருளில் தான் பயன்படுத்தப்பட்டது. பவுலும், யோவானும் இதனை இறையியல் பொருளில் பயன்படுத்தினர். இதுதான், சரியான கவனமின்றிப் படிக்கும் வாசகருக்குக் குழப்பம் விளைவிக்கும் வாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

II. பவுலில் **யூதனும் புறவினத்தானும்:** இறைவாக்கினர்களைப் போலவே பவுலும் மனித குலத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், ஏனைய நாடுகள் (யூதர்கள்-கிரேக்கர்கள்) என்று இரு பிரிவாகப் பிரித்துப் பார்க்கிறார் (கலா 3:28). இந்த அடிப்படையான வேறுபாடு கிறிஸ்துவின் வருகையால் காக்கப்பட்டது; அதே நேரத்தில் அழிக்கப்பட்டது.

1) ஒரு யூதனாய் இருப்பதால் உள்ள சலுகைகள்: யூதன் என்ற பெயரே ஒரு பெருமைக்குரிய பட்டமாகும் (உரோ 2:17). யூதா என்ற அடிச் சொல்லிலிருந்து வருவது யூதன்; அதாவது, ஆண்டவருக்குப் பெருமை செலுத்துவான் (ஆதி 29:35). மேலும், யாக்கோபின் ஆசீர்வாதத்தால், ''உன்னுடைய சகோதரர்கள் உன்னைப் புகழ்வார்கள்'' (49:8). சட்டம் மற்றும் விருத்தசேதனத்தின் சலுகைகள் யூதனுக்குரியவையே (உரோ 2:17-29). பவுல் தான் ஒரு யூதன் என்பதை மிகவும் பெருமைக்குரிய ஒன்றாக அறிக்கையிடுகிறார் (கலா 2:18). அதனால் ஒவ்வொரு பக்தியுள்ள யூதனும் தன்னைப் புறவினத்தானாகப் படைக்காததற்கு இறைவனுக்கு நன்றி கூறினான். பவுல் ஒரு கிறிஸ்தவராக இருந்தும் தன்னை ஓர் இஸ்ராயேலன் என்கிறார் (உரோ 11:1; பிலி 3:5). லூக்காவின் கூற்றுப்படி எருசலேமிலே மிகப்பெருமையாக தன்னை யூதனாக அறிவித்துக் கொள்கிறார் பவுல் (அ.ப. 22:3). கிறிஸ்தவன் ஆன அப்பொல்லொ ஒரு யூதன் என்று குறிப்பிடுகிறார் (18:24).

கடவுளுடைய கொடைகள் மகத்தானவை; ஆனால், அவை பொழியப்படுகிறவர்கள் மீது ஒரு சில கடமைகளைச் சுமத்துகின்றன. அதே போல யூதர்களுக்கு இறைச் சட்டம் அருளப்பட்டது. ஆனால், அதை அவர்கள் பிறருக்குப் போதிப்பதோடு நின்றுவிட்டு தாங்கள் அதைப் பின்பற்றாமல் இறைப் பெயரை அவமதிப்புக்குள்ளாக்கினர் (உரோ 2:17-24). விருத்தசேதனம், இறைவாக்கினர் போதிப்பது போல உள்ளத்தில் நிகழ்ந்திருந்தால் தான் அது பொருளுடையதாகும் (எரே 4:4; உப 30:6; லேவி 26:41). விசுவசிக்காத யூதன் தோற்றத்தில் மட்டுமே யூதனாகிறான் (உரோ 2:28). அவன் மகத்தான பெயரை அபகரித்துக்கொள்கிறான் (திருவெளி 2:9; 3:9). கிறிஸ்துவனே உண்மையாக விருத்தசேதனம் செய்யப்பட்ட யூதன் (பிலி 3:2). ஆவியில் யூதனாகிறான் (உரோ 2:29). எல்லோருக்கும் எதிராக குற்றச்சாட்டுகளைக் கூறியபோது பவுல், 'யூதர்களும் சரி, கிரேக்கர்களும் சரி அனைவரும் பாவிகளே' என்கிறார் (உரோ 3:9).

2) மனம் மாறிய புறவினத்தானும், விசுவசிக்காத யூதனும்: யூதனுக்கும் கிரேக்கனுக்குமிடையேயுள்ள உறவு சிக்கலானது. ஒரு நோக்கில் வேறுபாடுகள் அனைத்தும் பாவ நிலையில் மட்டுமன்று, அருளின் நிலையிலும் மறைந்து போய்விட்டன. ஏனெனில், யூதனென்றும் இல்லை; கிரேக்கனென்றும் இல்லை (கலா 3:28); கிறிஸ்துவுக்குள்

அனைவரும் ஒன்றே. நீதியை நிலை நாட்டக் கூடியது விசுவாசம் ஒன்றே, சட்டமன்று (காண்க. கொலோ 3:11). இத்தகைய சூழ்நிலையில்தான் இறைவாக்கினர்கள் முன்னறிவித்த, நாடுகளுக்கிடையேயான ஒப்புரவு நிகழ வேண்டும். ஏனெனில், ''கடவுள் புறவினத்தாரின் கடவுளாகவும் இருக்கிறார்'' (உரோ 3:29; 10:12).

அதே நேரத்தில் பவுல் தண்டனையாக இருந்தாலும் சரி, பரிசாக இருந்தாலும் சரி முதலில் யூதனுக்கு, பிறகுதான் கிரேக்கனுக்கு என்பதில் மிகக் கவனமாக இருக்கிறார் (உரோ 2:19 தொ; 1:16; மத் 15:24தொ; அ.ப. 13:46; 18:6). மனம் மாறிய புறவினத்தான் கடவுளின் திட்டத்தில் யூதனுக்குரிய இடத்தைத் தான் அடைந்து விட்டதாக நினைப்பது தவறு. யூதனுடைய மேன்மை மாறுவதில்லை (உரோ 3:1). ஏனெனில், கடவுள் தான் கொடுத்த கொடைகளை நினைத்து வருந்துபவரல்லர் (உரோ 11:29). கிறிஸ்தவத்திற்கு மனம் மாறிவந்த யூதர்கள் ஒலிவ மரத்தின் இயற்கையான கிளையில் ஒன்றாகிறார்கள். ஆனால், மனம் மாறிய புறவினத்தாரோ இயற்கைக் கிளையோடு ஒட்டப்படுகிறார்கள் (உரோ 11:24). தனது பிடி முரண்டான நிலையிலும், கிறிஸ்துவின் திருச்சபையில் இஸ்ராயேல் ஆற்ற வேண்டிய ஒரு பங்கு உண்டு. திருச்சபைக்கு, இஸ்ராயேல் இல்லாமை ஒரு குறைபாடே ஆகும். ஆகவே, ஒவ்வொரு விசுவாசிக்கும் இது ''பெருந்துயரமும் இடைவிடாத வேதனையும்'' கொடுக்க வேண்டும் (9:2).

III. **புனித யோவானும், விசுவாசமற்ற யூதனும்:** நான்காவது நற்செய்தியாளர் மற்றவர்களைப் போலவே இயேசுவின் காலத்து யூதர்களைப் பற்றிப் பேசுகிறார் (யோவா 3:1; 12:19). ஆனால், யோவான் எழுதிய காலத்திலேயே திருச்சபையும், செபக்கூடங்களும் தனித் தனிச் சமூகங்களாகப் பிரிந்து விட்டன. புதிதாகப் பிறந்த திருச்சபைக்கு யூதர்களால் வந்த பிரச்சனைகள் எல்லாம் முடிந்துவிட்டன. ஏறக்குறைய எல்லா இடங்களிலும் யோவான் யூதன் என்ற சொல்லை ஒரு இனத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தாமல் ஒரு வரலாற்றுப் பின்னணியில் ஓர் இறையியல் சொல்லாகப் பயன்படுத்துகிறார். முதலில் இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்களைக் குறிப்பிடவும், பின்னர் விசுவசியாத அனைவரையுமே குறிக்கவும் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். ஒருவகை விசுவாசமற்ற குழுவினராக யூதர்களைப் பிரித்துப் பார்க்க யோவான் முயல்வதைப் பார்க்கிறோம்.

தனது நற்செய்தியில் யூதர்களின் விழாக்களையும், பழக்கவழக்கங்களையும் பற்றிப் பேசும்போது யாரோ வெளி நாட்டவரைப் பற்றிப் பேசுவது போலக் குறிப்பிடுகிறார் (2:6.13; 5:1; 6:4; 7:2....). நிக்கோதேமுவுடன் பேசுவதுபோல் அல்லாமல் (7:51) யூதர்களிடம் பேசும் போது வெளிநாட்டவரிடம் பேசுவது போல இயேசு பேசுகிறார் (8:17; 10:34; காண்க. 7:19.22). பொதுவாக யூதன் என்ற சொல் இயேசுவின் எதிரிகளை இங்குக் குறிக்கிறது (2:18.20; 5:16.18; 6:41;...). அதே நேரத்தில் இயேசுவைப் பின்பற்றுபவன் அவன் யூதனாகவே இருந்தாலும் கூட யூதர்களின் எதிரியாகிறான் (5:15; 7:13-ஐ 7:11; 1:19-ஒடு ஒப்பிடுக). இவ்வாறு ஒருவகையான விசுவாசமற்ற கூட்டத்தினராக யூதர்கள் யோவான் நற்செய்தியிலே அடையாளம் காட்டப்படுகின்றனர். இது செமித்தியர்களுக்கு எதிரான விளக்க முறைக்கு ஈடுசெய்யக் கூடும். இத்தகைய விளக்கத்திற்கு யோவான் ஆதரவு அளிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். யூதர்கள் இயேசுவைச் சிலுவையில் அறையக் காரணமாக இருந்த அளவில் உலகில் உள்ள மற்றவர்கள் இயேசுவின் சீடர்களைத் துன்புறுத்தியதால் தங்கள் பங்கை நிறைவேற்றிக் கொண்டனர். கிறிஸ்துவைத் தங்கள் அரசராக ஏற்றுக்கொள்ள மறுத்த யூதர்களுக்கு நடுவராக இயேசு நியமிக்கப்பட்டுள்ளது போல் (19:13.14.19-22) கிறிஸ்தவன், தன்னைத் தீர்ப்பிட விரும்பும் உலகைத் தீர்ப்பிட வேண்டும். இதற்காக அவன், இயேசுவின்

ஆவியாகிய, பரிசுத்த ஆவிக்கு இடை விடாது செவிமடுக்க வேண்டும்.

யூதா (JUDAH) - ஆள்

1. யாக்கோபு, லேயா ஆகியோரின் நான்காவது மகன் (ஆதி 35:23; 46:12; யாத் 1:2; 1 நாள் 2:1). ஆதி 29:35-இல் வரும் பெயர்க்காரண விளக்கம் ''போற்றுதல்'' என்ற சொல்லிலிருந்து வருகிறது எனலாம்.

யூதாவைப் பற்றிய செய்திகள் எல்லாம் ஆதியாகமத்தில் காணப்படுகின்றன. தன் சகோதரர்களோடு சேர்ந்து, யூதா, யோசேப்பைத் தொலைத்துக்கட்டத் திட்டமிட்டார். ஆனால் அவரைக் கொல்வதற்குப் பதிலாக, அடிமையாக விற்றுவிடச் செய்தார் (37:26-27). கானானியப் பெண்ணான, சூவாவை மணந்து தனது குடும்பத்தை நிறுவினார் (38:1-5). அவருடைய மருமகள் தாமார் பிள்ளையின்றி விதவையான போது, அவளுடைய கணவனது உடன் பிறந்தானாகிய ஓனான் அவளைக் கருவுறச் செய்ய மறுத்த போது, அவள் தந்திரமாக யூதாவின் வழியாகக் கருவுற்றாள் (38:8-30).

யோசேப்பு எகிப்தில் உயர்வுற்றபின், பஞ்சம் உண்டாயிற்று. யூதா, தன் சகோதரர்களோடு சேர்ந்து, தானியங்கள் வாங்க எகிப்துக்குச் சென்றார். யோசேப்பு கோரியவாறு, தங்கள் இரண்டாம் பயணத்தில் பென்யமினைக் கூட்டிச் செல்ல அனுமதிக்குமாறு, யூதா யாக்கோபை இணங்க வைத்தார் (43:3-5.8-10). தந்திரத்தால் பென்யமினைத் தன்னோடு வைத்துக் கொள்ள யோசேப்பு முயன்றபோது, யூதா தன்னை அடிமையாக வைத்துக் கொண்டு பென்யமினைப் போகவிடுமாறு வேண்டினார் (44:18-33).

யாக்கோபின் மற்றப் புதல்வர்களைப் போல், யோசேப்பின் அழைப்பை ஏற்று, யூதாவும் அவரது குடும்பத்தினரும் எகிப்தில் குடியேறினர் (46:12.28). யாக்கோபு யூதாவுக்கு அளித்த ஆசீர் (49:8-12), அவரை அச்சந்தரும் சிங்கமாகவும், ஆட்சி செய்யக் குறிக்கப்பட்டவராகவும் விவரிக்கிறது (இந்த ஆசீர் யூதா இனத்திற்கு உரியது என்றும், தாவீது காலத்தைப் பிரதிபலிக்கிறது என்றும் ஆய்வாளர்கள் கருதுவர்).

மத்1:2; லூக் 3:33-இல் யூதா இயேசுவின் மூதாதையர்களுள் ஒருவராகக் குறிக்கப்படுகிறார்.

2. ஒரு லேவியர். நாடுகடத்தலுக்குப்பின் ஆலயப்பணியை மேற்பார்த்த ஒரு குடும்பத்தின் முன்னோர் (எஸ் 3:9). இவரும் எஸ் 2:40-இல் வரும் ஓதவியாவும் ஒரே ஆளாக இருக்கலாம்.

3. அன்னியப் பெண்ணை மணந்த ஒரு லேவியர் (எஸ் 10:23).

4. அசெனாவாவின் மகன். நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் குடியேறிய ஒரு தலைவர் (எஸ் 11:9).

5. நாடு கடத்தலிலிருந்து செருபாபேலோடு நாடு திரும்பிய ஒரு லேவியர் (நெகே 12:8).

6. மீண்டும் கட்டப்பட்ட எருசலேமின் சுவர்கள் அர்ப்பணிப்புச் சடங்கில் பங்கு பெற்ற யூதா இனத்தின் ஒரு தலைவர் (நெகே 12:34).

7. எருசலேமின் சுவர்கள் அர்ப்பணிக்கப்பட்ட சடங்கில் பங்கு பெற்ற ஒரு குருவும், இசைக் கலைஞரும் ஆவார் (நெகே 12:36).

8. இயேசுவின் மூதாதையர்களில் ஒருவர் (லூக் 3:30).

யூதா - இனமும் நாடும் (JUDAH - TRIBE AND LAND)

1. குலமூதாதையர் யாக்கோபின் நான்காம் மகனான யூதாவின் வழித்தோன்றல்கள் - யூதா இனமாகவும், அவர்களுக்குப் பாலஸ்தீனத்தில் குறிக்கப்பட்ட நிலப்பகுதி யூதா நாடாகவும் அழைக்கப்பட்டன. யாத்திரை நிகழ்ச்சிக்குப்பின் இந்த இனத்திற்குப் பாலஸ்தீனத்தின் தென்பகுதி கொடுக்கப்பட்டது.

2. தொடக்ககால வரலாறு: பாலைவனத்தில் அலைந்து திரிந்த காலத்தில் யூதாவைச் சேர்ந்தவர்கள் சந்திப்புக் கூடாரத்தின் கிழக்

கில் பாளையம் இறங்கினர். அம்மினதீபின் மகன் நகுசோன் இவர்களுக்குத் தலைமை தாங்கினார் (எண் 2:3). பயணம் செய்யும் போது யூதா, இசக்கார், செபுலோன் ஆகிய இனத்தவர் சேர்ந்து ஓர் அணியாக அமைந்து முதலில் அணிவகுத்துச் சென்றனர் (2:9; 10:14). மக்கட்தொகைக் கணிப்பின்படி, யூதாவில் ஏறக்குறைய எழுபத்து நாலாயிரத்து அறுநூறு பேர் இருந்தனர் (1:26-27; 2:4; 26:22). அறிஞர்களின் கருத்துப்படி, ஆயிரம் என்று பிற்காலத்தில் பொருள் கொள்ளப்பட்ட எலேபு என்ற எபிரேயச் சொல்லின் மூலப் பொருளில், இந்த எண்ணிக்கை, படைக்கு ஆள் அனுப்ப வேண்டிய எழுபத்து ஐந்து தலைக்கட்டுகளைக் குறிக்கலாம். யோர்தானைக் கடந்த பின் மக்களுக்கு ஆசீர் வழங்கும் பொருட்டுக் கெரிசிம் மலையில் நிற்கு மாறு, மோசேயால் கட்டளையிடப்பட்ட இனங்களில் யூதாவும் ஒன்றாகும் (உப 27:12). மோசேயின் இறுதி ஆசீர்வரை, அக்காலத்தில் யூதா அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததன்று என்றும், பிற இனங்களிடமிருந்து அதற்குப் படை உதவி தேவைப்பட்டது என்றும் சுட்டுகிறது (33:7).

பாலஸ்தீனத்தைக் கைப்பற்றியபோது, லேயா வழியாகத் தோன்றிய இனங்களில் ஒன்றான யூதா மலைப்பகுதியிலிருந்தும் நெகேபிலிருந்தும் கானானியர்களை விரட்டியடித்த போர்களில் யூதா இனம் மும்முரமாகப் போராடியது (நீதி 1:1-20; காண்க. யோசு 11:21-23). ஆனால், எல்லா இஸ்ராயேலருடனும் சேர்ந்து, பொதுவாக, பிற இன மக்களை எல்லாம் பாலஸ்தீனத்திலிருந்து விரட்ட யூதாவால் முடியவில்லை (நீதி 1:19).

3. யூதாவின் நிலப்பகுதி: எருசலேமுக்கும் எபிரோனுக்கும் இடைப்பட்ட மத்திய மலைப்பகுதியும், மக்கள் அதிகம் வாழாத, யூதாவின் பாலைநிலம் என்றழைக்கப்படும் நெகேபும் (நீதி 1:16) யூதாவின் நிலப்பகுதியாகும். இப்பகுதியின் வட எல்லையில் பென்யாமின், கிபயோனிய, பெலிஸ்திய நகரங்கள் அமைந்திருந்தன. கிழக்கு எல்லையாக சாக்கடலும், தெற்கெல்லையாக ஏதோமும், மேற்கெல்லையாக, வெற்றி கொள்ளப்படாத கானானிய நகரங்களும் பெலிஸ்தியப்பகுதியும் அமைந்திருந்தன. யூதாவுக்குக் குறிக்கப்பட்ட நிலப்பகுதி அதற்குப் பெரியதாக இருந்ததால் (யோசு 19:1-9), சிமினியோன் இனத்திற்கும் மற்றக் குழுக்களுக்கும் யூதாவின் பகுதிக்குள் நிலப் பகுதிகள் குறிக்கப்பட்டன [எ.கா. காலேபு (14:13-15; 15:13-19); எரகுமவேல் (காண்க. 1 சாமு 27:10); ஒத்னியேல் (யோசு 15:19); கேனியர் (நீதி 1:16]. இந்த எல்லைகள் தாவீது காலத்தில் நிலவிய சூழ்நிலையைப் பிரதிபலிக்கின்றது என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். எபிரோன் யூதாவின் மிகப் பெரிய நகரமாகும். இஃது அடைக்கல நகர்களில் ஒன்றாகும் (யோசு 20:7). லேவியர்கள் தங்கள் உரிமைச் சொத்தாக, யூதாவில் ஒன்பது ஊர்களைப் பெற்றிருந்தனர் (21:4.9-16).

இஸ்ராயேலர் பாலஸ்தீனம் முழுவதையும் கைப்பற்றிக்கொள்ள முடியாமை, நீதிபதிகள் அல்லது விடுதலை வீரர்கள் காலத்தில் (கி.மு. 12-ஆம் நூற்றாண்டு) தொடர்ச்சியாக வந்த தாக்குதல்களை எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கியது. முதல் நீதிபதி அல்லது விடுதலை வீரரான ஒத்னியேல் யூதாவில் தோன்றியவராவார். காலப்போக்கில் பெலிஸ்தியர் மற்றும் அம்மோனியர் ஆகியோரின் ஆதிக்க எழுச்சி இஸ்ராயேலில், கி.மு. 11-ஆம் நூற்றாண்டில், அரசாட்சி முறையை ஏற்படுத்த இட்டுச்சென்றது.

4. அரசாட்சிமுறை: பென்யாமின் இனத்தைச் சேர்ந்தவரும் இஸ்ராயேலின் துர்லப மான முதல் அரசனுமான சவுல் யூதாவில் அதிக ஆதரவு பெற்றிருந்தார். யாபேக-கிலயாதில் அம்மோனியர்களின் தாக்குதலை எதிர்த்துப் போராட தொண்டர்களைச் சவுல் கோரியபோது, யூதாவைச் சேர்ந்த 30,000 பேர் அதில் பங்கெடுத்தனர் (1 சாமு 11:8). அமலேக்கியருக்கு எதிரான

போரில் யூதாவைச் சேர்ந்த 10,000 பேர் பங்கெடுத்தனர் (15:4).

யூதாவின் மேற்கு எல்லையில் சோக்கோ என்ற இடத்தில் பெலிஸ்தியர் நடத்திய தாக்குதல், தாவீதின் தீரச்செயல் ஒன்றிற்கு வாய்ப்பளித்தது; இஸ்ராயேலின் எதிரியின் மீது பெரும் வெற்றியையும் அளித்தது (1 சாமு 17). தாவீதின் பெருமை வளர்வது சவுலின் பொறாமையைத் தூண்டியது. ஆகவே, தாவீது சவுலிடமிருந்து தப்பி யோட வேண்டியிருந்தது. தாவீது, முதலில் பெலிஸ்திய நகரான காத்திலும் (21:11), பின்பு, யூதாவின் சீபு பாலையிலும் (23:14-15) வாழ்ந்து வந்தார். பாலையிலும், சவுல் தாவீதைத் தேடிச்சென்றார்; ஆனால், வெற்றியடையவில்லை. இறுதியாக, தாவீது பெலிஸ்தியர்களின் பாதுகாப்பைத் தேடக் கட்டாயப்படுத்தப்பட்டார். யூதா வோடு தாவீதின் பிணைப்பு பலமாகவே இருந்தது. தாவீது அமலேக்கியரிடமிருந்து சிக்லாகுவின் மக்களை விடுவித்தபின் (1 சாமு 30), கொள்ளைப்பொருளில் ஒரு பகுதியை யூதாவின் தலைவர்களுக்கு அனுப்பினார்.

சவுல் போரில் இறந்தபின், தாவீது யூதாவின் அரசனாக எபிரோனில் அபிடே கம் செய்யப்பட்டார் (2 சாமு 2:1-4). அங்கிருந்து 7½ ஆண்டுகள் ஆட்சி செய்தார் (2:10-11). இஸ்ராயேல் சவுலின் மகன் இசுபொசேத்தால் ஆட்சி செய்யப்பட்டது. இவரின் 2½ ஆண்டு ஆட்சியில் இரு நாடுகளுக்குமிடையே இடைவிடாத போராட்டம் நடந்து கொண்டேயிருந்தது (2:12-31). இசுபொசேத்து கொலைசெய்யப் பட்ட பின்பு, வடபகுதியிலுள்ள இனங்க ளும் தாவீதைத் தங்கள் அரசனாக ஏற்றுக் கொண்டன. இவ்வாறு இரட்டை அரசாட்சி நிறுவப்பட்டது (5:1-5; காண்க. 1 சாமு 18:16). தாவீது தனது நிலையைப் பலப் படுத்த முனைந்தார். எபூசியர்களிடமிருந்து எருசலேமைக் கைப்பற்றி, அதை அரச தலைநகரமாக்கினார். பின்பு கிரியத்து - எயாரிமிலிருந்து உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்குக் கொண்டு வந் தார். அது முதல் எருசலேம், யூதாவுக்கும் இஸ்ராயேலுக்கும் வழிபாட்டு மையம் ஆயிற்று (2 சாமு 6:1-5).

தாவீதுக்கு எதிராக அப்சலோம் கிளர்ச்சி செய்தபோது, அவனும் எபிரோனில் தன்னை அபிடேகம் செய்து கொண்டான் (15:10-12). இச்செயலுக்காக அரசன் பழி வாங்குவான் என்றஞ்சிய யூதாவின் தலை வர்கள், தாவீது திரும்ப எருசலேமுக்கு வந்தபோது அவரை வரவேற்கத் தயங்கி னர். திறமையுள்ள அரசியல் செயலாக, அவர்களது அச்சத்தைப்போக்கி, தாவீது யூதாவையும் இஸ்ராயேலையும் ஒன்றுபடுத் துவதில் வெற்றி கொண்டார் (19:11-15; காண்க. 19:9-10). ஆனால், தாவீது யூதா வுக்கு அதிகச் சலுகைகள் அளிப்பதாக இஸ்ராயேல் விரைவில் உணரத்தொடங்கி யது. இஃது ஒரு கிளர்ச்சிக்கு இட்டுச் சென்றது (19:41-20:2). பென்யமினைச் சேர்ந்த சேபா தலைமை தாங்கிய இக் கிளர்ச்சி, யூதாவைச் சேர்ந்த வீரர்களால் அடக்கப்பட்டது (20:4-22).

சாலமோன் (கி.மு. 961-922), தனது தந்தை சேர்த்து வைத்த நிலப்பரப்பைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினார். அக் காலப் பழம் மேற்காசிய நாடுகளிலேயே செழிப்புற்று விளங்கிய பொருளாதாரத் தைப் பயன்படுத்த விரும்பினார் (1 அர 4:24-25). அரண்மனைக்கு வேண்டிய உணவுப்பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க இஸ்ராயேல் நாட்டைப் பன்னிரு மாவட்டங்களாகப் பிரித்து அமைத்ததில் (4:7) தென் அரசாகிய யூதா விலக்குப் பெற்றிருக்கலாம் (காண்க. 4:19). கட்டடங் களை எழுப்புவதில் சாலமோன் காட்டிய பேரார்வச் செயல்களில், யூதாவைச் சேர்ந்த பல நகரங்களைப் பலப்படுத்துவதும் அடங்கும். இவையெல்லாம் வணிகச் சாலையில் அமைந்திருந்தன. திம்னா பள்ளத்தாக்கின் சுரங்கங்களிலிருந்து செம் புக் கனிப்பொருளை இஸ்ராயேலுக்குக் கொண்டு செல்லவும், செங்கடல் துறைமுக மான எட்சியோன் கெபேர் வழியாக இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களை

எடுத்துச் செல்லவும் யூதா இஸ்ராயேலுக்கு வாயில் போல் அமைந்திருந்தது. சாலமோன் எருசலேமில் ஆலயத்தைக் கட்டியது யூதாவின் வருங்காலத்துக்குரிய பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம் (1 அர 6).

5. தென் அரசாகிய யூதா: வட, தென் பகுதிகளுக்கிடையிலான தொன்மையான கூட்டாட்சியைக் காப்பாற்றுவதில் சாலமோன் வெற்றி பெற்றார் என்று கூறலாம். ஆனால் அவரது மகன் ரெகபயாம், தனது விவேகமற்ற சொற்களால் அதை உடைத்தான். வடபகுதி இன மக்கள் தாவீது அரசமரபு தங்களை ஆட்சி செய்வதை நிராகரித்தனர் (1 அர 12:1-17; 2 நாள் 10:1-7). இதன் விளைவாக, பலம் வாய்ந்த ஒரு நாட்டிலிருந்து வலிமை குன்றிய இரு சிறு நாடுகள் தோன்றின. ஆயினும், தொடக்கத்திலிருந்தே வட அரசாகிய இஸ்ராயேல் மேல் யூதா சில சலுகைகளைப் பெற்றிருந்தது. யூதாவில் தாவீது அரச மரபு பழுது படாதிருந்தது, அதன் தொடர்ச்சியை உறுதிப்படுத்தியது. ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு அரசியல், சமய வாழ்க்கையின் மையமாகத் திகழ்ந்த இடமாக எருசலேம் இருந்தது. யூதாவின் பரப்பளவு குறுகிப் போனாலும் தாவீது வீட்டிற்குப் பென்யமின் காட்டிய பிரமாணிக்கம் தென் அரசுக்கு எருசலேமைப் பெற்றுத்தந்தது. இனிமேல் யூதாவின் அரசியல் வாழ்க்கை, உள்நாட்டில் குறுகிய கால மகிமைகளையும், அரசியல் சூழ்ச்சிகளையும் கொண்டிருந்தது; புறத்தில் பலரது தாக்குதல்களுக்கு எதிராகப் போராட வேண்டியிருந்தது.

ரெகபயாம் (கி.மு. 922-915) வடஇன மக்களை அரசியல் ரீதியாக ஒற்றுமைப் படுத்த எந்த முயற்சியும் செய்யவில்லை. அதற்குப் பதிலாக, அவர்களுக்கு எதிராக வடயூதாவில் 15 நகரங்களைப் பலப்படுத்தினான் (2 நாள் 11:5-12). பார்வோன் சீசாக்கின் தலைமையில் எகிப்தியர்கள் எருசலேம் உள்பட்ட பல நகரங்களைத் தாக்கிய போது, அவர்கள் மலைப்பகுதியில் புக முடியவில்லை (1 அர 14:25-26; 2 நாள் 12:2தொ).

அபியா (915-913), ஆசா (913-873) ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் யூதா தன் எல்லையில் இஸ்ராயேலரிடமிருந்தும் எகிப்தியர்களிடமிருந்தும் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது (2 நாள் 13; 14:9-14). இஸ்ராயேலைச் சேர்ந்த பாசா பென்யாமின் மீது படையெடுத்தான். ஆனால், ஆசா தமஸ்குவைச் சேர்ந்த முதலாம் பெனதாதுக்குப் பெரும் கையூட்டுக் கொடுத்து, அவன் இஸ்ராயேலுடன் செய்திருந்த உடன்படிக்கையை முறித்து, கலிலேயாவிற்குள் படை அனுப்பச் செய்தான். அதைத் தடுக்க பாசா பின் வாங்கினான் (1 அர 15:16-22).

ஆசாவின் மகன் யோசபாத்து (873-849) பயனுள்ள விதத்தில் ஆட்சி செய்தான். இவனுடைய தந்தையைப்போல் இவனும் யாவேயை வழிபடுபவன்; ஒழுக்க வாழ்விலும், போர்க்காரியங்களிலும் நாட்டை வலுப்படுத்தினான் (2 நாள் 17; 19:4-11). இஸ்ராயேலைச் சேர்ந்த ஆகாபுவால் தூண்டப்பட்டு இராமோத்து - கிலயாதின்மேல் நடந்த துர்லபமான தாக்குதலில் இவன் பங்கு கொண்டான் (2 நாள் 18). ஆனால், மோவாபுக்கும் அம்மோனுக்கும் எதிராக வெற்றியோடு போரிட்டான் (20:1-30). செங்கடல் வியாபாரத்தைப் புதுப்பிக்க இவன் செய்த முயற்சி தோல்வியில் முடிந்தது (1 அர 22:48-49; 2 நாள் 20:35-37).

யோசபாத்து, தன் மகன் யோராமுக்கு ஆகாபின் சகோதரி அல்லது மகளான அத்தாலியாவை மணம் செய்து, இஸ்ராயேலுடன் அமைதியான உறவை வலுப்படுத்தினான். ஆனால், யோராமின் ஆட்சியில் (849-842) யூதாவின் வளர்ச்சி பாழ்பட்டுப் போனது. ஏதோமும், பெலிஸ்தியர் எல்லையில் லிப்னாவும் கிளர்ச்சி செய்தனர் (2 அர 8:20-22). மேலும், அரண்மனை ஏறிய பின் இவன் தன் சகோதரர் அனைவரையும் கொன்றான். அவனது அரசி எருசலேமில்

புறஇன வழிபாட்டை ஊக்குவித்தாள் (2 நாள் 21:4.11). இதை இஸ்ராயேலைச் சேர்ந்த இறைவாக்கினர் எலியா கடுமையாகக் கண்டனம் செய்தார். நோய், போராட்டம் ஆகிய வடிவில் இவன் இறைவனுடைய தண்டனையை அனுபவித்தான் (21:12-20).

அனுபவமற்ற இளைஞனான அகசியா, குறுகிய காலத்திற்கே (842), தன் தாய் மற்றும் அவளுடைய ஆலோசகர்களின் ஆதிக்கத்தின் கீழ் ஆட்சி செய்தான். இஸ்ராயேலோடு சேர்ந்து அரமேயர்கள் மேல் தாக்கியது வெற்றியின்றி முடிந்த பிறகு வடஅரசில் ஏகூவின் சூழ்ச்சிக்குப் பலியானான் (2 அர 9:1-28; 2 நாள் 22:1-9). அத்தலியா யூதாவில் அரச அதிகாரத்தைக் கைப்பற்றினாள் (842-837). அரச குடும்பத்தினரைத் திட்டமிட்டுக் கொன்று அழித்தாள்; குழந்தையான யோவாசு மட்டுமே தப்பினான் (2 அர 11:1 3; 2 நாள் 22:10-12). சூழ்ச்சிக்குச் சூழ்ச்சிகள் நிகழ்ந்தன. தலைமைக்குரு யோயாதா, யோவாசை ஆறு ஆண்டுகளுக்குப் பாதுகாத்து வந்தார்; அதே சமயம், பிரமாணிக்கமுள்ள படைத் தலைவர்களோடும், லேவியர்களோடும் உடன்படிக்கை செய்து கொண்டார். ஏழு வயதில் யோவாசு முடிசூட்டப்பட்டான். அத்தலியா கொல்லப்பட்டாள். பாகால் ஆலயம் அழிக்கப்பட்டது (2 அர 11:4-21; 2 நாள் 23). யோயாதாவின் மேற்பார்வையில் யோவாசு ஆண்டு வந்தான்; ஆலயத்தைப் பழுதுபார்த்தான் (2 அர 12:1-16; 2 நாள் 24:1-14). தலைமைக் குருவின் இறப்புக்குப்பின், யோவாசு திடீரென்று புறமத வழிகளைப் பின்பற்றலானான் (2 நாள் 24:17-19; காண்க. 2 அர 12:3). சிறிது காலத்திற்குப்பின் அரமேயர்கள் யூதாவின் மேல் படையெடுத்துக் கொள்ளையிட்டனர் (2 நாள் 24:23); எருசலேமிலிருந்து கப்பம் கோரினர் (2 அர 12:17-18). யோவாசு போரில் காயம் அடைந்தான். பின்பு, இறைவாக்கினர் செக்கரியாவைக் கொன்றதற்குப் பழிவாங்குதலாகக் சொல்லப்பட்டான் (2 நாள் 24:25 26; காண்க. 2 அர 12:20-21).

எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அசீரிய ஆதிக்கத்தின் வளர்ச்சி அரமேயர்களை மட்டுப்படுத்தியது. இஃது இஸ்ராயேலுக்கும் யூதாவுக்கும் ஓரளவு அமைதியளித்தது. ஆயினும், யூதாவைச் சேர்ந்த அமட்சியா (800-783) ஏதோமுக்கு எதிராகப் போரிட்டான் (2 அர 14:7). இஸ்ராயேலின் அரசன் யோவாசை நேருக்கு நேர் போரிட அழைத்தான். அமட்சியா கைது செய்யப்பட்டான். இஸ்ராயேல் எருசலேம் மேல் படையெடுத்துக் கொள்ளையடித்தது (2 அர 14:8-14; 2 நாள் 25:5-24).

இஸ்ராயேலின் அரசன் இரண்டாம் எரொபவாம் (793-753) மற்றும் யூதாவின் ஊசியா (அல்லது அசரியா; 783-742) ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் இஸ்ராயேலும் யூதாவும் மறுமலர்ச்சியடைந்தன. ஊசியா யூதாவின் படையையும், வணிகத்தையும் சீர் செய்தான்; எருசலேமின் அரண்களைப் பழுதுபார்த்தான்; படைக்கு நல்ல போர்க்கருவிகளை அளித்தான்; ஏதோமைக் கட்டுப்படுத்தினான்; நெகேமில் வியாபாரச் சாலையைப் பாதுகாத்தான்; செங்கடல் துறைமுகமான எட்சியோன்கெபேரை மீண்டும் செயல்படச் செய்தான் (2 அர 14:22; 2 நாள் 26:9-15).

ஆனால், இந்தச் செழிப்பெல்லாம் முடிவுக்கு வந்தது. ஏனெனில், அசீரிய மன்னன் மூன்றாம் திகிலத் பிலேசரின் படையெடுப்பு சீரிய-பாலஸ்தீனத்தில் உள்ள சிறிய நாடுகளை அச்சுறுத்தத் தொடங்கியது. இஸ்ராயேலின் மெனகேம் அசீரியாவுக்குக் கப்பம் கட்டினான். ஆனால், அவன் மகன் பெக்காதமஸ்கு, பெலிஸ்திய நகரங்களுடன் சேர்ந்து அசீரியர்களுக்கு எதிரான கூட்டணி அமைத்தான். யூதாவின் யோத்தாம் (742-735) இக்கூட்டணியில் சேர மறுத்து விட்டான். ஆகவே, அவர்கள் அவனைத் தாக்கத் தயாரானார்கள் (2 அர 15:37). யோத்தாமுக்குப் பின் வந்த ஆகாக அரசுக்கு வந்தவுடன் (735-715) வடக்கு.

மேற்கு, தெற்கிலிருந்து யூதா ஒரே சமயத்தில் படையெடுக்கப்பட்டது (16:5-6; 2 நாள் 28:5-8.17-18). இந்த இடுக்கண் நிலையில் ஆக்காசு, திகிலத் பிலேசரின் உதவியை நாடினான் (2 அர 16:7-8; 2 நாள் 28:16; காண்க. எசா 7:1-8:15). அசீரியப்படை விரைவாக நகர்ந்து தெற்கு நோக்கிப் படையெடுத்து சீரியா, பாலஸ்தீனம், பெலிஸ்தியாவைக் கைப்பற்றி எகிப்துவரை சென்று நின்றது. அசீரியாவின் சிற்றரசன் என்ற அளவில் ஆகாசு அன்னிய சமய ஆதிக்கத்திற்கு உட்பட்டான் (2 அர 16:10-18: 2 நாள் 28:24-25).

அசீரியர்களுக்கு இஸ்ராயேல் கி.மு. 722-721-இல் வீழ்ந்தது. ஆகாசின் மகனும் அவனுக்குப்பின் அரசனும் ஆன எசேக்கியா (715-687) யாவேயிடம் கொண்டுள்ள நாட்டின் பிரமாணிக்கத்தைப் புதுப்பிக்கவும், மறைமுகமாக அரசியல் சுதந்தரம் பெறவும் உறுதி பூண்டான். அவன் பழங்கால பிறமதப் புனித இடங்களை அழித்தான் (2 அர 18:4; 2 நாள் 31:1); ஆலயத்தைச் சுத்தி செய்தான். வழிபாட்டை மையப்படுத்தும் நோக்கோடு, யாவே வழிபாட்டை முறைப்படுத்தினான் (2 நாள் 29-31:1). அசீரியப் பேரரசு முழுவதும் பரவி நிலவிய கிளர்ச்சியில் சேர நெடுங்காலமாகத் தூண்டப்பட்டாலும், 705-இல் சார்கோனின் இறப்புவரை காத்திருந்தான். கப்பம் கட்டுவதை நிறுத்தினான் (2 அர 18:7). எருசலேம் மற்றும் பிற யூதா நகரங்களின் பாதுகாப்பை விரைவாக வலிமைப்படுத்தினான் (20:20; 2 நாள் 32:1-5.30). அசீரியாவுக்கு எதிரான மற்றொரு கூட்டணியில் சேர்ந்தான். எகிப்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டான் (காண்க. எசா 30:1-7; 31:1-3). அசீரியா விரைவாகப் பழிவாங்கியது. சனகெரிபு, சீரியா, பாலஸ்தீனத்தில் எழுந்த எதிர்ப்புகளையெல்லாம் கி.மு. 701-இல் தகர்த்தெறிந்தான் (2 அர 18:13-16). யூதாவின் 46 நகரங்கள் வீழ்ந்தன. எருசலேம் முற்றுகையிலிருந்து தப்பியது. ஆனாலும் (2 அர 18-19; 2 நாள் 32; எசா 36-37), எசேக்கியா உடன்படிக்கை கோரக் கட்டாயப்படுத்தப்பட்டான்.

எசேக்கியாவின் இளைய மகன் மனாசே (687-642), அப்போது ஆதிக்க உச்சியில் இருந்த அசீரியாவுக்குச் சிற்றரசனாக விரைவில் பணிந்தான். அவனது மகன் ஆமோன் (742-740), ஆகாசின் காலத்தில் நிலவிய அநீதியான மற்றும் புறமதப் பழக்கங்களைப் பின்பற்றினான்; அசீரியத் தேவர்களுக்கு வழிபாடு செய்தான்; ஆலயத்தில் யாவே வழிபாட்டை நீக்கிவிட்டு கானானிய கடவுள்களுக்கு வழிபாடு நடக்க அனுமதித்தான் (2 அர 21:3-7; 2 நாள் 33:2-9; காண்க. 2 அர 21:10-11.16; 24:3-4).

அசீரியப் பேரரசு முழுவதும் அடிக்கடி கிளர்ச்சிகள் எழுந்தன. மேற்கிலிருந்து எகிப்தியர்கள், வடக்கிலிருந்து மேதியர்கள், கிழக்கிலிருந்து பாபிலோனியர்கள் தாக்கும் அச்சம் இருந்து கொண்டேயிருந்தது. ஆகையால், அப்பேரரசு கட்டிக் காக்க முடியாததாயிற்று. இது சிறுநாடுகளுக்குச் சிறிது அமைதியை அளித்தது. இறுதியாக யூதா யோசியாவின் ஆட்சியில் (640-609) சுதந்தரம் பெற்றது. யாவே குழுவினரால் அரசனாக்கப்பட்ட யோசியா ஆலயத்தைச் சுத்தி செய்தார். பரவலாக சமயச் சீர்திருத்தம் செய்தார். இஃது, ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட ''சட்டநூலால்'' இன்னும் ஊக்குவிக்கப்பட்டது (2 அர 22-23; 2 நாள் 34). நொறுங்கிக் கொண்டிருக்கும் பேரரசைப் பாபிலோனியர்களிடமிருந்து காப்பாற்றும் இறுதிச்செயலாக, அசீரியா தன் பழைய எதிரியான எகிப்தோடு உடன்படிக்கை செய்து கொண்டது. பார்வோன் 2-ஆம் நெக்கோவின் தலைமையில், அசீரியர்களுக்கு உதவிட, யூப்பிரத்தீசு ஆற்றங்கரையிலுள்ள கார்கேமிசை நோக்கி எகிப்தியப் படை முன்னேறிக்கொண்டிருந்தபோது, யோசியா விளக்க முடியாத விதத்தில் அப்படையைத் தாக்கினார்; ஆனால் அப்போரில் கி.பி. 609-இல் இறந்தார் (2 அர 23:29-30; 2 நாள் 35:20-25). அவரது மகன் யோவகாசு (சல்லூம்) மூன்று மாதங்களுக்கே ஆட்சி செய்தான். நெக்கோ அவனைப் பதவிநீக்கம் செய்து நாடு கடத்தினான். அவனது சகோதரனும் எகிப்தியர்க

ளுக்குச் சார்பானவனுமான எலியாக்கிமை (யோயாக்கிம், 609-598) நெக்கோ யூதாவின் அரசனாக்கினான்; பெரும் கப்பம் கட்டச் செய்தான் (2 அர 23:31-35; 2 நாள் 36:2-4; காண்க. எரே 22:10-12).

இப்போது எகிப்து, சீரியாவையும் பாலஸ்தீனத்தையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்தது. தொடக்கத்தில், புத்தெழுச்சி பெற்றுக்கொண்டிருந்த பாபிலோனியர்கள் எகிப்தைத் தாக்கும் வலிமை கொண்டிருக்கவில்லை. ஆனால், 605-இல் நெபுகத்னேசர் கார்கேமிசில் எகிப்தியரைத் தோற்கடித்தான். நெபுகத்நேசர் அரசனாக முடிசூட்டிக் கொள்ள தன் நாட்டிற்குத் திரும்பிச் சென்றபோது. பாபிலோனியர்களின் முன்னேற்றம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. 604-இன் பிற்பகுதியில் அவன் படையுடன் திரும்பி வந்து அசுதோதைக் கைப்பற்றி அதன் மக்களை நாடு கடத்தினான். பாபிலோனியப் படையோடு போரிட அஞ்சிய யோயாக்கிம், நெபுகத்னேசருக்குப் பணிந்தான் (2 அர 24:1). ஆனால் எகிப்திய எல்லையில் நடந்த கடும்போரில் பாபிலோனியர்கள் தற்காலிகமாகப் பின்வாங்கியபோது, யோயாக்கிம் மடத்தனமாய்க் கிளர்ச்சி செய்தான். இது சிறிது காலத்திற்கே நீடித்தது. 598-இல் நெபுகத்னேசர் படையெடுத்து எருசலேமுக்குள் நுழைந்து ஆலயத்தைக் கொள்ளையிட்டான். யோயாக்கிமைச் சங்கிலியால் பிணைத்து நாடு கடத்தினான் (2 நாள் 36:6-7). யோயாக்கிமின் மகன் யோயாக்கினை (கோனியா) அரசனாக்கினான். மூன்று மாதங்களுக்குப்பின், இவனும், எருசலேமில் வாழ்ந்த ஏழைகளும் தவிர, மற்ற அனைவரும் நாடு கடத்தப்பட்டனர் (2 நாள் 24:8-16; 2 நாள் 36:9-10; எரே 22:24-30). பின்பு யோயாக்கினின் சிற்றப்பன் மத்தனியா (செதேக்கியா) அரசனாக்கப்பட்டான்.

597-இல் நடந்த நாடுகடத்தலுக்குப்பின் யூதா குழம்பிப்போன, கலக்கமடைந்த நாடாக இருந்தது. யூதாவின் உடனடியாக வரவிருக்கும் முடிவு பற்றிய அடையாளங்கள் இறைவாக்கு நூல்களில் நிறைந்து காணப்படுகின்றன (எ.கா. எரே 27-29; எசே 21:25-27). வாய்ப்பான காலத்திற்குக் காத்திராமல், எந்த வெளி ஆதரவும் இல்லாமல், பாபிலோனியர்களுக்கு எதிராக செதேக்கியா கலகம் செய்தான் (2 நாள் 36:11-16). பாபிலோனியர் விரைவாகச் செயல்பட்டனர். 588-இல் எருசலேமை முற்றுகையிட்டனர் (2 அர 25:1; எரே 21:3-7; 52:4). எருசலேமைச் சுற்றியிருந்த நகரங்களை ஒன்றன் பின் ஒன்றாக அழித்தனர். எகிப்தியப்படை எருசலேமை நோக்கி வந்தபோது, பாபிலோனியர் சிறிது காலத்திற்குப் பின்வாங்கினர். ஆனால், விரைவில் மீண்டும் எருசலேமை முற்றுகையிட்டனர் (37:5-10). எருசலேம் இந்த முற்றுகையை ஓர் ஆண்டுக்குத் தாக்குப்பிடித்தது. செதேக்கியா சரண் அடைய விரும்பினான் (38:14-23). ஆனால், எருசலேமின் உணவுப் பொருள்கள் தீர்ந்து விட்ட நிலையில் 587-இல் ஜூலை மாதத்தில் நகரச்சுவர்களைப் பாபிலோனியர் தகர்த்தனர். அரசன் தப்பிக்க முயற்சி செய்தான்; ஆனால், கைது செய்யப்பட்டு, பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டான் (2 அர 25:4-7; எரே 52:6-11). நெபுகத்னேசரின் படைத்தலைவன் நெபுசரதான் ஆலயத்தைக் கொள்ளையடித்தான்; சுவர்களைத் தரைமட்டமாக்கினான்; எருசலேமை எரியூட்டினான். யூதாவின் தலைவர்களுள் சிலர் நெபுகத்னேசர் முன் கொண்டு வரப்பட்டுக் கொல்லப்பட்டனர். மிக ஏழையான மக்கள் தவிர மற்ற அனைவரும் நாடு கடத்தப்பட்டனர் (2 அர 25:8-21; 2 நாள் 36: 17-20; எரே 39:8-10).

யூதா ஒரு பாபிலோனிய மாகாணம் ஆயிற்று. கெதல்யா ஆளுநராக நியமிக்கப்பட்டார். கொலை செய்யப்படுவதற்குமுன் குறுகிய காலத்திற்கே இவர் ஆட்சி செய்தார் (2 அர 25:22-25; எரே 40:7-41:18).

6. நாடுகடத்தலும் அதற்குப் பின்னும்: பாபிலோனால் வெற்றி கொள்ளப்பட்ட பின், யூதா வறிய நாடாயிற்று. அதிகமாக மக்கள் அங்கு வாழவில்லை. நெபுகத்னேசர் மீண்டும் பாலஸ்தீனம் மற்றும் எகிப்தின்

மேல் படையெடுத்தான். கி.மு. 582-இல் மூன்றாம் முறையாக யூதாவிலிருந்து மக்களை நாடு கடத்தினான் (எரே 52:30). அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்குள்ள யூதாவின் வரலாறு இருளிலே மூழ்கியுள்ளது, ஒன்றும் கூறுவதற்கில்லை. உள்நாட்டுப் போராட்டங்களாலும், பாரசீகப் படையெடுப்பாலும் பாபிலோனியப் பேரரசு முடிவுக்கு வந்தது. 538-இல் அக்டோபர் மாதத்தில் பாரசீக மன்னன் சைரசு, பாபிலோனில் புகுந்து அதைக் கைப்பற்றினார். 588-இல் பாலஸ்தீனத்தில் யூதர்களை மீண்டும் நிறுவி, எருசலேம் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய பொருளுதவியும் செய்து சைரசு சட்டம் இயற்றினார் (2 நாள் 36: 22-23; எஸ் 1:1-4; 6:3-5).

யூத நாட்டை மீண்டும் அமைக்கும் பொறுப்பு, யூதாவின் அரச குடும்பத்தைச் சேர்ந்த சேசுபட்சரிடம் கொடுக்கப்பட்டது. இவர் முன்னாள் நாடு கடத்தப்பட்டவர்கள் அடங்கிய ஒரு குழுவுடன் புறப்பட்டார். இக்குழுவில் இருந்தவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை. இந்த மீண்டும் நாடமைக்கும் வேலை தொடங்கிய நாள்கள் கடினமானவையாகும். கடந்த மகிமையை மீண்டும் அடைய, கண்ட கனவுகள் நிறைவேறவில்லை. நாடு கடத்தப்பட்டவர்கள் சிறு சிறு குழுக்களாக நாடு திரும்பினர். அவர்களுக்கும், ஏற்கெனவே யூதாவின் பகுதியில் இருந்தவர்களுக்குமிடையே பிணக்குகள் ஏற்பட்டன. இது, நிலவிளைச்சல் குறைவாலும் (ஆகா 1:9-11; 2:15-17), ஆலய அமைப்பு வேலை மெதுவாக முன்னேறியதாலும் (2:3; எஸ் 3:12) மேலும் கேடாகியது.

சேசுபட்சருக்குப்பின் செருபாபேல் ஆளுநர் ஆனார். ஏசுவா தொடங்கி, தலைமைக் குருக்கள் பலர் யூதாவின் ஆன்மீகக் காரியங்களுக்குப் பொறுப்பாய் இருந்தனர். பாலஸ்தீனம் உள்ளடங்கிய, யூப்பிரத்தீசுக்கு மேற்கிலுள்ள பகுதிகளுக்குப் பாரசீக ஆளுநனாக இருந்த தத்தனாயும் மற்றவர்களும் எதிர்ப்புக் காட்டினாலும், கி.மு. 515-இல் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது (6:13-18).

இக்காலத்து வரலாறு பற்றிய கால வரையை நிர்ணயிப்பது கடினமானாலும், ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியில், நெகேமியா பாரசீக யூதா மாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். எருசலேமின் சுவர்களை மீண்டும் கட்டியெழுப்ப இவருக்கு அனுமதியளிக்கப்பட்டது (நெகே 2:1-8). இரண்டாவது முறையாக இவர் யூதாவுக்கு ஆளுநராக வந்தபோது, நாடு கடத்தலுக்குப் பின் இருந்த சமூகத்தை நிலைப்படுத்தும் நோக்கோடு, இவர் பல சமூக, சமயச் சீர்திருத்தங்களைச் செய்தார் (நெகே 13). இந்தக் காலத்தில்தான் மறைநூல் வல்லுநர் எஸ்ரா பாபிலோனிலிருந்து யூதாவுக்கு வந்து (எஸ் 7:1-26), மோசே சட்டத்துக்குரிய முதன்மை இடத்தை அதற்குப் பெற்றுத் தந்தார் எனலாம் (நெகே 8).

கி.மு. 333-இல் பெரிய அலக்சாந்தர் பாலஸ்தீனத்தை வென்றபோது, கிரேக்கர் காலத்தில், யூதாவும் செலூக்கிய ஆட்சிக்குட்பட்டது. இந்த யூதாவின் பகுதி அசமோனிய நாட்டின் மையப்பகுதியாயிற்று. பாலஸ்தீனத்தை உரோமையர் ஆக்கிரமித்த காலத்தில், யூதா என்ற பெயர், இதை விட யூதேயா என்ற பெயர், சுயமாக ஆட்சி செய்யும் அரசியல் அமைப்பை விட, ஒரு நிலப்பகுதியையே குறித்தது (காண்க. லூக் 1:39).

புதிய ஏற்பாட்டில், இயேசு யூதா இனத்தின் வழித்தோன்றலாகக் காட்டப்படுகிறார் (எபி 7:14; காண்க. திருவெளி 5:5). திருவெளி 7:5-இல் முத்திரையிடப்பட்டவர்களின் பட்டியலில் முதல் இனமாக யூதா குறிக்கப்படுகிறது. காண்க. இஸ்ராயேலின் வரலாறு, யூதேயா.

யூதா எழுதிய திருமுகம் (JUDE, LETTER OF)

புதிய ஏற்பாட்டில் வரும் பொதுத் திருமுகங்களில் இச்சிறு நூல் கடைசியானது.

1. ஆசிரியர்:- ஆசிரியர் தன்னைப்பற்றி ''இயேசு கிறிஸ்துவின் ஊழியன் யாக்கோபின் சகோதரன்'' என்று குறிப்பிடுகிறார் யூதா. இந்த யாக்கோபு யார்? யாக்கோபு என்ற பெயருடைய புதிய ஏற்பாட்டு நபர்களில் இங்குக் குறிப்பிடப்படும் யாக்கோபு, ''ஆண்டவருடைய சகோதரர்'' என்று குறிப்பிடப்படுபவரும், எருசலேம் திருச்சபையின் தலைவராக இருந்தவருமான யாக்கோபாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

யூதா அல்லது யூதாசு என்ற பெயரைக் கொண்ட நபர்கள் சிலர் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றனர். இத்திருமுகத்தின் ஆசிரியர் யூதாஸ் இஸ்காரியோத்தாகவோ (மத் 10:5), ததேயு என்றழைக்கப்படும் (மத் 10:4; மாற் 8:18), அப்போஸ்தலருள் ஒருவரும் யாக்கோபின் மகனுமான (லூக் 6:16; யோவான் 14:22) யூதாசாகவோ, யூதாசு பர்சபா ஆகவோ (அ.ப. 15:22.27.32), தமஸ்கு நகரத்து யூதாசாகவோ (9:11) இருக்க முடியாது என்று கருதப்படுகிறது. மேலும், ஆசிரியர் தான் ஓர் அப்போஸ்தலர் என்று உரிமை கொண்டாடவில்லை. மேலும், அப்போஸ்தலர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, கடந்து சென்றுவிட்ட ஒரு காலத்தைக் குறிப்பிடுவதைப்போல எழுதுகிறார் (யூதா 17). ஆகவே, இந்நூலின் ஆசிரியர் ''ஆண்டவருடைய சகோதரனாகக்'' கருதப்படும் யூதாவாக இருக்கலாம்.

திருச்சபைத் தந்தையருள் ஒருவரான தெர்த்துல்லியன் என்பவர் அப்போஸ்தலரான யூதாவே இந்நூலை எழுதியதாகக் கருதினார். மற்றத் தந்தையர் ஆண்டவருடைய சகோதரரும், யாக்கோபின் சகோதரருமான யூதாவே இந்திருமுகத்தை எழுதியதாகக் கருதினர்.

இக்கால ஆய்வாளர்கள், இந்நூல் ஒரு புனைபெயர் நூலாக இருக்கலாம் என்கின்றனர். பிற்காலத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர், தன் கருத்துகள் ஏற்கப்பட வேண்டும் என்பதற்காக அனைவருக்கும் தெரிந்த யூதாவின் பெயரைப் பயன்படுத்தி இந்நூலை எழுதியிருக்கலாம். இம்முறை விவிலிய இலக்கியங்களில் காணப்படுகிறது.

எழுதியவர் யாராய் இருப்பினும், புனைபெயர் நூலாக இருந்தாலும், இறை ஏவுதலோடு எழுதுகிறோம் என்பதை ஆசிரியர் அறியாதிருந்தாலும், இந்நூல் இறை ஏவுதல் பெற்றது என்று வளர்ச்சியுள்ள, உயிருள்ள திருச்சபையின் விசுவாசம் ஏற்றுக் கொண்டுள்ளது.

2. யாருக்கு, எப்போது எழுதப்பட்டது?

''இறைவனால் அழைக்கப்பட்டு, தந்தையாகிய கடவுளின் அன்பிலும் இயேசு கிறிஸ்துவின் பாதுகாப்பிலும் வாழ்பவர்களுக்கு'' (1) இத்திருமுகம் எழுதப்படுகிறது. இக்குறிப்பு இந்நூல் யாருக்கு எழுதப்பட்டது, அவர்கள் வாழ்ந்த இடம் எது என்பதைச் சுட்டவில்லை. விவிலியத் திருமுறைப் பட்டியலைச் சேராத நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் தருகிறார். இஃது, இந்நூல் யூதர்களுக்கு எழுதப்பட்டிருக்கலாம் என்று சுட்டுகிறது. ஆனால், அதே சமயத்தில் புறவினத்தாரிடையே காணப்பட்ட தீயபண்புகளும், பிரமாணிக்கமற்ற தன்மையும் இந்நூலில் குறிக்கப்படுகின்றன. இது புறவினத்தாரிடையே வாழ்ந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டிருக்கலாம். ஒருவேளை சிறிய ஆசியாவில் வாழ்ந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு இத்திருமுகம் எழுதப்பட்டிருக்கலாம்.

இத்திருமுகம் கி.பி. 95-இல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் முதலாம் கிளமந்து பாப்புவின் திருமுகத்தோடு பலவகைகளில் ஒத்திருக்கிறது. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகம் யூதாவின் திருமுகத்தைத் தழுவியதாகத் தெரிகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு, இத்திருமுகம் கி.பி. 90-ஐ ஒட்டி எழுதப்பட்டிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

3. ஏன் எழுதப்பட்டது?: நூலை ஆராயுங்கால் யூதக் கிறிஸ்தவ சமூகங்களுக்கு யூதர்களிடமிருந்தோ, உரோமை அதிகாரி

களிடமிருந்து சில தத்துவக் கொள்கையாலோ, விசுவாச எதிர்ப்புகள் தோன்றியிருப்பதாகத் தெரிகிறது. தங்களுடைய தவறான போதனையாலும், கெட்ட நடத்தையாலும் சிலர் விசுவாசிகளைக் குழப்பியிருக்கலாம். நூல் தாக்கும் தப்பறைகள், பிற்காலத்தில் ஞான வாதம் என்று வளர்ச்சியடையும் தப்பறைக் கொள்கையாகத் தெரிகிறது. இத்தவறான போதனைகள் என்ன என்று ஆசிரியர் விளக்கவில்லை. ஆசிரியர் கூறுவன எந்தத் தவற்றுக்கும் பொதுவானவையாக இருப்பது போல் தோன்றுகிறது. தப்பறைகளையும், அவற்றைப் பரப்புவோரையும் கண்டிக்கிறாரே ஒழிய அவற்றை விளக்கவில்லை. இவற்றிலிருந்து கிறிஸ்தவர்கள் தங்களையே காத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் பெற்றுக் கொண்ட விசுவாசத்தைக் காத்து வளர்த்துக் கொள்ள வேண்டும். இப்படி ஊக்குவிப்பதையும், உற்சாகப்படுத்துவதையுமே இந்நூல் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

4. திருமுறைப்பட்டியலில் இந்நூல்:- *யூசேபியு (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு) போன்றவர்கள் இந்நூலின் உண்மைத்தன்மை பற்றி ஐயுற்றுள்ளனர். இதற்கு எரோனிமு காரணம் கொடுக்கிறார். யூதா போலி நூலான ஏனோக்கிலிருந்து எடுத்துக்காட்டு கொடுப்பதால், பலரால் இந்நூல் நிராகரிக்கப் பட்டது. ஆயினும், அதன் தொன்மையாலும், அது பயன்படுத்தப்பட்டிருக்கும் முறையாலும், திருமுறையில் இடம்பெறத் தகுதியுள்ளதே என்று கூறுகிறார். இந்நூல் அலக்சாந்திரியா கிளமந்து, தெர்த்துல்லியன் போன்ற இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருச்சபைத் தந்தையரால் மதிக்கப்பட்டது. மூராத்தோரியின் திருமுறைப்பட்டியலிலும், அத்தனாசியு, எருசலேம் சிரில், தமசுஸ், இன்னோசன்ட் ஆகியோரின் பட்டியலிலும், இப்போ சங்கம், இலவோதிக்கேயா சங்கம், மூன்றாம் கார்த்தேசு சங்கம் ஆகியவற்றின் பட்டியலிலும் இந்நூல் இடம் பெறுகிறது. ஒரிசன் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.*

5. இலக்கியத் தொடர்பு:

அ. யூதாவும் இரண்டாம் பேதுருவும்:- *இருநூல்களும் போலிப்போதகர்களால், விசுவாசத்திற்கும் ஒழுக்க வாழ்வுக்கும் வரக்கூடிய ஆபத்துகளைப் பற்றி விசுவாசிகளை எச்சரிப்பதற்காக எழுதப்பட்டுள்ளன. இந்தப் பொது நோக்கிலிருந்து எழும் இந்நூல்களுக்குள் நெருங்கிய தொடர்பு உள்ளது. சிந்தனையிலும், மொழியிலும் இரண்டுக்குமிடையே மிகுந்த ஒற்றுமையுள்ளது. யூதா திருமுகத்தின் 25 வசனங்களில் 19 வசனங்கள் முழுமையாகவோ, பகுதியாகவோ பேதுருவின் திருமுகத்தில் கையாளப்பட்டுள்ளன என்பது பின்வரும் ஒப்புமையால் தெளிவாகும். யூதா 2—2 பேதுரு 1:2; யூதா 3—2 பேதுரு 1:5; யூதா 5அ—2 பேதுரு 1:12; யூதா 4.5ஆ-19-2 பேதுரு 2:1-3:3; யூதா 24—2 பேதுரு 3:4. இந்த ஒப்புமை, இவை ஒன்றை மற்றது தழுவி எழுதப்பட்டிருக்கலாம் என்ற கருத்தைத் தோற்றுவிக்கவல்லன. 2 பேதுருவை விட யூதா காலத்தால் முந்தியது எனக் கருதப்படுகிறது. ஏனெனில், இறைவனது தண்டனைகளைக் காலமுறைப்படி எடுத்துக் கூறி, 2 பேதுரு 2:4-7, யூதா 5-7-இல் வரும் வரிசையைத் திருத்துகிறது. மேலும், 2 பேதுரு யூதாவில் வரும் விநோதமானவைகளை விட்டுவிடுகிறது. எ.கா. வானதூதர்களின் பாவத்தின் தன்மை (யூதா 6தொ), பேயினுடன் மிக்கேல் வாதிடுதல் (யூதா 9), வழிதவறி அலையும் விண்மீன்கள் பற்றிய குறிப்பு (யூதா 13), ஏனோக்கு நூலிலிருந்து மேற்கோள் (யூதா 14தொ). இறுதியாக 2 பேதுரு 2-இல் போலி இறைவாக்கினர்களைப் பற்றிப் பேசும் பகுதி ஆசிரியரின் நோக்கத்திற்கேற்றவாறு மாற்றி அமைக்கப்பட்டிருப்பதோடு, திருமுகத்தின் பொதுக்கருத்தை முறிப்பதாகத் தெரிகிறது. இதுவும் 2 பேதுரு யூதாவைத் தழுவியுள்ளதாகச் சுட்டுகிறது.*

ஆ. யூதாவும் ஏனோக்கு நூலும்: *யூதா போலி நூலான ஏனோக்கைப் பெரிதும் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. யூதா 14-15-இல் வரும் மேற்கோளைத் தவிர்த்து,*

ஆசிரியர், வழி தவறி அலையும் விண் மீன்களைப் பற்றியும் (யூதா 13), வான தூதரின் தண்டனை பற்றியும் (யூதா 6) குறிப்பிடுகிறார். ஏனோக்கு நூல் இறை ஏவுதல் பெற்றதா இல்லையா என்று யூதா தீர்ப்புக் கூறவில்லை. ஆனால் தப்பறைக ளைப் போதிப்பவர்களைத் தாக்கி அவர்க ளுக்கு உரிய பதிலை அளிக்க வல்லது என்று தனது வாசகர்களால் ஏற்றுக் கொள் ளப்பட்ட நூல்போல் ஏனோக்கை யூதா பயன்படுத்துகிறது.

6. நூலின் திட்டம்:

I வச. 1-2 : முன்னுரை.

II வச. 3-4 : மடலின் காரணம் ; போலிப் போதகர்களின் பிரசன்னம்.

III வச. 5-16 : போலிப் போதகர்கள்.

அ. எச்சரிக்கைப் பாடங்கள் (5 7).

ஆ. தீயோரின் வாழ்வு (8-10).

இ. உவமைகளும் உருவகங்களும் (11-13).

ஈ. ஏனோக்கு மேற்கோள் (14-16).

IV வச. 17-23 : விசுவாசிகளுக்கு அறவுரை.

அ. அப்போஸ்தலப் படிப்பினை (17-19).

ஆ. விசுவாசிகளின் கடமைகள் (20-23).

V வச. 24-25 : இறுதிப் போற்றுரை.

யூதாசின் நற்செய்தி (JUDAS, GOSPEL OF)

இஃது ஒரு போலி நற்செய்தியாகும். இதை இரனேயு விவரிக்கிறார். தப்பறைக ளுக்கு எதிராக எப்பிபானியு எழுதிய நூல்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இதைக் காயின் ஞானவாதப் பிரி வினர் பயன்படுத்தினர். ஒருவேளை கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் இரனேயுவின் கருத்துப்படி, இந்நூல் யூதாசு இஸ்காரியோத்தைச் சாதகமான முறையில் விவரிக்கிறது. யூதாசு, அறவொளியூட்டப் பெற்ற ஞானவாதி என்ற அளவில், மனு குலத்தை மீட்புப் பெறச்செய்யும் உன்னத நோக்கோடு இயேசுவைக் காட்டிக் கொடுத் தார்.

யூதாசு (JUDAS)

யூதாசு என்ற பெயர் யூதா என்ற எபிரேயப் பெயரின் கிரேக்க வடிவமாகும்.

1. யூதாசு மக்கபேயு. காண்க. யூதா மக்கபேயு.

2. கலிபியின் மகன். யோனத்தான் படை யில் ஒரு தலைவர் (1 மக் 11:70). ஆட்சோரில் பதுங்கியிருந்து தாக்கப்பட்ட போது, எல்லாரும் ஓடிவிட இந்த யூதாசும் மத்தத்தியாவும் யோனத்தானுடன் இருந்தனர்.

3. சீமோன் மக்கபேயுவின் மகனும், யோவான் இரிக்கானுவுடைய சகோதரரும் ஆவார். சீமோன் மக்கபேயு வயது முதிர்ந்த வரான பின்பு, இந்த யூதாசும் யோவானும் யூத நாட்டுக்காகப் போரிடப் படைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். இருவரும் சேர்ந்து செந்தபேயுவைத் தோற் கடித்தனர் (1 மக் 16:2-10).

4. அரிஸ்தோபுலுக்கும் எகிப்திலுள்ள யூதர்களுக்கும் கடிதம் எழுதியவர்களில் ஒருவர் (2 மக் 1:10). சிலரின் கருத்துப்படி, இவர் யூதா மக்கபேயுவாக இருக்கலாம்.

5. இயேசுவின் சகோதரர்கள் என்று மத் 13:55; மாற் 6:3-இல் கூறப்பட்டுள்ள நால் வரில் ஒருவர். பொதுவாக, இவர் ''யாக் கோபின் சகோதரர் யூதா'' என்னும் யூதா எழுதிய திருமுகத்தின் ஆசிரியராகக் கருதப் படுகிறார்.

6. யூதாசு இஸ்காரியோத்து-

இத்தலைப்பின் கீழ்க் காண்க.

7. யாக்கோபின் மகன் (அல்லது சகோ தரன்). பன்னிருவருள் ஒருவர். லூக் 6:16; யோவா 14:22-இல் மட்டும் குறிக்கப்படுகி றார். இவர் மத் 10:3; மாற் 3:18-இல் குறிக்கப்படும் ததேயுவாகக் கருதப்படுகி றார். சிலர் இவரையும் 5-இல் விவரிக்கப் படுபவரையும் ஒன்றாகக் கருதுகின்றனர்.

8. கலிலேயனான யூதாசு; தீவிரவாதி; கி.பி. 6-7-இல் நடந்த கணக்கெடுப்பின்

போது உரோமையர்களுக்கு எதிரான கிளர்ச்சியின் தலைவன். உரோமையரின் ஆட்சியையும், யூதேயாவின்மேலான வரிமுறையைச் சுமத்துவதற்கும் இந்தக் கணக்கெடுப்பு அடையாளமாகும் (அ.ப. 5:37).

9. தமஸ்குவில் நேர்த் தெரு என்ற தெருவிலுள்ள இவரது வீட்டில்தான், இயேசுவின் காட்சிபெற்ற சவுல் தங்கியிருந்தார் (அ.ப. 9:11). இவரது வீட்டில்தான் சவுல் திருமுழுக்குப் பெற்று, தனது பணிக்கு ஆணை பெற்றார். இவரைப் பற்றி வேறு எதுவும் தெரியவில்லை.

10. யூதாசு பர்சபா எருசலேம் திருச்சபையின் முக்கிய அங்கத்தினரும் (இறைவாக்கினரும்) ஆவார். அந்தியோக்கு, சீரியா, மற்றும் சிலிசியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த புற இனக் கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்த பவுல், பர்னபாவோடு செல்வதற்காக அப்போஸ்தலர்களாலும் மூப்பர்களாலும் தேர்ந்தேடுக்கப்பட்டவர்களில் ஒருவர் (அ.ப. 15:22-35). மோசே சட்டத்தைப் பொருத்த மட்டும் புற இனக் கிறிஸ்தவர்களின் பொறுப்பைப் பற்றி எருசலேம் திருச்சபையின் தீர்மானத்தை யூதாசும் பர்னபாவும் விளக்கிக்காட்ட வேண்டும். யூதாசு எருசலேமுக்குத் திரும்பினார். இவர் யோசேப்பு பர்சபாவின் சகோதரனாக இருக்கலாம்.

யூதாசு இஸ்காரியோத்து (JUDAS ISCARIOT)

பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவர். இயேசுவைக் காட்டிக் கொடுத்தவர். இஸ்காரியோத்து என்ற பெயரின் பொருள் (காண்க. லூக் 22:3; யோவா 14:22) ஐயப்பாடு உள்ளதாகவே உள்ளது. ''பொய்யன் (பொய்யின் மனிதன்), வாள் கொண்டிருப்பவன், இசக்காரின் மனிதன்'' என்று இச்சொல்லுக்குப் பலவாறு சொல்லிலக்கணம் சுட்டிக்காட்டப்படும். ''கெரியோத்தைச் சேர்ந்த மனிதன்'' என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் பொருளாகும். கெரியோத்து இருந்த இடம் தெரியாது. அது யூதேயாவில் இருந்தது என்று கருதப்பட்டது. அதே பெயர், யோவா 6:71; 13:26-இல் யூதாசின் தந்தை சீமோனுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.

இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்காக யூதாசு இஸ்காரியோத்து பழிக்கப்படுகிறார். இதற்கு நான்கு நற்செய்திகளும் சான்று கூறுகின்றன (மத் 26:47-56 இணை). இயேசுவே இதை முன்னறிவிக்கிறார் (யோவா 6:70-7). படை வீரர்களையும், தலைமைக் குருக்களும் பரிசேயரும் அனுப்பிய காவலர்களையும் தோட்டத்திற்கு நடத்திச் சென்று, இயேசுவை முன் ஒழுங்கு செய்யப்பட்ட அடையாளமாகிய முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்து இக்கொடிய செயலைச் செய்தார்.

அப்போஸ்தலர்களின் பட்டியலில் யூதாசு சேர்க்கப்பட்டிருந்தாலும், அவர் தேர்ந்தெடுக்கப்படுதல், அழைப்பு ஆகியன விவரிக்கப்படவில்லை. அவரும் மற்ற அப்போஸ்தலர்களைப் போல் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அவருடைய நடத்தையும் மற்றவர்களுடையதைப் போலவே இருந்திருக்க வேண்டும். மீட்பரின் வார்த்தைகளைக் கேட்டிருக்க வேண்டும்; அவருடைய அருஞ்செயல்களைக் கண்டிருக்க வேண்டும். சீடர்களின் பல பொறுப்புகளை யூதாசும் செய்திருக்க வேண்டும். யோவா 12:5-6; 13:29-இன்படி, குழுவின் பணப்பொறுப்பு அவரிடம் இருந்தது. அதிலிருந்து திருடிக்கொள்வதுண்டு. அவரது பேராசையினால், தலைமைக் குருக்களிடம் சென்று, இயேசுவைக் காட்டிக் கொடுக்கப் பேரம்பேசினார் (மத் 26:14-16 இணை).

இயேசுவைக் காட்டிக்கொடுக்கத் திட்டமிட்டு வாய்ப்புக்காகக் காத்திருந்தார். பாஸ்கு உணவின்போது, சீடர்களில் ஒருவன் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்று இயேசு முன்னறிவித்தார். யூதாசு அந்த அறையை விட்டு வெளியேறி, தனது திட்டத்தின்படி நடக்கலானார். இயேசுவின் பழக்க வழக்கங்களை நன்கு அறிவராதலால் யூதாசுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. படைவீரர்களையும் காவலர்களையும் கெத்சம

னித் தோட்டத்திற்குக் கூட்டிச் சென்று, முன் ஒழுங்கு செய்திருந்தபடி, முத்தமிட்டுக் குருவைக் காட்டிக் கொடுத்தார். . இயேசு மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டபின், யூதாசை அவரது மனச்சாட்சி குத்த ஆரம்பித்தது. தலைமைக் குருக்களிடமும் மூப்பர்களிடமும் சென்று, அவர்களிடமிருந்து பெற்ற முப்பது வெள்ளிக்காசுகளை விட்டெறிந்துவிட்டு, பின் தூக்குப்போட்டுக் கொண்டார் *(மத் 27:3 5; அ.ப. 1:18-20)*.

இறையியல் நோக்கிலிருந்தும், விவிலிய விவரிப்பிலுள்ள சிலுவை வழி பரிகாரம் செய்வது என்ற நோக்கிலிருந்தும், யூதாசு இயேசுவைக் காட்டிக் கொடுத்த நிகழ்ச்சியைப் பற்றியும், யூதாசின் ஆட்தன்மையின் ஆற்றலுடைமையைப் பற்றியும் ஊகங்களுக்குக் குறைவேயில்லை. இயேசு ஏன் யூதாசைத் தேர்ந்தெடுத்தார்? ஏன் பணப் பெட்டியை அவரிடம் ஒப்படைத்தார்? யூதாசு ஏன் முதலில் சீடராகி, பின்பு காட்டிக் கொடுத்தார்? இதனால், இயேசு தமது ஆற்றலை வெளிப்படுத்தக் கட்டாயப் படுத்த முயற்சித்தாரா? இவற்றிற்கெல்லாம் நிச்சயமான பதிலே இல்லை எனலாம்.

யூதா மக்கபேயு (JUDAS MACCABEUS)

யூதா மக்கபேயு என்பவர் குருவாகிய மத்தத்தியாவின் மூன்றாவது புதல்வராவார். மக்கபேயு என்பது யூதாவுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயராகும் *(1 மக் 2:1)*. மத்தத்தியா செலூக்கிய மன்னர்களால் செய்யப்பட்ட அனைத்துத் தீய செயல்களையும் கவனித்துக் கொண்டே வந்தார். அந்தியோக்கு மன்னனால் அனுப்பப்பட்டவர்கள் மத்தத்தியாவிடம் வந்து, அவரையும் அவரது புதல்வர்களையும், அரசரின் நண்பர்களாக்கிக் கொள்ளுமாறு வேண்டிய பொழுது, மத்தத்தியா என்பவர் எங்கள் குலத்தந்தையர்களின் சமயத்தை விட்டு யார் பிரிந்து சென்றாலும் நாங்கள் பிரிந்து செல்லவும் மாட்டோம், எங்கள் சட்டங்களால் விதிக்கப்பட்ட கட்டளைகளை மீறி நடக்கவும் மாட்டோம், வேறு தெய்வங்களுக்குப் பலியிடவும் மாட்டோம், அரசனின் கட்டளைக்குக் கீழ்ப்படியவும் மாட்டோம் என்று உறுதியளித்தார் *(1 மக் 2:21)*.

மேலும், அரசனின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து சிலைகளுக்குப் பலியிட வந்த யூதனையும், அவனைப் பலி செலுத்த வலியுறுத்திய அரசனால் அனுப்பப்பட்ட மனிதனையும் மத்தத்தியா கொன்றார். இதிலிருந்துதான் மக்கபேயர் புரட்சி ஆரம்பமாகின்றது. மத்தத்தியாவும், அவருடைய புதல்வர்களும் மலைகளுக்கு ஓடிச்சென்று அங்கு ஒரு படைக்குழுவை ஏற்படுத்துகின்றனர். மறைந்திருந்த சிலர் ஓய்வு நாளில் போர்புரிய மறுத்ததால் அரசரால் அனுப்பப் பட்டவர்களால் கொலை செய்யப்படுகின்றனர். பகைவர்கள் தாக்கும் பொழுதெல்லாம் எதிர்த்து நின்று போர்புரிய வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது. பின், மத்தத்தியா தனது வயதான காலத்தில் தனது இளைய மகனாகிய யூதா மக்கபேயுவைப் படைத்தலைவனாக்கி, இதே புரட்சியை முன்னின்று வழிநடத்த வேண்டுகோள் விடுக்கின்றார் *(1 மக் 2:66)*. மக்கபேயர்களால் தொடங்கப்பட்ட இந்தப் புரட்சியை அடக்குவதற்காக அரசனால் அனுப்பப்பட்ட சிறிய சிறிய படைகளையெல்லாம் யூதா தாக்கி வெற்றி பெறுகின்றார். அப்பொல்லோனியு என்பவரைத் தோற்கடித்துக் கொலை செய்கின்றார் *(1 மக் 3:10-12)*. மேலும், செரோன் *(3:13-26)*, கோர்கியா *(1 மக் 3:38-4:25)*, லீசியா *(4:28-35)* போன்றவர்களையும் போரில் தோற்கடித்துக் கொலை செய்கின்றார். இவ்வாறு யூதாசு மக்கபேயு அடைந்த வெற்றிகளின் பயனாக அவரால் கி.மு. 165-இல் எருசலேம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தி அபிடேகம் பண்ண முடிந்தது *(4:36-60)*. உடனே புறவினத்தாரகள் கோபம் கொண்டு தங்களைச் சுற்றி வாழ்ந்த யூதமக்களை அழித்தொழிக்க திட்டம் தீட்டினர். இதனால் யூதா இதுமேயர்களுக்கும் *(5:1-8,65)* கிலயாதில் திமொத்தேயுவுக்கும் எதிராகப் போர் புரிந்து பெரிய சேதங்களை ஏற்படுத்தினார் *(5:24-44)*. கிலயாதில் யூதர்களின் நிலைமை மிகவும் மோசமானதாக இருந்த

தால் அவர்களனைவரையும் யூதா யூதேயா விற்கு அழைத்துச் சென்றார் *(5:45-54)*. மேலும், அவர் பெலிஸ்தியாவின் நகரங் களையும் தாக்கினார் *(1 :66-68)*.

ஐந்தாம் அந்தியோக்கு மன்னனின் அர சவை அதிகாரியும் படைத்தலைவனுமாகிய லீசியா வலிமைமிக்க படைகளையும், பல் லாயிரக்கணக்கான போர் வீரர்களையும் அனுப்பி யூதா மக்கபேயுவின் படைக்கு எதிராகப் போர்புரிந்து, இறுதியில் யூதாவைப் பெத்சூர் என்ற இடத்தில் தோற்கடித்தான் *(6:28-47)*. இருப்பினும் அந்தியோக்கு மன் னன் தான் அடைந்த வெற்றியின் மமதை யில் இருந்துவிடாமல் இருக்க தெமேத்தி ரியு என்பவன் அந்தியோக்குவையும் லீசி யாவையும் கொன்றுவிட்டு கி.மு. 162-இல் அரியணை ஏறினான். இவர் அரசரான பின் யூதா செய்த வீரச் செயல்களைக் கேட்டு, அவரை முறியடிக்க நிக்கானோர் என்ப வனை அனுப்பினார். யூதா அவனைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டார் *(7:32; 39-50)*. பின் உரோமையர்களோடு யூதா உடன்படிக்கை செய்துகொண்டார். ஆனால், இது பின்வந்த நிகழ்ச்சிகளைப் பாதிக்கவில்லை *(1 மக் 8)*. ஆனால், தன்னால் அனுப்பப்பட்ட நிக்கானோர் யூதா வால் கொலை செய்யப்பட்டுவிட்டான் என்பதை அறிந்த தெமேத்திரியு பாக்கீதின் தலைமையின் கீழ் வலிமைமிக்க படை களை அனுப்பி யூதாவை எதிர்த்துப் போரி டச் செய்கின்றான். இந்தப் போரில் யூதா தோற்கடிக்கப்பட்டு உயிர் துறக்கின்றார் *(9:1-21)*.

காண்க. மக்கபேயர் கிளர்ச்சி.

யூதாவின் பாலைவனம் (JUDAH, WILDERNESS OF)

பழைய ஏற்பாட்டு வாசகங்களின் அடிப் படையில், பாலஸ்தீனத்தின் தெற்கில் நெகேபு பகுதியில் இந்த யூதேயா பாலை வனப் பகுதி அமைந்துள்ளது; சாக்கடலின் மேற்குக் கரை வரை விரிந்திருக்கிறது. திருமுழுக்கு யோவான் யூதேயா பாலை வனத்தில் போதிக்கத் தொடங்கினார் என்று மத் *3:1* சொல்லுகிறது. இதற்கு இணையான மாற் *1:4*; லூக் *3:2*-இல் இப்பகுதி வெறு மனே ''பாலைவனம்'' என்று குறிப்பிடப் படுகிறது. வாசகங்களின் சூழ்நிலை, இப் பகுதி, யோர்தான் பள்ளத்தாக்கில் சாக்கட லின் வடமுனையில் அமைந்திருக்கலாம் என்று சுட்டுகிறது.

யூதாவின் மலைப்பகுதி (JUDAH, HILL COUNTRY OF)

பாலஸ்தீனத்தில் உள்ள ஒரு மாவட்டம். எப்பிராயிம் மலைப்பகுதிக்குத் தெற்கில் உள்ள மத்திய மலைப் பகுதி. கிழக்கில் யூதேயா பாலைவனத்தையும் மேற்கில் செப்பேலாவையும் எல்லையாகக் கொண் டது *(யோசு 11:21; 20:7; 21:11; 2 நாள் 21:11; 27:4)*. இந்த மாவட்டத்தின் பரப்பைப் பற்றி பழைய ஏற்பாடு குறிப்பிடவில்லை. எபிரோன் இந்த இடத்தில் தான் இருந்தது *(யோசு 20:7; 21:11)*. இது யோசு *15:48*; எரே *32:44; 33:13*-இல் வெறுமனே மலைப் பகுதி என்று குறிப்பிடப்பட்டாலும்; இம் மாவட்டத்தில் பல நகரங்கள் இருந்தன என்பதை இவ்வாசகங்கள் தெளிவுபடுத்து கின்றன.

அனேகமாக லூக் *1:65*-இல் சொல்லப் பட்டிருக்கின்ற 'யூதேயா மலை நாடு' இந்த இடமாகத்தான் இருக்க வேண்டும்.

யூதித்து (JUDITH - யூதப்பெண்)

1. ஏசாவின் மனைவிகளுள் ஒருத்தி. இத் தியன் பெயேரியின் மகள் *(ஆதி 26:34)*. சிலரது கருத்துப்படி இவளும் ஒகோலி பாமாவும் ஒரே ஆள் ஆவர்.

2. யூதித்து நூலின் முக்கிய கதைத் தலைவி; மெராரியின் வழித்தோன்றலும் மனாசேயின் விதவையும் ஆவாள் *(ஆதி 46:11; யாத் 6:16-19)*. அழகானவள், செல்வ மிக்கவள், பக்தியுள்ளவள் என்று விவரிக் கப்படுகிறாள். அவளுடைய கவர்ச்சியும் துணிவும் நெபுகத்னேசரின் படைகளிட மிருந்து எபிரேயர்களுக்கு விடுதலை தந் தன. படையெடுத்து வந்த தளபதியாகிய ஒலபெர்னேயால் விருந்துக்கு அழைக்கப் பட்டு அவன் குடிபோதையில் இருந்த

போது, அவனைக் கொன்று, எபிரேயர்களுக்கும் எருசலேமுக்கும் விடுதலை அளித்தாள்.

யூதித்து நூல் JUDITH, BOOK OF)

1. முன்னுரை:- இது துணைத் திருமுறைப் பட்டியலைச் சேர்ந்த நூலாகும். இந்நூல் மிட்ராசு முறையிலும் வெளிப்பாட்டு இலக்கிய முறையிலும் விளக்கம் பெறக் கூடியதாகும். இது பெத்தூலியாவின் யூதித்து என்ற வீராங்கனையின் தீரச் செயல்களைக் கூறுகிறது.

2. பெயர்:- அ) இப்பெயரில் ஏசாவின் மனைவியருள் ஒருத்தி இருக்கிறாள். இவளும், ஏசாவின் மற்றொரு மனைவியான பாசமத்தும், தங்களது மாமனார் மாமியாருக்கு எவ்வளவு தொந்தரவு கொடுத்தார்கள் என்றால், ஆதியாகம ஆசிரியர் ''அவர்கள் இருவரும் ஏற்கெனவே ஈசாக்கையும், ரபேக்காவையும் மனம் நோகச் செய்திருந்தனர்'' என்று கூறுகிறார் *(ஆதி 26:34-35).*

ஆ) ஆனால் இவர்களுக்கு நேர் மாறாக அமைந்திருக்கிறாள் இந்நூலின் கதைத் தலைவி. இவள் செல்வமிக்க விதவை. இவள் யூதாவின் மேல் படையெடுத்த ஓலபெரினே என்ற படைத் தலைவனது தலையைவெட்டி, தனது மக்களுக்கு விடுதலை அளித்தாள். இவள் லேவியின் மக்களுள் ஒருவரான மெராரியின் தலைமுறைகளில் வந்தவள் *(ஆதி 46:11; யாத் 6:16.19).* யூதித்து என்ற பெயருக்கு ''யூதப் பெண்'' என்ற பொருள் கொடுக்கலாம். பெண்களில் பக்தி மிகுந்த ஓர் எடுத்துக்காட்டான பெண்ணின் கதையைக் கூறும் நூலுக்குப் பொருத்தமானதே யூதித்து என்ற பெயர். இறைவனது வலிமையில் நம்பிக்கை வைத்து அவருக்குச் சரியான தொண்டு செய்தால், எவ்வளவு வல்லமை மிக்க உலக ஆற்றல்களையும் வெற்றி கொள்ளலாம் என்று எடுத்துக் கூறுகிறது இந்நூல்.

3. திட்டம்:- கதை தானாகவே இரு தெளிவான பகுதிகளாகப் பிரிகிறது.

I. நெபுகத்னேசர், ஓலபெரினே ஆகியோரின் வீரச் செயல்கள் *(1:1-7:32).*

அ) 1:1-12: அர்ப்பகசாதுமேல் நெபுகத்னேசரின் வெற்றி.

ஆ) 2:1-3:15: மேற்கு நாடுகள் மேல் ஓலபெரினே படையெடுத்தல்.

இ) 4:1-7-32: பெத்தூலியாவிலுள்ள யூதர்களின் எதிர்பார்ப்பும் நெருக்கடி நிலையும்.

II. யூதித்து இஸ்ராயேலர்களுக்கு விடுதலை அளித்தலும் போற்றுரைப் பாடலும் *(8:1-16:25).*

அ) 8:1-34: யூதித்தின் மேன்மையும் அவள் யூதத் தலைவர்களைக் கடிந்து கொள்ளுதலும்.

ஆ) 9:1-19: யூதித்தின் மன்றாட்டு.

இ) 10:1-13:11: யூதித்து ஓலபெரினேயின் பாசறைக்குச் சென்று அவனைக் கொலை செய்தல்.

ஈ) 13:12-15:15: யூதித்தின் வெற்றியும், அசீரியர்கள் தோல்வியும்.

உ) 16:1-31: யூதித்தின் வெற்றிப் போற்றுரைப் பாடல்.

4. பொருளடக்கச் சுருக்கமும், குறிப்புகளும்: I. கதைக்கு மேடை அமைக்கப்படுகிறது. இஸ்ராயேலர்களைத் தாக்க இருக்கும் அசீரியர்களின் ஆதிக்கம், ஆற்றல், வெற்றிகள் முதலியவை எடுத்துக் கூறப்படுகின்றன.

அதி. 1:- பின்னணியில் அசீரிய மன்னன் நெபுகத்னேசரின் மாபெரும் உருவம் அச்சம் தரும் விதத்தில் தோன்றுகிறது. அவனுக்கு நிகரான மேதியா மன்னன் அர்ப்பகசாது, எக்பத்தான் என்னும் நகரை நம்பத்தகாத அளவுகளையுடைய கோட்டை கொத்தளங்களோடு அமைத்து , பெருமை பாராட்டிக் கொள்கிறான். இவனுக்கு எதிராகத் தன்னோடு சேர்ந்து போர்செய்ய, அசீரிய மன்னன் நெபுகத்னேசர் ஏலாம் மற்றும் பாரசீகம் தொடங்கி எகிப்து மற்றும் எத்தியோப்பியா வரையிலுள்ள மேற்கு நாடுக

ளுக்கு அழைப்பு விடுக்கிறான். அவை யாவும் அவனது அழைப்பை ஏளனம் செய்து ஏற்க மறுக்கின்றன. அவன் கிழக்கு நாடுகளின் துணைகொண்டு எக்பத்தானை வென்று அழிக்கிறான். அந்த வெற்றியை அந்த இடத்திலேயே நூற்று இருபது நாட்களுக்கு அவனும் அவன் படையும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அதி. 2-3:- அவ்வெற்றிக்குப்பின் ஒரு கடவுளுக்குரிய ஆடம்பரத் தனிமையில் நெபுகத்னேசர் வாழ ஆரம்பிக்கிறான் (3:8). மன்னனது அழைப்பை ஏற்க மறுத்த மேற்கு நாடுகளைப் பழிவாங்கும் பொறுப்பை அவனது படைத்தலைவன் ஓலபெரினே ஏற்கிறான். நினிவே அருகில் பெரும்படை ஒன்று ஆற்றலோடு முன்னேறுகிறது. ஒரே அதிரடித்தாக்குதலில் இப்படை மேற்குக் கடலையும் அயோனியாவின் கடற்கரையான யாபேத்தின் எல்லையையும் அடைகிறது. திடீரென்று தெற்கு நோக்கிச் செல்லத் தீர்மானித்து சீரியா, தமஸ்கு வரையிலுள்ள பகுதிகளை அழித்து, தீர் முதல் காசா வரையிலுள்ள கடற்கரை முழுவதையும் சரண் அடையக் கட்டாயப் படுத்தியது. ஓலபெரினே நிகழ்த்திய அழிவைக் கண்டு அஞ்சிய மக்கள் தாமாகவே அவனுக்கு அடிபணிந்தனர். பின் எகதிரலோன் சமவெளியில் சமாரியாவின் மலைகளைக் கர்மேல் மலையோடு இணைக்கும் மலை முகட்டைக் கடந்து கடற்கரை வழியை ஓலபெரினே அடைகிறான். அச்சமவெளியில் படைகளை மீண்டும் ஒன்று கூட்டும் பொருட்டு ஒரு மாதம் தங்குகிறான் (3:9-10).

படைகள் புறப்பட்டு எருசலேமுக்குச் செல்லும் வழியைப் பாதுகாக்கும் மலைகளின் அடிவாரத்தை அடைந்தன. இதை அறிந்து எருசலேம் கலங்கியது. இஸ்ராயேல் ஒரு சிறிய மக்களினமாகும். வெற்றி மேல் வெற்றிகொள்ளும் ஒரு பெரும் படைக்குமுன் இஸ்ராயேலின் அவல நிலையை வாசகர் கண்டு உருகக் கதை சொல்பவர் ஒரு மாதகாலம் இடைவெளி அளிக்கிறார் எனலாம் (4:1-3). பெரிய குரு யோயாக்கிம் மலைப்பாதைகளையும், கணவாய்களையும் கைப்பற்றிக் காக்கும்படி பெத்தூலியா, பெத்தோமசுத்தயிம் நகரங்களில் வாழ்ந்த மக்களுக்குக் கட்டளையிட்டார். இதற்கிடையில் தீயவர்களின் கையில் இஸ்ராயேலரைக் கைவிட்டு விடாதவாறு இறைவனை மன்றாட பொதுச் செபம் கட்டளையிடப்படுகிறது. யூதேயா முழுவதும் மக்களனைவரும் மயிராடை உடுத்தி, நோன்பிருந்து இறைவனை மன்றாடினர். ஆண்டவரின் பீடத்தையும் மயிராடையால் மூடினர்.

அதி. 5-6:- இச்சிறிய எதிர்ப்பைக் கண்டு ஓலபெரினே கோபாவேசம் கொள்கிறான். இம்மக்களையும் இப்பகுதியின் தன்மையையும் அறியும்பொருட்டு மோவாபு மக்கள் தலைவர்களையும், அம்மோனியாப் படைத்தலைவர்களையும் அழைத்து அவன் ஆலோசனை நடத்துகிறான். அப்போது அம்மோனியர்களுக்கெல்லாம் தலைவரான அக்கியோர் இஸ்ராயேலைப் பிற மக்களிடமிருந்து எது வேறுபடுத்துகிறது என்று விரிவாக எடுத்துக் கூறுகிறார். இஸ்ராயேல் மக்கள் தங்கள் இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கும்வரை அவர்களை யாரும் வெல்ல முடியாது என்று அவர்கள் வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். ஓலபெரினேயின் அவை முழுவதும் அவரை நகைத்து ஏளனம் செய்கிறது. ''நெபுகத்னேசரை அன்றி வேறு கடவுள் இல்லை'' என்று ஓலபெரினே அறிக்கையிடுகிறான் (6:2). வெல்லமுடியாத மக்களின் விதியைப் பகிர்ந்து கொள்ளட்டும் என்று கூறி அக்கியோரை இஸ்ராயேலரிடம் அனுப்பிவிடுகிறான். அக்கியோர், பெத்தூலியா நகருக்குள் அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கு ஓலபெரினேயின் திட்டத்தையும் அகந்தையையும் எடுத்துக் கூறுகிறார். பெத்தூலியா மக்களுக்கும் வாசகர்களுக்கும் அக்கியோரின் தூதுப்பொருள் இல்லாமல் இல்லை. போரின் குறிக்கோள் தெளிவாக்கப் படுகிறது. ஒருபுறம் நெபுகத்னேசரும், மறுபுறம் இறைவனும் பிரசன்னமாகின்றனர். இதில் எசே 38-39-இல் வருவது போன்ற

வெளிப்பாட்டுப் பண்பைச் சிலர் காண்கின்றனர்.

அதி. 7:- இறுதியாக ஒலபெரினே தனது தாக்குதலைத் தொடங்குகிறான் (7:1-3). பெத்தூலியா நகரை முற்றுகையிடுகிறான். நாட்டை அறிந்த மோவாபு அம்மோனியாக் கூட்டாளிகள் ஆலோசனைப்படி, மும்முரமாகத் தாக்கும் இறுதிக் கட்டத்தைத் தள்ளிப் போடுகிறான். நகரைச் சுற்றி வருகையில் நகருக்குத் தண்ணீர் கொடுத்து வந்த ஊற்றைக் கண்டுபிடித்து, தண்ணீர் கொண்டுவரும் கால்வாயை அடைத்துவிடுகிறான். இனி முற்றுகையிடப்பட்ட நகருக்குள் உள்ள மக்கள் சரண் அடைய வேண்டும் அல்லது தாகத்தால் மடியவேண்டும். நகரத்துக்குள் தலைவர்கள் இதைத் தாக்குப் பிடிக்கத் தயாராகின்றனர். ஆனால், பொது மக்கள் பசி தாகத்தால் மடிவதைவிட அடிமைத்தனத்தில் வாழ்வதைத் தேர்ந்தெடுத்தனர். ஊசியா நகரத் தலைவனான ஊசியா பெரும் முயற்சி செய்து, இதை ஐந்து நாட்களுக்குத் தள்ளிப்போடச் செய்கிறார். இறைவன் தமது மக்கள் சார்பில் தமது வல்லமையைக் காட்டமாட்டார் என்று யார் சொல்லக்கூடும்! எக்பத்தானை அழிக்க நெபுகத்னேசர் ஐந்து ஆண்டுகள் எடுத்துக் கொண்டான். அவனது வல்லமை மிக்க படையைவெல்ல இறைவனுக்கு ஐந்தே நாட்கள்தான் தரப்பட்டன.

II. இவ்வாறு அமைக்கப்பட்ட நாடக மேடையில் இறுதிக் காட்சி நிறைவேறுகிறது.

அதி. 8:- இக்கட்டத்தில் கதைத் தலைவி யூதித்து காட்சியில் தோன்றுகிறாள். அவளது கைம்மை நிலையும், புனித வாழ்வும் மேன்மையும் விவரிக்கப்படுகின்றன (8:1-8). அவள் நகரத்துத் தலைவர்களை அழைத்து, அவர்கள் இறைவனுக்குக் கெடு வைத்து அவரை ஒரு மனிதனாக நடத்தியதற்காகக் கடிந்துகொள்கிறாள். அவர் தமது மக்களை மீட்கவோ தண்டிக்கவோ விரும்பினாலும் வரையில்லா நம்பிக்கைக்கு உரியவராவார். நாட்டின் எல்லையையும் நகரத்தையும் பாதுகாக்க தங்களைப் பலியிடுவதே அவர்களுக்குரிய கடமையாகும் என்பதை நினைவுபடுத்துகிறாள். தலைவன் ஊசியா, அவளது புனிதத்தையும் சொற்களையும் ஏற்று, மழைபெய்து நீரால் குளத்தை நிரப்ப இறைவனிடம் வேண்டுமாறு யூதித்தைக் கேட்கிறார். அருஞ்செயலை எதிர்பார்த்து வெறுமனே இருப்பதற்குப் பதிலாக அவளும் அவளது பணிப்பெண்ணும் நகருக்கு வெளியே செல்ல அனுமதி கேட்கிறாள். ஐந்து நாட்கள் முடியும் முன்பே, ஒரு பெண் கையால் இறைவன் என்ற செய்ய முடியும் என்று அவர்கள் காண்பார்கள் (8:9-34).

அதி. 9:- இறைவனது கரமே எல்லாவற்றையும் செய்கிறது. ஆகவே, யூதித்து செயல்படுமுன் தன் தந்தை சிமியோனின் இறைவனைப் பார்த்து உருக்கமாக மன்றாடுகிறாள். இதே மலையில் குலத் தலைவரான யாக்கோபுவினுடைய மகன் சிமியோனின் தங்கையைக் கற்பழித்தவர்களை அக்காலக் குலத் தலைவர்கள் அடித்துக் கொன்று பழிதீர்த்தனர். இப்போது இஸ்ராயேலின் மக்களை மாசுபடுத்தி ஒருவன் இறை நிந்தையாகச் செயல்படுகிறான். இத்தீயவனை வசியம் செய்து அழிக்க இறைவன் தம் அடியாருக்கு உதவி செய்ய வேண்டும் என்று மன்றாடுகிறாள்.

அதி. 9-13:- பின்பு அவசரமின்றிச் செயல்படத் தொடங்குகிறாள். விண்ணிலிருந்து வரும் மின்னல் இறைவனது நீதித் தீர்ப்புகளை இங்கே செயல்படுத்துவதில்லை. ஆனால், அவை மனிதச் செயல்களின் சாதாரண விளைவாகக் காட்டப்படுகின்றன. யூதித்து சட்டச் சடங்குகளிலும் பெண் கவர்ச்சிக்குரிய முறைகளிலும் ஈடுபடுகிறாள். பேரழகு மிக்கவளாக பகைவன்முன் செல்ல முனைகிறாள். புறக்காவல் முதல் தளபதியின் கூடாரம்வரை அவளது அழகு வழி திறந்து விடுகிறது. தனது மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்ல முனைபவனை, யூதித்து தனது நயமான பேச்சால் தவறான வழியில் இட்டுச் செல்கிறாள். ஆனால் (புறவினத்தாரின் பே. இருந்த

போதும் இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கிறாள். ஒவ்வொரு இரவும், அனுமதி பெற்று, பாளையத்துக்கு வெளியேயிருந்த ஓடைக்குச் சென்று சடங்குச்சுத்தி செய்த பின், இறைவனைத் தனக்கு வழிகாட்டுமாறு தூய உள்ளத்துடன் மன்றாடுகிறாள். புறவினத்தாரின் உணவை அவள் தொட்டதில்லை. தன்னோடு கொண்டு வந்திருந்த பொருட்களைக் கொண்டு பணிப்பெண் தயாரித்த உணவையே உண்டாள். காத்திருந்த மூன்று நாட்கள் இவ்வாறு கடந்து போயின. இறுதியாக நான்காம் நாள் தூண்டில் போடப்படுகிறது. இந்த யூதப் பெண் தன்னைக் கட்டுப்படுத்தியதால் தான் அவளை ஒன்றும் செய்யாததை உணர்ந்து ஒலபெரினே வெட்கப்படுகிறான். ஆனால், அவள்பால் மோகவெறி கொண்டிருந்தான். அவன் அவளை ஒரு விருந்துக்கு அழைக்க, அவளும் எப்போதும்போல் அமைதியாகச் செல்கிறாள். குடித்து மயங்கிய முரடனோடு யூதித்து தனித்து விடப்படுகிறாள். ஒலபெரினே குடிபோதையில் தன்படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தான். யூதித்து மன உறுதிக்காக தன் இறைவனிடம் மன்றாடியபின், அருகில் தூணில் தொங்கிக் கொண்டிருந்த வாளை எடுத்து, இருமுறை அவனது கழுத்தை வெட்டி தலையைக் கொய்து பணிப்பெண்ணிடம் கொடுத்துத் தன் பையினுள் வைத்துக் கொள்ளச் செய்கிறாள். பின்பு வழக்கம்போல் பாளையத்துக்கு வெளியே சென்று, தளபதியின் தலையோடு நேரே பெத்தூலியா நகருக்குச் செல்கிறாள் (13:1 10).

அதி. 13:1 16:25: பெத்தூலிய மக்கள் யூதித்து திரும்பி வருவாள் என்று எதிர் பார்க்கவில்லை. அவளது செயல் எல்லாரையும் வியப்பில் ஆழ்த்துகிறது. அந்த இரவு நன்றி மகிழ்ச்சியில் முடிகிறது. ஊசியா இந்தத் துணிவும் ஞானமும் மிக்க பெண்ணை ஆசீர்வதிக்கிறார். அவள் வழியாகத் தங்களுக்கு மீட்பளித்த இறைவனைப் போற்றுகிறார். நடந்ததையெல்லாம் அறிந்து வியப்புற்ற அக்கியோர் இஸ்ராயேலின் இறைவனில் விசுவாச அறிக்கையிடுகிறார். அங்கேயே விருத்தசேதனம் செய்யப்படுகிறார். ஐந்தாம் நாள் விடிந்தது. ஒலபெரினேயின் தலை பெத்தூலியா நகர் மதில்மேல் கட்டித் தொங்கவிடப்பட்டது. யூத வீரர்கள் போர் செய்யச் சென்றனர். தளபதியை எழுப்பச் சென்ற அசீரியர்கள் அவன் கொல்லப்பட்டுக் கிடப்பதை அறிந்து, அச்சமிகுதியால் கதிகலங்கித் தலைதப்பினால் போதும் என்று தப்பியோடினர். யூதர்கள் அவர்களை விரட்டிச் சென்று, அகப்பட்டவர்களையெல்லாம் கொன்று தீர்த்தனர். அசீரியர்களின் பொருட்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு வந்தனர். எருசலேமிலிருந்து பொதுச் சங்கத்தின் பெரிய குரு யோயாக்கிமே வந்து "எருசலேமின் மகிமை நீ! இஸ்ராயேலின் மகிழ்ச்சி நீ! நம் மக்களின் பெருமையும் நீயே! ஏனென்றால், நீ செய்தது தீரச் செயல்...." என்று யூதித்தைப் பாராட்டுகிறார். புதிய தெபோராவான யூதித்து வெற்றிப் பாடல் பாடுகிறாள். அதுவே நன்றிப் புகழ்ப்பாடலாகவும் மாறுகிறது. பின்பு, பகைவரின் கொள்ளைப் பொருட்களை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்க மக்கள் படை எருசலேமை நோக்கிச் செல்கிறது.

யூதித்து மக்களால் போற்றப்பட்டவளாக நீண்ட காலம் வாழ்கிறாள். அவளது கைம்மை நிலையை நீக்க முன்வந்தவர்களை மறுத்துவிடுகிறாள். அவளது மரணத்துக்குப் பின்னும் பல ஆண்டுகளுக்கு இஸ்ராயேல் அமைதியாக வாழ்ந்தது.

5. யூதித்து நூல் ஒரு வரலாற்று நூலா?: இந்நூல் வரலாற்றுத் தன்மையுடையது என்று வெகுசிலரே இப்போது கூறுவர். கதையின் உண்மைத்தன்மையில்லாத பின்னணி, ஆசிரியர் வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறவிரும்பினாரா என்று பெரிதும் ஐயம் எழுப்புகிறது. நெபுகத்னேசர் அசீரிய மன்னனாக நினிவேயில் ஆண்டதாகக் கூறப்படுகிறது (1:1). மேலும் இவன், யூதர்கள் நாடுகடத்தப்பட்டுத் திரும்பி வந்து ஆலயம் கட்டப்பட்ட காலத்திற்குச் சம காலத்தவனாகவும் ஆக்கப்படுகிறான் (4:3). இவையாவும் வரலாற்றுக்குப் புறம்பானதாகும்.

ஏனெனில், இவன் அசீரியன் அல்லன்; பாபிலோனிய மன்னன் ஆவான். அசீரியப் பேரரசின் ஆதிக்கமும் நினிவேயும் இவனது தந்தை நெபோபோலசரால் கி.மு. 612-இல் அழிக்கப்பட்டு ஏழு வருடங்களுக்குப்பின் 605-இல் இவன் ஆட்சி செய்யத் தொடங்கினான்; 562-வரை பாபிலோனில் ஆட்சி செய்தான். இவன்தான் எருசலேமை அழித்தான். இவனது சந்ததியின் ஆட்சியைப் பாரசீக மன்னன் சைரசு நசுக்கினான். 538-இல்தான் நாடுகடத்தல் முடிந்தது. தாரியுவின் காலத்தில்தான் 515-இல் ஆலயம் மீண்டும் கட்டப்பட்டது.

மேதிய நாட்டு அரசனான அர்ப்பகசாது வரலாற்றில் அறியப்படாத ஒருவனாவான். இவனோடு நெபுகத்னேசர் போரிட்டு வென்று இவனது தலைநகரான எக்பத்தானை அழித்தான் என்பது வரலாற்றைச் சேர்ந்த நிகழ்ச்சியன்று. ஒலபெரினே பாபிலோனியப் பெயரன்று, பாரசீகப் பெயராகும். இவன் நெபுகத்னேசர் இறந்த 200 ஆண்டுகளுக்குப்பின் மூன்றாம் அர்த்தக்சஸ்தா என்ற பாரசீக மன்னனது காலத்தில் (358-337) வாழ்ந்தவன். மேலும் யூதித்து நூல் கூறுவது போல் ஒலபெரினே அவலமுடிவெய்தவில்லை. எகிப்தியப் போரில் வெற்றிகொண்டு தன் நாடு திரும்பி யாவராலும் மதிக்கப்பட்டான். கதை ஆசிரியர் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த நெபுகத்னேசரோடு நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒலபெரினேயை இணைக்கிறார். இப்படையெடுப்பில் முக்கிய இடம் வகிப்பதாகக் கூறப்படும் பெத்தூலியா நகர் பற்றி ஒன்றும் அறிவதற்கில்லை. இவ்விடத்திற்கு எந்தப் பாலஸ்தீன ஊரையும் அடையாளம் காட்ட முடியாது. இது முழுவதும் கற்பனைப் படைப்பாக இருக்கலாம். இவற்றையெல்லாம் விட, பெத்தூலியா சமாரியாப் பகுதியில் இருந்தது என்பது நம்ப முடியாததாகும். அங்குதான் நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூதர்களின் மிகப் பெரிய எதிரிகள் வாழ்ந்தனர். பாரசீகர் காலம் முதல் கி.மு. 108-இல் யோவான் ஹிர்க்கான் வெற்றி கொள்ளும் வரை எசுதிரலோன் சமவெளியை எதிர்கொண்ட இம்மலைப் பகுதி சமாரியர் கையில் இருந்தது. அங்குதான் அவர்கள் வாழ்ந்தனர்.

கதைத் தலைவியான யூதித்தும் விவிலிய வரலாற்றில் அறியப்படாத ஒருத்தியாவாள். யூதித்து என்ற பெயர் ஏசாவின் இத்திய மனைவியின் பெயராக மற்ற இடங்களில் காணப்படுகிறது (ஆதி 26:34). இப்படியிருக்க, ஓர் உத்தம யூதப் பெண்ணின் பெயராக இஃது இருந்திருக்கக் கூடுமா என்பது ஐயத்திற்குரியது. யூதப் பெண் என்று பொருள்படுவதாலோ, யூதாசு என்ற பெயரோடு சொண்டுள்ள ஒலியியைபாலோ இப்பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். யூதாசு என்ற பெயர் ஒருவேளை மக்கபேயர் தலைவரைச் சுட்டலாம்.

நூலில் இஸ்ராயேலர் பெரிய குருவாலும் மூப்பர் சபையாலும் ஆளப்படுவதாகக் கூறப்படுகிறது. தாவீது மரபு சார்ந்த மன்னனது பெயரே காணப்படவில்லை. யூதி 8:18-இல் "தங்கள் இறைவனைக் கைவிட்டு அன்னியக் கடவுள்களை வணங்கி வந்த நம் முன்னோரின் பாவ வழியை நாம் பின்பற்றியதில்லையே" என்று யூதித்து கூறுகிறாள். இதை நெபுகத்னேசரின் காலத்தைப் பொருத்தமட்டும் புரிந்து கொள்வது கடினம்; ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

மேலும், வட சமாரியாவின் இடவிவரங்களை ஆசிரியர் அறிந்திருப்பதாய்த் தெரியவில்லை. கி.மு. 351-350-இல் எகிப்துக்கு எதிராகவும், 345-இல் சீதோனுக்கு எதிராகவும், 344-43-இல் எகிப்துக்கு எதிராகவும் பாரசீக மன்னன் அர்த்தக்சஸ்தா செய்த படையெடுப்புகளோடு தொடர்புபடுத்தி இக்கதையை ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக அமைக்க ஆய்வாளர்கள் சிலர் முயன்றுள்ளனர். ஆனால், இப்படையெடுப்புகள் பாலஸ்தீனத்தைத் தொட்டன என்பதற்கு எந்த வரலாற்று ஏட்டுச் சான்றுமில்லை. ஏதோவொரு படையெடுப்பை வரலாற்றுப் பின்னணியாக வைத்துத் [illegible] [illegible]ட்டுப் புனைந்துரைக்கப்பட்ட [illegible]

கற்பனையான புதினமாக இருக்கலாம் இந்நூல்.

இவ்வாறு வேறுபட்ட நிகழ்ச்சிகளுக்கு நெபுகத்னேசரைப் பொறுப்பாக்கி, ஒவ்வாத நிகழ்ச்சிகளையும் ஆட்களையும் மட்டு மீறிய முறையில் வரிசைப்படுத்துவதில் ஆசிரியர் பெரும் தவறு செய்திருக்கக் கூடுமா? இல்லையென்றே கூற வேண்டும். நவீன ஆய்வுகள் இந்நூலில் வரும் செய்தி களுக்குத் தடயம் கண்டுபிடிப்பதில் கடினப் பட்டாலும், எருசலேமின் வரலாற்றில் ஆசூர், நெபுகத்னேசர், பாரசீகர்கள் ஆகி யோரின் பங்கைப்பற்றி எந்த யூதனும் அறியாமல் இருந்ததில்லை. ஆசிரியர் பழைய ஏற்பாட்டை அறியாதவர் அல்லர். இவர் இஸ்ராயேல் வரலாற்றின் எந்தக் குறிப்பிட்ட காலத்திலிருந்தும் ஒதுங்கி நின்று, குறிப்பிட்ட நோக்கங்களுடன் விரும்பி பல நூற்றாண்டுகளிலிருந்து எடுக் கப்பட்ட கூறுகளை ஒன்று சேர்த்துக் காலம் சாராத கதையை உண்டாக்குகிறார் என்று கூறலாம். சான்றாக, நினிவேயைத் தலைநக ராகக் கொண்ட அசீரியர்கள் ஆதிக்கம் கி.மு. எட்டாம், ஏழாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததாகும். நெபுகத்னேசர் பாபிலோ னில் ஆட்சி செய்தான். மேதியர்கள் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். பாரசீகர் களின் ஆதிக்கம் 540-இலிருந்து 330 வரை நீடித்தது. இவ்வாறு நான்கு பேரரசுகளைச் சேர்த்து நூலுக்குப் பின்னணி அமைக்கிறார் ஆசிரியர். பங்கெடுக்கும் ஆட்கள் ஒன்றும் அறியப்படாதவர்கள் அல்லது ஒரே காலத் தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவற்றிலி ருந்து பல கூறுகளை எடுத்துப் பயன்படுத்தி ஆசிரியர் தமது கதையை எழுதுகிறார்.

நெபுகத்னேசர் எருசலேமின் எதிரிகளுக்கு ஒரு மாதிரிகையானவன். இதைவிட அகந்தை அடக்கப்பட வேண்டிய புறவினத் தாருக்கு ஒரு மாதிரியானவன். ஆசிரியர் உண்மை நிகழ்ச்சியிலிருந்து தொடங்கி னாரோ இல்லையோ, அதைப்பற்றியும் அதற்காகவும் அக்கறை கொள்ளவில்லை; மாறாக, அதன் அடையாளப் பொருளைப் பற்றியே அக்கறை கொள்கிறார். இடங்கள், ஆட்கள், நிகழ்ச்சிகள் பற்றிய துல்லியமான விவரிப்புகளைப் பற்றி ஆசிரியர் கவலைப் படவில்லை. ஆகவே, அவரை உந்தியதாகக் கருதப்படும் வரலாற்று நிகழ்ச்சியை மீண் டும் அமைக்கத்தேடுவது, ஆட்களையும் இடங்களையும் அடையாளம் காண முயல் வது ஆகியவை வீண் முயற்சியாகும். இவற்றால் எப்பயனும், தெளிவும் ஏற்படுவ தில்லை. ஏனெனில், ஆசிரியர் இஸ்ராயேல் வரலாற்றைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிப் போதிக்கவில்லை. அவ்வரலாற்றின் பொதுப் பொருளையே போதிக்க விரும்புகிறார். அதன் விளைவு களை எடுத்துக் கூறத் தெரிந்த கலைஞர் ஆவார். 8-ஆம் அதிகாரம்வரை கதைத் தலைவி யூதித்து தோன்றவில்லை. செயல் களை விவரிப்பதற்குப் போதிய அவகாசம் இருக்கிறது. முதல் ஏழு அதிகாரங்களும் நாடகத்திற்கு மேடை அமைக்கின்றன. பின், நூலின் முக்கிய நிகழ்ச்சி நடக்கவிருக் கும் இடத்தைச் சுற்றி நமது கவனத்தை நூல் மையங்கொள்ளச் செய்கிறது. அதே சமயம் இடங்கள் பற்றிய குறிப்புகள் நமது கவனத்தை ஒருங்கே குவிக்கின்றன. தீமை யின் சக்திகள் இறைவனது சிறிய மக்க ளினத்தைச் சுற்றிச் சூழ்கின்றன. இதன் கொடுமையை உணர, முடிவில் வரவிருக் கும் விடுவிப்பை மனதில் கொள்ளாதிருத் தல் நன்று. இவையெல்லாம் ஆசிரியர் ஒரு வரலாற்றை எழுத விரும்பவில்லை என்று காட்டுகின்றன.

இந்நிலையில் இரண்டு கருதுகோள் களுக்கு இடமுண்டு. ஒன்று புனைபெயர்க ளுக்குப்பின் உண்மை நிகழ்ச்சியின் விவ ரிப்பு மறைந்திருக்கிறது. அதை நம்மால் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. மற்றது மிகவும் வேறுபட்ட காலங்களைச் சேர்ந்த கூறுகளை எடுத்துத் தன் நோக்கத் திற்கு ஏற்றவாறு ஆசிரியர் ஒரு வரலாற்றுப் புதினத்தை எழுதுகிறார். இரண்டிலும், ஆசிரியர் காலவரையறையுடைய நிகழ்ச்சி யுரை எழுதவில்லை; வேறொன்றைக் கூற விரும்புவதாகச் சுட்டிக் காட்டுகிறார். இந் நூல் வரலாற்று நூல் இல்லை என்றால்,

எவ்வகை இலக்கியத்தைச் சேர்ந்தது? மிட்ராஷா? வெளிப்பாட்டு இலக்கியமா? இரண்டும் கலந்த வெளிப்பாட்டு மிட்ராசா?

6. மிட்ராசு விளக்கம்:- யூதித்து நூலை ஓர் அக்காதா மிட்ராசு நூல் என்று பொதுவாக ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்வர். இவ்வடிவம் ஏதாவது வரலாற்றுத் தோற்றம் உடைய கருவை அடிப்படையாகக் கொண்டு, போதக நோக்கத்திற்காகச் சுதந்தரமாகப் புனையப்பட்ட நிகழ்ச்சியுரையாகும். சான்றாக, தோபி நூலில் இறைவனின் அன்புமிக்க பராமரிப்பை இறைமக்கள் சார்ந்திருப்பதை ஆசிரியர் போதிக்கிறார். எஸ்தர் நூல் இறைவன் தமது மக்களைக் காப்பாற்றுகிறார், அவர்களது எதிரிகளால் அழியமாட்டார்கள் என்று எடுத்துக் கூறுகிறது. தானியேல் நூலின் மிட்ராசு பகுதிகள் (தானி 1-6. 13-14) மூலமாக நான்காம் அந்தியோக்கு எப்பிபான் யூதர்களைத் துன்பப்படுத்தியபோது, அக்கொடுமைகளுக்கிடையில் யூதர்களுக்கு இறைவனது பாதுகாப்பை உறுதி அளித்து, அவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்த பிற மதங்களின் சிறுபிள்ளைத்தனத்தின் மேல் யூத சமயம் கொண்டிருக்கும் மேன்மையைச் சுட்டிக்காட்டி, அவர்களை உற்சாகப்படுத்துவதும் ஊக்குவிப்பதும் ஆசிரியரது நோக்கமாகும்.

யூதித்து நூலை மிட்ராசு இலக்கியமாக விளக்குபவர்கள், இந்நூலின் நோக்கமும், எஸ்தர் நூலின் நோக்கமும் ஒன்றே என்பர். அதாவது, இறைவன் தமது மக்களை எப்போதும் பாதுகாக்கிறார். எதிர்ப்பு எவ்வளவு பெரிதாயினும், அவர் தமது மக்களின் எதிரிகளை ஒரு பெண் போன்ற பலவீனமான கருவியால் அழிக்கக்கூடும் என்று காட்டி இந்நூல் விசுவாசிகளுக்கு உறுதி அளிக்கிறது.

சாதாரணமாய் அக்காதா மிட்ராசில் இரு பண்புகள் உண்டு. அவை வரலாற்றுப் பின்னணியில் காணப்படும் ஒரே சீரான அமைப்பும், உண்மை போன்ற தோற்றமும் ஆகும். இவ்வாறு, தோபி, எஸ்தர் நூல்களில் ஒரே பேரரசின் பின்னணியில் விவரிக்கப்படும் தலத்து நிகழ்ச்சிகளுக்குள் ஆசிரியர்கள் தங்களையே வரையறை செய்து கொள்கின்றனர். கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அசீரிய வரலாற்றுப் பின்னணியில் தோபி கதை நடித்துக் காட்டப்படுகிறது. கி.மு. 5-ஆம் நூற்றாண்டு பாரசீக வரலாற்றுப் பின்னணியில் எஸ்தர் கதை அரங்கேறுகிறது. தோபி நூலில் கதைத் தலைவர் ஒரு நாடு கடத்தப்பட்டவர் என்று காட்ட மட்டுமே வரலாற்றுப்பின்னணி பயன்படுகிறது. எஸ்தர் நூலில் பாரசீகப் பின்னணி கதையில் நெருங்கிய விதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. கதையில் வரும் நிகழ்ச்சிகளும் பின்னணியோடு ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு கதைகளிலும் உண்மையான வாழ்வோடு ஒத்துப்போகும் தோற்றம் அளிக்க உண்மையாகவே முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. சாதாரண வாழ்வில் நிகழ்வதுபோலவே காரியங்கள் நடக்கின்றன; ஆட்களும் நடந்து கொள்கின்றனர். சில விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. குறிப்பிட்ட இடங்கள் ஓரளவு சரியாக விவரிக்கப்படுகின்றன.

ஆனால் யூதித்து நூலுக்கு வரும்போது, கண்டதெல்லாம் சேர்க்கப்பட்டு வரலாற்றுப் பின்னணி குழப்பப்பட்டிருக்கிறது என்பதை ஏற்கெனவே பார்த்துள்ளோம். இந்நூல் அக்காதா மிட்ராசுக்குரிய ஒரே சீரான அமைப்பும் உண்மைபோன்ற தோற்றமும் கொண்டிருக்கவில்லை. இப்பண்புகளைக் கொண்டிராதிருத்தல் வெளிப்பாட்டு இலக்கியங்களில் காணப்படுவதாகும். மேலும், நூலில் வரும் காலக்கணிப்புக் குறிப்புகளும் நிகழ்ச்சி நடந்த குறிப்பிட்ட காலத்தையும் பின்னணியையும் துல்லியமாகக் கண்டுபிடிக்க ஏதுவாக இல்லை. சான்றாக, நூலில் வரும் முதல் காலக் குறிப்பு நினிவேயில் நெபுகத்னேசர் கி.மு. 592-இல் வாழ்ந்ததாகக் கூறுகிறது (1:5). ஆனால், இருபது ஆண்டுகளுக்கு முன்பே கி.மு. 612-இல் இந்நகரம் முழுவதும் அழிக்கப்பட்டுப் பாழடைந்த நிலையில் இருந்தது என்பது வரலாற்று உண்மை.

இரண்டாவது காலக்குறிப்பு எருசலேம் கைப்பற்றப்பட்டு ஆலயம் அழிக்கப்பட்ட ஆண்டான 587-ஐக் குறிக்கிறது (2:1). இப்படிக் குறிப்பிட்ட முறையில் காலக் கணிப்பைக் கொடுத்தாலும், நாற்பத்து ஐந்து வருடங்களுக்குப்பின் நடந்த நிகழ்ச்சி யான 539-இல் நாடு கடத்தலிலிருந்து திரும்பி வந்த நிகழ்ச்சியைப் பற்றித் தெளி வாக ஆசிரியர் பேசுகிறார் (5:23). நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒலபெரினேயை, 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவளாகக் கருதப்படும் யூதித்தின் உடனடி எதிரியாகப் பயன்படுத்துவது காலக்குறிப்புக் குழப் பத்தை மேலோங்கச் செய்கிறது எனலாம். மேற்கூறியவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளும்போது இந்நூல் அக்காதா மிட் ராசு இலக்கிய வடிவிலிருந்து மிக நுட்பமா கப் பிரிந்து, கருத்திலும் அடையாளத்திலும் வெளிப்பாட்டு வடிவத்தை நெருங்குவ தாகத் தெரிகிறது; இரண்டு வடிவங்களுக் கும் இடைப்பட்ட அமைப்பாகத் தோன்று கிறது. ஆகவே இதை ஒரு வெளிப்பாட்டு மிட்ராசு இலக்கியம் என்று கூறலாம்.

7. இந்நூல் ஒரு வெளிப்பாட்டு மிட்ராசு இலக்கியம்: முக்கிய கருத்து, நோக்கம், அடையாளத்தன்மை ஆகியவற்றால் இஃது ஒரு வெளிப்பாட்டு நூலாகும்.

அ) முக்கிய கருத்து:- வெளிப்பாட்டு இலக்கியத்தின் அடிப்படைக் கருத்து இறை வனுக்கு எதிரான சக்திகள்மேல் இறைவன் வெற்றி கொள்வதாகும். இந்த வெற்றி இன்றியமையாததாகும். எசே 38-39; செக் 14; யோவே 3-4-இல் தெளிவில்லாமலும், தானி 7-12-இல் ஓரளவு தெளிவில்லாமலும் இருக்கும் காலக்கூறு இன்றி யமையாததன்று.

யூதத்து நூலில், இறைவன் தமக்கு எதிரான சக்திகளின்மேல் கொள்ளும் வெற்றியே அடிப்படைக் கருத்தாகும். இதை நெபுகத்னேசரை இறைவனோடு நேர் எதிர்ப்புக் கொள்ளச் செய்து ஆசிரியர் காட்டுகிறார். ''பேரரசனும் மண்ணகம் முழுமைக்கும் ஆண்டவனுமானவன் இவ் வாறு பேசினான்'' [2:5 (2:3)] என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். ''ஒலபெரினே தான் வென்ற மக்களின் புனிதத் தலங்களை அழித்தான்; புனித மரங்களை வெட்டி னான்; அவர்கள் வழிபடும் தெய்வங்களை அழித்தான்; நெபுகத்னேசரை மட்டும் வணங்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத் தினான்; எல்லா மொழியினரும் நாட்டவ ரும் அவனை மட்டும் கடவுளாக ஏற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தினான்'' [3:8 (3:13)] என்று ஆசிரியர் கூறுகிறார். அதி. 5-இல் எல்லா நாடுகளும் எப்படி நெபுகத் னேசருக்கு அடிபணிந்தன என்று விவரித்த பின், ஆசிரியர் அம்மோனியர் தலைவனான அக்கியோரின் வழியாக, நெபுகத்னேசரைப் பிரதிநிதியாகக் கொண்டிருக்கும் இறைவ னுக்கு எதிரான சக்திகளுக்கும், மிகச்சிறிய யூதாவைப் பிரதிநிதியாகக் கொண்டிருக்கும் இறைவனது சக்திகளுக்கும் இடையே நடக்கவிருக்கும் போருக்குத் தளம் அமைக் கிறார். ''அவர்களுடைய இறைவனே அவர் களைப் பாதுகாப்பார்'' என்று அக்கியோர் ஒலபெரினேயை எச்சரிக்க (5:25), ஒல பெரினே, ''நெபுகத்னேசரைத் தவிர எந்தக் கடவுள் இருக்கிறார்? அவர் தமது வல்லமையைக் காட்டி அவர்களை மண் ணகத்திலிருந்தே அழிப்பார். அவர்க ளுடைய இறைவன் அவர்களைக் காப்பாற் றமாட்டார்'' என்று பதில் கூறி [6:2-3 (5:27.29)], நெபுகத்னேசரை இறைவனுக்கு எதிராக நிறுத்திப் போராடவிடுகிறான்.

ஆ) நோக்கம்:- மற்ற வெளிப்பாட்டு இலக்கியங்களில் காணப்படுவது போன்றே, மக்களை ஊக்கப்படுத்தி அவர்களது நம்பிக்கைக்குப் புத்துயிர் அளிப் பதுவே யூதித்து நூல் ஆசிரியரது நோக்கமா கும். இஃது அக்கியோர், யூதித்து ஆகியோ ரின் பேச்சுக்களிலும், ஒலபெரினே மேல் கொண்ட வெற்றியிலும், யூதித்தின் பாடலி லும் தெளிவாக உள்ளது. இறைவன் தமக்கு எதிரான சக்திகளை உறுதியாக அழிப்பார் என்ற நம்பிக்கையே வெளிப்பாட்டு இலக் கியத்தின் முக்கிய பண்பாகும். ஒலபெரி னேயை வீழ்த்தி, அவனோடு இறைவ

னுக்கு எதிரான பிறமதச் சக்திகளை அழிப் பதற்குப் புறப்படுமுன், யூதித்து செய்யும் மன்றாட்டின் முடிவுரை இந்த நம்பிக்கை யையே எடுத்துக் கூறுகிறது. ''இதனால் உமது மக்களும் எல்லா இனத்தவரும் உம்மைத் தவிர வேறு பாதுகாப்பாளர் இல்லை என்று அறிந்துகொள்ளச் செய்யும்'' (9:14).

இ) அடையாளம்:- இந்நூலை ஒரு வெளிப்பாட்டு இலக்கியமாகக் கருது வதற்கு முக்கியமான காரணம், இதில் காணப்படும் அடையாளத்தன்மை வெளிப் பாட்டு இலக்கியத்தின் அடிப்படை அடை யாளத் தன்மையோடு ஒத்திருப்பதாகும். மூன்று கருத்துகளில் இந்த ஒப்புமை தெளிவாகிறது.

1) இஸ்ராயேலை அழித்து உலகெங்கும் ஆதிக்கம் செய்யும் நோக்கம் கொண்ட பெரும்படை. செக்கரியா, யோவேல் நூல் களில் இறைவனுக்கு எதிரான சக்திகள் அவரது நகரான எருசலேமை அழிக்க முயற்சிக்கும் நாடுகளின் படைகளால் மட்டும் எடுத்துக்காட்டப்படுகின்றன. எசேக்கியேலின் இறைவனுக்கு எதிரான சக்திகள் பெரும் படைகளால் எடுத்துக் காட்டப்படவில்லை. கோகு என்ற பெய ருடைய ஓர் அடையாளத் தளபதியால் எடுத்துக் காட்டப்படுகின்றன. இவை யாவும் நெபுகத்னேசர் கனவில் கண்ட சிலையிலும் (தானி 2), கடலிலிருந்து தோன்றும் நான்கு விலங்குகளிலும் (தானி 7) ஒன்றிணைக்கப்படுகின்றன. மேலும், இந்தப் பிறமதச் சக்திகளின் அடையாளத் தலைவர்கள் தானி 1-4-இல் நெபுகத்னேச ரும், தானி 7-12-இல் இறைவனுக்கு எதிராக நிந்தை செய்யும் ''சிறு கொம்பான'' நான்காம் அந்தியோக்கும் ஆவார்.

யூதித்து நூலில் பெரும்படையும், பிற மதச் சக்திகளின் அடையாளத் தலைவனும், உலகப்பேரரசுகளின் கூட்டமும் ஒன்று சேர்ந்து இறைவனுக்கு எதிரான பிறமதச் சக்திகளின் கலப்பு அடையாளமாக நிற்கின் றன. ஆசிரியர் முதல் அதிகாரங்களிலேயே படையின் மிகுதியையும், அதன் நோக்கத் தையும் வலியுறுத்துகிறார் [2:5 (2:5-7)]. படையெடுப்பின் நோக்கம் 3:8 (3:13)-இல் தெளிவாகக் கூறப்படுகிறத. பிறமதச் சக்திக ளின் சாதனங்களும் குறிக்கோளும் எசேக்கி யேலிலும் (38-39), தானியேலிலும் (2:7-12), யூதித்திலும் ஒரே தன்மையுடையனவாகும்.

2) பிறமதச் சக்திகளின் அடையாளத் தலைவன்:- நெபுகத்னேசரை ஒரு தனி ஆளாகக் கருதாமல், பிறமதச் சக்திகளின் அடையாளத் தலைவனாக சித்திரிக்கிறார் ஆசிரியர். இதை எடுத்துக்கூறும்போது, அவன் அரசன் மற்றும் வெற்றி வீரன் என்ற முறையில் செய்த வீரதீரச் செயல்களை ஒதுக்கிவிடுகிறார். அவனுக்கு இருநூறு ஆண்டுகளுக்குப்பின் வாழ்ந்த ஒலபெரினே யோடு அவனை இணைத்து, அவனை அசீரியர்களது மன்னனாகவும், மேதியர் களை வென்றவனாகவும் பாரசீகப் படை கள் அவனுக்குப் பணிசெய்வதாகவும் விவரிக்கிறார். அவன் கி.மு. 587-இல் எருசலேமையும், ஆலயத்தையும் அழித்த தால் நாடு கடத்தப்பட்ட யூதர்களால் இறைவனது எதிரிகளில் எல்லாம் எடுத்துக் காட்டானவனாகக் கருதப்பட்டான். அவ னைப் பிறமதச் சக்திகளின் அடையாளமாக் கியபோது வெளிப்பாட்டு இலக்கியத்தின் ஒரு முக்கிய மரபையே ஆசிரியர் பின்பற்று கிறார் (செக் 5:5-11; தானி 1-4; திருவெளி 17:3-18).

3) உலகப் பேரரசுகளின் கூட்டம்:- இந் நூலை வெளிப்பாட்டு இலக்கியத் தொகுப் பில் சேர்க்க உதவும் மூன்றாவது கூறு இறைவனுக்கு எதிரான சக்திகளின் பரு மனை அடையாளமாக எடுத்துக்காட்ட நான்கு பேரரசுகளை ஆசிரியர் பயன்படுத் தும் முறையாகும். இந்த அரசுகள் அசீரியா, பாபிலோன், மேதியா, பாரசீகம் என்ற வரிசையில் வருகின்றன. நான்கு என்ற எண் உலகமனைத்தையும் உள்ளடக்கும் பண்பைக் குறிப்பதால் அது பயன்படுத்தப் படுகிறது (எசா 11:12; செக் 1:7; 6:5-8; மேலும் ஆதி 4:10; எரே 49:36; மாற் 13;27; திருவெளி 7:1). இவ்வாறு எருசலேமை

அழித்த பிறமதச் சக்திகளை அடையாள மாகக் குறிக்க "நான்கு கொம்புகளை"ச் செக்கரியா பயன்படுத்துகிறார் (செக் 1:18-21). இதே கருத்தைத்தான் 2:7-இலும் காணலாம்.

மேற்கூறப்பட்ட மூன்று ஒப்புமைக் கூறு களும் ஒன்றிணைந்து இறைவனுக்கு எதி ரான பிறமதச் சக்திகளின் கலப்பு அடையா ளமாக அமைகின்றன. யூதித்து நூல் பாபி லோனிய மன்னனான நெபுகத்னேசரை அசீரிய மன்னனாகக் காட்டுவதும் அவன் மேதிய மன்னனான அர்ப்பக்சஸ்தாவை வென்று மேதியா நாட்டுத் தலைநகரமான எக்பத்தானைக் கைப்பற்றியதாக விவரிப் பதும் ஏன் என்று வாசகர்கள் வியக்கலாம். மேலும், புகழ்பெற்ற பாரசீகத் தளபதியைக் கொண்ட பெரும்படை பாபிலோனிய மன் னனுக்குப் பணி செய்தது என்று இந்நூல் கூறுவதைக் கண்டும் வியக்கலாம். தானி 2:7-ஐ வெளிப்பாட்டு அடையாள இயலைக் கொண்டு விளக்குவதுபோல் இவற்றையும் விளக்க வேண்டும். இறைவனது எதிரி களில் எல்லாம் எடுத்துக்காட்டான நெபுகத் னேசரின் தலைமையில் அசீரியா, பாபிலோ னியா, மேதியா, பாரசீகம் ஆகிய நான்கு பேரரசுகளையும் ஒருங்கிணைத்து, இறைவ னுக்கு எதிரான உலகளாவிய சக்திகளைக் கலப்பு அடையாளமாக எடுத்துக் காட்டு வது யூதித்து நூல் ஆசிரியரின் நோக்கமா கும். இது, தானியேலின் கனவில் வரும் பெருங்கலப்புச் சிலையை மலையிலிருந்து பெயர்ந்துவரும் கல் அழிப்பது, இறைவ னுக்கு எதிரான ஒருங்கிணைந்த சக்திகளை அவர் அழிப்பதை எடுத்துக் காட்டுவது போன்றதாகும். இவ்வாறு அசீரியர்களின் பாபிலோனிய மன்னனும் மேதியர்களை வெறுப்பவனுமான நெபுகத்னேசரின் படைத்தளபதி ஒலபெரினேயை யூதித்து வெல்வது, இறைவன் தமக்கு எதிரான ஒருங்கிணைந்த சக்திகளை வெல்வதை எடுத்துக்காட்டுகிறது.

யூதித்து நூல் ஒரு வெளிப்பாட்டு இலக் கியமாகக் கருதப்படுவதற்கு மேலும் சில, ஆனால் அவ்வளவு முக்கியமல்லாத கார ணங்கள் உண்டு. அ) பெரும் போர் நடக்க விருந்த இடமான எசுதிரலோன் மெகித்தோ விலிருந்து அதிகத் தூரத்தில் இல்லை. மெகித்தோவில்தான் நடுவர்கள் காலத்தில் யாவேல் சீசராவை வென்றாள் (நீதி 4). இங்குதான் இறைவனது படைக்கும் அவ ருக்கு எதிரான சக்திகளுக்குமிடையே இறு திப் பெரும்போர் நடக்கவிருப்பதாகத் திரு வெளிப்பாட்டு நூல் சித்திரிக்கிறது (திரு வெளி 16:16). இந்த 'இடம்தான்' எபிரேய மொழியில் அருமகதோன் என்றழைக்கப் பட்டது. ஆ) நூல் முழுவதும் புனை பெயர்த் தன்மையுடையதன்று. ஆனால், "யூதப்பெண்" என்று பொருள்படும் யூதித்து ஓர் உண்மையான தனிநபரைவிட நாட்டையே குறிக்கிறாள் (16:4. இங்கு யூதித்து தன்னைத் தன் நாட்டோடு ஒன்றாக் கிக் கொள்கிறாள்). இ) தானியேல், எசேக் கியேல், யோவேல் ஆகிய நூல்களோடு இந்நூல் கொண்டிருக்கும் வாசகத் தொடர்பு கள்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண் டால் யூதித்து நூல் அக்காதா மிட்ராக இலக்கியத்தைவிட வெளிப்பாட்டு மிட்ராசு இலக்கியத்தோடு நெருங்கியது என்பது தெரியும். தானியேல் நூலைப்போல் இறை வாக்கு வெளிப்பாட்டு இலக்கியமாக இல் லாமல், எரே 38-39-ஐப் பின்பற்றும் ஓர் எளிய நிகழ்ச்சியுரை அல்லது வரலாற்றுத் தோற்றமுடையது யூதித்து நூல் என்று சொல்லலாம்.

8. நூல் தோன்றிய காலம்:- இந்நூல் தோன்றிய காலம் பற்றிய கணிப்பு பிரச் சனைக்குரியதாகும். பாரசீகர்கள் வெளிப் படையாகக் குறிப்பிடுவதால், இந்நூல் தோன்றிய முந்திய காலமாக கி.மு. 350-ஐக் குறிக்கலாம் என்பர் சிலர். மூன்றாம் அர்த்தக்சஸ்தா என்ற பாரசீகப் பேரரசின் (கி.மு. 358-338) தளபதியான ஒலபெரினே நடத்திய படையெடுப்பில் நடந்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து இக்கதையின் கரு அமை கிறது என்பர். ஒரு மிட்ராசு ஆசிரியர் போதக நோக்கத்திற்காக பிற்காலத்தில் இந்நிகழ்ச்சியை விரிவாக்கியிருக்க வேண்

டும். ஆனால் தமது மக்களுக்குத் தன்னையே கடவுளாக்கும் விருப்பமுள்ள அரசனது மனப்போக்கு இந்நூல் தோன்றிய காலத்தைப் பாரசீக காலத்திற்குப் பின் தள்ளுகிறது. கி.மு. 350-க்குப் பின் இப்படி விரும்பிய முதல் அரசன் அலக்சாந்தர் ஆவான். ஆகவே, அவன் காலத்தில் இந் நூல் தோன்றியிருக்கலாம் என்பவரும் உளர்.

இந்நூல் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று கூறும் அறிஞர் பலர் உள்ளனர். அவர்கள் கூறும் சான்றுகள் மிகுதியானவை. அவர்கள், நான்காம் அந்தி யோக்கு காலத்தில் நடந்த சமயக் கொடுமைகளோடோ (175-64), கி.மு. 145-க்குப் பின் எகிப்தில் ஏழாம் தாலமியின் காலத்தில் நடந்த சமயக் கொடுமைக ளோடோ சிறப்பாக முன்னதோடு, இந் நூலைத் தொடர்பு படுத்துகின்றனர். அந்தியோக்குவோடு தொடர்புபடுத்தினால் நெபுகத்னேசர் அந்தியோக்குவையும், ஒல பெரினே நிக்கானோரையும் (2 மக் 15:30), அசீரியர்கள் செலூக்கியச் சீரியர்களையும், நினிவே அந்தியோக்கியாவையும் குறிக்க லாம்.

நூலில் காணப்படும் ஓய்வுநாள் கடைப் பிடிப்பு, உணவு பற்றிய ஒழுங்குகள், நோன்பிருத்தல், சடங்குச் சுத்தம், தசம பாகம் செலுத்தல் (8:4-8; 11:12-14; 12:1-4) ஆகியவை பற்றிய ஆர்வம், பொதுவாக யூதபக்தி, கசிதீம்களின் ஆன்மீக வழித் தோன்றல்களான பரிசேயர்களின் ஆன்மீக ஆதிக்கம் வலுவாயிருந்த காலத்தைச் சுட்டு கின்றன. ஆகவே இந்நூல், 166-142-இல் நடந்த மக்கபேயர் போர்க்காலத்திலோ, அதற்குப் பின்வந்த காலத்திலோ தோன்றி யிருக்க வேண்டும். யூதி 8:18-இல் வரும் யூதித்தின் கூற்று மக்கபேயர்களுக்குப்பின் வந்த காலத்தைச் சுட்டுகிறது. ஏனெனில், 166-164-இல் நடந்த கிரேக்க-சீரியர்களின் கொடுமைக் காலத்தில் பதிதமும் சிலை வழிபாடும் யூதர்களிடையே அதிகம் பரவி யிருந்தன. பெரிய குருவும், மூப்பர் சபை யும் எருசலேமில் தலைமை தாங்கியதாகத் தெரிகிறது (4:6; 15:8). மேலும், கதை சமாரியாவில் அமைக்கப்படுகிறது. இப் பகுதி, கி.மு. 108-இல் யோவான் இரிக்கான் சமாரியாவை வென்றபின்தான் யூதாவைச் சேர்ந்ததாயிற்று. இவையெல்லாம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ, முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ இந்நூல் தோன்றியிருக்க வேண்டும் என்று சுட்டுகின்றன.

இவ்வாறு இந்நூல் பிற்காலத்தில் தோன்றியதுதான், இது யூதத் திருமுறைப் பட்டியலில் சேர்க்கப்படாமைக்கும், வர லாற்று ஆசிரியர் யோசிபசு இதுபற்றி ஒன்றும் கூறாமைக்கும் காரணமாகலாம். இவற்றோடு, ஆசிரியர் கிரேக்க வடிவங்கள் பற்றிக் காட்டும் அறிவு (3:7; 15:13), அவர் சட்டகாரியங்களை வலியுறுத்துவது ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டால், ஒரு பெயர் தெரியாத ஆசிரியர் மக்கபேயர் காலத்திற்குப் பிற்பாடு, ஒருவேளை 145-ஐ ஒட்டி, பாலஸ்தீனத்தில் இந்நூலை எழுதி னார் என்று கூறலாம்.

9. வாசகம்:- இந்நூலின், நமக்குக் கிடைத்துள்ள காலத்தால் முந்திய வாசகம் கிரேக்க மொழியில் உள்ளது. நான்கு வகை வாசகங்கள் உள்ளன. இவற்றிடையே அதிக வேறுபாடுகள் இல்லையென்றாலும், ஒவ் வொன்றிற்குமுரிய தனிப்பண்புகள் இந்நூல் மூலத்தில் எபிரேயத்திலோ, அரமேயிக் கிலோ எழுதப்பட்டிருக்கலாம் என்று காட்டுகின்றன. அதன் சுவடுகளைக் கிரேக்க வாசகங்களில் காணலாம். மரபுமுறை வாசகம் எழுபது நூல் வாசகமாகும். இது நம்பத்தகுந்தது. இதிலிருந்து பழைய இலத் தீன் வாசகம் செய்யப்பட்டது. இதையும் கருத்தில் கொண்டு, அரமேயிக்கு வாசகத்தி லிருந்து புனித எரோனிமு அவசரமாக வுல்காத்தா வாசகத்தைச் செய்ததாகத் தெரி கிறது. . இந்த அரமேயிக்கு வாசகம் எச் சுவடுமின்றித் தொலைந்து போய்விட்டதா கத் தெரிகிறது. இது கிரேக்க வாசகத்தின் பொழிப்புரையாகத் தெரிகிறது. இப்போது பழக்கத்திலிருக்கும் எபிரேய வாசகம் கிரேக்க வாசகத்திலிருந்தோ, இலத்தீன்

வாசகத்திலிருந்தோ சுதந்தரமாக மொழி பெயர்க்கப்பட்டதாக இருக்கலாம் அல்லது அடிக்கடி கூறப்பட்ட பொதுப்பாணிக் கதையின் முழுவதும் வேறான வாசகமாக இருக்கலாம். இந்த அதிகாரத்தில் தரப்படும் வாசகக் குறிப்புகள் கிரேக்க வாசகத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

10. திருமுறைப் பட்டியலில் யூதித்து நூல்: நோக்கிலும் போக்கிலும் எஸ்தர் நூலைப் போன்றதே இந்நூல் என்றாலும் அதைப் போல் இது யூதத் திருமுறைப் பட்டியலில் இடம்பெறவில்லை. இதற்கு ஒரு காரணம் எஸ்தர் கதை பாரசீக அரசவையில் நிகழ்வதாகக் கூறப்படும்போது, யூதித்து கதை சமாரியாவைச் சேர்ந்த ஒரு சிறு பகுதியில் நடப்பதாகக் கூறப்படுவதாக இருக்கலாம். இதைவிட மேலாக, எஸ்தர் நூல் விழாக் காலங்களில் யூதர்களிடையே வாசிக்கப் பட்ட ஐந்து சுருள்களில் ஒன்றாகும்; பூரிம் விழாவின்போது வாசிக்கப்பட்டது. ஆகவே, எஸ்தர் நூல் யூதத் திருமுறைப் பட்டியலில் ஏற்றுக் கொள்ளப்பட எளிதாயிற்று. யூதித்து நூலைப் பொருத்தமட்டும் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கவில்லை. யூதத்திருமுறைப் பட்டியலைப் பின்பற்றும் கிறிஸ்தவப் பிரிவினைச் சபைகள் இந்நூலைத் தங்கள் பட்டியலில் ஏற்றுக் கொள்வதில்லை.

புனித எரோனிமு இந்நூலைத் தமது பட்டியலில் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நூலின் வுல்காத்தா வாசகத்திற்கு எழுதிய தம் முன்னுரையில், நீச்சேயாப் பொதுச் சங்கம் இந்நூலை அதன் திருமுறைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதால்தான், வேண்டாவெறுப்பாகத் தமது மொழி பெயர்ப்பைச் செய்ததாகக் கூறுகிறார். ஆனால், இந்நூல் திருச்சபையில் வாசிக்கப் பட்டது என்றும் கூறுகிறார். கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து திருச்சபைத் தந்தையர்கள் இந்நூலைப் பயன்படுத்தியுள்ளனர். பொது நலனுக்காகத் தங்களையே ஒப்புக் கொடுத்தலுக்கு மாதிரிகையாக எஸ்தரோடு யூதித்தையும் உரோமைக் கிளமந்து ஏற்கெனவே எடுத்துக் காட்டியுள்ளார். கார்த்தேசு என்ற இடத்தில் நடந்த திருச்சபையின் மூன்றாம் சங்கம் இந்நூலைத் தன் பட்டியலில் ஏற்றுக் கொண்டுள்ளது. கிரேக்கத் திருச்சபைகளும் இந்நூலை ஏற்றுக் கொள்கின்றன. கத்தோலிக்கத் திருச்சபையில் இந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததுதான் என்று திரிதெந்தீன் பொதுச் சங்கம் உறுதியாக அறிவித்தது.

11. யூதித்தின் ஒழுக்க வாழ்வு பற்றிய பிரச்சனை:- யூதித்து பிற்கால யூதப் பக்திக்கு ஓர் எடுத்துக்காட்டாக விவரிக்கப் படுகிறாள். அவள் யாக்கோபின் மக்களுள் ஒருவரான சிமியோன் குடும்பத்தைச் சேர்ந்தவள்; மனாசேயை மணந்தவள். அவள் ஒரு தனி ஆள் என்பது உண்மையே. ஆனாலும், ''யூதப்பெண்'' என்று பொருள் படும் யூதித்து என்ற அவளது பெயர் பொருத்தமில்லாமல் இல்லை. இறைவனின் ஊழியர் எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு அவள் ஓர் எடுத்துகாட்டாவாள் (11:17). விதவைக் காலத்திலும் அவளது கற்பு சிறப்பித்துக் கூறப்படுகிறது (8:4; 16:22). அவள் ஓய்வு நாட்களையும் விழாக்களையும் மட்டும் கடைப்பிடிக்கவில்லை; அவற்றிற்கு முந்தியநாள் சடங்குகளையும் அனுசரிக்கிறாள் (8:6). அவள் குறிப்பிட்ட நேரங்களில் செபிக்கிறாள்; உணவு பற்றிய ஒழுங்குகளையும் சடங்குத் தூய்மை பற்றிய சடங்குகளையும் கடைப்பிடிப்பதிலும் அக்கறை காட்டு கிறாள் (12:2.9.19; 16:18; 11:2). செயலாற்றுமுன் நோன்பாலும் செபத்தாலும் அவள் தன்னையே தயாரிக்கிறாள். இவற்றிலெல்லாம் யூதித்து பரிசேயர் சமயத்திற்கு ஒரு மாதிரிகையாவாள். இவ்வாறு சடங்கு முறைகளை நூல் வலியுறுத்துவது அதன் உண்மையான ஆன்மீக உணர்வுகளை நமக்கு மறைத்துவிடக் கூடாது. அவளது பக்தி ஆசீர்வதிக்கப்படுவதில் வியப்பில்லை. அவள் செல்வமிக்கவள், அழகுள்ளவள், எல்லாராலும் உயர்வாக மதிக்கப்படுபவள் (8:7-8). ஆனால், அவளுக்குப் பிள்ளைகள் இருந்தனர் என்று கூறப்படவில்லை. அவளது மனவுறுதி, முன்முயற்சி, சுயநலமின்மை ஆகிய பண்புகள்

அவளை மேலும் சிறப்பித்துக் காட்டுகின்றன (13:20). ''எல்லாம் இறைவனைச் சேர்ந்தவை என்பது போல் செபி; எல்லாம் உன்னையே சேர்ந்தது என்பதுபோல் உழை'' என்ற மேற்கோளுக்கு யூதித்து எடுத்துக்காட்டாகத் திகழ்கிறாள்.

ஆனால், ஐயத்திற்குரிய சாதனங்களைப் பயன்படுத்தும் ஒரு பெண்ணை ஆசிரியர் இவ்வாறு மட்டு மிஞ்சிப் போற்றுவது நவீன வாசகர்களுக்கு ஒருவித வெறுப்பை உண்டாக்கலாம். ஏனெனில், அவள் தனது சாகசங்களால் ஒருவனுடைய ஆசாபாசங்களைத் தூண்டிவிட்டு, அவன் தூங்கும் போது கொல்கிறாள். யூதித்து ஒலபெரினேயைக் காமச் செயலுக்கு இட்டுச் செல்லவில்லை என்பது உண்மைதான். ஆனால், இஃது இறைவனது இரக்கத்தின் விளைவே என்றும் (13:16), அவள் தன் குறிக்கோளை அடைய எதையும் செய்யத் தயாராக இருந்தாள் என்றும் ஆசிரியர் ஓர் உணர்வை விட்டுச் சென்றுள்ளார். ஆகவே, யூதித்தின் செயலை விளக்கவுரையாளர்கள் சிலர் இழிவாக விமர்சிப்பர்; வேறுசிலர் மாப்புக் கூறும் விதத்தில் விளக்குவர். இரு குழுவினரும் கதை கூறப்படும் பின்னணியைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர் எனலாம். ஏனெனில் இக்கதை, யூதா நாடு உயிர் தப்புவதற்கு எல்லா வகைத் திறமையும், இரக்கமற்ற கொடிய செயலும்கூட, செய்ய வேண்டியிருந்த காலத்தைப் பின்னணியாகக் கொண்டது. மேலும், பாவத்தையும் புண்ணியத்தையும் இறைவன் எப்படி நோக்குகிறார் என்று காட்டுவது இந்நூலின் முதன்மையான நோக்கங்களில் ஒன்று என்பதையும், ஆசிரியர் 'இறைவன் அவர்களைப் பாதுகாப்பர் என்று யூதர்கள் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும்' என்ற பாடத்தையும் கண்டுணரச் செய்ய விழைவதையும் விளக்கவுரையாளர்கள் சிலர் குறிப்பிடத் தவறிவிட்டனர். இறைவன் மனிதச்செயல்களில் ஆழ்ந்த ஆர்வம் காட்டுகிறார். மனிதச் செயல்கள் அவற்றிற்கேற்ற சன்மானம் பெறவேண்டும். மனிதன் சுதந்தரமுள்ளவன். அவனது செயல்களுக்கு அவன் கணக்குக் கொடுக்க வேண்டும். நீதிமான்கள்-இஸ்ராயேலும், யூதித்தும்-இறைவனது எல்லாம் வல்ல ஆதரவை நம்பலாம். பாவிகள் நெபுகத்னேசரும், ஒலபெரினேயும்-தவிர்க்க முடியாத வகையில் அழிவை எய்துவர்.

யூதித்தின் கதையில் மனிதர்கள் வழியாக, அதுவும் ஒரு பெண் வழியாக, மனிதர்களது மட்டுமிஞ்சிய இறுமாப்பை இறைவன் சாடுகிறார் (13:12.18; 16:6). இறைவனது நீதியே ஒலபெரினேயைக் கொலை செய்கிறது; அசீரியர்களை விரட்டி அடிக்கிறது. யூதித்து தனது குறிக்கோளை அடைய பொய் சொல்கிறாள்; தன் அழகைப் பயன்படுத்துகிறாள். இவற்றில் எல்லாம் வஞ்சகமான, துணிவுள்ள, நேர்மையென எண்பிக்கக்கூடிய தந்திரத்தையே ஆசிரியர் காண்கிறார். என்ன இருந்தாலும் அது போர்க்காலமாகும்! நல்ல பரிசேயர் பாரம்பரியத்தைச் சேர்ந்த ஆசிரியர், சாதாரணமாக ஏமாற்றுவதையும், காமத்தால் வசியம் செய்வதையும் அனுமதியார். ஆனால், கதையின் சூழ்நிலையில் இறைவனுடைய எதிரிகள் தங்களது காமத்தாலும், குருட்டுத்தனத்தாலும் அழிவதை ஒருவகை விருப்பத்தோடே நோக்குகிறார். இறையூக்கம் பெற்றவர் ஆனாலும், ''முடிவு சாதனங்களை நேர்மையென எண்பிக்கிறது'' என்ற மேற்கோளை மறுக்கும், முழுவதும் கிறிஸ்துவப் பண்புடைய மனச்சாட்சியின் மேன்மை அவரிடமில்லையெனலாம். அவர் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்தவர். பலவற்றில் தன் காலத்தால் வரையறைக்குட்பட்டவர். இறைவனையும் அவரது பரிசுத்தத்தையும் எவ்வளவு போற்றினாலும், அந்தப் பரிசுத்தம் எதை மனிதனது நடத்தையில் எதிர்பார்க்கிறது என்பதைக் கிறிஸ்தவனைப் போல் ஆழ்ந்தறிய ஆசிரியருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை எனலாம்.

யூதித்து கதை இப்தாகு, சிம்சோன், தாவீது போன்ற வீரர்களைக் கொண்ட பாரம்பரியத்தில் வருவதாகும். இவ்வீரர்களின் பண்பையும், அவற்றை இவர்கள் பயன்படுத்திய முறைகளையும் கடுமை

யான ஒழுக்கச் சோதனைக்கு யாரும் உட்படுத்தவில்லை. யூதித்து கதையையும் அதேமுறையில் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்கள் இருக்கும் விதத்திலேயே அவர்களைப் பயன்படுத்தி, இறைவன் தமது மக்களை மீட்கிறார். மேலும் யூதர்களின் மீட்பு, சட்டத்திற்கு அவர்கள் காட்டும் பிரமாணிக்கத்தைப் பொருத்ததாகும். இதுதான் அக்கியோரின் உரையிலும் (5:5-21), யூதித்தின் கூற்றுகளிலும் (8:17-20), பெண் என்ற அளவில் யூதித்தின் மாதிரியிலும் வெளிப்படுத்தப்படும் கருத்தாகும். சட்டத்திற்கு அளிக்கப்படும் கடுமையான விளக்கத்திற்கேற்ப யூதித்து வாழ்ந்தாள் (8:6; 10:5; 12:2.19). ''நீரே தாழ்ச்சியுள்ளோரின் இறைவன்; ஒடுக்கப்பட்டோரின் உதவி; பலவீனர்களின் ஆதரவு; கைவிடப்பட்டோரின் தஞ்சம்; நம்பிக்கையற்றோரின் மீட்பர்'' என்ற யூதித்தின் விசுவாச அறிக்கையை எடுத்துக் கூறுகிறது இக்கதை.

12. இறையியல் செய்தி: யூதித்து நூல் ஒரு வரலாற்று நூலாகக் கருதப்படாவிட்டாலும், யாத்திரை வரலாறு வழி மனித வரலாற்றில் இறைவனது ஈடுபாடு பற்றிய மிக உன்னதமான வரலாற்று உண்மையில் வேரூன்றிய போதகத்தை இந்நூல் எடுத்துக்கூறுகிறது. இஸ்ராயேல் வரலாற்றில் காலத்தால் வெகு தூரம் வேறுபட்ட கூறுகளைச் செயற்கை முறையில் ஒன்றனுள் ஒன்றாகப் புகுத்தி அடக்கி, அவற்றிற்கு யாத்திரை அனுபவம் என்ற உண்மையொளியில் மறுவிளக்கம் அளிக்கிறது. இறைவன் இஸ்ராயேலை எகிப்திலிருந்து ஆற்றல் மிக்க முறையில் வெளிக்கொணர்ந்திருந்தால், இஸ்ராயேல் இவ்வுலகச் சக்திகளைத் தவறாது வெல்லக் கூடும், வெல்லும் என்பதில் நம்பிக்கை கொள்ளலாம். நாடுகடத்தப்பட்டதற்குப் பின் வந்த வரலாற்றுக் குழப்பத்திலும் இஸ்ராயேல் தனது விசுவாசத்தை உறுதியாக அறிக்கையிட வேண்டும். அதற்கு இந்நூல் ஒரு வாய்ப்பளிக்கிறது.

அந்த விசுவாச அறிக்கையில், இறைவனது தன்மையையும் அதன் விளைவுகளையும் ஆசிரியர் தமது காலத்து யூதர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். இந்நூல் இறைவனைப் பற்றிய சிந்தனையில் முழுவதும் தோய்ந்திருக்கிறது. இதில் எஸ்தர் நூலின் எபிரேய வாசகத்திற்கு நேர்மாறாக இருக்கிறது எனலாம். அடிக்கடி அவதூறு கூறப்படும் இந்நூல் ஓர் உன்னதமான சித்திரத்தை நமக்கு அளிக்கிறது. இறைவனது ஆற்றல் மிகச்சிறப்பான முறையில் வலியுறுத்தப்படுகிறது. அவர் தமது சொல்லால் படைப்பவர் (9:12; 13:18; 16:14). அவரை மனிதனால் அறியமுடியாது. அவரை எதுவும் எடுத்துக் காட்டவும் முடியாது. விடுதலை அளிப்பதுவோ, தண்டனை அளிப்பதுவோ எது தகுதியுடையதென்று அவருக்குத் தோன்றுகிறதோ அதன்படி தன் விருப்பப்படி செய்பவர். யூதித்து போன்றவர்கள் அவரது கருவிகளே. இறைவனிடம் வேண்டுதலும், அவரது தயவுக்காகக் காத்திருத்தலும் மனிதனது கடமையாகும் (8:14-17). ஏனெனில், நடப்பவற்றையெல்லாம் அறிபவரும் திட்டமிடுபவரும் அவரே (9:5-6). ஆயினும், இந்த இறைவன் இஸ்ராயேலின் ஆண்டவராவார் (9:13-14). அவர்களுக்காகக் கடந்த காலத்தில் யாத்திரை நிகழ்ச்சியில் பல அருஞ்செயல்களைச் செய்துள்ளார். அவரே அவர்கள் வரலாற்றை முழுவதும் அமைத்துள்ளார் (5:6-19). அவர்கள் கதியைத் தமது கையில் கொண்டுள்ளார் (7:25). அவர்களோடு உடன்படிக்கை செய்துள்ளார் (9:13). ஆகவே, இஸ்ராயேல் அவருடைய உடைமையாகும் (13:15); அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும் (6:19). யாவே பாவத்தைப் பெறாதவர். ஆகையால், சில சமயங்களில் அவர்களின் பிரமாணிக்கமின்மையின் பொருட்டு, அவர்களைத் தமது சினத்தில் சந்திப்பார், தண்டிப்பார் (5:17-18; 7:28; 8:19). ஆனால் மிகப்பெரிய கேடுகளுக்கிடையிலும் கூட அவரது மக்கள் நன்றியோடு அவரை ஆராதிக்க வேண்டும் (8:25). ஏனெனில் அவர் அளிக்கும் தண்டனை ஓர் எச்சரிக்கையே ஆகும் (8:27). இஸ்ராயேல் இறைவனுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கும்போது (5:20-21; 8:18) பெரும் நாடுகள் இஸ்ராயேலுக்கு எதிராக எழுந்தாலும்

(16:4), அவர்கள் அவரை நம்பிக்கையோடு விசுவசிக்கலாம் *(7:30)*. இக்கருத்தில் யூதித்து வெளிப்பாட்டு நூல்களோடு ஒத்திருக்கிறது. கூறப்படும் முறை வேறுபடலாம். ஆனால் கூறப்படும் கருத்து ஒன்றே. தீயோர் தங்கள் சுய நம்பிக்கை அளிக்கும், ஆற்றலின் தோற்றத்திற்கு வெல்ல முடியாத பெரும் படையோடு, இறைவனது புனிதர்களோடு மோதலாம். இருப்பினும் புனிதர்களே இறுதியில் உறுதியாக வெற்றி கொள்வர். ஏனெனில், எல்லாம் வல்ல இறைவன் அவர்களோடு இருக்கிறார் (காண்க. எசே *38-39*; தானி *7-8*). ஆகவே, அவர்கள் நோன்பிருந்து மன்றாடுதல் நன்று *(4:8* தொ; *6:19; 9:1)*. அவர்களது மன்றாட்டு கேட்கப்படும் *(4:13)*. அவர்கள் விடுதலை அடையும் போது, அவர்கள் உடனே இறைவனது இரக்கமிக்க எல்லாம் வல்லமையைப் போற்றிப் பாடுதல் இயல்பானதே *(13:14.17; 16:11.13)*. இறைவனைப் பற்றிய இஸ்ராயேலின் இந்த நோக்கு அவருக்கு அளிக்கப்படும் வழிபாட்டின் அடிப்படையாகும். அவரது புனித இடம் எருசலேமிலுள்ள ஆலயமே *(4:2.12-13; 5:19; 9:8)*. அது பங்கப்படுவதிலிருந்து எவ்வழியிலாவது பாதுகாக்க வேண்டும் *(4:12; 8:21)*. ஏனெனில், அங்குதான் பணிசெய்யும் குருக்கள் வழியாக *(4:14; 11:13)* மன்றாட்டுகளாலும் பணிகளாலும் இறைவன் வழிபாடு பெறுகிறார் *(4:14; 16:18)*. பலி ஆண்டவர்பால் கொண்ட உண்மையான அச்சத்தை எடுத்துக் காட்டுகிறது *(16:16)*. ஆனால், வழிபாட்டின் மையம் எருசலேமில் இருந்தாலும், மன்றாட்டும் போற்றுரையும், நோன்பு முதலியவற்றால் முனைப்பாக்கப்பட்டு நாடு முழுவதிலும் எதிரொலிக்கிறது.

அதிக வலுவான யூதநாட்டுப் பற்றுடைய இந்நூலில், அன்னியரும் யூத மக்களினத்துக்குள் வர, மகிழ்ச்சியுடன் கதவு அகலத் திறந்துவிடப்படுகிறது. அக்கியோர் *(5:5* தொ.) யூதர்களால் வெறுக்கப்பட்ட அம்மோனிய இனத்தைச் சேர்ந்தவர் *(1* சாமு *11:2+* எரே *40:14*; உப *23:3)*. அவருடைய விசுவாசம், விருத்தசேதனம் ஆகிய அடிப்படையில், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினத்துக்குள்ளும் உடன்படிக்கை ஆசீர்களுக்கும் வரவேற்கப்படுகிறார் *(6:20; 14:6-9)*. இவரைத் தோபி நூலில் வரும் அகிக்காரோடு ஒன்றாக்குகின்றனர் ஆய்வாளர்கள் சிலர். யாரும் அறிந்த ஆனால் தெளிவில்லாத உருவமுடைய ஞானியும் தலைவருமான இவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் கொடுமைகளில் பங்கு கொள்வதால் மீட்கப்படும் புற இனத்தவர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை மீட்கும் அதே இறையாற்றலால் மீட்கப்படுபவர்களுக்கும், ஒரு மாதிரியாகிறார் என்பர். இவ்வாறு இஸ்ராயேலினால் வரும் மீட்பிலிருந்து ஒருவரும் ஒதுக்கப்படுவதில்லை என்று காட்டுவதில் ஆசிரியர் கவனமாய் இருக்கிறார்.

13. இக்காலத்திற்கு:- துணிவு சேர்ந்த கெட்டிக்காரத்தனமும், ஆலோசனையில் விவேகமும், செயலில் அமைதியும் வலிமையும் ஆகிய குணங்கள் தன் பேச்சிலும் தோற்றத்திலும் ஒளிவிடும் அழகால் மெருகூட்டப்பட்ட, யூதித்தை ஓர் எடுத்துக்காட்டான மனிதநேயம் உள்ளவரின் நயமிக்க சித்திரமாய் எடுத்துக் காட்டுகிறது யூதித்து நூல். மேலும், அவளது கைம்மை நோன்பு கிறிஸ்தவக் கன்னிமைத் துறவுக்கு ஒரு முன்மாதிரியாகவும் உள்ளது.

யூதித்து மனித விடுதலைக்கு ஓர் எடுத்துக்காட்டாவாள். அசீரிய நெருக்கடியை ஒரு விசுவாச நெருக்கடியாக மட்டுமன்று, அதை விசுவாச வாய்ப்பாகவும் யூதித்து நோக்கினாள். விசுவாசம் வெறுமனே கைகட்டி அமர்ந்திருப்பதற்கன்று; அது செயலுக்கு இட்டுச்செல்ல வேண்டும். ஒரு குறிப்பிட்ட நெருக்கடிச் சூழ்நிலையில் நான் என்ன செய்யக்கூடும்? என்ன செய்ய வேண்டும்? என்று சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். இதற்கு யூதித்து ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவாள். ஒரு பெண் விதவை ஆனாலும், அசீரியர்களை எதிர்த்துப் போராட வேண்டும் என்று இவள்தான் துணிந்து எடுத்துக் கூறுகிறாள்; சமூக உணர்வோடு சிந்திக்கிறாள். மனித விடு

தலையைச் செயல்படுத்த, ஒவ்வொருவரும் தன்னை முழுவதும் தன் ஆற்றல் அனைத்தையும் பொது நன்மைக்காக அர்ப்பணிக்க வேண்டும். தன்னையே வெறுமையாக்க வேண்டும். அப்போதுதான் மனித விடுதலை தன்னிறைவுள்ளதாகக் கூடும். யூதித்து நூல் தனது தேவைகளை ஒதுக்கிவிட்டு, சமூகத் தேவைகளுக்காக தன்னையே அர்ப்பணிக்கும் ஒருவரை நாடகப் பாணியில் சித்திரிக்கிறது. தன்னையே சமூகத் தேவைகளோடு ஒன்றாக்கிக் கொள்வதால், யூதித்து மனித விடுதலையின் மாதிரியாகிறாள். அவள் பிறர் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்டவள். பலவீனமான இப்பெண் இஸ்ராயேலின் விடுதலைக்காகவும், அதே சமயம் சமய விடுதலைக்காகவும் வலிமையாகச் செயல்படுகிறாள்.

நமது விசுவாச சமூகத்திற்கு யூதித்து நூல் ஒரு சவாலாகும். அடிப்படையில் பொதுப் பணியோடு நம்மையே ஒன்றாக்கி அச் சவாலை ஏற்று நமது வாழ்க்கைக்குப் பொருள் காண அழைக்கிறது. அதன் விளைவாக உலகச் சமூகத்தின் தேவைகளில் தங்களையே அர்ப்பணிக்க கிறிஸ்தவர்களைக் கோருகிறது. உலகில் தீமைகள் பலவடிவம் எடுக்கலாம்; திறமையாகச் செயல்படலாம். மனித அநீதி எவ்வடிவம் எடுத்தாலும், அதை எதிர்த்துப் போராட வேண்டும், அந்தந்த நூற்றாண்டு வரலாற்று மேடையில் பாடுகள்-உயிர்ப்பு வரலாற்றை உயிர்ப்பித்துக் காட்டவேண்டும். யூதித்து நூல் விடும் இந்தச் சவால் வரலாறு மற்றும் நாடுகளின் வரையறைகளைக் கடந்ததாகும். நற்செய்திக்குப் புறம்பாக வாசிக்கத்தக்கது அன்று யூதித்து நூல். விசுவாசச் சமூகம் இறைவனது முழு வார்த்தையைக் கேட்டு, எல்லாக் காலங்களுக்கும், இடங்களுக்கும் பொருத்தமான ஒரே பதில் இல்லை என்பதை உணரவேண்டும். உடன்படிக்கையை அதன் அடிப்படையான எல்லாம் உள்ளடக்கும் தன்மையில் புரிந்துகொள்ள விசுவாசச் சமூகத்தை இந்நூல் தூண்டுகிறது. முழு உலகின் ஒன்றியைந்த விடுதலையைத் தேடுவதே திருச்சபையின் கதியாகும்.

சமீப காலத்திலிருந்துதான் நமது வழிபாடு யூதித்து வாசகத்தை இயேசுவின் அன்னை மரியாளுக்குச் சாற்றிக் கூறுகிறது. இப்படிக் கூறுவதற்கு அடிப்படையில்லாமல் இல்லை. மரியாளே உண்மையிலேயே ஒன்றிணைந்த மனித விடுதலை பெற்றவள். அலகையின் ஆட்சியிலிருந்து நம்மை மீட்க இறைவன் திட்டமிட்டபோது இம்மரியாளை விரும்பித் தமது துணைக்கருவியாக்கிக் கொண்டார். இப்படிப்பட்ட மரியாளோடு, இறைவனுடையவும் தன் மக்களுடையவும் எதிரியின் தலையைக் கொய்த யூதித்து பெருமையில் ஒரே வரிசையில் உள்ளாள். மரியாளுக்கு முன்மாதிரியாகவும் உள்ளாள். ஆனால் யூதித்தின் அழகு, உண்மையான மனித விடுதலை பெற்றவளும் இறைவனது அருள் நிறைந்தவளுமான மரியாளின் அழகுக்கருகில் மங்கிப் போகிறது என்றே கூறவேண்டும்.

எல்லாவற்றையும்விட, இறைவனது ஆற்றலில் நம்பிக்கை வைத்து, அவருக்கு அயராது பணிசெய்து வந்தால், எவ்வளவு வலிமைமிக்க உலக சக்திகள் மேலும் வெற்றி கொள்ளலாம்; அவ்வெற்றி உண்மையான விடுதலையை அளிக்கும் என்று யூதித்து நூல் எக்காலத்திற்கும் போதிக்கிறது.

யூதேயா (JUDEA)

இது யூதா என்ற பெயரின் கிரேக்க, இலத்தீன் வடிவமாகும். விவிலிய வழக்கில், நாடு கடத்தலுக்குப்பின் வந்த யூத நாட்டைக் குறிக்கும் சொல்லாக, பாரசீகர் காலத்தைச் சேர்ந்த நூல்களில் (எஸ்ரா, நெகேமியா; காண்க. தோபி 1:18) முதல் முறையாக இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

நாடு கடத்தலுக்கு முன் யூதா நாடு பாலஸ்தீனத்தின் தென்பாதியை அடக்கியதாக இருந்தாலும், பாரசீகர்கள் காலத்தில் அஃது எருசலேமைச் சுற்றியுள்ள பகுதியை முதன்மையாகக் கொண்ட சிறு பகுதியாகச் சுருங்கியது. பரந்தபொருளில், மக்கபேயர்களின் சுதந்தரநாடு பாலஸ்தீனம் முழுவதை

யும் உள்ளடக்கியதாய் இருந்தாலும் உண்மையில் இது சிறிய யூதேயாவால் ஆட்சி செய்யப்பட்டது. இதில் சமாரியாவும் கலிலேயாவும் அடங்கும் *(காண்க. 1 மக் 11:28)*. இதே அளவுப்பகுதிக்குத்தான் பெரிய ஏரோது அரசனாய் இருந்தான். ஏரோதின் மகன், அர்க்கெலா ஆண்ட யூதேயா இதுமேயாவையும் சமாரியாவையும் உள்ளடக்கியிருந்தது. ஆனால், கலிலேயாவையும் பெரேயாவையும் கொண்டிருக்கவில்லை *(காண்க. மத் 19:1; லூக் 13:5; அ.ப. 10:37)*. காலப்போக்கில் யூதேயா உரோமையரின் சிரியா மாகாணத்தோடு சேர்க்கப்பட்டு, உரோமையரால் நியமிக்கப்பட்ட ஆளுநரால் செசரியாவிலிருந்து ஆட்சி செய்யப்பட்டது *(காண்க. லூக் 3:1)*.

திருமுழுக்கு யோவான் முதலில் போதித்த யூதேயாவின் பாலைவனம், மத்திய மலைப்பகுதிக்கும் சாக்கடலுக்கும் இடையிலும், எருசலேமுக்கும் எபிரோனுக்கும் இடையிலும் அமைந்திருந்த வறண்ட பகுதியாகும்.

யூத்திக்கு (EUTYCHUS - நற்பேறுள்ள)

துரோவாவில் பவுல் நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்த போது சன்னலில் அமர்ந்திருந்த யூத்திக்கு மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்து விட்டதாக நினைத்து எல்லோரும் புலம்பியபோது, 'உயிர் அவனுக்குள் இருக்கிறது' என்று பவுல் கூறினார் *(அ.ப. 20:7-12)*. இளைஞன் இறந்து விட்டதாகவும் அவனுக்குப் பவுல் உயிர் அளித்ததை நேரடியாகக் கண்டதாகவும் லூக்கா எழுதுகிறார் *(20:10-12)*.

யூபால் (JUBAL - கொம்பு ஊதுபவன்)

இலாமேக்கின் ஒரு மனைவியான ஆதாவின் மகன். யாபாலின் தம்பி. இவர் ''யாழ்மீட்டுவோர், குழல் ஊதுவோர் ஆகியோர் அனைவரின் தந்தை'' ஆவார் *(ஆதி 4:21)*.

யூபித்தர் (JUPITER - வானத்தின் கடவுள்)

இஃது உரோமையர் கடவுள்களில் தலைமையானது. இத்தாலியின் ஒவ்வொரு மலையுச்சியிலும் வழிபடப்பட்டது. கிரேக்க சேயுசுவோடு அடையாளம் காட்டப்படும் *(அ.ப. 14:12-13)*.

யூபிலி ஆண்டு (JUBILEE, YEAR OF)

பழங்கால இஸ்ராயேலில் கடைப்பிடிக்கப்பட்ட ஓய்வு ஆண்டுகளின் சுழலில் ஐம்பதாவது ஆண்டாகும். அப்போது, வறுமையைத் தவிர்ப்பதற்காக குத்தகைக்கு விடப்பட்ட அல்லது விற்கப்பட்ட நிலங்கள் அவற்றின் மூலச் சொந்தக்காரர்களிடம் கொடுக்கப்பட்டன. இஸ்ராயேலில் ஒப்பந்த அடிமைகள் விடுவிக்கப்பட்டனர். நாடு முழுவதும் எழுப்பப்பட்ட எக்காள ஒலி யூபிலி ஆண்டைத் தொடங்கி வைத்தது. இஃது எத்தானிம் என்ற ஏழாம் மாதம், பத்தாம் நாளாகிய பரிகார நாளில் தொடங்கியது. (திஸ்ரி, செப்டம்பர் — அக்டோபர், புரட்டாசி).

ஏழு ஓய்வு ஆண்டுகளின் சுழலை யூபிலி ஆண்டு முடித்து வைத்தது (லேவி 25; *காண்க. யாத் 23:10-11)*. நிலத்தைப் பயிர் செய்யும் ஆண்டுகளுக்குப்பின் வரும் ஒவ்வொரு ஏழாம் ஆண்டும் ஓய்வு ஆண்டாகும். அதில் மனிதர்களும் விலங்குகளும் ஓய்வு எடுக்க வேண்டும். ஆறாவது ஆண்டு அறுவடையின் நிறைவிலிருந்து மனிதர்களும் விலங்குகளும் உண்டு வாழ்வர் *(லேவி 25:20-21)*.

நில உடைமையுரிமை மற்றும் அடிமைத்தனம் ஆகியவற்றைப் பொருத்தமட்டும் யூபிலி ஆண்டு அறிவிப்பு இஸ்ராயேல் சமூகத்தில் சிறப்புப்பொருளுடையதாகும். கானானில் குடியேறியபோது ஒவ்வொரு இனத்தவருக்கும் நாட்டின் நிலப்பகுதி குறிக்கப்பட்டது. நாடு தமக்கு மட்டுமே உரியது என்று யாவே தெளிவுபடுத்தியிருந்தார். அவரது விருப்பப்படியே மக்கள் அங்கு வாழலாம் *(யாத் 19:5; லேவி 25:23)*. நாடு இறைவனுக்கு மட்டுமே உரியதானாலும், வறுமையைத் தவிர்ப்பதற்காக இஸ்ராயேலர் நிலத்தை விற்பதோ, குத்தகைக்கு விடுவதோ தடைசெய்யப்படவில்லை.

யூபிலி ஆண்டுக்கு முந்திய ஆண்டுகளில் நிலத்தை விற்றவனின் முறை உறவினனான ''மீட்பன்'' அந்நிலத்தை மீண்டும் வாங்கும் அல்லது ''மீட்கும்'' கடமை கொண்டிருந்தான் (லேவி 25:25). அதேபோல், மூலத்தில் சொத்துக்குரியவன், செழிப்புற்ற காலத்தில் மீட்டுக்கொள்வான் (25:26). இந்த மீட்புத் தொகை, வாங்கியவன் சொத்தைப் பயன் படுத்திய ஆண்டுகளோடு தொடர்பு படுத்திக் கணக்கிடப்பட வேண்டும் (52:15-17.27). லேவியர்களின் வீடுகள் மற்றும் நிலங்களை மீட்க சிறப்பு விதிகள் உண்டு (25:28-34). யூபிலி ஆண்டின் தொடக்கத்தில், முந்திய 49 ஆண்டுகளில் விற்கப் பட்ட நிலங்கள் மூல உடைமையாளருக்கோ, அவரது சந்ததியினருக்கோ திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆண்டவருடைய புனிதத் தலத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நிலத்தைக் குறிக்கும்போதும் யூபிலி கூறப்படுகிறது (27:16-25). அதை மீட்க, மீட்புக்கும் அடுத்த யூபிலிக்கும் இடைப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, நிலமதிப்பீட்டில் ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகச் சொந்தக்காரன் கட்ட வேண்டும். நிலம் மீட்கப்படவில்லையென்றாலோ, மற்றொருவருக்கு விற்கப்பட்டாலோ, அடுத்த யூபிலி ஆண்டில், அது புனிதத்தலத்துக் குருவின் உடைமையாயிற்று.

யூபிலி ஆண்டுச் சட்டம், ஒப்பந்த அடிமைத்தனத்தின் மேலும் கவனம் செலுத்துகிறது. ஓர் இஸ்ராயேலன், வறுமையின் நிமித்தம் தன்னையே மற்றொரு இஸ்ராயேலனுக்கு விற்கும்படி கட்டாயம் ஏற்பட்டால், அவன் அடிமையாக அல்லன், கூலியாள்போலும் விருந்தினர் போலும் நடத்தப்பட வேண்டும் (25:40.42). யூபிலி ஆண்டில் ஒப்பந்த அடிமையும் அவன் பிள்ளைகளும் விடுதலையாகி அவனுக்குரிய நிலபுலங்களிடம் திரும்பிச் செல்லலாம்.

இந்த யூபிலி ஆண்டுச்சட்டங்கள் இஸ்ராயேலில் கடைப்பிடிக்கப்பட்டதா என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. ஏனெனில், இவை புரட்சிகரமான விளைவுகளை ஏற்படுத்தவல்லன. ஆயினும் இவை, தமது மக்களிடையே நிலவவேண்டிய சமத்துவத்தைப் பற்றியும், பழங்கால இன நிலப் பகுதிகளைப் பாதுகாப்பது பற்றியும் இறைவனின் அக்கறைக்குச் சான்றாக உள்ளன.

யூபிலி நூல் (JUBILEE BOOK OF)

1. இது போலி விவிலிய நூல்களில் மிக முக்கியமானது. கிறிஸ்துவத்திற்கு முந்திய இரு நூற்றாண்டுகளில் யூத மதம் பற்றித் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது. யூத மதம், அன்று இருந்த அளவில் வரலாற்று நாள் முதல் இருந்தவாறே இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும். இதில் புனித எண் ஏழு முன்பை விட ஒரு முக்கியமான எண்ணாகக் கருதப் பட்டு வந்தது. இந்த உலக வரலாறு முழுவதும் யூபிலி காலங்களாகப் பிரிக்கப் பட்டு இருக்கிறது. இது சீனாய் மலையில் மோசேக்கு அளிக்கப்பட்ட ஒரு திட்டமாகக் கருதப்படுகிறது. இந்தப் புத்தகம் வான தூதர், பேய்கள் பற்றிய கோட்பாட்டு வளர்ச்சி நிலைகளை நன்கு காட்டுகிறது. மேலும், யூத மதத்தின் பழக்க வழக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. யூதர்களுக்கும் புறவினத்தார்களுக்கும் உள்ள வேற்றுமை காட்டப் பட்டுள்ளது.

2. தலைப்பும் வாசகமும்: இந்த நூல் பல் வேறு பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறது. யூபிலிகள், சிறிய ஆதியாகமம், மோசேயின் வெளிப்பாடு, மோசேயின் ஏற்பாடு, ஆதாமின் புதல்விகளின் புத்தகம், ஆதாமின் வாழ்க்கை.

இப்போது இருக்கும் பிரதிகள் எத்தியோப்பிய, கிரேக்க, இலத்தீன், சீரியக்கு மொழிகளில் உள்ளன. நான்கு எத்தியோப்பியப் பிரதிகள் உள்ளன. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதல் பிரதியும், 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாம் பிரதியும் அதிகமாக நம்பத் தகுந்தன. எத்தி

யோப்பியப் பதிப்புகள் மட்டும்தான் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. கிரேக்க பதிப்பில் சில பிரதிகளைத் தவிர மற்ற அனைத்தும் காணாமல் போய்விட்டன. ஒரு பிரதி (11:2-21) எத்தியோப்பிய வாசக சார்லசின் பதிப்பில் காணப்படுகிறது. நான்கில் ஒரு பகுதி இலத்தீன் பதிப்பில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இஃது எத்தியோப்பியப் பதிப்பிற்கு ஒத்த மதிப்புடையதாய் உள்ளது. ஆனால், திருத்தியவர்களின் கையில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. சீரியக்கு பதிப்புச் சான்று சிறிது தாழ்ந்ததே. இது ''யூபிலி என்ற எபிரேய நூலின்படி குலமூதாதையர்களின் மனைவிகளின் பெயர்கள்'' என்ற சீரியக்குப் பிரதியில் அடங்கியுள்ளது.

3. காலமும் ஆசிரியரும்: இந்நூல் கி.மு. 153-க்கும், 105-க்கும் இடையில் எழுதப்பட்டது. இதன் வரலாற்றுப் பின்னணி சீமோன், இரிக்கானு என்பவர்களின் கீழ் இருந்த மக்கபேயர்களின் காலத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த நூல் ஓர் ஆசிரியரின் வேலை என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அவர் விருத்தசேதனம், ஓய்வுநாள், சட்டத்தின் மதிப்பு, வானதூதர்களின் மேல் நம்பிக்கை, பேய்கள் மற்றும் உயிரின் அழியாத்தன்மை ஆகியவற்றின் மேல் குறுகிய கண்ணோட்டம் கொண்டிருப்பதால், குறுகிய கண்ணோட்டம் உள்ள ஒரு பரிசேயராகவோ, ஒரு லேவிய குருவாகவோ இருக்கலாம். இவர் மக்கபேயர் குருத்துவத்திற்குப் பெரிதும் ஆதரவு அளித்தவராகவும் தெரிகிறது. மேலும், பழைய மரபுகளிலிருந்தும் பழைய நூல்களிலிருந்தும் குறிப்பாக நோவா நூல், ஏனோக்குநூல் போன்றவற்றிலிருந்து தனது கருத்துக்களை எடுத்திருக்கிறார்.

4. குறிக்கோளும் பொருளடக்கமும்: இதன் ஆசிரியரின் முக்கிய நோக்கம், உண்மைகளை மீண்டும் எழுதுவதாகும். அதாவது எவ்வாறு குலமூதாதையர்கள் சட்டத்தை மிக நுணுக்கமாக அனுசரித்தார்கள் என்று தெளிவுறுத்த எழுதினார். இவர் தனது நூல் மோசேக்குக் கடவுள் கொடுத்த வெளிப்பாடாகக் காட்ட முயற்சிசெய்தார்; அதாவது, 'முதல் சட்டம்' (வசனங்கள் 1-22) என்று கருதப்பட்ட 'ஐந்நூலுக்கு'ப் பிற்சேர்க்கையாக ஆக்க எண்ணினார். கிரேக்கமயமாக்கும் ஒழுக்கக்கேடான விளைவுகளிலிருந்து, யூதமதத்தைக் காப்பாற்றுவது இவருடைய ஆசையாக இருந்தது. இஸ்ராயேலைப் புகழ்ந்தார். சட்டத்தைப் புகழ்ந்தார். குலமூதாதையர்கள் குற்றமற்ற வாழ்க்கை வாழ்ந்தனர் என்று காட்டினார். புறவினத்தாரை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ''பிரசன்னத்தின் வானதூதர்'' சீனாய் மலையில் மோசேக்கு ஆதி 1 -யாத் 3-வரை அடங்கியுள்ள வரலாற்றையும் சமயச்சட்டங்களையும் வெளிப்படுத்தினார். இஃது அலாக்கா மிட்ராஸ் முறையில் உள்ளது. சாதகமானவற்றையே எடுத்துக்கூறுகிறார். பாதகமானவற்றை விட்டுவிடுகிறார்.

உலக வரலாறு முழுவதும் யூபிலி காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஏழு முறை ஏழு ஏழாகப் பிரிக்கப்பட்டுள்ளது (லேவி 25:8-12). 2:1-2 முதல், ஆதி 1:1 - யாத் 14:31 வரையுள்ள பகுதியோடு இணையாக உள்ளது. மிட்ராசிக் விரிவாக்கம் கொண்டுள்ளது. யூத முறைகள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. விழா அனுசரிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. யூதர்களுக்கும், புறவினத்து மக்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் தெளிவாக்கப்பட்டுள்ளன. இஸ்ராயேல் தனித்து இருக்க வேண்டும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இங்கு ஏனோக்கு நூலை விட வானதூதர், பேய்கள் பற்றிய கொள்கை முன்னேற்றம் அடைந்துள்ளது. பல கற்பனைக் கதைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குலமூதாதையர்களைக் குறைவுபட வைக்கும் எதுவும் நீக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் எழுத்தாளர் 'தோரா' மேல் அதிக மதிப்பு வைத்திருப்பவர். தானியேல் மற்றும் ஏனோக்கு ஆகமங்களில் உள்ள வெளிப்பாட்டு முறையைத் தனது விளக்கத்தில் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு மோசே வானதூதரிடமிருந்து வெளிப்பாடு

பெறுகிறார். இஃது ஒரு புது வகையான முறையில் பொருளை எடுத்துக் கூறுவதாகும். இவைதான் யூபிலி நூல் மூலத்தன்மையும் தனித்தன்மையும் உடையது என்று காட்டுகின்றன.

5. மொழி: கீழ்க்காணும் காரணங்களுக்காக, சார்லஸ் என்பவர் இந்தப் புத்தகம் எபிரேய மொழியில்தான் இருக்க வேண்டும் என்று நம்புகிறார். அ) மோசேயால் எழுதப்பட வேண்டிய புத்தகம் எபிரேய மொழியில்தான் இருக்க முடியும். இது புனிதமானதாகவும், தேசிய மொழியாகவும் இருக்கிறது. ஆ) தேசிய மொழி மறுமலர்ச்சியினால், தேசிய ஆர்வ மறுமலர்ச்சி சேர்க்கப்பட்டுள்ளது. இ) இருக்கின்ற பிரதிகள் எப்போதும், நமக்குத் தெரியாதவைகளை விளக்கும் பொருட்டு, எபிரேயத்தில் மொழிபெயர்ப்பது புரிந்து கொள்ளத் தக்கதாயுள்ளது. வேறுசிலர் இந்நூல் மூலத்தில் அரமேயிக்கில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுவர்.

யூபிலி நூலை ஒத்த ஏடுகள் கும்ரான் ஏட்டுத்தொகுப்பில் 'காணப்படுகின்றன.

யூபுல் (EUBULUS - விவேகமுள்ள, நல்லாலோசனையுடைய)

2 திமொ 4:21-இல் வாழ்த்துக் கூறிக் கொள்ளும் ஒரு கிறிஸ்தவன். கல்வெட்டுப் பொறிப்புகளிலும் புல்தாள்களிலும் இப்பெயர் அடிக்கடி வருகிறது.

யூப்பத்தோர் (EUPATOR - மேன்மைமிக்க தந்தையினுடைய)

செலூக்கிய அரசன் ஐந்தாம் அந்தியோக்கசுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப் பெயர் அல்லது பட்டம். அந்தியோக்கு எப்பிப்பானின் புதல்வனாக இருந்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் (1 மக் 6:17 தொ; 2 மக் 10:10 தொ).

யூப்பிரத்தீசு (EUPHRATES)

1. மேற்கு ஆசியாவில் மிக அகண்ட, நீளமான ஆறு. விவிலியப் பாரம்பரியத்தின் படி இன்ப வனத்திலிருந்து புறப்படும் ஆற்றின் நான்கு கிளை ஆறுகளில் இதுவும் ஒன்று. இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு வாக்களித்த நாட்டின் வடக்கு எல்லையாக இந்நதி இருக்கிறது (ஆதி 15:18; உப 1:7; 11:24; யோசு 1:4). எபிரேய அரசு அதன் உச்சநிலையில் இதுவரை பரவியிருந்தது (2 சாமு 8:3; 10:16; 1 அர 4:24). யூப்பிரத்தீசு சில இடங்களில் வெறுமனே ''ஆறு'' என்றே அழைக்கப்படுகிறது (எண் 22:5; உப 11:24; யோசு 24:3.14; யோசு 1:4-இல் ''பேராறு'' என்று குறிப்பிடப்படுகிறது). ''நதிக்கு அப்பால்'' என்ற பாரசீகப் பகுதியில் நகர்கள் காணப்படுகின்றன (எஸ் 4:10 தொ; நெகே 2:7-9).

2. **யூப்பிரத்தீசு மேற்பகுதி:** யூப்பிரத்தீசு ஆர்மேனியாவிலிருந்து புறப்படுகிறது. இரண்டு தனித்தனிக் கிளை ஆறுகளின் சங்கமத்தால் இஃது உருவாகிறது. இவற்றில் மேற்கே அமைந்துள்ள 'காரா-சூ'தான் யூப்பிரத்தீசின் உண்மையான தொடக்கமாக பொதுவாகக் கருதப்படுகிறது; அஃது ஏர்சேருமுக்கு வடபகுதியிலுள்ள வட்டமான குளத்திலிருந்து ஓடுகிறது. பின் மேற்குப் புறமாக ஓடிவருகிறது. கிழக்கிலிருந்து வரும் முரத் சூயு என்னும் கிளை ஆறு ஏர்சேருமின் கிழக்குப்பகுதியில் தோன்றி சிறிது சிறிதாக மேற்குப்புறமாக வந்து 'காரா-சூ'வுக்கு இணையாக ஓடுகிறது. மலாத்தியாவின் வடக்கே இரண்டும் இணைந்து யூப்பிரத்தீசாக உருவாகின்றன. மலாத்தியாவிலிருந்து தென்கிழக்கிலும், தென்மேற்கிலுமாகப் பாய்ந்து ஓடி, பழங்கால சமோசாத்தாவான சாம்சாதில் சீரியச் சமவெளியில் நுழைகிறது. இந்தச் சமவெளி ஆற்றின் வலக் கரையில் அமைந்துள்ளது. இஃது ஒரு முக்கியமான 'கடவுத்துறையை'க் குறிக்கிறது. பழைய 'சமோசாத்தா' அசீரிய கும்முக்கின் அதாவது கொம்மாகேனெயின் கிரேக்க அரசின் தலைநகராக விளங்கியது. இந்த ஆற்றின் ஊற்றுகள் கடல் மட்டத்திலிருந்து 2438 மீ (8000 அடி) உயரத்தில் உள்ளன. கண்கவர் கெவிமலைப் பகுதி வழியாக ஓடி 305 மீ (1000) தாழ்கிறது.

2. **யூப்பிரத்தீசின் நடுப்பகுதி:** ஆற்றின் வலப்பகுதியிலுள்ள பழங்காலக் கார்க்கே

மிஸ் இருந்த இடமான எராப்லுவைத் தெற்காக ஓடிக் கடக்கிறது. தொடக்கத்தில் ஒரு சிறிய நகர அரசின் மையமாக விளங்கிய கார்க்கேமிஸ் கித்தியப் பேரரசினுடையவும், பிற்காலத்தில் அசீரியப் பேரரசினுடையவும் முக்கியமான மாநிலத் தலைநகராக மாறியது. பாபிலோனிய இரண்டாம் நெபுகத்னேசர் கி.மு. 605-இல் எகிப்தின் நெக்கோவை வெற்றிகொண்டது கார்க்கேமிசில் உள்ள யூப்பிரத்தீசின் நதிக் கரையில்தான் (காண்க. 2 அர 24:7; எரே 46). கார்க்கேமிசின் தெற்கில், மேற்கிலிருந்து ஓடிவரும் ''சாசூர்'' (அசீரிய சாகூர்) ஆறு . கலக்கிறது; யூப்பிரத்தீசு தொடர்ந்து தெற்கு நோக்கி ஓடுகிறது. முதலில் பெலிக்கு (அசீரிய பாலிக்கூ) பிறகு காபூர் ஆகிய ஆறுகள் இஃதோடு சேர்ந்து கொள்கின்றன. இரண்டு ஆறுகளுமே வடதிசையிலிருந்து வந்து யூப்பிரத்தீசில் கலக்கின்றன. ஆறு தென்மேற்காகத் தொடர்ந்து ஓடி சலேகியா, பழங்காலத் தூரா-யுரோப்போ, பழைய மாரிக்கு அருகிலுள்ள அல்புகெமால் ஆகியவற்றைக் கடக்கிறது. மேற்காக ஓடி 'அனா'வையும், பிறகு தென்மேற்காக பழைய 'இத்து'வான கித்துவையும் அடைகிறது. பழங்காலத்தில் இத்து அதன் நிலக்கீலுக்குப் பெயர் போனது. இந்நடுப்பகுதியில் ஆறு கடல் மட்டத்திலிருந்து 195 மீட்டரிலிருந்து 66 மீட்டருக்குத் (650-220 அடி) தாழ்கிறது.

3. யூப்பிரத்தீசின் கீழ்ப்பகுதி: கித்திலிருந்து யூப்பிரத்தீசு பெல்லுயாவுக்கும் தெற்கில் முசெய்பீபுக்கு ஓடுகிறது. அங்கு இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. முக்கிய கிளையான கிந்தியா, கிந்தியாவைக் கடந்து பகிர்சினாப்பியே வழியாகச் சாமாவாவுக்கு ஓடுகிறது. சிறிய கிளையான 'கில்லா' கிளை ஆறு கில்லாவையும் பழைய பாபிலோனியாவையும் கடந்து ஓடித் 'திவானியா'வை அடைகிறது. பிறகு தெற்கில் கிந்தியா கிளையோடும், தெற்கில் 'சாமாவா'வில் சேர்கிறது. 'சாமா'விலிருந்து தென்மேற்காக 'கம்மார்' ஏரி வழியாக 'நசிரியே'வைக்கடக்கிறது. 'பாஸ்ரா'வுக்கு முன் 'திகிரீசு' ஆற்றுடன் இணைகிறது. 'சாத்-ஏல்-அராப்' ஆக இரு ஆறுகளும் ஒன்றிணைந்து 'பாஸ்ரா'வைக் கடந்து பாரசீக வளைகுடாவில் கலக்கிறது. இந்தப் பகுதி பாபிலோன் கீஸ், நிப்பூர் எரேக், ஊர் போன்ற நகர்கள் வழியாக 3600 கி.மீ. (2200 மைல்) ஓடுகிறது.

4. பண்டைக்காலத்தில் யூப்பிரத்தீசின் கீழ்ப்பகுதி: இப்பகுதியில் யூப்பிரத்தீசின் பழங்கால ஓட்டம் இக்காலத்திலுள்ளதிலிருந்து வேறுபட்டதாகத் தெரிகிறது. பெல்லூயா பகுதியில் இன்று செல்வதற்கு இன்னும் கிழக்காக திசைமாறித் திரும்பி 'சிப்பார்' என்ற சூரியக் கடவுளின் நகரத்தைக் கடந்தது. சிப்பார், பழங்காலத்தில் கல்தேயர்களின் கல்வி மையமாகத் திகழ்ந்தது. சிப்பாரிலிருந்து மெசபொத்தாமியாவின் முதல் அரச மரபின் இடமான கீசை நோக்கித் தெற்குப் புறமாக ஓடி வந்து அடைகிறது. அங்கிருந்து சுமேரின் புனித இடமான, 'என்லில்' என்ற புயல் தேவதையின் நகரமான நிப்பூரைக் கடந்து கருபாக்கை (இக்காலப் பாரா) அடைகிறது. இங்கேதான் சுமேரிய நோவா, செயுசுதரா அவருடைய பேழையைக் கட்டினார். பின் தெற்காக ஓடி இன்றைய 'வார்க்கா'வான எரேக்கை அடைகிறது. எரேக்கு இஸ்தார் தேவதையினுடையவும், காவியத் தலைவன் கில்காமெசினுடையவும் புகழ்பெற்ற நகரம். யூப்பிரதீசு எரேக்கிலிருந்து, ஆபிரகாம் பிறந்த இடமான ''ஊர்'' வந்து சேர்கிறது. பிறகு இந்த நகரத்தின் தெற்காக ஓடி, பாரசீக வளைகுடாவில் கலக்கிறது.

5. விவிலியக் குறிப்புகள்: யூப்பிரத்தீசு சுமேரியர், பாபிலோனியர்களுக்கு உயிர் நாடி போன்றதாகும். மெசபொத்தாமியா, சீரியா, மத்திய தரைக்கடல், எகிப்து ஆகியவற்றிற்கிடையே ஒரு முக்கிய வணிக மார்க்கமாகும். ஆனால், பழங்காலப் பாலஸ்தீனத்திலிருந்து வெகுதொலைவிலுள்ள யூப்பிரத்தீசு எபிரேயர்களை அவ்வளவு பாதிக்கவில்லை. ஆகவே, இஸ்ராயேலின் வரலாற்றைப் பாதித்த அளவுக்கு இங்குமங்குமாகவே விவிலியம் இந்த நதியைக் குறிக்கிறது.

அ. பழைய ஏற்பாடு: ஆதி *2:14*-இன்படி யூப்பிரத்தீசு, ஏதேன் தோட்டத்தோடு தொடர்புடைய நான்காவது ஆறாகும். இஃது ஏதேன்தோட்டம், மெசபொத்தாமியாவில் இருந்தது என்று சுட்டுகிறது. ஆபிரகாமுக்கும் அவரது சந்ததியினருக்கும் வாக்களிக்கப்பட்ட நாட்டின் கிழக்கு எல்லையாக, யூப்பிரத்தீசு அடிக்கடி கூறப்படுகிறது *(ஆதி 15:18; காண்க. உப 1:7; 11:24; யோசு 1:4)*. தாவீது, சாலமோன் ஆட்சியில் *(காண்க. 2 சாமு 8:3)*, ஒருவேளை 2-ஆம் எரொபவாமின் ஆட்சியிலும் *(2 அர 14:25)* இஸ்ரயேலின் அரசு வடகிழக்கில் யூப்பிரத்தீசு வரை பரவியிருந்தது *(காண்க. எசா 27:12; செக் 9:10)*. எகிப்தியரை மெகித்தோவில் தடுக்க யோசியா செய்த வெற்றி பெறாத முயற்சிக்குப்பின் *(2 அர 23:29)*, கார்கேமிசில் நெபுகத்னேசர் எகிப்திய நெக்கோவை 605-இல் தோற்கடித்துக் கிழக்கில் எகிப்தியரது செல்வாக்கை முடிவுக்குக் கொண்டு வந்தார் *(2 அர 24:7)*. இது யூதாவின் முடிவையும் தொடங்கி வைத்தது. யூப்பிரத்தீசு பாரசீக மாநிலத்தின் ''ஆற்றுக்கு அப்பால்'' (ஆற்றுக்கு மேற்கு) கிழக்கு எல்லையாக அமைந்தது *(எஸ் 4:11.17.20)*.

எரேமியா நூலில் யூப்பிரத்தீசு இருமுறை அடையாள எடுத்துக்காட்டாக வருகிறது. இறைவாக்கினர் தனது இடைக்கச்சையை இந்த ஆற்றில் புதைத்து வைத்துச் சிறிது காலத்திற்கு பின் எடுத்துவர இறைவனால் கட்டளையிடப்படுகிறார். இதனால் யூதாவின் அகந்தை நாடுகடத்தலால் அடக்கப்படும் என்று நாடகப்பாணியில் எடுத்துக் கூறப்படுகிறது *(எரே 13:1-11)*. விளக்கவுரையாளர்கள் சிலர் எரேமியாவின் பிறந்த இடமான அனதோத்துக்கு வடகிழக்கில் 6 கி.மீ. தொலைவிலுள்ள பாராவிலுள்ள ஊற்றாகும் இந்த ஆறு என்று விளக்குகின்றனர். பிற்காலத்தில் எரேமியா, பாபிலோனுக்கு எதிரான இறைவாக்குகள் அடங்கிய சுருளை ஆற்றில் எறியும்படி செராயாவுக்குக் கட்டளையிடுகிறார். இச்செய்கையால் பாபிலோனின் வருங்கால வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகிறார் *(51:63)*.

ஆ. புதிய ஏற்பாடு: திருவெளிப்பாட்டு நூலில், யூப்பிரத்தீசு வருங்கால இறைத்தீர்ப்பின் இடமாகும். இங்கு நான்கு தூதர்கள் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் விசுவசியாதவர்களில் அனேகரை அழிக்க அனுமதிக்கப்படுவர் *(திருவெளி 9:14)*. மற்றொரு இடத்தில், ஒரு வானதூதர் இறைச்சீற்றத்தின் பாத்திரத்தை ஆற்றில் கொட்டி அதை வறண்டுபோகச் செய்து, கிழக்கிலிருந்து வரும் படைக்கு வழி அமைக்கிறார் *(16:12)*. இதனால், ஆசிரியரான யோவான் உரோமையர் பேரரசுக்கு எதிராக பார்த்தியரின் தாக்குதலைச் சுட்டிக்காட்டினாலும், அவருடைய உருவகம் இருந்த இருமக்களுக்குமிடையே நடந்த எந்த வரலாற்றுப் போராட்டங்களையும் குறிக்கும் வரைக்குட்பட்டதன்று.

யூப்பொலம் (EUPOLEMUS - *போரில் ஆற்றல் உள்ளவன்)*

ஒரு யூதப் பிரதிநிதி. நிக்கானோர்மேல் வெற்றிக்குப் பிறகு உரோமையரோடு உடன்படிக்கை ஏற்படுத்த கி.மு. 161-இல் யூதா மக்கபேயுவால் உரோமைக்கு அனுப்பப்பட்டவர் *(1 மக் 8:17; 2 மக் 4:11)*. இந்தக் காலக்கட்டத்தில் யூதர்களின் வரலாற்றைக் கிரேக்கத்தில் எழுதிய வரலாற்று ஆசிரியருக்கும் இதே பெயர்தான். இவரும் அந்த அரசியல் பிரதிநிதியும் ஒரே ஆளைக் குறிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

யூமன் (EUMENES - *நற்சார்புடைய)*

1 மக் 8:3-இல் குறிப்பிடப்படும் அரசன். இவர்தான் பெர்காமுவின் இரண்டாம் யூமன் என்ற அரசன் (கி.மு. 197-148). இவர்தான், செலூக்கிய அரசன் (பெரிய) மூன்றாம் அந்தியோக்கு என்னும் செலூக்கிய அரசனோடு உரோமையர்கள் போர் புரிந்தபோது (கி.மு. 190) உரோமையர்களுக்கு உதவினார். ஆகவே, அதற்குச் சன்மானமாக அவருக்குச் சீரியாவின் பெரும் பகுதியை உரோமையர்கள் கொடுத்

தனர். அவர் பெர்கமுவில் பல கட்டடங்களைக் கட்டி எழுப்பினார்.

யூர்கெத்து (EUERGETES - உபகாரி)

இன்று நல்ல சேவை செய்பவர்களுக்கு அவர்களைப் பாராட்டி அவர்களுடைய சேவைக்காக விருது கொடுப்பது போல, பண்டைக்காலத்தில் குறிப்பிடும் வகையில் நல்ல பணிகள் செய்பவருக்குப் பெருமையாக அளிக்கப்படும் பட்டம் (காண். லூக் 22:25). சீராக்கு நூல் ஆசிரியர் யூர்கெத்தின் 38-ஆவது வருட ஆட்சியில் எகிப்துக்கு அவர் அங்கு வந்ததைக் குறிப்பதனால் தன் நூலின் காலத்தை நிர்ணயிக்கின்றார் (தோலமி 7).

யூலியா (JULIA)

உரோமையில் ஒரு கிறிஸ்தவப்பெண். பவுலிடமிருந்து வாழ்த்துப் பெற்றவர்களில் ஒருத்தி (உரோ 16:15). ஒருவேளை பிலலோகுவின் மனைவியாகவோ, சகோதரியாகவோ இருக்கலாம்.

யூலியு (JULIUS)

இவர் ஓர் உரோமை நூற்றுவர் தலைவன். பவுலைப் பாலஸ்தீனத்திலிருந்து உரோமுக்குக் கொண்டு செல்வதற்கு நியமிக்கப்பட்டவன். யூலியு என்ற பெயரானது, யூலியு குடும்பத்தினரால் புகழாக்கப்பட்ட உரோமையர்களின் பொதுவான பெயர். அ.ப. 27:1.3.11.43; 28:7-இல் குறிக்கப்படும் யூலியு அகுஸ்துவின் படைப்பிரிவைச் சேர்ந்த ஒரு நூற்றுவர் தலைவன். இப்படை செசரியாவில் நிலை கொண்டிருந்தது.

பவுலுக்கு எதிராக யூதத் தலைவர்கள் முறையிட்டார்கள். 'யூதர்களிடையே கலகம் மூட்டுகிறவன், கோயிலை மாசுபடுத்த முயன்றவன், நசரேயர்களின் தலைவன் என்று சொல்லி ஆளுநன் முன்பாகக் குற்றஞ் சாட்டினர் (அ.ப. 24:1-9). பவுல் இவ்வழக்கு செசாருடைய மன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்று வாதாடினார். ஏனென்றால், பவுல் ஓர் உரோமைக் குடிமகன்; எனவே, செசாரிடமே என் வழக்கு செல்ல வேண்டும் என்றார் (25:8 12).

அகிரிப்பா என்ற அரசனும், பெஸ்து என்ற ஆளுநனும் பவுல் உரோமைக்கு அனுப்பப்படுவதற்குச் சம்மதித்தனர் (26:30-32). இந்த யூலியுவின் பாதுகாப்பில் பவுல் ஒப்படைக்கப்பட்டார் (27:1). இராணுவக் கப்பலுக்குப் பதிலாக வியாபாரக் கப்பலில் பயணம் செய்தனர். அதனால் பவுலின் நண்பர்களும் அவரோடு பயணம் செய்ய முடிந்தது.

படைத்தலைவன் யூலியு பவுலிடம் அன்பாகவும், இரக்கத்துடனும் நடந்து கொண்டான். அதனால் சீதோன் துறைமுகத்தில் பவுல் தன் நண்பர்களைச் சந்திக்கவும், அவர்களிடமிருந்து அன்பைப் பெற்றுக் கொள்ளவும் அனுமதி அளித்தான். பின்பு, மேற்காக உரோமை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

பயணத்தின்போது புயலும், எதிர்க்காற்றும் வீசி, சூழ்நிலை மோசமாய் இருந்ததால், அவர்கள் கணக்கிட்டிருந்த நாளுக்கும் தாமதமாகப் போய்ச் சேரவேண்டியிருந்தது. பவுல், கப்பல் பயணம் இப்பொழுது ஆபத்தானது என எச்சரித்தும், நூற்றுவர் தலைவன் அவரை நம்பாமல் கப்பலோட்டியும் கப்பலுக்குரியவனும் சொன்னதை நம்பினான். அதனால் கப்பல் புயலுக்குள் சிக்கியது (29:9-11). புயலில் தத்தளித்துப் பாறையில் கப்பல் மோதி உடைந்தது. சிதறுண்ட அனைவரும், ஒருவழியாக நீந்தியும், கட்டைகளைப் பிடித்துக்கொண்டும் கரை சேர்ந்தார்கள். அது மால்த்தா தீவு எனப் பின்பு அறிந்தார்கள் (28:1). மற்ற வீரர்கள் பவுலையும் மற்றக் கைதிகளையும் கொன்றுவிட எண்ணியபோது, யூலியு அதைத் தடுத்து நிறுத்தினான் (27:42-44). அதற்குப்பின் யூலியுவைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

யூற்றா (JUTTAH - நீட்டப்பட்ட, சாய்ந்துள்ள)

இது மாவோன் மாகாணத்தில், தென்கிழக்கு மலைப்பகுதியில் அமைந்துள்ள யூதா கோத்திரத்தின் ஒரு நகரம் (யோசு 15:55). ஆரோனின் புதல்வர்கள் இந்த

நகரத்தை, லேவியர்களின் நகரங்களில் ஒன்றாக உருவாக்கினார் (21:6). இதற்கு இணையான 1 நாள் 6:59-இல் இது விடப்பட்டுள்ளது.

இஃது எபிரோனுக்குத் தென்மேற்கில் 8.8 கி.மீ. தொலைவிலும், பெயித் இப்ரினுக்குத் தெற்கில் 25 கி.மீ. தொலைவிலும் உள்ள யாற்றாவாக அடையாளம் காட்டப்படுகிறது. தரோமின் (நெகேபு) மத்தியில் எலுத்தெரப்போலிவிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ள யூதர்களின் மிகப் பெரிய ஊர்தான் யூற்றா என்று யூசேபியு சொல்லுகிறார்.

இந்த மலைப்பகுதியில்தான் மரியாள் எலிசபெத்தைச் சந்தித்ததாக ஒரு பக்தி மரபு சொல்லுகிறது. இக்கருத்து அறிஞர் பலரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

யூனிக்கி (EUNICE - நல்ல வெற்றி)

லோயியின் புதல்வி (2 திமொ 1:5). திமொத்தேயுவின் தாய். இவளுடைய கணவன் ஒரு புறவினத்தான் (அ.ப. 16:1). 2 திமொத்தேயு நூலின் ஆசிரியர் அவளை அவளுடைய விசுவாசத்திற்காகப் பாராட்டுகின்றார். கலாத்தியாவிலுள்ள தெர்பை அல்லது லிஸ்திராவிலிருந்து வந்தவள். அவள் யூத இனத்தைச் சார்ந்தவள் (விதவையாக இருக்கலாம்). கிறிஸ்தவராக மாறியவள்.

அவள் விசுவாசமும், அவள் அன்னை லோயியின் விசுவாசமும் 2 திமொ 1:5-இல் குறிப்பிடப்படுவது, திமொத்தேயு இளையவராக இருந்த போதிலும் (1 திமொ 4:12; 2 திமொ 2:22) அவர் பழமையான கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் நிலைத்திருப்பதைச் சிறப்பித்துக்காட்டுகிறது. இவளும் இவள் தாயும் பவுலின் போதகத்தால் கிறிஸ்தவ மறையைத் தழுவினர் (காண்க. அ.ப. 14:6.21-22).

யூனியா (JUNIAS)

ஒரு கிறிஸ்தவ யூதப்பெண். பவுலின் உறவினரும், உடன் கைதியுமாவாள். இவள் ஒருவேளை அந்திரோனிக்குவின் மனைவியாக இருக்கலாம். இவர்கள் பவுலின் மனந்திரும்புதலுக்கு முன்பே கிறிஸ்தவர்கள் ஆனவர்கள். அப்போஸ்தலர்களுள் இவர்கள் பேர்பெற்றவர்கள் (அ.ப. 16:7).

யோ

யோகனான் (JEHOHANAN - யாவே அருளுடையவர், கருணை மிகுந்தவர்)

1. கோராகிய குலத்தைச் சேர்ந்த லேவியர். மெசலேமியாவின் ஆறாவது மகன். இவர் ஆலய வாயிற்காவலராக இருந்தார் *(1 நாள் 26:3).*

2. யூதா இனத்தவர். யோசபாத்து அரசனின் படைத்தலைவர்களில் ஒருவர் *(2 நாள் 17:15).*

3. பெரிய குரு யோயாதா அத்தலியாவுக்கு எதிராக புரட்சி செய்த போது அவருக்கு உதவிய இசுமாயேல் என்பவரின் தந்தை *(2 நாள் 23:1).* இவர் (2)-இல் குறிக்கப்பட்டவராக இருக்கலாம்.

4. அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்தவர்களுடைய பாவத்தின் பொருட்டு, உடன்படிக்கையைப் புதுப்பித்தலுக்காக எஸ்ரா நோன்பு இருந்த அறையின் உடைமையாளன் *(எஸ் 10:6).* இவர் பெரிய குரு எல்யாசிபின் மகன் என்று அழைக்கப்படுகிறார். இவர் நெகே *12:22-23*-இல் கூறப்படும் நெகேமியா காலத்துத் தலைமைக் குருவான எல்யாசிபின் *(நெகே 3:1)* பேரன் யோகனானாக இருக்கலாம். இஃது உண்மையாயின், எஸ்ரா-நெகேமியா காலக் கணிப்புக்கு இஃது ஒரு முக்கிய விடை அளிக்கிறது.

5. பேபாயின் ஒரு மகன். எஸ்ராவின் காலத்தில் புறவினப் பெண்ணை மணந்திருந்த ஓர் இஸ்ராயேலர் *(எஸ் 10:28).*

6. நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்த அம்மோனிய நாட்டவனும், நெகேமியாவின் எதிரியுமான தோபியா என்பவரின் மகன். எருசலேம் நகர் மதிலைக் கட்ட உதவிய மெசுல்லாம் என்பவரின் மகளே இவரது யூத மனைவியாவார் *(நெகே 6:18; காண்க. 3:4.30).*

7. தலைமைக்குரு யோயாக்கீமின் காலத்தில் ஒரு குரு. அமரியா குடும்பத்தின் தலைவர் *(நெகே 12:13).*

8. நெகேமியா இருந்த நாட்களில், எருசலேம் மதிலை அர்ப்பணித்தபோது பணிபுரிந்த குருக்களில் ஒருவர் *(நெகே 12:42).*

யோகனான் (JOHANAN - யாவே கருணை மிகுந்தவர்)

1. காரயாகு மகனாகிய இவர் இறைவாக்கினர் எரேமியா காலத்தவர். எருசலேம் பாபிலோனியரால் வீழ்த்தப்பட்ட பின்னர் *(கி.மு. 586),* பாபிலோனிய அரசனால் நியமிக்கப்பட்ட ஆளுநர் கெதல்யாவுடன் ஒத்துழைத்த யூதப்படைத்தலைவர்களுள் ஒருவர் *(எரே 40:8; காண்க. 2 அர 25:23).* கெதல்யாவைக் கொலை செய்யத் திட்டப்பட்ட ஒரு சதித்திட்டம் பற்றி அவரை யோகனான் எச்சரித்தார் *(எரே 40:13-16).* ஆனால், கெதல்யா அதனைப் பொருட்படுத்தாததால் கொல்லப்பட்டார். பின்னர் இக்கொலைக்காகப் பழிவாங்கினாலும், இதன் பின்விளைவுகட்குப் பயந்து, கெதல்யா கொல்லப்பட்டதால் பாபிலோனிலிருந்து தமக்கு என்ன தொல்லை வருமோவென அஞ்சி, மற்றத் தலைவர்களுடன் கலந்து பேசி எகிப்துக்குப் போக எண்ணினார் *(எரே 41:11-18).* எரேமியா இறைவாக்கினர் எகிப்துக்குச் செல்ல வேண்டாம், கடவுளை நம்பி இங்கேயே இருங்கள் என்று கூறியும், அவரை நம்பாமல், இறைவாக்கினரையும் தங்களோடு இழுத்துக் கொண்டு எகிப்துக்கு ஓடிப் போயினர் *(எரே 42:1-43:7).*

2. யோசியா அரசனின் மூத்த மைந்தன் இவன். முதல் மைந்தனாக இருந்தும் *(640-609)* தன் தந்தையை அடுத்து இவன் அரியணை ஏறவில்லை; ஒருவேளை இளைஞராக இருக்கும்போதே இறந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது *(1 நாள் 3:15).*

3. தாவீதின் வழிவந்த எலியோவெனாய் என்பவரின் மகன் *(1 நாள் 3:24).*

4. யோகனான் ஒரு குரு. இவர் குரு அசரியாவின் மகன் அல்லது தூரத்து உறவினனாக இருக்க வேண்டும் *(1 நாள் 6:9; காண்க. 1 அர 4:2)*. ஆலயத்தில் அசரியாவுடன் பணிபுரிந்தார்.

5. பென்யமின் குலத்தினனான இவன் தாவீதுடன் சிக்லாகில் போர் வீரனாகச் சேர்ந்து கொண்டான் *(1 நாள் 12:4)*.

6. காத்து என்ற இடத்திலிருந்து வந்து சிக்லாகில் மறைந்து வாழ்ந்த தாவீதுடன் சேர்ந்து கொண்டவர்களில் இவனும் ஒருவன் *(1 நாள் 12:12.14)*.

7. எப்பிரயிம் குலத்தலைவர்களில் ஒருவர் *(2 அர 28:12)*. அசரியாவின் தந்தை.

8. எஸ்ராவுடன் பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவர்களில் ஒருவர் *(எஸ்ரா 8:12)*. அஸ்காகு குலத்தைச் சேர்ந்தவர். அக்காற்றானின் மகன்.

9. தலைமைக்குரு எல்யாசீபின் பேரனும், யோயதாவுக்குப் பின்வந்த தலைமைக்குருவும் ஆவார் *(நெகே 12:22-23)*. இங்கு மகன் என்பது சொந்த மகனையோ, பேரனையோ, தூரத்து உறவினர் யாரையோ குறிக்கலாம். நெகே 12:11-இல் கூறப்படும் யோனத்தான், யோகனான் என வருவதற்குப் பதிலாக தவறாக வந்ததாக இருக்கலாம். எஸ்ரா கோவிலிலிருந்து வந்து நோன்பு இருக்கப் புகுந்த அறை யோகனான் அறை என்று எஸ்ரா 10:6 குறிப்பிடுகிறது. எல்யாசீபின் பேரன் யோகனானும், எஸ்ரா ஓய்வெடுக்கச் சென்ற அறைக்குரியவனும் ஒரே ஆள்தானென்றால் நமக்குக் காலக்கணிப்பு சரியாக வருகிறது; உறவும் தெளிவாகிறது. எல்யாசீபு நெகேமியா காலத்தவர் என்றால் அவரது பேரன் யோகனான் எஸ்ராவின் காலத்தவர் என்பது சரியாக இருக்கும். ஆனால், எஸ்ரா நெகேமியாவுக்குப் பின் எருசலேம் வந்தார் எனக் கொண்டால்தான் இது சரியாகும்.

'எலபன்டைன் ஏடுகள்' எனும் நாணல் தாள் ஏடுகள் யோகனான் எனும் இத் தலைமைக்குரு பாரசீக மன்னன் இரண்டாம் தாரியு காலத்தவர் எனவும் குறிப்பிடுகிறது *(கி.மு. 423-404)*. யூத வரலாற்றறிஞரான யோசிப்பசு இவரைக் கிரேக்கப் பெயரால் ''யோவான்'' என அழைக்கிறார். மேலும் தலைமைக் குரு பதவி பறிபோய்விடும் எனக் கருதி தனது சகோதரன் ஏசுவாவைக் கொன்றார் எனவும் குறிப்பிடுகிறார்.

யோகா (JOHA - *கொடுக்கப்பட்ட உயிர்)*

1. பாரியாவின் புதல்வர்களில் ஒருவனான இவன் பெயர் பென்யமின் குலத்தின் தலைமுறை அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது *(1 நாள் 8:16)*.

2. தாவீதின் வலிமைமிக்க போர்வீரர்கள் எனக்கூறப்படும் '30' பேர்களில், யோகா எனும் தீட்சியரும், அவனது சகோதரன் எதியவேலும் குறிப்பிடப்படுகின்றனர்.

யோகிலி *(JOGLI - இறைவன் வெளிப்படுத்துவாராக)*

தாண் கோத்திரத் தலைவனான புக்கியின் தந்தை இவர். இந்தப் புக்கி மேற்கு யோர்தானின் கானானிய நாட்டைப் பிரித்துக் கொடுக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவர் *(எண் 34:22)*.

யோக்கபேது (JOCHEBED - *யாவே மகிமை மிக்கவர்)*

லேவியின் மகளான யோக்கபேது அம்ராமின் மனைவி; ஆரோன், மோசே, மிரியம் ஆகியவர்களின் தாய் *(யாத் 6:20; எண் 26:59)*. குருக்கள் பாரம்பரியம் மட்டுமே இப்பெயரைக் கொண்டிருக்கிறது. எலோகிம் பாரம்பரியம் இவளை 'லேவியின் மகள்' என மட்டுமே குறிப்பிடுகிறது *(யாத் 2:1)*. இப்பெயர் எதிலிருந்து தோன்றியது எனத் தெரியவில்லை. இப்பெயர் உணர்த்துவது என்னவெனில், 'யாவே மகிமைக்குரியர்' என்பதாம். எனவே 'யாவே' எனும் பெயர் மோசேக்கு முன்னரே தெரிந்த ஒன்றாகும் எனச் சுட்டுகிறது. ஆனால், குருக்கள் பாரம்பரிய ஆசிரியர் இதனை இந்தப் பொருளில் புரிந்து கொள்ளவில்லையெனத் தெரிகிறது.

யோக்கிம் (JOKIM - யாவே எழச்செய்கிறார்)

யூதாவின் வழித்தோன்றல்களில் ஒருவரும் சேலாவின் மகனும் ஆவார் (1 நாள் 4:22).

யோக்சான் (JOKSHAN - பறவை வேட்டைக் காரன்)

ஆபிரகாமுக்கும் கெற்றூராவுக்கும் பிறந்தவர். சேபா, தெதான் ஆகியோரின் தந்தை (ஆதி 25:2-3; 1 நாள் 1:32). பல அராபிய மக்களினங்களின் குலப்பெயர் மூதாதையர்.

யோக்தயாம் (JOKDEAM - மக்கள் குடியேறியுள்ள)

யூதாவின் கிராமங்களில் ஒன்றான இது மலைப்பாங்கான மாவோன் மாவட்டத்தில் உள்ளது (யோசு 15:16). இது, யூற்றாவுக்கும் சீபுவுக்குமிடையில், எபிரோனுக்குத் தெற்கில், இக்காலக் கிர்பெத் ராகா இருக்கும் இடத்தில் இருந்திருக்கலாம். எழுபது நூல் வாசகப்படி 1 நாள் 2:44-இல் இருக்கும் யோர்க்கயாம் என்ற பெயரே மூலப்பெயராக இருக்கலாம்.

யோக்தவேல் (JOKTHEEL - இறைவன் அடக்குகிறார்)

1. யூதாவின் கிராமங்களில் ஒன்றான இஃது இலாக்கீசில் உள்ள தென்செபேலாவில் இருந்தது (யோசு 15:38). இஃது இருந்த இடம் தெரியவில்லை.

2. யூதாவின் அரசனான அமட்சியா உப்புப் பள்ளத்தாக்கில் ஏதோமியரை முறியடித்து, தலைநகரான செலாவைப் பிடித்து அதற்கு யோக்தவேல் எனப் பெயரிட்டான் (2 அர 14:7). பிறகு அமட்சியாவுக்கு எதிராக ஒரு முறை சதித்திட்டம் தீட்டப்பட்டபோது அவன் தப்பித்து இலாக்கீசுக்குச் சென்றான். இதன் அருகில்தான் யோக்தவேல் அமைந்திருந்தது (யோசு 15:38).

யோக்தான் (JOKTAN - இளையமகன், கவனமாயிரு)

இவர் ஏபேரின் இளைய மகனும், பெலேகுவின் சகோதரனும், சேமின் வழித்தோன்றலும் ஆவார். அராபிய மக்கள் பலரின் குலப்பெயர் மூதாதையர் ஆவார் (ஆதி 10:25-29; 1 நாள் 1:19-23). இந்த நாட்டில் முதலிலிருந்தே வாழ்ந்து வரும் மக்கள் இவர்களில் சிலரே; ஆனால், ஆபிரகாம் வழியாக ஆகாருக்கும் கெற்றூராவுக்கும் பிறந்தவர்கள் பின்னர் வந்து குடியேறியவர்களே.

யோக்தானின் வழிவந்தவர்களாகக் கூறப்படும் 13 பேரும், அரேபியாவின் வடபகுதியிலுள்ள மேசாவிலிருந்து கிழக்குப்பகுதியில் உள்ள மலைப்பகுதி வரையில் உள்ள நாட்டில் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றனர். அட்சர்-மாவேத்து உட்பட முதலில் கூறப்படும் நான்கு பெயர்களும் இந்தியப் பெருங்கடலை நோக்கி இருக்கும் கடற்கரையின் ஓரத்திலே அமைந்திருக்க வேண்டும். மற்றவர்கள் ஏமனிலும், மற்றும் சிலர் இன்னும் வடக்கே தள்ளியும் வாழ்ந்திருக்க வேண்டும்.

யோக்பகா (JOGBEHAH - உயர்ந்த இடத்திலுள்ள)

காத்தின் கோத்திரத்துக்கான அரண் அமைந்த நகரமான யோக்பகா யாசேருக்கு அடுத்துக் கூறப்படுகிறது (எண் 32:35). கிதியோன் மிதியானியரை விரட்டிச் செல்லும்போது, தன் பகைவர்களைப் பின்னிருந்து தாக்குவதற்காக நோபா, யோக்பகாவைச் சுற்றிச் சென்றார் (நீதி 8:11). அம்மானுக்கு வடமேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ள இக்காலக் கிர்பெத்-ஏல்-அய்பெயிகத்து இஃது அமைந்த இடமாக இருக்கலாம்.

யோக்மயாம் (JOKMEAM - ஒன்றுகூட்டப்பட்ட)

1. எப்பிரயிமில் உள்ள ஒரு லேவிய நகரம் இது (1 நாள் 6:68). இதற்கு இணையான பட்டியலில் (யோசு 21:22) கிபட்சயிம் என்று உள்ளது. இவ்விரு நகரங்களும் இதே இடத்தில் இருந்திருக்கலாம்.

2. செபுலோனின் நகரம் இது (1 அர 4:12). யோக்னயாமும் இதுவும் ஒன்றாக

இருக்கலாம். சாலமோன், பாகனா ஆட்சி செய்த மாகாணத்தில் இதைச் சேர்த்தார்.

யோக்னயாம் (JOKNEAM - ஒன்றுசேர்க்கப் பட்ட)

இது செபுலோனின் எல்லைக்கருகில் உள்ள ஒரு லேவிய நகரம் (யோசு 19:11; 21:34). இது தெல்கெயிமுன் எனும் மலை என்று அடையாளம் காட்டப்படுகிறது. இம்மலை இஸ்ரியேல் பள்ளத்தாக்கின் எதிரில், கர்மேல் மலைத்தொடரின் வடசரி வில், மெகிதோவுக்கு வடமேற்கே 11 கி.மீ. தொலைவில் உள்ளது. மூன்றாம் துட்மோசு நகரங்களின் வரிசைப்படி இது 113-ஆவது நகராகும். இஃது 'ஊற்று' எனப்பொருள் தருவதாகும். ஒருவேளை இம்மலைக்குக் கிழக்கேயுள்ள ஊற்றினைக் கொண்டு இப் பெயர் வந்திருக்கலாம். யோசு 12:22-இன்படி இது யோசுவா தோற்கடித்த கானானிய நகரமாகும். யோக்னயாம், யேக் மயாம் என்று தவறாக உச்சரிக்கவும் பட்டது. இது சாலமோனின் ஐந்தாவது நிர்வாகப்பிரிவிலுள்ள நாட்டின் ஒரு பகுதி யாக பின்னர் சேர்க்கப்பட்டது (1 அர 4:12).

யோசக்கார் (JOZACAR - யாவே நினைவு கூர்ந்தார்)

சிமயாத்தின் மகன். யோவாசு அரசனின் ஊழியக்காரருள் ஒருவன். அவர் கொலை செய்யப்படுவதற்குப் பொறுப்பாக உள்ள வர்களில் ஒருவன் (2 அர 12:21). இதற்கு இணையாக உள்ள 2 நாள் 24:26-இல் இவன் சாபாது என்று அழைக்கப்படுகிறான்.

யோசதாக்கு (JEHOZADAK - யாவே நேர்மை யுள்ளவர்)

நெபுசத்னேசரால் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட முக்கிய குருவான செராயா வின் மகன் (1 நாள் 6:14-15). நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், ஆலயத்தை மீண்டும் கட்ட உதவிய பெரிய குரு ஏகவ / யோசுவாவின் தந்தை (ஆகா 1:1. 12.14; செக் 2:2.4).

யோசதாக்கு (JOZADAK - யாவே நேர்மை யானவர்)

தலைமைக்குரு ஏசுவாவின் தந்தை. நெபு கத்னேசரால் பாபிலோனுக்கு நாடு கடத்தப் பட்டவர்களில் ஒருவர் (எஸ் 3:2.8; 5:2, 10:18; நெகே 12:26).

யோசதேக்கு (JOSEDECH)

யோசதாக்கு என்ற பெயரின் மற்றொரு வடிவம்.

யோசபக்காசா (JOSHBEKASHAH - கடின மாகப் போராடுதல்)

இவர் தாவீது நியமித்த ஆலயப் பாடகர் களுள் 17-ஆவது பிரிவுக்குத் தலைவர். ஏமானின் புதல்வர்களில் ஒருவர் (1 நாள் 25:4).

யோசபாது (JEHOZABAD - யாவே கொடுத் தார்)

1. சோமேர் என்பவரின் மகன். மில்லோ அரண்மனையில் அரசனைக் கொன்ற யோவாசின் ஊழியர்களில் இவரும் ஒருவர் (2 அர 12:21). இதற்கு இணையான பகுதியான 2 நாள் 24:26-இல் இவர் 'மோவாபியப் பெண் சிம்ரித்தின் மகன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் யோவாசின் மகனும் பின் அரசனுமான அமசியா (1)-ஆல் கொல்லப்பட்டார் (2 அர 14:5).

2. ஒபேது-ஏதோமின் இரண்டாம் மகன். ஒரு கோராகிய லேவியர். ஆலய வாயிற்காப் பாளரும் ஆவார் (1 நாள் 26:4).

3. யோசபாத்தின் படையில் இருந்த பென்யமின் குலத்தைச் சேர்ந்த படைத் தலைவர் (2 நாள் 17:18).

யோசபாது (JOZABAD - யாவே அளித்தார்)

1. தாவீது சிக்லாகுவில் தலைமறைவாய் இருந்தபோது, அவருடைய படையில் கெதேராவிலிருந்து வந்தவரும் பென்யமின் கோத்திரத்தைச் சேர்ந்தவருமான இவர் சேர்ந்து கொண்டார் (1 நாள் 12:4).

2. மனாசே இனத்தைச் சேர்ந்தவர். இவர் சவுலைக் கைவிட்டு, தன் படையின் தலைவராக சிக்லாகுவில் இருந்த தாவீ தோடு சேர்ந்து கொண்டார் (1 நாள் 12:20).

3. மனாசேயைச் சேர்ந்த மற்றொரு படைத்தலைவர். இவரும் சவுலைக்

கைவிட்டு, சிக்லாகுவில் தாவீதோடு சேர்ந்து கொண்டார் (1 நாள் 12:20).

4. எசேக்கியா அரசாண்ட காலத்தில் ஆலயத்தைக் கண்காணிப்பதற்காக பொறுப்பைப் பகிர்ந்து கொண்ட ஒரு லேவியர் (2 நாள் 31:13).

5. இவர் லேவியர் தலைவர்களுள் ஒருவர். யோசியா அரசாண்ட காலத்தில், பாஸ்காப் பலிக்கென 5000 செம்மறியாட்டுக் குட்டிகளையும், வெள்ளாட்டுக் குட்டிகளையும், 500 காளைகளையும் காணிக்கையாகக் கொடுத்தார் (2 நாள் 35:9).

6. ஒரு லேவியர். எஸ்ரா பாபிலோனிலிருந்து ஆலயப் பாத்திரங்களைத் திரும்பக் கொண்டு வந்து ஒப்படைத்தபோது, அவற்றை எண்ண உதவியவர் (எஸ் 8:33).

7. அன்னிய மனைவியரைக் கொண்ட லேவியருள் ஒருவர் (எஸ் 10:23). இவரும் 6-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

8. இவர் பஸ்கூரின் வழித்தோன்றலும் ஒரு குருவும் ஆவார். பின்பு தான் மணம் செய்திருந்த அன்னியப்பெண்ணை நீக்கிவிட்டார் (எஸ் 10:22).

9. எஸ்ரா சட்டத்தை வாசித்தபோது, அதை மக்களுக்கு விளக்கிக்காட்டிய ஒரு லேவியர் (நெகே 8:7). இவரும் 6 அல்லது 7-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

10. ஆலயத்தின் வெளிவேலைகளைக் கவனித்து வந்த ஒரு லேவியர் தலைவர் (நெகே 11:16). இவரும் 6, 7 அல்லது 9-இல் வருபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

யோசபாத்து (JEHOSHAPHAT - யாவே தீர்ப்பிடுகிறார்)

1. அகிலூதின் மகனான இவர் தாவீது, சாலமோன் ஆவணங்களைப் பாதுகாக்கும் பதவியில் இருந்தார் (2 சாமு 8:16; 20:24; 1 அர 4:3; 1 நாள் 18:15).

2. பாருவாகின் மகனான இவர் சாலமோன் ஆட்சியில் இசக்காரின் பகுதிகளுக்கு ஆளுநராக இருந்தார் (1 அர 4:17). அரசருக்கும் அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுப்பதே ஒவ்வொரு ஆளுநரின் வேலையாகும் (4:7).

3. ஏறக்குறைய கி.மு. 873-849-ஆம் ஆண்டுகளில் யூதாவின் நான்காம் அரசராக இருந்தவர். இவர் தமது 35-ஆவது வயதில் அரசராகி, 25 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவருடைய தாய் சில்கியின் மகளான அகபா ஆவாள். ஆசாவின் மகனும் அவருக்குப் பின் அரசராக வந்தவருமாவார் (1 அர 22:42; 2 நாள் 20:31). இஸ்ராயேலுக்கு எதிராக யூதாவைப் பலப்படுத்தினார் (2 நாள் 17:2; 17:12-19). இவரது ஆட்சிக் காலத்தில் யூதாவுக்கும் இஸ்ராயேலுக்குமிடையே நடந்து வந்த போர்கள் நின்று அமைதி நிலவியது (1 அர 22:44). இந்த நட்புறவுக்கு ஆகாபு - ஈசபேலின் மகளான அத்தலியாவை இவருடைய மகன் யோராமுக்குத் திருமணம் செய்து வைத்தது ஓர் அடையாளமாகும் (2 நாள் 8:1). ஆனால் இத்திருமணத்தால் யூதாவில் புகுந்த புற இனச் செல்வாக்கு, பிற்காலத்தில் யூதாவுக்குப் பெரும் துன்பங்கொண்டு வந்தது (2 அர 8:18.27). கிலயாதிலுள்ள இராமோத் கிலயாதைக் கைப்பற்றுவதற்காக யோசபாத்து இஸ்ராயேலின் அரசரான ஆகாபுடன் சேர்ந்து கொண்டார் (1 அர 22). அப்போரில் ஆகாபு படுகாயமுற்றார் (1 அர 22:2-40; 2 நாள் 18:3-34). இப்போரிலிருந்து திரும்ப வந்த யோசபாத்தைத் திருக்காட்சியாளர் ஏகூ சந்தித்து, ''ஆண்டவரை வெறுக்கும்'' தீயவனுக்கு உதவி செய்ததற்காக அவரைக் கண்டித்தார் (2 நாள் 19:2).

பின்னர் யோசபாத்து யோராம் அரசனோடு சேர்ந்து மோவாபின் அரசனுக்கு எதிராகப் போர் தொடுத்தார்; ஆனால், தோல்வியுற்றார் (2 அர 3). அவரது நீண்ட ஆட்சிக்காலம் அமைதியானதாகவும் வளமிக்கதாகவும் இருந்தது. அவர் பொன் திரட்ட ஓபிருக்குப் போகும்படி கப்பல்

களைக் கட்டினார். ஆனால், அவைகள் போக முடியவில்லை. ஏனெனில், ஏட்சியோன்-கெபேரில் கப்பல்கள் உடைந்து போயின. இப்படிக் கப்பல்கள் உடைந்ததற்கு இஸ்ராயேலின் அரசன் அகசியாவோடு யோசபாத்து கொண்டிருந்த நட்புறவே காரணம் என்று நாளாகம ஆசிரியர் கூறுகிறார் (2 நாள் 20:35-37). அப்பொழுது ஆகாபின் மகன் அகசியா யோசபாத்தை நோக்கி ''என்னுடைய பணியாளர் உம் பணியாளரோடு கப்பலில் செல்லட்டும்'' என்று கேட்டார். அதற்கு யோசபாத்து இணங்கவில்லை (1 அர 22:41-45).

யோசபாத்து அண்டை நாட்டாரால் மதிக்கப்பட்டார் (2 நாள் 17:11); ஏதோமின் மேல் மேலாண்மை கொண்டிருந்தார் (1 அர 22:47). இஃது அராபியாவிலிருந்து வரும் வியாபார வழிகளை யூதாவில் கட்டுப்பாட்டிற்குள் வைத்தது; அதனால் யூதாவுக்குப் பெரும் செல்வம் கிடைத்தது. 2 நாள் 20-இல் மோவாபியர், அம்மோனியர், மெயோனியர் ஆகியோர் சேர்ந்த கூட்டணியை ஏன்கேதியில் இவர் வெற்றி கொண்டது விவரிக்கப்படுகிறது.

யோசபாத்தின் ஆட்சிக்காலத்தை நாளாகம ஆசிரியர் சாதகமாக நோக்குகிறார். இவர் தாவீதின் நேர்மையான முன்மாதிரிகையைப் பின்பற்றினார் (2 நாள் 17:3-4); பாகாலை ஒதுக்கி, இஸ்ராயேலின் இறைவனை மட்டுமே வழிபட்டார். யாவே வழிபாடுகள் நடந்த மற்ற மேட்டுப் புனித இடங்களை அழிக்காவிட்டாலும், பாகாலுக்குரிய மேட்டு நிலங்களையும் மற்ற பிறவின மத வழிபாட்டு இடங்களையும் அகற்றினார் (1 அர 22:43; 2 நாள் 17:6; 19:13). இவர் இறைவனது ஆலோசனையைத் தேடுவது பற்றி பல குறிப்புகள் உள்ளன (1 அர 22:5தொ; 2 நாள் 18:4தொ; 20:3-19.20). மேலும், ஆண்டவரது சட்டத்தை மக்களுக்குப் போதிக்க தலைவர்களையும் லேவியர், குருக்களையும் நகரங்களுக்கு அனுப்பினார் (17:7-9). நீதி வழங்கும் முறையில் பல சீர்திருத்தங்கள் செய்தார். உடன்படிக்கைச் சட்டத்திற்கேற்ப நீதியையும் நேர்மையையும் வலியுறுத்தினார் (19:5-11).

யோசபாத்து 25 ஆண்டுகள் ஆட்சி செய்தார். தாவீதின் நகரில் அடக்கம் செய்யப்பட்டார். அவருக்குப் பிறகு அவருடைய மகன் யோராம் ஆட்சிக்கு வந்தான் (21:1 3). மத் 1:18-இல் இவர் இயேசுவின் முன்னோர் பட்டியலில் இடம் பெறுகிறார்.

4 ஒம்ரி அரசமரபை அழித்தொழித்த ஏகூவின் தந்தை. நிம்சியின் மகன் (2 அர 9:2.14). 1 அர 19:16; 2 அர 9:20; 2 நாள் 22:7-இல் ஏகூ நிம்சியின் மகன் என்று குறிக்கப்படுகிறார்; உண்மையில் நிம்சியின் பேரனாவார்.

5. இறைவனின் திருப்பேழை ஓபேது-ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகருக்கு எடுத்து வரப்பட்டபோது அப்பவனியில் பங்கு பெற்ற குருக்களில் ஒருவர். பேழையின் முன் எக்காளம் ஊதுவதே இவரது பணியாகும் (1 நாள் 15:24).

யோசபாத்து பள்ளத்தாக்கு (JEHOSHAPHAT VALLEY OF)

யூதா, எருசலேம் மீண்டும் அமைக்கப்படும் மெசியாக் காலத்தில் புறவினத்தார் அனைவரையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்குமிடம் (யோவே 4:2.12). இதன் பொருள் ''கடவுள் தீர்ப்பு வழங்குவார்'' என்பதாகும். யோவேல் இப்பள்ளத்தாக்கைத் ''தீர்ப்பு வழங்கும் பள்ளத்தாக்கு'' என்று அழைக்கிறார் (யோவே 3:14). இந்த இடம் அடையாளமானதாகும் புவியியலைச் சார்ந்ததன்று. ஆனால், யூத விரிவுரையாளர்கள் சிலரும், முற்காலத்தில் கிறிஸ்தவ விரிவுரையாளர்களும் இவ்விடம் உண்மையில் இருந்ததாக விளக்கம் அளித்தனர். சிலவேளைகளில் யோசபாத்து பள்ளத்தாக்கு இன்னோம் பள்ளத்தாக்கோடும், கிதரோன் பள்ளத்தாக்கோடும் ஒப்பிடப்பட்டது. கிதரோன் பள்ளத்தாக்கில் எண்ணிக்கையற்ற யூதக் கல்லறைகளும், நினைவுச் சின்னங்களும் காணப்படுகின்றன. இவை, இறுதி நாளில் இறந்தவர்கள் தீர்ப்பிடப்படுவதற்

காக உயிர் பெற்றெழுவார்கள் என்ற உண்மையை நினைவுபடுத்துகின்றன. எனவேதான் கிதரோன் பள்ளத்தாக்கே யோசபாத்து பள்ளத்தாக்கு என்று பலர் கருதுகிறார்கள்.

யோசபாற்று (JOSHAPHAT - யாவே தீர்ப்பிடுகிறார்)

1. இவர் ஒரு மத்னியர். தாவீதின் வலிமை மிக்க போர்வீரர்கள் ''முப்பது'' பேரில் ஒருவர் (2 நாள் 11:43).

2. ஆண்டவருடைய திருப்பேழைக்கு முன்பாக எக்காளம் ஊதி ஆர்ப்பரித்துக் கொண்டு வந்த குருக்களில் இவரும் ஒருவர். குறிப்பாக தாவீது எருசலேமிற்குத் திருப்பேழையைக் கொண்டு வந்தபோது இவர் எக்காளம் ஊதினார் (1 நாள் 15:24).

யோசபெயாத்து (JEHOSHABEATH)

யூதாவின் அரசன் யோராமின் மகள். அகசியாவின் மகன் யோவாசை அரசி அத்தலியாவின் கொலையிலிருந்து காப்பாற்றினாள். இவள் அகசியாவின் சகோதரி (2 நாள் 22:11). 2 அர 11:2-இல் இவள் யோசேபா என்றழைக்கப்படுகிறாள் காண்க. யோசேபா.

யோசவியா (JOSHAVIAH)

எல்னாமின் புதல்வர்களில் ஒருவர். தாவீதின் வலிமை மிக்க ''முப்பது பேரில்'' ஒருவர் (1 நாள் 11:46).

யோசா (JOSHAH)

அமட்சியாவின் மகன். எசேக்கியா காலத்தில், சிமியோன் இனத்தின் தலைவர்களுள் ஒருவர் (1 நாள் 4:34).

யோசிபியா (JOSHIBIAH - யாவே பாதுகாப்போடு வாழச்செய்வார்)

ஏகூவின் தந்தையும், செராயாவின் மகனுமாவார். எசேக்கியாவின் காலத்தில் சிமியோன் இனத்தலைவர்களுள் ஒருவர் (1 நாள் 4:35).

யோசிப்பியா (JOSIPHIAH - யாவே பெருகச் செய்கிறார்)

இவர் பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து எஸ்ராவோடு திரும்பி வந்த செலோமித்தின் தந்தையாவார் (எஸ் 8:10).

யோசியா (JOSIAH - யாவே வலுப்படுத்துகிறார், குணமாக்குகிறார்)

1. யோசியா யூதாவின் அரசராக இருந்த ஆமோனின் மகனாவார். தனது தந்தை இறந்தபின் யோசியா யூதாவின் அரசரானார் (கி.மு. 640-609). இவர் ஆமோன் அரண்மனை ஊழியர்களால் கொலை செய்யப்பட்டபின் தனது எட்டாவது வயதில் அரசனாக்கப்படுகின்றார் (2 அர 21:2தொ). இவர் யூதா நாட்டைச் சேர்ந்த மக்களால் அரசனாக்கப்படுகின்றார். அதாவது அரசவையைச் சேராத மக்கள் இவரை அரசராக்குகின்றார். ஆமோன் மன்னன் ஏன் கொலை செய்யப்பட்டான், இளம் வயதிலே ஏன் யோசியா அரசனாக்கப்பட்டான் என்பதற்கான காரணங்கள் தெளிவாக இல்லை. 2 அர 22-23; 2 நாள் 33-34 என்ற பகுதிகள் யோசியா செய்த சமய சீர்திருத்தங்களைப் பற்றி அழுத்திக் கூறுகின்றன. இவரது சமயசீர்திருத்தம் பழுதடைந்த நிலையிலிருந்த ஆலயத்தைப் பழுது பார்ப்பதில் தொடங்கி அன்னிய வழிபாடுகளையெல்லாம் அழித்தொழிப்பதில் உச்ச நிலையை அடைந்தது. இந்தச் சீர்திருத்தமானது இலிகியா என்பவரால் ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சட்டநூலில் கூறப்பட்டிருந்த சட்டங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது (2 அர 22:8தொ). மேலும், யோசியா உடன்படிக்கையைப் புதுப்பித்தார் (2 அர 23:1-3; 2 நாள் 4:29-33). பின் சட்டநூலில் குறிப்பிட்டிருந்தபடி பாஸ்கா விழாவைக் கொண்டாடினார் (2 அர 23:21தொ).

விவிலியத்திற்குப் புறம்பாகக் காணப்படும் குறிப்புக்களிலிருந்து இவர் காலத்தில் அரசியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களைக் காணலாம். கி.மு. 625-க்கும் 612-க்கும் இடைப்பட்ட காலத்தில் அசீரியா வீழ்ச்சியடைந்தது என்றால், கி.மு. 625-க்குப்பின் பாலஸ்தீனத்தில் அசீரியர்களின் அரசாட்சி ஆற்றலுள்ள விதத்தில் செயல்படவில்லை என்பதாகும். அசீரிய

அரசாட்சியின் கட்டுகளிலிருந்து சுதந்தரம் பெற்றதின் விளைவாகத்தான் 2 அர 23:4-இல் கூறப்படும் சமய சீர்திருத்தம் ஏற்பட்டது என்று நாத்து என்பவர் குறிப்பிடுகின்றார். இந்தச் சூழ்நிலையில் எந்த ஒரு வலிமைமிக்க அரச அமைப்பும் பாலஸ்தீனாவில் இல்லாததால் தாவீது அரசை மீண்டும் அமைக்க யோசியா முயற்சிகள் மேற்கொண்டார். மேலும் யோசியா பெத்தேல் (22 அர 23:15), சமாரியா, சமாரியாவிலுள்ள நகரங்கள் (23:18தொ), மெகிதோ போன்ற பகுதிகளில் பணிபுரிந்தார் என்பது வடக்கில் எகதிர லோன் வரையிலுள்ள இஸ்ராயேல் நாட்டை மீண்டும் உடைமையாக்கிக் கொண்டார் யோசியா என்று காட்டுகிறது. இந்நிலை, அரசியல் நிகழ்ச்சிகளின் விளைவாக குறுகிய காலத்திற்கே நீடித்தது. அசீரியாவின் அரசராகிய அசூருபாலித்து மெசபத்தோமியாவிலுள்ள காரானிலிருந்து பாபிலோனியர்களாலும் மேதியர்களாலும் கி.மு. 610-இல் வெளியேற்றப்பட்டார். எனவே, அசீரியாவின் வீழ்ச்சியால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப மற்றொரு மெசபத்தோமியர்கள் ஆட்சிக்கு வரலாம் என்று எகிப்தை ஆண்டுவந்த நெக்கோ என்பவர் அச்சமடைந்து அசூருபாலித்துக்கு உதவி செய்ய படையுடன் சென்றான். இதையறிந்த யோசியா மீண்டும் அசீரியர்களோ, எகிப்தியர்களோ ஆதிக்கம் செலுத்த வந்து விடுவார்கள் என்று அச்சம் கொண்டு மெகிதோவில் நெக்கோவை எதிர்த்துப் போரிடுகின்றார். ஆனால், அப்போரில் யோசியா இறந்ததாக 2 அர 23:29 இல் கூறப்படவில்லை. எனவே, அவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று வரலாற்று ஆசிரியர்கள் சிலர் எண்ணுகின்றனர். 2 நாள் 35:20-27 என்ற பகுதி இந்தப் போரினைப் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளது.

ஏரேமியா நூலில் (1:2தொ; 3:6) யோசியா, எரேமியா பணி செய்த காலத்தில் ஆட்சி செய்தவர் போல் தோன்றுகின்றார். இறைவாக்கினர் எரேமியா யோசியாவை எளிமையானவர் என்றும், நீதியுடனும், நேர்மையுடனும் செயல் புரிந்தவர் என்றும், ஏழைகளின் வழக்கைத் தீர்த்து வைத்தவர் என்றும் புகழ்கின்றார் (எரே 22:13-16).

2. இவர் செப்பனியாவின் மகன். இவர் இல்லத்தில் இறைவாக்கினர் செக்கரியா தலைமைக் குரு யோசுவாவுக்கு (ஏசுவாவுக்கு) முடி சூட்டினார் (செக் 6:10-11).

யோசுவா (JOSHUA - யாவே மீட்பாவார்

1. யோசுவா, நூனிமகன் - இத் தலைப்பின் கீழ்க்காண்க.

2. பெத்-செமேசைச் சேர்ந்தவர். பெலிஸ்தியர் ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையைத் திருப்பி அனுப்பிய போது, இரு கறவைப் பசுக்கள் பூட்டிய வண்டியில் வைத்து அனுப்பினர். இந்த வண்டி பெத்செமேசைச் சேர்ந்த யோசுவாவின் வயலுக்குள் வந்து நின்றது (1 சாமு 6:14).

3. அரசன் யோசியாவின் காலத்தில் இவர் எருசலேமின் ஆளுநராக இருந்தார் (2 அர 23:8).

4. நாடு கடத்தலுக்குப்பின் ஆகாய் மற்றும் செக்கரியா நூல்களில் வரும் முதல் தலைமைக் குருவின் ஏசுவா என்ற பெயரின் மற்றொரு வடிவம் இது.

5. இயேசுவின் மூதாதையருள் ஒருவர் (லூக் 3:29).

யோசுவா நூல் (JOSHUA, BOOK OF)

1. இறைவாக்கினர் நூல்களை முந்தைய இறைவாக்கினர், பிந்தைய இறைவாக்கினர் என்று இருபிரிவாக யூதர்கள் பிரித்தனர். இவ்வேறுபாடு அதிகாரப்பூர்வமான விவிலியப் பட்டியலில் வரும் வரிசையை அடிப்படையாகக் கொண்டு தோன்றியிருக்கலாம். முந்தைய இறைவாக்கினர் என்ற பிரிவின்கீழ் வரும் நூல்கள் ஒரு சிறப்புத் தன்மையுடையன. அவை யாவும் இஸ்ராயேலின் வரலாற்றைப் பதிவு செய்கின்றன. இதன் விளைவாக, அறிஞர்கள் சிலர்

இந்நூல்களை உபாகமத்தோடு சேர்த்து ''உபாகமப் பாரம்பரிய வரலாறு'' என்றழைப்பர். இந்த முந்தைய இறைவாக்கினர் பட்டியலில் முதலாவது வருவது யோசுவா நூல் ஆகும்.

2. நூலின் பெயர்: இந்நூல் ஒரு தனி நபரின் பெயரைத் தலைப்பாகக் கொண்டுள்ளது. இந்நூல் முழுவதும் சிறப்பான விதத்தில் செயல்பட்டு நிறைந்து நிற்கும் யோசுவாவின் தலைமையில் வாக்குறுதி அளிக்கப்பட்ட நாடாகிய கானானை இஸ்ராயேல் வெற்றிகொண்டு தங்களுடைய தாக்கிக் கொள்வதில், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய குலமூதாதையர்களுக்கு யாவே அளித்த வாக்குறுதி நிறைவேறுகிறது. யாவே யோசுவாவைப் பயன்படுத்தி அவருக்குச் சிறப்பான முறையில் துணை புரிநது வல்லமையோடு தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறார். ஆகவே, நூல் முழுவதும் யாவேயின் அருஞ்செயல்கள் பரவிக்கிடக்கின்றன. யாவேக்கு அடுத்து யோசுவா இந்நூலில் காப்பியத் தலைவனாகத் திகழ்கிறார். ஆகவே, பாரம்பரியம் இந்நூலுக்கு அவரது பெயரையே அளித்து அவரைச் சிறப்பிக்கிறது.

3. நூலின் அமைப்பும் திட்டமும்: இந்நூல் கி.மு. *1250-1225*-க்கு இடையிட்ட காலத்தில் கானான் நாடு கைப்பற்றப்பட்ட வரலாற்றையும், அப்பகுதி பன்னிரண்டு குலத்தவரிடையே பங்கீடு செய்யப்பட்டதையும் காட்டுகிறது. யோசுவாவின் தீரச்செயல்களின் அடிப்படையில் இந்நூலை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம்.

I. **கானானை வெல்லுதல்** *(1:1-12:24)*

1. முன்னுரை *(1:1-18)*.
2. எரிகோவுக்குச் சென்ற ஒற்றர்கள் *(2:1-24)*.
3. யோர்தானைக் கடத்தல் *(3:1-5:1)*.
4. கில்காலில் சமயச் சடங்குகள், எரிகோவின் வீழ்ச்சி *(5:2-6:27)*.
5. ஆயில் தோல்வியும் வெற்றியும் *(7:1-8:35)*.
6. கானான் வெற்றி நிறைவு பெறுதல் *(9:1-12:24)*.

II. **கைப்பற்றப்பட்ட நாட்டை இஸ்ராயேல் இனத்தவரிடையே பங்கிடுதல் *(13:1.21:45)***

1. பன்னிரு இனத்தவர்களுக்கு நாட்டைப் பகிர்ந்தளித்தல் *(13:1-19:51)*.
2. அடைக்கல நகர்களும், லேவியர் நகர்களும் *(20:1-21:40)*.
3. இறைவனின் பற்றுறுதி; இஸ்ராயேலில் அமைதி *(21:40-43)*.

III. **பிற்சேர்க்கை *(22:1-24:33)***

1) முதற் பிற்சேர்க்கை

அ) யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள பகுதியை உரிமையாக்கிக் கொண்ட இனத்தவர் திரும்புதல் *(22:1-9)*.

ஆ) யோர்தானுக்கு அருகில் பீடம் *(22:10-34)*.

2) இரண்டாம் பிற்சேர்க்கை

அ) யோசுவாவின் பிரியாவிடை அறவுரை *(23:1-26)*.

ஆ) செக்கேமில் திருக்கூட்டம்: உடன்படிக்கை புதுப்பித்தல் *(24:1-28)*.

இ) யோசுவா இறத்தல், அடக்கம் செய்யப்படுதல் *(24:29-33)*.

இம்மூன்று பகுதிகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள், இவை ஒருகாலத்தில் தனிப்பட்ட இலக்கிய அமைப்புகளாக இருந்திருக்க வேண்டும், பிற்காலப் பதிப்பாசிரியர் இவற்றைச் சேர்த்து ஒரே நூலாகத் தொகுத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன. மேற்கூறப்பட்டுள்ள நூலின் திட்ட அமைப்பை நன்கு புரிந்து கொள்ள இந்நூலின் இலக்கிய வரலாற்றையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வரலாறு பற்றிப் பின்னர்ப் பார்ப்போம்.

4. ஆசிரியர்: இந்நூலை யோசுவாதான் எழுதினார் என்று பழங்கால யூதப் பாரம்பரியங்களும், ஆதிக் கிறிஸ்தவப் பாரம்பரியங்களும் கூறி வந்தன. ஆனால் இப்

போது இக்கருத்து எல்லோராலும் கை விடப்பட்டு விட்டது எனலாம். ஆண்டவருடைய சட்டங்களை, யோசுவாதான் சட்ட நூலில் எழுதி வைத்தார் என்று யோசு 24:26-இல் கூறப்பட்டுள்ளது. ஆனால், தன் பெயர் கொண்ட இந்நூலை அவர்தான் எழுதினார் என்று கூறப்படவில்லை. 4:23-25-இல் ''யோர்தானின் நீரையும், நீங்கள் அதைக் கடக்கும்வரை உங்களுக்கு முன்பாக வற்றச் செய்தார்'' என்று ஆசிரியர் கூறுகிறார். 5:6-இல் வரும் ''நாம் உங்களுக்கு......'' என்பது ஆசிரியரும் அங்கு இருந்ததாகக் காட்டலாம். ஆனால், தங்கள் மூதாதையரின் பொது ஆட்தன்மையோடு தங்களையும் சேர்த்துக் கொள்ளும் போக்கு இஸ்ராயேலரிடையே உண்டு. ஆகவே, இக்கூற்றுகள் யோசுவாதான் இந்நூலை எழுதினார் என்று ஏற்றுக்கொள்ள இடம் தரவில்லை. இறுதிப் பகுதி யோசுவாவின் மரணத்தைக் கூறுகிறது. இதை யோசுவா எழுதியிருக்க முடியாது. நாடு கைப்பற்றப் பட்டு வெகுகாலத்திற்குப் பிறகு வந்த நடை முறைகளைச் சில தொடர்கள் எடுத்துக்காட்டுகின்றன (4:9. 5:9; 7:26; 9:27; 15:63; 19:47). சூரியன், சந்திரன் பற்றிய முன்னிலைப்பாட்டு (10:12 தொ) ''யாசாரின்'' நூலிலிருந்து எடுக்கப்பட்டது எனக் கருதப்படுகிறது. இந்நூல் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும். ஏனெனில், இந்நூல் சவுல், யோனத்தான் ஆகியோர் மேல் தாவீது பாடிய இரங்கற்பாவையும் கொண்டுள்ளது.

சில உண்மைகள், அல்லது சூழ்நிலைகள் ''இன்று வரை'' உள்ளன என்றும் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது (4:9; 5:6; 6:25....). இவை விவரிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடந்து வெகுகாலம் சென்றபின்தான், இந்நூலில் வரும் நிகழ்ச்சிகள் எழுத்து வடிவம் எடுத்திருக்கக்கூடும் என்று எண்ணத் தூண்டுகின்றன. இந்நூலில் காணப்படும் இலக்கியக்கூறுகள், இந்நூல் ஒருவரால் எழுதப்பட்டதன்று; மாறாக, பலரால் தொருக்கப்பட்டிருக்கலாம் என்று காட்டுகிறது. மீண்டும் கூறப்படுதலும், முரண்பாடுகளும் பல இடங்களில் காணப் படுகின்றன (3:17; 4:10தொ). 4:8. 20-இல் 12 கற்கள் ஆற்றிலிருந்து கொண்டு செல்லப் பட்டு, கில்காலில் நடப்படுகின்றன. ஆனால் 4:9-இல் ஆற்றின் நடுவிலேயே நடப்படுகின்றன. எரிகோவைக் கைப் பற்றிய நிகழ்ச்சி உரை இரண்டு விவரிப்புக் களை ஒன்றாக்குவதாகத் தெரிகிறது. ஒரு விவரிப்பில் இஸ்ராயேலர் படை மௌன மாக நகரத்தை ஏழு தடவை சுற்றியபின் போர் அறைகூவல் கொடுத்துத் தாக்குகின்ற னர். ஒரே நாளில் போர் முடிந்து விடுகிறது. மற்றோர் விவரிப்பில் குருக்கள் எக்காளம் ஊதிக்கொண்டு ஊர்வலத்துக்குத் தலைமை தாங்குகின்றனர். ஏழு தரம் சுற்றிய பின் சுவர்கள் விழுகின்றன. இவ்விவரிப்பு ஏழு நாட்கள் எடுக்கின்றது. 8:13-இல் ஆயிக்கு மேற்கே பதுங்கியிருக்க 30,000 வீரர்களை யோசுவா அனுப்புகிறார். 10:26; 10:37 ஆகிய இவ்விரு கூற்றுகளும் எபிரோன் அரசனது மரணத்தை உரைக்கின்றன. 10:36-இல் யோசுவாவும், 16:14-இல் காலேபும் இந்நகரைக் கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது. இந்நூலை நாம் கொண்டிருக்கும் வடிவில், யோசுவாவின் வாழ்வுக் காலத்திலேயே பாலஸ்தீன நாடு முழுவதும் கைப்பற்றப்பட்டு விட்டது என்ற கருத்து ஏற்படுகிறது. ஆனால் கானானியர் இன்னும் ஆங்காங்கேயிருந்து இஸ்ராயேலரை எதிர்த்தனர். நாட்டைக் கைப்பற்ற நீண்டதோர் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது என்பதற்குச் சான்றுகள் நூல் முழுவதும் காணப்படுகின்றன. இந்நிலையே நீதிபதி ஆகமத்தில் காணப்படும் நிலைக்கு ஒத்ததாயுள்ளது. ஆகவே, இந்நூல் ஓர் ஆசிரியருடைய வேலைப்பாடன்று. யோசுவாவால் இந்நூல் முழுவதும் எழுதப் படவில்லை. அப்படியே, யோசுவா ஏதாவது சில பகுதிகளை எழுதியிருந்தாலும், அவர் எழுதிய பகுதியைப் பிரித்துக்காட்டுவது முடியாத செயலாகும். இந்நூலின் இலக்கிய வரலாறு நீடியதொன்றாகும். பலர் இதில் ஈடுபட்டுள்ளனர்.

5. நூலின் தோற்றம்: இந்நூல் பலவகைப் பட்ட இலக்கியப் பொருட்களைக் கொண்

டுள்ளது. இந்நூல் எழுத்துவடிவம் எடுத்த வரலாறு பழைய ஏற்பாட்டுக் காலம் முழுவதும் பரவி நிற்கிறது. ஆகையால், இயற்கையாகவே இந்நூலின் வரலாறு பற்றி பல கருதுகோள்கள் உண்டு.

அண்மைக் காலத்தில் யோசுவா ஆகமம் தோராவோடு சேர்ந்த ஆறாவது நூலாகும் என்ற கருத்து எழுந்துள்ளது. ஆகவே, இந்நூலின் பொருளை ஐந்நூலைப் போன்று யாவே, எலோகிம், குருக்கள், உபாகமம் என்ற நான்கு பாரம்பரியங்களாகப் பிரித்து ஆய்வு செய்யலாம். 'நார்த்', 'பிரைட்' போன்றவர்கள் இந்நூலைப் புதிய கோணத்தில் ஆய்வு செய்வர். இதன்படி யோசுவா ஆகமம் ஐந்நூலைச் சேர்ந்ததன்று. மாறாக, உபாகமப் முதல் அரசராகமங்கள் வரையுள்ள உபாகமப் பாரம்பரியத் தொகுப்பைச் சேர்ந்தது. இக்கருத்து அடிப்படையில் இந்நூல் பற்றிய பகுப்பாராய்ச்சி பொதுவாக இப்பொழுது நடைபெறுகிறது. இதன்படி இந்நூல் தோன்றிய வரலாற்றைக் கீழ்க் கண்டவாறு திருத்தி அமைக்கலாம்.

அதிகாரங்கள் 2-11 அடங்கிய பகுதி மிகப்பழைய இலக்கியத் தொகுப்பு ஆகும். இதிலே காரணகாரியங்களைக் கொடுக்கும் (ETIOLOGIES) தொடர்களைக் காணலாம் (2-9; 10:16-34); போர் வரலாற்றைக் காணலாம் (10:10-15; 11:1-14). பென்யமின் இனத்தின் பாரம்பரியங்கள் கில்காலில் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டும். இப் பாரம்பரியம் யோசுவா காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில், இராகாபு இஸ்ராயேலரிடையே வாழ்கிறாள் (6:25). இத்துடன் பாலஸ்தீனத்தின் மற்றப் பகுதிகளில் சிதறிக்கிடந்த பாரம்பரியங்களையும் சேர்த்துத் திட்டம் செய்து, எழுத்து வடிவம் கொடுத்து, ஒரே சீராக ஓடும் நிகழ்ச்சியுரையாக அமைக்கிறார் யூதாவைச் சேர்ந்த ஆசிரியர். இவரை நாம் ''தொகுப்பாசிரியர்'' என்றழைக்கலாம். இது கி.மு. 900 ஐ ஒட்டி நடந்திருக்கலாம். அடுத்து இவ்வரலாற்றில் உபாகமப் பாரம்பரியப் பதிப்பாசிரியர் புகுகின்றார். இவர் மேற்கூறப்பட்ட 'தொகுப்பைப் பதிப்பித்து, தனது பெரிய உபாகம வரலாற்றுத் தொகுப்பில் சேர்த்துக் கொள்கிறார். இவர் இந்நூலுக்கு முன்னுரையாக முதல் அதிகாரத்தைச் சேர்க்கிறார். மேலும், இவர் தொகுப்பாசிரியரது முடிவுரையோடு 11:21-22; 14:6-15 என்ற பகுதிகளையும் சேர்த்திருக்கக்கூடும். நாட்டைக் கைப்பற்றும் நிகழ்ச்சியில் காணப்படும் இடைவெளிகளை இப்புதிய முடிவுரை தெளிவுபடுத்துகிறது. இதில் உபாகம ஆசிரியர் அக்கறை காட்டுவதாகத் தெரிகிறது. ஏனெனில், கானானியர் நாட்டில் இருப்பது இஸ்ராயேல் இறைவன்பால் பற்றுறுதியாய் இருப்பதற்கு ஓர் ஆபத்தாய் இருக்கும். இதே அக்கறையை 13:2-6-இலும் காணலாம். இவ்வாசிரியர் காலேபின் உரிமையிலும் தனி அக்கறை காட்டுகிறார் (உப 1:36). இந்த ஆசிரியர்தான், வெல்லப்பட்ட அரசர்களின் பட்டியலையும் (யோக 12), யோர்தானுக்குக் கிழக்கில் குடியேறிய இனத்தவரை விடுவித்தலையும் (22:1-6), எஞ்சியிருக்கும் கானானியர் பற்றிய எச்சரிக்கையோடு கூடிய யோசுவாவின் பிரியாவிடை அறவுரையையும் சேர்த்திருக்க வேண்டும். இந்தப் பதிப்பின்படி இந்நூலில், அதி. 1-12; 13:2-6; 14:6-15; 22:1-6; 23 ஆகியவை அடங்கி இருக்க வேண்டும். இந்நூலுக்கு எழுத்து வடிவம் கொடுத்த ஆசிரியர்கள், இந்நூலில் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தை நெருங்கியவர்களாக இல்லாமல் போகலாம். ஆனால் அவர்கள் பயன்படுத்திய மூலங்கள், நிகழ்ச்சிகளின் காலத்தோடு நெருங்கிய தொடர்புடையன. அவற்றில் காணப்படும் உயிர்ச் சத்தியும் செழிப்பும் இதற்குச் சான்று காட்டுகின்றன.

''தொகுப்பாசிரியர்'' நாடு கைப்பற்றியது பற்றிய நிகழ்ச்சியுரை எழுதிய சிறிது காலத்திற்குப்பின், மற்றொரு ஆசிரியர் யூத இனத்தவர்களுடைய உடைமைகள் பற்றி ஓர் நூல் எழுதுகிறார். இது நிகழ்ச்சியுரை அன்று. இஃது ஒரு நிலநூல் அளவீடு ஆகும் - (Geographical Survey). இது மன்னராட்சிக்கு முன் அல்லது மன்னராட்சித் தொடக்

கத்தில் பாலஸ்தீனத்தில் நிலவிய எல்லைப் பட்டியலை முக்கியமாகக் கொடுக்கிறது. அஃதோடு, பிளவுபட்ட மன்னராட்சிக் காலத்தைச் சேர்ந்த யூதாவின் மாகாணப் பட்டியலையும் சேர்த்துத் தருகிறது. இதில் யோசுவா நாட்டைப் பகிர்ந்து அளிக்கவில்லை; இஸ்ராயேலர்களே செய்கின்றனர். யோசுவாவுக்கும் ஒரு பங்கு அளிக்கப்படுகிறது (19:49-50). இந்நூல் 13:15-21.24-28; 14:1-5; 14:13-15; 15:12; 15:20-63; 16; 17; 19-ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகும். உபாகம வரலாற்றுத் தொகுப்போடு சேர்த்துக் கொள்ளும் பொருட்டு, இந்நூலும் உபாகமப் பாரம்பரியப் பதிப்பைப் பெற்றது. இப்பகுதியின்றியே யோசுவா, நீதிபதிகள், சாமுவேல், அரசராகமங்கள் அடங்கிய உபாகமத் தொகுப்பு நூல் ஏற்கெனவே வெளிவந்திருக்க வேண்டும். இந்த உபாகம ஆசிரியர் இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்ட காலத்தில் கி.மு. 600-ஐ ஒட்டிச் செயல்பட்டிருக்க வேண்டும். இவர் உபாகமப் பாரம்பரிய அடிச்சுவடுகளை இந்நூலில் விட்டுச் சென்றுள்ளார். இவர் அளவீட்டு நூலை ஒரு நிகழ்ச்சியுரையாக மாற்றுகிறார். இதன்படி யோசுவா நாட்டைப் பகிர்ந்தளிக்கிறார். இவ்வாசிரியர் 14:6-15-ஐ அதன் முந்தைய சூழ்நிலைகளிலிருந்து (11:23 அடுத்து) அகற்றி, மற்றொரு காலேபு பாரம்பரியத்தால் (15:13-19) நிறைவு செய்கிறார். யூதா, யோசேப்பு ஆகிய இனத்தவர் தங்கள் உரிமைப் பகுதியை உடைமையாக்கிக் கொண்டது பற்றிய 17:14-18; 18:2-10 ஆகிய பகுதிகளை இவர்தான் சேர்த்திருக்க வேண்டும். இதன் விளைவாக இவ்விரு இனத்தவர், யோர்தானுக்கு மேற்குப்பகுதியில் குடியேறிய இனத்தவரில் முதல்வர்களாகக் கருதப்படுகின்றனர். யோர்தானுக்குக் கிழக்கில் குடியேறிய இனத்தவர், மேற்கூறப்பட்ட அளவீடு நூலுக்குப் புறம்பே நிற்கின்றனர். அவர்கள்மேல் கொண்ட தனிப்பட்ட அக்கறையால் ஆசிரியர் அவர்களுக்கு அதி. 13-இல் முதலிடம் அளிக்கிறார். இந்நூல் 23:1-ஐ முன்னோக்கி 13:1-இல் உபாகம வரலாற்றுக்குள் புகுத்தப்படுகிறது. இதன் விளைவாக நாட்டைப் பகிர்ந்தளித்தல் யோசுவாவின் இறுதி வார்த்தைகளாகத் தோன்றுகிறது. யோர்தானுக்குக் கிழக்கில் வாழும் இனத்தவர் போர்ச்சேவையிலிருந்து விடுவிக்கப்படுதல், பின் தள்ளிப் போடப்படுகிறது (22:1-6). ஆனால், சண்டைகள் முடிந்துவிட்டதால் இவர்கள் தங்கள் பகுதிக்கு ஏற்கெனவே சென்று விட்டனர். உபாகமப் பாரம்பரிய ஆசிரியர் மேற்கூறப்பட்ட இரு சிறு தொகுதிகளையும் சேர்த்து ஒரே நூலாக அமைக்கிறார். பயன்படும் சொற்களும், நடையும், மனப்போக்கும், உபாகமப் பணிச்சட்டத்தைச் சார்ந்ததாகும் என்பது தெளிவு (அதி. 1; 2:10தொ; 4:21-24; 8:30-35; 9:1தொ).

இந்நூலின் தோற்ற வரலாற்றில், உபாகமப் பதிப்பை அடுத்து வருவது குருக்கள் குழுவின் பணியாகும். இந்நூலின் இரண்டாம் பகுதியில் குருக்கள் பாரம்பரியம் எலயாசர் (14:1; 19:51; 21:1), சீலோ (18:1-10) ஆகியவற்றையும் 2:7-34 என்ற பகுதியையும் உட்புகுத்துகிறது; அதி. 21-ஐத் திருத்தி எழுதுகிறது. மற்ற இடங்களிலும் இக்குழுவின் சுவடுகள் காணப்படுகின்றன (4:15-19; 5:10-12; 9:15-21).

இறுதியாக உபாகம, குருக்கள் ஆகிய இரு பாரம்பரியங்களையும் சேர்ந்த ஓர் இறுதி ஆசிரியர் 8:30-35-ஐயும் 24-ஆம் அதிகாரத்தையும் சேர்த்து இந்நூலுக்கு இறுதிவடிவம் அளிக்கிறார். இது கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

6. இலக்கியக்கூறுகள்: யோசுவா ஆகமம் வரலாற்று நிகழ்ச்சியுரை வகையைச் சேர்ந்தது. ஆனால், எப்பொருளில் இந்நூல் வரலாற்று நூல் என்பதைக் கவனமாய் வரையறை செய்ய வேண்டும். இதற்கு இந்நூலில் காணப்படும் இலக்கியக் கூறுகளைச் சிறிது அறிந்திருத்தல் சாலவும் நன்று.

6. அ. (பொருள்கள் தோற்றக்) காரண இலக்கியக்கூறு (Etiological): முதல் அதிகாரம் முழு நூலுக்கும் முன்னுரையாக அமைகிறது. அதி. 2-9-இல் அடங்கிய இலக்கியக்

தில் பெரும்பகுதி தோற்றக்காரண காரிய இலக்கிய வடிவமாகும். இவ்வடிவம் ஓர் இடத்தையோ, ஆளையோ சிறப்பித்துக் காட்டும் நிகழ்ச்சியுரையாகும். இஃது ஓர் இடத்தில் என்ன நடந்தது என்றோ, ஒருவருக்கு என்ன நிகழ்ந்தது என்றோ மட்டும் வெறுமனே கூறும் அமைப்பன்று. ஓர் இடத்திற்கோ, ஆளுக்கோ எப்படி அந்தப் பெயர் வந்தது என்று அல்லது ஓர் இடத்தில் ஏன் சில பொருட்கள் காணப்படுகின்றன என்று காரணம் காட்டி விளக்கும் வகையில் நிகழ்ச்சியுரை அமைந்திருக்கும். இத்தகைய தோற்றக்காரண இலக்கிய அமைப்பின் இறுதிப்பொருள் ஆழமானதாகும். சான்றாக ஆதி. 2:7-இல் ஆதாம் மண்ணிலிருந்து படைக்கப்பட்டான் என்பது தோற்றக்காரணக் கதையாகும் (ஆதாம் - உழவுநிலம்). இக்கதை முதல் மனிதனுக்குப் பெயரைக் கொடுப்பதாகத் தோன்றலாம். ஆனால் இவ்விளக்கத்தைவிட, இக்கதை, நிலத்தில் உழைக்க வேண்டியவன் ஆதாம் என்ற இறைவன் அளித்த அலுவலைப் பற்றிக் கூறுவதாக அமைந்திருக்கிறது. தோற்றக்காரணக் கதைகளின் வரலாற்று மதிப்பீடு கதைக்குக் கதை மாறுபடும். இம்மதிப்பீடு, கதையைச் சொல்பவர், அவர் விவரிக்கும் நிகழ்ச்சிக்கு எவ்வளவு அருகில் உள்ளார் என்பதைப் பொருத்ததாகும். 'யோசுவா ஆகமத்தைப் பொருத்த மட்டும் எரிகோ, ஆய், கிபயோன் முதலியவை பற்றிய பாரம்பரியங்கள், கி.மு. 12-13 நூற்றாண்டுகளில் கானான், இஸ்ராயேலரால் கைப்பற்றப்பட்ட காலத்தை ஒட்டியே உருவெடுக்கத் தொடங்கின என்று கூற நல்ல காரணங்கள் உள்ளன. யோசு 4:3. 5-9. 20-25; 5:9; 6:25-26; 7:26; 8:28-29; 9:27-இல் வரும் நிகழ்ச்சியுரைகள் தோற்றக்காரணக் கதையின் பண்புகளைக் காட்டுகின்றன. 4:1-9-இல் வரும் கற்களின் கதை, ஏன், எப்படி அக்கற்கள் வந்தன என்று மட்டும் கூறவில்லை. இதைவிட இக்கதை பிற்கால இஸ்ராயேலருக்கு எடுத்துக் கூறிய உண்மையும், விடுத்த அழைப்பும் முக்கியமானதாகும். அவர்களின் மூதாதையரின் வரலாற்றில் ஓர் இக்கட்டான கட்டத்தில் யாவேயின் ஆற்றலால் யோசுவா யோர்தானைக் கடந்தார். இப்பெரும் நிகழ்ச்சியோடு இணைந்து அனுபவம் பெறுமாறு, குடியேறி நிலைபெற்றுவிட்ட பிற்கால இஸ்ராயேலரை அழைக்கின்றது யோர்தான் பள்ளத்தாக்கில் காணப்படும் பெரும் கற்கள் அடங்கிய நினைவுச்சின்னம். இப்படிப் பிற நிகழ்ச்சியுரைகளுக்கும் விளக்கம் கூறலாம். ஆனால், ஓர் எச்சரிக்கை! தோற்றக்காரணக் கூறுகள் இந்நூலில் இருப்பது உண்மை; ஆனால், அதை அதிகமாக அழுத்திக் கூறினால் நாம் தவறு செய்தவர்களாவோம்.

6. ஆ. வீரகாவிய அல்லது காப்பிய இலக்கிய வடிவம்: இப்பண்பு அதி. *10-11*-இல் காணப்படுகிறது. இந்நூலில் யாவும் யோசுவாவை மையமாகக் கொண்டு நிகழ்கின்றன. வீரகாவியப் பரிமாணங்களோடு யோசுவா காட்சி அளிக்கிறார். வெற்றி கொண்டு நாட்டைக் கைப்பற்றிய வரலாறு முழுவதும் அவருக்கே சாற்றிக் கூறப்படுகிறது. இஃது எவ்வளவு மிகைப்படுத்தப்படுகிறது என்றால் பிறர் செய்த எந்தக் காரியமும் ஒன்றுமில்லாது மறைந்து போகின்றன. வெற்றிகள் ஒன்றன் பின் ஒன்றாக, தடை ஏதுமின்றி, வெகு எளிதாக நடைபெறுகின்றன. இந்த வெற்றிப் பெருமிதமும், யோசுவாவின் மீது முழுக்கவனத்தைச் செலுத்தும் பண்பும் வீரகாவியத்துக்கே உரிய மிகைப்படுத்துதல், எளிதாக்குதல் போன்ற அணிகளின் விளைவாகும். அதி. *10*-இல் வரும் கிபயோன் சண்டையில் யோசுவாவின் கட்டளைக்கிணங்க, சூரியனும் சந்திரனும் நிற்கின்றன. அப்போது யோசுவா எதிரியின்மேல் முழு வெற்றி கொள்கிறார். இந்நிகழ்ச்சியுரை இந்நூலில் காணப்படும் பெருங்காப்பிய இலக்கியத் தன்மைக்கு மிகத்தெளிவான சான்றாகும். *10:12-13* இல் காணப்படும் காவியப்பண்பும். *10:14* இல் வரும் ''அந்நாளைப்போல் நெடிய நாள் இதற்கு முன் இருந்ததுமில்லை; இனி இருக்கப் போவதுமில்லை'' என்ற ஆர்வம் மிகுந்த முடிவுரையும், ஆசிரியர் தனது காவியத்தலைவனை

மிகைப்படுத்திக் கூறுகிறார் என்பதற்குச் சிறந்த சான்றாகும், இங்கு இக்கதையைக் காப்பிய இலக்கிய வடிவம் என்று எடுத்துக் கொண்டால், சூரியன் சந்திரன் பற்றிய அருஞ்செயல் ஒரு பிரச்சனையே இல்லை. இக்கதையைப் பற்றி பின்பு சிறிது பார்ப் போம்.

தென் கானானில் நடந்த போர்களை விவரிக்கும் 10:28-43 என்ற பகுதி, ஒரு வெற்றியிலிருந்து மறு வெற்றிக்கு யோசுவா வெற்றிநடை போடுவதாகக் காட்டுகிறது. இவை யாவும் யாவேயின் கட்டளையாலும் அவருடைய உதவியாலும் நிகழ்வதால் ஒரு தடையுமின்றி நிறைவேறுகின்றன. இது தான் இந்தக் காப்பிய இலக்கிய வடிவின் இறையியல் பொருளாக இருப்பதாகத் தோன்றுகிறது.

இந்நூலின் இரண்டாம் பகுதி நாட்டைக் கைப்பற்றும் வேலையை யோசுவா முழுவதும் முடிக்கவில்லை என்று காட்டுகிறது. இன்னும் வெல்லப் படாத புற இனத்தார் பகுதிகள் நாட்டின் இடையேயுள்ளன. முதற்பகுதியோடு ஒப் பிட்டு வேறுபடுவதால் இரண்டாம்பகுதி, முதற்பகுதியில் வரும் நிகழ்ச்சியுரைகளின் காப்பியத் தன்மையைச் சுட்டிக்காட்டுகின் றது. 11:23, ''ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டிருந்தபடியே யோசுவா நாடு அனைத்தையும் பிடித்து, அதை அந்தந்தக் குலமரபிற்கு அமைந்த பங்குகளின்படியே இஸ்ராயேலருக்குச் சொந்தமாகக் கொடுத் தார். போரின்றி நாடு அமைதியாய் இருந்தது'' என்று கூறுகிறது. ஆயினும் 13:1-இல் இறைவன் யோசுவாவிடம் ''நீ வயது முதிர்ந்த கிழவனாய் இருக்கின்றாய்; பங்கி டாமல் கிடக்கிற நாடோ மிகப் பரந்த நாடாகும்....'' என்று கூறும் இன்னும் வென்று கைப்பற்றப்பட வேண்டிய பெருப் பகுதியுள்ளது என்று நினைவுபடுத்தும் ஒரு குறிப்பு உள்ளது. இதுவும் முதற்பகுதியின் வீரகாவிய இலக்கிய வடிவைச் சுட்டிக்காட் டும். இந்த வீரகாப்பிய இலக்கியக் கூற்றின் குறிக்கோள் என்ன? யாவேக்கு மகிமை அளிப்பதாகும். இவ்விலக்கிய வடிவு சமய போதகத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

6. இ. நிலவியல் இலக்கிய வடிவு (Geographical Literary Form): 13-21-ஆம் அதிகாரங்கள் அடங்கிய இரண்டாம் பகுதி நிலவியல் செய்திகள் நிறைந்ததாயுள்ளது. இதில் காணப்படும் இடங்கள் பற்றிய நீண்ட பட்டியல் நவீன வாசகர்களுக்கும் அயர்ச்சியை அளிக்கலாம். ஆனால், இப் பெயர்கள் தொல்பொருள் ஆய்வாளர்களுக் கும் நிலப்படம் வரைவோருக்கும் ஒரு சவாலாக அமைந்துள்ளன; ஊக்கம் அளித்துத் தூண்டி வந்துள்ளன. இவை ஒரு தனிப்பட்ட நிலவியல் அமைப்பை எடுத்துக் கூறவோ, கானான் நாட்டைக் கைப்பற்றி பங்கிட்டளிக்கும் கதையை எடுத்துக்கூறுவதற்காக மட்டுமாகவோ, இவ்விவரிப்புக்கள் தரப்பட்டதாகத் தெரிய வில்லை. அவை இறையியல் செய்தியைப் பறைசாற்றுகின்றன. அடிக்கடி கூறப்படும் இந்நகர்களின் பெயர்கள், இறைவன் வாக் களித்த நாட்டைக் கைப்பற்றப் போராடிய இடுக்கண் மிக்க காலத்தில் யாவே அளித்த சலுகையையும் பாதுகாப்பையும், இஸ்ரா யேலர்களுக்கு நினைவூட்டி நிற்கின்றன. இச்சிறப்பு அலுவலில் இப்பெயர்கள் யோர் தான் பள்ளத்தாக்கில் உள்ள நினைவுச்சின் னமாகிய கற்களைப் போன்றவை. குடி யேறி நிலையாக வாழ்ந்த காலத்திலும், மன்னராட்சிக் காலத்திலும், நாடிழந்து நாடு கடத்தப்பட்ட காலத்திலும் விசுவாசமிக்க இஸ்ராயேலர், இந்நகர்களின் நீண்ட பட்டி யலைச் சிந்தித்து, எப்படி இந்நாடு யாவேக்கு உண்மையிலேயே அன்பான முறையில் இருந்தது என்று நினைவுகூரவும் இப்பட்டியல் உதவியது. ஒருவிதத்தில் இரண்டாம் பகுதி, மிகைப்படுத்தல் அணி நிறைந்த முதற்பகுதிக்கு மாற்று அளித்து உண்மைத் தன்மையை விளக்குகிறது. மற் றப்படி இப்பகுதியிலும் கானானை இஸ்ரா யேலர் உடைமையாக்கிக் கொண்டது பற்றிய வரலாறு மிகைப்படுத்தப்பட்டுள் ளது. சான்றாக 13:1 7 இல் குறிக்கப்படும் சில பகுதிகள் (வடபகுதிகள்) இஸ்ரா

யேலை ஒருபோதும் சேர்ந்ததல்ல. இவ் வாசகம் இதை வாசிக்கும் இஸ்ராயே லருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விவரிப்பை மட்டும் கொடுக்கவில்லை. அஃதோடு வருங்காலத்திற்கு நம்பிக்கையை யும் கொடுத்தது. இந்நகரங்களின் பெயர் களை அன்போடு உச்சரிக்கும் பொழுது, இந்நம்பிக்கை வளர்ந்தது. யாவே இந் நாட்டை அவர்களுக்கு அளித்தார் என்ற விசுவாசம் உறுதி பெற்று வளர்ந்தது. ஆகவே, அந்நாடு நல்ல நாடாக இருக்க வேண்டும், வளமிக்க நாடாக இருக்க வேண்டும், பரந்து அகன்ற நாடாக இருக்க வேண்டும்.

6. ஈ. உபாகம இலக்கிய வடிவு: இந் நூலுக்கு முடிவுரையாகவுள்ள அதி. 22-24 அடங்கிய பிற்சேர்க்கை உபாகம நடையில் எழுதப்பட்டது. அதி. 23-இல் வரும் யோசுவாவின் பிரியாவிடை அறவுரைக்கு ஒத்ததாகும். யோசுவா, தமது முதிர்ந்த வயதில் தம் மக்களின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கிறார். இம்மக்கள் யாவேக்குத் தொடர்ந்து பற்றுறுதியுடன் கீழ்ப்படிந்து வந்தால், அவர் அவர்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு அளிப்பார் என்று வாக்குறுதி அளிக்கிறார். அவர்கள் கீழ்ப்படி யாவிட்டால், கொடிய தண்டனை கிடைக் கும் என்றும் எச்சரிக்கிறார். இந்த அற வுரைப் பகுதியில் போதகத்தொனி சிறப் பாகக் காணப்படுகிறது. கடந்த காலத்தில் யாவே செய்தவற்றை நினைவு கூரவும், அவர் வருங்காலத்தில் என்ன செய்வார் என்பதை ''இன்று'' உணரவும் வேண்டு கோள் விடுப்பது உபாகம இலக்கிய வடிவின் பண்பாகும். இவ்வேண்டுகோள் வாசகர்களின் உள்ளத்தை நோக்கி விடப்படு கிறது; மீண்டும் மீண்டும் விடப்படுகிறது. அதி. 23-இல் உள்ளதையே அதி. 24 பெருமளவிற்குக் கொடுக்கிறது; அஃதோடு செக்கேமிற்குச் சிறப்பு அளிக்கிறது. யோசு வாவின் இரு பிரியாவிடை விளக்கங்களில் அதி.24-இல் வரும் வாசகம் காலத்தால் முந்தியதாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர். இதிலும் மீட்பு வரலாற்றைப் பின்னோக்குதல், யாவேயின் பற்றுறுதியான அன்பை நினைவுபடுத்துதல், அவருக்கு அஞ்சவும் கீழ்ப்படியவும் அறவுரை கூறு தல், கீழ்ப்படியாமைக்கு எதிராக எச்சரித்தல் ஆகியவற்றில் உபாகம நடை காணப்படு கிறது. இவ்வதிகாரம், 23-ஆம் அதிகாரத்தை விடத் தெளிவாக உடன்படிக்கை புதுப்பித்த லுக்கு இட்டுச்செல்கிறது. இவ்வதிகாரத்தின் நடை உப 29-30-இல் காணப்படும் நடைக்கு ஒத்ததாகும். கெரிசிம் மலைக்கும் கெபால் மலைக்கும் இடையிலுள்ள செக் கேம் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இதன் காரணமாக யோசு 8:30-35-ஐ உபாகம ஆசிரியர் யோசு 24:1-15-ஆக விவரித்து எழுதியிருக்கலாம் என்பர் அறிஞர்கள் சிலர்.

7. முக்கிய கருத்துக்கள்

அ. யோசுவாவின் முன் வரலாறு: இந் நூலின் காப்பியத் தலைவன் பழைய ஏற்பாட்டில் யோசுவா என்ற பெயர் கொண் டவர்களில் எல்லாம், நூனின் மகனான யோசுவா மிகப் புகழ்ச்சி பெற்ற சிறப்புடை யவர். யோசுவா என்ற பெயருக்கு ''யாவே மீட்கிறார்'' என்ற பொருள் உண்டு. இயேசு என்ற பெயர் யோசுவா என்ற பெயரின் திரிபே.

யோசுவா நூனின் மகனாவார் (1 நாள் 7:27); எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவர். ஆகவே, யோசேப்பின் இனத்தைச் சேர்ந்த வர். பிற்காலத்தில் திம்னத்செரா அவருடைய சொந்த ஊராய் விளங்கியது (யோசு 19:49-50). யாத் 17:9-10-இல் இவர் மோசேயின் பணியாளராகவும், தானைத் தலைவராகவும் விளங்குகிறார். மோசே காலத்திலேயே யோசுவா திறமையுள்ள, அச்சமற்ற, துணிவுடைய, தகுந்த வழி காணும் போர்த்திறமுடைய தலைவராகத் திகழ்கிறார். சீனாய் மலைக்கு இஸ்ராயேலர் வந்து சேருமுன்பு பாலைவனத்தில் நடந்த சிறுசிறு போர்களில் இஸ்ராயேல் படைக்குத் தலைமை தாங்குகிறார். அப் படிப்பட்ட போர்களில் ஒன்றுதான் இரபிதி மில் அமலேக்கியரோடு செய்த போர். யாவேயுடன் மோசே உறவாடிக்கொண்

டிருந்த போது யோசுவா மோசேயின் நெருங்கிய, நம்பிக்கைக்குரிய கூட்டாளியாகத் தோன்றுகிறார் (யாத் 24:13). மோசேயைப் போல், யாவேயின் ஆவியால் நிறைந்தவர் என யோசுவா கருதப்படுகிறார் (யாத் 33:11). மக்களிடையே இறைவாக்கு ஆவி தோன்றியது மோசேயின் இறைவாக்குப் பதவிக்கு ஆபத்தாகக்கூடும் என்று எண்ணியதால், அவ்வாவியைத் தடை செய்யும்படி மோசேயைக் கேட்கும்போது மோசேயிடம் தமக்குள்ள ஆர்வத்தைக் காட்டுகிறார் (எண் 11:27-29).

காலேபுடன் சேர்ந்து யோசுவா காதேசிலிருந்து பாலஸ்தீனம் மீது வேவு பார்க்கச் சென்று, திரும்பிவந்து, அந்நாட்டின் மீது படையெடுக்க வேண்டும் என்று சரியான ஆலோசனை கொடுத்தவர் (எண் 14:5-7). எண் 27:18-23-இல் மோசேயிடமிருந்து யோசுவாவுக்கு அதிகாரம் மாறுகிறது. யோசுவா அப்பதவிக்குத் தகுதியுடையவரே என்று இப்பகுதி விவரிக்கிறது. உப 1:37-38-இல் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் தாம் நுழையப்போவதில்லை என்று மோசே கூறுகிறார். அந்நாட்டை உடைமையாக்கிக் கொள்ள பாலையில் பிறந்த தலைமுறையை இட்டுச் செல்வது யோசுவாவின் சிறப்பான வேலையாகும். அவ்வேலையில் ஈடுபட யோசுவாவை உற்சாகப்படுத்துவது தமது கடமையாகக் கருதுகிறார் மோசே. எகிப்திலிருந்து வெளிவந்தவர்களில் காலேபும் யோசுவாவும் மட்டும்தான் வாக்களிக்கப்பட்ட நாட்டில் புகுந்தனர். ஏனெனில், இவர்கள் யாவேயிடம் பற்றுறுதியாய் இருந்தனர். உப 34:7-9-இல் மோசேயிடமிருந்து யோசுவாவுக்கு இஸ்ராயேலின் தலைவர் பதவி மாற்றப்படுதல் விவரிக்கப்படுகிறது. யோசுவா ஆகமத்தின் தொடக்கத்தில் இத்தகைய இறை ஆவி ஆட்கொண்ட ஞானம் நிறைந்த தலைவராகத்தான் யோசுவாவைக் காண்கிறோம். மோசேயிடம் நிலவிய யாவேயின் பிரசன்னம், யோசுவாவிடமும் நிலவித் தொடர்ந்து செயல் ஆற்றுகிறது. யாவேயின் விருப்பத்திற்கேற்ப இஸ்ராயேல் மக்கள் அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்கின்றனர்.

யோசுவா ஆகமத்தில், யோசுவா போரில் சிறிதும் அச்சமற்றவராகச் செயல்படுகிறார். இஃது அவருடைய சொந்த பலத்தினால் வந்ததன்று;அவரிடம் நிலவிய யாவேயின் பிரசன்னத்தின் விளைவாகும். கானானைக் கைப்பற்றும் போராட்டத்தில் இஸ்ராயேல் அடையும் வெற்றி யாவும் யாவேயின் ஆற்றல் மிக்க செயல்களின் விளைவே என்று யோசுவா ஆழ்ந்து உணர்ந்து செயல்படுவதின் விளைவாகும். இத்தகைய மனநிலையோடு யோர்தானைக் கடந்துசெல்ல யோசுவா ஆயத்தமாகிறார்.

7. ஆ. யோசுவாவின் விவேகமும் இராகாபுவும்: கானானைக் கைப்பற்றும் வரலாறு பலபடிகளைக் கொண்டது. அதன் முதற்படி யோர்தானைக் கடந்தவுடன் எரிகோவின் கோட்டையைக் கைப்பற்றுதலாகும். யோர்தானைக் கடக்குமுன் இஸ்ராயேலர் சித்திம் என்ற இடத்தில் படையை இறக்கினர். இது யோர்தான் சமவெளியின் கிழக்கு ஓரத்தில் அமைந்திருக்கும் இக்கால தெல் கெப்ரென் என்ற இடமாக இருக்கலாம். ஆற்றிலிருந்து ஆறு மைல் தூரத்தில் எரிகோவுக்கு ஒத்த உயரத்திலேயே இருந்தது (யோசு 3:1; எண் 33:49). இங்கிருந்து யோசுவா ஒற்றர்களை அனுப்பினார். ஏனெனில், யாவேயின் நிலையான வழிகாட்டுதலை நன்கு அறிந்திருந்தார் என்றாலும், பயன் படக்கூடிய மனிதக் கருவிகளைப் பயன்படுத்துவதை அவரது விசுவாசம் தடை செய்யவில்லை. இதே விவேகத்தை அவரது வாழ்வு முழுவதும் காணலாம்.

நகர்ப்புறச் சுவரிலிருந்த இராகாபுவின் வீடு ஒற்றர் குழுவுக்கு உதவியாய் இருந்தது. ஒற்றர் வேவு பார்த்து வந்து செய்தி கூறினர். இவ்வரலாற்றை நூலில் படித்தறியலாம், இராகாபு விலைமாதர் தொழிலைக் கொண்டிருந்தாலும் அவளுடைய விசுவாசத்திற்காகவும், இஸ்ராயேல் ஒற்றர்களுக்கு உதவி செய்ததற்காகவும் புதிய ஏற்பாட்டில் மதிப்போடு குறிக்கப்படுகிறாள் (எபி 11:31; யாக்

2:25). இயேசுவின் மரபுக்கொடியில்கூட அவளது பெயர் இடம் பெறுகிறது (மத் 1:15). ஒரே தடவை மீட்கப்பட்டபின், அவள் எப்போதும் யாவேயின் சமயத்தில் பற்றுறுதியாய் இருந்தாள் என்ற உறுதியே இதற்குக் காரணம் ஆகும்.

7. இ. புனிதப்போர் அல்லது அர்ப்பணப் போர்: ''உங்களைத் தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில், நாளை ஆண்டவர் உங்களிடையே வியத்தகு செயல்கள்புரிவார்'' (யோசு 3:5) என்று யோசுவா மக்களுக்குக் கட்டளையிடுகிறார். அவர்களின் போர் எழுச்சி உலகியல் சார்ந்த நிகழ்ச்சியன்று. அஃது ஒரு சமய நிகழ்ச்சியாகும். ஆகையால், அவர்கள் புணர்ச்சி உறவை ஒதுக்கி வைக்க வேண்டும்; முறையாக உடுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவர்கள் யாவேயின் அருஞ்செயல்களை அனுபவிக்கப் போகிறவர்கள் (யாத் 19:10. 14; எண் 11:18). இப்போர் புனிதமானது. இதன் முக்கிய பண்பு சாபமாகும். இச்சாபத்தின்படி வெல்லப்பட்ட நகரும் அதிலுள்ள மனிதர், விலங்குகள், சொத்துக்கள் யாவும் யாவேக்கு அர்ப்பணிக்கப்பட்டவை. ஆகவே, முழுவதும் அழிக்கப்பட வேண்டும். ''சாபம்'', ''அர்ப்பணம்'' ஆகிய இரண்டு சொற்களும் ஒரே பொருளைக் குறித்தன.

இக்கருத்து இஸ்ராயேலர்களுக்கு மட்டும் உரியதன்று. மோவாபு இனத்தவரிடையிலும், அராபியர், செர்மேன் இனத்தவரிடையேயும் இம்மரபு உண்டு. அர்ப்பணிக்கப்பட்டதென்றால் எதிரியை ஒருவரும் தனது உடைமையாக உரிமை கொண்டாட முடியாது; முழுவதும் துறந்து கைவிட வேண்டும். கொள்ளைப் பொருட்களைச் சேர்க்க மட்டுமே போர் செய்வதைத் தடுப்பதற்காகவே இச்சாபம் கொடுமையாக அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இச்சாபத்தின் விதிகளை மீறினால், வென்றவனே இச்சாபத்திற்குப் பலியாவான். சில சமயங்களில் யாவேயின் மக்களான இஸ்ராயேலரின் மேலேயே இச்சாபம் விழுந்தது (நீதி 28:48; 21:10 தொ). இந்தச் ''சாபப்போர் அல்லது அர்ப்பணப்போர்'' என்ற கருத்து யாவேக்கு நிபந்தனையற்ற கீழ்ப்படிதலாக மாறியது. இஸ்ராயேல் இறைவனது தீர்ப்பின் கரமாய்த் திகழ்ந்தது. கானானியர் தீர்ப்பிற்கு உரியவர்களாய் இருந்தாலும், அமலேக்கியர்கள் இரக்கமற்ற கொள்ளைக்காரர்களாய் இருந்தாலும், இஸ்ராயேலர் யாவேயிடம் பற்றுறுதியாய் இருப்பதற்குத் தடையாக இருக்கக் கூடுமாதலால், அவர்கள் முழுவதும் அழிக்கப்பட வேண்டும். இச்சாபத்தால் யாவே தம் எதிரிகள் மேல் பழிவாங்குகிறார். சபித்தலும் தண்டித்தலும் ஒரே செயலாகிறது.

இக்கொடிய சாபம் ஒரு நிலையான நிறுவனம் அன்று, இது காலப்போக்கில் மாற்றியமைக்கப்பட்டது. சாபத்திலிருந்து விலங்குகளும், கொள்ளைப் பொருள்களும், பெண்களும், சிறுவர்களும் விலக்கப்பட்டனர். பொதுவாக இஸ்ராயேலரின் போர்களில் இரக்கம் இருந்தது. அவர்களின் அரசர்கள் இரக்கமிக்கவர்களாயிருந்தனர் (1 அர 20:31). கொலைக்குக் கொலை செய்தல் இஸ்ராயேலரிடையே அரிதாகிய செயலாகும். கைப்பற்றிய பெண்களைக் கற்பழித்ததாக இஸ்ராயேல் வீரர்களைப் பற்றிக் குற்றம் கூறப்படவில்லை. அவர்களின் போர்ச்சட்டப்படி பழமரங்களுக்குத் தனிப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது (உப 20:19). பிற்கால அரசர்கள் காலத்தில் இந்தச் சாபப்போர்முறை முழுவதும் மறைந்து விட்டது.

7. ஈ. யோர்தானைக் கடத்தல்: யாவே அடையாளம் கொடுக்க இஸ்ராயேல் படை சித்திமிலிருந்து புறப்பட்டது. இயற்கை நிகழ்ச்சியோ, அருஞ்செயலோ ஏதோ ஒரு சக்தி செங்கடலில் உதவியது போல், இஸ்ராயேலர் யோர்தானைக் கடக்க உதவியது. இக்கடத்தல் அறுவடைக் காலத்தில் நிகழ்ந்தது. பாலஸ்தீனத்தில் அறுவடைக் காலம் ஏப்ரல், மே மாதங்களில் வந்தது. அப்போது மழை குறைவு. நாடு பொதுவாக வறட்சியாக இருக்கும். ஆனால் யோர்தானின் நீர்மட்டம் எர்மோன் மலையில் பனி உருகுவதைப் பொருத்தது.

இக்காலத்தில் அடிக்கடி யோர்தானில் வெள்ளம் பெருகுவதுண்டு. யோர்தானைக் கடத்தலுக்கு இக்காலம் சாதகமானதன்று. இறைவனது வல்லமைமிக்க உதவியால் இஸ்ராயேல் யோர்தானைக் கடக்கின்றனர். இந்நிகழ்ச்சியை யோசுவா நூல் ''அது அறுவடைக்காலம்'' ஆகவே, தண்ணீர் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அவர்களின் உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்கிச் சென்ற குருக்களின் கால்கள் தண்ணீரில் நனையத் தொடங்கிய உடனே மேலிருந்து ஓடிவந்த தண்ணீர் ஒன்றாகக்கூடி ஆதாம் நகர் முதல் சாரத்தான் என்ற இடம் வரை மலைபோல் குவிந்து நிற்பதாகக் காணப் பட்டது. கீழேயுள்ள தண்ணீர் முழுவதும் சாக்கடல் என இப்போது அழைக்கப்படும் பாலைவனக் கடலுக்குள் வடிந்தோடிப் போயிற்று. அதற்குள் மக்கள் நதியைக் கடந்து எரிகோவுக்கு நேரே செல்லத் தொடங்கினர் (யோசு 3:15-16).

ஆதாம் நகர் இப்போது தெல் எத்-தமியே என்றழைக்கப்படுகிறது. இஃது இஸ்ராயேல் நதியைக் கடந்த இடத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ளது. சாரத்தான் (1அர 4:12; 7:46) இப்போது எங்குள்ளது என்பது பற்றி ஒன்றும் தெரியாது. கி.பி. 1267-இல் திசம்பர் மாதத்தில் இப்பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாக யோர்தானின் நீரோட்டம் அரை நாளுக்குத் தடைப்பட்டது. கி.பி. 1927-இலும் இத்தகைய நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. இஸ்ராயேலர் யோர்தானைக் கடந்த போது இப்படிப்பட்ட ஓர் இயற்கை நிகழ்ச்சி நடந்திருக்கலாம் என்பர் சிலர். இவ்விளக்கம் எவ்வளவு உண்மையானது என்பது கேள்விக்குரியது. ஆனால் இயற்கை நிகழ்ச்சிகளை இறைவன் எவ்விதம் தம் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்துகிறார் என்பது பற்றி நாம் யாத்திரை ஆகம முன்னுரையில் கொடுத்திருக்கும் குறிப்பு இங்கேயும் பொருந்தும்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், யோர்தானைக் கடத்தல் மீட்பின் அடையாளமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது (யோவா 10:40-42). தம் நண்பன் இலாசரை உயிர்ப்பிக்கச் செல்லுமுன், யோசுவாவைப் போன்று மூன்று நாட்கள் தாமதித்தபின் இயேசு யோர்தானைக் கடக்கிறார். இயேசு கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குச் செல்லும் தமது இறுதிப் பயணத்தில் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள பகுதிகளில் மெதுவாகச் சுற்றி வந்து, எரிகோவுக்கு அருகில் தான் யோர்தானைக் கடந்து பரிசுத்த நகர் எருசலேமுக்குச் செல்கிறார். அங்குதான் அவரது இறப்பிலும், உயிர்ப்பிலும் பாஸ்கு விழா நிறைவெய்தும், செங்கடலைக் கடத்தல் போன்று, யோர்தானைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் புகுவதும், கிறிஸ்துவச் சமயத்துக்குள் சேர்க்கும் சடங்கிற்கு ஆழ்ந்த அடையாளப் பொருளுடையது என்று தொடக்க காலத் திருச்சபைத் தந்தையர் அழுத்திக் கூறியுள்ளனர். நமது பாஸ்குத் திருவிழிப்பு வழிபாட்டில் யோர்தானை இஸ்ராயேலர் கடந்தது நினைவு கூரப்படுகிறது.

யோர்தானைக் கடந்தபின், இப்பெரும் நிகழ்ச்சியின் நினைவாக பன்னிரண்டு கற்கள் கொண்ட ஒரு நினைவுச் சின்னத்தை யோசுவா எழுப்பினார். ஒரு பாரம்பரியப்படி இச்சின்னம் யோர்தான் நதியிலே எழுப்பப்பட்டது (யோசு 3:12; 4:4-7). மற்றொரு பாரம்பரியப்படி கில்காலில் எழுப்பப்பட்டது (4:2தொ). இதன் காரணமாக கில்காலிற்குக் ''கற்கள் வட்டம்'' என்று பொருள் கொடுப்பர். இவ்விடம் எரிகோவுக்கு வடக்கில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. அங்கு, பாஸ்கு விழா கொண்டாடப்பட்டது (5:10-12). இதுவரை விருத்தசேதனம் செய்யப்படாதவர்களுக்கு அச்சடங்கு செய்யப்பட்டது. அதன் விளைவாக ''எகிப்தின் பழி'' நீக்கப்பட்டது (5:9). இதன் காரணமாக கில்காலிற்கு ''நீக்கப்படுதல்'' என்ற பொருளும் உண்டு.

யோர்தானைக் கடந்து இஸ்ராயேலின் படை கில்காலில் கூடாரம் அடித்தது, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் வரலாற்றில் ஒரு சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும். இதனோடு யாத்திரையின் முதல் குறிக்கோள்

நிறைவு பெறுகிறது. இனிமேல் இஸ்ராயேலர் பாலையில் அலைந்து திரியார்: ''பாலும் தேனும் பொழியும்'' (5:6) நாட்டில் அனுமதிக்கப்பட்டனர். மூதாதையர்களுக்கு இறைவன் அளித்த வாக்குறுதி நிறைவேறுகிறது. யாவே தம் அடியார்களிடம் தம் பற்றுறுதியைக் காட்டி விட்டார். வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைவது ''உருவிய வாளைக் கையில் ஏந்தியவராய்'' ஆண்டவருடைய படைத்தலைவரான யாவேயின் தூதர் யோசுவாவுக்குக் காட்சியளிப்பதோடு தொடங்குகிறது (5:13-15). உருவிய வாள் அச்சம் உண்டாக்கும் அடையாளமன்று, ஆற்றல் மிக்க வீரத்தை ஊக்குவிப்பதற்கு அடையாளமாகவுள்ளது. இனி நடக்கப்போவது வெறும் உலகைச் சார்ந்த வரலாறு அன்று. உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளை நிர்ணயிப்பதில் இறையாற்றலும் செயல்படுகிறது. இந்த உறுதியோடு எரிகோவின் கோட்டையைத் தாக்க முற்படுகிறார் யோசுவா. இப்போர் புனிதமானதாகும்; தியாகப்போராகும்.

7. உ. எரிகோ: உடன்படிக்கைப் பெட்டகத்தைத் தாங்கி யூபிலி காலத்துக்குரிய ஏழு எக்காளங்களை ஊதிக்கொண்டு குருக்கள் நகரைச் சுற்றி வந்தனர். நகர் சரண் அடையாததால் ஏழாம் நாள் அதற்கு அழிவு வந்தது. நகர மதில்கள் கடகடவென்று இடிந்து விழுந்தன. இஸ்ராயேலர் உட்புகுந்து கொடிய ''சாபத்தை'' நிறைவேற்றினர். விலைமாது இராகாபுவின் குடும்பம் காப்பாற்றப்படுகிறது.

எரிகோ என்ற சொல்லுக்குச் ''சந்திரக் கடவுளின் புனிதத்தலம்'' என்று பொருள் உண்டு. இந்நகர் ''பனை மாநகரம்'' என்றும் அழைக்கப்பட்டது (உப 34:3; நீதி 1:16). இவ்வூர் சாக்கடலுக்கு வடக்கில் 9 கி.மீ. தூரத்திலும், யோர்தான் நதிக்கு மேற்கில் 8 கி.மீ. தூரத்திலும் உள்ளது. இஃது உலகிலுள்ள நகரங்களில் உயரத்தில் மிகத்தாழ்ந்த நகரமாகும். கடல் மட்டத்திற்கு 825 அடிக்குக் கீழேயுள்ளது. எரிகோ நகர் ஒரு மண் குன்றின் மேல் இருந்தது. இந்நூலில் எரிகோ சிறப்புப் பெறுகிறது.

எரிகோ பலதடவை அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்ட நகரமாகும். யோர்தான் பள்ளத்தாக்கின் தென்பாகத்திலுள்ள மலைப்பகுதியிலிருந்து படையெடுத்து வருபவர்கள் பாதையில் இந்நகர் இருந்தது; போர்களில் முக்கியத்துவம் வாய்ந்தது. மேற்குச் சமவெளியின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. அதன் மேற்கில் பள்ளத்தாக்குகள் கொண்ட மலைப்பகுதிகள் உள்ளன. அம்மலைப் பகுதிகளுக்குச் செல்லும் வழியை இந்நகர் கட்டுப்படுத்தியது.

இந்நகர் இருந்ததாகக் கூறப்படும் பல இடங்களையும் தொல்பொருள் ஆய்வாளர்கள் தோண்டி ஆய்வு செய்துள்ளனர். இதிலிருந்து பல செய்திகளை அறிகிறோம். ஆனால் வெண்கலக் காலத்தின் பிற்பகுதியை ஒட்டிய (கி.மு. 1500-1200) தடயங்கள் ஒன்றுமே கிடைக்கவில்லை. யோசுவா இக்காலத்தைச் சேர்ந்தவர். ஆகவே, யோசுவா காலத்து எரிகோவைப் பற்றி தொல்பொருள் ஆய்வு ஒன்றும் கூறமுடியாது. ஆனால், பெத்தேல் இலாக்கீசு, தெபீர், ஆட்சோர் போன்ற நகரங்கள் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் அழிக்கப்பட்டன என்பதற்குத் தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள் உள்ளன. இஃது, இஸ்ராயேலர் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றியது இக்காலத்தில்தான் என்ற கருதுகோளுக்கு ஒத்ததாயுள்ளது. எரிகோ நின்ற மண்மேட்டின் மேற்பகுதி, மண்ணரிப்பாலும், மனிதர் அழிப்பாலும் முழுவதும் மறைந்து போயிற்று. இருப்பதெல்லாம் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த எரிகோவின் தடயங்களே.

இஸ்ராயேலர் எரிகோவை எப்படிக் கைப்பற்றினர்? முழுவதும் இறைவனது அருஞ்செயலால் நடந்ததா? அல்லது இங்கும் இயற்கை சார்ந்த விளக்கம் அளிக்க முடியுமா? எரிகோ யோர்தான் பள்ளத்தாக்கில் உள்ளது. இப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்படுவது உண்டு. இப்படிப்பட்ட நிலநடுக்கங்கள் கி.பி. 1267-இலும், 1927-இலும் இப்பகுதியில் நிகழ்ந்திருக்கின்றன. தொல்

பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ள பழைய எரிகோவின் கவர்கள், நிலநடுக்கத்திற்குப் பின் தோன்றும் கவர்களைப் போன்றுள்ளன.

இவற்றைக் கருத்திற்கொண்டு இந்நிகழ்ச்சியைப் பின் வருமாறு நாம் கற்பனை செய்யலாம். இஸ்ராயேலர் மோவாபு நாட்டின் வழியாக வந்து, சிறு ஓடைகள் யோர்தானோடு சேரும் பகுதியில் நதிக்குக் கிழக்கில் கூடாரம் அடித்து நதியைக் கடக்கப் பேராவலோடு தங்கியிருக்கின்றனர். அப்போது இறைவனது உதவி அவர்களுக்குக் கிடைக்கிறது. திடீரென்று யோர்தான் தண்ணீர் ஓட்டம் நிற்கிறது. பாளையத்தை வேகமாகக் கலைத்து, இஸ்ராயேலர் நதியைக் கடக்கின்றனர். திகைத்து நிற்கும் எரிகோ கோட்டையைத் திடீரென்று எதிர்த்து நிற்கின்றனர். அதை யாவேயின் உதவியால் கைப்பற்றுகின்றனர். இந்நிகழ்ச்சி, காப்பிய முறையில் மிகைப்படுத்தி இந்நூலில் கூறப்படுகிறது.

7. ஊ. மலைப்பகுதியின்மேல் படையெடுப்பு: எரிகோவிலிருந்து எருசேலம் வழியாகப் பாலஸ்தீன மலைப்பகுதிகளுக்கு இட்டுச் செல்லும் பாதை மிகச் செம்மையானதன்று. யோசுவா தேர்ந்தெடுத்த வழியே மிக எளிதானது. இது, ஆய், பெத்தேல் ஆகிய நகரங்கள் வழியாக ஒரு பள்ளத்தாக்குப் பாதையில் யோர்தான் சமவெளிக்கு இட்டுச் சென்றது.

எரிகோவை வென்ற உற்சாகத்தில், ஆயியைத் திடீரென்று தாக்கிக் கைப்பற்றுமாறு ஒரு சிறு படையை யோசுவா அனுப்பினார். ஆனால் இம்முயற்சி தோல்வியில் முடிந்தது. இதில் படைகளை இழந்ததைவிட இஸ்ராயேலர் மனவுறுதி இழந்ததுதான் பேரிழப்பாகும். யோசுவாவின் வீரர்கள் தன்னம்பிக்கை இழந்தனர். முதலில் பயந்து நடுங்கிய (யோசு 2:9-11; 6:27) எதிரிகள் தெம்பு அடைந்தனர்; புது ஊக்கம் பெற்றனர் (7:9). யோசுவா தம் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு தலையின் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு, முகம் குப்புற விழுந்து யாவேயிடம் புலம்பினார். இஸ்ராயேல் இருப்பதும், யாவேயின் அதிகாரமும் துலாக்கோலில் தொங்கின. இப்படிப்பட்ட அழிவை யாவே எப்படி அனுமதிக்க முடியும்? இப்பேரழிவிற்குரிய முதன்மையான காரணம் இஸ்ராயேலின் பாவமே (7:10). சாபப்போரில் விழுந்த எரிகோவின் சில பொருட்களை ஆக்கான் வைத்திருந்தான். இந்தத் தனிப்பட்ட ஒருவனது குற்றம் முழுச் சமூகத்தின் மேலும் சாபத்தைக் கொண்டு வந்தது. அவனும், அவன் குடும்பமும் தீர்ப்புக்குள்ளாகி அழிகின்றனர் (7:10-26). யாவேயின் சித்தம் எதிர்க்கப்படுகிறது என்று தோன்றியபோதெல்லாம் யோசுவா தீவிர நடவடிக்கை எடுக்கிறார். இதில் விட்டுக் கொடுக்கும் தன்மையை அவரிடம் காணமுடியாது.

இதற்குப்பின் ஆயியைத் தாக்க யோசுவா முற்படுகிறார். இதில் தனது போர்த்திறமையையும் காட்டுகிறார். இப்படிச் செய்யும்போதும் யாவேயின் ஆலோசனைக்கேற்ப நடந்து கொள்கிறார். பதுங்கித் தாக்கும் முறையைப் பயன்படுத்துகிறார். தாக்கும் இஸ்ராயேலர் படை பின்வாங்குவது போல் தோன்றச் செய்கிறார். இதன் விளைவாக, கோட்டையைப் பாதுகாத்து நிற்கும் படை வெளியே வரத்தூண்டுகிறார். இப்படைகள் நகரிலிருந்து போதிய தூரம் வெளியே சென்றபின் மறைவிடங்களில் இருந்து இஸ்ராயேல் படை தாக்கி, எதிரிகளை வென்று எரியூட்டிச் சாபத்தைச் செயல்படுத்தினர் (யோசு 8).

இவ்வாறு மத்திய பாலஸ்தீனத்தின் மலைப்பகுதியின் உயர்ந்த இடங்கள் இஸ்ராயேலர் வசமாயின. இந்நிலை, இங்கிருந்து மற்றப் பகுதிகளுக்குப் படையெடுக்க உயிர் நாடியானதாகும். தொல்பொருள் ஆய்வுப்படி, யோசுவா காலத்தில் இம்மலைப்பகுதிகளில் ஒரு சிறு பகுதியினரே வாழ்ந்து வந்தனர். பெரும்பாலான கானானியர்கள் மலைச்சரிவிலும் அடிவாரத்திலும் வாழ்ந்து வந்தனர். ஆகவே, இம்

மலைப் பகுதியைக் கைப்பற்றுவதற்குக் கடினமான தடையெதுவும் இல்லை. ஆகையால் இப்பகுதியைக் கைப்பற்றிய வரலாற்றை இந்நூல் சிறப்பித்துக் கூறவில்லை. கெபால் மலையில் உள்ள செக்கேம் வரை இஸ்ராயேலர் படை தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது. செக்கேமில் யோசுவா உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார். சட்டத்தை அனுசரிக்க வேண்டிய மக்களின் கடமையையும் பற்றுறுதியையும் புதுப்பிக்கிறார் (8:30-35).

'ஆய்' என்ற சொல்லுக்கு ''அழிவின் குன்று'' என்று பொருள் உண்டு. இந்நகர் பெத்தேலிலிருந்து 2 கி.மீ. கிழக்கே உள்ளது. தொல்பொருள் ஆய்வில் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முந்திய காலத்துத் தடயங்கள் காணப்படுகின்றன. ஆனால் யோசுவா காலத்துத் தடயங்கள் எதுவும் காணப்படவில்லை. ஆனால் பெத்தேலில் காணப்படும் தடயங்கள் இந்நகர் நீதிபதிகள் காலத்தில் அழிக்கப்பட்டதற்குச் சான்று கூறுகின்றன. பல இடங்களில், ஆய், பெத்தேல் என்ற பெயர்கள் ஒரே மூச்சில் விவிலிய ஆசிரியர்களால் கூறப்படுகின்றன (எஸ் 2:28; யோசு 9:3; ஆதி 12:8; 13:3). நீதிபதிகளின் ஆகமத்தில் வரும் பெத்தேலின் அழிவைத்தான் ஆயிக்கு நடந்ததாகக் கூறி, பெயர்க் காரணக்கதையாக இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுவர். ஆனால், ஆயியில் காணப்படும் அழிவிற்கும் விவிலிய நிகழ்ச்சியுரைக்கும் உள்ள உண்மையான தொடர்பு என்ன என்பது பற்றிய பிரச்சனைக்குக் காலம்தான் பதில் கூறவேண்டும்.

7. எ. **தென்பகுதியைக் கைப்பற்றுதல்:** கானான் நாடு நகர அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நகரமும் தன்னுரிமையாக இயங்கியது. இடுக்கண் வரும்போது, தங்கள் பாதுகாப்புக்காகக் கூட்டணி அமைத்துப் போரிடுவர். எரிகோ, ஆய் ஆகிய இடங்களில் இஸ்ராயேலர்கள் கொண்ட வெற்றியைக் கண்ட கானானிய நகரங்கள், இஸ்ராயேலரின் முன்னேற்றத்தைத் தடுக்க, திட்டமிட்ட எதிர்ப்புக் கொடுத்தனர். ஆனால் சிறுசிறு குழுவினராக எதிர்த்தனர். நாடு முழுவதும் சேர்ந்து இஸ்ராயேலரை எதிர்க்காதது இஸ்ராயேலர்களுக்கு வாய்ப்பாயிற்று.

கிபயோன், எருசலேமிலிருந்து மேற்கில் 8 கி.மீ. தூரத்திலிருந்த நகரமாகும். இந்நகரத்து மக்கள், போர் செய்து எதிர்ப்பதற்குப் பதிலாக, இஸ்ராயேலரோடு ஒரு வகை ஒப்பந்தம் செய்து கொள்ள முன்வந்தனர். இவர்கள் தொலைதூரத்திலிருந்து வந்து இஸ்ராயேலரோடு உடன்படிக்கை செய்துகொள்ள விரும்புவதாகச் சூழ்ச்சி செய்தனர். யோசுவா அவர்களை ஏற்று எல்லோர் முன்னிலையிலும் அவர்களோடு உடன்படிக்கை செய்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தார். இந்த ஏமாற்றுதல் தெரிய வந்தபோது அவர்களைச் சபித்தார். ஆனால், உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பது தனது கடமை என்று உணர்ந்தார் (9:19; 10:6-7). ஆனால், அவர்களைப் புனிதத் தலத்தில் பணி செய்ய எக்காலத்துக்கும் அடிமைகளாகத் தண்டித்தார் (9:20.27). கிபயோனைப் போன்று கெபிரா, பெயரோத்து, கிரியாத்து-எயாரிம் போன்ற நகர்களும் இஸ்ராயேலருடன் ஒப்பந்தம் செய்து கொண்டன.

எருசலேமின் அரசன் அதோனி செதேக்கின் தலைமையின் கீழ், கானானின் தென்பகுதியைச் சேர்ந்த மற்ற எல்லாக் கானானிய அரசர்களும் ஒன்று சேர்ந்து யோசுவாவை எதிர்த்தனர். அவர்களின் முதல் குறிக்கோள் தங்களிடமிருந்து பிரிந்துபோன கிபயோனியர்களைப் பழிவாங்குவதாகும். கிபயோனியர் யோசுவாவின் உதவியைக் கோரினர். யோசுவா தனது விருப்பத்திற்கு மாறாக இப்போரில் பங்கெடுக்க வேண்டியிருந்தது. அதி. 10 இப்போரை விவரிக்கிறது. இப்போர் யோசுவாவின் போர்த் திறமைக்குச் சான்றாக விளங்குகிறது. கல்மழை இவ்வரசர்களை விரட்டி ஓட்டுவதற்கு யோசுவாவிற்கு உதவியது. கதிரவன் அப்படியே ஒரு நாள் முழுவதும் நின்று யோசுவாவின் வெற்றிக்கு உதவியதாகக் கூறப்படுகிறது. அய்யலோன் பள்ளத்தாக்

கில் இவ்வரசர்களை வென்று மெய்சிலிர்க்கிறார் யோசுவா. ஆயினும், இவ்வெற்றியை யாவேக்குச் சாற்றிக் கூறுகிறார்.

இதற்குப்பின் யோசுவா தெற்கே திரும்பி மக்கேதா, லிப்னா, இலாக்கிச, எக்லோன் ஆகிய நகரங்களை ஒன்றன்பின் ஒன்றாக வென்று, அந்நகரங்களில் சாபப் போரை நிறைவேற்றுகிறார். இலாக்கிச, எக்லோன் ஆகிய நகரங்கள் இருந்ததாகக் கருதப்பட்ட இடங்களில் செய்யப்பட்ட தொல்பொருள் ஆய்வுகள், இந்நகர்கள் கொடுமையாக அழிக்கப்பட்டன என்பதற்குச் சான்று காட்டுகின்றன.

இவ்விதம் தென்னாடு முழுவதிலும் யோசுவாவின் ஆதிக்கம் பரவிய பின், யூதா மலைப்பகுதியில் தனித்து நின்ற எபிரோன் கோட்டையைத் தாக்கி வென்றார். பின்பு எல்லையிலுள்ள தெபீரை வென்று அழிக்கிறார். இப்படியாக யோசுவா, மலை நாட்டையும், தென்னாட்டையும், சமவெளியையும் காதேசு பர்னேயா தொடங்கி காசா வரை, கிபயோன் முதல் கோசேன் வரையுள்ள பகுதியைத் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வருகிறார். அங்கிருந்த அனைவரையும் அழிக்கிறார். உயிருள்ள எல்லாவற்றையும் சுட்டெரித்துக் கொலைசெய்கிறார். எவரையும் விட்டுவைக்கவில்லை. ஆனால், தனது வெற்றி யாவற்றையும் யாவேக்கே சாற்றிக் கூறுகிறார். ''ஏனெனில் இஸ்ராயேலின் ஆண்டவராகிய கடவுள் அவர்கள் சார்பில் போர்புரிந்தார்'' *(10:42)*.

இப்பகுதிகளில் தோண்டி, செய்யப்பட்ட தொல்பொருள் ஆய்வுகள் கி.மு. 1200-ஐ ஒட்டி, இஸ்ராயேல் இப்பகுதியைக் கைப்பற்றிய வரலாற்றைப் பற்றி பற்பல உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. இப்பகுதியிலுள்ள நகர் மக்கள் பலவந்தமாக அழிக்கப்பட்டுள்ளனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. வென்றவர்கள், கைப்பற்றிய நாட்டில் உடனே குடியேறி நிலைத்துவிட்டதாகத் தெரிகிறது. இஸ்ராயேலர் இனி நாடோடியாகத் திரியும் இனத்தவர் அல்லர். அவர்கள் கற்களினால் வீடுகட்டி வாழ்ந்தனர்; நிலத்தை உழுது பயிர் செய்தனர்; அவ்விடங்களில் நிலையாகத் தங்கி வாழும் நிலையை எய்திவிட்டனர். கானானியர்களை விட, இஸ்ராயேலர் நெருங்கிக் கூடி வாழ்ந்தனர். வெண்கலக் காலத்தின் பிற்பகுதியில் இவ்விடங்களில் மக்கள் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் கி.மு. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து, இம்மலைப் பகுதி முழுவதும் இரும்புக்காலக் கிராமங்களின் தடயங்கள் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட சிற்றூர்கள் விரைவாக உருவெடுத்தன. இம்மக்களின் வீடுகள் எளியவை. காடுகளை வெட்டி பயிர் செய்யும் நிலமாக மாற்றினர். அணுக முடியாத இடங்களிலும் குடியேறினர் *(யோசு 17:15-17)*.

7.ஏ. கல்மழையும், நிலையாக நின்ற கதிரவனும்: இஸ்ராயேல் மக்களுக்குத் தப்பி ஓடிப்போகும் எமோரியரின் மீது ''ஆண்டவர் வானத்திலிருந்து பெரிய கற்கள் விழச் செய்தார். இஸ்ராயேல் மக்களின் வாளால் வெட்டுண்டு மடிந்தவர்களைவிட அக்கல் மழையால் அடிபட்டுச் செத்தவர்களே அதிகம்'' *(யோசு 10:11)*. இக்கூற்று, இஸ்ராயேலர்களுக்கு யாவே அளித்த சிறப்பான உதவியை வலியுறுத்திக் கூறுகிறது. இவ்வெற்றியை யாவேக்கே சாற்றி ஆசிரியர் கூறுகிறார்.

அடுத்துக் கதிரவன் நிலையாக நின்ற நிகழ்ச்சி வருகிறது. இந்நிகழ்ச்சி, கலிலேயாவின் வழக்கு விசாரணையில் பலர் அறியப் புகழ்பெற்றது. ஓடிப்போகும் எமோரியர்களை, இஸ்ராயேலர் கொன்று முடிக்க ஏதுவாகப் பகல் நீடிக்குமாறு, யாவேயை வேண்டி யோசுவா சூரியனுக்கும், சந்திரனுக்கும் கட்டளையிடுகிறார். இக்கட்டளை ''யாசார்'' என்ற மிகப்பழைய பாடல் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வருஞ்செயலை உரைநடையில் மீண்டும் எடுத்துக்கூறும் பதிப்பாசிரியர், யோசுவாவின் ஆணை நிறைவேறுகிறது என்றும், அந்நாளில் ''ஆண்டவர் ஒரு மனிதன் சொல்லுக்கு அடங்கி இஸ்ராயேலர்களுக்காகப் போர் புரிந்தார். அந்நாளைப்

போல் நெடியநாள் இதற்கு முன் இருந்ததும் இல்லை. இனி இருக்கப்போவதுமில்லை'' *(10:14)* என்றும் கூறுகிறார்.

இந்நிகழ்ச்சியைப் பற்றிய பாடலும் உரைநடை விவரிப்பும் வீரகாப்பியத் தன்மை கொண்டுள்ளன என்பது தெளிவு. கானான் நாட்டைக் கைப்பற்றுவதில் இஸ்ராயேலுக்கு யாவே அளித்த உதவியைச் சிறப்பித்துக் காட்டுவதே இவ்விளக்கத்தின் நோக்கமாகும். நிகழ்ச்சியை இது நடந்தபடியே எடுத்துக் கூறுவதைவிட, இவ்விளக்கம் ஓர் இறையியலாகும்; சமய விளக்கவுரையாகும். யாவே தங்களுக்குச் செய்த நன்மையையும், காட்டிய அன்பையும், அக்கறையையும், இஸ்ராயேல் பாடலாகவோ, உரைநடையிலோ நினைவு கூரும்போதெல்லாம், இப்பொருளே சிறந்து நிற்கும் *(யாத் 15:1 21;19:16-19; நீதி 5:2-31; சங் 134)*.

நவீன அறிவியல் இந்நிகழ்ச்சியை ஏற்க மறுக்கும். நவீன இறையியல் வல்லுநர் இறைவன் மனிதனுக்குக் கீழ்ப்படிவதை ஏற்க மறுப்பர். ஆனால், இஸ்ராயேல் ஆசிரியர் வேறுவிதமாக எண்ணுகிறார். இவ்வாசிரியர்களுடைய கடவுள், சமய இலக்கியச் சுதந்தரம் ஆகியவை பற்றிய கருத்துக்களை மனதிற்கொண்டு, அதற்கேற்ப இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கல்மழையும், கதிரவன் நிலையாய் நிற்றலும் ஒரே நிகழ்ச்சியைச் சிறப்பித்துக் கூறுகின்றன. இது யோசுவா எஷோரியர் கூட்டணியை வென்றதாகும். இவ்வெற்றியில் யாவேயின் ஆற்றல் செயல்படுகிறது. மீட்பளிக்கும் கடவுளது இடையீட்டைப் பொதுமக்கள் பாணியில் பாரம்பரியம் வலியுறுத்திக் கூறுகிறது எனலாம். இது காலப் போக்கில் வீரகாப்பிய, வழிபாட்டுப் பரிணாமங்களைப் பெற்று விவிலியத்தில் இடம் பெறுகிறது.

7. ஐ. வடபாலஸ்தீனத்தைக் கைப்பற்றல்: தென்பாலஸ்தீனத்தின் தென்பகுதியில் இஸ்ராயேல் பெற்ற வெற்றியைக் கேள்விப்பட்ட ஆட்சோரின் அரசன் யாபீன் அஞ்சினான். தெற்கில் அதோனி செதேக்கு செய்ததுபோல், இவனும் வட அரசர்களை ஒன்றுகூட்டி, திட்டம் செய்து இஸ்ராயேலை எதிர்க்க முற்பட்டான். எவ்வழியாக யோசுவா வடபகுதிக்குச் சென்றார் என்பது பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. இஸ்ராயேலருடன் போர்புரிய வட அரசர்கள் மோரோம் என்ற ஏரிக்கு அருகே ஒன்று கூடினர். இஸ்ராயேலர்களைவிட இவர்கள் உயர்தரப் போர்க் கருவிகளைக் கொண்டிருந்தனர். குதிரைகளையும் தேர்களையும் கொண்டிருந்தனர். யாவேயால் ஊக்கமூட்டப்பெற்று *(11:6)* யோசுவா தன் வீரர்களோடு திடீரென்று எதிரிகள் மேல் பாய்ந்து ஓர் உறுதியான வெற்றி பெறுகிறார். மேற்கு ஆசியாவில் அடிக்கடி நடந்திருப்பது போல் இந்த ஒரே ஒரு சண்டை ஒரு படையெடுப்பையே தீர்மானிக்கிறது. அரசர்களின் கூட்டணி சிதறி ஓடுகிறது. வடமேற்கில் பெரிய சீதோன் வரையும், மேற்கில் ஆக்கோ வரையும், கிழக்கிலும் ஓடினர். யோசுவா அவர்களை விரட்டிக் கொன்று அழித்தார். அவர்களின் நகர்களில் சாபப்போரை நிறைவேற்றினார். சிறப்பாக இவ்வரசுகளுக்குத் தலைமையாய்த் திகழ்ந்த ஆட்சோரை எரியூட்டி அழித்தார்.

இவ்வளவு வெற்றி பெற்றாலும், கானான் முழுவதும் இஸ்ராயேலின் உடைமையாக மாறவில்லை. இதற்குப் பல போர்கள் நடத்த வேண்டியிருந்தது. இப்போராட்டம் அரசர்கள் காலம்வரை நீடிக்கும். ஆனால் யோசுவா நிகழ்த்திய போர்கள், அவர் நாட்டைப் பங்கிட்டு ஒவ்வொரு இனத்தவருக்கும் உரிய பகுதியை அளிக்க வாய்ப்பு அளித்தன. இந்தப் பகிர்ந்தளித்தலில் யோசுவாவின் ஞானமும் நேர்மையும் சிறப்பித்துக் காட்டப்படுகின்றன.

7. ஒ. பிரியாவிடை அறவுரை: யோசுவா தன் அலுவல்கள் எல்லாம் முடிந்தபின், செக்கேமில் இஸ்ராயேலரின் மூப்பர்கள், குடும்பத் தலைவர்கள், நீதிபதிகள், இயக்குனர்கள் மக்கள் யாவரும் அடங்கிய திருக்

கூட்டத்தை யாவேயின் முன்னிலையில் கூட்டுகிறார் (யோசு 21:1தொ). அங்கே உடன்படிக்கையைப் புதுப்பித்து அறிக்கை இடுகிறார். இஸ்ராயேலின் வரலாற்றைப் பின்னோக்கி, யாவே அவர்களுக்குச் செய்த அரும் பெருஞ்செயல்களை நினைவு படுத்துகிறார். இஸ்ராயேல் இருப்பதுவே இறைவனின் வேலையாகும். யூப்பிரத்தீசு நதிக்கு அப்பால் அன்னிய தேவர்களை வழிபட்டு வந்த அவர்களை யாவே தேர்ந் தெடுத்தார் (24:2-3). யாவேதான் அவர் களை மீட்டு எகிப்திலிருந்து வந்து வாக் களிக்கப்பட்ட நாட்டிற்குள் இட்டுச்சென் றார். அவர்கள் ஒரு மக்களினமாய் நிலைத் திருக்க விரும்பினால், அஃது அவர்கள் யாவேக்குப் பற்றுறுதியாக இருப்பதைப் பொருத்ததாகும். யாவேக்குப் பற்றுறுதி யாக இருப்பது கடினமானதாகும். அவர் அவர்களிடம் கேட்பவை மிகச் சிறிய காரியங்கள் அல்ல. அவற்றை நிறை வேற்ற தியாகம் வேண்டும். அவற்றை நிறைவேற்றும் கடமையை எல்லார் முன் னிலையிலும் ஏற்றுக்கொண்டு விட்டு, அதற்குப் பற்றுறுதியில்லாமல் இருப்பதும், அதை நிறைவேற்றத் தவறுவதும் அவர் களது முந்தைய அஞ்ஞானத்தைவிட மோச மானதாகும். யாவேயின் நன்மைத்தன்மை யும் இரக்கமும் அவரது இயல்பான தூய் மையோடு இணைந்ததாகும். ஆகையால் அவர் எந்தப் பற்றுறுதியின்மையையும் அல்லது அநீதியையும் தண்டிக்காது விட முடியாது. யாவேக்கு எதிராகக் கலகம் செய்வது அவர்களது இனத்தை அழியச் செய்யும். அவர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை இழந்து விடுவர். யோசுவாவின் அறவுரையைக் கேட்ட யாவரும் ''அவரே நம் கடவுளாய் இருப்பதால் அவரையே வழிபடுவோம்'' என்று ஒரே குரலாய்ப் பதில் அளித்தனர் (24-16-18). இவ்வாறு செக்கேமில் யோசுவா உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார். அவர்களுக்குச் சட்டம் அளிக்கிறார். இப்பகுதியில் யாவே தாம் அளித்த வாக்குறுதியைச் செயல்படுத்து வதில், காட்டும் பற்றுறுதியை அனுபவித்த வராய் யாவேயிடம் மக்கள் பணிந்து பற்றுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதில் ஆர்வமுள்ளவராய் யோசுவா தோன்றுகிறார். அதே பொழுது அவர்க ளுடைய சுதந்தரத்திற்கு மதிப்பளிக்கும் தலைவராகவும் திகழ்கிறார்.

யோசுவா இந்நிகழ்ச்சிகளை இறைவ னுடைய சட்டநூலில் எழுதிவைத்தார். பிறகு ஒரு பெரிய கல்லை எடுத்து யாவேயின் புனித இடத்துக்கருகிலுள்ள ஒரு கருவாலி மரத்தின் கீழ் அதை நாட்டினார். பின்னர், எல்லா மக்களையும் பார்த்து ''இதோ இக்கல் ஆண்டவர் உங்க ளுக்குச் சொல்லியிருக்கிற எல்லா வார்த்தை களையும் கேட்டிருக்கின்றது. நீங்கள் எப் போதாவது அவற்றை மறுத்து, உங்கள் ஆண்டவராகிய கடவுளுக்கு எதிராகப் பொய் சொல்லத் துணிவீர்களானால், இக் கல் உங்கள் நடுவில் உண்மைக்குச் சான்றாக விளங்கும்'' என்றார் (24:26-27). பிறகு யோசுவா மக்களுக்கு விடை கொடுத்து அவர்களைத் தத்தம் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். பின்பு எப்பிராயிம் மலை நாட்டைச் சேர்ந்த தம் ஊராகிய திம்னாசெ ராவுக்குத் திரும்பினார். அங்கே தம் 110-ஆம் வயதில் உயிர் நீத்தார். இவ்வாறு இஸ்ராயேலரின் பெரும் தலைவர்களில் ஒருவரது வாழ்வு முடிந்தது. இஸ்ராயேலின் வரலாற்றில் அவரது நினைவை ஒருபோ தும் அழித்து விட முடியாது. சீரா 46:1-6-இன்படி யோசுவா போரில் வல்ல வர்; இறைவனின் தூதராய் விளங்கினார். அவர் தம் பெயருக்கு ஏற்ப இறைமக்களின் மீட்பராக விளங்குகிறார்.

இஸ்ராயேலின் வரலாற்றில் யோசுவா வின் மறைவு ஓர் உச்சக்கட்டமாகும். ஏனெனில், கானானில் இஸ்ராயேலின் வரலாறு வெறும் உலகைச்சார்ந்த வரலாறு மட்டுமன்று, யாவேயிடம் இஸ்ராயேல் கொண்ட உறவின் வரலாறுமாகும்.

8. யோசுவா வாழ்வுபற்றிய திறன் ஆய்வு: இந்நூலில் வீரகாவிய அல்லது காப்பியத் தன்மை மிகுந்து காணப்படுகிறது. இதிவே உயர்வு நவிற்சியணி, எளிதாக்குவது

போன்ற அணிகள் சிறப்புப் பெறுகின்றன. நாட்டைக் கைப்பற்றுவதில் உள்ள வெற்றி முழுவதுமே யோசுவாவுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. இஃது எளிதாக்கும் அணியாகும். இதனால் மற்ற எந்த மனிதருடைய செயலும் குறைத்துக் கூறப்படுகிறது; பொருட்படுத்தப்படவில்லை; ஒன்றுமின்மையாகிறது. இறுதி முடிவு பற்றி ஐயம் எதுவுமின்றி ஒரு வெற்றியிலிருந்து மறு வெற்றிக்குச் செல்லும் வெற்றிப்போக்கில் உயர்வுநவிற்சி அணி காணப்படுகிறது.

''யோசுவா எல்லா நிலத்தையும் கைப்பற்றினார். அதை அவர்களின் அந்தந்தக் கோத்திரப் பிரிவுகளின்படி இஸ்ராயேலுக்கு உரிமைச் சொத்தாகக் கொடுத்தார்'' (11:23) என்று கூறப்படுகிறது. ஆனால் 13:1-6-இன்படி யோசுவா வயது முதிர்ந்த பின்னும் இன்னும் கைப்பற்றப்பட வேண்டிய பகுதிகள் பல உள்ளன. இக்கூற்று நீதிபதிகள் ஆகமத்தில் காணப்படும் அமைப்புக்கு ஒத்ததாயுள்ளது. அஃதோடு முற்பகுதியில் கூறப்படுபவை மிகைப்படுத்திக் கூறப்பட்டவை என்று சுட்டுகிறது.

நாட்டைக் கைப்பற்றுவதில் யோசுவாவின் பாகம் உண்மையிலேயே என்ன என்ற கேள்விக்கு நிறைவான பதில் கூறுவது கடினம். யாத்திரை ஆகமம், எண்ணாகமம் ஆகிய நூல்கள் மோசே தனக்குப்பின் தலைவராக வருபவரைப் பற்றி அக்கறை காட்டினார் என்று காட்டுகின்றன. இப்பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்பட்டது என்று உபாகமம் விளக்குகிறது. கி.மு. 13-ஆம் நூற்றாண்டில், இஸ்ராயேல் மக்கள் கானானில் நுழைந்து குடியேறியபோது நூனின் மகனான யோசுவா என்று விவிலியத்தால் அழைக்கப்படுபவர் முக்கியமான அங்கம் வகித்தார் என்பதற்கு ஐயமில்லை. நடு பாலஸ்தீனத்தைக் கைப்பற்றுவதில் யோசுவாவின் பங்கை இந்நூல் தருகிறது. இது யோசுவா, யோசேப்பு இனத்தைச் சார்ந்த எப்பிராயிம் பிரிவைச் சார்ந்தவர் என்ற 1 நாள் 7:27-இன் கூற்றோடு ஒத்துப்போகிறது. பாலஸ்தீனத்தின் நடுப்பகுதியில் யோசுவா செயல் புரிந்தார். இக்கருவை இஸ்ராயேலின் வீரகாப்பியக் கதை சொல்பவர் கானான் முழுவதையும் யோசுவாதான் வெற்றி கொண்டாரென்று விரிவாக்கியிருக்கலாம். யோசுவாவின் போர்கள் முடிந்த பின்னும் நாட்டின் பெரும்பகுதி கைப்பற்றப்பட வேண்டியிருக்கிறது என்று யோக 13:1-6 சுட்டுகிறது. உண்மையில் என்னதான் நடந்தது என்ற கேள்விக்குப் பதில் கூறுவது கடினம்!

இக்கேள்வியை விட, பழைய ஏற்பாட்டு இறையியலில், மீட்பு வரலாற்றில் யோசுவாவின் இடம் என்ன என்று அறிதல் முக்கியமானதாகும். மோசேயின் நிழலில் யோசுவா எப்போதும் நிற்பதைக் காண்கிறோம். இவ்வுண்மை அவரது உயர்வைக் குறைத்துக் காட்டவில்லை. மாறாக, புனித நாட்டிற்குள் புகுந்ததுவரை இறை மக்களை இட்டுச் சென்ற மனிதர் என்று மீட்பு வரலாற்றில் அவரது இன்றியமையாத பங்கை உயர்த்திக் கூறுகிறது. மோசே, யோசுவா ஆகியோரின் செயல்கள் வழியாக யாவேயின் பரிவன்புமிக்க பற்றுறுதி வெளிப்படுகிறது. எகிப்திலிருந்தும், பாலையிலிருந்தும் மக்களை யாவே மீட்கிறார்; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்களுக்குத் தாம் வாக்களித்த நாட்டிற்கு இட்டுச்செல்லுகிறார். இவை யாவும் மோசே, யோசுவா ஆகியவர்கள் வழியாகச் செயல்படுகின்றன.

9. வரலாற்று மதிப்பீடு: கி.மு. 13-ஆம் நூற்றாண்டின் கானான் நாட்டை இஸ்ராயேலர் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்தனர் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும். அவர்களுடைய வரலாற்றின் கடந்த கால நிகழ்ச்சிகளின் நினைவு அவர்களிடையே தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக இருந்தது என்பது உறுதி. கானானை இஸ்ராயேலர் எளிதாகக் கைப்பற்றி விடவில்லை; போர்கள் பல செய்து கைப்பற்றினர். ஆகவே, இந்நூல் இவ்வெற்றிகளைப் பற்றிய உண்மையான நினைவேடுகளை அடிப்படையாகக் கொண்டது என்று நாம் பொதுவாக ஏற்றுக் கொள்ளலாம். இந்நூலில் வரும் பாரம்பரி

யங்கள் இப்பகுதிகளில் காணப்படும் பெயர்களின் பொருளையோ, நிறுவனங் களையோ, எல்லையைக் காட்டும் அடை யாளங்களையோ விளக்கும் தோற்றக் காரண உரைகளாகும். ஆகவே, இது பொதுமக்களின் கற்பனைப் படைப்பு என்று கூறுவது இந்நூல் கூறும் உண்மையை வெறுமையாக்குவதாகும். இதில் நாட்டுப்பாடல் இலக்கிய வடிவில் நிகழ்ச்சி உரைகள் வரையப்பட்டிருப்பதால் ஒரு நிகழ்ச்சி உரை, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைத்தான் விவரிக்கிறது என்று வாதிக்க முடியாது போகலாம். ஆனால் பொதுவாக இந்நூலில் காணப்படும் பாரம் பரியங்கள் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டன என்று உறுதியாகக் கூறலாம்.

இந்நூல் ஆசிரியர், யோசுவாவின் பகுதியை, மிகைப்படுத்திக் கூறுகிறார் என் பதற்காக யோசுவாவின் பகுதியை நாம் குறைத்துக் கூற முடியாது. இஸ்ராயேலரின் எல்லா இனத்தவரும் அவருடைய தலை மையை ஏற்றுக் கொள்கின்றனர். இஃது அவருடைய சிறப்பை எடுத்துக் காட்டு கிறது.

யோசுவாவின் வெற்றிகளை விவரிக் கும்போது ஆசிரியர் தனக்குக் கிடைத்த மூலங்களுக்குப் பிரமாணிக்கமாயிருக்க முயல்கிறார். சான்றாக, தென்பகுதியை வெற்றி கொண்ட விவரிப்போடு வட பகுதியைப் பற்றிய விளக்கத்தை ஒப்பிடுக. வெல்லப்பட்ட பகுதிகளை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார் (*11:21-22; 13: 2-6; 23:4-5*).

பாலஸ்தீனத்தை இஸ்ராயேலர் கைப் பற்றிய வரலாற்றுக்குத் தொல்பொருள் ஆய்வு ஓரளவு ஆதரவு தருகிறது. ஆயினும் இது தரும் சான்றுகளை எச்சரிக்கையோடு பயன்படுத்த வேண்டும். இலாக்கீசு, எக் லோன், தெபீர், ஆட்சோர் முதலிய நகரங் கள் இஸ்ராயேலின் வெற்றிக்காலத்தில் அழிக்கப்பட்டன. ஆனால், இவ்வழிவுக்கும் இஸ்ராயேலின் வெற்றிக்கும் உள்ள தொடர்பு தெளிவாகத் தெரியவில்லை. இவ்வழிவுதான் இந்நூலின் நிகழ்ச்சியுரை களுக்குக் காரணமாயின என்பதையும் நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. எரிகோ, ஆய் ஆகிய இடங்களில் காணப் படும் சான்றுகள், இந்நூலில் காணப்படும் நிகழ்ச்சி உரைகளுக்கு ஆதரவு தரவில்லை. அண்டையிலுள்ள பெத்தேலுக்கு நிகழ்ந்த அழிவை ஆசிரியர் ஆயிக்குச் சாற்றிக் கூறியிருக்கலாம். யாபீனின் தோல்வியைப் பற்றி ஐயம் எழுந்துள்ளது. ஏனெனில், நீதி 4-இல் யாபீன் பிற்காலத்தில்தான் தோல்வி யடைந்ததாகப் படிக்கிறோம். மேலும், கர்மேலுக்கும் யோர்தான் பள்ளத்தாக்குக் கும் இடையிலுள்ள பகுதியில் கானானியர் வலிமைமிக்க இடங்களைக் கொண்டிருந்த னர். இஸ்ராயேலர் மலைப்பகுதியில் நன்கு வலிமை பெற்றிருந்தனர். சமவெளியில் கானானியர்கள் தேர்ப்படை வலிமை கொண்டு விளங்கினர். இப்படியிருக்க இவற்றைக் கடந்து, எசுதிரலோன் சமவெளி யைக் கடந்து கலிலேயாவின் மலைப்பகுதி களுக்கு இஸ்ராயேலர் சென்றிருக்க முடி யுமா? அறிஞர் சிலர் கருத்துப்படி இது யோசுவாவின் காலத்தில் நிகழ்ந்ததன்று; பிற்காலத்தில் நிகழ்ந்ததாகும். ஆகவே, யோசுவா ஆகமத்தில் வரலாற்று மதிப்பைக் குறைத்து மதிப்பீடு செய்ய சோதனை எழலாம்.

ஆனால், நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாட்டைக் கைப்பற்றுதல் விரை வாகவும், நாடு முழுவதும் நடந்ததாகவும் தோற்றம் அளிக்கச் செய்திருப்பது உபாகமப் பாரம்பரிய ஆசிரியரது வேலைப் பாடாகும். இவற்றில் பெரும்பாலானவை மிகப்பழம் பாரம்பரியங்களை அடிப்படை யாகக் கொண்டவை. இப்பாரம்பரியங்கள், நிகழ்ச்சி நடந்த காலத்தை நெருங்கியவை. ஆகையால், பலமான உண்மையான கார ணம் இருந்தால் ஒழிய எளிதாக இவற்றை நிராகரிக்கக்கூடாது. தோற்றக் காரணப் பண்பை மிகைப்படுத்தக்கூடாது என்று ஏற்கெனவே கூறியுள்ளோம்.

10. சமய மதிப்பீடு அல்லது போதகம்: யோசுவா ஆகமம் ஒரு வெறும் வரலாறு மட்டுமன்று. அஃது ஒரு சமய வரலாறு ஆகும். ஆசிரியர் இந்நூலை வரலாற்றுக்காக மட்டும் எழுதவில்லை; மாறாக, வேறுபட்ட வரலாற்று மதிப்புடைய தனது மூலங்களைப் பயன்படுத்தி வரலாற்றின், வரலாறு கடந்த போக்கை வரைகிறார். ஆசிரியர் தனது குறிக்கோளுக்கு ஏற்ற நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுகிறார். இஸ்ராயேலின் வாழ்வில் யாவேயின் செயல் பற்றிய போதனையை எடுத்துக் கூறுவதில் அக்கறை காட்டுகிறார். இஸ்ராயேலின் வரலாறு யாவேக்கு எதிரான அல்லது சார்பான வரலாறு ஆகும். இதை எடுத்துக் கூறுவதே இத்தொகுப்பின் நோக்கமாகும். இந்நூல் மீட்பு வரலாற்றின் ஒரு பகுதியாகும்.

யாவே வழிகாட்ட யாவேயின் ஆற்றலால் யோசுவா கானானை வெற்றி கொள்கிறார். இது யாவேயின் செயலாகும். மனிதனைப் பொருத்த மட்டும் இவ்வெற்றிகள் ஒரு வழிபாட்டுச் செயலாகும். சிறப்பாக கில்கால் திருத்தலத்தோடும் அங்கு நடக்கும் சமயச் சடங்குகளோடும் நெருங்கிய தொடர்புடையன. சாபப்போரும் அதன் விளைவாக யாவற்றையும் அழித்தலும் ஒரு வழிபாட்டுச் செயலாகும். உபாகம ஆசிரியர் இக்கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார். இத்தகைய ''பரிசுத்தப் போர்'' என்ற சடங்கு முறை தனது காலத்தில் கடைப்பிடிக்கப்படாவிட்டாலும், உபாகம ஆசிரியர், கானானியரால் இஸ்ராயேலருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு விரோதமாய்ப் பேசுகிறார். தனிப்பட்டோரின் குற்றமும் சமூகத்தையே சாரும் என்ற (யோசு 7) தொடக்க காலக்கருத்தைத் தொகுப்பாசிரியர் வலியுறுத்துகிறார். உபாகம ஆசிரியர் நிகழ்ச்சியுரைகளோடு தனது உடன்படிக்கைக் கருத்தையும் சேர்த்துக் கூறுகிறார். இஸ்ராயேலர் கானானைக் கைப்பற்றியது யாவே இஸ்ராயேல் மக்களுக்கும் (யாத் 3:17; 23:23-33; யோசு 1:2 தொ; 21:41 தொ; 23:14 தொ) குல மூதாதையர்களுக்கும் அளித்த பரிவன்பு மிக்க பற்றுறுதியின் வெளிப்பாடாகும். இக்குல மூதாதையர்கள் தங்கள் குலத்தவர் ஒரு காலத்தில் மெய்யாகவே இந்நாட்டை உடைமையாகக் கொள்வர் என்று யாவேயிடமிருந்து வாக்குறுதி பெற்றிருந்தனர். அந்நாட்டைத் தொடர்ந்து உடைமையாகக் கொண்டிருத்தல் சீனாய்ச் சட்டத்திற்குப் பணிந்து இஸ்ராயேலர் யாவேக்குக் காட்டும் பற்றுறுதியைப் பொருத்ததாகும். உப 7-இல் கூறப்படுவதுபோல் இறைவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதின் கட்டாயத்தை இடைவிடாது எடுத்துக்கூறுகிறார். இந்நூல் ஆசிரியரால் (யோசு 1:-9.16-18; 10:40; 11:15) இஸ்ராயேலர் வெற்றி பெறுவது இறைவனுடைய வேலைப்பாடாகும் என்று வலியுறுத்தப்படுகிறது. இது கானானியரை வெற்றி கொள்வதில் மக்களுக்கு உதவ இறைவன் ஆற்றிய அருஞ்செயல் விவரிப்பில் நேரடியாக எடுத்துக் காட்டப்படுகிறது (யோசு 3:6-10). மேலும், இதே உண்மை இஸ்ராயேலரின் கீழ்ப்படியாமையால்தான் அவர்கள் படைகள் தோல்வியடைகின்றன என்று காட்டுவதில் எதிர்மறையாக எடுத்துக்காட்டப்படுகின்றது (யோசு 8:18 தொ; 9:14 தொ). உடன்படிக்கைச் சாபங்கள் இன்றும் செயல்படக்கூடும். இஸ்ராயேலரின் ஒழுக்கம் இறைவனின் கொடைகளுக்கு அளிக்கும் பதிலாகும். இஸ்ராயேலர் யாவேயோடு கொண்ட உறவு தனிச்சிறப்புடையது. இறைவன் தொடர்ந்து அளிக்கும் கொடைகளில் உபாகம ஆசிரியர் விசுவாசம் கொண்டிருக்கிறார். நாடு கடத்தப்பட்ட நிலை நாட்டை முழுவதும் உடைமையாகக் கொண்டிருப்பதை ஒரு தூரக் கனவாக ஆக்கினாலும் அதைத் திரும்பச் செயல்படுத்தக் கூடும்.

குருகுலப் பதிப்பாசிரியர் தனது விசுவாசத்தைக் கருத்தியலாகக் கூறுகிறார். திருத்தலத்தை மையமாகக் கொண்டு சுற்றி நிற்கும் பன்னிரண்டு இனத்தவரும் அடங்கிய வழிபாட்டுச் சமூகத்தை விவரிக்கும் போது வருங்கால இஸ்ராயேலைச் சித்தரிக்கிறார். ஒவ்வொரு இனத்தவரும் குருகுல

இனத்திற்கு அவசியமானவற்றை எல்லாம் கருத்தாய்ச் செய்கின்றனர். இஸ்ராயேலர் தன் உரிமையாக இறைவனைத் தேர்ந்தெடுக்கின்றனர் (யோசு 24:15); இறைவனுக்கே பணி செய்வோம் என்று மீண்டும் மீண்டும் பறை சாற்றுகின்றனர் (24:24). நூலின் இறுதிப்பகுதி இஸ்ராயேலின் பற்றுறுதியையும் நாட்டை உடைமையாகக் கொண்டிருப்பதையும் வலியுறுத்துகிறது (24:30-33). ஏனெனில், யாவேயோடு இஸ்ராயேலர் கொண்ட உறவு தனிச்சிறப்புடையதாகும்.

ஆசிரியர் இந்நூலை நாட்டுப்பற்றை எடுத்துக் கூறும் பெருங்காப்பியமாக எளிதில் மாற்றியிருக்கலாம். ஆனால், இந்நூல் இஸ்ராயேலின் மகிமைக்காக அன்று, யாவேயின் மகிமைக்காகவே எழுதப்படுகிறது. நாட்டுத் தலைவனிடம் எதிர்பார்க்கப்படும் மேலான பண்பு சமயப்பற்று ஆகும் (யோசு 1). நூலின் இறுதியில் வரும் அறக்கோரிக்கைகள், மக்களைச் சமயப் பற்றுறுதி உடையவர்களாய் இருக்கத் தூண்டுகிறது. இந்நூல் ஆசிரியர் பெரும்பாலும் போதகராகவே விளங்குகிறார். இதில் உபாகமப் பாரம்பரியத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார். இதற்காகவே வெற்றி வரலாற்றைப் பயன்படுத்துகிறார். அவர் கடந்த வெற்றிகளை எடுத்துக் கூறுவது வீரமிக்க நாட்டுப் பற்றைத் தூண்டுவதற்காக அன்று, பற்றுறுதியையுடைய கீழ்ப்படிதலுக்கு இஸ்ராயேலை அழைக்கவே; மக்களின் அகந்தையைத் தூண்டுவதற்கு அன்று, மக்கள் யாவேயிடம் அசையா நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்றும் தூண்டி எழுப்பவே.

11. முடிவுரை: உள்ளக்கிளர்ச்சியை எழுப்பும் இந்நூலின் தொடக்கத்தில் யோசுவாவுக்குத் தெளிவான கட்டளைகளும் உற்சாக மூட்டும் சொற்களும் கூறப்படுகின்றன. ''உன்னோடு இருப்பேன். உன்னைக் கைந்நெகிழவிட மாட்டேன்; கைவிடவும் மாட்டேன்.. திடமும் உறுதியும் கொள்,.... எல்லாச் சட்டங்களையும் கடைப்பிடிப்பதில் கவனமாய் இரு. நீ அதனின்று வலப்புறமோ, இடப்புறமோ திரும்பாதே'' (யோசு 1:5-7). இவை இன்றும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் சிறப்பாக கிறிஸ்தவத் தலைவர்களுக்கும் இறைவன் அளிக்கும் கூற்றாகும். உண்மையான இறைவனாகிய யாவேயையோ புறஇனத் தேவதைகளையோ வணங்க உறுதியான தீர்மானம் எடுக்க இஸ்ராயேலை யோசுவா அழைப்பதோடு இந்நூல் முடிகிறது (யோசு 24:14-15). இஃது இஸ்ராயேலும் அவர்களுடைய வழித்தோன்றல்களின் ஒவ்வொரு தலைமுறையும் ஏன் புதிய இஸ்ராயேல் ஆகிய கிறிஸ்தவர்களும் அவரவர்கள் காலத்தில் எடுக்க வேண்டிய முடிவுமாகும். எண் 13:17-இல் நூனின் புதல்வனின் மீட்பு என்று பொருள்படும் ஓசேயா என்ற பெயரை யாவே மீட்பராய் இருக்கிறார் என்று பொருள்படும் ''யோசுவா'' என்று மோசே மாற்றுகிறார். இப்பெயர் யோசுவாவின் இறை அழைத்தலையும், இறைவனின் பெருஞ் செயல்களில் அவர் கொள்ளும் பங்கையும் விளக்குகிறது. இறைவனின் இப்பெரும் செயல்களில்தான் மீட்பு அடங்கியுள்ளது என்று விவிலியம் கூறுகிறது. யோசுவா தம் மக்களுக்கு மீட்பு அளிக்கிறார்; தங்க இடம் அளிக்கிறார்; எதிரிகளிடமிருந்து விடுதலை அளிக்கிறார். இதற்குப்பின் பல மீட்புகளும் வரும்... ஒன்று மற்றதற்கு இட்டுச் செல்லும் நம்பிக்கையை வளர்க்கும். இறுதியில் இறைவன், தன் மகன் இயேசுவையே மீட்பராக அனுப்புவார்.

யோசுவா, நூனின் மகன் (JOSHUA, SON OF NUN)

1. யோசுவா எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்த நூனின் மகனாவார் (1 நாள் 7:20-27). இவர் மோசேயின் தொண்டனும் அவருக்குப்பின் இஸ்ராயேலரின் தலைவரும் ஆவார். இவருடைய மூலப்பெயர் ஓசேயா என்பதாகும் (எண் 13:8).

2. மோசேயின் தொண்டனான யோசுவா, இஸ்ராயேலின் பாலைவனப் பயணம் முழுவதும் மோசேயின் நம்பிக்கைக்குரிய

தொண்டன் அல்லது ஊழியனாக இருந்தார் (எண் 11:28); அவருடைய புனித செயல்களுக்கெல்லாம் சாட்சியாக விளங்கினார் (காண்க. 7:14). இளைஞனாக இருந்த போதே (எண் 33:11) அமலேக்கியருக்கு எதிரான போரில் இஸ்ராயேலில் படையின் போர்த்தலைவராகச் செயல்பட்டார் (யாத் 17:8-13).

யோசுவா மோசேயின் படைத்தலைவன் மட்டுமல்லர் சீடனும் ஆவார். மோசே சீனாய் மலைக்குச் சென்றபோது, அவரோடு யோசுவா சென்றார். மோசே இறைவனைச் சந்தித்த நாற்பது நாளும் அங்கே புனிததலத்துக்கு அருகே தங்கியிருந்தார் (யாத் 24:13-18; 32:15-17); சந்திப்புக் கூடாரத்தின் காப்பாளனாக இருந்து மோசேக்கு உதவி செய்தார் (33:11). தனது தலைவரின் இறைவாக்குரைக்கும் பதவியைக் காப்பதில் ஆர்வம் காட்டுகிறார் (எண் 11:26-29).

மோசே கானான் நாட்டிற்குள் அனுப்பிய பன்னிரண்டு உளவாளிகளுள் யோசுவாவும் ஒருவர் (13:8). காலேபோடு சேர்ந்து ஆண்டவரின் வாக்குறுதிகளில் உறுதியான நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறார் யோசுவா. மற்ற உளவாளிகளின் பாதகமான செய்தியறிக்கையை எதிர்கொண்டு, யோசுவாவும், காலேபும் கடவுளை நம்பும்படி மக்களை ஊக்குவிக்கின்றனர். ஆனால், மக்கள் இவர்களது வேண்டுகோளை நிராகரித்து, இவர்களைக் கல்லால் எறிய முயன்றனர் (14:4-10). இவர்கள் காட்டிய விசுவாசத்திற்கும் துணிவுக்கும் சன்மானமாக, இவர்கள் இருவரை மட்டுமே வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைய ஆண்டவர் அனுமதித்தார் (14:30; 26:65; காண்க. 1 மக் 2:55; எபி 3:17-18). யோசுவா காட்டிய ஆழ்ந்த பிரமாணிக்கத்திற்கு இவர் சீனாய் மலையில் பெற்ற அனுபவமே மூலமாய் அமைந்தது.

மோசேக்குப்பின், இஸ்ராயேலின் தலைவராக இறைவன் யோசுவாவைத் தேர்ந்தெடுத்தார். இறைவனின் கட்டளைப்படி மோசே யோசுவாவின் மேல் தன் கைகளை விரித்து மக்களுக்குத் தலைவராகவும், தன் வேலையைச் செய்து முடிக்கவும் யோசுவாவைத் திருநிலைப்படுத்துகிறார் (எண் 27:12-23; உப 3:28; 31:14). தன் தலைவரைப் போலவே யோசுவாவும் ஞானத்தின் ஆவியால் நிரம்பப் பெறுகிறார் (34:9; காண்க. சீரா 46:1). மோசேயின் செயல்களுக்கு இணையாக யோசுவாவின் வாழ்வை யோசுவாநூல் சித்திரிக்கிறது (யோசு 1:15. 17; 3:7; 4:23; 8:32; காண்க. 3:5; 5:15).

3. இஸ்ராயேலின் தலைவரான யோசுவா: மோசேயின் இறப்புக்குப்பின் யோசுவா மக்களுக்குத் தலைமை தாங்குகிறார்; வலிமை மிக்கவராகக் காட்சியளிக்கிறார் (யோசு 1:6); புனிதப்போரை நடத்துவதில் துணிவைக் காட்டுகிறார். ஆயினும், இந்தப் போரில் விண்ணகத்தலைவர் உள்ளார். யோசுவா அவரின் பிரதிநிதி மட்டுமே ஆவார் (5:13தொ). போரில் இஸ்ராயேலுக்கு உதவி செய்ய இயற்கைச் சக்திகளின் மூலம் விண்ணகத்தலைவர் அளிக்கும் உதவியைக் காணலாம் (6:20; 10:10-14). ஆயினும், இந்தப் போரின் குறிக்கோள் கானானியர்களை அழிப்பதன்று, புற இனத்தாரின் நாட்டை இறைமக்களுக்கு உரிமைச் சொத்தாக அளிப்பதாகும் (சங் 78:54தொ). வாக்களிக்கப்பட்ட நாடு அவர்களின் மூதாதையரின் நாடல்லவா! ஆனால், இறைவனோடு உடன்படிக்கையை நிலைப்படுத்தவும், அவரது சட்டத்தைக் கடைப்பிடிக்கவுமே இஸ்ராயேல் இந்நாட்டிற்குள் இட்டுச் செல்லப்பட்டது. இதில் முழுச் சமயத்தின் விட்டுக்கொடாமையோடு (யோசு 23), யோசுவா தன்னையே ஒரு மாதிரியாகக் காட்டுகிறார்; பிரமாணிக்க வழியில் இஸ்ராயேலை இட்டுச் சென்றார் (8:30-35; 24).

யோசுவாவின் தலைமையில், வலிமை மிக்க கானானிய எதிர்ப்பை முறித்து, இஸ்ராயேல் உறுதியாக நாட்டில் நிலைப்படுத்தப்பட்டது (யோசு 6-12; சிறப்பாக 11:23). தொடக்க வெற்றிகளுக்குப்பின்

யோகவா நாட்டைப் பங்கிடு செய்து ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் அவர்தம் உரிமைச் சொந்தாக அளித்தார் (யோசு 13-21). தன் வாழ்வின் இறுதியில், இஸ்ராயேலர் அனைவரையும் ஒன்றுகூட்டி அவர்கள் பிரமாணிக்கமாக இருக்க அறவுரை கூறுகிறார்; உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார் (23:1-24:28).

தனது 110-ஆவது நிறைவயதில் யோசுவா இறந்தார். திம்னத்-செராவிலுள்ள அவருடைய உரிமைச் சொத்தான பகுதியில் அடக்கம் செய்யப்பட்டார் (24:29).

4. மீட்பரின் உருவம்: தங்கள் தியானத்தில் எடுத்துக்காட்டான வரலாற்றின் ஒரு பகுதியான யோசுவாவின் வாழ்க்கைக்கு ஞானிகள் மீண்டும் மீண்டும் திரும்புவர். மோசேயின் இறைவாக்கு அலுவலில் அவருக்குப்பின் வந்தவராக யோசுவா சரியாகவே பெயர் பெறுகிறார். இதன் பொருள் யாவே மீட்கிறார் என்பதாகும். இதற்கு ஏற்றவாறு, யோசுவா இறைவன் தேர்ந்தெடுத்தவர்களை மீட்கிறார் (சீரா 46:1). இந்த முதல் ''இயேசு'' வரவிருக்கும் மற்றொரு மீட்பரின் மங்கலான முன்நிழலே ஆவார். வரவிருப்பவரும் அதே பெயரைக் கொண்டிருப்பார் (மத் 1:21). நீண்ட மீட்பு வரலாற்றில் யோசுவாவின் செயல்கள் ஒரு முன் தயாரிப்புதான் (அ.ப. 7:45); ஆனால், ஒரு முக்கியமான கட்டமாகும். இப்போது இயேசு இறந்து, உயிர்த்து, விண்ணேற்றமானதில் உண்மையான மீட்பு இறைமக்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. யோசுவா அடைந்த வாக்களிக்கப்பட்ட நாடு ஓர் இடைக்கட்டமேயாகும், முடிவன்று; ஒரு முன்நிழலேயாகும்; அமைதியின் உண்மையான இடமன்று (எபி 4:8). இதைவிட மேலான ஓய்விடம், அதாவது இறைவனுடைய ஓய்விலேயே பங்கு கொள்ளும் ஏழாவது நாள், இடம் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது. வீரமிக்க மனிதனான யோசுவா இந்த ஓய்விடத்தை அடையப் போரிடுமாறு நம்மை உற்சாகப் படுத்துகிறார். அங்கே நம் உழைப்பின் சன்மானத்தைக் கண்டடைவோம் (திருவெளி 14:13).

யோசே (JOSES)

1. இயேசுவின் சகோதரர்களாகக் கருதப் படுபவர்களில் ஒருவர் (மாற் 6:3). மத் 13:55-இல் இவர் யோசேப்பு என்று அழைக்கப்படுகிறார்.

2. சிறிய யாக்கோபின் சகோதரர் (மாற் 15:40.47). மத் 27:56-இல் இவர் யோசேப்பு என்றழைக்கப்படுகிறார்.

யோசேக்கு (JOSECH)

லூக்காவின் தலைமுறைப்பட்டியலின் படி இயேசுவின் மூதாதையர்களுள் ஒருவர் (லூக் 3:26).

யோசேபா [JEHOSHEBA - இறைவன் (யாவே) நிறைவுள்ளவர்]

யூதாவை ஆண்ட யோராம் அரசனின் மகள் (2 அர 11:2). அரசன் அகசியாவின் சகோதரி. பெரிய குரு யோயாதாவின் மனைவி. ஏகூ செய்த புரட்சியினால் அகசியா அரசன் கொல்லப்பட்டபோது, அவனது தாய் அத்தலியா அரச குலத்தார் அனைவரையும் கொன்று குவிக்கத் தொடங்கினாள்; தானே அரசியானாள். ஆனால், யோசேபா கொல்லப்பட இருந்த அரச புதல்வரில் ஒருவனான அகசியாவின் கடைசி மகனான யோவாசை அத்தலியாவுக்குத் தெரியாத இடத்தில் ஆறு ஆண்டுகளாக மறைத்து வைத்தாள். அதன்பின் பெரிய குரு யோயாதா அவனை அரசனாக்கினார் (2 அர 11:2). 2 நாள் 22:11-இல் இவள் யோசபெயாத்து என்று அழைக்கப் படுகிறாள். மேலும், இவள் தலைமைக்குரு யோயாதாவின் மனைவி என்று குறிக்கப் படுகிறாள்.

யோசேபு - பசபேத்து (JOSHEB -BASSHEBETH)

இப்பெயர் 2 சாமு 23:8-இல் வருகிறது. காண்க: யாசொபயாம் - 1.

யோசேப்பு (JOSEPH - இறைவன் செழிப்பைக் கூட்டுவாராக)

1. யாக்கோபின் மகன் யோசேப்பு. காண்க. தொடக்கநூல் அல்லது ஆதியாகமம் (5ஒ): யோசேப்பு.

2. இசக்கார் இனத்தைச் சேர்ந்த இகாலின் தந்தை. கானானை உளவு பார்க்க மோசே அனுப்பிய பன்னிருவருள் ஒருவர் (எண் 13:7).

3. தாவீதின் இசைக்கலைஞர் ஆசாபின் புதல்வர். ஒரு லேவியர். இசையோடு இறைவாக்குரைக்கும் பணியில் பங்கு பெற்றவர் (1 நாள் 25:2.9).

4. பின்னூயின் வழித்தோன்றல். நாடு கடத்தலுக்குப்பின் அன்னியப்பெண்ணை மணந்த இஸ்ராயேலருள் ஒருவர் (எஸ் 10:42).

5. யோயாகிம் பெரிய குருவாக இருந்த காலத்தில் செபன்யா குலத்தின் குருக்கள் குடும்பங்களுள் ஒன்றுக்குத் தலைவர் (நெகே 12:14).

6. யூதித்தின் முன்னோருள் ஒருவர் (யூதி 8:1).

7. ஒரு செக்கரியாவின் மகன். யூதா மக்கபேயுவின் கீழ் ஒரு படைத்தலைவர். யூதா கிலயாதுக்கு எதிராகப் போர் செய்யச் சென்றபோது, யூதா நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்த யோசேப்பிடமும் அசரியாவிடமும் விட்டுச் சென்றார். எந்தப் போர் நிகழ்ச்சியையும் தொடங்கக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார். ஆனால், இந்த இருவரும் சுய மகிமை தேடும் பொருட்டு, யாம்னியாவைத் தாக்கினர்; படுதோல்வி அடைந்தனர் (1 மக் 5:18. 55-62).

8. 2 மக் 8:22; 10:19-இன்படி இவர் யூதாமக்கபேயுவின் சகோதரர்களுள் ஒருவர். ஆனால், 1 மக் 2:1-5-இல் இவர் மத்தத்தியாவின் புதல்வர்களுள் ஒருவராகக் குறிப்பிடப் படவில்லை.

9. இயேசு கிறிஸ்துவின் முன்னோர்களுள் ஒருவர். யன்னாயின் தந்தையும், மத்தத்தியாவின் மகனும் ஆவார் (லூக் 3:24).

10. தாவீதின் காலத்திற்கும், நாடு கடத்தப்பட்டதற்குப்பின் யூதாவின் ஆளுநரான செருபாபேலின் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த இயேசுவின் முன்னோர்களுள் ஒருவர் (லூக் 3:30).

11. யோசேப்பு, மரியாளின் கணவர்.

இத்தலைப்பின் கீழ்க்காண்க.

12. மத் 13:55-இன்படி இயேசுவின் சகோதரருள் ஒருவராகக் கருதப்படுபவர்.

13. சிறிய யாக்கோபின் சகோதரர் (மாற் 15:40).

14. அரிமத்தியா யோசேப்பு:- யூத சனேத்ரின்னைச் சேர்ந்த ஒரு செல்வமிக்கவரும் மதிக்கப்பட்டவரும் ஆவார். யூதேயாவின் மத்திய மலைப்பகுதியிலுள்ள அரிமத்தியாவைச் சேர்ந்தவர். இயேசுவை அடக்கம் செய்ய தனது புதிய கல்லறையை அளித்தவர் (மத் 27:57; மாற் 15:43). யோசேப்பு நல்ல, நேர்மையான யூதர் (லூக் 23:50-51). இரகசியமாக இயேசுவின் சீடர் (மத் 27:57; யோவா 19:38). இவர் துணிவோடு பிலாத்திடம் போய் இயேசுவின் சடலத்தைக் கேட்டார் (மத் 27:58; மாற் 15:43-45; யோவா 19:38; காண்க. உப 21:22-23). நிக்கோதேமின் உதவியுடன், யோசேப்பு இயேசுவின் சடலத்தை எடுத்து அதை யூத அடக்க முறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணிகளால் சுற்றிக் கட்டி புதிய கல்லறை ஒன்றில் அடக்கம் செய்தார் (மத் 27:59-60; மாற் 15:46; லூக் 23:53; யோவா 19:39-42).

14. யூதாசின் அப்போஸ்தல இடத்தை நிரப்ப, சகோதரர்களால் முன்னிறுத்தப்பட்ட இருவருள் ஒருவர். இவர் பர்சபா என்னும் யோசேப்பு ஆவார். இவருக்கு யுஸ்து என்ற பெயரும் இருந்தது (அ.ப. 1:23). மற்றவர் மத்தியா ஆவார். சீட்டு மத்தியா பேருக்கு விழுந்தது (1:26). இவர் 15:22-இல் வரும் பர்சபா அல்லர்.

15. சைப்ரசு தீவைச் சேர்ந்த ஒரு லேவியர். இவருக்கு அப்போஸ்தலர்கள் பர்னபா என்று பெயரிட்டார்கள் (அ.ப. 4:36).

யோசேப்பு (அரிமத்தியா) எழுதிய நிகழ்ச்சியுரை (JOSEPH OF ARIMATHEA, NARRATIVE BY)

இது கன்னி விண்ணேற்றம் பெற்றாள் என்ற நூலின் இலத்தீன் மொழிபெயர்ப்பு. இஃது அரிமத்தியா யோசேப்பு கதையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்று. அரிமத்திய யோசேப்பு கதை பிலாத்துவின் பணிகள் என்று நூலின் இறுதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

யோசேப்பு, மரியாளின் கணவர் (JOSEPH, HUSBAND OF MARY)

இவர் மரியாளின் கணவர். இயேசுவின் தந்தையாகக் கருதப்பட்டவர். மத்தேயு விவரிப்பின்படி, யோசேப்பு பெத்லகேமைச் சேர்ந்த ஒரு தச்சர். பிற்காலத்தில் நாசரேத்தில் குடியேறியவர். ஆனால், உரோமைப் பேரரசரின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் பொருட்டு, யோசேப்பு நாசரேத்திலிருந்து பெத்லகேமுக்குச் சென்றதாக லூக்கா விவரிக்கிறார் (லூக் 2:4-5). மத்தேயு, லூக்கா ஆகியோர் அளிக்கும் இயேசுவின் பிறப்பு, குழந்தைப்பருவம் பற்றிய நிகழ்ச்சியுரைகளுக்குப் புறம்பே யோசேப்பு அரிதாகத்தான் தோன்றுகிறார். மாற்கில் இவர் குறிப்பிடப் படவே இல்லை. ''யோசேப்பின் மகன் இயேசு'' என்று இரு குறிப்புகளில் யோவானில் யோசேப்பு குறிக்கப்படுகிறார் (யோவா 1:45; 6:42).

யோசேப்பைப் பற்றி அதிகம் தெரியவில்லை. இயேசுவின் மூதாதையர் பட்டியல்கள் (மத் 1:2-16; லூக் 3:23-38), இயேசு (அவரது சட்டபூர்வமான தந்தை யோசேப்பு வழியாக) அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று காட்ட, தாவீது வழியாக அவரது தோற்றத்தை எடுத்துக் கூறுகின்றன. (அறிஞர் சிலர் இயேசுவின் தாவீது வழிமரபு முறையை மரியாள் வழியாக எடுத்துக் காட்டுவர்). மரியாளுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்படும்போது, யோசேப்பு ஏற்கெனவே நாசரேத்தில் வாழ்ந்து கொண்டிருந்ததாக லூக்கா கூறுகிறார் (லூக் 1:26-27). ஆனால், அவர்கள் இன்னும் கூடி வாழவில்லை. ஆகவே, மரியாள் கருவுற்றிருந்ததை அறியும்போது யோசேப்பு பெரிதும் திகைப்படைகிறார். ஆனால், அவர் நேர்மையாளர். அவர் மரியாளை இகழ்ச்சிக்குள்ளாக்க விரும்பாமல், மறைவாக விலக்கிவிடத் திட்டமிடுகிறார் (மத் 1:18-19). ஆண்டவரின் தூதர் கனவில் தோன்றி மரியாளின் தூய்மை பற்றிய உறுதியையும், பிறக்கப்போகும் குழந்தையின் தன்மை பற்றிய வெளிப்பாட்டையும் அளித்தபோது, யோசேப்பு மரியாளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டார் (1:20-24).

பேரரசனது கட்டளைக்கிணங்க பெத்லகேம் சென்றது, அங்கு இயேசு பிறந்தது, இடையர்கள் குழந்தையைக் காண வந்தது, குழந்தைக்கு விருத்தசேதனம் செய்தல், குழந்தையை ஆலயத்தில் அர்ப்பணித்தல் (லூக் 2:1-40), ஞானிகள் வருகை, ஏரோதின் கொடுமையிலிருந்து குழந்தையைக் காப்பாற்ற வானதூதர் கட்டளைப்படி எகிப்துக்கு ஓடிப்போதல், பின் தூதரின் கட்டளைப்படி பாலஸ்தீனத்துக்குத் திரும்புதல் (மத் 2:1-15, 19-25), காணாமல் போன சிறுவன் இயேசுவைக் கண்டுபிடித்தல் (லூக் 2:41-51) ஆகிய நிகழ்ச்சிகளில் யோசேப்பு சிறப்பிடம் பெறுகிறார். ஆண்டுதோறும் பாஸ்குவிழாவில் பங்குகொள்ளும் ஒரு பக்தியுள்ள யூதராக யோசேப்பை லூக்கா விவரிக்கிறார் (2:41).

கி.பி. 2-ஆண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த யாக்கோபின் மூலநற்செய்தி, 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தச்சராகிய யோசேப்பின் வரலாறு என்ற நூல்கள், மரியாளுக்கு மணஒப்பந்தம் ஆனபோது, யோசேப்பு மனைவியை இழந்தவராகவும், பிள்ளைகளைக் கொண்டிருந்தவராகவும் சித்திரிக்கின்றன. பிந்தைய நூல், யோசேப்பு 110-ஆவது வயதில் இறந்தது பற்றி விரிவான விவரிப்புகளைக் கொடுக்கிறது. தோமா எழுதிய நற்செய்தி (2-ஆம் நூற்றாண்டு) இயேசு மற்றும் யோசேப்பு பற்றிய பல கற்பனையான நிகழ்ச்சிகளைத் தருகின்றது. மத்திய காலத்தில் புனித யோசேப்பின்பால் மக்கள் கொண்ட பக்தி

முயற்சிகள் பெருகின. கத்தோலிக்கத் திருச்சபையில் யோசேப்புக்கு ஒரு பெருவிழா கொண்டாடப்படுகிறது. அவர் தொழிலாளர்களின் பாதுகாவலர் என்றும், திருச்சபையின் பாதுகாவலர் என்றும் போற்றப்படுகிறார்.

யோசேப்புவின் செபம் *(JOSEPH, PRAYER OF)*

யூதர்களின் திருவெளிப்பாட்டு நூலான இதன் ஒருசில பகுதிகள் கிரேக்க மேற்கோள்களாக ஓரிசனால் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. பழமையான ஒரு பட்டியலில் இருந்து இது சாலமோனின் ஞானம் என்ற நூலைப்போன்று மிக நீளமானதெனத் தெரிகிறது. யாக்கோபு ஏற்கெனவே இஸ்ராயேல் எனும் வானதூதராக வாழ்ந்து வருவதாக இதில் காட்டப்படுகிறது. நமக்குக் கிடைத்துள்ள பகுதியில் அவரே எல்லாவற்றிலும் பேசுகிறார். மனித குலத்தின் எதிர்காலத்தை முன்னறிவிக்கிறார். எல்லா உயிர்களுக்கும் முன்னே பிறந்தது தான் மட்டும்தான் என்றும் உரிமை கொண்டாடுகிறார்.

இந்த நூலிலிருந்து கிறிஸ்தவத் தொடக்ககாலத்திய யூதர்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரை வானதூதர்களிலும் மேலாக உயர்த்திப் பேசுவதும், அவர்களைத் தெய்வமாகக் கொள்ளுமளவுக்கு உயர்த்தும் அவர்களது போக்கும் தெரிகிறது. இந்த நூல் கிறிஸ்தவர்க்கு எதிராக எழுதப்பட்டதெனச் சிலர் கருதினாலும் ஓரிசன் இவற்றைப் பாதுகாத்ததன் மூலம் இஃது அவ்வாறு இருக்க முடியாது எனத் தெரிகிறது. ஒரு சிலர் இது கிறிஸ்தவர்களை ஆதரிக்கும் நூல் எனவும், இஸ்ராயேல், யாக்கோபு எனும் பெயர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பனவாகும் எனவும் கூறுகின்றனர். இந்நூல் பற்றி எம்முடிவுக்கும் வர இயலவில்லை. ஆனால், கிறிஸ்தவத்துக்கு எதிரான நூல் என ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம்.

யோதா *(JODA)*

இயேசுவின் மூதாதையரில் ஒருவர் (லூக் 3:26).

யோது *(JOD)*

எபிரேய நெடுங்கணக்கில் பத்தாவது எழுத்தான இஃது அகரவரிசைச் சங்கீதமான 119-இல் பத்தாவது பகுதிக்குத் தலைப்பாக வருகிறது. இப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தைக் கொண்டு தொடங்குவதுபோல் அமைக்கப்பட்டு வருகிறது.

யோத்தாம் *(JOTHAM - யாவே நிறைவானவர்)*

1. இவர் கிதியோனின் (எருபாகாலின்) கடைசிப்புதல்வர். அபிமெலக்கினால் கிதியோன் குடும்பத்தினர் அனைவரும் கொல்லப்பட்டபோது இவர் மட்டும் தப்பிவிட்டார் *(நீதி 9:5)*. ஓர் உவமையால் *(9:7-20)* அபிமெலக்கை அரசனாக்கியதற்காக செக்கேமின் மக்களை யோத்தாம் கண்டனம் செய்தார். இவரது சாபக்கூற்று நிறைவேற மூன்று ஆண்டுகள் எடுத்தன. இந்த இடைக்காலத்தில் இவர் பெயேரில் தஞ்சம் புகுந்தார் *(9:21.57)*.

2. இவர் யூதாநாட்டு அரசராகிய ஊசியாவின் (அசரியாவின்) மகன் *(2 அர 15:32-38; 2 நாள் 27:1-9)*. கி.மு. 750-இல் ஊசியா தொழுநோயால் பாதிக்கப்பட்டபோது யோத்தாம் பகர ஆட்சியாளராகச் செயல் ஆற்றினார். தந்தைக்குப்பின் 741 முதல் 735 வரை தனியாக ஆட்சிபுரிந்தார் *(2 அர 15:5; 2 நாள் 26:16-27:1)*.

தனது ஆட்சிக்காலம்முதல் தனது தந்தையின் கொள்கையை யோத்தாம் கடைப்பிடித்தார். ''ஆண்டவர் திருமுன் நேர்மையுடன் நடந்தார்'' *(2 அர 15:35; 2 நாள் 27:2)*. ஆனால், தன் தந்தையின் அகந்தையைக் கொண்டிருக்கவில்லை. இவரது ஆட்சியில் யூதா மிகவும் செழிப்புற்றது. மக்கள் சிலை வழிபாடு, பேராசை, செல்வத்தால் வரும் அலட்சியப் புறக்கணிப்பு ஆகியவற்றில் தொடர்ந்து தீய வழியில் நடந்தனர் *(2 நாள் 27:2; காண்க. எசா 2:8; 5:8-23)*.

யோத்தாம் ஆலயத்தின் மேலை (வட) வாயிலைக் கட்டினார் *(2 அர 15:35)*; ஒபேலின் மதில்களைப் பெரிதாகக் கட்டினார் *(2 நாள் 27:3)*; மலைப்பகுதியில் போர்

முக்கியத்துவமுடைய நகரங்களை அமைத்தார்; யூதா முழுவதும் கோட்டைகளையும் கொத்தளங்களையும் கட்டினார் (27:4). இவர் ஊசியாவின் இறப்புக்குப்பின் அம்மோனியர் கிளர்ச்சி செய்தபோது அவர்களை அடக்கி, அவர்களிடமிருந்து பெரும் கப்பம் பெற்றார் (27:5). பாரம்பரியப் பகுதியோடு, யோத்தாம் ஆட்சியில் யூதா, யோர்தானுக்கு அப்பாலுள்ள தென் பகுதியையும் (காண்க. 1 நாள் 5:17), மோவாபு, ஏதோம், அம்மான், ஏட்சியோன் - கெபேர் வரைகட்டுப்படுத்தியது.

தன் தந்தையைப்போல், யோத்தாம் இஸ்ராயேல், சீரியாவோடு சேர்ந்து அசீரியர்களுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்தார். மூன்றாம் திகிலத் பிலேசரின் படையெடுப்பை எதிர்கொண்டபோது எருசலேமில் அசீரியர்களுக்குச் சார்பான கட்சி ஆகாசைப் பகர ஆட்சியாளராக ஆக்கியது. இது செயல் அளவில் யோத்தாமை ஓய்வு பெற்றவராக்கியது; அவரது அயல்நாட்டுக் கொள்கையைக் கட்டுப்படுத்தியது; சீரோ-எப்பிராயிம் போருக்கு இட்டுச் சென்றது (காண்க. 2 அர 15:37; எசா 7:1தொ).

இயேசுவின் மூதாதையர் பட்டியலில் மத்தேயு யோத்தாமைச் சேர்க்கிறார் (மத் 1:9).

3. யூதாவைச் சேர்ந்தவர். எகிதாயின் மகன். காலேபின் வழித்தோன்றல் (1 நாள் 2:47).

யோபாபு (JOBAB - வெற்றிக்களிப்பு)

1. இவர் யோக்தானின் கடைசி (இளைய) மகன். எனவே, அரேபிய இனப்பெயராகும் (ஆதி 10:29; 1 நாள் 1:23).

2. ஏதோமின் இரண்டாவது அரசனான யோபாபு பொட்சராவைச் சேர்ந்த செராகுவின் மகன் (ஆதி 36:33; 1 நாள் 1:44-45).

3. இவர் யோசுவாவால் தோற்கடிக்கப்பட்ட மாதோனின் அரசன் (யோசு 11:1; 12:9).

4. சகராயிமின் மகனான இவர் பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:9).

5. எல்பாகாலின் மகனாகிய இவர் பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர் (1 நாள் 8:18).

யோபு (JOB)

இசக்காரின் மூன்றாவது மகன் (ஆதி 46:13). ஆனால் எண் 26:24-இலும், 1 நாள் 7:1-இலும் வரும் இணையான பெயர்ப் பட்டியலில் இவர் யாசூபு என்று அழைக்கப்படுகிறார்.

யோபுநூல் (JOB, BOOK OF)

1. முன்னுரை:-

துன்பத்திற்குக் காரணம் யாது? அதன் பொருள் என்ன? தீயோர் செழிப்புற்றிருக்கும்போது நல்லோர் ஏன் துன்பப்பட வேண்டும்? துன்பத்திற்குப் போதிய காரணம் காணமுடியாதபோது அதை எப்படி ஏற்றுக்கொள்வது? மனித வாழ்வில் இறைவனது பங்கு என்ன? மனித வாழ்வில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை இறைநீதியோடு ஒத்துப்போகச் செய்ய முடியுமா? நாம் காணும் தீமை மிக்கதாகத் தோன்றும் உலகில் இறைவன் எல்லாம் வல்லவரா? நீதியுள்ளவரா? அவர் உலகம் நடத்தும் விதம் சரிதானா? ஒழுக்கம், நேர்மை மிக்க வாழ்வு வாழ முயலுவதின் பயன் என்ன? பயன் கருதாது இறைவனுக்குப் பணி செய்ய வேண்டுமா? இவை, மனித நிலையில், உண்மைகளைச் சிந்தித்துப் பார்க்கும் எவருக்கும் காலந்தோறும் மன உலைவு தரும் கேள்விகளாகும். குறிப்பாக, இவை பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய இஸ்ராயேல் ஞானிகளை மிகவும் பாதித்தன. அதன் விளைவு யோபுநூல் என்னும் ஒரு மிக உன்னதமான இலக்கியப் படைப்பாகும். யோபு நூலின் ஆசிரியர் மேற்கூறப்பட்ட கேள்விகளோடு போராடி, தனது கால இஸ்ராயேலரின் விசுவாச உதவியோடு தம்மால் கூடிய விடையைக் காண முயலுகிறார். அதை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறார். இந்நூல், ஆசிரியரது சொந்த ஆழ்ந்த அனுபவத்தின் விளைவாகும். ஆசிரியரது கவித்தன்மை மிகச் சிறப்பாய்

இருப்பது போல், அவர் எடுத்துக் கொள்ளும் பிரச்சனையும் மிகச்சிறப்பானது; மிகப் பெரியது. துன்பம், குறிப்பாகக் குற்றமற்றோரின் துன்பம், எந்த மனிதனையும் பாதிக்கக்கூடியது. ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் தொட்டு எதிரொலி உண்டாக்கவல்லது. ஆசிரியர் இப்பிரச்சனையோடு அனுபவ முறையில் போராடி, தமது சொந்த ஆழ்ந்த அனுபவத்தை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

2. பெயர்: யோபு என்ற பெயர் ''இய்யோப்'' அல்லது ''ஹியோப்'' (Iyyobh) என்ற எபிரேயப் பெயரிலிருந்து வருகிறது. இச்சொல்லுக்கு என்ன பொருள் என்பது உறுதியாகத் தெரியவில்லை. இதற்குப் ''பகையாளி, எதிரி'' என்று பொருள் கொடுக்கலாம். இது யோபு இறைவன்பால் காட்டும் எதிரி மனப்பான்மையை அடையாளமாக எடுத்துக் காட்டலாம்.

இச்சொல்லுக்குப் ''பகைப்பட்டவர், கொடுமைப்படுத்தப்பட்டவர்'' என்றும் பொருள் கூறலாம். இது யோபு அனுபவித்த துன்பங்களைச் சுட்டலாம். இச்சொல்லின் அராபிக் அடிச்சொல், ''திரும்புதல், மனத்துக்கப்படுதல்'' என்ற பொருளைக் கொடுக்கவல்லது. இதன்படி, நூலின் முடிவில், உண்மையாக மனத்துக்கம் கொள்ளும், மனந்திரும்பும் யோபுவைக் காண்கிறோம்.

இப்போது யோபு என்னும் சொல் முதலில் இந்நூலைக் குறிக்கும். அடுத்து ஒரு பழங்காலப் பெருந்தலைவரைக் குறிக்கும். இவர் இஸ்ராயேல் பாரம்பரியத்திலும், பிற இனப் பாரம்பரியங்களிலும் இடம் பெறுகிறார். மூன்றாவதாக, யோபு என்பது நூலின் ஆசிரியரைக் குறிக்கும். இவர் உடலிலும், உள்ளத்திலும் கடும் வேதனை அனுபவித்தவராகத் தோன்றுகிறார். இந்தச் சொந்த அனுபவத்தை அழகிய காவிய நயத்தோடு எடுத்துக் கூறுகிறார்.

3. ஆசிரியர்: இந்நூலை எழுதியவர் யார்? அவர் எங்கு வாழ்ந்தார்? இக்கேள்விகளுக்கு உறுதியாகப் பதில் கூற முடியாது. ஆனால், உரையாடல் பகுதி இந்நூலுக்குப் பின்னணியாகப் பாலஸ்தீனத்துக்குத் தென்கிழக்கிலுள்ள ஏதோம் நாட்டையும், அதை அடுத்த பகுதிகளையும் சுட்டுகிறது. யோபுவின் நண்பர்களில் ஒருவரின் பெயரான எலீப்பாசு என்பது ஏசாவின் மரபுக்கொடியில் வருகிறது *(ஆதி 36:4.11)*. ஏசா ஏதோமோடு தொடர்புடையவர் *(32:3)*. பால்தாது என்ற பெயர் ஏசாவின் மற்றொரு வழித்தோன்றலின் பெயராகும் [*(36:27)*. பல்தாது, பில்தாது என்ற பெயரின் எழுபது நூல் வடிவமாகும்]. சோப்பாரின் ஊராகிய நாமா, ஏதோம் நாட்டை அடுத்த ஆராம் நாட்டைச் சேர்ந்ததாகும். யோபுவின் நண்பர்கள் ஞானத்திற்குப் புகழ் பெற்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் (ஒப 8) என்று காட்ட ஆசிரியர் விழைவதாகத் தெரிகிறது. ஊசு *(யோபு 1:1)*, தேமான், சூகா, நாமா *(2:1)* ஆகிய ஊர்கள் இப்பகுதியைச் சேர்ந்தனவாக இருக்கலாம். ஆகவே, ஆசிரியரும் ஏதோம் நாட்டில் வாழ்ந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. ஆசிரியர் அதே நாட்டைத் தம் நூலுக்குப் பின்னணியாக அமைப்பதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

ஆசிரியர் நகர வாழ்க்கையை அறிந்திருக்கிறார் *(19:13 தொ; 24:10.12.16; 29:7தொ; 30:28; 31:2)*; வறண்ட பாலை நிலத்தையும் அதில் காணப்படும் செடி தழைகளையும் தின்று, இடர் செறிந்த நிலையற்ற வாழ்வு வாழும் மக்களையும் தெரிந்திருக்கிறார் *(30:40 தொ)*; பாலைவனத்தைக் கடந்து செல்லும் அனுபவத்தை உணர்ந்துள்ளார் *(38:26-27)*; பெடுயீனர் இனத்தையும் அவர்களது கொள்ளையடிக்கும் தொழிலையும் அறிந்திருக்கிறார்; ஏதோமையும் *(1:1தொ)* அதன் பாலைவனச் சோலைகளையும் தெரிந்திருக்கிறார். இவை ஆசிரியர் ஏதோம் நாட்டுக்குப் பழக்கப்பட்டவர் என்று காட்டுகின்றன.

ஆயினும், நூலின் இறுதி வடிவத்தில், நாடோடித் தன்மையும் முதியவர்களைத் தலைவர்களாகக் கொண்ட வாழ்க்கை

அமைப்பும், ஆசிரியரது பயண அனுபவங்களிலிருந்து, பின்னப்பட்ட பின்னணியாகவே அமைகின்றன. இவ்வாறு, இவர் பல காரியங்களை நினைவு படுத்தி உயிர்ச் சித்திரமாக விவரிக்கின்றார். சான்றாக, மணலில் குட்டி போட்டு அதை வளர்க்கும் பெண் மான்கள் (39:1-4), புல் வெளியில் அலைந்து திரியும் காட்டுக் கழுதை (38:5-8), தீக்கோழியின் பழக்க வழக்கங்கள் (30:30; 39:13 தொ), குள்ள நரி (30:29) ஆகியவற்றை எடுத்துக் காட்டலாம்.

ஆசிரியர் பல இடங்களுக்குப் பயணம் செய்திருப்பதாகத் தெரிகிறது. கனிமப் பகுதிகளையும், கனிமத்தொழிலையும் அறிந்திருக்கிறார். இது சீனாய்ப் பகுதியையோ, அனேகமாக அக்காபாவிலுள்ள செம்புக் கனிமப் பகுதியையோ சுட்டலாம் (28:2). எகிப்தையும், அதன் பிரமிடுகளையும் அடக்கம் செய்யும் இடங்களையும் (3:14; 18:21), அதன் செல்வமிக்க பகுதிகளையும் (3:15), அடிமைகளையும், சிறை அதிகாரிகளையும் (3:18; 7:1-2), நாணலையும், புல்லையும் (8:11), நைல் நதியையும், அதன் ஓடைகளையும் (9:26), பெருவெள்ளம் எடுத்து ஓடும் ஆறுகள் வறண்டு போதலையும் (14:11) நன்கு நினைவு வைத்திருக்கிறார். நீர் யானை, லெவியாத்தான் ஆகிய விலங்குகள் பாலையும், மலைகளும் கொண்ட ஏதோமில் காணப்படக்கூடியவையல்ல. இவை நைல் நதிப் பகுதிகளைச் சேர்ந்தவையாகும். இவையெல்லாம், ஆசிரியர் எகிப்தில், குறிப்பாக அலக்சாந்திரியாவில் வாழ்ந்திருக்கலாம் என்று கருதத் தூண்டியுள்ளன.

மேற்கூறப்பட்ட பயணக்குறிப்புகள் எபிரேய இலக்கியங்களுக்குப் புறம்பானவை. ஏனெனில், இவ்விலக்கியங்கள் பெரும்பாலும் பாலஸ்தீனத்தைப் பற்றியவையே. ஆகவே, யோபு நூலின் ஆசிரியரிடம் ஒரு வகை அயற்பண்பும், கலப்புத் தன்மையும் காணப்படுகின்றன. அவர் மேன்மை மிக்க கவியாக மாறுமுன் அதிகம் பயணம் செய்தவராகவும் சிந்தனை மிக்கவராகவும் இருந்திருக்க வேண்டும் என்று நூல் சுட்டுகிறது.

ஆசிரியர் பாபிலோனில் வாழ்ந்தவர் என்று கூறுவோருமுள்ளனர். ஆசிரியர் எங்கு வாழ்ந்திருக்கக்கூடும் என்பது பற்றி உறுதியாக ஒன்றும் தெரியவில்லை. அவர் ஒரு யூதர் என்பது இப்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். ஏனெனில், நூலின் மையப் பிரச்சனையும் கருத்துக்களும் அவற்றின் பின்னணியும் நாடு கடத்தலுக்குப் பின் பாலஸ்தீன யூதர்களிடையே நிலவியவையாகும். நூலில் வரும் யோபுவைப்போல், ஆசிரியரும் ஓரளவு துன்புற்றிருக்கக்கூடும். ஆகவே, நூல் ஒரு வகையில் ஆசிரியரின் ஆன்மீக வரலாறு ஆகும். யோபு நூலின் ஆசிரியர் ஒரு தொழுநோயாளி என்று சிலர் கருதுவர். சிலர் யோபுவே இந்நூலின் ஆசிரியர் என்பர். இதற்கு ஆதாரமாக அதி. 3—31; 32-37 ஆகிய பகுதிகளை ஒப்பிட்டுக் காண்பிப்பர். அதி. 3-31 என்ற பகுதி யோபுவோடு ஒத்துணர்வைக் கொண்டுள்ளது. ஆனால், அதி. 32-37 என்ற பகுதி உண்மையிலேயே நல்ல காலத்தையும் துன்பக் காலத்தையும் ஆழ்ந்து அனுபவித்த, தமது மாசற்ற தன்மையை உறுதியாக நம்பின ஒருவருடைய சொந்த அனுபவத்தை - நினைவு கூர்வதாய் அமைந்துள்ளது. ஆனால், இத்தகைய வாதம் உறுதியாக அமையவில்லை.

4. காலம்: இந்நூல் தோன்றிய காலத்தைப் பற்றித் தோராயமாகத்தான் கூற முடியும். இந்நூல் கி.மு. 600-300-க்கு இடையிட்ட காலத்தில் தோன்றியதாகச் சிலர் கூறுவர். இதைவிட கி.மு. 600-450-க்கும் இடையிட்ட காலத்தைக் குறிப்பது மேல். ஏனெனில், இஃது இஸ்ராயேலர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுதலும், பாபிலோனிலிருந்து திரும்புதலும் நிகழ்ந்த காலமாகும். நாடு கடத்தலுக்குப் பின்புதான் இஸ்ராயேலின் ஞான இலக்கியங்கள் தோன்றின என்பதை வாசகர்கள் மனதில் கொள்ள வேண்டும். அப்போது எரேமியா, எசேக்கியேல் போன்ற இறைவாக்கினர்களின் சில கருத்துக்கள் இஸ்ரா

யேல் மக்களிடையே இதுவரை நிலவிய கூட்டமைப்பு நன்னெறியில், ஓர் இக்கட்டான நிலையை உண்டாக்கின. வாழ்வில் நடைமுறை நிகழ்ச்சிகளுக்கும், பாரம்பரியப் போதகமான வினைப்பயன் கோட்பாட்டுக்கும் உள்ள நடைமுறை முரண்பாட்டிலிருந்து எழும் உள்ளார்ந்த போராட்டம் நாடு கடத்தலுக்குப் பின்புதான் கடினமான வடிவம் எடுத்தது. எரேமியா போராடிய பிரச்சனையோடுதான் (எரே 12:1-4; 20:14-18), யோபுநூல் ஆசிரியரும் போராடுகிறார். மேலும், ஆசிரியர் பல சங்கீதங்களை அறிந்திருப்பதாகத் தெரிகிறது (யோபு 7:17-ஐ சங் 8:5 ஒடும், யோபு 10:20-ஐ சங் 39:14-ஒடும் ஒப்பிடுக). ''சாத்தான்'' பற்றிய காட்சி செக் 3:1-2-இல் வருவதற்கு ஒத்ததாக உள்ளது; ஆனால் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 1 நாள் 21:1-8-இல் காணப்படுவது போல் அவ்வளவு வளர்ச்சி அடையவில்லை. இறையியலிலும் நடையிலும், யோபு நூல் உப எசாயா நூலை ஒத்ததாக உள்ளது. நூலின் மொழியமைப்பில் அரமேயிக்கு, அராபிக்குப் பண்புகள் அதிகம் காணப்படுகின்றன. தனி நபர்க்கும் இறைவனுக்குமுள்ள உறவு பற்றிய போதகத்தைப் பொருத்தமட்டும், இந்நூல் பழமொழி நூலுக்கும் திருவுரையாளர் நூலுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகத் தெரிகிறது (சீரா 49:9). யோபு 15:19-இல் வரும் குறிப்பு தெளிவில்லாமல் உள்ளது. அஃது எழுத்தாளர்களின் திரித்துரையாக இருக்கலாம். எசே 14:12-20 இந்நூலைக் குறிக்கவில்லை; யோபு என்ற ஒரு பழங்காலத் தலைவரைப் பற்றிய பொதுப்பணிப் பாரம்பரியத்தைச் சுட்டுகிறது.

இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு பெரும் ஆய்வாளர்களோடு சேர்ந்து இந்நூல் அனேகமாக கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ, முடிவிலோ, 4-ஆம் நூற்றாண்டின் முடிவிலோ தோன்றியிருக்கக் கூடும் என்று ஏற்றுக்கொள்ளலாம். ஒரு வேளை இறைவாக்கினர் மலாக்கியா காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். ''நீதியின் கடவுள் எங்கே?— கடவுளுக்கு ஊழியம் செய்வது வீண்; அவரது திருமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதாலும் — நமக்கு என்ன பயன்?'' (மலா 2:17; 3:14) என்ற அவநம்பிக்கை மிகுந்த கேள்விகளுக்குப் பதிலாக இந்நூல் தோன்றியிருக்கலாம்.

5. அயல் பாதிப்பு: யோபு, பழங்கால மேற்காசியப் பாரம்பரியங்களில் வரும் ஒரு குலமூதாதையராகவோ, இனத்தலைவராகவோ, ஞானியாகவோ இருந்திருக்கக் கூடும். இத்தகைய பாரம்பரியத்தை இஸ்ராயேலிலும், அதை விட காலத்தால் முந்திய மெசபொத்தாமியாவிலும், எகிப்திலும் காண்கிறோம். ஆகவே, யோபுவை வரலாற்றைச் சேர்ந்த ஒருவராகக் கருதுவோரும் இருந்துள்ளனர். இவ்விதமே திருச்சபைத் தந்தையர்களில் சிலர் நம்பினர். ஆகவே, யோபு நூலை ஒரு வரலாற்று நிகழ்ச்சியுரையாகவே ஏற்றுக்கொண்டனர். ஆனால், நாம் கொண்டிருக்கும் வடிவில் இந்நூல் ஆசிரியருடைய கலைப்பண்புடைய படைப்பாகும். அதில் ஆசிரியர் தாம் கூற விரும்பும் செய்திக்குப் பழங்காலத் தலைவராகக் கருதப்பட்ட யோபுவை ஒரு கருவியாகப் பயன் படுத்தியுள்ளார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தப் பழங்கால ஆளான யோபு, எசே 14:12-14.19-20 என்ற பகுதியில் குறிக்கப்படுகிறார். இப்பகுதி நோவா, தானியேல், யோபு ஆகியோரைப் பற்றிப் பேசுகிறது. தானியேல் என்ற பெயர் கி.மு. 1400-ஐ ஒட்டிய உகாரித்து ஏடுகளில் காணப்படுகிறது (தானேல் என்ற பெயர் யூதர்களிடையே தானியேல் ஆனது. உகாரித்து இப்போது ராஸ்சம்ரா என்று அழைக்கப்படும் இடமாகும்.) பெனிசியத் தானேலும், ஏதோமின் யோபுவும் தொடர்புடையவர்களாகத் தெரிகிறது. இந்த இருவரும் வரலாற்றைச் சேர்ந்த ஆட்களாகத் தெரிகிறது. தானேல் ராஸ்சம்ரா ஏடுகளிலும், யோபு எபிரேய ஞான இலக்கியத்திலும் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர். இருவரும் நீதிமான்களாகவும், ஞானிகளாகவும் விவரிக்கப்படுகின்றனர். ஆனால், தானேல்

தம் ஒரே மகனை இழக்கிறார். யோபு தமது பிள்ளைகளையெல்லாம் இழக்கிறார்.

மேற்காசியப் பழங்கால ஏடுகளை ஆராயும்போது யோபு நூலுக்கு முன்னோடியாக இருந்திருக்கக்கூடிய இலக்கியங்களைக் காண்கிறோம். யோபுவின் கருத்துத் தலைப்பைக் கொண்ட நூல்களை மெசபொத்தாமியாவிலும், எகிப்திலும் காண்கிறோம். ''ஞானத்தின் ஆண்டவரைப் போற்றுவேன்'' (I will praise the Lord of Wisdom) என்று தொடங்கும் பாபிலோனியப்பாடல் யோபு நூலுக்கு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இஃது ஒரு தனியுரையாகும். பாடலின் தலைவன் பலவாறு துன்புறுகிறான். காரணம் தெரியாது திகைக்கிறான். கடவுள்பால் செய்ய வேண்டியவற்றில் முழுப்பற்றுறுதியாக இருக்கிறான். ஏன் மார்துக்கு என்ற அவனது கடவுள் கோபம் கொள்ள வேண்டும்? இப்பிரச்சனையோடு போராடுகிறான். இறுதியில் மார்துக்கு என்ற அவனது கடவுள் அவனது துன்பங்களிலிருந்து விடுதலை அளிக்கிறார். இந்நூல் கி.மு. 1500 - 1200-ஐ இடையிட்ட காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும். நூலின் ஆசிரியர் நீதிமானின் துன்பம் என்ற பிரச்சனையோடு போராடுகிறார். அதற்கு எந்த விடையையும் காணவில்லை. அவர் கூறக்கூடியதெல்லாம், ''கடவுள் தண்டித்தார், அவரே குணமாக்கக்கூடியவர்'' என்பதே. ''பாபிலோனிய இறைப்போதகம்'' (Babylonian Theodicy) என்ற நூலும், யோபுவில் காணப்படுவது போன்று, துன்புறும் ஒருவருக்கும் அவரது நண்பருக்குமிடையே நடக்கும் உரையாடலைக் கொண்டுள்ளது.

கி.மு. 1700-ஐ ஒட்டிய சுமேரிய நாட்டுப் பழங்கால ஏடுகளும் துன்பம் என்ற பிரச்சனையை மையக்கருத்தாகக் கொண்டுள்ளன. இதே காலத்தைச்சேர்ந்த அக்காதிய ஏடுகளிலும் இப்பிரச்சனை சிறப்புப் பெறுவதைக் காணலாம். எகிப்திலும் யோபு நூலைப் போன்ற இலக்கியங்கள் காணப்படுகின்றன. கி.மு. 1800-ஐ ஒட்டிய ''வாழ்வில் சோர்வுகண்ட ஒருவன் - தன் ஆன்மாவோடு உரையாடுதல்'' என்ற பொருளுடைய நூல் (Dispute of a man, weary of life with his soul) ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். எபிரேயக் குலத் தலைவர்கள் எகிப்தில் நாடோடி வாழ்க்கை நடத்திய காலத்தில், இந்நூல் தோன்றியதாகக் கருதப்படுவது கவனிக்கத் தக்கது. இந்நூல் யோபு நூலோடு பல விவரங்களில் ஒத்திருக்கிறது. யோபுவின் கதை போன்ற எடுத்துக்காட்டுகள் கிரேக்க, இத்திய இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

யோபுநூல் பழங்கால மேற்காசிய நூல்களை ஒத்திருப்பதாகத் தோன்றுவதை எவ்வாறு மதிப்பீடு செய்வது? பிறஇன இலக்கியங்களுக்கும் யோபு நூலுக்குமிடையேயுள்ள ஒத்த தன்மை தலைப்புக் கருத்தைப் பொருத்தமட்டும் சரியாகும். ஆனால், இவற்றைத் தழுவியோ, சார்ந்தோ யோபு நூலின் ஆசிரியர் எழுதியதாகத் தெரியவில்லை. யோபு ஆசிரியர் திடீரென்று துன்பம் பற்றிய பிரச்சனையை எழுப்பவில்லை. அவருக்கு வெகு காலத்திற்கு முன்பே பக்தியும் சிந்தனை ஆற்றலுமுடைய ஆசிரியர்கள் யோபுவைப் போல் துன்பப்பட்ட ஒரு நல்லவரின் அனுபவத்தை இலக்கிய வடிவில் எடுத்துக் கூறியுள்ளனர் என்று அறிகிறோம். இவற்றில் சிலவற்றை யோபு நூலின் ஆசிரியர் அறிந்திருக்கலாம். இவை அவருக்கு முன்மாதிரியாக அமைந்திருக்கலாம். எபிரேயப் பாரம்பரியத்திலேயே, குற்றமற்ற யோபு என்ற ஒருவர் துன்புற்ற கதை இருந்ததையும் அவர் அறிந்திருக்க வேண்டும். ஆனால், இந்த நீதிமானின் துன்பம் என்ற அனுபவத்தை எபிரேய விசுவாசச் சூழ்நிலையில் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். இறையொருமைக் கொள்கை, இறைவனின் யாவும் கடந்த தன்மை போன்ற இறையியலாலும், ஆழ்ந்த மனப்போராட்டத்தை எடுத்துக்கூறும் இலக்கிய மேன்மையாலும், முன்கூறப்பட்ட பிறஇன நூல்களையெல்லாம் யோபு நூல் விஞ்சுகிறது. பிறஇன இலக்கியங்களில் எதுவும், யோபு நூலில் காணப்படும் இலக்கிய அமைப்பு, உண்மை

யான இறைபக்தி ஆகியவற்றின் கருத்துக் களைவிட உயரவில்லை. இந்நூல்களின் ஆசிரியர்களில் எவரும் உரையாடல் இலக் கிய வடிவத்தை யோபு நூலின் ஆசிரியரைப் போல் மிகச்சிறந்த முறையில் பயன்படுத்த வில்லை.

இஸ்ராயேலின் இலக்கியத் தொகுப்பி லும் இந்நூலில் காணப்படும் உரையாட லுக்கு இணையானது காணப்படவில்லை. இஸ்ராயேல் இலக்கியப் பாரம்பரியத்தில் யோபு நூலுக்கு மிக நெருங்கியவை-சங் 49; 73; 139 போன்ற சங்கீதங்களும் எரேமியாவின் சுயஅனுபவ அறிக்கைகளும் உப எசாயாவுமாகும். இவற்றை ஆசிரியர் நன்கு அறிந்திருக்க வேண்டும். இவற்றால் அவரது சிந்தனைப்போக்கு பெரிதும் பாதிக் கப்பட்டிருக்க வேண்டும். இவற்றை யோபு நூல் பிரதிபலிக்கிறது. முழுநூலும் விவிலி யத்தின் பிற பகுதிகளோடு தொகுக்க முடியாத தனிச்சிறப்புடையது.

6. நூலின் மூலமொழி: இந்நூல் முதலில் எந்த மொழியில் தோன்றியது என்பது பற்றிய பல கருத்துக்களைத் தொகுத்துத் தருகிறோம். இந்நூல் ஏதோமோடு தொடர் புடையது. இஃது ஏதோமின் புகழ் பெற்ற ஞானத்தை எதிரொலிக்கிறது. ஆகவே, ஆசிரியர் ஒரு யூதர் அல்லர், ஓர் ஏதோமி யரே என்று சிலர் கூறுவர். இந்நூலும் அம்மொழியில் முதலில் தோன்றியிருக்க வேண்டும். ஏதோம் மொழிபற்றி நாம் அறியக்கூடியது வெகு சிறிதே. இம்மொழி கானானியர் மொழியின் ஒரு திரிபாகும். ஆகவே, மற்றக் கானானியத் திரிபுமொழி களாகிய எபிரேய, அம்மோனிய, மோவா பிய மொழிகளை ஒத்திருக்க வேண்டும். ஏதோம் மொழியைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரியும்வரை இக்கருத்துக் களை மதிப்பீடு செய்யக் காத்திருப்பதே நன்று.

மற்றும் சிலர், இந்நூல் முதலில் அரா பிக்கு மொழியில் எழுதப்பட்டுப் பின் எபிரேய மொழியில் மொழி பெயர்க்கப் பட்டது என்பர். இதற்கு ஆதாரமாக, நூலில் காணப்படும் பல சொற்கள் எபிரேய மொழியில் காணப்படாமையால், அவை அராபிக்கு வடிவில் விளக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுவர். இதையே மற்றும் சில விவிலிய நூல்களுக்கும் உகாரித்து வாசகங்க ளுக்கும் கூறலாம். இந்தக் கருதுகோளுக்கு மொழியியல் சான்றுகள் போதிய அளவு இல்லை.

இந்நூலில் அரமேயிக்குப் பண்புகள் அதி கம் காணப்படுகின்றன. யாப்பு இணை யமைப்பில், எபிரேய அரமேயிக்குச் சொற் கள், அருகருகே, ஒரு பொருள் பல சொல்லாக அடிக்கடி காணப்படுகின்றன. இந்த அரமேயிக்குக் கலப்பு, விவிலியத்தின் மற்ற நூல்களை விட யோபு நூலில்தான் அதிகம் காணப்படுகின்றது. இது அரமே யிக்கிலிருந்து பாதியளவில் மொழி பெயர்க்கப்பட்ட நூலாகும் இந்நூல் என்று கூற, சிலரைத் தூண்டியுள்ளது. இந்த மொழி பெயர்ப்பாளர், வேண்டிய அளவு மட்டும் மாற்றியமைத்து அரமேயிக்குப் பாடல் எபிரேயம் பேசும் மக்களுக்குக் கிடைக்கச் செய்துள்ளார் என்பர். இவ்வாறு மூல அரமேயிக்குப் பண்புகள் சொற்றொகு தியிலும், இலக்கண அமைப்புகளிலும், ஓசைக்கூறுகளிலும் காணப்படுகின்றன. அர மேயிக்கு மூலத்தை எழுதியவர் பாபிலோ னைச் சேர்ந்த கி.மு. 6-ஆம் நூற்றாண்டுக்கு முந்திய ஒரு யூதராய் இருக்க வேண்டும். இவர் நாடு கடத்தப்பட்ட காலத்திய தொடக்கத்தில் ஒரு பழங்கதையை அடிப் படையாகக் கொண்டு இந்நூலை எழுதி யிருக்க வேண்டும். இதைச் சில தலை முறைகளுக்குப் பின், பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஒரு யூதர் வேண்டிய திருத்தங்கள் செய்து பதிப்பித்திருக்க வேண்டும் என்பர். ஆனால், இந்தக் கருதுகோள் போதிய நிறைவைக் கொடுக்கவில்லை. ஆகவே, இதையும் ஆய்வாளர்கள் ஏற்பதில்லை. ஆனால், இந்நூலில் காணப்படும் அரமே யிக்குப் பாதிப்பை ஏற்றுக்கொள்வர்.

இந்நிலையில், இந்நூலின் மூலமொழி எபிரேயம் என்றும், அம்மொழியில் உள்ள வாசகத்தை ஏற்றுக்கொள்வதும் சரியானதா

கும். இந்த மூல மொழிப்பிரச்சனை பற்றி ஆய்வாளர்கள் ஒரு நிலையான நிறைவான முடிவுக்கு வரும்வரை காத்திருப்போம். ஆனால், இப்படிப்பட்ட பிரச்சனை ஒன்று உளது என்பதை அறிந்திருப்பது நன்று.

7. இலக்கியச் சிறப்பு: இந்நூல் விவிலிய இலக்கியங்களுள் மிகச்சிறந்தவற்றின் ஒன்றாகும். இந்நூலின் ஆசிரியர் மிகப்பெரிய கவிஞர்களில் ஒருவராகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவார். நூலின் மையக் கருத்து, அதை ஆசிரியர் எடுத்துக்கூறும் முறை, அவரது காவியச்சிறப்பு, மொழி நடை ஆகியவை காலந்தோறும் பலரைக் கவர்ந்துள்ளன, சிந்திக்கச் செய்துள்ளன.

இந்நூல் ஒரு போதகநூல். மிகக்கொடிய துன்பங்கூட முன்பாவத்தின் விளைவாக இருக்க வேண்டியதில்லை என்பதை நூல் நிறுவுகிறது. நிலையான பொறுமை, இறைவனது திருவுளத்துக்குப்பணிவு, இறுதியிலாவது அதற்கு அமைந்து நடப்பது ஆகிய உண்மையான இறைபக்தியை எடுத்துக் கூறுகிறது. இது கிறிஸ்தவர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது. இவர்கள், யாக்கோபின் திருமுகத்தைப் பின்பற்றி (யாக் 5:1) காலந்தோறும் யோபுவின் பொறுமையைச் சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

இந்நூல் ஒரு நாடகமாகும் என்று சிலர் கூறியுள்ளனர். சிலர் இதை மறுத்துக் கூறியுள்ளனர். நாடகம் என்றவுடன் மேடையையும் புறநடிப்பு இயக்கத்தையும் நாம் எதிர்பார்க்கலாம். நாம் சாதாரணமாய் எடுத்துக்கொள்ளும் நாடகம் என்பதன் குறுகிய பொருளில் இந்நூல் நாடகமாகாது. அதன் பரந்த பொருளில் இந்நூல் ஒரு உளவியல் நாடகமாகும். இது நடித்துப் பார்க்கும் நாடகமன்று. படித்துச் சிந்திக்கச் செய்யும் நாடகமாகும். இதிலே தொடக்கம், நடுப்பகுதி, முடிவு ஆகியவை உண்டு. இதிலே உள்ளார்ந்த இயக்கம் இருக்கிறது. நாடகத்தில் பங்கெடுப்போரின் குணவியல்பில் வளர்ச்சியுண்டு. முன்னுரை மேடை அமைக்கிறது.யோபுவின் தனிப்புலம்பலோடு நாடகம் தொடங்குகிறது. பின், உரையாடல் வழியாகப் போராட்டம் வளர்ந்து, யோபுவின் இறுதிப்பேச்சில் உச்ச நிலையை நோக்கி இயங்குகிறது. இறைவனது தோற்றத்திலும் பேச்சிலும் உச்ச நிலை அடைகிறது.போராட்ட விடுவிப்பு யோபுவை மனம் வருந்தி இறைவனைச் சரண் அடைந்தவராகவும், நண்பர்களைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகவும் காட்டுகிறது. முடிவுரை நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறது. இந்த நாடகத்தில் போராட்டம், உச்சநிலை, முடிவுரை ஆகியவை உண்டு. நாடக இடக்கம் புறநடிப்பில் இல்லை. மாறாக, நடிகர்களின் பேச்சுக்களில், அவர்களின் மனஉணர்ச்சி வெளிப்பாட்டில் வளர்கிறது. ஆசிரியர் தமது கருத்துக்களைக் கூற யோபுவையும், நண்பர்களை எதிர்கட்சியாளர்களாகவும் பயன்படுத்தியுள்ளார். இது துன்பம் என்னும் பிரச்சனை பற்றிய இந்த உளவியல் நாடகத்திற்குக் கூர்மையையும் பல்சுவையையும் அளிக்கிறது. நூலின் மையமான உரையாடலில் போதிய அளவு உள்ளார்ந்த நடிப்பு உள்ளது. இந்த அடிப்படையில் இந்நூலை ஓர் உளவியல் நாடகம் எனலாம்.

இந்நூல் ஒரு பெரிய காவியமாகும். இதில் குறுகிய உரைநடைப்பகுதிகளும் நீண்ட பாடல் பகுதிகளும் உண்டு. இவை நூலின் காவியப்பண்புகளையும், அதற்குரிய ஆசிரியச் சுதந்தரத்தையும் காட்டுகின்றன. முன்னுரையிலும், முடிவுரையிலும் நிறைவைக் குறிக்கும் எண்கள், முன்னுரையில் வரும் வானகக் காட்சிகள், உரையாடல்கள், யோபுவுக்கு அவருடைய உடைமைகளின் அழிவுபற்றிய செய்தியைத் தூதர்கள் கொண்டுவரும் முறை, உரையாடலில் பங்கு பெறுவோரின் குணவியல்புகளைச் சித்திரிக்கும் முறை, உரையாடலின் முடிவில் சுழல்காற்றிலிருந்து வெளிப்படும் இறை மகிமைத் தோற்றம், நூலில் காணப்படும் சொற்றொகுதிகள், நடை - இவை யாவும் நூலின் காவியச்சிறப்பையும் ஆசிரியர் காட்டியிருக்கும் கவிஞனுக்குரிய இலக்கியச் சுதந்தரத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

இந்நூல் ஒரு போதகநூல், நாடகநூல், காவிய்நூல் என்று கூறப்படுவனவற்றில் எதுவும் தனியாகவோ, எல்லாம் சேர்ந்தோ, — இந்நூலின் தன்மையை விளக்கவில்லை. இந்நூல் ஒரு தனிவகையானது, தனிச்சிறப்பு டையது. இதையொத்த நூல் விவிலியத்தில் வேறு இல்லை.

இனி, நூலில் காணப்படும் சில இலக்கிய வடிவங்களைப் பார்ப்போம். நூலின் பாடல் பகுதியில் பாதிக்கு மேல் போற்றுரைப்பாடல் மற்றும் புலம்பல் வடிவங்களைக் கொண்டுள்ளது. யோபுவின் பேச்சுக்களில் பல அழகிய போற்றுரைப் பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றிற்குச் சில சான்றுகள் - 9:4-12; 12:13-25; 26:5-14. நண்பர்களின் பேச்சிலும் சில போற்றுரைப் பாடல் துணுக்குகளைக் காணலாம். அவற்றில் சில: 5:9-16; 11:7-11; 25:2-6; 34:18-30. யோபு நூலுக்கும் சங் 104-க்கும் குறிப்பிடத்தக்க தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. சங். 104:6-9-ஐ,யோபு 38:8-11-ஓடும், சங் 104:21-27-ஐ, யோபு 38:39-41-ஓடும், சங் 104:30-ஐ, யோபு 12-10-ஓடும், சங் 104:32-ஐ யோபு 9:5; 26:11-ஓடும் ஒப்பிடுக. சங் 104 சூரியனுக்குப் பாடப்பட்ட எகிப்தியப் பாடலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் மேற்காசியப் பகுதிகளில் பலரால் அறியப்பட்டிருக்க வேண்டும்.

யோபுவின் உரைகளில் பெரும்பகுதி புலம்பல் வடிவத்தில் உள்ளன. 3:3-24; 6:2-7; 9:25-10:22; 13:23-14:22; 16:6-17:9; 19:7-20:23; 29:1-31:37. இப்புலம்பல் வடிவம் வெறும் பேச்சு யுக்தியன்று. ஒருவர் தனது துன்பத்தின் கொடுமையை எடுத்துக் கூறி, இறைவனது இரக்கத்தை எழச்செய்து, தமக்கு விடுதலை அளிக்கும்படி மன்றாடுதலாகும். இது பாடல் வடிவிலுள்ள குணமாக்குதல் வழிபாடாகும். இவ்வடிவம் மெசபொத்தாமிய இலக்கியங்களில் அதிகம் காணப்படுகிறது. இவ்வடிவத்தை யோபு நூல் ஆசிரியர் நிறைவாகப் பயன்படுத்தியுள்ளார். இப்புலம்பல்களுக்கு ஒத்த சங் 22:12-19; 38; 88 ஆகிய சங்கீதங்களைக் காண்க.

பழைய ஏற்பாட்டில் உரையாடல்களுக்குப் பல முன்மாதிரிகைகள் உண்டு. அவற்றில் சில: ஆதி 18:22-32; 23:3-16; யாத் 3:2-4:17; எசா 6; எரே 1:1-10; ஆமோ 7:1-9; 8:1-3. இவற்றைப் பின்பற்றி ஆசிரியர் தமது உரையாடலை அமைக்கிறார். பழைய ஏற்பாட்டில் காணப்படும் எந்த மாதிரிகையையும் கடந்து சென்று, யோபு நூல் ஆசிரியர் ஒரு கருத்தை மையமாகக் கொண்டு தமது உரையாடலை அமைத்துச் சிறப்புப் பெறுகிறார்.

நூலில் இங்குமங்குமாகப் பல முதுமொழிகள் காணப்படுகின்றன. அவற்றில் சில: 4:8-11; 5:1-7; 8:11-19; 11:12; 12:11-12; 14:1-2; 15:17-35.

நல்ல சமாரியனைப்போல், யோபுவும் உலகின் பொதுச்சொத்தாக ஆகிவிட்டார் எனலாம். இது வரலாற்றைச் சேர்ந்தவர் யோபு என்று கருதச் செய்துள்ளது. இஃது இந்நூலின் சிறப்பைக் காட்டவல்லது. யோபு என்ற ஒருவர் வாழ்ந்திருக்கக்கூடும் என்பதற்கு எசே 14:12-20 என்ற பகுதி ஆதரவு அளிக்கிறது என்பர் சிலர். இக்கூற்றில் பெருவெள்ளக்கதையின் தலைவரான நோவாவோடும், கி.மு. 1400-க்கு முன் வாழ்ந்ததாக உகாரித்துப் பழங்கதையில் வரும் அரசனான தானேலோடும் யோபு சமமாகக் கருதப்படுகிறார். ஆனால், ஆசிரியர் யோபுவின் கதையை ஒரு கதையாகவே கூறுகிறார். துன்புறும் நீதிமானுக்கு எடுத்துக்காட்டாக யோபுவின், கதையைச் சித்திரிக்கிறார் என்பது நூலின் அமைப்பிலும் தொனியிலும் வெளிப்படுகிறது.

இந்நூல் வாசிப்பதற்கு அவ்வளவு எளிதானதன்று. அதே கருத்துக்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுவதால், நூல் சிறிது அயர்ச்சி தரக்கூடியது. மேலெழுந்தவாரியாக வாசிப்பவர்களைக் கவராது, சிந்திக்கத் தூண்டாது. நூலின் ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட பிரச்சனையை மேலெழுந்தவாரியாக எடுத்துக் கூறவில்லை. அம்முறையை வெறுத்து ஒதுக்கினார். பிரச்சனைக்கு எளிதான விடை காணுதலைத்

தவிர்த்தார். ஆகவே நாமும் ஆசிரியரோடு சேர்ந்து நூலைக் கவனமாய்ப் படிக்கவேண்டும். ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அப்போதுதான் இந்நூலில் புதைந்து மறைந்து கிடக்கும் புதையலைக் கண்டெடுத்துப் பயன்பெற முடியும்.

8. மூலவாசகமும் மொழிபெயர்ப்புகளும்: நூலின் மூல எபிரேய வாசகம் பெரிதும் பழுது பட்டிருக்கிறது; நன்றாகப் பாதுகாக்கப்படவில்லை; இதைத் திருத்துவதற்குப் போதிய பிறமூலங்கள் கிடைக்கவில்லை. விவிலியத்தில் வேறெங்கும் காணப்படாத பல சொற்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இவற்றில் பலவற்றை அக்காதிய, அரமேயிக்கு, அராபிக்கு மொழிகளின் உதவியைக் கொண்டு மட்டும்தான் விளக்கமுடியும். மேலும், எபிரேய வாசகம் பல தவறான, தெளிவில்லாத, புதிரான வசனங்களைக் கொண்டுள்ளது. தலைமுறை தலைமுறையாக இது மரபுவழி ஒப்பிடப்படுவதையும் மொழிபெயர்ப்புக்களையும் வெகுவாகப்பாதித்துள்ளது. பலர் எபிரேய வாசகத்தைத் திருத்த முயன்றுள்ளனர். அவர்களிடமிருந்து நூலின் மூன்றில் ஒரு பகுதியே தப்பியுள்ளது.

மொழிபெயர்ப்புக்களில் முதலில் வருவது - கிரேக்க மொழிபெயர்ப்பாகிய ''எழுபது நூல்''—வாசகமாகும். கிரேக்க வாசகம், எபிரேய வாசகத்தைவிட, ஏறக்குறைய 400 வசனங்களை, அதாவது நானகில் ஒரு பகுதியைக் குறைவாகக் கொண்டுள்ளது. இஃது எப்படி நிகழ்ந்தது என்று தெரியவில்லை. இதிலிருந்து கிரேக்க வாசகம், இப்போதுள்ள எபிரேய வாசகத்தைவிட காலத்தால் முந்தியது என்று சிலர் கருதியுள்ளனர். இக்கருத்துக்குப் போதிய சான்றுகள் இல்லை. கிரேக்க வாசகத்தில் விடப்பட்டுள்ளவை நூலைப் புரிந்துகொள்ள எவ்விதத்திலும் உதவவில்லை; மாறாக, வாசகத்தைக் கடினமாக்கியுள்ளது. பல இடங்களில் பிரமாணிக்கமான மொழிபெயர்ப்பாக இருப்பதற்குப் பதிலாக சுருக்கமாகவோ, பொழிப்புரையாகவோ உள்ளது. இவ்விதம், ஏற்கெனவே கடினமான அல்லது தெளிவில்லாப் பகுதிகள் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சிலரது கருத்துப்படி, அலக்சாந்திரியாவைச் சேர்ந்த ஒரு யூதர் பொது மக்களுக்காகச் சுதந்தரமாக மொழிபெயர்த்தார். பிற்காலத்தில் தியோடேசியன் என்பவர் எபிரேயத்திலிருந்து முழுநூலையும் கிரேக்கத்தில் மொழிபெயர்த்தார். ஒரிசன், எழுபது நூலின் குறுகிய வாசகத்தில் காணப்படாத வசனங்களைத் தியோடேசியன் மொழிபெயர்ப்பிலிருந்து எடுத்து, எழுபதுநூல் வாசகத்தில் அடையாளக் குறிப்புடன் சேர்த்துப் பதிப்பித்தார். ஆகவே, எழுபது நூல் வாசகத்தைப் பயன்படுத்தும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால், சில இடங்களில் மூல எபிரேய வாசகத்தைத் திருத்த கிரேக்க மொழிபெயர்ப்பு உதவியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

வுல்கத்தா இலத்தீன் மொழி வாசகம், கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் புனித எரோனிமுவால், அவர் காலத்தில் வழக்கிலிருந்த எபிரேய மூலவாசகத்திலிருந்து நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டது. முடிந்த மட்டும் எபிரேய வாசகத்திற்குப் பிரமாணிக்கமாய் இருக்க முயன்றுள்ளார். கடினமான பகுதிகளில், சிலவற்றைப் பிரமாணிக்கமாகவும், மற்றவற்றைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு சுதந்தரமாகவும் மொழி பெயர்த்துள்ளார். எழுபது நூல் வாசகத்தையும் அறிந்திருந்தார். இதை இவரே இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார். எழுபதுநூல் வாசகத்தாலும் வுல்கத்தா வாசகம் பாதிக்கப்பட்டுள்ளது. வுல்கத்தா வாசகத்தில் காணப்படும் சந்தமும் மொழிநயமும் யோபுநூலின் பழங்கால மொழிபெயர்ப்புகளில் இதைச் சிறந்ததாகக் காட்டுகின்றன. யோபுநூலின் வாசக ஆய்வில் வுல்கத்தா வாசகம் உதவியுள்ளது. ஆனால், இதை மிக எச்சரிக்கையாகப் பயன்படுத்த வேண்டும். தமிழ்க் கத்தோலிக்கரிடையே பயன்படும் தமிழ் வாசகம் வுல்கத்தா வாசகத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இது 1980-இல் திருத்தப்பட்டு நம்மிடையே பழக்கத்தில் உள்ளது.

9. திட்டம்:

யோபு நூலில் கவனமாய் அமைக்கப் பட்ட இலக்கியத்திட்டம் உள்ளது.

I. முன்னுரை (1: 1-2: 13).

1) 1:1-5 : யோபுவைப் பற்றிய விவரிப்பு.

2) 1:6-12 : வானுலகில் முதற் காட்சி.

3) 1:13-22 : யோபு தன் உடைமைகளை இழத்தல்.

4) 2:1-6 : வானுலகில் இரண்டாம் காட்சி.

5) 2:7-10 : யோபுவின் உடல் வேதனை.

6) 2:11-13 : அவரது நண்பர்கள் அறிமுகப் படுத்தப்படுகின்றனர்.

II. உரையாடல் (3:1-31:40).

அ. உரையாடலின் முதற்சுழல் (3:1-14:22).

1) 3:2-26 : யோபுவின் தனியுரை.

2) 4:1-5:27 : எலீப்பாசின் முதல் உரை.

3) 6:1-7:21 : யோபுவின் முதல் பதிலுரை.

4) 8:1-22 : பில்தாத்தின் முதல் பதில் உரை.

5) 9:1-10:22 : யோபுவின் இரண்டாம் பதிலுரை.

6) 11:1-20 : சோப்பாரின் முதல் உரை.

7) 12:1-14:22 : யோபுவின் மூன்றாம் பதிலுரை.

ஆ) உரையாடலின் இரண்டாம் சுழல் (15:1-21:34).

1) 15:1-35 : எலீப்பாசின் இரண்டாம் உரை.

2) 16:1-17:16 : யோபுவின் நான்காவது பதில் உரை.

3) 18:1-21 : பில்தாத்தின் இரண்டாம் உரை.

4) 19:1-29 : யோபுவின் ஐந்தாம் பதிலுரை.

5) 20:1-29 : சோப்பாரின் இரண்டாம் உரை.

6) 21:1-34 : யோபுவின் ஆறாவது பதிலுரை.

இ) உரையாடலின் மூன்றாம் சுழல் (22:1-31:37).

1) 22:1-30 : எலீப்பாசின் மூன்றாவது உரை.

2) 23:1-24:25 : யோபுவின் ஏழாவது பதிலுரை.

3) 25:1-6 : பில்தாத்தின் மூன்றாம் உரை.

4) 26:1-27:23 : யோபுவின் எட்டாவது பதிலுரை.

III ஞானத்தைப் பற்றிய ஒரு போற்றுரை (28:1-20). ஓர் இடைச் செருகல்.

IV உரையாடலின் முடிவு (29:1:31-40). யோபுவின் புலம்பலும், தனி இறுதியுரையும்.

V எலிகூவின் உரைகள் (32:1-37:24).

1) 32:1-22 : அறிமுகமும், எலிகூவின் முன்னுரைப் பேச்சும்.

2) 33:1-30 : எலிகூவின் முதல் பேச்சு.

3) 34:1-37 : அவரது இரண்டாம் பேச்சு.

4) 35:1-16 : அவரது மூன்றாம் பேச்சு.

5) 36:1-37:24 : அவரது நான்காம் பேச்சு.

VI இறைவனின் தோற்றமும், யோபுவின் பதிலும் (38:1-42:6).

1) 38:1-39:35 : இறைவனது முதல் பேச்சும், யோபுவின் பதிலும்.

2) 40:1-42:6 : இறைவனது இரண்டாம் பேச்சும், யோபுவின் பதிலும்.

VII முடிவுரை (42:7-16).

1) 42:7-9 : நண்பர்களை இறைவன் கண்டித்தலும், அவர்களுக்காக யோபு மன்றாடுதலும்.

2) 42:10-16 : யோபு செல்வச் சிறப்புகளை மீண்டும் பெறுகிறார்.

10. நூலின் ஒருங்கமைவும் உண்மைத்தன்மையும்: இந்நூல் பற்றிய பகுப்பாய்வு நூலின் ஒருங்கமைப்பையும், உண்மைத்தன்மையையும் பற்றிப் பல ஐயங்களை எழுப்ப வல்லது. அப்படிப்பட்ட பகுதிகள்: உரைநடைப் பகுதிகள் (அதி.1-2; 42:7-16), மூன்றாவது சுழற்பேச்சுக்கள் (அதி.24-27), ஞானத்தைப் போற்றும் பாடல் (அதி.28), எலிகூவின் பேச்சுக்கள் (அதி.32-37), இறைவனின் பேச்சுக்கள் (38:1-42:6) ஆகியவையாகும். இப்பகுதிகள் மூலநூலைச் சேராதவை என்று ஆய்வாளர் சிலர் கூறுவர். இவர்களது கருத்துக்களை ஏற்றுக் கொண்டால், ஒரு சிறிய பகுதியே மூலநூலாக மிஞ்சும். இக்கருத்துக்கள் பெரும்பாலும், பல்வேறு முறைகளில் தோன்றிய பகுதிகளின் தொகுப்பாகும் இந்நூல் என்று கருதுவோரின் ஆய்வுகளாகும்.

இதற்கு மாறாக, ஏறக்குறைய நூல் முழுவதையுமே ஒரே ஆசிரியர் இயற்றினார் என்றும், இந்நூலில் ஒற்றுமையுண்டு என்றும் கருதுவர் வேறுபலர். இவர்கள், நூலின் ஆசிரியர் ஒரே கட்டத்தில் நூல் முழுவதையும் இயற்றவில்லை; பல கட்டங்களில் இயற்றி, ஒன்றிணைத்து, ஒரு குறிப்பிட்ட திட்டத்துடன் நூலுக்கு இறுதி வடிவம் கொடுத்தார் என்று கருதுவர். இவர்கள் நூலில் ஒருங்கமைப்பையும், இலக்கியக் கலைப் பண்பையும் காண்கின்றனர். இக்கருத்துக்கு எதிராக அமைந்திருப்பவை நூலில் காணப்படும் மிக உயர்ந்த தரமுடைய இலக்கியப் பண்பும், கருத்தோட்டத்தில் காணப்படும் ஒற்றுமையும் ஆகும். இவை தற்செயலாகச் சேர்க்கப்பட்ட தொகுப்பில் உண்டாவதில்லை.

இப்படிப்பட்ட ஆய்வுகளில் இறங்கும் போது நாம் மனதில் கொள்ள வேண்டியது ஒன்றுள்ளது. யோபுவின் குறிப்பிட்ட சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு சில பகுதிகள் மூலநூலைச் சேராதவை என்று கூறுவது சரியான முறையன்று. இதில் நாம் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். யோபுவின் குறிப்பிட்ட சூழ்நிலையைச் சேராத, ஆனால் அதை ஒட்டிய கருத்துக்களைக் கூற கவிஞனுக்குச் சுதந்தரம் உண்டு. அவற்றைப் பொதுக் கருத்தாக ஆசிரியர் கூறலாம்.

இந்நூல் வெறும் பேச்சுக்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. இதில் செயலும் உண்டு. இதுவும் நூலின் உண்மைத் தன்மையைச் சேர்ந்ததாகும். இதை நாம் மனதில் கொள்ள வேண்டும். உரைநடைப் பகுதிகள் நூலின் ஒன்றிணைந்த பகுதிகளாகும். இதை, ஆசிரியர், ஏற்கெனவேயிருந்த பொதுப்பாணிக் கதையிலிருந்து எடுத்து, மாற்றம் செய்தோ, செய்யாமலோ பயன்படுத்தியிருக்கலாம். ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட பிரச்சனையை இருமட்டத்தில் விடுவிக்க முயல்கிறார். அப்பிரச்சனையை, உரைநடைப் பகுதிகளில் புறமட்டத்திலும், உரையாடலில் உள்ளார்ந்த மட்டத்திலும் விடுவிக்க முயல்கிறார். உரைநடைப் பகுதிகள் மூலநூலைச் சேர்ந்தவை, உண்மைத் தன்மை உடையவை என்று ஏற்றுக்கொள்வது நன்று. உரையாடல் பகுதி மூலநூலைச் சேர்ந்ததே என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

இறைவனது பேச்சுக்கும் யோபுவின் பதிலுக்கும் இவ்வாறே கூறலாம். இதுவும் மூலநூலைச் சேர்ந்ததே. இஃது இல்லாமல், முடிவுரையோடு தொடர்பு இல்லை. இறைமகிமைத் தோற்றத்திலும் இறைவனது பேச்சிலும், இறைவன் எல்லா மனித அறிவுக்கும் அளவு கடந்த முறையில் அப்பாற்பட்டவர் என்று கண்டுணர்ந்த யோபு தமது முறையீட்டைத் திரும்பப் பெறுகிறார்; மனம் வருந்துகிறார்; மனந்திரும்புகிறார். யோபுவின் நிலை சரியானதென்று இறைவன் ஏற்றுக்கொள்கிறார். இறைவனை அவ

ருள்ளபடியே யோபு ஏற்றுக்கொள்கிறார். இது யோபுவின் திருப்பத்திற்கும் முடிவுரை நிகழ்ச்சிகளுக்கும் இட்டுச் செல்கிறது. சிலர் இறைவனது பேச்சை 40:1-4 என்ற பகுதிக்கு மட்டும் குறைக்க முயன்றுள்ளனர். அப்படி யானால் இவ்வுரை மிகக் குறுகியதாகும். யோபு, நண்பர்கள் ஆகியோரின் நீண்ட உரைகளுக்குப்பின், இக்குறுகிய உரை, அஃது இறைவனிடமே இருந்து வந்தாலும், எப்படி யோபுவைப் பணிய வைக்கிறது என்று புரிந்து கொள்வது கடினம். இப் பேச்சு, ஆற்றலுள்ள விளைவை உண்டாக்க 38:1-40:9; 42:1-6 ஆகிய பகுதிகளையாவது அல்லது அவற்றில் காணப்படும் கருத்துக் களையாவது கொண்டிருக்க வேண்டும் என்று கூறுவாரும் உளர். விலங்குகள் பற்றிய விவரிப்பு (40:10-41:23) பிற்காலச் சேர்க்கையாக இருக்கலாம். இறைவ னுடைய இரு பேச்சுக்கள், ஒரே உரையின் இரு பகுதிகளாக இருக்கலாம், அல்லது இறைவனுடைய உரைபற்றிய இரு பாரம் பரியங்கள், பிற்காலத்தில், அருகருகே ஒன்று சேர்க்கப்பட்டிருக்கலாம். இறைவ னுடைய உரையும் யோபுவின் பணிவும் மூலநூலைச் சேர்ந்தவை, உண்மைத்தன்மை உடையவை என்று ஏற்றுக்கொள்வது மேல்.

எலிகூவின் உரை (அதி.32-37), ஞானம் பற்றிய போற்றுரைப்பாடல் (அதி. 28) ஆகியவை மூலநூலைச் சேர்ந்தவையல்ல என்று இப்போது பொதுவாக ஆய்வாளர் கள் ஏற்றுக்கொள்வர். மூன்றாவது சுழற் பேச்சுக்கள் இப்போதுள்ள வாசக நிலையில் சரியான அமைப்பைக் கொண்டிருக்க வில்லை என்பதும் ஏற்றுக் கொள்ளப்படும். நூலின் மற்றப் பகுதிகளாகிய உரைநடைப் பகுதிகள், உரையாடல் பகுதிகள், இறை வனது பேச்சு ஆகியவை மூலநூலைச் சேர்ந்தவை என்று ஏற்றுக்கொள்ளப்படும். இவை யாவும் ஒரே ஆசிரியரால் இயற்றப் பட்டவை என்று கொள்வது மேல். இவை, பிற்காலச் சேர்க்கைகளோடு சேர்ந்து நூலுக்கு இப்போதுள்ள வடிவத்தைக் கொடுக்கின்றன. பிற்காலச் சேர்க்கைகளும் மூலத்திட்டத்திற்கு ஏற்றவாறு திறமை யோடும், கலைப் பண்போடும் சேர்க்கப் பட்டுள்ளன.

11. முக்கிய கருத்துக்கள்

1) இறைவனது பெயர்கள்: நூலின் பின்னணி ஏதோம் நாட்டைச் சேர்ந்ததா யினும், யோபுவும் அவரது நண்பர்களும் இஸ்ராயேல் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர் களாகவே பேசுகின்றனர். ஆகவே, இந்த அன்னியப் பின்னணி ஓர் இலக்கிய யுக்தி யாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர்.

இந்நூலில் இறைவனைக் குறிக்கப் பயன் படும் பெயர்கள் கவனிக்கத்தக்கன. முன் னுரையிலும் முடிவுரையிலும் இறைவன், ''யாவே'' (ஆண்டவர்) என்ற பெயரால் குறிக்கப்படுகிறார். ஆனால், முன்னுரையில் வரும் உரையாடலில் பங்குகொள்வோர் யாவரும் இறைவனைக் கடவுள் என்று பொருள்படும் ''எலோயீம்'' என்ற பொதுப் பெயரால் குறிக்கின்றனர் (1:8; 2:3). இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு 1:21-இல், யோபு ஆண்டவர் என்று பொருள்படும் யாவே என்ற பெயரை மும்முறை பயன்படுத்து தலாகும்.

இதற்கு மாறாக, உரையாடல் பாடல் பகுதியில் யாவே என்ற பெயர் ஒரே ஒரு தரம், அதுவும் ஓர் எடுத்துக்காட்டு வசனத் தில் வருகிறது (12:9). ''எலோயீம்'' என்ற பொதுப் பெயரும் ஒருதடவை பயன்படு கிறது. மற்றப்படி ''ஏல்'' (இறைவன்), ''எலோவா'' (என்றும் உள்ளவர்), ''ஏல்ஷ டாய்'' (எல்லாம் வல்லவர்) போன்ற மிகப்பழங்காலப் பெயர்கள் ஒரே சீராகப் பயன்படுகின்றன.

யாத் 6:2-3- இலிருந்து, இந்த ஐந்து பெயர்களும் ஒரே ஓர் இறைவனையே குறிக்கின்றன என்று காட்டலாம். இவை இறையொருமைக் கோட்பாட்டை நிறுவு கின்றன. ஆனால், இஸ்ராயேலைச் சேராத நிலையை எடுத்துக் கூறுகின்றன. யோபு வும் அவரது நண்பர்களும் ''உண்மையான விசுவாசிகள்''; ஆனால், இஸ்ராயேலோடு இறைவன் செய்த உடன்படிக்கைக்குப்

புறம்பானவர்களாகத் தோன்றுகின்றனர். அவர்கள் பொது மனுகுலத்தின் பெயரால் பேசுகின்றனர். இறைவனுக்கும் அவர்களுக்கு மிடையே உள்ள உறவு, அவர்கள் இறைவ னால் படைக்கப்பட்டவர்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் இவ்வாழ்வில் தனி நபருடைய நலத்தைத் தவிர வேறு மீட்பை எதிர்பார்க்கவில்லை. யோபு மட்டுமே இறைவனோடு நெருக்க மான, நிலையான உறவைத் தேடுகிறார். இவ்வுறவு கொடைகள் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதன்று; அன்பை அடிப்படையாகக் கொண்டது. யோபு இவ் விறைவனைத் தேடும் முயற்சியில் பெரு மளவு வெற்றி பெறுகிறார்.

இந்த இறைவனே ஒரே ஓர் உண்மை யான இறைவன், எல்லாம் வல்லவர், எல்லாம் அறிந்தவர், யாவற்றின் மேலும் மேலாண்மையுடைய ஆண்டவர். உரை யாடலில் இவரைப் பற்றிய மிக உன்னத விவரிப்புகளும் போற்றுரைகளுமுண்டு. இவை ஓர் உண்மையான இஸ்ராயேலனிட மிருந்தே வரக்கூடியன. இவை இஸ்ராயேல் பாரம்பரியத்தில் மூழ்கிப்போன ஓர் உண் மையான எபிரேயனின் படைப்பாகும் (5:8-18; 9:2-24; 11:7-9; 12:13-25; 26:5-14). இவை யோபுவை ஆழமாய்ப் பாதித்தன. (39:31-35; 42:1-6). யோபுவுக்கும் நண்பர் களுக்குமிடையே நடக்கும் உரையாடலில் வரும் இறைவனின் யாவும் அறியும், எல்லாம் வல்ல பண்புகளைப் பற்றிய காட்சிகள், அவற்றைப் போதியமட்டும் விவரிக்கவில்லை. இக்காட்சிகள் அதி.25-26; 36:22-37-இல் வளர்ச்சியுறுகின் றன. சுழல் காற்றிலிருந்து வெளிப்படும் இறை மகிமைத் தோற்றத்திலும், பேச் சிலும் உச்ச நிலை அடைகின்றன. எல்லாம் கடந்த இறைவனை, அதே சமயம் மனிதர் களிடையே தங்கும், அவர்கள் காரியங் களில் ஈடுபடும் இறைவனை யோபு காண்கிறார். ''இப்போதோ உம்மை என் கண்கள் கண்டுகொண்டன'' (42:5).

தன்னேரில்லா இறைவன் பற்றிய கருத்து நூல் முழுவதும் காணப்படுகிறது (5:9; 9:10; 37:5). அவரே யாவற்றையும் படைத்தவர்; யாவற்றிற்கும் ஆண்டவர் (12:13); அணுக முடியாதவர் (23:8-9); மனிதக் கணிப்புக் கெல்லாம் அப்பாற்பட்டவர் (11:8-9). இறைவனது திருவுளம் எல்லாம் வல்லது. அவர் தாம் விரும்பியதைச் செய்கிறார் (9:12; 11:10; 23:13-14). துன்பம், மகிழ்ச்சி, காயப்படுத்துதல், குணமாகுதல் ஆகிய யாவும் அவரிடமிருந்து வருகின்றன (5:18; 22:18). இறைவன் தமது வானக அவையில் வாழ்கிறார். அவர் வானவர்கள் புடைசூழ இருக்கிறார். இவர்கள் அவரது பணிவிடை யாளரும் தூதுவர்களுமாவர். இவர்கள் மனி தர்களுக்கு மேலானவர்கள்; இறைவனுக் கும், மனிதர்களுக்குமிடையே இடையாளர் களாகப் பணிசெய்கின்றனர் (5:1; 33:23-24). இவர்களிடமும் (4:17-19; 5:1.2.8; 15:14-16), மற்ற வானத்துப் பொருட்களிடமும் (15:14-16; 25:4-6) இறைவன் குறை காண முடியும்.

***2) உயிர் அல்லது வாழ்வு இறைவனின் மறைபொருள் மிக்க கொடைகளில் ஒன்றா கும்:** அதுவே எல்லா நன்மைகளுக்கும், கொடுந் துன்பத்திற்குங்கூட, ஊற்றாகும்; உயிர் ஒளியைப்போல் இறைவனது கொடையாகும் (3:4-5.20). இறைவன் மனி தனை அவனது தாய் வயிற்றில் உருவாக்கு கிறார் (10:8-12). உயிரின் மூச்சு அவரிட மிருந்து வருகிறது (12:10; 33:4). அஃது இல்லையென்றால் சாவு வருகிறது (34:14-15). வாழ்வுக்கும் சாவுக்கும் இறை வனே காரணர் (8:8-9; 34:14-15). யோபு வாழ்வுக்கு எதிராகப் பேசுகிறார் (அதி. 3); மிகுந்த உணர்ச்சியோடு தாம் பிறந்த நாளைச் சபிக்கிறார் (3:3).*

ஆனால், தற்கொலையை எண்ணிப்பார்க் கவில்லை. மிகுந்த துன்பம் அனுபவிக்கும் போது, சாவு மேலானதாகத் தோன்றுகிறது (3:11-12;16:21.22;6:8-9;10:18-19). வாழ்வின் துன்பங்களோடும் அவதியோடும் ஒப்பிடும் போது, சாவு அமைதியை அளிக்கிறது (3:17.18.19). சாவு எல்லாநிலையில் உள்ள வரையும் சமநிலைப்படுத்துகிறது (8:14-15.19). சாவுக்குப்பின் திரும்புதல்

இல்லை என்பது ஓரளவு வலியுறுத்தப்படு கிறது *(14:7-12.18-22)*. உயிர்ப்புப் பற்றிய கிறிஸ்தவக் கருத்துடைய நமக்கு இதைப் புரிந்து கொள்வது சிறிது கடினமாக இருக்க லாம். யோபுவுக்கு வாழ்வும் சாவும் முழு வதும் வேறுபட்டவையாகும் *(14:21-22; காண்க. லூக் 16:26)*. எபிரேயர் மறுஉலக வாழ்வு பற்றி தெளிவில்லாத கருத்துக் களைக் கொண்டிருந்தனர். மரித்தவன், ''செயோல்'' அல்லது இருண்ட பாதாளம் என்னுமிடத்தில் வாழ்ந்தான்; மங்கலான நிழல் தன்மையுடைய, விளக்க முடியாத நிலையில் வாழ்ந்தான். இந்நிலை பற்றிய தெளிவான கருத்துக்களை எபிரேயர் கொண்டிருக்கவில்லை. இந்த இருண்ட உறைவிடத்தில் நல்லோரும் தீயோரும், உயர்ந்தவர்களும் தாழ்ந்தோரும் ஒரே தன் மையான வாழ்வைக் கொண்டிருந்தனர், சமமாயினர் *(3:13-10;7:7-11;14:10-15;30:23)*. இந்நிலை இறுதியானது. சாவு என்னும் பயங்கர உண்மையின்முன் மனிதன் ஒரு சிறிய அற்பப் பொருளாவான் *(7:17-18;13:28;14:1-2)*. மனிதவாழ்வு போர்ச் சேவைக்கு ஒப்பிடப்படுகிறது *(7:1-2)*. விரைவில் ஓடி மறைந்து விடுவது *(9:25-26)*. அது நண்பர்கள் கைவிடுவதா லும், அவர்கள் ஏமாற்றுவதாலும் மேலும் மோசமாகிறது *(6:15-17;19:13-17)*. யோபு நூலில், மனிதனையும் மனித சமூகத்தையும் பற்றி நன்னம்பிக்கையே காணப்பட வில்லை.

3) நீதியுள்ள இறைவன்: இறைவன் மனிதர் மேலும், நாடுகள்மேலும் கடுமை யான கட்டுப்பாடு கொண்டுள்ளார் *(34:21-22.25-30)*; ஆனால், எப்போதும் குற் றம்கண்டு கொண்டிருப்பதில்லை. தமது படைப்பின்மீது அன்புமிக்க அக்கறை கொண்டிருக்கிறார் *(10:12;29:2-5)*. இறை வன் மனிதனது உயர்வையே விரும்பு கிறார். அதற்காகவே தண்டிக்கவும் செய் கிறார் *(5:17;33:19தொ)*. இக்கருத்து எலீப் பாசின் உரைகளிலே விளக்கப்படுகிறது. இறைவன் நீதியுள்ள இறைவன் *(9:14-16;10:13-15;37:23)*. மனிதர்களின் செயல்களைச் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்வை யிடுகிறார் *(31:6)*. யோபு தமது கொடுமை யான உடல் துன்பத்தாலும் மிகுந்த மனத் துயரத்தாலும் அவதிப்பட்டு, இறை நீதிக்கு எதிராகப் பழிப்புரை கூறுகிறார் *(16:11-18;19:6-12;27:2-3)*; ஆனால், இறை நீதியில் நம்பிக்கை இழக்கவில்லை *(19:25-27;31:35-37)*.

இறைநீதியை இருவகையில் புரிந்து கொள்ளலாம். உதவியற்றோர், கொடுமைப் படுத்தப்பட்டோர் நோக்கில் நீதி அவர்கள் இறைவனிடமிருந்து பெறும் விடுதலையா கும், மீட்பு ஆகும். நீதிபதிகள் நூல் இருக்கருத்தையே அடிப்படையாகக் கொண்டது. எகிப்திலிருந்து விடுதலை அடைந்த யாத்திரை அனுபவத்தில் யாவே அளிக்கும் மீட்புச்செயல் நீதியாகும். அவ ரது தலையீடு நீதியை நிறுவுகிறது. அது மனிதர்கள் கொண்டிருக்கவேண்டியதை அடைந்த நிலையாகும். அவரது உடன் படிக்கைப் பங்காளிகள், பாதுகாப்பும் நல் வாழ்வும் கொண்டிருப்பது அவர்களுக்கு உரியதாகும், நீதியாகும்.

இந்த உடன்படிக்கைப் பங்காளிகள், பிரமாணிக்க மற்று, இறைவனது எதிரிகளா னால், அப்போது அவர்கள் நீதியின் மறுபுற மான அழிவை அனுபவிக்க வேண்டும். யூதா நாடுகடத்தப்பட்டபோது, இறைவாக் கினர்களின் கருத்துப்படி, இதுதான் நிகழ்ந் தது. ஆகவே, நாடு கடத்தலுக்குப்பின் வந்த காலத்தில், யாவேக்குப் பிரமாணிக்கமாய் இருத்தல் மிகவும் வலியுறுத்தப்பட்டது. அது, விரிவான புறச் சட்டத்தை வழிபாட்டு முறையிலும், சமூக முறையிலும் கடைப் பிடிப்பாகச் செயல் முறையில் எடுத்துக் கூறப்பட்டது.

அதேபோது, ஞானநூல் ஆசிரியர்கள், நேர்மைமிக்க வாழ்வின் ஆற்றலையும் தேவையையும் வலியுறுத்தினர். மனித வாழ்வைப் புரிந்து கொள்ளும் அவர்களது முயற்சியில், வாழ்வின் தற்செயலான, முன் னறிவிக்க முடியாத கூறுகளைக் குறைக்க முயன்றனர். வாழ்வைக் கட்டுப்படுத்தும்

அற ஒழுக்கச் சட்டங்கள் உள்ளன என்றும், அவற்றிற்கு இறைவனே பாதுகாவலும் உறுதியும் ஆவார் என்றும், இவற்றை அறியமுடியும் என்றும் படிப்பித்தனர். விவேகமுள்ள தேர்வாலும் குற்றமற்ற நடத்தையாலும் மனிதன் இச்சட்டங்களோடு ஒன்றிணைந்து வாழமுடியும் என்றும் அதன் விளைவாக மகிழ்ச்சியும் வெற்றியும் பெற முடியும் என்றும் உறுதியாகப் போதித்தனர். இது மக்கள் நல்வாழ்வில் பயிற்சிபெற உதவியது என்பதில் ஐயமில்லை; ஆனால், சிந்தனையாளர்களுக்கு மனிதவாழ்வில் நீதி பற்றிய பிரச்சனையைத் தீவிரப்படுத்தியது

4) வினைப்பயன் கோட்பாடு: எபிரேயர், தங்கள் இறைவனுடைய நன்மைத் தனத்தையும், நீதியையும் நம்பினர். அவர் நல்லவர்களுக்குச் சன்மானமும், தீயவர்களுக்குத் தண்டனையும் உறுதியாக அளிப்பார் என்றும் நம்பினர். இறைவன் நல்லோருக்கு நீடிய மகிழ்ச்சிமிக்க வாழ்வையும் செழிப்பையும் அளிக்கிறார்; தீயவர்களை உடல் நோயாலும் அகால மரணத்தாலும் தண்டிக்கிறார். துன்பம் பாவங்களின் விளைவாகும். ஒருவர் துன்புற்றால் அவர் பாவியாக இருக்க வேண்டும். இப்போதகத்தை விவிலியத்தின் பழங்கால ஆசிரியர்களும், உபாகமப் பாரம்பரிய ஆசிரியர்களும் பொதுவாக ஏற்றுக்கொண்டனர் (ஆதி 15:15;49:25; யாத் 20:12; உப 7:12-15; 8:7-18; 27:30). இதையே சங் 37-உம், பழமொழி நூலும் எடுத்துக் கூறுகின்றன. பழமொழி ஆசிரியர், ஞானம்=நேர்மை மிக்க வாழ்வு=வாழ்வில் வெற்றி, என்ற சமன்பாட்டை வலியுறுத்தினார். இதுவே யூத ஞானிகளின் பொதுவான போதனையாகும்.

இப்போதகமும், மறுவாழ்வு பற்றிய எபிரேயர்களின் தெளிவில்லாத கருத்துக்களும், சன்மானமும், தண்டனையும் இவ்வுலக வாழ்விலேயே அளிக்கப்பட வேண்டும் என்று மக்களை எதிர்பார்க்கச் செய்தது. ஆகவே, நீடிய மகிழ்ச்சிமிக்க வாழ்வு, பெரும்பொருட்செல்வம், பல பிள்ளைகளைப் பெறுதல், நீடிய பின் மரபுகள், மதிப்பு மிக்க நற்பெயர் ஆகியவை அடங்கிய நல்வாழ்வு நல்லோரின் உரிமையாகக் கருதப்பட்டது. இதற்கு மாறாக சாவு தீயோர்க்குரிய தண்டனையாகும். குறுகிய வாழ்வு, வறுமை, அகாலமரணம், மலட்டுத்தன்மை, பின் மரபு அற்ற தன்மை, அவப்பெயர் ஆகியவை தீயோருக்குரிய தண்டனையாகக் கருதப்பட்டது. இதை எலீப்பாசு, பில்தாது ஆகியோரின் உரைகளில் காணலாம் (அதி. 4;8; 15;18).

5) நூலின் பிரச்சனை: வினைப்பயன் கோட்பாடும், மறுவுலக வாழ்வு பற்றிய கருத்துக்களும், குழுப் பொறுப்புடைமைப் பின்னணியில், பல நூற்றாண்டுகளாகப் போதிக்கப்பட்டன. அக்கால மக்களுக்கு இப்போதனை போதியதாக இருந்தது. ஒருவர் தம்மை ஒரு தனி நபராக அன்று, ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் என்று கருதிய மட்டும், வினைப்பயன் கோட்பாட்டுக்கும் வாழ்க்கை நடப்பு முறைக்கும் இடையேயுள்ள முரண்பாடு அவ்வளவு கடுமையாக உணரப்படவில்லை. பக்தியுள்ள தனி மனிதன் தனக்குரிய சன்மானத்தையும், கடவுள் பற்றில்லாத தீயவன் தனக்குரிய தண்டனையையும் பெறவில்லை என்றால், அவ்விருவரும் சேர்ந்த சமூகம் அவற்றை அடையும் என்று ஆறுதல் பெற்றிருக்கலாம்.

யூதர்கள் நாடு கடத்தப்பட்ட காலத்தில், எசேக்கியேல் தனிநபருடைய பொறுப்புடைமையை வலியுறுத்தினார் (எசே 18;33:10-20). வினைப்பயன் கோட்பாட்டு விசுவாசத்தைத் தனி நபருக்குச் சாற்றிக் கூறினார். இச்சூழ்நிலையில் தனிநபர் வாழ்வில், வாழ்க்கை நடப்புமுறை, வினைப்பயன் கோட்பாடு அடிக்கடி ஒத்துப் போகவில்லை. இரண்டும் முரண்பட்டு நின்றன. வினைப்பயன் கோட்பாடு மனித வாழ்க்கையைப் பொதுவாக விளக்க முடிந்தது. ஏனெனில், நல்லோரில் பலர் செழிப்புற்றனர். தீயோரில் பலர் செத்து மடிந்தனர். ஆனால், இதே கோட்பாட்டைத் தனி நபருக்குச் சாற்றிக் கூறும்போது, அது வருந்தத்தக்க முறையில் குறையுள்ளதாகவும், மூடத்தனமான முடிவுக்கு இட்டுச் செல்வதாகவும் தோன்றியது. ஏனெனில்

தனிநபர் சிலர் உண்மையிலேயே நல்லவர்கள் ஆனாலும், துன்புற்றனர். யோசியா போன்ற பக்தியுள்ள நல்ல அரசனின் இறப்பையோ, இறைவாக்கினர் எரேமியா போன்ற புனிதர்களின் துன்பமிக்க வாழ்வையோ, வினைப்பயன் கோட்பாட்டால் விளக்க முடியவில்லை. இந்த உண்மை, உண்மையான பக்தியுள்ளோருக்கு ஆழ்ந்த மனத்துயரை அளித்தது. நீதிமான் துன்புறுகிறார், தீயோர் செழிப்புறுகின்றனர். ஏன்? எப்படி? இப்பிரச்சனையை வினைப்பயன் கோட்பாடு விளக்கவும் இல்லை, விளக்கப் போதியதாகவுமில்லை.

6) பிரச்சனை வரலாறு: யூதசமய வரலாற்றில் யோபு நூலுக்கு, உடனடியான முந்திய காலத்தில், அதாவது கி.மு. 7-5 ஆம் நூற்றாண்டுகளில், இப்பிரச்சனை அடிக்கடி தர்க்கிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சனை இஸ்ராயேலின் சிந்தனையாளர் யாவரையும் அமைதி குலையச் செய்துள்ளது. இப்பிரச்சனையை எரேமியா தாழ்ச்சியோடு, இறைவனிடமே எடுத்துக் கூறுகிறார். ''ஆண்டவரே உம்மோடு நான் வழக்காடினால், நீரே நீதியுள்ளவர் என்று விளங்கும்; இருப்பினும் நான் உம்மிடம் சில முறையீடுகளைச் செய்துகொள்கிறேன். தீயவர்கள் வாழ்க்கையில் நலமுடன் இருப்பது ஏன்? அநியாயமும் அக்கிரமமும் செய்கிறவர்கள் நலமாய் வாழ்வதேன்?'' (எரே 12:1). இதையே யோபு 21-ஆம் அதிகாரம் பிரதிபலிக்கிறது.

எரேமியாவிற்குச் சிறிது காலத்திற்குப் பின், இறைவாக்கினர் அபக்கூக்கு இதே முறையில் கேள்வி எழுப்புகிறார்; ''உம்முடைய கண்கள் தீமையைக் காணக் கூசுகின்றன. நீர் கொடுமையைப் பார்க்கத் தாங்காதவர். தீமை செய்பவர்களை நீர் ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்? தன்னிலும் நேர்மையானவனைப் பொல்லாதவன் ஒருவன் விழுங்கும்போது நீர் பேசாமல் இருப்பதெப்படி?'' (அப 1:13).

பாபிலோனுக்கு யூதர்கள் நாடு கடத்தப்பட்ட காலத்தில், எடுத்ததற்கெல்லாம் குறைகூறும் சிலர், தங்களது குற்றத்திற்காக அன்று, தங்கள் மூதாதையரின் குற்றத்திற்காக இறைவன் தங்களைத் தண்டிப்பதாக முறையிட்டனர். ''தந்தையர் திராட்சைக் காய் தின்ன, பிள்ளைகளுக்குப் பல் கூசிற்றாம்'' (எசே 18:1). இறைவனது நீதிக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுக்கு மறுப்புக் கூறவும், நாடு கடத்தப்பட்டோர் அவர்களின் குற்றத்திற்காகவே தண்டனை பெறுகின்றனர் என்று நிரூபிக்கவும், எசேக்கியேல், தமது மரபுக்கு மாறாகச் சென்று, பாவங்கள் பற்றிய தனிநபரின் பொறுப்புடைமையை வலியுறுத்துகிறார். ''பாவம் செய்த ஆன்மாவே சாகும்'' என்று திட்டவட்டமாக அறிவிக்கிறார் (எசே 18:20). இறைவன் தீயோரைத் தண்டித்து நல்லோருக்குச் சன்மானம் அளிக்கிறார் என்ற பொதுவான உண்மையை எசேக்கியேல் வெளிப்படையாகக் கூறுகிறார். அவரது கூற்று தனிநபர்களையே கருத்தில் கொண்டுள்ளது. தீயோர் தண்டிக்கப்படுதலும் நல்லோர் சன்மானம் பெறுவதும் பொதுவாக உண்மையென்றாலும், இப்பொது விதிக்கு விலக்குகள் உண்டு. மாசற்றவர்கள் துன்புற்றனர். ஏன்? இதே கேள்வியை எரேமியாவும், அபக்கூக்கும் எழுப்பினர். தனிநபரின் பொறுப்புடைமையை எசேக்கியேல் வலியுறுத்தியது இஸ்ராயேல் சிந்தனையாளருள், இக்கேள்வியை ஒரு முக்கியமான பிரச்சனையாக மாற்றியது.

நாடு கடத்தலின் முடிவில் உபஎசாயா தமது புகழ் பெற்ற 53-ஆம் அதிகாரத்தில் இப்பிரச்சனைக்கு ஓரளவு பதில் அளித்தார். உபஎசாயவில் வரும் துன்புறும் ஊழியர் உண்மையிலேயே பாவமற்றவர். இருப்பினும் இறைவன் அவரை இரக்கமற்ற முறையில் துன்புறுத்துகிறார். ஏன்? உபஎசயாவின் ஊழியன், பரிகாரமாகத் துன்புறுகிறார் என்று கூறுகிறார்.

''மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக் கொண்டார் ....

நம்முடைய நோய்களைச் சுமந்து கொண்டார் ....

ஆனால் நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார் ....
நம் அக்கிரமங்களுக்காகவே அவர் நொறுக்குண்டார் ....
நம்மை நலமாக்கும் தண்டனை அவர் மேல் விழுந்தது ....
அவருடைய காயங்களால் நாம் குண மடைந்தோம் ....
நம் அனைவருடைய அக்கிரமங்களையும் ஆண்டவர் அவர்மேல் சுமத்தினார் ....
பலருடைய பாவங்களைத் தாமே சுமந்து கொண்டு பாவிகளுக்காகப் பரிந்து பேசினார்'' (*எசா 53:4-12*). நல்லோர் துன்புறுதல் என்ற பிரச்சனைக்கு இஃது ஒரு நல்ல ஆனால், பற்றாக்குறையான பதிலாகும். யோபு நூலின் ஆசிரியர் உபஎசாயாவின் இப்பதிலை அறிந்திருந்தாரா? அல்லது இப்பதில் தமது பிரச்சனைக்குப் போதிய பதிலென்று எண்ணினாரா? இப்பதில் யோபு நூலில் காணப்படவில்லை.

மேலும், இப்பிரச்சனைக்குப் போதிய விடையளிக்க, எல்லாருக்கும் நீதி வழங்கப் படும் மறுவுலக வாழ்வு பற்றிய அறிவும் விசுவாசமும் யோபுநூல் தோன்றிய காலத்தில் இஸ்ராயேல் மக்களிடையே இல்லை. இது மக்கபேயர் காலத்தில்தான் வளர்ச்சியுற்றது; யாவரும் அறிந்த போதகமாக விளங்கியது (*2 மக் 6-7; தானி 12:2-3; ஞான 1-5*).

இனி, யோபு நூலுக்கு வருவோம். நீதிமானின் துன்பம் என்ற பிரச்சனையை விளக்க முனைந்த ஆசிரியர், பலரும் அறிந்த ஒரு பழங்கதையை எடுத்து, பழங்கால நடையைக் கவனமாய்ப் பின்பற்றி அக்கதையை மீண்டும் எடுத்துக்கூறுகிறார். சோதனைகளின் கடுமையை மிகைப்படுத்த *2:1-10*-என்ற பகுதியைச் சேர்க்கிறார். பின்பு ஞானமிக்க மூன்று நண்பர்களை அறிமுகப் படுத்தி, அவர்களுக்கும் யோபுவுக்குமிடையே நடக்கவிருக்கும் உரையாடலுக்கு மேடை அமைக்கிறார். உரையாடலில் கருத்து வளர்ச்சியிருப்பதாகத் தெரியவில்லை.

எலீப்பாக, பில்தாது, சோப்பார் ஆகிய மூவரும் பரம்பரைப் போதகத்தில் தோய்ந்தவர்கள். அதன் காப்பாளர்களாகத் தோன்றுகின்றனர். வினைப்பயன் கோட்பாடு பற்றிய பாரம்பரியப் போதகத்தைச் சொல்லாற்றலுடன் எடுத்துக் கூறுகின்றனர். இது பற்றி அவர்களுக்கு எந்த ஐயப்பாடும் இல்லை. அவர்களது நிலை மிக எளியது. துன்பம் பாவத்திற்குத் தண்டனையாகும். ஒருவன் துன்புற்றால் அவன் பாவியாக இருக்க வேண்டும். இப்போதகத்திற்கு ஏற்றவாறு வாழ்க்கை நடப்புக்கள் பொருத்தி விளக்கப்படவேண்டும். ஆகவே யோபு ஒரு பாவியாவார். அவர்படும் துன்பத்தைப் பார்த்தால் அவர் ஒரு பெரும் பாவியாக இருக்க வேண்டும். அவர் இறைவனிடம் மன்னிப்புக்கேட்டால், இறைவன் இரக்கம் காட்டுவார். எல்லாம் முன்போல் சரியாகும். இவ்வாறு நண்பர்கள் யோபுவுக்கு ஆலோசனை கூறுகின்றனர்; ஆறுதல் கூற முயல்கின்றனர். அவர்களுடைய வாதம் ஒரே சீராக உள்ளது. யோபு தமது மாசற்ற தன்மையை மீண்டும் மீண்டும் வலியுறுத்த, அவர்கள் தங்கள் நிலையை மேலும்மேலும் சிறிதும் இரக்கமற்ற முறையில் வலியுறுத்துகின்றனர். யோபுவும் இந்தப் பாரம்பரியத்தையே விசுவசிக்கிறார்; ஆனால், நேர் எதிர் முடிவுக்கு வருகிறார்.

நண்பர்களது நேர்நிலைக் கருத்து சரியானது, எளியது, ஆறுதல் அளிக்கக் கூடியது. பாரம்பரியப் போதகம் குழுத்தன்மையுடையது; தீமையும் துன்பமும் மனித வன்மமும், கெட்ட எண்ணத்தின் விளைவாகும் என்று கூறுகிறது. இதையே தனிமனிதனுக்குச் சாற்றிக் கூறும்போது இப்போதகம் மதியீனமான முடிவுக்கு இட்டுச் செல்ல வல்லது என்பதை உணர நண்பர்கள் மறுத்து விட்டனர். இப்போதகத்திற்கு விதிவிலக்கு உண்டு என்றும், அவர்களது அறியும் ஆற்றலுக்கும் வரையுண்டு என்றும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களது போதக விளக்கத்திற்குப்பின் ''இறைவன் விரும்பினால்'' என்று எழுத அவர்கள் விரும்பவில்லை. இறைபாலிப்புச் செயல் முறைகள் யாவும் அவர்களுக்குத் தெளிவாக

வும், வெளிப்படையாகவும், கணிதத்தன்மையோடும் இருக்கவேண்டும். அவர்கள் மறை உண்மையை மறை உண்மையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இறைவனை ஓர் ஆய்வுக்குரிய, புரிந்துகொள்ளக்கூடிய, முன்னறிவிக்கப்படக்கூடிய ஒரு பொருளாக ஆக்கினர். அவர்களது அறிவுக்கு ஒத்ததாக உண்மைகளைக் கட்டாயப்படுத்தி, விரும்பி நேர்மையற்றவர்களாயினர் (யோபு 13:6-11). அவர்கள் தங்கள் கோட்பாடுகளுக்கும், வாழ்க்கை நடப்புக்குமிடையே உள்ள முரண்பாட்டை உணரவில்லை. இத்தகைய ஆபத்தை, இக்காலத்தில் இறையியலைத் தொழிலாகக் கொண்ட பலரிடம் காணலாம்.

யோபு தாம் குற்றவாளி என்பதை மீண்டும் மீண்டும் மறுக்கிறார். தாம் குற்றமற்றவர் என்பதை அவர் நன்கு அறிவார். குறைந்தபட்சம், தாம் அனுபவிக்கும் துன்பங்களைப் பெறக் காரணமாக எக்காரியத்தையும் தான் செய்துவிடவில்லை என்று உறுதியாக அறிவார். யோபுவும் வினைப்பயன் கோட்பாட்டை நம்பினார். ஆனால் அது தமது துன்பநிலைக்குப் பொருந்தவில்லை, பதில் கூறமுடியவில்லை. இந்த முரண்பாட்டுக்குப் அவர் விடை காணவில்லை. காணவும் முடியவில்லை என்பதை உணர்கிறார். ஆனால் பிரச்சனையுடன் வீரத்தோடு போராடுகிறார்; வழி ஒன்றும் தெரியாமல் அலைகிறார். அவரது துன்பம் முழுவதும் பொருளற்றதாகத் தெரிகிறது.

யோபுவின் பேச்சுக்களில் கருத்துக்கள் ஒரே சீராக அமையவில்லை. ஒரு கருத்திலிருந்து மற்றதற்கு அலைகிறார். முதலில் நண்பர்களோடு தர்க்கம் செய்கிறார். போகப்போக அவர்களோடு வாதம் செய்வதை ஒதுக்கிவிட்டு இறைவன்பாலும் அவருக்கு எதிராகவும் திரும்புகிறார், மன்றாடுகிறார், முறைப்பாடு செய்கிறார், புலம்புகிறார். இறைவனைத் தமது எதிரியாகப் பாவிக்கிறார். இறைவன் ஆக்குவதைவிட அழிப்பதை விரும்புகிறாரா? இறைவன் அறிவுக்குப் பொருந்தாத வெறும் சக்தியே தவிர வேறொன்றுமில்லை! அவர் விரும்புவது மட்டும் தான் நீதியா? என்பனபோன்ற பல பிரச்சனைகளை யோபு எழுப்புகிறார். அவநம்பிக்கையின் ஆழத்தில் மூழ்கிப்போகிறார். அவர் கதைகளில் வரும் அசாதாரண வீரன் அல்லவே! சதையும் இரத்தமும் உடையவர் அல்லவா? இறைவனது ஆய்வு செய்ய முடியாத வழிகளைப் புரிந்துகொள்ள ஒளிகிடைக்காதா என்று ஏங்குகிறார். அதைக்காண முயலுகிறார்.

ஒரு சமயம் அவநம்பிக்கையில் மூழ்கிப்போகும் யோபு மறுசமயம் நம்பிக்கையில் உச்சநிலையை அடைகிறார். துன்பம் என்னும் அடர் இருளில் அலைந்து திரிகிறார். இது ''விசுவாச இருளாகும்''. பாரம்பரியக் கோட்பாட்டுக்கும் தமது வாழ்வில் நடப்பதற்குமுள்ள முரண்பாட்டை ஆழ்ந்து உணர்ந்து பெருந்துன்புற்ற நிலையிலும், அவர் தமது விசுவாசத்தை இழக்கவில்லை. இந்த விசுவாசம் வினைப்பயன் போதகத்திலிருந்து பிரிக்க முடியாதது. யோபு தமது விசுவாசத்தால் உண்மையாகவே உறுதி பெறுகிறார். இந்த முரண்பாட்டைத் தமது பக்தியால் செயல் முறையில் மேற்கொள்கிறார். அவரது விசுவாசம், அவர் ஒரு நடுவருக்காக, மீட்பருக்காக ஏங்குவதில் உச்சநிலை அடைகிறது. அவரது நிலை இறைவனை நோக்கிக் கூக்குரல் இடுவதாலும், அவரைச் சந்திக்க ஏங்குவதாலும் சமன்செய்யப்படுகிறது. தமது இறுதி மீட்பராகவும் தமது ஒரே உண்மையான அன்பனாகவும் இறைவனில் விசுவாசம் கொண்டு அவருக்காக ஏங்குகிறார். இவ்வாறு அவநம்பிக்கையும் விசுவாசமும், முறைப்பாடும் ஏக்கமும் மாறிமாறி யோபுவின் உள்ளத்தில் எழுகின்றன. இவை அதி. 29-இல் உச்ச நிலையை அடைகின்றன.

அந்த உச்சநிலையில், பொருத்தமாக இறைவனே யோபுவோடு பேசுகிறார். யோபுவினுடைய அவமதிப்பான துடுக்குத்தனத்தையும், அறிவின்மையும் எடுத்துக்காட்டுகிறார். மனித உள்நோக்கையும் ஆற்றலையும் கடந்து செல்லும் இயற்கை நிகழ்ச்சிகளின் மறை உண்மைகளைச் சுட்டிக்காட்டுகிறார். உலகை ஒழுங்குபடுத்தும்படியும்

குறிப்பாக இறைப் பற்றற்றவர்களையும் தீயோரையும் வென்று, அவர்களது செழிப்பால் ஏற்படும் இடரை நீக்கும்படியும் யோபுவுக்குச் சவால் விடுகிறார். அதே சமயம் யோபுவின் நிலையில் உள்ள நேர்மையையும் ஏற்றுக்கொள்கிறார். யோபு இறைவனது வியப்புக்குரிய செயல்களில் தம்மையே இழந்து தமது ஆற்றலற்ற தன்மையையும், தமது முறைப்பாடு குற்றச் சாட்டுகளின் ஒழுங்கின்மையையும் உணர்ந்து இறைவனிடம் சரணடைகிறார். தமது இறுதி விசுவாசப் பிரமாணம் செய்கிறார் *(42:5-6)*.

இறுதியில் யோபு தம் உடைமைகளை இருமடங்காக மீண்டும் பெறுவது பற்றிய நிகழ்ச்சியுரையோடு நூல் முடிகிறது. இவ்வாறு நூல், துன்பம் என்னும் பிரச்சனைக்குக் கோட்பாட்டளவில் விடையே கொடுக்கவில்லை. அக்கால இறையியல் வளர்ச்சி இப்பிரச்சனைக்குப் பதிலாக அமையவில்லை. யோபு, தாமும் தம் நண்பர்களும் இப்பிரச்சனைக்கு விடை காண முடியாது என்பதை உணர்கிறார். இது தீமையின் முன் மனித ஞானத்தால் அறிவால் ஒன்றும் செய்ய முடியாமையை எடுத்துக் காட்டுகிறது. யோபுவின் ஆன்மீக வளர்ச்சியின் உச்சநிலை இறைமகிமைத் தோற்றமாகும். யோபு தமது குற்றமின்மையை இறைவனிடம் எடுத்துக் கூறினார், முறையிட்டார், சவால் விட்டார். அதே இறைவன் இப்போது யோபுவுக்குத் தோன்றுகிறார். அவர் யோபுவின் முறைப்பாடுகளுக்கும் சவால்களுக்கும் செவிமடுத்ததாகவோ, அவற்றைப் பொருட்படுத்தியதாகவோ தெரியவில்லை. அவரது பேச்சு அவரது ஞானத்தை உறுதிப்படுத்துகிறது. அதன் பொருத்தத்தைக் கண்டுணர, பழைய ஏற்பாட்டில் ஞானம் என்றால் என்ன என்பதை அறிவது அவசியம். மனிதனது ஞானம் அவன் தன் காரியங்களை நடத்தும் விதத்தில் தெரிகிறது. அதுபோல, இறைவன் உலகை நடத்தும் விதத்தில் அவரது ஞானம் வெளிப்படுகிறது. உலகம் யாவேயின் ஞானததின் மறை உண்மைகளால் நிறைந்துள்ளது. அதில் பல முரண்பாடுகள் உள்ளதாகத் தோன்றலாம். அதனால் உலகம் பிளந்து அழியப் போவதில்லை; அதன் மூலக் குழப்பநிலைக்குத் திரும்பப் போவதில்லை. இந்த உலகில் மனிதர்கள், குறிப்பாக யோபு என்ற ஒரு மனிதன், ஒருமிகச் சிறிய பகுதியே. உலகத்தை அஃது இருக்கிற விதத்திலேயே, இறைவனையும் அவர் உள்ள விதத்திலேயே, யோபு ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, தமது துன்பம் என்ற பிரச்சனை அவருக்குப் பெரிய மலையாகத் தோன்றியது. இறைத் தோற்றம், அவரைப்பற்றிய உண்மைகள் ஆகியவற்றைக் கண்டபின், யோபு இறைவனை இறைவனாக ஏற்றுக்கொள்கிறார். துன்பம் என்னும் பிரச்சனை முன்போல் மறைபொருளாகவே உள்ளது. அதற்கு யோபு விடை காணவில்லை; ஆயினும், அமைதியுறுகிறார். இவ்வாறு, எப்போதும் போலவே பிரச்சனை கொள்கை அளவில் தீர்க்கப்படாததாய் இருந்தாலும், பக்தியுள்ள மனிதன் வினைப்பயன் கோட்பாட்டில் விசுவாசம் கொண்டிருந்தாலும், துன்புறும் போது எப்படி நடைமுறையில் துன்பத்தை வெற்றி கொள்வது என்று நூல் காட்டுகிறது. எப்போதும் வளர்ச்சியுறும் நம்பிக்கையோடு இறைவனது கரங்களில் தம்மையே ஒப்படைத்து, யோபு தமது துன்பத்தை வெற்றி கொள்கிறார், அமைதி கொள்கிறார். அறிய முடியாத இறைவனில் கொள்ளும் விசுவாசம் பொறுமைக்கும் அமைதிக்கும் இட்டுச் செல்கிறது. இவ்வாறு, அளவற்ற பொறுமையுள்ள யோபுவின் வேதனை நிறைந்த அழிவிலிருந்து விசுவாசமிக்க யோபு எழுகின்றார்.

நண்பர்களது தவறான கருத்துக்களைத் திருத்துவது ஓரளவு எளிது. அதை யோபுவே செய்யலாம். ஆனால் யோபுவின் தவறு மிகவும் நுட்பமானது, வினயமானது. அவரை இறைவனே திருத்தவேண்டும். முன்னுரையில் யோபுவின் துன்பத்திற்கும் இறைவனது நீதிக்கும் எத்தகைய தொடர்பும் செய்யப்படவில்லை. நண்பர்களின் குற்றச்சாட்டை, யோபு தமது பிரமாணிக்கத்தை எடுத்துக்கூறி மறுக்கிறார். அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இறைவனே தமது மாசற்ற தன்மையை மறுப்பதாக எண்ணி, அதை அதிகமாக மதிப்பீடு செய்கிறார். இறைவனுக்கு எதிராக வழக்காடுகிறார். இறைவன் திருமுன் பேரம் பேசுவது நன்றன்று. ''நான் குற்ற மற்றவன், இதற்குச் சன்மானமாக நீர் எனக்கு மகிழ்ச்சி அளிக்க வேண்டும்'' என்று உரிமை கொள்ள முடியாது.

நண்பர்களுக்கு எதிராக யோபு கொண்ட நிலை சரியானது. ஆனால், இறைவனுக்கு எதிராக அவர் எடுக்கும் நிலை சரியான தன்று. இறைவன் முன் எந்த உரிமையை யும் அவர் கொள்ள முடியாது. ''நீங்கள் கட்டளையிடப்பட்டதையெல்லாம் செய்த பின் 'நாங்கள் பயனற்ற ஊழியர்கள், நாங்கள் செய்ய வேண்டியதையே செய்துள் ளோம்' என்று கூறவேண்டும்'' (லூக் 17:10) என்ற ஆழ்ந்த பொருளுள்ள கூற்றில் கிறிஸ்து பிற்காலத்தில் எச்சரிப்பார்.

7. ஆசிரியரது விடை: துன்பம் பற்றிய பிரச்சனைக்கு இந்நூலில் பல பதில்கள் காணப்படுகின்றன. அவை போலி யானவை அல்லது பற்றாக்குறையானவை என்று காட்டப்படுகின்றன. பாவம் துன்பத் திற்குக் காரணம் என்று நண்பர்கள் கூறுவது தவறன்று. ஆனால் துன்பப்படுவோர் எல் லாம் பாவிகள் என்று அவர்கள் வலியுறுத்து வது தவறாகும். நண்பர்களுடைய கருத்தை மறுத்துக் கூறுவதே உரையாடலின் நோக்க மாகும். அவர்கள் கருத்து தவறானது என்று காட்டவே இறைவன் அவர்களைக் கண்டிக் கிறார் (42:7)

எலீப்பாசும் எலிகூவும் துன்பத்திற்கு மற்றொரு விளக்கம் தருகின்றனர். துன்பம் மனிதனைத் திருத்துகிறது, பயிற்சி அளிக் கிறது, தூய்மைப்படுத்துகிறது; மேலான வாழ்வுக்கு இட்டுச் செல்கிறது; அவனது புண்ணியத்தை அதிகரிக்கச் செய்து அதன் விளைவாக அவனது சன்மானத்தையும் அதிகரிக்கிறது. இது ஓரளவு சரியே. ஆனால், இந்த விளக்கமும், ஏன் மனிதனுக் குத் தெரிந்த எந்த விளக்கமுமே நீதிமானது துன்பம் பற்றிய பிரச்சனையை விடுவிக்க வில்லை.

ஆசிரியர் இதை, நூலை எழுதுவதற்கு முன்பே, ஒருவேளை, உணர்ந்திருக்க வேண்டும். நண்பர்களின் கருத்துக்கள் தவ றானவை என்று காட்டியபின், இப்பிரச் சனைக்கு அவர் அளிக்கும் இறுதிவிடை, இப்பிரச்சனை மிகப் பெரியது, மனிதனால் விடை காண முடியாதது என்பதே. நீதி மான்மேல் துன்பத்தைச் சுமத்துவதில் இறைவனின் நோக்கத்தை மனிதனால் புரிந்துகொள்ள முடியாது. இறைபாலிப் பின் இரகசியங்களுக்குள் மனிதனால் புக முடியாது. தன்னால் புரிந்து கொள்ள முடியாதபோதும் இறை ஞானத்திற்கு மனி தன் பணிய வேண்டும், அதை ஆராதிக்க வேண்டும். நீதிமான்கள் ஏன் துன்புறுகின் றனர், தீயோர் ஏன் செழிப்படைகின்றனர் என்பதை விளக்க இறைவனே தேர்ந்து கொள்ளும்வரை, இறைவனது நீதியையும் நன்மைத் தனத்தையும் விசுவாசிக்க வேண் டும், நம்ப வேண்டும். அவர் வெளிப் படுத்த விரும்பாதவற்றை அறிய உரிமை கொள்ளக்கூடாது. ஆசிரியரது இந்தச்செயல் முறையான விடை, ஞான இலக்கியங் களின் மற்றொரு அடிப்படைக் கூற்றை எடுத்துக்காட்டுகிறது. ''இறை அச்சமே ஞானத்தின் தொடக்கம்'' (28:28). ''இறை யச்சமும்'', ''தீமையிலிருந்து விட்டகலு வதும்'' இணையானதாகவும், ஒன்றோ டொன்று தொடர்புடையனவாகவும் காட் டப்படுகின்றன.

துன்பம் என்னும் பிரச்சனைக்கு மனிதன் விடைதேடும் முயற்சி இறைவனது சுதந் தரத்தை மீறியதாக இருக்கக்கூடாது. இறை வனிடம் வேண்டலாம்; விடாமுயற்சியுடன் மன்றாடலாம்; ஆனால், அவரைக் கட்டா யப்படுத்த முடியாது. மனிதன், சங் 8 — இல் விவரிக்கப்படும் அச்சத்தையும் தாழ்ச்சியையும் கொண்டிருக்க வேண்டும். ''நம்முடைய எண்ணங்கள் உங்கள் எண் ணங்கள் அல்ல என்கிறார் ஆண்டவர். மண்ணிலிருந்து விண் மிக உயர்ந்திருப்பது போல், உங்கள் வழிகளைவிட நம்முடைய எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன'' (எசா 55:8 — 9). இறைவனைச் சந்தித்தபின் யோபு கூறுவது, ''நாயேன் நான்! உமக்கு

என்ன பதிலுரைப்பேன்? கையால் என் வாயைப்பொத்திக் கொள்கிறேன்! ஒரு முறை பேசி விட்டேன். இனி வாய்திற வேன். இன்னொரு முறையும் பேசினேன். இனிப்பேசவே மாட்டேன்'' (யோபு 39:34—45). யோபு தம் சோதனையைக் கடந்து விட்டார் என்றும், மனிதனது ஞானம் இறைவனுக்குச் சேவை செய்வதில் தான் அடங்கியிருக்கிறது; அவரது அருள் பாலிப்பின் அறிவில் அவருக்குச் சமமாய் இருப்பதில் இல்லை என்றும் நூல் காட்டு கிறது.

இப்பதில் எதிர்மறையானதாகத் தோன்ற லாம். ஆனால் பாவத்திற்கும் துன்பத்திற்கு மிடையேயும், புண்ணியத்திற்கும் பின் சந்த திகளுக்குமிடையேயும் தொடர்பு இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை என்பதை நூல் உறுதியாகவும், நேரடியாக வும், தெளிவாகவும் நிறுவுகிறது. இந்த முடிவு, வருங்கால மறு உலக வாழ்வில் சன்மானம் — தண்டனை என்ற விடைக்குத் தவறாது இட்டுச் செல்லும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

ஆனால், ஆசிரியர் அடுத்த அடியை எடுத்துவைக்கவில்லை. ஏன்? இஃது இறை பாலிப்பின் மற்றொரு மறைபொருளாகும். வருங்கால மறுஉலக வாழ்வு பற்றிய விசுவாசம் இஸ்ராயேலில் மெதுவாகவே வளர்ச்சியுறும். இவ்வுலக வாழ்வில் போதிய நீதியில்லை என்பதால், வருங்கால வாழ்வு இருக்கவேண்டும் என்ற அடிப் படையில், வருங்கால வாழ்வு உள்ளது என்று கிறிஸ்தவத்திற்குமுன், எந்தத் தத்துவ ஞானியும் உறுதியாகக் கூறவில்லை. நல் லோருக்கு நிர்வாண வாழ்வையும், தீயோ ருக்குத் தண்டனையையும் எடுத்துக் கூறும் புத்த மதம், இதற்கு நெருங்கி வருகிறது.

யோபு நூலில் பல முரண்பாடுகள் உள்ளன. ஏனெனில், ஆசிரியர், மனிதன் அணுகமுடியாத, புரிந்து கொள்ள முடியாத இறை உண்மையைப் பல கோணங்களி லிருந்து அணுக முயல்கிறார். நூல் போதிக் கும் பாடத்தை ஏற்றுக்கொள்ள, யோபு இறைவனின் அன்பனாக, புனிதனாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மனிதன் தான் யோபு அனுபவிக்கும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ள முடியும். அப்படியிருந் தால்தான் அதி. 1-2-இல் தோன்றுவதாகச் சிலர் கருதும், இறைவனது கவலையற்ற, மரத்துப்போன போக்கைக் கண்டு இடறல் படுவதை மட்டுப்படுத்தக் கூடும். இறை வன், தம் ஊழியன், எந்தச் சூழ்நிலையிலும் தமக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். யோபுவுக்கு இப்படிப் பட்ட வாய்ப்பளிக்கப்படுகிறது. இக் கருத்தை மறைசாட்சி பற்றிய கிறிஸ்தவ இறையியலோடு ஒப்பிடலாம். ஸ்தேவான், அந்தியோக்கியா இஞ்ஞாசியார் தொடங்கி இன்றுவரை, மறைசாட்சிகள் இறைவன் தங்கள் உயிரையே இறுதிப் பலியாகக் கோருவதைப் பற்றி, அவர் அநீதியானவர் என்றோ, கொடியவர் என்றோ முறையிட்ட தில்லை. அவர்கள் தாங்கள் அன்பின் இறுதிச் சாட்சியாக தங்கள் உயிரையே அர்ப்பணிக்க விரும்பினர் (யோவா 15:13). குறைந்த ஆர்வமுடைய மறைசாட்சிகளை உற்சாகப்படுத்த, கிறிஸ்துவின் கெத்சமனித் தோட்ட மன்றாட்டு முன்மாதிரியாக உள் ளது. அதில் இறைமகன் கூடப் புலம்பி னார்; சோதனையிலிருந்து தம்மைக் காக் கும்படி மன்றாடினார்; ஆயினும், முழுச் சுதந்தரத்தோடு அதை ஏற்றுக் கொண்டார்.

8) பிரச்சனையின் பின்வரலாறு: இவ்வுல கில் நீதி வழங்கப்படாதவர்களுக்கும், எல் லாருக்கும் நீதி வழங்கப்படும் மறு உலக வாழ்வு இருப்பதை, யோபு நூலின் ஆசிரி யர் அறிந்திருக்கவில்லை. இதற்கு மாறாக, உயிர்ப்புக் கருத்தைப் புகுத்தும் யோபு 19:25—27 என்ற பகுதியின் வுல்கத்தா மொழிபெயர்ப்பு வாசகத்தை எடுத்துக் காட்டலாம். இது, பழுதுபட்ட வாசகத்தின் பிரமாணிக்கமற்ற மொழி பெயர்ப்பாகும். உயிர்ப்பிலும், மறு உலக வாழ்விலும் யோபுநூலின் ஆசிரியர் விசுவாசம் கொண்டி ருந்தார் என்று இவ்வாசகத்திற்கு விளக்கம் அளிக்க முடியாது. இக்கருத்து நூலின் வேறெந்தப் பகுதியிலும் காணப்பட

வில்லை. பிரச்சனைக்குப் பொருத்த முடைய விடையாக இக்கருத்தை ஆசிரியர் கருதியிருந்தால், இதை ஒரு தடவை கூறிய தோடு விட்டிருக்கமாட்டார். ஆயினும், இவ்வுலகில் தாம் குற்றமற்றவர் என்று எண்பிக்கப்படாவிட்டாலும், அவ்விதம் எண்பிக்கப்படக்கூடிய வருங்கால வாழ்வு இருக்காதா என்று யோபு வியக்கிறார். ஒருவேளை, ஆசிரியர் தமது தர்க்கத்தை இக்கருத்துக்கு இட்டுச் செல்வதாய்த் தோன் றலாம். அதற்கு வருங்கால வாழ்வில் கொள்ளும் விசுவாசமும் நம்பிக்கையும் அவசியம். அப்படிச் செல்வதற்கு அவர் காலத்து எபிரேய விசுவாசம் எந்த உதவியும் அளிக்கவில்லை. அத்தகைய விசுவாசம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் இஸ்ராயேல் மக்களிடையே தோன்றி, பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதுபற்றி முன்பே கூறி யுள்ளோம். ஆயினும் இந்த விசுவாச வளர்ச்சியில் யோபு நூல் ஒரு முக்கிய கட்டம் வகிக்கிறது.

வினைப்பயன் கோட்பாடு பழைய ஏற் பாட்டோடு முடியவில்லை. புதிய ஏற் பாட்டுக் காலத்திலும், பொதுவாக, மக்க ளிடையே காணப்படுகிறது. அதற்குச்சான்று யோவா 9:1-3 என்ற பகுதியாகும். இயேசு வின் சீடர்கள் வினைப்பயன் கோட் பாட்டை உண்மையாக எடுத்துக் கொள் கின்றனர். பிறவிக் குருடனான மனிதனைக் கண்ட சீடர்கள் ''இது பாவத்தின் விளைவா?'' என்று கேட்கவில்லை. ''ராபி, இவன் குருடனாகப் பிறந்தது யார் செய்த பாவம்? இவன் செய்த பாவமா? இவன் பெற்றோர் செய்த பாவமா?'' என்று கேட்டனர். அதற்கு ஆண்டவர் ''இவன் செய்த பாவமும் அன்று, இவன் பெற்றோர் செய்த பாவமும் அன்று. கடவுளுடைய செயல்கள் இவனிடம் வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தான்'' என்று கூறி சீடர்களைத் திருத்துகிறார். துன்பத் திற்குப் பாவத்தைத் தவிர, பிறிதொரு காரணமும் இருக்கலாம் என்று கூறுகிறார். அவர் கூறுவது யோபுநூல் படிப்பிக்கும் பாடத்திற்கு ஒப்பானது.

புதிய ஏற்பாட்டில் இலாசரும் பணக்கார னும் என்ற உவமை துன்பம் என்னும் பிரச்சனைக்கு அளிக்கும் விடையைக் கவ னிக்க வேண்டும். இறைமகன் இயேசுவின் சிலுவைப்பலியும் உயிர்ப்பும் விசுவாச முள்ளவனுக்குத் துன்பம், நீதி ஆகியவை பற்றிய இறுதிப் பொருளை அளிக்கிறது. இதைப் பற்றி புனித பவுல் ''உங்களுக்காக நான் படும் துன்பங்களில் இப்பொழுது மகிழ்ச்சி கொள்கிறேன். திருச்சபையாகிய தம் உடலின் பொருட்டு கிறிஸ்து பட வேண்டிய வேதனைகளில் இன்னும் குறை வாக இருப்பதை என் உடலில் நிறைவாக்கு கிறேன்'' (கொலோ 1:24) என்று கூறக் கூடும். ஆயினும், துன்பம் பற்றிய மறை பொருள் விடுவிக்கப்படவில்லை. அப் படியே இருக்கிறது.

12. இக்காலத்திற்கு: யோபு போராடிய பிரச்சனைகள், காலந்தோறும் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. ஏனெனில், அவை எக்காலத்திற்குமுரியன, எல்லாரையும் பாதிக்க வல்லன. மனித இனம் அடிப்படை யில் மாறாவிட்டாலும், மனிதன் தன் ஆற்றலால் அமைக்கும் அவனது அகப்புற உலகு புதிய பிரச்சனைகளையும் சவால் களையும் எழுப்புகின்றது. இந்நிலையில் ஒரு சமயத்தின் உண்மைகள் அந்தந்தக் காலத்தில் வாழ்க்கைக்குப் பொருந்தியதாக வும் ஆற்றலுள்ளதாகவும் இருக்க வேண் டும் என்றால், அந்த உண்மைகள் அந்தந்தக் காலத்தில் எழும் பிரச்சனைகளுக்கு விளக் கம் அளிக்க வேண்டும். அக்கால மொழி யில் அந்த உண்மைகளை எடுத்துக் கூற வேண்டும். அப்படிச் செய்யும் போது உண்மைகளை விட்டுக் கொடாமல் விளக் கம் அமைய வேண்டும்.

யோபுவும் அவரது நண்பர்களும் வினைப்பயன் கோட்பாடு என்று பாரம் பரிய போதகத்தை உறுதியாக நம்பினர். அதன் விளைவாக, யோபுவின் துன்பம் பற்றி, இருதரப்பினரும் தவறான முடிவு களுக்கு வருகின்றனர். துன்பம் பாவத்தின் விளைவாகும். யோபு மிகக் கொடிய துன்பம் அனுபவிக்கிறார். ஆகவே, அவர்

பெரும் பாவியாக இருக்க வேண்டும். இது நண்பர்களின் நிலை. தங்களது வினைப் பயன் கோட்பாட்டுக்கு விதிவிலக்கு இருக்கக்கூடும் என்பதை ஏற்க மறுத்துவிட்டனர். இறைவனது வழிகளை முழுவதும் அறிந்தவர்களாகவும், அவரது சுதந்தரத்தைத் தங்கள் பாரம்பரியப் போதகத்தால் கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும் நடந்து கொள்கின்றனர். ஆகவே, யோபுவின் உண்மை நிலையை ஏற்கவும், அதற்குரிய ஆலோசனையும் ஆதரவும் கூறவும் தவறிவிட்டார். வெறுமனே, உப்புச்சப்பற்ற முறையில் தங்களது பாரம்பரிய போதகத்தைக் கிளிப்பிள்ளை போல் எடுத்துக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட இறையியலைத் தொழிலாகக் கொண்டவர்களை நமது காலத்திலும் காணலாம். இவர்கள் தங்கள் தொழிலில் தவறிவிட்டனர். அதன் விளைவாக மறைஉண்மைகளைப் பழிப்புக்கு உள்ளாக்குகின்றனர்.

இதற்கு மாறாக, மற்றொரு வகை இயல் வல்லுநர்களையும் காணலாம். இவர்கள் இறைவனையும் அவரது வழிகளையும் மறைஉண்மைகளையும் முழுவதும் மனிதனால் அறியக்கூடும் என்று எண்ணுபவர்கள். அப்படி முடியாத போது, அவற்றை முழுவதுமே நிராகரித்து விடுவர். இவர்களும் இறைவனையும் அவரது சுதந்தரத்தையும் கட்டுப்படுத்த முயல்பவர்களே. இவர்களின் இறைவன் இவர்களது அறிவின் படைப்பே ஆகும். இவர்கள் எல்லாம் கடந்த, மனித அறிவுக்கும் அப்பாற்பட்ட, மறைபொருள் மிக்க இறைவனைச் செயல் முறையில் நிராகரிப்பவர்கள். இவர்களும் வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு வழிகாட்டத் தவறிவிட்டனர். மேற்கூறப்பட்ட இருசாராரையும் பற்றி நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மற்றொரு சாரார் யோபுவைப் போன்றவர்கள். இவர்கள், வாழ்க்கைப் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள முடியாத போது, இறைவனைப் பழிப்பர், அவரது நீதியை ஐயுறுவர், முறைப்பாடு செய்வர். இது பல வடிவங்கள் எடுக்கலாம். இவர்கள் தங்கள் எதிர்பார்ப்புகளாலும், பாரம்பரிய போதகத்தாலும் இறைவனை ஒருவகையில் கட்டுப்படுத்த விரும்புபவர்கள். யோபு தம்பால் இறைவன் கொண்டிருக்கும் அக்கறையையும், அன்பையும் (1:8;2:3) வாசகர் அறிந்திருப்பது போல், அறிந்திருந்தால், அவர் தம்மை அன்பு செய்யும் இறைவனைப் பற்றிப் பொறுப்பற்ற முறையிலும் சினத்தோடும் பேசியிருக்க மாட்டார். இந்நிலையில்தான் இறைமகிமைத் தோற்றத்தையும் இறைவனது பேச்சையும் புரிந்து கொள்ள வேண்டும். இக்காட்சி மனித அறிவின் வரையறையை எடுத்துக்கூறி மனதில் பதிய வைக்கிறது. யோபு தமது வரைக்குட்பட்ட தன்மையையும், இறைவனது மேலாண்மையையும், வரைக்கு அப்பாற்பட்ட தன்மையையும் அனுபவ ரீதியாகப் புரிந்து கொள்கிறார், மனந்திரும்புகிறார், இறைவனுக்கு அடிபணிகிறார். விசுவாசமே தமது துன்பத்தில் பற்றுக்கோடு என்று அனுபவ ரீதியாகக் கற்றுக்கொள்கிறார். வேதனையால் துன்புறும் போதும் யாவும் அறிந்த இறைவன் தன் பிள்ளைகளுக்கு நன்மையானதையே அளிக்கிறார் என்பதுவே அவ்விசுவாசமாகும். இதில் யோபு நமக்கு ஓர் அரிய பாடமாக அமைகிறார்.

இறைவனது போக்கு சில உண்மைகளை வெளிப்படுத்துகிறது. இறைவன் யோபுவின் குற்றச்சாட்டுகளைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை; அவற்றிற்குப் பதில் அளிக்கவுமில்லை. ஏனெனில், அவை இறைவனுக்கு எதிரான கிளர்ச்சியன்று, தவறான முடிவுகள். மாசற்றவனின் துன்பம் மறுக்கப்படவில்லை, விளக்கப்படவில்லை. மாறாக, இறைவனது கேள்விகள் மற்றொரு தளத்துக்கு, உலகின் மேலுள்ள இறைவனது மேலாண்மை என்னும் தளத்திற்கு மாறுகின்றன. இறைவனது கேள்விகள் அச்சத்தை உண்டாக்க வல்லன; மனிதனது குறுகிய நோக்கத்தை உடைத்துச் செல்ல வல்லன; பணிவை ஏற்படுத்த வல்லன. அத்தகைய வியப்பின்முன் துன்பமோ, செழிப்போ, எதுவுமே பொருளுடையதன்று. துன்பம், இறைவனிட

மிருந்து விலக்கப்பட்டதற்கு அடையாள மன்று.

இறைவனது கேள்விகள், யோபுவின் உண்மையான மேன்மையைக் குறைக்க வில்லை; ஆனால், மனிதனது ஆற்றலை மிகைப்படுத்துவதைக் கண்டிக்கின்றன. மனிதனது வரையறைகளைச் சுட்டிக் காட்டு கின்றன. ஆனால், அவனது உண்மையான ஆற்றலைப் போற்றுகின்றன. யோபு தம் நேர்மையில் கொண்டிருந்த சுயமரியா தையை அவமதிக்கவில்லை, நகைக்க வில்லை. மாறாக, வீரனைப் போல் இறை வன் முன் நிற்க யோபு அழைப்புப் பெறுகிறார். இறைவன் முன் அடிபணியும் போது, யோபு தம்மை இழிவாகத் தாழ்த்திக் கொள்ளவில்லை. தமது உண்மை நிலையை உணர்ந்து இறைவனுக்கு அடி பணிகிறார்.

யோபுவின் நண்பர்களிடமிருந்து பல பாடங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். நமது கோட்பாடுகளில் எவ்வளவு உறுதி கொண்டிருந்தாலும், துன்புறுவோரிடம் பேசும் போது மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நண்பர்கள் யோபுவோடு அமர்ந்து ஒருவாரத்திற்குத் துக்கம் கொண் டாடியதில் ஒரு நல்ல செயல் புரிந்தனர். துன்புறுவோருக்கு, நமது பிரசன்னம், தோழமை, அன்பான செயல்கள் ஆகியவை சொற்களைவிட அதிக ஆறுதலும் தெளிவும் அளிக்கக் கூடியன. அன்பான சொற்கள் கொடிய மனப்புண்ணையும் குணமாக்க வல்லன. கவனமற்ற சொற்கள், அறிவுரை கள் துன்பத்தை அதிகமாக்கும், நிலையை மேலும் மோசமாக்கும். இதற்கு நண்பர் களின் உரைகள் சிறந்த எடுத்துக்காட்டு களாகும். அவை யோபுவுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தன *(6:14-21)*. பிறரது தேவைகளைப் பற்றி ஒத்துணர்வு கொண் டிருக்கவேண்டும். வாழ்விலே துன்பம் அனுபவிக்காதவர்கள், பிறருடைய துன் பத்தை உணர்வதும், ஒத்துணர்வு கொள் வதும் கடினமாகும்.

யோபுவிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடிய பாடம் ஒன்றுள்ளது. துன்புறும்போது வெறுப்புக்கும், மனக்கசப்புக்கும் இடம் கொடுக்கக்கூடாது. அது நமது நிலையை மேலும் மோசமாக்கும். அதற்கு மாறாக, நம்மையே ஆராய்ந்து, இத்துன்பத்தாலேயே நம்மை இறைவன்பால் ஈர்க்க இறைவனை மன்றாடுதல் நன்று. துன்பம் நமது வாழ் வில் திருத்தும் பணியைச் செய்யலாம் (எபி *12:3-13*). அது நாம் இறைவனைச் சார்ந்தி ருப்பதை மேலும் உணர ஒரு வாய்ப்பாக இருக்கலாம். நண்பர்களின் வார்த்தைகள் யோபுவுக்கு ஆறுதல் அளிப்பதற்குப் பதி லாக எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தன எனலாம். ஆனால் நூலின் முடிவுரை, அவர்களோடு அவர் சண்டை போடுவதற்குப் பதிலாக, அவர்களுக்காகப் பரிந்து மன்றாடுபவராக யோபுவை விவரிக் கிறது. ''யோபு தம் நண்பர்களுக்காக வேண்டிக்கொண்டபின், ஆண்டவர் அவரு டைய செல்வச் சிறப்புக்களை மீண்டும் தந்தருளினார்'' *(42:10)*. இது கசப்பு மிகுந்த கதைக்கு எழுச்சி மிக்க முடிவாகும். இஃது ''உங்களைத் தூற்றுவோருக்காகச் செபியுங் கள்...மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள்'' *(லூக்6:28-37)*. என்ற இயேசுவின் போத கத்தை முன்னொலிக்கிறது.

இக்கட்டுரையின் முன்னுரையில் பல கேள்விகளை எழுப்பினோம். அவற்றை எதிர்கொள்ள, யோபுநூல் அவை பற்றிய உட்கருத்தையும் அவற்றை அணுகும் முறை யையும் கொடுக்கிறது. இறுதியில் ஒவ் வொருவரும் அவற்றை எதிர் கொள்ள வேண்டும். அவற்றோடு போராட வேண் டும். தானே அப்பிரச்சனைக்கு விடைகாண வேண்டும், அவற்றை விடுவிக்க வேண் டும். இதில் மறைபொருள் மிக்க இறை வனது மேலாண்மைக்கு ஆழ்ந்த முறையில் தன்னையே அர்ப்பணிப்பதும், தனது வரை யறைகளைச் சோதித்தறிவதில் காட்டும் நேர்மையும், படைக்கப்பட்ட பொருளின் வரையறைக்குட்பட்ட தன்மையைத் தாழ்ச் சியோடு ஏற்பதும், தனது உண்மை நிலை அறிந்தவனாய் இறைவனுக்கு அடிபணி

வதும், ஒருவனுக்குப் பாதுகாப்பாக அமைகின்றன.

யோப்பா (JOPPA - அழகுள்ள)

பாலஸ்தீனக் கடற்கரையில் எருசலேமுக்கு மேற்கே வடமேற்கில் உள்ளது யோப்பா நகரம். எருசலேமுக்கு மிக அருகில் உள்ள துறைமுகம் இதுதான். ஆனால், இதில் சரியான துறைமுகம் எதுவுமில்லையாதலால் மோசமான தட்பவெப்பம் நிலவும்போது இத்துறைமுகத்தைப் பயன்படுத்த முடியாது. எகிப்திய மன்னனான மூன்றாம் துத்மோசு கைப்பற்றிய கானானிய நகரங்களின் வரிசையில் இதுவும் ஒன்றாக வைக்கப்படுகிறது. எகிப்தின் 19-ஆவது அரச மரபைச் சேர்ந்த முதலாம் அனஸ்தாசியின் நாணல்தாள் (கி.மு. 13-ஆம் நூற்றாண்டு) இந்நகர்த் தோட்டத்தின் அழகு பற்றிப் பேசுகிறது. அமர்னா ஏடுகளில் இது நிர்வாக மையமாகக் காட்டப்படுகிறது. தாண் கோத்திரத்தின் நகராகக் கூறப்பட்டாலும் (யோசு 19:46), இஃது இஸ்ராயேலரின் நகரமாக இருந்ததே இல்லை. கானானியர்களிடமோ, பெலிஸ்தியரிடமோ, பாரசீகத்தின் ஆட்சிக் காலத்தில் பெனீசியர்களிடமோதான் இஃது இருந்தது.

கி.மு. 701-இல் அசீரியாவின் அரசன் சனகெரிபு இதனைக் கைப்பற்றினான். கேதுரு மரங்களும், தேக்கு மரங்களும், சாலமோனின் ஆலயத்திற்கும் (2 நாள் 2:15) செருபாபேலின் ஆலயத்திற்கும் (எஸ் 3:7) இந்தத் துறைமுகத்துக்குத்தான் தண்ணீரில் மிதக்கவிடப்பட்டுக் கொண்டு வரப்பட்டன. எபிரேய பழைய ஏற்பாட்டில் யோனா கரை சேர்ந்தது இந்த இடத்தில்தான் என்பதைத் தவிர இந்த ஊரைப் பற்றி வேறு ஒன்றும் கூறப்படவில்லை (யோனா 1:3). சீரியா நாட்டினர் இதனைப் பிடித்தபோது அவர்கள் கைக்குப் போனாலும், மக்கபேயர்கள் போரிட்டு இதனை மீண்டும் பிடித்ததால் யோனத்தானிடம் ஒப்படைக்கப்பட்டது (1 மக் 10:75 தொ). ஆனால், தொடர்ந்து சீமோனால் இருமுறை மீண்டும் மீண்டும் பிடிக்கப்பட்டது (1 மக் 12:33; 13:11). கி.மு. 142-இல் சீமோன் நிரந்தரமாகத் தனதாக்கி (1 மக் 14:5), இதனைச் சுற்றிப் பாதுகாப்பு அரண்களைக் கட்டி எழுப்பினார் (1 மக் 14:34; 15:28.35). பாம்பே இதனைப் பிடித்த பின், சீசர் இதனை மீண்டும் கி.மு. 47-இல் யூதர்களுக்கு அளித்தான். ஆனால், கி.பி. 67-இல் யூதர்கள் புரட்சி செய்ததால் மீண்டும் உரோமையர்கள் இதனை எடுத்துக் கொண்டனர்.

கிறிஸ்தவத் தொடக்கத்தில் யோப்பாவில் ஒரு கிறிஸ்தவ சமூகம் இருந்தது. பேதுரு உயிர்பெறச் செய்த தபித்தாவும் (அ.ப. 9:36-42), தோல் பதனிடும் சீமோனும் இங்கிருந்தவர்களே. இந்தச் சீமோனுடைய வீட்டிலிருக்கும்போதுதான் செசாரியாவிலிருந்து வந்த கொர்னேலியுவின் ஆட்களை ஏற்று, அவர்களுடன் செல்லுமாறு பேதுரு (அ.ப. 10:7-22) ஒரு காட்சி கண்டார். புறவினத்தார் முதலில் திருச்சபையில் சேர்ந்தனர்.

யோயதா, யோகதா (JEHOADDAH)

இவர் பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர்; ஆகாசின் மகனும் அலமேத்து, அசமாவேத்து, சிம்ரி ஆகியோரின் தந்தையுமாவார் (1 நாள் 8:36). 1 நாள் 9:42-இல் இவர் யாரா என்றழைக்கப்படுகிறார்.

யோயதான் (JEHOADDAN - யாவே களிப்பாவார்)

யூதாவின் அரசன் அமசியாவின் தாய் (2 நாள் 25:1). 2 அர 14:2-இல் யோவாதீன் என்றழைக்கப்படுகிறார்.

யோயாக்கிம் (JEHOIAKIM - யாவே உயர்த்துவார், நிறுவுவார்)

1. ஏறக்குறைய கி.மு. 609-598-ஆவது ஆண்டுகளில் யூதாவின் அரசனாக இருந்தவர். யோசியா, செபிதா ஆகியோரின் இரண்டாம் மகனும், யோவகாசின் சகோதரனுமாவார் (1 நாள் 3:15).

அக்கால ஆவணங்களில் இவன் பெயர் 'யாக்கிம்' என்று காணப்படுகிறது. இது யோயாக்கிம் என்ற பெயரின் சுருக்கமாகும். இப்பெயர்கள் அவர் அரியணை ஏறியபின்

கொடுக்கப்பட்ட பெயர்களாக இருக்கலாம். அவரது இயற்பெயர் எலியாக்கிம் என்பதாகும் (2 அர 23:34; 2 நாள் 36:4). ஆனால், பார்வோன் நெக்கோ அவரது பெயரை யோயாக்கிம் என்று மாற்றினார். இம்மாற்றம் இஸ்ராயேலின் நாட்டுப் பெருமையைக் காட்ட, பார்வோனால் வேண்டுமென்றே செய்யப்பட்டதாகும்.

1 நாள் 3:15 கூறுவதன்படி யோயாக்கிம் யோசியாவின் இரண்டாவது மகன். அவனது சகோதரன் யோவகாசின் மூன்று மாதங்கள் ஆட்சி செய்தபின் பார்வோன் நெக்கோ அவரை அரியணையினின்று இறக்கினார். அதன்பின் யோயாக்கிம் அரசனானார். யோயாக்கிம் தனது இருபத்து ஐந்தாவது வயதில் அரசனாகி, 11 வருடங்கள் எருசலேமில் ஆட்சி செய்தார் (2 அர 23:36; 2 நாள் 36:5). அவர் தாயின் பெயர் செபிதா. இவள் கலிலேயாவிலுள்ள ரூமா என்ற ஊரைச் சேர்ந்த பெதாயா என்பவரின் மகள் (2 அர 23:36). யோயாக்கிம் ஓர் எகிப்திய ஆதரவாளராய் இருந்ததால் இவரைப் பற்றி அதிகமாகக் கூறப்படவில்லை. இறைவாக்கினர் உரியா ஓடிச் செல்வதும், அவர் மரணமும் எகிப்தியரிடம் யோயாக்கிமுக்கு இருந்த செல்வாக்கைக் காட்டுகிறது (எரே 26:20 தொ). இது நெக்கோ அவரை அரசனாகத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணமாக இருக்கலாம். யூதா நாடு தனக்கு நூறு தாலந்து வெள்ளியையும், ஒரு தாலந்து பொன்னையும் கப்பம் செலுத்த வேண்டுமென்று நெக்கோ கட்டளையிட்டார் (2 அர 23:33; 2 நாள் 36:3). மேற்சொன்னவற்றைப் பார்வோனுக்கு அளிக்க எண்ணி, யோயாக்கிம் நாட்டு மக்கள் ஒவ்வொருவர் மேலும் வரி விதித்தார் (2 அர 23:35). இவ்வாறு கிடைத்த பணத்தை அவர் தனது சொந்த நலனுக்காகப் பயன்படுத்தினார் என்பது எரேமியா அவருக்கு எதிராக உரைத்த இறைவாக்கிலிருந்து தெளிவாகிறது (எரே 22:13 தொ).

யோசியா அரசன் மெகிதோவில் இறந்தபின் (609) நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பாபிலோனிய நாளேடு விவரிக்கிறது. மெகிதோ போருக்குப்பின் எகிப்தும், பாபிலோனியாவும் வல்லரசுகளாகத் திகழ்ந்தன. 609-ஆம் ஆண்டிலிருந்து 605-ஆம் ஆண்டுவரை பாபிலோனை ஆண்ட நெபோபோலாசாரும், அவனது மகன் நெபுகத்னேசரும் தெற்கு உரார்தியர் எல்லையில் வாழ்ந்தவர்களுக்கு எதிராகப் போர்கள் பல தொடுத்தனர். அதே வேளையில் எகிப்தியர்கள் யூப்பிரத்தீசில் உள்ள கர்க்கமிசில் தங்களது வல்லரசை நிறுவியிருந்தனர். பொதுவாக, எகிப்தே வல்லமை மிகுந்ததாக இருந்தது. நெபோபோலாசார் பாபிலோனுக்குத் திரும்பி வந்து அங்கே 605-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இறந்தான்.

605-ஆம் ஆண்டு மே-ஜூன் மாதம் பாபிலோனியப் படைக்குத் தலைமை வகித்த நெபுகத்னேசர் கர்க்கமிசில் உள்ள எகிப்தியர்களைத் தாக்கினார். அவர் எகிப்தியர்கள் அனைவரையும் அழித்தொழித்தார் என்று பாபிலோனிய நாளேடு கூறுகிறது. அவர் தொடர்ந்து சென்று சீரியா-பாலஸ்தீன நாடுகளையும் வென்றார். விவிலியமும் இதை உறுதிப்படுத்துகிறது. ''எகிப்திய அரசன் இதன்பின் தன் நாட்டிலிருந்து வெளிவரவே இல்லை. ஏனெனில், எகிப்திய நதி முதல் யூப்பிரத்தீசு நதிவரை எகிப்திய அரசன் கைவசம் இருந்த நாட்டையெல்லாம் பாபிலோனிய அரசன் பிடித்திருந்தான்'' (2 அர 24:7). நெபுகத்னேசர் தன் தந்தையின் இறப்புச் செய்தி கேட்டு, பாபிலோனுக்குத் திரும்பும் முன், அதாவது ஆகஸ்டு 605-க்கு முன் இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும்.

கர்க்கமிசின் போர் யோயாக்கிமின் ஆட்சிக்காலத்தில் நான்காவது ஆண்டில் நடைபெற்றது என்று எரேமியா கூறுகிறார் (எரே 46:2). இதிலிருந்து, மெகிதோ, போர் நடந்த காலத்தையும், யோசியா இறந்த காலத்தையும் நாம் கணிக்கலாம். மேலும், யோவகாசின் ஆட்சி நாட்களையும், யோயாக்கிம் அரசனான காலத்தையும் நாம் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

நெபுகத்னேசர் எகிப்தை வென்றதால் யோயாக்கிம் நெபுகத்னேசருக்குத் தனது ஆதரவைக் காட்டினார். ஆனால் உண்மையில், நெபுகத்னேசரின் ஆட்சியின் முதலாம் ஆண்டில், அதாவது 604-603-இல் அவர் சீரியா, பாலஸ்தீன நாடுகளின் மீது படையெடுத்து அவற்றின் மீது கப்பம் விதித்த போதுதான் யோயாக்கிம் நெபுகத்னேசருக்கு முழுவதுமாக அடிபணிந்தார் (2 அர 24:1தொ).

யோயாக்கிம் மூன்று ஆண்டுகள் பாபிலோனுக்குப் பணிந்திருந்தார். பின்பு, அதற்கு எதிராகக் கலகம் செய்தார் (2 அர 24:16). இதற்குக் காரணம், 601-600-இல் எகிப்தியர்களுக்கும், பாபிலோனியர்களுக்கும் எகிப்திய எல்லையில் நடைபெற்ற பெரிய சண்டையேயாகும். இதன் விளைவாக நெபுகத்னேசர் பாலஸ்தீனத்தில் போரிடுவதை நிறுத்த வேண்டியிருந்தது. இப்போருக்குப் பின் நெபுகத்னேசர் பாபிலோனுக்குத் திரும்பி அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார். அப்போது தனது படையை வலுப்படுத்துவதில் கவனமாயிருந்தார். அதே சமயம், காசாவைப் பிடிப்பதற்கு எகிப்து வலிமை பெற்றிருந்தது (எரே 47:1). யோயாக்கிமின் அரசவையில் எகிப்திய செல்வாக்கு இருந்ததனால்தான், அவர் எரேமியாவின் அறிவுரையைக் கேளாமல், பாபிலோனுக்கு எதிராகக் கலகம் செய்தார் (எரே 27:9-11). அவரது கலகத்தை அடக்குவதற்காக நெபுகத்னேசர் கல்தேயர்களை அனுப்பினார். மேலும் சீரியர்கள், மோவாபு நாட்டவர்கள், அம்மோனியர்கள் முதலியவர்களின் உதவியையும் நாடினார் (2 அர 24:2). இறுதியில் 598-ஆம் ஆண்டு அவரே படைக்குத் தலைமை தாங்கி வந்து, எருசலேமை முற்றுகையிட்டார்.

''கல்தேயரின் அரசன் நெபுகத்னேசர் அவனைத்தாக்கிச் சிறைப்பிடித்து, பாபிலோனுக்குக் கொண்டு போனான். ஆண்டவரின் ஆலயத்தில் இருந்த தட்டுமுட்டுகளையும் பாபிலோனுக்குக் கொண்டு சென்று அவற்றைத் தன் கோவிலிலே வைத்தான்'' என்று நாளாகமம் கூறுகிறது (2 நாள் 36:6-7). எரேமியாவின் இறைவாக்குரைகள் பலவற்றில் யோயாக்கிமின் ஆட்சியைப் பற்றியும், அவரது நடத்தையைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது (எரே 36).

யோயாக்கிம் எவ்வாறு இறந்தார் என்பது பிரச்சனைக்குரியதாக இருக்கிறது. 2 அர 24:6-இல் ''யோயாக்கிம் தம் முன்னோரோடு துயில் கொண்டான்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாளாகமத்தில் அவனது மரணத்தைப் பற்றிய குறிப்பே இல்லை. ஆனால், ''ஒரு கழுதைக்குரிய அடக்கமே அவனுக்குக் கிடைக்கும்...'' (எரே 22:18-19) என்றும், ''அவனது பிணம் வெளியில் எறியப்பட்டு பகலின் வெயிலிலும் இரவின் குளிரிலும் கிடக்கும்'' (எரே 36:30) என்றும் யோயாக்கிமின் இறப்பு பற்றி எரேமியா இறைவாக்குரைத்தார். அனேகமாக யோயாக்கிம் பாபிலோனிய ஆதரவாளர்களால் கொல்லப்பட்டிருப்பான். அவன் எகிப்தியர்களை ஆதரித்ததே இதற்குக் காரணம். எனவேதான், அவருடைய மகனான யோயாக்கின் விரைவில் பாபிலோனியர்களிடம் சரணடைந்தான். இந்தச் சூழ்நிலையில் எரேமியாவின் இறைவாக்கு நிறைவேறியிருக்கலாம்.

மத் 1-இல் காணப்படும் தலைமுறை அட்டவணையில் யோயாக்கிமின் பெயர் இடம் பெறவில்லை. யோசியாவின் மகனாக யோயாக்கின் (எக்கோனியா) மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளார்.

2. ஒரு பெரிய குரு. சல்லூமின் வழித்தோன்றலும் இலிக்கியாவின் மகனும்மாவார். இவருக்கு நாடு கடத்தப்பட்டவர்கள் காணிக்கைகள் அனுப்பினர் (பாரூ 1:7).

யோயாக்கிம் (JOIAKIM)

1. யூதித்தின் கதையில் வரும் எருசலேமின் பெரிய குரு (யூதி 4:6. 8.14; 15:8).

2. இவர் சூசன்னாவின் கணவர் (தானி 13:63).

யோயாக்கிம் (JOIAKIM)

நாடுகடத்தலுக்குப்பின் இருந்த ஒரு பெரிய குரு. ஏசுவாவின் மகன். எல்யாசீபுவின் தந்தை (நெகே 12:10.12.26).

யோயாக்கின் (JEHOIACHIN - யாவே நிறுவுகிறார்)

யோயாக்கிமின் மகனும், அவருக்குப் பின் யூதாவை ஆண்ட யூதாவின் 19-ஆவது அரசனுமாவார் (கி.மு. 598-597); நெபுகத்னேசரால் நாடு கடத்தப்பட்டார் (1 நாள் 3:16-17: எஸ்த 2:6; எரே 24:1; 27:20; 28:4; 29:27).

அக்காலத்திய எழுத்துப் பொறிப்புகளில் இவர் பெயர் யாக்கின் என்று காணப்படுகிறது. இப்பெயரும் யோயாக்கின் என்ற பெயரும் அவர் அரசனானபோது அவருக்குக் கொடுக்கப்பட்ட பெயராகும். அவரது இயற்பெயர் எக்கோனியாவாக இருக்கலாம். இவருடைய தந்தை எலியாக்கிம் என்ற பெயரை யோயாக்கிம் என்று மாற்றிக்கொண்டார் (2 அர 23:34). அதுபோன்றே இவரது மாமனாரும் அரசனானபோது சல்லூம் என்ற பெயரை யோவகாசு என்று மாற்றிக்கொண்டார் (2 அர 23:30; 1 நாள் 3:15; எரே 22:11).

யோயாக்கின் 598-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் தனது பதினெட்டாவது வயதில் அரசனானார்; மூன்று மாதங்கள் அரசாண்டார் (2 அர 24:8). 2 நாள் 36:9-இன்படி யோயாக்கின் எட்டு வயதில் அரசனாகி 40 நாட்கள் அரசாண்டார். ஆனால், பாபிலோனியக் கற்பலகைகளிலிருந்தும், 2 அர 24:15 அவரது மனைவியர்களைப் பற்றிக் கூறுவதாலும், அவனுக்குப் பதினெட்டு வயதாகும் போதே அரசனானார் என்பது தெளிவாகிறது. எருசலேமைச் சேர்ந்த எல்நாத்தானின் மகளான நெகுஸ்தா அவனது தாயார். அனேகமாக எரே 26:22; 36:12.25-இல் கூறப்பட்டிருக்கும் எல்நாத்தான் இவராக இருக்கலாம்.

யோயாக்கின் ஒரு சிதைந்து போய் கொண்டிருந்த நாட்டிற்கு அரசனானார். இவர் அரசனானபோது யூதா நாட்டினர் நெபுகத்னேசருக்கு எதிராக, புரட்சி செய்தனர். இவருடைய தந்தை யோயாக்கிம் புரட்சி ஒன்றின்போது கொலை செய்யப்பட்டார். இதுவே யோயாக்கின் விரைவில் பாபிலோனிய அரசனிடம் சரணடைவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். பாபிலோனிய வரலாற்று ஏடு ஒன்று யோயாக்கின் ஆட்சி பற்றிக் கூறுகிறது: நெபுகத்னேசரின் ஆட்சியில் ஏழாம் ஆண்டில், கிசிலேவு மாதத்தில் (திசம்பர் 598), நெபுகத்னேசர் தனது படையைத் திரட்டிக் கொண்டு சிரியா-பாலஸ்தீன நாடுகளை நோக்கிச் சென்றார்; எருசலேமுக்கு எதிரே முகாமிட்டார். ஆதர் மாதத்தின் இரண்டாம் நாளில் (மார்ச்சு 16, 597 (அல்லது) மார்ச்சு 15), எருசலேமைக் கைப்பற்றி அதன் அரசனைச் சிறைப்படுத்தினார். அங்கு அவருக்கு விருப்பமான ஒருவனை அரசனாக்கிவிட்டு, அங்கிருந்த செல்வங்களையெல்லாம் பாபிலோனுக்கு அனுப்பினார்.

சிறைப்படுத்தப்பட்ட அரசன் யோயாக்கின்தான். நெபுகத்னேசரால் அரசனாக்கப்பட்டவர் யோயாக்கினின் சிற்றப்பனாகிய மத்தானியா ஆவார். இவன் அரசனானவுடன் செதேக்கியா என்ற மறு பெயர் பெற்றான். விவிலியத்தில் யோயாக்கின் சரணடைந்ததாகவும், அவரையும், அவர் தாய், மனைவியர்கள், ஊழியர்கள் அனைவரையும் நெபுகத்னேசர் பாபிலோனுக்குச் சிறைப்படுத்திக் கொண்டு சென்றதாகவும் கூறப்பட்டுள்ளது. எரே 52:28 நாடு கடத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 3023 என்றும், 2 அர 24:14 பத்தாயிரம் என்றும் குறிப்பிடுகின்றன.

யோயரக்கின் நாடு கடத்தப்பட்டபோது தான் எரேமியா அவரைப் பற்றி இறைவாக்குரைத்தார் (எரே 13:18-19; 22:24-30; காண்க. 24:1-10). எரேமியா இங்கு யோயாக்கினின் தாயாரையும் பற்றிக் குறிப்பிடுகின்றார். யோயாக்கின் அடிமைத்தனத்திலிருந்து மீண்டு திரும்பி வரமாட்டார் என்றும், அவருடைய சந்ததியார் இனி யூதாவை ஆளமாட்டார்கள் என்றும் எரேமியா கூறினார். ஆனால், யோயாக்கின் இரண்டு

ஆண்டுகளுக்குள் திரும்பி வருவான் என்று அனனியா இறைவாக்கினர் கூறினார் (எரே 28:3-4.11). யோயாக்கின் நாடு கடத்தப் பட்ட பிறகுதான் இறைவாக்குரைக்க ஆரம் பிக்கிறார் (எரே 1:2; 8:1); அந்நிகழ்ச்சியை வைத்துத்தான் தனது காலத்தைக் கணக்கிடு கிறார். இது யோயாக்கின் அரச பதவி தொடர்ந்து இருக்கிறது என்று நாடு கடத்தப் பட்டவர்கள் எண்ணியதைப் பிரதிபலிக் கிறது.

யோயாக்கின் திரும்பி வரும்வரை உள்ள இடைக்கால அரசராக செதேக்கியா பலரால் கருதப்பட்டிருக்கலாம். செதேக்கியாவின் காலத்தைச் சேர்ந்த இரு ஜாடிகளின் கைப் பிடிகள் அகழ்வாராய்வில் கிடைத்துள்ளன. அவற்றின்மீது ''யாக்கினின் (யோயாக்கின்) கண்காணிப்பாளனான எலியாக்கிமுக்குச் சொந்தமானது'' என்று பொறிக்கப்பட்டுள் ளது. எனவே, நாடு கடத்தப்பட்ட பின்பும் யோயாக்கின் அரசனாகக் கருதப்பட்டது தெரிகிறது. செதேக்கியாவுக்குப் பிறகு யூதா வின் ஆளுநராக இருந்த கெதல்யாவும் இடைக்கால ஆளுநராகவே கருதப்பட்டிருக் கலாம்.

பாபிலோனில் யோயாக்கின் யூதாவின் அரசன் என்றே அழைக்கப்பட்டார். 592-ஆம் ஆண்டைச் சேர்ந்த பாபிலோனியக் கற்பலகை ஒன்றில் யோயாக்கினின் பெயர் காணப்படுகிறது. மற்றொரு கற்பலகை அவருக்கு உணவுப் பொருட்கள் வழங்கப் பட்டதையும், அவருக்கு 5 புதல்வர்கள் இருந்ததையும் குறிப்பிடுகிறது. இதிலிருந்து யோயாக்கின் சிறையில் அடைக்கப்படா மல் வாழ்ந்தார் என்பது தெரிகிறது. பின்னர் ஒருவேளை தப்பிக்க முயன்றதால் சிறைப் படுத்தப்பட்டிருக்கலாம்.

பாபிலோனிய அரசன் எவில்-மெரோதாக்கு யோயாக்கினைச் சிறையிலி ருந்து விடுவித்தார் (2 அர 25:27-30; எரே 52:31-34). இது நடந்தது 560 அல்லது 561-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 அல்லது 22-ஆம் தேதியாக இருக்கலாம். யோயாக்கி னுக்குப் பாபிலோனிலிருந்த மற்ற அரசர் களின் மேல் அதிகாரம் வழங்கப்பட்டது. அன்று முதல் தான் சாகும் வரை அவர் அரச பந்தியிலேயே அமர்ந்து உணவருந்தி வந்தார். அவர் இவ்வாறு நடத்தப்பட்டதால் நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேல் மக்க ளிடையே பெரும் நம்பிக்கை உதித்தது. அது மெசியாவை எதிர்பார்க்கும் அளவுக்கு வளர்ந்தது.

யோயாக்கினுக்கு ஏழு புதல்வர்கள் இருந் தனர். அவர்களின் பெயர்கள் 1 நாள் 3:17-இல் காணப்படுகின்றன. அவைகளில் ஒரு பெயரான செனாட்சர் என்பது எஸ் 1:8-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் சேசுபட் சரையே குறிக்கும் என்று சிலர் கருதுகிறார் கள். ஆகவே, பாபிலோனிலிருந்து திரும்பி வந்தபின் அவரே யூதாவின் முதல் ஆளுந ராக இருந்திருக்கலாம். இவருக்குப்பின் யோயாக்கினின் பேரனான செருபாபேல் ஆளுநரானார்.

மத் 1:11-12-இல் காணப்படும் இயேசு வின் தலைமுறைப்பட்டியலில் யோசியா வின் மகன் எக்கோனியா (யோயாக்கின்) என்று கூறப்பட்டுள்ளது. யோயாக்கிமின் பெயர் பட்டியலில் இடம் பெறவில்லை.

யோயாதா (JEHOIADA - யாவே அறிவார்)

1. கெரேத்தியருக்கும் பெலேத்தியருக் கும் தலைவனும், தாவீதின் கூலிப்படைத் தலைவனுமான பெனாயா என்பவரின் தந்தை (2 சாமு 8:18; 20:23; 23:20.22; 1 அர 1:8-2:46). இவர் சாலமோனின் கீழ் பணிபுரிந்தார் (1 அர 4:4; 1 நாள் 11:22.24; 18:17; 27:5). இவரே எபிரோனிலிருந்த தாவீதிடம் வந்து சேர்ந்த ஆரோன் வழிவந்த வருக்குத் தலைவரான யோயாதா ஆவார் (1 நாள் 12:27).

2. இவர் நூற்றுவர் தலைவர்களையும் வீரர்களையும் வரவழைத்து, அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டு, யூதாவை ஆண்ட அரசி அத்தலியாவை அரியணையி னின்று இறக்கினார் (கி.மு. 842-837). மேலும், அவள் பரப்பி வந்த பாகால் வழிபாட்டை ஒழித்து, இளவரசனான யோவாசை அரியணையில் அமரச் செய்தார்

(2 அர 11:4-21). யோவாசு சிறியவனாக இருந்தபோது அரசாள்வதில் அவருக்கு உதவி செய்தார். ஆலயத்தைப் பழுது பார்க்க யோவாசைத் தூண்டியவரும் இவர் தான் (2 அர 12:1-6). இதற்கு இணையான பகுதியான 2 நாள் 22:10-24:27-இல் அத்தலியாவால் கொல்லப்படாமல் யோவாசை மறைத்து வைத்துக் காத்த யோசேபா என்பவள் யோயாதாவின் மனைவி என்று கூறப்பட்டுள்ளது (22:10-12). அவ்வாறு இருப்பின், யோயாதா புதிய அரசனான யோவாசின் மாமனாராவார்.

யோயாதா இறந்த பிறகு யோவாசு தன் நற்செயல்களைக் கைவிட்டான். மக்கள் சிலை வழிபாட்டில் ஈடுபட்டனர். யோயாதாவின் மகன், செக்கரியாவைக் கொலை செய்தான். ஏனெனில், செக்கரியா யூதா குலத்தினர் இறைவனைப் புறக்கணிப்பதைப் பற்றிக் கண்டித்தார். செக்கரியாவைக் கொன்றதற்காக இறைவன் அவனைத் தண்டித்தார். இறுதியில் அவர் தோல்வியுற்றதோடு அல்லாமல் 130-ஆவது வயதில் கொல்லப்பட்டார் (4:17-27). இவர் யூதாவுக்கும் யாவேக்கும் செய்த நல்ல சேவைக்குச் சன்மானமாக அரச கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார்.

3. 1 நாள் 27:34-இன்படி, இவர் அகித்தோபலுக்குப் பின் தாவீது அரசரின் ஆலோசகராய் இருந்தார். இவர் பெனாயா என்பவரின் மகனும், அனேகமாக (1)-இல் உள்ள யோயாதாவின் பேரனுமாவார். எழுத்துப் பிழை காரணமாக தலைமுறை அட்டவணை மாறியிருக்கிறது என்றும், (1)-இல் கூறப்பட்டிருக்கும் யோயாதாவே இவர் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

4. இறைவாக்கினர் எரேமியா காலத்தில் இருந்த ஒரு குரு (எரே 29:26).

யோயாதா (JOIADA - யாவே அறிகிறார்)

1. நெகேமியாவின் கீழ் எருசலேமின் சுவரில் பழைய வாயிலைக் கட்டியவரான பாசயாகு என்பவரின் மகன் (நெகே 3:6).

2. நாடு கடத்தலுக்குப்பின் திரும்பி வந்து எருசலேமில் இருந்த தலைமைக்குருவான இவர் எல்யாசீபுவின் மகனும், யோகனானின் தந்தையும் ஆவார். இவர் நெகேமியாவின் காலத்தவர். அறிஞர்கள் சிலர் 'யோகனான் எல்யாசீபுவின் மகன்' என்று இருப்பதைச் சுட்டிக்காட்டி (நெகே 12:23; எஸ் 10:6), இதனால் யோகனான் யோயாதாவின் சகோதரனேயன்றி மகனல்லன் என்கின்றனர். ஆனால், மகன் என்பது பேரனையும் குறிக்குமாதலால், யோகனான் யோயாதாவின் மகன்தான் என மற்றவர்கள் இக்கருத்தை மறுக்கின்றனர்.

யோயாரிபு (JEHOIARIB - யாவே போராடுவாராக)

ஆரோனின் வழிவந்தவர். தாவீது அரசனின் காலத்தில் இருந்த குருத்துவக் குடும்பம் ஒன்றின் குலப்பெயர் முதல்வர் (1 நாள் 24:7). பாபிலோனிலிருந்து திரும்பி வந்தவர்களின் பட்டியலிலும் இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன (1 நாள் 9:10; நெகே 11:10).

யோயாரிபு (JOIARIB - யாவே போராடுகிறார்)

1. பாலஸ்தீனத்துக்கு வருவதற்குமுன் ஆலயப்பணியாளர்களை ஒன்று சேர்ப்பதற்கு எஸ்ராவுக்கு உதவியவர் (எஸ் 8:16); இதே (வரியில்) வாக்கியத்தில் வரும் யாரீபு இவராக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

2. நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் வாழ்ந்த ஒரு குருவின் குடும்பத்தின் பெயர் (1 நாள் 9:10). செருபாபேல் (நெகே 12:6), பெரிய குரு யோயாக்கீம் (12:19), நெகேமியா (நெகே 11:10) ஆகியோர் காலத்தில் இப்பெயர் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது.

3. நாடு கடத்தலுக்குப்பின் எருசலேமில் வாழ்ந்த யூதா கோத்திரத்தைச் சேர்ந்த இவர் மாசெயாவின் முன்னோராவார் (நெகே 11:5). செக்கரியாவின் மகனும் அதாயாவின் தந்தையுமாவார்.

யோரா (JORAH - முந்திய மழை)

இவர் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து செருபாபேலோடு திரும்பிய ஒரு குடும்பத்தின் தலைவர் (எஸ் 2:18). நெகே 6:24-இல் இவர் அரிபு என்றழைக்கப்படுகிறார்.

யோராம் (JEHORAM, JORAM - யாவே உயர்த்தப்பட்டவர், பெருமைப்படுத்தப்பட்டவர்)

1. இவர் அமாத்தின் அரசனான தோயி என்பவரின் மகன். தனது பகைவனான அத்தேசருடன் தாவீது போரிட்டு அவனைத் தோற்கடித்ததால் தாவீதுக்கு வாழ்த்துச் சொல்லவும், நன்றி கூறவும் தனது மகன் யோராமைத் தாவீதிடம் அனுப்பினான் (2 சாமு 8:9-12); அவ்வாறு செல்லும்போது பொன், வெள்ளி, வெண்கலப் பாத்திரங்களைக் கொடையாக எடுத்துப்போனான். 1 நாள் 18:10-இல் இவன் பெயர் ''தோகுவின் மகன் அதோராம் என்று வருகின்றது.

2. கி.மு. 849-842-இல் யூதாவின் அரசனாக இருந்த யோராம் யோசபாத்தின் மகன் (1 அர 22:51). ஆகாபு, ஈசபேல் இவர்களின் மகளாகிய அத்தலியாவின் கணவன். 32-ஆவது வயதில் அரசனானான். எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தான் (2 அர 8:17; 2 நாள் 21:5). இவனது ஆட்சிக்காலத்தில் தான் ஏதோம் யூதாவுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தது. அதனால் அதன் மேலுள்ள மேலாண்மையை யூதா இழந்தது. யோராமின் உயிரும் ஆபத்துக்குரியதாகியது. லிப்னாவும் யூதாவுக்கு எதிராகப் புரட்சி செய்தது (2 அர 8:16-24). நாளாகமம், இவன் தனது சகோதரர்களையெல்லாம் கொன்றான் எனவும் (2 நாள் 21:4), அதன் பின் இவனது அரசில் பெலிஸ்தியரும், அராபியரும் புகுந்து இதனை ஆட்கொண்டனர் எனவும் கூறுகிறது (2 நாள் 21:16-17). இறைவாக்கினர் எலியாவிடமிருந்து ஒரு பயமுறுத்தும் கடிதம் வந்தது (2 நாள் 21:12-15); அதில் அவன் செய்த தீமைகளின் விளைவால் குடல்நோயால் துயறுற்று இறப்பான் என எழுதப்பட்டிருந்தது (2 நாள் 21:18 தொ) என்றும் ஆசிரியர் கூறுகிறார். ஆனால் நாளாகமத்தின் பாரம்பரியம் எவ்வளவு தூரம் வரலாற்று உண்மைகள் உடையது என்பது சந்தேகத்துக்குரியது. ஏனெனில் பாவம் செய்பவர்க்குத் தண்டனை உண்டு எனும் இறையியல் கருத்தை உணர்த்தவே இவையெல்லாம் கூறப்பட்டன. ஆனால், அரசர் ஆகமத்தில் கூறப்படும் யோராமின் துன்பங்கள் ஆகாபு குடும்பத்துப் பெண்ணை மணந்த அரசனின் தீமைக்குப் பொருத்தமாக அமையவில்லை.

3. கி.மு. 849-842 வரை இஸ்ராயேலின் அரசனாக இருந்த யோராம், அகாசியாவின் மகன் (2 அர 1:17; 3:1-3). ஆகாபு இறந்த பின் இஸ்ராயேலுக்கு எதிராக மோவாபு அரசன் மேசா கிளர்ச்சி செய்ததால், அவனை அடக்க யோராம் சென்றபோது, யோசபாத்து அவனுக்குச் சிற்றரசனானதால் யோசபாத்தும் அப்போரில் பங்கு பெற வேண்டியிருந்தது (1:1; 3:4-5). இவர்கள் மோவாபியருடன் போர்புரியச் செல்லும் வழியில் குடிக்க நீரின்றி வருந்தியபோது இறைவாக்கினர் எலிசாவை அணுகி இறைவாக்கு என்னவென்று கேட்டனர். அவர், இறைவன் உங்களுக்கு நீரும், மோவாபியரிடம் வெற்றியும் தருவார் என்றார். மழை பெய்து நீர் கிடைத்தது. வெற்றியும் பெற்றனர் (3:4-12). ஆனால், மேசா மோவாபை மீண்டும் இஸ்ராயேலிடமிருந்து கைப்பற்றினான் என்று கூறப்படுகிறது. தமஸ்குவைச் சேர்ந்த அசாவேலுடன் போரிட்டு யோராம் இராமோத்து கிலயாதில் காயப்படுத்தப்பட்டான். காயத்தைக் குணப்படுத்த இஸ்ரியேலுக்குச் சென்றபோது ஏகூவினால் கொல்லப்பட்டான். இவனது உடல் நாபோத்தின் தோட்டத்தில் எறியப்பட்டது (2 அர 8:28-9:29; 2 நாள் 22:5-9). இவ்வாறு எலியாவின் இறைவாக்கு (1 அர 21:17-19) நிறைவேறிற்று.

4. மோசேயின் மகனான எலியேசரின் வழிவந்த ஒரு லேவியர் (1 நாள் 26:25).

5. யூதாவின் மக்களுக்கு ஆண்டவரது சட்டத்தைப் போதிக்க அரசன் யோசபாத்து அனுப்பிய குழுவில் இருந்த இரு குருக்களில் ஒருவர் (2 நாள் 17:8).

யோராய் (JORAI - யாவே படிப்பிக்கிறார்)

இவர் அபிகயிலின் மகன். பாசானில் வாழ்ந்த காத்து இனத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் தலைவர் (1 நாள் 5:13).

யோரிம் (JORIM - யாவே உயர்த்தப்பட்டார்)

இயேசுவின் மூதாதையர்களுள் ஒருவர். மத்தாத்தாவின் மகனும், எலியேசரின் தந்தையும் ஆவார் (லூக் 3:29).

யோர்க்கயாம் (JORKEAM)

இவர் இரகாமின் மகனும், காலேபுவின் வழித்தோன்றலுமாவார் (1 நாள் 2:44). அறிஞர் பலர் யூதாவின் பகுதியிலுள்ள ஒரு குடியிருப்பின் பெயராக விளக்குவர். எழுபது நூல், யோசு 15:56-இல் வரும் யோக்தயாம் என்ற நகருக்குப் பதிலாக யோர்க்கயாம் என்று கொண்டுள்ளது. இஃது இந்த இரு பெயர்களுள் ஒன்று எழுத்தருடைய வேறுபாடாக இருக்கலாம் என்று சுட்டுகிறது. இந்த இடம் எபிரோனுக்குத் தெற்கிலுள்ள மலைப்பகுதியில் சீபுவுக்கு அருகிலுள்ள இக்காலக் கிர்பெத் ராகவாக இருக்கலாம்.

யோர்தானுக்கு அப்பால் (JORDAN, BEYOND THE)

ஒருவர் இருக்கும் இடத்தைப் பொருத்து யோர்தானின் கிழக்குப் பகுதியையோ மேற்குப் பகுதியையோ குறிக்கும் ஒரு சொற்றொடராகும். விவிலியத்தில் இச்சொற்றொடர் ஏறக்குறைய முப்பது தடவை வருகிறது. ஐந்து தடவைதான் இச்சொற்றொடர் யோர்தானுக்கு மேற்கிலுள்ள பகுதியைக் குறிக்கிறது (ஆதி 50:10-11; உப 3:20.25; 11:30). மற்றப் பகுதிகளில் இச்சொற்றொடர் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள பகுதியையே குறிக்கின்றது. புதிய ஏற்பாட்டிலும் (எ.கா. யோவா 1:28) தால்மூது நூல்களிலும் இவ்வாறே இச்சொற்றொடர் பயன்பட்டுள்ளது.

யோர்தான் (JORDAN.)

இது பாலஸ்தீனத்திலுள்ள மிகப்பெரிய, மிக முக்கியான ஆறாகும். வடக்கே எர்மோன் மலையில் தொடங்கி தெற்கில் சாக்கடலில் ஒன்று கூடுகிறது. யோர்தான் என்ற சொல்லுக்குப் பலவாறு சொல்லிலக்கணம் கூறப்படும். ''எப்போதும் ஓடும் ஆறு'', ''விரைவாக இறங்கும் ஆறு'' ''நீர் குடிக்கும் இடம்'' என்று பலவாறு பொருள் கூறப்படும்.

உலகிலேயே மிகப்பெரிய நிலப்பிளவுப் பள்ளத்தாக்கின் வடநீட்டிப்பில் யோர்தான் ஆறு அமைந்துள்ளது. இந்த நிலப்பிளவு, ஆப்பிரிக்காவின் தென்கிழக்குப் பகுதியில் தொடங்கி பாலஸ்தீனம் வழியாக சீரியா வரை செல்கிறது. இந்தப் பிளவைப் பொருத்தது யோர்தானின் போக்கும், அதன் உப ஆறுகளான யார்முக்கு, யாபோக்கு, அர்னோன் மற்றும் சாரேதின் போக்கும் ஆகும். அவ்வப்போது நிகழும் நிலநடுக்கங்களும், நிலச்சரிவுகளும், வெப்ப நீர்ச்சுனைகளும் இப்பகுதியின் எரிமலைத் தன்மையுடைய கடந்த காலத்தின் அடையாளங்களாக உள்ளன.

யோர்தான் வளைந்து வளைந்து 320 கி.மீ. நீளம் அமைந்துள்ளது. இதன் படுகை தீக்கல் அல்லது எரிமலைப்பாறை வகையைச் சேர்ந்தது. இது வசந்தகால வெள்ளப் பெருக்குக்காலத்தில் 30.5 மீட்டர் அகலமுடையது. ஒன்று முதல் மூன்று மீட்டர் ஆழமுடையது. இதன் நெடுகிலும் பல கடவுத்துறைகள் காணப்படுகின்றன.

ஆற்றின் மூலங்கள், கிழக்கிலிருந்து மேற்காக நகர் பனியா, நகர் ஏல்-லேதான், நகர் கஸ்பானி மற்றும் நகர் பரேய்கித்து ஆகும். யோர்தான் தெற்கு நோக்கி ஓடும்போது கூலே ஏரி அல்லது பள்ளத்தாக்கு வழியாகச் செல்கிறது. விவிலியக் காலங்களில் இது வெப்ப மண்டலத்தைச் சேர்ந்த சதுப்பு நிலமாக இருந்தது. இங்கு நாணல்புல் அதிகமாக வளர்ந்தது.

இது மேலும் 11 கி.மீ. இறங்கி அடுத்து காலிலேயாக் கடலில் சேர்கிறது. சாதகமான தட்ப வெப்ப நிலையும், நீர் மிகுதியாகக் கிடைப்பதும் வரலாறு தோறும், கலிலேயாவை விவசாய முக்கியத்துவமுடையதாக்கியுள்ளது.

யோர்தான் மேலும் 180 மீட்டர் தாழ்ந்து கலிலேயாக் கடலிலிருந்து சாக்கடலுக்கு ஓடுகிறது. இப்பகுதியில் நீர் வேகமாக ஓடும். நீர்ச் சுழல்கள் காணப்படும். ஆற்றுப் படுகை அடிக்கடி மாறும். பள்ளத்தாக்கின் தாழ்ந்த பகுதிகளில் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. உயர்ந்த பகுதிகள் விளைநிலங்களாகவும், மேய்ச்சல் நிலங் களாகவும் உள்ளன. கலிலேயாவுக்குத் தெற்கே எட்டு உபநதிகள் உள்ளதால், தெற்கு யோர்தான் பள்ளத்தாக்கில் பல குடியிருப்புகள் தோன்றின. அவற்றில் சில யாபேசு-கிலயாது, எரிகோ, பெத்சான் ஆகியவையாகும்.

விவிலிய நிகழ்ச்சிகள் விவரிப்பில் யோர் தான் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் குறிப் பிடப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் ஆபிர காமும், லோத்தும் பிரிந்து போவது பற்றி நிச்சயிக்கும் நிகழ்ச்சியில் யோர்தான் முதன் முதல் குறிக்கப்படுகிறது (ஆதி 13:10-11). யோர்தானின் செழிப்பு மிக்க பள்ளத்தாக் குக்குச் செல்ல லோத்து தேர்ந்து கொண் டார். பிற்காலத்தில் யாக்கோபு ஆராமுக்குச் செல்லும்போது யோர்தானைக் கடந்து சென்றார் (32:10).

வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் புகுமுன் இஸ்ராயேலர் எதிர்கொண்ட கடைசித்தடை யோர்தானாகும். இந்த ஆற்றைக் கடந்து செல்வது மோசேயின் இறுதி விருப்பமாக இருந்தது (உப 3:23-25). அப்படிச் செய்வது யோசுவாவுக்கு ஆண்டவர் அளித்த முதல் கட்டளையாகும் (யோசு 1:2). யோர்தானை வியத்தகு முறையில் கடந்தது (யோசு 3-4; யாத் 14-15), எரிகோவின் அழிவிற்கும் கானானியர்களை அடிமைப்படுத்துவதற் கும் இட்டுச்சென்றது.

நீதிபதிகளிலிருந்து தொடக்க அரசாட் சிக்கு இடைப்பட்ட காலத்தில் யோர்தான் போர்த்தடையாக இருந்தது. ஆற்றின் கட வுத்துறைகளைக் கட்டுப்படுத்துவது பல போர்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது (நீதி 3:29-29; 7:24-25; 12:5-6; காண்க. 1 சாமு 22:3-4; 2 சாமு 17:22; 19:1தொ).

எலியா, எலிசா பற்றிய சில நிகழ்ச்சி களுக்கு யோர்தான் பள்ளத்தாக்கு பின்னணி யாக உள்ளது. இங்கே இவர்களும் இவர் களுடைய சீடர்களும் கூடினர். இப்பகுதி யில்தான் இந்த இரு இறைவாக்கினர்களும் பல வியத்தகு செயல்களைச் செய்தனர் (2 அர 2; 5:1-14; 6:1-7).

நற்செய்தியில் வரும் நிகழ்ச்சிகளுக்கும் யோர்தான் பின்னணியாக உள்ளது. திரு முழுக்கு யோவான், பாலை நிலத்திலிருந்து வெளிவந்து யோர்தானில் திருமுழுக்கு அளித்தார் (மத் 3:1-12 இணை). இங்குதான் இயேசு திருமுழுக்குப் பெற்றார் (3:13-17 இணை). இயேசு தனது பொதுப்பணிக் காலத்தில் ஆற்றில் கிழக்குக் கரையில் பயணம் செய்தார் (லூக் 12-18). எருசலே முக்குச் செய்த தனது கடைசிப்பயணத்தில் எரிகோவுக்கு அருகில் இயேசு யோர் தானைக் கடந்து சென்றார்.

யோர்தான் காடு, யோர்தான் மேன்மை (JUNGLE OF JORDAN, PRIDE OF JORDAN)

காலப்போக்கில் யோர்தானின் குறுகிய, வளைந்து செல்லும் படுகை அரிமானத்திற் குள்ளாயிற்று. அதில் வெப்பமும் வெள்ளப் பெருக்கும் சேர்ந்து பலவகை மரங்களும் செடிகளும் சேர்ந்த அடர்ந்த காடுகள் உண்டாயின (எரே 12:5; செக் 11:3). இக்காடுகள் காட்டு விலங்குகளின் உறை விடமாயின (எரே 49:19; 50:44; செக் 11:3); ஆபத்துகள் நிறைந்த இடமாயின (எரே 12:5).

யோர்தான் கிழக்குப்பகுதி (TRANSJORDAN)

1. கலிலேயாக்கடல், யோர்தான் ஆறு, அரபா அடங்கிய நிலப்பிளவுக்குக் கிழக் கிலும், சீரியா மற்றும் வட அராபியாப் பாலைவனத்திற்கும் மேற்கிலும் உள்ள பகுதி இப்பெயரால் குறிப்பிடப்படுகிறது. வடக்கில் எர்மோன் மலையிலிருந்து, தெற் கில் சாக்கடலின் தென்கிழக்குப் பகுதிவரை இப்பகுதி 350 கி.மீ. நீளமுடையது. வடக்கி லிருந்து தெற்காக, கலிலேயக்கடலின் தென் கிழக்கிலிருந்து இப்பகுதியில் பாசான், கிலயாது, அம்மோன், மோவாபு, ஏதோம்

நாடுகள் அமைந்துள்ளன என்று விவிலியம் குறிக்கிறது.

2. விவரிப்பு: மிகவும் சாதகமான கோணத்தில், யூதேயா அல்லது சமாரியாவின் கிழக்குப்பகுதியில், யோர்தானுக்குக் கிழக்குப்பகுதி நிலப்பிளவிலிருந்து எழும் பாறைச் சுவராகத் தோன்றுகிறது. இஃது உயர்ந்த பீடபூமியாகும். இஸ்ராயேலின் மத்திய பகுதியைப்போல் இப்பகுதியும் நிலவியல் சக்திகளாலும், மூலக்கடல்களாலும் பழங்கால எரிமலைகளாலும் உண்டாக்கப்பட்டதாகும். இதன் மேற்பரப்பு சிதைந்து போன தீக்கற்களாலும் மண்ணாலும் ஆனது. இப்பகுதியில் நிலவியல் சக்திகளால் ஏற்பட்ட கிழக்கு - மேற்காக அமைந்த நான்கு பிளவுகள் - யார்முக்கு, யாபோக்கு, அர்னோன், சேரேது - அமைந்துள்ளன. இந்தப் பாறைக் குடைவுகளின் வழியாக மழைநீர் மேற்காக ஓடுகிறது. இன்றும் இவை நீரோட்டமுடைய ஆறுகளாக உள்ளன. யார்முக்கு யோர்தானைச் சேரும்போது, யோர்தான் அளவு நீரைக் கொண்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தப் பிளவுகள் இப்பகுதியிலிருந்த நாடுகளின் இயற்கையான எல்லைகளாக அமைந்திருந்தன.

மத்தியதரைக் கடலிலிருந்து வரும் ஈரப்பசை மிக்க காற்றை இஸ்ராயேலின் நிலப்பரப்பு அனுமதித்த அளவுக்கே யோர்தான் கிழக்குப்பகுதி மழைநீரைப் பெற்றது. இவ்வாறு வடபகுதியாகிய பாசானும் கிலயாதும் ஏறக்குறைய ஆண்டுக்கு 100-125 செ.மீட்டர் அளவு மழையைப் பெற்றன. மோவாபும், அம்மோனும் குறைந்த அளவே மழைநீரைப் பெற்றன (25-50 செ.மீ.). இதன் விளைவாக வடபகுதி விவசாயத்திற்கும், தென்பகுதி மேய்ச்சல் நிலங்களாகவும் பயன்பட்டன (காண்க. எண் 32:1; 2 அர 3:4). வறட்சியான ஏதோமை நாடோடி இனத்தவரும், இடையர்களும், வணிகர்களும் பயன்படுத்தினர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வடபகுதியில் தானியங்கள் அதிகமாகப் பயிரிடப்பட்டு ஆக்கோவிலிருந்து உரோமைப் பேரரசு முழுவதற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. கிலயாது அதன் அடர்ந்த காடுகளுக்கும், வாசனைச் செடிகளுக்கும் பெயர்பெற்றது.

3. முக்கியத்துவம்: இஸ்ராயேலின் வரலாற்றில் யோர்தான் கிழக்குப்பகுதி முக்கியப் பங்காற்றியது. இஸ்ராயேல் நாட்டின் பொருளாதார அரசியல் நிலைகள், அது தனது அண்டைநாடுகளோடு கொண்டிருந்த உறவைப் பொருத்தன. தாவீது காலத்தில் இருந்ததுபோல், இஸ்ராயேல் கிழக்குப் பாலைவனப்பகுதிகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்ததால், அது நாட்டிற்குச் செழிப்பைக் கொண்டு வந்தது. இல்லையெனில், சாலமோனுக்கு எதிராக அதாதும் எரெசினும் இருந்தது போல், இப்பகுதி பல எதிரிகளைக் கொண்டு வரக்கூடும் (1 அர 11:14-25). எஃது எப்படியிருந்தாலும் இந்தக் கிழக்கு நாடுகளை ஒதுக்கிப் புறக்கணிக்க இஸ்ராயேலரால் முடியாது. ஏனெனில், இவர்கள் மேற்கு நோக்கி தங்கள் நாட்டை விரிவாக்கும் நோக்கமுடையவர்கள்; இஸ்ராயேலைத் தங்கள் முதல் எதிரியாகக் கருதியவர்கள்.

யோர்தான் கிழக்கிலுள்ள பகுதியில் இஸ்ராயேலர் இனத்தவர்கள் புக முனைந்த போது, முதல் சச்சரவு ஏற்பட்டது. தெற்கில் காதேசு-பர்னேயாவிலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் இஸ்ராயேலர் புக முடியாதபோது, அவர்கள் கிழக்காகப் பயணம் செய்து அராபாவைக் கடந்து, வடக்கு நோக்கிப் பயணம் செய்து சேரேது, அர்னோன் பள்ளத்தாக்குகளைக் கடந்தனர் (எண் 21:10-13); ஏதோமையும், மோவாபையும் சுதந்தரமாகக் கடந்து சென்றனர். ஆனால், எமோரிய அரசன் சீகோன் தன் நாட்டின் வழியாக இஸ்ராயேலர் கடந்து செல்ல அனுமதி கொடுக்க மறுத்ததோடு அவர்களோடு போர்புரியத் தொடங்கினான்; ஆனால், தோற்கடிக்கப்பட்டான் (21:21-30). காத்து, ரூபன் இனத்தவரும், மனாசேயின் பாதி இனத்தவரும் யோர்தான் கிழக்குப் பகுதியிலேயே குடியேறினர் (எண் 32; யோசு 13:8-33). இப்பகுதி

எப்போதும் கிழக்கிலிருந்து வரும் எதிரிகளின் தாக்குதல்களுக்கு உட்பட வேண்டியிருந்தது. இதற்கு எதிராக, ஏகூது (நீதி 3:12-30), கிதியோன் (நீதி 6-8), இப்தாகு (10:6-12:7) போன்ற நீதிபதிகள் அல்லது விடுதலை வீரர்கள் போராட வேண்டியிருந்தது. தாவீதுதான் இப்பகுதியைக் கட்டுப்படுத்தி இங்கே ஒரு கணக்கெடுப்பும் நடத்தினார் (2 சாமு 24:5-6).

சாலமோனின் ஒன்றுபட்ட இஸ்ராயேல் பிளவுபட்டது, யோர்தான் கிழக்குப்பகுதியிலுள்ள அரசர்களுக்கு இஸ்ராயேலைத் தாக்க வாய்ப்பளித்தது. யூதாவுக்கும் இஸ்ராயேலர்களுக்குமிடையே ஏற்பட்ட பூசல்களில் இவ்வரசர்கள் பங்கெடுக்கவும் அழைக்கப்பட்டனர். இஸ்ராயேலின் பாசா படையெடுத்து வந்தபோது, யூதாவின் ஆசா தமஸ்குவின் பென்-அதாதுவின் உதவியை நாடினான் (1 அர 15:16-21). சிரியா நாட்டைச் சேர்ந்த பென்-அதாதுவின் தலைமையிலான அரசர்களின் கூட்டணி இஸ்ராயேலைத் தாக்கியது (1 அர 20), கிழக்கிலிருந்து வரும் ஆபத்தின் கடுமையைத் தெரிவிக்கிறது. அசீரிய, பாபிலோனிய ஆதிக்கம் மேற்காசியாவில் பரவியபோது இந்தப் போராட்டங்கள் முடிவுக்கு வந்தன. யோர்தான் கிழக்குப்பகுதியின் மக்கள் அன்னியர் ஆதிக்கத்திற்கு உட்பட்டனர்.

கிரேக்கர் காலத்தில் விவசாயத்திற்கு ஏற்ற வடபகுதியில் புதிய குடியிருப்புகள் தோன்றின. கிரேக்க நகரங்களின் கூட்டணியான தெக்கப்பொலி உரோமையர்களின் சலுகைகளால் செழிப்புற்றது. உரோமை பெரிய ஏரோதுக்கு அதிக அதிகாரம் கொடுத்தபோது கடைசித் தடவையாக யோர்தான் கிழக்குப்பகுதி யூதர் ஆதிக்கத்திலிருந்தது. பெரிய ஏரோதுக்குப்பின், இப்போது காலனித்து என்றழைக்கப்படும் பழைய ஏற்பாட்டுப் பாசான் பிலிப்புக்கு உரிமையாயிற்று. கலிலேயாவின் அரசனாகிய ஏரோது அந்திப்பாவுக்குப் பெரயா என்றழைக்கப்படும் யோர்தான் கிழக்குப்பகுதியின் மத்திய பகுதி கொடுக்கப்பட்டது.

யோவகாசு (JEHOAHAZ - யாவே விடாமல் பிடித்தார், யாவே கைப்பற்றினார்)

1. கி.மு. 815-801-இல் இஸ்ராயேலை ஆண்ட 11-ஆவது அரசன். இவர் ஏகூவின் மகனும் அவருக்குப் பின் அரசாண்டவரும் ஆவார் (2 அர 10:35). இவர் பதினேழு ஆண்டுகள் அரசராக இருந்தார் (2 அர 13:1). ஆனால், 2 அர 13:10-இல் இவர் 14 ஆண்டுகள் ஆண்டதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால், இவர் அனேகமாக முதல் மூன்று ஆண்டுகளில் தன் தந்தையோடு சேர்ந்து ஆட்சி செய்திருக்கலாம். 13:1.10 ஒத்துப்போக வைக்க இதை 15 ஆண்டுகளாகத் திருத்த வேண்டும்.

யோவகாசின் அரசாட்சியைப் பற்றிக் கூறும் 2 அர 13:1-9 தெளிவாக இல்லை. இவர் ஆண்டவர் திருமுன் தீயவற்றைச் செய்தார். இதில் தன் முன்னோரைப் பின்பற்றினார். இஃது இறைவனுக்குச் சினம் மூட்ட, அவர் இவரை அசீரியர் கையில் ஒப்படைத்தார். சிரிய அரசனான அசவேலும், அவரது மகன் பென்-அதாதும் இஸ்ராயேலரைத் தோற்கடித்தனர் என்பது உண்மை (13:3; காண்க. 13:22). சமாரியாவில் சிலை வணக்கத்திற்காக அமைக்கப்பட்டிருந்த தோப்பு அழிக்கப்படாததுதான் இஸ்ராயேலரின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது (13:6). இஸ்ராயேல் நாடு ஓர் அடிமை நாடானது. இஃது அவரது படை பற்றிய விவரிப்பிலிருந்து தெரிகிறது. ''ஐம்பது குதிரை வீரரும், பத்துத் தேர்களும், பதினாயிரம் காலாட் படையினருமே மீதியாயிருந்தனர்'' (13:7) என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு மாறான கர்கார் போரில், அரசன் ஆகாபிடம் இரண்டாயிரம் தேர்களும் பதினாயிரம் காலாட்படையினரும் இருந்தனர் என்று அசீரிய ஏடுகளில் குறிக்கப்படுகிறது. யோவகாசிடம் பதினாயிரம் காலாட் படையினர் இருந்தனர் என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில், அசீரியா நாட்டு அரசன் அவர்களை அழித்துப் போரடிக்கும் களத்தின் தூசிபோல் ஆக்கியிருந்தான் (13:7). இதிலிருந்து இஸ்ராயேலர் படை முழுவதும் அழிக்கப்பட்டது என்பது

தெளிவாகிறது. இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது யோவகாசின் 'பேராற்றல்' என்று கூறப்பட்டிருப்பது ஓர் ஆசாரப் புகழுரையேயாகும்.

2அர 13:4-6 என்ற பகுதி பிற்காலத்தில் திணிக்கப்பட்ட பகுதி போலத் தோன்றுகிறது. யோவகாசு ஒரு காலத்தில் மனந் திரும்பினார். ஆகவே, ஒரு மீட்பரால் அவருக்கு ஒய்வு அளிக்கப்பட்டது. இஸ்ராயேலருக்குக் கொடுக்கப்பட்ட ''மீட்பர்'' (13·5) யாரென்று தெரியவில்லை. தொல்பொருள் ஆய்வு இப்போருக்குச் சான்று பகர்கின்றது. மெகிதோ நகரம் இக்காலத்தில் அழிக்கப்பட்டது போலத் தோன்றுகிறது. வெகு காலத்திற்குப் பிறகுதான் அது மீண்டும் கட்டப்பட்டது. இவர் இறந்தபின் சமாரியாவில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது மகன் யோவாசு (13:4) ஆட்சிக்கு வந்தார் (13:9).

2. கி.மு. 609-608-இல் யூதாவை ஆண்ட 17-ஆவது அரசர். அரசன் யோசியாவுக்கும் லிப்னா ஊரானான எரேமியாவின் மகள் கெமுத்தாளுக்கும் பிறந்த நான்காம் மகன் (2 அர 23:30-31; 2 நாள் 36:1-2; 1 நாள் 3:15). யோசியாவின் மகனும், அவருக்குப் பின் யூதாவை ஆண்டவருமான இவர், பார்வோனாகிய நெக்கோவால் எகிப்து நாட்டுக்கு அடிமையாக எடுத்துச் செல்லப் பட்டார்.

இந்த அரசர் யோவகாக, சல்லூம் என்ற இரு பெயர்களால் அழைக்கப்படுகின்றார் (1 நாள் 3:15; எரே 22:10 தொ). சல்லூம் என்பது அவரது இயற்பெயராகவும், யோவகாசு என்பது அவர் அரசரானபோது பெற்ற பெயராகவும் இருக்கலாம். இத்தகைய பெயர் மாற்றங்கள் பொதுவானதாகும் (2 அர 23:34; 24:6; எரே 22:24; 24:1; எசே 1:2; 2 அர 24:17).

இவரது தந்தை மெகிதோ போரில் இறந்தபோது இவரது மூத்த சகோதரர் எலியாக்கிம் இருந்தும் யோவகாசு தனது இருபத்து மூன்றாவது வயதில் மக்களால் அரசனாக்கப்பட்டார். மூன்று மாதங்கள் எருசலேமில் அரசாண்டார் (2 அர 23:31; 2 நாள் 36:2).

1 நாள் 3:15-இன்படி சல்லூம் தான் யோசியாவின் நான்கு புதல்வர்களில் கடைசியானவர். எனவே, அவரது மூத்த சகோதரனை விட்டுவிட்டு அவரை அந்நாட்டு மக்கள் அரசனாக்கியதற்குச் சிறப்புக் காரணம் ஏதாவது இருக்க வேண்டும். எலியாக்கிம் அல்லது யோயாக்கிம் எகிப்திய ஆதரவாளராக இருந்ததே இக்காரணமாக இருக்கலாம்.

பயங்கரமான சூழ்நிலையில்தான் யோவகாசு அரியணை ஏறினார். மெகித்தோவில் யோசியா இறந்த போது (609), தாவீதின் அரசு உயிரூட்டம் பெற்று சுதந்தரம் அடையும் என்ற யூதாவின் கனவு சிதைவுற்றது. யூதா அசீரியரின் ஆட்சியிலிருந்து விடுபட்டு எகிப்துநாட்டின் மாகாணமானது. யோவகாசு எருசலேமில் அரசாளாதபடி பார்வோன் நெக்கோ அவனைப்பிடித்து, கூலே-சீரியா நாட்டிலிருக்கும் ரிப்லாவில் சிறை வைத்தார். அன்றியும் யூதா நாடு தனக்கு நூறு தாலந்து வெள்ளியையும், ஒரு தாலந்து பொன்னையும் கப்பம் செலுத்தக் கட்டளையிட்டார். பார்வோன் நெக்கோ யோசியாவின் மூத்த மகன் எலியாக்கிமை அரசனாக ஏற்படுத்தி, அவனது பெயரை யோயாக்கிம் என்று மாற்றினார். பின்னர் யோவகாசை எகிப்துக்குக் கொண்டு சென்றார். அவர் அங்கேயே இறந்து போனார். யோவகாசு எகிப்துக்குக் கொண்டு செல்லப் பட்ட போதுதான் எரேமியா, ''இந்த இடத்திலிருந்து புறப்பட்டுப் போன அவன் இனி ஒருபோதும் மீண்டு வரான்'' என்று இறைவாக்குரைத்தார் (எரே 22:10-12). எசே 19:3 யோவகாசை 'இளஞ்சிங்கம்' என்று வர்ணிக்கிறது.

3. ஏறக்குறைய கி.மு. 842-ஆம் ஆண்டில் யூதாவை ஆண்ட அரசர். இவர் யோராமின் கடைசிப் புதல்வனும், அவரை அடுத்து ஆண்ட அரசனுமாவார் (2 நாள் 34:8). இவர் ஒரே ஓர் ஆண்டு ஆட்சி செய்தார்.

யோவகாக என்பது அகசியா (2)-இன் மறு பெயராகும் (2 நாள் 21:17; 22:1). முதற் பெயரில் இறைவனின் பெயர் முதலிலும், இரண்டாவது பெயரில் இறை வனின் பெயர் இறுதியிலும் உள்ளது.

யோவகாசு (JOAHAZ - யாவே விடாமல் பிடித்தார்)

யோவாகுவின் தந்தை (2 நாள் 34:8).

யோவனான் (JOANAN - யாவே அருள் மிக்கவர்)

இவர் செருபாபேலின் பேரன்; இயேசு வின் மூதாதையர்களுள் ஒருவர்.

இவர் 1 நாள் 3:19-இல் வரும் அனனியா வாக அடையாளம் காட்டப்படுகிறார்.

யோவன்னா (JOANNA - யாவே அருளுள்ளவர்)

ஏரோது அந்திப்பாவின் மாளிகை மேற் பார்வையாளர் கூசாவின் மனைவி. இயேசு வால் குணப்படுத்தப்பட்ட பெண்களில் ஒருத்தியான யோவன்னா, தங்களது உடை மைகளைக் கொண்டு இயேசுவுக்கும், பன் னிருவருக்கும் பணிவிடை செய்து வந்தவர் களுள் ஒருத்தி (லூக் 8:3). மக்தல மரியா வோடும், யாக்கோபின் தாய் மரியாவோ டும் மற்றப் பெண்களோடும் யோவன்னா வெற்றுக் கல்லறையருகே நின்றதாக லூக் 24:10-இல் குறிப்பிடுகிறார்.

யோவாகு (JOAH - யாவே சகோதரர் ஆவார்)

1. ஒபேது-ஏதோமின் மூன்றாவது மக னான இவர் ஒரு லேவியர். ஆலய வாயில் காப்பாளராக நியமிக்கப்பட்டவர் (1 நாள் 26:4).

2. சிம்மாவின் மகனாகிய இவர் ஒரு லேவியர்; கேர்சோம் குடும்பத்தைச் சேர்ந்த வர் (1 நாள் 6:21). எசேக்கியா அரசன் மேற்கொண்ட ஆலய சீர்திருத்தப்பணியில் ஒத்துழைத்தவராகவும் இருக்கலாம் (2 நாள் 29:12).

3. ஆசாபின் மகன். அரசவை அதிகாரி யான இவர் கி.மு. 701-இல் எருசலேம் முற்றுகையின்போது அசீரிய அரசனின் படையைச் சந்திக்க எசேக்கியா அரசனால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவர் (2 அர 18:26.37; காண்க. எசா 36:3.11.22).

4. யோசியா அரசனிடம் பதிவு செய்பவ ராகப் பணியாற்றியவர். யோவகாசின் மகன். ஆலயச் சீர்திருத்தத்திற்கான மேற் பார்வை செய்ய அரசனால் நியமிக்கப்பட்ட வர் (2 நாள் 34:8).

யோவாசு (JOASH, JEHOASH - யாவே கொடுத்தார், உதவினார்)

1. கிதியோனின் தந்தையான இவர் மனாசே கோத்திரத்தில் 'அபியேசர்' குடும்பத் தைச் சேர்ந்தவர் (நீதி 6:11-15). இவர் ஒபிரா எனுமிடத்தில் வாழ்ந்தாரெனப்படுகிறது. ஆனால் இஃது அமைந்த இடம் எதுவெனத் தெளிவாகத் தெரியவில்லை. இங்கு ஒரு கருவாலி மரத்தடியில் இறைவாக்கு அரு ளப்பட்டது. நீதி6:11-32 இரு மரபுகளை இணைத்து ஒரு நிகழ்ச்சியைத் தருகிறது. ஆனால், இவற்றில் உள்ள கருத்துக்கள் ஒத்துப்போவதாகத் தெரியவில்லை. யோவாசு பாகாலுக்கு ஒரு பீடத்தையும், அசெரா கம்பத்தையும் எழுப்பியதாகவும், அதனை இடித்துப் போடும்படியாக கிதி யோனுக்குக் கூறப்பட்டதாகவும் தெரி கிறது. பின்னர், நகரமக்களின் எதிர்ப்பு எழுந்தபோது யோவாசு தன் மகனுக்கு ஆதரவாக நின்றார்; தன் மகனுக்கு எருபா கால் என்ற புதுப்பெயர் அளித்தார் (நீதி 6:25-32).

2. ஆகாபின் மகனாகிய யோவாசு, சமாரி யாவின் ஆளுநனாகிய அமோனுடன் இணைத்துப் பேசப்படுகிறார். இராமோத்து கிலயாதுக்கு ஆகாபு போரிடப்போனபோது அவனுக்குத் தோல்வியின் இறைவாக்கை அறிவித்த இம்லாவின் மகன் மீக்காயாவை, அமோனிடம் யோவாசு ஒப்படைத்தார் (2 அர 22:26; 2 நாள் 18:25).

3. அகசியாவின் மகனாகிய யோவாசு கி.மு. 837-800-இல் யூதாவின் ஒன்பதாவது அரசனாக இருந்தான். அகசியாவின் புதல் வர்களெல்லாம் அத்தாலியாவால் கொல்

லப்பட்டபோது இவன் ஆறு ஆண்டுகள் கோவிலுக்குள் தனது அத்தை யோசேபா வால் வைத்துப் பாதுகாக்கப்பட்டான். அத்தலியா கொல்லப்பட்ட பின் யோயாதா வால் யோவாசு முடி சூட்டப்பட்டான் (2 அர 11:1-20). இவன் சிறுவனாக இருந்த போது யோயாதா இவனது இடத்திலிருந்து பகர ஆளாகக் கவனித்துக் கொண்டார். யோவாசு ஆலயத்தைப் பழுது பார்த்தான் (2 அர 12:1-16). சீரிய நாட்டு அரசன் அசாவேல் இவனைத் தோற்கடித்ததால் ஆலயக்கருவூலங்களில் உள்ள எல்லாப் பணத்தையும் கொடுத்து தன்னை விடு வித்துக் கொண்டான் (2 அர 12:17-18; காண்க. 2 நாள் 24:23-24); இதனால்தான் அவனது பணியாளர்களே அவனைச் சதி செய்து கொன்று விட்டனர் (2 அர 12:19)

இறையியல் கருத்துக்களை, அறிவுரை களைக் கொடுப்பதற்காக, நாளாகமம் எவ் வாறு வரலாற்றை மாற்றி எழுதுகிறது என்பதற்கு யோவாசின் வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணம். ஆலயத்தின் மேலுள்ள பக்தியால், ஆலயத்தின் செல்வமுழுதும் கொடுத்தாவது அதனைப் பாதுகாக்க வேண்டுமென்ற (மீண்டும் பெற வேண் டும்) என்ற ஒரு பண்பைக் காட்டுகின்றனர். யோவாசு யோயாதாவால் வழிநடத்தப்பட்ட போது சிறந்த முறையில் ஆட்சி செய்தான். யோயாதா இறந்த பின்பு யோவாசு பொய்த் தெய்வங்களை வழிபட ஆரம்பித்தான்; இதனைச் சுட்டிக் காண்பித்த யோயாதாவின் மகன் செக்கரியாவைக் கொல்லச் செய் தான். ஒரு வருடம் கழித்து அரமேயர்கள் நாட்டை அழித்தனர்.

4. கி.மு. 801-786 வரை இஸ்ராயேலின் பன்னிரண்டாவது அரசனாக இருந்தவன் யோவாசு. இவனது தந்தையும் யோவாசு என்றழைக்கப்படுகிறான் (2 அர 13:10-25; 14:8-17). இறைவாக்கினர் எலிசாவின் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியில் இவன் வருகிறான். அரமேயர் களை, 'நீ வெற்றி கொள்வாய்' என உறுதி அளித்த எலிசா அவனை வில் எடுத்து அம்பு எய்யுமாறு கூறினார். ஆனால், அவன் மூன்று முறை மட்டும் எய்ததால், 'நீ அவர்களை முழு வெற்றி கொள்ளமாட் டாய்' என அவனைக் கடிந்துகொண்டார் (2 அர 13:14-19). யூதாவின் அரசன் அமட்சியா, யோவாசைப் போருக்கு அழைத்ததால், அவனைத் தோற்கடித்து, எருசலேம் சுவரின் ஒரு பகுதியை இடித்து ஆலயக் கருவூலங்களைக் கொள்ளையடித் தான் (2 அர 14:8-14; 2 நாள் 25:17-25).

5. யூதாவின் மனிதர்களில் ஒருவனான இவன் சேலாவின் மகன் (1 நாள் 4:22).

6. பென்யமீன் குலத்தைச் சேர்ந்த இவன் பெக்கர் குடும்பத்தைச் சேர்ந்தவன் (1 நாள் 7:8).

7. கிபயாவைச் சேர்ந்த செமாகாவின் புதல்வரான யோவாசு இரு கையாலும், கவணையும், அம்பையும் கையாள்வதில் வல்லவர். தாவீது சிக்லாகுவில் தலைமறை வாய் இருந்தபோது அவருடன் வந்து சேர்ந்த யோவாசு, அகியேசருக்கடுத்து இரண்டாவது தலைவராவார் (1 நாள் 27:28).

8. தாவீதின் எண்ணெய்க்கிடங்குகளைக் கண்காணித்து வந்த அதிகாரி (1 நாள் 27:28).

யோவாதீன் (JEHOADDIN - யாவே களிப்பா வார்)

இவள் யூதா அரசனான அமசியாவின் தாயான (2 நாள் 25:1) யோயதான் என்ப வள். 2 அர 14:2-இல் யோவாதீன் என்று அழைக்கப்படுகிறாள்.

யோவாபு (JOAB - யாவே தந்தையாவார்)

தாவீதின் சகோதரியான செரூயாவின் மூத்த மகனே இவர்; அபிசாய், அசாவேல் ஆகிய இருவரும் யோவாபின் சகோதரர்கள் (1 நாள் 2:16). யோவாபின் தந்தை பெயர் எங்கும் குறிப்பிடப்படாதது வியப்புக்குரிய தாய் உள்ளது. தாவீது யூதாவின் அரசனான பின்பு, தாவீதின் படைக்குத் தலைவனாய் இருந்து அப்னேரின் தலைமையில் போரிட்ட இசுபாகாலின் படையை வெற்றி கொண்டார் (2 சாமு 2:12-32). தாவீது

அரசராகும் முன்பு அவர் நாடோடியாகச் சுற்றித் திரிந்தபோது இவரும் அவருடன் இருந்தார் என்றாலும், அபிசாயின் சகோதரர் என்பது தவிர வேறு எதுவும் இவரைப் பற்றிக் கூறப்படவில்லை (1 சாமு 26:6). தனது சகோதரன் அசாவேலைக் கொன்ற அப்னேரைத் தானே கொன்று பழிவாங்கினார் யோவாபு (2 சாமு 2:18-23; 3:24-27). இதற்கு அப்னேர் தாவீதை ஏமாற்றவே வந்தான் என்பதைக் காரணமாகக் கூறினார் (3:24-25). ஆனால் இது பழிவாங்குதல் செயலே என ஆசிரியர் கூறுகின்றார் (3:27). ஆனால், இந்தக் கொலையைத் தாவீது கண்டித்து, யோவாபைச் சபித்து (3:28), அப்னேருக்கு நல்லடக்கம் செய்வித்தார் (3:31-37). எல்லோருக்கும் முன்னிலையில் தனக்கும், கொலைகாரன் ஒருவனுக்கும் தொடர்பு இல்லை எனக் காண்பித்துக் கொள்ளவே தாவீது இவ்வாறு செய்தார் (3:37). ஆனால் தாவீது இக்குற்றத்திற்காக யோவாபைத் தண்டிக்க முடியாததிலிருந்தே தாவீதின்மேல் யோவாபுக்கு இருந்த பலம் தெரிகிறது (2 சாமு 3:38).

1 நாள் 11:6 யோவாபுதான் எருசலேமில் முதன் முதலில் நுழைந்தவன் எனும் ஒரு மரபு பற்றிக் குறிப்பிடுகிறது. இது சாமுவேலில் கூறப்படவில்லை; ஆனால் யோவாபு தலைமை இராணுவத் தளபதியாக்கப் பட்டதே இவ்வாறு விளக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. தாவீதின் முக்கிய அமைச்சர் குழுவின் பெயர் வரிசையில் யோவாபின் பெயர் தளபதியாகக் குறிப்பிடப்படுகிறது (2 சாமு 8:16; 20:23; 1 நாள் 18:15; 27:33).

அம்மோனியா, அரமேயர்களை வெற்றி கொண்டபோது, யோவாபே தளபதியாக இருந்தார் (2 சாமு 10:7; 12:26). இந்த இரு வெற்றிகளிலும் யோவாபு கேட்டுக் கொண்ட பின்னே நகரைத் தாவீது கைக் கொண்டார். உரியாவைப் போர்முகப்பில் நிறுத்தி அவன் இறந்த பிறகு, விதவையான பத்சேபாவை மணக்க வழிவகுக்கும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றியது யோவாபுதான் (11:14-25). அம்மோன் கொல்லப்பட்டபிறகு ஒளிந்து திரிந்த அப்சலோம் மீண்டும் நாட்டுக்குள் வர யோவாபின் செல்வாக்குதான் காரணம் (2 சாமு 14). தாவீதுக்கு எதிராகப் புரட்சி செய்த அப்சலோமைத் தாவீது கொல்ல வேண்டாமெனக் கூறியிருந்தும், அவன் கொல்லப் படுவதற்குக் காரணமாக இருந்தது யோவாபுதான் (2 சாமு 18). தனது உண்மையுள்ள ஊழியர்களைவிட, அவருக்கு எதிராகப் புரட்சி செய்த மகனைத் தாவீது மதித்ததை எதிர்த்து, வெளிப்படையாகவே யோவாபு தாவீதைக் கடிந்து கொண்டார் (19:1-7). தாவீது அவனது அறிவுரையைக் கேட்டாலும், அமாசாவை அவனது இடத்தில் தளபதியாக்கினார் (2 சாமு 19:13). ஆனால் அமாசாவின் மிகவும் காலம் கடத்தும் மோசமான திட்டங்களைக் கண்ட யோவாபு தந்திரமாக அவனைக் கொன்று தானே தலைமை தாங்கி, சேபாவின் புரட்சியை அடக்கினார் (2 சாமு 20).

தாவீது எடுக்க நினைத்த மக்கள் கணக்கெடுப்பை எதிர்த்தார் யோவாபு. கடவுள் அளித்த ஆசீர்களைக் கணக்கெடுப்பது கடவுளையே எதிர்ப்பது போலாகும் எனும் ஒரு வகை நம்பிக்கையால் இது வேண்டாமெனக் கூறினாலும் (24:3), யோவாபு மற்றப்படை அதிகாரிகளோடு மக்கட் கணக்கெடுப்புக்குத் தலைமை தாங்கினார் (24:4-9). அதோனியாவின் கூட்டத்தோடு சேர்ந்ததால் (1 அர 1:7) சாலமோன் விரும்பாதவர்களில் இவரும் ஒருவரானார். அப்னேரையும், அமாசாவையும் கொன்றதற்காக யோவாபைப் பழிவாங்குமாறு பொறுப்பைச் சாலமோனிடம் தாவீது தனது மரணத்துக்குமுன் விட்டுச் சென்றார் (2 சாமு 2:5தொ). இதன் வரலாற்று மதிப்பீட்டை ஐயுறுவர் சிலர் . யோவாபைக் கொல்வதற்குத் தாவீது அதிகாரம் அளித்தார் என்பதைக் காண்பிப்பதற்காக மேலே கூறியது மரபில் சேர்க்கப்பட்டதாக வரலாற்றறிஞர் சிலர் கருதுகின்றனர் (1 அர 2:28-34). ஆனால் இஸ்ராயேலரின் பழிவாங்கப்படாத இரத்தத்தால் வரும் ஆபத்து பற்றிய கருத்தின்படி யோவாபு கொல்லப் பட்டது சரியெனவே தோன்றுகிறது.

தாவீதின் அரசை நிர்மாணிப்பதில் யோவாபின் பங்கை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. சிலர் கூறுவதுபோல், யோவாபு ஒரு போர்த் திறமைமிக்க தலைவர் என்று ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால், அவர் ஆற்றல் மிக்க போர் வீரனாக இருந்தார் என்பது உண்மை. தாவீது அரியணை ஏறவேண்டும், அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடாது என்று கருதியே யோவாபு ஓர் உண்மையுள்ள ஊழியனாக இருந்தார்; இதற்காகவே சில வன்செயல்களைச் செய்தார்; தாவீதிடம், விலகிச்செல்லாத, அர்ப்பணிக்கப்பட்ட பிரமாணிக்கம் காட்டினார். எனவேதான் தாவீதினால் யோவாபை எதற்கும் தண்டிக்க இயலவில்லை. தாவீது இச்செயல்களை மறுக்கவும் இயலவில்லை; இவற்றினால் கிடைக்கும் பயனை அடையாமலிருக்கவும் விரும்பவில்லை. ஆனால் தனது மகன் சாலமோன் இவற்றிற்குப் பழிவாங்கி நீதி வழங்க வேண்டுமென எண்ணினார்.

யோவாரிபு *(JOARIB - யாவே போராடுவாராக)*

மக்கபேயர் தம் முன்னோராகக் கருதும் இவர் ஒரு குருவின் தந்தை. எனவே அக்குடும்பத்தின் தலைவராகக் கருதப்படுகிறார் *(1 மக் 2:1; 14:29)*. இக்குடும்பம் பற்றி முதலில் தாவீது காலத்தில் தெரிய வருகிறது *(1 நாள் 24:7)*.

யோவானின் பணிநூல் (JOHN, ACTS OF)

இது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு போலி நூல்; திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த அப்போஸ்தலர் பணி நூலை, அப்போஸ்தல் யோவானின் எல்லாப் பணிகளுக்கும் ஒரு வரலாறு அளித்து, நிறைவு செய்யும் நோக்கம் கொண்டது. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, இந்நூலை லூக்கியு கரினு என்பவர் எழுதியதாகவும், இவர் இந்நூலில் வரும் நிகழ்ச்சிகளுக்கு நேரடிச்சாட்சி ஆவார் என்றும் கருதப்பட்டன. இவர் பல போலிப் பணி நூல்கள் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்திருக்கிறார்.

மானிக்கேயர்களால் படைக்கப்பட்ட பல போலிப் பணி நூல்களில் இந்நூல் காலத்தால் முந்தியதாகும். ஒருவேளை இரண்டாம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பட்டிருக்கலாம். மற்றப் போலிநூல்களைப் போன்று யோவானின் பணிநூலும் நெருங்கிய அமைப்புடையதன்று. நூலின் தலைவரைப் பெருமைப்படுத்தும் பொருட்டு, பல மிகைப்படுத்தப்பட்ட வியத்தகு செயல்கள் எடுத்துக்கூறப்படும் இந்நூல் யோவானைப் பற்றிய பல நிகழ்ச்சிகளை விவரிக்கின்றது. அவற்றில் சில: உரோமைக்கு யோவான் பயணம் செய்தல்; பத்முவுக்கு நாடு கடத்தப்படுதல்; அவர் எபேசுக்கு வருதல் (இது பிற்சேர்க்கையாகும்); மிலேத்திலிருந்து எபேசுக்கு யோவான் பயணம் செய்தல்; கௌதாரி புழுதியில் விளையாடுதல்; யோவான் இலவோதிக்கேயாவிலிருந்து எபேசுக்குப் பயணம் செய்தல்; யோவானின் மரணம் பற்றிய நீண்ட விவரிப்பு; யோவானின் நீண்ட உரைகள்; கிறிஸ்துவின் வாழ்வு, இறப்பு மற்றும் தன்மை பற்றியவையாகும். இவற்றில் தோசேத்தியப் பதிதப் பண்புகள் காணப்படுகின்றன. ஆகவே, 787-இல் நீச்சேயாவில் நடந்த இரண்டாம் சங்கம் இந்நூலைக் கண்டனம் செய்து, இஃது அழிக்கப்பட வேண்டியது என்று தீர்ப்பிட்டது.

இந்த நூல் மூலத்தில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது; மத்தேயு நற்செய்தி அளவுக்கு நீண்டது. இந்த நூலின் மூன்றின் இரண்டு பகுதியே இப்போது கிடைத்துள்ளது. இதன் இலத்தீன் மொழிபெயர்ப்பு நான்காம் நூற்றாண்டின் முடிவில் தோன்றியது. மற்ற, துறவு மற்றும் ஞானவாத நூல்களோடு சேர்த்துத் தொகுக்கப்பட்ட சீரியக்கு, அரமேனியன், கோப்திக்கு, அரபிக்கு, எத்தியோப்பியப் பதிப்புகளில் இந்நூல் காணப்படுகின்றது. இந்நூலில் காணப்படும் பொருள்கள் திருத்தி அமைக்கப்பட்ட வாசகம், பத்முவில் யோவான் செய்த நிகழ்ச்சிகளின் விவரிப்புகள் ஆகியன போலிப் பிராக்கோர் எழுதியதாகக் கருதப்படும் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொகுப்புகளில் காணப்படுகின்றன.

யோவானின் போலி அல்லது இரகசிய நூல் (JOHN, APOCRYPHON OR SECRET BOOK OF)

இது தொடக்ககால ஞானவாதநூல்; அப் போஸ்தலர் யோவான் கண்ட காட்சியை விவரிக்கிறது. திருச்சபைத் தந்தையர் இர னேயு பதிதர்களுக்கு எதிர்ப்பாக எழுதிய மறுப்பு நூலில் இந்நூலைக் குறிப்பிட்டு அதற்கு மறுப்பு எழுதுகிறார். ஆயினும், வெகு காலமாக இதைப் பற்றி ஒன்றும் அறியப்படவில்லை. 1946-இல் எகிப்தில் செனேபோஸ்கியோன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஏடுகளில் இந்நூலின் ஒரு பிரதியும் கண்டெடுக்கப்பட்டது. இது 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தெரி கிறது. இது கோப்திக்கு மொழியில் உள்ள மொழிபெயர்ப்பாகும். இப்பிரதி நாக்-கம் மாதியிலுள்ள ஞானவாத நூல்நிலையத்தில் உள்ளது.

இந்நூல் இரகசிய நூல் என்றழைக்கப்படு கிறது. ஏனெனில், இது ஞானவாதப் பிரிவினருக்கு மட்டும் போதிக்கப்பட்ட ஞானவாத நற்செய்தியைக் கொண்டிருக் கிறது. இது மரியாளின் நற்செய்தி என்ற நூலோடு குழப்பப்படுகிறது. ஏனெனில், அஃதோடு சேர்த்து வைக்கப்பட்டதுதான். இதை, மற்றொரு போலிநூலான யோவா னின் வெளிப்பாடாக அடையாளம் காட்டு வர். இந்த இரகசியநூல் 2-3-ஆம் நூற் றாண்டுகளிடையில் அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இப்போது மூல ஞானவாத நம்பிக்கைகளின் முதன்மை யான மூலமாக உள்ளது.

மற்ற ஞானவாத நூல்களைப்போல், இந்த இரகசியநூல் காட்சியோடு தொடங்கு கிறது. இதில் ஆசிரியருக்கு (யோவான்) இரகசியச் செய்திகள், ஓர் இறைவெளிப் பாட்டாளரால் (உயிர்த்த கிறிஸ்து) அளிக் கப்படுகின்றன. இக்காட்சி உரையாடல் களாக வளர்கிறது. தீமையின் தோற்றம், ஆன்மீக மற்றும் சடப்பொருள் உலகங் களின் படைப்பு, மரணத்தைச் சேர்ந்த கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட மனிதப் போராட்டம் போன்ற கருத்துகள் எடுத்துக் கூறப்படுகின்றன.

யோவான் (JOHN - யாவே அருளுடையவர்)

ஒரு காலத்தில் யூதர்களிடையே பொது வாக வழங்கி வந்த, அதிகம் பயன்படுத்தப் பட்ட பெயர் இது.

1. மத்தத்தியாவின் தந்தையும், யூதா மக்க பேயரின் தாத்தாவும், குரு சிமியோனின் மகனும் ஆவார் (1 மக் 2:1; 14:20). இப்பகுதி இக்குடும்பத்தை ''யோவாரிபின் புதல்வர்கள்'', என அழைக்கிறது. இந்த யோவாரிபு என்பவர் 1 நாள் 24:7-இல் குறிப்பிடப்படும் 24 குருக்களின் குடும்பங் களில் முதலாவதின் முன்னோராக இருக்க லாம்.

2. மத்தத்தியாவின் ஐந்து புதல்வர்களில் மூத்தவனும், 1-இல் கூறப்பட்ட யோவா னின் பேரனும் ஆவார் (1 மக் 2:2). இவர் காத்தி என அழைக்கப்படுகிறார். மனாசே கோத்திரத்தில் இப்பெயருடன் விளங்கிய வர் முன்னர் யாரேனும் இருந்திருக்கலாம் (எண் 13:11). யோவானின் சகோதரனான யூதா முதலில் அசமோனியர்களை வழிநடத் தினார். அவரது இறப்புக்குப்பின் யோனத் தான் மக்கபேயர்களின் தலைவரானார். இது யோவான் எல்லோருக்கும் மூத்த மகனாக இருந்தாலும் தலைவராக இருக்கவில்லை என்பதைச் சுட்டுகிறது. யோனத்தான் மக்க பேயர்களின் செல்வத்தைப் பாதுகாக்க அதனை நபத்தேயாவுக்கு எடுத்துச் செல் லும் பொறுப்பை யோவானிடம் ஒப் படைத்தார். அவ்வாறு எடுத்துச் செல்லும் போது கொல்லப்பட்டதாக மட்டுமே இவரைப் பற்றிக் கூறப்படுகிறது (1 மக் 9:35-42). இவர் கி.மு. 161-இல் மேதி யாவைச் சேர்ந்த யாம்பிரியால் மறைந் திருந்து தாக்கப்பட்டு, கொல்லப்பட்டார். யோசேப்பு என பல இடங்களில் குறிப் பிடப்படுவது (2 மக் 8:22; 10:19), இந்த யோவானைக் குறிப்பதற்குப் பதிலான தவ றான வாசகம் எனக்கருதப்படுகின்றது.

3. இவர் அக்கோசின் மகனும் யூப்பெல மின் தந்தையும் ஆவார் (1 மக் 8:17). இவருக்கு மூன்றாம் அந்தியோக்கு அரச சலுகை அளித்தான் (2 மக் 4:11).

4. முதலாம் யோவான் இரிக்கான் (1 மக் 13:53; 16:1). காண்க. கசமோனியர்.

5. அந்தியோக்கு எப்பிபானின் தளபதியா கிய லீசியாவிடம் யூதர்கள் அனுப்பிய தூதர் (2 மக் 11:17). இதைத் தவிர வேறு எதுவும் இவரைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

6. திருமுழுக்கு யோவான். இத்தலைப் பின் கீழ்க் காண்க.

7. அப்போஸ்தலரான யோவான் காண்க. யோவான் எழுதிய நற்செய்தி:6

8. மாற்கு யோவான். காண்க. மாற்கு.

9. இவர் பேதுருவின் தந்தை (யோவா 1:42; 21:15-17). மத் 16:17-இன்படி இப் பெயர் பார்-யோனா என்ற வடிவில் வரு கிறது. இதற்கு யோனாவின் மகன் சீமோன் என்பது பொருள்.

10. ஒரு குருவின் குடும்பத்தைச் சேர்ந்த வர் என அ.ப. 4:6-இல் குறிப்பிடப்படு வதைத் தவிர இவர் பற்றி வேறு எதுவும் தெரியவில்லை. இவர் பெரியகுரு அன்னா வின் உறவினரும் ஒருவேளை அவருக்குப் பின் வந்த பெரிய குருவாகவும் இருக்க லாம். சனேத்ரின்முன் பேதுருவையும், யோவானையும் விசாரித்த இருவரில் இவ ரும் ஒருவராவார். இவர் ஒரு 'ராபி' எனவும் யோகனான் பென்சக்கல் எனும் பெயரில் முக்கியமானவராகக் கருதப்பட் டார் எனவும் ஒரு கருத்து உண்டு.

யோவான் எழுதிய திருமுகம் - I
(JOHN, FIRST LETER OF)

1. யோவான் எழுதியதாக, புதிய ஏற் பாட்டுத் திருமுறைப்பட்டியலில் மூன்று திருமுகங்கள் உள்ளன. முதலாவது திரு முகம் சிறிது நீண்டது. மற்ற இரண்டும் ஒருபக்கக் கடிதங்கள்.

2. **ஆசிரியர்:** தன்னை யார் என்று ஆசிரி யர் குறிப்பிடவில்லை. இந்நூலை அப் போஸ்தலரான யோவான்தான் எழுதினார் என்று இரனேயு, அலக்சாந்திரிய கிளமந்து, ஓரிசன், தெர்த்துல்லியன், அலக்சாந்திரிய தியோனியுசு போன்ற திருச்சபைத் தந்தை யர்கள் கூறியுள்ளனர். இந்நூல் மூராத்தோரி யின் பட்டியலில் காணப்படுகிறது. பாப் பியு,போலிக்கார்பு, யுஸ்தீன் போன்றோர் இத்திருமுகத்திலிருந்து எடுத்துக்காட்டுகள் கூறியுள்ளனர். பாரம்பரியமும், நான்காம் நற்செய்திக்கும் இத்திருமுகத்திற்குமிடையி லுள்ள உள்ளார்ந்த சான்றுகளும், குறிப்பாக நடையிலும் பொருளடக்கத்திலுமுள்ள ஒற்றுமை, இந்த இரு நூல்களும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவை என்று சுட்டு கின்றன.

3. **நற்செய்திக்கும் இத்திருமுகத்திற்கும் இடையேயுள்ள உறவு:** யோவான் எழுதிய நற்செய்திக்கும் இந்நூலுக்கும், சொற் றொகுதியில், நடையில், கோட்பாட்டில் உள்ள ஒற்றுமை அதிகமானது, நெருக்க மானது, ஆழமானது. எ.கா. 1 யோவா 1:1-4; 2:4.11.27; 3:14; 4:9.12; 5:9 ஆகிய பகுதிகளை யோவா 1:1-14; 8:44; 12:35; 16:30; 5:24; 3:16; 11:6; 5.34-ஆகிய பகுதிக ளோடு ஒப்பிடுக. இயேசு வார்த்தையாக வும், கடவுளாகவும் போதிக்கப்படுகிறார் (1 யோவா 1:1; 5:20; யோவா 1:1; 20:29). அவர் மனிதன் ஆதல் அழுத்திக் கூறப்படு கிறது (1 யோவா 1:2; 4:2; யோவா 1:14). விசுவாசமும் அறிவும் முடிவில்லா வாழ்வை அளிக்கின்றன; மனிதனான மக னோடு நம்மை ஒன்றாக்குகிறன (1 யோவா 1:2 தொ; 5:10-13; யோவா 17:3; 20:31). இருளும், இறப்புமே எதிர்க்கும் ''உலகம்'' ஆகும். இஃது அவிசுவாசம், வெறுப்ப, பொய், கொலை ஆகியவற்றைச் சிறப்பாகக் கொண்டிருக்கும் (1 யோவா 1:6;2:22 தொ; 3:12; யோவா 1:5; 3:18 தொ; 8:44; 15:18 தொ). செயல் முறையான நோக்கில் அன்பு என்பது இறைவனுடையவும் கிறிஸ்துவி னுடையவும் கட்டளைகளைக் கடைப்பிடிப் பதாகும் (1 யோவா 2:4; 3:23 தொ; யோவா 14:23தொ.31; 15:10.14). மறைபொருளான உள்ளுணர்வு பற்றிய ''இணைந்திருத்தல்'' ஒரே விதமாகக் கூறப்படுகிறது.

நற்செய்தியில் இயேசுவின் பிரியாவிடை உரை, முதலாம் யோவான் பயன்படுத்தும் உருவகங்களை நிர்ணயிப்பதில், குறிப்பான

முக்கிய பங்கு எடுத்துள்ளதாகத் தோன்றுகிறது. இறைவனுக்கும் (தந்தை, மகன், ஆவி), கிறிஸ்தவனுக்கும் உள்ள உறவை முதலாம் யோவான் பிரதிபலிக்கிறது. தந்தை கிறிஸ்தவனை அன்பு செய்கிறார் (1 யோவா 4:16; யோவா 14:21). பிரமாணிக்கமுள்ள கிறிஸ்தவனில் மகன் இணைந்திருக்கிறார் (1 யோவா 3:24; யோவா 15:4). ஆவி கொடையாக அளிக்கப்படுகிறார் (1 யோவா 4:13; யோவா 14:16-17). இறைவனோடு கிறிஸ்தவன் உறவு கொள்வதில், ஒருவர் மற்றவரில் வாழ்தல் (1 யோவா 3:24; யோவா 14:20), பாவமன்னிப்பு, தூய்மையாதல் (1 யோவா 1:9; யோவா 15:3), முடிவில்லாத வாழ்வு (1 யோவா 2:29; யோவா 17:2), ஏற்புடைமை (1 யோவா 2:29;யோவா 16:10) ஆகியவை சிறப்புக் கூறுகளாகும். கிறிஸ்தவச் சீடனுக்குரிய நிபந்தனைகள் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகின்றன. யோவா 16:8-9-இல் வரும் விசுவசியாத உலகத்திற்கும், 1 யோவா 1:8; 3:4-9-இல் வரும் போலி நிறைவுடையவர்களுக்கும் எதிரான நிலையில், விசுவாசம் பாவத்தில் இல்லை. அவன் இயேசுவை அன்பு செய்ய வேண்டும்; அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் (1 யோவா 2:3; 3:10.22-24; யோவா 14:15); உலகத்தின் போக்கை நிராகரிக்க வேண்டும் (1 யோவா 2:5; 4:1; யோவா 15:18). விசுவாசம் உலகை வெற்றிகொள்கிறது (1 யோவா 2:13-14; 5:5; யோவா 17:8-9).

முதலாம் யோவான் நான்காம் நற்செய்தியின் திட்டத்தைப் பின்பற்றுவதாகக் கருதுவர் சிலர். நற்செய்தியை எதிரொலிக்கும் முன்னுரைக்குப்பின் (1 யோவா 1:1-4; யோவா 1:1-14), திருமுகம் இரு பெரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி (1 யோவா 1:5-3:10) ''ஒளியில் நடப்பதின்'' கடமையை எடுத்துக்கூறுகிறது. இது நற்செய்தியின் ''அடையாளங்களின் நூலை'' (யோவா 1-12) எதிரொலிக்கிறது. ஒளியில் நடத்தலே நற்செய்திக்குக்காட்டும் உண்மையான பதிலாகும். இதுவே, யோவானின் கிறிஸ்தவர்களைப் பிரிந்து சென்றவர்களிடமிருந்து பிரித்துக்காட்டுகிறது. இரண்டாம் பகுதி (1 யோவா 3:11-5:12) ஒருவர் மற்றவர்க்கு அன்பு காட்ட வேண்டியதை வலியுறுத்துகிறது. இது நற்செய்தியின் ''மகிமையின் நூலை'', குறிப்பாக இயேசுவின் பிரியாவிடை உரையைப் பிரதிபலிக்கிறது; அன்புக்கட்டளை நிறுவப்படுகிறது. இயேசுவின் இறப்பு, இறையன்பின் எடுத்துக்காட்டான ஊன் உருவாக எடுத்துக்காட்டப்படுகிறது. திருமுகத்தின் முடிவுரையும், நற்செய்தியின் முடிவுரைக்கு இணையாக உள்ளது (1 யோசு 5:13;யோவா 20:30-31). திருமுகத்தின் குறிக்கோள் பற்றிய கூற்றும், நற்செய்தி மொழியை நேரடியாகப் பிரதிபலிக்கிறது. நற்செய்தியில் ''உங்கள் மகிழ்ச்சி நிறைவுபெற'' (யோவா 15:11) இயேசுவின் உரை பேசப்படுகிறது. திருமுகத்தில் வாசகர்கள் ''எங்களோடு நட்புறவு கொள்ளும்படியும்'', '' நம் மகிழ்ச்சி நிறைவு பெறவும்'' (1 யோவா 1:3-4) ஆசிரியர் எழுதுகிறார். இயேசுவின் வெளிப்பாட்டை ஏற்காத உலகின் மேலான தீர்ப்பு (யோவா 12:44-50), 1 யோவா 3-10-இல் வரும் ''இறைமக்கள் அலகையின் மக்களிடமிருந்து'' பிரிக்கப்படுவதோடு தொடர்புடையது.

ஆனால், நற்செய்தியிலும் முதலாம் யோவானிலும் காணப்படும் இறையியல் வேறுபாடுகளைக் கண்டு அறிஞர் சிலர் தயக்கம் காட்டியுள்ளனர். நற்செய்தியில் காணப்படும் சில முக்கிய சொற்கள் முதலாம் யோவானில் காணப்படவில்லை. திருமுகம் இயேசுவில் மகிமையை நேரடியாகக் குறிப்பிடவில்லை; இயேசுவுக்கும், தந்தைக்குமிடையேயுள்ள ஒன்றிப்பை வலியுறுத்துவது கூட திருமுகத்தில் காணப்படவில்லை. திருமுகத்தின் இறையியல் மொழி, நற்செய்தி கடந்து சென்றுவிட்ட அல்லது திருந்த மீண்டும் அமைக்கப்பட்ட, முந்தையப் பாரம்பரியத்திலிருந்து வருவதாகத் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக, ''துணையாளர்'' (1 யோவா 2:1) என்பது சமூகத்தை வழிநடத்த நிலையான பிரசன்னமாக துணையாளரின் வருகையில் செய

லாற்றும் இயேசுவின் வருகையைவிட, பரிந்து பேசுபவராக இயேசுவையே குறிக்கிறது. இயேசுவுக்கு ''நம்மை ஏற்புடையவராக்குபவர்'' *(1 யோவா 2:7-8)*, மெசியா (கிறிஸ்து) *(2:22)*, மகன் *(1:3; 3:23)* என்ற பட்டங்கள் சாற்றிக் கூறப்படுகின்றன. இயேசுவின் சிலுவையில் அவரது மகிமையின் வெளிப்பாட்டைக் காண்பதற்குப் பதிலாக, திருமுகம் இயேசுவின் இறப்பு, பரிகாரம் என்ற பழைய பாரம்பரியத்தையே கூறுகிறது *(1:7; 2:2; 3:16; 4:10)*. இறுதிக் காலம் வலியுறுத்தப்பட்டுள்ளது *(2:18)*. சொற்றொகுதிகள் துல்லியமாக இல்லை *(1 யோவா 1:1-3; யோவா 1:1-14)*. மூவொரு இறைவனுக்குள் உள்ள உறவு, ஆவியின் ஆட்தன்மை ஆகியவை தெளிவாக இல்லை. சில பகுதிகள் தந்தையையோ, மகனையோ குறிக்கலாம் *(1 யோவா 2:20; 3:2.24)*. இவற்றில் எல்லாம், நற்செய்தியில் காணப்படுவதை விட மூலவடிவில் திருமுகம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அடிப்படையில் நற்செய்திப் போதகத்தோடு ஒத்தேயிருக்கிறது எனலாம்.

திருமுகம் ஒரே மந்தத்தன்மையுடையது; நாடகப் பாணியற்றது; செமித்தியப் பண்புகள் கொண்டது. மிகக் குறைவாகவே பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகளைக் கொண்டுள்ளது என்பர் சிலர். கிரேக்க மொழி தவறற்ற மொழியே ஆனாலும், திருமுகத்தில் செமித்தியப் பண்புகள் அதிகம் காணப்படுகின்றன. ஏற்கெனவே, அமைப்புப் பெற்றுவிட்ட புறவினக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட திருமுகம் பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளையோ, நற்செய்தியின் நாடகத்தன்மையையோ, இயேசுவின் சொந்தச் சொற்களால் வரும் மாட்சிமையையோ கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், தனக்கே உரிய அழகையும் பெரும் கூற்றுக்களையும் திருமுகம் கொண்டுள்ளது.

நான்காம் நற்செய்திக்கும் முதலாம் யோவானுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள், இரண்டும் வெவ்வேறான ஆசிரியர்களால் எழுதப்பட்டன என்று கருதச் சிலரைத் தூண்டியுள்ளது. ஆனால் பொதுவாக, இரண்டிற்குமிடையேயுள்ள ஒப்பீட்டில் ஒத்த கருத்துகளே அதிகமாய் உள்ளன. இஃது இரண்டும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவை என்று கருதுவதே மேல். இதுவே பாரம்பரியச் சான்றாகவும் உள்ளது.

4. எப்போது எழுதப்பட்டது?: சில கருத்துகளில், முதலாம் யோவான், நான்காம் நற்செய்தியில் காணப்படும் வடிவத்தை விட காலத்தால் முந்திய வடிவைக் கொண்டிருப்பதாகத் தோன்றுவதால், இது நற்செய்திக்கு முன்பே எழுதப்பட்டது என்று சிலர் கூறியுள்ளனர். ஆனால், இரண்டும் கருத்தில் கொள்ளும் சமூக அமைப்புகள் வேறுபடுகின்றன. நற்செய்தி யூதத்துவத்தாலும், தந்தையால் அனுப்பப்பட்ட காலத்திற்கு முன்பே இருந்த மகனாக இயேசுவைப் பற்றிய போதகத்தை நிராகரித்த யோவானின் சமூகத்திற்குப் புறம்பானவர்களாலும் எழுப்பப்பட்ட சவால்களைத் தீர்க்க முயற்சிக்கிறது. ஆனால், திருமுகம் யோவான் சமூகத்தையே உடைப்பது பற்றிப் பேசுகிறது. மேலும், இந்த உடைபடுதலால் வரும் அதிர்ச்சி, ஒருவர் மற்றவர்க்கு அன்பு செய்தலின் முதன்மை, ''நீங்கள் தொடக்கத்திலிருந்து கேட்டவற்றிற்குப்'' பிரமாணிக்கமாய் இருத்தல் வலியுறுத்தப்படுதல் ஆகியவற்றை, நான்காம் நற்செய்திப் பாரம்பரியத்தில் யோவான் சமூகம் ஏற்கெனவே அமைந்து விட்டது என்ற கருத்தின் அடிப்படையில்தான் புரிந்து கொள்ள முடியும். ஆசிரியரும் வாசகர்களும் நற்செய்தி வாசகத்தோடு பழக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில்தான் புரிந்து கொள்ளக்கூடிய பகுதிகள் திருமுகத்தில் உள்ளன. நற்செய்தியில் காணப்படும் பாரம்பரியத்தைப் புரிந்து கொள்ள பணிச்சட்டம் அளிக்கவே திருமுகம் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே, நற்செய்திக்குப்பின்தான் முதலாம் யோவான் எழுதப்பட்டது என்று கொள்ளலாம். நற்செய்தி கி.பி. 90-ஐ ஒட்டித் தோன்றியதென்றால், இத்திருமுகம் 110-ஐ ஒட்டிய யோவான் சமூகத்தைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

5. யாருக்கு? ஏன்?: முதலாம் யோவான் திருமுகத்தைப் புரிந்து கொள்ள, அது கருத்தில் கொண்டிருக்கும் பதிதர்களைப் பற்றிய அறிவு அவசியமாகிறது. இவர்கள் யோவான் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், யூதக் கிறிஸ்தவர்கள் அல்லர். யோவான் சமூகத்தில் அங்கத்தினராக இருந்து, இப்போது தனிச்சமூகமாக அமைத்துக் கொண்ட புற இனக் கிறிஸ்தவர்கள் ஆவர். இவர்கள் புறஇன உலகில் பரவி, வெற்றியடைந்து கொண்டிருந்தனர் (1 யோவா 2:19; 2 யோவா 7). இவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உண்மையை அறிக்கையிடத் தவறியவர்கள். இவர்கள் இயேசு கிறிஸ்து ஊன் உருவில் வந்துள்ள இறைமகனாவார் என்பதை மறுத்தனர். விண்ணக வெளிப்பாட்டாளரின் மண்ணகக் கருவியே ஆவார் இயேசு என்று போதித்தனர். ஒழுக்கத் தவறுகளைப் போதித்தனர் (1 யோவா 1:5-2:11.22தொ; 3:4-24; 4:2தொ.5; 5:3-5). இறைவனைப் பற்றிய இரகசிய அறிவைக் கொண்டிருப்பதாகவும் (2:4), பாவமற்றவர்களாக இருப்பதாகவும் (1:6.8.10) உரிமை கொண்டாடினர். இவர்கள் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில்லை; தங்கள் சகோதரர்களை அன்பு செய்வதில்லை; வெறுக்கின்றனர் (2:3தொ.9; 3:10.15). யோவான் இத்திருமுகத்தை எழுதியபோது செரிந்து என்பவரைக் கருத்தில் கொண்டிருந்தார் என்று இரனேயு கூறுகிறார். இந்தச் செரிந்து ஆன்மீகக் கிறிஸ்து திருமுழுக்கின்போது இயேசுவின்மேல் இறங்கினார் என்றும், பாடுகளின்போது விலகிப் போய்விட்டார் என்றும் போதித்தார் (காண்க. 2:22; 4:3; 5:5தொ). யோவான் போராடும் பதிதம் தோசேத்தியம், ஞானவாதம் ஆகியவற்றின் தொடக்க வடிவமாக இருக்கலாம். இப்பதிதர்கள் ஏமாற்றுபவர்கள், எதிர்க்கிறிஸ்துகள் என்று குறிப்பிடப்படுகின்றனர். இந்தப் ''போலி ஆவிகள்'' நிராகரிக்கப்பட வேண்டும் (1 யோவா 4:1-5). இத்தகைய பிரிவினைப் போதகத்தோடு தொடர்புடையவர்களை ''உங்கள் இல்லத்தில் ஏற்காதீர்கள்; வாழ்த்துக் கூறாதீர்கள்'' என்று கட்டளையிடப்படுகிறது (2 யோவா 8-11).

இத்திருமுகத்தின் நோக்கம் இவ்விதம் எச்சரிக்கை செய்வதனாலும், அதே சமயத்தில், நேரடியான போதனையினாலும் கொடுக்கப்படுகிறது.

6. இலக்கியப் பண்பு: ஒரு மடலில் காணப்படும் சாதாரணக் கூறுகள் இத்திருமுகத்தில் காணப்படவில்லை. பவுலின் திருமுகங்களில் சிறப்பாகக் காணப்படும் முகமன் வாழ்த்தும், இறுதிவாழ்த்தும், ஆசீர்களும் இந்நூலில் காணப்படவில்லை. ஆசிரியரது காலத்து மனிதர்களைப் பற்றியோ, குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலையைப் பற்றியோ குறிப்புகள் இல்லை. எதிர்க்கிறிஸ்து, போலி இறைவாக்கினர்கள் பற்றிய தெளிவில்லாத சுட்டிக்காட்டுதல்கள் உள்ளன. இவையெல்லாம் இந்நூல் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் எழுதப்பட்ட ஒரு சுற்று மடலாகும், ஓர் அறவுரையாகும் என்று கருதத் தூண்டுகின்றன. இதில் இந்நூல் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம், யூதா எழுதிய திருமுகம் ஆகியவற்றை ஒத்திருக்கிறது. ஆனால் இவற்றிலிருந்து வேறுபட்டு, இந்நூல் பிரிவினைக்காரர் எழுப்பிய பிரச்சனைக்கு மறுப்புக் கூறுவதாக அமைந்துள்ளது. போதகம் முதன்மையான நோக்கமன்று. ஆனால், மறுப்புக் கூறுவதற்கு அதைப் பயன்படுத்துகிறது. இந்நூலுக்கு வரலாற்றுப் பின்னணியாகவுள்ள பதிதர்கள் பற்றிய குறிப்புகள் ஓரளவு காலவரையைச் சுட்டலாம். இத்திருமுகம் விசுவாசிகளுக்கு எழுதப்பட்டது என்பதைத் தவிர, வாசகர்களைப் பற்றி எந்தச் சிறப்பான குறிப்பையும் தரவில்லை.

7. நூலில் ஒற்றுமை: இத்திருமுகம் ஒரு தொகுப்பு நூலாகும் என்று காட்ட பலர் முயன்றுள்ளனர். இதற்குச் சான்றாக, எதிர்நிலை ஈரடியமைப்புகளையும், எதிர்மறையாகத் தோன்றுபவைகளையும் (1 யோவா 1:8தொ; 3:6தொ) சுட்டிக்காட்டுவர். ஆனால் நடைவேறுபாடு காரணமாக ஆசிரியர் பலரைச் சுட்ட வேண்டியதில்லை. நூலில் ஒற்றுமையுள்ளது என்பதைக் கைவிடாமல், இந்நூலில் பாடல், வாதப்போக்கு, அற

வுரை வடிவங்களை நாம் அடையாளம் காணலாம். குறிப்பாக, தனது போதகத்திலிருந்தே யோவான் கருத்துகளைப் பயன்படுத்தியிருக்கலாம் (காண்க. 4:13 தொ). திருமுகத்தின் முடிவுக்குப்பின் (5:13), ஆசிரியரே 5:14-21-ஐச் சேர்த்திருக்கலாம்.

இந்நூலில் பல்வேறுபட்ட திட்ட அமைப்புகளைக் காண ஆய்வாளர்கள் முயன்றுள்ளனர். இஃது அறிவுசார்ந்த நேர்த் திட்டமில்லை என்று சுட்டுகிறது. இணையமைப்பு, மீண்டும் கூறுதல், அதே தலைப்பைப் பற்றி மீண்டும் பேசுதல் ஆகியவை செமித்தியரும் தியானியுமான யோவானுக்கு இயற்கையானதாகும். ஆனால், முன்னுக்குப்பின் (1:1-4) வளர்ச்சியான விவரிப்பு உள்ளது. இறைவன் ஒளியாவார் (1:5-2:28). இறைவன் நேர்மையானவர் (2:29-3:24). ஆவிகளைத் தெளிதல் பற்றிய இடைக் கூற்றுக்குப்பின் (4:1-6), இறைவன் அன்பானவர் (4:75:3), இறைமகன் இயேசுவின் மேல் கொண்டுள்ள விசுவாசம் இறைச்சான்றைக் கொண்டுள்ளது (5:4-12), முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளோம் (முடிவுரை: 5:13-21) என்று அறிவோம்.

8. திட்டம்:

I. முன்னுரை (1:1-4).

II. ஒளியில் நடத்தல் (1:5-2:28).

அ. 1:5-2:17 : இருவழி அறவுரை.

ஆ. 2:18-28 : எதிர்க்கிறிஸ்துகளை நிராகரியுங்கள்.

III. இறைமக்களின் அடையாளம் அன்பே (2:29-3:24).

அ. 2:29-3:10 : தந்தை நம்மைத் தம் பிள்ளைகளாக்குகிறார்.

ஆ. 3:11-18 : அன்பின் கட்டளை.

இ. 3:19-24 : இறைவன்முன் நமது நம்பிக்கை.

IV. அன்பு செய்ய, விசுவசிக்கக் கட்டளைகள் (4:1-5:12).

அ. 4:1-6 : எதிர்க்கிறிஸ்துகளை நிராகரியுங்கள்.

ஆ. 4:7-12 : இறைவனே அன்பு.

இ. 5:1-12 : மகனில் விசுவாசம்.

V முடிவுரை (5:13-21).

9. போதகம்: பிரிவினைக்காரர்களின் தவறுகளை எதிர்த்துப் போராட, நேரடியான கோட்பாடுகளையும் செயல்முறையான அறவுரைகளையும் ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். ஆனால், கிறிஸ்தவர்கள் எச்சரிக்கப்பட வேண்டும். அவர்களை உற்சாகப் படுத்தவும், அவர்கள் இறைவனை அறிவார்கள் என்று உறுதிப்படுத்தவும் முனைகிறார். ''அறிதல்'' என்ற சொல் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது. இஃது ''உங்களுக்கு முடிவில்லா வாழ்வு உண்டு என்பதை நீங்கள் அறியவே'' (5:13) என்ற கூற்றில் உச்சநிலை அடைகிறது. அறிதல் என்ற சொல்லைக் கிரேக்க முறையில் புரிந்து கொண்டால், நாம் இந்தத் திருமுகத்தைத் தவறாகப் புரிந்து கொள்வோம். ஆசிரியர் இச்சொல்லைச் செமித்திய முறையில் பயன்படுத்துகிறார். இதன்படி இறைவனை அறிதல் என்பது, அவரை அடையாளம் கண்டு, அவரது ஆற்றலையும் செயல்மிக்க பிரசன்னத்தையும் அனுபவிப்பதாகும் (யாத் 6:6; 7:5.17; 29:45 தொ; எசே 25:5; 39:28தொ). அதற்கேற்றவாறு கடவுளின் கட்டளையைக் கடைப்பிடித்து, அவரது வழிகளில் நடந்து (1 அர 14:8), பணியையும் அன்பையும் மனிதனில் கோரியது (எரே 9:25; ஒசே 6:6). இப்படி நடவாவிட்டால், இறைவனை அறியாததாகும் (எரே 9:2; காண்க. 1 யோவா 2:3தொ). இஸ்ராயேல் உடன்படிக்கையை முறித்தபோது, எரேமியா மற்றும் எசேக்கியேல் வழியாக இறைவன் புதியதொரு உடன்படிக்கையை அறிவித்தார். அதில் தமது ஆவியால் அவர்களுடைய இதயங்களை மாற்றி, அவரை அறியவும், கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும் வழி செய்வார். இத்திருமுகத்தில் யோவான் இது நிறைவேறிவிட்டது என்று உறுதி கொண்டிருக்கிறார். இதை விவரிக்கிறார்.

எடுத்துக்காட்டாக, ''ஒருவரும் உங்களுக்குக் கற்பிக்கத் தேவையில்லை'' (1 யோவா 2:27; எரே 31:34); ''தம் ஆவியில் நமக்குப் பங்கு தந்துள்ளார்'' (1 யோவா 4:13; எசே 36:27); ''கடவுளின் மகன் உண்மை இறைவனை அறியும் ஆற்றலை நமக்குத் தந்துள்ளார்'' (1 யோவா 5:20; காண்க. எரே 24:7). இந்த ஆன்மீக அறிவு அடையாளங்களால் எடுத்துக்காட்டப்படுகிறது (1 யோவா 2:3.5; 3:10.19.24; 4:2.6.13; 5:2). முதலாம் யோவானில் விசுவாசம் என்பது மெசியா, இறைமகன், அவரது பெயர் அல்லது அவருக்கு இறைவனது சாட்சியம் பற்றியதாகும் (2:23; 4:15 தொ; 5:1.10.13). அறிதல் (பார்த்தல்) இறைவனின் உயிருள்ள ஆளை அல்லது இயேசுவை அடைகிறது (2:3தொ; 3:1தொ.5தொ; 5:20). அது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாலும், புனிதத்தாலும், விசுவாசந்தாலும் பிற அன்பாலும் வெளிப்படுத்தப்படுகிறது. (2:3தொ; 3:23; 4:6தொ). ''இறைவனிடமிருந்து பிறந்தவர்கள்'' என்பதாலும் ''இறைவனுடைய மக்களாய்'' இருப்பதாலும், இறைவாழ்வாலும், அவரைப்போலச் செயலாற்றச் செய்ய நம்முள் வைக்கப்பட்டிருக்கும் வாழ்வின் ஆற்றல் மிக்க வித்தாலும் இந்த விசுவாசத்தைக் கொண்டிருக்கிறோம் (2:29-3:10; 4:7தொ). இறைவனில் நாமும், நம்மில் அவரும் இணைந்து இருத்தலோடும், இறைவாழ்வு மற்றும் அதை எடுத்துக்காட்டும் செயல்களில், எல்லாவற்றிற்கும் மேலாக, அன்பில் பங்கு கொள்ளுதலாகிய ஆவியின் பிரசன்னத்தோடும் இந்த விசுவாசம் அமைகிறது (2:5தொ; 3:6.24; 4:4.12தொ; காண்க.யோவா 15:1-5). இவ்வாறு இறைவனைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் செய்து அறிகிற அறிவானது பணியில் வளர்ந்து, விசுவாசத்திலும் அன்பிலும் விரிவடைகிறது. ஏனெனில், அன்பாய் இருக்கும் இறைவனை, நம்மை மீட்க தமது செயலாற்றல் மிக்க பிரசன்னத்தால் நம்மில் தங்கவும் தம் மகனை அனுப்பிய இறைவனை, இப்போது அறிவோம்.

யோவான் எழுதிய திருமுகம் II & III (JOHN, 2&3 LETTERS OF)

1. முன்னுரை: இரண்டு திருமுகங்களும் புல்தாள் ஏட்டில் ஒருபக்க அளவு நீளம் கொண்டவை, கிரேக்கர்கள் தனிப்பட்டோருக்கு எழுதும் கடித அமைப்பையுடையன. இவை புதிய தன்மையுடையன, சிறிது கரடுமுரடானவை, செயல்முறையானவை, தனிப்பட்டோர் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன (3 யோவா 1.9.12). கடிதம் பெறுபவரின் சொந்தக் காரியங்களில் கவனம் செலுத்தாமல், கிறிஸ்தவச் சமூகம் பற்றிய காரியங்களில் கவனம் செலுத்துகின்றன. இரண்டாம் யோவான் ஒரு சமூகத்திற்கும், மூன்றாம் யோவான் ஒரு செயல் மிக்க கிறிஸ்தவனுக்குச் சமூகத்தைப் பற்றியும் எழுதப்படுகின்றன. இரண்டாம் யோவானில் வரும் ''தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமாட்டி'' தனிப்பட்ட நபரைக் குறிக்கலாம். ஆனால், மடலின் தொனி ஒரு சமூகத்தைச் சுட்டுகிறது. இந்தப் பெருமாட்டி ''உண்மையை அறிந்துள்ள அனைவரோடும்'' அன்புப் பிணைப்பால் ஒன்றித்திருக்கிறாள். இது போலவே அவளது ''மக்கள்'' உடல் சார்ந்த மக்கள் அல்லர். ஆன்மீக மக்களாவர் (2 யோவா 4.13; 3 யோவா 4). மூன்றாவது யோவானில் வரும் காயு என்பவர் மற்றப்படி அறியப்படாதவர்; அவரது சமூகத்தில் முக்கியமானவர்களில் ஒருவராக இருந்திருக்கலாம்.

2. ஆசிரியர்: இரண்டாம் யோவானில் காணப்படும் கரடுமுரடான சொற்றொடர்கள் முதலாம் யோவானை எழுதியவரே இரண்டாம் யோவானையும் எழுதியிருக்க முடியாது என்று காட்டுவதாகச் சிலர் கருதுகின்றனர். 1 யோவா 1:4-இல் குறிக்கப்படும் ''நாம்'' என்பவர்களுள் ஒருவர் இதை எழுதியிருக்கலாம் என்று கருதுகின்றனர். இது தனிப்பட்டோருக்கு எழுதப்பட்டது, பொது அறவுரையன்று என்பது இந்த வேறுபாட்டுக்குக் காரணமாகலாம் என்று விளக்குவர்.

இரு கடிதங்களின் மொழியும் நடையும் ஒரே தன்மையுடையன. இரண்டும் மூப்பரால் எழுதப்பட்டுள்ளன. கடிதங்களின் தொடக்கத்தில் வரும் ''உண்மையான அன்பு கொண்டுள்ள நான்'' (2 யோவா 1; 3 யோவா 1), ''உன் மக்களில் சிலர் உண்மைக்கேற்ப நடப்பது கண்டு நான் பெரும் மகிழ்ச்சியுற்றேன்'' (2 யோவா 4; 3 யோவா 3) ஆகிய சொற்றொடர்களும், முடிவுரையும் (2 யோவா 12-13; 3 யோவான் 13-15) இணையாயிருப்பதும் ஒரே தன்மையான இறுதிக்கால இயலைக் கொண்டிருப்பதும் இரு கடிதங்களுக்கும் ஆசிரியர் ஒருவரே என்று சுட்டுகின்றன. இரு கடிதங்களும் முதலாம் யோவானோடு கொண்டுள்ள உறவு நெருக்கமானது. சரியான விசுவாசம் அன்பு ஆகியவையே இம்மூன்று மடல்களுக்கும் பொதுவான முக்கிய கருத்துகளாகும் (2 யோவா 5.6.9.12-ஐ 1 யோவா 2:7; 5:2தொ; 2:23; 1:4-ஓடு ஒப்பிடுக). மேலும், 2 யோவா 10-11-இல் வரும் பிரிவினைக்காரர்களுக்கு எதிரான கடுமையை, முதலாம் யோவானில் காணப்படும் யோவான் கிறிஸ்தவர்களுக்கிடையே நிலவிய இடுக்கண் நிலையின் பின்னணியில்தான் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, மூன்று மடல்களும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவை என்று பலர் கருதுவர்.

மேலும், இம்மூன்று மடல்களும் நான்காம் நற்செய்தியோடு நெருங்கிய தொடர்புடையனவாகத் தோன்றுகின்றன. நற்செய்திக்கும் முதலாம் யோவானுக்குமிடையேயுள்ள உறவை யோவான் திருமுகம் - I-பற்றிய கட்டுரையில் கூறியுள்ளோம். உண்மையை அறிய (2 யோவா1), ''அந்த உண்மை நம்மிடம் நிலைத்திருக்கிறது'' (வச.2), ''நாம் தந்தையிடமிருந்து பெற்ற கட்டளை'' (வச.4), ''நீங்கள் முழுப்பயனையும் அடையும்படி'' (வச.8), ''கிறிஸ்துவின் போதனையில் நிலைத்து நில்லுங்கள்'' (வச.9) என்பனவற்றை யோவா 8:32; 14:16தொ; 10:18; 4:36; 8:3-ஒடும், 3 யோவா 12-ஐ யோவா 19:35; 21:24-ஒடும் ஒப்பிடுக. ''சார்ந்திருத்தல்'', ''அறிதல்'', ''நிலைத்து நிற்றல்'' போன்ற ஆழ்ந்த கருத்துகள் திருமுகங்களில் மீண்டும் மீண்டும் காணப்படுகின்றன. இவை, யோவானின் நூல்களுக்கு ஆசிரியர் ஒருவரேதான் என்று கருதத்தூண்டியுள்ளன. பாரம்பரியம் இக்கருத்தையே கொண்டுள்ளது. அப்படியென்றால் இத்திருமுகங்களின் ஆசிரியர், நற்செய்தியின் ஆசிரியர் பற்றிய கருத்துகளால் சோதிக்கப்பட வேண்டும். மறுபுறம், நற்செய்திக்கும் முதலாம் யோவானுக்கும் உரிய ஆசிரியருக்கு ''மூப்பர்'' என்ற பட்டம் எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி எழலாம். இரண்டாம், மூன்றாம் யோவானில் ஆசிரியரின் அடையாளத்தை மறைக்கும் நோக்கோடு மூப்பர் என்ற சொல் பயன்படவில்லை என்று உறுதியாகக் கூறலாம். வரலாற்றில் அந்தந்தக் காலத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது ''முதியவர்''களைப் புரிந்து கொள்வதுபோல், இத்திருமுகங்களின் வாசகர்கள் இவை யாரிடமிருந்து வந்தன என்பதை உடனடியாக அறிந்து கொள்வர் என்ற கருத்து உள்ளடங்கியுள்ளது. ''மூப்பர்'' என்ற சொல்லைக் கலைச்சொற்பொருளில் தலத்திருச்சபைத் தலைவர்களோடு, பாப்பியசு குறிக்கும் ''மூப்பரான யோவானுடனும்'' இணைத்துக் கூற எச்சான்றுமில்லை. இத்திருமுகங்களின் தொனியும் மனப்போக்கும் குலமூதாதையருடையதாக உள்ளன; சட்ட அதிகாரத்தன்மையதல்ல. இப்போக்கு அவர் உண்மையான அதிகாரம் கொண்டிருந்தால் மட்டுமே ஆகக்கூடியது.

ஆசிரியரின் அடையாளம் பற்றிய பாரம்பரியம் ஒரே சீராக இல்லை. ஆண்டவரது சீடர் நூலிலிருந்து எடுத்துக்கூறுவதுபோல் இரனேயு இரண்டாம் யோவானைப் பயன்படுத்துகிறார். அலக்சாந்திரிய கிளமந்து இதே கருத்தைப் பிரதிபலிக்கிறார். மூராத்தோரியின் பட்டியலில் நான்கு நூல்களும் இடம் பெறுகின்றன. அலக்சாந்திரிய தியோனிசு, ஒரிசன், யூசேபியு போன்றோரும் இதே கருத்தைப் பிரதிபலிக்கின்றனர்; ஆனால், இக்கருத்து சிலரால் தர்க்கிக்கப்படு

கிறது என்றும் கூறியுள்ளனர். எரோனிமு இத்திருமுகங்களை ''மூப்பரான யோவான்'' எழுதியதாகக் கூறுகிறார். தோது என்பவர் மூப்பர் யோவானை இத்திருமுகங்களின் ஆசிரியரான நற்செய்தியாளரின் சீடராக்கு கிறார்.

3. திருமுறைப்பட்டியல்: திருமுகங்கள் நான்காம் நற்செய்தியாளரால் எழுதப்பட்டன என்று பாரம்பரியம் ஏற்றுக்கொண்டாலும், முதல் இருநூற்றாண்டுகளில் இவை அதிகாரபூர்வமான நிலை கொண்டிருக்க வில்லை. முதலாம் யோவான், மேற்கு மற்றும் கிழக்குத் திருச்சபைகளால் இரண்டாம் நூற்றாண்டின் முடிவில்தான் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது. இரண்டாம் யோவான் கி.பி. 200-ஐ ஒட்டியும், மூன்றாவது யோவான் மூன்றாம் நூற்றாண்டின் மத்தியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. சீரியத் திருச்சபை ஐந்தாம் நூற்றாண்டில் தான் இவற்றை ஏற்றுக்கொண்டன. இப்போ (393), கார்த்தேசு (397) ஆகிய இடங்களில் நடந்த திருச்சபைச் சங்கங்கள் இத்திருமுகங்கள் இறை ஏவுதல் பெற்றவை என்று படிப்பித்தன. அதன் விளைவாக, இவை திருமுறைப்பட்டியலைச் சேர்ந்தவை என்று எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

4. இடமும் காலமும்: இவை சிறிய ஆசியாவில் எழுதப்பட்டன என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், காலத்தைக் குறிக்க சான்று இல்லை.

முதலாம், இரண்டாம் யோவான் திருமுகங்கள் யோவான் சமூகத்தில் முன்பு அங்கத்தினர்களாக இருந்து இப்போது பிரிந்து விலகியிருப்பவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன (1 யோவா 2:19; 4:1; 2 யோவா 7). இப்பிரிவினைப் போதகத்தோடு தொடர்புடையவர்களுக்கு வாழ்த்துக்கூடக் கூறக்கூடாது என்று கடுமையாகக் கட்டளையிடுகிறது இரண்டாம் யோவான் (வச. 8-11). இரண்டு கடிதங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் சூழ்நிலை இன்னும் மோசமாகிவிட்டது என்று இரண்டாம் யோவானின் கடுமையான தொனி காட்டுகிறது. முதலாம் யோவான் இரண்டாம் யோவானுக்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும்; இரண்டாம் யோவானின் வாசகர்களுக்கே அனுப்பப்பட்டிருக்க வேண்டும். மூன்றாம் யோவான் பிரிவினைக்காரர்களைக் குறிக்கவில்லை என்பதால், முதல் இரண்டு திருமுகங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். பிரிவினைப் போதகம் எழுதிய குழப்பத்தால் ஆசிரியரது சமூகத்திலிருந்து அனுப்பப்பட்ட மறைபரப்புப் பணியாளர்கள் ஏற்கப்பட்டு ஆதரிக்கப்படவில்லை எனலாம்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, நான்காம் நற்செய்தி கி.பி. 90-ஐ ஒட்டி இறுதி வடிவம் எடுத்ததென்றால், இத்திருமுகங்கள் கி.பி. 100-ஐ ஒட்டித் தோன்றியிருக்க வேண்டும். இதற்கு முன் இவற்றிற்குக் காலம் குறிப்பது கடினம்.

5. நோக்கம்: பிரிவினைப் போதகத்தைப் பற்றி யோவான் கிறிஸ்தவ சமூகத்தை எச்சரிப்பதே இத்திருமுகங்களின் முதன்மையான நோக்காகும். மேலும், பிரமாணிக்கமுள்ளவர்களை ஆசிரியர் உற்சாகப்படுத்து கிறார்.

6. திட்டம்:

அ. இரண்டாம் யோவான்.

I. முன்னுரை (வச. 1-3).

II. திருமுகத்தின் செய்தி (வச 4-11).

அ. வச. 4-6 : கடிதம் பெறுபவரின் பிரமாணிக்கம்.

ஆ. வச. 7-9 : பிரிவினைக்காரர்களுக்கு எதிரான எச்சரிக்கை.

இ. வச. 10-11: இவர்களுக்கு எதிரான நடவடிக்கை.

III. முடிவுரை (12-13).

உண்மையைத் தேடுவதிலும், பிறருக்கு அன்பு காட்டுவதிலும் தொடர்ந்து நிலைநிற்கும்படி ஆசிரியர் உற்சாகப்படுத்துகிறார்; உண்மையான போதகத்தில் நிலைத்து நிற்கும்படி அறவுரை கூறுகிறார் (வச.7-11).

விசுவாசிகள் போலிப் போதகர்களை உப சரிக்கக்கூடாது என்று எச்சரிக்கப்படுகின்ற னர். நற்செய்திப் போதகர்களாக வரும் அன்னியர்கள் கிறிஸ்துவைப்பற்றிய உண் மையான விசுவாசம் கொண்டிருக்கின்ற னரா என்று, விசுவாசிகள் அவர்களுக்கு உதவி செய்யுமுன், அவர்களைச் சோதித்த றிய வேண்டும்.

ஆ. இரண்டாம் யோவான்.

I. முன்னுரை (வச. 1-2).

II திருமுகத்தின் செய்தி (வச. 3-12).

அ. வச. 3-8 : நற்செய்திப் பணியா ளரை உபசரித்தல்.

ஆ. வச. 9-10 : தியோதிரபு மறுத்தல்.

இ. வச. 11-12 : பணியாளரை விருந் தோம்ப வேண்டுகோள்.

III முடிவுரை (வச. 13-15).

ஆசிரியர், பொதுவான பெயருடைய ஒரு காயுவுக்கு எழுதுகிறார், திருச்சபைக்கு அன்று. காயுவின் பற்றுறுதியையும், உற்சா கத்தையும் (வச. 3.5-8), தியோதிரபின், தன்னலமிக்க, தீய நடத்தையோடு ஒப் பிட்டு வேறுபடுத்துகிறார். தியோதிரபு யோவானின் அதிகாரத்தை ஏற்க மறுக்கி றான் (வச. 9-10). இக்கடிதம் தெமேத்திரியு வுக்கு உற்சாகம் அளிக்கிறது (வச. 12).

யோவான் எழுதிய நற்செய்தி (JOHN, GOSPEL OF)

1. முன்னுரை: இயேசு மரித்து, உயிர்த்து விண் சென்றபின், ஏறக்குறைய ஒரு தலை முறை கடந்து விட்டது. கிறிஸ்துவின் முதன்மைச் சீடர் பேதுரு வேதசாட்சி மரணம் எய்தி விட்டார். அவருக்குப்பின், யூத உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கிய பவுலும் குருதி சிந்தி இறைவனடி சேர்ந் தார். யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கு மிடையே வேற்றுமையும், வெறுப்பும் வளர்ச்சியுற்று வந்தன. ஆயினும், கிறிஸ்த வர்களின் வழிபாட்டுமுறை யூத செபக் கூடங்களை மையமாகக் கொண்டு விளங்கி யது. பல இடங்களில் நன்கு வளர்ச்சியுற்ற கிறிஸ்துவச் சமூகங்கள் நிலைபெற்றன. அவற்றிடையே கிறிஸ்து மீண்டும் வரும் காலம் நெருங்கி விட்டது என்ற நம்பிக்கை வளர்ச்சியுற்றது. கடைசி அப்போஸ்தலர் மரிக்கும் முன்பாகிலும் கிறிஸ்து மீண்டும் வருவார் என எதிர்பார்த்தனர்.

கி.பி. 70-இல் எருசலேம் தரைமட்டமாக் கப்பட்டது. இது பற்றிய இயேசுவின் முன்னறிவிப்பு நிறைவேறியது. பாலஸ்தீன யூதர்களும், கிறிஸ்தவர்களும் சிதறினர். இதுவரை கிறிஸ்தவர்களைத் தங்களது செபக்கூடங்களில் சகித்து வந்த யூத சமூகம் அவர்களைப் புறம்பாக விலக்கி விட்டது. அவர்களுக்கு விரோதமாகச் சாபம் ஒன்றை யும் தங்களுடைய பதினெட்டு ஆசீர்களில் சேர்த்துச் சொல்லி வந்தது. கிறிஸ்தவர் களுள் பக்தியுள்ள யூதர்கள் பலர் இருந்த னர். பரம்பரை பரம்பரையாகத் தாங்கள் கடைப்பிடித்து வந்த மறை வாழ்க்கையி லிருந்து விலக்கப்பட்டிருந்தது கண்டு வெதும்பினர், தளர்ச்சியடைந்தனர். புற இனக் கிறிஸ்துவர்களும் பல இன்னல் களுக்கு உட்பட்டனர். கிறிஸ்து வருவாரா? இன்று இயேசு அவர்களுடைய கிறிஸ்து தானா? அல்லது இறந்துபட்ட உரோமை அரசர்கள்போல், முந்திய இறைவாக்கினர் போல் இயேசுவும் வரலாற்றில் தோன்றி மறைந்த பல மனிதர்களில் ஒருவர்தானா? என்று பல ஐயங்கள் எழுந்தன.

காலம் முதல் நூற்றாண்டின் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர் மட்டும் எஞ் சியிருந்தார். அவரும் மூப்பெய்திக் கொண் டிருந்தார். அவர் மேற்கூறிய கிறிஸ்தவர் களின் நிலையைக் கண்டார். அவர்களுக்கு வேண்டியது ஊக்கம், ஆறுதல் என்பதை உணர்ந்தார். அதற்கேற்ப ஒரு நற்செய்தியை எழுத முனைந்தார். கிறிஸ்து உண்மையான மனிதர்; ஆனால், அதே நேரத்தில் இறை மகன். அவர் கடந்துவிட்ட வரலாற்றைச் சார்ந்த வெறும் மனிதரல்லர்; எக்காலத்திற் கும் உரிய மனிதர். அவரால்தான் நமது

வாழ்வு மேம்பாடு அடைகிறது. அவர் உலகில் வாழ்ந்தபோது எத்தொழிலைச் செய்தாரோ, அதே ஆன்ம வேலையை இன்றும் செய்து வருகிறார்; என்றும் செய்வார் என்று உறுதிகூறும் விதத்தில், ஊக்கமளிக்கும் விதத்தில், ஆறுதல் அளிக்கும் விதத்தில் செயலர்களைப் பயன்படுத்தித் தமது நற்செய்தியை வரைந்தார் இக் கடைசி அப்போஸ்தலர்.

அந்நூலை அவர் முடிக்கும் முன்பே அவர் இறந்திருக்கக்கூடும். அவரது சீடர்கள் அவரால் எழுதப்பட்ட நூலையும் அவரிடமிருந்து பெற்ற பல வாய்மொழிப் பாரம்பரியச் செய்திகளையும் சேர்த்து அதனைப் பல வடிவங்களில் பதிப்பித்தனர். இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவரது சீடர்களில் ஒருவர் மேற்கூறப்பட்ட பல பதிப்புக்களை ஒன்று சேர்த்துத் தொகுத்து ஒரு நூலைப் பதிப்பித்தார். இவ்வாறு உருவான நூலே நாம் கொண்டிருக்கும் வடிவில் நமக்குக் கிடைத்திருக்கும் யோவான் எழுதிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி. இந்நூலைப் பற்றி பல பிரச்சனைகள் உண்டு.

2. எழுதியது யார்?: இஃது ஒரு சிக்கலான பிரச்சனை. ஆய்வாளர்களிடையே ஒருமுகமான கருத்தொற்றுமையைக் காண்பது அரிது. பாரம்பரியத்தின் சான்றுகளும் இது பற்றி ஒருமுகமான தீர்ப்பைக் கூறவில்லை. இந்நூலின் ஆசிரியர் கலிலேயாவைச் சார்ந்த மீன் பிடிப்பவரும், அரமேயிக்கு மொழி பேசியவரும், யூதமதத்தில் பிறந்து வளர்ந்து இயேசுவோடு தோழமை கொண்டு அவரது சீடராகத் திகழ்ந்தவரும், செபதேயுவின் மகனுமான யோவான்தானா? கூறுவது கடினம். நாம் இக்காலத்தில் கருதும் விதத்தில் அவர் இந்நூலின் ஆசிரியர் அல்லர் என்று உறுதி கூறலாம். நாம் கொண்டிருக்கும் வடிவில் யோவானது நற்செய்தி யோவானிடமிருந்து வரவில்லை. எந்த விதத்தில் யோவான் இந்நூலுக்கு ஆசிரியர்? அப்போஸ்தலர்கள் காலத்தில் இந்நூல் தோன்றியதா? அல்லது பிற்காலத்தில் எழுதப்பட்டதா? அப்போஸ்தலிக்க அதிகாரம் பெற்றதா? சிறப்பாக, அப்போஸ்தலர் யோவானது பாரம்பரியத்தைக் கொண்டதா? தெளிய முயல்வோம்.

3. புறச்சான்றுகள்: திருச்சபையின் பல தொடக்க காலச் சான்றுகள் செபதேயுவின் மகனும், யாக்கோபின் சகோதரனும் அப்போஸ்தலருமான யோவான் இந்நான்காம் நற்செய்தியை எபேசில் எழுதினார் என்று கூறுகின்றன. அதில் முக்கியமானது இரனேயுவின் சான்றாகும். இரனேயு (கி.பி. 180) ''அதன்பின் (மற்ற நற்செய்திகள் எழுதப்பட்டபின்) ஆண்டவரின் சீடரும் அவரின் நெஞ்சில் தலை சாய்த்தவருமான யோவான் ஆசியாவின் எபேசில் வாழ்ந்தபோது ஒரு நற்செய்தியைப் பதிப்பித்தார்'' என்று கூறுகிறார். இந்தப் பாரம்பரியத்தைத் தாமாக இரனேயு உண்டாக்கவில்லை. அவர் தமது குருவான, சிமிர்னாவின் ஆயரான போலிக்கார்ப்பிடமிருந்து பெற்றதாகக் கூறுகிறார். போலிக்கார்ப்பு யோவானது போதகத்திற்குச் செவிமடுத்து இருந்ததாகவும் கூறுகிறார்.யோவான் திரேசன் காலம் வரை (98-117), எபேசில் முதியோரிடையே வாழ்ந்ததாகக் கூறுகிறார். எபேசுத் திருச்சபை பவுலால் தொடங்கப்பட்டாலும், திரேசன் காலம்வரை யோவான் அங்கு வாழ்ந்ததாகக் கூறுகிறார்.

இரனேயுவின் சான்று மிக முக்கியமானது. இச்சான்று காலத்தால் முந்தியதுமாகும். ஆகையால், இதனைச் சிறிது ஆய்வுக் கண்ணோடு நோக்க வேண்டும். போலிக்கார்ப்பு அறிந்திருந்த யோவான் அப்போஸ்தலர்தானா? அல்லது அதே பெயரையுடைய வேறு ஒருவரா? அப்போஸ்தலரான யோவான் எபேசில் வாழ்ந்தாரா? அப்படி வாழ்ந்திருந்தால், பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகம், அந்தியோக்கிய இஞ்ஞாசியாரின் கடிதங்கள், போலிக்கார்ப்பின் நூல்கள், இப்பெரியோர்களுடைய வாழ்க்கை ஆகியவற்றில் சான்றுகள் இருக்க வேண்டும்; அவ்வாறு சான்றுகள் இல்லை. வரலாறுகள் அவ்வாறு சான்று கூறவில்லை. ஆனால், பிற்காலச் சான்றுகள் உள. அவற்றைப் பின்னர்க் காண்போம். எனி

னும், அப்போஸ்தலரான யோவானுடன் போலிக்கார்ப்பு கொண்டிருந்த தொடர்பு பற்றி ஒன்றும் கூறப்படவில்லை என்பதற்காக அவர்களிடையே தொடர்பு இல்லை என்று கூறுதல் அறிவுக்கு உகந்ததன்று. மேலே கூறப்பட்டோரின் நூல்களில் சிலவே நமக்குக் கிடைத்துள்ளன என்பதும் நாம் நினைவில் கொள்ளத்தக்கதாகும். மேலும், அப்போஸ்தலரான யோவானுடன் போலிக்கார்ப்பு கொண்டிருந்த தொடர்பு பற்றி இரனேயு கூறுவது சரிதானா? ஏனெனில், தமது நூலில் இவர் பாப்பியசு என்பவர் யோவானுக்குச் செவிமடுத்ததாகக் கூறுகிறார். இதனை யூசேபியு மறுத்து, இரனேயு முதியோர் யோவானை (John the Elder) அப்போஸ்தலர் யோவான் (John the Apostle) எனக் குழப்புகிறார் என்று பாப்பியசின் நூலிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். ஆகையால் பாப்பியசுக்கும், இரனேயுவுக்கும் தெரிந்த மற்றொரு யோவான் இருந்திருக்கக்கூடுமா? ஆனால், பாப்பியசை இரனேயு நேரடியாக அறிந்திருக்கவில்லை; போலிக்கார்ப்பை நேரடியாக அறிந்திருந்தார். ஆகையால், தமது கூற்றில் தவறியிருக்க மாட்டார் எனக் கொள்ளலாம். ஆனாலும், ஆய்வாளரின் ஐயம் தீர்ந்தபாடில்லை.

மேலும், அப்போஸ்தலரான யோவான் முன்பே (கி.பி. 44-இல்) இறந்துவிட்டதாக ஒரு பாரம்பரியமுள்ளது. சிலர் மாற் 10:39-ஐக் கருத்தில் கொண்டு யோவான் முன்பே கொடுமையாகக் கொல்லப்பட்டதாகக் கூறுவர். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிலிப்பு, 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஜார்ஜ் ஹமர்டலோஸ் ஆகியோரின் நூல்கள், 5-ஆம், 6-ஆம் நூற்றாண்டு வேதசாட்சிப் பட்டியல் ஆகியவற்றிலிருந்து மேற்கூறிய கூற்றுக்குச் சான்று கூறுவர் அறிஞர் சிலர். ஹமர்டலோஸ், அப்போஸ்தலரான யோவான் எபேசில் அமைதியாக இறந்தார் என்று கூறுகிறார். முன்பே இறந்த செய்தி காணப்படவில்லை. வேதசாட்சிகளின் பட்டியலில் பலவித வேறுபாடுகள் காணப்படுகின்றன. யாக்கோபு, யோவானுடைய விழாக்கள் சேர்ந்து கொண்டாடப்படுவதால் இருவரும் முன்பே இறந்திருக்க வேண்டும் என்று கொள்ள வேண்டியதில்லை. ஆகையால், தகுதி வாய்ந்த எந்த ஆய்வாளரும் அப்போஸ்தலரான யோவான் முன்பே இறந்து போனார் என்று ஏற்றுக் கொள்ளார்.

மேலும் சிலர், முதியோர் யோவான் என்ற ஒருவர் எபேசில் இந்நற்செய்தியை எழுதியதாகக் கூறுவர். கிறிஸ்து தோன்றிய விவரங்களை முதியோரிடமிருந்து பெற்றதாகப் பாப்பியசு (100-140) கூறுகிறார்: ''முதியோர்களைப் பின்பற்றிய யாராவது வந்தால், அவர்களிடம் அந்திரேயா, பேதுரு, பிலிப்பு, யாக்கோபு, யோவான், மத்தேயு முதலியோர் சொல்லியவற்றையும், ஆண்டவருடைய சீடர்களாகிய அரிஸ்டியன், முதியோர் யோவான் ஆகியவர்கள் சொல்லுகின்றவற்றையும் கேட்பேன். ஏனெனில், இவர்களுடைய சாட்சியங்கள் உயிருள்ளவை, நிலையானவை. இவற்றை ஏடுகளிலிருந்து பெறமுடியாது''. இதில் கவனிக்க வேண்டியது, முதல் குழு அப்போஸ்தலர்களைத் தெளிவாகக் குறிக்கிறது. அவர்களை இறந்த காலத்தில் குறிப்பதால் அவர்கள் ஏற்கெனவே இறந்து போயிருக்கக் கூடும். இரண்டாம் குழு ஆண்டவருடைய சீடர்களைக் குறிக்கின்றது. நிகழ்காலம் பயன்படுத்தப்படுவதால் அவர்கள் பாப்பியசு காலத்தில் உயிரோடு இருந்திருக்க வேண்டும். இரு யோவான்கள் குறிக்கப்படுகின்றார்கள். ஆனால், முதியோர் யோவான் எதையும் எழுதினார் என்றோ, எபேசில் வாழ்ந்தார் என்றோ ஒன்றும் கூறவில்லை. பிற்காலத்தில், ஆயிரமாண்டு நல்லாட்சிக் கொள்கையுடைய திருவெளிப்பாட்டு நூலை வேதாகமப் பட்டியலிலிருந்து நீக்க விரும்பிய அலக்சாந்திரியத் தியோனிசியு, யூசேபியு ஆகியோர் முதியோர் யோவான் திருவெளிப்பாட்டு நூலை எழுதினார் என்று கூறினர். முதியோர் யோவானைப் பற்றி நாம் அறியக்கூடியது மிகக் குறைவே. அப்படியொருவர் வாழ்ந்தார் என்பது உண்மை. அவர்தான் யோவான் நற்செய்

தியை எழுதினார் என்பதற்குச் சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவேளை அவர் யோவானது பாரம்பரியத்தைப் போதித்திருக்கலாம்.

4. பிற சான்றுகள்: எபேசின் ஆயரான போலிக்கிரேத்து (190) ''சாட்சியும், போத கரும், ஆண்டவரது நெஞ்சிலே தலை சாய்த்தவரும், குருவின் அடையாளத்தை அணிந்த குருவுமான யோவான் எபேசில் உறங்குகிறார்'' என்று விக்டர் என்ற பாப்பு விற்கு எழுதுகிறார். இது யோவான் எபே சில் வாழ்ந்தார் என்பதற்கு உறுதியான சான்றாகும்.

அலக்சாந்திரியா கிளமந்து (211-216) கூறு வது: ''தோமிசியன் (81-96) இறந்தபின், யோவான் பத்மு தீவிலிருந்து எபேசுக்குச் சென்றார். சுற்றியுள்ள இடங்களுக்குச் சென்று, ஆயர்களை நியமித்து, கிறிஸ்துவச் சமூகங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்தார். மேலும், பிற நற்செய்திகள் (ஆண்டவரது) வரலாற்றை மட்டுமே கொடுக்கின்றன. யோவான், தம் நண்பர்களால் விரும்பிக் கேட்கப்பட்டு, ஆவியினால் தெய்வீகமாகத் தூண்டப்பட்டு இறுதியாக, ஓர் ஆன்மீக நற்செய்தியை எழுதினார்''.

மிகப் பழைய இலத்தீன் நற்செய்தி முன்னுரைகளும், மார்சியனுக்கு எதிராக எழுந்த நற்செய்தி முன்னுரைகளும், மூராத் தோரியின் அட்டவணையும், அப்போஸ்தல ரான யோவான் நான்காம் நற்செய்தியை எழுதினார் என்பதற்குச் சான்று கூறுகின்றன.

மேற்கூறியவற்றிலிருந்து இந்நூல் பற்றிய திருச்சபையின் பாரம்பரியம் உறுதியானது. இந்நிலையை ஐயுற்றவர் பலர். ஆனால் தவறு என்று இதுவரை ஒருவரும் காட்ட வில்லை. ஏறக்குறைய கி.பி. 200-இல் அலகொய், கேயஸ் போன்ற யோவானது போதகத்தை விரும்பாத சிலர், இந்நூல் உண்மைத் தன்மையுடையது என்பதையும், அப்போஸ்தலத் தொடக்கமுடையது என் பதையும் மறுத்தனர். 19-ஆம் நூற்றாண்டிலி ருந்து இந்நூலின் ஆசிரியர் அப்போஸ்தல ரான யோவான் என்பதைத் தீவிரமாக மறுத்தனர் பலர். அப்போஸ்தலரான யோவானைத் தவிர வேறு யாராகிலும் ஒருவர் (ஏன் யூதாசு கூட) எழுதியிருக்கக் கூடும் என்று நிறுவத் தயங்கவில்லை. அகச்சான்றுகள் பல கூறியுமுள்ளனர். ஒத் தமை நற்செய்திகளிலிருந்து அடிப்படை யில் வேறுபடும் இந்நூலைப் பன்னிரு வருள் ஒருவர் எழுதியிருக்கக்கூடும் என்பது முடியாத செயல் என்றும், மேலும் இந்நூல் 2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப் பட்டிருக்க வேண்டும் என்றும் வாதித்தனர். இவர்கள், யோவான்தான் இந்நூலின் ஆசிரி யர் என்ற பாரம்பரியத்தின் ஒரே தன்மை யான சான்றையும், அந்தியோக்கியா இஞ் ஞாசியார், போலிக்கார்ப்பு, யுஸ்தீன், உரோமைக் கிளமந்து ஆகியோர் 2-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இந் நூலைப் பயன்படுத்தி இருப்பதையும் புறக் கணித்தனர்; ஏற்க மறுத்தனர். எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட புல்தாள் ஏடுகள், இந்நூல் கி.பி.150-ஆம் ஆண்டுக்கு முன்பே, ஏன் சில ஏடுகள், இந்நூல் கி.பி. 130-ஆம் ஆண்டுக்கு முன்பே அறியப்பட்டிருக்க வேண்டும் என்று காட்டுகின்றன. அப் போஸ்தலரான யோவான்தான் இந்நூலுக்கு ஆசிரியர் என்பதை மறுத்துக் கூறுபவர்கள் தங்கள் கொள்கைக்கு ஏற்பத் தம் கருத்துக் களை வெளியிடுவர். இவர்களது சான்று களும், காரணங்களும் ஒரே தன்மையுடைய பாரம்பரியத்தைத் தவறு என்று நிரூபிக்க வில்லை. நாம் மேற்கூறிய தொடக்க காலப் புறச்சான்றுகள் தவறுடையனவாக இருக்க லாம். அவை தவறுடையன என்று யாரும் இதுவரை நிரூபிக்கவில்லை. அப்போஸ்த லர்தான் நான்காம் நற்செய்தியின் ஆசிரியர் என்ற திருச்சபைப் பாரம்பரியம் இத்தாக்கு தல்களையெல்லாம் வென்று நிலைத்து நிற்கிறது. யோவான் எந்த அளவில் இந் நூலுக்கு ஆசிரியர் என்பது பற்றிப் பின்னர்க் காண்போம்.

5. அகச்சான்றுகள்: இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நேரடியாகக் கண்டவர் விட்டுச்சென்ற பாரம்பரியமாகும் இந்நூல் என்று பொதுவாக ஆய்வாளர் பலர் ஏற்றுக்கொள்வர். ஆசிரியர் அளிக்கும் உயிர்ச் சித்திரத் தன்மையுள்ள விவரிப்பும் பாலஸ்தீனத்தின் நிலவியல், இடவிவரங்கள், யூதப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய நுண்ணிய அறிவும் இந்நூலில் காணப்படும் காலவரை ஆகியவற்றையும் நேரடியாகக் கண்டவரிடமிருந்தல்லாது வேறு ஒருவரிடமிருந்தும் எதிர்பார்க்க முடியாது. யோவா 1:14; 15:27; 19:35 ஆகிய பகுதிகளில் வரும் நேரடிச் சான்றுத் தன்மையை நாம் கருத்தோடு நோக்க வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர்தான் ''இயேசுவின் அன்புச் சீடர்'' என்று குறிக்கப் பெறுபவர் என்பர் சிலர். இப்பட்டம் இந்நூலில் ஐந்து தடவை கையாளப்படுகிறது: 13:23-26; 19:25-27; 20:2-10; 21:7.20; பெரும்பாலும் நூலின் பிற் பகுதியிலேயே வருகிறது. இந்நூலின் ஆசிரியரைப் பற்றிய உறுதியான சான்றுகள் யோவா 21:24-இல் கிடைக்கிறது: ''இந்தச் சீடரே....''. இங்குக் குறிக்கப்படும் சீடர்தான் 21:20-இல் தெளிவாகக் குறிக்கப்படும் ''இயேசுவின் அன்புச் சீடராவர்''. 1:40-இல் பெயரால் குறிக்கப்படுபவரும், 18:15-இல் குறிக்கப்பெறும் ''மற்றொரு சீடர்'' என்பவரும், 20:2-இல் வரும் ''மற்றொரு சீடர்'' என்பவரும் மேற்கூறப்பட்ட ''இயேசுவின் அன்புச் சீடராக'' இருக்க வேண்டும் என்பர். இப்படிப் பெயரில்லாது கூறுதல், தாம் யாரென்று காட்டிக்கொள்ளாமல், ஆசிரியர் தம்மை விவரிப்பதாகத் தெரிகிறது. ஆனால், இப்படிக் கூறுவதற்கு அடிப்படை இருப்பதாகத் தெரியவில்லை. விவிலிய அறிஞர்கள் இது பற்றிக் கருத்து வேற்றுமை கொண்டுள்ளனர். இவ்விதம் ஐயத்திற்குரிய பகுதிகளை விட்டுவிட்டுத் தெளிவான வாசகங்களை மட்டும் பார்த்தால் ''இயேசுவின் அன்புச் சீடர்'' முக்கியமான சந்தர்ப்பங்களில் பிரசன்னமாயிருக்கிறார் என்பது தெரிகிறது. இறுதி இரவுணவிலும், சிலுவையினடியிலும், கலிலேய ஏரிக்கரையில் உயிர்த்த இயேசு தோன்றியபோதும் இவரைக் காண்கிறோம். ஆனால், இவர்தான் அப்போஸ்தலரான யோவானா என்பதுதான் கேள்வி. யோவான்தான் 'இயேசுவின் அன்புச் சீடர்' என்பதற்குச் சாதகமாக ''இயேசுவின் அன்புச் சீடர்'' சீடர்களின் உட்குழுவில் ஒருவராக இருக்க வேண்டும். ஏனெனில் இறுதி இரவுணவிலும், சிலுவையடியிலும் அவரைக் காண்கிறோம். அப்போஸ்தலர்களில் செபதேயுவின் குமாரர்கள் வகித்த இடம், ஆசிரியர் இவர்களில் ஒருவராக இருக்கலாம் எனச் சுட்டுகின்றது. இயேசுவின் நெருங்கிய சீடர்கள் பேதுரு, யோவான், யாக்கோபு. இவர்களில் பேதுரு இந்நூலின் ஆசிரியராக இருக்க முடியாது என்பது தெளிவு. யாக்கோபு கி.பி. 44-இல் வேதசாட்சியாக மரித்ததால் அவரும் இந்நூலின் ஆசிரியராக இருக்க முடியாது. மேலும், கவனிக்கத்தக்கது ஒன்றுளது. மத்தேயுவில் இருமுறையும், மாற்கில் ஒன்பது முறையும், லூக்காவில் ஆறுமுறையும் யோவான் குறிக்கப்படுகிறார்.யோவான் நற்செய்தியில் யோவான் என்ற பெயரில் ஒருபோதும் குறிக்கப்படவில்லை. யோவானின் சகோதரரான யாக்கோபு மத்தேயுவில் இருமுறையும், மாற்கில் ஒன்பது முறையும், லூக்காவில் நான்கு முறையும் குறிக்கப்படுகிறார். யோவானில் அவரது பெயரைக் காணவில்லை. இருவரும் ஒரு முறை 21:2-இல் ''செபதேயுவின் குமாரர்கள்'' எனக் குறிக்கப்பெறுகின்றனர். யோவான் நற்செய்தியில் பன்னிருவரில் யோவான், யாக்கோபோடு மத்தேயுவின் பெயரும் காணப்படவில்லை. யாக்கோபு, யோவான் ஆகியவரைப் பற்றி ஒன்றும் கூறாமையும், ஆசிரியர் தமது பெயரைத் தராமையும் யோவான்தான் இந்நூலில் ஆசிரியர் எனச் சுட்டவல்லன. ''இயேசுவின் அன்புச் சீடர்'' யோவான்தான் என்றால் யோவானின் பாரம்பரியமும், ஒத்தமை நற்செய்திகளின் பாரம்பரியமும் ஒத்துப் போகக் கூடியனவாக இருக்கின்றன. ''இயேசுவின் அன்புச்சீடருக்கும்'' பேதுரு

வுக்கும் இடையேயுள்ள தொடர்பு லூக்கா விலும், அப்போஸ்தலர் பணியிலும், யோவானுக்கும் பேதுருவுக்கும் இடையே யுள்ள தொடர்போடு பொருந்திப்போகும்.

''இயேசுவின் அன்புச் சீடர்'' யோவான் தான் என்ற கூற்றுக்கு எதிராகப் பல கூறப்படுகின்றன. தமது பெயரை மறைத்துத் தாம் ''இயேசுவின் அன்புச் சீடர்'' என்று கூறுவது ஆசிரியரின் போலித் தன்மையைக் காட்டுகிறது. தமது பெரு மையை அவரே பாராட்டிக் கொள்வதாகத் தெரிகிறது. 21:2-இல் செபதேயுவின் குமா ரர்கள் குறிக்கப்பட்டிருப்பதால் ''இயேசு வின் அன்புச் சீடர்'' யோவானாக இருக்க முடியாது; ஒருவேளை வரலாற்றில் வாழ்ந் திராத ஒரு நிழலுருவாய் இருக்கலாம், ஓர் அடையாள உருவமாய் இருக்கலாம் என்பர்.

''இயேசுவின் அன்புச் சீடர்'' என்ற பட்டம் ஆசிரியர் தாமே தமக்கு இட்டுக் கொண்டாரா? அல்லது பின்னைய பதிப் பாசிரியர்கள் அவருக்குத் தங்களது மரியா தையைத் தெரிவிக்கும் வண்ணம் இப் பட்டத்தை அளித்தார்களா? பின்னதுதான் பெரும்பாலும் உண்மையானது என அறி ஞர்கள் பலர் கருதுகின்றனர். ஆசிரியரைக் கிறிஸ்தவச் சீடர்களுக்கெல்லாம் மாதிரிகை யாகக் கருதிய அவரது சீடர்கள் இப் பட்டத்தை அன்போடு அளித்துப் பிறகு இந்நூலில் சேர்த்திருக்கலாம். ஓர் உண்மை யான மேன்மை மிக்க சீடர் கிறிஸ்தவச் சீடர்களுக்கெல்லாம் ஓர் அடையாளமாக ஆனார் என்பது நம்பத்தகுந்ததே. ஆனால், அவர் வரலாற்றில் வாழவில்லை; ஒரு நிழலுருவமே என்று கூறுவது நற்செய்திச் சான்றுகளுக்குப் புறம்பானதாகும். ஏனெ னில், நற்செய்தி முழுவதும், சிறப்பாக 19:35 ஆம் வசனமும், 21-ஆம் அதிகாரமும், ''இயேசுவின் அன்புச் சீடர்'' உலகில் வாழ்ந்து உடலும், உயிரும் கொண்ட ஒரு மனிதர் என ஐயமறக் காட்டுகின்றன.

''இயேசுவின் அன்புச் சீடர்'' இவ்வுல கில் வாழ்ந்தவர்தான் என்று ஏற்றுக்கொண் டாலும் அவர் யோவான் அல்லர், வேறு ஒருவரே என்பர் சிலர். அப்படிப்பட்டவர் இலாசராக இருக்கக்கூடும். ஏனெனில், அவரை இயேசு நேசித்ததாக அழுத்திக் கூறப்படுகின்றது (11:3.5.11.36) என்பர் சிலர். யோவானது பாரம்பரியத்தைப் பதிப் பித்த இறுதிப் பதிப்பாசிரியர், 11, 12-ஆம் அதிகாரங்களில் மட்டும் பெயர் கூறிவிட்டு, மற்ற இடங்களில் பெயர் குறிக்கப்பெறாத சீடராகும்படி விட்டுவிடுகிறார் என்று கூறு வது புத்திக்கு ஏற்றதாகத் தெரியவில்லை. யோவான் நற்செய்தியின் பெரும்பாலான நிகழ்ச்சிகள் எருசலேமில் நிகழ்வதால் மாற் குதான் ''இயேசுவின் அன்புச் சீடர்'' என்பர் சிலர். ஏனெனில், மாற்கின் வீடு எருசலேமி லிருந்தது (அ.ப. 12:12). இலாசரும், மாற் கும் இயேசுவுக்கு மிகவும் நெருங்கியவர் கள் என்றால் ஒத்தமை நற்செய்திகளில் வரும் இயேசுவைப் பின்பற்றுவோர் பட்டி யலில் இவர்கள் கூறப்படாது விடப்பட்டது ஏன்? ஒத்தமை நற்செய்தியாளர்களுக்கு இவர்களைத் தெரியாதா? விடை காண்பது அரிது.

ஒரு கலிலேய மீனவர் பெரிய குருவை அறிந்திருக்க முடியுமா? நற்செய்தி எழுதும் அளவிற்குக் கிரேக்க மொழியை அவர் அறிந்திருப்பாரா? ஆகையால், யோவான் ''இயேசுவின் அன்புச் சீடராக'' இருக்க முடியாது என்பர். அப்போஸ்தலர்களின் ஆற்றலையும், அவர்கள் அறிந்த நபர்களை யும் பற்றி நமக்கு என்ன தெரியும்? அவர் ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்தி இருக்கக்கூடாதா? ஆகையால், இவ்வாதத் தில் வலுவில்லை. எனவே அகச்சான்றுகளி லிருந்து ''இயேசுவின் அன்புச் சீடர்'' யோவான்தான் என்று நம்பலாம்.

திருச்சபையின் பாரம்பரியத்தைச் சார்ந்த புறச்சான்றுகளுக்கும், ஆய்வாளர்களின் கருத்துக்கும் ஏற்ற முறையில் பின்வரும் விளக்கம் தரமுடியும். ஒத்தமை நற்செய்தி களுக்கு அடிப்படையாக பேதுருவின் போதகம் (Kerygma) அமைவது போல், நான்காம் நற்செய்திக்குச் செபதேயுவின் மகனான யோவானின் போதகம் அடிப்

படை வரலாற்றுப் பாரம்பரியமாக அமைகிறது. இந்நற்செய்தி பிற நற்செய்திகளிலிருந்து வேறுபட்டிருப்பதற்குக் காரணம் வேறு மூலத்தைக் கொண்டிருப்பதுமட்டுமன்று; வேறு இறையியல் நோக்கைக் கொண்டதும் ஆகும். இரு பாரம்பரியங்களில் எது பழையது என்று கூறமுடியாது, கூறுவதில் பொருளுமில்லை. ஏனெனில், இரண்டும் பல ஆண்டுகளின் போதகத்தால் வளர்ச்சியுற்றவை. ஏட்டுவடிவம் எடுத்தது முன்பின்னாக இருக்கலாம். யோவான் பல தடவை சீர்திருத்திப் பதிப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

யோவான் எபேசில் இறந்தார் என நம்ப இடமிருக்கிறது. கி.பி. 63-ஆம் ஆண்டுக்குப் பின் யோவான் எபேசுக்குச் சென்று அங்கு வசித்தார். தமது போதகத்தைத் திட்டப்படுத்தி அஃது எழுதப்படுவதை மேற்பார்த்தார் எனலாம். அவர் சொல்லச் சொல்ல ஒருவரும் எழுதவில்லை. நான்காம் நற்செய்தி முடிக்கப் பெறுமுன்னே யோவான் இறந்திருக்க வேண்டும் (*21:20-23* இதைக் குறிக்கிறது). பின் அவரது சீடர்கள் அவர் கூறியிருந்த பிற செய்திகளையும் சேர்த்துப் பதிப்பித்தனர். ஆனால், இந்நூலை ஏற்கப் பலர் மறுத்ததாகத் தெரிகிறது. இவ்வாறு பதிப்பிக்கப்பெற்ற நூல்களைச் சேர்த்து கடைசிப் பதிப்பாசிரியர் தொகுத்து எழுதினார். இவர்தான் யோவானை ''இயேசுவின் அன்புச் சீடர்'' என்று அழைத்திருக்க வேண்டும். தாம் பதிப்பித்த நூல் உண்மையான யோவானது பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது என்று சான்று கூறும் பொருட்டுத் தமது பிற்சேர்க்கையாகிய *21*-ஆம் அதிகாரத்தில் *24*-ஆம் வசனத்தை அழுத்திக் கூறுகிறார். இவ்விதம் நாம் கொண்டிருக்கும் யோவானது நற்செய்தி அவரது சீடர்களால் பதிப்பிக்கப்பெற்றது என்பது *21:24*-ஆம் வசனத்தில் வரும் ''நமக்குத் தெரியும்'' என்ற சொல்லிலிருந்து தெரியவருகிறது. ஆகவே, அப்போஸ்தலரான யோவான் நாம் கொண்டிருக்கும் வடிவில் யோவான் நற்செய்திக்கு ஆசிரியர் அல்லர். அதன் அடிப்படை வரலாற்றுப் பாரம்பரியத்திற்குக் காரணமானவர் என்ற முறையில் அதன் ஆசிரியராவர்.

6. யோவான்: இவரைப் பற்றி புதிய ஏற்பாட்டில் நாம் அறிவது என்ன? யோவான் என்பதற்கு ''யாவே பெருந்தன்மையுடையவர், அருள்மயமானவர்'' என்பது பொருள். இவர் செபதேயுவின் மகன்; பெரிய யாக்கோபின் தம்பி. சலோமி இவர்களுடைய தாயாய் ஒருவேளை இருக்கக்கூடும் (*மத் 27:56; மாற் 15:40*). மேற்கூறிய பகுதிகளோடு யோவா *14:25*-ஐயும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்களின் தாய் கன்னி மரியாளுடைய சகோதரியாக இருந்திருக்கக்கூடும் என ஊகிக்க இடமிருக்கிறது. ஆகவே, இவ்விருவரும் இயேசுவின் உறவினர்களாக அதாவது சகோதரர்களாகப் பிறரால் கருதப்பட்டிருக்கலாம். செபதேயுவும் அவரது குமாரர்களும் மீன் பிடிப்பவர்கள் (*மத் 4:21* இணை; *யோவா 21:7*). லூக் *5:10* இவர்களைப் பேதுருவோடு தொழிலில் பங்காளிகளாகக் காட்டுகிறது. இவ்விரு சகோதரர்களின் பெற்றோர் போதிய செல்வம் படைத்தவர்களாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், இவர்களது தந்தை கூலியாட்கள் அமர்த்தி வேலை வாங்கினார் (*மாற் 1:20*). இவர்களுடைய தாய் தனது உடைமையிலிருந்து இயேசுவுக்குப் பணிவிடை செய்கிறாள் (*மாற் 15:40; லூக் 8:3*).

யோவா *1:35-40*-இல் வரும் பெயர் குறிக்கப்படாத சீடர் யோவான் என்றால், இயேசுவைச் சந்திக்குமுன் திருமுழுக்கு யோவான் சீடராய் இருந்திருக்க வேண்டும். திருமுழுக்கு யோவானின் வார்த்தைகளால் தூண்டப்பெற்று, அந்திரேயாவோடு கலிலேயாவிற்குச் சென்று இயேசுவைப் பின்பற்றியிருக்க வேண்டும். மேற்கூறியவை பற்றி மிகுந்த கருத்து வேறுபாடு அறிஞர்களிடையே உண்டு. அப்போஸ்தலர் பட்டியலில் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகிய பெயர்கள் முதலில் வருகின்றன. இவர்கள்தான் முதன்முதலில் கலிலேயாவில் அழைக்கப்பட்ட சீடர்கள் (*மத் 1:6-20*). யாக்கோபும், யோவானும்

அவர்களுடைய தந்தையோடு மீன் பிடிக்கும் படகில் இருந்தபோது தம்மைப் பின்பற்றுமாறு அவர்களை இயேசு அழைக்கிறார் (மாற் 4:21தொ). பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூவரும் இயேசுவால் தனிப்பட்ட விதமாக அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவர்கள் இயேசுவோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். இம்மூவர் மட்டுமே, இயேசு பேதுருவின் மாமியாரைக் குணப்படுத்தியபோதும் (மாற் 1:29), யாயிரின் மகளை உயிர்ப்பித்த போதும் (மாற் 9:2), கெத்சமனித் தோட்டத்தில் இயேசு அவதியுற்றபோதும் (மாற் 14:33; மத் 26:37) அவரோடுகூட இருந்தனர். இயேசுவை ஏற்க மறுத்த சமாரிய ஊர்களின் மேல் வானத்திலிருந்து தீயை அழைக்க அனுமதி கேட்டவர்கள் யாக்கோபுவும், யோவானுமே (லூக் 9:54). இச்சினமிக்க தீவிரத்தன்மை (மாற் 3:17) இவர்களுக்கு, ''இடியின் மக்கள்'' எனப்பெயர் கொடுக்கக் காரணமாயிருந்திருக்கலாம் (மாற் 9:38-39 என்ற பகுதியையும் காண்க). ஆகவே, யோவான் ஒதுங்கி வாழும் குணமும், சிந்தனையில் ஆழும் பண்பும், சிறிது மென்மைத் தன்மையும் உடையவர் என்று கருதுவது மிகத் தவறாகும். இயேசுவின் இரு பக்கங்களிலும் இரு இருக்கைகளில் அமரும்படி கேட்கும்போது, இருவரும் பதவிப் பிரியர்கள் எனத் தோன்றுகின்றனர். இருவரும் மென்மையாகக் கண்டிக்கப்பட்டாலும், இயேசுவின் கிண்ணத்தைப் பருகும் பேறு பெறுவர் என்ற உறுதியைப் பெறுகின்றனர் (மத் 20:20-28; மாற் 10:35 45). அதிகாரம் பெறாத ஒருவர் பேய் ஓட்டுவதைப்பற்றி யோவான் மட்டும் குறை கூறுவதாகக் கூறப்படுகிறது (மாற் 9:38; லூக் 9:49). யோவானும், பேதுருவும் இயேசுவின் இறுதிப் பாஸ்கு உணவைத் தயாரிக்க அனுப்பப்படுகின்றனர் (லூக் 22:8). இயேசு உயிர்த்து விண் சென்ற பிறகு, பேதுரு ஆலயத்தில் முடமானவனைக் குணப்படுத்திய போதும் (அ.ப. 3:1.3.4.11), யூத சங்கத்தின் முன் விசாரணையின் போதும் (4:13-19), சமாரியர்கள் மீது பரிசுத்த ஆவி எழுந்தருளிய போதும் (8:14-25) பேதுருவோடு யோவானும் இருக்கிறார். பவுல், தமது மனந்திரும்புதலுக்குப் பின், இரண்டாம் முறையாக எருசலேமுக்கு வந்தபோது பேதுரு (ஆண்டவரது சகோதரனான), யாக்கோபு ஆகியோருடன் யோவானையும் கண்டார். இம்மூவரும் எருசலேம் திருச்சபையின் மூன்று தூண்கள், முக்கியமானவர்களெனக் குறிக்கிறார் பவுல் (கலா 2:9).

''இயேசுவின் அன்புச் சீடர்'' யோவான் தான் என்றால் அவரைப் பற்றி இன்னும் பல விவரங்கள் தெரியவரும். நான்காவது நற்செய்தியின் ஆசிரியர் தமது பெயரை நேரடியாக வெளிப்படுத்தவில்லை. இறுதிப் பதிப்பாசிரியரால் சேர்க்கப்பட்டதாகக் கருதப்படும் 21-ஆம் அதிகாரத்தில், நற்செய்தியில் கூறப்பட்டவைகளுக்கு நம்பத்தகுந்த சான்றாளராகவும், ஆசிரியராகவும் ''இயேசுவின் அன்புச் சீடர்'' காட்டப்படுகிறார் (யோவா 21:20-23.34). இந்தச் சீடர் யாரென முன்னமே பார்த்துள்ளோம். இவர் ஓர் அப்போஸ்தலராக இருக்க வேண்டும்; இறுதி இரவுணவில் பங்கெடுத்து, இயேசுவுக்கு அருகில் பந்தியமர்ந்து, அவரது நெஞ்சில் தலைசாய்த்தவர். இறுதி இரவுணவில், அப்போஸ்தலர்கள் மட்டும்தான் பங்கு எடுத்தனர். சிலுவையடியில் இவரிடம் தம் தாயை இயேசு ஒப்படைக்கிறார் (19:26). இயேசு தமது தாயை இச்சீடரின் பாதுகாப்பில் ஒப்படைத்தபோது (19:26தொ), பயமற்ற, மன உறுதியையுடைய, நம்பிக்கைக்குரிய அன்பு நிறைந்த ஒரு சீடரிடம் இக்கடமையைக் கொடுப்பதாக இயேசு அறிந்திருக்க வேண்டும். 21-ஆம் அதிகாரத்தில் இவரைப் பற்றிய குறிப்புகள் உள.

யோவானின் பிற்கால வாழ்வைப் பற்றி அதிகம் அறிவதற்கில்லை. திருச்சபையின் தந்தையர்களின் நூல்களில் இவரைப் பற்றி சிறிதளவு அறிகிறோம். இரனேயு சிமிர்னாவின் ஆயரான போலிக்கார்பிடமிருந்து பெற்றதாகக் கூறும் பாரம்பரியம் ஓர் அளவுக்கு நம்பத்தகுந்தது. இதையே இரண்டாம் நூற்றாண்டு நூல்களும் தருகின்றன.

இதன்படி கி.பி. 60-ஆம் ஆண்டுக்குப் பின்னும், 67-ஆம் ஆண்டுக்கு முன்னும் யோவான் சிறிய ஆசியாவிலுள்ள எபேசிற்கு வந்திருக்கலாம். பேரரசன் தோமிசியன் ஆட்சியின் (கி.பி. 81-96) இறுதிக்காலத்தில் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டு, அங்குத் திருவெளிப்பாட்டு நூலை எழுதியிருக்கலாம். பேரரசன் திரேசன் காலத்தில் (90-117) எபேசில் தமது திருமுகங்களையும் நற்செய்தியையும் எழுதியிருக்கலாம். இந்நற்செய்தி, யோவானின் சீடர்களால் பல முறை பதிப்பிக்கப்பட்டு, இப்போது நாம் கொண்டிருக்கும் வடிவம் எடுத்தது. திரேசன் காலத்தில் யோவான் எபேசில் மரித்திருக்க வேண்டும்.

யோவான் எபேசில் பழங்காலந்தொட்டு வணங்கப்பட்டு வந்துள்ளார். அவருக்கு எழுப்பப்பட்ட பேராலயத்தின் சிதைவு இதற்குச் சான்று கூறுகிறது. யோவானைச் சுற்றிப் பல கதைகளும், புராணங்களும் எழுந்துள்ளன. அவை உண்மையாயிருக்கலாம் அல்லது புனைவுகளாயிருக்கலாம். பிற்காலத்தில் யோவான் பெயரால் தோசேத்தியர், ஞானவாதியர் ஆகிய பிரிவினர், பல போலி வேதநூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளனர்.

எசே 1:10; திருவெளி 4:7 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, நான்கு நற்செய்தியாளருள் யோவான் கழுகு அடையாளத்தால் குறிக்கப் பெறுகிறார். இதற்குக் காரணம் முன்னுரையில் வரும் அவரது இறையியல் சிகரத் தன்மையே. பிற்கால ஓவியங்களில் யோவானோடு ஒரு (பூசைக்) கிண்ணத்தையும் சேர்த்து வரைதல் மத் 20:23 என்ற பகுதியின் எதிரொலியாக இருக்கலாம். இதனோடு சேர்ந்த கதையுமுண்டு. நஞ்சு இட்ட பான பாத்திரம் யோவானுக்குக் கொடுக்கப்பட்டதாகவும், நஞ்சு ஒரு பாம்பு உருவமாய் வெளிவந்ததாகவும் அக்கதை கூறும். யோவான் பெயரால் ''நட்பின் கிண்ணத்தைப்'' பருகும் வழக்கு ஐரோப்பாவில் உள்ளது. யோவானின் விழாவை (திசம்பர் 27) முடியப்பரது விழாவிற்குப்பின் கொண்டாடும் வழக்கம் மிகப்பழமையானதொன்றாகும். ஒரு வேளை ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம்.

7. எங்கு எழுதப்பட்டது?: மார்சியனுக்கு விரோதமாக எழுதப்பட்ட முன்னுரையின் ஆசிரியரும், எரோனிமு, எப்பிபானியு ஆகியோரும் இந்நூல் சிறிய ஆசியாவில் தோன்றியது என்பர். இரனேயு அப்பகுதியிலுள்ள எபேசில் தோன்றியதாகக் கூறுவர். யோவான்தான் இந்நூலிற்கு ஆசிரியர் என்பதை மறுப்பவர்கூட இந்நூல் எபேசில் தோன்றியது என்பதை ஏற்றுக்கொள்வர். ஆனால், எப்பிரேம் இந்நூல் அந்தியோக்கியாவில் எழுதப்பட்டது என்பார். அந்நகர் ஆயரான இஞ்ஞாசியாரின் கடிதங்கள் யோவானின் பாரம்பரியத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவு. யோவானது பாரம்பரியம் நீண்டகாலமாக வளர்ச்சியுற்றதொன்றாகும். அஃது எழுத்து வடிவம் எடுக்குமுன் பல இடங்களுக்கும் பரவியிருக்கலாம். அவ்வளர்ச்சியில் அந்தியோக்கியாவும் பங்கு எடுத்திருக்கலாம். அறிஞர்கள், பெரும்பாலோர் இந்நூல் எபேசில் தோன்றியது என்பதை ஏற்பர்.

8. எப்போது எழுதப்பட்டது?: இந்நூல் கி.பி. 90-ஆம் ஆண்டுக்கும், 110-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பர் அறிஞர். இப்படிக் கூறும்போது நாம் கொண்டிருக்கும் இறுதி நூலையே குறிக்கிறோம். யோவானின் பாரம்பரியம் முன்பே இருந்திருக்க வேண்டும்; சில பகுதிகள் ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கலாம்.

இந்நூல் கி.பி. 110-ஆம் ஆண்டுக்குப்பின் எழுதப்பட்டிருக்க முடியாது. சிலர் இந்நூல் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டது என வாதித்து வந்தனர். இதை இப்போது அறிஞர் ஏற்கமாட்டார்கள். ஆராய்ச்சிகளின்படி இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்நற்செய்தி எகிப்து, உரோமை, சிறிய ஆசியா ஆகிய பகுதிகளில் கிறிஸ்துவ வைதீக வட்டாரங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனத் தெரி

கிறது. அந்தியோக்கிய இஞ்ஞாசியார் (கி.பி. 110), போலிக்கார்ப்பு (கி.பி. 110), எர்மசின் ஆயர் (கி.பி.140), யுஸ்தீன் (கி.பி. 150), தோசியன், அந்தியோக்கிய நகரத் தியோபிலசு, இரனேயு ஆகியோர் இந் நூலை அறிந்திருந்தனர் என்பது அவர்கள் நூல்களிலிருந்து தெரிய வருகிறது.

எனினும், எவ்வளவு காலத்திற்கு முந்தி எழுதப்பட்டது இந்நூல் என்பது பற்றி உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. யோவான் நற்செய்தி தனிப்பட்ட வர லாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. ஆகையால், இது முன்பே எழுதப்பட்டி ருக்க வேண்டும் என்பர் சிலர். யோவான் பாரம்பரியம் கி.பி. 70-ஆம் ஆண்டுக்கு முன்பே பாலஸ்தீனத்திலிருந்து வெளிவந் திருக்க வேண்டும்; 70-ஆம் ஆண்டுக்குப் பின் வெளிவந்திருக்க முடியாது. ஏனெ னில், முதல் யூதக் கிளர்ச்சியின்போது பாலஸ்தீனத்திலிருந்து கிறிஸ்துவச் சமூகங் கள் சிதறி ஓடின. அப்போது நேர்ந்த அழிவின் காரணமாக 70-ஆம் ஆண்டுக்குப் பின் உண்மையான வரலாற்றுப் பாரம்பரி யத்தைச் சேகரிப்பது கடினம். இந்த யூகங் களை மனத்திற்கொண்டு ஆசிரியர் 70-ஆம் ஆண்டுக்கு முன் தமது பாரம்பரியத்தைப் பாலஸ்தீனத்தில் எழுத அல்லது தொகுக்க ஆரம்பித்தார் எனலாம். 70-ஆம் ஆண்டுக் குப் பின் பாலஸ்தீனத்திற்கு வெளியில் அது வளர்ச்சியுற்றது. இதற்கு ஒரு தலைமுறை காலம் கொடுக்கலாம். பல பதிப்பு வேலை களுக்கு இன்னுமொரு தலைமுறைக் காலத்தைக் கொடுத்தால் இந்நூல் 90-ஆம் ஆண்டுக்கும், 110-ஆம் ஆண்டுக்கும் இடை யிட்ட காலத்தில் இறுதி வடிவம் எடுத் திருக்க வேண்டும்.

இந்நூலின் உள் ஆராய்ச்சி, இந்நூல் 70-ஆம் ஆண்டுக்கு முன் எழுதப்பட்டிருக்க முடியாது எனக் காட்டுவதாய் அமைகிறது. இந்நூலில் ஒரு பிரச்சனை சுட்டிக் காட்டப் படுகிறது. அதாவது, யூதக் கிறிஸ்தவர்கள் யூதச் செபக்கூடங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டதாகும். இப்பிரச்சனை 85-ஆம் ஆண்டுக்கு முன் முக்கியம் வாய்ந்த தாகத் தெரியவில்லை. ஆகையால், இந்நூல் 90-ஆம் ஆண்டை ஒட்டி எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆகவே, 90-ஆம் ஆண்டுக்கும் 110-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத் தில் இந்நூல் எழுதப்பட்டது என்று கூறுதல் நம்பத்தகுந்தது. மேலும், இக்கூற்று பாரம் பரியப் புறச்சான்றுடன் ஒத்ததாயுள்ளது. ஏனெனில், இந்நூல் பேரரசன் திரேசன் காலத்தில் (93-117) எழுதப்பட்டது என இரனேயு கூறுகின்றார்.

9. யாருக்காக எந்நோக்கோடு எழுதப்பட் டது?: இப்பிரச்சனைகள் பற்றி ஆராய்ச்சியா ளர்களிடையே ஒற்றுமை காண்பது அரிது; பல நோக்கங்கள் இருப்பதாகத் தோன்று கிறது. மூல ஆசிரியருக்குப் பின் வந்த பதிப்பாசிரியர்கள் தங்களுடைய காலத் தேவைகளுக்கு ஏற்ற நோக்கங்களைப் புகுத் தியிருப்பதாகத் தெரிகிறது.

நான்காம் நற்செய்தி திருமுழுக்கு யோவானைப் பின்பற்றிய பிரிவினைக்காரர் களுக்கு மாறாக எழுதிய காப்புரை என்பர் சிலர். காரணம், முன்னுரையில் திரு முழுக்கு யோவானுக்கு மிகுந்த சிறப்பு அளிக்கப்படுவதைத் தடுக்கும் விதத்தில் பல குறிப்புக்கள் இருப்பதாகத் தோன்று கிறது. அவ்வாறு திருமுழுக்கு யோவா னுக்கு அளிக்கப்பட்ட மிகைப்பட்ட வணக் கத்தை மறுத்து அதைத் திருத்துவது நான் காம் நற்செய்தியின் நோக்கம் என்பர்.

முன்னுரை திருமுழுக்கு யோவானைப் போற்றும்பாடல். அதை யோவான் திருத்தித் தமது நோக்கத்திற்கேற்ப அமைத் துள்ளார் என்று கூறுவோருமுளர். இந்தக் கொள்கையை ஆராயும்போது, நாம் மன தில் கொள்ள வேண்டியவை சில உள. திருமுழுக்கு யோவானைப் பின்பற்றிய ஒரு பிரிவினர் இருந்தனர் என்பது உண்மை. ஆனால், இவர்கள் இயேசுவைக் கிறிஸ்து வாக (மெசியாவாக) ஏற்றுக்கொண்டதே யில்லை. கி.பி. 200-ஐ ஒட்டிய போலிக் கிளமந்து ஏடுகள், இயேசு மெசியா அல் லர், திருமுழுக்கு யோவானே மெசியா என்று இப்பிரிவினர் கருதினர் என்பதற்குச்

சான்று கூறுகின்றன. லூக்காவின் நற்செய்தியில் வரும் செக்கரியாவின் பாடல் திருமுழுக்கு யோவானைப் பற்றியது என்றால் திருமுழுக்கு யோவானின் சீடர்கள் அவரையே ஒளியாகக் கருதியதாகத் தெரிகிறது. இதற்கு மாறாக, யோவா *1:8-9* என்ற பகுதி திருமுழுக்கு யோவான் உண்மை ஒளி அல்லர், இயேசுவே உண்மையான ஒளி என்று அழுத்திக் கூறுவதாகத் தெரிகிறது. இயேசு திருமுழுக்கு யோவானுக்கு முன்பே இருந்தார். ஆகையால், அவரைவிடப் பெரியவர் என்று வலியுறுத்துவதாகத் தெரிகிறது *(1:30)*. திருமுழுக்கு யோவான், தாம் மெசியா அல்லர் என்று கூறுவது, இயேசுதான் உண்மையான மெசியா என்று சுட்டுகிறது. இவ்விதம் தோன்றினாலும், இந்நூலைக் கூர்ந்து கவனிக்குங்கால், இறைவனின் மீட்புத் திட்டத்தில் திருமுழுக்கு யோவானின் இடத்தை நன்குணர்ந்து அதை ஆசிரியர் சிறப்பித்துக் கூறுவதாகத் தெரிகிறது. திருமுழுக்கு யோவானது மகிமையைக் குறைத்துக் கூறவில்லை. அதற்கு மாறாக திருமுழுக்கு யோவான் இறைவனால் அனுப்பப்பட்ட தனிச்சிறப்புடைய முக்கியமான சான்றாளர் எனக்காட்டுகிறது இந்நூல். ஆகையால், திருமுழுக்கு யோவானைப் பின்பற்றிய பிரிவினருக்கு மாறாக எழுதப்பட்ட காப்புரையாகும் இந்நூல் என்பது மிகைப்படுத்திக் கூறுவதாகும்.

இந்நூல் ''ஞானவாதிகள்'' (Gnostics), ''மண்டேயர்கள்'' (Mandeans) ஆகிய ஆதி காலப் பிரிவினைச் சபையினருக்கு மாறாக எழுதப்பட்டது என்பர் சிலர். யோவானது சில கூற்றுக்கள் இதற்கு இடந்தருவனவாயுள்ளன. ஆனால் இப்பிரிவினையாளர்கள் காலத்தினால் மிகப் பிந்தியவர்கள். ஆகையால், இவர்களை மனதில் வைத்து மூல ஆசிரியரோ, பதிப்பாசிரியர்களோ இந்நூலை எழுதியிருக்க முடியாது.

மேலும் சிலர், இந்நூல், யூதர்களுக்கு விரோதமாகவும், அவர்களுக்காகவும், எழுதப்பட்ட வாத நூலாகும் என்பர். இயேசு தமது கால யூதர்களுக்குப் போதித்தது என்ன? கால நிறைவில், இறையரசைத் தாம் உலகிற்குக் கொண்டு வந்துள்ளதாயும், தமது வாழ்விலே அது தொடங்கி வளர்ச்சியடைவதாகவும், அதை யூதர்கள் ஏற்க வேண்டும் என்றும் இயேசு போதித்தார்; யூதர்கள் ஏற்க மறுத்தனர். ஆகையால், இயேசுவைப் பற்றிய உண்மையான வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் எந்த நற்செய்தி நூலும், யூதர்களுக்கு விரோதமாக ஒரு காப்புரை கொண்டிருக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கத்தக்கத்ததே. இத்தன்மை ஒத்தமை நற்செய்திகளைவிட யோவானில் அழுத்தமாகவும், தெளிவாகவும் காணப்படுகிறது. ஏனெனில், சுத்தி செய்தல், ஆலய வழிபாடு ஆகிய நிறுவனங்கள், ஓய்வுநாள், பாஸ்குவிழா, கூடார விழா, அபிடேகவிழா ஆகியவற்றை அகற்றி தாமே அவற்றின் நிறைவு ஆவதாகவும் பழைய உடன்படிக்கை முற்றுப்பெறுகிறது, பழைய திருவழிபாட்டு முறைகளும் மறைகின்றன, தன்னில் புதிய மீட்புச்செயலும், புதிய வழிபாட்டுமுறையும் ஆரம்பமாகின்றன என்பதாகவும், இயேசு காட்டுகிறார் என்ற கருத்தைச் சுற்றி இயேசுவின் பொதுப்பணி அமைக்கப்படுகிறது. ஆகவே, சுற்றுவட்டார யூதர்களைக் கிறிஸ்தவத்திற்கு ஈர்க்கும் வேதபோதக முயற்சியாகும் இந்நூல் என்பர்.

பாலஸ்தீன யூதர்களுக்காக நான்காம் நற்செய்தி எழுதப்படவில்லை என்று தோன்றுகிறது. இந்நற்செய்தி முழுவதிலும் ''யூதர்கள்'' என்ற சொல் விரோத, வெறுப்பு மனப்பான்மையுடன் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல் யூத இனத்தாரைக் குறிக்கவில்லை. ஏனெனில், 9-ஆம் அதிகாரத்தில் வரும் குருடனும், அவனது தந்தையும் யூதர்கள் ஆனாலும் ''யூதர்களோடு'' ஒப்பிடப்பட்டு வேறுபடுத்திக் கூறப்படுகின்றனர். ஒத்தமை நற்செய்திகள், தலைமைக் குருக்கள், பரிசேயர், சனேத்ரின் அதிகாரிகள் என்று குறிப்பவர்களை யோவான் நற்செய்தி ''யூதர்கள்'' என்று பெரும்பாலும் அழைக்கிறது (யோவா *11:47; 18:14*). இயேசுவுக்கு விரோதமான

யூத அதிகாரிகளைச் சிறப்பாக எருசலேமைச் சார்ந்த யூத அதிகாரவர்க்கத்தினரை யோவான் நற்செய்தி 'யூதர்க''ளென அழைக்கிறது. பிற்காலத்தில் யூத இனத்தவர்க்கும், கிறிஸ்தவர்களுக்கும் எழுந்த பகையை மனதில் வைத்து, இயேசுவின் எதிரிகளுக்கு இனத்தாரின் பெயரையே அளித்ததாகத் தெரிகிறது. இவ்விதம் யூதர்கள் என்ற சொல் பிற்காலத்தில் கொண்ட பொருள் முற்காலத்துக்கும் உரியதாக வழங்கப்பட்டது. இந்நூல் எழுதப்பட்ட, அல்லது பதிப்பிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக, பொதுவாக யூதர்களுக்கும் கிறிஸதவர்களுக்கும் பெரும்பகை மூண்டது; போர் மூண்டது. இருவருக்குமிடையே மிகுந்த கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இக்கால யூதர்கள் கிறிஸ்தவர்களை எதிர்த்ததுபோலவே இயேசுவின் காலத்து அதிகாரிகள் அவரை எதிர்த்ததால், இவர்களது பொதுப் பெயரையே (யூதர்கள்) இயேசுவை எதிர்த்த அதிகார வர்க்கத்தினருக்கு அளிக்கிறார். இயேசுவின் விரோதிகளை யூதர்கள் என்று அழைக்கும்போது, அவர்களது சந்ததியரான, ஆசிரியர் காலத்து யூதர்களையும் சேர்த்து அழைக்கிறார். இதில் விரோதத் தன்மையும், வெறுப்புமே தெரிகிறது. யூத நிறுவனங்களையும், யூத விழாக்களையும் அகற்றுவது பற்றிய யோவானது கூற்றுக்களும், மற்ற வாதங்களும் இரு குழுவினரிடையேயும் விரோதத்தை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன. ஆகையால், இந்நூல் பாலஸ்தீன யூதர்களையோ, சுற்றுவட்டார யூதர்களையோ கிறிஸ்தவத்திறகு ஈர்க்கும் வேதபோதக முயற்சியாகும் என்று கூறுவது ஒவ்வாததாகத் தோன்றுகிறது.

கீழ்வருபவை இந்நூலின் உண்மையான நோக்கங்களாகத் தோன்றுகின்றன. யூதக் கிறிஸ்தவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் பொருட்டும், ஆறுதல் அளிக்கும் பொருட்டும் இந்நூல் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. ஆலயம் அழிக்கப்படும்வரை யூத மதத்தினர்களும், அதிகாரிகளும் யூதக் கிறிஸ்தவர்களைச் செபக்கூடங்களில் அனுமதித்தனர், சகித்துக் கொண்டனர். கி.பி. 70-ஆம் ஆண்டுக்குப் பின் நிலை மாறியது. 80-ஆம் ஆண்டுக்குப் பின் இரு வகுப்பினருக்குமிடையேயுள்ள தொடர்பு சிதைந்தது. செபக்கூடங்களிலிருந்து விரட்டப்பட்டனர் யூதக்கிறிஸ்தவர்கள். யூத சமூகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர்; யூதர்களுடைய பதினெட்டு ஆசீர்களோடு கிறிஸ்தவர்களைச் சபிக்கும் வாக்கும் சேர்த்து வெளிப்படையாகச் சொல்லப்பட்டது. இதைச் சொல்ல மறுப்பவன் கிறிஸ்தவ மனப்பான்மையுடையவன் என்று காட்டிக் கொள்வான்; அதனால், பல தொல்லையுறுவான். கி.பி. 90-ஐ ஒட்டி நடந்த யாம்னியா கூட்டத்திற்கு இரண்டாம் கமாலியேல் தலைமை தாங்கியபோது, இயேசுவை மெசியா என்று ஏற்றுக் கொண்ட யூதர்கள் யூத மதத்திலிருந்து அதிகாரப்பூர்வமாக வெளியேற்றப்பட்டனர். ஆனால், யூதக்கிறிஸ்தவர்களோ பாரம்பரியத்தில் வளர்ச்சியுற்றவர்க[ள்] களது யூதப்பாரம்பரியத்தையும், உ[...] ருடன் கொண்ட தொடர்பையும் விட்டுவிடப் பிரியப்படவில்லை. ஆனாலும், இயேசுவின்பால் கொண்ட விசுவாசத்தை இழக்கவும் மனம் கொள்ளவில்லை. இவ்விரண்டிற்கும் இடையில் யூதக்கிறிஸ்தவர்கள் பெரிதும் அல்லலுற்றனர். அவர்களை ஊக்குவிப்பது மிக அவசியமாயிற்று. அவர்களுக்கு ஆறுதல் அளிப்பது இன்றியமையாததாயிற்று. இதற்காகவே இந்நூல் எழுதப்பட்டது எனலாம். ஆகவே, இந்நற்செய்தியின் முதற்பகுதி, யூத மதத்தை விட்டதனால் யூதக்கிறிஸ்தவர்கள் தாங்கள் இழந்துவிட்டதாகக் கருதிய தங்களுக்கு விருப்பமான நிறுவனங்களையும், விழாக்களையும் இயேசுவில் மேலான விதத்தில் கண்டடைவார்கள் என்று காட்டும் விதத்தில் அமைந்துள்ளது. நற்செய்தியில் இயேசுவை விசுவசித்த யூதர்கள், விரோத மனப்பான்மையுள்ள யூதர்களிடமிருந்து பிரித்துக் காட்டப்படுகின்றனர். 9-ஆம் அதிகாரத்தில் தனது விசுவாசத்திற்காக விலக்கி வைக்கப்பட்ட குருடன், ஒரு வீரனாகக் காட்டப்படுகிறான் (9:22.34). பிற்காலத்தில் நிகழ்ந்த விலக்கிவைத்தல் நிகழ்ச்சி, கால

மயக்கத்தோடு இரு இடங்களில் குறிப்பிடப்படுகிறது (9:2.42; 16:2). இது நற்செய்தி எழுதப்பட்ட அல்லது பதிப்பிக்கப்பட்ட காலத்தில் விலக்கிவைத்தல் ஒரு பெரும் பிரச்சனையாக இருந்தது என்பதைக் காட்டுகிறது. 12:42-43-இல் இயேசுவில் விசுவாசம் கொண்டாலும் யூதர்களுக்குப் பயந்து அதை வெளிக்காட்டப் பயப்பட்டவர்களைப் பற்றிக் கடுமையான கண்டனம் காணப்படுகிறது. 19:38-39-இல் யோசேப்பும், நிக்கோதேமுவும் எவ்விதம் இப் பயத்தை வென்று தாங்கள் கிறிஸ்தவர்களைச் சார்ந்தவர்கள் என்று வெளிப்படுத்தினர் என்பது கூறப்படுகிறது. இவர்களைப் போல் முதல் நூற்றாண்டு முடிவில் வாழ்ந்த யூதக்கிறிஸ்தவர்களும் செய்ய வேண்டும் என்று தூண்டும் முறையில் இந்நற்செய்தி எழுதப்பட்டது.

புற இனக் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் இந்நூல் எழுதப்பட்டது என்பர் சிலர். இதிலும் உண்மையிருக்கிறது. இந்நூலாசிரியர் புற இனத்தவர் மனந்திரும்புதல், தமது மகனை அனுப்பிய இறைவனது திட்டத்தில் ஒரு பகுதியாகும் எனக் காட்டுகிறார். வஞ்சப் புகழ்ச்சியாக 7:35-இல், இயேசு இறுதியாக புறஇனத்தவர்க்குப் (கிரேக்கருக்குப்) போதிக்கப் போவார் என்று குறிப்பால் உணர்த்துகிறார். 10:16-இல் நல்லாயரான இயேசு தமது மந்தையைச் சேராத ஆடுகளையும் தம் மந்தைக்குக் கொண்டுவர தமது உயிரையும் அளிப்பார் என்பது சிறப்பித்துக் கூறப்படுகிறது. தனக்கே புரியாத இறைவாக்காக, காயபா, இயேசு யூத நாட்டினருக்கு மட்டுமல்லர், சிதறிக்கிடந்த இறைமக்கள் யாவருக்காகவும் மரிப்பார் என்று முன்னறிவிக்கிறார் (18:52). இயேசு நிராகரிக்கப்பட்ட பின் உலகெல்லாம் அவரிடம் வருவதிலும் (12:19), புற இனத்தார் அவரைத் தேடுவதிலும் (12:20-21) இயேசுவின் பொதுப்பணி உச்சநிலை அடைகிறது எனலாம். இதுதான் அவர் மகிமைப்படு நேரம் வந்துவிட்டது என்பதற்கு அடையாளம் (12:23). நம் தந்தையிடத்திற்குச் செல்லும் வழியாக சிலுவையில் உயர்த்தப்படும் விதத்தில் யாவரையும் தம்மிடம் இயேசு ஈர்க்கிறார், சுவர்கிறார் (12:32).

யூதக்கிறிஸ்தவர்களுக்காக மட்டுமோ, புற இனக் கிறிஸ்தவர்களுக்காக மட்டுமோ அன்று, பொதுவாகக் கிறிஸ்தவர்கள் அனைவருக்காகவும் எழுதப்பட்டது இந்நற்செய்தி. அனைவரையும் ஊக்குவிப்பதற்காக எழுந்தது இந்நற்செய்தி என்பர். இந்நற்செய்தியின் நோக்கம் 20:31-இல் கூறப்படுகிறது: ''இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப் பெற்றுள்ளன''. இவ்வசனத்தின் முற்பகுதி காப்புரைத் தன்மையை வெளிப்படுத்தினாலும், பிற்பகுதி ஏற்கெனவே விசுவசிப்போரை உறுதிப்படுத்த ஆசிரியர் விரும்புவதாகக் காட்டுகிறது. இந்நற்செய்தி எழுதப்பட்ட காலத்தில் ஏற்கெனவே அருட்கருவிகளையும், வழிபாட்டையும் வளர்ச்சியுற்ற நிலையில் கொண்ட கிறிஸ்தவச் சமூகங்கள் பல இடங்களில் இருந்தன. இவற்றிற்கும் நாசரேத்து இயேசுவுக்கும் தொடர்பு என்ன? அவர் ஓர் இயக்கத்தை ஏற்படுத்தினார். அஃது அவருக்குப் பின் தானாக இயங்குவதாகத் தோன்றியது. அவர் பிறரைப்போல் ஒரு வெறும் வரலாற்று உருவம்தானா? இல்லை. அவர் வெறும் வரலாற்று உருவமல்லர். தாம் வாழ்ந்த காலத்தைப்போலவே, நூற்றாண்டின் முடிவிலும், என்றும் தமது சீடர்களுக்கு வாழ்வின் ஊற்றாகவும், வளர்ச்சியாகவும் விளங்குகிறார் இயேசு. இதுவே இந்நற்செய்தி அளிக்கும் செய்தி. இது நற்செய்தி முழுவதிலும் எதிரொலிக்கிறது. அவரில் விசுவாசம் கொள்வதால் எவனும் நித்திய வாழ்வை அடைய முடியும். திருச்சபை இயேசுவுக்குப் பதிலாக இருக்கவில்லை. அவரில் கொண்ட விசுவாசத்தில் வேரூன்றிய சமூகமாகத் திகழ்கிறது. அவர் திராட்சை, திருச்சபை அதன் கொடிகள். கொடிகள் திராட்சையிலிருந்து பிரிந்து வாழமுடியாது. திருச்சபை ஓர் அருட்கருவி நிறுவனமாகும். அருட்கருவி

கள் இயேசு உயிர் அளிக்கும் வாய்க்கால்களாகும். அவர் உலகில் வாழ்ந்த காலத்தில் அவரது உயிர் அளிக்கும் செயல்களுக்கு அடையாளங்களாகத் திகழ்ந்தன. நற்செய்தியில் அருங்குறிகளுக்கு இரண்டாம் பட்சமாக (secondary meaning) அருட்கருவிப் பொருள் கொடுக்கப்படுகிறது. இதன் நோக்கம் உயிர் அளிக்கும் செயலாக அருங்குறிகளின் இடத்தை அருட்கருவிகள் எடுத்துள்ளன என்று காட்டுதலாகும். ஆறாம் அதிகாரத்தில் அப்பம் பலுகுதல் நற்கருணையை அடையாளமாகக் குறிக்கிறது. ஒன்பதாம் அதிகாரத்தில் சிலோவில் பிறவிக் குருடனைக் குணப்படுத்துதல் திருமுழுக்குப் பொருளுடையது.

இயேசு திருச்சபையுடன் எவ்விதம் தொடர்பு கொண்டுள்ளார்? அப்போஸ்தலத் தலைமுறை மறைந்து கொண்டு வந்தது. இயேசுவைப் போதிக்க அதிகாரம் பெற்ற நேரடிச் சாட்சிகளின்றி, இயேசுவின் பிரசன்னத்தைத் திருச்சபையில் உயிருள்ள விதத்தில் எப்படிக் காப்பாற்றுவது? இஃது ஒரு நெருக்கடி நிலையைத் திருச்சபையில் ஏற்படுத்தியது (2 பேதுரு 3:4). பிற புதிய ஏற்பாட்டு நூல்கள் பரிசுத்த ஆவியை ஒரு கொடை அளிக்கும் ஆற்றலாகவும் திருமுழுக்கில் உயிர் அளிக்கும் சக்தியாகவும் அறிந்திருந்தன. ஆனால், இந்நற்செய்திதான் திருச்சபையில் இயேசுவின் செயலை ஆவி தொடர்ந்து நடத்துகிறார் என்று காட்டுகிறது. முன்பு இயேசுவைப் பற்றிச் சொல்லப்பட்டவையெல்லாம் இப்போது ஆவியைப் பற்றிச் சொல்லப்படுகின்றன. திருச்சபையை இயேசுவோடு இணைத்த நேரடிச் சாட்சிகள் மறைந்தபின்னும் இயேசு திருச்சபையில் பிரசன்னமாய் இருக்கிறார். எவ்வாறு? பரிசுத்த ஆவியே இயேசுவின் பிரசன்னம். திருச்சபை போதிக்கவும், அதற்கு வழிகாட்டவும், அதனோடு என்றும் இருக்கவும், தமது ஆவியை இயேசு திருச்சபைக்குக் கொடுத்திருக்கிறார் (யோவா 14-16).

திருச்சபையின் இந்தப் பின்னணியில், ஏற்கெனவே நிகழ்ந்துவரும் முடிவுகாலம் பற்றிய யோவானது போதனையை அறியலாம். அப்போஸ்தலிக்கத் தலைமுறை மறைந்த பின்னும் இயேசு மீண்டும் வராதது ஒரு பிரச்சனையை ஏற்படுத்தியது. இந்தத் தலைமுறை இறந்து போகுமுன் இயேசு மீண்டும் வருவார் என கிறிஸ்தவர்கள் எண்ணியதாகத் தெரிகிறது (யோவா 21:22-33). இயேசு இன்னும் வரவில்லையே! அந்நம்பிக்கை வீண்தானா? இயேசு மீண்டும் வருவார் என்ற மூல நம்பிக்கையை இழக்காமல் மேற்கண்ட பிரச்சனைக்கு, யோவான் விடை காண்கிறார். நீதித் தீர்ப்படையவோ, நித்திய வாழ்வு பெறவோ (3:18-21; 5:24-25) மனிதர்கள் இயேசுவின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. அவர்கள் ஏற்கெனவே இறைமக்கள். ஏனெனில், திருமுழுக்கில் மனிதர்கள் ஆவியின் வழியாக ஏற்கெனவே மேலிருந்து பிறந்துள்ளனர் (3:5). இயேசுவின் பிரசன்னம் ஆவியின் வழியாக ஏற்கெனவே அவர்களிடையே இருக்கின்றது. உலக முடிவில் அவர்கள் எதிர்பார்த்த பல செயல்கள் ஏற்கெனவே அவர்களிடையே உள்ளன. அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதே. இவ்விளக்கத்தின் காரணமாகவும், பிற விளக்கங்களின் காரணமாகவும் இந்நற்செய்தி ஒரு பெரும் இறையியலாகும். இயேசுவின் வார்த்தை, செயல்கள் பற்றிய பாரம்பரியத்தை விரிவுபடுத்தி, கிறிஸ்தவர்களின் விசுவாச வாழ்வை ஆழ்ந்து வேரூன்றச் செய்து, அவர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதே இந்நூலின் நோக்கம். இதில் முற்கூறப்பட்ட தனிப்பட்ட குழுவினரின் தேவைகளும் இடம் பெறுகின்றன.

10. யோவானும், ஒத்தமை நற்செய்திகளும்: இவ்விரண்டையும் ஒப்பிடுங்கால், சில இரண்டிற்கும் பொதுவானவையாக இருக்கின்றன. அவை: இயேசுவின் திருமுழுக்கு (1:32-34), ஆலயத்தைத் தூய்மையாக்கல் (2:13-16), அப்பங்களைப் பெருக்குதல் (6:1-13), தண்ணீரில் நடத்தல் (6:16-21),

பெத்தானியாவில் தைலம் பூசுதல் *(12:1-8)*, எருசலேமிற்குள் வெற்றி நுழைவு *(12:12-19)*, காட்டிக் கொடுக்கப்படுவதை முன்னறிவித்தல் *(13:21-30)*, பாடுகள், உயிர்ப்பு என்பன ஆகும். இவை யோவானிலும், ஒத்தமை நற்செய்திகளிலும் பொதுவாகக் காணப்பட்டாலும், இவற்றை யோவான் தமக்கே உரிய விதத்தில் விவரிக்கின்றார்.

மேற்கூறிய பொதுப்பகுதிகளைவிட யோவானிலும், ஒத்தமை நற்செய்திகளிலும் காணப்படும் வேறுபாடுகளே அதிகம். யோவானில் காணப்படுபவைகளில் பெரும்பாலானவை அவருக்கே உரியன. யோவானுக்கும் ஒத்தமை நற்செய்திகளுக்குமிடையே உள்ள தொடர்பு யோவானது இலக்கிய அமைப்பைப் பற்றி ஒரு பிரச்சனையை எழுப்புகிறது. அவர் ஒத்தமை நற்செய்திகளைக் கருத்தில் வைத்தே, அல்லது சார்ந்தே எழுதினாரா? இந்நூல்களை அவர் அறிந்திருப்பாரா? அல்லது அவரது பாரம்பரியமும் மூலங்களும் தனிப்பட்டவையா?

யோவானும், ஒத்தமை நற்செய்திகளும் வெவ்வேறு தளத்தில் உலாவுவதாகத் தெரிகிறது. ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவின் அருங்குறிகளையும், மனத்தைக் கவரும் உயிர்ச்சித்திரம் போன்ற விவரிப்புகளையும், இயேசுவின் வாக்குகளையும், உவமைகளையும் எடுத்துக் கூறுகின்றனர். அத்துடன் மனநிறைவடைந்து விடுவதாகத் தெரிகிறது. இவற்றில் பல புதுமைகள் உண்டு. யோவானில் ஏழே புதுமைகள் உள. அவற்றில் ஐந்து அவருக்கே உரியன. காலவரையிலும் ஒத்தமை நற்செய்திகளும், யோவானும் வேறுபடுகின்றன. ஒத்தமை நற்செய்திகளில் இயேசுவின் பொதுப்பணி ஓர் ஆண்டுக்கு மேற்பட்டது அன்று என்று தோன்றுகிறது. யோவானில் அப்பணி குறைந்தது இரண்டு வருடங்களுக்கு மேம்பட்டதாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஒத்தமை நற்செய்திகளில் ஓர் எருசலேம் பயணமும், ஒரு பாஸ்கு விழாவும் குறிக்கப்படுகின்றன. யோவானிலோ நான்கு எருசலேம் பயணங்களும், மூன்று பாஸ்கு விழாக்களும் குறிக்கப்படுகின்றன. பணிசெய்த இடங்களைப் பற்றியும் வேறுபாடு உண்டு. இயேசு தமது பணியை முழுவதும் கலிலேயாவில் செய்ததாகவும், இறுதியாக ஒரே முறை எருசலேமுக்குச் சென்றதாகவும் தோன்றும்படி ஒத்தமை நற்செய்திகளின் விவரிப்பு அமைகிறது. ஆனால், யோவானில் இயேசு தமது பணியின் சிறுபகுதியைக் கலிலேயாவிலும், பெரும் பகுதியை எருசலேமிலும் செய்கிறார்.

இயேசுவின் வாக்குகளைப் பொருத்தமட்டும் இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடு தெளிவாகவுளது. ஒத்தமை நற்செய்திகளில் இயேசு பரிசேயர், சதுசேயர், இறைநூல் அறிஞர், தமது சீடர்கள், பொதுமக்கள் ஆகிய பலதரப்பட்ட மக்களுக்குப் போதகம் அளிக்கிறார்; இறையரசைப் பற்றியும், மனிதன் அதை ஏற்க அவனிடம் இருக்க வேண்டிய மனநிலையைப் பற்றியும் பேசுகிறார். யோவானில், இயேசு பொதுத்தன்மையுள்ள யூத மக்களிடம் பேசுகிறார்; சில சமயங்களில் அவரை விசுவசியாத யூதத் தலைவர்களிடம் பேசுகிறார்; அல்லது நிக்கோதேமு, சமாரியப்பெண் போன்ற தனியாட்களுடன் பேசுகிறார். இந்த உரையாடல்களிலும், மற்றவர்கள் சிறிது சிறிதாகக் காட்சியிலிருந்து மறைகின்றனர். இயேசு ஒருவரே பேசுகிறார்; தனியாட்களுக்காக அல்லர், ஒவ்வொரு மனிதனுக்காகவும் பேசுகிறார். இதில் இயேசுவின் வார்த்தைகள் எங்கு முடிகின்றன, நற்செய்தியாளரின் வார்த்தைகள் எங்குத் தொடங்குகின்றன என்று கூறுவது கடினம். இயேசு மெசியாவுக்குரிய தமது அலுவலை வெளிப்படுத்துகிறார். அதேபோழ்து, அவரது தெய்வீகமும், அதற்கு மனிதர் அளிக்க வேண்டிய விசுவாசமும் அழுத்திக் கூறப்படுகின்றன. இங்குத் தர்க்கங்களுக்கோ, நல்லொழுக்கப் பிரச்சனைகளுக்கோ இடமில்லை. பிறர் அன்பு அழுத்திக் கூறப்படுகிறது. போதிக்கும் முறையும் வேறுபடுகிறது. ஒத்தமை நற்செய்திகளில் வரும்

உவமைகளும், போதகங்களும், யோவானின் உரையாடல்களுக்கும், அறவுரைகளுக்கும் இடம் அளிக்கின்றன. அறவுரைகள் மிக நீண்டிருக்கின்றன. சாதாரண மக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் முறையில் இல்லை. வேண்டுமென்றே கூறப்படும் இருபொருள் மயக்கமும், சுட்டிக்காட்டும் விதமும், இந்த அறவுரைகளைப் புரிந்து கொள்வதை இன்னும் கடினமாக்குகின்றன. சோதனை, பன்னிருவரைத் தேர்ந்தெடுத்தல், ஒழுக்கப் போதனைகள், ஒளி உருவானது, முடிவு காலம் பற்றிய அறவுரைகள், நற்கருணை நிறுவனம் ஆகிய நிகழ்ச்சிகள் யோவானில் காணப்படவில்லை. ஆகையால், ஒத்தமை நற்செய்திகளை யோவான் அறிந்திருந்தாரா என்ற கேள்வி எழுகிறது. அறிந்திருந்தால் இவ்வளவு வேறுபட்ட நற்செய்தியை எழுதியதன் நோக்கம் யாது?

யோவான், மாற்கை உறுதியாக அறிந்திருக்க வேண்டும்; லூக்காவை ஒருவேளை அறிந்திருக்கலாம்; மத்தேயுவை அவருக்குத் தெரிந்திருக்காது என்பர் தற்கால அறிஞர் பலர். யோவான் மாற்கோடு கொண்டுளதை விட, லூக்காவோடு அதிக இலக்கியத் தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிகிறது. யோவானுக்குரிய தனிப்பண்புகள் லூக்காவில் காணப்படுகின்றன. நான்கு நற்செய்திகளில் யோவான் இறுதியானது என்றால், ஒத்தமை நற்செய்திகளை யோவான் அறிந்திருக்க வேண்டும். இறுதியானது இல்லையென்றால் சில நற்செய்திகளைக்கூட அவர் அறிந்திருப்பது அரிது. பிற செய்திகளை அவர் அறிந்திருந்தாரோ, இல்லையோ, ஒத்தமை நற்செய்திகளுக்கு அடிப்படையான பாரம்பரியத்தை நன்கு அறிந்திருந்தார் எனலாம்.

ஆனால், அவற்றைப்போல் எழுதவில்லை. இலக்கிய அமைப்பு வேறுபடுகிறது. அவற்றைப்போல், இயேசுவின் வாழ்க்கை வரலாற்றைத் தரவில்லை. அவற்றிலிருந்து வேறுபட்டு, சில நிகழ்ச்சிகளையும், தமது சொந்த மொழியில் அமைத்த பல அறவுரைகளையும் தருகிறார் ஆசிரியர். இதற்குக் காரணம் முன்பு சொன்னதுபோல் விசுவாசமற்ற யூதர்களுக்கு எதிராகவும், திருமுழுக்கு யோவானைப் பின்பற்றியோருக்கு எதிராகவும் ''தோசேத்தியம், ஞானவாதம்'' ஆகிய பிரிவினைக்காரர்களுக்கு எதிராகவும் எழுதப்பட்ட தர்க்க வாத முடைய காப்புரையாகும் இந்நூல் என்பர். இவை சரியான காரணமாயிருக்க முடியாது என்று காட்டினோம். மேலும், இந்நூல் மற்ற நற்செய்திகளுக்குப் போட்டியாகவும், அவற்றை அகற்றவும் எழுதப்பட்டது என்பர். இதற்கு ஓர் ஆதாரமும் இல்லை. இதை அறிஞர் இன்று ஏற்கார். மேலும், இந்நூல் மற்ற நற்செய்திகளை நிறைவுபடுத்தும் பொருட்டு, முழுமைப்படுத்தும் பொருட்டு எழுதப்பட்டது என்பர். இவ்விதம் உண்மையில் நிறைவு செய்கிறதா என்பது தெரியவில்லை. ஆய்வாளர்கள் சிலர் இக்கூற்றுக்கு மாற்றுரைப்பர். இரு பாரம்பரியங்களுக்கும் பொதுவான நிகழ்ச்சிகளாகிய தூதுவனின் மகனைக் குணப்படுத்துதல் *(4:46-54)*, அப்பங்களைப் பெருக்குதல் ஆகியவற்றை ஆராயுங்கால், அவற்றிடையே காணப்படும் வேறுபாடுகள், யோவான், ஒத்தமை நற்செய்திப் பாரம்பரியத்தைச் சாராது, தமக்கே உரிய மூலத்தைச் சார்ந்து எழுதுவதாகத் தெரிகிறது. ஆகவே யோவான், ஒத்தமை நற்செய்திப் பாரம்பரியத்தை நிறைவுபடுத்தும் விதத்தில் எழுதினார் என்று கூறுவது சரியன்று.

யோவான் நற்செய்தி ஒரு தனிப்பட்ட பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது; அஃது எழுதப்பட்ட காலத்திற்கேற்ப இயேசுவின் நற்செய்தியை மாற்றியமைத்துத் தருகிறது. முன்பு கூறியதைப் போல், பல இன்னல்களுக்கிடையில் அவதியுற்ற கிறிஸ்தவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு எழுதப்பட்டது. அதற்கேற்ப மாறிய இலக்கிய அமைப்பைக் கொண்டது. இயேசுவைப் பற்றிய பல சொந்த சிந்தனைகளைக் கொண்ட சுருக்கவுரைகளையும், கட்டுரைத் தொகுப்புகளையும் கொண்ட நூல். அன்றும், இன்றும், என்றும் மனிதனான இயேசு உண்மையான மெசியா, இறைமகன் என்று பறைசாற்றுகிறது.

11. இந்நூலைப் பாதித்தவை: இந்நற்செய்தி, ஒத்தமை நற்செய்திப் பாரம்பரியத்தைச் சார்ந்து எழுதப்பட்டதன்று. இஃது ஒரு தனிப்பட்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது. இதைத் தவிர வேறு பிற சூழ்நிலைகள் இந்நூலைப் பாதித்தனவா என்ற கேள்வி எழுகின்றது. இந்நூல் ஞானவாதம், மந்தேயவாதம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது என்பர். இவ்வாறு முதலில் கூறப்பட்ட காலத்தில், மேற்கூறிய வற்றைப் பற்றிய நூல்கள் அதிகமில்லை. இப்போது இவைகளைப் பற்றிய பல நூல்களைக் கொண்டுள்ளோம். இவற்றோடு நான்காம் நற்செய்தியை ஒப்பிடும்போது சில இடங்களில் நடை ஒத்துள்ளது, சில இடங்களில் கருத்துகள் ஒத்திருப்பதுபோல் தோன்றுகின்றன. கருத்தளவில் இவை, நற்செய்தியைப் பாதித்திருப்பதற்குப் பதிலாக, நற்செய்தி இவற்றைப் பாதித்திருப்பதாகத் தெரிகிறது. எழுதப்பட்ட காலத்தை ஆராயுங்கால் இவை நற்செய்தியைவிடப் பிந்தியதாக உள்ளன.

அடுத்து, கிரேக்கம் எவ்வளவு தூரம் இந்நற்செய்தியைப் பாதித்தது? கிரேக்கம் என்று குறிப்பிடும்போது கிரேக்கக் கலாச் சாரத்தையும், இலக்கியத்தையும் சிறப்பாகக் குறிப்பிடுகிறோம். கிறிஸ்துவுக்கு முந்திய காலத்திலேயே கிரேக்கம் யூதத்தைப் பாதிக்க ஆரம்பித்தது எனலாம். இதை ஞானாகமங்களிலும், கும்ரான் ஏடுகளிலும் பார்க்கலாம். இவற்றின் வழியாகவும், இந்த அளவிலும் கிரேக்கம் யோவானைப் பாதித்தது எனலாம். ஆனால், நேரடியாகப் பாதித்ததா? நற்செய்திகள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதால், நற்செய்தியாளர் அம்மொழியின் மரபுக்கேற்ப கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துக்கூறுவது அவசியமாயிற்று. இஃது எல்லா நற்செய்தியாளர்களுக்கும் பொதுவானது; யோவானுக்கு மட்டும் சிறப்பானது அன்று. ஆனால், யோவான் கிரேக்க அமைப்புகளையும், சொல்லமைப்புகளையும், கருத்துகளையும் பிற நற்செய்தியாளர்களைவிட பெருமளவில் பயன்படுத்துகிறார் என்பர் சிலர். ஒரு சில சான்றுகள் இங்குத் தருகிறோம்: ''மேலிருந்து வருபவர்'', ''மண்ணுலகைச் சார்ந்தவை'' என்றும் (யோவா 3:31), ''விண்ணகத்திலிருந்து வந்த உணவு'' (6:41), ''சாதாரண அப்பம்'' என்றும் பிரித்துக் கூறுவதில் சாதாரண மக்கள் கருதிய பிளேட்டோவின் தத்துவம் பிரதிபலிக்கின்றது என்பர். முன்னுரையில் வரும் ''வாக்கு'' பற்றிய போதகம், ''ஸ்தோயிக்கு'' தத்துவத்தைச் சார்ந்த ''வாக்கி''ன் மாற்றம் என்பர். இவை போன்ற சான்றுகள் தர்க்கத்திற்குரியனவாகும். ஆனால், இவற்றை ஆழ்ந்து, உண்மை நோக்குடன் ஆராயும் அறிஞர்கள், இக்கருத்துகளின் அடிப்படை பாலஸ்தீன யூத இலக்கியத்திலேயே காணப்படுகிறது என்று ஏற்றுக்கொள்வர். ''வாக்கு'' பற்றிய யோவானது போதகம் ''ஸ்தோயிக்கு'' வாக்கோடு கொண்டிருக்கும் தொடர்பைவிட, ஞானாகமங்களில் வரும் ஆட்தன்மைப்படுத்தப்பட்ட ஞானத்தோடும், கடவுளது ஆற்றல் மிக்க வாக்கு பற்றிய யூதர்களின் போதகத்தோடும் அதிகத் தொடர்புடையது எனத்தெரிகிறது. பீலோவின் நூல்களுக்கும், யோவானுக்கும் இணைவுத்தன்மையிருப்பதாகத் தெரிகிறது. இதைப் புற ஆதாரங்களின்றிப் பழைய ஏற்பாட்டுப் பின்னணியைக் கொண்டே விளக்கலாம். இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம். சுருங்கக் கூறின் ஆய்வாளர் கருத்துப்படி, கிரேக்கமோ, ஞானவாதமோ இந்நற்செய்தியைப் பாதிக்கவில்லை எனலாம்.

ஆனால், பாலஸ்தீன, யூதப் பண்பாடு இந்நற்செய்தியைப் பாதித்துள்ளது; அதன் கருத்தையும், நடையையும் பாதித்துள்ளது. அக்காலத்திய பழைய ஏற்பாட்டுக் கருத்துப் போக்கு யோவானில் காணப்படுகின்றது. இயேசு மெசியாவாகவும், யாவேயின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியனாகவும், இஸ்ராயேலின் அரசராகவும், இறைவாக்கினராகவும் காட்டப்படுகிறார். பழைய ஏற்பாட்டிலிருந்து கொடுக்கப்படும் தெளிவான நேரடி எடுத்துக்காட்டுகள் சிலவேயானாலும், பழைய ஏற்பாட்டு ஆட்களையும்,

காட்சிகளையும் கட்டிக்காட்டும் மறைமுகமான எடுத்துக்காட்டுகள் பல உள. 1:2-10 என்ற பகுதி ஆதியாகம முதல் அதிகாரத்தையும், 8:31-58 ஆபிரகாமையும், 3:16 ஈசாக்கையும், 4:5-10 யாக்கோபையும், 1:17; 5:46 மோசேயையும், 6:31-59 மன்னாவையும், 7:38 பாறையிலிருந்து தண்ணீர் வந்ததையும், 3:14 பித்தளைப் பாம்பையும், 1:14 சந்திப்பின் கூடாரத்தையும், 10:35 நீதிபதிகளையும், 10-ஆம் அதிகாரம் அரச ஆயனையும் கட்டுகின்றன. அதிகாரங்கள் 2-4 யூத நிறுவனங்களையும், அதிகாரங்கள் 5-10 யூதப் பெரும் விழாக்களையும் சுட்டுகின்றன. அரமேயிக்குப் பின்னணியை மிகுதியாகக் கொண்டுள்ளது இந்நற்செய்தி.

ஒத்தமை நற்செய்திகள் சிறப்பித்துக் கூறாதவற்றை யோவான் சிறப்பித்துக் கூறுகிறார். எழுபது நூலில், எசா 43:10-11. 25-இலும் ஞானாகம இலக்கியங்களிலும் வரும் ''....நானே'' அல்லது ''நானே....'' என்ற சொல்வழக்கை யோவான் சிறப்பித்துக் கூறுகிறார் (6:35; 10:7. 11;15:1). இச்சொல் வழக்கு மாற்கில் ஒரு முறை மட்டும் காணக்கிடக்கிறது (மாற் 6:50). இயேசு மரித்துத் ஒம் தந்தையிடம் திரும்பிச் செல்லும் ''நேரம்'' உயிர்ப்பு, விண்ணேற்பு ஆகியவை (2:4; 7:30;12:23; 17:1) யோவானில் முக்கியமானவை. அவை சிறப்பித்துக் கூறப்படுகின்றன. ஆனால், அவை ஒத்தமை நற்செய்திகளில் தற்செயலாகக் கூறப்படுகின்றன (மாற் 14:35.41). தாமே இறைஞானம் என்ற முறையில் இயேசு பேசுவது ஒத்தமை நற்செய்திகளில் சில இடங்களில் தான் காணப்படும் (மத் 11:9; லூக் 11:49). ஆனால், இவ்வகைக் கூற்றை யோவான் முழுவதிலும் காணலாம். தம்மையும் தமது வெளிப்பாட்டையும் விவரிக்க இயேசு பயன்படுத்தும் அப்பம், நீர் போன்ற உவமானங்கள் (6; 7:37-39) பழைய ஏற்பாட்டில் ஞானாகம நூல்களில் காணப்படுகின்றன (பழ 9:5; உப 8:3; எசா 55:1-3; சீரா 24:18-20): அவர் எடுத்தாளும் சொற்களும் கருத்துக்களும் பழைய ஏற்பாட்டின் வழக்கிலிருந்து எடுக்கப்பட்டவைகளாக இருக்கின்றன.

மேற்கூறியவற்றிலிருந்து பாலஸ்தீன, யூதப்பண்பாடு எவ்வளவு தூரம் யோவான் நற்செய்தியைப் பாதித்துள்ளது என்பதைச் சிறிது உணரலாம். இஃது, யோவான் தனிப்பாரம்பரியத்தைக் கொண்டது என்ற கொள்கைக்கும் ஏற்றதாகும். யோவான் சாக்கடல் சுருள் ஏடுகளோடு நெருங்கிய இணைவுத்தன்மை கொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

12. **நற்செய்தியில் ஒற்றுமை:** நாம் கொண்டிருக்கும் யோவான் நற்செய்தியின் நடை கரடுமுரடானது, திட்ட அமைப்பில் பல சிக்கல்களைக் கொண்டது. ஆகவே இஃது ஓர் ஆசிரியரின் வேலைப்பாடா, பலரது வேலைப்பாடா என்ற பிரச்சனை எழுகிறது. திறனாய்வு வருகைவரை, இந்நூலைச் செபதேயுவின் மகனும் அப்போஸ்தலருமான யோவான் எழுதினார் என்று ஏற்றுக் கொண்டனர். இப்போது இஃது அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இந்நூல் இவ்வுருவம் எடுக்கப் பலர் உழைத்திருப்பதாகத் தெரிகிறது. நூலில் ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. நிகழ்ச்சியுரைப் பகுதிகள் ஒரே சீராகச் செல்வதில்லை. சில பகுதிகள் அவற்றின் இயல்பான சூழ்நிலைக்குப் புறம்பாகத் தரப்படுவதாகத் தெரிகிறது. முன்னுரையில், நற்செய்தியில் வேறெங்கும் காணப்படாத கவிதைப் பண்பும், வார்த்தையானவர் ஆள்மயமாக்கப்படும் இறையியல் அழுத்தமும் காணப்படுகின்றன. யோவா 5:3-4 பல கையேடுகளில காணப்படவில்லை. இப்பகுதி 5:7-இல் வரும் ''தண்ணீர் கலங்கும்போது'' என்பதை விளக்க பிற்காலத்தில் புகுத்தப்பட்ட குறிப்பாகும். விபசாரப் பெண்ணைப் பற்றிய நிகழ்ச்சி (7:53-8:11), நடையில் யோவானுடையதன்று; சூழ்நிலையோடு பொருந்தவில்லை. பல மூலக்கையேடுகளில் இப்பகுதி காணப்படவில்லை. இந்நிகழ்ச்சியின் நடை லூக்காவின் நடையை ஒத்திருக்கிறது (இது நற்செய்திப் பாரம்பரியத்தின் தனிப்பட்ட பகுதியாகும். பிற்காலத்தில் யோவானிலும் லூக்காவிலும் புகுத்தப்பட்டது. இப்பகுதி யோவானைச்

சார்ந்ததன்று என்றாலும், திரிதெந்தின் படிப் பினைப்படி இப்பகுதியும் இறையூக்கம் பெற்றது). முறைவைப்பு முறையில் பல முறிவுகளைக் கொண்டுள்ளது. சான்றாக, பொதுப்பணிக்கு இரு முடிவுகள் உள: *10:40-42;12:37-43.* இறுதிப் பிரியாவிடை உரையில் இரு முடிவுகள்: *14:31; 18:1.* சூழ்நிலைக்குப் பொருந்த இணைக்கப் பெறாத உரைகள்: *3:31-36; 12:44-50.* நற்செய் தியை வாசிப்போருக்கு நற்செய்தி *20:31*-ஆம் வசனத்தோடு முடிவுபெறுவது நன்கு தெரிகிறது. ஆயினும், 21-ஆம் அதிகாரம் பிற் சேர்க்கையாகச் சேர்க்கப்பட் டுள்ளது. இது, 20-ஆம் அதிகாரத்தில் காணப்படும் உயிர்ப்புக் காட்சிகளிலிருந்து முற்றிலும் தனிப்பட்ட காட்சிகளைத் தரு கிறது. இவ்வதிகாரத்தின் கிரேக்க நடை, நற்செய்தியின் மற்றப் பகுதிகளிலிருந்து வேறுபடுகிறது. இவ்வதிகாரத்தை அப் போஸ்தலரான யோவான் எழுதினாரா? இல்லையென்பர் அறிஞரில் பெரும்பா லோர். யோவான் இறந்தபின் அவரது சீடர்களில் ஒருவர் அல்லது பதிப்பாசிரியர் களில் ஒருவர் இப்பகுதியைச் சேர்த்திருக்க வேண்டும். திருச்சபையில் பேதுரு, ''இயேசுவின் அன்புச்சீடர்'' ஆகியோரின் நிலையைக் கூறவும், ''இயேசுவின் அன்புச் சீடர்'' இறந்ததைக் கூறவும் இப்பகுதி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இந் நூலின் கடைசி வசனங்கள் *(21:24-25)* யோவானால் எழுதப்பட்டவையல்ல என்று உறுதியாகக் கூறலாம். ''இவரது சான்று உண்மையானது என நமக்குத் தெரியும்'' என்று கூறுவது அவரது சீடர்களின் படைப் பாகும். ஆயினும் இப்பகுதி, இந்நூல் பல இடங்களுக்குப் பரவுமுன்னே சேர்க்கப்பட் டிருக்க வேண்டும். ஏனெனில், எல்லாக் கையேடுகளிலும் காணப்படுகின்றது. இவை யாவும் யோவானது நற்செய்திக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவர் அல்லர்; நற்செய்தியாளரைத் தவிர ஒரு பதிப்பாசி ரியரோ, பலரோ இருந்திருக்க வேண்டும் என்று காட்டுகின்றன. ஒருவேளை இப் பதிப்பாசிரியர்கள் நற்செய்தியாளருடைய சீடர்களாக இருந்திருக்கலாம். இவர்கள் நற்செய்தியாளரிடமிருந்து ஏதாவது ஒரு விதத்தில் தோன்றிய உரைகளையும், நிகழ்ச் சிகளையும் நற்செய்தியில் புகுத்தியிருக்கக் கூடும். இவ்வாறு விவிலிய அறிஞர் பலர் கருதுகின்றனர்.

ஆகையால், இந்நூலின் ஒற்றுமையின் மைத் தோற்றத்தை விளக்கப் பல உத்தேசக் கொள்கைகள் தோன்றியுள்ளன. இந்நூல் சிறிது சிறிதாக எழுதப்பட்ட பகுதிகளின் தொகுப்பு; ஆகவே, இதில் ஒற்றுமையு மில்லை, ஒரு திட்டமும் இல்லை என்பர் சிலர். இந்நூலைப் பதிப்பித்தவர் தமது சொந்தக் கருத்துகளைப் புகுத்தி இந்நூலின் மூலத் திட்டத்தைத் திரித்து விட்டார் என்பர் வேறு சிலர். புல்ட்மன் போன்றவர்களின் கருத்துப்படி இந்நூல் மூன்று மூல நூல் களின் தொகுப்பாகும். வெளிப்பாட்டு உரைகளைக் கொண்டது முதல் மூலம். இதில் கவித்தன்மையுடைய உரைகள், ''....நானே'' என்ற பகுதிகள் அடங்கியிருக் கலாம். இரண்டாவது மூலம் இயேசுவின் அரும் அடையாளச் செயல்களைக் கொண்ட நூலாகும். இது கிரேக்க மொழி யில் எழுதப்பட்டிருக்கலாம். ஆயினும், செமித்திக்குத் தன்மை மலிந்ததாக இருந் திருக்க வேண்டும். மூன்றாவது மூலம் பாடுகளையும், உயிர்ப்பையும் கொண்ட நூலாம். புல்ட்மனின் கருத்துப்படி, முதல் இரண்டு மூல நூல்களும் வரலாற்று அடிப் படை கொண்டவை அல்ல. நற்செய்தி யாளர் தம் விருப்பம்போல் இவற்றைத் தொகுத்துத் தமது சொந்த இறையியல் சிந்தனைகளை வெளியிடுவதற்கு ஏதுவாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். பிற்காலப் பதிப்பாசிரியர், இவற்றை மாற்றியமைத்துத் திருச்சபை அதிகாரிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நூலாகப் பதிப்பித்தனர். இவ் வுத்தேசக் கொள்கைகள் எல்லாம், இந்நற் செய்தி வரலாற்று அடிப்படை கொண்டது அன்று என்ற முன் தீர்மானத்தின் விளைவு கள். இவை சிறிது காலத்திற்கு ஆய்வாளர் களின் கவனத்தைக் கவர்ந்தன. இப்போது இவை முக்கியம் வாய்ந்தவையாகக் கருதப் பெறுவதில்லை.

13. பல பதிப்புக் கொள்கை: இது சிறிது நம்பத்தகுந்ததாகும். நாம் கொண்டிருக்கும் வடிவில் யோவானுக்கு அடிப்படையாக, வாய்ப்பாரம்பரியமும், எழுத்துப் பாரம்பரியமும், பல பதிப்புகளும் இருந்திருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் மூல காரணமானவர் ஒரு நற்செய்தியாளர். இவரே இந்நூலுக்கு எழுத்து வடிவம் கொடுத்திருக்கலாம். இப்பாரம்பரியம் மீண்டும் மீண்டும் போதிக்கப்பட்டதால், சில மாறுபட்ட எழுத்து வடிவங்களும் எடுத்திருக்கலாம். அதையெல்லாம் சேர்த்து, பிற்காலப் பதிப்பாசிரியர் ஒரே நூலாக வெளியிட்டிருக்கலாம். நாம் கொண்டிருக்கும் யோவான் நற்செய்தியாளரிடமிருந்து நேரடியாக வந்த நூல் அன்று. பிற்காலப் பதிப்பாசிரியரது வேலைப்பாடாகும். இவர் இந்நூலுக்கு முழுமை அளித்திருக்க வேண்டும். இக்கொள்கைப்படி, இந்நற்செய்தியில் ஒற்றுமையும் திட்டமும் இருப்பதாகக் கொள்ளலாம். இக்கொள்கை, நற்செய்தியில் காணப்படும் உட்சான்றுகளுக்கும் பாரம்பரியப் புறச்சான்றுகளுக்கும் ஏற்றதாகவுளது. ஏனெனில், மூராத்தோரியம் போன்ற ஆதிகாலச் சான்றுகள், இந்நூலை எழுத நற்செய்தியாளரோடு பலர் தொடர்பு கொண்டிருந்தனர் என்று கருத இடந்தருகின்றன.

சிலர் இந்நற்செய்தியைத் திருத்தி அமைக்க முயன்றுள்ளனர். இதன்படி,

(1) யோவா *3:21*-ஐ அடுத்து *3:31-36* வரவேண்டும். அப்போது உரை தொடர்ந்து செல்லும். *3:22-30* என்ற பகுதியை *2:12* என்ற பகுதிக்கும், *2:13* என்ற பகுதிக்கும் இடையில் வைக்க வேண்டும். அப்போது இயேசுவின் பயணம் தொடர்புடையதாக இருக்கும். *2:1-12*-இல் இயேசு கலிலேயாவிலும், *3:22-30*-இல் யூதேயாவிலும், *2:13*-இல் எருசலேமிலும் காணப்படுவார் என்பர்.

(2) 6-ஆம் அதிகாரம் 4-ஆவது அதிகாரத்தின் பின் இடம் பெற வேண்டும். நாம் கொண்டிருக்கும் வடிவில் இப்பகுதியில் இயேசுவின் பயணம் சீருடையதாக இல்லை. மேற்கூறிய திருத்தத்தை ஏற்றுக் கொண்டால், *4:54*-இல் இயேசு கலிலேயாவில் இருக்கிறார்; அங்கிருந்து ஏரியைக் கடந்து *(6:1)* எருசலேமுக்குச் செல்கிறார் *(5:1)*; பின் கலிலேயாவிற்குத் திரும்புகிறார் *(7:1)*.

(3) 7:25 என்ற வசனம், *7:14* என்ற வசனத்தையும், *7:5-24* என்ற பகுதி *5:47* என்ற வசனத்தையும் பின் தொடர வேண்டும். அப்போது இயல்பான தொடர்பு இருப்பதாகத் தோன்றும்.

(4) 10:19-29 முன்னதாகவும், *10:1-18* பின்னதாகவும் இருக்கும்படி மாற்ற வேண்டும்.

(5) 15-ஆம் *16*-ஆம் அதிகாரங்கள், பிரியாவிடை உரையின் முடிவாகிய *14:31*-க்கு முன் எப்படியாவது புகுத்தப்பட வேண்டும்.

(6) 12:36-ஐ அடுத்து, *12:44-50* வர வேண்டும்.

(7) 18:24-ஐ அடுத்து, *18:14-23* வர வேண்டும்.

இவ்வாறு பல திருத்தங்களைக் கூறுவர். ஆயினும் இவை ஒன்றிற்காவது, ஏடுகளிலோ, மற்றச் சான்றுகளிலோ அடிப்படையிருப்பதாகத் தெரியவில்லை.

இத்திருத்தங்கள் இயேசுவின் பயண வரலாற்றைச் சீர்திருத்தும் நோக்கோடு கூறப்படுகின்றன. ஆனால், நற்செய்தியாளர் பயணத்தை முக்கியமாகக் கருதியதாகத் தெரிகிறது. ஆகையால், நாம் கொண்டிருக்கும் வடிவிலேயே நூலை ஏற்று விளக்கம் கூறுவது சாலச்சிறந்ததாகும். அப்போது ஆசிரியரின் கருத்து நோக்கிலிருந்து சிறிதும் வழுவோம். இதுவேதான் தற்கால விளக்கவுரையாசிரியர்களின் போக்கும் ஆகும்.

14. இந்நூலின் திட்டம்: இந்நற்செய்தியில் ஓர் ஒற்றுமையிருக்கிறது, ஒரு திட்டம் இருக்கிறது என்று ஏற்று இந்நூலைநோக்குவது நன்று. ஆயினும் இத்திட்டத்தை வரையறை செய்தல் எளிதன்று. பலர் பலவிதமாக இந்நூலைப் பிரித்துத் திட்டம் செய்வர். அவற்றில் சிலவற்றை இங்குத் தருகிறோம். ''ஆல்லே'' என்பவர் இந்நற்

செய்தி ஐந்து பெரும் பிரிவுகளையும், உயிர்த்த இயேசுவைப் பற்றிய விவரிப்பையும் கொண்டுள்ளது என்பார். இவ்வைந்து பிரிவுகளும் வருமாறு: முதல் வெளிப்பாடு:1:19-4:42; கலிலேயப்பணி: 4:43-7:9; இயேசுவின் ஆள்தன்மையும், அவரது தூதுரையும் 7:10-11:57; ''புனித வார நிகழ்ச்சிகள்'' 12:1-17:26; பாடுகள்: 18:1-19:42. மோலட் என்பார் இந்நற்செய்தி முன்னுரைக்குப்பின், யூத வழிபாட்டு விழாக்களை ஒட்டி ஒன்பது பிரிவாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகக் கூறுவார். அவை: மெசியாவின் முதல் வாரம்: 1:19-2:11; முதல் பாஸ்கு : 2:12-4:54; ஓய்வு நாள்: 5:2-37; இரண்டாவது பாஸ்கு : 6:1-71; கூடாரங்களின் விழா : 7:1-10:21; அபிடேக விழா : 10:22 - 11:54; மூன்றாவது பாஸ்கு: 11:55-19:42; உயிர்ப்பும் காட்சிகளின் வாரமும் : 20:1-20; பிற்சேர்க்கை: 21:1-25.

புயிலே, தோது, மெக்கன்சி ஆகியோர் இந்நற்செய்தியை இரு பெரும் நூலாகப் பிரிக்கின்றனர். 1-12 அதிகாரங்களை ''அடையாளங்களின் புத்தகம்'' என்றும், 13-20 (21) அதிகாரங்களைப் ''பாடுகளின் புத்தகம்'' என்றும் அழைக்கின்றனர். இவர்களைப் பின்பற்றி இந்நூலின் திட்டத்தைச் சிறிது நோக்குவோம்.

I. முன்னுரை (1:1-18).

II. அடையாளங்கள் மற்றும் செயல்களின் நூல் (1:19-12:50).

அ) 1:19-2:12 : பணியின் தொடக்கமும் சீடர்களை அழைத்தலும்.

ஆ) 2:13-4:54 : பழைய ஏற்பாட்டு நிறுவனங்கள் அகற்றப் படுதல்.

இ) 5:1-10:42 : யூத விழாக்கள் அகற்றப் படுதல்.

ஈ) 11:1-12:50 : இலாசரை உயிர்ப்பித்தலும் அதன் விளைவுகளும்.

III. மகிமையின் நூல் (13:1-20:31).

அ) 13:1-17:26: இறுதி இரவுணவும் அறவுரைகளும்.

ஆ) 18:1-19:42 : பாடுகளும் இறப்பும்.

இ) 20:1-31 : உயிர்ப்பும் காட்சிகளும்.

IV. முடிவுரை: பிற்சேர்க்கை (21:1-25).

புயிலேயின் கருத்துப்படி, இந்நற்செய்தி நாடகப் பாணியைக் கொண்டுள்ளது. அதிலே, இருவகை இயக்கம் காணப்படுகிறது: ஒன்று இயேசுவின் ஆள்தன்மை, தூது ஆகியவை பற்றிய வளர்ச்சியான வெளிப்பாடும், அவரது சீடர்களின் விசுவாச வளர்ச்சியும்; மற்றது, யூதர்களுடைய அவிசுவாசமும், அவர்கள் அவரை மரணத்திற்குத் தீர்வையிட்ட கொடூரச் செயலும். இவ்விரு இயக்க வளர்ச்சியிலே, இயேசு, தாம் ஒரு புதிய மீட்புத் திட்டத்தை நிறுவுபவர் என்று வெளிப்படுத்துகிறார். புத்துயிர் அளிக்கும் திருமுழுக்கோடும் ஆவியின் வருகையோடும் (1:19-4:42) கூடிய புதிய உடன்படிக்கையை நிறுவுகிற மெசியாவாக தம்மை வெளிப்படுத்துகிறார். பின் இயேசு, பிதாவோடு வாழ்வின் ஊற்றாகவும் (4:43-5:47), வாழ்வின் உயிர் தரும் உணவாகவும் (6:1-71), உலகின் உயிராகவும், ஒளியாகவும் (அதி. 7-12) வெளிப்படுத்துகிறார். பின் அன்பு, ஆறுதல், ஒற்றுமை முதலிய கருத்துக்களை மையமாகக் கொண்டு தம்மையே தமது சீடர்களுக்கு மிக நெருங்கிய விதத்தில் வெளிப்படுத்துகிறார் (அதி. 13-17). இவ்வெளிப்பாடு, இயேசுவின் மீட்பளிக்கும் இறப்பிலே, அதாவது, அவரது ''நேரத்திலே'', உச்சநிலையடைகிறது (அதி. 18-19).

15. இலக்கியப்பண்பு: யோவான் பயன்படுத்தும் சொல் தொகுதி வரைக்குட்பட்டதாகும்; ஆனால், போதுமானதாகும். சொற்றொடர் இலக்கணம் சிறிது கடினமானது. நடை ஒரே தன்மையுடையதாயும், ஓரளவு சலிப்பைத் தரக்கூடியதாகவுமுள்ளது. ஆயினும், ஒரு தனிச்சிறப்புடையது. யோவானது திருமுகங்களைத் தவிர, இதனோடு ஒத்த நடையுள்ள நூல்கள் புதிய ஏற்பாட்டில் இல்லை. புதிய ஏற்பாட்டை நன்கறிந்தோர் இந்நடை யோவானுடையது என்று குறிப்பிடுதல் எளிது. அவரது நடை கிரேக்க

இலக்கியத் தன்மையைக் கொண்டதன்று; ஆனாலும், மக்களது கிரேக்க மொழியுமன்று. வேண்டுமென்றே திரும்பத்திரும்பக் கூறுவது ஓர் அளவு சலிப்பைத் தந்தாலும், அது பெருமிதமான உயர்நிலையை ஏற்படுத்துகிறது எனலாம். யோவானில் எல்லோராலும் போற்றப்படும் விழுப்பம் இருக்கிறது. இதனை அடைய ஆசிரியர், இலக்கிய நயத்தைப் பயன்படுத்தவில்லை. மாறாக, எளிமையாலும், ஆழமுடைமையாலும் இதனை அடைய விழைகிறார், அடைகிறார்.

ஆசிரியரது விவரிப்புகள் உயிர்ச்சித்திரம் போன்றவை. இதில் மாற்கு மட்டும்தான் யோவானை மிஞ்சியவர் எனலாம். நடை செமித்திக்குப் பண்பை அதிகமாய்க்கொண்டுள்ளது. அதிகமாக இணைவுத்தன்மையுண்டு. இலக்கணத் தொடர்பற்ற தனிப்பட்ட வாக்கியங்களைக் கொண்ட இலக்கிய அமைப்புகள் உண்டு. சிலவற்றை ''உட்பகுதியாக அமைக்கும்'' வழியையும் பயன்படுத்தியுள்ளார் ஆசிரியர். இவ்வழியாவது, ஒரு பகுதியைச் சிறப்பித்துக் காட்ட அப்பகுதியைத் தொடங்கிய சொற்றொடர்களாலேயே, அப்பகுதியை முடித்து, அஃது ஒரு தனிப்பகுதி என்று காட்டுதலாகும். இந்நூல், அரமேயிக்குத் தன்மையுடையது மொழிபெயர்ப்போடு கூடிய பல அரமேயிக்குச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன: *யோவா 1:38. 41. 42; 4:25; 9:7; 11:16; 19:13.17; 20:2.* ஒத்தமை நற்செய்திகளை ஒத்த பகுதிகளில், யோவான் பிற நற்செய்திகளில் இல்லாத அரமேயிக்குச் சொற்களைப் பயன்படுத்துவார். சான்றாக, பிறர் கிறிஸ்டோஸ், பெத்ரோஸ் என்ற சொற்களைப் பயன்படுத்தினால், யோவான், மெசியா, கேபா என்ற சொற்களைப் பயன்படுத்துவார். இவற்றை மனதில் கொண்டு பலர், நாம் கொண்டிருக்கும் நான்காம் நற்செய்தி அரமேயிக்கிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பர். ஆனால், அறிஞருள் பலர், இதனை ஏற்க மறுப்பர். ஏனெனில், இந்நூலின் கிரேக்க நடையையும், போக்கையும் நோக்குமிடத்து இஃது ஒரு மொழி பெயர்ப்பாகத் தெரியவில்லை. ஆயினும், இந்நூல் செமித்திக்குப் பின்னணியைக் கொண்டுளது என்பது உண்மை. இதனை மனத்தில் கொண்டால், இந்நூலை நன்கு புரிந்து கொள்ள முடியும். இந்நற்செய்தியின் சில பகுதிகள், முதலில் அரமேயிக்கில் எழுதப்பட்டிருக்கலாம்.

நமது சிந்தனைப்போக்கு எண்ணத் தொடர்புடையது. அதாவது, ஒன்றிலிருந்து ஒன்றைப் பகுத்தறிவு ஆராய்ச்சியுடன் முடிவு செய்வோம். யோவான் இம்முறையைக் கையாள்வதில்லை. எண்ணத் தொடர்புக்குப் பதிலாக உருவக முறையையும், கற்பனைச் சித்திர முறையையும் கையாள்வர். உதாரணமாக, நாம், கிறிஸ்துவே தேவ அருளின் ''ஊற்று'' என்று கூற விரும்புவதை யோவான், ''நான் திராட்சைக் கொடி; நீங்கள் அதன் கிளைகள்'' என்று இயேசு கூறுவதாகத் தருவார் *(15:5)*. இவ்வுருவக முறையை நன்குணர்ந்தால் யோவானது செய்தியையும் நன்கு அறிவோம்.

யோவான் பகுத்தறிவாராய்ச்சியுடன் எழுதவில்லை. அத்தகைய ஆராய்ச்சி செய்வது அவரது நோக்கமுமன்று. அவர், இயேசுவே மெசியா என்று சான்று கூறுகிறார்; அவர் மேல் மக்களுக்குள்ள விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறார்.

யோவான் தொடர்ச்சியான தர்க்கவாதத்தால் ஒரு கட்டுரை வரையவில்லை. மாறாக, கிறிஸ்து என்னும் மையத்தைச் சுற்றி அவரது சிந்தனைகள் சுழல்கின்றன. இத்தகைய உண்மையின் ஒவ்வொரு பகுதியையும் எடுத்து அறிய முயன்று, அதன் முழு உண்மையையும் மனித வார்த்தைகளால் விவரிக்க முயல்கிறார். அவரது சிந்தனை கிறிஸ்துவைப் பொது மையமாகக் கொண்ட வட்டங்களாக அமைகிறது. யோவான் கருத்துப்படி, கிறிஸ்து ஒளி, உயிர், உண்மை ஆவார். இந்த உருவகங்கள் கிறிஸ்துவில் தனித்தனியே காணப்படும் பண்புகள் மட்டும் அல்ல;

முழுக்கிறிஸ்துவையே குறிக்கின்றன; ஆகையால், ஒன்றுக்கொன்றாக மாற்றப் படக்கூடியன. கிறிஸ்துவே உயிர், கிறிஸ் துவே ஒளி, கிறிஸ்துவே உண்மை. கிறிஸ்து ஒவ்வொன்றின் நிறைவாயும், இவையெல் லாம் சேர்ந்த முழுமையாயும் விளங்கு கிறார்.

நற்செய்திகள் நான்கிலும், யோவானில் மட்டும்தான் ஆசிரியர், தமது சொந்தச் சிந்தனைகளைத் தருகிறார் (1:15-17; 3:16-21; 3:31-35; 12:37-43.44-50). சில சமயம், ஆசிரியரது சிந்தனைகளை இயேசுவின் வார்த்தைகளிலிருந்து பிரித்துக்காட்டுவது கடினம். இயேசுவின் வார்த்தைகள் எங்கு முடிகின்றன, ஆசிரியரது சிந்தனையும் விளக்கமும் எங்குத் தொடங்குகின்றன என்று சுட்டிக்காட்டுவது விளக்கவுரையா ளர் கடமை. ஏனெனில், ஒன்றிலிருந்து மற்றதற்கு அவ்வளவு எளிதாக ஆசிரியர் பாய்ந்து செல்வார். யோவானில் காணப் படும் இயேசுவின் வாத்தைகளின் நடையும் தொனியும், ஒத்தமை நற்செய்திகளில் காணப்படும் இயேசுவின் வார்த்தைகளின் நடை, தொனியிலிருந்து குறிப்பிடத்தக்க முறையில் வேறுபடுகின்றன. அறிஞருள் பலர், ஒத்தமை நற்செய்திகள் இயேசுவின் வார்த்தைகளை மூல வடிவில் கொண்டி ருக்க, யோவான் தமக்கே உரிய முறைப்படி இயேசுவின் வார்த்தைகளைத் தருகிறார் என்பர். இயேசுவின் வார்த்தைகள் அற வுரை வடிவில் யோவானில் தரப்படுகின் றன. இந்த அறவுரைகள் தனிப்பட்ட தலைப்புகளின் விவரிப்பாக அமைகின்றன. இந்த விவரிப்பு, கிரேக்கத் தர்க்கவாத முறையையோ, யூத ராபிகள் முறை யையோ சார்ந்ததன்று. ஒரு தனிப்பட்ட உள்ளுணர்வின் பயனால், இறையொன்றிப் பின் பயனால் மலர்ந்த மலராகும். தலைப்புச் சார்ந்த விவரிப்பானாலும், ஒரு பகுதியிலிருந்து மற்றப் பகுதிக்குச் செல் லும்போது அதில் வளர்ச்சியைக் காண்கி றோம். ஏதாவது ஒரு நிகழ்ச்சியிலிருந்து இவ்வறவுரைகள் எழுகின்றன. ஏதாவது ஒரு நிகழ்ச்சியை ஒட்டி கிறிஸ்து ஒரு மறை உண்மையைப் பறை சாற்றுவார். இப்பறை சாற்றலைக் கேட்போர் தவறாகப் புரிந்து கொள்வர். ஐயமும் கேள்வியும் எழும். இவற்றிற்கு விளக்கம் அளித்துப் பதில் கூறப்படும். இவ்விளக்கமும் பதிலுமே மற்றுமொரு மறை உண்மையைப் பறை சாற்றும். இவ்விதம் அறவுரை நீளும். இத்தன்மை ஒத்தமை நற்செய்திகளில் காணப்படுவதில்லை. மேலும், யோவா னில் செவி மடுப்போரின் மனப்போக்கும், பதிலும் எப்போதும் குறிக்கப்படும். இந் நூலை வாசித்துக் கொண்டு செல்லும் போது, விசுவாசமும், அவிசுவாசமும் வளர்ந்து உச்சநிலை அடைதலைப் படிப் படியாகக் காணலாம்.

16. யோவான் ஓர் இறையியல் வல்லுநர்; அவரது நற்செய்தி ஓர் இறையியல் நூல்:

(அ) ஒவ்வொரு நற்செய்தியாளரும் ஓர் இறையியல் வல்லுநர். இவ்விறையியல் நோக்கு அவர்களது கிறிஸ்துவின் வர லாற்று விவரிப்பைப் பாதித்துள்ளது; அதற்கு ஒரு திருப்பத்தைக் கொடுத்துள்ளது. அவர்கள் வெவ்வேறு விதத்தில் இறையி யல் நோக்குடையவர்கள். அதனைச் சிறப் பித்துக் கூற முயன்றுள்ளனர். அப்படியி ருக்க, இந்நூல் மற்ற நற்செய்திகளைவிட, சிறப்பான முறையில் இறையியல் தன்மை யுடையது என்று நெடுங்காலமாகக் கருதப் பட்டு வந்துள்ளது. அலக்சாந்திரியா கிளெ மந்து, யோவானை ஓர் ''ஆன்மீக நற்செய்தி'' என்று அழைத்துள்ளார். ஏன் என்று சிறிது ஆராய்தல் நன்று.

இந்நூல் ஓர் இறையியல் நூல் என்று கூறும்போது, தற்காலப் பொருளில் ஒரு திட்டம் செய்யப்பட்ட நூல் என்று கருது வது தவறாகும். இறையியல் என்ற சொற் றொடரின் மூலப்பொருள், இறைவனைப் பற்றிய அறிவு, இறைக்காரியங்களைப் பற்றிய அறிவு என்பதாகும். இப் பொருளைக் கருத்தில் கொண்டால், யோவான், சிறப்பான முறையில் ஓர் இறையியல் நூல் என்பது தெரியும். மற்ற நற்செய்தியாளரைவிட யோவான் மீட்பு மறையுண்மையை ஊடுருவி ஆராய்ந்துள்

ளார். இந்நூல் இயேசு, கிறிஸ்து (மெசியா) என்பதன் பொருளை ஆழமாய் வெளியிடக் காண்கிறோம். இந்நூல் இயேசு கிறிஸ்து என்ற தேவ ஆளைப் பற்றிய நற்செய்தியாகும். முன்னுரை *(1:1-18)*, முதற்பகுதியின் முடிவுரை *(12:37-50)*, முழுநூலின் மூலமுடிவுரை *(20:30-31)* ஆகியவற்றைப் படிக்குங்கால் ஆசிரியரது நோக்கம், இயேசுவையும், அவரது வாழ்வின் மறைபொருளையும் எடுத்து விளம்புவதே எனத் தெரிகிறது. இந்நற்செய்தியில் வரும் குறிப்பு அடையாள முறையும் இதை உணர்த்துகிறது. யோவானின் முக்கிய தலைப்புகளாகிய திருமுழுக்கும் நற்கருணை, விசுவாசம், உயிர், ஒளி, உண்மை, அன்பு, பாவம், ஆவி, வார்த்தை ஆகியவையும் இந்நூலில் தனிப்பட்ட முறையில் விளக்கப் பெறுகின்றன. இவ்விளக்கங்கள் யாவும் கிறிஸ்துவை மையமாக வைத்துச் சுழல்கின்றன. ஒத்தமை நற்செய்திகளில் கூறப்படுவதைவிட இந்நூலில் அருட்கருவித்தன்மை சிறப்பித்துக் கூறப்படுகிறது. தமது விளக்கத்திற்கு ஆசிரியர் பயன்படுத்தும் குறிப்பு அடையாள முறையும் சிறப்புடன் விளங்குகிறது. இது பற்றிச் சிறிது பார்ப்போம்.

(ஆ). குறிப்பு அடையாளம்: ஒவ்வொரு அறவுரையும் ஒரு நிகழ்ச்சியிலிருந்து எழுகிறது. அறவுரையின் பொருளை அடையாளத்தால் குறிக்குமாறு ஒவ்வொரு நிகழ்ச்சியும் அமைக்கப்பெறுகிறது. இதனையே குறிப்பு அடையாளம் என்கிறோம். இவ்வடையாள நிகழ்ச்சி ஒவ்வொன்றும் ஓர் அருஞ்செயலாக (புதுமையாக) இருக்க வேண்டுமென்பதில்லை. இந்நூலில் அடையாள நிகழ்ச்சிகளெல்லாம் அருஞ்செயலாக இருந்தாலும் *(2:11; 4:54; 6:14;12:18)*, இயேசுவின் பிற செயல்களும் அடையாளச் செயல்களே. சான்றாக, யோவா *1:1*-இல் ஆதி *1:1* எதிரொலிக்கிறது. மேலும், வார்த்தை மனிதனாதல், புதியதோர் படைப்பு தொடங்குகிறது என்று சுட்டுகிறது. ஆலயத்தைச் சுத்தி செய்தலும் *(2:13-25)*, சீடர்களின் பாதங்களைக் கழுவுதலும் *(13:1-20)* குறிப்பு அடையாளச் செயல்களே. ஒவ்வொரு நிகழ்ச்சியிலுமுள்ள குறிப்பு அடையாளத்தை நாம் உணர முயல வேண்டும்.

இக்குறிப்பு அடையாளத்தையும், அருஞ்செயல்களையும் ஒப்பிடும்போது ஆசிரியரது நோக்கை நன்கு அறிகிறோம். ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவின் மெசியா ஆற்றலை வெளிப்படுத்தும் நோக்குடன் அருஞ்செயல்களை விளக்குகின்றனர். இவற்றில் இயேசு தமக்குப் பிசாசின் மேலும், இயற்கையின் மேலும் உள்ள அதிகாரத்தைக் காட்டுகின்றார். இவ்வதிகாரம் இறையரசு வந்து விட்டது என்பதைக் காட்டுகிறது. ஆனால், யோவான் இந்நோக்கைச் சிறப்பாகக் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. அவரது ஆர்வம், இவ்வருஞ்செயல் எதைச் சுட்டுகிறது, அதன் பொருள் என்ன என்று காட்டுவதிலேயே அடங்கியிருக்கிறது. எடுத்துக்காட்டாக குருடனுக்குப் பார்வை வழங்கும் அருஞ்செயல் *(9:1-12)*, இயேசு அளிக்கும் ஞான ஒளிக்கு அடையாளமாக உள்ளதைக் கூறலாம். இவ்வருஞ் செயல் இயேசுவே ஒளி எனச் சுட்டுகிறது. இவ்வுண்மையை அதன்பின் வரும் அறவுரை விளக்குகிறது. இவ்விதமே இந்நூலின் பல பகுதிகள் அமைந்துள்ளன. அருஞ் செயல்கள், வெறும் அருஞ்செயல்களாக மட்டும் காட்டப்பெறவில்லை. இயேசுவின் வழியாக வரும் இறைவனது மீட்புச் செயலாகக் குறிக்கப்படுகின்றன. இவ்வருஞ்செயல் இம்மீட்பின் முன்நிகழ்வு அடையாளங்களாகும். யோவானில் வரும் எண்ணிக்கைகள் அடையாளப் பொருளைக் கொண்டிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது. சான்றாக, இந்நற்செய்தியில் இயேசு செய்த ஏழு அருஞ்செயல்கள் *(2:1-11; 4:47-54; 5:1-15; 6:1-15; 6:16-21; 9:1-12; 11:1-46)*, இயேசுவைப் பற்றிய ஏழு சான்றுகள் *(1:14-34; 1:49 (15:27); 5:37; 8:14;5:36 (16:38); 5:39; 15:26)*, இயேசுவின் ஏழு இயல்புகள் *(6:35-51; 8:12 (9:5); 10:7.9; 10:11.14; 11:25; 14:16; 15:1)* காணப்படுகின்றன. இந்த ஏழு என்ற எண்ணை இயேசுவின் நிறைவைக் குறிக்கும் அடையாளப்

பொருளில் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கலாம்.

ஆலோ, புயிலே போன்ற அறிஞர்கள் இந்நூலின் குறிப்பு அடையாளத் தன்மையைப் பின்வருமாறு சுருக்கிக் கூறுவர். முன்பு கூறியதுபோல் முன்னுரை புதியதோர் படைப்பைச் சுட்டுகிறது. திருமுழுக்கு யோவானது சாட்சிக்கும், கானாவூர் நிகழ்ச்சிக்குமிடையில் ஏழு நாட்கள் உள. தண்ணீர் விசுவாசத்திற்கும், திருமுழுக்குக்கும், சுத்திசெய்தலுக்கும் அடையாளமாக உளது. இரசமோ இரத்தம், பலி, அன்பு, நற்கருணை ஆகியவற்றிற்கு அடையாளமாக உளது. நிகழ்ச்சிகளையும் அறவுரைகளையும் எட்டுப் பகுதிகளாக அமைக்கலாம்: 1) கானாவூர் அருஞ்செயல்களில் தண்ணீர், இரசம் ஆகிய இரண்டும் திருமுழுக்கில் தொடங்கி நற்கருணையில் இயேசுவின் இறப்போடு கொள்ளும் ஒன்றிப்பைச் சுட்டுகின்றன. 2) ஆலயத்தைத் தூய்மை செய்வது இயேசுவே புதிய ஆலயம் எனக்காட்டுகிறது. 3) நிக்கோதேமு, சமாரியப்பெண் ஆகியோர் பற்றிய நிகழ்ச்சிகள், யூதர்களுக்கும் புற இனத்தவர்களுக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும் யாவருக்கும் திருமுழுக்கில் அளிக்கப்படும் புத்துயிர் இயேசுவே என்று காட்டுகின்றன. 4) இயேசு அரச அலுவலரின் மகனுக்கு உயிர் அளிக்கிறார். 5) பக்கவாதக்காரனுக்கு இயேசு கூறிய வார்த்தைகள் குணமளிக்கும் நீரின் ஆற்றலைக் கொண்டுள்ளன. 6) நற்கருணையில் இயேசுவே உயிர் அளிக்கும் அப்பம், புதிய மன்னா என்று குறிக்கப்படுகிறது. 7) இயேசுவே உலகின் ஒளி; யூதர்களின் குருட்டுத்தன்மைக்கு மாறாக, குருடனுக்கும் நீரின் உதவியால் பார்வை அளிக்கிறார். 8) கல்லறையின் இருளிலிருந்து, வாழ்வின் ஒளிக்கு வருகிறார் இறந்த இலாசர். இஃது இயேசுவே உயிர்ப்பு என்று காட்டுகிறது.

இவ்வாறு இந்நூலின் குறிப்பு அடையாளத்தன்மையை அழுத்திக் கூறும்போது, இஃது இந்நூலின் உண்மைத் தன்மையையும், வரலாற்றுத் தன்மையையும் பாதிக்காதவாறு அழுத்திக்கூற வேண்டும். ஏனெனில், கடந்த காலத்தில் தமது அடையாளப் பொருளை விளக்க, யோவான் தமது நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்துள்ளார்; ஆகவே, இந்நூல் வரலாற்றுத் தன்மையுடையது அன்று என்று கூறியுள்ளனர் சிலர். இப்படிக் கூறப்படும்போது, ஆசிரியரது நோக்கத்தைக் காண வேண்டும். நசரேத்தூர் இயேசு ஓர் உண்மையான வரலாறு சார்ந்த ஆள், அவரே மெசியா, இறைவனின் மகன் என்று காட்ட விழைகிறார் ஆசிரியர். அப்படியிருக்க அவர் நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்தார் என்றால், அஃது அவரது நோக்கத்திற்கு மாறான விளைவைக் கொடுக்கும். ஆகவே, இந்நிகழ்ச்சிகளை ஆசிரியர் கற்பனை செய்யவில்லை. ஆனால், தமது நோக்கத்திற்கு வேண்டிய நிகழ்ச்சிகளை மட்டும் பொறுக்கி எடுத்தார். தமது குறிப்பு அடையாளத்தை விளக்குமாறு சில சிறு விவரங்களை மாற்றியமைத்திருக்கக்கூடும். இந்நூலின் நிகழ்ச்சிகள் வரலாற்று நிகழ்ச்சிகளாயிருப்பதால்தான் அவற்றின் குறிப்பு அடையாளத்தன்மை சிறப்புறுகிறது என்பதை மறவாதிருப்பது நலம்.

(இ) யோவானில் மற்றொரு தன்மையுண்டு. அஃது, இரு பொருள் மயக்கமுடைய சொற்களைப் பயன்படுத்துதலாகும். இச்சொற்கள் மேலெழுந்தவாரியாக ஒரு பொருளையும், ஆழ்ந்த மற்றொரு கருத்தையும் உணர்த்தவல்லன. செவிமடுப்போர் மேலெழுந்தவாரியாகப் பொருள் கொள்வர். இயேசு இவற்றிற்கு விளக்கம் அளித்து, அச்சொற்களின் ஆழ்ந்த கருத்தை வெளிப்படுத்துகிறார். எடுத்துக்காட்டாக 2:19-இல், இயேசு குறிக்கும் ''ஆலயம்'', யூதர்கள் எண்ணியதுபோல், அப்போது கட்டப்பட்ட ஆலயத்தை உணர்த்தவில்லை; இயேசுவின் உடலாகிய ஆலயத்தைக் குறிக்கிறது (2:22). 3:3.7-இல் வரும் ''மேலிருந்து பிறத்தலைக்'' குறிக்கும் வார்த்தைக்கு, ''மீண்டும்'' என்ற மற்றொரு பொருள் உண்டு. இப்பொருளையே நிக்கோதேமு எடுத்துக்கொள்கிறார் (3:4). இயேசு இதற்கு

விளக்கம் அளித்து, மனிதன் எவ்விதம் நீரினாலும், ஆவியினாலும் மேலிருந்து பிறக்கிறான் என்ற உவமைப் பொருளை வெளிப்படுத்துகிறார். இதே போன்று 3:14; 8:28; 12:32-இல் வரும் உயர்த்தப்படுதலுக்குச் ''சிலுவையில் அறையப்படுதல்'', ''இயேசு தமது உயிர்ப்பு, விண்ணேற்றத்தில் மகிமைப்படுதல்'' என்று இருபொருள் உண்டு. பின்னதையே நற்செய்தியாளர் கருத்தில் கொண்டுள்ளனர். ''உயிருள்ள தண்ணீர்'' என்ற சொற்றொடர், சமாரியப் பெண் எடுத்துக் கொண்ட சாதாரணத் தண்ணீரையும், இயேசு குறித்த ''இறைவனின் சுதந்தரக் கொடையாகிய'' ஆன்மீகப் பொருளையும் உணர்த்தவல்லது. இச்சொற்றொடர் 7:38-க்குப் பின் பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. ஆறாம் அதிகாரத்தில் ''மன்னா'' என்ற சொல் பழைய ஏற்பாட்டு மன்னாவை முதலில் குறிக்கிறது; பின், இயேசுவையும், இறுதியில் நற்கருணையையும் குறிக்கிறது. இப்படி இருபொருள் மயக்கமுடைய சொற்களைப் பயன்படுத்தும் முறையை 7:33-36-இல் வரும் ''செல்லுதல்'', 8:33-36-இல் வரும் ''அடிமைகளாயிருத்தல்'', 11:11-14-இல் வரும் ''தூங்குகிறான்'', ''எழுப்புதல்'' ஆகிய சொற்களிலும் காணலாம்.

இவ்வாறு இயேசு தாம் கருதிய முழுமையான ஆழ்ந்த கருத்தையே உணர்த்த விரும்புகிறார். ஆனால், செவிமடுப்போர்தான் மேலெழுந்த வாரியாகப் பொருள் கொள்கின்றனர். ஆகையால், நான்காம் நற்செய்தியை ஆராயுங்கால், இந்த இருபொருள் மயக்க வழக்கை மனதிற் கொள்ள வேண்டும். நற்செய்தியாளர் இரு பொருளையும் கருத்தில் கொண்டு இச்சொற்களைப் பயன்படுத்துகிறார் எனலாம். இதில் அவரது நோக்கம் யாது? நாம் இந்நூலின் உண்மைகளை மேலெழுந்தவாரியாக உணராமல், இச்சொற்கள் உணர்த்தும் ஆழ்ந்த, ஆன்மீகப் பொருளை உணர வேண்டும் என்பதே. இயேசுவின் செயல்கள் மட்டும் ''அடையாளங்கள்'' அல்ல; அவரது வார்த்தைகளும் அடையாளங்களாகும். இயேசுவின் வார்த்தைகளாயிருப்பதால் அவை ''முடிவில்லாத வாழ்வு தரும் வார்த்தைகளாக'' இருக்கின்றன (6:68). ஆகவே, அவை ஆழ்ந்த பொருளையுடையன என்பதை இந்த இருபொருள் மயக்க வழக்கு உணர்த்துகிறது.

(ஈ) ஒத்தமை நற்செய்திகளோடு ஒப்பிடுகையில், இயேசுவைப் பற்றிய பல சிறப்பான செயல்கள் யோவானில் கூறப்படவில்லை. இஃது இறையரசைப் பற்றிய நற்செய்தியன்று; மாறாக, உலகம் தோன்றும் முன்னே வாழ்ந்த இறையாள் மனிதனான இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியாகும். வெளியடையாளங்களால், ''இயேசு எனும் ஆளைச்'' சிறிது சிறிதாக நற்செய்தியாளர் கண்டுபிடிக்கிறார்' எனலாம். இயேசுவைப் பற்றிய வெளிப்பாடு, இயேசு, திருமுழுக்கு யோவானைச் சந்தித்து அவருடைய சாட்சியைப் பெற்றதிலிருந்து தொடங்குவதாக இந்நற்செய்தி காட்டுகிறது. இவ்வெளிப்பாடு யோவான் நற்செய்தியின் மையக் கூறுகளான இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்பு ஆகியவற்றில் உயர்வு நிலை அடைகிறது (1:51; 3:13; 5:20; 6:62; 8:28; 16:25-30). இந்நூலில் வரும் இயேசுவின் வெளிப்பாட்டை ''அவரது நாள்'', ''அவரதுநேரம்'' எனப் பிரிக்கலாம். ''அவரது நாள்'' மறைமுக வெளிப்பாடாகிய அவரது வெளிப்படைப் பணியாகும். இவ்வெளிப்பாடு திருமுழுக்கு யோவானது சாட்சி, வேதாகமச் சாட்சிகள், இயேசுவின் வார்த்தைகள், செயல்கள் ஆகியவற்றால் உறுதி பெறுகிறது. இதில் இயேசுதான் மெசியாவென்றும், தந்தையிடமிருந்து அலுவல் ஆணைபெற்றவர் என்றும், தந்தையினால் அனுப்பப்பட்டவர் என்றும், தந்தையிடமிருந்து வந்தவர் என்றும், இந்நற்செய்தி காட்டுகிறது. ''அவரது நாளுக்குப் பின்'', ''அவரது நேரம்'' வருகிறது. இந்நேரம் இயேசுவின் இறப்பையும் மகிமைப்படுத்தலையும் குறிக்கிறது. இது நிறைவான வெளிப்பாடாகும்; மீட்புப் பொருளையும், முடிவுகாலப் பொருளையும் கொண்டது. அவர் தந்தையிடம் செல்வது அவர் தந்தை

யிடமிருந்து வந்ததற்கும், தந்தையின் முழுச் சாயலாக இருக்கிறார் என்பதற்கும் தெளிவான சான்றாகும். இயேசு அடையும் மகிமை அவரது தந்தையான இறைவனது மகிமையாகும். அதை உலகம் படைக்கப்படும் முன்பே கொண்டிருக்கிறார். இந்த ''அவரது நேரத்தில்தான்'' மீட்பு நிறைவேறுகிறது. இயேசு மரிக்கும்போது முழுமையாக வாழுகின்றார்; தம்மில் விசுவசிப்பவர்களுக்கும், புற இனத்தவருக்கும் வாழ்வு அளிக்கிறார். அவரே உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறி. இயேசுவே உலகின் மீட்பர். அவர் அளிக்கும் உணவும், உலகின் மீட்பிற்காகப் பலியிடப்பட்ட அவரது உடலே (ஊனே). தமது ஒரே, மாபெரும் மந்தைக்காக தம் முயிரையே அளிக்கும் ஆயர் அவரே. மிகுந்த பலனைக் கொடுக்கும் பொருட்டு மரிக்கும் கோதுமைத் தானியம் அவரே. இந்த ''அவரது நேரத்தில்'' தான் உலகின் முடிவுகால முக்கியம் அடங்கியிருக்கிறது. இந்நேரத்தில்தான் உலகம் தீர்வையிடப்படுகிறது (12:31); மனுமகன் மகிமைப்படுத்தப்படுகிறார் (13:31). அதாவது, ''இந்நேர''த்திலிருந்து இயேசு தமது மகிமையில் நுழைகிறார்; முடிவுகால நீதிபதியாக மனுமகன் முழு அதிகாரம் பெற்றுத் தோன்றுவார். ''இந்நேரம்'' கால முடிவின் தொடக்கமாகும். ஒத்தமை நற்செய்திகளில் காணப்படும் வரவிருக்கும் முடிவு காலத்தைப்போல் அல்லாமல், யோவானில் ஏற்கெனவே நிறைவேறிக் கொண்டிருக்கும் முடிவுகாலம் குறிக்கப்படுகிறது. தீர்வை, நிகழ்காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிது.

(உ) இறைவெளிப்பாட்டை நாம் ஒன்றில் ஏற்க வேண்டும் அல்லது ஏற்க மறுக்க வேண்டும். ஏற்காமலும், மறுக்காமலும் ''நடுநிலைமை'' கொள்ள முடியாது. மனிதன் அதை விசுவசித்தால் வாழ்கிறான். விசுவசிக்க மறுத்தால் தீர்வையிடப்படுகிறான். இந்த விசுவாசத்தையும் விசுவாசமின்மையையும் பற்றியே பல தர்க்கங்கள் அமைந்துள்ளன யோவானில். கிறிஸ்தவம் ஏற்கெனவே ஓர் அளவு வளர்ச்சியுற்றபின் இந்நற்செய்தி எழுதப்பட்டதால், விசுவாசத்தில் பிரமாணிக்கமாயிருத்தல் அழுத்திக் கூறப்படுகிறது. ''கற்பனைகளைப் பின்பற்று'' என்பதைவிட, ''எனது படிப்பினைகளை உறுதியாகக் கைக்கொள்'' என்பது தான் முக்கியமானது. கால முடிவின் தொடக்கம், முடிவு ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தில் இது மிகத் தேவையானது. இந்த விசுவாசப் பிரமாணிக்கம் பிறர் அன்பில் மலர வேண்டும். விசுவாசம், பிறர் அன்பு ஆகிய இரண்டையும் யோவானது முதல் இரண்டு திருமுகங்களிலும் காண்கிறோம். இவ்விரண்டும் வெறும் படிப்பினைகள் மட்டுமல்ல. இவை விசுவசிப்போரை, இயேசு என்ற ஆளோடு இணைக்கின்றன. திருமுழுக்கு, நற்கருணை என்ற அருட்சாதனங்கள் மூலமாய் இவை அனுபவிக்கப்படுகின்றன. விசுவாசத்தை ஏற்பதும், அன்பு செய்தலும் திருச்சபையின் ஒற்றுமையையும், கிறிஸ்துவர்களுக்குள்ளே உள்ள ஒற்றுமையையும், கிறிஸ்துவர்கள் கிறிஸ்துவோடு கொள்ளும் ஒன்றிப்பையும் தோற்றுவிக்கின்றன; அவற்றை வளர்ச்சியுறச் செய்கின்றன. திருச்சபை, இஸ்ராயேலர் அல்லாதவர்களையே பெரும்பாலும் கொண்டிருந்தாலும், அதுவே இறைவனது உண்மையான மந்தையும், மந்தை உறையும் பட்டியுமாகும்; உண்மையான திராட்சைக் கொடியும், திராட்சைத் தோட்டமும் ஆகும். கிறிஸ்தவ விசுவாசிகளே ஆபிரகாமினுடையவும், இறைவனுடையவும் உண்மையான பிள்ளைகள்.

17. நான்காம் நற்செய்தியின் வரலாற்று மதிப்பு: யோவான் ஒத்தமை நற்செய்திகளிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது; இறையியல் தன்மை மிகுந்து காணப்படுவதால், இந்நூலில் வரும் நிகழ்ச்சிகள் உண்மையானவையா என்று ஐயுற இடமிருக்கிறது. இந்நூல் இறையியலுக்கேற்ப ஆசிரியர் அமைத்த கற்பனையாகத் தோன்றுகிறது. ஆகவே, இது வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதன்று என்பர் சிலர். இக்கூற்றை இக்காலத்தில் பலர் ஏற்க மாட்டார்கள்.

இந்நற்செய்தி ஒரு தனிப்பட்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது என்று ஏற்கெனவே பார்த்துள்ளோம். ஆயினும், இயேசுவின் வாழ்க்கையைத் திருத்தி அமைத்து எழுத உதவும் வாழ்க்கை வரலாற்று நூல் அன்று. ஒத்தமை நற்செய்தியாளர், இயேசுவின் வாக்குகளையும் செயல்களையும் காலவரைப்படி ஒரு வரலாறாக எழுதாமல், தங்களுடைய இறையியலுக்கேற்ப நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி எழுதினர். அதே போன்று, யோவானும் தமது இறையியலுக்கேற்ப நிகழ்ச்சிகளையும் அறவுரைகளையும் வரிசைப்படுத்துகிறார். இதில் ஒத்தமை நற்செய்தியாளர்களைவிட, சிறிது அதிகமான சுதந்தரத்துடன் தமது நூலை எழுதுகிறார். இஃது எவ்வளவு தூரம் நிகழ்ச்சிகளின் வரலாற்றுத் தன்மையைப் பாதித்தது என்று கூறுவது கடினம். ஆனால், இவை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை என்று உறுதியாகக் கூறலாம். ஏனெனில், அப்போதுதான் இயேசு மெசியா, இறைமகன் என்று அவர் கூற விரும்பும் சாட்சிக்குப் பொருள் உண்டு என்று ஏற்கெனவே குறிப்பு அடையாளத்தின் கீழ்க் கூறியுள்ளோம்.

இந்நற்செய்தியில் வரும் காலக்கணிப்பு, ஒத்தமை நற்செய்திக் காலக்கணிப்பை விட நம்பத்தகுந்தது என்று கருதுவோர் உளர். ஒத்தமை நற்செய்திகளைப்போல், இதுவும் காலவரையுடன் எழுதப்படவில்லை. இந்நூலில் காணப்படும் காலக்கணிப்பும் நற்செய்தியாளருடைய இறையியல் நோக்கால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். புதைபொருள் ஆராய்ச்சிகளிலிருந்து வரும் புறச்சான்றுகள் இந்நூலின் வரலாற்றுத் தன்மைக்குச் சான்று கூறுகின்றவையாக அமைகின்றன. யோவா 5:2-இல் வரும் பெத்சாயிதாக் குளம் யோவான் விவரிப்பது போல் ஐந்து முற்றங்களைக் கொண்டுள்ளதாகப் புதை பொருள் ஆராய்ச்சி காட்டுகிறது. இப்பெயர் கும்ரான் குகைகளில் காணப்படும் செப்பு ஏடுகளிலும் காணப்படும். 19:13-இல் வரும் லித்தோஸ்த்ரோத்தோஸ் என்னும் மேடை அந்தோனியாக் கோட்டையின் கீழ்க் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. யோவானில் காணப்படும் இயேசு அளித்த உரைகள், யூத வாசகங்களோடு ஒத்துள்ளன. அவரது விளக்கங்களும், அவர் காலத்து யூத ராபிகளின் விளக்கவிதிகளுக்கு ஒத்ததாகவுள்ளன. இவையும் பிறவும், இந்நற்செய்தியின் ஆசிரியர் கி.பி. 70-க்கு முற்பட்ட பாலஸ்தீனத்தையும் அதன் பழக்கவழக்கங்களையும், இடங்களையும் நன்கு அறிந்திருந்தார் எனக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து ஆசிரியர் உண்மையான இடங்களில் நடந்த உண்மையான நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தமது நற்செய்தியை எழுதுகிறார் எனலாம்.

ஆயினும், நாம் தற்காலத்தில் பொருள் கொள்வது போன்ற வாழ்க்கை வரலாறு அன்று இந்நூல். இந்நூல் எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் இறையியல் நூல். இயேசு மெசியா, இறைமகன் என்று சான்று கூறுவதே இந்நூலின் நோக்கம். ''இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன'' (யோவா 20:31). ''இந்தச் சீடரே இவற்றிற்குச் சாட்சி. இவரே இவற்றை எழுதி வைத்தார். இவரது சான்று உண்மையானது என நமக்குத் தெரியும்'' (21:24).

யோவேசர் (JOEZER - யாவே உதவியாளர் ஆவார்)

இவர் சிக்லாகில் ஒளிந்து வாழ்ந்த தாவீதுடன் சேர்ந்து கொண்ட வலிமைமிக்க படைவீரர்களில் ஒருவர்; பென்யமின் குலத்தினர். இவர் ஒரு கோராகியர் என்ற இனப்பெயர் இவரது ஊரைச் சுட்டுகிறது (1 நாள் 12:6).

யோவேது (JOED - ஆண்டவர் சாட்சியாவார்)

இவர் நெகேமியாவின்கீழ் எருசலேமில் வாழ்ந்தவர்களில் ஒருவர்; பென்யமின்

குலத்தினர்; சல்லுவின் தாத்தா (நெகே 11:7). இதற்கு இணையான 1 நாள் 9:7-இல் இப்பெயர் காணப்படவில்லை.

யோவேலா (JOELAH - யாவே உயர்த்துகிறார்)

கெதோரைச் சேர்ந்த யோராமின் மகன். சிக்லாகில் தாவீதின் சிறப்பான தனிப்பட்ட படையோடு சேர்ந்து கொண்ட வன்மை மிக்க, புகழ்பெற்ற பென்யமின் குலத்துப் படைவீரர் ஆவார் (1 நாள் 12:7).

யோவேல் (JOEL - யாவே இறைவனாவார்)

பல கோத்திரங்களிலும் இப்பெயர் காணப்படுகிறது. இப்பெயரின் இறையியல் முக்கியத்துவம் இச்சொல்லின் சொல்லிலக்கணத்திலிருந்து தெரிகிறது.

1. இவர் இறைவாக்கினர் சாமுவேலின் மூத்தமகன் (1 சாமு 8:2). 1 நாள் 6:33; 15:17-இன்படி இவர் ஒரு கோகாத்திய லேவியர்; ஏமான் எனும் இசைக்கலைஞரின் தந்தை (1 நாள் 6:33).

2. எசேக்கியா காலத்தில் சிமியோன் இனத் தலைவர்களில் ஒருவர் (1 நாள் 4:35).

3. இவர் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்; செமாயாவின் தந்தை (1 நாள் 5:4.8).

4. பாசானிலிருந்த காத்து கோத்திரத்தைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவர் (1 நாள் 5:12).

5. இறைவாக்கினர் சாமுவேலின் தந்தையாகிய எல்கனாவின் முன்னோர்களில் ஒருவராக நாளாகமம் இவரைக் காட்டுகிறது. இவர் ஒரு கோகாத்திய லேவியர் (1 நாள் 6:36; காண்க. 6:34-35; 1 சாமு 1:1). அறிஞர் சிலர் இவரைச் சாவூலோடு ஒன்றுபடுத்துகின்றனர் (1 நாள் 6:24).

6. இசக்கார் கோத்திரத்தைச் சேர்ந்த இசரகியாவின் மகன். அரசன் தாவீது காலத்தின் ஓர் அதிகாரி (1 நாள் 7:3).

7. தாவீதின் வலிமை வாய்ந்த வீரர்களில் ஒருவர். நாத்தானின் சகோதரர் (1 நாள் 11:38). இதனோடு இணையான ஓர் அட்டவணையில் இவர் நாத்தானின் மகன் இகால் என்று குறிக்கப்படுகிறார் (2 சாமு 23:36).

8. கேர்சோமின் மகனான இவர் லேவியரின் தலைவர். தாவீது ஆட்சி செய்தபோது தனது சகோதரர் 130 பேருடன் உடன்படிக்கையின் பேழையை எருசலேமுக்குக் கொண்டுவரும் சடங்குகளில் பங்கு பெற்றார் (1 நாள் 15:7.11).

9. இலாதானின் மகன் (1 நாள் 23:8). இவர் ஆலயக்கருவூலப் பொறுப்பாளராக தனது சகோதரர்களுடன் இணைந்து பணியாற்றினார் (1 நாள் 26:22). இவரும் 8-இல் குறிக்கப்படுபவரும் ஒரே ஆளாக இருக்கலாம்.

10. தாவீதின் ஆட்சிக்காலத்தில் மனாசேயின் பாதிக்கோத்திரத்துக்குத் தலைவனாயிருந்த யோவேல் பெதாயியாவின் மகன் (1 நாள் 27:20).

11. கோகாத்திய லேவியனான யோவேல் எசேக்கியா அரசன் ஆட்சி செய்தபோது, ஆலயத்தைத் தூய்மைப்படுத்தி அதனை மறு அர்ப்பணம் செய்வதில் பங்கு கொண்டார் (2 நாள் 29:12).

12. பாபிலோனிலிருந்து திரும்பி வந்த யூதர்களில் அன்னியப் பெண்ணை மணந்தவர்கள் வரிசையில் இவரும் ஒருவர். இவர் எஸ்ரா வாழ்ந்தபொழுது வாழ்ந்தவர் (எஸ் 10:43).

13. நாடுகடத்தலுக்குப் பிற்பட்ட எருசலேமில் பொதுநிலையினரின் (பிரதிநிதியாக) தலைவனாக இருந்தவர் யோவேல். பென்யாமின் இனத்தவரை இவர் மேற்பார்த்தவர்; சிக்ரியின் மகன் (நெகே 11:9).

14. இறைவாக்கினர் யோவேல் பெத்துவேலின் மகன் (யோவே 1:1). காண்க. யோவேல் திருநூல்.

யோவேல் திருநூல் *(JOEL, BOOK OF)*

1. இறைவாக்கினரது பெயரும் வாழ்வும்: ''யோவேல்'' என்ற சொல்லுக்கு ''யாவே இறைவன்'', மற்றும் ''ஆண்டவரே இறைவன்'' என்று பொருள் கூறலாம். இவரைப் பற்றி அறிந்து கொள்ள இந்நூலைத் தவிர வேறொன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. யோவேல் பெத்துவேல் என்பவரின் மகனாவார். இவர் யூதாவைச் சேர்ந்தவர்; ஒரு வேளை எருசலேமில் வாழ்ந்திருக்கலாம்; ஆலயத்தைச் சேர்ந்த வழிபாட்டு இறைவாக்கினராகவும் இருக்கலாம் *(1:2-18; 2:1-16.26-27; 3-4)*. ஏனெனில், இவர் ஆலயத்தையும் அதன் வழிபாட்டையும் நன்கு அறிந்திருக்கிறார் *(1:13-14; 2:15-17)*. அவற்றில் அதிக ஆர்வம் காட்டுகிறார் *(1:8-9; 2:27; 4:16.17)*; ஆலயப் பணியாளர்களை மரியாதையோடு போற்றுகிறார்; வழிபாட்டின் முறையான பணிகளைப் பெரிதும் மதிக்கிறார்; அன்றாடப் பலிகள் நடைபெற முடியாததைக் கண்டு மிகவும் வருந்துகிறார் *(1:9)*. இவற்றைக் கருத்தில் கொண்டு, இவர் ஒரு குருவாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர். இவர் சமூகத்தின் பிரதிநிதியாகவும் திகழ்கிறார் *(1:19-20; 2:17)*. யோவேல் நற்குடிப் பிறப்பும் பயிற்சியுமுடையவர் என்று இந்நூலிலிருந்து புலனாகிறது.

2. நூல் எழுதப்பட்ட காலம்: இந்நூல் எப்பொழுது எழுதப்பட்டது என்று உறுதியாகக் கூறமுடியாது. சிலர், இந்நூல் ஆமோசுக்கு முந்தியது என்பர். அவ்வாறாயின், நூல் பெற்ற இறைவாக்கினர்களுள், யோவேல்தான் முதலானவர். ஆனால், இக்கருத்து பொருத்தமாகத் தெரியவில்லை. பலர் இந்நூல் பாரசீகப்பேரரசின் இறுதிக் காலத்தில் தோன்றியது என்பர். இதுதான் இன்று நிலவும் பொதுவான கருத்தாகும்.

இந்நூல் தோன்றிய காலத்தில் ஆட்சி செய்த அரசனைப் பற்றியோ, அரச மரபைப் பற்றியோ நாம் எதிர்பார்க்கக் கூடிய இடங்களில் கூட *(2:6-11)* எந்தக் குறிப்பும் கொடுக்கப்படவில்லை. இஸ்ராயேலரின் எதிரிகளான அசீரியர்களும் பாபிலோனியர்களும் குறிக்கப்படவில்லை. வட அரசாகிய இஸ்ராயேல் வரலாற்றிலிருந்து மறைந்து விட்டதாகத் தெரிகிறது. ஆகவே, யூதாவே - இஸ்ராயேல் என்று அழைக்கப்படுகிறது *(2:27;4:2.16)*. எருசலேமின் வீழ்ச்சி, நாடு கடத்தப்படுதல், நாடு அன்னியரால் பங்கிடப்படுதல் ஆகியவை கடந்தகால நிகழ்ச்சிகளாகி விட்டன *(4:1.3.17)*. கி.மு. 516-இல் கட்டி முடிக்கப்பட்ட ஆலயம் மக்களின் சமய சமூக வாழ்வின் முறையான அங்கமாகிறது. எருசலேமின் மதில்கள் கட்டப்பட்டு விட்டன. இது நெகேமியா முதல் முறை ஆளுநனாக இருந்தபோது கட்டப்பட்டது (கி.மு. 445-433). எந்த ஆளுநனுடைய பெயரும் குறிக்கப்படவில்லை. மூப்பர்களும் குருக்களும் யூத சமூகத்திற்குத் தலைமை வகிக்கின்றனர் *(1:2. 13-14; 2:15-17)*. மக்கள் குடியிருப்புக்கள் ஆலயத்திலிருந்து ஒலிக்கும் எக்காளத் தொனி கேட்கும் எல்லைக்குள் அமைந்திருக்கின்றன *(1:14; 21:1.9. 15.16)*. போகிற போக்கில் கிரேக்கர் குறிப்பிடப்படுகின்றனர் *(4:6)*. இது, மாமன்னன் அலக்சாந்தர் பாலஸ்தீனத்துக்குள் இன்னும் புகவில்லை என்பதை உணர்த்துகிறது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே மீட்பும் நற்கதியும் கிடைக்கும் என்ற கோட்பாடும் வழிபாட்டுச் சடங்குகளும் இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன. பிற இனத்தவர் மீட்புப் பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

மேலும், யோவேல் தனக்கு முந்திவந்த இறைவாக்கினர்களைத் தழுவி எழுதுவதாகத் தெரிகிறது *(2:10-ஐ எசா 13:10-ஒடும், 2:15-ஐ எசா 13:6-ஒடும், 4:18-ஐ எசே 47:1தொ ஒடும், 3:18-ஐ ஆமோ 9:13-ஒடும், 2:2-ஐ செப் 1:15-ஒடும், 2:6-ஐ நாகூம் 2:18-ஒடும், 3-5ஐ ஒப 17-ஒடும், 4:2-3-ஐ ஒப 11-ஒடும், 4:19-ஐ ஒப 10-ஒடும், 2:11-ஐ மலா 3:2-ஒடும், 3:14-ஐ மலா 3:23-ஒடும் ஒப்பிடுக)*. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்நூல் கி.மு. 400-350-க்கு இடையில் எழுதப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுவர்.

3. வாய்ப்பும் நோக்கமும்: நெகேமியா, எஸ்ரா ஆகியோர் செய்த சீர்திருத்தத்தின் விளைவாக, கொடுமைப்படுத்தப்பட்ட யூதர்கள் தங்கள் தனித்தன்மையையும், மதிப்பையும், உயர்வையும் உணர்ந்திருந்த னர். ஆலயத்தையும் சட்டத்தையும் மைய மாகக் கொண்டு தங்கள் சமய, சமூக வாழ்வை அமைத்துக் கொண்டிருந்தனர். பிற இனத்தவரிடமிருந்து வரும் ஆபத்துகளி லிருந்து தங்களையே காத்துக்கொள்ள, அவர்களிடமிருந்து தனித்து வாழ்ந்தனர். ஆண்டவரது நாளின் வருகைக்காகக் காத்தி ருந்தனர்.

இந்நிலையில், இதுவரை கண்டிராத வெட்டுக்கிளிக் கொள்ளை நோயின் தாக்கு தல், யூதர்களிடையே முதலில் பேரச்சத்தை உண்டாக்கியது. ஆனால், யோவேலின் தூண்டுதலால், மக்கள் இறைவனது உத வியைத் தேடி உருக்கமாக மன்றாடினர். ஏனெனில், யோவேல் இக்கொள்ளை நோயைக்கடந்து போகும் ஒரு நிகழ்ச்சி யாகக் கருதவில்லை. இதை யாவேயின் நாளுக்கு ஒரு முன்னோடியாகக் கண்டார். அப்படியே காண மக்களையும் தூண்டி னார். இறைவனது எதிரிகள் யூதாவின் மேலும், இறைவன் மேலும் நடத்தும் இறுதித் தாக்குதலின் முன்காட்சியாக அல் லது வெள்ளோட்டமாகக்கண்டார். இதை இறைத்தீர்ப்பின் முன்னோடியாகக் கருதி னார். இந்த விளக்கம் மக்களை இறைவன் பால் அச்சம் கொள்ளச் செய்கிறது. நல் விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஏனெனில், மக்கள் செபிக்கின்றனர்; நோன்பிருந்து தபசு செய்கின்றனர். அப்போது அவர்களுக்கு யோவேல் ஆறுதல் அளிக்கிறார். வெட்டுக் கிளிக் கொடுமை அகற்றப்படும்; யூதா மீண்டும் செழிப்படையும் (2:19-27). யோவேல் இந்த உடனடியான விடு தலைக்கு முடிவுகாலப் பொருள் அளிக்கி றார். ஏனெனில், யூதாவுக்காக இறைவன் உறுதியாக, நேரடியாகத் தலையீடு செய்யும் நாளில் வெட்டுக்கிளிகள் சிதறடிக்கப் பட்டதுபோல், யூதாவைக் கொடுமைப் படுத்திய பிறஇன நாடுகள் அழிக்கப்படும். யோவேல் இந்தக் கருத்தை அதி. 3-4-இல் விவரிக்கிறார்.

யோவேல், தனது காலத்தில் நடந்த வெட்டுக்கிளிக் கொள்ளை நோயாகிய ஒரு குறிப்பிட்ட ஆண்டவரது நாளிலிருந்து ''ஆண்டவரது வருங்கால மெசியா நாளுக் குச்'' செல்கிறார். பேரழிவை விளைவித்த ஒரு குறிப்பிட்ட வெட்டுக்கிளிக் கொள்ளை நோய், முதற்பகுதியில்(அதி. 1-2) காணப் படும் இறைவாக்குகளுக்கு வாய்ப்பாயிற்று. இந்தக் கொள்ளை நோயை அகற்றும் கருத்தோடு, பொதுச் செபக் கூட்டங்களா லும், நோன்புகளாலும் இறைவனை மன் றாட மக்களைத் தூண்டுவது முதல் பகுதி யின் நோக்கமாகும். நாடு கடத்தலுக்குப் பிற்காலத்தில், இஸ்ராயேல் சமூகம் தொடர்ச்சியாய் அனுபவித்த கடுந்துயர், இரண்டாம் பகுதியில் (அதி. 3-4) காணப் படும் இறைவாக்குகளுக்கு வாய்ப்பாயிற்று எனலாம். கொடுமையும் அவநம்பிக்கையும் மிக்க காலத்தில், மெசியா பற்றிய பழம் பெரும் இறைவாக்குகள் நிறைவேறும் காலத்தை முன்னோக்கிப் பார்ப்பதற்கு மக்களை உற்சாகப்படுத்துவதும் இப்பகுதி யின் நோக்கமாகும்.

இவ்வாறு, இதுவரை மக்கள் கண்டிராத முறையில் நாட்டைத் தாக்கிய கொடிய வெட்டுக்கிளிக் கொள்ளை நோயை, இறை வன் தமது மக்கள் மேல் அளித்த தீர்ப்பாக வும், உலகிலுள்ள யாவற்றின் மேலும் வரும் யாவேயின் நாளுக்கு முன்னோடி யாகவும் எச்சரிக்கையாகவும் யோவேல் விளக்குகிறார்.

4. ஆசிரியர் ஒருவரா, இருவரா?: இந் நூலை இரு பகுதிகளாகப் (அதி. 1-2; அதி.3-4) பிரிக்கலாம். முதல்பகுதி, பழைய இறைவாக்கினர்களது நடையைக் கொண் டுள்ளது. யூதா மக்களுக்கும், குருக்களுக் கும் தலைவர்களுக்கும் யோவேல் அளிக் கும் போதகம், அவர்களை ''உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு'' ஆண்டவரி டம் திரும்பி வருமாறு கோருகிறது. இரண்

டாவது பகுதியில் காட்சி இலக்கியப்பண்பு கள் மிகுந்துள்ளன. இஃது, இந்நூலின் ஒருமைப்பாட்டைப் பற்றி ஐயம் எழுப்பியது. இந்த ஐயத்தைத் 'தம்' என்ற அறிஞர் தொடங்கி வைத்தார். இவரது கருத்துப்படி, யோவேல் என்ற இறைவாக்கினர் முதற் பகுதியை மட்டுமே எழுதினார். யோவேலுக்குப் பிற்காலத்தில் வாழ்ந்த மற்றொரு இறைவாக்கினர் இரண்டாம் பகுதியை எழுதினார். இவ்வாறு இந்நூலை இரு ஆசிரியர்கள் எழுதியிருக்கலாம் என்ற கருத்து பரவலாயிற்று.

ஆனால் இப்படிக் கூறுவதற்கு வற்புறுத்தும் காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இரு பகுதிகளும் வேறுபடுவது போல் தோன்றுவதற்குக் காரணம், முதற் பகுதி வரலாற்றில் நிகழ்ந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை விவரிக்கிறது; வெட்டுக்கிளிக் கொள்ளை நோயையும் வறட்சியையும் விவரித்து. மக்களை மனத்துக்கத்திற்கும் உண்மையான நோன்புக்கும், செபத்திற்கும் அழைக்கிறது. இதற்கு மாறாக, இரண்டாம் பகுதி, ஆள்தன்மையற்ற, முடிவு காலக் கருத்துக்களை விவரிக்கிறது. அது முடிவு கால இயலின் தொகுப்பாகும். வருங் காலத்தை முன்னோக்கி ஆண்டவரது நாளுக்கு முன்னும், அஃதோடு வரும் நிகழ்ச்சிகளாகிய எல்லா மக்கள் மேலும் இறை ஆவிபொழியப்படுதல், பிற இனத்தவர் மேல் தீர்ப்பு, இஸ்ராயேலின் இறுதிப் போர் ஆகியவற்றை விவரிக்கிறது. இரு பகுதிகளின் அமைப்புகளும் இறைவாக்குப் பாரம்பரியத்திலேயே அமைந்திருக்கின்றன. நடை, வரலாற்றுப் பின்னணி, முந்தைய இறைவாக்கினர்களை மேற்கோள் காட்டுவது, ஆண்டவரது நாளைச் சுட்டிக் காட்டுவது போன்றவை இரு பகுதிகளுக்கும் பொதுவானவை. இதில் உண்மையான இறைவாக்குப் பாரம்பரியத்தையே யோவேல் பின்பற்றுகிறார். முதல்பகுதி இரண்டாம் பகுதிக்கு முன்னோடியாகவும் எச்சரிக்கையாகவும் அமைந்துள்ளது. இரு பகுதிகளும் ஒன்றிணைந்த முறையில் அமைந்துள்ளன. ஆகவே, இரு பகுதிகளையும் ஒரே ஆசிரியரே எழுதினார் என்ற கருத்தைப் பெரும்பாலான அறிஞர்கள் இப்போது ஏற்றுக்கொள்கின்றனர்.

5. இலக்கியப்பண்பு: இந்நூல் எபிரேய இலக்கியம், இறைவாக்கு இலக்கியத்திலிருந்து வெளிப்பாட்டு இலக்கியத்திற்கு மாறிக் கொண்டிருந்த இடைக் காலத்தைச் சேர்ந்ததாகும். யோவேல் திருநூல் வெளிப்பாட்டு இலக்கியப் பண்புகளில் சிலவற்றைக் கொண்டுள்ளது.

இந்நூலின் நடை உயிருள்ளது, நயமிக்கது. சொற்களின் பொருளை நன்குணர்ந்து ஆசிரியர் பயன்படுத்துகிறார். விவரிப்புக்கள் வண்ணமிக்கவை; கற்பனை ஆற்றல் மிக்கவை. இதை வெட்டுக் கிளிகளின் படையெடுப்புப் பற்றிய விவரிப்புகளில் காணலாம் *(1:4-12; 2:4-9)*. ஆசிரியரது தெளிவான வலிமைமிக்க நடை, உயிர்ச்சித்திரமான விவரிப்பு, மொழி நயம், மீண்டும் மீண்டும் கூறுதல், வேறுபாடுகள் ஆகியவற்றைக் கையாளும் நயமிக்க முறையும், உருவகம், உவமைகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தும் முறையும், யோவேலைப் பழைய ஏற்பாட்டில் சிறந்த கவிஞர்களில் ஒருவராக விளங்கச் செய்கின்றன. யோவேல் எபிரேய இலக்கிய வரலாற்றில் உயர்ந்த இடம் வகிக்கிறார். அவ்விலக்கியத்தின் ''வெள்ளிக் காலத்தின்'' இறுதிப் பிரதிநிதியாவார். இந்நூலின் எபிரேய வாசகம் பழுதுபடாமல் நன்கு பாதுகாக்கப் பட்டுள்ளது.

6. நூலின் திட்டஅமைப்பு:

தலைப்பு (1:1).

I வெட்டுக்கிளிக் கொள்ளை நோய் (1:2-2:27).

அ. முதல் போதகமும், விளைவும் (1:2-20).

1:2-12 : கொள்ளை நோயின் விளைவுகள்.

1:13-14 : செபம், உண்ணா நோன்புக்கு முதல் அழைப்பு.

1:15-20 : செபம்.

ஆ. இரண்டாவது போதகம்-முடிவுகாலப் பொருள் (2:1-17).

2:1-11 : படையெடுப்பு உவமை.
2:12-16 : செபம், உண்ணாநோன்புக்கு இரண்டாவது அழைப்பு.
2:17 : செபம்.

இ. இறைவனது பதில் (2:18-27).

II. யாவேயின் நாளாகிய இறுதிக்காலம் (3.1-4:21).
அ. ஆண்டவரின் நாள் (3:1-5).
ஆ. பிற இனத்தார்மேல் தண்டனைத் தீர்ப்பு (4:1-15).
இ. இஸ்ராயேல் மீது இறைவனது ஆசீர்கள் (4:16 21).

7. போதனை:

அ. யாவேயின் நாள்: யோவேலின் சிந்தனையில் இரு கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஒன்று யாவேயின் நாள் என்ற கருத்தாகும் (காண்க. யோவே 1:15). மற்றது, தனது கால நிகழ்ச்சிகள் மேல் இறைவனது தீர்ப்பை இறைவாக்கினர் அறிவிக்கிறார் என்பதாகும். ஆகவே, அவரது சமூகத்தில் வெட்டுக்கிளிக் கொள்ளை நோயும் விவசாயப் பேரழிவும், மனிதனைத் தண்டிப்பதற்காக வரலாற்றில் சீனாயின் புனித இறைவன் இடையீடு செய்வதின் வெளிப்பாடாகும் (உப 28:15தொ) என்று யோவேல் கருதுகிறார். எசேக்கியேலைப் பின்பற்றி யோவேல், ஒழுக்க மனந்திரும்புதலையும், குருக்கள் தலைமையில் செய்யப்படும் சமூகத் தபசின் ஆற்றலுடைமை பற்றிய குருக்கள் நோக்கையும் இணைக்கிறார். இன்றும் உரோமை வழிபாட்டு முறையில் யோவே 1:3தொ; 2:17தொ ஆகிய பகுதிகள் தபசுகால வழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்றன.

ஆ. இறுதிக்கால இயல்: தனது காலத்து மக்கள் அனுபவித்த ``நாள்'' இறுதிநாளின் நுண்மாதிரி மட்டுமே என யோவேல் கருதுகிறார். இறுதி நாள்தான் இறைவனின் தூய்மையையும ஆற்றலையும் முழுமையாக வெளிப்படுத்தும். அது புதிய யுகத்தைத் தொடங்கிவைக்கும். கடந்த காலத்தில் தமது மக்களைத் தண்டித்துத் திருத்த இயற்கை நிகழ்ச்சிகளையும் அன்னியர்களையும் பயன்படுத்திய இஸ்ராயேலின் இறைவன், அவரோடு யாவும் கடந்த முறையில் இஸ்ராயேல் கொண்டிருக்கும் உறவை எண்பிக்கும் பொருட்டு, இப்போது சீயோனில் தம்மை வெளிப்படுத்துவார். மறுபுறம் தங்கள் செழிப்பை வரலாற்றுப் போக்கின் ஒரு பகுதியாக மட்டுமே கொண்டுள்ள பிறநாடுகள் மறைந்து கடந்து போகும். இஃது அவர்களின் தீமையின்மேல் கூறப்பட்ட தீர்ப்பாகும்.

இ. ஆவி பொழியப்படுதல்: திரும்ப அமைக்கப்பட்ட சமூகத்தின் அனைவர் மேலும் இறை ஆவியின் அருங்கொடைகள் பொழியப்படுதலை யோவேல் முன்னோக்குகிறார். இது, மனிதனது தன்மையிலான பலவீனத்திற்கு மாறுபட்ட நிலையில், அவர்களுக்கு வாழ்வையும் வலிமையையும் கொடுக்கும். ஐம்பதாம் நாள் விழாவின் போது பேதுரு ஆற்றிய உரையில் (அ.ப. 2:14-36) யோவே 3:1-5 என்பது, பன்மொழி பேசும் வியத்தகு கொடையில் நிறைவேறி விட்டதாகக் கூறுகிறார். அதில் ''அதற்குப் பின்பு'' என்பதற்குப் பதில் ''இறுதி நாட்களில்'' என்ற சொற்றொடரைப் பேதுரு பயன்படுத்துகிறார். இது பொருளுடையதே; ஏனெனில், புதிய ஏற்பாட்டின் முன்னோக்கிய இறுதிக்கால இயலின்படி, திருச்சபையில் பன்மொழிக்கொடை மெசியாக் காலம் தொடங்குவதின் வெளிப்பாடாகும். வரலாறு பற்றிய ஆற்றல் மிக்க தியானமாகிய இஸ்ராயேலின் நூல்களின் கடந்தகாலப் பாரம்பரியத்தில் ஆழ்ந்து வேரூன்றிய, யோவேலின் இச்சிறுநூல், ஐம்பதாம்நாள் விழாவின்போது ஆற்றப்பட்ட முதல் அப்போஸ்தல அறவுரைக்கு வாசகம் அளித்தது பொருத்தமுடையதே.

8. இக்காலத்திற்கு: நூல் முழுவதும் வழிபாட்டுப் பண்பு பரவிக்கிடக்கிறது. மக்களைப் பாதிக்கும் இக்கட்டான காலத்தில் தபசும் ஆலயத்தில் மன்றாட்டும் அடங்கிய பொதுவழிபாடு வலியுறுத்தப்படுகிறது. இதில் ஆகாய், செக்கரியா, மலாக்கி ஆகிய

இறைவாக்கினர்களோடு யோவேல் இணைந்துள்ளார். இறைவாக்கினர் ஆமோஸ் யாவேயின் நாளின் வருகையோடு தமது இறைவாக்குப் பணியைத் தொடங்கினார். அதே கருத்தை யோவேலும் விரிவாக எடுத்துக்கூறி வலியுறுத்துகிறார். இறைவாக்குப் போதகத்தில் இஃது அடிப்படைப் பண்பாகும். யாவேயை யாரும் எதுவும் வெல்லமுடியாது என்ற நிலையான விசுவாசத்தை இந்நூல் அறிவிக்கிறது; பூமியில் இறைவன் நிறுவியவற்றை அழிக்க முடியாது என்ற நம்பிக்கையை எடுத்துக் கூறுகிறது. இவையிரண்டும் இந்நூலின் சிறப்புப் போதகமாகும். இந்த வெல்ல முடியாத விசுவாசமும் நம்பிக்கையும் புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக்கும் நமக்கும் இறைவாக்கினர் அளிக்கும் உரிமைச் சொத்தாகும்.

யோற்றுபா (JOTBAH - *இன்பமான, நன்மையான)*

யூதாவின் அரசன் ஆமோனின் தாய், மெசுல்லமேத்து தங்கியிருந்த இடமாகும் (2 அர 21:19). அனேகமாக இந்நகரம் யூதாவில் இருந்திருக்க வேண்டும். அப்படியானால், அக்காபுவுக்கு வடக்கில் 30 கி.மீ. தொலைவில் உள்ள அயின் அத்-தாபா இருக்கும் இடமாக இருக்கலாம். கெனசரேத்து ஏரியில் செபுலோன் பள்ளத்தாக்கிலுள்ள யோத்தபத்தாவும் (கிர்பெத் எபாத்து) இதுவும் ஒரே இடமாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

யோற்றுபாத்தா (JOTBATHAM - *இன்பமான, நன்மையான)*

இஃது ஆறுகள் உள்ள இடமாகும் (உப 10:7). இஸ்ராயேலர் தங்கள் பாலைவனப் பயணத்தின்போது, இங்குச் சிறிதுகாலம் தங்கினர் (எண் 33:33-34). இஃது எட்சியோன் - கேபேருக்கு வடக்கில் அராபாவில் இருந்திருக்க வேண்டும். இந்த இடத்தை அயின் அத்-தாபாக அடையாளம் காண்கின்றனர் அறிஞர் சிலர்.

யோனதாபு (JEHONADAB JONADAB - *யாவே தாராள குணமுடையவர், மேன்மை மிக்கவர், யாவே தூண்டப்படுகிறார்)*

1. இவன் தாவீதின் சகோதரர் சிமயாவின் மகன்; தாவீதின் மகன் அம்னோனின் தந்திரமுள்ள நண்பன். இவன்தான் அம்மோனின் ஒன்றுவிட்ட சகோதரி தாமாரை மயக்கி, அவளோடு உறவு கொள்ள அம்னோனுக்குத் திட்டம் தீட்டிக் கொடுத்தவன் (2 சாமு 13:3.5). தாமாருடைய சகோதரன் அப்சலோம், தன் சகோதரி கற்பழிக்கப் பட்டதற்காக அம்னோனைக் கொன்று பழி வாங்கியபோது, தாவீதுக்கு, அவரது புதல்வர்களில் அம்னோன் மட்டுமே கொல்லப் பட்டான் என்று செய்தியை உறுதியளித்தவனும் இவனே (2 சாமு 13:32-36). இவனைத் தாவீதின் சகோதரர் சிமயாவின் மகனும், இத்திய அரக்கனைக் கொன்றவனுமான யோனத்தானாக அடையாளம் காண்கின்றனர் சிலர் (2 சாமு 21:21; 1 நாள் 20:7).

2. இவர் கேனியரான இரேக்காபின் மகன் (எரே 35:6; காண்க. 1 நாள் 2:55); ஏகூ அரசன் மேற்கொண்ட சீர்திருத்தத்தில் அவனோடு துணை நின்றவர். ஆகாபின் புதல்வர்களைக் கொன்று குவித்துச் சமாரியாவில் பாகாலின் கோவில்களை அழித்தொழித்தபோது அவனுக்கு உதவி செய்தவர் (2 அர 10:15.23); இரேக்காப்பியப் பிரிவினரின் கடுமையான வாழ்க்கை முறையை நிறுவியவர் (எரே 35:6-9); இப்பிரிவினர் கேனியர்கள், காலேபியர்களின் வழித்தோன்றல்கள் ஆவர் (1 நாள் 2:55; 4:11-12).

யோனதெலம் - ரிக்கோகிம் *(*JONATH ELEM RECHOKIM*)*

இச்சொல் ''தொலைவில் வாழும் மௌன மாடப்புறா'' என்ற பொருளுடைய மெட்டைக் குறிக்கிறது (சங் 56). காண்க. இசை.

யோனத்தான் (JEHONATHAN - *யாவே கொடுத்தார்)*

1. யோசபாத்து அரசனின் ஆட்சியின் மூன்றாம் ஆண்டில் யூதா நகர்களில் சட்டத்தைப் போதிக்கும் பொருட்டு மூப்பர்களோடும் குருக்களோடும் அனுப்பப்பட்ட ஒரு லேவியர் (2 நாள் 17:8-9).

2. நாடு கடத்தப்பட்ட பின்பு இருந்த செமாயா என்ற குரு குலத்தின் தலைவர் (நெகே 10:8; 12:6). ஏசுவாவின் மகனான யோயாக்கிம் தலைமைக் குருவாக இருந்த போது இவர் குலத்தலைவராக இருந்தார் (12:18; காண்க. 12:10. 12.26).

யோனத்தான் (JONATHAN - யாவேகொடுத்தார்)

1. இவன் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு லேவியன். இவன் எப்பிரயிமினனான மீக்கா ஏற்படுத்திய புனித இடத்தில் குருவாகப் பணியாற்றினான். பின்னர், தாண் கோத்திரத்தில் பணியாற்றிய குருத்துவத்தை நிறுவியவன் (நீதி 17-18). யூதாவின் பெத்லகேமைச் சேர்ந்த யோனத்தான் மீக்கா குடும்பத்தின் குருவாக மலைநாடான எப்பிரயிமில் உள்ள புனித இடத்தில் பணியாற்றினான். தாண் கோத்திரத்தைச் சேர்ந்த ஒற்றர்கள் சிலர் மீக்காவின் வீட்டுக்கு வந்து அவர்கள் வாழ்வதற்குச் சிறந்த இடம் கிடைக்குமா என்று கேட்டபோது அவர்களுக்குச் சாதகமான பதில் தந்ததால், தாண் கோத்திரத்தார் அறுநூறு பேர்கள் வந்து, மீக்காவிடமிருந்த புனிதப் பொருட்களைக் கைப்பற்றினர். பின்னர், யோனத்தானைத் தாண் கோத்திரத்தின் குருவாக இருக்குமாறு வற்புறுத்தினர். இதனால், தாண் கோத்திரத்திற்கு ஒரு குரு கிடைத்தான். இக்குருத்துவத்தை நிறுவியவன் மோசேயின் மகனான கேர்சோமின் மகன் யோனத்தான் என்று கூறப்பட்டுள்ளது (1 நீதி18:30).

2. யோனத்தான், சவுலின் மகன்: இத் தலைப்பின்கீழ்க் காண்க.

3. இவர் குருவான அபியத்தாரின் மகன் (2 சாமு 15:27). தாவீதின் மகன் அப்சலோம் அவருக்கெதிராக புரட்சி செய்தபோது, எதிரியான மகனின் திட்டங்களைத் தாவீதுக்கு எடுத்துக்கூறி அவருக்குப் பேருதவி செய்தார். ஆனால், பின்னர் அதோனியாவின் அரச பதவிப்போட்டியில் யோனத்தான் அவனுக்கு ஆதரவாக இருந்ததால் இப்பணியினின்று விலக்கப்பட்டார். தாவீது எருசலேமை விட்டு வெளியேறியபோது அவரிடம் உடன்படிக்கையின் பேழையைக் கொண்டு சென்றவர்களில் இவரும் ஒருவர். தாவீது நகரை விட்டு வெளியேறியபின் ஊசாய் என்ற உளவாளியிடமிருந்து அரண்மனையில் நடப்பவற்றை அறிய அபியத்தாரும், சாதோக்கும் திரும்பிச் சென்றனர். அவர்களிடமிருந்து செய்தியைப் பெற்றுத் தாவீதுக்குக் கூறியவர்களுள் யோனத்தானும் ஒருவர் (2 சாமு 15:24 தொ). இவர்கள் ஒற்றறிதல் கண்டு பிடிக்கப்பட்டவுடன் யோனத்தானும் அகிமாசும் தாவீது தங்கியிருந்த மகனயிம் எனும் இடத்திற்கு ஓடிப்போயினர் (2 சாமு 17:17.20).

தாவீது தனது கடைசிக்காலத்தில் இருக்கும்போது அதோனியா, அரசரின் புதல்வர்களையும், அரச அலுவலர்களையும் ஏன்-ரேகேல் எனுமிடத்திற்குப் பலிவிழா ஒன்றிற்கு அழைத்தான். இந்தச் சமயத்தில் தான் அரசனாக அறிவிக்கப்படத் திட்டமிடப் பட்டிருந்தான். அப்போது, யோனத்தான் அரச கட்டளைப்படி சாலமோன் அரியணையைப் பெற்று, கிகோனில் அபிடேகம் செய்யப்பட்டான் எனும் விருப்பமில்லாத செய்தியைக் கொண்டு வந்தார். தனது தந்தை அபியத்தாருடன், யோனத்தானும் அதோனியா அரியணை பெறும் முயற்சியில் ஒத்துழைத்திருக்க வேண்டும். எனவே, சாலமோனால், அபியத்தார் அவரது பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டபோது அதில் யோனத்தானும் பங்கு பெற்றார் (1 அர 1:42-43; 2:26-27).

4. இவர் தாவீதின் சகோதரனான சிமயா அல்லது சிமயியின் மகன். இவர் காத்து என்ற இடத்தில் ஓர் அசாதாரண, பெலிஸ்திய அரக்கனைக் கொன்றார் (2 சாமு 21:21; 1 நாள் 20:7).

5. இவர் ஆராரியனான சம்மா அல்லது சகேயின் மகன். தாவீதின் வலிமை மிக்க முப்பது பேர்களில் ஒருவர் (2 சாமு 23:32; 1 நாள் 11:34).

6. இவர் யூதாவின் கோத்திரத்தைச் சேர்ந்த எரகுமவேலின் குடும்பத்தின் வழித்தோன்றல். இவர் யாதாவின் புதல்வரும்,

பெலேத்து, சாசாவின் தந்தையும் ஆவார் (1 நாள் 2:32-33).

7. இவர் அரசன் ஊசியாவின் மகன்; நகர்களிலும், ஊர்களிலும், கோட்டைகளிலும் உள்ள கருவூலங்களைக் கவனித்துக் கொண்டார் (1 நாள் 27:25).

8. இவர் தாவீதின் சிற்றப்பனும், அவருடைய ஆலோசகரும், கல்வியறிவும் நுண்மதியும் கொண்டவரும் ஆவார் (1 நாள் 27:32). இவர் பெயர் இங்கு மட்டுமே வருகிறது. இவர் சமாயியின் மகன் எனக் குறிப்பிடப்படுகிறார். இவர் அக்மோனியின் மகனான எகியேலுடன் அரசனின் மக்களைக் கவனித்து வந்தார் (1 நாள் 27:32) என்று காட்டப்படுகிறது. இவர் 4-இல் வருபவராக இருக்கலாம்.

9. இவர் எபேதின் தந்தை; அதீன் குடும்பத்தின் தலைவராவார். எஸ்ரா எருசலேமுக்கு வந்தபோது தனது குலப்பிரிவினர் ஐம்பது பேரோடு சேர்ந்து எஸ்ராவுடன் வந்தார் (எஸ் 8:6).

10. அசாவேலின் மகனான இவன் எஸ்ரா காலத்தில், அன்னியப் பெண்களை மணந்தவர்கள் பற்றி விசாரிக்க அமைத்த எருசலேம் குழுவினரை எதிர்த்தான் (எஸ் 10:15).

11. இவர் பாபிலோனிலிருந்து திரும்பிய பின் பணியாற்றிய தலைமைக் குருக்களுள் ஒருவர்; யோயாதாவின் மகனும், யாதுவாவின் தந்தையும் ஆவார் (நெகே 12:11). ஆனால், இங்கு வரும் யோனத்தான் எனும் பெயர் யோகனான் (11) எனும் பெயரின் சிதைந்த வடிவமாக இருக்கலாம் (எஸ் 10:6; நெகே 12:22-23).

12. யோயாக்கிம் தலைமைக் குருவாக இருந்தபோது மல்லூக்கியின் குருத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் தலைவர் (நெகே 12:4).

13. இவர் செமாயாவின் மகனும், செக்கரியாவின் (28) தந்தையும் ஆவார். நெகேமியா எழுப்பிய எருசலேம் சுவர் மறு அர்ப்பணம் செய்யப்பட்டபோது எக்காளம் ஊதிய குருக்களின் குழுவில் ஒருவராக இருந்தார் (நெகே 12:35).

14. எழுத்தர் அல்லது செயலனாகிய இவரது வீடு எரேமியாவை நாட்டைக் கைவிடும் துரோகத்துக்காக சிறை வைக்குமிடமாகியது (எரே 37:15.20; 38:26).

15. இவர் கரையாகுவின் புதல்வர்களில் ஒருவர். பாபிலோனியர்கள் யூதாவைப் பிடித்தபோது, திறந்தவெளியில் இருந்த யூதேயாவின் ஓர் இராணுவப் பிரிவின் தலைவராக இருந்தார். எருசலேமின் வீழ்ச்சிக்குப்பின் கெதல்யாவுடன் சேர்ந்துகொண்டார் (எரே 40:8).

16. இவர் மத்தத்தியாவின் மகன். இக்குடும்பத்தின் தலைமையில்தான் யூத நாடு சீரியாவின் அடிமைத் தளையினின்று (கி.மு. 166-142) விடுபட்டது. மத்தத்தியா இதனைத் தொடங்கி வைத்தார். அவர் தொடங்கி வைத்த புரட்சி யூதா மக்கபேயுவால் தொடரப்பட்டு, யோனத்தானால் முழுமைக்கு இட்டுச் செல்லப்பட்டது (1 மக் 9:23-12:53). யோனத்தான் இறந்த பின்னும் கூட அவரது சகோதரன் சீமோன் முயற்சியில் தளராது நாட்டின் சுதந்தரத்தைப் பெறுவதில் முடிவில் வெற்றி பெற்றார்.

17. இவர் அப்சலோமின் மகன். சீமோன் மக்கபேயுவால் யோப்பாவிற்கு அனுப்பப்பட்டார். அதை இவர் கைப்பற்றினார் (1 மக் 13:11).

18. நாடு கடத்தப்பட்ட பின் வாழ்ந்த ஒரு குரு. நெகேமியாவால் நடத்தப்பட்ட பலியில், மன்றாட்டை நடத்தியவர் (2 மக் 1:23).

யோனத்தான், சவுலின் மகன் (JONATHAN, SON OF SAUL)

சவுலின் மூத்த மகனான இவர், தாவீதிடம் கொண்டிருந்த உண்மையான சிறந்த நட்பினால் தனது தலைமுறைக்குச் சிறந்த பெயர் பெற்றுத்தந்தார். பழைய ஏற்பாட்டில் மேன்மை மிக்கவர்களுள் ஒருவர். இவர் ஒரு சிறந்த போர்வீரன் ஆவார். மிக்மாசு எனுமிடத்தில் பெலிஸ்தியர்களைத் தனியொருவனாக எதிர்த்து நின்று

அவ்விடத்தைப பிடித்ததால், இஸ்ராயேலர் கள் உற்சாகப்படுத்தப்பட்டனர்; பெலிஸ்தி யர்கள் அவ்விடத்தில் படுதோல்வியடைந்த னர். அன்று மாலைக்குள் யாரும் உண வுண்ணலாகாது, உண்பவன் சாகவே சாவான என முட்டாள்தனமாக சாபம் ஒன்றினைச் சவுல் இட்டிருந்தார். இதனை அறியாத யோனத்தான் காட்டுத்தேனை உண்டுவிட்டார். மறுநாள் இறைவார்த்தை தனக்குக் கிட்டாததால், யார் உண்டது என விசாரித்தபோது யோனத்தான் என சவு லுக்குத் தெரிய வந்தது. மக்கள் பெருங்குர லெழுப்பி, யோனத்தான் சாகக்கூடாது என்று கூறாவிடில் சவுல் இட்ட சாவுத் தீர்ப்பின்படி யோனத்தான் அன்று இறந்தி ருப்பார் (1 சாமு 14:1-45). தாவீது சவுலின் ஊழியனானபோது யோனத்தான் தாவீதின் நெருங்கிய நண்பனானார் (18:1-4). சவுலுக் கும், தாவீதுக்கும் பிளவு ஏற்பட்டு, சவுல் தாவீதைக் கொல்லத் தேடியபோது தாவீதுக் காக யோனத்தான் பலமுறை பரிந்து பேசினார் (19:1-7); ஆனால், அவரது முயற்சி தோல்வியடைந்து இருவரையும் இணைத்துவைப்பது இயலாததாயிற்று (1 சாமு 20). யோனத்தானும், தாவீதும் ஒரு வரை விட்டு ஒருவர் பிரிந்து செல்லுதல் (20:41தொ) அவர்கள் தனியே சந்திக்க முடியாமையினால்தான். 1 சாமு 23:16-18-இல் தாவீதும், யோனத்தானும் இறுதியாகச் சந்திப்பது பற்றிக் கூறப்படு கிறது. சவுலும், அவனது புதல்வர்களும் கில்போவா மலையில் பெலிஸ்தியர்களால் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் பெத் சான் நகர வாயிலில் தொங்கவிடப்பட்டன. யாபேசு, கிலயாது மக்கள் அவர்கள் உடலை அங்கிருந்து கொணர்ந்தனர். தாவீது தனது புலம்பல் சங்கீதத்தில் சவுலையும், யோனத்தானையும் நினைத்து அழுகிறார் (2 சாமு 1:17-27).

யோனா (JONAH - புறா)

இவர் அமித்தாயின் புதல்வன் (2 அர 14:25). செபுலோனிலுள்ள கேப்பர் என்ற ஊரினர். இவர் ஓர் இறைவாக்கினர் என்றா லும் அவரது இறைவாக்குச் செயல்கள் எப்பொழுது நடந்தன என்பது பற்றி ஒன்றும் தெளிவில்லை. இஸ்ராயேலின் எல்லைகள், அதாவது வட அரசு ஆமாத்தி லிருந்து அராபாக்கடல் வரை உள்ள பகுதி, அதற்கு மீண்டும் கிடைக்குமென முன் னுரைத்தார் (2 அர 14:25). இவர் கூறியது போலவே இரண்டாம் எரொபவாம் இஸ்ரா யேலுக்கு இஸ்ராயேலின் நாட்டை மீட்டுக் கொடுத்தான். நினிவேயைப் பற்றி இவரின் இறைவாக்குப் பணி பயன் அளித்ததால் 'யோனா திருநூலில்' இவர் முக்கியமான வர் ஆகிறார்; புதிய ஏற்பாட்டில் குறிக்கப் பெறுகிறார் (மத் 12:39-41; 16:4; லூக் 11:29-32).

யோனா திருநூல் (JONAH, BOOK OF)

1. முன்னுரை: எபிரேய விவிலியம் இந் நூலைப் போதக நூல்களோடு சேர்க்கிறது. கிரேக்க விவிலியம் இதை இறைவாக்கினர் நூல்களில் ஒன்றாகவும், பன்னிரு சிறிய இறைவாக்கினர்களில் ஒன்றாகவும் கருது கிறது. இஃது இறைவாக்கினர் நூல்களி லேயே மிகவும் பரவலாக அறியப்பட்டதா கும். இதற்குக் காரணம் அவற்றிலிருந்து இது வேறுபட்டது என்பதாகும். மற்ற நூல்கள் இறைவாக்குகளின் தொகுப்பாக இருக்கும்போது இந்நூல் ஒரு கதையாக இருக்கிறது. மற்ற இறைவாக்கினர் நூல் களில் அவர்களது வாழ்க்கை பற்றிய குறிப்புகள் சிலவே காணப்படுகின்றன. ஆனால், இந்நூல் யோனா என்ன கூறினார் என்பதை விட அவர் செய்தவற்றையே அதிகம் கொடுக்கிறது.

விவிலியத்தை அறியாதவர்கள் கூட யோனாவையும், திமிங்கலத்தையும் பற்றிக் கேள்விப்பட்டிருப்பர். உண்மையில் இந் நூலில் திமிங்கலத்தைப் பற்றி எக்குறிப்பும் இல்லை. ஒருவன் துரதிர்ஷ்டத்தையோ, பேரழிவையோ கொண்டு வந்ததாகக் கரு தப்பட்டால் அவனை ஒரு யோனா என்ற ழைப்பது பொதுமக்களிடையே பேச்சு வழக்காகும். மேலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நடந்த ஒரு கருத்து வேறு பாட்டுப் போராட்டம் இந்நூலுக்குத் தேவையில்லாத அவப்பெயரை அளித்து

விட்டது. ஒரு மனிதன் ஒரு பெரிய மீனால் விழுங்கப்பட்டு மூன்று நாட்களுக்கு அதன் வயிற்றுள் தங்கியபின் உயிரோடு வெளி வரும் கதையை விசுவாசத்திற்கு விரோதி களான ஐயவாதிகள் எள்ளி நகைத்தனர். ஆகவே, போர்க்காலத்தில் கொடியை உயர்த்திப் பிடிப்பதுபோல், விசுவாசிகள் இக்கதையின் உண்மைத் தன்மைக்காகப் போராடினர். இக்கதையை அப்படியே ஏற்றுக்கொள்வது பாரம்பரிய போதகத்தை ஏற்றுக் கொள்வதின் அடையாளமாகக் கருதப்பட்டது. இப்படித் தவறான காரணங் களுக்காக இந்நூல் பலராலும் நன்றாக அறியப்பட்டதொன்றாயிற்று. இந்நூல் உண் மையிலேயே நன்கு அறியப்பட தகுதி யுடையதொன்றாகும். ஏனெனில், நற் செய்தியின் அடிப்படை உண்மையும் போக் கும் இக்கதையில் அடங்கியுள்ளது.

2. *பெயர்:* யோனா என்றால் புறா என்று பொருள்படும்; வீட்டிலேயே தங்கியிருக் கும் ஆளைக் குறிக்கும். புறா இஸ்ரா யேலைக் குறிக்கும் அடையாளப் பறவை யாகும் (ஓசே 7:11; 11:11; சங் 68:13; உ.ச. 2:14; 4:1). ஓர் ஆளின் பெயராக, முதலில், கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த இரண்டாம் எரொபவாம் காலத்தில் வாழ்ந்த, கத்கேப்பேர் என்ற ஊரைச் சேர்ந்த அமித்தியின் மகனும், இறைவாக்கினரு மான யோனாவைக் குறிக்கும் (2 அர 14:25). இரண்டாவதாக இந்நூலில் வரும் இறை வாக்கினரைக் குறிக்கும்.

3. *எவ்வகை இலக்கியம்?:* இலக்கிய வடிவ ஒளியில்தான் இந்நூலின் பொருளைப் புரிந்து கொள்ள முடியும். இறைவாக்கு நூல்களிலேயே இந்நூல் தனித் தன்மையுடையதாகும். இது வாக்குகளின் தொகுப்பன்று; ஒரு நிகழ்ச்சியுரையாகும்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை இந்நூல் ஒரு வரலாறு ஆகும் என்று பாரம்பரிய மாகக் கருதப்பட்டது. இக்காலத்தில் கூட சிலர் இவ்வாறு கருதுவர். இக்கருத்துக்குச் சார்பாக, பின்வரும் காரணங்கள் சுட்டிக் காட்டப்படும். இந்நூல் உண்மையாக நடந் தவற்றின் ஏடாகும் என்ற உணர்வை ஏற் படுத்துகிறது. யோனா இறைவாக்கினர் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் எரொபவாம் ஆட்சிக் காலத்தில் உண்மை யாகவே வாழ்ந்துள்ளார் (2 அர 14:25). இவர் இஸ்ராயேல் இழந்துபோன பகுதி களை மீண்டும் கைப்பற்றும் என்று கூறியுள் ளார். மேலும், நமது ஆண்டவர் இயேசு தனது உயிர்ப்புக்கு யோனாவை அடையாள மாகக் காட்டியபோது, வரலாற்றைச் சேர்ந்த தென்னாட்டு அரசி பற்றிய குறிப்போடு யோனாவைப் பற்றிய குறிப்பையும் சேர்த்துக் கூறியுள்ளார் (மத் 12:39-42; லூக் 11:29-32). முன்னதை வரலாறு என்று ஏற்றுக்கொண்டால் பின்னதையும் வரலாறு என்று ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? நினிவே உண்மையிலேயே ஒரு பெரிய நகரம் என்று புதைபொருள் ஆய்வுகள் காட்டுகின்றன. திமிங்கிலமோ, பெரிய சுறாமீனோ ஒரு மனிதனை விழுங்க வல் லது. யோனாவின் போதகத்தைக் கேட்டு நினிவே மக்கள் கோணியுடுத்தி நோன்பிருந் தனர்; விலங்குகளையும் நோன்பிருக்கச் செய்தனர் என்று நூல் விவரிக்கிறது (3:7). இப்படி இல்லாதிருந்திருந்தால் பிற்கால ஆசிரியர் இறைவாக்கினர் ஒருவரை வெறுக் கத்தக்க பாத்திரமாகச் சித்திரிக்கமாட்டார். மேலும், ஓர் இறைவாக்கினர் புறஇன நாடுகளுக்குச் செல்வது இதுதான் முதல் தடவையன்று. எலியா பெனிசியாவுக்கும், எலிசா சீரியாவுக்கும் சென்றனர் (2 அர 8:7). யோனாவில் வரும் அருஞ்செயல் களுக்கு மறுப்புக் கூறினால் நற்செய்திகளில் வரும் அருஞ்செயல்களுக்கு மறுப்புக் கூற வேண்டியிருக்கும். ஏனெனில், எந்த அருஞ் செயலுக்கும் ஒரே ஆற்றலே வேண்டியிருக் கிறது.

ஆனால், இக்காரணங்களில் எதுவும் புனித எரோனிமூவைத் திருப்திப்படுத்த வில்லை. புனித கிரெகோரி நாசியான்சன் இந்நூலை ஓர் உவமையாக விளக்கியுள் ளார். ஏன் இப்படி விளக்கினார் என்று நாம் அறிவதற்கில்லை. இந்நூல் ஒரு வாழ்க்கை வரலாறு என்ற கருத்தை நிரா

கரிக்கப் பல கோவையான காரணங்கள் உண்டு. இக்காரணங்கள் தனித்தனியே உறுதியளிக்கக் கூடியவை அல்ல என்றாலும் அவற்றை ஒருங்கு சேர்த்துக் கவனிக்குங்கால் அவை இந்நூல் ஒரு வரலாறு அன்று, ஓர் உவமையாகும், ஒரு போதகம் அளிக்கும் கதையாகும் என்ற விளக்கத்தைச் சுட்டுகின்றன. இக்கருத்தையே நவீன ஆய்வாளர்களும் விளக்கவுரையாளர்களும் ஏற்றுக்கொள்வர்.

இந்நூல் ஒரு வரலாறு ஆகும் என்பதற்கு எதிரான காரணங்களில் முக்கியமானது கதையில் வரும் மிகைப்படுத்தப்பட்ட அருஞ்செயல் தன்மையாகும். தமது மகனை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச் செய்த இறைவனில் விசுவசிப்பவன் அருஞ்செயல்கள் பற்றி ஐயுறான். ஆனால், இந்நூலில் விவரித்திருக்கிறபடி இறைவன் செயலாற்றும் முறை, மற்றப்படி நாம் அவரை அறிந்திருப்பதற்கு ஒத்ததா? ஒரு மனிதனை மீன் விழுங்கிக் காப்பாற்றும் கதை எல்லா மக்களின் நாடோடிப் பாடல்களிலும் உண்டு. இதே கதை லூசியன் நூலிலும் உண்டு. அந்த மீனின் வயிற்றுக்குள்ளே இருக்கும்போது யோனா நன்றியுரைப்பாடல் அமைக்கிறார். அதன் வயிற்றினுள் 72 மணி அளவு எவ்வித ஆபத்தின்றியும் தங்கியிருந்தபின் வெளிவருகிறார். அரசியலில் மிகச் சிறிய நாட்டைச் சேர்ந்தவரும் முற்றும் அன்னியருமான ஒருவர் வரவிருக்கும் அழிவைப் பற்றிப் போதிக்க, மிகப் பெரிய அரசின் தலைநகர மக்கள் யாவரும் ஒரே நாளில் மனந்திரும்பினராம். இரண்டுக்குமிடையேயுள்ள பொருத்தமின்மை தெளிவாக உள்ளது. இறைவாக்கினர்கள் தொடர்ந்து போதித்தாலும் இப்படிப்பட்ட உடனடி மனந்திரும்புதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பற்றிக்கூடக் கூறப்படுவதில்லை (காண்க. எசே 3:5-7). அப்படி நடந்திருந்ததென்றால் அது மனித வரலாற்றிலேயே நடந்திராத ஈடுஇணையற்ற ஒரு பெரும் அருஞ்செயலாகும். அது பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மேல் எழுந்தருளிய ''ஐம்பதாம் நாளை'' விட மிகப்பெரிய நாளாகும். அசிரிய ஏடுகளிலிருந்தும் விவிலியத்தின் மற்ற ஏடுகளிலிருந்தும் அசிரியாவைப் பற்றி நாம் அறிவதில் யாவேயை வழிபட நினிவே மக்கள் மனந்திரும்பியது பற்றிய சான்றுகள் ஏதுமில்லை. சிலர் கூறுவதுபோல் மனமாற்றம் தற்காலிகமானதே என்பது கதையின் குறிக்கோளையே அழித்துவிடுகிறது. ஒரே இரவில் ஒரு செடி மனிதனது உயரத்திற்கு மேலாக வளர்கிறது. இஸ்ராயேல் வரலாற்றில் அருஞ்செயல்கள் மனித மீட்பு வரலாற்றுத் திட்டத்தில் நிலையான விளைவுகளை விட்டுச் சென்றுள்ளன. ஆனால், இந்தக் குறுகிய கதையில் வரும் மிக அதிகமான அருஞ்செயல் கதைகள் அப்படிப்பட்ட எந்த விளைவுகளையும் விட்டுச் சென்றதாகத் தெரியவில்லை.

தொல்பொருளியல் சான்றுகள் இந்நூல் ஒரு வரலாறு என்பதற்கு எதிராக உள்ளன. நூலை இயற்றியவருக்கு நினிவே நகரைப் பற்றி எதுவும் தெரிந்திருப்பதாகத் தெரியவில்லை. கதையில் நினிவே நகரத்தைக் குறுக்கே நடந்து செல்ல மூன்று நாட்கள் எடுக்கும் என்று கூறப்படுகிறது (3:3). அப்படியாயின் நினிவே நகரம் 80 கி.மீ. விட்டமுள்ள பெரும் நகரமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், புதைபொருள் ஆய்வுகள் நகரத்தின் சுற்றளவு 13 கி.மீட்டருக்கும் குறைவானதே என்று காட்டுகின்றன. குறிக்கப்படும் மக்கள் தொகையும் நகருக்கு மிகப் பெரியதாக உள்ளது. ''நினிவே அரசன்'' என்ற பட்டம் விவிலியத்தின் மற்ற நூல்களில் காணப்படவில்லை. அசிரிய அரசன் ''அசூரின் அரசன்'' என்றே அழைக்கப்பட்டான். மேலும், நினிவே வீழ்ச்சிக்குப் பின்னரே (கி.மு. 612), இந்நூல் எழுதப்பட்டது என்று சுட்டிக்காட்டப் பல சான்றுகள் உள்ளன.

கதையின் தலைவர், 2 அர 14:25-இல் குறிக்கப்படும் யோனாதான் என்று 1:1 கூறுகிறது. அதாவது, இரண்டாம் எரொபவாமின் ஆட்சிக் காலமாகும் (கி.மு. 783-743). இக்காலத்தில் அசிரிய மன்னர்கள் அசூரில் தங்கினர், நினிவேயில் அன்று.

நினிவே சனகெரிபு காலத்தில்தான் (760-680) தலைநகராகியது. மேலும், நினிவேயின் அரசன் யார்? எதிலிருந்து நினிவே மக்கள் மனந்திரும்பினர்? பிற்காலத்தில் யோனாவும், நினிவே மக்களும் என்ன ஆயினர்? இந்நூல் வரலாற்று நூல் என்றால், அதில் இத்தகைய விவரங்களை நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், ஆசிரியர் இவை பற்றி அக்கறை கொள்ளவில்லை. இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்குங்கால் ஆசிரியர் வரலாற்றுக்காக அன்று, வேறொரு நோக்கத்திற்காக, அதாவது போதகம் அளிப்பதற்காக, இந்நூலை எழுதினார் என்பது தெளிவாகிறது. இதற்காக ஓர் உவமைக் கதையை எழுதினார். இதுவே இப்போது ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளும் ஒருமித்த கருத்தாகும். பழைய ஏற்பாட்டு உவமைகளின் (2 சாமு 13:1-14; 14:6-8; 1 அர 20:39-41; எசா 5:1-6; 28:24-28) நெருக்கமான அமைப்பு, உயிர்ச் சித்திரத்தன்மை, சுருங்கச் சொல்லுதல் ஆகிய பண்புகள் இந்நூலில் காணப்படுகின்றன. நூல் தன் தலைவனை அடையாளம் காட்டுகிறது. அவரது பண்பை வரலாற்றுத் தோற்றத்துடன் விவரிக்கிறது.

உவமை என்ற அளவில், பெயர்களையும், காலத்தையும் குறிப்பிட எந்த முயற்சியும் நூலில் காணப்படவில்லை. முக்கிய நிகழ்ச்சிக்கு அப்பால் கதையைத் தொடர ஆசிரியர் முயலவில்லை. பிறஇன மக்களே கதையில் முக்கியத்துவம் பெறுகின்றனர் (1:3.5-6; 4:1-4.10-11). 1:16-இல் வரும் நிகழ்ச்சிகளைப் பற்றி யோனாவோ, ஆசிரியரோ எப்படி அறிந்தனர் என்பது பற்றி விளக்கம் தரவில்லை. வேறு மொழி பேசுபவர்களுக்கு இறைவாக்கினர் தமது போதகத்தை எப்படிப் புரியவைத்தார் என்பதும் விளக்கப்படவில்லை. நல்ல சமாரியன் உவமைபோல், இஸ்ராயேலர் வெறுத்தவர்களைக் கதையின் முக்கிய பாத்திரமாக்குவது, போதகத்தை வலியுறுத்த பெரிதும் உதவுகிறது. ஓர் எபிரேய இறைவாக்கினர் போதிக்க, தபசு செய்து மனந்திருப்பத் தகுதியுடைய நாடுகளில் எல்லாம் கடைசி நாடு, யூதர் கருத்துப்படி, அசிரியாவாகத்தான் இருக்க முடியும்; இஃது இறைவனுடைய இரக்கத்தைப் பெறத் தகுதியற்றது. அவ்வளவுக்கு யூதர்கள் அசிரியாவை வெறுத்தனர்.

இந்த உவமைக் கதையில் ஓரளவு உருவகப் பண்புகளும் உண்டு. கடந்த காலத்தில் வாழ்ந்த ஒன்றும் அறியப்படாத ஓர் இறைவாக்கினர் ஒரு ''வில்லனாகத்'' தோன்றுகிறார். புறா என்று பொருள்படும் பெயருடைய யோனா இஸ்ராயேலைக் குறிக்கிறார். நினிவே, புறஇன உலகம் முழுவதையும் குறிக்கிறது. யாவேயையும் அவரைப் பற்றிய இறையொருமைக் கோட்பாட்டு அறிவையும் புறஇன மக்களுக்கு எடுத்துச் சொல்ல இஸ்ராயேல் அழைக்கப் பட்டது. ஆனால், இஸ்ராயேல் இக்கடமையிலிருந்து பின்வாங்கியது; அப்பணியை நிறைவேற்ற மறுத்தது. யோனா தர்சிசுவுக்கு ஓடிப்போவது, நாடுகடத்தலுக்குமுன் தூதுரைக்க இஸ்ராயேல் மறுத்ததைக் குறிக்கிறது. புயலால் யோனா துன்புறுகிறார்; மீனால் விழுங்கப்படுகிறார். இஸ்ராயேல் தனது கீழ்ப்படியாமைக்காக பாபிலோனால் விழுங்கப்பட்டது (எரே 51:34). யோனா மீன்வயிற்றில் செய்ததுபோல், நாடுகடத்தப் பட்டபோது இஸ்ராயேல் யாவேயிடம் திரும்பியது; எழுபது ஆண்டு நாடுகடத்தலுக்குப்பின் விடுதலை அடைந்தது. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் தூதுரைக்க இரண்டாம் முறையாக இஸ்ராயேல் கட்டளை பெறுகிறது. இப்போதும் இறைவனது கட்டளைக்குப் பணிய இஸ்ராயேல் முரண்டு செய்தது. உருவகத்தின் இக்கட்டத்தில் ஆசிரியர் காலத்தை, நாம் அடைகிறோம். யோனா தூதுரைக்க புறஇன மக்கள் மனம்வருந்தித் திருந்தத் தயாராக இருந்தனர் என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். மனக் கசப்படைந்த, தீய எண்ணமுடைய யோனாவில், அவர் காலத்தில் யூதர்களிடையே நிலவிய குறுகிய மனப்பான்மையையும், சகிப்புத் தன்மையின்மையையும், புறஇனத்தார்பால் காட்டிய வெறுப்பையும் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பெருமளவிற்கு இந்த விளக்கம் உண்மையானாலும், இந்நூலை ஒரு தொடர் உருவகமாக எடுத்துக் கொண்டால் அது தவறான திசையில் இட்டுச் செல்லும். ஏனெனில், கதையில், மீன் தண்டனையின் கருவியன்று, மீட்பின் கருவியாகும். நினிவே மக்களுக்கு யோனா அறிவித்த செய்தி இறையொருமைக் கோட்பாடன்று, தவிர்க்க முடியாத அழிவைப் பற்றியதாகும். ஆகவே, யோனா கதைக்கும் இஸ்ராயேல் வரலாற்றுக்குமிடையே ஒவ்வொரு கட்டத்திலும் இணைவுத்தன்மை காண முயலக்கூடாது. ஆகவே, பெரும்பாலான விளக்கவுரையாளர்கள் இந்நூலை ஓர் உவமையாக ஏற்றுக் கொண்டு விளக்கம் அளிப்பர்.

விவிலியத்தின் உவமைக்கும் உருவகத்திற்குமிடையே துல்லியமான வேறுபாடுகள் இல்லை. உவமை ஒரு முக்கிய உண்மையை எடுத்துக்கூறும் கட்டுக் கதையாகும். இயேசு பயன்படுத்திய உவமைகள் போன்றது இந்நூல். ஆசிரியர் கதை சொல்வதில் வல்லவர். ஊதாரிப் பிள்ளை உவமையில் வரும் மூத்த சகோதரன் (லூக் 15:25-32) ஒரு குறிப்பிட்ட குழுவினரின் மனப்போக்கைச் சித்திரிக்கிறான். அதுபோல் இந்நூல் புறஇனத்தவரை வெறுக்கும் குறுகிய மனப்பான்மையுடைய, சகிப்புத்தன்மையில்லாத ஓர் எபிரேயக் குழுவினரைச் சித்திரிக்கும் கீழ்த்தரமான படமாகும். நாத்தானின் உவமையைக் கேட்டு தாவீது மன்னன் தன் மேலேயே தீர்ப்புக் கூறிக்கொண்டான் (2 சாமு 12:1-7). இந்த உவமை ஒரு வாளைக் கொண்டு குத்துவது போன்றது. ஆசிரியர் தமது காலத்து மக்களைக் குற்றம் சாற்றிக் காயப்படுத்தி, அவர்களது சுயநலத்தைக் கண்டனம் செய்கிறார். ஏனெனில், இவர்கள் உண்மையான இறைவனைப் பற்றிய அறிவை உலகின் பிற மக்களுக்குப் பகிர்ந்தளிக்காது மறைத்தனர். இவற்றைக் கருத்தில் கொண்டால் இந்நூல் உருவகக் கூறுகளைக் கொண்ட உவமையாகும் என்பது தெளிவாகும்.

பழைய ஏற்பாட்டு உவமைகள், கற்பிக்கும் பாடத்தைக் கடைசிப்பகுதியில் தெளிவாகவும், வெளிப்படையாகவும் விளக்குகின்றன. யோனாவின் ஆசிரியர் இத்தகைய விளக்க முடிவுரையைக் கொடுக்கவில்லை. கதை திடீரென்று முடிகிறது. ஆகையால், இந்நூல் ஓர் உவமை என்பதைவிட ஒரு போதகக் கதை, அல்லது மிட்ராக இலக்கியம் என்பது மேல்.

அரசர்கள், எரேமியா, எசேக்கியேல் நூல்களில் காணப்படும் இணைப்பகுதிகளோடு ஒப்பிடுகையில், யோனா நூல் பொதுப் பாணிக் கதையும் அன்று; பழைய ஏற்பாட்டில் நல்ல புலமை பெற்றவரின் படைப்பாகும். அவர் வேத நூலை நன்கு கிரகித்து, அதைத் தமது தனிப்பட்ட போதக நோக்கிற்காகப் பயன்படுத்துகிறார். யோனா நூலோடு ஒப்பிடக்கூடிய, இறைவாக்கினர் செயல்களைப் பொருளாகக் கொண்ட இரு வகைப் பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சியுரைகள் உள்ளன. அவை இறைவாக்கினர் பற்றிய கதைகளும், அடையாளச் செயல்களுமாகும். இறைவாக்கினர் பற்றிய கதைகள் வரலாற்று இலக்கியத்தின் பிற்கால வளர்ச்சியாகும். இவற்றைப் பின்பற்றி ஆசிரியர் தமது பாடத்தைப் போதிக்க வரலாற்று உண்மைகளை எடுத்துச் சுதந்தரமாகப் பயன்படுத்துகிறார் (1 அர 20:35-43; 22:11; 2 அர 13:14-19; எசா 20; எரே 27:1-8; எசே 4:1-15). இறைவாக்கினர் பற்றிய இந்த இருவகை நிகழ்ச்சியுரைகளுக்கும், யோனா நூலுக்கும் உள்ள ஒற்றுமை, ஆசிரியர் சமயச் செய்தி அளிப்பதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார் எனக் காட்டுகின்றன.

இவ்வாறு இஸ்ராயேல் நாடுகடத்தப்பட்டுத் திரும்பிய காலத்து வாழ்க்கைச் சூழ்நிலையில் இந்நூலை நாம் படிக்க வேண்டும். இறைவாக்கினர் நிகழ்ச்சியுரைகள், கதைகள் ஆகியவற்றோடு அது தழுவியுள்ள மூலங்களோடும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டும். நமக்குக் கிடைத்திருக்கும் வடிவில் நூலைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். அப்போது இந்நூல் ஒரு வர

லாற்று நிகழ்ச்சியுரை என்பதை விட, போதகக் கதையின் பண்புகளைக் கொண்ட ஓர் அக்காதா மிட்ராசு இலக்கியம் என்பது தெளிவாகும்.

4. யார், எப்போது, ஏன், எழுதினார்?: இந்நூலின் ஆசிரியர் பற்றி ஒன்றும் தெரிவதற்கில்லை. எப்போது எழுதப்பட்டது என்பது பற்றியும் துல்லியமாகக் கூற முடியாது.

இந்நூலை வரலாறாகக் கருதி விளக்கம் அளிப்பவர்கள் இது கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்பர். 2 அர 14:25-இல் குறிக்கப்படும் இறைவாக்கினர் யோனா தான் இந்நூலை எழுதினார் எனக் கருதுவர். ஆனால், இப்போதைய பெரும்பாலான ஆய்வாளர்கள், இக்கருத்தை ஏற்க மறுத்து, இந்நூல் கி.மு. 400-200-க்கு இடையிட்ட காலத்தில் தோன்றியிருக்க வேண்டும் என்பர். இதற்கு அவர்கள் பின்வருமாறு காரணங்கள் கூறுவர். ஆசிரியர் இறைவாக்கினரைப் பற்றிப் படர்க்கையிலும், முரண் நகைச்சுவையோடும் எழுதுகிறார். இஃது ஆசிரியர் தம்மைப் பற்றி எழுதவில்லை என்று காட்டுகிறது. மீன் இறைவாக்கினரைக் கக்கிய நாட்டின் பெயர், நினிவே அரசனது பெயர் போன்ற பொருள் விவரங்கள் கொடுக்கப்படவில்லை. இவை ஆசிரியர் தமது காலத்து நிகழ்ச்சியைப் பற்றி எழுதவில்லை என்று காட்டுகின்றன. மொழி நடை கி.மு. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. நூலில் பயன்பட்டுள்ள சில சொற்கள், பிற்கால எபிரேயங்களில் தவிர பழைய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப்படவில்லை. நூலில் காணப்படும் அரமேயிக்குப் பண்புகள், இந்நூல் 8-ஆம் நூற்றாண்டுக்கு மிகவும் பிந்திய காலத்தில் தோன்றியது என்று காட்டுகின்றன.

மேலும், இந்நூல் கி.மு.5-ஆம் நூற்றாண்டில் இஸ்ராயேலில் நிலவிய மனப்போக்கையும், பிரச்சனையையும் பிரதிபலிக்கிறது. அப்போது யூதா பரந்த பாரசீகப் பேரரசின் ஒரு சிறிய மாநிலமாகும். புற இன உலகோடு யூத சமூகம் எத்தகைய உறவு கொள்ள வேண்டும் என்பது பற்றிய ஓர் இக்கட்டான பிரச்சனை எழுந்தது. இஸ்ராயேல் புறஇனத்தவர்பால் பின்வரும் இரண்டில் ஒரு போக்கைப் பின்பற்றலாம். ஒன்று யூதர்கள் தங்களைப் பிறரிடமிருந்து பிரித்து, ஒதுங்கி வாழலாம்; சட்டத்தை வேலியாகக் கொண்டு, தங்கள் விசுவாசத்தையும் பாரம்பரியத்தையும் ஆர்வத்தோடு கடைப்பிடித்து பிறரோடு எத்தொடர்பும் கொள்ளாமல் தங்களையே பாதுகாத்துக் கொள்ளலாம். இறைவாக்கினர்களான ஆகாய், செக்கரியா, நாட்டுப்பற்றுடைய நெகேமியா, இறையியல் வல்லுநரான எஸ்ரா ஆகியோரின் நூல்கள் இத்தகைய மனப்போக்கை வலியுறுத்தின. புற இனத்தவரிடமிருந்து இறை மக்களைப் பிரித்துக் காட்டுபவைகளுக்கு முதன்மை அளிக்கப்பட்டது. அவற்றில் சில ஆலய வழிபாடு, சட்டத்தை நுணுக்கமாய்க் கடைப்பிடித்தல், விருத்தசேதனச்சடங்கு, ஓய்வு நாள் அனுசரிப்பு, புற இனத்தவரோடு செய்யும் கலப்புத் திருமணத்திற்கு எதிர்ப்பு, சமாரியரோடு பகை, அன்னியர் அரசுகளுக்கு எதிரான கசப்பான மனநிலை என்பன. இவற்றின் விளைவாக, இஸ்ராயேலர் புற இன மக்களிடமிருந்து பிரிந்து, ஒதுங்கி, கடுமையாக தனித்து வாழ்ந்தனர். குறுகிய நாட்டுப்பற்றும் பிறமதத் துவேசமும் பிற்கால யூதத்துவத்தின் பண்புகளாயின.

இத்தகைய மனப்போக்கு பரவலாக இஸ்ராயேல் சமூகத்தினரிடையே நிலவியிருந்தாலும், எல்லாரும் இந்நிலையை ஏற்றுக் கொண்டனர் என்று சொல்ல முடியாது. முன் கூறப்பட்ட மனப்போக்கை வன்மையாக எதிர்த்துக் கண்டனம் செய்யும் மற்றொரு மனப்போக்கும் காணப்பட்டது என்பதற்கு யோனா நூல் ஒரு சாட்சியாகும். இதன்படி இஸ்ராயேல் யாவேயின் தூதுரைக்கும் அடியானாகப் பணிசெய்யலாம். உண்மையான இறைவனைப் பற்றி தனக்கு அறிவிக்கப்பட்ட தனிச்சிறப்பான வெளிப்பாட்டைப் பிற மக்களோடும் பகிர்ந்து கொள்ளலாம். சிறப்பாக யாவேயின் இரக்கம் எல்லாருக்குமுரியது என்ற பொதுமைப்

பண்பைக் கடைப்பிடிக்கலாம். இப்போக்கு ஏற்கெனவே இரண்டாம் எசாயாவில் சிறப்பிடம் பெற்றிருந்தது.

இந்த இரண்டில் எதைப் பின்பற்றுவது என்பதுதான் பிரச்சனை. இது யோனா நூல் போதிக்கும் பாடத்திற்கும் பின்னணியாக அமைகிறது. புறஇனத்தவர்பால் யூதர்கள் காட்டிய கடும் கசப்புத்தன்மையும் வெறுப்பும் இந்நூலில் பயங்கரமாகச் சித்திரிக்கப்படுகின்றன. ஆனால், இறைவன் யாவர் மேலும் காட்டும் பரிவும் அன்பும், அவரது இரக்கத்தின் பரந்த தன்மை ஆகியவற்றோடு யூத சமூகத்தினரின் குறுகிய பழிவாங்கும் போக்கு ஒப்பிடப்பட்டு வேறுபடுத்தப்படுகிறது; குற்றம் சாற்றப்பட்டுக் கண்டிக்கப்படுகிறது. ஆசிரியர் இறைவன் யாவர் மேலும் காட்டும் அக்கறையையும், அன்பையும், இரக்கத்தையும் பறை சாற்றுகிறார். இஸ்ராயேலுக்கு அளிக்கப்பட்ட தூதுரைக்கும் அழைப்பை நிறைவேற்ற இஸ்ராயேலுக்குச் சவால் விடுகிறார்.

மேலும், நூலில் குறிப்பிடத்தக்க முறையில் அரமேயிக்குப் பண்புகளும், பிற்கால எபிரேயப் பண்புகளும் காணப்படுகின்றன. ''விண்ணகக் கடவுளாகிய ஆண்டவர்'' (1:9) போன்ற சில சொற்கள் யூதர்களிடையே பிற்காலத்தில்தான் பயன்பட்டன (எஸ் 1:2; 2:11;...நெகே 1:4.5; 2:4; தானி 2:18. 37;...). ஆசிரியர் எரேமியாவைத் தழுவி எழுதுவதாகத் தெரிகிறது. இஃது அசீரியப் பேரரசு அழிந்து நீண்ட காலத்துக்குப்பின் இந்நூல் எழுதப்பட்டது என்பதைச் சுட்டுகிறது. எபிரேய விவிலியத்தில் இந்நூல் இறைவாக்கினர் தொகுப்பில் சேர்க்கப்படவில்லை; மாறாக, போதக நூல்கள் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. இஸ்ராயேல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்புதான் இத்தகைய போதக நூல்கள் தோன்றின. வரலாற்று வடிவில் போதகம் அளிக்க பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் விரும்பிய காலத்தில்தான் (யோபு, யூதித்து, எஸ்தர், தானியேல்) இந்நூல் எழுதப்பட்டது என்று இலக்கியப் பண்புகள் காட்டுகின்றன.

இந்நூல் சீராக்கு நூலுக்குமுன் (கி.மு. 190) எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், சீராக்கு ஆசிரியர் ''பன்னிரு இறைவாக்கினர்களைக்'' குறிப்பிடுகிறார். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்நூல் 400-200-க்கு இடையிட்ட காலத்தில், அதாவது எஸ்ரா-நெகேமிய நூல்களுக்குப் பின்னும் (397), சீராக்கு நூலுக்கு முன்னும் தோன்றியது என்பது இக்கால ஆய்வாளர்களின் முடிவாகும்.

5. மூலங்கள்: ஆசிரியர் இந்நூலில் பயன்படுத்தியிருக்கும் மூலங்கள் பற்றி வெகு காலமாக பல யூகங்கள் உண்டு. பெர்செயூசும், அன்ரோமெடாவும், கெரிக்கலிசும், கசியோனும், ஓனானெசு என்ற பெயரில் வழிபடப்பட்ட செமித்திய மீன் கடவுளான தேகோனும் ஆகிய பல கதைகளோடு யோனாவும் மீனும் என்ற கதையைத் தொடர்புபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. இக்கதைகளில் எதையும் இந்நூல் தழுவியுள்ளது என்பதற்கு நேரடிச் சான்றுகள் இல்லை. ஆசிரியர் பயன்படுத்தியிருக்கக் கூடிய விவிலிய மூலங்கள் முக்கியமானவையாகும். யோனாநூல் எரேமியா, எசேக்கியேல் ஆகியோரின் நூல்களோடும் தொடர்பு கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. யோனா 3:10; எரே 8:6-7-ஐத் தழுவியுள்ளது. யோனா 3:8-க்கும், எரே 25:5; 26:3; 36:3.7-க்குமிடையில் வாசகத் தொடர்பு இருக்கிறது. யோனா 3:3-க்கும், எரே 36-க்கும் கருத்து ஒப்புமை உண்டு. யோனா 3:8-9-க்கும், எரே 26:2-3-க்கும் இடையில் சொற்களில் ஒற்றுமையுண்டு. யோனா 1-இல் வரும் புயல் விவரிப்பின் சொற்றொகுதி எசே 26-28-ஐ நினைவுபடுத்துகிறது. யோனா 4, 1 அர 19-உடன் ஒப்புமை கொண்டுள்ளது. மேலும், இரண்டாம் எசாயாவில் வரும் புறஇனத்தவர்க்குத் தூதுரைக்கும் கருத்தை மீண்டும் கையாண்டு, அதை இன்னும் தெளிவாகக் கூறுகிறது இந்நூல். இக்கருத்துக்கு எதிராக நிலவிய போக்கையும், எஸ்ரா-நெகேமியா காலத்தில் நிலவிய தனித்திருக்கும், ஒதுங்கியிருக்கும் போக்கையும் கண்டனம் செய்ய ஆசிரியர் முயற்சி

செய்வதாகத் தெரிகிறது. ஆதியாகம முதல் அதிகாரங்களில் காணப்படும் யாவரையும் உள்ளடக்கும் பொதுமைப்பண்பை மீண்டும் நிறுவும் முயற்சியாகும் இந்நூல். இவ்வாறு இந்நூல் முந்தைய விவிலிய இலக்கியங்களைத் தழுவிய தனது போதகத்தை அளிக்கிறது. ஆகவே, இந்நூல் ஓர் அக்காதா மிட்ராசாகும் என்று ஏற்றுக் கொள்ளலாம்.

6. நூலின் ஒற்றுமை: நூலில் ஒற்றுமையில்லை என்று கூறியுள்ளனர் ஆய்வாளர்கள் சிலர். இவர்கள் நூலில் இடைச்செருகல்களையும் இடமாற்றங்களையும் காண்கின்றனர். அதன் விளைவாக, கதையை அதன் மூல வடிவில் திருத்தி அமைக்க எடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகள் செயற்கையாகத் தெரிகின்றன. அண்மைக் காலத்தில் ஆய்வாளர்கள் இந்நூலில் ஒற்றுமையுள்ளது என்றும், 2:2-9 என்ற பகுதியைத் தவிர மற்றப் பகுதிகளை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் எழுதினார்கள் என்று கூற எக்காரணமும் இல்லை என்றும் கூறியுள்ளனர்.

2:2-9 என்ற நன்றியுரைப் பாடல் நூலின் மற்றப் பகுதிகளோடு ஒத்துப்போகவில்லை என்று இப்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். ஏனெனில், இதில் மற்றப் பகுதிகளில் காணப்படும் அரமேயிக்குப் பண்புகள் காணப்படவில்லை. இதன் நடை மற்றப் பகுதிகளிலிருந்து வேறுபடுகிறது. இதை விட முக்கியமானது நன்றியுரைப் பாடலின் பொருள் இது தவறான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சுட்டுவதாகும். இச்சங்கீதம் ஆபத்திலிருந்து விடுதலை பெற்ற சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்ட நன்றியுரைப் பாடலாகும். நீர், மரண ஆபத்துக்கு அடையாளமாகக் கருதப்பட்டது. ஏனெனில் இஸ்ராயேலர், பாபிலோனியர் ஆகியோரிடையே கடல், சாவின் அரசாகக் கருதப்பட்டது. மரண ஆபத்திலிருந்து விடுதலையடைந்த ஓர் இஸ்ராயேலன் பாடிய நன்றிப்பாடலாக இச்சங்கீதம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மீன் வயிற்றில் இச்சங்கீதத்தை ஒருவர் பாடுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. மீனால் கரையில் கக்கப்பட்டு, பாதுகாப்பாக இருக்கும்போது யோனா பாடுவதாக அமைந்திருந்தால் பொருத்தமுடையதாக இருந்திருக்கும்.

இச்சங்கீதம் ஒரு தனிப்பட்ட படைப்பாகும், இதை ஆசிரியரோ அல்லது பிற்காலப் பதிப்பாசிரியரோ இங்கே புகுத்தியிருக்க வேண்டும் என்பர் சிலர். அப்படியே இருந்தாலும் இது தவறான இடத்தில் புகுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சூழ்நிலையைத் தராமல், இச்சங்கீதம் ஆபத்திலிருந்து விடுதலை அடைந்ததற்காகப் பாடும் நன்றியறிதலை எடுத்துக்கூறுகிறது. ஆயினும், இச்சங்கீதம் மூலநூலைச் சேர்ந்ததன்று என்று கூற வேண்டியதில்லை, ஏனெனில், சங்கீதங்கள் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறு எப்போதும் அமைக்கப்படுவதில்லை.

7. புதிய ஏற்பாட்டில் யோனா: ''யோனாவின் அடையாளம்''. இது பற்றி இரு வாசகங்கள் உள்ளன. அவை: மத் 12:39-42; லூக் 11:29-32. அடையாளம் பற்றிய பகுதி லூக்காவில் சிறிது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மூன்று பகலும், மூன்று இரவும் என்பது அடையாளமாக வெளிப்படையாகக் கூறப்படவில்லை. யோனாவின் போதகத்தின் வெற்றியை வலியுறுத்த யோனா திமிங்கலத்தின் விவரத்தை வேண்டுமென்றே மாற்றினாரா என்று உறுதியாகக் கூறமுடியாது. மரண ஆபத்திலிருந்து அடையும் விடுதலை இறைவாக்கினரின் உண்மைத்தன்மையை எடுத்துக் காட்டுகிறது என்பதில் அடங்கியிருக்கிறது யோனாவின் அடையாளம். யோனா போதகத்தின் விளைவான வெற்றி அடையாளத்தின் ஒரு பகுதியே ஆகும். ஆயினும், இருவாசகங்களிலும் இப்பகுதி பற்றிய சொற்கள் ஒரே மாதிரியுள்ளன.

யோனா நூல் வரலாற்றுத் தன்மையுடையது என்று கருதுபவர்கள் யோனா அடையாளம் பற்றிய நற்செய்தி வாசகத்தை எடுத்துக் காட்டுவர். யோனாவின் விடு

தலை கிறிஸ்துவின் உயிர்ப்போடு இணையாக வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஒன்றைப்போல் மற்றதும் வரலாற்றுத் தன்மையுடையது என்பர். நற்செய்தி வாசகம் மூன்று நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறுகிறது. அவை: மீன் வயிற்றில் யோனா தங்கியது, நினிவே மக்கள் மனந்திரும்பியது, தென்னாட்டு அரசி சாலமோனைப் பார்க்க வந்தது என்பன. இந்நிகழ்ச்சிகளை நிறுவ வேண்டிய அவசியம் இயேசுவுக்கு இல்லை. யூதர்களுக்கு மாதிரிகையாக எடுத்துக் காட்டப்பட்ட யோனாவும் நினிவே மக்களும், தென்னாட்டு அரசியைப்போல் ஒரு சூழ்நிலையை எடுத்துக் காட்டுகின்றனர். ஏனெனில், அவற்றிற்கு வேதாகமமே சான்று கூறுகின்றன. எல்லாம் ஒரே மூலத்தைக் கொண்டுள்ளன. அவ்விவரிப்பின் இலக்கியத் தன்மை அவ்வளவு முக்கியத் தன்மையுடையதன்று. இவ்வாறு மனந்திரும்புவோருக்கு மாதிரிகையாக மகதலா மரியாவையும், ஊதாரிப்பிள்ளையையும் திருச்சபைப் போதகர்கள் பயன்படுத்தலாம்.

பழைய ஏற்பாட்டு வாசகங்கள் புதிய ஏற்பாட்டில் எடுத்துக் காட்டப்படுவது பற்றிய நவீன ஆய்வுகள், பழைய ஏற்பாடு அதன் பல்வேறுபட்ட இலக்கியங்கள் வேறுபடுத்தப்படாமல், எப்போதும் ஒரே தொகுப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டு எடுத்துக் காட்டாகப் பயன்பட்டுள்ளது என்று தெளிவாகக் காட்டுகின்றன. 1 கொரி 10:4-இல் வரும் பாறை அல்லது 2 திமொ 3:8-இல் வரும் யன்னேயும் யம்பிரேயும் போன்று, நற்செய்தியில் வரும் யோனாவும் வரலாற்றுத் தன்மையுடையவர் அல்லர். நல்ல சமாரியன் உவமை போன்று இதுவும் ஒரு கற்பனை நிகழ்ச்சியாகும். வரலாற்றுச் சுட்டிக் காட்டுதல்கள் போன்று ஆற்றலுடையதாகும்.

திருச்சபைத் தந்தையருள் பலர் இந்நூலை வரலாற்றுத் தன்மையுடையது என்று ஏற்றுக்கொண்டனர். ஏனெனில், அவர்கள் காலத்தில் யோனாநூல் வரலாற்று இலக்கிய வகையில் சேர்க்கப்பட்டிருந்தது. அதற்கேற்றவாறு இந்நூலின் வரலாற்றுத்தன்மை பற்றிய முடிவுகளும் அமைந்திருந்தன. அதன் விளைவாக இந்நூலில் வரும் அருஞ்செயல்கள் நடந்திருக்கக்கூடும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டன. திருச்சபைத் தந்தையருக்குக் கிடைத்திருந்ததை விட, பழங்கால இலக்கிய வகைகள் பற்றி அதிக அறிவை நாம் இப்போது கொண்டிருக்கிறோம். அதன் விளைவாக யோனா நூல் வரலாற்று நூல் அன்று, போதகக் கதை வகையைச் சேர்ந்த மிட்ராசு நூல் என்று ஏற்றுக்கொள்ளப் போதிய காரணங்கள் உள்ளன.

8. நூலின் திட்டம்:

யோனாவின் தூதிற்கேற்ப இந்நூலை இரண்டு பாகமாகப் பிரித்துத் திட்டம் செய்யலாம்.

I. முதல் தூது (1:1-2:11).

அ. யோனா தூதுரைக்கக் கட்டளை பெறுதல் (1:1-2).

ஆ. யோனா தர்சிசுக்கு ஓடுதல் (1:3).

இ. புயல் (1:4-16).

1) 1:4-9 : யோனா ஐயத்துக்குரியவராகிறார்.

2) 1:10-12 : புயலின் பொருள்.

3) 1:13-16 : யோனா கடலில் எறியப்படுதல்.

ஈ. யோனா காப்பாற்றப் படுகிறார் (2:1-11).

1) 2:1 : பெரிய மீன் யோனாவை விழுங்குகிறது.

2) 2:2-10 : யோனாவின் நன்றியுரைப் பாடல்.

3) 2:11 : யோனா விடுதலை அடைதல்.

II. இரண்டாம் தூது (3:1-4:11).

அ. யோனா மீண்டும் தூதுரைக்கக் கட்டளை பெறுதல் (3:1-4).

1) 3:1-2 : ஆண்டவரது செய்தி.

2) 3:3-4 : யோனாவின் அறிவிப்பு.

ஆ. நினிவே மக்கள் மனந்திரும்புதல் *(3:5-10).*

1) 3:5-9 : நினிவே மக்களின் மனத் துக்கமும் மாற்றமும்.

2) 4:4 : ஆண்டவரது பதில்.

ஈ. யோனாவும் ஆமணக்குச் செடியும் *(4:5-11).*

1) 4:5-8 : யோனாவின் மனக்கசப்பு.

2) 4:9-11 : ஆண்டவரது கண்டனம்.

9. நூலின் போதகம்: இந்நூலை எழுதத் தூண்டிய குறிப்பிட்ட சூழ்நிலையைப் பற்றி எந்தக் குறிப்பையும் நூல் கொடுக்க வில்லை. ஆசிரியரைப் பற்றியோ, யாருக் காக எழுதினார் என்பது பற்றியோ ஒன்றும் கூறப்படவில்லை. நூலுக்குப் பின்னணி யான வாழ்க்கைச் சூழ்நிலை பற்றி நாம் ஒன்றும் உறுதியாக அறிய முடியாவிட்டா லும், நூலின் பொதுவான பண்பாட்டுப் பின்னணி பற்றி ஒரு சிறிது அறிகிறோம். இந்தப் பின்னணியில் ஆசிரியரது போதக நோக்கு தெளிவாகிறது. தங்கள் எதிரிகளின் மீட்பைவிட அவர்களின் அழிவையே அதிக மாக எதிர்பார்க்க இஸ்ராயேலர் சோதிக்கப் பட்ட காலத்தில், இறைவனது இரக்கம் எவ்வளவு தூரம் போகும் என்பது பற்றி ஓர் ஒப்பற்ற செய்தியை அளிக்கிறார் ஆசிரியர். இச்செய்தி பழைய ஏற்பாட்டு வரலாற்றில் உன்னதமானதொன்றாகும். எல் லோருக்கும், இஸ்ராயேலின் கொடுமை யான பகைவர்களுக்கும்கூட, மீட்பு உண்டு என்ற செய்தி மனிதர்க்கு மகிழ்ச்சி அளிக்க வேண்டும். நல்விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்.

அ) இந்நூலை ஓர் உவமையாகவோ, மிட்ராசு நூலாகவோ எடுத்துக் கொண்டால் இதன் போதகம் என்ன? தாவீதுக்கு இறை வாக்கினர் நாத்தான் அளித்த உவமை போன்று (2 சாமு 12), புதிய ஏற்பாட்டில் வரும் திராட்சைத் தோட்டக் குத்தகைக்காரர் உவமை போன்று *(மத் 21:33-46)* ஆசிரியர் காலத்து வாசகர்களுக்கு அவர்கள் இருக்கும் விதத்தில் அவர்களைப் படம் பிடித்துக் காட்டுவது இந்நூலின் நோக்கங்களில் ஒன் றாகும். இறைவனது அன்பு இஸ்ராயேலர் களான தமக்கு மட்டுமே உரியது என்று கருதி, அது யாவர்க்குமுரியது என்று ஏற்றுக்கொள்ள மறுத்த இஸ்ராயேல் மக்க ளுக்கு அவர்களது அற்பத்தனத்தையும், சுயநலத்தையும் அறிவிலித்தன்மையையும் எடுத்துக்காட்டி, எரேமியாவின் போத னைக்கு ஏற்ப (எரே 18:8தொ), இஸ்ராயே லுக்கு எதிரான இறைவனது அச்சுறுத்தல் கள் மற்றும் நோன்பு செய்தால் நீக்கப்படு வது போன்று, புறஇனத்தாருக்கு எதிரான இறைவனது அச்சுறுத்தல்களும், அவர்கள் நோன்பு செய்தால், நீக்கப்படலாம் என்று படிப்பிக்கவும் இந்நூல் எழுதப்பட்டது.

மனிதர்கள், அவர்கள் யூதர்களோ, புற இனத்தவரோ யாவரையும் இறைவன் அன்பு செய்கிறார், அவர்கள் நலனில் அக்கறை காட்டுகிறார் என்பது இந்நூலின் அடிப்படைப் போதகமாகும். அப்போதகம் பழைய ஏற்பாட்டுத் தொடக்கத்திலிருந்தே தெளிவாக உள்ளது. ஆனால், தேர்ந்தெடுக் கப்பட்ட மக்களின் பொறாமையாலும், குறுகிய மனப்போக்காலும் அது மங்கிப் போயிற்று. ஆதி *3:15*-இல் எல்லா மக்களுக் கும் நம்பிக்கை அளிக்கப்படுகிறது. தேர்ந் தெடுக்கப்பட்ட இனத்தின் தந்தையான ஆபிரகாமை இறைவன் அழைத்தபோது, ''பூமியிலுள்ள இனமெல்லாம் உன் வழி யால் ஆசீர்வதிக்கப்படும்'' *(ஆதி12:3)* என்று அவருக்கு இறைவன் வாக்களித்தார். ஆபிர காமும் அவரது சந்ததியினரும் அனுபவித்த சலுகைகள் காலப்போக்கில் பிற இனத்த வருக்கும் உரியதாக வேண்டும். ஒருவர் வழியாகப் பலர் பயனடைவதும், ஓர் இனத்தின் வழியாக மனுகுலம் முழுவதும் மீட்படைவதும், ஒரு பரிசுத்த நாட்டின் வழியாக எல்லா நாடுகளும் அறிவொளி பெறுவதும் இறைவனது நோக்கமாகும். பொறுப்பில்லாமல் சலுகைகளை அனுப விக்க மட்டும் இஸ்ராயேலைத் தமது

ஊழியனாக இறைவன் தேர்ந்தெடுக்கவில்லை. தொடக்க முதல் இறைவனது மீட்பளிக்கும் திட்டம் யாவரையும் உள்ளடக்கியதாகும். எசா 2:2-3; மீக் 4:1-4-இல் இறைவனது வழிகளைக் கற்றுக்கொள்ள எல்லா மக்களும் இறைவனது மலையில் ஏறுவதாக இறைவாக்கினர்கள் காண்கின்றனர். சங் 72; 87; 117, இறையரசு எல்லாருக்குமுரியது, அவர் எல்லாரையும் அன்பு செய்கிறார் என்று காட்டுகின்றன. ''உலகத்தின் எல்லை வரையில் நமது மீட்பு எட்டும்படி புறவினத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினோம்'' (எசா 49:6). ஆசிரியரது காலம்வரை இத்தூதுரைக்கும் அலுவலைச் செய்ய இஸ்ராயேல் தவறிவிட்டது. இந்நூலில் இறைமக்களை உலகத் தூதுக்கு ஆசிரியர் எக்காளத் தொனியுடன் அழைக்கிறார்.

இறைவனது இரக்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டும் உரியதன்று, அது யாவருக்கும் உரியது என்று நூலில் விவரிக்கப்படுகிறது. அதன் விளைவாக இஸ்ராயேலின் இறைவாக்கினர்கள் புறவினத்தார்க்கு எதிராகக் கூறிய அச்சுறுத்தல்கள் மீண்டும் நீக்கப்படக் கூடாதவையன்று. இஸ்ராயேலர், தாங்கள் தீய வழிகளிலிருந்து மனந்திரும்பினால், தங்களுக்கு எதிராகக் கூறப்பட்ட அழிவுகளை, யாவே நிறைவேற்ற மாட்டார் என்ற விசுவாசத்தைப் போற்றி வந்தனர். யாவேயின் நாள் பற்றிய விவரிப்புக்குப்பின், இறைவாக்கினர் யோவேல், ''இப்பொழுதாவது நோன்பிருந்து அழுது கொண்டு உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்புங்கள். ஏனெனில், அவர் அருளும் இரக்கமுமுள்ளவர், நீடிய பொறுமையுள்ளவர், நிலையான அன்புள்ளவர், செய்யக் கருதிய தீமையைக் குறித்து மனம் மாறுகிறார்... ஒரு வேளை அவர் திரும்பவும் மனதை மாற்றிக்கொண்டு உங்களுக்கு ஆசி வழங்க மாட்டாரென யார் அறிவார்?'' என்று கூறுகிறார் (யோவேல் 2:12-14; மேலும் காண்க. நெகே 9:31; சங் 103:8-12). யோவேலின் சொற்களே யோனா 3:9-இல் பயன்படுத்தப்பட்டுள்ளன. புறஇன அரசனும் இதே நம்பிக்கையை எடுத்துக் கூறுகிறார். யோனாவும் மிகுந்த தயக்கத்தோடு இந்த உண்மையை ஏற்றுக் கொள்கிறார். அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் சலுகையாக இதுவரை கருதப்பட்ட யாவேயின் இரக்கம் இங்குப் புறஇன மக்களுக்கு உரியதாக விவரிக்கப்படுகிறது. ''நாம் குறிப்பிட்ட அந்த நாடு தன் தீமையை விட்டுத் திரும்புமாயின், அதற்குத் தீமை செய்ய நினைத்ததற்காக மனம் வருந்துவோம்'' (எரே 18:8) என்ற எரேமியாவின் போதனையை யோனாநூல் ஆசிரியர் விளக்கிக்காட்டி, அப்போதனை புறவினத்தார்க்கும் பொருந்தும் என்று காட்டுகிறார்.

இதன் விளைவாக, நாடுகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள், அவை அறிவிக்கப்பட்ட போது எவ்வளவு நீக்கப்படக் கூடாததாகத் தோன்றினாலும், அவை நிபந்தனைக்குரியவையே. இது யூதர்களுக்கு ஓர் இடறலாக அமைந்தது. ஏனெனில், ஓர் இறைவாக்கினர் யாவேயின் பெயரால் பேசினார் என்பதற்குச் சான்று அவ்வாக்கு நிறைவேறுதலாகும் (உப 18:21). இப்படியிருக்க, யாவே புறவினத்தாரை அழிக்கவில்லை என்றால் இஸ்ராயேலின் அழிவை மட்டுமன்று, அதன் வருங்கால மகிமையையும் முன்னறிவித்த இறைவாக்குகளையும் எப்படி ஏற்றுக் கொள்வது? ஆசிரியர் இப்பிரச்சனையை எதிர் கொள்கிறார். நூலின் முதற்பகுதியில், யோனா, அவர் விரும்பா விட்டாலும், யாவேயின் இறைவாக்கினராக ஐயமறக் காட்டப்பெறுகிறார். இரண்டாவது பகுதியில் யோனாவின் தூதும், அதன் விளைவும் சிறப்பித்துக் காட்டப்பெறுகின்றன. ''இன்னும் நாற்பது நாட்களில் நினிவே வீழ்த்தப்படும்'' (3:4). இதைவிட நிபந்தனையற்ற செய்தி ஒன்று இருக்க முடியாது. ஆயினும், இந்த அச்சுறுத்தலும் நிபந்தனைக்குரியதே என்று ஆசிரியர் காட்டுகிறார். ஏனெனில், ''நாம் அவர்களுக்குச் செய்யப் போவதாகச் சொல்லியிருந்த தீங்கைக் குறித்துக் கடவுள் தம் மனத்தை மாற்றிக் கொண்டு, அதைச் செய்யாது விட்டு விட்டார்'' (3:10).

யாவே யாவரையும், புறவினத்தாரையும், இஸ்ராயேலால் மிகவும் வெறுக்கப்பட்ட அசீரியர்களைக்கூட, அன்பு செய்கிறார். இதை யோனா ஏற்கெனவே நன்கு அறிந்திருந்ததால் அவர் இறைவனது கட்டளைக்குப் பணிய மறுத்தார் (4:2). நினிவே மக்கள் மனத்துக்கப்பட்டு நோன்பு இருந்ததால்' பரிவும் இரக்கமும் உள்ள யாவே அவர்களை அழிக்கப்போகும் தமது திட்டத்தைக் கைவிட்டு விடுவார்; அவர்களை மகிழ்ச்சியோடு மன்னித்துக் காப்பாற்றுவார் என்று யோனா அஞ்சினார். கசப்பும் வெறுப்பும் நிறைந்த யோனாவின் மோசமான படத்துக்கருகில், ''பரிவும் இரக்கமும், நீடிய பொறுமையும் அன்பும் உடைய'' (4:2) இறைவனது அழியாத அழகிய சித்திரம் ஒன்றையும் ஆசிரியர் வரைகிறார். யோனாவின் வரைக்குட்பட்ட அனுபவத்தோடு இறைவனது வரையற்ற இரக்கம் ஒப்பிடப்பட்டு வேறுபடுத்தப்படுகிறது. இறைவன் நினிவே மக்களையும் விலங்குகளையும் கூட, காப்பாற்ற ஏங்குவதில் அவரது உருக்கமான, மென்மை மிக்க பரிவு மிளிர்கிறது. மனுகுலம் முழுவதையும் இறைவன் அன்பு செய்கிறார். அவரது படைப்பு அனைத்தின் மேலும் அவரது பரிவிரக்கம் நாடிச் செல்கிறது. இறைவன் யாவரையும் வரையின்றி அன்பு செய்து, அவர்கள் மீட்படைய திருவுள்ளம் கொள்கிறார். இச்செய்தியை அளிப்பதில் யோனா நூல் மற்றுமொரு மூல நற்செய்தியாகும். கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குறுகிய மனப்பான்மையுடைய யூதர்கள் செய்ய மறுத்ததை அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஒளிபெற்றபின் அருளன்போடு செய்வர் (அ.ப. 10). அதாவது, நற்செய்தியை எல்லாப் படைப்புக்களுக்கும் போதித்து, இறைவனது வெளிப்பாட்டைப் புறவினத்தார்க்கும் அளிப்பர்.

ஆசிரியர் மனிதனது பாவத்தன்மையைத் தட்டிக் கழிக்கவில்லை. நினிவே ஒரு தீய நகரமாகும். அதன் குடிமக்கள் மனம் வருந்தினால் ஒழிய, எல்லாரும் அழிவர். ஆயினும், பிறவினமக்களை நூல் அவர்களுக்குச் சாதகமான ஒளியில் விவரிக்கிறது. புயலின்போது மாலுமிகள் உடனே தங்கள் கடவுள்களிடம் வேண்டுகின்றனர். யோனாவின் ஆலோசனைக்குப் பின்னும் அவரைக் கடலில் எறிய மிகவும் தயங்குகின்றனர். கடல் கொந்தளிப்பு அடங்கியபின் இறைவன்பால் பெரிதும் அச்சம் கொள்கின்றனர். அவருக்குப் பலியிட நேர்ச்சைகள் செய்கின்றனர். நினிவே மக்கள் இறைவனை விசுவசித்தனர். அவரது செய்தியைக் கேட்டு ஏற்றுக் கொண்டனர். உண்மையிலேயே மனம் வருந்தி நோன்பிருந்து, விடுதலைக்காக உருக்கமாக வேண்டுகின்றனர். நூலில் பிறவினத்தார் அனைவரும் நல்லவர்களாகவும், சமய உயர்வுடையவர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். புறவினத்தவரது நற்பண்புகளை, யூதசமூகத்தில் தனித்து ஒதுங்கியிருக்கும் பண்பு புறக்கணித்தது. பிற இனத்தவரில் சிலரிடமாவது போற்றத்தக்க நற்குணங்கள் உண்டு என்று நூல் விவரிக்கிறது. இதே காலத்தில் எழுதப்பட்ட ரூத்து நூலும் இதையே வலியுறுத்துகிறது. அதில் கதாநாயகியான ரூத்து பிரமாணிக்கமுள்ள அன்பின் உருவாகத் திகழ்கிறாள். தாவீதின் மூதாதையருள் ஒருத்தி மோவாபு இனத்தைச் சார்ந்த புறவினத்தாள். யூத சமூகம் மட்டும் இறைவன் அளிக்கும் சலுகைகளுக்கும், ஆதரவுக்கும், புண்ணிய வாழ்வுக்கும் ஏகபோக உரிமை கொண்டது அன்று. வாய்ப்புக் கிடைத்தால் இறைவனது செய்தியை ஏற்றுக் கொள்பவர்கள் உலகில் பலர் உள்ளனர். தீயவர்களுக்கும் நம்பிக்கையில்லாமல் போகவில்லை. தீய நகரங்களும் புறக்கணிக்கப்படுவதில்லை. நல்லவர்களும், தீயவர்களும் மனம் திரும்ப வேண்டும். இறை ஆவியின் செயலால் அவிசுவாசிகளும் இறைவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இஸ்ராயேல் இறைவனைப் பற்றித் தூதுரைக்க வேண்டும்; அவருக்குச் சாட்சி பகர வேண்டும். இதற்கு இஸ்ராயேல் அழைக்கப்பட்டிருக்கிறது என்று யோனா ஆசிரியர் உறுதியோடும் உற்சாகத்தோடும் அறிவிக்கிறார்.

ஆ) அடுத்து "எல்லாருக்கும் மீட்பு உண்டு" என்ற பொதுமைக் கருத்தின் வளர்ச்சியில் யோனா நூல் முக்கிய இடம் வகிக்கிறது. இக்கருத்து இருவகைப்படும். ஒன்று ஆலயத்தையும் தாவீது மரபையும் மையமாகக் கொண்டது. மற்றது எல்லாத் தனிநாட்டுப் பண்புகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டது; எல்லை கடந்தது. இறைவாக்கினர் ஆமோஸ் ஒருவகை எதிர்நிலையான பொதுமைக் கோட்பாட்டைப் போதித்தார். அது யாவேயின் முன் எல்லா மனிதரும் குற்றமுள்ளவர்கள் என்பதாகும். எசாயா நேர்நிலையான, ஆனால் மிகவும் மையப் படுத்தப்பட்ட பொதுமைக் கோட்பாட்டைப் போதித்தார். அதில் எருசலேம் ஆற்றல் மிக்க ஆன்மீக மையமாகத் திகழ்ந்தது (எசா 2:2-5). புற அடையாளங்களை விட உள்ளார்ந்த மனந்திரும்புதலை வலியுறுத்துவதில் எரேமியா ஒருபடி முன்னேறுகிறார். இது நாட்டுப்பற்று குறைந்த பொதுமைக் கோட்பாட்டிற்கு வழிகோலுகிறது. இரண்டாம் எசாயாவில் பொதுமைக் கருத்து எருசலேமோடு கொண்ட தொடர்பிலிருந்தும் இன்னும் அதிகமாக விடுவிக்கப்படுகிறது (எசா 40-55). ஆயினும், நாடுகடத்தப்பட்டுத் திரும்பியபின், ஆலயம் மீண்டும் அமைக்கப்படுகிறது. அஃதோடு எருசலேமின் முக்கியத்துவம் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் வலுப்பெறுகிறது (எசா 56-66). மக்களிடையே சமய ஆர்வம் குறைந்ததால், பரவலான பொதுமைக் கோட்பாடு மலாக்கியாவில் முன்னுக்கு வருகிறது (மலா 1:11). யோனா நூல் இக்கட்டத்தைப் பிரதிபலிக்கிறது எனலாம். ஒருவன் நினிவேயின் குடிமகனாகவோ, புறவின மாலுமியாகவோ இருக்கலாம். அவனும் யாவேயைத் தொழலாம். எருசலேமுக்குப் போகாமலேயே அவனும் மன்னிப்புப் பெறலாம். பழைய ஏற்பாட்டில் இந்த அளவுக்குத்தான் எருசலேமோடு தொடர்பறுந்த பொதுமைக் கோட்பாடு வளர்கிறது. கிரேக்கக் கலாச்சாரம், கலப்புமதம் ஆகிய ஆபத்துக்களின் வருகையோடு எருசலேமும், உண்மையான வழிபாட்டின் மையமாக ஆலயமும் மறுபடி அழுத்தம் பெறுகின்றன. யூதர்களுக்கும், புறவினத்தவருக்கும், கிரேக்கர்களுக்கும், அல்லாதவர்களுக்கும் நற்செய்தி அறிவிக்கப்படுவதோடு புதிய ஏற்பாட்டில்தான் "யாவருக்கும் மீட்பு உண்டு" என்ற பொதுமைக் கோட்பாடு நிறைவடைகிறது.

இ) **மற்றப் போதனைகள்:-** இவை நேரடிப் போதகமில்லை என்றாலும் இக்கதையில் உள்ளடங்கியுள்ளன. யாவே புறஇனத்தவர்க்கும் இறைவனாவார். அவர்கள் மன்றாட்டுக்குச் செவிமடுக்கிறார் *(1:14)*. அவர்களது பலிகளையும், நேர்ச்சைகளையும் *(1:16)*, நோன்பையும், மனத்துக்கத்தையும் *(3:10)* ஏற்றுக் கொள்கிறார். அவர் உலகமனைத்துக்கும் ஆண்டவர். அவர் காற்றுக்கும், கடலுக்கும் கட்டளையிடுகிறார் *(1:4.15)*. கடலையும் கட்டாந்தரையையும் படைத்த அவரே விண்ணக இறைவன் *(1:9)*; விலங்குகளுக்கும், செடிகளுக்கும் *(4:6)*, வெப்பக்காற்றுக்கும் *(4:7)*, படைப்பு அனைத்துக்கும் ஆண்டவர். அவை யாவும் அவரது நோக்கத்திற்கேற்பப் பணி செய்கின்றன.

10. இக்காலத்திற்கு: "இக்கிடையைச் சேராத, வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. அவற்றையும் நான் கூட்டிச் சேர்க்க வேண்டும்" (யோவா 10:6) என்று இயேசு கூறினார். இந்தச் "சேராதவர்களுக்காகவே" திருச்சபை இன்னும் இருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் இவர்களையும் கூட்டிச் சேர்க்க வேண்டும். இதுவே இந்நூல் வழியாக புதிய இஸ்ராயேலாகிய கிறிஸ்தவத் திருச்சபைக்கு இறைவன் எல்லாக் காலங்களிலும் தொடர்ந்து விடும் சவாலாகும். யாவர்க்கும் நற்செய்தியை அளிக்கும் தூதுக்குத் திருச்சபை எப்போதும் அழைப்புப் பெறுகிறது. இந்த அழைப்பைச் செயல்படுத்துவதில் இக்காலத்தில் "குறுகிய மனப்பான்மை", "பரந்த மனப்பான்மை" ஆகிய இருவகை ஆபத்துகள் உண்டு. இரண்டிலும் திருச்சபை அங்கத்தினர்கள், இறைவனது அழைப்புக்கு யோனாவைப்போல் நேரடியாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக எதிர்ப்புக்

காட்டுகின்றனர். தூதுரைக்கும் அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

''திருச்சபைக்கு வெளியே மீட்பு இல்லை'' என்ற கூற்றைக் குறுகிய மனப்போக்கில் புரிந்துகொண்டு, யோனாவைப்போல் இன்றைய கிறிஸ்தவனும் கடின இதயம் கொண்டவனாக இருக்க முடியும். இறைவன் தரும் மீட்பிலிருந்து பிறர் எல்லாம் புறம்பானவர்கள் என்று கருதக்கூடும். இஸ்ராயேலரைப்போல், திருச்சபை அங்கத்தினர்களும் மனுகுலத்திற்குச் சேவை செய்து சாட்சி பகர்வதற்குப் பதிலாக, தனித்திருக்கும், ஒதுங்கியிருக்கும் திருச்சபைக்குள் சுகமாக இருக்கக்கூடும். பிறரோடு பகிர்ந்து கொள்ள நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசத்தை நமது இதயத்துக்குள் பூட்டி வைத்துக் கொள்ளக்கூடும். மனுகுலமனைத்திற்கும் உரிய மீட்பை நமது திருச்சபைக் குழுக்களுக்குள் சுயநலத்தோடு மூடி வைத்துக் கொள்ளக்கூடும். இன்றைய உலகில் கிறிஸ்தவர்கள் புண்ணிய வாழ்விற்கு ஏகபோக உரிமை கொண்டிருக்கவில்லை. இன்றைய சமூக அரசியல் வாழ்வில் ஆண்டவர் பெயரைக் கூப்பிடாதவர்களும், பொறுப்போடு தன்னலந்துறந்து பிறருக்குச் சேவை செய்வதைப் பார்க்கிறோம். இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தால் நற்செய்தியை ஏற்று அதன்படி நடப்பவர்கள் பலர் உண்டு. இவர்களுக்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டும். நமது சொல்லாலும், செயலாலும், வாழ்க்கை முறையாலும் எக்காலத்திலும் எல்லாச் சூழ்நிலையிலும் எல்லாருக்கும் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். இத்தூதுக்குத் திருச்சபை இன்றும், என்றும் அழைக்கப்படுகிறது.

இத்தூதுரைக்கும் அழைப்புக்கு எதிரான மற்றொரு ஆபத்து உண்டு. இஃது ஒரு வகை ''பரந்த மனப்பான்மை'' ஆகும். இஃது ''எல்லா மதமும் சம்மதம்'' என்ற செயலளவில் காட்டும் போக்காகும். இது சில தான்தோன்றி இறையியல் வல்லுநர்களிடையே காணப்படுகிறது. இந்தப் போக்கு கிறிஸ்துவின் வழியாக இறைவன் தரும் மீட்பைப் பறைசாற்றத் தயங்கும், ஏன் மறுக்கும். ஆகவே, இதிலும் நற்செய்தி அளிக்கப்படுவதில்லை. இந்த நஞ்சு திருச்சபையின் பல மட்டங்களிலும் காணப்படுகிறது; தந்திரமாய்ப் பரப்பப்படுகிறது. இம்மனப் போக்குடையவர்களும் நற்செய்தி தூதுரைக்க விடப்படும் சவாலை ஏற்க மறுக்கின்றனர்; தயங்குகின்றனர்.

மேற்கூறிய இரு குழுவினரும் யோனாவைப் போல் நடந்து கொள்கின்றனர். நற்செய்தியை யாவர்க்கும் அறிவிக்கும் தூதை ஏற்க மறுக்கின்றனர். இரு குழுவினரும் ''நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ! எனக்குக் கேடு'' *(1 கொரி 9:16)* என்ற புனித பவுலின், அறைகூவலுக்குச் செவிமடுப்பது நல்லது. திருச்சபையும் அதன் அங்கத்தினர்களும் கிறிஸ்துவின்பால் கொண்ட அன்பால் தூண்டப்பெற்று அவரது நற்செய்தியை எல்லாருக்கும், எக்காலத்திலும், எல்லாச் சூழ்நிலையிலும் அறிவிக்க வேண்டும். அவரது தூதுரைக்கும் அடியார்களாக வேண்டும். அப்படித் தூதுரைக்க மறுக்கும் யோனாவாக, வாசகர்கள் தங்களைக் காணும்போது, இந்நூலின் செய்தி உச்சநிலை அடைகிறது, ஆற்றல் உள்ளதாகிறது. பாவத்தைத் தீர்ப்பிடுவது மட்டும் ஆசிரியரது நோக்கமன்று; இறைவன் தரும் மீட்புச் செய்தியைப் பிறருக்கு அறிவித்து, அவர்களோடு அதைப் பகிர்ந்து கொள்வதற்கு வேண்டிய ஆற்றலுள்ள தூண்டுகோலாகவும் அமைந்திருக்கிறது. இதுவே இந்நூலின் சிறப்பாகும்.

யோனாம் (JONAM)

இயேசுவின் மூதாதையருள் ஒருவர். எலியாக்கிமின் மகனும், யோசேப்பின் தந்தையுமாவார் *(லூக் 3:30).*

ர...ரோ

ரபேக்கா (REBEKAH - பசு, பெண் குதிரை)

இவள் பெத்துவேலின் மகளும், லாபானின் சகோதரியும், ஈசாக்கின் மனைவியும், ஏசா, யாக்கோபு ஆகியோரின் தாயும் ஆவாள்.

ஆதி 24-இல் இவளுக்கும் ஈசாக்கிற்கும் நடந்த திருமணம் விவரிக்கப்படுகிறது. இருபது ஆண்டுகள் மலடியாய் வாழ்ந்த பின், ஈசாக்கின் வேண்டுதலால் இவளுக்கு இரட்டையர்கள் (ஏசா, யாக்கோபு) பிறந்தார்கள் (ஆதி 25:21.26). யாக்கோபையே அவள் அதிகமாக அன்பு செய்தாள். இவள் செய்த சூழ்ச்சியின்படியே யாக்கோபு தன் தந்தை ஈசாக்கின் ஆசீரைப் பெறுகிறார்; முதல் வாரிசு ஆகிறார். இதற்காக ஏசாவிடமிருந்து தப்பியோடிய யாக்கோபு தன் அன்னையை மீண்டும் காண முடியவில்லை. இவளது இறப்பைப் பற்றி வேதாகமத்தில் குறிப்பு இல்லை. ஆனால், மக்பேலா என்ற குகையில் இவள் உடல் புதைக்கப்பட்டிருப்பதாக ஆதி 49:31-இல் கூறப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் உரோ 9:10-12-இல் மட்டுமே ரபேக்காவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு, இறைவனின் தேர்ந்தெடுக்கும் நோக்கத்தின் எடுத்துக்காட்டாக ஆதி 25:23 எடுத்துக் கூறப்படுகிறது.

ராகேலின் கல்லறை (RACHEL'S TOMB)

ராகேல் அடக்கம் செய்யப்பட்ட இடம் பெத்லகேமிலிருந்து வடக்கில் 1.5 கி.மீ. தொலைவில் எருசலேம் சாலையின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ளதாக மரபு (ஆதி 35:19; 48:7).

ஆதியாகமம் பெத்தேலில் இருந்து எப்ராத்துக்குச் செல்லும் வழியில் இவள் இறந்ததாகக் கூறுகிறது (ஆதி 35:16-19). அங்குதான் அவள் அடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ''பெத்லகேம் என்ற எப்ராத்து'' என்பது தவறான அடையாளமாகும். பெத்லகேம் எப்ராத்தா மாவட்டத்திலுள்ளது (ரூத் 4:11; மீக் 5:1).

முதலில் ராகேல் இறந்த இடத்தில் சிறு நினைவுத்தூண் இருந்ததாகவும், பிறகு இஸ்ராயேலின் 12 குலத்தைக் குறிக்க 12 கற்களைக் கொண்ட பிரமிடு அமைப்பு இருந்ததாகவும் கூறுவர். இன்றுள்ள நினைவுச்சின்னம் சிலுவைப்போர் வீரர்களால் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இது குவிமாட அமைப்புக்கொண்டது. கி.பி. 1841-இல் இதை மோன்தோபேரே என்பவர் வாங்கி, இதன் முன் ஒரு செபக்கூடத்தைக் கட்டினார்.

ராகேல் (RACHEL - பெண் ஆடு)

இவள் லாபானின் இளைய மகள். இவள் யாக்கோபின் இரண்டாவது மனைவி. யோசேப்பு, பென்யமின் ஆகியோர் இவளின் புதல்வர்கள். இவளுடைய அத்தையும் மாமியாருமான ரபேக்காளைப் போலவே பழைய ஏற்பாட்டில் கிணற்றடியிலே அறிமுகப்படுத்தப்படுகிறாள் (ஆதி 29:1-4). இந்தக் கிணறு மெசபொத்தாமியாவில் உள்ள காரான் அருகில் உள்ளது. இவளை மணம்முடிக்கும் பொருட்டு யாக்கோபு ஏழு ஆண்டுகள் தன் மாமன் லாபானிடத்தில் வேலை செய்தார் (29:17-20). ஆனால், திருமணத்தன்று லாபான் தன் மூத்தமகள் லேயாவை, யாக்கோபு அறியாவண்ணம், மணவறையில் அமரவைத்து விட்டார். இதனால் ஏமாற்றப்பட்ட யாக்கோபு ராகேலுக்காக இன்னும் ஓர் ஏழாண்டுகள் வேலை செய்து இறுதியில் அவளையும் மணமுடித்துக் கொண்டார் (29:21-30). இவளையே இவர் அதிகமாக அன்பு செய்தார். இவளுக்கு முதலில் பிள்ளைப் பேறு இல்லாததால் தன் ஊழியக்காரியை யாக்கோபிடம் அனுப்பி அவளுக்குப் பிள்ளைகள் பெறச்செய்தாள். அவர்களுக்குத் தானே பெயரிட்டாள் (29:31-30:8) இவ்வாறு அடிமை மூலம் பிள்ளை பெறும் பழக்கம் நூசி கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதியாக இவள் யோசேப்பையும், பென்யமினையும் பெற்

றெடுத்தாள். இந்த யோசேப்பின் புதல்வர்களே எப்பிராயிம், மனாசே என்பவர்கள் (ஆதி 41:50-52). யாக்கோபு தன் சொந்த நாடு திரும்ப முடிவெடுத்தபோது அவனது மனைவிகள் இருவருமே இதற்கு ஒப்புக்கொண்டனர் (ஆதி 31:1-6). ராகேலையும் அவள் மூலமாகப் பிறந்த பிள்ளைகள் இருவரையும் யாக்கோபு அதிகமாக நேசித்தார் என்பது பல இடங்களில் தெரிகிறது (ஆதி 33:1-2). பென்யமின் பிறந்தபோது ராகேல் இறந்தாள். பென்யமின் நாட்டில் உள்ள எப்பிராத்தில் இவள் புதைக்கப்பட்டாள் (35:16-19) பின் அந்த இடத்தில் யாக்கோபு ஒரு கல்லறை கட்டினார்.

ரூத் 4:11-இல் லேயாவும் ராகேலும் இஸ்ராயேல் குலத்தின் தாய்மார்களாகக் கூறப்பட்டுள்ளது. எரேமியா அசீரியாவுக்கு நாடு கடத்தப்பட்ட தம் மக்களைப் பார்த்து ராகேல் அழுவதாகக் கூறுகிறார் (எரே 31:15). புதிய ஏற்பாட்டில் மத் 2:16.18-இல் எரே 31:15 மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

ராக்கா (RACA)

வெறுப்பு, புறக்கணிப்பு, அவமதிப்பு, பழியுரை, வசை ஆகியவற்றை எடுத்துரைக்கும் சொல்லாகும். இஃது ஒரு வேளை, ''அறிவற்ற மடையன்'' என்று பொருள்படும் 'ரக்கா' என்ற அரமேயச் சொல்லிலிருந்து வந்திருக்கலாம். ''தன் சகோதரனை 'முட்டாள்' (ராக்கா) என்பவன், தலைமைச் சங்கத் தீர்ப்புக்குள்ளாவான்'' என்று இயேசு கூறுகிறார் (மத் 5:22).

ராசி (RAZIS)

இவர் எருசலேமின் மூப்பார்களில் ஒருவர். இவருடைய பற்றுதலை முன்னிட்டு யூதருடைய தந்தை என்றழைக்கப்பட்டார். நிக்கானோர், யூதர்கள்பால் தனக்குள்ள வெறுப்பைக் காட்ட, இவரை இழிவுபடுத்த முயன்றான். ஆனால் இவர், ''பாவிகளுக்கு அடிமைப்படுவதையும், தன் பிறப்புக்குத் தகாத நிந்தைக்கு உட்படுவதையும் விடச் சாவதை மேலானதாகத் தேர்ந்துகொண்டு'', தற்கொலை செய்து கொண்டார் (2 மக் 14: 37-46).

ராபா (RAPHA)

காண்க. இராப்பா - 1:727.

ராபி, ரபூனி (RABBI, RABBONI - என் தலைவர்)

மோசேயின் சட்டத்தில் புலமை மிக்கவர்களும், அச்சட்டங்களைப் பிறருக்குக் கற்பிப்பவர்களும் இவ்வாறு அழைக்கப்பட்டனர். பழங்காலத்தில் சட்டம் படித்தவர்களை வேலையாட்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டவும், அவர்களுக்கு மரியாதை கொடுக்கவும் இப்பெயர் பயன்படுத்தப்பட்டது. ஆனால், தற்போது இஃது அதிகாரபூர்வமாக சிலருக்குக் கொடுக்கப்பட்ட பணி ஆகும்.

புதிய ஏற்பாட்டில் பொதுவாக இது சட்டங்களைக் கற்பிப்பவர்களையே குறித்தது (மத் 23:7-8). சில இடங்களில் இச்சொல் திருமுழுக்கு யோவானைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது (யோவா 3:26). மற்ற இடங்களில் இது பெரும்பாலும் இயேசுவையே குறித்தது. இச்சொல் மத்தேயுவில் இருமுறையும், மாற்கில் நான்கு முறையும் பயன்பட்டுள்ளது. நான்காம் நற்செய்தி இப்பெயரால் இயேசுவை மிகவும் மேன்மைப்படுத்துகிறது (யோவா 1:38.49; 3:2; 4:31; 6:25; 9:2; 11:8; 20:16).

ராமசேசு (RAAMSES, RAMESES)

காண்க. இராமசேசு - 1:728.

ராமா (RAMAH)

காண்க. இராமா - 1:728

ராமாத்தயிம் - சோப்பிம் (RAMATHAIM -ZOPHIM)

காண்க. இராமா 5 - 1:728.

ராமாவினர் (RAMATHITE)

காண்க. இராமாவியர் - 1:729.

ராமோத்து - கிலயாது (RAMOTH - GILEAD)

காண்க. இரோமோத்து - கிலயாது - 1:730.

ரிம்மோனோ (RIMMONO)

காண்க. இரிம்மோனோ - I:733.

ரிம்மோன் (RIMMON)

காண்க. இரிம்மோன் - I:733.

ரிம்மோன் பாரேசு (RIMMON PEREZ)

காண்க. இரிம்மோன் பேரேசு - I :733.

ரின்னா (RINNAH)

காண்க. இரின்னா - I :733.

ரூகாமா (RUHAMA)

காண்க. உருகாமா - II:76.

ரூத்து (RUTH - தோழி, திருப்தி)

ஒரு மோவாபியப் பெண். இவள் ரூத்து நூலின் கதாநாயகி ஆவாள். இவள் யூதாவிலுள்ள பெத்லகேமிலிருந்து குடியேறிய எபிரேய மகுலோனை மணந்தாள் (*ரூத் 1:2-5*). அவர் இறந்தபின், இவள் தன் மக்களிடம் போவதற்குப் பதிலாக, தன் மாமி நகோமியோடு பெத்லகேமுக்குத் திரும்பினாள். அங்குத் தன் கணவனுடைய உறவினரான போவாசை மணந்து தாவீதின் தந்தையான ஈசாயின் தந்தை ஓபேதுவைப் பெற்றாள். இவ்வாறு ரூத்து தாவீதின் மூதாதையும், அதனால் இயேசுவின் மூதாதையும் ஆவாள் (*ரூத் 4:17-27; மத் 1:5*).

ரூத்து திருநூல் (RUTH, BOOK OF)

1. முன்னுரை: இந்நூல் எபிரேய விவிலியத்தின் ''நூல்கள்'' என்ற மூன்றாவது தொகுப்பில் காணப்படும் விழாக் காலங்களில் வாசிக்கப்பட வேண்டிய ''மெகில்லோத்'' (Megilloth) என்ற ஐந்து சுருள்களில் ஒன்றாகும். இது ''நீதிபதிகளின் காலத்தில்'' என்ற சொற்றொடரோடு தொடங்குகிறது; முரட்டுத்தனமும் காட்டுமிராண்டித்தனமும் பரவலாகக் காணப்பட்ட நீதிபதிகளின் காலத்தில் ஒரு பக்தி மிக்க இஸ்ராயேல் குடும்பத்தின் எளிய நாட்டுப்புற வாழ்க்கை பற்றிய மிகச் சிறந்த ஓர் ஓவியத்தை அளிக்கிறது. இதற்கிணையான பகுதியை *1 சாமு 1-3*-இல் வரும் அன்னா, எல்கானா, சாமுவேல் ஆகியோருடைய குடும்ப வரலாற்றில் காணலாம். இந்நூல் நீதிபதிகள் காலத்திற்கும், சாமுவேல் நூலில் வரும் அரசாட்சிக் காலத்திற்கும் இடையில் ஓர் இணைப்பாக அமைந்துள்ளது. இது தாவீதின் முப்பாட்டியான, மோவாபிய ரூத்து என்னும் தலைவியின் வரலாறு ஆகும்.

2. பெயர்: ரூத்து என்ற பெயருக்கு அக்காதிய மொழிவழி ''தலைவியின் தோழி'' என்ற பொருள் கொடுக்கப்படும். எபிரேய மொழியில் இப்பெயருக்கு ''(நீரால்) திருப்திபெறுதல்,'' ''நீர்மிகுதி,'' ''புத்துயிர்ப்பூட்டு'' என்று பலவாறாகப் பொருள் கூறலாம்.

3. கதை: நீதிபதிகள் காலத்தில், பெத்லகேமைச் சேர்ந்த எலிமெலக்கு என்பவர் பஞ்சத்தின் காரணமாகத் தமது மனைவி நகோமியோடும், இரு புதல்வர்களோடும் மோவாபு நாட்டில் குடியேறினார். அங்கு அவர் இறந்தார். மக்லோன், கிலியோன் என்ற இரு புதல்வர்களும் முறையே ரூத்து, ஓர்பா என்ற மோவாபியப் பெண்களை மணந்து தங்கள் விதவையான தாயோடு வாழ்ந்தனர். குடியேறிய பத்து ஆண்டுகளுக்குள் இரு புதல்வர்களும் இறந்து போயினர். நகோமி பெத்லகேமிற்குத் திரும்பத் தீர்மானிக்க, விதவைகளான இரு மருமக்களும் அவளுடன் யூதாவுக்குச் செல்ல விரும்பினர். இருவரும் அவர்களுடைய இனத்தவரிடம் 'அவர்கள் தாய்வீடுகளுக்குச் செல்வதே நல்லது' என்று அறிவுரை கூறினாள். அதற்கிசைந்து ஓர்பா தனது உறவினர்களிடையே திரும்பிச் சென்றாள். இதற்கு மாறாக, ரூத்து தனது மாமியிடம் உள்ள தனது பற்றுறுதியை எடுத்துக்கூறி, அவளோடு பெத்லகேமுக்குச் சென்றாள்.

இரு விதவைகளும் வாற்கோதுமை அறுவடைக் காலத்தில் பெத்லகேமை அடைந்தனர். தங்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய, மாமியின் அனுமதி பெற்று ரூத்து வயலில் அறுவடை செய்வோர் விட்டுச் சென்ற கதிர்களைப் பொறுக்கச் செல்கிறாள். எலிமெலக்கின் உறவினனான போவாசு என்ற நிலக்கிழாரின் வயலில் கதிர் பொறுக்க அனுமதி பெறுகிறாள்.

அங்கே, போவாசை ரூத்து சந்தித்து அவரது ஆதரவு பெறுகிறாள்; அவர்பால் ஈர்க்கப் பெறுகிறாள். நகோமியால் தூண்டப் பெற்று, உறவினன் என்ற முறையில் தன்னை மணந்து பாதுகாப்பு அளிக்குமாறு போவாசை ரூத்து ஓர் அடையாளச் செய் கையால் கேட்கிறாள். இச்செயலைப் புரிந்துகொண்ட போவாசு தன்னையும் விட நெருங்கிய மற்றொரு உறவினன் எலிமெ லக்கின் குடும்பச் சொத்தை வாங்கும் உரிமையையும் அவருக்குச் சந்ததி உண்டாக் கும் கடமையையும் விட்டுக் கொடுத்தால், ரூத்தை மணந்து கொள்வதாகக் கூறுகிறார். அவ்வாறே செய்து காட்டுகிறார். இந்தத் திருமணத்தின் விளைவாக ஒபேது பிறக் கிறார். இவ்வாறு, நகோமி, ரூத்து ஆகியோ ரின் முயற்சியால், இறந்து போன எலிமெ லக்குக்குச் சந்ததி உண்டாகிறது. அவரது குடும்ப மரபுவழி பாதுகாக்கப்படுகிறது. குடும்பம் பெரும்பேறு பெறுகிறது. ஏனெ னில், ஒபேது தாவீது மன்னனின் முப் பாட்டனும், இயேசுவின் மூதாதையருள் ஒருவரும் ஆவார் (மத் 1:5).

4. விவிலியத் திருமுறைப் பட்டியலில் ரூத்து நூல்: எபிரேய விவிலியத்தின் ''நூல்கள்'' என்ற மூன்றாம் தொகுப்பில், ரூத்து நூல் இடம் பெறுகிறது. இத்தொகுப் பிலும் முதலாவதாக, சங்கீதங்கள், யோபு ஆகிய நூல்களுக்கு முன் தால்மூது பாரம்பரி யம் இந்நூலுக்கு இடம் அளிக்கிறது. பிற்கால யூதப் பாரம்பரியம் ''நூல்கள்'' என்ற தொகுப்பில் ஐந்து நூல்களை ஒதுக்கி, விழாக்களில் வாசிக்கப்பட வேண்டிய நூல் கள் (Megilloth) என்றழைத்தது. இதில் உன்னத சங்கீதம், ரூத்து, புலம்பல், திரு வுரை, எஸ்தர் ஆகிய நூல்கள் அடங்கும். இவை ஆண்டுதோறும் குறிப்பிட்ட விழாக் களில் வாசிக்கப்பட்டன. உன்னத சங்கீதம் பாஸ்கு விழாவின்போதும், ரூத்து வாரங் களின் விழா என்றழைக்கப்பட்ட ஐம்பதாம் நாள் விழாவின்போதும், புலம்பல் அம் மாதம் ஒன்பதாம் நாளிலும், திருவுரை கூடாரவிழாவின் போதும், எஸ்தர் பூரீம் விழாவின்போதும் வாசிக்கப்பட்டன. எபி ரேய விவிலியத்தில் இந்த விழாக்களின் வரிசையில் இந்த ஐந்து சுருள்கள் காணப் படுகின்றன. சில மாசோரோட்டிக்கு வாச கங்களில் ரூத்து, உன்னத சங்கீதத்துக்கு முன் காணப்படுகிறது.

எபிரேயத் திருமுறைப்பட்டியலில் ரூத்து நூலின் இடமும், இது வாரங்களின் விழா வின்போது வாசிக்கப்படுவதும் யூதப் பாரம்பரியத்தில் இந்நூலின் பொருளை ஓர் அளவு சுட்டிக் காட்டுகின்றன. வாரங்களின் விழா ஒரு விவிலிய விழாவாகும். இது தானிய அறுவடை இறுதியில் கொண் டாடப்பட்டது. இந்த அறுவடைப் பின்ன ணியில் ரூத்து நூல் இவ்விழாவோடு தொடர்பு படுத்தப்படுகிறது. பாரம்பரியம் வாரங்களின் விழாவைச் சட்டம் அளிக்கப் படுதலின் நினைவுகூர்தலாகக் கருதுகிறது. விளக்கவுரையாளர் சிலர் சட்டம் அளிக்கப் படுவதை, யாவரையும் உள்ளடக்கும் பொதுமைப் பொருளுடைய நிகழ்ச்சியாகக் கருதுகின்றனர். ஏனெனில் சட்டம், மனு குலம் முழுமைக்கும் அளிக்கப்படும் கொடையாகும். யாவரையும் உள்ளடக்கும் பொதுமைப் பொருளுடைய விழாவில் ரூத்து நூல் வாசிக்கப்படுவது பொருத்த முடையதே.

எழுபதுநூல் பாரம்பரியம் விவிலி யத்தைச் சட்டம், இறைவாக்கினர்கள், நூல் கள் என்று பாகுபடுத்தவில்லை. இப்பாரம் பரியம் ரூத்து நூலை நீதிபதிகள் நூலுக்குப் பின்னும், புலம்பல் நூலை எரேமியா நூலுக்குப் பின்னும் வைக்கிறது. இதற்கு இவை அக்கால வரலாற்றைப் பற்றிக் கூறுவது ஒரு வேளை காரணமாய் இருக்க லாம். ரூத்து நூலைப் பொருத்த மட்டும், இந்நூல் நீதிபதிகள் காலத்தில் அமைக்கப் பட்டு (1:1), இதன் முடிவுரையில் வரும் தாவீதின் மரபுக்கொடி வழியாகச் சாமு வேல், அரசர்கள் ஆகிய நூல்களுக்கு இயற் கையான அறிமுகமாக அமைகிறது. யோசி பசு என்பவர் ரூத்து நூலை நீதிபதிகள் நூலின் பின் சேர்க்கையாகக் கருதியதாகத் தெரிகிறது. நீதிபதிகள், ரூத்து ஆகிய நூல்களுக்குச் சாமுவேல்தான் ஆசிரியர்

என்ற தால்மூதின் கூற்று மேற்கூறப்பட்ட கருத்தைப் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. இலத்தீன் மொழிபெயர்ப்புக்கள் எழுபது நூல் பாரம்பரியத்தையே பின்பற்றுகின்றன. ஓரிசன், புனித எரோனிமு போன்றவர்கள் ரூத்து நூல் நீதிபதிகள் நூலுக்கு மூன்றாவது பிற் சேர்க்கையாக இணைக்கப்பட்டது என் பர். திருச்சபைத் தந்தையர் வேறு சிலர் இந்நூலுக்கு நீதிபதிகள் நூலுக்குப் பின் இடம் அளித்தனர். கத்தோலிக்கத் தமிழ் மொழி பெயர்ப்பும் எழுபதுநூல் பாரம்பரி யத்தையே பின்பற்றுகிறது.

மேற்கூறப்பட்ட இரு பாரம்பரியங்களில் எது காலத்தால் முந்தியது, மூல எபிரேயப் பாரம்பரியத்தைச் சேர்ந்தது என்று கூறுவது கடினம். ஏனெனில், நவீன எபிரேய விவிலி யம் அண்மைக் காலத்தைச் சேர்ந்ததாகும். இதில் நூல்கள் தொகுப்பில் ரூத்து நூல் காணப்படுகிறது. இந்த வரிசை எழுபதுநூல் வரிசைக்கு உறுதியான மறுப்பாகாது. இருப் பினும், மதிப்பு மிக்க முந்தைய இறைவாக் கினர் தொகுப்பிலிருந்து, ரூத்து நூல், அவ்வளவு மதிக்கப்படாத நூல்கள் தொகுப் பிற்கு மாற்றப்பட்டதை ஏற்றுக் கொள்வது கடினமாகும். ''நீதிபதிகள் காலத்தில்'' (1:1) என்ற சொற்றொடரையும், தாவீதின் மூதா தையர் பற்றிய நூலின் நோக்கத்தையும் பின்னோக்காகக் கருத்தில் கொண்டு, முந் தைய இறைவாக்கினர் தொகுப்பில் இந் நூலைச் சேர்ப்பது மேலானதாகத் தோன்ற லாம். இருப்பினும், பாபிலோனியத் தால் மூது, ரூத்து நூலைச் சாமுவேல் எழுதினார் என்று கூறினாலும், அதற்கு ''நூல்கள்'' என்ற தொகுப்புக்கு வெளியே இடம் அளிக்கத் துணியவில்லை. மேலும், தால் மூது பாரம்பரியத்தில் இத்தொகுப்பின் முதலாவதாக, சங்கீதநூலுக்கு முன் இந்நூல் இடம் பெறுகிறது. இது, திருமுறைப்பட்டி யலில் இந்நூலுக்குரிய இடத்தைச் சுட்டுவ தாக அமைகிறது.

5. பின்னணிகள்:

அ. வரலாற்றுப் பின்னணி: தாவீது, சால மோன் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின்னும் யூதா தனது சட்டங்களையும், பாரம்பரியங்களையும் தொகுக்க ஒரு பெரும் முயற்சி நடந்தது. இதை இப்போது யாவே பாரம்பரியம் என்றழைக்கிறோம். இஃது ஆதியாகமம், யாத்திரை ஆகமம், எண்ணாகமம் ஆகியவற்றில் பரவிக் கிடக் கின்றது. இதில் பல வீரக்கதைகள், குறிப் பாகப் பெண்கள் பங்கெடுக்கும் கதைகள் உண்டு. இவற்றில் சில இறைவன் ஆபிரகா முக்கு அளித்த வாக்குறுதி நிறைவேறுவதில் கற்பனை செய்ய முடியாத தடைகள் எழுந்தாலும், அவர் அவற்றையெல்லாம் நீக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட வாரிசுகளைத் தோன்றச் செய்து காப்பாற்றினார் என்று காட்டுகின்றன. சாரா, ரபேக்கா, ராகேல் ஆகியவர்களின் மலட்டுத்தன்மை குடும்ப மரபுக்கொடித் தொடர்ச்சியை அழித்துவிட இருந்தது (ஆதி 15:3; 16:1; 25:21: 30: 1-2). சில சமயம் ஏசா போன்ற மூத்த சகோதரர் கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மரபுவழிக்குத் தடையாக இருக்கின்றனர். இவர்கள், நேர் மையான முறையில் தலையிட்டு வாக்குறு தியைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படாத மக்களுக்கு அதை உரிமையாக்கும் வாய்ப் பிருந்தது. யூதாவின் தலைமகன் பிள்ளை யின்றி மரிக்கிறான் (ஆதி 38). ஆனால், இப்படிப்பட்ட அவல நிலையிலிருந்து இறைவன் எப்போதும் இஸ்ராயேலைக் காப்பாற்றுகிறார். இக்கதைகளை ஒரு தொகுப்பாக எடுத்துக் கொண்டால், இறை வன் தேர்ந்தெடுக்கப்பட்ட வாரிசு வரி சையைத் தடுக்க முடியாத வித்தில் தோன்றச் செய்து பாதுகாத்து, ஆபிரகாமி லிருந்து ஈசாக்கு, யாக்கோபு வழியாகப் பாரேசுக்கும், அரச மரபுக்கும் நீடிக்கச் செய்தார் என்று காட்டுகின்றன.

இக்கதைகள் பலவற்றில் பெண்கள் சிறப் பிடம் பெறுகின்றனர். ஏசாவுக்குப் பதிலாக யாக்கோபு ஈசாக்கின் சிறப்பு ஆசீரைப் பெற ரபேக்கா தந்திரமாய் ஒழுங்கு செய்கிறாள் (ஆதி 27). தாமார் தனது அகந்தையைக் கைவிட்டு, தன் உயிரையே பணயம் வைத்து இறந்துபோன தனது கணவனுக்கு ஒருவாரிசை உண்டாக்குகிறாள் (ஆதி 38). மூத்தவனை ஒதுக்கிவிட்டு சாலமோன் ஆட்

சிக்கு வருவதில், அவரது தாய் பத்சேபா சிறப்பான அங்கம் வகிக்கிறாள். இது தாவீது அரசுக்குப் பணி செய்த யாவே பாரம்பரிய ஆசிரியரை இக்கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கத் தூண்டியிருக்க வேண்டும்.

குடும்ப வாரிசுகள் இறை பராமரிப்பால் காப்பாற்றப்படுகின்றன என்ற கருத்தைப் பதிப்பாசிரியர் கொண்டிருந்தார் என்பதை யாவே பாரம்பரியத்தில் வரும் மற்றக் கதைகளும் காட்டுகின்றன; நோவா நிகழ்ச்சியுரை (ஆதி 7-9), லோத்தும் அவர் புதல்வியரும் பற்றிய விவரிப்பு (ஆதி 19:30-38). இக்கருத்தில் மற்ற விவிலியப் பாரம்பரியங்களும் அக்கறை கொள்கின்றன (ஆதி 22:1-19; யாத் 1:15-22; 2:1-10; நீதி 13:1-25; 1 சாமு 1). இக்கதைகளில் காணப்படும் இடுக்கண் நிலையே ரூத்து நூலிலும் காணப்படுகிறது. எலிமெலக்கின் குடும்ப மரபு நீடிக்குமா? மேற்கூறப்பட்ட கதைகளில் நடந்தது போலவே, ரூத்து கதையிலும் இறைவனது பராமரிப்பால் இடுக்கண் விடுவிக்கப்படுகிறது. இடுக்கண் இருந்தாலும் மகிழ்ச்சியான முடிவு ஏற்படுகிறது.

இத்தகைய கதைகளில் ஆர்வம் தொடக்க கால எபிரேயர்களிடையே பரவலாக இருந்ததாகத் தெரிகிறது. இக்கதைகள் அரசாட்சிக் காலத்திலும் அதற்கு முன்னும் தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ரூத்து கதையும் இக்காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். மேற்கூறப்பட்ட கதைகள் தொடக்க காலத்தைச் சேர்ந்தவை, சுருக்கமானவை, நேரடித் தன்மையுடையவை. இவற்றோடு ஒப்பிடும்போது, ரூத்து கதை நீண்டது, நயத்தோடு அமைக்கப்பட்டது, மென்மைமிக்கது. ஓர் உயர்ந்த பண்பாட்டைப் பிரதிபலிக்கிறது. கதைக்குப் பின்னணி கிராமப்புறமானாலும் பங்கெடுப்போர் பேச்சிலும் நடைமுறையிலும் அரசவையைச் சேர்ந்தவர்களாகத் தோன்றுகின்றனர்.

தன் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் தஞ்சம் தேடியபோது, தாவீது அதை மோவாபில் கண்டார் (1 சாமு 22:3-4). இது வரலாற்றுப் பின்னணியாக இருந்து, ரூத்தை மோவாபியப் பெண்ணாக்குதற்கு ஆசிரியரைத் தூண்டியிருக்கலாம்.

ஆ. சமூகப் பின்னணி: எபிரேயரிடையே வலுவான குடும்பம் அல்லது இனக்கூட்டொருமை அமைந்திருந்தது. ஒரு மனிதன் மகனையோ, பேரனையோ பெற்றெடுக்கும் போது ஒரு குடும்ப மரபையே பெற்றெடுத்ததாகக் கருதப்பட்டது. ஒரு குலமரபின் நபர்கள் அனைவரும் மூலக் குலத்தலைவரின் நீடிப்பாகக் கருதப்பட்டனர்; அதே எலும்பு, சதை, இரத்தத்தில் பங்கு கொண்டவர்களாக வளரும் உடலின் அங்கங்களாகக் கருதப்பட்டனர் (ஆதி 29:14; 37:27; நீதி 9:1-2; 2 சாமு 5:1; 19:11-13). ஆகவே குலமரபின் தொடர்ச்சியிலும், நிறைவிலும் அக்குலத்தைச் சேர்ந்த அனைவரும் ஆழ்ந்த அக்கறை காட்ட வேண்டும். இந்தக் கூட்டொருமை உயிரையும், உடைமையையும் திருமணத்தையும் பாதித்தது.

ஒருவன் கொல்லப்பட்டால், அவன் மட்டும் இரத்தம் சிந்தவில்லை; அவன் குலம் முழுவதுமே இரத்தம் சிந்தியதாகக் கருதப்பட்டது. இரத்தம் உயிர் தங்குமிடமானதால் (ஆதி 9:4; லேவி 17:11). குலமரபின் ஆற்றலில் ஒரு பகுதி அழிந்துபோய் விட்டதாகக் கருதப்பட்டது. ஆகவே, அதே குலத்தைச் சேர்ந்த மற்றொருவன் கொலை செய்தவனைத் துரத்திச் சென்று கொல்ல வேண்டும். குற்றம் செய்தவனின் குலமரபிலிருந்து ஒன்றை அழித்து ஈடு செய்ய வேண்டும். இவ்வாறு சமூகச் சமன்பாட்டை நிறுவுவது வழக்கமாக இருந்தது (எண் 35:19-21; உப 19:6-13). இக்கடமையைச் செய்யும் உறவினன் மரபின், ''இரத்தப் பழி வாங்கியவன்'' (goel haddam) அல்லது ''மீட்பன்'' என்று அழைக்கப்பட்டான்.

நிலம், வீடு போன்ற உடைமைகளும் ஒருவிதத்தில் ஒருவனுடைய நீடிப்பாகக்

கருதப்பட்டன; குலமரபின் துணை உறுப்புக்களாகக் கருதப்பட்டன. நாபோத்து தனது குடும்பத்துக்குச் சொந்தமான திராட்சைத் தோட்டத்தை ஆகாபு அரசனுக்குக் கொடுக்க மறுத்ததை நினைவு கூரலாம் (1 அர 21). ஒருவன் தன் குல உடைமைகளில் ஏதாவது ஒன்றை இழந்தால் அது குலமரபின் இழப்பாகவும், குலமரபின் தொடர்ச்சியையும் உயிர் ஆற்றலையும் பாதித்ததாகவும் கருதப்பட்டது. ஆகவே, ஒரு வறியவன் தன் உடைமையை விற்கவோ, இழக்கவோ கட்டாயப்படுத்தப் பட்டால், மற்றொரு உறவினன் தலையிட்டு தானே வாங்கியோ, கைப்பற்றிய அன்னியனிடமிருந்து மீட்டோ, அவ்வுடைமையைத் தன் குலமரபுக்குள்ளே வைத்துக் கொள்ள வேண்டும் (லேவி 25:25-29; எரே 32:6-9). இக்கடமையைச் செய்யும் உறவினனும் ''மீட்பன்'' என்று பொருள் படும் ''கோயல்'' (goel) எனப்பட்டான். இச்செயல் ''மீட்பு'' என்று அழைக்கப்பட்டது. இதற்குரிய சட்டம் லேவி 25:25-29-இல் கொடுக்கப் படுகிறது. அது செயல்படும் முறை எரே 32-இல் விவரிக்கப்படுகிறது.

குலமரபின் தொடர்ச்சியும், நிறைவும் குழந்தையில்லாமையால் அழிந்து போகக் கூடும். உயிர்ப்பு, மறுஉலக வாழ்வு போன்ற எக்கருத்தும் இல்லாத காலத்தில், ஒருவன் தன் புதல்வர்கள், பேரப்பிள்ளைகள் வழியாகத் தனது பெயரை நிலைக்க வைத்துச் சாகாமையைத் தேடினான். ஒருவன் ஆண் மகவு இல்லாமல் இறந்து விட்டால் அவனது விதவை மனைவியை அவனது சகோதரனோ, நெருங்கிய உறவினனோ மணந்து ஆண் மகவு பிறக்க வழி செய்ய வேண்டும். இப்படிப் பிறக்கும் மகன் இறந்தவனின் மகனாகக் கருதப் பட்டு, அவனது உடைமைக்கு வாரிசாவான். இவ்வாறு அவனது குலமரபும் பெயரும் காப்பாற்றப்படும் (உப 35:5-6). இக்கடமையைச் செய்பவன் ''சந்ததி உண்டு பண்ணுபவன்'' எனப் பொருளுடைய ''யாபான்'' (yaban) என்றழைக்கப்பட்டான். கணவன் உடன் பிறந்தானை ''லேவீர்'' (levir) என்ற இலத்தீன் சொல் குறித்தது. ஆகவே, இந்தக் ''கணவன் உடன்பிறந்தான் திருமணம்'' என்ற வழக்கு ''லேவீரேட் திருமணம்'' (levirate marriage) என்றழைக் கப்பட்டது.

யாவே, இஸ்ராயேலுக்கு ''மீட்பன்'' (goel) ஆவார் என்று விவிலியத்தில் பல இடங்களில் குறிக்கப்படுவது கவனத்திற்குரியதாகும். மேற்கூறப்பட்ட மூன்று முறையிலும் ''மீட்பன்'' என்ற பெயர் இறைவனுக்குப் பொருந்தும் (யோபு 19:25; சங் 19:14; 78:35; எசா 38:17; 59:20; 23:16; எரே 50:34; புல 3:58; அ.ப. 7:35).

சுருக்கமாக ''மீட்பன்'' (goel) தன் உறவினனது உயிரைப் பாதுகாக்க வேண்டும் (யோசு 20:3-5); சுதந்தரத்தைப் பாதுகாக்க வேண்டும் (லேவி 25:47-49); அவனது பெயரும் குடும்பமும் மறைந்து போகாமல் பாதுகாக்க வேண்டும் (உப 25:5-10;லேவி 25:23-26; ரூத் 4:3-4).

பிள்ளையில்லாது இறந்துபோன சகோதரனது விதவையை மணந்து அவனுக்கு வம்சம் உண்டாக்க மறுக்கும் கணவன் உடன்பிறந்தானை, ''அப்பெண் பெரியோர்கள் முன்பாக அவனருகில் வந்து, அவன் காலிலிருக்கிற செருப்பைக் கழற்றி, அவன் முகத்தில் உமிழ்ந்து, தன் சகோதரனின் வீட்டைக் கட்டாதவனுக்கு இப்படியே செய்யப்பட வேண்டும் என்று சொல்லக் கடவாள். மேலும், இஸ்ராயேலில் அப்படிப்பட்டவனுடைய வீடு செருப்புக் கழற்றப்பட்டவனுடைய வீடு என்றழைக்கப் படும்'' என்று உப 25:9-10 கூறுகிறது. இது, கணவன் உடன் பிறந்தான் திருமணம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய தொன்று என்றும், தவறினால் அஃது ஓர் அவக்கேடாகும் என்றும் காட்டுகிறது. ரூத் 4:7-9-இல் வரும் மிதியடி நிகழ்ச்சி மேற்கூறப்பட்ட உப 25:9-10-ஐத் தழுவி எழுதப் பட்டது என ஆய்வாளர் சிலர் கருதுவர். ஆனால், நெருங்கி ஆராய்ந்தால் ரூத்து நூலில் வரும் சடங்கு உப 25:9-10-இலிருந்து வேறுபட்ட முறையில் நடத்தப்படுகிறது.

இது நில உடைமைகளை மீட்கும் ஒப்பந்தத்திற்கு உரியது. உபாகமத்தில் வருவது போல் கணவன் உடன்பிறந்தான் திருமணத்திற்குரியதன்று.

எபிரேயர்களிடையே தொடக்க காலத்தில் குலமரபுக் கூட்டு ஒற்றுமை மிகவும் வலுவாய் இருந்தது. அக்காலத்தில் 'கணவன் உடன்பிறந்தான் திருமணம்' என்ற வழக்கு மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது (ஆதி 38). இது பற்றி உபாகமத்தில் வரும் சட்டம், கணவன் உடன்பிறந்தானை மட்டுமே கட்டுப்படுத்தியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நகோமிக்கு வேறு புதல்வர்கள் இருந்திருந்தால் அவர்கள் இக்கடமையைச் செய்ய வேண்டும் என்பது அறியப்பட்டிருப்பதாய் ரூத் 1:11-இல் தெரிகிறது. மரித்தவனுக்குச் சகோதரர்கள் இல்லாதபோது குலமரபுக் கூட்டு ஒற்றுமைப்படி, நெருங்கிய மற்றொரு உறவினன் இக்கடமையைச் செய்யலாம். ஆனால், இது கட்டாயமன்று. தேவைப்பட்டால் எந்த அவப்பெயருமின்றி இக்கடமையை மற்றொரு உறவினனுக்கு விட்டுக் கொடுக்கலாம்.

உப 25:5-10, கணவன் உடன் பிறந்தான் திருமணம் பற்றிய பிற்காலக் குறுகிய மனப்போக்கைப் பிரதிபலிக்கிறது என்று ஆய்வாளர் பலர் கருதுவர். இக்காலத்தில் இக்கடமை ஒருவனுடைய சகோதரனுக்கு அப்பால் நீடிப்பது அவசியமற்றதாகக் கருதப்பட்டது. மரித்தவனுடன் வாழ்ந்தவன் அவன் சகோதரனாகக் கருதப்பட்டான். இவனும் பொதுமக்களின் கண்டனத்தைத் தவிர வேறு எந்தத் தண்டனையும் இல்லாமல் இக்கடமையைத் தவிர்த்து விடலாம். இக்காலத்தில் குடும்பக் கூட்டு ஒற்றுமை வலுவானதாக இருந்தாலும், இக்கடமை வெளிப்படையாக வலியுறுத்தப்படவில்லை என்பது தெளிவு. ஏனெனில், நாடு கடத்தப்பட்டபின் வந்த குருக்கள் பாரம்பரியம் இத்தகைய திருமணத்தைத் தடுத்தது எனலாம். லேவி 18:16, ஒருவன் தன் உடன்பிறந்தான் மனைவியோடு செய்து கொள்ளும் மணத்தைத் தடை செய்தது. இத்தகைய உறவைத் தடைவிதிக்கப்பட்ட நெருங்கிய உறவினரிடையேயான தகாக் கலவி என்றழைத்தது (லேவி 20:21). ரூத்து நூல் முந்தையக் காலத்துப் பாரம்பரியத்தைச் சேர்ந்த குலமரபுக் கூட்டு ஒற்றுமையைப் பிரதிபலிக்கிறது. அப்போது தூரத்து உறவினனும் ஒரு விதவையை மணந்து, மரித்தவனுக்கு வாரிசு உண்டாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்த வழக்கின் பரந்த கடைப்பிடிப்பை ரூத்து நூல் ஆசிரியர் ஏற்றுக்கொள்வதாகவும், தமது வாசகர்கள் அறிந்திருப்பர் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிகிறது.

ரூத்து கதையில், குடும்பச் சொத்தை வாங்குதல், இறந்தவனின் விதவையை மணம்செய்தல் ஆகிய இரு கடமைகளை எதிர்கொள்கிறான் மிக நெருங்கிய உறவினனான ''மீட்பன்'' (goel) அவன் முன்னதைச் செய்யத் தயாராக இருக்கிறான்; பின்னதை நிறைவேற்ற விருப்பமில்லை. ஏனெனில், இம்மணத்தில் பிறக்கும் குழந்தை இறந்தவனின் மகனாகவும், மீட்ட சொத்துக்கு வாரிசாகவும் கருதப்படும். ஆகவே, மிக நெருங்கிய ''கோயல்'' தன் உரிமையையும், கடமையையும் விட்டுக் கொடுக்கிறான். ஆகவே, அடுத்த உறவினரான போவாசு சொத்தை மீட்டு, ரூத்தையும் மணம் செய்து கொள்கிறார். போவாசுக்கு ஆண் மகவு இல்லாமலும், அதனால் சொத்துப் பிரச்சனை இல்லாமலும் இருந்திருக்கலாம். போவாசுக்கு ஏற்கெனவே பிள்ளைகள் இருந்திருந்தால், அவர் ரூத்தை மணந்தால், மீட்ட சொத்து இத்திருமணத்தில் பிறந்த குழந்தைக்குச் சேரும். குழந்தை ரூத்தின் இறந்துபோன கணவனான மக்லோனுடையதாகக் கருதப்படும். எல்லாவற்றையும் தாராள மனதோடு ஏற்று, போவாசு ரூத்தை மணம் செய்து தனது கடமையை நிறைவேற்றுகிறார்.

6. நூலின் நோக்கம்: இதுதான் நூலின் நோக்கம் என்று உறுதியாகக் கூற முடியாது. ஆசிரியர் பல கருத்துக்களை மனதில் கொண்டு இந்நூலை எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அவற்றை இங்குச் சுருக்கமாகத் தருகிறோம்.

நூலின் தலைப்பு தெளிவாக உள்ளது. அது தாவீதின் மூதாதையர்களான போவாசு-ரூத்து ஆகியோரின் திருமணம் வழியாக எலிமெலக்கின் குடும்பம் மறைந்து போவதிலிருந்து அசாதாரண முறையில் தப்புவதாகும். நகோமியின் குடும்பம் மீண்டும் அமைக்க முடியாது என்ற நிலையில் (1:11-13) ரூத்து, நகோமி ஆகிய இரு பெண்களின் வீரமிக்க முயற்சியால் அக்குடும்பம் மீண்டும் அமைக்கப்படுகிறது. இவர்களின் வீரமிக்க விடா முயற்சியும் மனித அன்பும் அடங்கிய உன்னதக் கதையாக வடிவெடுத்து, இந்நூல் தாவீதின் மூதாதையர்களின் வரலாற்றில் இடம் பெறுகிறது. இதுவே அக்குடும்பம் பெறக் கூடிய மேலான மகிமையாகும். நூலில் காணப்படும் குறுகிய மரபுக்கொடி (4:17) மூல நூலோடு சேர்ந்தது என்பதை மறுக்க எக்காரணமும் இல்லை.

மேலும், இந்நூல் யூத இனக்கூட்டு ஒற்றுமைச் சட்டமான ''மீட்பன்'' (goel) முறையையும், மற்றச் சடங்குகளையும் செயல் முறையில் புரிந்துகொள்ள இடமளிக்கிறது. இம்முறை பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம்.

ரூத்து நூல் விசுவாச வளர்ச்சிக்குதவும் ஒரு வரலாற்றுக் கதையாகும். குடும்ப வாழ்வின் மேன்மை மிக்க எளிமை, ஒருவர்க்கொருவர் காட்டும் பிரமாணிக்கம், தாராளத்தன்மை ஆகியவை இலக்கிய நயத்துடன் விவரிக்கப்படுகின்றன. எலிமெலக்கு தனது குடும்பத்தைக் காப்பாற்ற, பிழைப்புக்காக அயல் நாட்டில் குடியேறுவதை ஏற்றுக் கொள்கிறார் (1:1). நகோமி தன்னைவிட, தன் மருமக்களின் நலனிலேயே அக்கறை காட்டுகிறாள் (1:8-13). ரூத்து தன் மாமிக்குக் காட்ட வேண்டிய பிரமாணிக்கத்திற்கு முதன்மை அளிக்கிறாள் (1:14-18). போவாசு தனது உறவினர்களிடம் அன்பும் பரிவும் காட்டுகிறார் (2:8-17). குடும்ப நற்பண்புகள், இஸ்ராயேலின் இன மேன்மையை எடுத்துக்காட்டும் நற்பண்புகளின் விவரிப்புக்கள் ஆகியவை நூல் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. சமூகம் யாவேயிடம் கொண்டுள்ள அசைக்க முடியாத விசுவாசத்தின்மேல் கட்டப்பட்டுள்ளது. யாவே வறியவர், எளியவர், கைம்பெண்கள் ஆகியோரின் பாதுகாவலர்; பிரமாணிக்கத்திற்குச் சன்மானம் அளிப்பவர். அதை அன்னியர் கடைப்பிடித்தாலும் அதற்கு இறைவன் சன்மானம் அளிக்கிறார். எலிமெலக்கின் குடும்பப் பாரம்பரியம் நகோமி, ரூத்து ஆகிய இரு பெண்களின் நற்பண்புகளின் மேல் கட்டப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தின் நல்ல எதிர்காலம் இத்தகைய நற்பண்புகளையே தழுவியுள்ளது. அன்னியப் பெண்ணான ரூத்திடம் இப்பண்புகள் சிறப்பாகக் காணப்படுகின்றன. இவள் தன் மாமி நகோமியையும், அவள் உறவினர்களையும், மக்களையும், கடவுளையும் தன்னுடையவர்களாக ஆக்கிக் கொள்கிறாள் (1:16 தொ). நகோமியின் குடும்ப இடுக்கண் நிலையைத் தீர்க்கும் உடனடி ஏதுவாக ஆகிறாள் ரூத்து. அவள் அழகிலும், மேன்மையிலும் இஸ்ராயேல் மங்கையரைவிடச் சிறந்து விளங்குகிறாள். அவற்றால் போவாசு என்பவரைக் கவர வல்லவளாகிறாள். இஸ்ராயேலர், மங்கையர்களுக்குக் காட்டும் அருள்மிகு பராமரிப்பையே இந்த அன்னியப் பெண்ணுக்கும் இறைவன் காட்டுகிறார்.

மரபுக் கொடியையும் சமூக, சமயவழக்குகளையும் எடுத்துக் கூறுவதைவிட, இந்நூல் மனித அன்பை மேன்மைப்படுத்துவதாக அமைந்துள்ளது எனலாம். இந்நூல் சடங்கு அல்லது சட்டக் காரியங்களைப் பற்றிப் பேசவில்லை என்று கூறும் ராபா என்ற ராபி, அன்புச் செயல்களைச் செய்பவர்களுக்கு எவ்வளவு பெரிய சன்மானம் கிட்டுகிறது என்று காட்டவே இந்நூல் எழுதப்பட்டது என்பார். ரூத்து நகோமியிடம் காட்டும் சுயநலமற்ற பற்றுறுதியில் இக்கருத்து பாராட்டப் பெறுகிறது. ''நான் உம்மைவிட்டுப் போகும்படி இன்னும் என்னைத் தூண்ட வேண்டாம். நீர் எங்குப் போனாலும், நானும் வருவேன். நீர் எங்குத் தங்குவீரோ, அங்கே நானும் தங்குவேன். உங்கள் இனமே என் இனம். உங்கள்

கடவுளே எனக்குக் கடவுள்...'' *(1:16-17)* என்ற கூற்று பெண்களிடையே நிலவ வேண்டிய நட்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் காலந்தோறும் அமைகிறது. இது தாவீதுக்கும், யோனத்தானுக்குமிடையே நிலவிய புகழ்பெற்ற நட்புக்கு இணையானது. இங்கே குறிக்கப்படுவது, ஒரு பெண் அவள் உறவினர்பால் கொள்ள வேண்டிய பற்றுறுதியை மட்டுமன்று, அறிவு சார்ந்த முறையில் கோரப்படும் கடமையையும் கடந்து, ' ஓர் அன்னியளும் மாமியுமான பெண்ணுக்குக் காட்டும் பற்றுறுதியான பக்தியாகும்.

ரூத்து, தன் மாமிக்குக் காட்டும் பற்றுறுதியை எடுத்துக்கூறும்போது, அன்னியப் பெண்ணாக இருந்தும் ரூத்து இஸ்ராயேலில் ஏற்றுக்கொள்ளப்பட்டாள் என்பது நூலில் வலியுறுத்தப்படுகிறது *(1:4.22; 2:2.6.10.13.21. 4:5.10)*. ரூத்து, போவாசு தனக்குக் காட்டிய ஆதரவைப் பற்றிப் பேசும்போதும் இருமுறை இதை அழுத்திக் கூறுகிறாள் *(2:10.13)*. கதைக்கு அவசியமில்லாதபோதும் ரூத்து ஒரு மோவாபியப் பெண் என்பது இருமுறை சுட்டிக்காட்டப்படுகிறது *(2:21)*. இந்நூலில் போற்றப்படும் மனித அன்பு நாட்டு எல்லைகளைக் கடந்து செல்லவல்லது; எல்லா மனிதரையும் உறவினராக்க வல்லது. ரூத்து நகோமிக்குக் காட்டும் அன்பில் இந்த இரு பண்புகளும் உண்டு. யாவற்றையும் உள்ளடக்கும் பொதுமைப் பண்பு நூல் முழுவதும் காணப்படுகிறது. மோவாபியப் பெண்ணான ரூத்து தாவீதுக்கு முப்பாட்டியானாள் என்ற கருத்தே இந்தப் பொதுமைப் பண்பின் உச்சநிலையாகும். புற இனத்தாருக்கும் இறைவன் காட்டும் தாராளத் தன்மையையும், அன்பிரக்கத்தையும் எடுத்துக் கூறும் யோனா, உப எசாயா போன்ற நூல்களோடு இந்நூல் ஒத்துப்போகிறது. உப எசாயாவின் பொதுமைக் கருத்தால் தூண்டப்பட்டு, தாவீதின் முப்பாட்டியைப் பற்றிய வாய்மொழிப் பாரம்பரியத்தை ஆசிரியர் ஒரு நூலாக எழுதியிருக்கலாம். அதன் நோக்கம், மீட்புக்கு யாவரையும் இறைவன் அழைக்கிறார் என்பதை வலியுறுத்தவும், மோவாபைச் சேர்ந்த ரூத்து போன்ற புற இனப்பெண்ணையும் மெசியாவின் மரபுக் கொடியில் சேர்த்துக் கொள்ள இறைவன் தயங்கவில்லை, மாறாக விரும்பினார் என்றும் காட்டுவதேயாகும் *(ரூத் 4:18; மத் 1:3-6; லூக் 3:31-33)*.

ஆய்வாளர் சிலர் இந்நூலில் வாதப் போக்கைக் காண முயன்றுள்ளனர். கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எஸ்ரா, நெகேமியா போன்ற யூதச் சீர்திருத்தவாதிகள், இறைவனின் மூலக் கட்டளையையும், யூத இனத்தூய்மையையும் பாதுகாக்கும் பொருட்டு, யூதர்களுக்கும் பிற இனத்தலைவர்களுக்குமிடையே நடந்த திருமணங்களை நிறுத்த முயன்றனர்; தடை செய்தனர்; இச்சீர்திருத்தத்தைச் செயல்படுத்துவதில் கடுமையான போக்கையும் கடைப்பிடித்தனர் *(எஸ் 9-10; நெகே 13:1-3.23-28; காண்க. உப 23:4-7)*. இது யூதர்களிடையே ஒதுங்கி வாழும் குறுகிய மனப்போக்கை ஏற்படுத்தியது. இந்தச் சீர்திருத்தம் பலரிடையே எதிர்ப்பை எழுப்பியிருக்க வேண்டும். இச்சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பாக, ஒரு திருத்தமாக இந்நூல் தோன்றியது என்பர். ஒரு நற்பண்புடைய புறவினத்துப் பெண் இஸ்ராயேலர் குடும்பத் தலைவியருள் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தாள் என்றும், அவள் தாவீது மன்னனது மூதாதையருள் ஒருத்தியாக விளங்கினாள் என்றும் காட்டுவது. கலப்புத் திருமணம் முழுவதும் தீமையானதாக இருக்க முடியாது என்றும், சீர்திருத்தவாதிகளின் குறுகிய மனப்போக்கு இஸ்ராயேல் சமூகத்திலிருந்து தகுதியுடையவர்களையும் புறம்பாக்கக் கூடும் என்றும் காட்ட வல்லது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் ரூத்து நூல் எழுதப்பட்டது என்று ஆய்வாளர் சிலர் கூறுவர். இத்தகைய வாதப்போக்கே இந்நூலில் இல்லை என்பர் பலர்; அப்படி இருந்தாலும் அது மறைமுகமானது. இவர்கள் கருத்துப்படி இந்நூலில் போராட்டப் போக்கிற்குப் பதிலாக, பரந்த மனப்போக்கும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும்

காணப்படுகின்றன. நூல் எந்தக் குறிப்பிட்ட கருத்தையும் தாக்கவில்லை. நாட்டு அல்லது சமய விட்டுக்கொடாத் தன்மையைக் கடந்து, நன்மை செய்ய வல்ல நல்லெண்ணத்தையும், பிறருக்குக் காட்டும் மரியாதையையும் எடுத்துக்கூறுவதை நேரடி நோக்காகக் கொண்டுள்ளது. இந்நூலில் போராட்டப் போக்கு இல்லாததுதான் இந்நூலை எந்தச் சூழ்நிலையிலும் பொதுமை நோக்குக்கு நேரடியான நிலையான சாட்சியாக்குகிறது.

சுருக்கமாக, ரூத்துநூல், விவிலியத்தில் காணப்படும் பல நிகழ்ச்சியுரைகளைப் போன்று பல நோக்குடையது. அஃது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பம் அழிவிலிருந்து தப்பிய கதையை நாடகப் பாணியில் எடுத்துக் கூறுகிறது. தன் கணவனுக்கும் உறவினர்களுக்கும் ஒரு பெண் காட்டும் விடாப்பிடியான பற்றுறுதிக்கு ரூத்து சிறந்த எடுத்துக்காட்டாவாள். போவாசு விவேகத்தையும், மேன்மையையும், தாராள குணத்தையும் காட்டுகிறார். இருவரும் வாசகர்கள் பின்பற்றக்கூடிய மாதிரிகளாகக் காட்டப்படுகின்றனர். குடும்பப் புண்ணியங்கள் சிறந்த முறையில் எடுத்துக்காட்டப்படுகின்றன. இஃது ஓர் ஒழுக்க மேம்பாட்டுக் கதையாகும். இதை அடிப்படையில்லாத ஒரு கட்டுக் கதையாக மதிப்பிட வேண்டியதில்லை. கூறப்படும் நிகழ்ச்சிகளில் ஆசிரியர் அவ்வளவு அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. ஆனால், அவற்றின் வழியாக எப்படி இறைவனின் தன்மையும், வழிகளும் வெளிப்படுகின்றன என்பதையும் இறைவனின் திட்டத்தில் தாவீது குடும்பத்தின் சலுகை பெற்ற இடம், பற்றுறுதி, தாராளத் தன்மை ஆகியவற்றின் சன்மானம் முதலியவற்றையும் எடுத்துக் கூறுவதில் ஆசிரியர் அக்கறை காட்டுகிறார். அவருக்கு இவை முக்கியமானவையாகும். இவற்றை வலியுறுத்த ஆசிரியர் நிகழ்ச்சிகளைச் சுதந்தரமாக அழகுபடுத்துகிறார். ரூத்து ஒரு வரலாற்று ஏடன்று; ஓர் எடுத்துக்காட்டான கதையாகும்; ஓர் அக்காதா மிட்ராஷ் ஆகும்.

7. நூல் தோன்றிய காலம்: இது பற்றிப் பலத்த வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. சிலர் நாடு கடத்தலுக்கு முன்னும், வேறு சிலர் அதற்குப் பின்னும் இந்நூல் தோன்றியதாகக் கூறுவர்.

எழுபது நூலும், வுல்கத்தா வாசகமும் நீதிபதிகள் நூலுக்கு அடுத்து ரூத்து நூலை வரிசைப் படுத்துகின்றன. தால்மூது பாரம்பரியம் இவ்விரு நூல்களையும் சாமுவேல் எழுதியதாகக் கூறுகிறது. நூலும் ''நீதிபதிகளுடைய காலத்தில்..'' *(1:1)* என்று இயற்கைப் பண்போடு தொடங்குகிறது. இவை யாவும் இந்நூல் காலத்தால் முந்தியது என்று நினைக்க நம்மைத் தூண்டலாம்.

இந்நூல், தாவீதின் மூதாதையரது மரபுக் கொடி இறைவனது பராமரிப்பால் பாதுகாக்கப்பட்டதைக் கூறுவதால், தாவீது முக்கியத்துவம் அடைந்த சிறிது காலத்துக்குப் பின் தோன்றியிருக்க வேண்டும். இக்காலத்தில்தான் யாவே பாரம்பரியப் பதிப்பாசிரியர் இத்தகைய கதைகள் வழியாக ஆபிரகாமிலிருந்து தாவீது வரையிலுள்ள பல தலைமுறைகளை இணைக்க முயன்றனர். இக்காலத்தில்தான் தாவீதின் உரிமை பற்றிய பெரும் இலக்கியப் பகுதிகள் தோன்றின *(2 சாமு 9-10; 1 அர 1-2)*. இக்காலம்தான் ரூத்து போன்ற நூல்கள் தோன்றச் சாதகமான சூழ்நிலையாகியது எனலாம்.

ரூத்து நூலுக்கும், யோசேப்பின் வரலாறு பற்றிய ஆதி 37-50 என்ற பகுதிக்குமிடையில் நடையிலும் மனப்போக்கிலும் ஒற்றுமை இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுவர். யோசேப்பு வரலாறு பற்றிய இலக்கியம் அரசாட்சிக் காலத்தில் தோன்றியதாகவும், விசுவாசத்தை வளர்க்கவும் நல்லொழுக்கத்தைக் கற்றுக்கொடுக்கவும் அமைக்கப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் கருதுவர். அப்படியாயின் அதே காலத்தில் ரூத்து நூலும் தோன்றியிருக்கக் கூடுமா?

மேலும், நாடு கடத்தப்பட்ட பிற்காலத்தில் தோன்றியவை என்று உறுதியாகக் கூறக்கூடிய தோபித்து, எஸ்தர் போன்ற

நூல்களின் மனம்போன போக்கான நிகழ்ச்சியுரைகளோடு ஒப்பிடும்போது ரூத்து நூல் காலத்தால் முந்தியதாகவும், நயமிக்கதாகவும் தெரிகிறது. ரூத்து நூலின் மொழியும் நாடு கடத்தலுக்கு முன் இந்நூல் தோன்றியது என்ற கணிப்புக்கு ஆதரவு அளிக்கிறது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு, சிலர் இந்நூல் தாவீது அரச வரலாற்றோடும், யாவே பாரம்பரியத்தோடும் ஒத்த காலமாகிய கி.மு. 950-850-க்கு இடையிட்ட காலத்திலும், வேறுசிலர் கி.மு. 1000-700-க்கு இடையிட்ட காலத்திலும், இன்னும் சிலர் கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலும் தோன்றியதாகக் கூறுவர். அத்தாலியாவின் தீமை மிக்க ஆட்சிக்கு ஒரு மாற்றமாக கி.மு. 832-ஐ ஒட்டி நாட்டில் இந்நூல் வழக்கில் இருந்தது என்பாரும் உள்ளனர்.

மேற்கூறிய கருத்துக்கு மாறாக, நாடு கடத்தலுக்குப் பின்புதான் இந்நூல் தோன்றியது என்று ஆய்வாளர் பலர் கூறுவர். இதற்கு அடிப்படையான புறச்சான்று எபிரேய விவிலியத்தில் ரூத்து நூல் கொண்டிருக்கும் இடமாகும். இஃது எபிரேய விவிலியத்தின் மூன்றாம் தொகுப்பாகிய ''நூல்கள்'' என்ற தொகுப்பில் இடம் பெறுகிறது. பிற்காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் ரூத்து நூலைச் சாமுவேல் எழுதினார் என்று கூறும் தால்மூது பாரம்பரியம், இதை முந்தைய இறைவாக்கினர் நூல்களோடு சேர்க்கத் துணியவில்லை; ''நூல்கள்'' என்ற தொகுப்பிலேயே சேர்க்கிறது.

சிறிய நூலானாலும் இந்நூலில் காணப்படும் பல அரமேயிக்குப் பண்புகளும், நூலின் தொனியும், நடையும் இது நாடு கடத்தலுக்குப் பின்பு தோன்றியது என்று காட்ட வல்லன என்பர் ஆய்வாளர்கள் சிலர். ஆனால், மற்ற நூல்களோடு ஒப்பிடுகையில் இந்நூலில் காணப்படும் அரமேயிக்குப் பண்புகள் அதிகம் இல்லை. பெற்றெடுப்பது, மணம் செய்தல் போன்ற சொற்கள் இந்நூல் நாடுகடத்தலுக்கு முன் தோன்றியது என்று கூற இடந்தரவில்லை.

இந்நூல் எஸ்ரா, நெகேமிய சீர்திருத்தத்திற்கு எதிராகத் தோன்றியது; ஆகவே, நாடு கடத்தலுக்குப் பின் தோன்றியது என்பர் சிலர். இவ்விளக்கத்தை இந்நூல் நாடு கடத்தலுக்குப் பின் தோன்றியது என்று கூறுபவர்களும் நிராகரிப்பர். ஏனெனில், ரூத்து மோவாபியப் பெண்ணானாலும் தனது நாட்டையும் கடவுள்களையும் விட்டுவிட்டு யாவேயைப் பின்பற்றுவோர்க்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாவாள் என்ற வரலாற்றைக் கூறும் இந்நூல் சீர்திருத்தவாதிகளுக்குச் சாதகமாகவே பயன்பட்டிருக்கும். மேலும், யூத — புறவினத்தார் திருமணம் பற்றிய முழுவதும் வேறுபட்ட மனப்போக்கை இந்நூல் எடுத்துக்கூறுகிறது என்பது உறுதி.

ரூத் *4:18-22* குருக்கள் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது என்பதும், கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த *1 நாள் 2:4-15*-இல் வரும் மரபுக் கொடியையே தருகிறது என்பதும் உண்மையே. ஆனால், இஃது இங்கு வச. 17-இல் விளக்கமாகப் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்று ஆய்வாளர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்வர். ஆகவே, இப்பகுதி காலக்கணிப்பிற்கு உதவியாக அமைய முடியாது.

சுருக்கமாக, எபிரேய விவிலியத்தில் ரூத்து நூல் கொண்டிருக்கும் இடம், மொழியில் காணப்படும் புதிய மரபுச்சொற்கள், மிகப் பழையன; ஆனால், வழக்கிலிருந்து மறைந்து விட்டன என்று காட்டுவதாக ஏற்றுக்கொள்ளப்படும் *(4:7)*. சட்டங்கள், வழக்கங்கள் பற்றிய விவரிப்புகள், கதைத் தலைவியான புறவின ரூத்தின் நற்பண்புகள் மட்டுமின்றி, அவளுடைய சகோதரி ஓர்பாவின் நற்குணத்தையும் எடுத்துக்கூற விரும்பும் ஆசிரியரது நோக்கம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டால், இந்நூல் கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆசிரியரால் எழுதப்பட்டது என்று தோன்றும் என்றும், இவர் உப எசாயாவின் பொதுமைப் போதகத்தால் தூண்டப்பட்டு, தாவீதின் முப்பாட்டியைப் பற்றிய வாய்மொழிப் பாரம்பரியத்தை ஒரு நூலாக எழுதினார் என்றும்

கூறுவர். யாவரும் மீட்புக்கும், மீட்புத் திட்டத்தில் பங்கெடுக்கவும் அழைக்கப்படுகின்றனர் என்ற பொதுமைக் கருத்தும் இந்நூல் பிற்காலத்தில் தோன்றியதென்பதற்கு ஆதரவு அளிக்கிறது.

8. இலக்கியச் சிறப்பு: கதை கலைப் பண்போடு எடுத்துக்கூறப்படுகிறது. அதுவே நூலுக்குப் போதிய குறிக்கோளாகும் என்று விளக்கவுரையாளர் சிலர் கூறுவர். ''கதை அதன் தெளிவான எளிமையில் எவ்வளவு நயமிக்கதாய் இருக்கிறதென்றால், அதற்கு விளக்கம் அளிப்பது அதற்குப் பாதகம் செய்வதாகும்'' என்று ஓர் அறிஞர் கூறுகின்றார்.

ரூத்து நூல் எபிரேய இலக்கியத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். கதை சுருக்கமானாலும், ஓர் இலக்கிய இரத்தினமாகும். கவர்ச்சிமிக்க இக்கதை மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விதத்தில் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காலந்தோறும், இக்கதையின் இலக்கியப் பண்புகள் அதிகம் பாராட்டப் பட்டுள்ளன. யோசுவா, நீதிபதிகள் ஆகிய நூல்களை வாசித்தபின் இந்நூலை வாசிக்கும்போது, இஃது உணர்ச்சிமிக்க, எளிய கிராமப்புற வாழ்க்கைச் சித்திரமாகத் தோன்றும். முன்னவற்றில் காணப்படும் போர்கள், கொடுமைகளிலிருந்து விடுபட்டு அமைதி மிக்க சூழ்நிலையில் நுழைவதை உணரலாம். கதை அன்றாட எளிய வாழ்வை அழகாகச் சித்திரிக்கிறது; பண்புமிக்க பாத்திரங்களையும், வண்ண மிக்க காட்சிகளையும், கருக்கமான உயிர்ச்சித்திரமான உரையாடல்களையும் கொண்டுள்ளது. இவை நன்கு கவைக்கப் பெற்று, திறமையோடு எடுத்துக் கூறப்படுகின்றன.

பெயர்கள் அடையாளப் பொருளுடையனவாக உள்ளன. நகோமி = இனியவள், எலிமெலக்கு = இறைவன் என் அரசர், மக்லோன் = சோர்வு, நோய், கிலியோன் = தேய்வு, மெலிவு, குறைவு, ஓர்பா = திரும்பிச் சென்றவள், ரூத்து = தோழி, போவாசு = இறைவன் வல்லவர். இவை யாவும் ஆசிரியர் இந்நூலுக்கு ஓர் அடையாளப் பொருளை அளிக்க விரும்பினார் என்று சுட்டவல்லன.

கதையில் ''வில்லன்'' அல்லது பாதகன் இல்லை. பங்கெடுக்கும் பாத்திரங்களில் எவரும் கண்டனம் பெறவில்லை. ஆனால், ஆசிரியர் விவரங்களையும் வேறுபாடுகளையும் நயமிக்க முறையில் பயன்படுத்தியுள்ளார். அதன் விளைவாக, சாதாரண நன்மைத்தனத்துக்கும், அசாதாரண நன்மைத் தனத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடு பொதுவாழ்வின் பின்னணியில் தெளிவாக வெளிக்கொணரப்படுகிறது. ஓர்பா தனது கடமையிலும் பற்றுறுதியிலும் எவ்விதத்திலும் குறைந்து விளங்கவில்லை. அவள் தனது மாமி நகோமியோடு புது நாட்டிற்குச் செல்லத் தயாராக உள்ளாள். நகோமி மறுமுறை அறிவுரை கூறித் தூண்டியபின் தான், தன் மக்களிடம் திரும்பிப் போக ஒத்துக்கொள்கிறாள் (1:8-14). பெயர் தெரியாத மிக நெருங்கிய உறவினன் தனது பொறுப்பை ஏற்று, நகோமியின் உடைமையை மீட்கத் தயாராக இருக்கிறான். இஃது ஒரு திருமணத்தையும் உள்ளடக்கும் என்றும், அது தனது சொந்த மரபுரிமைக்குள்ள கடமைக்கு முரண்பாடாக அமையும் என்றும் அறியும்போதுதான், தன் உரிமையை விட்டுக் கொடுக்கிறான் (4:4-6). இந்தப் பின்னணியில்தான் ரூத்து, போவாசு ஆகியோரின் அசாதாரணப் பெருந்தன்மை தெளிவாக மிளிர்கிறது. சாதாரண எளிய வழியைத் தேர்ந்தெடுக்கும் ஓர்பா பிரமாணிக்கமுள்ள ரூத்தைச் சிறப்பித்துக் காட்டுகிறாள் (1:14-17). தன்னலத்திற்காக உரிமையை விட்டுக்கொடுக்கும் உறவினன் போவாசின் தாராள குணத்தைச் சிறப்பித்துக் காட்டுகிறான் (4:9-10). நகோமியை நோக்கிக் கூறப்பட்ட புலம்பல் (1:19) அவளுக்கு அளிக்கப்படும் பாராட்டால் (4:12-17) சமன் செய்யப்படுகிறது. இந்த ஒப்பீட்டு வேறுபாடுகள் செயற்கைத் தன்மையுடையனவாகத் தோன்றலாம். ஆனால், இவை, ஆசிரியர் நூலுக்குக் கலையமைப்பும் திட்டமும் அளிக்க விரும்பினார் என்று காட்டவல்லன.

ஏற்கெனவே எழுதப்பட்டிருந்த மூலங்களை ஆசிரியர் பயன்படுத்தினார் என்பதற்குச் சான்றுகள் இல்லை. எழுதப்பட்ட நீதிபதிகள் நூலின் ஒரு பகுதியாக ரூத்து நூல் இருந்தது என்ற பாரம்பரியத்திற்கு, இரு நூல்களுக்குமிடையே பொருளடக்கத்திலும் உணர்வுகளிலும் காணப்படும் வேறுபாடுகள் சான்றாய் அமையவில்லை. நூலில் வரும் தாவீதின் மரபுக்கொடி எந்த எழுதப்பட்ட துல்லியமான மூலத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகத் தெரியவில்லை. கண்வன் உடன் பிறந்தான் திருமணச்சட்டம், சொத்தை மீட்டல் ஆகியவை பற்றிய ஆசிரியரது விளக்கம் உப 25-இல் வரும் சட்டத்தோடு ஒத்துப்போவதாகத் தெரியவில்லை. மேலும், நூலில் வரும் கதை வடிவம் நீண்டகால வாய்மொழிப் பாரம்பரியம் இருந்திருக்கக்கூடும் என்று சுட்டுகிறது. காலப்போக்கில் இது மீண்டும் மீண்டும் சொல்வதால் நயப்பட்டிருக்க வேண்டும். சரியாக, வேண்டிய அளவே விவரங்களைப் பயன்படுத்துவது கதைசொல்லும் கலையின் ஒரு பண்பாகும். ஒவ்வொரு விவரமும் தன் பாகத்தைச் சரியாகச் செய்யவேண்டும். இதற்கு, மத்திய இடைவேளையில் போவாசு, ரூத்துக்கு உணவு அனுப்புவது, ரூத்து உணவின் மீதிப்பகுதியைத் தன் மாமிக்கு எடுத்துச் சேகரிப்பது போன்றவற்றைச் சுட்டிக் காட்டலாம். உரிய அளவு எதிர்பார்ப்பு நிலை அமைந்து, அதற்கு அளிக்கும் முடிவும் சரியாக அமைந்துள்ளது. ரூத்து, போவாசுக்குச் சொந்தமான வயலை அடைந்து கதிர்பொறுக்கத் தொடங்குவதிலிருந்து, நெருங்கிய உறவினன் நகோமியின் சொத்தை மீட்கப் போவதாக அறிவிக்கும்போது முழுத்திட்டத்திற்கும் ஏற்படும் அச்சுறுத்தல்வரை எதிர்பார்ப்புநிலை படிப்படியாக வளர்ச்சியோடு எடுத்துக் கூறப்படுகிறது. இது, பலதடவை வெற்றியோடு சொல்லப்பட்ட ஒரு கதையின் கூறுகளைச் சுட்டுகிறது. இவ்வாறு கதை வளர்ச்சியுற்றிருந்தால், கதையின் மையம் அவ்வப்போது மாறியிருக்க வேண்டும் என்று கூறலாம். மூலக் கதையை இப்போது கண்டுபிடிப்பது ஒருவேளை முடியாத காரியமாகலாம். இஃது ஒருவேளை பெத்லகேமைச் சேர்ந்த பழங்கால வழிபாட்டுச் சடங்குக் கதையாக இருந்திருக்கலாம். இதில் அறுவடைச் சடங்கும், ஒரு பெண்ணின் கதையும், புலம்பலும், புதுக் குழந்தையின் பிறப்பும் தொடர்புபடுத்தப்பட்டிருக்கலாம். தோற்றமும், மூலப் பொருளும் எதுவாயினும் நமக்குக் கிடைத்திருப்பது கலைப்பண்புடைய சிறப்புமிக்க கதையாகும். மீண்டும் மீண்டும் கூறுவதால் நயப்படுத்தப்பட்ட, நாம் இப்போது கொண்டிருக்கும், கதையைத்தான் இந்நூலின் நோக்கத்தையும் பொருளையும் மதிப்பீடு செய்யும்போது நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

9. நூலின் திட்டம்:

நான்கு அதிகாரங்களைக் கொண்ட இக்குறு நூலை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

I. மோவாபு நாட்டினிலே *(1:1-18)*.

1:1-5 : நகோமியின் குடும்ப அவல நிலை.

1:6-15 : நகோமியைப் பிரிந்து செல்ல ரூத்தின் வாய்ப்பு.

1:16-18 : நகோமியோடு தங்க ரூத்து தேர்ந்தெடுத்தல்.

II. பெத்லகேம் வயலிலே *(1:19-2:23)*.

1:19-22 : நகோமி, ரூத்து பெத்லகேமை அடைதல்.

2:1-7 : ரூத்து கதிர்பொறுக்கச் செல்லுதலும், போவாசைச் சந்தித்தலும்.

2:8-16 : போவாசு ரூத்துக்குப்பாதுகாப்பு அளித்தல்.

2:17-23 : போவாசு ரூத்துக்குப் பரிவு காட்டுதல்.

III. *பெத்லகேமின் சூட்டடிப்புக் களத்தினிலே (3:1-18).*

3:1-5 : உறவுமுறை மீட்பளிக்க போவாசிடம் கேட்குமாறு ரூத்துக்கு நகோமியின் ஆலோசனையும், திட்டமும்.

3:6-9 : ரூத்து நகோமியின் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

3:10-18 : ரூத்துக்கு மீட்பளிக்க போவாசு இணங்குதல்.

IV. பெத்லகேம் நகர வாயிலிலே *(4:1-22).*

4:1-12 : நகரவாயிலிலே போவாக வழக்காடுதலும், ரூத்தை மணந்து கொள்ளுதலும்.

4:13-16 : ரூத்து ஒபேதைப் பெற்றெடுத்தல், நகோமி பாராட்டப்படுதல்.

4:17 : ரூத்து தாவீதின் முப்பாட்டியாதல்.

4:18-22 : பாரேசின் குலமரபுக்கொடி.

10. நூலின் போதகம்: இந்நூல் இவ்வுலகைச் சார்ந்த, சமய சார்பற்ற காரியங்களைப் பற்றிப் பேசுவதாகவும், கதையில் மனிதர்களே ஆதிக்கம் செலுத்துவதாகவும் தோன்றலாம். ஆனால், இந்நூல் மறைந்திருந்து செயலாற்றும் யாவேயின் கதையாகும். நூல் இறைவனது பெயரையும் தலையீட்டையும் குறிப்பிடுகிறது. மனிதர்கள் தங்கள் சகமனிதர்களின் தேவைகளில் அக்கறை கொள்ளும் போதெல்லாம் இறைவன் அங்குப் பிரசன்னமாக இருக்கிறார் என்றும், மனிதர்கள் தங்கள் பொறுப்பை ஏற்று நடக்கும்போதெல்லாம் அங்கு இறைவன் தம் பற்றுறுதியோடு பிரசன்னமாய் இருக்கிறார் என்றும் அழகாக எடுத்துக் கூறுகிறது. சமய சார்பற்றதாகத் தோன்றும் நிகழ்ச்சிகள் வழியாக உடன்படிக்கைப் பிரமாணிக்கமும் அன்பும் எடுத்துக் காட்டப்படுகின்றன. சாதாரண நிகழ்ச்சிகள், ஒதுங்கியிருப்பதாகத் தோன்றும் இறைவனின் பிரசன்னத்தை எடுத்துக்காட்டும் அசாதாரண நிகழ்ச்சிகளாக மாற்றி அமைக்கப்படுகின்றன.

சிறிய நூல் ஆனாலும், ஆசீர்களும், வேண்டுதல்களும் புலம்பல்களும் நூலில் அதிகம் காணப்படுகின்றன. அவை யாவேயைப் பார்த்துக் கூறப்படுகின்றன. அவரது பதில் மனிதர்கள் வழியாகத் தரப்படுகிறது. பசித்தோர்க்கு உணவு அளிக்கப்பட வேண்டும். விதவைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அன்னியர்களுக்கு இடம் அளிக்க வேண்டும். இத்தகைய தேவைகளுக்குட்பட்டோரைப் பற்றி இறைவன் கவலை கொள்கிறார். இவைகளை விசுவாசத்தை எடுத்துக் காட்டும் வாய்ப்பாகக் காணச் செய்கிறார். இவற்றை மனிதர் வழியாகவே நிவர்த்தி செய்கிறார். இறைவனது பராமரிப்பு, நூல் முழுவதும் பரவி நிற்கிறது.

இந்நூல் ஒரு பெண் விடுதலைக் கதையாகும். ஆண்களின் ஆதிக்கம் மிகுந்த சமுதாயத்தில் நகோமியும், ரூத்தும் அவர்களுடைய கணவர்களின் துணையின்றி அவர்களுடைய வாழ்வை அவர்களே நிர்ணயித்துச் செயல்படுகின்றனர். அவர்களே முன்முயற்சி எடுக்கின்றனர். அவர்களின் செயல்களுக்குப் பதிலாகவே போவாசின் செயல் அமைகிறது. ஆண்களின் உலகில் இவ்விரு பெண்களும் மையம் வகிக்கின்றனர்; இறை இடையீட்டைக் கோரும் ஊக்கு சக்திகளாக அமைகின்றனர்; அதிர்ச்சி அளிக்கின்றனர்; தூண்டுகின்றனர்; அச்சுறுத்துகின்றனர். பிதாப்பிதாக்களின் சமூகத்தில் நிலவிய வரையறைகளை எப்படிப் பெண்கள் மேற்கொள்கின்றனர் என்பதைக் கூறும் கதையாக அமைகிறது இந்நூல். மேலும், இது சமூக இடுக்கண்களை எதிர்கொள்ளும் வகையில் மனிதர்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பங்கை எடுத்துக்கூறும் கதையாகும்; விசுவாச சமூகத்திற்குச் சவால் விடும் விசுவாசக் கதையாகும்.

நூலில் காணப்படும் உடன்படிக்கை மரபுமொழி வேறொரு போதகத்தையும் சுட்டுகிறது. அஃது ஒருவருக்கொருவர் உதவி செய்து ஆதரவு அளிப்பதாகும்; உடன்படிக்கையின் விளைவுகளைச் செயல் முறையில் வாழ்ந்து காட்டுவதாகும். ஒரு குறிப்பிட்ட

வரலாற்றுச் சூழ்நிலைக்குள் ஆசிரியர் தம்மையே வரையறுத்துக் கொண்டாலும் எல்லாச் சூழ்நிலைக்கும் ஏற்றவிதத்தில் உடன் படிக்கை அன்பைப் போதிக்கிறார். உடன் படிக்கையின் பொருள், அதைக் கடைப் பிடித்தல் ஆகியவை பற்றி இஸ்ராயேலர் கேள்வி எழுப்பும்போதெல்லாம், அவர்கள் நகோமி, ரூத்து ஆகியோரின் பற்றுறுதி, போவாசின் பெருந்தன்மை, கடமையை ஏற்க மறுக்கும் உறவினனின் போக்கு முதலியவற்றைக் கவனத்தில் கொண்டால், உடன்படிக்கையின் பொருளையும் கடைப் பிடிப்பையும் கண்டுணர்வர். பிறருக்குச் செய்யும் சேவையில் தங்கள் சன்மானத்தையும் இறைவனது பிரசன்னத்தையும் கண்டடைவர். இந்நூலில் இறைவனது பிரசன்னம் குறிப்பிட்ட இடங்களையோ இறையாவி பெற்ற தலைவர்களையோ சார்ந்ததன்று; மனிதர்கள் தங்கள் உலகத் தேவைகளை மனித முறையில் நிவர்த்தி செய்ய முயலும் போது எடுக்கும் துணிவுள்ள, இறைபயம் மிக்க தீர்மானங்களோடு இணைந்தது. முக்கிய பாத்திரங்களின் குறைநிறைகள் பூசி மேவப்படவில்லை. மனிதர்களின் பலவீனத்திலும், அதன் வழியாகவும் இஸ்ராயேலின் இறைவன் செயல் ஆற்றுகிறார்.

மேற்கூறப்பட்ட போதகங்களுக்கெல்லாம் அடிப்படையாக இறைவனுக்கு முதலிடம் கொடு என்ற போதகம் அமைந்துள்ளது. அவரை மாட்சிமைப்படுத்தியவர்களை அவரும் மாட்சிமைப்படுத்துவார் (1 சாமு 2:30). நகோமியின் துன்பங்களில் அவளது விசுவாசம் ஒன்றே அவளுக்கு நங்கூரமாக விளங்கியதைக் கண்ட ரூத்து நகோமியின் இறைவனில் தனது நம்பிக்கையை வைத்தாள். நகோமிக்குப் பணி செய்ய தன்னையே அர்ப்பணித்தாள். அதற்காக ''உன் செயலுக்கு ஏற்ற வெகுமதியைக் கடவுள் உனக்கு அளிப்பாராக; நீயும் இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரை நாடி, அவரது திருவடியைத் தஞ்சமெனத் தேடி வந்தாயே; அவரால் முழுக் கைம்மாறு பெறுவாயாக'' என்று போவாசு அவளை வாழ்த்துகிறார் (2:12). உண்மையிலேயே மேன்மையான சன்மானம் பெறுகிறாள். விசுவாசி சன்மானத்திற்காகச் செயலாற்றுவதில்லை. ஆனால், இறைவனது சன்மானத்தைப் பெறாது போகான். ஏனெனில், தாராள குணத்திலும் பற்றுறுதியிலும் இறைவன் யாவரையும் மிஞ்சியவர் ஆவார். மனித விவேகத்தையும் கடந்து சென்று தன்னலம் கருதாது, ரூத்து இறைவனில் நம்பிக்கை வைத்தாள்; யாவரையும் பராமரிக்கும் இறைவனில் தஞ்சம் புகுந்தாள் (2:12). இறைவன் அவளது வாழ்வை வியத்தகு முறையில் புதியதாகவும், மகிழ்ச்சி மிக்கதாகவும் மாற்றி அமைத்தார். அவளது கொள்ளுப்பேரன் தாவீதின் சொற்களில், அவளது வாழ்வின் நெறியை உறுதிப்படுத்தினார் (சங் 37:23). அவர்களுக்கு எதிலும் குறைவு வைத்ததில்லை (34:10). எல்லாம் நிறைவாக அவளுக்கு அளிக்கப்பட்டது; ''கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள்; இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்'' (மத் 6:33;காண். உரோ 8:32) என்ற இயேசுவின் போதகத்தைச் செயல் முறையில் ரூத்து நூல் எடுத்துக்காட்டுகிறது.

இதுவே இன்றைய உலகிற்கு இந்நூல் அளிக்கும் போதகமாகும்.

ரூபன் (REUBEN - *பால், ஒரு மகன்*)

யாக்கோபின் பன்னிரண்டு புதல்வர்களிலும், லேயாவின் நான்கு புதல்வர்களிலும் தலைப்பேறானவர் (ஆதி 29:31-32; 49:3). இவரது வழித்தோன்றல்கள் ரூபனியர்கள் என்றழைக்கப்பட்டனர்.

யோசேப்பு தன் சகோதரர்களால் கொல்லப்படுவதிலிருந்து ரூபன் காப்பாற்றினார் (37:21-30; 42:22). யோசேப்பின் சகோதரன் பென்யமினின் பாதுகாப்பான திரும்புதலுக்குப் பிணையாக ரூபன் தன் இருமக்களை அளித்தார் (42:37). இவர் தன் தந்தையின் வைப்பாட்டி பில்காவுடன் உடலுறவு கொண்டதால் தந்தையின் அன்பை இழந்தார் (35:22; 49:4; 1 நாள் 5:1). இச்செயல் தன் தந்தையின் அதிகாரத்தை

அபகரித்துக் கொள்ளுதலாகக் கருதப்பட்டது (2 சாமு 3:7; 6:21-22).

இவருக்குக் கனோக்கு, பல்லூ, கெசிரோன், கர்மி ஆகிய நான்கு புதல்வர்கள் இருந்தனர் (ஆதி 46:9). இவர்களின் சந்ததியினர் மற்ற இஸ்ராயேல் இனத்தவர் கானானைக் கைப்பற்ற உதவியபின், யோர்தானுக்கு அப்பாலுள்ள சமவெளியில் அர்னோன் ஆற்றுக்கு வடக்கிலும் காத்து கிலயாதுக்குத் தெற்கிலும் உள்ள பகுதியைத் தங்கள் பங்காகப் பெற்றனர் (யோசு 13:15-23). இந்த இனம் பெரும்பாலும் ஆயர் தொழிலை உடையது. தொடக்கத்திலிருந்து இந்த இனம் யோர்தான் ஆற்றால் பிற இனங்களிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மற்ற இனத்தவரோடு போரில் பங்கெடுக்காததற்குத் தெபோராவின் பாடல் இவர்களைத் தூற்றுகிறது (நீதி 5:15-16). குடியேறிய பின் ரூபன், காத்து, மனாசே ஆகிய இனங்கள் தங்களுக்கென வழிபாட்டு மையங்களை அமைத்துக் கொண்டன. இது மற்றவர்களுக்குச் சினம் மூட்டியது. அதனால், இவை வெறும் நினைவுச் சின்னங்களாகக் கருதப்பட்டன. அதனால் போர் தவிர்க்கப்பட்டது (யோசு 22).

1 நாள் 5:1-10-ஐ அடிப்படையாகக் கொண்டு, மூன்றாம் திகிலத் - பிலேசர் என்பவரால் இஸ்ராயேலர் நாடு கடத்தப்படும் வரை (கி.மு. 732) ரூபனியர்கள் தங்களுக்கே உரிய அடையாளம் கொண்டிருந்தனர் என்று அறிஞர் சிலர் கருதுகின்றார். வேறுசிலர் சவுல் காலத்திற்குள்ளே (கி.மு. 1020) ரூபனியர்கள் காத்து, கிலயாது இனத்தவரோடு ஒன்றிப்போய் விட்டனர் என்று கருதுகின்றனர்.

இந்த இனம் பெரியதன்று (உப 33:6); காத்து இனத்தோடு இணைத்தே எப்பொழுதும் குறிப்பிடப்படுகிறது (எண் 32:6.33; 1 நாள் 26:32). எண் 32:34-38-இல் வரும் நகரங்களின் பட்டியல் ரூபனியர்களுக்குத் தெற்கிலும் வடக்கிலும் காத்து தன் நகர்களைக் கொண்டிருந்தது என்று சுட்டுகிறது. ரூபன் நகர்கள் நெபோ மலையைச் சுற்றிய சிறிய பகுதியிலேயே உள்ளன. இஃது ரூபனுக்குப் பங்கீடு செய்யப்பட்ட பகுதியைவிடக் குறுகியது. அரசர் சவுலுக்குப்பின் ரூபன் இனம் இஸ்ராயேல் வரலாற்றில் பங்கெடுப்பதாய்த் தெரியவில்லை. ஆயினும், தாவீதின் காலத்தில் நபர்கள் சிலர் ரூபியர் என்று குறிக்கப்படுகின்றனர் (1 நாள் 11:42). மோவாபியக் கல் மற்றும் தாவீதின் மக்கள் கணக்கெடுப்பு (2 சாமு 24:-6) ரூபனியர்களைக் குறிக்கவில்லை.

இறுதிக்காலத்தில் இஸ்ராயேல் மீண்டும் அமைக்கப்படுவதில் ரூபன் இடம் பெறுகிறது (எசே 48:6.31; திருவெளி 7:5). புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டில் மட்டும் யூதாவுக்கு அடுத்த இனமாக ரூபன் குறிக்கப்படுகிறது (திருவெளி 7:5).

ரூபு (RUFUS)

காண்க. உரூபு - II:87.

ரூமா (RUMAH)

காண்க. உரூமா - II:88.

ரெகபெயாம், ரெகபயாம் (REHOBOAM)

காண்க. இரகபெயாம் - I:707.

ரெசேபு (REZEPH)

காண்க. இரசேப்பு - I:714.

ரெத்சின், ரெசின் (REZIN)

காண்க. இரசீன் - I:713.

ரெயுவேல் (REUEL)

காண்க. இரகுவேல் - I:708.

ரெய்ம்ஸ் மொழிபெயர்ப்பு ஏடு (RHEIMS" VERSION)

அதிகார பூர்வமான உரோமைக் கத்தோலிக்க ஆங்கில விவிலியத்தில் புதிய ஏற்பாட்டுப் பகுதியைக் குறிக்கும். இது தூவே (Douay version) மொழி பெயர்ப்பு ஏடு என்றும் வழங்கப்படுகிறது. கர்தினால் வில்லியம் ஆலன் என்பவர் தூவேயிலுள்ள திருச்சபைச் சட்டப் பேராசிரியர்களை, ஒரு மொழிபெயர்ப்பு ஏட்டைத் தயாரிக்கும்படி தூண்டினார் (1578). இரகோரி மார்டின்

என்பவர் மொழிபெயர்ப்பைச் செய்து முடித்தார் (1582). பிரான்சிலுள்ள, தூவே யில் ஆங்கிலக் கல்லூரியில் வேலை தொடங்கியது. ஆனால், அரசியல் நிலை மையின் காரணமாக இவ்வேலை ரெய்ம்ஸ் நகருக்கு மாற்றப்பட்டது. இங்கு புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பு முடிவடைந் தது. எனவே, இந்தப் பகுதி ரெய்ம்ஸ் மொழிபெயர்ப்பு ஏடு என்று வழங்கலா யிற்று. இஃது அதிகாரபூர்வமான இலத்தீன் மொழி பெயர்ப்பின் (Vulgate) அடிப்படை யில் அமைந்தது.

ரேசு (RESH)

எபிரேய நெடுங்கணக்கில் இருபதாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதம் 119-இல் இருபதாவது பிரிவு இவ்வெழுத்துடன் தொடங்குகிறது (119: 153).

ரோககா (ROHGAH)

காண்க. உரோக - II:88.

ரோகலிம் (ROGEUM)

காண்க. உரோகலிம் - II:88.

ரோசு (ROSH)

காண்க. உரோசு - II:88.

ரோதா (RHODA)

உரோதா - II:88.

ரோதானியர் (RODANIM)

காண்க. உரோதானிம் - II:88.

ரோதே (RHODES)

காண்க. உரோது - II:88.

ரோதொக்கு (RHODOCUS)

காண்க. உரோதொக்கு - II:89.

ரோமமத் எசேர் (ROMAMTI EZER)

காண்க. உரோமந்தி ஏசேர் - II:69.

ல...லோ

லக்கதேமோனியர், இலக்கதேமோனியர் (LACEDAEMONIANS)

இவர்கள் தென் கிரீசில் லக்கோனியாவின் தலைநகரான லக்கதேமோன் அல்லது ஸ்பார்த்த என்றழைக்கப்பட்ட ஊரில் வாழ்ந்தவர்கள். இவர்களுக்கும் யூதர்களுக்கும் நல்லுறவு இருந்ததாகத் தெரிகிறது. பெரிய குரு யாசோன் இவர்களிடையே தஞ்சம் புகுந்தார் (2 மக் 5:9). யோனத்தான் இவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார் (1 மக் 12:6-18).

லபவோத்து, இலபவோத்து (LEBAOTH)

காண்க. பெத்லபவோத்து - IV:717.

லாசேயா, இலசயா (LASEA)

காண்க. இலசயா - I:750.

லாபான் (LABAN - வெள்ளை) - ஆள்

1. குடும்பமும் நாடும்: காரானிலுள்ள லாபான் ஓர் அரமேயர் (ஆதி 25:20; 28:5; 31:34); பாதான் ஆராமில் வாழ்ந்தவர் (29:4-5; 27:43). லாபான் பெத்துவேலின் மகனும், ரபேக்காவின் சகோதரனும், நாகேரின் பேரனும் ஆவார் (24:29; 28:5); லேயா, ராகேல் ஆகியோரின் தந்தை ஆவார் (29:16); யாக்கோபின் தாய்மாமன்; இப்பகுதி சீரியா என்றும் அழைக்கப்பட்டது. இவர்கள் யூதர்களுடன் வம்ச வழித் தொடர்பு கொண்டிருந்தனர்.

2. ஆபிரகாமின் வேலையாளும் லாபானும்: ஆபிரகாம் தன் ஊழியனை, ஈசாக்குக்குப் பெண் பார்த்து வரும்படி அனுப்பியபோது, ரபேக்காவை ஈசாக்கின் மனைவியாக நிச்சயம் செய்யக் காரணமாக இருந்தவர் லாபான் ஆவார். லாபான் அறிந்து கொள்வதில் ஆர்வம் உள்ளவராகவும், விருந்தினரை உபசரிப்பதில் சிறந்தவராகவும் விளங்கினார் (24:29.31-32). லாபான் ஆபிரகாமின் ஊழியன் செயல்களில் இறைவனின் செயல்களைக் கண்டார் (24:31. 50-51.60). இச்செயல்களிலெல்லாம் தன்னலமே தலைதூக்கி நிற்கின்றது (24:30).

3. லாபானும் யாக்கோபும்: யாக்கோபு தன் சகோதரன் ஏசாவை ஏமாற்றிய பின் தன் மாமனிடம் ஓடிவிட்டான் (ஆதி 27: 41-44 காண்க. 27: 46-28:5). லாபானும் அவனை வரவேற்று அவனுக்குத் தன் மகளை அதாவது ராகேலை மணம் முடித்துக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார். ஆனால், முதலில் யாக்கோபு லேயாவை அடையும்படி செய்து லாபான் அவனை ஏமாற்றிவிட்டார். பின்னரே, யாக்கோபு ராகேலை மணந்தான். யாக்கோபு தன் நாடு திரும்ப எண்ணிய போது லாபான் தன் மந்தைகளைச் சரிபாதியாகப் பங்கிட முன் வந்தார். ஆனாலும், லாபான் தன்னலத்தால் அவனை விட்டுப் பிரிய விரும்பவில்லை. ராகேல் வீட்டு விக்கிரகங்களைத் திருடிக் கொண்டு போய்விட்டதால், லாபான் அவர்களைப் பின்தொடர்ந்தார். யோர்தான் ஆற்றின் அக்கரையில் இருவரும் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

யாக்கோபு லேயாவையும், ராகேலையும் மணக்க 14 ஆண்டுகள் வேலை செய்த நிகழ்ச்சி நூலில் கிடைத்த ஓரியர் சாசனங்களால் நன்கு விளங்குகிறது. இச்சாசனத்தில் கூறப்படும் பழக்கத்தின்படி லாபான், யாக்கோபை அவனுக்கு வளர்ப்பு மகன் ஆக்கிக் கொண்டான். வளர்ப்பவருக்கு ஆண் குழந்தை பிறந்தால் ஒழிய, மருமகனுக்குச் சொத்தில் உரிமையும், குடும்பக் கடவுள்களின் சிலைகளுக்கும் குடும்பத்தலைமைக்கும் உரிமையும் உண்டு. ஆனால், லாபானுக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஆகவே, ராகேல் குடும்பக் கடவுள்களை எடுத்துச் சென்றது சட்டப்படி குற்றமாகும். இவற்றில் எல்லாம், லாபான்-யாக்கோபு கதை (ஆதி 29-31) நூசி வழக்கை நன்கு பிரதிபலிக்கிறது. இந்நிகழ்ச்சியானது இஸ்ராயேல் மக்களால் சீரியர்களை வெல்ல முடியும் என்பதையும், முதலில் எதிரி வெற்றி பெற்றாலும் இறுதியில் தோல்வி அடைவான் என்பதையும் கூறுகின்றது.

இந்நிகழ்ச்சியில் ஆண்டவரின் உதவியால் தான் யாக்கோபு வெற்றி பெற்றான் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கின்றது (ஆதி31:24.42).

லபான் (LABAN - வெள்ளை) - இடம்

சீனாய்ப் பகுதியில் உள்ள லாபான் என்னும் இடம், மற்ற இடங்களான தாபேல், அட்சரோத்து, திசகாபு ஆகிய இடங்களுடன் சேர்த்துக் கூறப்படுகிறது (உப1:1). அட்சரோத்துக்குப் பிறகு பாளையம் இறங்கிய மூன்றாவது இடமான லிப்னாவும் லாபானும் ஒன்று என்று கருதப்படுகின்றது (எண் 33:20). ஆனால், இஃது இருந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை.

லாமேது (LAMED)

இஃது, எபிரேய நெடுங்கணக்கில் பன்னிரண்டாவது எழுத்து. அகரவரிசைச் சங்கீதமான 119-இல் பன்னிரண்டாவது பிரிவுக்குத் தலைப்பாக உள்ளது (சங் 119:89). இதில் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்துடன் தொடங்கும்.

லிக்கவோனியா (LYCAONIA)

காண்க. இலிக்கவோனியா - I:760.

லிக்கி (LIKI)

காண்க. இலிக்கி - I:760.

லிசானியா (LYSANIAS)

காண்க. இலிசானியா - I:761.

லிசிமாக்கு (LYSIMACHUS)

காண்க. இலிசிமாக்கு - I:761.

லிஸ்திரா (LYSTRA)

காண்க. இலிசித்திரா - I:761.

லித்தா (LYDDA)

காண்க. இலிதா - I:761.

லிபியா (LIBYA)

கிழக்கே எகிப்து, சூடானும், மேற்கே துனிசியா, அல்ஜீரியாவும், தெற்கே மேற்கு ஆப்பிரிக்காவும் இருக்க, இதன் நடுவே வட ஆப்பிரிக்காவில் அமைந்த பரந்த பகுதியே 'லிபியா' ஆகும். இதன் பெரும் பகுதி பாலைப்பகுதியாகும்.

கி.மு. 3-ஆம் ஆயிரமாண்டிலிருந்து லிபியா மக்கள், அவ்வப்போது எகிப்தின் செல்வத்தின் மேல் ஆசை கொண்டு எகிப்தோடு போரிட்டனர். கி.மு. 950-இல் லிபியா அரசமரபு தொடங்கி 730-வரை நீடித்தது. இதன் அரசர்களில் ஒருவரான முதலாம் சிசாக்கு சாலமோனிடமிருந்து தப்பியோடிய எரொபவாமுக்குத் தஞ்சம் அளித்தார் (1 அர 11:40). பிற்காலத்தில் எருசலேமைத தாக்கி, கப்பம் கோரினார் (14:25; 2 நாள் 12:2-9).

பழைய ஏற்பாட்டில் எகிப்தின் அண்டை நாடு என்று மட்டுமே லிபியா கூறப்படுகிறது. இதுவும் பிற்கால லிபியர்களைப் பற்றியே கூறுகிறது (எசே 30:5; தானி 11:43; நாகூ 3:9; எரே 46: 7-9). செரகு தலைமை தாங்கிய படையில் லிபியர்களும் இருந்திருக்கலாம் (2 நாள் 16:8). லிபியாவுக்கும், அதன் மொழித்திரிபான இலகாபிமுக்கும் இடையேயுள்ள உறவு பற்றி உறுதியாக ஒன்றும் கூற முடியாது (ஆதி 10:13).

உரோமைப் பேரரசில், லிபியாவின் வட பகுதி சிரேனே மாகாணமாக அமைந்து, அதன் நகரமான சிரேனேயால் அழைக்கப்பட்டது (அ.ப. 2:10). சிரேனே ஆட்சிமுறையில் கிரேத்துத் தீவோடு சேர்க்கப்பட்டது.

லிப்னா (LIBNAH)

காண்க. இலிபுனா - I:762.

லிப்னி (LIBNI)

காண்க. இலிபுனி - I:762.

லிலித்து (LILITH)

காண்க. இலிலித்து - I:762.

லிவியத்தான் (LEVIATHAN)

காண்க. இலவியத்தான் - I 755.

லிக்கியா (LYCIA)

காண்க. இலிக்கியா - I 760.

லிசியா (LYSIAS)

காண்க. இலிசியா - I:763.

லிசியா கிளாதியு (LYSIAS CLAUDIUS)

காண்க. இலிசியா கிளாதியு - I:763.

லீதியா (LYDIA) - ஆள்

இவள் சிறிய ஆசியாவில் உள்ள தியத்திரா நகரைச் சேர்ந்த பெண். இவள் பிலிப்பியில் வாழ்ந்தாள். பவுல் பிலிப்பி நகரில் இவளைச் சந்திக்கிறார். ''லீதியா நகரைச் சேர்ந்தவள்'' என்பதிலிருந்து இவளது பெயர் வந்திருக்கலாம். ஏனெனில், தியத்திரா லீதியா நகரங்களில் ஒன்று. இவளது பெயர் அ.ப. 16:14.40-இல் மட்டுமே வருகிறது. இவள் ஒரு யூதப் பெண்ணாக இருக்கலாம். இரத்தாம்பரம் விற்பதே இவளது தொழில். ஏனெனில், மற்ற லீதிய நகரங்களைப் போலவே தியத்திராவும் இதற்குப் பெயர்போனது. எனவே, அவள் ஓரளவு பணமுள்ளவளாகவே இருக்க வேண்டும்.

பவுலின் போதனையைக் கேட்டு அவளும், அவள் குடும்பத்தினரும் மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற்றனர். மேலும், அவள் அப்போஸ்தலர்களைத் தம் வீட்டில் தங்குமாறு வற்புறுத்தி விருந்தோம்பினாள். பவுலுக்கு மிகவும் பிடித்த திருச்சபை பிலிப்பி திருச்சபையாகியது. மேலும், மற்ற எந்தத் திருச்சபையிடமிருந்தும் உதவியும் நன்கொடைகளும் பெறாத பவுல் பிலிப்பி திருச்சபையிடமிருந்து மட்டும் இவற்றையெல்லாம் பெற்றுக் கொள்கிறார் (பிலி 4:15). பிலிப்பி திருச்சபைக்கும் பவுலுக்குமிடையே இருந்த நெருங்கிய உறவுக்கு (பிலி 1:38; 2:12.15-16; 4:1.15.16.18) லீதியாவின் விருந்தோம்பும் பண்பு முக்கிய காரணமாக இருந்திருக்க வேண்டும்.

லீதியா (LYDIA) - இடம்

காண்க. இலீதியா - I:763.

லீலி, அல்லி (LILY)

லீலி என்று மொழி பெயர்க்கப்படும் எபிரேயச்சொல் தெளிவில்லாமல் இருக்கிறது. இது தாமரையையும், அல்லியையும் குறிக்கக்கூடும். பாலஸ்தீனத்தில் இயற்கையாக வளரும் லீலி வெள்ளைப் பூவைக் கொண்ட காட்டுச் செடியாகும். இது, லீலியைப் பற்றிய விவரிப்புகளோடு ஒத்துப்போகவில்லை. ஆனால், லீலி என்பது, மேற்காசியா முழுவதிலும் திறந்த வயல்களிலும், மலைகளிலும் காணப்படும் செங்கறுப்பு, ஊதா அல்லது வெள்ளைப் பூக்களை உடைய செடியாக இருக்கலாம்.

உன்னத சங்கீதத்தில் வரும் லீலியும் (உ.ச. 2:1-2), லீலிகளுக்கு நடுவில் மேயும் மான்குட்டிகளும் (4:5), இளம் பெண்ணின் அழகின் உருவகங்களாகும். பல மலர்ச் செடிகளின் பிரகாசமான சிவப்பு நிறத்தை மனதில் கொண்டு, காதலி தன் காதலனின் ''இதழ்கள் லீலி மலர்கள்'' என்கிறாள் (5:13). ''லீலிகள் நடுவில் மேய்கிறார்'' (2:16; 6:3), ''லீலி மலர்களைக் கொய்தல்'' (6:2) ஆகியவை சிற்றின்ப அன்பைக் குறிக்கும் உருவகங்களாகும். பலனுடைமையைக் குறிக்கவும் லீலி உருவகமாகப் பயன்படுகிறது (7:3).

சாலமோன் ஆலயத்தில் இருந்த இரு தூண்களின் உச்சியிலிருந்த போதிகைகள் (1 அர 7:19.22), வார்ப்புக் கடலின் விளிம்பு (7:26; 2 நாள் 4:5) ஆகியவற்றின் விவரிப்பில் லீலிமலர் இடம் பெறுகிறது. இந்த வாசகங்களில் இஃது அல்லி என்று குறிக்கப்படுகிறது. சங் 45; 69; 80-இன் தலைப்பில் வரும் ''லீலிமலர்'' பலரும் அறிந்த ஒரு மெட்டைக் குறிக்கலாம். சங் 80-இன் தலைப்பில் வரும் ''சான்று பகர் லீலிமலர்'' மற்றொரு மெட்டைக் குறிக்கலாம். இயேசுவின் உவமைகளில் ''வயல் வெளியின் லீலிமலர்கள்'' (காட்டு மலர்கள்) இடம் பெறுகின்றன. அவை இறைவன் காட்டும் அக்கறையின் அபரிமிதத்தைச் சுட்டுகின்றன (மத் 6:28-29-இணை).

லீலிமலர் வேலைப்பாடு (LILY WORK)

சாலமோன் ஆலய நுழை வாயில் தூண்களின் போதிகைகளில் லீலி மலர்களின் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தப் போதிகைகளுக்குச் சற்றுக் கீழேயுள்ள பகுதியிலும் இதே மாதிரியான

அமைப்பு அமைக்கப்பட்டிருந்தது. 1 அர 7:26-இல் விவரிக்கப்பட்டிருப்பது போல, வார்ப்புக்கடலின் விளிம்புகளில் செய்யப் பட்ட லீலிமலர்களின் வடிவமைப்புகள் மிக அழகானதாகவும், கம்பீரமானதாகவும் அமைந்தன. மெசிதோவில் கண்டெடுக்கப் பட்ட இரண்டு தூபப்பீடங்களில் செய்யப் பட்ட அலங்கார அமைப்பு கூட லீலி மலர் அமைப்பின் தன்மையைக் கொண்டதுதான்.

முதலாவது பீடம் மண்ணால் செய்யப் பட்டது. இதன் விளிம்புகளில் இரண்டு வரிசையாக அழகான இலை வடிவங்கள் செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது பீடமா னது சற்றுப் பெரிய அளவினையுடையது. இதில் தாமரை மொட்டுக்கள், மற்றும் விரிந்த மலர்கள் போன்ற கலை அமைப்பு கள் கொடுக்கப்பட்டிருந்தன. இந்தத் தூபப் பீடங்கள், தூண்களைப் போன்ற அமைப் பினைக் கொண்டதாக இருந்ததால் இவற் றில் செய்யப்பட்டிருந்த கலை அமைப்பு களை லீலி மலர் வேலைப்பாடாக ஏற்றுக் கொள்கின்றோம் (1 அர 7:19.22.26).

லீனு (LINUS)

காண்க. இலீனு - I:763.

லூகித்து (LUHITH)

காண்க. உலூகித்து - II:113.

லூக்கா (LUKE)

லூக்கா, பவுலின் உடன் உழைப்பாளரும் பயணத் தோழரும் ஆவார்; மூன்றாம் நற்செய்தி, அப்போஸ்தலர் பணி ஆகிய நூல்களின் ஆசிரியராகக் கருதப்படுகிறார்.

லூக்கா என்ற பெயர் லூக்கியு என்ற இலத்தீன் பெயரின் கிரேக்க வடிவத்திலி ருந்தோ, லூக்கானு என்ற இலத்தீன் பெயரி லிருந்தோ வந்திருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் லூக்கா என்ற சொல் மூன்று இடங்களிலும் (கொலோ 4:14; 2 திமொ 4:11; பில 24), லூக்கியு என்ற சொல் இரு இடங்களிலும் (அ.ப. 13:1; உரோ 16:21) வருகின்றன. முதல் மூன்று குறிப்புகளிலி ருந்து, லூக்கா பவுலின் ''அன்பு மிக்க மருத்துவர்'' என்றும், ''உடன் ஊழியர்'' என்றும், லூக்கா மட்டும் பவுலோடு இருப்பதாகவும் அறிகிறோம்.

அப்போஸ்தலர் பணியின் ஆசிரியர் லூக் காதான் என்றால் அவரைப் பற்றி நாம் பல விவரங்களை அறியலாம். மறைமுக மாக, ஆனால், இயல்பாக, ஆசிரியர் தம்மையே தமது நூலில் அறிமுகம் செய்து கொள்கிறார். அப்போஸ்தலர் பணியில் காணப்படும் ''நாங்கள்....'' என்ற பகுதி களிலிருந்தும் மேற்கூறிய பவுலின் குறிப்பு களிலிருந்தும் லூக்காவைப் பற்றியும் அவ ரது வேத போதகப் பயணம், அலுவல் பற்றியும் கீழ்க்கண்டவைகளை நாம் அறிய லாம்.

லூக்கா, சீரியாவைச் சார்ந்த அந்தியோக்கி யாவில் கிரேக்கப் பெற்றோருக்குப் பிறந்த வர் (கொலோ 4:10-14). இவர் தீத்துவின் சகோதரராக இருக்கலாம் (2 கொரி 8:16-18; 12:18). இது, பவுலின் திருமுகங்களில் தீத்து முக்கியத்துவம் பெற்றிருந்தாலும், எருசலே முக்குப் பவுலோடு கூடச் சென்றவர்களில் அவரும் சேர்க்கப்பட்டிருந்தாலும், அப் போஸ்தலப் பணியில் (அ.ப. 20:4-இல் கூட) குறிக்கப் படாமையை விளக்கலாம். ஏறக்குறைய கி.பி. 50-இல் துரோவாவில் பவுலை அவரது இரண்டாம் வேதபோதகப் பயணத்தின்போது லூக்கா சந்திக்கிறார் (அ.ப. 16:10). அவர் ஆரம்பகாலத்தில் மனந்திரும்பிய புறவினத்தார்களில் ஒருவ ராக இருந்திருக்க வேண்டும் (11:19-21). பவுலோடும், சீலாவோடும் மாசிதோனியா விலுள்ள பிலிப்பிக்கு அவர் செல்கிறார் (16:10-17). லூக்கா அங்கேயே தங்கியிருந்த தாகத் தெரிகிறது. ஏனெனில், அடுத்து வரும் ''நாங்கள்....'' என்ற பகுதி பவுலின் மூன்றாவது வேதபோதகப் பயணத்தில்தான் காணப்படுகிறது. ஏறக்குறைய ஆறு ஆண்டு களுக்குப் பிறகு, பவுல் தனது மூன்றாம் வேதபோதகப் பயணத்தில் பிலிப்பிக்கு வந்தபோது, அவரோடு சேர்ந்து லூக்கா மிலேத்து, செசரியா வழியாக எருசலே முக்குச் செல்கிறார் (20:5-15; 21:1-18). அதன்பின், பவுல் கைது செய்யப்பட்டு இரு வருடங்கள் செசரியாவில் சிறையிருந்தார்.

இது, தன் நற்செய்திக்கும், அப்போஸ்தலப் பணிக்கும் வேண்டிய வாய்மொழி மூலங்களையும், எழுத்து மூலங்களையும் தேடி ஆராய, லூக்காவுக்கு வாய்ப்பளித்தது எனலாம். இறுதியாக லூக்கா பவுலோடு உரோமைக்குச் செல்கிறார் *(27:1-28:6)*. அங்குப் பவுல் வீட்டுக்கைதியாக இருந்த போது அவரோடு இருக்கிறார் *(கொலோ 4:14; பில 24)*. அங்கு மாற்கை நேரடியாகச் சந்தித்திருக்கலாம்.

லூக்கா மணமாகாதவர். அவர் அக்காய என்ற பகுதியில் தன் நற்செய்தியை எழுதியதாகவும், போயேத்தியாவில் அல்லது பித்தினியாவில் தன் 74-ஆம் வயதில், பரிசுத்த ஆவியால் நிரம்பப் பெற்றவராய் மரித்தார் என்றும் மார்சியனுக்கு எதிராக எழுதப் பட்ட முன்னுரை கூறுகிறது. புனித எரோனிமுவும் இதையே கூறுகிறார். இதற்கு மேல் லூக்காவைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. திருச்சபை அவரை ஒரு முறை சாட்சியாக அறிவித்துப் போற்றுகிறது. அவரது திருநாளை அக்டோபர் 18-ஆம் நாள் கொண்டாடுகிறது.

பவுல் லூக்காவை, ''அன்புமிக்க மருத்துவர்'' *(கொலோ 4:14)* என்று குறிப்பிடுவதை வைத்துக்கொண்டு, அவர் ஒரு மருத்துவர் என்று காட்டப் பலர் முயன்றுள்ளனர். மூன்றாவது நற்செய்தியிலும், அப்போஸ்தலர் பணியிலும் மருத்துவம் பற்றிய கலைச்சொற்களும், நோய்கள் பற்றிய தெளிவான குறிப்புகளும் சிறப்பான முறையில் காணப்படுவதாகக் காட்ட முயன்றுள்ளனர் *(லூக் 4:38; 5:12; 6:18; 8:42; 13:11; அ.ப. 3:7; 9:3; 28:7-10)*. ஆனால், இந்நூலில் காணப்படும் மருத்துவ அறிவு அக்காலத்தில் வாழ்ந்த கல்வியறிவுடையோர் எவரும் அறிந்திருக்கக்கூடிய பொது அறிவேயன்றி நுணுக்கமான அறிவன்று என்று உறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்நூல்களிலே லூக்காவின் மனிதப்பண்பும் இரக்கச் செறிவும் தெளிவாகக் காணப்படுகின்றன.

ஆறாவது நூற்றாண்டிலிருந்து வரும் பாரம்பரியம் லூக்கா ஓர் ஓவியர் என்று குறிப்பிடுகிறது. இக்குறிப்பின் உண்மைத் தன்மை எத்தன்மைத்தாயினும், அவர் தூரிகையைப் பயன்படுத்திய கலைஞனாயிருந்திராவிடினும் சொற்களைப் பயன்படுத்துவதில் ஒரு கலைஞன், மொழிவல்லாளர் என்பது மட்டும் மறுக்க முடியாதது. அவருடைய நூல்களிலே உயர்ந்த நடையும், சொல் நயமும் உண்டு.

அந்தியோக்கியாவைச் சேர்ந்த போதகர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோருள் ஒருவரான சீரோனைச் சேர்ந்த லூக்கியாதான் லூக்காவாக இருக்கக்கூடும் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர் *(அ.ப. 13:1)*.

லூக்காவின் ஆட்தன்மை மற்றும் இறையியல் பற்றி அவருடைய நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவர் இஸ்ராயேல் எல்லையைக் கடந்து புறவின உலகில் நற்செய்தி பரப்புவதில் மிகவும் அக்கறை காட்டுகிறார் *(லூக் 2:32; 4:25-27; அ.ப. 11:18)*. இயேசுவினுடைய பணி எருசலேமை மையமாகக் கொண்டது *(லூக் 9:51; 13:33)*. ஆனால், திருச்சபையின் பணி எருசலேமிலிருந்து உலகம் முழுவதும் பரவுகிறது *(24:47; அ.ப. 1:8)*. லூக்கா பாவிகளின் மனந்திரும்புதலில் *(லூக் 5:8; 7:37-48;13:1-5; 18:13-14)*, சமாரியர்களில் *(9:51-56; 10:29-37. அ.ப. 8:5-25)* சிறப்பான அக்கறை காட்டுகிறார். மற்ற நற்செய்தியாளர்களைவிட, இவர் பெண்களை உள்ளிட்ட தாழ்த்தப்பட்டோரிடம் பெரிதும் அக்கறை காட்டுகிறார் *(லூக் 1:25.26; 2:36-38.51; 7:12-15.37-38; 8:2-3; 10:38-42)*. இவர், பரிசுத்த ஆவியின் வருகை, கொடை, நிறைவு மற்றும் மகிழ்ச்சியில் குறிப்பிடும் விதத்தில் அக்கறை காட்டுகிறார் *(4:1.14; 11:13; அ.ப. 2:11-21; 4:8.31; 8:15-19)*. பொருளாதாரத் துறத்தல், பகிர்ந்து கொள்ளுதல் உள்ளடங்கிய சீடராவதற்காகக் கடுமையான கோரிக்கைகளை அழுத்திக் கூறுகிறார் *(லூக் 6:34-35; 12:13-21;14:7-14.25-26; 16:10-13; 17:7-10; அ.ப. 2:44-45; 4:32-5:10)*.

லூக்கா எழுதிய நற்செய்தி (LUKE, GOSPEL OF)

1. முன்னுரை: இயேசு மரித்து உயிர்த்து விண்ணெழுந்தபின், ஏறக்குறைய இருபது இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன. எதிர்ப்புகளுக்கிடையிலும் பல இன்னல்களுக்கிடையிலும் இயேசு போதித்த நற்செய்தி மக்களிடையே நாளடைவில் பரவுகிறது. இயேசுவின் சீடர்கள் யூதர்களிடையே முதலில் போதித்தனர். அவர்களுக்கென இயேசுவைப் பற்றிய நூல்களை எழுதினர். பரிசுத்த ஆவியரால் ஒளியும் பலமும் பெற்றுச் சீடர்கள் தங்களது வேத போதக அலுவலைப் புறவினத்தவரிடையும் நடத்துகின்றனர். பலர் கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டு, அவரைப் பின்பற்றுகின்றனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் இளம் வயதிலேயே கிறிஸ்துவை ஏற்று விசுவசிக்கிறார். ஏறத்தாழ கி.பி. 50-இல் புறவினத்தாரது அப்போஸ்தலரான புனித பவுலைச் சந்தித்து, அவரது வேதபோதக அலுவலில் பங்கு கொள்ளுகிறார். அவரோடு நெருங்கி வாழ்கிறார்.

இயேசுவைப் பற்றிய இவர் கண்ட நூல்கள் யாவும், ஒரு சிலவற்றைத் தவிர, யூதர்களால் யூதர்களுக்காக எழுதப்பட்டிருந்தன. அந்நூல்கள் இயேசு யூதர்களுக்கு மட்டும்தான் மீட்பர் என்ற குறுகிய நோக்குடையன. அவற்றின் நடையும் நயம் குன்றிய நடை. பவுல் போதித்த பொதுமையை, அதாவது கிறிஸ்து யாவருக்கும் மீட்பர் என்ற கருத்தை, அடிப்படையாகக் கொண்டு புற இனத்தாருக்கென இயேசுவைப் பற்றிய ஒரு நூல் எழுத ஆசிக்கிறார் மேற்கூறிய அன்பர். இயேசுவைப் பற்றி அப்போதுள்ள நூல்களை ஆராய்கிறார். தாம் வாசித்தவற்றையும், கேட்டவைகளையும் பவுலின் போதகத்தையும் கொண்டு, உயரிய நடையிலே, இயேசுவைப் பற்றி அரியதொரு நூல் எழுதுகிறார். அம்முயற்சியின் விளைவே நாம் கொண்டிருக்கும் நற்செய்தியின் மூன்றாவது வடிவமான லூக்கா எழுதிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நற்செய்தி.

2. புறச்சான்றுகள்: மூன்றாவது நற்செய்தியை லூக்காதான் எழுதினார் என்று பாரம்பரியம் தயக்கமின்றிச் சான்று கூறுகிறது. இதற்கு கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சான்றுகள் பலவுள. ''பவுலின் தோழரான லூக்கா பவுலின் நற்செய்தியை ஒரு நூலாக எழுதினார்'', என்று இரனேயு கூறுகிறார். இதே விதத்தில், மார்சியனுக்கு எதிராக எழுதப்பட்ட முன்னுரைகளும், மூராத்தோரியின் பட்டியலும் சான்று கூறுகின்றன.

மூராத்தோரியின் பட்டியல்: மிலானிலுள்ள அம்புரோசியார் நூல் நிலையத்தில் 1740-இல் மூராத்தோரி என்பவர் புதிய ஏற்பாடு பற்றிய பல பழைய ஏடுகளைக் கண்டெடுத்தார். இவற்றை யார் எழுதினார் என்று கூறுவதற்கில்லை. ஆகையால் கண்டெடுத்தவர் பெயராலேயே இவ்வேடுகள் அழைக்கப்பட்டன. இவ்வேடுகள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றன. இவற்றில் புதிய ஏற்பாட்டின் சில பகுதிகளும் பட்டியலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தெர்த்துல்லியன், அலக்சாந்திரியா கிளமந்து, ஓரிசன், யூசேபியு போன்றோரும், விவிலிய அறிஞர் புனித எரோனிமுவும் இவ்விதமே சான்று பகர்கின்றனர். இவற்றை ஆராயுங்கால் கீழ்க்கண்டவை புலனாகின்றன: நற்செய்தியின் மூன்றாவது வடிவத்தை எழுதியவர் லூக்கா என்பவர். அவர் பவுலின் சீடனும், தோழனும் ஆவார். அவர் ஒரு மருத்துவர்; புற இனத்தாருக்கென இந்நூலை எழுதினார். இப்பாரம்பரியச் சான்றை இக்கால விவிலிய அறிஞர்கள் ஏற்றுக்கொள்வர். லூக்காதான் அப்போஸ்தலர் பணியையும் எழுதினார் என்பது யாவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும்.

3. ஆசிரியர்: காண்க.லூக்கா.

4. காலம்: மற்ற நற்செய்திகளைப்போல், இந்நூல் எங்கே, எப்போது எழுதப்பெற்றது என்று உறுதியாகக் கூறும் பாரம்பரியம் இல்லை. காலத்தைப் பற்றி இருவகைக்

கூற்றுக்கள் உள்ளன. ஒரு சாரார் கி.பி. 60-62-க்கு இடைப்பட்ட காலத்தில் இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பர். காரணம்: தமது மற்றொரு நூலாகிய அப்போஸ்தலர் பணியில் பவுலின் உரோமைச் சிறைவாசத்தைக் கூறிவிட்டு அதன் முடிவைக் கூறாது தமது நூலை முடிக்கிறார் ஆசிரியர். இச்சிறைவாசம் ஏறத்தாழ கி.பி. 63-இல் நிகழ்ந்தது. ஆகையால், அப்போஸ்தலர் பணி கி.பி. 63-க்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நற்செய்தியோ, அப்போஸ்தலர் பணிக்கு முந்தியது. ஆகையால், நற்செய்தி கி.பி. 60-62-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இக்காரணம் எதையும் நிரூபிக்கவில்லை. லூக்காவின் நோக்கத்தை ஆராயும்போது, அப்போஸ்தலர் பணியின் முடிவு ஆசிரியர் விரும்பிய ஒன்றாகத் தெரிகிறது. அவரது நோக்கம், ''பரிசுத்த ஆவியார் உங்கள்மேல் வரும்போது அவரது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அ.ப. 1:8), என்ற இயேசுவின் இவ்வார்த்தைகளில் காணப்படும் திட்டத்தைப் பின்பற்றித் தமது நூலை எழுதலாகும். அப்போஸ்தலர் பணியில் எருசலேமிலிருந்து தொடங்கி, எவ்விதம் விசுவாசம் உலகெங்கும் பரவுகிறது என்று காட்டிப் புறவினத்தவரது அப்போஸ்தலரை, அக்காலத்து உலகின் மையமாகிய உரோமைப் பேரரசின் தலைநகரில் போதிப்பதாகக் காட்டுவதுடன் தமது நூலை ஆசிரியர் முடிக்கிறார். அப்போஸ்தலர் கைதியானாலும் ''தம்மைக் காண வந்தோரை உபசரித்து, மிக்க துணிவோடு, தடையெதுவுமின்றி அவர்களுக்குக் கடவுளின் அரசைப் பற்றிய செய்தியை அறிவித்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உண்மைகளைப் போதித்து வந்தார்'' (அ.ப. 28:31). மேலும், ''ஈராண்டுகள்'' என்ற சொற்றொடர் உரோமைச் சட்டக்கலைச் சொல்லாகும். குற்றம் நிரூபிக்கப்படாவிட்டால், இருவருட முடிவில் விடுதலை அடையக் குற்றம் சாட்டப்பட்டவர் கொண்டிருந்த உரிமையை இச்சொற்றொடர் குறிக்கிறது. ஆகையால், அப்போஸ்தலர் பணியின் முடிவு திடீரென்று முடிவதில்லை. ஆசிரியர் வேண்டுமென்றே இவ்விதம் முடிக்கிறார். கிறிஸ்தவ மறையின் வெற்றியையும் முன்னேற்றத்தையும் காட்டி முடிக்கும் தன்மையே அவரது இலக்கியக் கலைத் திறனைக் காட்டுகிறது. ஆகையால், அப்போஸ்தலர் பணி கி.பி. 63-இல் எழுதப்பட்டது என்றும், மூன்றாம் நற்செய்தி கி.பி. 60-62-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுவதற்குப் போதிய காரணங்கள் இல்லை என்றும் கூறலாம்.

மேலும், நாம் மாற்கின் நற்செய்தி கி.பி. 60-65-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்று ஏற்றுக்கொண்டால், லூக்காவின் நற்செய்தி 65-க்கு முன் எழுதப்பட்டிருக்க முடியாது. ஏனெனில், லூக்கா மாற்கின் நூலைப் பயன்படுத்தியுள்ளார். ஆகையால், கத்தோலிக்க விவிலிய அறிஞர்களில் பலர் கி.பி. 65 70-க்கு இடைப்பட்ட காலத்தில் லூக்காவின் நற்செய்தி எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பர். கத்தோலிக்க அறிஞரில் சிலரும், பிரிவினைச்சபை அறிஞரில் பலரும், கி.பி. 70-80-க்கு இடைப்பட்ட காலத்தில் லூக்காவின் நற்செய்தி எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பர். இஃது இரண்டாவது கூற்று. இதற்குக் காரணம், எருசலேமின் அழிவைப் பற்றிய முன்னறிவிப்பு மிக விரிவாக உள்ளது என்பதாகும் (லூக் 19:43 தொ; 21:20-24; 23:28-30). மாற்கும் மத்தேயுவும் ''பாழாக்கும் அருவருப்பு'' என்று குறிப்பிடுவதை (மத் 24:15;மாற் 13:14), லூக்கா ''எருசலேமைப் படைகள் முற்றுகையிடக் காணும் போது'' (லூக் 21:20) என்ற சொற்களால் குறிக்கிறார். மேலும், எருசலேம் மக்கள் ''வாள் முனையில் மடிவார்கள்; புறநாடுகளுக்கெல்லாம் அடிமைகளாகக் கொண்டு செல்லப்படுவார்கள்; புறவினத்தாரின் காலம் நிறைவேறும் மட்டும்

எருசலேம் புறவினத்தாரால் மிதிபடும்'' (21:24) என்று கூறுகிறார். இவ்விதம் பின் நடந்ததை முன்னறிவிப்பாக விரிவாகக் கூறுகிறார் ஆசிரியர். ஆகையால், எருசலேமின் அழிவுக்குப்பின், அதாவது கி.பி. 70-க்குப் பின்தான் இந்நூல் எழுதப்பட்டிருக்க முடியும் என்பர். இக்காரணமும் குறையற்றதன்று. ஏனெனில், மேற்கூறிய விவரிப்புகளும் சொற்றொடர்களும் பழைய ஏற்பாட்டில் காணப்படுபவை (உப 28:45; ஓசே 9:7; செக் 12:3), அவற்றை லூக்கா பயன்படுத்தியிருக்கலாம்.

ஒருவேளை கி.பி. 70-ஐ மிகவும் அடுத்து இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம். கி.பி. 60-62-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருந்தால் இந்நூல் உரோமையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். கி.பி. 70-க்குப் பின் எழுதப்பட்டிருந்தால் கிரேக்க நாட்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எப்போது, எங்கே எழுதப்பட்டது போன்ற பிரச்சனைகள் முக்கியம் வாய்ந்தவையல்ல. நமது விசுவாசத்தையோ, ஒழுக்க முறையையோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ இப்பிரச்சனைகள் பாதிப்பதில்லை; பாதிக்கவும் முடியாது. எனவே, இவைகளுக்கு அவசியமின்றி முக்கியத்துவம் அளிக்கக் கூடாது.

5. யாருக்காக?: இந்நூலை மற்ற ஒத்தமை நற்செய்திகளுடன் ஒப்பிட்டுச் சிறிது கவனத்துடன் படித்தால் யூதர்களுக்கு மட்டும் உரிய பிரச்சனைகள் விடப்பட்டுள்ளன என்பதும், புறவினத்தவர்களுக்குச் சிறப்பாக உரியவை வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன என்பதும் விளங்கும். சான்றாக, யூதர்களது பாரம்பரியம் (மத் 15:1-20; மாற் 7:1-23), எலியா மீண்டும் வருதல் (மாற் 9:11-13), எதிர்நிலைகள் (மத் 5:21-37) என்பவை யூதர்களுக்கே உரியவை. இவை லூக்கா நற்செய்தியில் இடம் பெறவில்லை. பின்வரும் சொற்களை லூக்கா ஒருபோதும் பயன்படுத்துவதில்லை. ''அப்பா'' (மாற் 14:36 = லூக் 22:42); 'பொவனேர்கேச'' (இடியின் மக்கள்) (மாற் 3:17 - லூக் 9:54); ''எப்பத்தா'' (திறக்கப்படு) (மாற்கு 7:34); ஓசன்னா (மாற் 11:9; மத் 21:9; யோவா 12:13 = லூக் 19:38). எபிரேயச்சொற்களுக்குப் பதிலாக அச்சொற்களின் பொருள் பொதிந்த கிரேக்கச் சொற்களைப் பயன்படுத்துகிறார். சில இடங்களில் வேண்டுமென்றே சில பகுதிகளை விட்டு விடுகிறார் அல்லது திருத்தி அமைத்துத் தருகிறார். சான்றாக, மத் 5:38-48 என்ற பகுதியை லூக் 6:27-36 என்ற பகுதியோடும், மத் 7:24-27 என்ற பகுதியை லூக் 6:47-49 என்ற பகுதியோடும் ஒப்பிட்டு நோக்குக. புறவினத்தவருக்கு அதிர்ச்சியைத் தரக்கூடியவற்றை வெகு கவனமாய்ச் சிறிது மாற்றிக் கூறுகிறார் (மாற் 3:5 = லூக் 6:10; மாற்கு 11:15-17 = லூக் 19:45 தொ; மாற் 14:32-42 = லூக் 22:39,46; மாற் 6:5 தொ = லூக் 4:25-30; மாற் 1:34 = லூக் 4:40; மாற்கு 1:45 = லூக் 5:15 தொ). புறவினக் கிறிஸ்தவர்களுக்குப் பெருமை தராதவைகளை விட்டு விடுகிறார் அல்லது மாற்றிக் கூறுகிறார்.

புறவினத்தவர்க்குச் சிறப்புத் தருபவைகளை விரித்துப் பெரிதுபடுத்திக் கூறுகிறார் லூக்கா (லூக் 7:1-10 = மத் 8:5-13). இதே போக்கை அப்போஸ்தலர் பணியிலும் காணலாம். அங்கே உரோமை வீரர்கள் பவுலை அன்புடன் நடத்தியதாக வாசிக்கிறோம் (அ.ப. 21:31 தொ; 22:29; 27:3). மத்தேயுவோடு ஒப்பிடும்போது, லூக்கா குறைவாகவே பழைய ஏற்பாட்டு எடுத்துக் காட்டுகளைக் கொடுக்கிறார். லூக்காவுக்கு இயேசுவே இறைவாக்குரைஞர் (4:24; 7:16-39; 9:19). புறவினத்தவர்க்கு அனுப்பப்பட்ட இறைவாக்குரைஞர் எலியாவைப் போன்று கிறிஸ்து தோன்றுகிறார். ஆயினும், லூக்காவில் இயேசு புறவினத்தார்க்கு ஒருபோதும் போதிக்கவில்லை. எலியாவோடு இயேசுவை லூக்கா ஒப்பிடுதலை நன்குணர, பின் வருவனவற்றை மனதில் கொள்ள வேண்டும். லூக்கா, நற்செய்தியில் வரும் கிறிஸ்துவின் திருப்பணியையும், அப்போஸ்தலர் பணியில் வரும் திருச்சபையின் திருப்பணியையும் இணைவுபடுத்திக் காட்டுகிறார்: ஆவியரால் திருமுழுக்கு (லூக் 3:21 தொ = அ.ப. 2:1 தொ),

ஆவியரைப் பற்றிய போதகம் (லூக் 4:16-19 - அ.ப. 2:17); இயேசுவை மக்கள் ஏற்க மறுத்தல் (லூக் 4:29 - அ.ப. 7:58; 13:50); மக்கள் கூட்டத்தைக் குணப்படுத்துதல் (லூக் 4:40 தொ = அ.ப. 2:43; 5:16); மகிமைப்படுத்தப்படுதல் (லூக் 9:28-36 = அ.ப. 1:9-11). புறவினத்தவர்க்குப் பயன் படாத பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டு களை விட்டு விடுவதோடல்லாமல் இயேசு வின் இறைவாக்குத் திருப்பணியில் கவனம் செலுத்துகிறார். இது புறவினத்தவரிடையே நிகழும் திருச்சபையின் திருப்பணியில் நிறைவெய்துகிறது.

அப்போஸ்தலர்கள் காலத்துத் திருச்சபை இயேசுவையும், யூதத்துவத்தையும் இணைத்தே கருதியது. ஆனால், லூக்காவும் அவரது வாசகர்களும் யூதச் சட்டத்திலிருந்து விடுதலை பெற்றவர்கள் அல்லவா! ஆகை யால், மற்ற நற்செய்திகளில் காணப்படுவது போன்று யூதச் சட்டத்தையும் நற்செய்தியை யும் பொருத்திக் காட்ட வேண்டிய பிரச் சனையே எழவில்லை. லூக்காவின் நற்செய் தியிலும் நாம் காணும் இயேசு யூதர்களின் மெசியாவானாலும் அவர் உலக மீட்பர் ஆவார். லூக்காவின் சிறப்பான நோக்கம் இயேசுவையும் அவரது போதனைகளை யும் கவர்ச்சிகரமாய்ப் புறவினத்தவர்க்கு அளித்தலாகும். அதற்கு இடையூறான யாவற்றையும் தவிர்க்க முயல்கிறார்.

6. மூலங்கள்: ''நம்மிடையே நிறை வேறிய நிகழ்ச்சிகளைத் தொடக்கமுதல் கண்கூடாகக் கண்டவர்கள் தேவ வார்த்தை யின் பணியாளராகி நம்மிடம் ஒப்படைத் துள்ளனர். ஒப்படைத்தவாறே அவற்றைப் பலர் நிரல்பட எழுத முயன்றுள்ளனர்'' (லூக் 1:1-2), என்று தமது நற்செய்தியைத் தொடங்குகின்றார் லூக்கா. இதிலிருந்து, இயேசுவின் சொல் செயல்களைப் பற்றி ஏற்கெனவே எழுதப்பட்டிருந்த நூல்களை லூக்கா நன்கு அறிந்திருந்தார் எனலாம் (அ.ப. 1:1). இவைகள் குறையுள்ளவை என்று அவர் கருதியதாகத் தெரிகிறது. நேரடிச் சாட்சிகளாயிருந்து நற்செய்தியைப் போதித்தவர்களின் வாய்மொழிப் பாரம்பரி யத்தையும் மற்ற ஏட்டுச் சான்றுகளையும் ஏற்று, நுணுகி ஆராய்ந்து முறையாக வரைவதாகக் கூறுகிறார் (லூக் 1:3-4).

லூக்காவின் மூலங்களில் நமக்குத் தெரிந்த அளவில் முதன்மையானது மாற்கு எழுதிய இயேசுவின் நற்செய்தியாகும் எனப் பொதுவாக விவிலிய அறிஞர்கள் ஏற்றுக்கொள்வர். லூக்காவை மாற்கு, மத் தேயுவுடன் ஒப்பிடுகையில் லூக்காவில் காணப்படும் 1149 வசனங்களில் 548 வசனங் கள் அவருக்கு மட்டுமே உரியவை என்று கூறலாம். மாற்குவின் 660 வசனங்களில் 350 வசனங்களை லூக்கா எடுத்தாண்டுள்ளார். மாற்கில் காணப்படும் பெரும்பாலான வசனங்கள் ஏறக்குறைய சொல்லுக்குச் சொல் லூக்காவில் காணப்படுகின்றன. இது லூக்கா மாற்கைத் தமது மூலமாகப் பயன் படுத்தியுள்ளார் என்று காட்டுகிறது. 325 வசனங்கள் லூக்காவுக்கும் மத்தேயுவுக்கும் மட்டுமே பொதுவானவை. லூக்கா மத்தேயு வால் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட தாகக் கூறப்படும் நற்செய்தியை அறிந் திருக்கக் கூடுமோ என்பது பற்றி பலர் ஐயுறுவர். மத்தேயு, மாற்கு ஆகியோருடன் லூக்கா பொருளளவில் ஒத்திருந்தாலும் சிலவற்றில் வேறுபடுவதாகத் தெரிகிறது. சான்றாக, மாற்கில் காணப்படும் சில பகுதிகள் தமது நோக்கத்திற்கு ஏற்றதாயிருந் தும், அவற்றை அவர் பயன்படுத்தவில்லை (மாற் 7:24-30; சீரோபெனீசியக் கானா னியப், புறவினப்பெண்). மேலும் மாற்கு, மத்தேயுவில் காணப்படாத வாய்மொழிப் பாரம்பரியத்தைத் தருகிறார் லூக்கா. சான் றாக, இயேசுவின் பாலபருவம் பற்றிய பகுதி. இந்த வேறுபாடுகளை விளக்குவது மிகக் கடினம். சிலவேளை மற்ற இருவருக் கும் அகப்படாத எழுத்து மூலங்களை லூக்கா பயன்படுத்தியிருக்கலாம். நற்செய்தி கள் நாம் கொண்டிருக்கும் வடிவில் உரு வெடுக்கும் முன்பே, இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் வாக்குகளை யும் கொண்ட நூல்கள் இருந்தன என்பது இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இவற்றை ஒவ்வொரு நற்செய்தி

யாளரும் தங்களது விருப்பத்திற்கும் நோக்கத்திற்கும் ஏற்ற விதத்தில் கையாண்டிருக்கலாம். மாற்கும் லூக்காவும் ஒரே வாய்மொழிப் பாரம்பரியத்தை விருப்பம்போல் பயன்படுத்தியிருக்கலாம். லூக்காவுக்கு மட்டும் உரியவை என்று கருதப்படுபவை அவரைச் சார்ந்தனவா அல்லது தனிப்பட்ட சிதறிக்கிடந்த, எழுத்து வடிவடைந்த வாய்மொழிப் பாரம்பரியத்தைச் சார்ந்தனவா என்று கூறுதல் கடினம். சான்றாக, லூக்கா தமக்கே உரிய பகுதியில் இயேசுவை 'ஆண்டவர்' என்று குறிப்பிடுகிறார். இஃது ஆசிரியரது சொந்த விகவாசமா? அல்லது பாரம்பரியமா? இது போன்றதே, அவரது இலக்கிய நடையும், தனிப்பட்ட பண்புகளும்; உறுதியாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. லூக்கா பாலஸ்தீனத்தில் சில காலம் வாழ்ந்ததாக அப்போஸ்தலர் பணி சுட்டிக்காட்டுகிறது. அப்போது அவர் இயேசுவைப் பற்றிய பாலஸ்தீன வாய்மொழிப் பாரம்பரியத்தைத் திரட்டியிருக்க வேண்டும். ஒருவேளை ஏரோது அந்திப்பாவின் பாலியத் தோழனான மனாயேன் (அ.ப. 13:1), ஏரோதனின் மேற்பார்வையாளரான கூசாவின் மனைவி, யோவன்னா ஆகியோர் இயேசுவுக்கும் ஏரோதனுக்குமிடையே நிகழ்ந்தவற்றை (லூக் 13:31-33; 23:7-12) லூக்காவுக்குக் கூறியிருக்கலாம். எபேசு நகரில் யோவானுடன் தொடர்பு கொண்டு, அவரிடமிருந்தும், ஏன், இயேசுவின் தாயாகிய மரியாளிடமிருந்தும், இயேசுவைப் பற்றிய பல நிகழ்ச்சிகளை அறிந்திருக்கக் கூடும். இஃது இயேசுவின் பால பருவத்தைப் பற்றி லூக்கா மட்டும் தருவதை விளக்கச் சிறிது உதவலாம். செசரியாவில் பவுல் கைதியாக இருந்தகாலை, சமாரியாவில் நற்செய்தியைப் பரப்பிய தியாக்கோன் பிலிப்புவிடமிருந்து (அ.ப. 8; 21:8) இயேசு சமாரியாவில் நிகழ்த்தியவற்றை அவர் அறிந்திருக்கக்கூடும். அவரது மதிப்புக்கும் அன்புக்குமுரிய ஆசிரியரான பவுல் இயேசுவோடு வாழ்ந்திராவிட்டாலும் பவுலிடமிருந்து நேரடிக்காட்சி விவரங்களுக்குப் பதிலாக, அடிப்படை மனப்பான்மையை லூக்கா பெற்றிருக்கலாம்.

சிலர் லூக்கா பவுலைச் சார்ந்து எழுதுவதாகக் கூறுவர். இதற்குச் சான்றாக, நற்கருணை ஏற்படுத்தப்பட்ட பகுதி (லூக் 22:14-20 = 1 கொரி 11:23-26), புற இனத்தவர் மீட்பிற்கு அழைக்கப்படுதல், யாவருக்கும் மீட்பு அளிக்கப்படுதல், சொல் தொகுதி ஒற்றுமை ஆகியவற்றை எடுத்துக்காட்டுவர். நற்கருணையைப் பற்றிய பகுதி இருவரிடமும் ஒத்திருப்பது உண்மையே. ஆனால், இவ்வொற்றுமை இருவரும் அந்தியோக்கியப் பாரம்பரியத்தைக் கூறுவதன் விளைவே என்று அறிஞர் ஏற்றுக்கொள்வர். புறவினத்தவர் மீட்புப் பற்றிய ஒற்றுமை இந்நூல் புறவினக் கிறிஸ்தவர்களிடையே எழுந்தது என்பதை மட்டும்தான் காட்டுகிறது. இருவருக்கும் இடையே காணப்படும் சொல் தொகுதி ஒற்றுமை இருவரும் கொய்னே கிரேக்க மொழியில் உயர்ந்த மரபுப்படி எழுதியதின் விளைவாக இருக்கலாம். இச்சான்றுகளில் எதுவும், லூக்கா பவுலைச் சார்ந்து எழுதுகிறார் என்று நிரூபிக்க வல்லதன்று.

7. திட்டம்:

I. **பாலபருவம்.**

1:1-4 முன்னுரை.

1:5-2:52 இயேசுவின் பாலபருவம் பற்றிய சிறப்பு நற்செய்தி; லூக்காவுக்கு மட்டும் உரியசெய்திகள் பல காணக்கிடக்கின்ற இத்தொகுப்பில், இயேசு, திருமுழுக்கு யோவான் ஆகியோரின் பால பருவ நிகழ்ச்சிகள் கலைப்பண்புடன் பின்னிக் கிடக்கின்றன. இரு இணை விவரிப்புகளும் இயேசுவின் தாய் யோவானின் தாயைச் சந்தித்தலில் கூடுகின்றன.

1:5-25 திருமுழுக்கு யோவானுடைய பிறப்பின் அறிவிப்பு.

1:26-38 இயேசுவினுடைய பிறப்பின் அறிவிப்பு.

1:39-56 மரியாள் எலிசபெத்தைக் காணுதல், மரியாளின் பாடல்.

1:57-80 திருமுழுக்கு யோவானுடைய பிறப்பு, விருத்த சேதனம், செக்கரி யாவின் பாடல், பாலபருவம்.

2:1-52 இயேசுவின் பிறப்பு, வானவர் கீதம், விருத்த சேதனம், காணிக்கை, பாலபருவம், மறைந்த வாழ்வு.

II. **கலிலேயாவில் திருப்பணி (3:1-9:50).**

3:1-4:13 வரலாற்றுப் பின்னணி, திரு முழுக்கு யோவானின் போதகம், இயேசுவின் திருமுழுக்கு, சோத னைகள் ஆகிய இவை இயேசு வின் திருப்பணிக்கு ஆயத்தமாக அமைந்துள்ளன.

4:14-6:11 நாசரேத்தூர், கப்பர்நாகும்; சீடர் களை அழைத்தல்; அருஞ்செயல் கள், மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரோடு தருக்கம்.

6:12-8:3 பன்னிருவரைத் தேர்ந்தெடுத்தல்; அறவுரைகள்; அருஞ்செயல்கள்.

8:4-9:50 உவமைகளைப் பயன்படுத்திப் போதித்தல்; அருஞ்செயல்கள் *(8:22-56)*; பன்னிருவரை வேத போதக அலுவல் ஆற்ற அனுப்பு தல் *(9:1-6)*; ஏரோதனின் அச்சம் *(9:7-9)*; ஐயாயிரம் பேருக்கு உண்டி அளித்தல் *(9:10-17)*; பேது ருவின் விசுவாச அறிக்கை; பாடு களை முதன் முறையாக முன்னறி வித்தல் *(9:18-22)*; இயேசுவைப் பின்பற்றல் எப்படி? *(9:23-27)*; ஒளியுருவாதல் *(9:28-36)*; பேய் களை ஓட்டுதல் *(9:37-43)*; பாடு களைப் பற்றி இரண்டாம் முறை முன்னறிவித்தல் *(9:43-45)*; யார் பெரியவன் முதலியன *(9:46-50)*.

III. **கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் பயணம்: (9:51-19:27).**

9:51-56 சமாரியா.

9:57-62 சீடனாயிருப்பதற்கான தகுதி.

10:1-24 எழுபத்திரண்டு சீடரைப் பணி செய்ய அனுப்புதல்.

10:25-11:13 உண்மையான பக்தி.

11:14-54 தருக்கங்கள்.

12:1-53 சீடர்களுக்கு எச்சரிக்கை.

12:54-13:35 மனந்திரும்புதலுக்கு அழைக் கும் வாக்குகள்.

14:1-24 பரிசேயன் வீட்டில் உணவு கொள்ளல்.

14:25-35 துறவு

15:1-32 இரக்கம் பற்றிய மூன்று உவ மைகள்.

16:1-31 பிற உவமைகள்.

17:1-19 பல போதகங்கள், அருஞ்செயல் கள்.

17:20-37 மனுமகன் வரும் நாள்.

18:1-14 செபம் பற்றிய உவமைகள்.

18:15-30 இயேசுவும் குழந்தைகளும்; செல்வத்தால் வரும் கேடுகள்.

18:31-34 பாடுகள் பற்றி மூன்றாம் முறை அறிவித்தல்.

18:35-19:27 எரிகோவில் இயேசு.

இத்தொகுப்பு பெரும்பாலும் லூக்கா வுக்கே உரியது. மாற்கு, மத்தேயுவில் காணப்படும் இயேசுவின் அறவுரைகள், வாக்குகள் இத்தொகுப்பில் சிதறிக் கிடக் கின்றன. இப்பயணப்பகுதி, சிதறிக் கிடந்த பல பாரம்பரியச் செய்திகளை ஒரே தொகுப்பில் ஒன்று சேர்க்கப் பயன்படும் ஓர் இலக்கிய முறையாகத் தோன்றுகிறது *(9:51; 13:22; 17:11)*.

IV. **எருசலேமில் திருப்பணி (19:28-21:38).**

19:28-46 எருசலேமில் மெசியாவின் வெற்றி நுழைவு.

19:47 -21:4 ஆலயத்தில் போதகம்.

21:5-36 எருசலேமின் அழிவைப் பற்றிய உரை.

21:37-38 இறுதி நாட்கள்.

V. பாடுகள், இறப்பு, உயிர்ப்பு (22:1-24:50).

இத்தொகுப்பு பெ(ருமள)வில் மத்தேயு-மாற்கை ஒத்துள்ளது. இதில் லூக்காவுக்கு மட்டும் உரியவை.

22:24-30	இறுதி உணவின்போது அப்போஸ்தலர்களுக்குள் வாக்குவாதம்.
22:43	பின் கெத்சமனியில் தூதன், இரத்த வியர்வை.
23:8-12	ஏரோதன் முன் இயேசு.
23:27-31	எருசலேம் பெண்களின் புலம்பல்.
23:34	தமது கொலையாளிகளுக்காக இயேசு வேண்டுதல்.
23:39-43	நல்ல கள்ளனுக்கு உய்வு அளித்தல்.
24:13-35	உயிர்த்த இயேசு எம்மாவுக்குச் செல்லும் இரு சீடர்களுக்குக் காட்சி அளித்தல்.
24:50-53	விண்ணேற்பு.

8. சிறப்பியல்புகள்: லூக்கா தமது நூலை ''உத்தம தியோபில்'' என்பவருக்குச் (லூக் 1:13) சமர்ப்பிக்கிறார். அதுபோலவே அப்போஸ்தலர் பணியையும் அதே நபருக்குச் சமர்ப்பிக்கின்றார். யார் இந்த 'உத்தம தியோபில்'' என்று இன்று வரை அறிவதற்கில்லை. ஆனால், அக்காலத்து இலக்கிய மரபைப் பின்பற்றுவதிலிருந்து, லூக்கா எந்நோக்குடனும் எந்த இலக்கியத் தரத்திலும் எழுத விழைகிறார் என்பதை இத்தொடக்கம் காட்டுகிறது. மேலும் முன்னுரை ஒன்றும் வழங்குகிறார். பொதுவாக, பாலபருவத்திலே (1:5-2:52) உறுதியான எபிரேயத் தொனியும், நற்செய்தியின் பிற்பகுதிகளிலே ''எழுபது நூலின்'' நடையையும் காணலாம்.

அ) முதல் மூன்று நற்செய்திகளில், லூக்கா எழுதிய நூல் இலக்கிய நயமிக்கது. பொதுமக்கள் பேசிய ''கொய்னே'' கிரேக்க மொழிப்பிரிவைப் பயன்படுத்தினாலும், அவரது நடை அக்காலத்திய உயர்ந்த இலக்கியப் பண்பைக் கொண்டுள்ளது. அவர் பயன்படுத்தும் சொல் தொகுதி மத்தேயு, மாற்கினுடையதைவிடப் பரந்து விரிந்தது. பிற மூலங்களைச் சாராது, அவராகவே எழுதும் பகுதிகளில் லூக்காவின் கிரேக்க நடை சிறந்து விளங்குகிறது, உயர்ந்த தரமுடையது. ஆயினும் எபிரேய, அரமேயிக்கு அமைப்புகளைத் தவிர்க்கவில்லை. இங்கும் அங்குமாகக் காணப்படும் செமித்திக்கு அமைப்புகள் இதற்குச் சான்றாகும். இவை ஆசிரியர் தமது மூலங்களுக்கு எவ்வளவு பிரமாணிக்கமாயிருந்தார் என்பதைக் காட்டும். சில சமயங்களில் எபிரேயச்சொற்களின் மொழிபெயர்ப்பைத் தருவார்; மற்றச் சமயங்களில் தம்முடைய மூலங்களில் காணப்படும் திருந்தாச் சொற்களை நீக்கி, நயமுடன் எழுதுகிறார். ஆனால், ஒரே சீராக இவ்விதம் எழுதவில்லை. அதன் விளைவாக அவரது நடை ஒரே சீராக இராது; சில இடங்களில் உயர்ந்தும், சில இடங்களில் மிகச் சாதாரணமாயும் காணப்படுகிறது. நிகழ்ச்சியுரைகளை எழுதுங்கால் மாற்கில் காணப்படும் சிறு விவரங்களை விட்டுவிட்டு, விளக்கவுரையுடன் எழுதுகிறார். லூக்கா அளிக்கும் நிகழ்ச்சியுரை, செய்தி அளிக்கும் தன்மையில் அமைந்துள்ளது. இது மூலங்களிலிருந்து எடுத்தாளப்பட்டதன்று. வேண்டுமென்றே ஆசிரியர் இம்முறையைப் பயன்படுத்துவதாகத் தோன்றுகிறது. இதில், ஆசிரியர் ''எழுபது நூலில்'' காணப்படும் கிரேக்க நடையை விரும்பிப் பின்பற்றுகிறார் என்பர் அனேக அறிஞர்.

ஆ) லூக்காவின் மற்றொரு இலக்கியப் பண்பு ஒரு பொருளைப் பற்றிய நிகழ்ச்சிகள், கூற்றுக்கள், விளக்கங்கள் யாவற்றையும் ஒரே இடத்தில் சொல்லி முடித்தல். சான்றாக, திருமுழுக்கு யோவானின் போதகத்தைக் கூறியவுடன் அவர் சிறைப்பட்டதையும் கூறுகிறார் (3:19 தொ). இப்படிச் சேர்த்துக் கூறுவது சில சமயங்களில் தவறாகப் புரிந்துகொள்ள ஏதுவாகிறது. சான்

றாக, ''மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்து பிறகு வீடு திரும்பினாள்'' (1:56) என்று கூறிய பின், திருமுழுக்கு யோவானின் பிறப்பைப் பற்றிக் கூறுகிறார். ஆகையால் பிள்ளை பிறப்பிற்கு முன்னே, மரியாள் திரும்பி விட்டதாக நாம் புரிந்து கொண்டால் அது தவறாகும். ஆசிரியர் சொல்ல விரும்பியது, மரியாள் எலிசபெத்தைக் காணச் சென்ற நிகழ்ச்சியை முடிப்பதே. மத்தேயுவைப் போலவே, லூக்காவும் தாம் கூற விரும்பிய வற்றைக் கருத்துப்படி ஒழுங்கு செய்து தொகுத்துக் கூறுகிறார். ஆனால், கூறும் விதம் வேறு. இருவரும் காலவரைப்படி செய்திகளைத் தருவதில்லை.

இ) சிலசமயம் பின் வரப்போகிறவை களை முன்னே சுட்டிக்காட்டுகிறார். இது நிகழ்ச்சியுரைகளில் தொடர்பையும் ஒன்றிப் பையும் உண்டாக்குகிறது. சான்றாக, திரு முழுக்கு யோவான் ''பாலைவனத்தில் மறைந்து வாழ்ந்தார்'' என்று கூறுகிறார் (1:80); பின்பு, பாலைவனத்தில்தான் அவ ருக்குக் கடவுளின் வாக்கு அருளப்படுகிறது (3:2), சோதனைகளின் முடிவிலே அலகை ''குறித்த காலம் வரைக்கும் அவரை (இயே சுவை) விட்டுச்சென்றது'' (4:13) என்று கூறுகிறார். இக்கூற்றின் மூலம் ''ஆனால், இஃது உங்கள் நேரம், இருள் ஆட்சிபுரியும் நேரம்'' (22:53) என்று இயேசு கைது செய்யப்படும் நேரத்தை முன் குறிக்கிறார். இவ்விதம் 3:20 = 9:9; 5:33 = 11:1; 8:2தொ = 23:55தொ; 9:1-6 = 10:1-12; 18:31 = 24:25தொ; 20:19 = 22;2; 20:25 = 23:2 ஆகிய பகுதிகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம். இவ் விதம் நிகழ்ச்சிகளைக் கலைப்பண்போடு பின்னிக்கூறுவது லூக்கா நிகழ்ச்சிகளுக்கு அளிக்கும் இறையியல் விளக்கத்தின் ஒரு பகுதியாகும். இஃது அவருக்கே உரிய தொன்று, மூலங்களிலிருந்து பெற்றதன்று.

ஈ) லூக்கா தமக்குக் கிடைத்த மூலங் களை எவ்விதம் பயன்படுத்தினார் என்று அறிய, அவரது நூலை மாற்கு, மத்தேயு ஆகியோர் எழுதிய நூல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இவ்விதம் ஒப்பிட்டு ஆராய்தல் பல செயல்களை நமக்கு வெளிப் படுத்துகிறது. லூக்கா தமது நூலை எழுதுவ தற்கு முன்னே, இயேசுவின் வாழ்வு முப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுத் திட்டம் செய்யப்பட்டிருந்தது. இத்திட் டத்தை அடிப்படையாகக் கொண்டே அவர் தமது நூலை எழுதுவது அவசியமாயிற்று. இதில் லூக்கா மாற்கைப் பின்பற்றுகிறார். திட்டத்தில் மாற்கைப் பின்பற்றினாலும் மாற்கு கூறியவற்றை அப்படியே கூற வில்லை, தமது நோக்கத்திற்கேற்ப மாற்றி யமைத்துக் கூறுகிறார். இந்த மாற்றங்களை அகற்றல், உட்புகுத்தல், சீர்திருத்தல், மாற்றி யமைத்தல் ஆகிய தலைப்புகளின் கீழ் பிரித்துக் கூறலாம். இவ்வித மாற்றங்கள், அவர் கருத்தில் கொண்ட இறையியல் நோக்கிற்கேற்ப அமைக்கப்பட்டன.

உ) **அகற்றல்:** லூக்கா மாற்கில் காணப் படும் யூதர்களுக்கு மட்டுமே உரியனவும், தமது வாசகர்களுக்குப் புரியாதனவும் (மாற் 7:1-23; 9:9-13; 10:1-12), அவர்களுக்கு இக்கட்டானவையுமான (மாற் 3:20தொ; 7:24-30; 11:12-14; 20:25; 6:45-52) பகுதிகளை விட்டு விடுகிறார். இயேசுவின் பாலுள்ள மரியாதையினால் சில பகுதிகள் விடப் பட்டுள்ளன. சான்றாக, மாற்கில் இயேசு வின் மனித உணர்ச்சிகளைத் தெளிவாகக் காட்டும் பகுதிகள் (மாற் 1:43; 3:5; 9:36; 10:16-21; 14:33தொ), அவரது அறிவு வரை யறையுடையது என்று காட்டும் பகுதிகள் (மாற் 13:32; 15:34) லூக்காவில் அகற்றப் பட்டுள்ளன. அதேபோல் அப்போஸ்தலர் களுக்கு இழிவு தரும் பகுதிகள் அகற்றப் பட்டுள்ளன (மாற் 4:13-38; 6:31; 9:10-23தொ.33தொ; 10:35-45; 14:50). மேலும், மாற்கில் காணப்படும் பல நிகழ்ச்சி விவரங்கள் விடப்பட்டுள்ளன. பொதுவாக, மாற்கில் காணப்படும் அவசிய மற்ற, கவர்ச்சி தரும் விவரங்களை லூக்கா விட்டு விடுகிறார். மாற் 6:45-8:26 என்ற பகுதியை லூக்கா அகற்றியிருக்கிறார். இது 'பேரகற்றல்' என்றழைக்கப்படுகிறது.

ஊ) **உட்புகுத்தல்:** மேற்கூறியதற்கு மாறாக, லூக்கா மாற்கில் காணப்படாத பல

பகுதிகளைத் தமது நூலில் உட்புகுத்தியுள்ளார். இவற்றில் முக்கியமானவை 6:20-8:3; 9:51-18:14. இவற்றில் முன்னது மாற்கில் 3:19-க்கும் 3:20-க்கும் இடையிலும், பின்னது மாற்கில் 9:50-க்கும் 10:1-க்கும் இடையிலும் நிகழ்ந்திருக்கலாம். இரு நூல்களிலும் இப்பகுதிகளுக்கு முன்னும் பின்னும் வரும் பகுதிகளைக் கவனித்தால் நமது முடிவு நியாயமானதாக விளங்கும். லூக் 9:51 -18:14 என்ற பகுதி ''பெரிய உட்சேர்க்கை அல்லது பெரிய உட்புகுத்தல்'' என்று அழைக்கப்பெறும். இதைத் தவிர பல சிறு பகுதிகள் உட்புகுத்தப்பட்டுள்ளன; சில சீர்திருத்தப் பெற்றுள்ளன. அவற்றில் சில: லூக் 4:31; 5:1; 8:24; 19:37; 23:51; 6:15; 4:1; 8:18-30; 8:53-55; 9:9; 22:51-69. லூக்கா கருத்தில் கொண்டுள்ள அவருக்கே உரிய நோக்கத்திற்கேற்ப பல பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை: லூக் 5:25; 18:43; 19:37; 23:47; 3:6-21; 6:12; 9:28; 23:34; 5:11-28; 14:26; 18:22-29; 4:14; 10:21; 11:13.

எ) **இடமாற்றிக் கூறல்:** மாற்கில் காணப்படும் பல பகுதிகள் லூக்காவின் நோக்கத்திற்கேற்ப இடமாற்றிக் கூறப்படுகின்றன. சூழ்நிலை மாற்றிக் கூறப்படும் நிகழ்ச்சிகளுக்கும் வேறு விளக்கம் அளிக்கப்படுகிறது. அவை:

மாற்கு	1:16-20	=	லூக்	5:1-11.
மாற்கு	3:18-21	=	லூக்	11:14-23.
மாற்கு	4:30-32	=	லூக்	13:18-21.
மாற்கு	6:1-6	=	லூக்	4:16-30
மாற்கு	8:11-13	=	லூக்	11:29-32
மாற்கு	9:42-48	=	லூக்	17:1தொ.
மாற்கு	9:49	=	லூக்	14:34தொ.
மாற்கு	10:11தொ	=	லூக்	16:8.
மாற்கு	10:31	=	லூக்	13:30.
மாற்கு	10:35-45	=	லூக்	22:24-27.
மாற்கு	12:28-34	=	லூக்	10:25-28.
மாற்கு	13:15தொ	=	லூக்	17:31.
மாற்கு	13:21-23	=	லூக்	17:23.
மாற்கு	13:33-37	=	லூக்	12:35-40.
மாற்கு	14:27-31	=	லூக்	22:31-34.

ஏ) **இரட்டிப்பு உரைகள்:** மாற்கு ஒரே மூலத்தைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது. ஆனால், லூக்கா பல மூலங்களைப் பயன்படுத்தியுள்ளார் எனத் தெரிய வருகிறது. அதன் விளைவாக ஒரே பகுதி இரண்டு இடங்களில் வெவ்வேறு சூழ்நிலையில் தரப்படுகிறது. இவை பெரும்பாலும் இயேசுவின் வாக்குகளாகும். இவ்வாக்குகள் ஒரு முறை மாற்கிலிருந்து எடுத்துப் பயன்படுத்தப்படுகின்றன; மற்றொரு முறை லூக்கா - மத்தேயுவுக்கு மட்டும் உரிய மூலத்திலிருந்து எடுத்தாளப்படுவதாகத் தெரிகிறது (8:16 = 11:33; 8:17 = 12:2; 8:18 = 19:26; 9:5 = 10:10; 9:23 = 14:27; 9:24 = 17:33; 9:26 = 12:19; 9:50 = 11:23). இப்படிப்பட்ட இரட்டிப்பு உரைகள் மாற்கில் காணப்படுவதில்லை. லூக்காவில் இயேசு செய்த பணியின் முதற்பகுதி (4:1-9:50), இரண்டாம் பகுதியோடு (9:51-19:28) இணையாக அமைந்துள்ளது.

ஆனால், பல நிகழ்ச்சியுரைகளில் இரு முறை கூறுவதை லூக்கா தவிர்த்துள்ளார். சான்றாக, ஒருமுறைதான் இயேசு தைலம் பூசப்படுகிறார் (7:36-50); அப்பம், மீன் பலுகுதல் ஒரு முறைதான் நிகழ்கிறது (9:12-17); பலன் கொடா அத்திமர விவரிப்பு ஒருமுறைதான் கூறப்படுகிறது (13:6-4); கெத்சமனித் தோட்டத்தில் இயேசு ஒருமுறைதான் அப்போஸ்தலர்களிடம் வருகிறார் (22:39-46); யூத அதிகாரிகளின் முன் ஒரே ஒரு விசாரணைதான் நடைபெறுகிறது (22:66-71).

ஐ) மருத்துவரெனக் கருதப்படும் லூக்கா செயற்கைப்பழக்கம் (mannerism), உள்வியல் போக்கு, புதைந்து கிடக்கும் நோக்கு இவைகளைக் கூர்ந்து கவனித்து எழுதுகிறார். அவர் மட்டும்தான் உளவியல் சூழ்நிலையைக் கொடுக்கிறார்: 3:15;

4:14தொ; 9:43; 11:1-29;13:1; 17:20; 18:19; 19:11. அவரது புறவினப் பிறப்பும் வளர்ப்பும், பல நாடுகளுக்குப் பயணம் செய்ததும், யாவற்றையும் சம நிலையோடு நோக்கும் மனப்போக்கும் அவருக்குப் பரந்த மனப்பான்மையைக் கொடுத்திருக்க வேண்டும். சிறுபான்மையினருக்கும், ஒதுக்கப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் தனிப்பற்று காட்டுகிறார். சமாரியர், தொழு நோயாளிகள், ஆயக்காரர், வீரர்கள், நிந்தை அவமானம் நிறைந்த பொதுப்பாவிகள், கல்வியறிவில்லாத இடையர்கள், ஏழைகள் ஆகியோர் இந்நற்செய்தியில் தனிப்பட்ட விதத்தில் சிறப்புப் பெறுகின்றனர்; உற்சாகம் பெறுகின்றனர்.

ஒ) இவற்றையெல்லாம் ஆராயுங்கால், லூக்கா தம்முடைய மூலங்களைச் சுதந்தரத்துடன் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. நிகழ்ச்சிகளை மாற்றி அமைக்கவும், பொதுத் தன்மையுடையவைகளைத் தொகுத்து வரையவும், நிகழ்ச்சிகளை நாடகப் பாணியில் திருத்தி எழுதவும் தமக்குச் சுதந்தரம் உண்டென்று லூக்கா கருதியதாகத் தெரிகிறது. லூக்காவில் காணப்படுபவற்றை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்: 1. தொகுப்பாளர் என்ற முறையில் லூக்கா தரும் பகுதிகள்; 2. மாற்கைச் சார்ந்து எழுதும் பகுதிகள்; 3. மத்தேயுவைச் சார்ந்து எழுதும் பகுதிகள்; 4. லூக்காவுக்கு மட்டும் உரிய பகுதிகள்.

லூக் 1-2 அவருக்கே உரியதொன்றாகும். காணாமற் போன மகன் (15:11-32), நல்ல சமாரியன், பரிசேயனும் ஆயக்காரனும் போன்ற அழகிய உவமைகள் லூக்காவில் மட்டும்தான் காணப்படுகின்றன. பாடுகள், உயிர்ப்புப் பகுதிகளில் லூக்கா பல விவரங்களை உட்சேர்த்துள்ளார். இவை யாவும் முக்கியமானவையாகும். பிற நற்செய்திகளில் காணப்படாத பல விவரங்களைத் தந்து சென்றதற்கு நாம் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

முன்பு கூறியதுபோல், லூக்கா தூரிகை பயன்படுத்தும் ஓவியராய் இருந்திராவிடினும், சொல்லோவியம் தீட்டுவதில் ஆற்றல் மிக்கவர். கிறிஸ்தவ ஓவியர்களுக்கு, ஓவியம் தீட்டும் வாய்ப்பை மற்ற நற்செய்தியாளர்களை விட லூக்கா அதிகமாக அளித்துள்ளார். இயேசுவின் பிறப்புப் பற்றிய காட்சிகள், இயேசுவினுடைய பிறப்பின் அறிவிப்பு, மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல், ஆலயத்தில் இளைஞன் இயேசு, நல்ல சமாரியன், காணாமற்போன மகன், பணக்காரனும் இலாசரும் ஆகியவை போன்ற லூக்காவின் சொற்சித்திரங்களை ஓவியர்கள் திரைச்சீலைகளிலும், மதில்களிலும் தீட்டிப் பெரும் பேறடைந்துள்ளனர். லூக்காவின் நற்செய்திக்கு விளக்கம் அளிக்க முயல்பவர்கள் இவ்வாசிரியர் சொற்களால் சித்திரம் வரைபவர் என்பதை மனதிற்கொண்டு விளக்கவுரையில் சிறிது கற்பனைத் திறனையும் பயன்படுத்த வேண்டும். வெறுமனே விளக்கம் அளித்தால் இந்நூலில் காணப்படும் பல நயங்கள் விடுபட்டுப் போகும்.

9. நோக்கம்: எதற்கும் மேலாக, புறவினத்தாருக்குக் கிறிஸ்துவின் மீட்பளிக்கும் நற்செய்தியை அளிக்க விழைகிறார் லூக்கா. சிமியோன் கிறிஸ்துவில் ''புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி''யைக் கண்டார் (2:32). பவுல் உரோமை யூதர்களுக்கு ''இறைவன் ஈந்த இந்த மீட்பு புறவினத்தாருக்கு அனுப்பப்பட்டது என்றும் அறிவீர்களாக'' (அ.ப. 28:28) என்று கடைசியாகக் கூறிய வார்த்தைகளைப் பவுலின் தோழனும் சீடனுமான லூக்கா மறந்திருக்க முடியாது.

அதன்படி லூக்கா எழுதிய நற்செய்தியிலே, இஸ்ராயேல் மக்கள் இயேசுவை ஏற்க மறுத்து அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றதையும், அவர் மகிமைப் படுத்தப் பெற்று, உலகனைத்திற்கும் மீட்பு போதிக்கப்படுவதையும் காண்கிறோம். மறைநூலில் எழுதியுள்ளது இதுதான்: ''மெசியா பாடுபட்டு, மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுவார்; அவர் பெயரால் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேமில் தொடங்கி, புறவினத்தார் அனைவருக்கும் அறிவிக்கப்

படும். இவற்றிற்கெல்லாம் நீங்கள் சாட்சி'' (24:46-48). இதற்காக, தமது நற்செய்தியை எருசலேமை மையமாகக் கொண்டு எழுத வேண்டும் என்பது அவரது முழுக்கவனத்தையும் ஈர்த்துள்ளது எனலாம். ஏனெனில், எருசலேம் இறைவனின் புனித நகரம். எருசலேம் என்ற மேடையில்தான், இயேசுவின் பாடுகள், வெற்றி ஆகிய மீட்பின் மாபெரும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எருசலேமில் நற்செய்தி தொடங்குகிறது (லூக் 1:5); அங்கேயே நற்செய்தி முடிவு பெறுகிறது (24:52தொ). பாலபருவ வரலாற்றிலேயே, எருசலேம் இருமுறை நம் கண்முன் கொணரப்படுகிறது. இதே நோக்கோடு ஆசிரியர் சில நிகழ்ச்சிகளை மாற்றியமைக்கிறார். சான்றாக, இயேசுவின் சோதனைகள், மத்தேயுவில் காணப்படும் இயற்கையான சூழ்நிலையில் அன்றி, எருசலேம் ஆலயக்கோபுரத்தில் உச்சநிலையடைகிறது. கலிலேயாவுக்கு வெளியில் இயேசு செய்த பயணங்கள் விடப்பட்டுள்ளன. அதற்கு மாறாக, ஆசிரியர் சேர்த்துள்ள ''பெரிய உட்புகுத்தல்'' (9:51-18:14) எருசலேமை நோக்கிச் செல்லும் நெடும் பயணமாக விவரிக்கப்படுகிறது. எருசலேமைப் பெரிதுபடுத்திக் காட்டும் பொருட்டு மற்ற இடங்களின் பெயர்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. பேதுரு தமது விசுவாச அறிக்கையிட்டது செசரியா பிலிப்பியில் என்று கூறப்படவில்லை. உயிர்த்தபின் கலிலேயாவில் இயேசு கொடுத்த காட்சிகள் தரப்படவில்லை. இயேசு எருசலேமுக்கு வந்தார்; அங்குத் தமது மக்களால் நிராகரிக்கப்பட்டார்; அங்குப் பாடுபட்டார்; அங்குதான் உயிர்த்தெழுந்தார்; எருசலேமிலிருந்துதான் விண்ணெழுந்தார். அந்நகரத்திலிருந்து சிறிது பிரிந்திருந்தாலும், அதனை ஒரு வீழ்ச்சி நிலையாக ஆசிரியர் கருதியதாகத் தெரிகிறது. எருசலேமே மீட்பு நிகழ்ச்சியின் மையம் என்ற நோக்கு ஆசிரியரது இரண்டாம் நூலாகிய அப்போஸ்தலர் பணியிலும் காணப்படுகிறது. ''எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அ.ப. 1:8). எருசலேமிலிருந்துதான் கிறிஸ்துவின் உய்விக்கும் நற்செய்தி ஒளிர்கிறது, பரவுகிறது, உலகனைத்தையும் வெற்றிகொள்கிறது.

10. முக்கிய கருத்துக்கள்: எந்த நற்செய்தியாளரும் கிறிஸ்தவக் கொள்கைகள் அடங்கிய இறையியல் நூலை எழுத விரும்பவில்லை. ஆனால், அவர்களது நூலில் இறையியல் காணப்படுகிறது. நற்செய்தியாளர் யாவரும் போதித்த இறையியலையே தங்களது நூலில் அளிக்கின்றனர். ஆனால், ஒவ்வொருவரும் கூறும் விதம் வேறு. அவரவர் குறிக்கோளுக்கு ஏற்பச் சிலவற்றை அழுத்திக் கூறுவர், சிலவற்றை மேலெழுந்த வாரியாகக் கூறுவர். அதன்படி, லூக்காவும் சில கருத்துக்களை அழுத்திக் கூறுகிறார். திருச்சபையின் முதல் தலைமுறை முடிவிலே வாழ்ந்த புறவினக் கிறிஸ்தவர்களுக்கு, அவர்களது ஆன்மீக வாழ்வை உறுதிப்படுத்தும் விதத்தில், இயேசுவின் தெய்வீகப் போதனையைத் தருகிறார்.

அ) லூக்காவின் நூல் உலகினர் யாவர்க்கும் இறைவன் அளித்த மீட்பின் (Universal salvation) நற்செய்தியாகும். நற்செய்தி யாவர்க்கும் பறைசாற்றப்படுகிறது. அதன் வழியாக யாவர்க்கும் மீட்பு அளிக்கப்படுகிறது. இந்த ''அனைத்துத்தன்மை'' லூக்காவின் நற்செய்தியின் சிறப்புக் கருத்தாகும், மையக்கோட்பாடாகும், அவரது ஆழ்ந்த விசுவாசமும் ஆகும். இக்கருத்து லூக்காவுக்கோ, பவுலுக்கோ மட்டும் உரியதொன்றன்று; மூலப் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். ஆனால், லூக்கா பவுலைப்போல், தெளிவாக இக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுகிறார். இதன் காரணம், அவர் புறவினத்தாருக்கு எழுதியதால், அவர்களும் இந்த அனைத்துத் தன்மையை அறிந்து, உணர்ந்து, ஏற்றுப் பயன்பெறுதலை விரும்பியதே ஆகும். அதற்கேற்ப இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை வரைகிறார்.

இயேசுவின் மூதாதையரின் பட்டியல், ஆபிரகாமிலிருந்து தொடங்கவில்லை; மாறாக, மக்கள் அனைவரின் தந்தையும் ''கடவுளின் மகனும்'' (3:38)ஆன ஆதாமி விருந்து தொடங்குகிறது. மக்கள் அனை வரையும் இறைவனின் பிள்ளைகள் என்ற உயர்நிலைக்குத் திரும்பக் கொணரும் புதிய ஆதாம் (3:23-38) இயேசுவே. ''(இறை வனது) தயவு பெற்றவர்க்கு அமைதியு மாகுக'' என்ற வானதூதர்களின் திருப்பாட லிலும் (2:14) இவ்வனைத்துத் தன்மை மிளிர்கிறது. இயேசுவைப் ''புற இனத் தார்க்கு இருள் அகற்றும் ஒளியாக''க் கண்டார் சிமியோன் (2:28). அவரில் ''மனிதர் எல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர்'' (3:6). அவர்பால் கொண்ட விசுவாசம் உலகினர் யாவரையும் ஆபிரகா மின் பிள்ளைகளாக்கும் (3:8).

இவ்வனைத்துத் தன்மைக்கு ஊறு செய் பவைகளையும், இதனைக் குறுக்கிக் காட்டு பவைகளையும் லூக்கா அகற்றி விடுகிறார் அல்லது தெளிவற்ற முறையில் கூறுகிறார். மாறாக, இக்கோட்பாட்டை விளக்குபவை கள் அழுத்திக் கூறப்படுகின்றன. சான்றாக, மாற்கில் காணப்படும் யூதப் பழக்க வழக் கங்களும் பண்புகளும் லூக்காவில் அகற்றப் பட்டுள்ளன. பன்னிரு சீடர்கள் சமாரிய ரிடையே போதிக்கச் செல்ல வேண்டாம் என்று இயேசு கூறியது (மத் 10:5தொ) லூக்காவில் இல்லை. ஆனால், மீட்பின், திருச்சபையின் அனைத்துத் தன்மையை, லூக்கா தமக்கே உரிய முறையில் வெளிப் படையாகச் சுட்டிக்காட்டுகிறார் (2:14-32; 24:47). இயேசு சமாரியரிடையே தங்க இடம் கேட்கிறார் (9:52). குணமான தொழு நோயாளிகளுள் சமாரியனான ஒருவன் மட்டும் நன்றி கூற வருகிறான் (17:11-19). பிறர் அன்பிற்கு மாதிரிகையாகச் சமாரி யனை உவமை வாயிலாகக் காட்டுவதை நாம் மறந்து விட முடியாது (10:30-37). இவ்வுவமையிலே, அன்பின்முன், இன, மத வேற்றுமைகள் தகர்ந்தொழிகின்றன. நல்லொழுக்கத்திற்கும் தாராள விசுவாசத் திற்கும் புறவினத்தவர் மாதிரிகையாவர் (7:9). இயேசுவின் இறுதிக்கட்டளை அப் போஸ்தலர்கள், அனைவருக்கும் நற்செய் தியைப் போதிக்க வேண்டும் என்பதே (24:47). மீட்பு அனைவருக்கும் அளிக்கப் படுகிறது என்ற போதகம் புறவினத்தார்க்கு எவ்வளவு மகிழ்ச்சியையும் அமைதியையும் அளித்திருக்கக்கூடும் என்பதை நாம் எண்ணியுணரலாம்.

ஆ) அடுத்து, இந்நற்செய்தி இயேசுவின் இரக்கத்தைப் பாடும் காவியமாகும். ஆசிரி யர் இயேசுவின் இரக்கத்தையும், நன்மைத் தன்மையையும் பல இடங்களில் அழுத்திக் கூறுகிறார் (7:36-50; 15:11-32; 18:10-14; 19:1-10; 23:42தொ). இயேசுவின் இரக் கத்தை நூலில் வரும் பெரும் மன்னிப்பு நிகழ்ச்சிகளில் காணலாம்: பாவியான பெண் (7:36-50), ஊதாரிப்பிள்ளை அல்லது காணாமற்போன மகன் (15:11-32), சக்கேயு (19:1-10), இயேசுவின் கொலையாளிகள் (23:34), நல்ல கள்ளன் (23:39-43). பாவி களை அவர் வெறுக்கவில்லை; மாறாக, அவர்களிடம் அன்பும் இரக்கமும் கொண் டார். இவற்றைக் காணும்போது, இந் நூலைப் ''பெரும் மன்னிப்புகளின் நற் செய்தி'' என்று அழைக்க சிலர் தயங்குவ தில்லை. ''இயேசு பாவிகளின் நண்பன்.'' இது லூக்காவுக்கே உரிய கருத்தாகும். இஃது அவரது அனைத்துத் தன்மை நோக் கின் சிறப்புகளில் ஒன்றாகும். ''இழந்து போனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார்'' (14:10) என்ற கூற்றை லூக்கா வில் மட்டுமே காண்கிறோம். ''உங்கள் வானகத்தந்தை நிறைவுள்ளவராய் இருப் பது போல், நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்'' (மத் 5:48) என்று மத்தேயு கூறுமிடத்து, ''உங்கள் தந்தை இரக்கமுள்ள வராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்க முள்ளவர்களாய் இருங்கள்'' (லூக் 6:36) என்று லூக்கா கூறுகிறார். ''மனந்திரும்புதல்'' என்ற சொற்றொடர் லூக்காவில் மட்டும் தான் வருகிறது (5:32). காய்க்காத மரத் திடம் காட்டும் பொறுமை பற்றிய உவமை

யும், பரிசேயனும் ஆயக்காரனும் என்ற உவமையும் என்றும் வாசகர்களின் மனதை விட்டு அகலா. அருஞ்செயல்களைக் கூறும் போது, துன்புறுவோரிடம் இயேசு காட்டிய கனிவிரக்கத்தை அழுத்திக் கூறுகிறார் ஆசிரியர் (7:11-17; 13:11-17; 14:1-6; 17:19-31). மாற்கில் காணப்படும் சீடர்களைப் பற்றிய கடுமையான கூற்றுகள் லூக்காவில் காணப் படவில்லை. அதேபோல் மாற்கில் காணப் படும் சில கொடூரமான சொற்கள் (மாற்கு 4:12; 9:43-48; 14:21) லூக்காவால் தவிர்க்கப் பட்டுள்ளன. இயேசுவின் இரக்கத்தை லூக்கா எடுத்துக்கூறும் தன்மை மனதைக் கவரவல்லது. இதை மனதிற் கொண்டுதான் மகாகவி தாந்தே லூக்காவைக் ''கிறிஸ்து வின் இரக்கத்தைப் பாடுவோன்'' என் றழைக்கிறார்.

இ) அடுத்து, லூக்கா எழுதிய இந்நூலை எளியோருடையவும், தாழ்ச்சியுடையோரு டையவும் நற்செய்தி எனலாம். இக்கருத்து இயேசுவின் பால பருவ வரலாற்றிலும் (குழந்தையில்லாத் தம்பதியர் செக்கரியா, எலிசபெத்து; யாரும் அறியா நாசரேத்தூரி லிருந்து யோசேப்பும் மரியாளும் தோன்று கின்றனர்; ஆலயத்தில் ஒரு முதியோரும், ஒரு முதிய விதவையும் காட்சியளிக்கின்ற னர்), நாசரேத்தில் போதித்தலிலும் (4:14தொ.16; 7:22), இந்நூலுக்கே உரிய பல வாக்குகளிலும் (12:13-20), பணக்கார னும் ஏழை இலாசரும் போன்ற உவமை களிலும் (16:19-31) காணப்படுகிறது. மத் தேயு ''எளிய மனத்தோர் பேறு பெற்றோர்'' (5:3) என்று கூறும்போது, லூக்கா ''ஏழை களே, நீங்கள் பேறு பெற்றவர்கள்'' (6:20) என்று கூறுகிறார். தருமம் வழங்குதல் அழுத்திக் கூறப்படுகிறது. ஏழைகளுக்கும் இயலாதோர்க்கும் மனத்தளவிலும், செய லளவிலும் இரங்குதல் சிறப்பித்துக் கூறப் படுகிறது.

எளியோருள் மகளிரும் அடங்குவர். லூக்கா தமது நூலில் மகளிருக்குத் தனிச் சிறப்பும் முக்கியத்துவமும் அளிக்கிறார். இது லூக்காவின் அனைத்துத் தன்மையின் மற்றொரு சிறப்பான பகுதியாகும். மற்ற நற்செய்திகளில் காணப்படுவதை விட இந் நூலில் மகளிர் பலர் வருகின்றனர்; சிறப் புடையோராய்க் காட்சியளிக்கின்றனர். கிரேக்கர்கள், யூதர்களைவிட மகளிர்க்கு மதிப்பும் உயர் நிலையும் அளித்திருந்தனர். யூதர்கள் பெண்பாலர்பால் கொண்டிருந்த கருத்து இயேசுவின் நற்செய்தியில் இல்லை எனக் காட்ட விழைகிறார் ஆசிரியர். இதை, இயேசுவின் தாயாகிய மரியாளைப் பற்றிய நிகழ்ச்சிகள், நயீனைச் சார்ந்த விதவை (7:11-17), மன்னிப்பு வேண்டும் பெண்மணி (7:36-50), மார்த்தாவும் மரியாளும் (10:38-42), இன்னும் இயேசுவுக்குப் பணி விடை செய்த மகளிர் ஆகியோரைப் பற்றிய நிகழ்ச்சிகளில் காணலாம்.

ஈ) உலகில் உள்ள எளியோர் யாவர்க்கும் இறைவனது மீட்பு கொடையாக அளிக்கப் படுகிறது. அதை அடைய ஒருவன் இஸ்ரா யேல் இனத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும் என்பதில்லை. பணக்கார னாகவோ, தனிச்சலுகை பெற்றவனாகவோ இருக்க வேண்டியதில்லை. இறைவனுக்குத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். யாவற் றையும் துறந்துவிடல் வேண்டும் (12:33-34). இயேசுவே அதற்கு மாதிரிகை. மற்ற நற்செய்தியாளரை விட, லூக்கா, இயேசு பாடுகள் படவேண்டியதை அழுத்திக் கூறு கிறார் (9:22; 13:33; 17:25; 22:37; 24:7.26.46). இயேசுவைப் பின்தொடர விரும்பும் அவ ருடைய சீடர்கள் தங்களது சிலுவையை நாள்தோறும் சுமக்க வேண்டும் (9:23). சீடர்களைப் பற்றி ''அவர்கள்... யாவற்றை யும் துறந்து அவரைப் பின் தொடர்ந்தார்கள்'', ''அவரும் எழுந்து, அனைத்தையும் விட்டு அவரைப் பின் தொடர்ந்தார்'' (5:11-29) என்று லூக்கா கூறுகிறார். செல்வத்தை லூக்கா கண்டனம் செய்யவில்லை. ஆனால், செல் வத்திற்கு அடிமையானதைக் கண்டனம் செய்கிறார். சிலர் மண வாழ்வையும் துறந்து இயேசுவைப் பின் தொடரத் தயா ராக இருக்க வேண்டும் (14:26). இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு சிலர் இந் நூலை முழுத்துறவின் நற்செய்தி என்றழைத் தனர்.

உ) மேற்கூறப்பட்ட, யாவற்றையும் து[illegible]களையே இயேசுவுக்கு அர்ப்பணிக்கும் வாழ்வு செபமும், பரிசுத்த ஆவியாரின் உதவியும் இன்றி இயலாத ஒன்றாகும். இயேசு தமது வாழ்வின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திற்கு முன்னும் செபித்தார் என்று குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறார் லூக்கா. சான்று: இயேசுவின் திருமுழுக்கின்போதும் *(3:21)*, அப்போஸ்தலர்களைப் பொறுக்கி எடுக்கும் முன்னும் *(6:12)*, பேதுருவின் விசுவாச அறிக்கைக்கு முன்னும் *(9:18)*, ஒளியுருவாகும் முன்னும் *(9:28)*, பாடுகளுக்கு முன்னும் *(22:39 தொ)*, சிலுவையின் மேலும் இயேசு செபிக்கிறார். இயேசு செபித்தலில் வல்லுநர் *(11:1-13; 18:1-8)*. அடிக்கடி பிறரை விட்டுப் பிரிந்து சென்று, தமது தந்தையோடு செபத்தில் முழுவதும் ஒன்றித்திருப்பார். மீட்பும் அதன் வருகையும் செபமிக்க சூழ்நிலையில் நிகழ்கிறது; செபமிக்க சூழ்நிலையை ஏற்படுத்துகிறது *(3:21; 5:16; 9:18-28; 10:21; 22:32; 23:34)*. விடாது தொடர்ந்து செபிக்கக் கற்பிக்கும் ''தொந்தரை செய்யும் நண்பன்'' *(11:5-8)* உவமை, ''பொல்லாத நடுவர்'' *(18:1-8)* உவமை போன்றவை லூக்காவுக்கே உரியவை.

செப வாழ்வின் பயனாக, இயேசு பரிசுத்த ஆவியரால் நடத்தப்பட்டார். இயேசுவையும் சீடர்களையும் அவர்களது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் பரிசுத்த ஆவியர் நடத்திச் செல்வதை லூக்கா சிறப்பித்துக் கூறியுள்ளார் *(1:15.35.41.67; 2:25-27; 3:16. 22; 4:1.14. 18; 10:21; 11:13; 12:10.12)*. இயேசுவுக்கு நேர்ந்தது, அவருடைய இரண்டாம் வருகை வரை திருச்சபையிலும் நடைபெறுகிறது. பரிசுத்த ஆவியர் அப்போஸ்தலர்களையும், அவர்களுடைய மறை வழித்தோன்றல்களையும் வழி நடத்துகிறார். இது பரிசுத்த ஆவியரின் காலமாகும்.

ஊ) இந்நூல் ''இறைவனைப் போற்றும், மகிழ்ச்சி அளிக்கும் நற்செய்தியாகும்''. மீட்பின் வருகை மகிழ்ச்சி மிக்க சூழ்நிலையைப் படைக்கிறது. இது மற்ற நற்செய்திகளில் காணப்படுவதைவிட, லூக்காவில் பல இடங்களில் குறிப்பிடப்படுகிறது *(1:4.28.58; 2:10; 10:17. 20 தொ; 13:17; 19:6-37; 24:41.52)*. இந்நூலின் தொடக்கத்திலே வானதூதர்களின் மகிழ்ச்சிக் கானத்தைக் கேட்கிறோம் *(2:13தொ)*. அதன் முடிவிலே, இறைவனை இடைவிடாது வாழ்த்திப் போற்றும் அப்போஸ்தலர்களின் காட்சி நம் கண்முன் கொண்டு வரப்படுகிறது *(24:52தொ)*. மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து விண்வீட்டிலே மிகுந்த மகிழ்ச்சியுண்டாகும் *(15:7.10.32)*. இயேசுவின் விந்தை மிக்க அருஞ்செயல்கள் கண்டு, மக்கள் மகிழ்ச்சி மிக்க வியப்பெய்துகின்றனர் *(5:26; 10:17; 13:17; 18:43)*. இவை கருத்தோடு நோக்குதற்குரியன. லூக்காவில் காணப்படும் மகிழ்ச்சி மரியாளின் பாடல், செக்கரியாவின் பாடல் போன்ற புகழுரையாகவும் போற்றுரையாகவும் மலர்கிறது.

எ) லூக்காவின் நற்செய்தி ஒரு வாழ்க்கை ஒழுங்காகும். அதை ஒரு ''சமூக நற்செய்தி'' என்று கூடக் கூறலாம். செல்வம், வறுமை பற்றிய அவருடைய கூற்றுக்கள் அவருடைய நோக்கையும், மனப்பான்மையையும் காட்டுகின்றன. ''பணக்காரனும் ஏழையும்'' *(16:19-31)*, பணக்கார அறிவிலி *(12:13-21)*, ஏழைகளை விருந்துக்கு அழைத்தல் *(14:12-14)* ஆகிய உவமைகள் செல்வம் வறுமை பற்றிய கருத்துக்களை விளக்குகின்றன. இயேசுவின் சீடர்களிடம் காணப்பட வேண்டிய முற்றிய துறவு மனப்பான்மையை அழுத்திக் கூறுகிறார் லூக்கா. ஏழைகளுக்குத் தானம் வழங்குதல் *(3:10தொ, 14:12-14)*, ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ளாவிட்டால் வரும் தண்டனை *(16:25தொ)*, பிறரைத் துன்புறுத்தி ஏமாற்றுவோரின் கடமைகள் *(3:10-14)* ஆகியவை பற்றித் தெளிவாகக் கூறுகிறார் லூக்கா.

ஏ) நற்செய்தியாளருள், லூக்கா மட்டுமே ஆதிக்கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய, கிறிஸ்து-இயல் என்னும் பொருள்படும் ''ஆண்டவர்'' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்; இயேசுவை மீட்பராகக் கரு

துகிறார். இஃது ஆசிரியர் கிரேக்கர் என்பதன் விளைவோ, கிரேக்கப் பின்னிலையின் பயனோ அன்று. ஏனெனில், இந்நூலில் காணப்படும் மீட்பு விவிலியக் கருத்தாகும். ஆசிரியரின் அனைத்துத் தன்மைக் கருத்தின் விளைவும் ஆகும். ''ஆண்டவர்'' என்ற சொல்லைப் பயன்படுத்துவது, நற்செய்தியின் பாரம்பரியத்தைப் புரிந்துகொள்ளவும், அதனைப் பிரமாணிக்கமாக விளக்கவும் தகுதியான கிரேக்கச் சொற்களைப் பயன்படுத்த ஆசிரியர் கொண்ட பேராவலின் விளைவாகும்.

இக்கருத்துக்கள் யாவும் கலைப்பண்புடன் பின்னிப் பிணைக்கப்பட்டு, இறைவன் அனைவருக்கும் அளிக்கும் மீட்பின் நித்திய திட்டமாக வெளிப்படுகின்றன. இயேசுவே மீட்பர். அவரது இறப்பு-உயிர்ப்பில் மீட்பு நிறைவேறி பரிசுத்த ஆவியால் யாவருக்கும் அளிக்கப்படுகிறது.

11. லூக்கா வரலாற்று ஆசிரியர்: லூக்கா தமது நூலுக்கு அளிக்கும் தொடக்க உரையும் அர்ப்பணமும், அவர் வெறுமனே நற்செய்தியைப் பற்றி எழுத விரும்பவில்லை; மாறாகத் தமக்குக் கிடைத்த மூலங்களைச் சீர்தூக்கி மதிப்பிட்டு, ஆதி போதகங்களின் உண்மைத்தன்மையை நிலைநிறுத்தி ஒரு வாழ்க்கை வரலாற்றை எழுத விரும்பினார் எனக் காட்டுகின்றன. அதனால், அவர் வரலாற்று நிகழ்ச்சிகளில் மற்ற நற்செய்தியாளரை விட அதிகக் கவனம் செலுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இயேசுவின் பிறப்பிற்கு முன்னும் (2:1-3), திருமுழுக்கு யோவானின் திருப்பணிக்கு முன்னும் (3:1தொ), அக்காலத்திய வரலாற்றுச் சூழ்நிலையைச் சுருக்கமாக விவரிக்கிறார். இதைக் கொண்டு, தாம் எழுதும் வரலாறு எப்போது எச்சூழ்நிலையில் நிகழ்கிறது என்று வரலாற்றுப் பண்புடன் விளக்குகிறார். அவர் வரலாற்றுக்கு அளிக்கும் மதிப்பு, அவர் தம்முடைய மூலங்களைப் பயன்படுத்தும் விதத்திலிருந்து விளங்குகிறது. அவரது முதன்மையான மூலநூல் மாற்கின் நற்செய்தியாகும். முன் கூறியதுபோல், தம்முடைய மூலங்களைச் சுதந்தரத்துடன் பயன்படுத்தினாலும் அவற்றிற்குப் பிரமாணிக்கமாக இருக்கிறார். சில சமயம் தமது மூலங்களின் கால ஒழுங்கு முறையைத் திருத்தி அமைப்பார். சான்றாக, பேதுருவின் விசுவாச அறிக்கைக்குப்பின் ஆறுநாட்கள் கழித்து ஒளியுருவாதல் நடைபெற்றது என்பார் மாற்கு (9:2). ஆனால், லூக்கா அதை ''ஏறக்குறைய எட்டு நாட்களுக்குப்பின்'' (9:28) என்று திருத்துவார்; எண்களைப் பயன்படுத்தும்போது ''ஏறக்குறைய'' என்ற அடைமொழியைப் பயன்படுத்துவார் (1:56; 3:23). பிற நற்செய்தியாளர் ஏரோதைப் பொதுவாக ''அரசன்'' (மாற் 6:14) என்று குறிப்பிடும்போது, லூக்கா அவனுக்குரிய பட்டமாகிய ''நான்கில் ஒரு பகுதிக்குத் தலைவன் அல்லது சிற்றரசன்'' என்று குறிப்பிடுவார் (9:7); ''கலிலேயக் கடல்'' என்று கூறாமல் (மாற் 1:16) ''கெனசரத்து ஏரி'' (லூக் 5:1) என்பார்; பிலாத்து கலிலேயர்களைக் கொன்றது (13:1-3), சீலோவாமின் கோபுர வீழ்ச்சி போன்ற வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறுவார். மேற்கூறியவாறு திருத்திக் கூறும்போதும், தம்முடைய மூலங்களைச் சுதந்தரமாய்ப் பயன்படுத்தும் போதும் அவர் நற்செய்தியைத் திரிபுபடுத்திக் கூறவில்லை. இயேசுவைப் பற்றிய நிகழ்ச்சிகளை மாற்றவில்லை. அவரும் பாரம்பரிய வரலாற்றையே கூறுகிறார். ஆனால், கூறும் விதம் தான் வேறு. தம்முடைய நூல் பிற நற்செய்தி நூல்களை அகற்றவேண்டும் என்ற போலி ஆர்வம் அவரிடம் இல்லை. அவர் விரும்பியதெல்லாம் இயேசுவின் உண்மையான வரலாற்றை ஓரளவு வரலாற்றுப் பண்புடன் கூற வேண்டும் என்பதே.

ஆயினும், வரலாற்றைப் பற்றி நாம் கொண்டிருப்பன போன்ற கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை லூக்கா. அவர் கால ஒழுங்கு முறையைப் பற்றியும் இட விவரங்களைப் பற்றியும் அவ்வளவு அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், வரலாற்று நிகழ்ச்சிகளில் அதிகமான கவனம் காட்டுகிறார். அவர் ''முறையாக

வரைய'' விரும்பினாலும் அந்த முறை, அடிப்படையில் இறையியல் முறையாகும். ஏனெனில், அவர் வெறும் நேரடிச் சாட்சி களின் சான்றை மட்டும் கூறவில்லை. சாட்சிகளும் இறை வார்த்தையின் பணி யாளருமானவர்களுடைய சான்றுகளைத் தொகுத்துத் தருகிறார்.

12. லூக்கா ஒரு நற்செய்தியாளர்: லூக்கா வரலாற்றுப் பண்புடன் தமது நூலை எழுதினாலும் அவர் ஒரு நற்செய்தியை எழுதுகிறார். அவர் சிறப்பாக ''வார்த்தை யின் பணியாளர்'' ஆவார், ''நற்செய்தியா ளர் ஆவார்''. ஆகையால்தான் அவர் இயேசுவைப் பற்றிய ஆதித் திருச்சபையின் பொதுத்திட்டத்தைப் பிரமாணிக்கமாகப் பின்பற்றுகிறார். ''நற்செய்தி'' என்ற சொற் றொடர், தொடக்க காலத்தில் இயேசுவின் போதகங்களைக் குறித்தது; பின், அப்போத கங்களை உள்ளடக்கிய நூலைக் குறித்தது. நற்செய்தியாளர் தம்முடைய நூலில் தமது சொந்தக் கருத்துக்களைத் தருவதில்லை. அவர் திருச்சபையின் பிரதிநிதி. அவர் கூறுவது திருச்சபையின் போதகம், பாரம்ப ரியம். அவர் அளிப்பது ஒரு பெரும் செய்தி; இயேசுவையும் அவரது செயல்க ளையும் பற்றிய அறிக்கையாகும். அவர் வரலாற்றுப் பண்புடன் தமது நூலை எழுதினாலும், அவர் கூறும் நிகழ்ச்சிகளெல் லாம் ஒருவரைச் சுற்றி நிகழ்கின்றன. மனிதரிடையே வாழ்ந்து, மனிதரிடையே பழகி, போதித்து, குறித்த காலத்திலும், இடத்திலும் மரித்து, உயிர்த்த ஒருவரைப் பற்றியது. இந்த உயிர்த்த நிகழ்ச்சியை மனதிற்கொண்டு இயேசுவைக் காணும் வரலாறு ஆகும் நற்செய்தி. லூக்கா கிரேக்கர் ஆனதால், வரலாற்று விவரங்களில் மற்ற நற்செய்தியாளரைவிடக் கவனம் செலுத்த லாம். ஆனால், அவர் எழுதுவது ஒரு நற்செய்தி; அடிப்படையில் ஒரு செய்தி அறிக்கையாகும்; ஆனால், இறையியல் நோக்குடன் எழுதப்பெற்றது.

இந்நோக்குடன் லூக்கா காலத்தை நோக் குகிறார். பழைய ஏற்பாட்டில் காலத்தின் மையம் வரவிருக்கும் மெசியாவாகும். ஆனால், கிறிஸ்தவன் ஏற்கெனவே வந்து விட்ட இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, செயல் ஆகியவற்றில் காலத்தின் மையத்தைக் காண்கிறான். பழைய ஏற்பாட் டில் உலகின் முடிவுநாளைக் காலத்தின் மையமாகக் கருதினர். மெசியாவின் வரு கையும் உலகின் முடிவும் ஒன்றாகக் கருதப் பட்டன. அந்நாளை நோக்கி ஏங்கியிருந்த னர். புதிய ஏற்பாட்டிலும் இயேசுவின் வருகைக்காக ஏங்கியிருத்தல் காணப்படுகி றது. ஆனால், வரவிருக்கும் முடிவுநாள் அல்லது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மீட்பு வரலாற்றின் மையமன்று, அதன் நிறைவு ஆகும். ஒரு வரலாற்று நிகழ்ச்சியே மீட்பு வரலாற்றின் மையம். கிறிஸ்துவே அம்மையம். அவரது பாடுகளும், மரண மும் உயிர்ப்பும் காலத்தின் மையமாகும். இவை உலகில் நடப்பவற்றிற்கெல்லாம் பொருள் அளிக்கின்றன. மீட்பு வரலாற்றின் இந்த மையத்தைப் பற்றி லூக்காவின் நற்செய்தி பறைசாற்றுகிறது. அதுவே கிறிஸ்து என்னும் வரலாற்று நிகழ்ச்சி.

லூக்கியு (LUCIUS)

காண்க. உலூக்கியு - II:113.

லூசு (LUZ)

காண்க. உலூசு - II:114.

லூது, லூதியர் (LUD, LUDIM)

காண்க. உலூது, உலூதியர் - II:114.

லெபனோனின் கேதுரு (LEBANON, CEDAR OF)

கேதுரு மரம் லெபனோனின் மலைகளில் அதிகம் வளர்ந்தது. இவை அழகும் வலி மையும் உடையன (எசே 31:1-18; ஆமோ 2:9). லெபனோனின் கேதுரு யூதாவின் அரசன் அமட்சியாவுக்கு இஸ்ராயேலின் அரசன் யோவாசு அனுப்பிய எச்சரிக்கை யில் இடம் பெறுகிறது (2 அர 14:9). சாலமோன் ''லெபனோனின் கேதுரு முதல் சுவரில் முளைக்கும் ஈசோப்பு வரை உள்ள எல்லா மரவகைகளையும்'' (1 அர 5:13) அதாவது தாவர உலகு முழுவதையும் அறிந்திருந்தார்.

லெபனோனின் வன மாளிகை (LEBANON, HOUSE OF THE FOREST OF)

இஃது எருசலேமில் இருந்த சாலமோனின் அரண்மனையின் ஒரு பகுதியாகும் (1 அர 7:1-8). இஃது, ஒரு செவ்வக மாளிகையாகும். இதன் தூண்களும் (7:2), மேல்தளம் (7:7), விட்டங்கள் (7:2), அறைகள் (7:3) ஆகிய யாவும் லெபனோனின் கேதுரு மரங்களால் அமைக்கப் பட்டிருந்தன.

இம்மாளிகையில் நான்கு வரிசையாகக் கேதுருத் தூண்கள் அமைந்திருந்தன. இதற்கு வரிசைக்குப் பதினைந்தாக நின்ற நாற்பத்தைந்து தூண்களின் மேல் அமைந்த அறைகள் கொண்ட மேல்மாடி உண்டு. பலகணிகள் மூன்று வரிசையாகவும், ஒன்றுக்கொன்று எதிராகவும் அமைந்திருந்தன. கதவுகளும் கதவு நிலைகளும் சதுர வடிவிலும், மூன்று வரிசையிலும், ஒன்றுக்கொன்று எதிராகவும் இருந்தன (7:3-5). இவை யாவும் கேதுரு மரத்தால் அமைக்கப் பட்டிருந்தன.

இந்த லெபனோன் வனவீடு, தூண்-மண்டபம் அல்லது காத்திருக்கும் மண்டபம் (7:6), மற்றும் அரியணை மண்டபம் அல்லது நீதி மண்டபம் (7:7) ஆகியவற்றோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. இவற்றிற்குப்பின் சாலமோனின் குடியிருப்பிற்குக் கட்டப்பட்ட அரண்மனையும், பார்வோனின் மகளது வீடும் அமைந்திருந்தன.

இந்த லெபனோனின் மாளிகை (1 அர 10:17.21; 2 நாள் 9:16.20) எசா 22:8-இல் ''வன மாளிகை'' என்று குறிப்பிடப்படுகிறது. சாலமோனின் அரண்மனை வளாகம் ஆலயமுற்றத்தின் தெற்கில் அமைந்திருந்தது; ஆனால், எங்கு இருந்தது என்று துல்லியமாக அடையாளம் காட்ட முடியவில்லை. இதற்குப் போதிய தொல்பொருள் செய்திகள் கிடைக்கவில்லை.

லெபனோன் (LEBNON - வெள்ளையான மலை; வருடத்தில் அதிக நாட்கள் பனியால் மூடப்பட்டிருப்பதால் இப்பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம்).

லெபனோன் மலைகள் வடக்கே அமனூசு மலைகளிலிருந்து தெற்கே சீனாய்த் தீபகற்பம்வரை மத்தியதரைக் கடலுக்கு இணையாக நீண்டு கிடக்கும் மலைத்தொடராகும். இது 160 கி.மீ நீண்டது. இப்பகுதி இரு நதிகளுக்கிடையே அமைந்த மலைத் தொடர்ப் பிரதேசமாகும். நாக்ரு ஏல்-காசிமெயே (லித்தானி) என்னும் நதி லெபனோனை, எதிர் லெபனோனினின்று பிரிக்கிறது. இந்நதி பெக்கா எனும் பள்ளத்தாக்கில் ஓடுகிறது. இது லெபனோன் பள்ளத்தாக்கு எனவும் அழைக்கப்படுகிறது (யோசு 1:7).

'வெண்மை' எனும் பொருள் லெபனோனை மூடியிருக்கும் பனிப்படலத்தைக் குறிக்கிறது. 1800 மீட்டரிலிருந்து 3000 மீட்டர் வரை உயர்ந்த இம்மலைப் பகுதிகள் குளிர்காலங்களில் மட்டுமே அதிகம் பனியால் மூடப்பட்டிருக்கும். எதிர்லெபனோனின் தெற்குப் பகுதியாகிய எர்மோன் மலை பனியால் சூழப்பட்டு உயர்ந்து நிற்கும் காட்சி அரியதொன்றாகும். மலைகள் வளைந்து உயர்ந்த சிகரங்களைக் கொண்டிருப்பதால், பல பள்ளத்தாக்குகளும் உள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை மரோனியா சமூகத்தினர் வாழ்ந்த ''புனிதப் பள்ளத்தாக்கும்,'' ''வீனசு அதோனிசு'' எனும் வழிபாடு தோன்றிப் பரவிய அதோனிசு பள்ளத்தாக்கும், மற்றொரு முக்கியமான இடமுமாகும். லெபனோன் மலைப்பகுதி தோன்றியது இயற்கையில் ஏற்பட்ட பல மாற்றங்களாலேயாகும்.

பெக்கா பள்ளத்தாக்கு விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலமாகும். அன்றைய நாட்களில் லெபனோனின் திராட்சை ரசமும் (ஓசே 14:7.8), கேதுரு மரங்களும் (1 அர 5:14; சங் 29:5; எசா 2:13; எசே 17:3) பெயர் பெற்றவையாகும். சாலமோன் வாழ்ந்த அரண்மனை லெபனோனின் காட்டையொத்த வீடு எனப் பேசப்படுமளவுக்குச் சிறந்தவை அக்காடுகள் (உ.ச. 4:11; ஓசே 14:7). ஒலிவ மரங்களிலிருந்து பெறப்பட்ட ஒலிவ எண்ணெய் பல வகைகளில் பயன்படுத்தப்பட்டது. லெபனோனின்

காட்டு விலங்குகள் 2 அர 14:9; எசா 40:16; அப 2:17 இல் குறிக்கப்படுகின்றன. இன்று இப்பகுதி ஆடுமாடுகளின் மேய்ச்சலுக்கான அளவே வளமுள்ளதாய் உள்ளது. ஏனையவை மறைந்து போயின.

லெமுவேல் (LEMUEL)

காண்க. இலமுவேல் - 1:754.

லெயுக்கியு (LEUCIUS)

யோவானின் சீடராகவும், யோவானின் பணி என்ற திருமுறை சாராத நூலின் ஆசிரியராகவும் கருதப்படுபவர். 5-ஆம் நூற்றாண்டுக்குப்பின் பவுல், பேதுரு, அந்திரேயா, தோமா ஆகியோரின் பணிகள் என்ற நான்கு நூல்களை இவரே எழுதியதாகக் கருதப்பட்டது. மானிக்கேயர், திருமுறை அப்போஸ்தலர் பணி நூலுக்குப் பதிலாக இவரது நூல்களை ஏற்றுக்கொண்டனர். அலக்சாந்திரியாவின் கிளமந்தும், தெர்துல்லியனும் இருநூல்களைக் குறிப்பிடுகின்றனர். இதுவும் இந்நூலில் காணப்படும் தோசேத்திய ஞானவாதக் கூறுகளும், இந்நூலை லெயுக்கியு இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதியிருக்கக்கூடும் என்று சுட்டுகின்றன.

லேயா (LEAH - காட்டுப் பசு)

லேயா லாபானின் மகளும், ராகேலின் மூத்த சகோதரியும், யாக்கோபின் முதல் மனைவியுமாவாள். லாபான் யாக்கோபை ஏமாற்றி அழகு இல்லாத லேயாவை, ராகேலுக்குப் பதிலாக மணம் முடித்து வைத்தார் (ஆதி 29:15-30). லேயா ரூபன், சிமியோன், லேவி, யூதா (ஆதி 29:31-35), இசக்கார், செபுலோன் மற்றும் தீனா (30:14-24) ஆகியவர்களைப் பெற்றாள். லேயாவின் அடிமையான சில்பாவின் பிள்ளைகளான காத்து (30:9-11) மற்றும் ஆசேர் (30:12-13) ஆகியோரும் லேயாவின் மக்களாகவே கருதப்படுகின்றனர். லேயாவும் அவள் பிள்ளைகளும் யாக்கோபுடன் பாலஸ்தீனத்திற்குச் சென்றனர் (ஆதி 31). லேயா மம்பிரேயில் உள்ள மக்கபேலாக் குகையில் அடக்கம் செய்யப்பட்டதாகக் குருக்கள் பாரம்பரியம் கூறுகின்றது (49:11). லேயா குலத்தாரில் ரூபன், சிமியோன், யூதா கோத்திரத்தார் ஆகியோர் பாலஸ்தீனத்திற்குத் தெற்கே வாழ்ந்தனர். லேவி தனிக் கோத்திரமாகத் தோன்றவே இல்லை. யூதா கோத்திரம் இவை எல்லாவற்றையும் விடச் சிறந்திருந்தது. செபுலோனும், இசக்காரும் கலிலேயாவில் இருந்தனர்.

லேவி (LEVI - சேர்க்கப்பட வேண்டியவர், நேர்ந்தளிக்கப்பட்டவர்)

1) லேவி யாக்கோபுக்கும் லேயாவுக்கும் பிறந்த மூன்றாவது மகன் ஆவார். செக்கேமைத் தாக்கி, தன் சகோதரி தீனாவுக்குத் தீங்கிழைத்தவர்களைத் தன் சகோதரர் சிமியோனுடன் சேர்ந்து பழிவாங்கியதன் மூலம் (ஆதி34:25-31) யாக்கோபின் குடும்பத்திற்குக் கானானியரிடத்தில் கெட்ட பெயரை ஏற்படுத்துகிறார். யாக்கோபு ஆசீர் அளிக்கும்போது லேவியையும் அவன் சகோதரர் சிமியோனையும் ''முறையற்ற போராட்டத்தின் கருவிகளெனக்'' கண்டிக்கிறார் (49:5-7). லேவி தன் சகோதரர்களுடன் எகிப்தில் குடியேறினார் (ஆதி 42:2). அங்கு அவர் தனது 137-ஆவது வயதில் இறந்தார் (யாத் 6:16).

இந்த லேவியின் மக்களே மோசேயின் சொற்படி பாலைவனத்தில் வழிதவறி நடந்த எபிரேயர்களை யெல்லாம் கொன்று, பின்பு யாவேயின் பணிக்குத் தங்களையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் (யாத் 32:25-29; உப 33:8-11).

பாரம்பரியப்படி கேர்சோன், கோகாத்து, மெராரி ஆகியோர் லேவியின் புதல்வர்களாவர். லேவியர்களின் மூன்று பிரிவின் மூதாதையராகக் கருதப்படுகின்றனர் லேவியின் மக்களாகிய இவர்கள். மோசேயின் தாய் லேவிக்குப் பிறந்தவர் என்று கூறுவது அவளது மூதாதையரைக் குறிப்பதாகும்.

லேவியரின் கோத்திரம் இஸ்ராயேலின் மீட்பு வரலாற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது.

2. இவர் இயேசுவின் பெரிய கொள்ளுத் தாத்தா அல்லது தூரத்து உறவினராவார் (லூக் 3:24).

3. இயேசுவின் மூதாதையருள் ஒருவர் *(லூக் 3:29).*

4. முன்னாள் ஆயக்காரனும், அப்போஸ் தலருமான மத்தேயுவின் எபிரேயப் பெயர் *(மாற் 2:14; லூக் 5:27.29).* கப்பர்நாகுமில் இருந்த வரி வசூலிக்கும் லேவி இயேசுவைப் பின் தொடர்ந்தவர்களில் ஒருவர் *(மாற் 2:14).* லூக்கா இவரது இல்லத்திற்கு இயேசு விருந்தினராகச் சென் றார் என்கிறார். அதே நேரத்தில் மாற்கு இவரை அல்பேயுவின் மகன் என்று குறிப் பிடுகிறார். மத்தேயு ''லேவியை'' மத்தேயு என்றே அழைக்கிறார் *(மத் 9:9).* லேவி என்ற சொல் இயேசுவின் பன்னிரு சீடர் வரிசையில் எங்குமே காணப்படவில்லை.

லேவியர் (LEVITE)

இவர்கள் யாக்கோபு - லேயா ஆகியோ ருக்குப் பிறந்த மூன்றாம் மகன் லேவியின் வழித்தோன்றல்கள் ஆவர். லேவிக்குக் கேர் சோன், கோகாத்து, மெராரி என்ற மூன்று புதல்வர்கள் இருந்தனர். இதற்கேற்ப, லேவி யர்கள் கேர்சோனியர், கோகாத்தியர், மெரா ரியர்கள் என்று மூன்று பிரிவினராகப் பிரிக்கப்பட்டனர் *(யாத் 6:16-19; எண் 3:17-37; 1 நாள் 23:6-23).*

யாத்திரையின்போது, இஸ்ராயேலரின் தலைப்பேற்றாண்கள் அனைவருக்கும்மேல் தமக்குரிய உரிமையை யாவே அறிவித்தார் *(யாத் 13:2).* ஆனால், பாலைவனப் பயணத் தின்போது, தலப்பேற்றாண்களுக்குப் பதி லாக, லேவியின் இனம் தமது பணிக்கு அர்ப்பணிக்கப்படும் என்று யாவே தீர்மா னித்தார் *(எண் 3:12-13.41.45).* லேவியர் இனத்துக்குள் ஆரோனின் சந்ததியினர் குருக் களாக இருப்பர் *(யாத் 28:1).* மற்ற லேவியர் குருக்கள் அல்லர். இவர்கள் கூடார, ஆலய வழிபாட்டில் உதவிசெய்வர் *(எண் 18:1-7).* பொன் கன்றுக்குட்டி வழிபாட்டுக்குப்பின், லேவியர், மோசேயின் சொற்படி, கிளர்ச்சி யாளர்களைக் கொன்று தீர்த்தனர்; தாங்கள் யாவேயைச் சேர்ந்தவர்கள் என்று காட்டினர் *(யாத் 32:26-28).* வழிபாட்டில் உதவி செய்ய லேவியர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு அவர் களது பிரமாணிக்கமே காரணம் என்று இந்நிகழ்ச்சி காட்டுகிறது *(32:29).* லேவியர் அபிடேகம் செய்யப்படுதலை எண் *8:5-22* என்ற பகுதி விவரிக்கிறது. இதில், இவர் கள் ஆரத்திப் பலியாக இறைவன் முன் நிறுத்தப்படுகின்றனர்.

கானானில் லேவியர்களுக்கென நாட்டின் எப்பகுதியும் உரிமைச் சொத்தாக அளிக்கப் படவில்லை. ஆகவே, இவர்கள் வாழ்க் கைக்கு ஆதரவாக எதையும் கொண்டிருக்க வில்லை. இவர்கள் மக்களிடமிருந்து அறு வடையிலும், விலங்குகளிலும் பத்தில் ஒரு பங்கைப் பெறுவர் *(லேவி 27:30-33; எண் 18:21.24).* இவற்றில் பத்தில் ஒரு பங்கை இவர்கள் குருக்களுக்கு அளிப்பர் *(18:26-27).* இஸ்ராயேலர் தங்களது பலி உணவில் பங்கு கொள்ள லேவியர்களை அழைப்பர் *(உப 12:12.18; 14:27.29; 16:11).*

லேவியர் ஐம்பது வயது வரை தங்கள் பணியை நிறைவேற்றலாம் *(எண் 4:3).* ஆனால், இவர்கள் தங்கள் பணியை இரு பது வயதில் *(1 நாள் 23:24.27; 2 நாள் 31:17; எஸ் 3:8),* இருபத்தைந்து வயதில் *(எண் 8:24),* முப்பது வயதில் *(எண் 4:3; 1 நாள் 23:3)* தொடங்கியதாகப் பலவாறு கூறப்பட்டுள்ளது. பாலைவனத்தில் இஸ்ரா யேலர் அலைந்து திரிந்தபோது, கூடாரத்திற் கும் அதைச் சார்ந்த பொருள்களுக்கும் இவர்கள் பொறுப்பாய் இருந்தனர் *(எண் 3:8.25-26.31.36-37; 4:15.25-26.31-32).* கூடார வழிபாட்டில் குருக்களுக்கு உதவி செய்தனர் *(18:2-4.6.23).* இக்கடமைகளைச் செய்வதற் காக, இவர்கள் போர்ப் பணியிலிருந்து விடுதலை பெற்றிருந்தனர் *(1:47-54).* மன்ன ராட்சிக் காலத்தில் லேவியர்களின் கடமை கள் மாறின *(1 நாள் 23:25-26).* ஆலயத்தைப் பாதுகாப்பதிலும், பலி ஒப்புக் கொடுத்தலி லும் இவர்கள் உதவி செய்ய வேண்டும் *(23:28-29.32);* மன்றாட்டு மற்றும் பலிகளின் போது குருக்களோடு நிற்க வேண்டும் *(23:30-31);* ஆலயக் கருவூலத்தைப் பாது காக்க வேண்டும் *(26:20-28; காண்க. 2 நாள் 8:15).* சிலர் அதிகாரிகளாகவும், நடுவர்களா கவும் *(1 நாள் 23:4;காண்க. 26:29-32),*

வாயில் காப்போராகவும் (23:5; காண்க. 16:38. 42; 26:1-19), இசைஞர்களாகவும் (23:5; காண்க. 16:41-42; 25; 2 நாள் 8:14) செயல்பட்டனர்.

சில சமயம், லேவியர் என்பது தலைமைப்பெயரைக் குறிக்காது, அலுவலர் பெயரையே குறித்தது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு நீதி 17:7-இல் வரும் ''யூதா கோத்திரத்தைச் சேர்ந்த லேவியர்'' ஆவார். சீலோவின் குருக்களுக்கு உதவி செய்த (1 சாமு 2:11) சாமுவேல் எப்பிராயிம் இனத்தைச் சேர்ந்தவர் ஆவார் என்பதையும் (1:1) இது விளக்கலாம். இஸ்ராயேல் முழுவதும் லேவியர் சிதறிக்கிடந்ததால் இது எதிர்பார்க்கத்தக்கதே.

லேவியர் திருநூல் (LEVITICUS, BOOK OF) காண்க. வழிபாட்டுத் திருநூல்.

லேவியர் நகரங்கள் (LEVITICAL CITIES)

நாற்பத்தெட்டு நகரங்களும், அவற்றைச் சேர்ந்த மேய்ச்சல் நிலங்களும் லேவியர்கள் வாழும் நிலங்களாக அவர்களுக்கு அளிக்கப்பட்டன. இஸ்ராயேலர் கானானுள் புகுமுன் இந்தக் கட்டளை அளிக்கப்பட்டது (எண் 35:2-8; காண்க. லேவி 25:32-34). ஆறு அடைக்கல நகர்களும் இந்த லேவியர் நகர்களுள் சேர்ந்தவையாகும் (எண் 35:6). இந்த நகர்கள் பிரிக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி இருமுறை விவரிக்கப்படுகிறது (யோசு 21:1-42; 1 நாள் 6:54-81). ஆனால், இரண்டு பட்டியல்களிலும் வேறுபாடு காணப்படுகிறது.

லேவியர்களுக்கு நகரங்கள் அளிக்கப்படுவதற்கும் கானானில் லேவியர்களுக்கு உரிமைச் சொத்து இல்லை என்பதற்கும் இடையில் முரண்பாடு இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். அவர்களுக்கு உரிமைச் சொத்துக் கொடுக்கப்படாததால் அவர்களுக்குத் தசமபாக வரி கொடுக்கப்பட வேண்டும் (எண் 18:20.24; உப 10:9; யோசு 13:4). மேலும், மற்ற இஸ்ராயேலரின் பல நகரங்களில் லேவியர் வாழ்ந்தனர். ஆகவே, பலியுணவில் பங்கு கொள்ள அவர்கள் அழைக்கப்பட வேண்டும (உப 12:12.18; 14:27.29; 16:11). மத்திய வழிபாட்டு இடத்தில் நடக்கும் வழிபாட்டிலும் அத்துடன் வரும் உணவிலும், லேவியருக்கு இடம் உறுதிப்படுத்தப்பட்டது (18:6-8). உப 14:29; 16:11-இல் லேவியர்கள் ''அன்னியர், அனாதைகள், மற்றும் கைம்பெண்களோடு'' கருதப்படுகின்றனர்.

இப்பிரச்சனை பின்வருமாறு விளக்கப்படுகிறது. 1) லேவியர் நகர் என்ற அளவில் எந்த நகரமும் இருக்கவில்லை. நிகழ்ச்சியுரைகள், லேவியர் இனம் சிதறிக் கிடந்த நிலைக்குக் கருத்தியலான முறையில் இரு விளக்கங்களைத் தருகின்றன. 2) தாவீது நாட்டை மாற்றி அமைத்தலைச் சேர்ந்தவையாகும் லேவியர் நகரங்கள் (காண்க. 1 நாள் 13:2; 2 நாள் 11:14; 31:15.19). உரிமைச் சொத்துடைமையின்மை மற்ற இனத்தவர்களுக்கு உரிமையாக இருந்ததுபோல், நாட்டில் ஒன்றிணைந்த பகுதியின்மையாகும். ஒருவேளை லேவியர் நகர்கள் அவர்களின் தடையற்ற உடைமையாக இல்லாதிருந்திருக்கலாம். அல்லது இந்நகரங்கள் லேவியர்களின் தேவைகளை நிறைவு செய்யப் போதியதில்லாதிருக்கலாம். இதுவே மற்ற இஸ்ராயேலர்களிடையே லேவியர்கள் வாழ்ந்ததையும், அவர்கள் அன்னியர்களாகவும் ஊர் சுற்றித் திரிபவர்களாகவும் வாழ்ந்ததையும் விளக்கலாம் (காண்க. நீதி19:1).

லேவிரேட்டுத் திருமணம் (LEVIRATE MARRIAGE)

சகோதரர்கள் கூடிவாழும்போது, ஒருவன் ஆண் சந்ததியின்றி இறந்தால், அவனுக்கு அடுத்த சகோதரன் அவனது கைம்பெண்ணை மணக்க வேண்டும். இந்தத் திருமணத்தால் பிறக்கும் முதல் மகன் இறந்தவனின் சந்ததியாகக் கருதப்படுவான் (உப 25:5-10). முதல் கணவனின் உடன்பிறந்தானை ''லேவீர்'' (Levir) என்ற இலத்தீன் சொல் குறித்தது. ஆகவே, இந்தக் ''கணவன் உடன்பிறந்தான் திருமணம்'' என்ற வழக்கு ''லேவீரேட்டுத் திருமணம்'' (Levirate Marriage) என்றழைக்கப்பட்டது.

லோ-அம்மி (LO-AMMI)

இறைவனின் கட்டளைப்படி, விலை மகள் கோமேர் வழியாக இறைவாக்கினர் ஓசேக்குப் பிறந்த மூன்றாவது குழந்தையும், இரண்டாவது மகனுமான இவருக்கு ''என் மக்கள் அல்லர்'' என்று பொருள்படும் இப்பெயர் இடப்பட்டது. இஃது இஸ்ராயேலை இறைவன் உறுதியாக நிராகரித்ததை உணர்த்திற்று.

''லோதபார்'' (LO-DEBAR)

யோர்தானுக்கு அப்பால் வடபகுதியிலுள்ள ஒரு நகர். ஒருவேளை தெபீர் 2-ஆக இருக்கலாம். யார்முக்குக்குத் தெற்கில், யோர்தானின் உபநதியாகிய வாடி அரபுக்குத் தெற்கிலுள்ள உம் எத்-தெபார் ஆக அடையாளம் காட்டலாம். லோதபாரின் மாக்கிர் யோனத்தானின் மகன் பெரிபொசேத்துக்கும் (2 சாமு 9:3-5), தாவீதுக்கும் (17:27-29) உதவி செய்தார். காத்துவின் எல்லையில் உள்ள இடமாக யோசு 13:26-இல் குறிப்பிடப்படும் கிலிதெபீர் என்ற இடமும் இதுவும் ஒன்றையே குறிக்கலாம். ஆமோ 6:13-இல் வரும் லோதபார் இவ்விடத்தையே குறிக்கலாம். இவ்விடத்தை, இரண்டாம் எரொபவாம் காலத்தில் அரமேயர்களிடமிருந்து இஸ்ராயேலர் கைப்பற்றினார்.

லோது (LOD)

காண்க. உலோது - II :114.

லோத்தான் (LOTAN)

காண்க. உலோத்தான் - II:115.

லோத்து (LOT)

லோத்து ஆரானின் மகனும், ஆபிரகாமின் சகோதரர் மகனும் ஆவார் (ஆதி 11:27.31). லோத்தின் வாழ்க்கைக் கதைகள் ஆபிரகாமின் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. லோத்து ''ஊரில்'' பிறந்தவர். தன் பாட்டன் தேராகுவோடு காரனுக்குச் சென்றார். பின்பு, லோத்து கானானுக்கு ஆபிரகாமுடன் சென்றார் (12:4-5). அங்கு இருவரும் இரு பெரிய ஆயர் குலத்தவர்களுக்குத் தலைவர்களாகத் திகழ்ந்தனர். ஆபிரகாமின் ஆடுமேய்க்கும் ஊழியர்கட்கும், லோத்தின் ஊழியர்கட்கும் ஏற்பட்ட சச்சரவினால் லோத்து அவரைப் பிரிந்து சோதோமுக் கருகில் குடியேறினார் (13:5-13). மெசபொத்தாமிய அரசனால் சிறைசெய்யப்பட்ட லோத்து ஆபிரகாமால் விடுவிக்கப்பட்டார் (14:12-16). வானதூதருக்கு விருந்தளித்துக் காத்ததால் லோத்து குடும்பம் சோதோமின் அழிவினின்று காக்கப்பட்டது (19:1-26). லோத்து ஒரு குகையில் தனித்து வாழ்ந்த பொழுது அங்கு ஆடவர் வேறு எவருமில்லையாதலால் அவரது பெண்மக்கள் இருவரும் தங்கள் குடும்பத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு அவருக்கு மகன்களைப் பெற்றெடுத்தனர். இவர்களே மோவாபியர், அம்மோனியர்களின் மூதாதையர். 'மோவாபு' என்பதற்குத் தந்தையினின்று வந்தவன் என்பதும், 'அம்மோன்' என்பதற்கு என் உறவினனின் மகன் என்பதும் பொருளாகும். இவர்களிருவரும் லோத்தின் மகன்களென அழைக்கப்படுகின்றனர் (உப 2:9.19; சங் 83:9). எனவே தான், இவர்களை இஸ்ராயேலர் தாக்கக் கூடாது எனும் ஒரு கொள்கையைக் கொண்டிருந்தனர். ஆனால், இவர்கள் இஸ்ராயேலின் வருங்கால எதிரிகளாய் இருப்பர் (சங் 83:6-8). லோத்து பற்றிய கதைகள் பல அன்றைய நாட்டுப்புற இலக்கியங்களினின்று எடுக்கப்பட்டவையாக இருக்கலாம். பலருக்கு லோத்தைவிட, உப்புச் சிலையான அவரது மனைவியைப் பற்றியே அதிகம் தெரியும்.

''லோத்தின் காலத்தில்'' (லூக் 17:28-30) என்ற தொடர் திடீரென்று வரும் முழுமையான தீர்ப்பைக் குறிக்கும் பழமொழியாயிற்று. லோத்தின் அயலார் மன்னிக்கப்படாத பாவிகளுக்கு எடுத்துக் காட்டாயினர் (சீரா 16:6; ஞான 10:7-8). லோத்தின் மனைவி உறுதியின்மைக்கும் (லூக் 17:31-32), அவிசுவாசத்திற்கும் (ஞான 10:7) எடுத்துக்காட்டாவாள், லோத்து நீதிமானாகக் காட்டப்படுகிறார் (2 பேதுரு 2:7; ஞான 10:6).

லோயி (LOIS)

காண்க. உலோய் - II:115.

லோருகாமா (LO-RUHAMAH)

காண்க. அன்பு பெறாதவள் - I:362.

வ

வங்கி, வட்டிக்கடை (BANK)

பன்னாட்டு வாணிபங்கள் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த நிலையில் பணத்தை மாற்றவும், புழக்கத்திற்கு விடவும் வங்கி அமைப்பு முறை அவசியமாயிற்று. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வங்கியின் நடவடிக்கைகள் நிலச்சொந்தக்காரர்கள், வணிகர்கள், வியாபாரிகள் ஆகியவர்களால் செய்யப்பட்டு வந்தன. வங்கி அமைப்பு முறை ஒரு தொழிலாக கிரேக்கர்களின் காலத்திற்கு முன்பு இருக்கவில்லை. வங்கி என்ற சொல்லுக்குக் கிரேக்கத்தில் ''மேசையில் எண்ணுபவர்'' என்று பொருள். மத் 25:27; லூக் 19:23-இல் இது வட்டிக்கடை என்று கூறப்படுகிறது. நாணயங்கள் மாற்றுவது வங்கி நடவடிக்கைகளில் ஒன்றாகும். மிகவும் நுணுக்கமான தந்திரமான முறைகளில் நாணயம் மாற்றவும் ஆட்கள் இருந்தனர்.

வசம்பு, கன்னல் (CALAMUS)

நறுமண வசம்பினால் (புல்லால்) செய்யப்பட்ட ஒரு வாணிகப் பொருள் (யாத் 30:23; உ.ச.4:14; எசே 27:19). இஃது அனேகமாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம்.

வசனம் (VERSE)

நவீன காலப்பதிப்புகளில் விவிலிய நூல்கள் வசனங்கள், அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால், இவை மூலநூல்களில் காணப்படவில்லை. இத்தகைய பிரிவுகள் கிறிஸ்தவ காலத்தொடக்கத்திலேயே எபிரேய விவிலியத்தில் புகுத்தப்பட்டு, கி.பி. 900-இல் இக்கால வடிவப்படி நிலைப்படுத்தப்பட்டன.

ஓரத்தில் வசனங்களோடு அச்சிடப்பட்ட முதல் விவிலியம் கி.பி. 1528-இல் தோன்றியது. இதை ராபர் எஸ்தியேன் (ஸ்தேவானுஸ்) என்பவர் இப்போது இருப்பதிலிருந்து வேறுபட்ட பிரிவுகளைக் கொண்ட கிரேக்கப் புதிய ஏற்பாட்டை 1551-இல் பதிப்பித்தார். அவர் 1555-இல் பதிப்பித்த இலத்தீன் விவிலியம்தான் இரண்டு ஏற்பாடுகளின் வசனங்கள், அதிகாரங்கள் கொண்ட பிரிவுகளுடன் அமைந்த முதல் பதிப்பாகும். இஃது ஆங்கிலமொழியில் செனிவா விவிலியத்தில் (1560) பின்பற்றப்பட்டது. அதற்குப் பின் வந்த பதிப்புகள் இதையே பின்பற்றின.

வசனப்பிரிவுகள் விவிலியத்தின் குறிப்பிட்ட பகுதிகளைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. தொடக்கப் பதிப்புகளில் ஒவ்வொரு வசனமும் குறிக்கப்பட்ட முதல் வரியுடன் பதிப்பிக்கப்பட்டு ஒவ்வொன்றும் தனிப்பத்தியாகத் தோன்றியது. இஃது ஒவ்வொரு வசனமும், வாசகச் சூழ்நிலையினின்று தனித்து விளக்கம் அளிக்க வாய்ப்பளித்தது. ஆனால், அந்த ஒரு பத்தியின் அல்லது பகுதியின் பொருளைப் புரிந்து கொள்வது கடினமாயிற்று. ஆகவே, பல மொழிபெயர்ப்புகள் வசன எண்ணை ஓரத்தில் அச்சிடுகின்றன. மற்றவை இதையொத்த காரணத்திற்காக, வாசகத்திற்குள்ளேயே வசன எண்ணைப் பதிப்பிக்கின்றன; ஆனால், ஒவ்வொரு பத்தியின் முதல் வரியில் மட்டும் குறிப்பிடுகின்றன.

வஸ்தி (VASHTI - அழகுள்ளவள், அன்பு செய்யப்பட்டவர்)

எஸ்தர் நூலின்படி இவள் அகசுவேர் மன்னனின் மனைவி (எஸ்த 1:9-22) ஆவாள். விருந்தின் 7-ஆம் நாள் அரசி வஸ்தியின் அழகை விருந்தினருக்குக் காட்ட விரும்பி அகசுவேர் அவளை வரச் சொல்லி அனுப்பினான். அவள் வர மறுக்கவே, அரசன் அவளை அரசி பதவியிலிருந்து நீக்கி விட்டான் (1:22). இவள் அகற்றப்பட்டதால் எஸ்தர் புதிய அரசியானாள்.

இந்தப் பகுதியின் வரலாற்று உண்மை கேள்விக்குரியதாகும். இந்தப் பகுதி அனேகமாக, எஸ்தரை இந்த நூலில் நுழைப்பதற்காகச் சேர்க்கப்பட்ட ஒரு கதையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வஞ்சப்புகழ்ச்சியும் வசையுரையும் (IRONY AND SATIRE)

I. வஞ்சப்புகழ்ச்சி ஒரு வகை இலக்கிய அணியாகும். இது நகைச்சுவை, கேலி செய்தல் மென்மையான வசை ஆகிய வற்றைப் பயன்படுத்தும் பேச்சு முறையா கும். சொற்பொருள் குறிப்பதற்கு எதிர் மறையான பொருளை உணர்த்துவது இவ் வணியின் நோக்கமாகும். வசை கவியுரை ஓர் இலக்கிய மரபு. இது மனித, தனிநபரின் தீயொழுக்கம், மடமை, சீர்கேடு அல்லது எவ்வகைக் குறையையும் வெறுக்கத்தக்க வையாகும் என்று கேலி செய்தல், ஏளனம் செய்தல், கிண்டல், நையாண்டி செய்தல், மற்றும் முன்னுக்குப்பின் முரணானதைச் சுட்டிக்காட்டும் எந்த முறையையும் பயன் படுத்தி எடுத்துக் கூறுவதாகும். இதன் நோக்கம் ஒருவரைத் திருத்துவதாகும். பொதுவாக, வஞ்சப் புகழ்ச்சியும் வசை யுரையும் ஒழுக்க மற்றும் கட்டுப்பாட்டு நோக்குடையது. இதில் இவை நகைச்சுவை யிலிருந்து வேறுபடுகின்றன. ரேனால்டு நாக்சு என்பவர் வஞ்சப் புகழ்ச்சியையும் வசையுரையையும் பின்வருமாறு வேறு படுத்துகிறார். அவரது கருத்துப்படி வஞ்சப் புகழ்ச்சி, ஒருவரை அவர் இருக்கும் விதத்தி லேயே, அவருடைய மதிப்பீட்டின்படியே விவரித்துப் பின், நமட்டுச் சிரிப்பு சிரிப்ப தாகும். வசையுரை மனிதனின் பிடிவாத மான, மீண்டும் மீண்டும் நிகழ்கிற மட மைக்குக் கசையடி கொடுப்பதாகும்.

II. **வஞ்சப்புகழ்ச்சி:** விலியத்தில் வஞ்சப் புகழ்ச்சி பற்றி ஏராளமான எடுத்துக்காட்டு கள் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டி லிருந்து குறிப்பிடத்தக்கவை: மனிதன் கட வுளுக்கு இணையாக இருக்க முடியும் என்று கேலியாகக் கூறுதல் (ஆதி 3:5.22; 11:6); சேரா திரும்பத் தவறியதற்குக் கூறப் படும் போலிக் காரணம் (நீதி 5:28-30); ''நீர் எனக்கு அன்பு காட்டாமல் வெறுப் பையே காட்டுகின்றீர்'' (நீதி14:16); தெலீலா விடம் சிம்சோன் கூறும் பச்சைப்பொய் (நீதி 16:7.11.13); ''உயிரோடிருக்கும் குழந் தையை இரண்டாக வெட்டி விடு'' என்ற சாலமோனின் கட்டளை (1 அர 3:25); எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை வசைச் சொற்களால் பழித்துக் கூறுதல் (18:27); மீக்காயா ஆகாபுக்கு அளிக்கும் கேலிப் பதில் (22:15); யோபு தன் நண்பர்களுக்கு அளிக்கும் கசப்பான பதில் (யோபு 12:2); கடவுள் யோபுவுக்கு அளிக்கும் சவால் (யோபு 40:10-14; காண்க. ஆதி 3:5); இறைவனைப் பற்றிய தவறான கருத்துகள் (சங் 2:3-4; 83:3-4); அரசனுக்கு ஏற்படுகின்ற வீழ்ச்சி (எசா 14:9-17; 23:4.16; எசே 28:2); ஏமாற்றப்பட்ட எப்பிராயிம் (ஓசே 6:1-3); ''யூதாவுக்கன்று, கானானுக்குப் பிறந்தவன் நீ'' (தானி 13:56).

புதிய ஏற்பாட்டில்: ''எனக்கு உங்களைத் தெரியாது'' (மத் 25:12; காண்க. 7:23; லூக் 13:25-27); விதைக்காத இடத்தில் அறுக்கிற வர் தூவாத இடத்தில் விளைச்சலைச் சேர்ப்பவர் (மத் 25:26); இயேசு யூதாசுக்கும் (நண்பா!) கூட்டத்திற்கும் அளித்த பதில் (மத் 26:50.55); கூட்டத்தின் கேலிச்சொல் (மத் 26:68; 27:40-43.49; யோவா 19:3); நாசரேத்தூரிலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ? (யோவா 1:46); ''உங்களுள் பாவமில்லாதவன் முதலில் அவள்மேல் கல் எறியட்டும்'' (8:7). ''ஒருவேளை நீங்களும் அவருடைய சீடர்களாக விரும்புகிறீர்களா?'' (9:27); இயேசு பேதுருவுக்கு அளித்த பதில் (13:38); பிலாத்து இயேசுவுக்கு அரசன் என்ற பட்டம் அளித்தல்; ''நாசரேத்தூர் இயேசு யூதரின் அரசன்'' (19:14-15.19); ''உண்டு குடிக்க உங்களுக்கு வீடு இல் லையா? அல்லது இல்லாதவர்களை நாணச் செய்து, கடவுளின் சபையை இழிவுபடுத்து கிறீர்களா என்ன சொல்வது? உங்களைப் புகழ்வதா?'' (1 கொரி11:22); ''சுகமாகப் போய் வாருங்கள்; குளிர் காய்ந்து கொள் ளுங்கள்; பசியாற்றிக் கொள்ளுங்கள்'' (யாக் 2:16).

III. **வசைகவியுரை:** இது வஞ்சப்புகழ்ச் சியை விட நீண்ட விதத்தில் எடுத்துக் கூறப்படுகிறது. உண்மையாக இது வஞ்சப் புகழ்ச்சி, பழிச்சொல், நிந்தை, பரிகாசம், நையாண்டி போன்றவற்றைப் பயன்படுத்த

லாம். எப்படியிருந்தாலும், நிந்தை மட்டும் வசைகவியுரை அன்று என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வசைகவியுரை மென்மையான நகைச்சுவையைக் காட்ட வேண்டும்; இருந்தாலும், பரவலாக உள்ள தீமை அல்லது மடமையைச் சீர்திருத்தும் நோக்கத்தை முக்கியமாகக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு விவிலியத்திலுள்ள எடுத்துக்காட்டுகள் ஊழல் சமூகத்தைப் பற்றிய இறைவாக்கினர்களின் கசப்பான குற்றங்கூறலாகும். விவிலியத்தை இனியதாகவும், எளியதாகவும் கருதும் வாசகர்களும் விளக்கவுரையாளர்களும் இந்த வசை கவியுரையின் பயங்கரத் தாக்கத்தைப் பெரும்பாலும் தவிர்க்கின்றனர் அல்லது ஒதுக்குகின்றனர். பொதுவாக, விவிலியத்தின் வசை கவியுரையின் அளவு பலருக்கு அனேகமாகத் தெரியாமலிருந்திருக்கிறது. வசைகவியுரைக்குச் சில சிறந்த எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்படுகின்றன.

பொதுவாக அரசாட்சியைப் பற்றிய, குறிப்பாக, சாலமோனின் ஆட்சி பற்றிய வசையுரை (உப 17:14-20; 1 சாமு 8:10-12; காண்க. 1 அர 9:15-11:40); அபிமெலக்கின் தீய செயல்களுக்கு எதிரான யோத்தாமின் கதை அல்லது உவமை (நீதி 9:4-20). இஃது இலக்கிய நடையிலும் வடிவிலும் அரசாட்சி முறைக்கு எதிராக உள்ளது.

யோபு நூல், வசைகவியுரை உள்ளிட்ட பலவ்கை அடங்கிய உன்னதமான இலக்கியமாகும். வாக்குவாதத்தில் யோபுவினுடைய முழு முயற்சி தனிப்பட்ட பாதுகாப்பை மட்டும் உணர்த்துவதில்லை. பாரம்பரிய சமயக்கருத்துகளை, குறிப்பாக முழுமையான மற்றும் துல்லியமான வினைப்பயன் கோட்பாட்டை வசைபாடுகிறது. மறுபுறம் ''ஞானத்தின் மேன்மை'' பற்றிய பகுதியும் (யோபு 28), ஆண்டவருடைய உரைகளும் (யோபு 38-41) ஒருவகை வசையுரைகளே.

வசையுரையுடைய மற்றொரு நூல் திருவுரையாளர் நூலாகும். இந்நூலும் பாரம்பரிய கருத்துக்களைத் தாக்கித் தெளிவுபடுத்துகிறது. ''வீண், முற்றிலும் வீண், எல்லாமே வீண்!'' (திருவுரை 1:2; 12:8), ''செத்துப்போன சிங்கத்தை விட, உயிருள்ள நாயே மேல்'' (9:4) போன்ற ஏளனக் கூற்றுகளைக் காணலாம். இருந்தாலும், இதன் ஆசிரியர் யோபுவைப் போல், கடவுளை ஒரு பொழுதும் குறை சொல்லவில்லை. ஆசிரியர் இறைவனைப் பற்றிய மேலான கருத்தையும் வாழ்வு பற்றிய நலமான நோக்கையும் தேடுவதாகத் தெரிகிறது.

பழமொழி நூலில் ஒரு குறிப்பிட்ட அளவு வசைகவிகள் உள்ளன. இதற்குச் சில எடுத்துக்காட்டுகள்: தீமையான பெண்ணுக்குப் பலியானவன் (பழ 5:1-20; 6:23-33; 7:4-27; 9:13-18 [பெண் இங்கே மடமையை உருவகப்படுத்துகிறாள்]; 22:14; 30:20; காண்க. சீரா 9:2-9); சோம்பேறி மனிதன் (பழ 6:6-11; 13:4; 18:9; 21:25; 22:13; 26:13-16; காண்க. சீரா 22:1-2); குடிகாரன் (பழ 20:1; 21:17; 23:19-21.29-35; காண்க. சீரா 31:25-30). பேருண்டி (23:1-3; காண்க. சீரா 31:12-24); மூடன் (10:8.14.23; 14:7.24; 15:5.7.14.21; 16:22; 17:7.10.12.16.21.24-25.28; 18:2.6-7; 21:20; 22:3.15; 26:3-12; 27:2; 29: 9.11.20). இவற்றிற்கெல்லாம் முன்னுரையாக ஞானத்தைப் போற்றுதல் அமைந்துள்ளது (1:20-2:22) என்பது கவனிக்கத்தக்கது. ஞானம் கற்புடைய, அழகான பெண்ணாக ஆட்தன்மைப்படுத்தப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ளவற்றிற்கு மேலாக, பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் நூல்களில் பொருள் பொதிந்த வசையுரைகள் உள்ளன. இவை இறைவாக்கினரின் சொந்த மக்களுக்கும், பண்பாட்டுக்கும் எதிராகக் கூறப்பட்டுள்ளன. வெளிநாட்டவர்களைக் குறைசொல்வது எளிதாகும். ஆனால், ஒருவருடைய சொந்தச் சமூகத்தில் நிலவும் தீமைகளைத் தாக்குவதற்கு அசாதாரணத் துணிச்சல் வேண்டும். இறைவாக்கினர் எலியாவின் கதை (1 அர 18:16-46); மீக்காயாவின் கதை (22:5-38).

ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு நூல் பெற்ற இறைவாக்கினர்கள் எபிரேயப் பகுதிகளின் நிலையைப் பற்றி வசைபாடுகின்றனர்,

வரவிருக்கும் அழிவைத் தவிர்ப்பதற்காக ஆமோசும், ஓசேயாவும் வட அரசு மக்களிடம் நேரடியாகவே பேசுகின்றனர். இந்தப் பின்னணியில்தான் ஆமோசு நூலை வாசிக்க வேண்டும். ஓசேயாவின் செய்தியும் இதையொத்ததே; ஆனால், மிகக் கசப்பானதாகும் (ஓசே 2:2-13; 4.9; 11:12-13:16).

எசாயாவும் மீக்காவும் கூட, யூதாவுக்குச் சாதகமாக, இஸ்ராயேலர்களுக்கு எதிராக வசை கூறினர் (எசா 28:1-4; மீக் 1:6-8); குறிப்பாக இஸ்ராயேலின் வீழ்ச்சிக்குப் பிறகு, அவர்களுடைய சொந்த நாட்டின் மேல், குறிப்பாக அதன் சுயநேர்மையை மிகக்கடுமையாகத் தாக்குகின்றனர் (எசா 1:2-23; 3:13-26; 5:1-7.22.24; 28:7-22; 29:1-4; 30:8-17; 31:1-3; 32:9-14; மீக் 2:1-11; 3; காண்க. செப் 1:2-13).

எரேமியாவும் எசேக்கியேலும் யூதேயாவிடம் அதன் வீழ்ச்சிக்கு முன்னால் இவ்வாறே பேசினர் [எரே 1:4-23:29 (3:14-18; 10:1-16.23-25; 12:14-17; 16:14.15.19-20; 17:19-27; 23:1-8 ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும்); எசே 4-9; 11:1-12; 12:16; 20:45-24:14].

இந்த இறைவாக்கினர்கள் அவர்களுடைய நாளில் காணப்பட்ட ஆட்சி முறையைக் குறை கூறினர். ஆகவே, இறைவாக்கினர் போதனையில் அரசாட்சிக்கு எதிரான வசையுரை தோன்றியிருக்கலாம். இறைவாக்கினர்கள் தங்களது சொந்த அரசர்கள், நகரங்களையும், மக்களின் சிலை வழிபாட்டையும், ஊழலையும் குறைகூறிக் கேலி செய்தனர்; வசை பாடினர். இதில் ஆமோஸ் அண்டை நாடுகளையும் சேர்த்துக் கொண்டார் (ஆமோ 1:3-2:16). எசாயா அசீரியா, பெலிஸ்தியா, தமஸ்கு, எகிப்து ஆகியவற்றுக்கு எதிராகவும் இறைவாக்கு உரைத்தார் (எசா 10:12-15; 14:28-32; 17:1-3; 20). எரேமியா எகிப்துக்கு எதிராக இறைவாக்குரைத்தார் (எரே 44:30; 46:3-12).

அன்னிய சிலைவழிபாட்டை நையாண்டி செய்யும்போது, எபிரேயர்களிடையே நிலவிய சிலைவழிபாடு கண்டனம் பெறுகிறது (1 சாமு 5:1-7; காண்க. 1 அர 12:28-30; சங் 115:4-8;135: 15-18; எசா 44:9-20; 45:16; 46; காண்க. 57:3-13; எரே 10:1-16).

தானியேல் நூலின் பெரும்பகுதி இத்தகைய வசையுரைப் போக்கைக் கொண்டுள்ளது. அதி. 1 அன்னியரின் ஞானத்தையும், சாப்பிடும் பழக்கத்தையும் நகைத்துக் கூறுகிறது. அதி. 2 - கல்தேயர்களின் அறியாமையையும், நாட்டையும், சிலைகளையும் நகைக்கிறது. அதி. 3-இல் மூன்று யூதர்கள் அரசனைக் கேலிக்குரியவனாக்குகின்றனர். அதி. 4 - ஒரு பெரிய அன்னிய அரசன் பைத்தியமாகத் திரிகிறான். அதி.5 - அன்னிய மந்திரவாதிகளின் தீய பழக்கங்கள், சிலைவழிபாடு, அறியாமை ஆகியவற்றை வசைபாடுகிறது. அதி 6 - வலிமை மிக்க அன்னிய அரசன் தாழ்த்தப் பெறுகிறான்.

யோனா நூல் மிகவும் வேறுபட்ட வசை கவியுரையை அளிக்கிறது. இது தொடக்க கால இறைவாக்கினர்களைப் பின்பற்றுவதாகத் தெரிகிறது. யூதித்து நூல் அன்னிய படை அதிகாரிகளின் இயலாமையை நகைக்கிறது. சாலமோனின் ஞானம் என்ற நூல் சிலைவழிபாட்டுக்கு எதிராக வசை கூறுகிறது (ஞான 13:10-14:31; 15:7-16:1). இப்படிக் கூறிக்கொண்டே போகலாம்.

புதிய ஏற்பாட்டில் முதன்மையான வசையுரை, நற்செய்திகளின் பரிசேயர், மறைநூல் வல்லுநர்களுக்கும், அவர்களுடைய போலித்தனத்திற்கும் எதிராகக் கூறப்படுகிறது (மத் 23; லூக் 11:39-54; மாற் 2:16-17; லூக் 5:30-35; 6:7-11; 15:1-10); பவுல் யூதமயமாக்குபவர்களைத் தாக்குகிறார் (பிலி 3:2.19); யாக்கோபு பணக்காரர்களுக்குக் கசையடி கொடுக்கிறார் (யாக் 5:1-6;காண்க. மாற் 10:25). இறுதியாக, திருவெளிப்பாட்டில் உரோமைக்கு எதிராகக் கூறப்படும் புகழ்பெற்ற வசையுரை வருகிறது (திருவெளி 13; 14:8; 16:18-19:3; 19:17-21). அந்நகரும் அதன் கூட்டாளிகளும் அழிகின்றனர். அவற்றின்மேல் ஆசிரியர் தனது கசப்பான எள்ளி நகையாடுதலையும் வசையுரையையும் பொழிகிறார்.

வடக்கிலிருந்து வரும் படை (NORTHERNER)

யோவேல் 2:20-இல் இச்சொற்கள் பெரும்பாலும் வெட்டுக் கிளியின் படையைக் குறிக்கின்றது. இது வழக்கத்திற்கு மாறாக, வடக்கிலிருந்து எருசலேமுக்குப் படையெடுத்தது. ஆண்டவர் கோதுமையும், திராட்சைரசமும், எண்ணெயும் அடங்கிய நிலச்செழிப்பைக் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். அஃதோடு வெட்டுக்கிளி வாதனையையும் நீக்குவதாகவும், அது விளைவித்த நிந்தையையும் பொருளாதாரத் துன்பத்தையும் நீக்குவதாகவும் வாக்களித்திருந்தார் (2:19). வடக்கிலிருந்து வந்த பெருங்காற்று (காண்க. யாத் 10:19), சாக்கடலுக்கும் மத்தியதரைக்கடலுக்கும் இவ்வெட்டுக்கிளிகளை அடித்துச் சென்றிருக்க வேண்டும்.

வெட்டுக்கிளிப் படையைக் குறிக்க யோவேல் பயன்படுத்திய இச்சொற்றொடர் வடக்கிலிருந்த வந்த எதிரிகளைப் பற்றிய முந்தைய இறைவாக்குகளைப் (எரே1:14; 13:20; எசே 38:6.15; 39:2) பலருக்கு நினைவுபடுத்தியிருக்க வேண்டும். மேலும், இச்சொற்றொடர் பல புராணக்கதைகளோடு தொடர்புடையதுமாகும்.

வடநாடுகள் (NORTH COUNTRY, THE)

பாலஸ்தீன நாட்டின்மீது வடக்கிலிருந்து படையெடுத்து வரும் எந்த நாட்டிற்கும் இறைவாக்கினர் இட்ட பெயர் ''வடநாடுகள்'' என்பதாகும். பாலஸ்தீனம் பல நாடுகளை இணைக்கும் பாலமாக இருந்தது. மேற்கில் மத்திய தரைக்கடலையும், கிழக்கில் அரேபியாவிலுள்ள பாலைவனத்தையும் இணைத்தது. உலகநாடுகளின் நெடுஞ்சாலை ஒன்று தென்வடலாகச் சென்றது. எகிப்து தெற்கிலும், மற்ற நாடுகளும் (அசீரியா, பாபிலோனியா, சீரியா) பிற செமித்தியர் அல்லாத நாடுகளாகிய மேதியா, பாரசீகம், ஏலாம் ஆகிய அனைத்தும் பாலஸ்தீனத்துக்கு வடக்கிலும் இருந்தன (எசா 4:25). எபிரேயர்கள் கடவுள்களின் மலை தொலைவான வடபுற எல்லையில் இருக்கின்றது என்ற கானானியக் கருத்தை ஏற்றுக் கொண்டனர் (சங் 48:2-3; எசா 14:13-14); அதேபோல் தங்கள் கடவுளாகிய யாவே வடக்கிலிருந்து வருவதாக விசுவசித்தனர் (யோபு 37:22; எசே 1:4). வடக்கிலிருந்து வரும் எதிரிகளின் படையெடுப்புப் பற்றிய இறைவாக்கினரின் தெளிவற்ற கூற்று, அதை இறைவனுடைய பழிவாங்குவோரின் படையென விளக்கப்பட்டிருக்கலாம். சாதாரணமாக, இவ்வாறு பகைவர்கள் அனுப்புவது யூதேயாவுக்கு எதிராகத்தான். சில நேரங்களில் இறைவனின் தூதர்கள் வடக்கிலிருந்து எகிப்திற்கு எதிராகவும் (எரே 46:10.20.24), பெலிஸ்தியர்களுக்கு எதிராகவும் (47:2) அனுப்பப்பட்டார்கள்.

வல்லரசு நாடுகள் எபிரேய நாட்டைப் பயமுறுத்தும்போது, வடக்கிலிருந்து வரும் எதிரிகள் பற்றிய இறைவாக்கினரின் மறைமுகமான குறிப்பு மக்களால் எளிதாய் அடையாளம் கண்டுகொள்ளப்படும். சூழ்நிலையின் சரித்திர மற்றும் புவியியல் குறிப்புகள் வடநாட்டை அடையாளம் காண உதவி செய்கின்றன. சில நேரங்களில் இந்நாடு அசீரியாவும் யூப்பிரத்தீசு நதியையொட்டிய மெசபொத்தாமியாவின் மேற்கு மாநிலங்களுமாக (எரே 46:10; 2:13) இருக்கலாம். இப்பகுதிகளுக்குத்தான் சிறைப்பிடிக்கப்பட்ட இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டனர் (2 அர 17:6). அங்கிருந்து அவர்கள் மீண்டும் திரும்புவர்(எரே 3:12.18; 16:15; 23:8; 31:8). மற்றக் காலங்களில் வடநாடு பாபிலோனியாவிலிருந்த கல்தேய அரசாக இருக்கலாம் (எசே 26:7; செக் 2:6-7). அல்லது பாரசீக அரசாகவோ (எசா 41:25;எரே 50:3.9.41), சீரியாவைச் சேர்ந்த செலூக்கிய அரசாகவோ இருக்கலாம் (தானி 11:6தொ). இவைகள் எல்லாம் வடக்கு நாடுகளாகக் கருதப்பட்டன.

சில சமயங்களில் செமித்திய இனத்தைச் சேராதவர்களும் (எசே 38:6) வடநாட்டைச் சேர்ந்தவர்களென்று குறிப்பிடப்பட்டுள்ளனர். எரேமியா குறிப்பிட்டுள்ள வடக்கிலுள்ள எதிரிகள் எல்லாம் சித்தியர்கள் என்பது தவறானதாகும் என்று கருத இட

மிருக்கிறது. வடக்கிலுள்ள நாடோ, இனமோ பாபிலோனியர்களிடமிருந்து வேறுபடுத்தப்படும்போது (எரே 1:14-15; 25:9; 50:9.41), அவர்கள் பெரும்பாலும் வலிமை வாய்ந்த நாடுகளோடு ஒன்று சேர்ந்த கூலிப்படையினராகவோ, அவர்களைச் சார்ந்தவர்களாகவோ இருக்கின்றனர்.

வடிகட்டுதல், தூய்மைப்படுத்துதல் (REFINING)

நயமான நிலைக்குக் கொண்டு வருதல். உருவகமாகக் கூறவேண்டுமெனில் மாசு அகற்றுதல், தூய்மைப்படுத்துதல் என்பதாகும்.

எபிரேயத்தில் இருவேறு சொற்கள் இருவேறு நிலைகளைக் குறிப்பதாக வருகிறது. முதல் சொல் மழை நீரை வடிகட்டுதல் (யோபு 36:27), இரசத்தை வடிகட்டித் தூய்மைப்படுத்துதல் (எசா 25:6) என்பனவற்றைக் குறிக்கின்றது. அதே நேரத்தில் உலோகத்தைத் திடநிலையிலிருந்து திரவ நிலைக்கு மாற்றி அதிலுள்ள மாசுகளை அகற்றி உலோகத்தை இன்னும் தூய்மையானதாக மாற்றுதல் பற்றிய குறிப்பையும் கொண்டுள்ளது (1 நாள் 28:18;29:4; யோபு 28:1; சங் 12:6). மற்றொரு சொல் உலோகக் கனிப்பொருள்களிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுத்தலுக்குப் பயன்படுத்தப்படுகிறது (எசா 1:25; 48:10; எரே 6:29; 9:7; 2 சாமு 22:31; சங் 12:6).

தொடக்ககாலத்தில் உலோகத் தாதுக்களிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுக்கும் ஒரே வழியாக அவற்றைக் குவித்து வைத்து நெருப்பு வைப்பதாக இருந்தது. பின்னர், உயரமான சூளைகளில் வைத்து எரியவிட்டுப் பின்னர் அடியிலிருந்து தூய்மையான உலோகத்தைப் பிரித்தெடுத்தனர். இரும்பு போன்ற உலோகங்களைப் பிரித்தெடுக்க அதிக வெப்பம் தேவைப்பட்டதால் அதற்கேற்ற சூளைகளும் தயாரிக்கப்பட்டன. இத்தகைய சூளைகள் இரவு நேரங்களில் எரிவதும், பின் பகல் நேரங்களில் புகை போவதுமாக இருந்ததால் இவை தூய்மைப்படுத்துவதின் அடையாளங்களாக (எசா 1:25-26; செக் 13:9; மலா 3:3), தீர்ப்பின் அடையாளங்களாகக் (எசா 1:22; எரே 6:27-30; எசே 22:17.22) கருதப்பட்டன.

தங்கள் நாட்டில் உலோகக் கனிப்பொருள்கள் கிடைக்காததால் விவிலியகால மக்கள் இறுதி நிலையில் உலோகத்தைத் தூய்மைப்படுத்தினர். சாலமோன் காலத்தில் இரும்பு, தாமிரம் போன்றவற்றைத் தூய்மைப்படுத்துவதில் இஸ்ராயேல் சிறப்புற்றிருந்தது.

வட்டி (INTEREST)

கடன் வாங்கியவர் தான் வாங்கிய பணத்தைப் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கும் பணமே வட்டி. வட்டி என்பதற்கு 'அதிகரித்தல்' எனும் ஒரு பொருளும், இன்று நாம் கூறும் அநியாய வட்டி எனும் பொருளும் உண்டு. ஆனால், அன்று இப்பொருளில் அதனைப் பயன்படுத்தவில்லை. ஆனால், வட்டி வாங்குவது தவறு என சட்டம் சுட்டிக் காட்டியதை அன்றைய மக்கள் உணர்ந்திருந்தனர்; அதுவும் இரக்கமற்ற முறையில் அளவுக்கதிகமாக வட்டி வாங்குவதைப் பெரிய பாவம் எனவும் அறிந்திருந்தனர் (லேவி 25:36-37; உப 23:19-20; எசே 18:8.13.17; 22:12; நெகே 5:6-13). மத்திய காலத்து இறையியலார் சிலர் கடனுக்கு வட்டி வாங்குவதை வன்மையாகக் கண்டித்தனர்.

வணக்கம் தெரிவித்தல் (OBEISANCE)

பழைய ஏற்பாட்டிலே இச்சொல்லானது வழிபாட்டைப் பற்றிக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. தன்னைத் தாழ்த்தி, தெண்டனிட்டு வணங்கும் இந்தச் செயலுக்கு ஆராதனை, தன்னையே அர்ப்பணித்தல் என்று பொருள்.

புதிய ஏற்பாட்டிலே இச்சொல்லானது வழிபாட்டைக் குறிப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது.

வணிகர் (MERCHANT, TRADER)

பாபிலோனியர்களும், அரமேயர்களும், கானானியர்களும், பெனிசியா நாட்டி

னரும், கிரேக்கரும் பெரும் வணிகர்களாய் இருந்தனர். விவிலிய காலத்தில் எபிரேயர்கள் பெரும் வணிகர்களாக இல்லை. எனவே, 'கானானியர்' என்ற சொல் 'வணிகர்' என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப் பட்டது (பழ 31:24; ஓசே 12:7).

வணிகர் சில சமயங்களில் வீடு வீடாகச் சென்று பொருட்களை விற்பதுண்டு (நெகே 13:16). அவர்கள் விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று வீட்டில் நெய்த துணிகளைக் கொள்முதல் செய்தனர் (பழ 31:24); தங்கள் பொருட்களைப் பொது இடங்களுக்குக் கொண்டுவந்து கடை வைப்பார்கள்(நெகே 3:31; 13:19 தொ; காண்க. 1 அர 20:34).

அவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்வர் (ஆதி 37:28); கடல் கடந்து செல்வர் (எசா 23:2); கூட்டாக வணிகம் செய்வர் (யோபு 41:6); ஆலயத்திலும் வியாபாரம் செய்வர் (செக் 14:21). முக்கியமான, செல்வமிக்க வணிகர்கள் பலர் குறிக்கப்படுகின்றனர் (எசா 47:15; எசே 17:4).

தந்தமும், தங்கமும் ஆப்பிரிக்காவிலிருந்தும், பட்டும் அம்பரும் ஆசியாவிலிருந்தும், சாம்பிராணி நறுமணப் பொருட்கள் அரேபியா, மற்றும் இந்தியாவிலிருந்தும் பெற்றுவர வணிகர்கள் நீண்ட பயணம் மேற்கொண்டனர். வேறு நாடுகளுக்குப் பயணம் செய்யும் வணிகர்கள் தங்க வணிகர் விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. சேமிக்கும் களஞ்சியங்கள் விவிலியத்தில் குறிப்பிடப்படுகின்றன (ஆதி 41:49; 1 அர 10:28). சாலமோனின் ஆட்சிக்காலத்தில், இஸ்ராயேல் வணிகத்தில் வளர்ச்சியுற்றது (1 அர 9:26-27;10:28). யாக்கோபின் புதல்வர்கள் எகிப்தில் வாணிகம் செய்தனர் (ஆதி 43:11). பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த போது யூதர்கள் பெரும் வணிகர்களானார்கள். அங்கிருந்து அவர்கள் செல்வந்தர்களாகத் திரும்பி வந்தனர் (நெகே 5:1-13). எசா 23:8-இல் வணிகர்கள் குறிக்கப்படுகிறார்கள். எருசலேமின் கவர்களை மீண்டும் கட்ட வாணிபக் குழுக்கள் நெகேமியாவுக்கு உதவி செய்தன (நெகே 3:8.31-32.) மோசே சட்டங்களும், கமுராபியின் சட்டங்களும் எடைகளையும், அளவைகளையும் சரிபார்த்தன (உப 25:14). ஒப்பந்தங்களை முடிவு செய்ய முத்திரைகள் இடப்பட்டன. ஏமாற்றுவதற்கு எதிராக சீராக்கு எச்சரிக்கிறார் (சீரா 26:28; 37:12;42:5). கி.பி. 70-இல் எருசலேம் உரோமையர்களால் அழிக்கப்பட்ட பின்னும் யூதர் பலர் வாணிபத் தொழில் செய்து வந்தனர்.

வணிகர் குழு, பயணியர் குழு (CARAVAN)

இஸ்ராயேலின் உள்நாட்டு வணிகர்கள் கழுதைகளைப் பயன்படுத்தி, பொருட்களை மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்குக் கொண்டு சென்றனர். கி.மு. 1100-ஐ ஒட்டி உபயோகத்திற்கு வந்த ஒட்டகமானது அதிக அளவு பொதுவாக உபயோகப்படுத்தப்படவில்லை. அப்படிப்பட்ட வணிகமானது நிலையற்ற அரசியல் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் (நீதி 5:6). பழைய ஏற்பாட்டில் சொல்லப் பட்டுள்ள ஏறக்குறைய எல்லா வகைக் கூட்டங்களும் யோர்தானுக்கு அப்பாலுள்ள நாடுகள், அரேபியா ஆகியவற்றுடன் தொடர்புடையனவாக இருந்தன. அரேபியா நாட்டு ஒட்டக வணிகக்கூட்டங்கள், இலாபம் தரும் வாசனைப்பொருட்களையும், நறுமணப்பொருட்களையும் முதன்மையாக வணிகம் செய்தார்கள். இந்தப் பொருட்கள் தெற்கு அரேபியாவிலுள்ள அத்ரமவுத்திலிருந்து வந்தன. இப்படிப்பட்ட வணிகர்கள் வடக்கிலிருந்து திம்னா, மரிபு வழியாகக் கியாசில் புகுந்து, காசா அல்லது தமஸ்குவுக்கும், பிற்காலத்தில் அதே வழியாக பெத்ரா, மற்றும் போஸ்தராவுக்கும் சென்றனர். சாபாவின் அரசர்கள் இந்த வியாபாரத்தில் இறங்கியிருந்தார்கள் (1 அர 10:2). யோர்தானுக்கு அப்பால் உள்ளவர்கள் எகிப்தியருடன் வணிகம் செய்தார்கள் (ஆதி 37:25). அரேபியர்கள், பாரசீகர்களுக்கு வருடத்திற்கு ஓராயிரம் தாலந்து விலை மதிப்புள்ள வெள்ளைப்போளத்தைக் கொடுத்தார்கள் என்று எரோதோத்து கூறு

கிறார். வாசனைப் பொருட்கள் தெற்கு அரேபியாவிலிருந்து காசாவிற்கு வருவதற்கு 65 நாட்கள் ஆயின என்று பிளினி கூறுகின்றார்.

வண்டி (CART)

என் 7:3-8; 2 சாமு 6:3-இல் உள்ள 'தேர்' என்பது இரண்டு மாடுகளால் இழுக்கப்பட்ட ஒரு பளுவான நான்கு சக்கர வண்டியைக் குறிப்பிடுகின்றது. இந்த வண்டிகள் ஆட்களையும், பொருட்களையும் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டிருந்திருக்கலாம் (ஆதி 45:19.21.27;46:5; யூதி 15:11). இதே போன்ற பளுவான நான்கு சக்கர வண்டியைத்தான் திருவெளி 18:13-இல் உள்ள 'தேர்' குறிப்பிடுகின்றது. எண் 7:3-இல் உள்ள 'வண்டி' என்பதின் பொருள் தெளிவாக இல்லை. எசே 23:24; 26:10-இல் உள்ள 'வண்டி' என்பது படையைச் சேர்ந்த 4 சக்கரவண்டியாக இருந்திருக்கும். சங் 46:9-இல் உள்ளதும் இதையேதான் குறிக்கும்; இருப்பினும், ''தேர்'' என்ற பொருளையும் பெறலாம். ஒரு சக்கர வண்டியானது போரடிப்பதில் பயன்படுத்தப்பட்டது (எசா 28:27-28). இதுவும், ஆமோ 2:3-இல் உள்ள ''வைக்கோல் பொதி நிறைந்த வண்டியும்'' ஒன்றல்ல.

வண்ணார், சலவைத் தொழிலாளி (FULLER)

இவர் கம்பளி மற்றும் நூல் ஆடைகளைச் சுருங்கவும், தடிமனாகவும் பக்குவப்படுத்தும் சலவைத்தொழிலாளி ஆவார். இது துணிகளை அடித்து மிதித்துச் சவர்க்காரத்தால் நீரில் தேய்த்துத் தூய்மைப்படுத்துதலாகும் (மலா 3:2). இறுதியில் வெயிலில் காயவைத்து வண்ணம் போக்கி வெள்ளையாக்கப்படும்.

பொதுவாக வண்ணான் கடை நீர்த்தேக்கத்துக்கு அருகிலும், நகருக்குப் புறத்திலும் அமைந்திருக்கும். அங்கு, துவைக்கவும் காயவைக்கவும் போதிய இடமிருக்கும். அங்கிருந்து வரும் வீச்சம் நகரைப் பாதிக்காதபடி போதிய தொலைவில் இருக்கும். ஆண்டவருடைய நாளுக்கான தயாரிப்பில் குருத்துவத்தைத் தூய்மைப்படுத்துவது வண்ணான் சுத்திகரிப்புக்கு ஒப்பிடப்படுகிறது (மலா 3:2; காண்க. எரே 2:22). இயேசு உருமாறியபோது, அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்தச் சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்குப் பளபளப்பாக வெண்மையாயின.

வண்ணான் வயல், வண்ணான்துறை (FULLER'S FIELD)

எருசலேமின் புறநகர்ப் பகுதியிலே மேற்குளத்துக்குப் போகும் கால்வாயின் அருகில் இந்த வண்ணான்வயல் அமைந்திருந்தது. எசாயா ஆகாசைச் சந்தித்த இடமும் (எசா 7:3), எசேக்கியாவின் அதிகாரிகள் சனகெரிபின் படைத்தலைவர்கள் சந்தித்த இடமும் (2 அர 18:17; எசா 36:2) இதுவே. கீகோனிலிருந்து வரும் நீர்சேமித்து வைக்கப்பட்டிருக்கும் மேற்குளத்தோடு இந்த 'வண்ணான் வயல்' இணைக்கப்பட்டிருக்கிறது. பிர் ஆயூபு (ஏன் ரோகேல்), அல்லது தாவீது நகரின் தெற்கு எல்லையிலுள்ள பகுதியாக இஃது அடையாளம் காட்டப்படுகிறது. யோசிப்பசின் ''வண்ணான் சின்னம்'' ''வண்ணான் வயலை'' மன்னராட்சிக் காலத்திய எருசலேமின் வடக்குச் சுவருக்கு வெளியில் குறித்துக் காட்டுகிறது. ஆனால், இது சூழ்நிலையில் பொருத்தமாகத் தெரியவில்லை.

வதைத்தல், வேதனைக்குள்ளாக்குதல் (TORTURE)

எபி 11:35-இல் காணப்படும் ''வதைக்கப்பட்டு'' என்ற சொல் ஒருவித தண்டனை அளிக்கும் முறையைக் குறிக்கிறது. பொதுவாக இஃது உடலை மிகவும் வருத்தக்கூடிய தண்டனையாகும். எப்படி இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டதென்பது, கேள்விக்குறியாகும். திருவெளி 9:5-இதனை வேதனைக்குள்ளாக்குதல் என்று கூறுகிறது.

வத்திக்கான் சுவடித்தொகுப்பு (CODEX VATICANUS)

இது வத்திக்கான் நூல் நிலையத்தில் காணப்படும் ஒரு பழைய சுவடித்தொகுப்

பாகும். இதனை 'B' என்ற குறியெழுத்துக் கொடுத்து எழுதுவர். இது கி.பி. 4-ஆம் நூறாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்ட சுவடி. இது வேல்லும் என்ற தோலினால் ஆனது. இச்சுவடியில் முதலில் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலியம் முழுவதும் எழுதப்பட்டிருக்கிறது. இதில் புதிய ஏற்பாடும், பழைய ஏற்பாடும் அடங்கும். ஆனால், இத்தொகுப்பில் மனாசேயின் செபமும், மக்கபேயரின் இரு புத்தகங்களும் இடம் பெறவில்லை. இப்பழஞ் சுவடி, விவிலியத்தின் பழமைக்குச் சாட்சியம் கூறும் முக்கியமான தொகுப்பாகும். குறிப்பாக எழுபது நூலைப் பற்றி ஆராய இப்பழஞ் சுவடி பெரிதும் துணை செய்கிறது. இச்சுவடி காலப்போக்கில் பல சிதைவுகளுக்கு ஆளாகியிருக்கிறது. இதனால் கீழ்க்கண்ட பகுதிகளை இப்பழைய ஏட்டில் நாம் காண முடியவில்லை. ஆதி1:1-46:28; 2சாமு 2:5-7. 10-13 என்ற வசனங்கள்; சங்கீதங்கள் 106:27 முதல் 138:6 வரை; புதிய ஏற்பாட்டில் எபி 9:14-13:25 வரை; மேய்ப்புப்பணி மடல்கள் என்ற திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டு திருமுகங்களும், தீத்துவிற்கு எழுதப்பட்ட திருமுகம், திருவெளிப்பாடு, ஆகியவற்றின் அனைத்துப் பகுதிகளும் இப்பழஞ் சுவடியிலிருந்து சிதைந்து போய்விட்டன.

இச்சுவடி 759 தாள்களைத் தன்னுள் கொண்டிருக்கிறது. இதில் 617 தாள்களில் பழைய ஏற்பாடும், 142 தாள்களில் புதிய ஏற்பாடும் எழுதப்பட்டுள்ளன. ஆனால், இத்தொகுப்பு மொத்தம் 820 தாள்களில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற குறிப்பு இச்சுவடியில் மறைமுகமாகத் தெரிகிறது. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள தோலேடுகள் 26 செ.மீ. நீளம், 25 செ.மீ. அகலம் என்ற அளவில் அமைந்துள்ளன.

கவிதை நடையில் உள்ள விவிலியப் புத்தகங்கள், ஒரு பக்கத்தில் இரு பத்திகள் வீதம் எழுதப்பட்டுள்ளன. மற்றப் புத்தகங்கள், பக்கத்திற்கு மூன்று பத்திகள் வீதம் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்தியிலும் 40 முதல் 44 வரிகள் இடம் பெறுகின்றன. இது, பன்னிரு பாக எழுத்துக்கள் என்ற எழுத்து முறையில் எழுதப்பட்டுள்ளது. இத்தொகுப்பை இரண்டு எழுத்தாளர்கள் நகலெடுத்து எழுதியிருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இச்சுவடி ஆரம்பத்திலிருந்தே வத்திக்கான் நூல் நிலையத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆனால், 1475-இல் இந்நூல்நிலையத்தில் உள்ளவைகளைப் பற்றி அட்டவணை ஒன்று தயாரித்தபோதுதான், இதனைப் பற்றிய முழுவிபரமும், முக்கியத்துவமும் உலகிற்குத் தெரிய வந்தது. இஃது அலக்சாந்திரியாவில் எழுதப்பட்டிருக்கலாம்.

வயல், நிலம் (FIELD)

மக்கள் குடியிருக்காத நிலப்பரப்பாகும். இது விளைச்சலுக்கும் மேய்ச்சலுக்கும் பயன்பட்டது. நிலத்தின் புவியியலுக்கும், நிலச்சொந்தக்காரனுடைய சொத்துத் தகுதிக்கும் ஏற்ப, பரப்பிலும் விளைச்சல் தரத்திலும் இது வேறுபட்டது; நகர் அல்லது கிராமத்தைச் சுற்றியிருந்தது (காண்க.லேவி 25:31.34; எண் 16:14; யோசு 15:18; நீதி 1:14; யோசு 21:12). இது திறந்தவெளியாக இருக்கலாம் (லேவி 14:53; 2 சாமு 11:11; எசே 29:5); அல்லது சுவர் சூழ்ந்த தோட்டமாக இருக்கலாம் (எண் 22:23-24; பழ 24:30-31). இது பயிர் செய்யப்பட்டதாகவும் (யாத் 23:16; லேவி 26:4; சங் 107:37; யோவா 4:35), பயிர் செய்யப்படாத திறந்தவெளியாகவும் (ஆதி 25:27; 2 சாமு 11:11; எசே 39:10), மேய்ச்சல் நிலமாகவும் பயன்படலாம் (எண் 22:4; உப 11:15; லூக் 15:15). இப்பகுதிகளில் வாழ்ந்த உயிரினங்கள் அடிக்கடி குறிக்கப்படுகின்றன (2 சாமு 17:8; எரே 14:15; எசே 31:6).

உருவகமாக வயல் இறையரசின் விதைகளை விதைக்க ஏற்ற செழிப்பான இடமாக (மத் 13:24.27.31) உலகம் முழுவதையும் குறிக்கிறது (13:38). கொரிந்தியத் திருச்சபை ஆன்மீக வளர்ச்சிக்கு ஊட்டம் இடப்பட வேண்டிய நிலமாகச் சித்திரிக்கப்படுகிறது (1 கொரி 2:9; 2 கொரி 10:15). இறையரசு உண்மையாக்கப்படுதலை ''அறுவடைக்குத்

தயாராய் உள்ள வயல்வெளியாக'' யோவான் விவரிக்கிறார் (யோவா 4:35).

வயிசாத்தா (VAIZATHA - வெட்ட வெளி மகன்)

யூதர்களால் கொல்லப்பட்ட ஆமானின் பத்துப் புதல்வர்களுள் ஒருவன் (எஸ்த 9:9). பாரசீக அரசிலிருந்த யூதர்கள் அனைவரையும் அழிக்க வேண்டும் என்ற ஆமானின் எண்ணம் தோல்வியுற்று, யூதர்கள் எதிர்த்தெழுந்தபொழுது இது நடந்தது.

வரலாறு (HISTORY)

பழங்கால முன்னோக்கில், வரலாறு என்பது கடந்த கால நிகழ்ச்சிகளும், சூழ்நிலைகளும் நினைவுகூரப்பட்டு வாய்மொழியாகவும், எழுத்து வடிவத்திலும் கையளிக்கப்படுவதாகும்.

விவிலியம் பெருமளவில் வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ளது, இதில், ஆதி 1-11-இல் உள்ள உலகளாவிய நிகழ்ச்சிகளை உள்ளடக்கும் ''முதன்மை வரலாறு, குலமூதாதையரில் தொடங்கி, எகிப்தில் வாழ்ந்தது, விடுதலை பெற்றது, கானானில் குடியேறியது, அரசாட்சி, சமாரியா மற்றும் எருசலேமின் வீழ்ச்சிவரையுள்ள இஸ்ராயேலின் வரலாறு' (ஆதி 12-2 அர), அரசாட்சி, நாடு கடத்தலுக்குப் பின்வந்தவை பற்றிய நாளாகம விவரிப்புகள் (1, 2, நாளாகமங்கள், எஸ்ரா, நெகேமியா), மக்கபேயர் காலவரலாறு, இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகள் அடங்கிய நான்கு நற்செய்திகள், அப்போஸ்தலர் பணிநூலில் வரும் தொடக்ககாலத் திருச்சபையின் வரலாறு ஆகியவை அடங்கும். மற்ற வரலாற்றுச் செய்திகள் இறைவாக்கினர் நூல்களிலும், ரூத்து, எஸ்தர், தானியேல் ஆகியவை உட்பட்ட நூல்கள் என்ற தொகுப்பிலும், ஒரு வேளை தோபித்து, யூதித்து ஆகிய நூல்களிலும் காணப்படலாம்.

தலைமுறைப் பட்டியல்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள், நாட்டைப் பங்கீடு செய்தல், நாளேடுகள், ஆட்சிக் குறிப்பேடுகள், இஸ்ராயேலின் தலைவர்கள், மக்கள் ஆகியவர்களின் போற்றிப் பாதுகாக்கப்பட்ட தீரச்செயல்கள் ஆகியவை உள்ளிட்ட வரலாற்றுச் செய்திகள், பெரும்பாலும் கதைவடிவில் பாதுகாக்கப் பட்டுள்ளன. இவை யாவும் சமய, போதகப் பின்னணியில் ஒன்றிணைக்கப்பட்டு, ''மீட்பு வரலாறாக'' மனித வரலாற்றில், குறிப்பாக இஸ்ராயேல் வரலாற்றில் இறைவனது செயல்களைப் பற்றிய விசுவாச அறிக்கையாகத் திகழ்கின்றன.

வரி, வரிகள் (TAX, TAXES)

வரிகள் ஆட்சிக்குத் தேவையானவற்றைக் கவனிக்க மக்களால் கொடுக்கப்படும் பங்காகும். பின்வரும் சொற்கள் 'வரியை'க் குறிக்கின்றன: ''அவரவர் நிலைக்கேற்ப வரி'' (2 அர 23:35), ''கட்டாய'' ஊழியம் (உப 20:11), 'திறை' (எஸ் 4:13), 'தீர்வை' (எஸ் 4:13), 'வரி' (மத் 22:17) முதலியன.

செழுமையான ஏழு ஆண்டுகளில், எல்லாப் பொருட்களிலும் ஐந்திலொரு பகுதி வரியாக எகிப்தில் பெறப்பட்டது. ஏறக்குறைய 20% எல்லாப் பொருட்களிலும் சேமித்து வைத்ததினால் அடுத்து வந்த பஞ்ச காலத்தில் எகிப்து தன் மக்களுக்கு உணவுக்கு வழி செய்ததோடு அண்டை நாடுகளுடனும் தன் சேமிப்பைப் பகிர்ந்து கொண்டது (ஆதி 41 : 25 - 42 : 5). இத்தகைய வரிகள் பார்வோன்கள் நாட்டை முழுவதும் ஆண்டதால்தான் பெறமுடிந்தது (ஆதி 41:44).

நீதிபதிகளின் காலத்தில் இராணுவமோ, அரண்மனையோ இஸ்ராயேலில் இல்லை (1 சாமு 8:10-18). ஒவ்வொரு மாதமும் பணிபுரிய, தாவீது மக்களிடமிருந்து வரி வசூலிக்காமல், 24,000 படை வீரர்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது (1 நாள் 27:1). நாளடைவில், மன்னர்கள் செலுத்திய திறையாலும், போர்க் கொள்ளைப் பொருளாலும் தாவீதின் கருவூலம் விரிவடைந்தது (1 நாள் 27:25-31).

நாட்டிலிருந்து விரட்டப்படாத கானானியரிடமிருந்து இஸ்ராயேல் மக்கள் கட்டாய வேலை வாங்கினர் (யோசு 16:10; 17:13; நீதி 1:28). தாவீதும், சாலமோனும் அன்னி

யர்களை ஆலயத்தைக் கட்டும் பணிக்குக் கட்டாயப்படுத்தினர் (1 நாள் 22:2; 2 நாள் 2). மற்றும் கட்டுமான வேலைகளுக்கும் சாலமோன் அவர்களைக் கட்டாயப்படுத்தினார் (1 அர 9:20; 2 நாள் 8:7).

சாலமோன் காலத்தில் கட்டாய வேலை செய்ய இஸ்ராயேல் மக்களே கட்டாயப் படுத்தப்பட்டனர் (1 அர 5:13). அனேகமாக, சாலமோன் அரசர்தான் இஸ்ராயேலில் வரியை முதன் முதலில் கொண்டு வந்தவராக இருக்க வேண்டும். தாவீதின் காலத்தில் போர்க் கொள்ளைப் பொருளைக் கொண்டே வாழ்ந்த அரண்மனைக்குச் சாலமோன் ஆட்சியில் இன்னும் அதிகமாக பொருள் தேவைப்பட்டது. எனவே, இஸ்ராயேல் மக்கள்மீது வரி விதிக்கப்பட்டது. அரசருக்கும் அவரது அரண்மனைக்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொடுக்க நாடெங்கும் பன்னிரு கண்காணிப்பாளர்கள் சாலமோனுக்கு இருந்தனர். அவர்கள் ஆண்டு முழுவதற்கும் வேண்டியவற்றை எல்லாம் அனுப்பி வைத்தனர் (1 அர 4:7). தனக்கு உட்பட்டவர் அளிக்கும் திறைகளுக்கும், வணிகரிடமிருந்து பெறப்பட்ட வரிகளுக்கும் மேலாக மக்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டது (1 அர 10:14-29; 2 நாள் 9:13-28).

அரசு, எரொபவாமால் இரண்டாகப் பிரிக்கப்பட்டது, சாலமோன் விதித்த அதிகமான வரியின் காரணமாகத்தான் என்று கருதப்படுகிறது (1 அர 12). நாளாகமத்தின்படி யோசபாத்து வரிகளைப் பெற்றான் (2 நாள் 17:5). இறுதியாக, யூதா நாடுதான் அசிரியர்களுக்கும் (2 அர 18:13-16), எகிப்தியர்களுக்கும் (2 அர 23:33), பாபிலோனியர்களுக்கும் (2 அர 24-25) கப்பம் கட்டியது. எகிப்து நாட்டுப் பார்வோன் நெக்கோ விதித்த கட்டளைப்படி வரி செலுத்த, யோயாக்கிம் மக்கள் ஒவ்வொருவர் மேலும் வரி விதித்தான் (2 அர 23:35).

பாரசீகர்களின் காலத்தில் வரிச்சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த முறை எல்லாப் பாரசீக ஆட்சியிடங்களிலும் ஒரு பாரசீக ஆளுநரால் அமுலாக்கப்பட்டது. தாரியுவின் ஆணையின்படி இந்த ஆளுநர்கள் நாட்டின் கருவூலத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும். இந்தத் தொகையானது மக்களிடமிருந்து வரி, தீர்வை ஆகியவைகளாகப் பெறப்பட்டன (எஸ் 4:13). அர்த்தக்சஸ்தா குருக்கள், லேவியர், பாடகர், வாயிற்காவலர், ஆலய ஊழியர்கள் ஆகியவர்கள் மீது வரி விதிக்கவில்லை (எஸ் 7:24). அரசாங்க வரியில்லாமல், ஆளுநரின் தேவைக்காக மக்கள்மீது வரி விதிக்கப்பட்டது. இந்த வரியானது உணவாகவும், திராட்சைரசமாகவும், நாள் ஒன்றுக்கு 40 செக்கேல் அளவு வசூலிக்கப்பட்டது (நெகே 5:14-15). நெகேமியா தன் ஆளுகையில் ஆளுநர் வரி விதிக்கவில்லையென்றாலும், பஞ்ச காலத்தில், மக்கள் வாழ அவர்கள் நிலங்களையும், உடைமைகளையும் அடைமானம் வைக்க வேண்டியிருந்தது (நெகே 5:3-4; 9:37). இந்த வரிகளோடு புனித இடங்களைப் பாதுகாக்கவும், எருசலேமின் நகரச் சுவரை மீண்டும் கட்டவும் வேண்டிய பொறுப்பும் சேர்ந்து கொண்டது.

ஆனால், பிற்பாடு கிரேக்கர்கள் தோலமியர்கள் மற்றும் செலூக்கியர்கள் காலத்தில், அன்னிய நாட்டு அரசன் வரி விதிக்கவில்லை. மாறாக, வரி வசூலிக்கும் பணி அதிகமாகச் சேர்த்துக் கொடுக்க ஒத்துக் கொள்வோருக்கு அளிக்கப்பட்டது. ஆனால், இந்த வரிவசூலிக்கும் பணியில் அவர்களுக்கு இராணுவ உதவியும் அளிக்கப்பட்டது. செலூக்கிய அரசன் மூன்றாம் அந்தியோக்குவின் ஆட்சியில் (1 மக் 10:29-31; 11:34-35; 13:37-39), உப்புவரி, பொன்முடி வரி ஆகியவை இருந்தன. விளைச்சலில் $^1/_3$ பகுதியும், பழங்களில் $^1/_2$ பகுதியும் வரியாக வசூலிக்கப்பட்டன. ஆலயத்திற்கு $^1/_{10}$ பகுதி வரியாகச் செலுத்தப்பட்டது.

பாம்பே கி.மு. 63-இல் எருசலேமைக் கைப்பற்றியபோது அவன் யூதர்கள்மேல் விதித்த வரி சுமார் 10,000 தாலந்தாகும். யூலியு சீசர் வரியைக் குறைத்ததோடு, ¼ பகுதிக்கு மேல் விளைச்சலில் வரியாக வசூலிக்கக்கூடாது என்றும், ஓய்வு ஆண்டில் வரி வசூலிக்கக் கூடாதென்றும் ஆணையிட்டான்; மேலும், யூதர்கள் இரிக்கானுக்குப் பத்திலொரு பங்கை வரி செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டான். துறைமுக நகரான யோப்பா பாதுகாக்கப்பட, இரிக்கானு 20,675 மோதிகள் செலுத்த வேண்டும். இந்தத் தொகையானது நிலவரியாகவும், துறைமுக வரியாகவும், ஏற்றுமதி வரியாகவும் சேர்க்கப்பட்டு சீதோனில் உள்ள உரோமை அதிகாரிகளிடம் செலுத்தப்பட வேண்டும். ஆனால், இந்த வரி ஓய்வு ஆண்டில் மட்டும் வசூலிக்கப்படாது.

பெரிய ஏரோது நில விளைபொருட்கள் மற்றும் விற்பனை வரிகளை விதித்தான். ஆளுநர்களின் ஆட்சியில், நாட்டின் வருவாய்த்துறை தொடங்கப்பட்டது. தோலமியர்களின் ஆட்சியைப் போன்றே வரி வசூலிக்கும் பணி அதிகமான குத்தகைக்குக் கேட்பவருக்கு விடப்பட்டது. நான்கு வகையான வரிகள் இருந்தன. அவை: நிலவரி, தலைவரி (மத் 22:17), சுங்கவரி, எருசலேமில் வீட்டுவரி.

இவை இல்லாமல், யூதர்கள் ஆண்டு வரியாக ஆலயத்திற்கு அரைச் செக்கேல் செலுத்த வேண்டும். இது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் திதிராக்மா (இரண்டு திராக்மா) (மத் 17:24) என்று அழைக்கப்பட்டது. நெகேமியாவின் காலத்தில் ஒரு செக்கேலின் ⅓ பகுதியை ஆலயத்திற்குச் செலுத்தினர் (நெகே 10:32-33). இந்த வரியானது பிற்காலத்தில் அரைச் செக்கேலாக உயர்த்தப்பட்டு இருபது வயதும், அதற்கு மேற்பட்ட வயதுமுடைய, உலகெங்கும் வாழும் எல்லா யூத ஆண்களிடமிருந்தும் வசூலிக்கப்பட்டது. கி.பி. 70-இல் எருசலேம் அழிந்தபோது உரோமைப் பேரரசன் வெஸ்பாசியன் யூதர்களை வரி செலுத்தும்படி கட்டாயப்படுத்தினான்.

இந்த அரைச் செக்கேல் வரியை வசூலிப்பதற்காக வரி வசூலிப்போர் ஊர் ஊராகச் சென்று வரித்தொகையையும் உயர்த்தினர். வரி வசூலிப்பதற்காக ஒரு பட்டியல் தயாரிக்கும்படி அகுஸ்து ஆணையிட்டான். இந்த ஆணையால் யோசேப்பும் மரியாளும் பெத்லகேமுக்கு வந்தபோதுதான் இயேசு அங்குப் பிறந்தார் (லூக் 2:1-7).

மத்தேயு சுங்க வரி வசூலிப்போருள் ஒருவர் (மத் 9:9; மாற் 2:14). வரி வசூலிப்போர் மக்களாலும், பரிசேயர்களாலும் இழிந்தவர்களாகக் கருதப்பட்டாலும், இயேசு அவர்களோடு உறவாடினார் (மத் 9:10-13; மாற் 2:15-17; லூக் 5:29-32). பரிசேயர்கள் இயேசுவைச் சீசருக்கு வரி செலுத்துவது முறையா என்று கேட்டனர். இவர்கள் தம்மை மடக்கப் பார்க்கிறார்கள் என்று எண்ணி, நாட்டின் சட்டம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று பதிலுரைக்கிறார் (மத் 22:17-21; மாற் 12:13-17; லூக் 20:22-25). புனித பவுலும் வரிகளும், நிலவரிகளும் செலுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறார் (உரோ 13:6-7).

வரிவசூலிப்பவர் (EXACTOR OF TRIBUTE)

வரி, சுங்க வரி முதலானவற்றை விதிக்கும் அல்லது வசூலிக்கும் அரசாங்க அதிகாரி. வேலை வாங்கும் மேற்பார்வையாளரும் இவ்வாறு அழைக்கப்பட்டார். இதன் எபிரேயச்சொல் தனது அதிகாரத்தினால் சட்டத்துக்குப் புறம்பான முறையில், அளவுக்கதிகமான வரி வசூலிப்பவனை ஏளனமாகக் குறிக்கும். இச்சொல், ''கொடுமைப் படுத்துபவர்''. ''அச்சுறுத்திப் பணம் பறிப்பவர்'' போன்ற சொற்களுக்குச் சமமானதாகும்.

தானி 11:20-இல் நான்காம் செலூக்கிய பிலோபாத்தோரின் (கி.மு. 187-175) நிதியமைச்சராக இருந்த கெலியதோரின் எருசலேம் வருகையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவர் எருசலேம் ஆலயத்தில் அதிக பணம் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறதா என்று காண வந்தார்.

இத்தகைய வரிவிதிப்பாளர் சிறிது கால இடைவெளிக்குப் பின் எருசலேமுக்கு வந்திருக்கலாம். அந்தியோக்கு எப்பிப்பானுக்கு (கி.மு. 175-164) இத்தகைய வரி வசூலிப்பவன் ஒருவன் இருந்ததாக 1 மக் 1:29 கூறுகிறது.

வருத்தம் (SADNESS)

I. மகிழ்ச்சி, மீட்போடு இணைந்ததும் இறைப்பிரசன்னத்தைக் கொண்டிருப்பதும் ஆகும். அதற்கு மாறாக, பாவத்தின் கசப்பான கனிதான் வருத்தம். அது நம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கிறது. வெளிப்படையான அதன் காரணங்கள் பல: கடவுள் தன் முகத்தை மறைத்துக் கொள்ளும் சோதனைக் காலமாக இருக்கலாம் (சங் 13:2 தொ); ஏமாற்றும் ஒரு தீய மனைவியாக இருக்கலாம் (சீரா 25:23); மோசமாக வளர்க்கப்பட்ட மகன் (30:9), நம்பிக்கைத் துரோகியான நண்பன் (37:2), ஒருவனுடைய சொந்த மடமை (22:10), மனக்கோட்டம் (36:20), புறங்கூறுதல் (பழ 25:23) ஆகியவையும் வருத்தத்திற்குக் காரணமாகலாம். மனிதன் இடைவிடாமல் சந்திக்கும் ஏமாற்றங்களை மட்டும் விவிலியம் அவனது துயரங்களுக்குக் காரணமாகச் சொல்லவில்லை. அவனது எல்லாத் துயரங்களுக்கும் பாவமே காரணம் எனத்தெளிவாக்குகிறது. மீட்பரில்தான் இதற்குச் சரியான குணம் கிடைக்கும். ஏனெனில், வருத்தம் பாவத்திலிருந்து வருகிறது. மகிழ்ச்சியோ மீட்பிலிருந்து வருகிறது (சங் 51:14).

II. பழைய ஏற்பாடு:

1. நல்லுணர்வும், வருத்தமும்: ஆண்டவர் மேல் வைத்திருக்கும் பயமே ஒருவனுக்கு மகிழ்ச்சியான வாழ்வைத் தரமுடியும் (சீரா 1:12). நோயை விட வருத்தமே ஒருவரின் இதயத்தை நோகடிக்கிறது; ஒருவனின் ஆவியைக் கொல்கிறது; எலும்பைக் காய வைக்கிறது (பழ 18:14; 12:25; 15:13; 17:22). அதனால்தான் ஞானிகள் அறிவுரை கூறுகிறார்கள். ''மோசமான நினைவுகளுக்கு இடம் கொடாதீர்'' (சீரா 30:21). பலரை உருக்குலைத்த துயரத்தை விரட்டு. ஏனெனில், அது மனிதரை வயது வருமுன்னே கிழவர்களாக்குகிறது (30:22). அழுவாரோடு அழுவது சரிதான். ஆனால், நமக்கு நெருக்கமானவர்கள் இறந்து விட்டார்கள் என்பதற்காக அளவுக்கு மீறி புலம்பத் தேவையில்லை. திராட்சைரசம் பல துன்ப துயரங்களில் ஆறுதலாய் இருக்கிறது (பழ 31:6; திருவுரை 9:7; 10:9). எல்லா மகிழ்ச்சியும் விரைவில் துயரமாக முடியும் (பழ 14:13); கண்ணீர் விட ஒரு நேரமுண்டென்றால், சிரிப்பதற்கும் ஒரு நேரமுண்டு என்பதை மறவாதே (திருவுரை 3:4). இந்த அறிவுரைகள் எல்லாம் எழுச்சியூட்டாதவைகளானாலும் வருத்தத்திற்குள் தன்னையே புகுத்திக் கொள்ளும் நிலையைக் கண்டுணர உதவுகின்றன. இந்தச் சொற்கள் இன்னும் சிறப்பான, உயர்ந்த வெளிப்பாட்டுக்கு நம்மை அழைத்துச் செல்கின்றன.

2. வருத்தம் பாவத்தின் அடையாளம்: ஒரு வகையில் பார்த்தால் இஸ்ராயேலரின் உடன்படிக்கை வரலாறு அவர்கட்கு ஒரு பாடம் கற்பித்துள்ளது. அஃது என்னவென்றால் அவர்கள் பெற்ற தண்டனையால் அவர்கள் வருத்தம் அடைந்தனர். ஏன் வருத்தம் அடைந்தனர்? அவர்கள் கடவுளை விட்டுப் பிரிந்து வந்ததால் வருத்தம் அடைந்தனர். சீனாய் மலையடிவாரத்தில் அவர்கள் சீனாயில் நிகழ்த்திய சிலை வழிபாட்டினால் கடவுள் இனிமேல் ஆட் தன்மையில் அவர்களைத் தொடரப் போவதில்லை என்ற தண்டனையைச் சுமத்துகிறார். துயரத்தின், புலம்பலின் அடையாளமாக மகிழ்ச்சியின் ஆடைகளைக் களைந்தெறியுமாறு கட்டளையிடப்படுகிறது (யாத் 33:4). பாவம், கடவுளிடமிருந்து பிரிதலும், வருத்தத்தைக் கொண்டுவரும் தண்டனையும் ஆகும். இதே அமைப்பை அவர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் புகும்போதும் (யோசு 7:6தொ.11 தொ), நீதிபதிகள் காலத்திலும் (நீதி 2) அவர்கள் அனுபவிக்கின்றனர். இறைவாக்கினர்கள் இந்த வருத்தத்தை இனம் கண்டு பாவம் செய்தவர்களிடம் இருப்பது போலியான அமைதியே என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. அவர்களோ துயரத்தில் ஆழ்ந்து அந்த

அனுபவத்திலிருந்து போதிக்கின்றனர். எரேமியா இதற்கு ஒரு மாதிரியாகத் திகழ்கிறார். அவரது துயரக்குரல்கள் மக்களுடைய துயரத்தின் பிரதிபலிப்பு எனலாம். போர் நெருங்குவதற்கு முன் (எரே 4:19), பஞ்சம் வருமுன் (8:18), அவலம் நேருமுன் (9:1) அவர் பாவம் செய்த மக்களின் மனம் வருந்தும் மனச்சாட்சியாக இருக்கிறார் (9:18; 13:17; 14:17). அவர் மறைந்து வாழ்கிறார். இதில் மக்களுக்கு ஒரு சாட்சியாகத் திகழ்கிறார் (15:17; 16:8). எசேக்கியேல் இதையே, ஆனால் சற்று எதிர்முறையான விதத்தில், செய்கிறார். அதாவது, அவர் தன் வாழ்வின் மகிழ்ச்சியான மனைவிக்காக அழக்கூடாது. அவ்வளவு தூரம் இஸ்ராயேலின் உள்ளம் பாறையாக இறுகிப் போயிருந்தது (யாத் 24:15-24).

3. இறைவன் எதிர்பார்க்கும் வருத்தம்: உண்மையான மனவருத்தத்தை உறுதிப்படுத்துவது இறைவாக்குத் தூதாகும். புலம்பலிலும் சைகைகளிலும் வருத்தம் அழுத்தமாக வெளிப்படுத்தப்படுகிறது. நோன்பிலும் (நீதி 20:26), கிழிந்த ஆடைகளிலும் (யோபு 2:12), சாம்பல், சாக்குத் துணிகளிலும் (2 சாமு 12:16; 1 அர 20:31; புல 2:10; யோவே 1:13; நெகே 9:1; தானி 9:3), அழுகையிலும், புலம்பல்களிலும் (எசா 22:12; புல 2:18; எசே 27:30; எஸ்த 4:3) ஒருவர் கொண்டிருக்கும் வருத்தம் எவ்வளவு ஆழமானது என்பது தெரியவருகிறது. ஆனால், இந்தப் பாவமன்னிப்பு வழிபாடுகள் எல்லாம் இறைவாக்கினர்களின் குற்றஞ்சாட்டுதலுக்குத் தகுதி பெற்றதாகிறது (ஓசே 6:1-6; எசே 3:21-4:22). ஒருவர் வருத்தம் அடைவது தான் இழந்த நலன்களுக்காக என்பதை விட ஆண்டவரை விட்டுத் தொலைவில் இருக்கிறோமே என்பதற்காக என்றால் சிறப்பாக இருக்கும் (ஓசே 7:14). சட்டத்திற்குப் பிரமாணிக்கமாய் இருப்பதற்குப் பதிலாக ஒருவர் வெறும் கண்ணீர் வடித்தல் மட்டும் போதாது (மலா 2:13). தபசு முயற்சிகளில் உண்மையான மனமாற்றம் வெளிப்பட வேண்டும். ''ஏனெனில், உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயங்களைக் கிழித்துக்கொள்ளுங்கள்'' என்று கூறப்பட்டுள்ளது (யோவே 2:12). இந்த நிபந்தனையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட செயல்கள் பொருளுள்ளவையாகின்றன (நெகே 9:6-37; எஸ் 9:6.15; தானி 9:4-19;பாரூ 1:15-3:8; எசா 63:7-64:11). கண்ணீர் இறைவனின் பரிவிரக்கத்தை நம்பால் ஈர்க்கிறது (புல 1:2; 2:11.18; சங் 6:7). வருத்தம் பாவியின் நிலையை ஏற்றுக் கொள்வதாகும் (சங் 56:9).

4. வருத்தமும் நம்பிக்கையும்: இதயம் நொறுங்கிப் போனாலும் நம்பிக்கை அழிக்கப்படுவதில்லை; அதற்கு மாறாக, பாவி வாழ்வதையே விரும்பும் மீட்பரைக் கூப்பிடுகிறது (எசே 18:23). நாடு கடத்தப்பட்டு அன்னியராய் வேற்று நாட்டில் இருக்கும் போது தங்கள் பாவத்திற்கு இது சரியான தண்டனைதான் என்று உணர்ந்த அவர்களிடம், தங்கள் வருத்தம், துயரம் எல்லாம் என்றென்றைக்கும் இல்லாமல் போய் விடும் என்ற நம்பிக்கை தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. ராகேல் தன் குழந்தைகளுக்காக அழுகிறாள். அவளைத் தேற்றுவார் யாருமில்லை. ஆனால், கடவுள் இடையிடுகிறார், ''நீ அழுகையை நிறுத்து, கண்ணீர் வடிக்காதே'' (எரே 31:15). புலம்பல்களின் இறைவாக்கினர் ஆறுதல் அளிக்கும் தூதராகி நம்பிக்கையையும் அறிவிக்கிறார். ''அவர்கள் அழுகையோடு சென்றனர்... ஆறுதல் அளித்து அவர்களை அழைத்து வருவேன்... அவர்களுடைய அழுகையை நான் மகிழ்ச்சியாக மாற்றுவேன். அவர்களுக்கு ஆறுதல் அளிப்பேன். துன்பத்திற்குப் பதிலாக, இன்பத்தை அருள்வேன்'' (எரே 31:8.12). இவ்வாறு ஒரு நிலையில் துயரத்தையும், வருத்தத்தையும் கொடுக்கும் செய்தியையே அறிவித்துக் கொண்டிருந்த இறைவாக்கினர்கள், அவற்றையெல்லாம் இறைவன் மகிழ்ச்சியாக மாற்றுவார் எனும் நம்பிக்கையைத் தந்து இஸ்ராயேலரைத் தேற்றுவதைப் பார்க்கிறோம் (எசா 40-55; 35:10; 57:18; 60:20; 61:2தொ; 65:14; 66:10.19; சங் 126:5; காண்க.

பாரு 4:23; தோபி 13:14; எசா 24:7-11; 25:8). இதுதான் பழைய ஏற்பாட்டின் முடிவான சொல்லன்று. திருவெளிப்பாட்டு நூலில் தோன்றும் இந்த விண்ணகக்காட்சி (*திருவெளி 21:4*), முடிவில்லா மகிழ்ச்சிக்கு இட்டுச்செல்லும் பாதையின் துன்பமிக்க பாதையின் உண்மையை மறைப்பதில்லை. நகரின் மத்தியில் மகிழ்ச்சியின் வற்றா நிறைவளமுடைய ஊற்று, திறந்து விடப் படுமாறு தாங்கள் ''ஊடுருவக்குத்தியவருக் காகப்'' (*செக் 12:107*) புலம்பும் நாள் நிகழ வேண்டும்.

III. **புதிய ஏற்பாடு:**

1. இயேசுவின் (துயரம்) வருத்தம்: உல கின் ப்ாவங்களை ஏற்றுக்கொண்டவர், மனி தனது வரையற்ற துன்பத்தால் அமிழ்த்தப் பட்டார். ஆனால், ஒருபோதும் முழுவதும் நொறுக்கப்படவில்லை. இறுகிப்போன உள்ளத்துடனிருந்த பரிசேயர்களின் நிலையைப் பார்த்துப் பெரிதும் வருத்த மடைந்தார் இயேசு (*மாற் 3:5*). எருசலேம் தனக்கு வரும் அழிவை உணர்ந்து கொள்ள வில்லையே என்று மனம் வருந்துகிறார் (*லூக் 19:14*). தேர்ந்து கொள்ளப்பெற்ற மக்களின் நிலையை நினைத்து வருந்திய அவர், தன் நண்பர் இலாசர் இறந்து போனதைக் கண்டு கண்ணீர் விடுகிறார் (*யோவா 11:35*). யூதர்கள் எண்ணியதுபோல் இதுவெறும் மனித நட்பன்று (*11:36*). இலாசரிடம் அவர் கொண்ட அன்பு தந்தை யிடம் இருந்துவந்த நட்பு (*15:9*). ஆகவே, அவர் மீண்டும் உள்ளம் குமுறினார் (*11:38*). அவர் தேம்பி அழுதது சாவு என்ற உண்மை எவ்வளவு அதிர்ச்சிக்குரியது என்பதை உணர்த்துகிறது.

சாவைச் சந்தித்தபோது மட்டுமன்று, அதை நினைத்தபோதே அவருடைய உள் ளம் சாவுக்கு ஏதுவான மனவருத்தம் அடைந்தது (*மத் 26:37தொ*). இது சாவைப் போன்றதுதானே. ஆனால், சாவைச் சந்தித்த அனைவரது கண்ணீரையும் தனது செபத் தில் ஒன்றாக இணைத்து அவர் தந்தையிடம் ஒப்படைத்தபோது அதைத் தந்தை கேட்டு அவர் குரலுக்குச் செவி மடுத்தார் (*எபி 5:7*). சிலுவையில் தொங்கும்போது தான் தந்தையினால் கைவிடப்பட்டு இறப்பதாக எண்ணும்போது கூட, துன்புறுத்தப்பட்ட நீதிமான் பாடும் நம்பிக்கையின் சங்கீதத் தைத்தான் பாடுகிறார் (*மத் 27:46 இணை*). தன்னைக் கைவிட்டவரிடமே தன்னை ஒப் படைப்பதாக லூக்கா இந்த நிகழ்ச்சியை விளக்குகிறார் (*லூக் 23:46*). இவ்வாறு பாவமற்ற அவர் தன்னையே வருத்தத் திற்குக் கையளிப்பதால் வருத்தத்தை வெல் கிறார்.

2. அழுபவர்களே, நீங்கள் பேறு பெற் றோர் (லூக் 6:21): துன்பத்தின் ஆழத்தை அனுபவித்தவர், துன்பம் என்ற அளவில் அல்லாமல் அவரது மீட்பு மகிழ்ச்சியோடு இணைந்த துன்பத்தைப் பேறுடையதாக முன்னதாகவே அறிவிக்கிறார். பலவகை வருத்தங்கள் உண்டு. ''கடவுளின் திருவுளப் படி ஏற்கப்படும் துயரம், மீட்பைத்தரும் மனமாற்றத்தை விளைவிக்கிறது. அதற்காக மனம் வருந்துவதற்கு இடமே இல்லை. ஆனால், இவ்வுலகுக்கடுத்த துயரமோ, சாவையே கொணர்கிறது'' (*2 கொரி 7:10*). பவுலின் இந்தக் கூற்று பழக்கமான எடுத் துக்காட்டுகளால் விளக்கப்படுகிறது. சான் றாக ஓர் இளைஞன் இயேசுவை விட, தன் செல்வமே பெரிதென நினைத்ததால் வருத்தத்துடன் செல்கிறான் (*மத் 19:22*). அதனால்தான் செல்வந்தர்கட்கு முடிவில் லாத சாவுதான் பரிசு என யாக்கோபு கண்டனம் செய்வதற்கு (*யாக் 5:1*), மேலே கூறிய கருத்து முன்னோடியாக உள்ளது. இயேசுவின் சீடர்கள் துக்கத்தாலும் மிகுந்த மன வருத்தத்தாலும் கெத்சமனித் தோட்டத் தில் தங்கள் குருவை விட்டு ஓடிப் போவதையும் நினைத்துப் பார்க்க வேண் டும் (*லூக் 22:45*). யூதாசைப் பொருத்தவரை யில் துரோகம் அவனை இயேசுவிடமிருந்து பிரிக்கிறது. அவனும் நம்பிக்கை இழக்கி றான் (*மத் 26:22*). பேதுரு மனம் வருந்தி அழுகிறார். ஏனெனில், அவர் தன் தலை வரையே மறுதலித்து விட்டார் (*மத் 26:75*). எம்மாவுக்குச் செல்லும் சீடர்கள் தங்கள் குரு தங்களைவிட்டுச் சென்றதை நினைத்து

வருத்தத்தோடு பேசிச் செல்கின்றனர் (லூக் 24:17). மரியாள் தன் ஆண்டவரை யாரோ எடுத்துச் சென்று விட்டார்கள் என்பதை நினைத்து அழுகிறாள் (யோவா 20:11). இங்கு இரண்டு வகையான வருத்தத்தைப் பிரித்துக்காட்டுவது இயேசுவின் மீது வைத்த அன்புதான். இயேசுவிடம் ஒன்று சேர்ப்பதற்காகத் தன்னை உலகிலிருந்து பிரித்து வைக்கும் வருத்தத்தைப் பாவி அனுபவிக்க வேண்டும். இயேசுவுக்குத் தன்னையே அர்ப்பணிக்கும் ஒருவன் அவரைப் பிரிவதைத் தவிர வேறு எந்தத் துயரத்தையும் உணரமாட்டான்.

3. மகிழ்ச்சி வருத்தத்திலிருந்து பிறப்பது தான்: எட்டுப்பேறுகளில் ஒன்று அழுபவர் கட்கு ஆறுதல் கூறுகிறது. ஆயினும், மணமகன் அவர்களிடமிருந்து எடுக்கப் படும்போது அவர்கள் அழுவார்கள் என இயேசு குறிப்பிடுகிறார் (மத் 9:15). இறுதி இரவுணவிற்குப் பின் இயேசு ஆற்றிய உரையில் வருத்தத்தின் முழுமையான பரி மாணம் வெளிப்படுகிறது. ராகேல் மீண் டும் தன் குழந்தைகளுக்காக அழுதது இயேசுவினால்தான் (மத் 2:18). தனது தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற் காக, தன் தாயின் வருத்தத்தை அதிகரித் தைதைப் பற்றி அவர் பயப்படவில்லை (லூக் 2:48 இணை). இறுதி இரவுணவின்போது அவரது பிரிவு வருத்தத்தை விளைவிக்கும் என்பதை அவர் மறுக்கவில்லை. இப்படி யில்லையென்றால், அவர் இல்லாத வாழ் வும் இறப்பாகும் என்ற உண்மையைக் காட்டுபவராக இருக்கமாட்டார். அவ ரது மறைவு உலகிற்கு மகிழ்ச்சி தரும் என்றும் அவர் அறிவார் (யோவா 16:20). எனவேதான் ஒரு புதிய உலகம் பிறப்பதை (எசா 26:17; 66:7-14; உரோ 8:22), ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய் முத லில் துன்புற்றாலும் பிறகு உலகிற்கு ஒரு புதிய மனிதனைத் தருகிறோம் என்று மகிழ்ச்சியடைவாள் என்பதோடு ஒப் பிட்டுக் கூறுகிறார் (யோவா 16:21). இவ் வாறு உங்கள் வருத்தமெல்லாம் மகிழ்ச்சி யாக மாறும் என்கிறார் (16:20). வருத்தம் முடிந்துவிட்டது. இதைவிட மேலாக, அது மகிழ்ச்சியாக மாறிவிட்டது.

இதற்குப் பலியிடப்பட்டதுபோல் காணப்பட்ட விண்ணகச் செம்மறியை எப் போதும் குறிக்குக் காட்டும் காயங்களில் ஒரு எடுத்துக்காட்டுக் காணப்படும் (திரு வெளி 5:6). இனி, வருத்தம் நிலையான மகிழ்ச்சியாக மாறுகிறது (யோவா 16:22). ஏனெனில், அது சாவின் வாயில்களுக்கு அப்பால் நிமிர்ந்து நிற்பவரிடமிருந்து வரு கிறது. இந்த மகிழ்ச்சி, மனக்குழப்பத்திலி ருந்தும் அச்சத்திலிருந்தும் (14:27), வேத னையிலிருந்தும் (16:33) பொங்கி எழுகிறது. இயேசுவின் சீடர்கள் இனிமேல் வருத்தம் கொள்ளார்; திக்கற்றவர்களாக விடப்பட்ட வர் போல் அவர்கள் தனிமையில் வருந்தார் (14:18); துன்புறுத்தும் உலகிற்குக் கையளிக் கப்பட மாட்டார் (16:2 தொ). உயிர்த்த கிறிஸ்துவே அவர்கள் மேல் முழுமையான மகிழ்ச்சியைப்பொழிவார் (17:13; 20:20).

இனி,வேதனைகளோ (எபி 12:5-11; 1 பேதுரு 1:6தொ; 2:19), இறந்துபோன சகோதரர்களிடமிருந்து பிரிவோ (1 தெச 4:13), அவிசுவாசிகளிடமிருந்தான பிரிவு கூட (உரோ 9:2), விசுவாசியின் மகிழ்ச் சியை அடக்கி ஒடுக்கி விடவோ, அவரை இறை அன்பிலிருந்து பிரிக்கவோ முடியாது (8:39). வருத்தத்தில் இருப்பவர்கள்போல் தோன்றினாலும் இயேசுவின் சீடர்கள் எப் போதும் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர் (2 கொரி 6:10); இந்நிலையிலும் அடக்கமாக வாழ்கின்றனர்; ஆயினும், தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை எப்போதும் ஊடுருவும் விண்ணக மகிழ்ச்சியை அறிவர். அவர்க ளுடைய கண்ணீரனைத்தையும் துடைக்க (திருவெளி 7:17; 21:4), இறைவன் அவர்க ளோடு என்றும் இருப்பார்.

வலக்கரம் (RIGHT HAND)

வலம் என்பது, ஆற்றலின் அடையாள மான வலக்கரத்தையும், சலுகையின் அடை யாளமான வலப்பக்கத்தையும் குறிக்கிறது. பெரும்பாலும் இஃது அடையாளமாகப் பயன்படுகிறது.

வலக்கரம் இரு கரங்களில் திறமையுடையது என்பதால் மட்டுமன்று, பலமிக்கதும் ஆகும். இக்கரம் வாளை வீசக்கூடியது. ஆகவே, விவிலியம், வலிமைமிக்கது என்ற அளவில், வலக்கரத்திற்குச் சிறப்புப் பொருள் அளிக்கிறது (யோபு 40:10; சங் 45:4; காண்க.லூக் 6:6; அ.ப. 3:7). இஃது இறைவனின் ஆற்றலின் அடையாளமாகிறது. இறைவன் தமது வலக்கரத்தின் வலிய செயல்களால் தம்மை வெளிப்படுத்துகிறார்; எதிரிகளை அதிரடிக்கிறார்; மக்களை மீட்கிறார் (யாத் 15:6; சங் 20:7; 21:9). ஆகவே, சங்கீத ஆசிரியர் முன்னறிவித்தபடி(சங் 118:16), இயேசு இறந்தபின், ''கடவுளின் வல்லமையால் (வலக்கரத்தால்) உயர்த்தப்பட்டார்'' (அ.ப.2:33).

வலக்கரம் ஆசீர் அளிக்கும் கரமாகவே, தனிச்சிறப்பான திறமையுடையது (ஆதி 48:14; யாத் 29:20; எசே 21:22; காண்க. மத் 25:33; 27:29; திருவெளி 1:16-17). இதற்கு மாறாக, இடக்கரம் ஏமாற்றும் தன்மையுடையது; உயிரிழப்பில் கொண்டு விடக்கூடியது (நீதி 3:15.21; 20:16; 2 சாமு 20:9-10). முழுவலிமையின் அடையாளம் என்ற அளவில், வலக்கரப் பக்கம்தான் மனிதன் அச்சுறுத்தப்படுகிறான் (யோபு 30:12; சங் 9:7), அல்லது குற்றம் சாட்டப்படுகிறான் (செக் 3:1). அவனை மீட்பவன் பாதுகாக்க அப்பக்கத்தில்தான் நிற்க வேண்டும் (சங் 16:8; 109: 31; 121: 5; காண்க. அ.ப. 2:25). ஒருவனுடைய வலக்கரப் பக்கம் மதிப்பின், மேன்மையின் இடமாகும் (1 அர 2:19; சங் 45:9).

''கடவுளின் வலக்கரம்'' அவரது வலிய ஆற்றலை உருவகமாக உணர்த்துகிறது. அதனால் அவர் படைக்கிறார் (எசா 48:13), போர் புரிகிறார், தமது மக்களை மீட்கிறார் (உப 33:2; சங் 89:13; காண்க. யாத் 15:6-12; சங் 17:7; 18:35; 139:10). அது பின்வாங்கப்படுதல் தீர்ப்பையும், துர்ப்பேற்றையும் உணர்த்தும் (சங் 74:11; காண்க. 77:10; புல 2:3). அது தமது மக்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படலாம் (புல 2:4).

வலக்கரம் அதன் பக்கத்தில் இருப்பவர்களைப் பாதுகாக்கிறது. இறைவனின் வலக்கரப்பக்கந்தான், அவரது அன்பர்கள் முடிவில்லா இன்பத்தைச் சுவைப்பர் (சங் 16:1). அங்குதான் கடவுளுக்கு அருகில் மெசியா அரியணையில் அமர்த்தப்படுவார் (110:1). அ.ப. 2:33-இல் காணப்படும் மற்றொரு மொழிபெயர்ப்பின்படி இயேசு, ''கடவுளின் வலக்கரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார்.'' அவர் கடவுளின் வலிய கரத்தின் கருவியாக, ''வலப்பக்கம் இருக்கும் மனிதனாக'' (சங் 30:17) ஆகிறார். இதில் இறைவன் தம் வலிமையால் உறுதிப்படுத்திய இஸ்ராயேலின் அரசனைப் போலாகிறார். பழைய ஏற்பாட்டின் இந்த வாக்குறுதிகளை இயேசு உறுதிப்படுத்துகிறார், நிகழச் செய்கிறார். அரசனாக, உலகம் முழுவதின் நடுவராக வரும்போது மனுமகன் தம் தந்தையால் ஆசி பெற்றவர்களைத் தம் வலப்பக்கம் நிறுத்துவார் (மத் 25:31-34). 110-ஆம் சங்கீதத்திற்கேற்ப, வல்லவரின் வலப்புறத்தில் வீற்றிருந்து, வான மேகங்கள்மீது வருவதாக இயேசுவே உறுதியாகக் கூறுகிறார். இவ்வாறு நடுவராக அவர் தோன்றுவதை அவரது எதிரிகள் காணும் முன்பே, அங்கு இயேசு சாட்சியாக நிற்பதை ஸ்தேவான் காண்கிறார் (அ.ப. 7:55).

உயர்த்தப்பட்டு, கடவுளின் வலப்பக்கத்தில் மாட்சியோடும் வல்லமையோடும் ஆட்சிபுரிவதை எடுத்துக்கூற, புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலிக்க சாட்சியம் சங் 110-ஐ அடிக்கடி எடுத்துக்காட்டுகிறது (மாற் 12:36; அ.ப. 2:34-35; எபி 1:13; காண்க. அ.ப. 5:31; உரோ 8:34; எபே 1:20; கொலோ 3:1; எபி 8:1; 10:12; 12:2; 1 பேதுரு 3:22).

வலிப்பு (EPILEPSY)

நடு நரம்பு அமைப்பின் சீர்குலைவு. அப்போது நினைவிழப்பு, வலிப்பு முதலியவை உண்டாகும். முற்காலத்தில் இது ''விழும் வியாதி'' என்று அழைக்கப்பட்டது. இதன் காரணம் தெளிவாக இல்லை. இத்தகைய வலிப்பு குழந்தைப் பருவத்திலும், வாலிபப்பருவத்திலும் ஆரம்பமாகும். பெருமூளைப் பகுதியில் உண்டாகும்

நெறிபிறழ்ந்த நிலையில் இஃது ஏற் படுகிறது.

முதல் நிலையாக ஏற்படுகின்ற வலிப் புக்கு முன் அறிகுறி ஒன்று தோன்றும். இந்த அறிகுறி கேட்கக்கூடிய, முகரக்கூடிய, சுவைக்கக்கூடிய அல்லது காணக்கூடிய உணர்வாக இருக்கும். சில வேளைகளில் அதிக வலிப்பினால் உணர்வு இழந்துவிடு வதும் உண்டு. இந்நோய் சிறிதே உடைய வர்களுக்கு வலிப்பு ஏதுமின்றி உணர் விழப்பு மட்டும் ஏற்படலாம். இந்நோய் அதிகம் உள்ளவர்களுக்கு உணர்விழப்பும், தசைநார் வளைவும், முதுகு வளைவும், வலிப்பும், சிறுநீர் அடக்க முடியாமையும் ஏற்படுகிறது.

இயேசு குணப்படுத்திய வலிப்பு நோயுடைய பையன் (மத் 17:14-18; மாற் 9:14-27; லூக் 9:37-42) அனேகமாக அறிவு வளர்ச்சி நின்றுவிட்ட நிலையுடையவனாக இருக்கலாம். இது முதல்நிலையாக ஏற்படு கின்ற வலிப்பு நோய் என்று மாற்கு விவரிக்கிறார். லூக்கா இப்போகிராத்து பயன்படுத்திய மருத்துவச் சொற்களைப் பயன்படுத்துகிறார். மத்தேயு நிலவால் பாதிக்கப்படுதல் என்ற பொருளுடைய சொல்லைப் பயன்படுத்துகிறார். நிலவுக் கும், வலிப்பு நோய்க்கும் தொடர்பு உண்டு என்ற முற்கால நம்பிக்கையை இது பிரதி பலிக்கிறது. இயேசு வலிப்பு நோயுற்ற மற்றவர்களையும் குணப்படுத்தினார் (மத் 4:24).

வலிமை (STRENGTH)

I. விவிலியம் முழுவதும் வலிமையைப் பற்றிப் பேசுகிறது; கனவு காண்கிறது. ஆனால், அதே சமயம் வலியவர் வீழ்வார், தாழ்ந்தோர் உயர்த்தப்படுவார் என்பதையும் அது கூறுகிறது. இந்தப் போராட்டம் அல்லது முரண்பாடு சிலுவை பற்றிய போதகம் வரை தொடர்கிறது. அங்கு, கடவுளின் வலிமையின்மை அல்லது பல வீனம் மனிதனின் வலிமையை விட வலியதாகக் கருதப்படுகிறது (1 கொரி 1:25). அதனால்தான் சிறுவயது முதல் போர்ப்பயிற்சி பெற்று வாளோடும் ஈட்டி யோடும் வந்த கோலியாத்து, வெறும் கவணோடும் ஐந்து கூழாங்கற்களோடும் யாவேயின் பெயரால் வந்த சாதாரணச் சிறுவனாகிய தாவீதினால் வீழ்த்தப்பட் டான் (1 சாமு 17:45). ''வன்மையானதை நாணச் செய்ய, வலுவற்றது (மடமை) என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்து கொண்டார்'' (1 கொரி 1:27) எனக் கடவுளின் வழிமுறைகளைப் பவுல் விளக் குகிறார்.

இஃது ஒருவரின் பலவீனத்தை நியாயப் படுத்துவதற்காக அன்று, மாறாக கடவுளின் வலிமையை மகிமைப்படுத்துவதற்கும் விசு வாசியின் மீட்பை உறுதிப்படுத்துவதற்காக வும்தான் (உரோ 1:16). இதில் ஒரு மனிதன் இறைவனில் காணும் வலிமையை இறைவ னின்றி வாழ்பவனுடைய வலுவின்மைக்கு எதிராக்குகிறார். இறைவனோடு இருப்ப வன் ஆயிரம் பேரோடு சண்டையிட்டு வெற்றி பெறுவான் (யோசு 23:10; லேவி 26:8); கடவுள் இல்லாமல், அவன் ஓர் உதிர்ந்த இலையின் ஒலிக்கு அஞ்சி ஓடும் மனிதனாகிறான் (லேவி 26:36). ''எனக்கு உறுதியூட்டும் இயேசு கிறிஸ்துவில் எதை யும் செய்ய முடியும்'' என பவுல் அறிக்கை யிடுகிறார் (பிலி4:13). ''கடவுளின் துணை யினால் வீரத்துடன் போரிடுவோம்'' என்று சங்கீத ஆசிரியர் பாடுகிறார் (சங் 60:12).

II. **இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட வரின் வலிமை:**

1. **பிறரின் மரியாதையை வரவழைக்கும் வலிமை:** இஸ்ராயேல் தனக்கு வலிமை வேண்டும் என கனவு கண்டது. ஏனெனில், அதன் வழியாகத்தான் உலகின் கவனத்தைக் கவரமுடியும் என அது நம்பியது. ''எப்பி ராத்து மரபினில் சிறந்து நீர் வாழ்க! பெத்லகேமில் நீர் புகழுடன் திகழ்க!'' என்று போவாசை வாழ்த்துகின்றனர் (ரூத் 4:11). பிறரது கவனத்தை ஈர்க்கும் வலிமை ஒருவனது கை வலிமையாகும் (சங் 76:5தொ); இடையின் வலிமை (93:1), வளைந்து கொடுக்காத கால்கள், போராட் டத்திலும் தளராத உறுதியான இதயம்

(57:8) ஆகியவை சிறந்ததாகக் கருதப்படு கின்றன. ஒருவன் கொண்டிருக்கும் உயி ராற்றலும், உடல் நலமும், இனப்பெருக்க ஆற்றலும் (ஆதி 49:3) அவனது வலிமை யாகக் கருதப்படுகின்றன. பொருளாதார வளமும் வலிமையாக எண்ணப்பட்டது. பிறருக்குக் கப்பம் கட்டியும், பிறரிட மிருந்து பொருட்கள் வாங்கியும் இஸ்ரா யேல் இவ்வளத்தில் வலிமையற்றதாகப் போய்விட்டது (ஒசே 7:9; எசா 30:6). தங்கள் செல்வத்தை வைத்துத் தீயவர்கள் தங்களை வலிமையுள்ளவர்களாகக் காட்டிக் கொண்டால் அஃது இழிவானதாகும் (சங் 49:7.17). இதற்கு மாறாக, மாண்புமிகு நற்பண்புகள் புகழுக்குரியதாகும் (பழ 31:10-31).

வலிமை புறநிலையை உறுதி கூறுவ தால், வலிமையாய் இருத்தல் என்பது (மற்றொன்றைவிட) வலிமையாக இருப்ப தாகும். வலிமையுள்ளவன் எதிரியைப் பாறையின், வைரத்தின் (எசே 3:9) மற்றும் வெண்கலத்தின் (யோபு 6:12) உறுதியோடு எதிர்க்கிறான் (எசே 3:9). பாறையின் எதிர்ப்புச் சக்தி மாபெரும் அலைகளையும் தாங்கி அசையாது நிற்கிறது (சங் 46:3தொ). உள்ளே போக முடியாத கோட்டைச் சுவர் (எசா 26:5), அணுக முடியாத உச்சியில் அமைந்திருக்கும் குகை (ஒப 3) ஆகியவற் றின் எதிர்ப்புச் சக்தி சிறப்பானது. வலிமை யுள்ளவன் தலை நிமிர்ந்து நிற்கிறான்; வலுவற்றவனோ தடுக்கி விழுகிறான்; இறந் தவன் போலக் கீழே கிடக்கிறான். ''யாவே என் கற்பாறை, என்கோட்டை, புகலிடம் அளிக்கும் மலை, என் கேடயம், என் அடைக்கலம்'' (சங் 18:2; 62:2).

இத்தகைய அசைக்க முடியா வலிமை எப்பொழுதும் தற்காக்கும் ஒன்றாகவே இருக்க முடியாது. ஏனெனில், உயிருக்கான போராட்டத்தில் யாராவது ஒருவர் வெற்றி பெற வேண்டும்; மற்றவர் தோல்வியுற வேண்டும். இதற்கு இடைப்பட்ட நிலை ஒன்று இருக்க முடியாது. யாவேயினால் அபிடேகம் பண்ணப்பட்டவர் ஒன்றித்த உலகின் முன் தலைநிமிர்ந்து நிற்கிறார். அவன் வலிமையினால் அவனது எதிரிகள் அனைவரும் கீழ்ப்படுத்தப்படும்படி யாவே பார்த்துக் கொள்கிறார் (சங் 18:48). ஒரு வரும் அவனிடமிருந்து தப்ப முடியாது (சங் 21:9). ஏனெனில், அரச சங்கீதங்களின் படி பார்க்கும்பொழுது முழுமையான, உறுதியான வெற்றியின்றி உண்மையான அமைதி இல்லை என்ற உண்மை வெளிப் படுகிறது.

2. இறைப் பணியில் பெரும் வலிமை: தான் வலிமையுள்ளவளாய்த் திகழ்வதாய் இஸ்ராயேல் கனவு காண்பது கடவுளின் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்துடன் தான். அப்படியில்லையென்றால், கானான் நாட்டை யோசுவா வென்றிருக்க முடியுமா (யோசு 1:6)? அல்லது மீட்பைத் தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள் நெருங்கிச் சென்றி ருக்க முடியுமா (எசா 35:3)?

புதிய ஏற்பாட்டு இறையரசில் பங்கு பெறுவதற்கும் ஒருவனுக்குத் தேவையான வலிமை வேண்டும். ஆனால், இவ்வலிமை வேறொரு மட்டத்தைச் சேர்ந்ததாகும். ''அவருடைய மாட்சிமை மிக்க ஆற்றலுக் கேற்ப எந்த நிலையிலும் பொறுமையும் மன உறுதியும் கொண்டிருக்கும்படி, முழு வல்லமையாலும் வலுப்படுத்தப் பெறுவீர் கள்'' (கொலோ 1:11). கிறிஸ்தவர்கள் சோதனைகளையும், சவால்களையும் எதிர் கொண்டு வெற்றி கொள்ள அவர்கட்கு வலிமை தேவைப்படுகிறது. தந்தையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கும் உயிர்த்த இயேசுவின் வலிமையில் கிறிஸ்தவன் பங்கு பெறுவதால் (எபே 1:19) அவன் உலகை வெற்றி கொள்பவனாகிறான் (1 யோவா 5:5). கிறிஸ்துவின் வலிமை, அவர்களுள்ளும் (2:4; 5:8), அவர்களைச் சுற்றியுள்ள, தீய சக்தி அனைத்தின் மேலும் (மாற் 16:17 தொ) அவர்களுக்கு ஆற்றல் அளிக்கிறது. ஆண்டவரின் ஆவி நாம் உயிர்த்தெழுதலுக்குரிய வலிமையாக நம் மில் இருக்கிறார் (பிலி 3:10). நம்மில் இருக்கும் உள்ளார்ந்த மனிதனை அது வலிமைப்படுத்துகிறது (எபே 3:16). இவ் வாறு அவரில் நாம் முழுமை பெறுவதற்கு இட்டுச் செல்கிறது (3:19).

III. ***பலவீனத்தில் வலிமை:*** தன்னை மீட்கும் வலிமை மனிதனிடம் இல்லை. மாபெரும் படை அரசனுக்கு வெற்றி கொணர்வதில்லை. குதிரைப்படை தனக்கு வெற்றி கொண்டு வரும் என்று வீணாக நம்பிக்கை வைக்கிறான் (சங் 33:16). இவ்வாறு தமது வலிமையற்ற நிலையை ஏற்றுக்கொள்வது எல்லாச் செபங்களிலும் பொதுப்பண்பாக இருக்கிறது. தங்களை விட வலிமைமிக்க உலகைச் சந்திக்கும் சாதாரண மனிதர்கள் கடவுளின் வலிமையைத் தமது பக்கம் வைத்துக்கொள்ள முயல்கின்றனர். ஆனால், மனிதனின் நிலையை ஈடுசெய்ய ஆற்றல் மிக்க மாற்று உபாயத்தை விவிலியம் அளிக்கிறது. ஏனெனில், கடவுள்தான் மனிதனைத் தனது பணியில் அவர் விருப்பம்போல் ஈடுபடுத்துகிறார். மனிதனை அவர் வலிமையுள்ளவனாக்கினால், அஃது அவரது விருப்பத்தை நிறைவேற்றி அவரது திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத்தான் (சங் 41:10; 2 கொரி 13:8).

யாவேயிடமிருந்து பெற்ற வலிமை அல்லது கொடைகளால் இஸ்ராயேலர் செயல்பட்டனர். ஆனால்,. அதை உணர பல நேரங்களில் இஸ்ராயேலர் தவறி விடுகின்றனர்; அவரிடமிருந்து சுதந்தரமானவர்களாகக் கருதினர் (உப 8:17). அவராலும், அவரிலும்தான் ஒருவன் வலிமையுள்ளவனாக இருக்கிறான் என்பதைத் தெளிவாக உணர்த்த, இறைவன் சாதாரணத் தோற்றமுடைய, ஆனால் நிலையான இதயத்தையுடையவர்களைத் தமக்கெனத் தேர்ந்தெடுக்கிறார் (1 சாமு 16:7). சவுலைப்போல் உள்ளவர்களை அவர் தேர்ந்தெடுக்க விரும்பவில்லை (1 சாமு 10:23). சாதாரணத் தாழ்ச்சியான மனித சக்தியைத்தான் கடவுள் பயன்படுத்த விரும்புகிறார். ''உன்னுடன் இருக்கும் மக்கள் ஏராளமாக இருப்பதால் மிதியானியர்களை அவர்கள் கையில் ஒப்படைக்க மாட்டேன். இல்லையெனில், 'எம் கையே எம்மைக் காத்தது' என்று கூறி இஸ்ராயேல் மக்கள் எனக்கெதிராகத் தற்பெருமை கொள்வர்'' (நீதி 7:2; எசா 30;15 தொ). அதனால்தான் பவுலிடம் ஆண்டவர் ''நான் தரும் அருள் உனக்குப் போதும். ஏனெனில், மனித வலுவின்மையில்தான் என் வல்லமை சிறந்தோங்கும்'' (2 கொரி 12:9) என்று கூறுகிறார்.

அப்படியில்லையென்றால் கடவுளின் மகிமை வெளிப்பட வாய்ப்பே இல்லை. மனிதனால் இனி ஒன்றும் செய்யமுடியாது என்ற நிலையில் கடவுள் தலையிட்டு (எசா 29:4) அச்செயலை இறைவனால் மட்டுமே ஆனது என்று மிகத் தெளிவுபடுத்துகிறார். இயற்கை உண்மைகளில் பெரியது, சிறியது என்ற அமைப்பை அவர் பொருட்படுத்துவதில்லை. ''தலைவர்கள்மேல் இகழ்ச்சியைக் கொட்டுகிறார்'' (சங் 107:40). தூசியிலிருந்து தூக்கிய ஏழையைத் தம் வலப்புறத்தில் அமர்த்துகிறார் (113:7). அவர் தனது ஊழியன் உயர்த்தப்படுவதில் மகிமையடைகிறார். ஏனெனில், சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டவனாக தனது பலத்தை நம்பாமல், கடவுள் ஒருவரே தன்னை மீட்க வேண்டும் என்று அவரைச் சார்ந்திருப்பதால் அவன் மீண்டும் வெற்றி பெறுதலைக் கடவுள் மகிமையாகக் காண்கிறார். இந்த உண்மை கிறிஸ்துவின் உயிர்ப்பில் முழுமையாக வெளிப்படுகிறது. இந்த மறையுண்மை போதிக்கப்படும்பொழுது அது கடவுளின் வலிமை மிக்க செய்தியாக அமைகிறது (1 கொரி 1:18).

கிறிஸ்தவத் தாழ்ச்சி என்பது மரியாளின் பாடலில் வெளிப்படும் தாழ்ச்சியாக இருக்கிறது. அவள் தன்னை ஒரு பலவீனமான படைப்புப் பொருளாகவோ, பாவியாகவோ தாழ்த்திக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் தனது வலிமை முழுவதும் கடவுளிடமிருந்தே வருகிறது என்பதில் தெளிவாக இருக்கிறாள். ''இணையற்ற இவ்வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை; கடவுளுக்கே உரியது என்று விளங்கும்படி, இந்தச் செல்வத்தைக் கொண்டிருக்கும் நாங்கள் வெறும் மட்கலங்களாகவே இருக்கிறோம்'' (2 கொரி4:7).

வலிமை மிக்கோர் (MIGHTY MEN)

பொதுவாக, போர் வீரர்களுக்கும், வலிமை மிக்க மற்றவர்களுக்கும் இப் பட்டம் அளிக்கப்பட்டது (ஆதி 6:4; 10:8; 2 நாள் 32:3; காண்க.யோசு 1:14). இப் பட்டம் முதன்மையாக தாவீது அரசனின் கூலிப்படை வீரர்களுக்கும் கலைச்சொல் லாகப் பயன்பட்டுள்ளது (2 சாமு 17:8). இவர்களில் பலர் இஸ்ராயேலரைச் சேர்ந்த வர்கள். யோவாபுவின் தலைமையில் வலிமை மிக்க வீரர்கள் இருந்தனர் (2 சாமு 10:7). இவர்களில் கெரேத்தியர்கள், பெலேத்தியர்கள், பெனாயாவின் தலைமை யில் இருந்த அரச மெய்க்காப்பாளர் படை யினரும் அடங்குவர் (காண்க. 8:18; 1 அர 1:10.38). யோசேபுபசபேத்து, எலயாசர், சம்மாகு ஆகிய மூன்று வலிய வீரர்களைப் பற்றிக் கூறப்படுகிறது. இவர்கள் உயர் பட்ட அதிகாரியாக இருந்திருக்க வேண்டும் (2 சாமு 23:8; காண்க. 23:23). அதற்கு அடுத்து, வலிமை மிக்க முப்பது வீரர்களின் விவரிப்பு கொடுக்கப்படுகிறது. அவர்களின் தலைவர்களாகிய அபிசாய் மற்றும் பெனாயா ஆகியவர்களின் வீரச்செயல்கள் விவரிக்கப்படுகின்றன (23:18-39).

வலை (NET)

நார்கள் அல்லது நைலான் கயிறுகளால் பின்னப்பட்டு மீன், பறவை, விலங்கினங்க ளைப் பிடிப்பதற்குப் பயன்படும் கருவி.

1. துறைச்சொல்: வலை என்ற சொல் லால் பல எபிரேய, கிரேக்கத் துறைச்சொற் கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டில், ''கண்ணி'' (சங் 141:10); வலை (எசா 51:20); நீரின் மேல் வலைவீசுதல் (19:8); வலை (அப 1:15-16); வலை (திருவுரை 9:8); கண்ணி (எசே 12:13; 17:20; 32:3) என வருகின்றன. வலையோடு தொடர்புள்ள சொற்கள்: வலைப்பின்னல் (யாத் 27:4; 38:4); புதிய ஏற்பாட்டில், ''வலையை வீசுதல் (மத் 4:18); வாரி வரும் வலை (13:47) என்பன.

2. கயிற்று வலைகள்:

அ) கயிறும், நூலும் தயாரிப்பது பழங் காலத் திறமைகளில் ஒன்றாகக் கருதப் பட்டது. இத்தகைய பொருட்களைக் கொண்டு வலைகள் பின்னுவது இடைக்கற் காலத்திலிருந்தே இருந்திருக்கிறது. எகிப்து, மேற்காசிய நாடுகளின், விவிலியக் குறிப்பு கள் அனைத்தும் வலைகள் மக்களின் பழக்கத்திற்குப் பழங்காலத்தில் இருந்தே உபயோகப்படுத்தப்பட்டு வந்ததாய்க் கூறு வதால் இவைகள் விவிலிய ஆசிரியர் களுக்கு நன்கு தெரிந்து இருந்தது. இக்கயிறு களைச் செய்ய சணல், புளிச்சை, பனைநார், கோரை ஆகியவற்றைப் பயன்படுத்தினர். பழைய ஏற்பாட்டில் வலைக்கும் கண்ணிக் குமுள்ள வித்தியாசம் சரியாகக் காட்டப்பட வில்லை.

ஆ. மீன் பிடிக்கும் வலை: மீன் பிடிக்கும் வலைகளிலே இரண்டு வகை இருந்தன. ஒன்று கைவலை எனப்பட்டது. இதன் வாய் அகலமாகவும், கூம்புவடிவத்தில் சென்று முடிவடையும். அகலமான பகுதி தண்ணீருக்கு மேலும், கூம்பிய பகுதி தண்ணீருக்குள்ளும் இருக்கும் (மத் 4:18-21; மாற் 1:16-19). இரண்டாவது ''இழுவலை'' எனப்பட்டது. இவ்வலையின் தலைப்பகுதி மிதக்கின்ற தக்கைகளாலும், அடிப்பகுதி நீரில் மூழ்கக்கூடிய பொருட்களாலும் இணைக்கப்பட்டிருக்கும். இவை எப் போதுமே அரைவட்ட நிலையில் இழுத்து வரப்பட்டு, கரைக்குக் கொண்டு வரப்படும் (எசா 19:8; எசே 26:5; 47:10; 32:3; மத் 13:47). காண்க. மீன்பிடித்தல் (FISHING).

இ) பறவைகளைப் பிடிக்கும் வலை: பறவைகளைப் பிடிக்கும் வலைகள் பழ 1:17; ஓசே 7:11-12-இல் குறிப்பிடப் பட்டுள்ளன. அவைகளை எப்படிப் போடு கின்றார்கள் என்பதை நாம் ஊகித்துணர லாம். பழங்காலத்தில் எகிப்து மக்கள் சுருக்கு வலையைப் பயன்படுத்தி குளங்களி லுள்ள நீர்க்கோழிகளையும், சதுப்பு நிலங் களில் காணப்படுவனவற்றையும் பிடித் தார்கள்.

ஈ) காட்டு மிருகங்களைப் பிடிக்கும் வலை: தப்பித்து ஓடுகின்ற காட்டு விலங்கின் மீது வலைகளை வீசியும், புதரின் மறைவில் கட்டப்பட்டிருக்கும் வலைகளின் பக்கம் மிருகங்களைத் துரத்தியும் பிடித்தார்கள்

(எசா 51:20; எசே 19:8). காண்க. வேட்டை யாடுதல்.

3. உலோகத்தால் செய்யப்பட்ட வலைகளும் வெண்கலத்தால் செய்யப்பட்ட வலைப்பின்னல்களும் பலிபீடத்தைச் சுற்றி அமைக்கப்பட்டதாக, யாத் 27:4-5; 38:4-இல் பார்க்கின்றோம். யாத் 35:16; 38:5.30; 39:39-இல் வெண்கலச் சல்லடை அல்லது வலைப்பின்னல் என்று குறிக்கப் பட்டுள்ளது.

ஆலயத்தின் நுழைவாயிலில் நிற்கும் இரு தூண்களும் வெண்கலப் பின்னல்கள் சுற்றப் பட்டு அதன் போதிகையை அழகு செய்த தாக பழைய ஏற்பாட்டில் பார்க்கின்றோம் (1 அர 7:17-20).

4. உருவகத்தில் பயன்படுத்தப்படும் வலை: பழைய ஏற்பாட்டில் ''வலை'' என்பது பேச்சில் உருவகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அப்போது வலை இஸ்ராயேலரை ஆண்டவர் தண்டிப்பதைக் குறிக்கிறது. ''வலையில் நாங்கள் அகப்படச் செய்தீர்'' (சங் 66:11; புல 1:13; ஓசே 7:12). செதேக்கியாவையும் (எசே 12:13), யோபுவையும் (யோபு 19:6), எகிப்தையும் (எசே 32:3) தண்டித்ததைக் குறிக்கிறது. இஸ்ராயேல் விரித்த கண்ணியையும் (ஓசே 5:1), சங்கீத ஆசிரியரின் எதிரிகள் விரித்த வலையையும் (சங் 9:5; 31:4; 35:7-8; 57:6; 140:5; 141:10), மனிதன் மனிதனுக்கு விரித்த வலையையும் (சங் 10:9; மீக் 7:2; அப 1:15-17), தலைவிதி ஒத்த ஒன்றையும் (யோபு 18:8;சாட் 25:15; திருவுரை 9:12), தீய முடிவையும் (யோபு 18:8) என்று உருவகமாக விவிலியம் விவரிக்கிறது. பழ 29:5-இல் அளவு மீறிப் புகழ்கிறவனின் தந்திரமும், திருவுரை 7:26-இல் பெண்ணின் கவர்ச்சியும் சிக்க வைக்கும் வலைக்கு ஒப்பிடப்படுகின்றன.

வலைப்பின்னல் (NETWORK, GRATING)

1. வலைப்பின்னலைப் போன்ற ஒரு வெண்கலச் சல்லடை செய்து பலிபீடத்தின் பாதி உயரத்தில் வைக்கப்பட்டிருக்கும் (யாத் 27:4-5; 35:16; 38:4-5.30; 39:39).

2. சாலமோன் ஆலய வாயிலிலிருந்த இரு தூண்களை வெண்கல வலைப்பின்னல்கள் அழகு செய்தன (1 அர 7:18.20.41-42; 2 அர 25:17; 2 நாள் 4:12-13; எரே 52:22-23).

வல்லூறு (HAWK, HERON)

வல்லூறு என்ற சொல் பல பறவைகளின் எபிரேயப் பெயர்களை மொழிபெயர்க்கப் பயன்பட்டுள்ளது. இப்பறவையினத்தில் பல வகையுண்டு. இது நீண்ட மெல்லிய கழுத்தையும், நீண்ட கால்களையும் உடையது. இது நீர் நிலைகளையொட்டிக் காணப் படும்; மீனும் மற்ற நீர்வாழ் உயிரினங் களையும் உணவாகக் கொள்ளும். இது சில இடங்களில் கூகை என்றும், இராசாளி என்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட் டுள்ளது (லேவி 11:16.18; உப 14:18; யோபு 39:26; எசா 34:11).

இது லேவி 11:19; உப 14:18-இல் உண்ணத் தகாத தீட்டான பறவை என்று குறிக்கப்படுகிறது.

வவ் (VAU)

இஃது எபிரேய நெடுங்கணக்கில் ஆறாவது எழுத்து; அகர வரிசைச் சங்கீதம் 119-இல் ஆறாவது பகுதிக்குத் தலைப்பாக உள்ளது. இப்பகுதியின் ஒவ்வொரு வரியும் இந்த எழுத்தோடு தொடங்குகிறது.

வழி (WAY)

I. பழங்கால செமித்திய இனத்தவர் பெரும்பாலும் நாடோடிகள். ஆகலால், வழி, பாதை, சாலை என்பன அவர்களின் வாழ்வில் இன்றியமையாதவைகளாக இருந்தன. எனவே, அவர்களது சமய, ஒழுக்க நெறியிலும் இச்சொற்கள் மிகுதியாகப் பயன்பட்டன. இதன் காரணமாக இச்சொற்கள் எபிரேய மொழியில் பெருமளவில், பல பொருள்களில் கையாளப்பட்டுள்ளன.

II. **வழிகளும் வழியும்:**

1. ''வானத்தில் கழுகு மிதத்தல், கற்பாறை மேல் பாம்பு ஏறுதல், ஆண் மகனுக்குப் பெண் மீதுள்ள நாட்டம்'' (பழ 30:19) ஆகியவை ஒவ்வொன்றும் ஒரு வழியே. மாதவிடாய் ''பெண்ணின் வழியா

கும்'' (ஆதி 18:11; 31:35). பிறப்பும் இறப்பும் மண்ணில் தோன்றிய யாவர்க்கும் உரிய வழியாகும் (ஆதி 19:31; யோசு 23:14; 1 அர 2:2). மனித நடத்தையும் ஒரு வழி (1 அர 2:4; 8:25; 2 நாள் 6:16; சங் 119:1.9; யாக் 5:20) அல்லது வழிகளாகும் (யோபு 4:6; 13:15; 22:3; சங் 39:1; 119:5.26; எசே 16:47; அ.ப.14:16; 1 கொரி 4:17; யாக் 1:8). மனிதனுக்கு இரண்டு வழிகள் திறந்திருக்கின்றன. அ) நல்ல, நேரிய வழி (1 சாமு 12:23) அல்லது ஆண்டவரின் வழிகள் (ஆதி 18:19; சங் 18:21; 25:9). ஆ) தீய வழி (பழ 2:12; 8:13; எரே 18:11; எசே 3:18; யோனா 3:8.10; செக்1:4). இது பாவிகளின், பொல்லாதவர்களின் வழியாகும் (சங் 1:1.6). ஆண்டவரது வழிகளும் மனிதனுடையவைகளும் அடிப்படையிலேயே வேறுபட்டன (எசா 55:8-9). ஆண்டவருடைய வழிகள் நிறைவானவை (உப 32:4; 2 சாமு 22:31; சங் 18:30), நேர்மையானவை (ஓசே 14:10), நீதியானவை (தானி 4:34), உண்மையானவை (திருவெளி 15:3). மனிதனது வழிகள் நல்லவையாகவோ (1 அர 8:36; 2 நாள் 6:27; சங் 101:2.6; பழ 2:20; 29:27; எசா 26:7; மத் 21:32; உரோ 3:17; 1 கொரி 12:31; 2 பேதுரு 2:15.21), தீயவையாகவோ (ஆதி 6:12; எண் 22:32; நீதி 2:19; 1 அர 13:33;யோபு 22:15; சங் 36:4; பழ 4:14.19) இருக்கலாம்.

2. தீய வழிகளைத் தவிர்க்கவோ (சங் 119:101.104.128), பின்பற்றவோ (எசா 53:6; 57:17; 59:8; 65:2; 66:3; எரே 3:21) மனிதன் சுதந்தரம் கொண்டுள்ளான் (சங் 119:59; பழ 7:25; 21:29; 23:19). மனிதர்களும் நாடுகளும் நன்மைக்கோ, தீமைக்கோ தங்கள் வழிகளை மாற்றலாம் (எரே 18;எசே 18). ஒழுக்கப் பயிற்சி செயலாற்றல் மிக்கது (பழ 26:6). நல்லமாதிரி பின்பற்றப்படலாம் (1 அர 22:43; 2 அர 22:2; 2 நாள் 11:17; 17:3) அல்லது தீய மாதிரி பின்பற்றப்படலாம் (1 அர 15:26.34; 22:52; 2 அர 8:18.27; 16:3; 2 நாள் 22:3; பழ 16:29; எரே 10:2; எசே 23:13.31; 2 பேதுரு 2:15; யூதா 11), அன்றி பின்பற்றப்படாமல் தவிர்க்கப்படலாம் (1 சாமு 8:3.5; 2 நாள் 21:12). ஒருவர் தவறாக வழிநடத்தப்படலாம் (எசா 3:12).

3. ''இறைவனுடைய கண் மனிதரின் நடத்தை மேல் உள்ளது''. இறைவன் அவர்களைக் கவனிக்கிறார்; அவர்களது வழிகளை அறிகின்றார் (யோபு 24:23; 31:4; 34:21; சங் 119:168; 139:3; பழ 5:21; எரே 16:17). தோற்றத்திற்கு எவ்வாறாய் இருப்பினும் (சங் 37:7-8), ஒவ்வொருவருடைய வழிகளுக்கேற்பப் பலனளிக்கிறார் (1 அர 8:32.39; 2 நாள் 6:23; யோபு 34:11;சங் 146:9; பழ 14:14; எரே 4:18; 17:10; 32:10; எசே 7:3.27; 11:21; 16:43; 18:30; 22:31; 24:14; 33:20; 36:19; ஓசே 4:9; செக் 1:6; 3:7). இருப்பினும், இஸ்ராயேல் மனம் வருந்தித் திரும்ப வரும்போது, அதன் தீயவழிகளுக்கேற்ப அன்று, தமது பெயருக்காகவும் உடன்படிக்கைக்காகவும், அவர்களை நடத்துவார் (எசே 16:61; 20:43; 36:31-32). மனிதர் தங்களது தீயவழிமுறைகளையும் எண்ணங்களையும் விட்டுவிட்டு, மனந்திரும்பி வாழ்வதையே ஆண்டவர் விரும்புகிறார் (2 அர 17:13; 2 நாள் 7:14; எசா 55:7; எரே 7:3.5; 18:11; 25:5; 26:3.13; 35:15; எசே 18:23; 33:8; யோனா 3:8.10; செக் 1:4). இறைவன் தம் வழிகளை மனிதனுக்குப் போதிக்கவும், அவற்றில் அவனை நடத்தவும் எப்போதும் ஆயத்தமாக உள்ளார் (சங் 16:11; 23:3; 25:8-9.12; 27:11; 32:8; 86:11; 119: 27.29.33.35.37; 143:8; எசா 30:21; எரே 32:39; 42:3; மீக் 4:2). ஆண்டவருடைய வழியைப் பின்பற்றுவது என்பது மோசே சட்டத்தைக் கடைப்பிடிப்பதாகும் (யாத் 18:20; 32:8; உப 5:33; 8:6; 9:12; 10:12; 11:22; 19:9; 26:17; 28:9; 30:16; யோசு 22:5; சங் 18:21; 25:4; 51:13; 81:13; 95.10; 103:7; 119:1.3; எசா 2:3; 42:24; 58:2; எரே 7:23; மாற் 12:14; லூக் 20:21). மனிதனுக்குத் திறந்திருக்கும் இருவழிகளுள் ஒன்று வாழ்வுக்கும் அமைதிக்கும் இட்டுச் செல்கிறது (சங் 16:11; பழ 3:17; 4:18; 6:23; 8:32; 10:17.29; 11:5; 12:28; 13:6; 15:24; 16:7.17; எரே 21:8; மத் 7:13-14;

அ.ப. 2:28; உரோ 3:17); மற்றது சாவுக்கும் துன்பத்திற்கும் இட்டுச்செல்கிறது (*பழ 7:27; 13:15; 14:12; 16:25; 21:16; 22:5.25; எசா 59:7*). மனிதன் தனது விதியைத் தானே கட்டுப்படுத்துவதாக எண்ணும் மயக்கத்தில் இருக்கலாம்; தன் விருப்பம்போல் செயலாற்றலாம் (*பழ 12:15.26; 16:9; 21;2; எரே 10:23*). ஆனால், ஆண்டவர்தான் மனிதனது வழிகளை நடத்துகிறார், பாதுகாக்கிறார் (*சங் 37:23; 91:11; பழ 2:8; 16:9; எரே 10:23; தானி 5:23*). ஆண்டவரிடம்தான் மனிதன் தன் வழிகளை ஒப்படைக்க வேண்டும் (*சங் 37:5; பழ 3:6*). ஆயினும், இறுதிவழி திரும்ப வரவியலாததாகவே உள்ளது(*யோபு 16:22*). இறைவாக்கினர் அறிவித்த ஆண்டவருடைய வழி, இறைவனது நோக்கம் (*எசா 40:3; மலா 3:1*) கிறிஸ்துவில் நிறைவேறுகிறது (*மத் 3:3; மாற் 1:2-3; லூக் 3:4; 7:27; யோவா 1:23; அ.ப. 18:25-26*). அஃது அமைதியின் (*லூக் 1:79*), உண்மையின் (*2 பேதுரு 2:2*), மீட்பின் (*அ.ப. 16:17*) வழியாகும். கிறிஸ்து ''புதியதும் உயிருள்ளதுமானதொரு பாதையைத் திறந்து வைத்துள்ளார்'' (*எபி 10:20*). அவரே வழி (*யோவா 14:4-6*). கிறிஸ்துவம் புதிய நெறி, வழி என்றழைக்கப்பட்டது (*அ.ப. 9:2; 19:9.23; 22:4; 24:14.22*).

III. **இறைவனின் வழிகள்:**

ஆபிரகாம் இறைவனின் குரல் கேட்டு வெளியேறினார் (*ஆதி 12:1-5*); அன்று மாபெரும் திருப்பயணம் ஒன்று ஆரம்பித்தது. அதில் பங்கேற்கும் இறைவனின் வழிகளைக் கண்டு பிடித்துப் பின்பற்றுவது எப்போதுமே பெரும் பிரச்சனையாக இருக்கிறது. அவருடைய வழிகளோ திக்குமுக்காடச் செய்கின்றன. ''என் வழிகள் உன் வழிகள் அல்ல'' என்று ஆண்டவரே கூறினார் (*எசா 55:8*). ஆனால், அவை வியப்பூட்டும் வகையில் நிறைவுக்கும் முழுமைக்கும் அழைத்துச் செல்கின்றன.

1. மேற்கூறியவாறு மனிதன் இறைவனோடு மேற்கொள்ளும் திருப்பயணத்தின் நிகரற்ற மாதிரியாக விளங்குவது இஸ்ராயேலர் எகிப்து நாட்டிலிருந்து வெளிப்போந்த **விடுதலைப் பயணமாகும்.** இதில் மக்கள் ''இறைவனோடு நடப்பது'' (*மீக் 6:8*) என்றால் என்ன என்றும், அவரோடு உடன்படிக்கை செய்வது என்றால் எப்படி இருக்கும் என்றும் அனுபவ வாயிலாக உணர்கின்றனர். இறைவன் அவர்களுக்கு வழி காட்டிட மேகமாகவும், நெருப்புத் தூணாகவும் அவர்களுக்கு முன் செல்கின்றார் (*யாத் 13:21 தொ*). ''கடலைப் பிளந்து வழிநடத்தினார்; நீர்த்திரளை அணைபோல் நிற்கச் செய்தார்'' (*சங் 77:20*) எனும் மொழிக்கேற்ப, கடல் கூட அவருக்குத் தடையாக அமைவதில்லை. அதன் விளைவாக இஸ்ராயேலர் எகிப்திலிருந்து தப்பி, சுதந்தரம் பெறுகின்றனர்; பிறகு, பாலைவனத்தில் தங்கள் பயணத்தைத் தொடர்கின்றனர் (*சங் 68:8*). அங்கு இறைவன் தன் மக்களுக்காகப் போராடி, ஒரு தந்தை தன் மகவை ஏந்திச் செல்வது போல அவர்களை ஏந்திச் செல்கின்றார். அவர்களுக்கு உணவும், நீரும் அளித்து, பாளையம் இறங்க ஓர் இடத்தையும் தேடிப் பிடிக்கின்றார். அவரது பராமரிப்பில் அவர்களுக்கு எந்தக் குறையும் இருப்பதில்லை (*உப 1:30-33*).

அதே சமயத்தில் இஸ்ராயேல் தன்னிடம் விசுவாசம் இழக்கும்போது இறைவன் அம் மக்களைத் தண்டிக்கத் தவறுவதில்லை. இவ்வாறு இறைவனோடு மேற்கொள்ளும் திருப்பயணத்தில் அதற்குரிய இடர்ப்பாடுகளும் உள்ள பாலைநிலத்தில் அவர்கள் உள்ளங்களில் உள்ளதை அவர்களே அறிந்து கொள்ளும்படி செய்து, இறைவன் அவர்களைத் திருத்துகின்றார் (*உப 8:2-6*). எனவே, பாலைவனத்தில் வாழ்ந்த காலம் சோதனைக் காலமாகின்றது. எனவே, இறைவனின் வழி நீண்டதாயும், சுற்றானதாயும் இருக்கின்றது (*உப 2:1தொ*). எனினும், அவ்வலைச்சலுக்கும் ஒரு முடிவு உண்டு. உண்மையில் இறைவன் அவர்கள் இளைப்பாறும் வண்ணம் வளநிலத்திற்கு அழைத்துச் செல்கின்றார். அங்கு அவர்கள் உண்டு, நிறைவு எய்தி, யாவேவைப் போற்றுகிறார்கள் (*உப 8:7-10*). எனவே,

''ஆண்டவரின் வழிகள் யாவும் அருளும், உண்மையும் கொண்டவை'' (சங் 25:10; காண். சங் 136); ''அவருடைய வழிகள் யாவும் நேர்மையானவை'' (உப 32:4) என்பன படிப்படியாகத் தெளிவாகின்றன.

ஆண்டுதோறும் நடைபெற்ற பாஸ்கா விழாவிலும், கூடார விழாவிலும் எகிப்திலிருந்து அடைந்த விடுதலைப் பயணம் திரும்பத் திரும்ப நினைவுபடுத்தப்பட்டது. எனவே, இப்பயணம் ஒவ்வொரு யூதனின் நினைவிலும் ஆழமாகப் பதிந்திருந்தது. மேலும் செக்கேம், சீலோ, பிற்காலத்தில் எருசலேம் ஆகிய இடங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட திருப்பயணங்கள் இறைவன் தரும் இளைப்பாற்றுதலுக்கு அழைத்துச் செல்லும் புனித வழியைப் பற்றிய கருத்தினை இன்னும் ஆழமாக மனத்தில் பதித்தன. இக்கருத்தின் அடிப்படையில்தான் எலியா, இஸ்ராயேல் யாவேயை மறந்து சிலை வழிபாட்டில் மனத்தைச் செலுத்தியபோது, ஓரேபு மலைக்குப் பயணமாகின்றார். பிற்காலத்தில் இறைவன் தனது குழந்தையான இஸ்ராயேலைக் கையில் ஏந்திப் பயணமான காலத்தை (ஓசே 11:1 தொ) இறைவாக்கினர் கருத்தியலாக்கி எடுத்துரைக்கின்றனர்.

2. திருச்சட்டம்: வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைந்ததன் பின் ஆண்டவரின் வழியில் இனியும் தொடர்ந்து பயணம் செய்கின்ற கடமை (சங் 128:1) இஸ்ராயேலுக்கு எள்ளளவும் குறையவில்லை. உண்மையில் இறைவனின் வழிகளைப் பற்றிய அறிவும் தெளிவும் இஸ்ராயேல் மக்களின் தனிச் சிறப்புடைமை ஆயிற்று (காண். சங் 147:19தொ). அறிவதற்கான அனைத்து வழிகளையும் ஆண்டவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். இஃது என்றுமே அழிவுறாத அவரது திருச்சட்டங்களின் தொகுப்பாகும் (பாரூ 3:37;4:1). இனி இஸ்ராயேலர் ''ஆண்டவரின் திருச்சட்டப்படி நடக்க வேண்டும்'' (சங் 119:1). இதுவே, உடன்படிக்கையில் மாறாது இருக்கவும், ஒளி, அமைதி, நல்வாழ்வு இவற்றை நோக்கி நடைபோடவும் வழிகோலும் (பாரூ 3:13தொ). எனவே, மனிதன் நடக்க வேண்டிய உண்மையான பாதை திருச்சட்டமாகும். ஏனென்றால், அதுவே இறைவன் வகுத்த வழியாகும்.

திருச்சட்டத்தை மீறிச்செல்வது என்பது அழிவை நோக்கிச் செல்வதாகும் (உப 31:17). அதன் இறுதித் தண்டனை நாடிழந்து அடிமைகளாவதாகும். இஃது எகிப்திலிருந்து கிளம்பிய விடுதலைப் பயணத்திற்கு எதிரிடையான அடிமைப்பயணமாகும் (லேவி 26:41; ஓசே 11:5). ஆனால் தம் மக்களை முற்றிலும் தோல்வியுற விடுவது இறைவனுக்கு இயலாத ஒன்றாகும் (லேவி 26:44 தொ). எனவே (அவர்கள் திரும்பி வர), ''பாழ்வெளியில் யாவேயின் வழியை ஆயத்தப்படுத்துவது'' அவசியமாகின்றது (எசா 40:3). தன் மக்கள் வெற்றி வாகையோடு திரும்பி வர யாவேயே ''பாழ்வெளியில் பாதையொன்று வகுப்பார்'' (43:19); ''மலைகளை வெட்டி, சாலை அமைப்பார்'' (49:11).

IV. **இருவழிகள்:** மனிதனின் ஒழுக்க வாழ்வை ''இரு வழிகள்'' பற்றிய கொள்கையில் யூதர்கள் மொழிந்தனர். அதன்படி, இருவகையான ஒழுகலாறுகளும் அதற்கேற்ப இருவகையான நெறிகளும் உள்ளன. அவை நல்வழி, தீவழி என்பன (சங் 1:6; பழ 4:18 தொ; 12:28). நல்வழி நேரானது, செம்மையானது (1 சாமு 12:23; 1 அர 8:36; சங் 101:2.6; 1 கொரி 12:31). நீதியைக் கடைப்பிடிப்பதிலும் (பழ 8:20; 12:28), உண்மை வழுவாது வாழ்வதிலும் (சங் 119:30; தோபி 1:3), அமைதியைத் தேடுதலிலும் (எசா 59:8; லூக் 1:79) நன்னெறி அடங்கும். ஞானநூல்கள் நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லும் வழியைக் கற்பிக்கின்றன (பழ 2:19; 5:6; 6:23; 15:24). அவ்வழியில் நடப்பவன் இத்தரையில் நீண்டகாலம் வளமிக்க வாழ்வு பெறுவான்.

தீயோரின் வழியோ கோணலானது (பழ 21:8); மதியீனர்களையும் (பழ 12:15), பாவிகளையும் (சங் 1:1; சீரா 21:10),

அக்கிரமிகளையும் (சங் 1:6; பழ 4:14.19; எரே 12:1) அழிவுக்கும் (சங் 1:6), சாவுக்கும் (பழ 12:28) இட்டுச்செல்வது. இவ்விரு வழிகளில் ஒன்றைத் தன் விருப்பத்தின்படி தேர்ந்தெடுக்க மனிதனுக்கு முழு உரிமையும், பொறுப்பும் உண்டு (உப 30:15-20; சீரா 15:12).

'அழிவுக்குச் செல்லும் வழி அகன்றது; மிகப் பரந்தது. அதன் வழியே நுழைபவர் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் எவ்வளவோ ஒடுக்கமானது; மிக இடுக்கானது. இதைக் கண்டு பிடித்து நுழைபவர் சிலரே' என்று நற்செய்தியும் எடுத்துரைக்கின்றது (மத் 7:13 தொ).

V. **வாழும் வழி கிறிஸ்து:** அடிமைகளாய் நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேல் மறுபடியும் விடுதலை பெற்றுத் தாயகம் திரும்பியது அவர்கள் இறுதியாகப் பெறவிருந்த முழுமையான விடுதலையின் முன் அடையாளமே ஆகும். இதனை, இரண்டாவது எசாயாவின் கூற்றினை அடியொற்றி திருமுழுக்கு யோவான் தெளிவாக அறிவிக்கிறார். ''ஆண்டவரின் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்'' (லூக் 3:4=எசா 40:3). மெசியாவின் காலத்தில் நடக்கும் புதிய விடுதலைப் பயணம் இறைவன் தரும் இளைப்பாறுதலுக்கு (எபி 4:8தொ) நிச்சயமாக அழைத்துச் செல்கிறது. இதில் இயேசுவே புதிய மோசே; அவரே வழி நடத்துபவர்; வழித்துணை; தலைவருமாவார் (லூக் 24:15; எபி 2:10தொ; 17:2தொ). அவர் தன்னைப் பின்பற்றி நடக்க மனிதருக்கு அழைப்பு விடுக்கின்றார் (மத் 4:19; லூக் 9:57-62; யோவா 12:35தொ). வரவிருக்கும் இறையரசினுடைய மகிமையின் முன்னறிவிப்பாக கிறிஸ்துவின் உருமாற்றம் ஒரு சில விநாடிகளுக்கு ஒளிவீசியது. ஆனால், கல்வாரியில் சிறிது நேரம் தங்க வேண்டும் என்பதைப் பாடுகளைப் பற்றிய முன்னறிவிப்பு உணர்த்துகிறது. ஆதலால், சிலுவையின் வழியே, மகிமையின் வழியாகும் (மத் 16:23; லூக் 24:26; 9:23 யோவா 16:28). எனவே, இயேசு முன் வைத்த காலைப் பின்வைக்காது, எருசலேமை நோக்கிப் பயணமாகி, அங்குத் தன்னையே பலியாக ஒப்புக்கொடுக்கின்றார் (லூக் 9:51; 22:22.33). பழைய பலிகளைப் போலன்றி, அவருடைய பலி வானகத்திற்குள்ளேயே நுழைகின்றது (எபி 9:24); அதே சமயத்தில், நாம் பின் செல்லவும் ஒரு வழியை நமக்கு அமைத்துக் கொடுக்கின்றது. அவருடைய இரத்தத்தின் விளைவாக இறையாசனத்திற்குமுன் தோன்ற நமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. குத்தி ஊடுருவப்பட்ட அவரது உடலின் மூலம், வாழும் வழியொன்றை இயேசு நமக்காகத் திறந்துள்ளார் (எபி 10:19 தொ). அப்போஸ்தலர் பணி நூலில் கிறிஸ்துவ மறையை ''வழி'' என்ற சொல்லாலேயே குறிப்பிட்டனர் (அ.ப. 9:2; 18:25; 24:22). ஏனெனில், அப்பொழுதுதான் புதிதாக வெளிப்படுத்தப்பட்ட மெய்வழி தங்களுக்குத் தெரிந்து விட்டது என்ற மகிழ்வுணர்வு ஆதிக்கிறிஸ்தவரிடம் இருந்தது (எபி 9:8). அவர்கள் கண்ட புதுவழி முன்புபோலச் சட்டதிட்டத்தின் வடிவில் இருக்கவில்லை; மாறாக, இயேசுவே அப்புது வழியாக இருக்கிறார் (யோவா 14:6). அவரில்தான் ஒரு கிறிஸ்தவனின் ''திருக்கடப்பும்'', ''விடுதலைப் பயணமும்'' நிகழ்கின்றன. அன்பின் வழியைப் பின்பற்றி (எபே 5:2; 1 கொரி12:31), அவரில் தான் ஒன்றித்து நடக்க வேண்டும் (கொலோ 2:6). ஏனெனில், அவரில்தான் யூதனும் கிரேக்கனும் ஒன்றாக ஒரே தேவ ஆவியில் தந்தையை அணுகும் பேறு பெற்றுள்ளனர் (எபே 2:18).

வழித்துணை (CUSTODIAN, GUIDE)

அந்தக் காலத்தில், சிறுவன் 16 வயதை அடையும்வரை அவனைக் கவனித்துக் கொண்டும், பள்ளிக்கு அழைத்துச் சென்றும் வந்த அடிமையின் பட்டம்.

கலா 3:24-25-இல் புனித பவுல் இப்பெயரை உருவகப்படுத்திப் பேசுகிறார். இங்கே சட்டத்தின்படி நடப்பவர்களின் சிறுமைத்தன்மையைக் கூறுகிறார்.

''விசுவாசம் அளிக்கப்படுமுன், அவ்விசுவாசம் வெளிப்படும்வரை, சட்டத்தின் கீழ் அடைபட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்

தோம். அவ்வாறு விசுவாசத்தால் நாம் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆக்கப்படுவதற்குத் திருச்சட்டம் நம்மைக் கிறிஸ்துவினிடம் அழைத்துச் செல்லும் வழித்துணையாய் இருந்தது. இப்பொழுது விசுவாசம் அளிக்கப்பட்டதால், இனி நாம் வழித்துணைவனின் கண்காணிப்பில் இல்லை''.

இங்கே வழித்துணையாளர் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு பொருளில் கிறிஸ்துவிடமும் அழைத்துச் செல்கிறார்.

1 கொரி 4:15-இல் கொரிந்தியர்களுக்கு ஆசிரியர்கள், வழிகாட்டிகள் பலர் இருந்தாலும் தான்தான் அவர்களை இயேசு கிறிஸ்துவில் ஈன்றெடுத்த தந்தை என்று பவுல் உரிமை கொண்டாடுகிறார்.

வழிபாடு (WORSHIP)

I. எல்லா மதங்களிலும் வழிபாடுதான் கடவுளுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உறவை உருவாக்குகின்றது, வலுப்படுத்துகின்றது, வளர்த்து விடுகின்றது. விவிலியத்தைப் பொருத்தவரையில் இந்த உறவுகட்கு முதல் முயற்சி எடுப்பவர் தன்னையே வெளிப்படுத்திக் கொண்ட உயிருள்ள கடவுள்தான். இதற்குப் பதிலாக மனிதன் கடவுளை வணங்குகிறான். இஃது ஒரு சமூகப் பண்பைப் பெறுகிறது. வழிபாடு மனிதனுக்கு அவசியம். அவனுக்குத் தன்னைப் படைத்த ஒருவரைச் சார்ந்து இருக்க வேண்டிய தேவை மட்டுமன்று. கடவுளே தன்னை வணங்கி, பணிவிடை செய்ய மனிதர்களைத் தேர்ந்தெடுத்து அதன் வழியாக அவர்கள் தன் சாட்சிகளாக மாற வேண்டும் என எதிர்பார்க்கிறார். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்கள் தங்கள் பணியைக் கடவுளை வழிபடுவதன் மூலம் நிறைவேற்ற வேண்டும். எபிரேயத்தில் வழிபாடு என்ற சொல் 'பணிசெய்ய' என்ற அடிச்சொல்லிலிருந்து வருகிறது.

II. *பழைய ஏற்பாடு:*

1. வரலாற்றில் உண்மைக் கடவுளின் வழிபாடு: விவிலியம் வழிபாடு வரலாற்றில் சிறிது சிறிதாக வளர்ச்சி பெறுவதைக் காட்டுகிறது. எல்லா வழிபாடுகளுக்கும் பொதுவான சில தன்மைகள் எழுவதைப் பார்க்கிறோம். புனித இடங்கள், பொருட்கள், புனித மனிதர்கள், புனித நேரங்கள் (ஓய்வு நாட்கள், விழாக்கள்), வழிபாட்டுச் செயல்கள் (சுத்திகரிப்பு, விருத்தசேதனம்), மதத்தின் கட்டளைகள் என வளர்ந்து வழிபாட்டைச் சிறப்பித்தன.

பாவத்திற்குமுன் கடவுளுக்கும் மனிதருக்குமிடையேயுள்ள உறவு எந்தவிதச் சிக்கலுமற்றதாக இருந்தது. நல்லது தீயது அறிய உதவும் மரத்தின் கனியை உண்ண மாட்டாய் என்ற கட்டளைக்குக் கட்டுப்பட்டு அதன் மூலம் தான் கடவுளைச் சார்ந்தவன் என்பதை உணர்ந்து வாழ்வதன் மூலம் மனிதன் வாழ்வின் மரத்தின் கனியை உண்ணலாம் (ஆதி 2:9; 3:22) என்ற நிலை இருந்தது. வழிபாட்டுக்கு இணையான ஒரு செயலால் மனிதன் கடவுளோடு உறவு கொள்ளவும் உரையாடவும் முடிந்தது. இதே வாழ்வின் மரம் விண்ணக எருசலேமிலும் இருக்கிறது. ஆனால், இங்கு வழிபாடு கடவுளையும் மனிதனையும் இணைக்கும் பாலமாக இருப்பதில்லை (திருவெளி 22:2தொ). ஏனெனில், இங்கு மனிதன் கடவுளை நேருக்கு நேராகச் சந்திக்கிறான்.

முதல் பாவத்திற்குப் பிறகு வழிபாட்டில் பலியிடுதல் தோன்றுகிறது. மூதாதையர்கள் யாவேயைத் தொழுது அவருக்கென பீடங்கள் எழுப்புகின்றனர் (ஆதி 4:26; 8:20; 12:8). ஆனால், கடவுள் எவ்வகை வழிபாட்டையும் அப்படியே ஏற்கவில்லை. பலி கொடுக்கும் மனிதனின் உள்ளார்ந்த நிலையைப் பார்ப்பதோடு (4:3தொ), மனிதனைப் பலியிடுதல் (22; 2 அர 16:3; லேவி 20:2தொ), வழிபாட்டின் பெயரில் விபசாரம் செய்தல் (1 அர 22:47; உப 23:18), கண்ணால் காணமுடியாத கடவுளை உணர்த்த சிலைகளைச் செய்தல் (உப4:15-18; காண்க. யாத் 32:4) போன்ற வெளிப்படையான முறைகேடுகளையும் கடவுள் ஏற்பதில்லை. அவற்றைப் புறம்பாக்குகிறார். கடவுளின் மக்களாகிய இஸ்ராயேலருடன் உடன்படிக்கை செய்யப்பட்ட பிறகு, அவர்கள் வழிபாடு பல சட்ட திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டது.

கடவுளின் பிரசன்னத்தை உணர்த்தும் உடன்படிக்கையின் பேழை அவர்கள் வழிபாட்டின் மையமாக அமைந்தது. முதலில் எங்கு வேண்டுமானாலும் தூக்கிச் செல்ல முடிந்த நிலையில் உடன்படிக்கையின் பேழை பல வழிபாட்டு மையங்களில் தங்கியது (யோசு 18:1). தாவீது இறுதியாக அதனை நிலையாக எருசலேமில் கொண்டு வந்து வைத்தார் (2 சாமு 6). சாலமோன் அதற்கு ஆலயம் எழுப்பினார் (1 அர 6). உபாகமச்சீர்திருத்தத்திற்குப்பின் இந்த ஆலயம் பலிவழிபாட்டின் ஒரே மையமாக விளங்கியது. நாடு கடத்தலுக்குப்பின் வழிபாடு மோசே அளித்ததாகக் கருதப்பட்ட வழிபாட்டுச் சட்டங்களின்படி நடத்தப்பட்டது. பென்சிராக்கு மக்கபேயர்களின் போராட்டத்திற்குச் சிறிது முன்பு, மேலே கூறப்பட்ட உறவின் பிணைப்பை வலியுறுத்தி மக்கள் சட்டத்திற்கும், ஒரே கடவுளுக்கும் வழிபாட்டுக்கும் என்றும் பிரமாணிக்கமாய் இருக்குமாறு கூறுகிறார் (1 மக் 1:41-46). செபக்கூடங்களின் வழிபாடு, பாடல்கள், செபங்கள் முதலியவற்றைக் கொண்டு நாடு கடத்தலுக்குப்பின் சிதறிப் போன யூத சமூகத்தை ஒன்றிணைக்கும் பணியைச் செய்தது. அத்துடன் ஆலய வழிபாட்டை நிறைவு செய்தது. ஆனால், இஃது ஒரே ஆலயத்தின் சலுகைகளை நீக்கிவிடவில்லை. ஆனால், கும்ரான் குழுவினர். இந்த ஆலய வழிபாட்டிலிருந்தும் குருத்துவப் பலிமுறையினின்றும் தங்களையே பிரித்துக் கொள்கின்றனர். ஏனெனில், அவர்கள் புதுப்பிக்கப்பட்ட ஓர் ஆலயத்தில் தனித்து இறைவனை வழிபட விரும்பினர்.

2. வழிபாட்டுச் சடங்குகளும் இறைமக்களுக்குப் போதனையும்: கடவுளின் மக்கள் தங்கள் அண்டை நாட்டவரது நாடோடி ஆயர்களின் அல்லது நிலையான உழவர்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் வழிபாட்டுச் சடங்குகளின் பண்புகளைத் தங்கள் வழிபாட்டில் சேர்த்துக் கொண்டனர். ஆனால், உடன்படிக்கை வரலாற்றோடு இந்தச் சடங்குகளை இணைத்து, இவற்றிற்குப் புதிய பொருள் கொடுத்து (உப 16:1-8; லேவி 23:43) பலியால் அதனைச் செல்லத்தக்கதாகச் செய்தனர் (யாத் 5:1தொ; 19:6; சங் 50:5). அவர்கள் வழிபாட்டுச் சடங்கில் பாஸ்கா, கூடாரம், உடன்படிக்கை என எல்லாத் தன்மைகளும் உள்ளடங்கி, வரலாற்றில் இறைவன் அவர்களுக்குச் செய்தவற்றைப் போதிக்கும், சமயக்கல்வி அளிக்கும் சந்தர்ப்பங்களாக அவை அமைந்தன.

சடங்குகள் இவ்வாறு கடந்த நிகழ்வுகளை நினைவுகூர்ந்து அவற்றைக் கொண்டாடிப் புதுப்பிக்கின்றன. அத்துடன் அவற்றிற்கு நிகழ்கால உண்மை அளித்து மக்களின் விசுவாசத்தைப் புதுப்பித்து, அவர்கள் விசுவசிக்கும் கடவுள், கடந்த காலத்தைப் போல் இன்றும் பிரசன்னமாக உள்ளார், மற்றும் சக்தியுள்ளவர் என்ற நம்பிக்கையை ஆழப்படுத்துகிறது (சங் 81:106; உப 1-11; யோசு 24). இறுதியாக இறைவன் தமது அரசை இம்மண்ணில் ஒருநாள் முழுமையாக நிலைநாட்டுவார். அன்று விடுதலை பெற்ற இஸ்ராயேலரோடு பிறநாடுகள் ஒன்று சேர்ந்து உண்மையான இறைவனை வழிபடும்.

இத்தகைய முன்னோக்கிய பார்வை சிறிது சிறிதாகத்தான் மக்கள் மனதில் உருப்பெற்று வளர்ச்சி அடைகிறது. சிறப்பாக, புதிய உடன்படிக்கையின் நம்பிக்கையை மக்கள் உள்ளத்தில் ஏற்படுத்திய இறைவாக்கினர்கள்தான் பாராட்டுக்குரியவர்கள் (எரே 31:31 தொ). முக்கியமாக ஆறுதலின் நூலிலும் (எசா 45), நாடு கடத்தலுக்குப் பின் வந்த இறைவாக்குகளிலும் (எசா 66:18-23; செப் 14:16-21) ஒரே கடவுள் தனது திட்டத்தை வெளிப்படுத்துகிறார். உலகனைத்தையும் படைத்தவரும் மீட்பரும் என்ற முறையில் அனைவரும் தன்னை அறியவும் தன்னை வழிபடவும் வேண்டும் என்பதே அந்த ஒரே கடவுளின் விருப்பமாகும். அவரது திட்டத்தின் சாட்சிகளான இறைவாக்கினர்கள் உடன்படிக்கையின் கடவுள் வாழ்வற்ற, உயிர் அற்ற வழிபாட்டை விரும்பவில்லை என்பதைத்

தெளிவாக்குகின்றனர். அதே சமயத்தில், மக்களின் ஒதுங்கியிருக்கும் தன்மையையும், சடங்கு முறை மனப்பான்மையையும் தாக்கி, இஸ்ராயேலின் வழிபாடு ஆன்மீக வாழ்வில் ஊன்றியதாக இருக்க வேண்டும் என்றும், தமது மக்களிடமிருந்து எதிர்பார்க்கும் ஆற்றல் மிக்க சாட்சியாக இருக்க வேண்டும் என்றும் இறைவாக்கினர்கள் வலியுறுத்துகின்றனர்.

3. உண்மை வழிபாட்டின் ஆன்மா: உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாயிருத்தல்: இறைவாக்கினர்களின் குரலைக் கேட்டு உடன்படிக்கையின் உள்ளார்ந்த கோரிக்கைகளுக்குப் பணிந்து நடந்தால், நிச்சயமாக இஸ்ராயேலரின் வழிபாடு ஆன்மீக வழிபாடாக அமையும். இத்தகைய உள்ளார்ந்த பிரமாணிக்கமே இறைவனுக்குச் செலுத்தும் உண்மையான வழிபாட்டின் நிபந்தனையும், இஸ்ராயேலுக்கு யாவேயைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பதற்குச் சாட்சியுமாகும் (யாத் 20:2தொ). அவர்களைக் காத்த கடவுள் புனிதமானவர். அவர் புனித குருத்துவ மக்களும் புனிதமானவர்களாக இருக்க வேண்டும் என்று கோருகிறார் (லேவி 19:2). இவற்றை நினைவுகூரும் இறைவாக்கினர்கள் இந்தச் சடங்குகளைப் புறக்கணிக்காமல் அவற்றின் உண்மையான பொருளை அவற்றிற்குக் கொடுக்க வேண்டும் என்கின்றனர். நாம் பெறும் ஒவ்வொரு வாழ்வின் கொடைக்கும் ஊற்றாக இருக்கும் கடவுளுக்கு, நமது பலியின் கொடைகள் நமது நன்றியை அவருக்குச் செலுத்துவதாக அமைய வேண்டும் (சங் 50).

கீழ்ப்படிதல் இல்லாதவர்களின் பலியை இறைவன் புறக்கணிக்கிறார் என்பதை ஏற்கெனவே சாமுவேல் உறுதிப்படுத்தியிருக்கிறார் (1 சாமு 15:22). ஆமோசும், எசாயாவும் இதே கருத்தை மிக அதிகமாகத் திரும்பவும் வலியுறுத்துகின்றனர் (ஆமோ 5:21-26; எச 1:11-20; 29:13). எரேமியா ஆலயத்தில் நின்று கொண்டே அவர்கள் சடங்குகளின் வெறுமையைச் சுட்டிக்காட்டி, அவர்கள் உள்ளம் தீமையால் நிறைந்திருப்பதையும் கண்டனம் செய்கிறார் (எரே 7:4-5.21தொ). குருவும் இறைவாக்கினருமான எசேக்கியேல், சிலைவழிபாட்டால் இழிவுபடுத்தப்பட்ட ஆலயத்தின் அழிவைப் பற்றிக் கூறிவிட்டு, புதிய உடன்படிக்கையின் புதிய ஆலயம் (எசே 37:26) விசுவாசிகளின் வழிபாட்டு மையமாக இருக்கும் என விவரிக்கிறார் (எசே 40-48). நாடு கடத்தலிலிருந்து திரும்பி வந்த இறைவாக்கினர்கள் கடவுள் தனது மக்களின் வழிபாட்டை எந்த நிபந்தனையின் கீழ் ஏற்றுக் கொள்வார் என்பதைக் கூறுகின்றனர். அவர்கள் உண்மையிலேயே ஒரு சகோதரச் சமூகமாக வாழும்போதுதான் அவற்றை ஏற்றுக்கொள்வார் என்கின்றனர் (எசா 58:6தொ. 9 தொ.13; 66:1தொ).

இறைவனுக்கு அஞ்சி, சட்டத்தைக் கடைப்பிடிக்கும் புறவினத்தாரை இந்தச் சமூகம் கரம் விரித்து வரவேற்கிறது. மேலும், உலகளாவிய வழிபாடு பரவலாக்கப்படுகிறது (மலா 1:11). இத்தகைய எதிர்பார்ப்புகளால் ஆட்கொள்ளப்பட்டு, சட்டத்தோடும் சடங்கு வழிபாட்டோடும் பிரமாணிக்கத்தை மிக நெருங்கிய விதத்தில் இணைக்கும் இறைவாக்குப் பாரம்பரியத்திற்குத் தன்னையே வாரிசாகக் காட்டுகிறார் சீராக்கு (சீரா 34:18தொ; 35:1-16). அவரது செய்திக்குத் தன்னை மூடிக்கொள்ளும் இந்த ஒதுங்கியிருக்கும் மற்றும் சடங்கு மனப்பான்மையுடைய இஸ்ராயேலரில் கிறிஸ்து எளிய இதயங்களைக் காண்பார். இவற்றில், உண்மையான நீதியையும் (உண்மை வழிபாட்டின் நிபந்தனை; லூக் 1:74 தொ) வழிபாட்டின் நிறைவடிவை நிறுவும் மெசியா பற்றிய நம்பிக்கையையும் (மலா 3:1-4) இணைக்கும் சங்கீதங்களின் மனப்பான்மையைக் காண்பார்.

III. புதிய ஏற்பாடு:

I. பழைய சடங்குகளின் முடிவு:

அ. பழைய சடங்குகளை நிறைவு செய்து இயேசு அவற்றை முடிவுக்குக் கொண்டு வருகிறார். முதலில் அவற்றைப் புதுப்பித்துப் பிள்ளைக்குரிய செபத்தின் தனது ஆவியால் அவற்றை உயிர்ப்பூட்டுகிறார். அவருடைய பிறப்பின்போது அவரைக்

கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த னர் (லூக் 2:22). அவர் வாழ்வு முழுவதும் விழாக்களுக்காக ஆலயத்திற்குப் பலமுறை செல்கிறார் (லூக் 2:41; யோவா 2:13; 10:22). மக்கள் வழிபாட்டுக்காகக் கூடுமிடங்களில் அடிக்கடி போதிக்கிறார் (மாற் 14:40; யோவா 18:20). இறைவாக்கினர்களைப் போலவே இவரும் வழிபாட்டின் உண்மை யான பொருளுக்குப் பிரமாணிக்கத்தைக் கோருகிறார் (மத் 23:16-23). உள்ளத் தூய்மை இல்லையென்றால் துப்புரவுச் சடங்குகள் பயனற்றவை (மத் 23:25; 5:8.23தொ).

பழைய சடங்குகளையெல்லாம் தனது பலியால் கடந்து செல்கிறார். பழைய ஆலயத்தின் மேல் தான் வைத்திருந்த மரியாதையை அதைத் தூய்மைப்படுத்து வதன் மூலம் காட்டிக் கொள்கிறார் (யோவா 2:14). அதே நேரத்தில் யூதர்கள் செய்த தவறினால் இந்த ஆலயம் இடிக்கப் படும் என்பதையும், ஆனால் ஒரு புதிய ஆலயம் எழும் எனவும், அது தன் உயிர்த்த உடலாகிய ஆலயமே என்றும் முன்னறிவிக் கிறார் (யோவா 2:19 தொ). அப்பொழுது எருசலேமில் நடக்கும் வழிபாடுகள் முடி வுக்கு வரும் (4:21).

ஆ. ஆதித்திருச்சபையும், ஆலய வழி பாட்டைக் கடந்து செல்வதால் அதனோடு உள்ள உறவை முறித்துக் கொள்கின்றது. இயேசுவைப் போலவே அவரது சீடர்களும் ஆலயத்தில் செபிக்கின்றனர், போதிக்கின்ற னர் (அ.ப. 2:46; 5:20). ஆனால், ஸ்தேவான் கூறுவதுபோல் கடவுள் குடிகொள்ளு மிடமே உண்மையான ஆலயம், என்றும் அதையே இயேசு கிறிஸ்து ஆள்கிறார் (6:13தொ; 7:48தொ.55தொ). ஆகவே, மன மாற்றம் பெற்ற யூதர்களின் உணர்வுகளை மதிக்கும் பொருட்டு அவர்கள் தங்கள் சமயச் சடங்குகளில் பங்கு பெற பவுல் அனுமதிக்கிறார் (21:24.26; காண்க. 1 கொரி 10:32தொ). ஆனால், விருத்த சேதனம் என்பது பயனற்றது. கிறிஸ்தவன் அந்தப் பழைய பழக்கத்தால் கட்டுப்படுத்தப்படாத வன் என்று அடிக்கடி பவுல் போதிக்கிறார். கிறிஸ்தவ வழிபாடு புதியது (கலா 5:1.6).

2. புதிய வழிபாட்டின் தோற்றம்:

அ) புதிய வழிபாடு எது என்பதை இயேசு வரையறுக்கிறார். உண்மையான வழிபாடு ஆன்மீக வழிபாடாகும். இது சடங்குகள் இல்லாமல் இருக்க வேண்டு மென்று அவசியமில்லை. ஆனால் வழி பாட்டில் பங்கு பெறுவோர் கட்டாயம் தூய ஆவியால் வழிநடத்தப்பட வேண்டும் (யோவா 4:23; 7:37; 4:10.14). புதிய உடன்படிக்கையைச் செல்லத்தக்கதாகச் செய்யும் இயேசுவின் பலி (மாற் 10:45; 14:22) பழைய சடங்குகளுக்கு அவற்றின் புதிய நிறைபொருளைக் கொடுக்கிறது (எபி 10:1-18; காண்க. சங் 40:7). அவர் மக்கள் அனைவருடைய பாவங்களுக்காகவும் பரி காரம் செய்து அவருடைய உடலிலும், இரத்தத்திலும் பங்கு பெறும் ஒவ்வொரு வருக்கும் முடிவில்லா வாழ்வைத் தருவ தால் புதிய வழிபாட்டு முறையை ஏற்படுத் துகிறார் (லூக் 22:19).

ஆ) திருச்சபை இதற்கு எப்போதும் பணிந்துள்ளது. கிறிஸ்தவர்கள் வழிபாட்டிற் கென எங்குக் கூடினாலும் அதன் உச்ச கட்டம் அப்பம் பிடுதலோடு நிறைவு பெற்றது (அ.ப. 2:42; 20:7.11). இந்த நற்கருணை வழிபாட்டின் மரபுப்பொருளை யும் அதற்குத் தேவையானவற்றையும் பற்றி மறந்து போனவர்கட்குப் பவுல் நினைவூட்டு கிறார் (1 கொரி 10:16; 11:24).

ஒருவன் நற்கருணையில் பங்கு பெற வேண்டுமெனில் அவன் இயேசு ஏற்படுத் திய திருமுழுக்கால் ஏற்கெனவே திருச்சபை யுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் (மத் 28:19). ஏனெனில், புதுவாழ்வு பெறுவ தற்குரிய நிபந்தனையாகவும் (மாற் 16:16; யோவா 3:5), அப்போஸ்தலர்களால் பெந்த கோஸ்து நாளிலிருந்து இது நிறைவேற்றப் பட்டு வந்தது (அ.ப. 2:3-41). இறுதியாக அப்போஸ்தலர்கள் தங்கள் கரங்களை விரித்துத் திருமுழுக்குப் பெற்றவர்க்குத் தூய ஆவியை வழங்கினர் (8:15தொ).

இத்தகைய மூன்று மரபுவழி அடிப்படை யான சடங்குகளோடு கிறிஸ்தவ வழிபாட்

டில் மிக முக்கியமான மரபுச் செயல்பாடுகள் சேர்க்கப்பட்டன. வாரத்தின் முதல் நாளான ஞாயிறு கொண்டாட்டம் (அ.ப. 20:7; 1 கொரி 16:2), ஆண்டவரின் நாள் (திருவெளி 1:10), பெண்கள் முக்காடு அணிதல் போன்ற ஒழுங்கு பற்றிய சமயப் பொதுக்கூட்டங்களில் அவர்கள் அமைதி காக்க வேண்டும் என்பது, அமைதிக்காகவும், ஒழுங்கிற்காகவும் உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்களாய் இருந்தன (1 கொரி11:5-16; 14:34.40).

3. கிறிஸ்தவ வழிபாட்டின் அமைப்பும் அதன் மூன்று தன்மைகளும்: இஸ்ராயேலின் வழிபாட்டைப் போலவே திருச்சபையின் வழிபாட்டிலும் மூன்று தன்மைகள் உள்ளன. 1) இது கடந்தகால இறைச் செயலைக் கொண்டாடுகிறது; 2) அந்த இறைச் செயலை இப்பொழுது பிரசன்னமாகச் செய்கிறது; 3) அதை உண்மையாக்குகிறது. இவ்வாறு, இறுதி நாளில் கிறிஸ்துவின் மகிமையில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பங்கு பெறுவான் என்ற நம்பிக்கையில் வாழச் செய்கிறது. பழைய வழிபாட்டிலிருந்து கிறிஸ்துவ வழிபாடு சில சடங்குகளை அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கலாம். அதனால் இது வரப்போகின்ற வழிபாட்டின் வெறும் உருவமன்று, அதன் சாயலாகும். கிறிஸ்தவ வழிபாட்டின் புதிய தன்மை என்னவென்றால், இது கடவுளின் மகனாகிய கிறிஸ்துவின் நிறைவான பலியை அடிப்படையாகக் கொண்டதாகும் (எபி 1:2தொ). அவர் வழியாக இறைத் தந்தை முழுமையாக மகிமைப்படுத்தப்படுகிறார். அவரில் நம்பிக்கை வைப்பவர்கள் எல்லாம் பாவத்தினின்று விடுவிக்கப் பெற்று கிறிஸ்து தந்தைக்கு அளிக்கும் பிள்ளைக்குரிய வழிபாட்டில் இணைந்து, முடிவில்லா வாழ்விலும் அவருடன் பங்கு பெறுகின்றனர் (எபி 7:26;8:1தொ; 9:14.26).

அ) பழைய கிறிஸ்தவர்கள் கொண்டாடும் கிறிஸ்துவின் கடந்தகாலச் செயல் என்பது நமது மீட்புக்காக அவர் அளித்த காணிக்கையாகும்; அதன் பலன் உயிர்ப்பும் ஆவியின் கொடையுமாகும். இது மீட்பிற்கான நம்பிக்கையைத் தரும் பழைய வழிபாட்டிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது (எபி 7:18-28). சிலுவையெனும் பீடத்தில் கிறிஸ்து அளித்த பலியின் பயன்களை நாம் நற்கருணையில் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பை அவர் தந்துள்ளார் (எபி 13:10).

ஆ) இந்த நற்கருணையினால் இப்பொழுது ஏற்படும் உறவின் ஒன்றிப்பு நிறைவாக நாம் அடையப்போகும் முடிவில்லாத ஒன்றிப்புக்கு நம்மைத் தயாரிக்கிறது. எனவே, நற்கருணை வழிபாடு புதிய வழிபாட்டின் மையமாகவும் புதிய வாழ்வின் வழியாகவும் அமைகிறது. அதன் அடையாளமாகவும் சாதனமாகவும் அமைகிறது. இந்தச் சடங்கின் வழியாக மகிமைப் படுத்தப்பட்ட கிறிஸ்து இங்குத் தன்னையே மறைபொருளாய்ப் பிரசன்னமாக்குகிறார். அதன் விளைவாக, அவர் அளித்த அவருடைய உடல் மற்றும் இரத்தத்தோடு நாம் ஒன்றிணைந்து ஒரே உடலாகி, கிறிஸ்துவாலும் கிறிஸ்துவோடும், தூய ஆவியின் தூண்டுதலால் தந்தையை மகிமைப்படுத்தலாம் (1 கொரி 10:16தொ; 11:24தொ; பிலி 3:3).

இந்த உண்மையால் விண்ணகத் தூயகத்துக்குள் (எபி 10:19தொ) என்றென்றும் குருவாக விளங்கும் கிறிஸ்து குடியிருக்கும் அந்த இடத்தை நாம் அடைய முடிகிறது (எபி 7:24தொ; 9:11. 24). ஏனெனில், உயிருள்ள இறைவனுக்குத் தகுதியான ஒரே வழிபாடாகிய ஆவியிலும் உண்மையிலும் தந்தை இறைவனை ஆராதிக்கும் கொண்டாட்டம் அங்கு நடைபெறுகிறது (யோவா 4:23; எபி 9:14). இது பலியாக்கப்பட்ட செம்மறியால் இறைவனது அரியணை முன் கொண்டாடப்படுகிறது. இங்குதான் கடவுளின் உண்மையான ஆலயமும் உடன்படிக்கையின் பேழையும் இருக்கின்றன (திருவெளி 5:6; 11:9). தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், எசாயா எதிரொலியாகக் கேட்ட ''தூயவர்'' என்ற சொல்லால் இறைவனை மகிமைப்படுத்துகின்றனர் (திருவெளி 4:2-11; எசா 6:1தொ); மகனாகிய செம்மறியையும் மகிமைப்படுத்து

கின்றனர் (திருவெளி 14:1). அவரே தனது நிறைவழிபாட்டில் அவர்களை ஒன்றிணைக்கும் பொருட்டு, அவர்களை அரசகுலக் குருக்களாக்கியுள்ளார் (5:9-13).

நம்மைக் கிறிஸ்துவோடு இணைக்கும் சடங்குகள் அவரது விண்ணக வழிபாட்டுடன் நம்மை ஒன்றிக்கச் செய்வன. இவை ஒரு சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளை எதிர்பார்க்கின்றன. திருமுழுக்கால் நாம் பாவத்திற்கு இறந்து உயிர்த்த கிறிஸ்துவின் புனித வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம் (உரோ 6:1-11; கொலோ 3:1-10; 1 பேதுரு 1:14). எனவே, பாவம் செய்வதென்பது ஒருவன் இயேசுவின் இரத்தத்திலும் உடலிலும் பங்குபெறத் தன்னையே தகுதியற்றவன் ஆக்கிக் கொள்வதாகும். அதில் அவன் பங்கு பெற்றால் தன்னையே தண்டனைக்கு உள்ளாக்கிக் கொள்கிறான் (1 கொரி 11:27). மறுபுறம் கிறிஸ்துவைப் பின்பற்றவும், அவரை நிலையான பிரமாணிக்கத்துடன் அர்ப்பணமாக்கத் தூண்டிய அன்பில் தம்மை இணைத்துக் கொள்ளவும் ஒருவன் உயிருள்ள பலியாக அளிக்கும்போது கடவுள் அவனை ஏற்றுக்கொள்கிறார் (எபே 5:1; உரோ 12:1தொ; 1 பேதுரு 2:5; எபி 12:28). நமது வழிபாடுகளில் இறைவனை வழிபடும்போது நாம் பாடும் புகழ்க் கீதங்கள் இறைவனுக்கு என்றென்றும் மாறாத நன்றியறிதலாகும். நம் நன்றியைப் புகழ்ப்பாடலாக இயேசு கிறிஸ்துவான மகன் வழியாக தந்தைக்குச் செலுத்துகிறோம் (கொலோ 3:12-17).

இ) அந்த இறுதிநாளில் இந்தச் சடங்குகள் எல்லாம் முடிவுறுகின்றன. செம்மறி வரும்வரை இதனைக் கொண்டாடுகிறோம். அதன் பிறகு மணமகனின் அழைப்பை ஏற்று மணமகள் திருமணத்தை நிறைவு செய்யப் போகிறாள் (1 கொரி 11:26; 16:22; திருவெளி 19:7; 22:17). அதன்பிறகு ஆலயம் இறைப்பிரசன்னத்தை அடையாளமாக உணர்த்தாது. விண்ணக எருசலேமில் கடவுளின் மகிமை தன்னையே இனிமேல் அடையாளங்களின் வழியாக உணர்த்தாது (திருவெளி 21:22). ஏனெனில், முடிவில்லாத அந்தப் புனித நகரத்தில் கடவுளை வழிபடும் பணியாட்கள் இனிப் பாவிகள் அல்லர், புதல்வர்கள். ஏனெனில், கடவுளின் மற்றும் செம்மறியின் மகிமையால் அவர்கள் ஒளிர்விக்கப் பெற்று அவரில் மகன்களாக மாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் இறைத்தந்தையை முகமுகமாய்க் கண்டு உயிருள்ள நீரூற்றாம் ஆவியில் நீர் பருகுவர் (திருவெளி 21:1-7.23; 22:1-5).

வழிபாட்டுத்திருநூல், லேவியர் திருநூல் (LEVITICUS, BOOK OF)

1. பெயர்: ஐந்நூலின் மூன்றாம்பகுதி எபிரேய மொழியில், அதன் தொடக்கச் சொற்களால் ''அவர் அழைத்தார்'' என்றழைக்கப்பட்டது. ''எழுபது நூல்'', கிரேக்க மொழியில், இப்பகுதியை லேவியர் சட்டம் என்றழைத்தது. நாம் தமிழில் லேவியர் திருநூல் என்றழைக்கிறோம். இப்பெயர் பொருத்தமுடையதே. ஏனெனில், நூலின் பெரும்பகுதி லேவியர் குருத்துவத்தின் சடங்குக் கடமையில் கவனம் செலுத்துகிறது. இந்நூல் அவர்களின் வழிபாட்டுக் கையேடாகும். ஆகவே வழிபாட்டுத் திருநூல் என்றும் அழைக்கப்படுகிறது. மேலும், இஸ்ராயேலர் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் கொண்டிருக்க வேண்டிய கறையற்ற தூய்மையின் இன்றியமையாமையை அவர்களுக்கு இந்நூல் போதிக்கிறது. நூல் முழுவதும் பெரும்பாலும் சட்டங்களையும் வழிபாட்டு ஒழுங்குகளையும் கொண்டிருப்பதால், வரலாற்றைப் பொருத்தமட்டில், இந்நூலால் முன்னேற்றம் இல்லை. மாறாக, வரலாற்றின் ஓட்டத்தை இந்நூல் ஒரு விதத்தில் தடைசெய்கிறது எனலாம்.

2. ஆசிரியர்: ஐந்நூல் முழுவதையும் எழுதிய ஆசிரியரைப் பற்றிய சிக்கலை ஐந்நூல் பற்றிய கட்டுரையில் காணலாம். இதை, ஆசிரியரைப் பற்றிய இக்காலக் குறுகிய கருத்தோடு நோக்கக் கூடாது. இந்நூலுக்கு மோசேயைப் போல் வேறு எவரும் அவ்வளவு பொறுப்பாளியல்லர். மோசே பெரும் சட்டம் அளித்தவர். உண்மையில் அவரே இஸ்ராயேலின் ஆதிவழிபாட்டு முறைகளை ஒழுங்கு செய்தவர். ஆயினும்,

லேவியர் நூலின் இறுதி வடிவம் மோசேக்குப் பல்லாண்டுகளுக்குப் பிந்தியதாகும்; பாலைவனத்தில் நடந்தேறிய வழிபாட்டிலிருந்து பெரிதும் வேறுபட்டதாகும். அதன் பலி ஒழுங்குகளும், குருவை நியமித்து திருநிலைப்படுத்தும் சடங்குகளும், நன்கு வளர்ச்சியடைந்த சமூகத்தில் தோன்றியனவாகத் தெரிகின்றன. இவை இஸ்ராயேல் நகர வாழ்வை ஏற்று, ஆலயத்தை மையமாகக் கொண்ட வழிபாட்டையும் ஏற்று, நிலையாக நன்கு அமைக்கப் பெற்ற சமூகத்தில் எழுந்திருக்க வேண்டும். அச் சமூகத்தோடு வழிபாடும் வளர்ந்திருக்க வேண்டும். பல நூற்றாண்டுகளாக மோசேயின் சட்டங்களை அவரவர் காலத் தேவைக் கேற்பத் திருத்தி அமைப்பதில் பலரும் ஈடுபட்டிருந்தனர். ஆகையால், லேவியர் நூல் வளர்ச்சியில் பலரும் பங்கெடுத்துள்ளனர் என்பது இப்போது பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மையாகும். எனவே, இன்னார்தாம் எழுதினார் என்று ஒருவரை மட்டும் சுட்டிக் காட்டுவது இயலாத செயலாகும். ஆயினும், சீனாய் மலைப்போக்கு இந்நூல் முழுவதும் பரவி நிற்கிறது. இச்சட்டத் தொகுப்புக்கு நாடக மேடை சீனாய்மலை அடிவாரமாகும்; மோசேயே இயக்குநர். இவை, இந்நூலுக்கு மூலம் யார் என்பதையும், அதன் போக்கு யாருடையதென்பதையும், அதற்கு அதிகாரத்தன்மை கொடுப்பவர் யார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. மோசேயே இந்நூலின் ஊற்றுமூலம் ஆவார். அந்த அளவில் அவரே இந்நூலுக்கு ஆசிரியராவார்.

3. தோற்றமும் காலமும்: ஐந்நூலில் காணப்படும் பெரும் பாரம்பரியங்களில் இந்நூலின் தோற்றத்தைத் தேட வேண்டும். ஆதியாகமம், யாத்திரை நூல், எண்ணாகமம் ஆகிய நூல்கள் பல மூலங்கள் சேர்ந்த திரட்டாகும். மாறாக, இந்நூலில் காணப்படுவது பெரும்பாலும் முழுவதுமே குருக்கள் பாரம்பரியமாகும். குருக்கள் குழுவில் வளர்ச்சி அடைந்த இந்நூல், அக்குழுவின் சிறப்பான வேலைப்பாடாகும். இது மோசேயில் தோற்றங் கொண்டது. அவருடைய சட்டங்களால் ஆழ்ந்த விதத்தில் பாதிக்கப்பட்டது.

இந்நூல் எழுத்து வடிவம் எடுத்த வரலாறு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ந்து நீடியதொன்றாகும்; சிக்கல் மிக்கதுமாகும். இந்நூலில் வரும் செய்திகளில் பல மிகப் பழமையானவையாகும். இவை இஸ்ராயேல் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிக் குடியேறிய தொடக்க காலத்தைச் சேர்ந்தவை. இவற்றில் சில கானானியரின் பழக்கவழக்கங்களிலிருந்து எடுத்துத் திருத்தி அமைக்கப்பட்டன; பல இஸ்ராயேலின் புனித இடங்களில் தோன்றி, குருக்களால் காக்கப்பட்ட தனிச்சிறு தொகுதிகள்.

காலம் குறிக்க வேண்டுமென்றால், எபிரேய மன்னராட்சியின் இறுதிக் காலத்தில் இந்நூல் முதன் முதல் எழுத்து வடிவில் தோன்றியிருக்கலாம். கி.மு. 587-இல் தென்னரசாகிய யூதாவும் வீழ்ந்தது. இவ்வாண்டை ஒட்டி, அதாவது கி.மு. 7-ஆம் நூற்றாண்டின் முடிவில் அல்லது 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எருசலேம் குருக்கள் ''புனிதத்தின் சட்டத்தைப்'' (லேவி 17-26) பதிப்பித்திருக்க வேண்டும். இப்பதிப்போடு லேவியர் திருநூல் எழுத்து வடிவம் எடுத்தது எனலாம். இப்பதிப்பு பிற்காலக் குருக்கள் குழுவின் நூல்களாலும், எசேக்கியேல் ஆகமத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது, வளர்ச்சியடைந்தது.

நாம் கொண்டிருக்கும் வடிவில், லேவியர் திருநூல் இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் (கி.மு. 538) உருவெடுத்திருக்க வேண்டும். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின், ஆலயம் மீண்டும் கட்டப்பட்டது; வழிபாடு திருத்தி அமைக்கப்பட்டது. குருக்கள் குழு இதனைச் செய்தனர். இக்காலத்தில் குருகுல ஆசிரியர்கள் புனிதத்தின் சட்டத்தை மீண்டும் பதிப்பித்தனர். நாடு கடத்தப்பட்ட காலத்தில் புனிதத்தின் சட்டம் பல இடைச் சேர்க்கைகளை ஏற்றுக்கொண்டது. அத்துடன் பலிகள் பற்றிய சட்டங்கள் (லேவி 1-7), குருக்களைத் திருநிலைப்படுத்தும்

சடங்கு *(8-10)*, சட்டத்தூய்மை பற்றிய ஒழுங்குகள் *(11-15)*, பாவப்பரிகாரச் சடங்கு *(16)* ஆகியவையும் சேர்க்கப்பட்டன. 27-ஆம் அதிகாரம் நேர்ச்சிகளை மாற்றுவதைப் பற்றிக் கூறுகிறது. இஃது இன்னும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாகும். நாம் கொண்டிருக்கும் வடிவில், லேவியர் திருநூலின் நோக்கம், நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய எபிரேய மக்களுக்கு மறைவாழ்வு பற்றிய எல்லாச் செயல்களையும் ஒழுங்கு செய்தலாகும். சிறப்பாக, ஆலய வழிபாட்டை ஒழுங்குமுறை செய்தலாம்.

4. திட்டம்: லேவியர் திருநூலில் சில பகுதிகளில் பல செய்திகள் காணப்படுவதால், இந்நூலைத் திட்டம் செய்வது கடினம். ஆயினும், பொது அமைப்பைப் பின்பற்றி பின் வருமாறு திட்டம் செய்யலாம்.

1) பலிவகைகளும் பலிமுறைகளும் *(1:1-7:38)*.

1:1-17 : தகனப்பலி.

2:1-16 : உணவு, தானியக் காணிக்கைகள்.

3:1-17 : சமாதானக் காணிக்கை, ஒன்றிப்புப் பலி.

4:1-5:13 : பாவப் பரிகாரக் காணிக்கைகள்.

5:14-6:7 : குற்றப் பரிகாரக் காணிக்கைகள்.

6:8-13 : அன்றாடத் தகனப்பலி.

6:14-23 : அன்றாட உணவு, தானியக் காணிக்கை.

6:24-30 : பாவப்பரிகாரப் பலி.

7:1-10 : குற்றப் பரிகாரப்பலி.

7-11-21. 28-34 : சமாதானப்பலி.

7:22-27 : இரத்தமும் கொழுப்பும் தடைசெய்யப்படுதல்.

7:35-38 : முடிவுரை.

இப்பகுதி, பலி வகைகளையும், சடங்கு முறைகளையும் விவரிப்பதோடு, குருக்கள் அல்லாதவர்களுடைய உரிமை, சடங்கு முறை ஆகியவற்றையும் விவரிக்கிறது.

2) குருத்துவத் திருநிலைப்படுத்தும் சடங்கு *(8:1-10:20)*.

8:1-13 : ஆரோனும் அவர் புதல்வர்களும் திருநிலைப்படுத்தப் படுதல்.

8:14-36 : திருநிலைப்படுத்தும்போது பலிகள்.

9:1-24 : திருநிலைப்படுத்திய பின் எண் கிழமைகள்.

10:1-20 : குருத்துவப் பணியின் பெரும் பொறுப்பு.

லேவியர் திருநூல் முழுவதும் சட்டங்களையே கொண்டிருந்தாலும், இதில் இரு சிறு நிகழ்ச்சியுரைப் பகுதிகள் உள்ளன. அவை ஆரோனும் அவருடைய புதல்வர்களும் திருநிலைப்படுத்தப்பெறுதலையும், அவருடைய புதல்வர் நாதாபு, ஆபியூ ஆகியோரின் மரணத்தையும் பற்றியனவாகும். ஆரோனும் அவருடைய புதல்வர்களும் திருநிலைப்படுத்தப்பட்டது பற்றிய விரிவான விவரிப்பு, வரலாற்று நிகழ்ச்சியை விவரிப்பதைக் காட்டிலும், குருக்கள் திருநிலைப்படுத்தப்படுவதைப் பற்றிய சட்டத்தைக் கொடுக்கும் நோக்கத்தோடு விவரிக்கப்படுகிறது. ஆரோனுடைய புதல்வர் இருவருடைய வேளை தவறிய மரணம், வழிபாட்டுச் சடங்கில் தூய்மையானவைகளோடு உலகியலான செயல்களைக் கலப்பதின் தீமையையும், கடுமையையும், அதன் விளைவையும் எடுத்துக் காட்டுகிறது.

3) சட்டத்தூய்மை *(11:1-15:33)*.

11:1-47 : சுத்த, அசுத்த விலங்குகள், பறவைகள்.

12:1-8 : குழந்தையின் பிறப்பு.

13:1-14:57 : தொழுநோய்.

13:1-46 : மனிதரில் தொழுநோய்.

13:47-59 : உடையில் தொழுநோய்.

14:1-32 : சுத்திகரம்.

14:33-57 : கட்டடங்களில் தொழுநோய்.

15:1-33 : ஆண், பெண், பாலினச் சுத்தம்.

இப்பகுதியில் இறைவனுக்கு முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட மக்களிடமிருந்து கோரப்படும் சட்டத்தூய்மை விரிவாகக் கொடுக்கப்படுகிறது. வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் கறையற்ற தூய்மை, முழுமை இருக்க வேண்டும்.

4) பரிகார நாள் (16:1-34).

எல்லா மக்களின் பாவத்தீட்டையும் போக்க பரிகாரச் சடங்குகள் செய்யப் பட்டன.

5) புனிதத்தின் சட்டம் (17:1-26:46).

17:1-16 : இரத்தத்தின் தூய்மை.

18:1-30 : புணர்ச்சித் தூய்மை.

19:1-37 : ஒழுக்கம் பற்றிய பல விதி கள்.

20:1-27 : தீச்செயல்களுக்குத் தண்டனை.

21:1-24 : குருக்களுடைய புனிதம், ஒழுக்க முறை.

அ) 21:1-9 : குருக்கள்.

ஆ) 21:10-15 : பெரிய குரு.

இ) 21:16-27 தடைகள்.

22:1-33 : பலிகள் பற்றிய ஒழுங்கு கள்.

அ) 22:1-9 : குருக்கள்.

ஆ) 22:10-16 : குருக்கள் அல்லாதோர்.

இ) 22:17-33 ஏற்றுக்கொள்ளத்தகாத பலிப்பொருட்கள்.

23:1-44 : புனிதநாட்கள்; வழி பாட்டு ஆண்டு.

அ) 23:1-3 : ஓய்வு நாள்.

ஆ) 23:4-14 : பாஸ்குவிழா, புளியாத அப்பவிழா, முதற்கனிகள்.

இ) 23:15-22 : ஐம்பதாம் நாள் விழா.

ஈ) 23:23-26 : புத்தாண்டு.

உ) 23:27-32 : பரிகாரத்திருநாள்.

ஊ) 23:33-44 கூடார விழா.

24:1-23 : புனிதப் பொருட்கள்.

அ) 24:1-4 : திருத்தல விளக்கு.

ஆ) 24:5-9 : திருமுன் அப்பம்.

இ) 24:10-16 : இறைவன் திருப்பெயர்.

ஈ) 24:17-23 மனித உயிர்.

25:1-55 : புனித ஆண்டுகள்.

அ) 25:1-7 : ஓய்வு ஆண்டு.

ஆ) 25:8-55 : யூபிலி ஆண்டு.

26:1-46 : வெகுமதியும் தண்டனை யும்.

இப்பகுதி லேவியர் திருநூலின் மூலக் கருப்பொருளாகும். இஸ்ராயேலின், ஒழுக்க, சட்டப் புனிதம் யாவேயின் புனி தத்தையே எடுத்துக்காட்ட வேண்டும். மனி தன் இறைவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; இதற்குமேல், அவரையே பின்பற்ற வேண் டும். ''நாம் உங்கள் கடவுளாகிய ஆண்ட வர்; நாம் பரிசுத்தராய் இருப்பதுபோல் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்'' (லேவி 19:2). இப்பகுதியில் இறைமக்கள் புனித ராய் 'இருக்க வேண்டியதன் தேவையும், அப்புனிதத்தின் சிறப்பும் அழுத்திக் கூறப் படுகின்றன.

6) நேர்ச்சைகளின் மதிப்பீடும் மீட்டலும் (27:1-34).

முன் சொன்னதுபோல் இவ்வதிகாரம் பிற்காலச் சேர்க்கையாகும். இது, நேர்ச்சி கள், பத்தில் ஒரு பாகவரி ஆகியவற்றை யும், அவற்றிற்குப் பதிலாக அளிக்கக்கூடிய வற்றையும் விவரிக்கிறது.

5. சிறப்புக் கருத்துக்கள்: பின்வருவன வற்றில் இந்நூலில் காணப்படுபவற்றோடு, பிற நூல்களில் காணப்படும் செய்திகளை யும் சேர்த்துத் தருகிறோம். இம்முறை இக்கருத்துக்களின் முழுமையை அறிய உதவும் என்பது எமது நம்பிக்கை.

5. 1) பலி வழிபாடு: இறைவனுக்குப் பலி செலுத்துதல் எல்லா மதங்களிலும் உண்டு. ஆனால், இது விவிலியத்தில் சிறப்பான இடம் வகிக்கிறது. பழைய ஏற்பாட்டில் பலி செலுத்துதல், மக்களிட மிருந்து இறைவன் கோரும் வழிபாட்டு முறையாகும்; அவரது சித்தத்தின் விளை வாகும்; அவருடைய போதனைகளின்படி நடப்பதாகும். ஐந்நூல் சட்டங்கள் இப்பலி வகைகளையும், அவை செய்யப்பட வேண் டிய முறையையும் ஒழுங்கு செய்கிறது. ஆனால், முழுவதும் ஒருமைப்பாட்டுடன் அமையவில்லை. காலப்போக்கில் பல மாற்றங்கள் தேவையாயிற்று. சிலவற்றில் பழையனவற்றை விரிவாக்க வேண்டியிருந் தது; சிலவற்றில் திருத்தம் செய்ய வேண்டி யிருந்தது. மற்றவற்றை முழுவதுமே நீக்க வேண்டியிருந்தது. இப்படியாகப் பழையன வும் புதியனவும் அருகருகே காணப்படுகின் றன. ஆகையால், சில விவரங்கள் எப்படி வளர்ச்சியடைந்தன என்பது பற்றித் தெளி வாகக் கூற முடியாது. இவ்வழிபாட்டுச் சட்டங்கள் பிற மதச் சட்டங்களோடு சிலவற்றில் ஒத்திருக்கலாம். அதற்காக, மதங்கள் பற்றிய பொது வரலாறு அடிப் படையில் இவற்றை விளக்கக்கூடாது. பிற மதங்களிலிருந்து பழைய ஏற்பாட்டு மதத்தை, இறைவனைப் பற்றிய கருத்தும் விசுவாசமும் எவ்வளவு பிரித்துச் சிறப் பித்துக் காட்டுகின்றனவோ, அவ்வளவுக்கு இச்சட்டங்களும் அதன் பொருளும் பிறமதச் சட்டங்களிலிருந்து வேறுபட்டவை, சிறப் புடையவை. இந்தப் பலி வழிபாடு யாவே யிடம் கொண்ட விசுவாசத்தால் உந்தப்படு வது; அதனால் உயிர்பெறுவது.

இறைவனுக்குக் கொடை அளித்தல் என் பது இறைவனுக்கே உரிய சொத்தாக, தனிச் சிறப்பான சடங்குகளுடன் கொடையாக அளிக்கப்படுவது ஆகும். அவை முழுவதும் பீடத்தின் மீது எரிக்கப்பட்டாலும், அல்லது ஒரு பகுதி குருவுக்காகவோ, கொடை அளிப்பவனுக்காகவோ எரிக்கப்படாது தனித்து வைக்கப்பட்டு மீதி எரிக்கப்பட்டா லும், அச்சடங்கின் வழியாகப் பலியாகுகின் றன. ஏனெனில், அவை முழுவதும் இறை வனுக்கே உரியதாகும். பலி ஒரு கொடை, ஒரு காணிக்கையாகும்; மனிதன் தன்னிட முள்ள உன்னதமானதையும் விலையுயர்ந்த தையும் கொடையாக அளிப்பதாகும். பலி யின் சிறப்பானகூறு, சடங்கு வழியாக சொந்த அர்ப்பணமும் ஆகும். கொடை ஒரு புற அடையாளமேயாகும். அது கொடை அளிப்பவனது உள்ளத்தை எடுத்துக் காட்டு கிறது. பலி ஒருவனுடைய ஆராதனையை யும், நன்றியறிதலையும், மன்றாட்டையும், குற்ற மனப்பான்மையையும் அல்லது பரி கார மனப்பான்மையையும் எடுத்துக் கூறுவ தாக அமையலாம். அடிப்படையில் பலி இறைவனோடு கொள்ளும் ஒரு சந்திப்பா கும். முழுமையும் புனிதமிக்க இறைவனுக் கும், தூய்மையற்ற மனிதனுக்கும் உள்ள ஆழ்ந்த இடைவெளி அகற்றப்பட்டு, இரு வருக்குமிடையே ஒன்றிப்பு ஏற்பட ஏதுவா கிறது. பலியினால் மனிதன் இறைவனது புனிதத்தின் சூழ்நிலையில் நுழைகிறான்.

பொருட்களைப் பொருத்தமட்டில் பழைய ஏற்பாட்டில் பலிகள் இரத்தம் சிந்திய பலிகள், இரத்தம் சிந்தாத பலிகள் என இருவகையாகப் பிரிக்கப்படும். இரத் தம் சிந்தாத பலிகளாகத் தானியங்கள், எண்ணெய், தூபம், உணவு முதலியவை ஒப்புக் கொடுக்கப்பட்டன. எருது, செம்மறி யாடுகள், வெள்ளாடுகள் போன்ற விலங்கு கள் இரத்தம் சிந்திய பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டன. சில சமயம் பாலினம் பார்த்து இப்பலி செலுத்தப்பட்டது. மந்தை யிலிருந்து எடுக்கப்படும் பலிப்பொருள் ஏழுநாள் வயது உடையதாக இருக்க வேண்டும். முழு உயிருள்ளதாக இருக்க வேண்டும். எல்லாம் வல்ல இறைவனுக்கு அளிக்கப்படுவதால், பலியாக ஒப்புக் கொடுக்கப்படும் விலங்கு ஒரு மாக மறு

அற்றதாக இருக்க வேண்டும். குறையுள்ள விலங்கைப் பலியிடுதல் இறைவனுக்கு அளிக்கும் அவமரியாதையாகும்; பக்தி முயற்சியுமன்று.

பலிப்பொருள் உயிர் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதிலும் மனிதனது வாழ்வை நெருங்கிய விதத்தில் சார்ந்ததாக இருக்க வேண்டும். அவனது உழைப்பின் பயனான தாக இருக்க வேண்டும். அதன் விளைவாக அவை மனிதனைக் குறிக்கும் அடையாள மாக மாறுகின்றன. அவற்றின் வழியாக மனிதன் தன்னையே இறைவனுக்கு அளிக் கிறான். பலிப்பொருள், பலி ஒப்புக்கொடுக் கும் சமூகத்தின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புள்ளதாக இருக்க வேண்டும். எந்தப் பொருளையும் பலியாக ஒப்புக் கொடுத்துவிட முடியாது. ஒருவனது சொந்தப் பண்பாட்டின் பயனான ஒன்றையே பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். பலிகள் பற்றிய எபிரேயச் சட்டம் எருது, ஆடு, போன்ற வீட்டு விலங்குகளை யும், புறா போன்ற பறவைகளையும், தானியங்கள், பழங்கள் போன்ற நிலத்தில் பயிர் செய்யப்படும் பொருள்களையுமே பலிகளாக ஒப்புக் கொடுக்கலாம் என்று தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

5. 2) பலிசெலுத்தும் சடங்கு-

முதற்படி: பலி விலங்கு புறமுற்றத்திற்குள் யாவேயின் திருமுன் பலி கொடுப்போரால் கொண்டு வரப்படுகிறது. அங்கே அதைப் பெற்று குரு சோதித்துப் பார்ப்பார். உடன் படிக்கைக் கூடாரத்தின் புற முற்றமே பலி செலுத்துவதற்கு முறையான இடமாகும். இதற்கு விலக்கு உண்டு *(யோசு 8:30-31; நீதி 2:5; 1 சாமு 6:15; 9:12; 7:17).*

இரண்டாம் படி: பலிப் பொருளின் மேல் கை விரித்தல். இச்செயலுக்குப் பல பொருள் உண்டு. பொதுவாக, தகனப்பலி, சமாதானக் காணிக்கை, பரிகாரப்பலி ஆகி யவை நிகழும்போதும் இச்சடங்கு எப்போ தும் செய்யப்பட்டது. பொதுவாக, பலியில் இச்செயல் காணிக்கை அளிப்பதையும், உடைமை உரிமையைக் கையளிப்பதையும் உணர்த்திற்று. மனிதன் காணிக்கைப் பொருள்மேல் தனக்குரிய உரிமையைக் கைவிட்டு, இறைவனிடம் முழுவதும் சரண் புகுவதையும் எடுத்துக்கூற இச்செயல் பயன்பட்டது.

மூன்றாம்படி: பலி விலங்கைக் கொல்லு தல். பலி கொடுப்பவரே இதைச் செய்வார். அப்போது குரு இரத்தத்தை ஒரு கலத்தில் பிடித்து வைப்பார். இதைப் பரிகாரச் சடங்கின் தெளித்தலுக்குப் பயன்படுத்து வார். பழங்காலத்துக் கருத்துப்படி மனிதனி லும் *(ஆதி 4:10;யோபு 16:19)*, விலங்குகளி லும் *(லேவி 17:11.14; உப 12:23)* ஆன்மா (உயிர்) இரத்தத்தில் தங்கியிருப்பதாகவும், இரத்தத்தோடு வெளிவருவதாகவும் கருதப் பட்டது. ஆகையால், இரத்தத்தைக் குடித் தல் கூடாது. மாறாக, உயிரின் உன்னத ஆண்டவர் என்ற அளவில் இறைவனுக்கு மட்டுமே அஃது ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும். ''உடலின் உயிர் இரத்தத்தில் அமைந்துள்ளது. இதை நாம் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆன்மாக்களுக்காகப் பாவப் பரிகாரம் செய்வதற்கும், உங்கள் ஆன்மா வின் சுத்திகரத்திற்கு உதவுவதற்கும் அல்லவோ உங்களுக்குத் தந்தருளினோம்'' *(லேவி 17:11)*. இரத்தம் உயிருள்ள ஆன்மா தங்கும் இடமாதலால், அது பரிகாரம் செய்யும் ஆற்றலையும் கொண்டதாகக் கரு தப்பட்டது. இவ்வாறு லேவியர் சட்டத்தில் இரத்தம் மற்ற உலகியல் பழக்கத்திற்குப் புறம்பாக்கப்படுகிறது. மேலும், இஸ்ராயே லின் பலி வழிபாட்டில் இரத்தம் பரிகாரம், ஒப்புரவு ஆகிய உன்னதமான பொருளை யும் பெறுகிறது. ஆனால், பலி கொடுப்பவ ரிடம் சரியான மனப்பண்பு இல்லாவிடில் இந்த இரத்தத்திற்குப் பொருளேயில்லை.

நான்காம்படி: பலிப் பொருளின் ஊனை எரித்தலாகும். இப்படி ஊன் எரிக்கப்படுவ தால், பலிப்பொருள் எல்லா உலகியல் பழக்கத்திலிருந்தும் முழுவதும் நீக்கப்படு கிறது. பலிப்பொருள் முழுவதும் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் மட்டும் எரிக்கப்பட்டன. பின்னதில், மீதிப்பகுதி பலியுணவு விருந்தில் பயன்பட்டது.

5. 3) பலிவகைகள்: அ) தகனப்பலி அல்லது அவிப்பலி: பலிப்பொருள் முழுவதும் எரிக்கப்படுவதால் இப்பலி இப்பெயர் பெறுகிறது. இப்படி எரிக்கப்படுவது இறைவனுக்குச் செலுத்தும் தலை சிறந்த ஆராதனையை உணர்த்துகிறது. இப்பலிக்கு இடைவேளையேயில்லை. ஆகையால், இது நித்திய பலி என்றழைக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் ஒரு செம்மறி கொல்லப்பட்டு, பகலும் இரவும் முழுவதும் எரிக்கப்பட்டது (லேவி *6:9-13*).

ஆ) பாவப்பரிகாரப் பலி: இப்பெயர் குறிப்பது போல் பாவங்களுக்குப் பரிகாரமாக இப்பலி செலுத்தப்பட்டது. இங்கே குறிக்கப்படும் பாவம் ''அகந்தையினாலே துணிந்து செய்யப்பட்டது'' அன்று. இப்பாவத்திற்குச் சாவுதான் பரிகாரம் (எண் *15:30-31*). இங்குக் குறிக்கப்படும் பாவங்கள் ஆத்திரத்தில் செய்யப்படும் குற்றங்கள், லேவியருடைய தூய்மையின்மையால் எழும் பலி செலுத்தத் தகுதியின்மை போன்றவையாகும். இவற்றை நீக்க இப்பலி செலுத்தப்பட்டது. இப்பலியில் பரிகாரம் முதன்மை பெறுவதால் இச்சடங்கில் இரத்தம் பயன்பட்டது. தனிப்பட்டோருக்காக இப்பலி செய்யப்பட்டால், தகனப் பலிபீடத்தின் கொம்புகளில் இரத்தம் தெளிக்கப்பட்டது; குருக்களுக்காகவோ, மக்கள் சமூகத்திற்காகவோ செய்யப்பட்டால், இரத்தம் தூயகத்திற்குள் கொண்டு வரப்பட்டு, திருத்தூயகத்திற்கு முன் தொங்கிய திரையின் மேல் தெளிக்கப்பட்டது. பரிகார நாளில் பலிப்பொருளின் இரத்தம் திருத்தூயகத்துள் எடுத்துச் செல்லப்பட்டது; உடன்படிக்கைப் பெட்டகத்தின் மேலுள்ள தகட்டின் மேலேயே தெளிக்கப்பட்டது. பலியிடப்பட்ட பொருளின் ஊனில் கொழுப்பும், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளும் பீடத்தின்மேல் எரிக்கப்பட்டன. எந்தப் பலியிலாவது, இரத்தம் தூயகத்துக்குள் எடுத்துச் செல்லப்பட்டால், அப்பலிப் பொருளில் பீடத்தில் எரிக்கப்பட்டது போக மீதித்தசை மக்கள் கூடாரத்திற்குப் புறம்பே எரிக்கப்பட்டது; பிற்காலத்தில், நகரத்துக்கு வெளியே எரிக்கப்பட்டது. மற்றப் பலிகளில் தசை குருக்களுக்குச் சொந்தமாயிற்று. அதையும் புற முற்றத்திற்குள் மட்டும்தான் உண்ணலாம் (லேவி *4; 6:25-30; 16*).

இ) குற்றப்பலி: இதற்கும் முன்னதற்கும் தெளிவான வேறுபாடுகள் தெரியவில்லை. இதில் இரத்தம் பீடத்தின்மேல் தெளிக்கப்பட்டது. கொழுப்புப் பகுதிகள் பீடத்தில் எரிக்கப்பட்டன. பலிப்பொருளின் மீதிப் பகுதி குருக்களுக்கு உரியதாயிற்று. இப்பலிக்குச் செம்மறி ஆடு போன்ற சிறு விலங்குகளே பயன்பட்டன. விலங்கின் விலையைக் குரு மதிப்பிட வேண்டும். ஆனால், இதற்குப் பதிலான வேறு பலி அனுமதிக்கப்படவில்லை. இது குற்றப்பலியின் தன்மைக்கு ஒத்ததே. பிறருடைய உடைமைகளைப் பறித்துக் கவர்ந்து கொள்ளுதல் அல்லது அவற்றிற்கு ஊறு செய்தல் போன்ற குற்றங்களுக்குப் பரிகாரமாக இப்பலி கட்டளையிடப்பட்டது. இதில் அழிக்கப்பட்ட பொருளுக்கு ஈடு கொடுப்பது அடங்கியிருந்ததால், இப்பலியோடு இழப்பீடும் கொடுக்க வேண்டும்; அஃதோடு, தண்டனையும் உண்டு. இது பொதுவாகப் பொருளின் விலையில் ஐந்தில் ஒரு பாகமாகும் (லேவி *5:14* தொ; *7:1-7*).

ஈ) சமாதானப் பலி: இதன் சிறப்பு அங்கம் பலியுணவாகும். கொழுப்புப் பகுதிகள் எரிக்கப்பட்டன. பின்னங்கால்கள் குருக்களுக்கு அளிக்கப்பட்டன. மீதி ஊன், பலி உணவில் பயன்படுத்தப்பட்டது. இவ்விருந்தில், பலி கொடுத்தவரின் குடும்பம் முழுவதும், அடிமைகளும் பங்கெடுத்தனர். ஏழ்மை மிக்க லேவியரும் இதில் பங்கு பெற அழைக்கப் பெறுவர் (லேவி *3:7.11-21*). பலியின் பெயரே, அதன் பொருளை உணர்த்துகிறது. இப்பலியில், பலி கொடுப்பவர் தான் இறைவனின் அன்பன் எனக் காட்ட விழைகிறார். இறைவனுக்கும் தனக்கும் உள்ள சமாதான உறவையும், அன்பையும் வெளிக்காட்டவும் உறுதிப்படுத்தவும் இப்பலியை ஒப்புக் கொடுக்கிறார். இக்கருத்து பலியுணவில்

முதன்மை பெறுகிறது. இதில் இறைவனே விருந்தளிப்பவர். பலி செலுத்தியவர் வி ருந் தாளியாவார். விருந்து இருவருக்குமிடை யேயுள்ள அன்பின் அடையாளமும் உறுதியு மாகும். இப்பலியுணவு, மெசியா அரசில் மனுகுலத்திற்கு யாவே தயாரிப்பதாக அடிக் கடி வேதநூலில் கூறப்படும் உணவுக்கு எடுத்துக்காட்டாகும்.

சத்தியம் செய்யும்போது ஒப்புக் கொடுக் கப்படும் பலியும், போற்றுரைப் பலியும், நன்றிப்பலியும் சமாதானப் பலியின் சிறப்பு வடிவங்களாகும். இப்பலிச் சடங்கு மகிழ்ச்சி மிக்கதாகும்.

உ) உணவுக் காணிக்கை: இஃது இரத்தம் சிந்தாத பலிவகையைச் சேர்ந்ததாகும். தானிய வகைகள் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்டன. தானியங்கள் அப்படியே அளிக்கப்படவில்லை. மாவா கவோ, புளியாத அப்பமாகவோ மற்றும் ஏதாவதுஒரு வகை உணவாகவோ அளிக்கப் பட்டன. எண்ணெய் உணவுக் காணிக்கை யோடு கலந்து ஒப்புக் கொடுக்கப்பட்டது. இவற்றோடு உப்பும் தூபப்பொருட்களும் ஒப்புக் கொடுக்கப்பட்டன. உணவுக் காணிக்கையில் ஒரு பகுதி மட்டும் தூபத் தோடு பீடத்தில் எரிக்கப்பட்டது. மீதி யாவும் குருக்களுக்குச் சொந்தமாயின. திராட்சைரசம் பானப்பலியாகப் பீடத்தின் மேல் ஊற்றப்பட்டது. குருக்கள் அளிக்கும் உணவுக் காணிக்கை முழுவதும் எரிக்கப் பட்டது. சிறப்பாகப் பெரிய குரு நாள் தோறும் அளிக்கும் உணவுப் பலி இவ் விதம் முழுவதும் எரிக்கப்பட்டது. உணவுக் காணிக்கை வெளி முற்றத்திலோ, தூயகத் திலோ ஒப்புக் கொடுக்கப்பட்டது. தூபக் காணிக்கை, திருமுன் அப்பம், பிற உணவுக் காணிக்கைகள், திராட்சைரசப் பானப்பலி, தங்க விளக்குத் தண்டின் ஒளி முதலியவை இரத்தம் சிந்தாப் பலிகளில் சிலவாகும். புற முற்றத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் பலிகளில், பெரிய குரு தனக்காகவும் குருகுலம் முழுவதற்காகவும் நாள்தோறும் அளிக்கும் பலியும், இரத்தப்பலி அளிக்க முடியாத ஏழைகளின் பேரில் அளிக்கப் படும் பரிகாரப் பலியும் சிறப்பு மிக்கவை யாகும் *(லேவி 2;5:11-13)*.

5. 4) பழைய ஏற்பாட்டுப் பலியும் பிற சமயப் பலிகளும்: தேவர்களுக்கு உணவு அளித்தல் என்கிற பொதுக் கருத்துக்கு விவிலியத்தில் இடமேயில்லை. யாவே உலகமனைத்திற்கும் ஆண்டவர். அவருக்கு அவருடைய படைப்புகள் உணவளிக்க வேண்டியதில்லை. எல்லா நற்கொடை களையும் அளிப்பவர் யாவே என்று மனி தன் ஏற்று அவரை வணங்க, இப்பலிகள் அவருக்கு ஒப்புக் கொடுக்கப்படுகின்றன. இவ்விதம் இஸ்ராயேலின் வழிபாடு, ஒரு மனிதன் தனது மறை அனுபவத்தை வெளிப்படுத்த, பரந்த வாய்ப்பை அளிக் கிறது. இங்கே மனிதன் பாவ உணர்வை யும், பரிகார மனப்பான்மையையும், பெற்ற உதவிக்கு நன்றி செலுத்துதலையும், ஆரா தனையையும், வணக்கத்தையும் இறைவ னுக்கு எடுத்துக்காட்ட வாய்ப்பு உண்டு. இவ்வழிபாட்டின் புறச் சடங்குகள், மற்றப் பழைய மேற்காசிய சமயச் சடங்குகளோடு சிறிது ஒற்றுமை கொண்டிருக்கலாம். இது யூதர்கள் பிற சமயத்தேவர்களுக்குப் பலி செலுத்தும் பொல்லாங்குக்கு எப்போதும் இடம் அளித்தது. ஆனால், இந்தப் புறச் சடங்குகளுக்கு யாவேயின்பால் கொண்ட விசுவாசம் புதிய பொருளையும் நோக்கத் தையும் அளித்தது.

5. 5) பலியின் நோக்கம்: முதல் பாவத் திற்குப்பின், இறைவனுக்கும் மனிதனுக்கு மிடையே பெரும் ஆழ்ந்தகன்ற பிளவு இருக்கிறது. இஸ்ராயேலை இறைவன் தேர்ந்தெடுத்திருந்தாலும் அவரது சினம் மனுகுலத்தின் மேல் இன்னும் இருக்கிறது. இறைவனுக்கு அளிக்கப்படும் இடை விடாத பலிகளால், இந்த மரண சாபமும் குற்றசாபமும் மனிதனுக்குத் தொடர்ந்து நினைவூட்டப் பெறுகின்றன எனலாம். ஆகையால்தான் இதற்குரிய பரிகாரத்தை, இரத்தம் குறிக்கும் உயிரை இறைவனுக்குச் சரணாகக் கொடுக்கும் மனப்பான்மை யோடு அளிக்கும் இரத்தப் பலியால் மட்டும் செலுத்தக்கூடும். தனிப்பட்ட

உயிரைப் போலவே மக்கள் அனைவரின் உயிரும் எல்லாத் தலைமுறைகளுக்கும் குற்றத்தைச் சுமந்து நிற்கிறது. ஆகையால், எல்லாத் தலைமுறைகளுக்காகவும் ஆண்டு பரிகார நாளையும், நாள்தோறும் காலையும் மாலையும் அளிக்கப்படும் பரிகாரப் பலியையும் ஒப்புக்கொடுக்க வேண்டும். இப்பரிகாரம் தொடர்ந்து நடக்க வேண்டும். இவ்விதம் பலிவழிபாடு, மீட்பைத் தேடும் கட்டாயக் கோரிக்கையாக மாறுகிறது. பழைய ஏற்பாட்டு மறை மேலும் மேலும் உள்ளார்ந்ததாக மாறும்போது விலங்குகளின் இரத்தத்தைக் கொண்ட வழிபாட்டின் வெறுமை மேலும் மேலும் தெளிவாகுகிறது. குற்ற மிக்க மக்களுக்குப் பரிகாரமாகக் குற்றமற்ற மலிதப் பலியால் மட்டுமே இறைவனோடு மக்களை அடிப்படையிலேயே ஒப்புரவாக்கக்கூடும் என்ற மீட்புக் கருத்தின் தோற்றத்தை இறையூழியன் பாடலில் (எசா 53) காண்கிறோம்.

பழைய ஏற்பாட்டுப் பலி வழிபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்ள இவை யாவற்றையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவை வெறும் புறச்சடங்குகள் மட்டும் அல்ல. உள்ளார்ந்த மனப்பக்குவம் இல்லையெனில் இவற்றிற்குப் பொருளேயில்லை. பழைய ஏற்பாட்டின் இறுதிக் காலத்தில் பலரிடையே புறவழிபாடே ஒரு குறிக்கோளாயிற்று. அதனால் இவ்வழிபாடு, தான் இருப்பதற்குரிய காரணத்தை இழந்து விட்டது. இந்நிலையில் கயிற்றால் ஆன சாட்டையோடு இயேசு தோன்றி வணிகர்களையும், வாங்குவோரையும் ஆலயத்திலிருந்து துரத்துகிறார்; பழைய ஏற்பாட்டுப் பலிவழிபாட்டின் தொன்மையான, சரியான மனப்பக்குவத்தை மீளவும் ஏற்படுத்த முயற்சிக்கிறார். பணிவாலும், விசுவாசத்தாலும் மனுகுலம் இறைவனோடு ஒப்புரவாகுதலே இம்மனப்பக்குவமாகும்.

5. 6) வழிபாட்டின் பணியாளர்: குலமுதுவர் காலத்தில் மேலாண்மை உரிமையுள்ள குருத்துவமில்லை. குலத்தலைவர்கள், சென்ற இடங்களிலுள்ள புனித இடங்களில் பொது வழிபாட்டுச் செயல்களை ஆற்றுவர் *(ஆதி 31:54; 46:1)*. ஆதியாகமத்தில் குறிக்கப்படும் குருக்கள், நாடோடியாகத் திரியாத அன்னியரான புற இனத்தைச் சேர்ந்தவர்களாகத் தெரிகிறது *(ஆதி 14:18; 41:45; 47:22)*. தொடக்க காலத்தில் இஸ்ராயேலில் லேவி இனத்தவர் குருக்களுக்குரிய பணிகளைச் செய்யத் தொடங்கினர். இஃது எப்படித் தொடங்கியது என்பது தெளிவாகத் தெரியவில்லை. லேவியரின் பிரமாணிக்கத்திற்குப் பரிசாக பாலையில் குருக்களுக்குரிய பணிகளைச் செய்யும் உரிமை இவர்களுக்கு அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது *(யாத் 32:25-29)*. மோசே சட்டப்படி இஸ்ராயேலின் குருத்துவம் ஆரோனுக்கும் அவருடைய ஆண் வழித்தோன்றல்களுக்கும் மட்டுமேயுரிய பணியாக மாறியது *(யாத் 28:1)*. லேவி இனத்தைச் சார்ந்த மற்றவர்கள் குருக்களுக்கு ஊழியர்களாக அமைக்கப்பட்டனர். இதற்காக இவர்கள் யாவேக்கு அவருடைய உடைமையாக அளிக்கப்பட்டனர். ஒவ்வொரு தலைப்பேறான மகனும் பிறப்பால் யாவேயின் உடைமையாவான். அதே முறையில் லேவியினத்தவர் யாவேயின் உடைமையாவர் *(எண் 3:6 தொ)*. வழிபாட்டுப் பணியாளர் யாவரும் லேவி இனத்தவர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களை லேவியர், குருக்கள், பெரியகுரு ஆக முப்பிரிவாகப் பிரிக்கலாம். லேவியர் குருக்கள் அல்லர். ஆனால், குருக்களுக்கு ஊழியராவார். குருக்கள் ஆரோனின் ஆண் வழித்தோன்றல்கள். பெரிய குரு ஆரோனின் பதவியாகும். அவருக்குப்பின் அவரது குடும்பத்தின் தலைப்பேறான ஆண் மக்கள் இப்பதவியை வகித்தனர். இப்பிரிவு வழிபாட்டு இடத்தின் பிரிவுக்கு ஏற்றதாகும். லேவியர் புறமுற்றத்திலும், குருக்கள் தூயகத்துள்ளும், பெரியகுரு திருத்தூயகத்துள்ளும் பணிபுரிவர்.

அ) லேவியர்: சீனாய்ப் பாலைவனத்தில் மக்கள் செய்த கிளர்ச்சிக்குப்பின் லேவியர், யாவரும் அறிய இறைவனது சேவைக்காகத் திடநிலைப்படுத்தப்பட்டனர். இதுபற்றி *எண் 8:5 22*-இல் வாசித்தறியலாம். இதில்

மூவகைத் தூய்மைப்படுத்தும் சடங்கு உண்டு. இவை இறைப்பணியில் நுழைப வருக்கு இருக்க வேண்டிய உள்ளார்ந்த தூய்மையை எடுத்துக் காட்டுகின்றன. மக்க ளின் தலைவர்கள் தங்கள் கரங்களை லேவியர் மேல் நீட்டிப் பிடித்தனர். பின் ஆரோன் லேவியரைக் கூடாரத்துக்குள் இட்டுச் சென்றார். பிறகு யாவேய்க்கு அவர்கள் அளிக்கும் பணியின் அடையாள மாக தகனப்பலி பீடத்திற்கு அவர்களை இட்டுச் சென்றார். இவ்விதம் அவர்க ளுடைய வழிபாட்டுப்பணி தொடங்கி வைக்கப்பட்டது. முடிவில் ஒரு தகனப்பலி யும், பரிகாரப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட் டன. இச்சடங்கு எல்லாத் தலைமுறைக்கும் செல்லக்கூடியதாகும். ஒவ்வொரு தலை முறையிலும் புதுப்பிக்க வேண்டியதில்லை.

லேவியர், பலிவழிபாட்டில் குருக்க ளுக்குத் துணை புரிந்தனர்; கூடாரத்தைப் பாதுகாத்துத் தூய்மையாய் வைத்திருத்தல், யாத்திரையின்போது கூடாரத்தைத் தூக்கிச் செல்லல், திருமுன் அப்பத்தைச் செய்தல் முதலிய இறைபணியோடு சேர்ந்த செயல் களைச் செய்தனர் (நெகே 11:22தொ); மக்களுக்குச் சட்டத்தைக் கற்பித்தனர் (1 நாள் 26:29). எண் 4:3-இன்படி லேவியர் முப்பது வயதிலிருந்து கடினமான வேலைக் குட்பட்டனர். எண் 8:24-இன்படி 25-ஆம் வயதிலிருந்து எளிய வேலைக்குட்பட்டனர். 50 வயதோடு இப்பணியிலிருந்து ஓய்வு கிடைத்தது (எண் 4:3; 8:25).

வாக்களிக்கப்பட்ட நாடு பங்கீடு செய்யப் பட்டபோது லேவியினத்தவர் தங்களுக் கென ஒரு பகுதியையும் உடைமையாகப் பெறவில்லை. யாவேயே அவர்களுடைய பாகமும் உடைமையும் ஆவார் (எண் 18:20). நாடு முழுவதிலும் நாற்பது நகரங் கள் லேவியர் தங்குவதற்கென ஒதுக்கப்பட் டன. அவற்றில் பதின்மூன்று எருசலே முக்கு அருகிலிருந்தன. இந்நகரங்களில் வசிக்க, சீட்டுப் போட்டு லேவியர் தேர்ந் தெடுக்கப்பட்டனர் (எண் 35: 1-8; யோசு 21) அவர்களுடைய வாழ்க்கைத் தேவை களுக்கு இறைவனே பொறுப்பு. பூமியின் ஆண்டவரும் உடைமையாளரும் என்ற அளவில், இறைவன் வரிகளைப் பெற்றார். இது லேவியர்களுக்குச் சென்றது. பூமியில் விளையும் பொருட்களில் பத்தில் ஒரு பங்கை லேவியர் பெற்றனர். இவர்களும் தங்கள் வருவாயிலிருந்து பத்தில் ஒரு பங்கைக் குருக்களுக்கு அளித்தனர் (எண் 18:21-28). வரிகளிலிருந்தும் போர்ச் சேவை யிலிருந்தும் இவர்களுக்கு விலக்கு உண்டு. இவர்களிடம் மக்கள் தாராளமாய் இருக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப் பட்டது (உப 12:9).

ஆ) குருக்கள்: இவர்கள் தங்கள் குல மரபை ஆரோன் வழியாகப் பெறுகின்றனர். இதை எண்பிக்க எப்போதும் இவர்கள் தயாராக இருக்க வேண்டும் (யாத் 28:1; எண் 3:10; எஸ் 2:62). குருக்களின் பதவியை யும் சலுகைகளையும் உரிமையின்றித் தவ றான முறையில் கைப்பற்றுவது மரண தண்டனைக்குரிய குற்றமாகும். ஆரோனின் கோல் மலர, கொரே, தாத்தான், அபிரோன் ஆகியோர் மடிந்தனர். இந்நிகழ்ச்சியின் விளைவாக குருத்துவம் ஆரோனின் குடும் பத்திற்கே உரியது என்று உறுதி செய்யப்பட் டது. இந்நிகழ்ச்சியின் நினைவாக உடன் படிக்கைப் பெட்டகத்தில் ஆரோனின் கோல் வைக்கப்பட்டது (எண் 16:17கொ). இந்தக் குலமரபுக்கொடி பழைய ஏற்பாட் டின் ஒரு சிறப்பாகும். யூதா இனத்தைச் சேர்ந்த கிறிஸ்துவின் குருத்துவத்தால் பழைய ஏற்பாட்டுக் குருத்துவம் அகற்றப் படுவது பழைய சட்டமே அகற்றப்படு வதற்குச் சமமாகும் (எபி 7:12). மெசியா வின் காலத்தில் லேவியரும் குருக்களும் புறமதத்தினரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படு வர் (எசா 66:21).

குருத்துவத்தின் மேன்மையைக் காக்கும் பொருட்டு, குருக்களின் உடம்பில் ஒரு குறையும் இருக்கக்கூடாது. ஊனமுடை யோர் குருக்களின் பணியிலிருந்து விலக்கப் பட்டனர் ஆனால், குருக்கள் வருவாயில் பங்கு பெற்றனர் (லேவி 21:16-23). இறை வனது திருமுன் அவருக்கு நெருங்கிய அணுக்கத்தில் பணி செய்ய வேண்டியிருப்

பதால் குருக்களிடம் உயர்ந்த ஒழுக்கம் எதிர்நோக்கப்பட்டது. இறைப்பணியிலிருந்து விலக்க வேண்டிய எல்லாத் தூய்மையின்மையும் அவர்கள் தவிர்க்க வேண்டும். தூயகத்தில் பணி செய்யும் காலத்தில் திருமண உடலுறவுகளையும், போதை தரும் பானங்களையும் முழுதும் அகற்ற வேண்டும் (லேவி 21:1-9; அதி. 9-11).

குருக்கள் இறைவனுக்கும் மக்களுக்கும் பிணைப்பேருள்ள நடுவராவர் (எபி 5:1). இச்சலுகை நிறைந்த பதவி, அவர்களின் சொந்த மேன்மைக்காக அளிக்கப்பட்டது அன்று, இறைவன் முன் மக்களுக்காகச் செய்யும் சேவைக்காக அளிக்கப்பட்டதாகும். மக்களின் கவலைகளையும் தேவைகளையும் இறைவன் திருமுன் சமர்ப்பித்து, இறைவனுடைய ஆசீரையும் அருளையும் மக்களுக்கு அளிப்பது குருவின் கடமையாகும். இவ்வாறு, குரு இறைவனுக்கு அண்மையில் உலாவுவதால், குருவை இறைவனது உடைமையாகக் கருதலாம். இவர்கள் இறைவனது சேவைக்காக மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவ்விதம் இறைவனுடைய எல்லைக்குள்ளே குரு நுழைவதால், இறைவனது உடைமையிலும், சிறப்பாக அவரது புனிதத்திலும் ஒரு பங்கு பெறுகிறார். பலிவழிபாடு முழுவதிலும் பங்கு கொள்ளுதலும், பரிசுத்த நெருப்பைக் காப்பாற்றுதலும் குருவின் கடமையாகும். பலியின்போது குருக்களுக்கு லேவியர் உதவி செய்வர். ஆனால், பலியின் சடங்கைக் குருக்கள் மட்டுமே செய்ய வேண்டும். தூயகத்தைக் காத்து, அதைத் தூய்மையாக வைத்திருப்பது, விளக்குத் தண்டுகளைப் போடுவது, திருமுன் அப்பங்களை ஒப்புக் கொடுத்தல், காலை மாலை பலிக்குப் பின் மக்களை ஆசீர்வதித்தல் முதலியவைகளும் குருக்களின் பணிகளாகும். அதோடு மக்களுக்குச் சட்டப் போதிப்பதும் (மலா 2:7), கடினமான வழக்குகளில் நீதி வழங்குதலும் (உப 17:8-12) இவர்களுடைய கடமையைச் சேர்ந்தவையாகும். குருக்கள், பலி செலுத்துவோராவர், ஆசிரியராவர், சட்ட வல்லுநர்களாவர். அவர்களிடத்தில், சமய சமூகக் கடமைகளும் அதிகாரங்களும் நெருக்கிப் பிணைக்கப்பட்டிருந்தன.

குரு தனக்குரிய பதவி ஆடையோடு மட்டும்தான் வழிபாட்டுச் சடங்கில் ஈடுபடலாம். இவ்வாடைகள் சணல் நூலால் நெய்யப்பட்ட கால்சட்டையும், மேலாடையும் ஆகும். மேலாடை கணுக்கால்வரை மூட வேண்டும். ஆடை வண்ணக் கயிற்றால் கட்டப்பட்டது. தலையில் தலைப்பாகை உண்டு (யாத் 28:40-43).

இ) பெரிய குரு: இவர் குருகுலத்தின் தலைவராவார்; ஆரோனின் மரபில் வரும் தலைப்பேற்று ஆண்மகன் ஆவார். அவரது ஆடை, குருக்களின் ஆடைகளோடு, முழங்கால்வரை நீண்ட கருநீல மேலாடையும், மார்புத் தகட்டோடு கூடிய ஏபோது முதலியவையுமாகும். ஏபோது குருக்களின் ஆடைகளில் ஒன்றாகத் தெரிகிறது (சாமு 2:28; 22:18); இது சணல்நூல் ஏபோது என்றழைக்கப்பட்டது. இது வருங்காலத்தை நிர்ணயிக்கவும், கடினமான சட்டச் செயல்களில் தீர்ப்பு வழங்கவும் பயன்பட்ட ஏபோதிலிருந்து வேறுபட்டது. பெரியகுருவின் ஏபோது, இடுப்பு வரை முன்னும் பின்னும் மறைக்கும் ஆடையாகும். இது பொன், நீலம், கருஞ்சிவப்பு, இருமுறை சாயம் தோய்த்த இரத்தநிறம் கொண்ட நூல்கள், முறுக்கிய சணல்நூல் ஆகியவற்றால் விசித்திர வண்ண வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டது. தோள்களை மூடவில்லை. கச்சையால் இடையில் கட்டப்பட்டது. இரு பகுதிகளையும் தங்கம் இழைக்கப்பட்ட தோல்வார்கள் தோள்மேல் இணைத்தன. ஏபோதில் இரண்டு கோமேதகக் கற்கள் அணி செய்தன. இக்கற்களில், இஸ்ராயேலின் பன்னிரண்டு புதல்வர்களின் பெயர்களும் செதுக்கப்பட்டிருந்தன. பெரியகுரு தூயகத்துள் நுழைந்தபோது, இறைவனுக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள நடுவராகத் திகழ்ந்தார்; அன்போடும், அருளோடும் இஸ்ராயேலை நோக்குமாறு யாவேயை வேண்டினார்.

ஏபோதின் உண்மையான பொருளையும் மதிப்பையும் அதை மார்புப் பதக்கத்தோடு இணைத்து உணர வேண்டும். மார்புப் பதக்கம் பை போன்றது; ஏபோதைப்போல் நெய்யப்பட்டிருந்தது. அது நாற்கோணமாகவும், இரட்டையாகவும், நீளத்திலும், அகலத்திலும் ஒருசாண் அளவாகவும் இருந்தது. ஏபோதும், மார்புப் பதக்கமும் நன்றாய் இணைக்கப்பட்டிருந்தன. மார்புப் பதக்கத்தில் இஸ்ராயேலின் புதல்வர்களின் பெயரைக் கொண்ட பன்னிரண்டு இரத்தினங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மார்புப் பதக்கத்தின் மற்ற விவரங்களை யாத் *28:15-30; 39:8-21*-இல் வாசித்தறியலாம். மார்புப் பதக்கப் பையில் யூரிம், தும்மிம் என்ற சொற்கள் பதிக்கப்பட்ட இரு பொருள்கள் இருந்தன. இச்சொற்களின் பொருள் என்ன என்று உறுதியாகக் கூற முடியாது. எழுபது நூல் இவற்றைக் ''கோட்பாட்டு, உண்மை'' என்று மொழி பெயர்த்தது. இந்த உத்தியின் வழியாக இக்கட்டான தீர்மானங்களில் யாவேயின் திருவுளம் அறியப்பட்டது (யாத் 28:29). யூரிம், தும்மிம் என்பவை கற்களாக இருந்திருக்கலாம் என்று எண்ண இடம் இருக்கிறது. ஏபோதும் இறைவாக்கு மார்புப் பதக்கப் பையும் எகிப்து, பழங்கால மேற்காசிய மறைகளைச் சேர்ந்தனவாகத் தெரிகிறது. ஆயினும், யாவேயின் வழிபாட்டோடு ஒன்றும்போது தனிச்சிறப்பும், பெருமையும், மதிப்பும் பெறுகின்றன.

பெரிய குருவின் தலையிலே தங்கத் தகட்டோடு கூடிய தலைப்பாகையுண்டு. தலையில் ''ஆண்டவருக்கு அர்ப்பணித்து ஒதுக்கப்பட்டவர்,'' என்ற சொற்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இது தலைமைக் குருவைத் தனிப்பட்ட விதத்தில் யாவேயின் உடைமையாக்கியது. மற்றவர்களைவிடச் சிறந்த முறையில் இவர் இறைவ[illegible] மக்களுக்கும் இடையேயுள்ள நடு[illegible] பரிந்துரைப்பவராவார். தலை[illegible]க் குரு விரும்பினால் குருக்கள் [illegible]வல் அனைத்தையும் செய்யலாம். பரிகாரப் பெருநாளில் மக்கள் அனைவர்க்கும் பரிகாரம் செய்வதும், பெரும் சிறப்புக் காரியங்களில் இறைவாக்கு அருளுவதும் பெரிய குருவின் சிறப்பு அலுவல்களாகும். குருத்துவம் முழுவதன் மேலும் இறைவழிபாட்டிலும், ஆலயக் கருவூலத்தின் மேலும், பெரிய குரு முழு அதிகாரம் கொண்டிருந்தார். சமயப் பணிகளில் அவரது தீர்ப்பே இறுதியானது.

ஈ) வரலாறு: நீதிபதிகள் காலத்தில் இஸ்ராயேல் ஒரே இடத்தில் நிலையாகத் தங்கி வாழத் தொடங்கியபோது, கானானியரின் பழைய புனித இடங்களை அகற்றிவிட்டுப் புதியவற்றை நிறுவியபோது, புனித இடங்களைக் கவனிக்க வேண்டிய குருகுலத் தொழில் முழுவதும் லேவியரைச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. அரசர் காலத்தில் லேவியர் மட்டும் குருத்துவப் பணியைச் செய்கின்றனர். கி.மு. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து பலி ஒப்புக்கொடுப்பது குருக்களின் சிறப்பான, அவர்களுக்கு மட்டும் உரிய தொழிலாக மாறியது. ஆலய வழிபாடு சேராத தொழில்கள் பிறருக்கு அளிக்கப்பட்டன. கி.பி. 70-இல் ஆலயம் அழிக்கப்பட்டது. அஃதோடு குருக்களின் ஆதிக்கம் முற்றுப்பெற்றது.

5. 7) *குருத்துவத் திருநிலைப்படுத்தும் சடங்கு:* இது யாத் *29:1-37*; லேவி *8:1-36*-இல் விவரிக்கப்படுகிறது. விவரங்களை இப்பகுதிகளில் வாசித்தறியலாம். இஃது ஏழுநாட் சடங்காகும். திருநிலைப்படுத்தப்பட விரும்புவோர், தண்ணீரால் கழுவப்படுவர். அவருக்குக் குருத்துவ ஆடை அணிவிக்கப்பட்டது. அவர் தலைமேல் அபிடேகத் தைலம் வார்க்கப்பட்டது. பின், திருநிலைப் படுத்தப்படுவோருக்காகத் தொடர்ச்சியாகப் பலிகள் செலுத்தப்பட்டன. பலிப்பொருளின் இரத்தம், திருநிலைப்படுத்தப்படுவோரின் வலக்காது மடல், வலக்கைப் பெருவிரல், வலக்கால் பெருவிரல் ஆகியவற்றின் மேல் தடவப்பட்டது. பின், இரத்தமும் அபிடேகத் தைலமும் சிறிது, திருநிலைப்படுத்தப்படுவோரின் மேலும், அவர்கள் ஆடைகளின் மேலும் தெளிக்கப்பட்டன. இவ்விதம் முழு மனிதரும் இறைப்பணிக்காகத் திருநிலைப்

படுத்தப்பட்டார். திருநிலைப்படுத்தப்பட்டோர் யாவேயின் திருமுன் காணிக்கைகள் செலுத்தினர். இவை நறுமணமுள்ள தகனப் பலியாகப் பலிபீடத்தில் சுட்டெரிக்கப்பட்டன. முழுச்சடங்கும் ஒன்றிப்புப் பலியுணவோடு முடிந்தது. இச்சடங்கு ஏழு நாட்களுக்கு மீண்டும் செய்யப்பட்டது. இதில் திருநிலைப்படுத்தும் மிகப்பழைய சடங்கு முறையைக் காண்கிறோம். இதில் இரத்தம் தெளித்தல் ஒருவர் தம்மை இறைவனுக்கு அர்ப்பணிப்பதைக் குறிக்கிறது. எண்ணெய் பூசுதல், அவர் இறைவன் சேவைக்கு ஒதுக்கப்படுதலை உணர்த்துகிறது. திருவுடை அணிவித்தலின் வழியாக இவரிடம் இறைவழிபாடு ஒப்படைக்கப்படுகிறது.

இச்சடங்குகள், பாலைவனத்துச் சந்திப்பின் கூடாரச் சூழ்நிலையில் விவரிக்கப்பட்டாலும், ஐந்நூலில் குருக்கள் பாரம்பரிய ஆசிரியர்கள், நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் எருசலேம் ஆலயத்தில் வழக்கில் இருந்த சடங்குகளையே இங்கு விவரிக்கின்றன என்பர் சிலர். எண்ணெய் பூசுதல் பிற்காலத்தைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. மன்னர்கள் ஆட்சி முடிவுற்று, அரச சலுகைகள் குருக்களுக்கு மாற்றப்பட்டு, யூத சமூகத்தில் குருக்கள் அரச அதிகாரம் செலுத்தத் தலைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். ஆனால், இவ்வழக்கு காலத்தால், அரச நிலை மாற்றத்துக்கு முந்தியதாக இருக்கலாம்.

5. 8. தூய்மையின் சட்டம்: தூய்மை, தூய்மையின்மை பற்றிய கட்டளைகள், சட்டத்தை வீட்டுக்குள்ளும் புகுத்துகின்றன எனலாம். இச்சட்டம் வாழ்வின் ஒவ்வோர் அலுவலையும் பாதித்தது. இஃது இஸ்ராயேலுக்கு மட்டும் உரியதன்று. பழைய மேற்காசியச் சமயங்களிடையே பெரும்பாலும் காணப்படுவதாகும்.

அ. வழிபாட்டுத் தூய்மையின்மை: இக்கருத்துக்கள் வழிபாட்டுச் சூழ்நிலையில் முதலில் எழுந்து வளர்ச்சியடைந்தன எனலாம். தூய்மையற்றன யாவும் வழிபாட்டில் இடம் பெறலாகாது. இஃது ஆட்களுக்கும் பொருட்களுக்கும் பொருந்தும். ஆட்களும் பொருட்களும் தூய்மையானவை தூய்மையற்றவை எனவும், பலிச்சடங்கில் பங்கெடுக்கத் தகுதியுடையவர், தகுதியில்லாதவர் எனவும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். பலி செலுத்த முடியாமையாகிய தூய்மையின்மையில் பலபடிகள் உண்டு. மிகக் குறைந்த அளவு தூய்மையின்மை ஒருவரை அந்நாளில் மட்டும் புனித இடத்தின் புறமுற்றத்துக்குள் நுழைவதைத் தடுத்தது. இத்தூய்மையின்மை உடம்பைக் கழுவுவதால் அல்லது ஆடைகளைத் துவைப்பதால் நீக்கப்படலாம். வழிபாட்டுத் தூய்மையின்மை ஒரு வாரம் இரண்டு வாரம் அல்லது பலநாட்கள் வரை நீடிக்கலாம். இத்தூய்மையின்மை ஒரு வாரத்திற்கு மேல் நீடித்தால் அதை நீக்கும் சடங்கில் பலி செலுத்துதல் இடம் பெறும்.

ஆ) இந்த வழிபாட்டுத் தூய்மையின்மையை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1) இறந்த உடலால் உண்டாகும் தூய்மையின்மை. மரித்த மனித உடல், அஃது கிடந்த வீட்டையும் வீட்டில் வசித்தோரையும், வீட்டிலுள்ள பொருட்களையும் ஏழு நாட்களுக்குத் தூய்மையற்றதாக்கியது. இவற்றைத் தூய்மைப்படுத்த வெறுமனே கழுவினால் மட்டும் போதாது; செங்கிடாரியின் சாம்பல் கலந்த நீரால் தெளிக்க வேண்டும். யூதர்கள் பாலைவனத்தில் சுற்றித் திரிந்த காலத்தில், சுமை சுமக்காத செங்கிடாரி, தனிச்சடங்கோடு பரிகாரப் பலியாகக் கொல்லப்பட்டு, தேவதாருமரம், கடற்காளான், கம்பளி ஆகியவற்றோடு முழுவதும் எரிக்கப்பட்டது. இந்தச் சாம்பல் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, தூய்மையற்றவற்றைத் தூய்மையாக்க, லேவியர் குறிப்பிட்ட சடங்குகளில் தண்ணீரோடு கலந்து தெளிக்கப் பயன்பட்டது. இறந்த விலங்குகளின் உடலைத் தொட்டவன் அன்று மாலை வரை தூய்மையற்றவனாக இருந்தான்.

2) தொழுநோயால் வரும் தூய்மையின்மை: தொழு நோயுடையவன் அந்நோயால் வாடும் வரை தூய்மையற்றவனாகக்

கருதப்பட்டான். அவன் துக்க ஆடை அணிய வேண்டும். நகருக்கு அல்லது பாளையத்துக்குப் புறம்பே, மனித சமூகத்துக்கு அப்பால் தனது வீட்டை அமைத்துக் கொள்ள வேண்டும். தன்னை மக்கள் நெருங்கும்போது, தான் அசுத்தன் என்று உரக்கக் கூறி எச்சரிக்க வேண்டும். அவன் குணமானால், குருக்கள் மட்டுமே அவன் குணமானவன் என்று தீர்ப்பளிக்கக்கூடும். அவனுக்காகச் சிக்கல் மிக்க சுத்திகரச் சடங்கு செய்ய வேண்டும் (லேவி 13-14).

கட்டடங்களும் ஆடைகளும் கூடத் தொழுநோய்த் தூய்மையின்மை உடையனவாகக் கருதப்பட்டன.

3) பாலினத் தூய்மையின்மை *(லேவி 12:15):* முதற்கண் இது நோய்க் கூறுடையதாகும். ஆணிடமோ, பெண்ணிடமோ ஒரு நாள் வரை நீடிக்கக்கூடிய சட்டத்தூய்மையின்மையை உண்டாக்கக்கூடிய இயற்கை நிலையோ, செயல்களோ இத்தூய்மையின்மையை உண்டாக்கின. இத்தூய்மையின்மை உடையவர் எதைத் தொட்டாலும் அவை தூய்மை இழந்தனவாகக் கருதப்பட்டன. மூலநிலை நீங்கியபின் ஏழு நாட்களுக்குப்பின் அவை தூய்மையாயின. குளித்தல், கழுவுதல் போன்ற சடங்காலோ, தகனப் பலியாலோ, பாவப்பரிகாரப் பலியாலோ இத்தூய்மையின்மை நீக்கப்பட்டது. உடல் நல நோக்கும் ஒழுக்க நோக்கும் மிக மறைமுகமாகத்தான் இச்சட்டங்களில் இடம் பெறுகின்றன. தன்னியல்பான இரவுப் புறக்கசிவும், கணவன் மனைவியரது முறையான புணர்ச்சியும்கூட ஒருநாள் வரைக்கும் தூய்மையின்மையை உண்டாக்கக்கூடும் (லேவி 15:16; உப 23:11). மாதவிலக்கு ஒரு பெண்ணை ஏழு நாட்களுக்குத் தூய்மையற்றவளாக்கியது (லேவி 15:19-24). இக்காலத்தில் அவள் தன் கணவனுடன் புணர்ச்சி கொள்ளக்கூடாது. பெற்ற பிள்ளை ஆண் குழந்தையானால் 40 நாட்களுக்கும், பெண் குழந்தையானால் 80 நாட்களுக்கும் தாய் தூய்மையிழந்தவளாகக் கருதப்பட்டாள். இத்தூய்மையின்மை, தகனப்பலியாலோ, பாவப்பலியாலோ நீக்கப்பட்டது. பலிப்பொருள் ஒரு செம்மறியும், ஒரு புறாவும் ஆகும். ஏழையானால் இரு புறாக்களாகும் (லேவி 12; லூக் 2:22).

இச்சட்டங்கள் திருமணம், பிறப்பு ஆகியவை பற்றிய வெறுப்பால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல. ஏனெனில், பெருங்குடும்பம் ஒரு மேலான ஆசீராகவும், மலட்டுத்தன்மை ஒரு அவமானமாகவும், இறைத் தண்டனையாகவும் கருதப்பட்டன.

இ) உணவு பற்றிய ஒழுங்குகள்: சட்டத் தூய்மை ஒழுங்குகளைப்போல், உணவு பற்றிய ஒழுங்குகளும் இஸ்ராயேலுக்கே தனியாக உரியனவல்ல; பழைய மேற்காசிய மக்கள் அனைவர்க்கும் பொதுவானதாகும். இப்படிப்பட்ட ஒழுங்குகளை எகிப்திலும் காணலாம்.

பழைய ஏற்பாட்டில் தூய்மையானவை தூய்மையற்றவை என்று விலங்குகளைப் பிரித்தல், புற அடையாளங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். நான்குகால் விலங்குகளில் அசைபோடுவனவும், பிளந்த குளம்புகளையுடையனவும் தூய்மையானவையாகும். நீரில் வாழ்பவைகளில் செதில்கள் உள்ளவையும், சிறகுகளை உடையவையும் தூய்மையானவையாகும். ஒட்டகம், கழுதை, பன்றி, வளைதோண்டி வாழும் கரடி, குழிமுயல் போன்றவை தூய்மையற்றவையாகும். ஐந்நூலில் பன்றிக் கறியை உண்பதைத் தடுப்பது தனிப்பட்ட முறையில் அழுத்திக் கூறப்படவில்லை. ஆயினும், பிற்காலத்தில் இது மோசே சட்டத்திற்குப் பிரமாணிக்கமின்மையின் மூடக் கொள்கையாகவும், இஸ்ராயேலின் மறையிலிருந்து விலகுவதற்குச் சமானமாகவும் மாறியது (எசா 65:4; 66:3.17; 2 மக் 6:18 தொ; தானி 1:8.12; அ.ப. 10;12). ஏன் இப்படிச் சில விலங்குகள் விலக்கப்பட்டன என்பது பற்றி ஒன்றையும் உறுதியாகக் கூறமுடியாது. பிறமதப் பலிவழிபாட்டில் இவ்விலங்குகள் பயன்பட்டதும், இவற்றில் பல பெருந்தீனி உண்பதும், சில வெறுக்கத்தக்க தோற்றம் கொண்டிருப்பதும் காரணங்களாக இருக்கலாம். இப்படி விலக்கப்படு

வதற்கு அறிவு சார்ந்த காரணம் எதுவும் கொடுக்க முடியாது. தங்களைச் சுற்றி இருந்த மக்களிடமிருந்து இப்பழக்க வழக்கங்களை ஏற்றுத் தங்களது தேவைக்கேற்ப மாற்றி அமைத்தது, அவற்றிற்குச் சமய அடிப்படையும், தபசு மனப்பான்மையும் அளித்துத் தனதாக்கிக் கொண்டது இஸ்ராயேல் எனலாம்.

ஈ) தூய்மை - தூய்மையின்மை - புனிதம்: மேற்கூறியவற்றிலிருந்து, தூய்மை, தூய்மையின்மை என்பன உடல் நலத்தோடோ, ஒழுக்கத்தோடோ சேர்ந்த கருத்தல்ல என்பது தெளிவாகும். ஒருபுறம் தூய்மையின்மை மறைபொருளான, பொல்லாங்கான ஒன்றை உணர்த்தி, அதை எப்படியாவது தவிர்க்க வேண்டும் என உணர்த்திற்று. ஆகையால், தூய்மைற்றவை கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டவையாகும்; ஒதுக்கி வைக்கப்பட்டவையாகும். இதன் படி, ஓர் ஆள், ஒரு விலங்கு, ஒரு பொருள், ஏன் ஒரு செயல் கூட தூய்மையற்றதாகக் கருதப்படலாம். சான்று:- பிள்ளை பெற்றெடுத்திருக்கிற பெண், ஒட்டகம், இறந்த உடல். இப்பொருளை உணர்த்தும் சொற்கள் விவிலியத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன.

அடுத்து, தூய்மையானது மனிதனின் பிறப்பு, வாழ்வு, இறப்பையும் சார்ந்த கருத்தாக இருந்ததெனத் தெரிகிறது. இத் தூய்மையை இழந்தால் அவர்களிடமிருந்து யாவே தம் முகத்தைத் திருப்பிக் கொள்வார். ''அவர்களின் தூய்மையின்மைக்கும் குற்றங்களுக்கும் ஏற்ப நாம் அவர்களுக்குச் செய்தோம்; நமது முகத்தையும் அவர்களிடம் இருந்து மறைத்துக் கொண்டோம்'' (எசே 39:24). இப்போக்கு, புனித மிக்க யாவேக்கு அவர்கள் அளிக்கும் பதிலின் விளைவாகும். ''நாம் பரிசுத்தராய் இருப்பதுபோல் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்'' (லேவி 19:2). தூய்மை இங்குப் புனிதத்தை உணர்த்திற்று. ஆயினும், சிலவேளைகளில் தூய்மையின்மையும் புனிதமும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிகிறது. செமித்திய மொழிகளில், இரண்டையும் குறிக்க ஒரே மூலச்சொல் பயன்படுகிறது. இது புனிதத்தையும் குறிக்கிறது; வெறுக்கத் தக்கதையும் குறிக்கவல்லது. புனிதமாவது தொடக்கூடாததாகும் (லேவி 11: 31-34; 15:4-12.20-28) ஆகையால், குரு வழிபாட்டு வேலை முடிந்தவுடன், தன் திருச்சடங்கு ஆடைகளைக் களைந்து விட்டு, வேறு உடைகள் அணிய வேண்டும் (எசே 44:19; யாத் 28:43). செங்கிடாரி போன்ற திருப் பொருளைத் தொட்டால் (என் 19:1-10) ஒருவன் தூய்மையற்றவன் ஆவான். இரத்தம் தெளிக்கும் குரு தூய்மையற்றவராவார். ஆகவே, புனிதமான இறைவனை அணுகு முன் குளிக்க வேண்டும், கழுவ வேண்டும். தூய்மையின்மையை நீக்குதல், அர்ச்சித்தல் அல்லது தூய்மையாக்குதல் என்றழைக்கப் பட்டது (யோசு 3:5; 1 சாமு 16:15). தூய்மையாய் இருத்தலும் புனிதமாய் இருத்தலும் ஒன்றல்ல. தூய்மை புனிதத்திற்கு ஒரு நிபந்தனையும் முன் தேவையுமாகும். புனிதரான இறைவனை அணுகுவதற்குத் தகுதியளிக்கும் நேரடி ஆற்றலாகும். புனிதரான இறைவன் தூய்மையின்மையைப் பொறுத்துக்கொள்ளார். இக்கருத்து, பழைய ஏற்பாட்டில் தூய்மை பற்றிய ஒழுங்குகள் மறைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டன என்று காட்டும்.

யாவே பொறாதவர், மற்றெந்தத் தேவர்களையும் பொறுத்துக்கொள்ளார். பிற தேவர்களை வணங்குவதால் யாவேயின் மக்கள் தூய்மையற்றவராகின்றனர் (எரே 2:7-23; ஓசே 6:10). சோதிடம் பார்த்தலும் (லேவி 19:31), இறந்த உடலில் நெற்றிக்கு மேல் மயிரைச்சிரைத்தலும் (உப 14:1), அயல்நாடுகள் பிற தேவர்களை வணங்குவதால் அந்நாடுகளும் (ஆமோ 7:17; எசா 52:1), அவற்றிலிருந்து வரும் உணவு உட்பட்ட பொருள்களும் தூய்மையற்றவையாகும் (ஓசே 9:3; தானி 1:5-16). ஆகையால், கானானியரின் புனித இடங்களும் அவற்றின் பொருள்களும் முழுவதும் அழிக்கப்பட வேண்டும் (என் 31:20-24). பாபிலோனியாவிலிருந்து திரும்பிய யூதர்கள் தங்களைச் சுத்தி செய்தனர் (எஸ் 6:20-22).

அன்னியரால் தீட்டுப்பட்ட எருசலேமின் சுவர்கள் கூடச் சுத்திசெய்யப்பட்டன (நெகே 12:30). பாபிலோனுக்கு நாடுகடத் தப்பட்டுத் திரும்பிய காலத்துப் பழக்க வழக்கங்களிலிருந்து சடங்குத் தூய்மை பற்றிய சட்டங்களின் மையம், இறைவனுக் காகப் பிற மக்களிடமிருந்து பிரிந்திருக்கும் புனிதம் பற்றிய இறையியல் கருத்தாகும் என்று அறிகிறோம். புதிய ஏற்பாட்டுக் காலத்தினர் பாஸ்குக் காலத்தில் அன்னியரு டன் பழகுவதும் தீட்டாகும் எனக் கருதினர் (யோவா 18:28).

உ) புறத்தூய்மை - அகத்தூய்மை: ஏற் கெனவே பழைய மேற்காசிய மக்களி டையே இருந்த தூய்மை, தூய்மையின்மை என்ற கருத்துக்களை எடுத்து, அவற்றை இஸ்ராயேலர் தாங்கள் யாவேயிடம் கொண் டுள்ள விசுவாசத்திற்கேற்ப மாற்றியமைத்த னர். மோசே அவற்றை மறைசார்ந்த கட்டளையாக்குகிறார். அவருக்குப்பின் வந்த குருக்கள் பாரம்பரிய ஆசிரியர்கள் இதே அடிப்படையில் இச்சட்டங்களை வளர்த்துப் பேணிக்காத்தனர்.

இச்சட்டங்களைக் கடைப்பிடிப்பது இறைமக்களின் புனிதத்திற்கு அடையாள மாகக் கருதப்பட்டது (லேவி 11:44). இஸ்ரா யேலின் ஒரே இறைத்தன்மைக் கோட் பாட்டைக் காக்க இஃது உதவியது. ஏனெ னில், இதனால் மற்ற மறைகளிலிருந்து இஸ்ராயேலர் பிரிக்கப்பட்டனர் (தானி 1:8-12; தோபி 1:10-12). மேலும், தூய்மை பற்றிய ஒழுங்குகள் இறைவனுடைய கட்ட ளையாகக் கருதப்பட்டதால், அவற்றைக் கடைப்பிடித்தது ஒழுக்கத்தையும் வளர்த் தது. இது சிலவேளைகளில் எலியேசரின் வேதசாட்சி மரணம் போன்ற (2 மக் 16:18-31) வீரச் செயல்களுக்கும் இட்டுச் சென்றது. ஆயினும், வெறும் ஆசாரக் கண்டிப்பு, சடங்குத் தூய்மையை மிகைப் படுத்துவது போன்ற கேடுகள் எப்போதும் இருந்தன. நாடு கடத்தப்பட்ட காலத்திற்குப் பின் சுத்திகரச் சடங்கு வழக்கங்களைத் தவறாகப் பயன்படுத்துபவரை இறைவாக் குரைஞர்கள் இடித்துக் கூறியுள்ளனர். ''வா யால் இம்மக்கள் நம்மை அணுகி வருகின்ற னர்; உதட்டால் நம்மைப் போற்றுகின்றனர். அவர்கள் உள்ளமோ நம்மைவிட்டுத் தொலைவில் இருக்கின்றது. நம்மைப் பற்றிய அவர்களுடைய அச்சம், வெறும் மனிதக் கற்பனையை மனப்பாடமாய்க் கற்றதுதான்'' (எசே 29:13; ஒசே 6:6; ஆமோ 4:1-5; எரே 7:21-24). மனிதனைக் கறைப் படுத்தும் உண்மையான தூய்மையின்மை பாவமாகும் என்பதை இறை வாக்குரைஞர் கள் அழுத்திக் கூறினர் (எசே 36:17-20). இக்கறையை இறைவன் மட்டுமே தூய்மை யாக்க முடியும் (எசா 6:5-7). புறத்தோடு அகத்தையும் சேர்த்து முழு ஆளையும் தூய்மையாக்குதல் மெசியாவின் வாக்குறுதி யோடு வருவதாகும். ''நாம் உங்கள்மேல் தூயநீரைத் தெளிப்போம்; உங்கள் அழுக்கு கள் எல்லாம் போய்விட நீங்கள் தூய்மை யாக இருப்பீர்கள்; சிலை வழிபாட்டுத் தீட்டுகளிலிருந்து உங்களைத் தூய்மையாக் குவோம்; உங்களுக்குப் புதிய இதயத்தை அருளுவோம்; உங்கள் உள்ளத்தில் புதிய ஆவியை ஊட்டுவோம்; உங்கள் உடலிலி ருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு, உணர்ச்சியுள்ள இதயத்தை உங்களுக்குக் கொடுப்போம்; உங்கள் உள்ளத்தில் நமது ஆவியை ஊட்டுவோம். நம் கற்பனைகளின் படி நடக்கவும், நம் நீதிமுறைமைகளைக் கடைப்பிடிப்பதில் கவனமாயிருக்கவும் செய்வோம்'' (எசே 36:25-27; செப் 3:9; எசா 35:8; 52:1).

சங்கீத ஆசிரியர்களும் ஒழுக்கத் தூய் மையைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். இறை வனின் நன்மைத் தன்மை தூய இதயத்தோரி டம் திரும்புகிறது (சங் 73:1). பாவமில்லா தோர், தூய இதயத்தோர் ஆண்டவரை அணுகலாம் (சங் 24:4). ஒவ்வொருவனுக் கும் அவனது நீதிக்கேற்ப இறைவன் பரிசு அளிக்கிறார் (சங் 18:21-25). மற்றச் சங்கீதங் களைவிட 51-ஆம் சங்கீதம் தூய்மை பற்றிய இஸ்ராயேலின் கருத்து, சடங்குத் தூய்மையி லிருந்து ஒழுக்கத் தூய்மைக்கு வளர்ந்துள்ள தற்குச் சான்று பகர்கிறது. ''என் பாவங்களி னின்று உம் திருமுகத்தைத் திருப்பிக்

கொள்ளும்; என் குற்றங்களையெல்லாம் போக்கிவிடும்; உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்; உமது பெருந்தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்'' (சங் 51:9-12). ஞானாகம ஆசிரியர்களும் அகத்தூய்மையை அழுத்திக் கூறுகின்றனர் (யோபு 14:4-14; 16:17). இறைவன் முன் மனிதன் அடிப் படையிலேயே தூய்மையற்றவன் (பழ 20:9; யோபு 9:30-31). அவரால் மட்டும் அவன் தூய்மையடைய முடியும்.

ஊ) புதிய ஏற்பாட்டில்: நாடு கடத்தப் பட்டபின், யூத சமயத்தில் ஒழுக்கத் தூய் மையும், சட்ட ஆசாரத் தூய்மையும் அடுத் தடுத்துக் காணப்படுகின்றன. இப்போக்கு கிறிஸ்துவின் காலத்திலும் காணப்படுகிறது. புறச் சடங்குகளைக் கடைப்பிடித்தல் அழுத்திக் கூறப்படுகிறது. சான்றுகள்: மீண் டும் மீண்டும் கழுவுதல் (மாற் 7:3-8); கிண்ணங்களைக் கழுவுதல் (மத் 23:25); பாவிகளோடு பழகுவதைத் தவிர்த்தல் (மாற் 2:15-16). இயேசுவே இவற்றில் சிலவற்றைக் கடைப்பிடித்திருப்பதாகத் தெரிகிறது (மாற் 1:43-44). ஆனால், இவற்றை மிகைப்படுத்திக் கூறுவதைக் கண்டிக்கிறார் (மாற் 7:6-13). உணவு பற்றிய யூத ஒழுங்குகளை இயேசு அடியோடு அகற்றவில்லை. ஆதித்திருச்சபை இவற்றைச் சிறிதுசிறிதாக, துன்பமிக்க அனு பவத்தோடு அகற்ற வேண்டியிருந்தது (அ.ப. 10:11-14; 15:28-29; கலா 2:11-17; உரோ 14:14; கொலோ 2:20-22). ஆதித் திருச்சபை உணவு பற்றிய ஒழுங்குகளை அடியோடு அகற்றியபோது, யூதநாடு முழு வதும் வீழ்ச்சியடைந்திருந்தது. இறையரசா கிய திருச்சபை, நாடுகளின் பிரிவைக் கடந்த, எல்லா மக்களுக்கும் இறையரசைப் போதிக்கும் பெரும் பணியில் ஈடு பட்டிருந்தது.

மனிதனைத் தூய்மையற்றவனாக்குவது ஒழுக்கமின்மைதான், சடங்குகளின் குறை வன்று. ''அனைவரும் நான் சொல்வதைக் கேட்டு உணர்ந்து கொள்ளுங்கள். புறத்தேயி ருந்து மனிதனுக்குள்ளே சென்று அவனை மாசுபடுத்தக்கூடியது ஒன்றுமில்லை; மனித னுள்ளிருந்து வெளிவருவதே அவனை மாசு படுத்தும்'' (மாற் 7:14-15). இப்பொருளில் பேய்கள் தூய்மையற்ற அல்லது அசுத்த அருபிகள் என்றழைக்கப்படலாம் (மாற் 1:23; லூக் 9:42). தூய இதயத்தோர் இறைவனை அணுக முடியும் (மத் 5:8). இறைவனைப் பார்ப்பது, அவர் திருமுன் வருவது, இறையரசுக்குள் நுழைவது ஆகிய வற்றுக்கு ஒழுக்கத்தூய்மை மட்டும் போதாது. ஒருவனது உள்ளத்தில் இறை வனே குடிகொள்வது இன்றியமையாததா கும். அப்போதுதான் மனிதன் அடிப்படை யிலேயே நிறைதூய்மையுடையவனாவான், புனிதனாவான் (யோவா 13:10;15:3).

5. 9. பரிகார நாள்: இஃது ஒரு பெரு நாளாகும். இது திஸ்ரி மாதம் (செப்டம்பர்- அக்டோர்) 10-ஆம் நாள், கூடார விழாவுக்கு ஐந்து நாட்களுக்கு முன் கொண்டாடப் பட்டது. இந்நாளில் ஓய்வுநாள் கடன் அனுசரிக்கப்பட வேண்டும். இந்நாள் தவம் செய்யும் நாளாகும், கடின உண்ணாநோன்பு இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்க ளுடையவும் நாட்டு மக்களுடையவும் பாவங்களுக்காகத் தவம் செய்ய வேண்டும்; நோன்பு இருக்க வேண்டும்; பலிகள் ஒப்புக்கொடுக்க வேண்டும். பிற்காலத்தில் ராபிகள் இவ்விழாவை ''யோம் இப்பூர்'' என்றழைத்தனர். விவிலியத்தில் இது ''யோம் ஹகிப்பூரீம்'' என்றழைக்கப்பட் டது. இரண்டும் பரிகார நாள் எனப் பொருள்படும். இந்நாள் பற்றியும், அன்று செய்யப்படும் சடங்குகள் பற்றிய விவரிப் பும் லேவி 16:1-39;23:26-32; எண் 29:7-14 ஆகிய பகுதிகளில் காணக் கிடக்கின்றன. இவ்விவரிப்பு குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும். இதில் ஆலய வழிபாட்டுக் கட்டளைகள், பாலைவனத்தில் ஆரோன் பணிசெய்த சந்திப்பின் கூடார வழிபாட்டுக் குள் வரலாற்றுக் கருத்துடன் புகுத்தப்படு கின்றன. இவ்விழா எப்போது தோன்றியது என்பது பற்றி ஒன்றும் உறுதியாகக் கூறமுடி யாது. முதலில் இப்பரிகாரச் சடங்கு குருக்க ளுக்கு மட்டும் உரியதாக இருந்திருக்க

வேண்டும். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் எல்லாரும் பொதுவாக தவமும், உண்ணாநோன்பும் செய்யும் நோன்பு நாளாயிற்று. சடங்கின் விவரிப்பு மிகப் பழங் காலத்தைச் சுட்டுகிறது.

இப்பெருநாள் எக்காளக் கொம்புகள் ஊதி முன்னறிவிக்கப்பட்டது. இது சிறப்பான முறையில் பெரிய குருவின் நாளாகும். பரிகார நாளில் காலைப்பலியின் போது, பெரிய குரு தனது பதவிக்குரிய குருத்துவ ஆடை அணிந்து, பாவப்பலிக்காக ஒரு காளைமாட்டையும், தகனப்பலிக்காக ஒரு செம்மறியாட்டையும் கூடாரத்திற்குள் இறைவன் திருமுன் கொண்டு வர வேண்டும். மக்களிடமிருந்து பாவப்பலிக்காக இரண்டு வெள்ளாட்டுக் கிடாய்களையும், தகனப்பலிக்காக ஒரு செம்மறியாட்டையும் பெறுவார். பின் பெரிய குரு தனக்கும் தன் வீட்டுக்கும் பாவக் காணிக்கை ஒப்புக்கொடுப்பார். பின் சந்திப்பின் கூடாரத்து வாயிலில், இரண்டு வெள்ளாடுகளையும், கொண்டு வந்து சீட்டுப் போட்டு, ''ஒன்று யாவேக்கும் மற்றது ஆசசெலுக்குமாகத் தேர்ந்தெடுப்பார். யாவேயின் ஆட்டைப் பாவக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பார். பின், பெரிய குரு பாவப்பலியாக காளைமாட்டைக் கொல்லுவார்; தூபக்கலம் நிறைந்த நெருப்போடும் நறுமணச் சாம்பிராணியோடும் திரைக்குப் பின்னுள்ள திருத்தூயகத்துள் நுழைந்து சாம்பிராணியைத் தூபக்கலத்தில் இட்டு, தூபப் புகை ''இரக்க இருக்கையைச்'' சூழச் செய்வார். பின்னர் வெளியே சென்று, காளைமாட்டின் இரத்தத்தைக் கொண்டு வந்து, இரக்க இருக்கை மீது ஒரு முறையும் அதன் முன்தரையில் ஏழு முறையும் கையால் தெளிப்பார். இவ்வாறு குருகுலத்திற்காகப் பரிகாரம் செய்யப்பட்டது. பின், யாவேக்காக ஒதுக்கப்பட்ட மக்களுடைய வெள்ளாட்டைப் பலி கொடுத்து, அதன் இரத்தத்தைத் திருத்தூயகத்துள் கொண்டு சென்று முன் செய்தது போலவே, இரக்க இருக்கை மீதும் அதன் முன்னும் இரத்தத்தைத் தெளிப்பார். பின் தூயகத்துக்குள் வந்து, தூபப்பீடத்திற்குச் சென்று அதன் கொம்புகளில் இரத்தத்தைப்பூசி, அதன் முன்தரையில் ஏழு தரம் இரத்தம் தெளித்து, பரிகாரம் செய்வார். அதன் பின் வெளி முற்றத்திலும் தகனப் பலிபீடத்திலும் இதே பரிகாரச்சடங்கு செய்யப்பட்டது. இவ்வாறு மக்களுக்காகப் பரிகாரம் செய்யப்பட்டது. இந்தப் பரிகாரச் சடங்கு செய்யும்போது சந்திப்பின் கூடாரத்துக்குள் வேறு எந்த மனிதனும் இருக்கக்கூடாது.

இவ்விதம் பெரிய குரு தனக்காகவும் மக்களுக்காகவும் பரிகாரம் செய்தபின், ஆசசெலுக்காக ஒதுக்கப்பட்ட வெள்ளாடு இறைவன் திருமுன் கொணரப்பட்டது. பெரிய குரு அதன்மேல் கைகளை விரித்து மக்களின் பாவங்களையெல்லாம் அறிக்கையிட்டு அதன்மேல் சுமத்துவார். ஆகையால், இவ்வெள்ளாடு பழிகமத்தப்பட்ட ஆடு என்று அழைக்கப்பட்டது. இப்படி மக்களின் பழி சுமத்தப்பட்ட ஆடு பாலை நிலத்திற்குத் துரத்தப்பட்டது. பின், பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட காளைமாடு, வெள்ளாடு ஆகியவற்றின் கொழுப்புள்ள பகுதிகள் பீடத்தில் எரிக்கப்பட்டன; மற்றப் பகுதிகள் யாவும் பாளையத்திற்கு வெளியே முழுவதும் எரிக்கப்பட்டன. இச்சடங்கு ஏழு செம்மறி ஆடுகளைத் தகனப்பலியாக ஒப்புக்கொடுத்தலோடு முடிவடைந்தது.

இப்பெருநாளில் மட்டும்தான் பெரியகுரு திருத்தூயகத்துள் நுழையலாம்; அதுவும் தூபத்தோடும், பலிப்பொருளின் இரத்தத்தோடும் செல்லலாம். ஆசசெல் என்றால் என்ன? அஃது ஓர் இடம் என்பர் சிலர். இது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆசசெல் என்றால் தீய ஆவி, பாலைவனத்தில் திரியும் பேய் என்று யூதர்கள் கருதியதாகத் தெரிகிறது. இப் பேய்க்குப் பழிசுமத்தப்பட்ட வெள்ளாட்டை இஸ்ராயேல் பலியிடவில்லை. ஆனால், அதை இறைவன் திருமுன் கொண்டுவந்து அதன்மேல் தங்களின் பாவங்களைச் சுமத்தி ஆசசெல்லிடம் பாலை நிலத்திற்கு ஓட்டினர். இதற்கொத்த சடங்கு, பாபிலோனியாவிலும், மற்றப்

பழைய மேற்காசியச் சமயங்களிலும் காணப்படுகிறது. ஒருவேளை ஏற்கெனவே யிருந்த பொதுப்பழக்கத்தை எடுத்து, இஸ் ராயேலர் அதற்குப் புதுப்பொருள் கொடுத்துத் தங்கள் சமய விழாவாக ஆக்கி யிருக்கலாம்.

இப்பரிகாரப் பெருநாள் எப்போது இஸ் ராயேலரிடம் தோன்றியது என்பது மறை வாகவேயிருக்கிறது. நாடு கடத்தப்படும் முன் உள்ள பழைய ஏற்பாட்டு வாசகங்களி லும், பின் வரும் வாசகங்களிலும் இது பற்றிய குறிப்பேயில்லை. மிகப் பிற்காலத் தில் இவ்விழா நிறுவப்பட்டிருக்கலாம். இதை விடத் தெளிவாக நாம் எதையும் கூற முடியாது. எபிரேயர்களிடையே உள்ள பாவப் பரிகாரச் சடங்குகள் மிகப்பழையன வாகும்; ஆனால், எளிய முறையில் கொண் டாடப்பட்டன. நாடு கடத்தப்பட்டபின், இஸ்ராயேல் மக்கள் துய்த்த பெருங்கேடுக ளால் பாதிக்கப்பட்டு, இப்பரிகாரச் சடங்கு வளர்ந்து ஒருபெரும் பரிகாரத் தவ விழா வாக மாறியிருக்கலாம். பழைய ஏற்பாட்டு இறுதியில் பரிகாரக் கருத்து யூதமறைக் கருத்துக்களில் சிறப்புப் பெறுகிறது. குரு வும் மக்கள் யாவரும் இறைவன் முன் பரிகாரம் செய்ய வேண்டும். இதை இரத் தம் தெளிப்பதாலும் பலியாலுமே நிறை வேற்ற வேண்டும். இச்சடங்கின் பொருளைப் பழி சுமந்த ஆட்டுச்சடங்கு எடுத்துக் கூறுகிறது. பழி சுமத்தப்பட்ட ஆடு பாலை நிலத்திற்குத் துரத்தப்படுதல், இறைமக்களிடமிருந்து பாவப்பழி முழுவ தும் அகற்றப்படுவதை உணர்த்துகிறது. காலப்போக்கில், இவ்விறையியல் கருத்தை, பொதுமக்கள் தங்களுக்குரிய பாணியில் செயல்படுத்தினர். பாவம் சுமத் தப்பட்ட ஆடு பாலைக்குப் போகும்போது, அதை வசைவு கூறி அது திரும்பிவராதபடி நெடுந்தூரத்திற்குத் துரத்தினர். பிற்காலத் தில் செங்குத்தான பாறையில் துரத்தி, அதை மடியச் செய்தனர்.

எபிரேயர்களுக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் இப்பரிகாரப் பெருநாள் சடங்கில், கிறிஸ்து, உலகம் யாவுக்கும் பரிகாரம் செய்ததின் அடையாளத்தைக் காண்கிறார். அதே சமயம் இரண்டிற்கும் உள்ள வேற்று மைகளை அழுத்திக் கூறுகிறார். பெரிய குரு இயேசுவுக்கு ஓர் அடையாளமாவார் (*எபி 8:1*). ஆனால், இவ்வடையாளம் அவ் வளவு வலுவுள்ளது அன்று. பெரிய குரு இந்த உலகிலுள்ள திருத்தூயகத்துள் விலங் குகளின் இரத்தம் ஏந்திச் செல்கிறார். மாறாக, கிறிஸ்து இறைவனுடைய உண் மையான திருத்தூயகத்துள் தனது சொந்த இரத்தத்தையே ஏந்திச் செல்கிறார் (*9:2*). பழைய ஏற்பாட்டில் அந்தந்த ஆண்டில் செய்த பாவங்களைத் தூய்மையாக்கும்படி யாக பரிகாரம் செய்யப்பட்டது. மாறாக, கிறிஸ்து தமது இரத்தத்தால் எல்லாக் காலங்களுக்கும், எல்லா மனிதர்களுடைய பாவங்களுக்கும், நிறைவான, முழுமை யான பரிகாரம் செய்துள்ளார் (*9:28*). தமது பரிகாரத்தால் கிறிஸ்து, சாவைத் தரும் செயல்களிலிருந்து நமது மனச்சாட்சியைத் தூய்மையாக்கியுள்ளார். அப்படியே நமக்கு வான் வீட்டின் கதவுகளைத் திறந்துவிட்டுள் ளார் (*10:20*), பெரிய குரு எந்தப் பாவத்தை யும் போக்கவல்லவர் அல்லர். ஏனெனில், அவர் அளித்தது விலங்குகளின் இரத்தமா கும் (*9:10.13; 10:4*). ஆகையால்தான் திருத் தூயகம் மக்களனைவருக்கும் மூடியதாகவே இருந்தது (*9:8*); பரிகாரச் சடங்கு ஆண்டு தோறும் நடைபெற வேண்டியிருந்தது (*10:1-3*). மாறாக, கிறிஸ்து தமது சிலுவைப் பலியால் வான்வீட்டின் திருத்தூயகத்துள் ஒரே ஒருதரம்தான் நுழைய வேண்டியிருந் தது. அப்பலியால் தமது மீட்புச் செயலை நிறைவேற்றுகிறார். இக்கருத்தை எபிரேய ருக்குத் திருமுகம் எழுதிய ஆசிரியர் அழுத்திக் கூறுகிறார்.

ஆயினும், கிறிஸ்தவ வழிபாட்டில் இவ் விழா இடம் பெறவில்லை.

5. 10) புனிதத்தின் சட்டம்: *லேவி 17-26* அதிகாரங்கள் அடங்கிய இப்பகுதி புனிதத் தின் சட்டம் என்றழைக்கப்படுகிறது. முன்பே கூறியபடி, இப்பகுதி லேவியர் திருநூலின் கருப்பொருளாகும்; குருக்களின் பாரம்பரியத்தில் தோன்றியது; அதிலே

வேரூன்றியது; குருகுலச் சட்டப்பண்பைக் கொண்டுள்ளது. இப்பகுதிக்குரிய தனிச் சிறப்பு இதை லேவியர் திருநூலின் மற்றப் பகுதிகளிலிருந்து பிரித்துக் காட்டுகிறது.

இப்பகுதி புனிதத்தை அழுத்திக் கூறு கிறது. இறைவன் ஒருவரே புனிதமானவர். (அதன் விளைவாக) அவர், யாவற்றிலிருந் தும் வேறுபட்டவர்; மனிதனைச் சார்ந்த உலகத்திலிருந்து பிரிந்திருப்பவர்; யாவற் றையும் கடந்தவர்; நாம் அறியும் யாவற்றிற் கும் ''முழுவதுமற்றவர்''. இந்த அவரது திருப்பண்பை மதிக்க வேண்டும் (22:32). அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் இறைவனது இப்பண்பைப் பின் பற்ற வேண்டும் (20:7-26;21:16). எகிப்திலி ருந்து வந்தபோது யாவே இஸ்ராயேலரைப் புனிதப்படுத்தியுள்ளார். அவர்களிடம் காணப்படும் எந்தப் புனித நிலைக்கும் எப்போதும் அவரே காரணம். ஆகவே, யாவேயின் புனித மக்களாகிற இஸ்ராயேல், உலகியல் சார்ந்தவற்றிலிருந்தும், தகாதவற் றிலிருந்தும், தன்னை அறவே பிரித்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஏதுவாகச் சடங்குத் தூய்மையையும் ஒழுக்க நேர்மை யையும் இஸ்ராயேல் கடைப்பிடிக்க வேண் டும். இவ்வழியாக, ஆண்டவரின் புனிதத் தன்மையையும், அவரின் ''முழுமையும் மற்ற தன்மையையும்'' தங்கள் வாழ்வில் எடுத்துக் காட்ட வேண்டும.

புனிதத்தின் சட்டத்தில் பல பகுதிகள் மிகப் பழையவையாகும். அவ்விடங்களி லுள்ள புனித இடங்களைச் சேர்ந்த குருக் களின் மரபு முறைகளைக் கொண்ட சிறு சிறு தொகுப்புகள் ஏற்கெனவே இருந் திருக்க வேண்டும். இவை பாதுகாக்கப் பட்டு, காலப்போக்கில் எருசலேம் குருக்க ளால் ஒன்று சேர்க்கப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டன. மன்னர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் இது நடத்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

பலவகைச் சட்டங்களைக் கொண்டிருப்ப தால் இப்பகுதிக்குச் சுருக்கம் அளிப்பது கடினம். இரத்தத்திற்கு மதிப்பளித்தல், சிலைவழிபாட்டைத் தடுத்து அழித்தல் போன்ற நோக்கங்களால் உந்தப்பட்டு, எவ் வகைப் பலியும் ஆலயத்தில் மட்டும்தான் நடக்க வேண்டும் எனக் கோருகிறது (அதி.17). அதி. 18-20-இல் வரும் ஒழுக்கச் சட்டமும், அதன் தடைகளும் குறிப்பிட்ட இரத்த உறவுக்குட்பட்ட பாலினப் புணர்ச்சியைத் தடை செய்கிறது. இதன் வழியாக மனித உயிரினம் பலுகும் செய லின் புனிதத்தன்மை காக்கப்படுகின்றது.

புனிதம் பற்றிய எந்த விளக்கமும் லேவி 19-ஆம் அதிகாரத்திற்கு இணையாகாது. இதில் வழிபாடு, நீதி, கற்பு, பிறர் அன்பு முதலியவை பற்றிய கட்டளைகள் காணப் படுகின்றன. உடல், ஆன்மா, ஆவி, சித்தம், ஒழுக்க மனச்சாட்சி, இயற்கை உணர்வு, காலம், இடம், தனிப்பட்டோர், சமூகம், வழிபாடு முதலியவை மன உலைவு தரும் விதத்தில் கலப்படமாகக் குறிக்கப்படுகின் றன. இவற்றை விளக்கும் அடிப்படைக் கொள்கை, ''நாம் பரிசுத்தராய் இருப்பது போல் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்'' (19:2) என்பதாகும். மனிதன் கீழ்ப்படியமட் டும் அழைக்கப்படவில்லை; பின்பற்றவும் அழைக்கப்படுகிறான். தோரா வெறும் கட் டளைகள் அடங்கிய ஒரு நூலாகாது. அஃது இறைவனோடு ஒரு பங்கெடுத்தலாகும். அதற்கு இறைவனைப் பின்பற்றுதல் முதல் படியாகும். இந்த 19-ஆம் அதிகாரத்தைப் புரிந்து கொள்ள இந்தப் பின்பற்றுதல் ஒளி அளிக்கிறது. இறைவனது புனிதத்தைப் பின்பற்றுவதால் புனிதம் அடையலாம். ஒரே இறைவனில் புனிதம் நிறைவெய்துகி றது. அவருடைய சாயலான மனிதன், தன் வாழ்வில் பல எதிர்மறைகளைக் கொண்டு, நிறைவில்லாதவனாக இருக்கலாமா? சட் டம் மனிதவாழ்வு முழுவதையும் ஒளிர்விக் கிறது. அசுர அலைபோல், அதைத் தன்னுள் அடக்குகிறது. உடல் சார்ந்த விலங்குத் தன்மை உணர்ச்சிகள் முதல், மேன்மை மிக்க ஆன்மீக உச்ச மேம்பாடுவரை யாவற் றையும் சட்டம் அரவணைத்து வளமாக்கு கிறது. இறைவனது புனிதம் மனிதனின் வாழ்வில் ஒவ்வொரு பகுதியையும் புனித

வளமிக்கதாக்க வல்லது. யாவற்றிலும் அவரது புனிதத்தை மனிதன் பின்பற்ற வேண்டும்.

அதி. 21-22 வழிபாட்டுச் சடங்குகளையும் குருக்களையும் பற்றிய ஒழுங்குகளைத் தருகின்றன. அதி. 23-இல் நாடு கடத்தப்படு முன் உள்ள மூலவடிவில் பல விழாக்கள் தரப்படுகின்றன. இவை பற்றிப் பின் பார்ப்போம். அதி. 24-இல் தூயகத்து விளக்கு, திருமுன் அப்பம், இறை சிந்தனை, பழி வாங்குவது ஆகியவை பற்றிய விவரிப்புக் கொடுக்கப்படுகின்றது. அதி 25-இல் தரப்படும் புனித ஆண்டு பற்றிய விவரிப்பைப் பின் பார்ப்போம். அதி. 26 சாபங்களையும், ஆசிர்களையும் கொண்டது. புனிதத்தின் சட்டமாகிய இப்பகுதி உடன்படிக்கைச் சட்டம் (யாத் 20:22-23:19), உபாகமச்சட்டம் (உப 12-26) ஆகிய பகுதிகளைப்போல் முன்னுரையும் முடிவுரையும் கொண்டது.

5. 11) புனித நாளேடு: வழிபாட்டுச் சடங்குகளுக்கு இடமும் வேண்டும், காலமும் வேண்டும். காலம் கதிரவன், மதி ஆகியவற்றின் இயற்கைச் சுழற்சிகளைக் கொண்டு கணிக்கப்பட்டது. பகலவன் இயற்கையின் உயிர் ஊட்டத்திற்கு வேண்டிய பருவ காலங்களை அளித்து வருகிறது. ஆனால், பழங்காலந்தொட்டு, காலம் நிலாவைக் கொண்டே கணிக்கப்பட்டு வந்துள்ளது. இயற்கையின் இலயத்திற்கேற்ப பெரும் விழாக்கள் அமைக்கப் பெற்றன. தானியங்கள் பழ மரங்கள் முதலியவை முளைத்தல், வளர்ச்சி, முதிர்தல், அறுவடை ஆகியவை ஆண்டின் இயற்கை விழாக்களின் பொருளாகின. வசந்த காலத்தில் முதற்கனிகளை இறைவனுக்கு ஒப்புக் கொடுத்தல், தானிய அறுவடை முடிவில் விழாக்கொண்டாடுவது, இலையுதிர்காலத்தில் கூடாரங்களில் வதிந்து விழா எடுப்பது போன்ற இயற்கையை ஒட்டிய விழாக்கள் வழியாக இஸ்ராயேலரின் எளிய குடியானவர்களது வாழ்வு மறைபொருள் பெற்றது. இப்படிப்பட்ட விழாக்கள் கானானியர்களிடமும் இருந்தன. ஆனால், இஸ்ராயேலரிடையே இருந்த இயற்கை இலயத்தோடு ஒட்டிய விழாக்கள் மீட்பு வரலாற்றின் பெரும் நிகழ்ச்சிகளோடு இணைந்து சமய மூறுக விழாக்களாயின. இஸ்ராயேலின் திருநாளேட்டில் பின்வரும் விழாக்களைக் காணலாம். 1) ஓய்வு நாளை ஒட்டிய விழாக்கள். 2) முப்பெரும் மகிழ்ச்சி விழாக்கள், பரிகார நாள். இவ் விழாக்களில் ஏழு என்ற எண் சிறப்பிடம் வகிக்கிறது. வாரத்தின் ஏழாவது நாள் ஓய்வு நாளாகும். ஏழாவது மாதம் ஓய்வு மாதம். ஏழாவது ஆண்டு ஓய்வு ஆண்டாகும். ஏழு தடவை ஏழாவது ஆண்டு யூபிலி ஆண்டாகும். பாஸ்கு விழாவுக்குப்பின் ஏழு தடவை ஏழாவது நாளில் 50-ஆம் நாள் விழாக் கொண்டாடப்பட்டது. ஏழாவது மாதத்தில் பரிகாரப் பெருநாளும். கூடாரங்களின் விழாவும் கொண்டாடப்பட்டன. பாஸ்கு விழா, கூடார விழா ஆகிய சிறப்பு விழாக்கள் ஒவ்வொன்றும் ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டன. பரிகாரப் பெருநாளைப் பற்றி ஏற்கெனவே விவரித்துள்ளோம். இனி, மற்றவை பற்றிச் சிறிது காண்போம்.

5. 12) ஓய்வு நாளை ஒட்டிய விழாக்கள்: அ) வாரத்தின் ஏழாவது நாள் ஓய்வு நாள் எனப்பட்டது. நாட்கள் மாலையிலிருந்து கணிக்கப்பட்டதால், வெள்ளிக் கிழமை மாலை ஓய்வு நாள் தொடங்கிற்று. யாவரும் அன்று முழு ஓய்வு எடுக்க வேண்டும். வேலை ஒன்றும் செய்யக் கூடாது. மீறினால் தண்டனை சாவாகும். மன்னாவைச் சேகரித்தல், தீ மூட்டுதல், உணவு சமைத்தல் போன்ற வேலைகள் கூட அன்று செய்யக்கூடாது. இப்படிப்பட்ட இன்றியமையாத வேலைகள் வெள்ளிக் கிழமையே செய்யப்பட வேண்டும். ஆகையால், வெள்ளிக்கிழமை ''ஆயத்தநாள்'' என்றழைக்கப்பட்டது. புறமத அடிமைகள், வீட்டு விலங்குகள்கூட இவ்வோய்வு நாளைக் கடைப்பிடிக்க வேண்டும். நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய காலத்திற்குப்பின் இஃது ஓர் அனுகூலமாய் இருப்பதற்குப் பதிலாகப் பெரும் சுமையாக மாறிற்று.

இதை இயேசு கண்டிக்கிறார். மாறாக, ஒய்வு நாளில் குணமாக்குதல் போன்ற நற்செயல்கள் புரிகிறார். வழிபாட்டில், ஓய்வு நாளன்று, இருமடங்காக நாள்பலிகள் செய்யப்பட்டன. புதிய திருமுன் அப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. மக்கள் கூடித் தொழுதனர்.

இஸ்ராயேலின் ஓய்வு நாளுக்கொத்த கடைப்பிடிப்பை எந்த மறையிலும் காண முடியாது. இஸ்ராயேல் வழியாக இறைவன் மக்களினத்திற்கு அளித்த மாபெரும் கொடையாகும் ஓய்வு நாள்

ஆ) ஓய்வு ஆண்டு: ஒவ்வொரு ஏழாவது ஆண்டும் ஓய்வு ஆண்டாகக் கொண்டாடப் பட்டது. இவ்வாண்டில், நிலத்திற்குக்கூட ஓய்வு உண்டு. நிலத்தை உழுதல், விதைத் தல், பயிர் செய்தல், அறுவடை செய்தல், யாவும் தடை செய்யப்பட்டன. வயல்களி லும், தோட்டங்களிலும், மரங்களிலும் தானாக விளைந்தவை பொதுச் சொத்தாகக் கருதப்பட்டன. இவையும் ஏழைகளுக்கும், அன்னியர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட் டன (லேவி 25:54). இவ்வோய்வு ஆண்டில் கடனைக் கட்டும்படி கட்டாயப்படுத்த முடியாது. கூடார விழாக்காலத்தில் புனித தலத்தில் கூடியிருக்கும் மக்களனைவருக் கும் சட்டம் முழுவதும் வாசிக்கப்படும்.

இக்கடைப்பிடிப்பின் மறைபொருள் என்ன? நிலமும் அதில் விளையும் பயனும் யாவேக்கு உரியன என்று ஏற்றுக்கொள்ளு வதை மக்களுக்கு நினைவூட்டவே இவ் வோய்வு ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டது. ஓராண்டுப் பலன் முழுவதும் எளியவர் களுக்கு அளிப்பது நல்லெண்ணமுடையது. ஆனால், வாழ்க்கையில் கொள்ளக்கூடி யதா? கடைப்பிடிக்கப்பட்டதா? பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு சான்று உளது (1 மக் 6:53).

இ) யூபிலி ஆண்டு: ஏழு தடவை ஏழா வது ஆண்டு யூபிலி ஆண்டாகக் கொண்டா டப்பட்டது. இது பரிகாரப் பெருநாளில் நாடு முழுவதும் தொடங்கியது. ஓய்வு ஆண்டைப் போல் இவ்வாண்டிலும் நிலங் களுக்கு ஓய்வு உண்டு (லேவி 25:2-7). இவ்வாண்டு சுதந்தர ஆண்டு என்றும் அழைக்கப்பட்டது. இவ்வாண்டில் அடை மானமாக வைக்கப்பட்ட பொருள்கள் எல் லாம் கடனைத் திரும்பப் பெறாமல் அதன் மூல உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாண்டில் அடிமைகளாக இருந்த இஸ்ராயேலர் களுக்கு விடுதலை அளிக்கப்பட்டது. இப் படி உடைமைகள் அதன் உரிமைக்காரர் களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுவதால், தொடக்கத்தில் இறைவனின் சித்தப்படி, நாட்டு நிலங்கள் பிரிக்கப்பட்ட அமைப்பு, இஸ்ராயேலர்களுக்குள்ளே எக்காலத்தும் நிலைத்திருக்கும். யூபிலி ஆண்டில் உடை மைகள் அதன் மூல உரிமையாளர்களிடம் கொடுக்கப்படுவதால், உழவர்களின் உடைமை அமைதி காக்கப்படுகிறது. பெரும் சொத்துடையோரிடமிருந்து வரும் சமூக ஆபத்துக்கள் இதனால் நீக்கப்படுகின் றன. இதே மனப்போக்கு அடிமைகளுக்கு விடுதலை அளிப்பதிலும் காணப்படுகிறது. இறைமக்களிடையே நிலையான அடிமைத் தனம் இருக்கவே கூடாது. இக்குறிக்கோள் மிக உன்னதமானது. ஆனால், செயல்படும் போது அவ்வளவு எளிதானதாகத் தெரிய வில்லை.

5. 13. பெரும் விழாக்கள்: இஸ்ராயேல ரிடையே மூன்று மகிழ்ச்சி விழாக்கள் உண்டு. இவ்விழாக்கள் அவர்களுடைய மீட்பு வரலாற்று நிகழ்ச்சிகளோடு தொடர் புடையவை. அதே போழ்து வேளாண் மைத் தொழிலோடும் தொடர்புடையன. இவ்விழாக்களைக் கொண்டாட வயது வந்த ஒவ்வொரு யூதனும் திருத்தலத்துக்குத் (பிற்காலத்தில் எருசலேம் ஆலயத்துக்குத்) திருயாத்திரை சென்றனர். பெண்களும் குழந்தைகளும் விரும்பினால் போகலாம்; ஆனால், கடமை என்பதில்லை.

அ) யூதர்களின் முதற் பெரும் விழா பாஸ்கு-புளியாத அப்ப விழாவாகும். இஃது இருவிழாக்கள் இணைந்த கொண் டாட்டமாகும். பாஸ்குச் செம்மறி கொல் லப்படுவதோடு கூடிய பாஸ்கு விழாவும்,

புளியாத அப்ப விழாவும் சேர்ந்து நீசான் (மார்ச் - ஏப்பிரல்) மாதம் 14-ஆம் நாளிலிருந்து எட்டு நாட்களுக்குக் கொண்டாடப் பட்டது.

இவ்விழாக்கள் மோசே காலத்துக்கு முந்தியதாக இருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. ஆனால், பழைய ஏற்பாட்டில் யாவேயிடம் கொண்ட விசுவாசத்தால் இவ் விழாக்கள் புதுப்பொருள் பெறுகின்றன. பாஸ்கு எகிப்தியரிடமிருந்து இஸ்ராயேலர் அடைந்த விடுதலையை நினைவு கூர்கிறது. பாஸ்கு விழாவுக்கு முந்திய நாள் மாலை வேளையில் எகிப்திலிருந்து வெளிப்போந்த வரலாற்று நிகழ்ச்சி கூடிய மட்டும் துல்லியமாக மீண்டும் நடத்தப்பட வேண்டும் (யாத் 12). செம்மறியைக் கொல்லுதல், கதவு நிலைகளில் அதன் இரத்தம் பூசுதல், பயணத்துக்கு முன்னேற்பாடாக உணவு உண்ணுதல் ஆகிய எல்லாச் சடங்குகளும் எகிப்திலிருந்து வெளிப்போந்த அருஞ் செயல்மிக்க மீட்பின் நினைவாக்கமாகக் கொண்டாடப்பட்டன.

பிற்காலத்தில் பாஸ்கு உணவுச்சடங்கு, யாத்திரை ஆகமத்தில் காணப்படுவதற்குச் சிறிது வேறுபட்ட விதத்தில் கொண்டாடப் பட்டது. பாஸ்கு விழாவுக்கு முந்திய பிற்பகலில், ஆலயத்தின் புறமன்றத்தில் பாஸ்குச் செம்மறி கொல்லப்பட்டது. குருக்கள் இரத்தத்தைப் பிடித்துப் பீடத்தில் தெளித்தார்கள். கொழுப்புப் பகுதிகள் பீடத்தின்மேல் எரிக்கப்பட்டன. பின், செம்மறியின் மீதிப் பகுதிகள் விறகின்மேல் சுடப் பட்டன. அதன் எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படவில்லை. செம்மறியோடு, புளியாத அப்பமும், கசப்பான கீரைகளும் உண்ணப் பட்டன.

புளியாத அப்பவிழா பழங்கால உழவர் விழாவாகும். புதிய அறுவடைக்குமுன், பழையவை புதியவற்றைப் பாழாக்காதபடி சென்ற அறுவடையின் முழுப்பயனும் பயன்படுத்தப்பட வேண்டும். எகிப்திலிருந்து விடுதலையடைந்து, செய்த யாத்திரையோடு தொடர்புபடுத்தப்பட்டு இவ்விழா மீட்பு வரலாற்றுப் பொருளைப் பெறுகிறது. நீசான் மாதம் 14-ஆம் நாளன்றே பாஸ்கு உணவுக்குமுன் வீட்டிலுள்ள புளிக்காரம் யாவும் அகற்றப்படும். இந்நாட்களில் புளியாத அப்பம் மட்டும் உண்ணப்பட்டது. இவ்விழாவின்போது ஒவ்வொரு நாளும் ஆலயத்தில் விழாப்பலி செலுத்தப்பட்டது. முதல் நாளிலும் இறுதி நாளிலும் மக்கள் கூடிப் பொதுத்தொழுகை செய்தனர் (யாத் 12:16). இரண்டாம் நாள் புதிய அறுவடையின் கதிர்க் கொத்துக்கள் இறைவன் திருமுன் காணிக்கையாக அளிக்கப்பட்டன.

ஆ) ஐம்பதாம் நாள் விழா: பாஸ்கு விழாவிலிருந்து ஐம்பதாம் நாள் ஒரு பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. அன்று விழாக்கூட்டங்களும், தனி விழாப் பலிகளும், பல விருப்பப் பலிகளும், மகிழ்ச்சி விருந்துகளும் நடந்தன. இவ்விழா அறுவடையின் முடிவில் கொண்டாடப்பட்ட நன்றி விழாவாகும். ஆகையால், புது மாவிலிருந்து செய்யப்பட்ட இரு அப்பங்கள் இறைவன் திருமுன் ஒப்புக் கொடுக்கப் பட்டன (எண் 23:26). பிற்காலத்தில் இவ் விழாவில் அறுவடைக் கருத்தோடு சீனாயில் சட்டம் அளிக்கப்பட்ட நிகழ்ச்சியும் நினைவு கூரப்பட்டது.

இ) கூடார விழா: (உப 16:13; லேவி 23:34-40). இலையுதிர் காலத்தில், ஏழாம் மாதமாகிய திஸ்ரியில் இவ்விழா கொண்டாடப்பட்டது. திராட்சை, ஒலிவாப் பழங்கள் கொய்தலின் முடிவில் கொண்டாடப் பட்டது. திஸ்ரி மாதம் 15-ஆம் நாளிலிருந்து ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின்போது பரந்த வெளிகளிலும், வீதிகளிலும், வீட்டுக் கூரைகளிலும் மரக் கிளைகளால் அமைக்கப்பட்ட குடிசைகளில் அல்லது "கூடாரங்களில்" மக்கள் வாழ்ந்தனர். இவ்விழாவின் முதல் நாள் ஓய்வு நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டது. விழாக் கூட்டங்கள் நிகழும் ஓய்வு ஆண்டில் இவ்விழாவின் முதல் நாளில் சட்டம் மக்களுக்கு வாசித்து அறிவிக்கப்பட்டது. எட்டாம் நாளிலும் ஓய்வும், விழாக் கூட்டமும் கடைப்பிடிக்கப்பட்டன (லேவி

23:36.39;எண் 29:35-38). இவ்விழா ஒரு நன்றி விழாவாகும். அண்மையில் கிடைத்த கனிகளுக்காக, பொதுவாக ஆண்டு அறுவடைக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தப்பட்டது. இவ்விழாவோடு, இஸ்ராயேல் பாலை நிலத்தில் கூடாரங்களில் வாழ்ந்த தொடர்நிகழ்ச்சி நினைவு கூரப்பட்டது. இஃது ஒரு மகிழ்ச்சி விழாவாகும். ஆகவே, இதை வெறுமனே ''விழா'' என்று அழைத்தனர் *(1 அர 8:2;12:32).* பீலோ இதை மிகப்பெரிய விழாவென்றும், யோசிப்பசு ''புனிதமிக்க மிகப்பெரும் விழா'' என்றும் அழைக்கின்றனர். ஐந்நூல் இதை ''ஒன்று கூடும் விழா'' என்றும் அழைக்கிறது.

நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின், இவ்விழா வளர்ச்சியடைந்தது. இரு சடங்குகள் சேர்க்கப்பட்டன. ஒன்று நீர்க்காணிக்கையாகும். ''மீட்பின் ஊற்றுகளினின்று தண்ணீரை அகமகிழ்வோடு நீங்கள் முகந்து கொள்ளுங்கள்'' *(எசா 12:3)* என்று கூறிக் கொண்டு நீர்க்காணிக்கை செலுத்தப்பட்டது. மற்றது ஏழு நாட்களும் காலைப் பலியின்போது ஒரு தங்கக் குடத்தில் சீலோவாம் ஊற்றிலிருந்து நீர் கொணர்ந்து தகனப்பலி பீடத்துக்குத் தென்மேற்கு முனையில் ஊற்றுதலாகும்.

6. முடிவுரை: லேவியர் திருநூல் குருக்களையும் அவர்களின் சிறப்பான பணியாகிய ஆலய வழிபாட்டையும் பற்றிய நூலாகும். புதிய ஏற்பாட்டு நோக்கோடு பார்க்கும்போது பழைய ஏற்பாட்டுப் பலிவழிபாடு பயனற்றதாகவும் வலுவற்றதாகவும் தோன்றலாம். இதனால் நாம் அதன் மதிப்பைத் தாழ்த்தக் காரணமேயில்லை. பழைய மேற்காசியாவில், பழைய வழிபாட்டுச் சடங்குகள் சமய அனுபவத்தின் ஓர் உண்மையான உச்ச நிலையாகும். தம்மைத் தவிர வேறொரு கடவுளைப் பொறுக்காத ஒரே இறைவனாகிய யாவேயை - தமக்கென இம்மக்களைத் தன்னுரிமையாகத் தேர்ந்தெடுத்த ஆண்டவராகிய யாவேயை- வழிபடுதல், அவரிடமிருந்து வரும் கொடைகளுக்கு நன்றி கூறுதல், உதவியும் ஆலோசனையும் வேண்டுதல், குற்றங்களை அறிக்கையிட்டுப் பரிகாரம் செய்து மன்னிப்புப் பெறவிழைதல் போன்ற சமயக் கருத்துக்கள் கிறிஸ்து ஏற்படுத்திய மறைக்கு முன்னோடியாகும். இவற்றின் உண்மைப் பொருளை இறைவெளிப்பாடு பெற்ற மறையில்தான் உணர்ந்தறிய முடியும்.

மோசே, ஆரோன், இஸ்ராயேலரின் குருக்கள் ஆகியோரை இறையதிகாரத்தோடு நியமித்த இறைவனே, காலம் நிறைவுற்றபோது, தம் ஒரே மகனை அனுப்பினார். இயேசுவில், ஒரு புதிய மேன்மை மிக்க மோசேயைக் காண்கிறோம். இறைவனும் மனிதனும் என்ற அளவில் இயேசு மோசேக்கும், பழைய ஏற்பாட்டுக் குருக்களுக்கும் அளிக்கப்பட்ட எல்லா ஆற்றல்களையும் கொண்டிருந்தார். சட்டத்தை இயேசு அழிக்கவில்லை; அதை நிறைவேற்றினார். சட்டம் என்ற அடிப்படையின் மேல் தமது சொந்த மகிமை மிக்க அமைப்பை எழுப்புகிறார்.

லேவியர் சட்டம் நம்மை இப்போது கட்டுப்படுத்தவில்லை. ஆனால், அஃது எடுத்துக்காட்டும் புனிதம், இன்றும் நம்மைக் கட்டுப்படுத்தவல்லது. நம் இதயத்தில் புனிதம் என்னும் ஆலயத்தைக் கிறிஸ்து எழுப்புமுன், லேவியர் மனப்பான்மை என்னும் அடிப்படை அங்கே இருக்க வேண்டும். இம்மனப்பான்மை, எல்லாம் வல்ல இறைவனுக்கு வரையற்ற, நிபந்தனையற்ற அர்ப்பணமாகும்.

வழிப்போக்கர் (WAYFARER)

பயணி. நடைபாதையில் நடந்தே பயணம் செய்வோர். இத்தகு வழிப்போக்கர்கள் வியாபாரிகளாகவோ, இசைக் கலைஞர்களாகவோ, கொல்லர்களாகவோ, இருக்கலாம். அன்னியரும், பிச்சை எடுத்துப் பிழைப்போரும் வழிப்போக்கர்கள் என்றே அழைக்கப்பட்டனர். போர்க் காலங்களில் வழிப்பயணம் செய்வது அபாயமானதொன்றாகக் கருதப்பட்டது *(நீதி5:6; 19:17தொ; எசா 33:8).* வழிப்போக்கர்கள் வழியில் செமித்திய முறைப்படி

நல்லதொரு உபசாரம் பெற்று வந்தனர் என்பதற்கு 2 சாமு 12:14; யோபு 31:32; எரே 14:8 சான்று பகர்கின்றன. ''வழிப் போக்கர்'' என்ற பொருளுடைய ஆரகு என்பவரின் சந்ததியினர் அடிமைத்தனத் தினின்று திரும்பி வந்ததை எஸ் 2:5; நெகே 6:18; 7:10 குறிப்பிடுகின்றன.

வழிப்போக்கர்களின் பள்ளத்தாக்கு (TRAVELLERS, VALLEY OF)

சாக்கடலின் கிழக்கில், ஆகவே, புனித நாட்டிற்குப் புறம்பே அமைந்துள்ள ஒரு பள்ளத்தாக்கு (எசே 39:11). இஸ்ராயேல் பிற்காலத்தில் 'கோகு' என்பவனோடு போரிடும்பொழுது அவனையும் அவனது படைகளையும் இங்குதான் புதைப்பார்கள் என்று இறைவாக்கினர் எசேக்கியேல் முன்னறிவிக்கின்றார் (எசே 38-39). அதன் பிறகு அஃது அமோன்-கோகு பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படும் (39:11-15).

வழியடையாளம், சாலை அடையாளம் (WAYMARK, GUIDEPOST)

இஸ்ராயேலர் நாடு கடத்தப்பட்டபோது மீண்டும் தங்கள் நாடு திரும்புவதற்கு உதவியாக இருக்குமாறு ஆங்காங்கே கற் குவியல்களை வழியடையாளங்களாக ஏற் படுத்திச் சென்றனர். அவர்கள் தம்நாடு திரும்புவதற்கு இக்கற்குவியல்கள் வெகு வாக உதவியாக இருந்தன (எரே 31:20).

எசே 39:15 புதைக்கப்படாத மனித எலும்பின் இருப்பிடத்தைக் குறிக்கும் கற் குவியல் ஒன்றைப்பற்றிக் குறிப்புத் தரு கின்றது. அக்காலத்தில் கல்லறைகளுக்கும் கற்குவியல்களால் அடையாளங்கள் வைக்கப்பட்டிருக்கலாம். எனவேதான் 2 அர 23:17-இல், கற்குவியல் நினைவுச்சின்ன மாகப் பொருள் கொள்ளப்படுகின்றது.

வளமைச் செறிவு வழிபாடு (FERTILITY CULT)

இது பழங்காலத்தில் மேற்காசிய நாடு களில் பின்பற்றப்பட்டு வந்த ஓர் வழி பாட்டு முறை. ஒரு தேவதையைச் செழிப் புக்குக் கடவுளாக உருவகப்படுத்தி அதை அவர்கள் வழிபட்டனர். இந்தத் தேவ தைக்கு இணையாக ஓர் ஆண் கடவுளை வழிபட்டனர். இந்த ஆண் கடவுள் இறந்து பின் உயிர்பெற்றார் என நம்பினர். எப்படித் தாவரங்கள் முதலில் வாடி, பின் வளர்ச்சி யடைகிறதோ அது போல உயிர் பெற்றார் எனக்கருதினர். இதைப் பற்றி பல புராணங் கள் உள்ளன. இந்த ஆண் கடவுள் வேறொரு கடவுளாலோ, மிருகத்தாலோ கொல்லப்பட்டார். அவர் இறந்தவுடன் பூமியில் வறட்சி ஏற்பட்டது. பெண் தேவதை அவனுக்காக அழுது புலம்பியது. பின் அவன் உயிர் பெற்றவுடன் இருவரும் மகிழ்ந்தனர்.

மெசபொத்தாமியாவில் இவ்விருவரும் இஸ்தார் (பெண்) மற்றும் தம்முசு (ஆண்) எனவும், எகிப்தில் இசிசு மற்றும் ஒசிரிசு எனவும், உகாரித்து ஏடுகளில் பாகால்-அதாது மற்றும் அனாத்து எனவும் அழைக் கப்பட்டனர். இதைப் பற்றிய குறிப்புகளை நாம் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம்.

இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு வந்தபோது அந்நாடெங்கும் இந்த வழிபாடு பரவியிருந்தது. இந்தக் கடவுளுக்குப் பெரிய பெரிய ஆலயங்களும் இருந்தன. காலப்போக்கில் இஸ்ராயேலும் உண்மைக் கடவுளையும் பாகாலையும் சேர்த்து வழிபடத் தொடங்கினர். கானா னிய சமயவிதிப்படி ஓர் ஆண்குருவும் பெண்குருவும் உடலுறவு கொண்டால் அவர்களின் கடவுளும் தேவதையும் உட லுறவு கொள்வர்; இதனால் பூமிவளம் பெறும் என நம்பினர். இந்த வழிபாட்டில் எல்லோரும் சேர்ந்து உணவை உட்கொண் டனர். அதிகமாக திராட்சை ரசம் பருகினர். இந்த வழிபாட்டின்போது சிறு பிள்ளைகள் பலியிடப்பட்டனர் (குழந்தைகள்). தங்கள் வாழ்விற்குத் தேவையான இரசம், பெண், பாடல் முதலியவற்றையே பலியாக ஒப்புக் கொடுப்பதாகவும் இதனால் வாழ்வு தொடர்வதாகவும் அவர்கள் எண்ணினர். இது நீதிபதிகளாலும், இறைவாக்கினர் களாலும் பெரிதும் கண்டிக்கப்பட்டது.

வளர்ச்சி (GROWTH)

1. படைப்பில் வளர்ச்சி: உயிர் என்பது தன்னியல்பாகவே வளர்ச்சி பெறுவதாகும். இறைவன் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் 'பலுகிப் பெருகுங்கள்' என்று கட்டளையிடுகிறார். மனிதன் எண்ணிக்கையில் பெருகுவதோடு மட்டுமின்றி, உலகையே தன் ஆளுகைக்குள் கொண்டு வரவும் வேண்டும் (ஆதி 1:22.28; 9:7). மேலும், கோரை தன் வளர்ச்சிக்குத் தண்ணீரை நம்பியிருப்பது போல (யோபு 8:11தொ), மனிதனும் தன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இறைவனைச் சார்ந்திருக்கிறான். இந்த உண்மையை அவன் மறந்திடலாகாது. படைத்தவரின் ஆசி உயிருக்கும் அதன் வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். மனிதனின் பாவம் படைப்பை இறைவனின் சாபத்திற்கு உள்ளாக்கியது. இறைவன் மட்டும் தமது இரக்கத்தால் தம் ஆசீரைத் திரும்ப அளித்திராவிடில் (ஆதி 9:1-7), இப்பாவம் பூமியின் மீதுள்ள உயிர்களை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கும் (3:17; 6:5தொ). இறைவன் தந்த இவ்வாசீர் ஆபிரகாம் வழியாக மக்கள் இனத்தார் அனைவருக்கும் உரியதாகும் (12:3; கலா 3:8).

2. மீட்பு வரலாற்றில் வளர்ச்சி:

அ) உலகில் தீமையின் வளர்ச்சி: படைப்பில் தீமை இடம் பெற்றுவிட்டது. அத்தீமை அங்குப் பெருகவும் செய்கின்றது. எவ்வாறெனில், சகோதரர்களுக்குள் சண்டை மூள நீதிமான் அழிவுறுகிறான் (ஆதி 4:8); பழிவாங்கும் மனப்பான்மை அத்துமீறி வளர்ந்து கொலைகளின் எண்ணிக்கையைப் பெருக்குகின்றது (4:24); மனிதனின் உள்ளத்தில் வஞ்சகம் பெருக உலகில் வன்முறைகள் தாண்டவமாடுகின்றன; பல்வேறு தண்டனைகள் பொல்லாதவர்களின் கெடுமதியை அம்பலப்படுத்திக் கண்டனம் செய்தாலும் (6:13; 11:9; 19:24தொ), பொல்லாதவர்களோ பெரும்பாலும் வளமான வாழ்வும் (சங் 73:3-12; எரே 12:1), நிலையான சந்ததியும் பெற்றுச் செழித்தோங்குகிறார்கள் (யோபு 21:7தொ). இத்தகைய நிலை நல்லவர்களுக்கு இடறலாகும். கடவுள் இந்நிலையை விட்டு வைப்பதோடு அல்லாமல், தீமையின் வளர்ச்சியைத் தடுக்க முற்படும் தம் ஊழியர்களையும் அனுமதிப்பதில்லை. ஏனெனில், பொல்லாதவர்களைப் பூண்டோடு அழிப்பது தமது உரிமை என்கிறார் (மத் 13:39). தீமையை நன்மையால் வெல்வதே இறைவன் மேற்கொள்ளும் வழி முறை (உரே 12:21). ஆகவேதான், பாவம் பெருகிய இடத்தில் தம் அருளை அணை கடந்தோடச் செய்கிறார் (5:20).

ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சி: பாவ உலகினின்று இறைவன் யாக்கோபின் வழிவந்த இனமொன்றைத் தமக்கெனத் தேர்ந்துகொள்கிறார். யாக்கோபின் சந்ததியார் பலுகிப் பெருக இறைவன் அருள்கூர்ந்ததுபோல் (ஆதி 35:11), தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களும் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருந்தால் அவர்கள் பலுகிப்பெருகும்படி விரும்புவார்; இன்றேல், அவர்களை அழித்திடுவார் (லேவ 26:9; உப 28:63;30:16). இறைவன் தமது இரக்கத்தின் காரணமாக, பிற இனத்து மக்களைப்போல இஸ்ராயேல் மக்களை நடத்துவதில்லை என்பது உண்மை. ஏனெனில், அவர்களின் பாவங்கள் முழு அளவை அடையும் முன்னரே அவர்களைக் கண்டித்துத் திருத்துகிறார் (2 மக் 6:12-16). இவ்வாறு தண்டிப்பதின் நோக்கமும் மனந்திரும்புதலாகும். மனந்திரும்புதல் மீட்புப்பெற மக்களின் உள்ளங்களைத் திறந்து விடுகிறது. தம் மக்கள் திருந்தும்பொழுது அவர்கள் எண்ணிக்கையிலும் மகிமையிலும் அதிகரிக்க இறைவன் அருள்புரிகின்றார் (எரே 30:19; எசே 36:10தொ.37தொ; எசா 54:1தொ).

இ) மீட்பரும் அவர் வார்த்தையும் வளர்ச்சி பெறுதல்: இம்மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற, இறைவன் தம் திருமகனை இரக்கமும் அருளும் உண்மையும் நிறைந்தவராய் இவ்வுலகிற்கு அனுப்புகிறார். இயேசுவோ மனித வாழ்வுக்குரிய வரம்புகளுக்குக் கட்டுப்படுகிறார். ஆகவே, முதலில் பாலனாகிறார். அப்பாலன் வளர்ந்து

யிலும் ஞானத்திலும் வளர்கிறார் (லூக் 2:40.52). இயேசு தாம் யார், தம் பணி என்ன என்பது பற்றி மக்களுக்குத் தம் போதனையால் வெளிப்படுத்துகிறார். இதைப் படிப்படியாகச் செய்கிறார். செய்து மக்களின் எதிர்ப்புக்கு ஆளாகிறார். இவ்வெதிர்ப்பு, இருளே ஆட்சிபுரியும் நேரமென்று தோன்றுமளவுக்கு வளர்ந்து கொண்டே போகிறது (லூக் 6:11; 11:53தொ; 19:47தொ; 22:2.53). இவ்வாறு இருள் ஆட்சிபுரியும் நேரத்தில்தான் இயேசு தமது பணியை நிறைவாக்குகின்றார். எவ்வாறெனில், இயேசு தமது அன்பை உச்சக் கட்டத்தில் வெளிப்படுத்தி, தந்தை மக்கள் மீது எந்த அளவுக்கு அன்பு கூரலானார் என்பதை முழுமையாக வெளிப்படுத்துகிறார் (யோவா 3:16; 13:1; 15:13; 17:4; 19:30). மண்ணில் விழுந்த கோதுமைமணி அங்கு மடிந்து தன்னைப் பலுகச் செய்வது போல (12:24), நல்ல ஆயனும் மடிந்து தம் ஆடுகள் மிகுதியாய் வாழ்வு பெறும்படி செய்கிறார் (10:10தொ). மக்கள் உள்ளங்களில் விதைக்கப்பட்ட அவரது வார்த்தை பலனளிக்கும் (லூக் 8:11.15). எனவேதான், இளந்திருச்சபையின் வளர்ச்சியை லூக்காவருணிக்கும்போது சிலவேளைகளில் விசுவாசிகளின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகிறது என்பார் (அ.ப. 2:41; 5:14; 6:7; 11:4); சிலவேளைகளில் கடவுளின் வார்த்தை மேன்மேலும் பரவி வருகிறது என்பார் (6:7; 12:24; 19:20).

ஈ) திருச்சபையின் வளர்ச்சியும் அதில் கிறிஸ்தவனின் வளர்ச்சியும்: உயிரனைத்தையும் போலவே கிறிஸ்தவ வாழ்வும் தன்னியல்பாக வளர்ச்சியுறுவதாகும். கிறிஸ்தவன் வளர்ச்சியுற வேண்டும்; ஆனால், தனிப்பட்ட மனிதனாக அன்று, திருச்சபையின் உறுப்பினனாக வளர்ச்சியுற வேண்டும். ஏனெனில், அவன் திருச்சபையில் உயிருள்ள கல்லெனப் பொருத்தப்பட்டுள்ளான். மீட்பில் கிறிஸ்தவன் வளரும்போதே ஞான இல்லமான திருச்சபையும் கட்டி எழுப்பப்படுகிறது (1 பேதுரு 2:2-5). பவுல் அறிவுறுத்துகின்றபடி, கிறிஸ்தவன் இறையறிவிலும் விசுவாசத்திலும் வளர்ச்சி பெற வேண்டும் (2 கொரி 10:15). இதனால் கிறிஸ்தவன் எல்லா வகையான நற்செயல்களிலும் சிறந்து, அன்பில் வளர்ச்சியுறுகிறான் (கொலோ 1:10; பிலி 1:9; 1தெச 3:12). இறையறிவில் பெறும் வளர்ச்சி முதன் முதலாக அவர் அருளில் பெறும் வளர்ச்சியாகும் (2 பேதுரு 3:18). ஏனெனில், இந்த அருளின் வளர்ச்சிக்குக் காரணமாயிருப்பவர் மீட்பரே. கடவுளின் உண்மை உடனுழைப்பாளர்களான அப்போஸ்தலர்கள் நடுகிறார்கள், நீர் பாய்ச்சுகிறார்கள். ஆனால், வளர்ச்சியைக் கொடுப்பவர் கடவுள்தாமே (1 கொரி 3:6-9).

மேலும், கடவுளே புனிதர்கள் ஒவ்வொருவருக்கும் அருளைப் பொழிந்து தங்கள் தலையாகிய கிறிஸ்துவை நோக்கி முன்னேறச் செய்கிறார். இதனால் இவர்கள் அன்பிலே உண்மையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்ப ஒத்துழைக்கின்றனர். அவ்வுடலும் வளர்ச்சி பெற்று அன்பினால் கட்டடமாக எழுகிறது (எபே 4:11-16). ஏனெனில், ஒவ்வொருவரின் வளர்ச்சியும் அவர் கிறிஸ்துவோடு கொண்டுள்ள ஒன்றிப்பின் வளர்ச்சியைப் பொருத்ததாகும். திருமுழுக்கு யோவான் கூறியதுபோல, ஒவ்வொருவரும் குறைய வேண்டும்; குறைந்தால்தான் கிறிஸ்து அவரிடத்தில் வளர்ச்சியடைந்து தமது முழுப் பருவத்தின் அளவை அடைய முடியும் (யோவா 3:30; எபே 4:13). இதனால் ஆண்டவருக்குள்ளும், தேவ ஆவிக்குள்ளும் திருச்சபை கடவுள் உறையும் புனித ஆலயமாகக் கட்டப்பட்டு உயரும் (2:21தொ).

3. இறையரசை நோக்கி: விசுவாசி தன் வாழ்வின் இலக்கை அடைய இடையறாது முயற்சி செய்கிறான் (பிலி 3;12தொ); அவன் ஆன்மீகக் குழந்தைப் பருவத்திலிருந்து முதிர் பருவத்திற்குக் கடந்துசெல்ல ஆர்வம் கொள்கிறான் (1 கொரி3:1தொ; எபி 5:12தொ); நற்செய்தி உலகெங்கும் பரவித் தொடர்ந்து பயனளிக்க வேண்டும் (கொலோ 1:6). இவையெல்லாம் இறையரசு என்பதையே வளர்ச்சியுறச் செய்கின்ற

னவா? உவமைகள், இறையரசை ஒருவகை வளர்ச்சியின் இறுதிக் கட்டமாகத்தான் எடுத்துக்காட்டுகின்றன என்பது உண்மை. புளிப்புமா, மாவு முழுதும் புளிப்பேறச் செய்து முடிக்கிறது (மத் 13:33); அறுவடை மட்டும், விதை வளர்ச்சியடைகிறது; ஒரு விதை மரமாகவும் வளர்கின்றது (13:23.32). இவை யாவும் தம்முள் கொண்ட ஆற்ற லால் நடப்பவை (மாற் 4:28). இத்தகைய உவமைகள் யாவும் இறையரசின் வளர்ச் சியைக் குறிப்பதை விட, இறையரசை நோக்கி முன்னேறிச் செல்லும் திருச்சபை யின் வளர்ச்சியைக் குறிப்பதில்லையா? அத்திருச்சபை இறையரசை அறிவித்து, அதன் விதை போல இருந்து, அதையே இறைவனின் ஒரு கொடையாகப் பெற எதிர்பார்ப்பது இல்லையா? இக் கொடையை ஒவ்வொருவரும் ஒரு குழந் தையைப் போலப் பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறெனில், இறையரசை அறிவிக்கும் நற்செய்தியை (10:15; தாண். 1:15) ஒருவர் விசுவசித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறுதான் இறை வனின் நட்புறவில் பங்கு கொள்ள முடி யும். இந்த நட்புறவே இறையரசாகும். இவ்வாக, மனுமகன் தம் மாட்சியில் உலகைத் தீர்ப்பிட வரும்போது வெளிப் படும் (மத் 25:31-34). அப்பொழுதுதான் கடவுள் ஆட்சி புரிவார். ஏனெனில், அவ ரோடு கொண்ட நட்புறவு முழுமை பெறும்; கடவுள் அனைத்திலும் அனைத்து மாக இருப்பார் (1 கொரி 15:24-28). இக்கட்டத்தில் இறையரசு வளர்ச்சியுறுவதற் கில்லை. ஏனெனில் இந்த இலக்கை நோக் கித்தான் ஆன்மீக வளர்ச்சியனைத்தும் முன் னோக்கிச் செல்கிறது. இந்த இலக்குதான் நம்மிடத்தில் ஓர் ஏக்கத்தை உண்டாக்கி வளர்ச்சிக்குக் காரணமாகிறது. இயேசுவின் உயிர்ப்பைப்போல, இந்த இறையரசின் வருகையும் தந்தையின் கொடையாகும்.

வளாகம் (SQUARE)

விவிலியத்தில் வளாகம் என்னும் பொரு ளுடைய எபிரேயச் சொல்லின் மூலப் பொருள் இன்னும் சரிவரப் புரியாத ஒன்றே ஆயினும், பொதுவிடம், திறந்தவெளி, சதுக்கம் என்று பலவாறு மொழி பெயர்க்கலாம்.

தொல்பொருள் ஆராய்ச்சியின் கண்டு பிடிப்பின்படி இஸ்ராயேலரின் நகரங்களில் காணும் நுழைவாயிலுக்கு எதிரில் அமைந் துள்ள திறந்தவெளியே இவ்வளாகமாக இருக்கலாம் என்பது விவிலிய அறிஞர் களின் கருத்து (2 நாள் 32:6; நெகே 8:1.3.16; எஸ் 10:9; உப 13:16; நீதி 19:15; எஸ்த 4:6; யோபு 29:7).

வளையங்கள், கொக்கிகள் (LOOPS)

பழைய ஏற்பாட்டில், திரு உறைவிடத் திற்குப் போடப்பட்ட திரைகளின் இரண்டு பகுதிகளைச் சேர்த்துக் கட்டுவதற்கு வசதி யாகச் செய்யப்பட்டிருந்த கொக்கி வளை யங்களையே இங்கு விளக்குகிறோம் (யாத் 26:4-5.10-11; 36:11-12.17). கூடாரத்தின் மூடு திரைகளின் ஓரங்களிலும் இளநீல நூலால் வளையங்கள் அமைத்தனர். ஒவ்வொரு திரையின் இரு புறங்களிலும் ஐம்பது வளையங்கள் இருந்தன. அவை ஒன்றோ டொன்று இணையும்படி வளையங்கள் எதிர் எதிரே அமைக்கப்பட்டிருந்தன. அஃ தோடுகூட கூடாரம் ஒரே உறைவிடமாய் அமையும்படி, ஐம்பது பொன் கொக்கி களையும் செய்து மூடுதிரைகள் ஒன்றோ டொன்று அந்தக் கொக்கிகளாலேயே இணைக்கப்பட்டிருந்தன.

கூடாரத்தின் மேற்புறத்தை மூடுவதற்காக வெள்ளாட்டு மயிரினாலான கம்பளித் திரை களை, மேலே குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படியே அமைத்தனர். ஆனால், பொற் கொக்கிகளுக்குப் பதிலாக இதில் வெண்கலக் கொக்கிகளைப் பயன்படுத் தினர்.

வளையம் (RING)

''நெசெம்'' என்ற எபிரேயச் சொல் பொதுவாக வளையத்தைக் குறிக்கிறது. இது காதிலோ, மூக்கிலோ அணியப்பட் டால் அது தனியாகக் குறிக்கப்படுகிறது. பெண்கள் அணியும் ஆபரணமாக மூக்கு வளையம் ஆதி 24:47; எசா 3:21-இலும்,

காதில் அணிவதாக எசே 16:12-இலும் குறிக்கப்படுகிறது. காது வளையம் ஆண், பெண் இரு பாலராலும் அணியப்பட்டிருக்கிறது (ஆதி 35:4; யாத் 32:2). கையில் அணியும் வளையம் பொதுவாக முத்திரைக் கணையாழியையே குறிக்கும். இஃது அரசர்களாலும், அதிகாரிகளாலும் மட்டுமே பொதுவாக அணியப்பட்டது (யாத் 35:22; எசா 3:21). தொல்பொருள் ஆய்வுகள் காதுவளையத்தைச் சீரியர்கள், நீக்ரோக்கள் அணிந்தனர் என்று காட்டுகின்றன. மேதியர்கள், ஏலாமியர்கள், இத்தியர்கள், கி.மு. 14-13-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பாலஸ்தீனியர்கள், அசீரியப் படைவீரர்கள், எகிப்திய அரசிகள், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அசீரிய அரசர்கள், பாலஸ்தீனக் கடவுள்கள், இத்தியக் கடவுள்கள், அசீரியக் கடவுள்கள் முதலானோர் காது வளையங்களை அணிந்திருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. இதிலிருந்து அக்காலத்தில் காதுவளையம் எவ்வாறு ஆண், பெண் யாவராலும் அணியப்பட்டது என்பது தெரிகிறது. காது வளையத்தோடு தொங்கல்களும் இணைக்கப்பட்டிருந்தன. சுபாதின் அரசி அணிந்தது 11 செ.மீ. விட்டம் கொண்ட வளையமாக இருந்தது.

வறுக்கப்பட்ட தானியம் (PARCHED GA-RAIN)

இஃது அறுவடைசெய்வோர் முதல் (ரூத் 2:14) அரசன் வரையில் (2 சாமு 17:28; காண்க. 1 சாமு 25:18) அனைவராலும் உண்ணப்பட்ட உணவு (லேவி 23:14;யோசு 5:11; 1 சாமு17:17; யூதி 10:5). கோதுமை மணிகளைச் சட்டியில் வறுப்பதன் மூலமோ, கோதுமைக் கதிர்க் கட்டுகளை நெருப்பில் ஏந்தியிருப்பதன் மூலமோ, இவ்வுணவு தயாரிக்கப்பட்டது.

வனியா (VANIAH - அன்பிற்குத் தகுதியானவர்)

எஸ்ராவின் காலத்தில் வாழ்ந்த அன்னியப் பெண்களை மணந்த பக்தர்களின் பட்டியலில் இவர் குறிக்கப்படுகிறார் (எஸ் 10:36).

வன்முறை (VIOLENCE)

I. வன்முறை என்றதும் முரட்டுத்தனமான அழிப்பு, கற்பழிப்பு, மீறல் ஆகியவையே நம் கண்முன் தோன்றுகின்றன. ஆனால், வன்முறைக்கு அடிப்படையாக உள்ள உயிர் ஆற்றலையும், அஃது எவ்வாறு தன்னைப் பாதுகாக்க முனைகிறது என்பதையும், அதன் விளைவாகத் தன்னையே அழிக்க முற்படுகின்றது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனிதரிடையே நிலவும் வன்முறையை வேதாகமம் ஒளிவு மறைவு இன்றிக் காட்டுகின்றது. இன்று உயிர் ஆற்றலும், அழிவாற்றலும் தற்காலிகமாக சமநிலையில் இருக்கின்றன. வன்முறையற்ற வாழ்வைப் பற்றிய கனவு இறுதிக்காலத்தில் இயேசுவினால் நனவாகும் என்றும் வேதாகமம் வெளிப்படுத்துகின்றது (காண். எசா 11:6-9; திருவெளி21:4).

II **வர்ணனை**

1. ஒழுங்கை மீறி நிகழ்கின்ற எச்செயலும் வன்முறை என்று கூறலாம். சிமியோன், லேவி இருவரும் வன்முறைக்குட்பட்ட தங்கள் சகோதரி தீனாவின் (ஆதி34; 2)பொருட்டு, பழிவாங்குதல் அக்கால வழக்கத்திற்கு இயைந்ததே. அதிலே அளவை மீறியதால் கொடியோரைத் தண்டிக்க அவர்கள் உபயோகித்த கத்திகளை, அவர்களின் தந்தை ''வன்முறைக் கருவிகள்'' என்கிறார் (49:5). மக்களும் குருக்களும் கூட திருச்சட்டத்தை மீறினார்கள் (எசே 22:26; செப் 3:4). பிறரை ஏமாற்றி, சமூகநீதியை மீறுவர் சிலர் (செப் 1:9); பிறர் உரிமையை மீறுவர் மற்றும் சிலர் (எசே 45:9). வழக்கமாக வன்முறையோடு செயலில் முன்கூட்டிய திட்டமும் நினைவும், பேச்சில் அடக்கமின்மையும் சேர்ந்திருக்கும். பதுங்கியிருந்து தந்திரமாகத் தாக்குதல் (சங் 140:2), பிறர் செல்லும் வழியிலே குழிதோண்டுதல் (7:17), வஞ்சகம் (72:14), பழிச்சொல் (140:12), ஏமாற்றுதல் (மலா 2:16), பொய்ச்சாட்சி (யாத் 23:1;உப 19:16;சங் 27:12; 35:11) போன்றவையும் வன்முறைகளேயாகும். நல்லவர்கள் இவற்றில் ஈடுபடுவதில்லை (யோபு 16:17).

2. வன்முறைகளின் தன்மையை அதன் முக்கிய விளைவாகிய உடல் மற்றும் சமூக வாழ்வின் அழிப்பிலிருந்தும் உணரலாம். இச்சூழ்நிலையில் வன்முறையைக் குறிக்கும் சொல்லோடு வழக்கமாக அடக்குமுறை, சுரண்டல், பாழாக்குதல், சிதைவு போன்றவற்றைக் குறிக்கும் வேறொரு சொல்லும் சேர்ந்து வரும். வன்முறைக்கு ஆளாகிய மக்களின் நிலைபற்றி இறைவாக்கினர் முறையிடுகின்றார்கள் (ஆமோ 3:10; எரே 6:7; 20:8; எசா 60:18); யாவே மட்டுமே இந்த அநீதியைச் சரிப்படுத்த முடியுமென்று அவரை இறைஞ்சுகின்றார்கள் (அப 1:3); ''உலகிலே வன்முறை அதிகரித்து விட்டது'' என்றுதானே பெருவெள்ளம் வரச்செய்கின்றார் (ஆதி 6:11.13)? வன்முறையாளரிடமிருந்து விடுதலை விரும்பும் அடக்கப்பட்டோரின் கூக்குரலையும் அடிக்கடி கேட்கின்றோம் (2 சாமு 22:3-49; சங் 18:49; 140:2.5). வன்முறைக்குப் பதில், வன்முறையே என்று இவர்கள் நம்புகின்றார்கள். ''வன்செயல் செய்பவனைத் தீமை விரட்டி வேட்டையாடுவதாக'' (சங் 140:12). இறைவனின் ஊழியன் மட்டும் தன்னை முழுவதும் கையளிக்கின்றார். வன்முறைகளிலோ, ஏமாற்று வித்தைகளிலோ அவர் ஈடுபடாவிட்டாலும் (எசா 53: 9) பாவிகளோடு சேர்க்கப்பட்டுத் துன்புறுகிறார்.

3. வலுக்கட்டாயமோ, பழிக்குப்பழி வாங்குவதோ, கோபமோ, பேரார்வமோ வன்முறை அல்ல. உயிர் ஆற்றல் இவை போன்ற வழிகளில் வெளிப்பட்டு, சில வேளைகளில் வாழ்வையே அழிக்கின்றது என்பது உண்மையே. ஆனால், இவையெல்லாம் வன்முறையின்பாற் பட்டதன்று. ஏனெனில், பழைய ஏற்பாட்டில் ஓர் ஒழுங்கை மீறுதலே வன்முறையாகக் கருதப்பட்டது. இவ்வொழுங்கு கிரேக்கர்கள் கருதியதுபோல், என்றும் மாறாத ஏதோ ஓர் இயற்கை நியதி அன்று. காலத்திற்கேற்ப, நீதியினால் அதாவது எல்லாச் செயல்களுக்கும் முடியும் நடுவருமான உடன்படிக்கையின் இறைவனால், அது நிர்ணயிக்கப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில்தான் நாம் பழைய ஏற்பாட்டில் வன்முறையைப் பற்றி ஆராய வேண்டும்.

III. **சூழ்நிலைகள்:** மேற்கண்ட குறிப்புக்களைக் கொண்டு வன்முறைச் செயல்கள் எவை என்று பிரித்துணரலாம். ஆபேலைக் காயின் கொலை செய்தல் ஒரு வன்முறைச் செயல். ''உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கிறது'' என்கிறார் இறைவன். ஓரளவு பொருத்தமும் இன்றி, இலாமேக்கு தன்னைக் காயப்படுத்திய ஒரு மனிதனைக் கொல்கின்றான் (4:23). இஸ்ராயேல் எகிப்தில் அடிமைப்படுத்தப்படுகின்றது (யாத் 1:12; உப 26:6; காண். 2 சாமு 7:10). ஒரு பெண்ணைக் கற்பழித்தல் ஒரு வன்முறைச் செயல். ஏனெனில், பெண்ணின் சம்மதம் இல்லாத இச்செயலால் சமூக உறவுகள் பாதிக்கப்படுகின்றன. அந்த அநீதச் செயலைச் சட்டம் கண்டனம் செய்கிறது (உப 22:24.29; காண். ஆதி 34:2; நீதி 19:24; 20:5; 2 சாமு 13:12.14; புல 5:11). தாவீது புனிதப்போர் என்ற சாக்கிலே தந்திரமாக பெத்சேபாவின் கணவனான உரியாவைச் சாவுக்குள்ளாக்குகின்றார் (2 சாமு 11:15). ஆனால், சிமயி அவரைப் பழித்துப் பேசினாலும் கூட, சவுல் குடும்பத்தாரோடு அவர் வன்முறையாக நடந்து கொள்ளவில்லை (16:7தொ; 19: 19-24). சவுல் அவரை மறைமுகமாகத் தாக்க, பன்முறை முயன்றாலும்கூட (1 சாமு 18:10தொ; 19:9-17), இரண்டு முறை அவரைக் கொல்லாது விட்டுவிடுகின்றார். (24:26). ஈசபேலால் சதித்திட்டம் செய்யப்பட்ட பொய்ச்சாட்சியினால் நாபோத்து கல்லால் அடித்துக் கொல்லப்பட்ட பின் ஆகாபு நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை வன்முறையாக அபகரித்துக் கொள்கிறான் (1 அர 21:8-16). இறுதியாக, இயேசுவுக்கு முன் உள்ள விவிலிய வரலாறு மனிதரின் வன்முறை வரலாறோ என்று எண்ண வேண்டிய அளவு பேராசை, அடக்குமுறை, கொலை, கலகம் போன்றவை விவிலியத்தில் மலிந்திருக்கின்றன (லூக் 13:1; மாற் 15:7; காண். மத் 2:16).

IV. **யாவேயும் வன்முறையும்:** மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்பொழுது யாவேயின் செயல்முறையிலே தெளிவு இல்லை. அநீதியை அவர் வெறுக்கின்றார். என்றாலும் சில வேளைகளில் நாம் வன்முறை என்று கருதக்கூடிய செயல்களைக் கண்டிக்காது விடுவதோ, ஆதரிப்பதோ மட்டுமல்ல, அவரே செய்கின்றார். இதை எப்படிப் புரிந்துகொள்வது?

1. சந்தேகத்திற்கிடமின்றி வன்முறை, அநீதியையெல்லாம் கடவுள் கண்டிக்கின்றார். ஆனால், மக்களுடைய பண்பாட்டிற்கேற்ப அதைப் படிப்படியாகச் செய்கின்றார். எடுத்துக்காட்டாக, பழிக்குப்பழி கேட்கும் சட்டத்தை அவர் ஏற்றுக்கொண்டாலும் (யாத் 21:24), இலாமேக்கினுடைய செயல்களோடு ஒப்பிடும்பொழுது (ஆதி 4:15-24) இது முன்னேற்றம் என்றே கூறவேண்டும். ஆமோஸ் அவரது காலமுறைக்கு ஏற்ப விவரிக்கும் வன்முறைச் செயல்களைச் செய்யக்கூடாதன என்று கண்டனம் செய்கிறார். இச்செயல்கள், மக்களை இரத்த உறவுகளைப் பார்க்காமல் இடம் பெயர்ப்பது; கர்ப்பிணிகள் வயிற்றைக் கிழிப்பது; சடலங்களைக் கொளுத்துவது; திருச்சட்டத்தை நிராகரிப்பது; சிறியோரைக் கொடுமை செய்வது (ஆமோ 1:1-2:8) போன்றவையாகும்.

எகிப்தியர் இஸ்ராயேலரைக் கொடுமைப் படுத்தியபோது அவர்களுக்கு ஆதரவாயிருந்த (யாத் 3:9) யாவே, இஸ்ராயேலரும் எளியவருக்கு ஆதரவாயிருக்க வேண்டும் என்று கூறுகின்றார்: ''அன்னியனைத் துன்புறுத்தாதே! ஏனென்றால், நீங்களும் எகிப்து நாட்டில் அன்னியராய் இருந்தமையால், அன்னியரின் மனநிலையை நீங்களுமே அறிவீர்கள்!'' (23:9). மனிதரால் அநீதியாகக் கொடுமைப்படுத்தப்படுவோருக்கு, சிறப்பாக அனாதைகள், விதவைகள், ஏழைகள் ஆகியவர்களுக்குப் . பாதுகாப்பாளராக இறைவன் இருக்கின்றார் (யாத் 21-23; உப 24:20).

2. ஆனால், சிலைகளைத் தொழும் நாடுகளின் மத்தியில், மெசியா வரும்வரை இஸ்ராயேலரைப் பேணிப் பயிற்றுவித்து வந்த இறைவன், அவர்கள் வாழ்ந்த பண்பாடு சூழ்நிலை ஆகியவற்றை அலட்சியப் படுத்தாது, அவர்களோடு செய்த உடன்படிக்கையின் பெயரால், அச்சந் தருகிற போர்க்கடவுளாகக் காட்சியளிக்கின்றார்; எகிப்தியரின் தலைப்பிள்ளைகளை அழிக்கின்றார் (யாத் 12); எதிரிகளை வெல்லும் பொழுது அவர்களை அடியோடு அழிக்க வேண்டும் என்ற அர்ப்பணப்போரை வற்புறுத்துகின்றார் (யோசு 7); போர்களைத் தானே முன்னின்று நடத்துகிறார் (காண். 2 சாமு 5, 24); சிம்சோன் தன் வலிமையால் எதிரிகளைப் பழிக்குப்பழி வாங்கி அழிக்கச் சம்மதிக்கின்றார் (நீதி 15-16); உடன்படிக்கையை மீறுபவர்களைக் கொலை செய்யும் வெறியை ஆதரிக்கின்றார் (எண் 15:11).

இவற்றையெல்லாம் இறைவன் செய்தாலும் அவரை விவிலியம் வன்முறையாளராகக் கருதவில்லை. ஏனெனில், அவர் தான் செய்த உடன்படிக்கையை மீறாது அதற்குப் பிரமாணிக்கமாகவும் உத்திரவாதமாகவும் இருக்கின்றார். இச்செயல்களால் ஓர் உயர்ந்த நன்மைக்காக இவ்வுலக உயிர்கள் அழிக்கப்படலாம் என்றும், இறுதி நாட் போரில் உலகிலுள்ள தீயனவெல்லாம் முழுவதும் அழிக்கப்படும் என்றும் குறித்துக்காட்டுகின்றார். ஆனால், இதே அடிப்படையில் தற்கால அரசியலில் இந்தப் போக்கைச் செயல்படுத்தல் கூடாது. கடவுள் தன்னை வெளிப்படுத்தியபோது இருந்த சூழ்நிலை வேறு; இப்பொழுதுள்ள சூழ்நிலை வேறு.

3. யாவேயின் செயல்முறையின் முரணான தன்மை தன் செயல்கள் மூலம் தன்னை உயிருள்ள இறைவன் என்று வெளிப்படுத்தும் அவரது இயல்பையும் ஓரளவு பிரதிபலிக்கிறது. ஆனால், இது வரலாற்றுப் போக்கில் படிப்படியாகத் தெளிவு நயம் பெறுகிறது. முதலில் இறைவன் இயற்கை நியதியை மீறும் அருஞ்செயல்கள் மூலம், எடுத்துக்காட்டாக

சீனாய் மலையில் (யாத் 19), தன்னை வெளிப்படுத்துகின்றார். பிறகு எலியா, இறைவனின் செயல் புயலைப் போலவோ, பெரும் காற்றைப் போலவோ, நிலநடுக்கம் போலவோ இல்லை, ஆனால் தென்றலின் மெல்லிரைச்சலைப் போன்றது என்று உணர்கின்றார் (1 அர 19:11தொ). மெசியாவும் முதலில் தன்னை எதிர்ப்போரின் தலைகளை நசுக்கும் போர்த்தலைவராக உருவகப் படுத்தப்பட்டாலும் (சங் 110:5தொ; காண். எரே 17:25; 22:4), பின்னர் ''அமைதியும் எளிமையும் பொருந்திய அரசராகக் கழுதையின்மேல் வருவார்'' (செக் 9:9; காண். ஆதி 49:11; நீதி5:10) என்ற கருத்தே நிலவுகின்றது. இறுதியாக இறைவனின் ஊழியன் இறைவனை மட்டுமே நம்புகின்றார். வன்முறையை விரும்பிப் பணிவோடு ஏற்றுக்கொள்வதன் மூலம் அதை வெல்கின்றார். தீயோரை அவர் எதிர்ப்பதில்லை (எசா 50:5தொ); ஏமாற்றமோ வன்முறையோ அவரிடம் இல்லை (53:9). இவ்வூழியனை இயேசுவின் முன்னுருவாகக் கிறிஸ்தவர்கள் காண்கின்றார்கள்.

IV. **இயேசுவும் வன்முறையும்:** இயேசுவின் செயல்முறையை எளிதாக விவரித்து விட முடியாது. அது சிக்கல்கள் நிறைந்தது; புதிரானது; மனிதர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. ஆகவே, அவருடைய சொல்லையும் செயலையும் விளக்க நம்முடைய விருப்பு வெறுப்புக்களையொட்டி அவற்றுள் சிலவற்றைப் பொறுக்கிக்கொள்ளாது இயேசுவினுடைய கண்ணோட்டத்திலேயே அவை அனைத்தையும் அணுக வேண்டும்.

1. இறையரசை இயேசு தொடங்குகிறார். யூதர்கள் எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக அது வன்முறையை எதிர்கொள்கிறது. ''திருமுழுக்கு யோவான் நாள்முதல் இதுவரை, விண்ணரசு பலவந்தத்திற்கு உள்ளாகி வருகிறது; பலவந்தம் செய்வோர் அதைக் கைப்பற்றுகின்றனர்'' (மத் 11;12). அனேகமாக இறையரசுக்குள் நுழைய இருப்போரைத் தடுக்கும் எதிரிகளைப் பற்றித்தான் இயேசு பேசுகின்றார் என்று பெரும்பாலான உரையாளர் கருதுகின்றனர். ஆனால், சீடர்கள் ''குறுகிய வாயில் வழியாக நுழைய முயலவேண்டும்'' (லூக் 13:24) என்ற கண்ணோட்டத்தில் லூக்கா இதைப் புரிந்து கொள்கின்றார். ''திருச்சட்டமும் இறைவாக்கினர்களும் யோவான் காலம் வரைதான். அதுமுதல் கடவுளின் அரசைப் பற்றிய நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. அதில் ஒவ்வொருவனும் பலவந்தமாய் நுழைகிறான்'' (16:16). இறையரசின் வருகையால் ஒரு புதிய வேகம் இவ்வுலகிலே தோன்றுகின்றது. அதன் இயல்பை விவரிக்க ஏற்ற சொற்கள் இல்லையென்றாலும், இயேசு அதை மறைக்கவில்லை.

2. இறையரசை ஏற்க மறுத்து அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் அநீதமான ஓர் அமைப்பை மற்ற இறைவாக்கினரைப் போல இயேசுவும் எதிர்க்கும்பொழுது அவருடைய சொல்லும் செயலும் அவ்வமைப்பைக் கட்டிக்காப்பவர்களுக்கு வன்முறையாகத்தான் தோன்றும். வரம்பு மீறியதால் அன்று, மேலெழுந்த வாரியாக நோக்கும்பொழுது திருச்சட்டத்தை மீறுவது போல் காணப்படுவதால், அநீதிக்கு முன் சகிப்புத்தன்மையின் தெளிவற்ற நிலையையும், உண்மை அன்பின் தேவைகளையும் இவ்வாறு இயேசு தெளிவாக்குகின்றார். கடைக்காரர்களை அவர் கோவிலிலிருந்து விரட்டுகின்றார் (மத் 21:12தொ. இணை; யோவா 2:13-22). சமயம், சமூகம், மொழி இவற்றின் மரபுகளை மீறுகின்றார். ஓய்வுநாள் தன் அதிகாரத்திற்கு உட்பட்டது எனக்காட்டுகின்றார் (மாற் 2:28). இறைவாக்கினர் ஏற்கெனவே பழித்துக்கூறிய பொய்யான அமைதிக்குப்பதில் (காண்.எரே 6:14) வாளையே (மத் 10:34; காண்.லூக் 12:51) கொண்டு வந்த அவர் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய குடும்பத்தில்கூட பிளவுகளைத் தோற்றுவிக்கின்றார். அவருடைய அழைப்பு (மத் 19:35தொ) பெற்றோரிடமிருந்து பிள்ளைகளையும், சகோதரரிடமிருந்து சகோதரி

களையும் பிரிக்கின்றது. பெற்றோருக்குச் செலுத்தவேண்டிய மரியாதையைக் கூடப் புறக்கணிக்கச் சொல்கின்றார். ''இறந்தோர் தங்கள் இறந்தோரை அடக்கம் செய்து கொள்ளட்டும்'' (லூக் 9:60). அங்கக்குறைவில்லாத உடலையே யாரும் விரும்புவார்கள். ஆனால், உனக்கு இடறலாயிருந்தால் ''கண்ணைத் தோண்டியெடு, கையைத் துண்டித்துவிடு'' என்று கூறுகின்றார் (மத் 5:29தொ). இவற்றிலெல்லாம் அமைப்புகள் தம்மிலே அநீதமானவை என்பதற்காக அல்ல, அவற்றைவிட உயர்ந்ததெனக் கருதப்படும் இறையரசின் பொருட்டே மீறப்படுகின்றன. இவ்வமைப்பின் அதிகாரிகளும் கபடர்கள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்று அழைக்கப்படுகின்றனர் (23:13-36).

நிலவிவரும் சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள், அதைவிட உயர்வானதொன்றை ஏற்க மறுக்கும்பொழுது முன்னாளில் எலியாவைப்போல (1 அர 19:17தொ) இயேசுவையும் ஒரு கலகக்காரனாகவோ அதிகாரிகள் வகுத்த வழியிலிருந்து மக்களைப் பிரிக்க முனையும் புரட்சியாளனாகவோ காண்கின்றனர் (லூக் 23:2). ஆனால், இறைவனுடைய கண்ணோட்டத்தில் நிறுவனங்களால் நெருக்கிச் சாகடிக்கப்பட்ட உண்மையான மதிப்புக்களுக்கு இயேசு புத்துயிர் ஊட்டுகின்றார். நிகழ்ச்சிகள் தோன்றும் கண்ணோட்டத்திற்குத் தகுந்தாற்போல், திருவெளிப்பாட்டு நூலோடு, இயேசுவை இறுதியில் அமைதியை நிலைநாட்டும் (திருவெளி 21:4) வன்முறையாளராகவோ (திருவெளி 6:4-8; 8:5...), அவரே தன்னைப் பற்றிக் கூறுவதுபோல, இதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் நிறைய, வன்முறைக்குப் பணிந்து அதன் விளைவுகளை ஏற்று அதை வெற்றி கொண்டு (1 பேது 2:21-24) அநீதியை ஒழித்து ஓய்வளிக்கும் தலைவராகவோ காணலாம் (மத் 11:29). இவரை உயிருள்ள முன் மாதிரிகையாகக் கொண்டு தான் வாழும் முறையை வகுத்துக்கொள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் முனைகின்றான் (1 பேதுரு 2:18-21; 3:14; லூக் 5:9தொ: திருவெளி 14:12). சமூக அமைப்புக்களைப் பொருத்தவரை, எங்கெல்லாம் நீதியும் அன்பும் நசுக்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் நற்செய்தி புரட்சி முழக்கம் செய்கின்றது. நீதியும் அன்பும் இல்லாமல் இறைவனின் எந்த மகனும் வாழமுடியாது. ''கடவுளுடைய அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் தேடுங்கள்'' (மத் 6:33).

3. உலகில் நிலவும் அநீதியைப் பற்றிய இயேசுவின் கருத்துக்கள் பழைய ஏற்பாட்டை விடப் புரட்சிகரமானவை. பழிக்குப்பழி வாங்குவதில் சமநிலையைக் கடைப்பிடித்தது பழைய ஏற்பாட்டு நீதி. இயேசு வலியுறுத்தியதோ மன்னிப்பு (மத் 6:12. 14தொ; மாற் 11:25), அளவற்ற மன்னிப்பு (எழுபது முறை ஏழுமுறை: மத் 18:22). ''உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்'' (மத் 5:44; லூக் 6:27) என்று எல்லோருக்கும் கட்டளை இடுகின்றார். ''தீயோனை எதிர்க்க வேண்டாம்'' (மத் 5,39) என்று தன் சீடர்களுக்கு ஆணையிடுகின்றார். இக்கட்டளைகளை விளக்க அவர் தரும் மூன்று எடுத்துக்காட்டுக்களிலும் (மத் 5:39-41) இயேசு சமூக அநீதிச் செயல்களின் (கன்னத்தில் அறைதல், மேலாடையை எடுத்துக் கொள்ளுதல், தன்னோடு வரும்படி கட்டாயப்படுத்தல்) அடிப்படைக் காரணங்களைத் தீர்ப்பிடவில்லை. இந்த வன்முறைச் செயல்களுக்குத் தகுந்த காரணங்கள் இருக்கலாம். மாறாக, நம்பிக்கைத் துரோகியான கணக்கரையோ (லூக் 16:1-8), பொல்லாத நடுவனையோ (18:1-5) பின்பற்றும்படியும் அவர் கூறவில்லை. தீங்கிழைக்கப்பட்டவரின் நிலையை மட்டும் கருத்தில் கொண்டு, அவர்கள் வன்முறைச் செயல்களை ஏற்றுக் கொள்ளத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

இம்மனநிலைக்கு இயேசுவே முன் மாதிரிகை. இறையரசை வன்முறையால் நிலைநாட்ட மறுக்கின்றார். மாயவித்தையால் உலகமக்களின் பசியைத் தீர்க்க கற்களை உணவாக அவர் மாற்றவில்லை

(மத் 4:3தொ). மனிதரை வலிமையால் தன் வயப்படுத்த அவர் விரும்பவில்லை (4:8தொ). அரசியல் புரட்சியில் ஈடுபடவில்லை (யோவா 6:15). சிலுவைப் பலியின் வழியாக அன்றி மகிமையடையவும் அவர் விரும்பவில்லை (மத் 16:22தொ). இறுதியாக இரத்த வியர்வைக்குப்பின் ஒலிவ மலைத் தோட்டத்தில் தன் சீடர்கள் தன்னைச் சண்டையிட்டுக் காக்க முயன்ற போது, ''போதும், விடுங்கள்'' என்று அவர்களைத் தடுக்கின்றார். தன் எதிரியைக் குணப்படுத்தவும் அவர் தயங்கவில்லை (லூக் 22:49தொ; காண்.22:36தொ). இயேசு பிறருடைய இரத்தத்தைச் சிந்தவில்லை; தன் இரத்தத்தையே சிந்தினார்.

தீயோரை ஏன் எதிர்க்கக் கூடாது? அமைதிப்போராட்ட வேட்கையினாலா இல்லை. அன்பும் தியாகமும் வன்முறையாளனுக்கும் துன்புறுவோனுக்கும் இடையே ஒப்புரவை ஏற்படுத்த வல்லன என்பதால்தான் (காண். ஆதி 33;45; 1 சாமு 26). இறையரசு மிருகத்தனமான வலிமையால் அன்று, இயேசுவை உயிர்ப்பித்து, இறப்பையும் வெற்றி கொண்ட இறையாற்றலாலே நிறுவப்படும். அப்போதிருந்து ''வாளெடுப்போர் வாளால் மடிவர்'' (மத் 26:52). விருந்தோம்ப மறுத்த சமாரிய மக்களை நெருப்புக்கிரையாக்க வேண்டும் (லூக் 9: 54) என்ற விருப்பம் இயேசுவின் மனநிலைக்கு முற்றிலும் மாறானது. சாந்த மனமுள்ளவரே உலகைத் தம் உரிமையாக்குவர் (மத் 5:4). ''புறவினத்தாரின் தலைவர்கள் அவர்களை அடக்கி ஆண்டு, அவர்கள் மீது அதிகாரம் செலுத்துதல் போல்'' இல்லாமல் இயேசுவின் சீடர், ''பிறரின் பணியாளனாய்'' இருக்க வேண்டும் (மத் 20:25தொ). இறைவனின் ஊழியனைப்போல, தனது எதிரிகளின் தீச்செயல்களிலிருந்து இயேசு பின்வாங்கி (மத் 12:15.18-21; 14:13;16:4) தன்னை முழுதும் இறைவனிடம் கையளித்து, ஊழியனின் பாடல்களில் முன்னறிவிக்கப்பட்ட (எசா 50:5; 53:9) கொடுமைக்கு உட்படுவோரின் பேற்றை (மத் 5:10தொ) உண்மையாக்குகிறார். ஆனால், மறுகன்னத்தைக் காட்டு என்று தன் சீடரிடம் கூறும்பொழுதும், அநீதமான முறையில் தன்னைச் சிலுவையில் அறைவோரை மன்னிக்கும்பொழுதும், இயேசு பழைய ஏற்பாட்டுக் குறிக்கோளைக் கடந்து நிற்கின்றார். அடக்கப்படுவோரின் அடைக்கலமான இறைவனைச் செயலற்ற முறையில் சரணடைந்ததோடு அவர் நின்றுவிடவில்லை; மாறாக, வன்முறையைத் தன் 'வன்முறை'யால் வெற்றிகொள்கின்றார். இவ்வெதிர்ப்பு எதிர்நோக்கும் ஒப்புரவு ஒன்றே, இவ்வுலகிலேயே கூட, உண்மையாகலாம்.

வா

வாகேபு *(WAHEB)*

அர்னோன் ஆற்றுக்கு அருகிலுள்ள சூபா வின் மோவாபியப் பகுதியிலுள்ள ஓர் இடம் (எண் 21:14). இதன் எபிரேய வடிவம் தெளிவாக இல்லை.

வாக்குகள் தொகுப்பு *(LOGIA)*

நற்செய்தி ஆசிரியர்களால் எடுத்தாளப் பட்ட வாக்குகள் தொகுப்பைக் குறிப்பிடும் சொல். அடிக்கடி எழுபது நூலிலும், பல தடவை புதிய ஏற்பாட்டிலும் இச்சொல் பயன்பட்டுள்ளது.

2-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாப்பியாவின் ஓர் உபயோகப்படுத்தப் பட்ட குறிப்பில் பயன்பட்டுள்ளதால் இச் சொல் சிறப்பு மிக்கதாக அமைந்துள்ளது. இக்குறிப்பை யூசேபியு எடுத்துக்கூறுகிறார். எபிரேய (அரமேயிக்கு) மொழியில் இயேசு வின் கூற்றுகளைத் தொகுத்து எழுதியதற்கு மத்தேயுவே பொறுப்பு என இக்குறிப்பு சுட்டிக்காட்டுகிறது. பாப்பியா மத்தேயுவின் நற்செய்தி அல்லது மறைந்துவிட்ட அர மேயிக்கு நற்செய்தியான எபிரேயரின் நற் செய்தியினைக் குறிப்பிடுவதாக, சிலர் கருது கின்றனர். இக்கருதுகோளுக்குத் திருச்சபைத் தந்தையரின் சில பாரம்பரியங்களும், பிலோவும் மற்றவர்களும் ''மறைநூல்'' என்ற பொருளில் ''வாக்குகள் தொகுப்பு'' என்ற சொல்லைப் பயன்படுத்துவதும் ஆதர வாக உள்ளன. மத்தேயுவைப் பொருத்தமட் டும், முதல் நற்செய்தி கிரேக்க மொழியில் கிரேக்க மூலக்கருத்துக்களைக் கொண்டு எழுதப்பட்டது என்பது, இதற்கு எதிரான சாட்சியமாக அமைந்துள்ளது.

பெரிதும் புகழ்பெற்ற கருதுகோள் பாப்பி யாவில் ஒலைச்சுருளில் கூறப்பட்டுள்ள வாக்குத்தொகுப்பு, முதல் மற்றும் மூன்றாம் நற்செய்திகளால் பயன்படுத்தப்படும் கூற்று களின் தொகுப்பாக அடையாளம் காட்டப் படுவதாகும். வாக்குத்தொகுப்பு என்பது மெசியா பற்றிய ஆதார வாசகங்களின் தொகுப்பு அல்லது பாப்பியா தவறான செய்தியைப் பெற்றுவிட்டார் என்பன போன்ற மற்றக் கருதுகோள்கள் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

Q-வையும் வாக்குகள் தொகுப்பையும் அடையாளம் காட்ட ஆதரவாய் அமைவது இச்சொல் வரைக்குட்பட்ட பொருளில் எழுபதுநூல், புதிய ஏற்பாடு மற்றும் உரோமைக்கிளமந்து, போலிக்கார்ப்பு, யுஸ் தீன் ஆகியோரின் நூல்களிலும் பயன்பட்டி ருப்பதாகும். இத்தகைய விளக்கம், யூதர்கள் தங்களின் போதகர்களின் கூற்றுகளை ஒன்று சேர்த்ததுபோல, போதிக்கும் நோக்கங் களுக்காக, இறைவாக்குகள் எனக் கருதப் பட்ட இயேசுவின் கூற்றுகளை ஒன்றுசேர்க் கும் ஆதித்திருச்சபையின் செயல்களுக்கு ஏற்றதாகவே உள்ளது. இந்த நோக்கில் உலகளாவிய பொருள் பொதிந்த சுருக்க மான கூற்றுகளின் புனித மற்றும் இறை வாக்குத் தன்மை அழுத்தம் பெறுகின்றது (மத் 5-7). இது நிகழ்ச்சியுரைகளில் காணப் படும் வெறுமனே அறிவு சார்ந்த பொருள் கூற்றுகளிலிருந்தும் (மாற் 2:23.28; மத் 8:5-13; லூக் 7:10), யோவான் நற்செய்தியில் உள்ளதைப் போன்ற நீண்ட அல்லது காரண காரிய உரைகளிலிருந்தும் வேறுபடுத்தப் படுகிறது

வாக்குக்கொடுத்தல், வார்த்தைப்பாடு, நேர்ச்சை, பொருத்தனை *(VOW)*

I இஃது ஒரு செயலைச் செய்வதாக அல்லது செய்யத் தவிர்ப்பதாக ஒரு தேவ னைக்குப் பகிரங்க வாக்குறுதி அளிப்ப தாகும். இதைக் குறிக்கும் எபிரேயச்சொல் ஒரு செயலை (ஆதி 28:20-22), ஒரு காணிக்கையை (லேவி 27) அல்லது ஒன் றைத் தவிர்த்தலை (சங் 132:2-5) அல்லது இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் செய லைக் குறிக்கிறது. நேர்ச்சிகள் விரைவில் செலுத்தப்பட்டன; ஆனால், எப்போதும் மனமார்ந்து சுதந்தரமாக அளிக்கப்பட்டன (உ ப 23:21-23; காண்க. திருவெளி 5:3-4).

II. *பழைய ஏற்பாடு:*

1) நேர்ச்சை: பொதுவாக, இறைவன் ஓர் ஆபத்திலிருந்து விடுவித்த பின் அல்லது ஒரு சலுகை காட்டிய பின், ஒருவன் ஒரு சிறப்பான செயல் செய்வதாக வாக்குக் கொடுப்பான் (எ.கா. மனிதப்பலி: நீதி *11:30-31;* சடங்குப்பணிக்கு அர்ப்பணித்தல்: *1 சாமு 1:11;*வழிபாடு : *2 சாமு 15:7-8;* காண்க. *சங் 22:25; 76:11; 116:18-19).*

இறைவனுக்கு வாக்குக் கொடுத்தலில் மனமார்ந்த உறுதி அளிக்கப்படுவதால், விலங்குகளின் முதற்பேறு போன்ற மோசே சட்டப்படி ஏற்கெனவே ஆண்டவருக்கு உரியதொன்றை நேர்ச்சி செய்ய அனுமதி யில்லை. விலைமாதின் வாடகையையோ, விலைமகனின் கூலியையோ இறைவனுக்கு நேர்ச்சையாக ஒப்புக்கொடுக்கக்கூடாது (*உப 23:18).* இறைவனுக்கு நேர்ச்சை செய்வதைப் பிற்காலத்தில் ''கோர்பான்'' என்ற எபிரேயச் சொல்லால் குறித்தனர். அதாவது, ''இறைவனுக்குக் கொடுக்கப் பட்டது'', ''காணிக்கை'' என்று இச்சொல் பொருள்படும் (*மத் 15:5; மாற் 7:11).* பலிக்காக அனுமதிக்கப்பட்ட விலங்குகள் காணிக்கையாக மட்டும்தான் நேர்ந்தளிக்கப் படலாம்; அப்போதும் சமாதானக் காணிக் கையின் ஒழுங்குகளுக்கு உட்பட்டதாகும்.

2. ஒழுங்குகள்: ஆண்டவருக்கு நேர்ந் தளிக்கப்பட்ட ஆட்களை மீட்கச் செலுத்தப் பட வேண்டிய மதிப்பு பற்றி லேவி 27 கூறுகிறது. இந்த மதிப்பு பால்வகை மற்றும் வயதிற்கேற்ப வேறுபடும். இந்த மதிப்பைச் செலுத்த இயலாத அளவுக்கு ஒருவன் ஏழையாக இருந்தால், அவனுடைய நிலைக்கேற்ப குரு இந்த மதிப்பைச் சரிப் படுத்துவார் (*27:1-8).*

ஒரு விலங்கு காணிக்கையாக ஒப்புக் கொடுக்கத் தகுதியுள்ளதாயின் இறை வனுக்கு நேர்ந்தளிக்கப்பட்ட அந்த விலங் குக்குப் பதிலாக வேறு ஒன்றைச் செலுத்து வது அனுமதிக்கப்படவில்லை. ஒழுங்கு களையும் மீறி இப்படிச் செய்தால், விலங் கும், அதற்குப் பதிலாக ஒப்புக்கொடுக்கப் பட்டதும் இறைவனுக்குக் கொடுக்கப்பட வேண்டும். தூய்மையானதாக அறிவிக்கப் பட வேண்டும் (*27:9-10;* காண்க. மலா *1:14).* அசுத்தமான விலங்கு அல்லது வீடு ஆண்டவருக்கு நேர்ந்தளிக்கப்பட்டிருந்தால், அதைக் குரு மதிப்பீடு செய்வார். இந்த மதிப்பில் ஐந்தில் ஒரு பங்கு மீட்புப் பணமாகக் குறிக்கப்படும் (*27:11-15).*

நிலம், அதில் விதைக்கப்படும் விதை யின் அளவுக்கேற்ப மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஆயினும், யூபிலி ஆண்டுக் கடுத்து உடனடியாக நேர்ச்சை செய்யப் பட்டால்தான், முழு மதிப்பீடும் செலுத்தப் பட வேண்டும். நேர்ச்சை செய்யப்படுவதற் கும் அடுத்த யூபிலி ஆண்டுக்கும் இடைப் பட்ட காலத்திற்கேற்ப, இது குறைக்கப் படும். மீட்டுக் கொள்வதற்கும் (*27:16-19),* குருக்கள் (*27:20-21)* மற்றும் மூலச் சொந்தக் காரரின் (*25:25; 27:22-24)* பாதுகாப்பிற்கும் ஒழுங்குகள் கொடுக்கப்பட்டிருந்தன.

ஒன்று அனுமதிக்கப்பட்டிருந்தும் அல்லது விரும்பத்தக்கதாய் இருந்தும், இறைவன் அவனது விருப்பத்தை நிறை வேற்றும்வரை அச்செயலைச் செய்வ தில்லை என்று நேர்ச்சை செய்யலாம். இதற்கு எடுத்துக்காட்டுகள்: போர் நடந்து கொண்டிருந்தபோது உணவு பற்றிய சவு லின் ஆணை (*1 சாமு 14:24);* ஊரியாவின் ஆணை (*2 சாமு 11:9-13);* ஆண்டவருக்கு ஓர் இடத்தை அமைக்கும் வரையில் தூங்க மாட்டேன் என்ற தாவீதின் ஆணை (சங் *132:2-5).* இவ்வகையில், நாசரேயர்களின் பொருத்தனைகள் சிறப்பிடம் வகிக்கின்றன.

திருமணமான பெண்ணும், தந்தையின் வீட்டிலுள்ள புதல்விகளும் செய்யும் நேர்ச்சை பற்றிய ஒழுங்குகளை எண் *30* கொடுக்கிறது.

3. நேர்ச்சைகளின் வகைகள்:

அ) அடைந்த நன்மைகளுக்குப் பதிலாகச் செலுத்தப்படும் நேர்ச்சைகள்: இவ்வாறு, பெத்தேலில் யாக்கோபு, தனக்கு இறைவன் உதவினால் அவரை வழிபடுவதாகவும், புனிததலம் அமைப்பதாகவும், தன்னுடைய

உடைமைகளில் பத்தில் ஒரு பங்கு செலுத்துவதாகவும் நேர்ந்து கொள்கிறார் (*ஆதி 28:20-22*). இப்தாகு, தனக்குப் போரில் வெற்றி கிடைத்தால் திரும்பி வரும்போது, தன் வீட்டிலிருந்து முதலில் வெளிவருபவரைப் பலியாக ஒப்புக் கொடுப்பதாக நேர்ந்து கொள்கிறார். அதன் படி தன் மகளையே பலியாக ஒப்புக் கொடுத்தார் (*நீதி 11:30-31*). அன்னா, தனக்கு ஒரு மகன் பிறந்தால், அவனைச் சீலோவிலுள்ள ஆலயத்தில் பணிசெய்ய ஒப்புக்கொடுப்பதாக வாக்கு அளிக்கிறாள் (*1 சாமு 1:11*). தன் தந்தை வீட்டிற்குத் திரும்பினால் பலிவழிபாடு ஒப்புக் கொடுப்பதாக அப்சலோம் உறுதி கூறுகிறான் (*15:7-12*). யோனா தப்பியோடிய கப்பலில் இருந்தவர்கள், தாங்கள் அடைந்த பாதுகாப்பிற்காக பொருத்தனைகள் செய்து கொண்டனர் (*யோனா 1:16*). அ.ப. 21:23-இல் வரும் நால்வரும் செய்து கொண்ட பொருத்தனை இவ்வகையைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

ஆ) தன்னலமற்ற பக்தி முயற்சிகள்: தாவீது, ஆண்டவருடைய பேழையைத் தன்னுடைய புதிய தலைநகரான எருசலேமில் நிறுவ முடிவு செய்தபோது, எருசலேமில் பேழை நிலைபெறும்வரை வீட்டிற்குப் போவதோ, படுக்கச் செல்வதோ, தூங்குவதோ இல்லையென்று ஆணையிடுகிறார் (*சங் 132:2-5*; காண்க. பவுலின் பொருத்தனை: *அ.ப. 18:18*).

இ) தவிர்ப்பதை அல்லது அழிப்பதைக் கூறும் பொருத்தனைகள்: கானானியர்களைத் தங்களிடம் ஆண்டவர் ஒப்படைத்தால், அராது நகர மக்களையும் நகர்களையும் அழித்துவிடுவதாக இஸ்ராயேலர் பொருத்தனை செய்கின்றனர் (*எண் 21:1-3*); அப்படியே செயல்படுகின்றனர். இத்தகைய பொருத்தனைகள், ஆணையிடுதல்கள் என்பன சவுலின் காலத்திலும் (*1 சாமு 14:24*), பவுலின் வாழ்விலும் (*அ.ப. 23:21*) காணப்படுகின்றன.

மேற்கூறிய மூன்று வகையிலும் மன்றாட்டுகளோடோ, அவற்றைப் பலப்படுத்தவோ பொருத்தனைகள் செய்யப்படுகின்றன. இவற்றில் தனிப்பட்ட பொருத்தனையை விட, வழிபாட்டுக் கடமைகளின் பொது விவரிப்பே கொடுக்கப்படலாம் (*பழ 7:14; 31:2; நாகூ 1:15*). இஸ்ராயேலரைப் போன்று எகிப்தியரும் ஆண்டவரை வழிபடும்போது ஆண்டவருக்குப் பலி செலுத்துவர்; பொருத்தனைகள் செய்து அவற்றை நிறைவேற்றுவர் (*எசா 19:21*). அதுபோல பதித இஸ்ராயேலர் விண்ணக அரசிக்கு நேர்ச்சைகள் செய்தனர்; பொருத்தனைகள் நிறைவேற்றினர் (*எரே 44:25*).

ஈ) சங்கீதங்களில், அடைந்த விடுதலைக்கு நன்றிகூறுதலையும், நம்பிக்கையை எடுத்துக்காட்டவும் நேர்ச்சைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன (*சங் 56:12-13; 66:13-15; 20:4; 22:25; 50:14; 61:5.8; 65:1; 79:13; 89:1-4; 101; 144:9;...*). இஸ்ராயேலுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் இறைவன் அளிக்கும் வாக்குறுதிகள், ஆணைகள், ஒப்பந்தங்கள் ஆகியன இறைவனுடைய நேர்ச்சையாக விவரிக்கப்படலாம் (காண்க. *ஆதி 12:2-3.7; 15:5-6; 2 சாமு 7; சங் 89:3-4*).

III **புதிய ஏற்பாடு:** மலைப்பொழிவில், ஆணையிடுதலைத் தவறாகப் பயன்படுத்துதலைப் பற்றி இயேசு போதிக்கிறார் (*மத் 5:33-37*). தனக்குச் செவி மடுப்போருக்கு ஆணையிட அவசியமின்மையை நினைவுபடுத்துகிறார் (*5:35*). அப்படிச் செயதாலும் ''விண்ணுலகின் மேலும்'', ''மண்ணுலகின் மேலும்'' ஆணையிட வேண்டாம் என்று போதிக்கிறார். இதற்கு மாறாக, உண்மை பேசுபவர்களாய் இருக்கும்படி போதிக்கிறார் (காண்க. *உப 23:22-24*).

ஆதித்திருச்சபையில், பொருத்தனை செய்யும் பழக்கத்தை இரு பகுதிகள் எடுத்துக் காட்டுகின்றன. கொரிந்துவில் பணிமுடித்து அந்தியோக்குக்குப் பவுல் செல்லும் வழியில், கெங்கிரேயாவில் பவுலோ, அக்கிலாவோ பொருத்தனையின் பொருட்டு

முடிவெட்டிக் கொண்டனர் (அ.ப. 18:18). இப்பொருத்தனையின் சந்தர்ப்பம் கூறப் படாவிட்டாலும், இது நாசரேயர் பொருத்த னையாக இருக்கலாம். தனது மூன்றாம் மறைபரப்புப் பயணத்துக்குப்பின் பவுல் எருசலேமை அடைந்தபோது மற்றொரு நாசரேயரின் பொருத்தனை நிகழ்ச்சி நிகழ் கிறது (21:23-26).

வாக்குறுதிகள் (PROMISES)

I.**வாக்குறுதிகளும் விசுவாசமும்:** அன்பு மொழியின் மிகச்சிறந்த சொற்களில் ஒன்று வாக்குறுதியளித்தல். வெளிப்படையாக அறிவித்தலே வாக்குறுதி செய்தலாகும்; அத்துடன் ஒரு கொடையின் அத்தாட்சி யாகிறது. உறுதியாகவுள்ள வருங்காலத்தை யும், தன்னையும் நிச்சயப்படுத்தி அறி வித்து, அதே சமயத்தில் ஒருவருடைய பங்காளியின் முழுமன ஒன்றிப்பையும், அவர்தம் விசுவாசத்தின் தாராளத் தன்மை யையும் தூண்டுவதே வாக்குறுதியாகும். என்றும் ஏமாற்றாத தனித்தன்மையைக் கொண்டு, இறைவன் தமக்கே உரித்தான முறையில் வாக்களிக்கும் தமது தனிப் பெருந்தன்மையை வெளிப்படுத்துகிறார். ''பொய் சொல்வதற்குக் கடவுள் மனிதன் அல்லர். மனதை மாற்றிக்கொள்ள ஒரு மனிதப் பிறவியும் அல்லர். அவர் சொல்லி யதைச் செய்யாமலிருப்பாரா? அல்லது உரைத்ததை நிறைவேற்றாமலிருப்பாரா?'' (எண் 23:19). அவரைப் பொருத்தமட்டும், வாக்குறுதி அளித்தல் ஏற்கெனவே கொடுத்ததற்குச் சமம். முதலில் அவரளிக் கும் விசுவாசமே வரவிருக்கும் அவரது கொடைக்காகக் காத்திருக்கச் செய்யும். இந்த அருள் அடைந்தவர் கொடையில் கொடுத்தவரின் உள்ளத்தை அறிந்து அவ ருக்கு நன்றி நவில முடிகிறது (உரோ 4:20).

இஸ்ராயேலில் இறைவனது இறை வாக்குகள், ஆணையிடுதல் முதலியவை நிறைவேறுதலாகிய மீட்புவரலாற்றின் திறவுகோல் வாக்குறுதிகளாகும் (ஆதி 22:16-18; சங் 110:4; லூக் 1:73). இந்த ஆணைகள் இறைவனது கொடைகளைத் திரும்பப் பெற முடியாததாகின்றன (உரோ 11:29; எபி 6:13தொ). சில வேளைகளில் இஸ்ராயேலரின் விசுவாசமின்மை இவ்வாக் குறுதிகளை வரையறைப்படுத்த இட்டுச் செல்கிறது. ஆனால் வாக்குறுதிகள் எஞ்சி யோரின் பொருட்டும், ''மானிட மகனின்'' (தானி 7) பொருட்டும் என்றும் நிலைத்து நிற்கும்.

யூதத்துவம், அவ்வாக்குறுதிகளில் நம்பிக் கையை ஒருபுறமும், அவற்றிலுள்ள வெகு மதித் தன்மையை மறுபுறமும் வலியுறுத்திக் காட்டும். கட்டளைகளுக்குப் பணிந்து நடப் பதன் மூலம் வாக்களிக்கப் பெற்ற சொத்துரி மையைப் பெற வேண்டும். மாறாக, அவற்றில் இறைவன் மேற்கொள்ளும் கலப் பற்ற முன் முயற்சியையும், விசுவசிப்பவர் களுக்கு வாக்களிக்கப் பெற்ற கொடைகளை யும் கிறிஸ்தவம் காணும். ஆனால், கும்ரான் சமூகம் அதே காலத்தில் அதைக் கடைப் பிடித்தொழுகும் உறுப்பினர்களுக்கு வாக் களிப்பின் நன்மைகளைக் கட்டுப்படுத்த விழைகிறது.

இதனால்தான் கிறிஸ்தவ வாழ்வு விசு வாசத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதை எடுத்துக்காட்ட பவுல் அக்கறை காட்டுகிறார்; ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவில் நிறைவேறும் வாக்கு றுதிகளில் வேதாகமத்தின் மற்றும் இறைத் திட்டத்தின் பொருளைக் காண்கிறார் (கலா 3:16-39). இதனால்தான் எபிரேயருக்கு எழு திய திருமுகத்தில், பழைய ஏற்பாட்டி லுள்ள விசுவாசத்தின் வரலாற்றை எடுத்துக் கூறுவதில் ஆர்வம் காட்டும் ஆசிரியர், அதே சமயத்தில் அத்துடன் வாக்குறுதிக ளின் வரலாற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார் (எபி 11:9.13.17.33.39). ஆக வேதான், பவுலின் சிந்தனைகளுக்கு முன்பே மிகப் பழமையான போதகங்களில் ஒன்றான தூய ஆவி எழுந்து வந்த நாளில் பேதுருவின் போதகம் தூய ஆவியின் கொடையையும், திருச்சபையின் தோற் றத்தை ''வாக்குறுதி''யாகவும் (அ.ப. 2:36) இறைவாக்குகளின் நிறைவேறுதலாகவும் (2:16) தவறின்றித் தெளிவாகக் கூறுகிறது. யூதனுக்கு வேதாகமங்கள் முதலில் ஒரு

சட்டம்; இறைவனின் திருவுளத்தை எப்பாடுபட்டாகிலும் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், கிறிஸ்தவனுக்கு அவைகள் முதலில் வாக்குறுதிகளின் நூலாகிறது. வாக்குறுதிகளின் களஞ்சியங்களாக இஸ்ராயேலர் விளங்கினர் (காண்க. உரோ 9:4). கிறிஸ்தவர்கள் அவற்றின் உரிமையாளர்களாகத் திகழ்கின்றனர் (கலா 3;29).

புதிய ஏற்பாட்டின் மொழி இதைத் தெளிவாக்குகிறது. வாக்குறுதி என்னும் பொருள் தரக்கூடிய சொல் எபிரேய மொழியில் இல்லாததால் அதைப் பல சொற்களால் விளக்குகிறது. வாக்கு, உறுதிமொழி, ஆசீர், உரிமை, வாக்களிக்கப்பெற்ற நிலம்; அல்லது ''ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் இறைவன்'', ''ஆபிரகாமின் இனம்'', போன்ற வாய்பாடுகள். இதற்கு மாறாக, புதிய ஏற்பாடு வாக்குறுதியைக் குறிக்கக்கூடிய தகுந்த சொல்லைக் கொண்டுள்ளது. இது ''கொடுக்கப்பெற்ற இவ் வார்த்தையின்'' மதிப்பை அழுத்தமாகக் கூறுகிறது. இஃது ''ஓர் அறிவிப்பாகும்''. மேலும், இச்சொல் நற்செய்தி வார்த்தையோடு தொடர்பு கொண்டுள்ளது.

II **வாக்குறுதிகளின் மக்கள், இஸ்ராயேலர்:** கலாத்தியர்களுக்கு எழுதிய திருமுகத்தில் வெளிப்படும் கிறிஸ்தவ உள்ளுணர்வு அடிப்படை அமைப்பைத் தெளிவாக்குகிறது. இஸ்ராயேலர் உயிர் வாழ்வதற்கு அழிக்க முடியாத தனிப்பெரும் அடித்தளமாகத் திகழ்வது இறைவனுடைய வாக்குறுதியாகும்.

1. குல மூதாதையர்களுக்கு அளிக்கப்பட்ட **வாக்குறுதிகள்:** பல்வேறு பாரம்பரியங்களும் ஆதியாகமத்தில் இணைந்து, இதை வாக்குறுதிகளின் கதையான நூலாகச் செய்கிறது. வாக்குறுதிகளைப் பெறுபவர் ஆபிரகாம் (ஆதி 12:1.7; 13:15தொ; 15; 17; சங் 105:8தொ). எப்பொழுதும் இவை ஒரு வாரிசையும், உரிமையாளனையும், மகிமையுள்ள பல வாரிசையும், வளமிகு நிலத்தையும் கொண்டுள்ளன (காண்க. ஆதி 15:4-7; 17:17: 26:24; 28:13தொ; 35:12). இவைகளும் மனுகுல ஊழியோடு எப்பொழுதும் இணைக்கப்பெற்றுள்ளன. மனுகுலப் பெயரை விண்ணகம்வரை உயர்த்த எண்ணி (ஆதி 11:4), பாபேலைச் சார்ந்த தகாத முயற்சிக்கு, ஆபிரகாமுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட ஆசீரை இறை பதிலாக யாவே பாரம்பரியம் காட்டுகிறது (ஆதி 12:2). மேலும், மனித பாவம் மண்ணகத்திற்குக் கொணர்ந்த சாபத்திற்கு ஈடு செய்வதாகவும் (3:17; 4:11), முதற் பாவத்திற்குப் பிறகு வெற்றிகரமான உறுதியான நம்பிக்கையை இறைவன் வெளிப்படுத்துவதாகவும் காணப்படுகிறது (3:15). மேலும் ''மண்ணின் மக்களினங்கள் அனைத்தையும்'' தன்னுள் அடக்கும் நோக்கை இவ் வாக்குறுதி கொண்டுள்ளது (12:3). படைப்பின் முதல் ஆசீருடன் ஆபிரகாமின் ஆசீரைக் குருக்கள் பாரம்பரியம் தெளிவாகத் தொடர்புபடுத்துகிறது (1:22.28; 17:6.20). வாக்குறுதிகளின் குறியிலக்கை விருத்தசேதனம் நிச்சயமாகக் கட்டுப்படுத்துவதாகத் தோன்றுகிறது. உண்மையில், இஸ்ராயேலர் இச்சடங்கின்மூலம் எவ்வினத்தையும் தன்னுடன் கூட்டிச் சேர்க்க இயலும் (34). இவ்விதமாக ''எண்ணற்ற நாடுகளுக்குத் தந்தை''யாகத் திகழும் ஆபிரகாம் பெற்ற வாக்குறுதி நிறைவேறுகிறது (ஆதி 17:5; சீரா 44:19-22). சேம், ஆபிரகாம் குடும்பங்களின் ஆசீர் ''குருக்களின் அரசாகவும், தூய மக்களினமாகவும் (யாத் 19:6) தயார் செய்வதன் மூலம், வாக்குறுதியின் சலுகையைச் செயல் முறையாக்குகிறது, அதாவது, ''இறைமக்களாக்குகிறது.''

2. **வாக்குறுதிகளும் திருச்சட்டமும்:** குல மூதாதையர்களுக்கு அளிக்கப்பெற்ற வாக்குறுதிகளும், இறைவனுடைய முன்முயற்சி மற்றும் அருளின் வெளிப்பாடுகளும் ஏற்கெனவே, அவற்றின் கோரிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளன. விசுவாசத்திற்கு அவைகள் அளிக்கப்பெறுகின்றன; அதாவது, இறைவாக்கின் அடிப்படையில் தோன்றிய ஒரு புது உயிர் வாழ்வைத் தூண்டுகின்றன: ஆபிரகாம் புறப்படுதல் (ஆதி 12:1), அவர் இறைவன் திருமுன் நடத்தல் (17:1), அவ

ருக்குக் கீழ்ப்படிதல் (22:1). இத்திருச்சட்டம் மனித வாழ்வு முழுமைக்குமே தனது கோரிக்கையை நீட்டிக்கிறது. உடன்படிக்கையின் உரிமைப் பத்திரமே இத்திருச்சட்டம் (யாத் 19:5; 24:8; யோசு 24:25); அதாவது, இஸ்ராயேலர் ஒரு புதிய புனிதமான வாழ்வில் நுழையவும், இறைமக்களுக்குரிய நிலையில் வாழவும், தன்னை அவர்தம் வழிநடத்தலுக்கு ஒப்படைக்கவும் சாதனமாக உள்ளது. இத்திருச்சட்டம் பழைய வாக்குறுதியைக் கொண்டுள்ளது; அவ்வாக்குறுதியின் துல்லியமான, நிபந்தனைகளையும் ஏற்படுத்துகிறது. கீழ்ப்படிதலுக்குப் பதிலாக அளிக்கப்பெற்ற வாக்குறுதிகள் இஸ்ராயேலரின் நேர்மைக்காக அளிக்கப்பெற்ற வெகுமதி அல்ல. ஆனால், பாவத்திற்கு முன் இரக்கமற்றவராகவும், தம்மில் விசுவாசம் கொள்ளாத எவர்க்கும் தம்மையே கொடுக்க இயலாதவராகயிருந்தாலும், அவ்வாக்குறுதிகள் இறைவன் தம்முடையவர்களை என்றென்றும் ஆசீர்வதிக்கும் தாராளத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

3. தாவீதுக்கு வாக்குறுதிகள்: இஸ்ராயேலரின் முழு வாழ்வும் விசுவாசத்தில் நிலைத்து நிற்கும்படியாக அதனுடைய நிறுவனங்களனைத்தும் இறைவாக்கில்தான் உறுதித் தலத்தைக் காண வேண்டும். உலக சமுதாயத்தின் சாதாரண அடிப்படையும், வாழ்வதற்குள்ள விருப்பத்தை எடுத்துக் கூறுவதுமான அரசாட்சி நிறுவனம் இஸ்ராயேலில் முரண்பாடான தன்மையைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய இறைவனின் விருப்பத்திற்கு மாறாக இது விட்டுக் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால், யாவே தம் மக்களிடமிருந்து எதிர்பார்க்கும் முழுமையான நம்பிக்கையில் குறைவு ஏற்படும் பேராபத்துண்டு (1 சாமு 8:7தொ); அதே சமயத்தில் மண்ணகக் கனவுகளுக்கப் பாலுள்ள மேன்மைக்கும், வருங்காலத்துக்கும் (2 சாமு 7) இஃது உயர்த்தப்படுகிறது. ''மேய்ச்சல் தொழிலிலிருந்து அழைக்கப்பெற்ற'' இளைஞன் ''மிகப்பெரிய மனிதர்களுக்குச் சமமான பெயரை''ப் பெறுவான் (2 சாமு 7:9). ஓர் அரச பரம்பரையை உருவாக்குபவன் அவனே (7:11); அவனை ஆசீரால் நிரப்பும் யாவேயின் அருளையும், அன்பையும் அனுபவிப்பான் (சங் 89:21-30); அவனுடைய வழித்தோன்றல்கள் ''இறைவனின் வலப்புறம்'' (சங் 110:1), அமர்ந்து நாடுகளைத் தம்முடைய உடைமையாக்குவர் (2:8). இஸ்ராயேலின் இன்னல் நிறைந்த மிகத்தாழ்ந்த காலத்திலும், கிறிஸ்துவின் நாட்களிலுங்கூட, இஸ்ராயேலின் விசுவாசத்தை இவ்வாக்குறுதிகள் ஊட்டப்படுத்தும் (எசா 11:1; எரே 23:5; செக் 6:12; லூக் 1:32.69).

இவ்வாக்குறுதிகள் நீண்ட காலமாக உலகத்தன்மையைக் கொண்டிருந்தன: ஒரு புதல்வன், ஒரு நிலம், ஓர் அரசர், நிறைவான வளம். இருந்தபோதிலும், மகிழ்வு, திருப்தி ஆகியவற்றின் கருத்தோடு ஏற்கெனவே அவைகள் உபாகமத்தில் தொடர்பு கொண்டுள்ளன. இறைவாக்கினரோடு அவை ஆன்மீக மற்றும் உள்ளார்ந்த தன்மை பெறுகின்றன. மிக முக்கியமான ஒன்று புதிய உடன்படிக்கையாக மாறுகிறது. ''அவர்களுடைய உள்ளத்தின் ஆழத்தில் நம் திருச்சட்டத்தைப் பதிப்போம்; அவர்தம் இதயங்களில் அவற்றை எழுதி வைப்போம்'' (எரே 31:32). நெருங்கிய ஞானத்தோடு இந்தப் புதிய உடன்படிக்கை இறைவன் மன்னிப்பையும், புதியதொரு இதயத்தையும் கொண்டுள்ளது (எசே 36:26தொ; சங் 51:12). அரசியலில் எருசலேம் தன் நிலையை இழந்தபோதுதான், இறைவாக்கினர் அவளுக்கு மிக வியத்தகு வாக்குறுதிகளை வழங்குகின்றனர். ''யாவே என் உரிமைச் சொத்து'' (சங் 16:5; 73:26) என்று சங்கீத ஆசிரியர் பாடுவார். ஏழைக்கு இறைவனுடைய உரிமைச் சொத்தையும், பேற்றினையும் வாக்களிப்பர்; மறை சாட்சிகள் உயிர்ப்பை எதிர்நோக்கியிருக்கையில் (தானி 12:2தொ; 2 மக் 7), ''நம்பிக்கையையும்...சாகாமையின் நிறைவையும்'' (ஞான 3:1-5) ஞானிகள் நீதிமான்களுக்கு அறிவிப்பர்.

4. மெசியா சார்ந்த வாக்குறுதிகள்: குலமுதாதையர்களுக்கும், தாவீதுக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அவர்களுடைய இனத்தின் மகிமைமிக்க நிலையான வருங்காலத்தை உறுதிப்படுத்துகின்றன. ''வரவேண்டிய அந்த ஒருவரை'' (எசா 26:21; ஆகா 2:3தொ) எதிர்நோக்குவதில் இவை உச்சநிலை அடைகின்றன. இறைவாக்கினர் தண்டனைப் பயமுறுத்தல்களோடு மெசியா சார்ந்த நம்பிக்கை வாக்குறுதிகளையும் வெளிப்படுத்துகின்றனர். இம்மானுவேல் ஒரு கன்னியிடமிருந்து பிறப்பதை மக்களுக்கு அளிக்கும் ஆசிரின் அறிகுறியாக எசாயா நோக்குகிறார் (எசா 7:14); தாவீதின் வழித்தோன்றலான இக்குழந்தையின் வருங்கால உயர்நிலையை ''அமைதியின் அரசனாகவும்'' (9:5தொ), ''நீதியுள்ள அரசனாகவும்'' (11:11) எடுத்துரைக்கிறார். மத் 2:6-இன்படி, மீக்கா ''இஸ்ராயேலை ஆள வேண்டிய அந்த ஒருவர்'' பிறக்கும் இடத்தையும் பெயரிட்டுக் குறிக்கிறார்; பிறக்க வேண்டியவர் ''தோன்றும் மரபு ஊழி ஊழிக்காலம் உளதாகும்'' (மீக் 5:1-5) என்றும் கூறுகிறார். இஸ்ராயேலின் மகிமையாகவும், அதை மீண்டும் அமைப்பவராகவும் உள்ள ஒரு ''நீதியுள்ள தளிரை'' எரேமியா வாக்களிக்கிறார் (எரே 23:5தொ; 33:15தொ; காண்க. எசா 4:2; செக் 3:8தொ; 6:12). புதியதொரு தாவீதைப்போல, தம்முடைய ஆடுகளுக்கு உணவளிக்கவல்ல வரவிருக்கும் ஒரு நல்ல ஆயனைப் பற்றி எசேக்கியேல் முன்னறிவிக்கிறார் (எசே 34:23தொ; காண்க. 37:24தொ). மகிழ்ச்சி ஊர்வலத்தோடு அமைதியைக் கொணர்ந்து மெசியா அரசன் தாழ்ச்சியோடு எருசலேமில் நுழைவதைச் செக்கரியா நோக்குகிறார் (செக் 9:9தொ).

5. புதிய வாக்குறுதிகள்: இஸ்ராயேல் தம் அரசன், தலைநகர், ஆலயம், மதிப்பு ஆகிய அனைத்தையும் இழந்து வாழ்வற்றிருக்கும் போது அதனுடைய விசுவாசத்தை இறைவன் புதிய வாக்குறுதிகளால் விழிப்புறச் செய்வார்; இஸ்ராயேலருக்கு முன்னறிவித்த ''முற்கால நிகழ்ச்சிகள்'' மீது இதை நிறுவத் துணிகிறார். அச்சுறுத்தக்கூடிய நுணுக்கத்துடன் அழிவின் பயமுறுத்தல்கள் நிறைவேறுகின்றன (எசா 48:3தொ; 43:18). ஆனால், இஸ்ராயேலுக்குப் ''புதியனவற்றையும், அறியாத மறைபொருள்களையும்'' (48:6; 42:9; 43:19), கற்பனை செய்ய இயலாத மாபெரும் செயல்களையும் அவர் வாக்களித்துள்ளார். ''மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய செபவீடு' (எசா 56:7) எண்ணற்ற இனத்தினரின் தாயாகவும் (54:3: 60:4), இறைவனின் மகிழ்வும், பெருமையுமாகவும் (60, 15) விளங்கும் புதிய எருசலேம் இம்மாபெரும் செயல்களின் கூட்டிணைப்பாக எடுத்துக்காட்டப்படுகிறது.

6. ஞானத்தின் வாக்குறுதிகள்: இறைவனின் வாக்குறுதிகள் இஸ்ராயேல் மக்களின் வாழ்வு முழுவதற்கும் அடித்தளமாக விளங்குகின்றன என்பதை அவை ஞான நூல்களில் வகிக்கும் இடம் எடுத்துக்காட்டுகிறது. எல்லா ஞானமும் ஒரு வாக்குறுதியைக் கொண்டுள்ளது என்பது உண்மையே. ஏனென்றால் அஃது, ஒருவன் எதிர்பார்க்கும் பலன்களைப் பகுத்தறிய அனுபவங்களை மீண்டும் கூட்டிச் சேர்த்துப் பாகுபடுத்தலோடு தொடங்குகிறது. அனுபவத்தின் அடிப்படையில் கணித்துள்ள இவ்வெதிர் நோக்கலுக்குப் பதிலாக நம்பிக்கையை அளிப்பதே இஸ்ராயேல் ஞானத்தின் தனித்தன்மையாகும். இந்நம்பிக்கை வேறிடத்திலிருந்து வந்துள்ளது. யாவேயின் உண்மையான மனத்தன்மைக்கும், ''உன்னத இறைவனின் உடன்படிக்கைக்கும், மோசேயின் சட்டத்திற்கும்'' காட்டும் பிரமாணிக்கத்திலிருந்து இது (சீரா 24:23) வருகிறது. இஸ்ராயேலரின் ஞானம் அதற்கும் மேலிருந்து வருகிறது (பழ 8:22-31; சீரா 24:2தொ; ஞான 9:4.10). ஆதலால்தான் ''இறைவனுடைய நட்பையும்'' (ஞான 7:14), ''யாவேயின் கருணையையும்'' (பழ 8,35) அடைய அது வாக்களிக்கும் பேறு மனித நம்பிக்கைகளையெல்லாம் கடந்துள்ளது (பழ 8:32-36). நேர்மையாயுள்ளோர் உள்ளத்தில் இவ்வாக்

குறுதிகளின் எதிரொலியாக சங் 119 ஒலிக்கிறது; இறைவனே போதும் என்னும் உறுதியோடுள்ள இஸ்ராயேலரின் விசுவாசத்திற்கு ஆதரவாகச் சான்று கூறுகிறது.

III இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகள்:

1. ஒத்தமை நற்செய்திகள்: வாக்களிக்கப் பெற்ற மெசியா இயேசுவில் ''இறைவனின் வாக்குறுதிகளனைத்தும் நிறைவேறுகின்றன'' (2 கொரி 1:20). அவரே வாக்குறுதிகளின் பொருளாகவும், புதிய வாக்குறுதிகளைக் கொண்டுள்ளவராகவும், முதலில் காட்டப்பெறுகிறார். அரசை அறிவிப்பதோடு தம் போதகத்தைத் தொடங்குகிறார் (மத் 4:23); அதை ஏழைகளுக்கும் துன்புறுத்தப்படுவோருக்கும், பேறுகளில் அவர் வாக்களிக்கிறார் (5:3.10; லூக் 6:20.23). மனிதர்களைப் புதுமையாகப் பிடிப்பதையும் (4:19), பன்னிரு இஸ்ராயேல் கோத்திரங்களின் மீது அதிகாரம் செலுத்தவும் (19:28) வாக்களிக்கையில் சீடர்களைத் தம் பங்காளிகளாகக் கொள்கிறார். பேதுரு மீது தம் திருச்சபையை எழுப்ப வாக்குறுதி அளிக்கிறார். நரகத்தின் மீது வெற்றி கொள்வதற்கு அவருக்கு உத்தரவாதம் அளிக்கிறார் (16:16 தொ). தம்மைப் பின்பற்றுபவன் எவனுக்கும் நூறு மடங்கும், முடிவில்லா வாழ்வும் (19:29) வாக்களிக்கிறார்; தன்னை ஏற்றுக் கொள்பவனுக்கு இறைவன் திருமுன் தம் உதவியை வாக்களிக்கிறார் (10:32). ஓரினத்தாரின், நிலத்தாரின், அரசின், பேற்றின் வாக்குறுதிகள் ஆகிய அனைத்துப் பழைய ஏற்பாட்டின் வாக்குறுதிகளையும் தம்முடையவைகளாக்கிக் கொள்கிறார். அவையனைத்தும் அவருடைய ஆட்தன்மையையும், அப்போஸ்தலப் பணியையும் சார்ந்துள்ளன. அவருடய நேரம் இன்னும் வராததால் அவைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை; விசுவாசத்தில் மட்டுமே எவனும் இயேசுவைப் பின்தொடர இயலும். அவரில் நம்பிக்கை வைத்தல் அவைகள் ஏற்கெனவே நிறைவேறி முடிவு பெறுவதை உணர்வதாகும் (யோவா 1:41.45).

2. யோவானின் நற்செய்தி: இஃது இயேசு தம்முடைய ஆட்தன்மையாலும், செயல்களாலும் எவ்வளவுக்கு இவ்வுலகில் வாக்குறுதிகளின் உயிருள்ள பிரசன்னமாய் இருக்கிறார் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. மனிதன் எதிர்பார்ப்பதெல்லாம் அவரே! இறைவன் தம் மக்களுக்கு வாக்களித்த உண்மை, உயிர், உணவு, உயிருள்ள நீர், ஒளி, உயிர்ப்பு, இறைமகிமை ஆகிய யாவும் அவரே! ஆனால், மனுவுடலில் அவர் இவையெல்லாமுமாய் விளங்குகிறார். விசுவாசத்தில் மட்டுமே அவர் தம்மைக் கொடுக்க இயலும். அவர் ஒரு வாக்குறுதிக்கு மேலானவர்; ''அவரில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு'' (யோவா 3:16) அவரே ஒரு கொடையாகி, விசுவாசத்தில் கொடுக்கிறார்.

3. ஆவியின் வாக்குறுதி: ''தந்தையின் வாக்குறுதி'' தூய ஆவியாகும் (லூக் 24:49; அ.ப. 1:4). ''உலகை நிரப்பி அனைத்தையும் ஒன்று சேர்த்திணைத்து'' (ஞான 1:7), அவர் தம்மில் வாக்குறுதிகளனைத்தையும் கொண்டுள்ளார் (கலா 3:14). அவரை நமக்களிக்க, இயேசு தம்முடைய வேலையை மண்ணுலகில் முடிக்க வேண்டும் (யோவா 17:4); தம்முடையவர்களை இறுதிமட்டும் அன்பு செய்ய வேண்டும் (13:1); தம்முடைய உடலையும், இரத்தத்தையும் கொடுக்க வேண்டும் (லூக் 22:19). பிறகு இறைவனுடைய செல்வம் அனைத்தும் அவருக்களிக்கப்பட்டுள்ளதால், அவர் எல்லாவற்றையும் வாக்களிக்கலாம். எவனும் ''அவருடைய பெயரால் இறையவனிடம் கேட்பதெல்லாம்'' பெறுவது உறுதி (14:13). இதுவே ''உலகம் பெற இயலாத உண்மையின் ஆவி'' (14:7). ஏனென்றால், அவரே தந்தையும், மகனுடையதுமான உயிருள்ள சொத்து என்று இவ்வுலகம் விசுவசிக்க இயலாது (16:15). ''எல்லாம் நிறைவேறிய'' பொழுது, இயேசு ''ஆவியைக் கையளித்து'' உயிர் விடுகிறார் (19:30). அவர் தம்முடைய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியுள்ளார். ''பிதா, சுதன், தூய ஆவியை'' (மத் 28:19), அவர்களுக்குத் தாம் அளிக்கும் நேரத்தி

லிருந்து ''உலகம் முடியும் வரை'' அவர்களோடிருக்க அவர் வாக்களிக்க இயலும்.

IV. **வாக்குறுதியின் வாரிசுகளான கிறிஸ்தவர்கள்:** தூய ஆவியைப் பெற்றுள்ள கிறிஸ்தவர்கள் வாக்குறுதிகள் அனைத்தையும் பெற்றுள்ளார்கள் (அ.ப. 2:38தொ). முன்பு ''வாக்குறுதியின் உடன்படிக்கைக்கு அன்னியர்களாயிருந்த'' (எபே 2:12) ''புறவினத்தார்களும் பரிசுத்த ஆவியின் கொடையைப் பெற்றதிலிருந்து'' (அ.ப. 10:15), கிறிஸ்துவில் ''வாக்குறுதியின் பங்காளி''களாயுள்ளனர் (எபே 3:6). அன்றிலிருந்து விசுவாசத்திற்கே எப்பொழுதும் வாக்குறுதியளிக்கப்படுகிறது (உரோ 4:13); ''எல்லா இனத்தாரின் தந்தையாக விளங்கும் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கொண்ட அவர் வழிவந்தவர்கள்'' (4:16) எனப்படும் அனைவருக்கும், விருத்தசேதனம் செய்யப்பெற்றவர்களானாலும் சரி, விருத்த சேதனம் செய்யப்பெறாதவர்களானாலும் சரி (4:9) இவ்வாக்குறுதி யளிக்கப்படுகிறது.

''எல்லாக் கொடைகளாலும் நிரப்பப்பெற்று'', ''எந்த அருட்கொடையிலும் குறையில்லாததால்'' (1 கொரி1:5.7) கிறிஸ்தவர்கள் விரும்புவதற்கு வேறொன்றுமில்லை. ஏனென்றால், தூய ஆவி அவர்களை அபிடேகம் செய்து முத்திரையிட்டு அவர்களுள் நிலையாகக் குடிகொண்டுள்ளார். எனினும், அவர் நம் உரிமைச் சொத்தின் பிணையாக மட்டுமே இருக்கிறார் (எபே 1:14; 2 கொரி 1:22; 5:5). அவர் ''நம் மீட்பின்... முதற்கனி'' ஆவார் (உரோ 8:23). அவருடைய செபம் நம்மில் ஓர் ''ஏக்கக் குரலாகவும்'', நம்பிக்கையாகவும் விளங்குகிறது (8:23தொ). கிறிஸ்தவர்கள் ''மேலானதொரு தந்தை நாட்டின்'' யாத்திரிகர்களாகவே இன்னுமுள்ளனர் (எபி 11:16). அவர்கள் ''விசுவாசத்திலும், பொறுமையிலும்'' (6:12-15), ஆபிரகாமின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி அதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இறுதிநாள் வரை, ஒருவன் தன்னை இறையன்பினால் விசுவாசத்திற்கு ஒப்புக்கொடுக்கும் கருவியாக வாக்குறுதி உள்ளது.

வாசனைக் கட்டை (SCENTED WOOD)

வாசனைக் கட்டைகள், பாபிலோனியர்களால் விலை கொடுத்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களில் ஒன்று (திருவெளி 18:12). இஃது ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இதை மேசை போன்ற பொருட்களைச் செய்ய உரோமையர்கள் பயன்படுத்தினர்.

வாசனை மரம் (ALGUM, ALMUG)

லெபனோனிலிருந்து பெறப்பட்ட விலையுயர்ந்த மரம். ஆலயத்தையும் (2 நாள் 2:7) மற்றக் கட்டடங்களையும் (9:10) கட்ட சாலமோன் ஈராமிடமிருந்து கேட்டிருந்த மரமாகும். ஓப்பிரிலிருந்து இது பெறப்பட்டிருக்கலாம் (9:10; 1 அர 10:12).

வாசிங்டன் சுவடித்தொகுப்பு (CODEX WASHINGTONENSIS)

கி.பி. நான்காவது அல்லது ஐந்தாவது நூற்றாண்டைச் சார்ந்த பழைய ஏடு இது. இதில் புதிய ஏற்பாட்டு நூல்கள் மட்டும் இடம் பெற்றிருக்கின்றன. இது கிரேக்க மூல மொழியில் எழுதப்பட்டுள்ளது. இத்தொகுப்புக்குக் கொடுக்கப்பட்டுள்ள குழூஉக் குறிப்பெழுத்து 'W' என்பதாகும்.

இதில் நற்செய்தி நூல்கள் மேற்கத்திய வரிசை முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன. அதாவது மத்தேயு, யோவான், லூக்கா, மாற்கு என்ற வரிசையில் நற்செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

இந்தச் சுவடியின் தனி முக்கியத்துவம் என்னவென்றால், மாற் 16:14-இல் சேர்க்கப்பட்டுள்ள ஒரு புதிய வசனமாகும். இவ்வசனத்தின் கருத்து, தற்போதுள்ள தலைமுறை - சட்டங்களுக்குக் கட்டுப்படாத தலைமுறை - விசுவாசமற்ற தலைமுறை; எனவே, அது சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது; ஆகவே மக்கள் சாத்தானின் ஆட்சியை விட்டு சத்தியத்தின் ஆட்சிக்குத் திரும்பவும், அதனால் விண்ணக நீதியில் நிலைத்து நிற்கவும் இயேசு இறந்தார் என்பதாகும். இப்பொருளில் வருகிற வாக்கியம் இச்சுவடியில் மட்டும்தான் காணப்

படுகிறது. இவ்வாக்கியத்தைப் பிரியர் வாக்கியம் என்பார்கள்.

இத்தொகுப்பை சி.எல்.பிரியர் என்பவர் 1906-ஆம் ஆண்டு கெய்ரோ நகரில் விலை கொடுத்து வாங்கினார். இப்போதும் இப் பிரியர் என்பவர் சேர்த்து வைத்திருக்கும் பழங்காலப் பொருட்களுடன் இவ்வேடும் சேர்த்துவைத்து வாசிங்டன் நகரில் காப் பாற்றப்பட்டு வருகிறது.

வாஞ்சை, பரிவு (TENDERNESS)

வாஞ்சையைக் குறிக்க குடல், வயிறு என்று பொருள்படும் எபிரேயச் சொற்கள் பயன்பட்டுள்ளன. தங்கள் குழந்தைகள் மீது தாய்மார்கள் கொண்டிருப்பது வாஞ்சை தான் (1 அர 3:26). இவ்வாஞ்சை எல்லா மனித உயிர்களும் தங்கள் குழந்தைகள் மீதும், தங்களுக்கே மிக நெருக்கமாக உள்ளவர்கள் மீதும் கொள்வது இயல்பு (ஆதி 43:30). இவை அனைத்தையும் விட, கடவுள் தம் படைப்புகள் மீது கொண்டிருக்கும் வாஞ்சை அளவற்றது.

1. கடவுளின் வாஞ்சை: கடவுள் தந்தையாகவும் (சங் 103:13), தாயாகவும் (எசா 49:14தொ; 66:13) உள்ளார். அவர் கொண்டிருக்கும் வாஞ்சை மனிதரின் வாஞ்சையை விட ஒருபடி மேலானது. அதனால்தான் அவர் தனது சாயலாகவே மனிதனைப் படைத்தார் (ஆதி 1:25; 5:1-3). இந்தக் கொடை எந்தவித எதிர்பார்ப்புமின்றி இறைவனால் தரப்பட்டது (தானி 9:18); எப்பொழுதும் விழிப்போடிருக்கும் வாஞ்சை அது (ஓசே 11:8; எரே 31:20; எசா 63:15). அளவற்றது இவ்வாஞ்சை (எசா 54:7; பாரூ 2:27; சீரா 51:3). குறையா நிறைவளமுடையது (சங் 77:10; நெகே 9:9; 27:31). அஃது ஒவ்வொரு காலையும் புதுப்பிக்கப்படுகிறது (புல 3:22); என்றுமே மாறாத அசைக்க முடியாத பிரமாணிக்கமுடையது (சங் 25:6; லூக் 1:50); எல்லோருக்கும் எந்த விதிவிலக்குமின்றிக் காட்டப் படுவது (சீரா 18:12; சங் 145:9). முக்கியமாக ஏழைகட்கும், அனாதைகட்கும் சிறப்பாகக் காட்டப்படும் வாஞ்சை இது (ஓசே 14:4). இஃது இறப்புக்குப்பின் பிரமாணிக்கமுள்ள விசுவாசிகளை ஒன்றிணைக்கக் கூடியது (2 மக் 7:29).

இந்த அன்பை எதனாலும் கட்டுப்படுத்த முடியாது. எனவே, அஃது எல்லா வகையான ஆசீர்களைப் பொழிவதிலும் (எசா 63:7), வாழ்வெனும் கொடையைத் தருவதிலும் (சங் 119:77.156), மீட்பையும் விடுதலையையும் தருவதிலும் (உப 30:3; செக் 1:16), ஒரு சில போதனைகளைத் தருகின்ற சோதனைகளிலும் கூட (புல 3:32; ஞான 11:9) தன்னை வெளிப்படுத்துகிறது. எப்பொழுதும் தவறு செய்தவர்களை மன்னிக்கத் தயாராக இருக்கும் ஆண்டவரின் தன்மை அவரின் அளவற்ற வாஞ்சையையும் இரக்கத்தையும் காட்டுகிறது (எசா 55:7; தானி 9:9). எனவே, ஒவ்வொரு பாவியும் அவரது அளவற்ற நன்மைத்தனத்தில் நம்பிக்கை வைத்து, காத்திருக்கும் தந்தையிடம் திரும்பி வரவேண்டும் (சங் 78:8; லூக் 15:20). இந்த நம்பிக்கை மீண்டும் பாவம் செய்வதற்குப் பயன்படுத்தப்படக் கூடாது (சீரா 5:4-7).

'வாஞ்சையும், இரக்கமும் உள்ள கடவுள்' என்ற பெயரை அவரே முதன் முதலில் தனக்குரிய பட்டமாக உரிமை கொண்டாடுகிறார். இப்பட்டத்தையே யாத்திரைநூல் (34:6), உபாகம நூல் (4:31), சங்கீதங்கள் (86:15; 103:8; 111:4; 145:8), இறைவாக்கினர் நூல்கள் (யோவே 2:13; யோனா 4:2), வரலாற்று நூல்கள் (2 நாள் 30:9; நெகே 17:31), ஞானநூல்கள் (சீரா 2:11; ஞான 15:1) ஆகியவை அவருக்கு அளித்தன. வாஞ்சை என்ற சொல் ஒரே ஒரு தரம் மனிதனைப் பற்றிக் கூறப்படுகிறது (சங் 112:4). மற்ற இடங்களிலும் இது கடவுளைக் குறிக்கவே பயன்படுத்தப் படுகிறது (காண்க. சங் 78:38; 106:5). எனவே, ஒவ்வொரு விசுவாசியும் தனது ஆண்டவரின் மேல், ஒரு குழந்தை தாயின் மேல் வைக்கும் முழுமையான நம்பிக்கையை வைக்கலாம் (சங் 131). இதுவே இயேசு காட்டிய மகனுக்குரிய வாஞ்சை. அவர் வழியாகவும் அவரிலும் கடவுளின் வாஞ்சை நிறைவாக வெளிப்படுகிறது.

2. கிறிஸ்துவிலும் கிறிஸ்து வழியாகவும் வெளிப்படும் கடவுளின் வாஞ்சை: இயேசுவில் கடவுளின் நன்மைத்தனம் முழுவதும் வெளிப்பட்டது *(லூக் 1:78; தீத் 3:4-7).* அவரில் இரக்கத்தின் ஊற்றாம் தந்தை *(2 கொரி 1:3; உரோ 12:1)* தன்னை வெளிப்படுத்தியுள்ளார். அவரது வாஞ்சை எவ்வளவு பெரியது என்பதை இயேசுவின் உயிர்ப்பில் காட்டுகிறார். அது நமக்கும் ஓர் உத்தரவாதமாக அமைவதைப் பார்க்கிறோம் *(எபே 2:4-6; 1 பேதுரு 1:3).*

இயேசு மட்டும் இறைவாஞ்சையைப் பெற்றுக்கொள்ளவில்லை. அதைத் தன்னுடையதாக மாற்றி அதை நமக்கும் தருகிறார். இறைவன் தம் இழிந்த மந்தையை எதிர்கொள்வது போல் *(எசே 34:16),* இயேசு, மக்கள் ஆயனில்லாத ஆடுகள் போல் தவிப்பதைக் கண்டு, அவர்கள்மீது மனமிரங்கி நற்செய்தியையும் *(மாற் 6:34),* உணவையும் *(8:2)* கொடுக்கிறார். தொழுநோயாளர்கள் *(1:14),* குருடர்கள் *(மத் 20:34),* பிள்ளையை இழந்த தாய்கள் அல்லது சகோதரிகள் *(லூக் 7:13; யோவா 11:3)* மற்றும் திக்கற்றோரையும் காணும்போது அவர்கள்மீது மனமிரங்கி வேதனைக் குரல் கொடுக்கிறார். கடவுளின் வாஞ்சையைப் போல இதுவும் சோர்வுறாத ஒன்றாக இருந்ததால் பாவத்தின்மீது வெற்றி கொண்டு, மிகக்கொடிய பாவியையும் அவரால் மன்னிக்க முடிந்தது *(லூக் 23:34).*

3. கிறிஸ்தவர்கள் வாழ்வில் வெளிப்பட வேண்டிய கடவுளின் வாஞ்சை: கடவுள் தன் வாஞ்சை மனிதரின் இதயத்தை ஊடுருவிச் செல்ல வேண்டும் என விரும்புகிறார் *(செக் 7:9; சங் 112:1.4; சீரா 28:1-7).* இதை மனிதர்கள் தாங்களாகவே பெற்றுக் கொள்ள முடியாததால், இயேசுவால் நிறைவேற்றப்பட்ட புதிய உடன்படிக்கையின் திருமணப்பரிசாக *(ஓசே 2:21)* இறைவன் மனிதர்களுக்கு அதைத் தருகிறார் *(செக் 12:10).* மனிதனான இறைமகனுடைய வாஞ்சையாக ஆகியபின், கடவுளின் வாஞ்சை, இயேசுவில் இறைவனுடைய பிள்ளைகளாக மீண்டும் பிறக்கும் மனிதர்களின் வாஞ்சையாகிறது.

''கிறிஸ்து இயேசுவுக்குரிய அதே பரிவுள்ளத்தை''த் தனதாக்கிக் கொள்ளும் ஒரே ஏக்கத்தைப் பவுல் கொண்டிருக்கிறார். ஆகவே, கடவுளுடையவும் அவருடைய மகனுடையவும் ''பரிவையும் இரக்கத்தையும்'' அணிந்து கொள்ளும்படி கிறிஸ்தவர்களை அவர் தூண்டுகிறார் *(கொலோ 3:12; எபே 4:32; காண்க. 1 பேதுரு 3:8).* நற்செய்தியாளர்களும் இதே முறையில் போதிக்கின்றனர். தன் சகோதரனுக்கு எதிராக, தன் இதயத்தை மூடிக்கொள்பவன் தந்தையின் அன்பிலிருந்து தன்னையே முறித்துக் கொள்கிறான் *(1 யோவா 3:17).* தன்னைப்போல் பிறருக்கு மன்னிப்பு அளிக்க மறுப்பவன் தனக்கே இறைவனது மன்னிப்பை வேண்டாம் என்று மறுக்கிறான் *(மத் 18:23-25).* இறைவனின் பிள்ளைகள் யாவரும், தந்தையின் இதயத்தைப் போன்ற இதயம் கொண்டு, உணர்ச்சி வசப்படுதல் மட்டுமின்றி செயலாற்றும் *(லூக் 10:33)* நல்ல சமாரியனின் எடுத்துக் காட்டை மாதிரியாகக் கொண்டு, எவ்வித விலக்குமின்றி தங்கள் அயலார் அனைவர் மீதும் இரக்கத்தால் தூண்டப்பட்டு *(லூக் 15:20.31),* தந்தையின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் *(6:36).* இவ்வாறு, அவர்கள் இறைவாஞ்சையின் இயக்கத்தில் நுழைகின்றனர். இது தந்தையிடமிருந்து இயேசு வழியாக அன்பின் ஆவியில் *(பிலி 2:1)* அவர்களுக்குக் கிடைக்கிறது. இது பாவத்தையும் சாவையும் கடந்து, முடிவில்லாத மகிழ்ச்சியை நோக்கி அவர்களை இட்டுச் செல்கிறது.

வாடைக்கொண்டல் *(NORTHEASTER, THE)*

இது கிழக்கு-வடகிழக்கிலிருந்து வீசிய புயல் காற்றாகும். இத்தகைய புயல்காற்று ஒன்றில், பவுலையும் பிற கைதிகளையும் ஏற்றிச் சென்ற கப்பல் அகப்பட்டுக் கொண்டதால், இக்காற்றால் கிரேத்தாத் தீவின் தென்பக்கத்தில் கப்பல் அடித்துக் கொண்டு செல்லப்பட்டது *(அ.ப. 27:14-15).*

வாதுமை (ALMONO - எழுப்புபவர்)

சனவரி கடைசியில் அல்லது பிப்ரவரி தொடக்கத்தில் இம்மரம் முதன்முதல் மலர்வதிலிருந்து இப்பெயர் இதற்கு வருகிறது. இது புதிய உயிரின் அடையாளமாகும். 5 மீட்டர் உயரத்திற்கு மிகப்பெரியதாக வளரும் இம்மரம், சிறிது இளஞ்சிவப்புக் கொண்ட வெண்பூக்களைத் தருகிறது. எரே 1:11-12-இல் ''வாதுமை (விழிப்பாயிருக்கும் மரம்) மரக்கிளையைக் காண்கிறேன்'' என்று எரேமியா கூற, ஆண்டவர் ''நீ கண்டது சரியே. என் வாக்கைச் செயலாக்க நானும் விழிப்பாய் இருக்கிறேன்'' என்று கூறுகிறார். **'வாதுமை மரம் பூத்து'** என்பது திருவுரை 12:5-இல் முதுமையை உவமையாகக் குறிக்கிறது. ஆரோனின் கோல் தளிர்த்துப் பூத்து வாதுமைப் பழங்களைத் தாங்கியிருந்ததால் அவரது குருத்துவம் உறுதி செய்யப்பட்டது (எண் 17:23). மேற்காசிய நாடுகளில் 'வாதுமைப் பருப்பு' உயர்ந்த பொருளாகவும், மென்மையானதாகவும் கருதப்பட்டது. எனவேதான் யாக்கோபு, யோசேப்புக்குக் காணிக்கையாக மற்ற உயர்ந்த பொருட்களுடன் இதனையும் அனுப்பி வைத்தார் (ஆதி 43:11). பதான் - ஆராமில் ஆலயத்தில் விளக்குத் தண்டின் கிண்ணங்கள் வாதுமை வடிவில் செய்யப்பட்டிருந்தன (யாத் 25:33-34; 37:19-20). இம்மரம் சிறிய ஆசியா, சீரியா, மெசபொத்தாமியா ஆகிய நாடுகளில் காணப்படுகிறது. பாலஸ்தீனத்தில் காட்டு மரமாக வளர்ந்தது.

வாயில் (GATE, DOOR)

I வாயில்கள் திறந்திருக்கும்போது மக்கள் போவதும் வருவதுமாக சுதந்தரமான போக்குவரத்து அமைகிறது. எனவே, திறந்த வாயில்கள் வரவேற்பை உணர்த்துகின்றன (யோபு 31:32); அத்துடன் வாய்ப்புத் தருவதாகவும் அமைகின்றன (1 கொரி 16:19). அவை மூடிவைக்கப்படும்போது மக்கள் உள்ளே போய் வருவதைத் தடுக்கிறது; எனவே பாதுகாப்பாகிறது (யோவா 20:19) அல்லது உள்ளே நுழைவதை மறுப்பதின் அடையாளமாகிறது (மத் 25:10). பிரித்து வகைப்படுத்தும் கருத்தையும் காட்டுகிறது.

II. பழைய ஏற்பாடு:

1. நகரத்தின் வாயில்: நகரத்தின் அரண் சூழ்ந்த வாயில் அதில் வசிப்பவர்களை எதிரியின் தாக்குதலிலிருந்து காக்கிறது; நண்பர்களை உள்ளே அனுமதிக்கிறது. ''நகர வாயிலுக்குள் இருக்கும் அன்னியரும்'' (யாத் 20:10) இஸ்ராயேலுக்குரிய சலுகைகளைப் பெறுகிறார்கள். இவ்வாறு வாயில்கள் நகரத்தில் உள்ளவர்கள் பாதுகாப்பாக ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பத் துணைபுரிகிறது. நகரத்தின் வாழ்க்கை நகர வாயிலை மையமாகக் கொண்டிருக்கிறது. இங்குதான் முக்கியமான கூட்டங்கள் நடைபெறுகின்றன (யோபு 29:7; சங் 63:19); வியாபாரச் செயல்கள் பேசி முடிவு செய்யப்படுகின்றன (ஆதி 23:11-18; ரூத் 4:1-11); அரசியல் தந்திரங்கள் திட்டமிடப்படுகின்றன (2 சாமு 15:1-6). போர்க்காலங்களில் இங்கிருந்துதான் படைகள் பிரிந்து சென்றன (1 அர 22:10). இவை எல்லாவற்றையும் விட முக்கியமான **நீதித்தீர்ப்புகள்** இங்குதான் கொடுக்கப்பட்டன (உப 21:19; 22:15; 25:7; ஆமோ 5:10.15; யோபு 5:4; 31:21; பழ 22:22; 24:7). எனவே வாயில், நீதிக்கும் பாதுகாப்புக்கும் அடையாளமாய் நிற்கிறது (எசா 28:6). எனவே, ஒருவகையில் வாயில்கள் நகரத்தை உணர்த்துவனவாகவும், நகரத்தையே குறிப்பனவாகவும் (உப 28:52.57) நகரத்தின் பலத்தையும் கூட உணர்த்துவனவாகவும் உள்ளன. வாயிலைப் பிடிப்பது என்பது நகரத்தையே பிடிப்பதாகவும் (ஆதி 22:17), சிறைப்பட்டவர்களை விடுவிப்பதாகவும் (சங் 107:16; எசா 45:2), வாயில் கதவுகளின் சாவிகளைப் பெற்றுக்கொள்வது அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதாகவும் பொருள்படும் (எசா 22:22). ஒப்புமையால் செயோல் அல்லது மரணத்தின் வாயில்களைப் பற்றிப் பேசலாம். இஃது எல்லா மனிதரும் செல்லும் மறைபொருளான உறைவிடத்தைக் குறிக்கிறது (சங் 107:18; எசா 38:10). இதன் வாயிலை இறைவன் மட்டுமே அறிவார் (யோபு 38:17). அதை வெல்லும் ஆற்றல் அவரிடம் மட்டுமே உள்ளது (சங் 9:14; ஞான 16:13; காண்க. மத் 16:18).

எருசலேமின் வாயில்களை ஆண்டவரே பலப்படுத்தியுள்ளார். ஏனெனில், அதனை அவர் அதிகம் அன்பு செய்கிறார் (சங் 24:7தொ; 87; 147:13). இந்த வாயில்களைக் கடந்து செல்பவர்கள் அமைதியையும் ஒற்றுமை உணர்வையும் பெறுகின்றனர் (சங் 122). உடைத்து நுழைய முடியாத அளவுக்கு மிகவும் வலுவான இந்த வாயில்கள் எருசலேம் நகருக்குள் வாழ்பவர்கட்குச் சிறப்பான பாதுகாப்புத் தருகின்றன; ஆனால், இங்கு நீதி எப்பொழுதும் சரியாக வழங்கப்பட்டது என்று கூற முடியாது (எசா 2:21தொ; 29:21). ஆகவே இறைவாக்கினர்கள், எல்லா நாடுகளையும் ஏற்றுக்கொண்டு நீதியிலும், அமைதியிலும் உருவாக்கப்படும் புதிய எருசலேமைக் கனவு காண்கின்றனர் (எசா 26:1-5; 60:11; எசே 48:30தொ; செக் 2:8தொ).

2. விண்ணகத்தின் வாயில்: யாவே இறைவன் மழையை, மன்னாவை (சங் 78:23), ஆசீர்வாதங்களை மண்மீது பொழிவதற்கு விண்ணகத்தின் கதவுகளைத் திறந்து விடுகிறார் (மலா 3:10). ஆனால், விண்ணகத்தின் வாயில் அடைக்கப்பட்ட பிறகு மனிதன் கடவுளோடு நெருங்கிய முறையில் உறவு கொள்ள முடியவில்லை. வழிபாடுதான் விண்ணக, மண்ணக உலகுகளை உறவில் ஒன்றிணையச் செய்கிறது. இவ்வாறு யாக்கோபு 'பெத்தேலில்' விண்ணக வாயிலைக் கண்டார் (ஆதி 28:17). ஆலய வாயிலை நெருங்கும் இஸ்ராயேலன் யாவே இறைவனைச் சந்திக்க விரும்புகிறான் (சங் 100:4). ஆனால், அங்கு நுழைவதற்கான நிபந்தனைகளைக் குரு அவனுக்கு நினைவூட்டுகிறார்; உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருத்தலும், நீதியும் ஆண்டவரின் இல்லத்தில் நுழைவதற்கு அவசியமானவை என்கிறார் (சங் 15:24; எசா 33:15தொ; காண்க. மீக் 6:6-8; செப் 8:16தொ). ''ஆண்டவரது வாயில் இதுவே: இது வழியாய் நீதிமான்களே நுழைவர்'' (சங் 118:19). எரேமியா இறைவாக்கினரோ இதே வாயிலில் நின்றுகொண்டு மேலே கூறிய நிபந்தனைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை; எனவே, கடவுளைச் சந்திப்பதென்பதே ஒரு மாயை, ஆலயம் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்றறிவிக்கிறார் (எரே 7; காண்க. எசே 8-11). எருசலேம் சிறப்பாக இருப்பதற்குரிய தகுதியை அஃது இழந்துவிட்டது. வெளிநாட்டவர்களை நுழையவிடாமல் அதன் வாயில்களை மூடிவைப்பதற்குப் பதிலாக அதன் மத்தியில் இருக்கும் தீமைகளை அகற்றுவதால் மட்டுமே நகரம் தூய்மையடைய முடியும். ஆலயம் அழிக்கப்படும் போது தாங்கள் விண்ணகம் ஏறிச் செல்ல முடியாது என்று உணர்ந்த இஸ்ராயேலர் கடவுளே நேரடியாக இறங்கி வருமாறு வேண்டுகின்றனர் (எசா 63:19). அவரே ஆடுகளை வாயில் வழியாக அழைத்துச் செல்ல வேண்டுமென்று வேண்டுகின்றனர் (மீக் 2:12 தொ; காண்க. யோவா 10:4).

III புதிய ஏற்பாடு: அவர்களது செபத்திற்கு இயேசு செவிமடுக்கிறார். அவர் தனது திருமுழுக்கின்போது, விண்ணகம் திறக்கப்பட்டது; அவரே, மண்ணகத்திற்கு இறங்கி வந்த விண்ணகத்தின் வாயிலாகிறார் (யோவா 1:51;காண்க. ஆதி 28:17). அவர் விண்ணக ஆசீர்கள் இலவசமாக வழங்கப்படும் மேய்ச்சல் நிலங்களுக்கு அழைத்துச் செல்லும் வாயிலாகவும் (யோவா 10:9), ஒரே இடையாளராகவும் இருக்கிறார். அவர் வழியாகவே தந்தை மக்களோடு பேசுகிறார். அவர் வழியாகவே மனிதர்கள் கடவுளை நெருங்கிச் செல்ல முடியும் (எபே 2:18; எபி 10:19). ஆனால், அதே நேரத்தில் தாவீதின் திறவுகோல்களைத் தமது கையில் கொண்டு (திருவெளி 3:7), இறையரசில் நுழைவதற்குச் சில நிபந்தனைகளை விதிக்கிறார். விண்ணகத்தின் திறவு கோல்களைப் பேதுருவிடம் ஒப்படைக்கிறார் (மத் 16:19). வாழ்வில் நுழைதல் அல்லது மீட்பைப் பெறுதல் ஒரு நகரத்தில் நுழைதல் அல்லது விருந்து மண்டபத்தில் நுழைதலுக்கு ஒப்பிடப்படுகிறது. அதற்குக் குறுகிய வாயில் வழியே செல்ல வேண்டும். இது மனமாற்றத்தைக் குறிக்கிறது (மத் 7:13தொ;

லூக் 13:24). இதற்கு விசுவாசமும் மிகமிக முக்கியம் (அ.ப. 14:27; எபே 3:12). விழிப்போடு இல்லாதவர்கள் கதவு மூடி யிருப்பதையே காண்பார்கள் (மத் 25:10; லூக் 13:25). இயேசு சாவின், நரகத்தின் திறவுகோல்களை வைத்திருக்கிறார் (திரு வெளி 1:18). ஏனெனில், அவர் தீமையை வெற்றி கொண்டு தீமையின் சக்திகளை விட், தனது திருச்சபையைச் சக்தி மிக்கதாக மாற்றியுள்ளார் (மத் 16:18).

இறுதிநாளில் நகரமும், விண்ணகமும் ஒன்றாகிறது. திருவெளிப்பாடு, எசாயா, எசேக்கியேல், செக்கரியா ஆகிய இறைவாக் கினர்களின் முன்னறிவிப்பு நிறைவு பெற்ற தைக் காட்டுகிறது. விண்ணக எருசலேம் பன்னிரண்டு வாயில்களைக் கொண்டுள் ளது. அஃது எப்பொழுதும் திறந்தே இருக் கும். ஆனால், தீமை அவற்றில் நுழைய முடியாது. அமைதியும், நீதியும் அங்கு நிலவும். கடவுளுக்கும் மனிதருக்கு மிடையே முழுமையான நல்லுறவு அங்கு நிலவும் (திருவெளி 21:12-27; 22:14-15).

வாயில்காப்போன் (DOOR KEEPER)

வாயிலைக் காப்பவன். உடன்படிக்கைப் பெட்டகத்திற்குத் தனிப்பட்ட வாயிற்காப் போர்கள் இருந்தார்கள் (1 நாள் 15:23-24). இவர்களே கோவிலின் நுழைவாயிலையும் கவனித்துக் கொண்டார்கள் (2 அர 22:4); மக்களிடமிருந்து பணத்தையும் வசூலித்தார் கள். பாரசீக மன்னர்களின் அரண்மனையில் அண்ணகர்கள் வாயில் காப்போர்களாக இருந்தனர் (எஸ்த 2:21). சில சமயங்களில் பெண்கள் வாயிலைக் காத்தார்கள் (2 சாமு 4:6; யோவா 18:16-17). கடவுளின் வீட்டில் ஊழியனாயிருப்பவனுக்கு இந்தச் சிறுமை யான வேலையும் மிகவும் மகிழ்ச்சியை அளித்தது (சங் 84:10).

வாயில் நிலை (DOOR POST)

இச்சொல் கெட்டியான உறுதியான கேதுரு மரங்களைக் கொண்டு செய்யப் பட்ட வாயில் நிலைகளைக் குறிக்கிறது (எசா 1:29; 57:5). இதன் வேலைப்பாடு களைப் பற்றிய குறிப்பு எசேக்கியேலின் காட்சியில் கண்ட தேவாலயத்தின் குறிப் பில் அமைந்துள்ளது (எசே 40:9-41:3). எசே 40:9-இல் கூறப்பட்டுள்ளது சற்றே குழப்பத் திற்குரியது. இதன் மாறுபாடான அளவுகள் எதைக் குறிக்கின்றன என்றால் அந்தத் தேவாலயத்தில் ஒரே நிலை இல்லை; மாறாக, சேர்ந்த பல நிலைகள் இருந்தன என்பது தெளிவாகிறது.

எசா 6:4-இல் 'நிலைகள்' என்று பன்மை யில் கூறப்பட்டுள்ளது. இஃது அதன் அடித்தளத்தின் பலத்தைக் குறிப்பதாக உள் ளது. சில இடங்களில் இது பக்க நிலைகள் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், பொதுவாக வாயில்நிலை என்றே கூறப் பட்டுள்ளது.

யூதர்களின் மதக் கொள்கையில் வாயில் நிலை என்பது பெரும் பங்கு வகிக்கிறது. யூதர்களின் பாஸ்காத் திருநாளுக்கு முன் தினம் அவர்களின் வாயில் நிலைகளில் இரத்தம் பூசப்பட்டது (யாத் 12:7-22-23). தன் தலைவனோடு இருக்க விரும்பும் அடிமையின் காதுகளில் துளை இடப்படும் (யாத் 21:6). இது நிலைகளுக்கு அருகே நடைபெறும். ஒவ்வொரு வீட்டின் வாயில் நிலையிலும் எழுதப்பட வேண்டும் (உப 6:9; 11:20). தொன்மையான யூதர்களுக்குப் புனித வார்த்தைகள் அடங்கிய சுருள் நிலையோடு பொருத்தப்பட வேண்டும் (1 அர 7:5).

வாயைக்கட்டுதல் (MUZZLE)

உப 25:4-இன்படி, ''போரடிக்கும் மாட் டின் வாயைக் கட்டலாகாது''. ''வேலை யாள் தன் ஊதியத்துக்கு உரியவனே'' என்பதை எடுத்துக்காட்ட இத்தடையைப் பவுல் இருமுறை எடுத்துக் கூறுகிறார் (1 கொரி 9:9; 1 திமொ 5:18). ராசி போன்ற யூத விளக்கவுரையாளர்கள் இத்தடை உணவுப்பொருள் உண்டாக்குவதற்குப் பயன்படும் எந்த விலங்குகளுக்கும் பொருந்தும் என்பர். இத்தடையின் விளை வாக, இஸ்ராயேலில் மாடு உயர்வாகக் கருதப்பட்டது. அது வலிமையின், வளமை யின் அடையாளமாகும். பிற்காலத் தலை முறைகள் எவ்வளவுதான் பதிதத்தில் மூழ்கி

யிருந்தாலும், எரொபவாம் ஆட்சியிலும், அதற்குப் பின்னும், பொற்கன்று யாவே வழிபாட்டின் அடையாளமாக இருந்தது (1 அர 12:28தொ; 2 அர 10:29; 2 நாள் 13:8). அதுபோலவே, பாலைவனத்தில் அவர்களின் முன்னோருக்கும் பொற்கன்று அவ்வாறே இருந்தது (யாத் 32:1தொ). இதைப் பொருத்தமட்டும், இஸ்ராயேலில் பலிவழிபாட்டில் பரவலாக மாடு பயன்பட்டது என்ற உண்மை (எண் 7:87-88; 2 சாமு 24:22; 2 நாள் 5:6; 7:5) ஓரளவு பொருளுள்ளதாகும்.

வாய் (MOUTH)

இச்சொல் பரவலாக, பல பொருளில் பயன்பட்டுள்ளது. உணவை உட்கொள்ளவும், நீரைப் பருகவும் உதவும் உடலுறுப்பாக வாய் இருக்கின்றது (நீதி 7:6; 1 சாமு 14:26-27). உருவகத்தில் பொருட்களின் சுவை அறியும் உறுப்பாக உள்ளது (யோபு 20:12; சங் 119:103); நிலம் தன் வாயைத் திறந்து விழுங்கி விடுகிறது (ஆதி 4:11; எண் 16:30. 32); பாதாளக் குழி அளவு கடந்து தன் வாயைத் திறந்துள்ளது (எசா 5:14; சங் 69:15).

வாய் ஒரு வெளி உறுப்பு (2 அர 4:34; பழ 30:20). இது முத்தமிடுவதற்கும் (1 அர 19:18; யோபு 31:27; உ.ச. 1:2), கேலிப்பரிகாசம் செய்வதற்கும் (யோபு 16:10; சங் 35:21; எசா 57:4) பயன்படுகின்றது.

வாய் பேசுவதற்கும் (ஆதி 45:12; உப 32:1; 2 சாமு 1:16; மத் 5:2; 12:34; 13:35), சிரிப்பதற்கும் (யோபு 8:21; சங் 126:2) பயன்படுகிறது. இறைவன் திருவாய் மலர்ந்து அருளுகிறார் (எசா 1:20; 40:5; எரே 9:12). பேசும் விலங்கினங்கள் வாய் (ஆதி 8:11; எண் 22:28; எசா 10:14; திருவெளி 12:16; 13:2). விரோதிகளின் பேச்சு கொடிய விலங்குகளின் வாய்க்கு ஒப்பிடப்படுகிறது (சங் 22:21). இறைவனின் வாயினின்று தீ புறப்பட்டது (2 சாமு 22:9; சங் 18:18).

கிணற்றின் வாய் (ஆதி 29:2-3.8.10); குகையின் வாய் (யோசு 10:18.22.27); உயர்ந்த பாறைகளின் இடுக்குகள் பொந்துகள் (வாய்) (எரே 48:28); சேயோலின் வாய் (சங் 141:7); கோணிப்பையின் வாய் (ஆதி 42:27-28; 44:1-2.8).

வாய்மொழி மரபு, வாய்மொழிப் பாரம்பரியம் (ORAL TRADITION)

வாய்மொழியால் மட்டும் கூறப்படும் எந்தவொரு பொருளும், அது பாதுகாக்கப்படும் முறையும் இத்தலைப்பால் குறிக்கப்படும். இது பாதுகாக்கப்படுங்காலத்தில் இந்தப் பொருள்கள் நிலையான வடிவம் கொண்டிருப்பதில்லை. இவை மறு விளக்கம் பெறலாம். விவிலிய ஆய்வில் இச்சொல் கதைகள், வெளிப்பாடுகள், வரலாறுகள், இறைவாக்குகள், பிற்காலத்தில் எழுதப்பட்ட மறைநூலின் பகுதியாகிய பிறவற்றையும் குறிக்கிறது.

விவிலியத்தின் பெரும்பகுதி முதலில் வாய்மொழி மரபாக இருந்தது என்பதில் ஐயம் இருக்க முடியாது. இறைவாக்கினர்களின் கூற்றுகளும், எருசலேம் வழிபாட்டின் சங்கீதங்களும், இயேசுவின் உவமைகளும் போதகங்களும் முதலில் வாய்மொழியாகவே கொடுக்கப்பட்டன. ஒரு பொருள் வாய்மொழிப் பாரம்பரியத்திலிருந்து,, எழுத்து வடிவம் எடுத்ததற்கு இடையிலான காலம் பற்றி அறிஞர்களிடையே பெரும் தர்க்கம் உண்டு.

ஒருகாலத்தில் அறிஞர்கள் உறுதியான நிறுவப்பட்ட குழுக்களாகப் பிரிந்திருந்தனர். முற்போக்கான அறிஞர்கள் பெரும் பகுதியான பொருள்கள் மிகவும் பிற்பட்ட காலத்தில் (நாடு கடத்தல் அல்லது அதற்கும் பிற்பட்ட காலத்தில்தான் பழைய ஏற்பாடு) எழுதப்பட்டன என்றும், பிற்காலத்தைச் சேர்ந்த அக்கறைகளைத்தான் அவை முதன்மையாகப் பிரதிபலித்தன என்றும் கருதினர். பழமை தழுவிய அறிஞர்கள் இப்பொருள்கள் எடுத்துக்கூறப்படும் காலத்திற்கு நெருங்கிய முற்காலத்திலேயே எழுதப்பட்டன என்றும், முற்

காலத்து அக்கறைகளையே முதன்மையாகப் பிரதிபலித்தன என்றும் கருதினர். நவீன ஆய்வுகள் இந்தக் கெடுபிடியான நிலைகளைத் தகர்த்து விட்டன. இரு குழுக்களிடையே உரையாடலைத் தூண்டியுள்ளன.

வாய்மொழிப் பாரம்பரியத்தை ஆய்வு செய்ய, ''பாரம்பரிய ஆய்வு'' என்றழைக்கப்படும் தெளிவான ஆய்வு முறையை அறிஞர்கள் பயன்படுத்துகின்றனர். இந்த அணுகுமுறை முதலில் ஒரு குறிப்பிட்ட வாசகத்தின் வளர்ச்சியின் வரலாற்றைத் தடம் காண்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் குறிப்பிட்ட ஆட்கள் சிலர் பொறுப்பாய் இருந்திருக்கின்றனர். இவர்களின் அக்கறைகள் அல்லது முன் கருத்துகளை அடையாளம் காண்பது, ஒரு பாரம்பரியம் வடிவம் எடுத்த அல்லது பயன்படுத்தப்பட்ட முறையைப் புரிந்துகொள்ள அறிஞர்களுக்கு உதவுகிறது. இரண்டாவது அணுகுமுறை, ஆய்வுக்குரிய பாரம்பரியத்தை அதையொத்த பிற பாரம்பரியங்களோடு ஒப்பிட்டு வேறுபடுத்துவதாகும். இத்தகைய ஒப்பீடு, பொதுத்தலைப்புகளையும், குறிக்கோள்களையும், ஒன்றையொன்று தழுவிய தன்மையையும் கூட அடையாளம் காண அறிஞர்களுக்கு உதவுகிறது.

வாசகத்திற்குப் பின்னணியாக உள்ள வாய்மொழிப்பாரம்பரியம் பற்றிய ஆய்வு, விவிலிய ஆய்வில் பெரிதும் பயனுள்ளதாக இருந்திருக்கிறது. குறிப்பாக, போதிய இணைவாசகங்கள் கிடைக்கும்போது (எ.கா. சங்கீதங்கள், நற்செய்திகள்) இந்த ஆய்வு மிகவும் பயனளித்தது. இது, சமூகம் (இஸ்ராயேல் அல்லது திருச்சபை) அதன் வரலாற்றில் ஒரு வாசகத்தைப் புரிந்துகொண்ட வேறுபட்ட முறைகளைக் காண விளக்கவுரையாளர்களுக்கு உதவியுள்ளது. இது வாசகத்தை ஆழமாகப் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

வாரங்களின் விழா (WEEKS, FEAST OF)

பெரிய திருவிழாக்கள் இஸ்ராயேலில் கொண்டாடப்பட்டன. இவற்றில் இரண்டாவது வருவது இந்த வாரங்களின் விழா. இது, பாஸ்கு தொடங்கிய சுழலின் முடிவாகக் கொண்டாடப்பட்டது. இஃது எருசலேம் ஆலய அழிவிற்குப் பிறகு சட்டம் கொடுக்கப்பட்டதை நினைவு கூர்தலுக்காகக் கொண்டாடப்பட்டது.

இந்தத் திருவிழாவுக்கு அளிக்கப்பட்ட மற்றப் பெயர்கள்: ''அறுவடை விழா'', ''பெந்தக்கோஸ்தே அல்லது ஐம்பதாம்நாள் விழா'' (தோபி 2:1; 2 மக் 12:32; அ.ப. 2:1; 20:16; 1 கொரி 16:8; காண்க. லேவி 23:16), ''முதற் பலன்களின் நாள்'' (எண் 28:26) என்பன.

இவ்விழா அடிப்படையில் அறுவடை விழா ஆகும். விவிலிய வரலாறு முழுவதும் மூலப்பண்பு பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது. யாத் 23:16 இதை ''அறுவடை விழா'' என்று அழைக்கின்றது. இதுதான் அதன் மிகப்பழைய பெயராக இருக்கலாம். ''வாரங்களின் விழா'' என்ற சொல் கோதுமையின் முதற்பலனை ஆண்டவருக்கு அளித்த சிறப்பான விழாவாகக் குறிக்கப்பயன்பட்டாலும் இது வாற்கோதுமை அறுவடை செய்யத்தொடங்கிய நாளிலிருந்து, கடைசி அறுவடை வரையுள்ள ஏறக்குறைய ஏழு வாரங்கள் அடங்கிய முழுக்காலத்தைக் குறித்தது. இந்தக் காலம் புனிதமான காலமாகக் கருதப்பட்டது. இதன் வழியாக, கடவுள் மழையின் ஊற்றாகவும், விவசாயத்திற்கு வளமை அளிப்பவராகவும் உள்ளார் என்பதை இஸ்ராயேல் உணர வேண்டுமென்பதற்காகக் கொண்டாடப்பட்டது (எரே 5:24). இந்தத் திருவிழா முதற்பலன்களின் நாள் என்றும் (எண் 28:26; யாத் 23:16; 34:22; லேவி 23:17), இது தாராளமாக முதற்பலன்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பதற்கு ஏற்றகாலம் என்பதையும் காட்டுகின்றது. கூடார விழாவுடன் இந்தக் காலம் முடிவடைந்தது. கிரேக்க மொழி பேசும் யூதர்களிடையே இந்தத் திருவிழா பெந்தக்கோஸ்தே நாள் என்ற பெயர் பெற்றிருந்தது. இஃது ஏழு வார காலத்தைக் குறிக்கும். மேற்குறிப்பிட்ட சொல் யூதத் திருவிழாவுக்குத் தலைப்பாக அமைந்து, முதற்பலனின்

வரியாகத் தானியங்களின் அறுவடையைச் சுட்டி நிற்கின்றது என்று கருத ஆதாரம் இல்லை. இந்த விழா இரு வடிவும், இருதன்மையுமுடையது என்று யூபிலி நூல் கூறுகிறது. இது வாரங்களையும், முதற் பலன்களையும் சுட்டுகிறது. தால்மூது, இவ்விழாவைத் ''திருக்கூட்டம்'' என்று அழைக்கும்போது, அது திருவிழா நாட்களின் சடங்குகள் மீது அதிகமாகக் கவனத்தைச் செலுத்துகின்றது. இப்படியாக பாஸ்கு விழாவோடும், கூடாரங்கள் விழாவோடும் ஒப்பிடப்படுகிறது (காண்க. லேவி 26:36; உப 16:8). மேலும், தால்மூதில் ''திருக்கூட்டம்'' என்ற சொல் பொதுவாகத் தென்படுகின்றது. இது பாஸ்குக் காலத்தை முடிக்கின்றது. இப்படியாக அறுவடைக் காலத்துடனும் தொடர்புடையதாக உள்ளது. ஆகையினால் இந்தத் திருவிழா, பாஸ்குத் திருவிழாவுடனும் அறுவடைக் காலம் முழுவதுடனும் மேலும் முதற்கனியை அர்ப்பணிக்கும் காலத்துடனும் தொடர்புடையதாகையால் இதை விவசாய விழா என்று கூறலாம். பழைய ஏற்பாடோ, யோசிப்பசோ, பீலோவோ இந்த விழா இஸ்ராயேல் வரலாற்றில் நடந்த நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துகின்றது என்று கூறவில்லை. யூபிலி நூலும் இதை அறுவடைக் கடைப்பிடிப்பாகக் கருதுகின்றது. மேலும், நோவா காலத்தில் நடந்த, உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் சடங்கைக் குறித்தது என்றும் சொல்லப்படுகின்றது. இஃது உண்மையாக இருக்கலாம். ஏனெனில், நோவாவின் உடன்படிக்கையோடு கூடிய தொடர்பு, ஆண்டவர் சீனாய் மலைமீது சட்டத்தைக் கொடுத்ததோடு தொடர்பு ஏற்படுத்துவதை எளிதாக்குகிறது.

பாலஸ்தீனத்தில் இந்த விழா ஒரே ஒரு நாளைக்கு மட்டும் நீடித்தது. சிதறிக்கிடந்த யூதர்களிடையே, சரியான நாளில் கொண்டாடாமல் இருப்பதைத் தவிர்க்க, இரண்டு நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. இஃது ஐம்பதாவது நாளாகக் கருதப்பட்டது. ''ஆண்டவருக்குப் புதுத் தானியப் படையலைச் செலுத்துங்கள்'' (லேவி 23:15). அதாவது, கதிர்க்கட்டை ஒப்புக்கொடுத்த நாள் ஓய்வு நாளுக்கு அடுத்த நாளில் நடந்தது. இந்நாள் பற்றி அறிஞரிடையே பல சர்ச்சைகள் உண்டு.

கைப்பிடியளவு கதிர்கள் எடுத்து ஆண்டவருக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்டது (லேவி 23:1). இஃது ஒரு சடங்கு முறையாக, முதன்முறையாக விளைந்து நிற்கும் கதிர்களை அரிவாளால் வெட்டிச் சேர்க்கப்பட்டது (உப 16:9). இது நாட்டின், மனித குல முழுவதின் முதற்கனியாகக் கொண்டு வரப்பட்டது (1 கொரி 15:20.23). இஃது ஆண்டவருக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. ஏனெனில், நிலத்தின் சொந்தக்காரரும் விளைச்சலுக்கு முதல் காரணமும் அவரே. இதை ஆண்டவருக்கு அளிக்கும் வரை அறுவடை செய்வது, அல்லது அவற்றை உணவாகக் கொள்வது சட்ட விரோதமானது (லேவி 23:14). குரு இந்தக் காணிக்கையை அளிப்பது மக்களின் பெயரால் அளிக்கப்படும் சமூக வழிபாடாகும். இஃது அறுவடைக்காலத்தைத் தொடங்கி வைத்தது. இக்காணிக்கையின் ஒரு பகுதி பீடத்தின் மீது வைக்கப்படும். மீதியைக் குரு தனக்கு உணவாகப் பயன்படுத்திக் கொள்வார். தகனப்பலியாக ஓர் ஆண் செம்மறி அளிக்கப்பட்டது (லேவி 23:12). ஒரு கைப்பிடி கதிர்க்கட்டுக்களை அளிக்கும் சடங்கானது புளியாத அப்பத் திருவிழாவின் முக்கிய பகுதிகளில் ஒன்றாகும்.

இந்தத் திருவிழாநாள் ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் நாளாகவும், மகிழ்ச்சியின் நாளாகவும் கருதப்பட்டது. ஏனெனில், அவரது பாதுகாவல் நம்மைப் பாதுகாத்திருக்கின்றது. மேலும், ஏழு வாரங்களுக்கு முன் தொடங்கிய அறுவடையை நல்லதொரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இது சபை கூடும் நாளாகும் (லேவி 23:21). வேலைகள் நிறுத்தப்பட்டன. இஸ்ராயேலின் ஆண் பிரதிநிதியின் வழியாக, பிற்காலத்தில் குறிப்பாக ஆலயக்குருக்கள் வழியாக, இஸ்ராயேல் சமூகம் முழுவதையும் ஆண்டவர் முன்னிலையில் பிரசன்னப்படுத்தியது. மற்றப் பெரிய திருவிழாக்

களில் உள்ளது போலவே சூரிய உதயத்தின் போது அளிக்கப்பட்ட தகனப்பலியுடன் சேர்த்து, வேறு பலிகளும் செலுத்தப் பட்டன (எண் 28:26தொ). அந்த நாளின் மிகவும் முக்கியமான கட்டம் இரண்டு அப்பங்களைச் சுட்டு அவற்றை ஆண்டவ ருக்கு முதற்பலனின் ஆரத்திப்பலியாக ஒப் புக்கொடுப்பதாகும் (லேவி 23:17). புதிய தாகக் கிடைத்த தானியங்களினால் செய்யப் பட்ட மாவினைப் புளிப்பேற்றிச் செய்யப் பட்ட அப்பங்களை மக்களின் பெயரால் குரு ஆரத்திப்பலியாக ஒப்புக்கொடுத்தார். இது புளிப்பு மாவினால் செய்யப் பட்டதாகையால் இதைப் பலிபீடத்தின் மீது வைக்கவில்லை. மாறாக, குருக்கள் அதை உணவாக உட்கொண்டனர். இரண்டு அப்பங்களுடன் இரண்டு செம்மறி ஆடு களும் ஆரத்திப் பலியாக ஒப்புக்கொடுக்கப் பட்டன. இஃது ஏழு வாரங்களுக்கு முன் காணிக்கையாக அளிக்கப்பட்ட கதிர்க்கட்டு களின் மூலம், புதிய தானியங்களை உண வுக்குப் பயன்படுத்தலாம் என்பதையும், மேலும் வழிபாட்டுத் தேவைக்கும் பயன் படுத்தலாம் என்று அனுமதித்ததையும் குறிக்கிறது. இந்தச் சடங்குகளில் பங்கு கொண்ட எல்லா ஆண்களும் பீடத்தைச் சுற்றி அல்லேலச் சங்கீதங்களைப் பாடிக் கொண்டு ''பீட நடனம்'' ஆடினர் (சங் 113-118). ஏழைகளுடனும், அன்னியர்களுட னும், லேவியர்களுடனும் சேர்ந்து உண் ணும் பொது உணவுடன் விழா முடிவடைந் தது. இவ்வாறு அடிப்படையில் ஒரு விவசாயச் சடங்கு கடவுளை மகிமைப்படுத் தியது; அதே போல் ஆண்டவரின் உடன் படிக்கையால் ஒன்றிணைக்கப்பட்ட சமூகத் தின் சகோதரப் பிணைப்பின் பொறுப்பை எடுத்துக்காட்டியது.

வாரங்களின் விழா முதற்கனி விழா என்றும் அழைக்கப்படுகின்றது (எண் 28:26). அப்பங்களைப் பலிக்காணிக்கையாக அளித்தபின், தனிநபர்கள் புதியதாகக் கிடைத்த தானியங்களைத் தங்களின் முதற் பலனின் பலியாக ஆண்டவருக்கு அளிக்க லாம். இக்காலம் கூடாரத்திருவிழாவோடு முடிவுக்கு வந்தது. இந்தக் காலத்தில் தனிநபர்கள் தனியாக வந்து காணிக்கைப் பெரும் விழாக்களில் மட்டுமன்று, எக் காலத்திலும் செலுத்தும் நிகழ்ச்சி இப் போது தொடங்கியது. இந்தக் காணிக்கை கள் சடங்கு முறையுடன் பக்தனால் குரு விடம் அளிக்கப்பட்டன; அப்போது அளித் தவர் தனது நன்றியறிதலை உருக்கமாக அறிக்கை செய்தார். இஃது ஆண்டவ ருடைய வல்ல செயல்களையும், வாக்களிக் கப்பட்ட நாட்டை உரிமைச் சொத்தாக அடைந்ததையும் நினைவு கூர்ந்தது (உப 26:1-11). வாரங்களின் விழா, கடவுளைத் தானியங்கள் வழங்கும் வள்ளலாக மட்டும் கொண்டாடாமல், முதற்பலனை அளிக்கும் இந்தச் சடங்குகளில், இஸ்ராயேலரின் புனித வரலாற்றின் கண்ணோட்டத்தில் அறுவடையின் பொருளையும் விளக்கினர்.

ஆலயத்தின் அழிவிற்குப்பின், வாரங் களின் விழா படிப்படியாக மாற்றம் அடைந்து ஆண்டவர் அளித்த கொடையான சட்டத்தை ஞாபகப்படுத்தும் விழாவாகக் கடைப்பிடிக்கப்பட்டது இந்தச் சட்டத்திற் காகவே இவ்விழா மகிழ்ச்சியாகக் கொண் டாடப்பட்டது. திருவிழாவின் மாலைத் தயாரிப்பாக, தோராவின் தொகுதிகளை வாசிக்கும் வழக்குத் தோன்றியது.

ஆனால் முன்பே குறிப்பிட்டதுபோல், வாரங்களின் விழாவைச் சட்டத்தின் திரு வெளிப்பாட்டுடன் தொடர்புபடுத்துவது பிற்கால வளர்ச்சியாகும். இந்த விழாவின் போது யாத் 19-ஆம் அதிகாரம் வாசிக்கும் வழக்கம் ஏறக்குறைய கி.பி. 200-இலிருந்து தொடங்கியிருக்க வேண்டும் எனக் கருதப் படுகின்றது. இதற்கு முன்னால் ரூத்து புத்தகத்தை வாசிப்பது வழக்கமாக இருந்து வந்தது. அறுவடைச் சூழ்நிலையிலே, இந் தப் பழக்கம் பின்பற்றப்பட்டது. சட்டத்தின் விழாவாக மாற்றிக் கடைப்பிடிக்கப்பட்டா லும் ரூத்து நூலை வாசிக்கும் வழக்கம் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. வாரங்க ளின் விழாவை இயேசுவின் காலத்தில் ''வெளிப்பாட்டின் விழா''வாக விவரிப்பது வரலாற்றுப் பூர்வமாகச் சரியானதன்று.

இதன் விளைவாக, சட்டத்தின் விழாவைப் பெந்தக்கோஸ்தே அகற்றுகிறது அல்லது அதற்குப் பதிலாக இருக்கிறது என்ற அடிப்படையில் அ.ப. 2-அதிகாரத்தையும் பெந்தக்கோஸ்தேயின் பொருளையும் விளக்க முயற்சிப்பது தவறான போக்குடையதாகும். இதற்குப் புதிய ஏற்பாட்டில் எந்த ஆதாரமும் இல்லை எனலாம். வாரங்களின் விழாவைப் பற்றிய புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள் முதற்பலனான பலி அப்பங்களின் அடையாளப்பொருளையே சுட்டிக் காட்டுகின்றன (உரோ 8:23; 1 கொரி 15:20.23).

வாரம் (WEEK)

1. சமுதாய வாழ்விலும், வழிபாட்டிலும்: ஒரு வாரம் என்ற கால அளவு எவ்வாறு உருவானது என்பதைக் கண்டுபிடிப்பது சற்றுக் கடினமானது. ஓய்வு நாளோடு மிக நெருக்கமாகத் தொடர்பு, ஒருவேளை சந்திரச் சூழலோடும் தொடர்பு உடைய இது மத்திய கிழக்கு நாடுகளில் வழக்கமாக நாட்களைக் கணக்கிடும் முறையிலிருந்து மாறுபட்டு நிற்கிறது (ஆதி 8:10; 29:27; நீதி 14:12; 2 அர 3:9). மோசேயின் சட்டத்திற்கு முன்பே வாரம் என்பது பழமையான விவிலியப் பகுதிகளில் சிறப்பாகக் குறிப்பிடப்படுவதைக் காணலாம் (யாத் 20:8தொ; 23:12; 34:21). இவ்வாறு கடவுள் தனது மக்கள் வேலை செய்வதற்கும் ஓய்வெடுப்பதற்குமுரிய ஒழுங்கியல்பை வகுத்துக் கொடுக்கிறார்.

பழைய ஏற்பாட்டுச் சமய, சமூகப் பழக்கவழக்கங்களில் வாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. புளியாத அப்பத் திருவிழாவும், கூடாரத்திருவிழாவும் ஒரு வாரம் வரை நீடித்தன (உப 16:4; லேவி 23:8.34). பெந்தக்கோஸ்தே எனும் விழா பாஸ்கா முடிந்த ஏழு வாரங்கள் கழித்து வருகிறது (யாத் 34:22; லேவி 23:15). நாடு கடத்தலுக்குப் பிறகு குருக்களும் லேவியர்களும் வாரம்வாரம் மாற்றி வழிபாட்டுச் சடங்குகளை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்று நடத்தினர். அதில் பயன்பட்ட அதிகாரபூர்வமான நாட்காட்டியைக் கிறிஸ்தவர்களும் ஏற்றுப் பாதுகாத்தனர். இஃதோடு ஒரு பழங்காலக் குருத்துவ நாட்காட்டி 364 நாள்களும், 52 வாரங்களும் அடங்கிய சூரிய ஆண்டை இணக்குவித்தது.

ஆண்டுகளின் ஒவ்வொரு வாரமும் ஓய்வு ஆண்டோடு முடிந்தது. அவ்வாண்டில் அடிமைகளுக்கு விடுதலை அளிப்பதும், கடன் பெற்றவர்களை விட்டுவிடுவதும், நிலத்தைத் தரிசாக விடுவதும் கட்டாயமாகும் (யாத் 21:2; 23:10தொ; உப 15:1தொ; லேவி 25:3தொ). ஆண்டுகளின் ஏழு வாரங்களின் முடிவில் யூபிலி ஆண்டு, விடுதலை ஆண்டாகக் கொண்டாடப்பட்டது (லேவி 25:8). எழுபது வாரங்கள் பற்றிய இறைவாக்கு (தானி 9:4) இஸ்ராயேல் முழுமையாக விடுதலை பெறும் என்று அறிவிக்கிறது. இது மரபுமுறை எண்ணான பத்து யூபிலிக் காலத்தை உள்ளடக்குகிறது. ஆனால், எரேமியாவின் வாசகம் (எரே 25:11தொ) பத்து ஓய்வுகாலங்களின் முடிவில் விடுதலை கிடைக்கும் என்று சுட்டுகிறது.

2. இறையியல் முக்கியத்துவம்: குருக்கள் பாரம்பரிய இறையியலின்படி மனிதனின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்தும் வாரம் கடவுளின் படைப்புச் செயலைப் பிரதிபலிக்கிறது (ஆதி 1:1 2:3; யாத் 20:9; 31:17). எனவே, ஒரு வாரம் என்ற சட்ட ஒழுங்கு அகில உலகிற்கும் பொருந்துமாறு கடவுள் படைத்ததாகும்.

புதிய ஏற்பாட்டில் வாரம், ஒரு புதிய சமயமுக்கியத்துவம் பெறுகிறது. இதிலிருந்து ஆண்டவருடைய நாளாகிய ஞாயிறிலிருந்து வாரம் தொடங்குகிறது. இஃது அவரது வெற்றியின் வாராந்தரக் கொண்டாட்டமாகும். இவ்வாறு கிறிஸ்தவர்கள் செய்யும் வேலைகள் அனைத்துக் காலங்களையும் ஆளும் மீட்பராகிய கிறிஸ்துவின் செல்வாக்கில் நடைபெறுகின்றன. அஃது எட்டாவது நாளை நோக்கி இயங்குகிறது. இது வாரங்களின் சுழலுக்கு அப்பால், பெரும் இறை ஓய்வுக்குள் இறைமக்களை அறிமுகப்படுத்துகிறது (எபி

4:1-11). ஞாயிறின் ஓய்வு அதன் வருகையை ஏற்கெனவே அறிவிக்கிறது.

வாரிசு, உரிமையாளர் (HEIR)

ஒரு குறிப்பிட்ட சொத்துக்குச் சொந்தக் காரரான ஒருவரின் மகன் வாரிசு எனப்படு வான். அவனே அந்தச் சொத்தைத் தந்தைக் குப் பின் அடைவான். அந்த வாரிசு குழந்தையாக இருக்கும்போது அடிமைக் குரிய மதிப்பே உண்டு. தன் தந்தையால் குறிக்கப்பட்ட நாள்வரையில் அவன் பாது காப்பாளர்கள், கண்காணிப்பாளர்களின் பொறுப்பில் உள்ளான் (கலா 4:1-2).

கிறிஸ்துவினால் மனிதர் அடிமைக் கோலம் துறந்து புதல்வர்களாக மாறி வாரிசு ஆகின்றனர் (கலா 4:4-7). மகன் எல்லாவற்றிற்கும் உரிமையாளராக நியமிக் கப்பட்டுள்ளார். அதன் விளைவாக அவர் இறைவனின் மகிமையைப் பிரதிபலிக்கி றார் (எபி 1:2-3). விசுவாசத்தினால் நோவா ஏற்புடைமையின் வாரிசு ஆகிறார் (11:7). ஈசாக்கும், யாக்கோபும், ஆபிரகாமும் வாக் குறுதிக்கு உரிமையாளர் ஆகின்றனர் (11:9). ஏழைகளான ஆண்களும் பெண்களும், ''வாழ்வு தரும் இறையருளுக்கு'' உரிமை யாளர் ஆவர் (1 பேதுரு 3:7).

வாரிவரும் வலை (DRAGNET)

இது மீன்பிடிக்கும் வலை; 200-250 மீட்டர் நீளமும், 5 மீட்டர் அகலமும் கொண்டது. மேலே மிதப்புகளையும் அடி யில் பளுவான எடைகளையும் கொண்டது. இரண்டு படகுகளுக்கிடையில் தொங்க விடப்பட்டு, கயிறுகளால் கரையை நோக்கி இழுக்கப்படும் (எசா 19:8; அப 1:15-16; மத் 13:47-48). எகிப்தின் பார்வோன், கடல் அல்லது ஆற்றில் பறவை நாகம் என்னும் உருவத்தில், இவ்வலையால் பிடிக்கப் படுவான் (எசே 32:3).

வாரிவரும் வலை - உவமை (மத் 13:47-50)

நல்லவையும் கெட்டவையும் எவ்வாறு பிரிக்கப்படும் என்பதை இவ்வுவமை எடுத்தியம்புகிறது. இங்கே கடல் இவ் வுலகைக் குறிக்கிறது. இந்தக் கடலிலே இறையரசாகிய வலை வீசப்படுகின்றது. (மீனவன்) வலை கரையை அடைந்தவுடன் நல்லவற்றை எடுத்துக்கொண்டு கெட்ட வற்றை எறிந்து விடுகின்றான். இதே போன்று இறுதிக்காலத்திலே நல்லவர்கள் இறைவனின் இன்பத்தை அடையவும், தீயவர்கள் தண்டனையை அனுபவிக்கவும் தனித்தனியாகப் பிரிக்கப்படுவார்கள். இதை வானதூதர்கள் செய்வர்.

வார்ப்புக்கடல் (MOLTEN SEA)

இது வெண்கலத்தால் செய்யப்பட்ட ஒரு பெரிய பாத்திரம். இது தீர் நாட்டு ஈராம் என்பவனால் செய்யப்பட்டது. அவனைச் சாலமோன் வெண்கல வேலைக்காகப் பணித்திருந்தார் (1 அர 7:13-14); 1 நாள் 18:8-இன்படி இது தாவீதுக்குக் கிடைத்த, கொள்ளைப் பொருளாகக் கிடைத்த வெண் கலத்தால் செய்யப்பட்டதாகும் (காண்க. 2 சாமு 8:8). இது கழுவுவதற்காக வெண்கல நீர்த்தொட்டி குறிக்கப்படும் இடத்தில் அமைந்திருக்க வேண்டும். அதாவது சந்திப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்திற்கும் இடையில் அமைந்திருக்க வேண்டும் (யாத் 30:18).

பாத்திரம் வட்ட வடிவமானது. அதன் விட்டம் பத்து முழமும், உயரம் ஐந்து முழமும், சுற்றளவு முப்பது முழமும், இருந்தன (1 அர 7:23; 2 நாள் 4:2). அதனுடைய பருமன் ஒரு கையகலம்; விளிம்பு கப்பு போன்று வளைந்து, லீலி மலரைப்போல் தோற்றமளித்தது. விளிம் பிற்குக் கீழே இரண்டு வரிசையில் வெண் கலத்தால் செய்யப்பட்ட கொம்மட்டிகள் அழகு செய்தன. பாத்திரம் பன்னிரண்டு காளை வடிவங்கள் மேல் அமர்ந்திருந்தது. காளைகள் நான்கு திசைகளை நோக்கினாற் போல இருந்தன. யோசிப்பஸ் என்பவரின் கருத்துப்படி அந்தப் பாத்திரம் அரை யுருண்டை வடிவம் உடையது. ஆனால், மற்றவர்களின் கருத்துப்படி அது நீள் உருளை வடிவமுடையது.

அரசர்கள் நூல் கடல் தொட்டியின் நோக்கத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால், 2 நாள் 4:6 கடல் தொட்டி குருக்கள் தங்களைத் தூய்மைப் படுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிடுகின் றது. அண்ட அடையாளம் இதில் தென் படுகின்றது. இது பாபிலோனிய நீர்த்தேக் கத்திற்கு ஒப்பிடப்படுகின்றது. இங்கிருந்து தான் எல்லாமே உயிரும், வளமையும் பெறுகின்றன என்று பாபிலோனியர் நம்பி னர். அதைப் போலவே வெண்கலத்தால் செய்யப்பட்ட காளைகளின் மீது வைக்கப் பட்டுள்ள கடல் தொட்டியும் ஏதோ ஓர் அடையாளம் கொண்டதாக இருந்திருக்க வேண்டும்.

அரசர் ஆகாசின் ஆட்சிக்காலத்தில் கடல் தொட்டி வெண்கலக் காளையின் மீதிருந்து இறக்கி, கற்களால் பாவப்பட்ட தளத்தில் வைக்கப்பட்டது (2 அர 16:17). கி.மு. 587-இல் பாபிலோனியர்கள் எருசலேமைக் கைப்பற்றியபோது, அதைச் சிறுசிறு துண்டு களாக உடைத்துப் பாபிலோனுக்கு எடுத்துச் சென்றார்கள் (25:13.16).

வார்ப்புச்சிலை (MOLTEN IMAGE)

பண்டைக் காலத்து மக்கள் தேவதை களை வழிபடுவதற்கு உதவியாக அவற்றின் உருவச் சிலைகளைப் பயன்படுத்தும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்ற உண்மையையே பழைய ஏற்பாட்டில் காணப்படும் இந்தச் சொல் குறிப்பிடுகின் றது. தங்கம், வெள்ளி, இரும்பு அல்லது வெண்கலம் போன்ற உலோகத்தினை உருக்கி, முன்பே தயாரிக்கப்பட்ட வடிவ அமைப்பில் ஊற்றி இத்தகைய உருவச் சிலைகளைச் செய்தனர் (லேவி 19:4; உப 27:15; எசா 40:18-20).

இஸ்ராயேல் மக்களும் சிலைவழிபாட்டி னைக் கொண்டிருந்தனர். எனவேதான் பத் துக்கட்டளைகளில் இது தடை செய்யப் பட்டுள்ளது. புதைபொருள் ஆய்வுகளின் மூலம், பாகால் மற்றும் பிற தேவதைகளின் சிறிய உருவச் சிலைகள் கண்டுபிடிக்கப் பட்டன. வெள்ளி, தங்க உருவங்களும், வெண்கலத்தால் வார்க்கப்பட்ட விலங்கு உருவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாவேக்கு எந்தவிதமான உருவச்சிலை யும் செய்யப்படவில்லை. ஆயினும், பொற் கன்றுக்குட்டியைப் பற்றிய கதை (யாத் 32), மீக்காவின் சிலைகள் (நீதி 17-18), இறை வாக்கினர்களின் கண்டன உரைகள் (எசா 30:32; 40:19; ஓசே 13:2) ஆகியவை இத்தகைய உருவச்சிலைகள் இஸ்ராயேலில் இருந்தன என்பதைச் சுட்டுகின்றன. இஸ்ரா யேல் மக்கள் தாங்கள் யாவேக்குச் செய்த வழிபாடுகளில் கானானிய உருவச்சிலை களைப் பயன்படுத்தியிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது.

வாழ்க்கைத்துணை (SPOUSE)

I மணமகன் என்ற பெயர், இறைவன் தமக்கே அளித்துக்கொள்ளும் பெயர்களில் ஒன்றாகும் (எசா 54:5). இது தமது படைப்புகள்பால் அவர் கொண்டுள்ள அன்பை எடுத்துக்காட்டுகிறது. இக்கோணத் திலே இக்கட்டுரையில் அவரைப் பற்றிப் பார்ப்போம். மனித உறவுகள் பற்றிய பண்புகளைத் திருமணம் என்ற கட்டுரை யில் காணலாம்.

II *பழைய ஏற்பாடு:*

1. இறைவன் தம் மறைபொருளான பெயரால் மட்டும் (யாத் 3:14 தொ) தம்மை வெளிப்படுத்துவதில்லை. நமது அன்றாட அனுபவத்திலிருந்து எடுக்கப்பட்ட மற்றப் பெயர்களாலும் தம் மக்களோடு கொண் டுள்ள உறவை வெளிப்படுத்துகிறார். அவர் அவர்களின் ஆயனாவார், தந்தையாவார், அவர்களின் மணமகனுமாவார்.

இங்குக் கானானிய சமயத்தில் காணப் படுவது போன்று இதிகாசங்களுக்கு இட மில்லை. இந்த இதிகாசங்களில் கடவுளா கிய மணமகன் பூமியை வளமுள்ளதாக்கு கிறார். இக்கதையில் பாகால் (தலைவனும் கணவனும்) இந்த மணமகன் ஆவார் (ஓசே 2:18; காண்க. நீதி 2:11தொ). சடங்கு விபசாரம் போன்ற உடலுறவுச் சடங்குகள் இதில் உண்டு. இந்தச் சடங்கு சிலைவழி பாட்டோடு தொடர்புடையது. ஆகவே,

மிகவும் பழித்துரைக்கப்படுகிறது (காண்க. யாத் 34:15தொ; எசா 1:21). பொறாத இறைவன் இதை விபசாரம் என்று கண்டனம் செய்கிறார். இஸ்ராயேலின் இறைவன் பூமிக்கு மணமகன் அல்லர்; தமது மக்களின் மணமகனாவார். அவர்களை ஒன்றிக்கும் அன்பிற்கு ஒரு வரலாறு உண்டு. இறைவனின் இலவசமான பரிபாலிப்பும் தமது மக்களின் பிரமாணிக்கமின்மையின் மேல் அவரது இரக்கம் கொள்ளும் வெற்றியும் இறைவாக்கினர்களின் முக்கிய கருத்துகளாகும். இக்கருத்துகள் ஒசேயாவோடு தொடங்குகிறது. அவர் திருமணத்தின், தனது சொந்த அனுபவத்திலிருந்து இக்கருத்துகளின் பொருளை உணர்ந்தவர்.

2. ஒசேயாவின் அனுபவம்:

கணவனும் பிரமாணிக்கமற்ற மணமகளும்: *தான் அன்பு செய்த ஒரு பெண்ணை ஒசேயா திருமணம் செய்கிறார். அவளும் அவருக்குப் பிள்ளைகளைப் பெற்றளிக்கிறாள். ஆனால், அவள் அவரை விட்டு விலகி, ஆலய விபசாரத்தில் ஈடுபடுகிறாள். ஆனால் இறைவாக்கினர், பணம் கொடுத்து அவளை மீட்டு, தன் வீட்டிற்குக் கொண்டு வருகிறார். தபசும் சோதனைகளும் கொண்ட காலம், வீட்டில் அவளுக்குரிய இடத்தை மீண்டும் பெற அவளைத் தயாரிக்கிறது (ஒசே 1-3). இந்த நாடக விவரிப்பின் பொருள் இதுவாக இருக்கலாம். இந்த மணவுறவு அனுபவத்தில் தம் மக்களோடு தம்மையே இணைத்துக்கொள்ளும் இறைவனது அன்புக்கும், இஸ்ராயேலர் உடன்படிக்கைகளை முறிப்பதற்கும் இடையிலான உறவின் மறைபொருளை இறைவாக்கினர் கண்டுணர்கிறார். உடன்படிக்கை திருமணத் தன்மையைக் கொள்கிறது. சிலைவழிபாடு விபசாரம் மட்டுமன்று, பிறன்மனை நயக்கும் கூடா ஒழுக்கமுமாகும். சலுகைகள் பொழியப்பட்ட மணமகள், தான் பெற்றதையெல்லாம் மறந்து விட்டு ஒழுக்கக்கேடாக வாழ்வதாகும். பிரமாணிக்கமற்ற மணமகளைத் தண்டிக்கும் மணமகன், அலைந்து திரிபவளை வீட்டிற்குக் கொண்டு வந்து அவளை மீண்டும் அன்புக்குரியவளாக்க விரும்புகிறான். இது போன்றதே, இறைவன் தம் மக்களிடம் காட்டும் சினம். இந்த அன்பே இறுதி வார்த்தையைக் கொண்டது. இஸ்ராயேல் மீண்டும் பாலைப்பயணத்தை அனுபவிக்கும் (2:16தொ); நீதியிலும், வாஞ்சையிலும் நிறைவேறும் திருமணத்திற்குப் புதிய மண ஒப்பந்தம் தயாரிக்கும்; தூய்மைப்படுத்தப்பட்ட மக்கள் தனது மணமகனையும் அவரது பிரமாணிக்கமுள்ள அன்பையும் அறியும் (2:20தொ).*

இதுவரை உடன்படிக்கை ஒரு சமூக ஒப்பந்தமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அதை முறிப்பது இறைவனது சினத்தைக் கொண்டு வரும். இப்போது இச்சினம் மணமகனின் பொறாமையின் விளைவாகவும், உடன்படிக்கை திருமண உறவாகவும் தோன்றுகிறது. இந்த உறவு எவ்வளவு தனித்தன்மையுடையதோ அவ்வளவு நெருக்கமானதாக இருக்கிறது. இரு வாழ்க்கைத் துணைவர்களுக்குள் ஏற்படுவது போல், இந்த ஒருவர்க்கொருவரிடையேயான பரிமாற்றத்தில் மாறுபடும் நிலைகள் உண்டு. இந்நிலைகள் நீதிபதிகள் காலம் முதல் இஸ்ராயேல் வரலாற்றின் மாறுதல்களை அடையாளமாக உணர்த்துகின்றன. இவை பாவம், தண்டனை, மனத்துக்கம் மற்றும் மன்னிப்பு ஆகும் (காண்க. நீதி 2:11-19).

3. இறைவாக்கினர் செய்தி:

அன்பு செய்யும் பிரமாணிக்கமுள்ள மணமகன்: *ஒசேயாவின் ஆன்மீக வாரிசான எரேமியா, இஸ்ராயேலின் நம்பிக்கைக் கேட்டையும் ஒழுக்கக்கேட்டையும், இறைவன் தம் மக்கள்பால் காட்டிய முடிவில்லாத அன்புடன் ஒப்பிட்டு வேறுபடுத்த, திருமண அடையாளத்தைப் பொருள் பொதிந்த உருவகங்களில் எடுத்துக் கூறுகிறார். ''உன் இளமையின் அன்பையும், மணமகளுக்குரிய காதலையும், விதைக்கப்படாத பாலை நிலத்தில் நீ என்னை எவ்வாறு பின்பற்றினாய் என்பதையும் நான் நினைவு கூர்கிறேன்'' (எரே 2:2); ஆனால், ''உயர்ந்த குன்றுகள் அனைத்தின் மீதும்,*

பசுமையான மரங்கள் அனைத்தின் கீழும் விலைமாதாய்க் கிடந்தாயே'' *(2:20)*. ஆயினும், ''உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன்; எனவே, பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்'' *(31:2)*. எசேக்கியேல் இன்னும் கரடுமுரடான உருவகங்களைப் பயன்படுத்தி, எருசலேமைக் கேட்பாரற்றுக் கிடந்த குழந்தையாய் மீட்டவர் அதை வளர்த்து, மணம் செய்து கொள்கிறார். ஆனால், அவள் விலைமகளானாள். அவளுடைய மணமகனோடு இணைத்த உடன்படிக்கையை முறித்தாலும், அவர் மீண்டும் நிறுவுவார் (எசே *16:1-43.59-63*).

இறுதியாக, ஆறுதல்களின் நூல்தான், எருசலேம் அன்பு செய்யப்பட்ட அன்பை அவளுக்கு மிகவும் உருக்கமான தொனியில் எடுத்துக்கூறுகிறது. ''வெட்கி நாணாதே... உன்னை உருவாக்கியவரே உன் கணவர்... தள்ளப்பட்ட இளம் மனைவிபோலும் இருக்கும் உன்னை ஆண்டவர் அழைத்துள்ளார்... நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன்.. என்றுமுள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன்'' (எசா *54:4-8*). பலன் எதிர்பார்க்காத மற்றும் பிரமாணிக்கமுள்ள, அளவிட முடியாத மற்றும் முடிவில்லாததுமான, மணமகனின் அன்பு வெற்றியடையும்; பிரமாணிக்கமற்றவளைக் கற்புடைய மணமகளாக மாற்றும் *(61:10; 62:4*தொ). அவர் அவளோடு முடிவில்லா உடன்படிக்கையால் ஒன்றிணைந்திடுவார்.

இந்த இறைவாக்கு முன்னோக்கில்தான் உன்னத சங்கீத நூலின் பாடல்கள் வாசிக்கப்பட வேண்டுமா? அவை இவ்வுலகக் காதல்களின் அன்பால் தூண்டுதல் பெற்றவை அல்லவா? அவை இஸ்ராயேலின் வரலாற்றை உருவகமாக எடுத்துக் கூறுகின்றனவோ? இறைவாக்கினரின் உடன்படிக்கைப் பந்தத்திற்கு மாதிரியாக்கும் திருமண அன்பைப் பாடுகின்றனவோ, இல்லையோ, அவை பயன்படுத்தும் அடையாளங்களைப் புரிந்துகொள்ள அவை விளக்கக்குறிப்பு எதுவும்அளிக்கவில்லை; அவற்றில் யாவே ஒருபோதும் மணமகனாக அடையாளம் காட்டப்படவில்லை. வாசகத்திற்கு உருவக விளக்கம் அளிப்பது எவ்வளவு நேர்மையானாலும், உன்னத சங்கீத நூலை ஓர் உவமையாக எடுத்துக்கொள்வது மேலானது என்று தோன்றுகிறது. சாவைப்போல் வலிமை மிக்க அன்பை இந்நூல் பாடுகிறது. இந்த அன்பின் தணிக்க முடியாத ஆர்வக்கனல் இறைவன் தம் மக்கள்பால் கொண்டிருக்கும் பொறாத அன்பின் உருவமாகிறது (உ.ச. *8:6*தொ; காண்க. உப *4:24*). மூலத்தில் சங் *45*. இஸ்ராயேலின் அரசனது திருமணத்திற்காக எழுதப்பட்டது; ஆனால், அரச-மெசியாவுக்குச் சாற்றிக் கூறப்பட்டது. அரசனுக்கு இறைப்பட்டங்களை அளித்துக் கிறிஸ்துவின் இறைமகன் தன்மை வெளிப்பாட்டுக்கு முன்னுரை அளிக்கும் அதன் கூறுகளை எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் பயன்படுத்துகிறது (சங் *45:7*தொ; எபி *1:8*).

4. ஞானமும் இறைவனோடு ஒன்றிப்பும்: இறைவாக்கினர்களின் இயல்வாய்மை இறை அன்பின் ஆர்வத்தைப் புடைப்பியல் செதுக்கோவியமாகப் படைக்கிறது. இந்த அன்பினால் செயலுருவாக்கப்படும் ஒன்றிப்பின் ஆட்தன்மை வாய்ந்த உள்ளார்ந்த பண்பினை ஞானநூல்கள் வலியுறுத்துகின்றன. இறைவன் பிரமாணிக்கமுள்ளவர்களுக்குத் தம் மகளாகிய ஞானத்தை அளிக்கிறார் (பழ *8:22*). இந்த ஞானம் தாயாக மணமகளாகத் தன்னையே வெளிப்படுத்துகிறது (சீரா *15:2*). ஞானநூல் இந்த உருவத்தைப் பயன்படுத்துகிறது. இறைவனின் நண்பர்களாவதற்கு வழி ஞானத்தை அடைவதாகும் (ஞான *7:14*). ஒருவன் ஞானத்தைத் தேட வேண்டும்; அதை ஆர்வத்தோடு விரும்ப வேண்டும்; அஃதோடு வாழ வேண்டும் *(7:28; 8:21)*. இறைவன் மட்டுமே கொடுக்கக்கூடிய மணமகளாய் *(8:21)*, ஞானம் தன்னோடு ஒன்றிணைந்திருப்பவர்களை அழியாமைக்கு உட்படாதவர்களாக்குகிறது. பரிசுத்த ஆவியைப் போல் இறைவனால் அருளப்பட்டு *(9:17)*, ஞானம் ஓர் ஆன்மீகக் கொடையாகிறது. நம்மில் இறைவனது செயல்களை நிறை

வேற்றும், நம்மை நற்பண்புகளால் மிளிரச் செய்யும் (8:6தொ) கலைஞன் ஆகும் ஞானம். திருமண அடையாளம் இங்கு முழுவதும் ஆன்மீக மயமாக்கப்படுகிறது. இறைவனோடு மனிதன் கொள்ளும் ஒன்றிப்பை நிறைவேற்றும் அருள் பற்றிய மறையுண்மையின் வெளிப்பாடு இவ்வாறு தயாரிக்கப்பட்டது. இந்த நிறைவேறுதல் இறைவனின் ஞானமாகியவர் மனிதன் ஆதலும், அவர் தன் மணமகளாகிய திருச்சபையைத் திருமணம் செய்து கொள்வது மாகும்.

III புதிய ஏற்பாடு:

1. புதிய உடன்படிக்கையின் மணமகனான செம்மறி: இறைவனிடமிருந்து பிறந்து, மனிதர்களிடையே இருப்பதில் இன்பம் காணும் ஞானம் வெறும் ஆன்மீகக் கொடை மட்டுமன்று. அஃது ஊன் வடிவில் தோன்றுகிறது. அஃது இறைவனின் ஞானமாகிய கிறிஸ்துவேயாகும் (1 கொரி 1:24). இறைவனின் மடமையாகிய சிலுவையின் மறைபொருள்தான் இறைவன் தமது பிரமாணிக்கமற்ற மணமகளுக்குக் காட்டும் அன்பை வெளிப்படுத்துகிறது. இந்த அன்பு அவளைப் புனிதப்படுத்தி அவருடனான உடன்படிக்கைக்கு ஏற்றவளாகச் செய்கிறது (எபே 5:25தொ).

இவ்வாறு மணமகன், மணமகள் என்ற பெயர்களால் பழைய ஏற்பாட்டில் அடையாளமாக உணர்த்தப்படும் ஒன்றிப்பு மறைபொருளின் திரை நீக்கப்படுகிறது. மனிதன் மூவொரு கடவுளின் வாழ்வில் பங்கு பெறுதலும், விண்ணகத் தந்தையின் குழந்தையாவதற்கு இறைமகனோடு ஒன்றித்துக் கொள்வதும் முக்கியமாகும். மணமகன் கிறிஸ்துவே, அதுவும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே. அவரது இரத்தத்திலேயே புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படுகிறது (1 கொரி 11:25). இதனால்தான் திருவெளிப்பாட்டு நூல் எருசலேமை இறைவனின் மணமகளாக இனி ஒருபோதும் அழைப்பதில்லை; செம்மறியின் மணமகளாக அழைக்கிறது (திருவெளி 21:9).

2. புதிய உடன்படிக்கையின் மணமகளான திருச்சபை:

இறைமகனுடன் உடன்படிக்கை செய்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கும் இந்த எருசலேம் எது? இஃது இனிமேல், பழைய உடன்படிக்கை மக்களின் பிரதிநிதியான ஊழியன் அன்று; சுதந்தரப் பெண்ணாகிய விண்ணக எருசலேம் ஆகும் (கலா 4:22-27). மணமகன் வந்தபின், அவரது முன்னோடியும் நண்பனுமானவர் சாட்சியளித்தார் (யோவா 3:29). அதற்குப்பின் மனுகுலம், இரு ஆன்மீக நகரங்களின் அடையாளமான இரு பெண்களால் எடுத்துக்காட்டப்படுகிறது. ஒருபுறம், சிலைவழிபாட்டையுடைய பாபிலோனின் மாதிரியான ''வேசி'' (திருவெளி 17:1.7; காண்க. எசா 47); மறுபுறம் விசுவசிக்கும் நகரத்தின் மாதிரியான செம்மறியின் மணமகளான (திருவெளி 20:9), விண்ணகத்திலிருந்து வரும் புனித எருசலேம். ஏனெனில், தனது மணமகனிடமிருந்து தனது புனிதத்தைப் பெறுகிறது (21:29தொ).

இப்பெண் இறைமக்களின் தாய் ஆவாள்; செம்மறி தனது இரத்தத்தால் பறவை நாகத்திடமிருந்து மீட்டவர்களின் தாய் ஆவாள் (12:1தொ.11.17). கிறிஸ்துவின் மணமகள் தேர்ந்தெடுக்கப்பட்டோர் சபை மட்டுமன்று; அவளே அவர்களின் தாயாகத் தோன்றுகிறாள். அவள் வழியாக அவளில் அவர்கள் ஒவ்வொருவரும் பிறக்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவின் அருளால் புனிதம் அடைகின்றனர் (தீத் 3:5தொ); கன்னி உயிர்களாகின்றனர்; அவர்களின் மணமகனான கிறிஸ்துவுக்குத் தகுதியாகி (2 கொரி 11:2), செம்மறியோடு எக்காலத்திற்கும் ஒன்றித்திருக்கின்றனர் (திருவெளி 14:4).

3. முடிவில்லாத் திருமணம்: திருச்சபை ஒரே சமயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் தாயாகவும், அவர்களைக் கூட்டிச் சேர்க்கும் நகரமாகவும் விளங்கும் உண்மையிலிருந்து, செம்மறியின் திருமணம் வேறுபட்ட கட்டங்களைக் கொண்டிருக்கிறது.

அ) திருமணத்தின் முதல் கட்டம் கிறிஸ்துவின் வருகைக்காலமாகும் (மத் 9:15). இது கிறிஸ்துவின் சிலுவையில் புதிய ஆதாம் புதிய ஏவாளைப் புனிதப்படுத்தும் போது நிறைவேறுகிறது. அவள் அவரது விலாவிலிருந்து வருகிறாள். திருச்சபையின் அருட்சாதனங்கள் நீராலும் இரத்தத்தாலும் அடையாளமாக்கப்படுகின்றன (யோவா 19:34; காண்க. 1 யோவா 5:6). மணமகன் தன் வாழ்க்கைத் துணைக்குக் காட்டும் அன்பு கிறிஸ்தவத் திருமணத்தின் மாதிரியாகும் (எபே 5:25-32).

ஆ) இந்தத் திருமணத்திற்குக் கிறிஸ்து எல்லாரையும், முதலில் தமது மக்களை, அழைக்கிறார் (மத் 22:1-10). இதில் பங்கு கொள்ள ஒருவர் அழைப்புக்கு இணங்குவது மட்டும் அன்றி திருமண ஆடையும் அணிந்திருக்க வேண்டும். ஆனால், இந்த அழைப்பை மறுப்பவர்கள் பலருண்டு (22:11தொ). எப்போதும் விடப்படும் இந்த அழைப்பு, திருச்சபை இருக்குமட்டும் நீடிக்கும். ஆனால், கொண்டாட்டத்தின் நேரம், ஒவ்வொருவரைப் பொருத்தமட்டும் உறுதியில்லாதிருப்பதால், விழிப்பு அவசியமாகும். அதனால் மணமகன் வரும்போது, திருமண விருந்துக்கு அழைக்கப்பட்ட கன்னியர் தயாராக இருப்பதைக் காண்பார் (25:1-13).

இ) இறுதியாக, வரலாற்றின் முடிவில் மணமகளது திருமண ஆடை தயார் செய்யப்படும் விதம். அது விசுவாசிகளின் செயல்களால் நெய்யப்பட்ட, பகட்டானதும் தூய்மையானதுமான விலைமிக்க ஆடையாகும். செம்மறியின் திருமணத்திற்கு அழைக்கப்படும் மகிழ்ச்சி கொண்ட விசுவாசிகள் இத்திருமணத்திற்காகக் காத்திருக்கின்றனர்; செம்மறியின் திருமணத்தைப் போற்றுகின்றனர் (திருவெளி 19:7தொ). வேசி தீர்ப்பிடப்படும் இந்தச் சமயத்தில் (19:2), மணமகன், தமது ஆவி மணமகளிடம் தூண்டுகிற வேண்டுதலுக்கு, இறுதியாகப் பதில் அளிப்பார். அவளைப் போலவும் அவளிலும், மணமகனது அன்பிலும் வாழ்விலும் ஒன்றிக்க விரும்பும் அனைவருடைய தாகத்தையும் தீர்ப்பார் இந்த வளமையான ஒன்றிப்பை வாழ்க்கைத் துணைகள் என்பன மிகச்சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகின்றன (22:17).

வாழ்வு நூல் (BOOK OF LIFE)

கடவுளால் நீதிமான்களென முன்குறித்து வைத்தலர்கள் பெயர்கள் பொறித்த விண்ணக நூல் இது (காண்க. சங் 139:16; லூக் 10:20; பிலி 4:3; எபி 12:23; திருவெளி 13:8; 17:8; 21:27). இதுபோலவே தீயவர்க்கு 'அழிலோரின் நூல்' ஒன்று இருந்ததாக போலிநூல்களில் குறிக்கப்பட்டுள்ளது. ஒருவன் இறைவனுக்கு எதிராகச் செல்வதினால் தன் பெயரை வாழ்வு நூலினின்று நீக்கிக் கொள்ளலாம். அல்லது மனந்திரும்புதலால் தன் பெயரை இந்நூலில் சேர்த்துக் கொள்ளலாம் (காண்க. சங் 69:28; திருவெளி 3:5). மனிதரின் நல்ல, தீய செயல்கள் குறித்து வைக்கப்பட்டுள்ள விண்ணக நூல்கள் மேற்சொன்ன நூலினின்று வேறுபட்டவை (காண்க. தானி 7:10; 12:1; திருவெளி 20:12.15). இவை இறுதித்தீர்ப்பின் போது திறக்கப்படும்.

வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவர் (AUTHOR OF LIFE)

கிறிஸ்துவைக் குறிக்கும் ஒரு சொற்றொடர் (அ.ப. 3:15; 5:31). தலைவர் என்ற சொல் எபி 2:10; 12:2-இல் ''தொடங்கி வைத்தவர்'' என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் கிறிஸ்துதான் குறிக்கப்பெறுகிறார். ஒரு நகரை உருவாக்கிய எகிப்தியப் பெண் கடவுளைக் குறிக்க பிளேட்டோ பயன்படுத்திய சொற்றொடர் இது. அ.ப. 3:15-இல் சிலுவையில் அறையப்பட்டவர் புதிய வாழ்வை அளிப்பவராக ஏற்றுக்கொள்ளப் படுகின்றார். அவரைப் பின்பற்றுவோர் அப்புதிய வாழ்வைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

வாழ்வோரின் கட்டுகள் (BUNDLE OF THE LIVING)

இந்த உருவகமாக வாழ்வோர்கள் நடுவில் பாதுகாக்கப்படும் நிலையைக் குறிக்

கிறது (1 சாமு 25:29). விலையுயர்ந்த பொருட்களைக் கொண்டுள்ள மனிதன் அதை எவ்வாறு கட்டாக அல்லது பையில் போட்டுத் தன்னுடனேயே வைத்துக் கொள்கிறானோ அதுபோல ஆண்டவரும் வாழ்வதற்கென்று நியமனம் பெற்றவர்களைத் தன் வாழ்வோரின் கட்டுகளில் வைத்துக் காக்கின்றார். இத்தகைய வழக்கு பழங்காலத்தில் வழக்கத்தில் இருந்து வந்தது. வாழ்வோரின் நூல் என்பதும் இதைச் சார்ந்ததே (சங் 68:28; காண்க. யாத் 32:32-33; தானி 12:1).

வாளுறை (SCABBARD, SHEATH)

இது வாளின் மேலுறை அல்லது கவசம். தாவீது, யோவாபு, பேதுரு போன்றவர்களுடைய வாள்களுக்கு உறை பயன்படுத்தப் பட்டதாகக் (1 சாமு 17:51; 2 சாமு 20:8; யோவா 18:11) குறிப்பிடப்பட்டுள்ளது. உருவகமாக, ஆண்டவரின் அச்சமுறுத்தும் தீர்ப்புக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 நாள் 21:27; எரே 47:6; எசே 21:3-5; காண்க. எசே 21:30).

வாள் (SWORD)

மிகவும் பழங்காலத்திலிருந்தே இரண்டு வகையான வாள்கள் இருந்திருக்கின்றன. ஒன்று குத்துவாள். இது கூறாகவும், இருபுறமும் வெட்டக்கூடியதாகவும் இருக்கும். இரண்டு கொடுவாள். இஃது ஒருபுறம் மட்டும் வெட்டக்கூடியது. எபிரேய மொழியில் இந்த இரண்டு வகையான வாள்களையும் வேறுபடுத்திக் காட்ட வேறு வேறு சொற்கள் கிடையாது. பழங்காலக் கலைகளிலும், ஓவியங்களிலும் காணப்படும் உருவங்கள், பிற்காலத்தில் வாள்கள் கைப்பிடிகளோடு இணைக்கப்பட்டனவே ஒழிய வேறு எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்பதை எண்பிக்கின்றன. கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே வாள் செய்வதற்கு இரும்பும், வெண்கலமும் பயன்படுத்தப்பட்டன. இக்காலத்தில் இரும்புத் தொழில் பெலிஸ்தியர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்ததால் இஸ்ராயேலரிடம் வாள் இல்லை (1 சாமு 13:19.22). வாள் அரைக்கச்சையில் கட்டப்பட்டிருந்தது; தோல் உறையில் வைக்கப்பட்டது. இத்தியர்கள் நீளமான குத்துவாள் வைத்திருந்தனர். ஆனால், வெட்டும்பகுதி நீண்ட கொடுவாள் ஒரு சடங்குக் கருவியாகவே பயன்படுத்தப் பட்டது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

பொதுவாக வாள், பழைய ஏற்பாட்டில் ஒரு போர்வீரனுக்குரிய கருவியாக விளங்கியது. ஒரு சமயம் இஸ்ராயேலரின் போர் முழக்கம் ''ஆண்டவருடைய வாளாக, கிதியோனின் வாளாக'' இருந்தது (நீதி 7:20). இஃது உருவகமாக வரும்போது அவதூறு பேசுகின்ற நா வாளைப் போன்றது என்று கூறப்படுகின்றது (சங் 55:21; 57:5; 59:8; பழ 12:18; 30:14). வாள் தசையை உண்ணும் கருவியாகக் குறிப்பிடப்படுகின்றது (உப 32:42; 2 சாமு 2:26; எசா 2:20; எரே 2:30; 12:12; 46:10). 'வாள்' உருவகமாக, போரைக் குறிக்கும். அது பெரும்பாலும் ஆண்டவரால் அனுப்பப்படும் (லேவி 26:6.25; 2 சாமு 11:25; எரே 5:12; 46:16; எசே 7:15). இது வன்முறையையும் குறிக்கும் (2 சாமு 12:10). தண்டிக்க யாவே பயன்படுத்தும் கருவி (1 நாள் 21:12; சங் 7:12; எசா 34:5தொ; 66:16; திருவெளி 19:15). எசேக்கியேலில் வரும் ''வாளின் பாடல்'' கருத்து இதுவே (எசே 21:13-22). எரேமியாவில் யூதாவுக்கு எதிராகக் கூறப்படும் மூன்று தண்டனைகள் வாள், பஞ்சம், கொள்ளை நோய் ஆகும். மெசியாவின் அமைதிக் காலத்தில் வாள் கலப்பைக் கொழுக்களாக அடிக்கப்படும் (எசா 2:4; மீக் 4:3). நீதியின் காலத்தில் இது தலைகீழாக மாறும்; கலப்பைக் கொழுக்கள் வாள்களாக அடிக்கப்படும் (யோவே 4:10).

ஆனால், கிரேக்க மொழியில் குறுகிய வாள், அகன்டவாள், குத்துவாள் எனப் பலவகையாக வாள்கள் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. ஆனால், புதிய ஏற்பாட்டில், முதல் இரண்டு வகைகள் மட்டும் தெளிவான வேறுபாடு இல்லாமல் பயன் பட்டுள்ளன. வாள் அதிகாரத்தைக் குறிக்கின்றது (உரோ 13:4). வாள் மரண தண்டனையை நிறைவேற்றும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது (அ.ப. 12:2; எபி

11:37). சிவப்புக்குதிரையின் மீது வாளை ஏந்தி வரும் வீரன் போரைக் குறிக்கிறார் (திருவெளி 6:4). இதே சொல் உருவகமாகத் துக்கத்தையும் குறித்தது (லூக் 2:35). கிறிஸ்துவின் அன்பினின்று வேதகலாபனை என்ற வாள் கிறிஸ்தவனைப் பிரிக்க இயலாது (உரோ 8:35). கடவுளின் ஊழியனின் வாயினின்று வரும் வாளும், செம்மறியின் வாயினின்று வரும் வாளும் (எசா 49:2; திருவெளி 1:16; 2:12.16) கடவுளின் வார்த்தை ஆகும். கடவுளின் வார்த்தையாகிய ஆவியின் இந்த வாள் கிறிஸ்தவனின் ஆயுதங்களில் ஒன்றாகும் (எபே 6:17). கடவுளுடைய வார்த்தை இருபுறமும் கருக்கு வாய்ந்த எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவின் உள்ளாழத்தையும், ஆவியின் உள்ளாழத்தையும் ஊடுருவுகிறது (எபி 4:12). இப்பகுதிகளில் வரும் கடவுளின் வார்த்தை புனித நூல்களில் எழுதப்பட்ட வார்த்தையன்று; மாறாக, இறைவாக்கினர்களின், அப்போஸ்தலர்களின் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாகும், குறிப்பாக இயேசுவின் வார்த்தையாகும். அஃது அவருடைய எதிரிகளை மறுத்துரைக்கும்; கிறிஸ்தவனுக்குக் காப்புரை அளிக்கும்; ஒவ்வொரு மனிதனையும், அவனது போலித்தன்மையையும் சாக்குப்போக்குகளையும் களைந்து விட்டு, தீர்மானம் செய்யக் கட்டாயப்படுத்தும்.

இயேசு கைது செய்யப்பட்டபோது, அவரைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் பயன்படுத்தப்பட்ட வாள் (மத் 26:51; மாற் 14:47; லூக் 22:48 தொ; யோவா 18:10தொ), புகழ் பெற்ற ஒரு கூற்றுக்கு வாய்ப்பாயிற்று. இது மத்தேயுவில் மட்டும் காணப்படுகிறது. ''வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்து போவர்'' (மத் 26:52). ''அமைதியையன்று வாளையே கொணர வந்தேன்'' என்று இயேசு கூறுகிறார் (10:34). இக்கூற்றின் சூழ்நிலை இங்கு, வாள் இயேசுவின் மீது கொள்ளும் விசுவாசம் எழுப்பும் பகைமையையும் எதிர்ப்பையும் சுட்டுகிறது என்பது தெளிவு. இயேசுவின் பாதுகாப்புக்காக வன்முறையைப் பயன்படுத்துவது பற்றிய அவரது மனநிலை பற்றி பிறநற்செய்திகள் மறைமுகமாகக் கூறுவதை மத் 26:52 வெளிப்படையாகக் கூறுகிறது. அவ்வாறு வன்முறை பயன்படுத்தப்படுவதைக் கண்டிப்பாக இயேசு நிராகரிக்கிறார். ஆனால், இஃது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தைக் கடந்து பொதுவானதாகக் கூறப்படலாம்; ஆயுதங்களும் வன்முறையும் பயன்படுத்தப்படுவதை முழுவதும் நிராகரிப்பதாக விளக்கலாம். இவ்விளக்கம் நற்செய்தியின் மற்றக் கூற்றுகளோடு முழுவதும் ஒத்துப்போகிறது (மத் 5:34-48; லூக் 6:27-30.32-36). வன்முறையைக் கோருபவன் முடிவில் அதனாலேயே அழிந்து போகிறான். இஃது ஒழுக்கவியல் நிராகரிப்பாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டியதில்லை; மாறாக, வன்முறையின் பயனற்ற தன்மை பற்றிய அறிக்கையென வெறுமனே எடுத்துக் கொள்ளலாம். நேர்மையான வன்முறை இருக்கிறது என்று நம்பும் கிறிஸ்தவர்கள் வன்முறை பற்றிய கிறிஸ்துவின் தீர்ப்போடு அவர்கள் நம்பிக்கை எப்படி ஒத்துப்போகிறது என்று சிந்திக்க வேண்டும். நற்செய்தியின் சொற்களுக்கு அளிக்கும் குறைந்த அளவு மரியாதை கூட, கிறிஸ்துவின் பணியை முன்னேற்ற வன்முறையைப் பயன்படுத்துவதைப் பரிந்துரைக்கும் எதையும் தடுக்கிறது என்று தோன்றுகிறது.

இதே கருத்தை மற்றொரு வடிவில் லூக் 22:35-38 எடுத்துக்கூறுகிறது எனலாம். ''வாள் இல்லாதவர் தம் மேலங்கியை விற்று வாள் வாங்கிக் கொள்ளட்டும்'' என்ற இயேசுவின் எச்சரிக்கை உருவகமாகக் கூறப்பட்டுள்ளது என்பது தெளிவு. இதைச் சீடர்கள் அதன் சொற்பொருளில் புரிந்து கொள்கின்றனர். அப்பொருளிலேயே அஃது ஒன்றுமில்லாமல் போகுமாறு லூக்கா விட்டு விடுகிறார். இயேசுவின் பாடுகளுக்கு உடனடியான முன் சூழ்நிலையில், இது, வாள் பயன்படுத்துவதற்கான காலம் அன்று என்பதற்கு எந்த விளக்கமும் தேவையில்லை.

வாற்கோதுமை (BARLEY)

விவிலியத்தில் அடிக்கடி கூறப்படும் முக்கியமான இத்தானியம் 14-ஆம் நூற்றாண்டில் உள்ள உகாரித்துக் குறிப்புகளில் அடிக்கடி காணப்படுகின்றது. இதன் செமித்தியப் பெயர் 'முடி' என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது. இது விதைக்கு மேலே தோன்றிப் பாதுகாப்பு அளிப்பது போன்று கதிர்களில் இருப்பதால் இப்பெயர் வந்திருக்கலாம்.

கோதுமை அறுவடைக்குமுன் வாற்கோதுமை விளைந்து முதிர்வுறும் (யாத் 9:31). வாற்கோதுமை அறுவடை முடிந்து இரு வாரங்களுக்குப்பின் கோதுமை அறுவடை தொடங்கும். கோதுமையும், வாற்கோதுமையும் பாலஸ்தீனத்தில் விளைந்தன (உப 8:8). வாற்கோதுமை கோதுமையை விட மலிவானது (2 அர 7:1.16.18; திருவெளி 6:6). இது விலங்குகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்டது (1 அர 4:28). இத்தானியம் மனித உணவின் ஒரு முக்கிய பகுதியாக, குறிப்பாக ஏழைகளின் உணவாகப் பயன்பட்டது (லேவி 23:22; ரூத் 3:15.17; 2 சாமு 17:28; 2 அர 4:42; 7:1; 16:18; 2 நாள் 2:10.15; 27:5; எரே 41:8). அப்பங்கள் போல் இது சமைக்கப்பட்டது (நீதி 7:13; எசே 4:12; யோவா 6:9.13). இத்தானியம் காணிக்கையாகச் செலுத்தப்படுவதற்கும் (எண் 5:15; எசே 45:13; லேவி 23:10-14), பண்டமாற்றுவதற்கும் (எசே 13:9; ஒசே 3:2) பயன்படுத்தப்பட்டது. அக்கால நாள் காட்டியின் குறிப்பாக வாற்கோதுமை அறுவடை அமைந்து இருந்தது (ரூத் 1:22; 2 சாமு 17:28) என்பது கி.மு. 10-ஆம் நூற்றாண்டில் உள்ள கேசேர் நாள்காட்டி ''அவனுடைய மாதம் வாற்கோதுமை அறுவடைக்காலம்'' என்பதிலிருந்து தெரிகிறது. விவிலியத்தில் வரும் நாடுகளில் பலவகையான வாற்கோதுமைகள் பயிரிடப்பட்டன.

வாற்கோதுமை அறுவடை (BARLEY HARVEST)

இது வசந்தகாலத்தில் விளைந்து அறுவடை செய்யப்பட்ட வாற்கோதுமை அறுவடையைக் குறிக்கலாம். இந்த அறுவடை ஏப்ரல் மாதத்தின் இறுதியிலோ (யோசு 3:15), மே மாதத்தின் முற்பகுதியிலோ, கோதுமை அறுவடையின் 2 வாரத்திற்கு முன் நடக்கும் (ரூத் 2:23). வாற்கோதுமை அறுவடையின்போதுதான் அறுவடையை அர்ப்பணிக்க முதற்பயன்கள் கொண்டுவரப்பட்டன (லேவி 23:10).

வானகம், விண்ணகம் (HEAVEN, FIRMAMENT)

I. வானில் பறக்கும் விமானிகள் மற்றும் வான இயலைப் படிப்பவர்களை, ''வானகம் எங்கிருக்கிறது, அடையாளம் காட்ட முடியுமா?'' என்று கேட்டால் அவர்கள் இயலாது என்றுதான் சொல்வார்கள். விவிலியத்தில் பயன்படுத்தப்படும் மொழியை நாம் சரியாகப் புரிந்து கொள்வது அவசியம். சாதாரண மனித அனுபவம் என்ன சொல்கிறது? கடவுள் படைப்புப் பொருள் அனைத்து வழியாகவும், அவற்றின் காணக்கூடிய அமைப்புகள் வழியாகவும் தம்மை வெளிப்படுத்துகிறார். இதனை விவிலியம் சற்றுச் சிக்கலான, அதிகக் குழப்பமில்லாத வடிவில் நமக்கு எடுத்துச் சொல்கிறது. அதே நேரத்தில் நாம் காணும் வானையும், கடவுளின் விண்ணகத்தையும் தெளிவாக வேறுபடுத்திப் பேசுகிறது விவிலியம். 'விண் மண்ணுக்குரிய' விண்ணகமும், மண்ணிலிருந்து வேறுபட்ட விண்ணகமும் இருக்கின்றன. முதலில் நாம் குறிப்பிடும் ஒன்றுதான் இரண்டாவதை நாம் எண்ணிப் பார்ப்பதற்குத் துணை புரிகிறது.

II. **விண்ணகமும் மண்ணகமும்:** எபிரேயர்களைப் பொருத்தமட்டில் வானம் அகிலத்தின் ஒரு பகுதியாக இருந்தாலும், மண்ணகத்தோடு தொடர்புடையதாக இருந்தாலும் அது மண்ணிலிருந்து வேறுபட்டது. விண்ணகம் என்பது பூமியைச் சூழ்ந்திருக்கும் உலகளாவிய ஒரு கோள வடிவம் என்று நினைத்தனர். மண்ணும் விண்ணும் சேர்ந்ததே அகிலம் என்று கருதினர். இவை இரண்டையும் சேர்த்து அழைக்க சரியான சொற்கள் இல்லாததால் 'விண்ணும் மண்ணும்' என்றழைத்தனர் (ஆதி 1:1; மத் 24:35).

இஸ்ராயேலர் வானத்தின் மாட்சிமையையும் அதன் ஒளியையும் தெளிவையும் கண்டு வியந்தார்கள் என்றால் (யாத் 24:10) அதன் அசைக்க முடியா உறுதியை நினைத்து இன்னும் அதிகம் வியப்பு அடைந்தனர் (ஆதி 1:18). வானம், பூமியைப் போலவே மிக உறுதியாகக் கட்டப்பட்டு ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கிறது என நினைத்தனர். வானம் தூண்களால் (யோபு 26:11) அல்லது அடித்தளங்களால் (2 சாமு 22:8) தாங்கப்பட்டு நிற்கிறது எனவும், மழை, பனி, புயல், காற்று அனைத்திற்கும் தேக்கங்கள் போன்ற அமைப்புகள் இருப்பதாகவும் நினைத்தனர் (யோபு 38:22தொ; 37:9தொ; சங் 33:7). அதன் ''சன்னல்கள்'', ''கதவுகள்'' வழியாக சரியான நேரத்தில் மழை, காற்று முதலியவை அவற்றின் தேக்கங்களிலிருந்து திறந்து விடப்படுவதாக நம்பினர் (ஆதி 7:11; 2 அர 7:2; மலா 3:10). வானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கோள்கள், விண்மீன் கூட்டங்கள் (ஆதி 15:5) ஆகியவை மிகச்சிறப்பாக ஒழுங்காக இயங்குவதால் கடவுளின் திட்டம் எவ்வளவு மகத்தானது என்பதை விளக்குகின்றன (காண்க. எசா 40:26; யோபு 38:3தொ).

III. **பூமியிலிருந்து வேறானது விண்ணகம்:** வானத்தின் அகண்ட வெளி, அதில் உள்ள ஒளி, வியப்புமிக்க, விளக்க முடியாத முறையில் அனைத்தும் ஒரே சீராக இயங்கும் விதம் ஆகிய அனைத்துமே வானத்தைப்பற்றிய ஊடுருவ முடியாத மறை பொருள்; மனிதனுக்கு ஒரு பிரமிப்பும் வியப்பும் ஏற்படுத்துவன. பூமியின் ஆழமும், அதன் கீழ் உள்ள பேராழமும் அணுக முடியாததொன்றானாலும் (யோபு 38:4தொ.16தொ), அணுக முடியாத தன்மையை இன்னும் அதிகமாகக் கொண்டதாக வானம் தனக்கு வெளிப்படுத்தப்படுவதைக் கண்டு மனிதன் மேலும் வியப்படைகிறான். மனிதன் மண்ணுக்குரியவன். விண்ணகம் அவனுக்கு மூடப்பட்டுள்ளது. எவனும் வானகத்திற்கு ஏறிச் சென்றதில்லை (யோவா 3:13; காண்க. பழ 30:4; உரோ 10:6). பாபேலின் அரசன் வானத்தைத் தொடும் வண்ணம் ஒரு கோபுரம் அமைப்போம் என்று கனவு கண்டது முட்டாள்தனமானது (ஆதி 11:4). ஏனெனில், அஃது இறைவனுக்கு இணையாக ஒருவன் தன்னை வைத்துப் பார்ப்பதாகும் (எசா 14:13தொ). இவ்வாறு இறைவனுக்கும் வானத்திற்கும் ஓர் இயல்பான உறவு இருக்கிறது. ''விண்ணகமோ ஆண்டவருக்கு உரியது. மண்ணகத்தையோ அவர் மானிட மைந்தர்க்கு வழங்கியுள்ளார்'' (சங் 115:16).

வானகம் உண்டாக்கிய இந்த இயல்பான சமய உணர்வுகளினால் இதனை (வானகங்கள்), விண்ணகங்கள் என்று பன்மையில் எழுபது நூல் குறிக்கிறது. யூத சமயமும், புதிய ஏற்பாடும் இந்தப் பன்மைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்ததென்றால் 'விண்ணரசு' என்பது 'இறைவனின் அரசு' என்பதற்கு இணையாகப் பொருள் கொள்ளப்பட்டது. ஆனால், அதற்காக புதிய ஏற்பாட்டிலோ, பழைய ஏற்பாட்டிலோ விண்ணகம் என்பது மனிதர் காணும் சாதாரண வானம் என்றும், விண்ணகங்கள் என்பது இறைவனின் உறைவிடம் என்றும் பிரித்துப் பொருள் கொள்ள முடியாது. ஆனால், இந்தப் பன்மை பிறகு அடுக்கடுக்காக விண்ணகங்கள் உள்ளன என்று மேற்காசிய மக்கள் எண்ண இட்டுச் சென்றிருக்கலாம் (காண்க. 2 கொரி 12:2; எபே 4:10). ஆனால் பொதுவாக, இந்தப் பன்மையை ஒரு கவிதையின் மிகைப்படுத்தும் நடையாகவே நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது (காண்க. உப 10:14; 1 அர 8:27). விவிலியம், சடப்பொருள் சார்ந்த வானகமென்றும், ஆன்மீக வானகமென்றும் பிரித்துப் பேசவே இல்லை. ஆனால், நாம் காணக்கூடிய இந்த விண்ணகத்திலேயே கடவுளின் செயல்களையும், அவரின் மறைபொருட்களையும் விவிலியம் காண முயற்சிக்கிறது.

IV. **இறைவன் வாழுமிடமாகிய விண்ணகம்:** தான் வாழுமிடமாக இறைவன், நீரின்மேல் கூடாரம் போல் முதலில் விண்ணகத்தைத் தூண்களின் மீது எழுப்பினார்

(சங் 104:2தொ). அதன்பிறகு மேகங்களின் மீது பறந்து வந்தும் (சங் 68:5. 34; உப 33:26), புயலின் மத்தியிலிருந்தும் தண்ணீர் மேல் தனது மாபெரும் குரலை எழுப்பினார் (சங் 29:3). விண்ணகத்தில் அவரது அரியணை இருக்கின்றது. அங்கமர்ந்து அவர் தனது அரசவையை நடத்துகிறார். அவரது ஆணைகளைப் பூமியின் கடை எல்லைவரை உடனடியாக நிறைவேற்ற விண்ணகச் சேனைகள் இருக்கின்றன (1 அர 22:19; காண்க. எசா 6:1தொ.8; யோபு 1:6-12). உண்மையில் அவரே விண்ணகத்தின் கடவுள் (நெகே 1:4; தானி 2:37).

இந்தக் கூற்றுக்கள் எல்லாம் சிறு குழந்தைகளின் கற்பனையிலிருந்தோ, மிகைப் படுத்தப்பட்ட கவிதைநடையிலிருந்தோ வந்தவை அல்ல. உலகத்தின் உண்மை நிலையிலிருந்து உருவாகிய ஆழ்ந்த, உண்மையாகும். இவை மேலாண்மையான அதிகாரத்தினால் ஆளப்படுகிறது; அவரது முழு அறிவினால் ஊடுருவப்பட்டுள்ளது. கடவுள் விண்ணகத்திலிருந்து ஆட்சி செய்வதால் அரசர்கள் தங்களுக்குள்ளே சதித் திட்டம் தீட்டுவதைக் கண்டு அவர் நகைக்க முடிகிறது (சங் 2:2தொ; காண்க. 11:7). ''அவர் விழிகள் மானிடரைச் சோதித்தறிகின்றன'' (சங் 11:4). அவர் வானங்களின் மேல் மாட்சிமையுடன் இருப்பதால் அவர் நீதியாக நடந்து கொள்கிறார்; சிறப்பாக ஏழையைப் புழுதியினின்று தூக்கி விடுகிறார் (சங் 113:4தொ). வானகத்தில் அமர்ந்திருந்து அவருடைய மக்கள் அனைவருடைய வேண்டுதல்களையும் அவரால் கேட்க முடிகிறது (1 அர 8:30). அவர் நமக்கு மிக அருகில் உள்ள கடவுளாக இருந்தாலும் அவர் தொலைவில்தான் இருக்கிறார் (எரே 23:23தொ); இஃது எப்படிச் சாத்தியமாகும்? அவரது மகிமை பூமியை நிரப்புவதால் மட்டுமன்று (எசா 6:3) உலகில் உள்ள எதுவும் அவரைத் தமக்குள் அடக்கி விட முடியாது; ''வானமும், வான மண்டலங்களும்'' அவரைக் கொள்ள இயலாது (1 அர 8:27).

இவ்வாறு கடவுள் விண்ணகத்தில் உறைதல் அவரது முழுவதும் யாவற்றையும் கடந்து நிற்கும் தன்மையை உணர்த்தினாலும், வானத்தைப் போல எங்கும் நிறைந்திருக்கும் அவரது பிரசன்னத்தையும் அஃது உணர்த்துகிறது. அவர் அருகில் இருக்கிறார், அதே நேரத்தில் தொலைவிலும் இருக்கிறார் என்ற இக்கருத்து ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் விவிலியத்தில் சுட்டிக்காட்டப்படுகிறது. பெத்தேலில் யாக்கோபு கண்ட ''நிலத்தில் ஊன்றி வானத்தைத் தொட்ட ஏணியிலிருந்து தொடங்கி'' (ஆதி 28:12) எசாயாவினுடையதைப் போன்ற இறைவாக்குகள் வரை இறைவனின் அருகும் அணிமையும் இணைந்து கூறப்படுகின்றன.

''விண்ணகம் என் அரியணை. அவ்வாறிருக்க எத்தகைய கோயிலை நீங்கள் எனக்காகக் கட்டவிருக்கிறீர்கள்?.....எளியவனையும் உள்ளம் வருந்துபவனையும் என் சொல்லுக்கு அஞ்சுபவனையும் நான் கண்ணோக்குவேன்'' (எசா 66:1-2; காண்க.57:15).

V. **வானங்களே, பொழியுங்கள்:** இஸ்ராயேலரின் இறைவன் வானங்களை உறைவிடமாகக் கொண்டு மீட்பளிக்கும் இறைவனாகையால், அங்கே அவர் தம் உண்மையோடும் (சங் 119:89தொ), தம் அருளோடும் பிரமாணிக்கத்தோடும் (89:3) வாழ்கிறார். பூமியின்மேல் மீட்பைப் பொழிவதற்கென அங்கே இருக்கின்றார். வானம் இறைவனது மேலாண்மையையும் யாவற்றையும் உள்ளடக்கும் பிரசன்னத்தையும் எடுத்துக் காட்டுவதுபோல், அது பூமியில் பொழியப் பட எப்போதும் தயாராக இருக்கும் மீட்பின் அடையாளமாகவும் உள்ளது. மேலும், வானத்திலிருந்து உயிரளிக்கும் மழையும் பனியுமாகிய ஆசீர்கள் வருகின்றன; இரண்டும் இறைவனது தாராளத் தன்மையையும் கொடையையும் உணர்த்துகின்றன. இவ்வாறு இயற்கை அடையாளமும் வரலாற்று நினைவு கூர்தலும் சேர்ந்து இணைந்து, இஸ்ராயேலின் நம்பிக்கையை விண்ணிலிருந்து இறங்கி வரவிருக்கும் ஒரு நிகழ்ச்

சியை எதிர்பார்க்கச் செய்கின்றன. ''நீர் வானங்களைப் பிளந்து இறங்கி வர மாட்டீரா?'' (எசா 64:1; காண்க. 45:8).

மேலும் ஏனோக்கு (ஆதி 5:24), எலியா (2 அர 2:11) போன்றோரின் விண்ணேற்பு கள், மனிதர்களின் மனதை மேலே எழுப்பி, இவ்விருவரும் அனுமதிக்கப்பட்ட இறைவ னோடு கொள்ளும் முடிவில்லா ஒன்றிப்பை அங்குத் தேடத் தூண்டின. எசேக்கியேல், செக்கரியா, சிறப்பாகத் தானியேல் போன்ற வெளிப்பாட்டுக் காட்சியாளர்கள், விண் ணக இறைவனிடமிருந்து நாடுகளின் ஊழ் பற்றிய மறைபொருள் வெளிப்பாடுகளைப் பெற்றனர் (தானி 2:28). அக்காலத்திலிருந்து இஸ்ராயேலின் மீட்பு விண்ணகத்தில் எழுதப்பட்டுள்ளது. அங்கிருந்து அஃது இறங்கி வரும். பாழாக்கும் அருவருப்பின் முடிவை வாக்குறுதியளிக்க விண்ணகத்தி லிருந்து காபிரியேல் தானியேலிடம் இறங்கி வந்தார் (தானி 9:21தொ) புனித மக்களுக்கு அரசும், ஆட்சியுரிமையும், அரசர்களின் மேன்மையும் அளிக்கப்படுவ தற்காக மனுமகன் வானத்தின் மேகங்கள் மீது தோன்றவேண்டும். இறுதியாக, ''கட வுளின் திருமுன் நிற்கும்'' (லூக் 1:19) விண்ணகத்திலிருந்துதான் கபிரியேல் செக் கரியாவிடமும் மரியாளிடமும் அனுப்பப் படுகிறார். ''கடவுளுக்கு மாட்சி உரித் தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!''என்று பாடிய வான தூதர்கள் விண்ணகத்திற்கு திரும்பிச் செல் கின்றனர் (2:11-15). வான தூதர்களின் இந்தப் பிரசன்னம், இறைவன் வானங் களைப் பிளந்துவிட்டார் என்பதற்கும் அவரே இம்மானுவேல், ''கடவுள் நம்மோடு'' ஆவார் என்பதற்கும் அடையாளமாகும்.

VI. **இயேசு கிறிஸ்து : விண்ணகமே மண்ணுக்கு வந்தது:**

*1. **இயேசு விண்ணகத்தைப்** பற்றிப் பேசு கிறார்:* இயேசு அடிக்கடி பயன்படுத்திய சொற்களில் ஒன்று விண்ணகம். ஆனால் இச்சொல், இறை சாராது தானாக இருக்கும் எந்த ஓர் எதார்த்தத்தையும் சுட்டிக் காட்ட வில்லை. விண்ணக அரசு பற்றியும், வான கத்தில் கைம்மாறு காத்திருக்கிறதையும் (மத் 5:12), விண்ணகத்தில் ஒருவனது செல்வம் சேர்த்து வைப்பது பற்றியும் (6:20; 19:21) இயேசு குறிப்பிடுகிறார். இத்தகைய சொல் வழக்கு விண்ணகத் தந்தையைப் பற்றிய எண்ணத்திலிருந்து தான் இயேசு வுக்கு வந்திருக்கிறது (மத் 5:16. 45; 6:1:9). எனவே, அனைத்தையும் சூழ்ந்து வற்றாத இரக்கம் காட்டும் (7:11) தந்தையின் காண முடியாத ஆனால், அக்கறையுள்ள பிரசன் னத்தை உணர்த்தும் ஒன்றாக வானகம் இருக்கிறது. இந்தப் பிரசன்னம் தான் வானத்துப் பறவைகளுக்கும் (6:26), நீதியுள் ளோர்க்கும், நீதியற்றோர்க்கும் (5:45) உண வளிக்கிறது; பாதுகாப்பும், வாழ்வும் தரு கிறது. மனிதர்கள் இத்தகைய இறைப்பிர சன்னத்தை உணர முடியாத குருடர்களாக இருப்பதால் இயேசுகிறிஸ்து தான் பார்த்த தையும், அறிந்ததையும் மனிதர்களுக்கு எடுத்துச் சொல்ல வந்துள்ளார் (யோவா 3:11). இவ்வாறு விண்ணகம், ஒரு வாழ் கின்ற வெற்றிகொள்ளும் மெய்ம்மை ஆகி றது. எனவே, விண்ணக அரசு மண்மீது வருகை தருகின்றது.

*2. **இயேசு விண்ணகத்திலிருந்து** வருகி றார்:* இயேசு விண்ணகத்தைப் பற்றிப் பேசும் பொழுது அவர் தனக்குத் தொடர் பற்ற ஒன்றைப் பற்றிப் பேசவில்லை. மாறாக, நமக்குப் பூமி எவ்வளவு தெளி வாக உள்ளதோ, அவ்வளவு அவருக்குப் பழக்கமானதும், அவருடையதும், அவ ருக்கு ஆழமானதும் முக்கியமானதுமான ஓர் உண்மையைப் பற்றிப் பேசுகிறார். அவர் விண்ணரசின் மறைபொருட்களைக் கொண்டிருக்கிறார் (மத் 13:11). நம் அனை வருக்கும் விண்ணகத்தில் தந்தையாக இருப் பவரைத் தனது சொந்தத் தந்தையாக அவர் அறிந்திருக்கிறார் (12:50; 16:17; 18:19). இவ்வளவு தெளிவாக விண்ணகத்தைப் பற்றிப் பேச முடிகிறதென்றால் அவர் விண்ணகத்திலிருந்து தான் வந்திருக்க வேண்டும். ''விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள மானிட மகனைத் தவிர வேறு

எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை'' (யோவா 3:13). அவர் தமது உறைவை விண்ணகத்தில் கொண்டிருக்கும் மானிட மகனாகவும், விண்ணகத்திற்குத் திரும்பிச் செல்ல விண்ணிலிருந்து வந்த மனிதனாகவும் இருப்பதால் (யோவா 6:62), அவர் செயல்பாடுகளும் விண்ணகத்தைச் சேர்ந்தவையாகவே இருக்கின்றன. அவரது மிக முக்கிய வேலையான அவருடைய உடலும் இரத்தமும் ஆகிய பலி விண்ணகத் தந்தை வானகத்திலிருந்து தந்த அப்பமாகிறது (6:35-58). அதுவே அழியா வாழ்வு தருவது. ஏனெனில், அது விண்ணகத் தந்தையின் வாழ்வும், வானக வாழ்வும் ஆகும்.

3. விண்ணுலகில் நிறைவேறுவதுபோல் மண்ணுலகிலும் நிறைவேறுக!

இயேசு விண்ணகத்திலிருந்து வந்து மீண்டும் விண்ணகத்திற்குச் செல்கிறாரெனில், கிறிஸ்தவர்கள் ஏற்கெனவே அவரோடு விண்ணகத்தில் இருக்கின்றனர் என்பதும் தந்தை அவர்களை ''உயிர்தெழச் செய்து விண்ணுலகில் அமரச் செய்துள்ளார்'' என்பதும் உண்மையெனில் (எபே 2:6; கொலோ 2:12; 3:1-4) இயேசுவின் வேலை இன்னும் தொடர்கிறது என்பதாகும். இந்த வேலை எவ்வாறு தொடர்கிறது? மண்ணையும் விண்ணையும் எக்காலத்திற்கும் ஒன்றாகச் சேர்ப்பதாலும், இறையரசு வந்து விண்ணகத்தில் நிறைவேறுவது போலவே மண்ணகத்திலும் இறைவனின் திருவுளம் நிறைவேறச் செய்வதாலும் (மத் 6:10) இயேசுவின் வேலை தொடர்கிறது. அதன் விளைவாக மண்ணுலகிலோ, விண்ணுலகிலோ அனைத்தும் அவரில் ஒப்புரவாகும் (கொலோ 1:20). அவரது உயிர்ப்பின் போது மண் விண் ஆகியவற்றில் உள்ள அனைத்து அதிகாரங்களும் அவருக்குத் தரப்பட்டதாலும் (மத் 28:18), விண்ணகத் தூயகத்துக்குள் தனது இரத்தப் பலியினால் நுழைந்து விட்டதாலும் (எபி 4:14; 9:24) அவர் விண்ணகத்திற்குமேல் உயர்த்தப்பட்டு (7:26) விண்ணகத் தந்தையின் வலப்புறம் வீற்றிருக்கிறார். அங்கு அவர் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையிலான ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளார் (9:25). அவர் தனது அதிகாரத்தைத் திருச்சபைக்குக் கொடுத்தபோது அது மண்ணகத்தில் உறுதி செய்வதை விண்ணகத்திலும் நிறைவேற்றி வைப்பதாக வாக்களிக்கிறார் (மத் 16:19; 18:19).

4. விண்ணகம் திறந்தது: இயேசுவில் நாம் பெற்ற ஒப்புரவு ஒரு சில அடையாளங்களால் உறுதிப்படுத்தப்படுகிறது. வானகம் அவர்மேல் திறக்கிறது (மத் 3:16). தூய ஆவி இறங்கி வருகிறார் (யோவா 1:32). அதனால், அவரது சீடர்களும் அதே அனுபவத்தைப் பெறுகின்றனர். மாபெரும் பேரிரைச்சலுடனும் (அ.ப. 2:2), ஒளி நிறைந்த காட்சியுடனும் (9:3; 10:11) விண்ணகம் திறக்கப்பட அவர்கள்மேல் தூய ஆவி இறங்கிவருகிறார். ''விண்ணகம் அவர்கள்மேல் திறக்கப்படுகிறது; தூய ஆவி இறங்கி வருகிறார்''. ''வானம் திறந்திருப்பதையும், கடவுளின் தூதர்கள் மானிட மகன் மீது ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள்'' என்ற தனது வாக்குறுதியைக் கிறிஸ்து நிறைவேற்றுகிறார் (யோவா 1:51).

VII விண்ணகத்திற்கான நம்பிக்கை:

''விண்ணகமே நமது தாய்நாடு''. அங்கிருந்து மீட்பர் வருவாரெனக் காத்திருக்கிறோம். ஆண்டவராகிய கிறிஸ்துவே அந்த மீட்பர். அவர் அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்தவல்ல ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார் (பிலி 3:20-21). இப்பகுதி கிறிஸ்தவன் நம்பும் விண்ணகத்தின் எல்லாத் தன்மைகளையும் உள்ளடக்குகிறது. கிறிஸ்தவர்கள் விண்ணகத்தை ஒரு நகரமாக, தங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அன்புச் சமூகமாக, புதிய எருசலேமாக இருக்கும் என நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றனர் (திருவெளி 3:12; 21:3.10தொ). நாம் அவாவும் தங்குமிடம் நமக்கு விண்ணகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (2 கொரி 5:11). நாம் விண்ணகத்துக்குச் சொந்தமானவர்கள். விண்ணகம் ஒரு புதிய அகிலமாகும் (21:5). இது நமது அகிலத்

தைப்போல ஒரு புதிய வானகமும், புதிய பூமியும் அடங்கியதாகும் (2 பேதுரு 3:13; திருவெளி 21:1). இது நமது அகிலத்தோடு வேறுபடுத்தப்படுகிறது. ஏனெனில், அங்கு சாவில்லை, புலம்பலில்லை, அழுகையில்லை, நோயில்லை (திருவெளி 21:4); மாசுபட்டது எதுவும் இராது (21:27); இரவு இராது (22:5). இந்த விண்ணகம் தோன்றும் போது முதலில் தோன்றிய மண்ணகமும் விண்ணகமும் மறைந்து போகும் (திருவெளி 21:1; 20:11; 6:14).

விண்ணகமே நமது புதிய உலகமாகும். ஊன் ஆன வார்த்தை மற்றும் அவருடைய உடலின் உடைமையதெல்லாம் எக்காலத்திற்கும் நம்முடையதாகும். இனி வார்த்தை மனுவுருவானவருடையதுதான். ஆண்டவருடன் ஒன்றிப்பு இல்லாமல் நமக்கு எந்த விண்ணகமும் இருக்க முடியாது (1 தெச 4:17; 2 கொரி 5:8; பிலி 1:23). கடவுளும் தந்தையுமானவரிடம் அனைத்தையும் ஒப்படைக்கும் பொருட்டு, அவர் அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்துகிறார் (1 கொரி 15:24-28).

வான தூதர்கள் (ANGELS)

I. வானதூதர் என்ற பெயர் தன்மையைச் சுட்டிக்காட்டும் பெயரன்று; மாறாக, ஒரு செயலைக் குறிக்கிறது. செய்தியைக் கொண்டு வருபவர், 'தூதர்' என்பதே இதன் பொருள். ''ஊழியம் செய்யவும் மீட்பை உரிமைப்பேறாகப் பெறுபவர்களுக்குப் பணிபுரியவும் அனுப்பப்பட்ட ஆவிகளே'' வானதூதர்கள் (எபி 1:14). அவர்கள் மறைபொருளான ஓர் உலகை அமைக்கின்றனர். நமது சாதாரண பார்வைக்கு வான தூதர்கள் தோன்றுவதில்லை. வானதூதர்களின் பிரசன்னம் என்றுமே விவிலியத்தில் எந்தப் பிரச்சனையையும் ஏற்படுத்தியதில்லை. ஆனால் இதற்குமேல், வானதூதர்கள் பற்றிய போதனை வளர்ச்சியடைந்ததைப் பார்க்கும்போது, அவர்களைப் பற்றிப் பேசும் விதத்திலும், அவர்களைச் சித்திரிக்கும் விதத்திலும் சமய அடையாளங்களுக்குக் குறைவேயில்லை என்பது தெளிவாகும்.

II. *பழைய ஏற்பாடு:-*

1. யாவேயின் தூதுவர்களும், தூதரும்: மேற்காசியப் புராணங்களிலுள்ள பொதுத் தன்மையை எடுத்துக் கொண்டு, ஒரே இறைவனின் வெளிப்பாட்டிற்கு ஏற்றவாறு மாற்றியமைத்துப் பழைய ஏற்பாடு இறைவனை ஒரு மேற்காசிய அரசனாகச் சித்திரிக்கிறது (1 அர 22:19; எசா 6:1தொ). இந்த அரசரின் அவையில் உள்ள உறுப்பினர்களும் அவரது பணியாளர்களே (யோபு 4:18); அவர்கள் தூயவர்கள் எனவும் (யோபு 5:1; 15:15; சங் 89:6; தானி 4:10), இறைவனின் மைந்தர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர் (சங் 29:1; 89:7; உப 32:8). அவைகளில் கெருபுகள் அவரது அரியணையைத் தாங்கி நிற்கின்றனர் (சங் 80:2; 99:1); அவரது தேரை இழுக்கின்றனர் (எசே 10:1); அவரது வாகனங்களாகத் திகழ்கின்றனர் (சங் 18:10); அவரது ஆட்சிப் பகுதியில் அன்னியரின் தலையீடும் பாழாக்கும் தன்மையும் இல்லாமல் பாதுகாக்கின்றனர் (ஆதி 3:24). நெருப்பு வடிவில் உள்ள செராபியர் அவரது புகழைப் பாடுகின்றனர் (எசா 6:3). அவர்களில் ஒருவர்தான் எசாயாவின் தொடக்கக் காட்சியில் அவரது உதடுகளைத் தூய்மைப் படுத்துகிறார் (6:7).

ஆலய உருவங்களில், கெருபுகள் இரக்கத்தின் இருக்கையைத் தம் இறக்கையால் மூடியவாறு உள்ளனர் (யாத் 25:18தொ; 1 அர 6:23-29). இவ்வாறு ஒரு விண்ணகச் சேனை முழுவதும் (1 அர 22:19; சங் 148:2; நெகே 9:6) இறைவனது புகழைப் பாடுகின்றது. இந்தச் சேனையைக் கொண்டு அவர் உலகை ஆள்கிறார்; தமது திருவுளத்தை நிறைவேற்றுகிறார் (சங் 103:20-21). இச்சேனை விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பாலமாக அமைகின்றது (ஆதி 28:12).

ஆனால், இந்தப் புதிரான தூதர்கள் அல்லாமல், பழங்கால விவிலிய நிகழ்ச்சியுரைகள் யாவேயின் ஒரு தூதரைப் பற்றிப் பேசுகின்றன (ஆதி 16:7; 22:11; யாத் 3:2, நீதி 2:1). இவர் யாவேயிடமிருந்து வேறுபட்டவர் அல்லர்; பூவுலகில் காணக்

கூடிய வடிவில் தம்மை வெளிப்படுத்துகிறார் (ஆதி 16:13; யாத் 13:2). அணுக முடியாத ஒளியில் வாழ்கிற இறைவன் (1 திமொ 6:16) தமது முகத்தைப் படைப்புகள் பார்க்க அனுமதிக்க முடியாது (யாத் 33:20). மனிதர் அதன் மறைபொருளான பிரதிபலிப்பைத்தான் உணரமுடியும். பழைய வாசகங்களில் காணப்படும் யாவேயின் தூதர் பழமைமிக்க இறையியலை அளிக்கப் பயன்படுகிறார். இந்த இறையியல், ''ஆண்டவரின் தூதர்'' என்ற பெயரில் புதிய ஏற்பாட்டில் கூட மற்றும் திருச்சபைத் தந்தையார் நூல்களிலும் தனது சுவடுகளை விட்டுச் சென்றுள்ளது (மத் 1:20.24; 2:13.19; லூக் 1:11; 2:9). ஆயினும், வெளிப்பாட்டின் வளர்ச்சிக்கேற்ப, இறைவன் வானதூதர்களைத் தமது சாதாரண தூதர்களாகப் பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

2. தூதர்களைப் பற்றிய கோட்பாட்டின் வளர்ச்சி:

தொடக்கத்தில் எவ்வித வேறுபாடுமின்றி நல்ல, தீயபணிகள் இரண்டுமே வானதூதர்களுக்குச் சாற்றிக் கூறப்பட்டன (காண்க. யோபு 1:12). கடவுள் நல்ல தூதர்களை இஸ்ராயேலைக் காக்க அனுப்புகிறார் (யாத் 23:20); ஆனால், சாவுக்குத் தீமையின் தூதர்களை அனுப்புகிறார் (சங் 78:49). இவர்கள் அழிவைக் கொணர்பவர்கள் (யாத் 12:23; காண்க. 2 சாமு 24:16தொ; 2 அர 19:35). யோபு நூலில் வரும் சாத்தான் கூட இறைவனின் அவையில் பங்கெடுப்பதாகக் கூறப்படுகிறது (யோபு 1:6-12; 2:1-10). ஆனால், நாடு கடத்தலுக்குப்பின் வானதூதுவர்கள் தனிப்பட்ட சிறப்பான பணிக்கு உரியவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்களின் அலுவலுக்கேற்ப ஒழுக்கப் பண்பைப் பெறுகின்றனர். நன்மையின் வானதூதர்கட்கும், சாத்தான் மற்றும் தீமையின் தூதுவர்கட்குமிடையே பெரும் எதிர்ப்பும், போராட்டமும் தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கிறது (செக் 3:1தொ). இத்தகைய பிளவுபட்ட ஆன்மீக உலகு பற்றிய கருத்து மெசபொத்தாமியா மற்றும் பாரசீக நாடுகளால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டது. இரானிய - பாபிலோனியக் கலப்பு மதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு ஏதுவாக, யூத தத்துவம் தனது முந்தைய கோட்பாட்டை வளர்த்துக் கொண்டது. தனது கடுமையான ஒரே இறையொருமைக் கோட்பாட்டிலிருந்து விலகாமல், அது கடன் வாங்கிய அடையாளங்களைச் சிலசமயம் பயன்படுத்தியது. தனது வானதூதர் உலகை எடுத்துக் கூறுவதைத் திட்டம் செய்தது. இவ்வாறு பாரசீக நாட்டு வானதூதர் கோட்பாட்டைப் போலவே தோபியா நூல் ஆண்டவரின் முகத்தின் முன் நிற்கும் ஏழு வானதூதுவர்களைப் பற்றிப் பேசுகிறது (தோபி 12:15; காண்க. திருவெளி 8:2). ஆனால், வான தூதர்களின் பணி மாறவில்லை. அவர்கள் மனிதர்களைக் காக்கின்றனர் (தோபி 3:17; சங் 91:11; தானி 3:49தொ); மனிதரின் செபங்களைக் கடவுளிடம் எடுத்துச் செல்கின்றனர் (தோபி 12:12); நாடுகளின் முடிவை நிர்ணயிப்பதில் தலைமை தாங்குகின்றனர் (தானி 10:13.21). எசேக்கியேல் காலத்திலிருந்தே வானதூதர்கள்தான் இறைவாக்கினர்கள் காணும் காட்சியின் பொருளை அவர்கட்கு விளங்க வைக்கின்றனர் (எசே 40:3தொ; செக் 1:8தொ). இஃது இறுதியில் வெளிப்பாட்டு இலக்கிய நடையாக உருவாகிறது (தானி 1:5-19; 9:21தொ). அவர்கள் செய்யும் பணியைக் குறிக்கும் விதத்தில் அவர்கள் பெயர்கள் அமைகின்றன. இரப்பாயேல் என்றால் 'கடவுள் குணமாக்குகிறார்' (தோபி 3:17; 12:15), கபிரியேல் என்றால் கடவுளின் வீரர் எனவும் (தானி 8:16; 9:21), மிக்கேல் என்றால் ''கடவுளுக்கு நிகர் யார்''? (தானி 10:13.21; 12:1) எனவும் பொருள் கொள்ளப்படுகின்றன. அனைவருக்கும் தலைவராக விளங்கும் வானதூதரிடம் இஸ்ராயேல் சமூகம் ஒப்படைக்கப்படுகின்றது (தானி 10:13. 21; 12:1). மேலே கூறப்பட்ட உண்மைகள் வெளிப்பாட்டுப் போலி நூல்களிலும் (ஏனோக்கு நூல்) ராபிகளின் இலக்கியங்களிலும் விரிவாக்கப்பட்டன. இந்நூல்கள் இவற்றை ஓரளவு ஒன்றியைந்த விதத்தில்

திட்டம் செய்ய முயன்றுள்ளன. இவ்வாறு வானதூதுவர்களின் உலகம் பற்றிய மற்றும் மனிதர்கள் உலகில் அவர்களின் பிரசன்னம் பற்றிய கோட்பாடுகள் தொடர்ந்து உறுதியாகப் பேசப்படுகின்றன. ஆனால், அவற்றைப் பற்றி பழைய ஏற்பாடு கூறும் விதமும், அவர்களை வகைப்படுத்தும் விதமும், ஓர் அடையாள மொழியில் அமைந்திருப்பதால் அதனை விளங்கிக் கொள்வது தான் பிரச்சனைக்குரியதாக உள்ளது.

III. **புதிய ஏற்பாடு:** 1 அக்கால யூத மரபு மொழியிலிருந்தும், திருநூல்களிலிருந்தும், அக்கால யூதப்பாரம்பரியத்திலிருந்தும் அதே மரபு மொழியை எடுத்தாள்கிறது புதிய ஏற்பாடு. எனவே, புதிய ஏற்பாடு அதிதூதர்களைப் பற்றியும் (1 தெச 4:16; யூதா 9), கெருபுகளைப் பற்றியும் (எபி 9:5), அரியணை சூழ்வோர், ஆட்சிபுரிபவர், தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர் ஆகியோர் பற்றியும் (கொலோ 1:16), வலிமை மிக்கோர் பற்றியும் (எபே 1:21) பேசுகிறது. இத்தகைய படிமரபுடைய அமைப்பை எடுத்துக்கூறுவது இடத்திற்கு ஏற்றாற்போல் மாறுபடுகின்றது. இது நிலையான போதகப் பண்பைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டைப் போலவே இவற்றின் அடிப்படை வேறொன்றை மையமாகக் கொண்டுள்ளது; அதாவது, இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

2. வானதூதர்களும் கிறிஸ்துவும்: இயேசுவின் சிந்தனையில் வானதூதரின் உலகமும் பங்குபெறுகின்றது. நற்செய்தியாளர்கள் இயேசு வானதூதர்களோடு கொண்ட நெருக்கமான தொடர்பு பற்றிப் பேசுகின்றனர் (மத் 4:11; லூக் 22:43). இயேசு வானதூசர்களைச் செயல்பாடு மிக்க உண்மையான உயிர்களெனக் கூறுகிறார். அவர்கள் மனிதரைக் காக்கும் அதே நேரத்தில் தந்தையின் முகத்தையும் பார்க்கின்றனர் (மத் 18:10 இணை). அவர்கள் வாழ்வு தசையால் அடிமைப்படுத்தப்பட முடியா வாழ்வாகிறது (மத் 22:30இணை). தந்தைக்கு மட்டுமே தெரியும் இறுதித் தீர்ப்பின் நாள் அவர்கட்குத் தெரியாவிடினும் (மத் 24:36) வானதூதர்களே அதனை நிறைவேற்றுபவர்களாக இருப்பர் (மத் 13:39.49; 24:31). இப்போதிருந்து பாவிகள் மனந்திரும்பும்போது ஏற்படும் மகிழ்வில் தந்தையுடன் வானதூதர்களும் பங்கு பெறுவர் (லூக் 15:10). இவை அனைத்துமே மரபுச் சிந்தனைகளோடு ஒத்துப் போகின்றன.

அவரது வருங்கால மகிமையில் அவரை விவரிக்கும் மறைபொருளான உருவமான மனுமகனோடு வாதூதர்களுக்குள்ள தொடர்பை இயேசு தெளிவுபடுத்துகிறார். மனுமகன் மகிமையோடு இறுதிநாளில் வரும்போது வானதூதர்கள் புடைசூழ வருவார் (மத் 25:31); முற்காலத்தில் யாக்கோபின் ஏணியில் நிகழ்ந்ததுபோல் (ஆதி 28:10) அவர்கள் அவர்மீது இறங்குவர் (யோவா 1:51). வானதூதர்களை அனுப்பி, தேர்ந்து கொள்ளப் பெற்றவர்களை ஒன்று சேர்க்கவும் (மத் 24:31இணை), இறையரசிலின்று ஒதுக்கப்பட்டோரை விலக்கவும் (மத் 13:41தொ) கட்டளையிடுவார். அவரது பாடுகளின் நேரத்திலிருந்து வானதூதர்கள் அவருக்குப் பணிபுரியக் காத்திருக்கின்றனர். எனவே, எப்பொழுதும் அவர்களை இயேசு உதவிக்கு அழைக்கலாம் (மத் 26:53).

தொன்மையான கிறிஸ்தவச் சிந்தனை வானதூதர்கள் அவருக்குத் தாழ்ந்தவர்களே என்று குறிப்பிடும்போது இயேசுவின் சொற்களையே விரிவாக்குகின்றது. அவர் மனுவுருவெடுத்ததால் வானதூதரின் நிலையைவிட, தாழ்நிலையை அடைந்தாலும் (எபி 2:7), இறைமகன் என்ற முறையில் அவைகளின் ஆராதனைக்குரியவராகிறார் (எபி 1:6தொ; காண்க. சங் 97:7). ஆனால், அவரது உயிர்ப்புக்குப்பின் அவர்கள் அனைவரையும் இறைவன் அவருக்குக் கீழ்ப்படுத்துகிறார் (எபே 1:20தொ). அவர்சள் அவராலும், அவரிலும், அவருக்காகவும் படைக்கப்பட்டவர்கள் (கொலோ 1:16). இப்பொழுது வானதூதர்கள் அவரது ஆட்சியை ஏற்றுக்கொள்கின்றனா (திரு

வெளி 5:11தொ; 7:11தொ); இறுதி நாளில் அவரது வழிக்காப்பாளர்களாகச் செயல்படு வார்கள் (2 தெச 1:7; திருவெளி 14:14-16; 1 தெச 4:16). இவ்வாறு வானதூதர்களின் உலகம் அது தியானித்த மறைபொருளான கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தப்படுகிறது (1 திமொ 3:16; காண்க. 1 பேதுரு 1:12).

3. வானதூதர்களும் மனிதர்களும்: இந்த முன்னோக்கில் பழைய ஏற்பாட்டில் வான தூதர்கள் மனிதருக்குச் செய்த அதே உதவி களை இங்கும் தொடர்ந்து செய்வதை நாம் பார்க்கிறோம். விண்ணகத்திலிருந்து இறைச் செய்தி வரும்போது அதன் மறைபொரு ளான தூதுவர்களாக அவர்கள் விளங்குகின் றனர். காபிரியேல் தூதர் இரண்டு முன்னறி விப்புச் செய்திகளையும் தருகிறார் (லூக் 1:19.26). இயேசு பிறந்தபோது விண்ணகத் தூதரணி ஒன்று தென்படுகிறது (லூக் 2:9 14). உயிர்ப்பை அறிவிப்பது வானதூதர் தான் (மத் 28:5தொ). அத்துடன் அப்போஸ் தலர்கள் இயேசுவின் விண்ணேற்றத்தைப் புரிந்துகொள்ள உதவுவதும் வானதூதர்கள் தான் (அ.ப. 1:10தொ). மீட்புப் பணியில் கிறிஸ்துவின் உதவியாளர்கள் என்ற அள வில் (எபி 1:14), மனிதர்களின் பாதுகாப் புக்கு வானதூதர்கள் உறுதியளிக்கிறார்கள் (மத் 18:10; அ.ப. 12:15); புனிதர்களின் செபத்தைக் கடவுளிடம் எடுத்துச் செல் கிறார்கள் (திருவெளி 5:8; 8:3); நீதிமான் களின் ஆன்மாவை விண்ணகத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள் (லூக் 14:22); திருச்சபையைக் காப்பதற்குத் தங்கள் தலை வர் மிக்கேலின் தலைமையில் எதிரியான சாத்தானோடு தொடர்ந்து போராடுகிறார் கள் (திருவெளி 12:1-9).

இவ்வாறு விண்ணக உலகிற்கும் மண் ணக உலகிற்கும் ஒரு நெருங்கிய பிணைப்பு இருக்கிறது (திருவெளி 4:8-11). அத்துடன் விண்ணகத்தில் வானதூதர்கள் என்றுமுள வழிபாட்டைக் கொண்டாடுகின்றனர் (திரு வெளி 4:8-11). அஃதோடு நடக்கும் திருச் சபையின் வழிபாடு ஒன்றிணைக்கப்பெறு கிறது. இயல்பு கடந்த சக்தியின் பிரசன்னங் கள் நம்மைச் சூழ்கின்றன. திருவெளிப்பாட் டின் காட்சியாளர், வழக்கால் புனிதப்பட்ட மரபுமுறை மொழியில் இப்பிரசன்னத்தைச் செயல்முறையான விதத்தில் எடுத்துக்கூறு கிறார். இது நமது மரியாதையைக் கோரு கிறது (காண்க. யோசு 5.13தொ; தானி 10:9; தோபி 12:16). இதனை நாம் ஆரா தனை என நினைத்துக் குழம்பிக் கொள்ளக் கூடாது (திருவெளி 22:8தொ). விவிலியத் தில் காணப்படும் இத்தெளிவான கூற்று களுக்கு அப்பால், சுற்றியிருந்த புறவின உலகிலிருந்து பெரும்பாலும் கடன் வாங்கப்பட்டு விவிலிய மொழியில் புறக் கூறுகளைப் புகுத்தப் பயன்படும் இந்த உருவமைப்புகளின் பொருள் என்ன என்ற கேள்வி ஒருவரில் எழுவது இயல்பு. வானதூதர்களைப் பற்றிய இந்தக் கோட் பாடு மிக எளிதாகத் தீர்க்கப்படக்கூடிய ஒன்றன்று. ஆனால், கடவுளைச் சூழ்ந்து அவரது திருவுளத்தை நிறைவேற்றும் ஆன் மீக உலகின் தன்மையும் அமைப்பும் எத்தகையதாக இருந்தாலும் சரி, மீட்பின் இடைநிலையாளரான கிறிஸ்துவுக்குப் பணிவதன் வழியாகவே, படைப்பு மற்றும் மீட்பு ஆகிய இறைத்திட்டத்திற்குள் ஆன் மீக உலகு இணைக்கப்படுகிறது. இந்த அடிப்படையில்தான் இந்த வானதூதர் பற்றிய சிந்தனை நம் விசுவாசச் சூழலில் இடம் பெறுகிறது.

வான மண்டலம் (HIGHEST HEAVENS HEAVEN OF HEAVENS)

குறுகிய நோக்கில் வானத்தைக் குறிக்க எபிரேயர் இதைப் பயன்படுத்தினர். இது பூமியின் கூரை எனவும் கருதப்பட்டது. தொங்கவிடப்பட்டிருக்கும் வான மண்ட லம் (1 அர 8:27; 2 நாள் 2:6; 6:13) என்பது பூமியின் குவிகை மாடம் போல் உள்ள ஓர் அமைப்பு எனக் கருதப்பட்டது. மெசபொத்தாமியா மற்றும் பிற்கால யூத நாட்டுப்புறப் பாடல்களில் விண்ணகம் ஒன்றன்மேல் ஒன்றாக அமைந்த பல அடுக்குகள் அல்லது நிலைகளைக் கொண் டிருந்ததாகக் கருதப்பட்டது. இந்த அடுக்கு களில் வான மண்டலம் என்பதுதான் மிக உயரத்தில் உள்ள கடைசி அடுக்கு எனக் கருதப்பட்டது.

இதைத்தான் அக்காதியர்கள் 'அனுஷன் வானம்' என்றழைத்தனர். அங்குதான் அவர்களின் தலையான கடவுளான 'அனு' குடிகொண்டிருப்பதாகக் கருதப்பட்டது.

இதை உப 10:14 ''விண்ணின் வானங்கள்'' என்றும், நெகே 9:6 ''விண்வெளி வானங்கள்'' என்றும் மொழிபெயர்க்கின்றன.

வானம் (FIRMAMENT)

ஆதி 1:6-8-இல் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கும் மற்ற இடத்திலும் வானவெளிக்குக் கீழ் உள்ள நீரையும், வானவெளிக்கு மேல் உள்ள நீரையும் பிரிப்பதற்காக உண்டாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இச்சொல்லின் எபிரேயத்தொடர் அடித்து மெல்லியதாக ஆக்கப்பட்ட உலோகத் தகட்டைக் குறிக்கிறது (காண்க. யாத் 39:3; எண் 17:3; எரே 10:8). மேலும், கண்ணாடி போன்ற மேற்பரப்பைக் கொண்ட ஆகாயம் என்று கருதுதல் என்று முன்பு சொன்ன பொருளையே திரும்பச் சொல்கிறது. இக்கருத்து யோபு 37:18-இல் திரும்ப வருகிறது. ''வெண்கல வானம்'' என்ற கோமேருடைய சொற்களில் இக்கருத்து சிறந்த மறுவடிவம் பெறுகிறது.

பழங்கால இஸ்ராயேலில் வானம் ஒரு குவிகை மாடம் அல்லது கூடாரமாகவும் (சங் 104:2), அதிலிருந்து விண்மீன்களும் கோள்களும் தொங்கவிடப்பட்டிருந்தனவாகவும் (ஆதி 1:14-17) கருதப்பட்டிருக்கலாம். மழை மற்ற விண்ணக ஆசீர்களும் வானங்களின் மதகுகள் வழியாக பூமியின் மேல் பொழியப்படலாம் (ஆதி 7:11; 2 அர 7:2; சங் 78:23-24). யோபு 26:13-இல் ஆகாயத்தில் வீசும் காற்று, வான்வெளியை ஒளிர்விக்க, கடவுள் அனுப்பிய அவரது மூச்சாகும் என்று சித்திரிக்கப்படுகிறது.

வானவில் (RAINBOW)

சூரிய ஒளி மழைத்துளிப் படலத்தில் பட்டுப் பிரதிபலிப்பதால் ஏழு வண்ணக் கலவை கொண்ட ஒரு வில் போன்ற வடிவம் பார்ப்பவர்க்குத் தோன்றும். இதன் பெயர்தான் வானவில். புயல் ஓய்ந்த பின்னே மேகங்களுக்கிடையே தோன்றுவதால் இது கடந்து போன புயலின் ஒரு அடையாளமாக இருக்கிறது. இந்த வில் தான் யாவே தனது மின்னல் அம்புகளைச் செலுத்தியபின் விட்டுச் சென்றது (புல 2:4; அப 3:9-11); மேலும், இஃது இனிமேல் தண்ணீரால் உலகை அழிக்கவே மாட்டோம் என யாவே செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாகவும் இருக்கிறது (ஆதி 9:8-17). இதன் அழகு அச்சத்தோடும் வியப்போடும் நோக்கப்பட்டது (சீரா 43:11). விண்ணகத்தின் காட்சிகளுள் இதுவும் ஒன்றாகக் கருதப்பட்டது (எசே 1:28; திருவெளி 4:3; 10:1).

வி

விசாரணை (TRIAL)

I. விவிலியத்தில் பல இடங்களில் விசாரணை காணப்படுகின்றதென்றால், பல தடவைகள், இறைவனே குற்றம் சாட்டப்பட்டவராக, நீதிபதியாக, வாதியாக, வக்கீலாகத் தோன்றுகிறார் என்றால், இதற்குக் காரணம் மற்றவர்களை விட இஸ்ராயேலர்கள் சச்சரவுகளிலும் நீதி விசாரணைகளிலும் கைதேர்ந்தவர்கள் என்பதற்காக அன்று, விவிலியத்தின் இறைவன் நீதியையும் நேர்மையையும் விரும்புபவராக இருப்பதால் தான். இறைவன் தம் சாயலாக மனிதனைப் படைத்ததில், அவன் நன்றியோடு ஏற்றுக் கொள்ளுதலையும், சுதந்தரத்தில் நிலைத்து நிற்பதையும், உண்மையில் அவரோடு ஒன்றித்திருப்பதையும் இறைவன் எதிர்பார்த்தார். மனிதன் பாவம் செய்த பின்னும், இறைவன் தம் படைப்புப் பற்றியும் அவனது அறிவைப் பற்றியும் நம்பிக்கை இழந்து விடவில்லை. அவன் நிராகரிக்கப்பட்டாலும், அவனைத் தேடிச்செல்ல முனைவார். அவனை இறைவன் தண்டிக்க வேண்டும் என்றால், அவனுக்குச் செவிமடுக்காமலும், அவன் தவறில் உள்ளான் என்றும் தாம் செய்வது சரியானதென்றும் அவனை உணரச்செய்யாமலும் இறைவன் அவனைத் தண்டிப்பதில்லை. இவ்வாறு இறைவன் வெற்றி பெறுவது உண்மையின் வலிமையால் மட்டுமே. ஒரு விசாரணை என்றால், இரண்டு குழுக்களிடையே பூசல்களும் வழக்காடுதலும் இருக்க வேண்டும். அதே சமயத்தில் ஒரு சில அடிப்படை விதிகளில் இருவரும் ஒத்துப்போக வேண்டும். விசாரணை நடந்து, தீர்ப்புக் கூறாத வரையில் இருவரும் ஒப்புரவாவதற்கு இன்னும் வாய்ப்பிருக்கிறது. அப்படியே தீர்ப்பு ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டாலும், முந்தைய வாக்குவாதங்களின் ஒளி நிலைத்து நிற்கிறது; ''அனைவருடைய வாயையும் அடைக்கிறது'' (உரோ 3:19); இறைவனது நீதியை ஒளிரச் செய்கிறது.

உடன்படிக்கையின் சாசனம் மற்றும் அறிவிப்பு என்ற அளவில், பழைய ஏற்பாடு முழுவதும் இறைவனுக்கும் அவர்தம் மக்களுக்கும் இடையே நிகழும் வாதங்களைப் பற்றியே முழுவதும் ஈடுபாடு காட்டுகிறது. முன் கேள்விப்பட்டிராத முறையில், இறைவன் செயலால் இயேசுவின் வருகை இந்த வாதத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறது. பாவத்தைக் குழப்பி, விசுவாசத்தால் தம் மகனோடு வெறுமனே ஒன்றிக்கொள்வதால், பாவிகள் தங்களை ஏற்புடையவர்களாக்கிக் கொள்ள இறைவன் வாய்ப்பளிக்கிறார். நிகழ்ச்சிகளின் இந்தத் திடீர்த் திருப்பம் புதிய வடிவம் எடுக்கிறது. இனிமேல், இயேசுவின் விசாரணை பற்றியும், அதில் இயேசு கொள்ளும் பங்குக்கு ஏற்பவும், மனிதனின் விசாரணை இறைவன் முன் நிகழும்.

II. **பழைய ஏற்பாட்டில் இறைவனும் அவர்தம் மக்களும் விசாரணையில்:**

1. இறைவனோடு பாவியின் விசாரணை: இறைவனோடு விசாரணையில் இறங்குவதும், அவர் பொய் சொல்வதாகவும் தீமை செய்வதாகவும் சந்தேகப்படுவதும் அடிப்படைச் சோதனையாகும். இந்தச் சோதனையைப் பாம்பு ஏவாளின் உள்ளத்திலே எழச் செய்தது; ''நீங்கள் சாகவே மாட்டீர்கள்;..... நீங்கள் கடவுளைப்போல் நன்மை தீமை அறிவீர்கள் என்று கடவுளுக்குத் தெரியும். அவர் உங்களை ஏமாற்றுகிறார்'' (ஆதி 3:4-5). பாவியான ஆதாமின் எதிர்ப்பதில்: ''என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண் மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள்; நானும் உண்டேன்''. எல்லாத்தீமையும் உம்மிடமிருந்து வருகின்றது (3:12). இதுவே பாலைவனத்தில் இஸ்ராயேலின் இறவாத பாவமாகும். எகிப்திலிருந்து தங்களைக் காப்பாற்றியவர் இறைவனே என்பதை மறந்து அவரது ஆற்றல் மற்றும் பிரமாணிக்கம் பற்றி சந்தேகம் கொண்டனர். செங்கடலைக் கடந்தபின், மெரிபா நிகழ்ச்சி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு (யாத் 17:7). மெரிபா என்ற சொல்லினுடைய வேர்ச்சொல்லின் பொருள் சோதனை. சோதித்தல் என்பதாகும். இந்த நிகழ்ச்சி,

''கேடுகெட்ட தலைமுறையின்'' (உப 32:20) எல்லாத் தவறுகளையும், யாவேக்கு எதிராக அவருடைய மக்கள் கொண்டு வந்த எல்லா முறையீடுகளையும் (எரே 2:29) அறிவிக்கிறது. விசுவாசம் இங்கு எழும் பிரச்சனையாகும். விசுவசிக்க மறுப்பது இறைவனுக்கு எதிராகத் தங்களுக்கே கார ணம் கூறிக்கொள்வதும், அவரைச் சந்தேகப் படுவதும், அவரைச் சோதிப்பதும் ஆகும்.

2. தம் மக்களோடு இறைவனின் விசாரணை: சந்தேகப்படுவதை இறைவனால் தாங்கிக் கொள்ள முடியாது. அஃது அவரது அன்புக்கு அவமதிப்பாகும். எனவே, அவரது முறையில் இறைவன் தம் மக்களோடு வழக்காடுகிறார் (ஓசே 4:1; 12:3; எசா 3:13; மீக் 6:2; எரே 2:9). இந்த விசாரணை, இறைவாக்கினர் பாரம்பரியப்படி உடன் படிக்கையையும், அது விசுவாசத்திற்கு அளிக்கும் அடையாளங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். தாம் தேர்ந்தெடுத்த மக்களோடுதான் இறைவன் விசாரணையில் ஈடுபடுகிறார். ஆயினும், பிரபஞ்சத்தின் மத்தியில் உடன்படிக்கை வெளிப்படுத்தப் படும் அளவிற்கு ஏற்ப இந்த விசாரணை ''மக்களினங்களுக்கு எதிரான வழக்காகவும்'' (எரே 25:31), போலிக் கடவுள்களுக்கு எதிரான வழக்காகவும் விரிவாகிறது (எசா 4:21-24; 43:8-13; 44:6தொ).

இந்த விசாரணை, ''மலைகள், குன்றுகள், மண்ணுலகின் நிலையான அடித்தளங்கள்'' (மீக் 6:1தொ; காண்க. சங் 50:4) அடங்கிய மிகவும் ஆரவாரமான, மிகவும் பரந்த பின்னணியில், அளிக்கப்படும் பகிரங்கமான விளக்கமாகும். உலகம் முழுவதுமே சாட்சி கூற அழைக்கப்படுகிறது. கேதாரும், சைப்ரசின் தீவுகளும் (எரே 2:10), எருசலேமில் குடியிருப்போரும், யூதாவில் வாழ்வோரும் (எசா 5:3) நீதி வழங்க அழைக்கப் படுகின்றனர்.

இங்கு இறைவன், தம் சாட்சிகளோடு (எசா 43:10; 44:8) குற்றம் சாட்டுபவராகவும் (சங் 50:7.21; ஓசே 4:1 5), எல்லா வழிவகைகளும் தீர்ந்து விட்ட நிலையில் தன் ஆற்றலின் இறுதியிலுள்ள பலியாளாகவும் (மீக் 6:3தொ; எரே 2:9; எசா 43:22-25) காட்சி அளிக்கிறார். இஸ்ராயேல் தனது வாதங்களை எடுத்து முன்வைக்குமாறு கேட்கிறார் (எசா 1:18; 43:26; மீக் 6:3). ஆனால், ஏமாற்றும் மறுதலிப்புகள் மட்டுமே அவருக்குக் கிடைத்தன (எரே 2:35). ஒருவரும் அவருக்குப் பதில் கூற முடியாது. ''உயிர் வாழ்வோர் எவரும்'' அவர்முன் ஏற்புடையவராக முடியாது (சங் 143:2). தண்டனையாக மட்டுமே இருக்கக்கூடிய தீர்ப்பை அவர் கூற வேண்டியதுமட்டுமே எஞ்சியுள்ளது (ஓசே 2:4; 4:1தொ; எரே 2:9.29). இஃது அவர் மட்டுமே பேசமுடியும் என்பதையும், அவர் பக்கமே நேர்மையிருக்கிறது என்பதையும் தெளிவாக்குகிறது (எசா 41:24; 43:13தொ; 44:7; சங் 50:7.21; 51:6). ஆயினும், தண்டனையின் மத்தியிலேயே மற்றொரு உபாயம் கைக்கொள்ளப் படுகிறது; ''வாருங்கள், இப்பொழுது நாம் வழக்காடுவோம்.... உங்கள் பாவங்கள் கருஞ்சிவப்பாய் இருக்கின்றன; எனினும், உறைந்த பனியைப்போல் அவை வெண்மையாகும்'' (எசா 1:18; காண்க. ஓசே 2:16-25).

3. இறைவனோடு யோபின் விசாரணை: இறைவனைக் குற்றம் சாட்டுதல் தலையாய பாவம் என்றால், இஃது அடிக்கடி மனிதனுக்கு ஏற்படும் சோதனையாகும் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை நேர்மைப்படுத்த முடியவில்லையென்றால், மனதைக் குழப்பும் இறைவனுடைய வழிகளின் காரணமாக, இஃது அழிவுக்கு இட்டுச் செல்லலாம். உலகின் துன்பங்களும் தீமைகளும் இறைவனைப் பிரதிவாதியாக ஆக்கவில்லையா? இந்தச் சோதனைக்கு உச்சநிலையான எடுத்துக்காட்டு யோபு நூலாகும். இறைவனுக்கு எதிரான விசாரணையாக இந்நூல் அமைந்துள்ளது. யோபு அனுபவிக்கும் துன்பங்களின் தீமையெல்லாம் இறைவனிடமிருந்தே வருவதால் (யோபு 6:4; 10:2; 16:12; 19:21), இறைவன் தம்மையே எங்பிப்பது அவரது கடமையில்லையா? இறைவனுக்கு எதிராக

நேர்மையைத் தன் பக்கம் கொண்டிருப்ப தாகக் கற்பனை செய்வது மடத்தனமாகும் என்பதை யோபு நன்கு அறிவார் *(9:1-13)*. ஆனால், யோபுவால் ''இறைவனுக்குப் பதிலுரைக்க'' முடிந்தால் *(9:14)*, தன் நடத்தையை இறைவன் முன் எண்பிக்க முடிந்தால் *(13:1தொ)*, வெறுமனே அவர் முன் வர முடிந்தால், தனது வழக்கு வெற்றி பெறும் என்றும் *(23:3-7)*, தனது ''மீட்பர்... தன்னைப் பாதுகாப்பார்'' *(19:25தொ)* என் றும் யோபு அறிவார். இங்கு வழக்காடுத லில் பயன்படும் மொழி காணப்படுகிறது. ஆனால், அவரது முறையீடு விசாரணை யாக மாறும் மற்றும் அவரது ஐயப்பாடு குற்றம் சாட்டுதலாக மாறும் சரியான கட்டத்தில் யோபு நிறுத்திக் கொள்கிறார். அவரால் இறைவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், இறைவனைக் குற்றம் சாட்டும் சோதனைக்கு இடம் கொடுக்கவில்லை. இறைவன் தன் பக்கம் இருப்பதாகவும் தான் அவரது ஊழியன் என்பதையும் மறந்து விடவில்லை.

இறைவனிடம் வெல்ல முடியாத கேள்வி களைக் கேட்பது மனிதனுக்கு இயல்பு (காண்க. எரே *12:1*). அத்தகைய கேள்வி களைக் கேட்டு யோபு பாவம் செய்ய வில்லை. ஆயினும், தன் கேள்விகளைக் கைவிடக் கற்றுக்கொள்வது அவசியமா யிற்று. இறைவனே இடையீடு செய்கிறார். மனிதன் தன் குருட்டுத்தனத்தைப் புரிந்து கொண்டு *(38:1தொ)*, தன் கேள்விகளை யெல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்கிறான் *(42:6)*. எந்தத் தீர்ப்பையும் எடுத்துக்கூறும் தேவையின்றி, இறைவனது பிரசன்னமே எல்லாவற்றையும் விளக்கப் போதுமான தாக உள்ளது.

III. **கிறிஸ்து இயேசுவில் இறைவன் விசா ரணையை முடிக்கிறார்:** பாவத்தினால் தோற்றுவிக்கப்பட்டு, இறைநீதியால் பின் தொடரப்பட்ட விசாரணை இயேசு கிறிஸ்து வில் இறுதிநிலையை அடைகிறது. இறை வன் அளிக்கும் விடை வியப்பளிக்கும் துணிகரம் கொண்டதாகும்; ஆனால், அறிவு மற்றும் சட்டம் ஆகியவற்றின் கோரிக்கை களைக் கடுமையாகக் கடைப்பிடிக்கிறது. அவை இல்லாமல் விசாரணை பொருளற்ற தாகும். இங்குப் பாவம் விட்டுக் கொடுத்த லின்றித் தீர்ப்பிடப்படுகிறது. எல்லா வடி வங்களிலும் எந்த ஆட்சியிலும், இவை புற இனத்தாரைச் சார்ந்ததாகவோ, யூத இனத் தாரைச் சேர்ந்ததாகவோ இருந்தாலும், இயேசுவோடு கொள்ளும் சந்திப்பில், பாவம் மிகக்கொடிய தீமையாகவும், இறை வனுக்குக் காட்டும் அடிப்படையான நன்றி யின்மையாகவும், மனிதனின் சீர்செய்ய முடியாத அழிவாகவும் தோன்றுகிறது (உரோ *1:18-3:20*). இயேசுவின் நற்செய்தி வழியாக வெளிப்படும் புனிதம் ஒவ்வொரு உள்ளத்திலும் மறைந்திருக்கும் பொய்யைத் திறந்துகாட்டுகிறது *(3:4)*; அனைவருடைய நாவையும் அடைக்கிறது *(3:19)*; உண்மை யுள்ள இறைவனின் வெற்றியை ஒளிரச்செய் கிறது *(3:4)*.

ஆனால், இந்த வெற்றியே ஒரே சமயத் தில் மனிதனது மீட்பு ஆகும். பாவி தனது வழக்கை இழக்கிறான்; தோல்வியை ஏற்கி றான். தனது சொந்த ஏற்புடைமையின் பாதுகாப்புகளைக் கைவிடுகிறான் (பிலி *3:9*). அதன் விளைவாக இயேசு கிறிஸ்து வில் இறைவனது மன்னிப்பு, அருள், மற்றும் நீதியில் விசுவாசம் கொள்கிறான்; அதனால், தனது ஏற்புடைமையையும் (உரோ *3:21-26*), விலையையும், இறைவன் முன் மதிப்பையும் பெறுகிறான். இயேசு கிறிஸ்துவிலும் அவரது இறப்பின் மீட்பு ஆற்றலிலும் விசுவசிப்பது, ஒரே சமயத் தில், இந்த இறப்புக்குப் பொறுப்பான தன்னுடைய சொந்தப்பாவங்களை மறுப் பதும் தமது எதிரிகளுக்காகத் தமது ஒரே மகனை மரணத்துக்குக் கையளிக்கச் செய் யக்கூடிய இறைவனது புரிந்து கொள்ள முடியாத அன்புக்கு உரியவன் என்பதை *(5:6-10; 8:32)* ஏற்றுக்கொள்வதும் ஆகும். அன்புக்கும் நன்றிக்கும் தன்னைக் கையளிப் பதால் இறைவனுக்கு எதிரான எந்த வாதத் தையும் குற்றச்சாட்டையும் மனிதன் கை விடுகிறான். விசாரணை முழு ஒப்புரவில் முடிகிறது.

IV. **இயேசுவின் விசாரணை:**

1. இந்த ஒப்புரவு விசுவாசத்தில் மட்டுமே நிகழ்கிறது. இந்த விசுவாசத்தின் பொருள் கிறிஸ்துவும், அவரது இறப்பும் உயிர்ப்புமாகும். இறைவனைக் குற்றம் சாட்ட நம்மில் எழும் தன்னிச்சையான இயக்கத்தை மேற்கொள்ள, கிறிஸ்துவில் அவரது தந்தையால் கையளிக்கப்பட்ட அன்பார்ந்த மகனை நாம் காண வேண்டும். ஆனால், பாவி இறைவனின் தாராளத் தன்மையை ஏற்க மறுக்கிறான்; அவர் அனுப்பியுள்ளவரை நிராகரிக்கிறான். அவரது தூதின் சான்றாக அவர் செய்யும் அருஞ்செயல்களில் இறைநிந்தனையைக் காண்கிறான். கயாபா முன்னும், எருசலேமின் மற்ற நீதிமன்றங்கள் முன்னும் நடந்த விசாரணை, முதல் பாவத்தின் காலமுதல் இறைவனுக்கு எதிராக நடத்தப்படும் விசாரணையின் நிறைவான மாதிரியாகும். இறைவனிடம் தன்னையே கையளிக்க முடியாமல், அவரின் அன்பினால் பெற்றுக் கொண்ட எல்லாச் சான்றுகளையும் அவருக்கு எதிராகவே மனிதன் திருப்புகிறான்.

2. பாடுகளை எடுத்துக்கூறும் எல்லா நற்செய்தி விவரிப்புகளும் விசாரணையின் மையத்தில் ஒரு தீர்வான கேள்வியைக் கொண்டுள்ளன. இயேசு கிறிஸ்து, உலக மீட்பின் பொறுப்பைப் பெற்றுள்ள இறைவனின் தூதரா? (*மத் 26:63* இணை; *27:11*இணை; *யோவா 19:7*). இந்த விசாரணை விவரிப்புகள் இறைவனோடு இயேசு கொண்டுள்ள பிணைப்புப் பற்றிய உறுதியை வலியுறுத்த முயல்கின்றன. இந்தப் பிணைப்பை மனிதனிடமிருந்தோ இறப்பிலிருந்தோ வரும் எந்தச் சக்தியும் முறிக்க முடியாது; அவருடைய எதிரிகள் தம்மிடையே நிலவிய அவர்கள் உண்மையை ஏற்க மறுத்தது, யூத விசாரணையில் நிகழ்ந்த பொய்ச்சாட்சிகள் (*மத் 26:59*), பிலாத்துவின் கோழைத்தனம் (*27:18-24*), ஏரோதின் வீண்பெருமை (*லூக் 23:8-11*), பரபாவுக்கு முன்னுரிமை அளித்தல் (*23:25*), மேலும் இறைவன் அவரை விரும்பிக் கையளித்து (*அ.ப. 2:23; மத் 27:46*) பாவத்தின் ஆட்சிக்குக் கைவிட்ட சூழ்நிலைக்குக் (*லூக் 22:53; யோவா 14:30*தொ; *2 கொரி 5:21*) காட்டும் சாக்குப்போக்கு (*லூக் 23:34; அ.ப. 3:24*) ஆகிய யாவும் இச்சக்திகளாக இருக்கலாம்.

3. யோவானின் நற்செய்தி இயேசுவின் விசாரணையில் எடுத்துக் காட்டுத் தன்மையை இன்னும் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. இந்த வரலாறு அவரது பொது வாழ்க்கை முழுவதும் வெளிப்படுகிறது. எருசலேமில் அவர் செய்த முதல் அருஞ்செயலுக்குப்பின் ''யூதர்கள் அவரைத் துன்புறுத்தினார்கள்'' (*யோவா 5:16*); ஏற்கெனவே, அவரைக் கொல்ல முயற்சித்தனர் (*5:18*; காண்க. *மாற் 3:6*). யூதர்களுக்கும் அவருக்குமிடையில் நடந்த தர்க்கங்கள் விசாரணை வடிவிலேயே உள்ளன. அவற்றில் தனது சான்றுகளையும் யோவானுடைய சான்றுகளையும் (*யோவா 5:33*), தனது அடையாளங்களையும் செயல்களையும், இறுதியாக இறைவனுடைய தனித்தன்மையுடைய சாட்சியையும் (*5:31-37; 8:13-18*) எடுத்துக் கூறுகிறார். ஒத்தமை நற்செய்திகளில் காணப்படுவதுபோல், இந்த விசாரணையிலும் இயேசுவின் இறை மற்றும் மெசியா ஆட்தன்மையும், இறை மகன் என்ற பட்டமும் ஆகிய அதே உண்மைகள் (*5:18; 8:25*தொ; *10:22-38; 19:7*) போராடி நிலைநாட்ட வேண்டிய நிலையில் உள்ளன.

4. இயேசுவின் விசாரணையை மறுபரிசீலனை செய்வதே திருச்சபையின் முதல் பொதுச் செயலாக உள்ளது. அப்படி மறுபரிசீலனை செய்வதே அதன் நிலையான தூதாக உள்ளது. இயேசுவை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச் செய்ததில், இறைவன் தமது நீதியைப் பகிரங்கமாக எடுத்துக்காட்டியுள்ளார்; அவரது எதிரிகளைக் கலங்கடித்துள்ளார். அவர்கள் சிலுவையில் அறைந்தவரை ''ஆண்டவரும் மெசியாவும்'' ஆக ஆக்கியுள்ளார் (*அ.ப. 2:36*). ஆயினும், ஆற்றலின் வெளிப்பாட்டுக்குப் பதிலாக உயிர்ப்பை விசுவாசத்திற்கும் மனந்திருப்புதலுக்கும் உரிய கோரிக்

கையாக்கி, இறைவன் தமது வெற்றியை மன்னிப்பின் வெற்றியாக ஆக்கியுள்ளார். பாவிகள்மேல் இறைவன் கொள்ளும் வெற்றியும், இந்த வெற்றி பாவிகளுக்குக் கொண்டு வரும் மீட்புமாகிய இரட்டைச் செய்தி, புதிதாகத் தோன்றிய திருச்சபையின் போதகத்தில் முக்கியமான செய்தியாகும் (அ.ப. 2:36.38; 3:13.19; 4:10.12; 5:30தொ; 10:39தொ.43). இஃது உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் காணப்படும் பவுலின் வெளிப்படையான இறையியலோடு துல்லியமாக ஒத்துப்போகிறது.

கிறிஸ்தவன் உலகுக்கு அளிக்கும் சாட்சியம் இத்தகையதே. எருசலேமில் அப்போஸ்தலர்களின் தூதைப்போல் உலகம் இறைவனுக்கும் கிறிஸ்துவுக்கும் எதிராகத் தொடர்ந்து செய்யும் விசாரணையின் அநீதியை உலகுக்கு எடுத்துக்காட்டுவதே கிறிஸ்தவனின் தூதாகும். கிறிஸ்தவன் நீதி மன்றங்களிடம் ஒப்படைக்கப்படுவதும், அயலாரால் குற்றம் சாட்டப்பட்டுக் கையளிக்கப்படுவதும் இயல்பானதே (மாற் 13:9.13 இணை). கிறிஸ்துவின் சீடர்களை உலகம் வெறுப்பதும் துன்புறுத்துவதும் (யோவா 15:18தொ), அவர்கள் உலகமனைத்திற்கும் இரக்கமற்ற முறையில் வேடிக்கையாதலும் (1 கொரி4:9) தவிர்க்க முடியாததாகும். ''அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு விளக்கம் கூறும்படி யாராவது கேட்டால் தக்க விடை பகர எப்போதும் தயாராக இருக்க வேண்டும்'' (1 பேதுரு 3:15). ஆனால், இந்த விசாரணை அவர்களுடையதன்று; அஃது கிறிஸ்துவினுடையதாகும். அவர்தான் பின்தொடரப்படுகிறார். அவருக்கு அவர்கள் சாட்சியம் கூற வேண்டும். ஆகவே, இந்தச் சாட்சியம் அவர்களுடையதன்று; அது பரிசுத்த ஆவியினுடையதாகும் (மற் 13:1). வெல்ல முடியாத துணையாளரான பரிந்துரையாளர், பின்ந்தவர்களின் சொல்லாலும் வாழ்வாலும், உலகத்தின் அநீதியையும், இயேசு கிறிஸ்துவின் நீதியையும் விசுவாசிகளுக்கு வெளிப்படுத்தி உலகம் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை'' எனக் காட்டுவார் (யோவா 16:8 11).

விசுவாசம் (FAITH)

I. 1.விவிலியத்தின்படி விசுவாசமே சமய வாழ்வு அனைத்திற்கும் ஊற்றும் மையமும் ஆகும். காலத்தின் இறைவன் செயலாற்றும் திட்டத்திற்கு விசுவாசத்தால் மனிதன் பதில் அளிக்க வேண்டும். ''விசுவசிக்கிற யாவருக்கும் தந்தையான'' (உரோ 4:11) ஆபிரகாமின் அடிச்சுவட்டில், பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டான ஆள்கள் விசுவாசத்தில் வாழ்ந்து இறந்தனர் (எபி 11). இந்த விசுவாசத்தை ''இயேசு நிறைவு பெறச் செய்கிறார்'' (12:2). ''விசுவசித்தவர்களும்'' (அ.ப. 2:44), ''விசுவசிப்பவர்களுமே'' (1 தெச 1:7) இயேசுவின் சீடர்களாவர்.

2. விசுவாசத்தைக் குறிக்கு எபிரேயத்தில் சொற்கள் பல பயன்படுகின்றன. அவை விசுவாசியின் ஆன்மீக மனநிலையைப் பிரதிபலிக்கின்றன. அவற்றில் இரு வேர்ச் சொற்கள் முக்கியமானவை. ஒன்று ''ஆமன்'' (காண்க. ஆமென்). இது திண்மையையும் உறுதியையும் பொருளாகச் சுட்டுகிறது. மற்றது ''பாற்றா'' என்ற சொல்லாகும். இது பாதுகாப்பையும் நம்பிக்கையையும் பொருளாகச் சுட்டுகிறது. கிரேக்கச் சொற்றொகுதி பல்வேறுபட்டவையானாலும், கிரேக்கச் சமயத்தில் விசுவாசத்திற்கு இடமே இல்லை என்று கூறலாம். எழுபது நூல் விவிலியத்தைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தபோது, விசுவாசத்தைக் குறிக்க பொருத்தமான கிரேக்கச்சொல் கிடைக்கவில்லை. ''பாற்றா'' என்ற எபிரேய வேர்ச்சொல்லின் பொருளை உணர்த்த ''எல்பிஸ்'', ''எல்பிசோ'', ''பெப்போயிதா'' (elpis, elpizo, pepoitha) ஆகிய சொற்களையும், ''ஆமன்'' என்ற சொல்லின் பொருளை உணர்த்த ''பிஸ்திஸ்'', ''பிஸ்தேயோ'', ''அலேத்தேயா'' (pistis, pisteo, aletheia) ஆகிய சொற்களையும் பயன்படுத்தியது. புதிய ஏற்பாட்டில் பிற்காலக் கிரேக்கர் சொற்களில் அறிவு சார்ந்த பண்பு முதன்மை பெறுகிறது. சொல்லாய்வு, விவிலியத்தில் விசுவாசத்திற்கு இரு கோணங்களைக் காட்டுகிறது. ஒன்று, ''பிரமாணிக்கமுள்ள'' ஆளின்பால் காட்டும் நம்பிக்கை. இது மு

மனிதனையும் ஈடுபடுத்துகிறது. மற்றது, காணாத உண்மைகளின்பால் (எபி 11:1), சொற்களால் அல்லது அடையாளங்களால் உணர்த்தும் அறிவு இயக்கமாகும்.

3. விசுவாசிகளின் தந்தை ஆபிரகாம்: கல்தேயாவில் ''மற்றத் தெய்வங்களுக்கு ஊழியம்'' செய்தவரின் மகனான ஆபிரகாமை அழைத்து (யோசு 24:2; காண்க. யூதி 5:6தொ) யாவே ஒரு நாட்டையும் பெரிய இனத்தையும் வாக்களித்தார் (ஆதி 12:1தொ). இவை நிறைவேறும் என்ற நம்பிக்கைக்கு இடம் இல்லாதபோதும் (உரோ 4:19), ஆபிரகாம் ''ஆண்டவர் மீதும்'' (ஆதி 15:6) அவரது சொல்லிலும் நம்பிக்கை கொண்டார்; அழைப்பை ஏற்றார். அந்த வாக்குறுதியில் தன் வாழ்வைத் தொடங்கினார். சோதனை நாளில் வாக்குறுதியின் பயனான தம் ஒரே மகனையும் பலியாக்குமளவுக்கு (ஆதி 22) அவரது விசுவாசம் வலிமை வாய்ந்ததாக இருந்தது. உண்மையில் இறைவனின் சொல் அதன் பலனைவிட அதிக உண்மை கொண்டது. இறைவன் பிரமாணிக்கமுள்ளவர் (காண்க. எபி 11:11); எல்லாம் வல்லவர் (உரோ 4:21).

இது முதல் ஆபிரகாம் விசுவாசியின் மாதிரியாகத் திகழ்ந்தார் (சீரா 44:20). உண்மையான இறைவனையும் (சங் 47:10; காண்க. கலா 3:8), அவரது மகனையும் (யோவா 8:31-41.56) கண்டுபிடிப்பவர்களையும், இறைவனிடமும் அவரது வார்த்தையிலும் மட்டும் தங்கள் மீட்பைக் காண்பவர்களையும் (1 மக் 2:52-64; எபி 11:8-19) ஆபிரகாம் தம் வாழ்வில் முன்னறிவிக்கிறார். ஒரு நாள் ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி அவரது வழித்தோன்றலான (கலா 3:16; உரோ 4:18-25) இயேசுவின் உயிர்ப்பில் நிறைவேறும். அப்போது, ஆபிரகாம் ''பல இனத்தாருக்கும் தந்தையாவார்'' (உரோ 4:17தொ; ஆதி 17:5); விசுவாசத்தால் இயேசுவோடு ஒன்றிக்கப்படும் அனைவருக்கும் தந்தையாவார்.

II. பழைய ஏற்பாடு:

1. விசுவாசம், உடன்படிக்கையின் கோரிக்கை: ஆபிரகாமின் இறைவன் எகிப்தில் துன்புறும் தம் மக்களைச் சந்திக்கிறார் (யாத் 3:16); மோசேயை அழைத்து அவருக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார்; இஸ்ராயேலை அதன் நாட்டிற்கு அழைத்துச் செல்வதில் அவரோடு இருப்பதாக வாக்களிக்கிறார் (3:1-15). ''கண்ணுக்குப் புலப்படாத இறைவனைக் கண்ணால் பார்ப்பவர் போல'' மோசே விசுவாசத்தால் இறைவனது திட்டத்திற்குப் பதில் அளிக்கிறார்; காலப்போக்கில் பலவீனமானவர் ஆனாலும் (எண் 20:1-12; சங் 106:32தொ), ''தளராமல் நிலைத்து நின்றார்'' (எபி 11:23-29). இடையாளர் என்ற அளவில், மோசே இறைவனது திட்டத்தை மக்களுக்கு அறிவிக்கிறார். அவர் செய்த அருஞ்செயல்கள் அவருடைய பணி இறைவனிடமிருந்து வருகிறது என்று சுட்டிக்காட்டுகின்றன. முழு நம்பிக்கையுடன் (எண் 14:11; யாத் 10:9) ''ஆண்டவரிடமும் அவர் அடியார் மோசேயிடமும் நம்பிக்கை வைக்க'' (யாத் 14:31; எபி 11:29) இஸ்ராயேலும் அழைக்கப்படுகிறது.

இஸ்ராயேல் வரலாற்றில் உடன்படிக்கை இறைவனது ஒப்பந்தத்தைத் திருநிலைப்படுத்துகிறது. இதற்குப் பதிலாக, இஸ்ராயேல் இறைவனின் வார்த்தைக்குப் பணியக் கோரப்படுகிறது (யாத் 19:3-9). ''யாவேக்குச் செவிமடுப்பது'' முதலில் ''அவரில் விசுவாசம் கொள்வதாகும்'' (உப 9:23; சங் 106:24தொ). இனி, இஸ்ராயேலின் வாழ்வும் சாவும் அதன் சுதந்தரமான பிரமாணிக்கத்தைச் சார்ந்திருக்கும் (உப 30:15.20; 28; எபி 11:33); அவர்களை இறைமக்களாக்கும் விசுவாச இணக்கத்தைக் (ஆமென்) கடைப்பிடிப்பதில் அடங்கியிருக்கும் (காண்க. உப 27:9-26). பாலைவனத்தைக் கடத்தல், வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றுதல், கானானில் குடியேறுதல் ஆகியவை அடங்கிய வரலாற்றில் இஸ்ராயேலர் எண்ணற்ற முறை பிரமாணிக்கம் தவறுகிறார்கள். எனினும், இக்காலத்தைப்பற்றி ''விசுவாசத்தி

னால்தான் எரிகோவின் மதில்கள் விழுந்தன.... கிதியோன், பாராக்கு, சிம்சோன், இப்தாகு, தாவீது ஆகியோரைப் பற்றிக் கூற எனக்கு நேரமில்லை'' (எபி 11:30 தொ) என்று சுருக்கமாகக் கூறலாம்.

உடன்படிக்கை வாக்குறுதிகளின்படி (உப 7:17-24; 31:3-8) இஸ்ராயேலர் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருந்த போதெல்லாம் யாவேயின் எல்லாம் வல்ல பிரமாணிக்கம் இஸ்ராயேலர் பணியில் எப்போதும் வெளிப்படுத்தியது. இஸ்ராயேலர் வரலாற்றில் கடந்த காலத்தில் நடந்த அருஞ்செயல்களை, சிறப்பாக யாத்திரை நிகழ்ச்சியை, கண்ணுக்குப் புலப்படாத இறைவனின் செயலாக அறிவிப்பது, இஸ்ராயேலுக்கு விசுவாச அறிக்கையாகும் (உப 26:5-9; காண்க. சங் 78; 105). இந்த விசுவாசம் தலைமுறை தலைமுறையாக, சிறப்பாக பெரும் ஆண்டு விழாக்களின் போது (யாத் 12:26; 13:8; உப 5:20), கையளிக்கப்பட்டது. இவ்வாறுதான் மக்கள் தங்கள் இறைவனின் அன்பை உயிருள்ள விதத்தில் நினைவு கூர்ந்தனர் (சங் 136).

2. இறைவாக்கினரும் இன்னலுக்குட்பட்ட இஸ்ராயேலின் விசுவாசமும்: இஸ்ராயேலர் நாடுகடத்தப்படும் வரை, அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட இன்னல்கள் யாவும் அவர்கள் விசுவாசத்திற்குக் கடும் சோதனையாய் அமைந்தன. யாவேயில் மட்டும் கொண்ட விசுவாசத்தை அழித்த சிலை வழிபாட்டையும் (ஓசே 2:7-15; எரே 2:5-13), வழிபாட்டின் கோரிக்கைகளை அழித்த புறச்சடங்குகளையும் (ஆமோ 5:21; எரே 7:22தொ), ஆயுத பலத்தால் மீட்பைத் தேடுதலையும் (ஓசே 1:7; எசா 31:1தொ) இறைவாக்கினர்கள் கண்டனம் செய்தனர்.

விசுவாசத்தை வலியுறுத்திய தூதுவர்களில் மிகச் சிறந்தவர் எசாயா ஆவார் (எசா 30:15). அவர் அச்சத்தில் மூழ்கியிருந்த ஆகாசை யாவே மீது அமைதியான நம்பிக்கை கொள்ள அழைக்கிறார் (7:4-9; 8:5-8). ஏனெனில், தாவீது வீட்டாருக்கு அளித்த வாக்குறுதிகளை யாவே காப்பாற்றுவார் (2 சாமு 7; சங் 89: 21-38). யாவே எருசலேமைக் காப்பாற்ற வழி செய்த விசுவாசத்தால் எசேக்கியாவைத் தூண்டுகிறார் (2 அர 18-20). விசுவாசத்தில்தான் இறைவனின் புரியாப் புதிரான ஞானத்தைக் கண்டு கொள்கிறார் (எசா 19:11-15; 29:13—30:6; காண்க. 1 கொரி 1:9தொ).

எருசலேம் கைப்பற்றப்பட்டு, நாடு கடத்தப்பட்டபோது, இஸ்ராயேலரின் விசுவாசம் மிகவும் சோதனைக்கு உள்ளாகியது. ''ஏழைகளும் வறியோரும்'' (எசா 41:17) ஆன நிலையில், இஸ்ராயேலர் தங்கள் அவல நிலைக்கு யாவேயின் வலிமையின்மையே காரணம் என்று குறைகூறி, வெற்றி கொண்ட பாபிலோனியாவின் கடவுள்கள் பால் திரும்பும் அளவுக்குக்கூட சோதனைக்கு உள்ளாயினர். அப்போது இஸ்ராயேலின் இறைவனுடைய (எரே 32:27; எசே 37:14), உலகைப் படைத்தவருடைய (எசா 40:28தொ; காண்க. ஆதி 1), வரலாற்று ஆண்டவருடைய (எசா 41:1-7; 44:24தொ), அவரது மக்களின் பாறை ஆகியவருடைய (44:8; 50:10) எல்லாம் வல்லமையை இறைவாக்கினர் பறைசாற்றுகின்றனர். சிலைகள் யாவும் ஒன்றுமில்லாதவை (44:9-20). யாவேயைத் தவிர வேறு கடவுள் இல்லை (44:6தொ; 43:8-12; காண்க. சங்115:7-11). நம்பிக்கைக்கு இடமேயில்லை என்று தோன்றும்போதும்கூட, யாவே முழு நம்பிக்கைக்கு உரியவர் (எசா 40:31; 49:23).

3. இறைவாக்கினர்களும் வருங்கால இஸ்ராயேலின் விசுவாசமும்:

அ) வரவிருக்கும் உண்மையாகிய விசுவாசம்: பொதுவாக நோக்குமிடத்து, விசுவாசங் கொள்ளும்படி இறைவாக்கினர்கள் விடுத்த வேண்டுகோளை இஸ்ராயேல் ஏற்கவில்லை (எரே 29:19). இவ்வேண்டுகோளை ஏற்க வேண்டுமென்றால், ஒரு காலத்தில் மோசேயை நம்பியது போல் (யாத் 14:31), மக்கள் முதலில் இறைவாக்கினர்களை நம்ப வேண்டும் (தோபி 14:4). இக்காலக் கட்டத்தில், இஸ்ராயேலர் இரு வகை இடையூறுகளை எதிர்கொண்டனர். முதலாவது, போலி இறைவாக்கினர்கள்

தோன்றியதாகும் (எரே *28:15; 29:31*). உண்மையான இறைவாக்கினர்களிடமிருந்து இவர்களை எங்ஙனம் பிரித்து வேறுபடுத்துவது (*23:9-32*; உப *13:2-6; 18:9-22*)? இரண்டாவதாக, விசுவாசத்தைப் பொருத்த அளவிலும் இடையூறு தோன்றியது. அதன் கண்ணோட்டம் புரியாப் புதிராக உள்ளது; அதன் கோரிக்கைகளைக் கடைப்பிடிப்பது அவ்வளவு எளிதன்று.

பிரமாணிக்கமுள்ள இறைவன் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவற முடியாது. ஆனால், உடன்படிக்கைச் சூழ்நிலையில் இது விசுவாசத்தைப் பொருத்ததாகும். வரலாற்று இஸ்ராயேலில் இந்த விசுவாசம் காணப்படவில்லை. ஆகவே, இறைவாக்கினர்களைப் பொருத்தமட்டும் விசுவாசம் வருங்காலத்தைச் சேர்ந்த உண்மையாயிற்று. அஃது இறைவனால் புதிய உடன்படிக்கையின் இஸ்ராயேலுக்கு அளிக்கப்படும் ஒரு நாள் வரும். அப்போது இறைவன் மக்களின் இதயங்களைப் புதுப்பிப்பார் (எரே *32:39*தொ; எசே *36:26*). இவ்வாறு புதுப்பிக்கப்பட்டவர்கள் கல்மன நிலையிலிருந்து (எசா *6:9*தொ) விசுவாசத்திற்குக் கடந்து செல்வர் (உரோ *10:9*தொ; காண்க. யோவா *12:37-43*). விசவாசத்திலிருந்து பிறக்கும் அறிவாலும் (எரே *31:33*தொ) பணிவாலும் (எசே *36:27*) இறைவன் அவர்களை நிரப்புவார்.

ஆ) வருங்கால இஸ்ராயேலின் பிணைப்பாகிய விசுவாசம்: ஆபிரகாம் மற்றும் மோசே ஆகியோரைப் போன்று, இறைவாக்கினர்களின் வாழ்வும் யாவேயில் கொண்டிருந்த விசுவாசம், அவர்களின் அழைப்பு மற்றும் பணித்தூது (காண்க. எபி *11:33-40*) ஆகியவற்றில் அடித்தளம் கொண்டிருந்தது. பெரும்பாலும், இந்த விசுவாசம் தொடக்கமுதல் அசைக்க முடியாததாய் இருந்தது (எசா *6; 8:17; 12:2; 30:18*). சில வேளைகளில், தெளிவான உறுதியை அடையுமுன் (எரே *26; 37-38*), மிகவும் கடுமையான கோரிக்கை (எரே *1*; காண்க. யாத் *3:10*தொ; *4:1-17*) அல்லது இறைவன் பிரசன்னமாய் இல்லை என்று தோன்றுதல் (*1* அர *19*;எரே *15:10-21; 20:7-18*) போன்ற சோதனைகளை எதிர்கொள்ளும்போது அவர்களுடைய விசுவாசம் மெதுவாகத் தான் உறுதிப்பட்டது.

இறைவாக்கினர்களின் இந்த விசுவாசம், சீடர்கள் அடங்கிய பெரிய அல்லது சிறிய குழுவினர்களுக்கும் செவிமடுப்பவர்களுக்கும் பரவியது (காண்க. எசா *8:16*; எரே *45*). இவ்வாறு, இஃது ஒரு சொந்த ஈடுபாடாகவும் மனநிலையாகவும் மேலும் மேலும் தோன்றியது. இஃது, இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்ட எஞ்சியோரை ஏற்கெனவே ஒன்று கூட்டியது.

இவர்கள், இந்தச் சிறு சமூகங்களில் இஸ்ராயேல் முன் நிழல் பெறுகிறது என்று காண்கின்றனர். சீயோனின் மறைபொருளான கல்லின்மேல் கொண்ட விசுவாசத்தால் ஒன்றிணைக்கப்பட்டு (எசா *28:6*; காண்க. *1* பேதுரு *2:6*தொ) இறைவனில் கொண்டுள்ள விசுவாசத்தால் ஒன்றுகூட்டப்பட்ட எளியோர் அடங்கிய மக்களாக இருப்பர் (மீக் *5:6*தொ; செப் *3:12-18*). ''நேர்மையுடையவனோ தன் பற்றுறுதியால் (விசுவாசத்தால்) வாழ்வடைவான்'' (அப *2:4*). இனிமேலும் மீட்கப்பட்ட சமூகமாய் இல்லாமல், சொந்த விசுவாசத்தால் பிணைக்கப்பட்ட எளியோரின் சமூகத்தை ஏற்கெனவே அமையும் திருச்சபையை இறைவாக்கினர்கள் முன்னோக்குகின்றனர். இந்த விசுவாச மக்களுக்கு யாவேயின் ஊழியர் ஓர் எடுத்துக் காட்டாக இருப்பார். சாவுக்கும் இட்டுச் செல்லக் கூடிய சோதனைகள் நடுவிலும் (எசா *50:6; 53*), இறைவனில் கொண்டுள்ள முழு விசுவாசத்தில், அவர் தன் முகத்தைக் ''கற்பாறை ஆக்கிக் கொள்வார்'' (*50:7*தொ; காண்க.லூக் *9:51*); இதை வருங்காலம் எண்பிக்கும் (*53:10*தொ; காண்க. சங் *22*).

இ) நாடுகளின் விசுவாசம்: ஊழியனின் தூது பிறநாடுகளுக்கும் மக்களுக்கும் விரிவாகிறது (எசா *42:4; 49:6*). இவ்வாறு வருங்கால இஸ்ராயேல் விசுவாசத்தில் ஒன்றிணைந்ததாய் இருந்தால், பிற நாடுகளை

யும் திறந்த மனதுடன் தன்னுள் ஏற்றுக் கொள்ளும். அவர்களும் விசுவாசத்தில் ஒரே இறைவனை ஏற்று (43:10), அவரை அவ்வாறு அறிக்கையிட்டு (45:14; 52:15தொ; காண்க. உரோ 10:16; எசா 56:1-8) அவரது வல்லமையிலிருந்து தங்கள் மீட்பை எதிர்பார்ப்பர் (51:5தொ).

4. விசுவாசிகள் ஒன்றுகூடுதலை நோக்கி: நாடு கடத்தலுக்குப் பின்வந்த நூற்றாண்டுகளில், வரலாற்றைச் சேர்ந்த இஸ்ராயேல் இறைவாக்கினர்கள் முன்னுரைத்த வருங்கால இஸ்ராயேலுக்கு ஏற்ப தன்னை அமைத்துக் கொள்ளும் போக்கைக் கொண்டிருந்தது; ஆயினும், ஒரு நாடாகவும் ''விசுவாசிகளின் கூட்டமாகவும்'' (1 மக் 3:13) இருக்கத் தவறவில்லை.

அ) ஞானிகள், எளியோர், வேதசாட்சிகள் ஆகியோரின் விசுவாசம்: இறைவாக்கினரைப்போல் இஸ்ராயேலரின் ஞானிகளும் மீட்படைய யாவேயில் மட்டுமே நம்பிக்கை கொள்ள வேண்டுமென்பதை நெடுநாளாய் அறிந்திருந்தனர் (பழ 20:22). புலனுக்கு எட்டிய அளவு மீட்புத் திட்டங்களெல்லாம் மறையும்போதும் இறைவனில் முழு நம்பிக்கைக் கொள்ள வேண்டும் என்று ஞானம் கோருகிறது (யோபு 19:25தொ). இறைவன் எல்லாம் வல்லவராய் விளங்குகின்றார் என்பதை ''அறியும்'' விசுவாசம் அவசியமாகின்றது (42:2). தங்கள் நம்பிக்கையைச் சங்கீதங்கள் வழி பாடிய எளியோரும், ஞானிகளும் இதில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

சங்கீதங்கள் அனைத்தும் ஒரே இறைவனாகிய யாவேமீது இஸ்ராயேல் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன (சங் 18:32; 115); அவர் படைத்தவர் (9; 104), எல்லாம் வல்லவர் (28), பிரமாணிக்கமுள்ள ஆண்டவர் (89), தம் மக்கள் மீது இரக்கம் கொண்டவர் (105; 136), உலகிற்கெல்லாம் பேரரசர் (47; 96-98) என்றெல்லாம் குறிப்பிடுகின்றன. யாவே மீது இஸ்ராயேல் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பல சங்கீதங்கள் எடுத்துக் காட்டுகின்றன (44; 74; 125). எல்லாவற்றிற்கும் மேலாக, விசுவாசத்தின் சிறந்த சான்றாய் விளங்குவது அவர்களுடைய செபம். இந்தச் செபத்தில்தான் தனி நபர்களின் விசுவாசம் கிடைப்பதற்கரிய தனிப்பட்ட நம்பிக்கையாக மலர்கின்றது. துன்புறுத்தப்பட்ட நீதிமான் விரைவிலாவது பிறகாவது தன்னை மீட்கின்ற இறைவன் மீது கொண்டுள்ள விசுவாசம் (7; 11; 31; 62), பாவி இறைவன் இரக்கத்தில் கொண்டுள்ள நம்பிக்கை (40:13-18; 51; 130), சாவைவிட இறைவனில் அதிக உறுதி வாய்ந்த நம்பிக்கை (4; 23; 121; 131; 16; 49; 73) ஆகியவை காணக்கிடக்கின்றன. எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்து (22), நற்செய்தியையும் (எசா 62:1; காண்க. லூக் 4:18), நாட்டின் உரிமையையும் (சங் 37:11; காண்க. மத் 5:4) இறைவன் வழங்குவார் என்ற நம்பிக்கையில் ஒன்றுகூடிய எளியோரின் செபமே இவை.

வரலாற்றில் முதன் முறையாக (காண்க. தானி 3) இஸ்ராயேலர் நாடு கடத்தப்படுதலுக்குப் பிறகு இரத்தம் சிந்தும் வேதகலாபனை போன்றவைகளால் தாக்கப்பட்டனர் (1மக் 1:62 தொ; 2:29-38; காண்க. எபி 11:37தொ). வேதத்திற்காக மடிந்தவர்கள் விசுவாசியாக இருந்ததால் மட்டுமல்லர், விசுவாசத்திற்காக உயிர் துறந்தனர். இறைப்பிரசன்னம் இன்மையை மிகக்கடுமையாக எதிர்கொண்டபோதும் மறை சாட்சிகள் விசுவாசம் தளரவில்லை (1 மக் 1:62). சோதனைகள் மத்தியிலும் இறைவனின் பிரமாணிக்கத்தில் உறுதிகொண்டு உயிர்ப்பையும் (2 மக் 7; தானி 12:2 தொ), அழியா வாழ்வையும் (ஞான 2:19தொ; 3:1-9) எதிர்நோக்கி விசுவாசம் ஆழமடைந்தது. இவ்வாறு விசுவாசம் மேலும் மேலும் வலுவடைந்து எஞ்சியோரைச் சிறிது சிறிதாகக் கூட்டிச் சேர்த்தது. இவர்கள் வாக்குறுதிகளின் பலனை அடைவோராயினர்.

ஆ) புறவினத்தாரில் மனந்திரும்பியவரின் விசுவாசம்: அக்காலத்தில் இஸ்ராயேலிடையே வேதபோதக ஆர்வம் மிகுந்திருந்தது. நாமானைப் போன்று (2 அர 5),

புறவினத்தவர் பலர் ஆபிரகாமின் கடவுளை விசுவசித்தனர் (சங் 47:10). அப்போதுதான் ஒரேயொரு இறைவாக்கினரின் போதகத்தால் ''இறைவனில் விசுவாசங்கொண்ட'' (யோனா 3:4 தொ; காண்க. மத் 12:41) நினிவே மக்களின் வரலாறு எழுதப்பட்டது. நெபுகத்னேசரின் மனமாற்றம் (தானி 3-4) பற்றியும் ''விசுவசித்து இஸ்ராயேல் குலத்தில் நுழைந்த'' ஆக்கியோர் (யூதி 14:10; காண்க. 5:5-21) பற்றியும் எழுதப்பட்டது. ''தம்மில் விசுவாசங்கொள்வதற்கு'' இறைவன் பிற மக்களுக்குக் காலங்கொடுத்துக் காத்திருக்கின்றார் (ஞான 12:2; காண்க. சீரா 36:4).

இ) இஸ்ராயேலரின் விசுவாசத்தின் குறைபாடுகள்: வேதகலாபனை மறைசாட்சிகளை உருவாக்கியது. அஃதோடு இஸ்ராயேலை விடுவிக்கப் (1 மக் 2:11) போராடாது சாகமாட்டோம் என்று கூறிய போர் வீரர்களையும் உருவாக்கியது (1 மக் 2:39தொ). வலியவரோடுள்ள போராட்டத்தில் தங்கள் வெற்றியை இறைத்துணையில் தேடினர் (1 மக் 2:49-70; காண்க. யூதி 9:11-14). தன்னிலேயே புகழ்ச்சிக்குரிய விசுவாசமாக இருந்தாலும் (காண்க. எபி 11:34-39), அதில் மனித ஆற்றலில் கொண்ட நம்பிக்கையும் கலந்திருந்தது.

இஸ்ராயேலரின் விசுவாசத்திற்கு ஊறு விளைவித்த மற்றொரு குறைபாடுமுண்டு. இறைவனுக்கும் அவருடைய திருச்சட்டத்திற்கும் பிரமாணிக்கமாக இருந்ததால் மறைசாட்சிகளும் போர்வீரர்களும் இறந்துபட்டனர் (1 மக் 1:52-64). இதன் வழியாக உடன்படிக்கையின் கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிகின்ற விசுவாசம் இன்றியமையாதது என்று இஸ்ராயேலர் உணரத் தொடங்கினர். இதே போக்கில் பரிசேயர் பலர் சிக்கிய விபத்தொன்றிருந்தது. திருமறைக்கும், திருநூலின் ஒழுக்கக்கோரிக்கைகளுக்கும் அளிப்பதைவிட புறச்சடங்கு முறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதும் (மத் 2.:13-30), நீதிமானாக்கப்படுவதற்கு இறைவனைவிட மனிதரிலும், மனித உழைப்பிலும் அதிக நம்பிக்கை கொள்வதுமே (லூக் 18:9-14) ஆகும் அவ்விபத்து.

இறைவன் மீது இஸ்ராயேலர் கொண்ட நம்பிக்கை தூயதாகவில்லை. மறைநூலில் வெளிப்படுத்தப்பட்ட இறைத்திட்டத்திற்கும் அவர்களுடைய விசுவாசத்திற்கு மிடையே தொங்கிய திரை இதற்கு ஒரு காரணமாகும் (2 கொரி 3:14). அத்துடன் உண்மையான விசுவாசம் வாக்களிக்கப்பட்டது எதிர்கால இஸ்ராயேல் குலத்திற்குத் தான். ஒரு நாட்டிற்கே நம்பிக்கை அளிக்கத் தோன்றிய விசுவாசத்திலோ, புறச்சடங்குகள் பலவற்றை மக்கள் கடைப்பிடிக்கத் தூண்டிய விசுவாசத்திலோ பங்குகொள்வது புறவினத்தவருக்குப் பெருங்கடினமாக இருந்தது. இத்தகைய விசுவாசத்தை ஏற்பதால் அவர்களுக்குப் பயனென்ன (மத் 23:23)? எளியோரிடம் ஆழ்ந்த உறுதியான விசுவாசமிருந்தது. ஆனால், இவ்விசுவாசம் புறவினத்தாரை நம்பிக்கையளவில் மட்டுமிருந்த மீட்பில் பங்குபெறச் செய்ய இயலவில்லை. இஸ்ராயேலரும், மற்றெல்லா நாடுகளும் விசுவாசத்தை முழுமையடையச் செய்பவருக்காகக் (எபி 12:2; காண்க. 11:39தொ) காத்திருக்கவும் ''வாக்களிக்கப்பட்ட தேவ ஆவியைப்'' (அ.ப. 2:33) பெற்றுக் கொள்ளவும் வேண்டியிருந்தது.

III. ***புதிய ஏற்பாடு:***

1. இயேசுவின் போதனையிலும் வாழ்விலும் இடம்பெற்ற விசுவாசம்:

அ) தயாரிப்பு: எளியோரின் விசுவாசமே (லூக் 1:46-55) மீட்புப் பற்றிய முதற்செய்தியைப் பெறுகின்றது. செக்கரியாவின் குறைபட்ட விசுவாசமும் (லூக் 1:18தொ; காண்க. ஆதி 15:8), மரியாளின் நிறைவான விசுவாசமும் (லூக் 1:35தொ. 45; காண்க. ஆதி 18:4) சிறிது சிறிதாகப் பிறரால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன (லூக் 1-2). தோற்றத்தின் எளிமை விசுவாசத்திலிருந்து இறைமுன் முயற்சியை மறைக்கவில்லை. தம் பாவங்களையுணர்ந்த எளியவர்கள்தான் திருமுழுக்கு யோவானை விசுவசித்தார்களேயன்றி ஆணவம் பிடித்த பரிசேயரல்லர் (மத் 21:23-32). அவர்களோடிருந்து (மத்

3:4-17) தன்னில் விசுவாசங்கொள்ள அவர்களைத் தூண்டிய (அ.ப. 19:4; காண்க. யோவா 1:7) இயேசுவைச் சுற்றிக்கூட அவர்கள் அறியாமலே செய்வதும் இந்த விசுவாசமே.

ஆ) இயேசுவையும் அவருடைய வார்த்தையையும் விசுவசித்தல்: இறையரசின் வருகை பற்றிப் போதித்த (மத் 11:3-6இணை; 13:14-17இணை) இயேசுவின் வார்த்தையையும் அருஞ்செயல்களையும் எல்லோராலும் ''கேட்கவும், காணவும்'' (13:13இணை) முடிந்தது. ஆயினும், இறை வார்த்தையைக் கேட்கவும் (11:15இணை; 13:19-23இணை), அதன்படி நடக்கவும் (7:24-27இணை; காண்க. உப 5:27) ஊனுடல் எடுத்த வார்த்தையை உண்மையில் காணவும், சுருங்கக் கூறின், விசுவசிக்கவும் (மாற் 1:15; லூக் 18:12; காண்க. உப 9:23) சீடர்களால் மட்டுமே முடிந்தது (லூக் 8:20இணை). அவருடைய போதனையும் அருஞ்செயல்களும் ''இவர் யார்?'' (மாற் 5:41; 6:1-6.14தொ. இணை) என்ற வினாவைத் தான் மக்களிடையே எழுப்பியது. இவ்வினா திருமுழுக்கு யோவானுக்கு ஒரு பரிசோதனையாகவும் (மத் 11:2தொ), பரிசேயருக்கு இடையூறாகவும் (12:22-28 இணை; 21:23இணை) இருந்தது. இயேசுவின் முழு வல்லமையை ஏற்றலின் குறைவான பதிலிறுப்பாக (மத் 8:2; மாற் 9:22தொ) அமைந்ததுதான் அவருடைய அருங்குறிகளை ஏற்றுக்கொள்ளத் தேவைப்பட்ட விசுவாசம் (லூக் 7:50; 8:48). ''நீரே கிறிஸ்து'' (மத் 16:13-16 இணை) எனப் பேதுரு விசுவாச அறிக்கையிட்டு உண்மையான பதில் அளிக்கிறார். அந்த விசுவாசமே இயேசுவின் சீடர்களை இயேசுவோடிணைக்கின்றது. சீடர் தம்மிடையேயும் இணைக்கப்படுகின்றனர்; இயேசுவின் ஆளுமை பற்றிய மறைபொருளையும் பகிர்ந்து கொள்கின்றனர் (16:18 20இணை).

எளிய மனிதனான இயேசுவைச் சுற்றி (மத் 11:20), எளியவருக்குத் தன்னை அறிமுகம் செய்தவரைச் (5:2-10இணை; 11:5இணை) சூழ்ந்து ''சின்னஞ்சிறியோரைக்'' கொண்ட எளியோரின் (10:42) கூட்டம் கூடியுள்ளது. அனைத்திற்கும் மேலாக அவர் மீதும், அவருடைய வார்த்தை மீதும் (18:6-10இணை) கொண்ட விசுவாசமே அவர்களை இணைக்கும் பாலமாக அமைந்தது. இந்த விசுவாசம் இறைவனிடமிருந்து வருகின்றது (11:25இணை; 16:17). ஒருநாள் இந்த விசுவாசத்தை அனைத்து நாடுகளும் பகிர்ந்துகொள்ளும் (8:5-13இணை; 12:39-42இணை). இறைவாக்குகள் நிறைவேறுகின்றன.

இ) விசுவாசத்தின் நிறைவு: ''மரணமட்டும் கீழ்ப்படிந்திருந்த'' (பிலி 2:7தொ) ஊழியனாகிய இயேசு எருசலேமை நோக்கிப் பயணம் செய்யத் தீர்மானித்தபோது (லூக் 9:51; காண்க. எசா 50:7) தன் மரணத்தால் எளியோரின் விசுவாசத்தை (லூக் 23:46=சங் 31:6; மத் 27:46=சங் 22) ''நிறைவுக்கு இட்டுச் செல்கின்றார்'' (எபி 12:2). இவ்வாறு உயிர்ப்பின் வழி, ''சாவினின்று தன்னை விடுவிக்க வல்லவர்'' (எபி 5:7) மீது தான் கொண்ட முழு நம்பிக்கையை இயேசு வெளிப்படுத்துகின்றார்.

இறையரசைப் பற்றிய மறைபொருளின் அறிவு இருந்தும் (மத் 13:11இணை) விசுவாசத்தில் மனுமகனைப் பின் தொடர வேண்டியிருந்தபோது (16:21-23இணை) சீடர்களுக்குக் கடினமாயிருந்தது. கவலையினின்றும் அச்சத்தினின்றும் விடுவிக்கின்ற நம்பிக்கை (லூக் 12:22-32இணை) எப்போதும் அவர்களிடம் இருந்ததில்லை (மாற் 4:35-41; மத் 16:5-12இணை). பாடுகளின் பரிசோதனை (மத் 26:41) அவர்களுக்கு இடறலாகயிருந்தது (26:33). அன்று அவர்கள் இயேசுவின் வாழ்வில் கண்டதை ஏற்று, விசுவாசத்தில் நிலைத்திருக்க அதிகமான தியாகம் தேவைப்பட்டது (காண்க. மாற் 15:31தொ). பேதுருவின் விசுவாசம் அவரிடத்திலிருந்து மறைந்துவிடவில்லை. ஏனெனில், இயேசு அவருக்காகச் செபித்திருந்தார் (லூக் 22:2). இருப்பினும், அவ்விசுவாசத்தை ஆணித்தரமாக எடுத்துரைக்கக்கூடிய மனத்திடன் அவரிடத்திலில்லாமல் போயிற்று (22:54-64 இணை). சீடர்களின் விசுவாசம் திருமறை

யின் விசுவாசமாக மாறுவதற்கு இன்னும் அதிக உறுதி பெற வேண்டியிருந்தது.

2. திருச்சபையின் விசுவாசம்:

அ) பாஸ்கா விசுவாசம்: உயிர்ப்புக் காட்சிகளை எதிர்கொண்டபோது(மத் 28:17; மாற் 16:11-14; லூக் 24:11), பலவிதத் தயக்கங்களுக்குப் பின் இயேசுவின் உயிர்ப்பில் சீடர்கள் நம்பிக்கை கொண்டநிலையில் உறுதியான முதல் கட்டம் தொடங்கியது. இயேசு கூறியவற்றிற்கும் செய்தவற்றிற்கும் சாட்சிகளான அவர்கள் (அ.ப. 10:39) அவரை ''ஆண்டவரும் கிறிஸ்துவும்'' என்றும், அவரில்தான் வாக்குறுதிகளனைத்தும் கண்ணுக்குப்புலப்படாத விதமாய் நிறைவேறியுள்ளன என்றும் (2:38-36) பறைசாற்றினர். ''குருதி சிந்துமளவிற்கு'' (காண்க. எபி 12:4) அவர்களுடைய விசுவாசம் உறுதி வாய்ந்ததாக இருந்தது. தங்கள் அறவுரைகளுக்குச் செவிமடுத்தவரை அவர் தம் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதன் மூலம் வாக்குறுதியின் பயனைப் பெறும் வண்ணம் விசுவசிக்க அழைத்தனர் (அ.ப. 2:28தொ; 10:43). திருச்சபையின் விசுவாசம் பிறந்தது.

ஆ) வார்த்தைமீது விசுவாசம்: தொடக்கத்தில் இயேசுவோடு வாழ்ந்தவர்களின் போதனையைப் பெறுதல், நற்செய்தியையும் (அ.ப. 15:7; 1 கொரி 15:2), வார்த்தையையும் (அ.ப. 2:41; உரோ 10:7; 1 பேதுரு 2:8) ஏற்று, 'இயேசு ஆண்டவர்' (1 கொரி 12:3; உரோ 10:9; காண்க. 1 யோவா 2:22) என அறிக்கையிடுதல் ஆகியனவே விசுவாசமாகும். பாரம்பரியமாக எடுத்துரைக்கப்பட்டு வந்த இந்த முதல் செய்தி (1 கொரி 15:1-3) போதனையில் பொருள் பொதிந்ததாயும் தெளிவாயும் வெளிப்படும் (1 திமொ 4:6; 2 திமொ 4:1-5). இம்மனித வார்த்தை விசுவாசத்தைப் பொருத்தமட்டில் இறைவார்த்தையாகவே இருக்கின்றது (1 தெச 2:13). இந்த விசுவாசத்தைப் புறவினத்தவர் ஏற்பது என்பது சிலைவழிபாடுகளை விட்டு விலகி, வாழுகின்ற உண்மையான இறைவனை நோக்கித் திரும்புவதாகும் (1 தெச 1:8தொ). அனைவரும் இந்த விசுவாசத்தைத் தழுவுவது என்றால் ஆண்டவராகிய இயேசு இறைத்திட்டத்தை நிறைவு செய்கின்றார் (அ.ப. 5:14; 13:27-38; காண்க. 1 யோவா 2:24) என்பதை ஏற்பதாகும். திருமுழுக்கின்வழி நாம் இத்திட்டத்தை ஏற்கிறோம். தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவொரு கடவுளின் மேல் நமது விசுவாசத்தை அறிக்கையிடுகின்றோம்.

பவுல் குறிப்பிடுவதுபோல கிறிஸ்துவிலுள்ள ''ஞானமும் அறிவுமாகிய செல்வத்தை'' (கொலோ 2:3) அறிந்துணர வழிவகுக்கின்றது இவ்விசுவாசம். ஞானம் தன்னிலேயே இறைவனிடமிருந்து பிறந்தது; பரிசுத்த ஆவியால் வெளிப்படுத்தப்பட்டது (1 கொரி 2); மனித ஞானத்திற்கெல்லாம் அப்பாற்பட்டது (1 கொரி 1:17-37; காண்க. யாக் 2:1 5; 3:13-18; எசா 29:14); கிறிஸ்துவையும் அவருடைய அன்பையும் பற்றிய அறிவினால் வெளிப்படுத்தப்பட்டது (பிலி 3:8; எபே 3:19; காண்க. 1 யோவா 3:16).

இ) விசுவாசமும் திருமுழுக்குப் பெற்றோரின் வாழ்வும்: திருச்சபையின் முழு அங்கத்தினராக்கும் திருமுழுக்கு மற்றும் கைகளை விரித்தலுக்கு விசுவாசத்தால் இட்டுச் செல்லப்பட்டு, வார்த்தையானவரில் விசுவாசம் கொண்டோர் இத்திருச்சபையின் போதனை, மனப்போக்கு மற்றும் வழிபாட்டில் பங்கு பெறுகின்றனர் (அ.ப. 2:41-46). ஏனெனில், விசுவசிப்போரின் மீட்புப்பணி பற்றிய திட்டத்தை இறைவன் திருச்சபையில்தான் செயல்படுத்துகின்றார் (அ.ப. 2:47; 1 கொரி 1:18). அந்த இறைத்திட்டத்திற்குட்பட்டு வாழ்ந்ததால்தான் விசுவாசம் பரவியது (அ.ப. 6:7; 2 தெச 1:8). நன்னெறியில் ஒழுகுகின்ற வாழ்க்கையினாலும் (1 தெச 1:3; யாக் 1:21தொ), கிறிஸ்துவின் கட்டளைக்குப் பணிந்து நடப்பதாலும்தான் (கலா 6:2; உரோ 8:2; யாக் 1:25; 2:12) விசுவாசம் மலர்கின்றது. சகோதர அன்பு வழி இந்த விசுவாசம் செயல்படுகின்றது (கலா 5:6; யாக் 2:14-26). இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி (எபி 12; அ.ப. 7:55-60), சாவை எதிர்கொள்ளும்

அளவுக்குப் பிரமாணிக்கம் உள்ளதாகவும், ''யாரில் விசுவாசம் கொண்டுள்ளதோ'' (2 திமொ 1:12; 4:17தொ) அவரில் முழு நம்பிக்கை கொள்ளவும் விசுவாசம் தன்னை வளமாக்குகின்றது. மீட்படையாதோரை மீட்படைந்தோரிலிருந்து பிரிப்பது (2 தெச 1:3-10; 1 பேதுரு 2:7தொ; மாற் 16:16) இறைவார்த்தையில் விசுவாசம் மற்றும் நம்பிக்கை கொண்ட கீழ்ப்படிதல் என்ற திருச்சபையின் விசுவாசமே.

3. புனித பவுல் விசுவாசம் பற்றிப் போதித்தல்: புதிதாகப் பிறந்துள்ள மறைக்கு விசுவாசம் கடவுளின் கொடையாகும் (அ.ப. 11:21 தொ; 16:14; காண்க. 1 கொரி 12:3). புறவினத்தார் மனந்திரும்பியபோது இறைவனே அவர்கள் ''இதயங்களை விசுவாசத்தால் தூய்மையாக்கினார்'' (அ.ப. 11:18; 14:27; 15:7தொ). விசுவசித்த யூதர்கள் பெற்றுக்கொண்ட அதே பரிசுத்த ஆவியை விசுவசித்த புறவினத்தவரும் பெற்றனர் (11:17). பின்னரே திருச்சபையில் அவர்கள் சேர்க்கப்பட்டனர்.

அ) விசுவாசமும் யூதச்சட்டமும்: புறவினத்தார் விருத்த சேதனம் பெறவும், யூதச் சட்டத்தைப் பின்பற்றவும் வேண்டுமா என்ற பிரச்சனை ஆதித்திருச்சபையில் எழுந்தது (அ.ப. 15:5; கலா 2:4). பொறுப்புள்ளவர்களோடு கலந்தாலோசித்த பின் (அ.ப. 15; கலா 2:3-6) புறவினத்தவரை ''யூதர்களாக''க் கட்டாயப்படுத்துவது நியாயமல்லவென்று பவுல் கருதினார். ஏனெனில், யூதர்களுக்கு மீட்பளித்தது யூதச் சட்டமன்று; கிறிஸ்து இயேசுவின்பால் கொண்ட விசுவாசமே (கலா 2:15தொ). கலாத்தியாவிலுள்ள கிறிஸ்துவர்கள் மீது விருத்தசேதனத்தைச் சுமத்தியபோது (கலா 5:2; 6:12) வேறொரு நற்செய்தி போதிக்கப்படுவதாக பவுல் உணர்ந்தார் (கலா 1:6-9). இச்சிக்கல் மீட்பு வரலாற்றில் சட்டத்தின் பங்கு என்ன, விசுவாசத்தின் பங்கு என்ன என்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்க அவருக்கு வாய்ப்பளித்தது. ஆதாமின் காலமுதல் (உரோ 5:12-21) புறவினத்தவராயினும் சரி, யூதர்களாயினும் சரி, எல்லோரும் இறைவன் முன் பாவிகளே (1:18-3:20). வாழ்விற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டிய சட்டமே பாவத்திற்கும் சாவிற்கும் வழியாயிற்று (உரோ 7:7-10; கலா 3:10-14.19-22). விசுவாசத்தால் பெற்றுக்கொண்ட (கலா 2:16; உரோ 3:22; 5:2) இறைவனின் ஏற்புடைமையை வெளிப்படுத்தி (உரோ 3:21-26; கலா 2:19தொ), கிறிஸ்துவின் இறப்பு இந்நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. பின்னர், சட்டத்தின் துணை தேவையற்றதாக இருந்தது (கலா 3:23-4:11). வாக்குறுதியின் அரசாட்சி, இயேசுவில் நிறைவுபெற்று நிலவியது (கலா 3:15-18). ஆபிரகாமைப்போல கிறிஸ்தவர்களும் விசுவாசத்தால் ஏற்புடையோராக்கப்படுவார்களேயன்றி சட்டத்தாலன்று (உரோ 4; கலா 3:6-9; காண்க. ஆதி 15:6; 17:11). மேலும் இறைவாக்கினரின்படி, ''நீதிமான் விசுவாசத்தால் வாழ்வான்'' (அப 2:4; கலா 3:11; உரோ 1:17); இஸ்ராயேலரில் எஞ்சியோரில் (உரோ 11:1-6) இறைவனில் விசுவாசம் கொள்பவரே மீட்கப்பெறுவர் (எசா 28:16; உரோ 9:33; 10:11). விசுவாசம் எல்லா இனத்தவருக்கும் திறந்து வைக்கப்பட்டது (உரோ 10:14-21; 1 பேதுரு 2:4-10).

ஆ) விசுவாசமும் அருளும்: ''திருச்சட்டம் விதித்திருக்கும் செயல்களின்றியே மனிதன் விசுவாசத்தினாலே இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப்படுகின்றான்'' (உரோ 3:28; கலா 2:16). பவுலின் இக்கூற்று விசுவாச ஆட்சியில் யூதச் சட்டத்தின் பலனின்மையைக் கூறுகிறது. சிந்திக்குமிடத்து மீட்பு என்பது ஒருவனுடைய உரிமையன்று, விசுவாசத்தை முன்னிட்டு அவனுக்கு அளிக்கப்படும் இறைவனின் கொடையாகும் (உரோ 4:4-8). திருமுழுக்கின்போது பெற்றுக்கொண்ட ஆவியானவரின் கொடைகளுக்கேற்ப (கலா 5:13-26; உரோ 6; 8:1-13) விசுவாசம் ''செயல்பட'' (கலா 5:6; யாக் 2:14-26) வேண்டும் என்பதையும் பவுல் உணராமலில்லை. ஆயினும், விசுவசிப்பவன் ''தனது ஏற்புடைமை'' பற்றி ''பெருமை'' பாராட்டவோ, பரிசேயனான சவுலைப்போல் (பிலி 3:4-9; 2 கொரி

.1:16-12:4) திருச்சட்டத்தின் செயல்களை பற்றும் நம்பியிருக்கவோ கூடாதென வலியுறுத்திக் கூறுகின்றார். அவருடைய [illegible]ான்று இறைவன் முன்னிலையில் [illegible]க் குற்றம் சாட்டாவிடினும் (1 கொரி [illegible]தையும் விரும்பவும் செயலாற்ற [illegible] திருவுளம் நிறைவேற அவரில் செயலாற்றும்'' (பிலி 2:13) இறைவன் ஒருவரை மட்டும் நம்பியிருப்பதாகக் கூறுகின்றார். எனவே, அவர் தன் மீட்புக்காக ''அச்ச நடுக்கத்தோடு'' உழைத்து வந்தார் (பிலி 2:12). அத்துடன் மகிழ்வளிக்கும் நம்பிக்கையுடனும் உழைக்கின்றார் (உரோ 5:1 11; 8:14-39). ''கிறிஸ்து இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட இறையன்பை'' (உரோ 8:38தொ; எபே 3:19) அவருடைய விசுவாசம் உறுதிப்படுத்துகின்றது. தொடக்கத் திருச்சபையின் மக்கள் பாஸ்கா விசுவாச வாழ்வைத் தெளிந்த மனச்சாட்சியோடு வாழ்வதற்குப் பவுல் துணைபுரிந்தார். இஸ்ராயேலரின் விசுவாசத்தில் காணப்பட்ட குறைபாடுகள், வரையறைகள் இவ்விசுவாசத்தில் இல்லை. இது முழுவதுமே திருச்சபையின் விசுவாசமாகும்.

4. ஊன் உருவெடுத்த வார்த்தையில் விசுவாசம்: புதிய ஏற்பாட்டின் இறுதியில் திருச்சபையின் விசுவாசம் புனித யோவானோடு சேர்ந்து தன் தொடக்கம் பற்றிய சிந்தனையைச் சுழலவிடுகின்றது. எதிர்காலத்தை மேலான விதத்தில் எதிர்கொள்ள தனக்கு நிறைவு அளித்தவரிடமே திரும்புகிறது. விசுவாசம் பற்றி யோவான் கூறுவது ஒத்தமை நற்செய்திகள் கூறுவதை ஒத்ததே. இயேசுவைச் சுற்றி சீடர்களை விசுவாசம் ஒன்றிணைக்கிறது (யோவா 10:26தொ; 17:8). இவ்விசுவாசம் திருமுழுக்கு யோவானால் அறிமுகப்படுத்தப்பட்டு (1:34 தொ; 5:33தொ) இயேசுவின் மகிமையைக் கானாவில் கண்டது (2:11). ''அவருடைய வார்த்தையைக் கேட்டு'' (12:46தொ), அதற்குச் ''செவிமடுக்கின்றது'' (10:26தொ; காண்க. உப 4:30); சுப்பர்நாகூமில் பேதுருவின் வாய்மொழியால் தன்னை உறுதிப்படுத்துகின்றது (யோவா 6:70 தொ). பாடுகள் அதற்கு ஒரு பரிசோதனையாகவும் (14:1-28; காண்க. 3:14தொ), உயிர்ப்பு அதன் முடிவான நோக்கமாகவும் (20:8.25-29) இருந்தன.

ஆயினும், ஒத்தமை நற்செய்திகளைவிட, நான்காம் நற்செய்தியை விசுவாசத்தின் நற்செய்தியென்றால் பொருந்தும். ஏனெனில், இந்நற்செய்தியில் இயேசுவும், அவரது இறைமாட்சிமையும் விசுவாசத்தின் மையப்பொருளாக அறிக்கையிடப்பட்டுள்ளன. இயேசுவிலும் (4:39; 6:35), அவர் பெயரிலும் (1:12; 2:23) விசுவாசம் கொள்வது அவசியம். இறைவனை விசுவசிப்பதும், இயேசுவை விசுவசிப்பதும் ஒன்றே (12:44; 14:1; காண்க. 8:24; யாத் 3:14). ஏனெனில், இயேசுவும் தந்தையும் ஒன்றே (10:30; 17:21). இந்த ஒன்றிப்பே விசுவாசத்தின் பொருளாக அமைகிறது (14:10தொ). இயேசுவின் மாட்சிமையை வெளிப்படுத்தும் அருங்குறிகளைக் (2:11தொ; 4:48; 20:29) காணாமலே கட்புலன்களுக்குத் தோன்றாத அவருடைய இறைமாட்சியை உணரும் வண்ணம் விசுவாசம் இட்டுச்செல்ல வேண்டுமென்றும் போதிக்கிறது. ஆனால், உண்மையில் அவர் செய்த அருங்குறிகளைக் காணவும் (2:23; 11:45), தொடவும் (20:29) வேண்டிய தேவை விசுவாசத்திற்கு ஏற்பட்டால், கட்புலன்களுக்குத் தோன்றாதவை பற்றி அறியவும் (6:69; 8:28), தியானிக்கவும் (1:14; 11:40) விசுவாசம் அழைப்பு விடுக்கின்றது.

மேலும் விசுவாசத்தின் கட்புலனாகாத பயன்களின் இக்காலப் பண்பையும் யோவான் வலியுறுத்துகின்றார். விசுவசிப்பவன் தீர்ப்புக்குள்ளாக மாட்டான் (5:24); ஏற்கெனவே உயிர்த்துவிட்டான் (11:25தொ; காண்க. 5:40), ஒளியில் நடக்கிறான் (12:46), முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான் (3:16; 6:47). மாறாக, விசுவசியாதவனோ ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டான் (3:18). சாவுக்கும் வாழ்வுக்குமிடையே, ஒளிக்கும் இருளுக்குமிடையே, எதை ஏற்பது, எதை மறுப்பது எனத் தேர்ந்தெடுக்க வேண்டிய துன்பகரமான மேன்மையை

விசுவாசம் உருவாக்குகின்றது. இந்நிலை மிகவும் கடினமானது. ஏனெனில், விசுவாசத்தை ஏற்பதும் மறுப்பதும் அவரவர்களுடைய ஒழுக்கச் செயலின் தன்மையைப் பொருத்ததாகும் *(3:19-21)*.

விசுவாசம், அதன் உண்மையான நோக்கம், அதன் முக்கியத்துவம் போன்றவற்றை வலியுறுத்திக் கூறுவதன் மூலம் தன் நற்செய்தியின் நோக்கம் என்ன என்பது பற்றி யோவான் விளக்கிக் கூறுகின்றார். வாசிப்போர் தன் விசுவாசத்தில் பங்குகொண்டு ''இயேசுவே கிறிஸ்து, அவரே இறைமகன்'' *(20:30)* என ஏற்று, ஊனுருவான வார்த்தையில் *(1:9-14)* விசுவாசம் கொள்வதன் மூலம் இறைமக்களாக வேண்டும் என்பது அவரது நோக்கம். யோவானின் சான்று, விசுவாசத்தைத் தேர்ந்தெடுத்தல் இயலும் என்பதை உறுதிப்படுத்துகின்றது *(1 யோவா 1:2தொ)*. இந்த விசுவாசம் திருச்சபையின் பாரம்பரிய விசுவாசமேயாகும். இது தான் பெற்ற போதனைக்கேற்ப *(1 யோவா 2:23-27; 5:1)* இயேசுவை இறைமகன் என அறிக்கையிடுகின்றது. பாவமற்ற வாழ்க்கை மூலமும் *(3:9தொ)*, சகோதர அன்பு வழியும் *(4:10தொ; 5:1-5)* இந்த விசுவாசம் பரவுகின்றது. பவுலைப் போன்று *(உரோ 8:31-39; எபே 3:19)* யோவானும் மனிதர் மீது இறைவன் கொண்ட அன்பை ஏற்க வழி வகுக்கின்றது விசுவாசம் என்ற முடிவுக்கு வருகின்றார் *(1 யோவா 4:16)*.

வரவிருக்கின்ற போராட்டங்களைக் கண்முன் கொண்டு, மரணமட்டும் ''பொறுமையாகவும்'' பிரமாணிக்கமாகவும் இருந்த புனிதர்களை விசுவாசிகளின் கண்முன் வைக்கின்றது திருவெளிப்பாட்டு நூல் *(திருவெளி 13:10)*. இத்தகைய பிரமாணிக்கத்தின் ஊற்றாய் அமைவது ''சாவுக்குட்பட்டேனாயினும் இதோ, நான் என்றென்றும் வாழ்கின்றேன்'' *(1:18)* என்று கூறிய இயேசுவின் மீது கொண்ட பாஸ்கா விசுவாசமாகும்; தன்னரசை நிறுவுகின்ற ஊனுருக்கொண்ட [illegible] வார்த்தை *(19:11-16; காண்க. அ.ப. 4:24-30)* மீதுள்ள விசுவாசமாகும். விசுவாசப் முடிவு பெறும்போது, இறைவனை ''அவர் இருப்பதுபோல் அவரை நாம் காணும்'' *(1 யோவா 3:2)* நாளை எதிர் நோக்கி இருக்கச் செய்வதும் பாஸ்காவின் விசுவாசமாகும். இந்த விசுவாசமே, ''உலகைத் தோற்கடித்து நாம் அடைந்த வெற்றி நமது விசுவாசமே'' *(1 யோவா 5:4)*, என மீண்டும் பறைசாற்றப்பெறும்.

விடிவெள்ளி (DAY STAR)

கதிரவனைச் சுற்றிச் செல்லும் இரண்டாவது கோளான வெள்ளிக்கோளின் மற்றொரு பெயர். இது கதிரவனுக்கு முன் வானில் தோன்றும். தனது வசைப்பாடலில் எசாயா, பாபிலோனிய அரசனை வானத்திலிருந்து வெட்டப்பட்டுத் தரையில் வீழ்ந்த விடிவெள்ளிக்கு ஒப்பிடுகிறார் *(எசா 14:12)*. இந்த வசனத்தைச் சாத்தானின் வீழ்ச்சியோடு தொடர்புபடுத்துகின்றனர் திருச்சபைத் தந்தையர்கள் சிலர். ''வானத்திலிருந்து சாத்தான் மின்னலைப்போல விழக் கண்டதாக'' இயேசு கூறுகிறார் *(லூக் 10:18)*. விளக்கவுரையாளர்கள் சிலர் விண்ணகத்திலிருந்து இறை ஆட்கள் வெளியேற்றப்படும் பழங்கால இதிகாசங்களோடு இக்கருத்தைத் தொடர்புபடுத்துகின்றனர்.

2 பேதுரு 1:19-இல் வரும் விடிவெள்ளி கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைச் சுட்டுகிறது. *திருவெளி 2:28*-இல் வரும் விடிவெள்ளி, தியத்திராத் திருச்சபைக்கு இயேசு அளிக்கும் ஆதரவைச் சுட்டுகிறது.

விடுதலை / சுதந்தரம் (LIBERATION / LIBERTY)

I. ''நீங்களோ, சகோதரர்களே, உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்'' *(கலா 5:13)*. இச்செய்தி மீட்பு நற்செய்தியின் ஓர் இன்றியமையாப் பகுதியாகும். ''சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும்'' இயேசு வந்துள்ளார் *(லூக் 4:18)*. விதியினால் தாங்கள் ஆட்கொள்ளப்பட்ட உணர்வைக் கொண்டிருந்த பழங்காலப் புறவினத்தாருக்கு மட்டுமன்று, தாங்கள் அடிமைகளென ஏற்றுக்கொள்ள மறுத்த யூதருக்கு மட்டுமன்று *(யோவா 8:33)*, குழப்பமு

வழிகளில் நிரந்தர விடுதலைக்காக ஏங்கி நிற்கும் இன்றைய மனிதர்கட்கும் இயேசுவின் வருகை விடுதலையைக் கொணர்கின்றது. ஆனால், 'விடுதலை' பலவாறு திரிக்கப்படுகின்றது; விவிலியமோ அதனை வரையறுத்துக் கூறுவதில்லை. எனினும், இறைவன் மனிதர்க்கென வகுத்திருக்கும் திட்டங்களைச் சுதந்தரத்துடன் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் படைத்தவன் மனிதன் என்று விவிலியம் மறைமுகமாய்க் கூறுகின்றது; மிகச் சிறப்பாக, உண்மைச் சுதந்தரத்தின் வழியைச் சுட்டிக் காட்டுகிறது. தம் மக்களின் விடுதலையை உறுதியாக்க, பழைய ஏற்பாட்டில் யாவே தலையிடுகின்றார். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் அருள் உலகினருக்கு இறைமக்களின் உரிமை வாழ்வைக் கொண்டு வருகின்றது.

II. **மனித சுதந்தரம்:** இறை மேலாண்மையை மிக அழுத்திக் கூறுகின்றன விவிலிய வாசகங்கள் (எசா 6:9தொ; உரோ 8:28தொ; 9:10-21; 11:13 36); ஆதலின், இவை மனிதனுக்குச் சிறிதேனும் உண்மைச் சுதந்தரம் உண்டோ எனும் ஐயம் எழச் செய்யலாம். இத்தகைய கட்டங்களில் யூதரின் சிந்தனைப் பாணியைக் கணிப்பது முக்கியம். அது மூலகாரணமாகிய இறைவனிடம் நேரடியாகச் செல்கிறது; இரண்டாந்தரக் காரணங்களைச் சுட்டிக்காட்டாத போதிலும் அவற்றை மறுப்பதில்லை (காண்க. யாத் 4:21; 7:13தொ; பார்வோனின் இதயம் கடினமாதல்). இதற்கு மாறாக, இறை உள்ளத்தின் பல படிகளையும், அம்சங்களையும் பிரித்துணர்தல் தேவை. அவர் எல்லா மனிதருடைய மீட்பையும் விரும்புவது போலவே (1 திமொ 2:4), மனந்திருந்தாத பாவியின் நித்திய சாவையும் விரும்புகிறார் என்று எண்ணலாகாது (காண்க. எசே 18:23). இறைவன் 'தாமே விரும்பித் தேர்ந்தெடுப்பதையும்' (உரோ 9:11), (தம் மகனின் சாயலுக்கேற்ப பலரை) 'முன் குறித்தலையும்' (8:29தொ) பவுல் அழுத்தமாகக் கூறுகின்றார்; ஆனால், அக்கூற்றிலிருந்து மனித சுதந்தரம் மாயையில் தோய்ந்தது என்ற முடிவுக்கு வருதல் தவறு.

உண்மையில் மனிதன் சுதந்தரத்துடன் தீர்மானங்கள் செய்யக்கூடியவன் என்பது விவிலியம் பரம்பரையாக உணர்த்தும் ஒன்றாகும். அவனது தேர்ந்தெடுக்கும் ஆற்றலை அடிக்கடி வலியுறுத்துவது போல, அவனது பொறுப்புணர்ச்சியையும் வலியுறுத்திக் கூறுகின்றது. முதல் பாவ நிகழ்ச்சியினின்று இதனைச் காண்கின்றோம் (ஆதி 2-3; காண்க 4:7). ஆசீரையோ, சாபத்தையோ, வாழ்வையோ, சாவையோ (காண்க. உப 11:23தொ; 30:15-20), மனந்திருந்துதலையோ மனிதன் தேர்ந்தெடுக்கக் கடமைப்பட்டுள்ளான். இந்நிலை அவன் வாழ்வு முழுவதும் நீடிக்கும் (எசே 18:21-28; உரோ 11:22தொ; 1 கொரி 9:27). வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் பாதையில் நுழைந்து, அதனில் நிலைத்திருக்க ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் சுதந்தரம் உண்டு (மத் 7:13தொ). விதியை நம்புவோரது சாக்குப் போக்குகளைச் சீராக்கு நூல் திட்டவட்டமாக உதறித் தள்ளுகிறது. ''என் பாவத்துக்கு ஆண்டவர் பொறுப்பு என்று சொல்லாதே; ஏனெனில், அவர் வெறுக்கும் பாவத்திற்கு அவரே காரணமாக இயலாது... கட்டளைகளைக் கடைப்பிடிக்க நீ விரும்பினால், பற்றுறுதியுடன் - ஒழுக உனக்கு வலிமை உண்டு.'' (சீரா 15:11-15; காண்க. யாக் 1:13தொ). இறைவனது அநீதியின்மேல் பழிபோட்டு விடலாம் என்று எண்ணும் பாவியின் தெய்வ நிந்தனையைக் கடுமையாகக்கண்டிக்கின்றார் பவுல். ஏனெனில், உண்மையில் நீதியுடன் தான் தண்டிக்கின்றார் இறைவன் (உரோ 3:5-8; 9:19தொ).

இறைவன் ஆதிக்கத்துக்கும் மனித சுதந்தரத்துக்குமிடையே முரண்பாடு தோன்றத்தான் செய்கின்றது. விவிலிய எழுத்தாளர் இதனை அறவே நீக்கிவிடவில்லை. ஆனால், மீட்பு எய்த இறை அருளும் தேவை, மனிதனது சுதந்தரக் கீழ்ப்படிதலும் தேவை என்பதை ஐயந்திரிபறக் காட்டியுள்ளார். தன் வாழ்விலேயே இஃது உண்மை என்பதையும் (அ.ப. பணி 22:6 10; 1 கொரி 15:10), ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்

விலும் உண்மை என்பதையும் (பிலி 2:12தொ) உணர்கின்றார் பவுல். நம் கண்ணோட்டத்தில் இது மறைபொருள்தான். ஆனால், நம் இதயங்களை வலுவந்தத்துக்கு உட்படுத்தாமல் இயக்குவதன் இரகசியமும், கட்டாயப்படுத்தாமல் தம்மிடம் ஈர்த்துக்கொள்ளும் இரகசியமும் இறைவனுக்கு நன்கு தெரியும் *(காண்க. சங் 119:36; எசே 36:26தொ; ஓசே 2:16தொ; யோவா 6:44).*

III இஸ்ராயேலின் விடுதலை:

1. எகிப்திலிருந்து வெளியேற்றம்: தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் வரலாறு எகிப்தின் அடிமைத்தனத்தினின்று இறைவனால் மீட்கப்பெற்ற நிகழ்ச்சியை அடித்தளமாகக் கொண்டது *(யாத் 1-15).* இதனைக் குறிப்பிடும்போது பழைய ஏற்பாடு இரண்டு வினைச் சொற்கட்கு முக்கியத்துவம் தருகின்றது. முதல் சொல் 'கால்' (gaal) *(யாத் 6:6; சங் 74:2; 77:16).* இது குடும்ப உரிமைகளைக் குறிப்பதாகும். இரண்டாம் சொல் 'பாதா' (pādāh) *(உப 7:8; 9:26; சங் 78:42).* இது சாதாரணமாக வாணிப உரிமைகளை உணர்த்துவதாகும் - பணத்துக்கு ஈடான பொருளைத் தந்துவிடுதல். ஆனால், இறைவனுக்குச் சாற்றிக் கூறும்போது இரு சொற்களும் ஏறத்தாழ ஒரே பொருளைக் கொண்டுள்ளன. எழுபது நூல் மீட்டல் என்ற சொல்லால் மொழிபெயர்க்கிறது. விடுதலை பற்றிய வேர்ச்சொல் பொருள் மயக்கம் தருவதாக உள்ளது. எல்லா விவிலிய வாசகங்களும் விளக்குவது இதுதான்; முதல் மீட்பு வெற்றிகரமான விடுதலை ஆகும். இஸ்ராயேலை ஒடுக்கிய பகைவருக்கு மீட்புப் பணமாக எதுவும் தராமலேயே வெற்றி பெற்றார் யாவே.

2. இறைவன், இஸ்ராயேலின் 'கோயேல்' (மீட்பளிக்கும் உறவினர்): இறைமக்களது பிரமாணிக்கமற்ற செயல்கள் எருசலேம் நகர் பாழாவதற்கும் அவர்கள் அகதிகள் ஆவதற்கும் வழிகோலின. அதன்பின், பாபிலோனிலிருந்து விடுதலையடைதல் யூதர்களுடைய இரண்டாம் மீட்பாகும். இந்த செய்தியே எசா 40-55-என்ற பகுதியின் முக்கிய செய்தியாகும். இஸ்ராயேலின் தூயவரான யாவேயே அதன் 'மீட்பர்', அதன் 'கோ-யேல்' *(எசா 43:14; 44:6.24; 47:4; காண். எரே 50:34).*

பழங்கால எபிரேயச் சட்டத்தில், நெருங்கிய உறவினராகிய 'கோ-யேல்' என்பவருக்குப் பல கடமைகள் உண்டு. குலத்தின் சொத்தைப் பாதுகாக்க வேண்டிய வேளைகளில் குடும்ப உரிமைகளைப் பேணுதல் *(லேவி 25:23தொ);* அடிமைத்தனத்தில் நழுவி விழுந்த 'சகோதரனை' விடுவித்தல் *(லேவி 25:26-49);* ஒரு விதவையைப் பாதுகாத்தல் *(ரூத் 4:5);* உறவினரது கொலைக்காகப் பழிவாங்குதல் *(எண் 35:19தொ).* எசா 40-55-இல் 'கோ-யேல்' எனும் பெயரைப் பயன்படுத்துவதிலிருந்து யாவேக்கும் இஸ்ராயேலுக்குமிடையே உள்ள உறவுப்பந்தம் நீடிக்கின்றது என்பதை உணர்கின்றோம். முதல் யாத்திரையின்போது உருவாக்கப்பட்ட உடன்படிக்கையே அதன் கருவூலம் ஆகும் *(காண்க. யாத் 4:22).* அதன் பாவங்கள் குறுக்கிட்ட போதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குலம் யாவேயின் மனைவாட்டியாகவே நிலைத்திருக்கிறது *(எசா 50:1).* இரு விடுதலைகட்குமிடையே உள்ள ஒப்புமை தெளிவாகக் காணக்கிடக்கிறது *(காண்க. எசா 10:25தொ; 40: 3);* எகிப்தினின்று வெளியேறிய நிகழ்ச்சியைப் போலவே நாடு கடத்தப்பட்ட மக்கள் தாயகம் திரும்பியதும் முழுக்க முழுக்க இறைவனின் கருணைச் செயலே ஆகும் *(45:13; 52:3):* நாடிழந்த நிலை மக்களது பாவத்தின் தண்டனையாகும். ஆதலால், தாயகம் திரும்பிய செயலில்தான் இறைவனின் கருணை இன்னும் அதிகமாக மிளிர்கின்றது.

3. நிரந்தர விடுதலையை எதிர்நோக்குதல்: தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் இன்னும் பல சோதனைகட்கு உட்படும்போது இறைவன் உதவியை இரந்து வேண்டுவர் *(காண்க. சங் 25:21; 44:27);* நிரந்தர விடுதலைக்கு முன்னோடியான முதல் விடுதலையை நினைவில் கொண்டு இறைவனைக் கூவி அழைப்பர்: ''எகிப்து நாட்டிலிருந்து நீ

விடுதலை பெற்றுள்ளாய். ஆகவே, உன்னைச் சார்ந்துள்ள பொறுப்பைக் கைநெகிழவிடாதே'' [மொர்தக்காயின் செபம்- எஸ்தர் *4:17* (எழுபது நூல் வாசகம்); காண். *1* மக் *4:8-11*]. மெசியாவின் வருகைக்கு முந்திய சில நூற்றாண்டுகளில் 'நிரந்தர விடுதலையை' மக்கள் எதிர் நோக்குகின்றனர். யூத மறையிலுள்ள அதிகாரபூர்வமான செபங்கள் அவ்விடுதலை விரைவில் வந்து சேர வேண்டுமென இஸ்ராயேலின் 'கோ-யேலை' வருந்திக் கேட்பதாக உள்ளன.

அதுவுமின்றி, அன்னிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து மீளவேண்டுமென்று யூதர்கள் ஏங்கிக் கிடந்தனர். ''இஸ்ராயேலுக்கு விடுதலை அளிப்பவரது'' (லூக் *24:21*) பணி அத்தகைய மீட்பே என்று எம்மாவூ நோக்கிச் சென்ற சீடர்கள் கருதினார்கள் போலும். எனவே, தங்கள் மீட்பின் நம்பிக்கையில் சமயச் சார்புள்ள சிந்தனைகளைப் பிணைத்தவர்கள் சங்கீதப் பாடகர்போல உயர்ந்த நெஞ்சம் படைத்த ஒரு சிலரேயாவர் (காண்க. லூக் *2:38*); ''அவர் இஸ்ராயேலரை அவர்களுடைய எல்லாத் தீவினைகளிலிருந்தும் மீட்பார்'' (சங் *130:8*). இறைவனின் தூய்மையில் பங்குபெற அழைக்கப் பெற்றவர்கள் அவ்வாறு எஞ்சிநின்ற சிலரே; இவர்கள் தூய்மையாக்கப் பெறுதல் மூலம் உண்மை விடுதலை புலனாகும் (காண்க. எசா *1:27*; *44:22*; *59:20*).

4. தனி மனிதனின் விடுதலையும், சமுதாய விடுதலையும்:

அ) தனி மனிதன்: சங்கீதங்களில் அடிக்கடி ஒலிக்கும் சிந்தனை இது. ''அனைத்துத் துயரங்களினின்றும் என்னை விடுவித்த எம்முள ஆண்டவர்'' (காண். *2* சாமு *4:9*). தம் மக்கட்கு இறைவன் கொணர்ந்த விடுதலையானது விசுவாசிகள் ஒவ்வொருவர் வாழ்விலும் அவர்களுக்கே தெரியாத வழிகளில் புதுப்பிக்கப்பெறுகிறது. சில சமயங்களில் தன்னைச் சூழ்ந்துள்ள ஆபத்தைக் குறிப்பிடாது பொதுவில் இடர்களை உணர்த்திச் செபிக்கிறார் சங்கீத ஆசிரியர் (சங் *19:15*; *26:11*); வேறு சமயங்களில் தம் உயிரையே பறிக்க விரும்பும் விரோதிகளுடன் போராடுவதாகச் சொல்லுகின்றார் (*55:19*; *69:19*); அல்லது இறைவன் தலையிடாவிட்டால் தான் விரைவில் இறந்துவிடக்கூடும் என்று கடுமையான நோயால் வருந்துபவரின் செபம் அமைந்துள்ளது (*103:3*தொ). ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தும் எதிர்பார்ப்பின் செபங்கள் சில ஏற்கெனவே காணப்படுகின்றன (காண்க. *31:6*; *49:16*).

ஆ) சமுதாயம்: யாவே தம் மக்களை மீட்டதன் நினைவாக எபிரேய அடிமை ஏழு ஆண்டுகட்குப் பின் விடுதலை பெற வேண்டும் என்று உபாகமப் பாரம்பரியம் நிர்ணயிக்கின்றது; இவ்வாறு விவிலியச் சட்டம் இஸ்ராயேலின் முதல் விடுதலையை மக்கள் கண்முன் வைக்கின்றது (உப *15:12-15*; காண்க. எரே *34:8-22*) எனினும், அச்சட்டத்தை மீறியவர் இல்லாமல் இல்லை; அகதிகள் நிலையினின்று திரும்பியபின்கூட விடுவிக்கப்பட்ட சகோதரர்களைத் திரும்பவும் அடிமைத்தனத்துக்கு உட்படுத்தத் தயங்காதவர்கள் இருந்தனர். இவர்களை நெகேமியா கடிந்து கொள்வார் (நெகே *5:1-8*). என்றாலும், ''ஒடுக்கப்பட்டவரை விடுவிப்பதும், எல்லாவிதத் தளையையும் தகர்த்தெறிவதும் யாவேக்கு ஏற்புள்ள நோன்பு முறையாகக்'' கருதப்பட்டது (எசா *58:6*).

IV இறைமக்களின் சுதந்தரம்:

1. நமது மீட்பராம் கிறிஸ்து: கிறிஸ்துவ மீட்பின் முன்னோடியாக இருந்தது இஸ்ராயேலின் விடுதலை. விசுவாசத்திலும் அன்பிலும் தம்முடன் இணையும் அனைவரையும் - யூதரையும் புறவினத்தாரையும் - முழுமையான மற்றும் நிரந்தரமான சுதந்தரத்தில் நிலைநிறுத்துபவர் கிறிஸ்துவே.

கிறிஸ்துவ சுதந்தரத்தின் தலையாய அறிக்கையாளர் பவுலும், யோவானும் ஆவர். கலாத்தியருக்கு விடுத்த மடலில் அதனைச் சிறப்பாகப் பறைசாற்றுகின்றார் பவுல்: ''கிறிஸ்து, அடிமைநிலையிலிருந்து நம்மை விடுவித்து, உரிமை வாழ்வு நமக்கு அளித்தார். அதிலே நிலைத்திருங்கள்... நீங்களோ,

சகோதரர்களே, உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்'' (கலா 5:1.13; காண்க. 4:26.31; 1 கொரி 7:22; 2 கொரி 3:17). இயேசுவின் வார்த்தையை வரவேற்கும் விசுவாசமே உண்மைச் சுதந்தரத்தின் ஊற்று. இதனை அழுத்திக் கூறுகின்றார் யோவான்: ''உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்; மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்'' (யோவா 8:32.36).

2. கிறிஸ்துவ சுதந்தரத்தின் இயல்பு: கிறிஸ்துவ சுதந்தரம் சமுதாய வாழ்வில் எதிரொலி எழுப்பும் என்பதற்குச் சான்று பிலமோனுக்குப் பவுல் எழுதிய திருமுகம். எனினும், அதன் மையம் சமுதாய அமைப்புகட்கு அப்பாற்பட்டது. ஒருவனது சமுதாய நிலை மாற வேண்டும் என்பது அது குறிக்கும் நிபந்தனையன்று. ஆதலின், சுதந்தரமுள்ள மனிதருக்கு மட்டுமன்று, அடிமைகட்கும் கூட அது கிடைக்கக்கூடிய ஒன்று (1 கொரி 7:21). கிரேக்க - உரோமை மயமான உலகில் தனி மனிதனின் முழுமைக்கு அடித்தளம் போன்றிருந்தது குடியுரிமைச் சுதந்தரம்; ஆதலின் அவ்வுலகில் கிறிஸ்துவ சுதந்தரத்தின் உண்மை ஒரு முரண்பாடாகத்தானிருந்தது. ஆனால் இதே காரணத்தால், கிறிஸ்து அளித்துள்ள விடுதலையின் ஆழ்ந்த மதிப்பும் தெற்றெனத் துலங்கியது. தங்களையே முழுவதும் அடக்கி ஆளும் ஆற்றலையும், அசையாத அமைதியையும் தத்துவக் கோட்பாடுகள் மூலமும், ஒழுக்கப் பயிற்சிகள் மூலமும் எய்திட ஞானிகளும், பிறரும் முயன்றனர். இவர்களது குறிக்கோளுடன் கிறிஸ்துவின் விடுதலையைக் குழப்பலாகாது. கருத்தியலான, காலத்தோடு தொடர்பற்ற முறையில் அமையும் கொள்கையின் விளைபொருள் அன்று கிறிஸ்துவ விடுதலை; மாறாக, அது வரலாற்று நிகழ்ச்சியாம் இயேசுவினுடைய வெற்றிநிறை சாவின் விளைவாகும்; திருமுழுக்கில் கிறிஸ்துவுடன் ஆள் என்ற முறையில் தொடர்பு கொண்டு, அவரோடு ஒன்றிப்பதன் விளைவாகும்.

விசுவசிப்பவன் சுதந்தரமுள்ளவன் என்பதற்குப் பொருள் இதுதான்; பாவம், சாவு, சட்டம் ஆகிய தளைகளின் தடையின்றி, தந்தையுடன் ஆழ்ந்த ஐக்கியத்தில் வாழ ஆவியானவரில் ஆற்றல் பெற்றுள்ளான்.

அ) பாவம் என்ற அரக்கன்தான் உண்மையான கொடுங்கோலன். அதன் நுகத்தினின்று நம்மைக் களைந்துள்ளார் இயேசு கிறிஸ்து. உரோமைருக்கு விடுத்த மடலில் (1-3) பவுல் உலக முழுவதிலும் பரவியிருந்த பாவத்தின் கொடுங்கோலாட்சியை வருணனை செய்கின்றார்; நாம் அருட்பெருக்கை இன்னும் அதிகமாக உணரும் பொருட்டே அவ்வாறு விவரிக்கின்றார் (உரோ 5:15.20; 8.2). கிறிஸ்துவின் சாவு - உயிர்ப்பு மறைபொருளுடன் நம்மை இணைக்கும் திருமுழுக்கு - நம் அடிமை நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது (6:6). இஸ்ராயேலில் உள்ளுணர்வு பெற்ற சிறுபான்மையினரது கருத்துக்கேற்ப, பழைய ஏற்பாட்டில் மக்கள் எதிர்பார்த்த சிறப்பு அம்சத்தை இந்த விடுதலை நிறைவு பெறச் செய்கின்றது (காண். லூக் 1:68-75).

பவுல் அதன் ஆன்மீகப் பொருளை ஊடுருவிக் காட்டுகின்றார்; ''விடுதலை அளிப்பவர் சீயோனிலிருந்து வருவார். யாக்கோபின் குலத்திலிருந்து இறைப்பற்றின்மை அனைத்தையும் போக்கிடுவார்'' (உரோ 11:26). தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்களின் உரிமைகளில் முழுப்பங்கெடுக்க புறவினத்தாரும் அழைக்கப்பெற்றுள்ளனர் எனும் மறைபொருளை வெளியிடுகின்றார். முதல் விடுதலையின் வியத்தகு செயல்கள் நம் அனைவரிலும் புதுப்பிக்கப்பெறுகின்றன. ''இறைவனே இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுவித்து, நம் அன்பார்ந்த மகனுடைய அரசில் கொண்டு வந்து சேர்த்தார். இம்மகனால்தான் நமக்கு மீட்பு உண்டு, பாவமன்னிப்பு உண்டு'' (கொலோ 1:13தொ).

ஆ) பாவத்தின் தவிர்க்க முடியாத விளைவான சாவும் தோல்வியடைந்து விட்டது (ஆதி 2:17; ஞான 2:23தொ; உரோ 5:12);

அதன் கொடுக்கும் மறைந்து விட்டது (1 கொரி 15:56). சாவின் அச்சத்துக்குக் கிறிஸ்தவர்கள் இனி அடிமைகள் அல்லர் (எபி 2:14தொ). உண்மையாகவே, மகிமை நிறை உயிர்ப்பில்தான் சாவின் அச்சத்திலிருந்து முழுவிடுதலை பெறுவோம் (1 கொரி 15:26. 54தொ). இன்னும் நாம் ''நம் உடல் விடுதலையாக்கப்படும் நாளை எதிர்நோக்கித் தவித்துக்கொண்டிருக்கிறோம்'' (உரோ 8:23). ஆனால், இறுதிக்காலங்கள் ஏற்கெனவே ஓரளவு தொடங்கிவிட்டன; எந்த அளவுக்கு விசுவாசத்திலும் அன்பிலும் வாழ்கின்றோமோ, அந்த அளவுக்குச் ''சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து வந்துள்ளோம்'' (1 யோவா 3:14; யோவா 5:24).

இ) சட்டம்: அதே காரணத்தால் ''நாம் சட்டத்தின் அதிகாரத்தில் இல்லாமல், இறையருளின் அதிகாரத்தில் இருக்கின்றோம்'' (உரோ 6:15). பவுலின் வாக்கு வியப்பையும் ஊட்டக்கூடும்; மிகச் சாதாரணமாகவும் தோன்றக்கூடும்; எனினும், அப்போஸ்தலர் மீட்பு பற்றித் தரும் நற்செய்தி சிறிதெனக் கருதினால் அதனைச் சிதைத்தது போலாகும். மறைபொருளான விதத்தில் நாம் கிறிஸ்துவுடன் இறந்துவிட்டோமாதலின், இனிச் சட்டத்தினின்று மீட்புப்பெற்றுவிட்டோம் (உரோ 7:1-6); வெளிச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் மீட்பின் மூலப்பொருளைக் கண்டடையோம் (கலா 3:2.13; 4:3தொ). புது ஆளுகைக்கு உட்பட்டுள்ளோம். நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ள ஆவிக்குப் பணிதலே நம் நடத்தையின் கோட்பாடாகும் (காண்க. எரே 31:33; எசே 36:27; உரோ 5:5; 8:9.14; 2 கொரி 3:3.6). 'கிறிஸ்துவின் சட்டத்தைப் பற்றி' (கலா 6:2; காண்க. 1 கொரி 9:21) பவுல் இன்னும் பேசுகிறார் என்பது உண்மை; ஆனால், இச்சட்டத்தின் கொடுமுடி அன்பு (உரோ 13:8தொ). ஆவியின் உந்துதலில் தன்னியலார்ந்த முறையில் அதனைச் செயல்படுத்துகிறோம். ஏனெனில், ஆண்டவரின் ஆவியானவர் எங்கிருக்கிறாரோ அங்கு விடுதலை உண்டு'' (2 கொரி 3:17).

3. கிறிஸ்தவ சுதந்தரத்தின் பயிற்சி முறை:

அ) விடுதலை பெறும்போது, கிறிஸ்தவன் துணிவுள்ள நம்பிக்கையினால் நிறைவு பெறுகின்றான். இதனைப் பெருமிதம் எனலாம். புதிய ஏற்பாடு பயன்படுத்தும் 'பரேசியா' (parēsia) எனும் கிரேக்கச் சொல்லுக்கு 'யாவற்றையும் எடுத்துரைக்கும் சுதந்தரம்' என்று பொருள். கிறிஸ்தவனுக்கு, இன்னும் குறிப்பாக அப்போஸ்தலருக்கு, அலாதியான ஒரு மனப்பான்மையை அச்சொல் சுட்டிக்காட்டுகிறது. இறைத்திருமுன் மகவாய் நடக்க மனிதனை அழைத்துச் செல்வது இந்நம்பிக்கையே (காண்க. எபே 3:12; எபி 3:6; 4:16; 1 யோவா 2:28; 3:21). ஏனெனில், திருமுழுக்கில் நாம் பெறுவது 'அடிமையுள்ளம்' அன்று, மாறாக, 'தத்துப்பிள்ளையாகும் உள்ளத்தையே' (உரே 8:14-17). நற்செய்தியின் செறிவை மனிதர் முன் பறைசாற்றத் தேவைப்படும் முழு நம்பிக்கையையும் கிறிஸ்தவ மனப்பான்மை நம்முள் புகட்டுகிறது.

ஆ) சுதந்தரம் என்பது தன்னடக்கமற்ற தன்மை அன்று: ''நீங்களோ, சகோதரர்களே, உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்; அந்த உரிமை, ஊனியல்பின் இச்சைகளுக்கு ஏற்ற வாய்ப்பாகும்படி விட்டுவிடாதீர்கள்'' (கலா 5:13). தொடக்கத்திலிருந்தே, கிறிஸ்தவ சுதந்தரத்தைச் சிலர் திரித்துக் கூறுவதைத் தவறென அப்போஸ்தலர்கள் கண்டிக்க வேண்டியிருந்தது (1 பேதுரு 2:16, 2 பேதுரு 2:19); குறிப்பாக, கொரிந்தியர் சமுதாயத்தில் இத்தகைய ஆபத்து கடுமையாக இருந்ததாகத் தெரிகிறது. அங்கிருந்த ஞானவாதிகள் பவுலின் வாக்கு ஒன்றைத் தங்கள் வாக்காகக் கொண்டனர் போலும்! ''எனக்கு எதையும் செய்ய உரிமையுண்டு''. ஆனால், அவர்கள் அதன் பொருளைத் திரித்து மாற்றிவிட்டனர். ஆதலின், பவுல் தன் வாக்கினைத் தெளிவுபடுத்த வேண்டியிருந்தது. கிறிஸ்தவன் ஆண்டவருக்குச் சொந்தம், உயிர்ப்பே அவனது இறுதிக் கதி என்று சுட்டிக்காட்டினார் (1 கொரி 6:12தொ).

இ) யாவற்றிலும் உயர்ந்தது அன்பு: ''எதையும் செய்ய உரிமை உண்டு. ஆனால், எல்லாமே பயன் தராது'' *(1 கொரி 10:23).* அயலார் நன்மையைக் கருதி நம் உரிமைகளையும் தியாகம் செய்ய வேண்டும் என்று நமது மனச்சாட்சி பகரலாம் *(1 கொரி 8-10; உரோ 14).* உன்னிப்பாய்க் கருதினால், அத்தகையநிலை நமது சுதந்தரத்தைக் கட்டுப்படுத்துவதில்லை; மாறாக, இன்னும் நிறைவழியில் அதனைக் கடைப்பிடிப்பதாகும். இறைவனுக்குப் பணிபுரியும் பொருட்டுத்தான் தங்களுடைய பழைய அடிமை நிலையிலிருந்து விடுதலை பெறுகின்றனர் கிறிஸ்தவர்கள் *(உரோ 6).* ஆதலின், தூய ஆவி அவர்களை உந்தும் வழிகளில் *(கலா 5:16 26),* ''ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாய்'' மாறுவர் *(5:13).* தன்னைப் பணியாளனாகவும், இன்னும் சொல்லப் போனால் தன் சகோதரர்களின் அடிமையாகவும் மாற்றிக் கொள்ளும்போது *(காண்க. 1 கொரி 9:19),* பவுல் தன் சுதந்தரத்தை இழந்து விடுவதில்லை; மாறாக, ஊழியனான மகனை, கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றார் *(காண்க. 1 கொரி 11:1).*

விடுதலை ஆண்டு *(RELEASE, YEAR OF)*
காண்க. ஒய்வு ஆண்டு - II:597.

விடுதலைத்தலைவர்கள் நூல், நீதிபதிகள் நூல் *(JUDGES, BOOK OF)*

1. பெயர்: இந்நூல் எபிரேயத்தில் 'சோபேட்டிம்' (Sopetim) என்ற பெயருடையது. இதை எழுபதுநூல் கிரேக்க மொழியில் 'க்ரிடைய' (Kritai) என்று மொழி பெயர்த்தது. இதைப் பிற மொழிகளில் நீதிபதிகளின் நூல் என்று அழைக்கிறோம். ஆனால், இப்பெயர் 'சோபேட்டிம்' என்ற எபிரேயச் சொல்லின் விவிலியப் பொருளை அவ்வளவாக எடுத்துக்காட்டவில்லை; ''விடுதலைத்தலைவர்கள் நூல்'' என்பது ஓரளவு எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

''சோபேட்டிம்'' என்ற எபிரேயச் சொல் கானானியரிடமிருந்து வந்திருக்க வேண்டும் *(ஆமோ 2:3)* இச்சொல்லின் பொருள் 'தலைவர்' அல்லது 'இளவரசர்' என்பதாகும். நீதிபதிகள் என்ற பெயர் இந்நூலில் வரும் தலைவர்களுக்குச் சாற்றிக் கூறப்படுகிறது. இக்காலத்துப் பொருளில் கொள்வது போல், சண்டைகளைத் தீர்த்து, குற்றம் தண்டித்து, மக்கள் தங்களது உரிமைகளைப் பெற உதவி செய்ய நியமிக்கப்பட்டவர்கள் அல்லர் இவர்கள். இந்நூலில் நீதிபதி என்பதற்கு முதன்மையான பொருள் எழுதப்பட்ட சட்டப்படியோ, வாய்மொழிப் பாரம்பரியப்படியோ நீதித்தீர்ப்பளிக்கும் நடுவர் என்பது அன்று. இவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் யாவேயின் ஆவியால் உந்தப்பட்டுத் தோன்றிய, ஆவேசம் பெற்ற தலைவர்கள் ஆவர்; புற இனத்தவரின் கொடுமைகளிலிருந்து இக்கட்டான காலத்தில் நாட்டை முழுவதுமோ, ஒரு பகுதியையோ அழிவிலிருந்து காப்பாற்ற இறைவனால் அனுப்பப்பட்ட போர்த்தலைவர்கள். இறைமக்களை விடுவிப்பது இவர்களது சிறப்பான பணியாகும். இவர்கள் இறைமக்கள் இழந்துவிட்ட உரிமைகளை மீட்டுத் தருபவர்களாவர். இப்படிச் செய்யும் போது இறைவனுடைய சிறப்பான உதவியுடன் செயல்படுகின்றனர். யாவேயின் மீட்பு நீதியை மெய்ப்பிக்கின்றனர். புற இனத்தவருடைய கொடுமைக்கு உட்படுதல் இறைமக்கள் யாவேயிடம் பற்றுறுதி தவறுவதால் ஏற்படுகிறது *(உப 28:15.68; நீதி 2:11-15).* அதேபோல் அவர்கள் மனந்திரும்பி யாவேயிடம் திரும்பி வரும்போது, கொடுமைகளிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்கிறது *(உப 28:1-24; நீதி 2:18).* இதுவே யாவேயின் நீதியாகும்; உடன்படிக்கையின் விளைவாகும். யாவேயின் பற்றுறுதி இதற்கு உறுதியளிக்கிறது. ஏனெனில், யாவே நீதியுள்ளவர். இந்த இறை நீதியை மெய்ப்பிக்கும் கருவிகளாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவேசமிக்க அருங்கொடை பெற்ற தலைவர்களே இந்த நீதிபதிகள்! ''விடுதலைத் தலைவர்கள்'' *(நீதி 9:15 31)* அல்லது நீதிபதிகள் என்ற அளவில் இவர்கள் யாவே தமது வார்த்தைக்கு அளிக்கும் பற்றுறுதியின் கருவிகளாவர்.

நீதிபதி பற்றிய இக்காலக்கருத்து ஓரள விற்கு, இந்நூலில் வரும் சிறிய நீதிபதி களுக்குப் பொருந்தும். இவர்கள் மக் களைப் பகைவர்களிடமிருந்து மீட்பதோடு நீதியும் வழங்கினர். இவர்கள் யூத இன ஆட்சியின் நிலையான நிறுவன அமைப் பைச் சார்ந்தவர்கள். இவர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள். யாவேயின் சட்டத்திற்கு விளக்கம் அளிப்பதும், யூத இனத்தவரி டையே சச்சரவும் கருத்து மாறுபாடும் ஏற்படும்போது அதைத் தீர்த்து வைப்பதும் இவர்களுடைய பணியாகும்.

ஆகவே, இந்நூலாசிரியர், நீதிபதி என்ற பொதுத்தலைப்பின்கீழ்ப் பல செயல்களை உள்ளடக்கிக் கூறுகிறார். ஆயினும், இந் நூலில் சிறிய நீதிபதிகளின் நிறுவனச் செயல்கள் சிறப்புப் பெறவில்லை; பெரும் நீதிபதிகளின் தீரச் செயல்களே சிறப்புப் பெறுகின்றன. உபாகம ஆசிரியருக்கு எல் லாத் தீர்ப்பும், இறைவன் இஸ்ராயேல ரோடு செய்துகொண்ட வரலாற்று உடன் படிக்கையில் வேரூன்றியுள்ளன. நீதியென் பது இறைவனுடைய மீட்பளிக்கும் நீதியே. இந்நூலில் வரும் நீதிபதிகள் இறைமீட்புச் செயலின் அடையாளங்களும் கருவிகளுமா வர். இறைவன் ஒருவரே இறுதியான மீட்பராவர். மீட்கும் செயல் அவரிடமி ருந்து மட்டுமே வருகிறது (நீதி *6:34.36-37; 7:2.9.14-15*). ஒருவேளை இந்த இறையியல் கருத்து, இந்நூலில் வரும் எல்லாத் தலை வர்களுக்கும் நீதிபதி என்ற பெயரைச் சாற்றிக் கூறத் தூண்டியிருக்கலாம்.

இவர்கள் ஒவ்வொருவரும் நூலில் கொடுக்கப்பட்டிருக்கும் வாசகத்தின் நீளத் திற்கு ஏற்ப, பெரிய நீதிபதிகள் சிறிய நீதிபதிகள் என்று பிரிக்கப்படுவர். நூலில் பெரும்பகுதியை நிரப்பும் ஆறுபேர் பெரிய நீதிபதிகள் என்றும், மற்றவர்கள் சிறிய நீதிபதிகள் என்றும் அழைக்கப்படுவர். இஃது ஒருதலையான முடிவாகும். சிறிய நீதிபதிகள் பற்றிய பகுதியில், பெரிய நீதிபதிகளின் பகுதியில் காணப்படும் இறை யியல் வாய்பாடுகள் காணப்படவில்லை; ஆனால், சில நிலையான கூறுகள் உள்ளன. பதவியேற்றல், நீதி வழங்கிய காலம், அவர்கள் இறப்பு, அடக்கம் செய்யப்பட்ட இடம் ஆகியவை குறிக்கப்படுகின்றன. சில சிறிய நீதிபதிகளுக்கு அவர்களின் சொத்துப் பட்டியல் தரப்படுகிறது. சிறிய நீதிபதிகள் இஸ்ராயேலின் கூட்டாட்சியில் நிலையான நிறுவனமாக இருந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது.

சிறிய, பெரிய நீதிபதிகளான பன்னிருவ ருடன் ஏலியையும் சாமுவேலையும் சேர்க்க வேண்டும் (*1* சாமு *1:7*). இந்த இருவர் மட்டும்தான் இஸ்ராயேல் நாடு முழுவதற் கும் நடுவராக இருந்ததாகத் தெரிகிறது. மற்றவர்களைப்போல் அல்லாது, இவர்கள் முழுவதும் சமய, ஆன்மீகத் தலைவர்கள் ஆவர்.

2. திட்டம்:

அ. முதல் முன்னுரை (*1:1-2:5*).

ஆ. இரண்டாவது முன்னுரை(*2:6-3:6*).

இ. நீதிபதிகளின் நூல் (*3:7-16:31*).

1. *3:7-11*	:	ஒத்னியேல்.
2. *3:12-30*	:	ஏகூது.
3. *3:31*	:	சம்கார்.
4. *4:1-5:32*	:	தெபோரா - பாராக்கு.
5. *6:1-8:35*	:	கிதியோன்.
6. *9:1-57*	:	அபிமெலக்கு (நீதிபதி களில் ஒருவன் அல்லன்).
7. *10:1-2*	:	தோலா.
8. *10:3-16*	:	யாயிர்.
9. *10:17-12:7*	:	இப்தாகு.
10. *12:8-10*	:	இப்சான்.
11. *12:11-12*	:	ஏலோன்.
12. *12:13-15*	:	அப்தோன்.
13. *13:1-16:31*	:	சிம்சோன்.

ஈ. முதல் பிற்சேர்க்கை (*17:1-18:31*).

உ. இரண்டாவது பிற்சேர்க்கை (19:1-21:25). இந்நூல் பல்வேறுபட்ட கதைகளின் தொகுப்பாகும். அவற்றிடையே ஒற்றுமையில்லை; ஆனால், வரலாறு பற்றிய இறையியல் திட்டத்தினுள் ஒன்று சேர்த்துத் தரப்படுகின்றன.

3. எப்படித் தோன்றின: இந்நூலின் தோற்ற வரலாற்றில் நான்கு படிகளைக் காணலாம்.

அ. முதற்படி: வாய்மொழிப் பாரம்பரியம். வீரர்களின் வரலாறு, குடும்ப வீரகாவியங்கள், பெயர்க் காரணக்கதைகள் ஆகியவற்றை ஒட்டிய மிகப்பழைய வாய்மொழிப் பாரம்பரியங்கள் இஸ்ராயேலரிடையே எங்கும் பரவியிருந்தன. பெரும்பாலும், இவை வழிபாட்டு மையங்களிலும், பாடகர் குழுக்களிலும் காப்பாற்றப்பட்டு வந்தன. குடியேற்றக் காலம் பற்றிய சில வீர காவியக்கதைகள் வாய்மொழியாக வட நாட்டுப் பாரம்பரியத்தில் மட்டும்தான் காப்பாற்றப்பட்டிருந்தன; மற்றவை தென் பகுதியில் பாதுகாக்கப்பட்டன. இப்பாரம்பரியங்கள் வெவ்வேறு விதத்தில் மாற்றியமைக்கப்பட்டு நினைவில் காக்கப்பட்டன.

ஆ. இரண்டாம்படி: வாய்மொழிப் பாரம்பரியங்கள் இணைவட்டவடிவில் ஒன்று சேர்க்கப்பட்டன. சிறிது காலத்திற்குப்பின் இப்பாரம்பரியங்களுக்கு எழுத்து வடிவம் கொடுக்கப்பட்டது. இது தாவீது அல்லது சாலமோன் காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

இ. மூன்றாம்படி: வட அரசு வீழ்ந்தபின் கி.மு. 721) இப்பாரம்பரியங்கள் இணைக்கப்பட்டு முதல் பதிப்பு தோன்றியது. இஃது இஸ்ராயேலின் சமய வரலாற்றை எழுத முயன்ற உபாகமப் பாரம்பரிய ஆசிரியர்களின் வேலைப்பாடாகும். இவர்கள் தங்களுக்குக் கிடைத்த ஏட்டு மூலங்களைப் பயன்படுத்தி, திட்டம் செய்து, வாய்பாட்டுச் சொற்களைப் பயன்படுத்தி இந்நூலுக்கு ஒற்றுமை அளித்தனர். மீண்டும் மீண்டும் வரும் வாய்பாட்டுச் சொற்கள் உபாகமப் பாரம்பரியக் கொள்கைக்கு ஒத்தனவாயுள்ளன. அவை அதே வரலாற்று விளக்கத்தையும் எதிரொலிக்கின்றன. உடன்படிக்கைக் கடமையையும் அதே முறையில் வலியுறுத்திக் கூறுகின்றன. இந்த ஒற்றுமைகள், உபாகம ஆசிரியர்களே இந்நூலை அமைத்தனர் என்று கருத இடமளிக்கின்றன. பாவம் செய்தல், கொடுமைப்படுதல், மனந்திரும்புதல், விடுதலை, அமைதி ஆகியவை மீண்டும் மீண்டும் வரும் இணைவட்ட அமைப்பாக எடுத்துக் கூறப்படுகின்றன. இந்நிலையில் நீதி 2:11-3:6-இல் வரும் முன்னுரை சேர்க்கப்பட்டது. தனிப்பட்ட வீரகாவியங்கள் இந்த இறையியல் அமைப்பில் உருவாயின. ஒருவேளை இச்சமயத்தில்தான், வெற்றிகள் பற்றி உபாகமப் பாரம்பரிய விளக்கமுடைய நிகழ்ச்சியுரை (1:1-2:5) நீதிபதிகள் ஆகமத்திற்கு ஒரு முன்னுரையாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம். இதன் முற்சேர்க்கை, நீதி 2:6-4-இல் யோசு 24:28-31 என்ற பகுதியை மீண்டும் கூறச் செய்கிறது. இந்தப் பதிப்பாசிரியர் தன் நோக்கத்திற்கு ஒவ்வாததும், ஒழுக்கத்திற்குப் பொருந்தாதுமாகக் கருதி நீதி 9: 16 அதிகாரங்களை வேண்டுமென்றே விட்டிருக்கலாம். (9; 16-ஆம் அதிகாரங்களைத் தவிர்த்த) இந்தத் தொகுப்பு (1:1-15:20) ஆறு நீதிபதிகளைப் பற்றிய (ஒத்னியேல், ஏகூது, பாராக்கு, கிதியோன், இப்தாகு, சிம்சோன்) வரலாற்றை மட்டுமே கொண்டிருந்தது. பிற்காலப் பதிப்பாசிரியர் இன்னும் ஆறு பேருடைய (சம்கார், தோலா, யாயிர், இப்சான், ஏலோன், அப்தோன்) வரலாற்றைச் சேர்த்திருக்க வேண்டும். இவர்களைப் பாரம்பரியம் நினைவு கூர்ந்தது; ஆனால், அவர்களுடைய தீரச்செயல்களை வெகு காலமாக மறந்திருக்க வேண்டும். இச்சேர்க்கையின் விளைவால் ''பன்னிரண்டு நீதிபதிகளின் நூல்'' தோன்றியது. ஒருவேளை இதுதான் இப்பதிப்பாசிரியரின் நோக்கமாய் இருக்கலாம். இவர்தான் 9; 16-ஆம் அதிகாரங்களை இந்நூலில் புகுத்தியிருக்க வேண்டும். இப்பதிப்பு வேலைகள் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் நடந்திருக்க வேண்டும்.

ஈ. நான்காம்படி: அதி. 17-18-இல் வரும் "தாண்" என்ற இடத்திலுள்ள திருத்தலம் பற்றிய நிகழ்ச்சியுரையும், அதி. 19-21-இல் வரும் தீரச்செயல் பற்றிய நிகழ்ச்சியுரையும் பிற்காலத்தைச் சார்ந்த ஆர்வத்தைக் காட்டு கின்றன. இவை நாடு கடத்தப்பட்ட காலத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அதி. 1 16-இல் காணப்படும் இறையியல் போக்கு இப்பிற்சேர்க்கைகளில் காணப்படவில்லை. இவற்றையெல்லாம் சேர்த்து ஒரு பதிப்பாசிரியர் நாம் கொண்டிருக்கும் வடிவில் இந்நூலை எழுதியிருக்க வேண்டும்.

இம்முறையில் இந்நூல் தோற்றத்தில் பலபடிகளும் பல பதிப்புகளும் உண்டு.

4. சில முக்கிய கருத்துக்களும் குறிப்புகளும்:

1. முதல் முன்னுரை: *(1:1-2:5)*: யோசுவா ஆகமத்தைப் படிக்கும்போது, வாக்களிக்கப்பட்ட நாட்டில் புகுந்த இஸ்ராயேல் படிப்படியாக வெற்றிமேல் வெற்றி கொண்டு, பாலஸ்தீனம் முழுவதையும் கைப்பற்றி நிலையாகக் குடியேறியதாக உணர்வு ஏற்படுகிறது. ஆனால், இந்த முன்னுரை அதற்கு எதிரான விவரிப்பைக் கொடுக்கிறது. இப்பகுதி யோசுவாவுக்குப்பின் வந்த காலத்தில் நிலவிய அரசியல், சமய நிலைகளை விவரிக்கிறது. இஸ்ராயேல் மக்கள் தங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பகுதிகளில் குடியேற முயன்றபோது, அங்கே ஏற்கெனவே வாழ்ந்த மக்கள் எல்லோரையும் வென்று தங்களது அதிகாரத்தை நிறுவ முடியவில்லை. ஆகையால், அம்மக்களோடு ஒன்றி வாழ்வதைத் தவிர வேறு ஒன்றும் இஸ்ராயேல் இனத்தவர் சிலரால் செய்ய முடியவில்லை. தொடர்ந்து போராட்டம் இருந்து கொண்டே இருந்தது. அரசியல் ஆபத்து மட்டுமன்று, சமய ஆபத்தும் இருந்தது. நீதி 1:1-36 என்ற பகுதி குடியேறிய காலத்தில் கண்ட வெற்றிகளை விவரிக்கிறது. ஆனால், இஸ்ராயேலர் இறைவனோடு செய்து கொண்ட உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கவில்லை. ஆகவே, இக்காலத்தை 2:1-5 என்ற பகுதி இறையியலாகத் தீர்ப்பிடுகிறது. கானானில் வாழ்ந்த புற இனத்தவரை அழிக்கத் தவறியது பாவமாகும். அதற்காக அவர்கள் அடைந்த தண்டனையை 2:6-16:31 விவரிக்கிறது. கானானை வெற்றி கொண்டு குடியேறிய இக்காலம் பற்றிய இம்முதல் முன்னுரை உபாகமப் பாரம்பரிய விளக்கவுரையாகும். இதையே பிற்காலத்திற்கு ஏற்றபடி மெருகேற்றியது இரண்டாம் முன்னுரை *(2:6-3:6)*.

4. 2. இரண்டாம் முன்னுரை: *நீதி 1:1-2:5.* இந்நூலுக்கு நல்லதோர் முன்னுரையாக இருந்தாலும் 2:6-3:6 என்ற பகுதியும் ஒரு முன்னுரையாக அமைகிறது. இம்முன்னுரை, யோசுவாவின் இறுதி உரையோடு நேரடியாகத் தொடர்பு கொள்கிறது (யோசு 24:28-33; நீதி 2:6-9). இம்முன்னுரையின் மையப்பகுதி மிகக் கவனமுடன் அமைக்கப்பட்ட வேலைப்பாடுடையதாகும். இதிலே உபாகமப் பாரம்பரியக்குழுவின் இறையியல் திட்டம் வரையப்படுகிறது. இது பின்வரும் 3:7-16:31-இல் வரும் வரலாற்றை விளக்கப் பயன்படுகிறது. இவ்விரண்டாம் முன்னுரை நூலின் முதன்மைக் கருத்தை வட்டவடிவில் எடுத்துக் கூறுகிறது. இவ்வகையில் ஒரு வாய்பாடு அமைகிறது. இஸ்ராயேலர் இறைவன் திருமுன் தீமை செய்கின்றனர்; பொய்த்தேவதைகளை வணங்குகின்றனர்; பாவம் செய்கின்றனர். இறைவன் அவர்கள்மேல் சினம் கொள்கிறார். அவர்களுடைய எதிரிகளிடம் அவர்களைக் கையளிக்கிறார்; "விற்றுவிடுகிறார்". அவர்கள் கொடுமைப் படுத்தப்படுகின்றனர். அவர்கள் மனந்திரும்பி இறைவனை நோக்கி அபயமிடுகின்றனர், அழுகின்றனர்; இறைவனை நாடுகின்றனர். இறைவன் மனமிரங்கி அவர்களுக்கு ஒரு மீட்பரை, நீதிபதியைத் தோற்றுவிக்கிறார். பாவம், இறைவனது சினம், துன்பப்படுதல், மனந்திரும்புதல், மீட்பு, அமைதி, பாவம், இறைவனது சினம்... இப்படித் தொடர்ந்து கொண்டே போகிறது. இந்த முதன்மைக் கருத்து நூல் முழுவதும் ஒரு திட்டம் செய்யப்பட்ட வாய்பாடுபோல் ஓடுகிறது. இன்னல்கள் பாவத்தின் தண்டனைகளாக

வும், விடுதலை மன்னிப்பின் அடையாள மாகவும் காட்டப்படுகின்றன. இக்கருத்து இந்நூல் முழுவதும் தொடர்ந்து செயல்படு கிறது. இறைவன் மீட்புச் செயலைத் தொடர்ந்து நடத்துபவர் என்ற கருத்து இந்நூல் முழுவதும் உறுதியடைந்து கொண்டே போகிறது.

இவ்விறையியல் கருத்தை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சியுரைகள் மூன்று முக்கிய கருத்துக்களைச் சுற்றி அமைகின்றன; இறைவன் ஒரு மீட்பரை எழுப்புகிறார். ஒரு பெரும் போர் நடக்கிறது, இஸ்ராயேலர் வெற்றி பெறுகின்றனர். நிகழ்ச்சியுரை இரு வகைக் கூறுகளோடு முடிகிறது; பகைவன் இழிவாக்கப்படுகிறான், நாட்டில் அமைதி நிலவுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியுரையும் வாய்பாட்டு முறையில் தொடங்கி முடிகின்றது. ஆனால், இந்த வாய்பாடு நிகழ்ச்சியுரைகளைப் பாதிப்பதில்லை.

4. 3. ஒத்னியேல்: இவரைப் பற்றிய நிகழ்ச்சியுரை, பொதுவான வாய்பாட்டுடன் தொடங்குகிறது. இஸ்ராயேல் மக்கள் "ஆண்டவன் திருமுன் பாவம் புரிந்து தங்கள் கடவுளை மறந்து போய்ப் பாகாலையும், அசரோத்தையும் வழிபட்டனர். ஆண்டவர் இஸ்ராயேலர் மேல் கோபம் கொண்டு மெசபொத்தாமியாவின் அரசனான கூசான் ரிசத்தயிம் என்பவனுக்கு அவர்களைக் கையளிக்கவே, இஸ்ராயேல் மக்கள் எட்டு ஆண்டுகளுக்கு அவனுக்கு அடிமைகளாக இருந்தனர்" (நீதி 3:7-8). கூசான் ரிசத்தாயிம் என்பதற்கு இரட்டிப்பாகக் கொடுமையுள்ளவன் என்பது பொருள். இவன் ஏதோமைச் சார்ந்தவன். யூதாவின் தெற்கு எல்லை இவனுடைய அரசுக்கு எல்லையாக விளங்கியது. யூதா இனத்தவருடைய பலவீனத்தை அறிந்து இவன் அவர்களைத் துன்புறுத்தினான். இதைக் கண்ட இஸ்ராயேலர் இறைவனிடம் மன்றாடினர். இக்கொடுமையிலிருந்து மக்களை மீட்க யாவே காலேபின் தம்பி கெனாசின் மகன் ஒத்னியேலைத் தேர்ந்து கொண்டார். இறைவனது ஆவி இவரை ஆட்கொண்டது. இந்த ஆவி ஒரு மனிதனை ஆட்கொண்டு அவருக்கு ஆற்றல் மிக்க சக்தி அளித்து, அவனைப் பெருஞ்செயல் செய்ய வைக்கக்கூடிய இறைவனது ஆற்றலாகும். ஒத்னியேல் இஸ்ராயேலை மீட்டு, அவர்களிடையே 40 ஆண்டுகளுக்கு நீதி வழங்கினார்.

4. 4. ஏகூது: இஸ்ராயேலர் மீண்டும் இறைவன் திருமுன் தீயன செய்தனர். மோவாபு அரசன் எக்லோன் இறைவனின் தண்டிக்கும் கரமாக விளங்கினான். கொடுமை மோவாபியரிடமிருந்து வருகிறது. அராது, அர்னோன் ஆகிய ஆறுகளுக்கிடையில் சாக்கடலுக்கு வடகிழக்கில் மோவாபு இனத்தவர் வாழ்ந்து வந்தனர். தங்கள் நாட்டை விரிவாக்க எண்ணியபோதெல்லாம் அர்னோனுக்கு வடக்கிலுள்ள செழிப்பான பகுதி அவர்கள் கண்ணில் பட்டது. இஸ்ராயேலரிடையே மத்திய அரசு அமைப்பு இல்லை. ஆனால், மோவாபியர் நல்ல அமைப்புப் பெற்று ஒரே அரசின் கீழ் இயங்கினர். ஆகையால், இவர்கள் இஸ்ராயேலரை எளிதில் வெற்றி கொள்ள முடிந்தது. இவர்களால் துன்புற்றது பென்யமின் இனமாகும். எக்லோன் என்பதற்கு எருது என்பது பொருள். இவனால் கொடுமை அடைந்த இஸ்ராயேலர் இறைவனை மன்றாட, இறைவன் ஏகூது என்ற "இடக் கையனைத்" தனது மீட்புக் கருவியாகப் பயன்படுத்துகிறார். ஏகூது எக்லோனை இரகசியம் கூறுவதாகத் தனியே சந்தித்து அவனை வயிற்றில் குத்திக் கொல்லுகிறார். பின், இஸ்ராயேலருக்குத் தலைமை தாங்கி மோவாபியரை வெல்லுகிறார். இவர் 80 ஆண்டுகளுக்கு நீதி வழங்கினார்.

இப்படி அரசனைக் கொல்வது பற்றி இந்நூல் ஒரு தீர்ப்பும் கூறவில்லை. நாட்டின் விரோதிக்கு எதிராகச் செய்த நெருக்கடிக்கேற்ற செயல் ஆனதால், இச்செயல் கண்டிக்கப்படவில்லை. ஒருவேளை அக்காலத்தில் இப்படி நடப்பது வெகு அரிதான செயலன்று.

4. 5. சம்கார்: இப்பெயர் செமித்திக்கு பெயரன்று; அனாத்தின் மகன் எனப் பொருள்படும்; ஒருவேளை கலிலேயாவிலுள்ள பெத் - அனாத்தின் குடிமகன் எனப் பொருள்படும். இவர் சிறிய நீதிபதிகளில் ஒருவர். இவர் பெலிஸ்தியரிடமிருந்து வந்த ஆபத்திலிருந்து இஸ்ராயேலரைக் காப்பாற்றினார். இவர் பெலிஸ்தியரில் அறுநூறு பேர்களைக் கலப்பைக் கொழுவால் கொன்றார் என்று வாசிக்கிறோம் (நீதி 3:31). இது 2 சாமு 23:11-12-இல் வரும் ஆகேயின் மகன் சம்மாவின் தீரச்செயலை நினைவு படுத்துகிறது. இதே சம்கார் தெபோராவின் பாடலில் குறிப்பிடப்படுவதாகத் தெரிகிறது (நீதி 5:6). ஆனால், இக்குறிப்பு ஒரு கொடுமைக்காரனை விவரிக்கிறது, விடுதலை அளித்துப் பாதுகாக்கும் நீதிபதியை அன்று. ஆகவே, இந்நூலுக்கு இறுதி வடிவம் அளித்த உபாகமப் , பாரம்பரிய ஆசிரியர் இவனைத் தவறாகப் புரிந்து கொண்டாரா என்று அறிஞர் ஐயுறுவர். சம்காரை விடுதலை அளிப்பவனாகவும், அபிமெலக்கை நீதிபதிகள் அட்டவணையில் சேர்க்கத் தகுதியற்றவன் எனவும் கருதிய ஆசிரியர், சம்காரைப் பற்றிய ஒரு குறிப்பை நீதி 3:31-இல் உட்புகுத்துகிறார். இவ்வாறு 12 நீதிபதிகளின் எண்ணை நிறைவுபடுத்துகிறார் என்பர் அறிஞர் சிலர். இன்னும் பலவாறு சம்காரைப் பற்றிக் கூறுவர்.

4. 6. தெபோரா-பாராக்கு: இஸ்ராயேல் ஆண்டவர் திருமுன் மீண்டும் பாவம் செய்தனர். எனவே, ஆட்சோர் நகரை ஆண்டுகொண்டிருந்த கானான் நாட்டு அரசன் யாபீனுக்குக் கடவுள் அவர்களைக் கையளித்தார்.

கானானியர் நகரங்களிடையே நிலவிய ஒன்றிப்பு இஸ்ராயேலருக்கு, சிறப்பாக கலிலேயாவில் தங்கிய இஸ்ராயேலர்களுக்கு, ஒரு பெரும் ஆபத்தாக முடிந்தது. இந்த பத்து மத்திய பாலஸ்தீனத்தில் வாழ்ந்த எப்பிராயிம் இனத்தவரைப் பாதித்தது. இஸ்ராயேலரிடையே நிலையான மைய அரசு இல்லாதது கானானியர் எளிதில் வெற்றி கொள்ள உதவியது. இந்த ஆபத்துக்கு எதிர்ப்பு ஒரு பெண் இறைவாக்குரைஞரிடமிருந்து எழுகிறது. ''தெபோரா'' என்பதற்குத் ''தேனீ'' என்று பொருள். இவள் எப்பிராயிம் மலையில் இராமா, பெத்தேல் என்ற ஊர்களுக்கு இடையில் தங்கி இஸ்ராயேலர்களுக்கு நீதி வழங்கினாள்.

கானானியரிடமிருந்து ஆபத்து வந்த போது, நெப்தலி இனத்தைச் சேர்ந்த பாராக்கை அழைத்து, கானானியரோடு போரிடுமாறு தெபோரா யாவேயின் பெயரால் ஆணையிடுகிறாள். பாராக்கு என்ற சொல்லுக்கு ''மின்னல்'' என்று பொருள். தெபோரா தன்னுடன் வந்தால்தான் படையை நடத்துவதாக பாராக்கு கூற, அவளும் இசைகிறாள். பாராக்கு தனது இனமாகிய எப்பிராயிமிலிருந்தும், அண்டை இனமாகிய செபுலோன் இனத்திலிருந்தும் வீரர்களைச் சேர்த்துத் தாபோர் மலைக்கு இட்டுச் செல்கிறார். அங்கிருந்து யாபீனின் படைத்தலைவன் சீசராவின் தலைமையின்கீழ் வந்த கானானியர் படையைத் தாக்கி, பாராக்கு பெரும் வெற்றி கொள்கிறார். இவ்வெற்றி எவ்வளவு பெரியதென்றால், யாவேயின் நேரடியான இடையீட்டினால்தான் இது நடந்தது என்று இஸ்ராயேலரைக் கருதச்செய்தது (நீதி 5:20). சீசரா ஓடிப்போகும்போது கேனியரான ஏபேரின் மனைவி யாவேல் அவனைக் கொன்றாள்.

இவ்வெற்றி பற்றிய இரு விவரிப்புகள் உள்ளன. ஒரு வாசகம் அதி.4-இல் உரைநடையில் கொடுக்கப்படுகிறது. மற்றது அதி. 5-இல் பாடலாகத் தரப்படுகிறது. இரு வாசகங்களும் பலவற்றை விளக்காமல் விட்டு விடுகின்றன. புதை பொருள் ஆய்வுகள் இஸ்ராயேலருக்கும் கானானியருக்கும் இடையே நிலவிய நிலையற்ற போர்நிலையைப் பற்றிய பல குறிகள் காட்டுகின்றன. சான்றாக, பெத்தேல் கி.மு. 1200 - 1000-க்கு இடையில் நான்கு முறை அழிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மெகிதோ கோட்டை கர்மேல் மலைக்குப் போகும் பாதையைக் காத்து வந்தது. இது கி.மு. 1150-1100-க்கு இடையில் இஸ்ராயேலரால் அழிக்கப்பட்டது. அது திரும்பக் கட்டியெழுப்பப்பட சிறிது காலம் ஆயிற்று. அப்போது தெபோரா பாடலில் கூறப்படும் சீசராச் சண்டை நடைபெற்றிருக்கலாம். இச்சண்டை மெகிதோ நீர்த்துறை அருகே நடந்தது என்று குறிப்பிடப்படுகிறது (நீதி 5:19). இக்குறிப்பு, மெகிதோக் கோட்டை அழிவுற்றிருந்த காலத்தைச் சுட்டுகிறது. ஆகையால், இப்போர் கி.மு. 1100-ஐ ஒட்டி நடந்திருக்க வேண்டும் என்பர் ஆய்வாளர்கள்.

தெபோராவின் பாடல் மிகப் பழைய எபிரேயப்பாடலுக்கு ஒரு சான்றாக நிற்கிறது. இஃது ஒரு சாதாரண நிகழ்ச்சி இவ்வாறு ஒரு பாடலாக அமைக்கப்படலாம் என்று காட்டுகிறது. அஃது உயிர்ச்சித்திரமாகவும் அழகோடும், மக்களைத் தூண்டி உற்சாகப்படுத்தும் விதத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் மனதில் உயிருள்ள முறையில் பதிந்திருந்த நினைவைச் சமயமுறையில் தூய்மை செய்து ஓர் உன்னத காவியமாக்குகிறது. இப்பாடல் முழுவதும் நிறைந்து நிற்பது யாவேயின் புகழ் அஞ்சலியாகும். போர், வெற்றி, அதன்பின் வந்த அமைதி ஆகிய யாவுமே யாவேக்குச் சாற்றிக் கூறப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தங்களது சமய உடன்படிக்கைக்கு ஒரு போர்க் கருத்தைக் கொடுத்தனர். அவர்கள் இறைவனாகிய யாவேயைச் ''சேனைகளின் ஆண்டவர்'' என்று அழைத்துப் போற்றினர்.

4. 7. கிதியோன்: மீண்டும், இஸ்ராயேலர் இறைவன் திருமுன் பாவம் செய்தனர். இறைவனும் அவர்களை மிதியானியர் கையில் ஏழாண்டுகள் விட்டுவிட்டார்.

இந்த மிதியானியர், ஒட்டகங்களைப் பயன்படுத்தித் திரிந்த நாடோடிகளாவர். அவர்கள் வடமேற்கு அரேபியப் பாலையை மையமாகக் கொண்டு சுற்றித் திரிந்தனர். அவர்கள் நாடுகளைக் கைப்பற்றவில்லை. பிறருடைய நாட்டைத்தாக்கிக் கொள்ளையடிப்பதும், பயிர்களை அழித்துத் தானியங்களையும் விலங்குகளையும் கைப்பற்றிக் கொண்டு ஓடிவிடுவதுமே அவர்களுடைய சிறப்பான தொழிலாகும். அப்பகுதிகளிலே மிகுந்த அச்சத்தை உண்டாக்கினர். இதற்கு அஞ்சி இஸ்ராயேலர் மலைகளில் குகைகள் செய்து பாதுகாப்பான இடங்களைத் தேடிக்கொண்டனர். ஆயினும், மிதியானியர் மின்னல் வேகத்தில் வந்து கொள்ளை அடிப்பர்; வெட்டுக்கிளிகளைப்போல் பயிர்களை அழிப்பர். ஆகையால், இஸ்ராயேலர் அன்றாட உணவைக்கூட இழந்தனர். இத்தாழ்ந்த நிலையில் இறைவனிடம் இஸ்ராயேலர் மன்றாடினர். அவரும் ஒரு மீட்பரை அனுப்பினார்.

''கிதியோன்'' என்ற சொல்லுக்கு ''வெட்டுபவன்'' என்று பொருள். இவர் மனாசே இனத்தைச் சார்ந்த அபியேசர் குடும்பத்தைச் சேர்ந்த யோவாசின் மகன். யாவேயின் ஆவி இவரை ஆட்கொள்ள, இவர் பாகாலின் பீடத்தை அழித்து மரங்களையும் வெட்டி, நாட்டின் விடுதலையை ஒரு சமயச் செயலோடு தொடங்குகிறார். இதன் விளைவாக அவருக்கு எருபாகால் என்ற பெயர் கிடைக்கிறது, ஆண்டவரது தூதனின் காட்சியும், பனி பெய்தலான அருஞ்செயலும் இறைவன் அவருக்குக் கொடுத்த தூதை உறுதிப்படுத்துகின்றன. அவருடைய அழைப்புக்கிணங்க, பலபேர் அவரது படையில் சேர்கின்றனர். ஆயினும், தண்ணீர் குடிக்கும் சோதனை வழியாக 300 பேரை மட்டும் தேர்ந்தெடுத்தார். இதை நூலில் வாசித்தறிக. அவர்களுக்குப் பானைகளையும், அவற்றுள் விளக்குகளையும், கையில் எக்காளங்களையும் கொடுத்து, இஸ்ரியேல் பள்ளத்தாக்கில் பாளையம் இறங்கியிருந்த மிதியானியரைத் திடீரென்று தாக்கினார். இதைக் கண்டு கலங்கிய எதிரிகள் ஓடிப்போயினர். அவர்கள் யோர்தானை அடையுமுன்பே எப்பிராயிமியர் அவர்களைத் தாக்கி அவர்களது இளவரசர்களான ஒரேபுவையும் (காகம்), செயேபுவை

யும் (ஓநாய்) கொன்றனர். கிதியோன் யோர்தானைக் கடந்து, மிதியானியரைத் துரத்திச் சென்று அவர்கள் தலைவர்களான செபாகுவையும் சல்முன்னாவையும் வெட்டிக் கொன்றார். தனக்கு உதவி செய்ய மறுத்த சுக்கோத்து, பெனுவேல் ஊரார்களுக்குக் கொடிய தண்டனை அளித்தார்.

இதன்பின், இஸ்ராயேல் மக்கள் அவரை அரசனாக்க விரும்பினர். ஆனால் அவர், ''ஆண்டவரே உங்களை ஆளட்டும்'' என்று கூறி மறுத்துவிட்டார். இப்படி உண்மையிலேயே மறுத்தாரா அல்லது ஏதோ ஒப்புக்கு இப்படிச் செய்தாரா என்று கூறுவது கடினம். பின் வந்த அவருடைய செயல், அவரது மறுப்பு உண்மையானது என்று காட்டவில்லை. ஒரு சமய மீட்பரும் தவறி நடக்கக்கூடும் என்பதற்குக் கிதியோன் ஓர் எடுத்துக்காட்டு. கொள்ளையடித்த பொருட்களைக் கொண்டு ஒரு ''ஏபோது'' என்ற சிலையைச் செய்து தன் ஊரான ஒப்பிராவில் வைத்தார். இஃது இஸ்ராயேலரைச் சிலை வழிபாட்டுக்கு இட்டுச் சென்றது. கிதியோன் அவர் காலத்துக்குரியவர்; கானானியரின் மத சோதனைக்கு உள்ளானார். இதன் விளைவாக, இவரைப் பற்றிய வரலாற்றுத் தீர்ப்பு ஐயப்பாடு உடையதாகும். ஆயினும், அவர் ''மிதியானியரை வெற்றி கொண்ட நாள்'' உலக இறுதியில் மெசியா கொள்ளும் வெற்றிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும் (எசா 9:4). இவர் 40 ஆண்டுகளாக இஸ்ராயேலர்களுக்கு நீதி வழங்கினார். அவர்களிடையே அமைதி நிலவியது.

4. 8. அபிமெலக்கு: இச்சொல்லுக்கு 'என் தந்தை ஓர் அரசன்' என்பது பொருள். இவன், கிதியோனுக்குச் செக்கேமைச் சார்ந்த ஒரு வைப்பாட்டியிடம் பிறந்தவன். ஆகையால், இவனை இவனுடைய சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவன் தந்தை ஏற்க மறுத்த அரசை இவன் பெரிதும் விரும்பினான். இதற்கு இஸ்ராயேலரிடையே நிலவிய போட்டி மனப்பான்மை பெரிதும் உதவிற்று. தனது தாயின் ஊரான செக்கேம் மக்களைத் தூண்டி விட்டு அவர்களுக்கு அரசனானான். பின் தனது 70 சகோதரர்களையும் கொல்லத் தலைப்பட்டான். யோத்தாம் என்ற ஒரே ஒருவன் மட்டுந் தப்பினான். இக்கொடிய அபிமெலக்கு கானானியரைப்போல் ஒரு சிற்றரசனாக இருக்க விரும்பவில்லை. சிறிது சிறிதாகத் தன் ஆட்சியை மனாசே, எப்பிராயிம் இனத்தவர் நாட்டின்மீது செலுத்தத் தலைப்பட்டான்; அருமாவிற்குத் தன் தலைநகரை மாற்றினான். இதனால் செக்கேமியரைப் பகைத்துக் கொண்டான். அவர்கள் அவனுக்கு எதிராக எழுந்தபோது, அவர்கள் நகரையே அழித்தான். அவனுடைய ஆதிக்கத்திற்கு ஆதாரமான செக்கேமின் அழிவோடு அவனது ஆட்சியும் அழியத் தொடங்கியது. தேபேசு என்ற இடத்தில் நடந்த போரில், ஒரு பெண் எந்திரக்கல்லின் தண்டை அபிமெலக்கின் மேல் எறிந்து அவன் மண்டையை உடைத்தாள். இவ்வாறு ஓர் இழிவான முடிவை அடைந்தான் அபிமெலக்கு.

இஸ்ராயேலர் தலைவர்களில் தன்னையே அரசன் என்று கூறிக் கொண்டவர்களில் இவன்தான் முதல்வன். இவன் செய்த தீமைகளுக்கு இறைவனே பழிவாங்கினார் என்று நீதிபதிகள் ஆகமம் தீர்ப்புக் கூறுகிறது. இவன் நீதிபதிகளுள் ஒருவன் அல்லன்.

4. 9. தோலா: சிறிய நீதிபதிகளுள் ஒருவர். இசக்கார் இனத்தில் பூகாவின் மகனாவார். எப்பிராயிம் மலைநாட்டுச் சாமிரில் வாழ்ந்தார். 23 ஆண்டுகள் இவர் இஸ்ராயேலருக்கு நீதி வழங்கினார். இவர் செய்த தீரச்செயல்கள் குறிக்கப்படவில்லை.

4. 10. யாயிர்: இப்பெயருக்கு ''(இறைவன்) தெளிவுபடுத்துகிறார்'' என்பது பொருள். சிறிய நீதிபதிகளில் ஒருவர். கிலயாதைச் சேர்ந்தவர். இவரது மக்கள் யாயிரின் முப்பது நகரங்களுக்குத் தலைமை வகித்தனர். இப்பெயர் இந்நகரங்களின் பெயரை விளக்கக் கொடுக்கப்பட்ட கற்பனைப் பெயராக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுவர். இவர் 23 ஆண்டுகள் இஸ்ராயேலர்களுக்கு நீதி வழங்கினார்.

4. 11. இப்தாகு: இச்சொல்லுக்கு ''(இறைவன்) கருப்பையைத் திறந்தார்'' அல்லது ''(இறைவன்) விடுதலை அளித்தார்'' என்று பொருள் ஆகும். பெரிய நீதிபதிகளில் ஒருவர் கிலயாதைச் சேர்ந்தவர் (கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம்).

இஸ்ராயேலர் மீண்டும் இறைவன் திருமுன் பாவம் செய்தனர், பழிகாராகினர்; பல புற இனத் தேவதைகளை வழிபட்டனர். சினமுற்ற இறைவன் அப்புற இனத்தவரிடையே இஸ்ராயேலரைக் கையளித்தார். இஸ்ராயேலர் பதினெட்டு ஆண்டுகளுக்கு மோவாபியர், அம்மோனியர் ஆகியவரிடம் அவதியுற்றனர்; இறைவனிடம் மன்றாடினர்; அவரும் செவிமடுத்தார்.

இப்தாகு கிலயாதைச் சேர்ந்த ஒரு விலைமகள் வழியாகப் பிறந்தவர். ஆகையால், இவரது சகோதரர்கள் இவரைத் தங்களுடையவராக ஏற்றுக் கொள்ளவில்லை; ஆகவே, கொள்ளைக் கூட்டத்திற்குத் தலைவரானார். அம்மோனியர்களை எதிர்த்துப் போராடத் தங்களுக்குள் தலைவன் இல்லாததால் இக் கிலயாது இஸ்ராயேலர், இப்தாகுவை அழைத்து அம்மோனியர்களுக்கு எதிராகத் தங்களை நடத்திச் செல்லுமாறு வேண்டிக் கொண்டனர். அவர்கள் தன்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டதால், அவர்களைப் போருக்கு நடத்திச் செல்ல ஒத்துக்கொண்டார். மற்ற நீதிபதிகள் மேல் இறை ஆவி எழுந்து வந்து அவர்களை ஆட்கொண்டு மீட்புப் பணிக்கு அழைத்தது. ஆனால், இப்தாகுவை மக்கள் தேர்ந்தெடுத்து அதிகாரம் வழங்கினர். அவர் படையைக் கூட்டிக் கிலயாதிலுள்ள மிஸ்பாவுக்குச் செல்கிறார். அங்கு அவர்மேல் யாவேயின் ஆவி இறங்குகிறது (நீதி 11:29). அவரை இறை ஆவி உயர்ந்த தலைவராக்குகிறது. அவரது ஊக்கமிக்க தலைமையின் கீழ், கிலயாதைச் சேர்ந்த இஸ்ராயேலர் அம்மோனியர்களை வெற்றி கொள்கின்றனர். இவ் வெற்றிக்கு அவர் ஒரு பெரும் விலை கொடுக்க வேண்டியிருந்தது. போருக்குப் போகுமுன், இவ்வெற்றி கிட்டினால், திரும்பி வரும்போது அவர்தம் வீட்டிலிருந்து அவரை எதிர்கொள்ள யார் வருவாரோ அவரை ஆண்டவருக்குப் பலியாக ஒப்புக் கொடுப்பதாக வாக்குறுதி செய்திருந்தார். ஆனால், போர் முடிந்து திரும்பி வரும்போது, அவரது ஒரே மகள் ஆரவாரத்துடன் அவர் வீட்டிலிருந்து எதிர்கொள்கிறாள். அவளைப் பலியிடுகிறார்.

மனிதப் பலி யாவே வழிபாட்டுக்கு ஒவ்வாததாக இருந்தாலும் கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் இஸ்ராயேலில் மனிதப் பலி நடப்பது சாத்தியமான தொன்றாகும் என்று இந்நிகழ்ச்சி காட்டுகிறது. அக்காலத்தில் இப்படிச் செய்வது, தவறுதலாக இறைப்பற்றாகக் கருதப்பட்டிருக்கலாம்.

எப்பிராயிமியர்களோடு இப்தாகு போராடியது, இஸ்ராயேலர்களிடையே பொறாமை எவ்வாறு ஒரு போராட்டத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதைக் காட்டுகிறது. இப்தாகு எப்பிராயிம் மக்களை வென்று அடக்குகிறார். ''ஷிபோலத்''என்ற குறிச்சொல் யோர்தானுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் வாழ்ந்த மக்களிடையே நிலவிய மொழித் திரிபைச் சுட்டுகிறது. இப்தாகு ஆறு ஆண்டுகள் நீதி வழங்கினர்.

4. 12. இப்சான்-ஏலோன்: இப்சான் சிறிய நீதிபதிகளில் ஒருவர். இவர் பெத்லகேமைச் சேர்ந்தவர். இவருக்கு 30 புதல்வர்களும், 30 புதல்விகளும் இருந்ததாகத் தெரிகிறது. இவர்களுக்கு வெளியிடங்களில் மணம் செய்து வைத்தார். இஃது ஒரு சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. இவர் ஏழு ஆண்டுகளுக்கு நீதி வழங்கினார். அவரை அடுத்து வந்தவர் ஏலோன். இவரும் சிறிய நீதிபதிகளில் ஒருவர்; செபுலோன் இனத்தைச் சார்ந்தவர்; பத்து ஆண்டுகள் நீதி வழங்கினார்.

4. 13. அப்தோன்: இவர் சிறிய நீதிபதிகளில் ஒருவர்; பிராத்தோன் இனத்தாரான இல்லேலின் மகன். இவருக்கு 40 புதல்வர்களும், 30 பேரப்பிள்ளைகளும் இருந்தனர். இவர்கள் 70 கழுதைகளில் சவாரி செய்தனர். இக்குறிப்பு இவரது செல்வப் பெருக்கைச்

கட்டுகிறது. இவர் எட்டு ஆண்டுகள் நீதி வழங்கினார்.

4. 14. **சிம்சோன்:** இவர் பெரிய நீதிபதிகளில் கடைசியானவர்; தாண் இனத்தைச் சேர்ந்தவர்; மனோவாகுவின் மகன். இவரது குடும்பம் சோராவில் இருந்தது. இவர் இஸ்ராயேலரின் பொதுப்பாணி நாட்டுப் பாடலின் வீரத் தலைவனாவார். சிம்சோன் என்ற பெயருக்குச் ''சூரியன்'' என்ற பொருளுண்டு. ஆகையால், நீதிபதிகள் ஆகமத்தில் வரும் சிம்சோனின் கதை புற இனத்தவரின் இதிகாசங்களில் வரும் ''சூரியன் கதைக்கு'' ஒத்தது என்று அறிஞர் சிலர் கருதுவர். அதனால், இவரை ஓர் இதிகாசப் பாத்திரமாக ஆக்க முயல்வர்.

இக்கதையின் உண்மைப்பொருளை அறிந்து கொள்ள விரும்பினால் அதன் இலக்கிய வடிவத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சியுரை, இஸ்ராயேலின் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட இக்கட்டான நேரத்தை, ''ஒரு பெரிய கன நேரத்தை''ச் சித்திரித்துப் பின்வரும் தலைமுறைகளுக்கு விட்டுச் செல்கிறது. சிம்சோனின் கதையைப் *புரிந்துகொள்ள, அக்கதை தோன்றிய வாழ்க்கைச் சூழ்நிலையையும் அக்கால உலகையும் பற்றிய அறிவு இன்றியமையாதது.

அக்காலம் பெரும் புரட்சிகளும், பெரும் படையெடுப்புகளும், பெரும் குடியேற்றங்களும் நிகழ்ந்த காலமாகும். இக்காலத்தில் தான் வாக்களிக்கப்பட்ட நாட்டின் மலைப் பகுதியில் இஸ்ராயேலர் குடியேறிக் காலூன்றத் தொடங்கியிருந்தனர். அவர்களுக்கு எவ்வகைப் பாதுகாப்பும் இல்லை. அவர்களைச் சுற்றிலும் பகைவர்கள் சூழ்ந்து இருந்தனர். இப்பகைவர்களில் வலிமையானவர்கள் பெலிஸ்தியராவர். இவர்கள் மட்டும்தான் இரும்பால் செய்த ஆயுதங்களைப் பயன்படுத்தினர். இவ்வித ஆயுதங்களையுடைய பெலிஸ்தியரிடமிருந்து, அரசியல் ஒற்றுமையும், மைய அமைப்பும் இல்லாத இஸ்ராயேலுக்குப் பேரழிவான அபாயம் எதிர் நோக்கியிருந்தது. இஸ்ராயேலின் ஒரே நம்பிக்கை சமய ஒற்றுமையும் யாவேயின் உதவியுமாகும். அவர்கள், யாவேயின் வழிபாட்டை விட்டு அவர் திருமுன் பாவம் செய்தபோதெல்லாம், அவர்களை யாலே அவர்களின் எதிரிகளிடம் ஒப்படைத்தார். அவர்கள் சிலை ஆராதனையை விட்டு மனம் திரும்பியபோதெல்லாம் அவர்களுக்கு விடுதலை அளிக்கும் நீதிபதிகளை அனுப்பினார். யாவே அனுப்பிய இப்படிப்பட்ட வீரர்களில் ஒருவர்தான் சிம்சோன். பெலிஸ்தியரிடமிருந்து வந்த பெரும் ஆபத்தை எதிர்த்து, சிம்சோன் தனியாகப் போராடினார். அவர் இறந்தபின், அவரது தீரச் செயல்கள் பல இடங்களில், சிறப்பாகப் புனித இடங்களில், பேசப்பட்டன; நாட்டுப் பாடல்களாக மக்கள் மனதில் குடியேறின; மக்களை ஊக்குவிக்க, அவர்களிடம் நாட்டுப்பற்றைத் தூண்ட ஓர் அரிய சாதனமாக அமைந்தன.

மற்ற நீதிபதிகளைப் போல் இவர் பெரும்படை சேர்த்து, பெலிஸ்தியரை எதிர்த்துப் போர் நடத்தவில்லை. தனிநபராக, பழிக்குப்பழி வாங்கும் நோக்கோடு போராடியதாகத் தெரிகிறது. ஆயினும், இவை யாவும் யாவேயால் ஒழுங்கு செய்யப்பட்ட செயல்களாகக் (நீதி 14:4) கருதப்படுகின்றன. இவருக்கு இருந்த ஆற்றல் மிகுந்த உடல் பலம், யாவேக்கு அர்ப்பணிக்கப்பட்டதன் விளைவாக வந்ததாகக் காட்டப்படுகிறது. சிம்சோன் திம்னாவைச் சேர்ந்த ஒரு பெலிஸ்தியப் பெண்ணை நேசிக்கிறார். இஃதோடு இவருக்கும் பெலிஸ்தியருக்குமிடையே எழும் பகைமை தொடங்குகிறது. திருமணத்தின் போது சிம்சோன் பெலிஸ்தியருக்கு ஒரு விடுகதை கொடுக்கிறார். அவரது மனைவி அவரை வசப்படுத்தி அவரிடமிருந்து விடையை அறிந்து பெலிஸ்தியரிடம் கூற, அதற்கு வெகுமதியாக சிம்சோன் 30 பெலிஸ்தியரைக் கொன்று, அவர்களின் ஆடைகளை விடுகதையை விடுவித்தவர்களுக்குக் கொடுத்தார். பின், உண்மையறிந்த அவர் கோபமடைந்து தன் மனைவியை விட்டகன்று செல்ல, அவளைப் பெலிஸ்தி

யருள் ஒருவன் எடுத்துக் கொண்டான். இந்த அபகரிப்புக்குப் பழிவாங்க, முந்நூறு நரிகளைப் பிடித்து, அவற்றின் வால்களை ஒன்றோடு ஒன்றாக இணைத்து, இரு வால்களுக்கிடையே ஒரு எரியும் பந்தத்தைக் கட்டி, பெலிஸ்தியருடைய பயிர் நிலங்களிலே செலுத்தி, அவற்றை எரித்து அழித்தார். பின் யூதாவின் பகுதியில் சென்று வாழ்ந்தார். பெலிஸ்தியர் சிம்சோனைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோர, யூதா இனத்தவர் சிறிதும் வெட்கம் இன்றி, அவரை அவர்களிடம் ஒப்படைத்தனர். பெலிஸ்தியர் அவரைக் கூட்டிச் சென்றபோது, அவர் கட்டுகளை அறுத்துவிட்டு, 1,000 பெலிஸ்தியரைக் கொன்றார்.

மற்றொரு நிகழ்ச்சியில், காசா நகரில் ஒரு விலைமகளுடன் இரவைக் கழிக்கச் சென்றபோது, பெலிஸ்தியர் அவரைக் கொல்லச் சதிசெய்தனர். அவர், இரவில் எழுந்து, நகரின் கதவுகளைப் பிடுங்கிக் கொண்டு எபிரோன் வரை சென்று தப்பினார். மற்றொரு வீரச்செயல் அவருக்கு அவல முடிவாக அமைந்தது. அஃது அவர் விலைமகள் தெலீலாவை விரும்பி அவளோடு வாழ்ந்ததும், அதன் விளைவுமாகும். அப்போது பெலிஸ்தியரில் பலரையும் அழித்துத் தன்னையும் அழித்துக் கொண்டார்.

சிம்சோன் கதைகள் தொடர்பு இன்றி அமைந்திருக்கலாம்; ஆனால், சமயப் பொருள் மிக்கன. இச்சமயப் பொருளும் கதைகளில் இல்லை, அவற்றை ஆசிரியர் அமைக்கும் சூழ்நிலையில் அஃது அமைந்திருக்கிறது. இவர் பிறக்குமுன்னே தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருடைய பெரும் உடற்பலம் இறைவனுடைய கொடையாகும். இறைவனுடைய ஆவி அவர்மேல் வருவதால் பெருஞ்செயல்கள் செய்கிறார். அவர் ஒரு நசரேயராவார்; இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர். நசரேயர் போதை தரும் பானங்களைக் குடிக்கக்கூடாது; தங்கள் முடியைச் சிரைக்கக்கூடாது; இறந்து பட்டவரின் உடலைத் தொடக் கூடாது. சிம்சோன் பற்றிய ஒவ்வொரு கதையும், இந்த அர்ப்பணத்தின் கடமையை மீறிய கதையாகும். அதன் விளைவு, அவர் பெலிஸ்தியர் பலரை அழித்தாலும் தானும் அழிகிறார். இறந்த சிங்கத்தைத் தொடுவதில் முதல் முறையாக தன் கடமையிலிருந்து தவறுகிறார். புற இனப்பெண்ணைத் திருமணம் செய்தபோது இரண்டாம் முறை மீறுகிறார். தன் அர்ப்பணத்தின் விளைவானது தன் பெரும்பலம் என்ற இரகசியத்தை வெளியிடுவதில் மூன்றாம் முறையாக மீறுகிறார். இது தெலீலா அவரது முடியைச் சிரைப்பதற்கும், அவர் கைது செய்யப்படுவதற்கும், சாவிற்கும் இட்டுச் செல்கிறது. இப்படியாக, அர்ப்பணத்தை மீறுவது பாவம். பாவம் சாவிற்கு இட்டுச் செல்லுகிறது. அடங்காத இச்சைகள் மிகப் பெரிய வீரனையும் அழிக்க வல்லன. அதன் விளைவாக, இறைவனாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டுப் பெரும் பணிகளுக்காக அழைக்கப்பட்ட வீரனுக்குக் கூட மரணமும் அழிவும் வந்து சேரும் என்ற பாடம் கற்பிக்கப்படுகிறது. சிம்சோன் பெரும் கோபக்காரர், ஒழுக்கம் கெட்டவர், போகப்பிரியர். ஆயினும் இத்தகைய சிம்சோனையும் இஸ்ராயேலின் விடுதலை வீரனாக யாவே பயன்படுத்துகிறார். அவரது சாவிலும் கூட சிம்சோன் ஒரு விடுதலை வீரனாகத் திகழ்கிறார். அழிவிலும் வெற்றிப் பெருமிதம் மிளிர்கிறது. இதுதான், இஸ்ராயேலின் இடுக்கண் மிக்க காலத்தில், சிம்சோனின் பெருஞ்செயலாகும். ஆகவே தீயவரானாலும், இஸ்ராயேலின் பெருமைமிக்கவராகத் திகழ்கிறார். .மக்கள் விரும்பும் நாட்டுப் பாடல்களில் தலைவனாக இடம் பெறுகிறார். இத்தன்மை மாறாது, தனக்குக் கிடைத்த வாய்மொழிப் பாரம்பரியத்தைத் தனது திட்டத்துக்குள் புகுத்தி இந்நூலாசிரியர் தனது நூலை அமைக்கிறார். அப்படிச் செய்யும்போது சிம்சோனைக் குறை கூறியோ, போற்றியோ தீர்ப்புக் கூறவில்லை. சிம்சோன் யாவேயின் மீட்பளிக்கும் சித்தத்திற்கும் ஆற்றலுக்கும் சாட்சியாகத் திகழ்கிறார்.

4. 15. பிற்சேர்க்கைகள்: *அதி. 17-18* ஆகிய பகுதிகள் தாண் இனத்தவர் சுற்றித்திரிந்த வரலாற்றைக் கூறுகின்றன. பெலிஸ்தியரால் தாக்கப்பட்டு, தாண் இனத்தவர், தங்கள் உரிமைச் சொத்தான பகுதியை விட்டு விட்டு ஒரு புதிய உறைவிடம் தேடி வடக்கே செல்கின்றனர். எப்பிராயிமுக்குச் சொந்தமான மலைப்பகுதியை அடைந்து அங்குத் தங்கி ஒரு சிலை வழிபாட்டுத் தலத்தையும் அமைக்கின்றனர். காரணம், ''அக்காலத்தில் இஸ்ராயேலை ஆள அரசன் இல்லாததால், தனக்குச் சரி என்று பட்ட தை ஒவ்வொருவனும் செய்து வந்தான்'' (நீதி *17:6*).

அதி *19-21* என்ற பகுதிகள் பென்யமின் இனத்தவரின் போர்களை விவரிக்கின்றன. இந்நிகழ்ச்சியுரை ஒரு லேவியனது மனைவிக்குப் பென்யமின் இனத்தவரால் ஏற்பட்ட கொடிய மானபங்கத்திற்குப் பழி வாங்குதலை விவரிக்கிறது. இந்த இழி செயலால் கோபம் அடைந்த இஸ்ராயேல் முழுவதும், பென்யமின் இனத்தைத் தண்டித்து அது முழுவதும் அழிந்து போகாமல் பார்த்துக் கொள்ளவும் செய்கிறது. இதை நூலில் வாசித்தறிக.

இப்பகுதி அக்காலத்தில் நிலவிய ஒழுக்க, சமய, சமூக நிலைகள் பற்றிய துயரமிக்க விவரிப்பைக் கொடுக்கிறது; இறைவனை மறந்து தங்கள் விருப்பம் போல் மக்கள் நடந்தால் என்ன நிகழும் என்று காட்டுகிறது. சில கதைகள் நம் காலத்திற்கும் தெளிவாக எச்சரிக்கையாக இருக்கின்றன. பேராசை (*17:1-3*), சிலை வணக்கம், கீழ்ப்படியாமை (*17:4-13*) ஆகியவற்றை இப்பகுதிகளில் நாம் காணுகிறோம். தடை செய்யப்பட்ட சிலைகளைக் கொண்டிருந்த வீட்டில் பணிசெய்ய ஒரு லேவியன் ஒத்துக் கொள்கிறான் (யாத் *20:4-5*). சுயநலம் தேடுதல், பற்றுறுதியின்மை, கொள்ளையடித்தல், களவு செய்தல் பற்றிய அருவருப்பான கதைகள் காணப்படுகின்றன (நீதி *18:1-31*). மக்கள் இதயமற்றவர்களாகவும், சுயநலம் மிக்கவர்களாகவும் (*18:7; 19:15.18*), ஒழுக்கம் கெட்டவர்களாகவும், கொடியவர்களாகவும் (*19:16-26*) மாறினர். குடும்பத் தகராறு உள்நாட்டுப் போராக மாறுகிறது. மூர்க்கத்தனமும் வலிந்து தாக்குதலும் நாட்டில் அமைதியைக் கெடுத்தன. ''பாலும் தேனும் பொழியும்'' நாடு இரத்தக்களரியும் கசப்பும் வெறுப்பும் மிகுந்த நாடாயிற்று. இந்தச் சுயநலமும் சண்டை சச்சரவும் இந்நூலின் இறுதியில் வரும் துன்பமிக்க வார்த்தைகளால் சுருக்கித் தரப்படுகிறது. ''ஒவ்வொருவனும் தனக்குச் சரியெனப்பட்டதைச் செய்தான்'' (*21:24*).

இப்பகுதிகள் காலத்தால் முந்திய பாரம்பரியங்களைச் சார்ந்ததாக இருக்கலாம். ஆனால், உபாகமப் பாரம்பரியத் தொகுப்பாசிரியரின் முதல் தொகுப்பில் இவை இடம் பெறவில்லை எனக் கூறலாம். ஏனெனில், இந்நூலின் மையக் கருத்துகள் இப்பகுதிகளில் இல்லை. ஒருவேளை இப்பகுதிகள், இந்நூலைச் சாமுவேல் ஆகமங்களோடு இணைக்கும் நோக்கத்தோடு இங்கே புகுத்தப்பட்டிருக்கலாம். இப்பிற்சேர்க்கைகள், அக்காலத்தில் இஸ்ராயேலரிடையே நிலவிய ஒழுக்க, கலாச்சார, சமயக் குழப்ப நிலைகளை எடுத்துக் காட்டுகின்றன; இஸ்ராயேலின் தான்தோன்றித் தனத்தைக் காட்டுகின்றன (நீதி *21:24*).

5. காலக்கணிப்பு: நீதிபதிகளின் காலம் கி.மு. *1200-1040*-க்கு இடையிட்ட காலத்தை உள்ளடக்கும். ஆனால், இந்நூலில் வரும் குறிப்புகளைக் கொண்டு கணித்தால், இந் நிகழ்ச்சிகள் நடக்க 410 ஆண்டுகள் எடுத்தது எனத் தோன்றலாம் (*3:8.11.14.30; 4:3; 6:1; 8:28; 9:22; 10:2.3.8; 12:7.10.11.14; 13:1; 15:20;16:31*). இக்கணிப்பு செயற்கை முறையானதாகும். ஒரு தலைமுறையைக் குறிக்க *40* ஆண்டுகள் அல்லது அதன்பாதி *20* ஆண்டுகள் அல்லது அதன் இருமடங்கு *80* ஆண்டுகளைப் பயன்படுத்துகிறார் ஆசிரியர் (*3:11; 5:31; 8:28; 13:1*). பல போர்களும், கொடுமைப்படுத்தப்படுதலும் ஒன்றன் பின் ஒன்றாக நடந்ததாகக் கூறப்படுகின்றன. இஃது ஆசிரியரின் வேலைப்பாடாகும். மூலத்தில் வேறுபட்டவைகளாக நின்ற

நிகழ்ச்சிகளை, இவ்வாசிரியர் தனது சமய வரலாற்றுத் திட்ட அமைப்புக்குள் புகுத்துகிறார். உண்மையில் இந்நூலில் வரும் நிகழ்ச்சிகளில் பல, நாட்டில் பல பகுதிகளில் ஒரே சமயத்தில் நடந்திருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது. இக்காலம் முழுமையும், இஸ்ராயேலில் ஏதாவது ஒரு பகுதி போராட்டத்திலும் இடுக்கண் நிலையிலும் இருந்து கொண்டே இருந்திருக்கிறது. இப்பகுதிகளில் வாழ்ந்து வந்த கானானியரோடு போராட்டம் இருந்து கொண்டேயிருந்தது. மேலும், இந்நூலாசிரியர் யோசுவா, சாமுவேல் ஆகியோருக்கு இடையிட்ட காலம் பற்றிய வரலாற்றை, காலவரையறைத் துல்லியமுடைய இஸ்ராயேலின் வரலாற்றை எழுதும் எண்ணம் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. அவர் நீதிபதிகள் பற்றிய கதைகளைப் பரந்த உலக வரலாற்றோடு பொருத்திக் கூற வேண்டும் என்று கருதவேயில்லை. இஸ்ராயேலருடன் தொடர்பு கொண்ட அளவுக்குத்தான் புற இனத்தவர் இந்நூலில் காட்சியளிக்கின்றனர். இதனால் காலக்கணிப்பில், விடுபடாத பல பிரச்சனைகள் எழுகின்றன.

6. நீதிபதி ஆகமத்தில் இஸ்ராயேலர்: இக்காலத்தில் இஸ்ராயேலர் தம் சமூக அமைப்பில் பல மாறுதல்களைப் பெற்றனர். இம்மாற்றத்தை மூன்று பின்னிலைகளில் புரிந்து கொள்ளலாம். 1) யோசுவா ஆகமத்தின் பின்னிலை. 2) நாடோடியாகத் திரிந்த மக்கள் வேளாண்மைத் தொழிலை நிலையாக ஏற்றபோது அவர்கள் அடைந்த மாற்றம். 3) நெருக்கமற்ற கூட்டாட்சியிலிருந்து ஒற்றுமையுடைய அரச அமைப்பாக மாறும்போது ஏற்படும் மாற்றம்.

யோசுவா பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான யூதாவும் சமாரியாவும் அடங்கிய பகுதியைத்தான் கைப்பற்றியிருந்தார். அதையும் முழுவதும் வெல்லவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். யோசு 13:1-17; 17: 11-13; நீதி 2-3 ஆகிய பகுதிகளை வாசித்தால் ஆக்கோர் பள்ளத்தாக்கு, சாரோன் சமவெளி, பெலிஸ்தியச் சமவெளி ஆகிய பகுதிகள் இன்னும் இஸ்ராயேலரால் கைப்பற்றப்படவில்லை. இஸ்ரியேல் பள்ளத்தாக்கு இன்னும் கானானியரிடமே இருந்தது. இது பாலஸ்தீனத்தின் நடுப்பகுதியை வடபகுதியிலிருந்து பிரித்தது. நடுப்பகுதியைத் தென்பகுதியிடமிருந்து பிரித்த எருசலேம் அய்யலோன், ஆட்சோர் ஆகியவை இன்னும் கைப்பற்றப்படவில்லை. இதன் விளைவாக ஒவ்வொரு இனத்தவருக்கும் பிரித்தளிக்கப்பட்ட பகுதிகள் அவர்களுக்குப் பெயரளவில்தான் உரிமையாக இருந்தன. ஏனெனில், அப்பகுதிகளில் ஏற்கெனவே வாழ்ந்த மக்களை முழுவதும் விரட்ட இஸ்ராயேலரால் முடியவில்லை. சான்றாக 'தாண்' இனத்தைச் சேர்ந்தவர்கள், எருசலேமுக்கு மேற்கிலும் மத்தியதரைக்கடலுக்கும் இடையிலுள்ள பகுதியைக் கைப்பற்ற முடியவில்லை. அதன் விளைவாக வடக்கே சென்று யோர்தான் நதி தோன்றும் பகுதியில் குடியேற வேண்டியதாயிற்று (நீதி 18).

அடுத்து, இஸ்ராயேலரிடையே நடந்த சமூக மாற்றத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கி.மு. 1225-ஐ ஒட்டி, பாலஸ்தீன மலைப் பகுதியைக் கைப்பற்றிய இஸ்ராயேலர் தலைமுறை, ஏற்கெனவே ஏறக்குறைய 40 ஆண்டுகள் பாலையில் வாழ்ந்தவர்கள்; ஓரளவு நாடோடிகள்; நாகரிகக் கலாச்சாரத்தில் வளர்ச்சியுறாதவர்கள். இவர்கள் கானானைக் கைப்பற்றியது, நாகரிகம் அற்றவர்கள், நாகரிகம் வளர்ந்த நாட்டைப் படையெடுத்துக் கைப்பற்றியதற்கு ஒப்பாகும். அங்கு நிலையாகக் குடியேறியபோது பாலையில் கொண்டிருந்த ஓரளவு நாடோடி வாழ்க்கையிலிருந்து கானானின் உழவுத் தொழிலைக் கொண்ட நிலையான குடிமக்களாக மாற வேண்டியிருந்தது. ஆகவே, இக்காலத்தில் சிறிது காட்டுமிராண்டித்தனம் மிகுந்திருந்தது என்பதை நீதிபதிகள் ஆகமத்தில் காணப்படும் சில நிகழ்ச்சியிலிருந்து அறியலாம் (நீதி 1:7; 8:16; 9:5; 11:31; 19).

அடுத்து அரசியல் மாற்றம் ஏற்பட்டது. கானானைக் கைப்பற்றும் போது யோசுவா இஸ்ராயேலுக்குத் தலைமை தாங்கினார்.

நீதிபதிகள் காலத்தில் மைய அரசோ, அரச அமைப்போ இஸ்ராயேலரிடையே இல்லை. இவர்கள் நெருக்கமற்ற கூட்டாட்சி நடத்தினர். இவர்கள் பொதுவாக யாவேயிடம் விசுவாசம் கொண்டிருந்தனர். சீனாய் உடன்படிக்கையும், அதன் அடையாளமான உடன்படிக்கைப் பெட்டகமும் அவர்களை இணைக்கும் ஒரே கருவியாக அமைந்தன. உடன்படிக்கைப் பெட்டகம் தான் அவர்களின் வழிபாட்டு மையம். அஃது இக்காலத்தில் செக்கேம் அல்லது சீலோவில் வைக்கப்பட்டிருந்தது. இம்மையங்களில் விழாக்கள் முறையாக நடைபெற்றன; உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது.

இக்கூட்டாட்சியின் நெருக்கமின்மை பற்றி இந்நூல் பல சான்றுகளைக் கொடுக்கிறது. இக்காலத்தில் இஸ்ராயேலர், பிற இனத்தவரால் அடக்கப்பட்டு, கொடுமைப் படுத்தப்பட்டது, அவர்கள் பாவத்தின் விளைவு மட்டுமன்று, அவர்களுடைய அரசியல் ஒற்றுமையின்மையின் விளைவு மாகும். இறுதி நீதிபதியான சாமுவேல் காலத்தில் தாங்கள் ஓரினமாக வாழ வேண்டுமென்றால், தங்களுக்கு மத்திய அரச அமைப்பு மிகத் தேவை என்பதை இஸ்ராயேலர் உணர்ந்தனர். இது காலப்போக்கில் அரச மரபு நிலவுவதற்கு இட்டுச் சென்றது.

7. வரலாற்று மதிப்பீடு: இந்நூல் ஒரு சமய வரலாறு ஆகும். இந்த அளவில் இது சில சிறப்பு இயல்புகளைக் கொண்டுள்ளது. இவை இந்நூலை மற்ற விதத்தில் வரையறை செய்கிறது.

சான்றாக அதன் நோக்கு, நடைமுறைத் தன்மையுடையது; கருத்தியலானதன்று. இந்நூல் நிகழ்ச்சிகளின் சமயப்பொருளில் அக்கறை காட்டுகிறது. வரலாற்றைச் சமய வரலாறாகவே நோக்குகிறது. அந்த அளவில்தான் வரலாற்று நிகழ்ச்சிகளையும், அவற்றின் சமயத்தின் மையங்களையும் சிறப்பித்துக் காட்டுகிறது. ஆயினும், நிகழ்ச்சிகளையும் உரையாடல்களையும் பொறுக்கி எடுத்தலில் தனது கலைப் பண்பைக் காட்டுகிறார் ஆசிரியர்.

ஆகையால், இந்நூலில் வரும் நிகழ்ச்சிகள் உண்மையானவையா அல்லது சமய போதகத்திற்காக அமைக்கப்பட்ட கற்பனைகளா என்ற ஐயம் எழலாம். இந்நூலில் காணப்படும் நிகழ்ச்சிகள் அக்காலத்து வரலாற்றுச் சூழ்நிலைகளோடு நன்கு ஒத்துப் போகின்றன. அஃதோடு இந்நிகழ்ச்சிகளில் காணப்படும் புவியியல், இடம் பற்றிய செய்திகள் ஆகியவை தொல்பொருள் ஆய்வுகளின் கண்டு பிடிப்புகளோடு ஒத்துப்போகின்றன. இன்று கிடைக்கும் சான்றுகளிலிருந்து இந்நூலில் வரும் நிகழ்ச்சிகள் வெறும் கற்பனைகள் அல்ல. மாறாக, அவை வரலாற்றுத் தன்மை கொண்டவை என்று நம்பிக்கையோடு கூறலாம்.

இந்நூலில் காணப்படும் பெயர்க்காரணக் கதைகள் மக்களிடையே இருந்த பழக்க வழக்கங்களையும் இடங்களின் பெயர்களையும் விளக்குகின்றன. ஆகையால், இப் பெயர்க் காரணப்பகுதிகள் வரலாற்றுத் தன்மையுடையவை அல்ல; ஐயத்திற்குரியன என்று சில காலமாகக் கருதப்பட்டு வந்தது. இந்நூலில் சில பகுதிகளில் பெயர்க் காரணக்கூறுகள் நிச்சயமாகக் காணப்படுகின்றன. ஆனால், இந்நூலின் மூலங்களில் அவை பெயர்க் காரணக்கூறுகளாக எடுத்துக் கூறப்படவில்லை. பெயர்க் காரணம்தான், ஒரு நிகழ்ச்சியைத் திட்டம் செய்து எழுதுவதற்குக் காரணமாயிருந்தது என்று இந்நூலின் பாரம்பரியங்களின் அமைப்பில் தோன்றவில்லை. மேலும், பெயர்க்காரணக்கூறு பழக்கவழக்கங்களின் தோற்றத்தையும் வியப்புமிக்க இடங்களையும் விளக்கும் நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படவில்லை. பெரும்பாலும் அத்தகைய இடங்களும் பழக்கவழக்கங்களும், பெயர்களும் நிகழ்ச்சியின் நினைவை உறுதிப்படுத்துவதற்காக நிகழ்ச்சியுரையில் புகுத்தப்படுகின்றன. மேலும், இலக்கிய வடிவம் மட்டுமே வரலாற்றுத் தன்மைக்கு இறுதியான சோதனையன்று. வரலாற்றுத் தன்மை நம்பத் தகுந்தது என்று கூற, புறச்சான்று மிகவும் தேவையாகும். யாவற்றையும் மனதில் கொண்டால் இந்நூல் வரலாற்று அடிப்படை கொண்ட நூலாகும்.

8. சமயபோதகம்: மக்களிடமிருந்து பிரிந்து செல்லுமுன் யோசுவா சிலைவணக்கம், கலப்புத்திருமணம் பற்றிக் கடினமாக எச்சரிக்கை செய்திருந்தார் (யோசு 23:11-15; 24:14-23). அவர்கள் புகுந்த நாட்டில் ஏற்கெனவே வாழ்ந்தவர்களை விரட்ட வேண்டும் என்று மோசே கூறியிருந்தார் (யாத் 23:32-33; 34:12-16; எண் 33:55; உப 7:1-5). மக்கள் வினோதமான கடவுள்களைக் கொண்டிருந்தனர் (யோசு 24:23). தங்கள் விசுவாசத்தைச் சாராதவர்களை மனைவியர்களாகக் கொண்டனர். தங்கள் எதிரியான கானானியர்களோடு இஸ்ராயேலர் ஒத்து வாழத் தொடங்கினர். இத்தகைய துன்பியலான வரலாற்றை நீதிபதிகள் ஆகமம் கூறுகிறது. மக்கள் இறைவனுக்கு ஓர் அளவு மட்டும் கீழ்ப்படிந்தால் என்ன நிகழும் என்பதை இந்நூல் எடுத்துக் கூறுகிறது (நீதி1:19; யோசு 17:16-18). இறைவன் கூறியவற்றை விட்டு, தங்கள் விருப்பம் போல் மக்கள் வாழ்ந்தால், இறைவனிடம் மக்கள் முழுமையாகச் சரண் அடையாவிட்டால், என்ன நிகழும் என்பதை இந்நூல் எடுத்துக் கூறுகிறது. கீழ்ப்படிதலை விட சூழ்நிலைத் திறம் முக்கியமாகிறது. அதன் விளைவு, நாட்டை உடைமையாக்கி, அதன் பயனை அனுபவிப்பதற்குப் பதிலாக, இஸ்ராயேல் தாங்கள் வாழ்ந்த இடங்களையும் இழந்தனர். தங்கள் உயிரை இழந்துவிடும் அச்சத்தில் வாழ்ந்தனர் (நீதி1:34-35). இத்துன்பியலான நூல் கூறுவதென்ன? இறைவனுக்குப் பணியாமை மனிதனுக்குப் பெரும் துன்பத்தையே கொண்டுவரும். கடவுள் ஒரு கட்டளையிடும்போது அவனைத் தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அன்று; மாறாக, அவனைச் செல்வனாக்கவே. நமக்கு எது சரியானது, நன்மையானது, மேலானது என்று அவருக்குத் தெரியும். நாம் சுயநலமிக்கவர்களாக இருப்பதால் நாம் எப்போதும் பிரச்சனைகளைத் தெளிவாகப் பார்க்க முடிவதில்லை. இறைவனது குரலுக்குக் கீழ்ப்படியும்போதுதான் அவரது கொடைகளை நாம் அனுபவிக்க முடியும். நாம் இறைவனது கட்டளைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காததால், அவர் வாக்களித்த அமைதியையும் செழிப்பையும் எப்போதும் அனுபவிக்க முடிவதில்லை. பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி கீழ்ப்படிதல் மையக்கருத்தாக அமைந்துள்ளது (யோவா 2:5; 14:15; 15:10; அ.ப. 5:29; 6:7; 2 கொரி 6:16-17; பிலி 2:12; எபி 5:9; 1 பேதுரு 1:14.22).

இந்நூல் மனிதனின் தீமையை மட்டும் கூறவில்லை, இஸ்ராயேலின் நீதிபதிகள் சிலரின் மகிமைமிக்க ஆன்மீகப் பற்றுறுதியையும் வீரமிக்க போராட்டத்தையும் விவரிக்கிறது; அதற்கு மேலாக இறைவனின் நன்மைத் தன்மையையும் பறைசாற்றுகிறது.

பல்வேறு நீதிபதிகளுடைய வாழ்வின் ஆற்றலுக்கு அடிப்படை இறைவனது ஆற்றலாகும். அவர் சாதாரண, கோழையான, பொருத்தமில்லாத மனிதர்களை மாற்றித் தனது மாபெரும் ஆற்றலின் கால்வாய்களாக்கினார். இந்நூலில் பல இடங்களில் வெற்றி பெறுவோரின் உடல் பலவீனம் அல்லது அவர்கள் பயன்படுத்தும் கருவிகளின் பற்றாக்குறையுடைய தன்மை வலியுறுத்திக் கூறப்படுகிறது. ஏகூது இடக்கையனாவார் (3:15). சம்கார் கலப்பைக் கொழுவை மட்டும் ஆயுதமாகக் கொண்டு போருக்குச் செல்கிறார் (3:31). இஸ்ராயேலில் வீரர்கள் பலர் இருந்திருக்கக்கூடும். இருப்பினும் இரு பெண்கள் இஸ்ராயேலரை வெற்றிக்கு இட்டுச் செல்கின்றனர் (4:1-5:31).

இறைவன் கிதியோனை ஆட்கொள்ளும் வரை அவர் ஒரு கோழையாக மிதியானியரைச் சந்திக்க அஞ்சினார் (6:11-14). மேலும் சிம்சோன் கழுதையின் தாடை எலும்பை ஆயுதமாகப் பயன்படுத்தினார் (15:15). குருடனும் பலவீனனுமாயிருந்தபோது இவர் தமது மிகப் பெரிய வெற்றியை நிகழ்த்துகிறார் (16:25-30). இம்மனிதர்கள் கடினமான செயல்களுக்காக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறைவனது ஆவி இவர்கள் மேல் இறங்கியது. இடர்மிக்க செயல்களைச் செய்ய இவர்களைத் தகுதியுள்ளவர்

களாக்க இறை ஆவி இவர்களை ஆட்கொண்டது. அதன் விளைவாக இவர்கள் பெருஞ் செயல்களை ஆற்றினர். பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவி குறிப்பிட்ட காலத்திற்கு மனிதரில் குடிகொள்கிறார். ஆனால், புதிய ஏற்பாட்டில் அவருக்குக் கீழ்ப்படிபவர் அனைவரின் உள்ளத்திலும் எக்காலத்திற்கும் குடிகொள்கிறார் (அ.ப. 5:32).

இஃது, ஒரு துன்பியலான நூல் என்று முன்பு கூறினோம். பாவம் செய்தல், கொடுமைப்படுதல், மனந்திரும்புதல், விடுதலையும் அமைதியும் பெறுதல் என்ற வட்ட அமைப்புப் பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம். இறைவன் பாவத்தையும் கிளர்ச்சிகளையும் பொறுத்துக் கொள்ள மாட்டார். தம் மக்கள் தங்கள் கடமையில் தவறினால் அவர்களை மாறாது தண்டிப்பார். ஆயினும், அவர்களை அழிவிலிருந்து எப்போதும் காப்பாற்றுவார். இப்போதகத்தில் இறைவனது தூய்மையும் பற்றுறுதியும் சிறந்து விளங்குகின்றன. அவரால் தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், அவரது பிரதிநிதி மக்களாகத் திகழ வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இப்போதகம் அக்காலத்திற்கு மட்டுமன்று, இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் உரியதாகும்; நமக்கும் இன்று அளிக்கப்படுகிறது. இக்கொள்கையைச் செயல் முறையில் காட்ட விரும்பிய ஆசிரியர் உப 27-28; 32 ஆகிய அதிகாரங்களில் காணப்படும் போதகத்தை மனதில் கொண்டு செயல்படுகிறார்.

நீதிபதிகளே பெரும் தவறுகளைச் செய்துள்ளனர். கிதியோன் தன் பேராசையால் மக்களிடையே பேரழிவைக் கொண்டு வந்தார் (8:24-27). இப்தாகு முன்பின் யோசியாத வாக்குறுதியால் தன் குடும்பத்தாருக்கு இதயவலி கொண்டு வந்தார் (11:30-40). அக்காலத்திலும் மனித பலி தடை செய்யப்பட்டிருந்தது. சிம்சோன் தன் இறைப்பற்று மிக்க பெற்றோருக்கும், பிறகு நாட்டிற்கும் இதயவலி கொண்டு வந்தார். இப்தாகு சொல்லக் கூடாத வாக்குறுதியைக் கூறினார் என்றால், சிம்சோன் கொடுத்த வாக்குறுதியைக் கடைப்பிடிக்கவில்லை (13:3-5.7). இவ்வாறு மனிதர்கள் தவறிய வரலாற்றை எடுத்துக் கூறினாலும், இந்நூல் இறைவனை நம்ப எல்லாத் தலைமுறையினரையும் தூண்டுகிறது. ஏனெனில், அவர் வலுவற்றவர்களை எடுத்து, அவர்களை வலுவுள்ளவர்களாக மாற்றுவார்; வீழ்ச்சியுற்றோரை எழுப்புகிறார். இவ்வுண்மைக்குச் சிம்சோன் கதை மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். சங்கிலியால் கட்டப்பட்டு, செக்கிழுத்து, கழிவிரக்கத்திற்குரிய துக்கத்திலும் இருளிலும் சிக்குண்டிருந்த இம்மனிதனுக்கு என்ன நம்பிக்கை இருக்க முடியும்? ஆனால் இவர் இறைவனை நம்பினார். துணிகரமிக்க நம்பிக்கையோடு இறைவனை உதவிக்கு அழைக்கிறார் (16:28-30). இத்தகைய மன்றாட்டு அவரது முதல் அனுபவமன்று (15:18-19). ஆனால், தன் பாவத்தினால் இழிநிலை அடைந்தபோதும் தன் மன்றாட்டை இறைவன் கேட்டருளுவார் என்ற நம்பிக்கையோடு வேண்டுகிறார். "அவனது தலைமயிர் முளைக்கத் தொடங்கிற்று" (16:22). இக்கூற்று ஓர் ஆன்மீக வரலாற்றைக் கொண்டிருக்கிறது. நாம் உண்மையிலேயே மனம் வருந்தினால், இறைவன் மன்னிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறார். நாம் அவரிடம் சரண் புகுந்தால் தவற்றிற்கு முன் நாம் செய்வதைவிட, தவற்றிற்குப்பின் அதிகமாகச் செய்து முடிக்கலாம் (19:30). இறைவன் தம் மக்களோடு அருளன்போடு செயல்படுகிறார்.

9. நீதிபதிகள் ஆகமமும், கிறிஸ்தவமும்: கிறிஸ்தவத்திற்கும் நீதிபதி ஆகமத்திற்கும் உள்ள பொருத்தம் மறைமுகமானதே. கிறிஸ்து நிகழ்ச்சியில் மனித வரலாற்றுக்கு இறைவன் முடிவான முன்நிலைத்த தோற்றமாய் இருக்கிறார் என்பதற்குப் பழைய ஏற்பாடு ஒரு தேவையான தயாரிப்பாகும். இறைமக்களின் பெரும் வரலாற்று நெருக்கடி நிலைகள் கிறிஸ்தவனின் வாழ்வுக்கும். வளர்ச்சிக்கும் எப்போதும் மூல எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. இந்த அளவில் பழைய ஏற்பாடு கிறிஸ்தவனுக்குப்

பொருத்தமுடையது. அப்படிப்பட்ட நெருக்கடி நிலைகளில் ஒன்று, இஸ்ராயேல் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறிய காலத்தில் அவர்கள் எதிர்கொண்ட சிலை வழிபாடாகும். இந்த நெருக்கடி நிலையை இந்நூல் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. உண்மையான இறைவனை ஏற்றுக் கொள்வதா அல்லது ஏற்கெனவே சுற்று வட்டாரத்திலுள்ள தேவதைகளை ஏற்றுக் கொள்வதா என்பது பிரச்சனை. நமக்கு அப்பாற்பட்ட, நம்மைச் சந்திக்கும் எல்லாம் வல்ல இறைவனை ஏற்றுக் கொள்வதா அல்லது நமது கரங்களே படைத்த பொருட்களுக்குச் சேவை செய்வதா? படைத்தவரை, மீட்டவரை இறைவனாக ஏற்றுப் பணி செய்வதா? அல்லது படைக்கப்பட்ட பொருட்களை இறைவனாக ஏற்றுக்கொள்வதா? இஃது ஒவ்வொரு மனிதனிலும் எக்காலத்தும் எழும் பிரச்சனையாகும். இஃது ஒவ்வொரு கிறிஸ்தவனுடையவும் அடிப்படை அனுபவம் ஆகும். இந்நிலையில் இந்நூல் ஒளியூட்டி வழிகாட்டுகிறது. இயேசுவின் சோதனைகளில் ஒன்றும் அதற்கு அவர் அளிக்கும் பதிலும் இந்நூலின் சுருக்கத்தைத் தருகிறது எனலாம் (மத் 4:9-10; லூக் 4:5-8). ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரை மட்டுமே ஆராதிப்பாயாக''.

விடுதலைப் பயணநூல், யாத்திரை நூல் (EXODUS, BOOK OF)

1. பெயர்: ஐந்நூலின் இரண்டாவது பகுதியான இந்நூல் எபிரேய மொழியில் ''இவை பெயர்கள்'' என்று பொருள்படும் தலைப்பைக் கொண்டுள்ளது. எழுபது நூலிலும், அதைப் பின்பற்றி இலத்தீனிலும், ஆங்கிலத்திலும் ''வெளிப்போதல்'' என்ற பொருளுடைய ''எக்சோடஸ்' என்ற பெயர் பெறுகிறது இந்நூல். முதல் பதினைந்து அதிகாரங்களில், இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேலர் எகிப்திலிருந்து விடுதலை அடைந்து, அந்நாட்டிலிருந்து வெளியேறிய நிகழ்ச்சியின் விவரிப்பிலிருந்து இப்பெயரைப் பெறுகிறது இந்நூல். ஆனால், இப்பெயர் நூலின் முழுப் பொருளடக்கத்திற்கும் பொருந்தியதன்று. நாம் தமிழில் இந்நூலை யாத்திரை நூல் அல்லது விடுதலைப் பயணநூல் என்று அழைக்கிறோம். இப்பெயர்கள், ஓர் அளவு இந்நூலை நிறைவாக விவரிக்கின்றன எனலாம். ஏனெனில், இறை மக்கள் இஸ்ராயேலர் எகிப்திலிருந்து வெளிப்போந்து உறுதியளிக்கப்பட்ட கானான் நாட்டை நோக்கிச் செய்த மாபெரும் யாத்திரையின், விடுதலைப் பயணத்தின், சிறப்பான பகுதியை இந்நூல் விவரிக்கிறது.

2. ஆசிரியரும் எழுதப்பட்ட காலமும்: பழங்காலத்தில் இந்நூலை மோசே எழுதினார் என்று கூறினால் யாவரும் ஏற்றுக் கொள்வர். இதை மறுத்துக் கூற ஒருவரும் துணியார். திருச்சபையின் தொடக்க காலத்தில் ஞானவாதிகள் என்ற பிரிவினர் இந்நூல் யூதப் போலிநூலாகும் என்று கூறினர். மறுமலர்ச்சி ஆராய்ச்சிகளின் விளைவாக ஐயங்கள் பல எழுந்தன. கி.பி. 16-ஆவது நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே ஆந்த்ரே மாசியுசு என்ற சட்ட வல்லுநர், மோசேயைச் சேராத வாசகங்கள் இந்நூலில் புகுத்தப்பட்டுள்ளன என்று கூறினார். இவ்வாராய்ச்சி தொடர்ந்து நடந்தது. இஃது இந்நூல் பல பாரம்பரியங்களின் கலப்பின் விளைவாகும் என்று காட்டியது.

யாத்திரை எப்போது, எப்படித் தோன்றியது என்பன பற்றிப் போதிய அளவு அறிய விரும்பினால், ஐந்நூல் முழுவதற்கும் இச்சிக்கலைப் பொருத்திப் பார்க்க வேண்டும். இது பற்றி ஐந்நூல் என்ற தலைப்பின் கீழ்க் கூறியுள்ளோம். நால்வகை ஏடுகள் கருதுகோள் பற்றிக் கூறியவை இந்நூலுக்கும் பொருந்தும். யாவே (J), எலோகிம், (E), குருக்கள் பாரம்பரியம் (P) ஆகிய பகுதிகள் இந்நூலில் சிறப்பாகக் காணப்படுகின்றன. நாம் கொண்டிருக்கும் வடிவில் இந்நூல் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் இறுதி வடிவம் எடுத்திருக்கலாம்.

வரலாற்று அடிப்படையில் உடன்படிக்கைத் தொகுப்பின் சில பகுதிகளுக்காவது (யாத் 19:1-24-18) மோசே ஆசிரியராக

இருந்திருக்க வேண்டும் என்று கூறலாம். மேற்காசிய மரபுப்படி, இவ்வுடன்படிக்கையின் சிறப்பான பகுதிகள் விரைவில் எழுதப்பட்டு, மக்களால் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்தன எனலாம் *(யோசு 26:16-28)*.

எழுதப்பட்ட பகுதிகளோடு, வாய்மொழிப் பாரம்பரியங்களும் தொடர்ந்து வளர்ந்து பெருகின. இந்நிலை இறைமக்கள் கானான் நாட்டைக் கைப்பற்றிக் குடியேறிய பின்னும் தொடர்ந்து நடந்தது. கானான் நாட்டில் எபிரேயர் வாழ்வு நிலையான உருவம் எடுக்க எடுக்க, வாழ்க்கை முறையும் சிக்கல் மிக்கதாக மாறியது. இந்நிலைக்கேற்பப் புதிய ஒழுங்குகள் தேவையாயின. இப்படி எழுந்த சட்டங்கள் மோசேயின் சட்டம் முன் தொடங்கி வைத்த கோட்பாடுகளைப் பின்பற்றி எழுந்தன. ஆகையால், இவற்றையும் மோசேயே தந்தார் என்று கூறுவதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும் மக்களிடையே கருத்து வேற்றுமை எதுவும் எழவில்லை. கானானில் நிலையாக இஸ்ராயேலர் குடியேறியபின் பாலஸ்தீனத்தின் வடக்கிலும் தெற்கிலும் இஸ்ராயேலின் வரலாறு, சட்டம் ஆகியவை பற்றித் தனித்தனிப் பாரம்பரியங்கள் உருவெடுத்தன. இப்படியெழுந்த பாரம்பரியங்கள் இறுதியில் எப்படி ஐந்நூலில் இடம் பெற்றன என்பது ஒரு பெரும் பிரச்சனையாகும். இதை விளக்கப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஐந்நூல் நான்கு பெரும்பாரம்பரியங்களின் தொகுப்பாகும் என்ற கருதுகோளை அறிஞர்கள் ஏற்றுக்கொண்டனர். இது யாத்திரை நூலுக்கும் பொருந்தும். இது பற்றி ஐந்நூல் என்ற தலைப்பின்கீழ் வாசித்தறியலாம்.

3. திட்டமும் பொருளடக்கமும்:

யாத்திரை நூலை ஆறு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

I எகிப்தில் இஸ்ராயேலர் *(1:1-12:36)*.

1) 1:1-7 : இஸ்ராயேலரின் இனப்பெருக்கம்.

2) 1:8-22 : இஸ்ராயேலர் துன்புறுத்தப்படுதல்.

3) 2:1-10 : மோசே பிறப்பும் தத்தெடுக்கப்படுதலும்.

4) 2:11-22 : மோசே மிதியானுக்கு ஓடிச்சென்று அங்கு வாழ்தல்.

5) 2:23-4:9 : இறைவன் மோசேக்குக் காட்சி அளித்து அவரை அழைத்தல்.

6) 4:10-17 : ஆரோன் மோசேக்கு உதவியாளன்.

7) 4:18-5:13 : மோசே எகிப்துக்குத் திரும்புதல், பார்வோனிடம் இறைவனின் கட்டளைகளைத் தெரிவித்தல். பார்வோனின் பிடிவாதம்.

8) 5:14-6:13 : இஸ்ராயேலர் முறையிடுதல்,
இறைவன் தமது உறுதிமொழியைப் புதுப்பித்தல்.

9) 6:14-27 : மோசே, ஆரோன் தலைமுறை.

10) 6:28-7:13 : மோசேக்கும் ஆரோனுக்கும் இறைவனின் கட்டளை. கோல் பாம்பாய் மாறியது.

11) 7:14-11:10: வாதைகள்.

அ) *7:14-25* : முதல் வாதை: நீர் குருதியாக மாறுதல் (J, E, P)

ஆ) *8:1-15* : இரண்டாவது வாதை: தவளைகள் (J, P)

இ) *8:16-19* : மூன்றாவது வாதை: கொசுக்கள் (P)

ஈ) *8:20-32* : நான்காவது வாதை: ஈக்கள் (J)

உ) *9:1-7* : ஐந்தாவது வாதை: விலங்குகளுக்குக் கொள்ளை நோய் (J)

ஊ) *9:8-12* : ஆறாவது வாதை: கொப்புளங்கள் (P)

எ) *9:13-35* : ஏழாவது வாதை: கல்மழை (J, E).

ஏ) *10:1-20* : எட்டாவது வாதை: வெட்டுக்கிளிகள் (J, E).

ஐ) *10:21-29* : ஒன்பதாவது வாதை: இருள் (J, E).

ஒ) *11:1-10* : பத்தாவது வாதை: தலைப் பேறுகள் கொல்லப்படும் என்று அச்சுறுத்தல் (J, E, P)

12) 12:1-20 : பாஸ்காவும் புளியாத அப்ப விழாவும்.

13) 12:21-36 : முதல் பாஸ்கா, தலைப்பேறுகள் இறத்தல், இஸ்ராயேலர் விடுதலை அடைந்து எகிப்திலிருந்து புறப்படுதல்.

இப்பகுதி எகிப்தில் இஸ்ராயேலரின் அவல நிலையை எடுத்துக் கூறுவதுடன் தொடங்குகிறது. மோசேயின் பிறப்பும் தத்தெடுக்கப்படுதலும் விவரிக்கப்படுகின்றன. மோசே மிதியானுக்கு ஓடிப்போகிறார். அங்கே மோசேயை இறைவன் தேர்ந்தெடுக்கிறார்; தமது பணிக்கு அழைக்கிறார். இறைவனின் அழைத்தலுக்குப் பணிந்து, மோசே எகிப்துக்குத் திரும்பி, ''நம் மக்களைப் போகவிடு'' என்ற இறைவன் கட்டளையோடு பார்வோனைச் சந்திக்கிறார். பார்வோனின் பிடிவாதமும், எகிப்தியர் பல வாதைகளால் துன்புறுதலும் மீதிப்பகுதியில் விவரிக்கப்படுகின்றன. எகிப்தியரின் தலைப்பேறுகள் இறந்துபட, இஸ்ராயேலுக்கு விடுதலை கிடைக்கிறது. அடிமை நாட்டிலிருந்து உறுதியளிக்கப் பட்ட நாடு நோக்கிப் புறப்படுகின்றனர் இஸ்ராயேலர்.

II. **எகிப்திலிருந்து வெளிப்போதலும், சீனாய்மலை நோக்கிப் பயணமும் (12:37-18:27).**

1) 12:37-51 : எகிப்தை விட்டுப் புறப்படுதல்.

2) 13:1-16 : புளியாத அப்பமும், தலைப்பேறுகள் இறைவனுக்கு நேர்ச்சி செய்யப்படுதலும்.

3) 13:17-22 : பயணத்தின் முதற்பகுதி.

4) 14:1-22 : செங்கடலைக் கடத்தல்.

5) 14:23-31 : எகிப்தியரின் அழிவு.

6) 15:1-21 : மோசேயின் வெற்றிப்பாடல்

7) 15:22-27 : மாராவிலும் ஏலிமிலும் நடந்த நிகழ்ச்சிகள்.

8) 16:1-36 : இஸ்ராயேலரின் முணுமுணுப்பு; மன்னாவும் காடையும்.

9) 17:1-7 : பாறையிலிருந்து நீர்.

10) 17:8-16 : அமலேக்கியர் எதிர்த்தல்.

11) 18:1-12 : இத்திரோவும் மோசேயும்.

12) 18:13-17 : நடுவர்கள் நியமிக்கப்படுதல்.

இப்பகுதி யாத்திரையின் தொடக்கத்தையும் இஸ்ராயேலர் அலைந்து திரிந்ததையும் விவரிக்கின்றது. பெலிஸ்தியரின் நாட்டுக்குப் போகும் வழியைத் தவிர்த்துவிட்டு மோசே செங்கடல் என்றழைக்கப்படும் நாணல் கடல் வழியாகக் கரடுமுரடான சீனாய்த் தீபகற்பத்திற்கு இஸ்ராயேலரை இட்டுச் செல்கிறார். நிகழ்ச்சியுரை முழுவதிலும் இறைவன் இஸ்ராயேலருக்கு அளித்த உதவி சிறப்பான முறையில் அழுத்திக் கூறப்படுகின்றது. 15-ஆம் அதிகாரத்தில் வரும் வெற்றிப்பாடல் மேன்மையும், மகிழ்ச்சியும், நன்றியும் மிக்க போற்றுரைப் பாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அதே போழ்து, இதில் மிகப் பழைய எபிரேயக் கவிதை ஒன்றும் நமக்குக் கிடைத்திருக்கிறது. மக்களின் குறைகேட்டு யாவே மன்னாவையும் காடைகளையும், பாறையிலிருந்து தண்ணீரையும் அளிக்கிறார். மோசேயின் வேண்டுதலால் அமலேக்கியரின் மேல் இஸ்ராயேலர் வெற்றி பெறுகின்றனர். இப்

குதி, மக்களிடையே நடுவர்கள் அமர்த்தப் படுதலோடு முடிகின்றது.

III சீனாய் மலையில் உடன்படிக்கை *(19:1-24:18).*

1) 19:1-2 : சீனாய் மலையை அடைதல்.

2) 19:3-8 : இறைவன் வாக்குறுதி அளித்தல்.

3) 19:9-25 : மலையில் இறையாற்றல்.

4) 20:1-17 : பத்துக் கட்டளைகள்.

அ) 20:2-6 : முதல் கட்டளை.

ஆ) 20:7-17 : மற்ற ஒன்பது கட்டளைகள்.

5) 20:18-21 : மோசே பரிந்து பேசும் நடுவர்.

6) 20:22-23:19 : உடன்படிக்கை நூல்.

அ) 20:22-26 : வழிபாடு பற்றிய ஒழுங்குகள்.

ஆ) 21:1-11 : அடிமைகள் பற்றிய ஒழுங்குகள்.

இ) 21:12-17 : கொலை, பெற்றோரை மதியாமை முதலியவை பற்றிய ஒழுங்குகள்.

ஈ) 21:18-32 : உடல் தீங்கு பற்றிய ஒழுங்குகள்.

உ) 21:33-22:15 : பொருள்களை அழிப்பது பற்றிய ஒழுங்குகள்.

ஊ) 22:16-30 : சமூக வாழ்வு பற்றிய ஒழுங்குகள்.

எ) 23:1-9 : நீதி, பிறருக்குச் செய்ய வேண்டிய கடமை.

ஏ) 23:10-19 : சமய ஒழுங்குகள்.

7) 23:20-33 : எச்சரிக்கைகளும் உறுதி மொழிகளும்.

8) 24:1-11 : உடன்படிக்கையை மக்கள் ஏற்றுக்கொள்ளுதல்.

9) 24:12-18 : மோசே நாற்பது நாள் மலையில் தங்குதல்.

இப்பகுதி இந்நூலின் மையமாகும். இஃது உடன்படிக்கையின் விவரிப்பைக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனான மோசேயைச் சீனாய் மலைக்கு யாவே அழைக்கிறார். அவர் வழியாகத் தமக்கும் இஸ்ராயேல் மக்களுக்குமிடையே ஓர் இணையற்ற தனிச் சிறப்புடைய உறவை ஏற்படுத்துகிறார். இஸ்ராயேலர் யாவேயின் மக்களாயிருப்பர்; யாவே அவர்களுடைய இறைவனாவார். இவ்வுறவின் விளைவாக இஸ்ராயேலைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாடுகளைப் பத்துக் கட்டளைகளும் உடன்படிக்கை நூலும் பறைசாற்றுகின்றன. இப்பகுதியின் முடிவிலே, மோசே முகில் நடுவே புகுந்து மலை மேல் ஏறி, அங்கே நாற்பது நாள் இரவும் பகலும் தங்கியிருப்பதைக் காண்கிறோம்.

IV புனித இடத்தை அமைப்பது, அதன் பொருட்கள் பற்றிய ஒழுங்குகள் *(25:1-31:18).*

1) 25:1-9 : பொருள்களைத் திரட்டல்.

2) 25:10-22 : பெட்டக விவரிப்பு.

3) 25:23-30 : திருமுன் அப்பக்காணிக்கை மேசை.

4) 25:31-40 : விளக்குத்தண்டு.

5) 26:1-14 : ஆசாரக்கூடாரத்துணி.

6) 26:15-30 : பலகைகள்.

7) 26:31-37 : திரை.

8) 27:1-8 : பலிபீடம்.

9) 27:9-21 : ஆசாரக் கூடாரச் சுற்றுவாவீதி.

10) 28:1-5 : குருகுலம்.

11) 28:6-30 : குருவின் மேலாடையும், நெஞ்சாடையும்.

12) 28:31-43 : மற்ற உடைகள்.

13) 29:1-9 : குருக்கள் திருநிலைப் படுத்தப்படுதல்.

14) 29:10-37 : திருநிலைப்படுத்தும்போது பலிகள்.

15) 29:38-46 : அன்றாடப்பலிகள்.

16) 30:1-10 : தூபப் பீடம்.

17) 30:11-16 : கணக்கெடுப்பு வரி.

18) 30:17-38 : புறத்தூய்மைக்கு நீர்த் தொட்டி, திருநிலைப்படுத்தும் தைலம், மணப்புகை வகைகள்.

19) 31:1-11 : கூடார வேலை செய்ய ஆட்களைத் தேர்ந்தெடுத்தல்.

20) 31:12-17 : ஓய்வுநாள்.

21) 31:18 : சட்டப் பலகைகள்.

இப்பகுதியில் பெட்டகம், ஆசாரக் கூடாரம் ஆகியவற்றைப் பற்றிய கட்டளைகள் விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன. அவற்றைச் சார்ந்த அணிகள் முதலியவை விரிவாகக் கூறப்படுகின்றன. மேலும், குருத்துவம் நிறுவப்படுதல், குருக்களைத் திருநிலைப்படுத்துதல், குருக்களின் உடை ஆகியவை பற்றிய ஒழுங்குகளும், பலிகள் பற்றிய கட்டளைகளும் இப்பகுதியில் தரப் படுகின்றன.

V மக்களின் பதிதமும் உடன்படிக்கை புதுப்பிக்கப்படுதலும் *(32:1-34:25).*

1) 32:1-29 : பொற்கன்றுக்குட்டிக்கு இறைவழிபாடு செய்தலும் தண்டனையும்.

2) 32:30-35 : மோசேயின் பரிந்துரை.

3) 33:1-6 : இறைவனின் அச்சுறுத்தலும், மக்களின் துக்கமும்; புறப்படக் கட்டளை.

4) 33:7-11 : உடன்படிக்கைக் கூடாரம்.

5) 33:12-33 : மோசேயின் செபம்.

6) 34:1-9 : சட்டப்பலகை புதுப்பிக்கப் படுதல்.

7) 34:10-28 : உடன்படிக்கை.

8) 34:29-35 : மோசே மக்களிடம் திரும்பி வருதல்.

இப்பகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பதிதத்தின் கதையாகும். பொற் கன்றுக்குட்டியை மக்கள் வணங்குகின்றனர். மோசே வேண்டுதலால் மக்களின் அழிவு தவிர்க்கப்படுகிறது. யாவேயுடன் உடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது.

VI இறைவன் கட்டளைகளை நிறைவேற்றுதல் *(35:1-40:38).*

1) 35:1-3 : இஸ்ராயேலின் சபை: ஓய்வுநாள்.

2) 35:4-29 : பொருட்களைத் திரட்டல்.

3) 35:30-36:1 : கூடார வேலை செய்ய ஆட்கள்.

4) 36:2-7 : பொருட்களைத் திரட்டல் நிறுத்தி வைக்கப்படுதல்.

5) 36:8-19 : கூடார மூடு திரைகள்.

6) 36:20-34 : பலகைகள்.

7) 36:35-38 : திரை.

8) 37:1-9 : பெட்டகம்.

9) 37:10-16 : திருமுன் அப்பக்காணிக்கை மேசை.

10) 37:17-24 : விளக்குத்தண்டு.

11) 37:25-29 : தூபப்பீடம், தைலம், தூபம்.

12) 38:1-7 : பலிபீடம்.

13) 38:8-20 : கழுவுவதற்குத் தொட்டி, ஆசாரக் கூடாரச் சுற்றுலா வீதி.

14) 38:21-31 : பயன்பட்ட உலோகத்தின் கணக்கு.

15) 39:1-21 : குருவின் மேலாடையும், நெஞ்சாடையும்.

16) 39:22-32 : மற்ற உடைகள்.

17) 40:1-38 : கூடாரம் நிறுவப்படுதல்; திரு நிலைப்படுதல்.

இப்பகுதி 25-31-ஆம் அதிகாரங்களில் தரப்பட்ட கட்டளைகள் நிறைவேற்றப்படுவதை விவரிக்கிறது. இரண்டும் இணையாய் இருப்பதை எளிதில் கண்டுணரலாம். புனித இடம் அமைக்கப்படுகிறது; அணி செய்யப்படுகிறது; திருநிலைப்படுத்தப்படுகிறது.

4. மூலங்கள்: யாவே, எலோகிம், குருக்கள் பாரம்பரியங்களின் கலவையில் எழுந்ததாகும் இந்நூல். அப்பாரம்பரியங்களுக்குரிய பகுதிகளை இங்கு, குறிப்பாகத் தருகிறோம். வழக்கம்போல், J, E, P. என்ற எழுத்துக்கள் யாவே, எலோகிம், குருக்கள் பாரம்பரியங்களைக் குறிக்கின்றன.

யாவே பாரம்பரியப் பகுதிகள் (J) 1 (EP), 2-5 (EP); 7-10 (EP), 11 4-8; 12 21-27, 13-14 (E), 15 22-27 (E), 16(EP), 19 20-25, 23-24 (EP); 32 (E); 34 1-28

எலோகிம் பாரம்பரியப் பகுதிகள் (E): 1 (JP); 2-5(JP); 7-10(JP); 11:1-3, 12(JP), 13-14(J); 15 20; 16(JP); 17-18, 19(J); 20:22-23; 19:23-24(JP); 32(J); 33(J).

குருக்கள் பாரம்பரியப் பகுதிகள் (P). 1:1-5.7-13; 2:23-25; 6:2-30: 7:1-13; 8:1-3.12-15; 9:8-12; 11:9-12.20.28, 12:40-51; 16 (JE); 24:16-18; 25-31; 34 29-35, 35-40.

யாத்திரை ஆகமத்தில் உபாகமப் பாரம்பரியப் பகுதிகளுக்கு இடமில்லை. யாத் 15:1-19; 19:2-19; 20:22; 34:35 ஆகிய பகுதிகள் பிற்காலப் பதிப்பைச் சேர்ந்தவை என்று அறிஞர்கள் சிலர் கூறுவர்.

5. சிறப்புக் கருத்துக்கள்:

1) யாத்திரை நூலின் காலம் ; இஸ்ராயேலரின் இன்னல்கள்: இந்நூல், அதில் காணப்படும் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில் எகிப்தை ஆண்ட பார்வோன்களின் பெயர்களைக் கொடுக்கவில்லை. 1 அர 6:1-இல் வரும் குறிப்பு எகிப்திலிருந்து வெளிப்போதலுக்கும் சாலமோன் ஆலயத்திற்கும் இடையிட்ட காலம் 480 ஆண்டுகள் என்று கூறுகிறது. இதை வைத்து அறிஞர்கள் சிலர் யாத்திரை நூலில் வரும் நிகழ்ச்சிகள் நடந்த காலம் கி.மு. 15-ஆம் நூற்றாண்டு என்பர். சாலமோன் அரசுக் கட்டில் ஏறியது ஏறத்தாழ கி.மு. 960 என்று உறுதியாகக் கூறலாம். இது சரியென்றால் எகிப்திலிருந்து இஸ்ராயேலர் வெளிப்போந்தது ஏறத்தாழ கி.மு. 1440-இல் நடந்திருக்க வேண்டும். இம்முடிவை அறிஞர்கள் இப்போது ஏற்றுக்கொள்வதில்லை. 1 அர 6:1-இல் வரும் 480 ஆண்டுகள் 12 தலைமுறைகளைக் குறிக்கும் (ஒரு தலைமுறைக்கு 40 ஆண்டுகள்) முழு எண் ஆகும் என்று எடுத்துக் கொள்வர்.

கி.மு. 18-ஆம் நூற்றாண்டில் செமித்திய இனத்தைச் சார்ந்த நாடோடியரான கைச்சோஸ் என்ற மரபினர் எகிப்தைத் தாக்கி தங்களது ஆட்சியை நிறுவினர், அப்போது செமித்தியனான யோசேப்பு, முதல் அமைச்சராக இருந்திருக்கக்கூடும் என்பவை பற்றி ஆதியாகமம் பற்றிய கட்டுரையில் கூறியுள்ளோம். இந்தக் கைச்சோசின் ஆட்சியிலிருந்து தீபன் என்பவன் எகிப்திற்கு விடுதலை அளித்தான். இவன் எகிப்தின் 18-ஆவது பேரரசைச் சேர்ந்தவன். இப்பேரரசு தன் தலைநகரைத் தென்எகிப்தில் கொண்டிருந்தது. யாக்கோபின் மரபினர் எகிப்தின் வடபகுதியில் அமைதியாக வாழ இஃது உதவிற்று என்பதற்கு ஐயமில்லை. எகிப்தில் ஆற்றுக் கழிமுகப் பகுதிகளில் எபிரேயர் கட்டட வேலைகளில் துன்புற்று அவல நிலையில் இருந்ததாக விவிலியம் கூறுகிறது. கி.மு. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 18-ஆம் பேரரசின் காலத்தில் இத்தகைய வேலைகள் நடந்ததாகத் தெரியவில்லை.

19-ஆம் பேரரசின் எழுச்சியோடு ஆட்சி மையம் எகிப்தின் தெற்கிலிருந்து வடபகுதிக்கு மாறுகிறது. செமித்தியர் ஆற்றுக் கழிமுகப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள், பிறரோடு ஒப்பிடும்போது சிறுபான்மையினரானாலும், பெரும் தொகை

கொண்டிருந்தனர். அவர்கள் ஓர் அளவு சிறப்பு வாய்ந்தவர்களாகவும் இருந்திருக்க வேண்டும். எகிப்திய மொழியில் பல நூறு செமித்தியச் சொற்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது இதைச் கட்டுகிறது. இந்த 19-ஆம் பேரரசை நிறுவியவன் முதலாம் இராமசேக ஆவான். இவன் கிழக்கு ஆற்றுக்கழிமுகப் பகுதியிலுள்ள ஆவாரிசு அல்லது சோஆன் என்றழைக்கப்படும் இடத்தைச் சேர்ந்தவன். கி.மு. 1309-இல் முதிய வயதில் இவன் அரசுக் கட்டிலில் ஏறினான்; ஓராண்டு அளவே ஆட்சி செய்தான். அவன் மகன் முதலாம் சேத்தி அரசு ஏற்று 18 ஆண்டுகள் ஆண்டான். இக்காலத்தில் அரசியல் மையம் வடபகுதிக்கு மாறியது. இந்தப் பார்வோன்தான் ஆவாரிசில் கட்டடங்கள் எழுப்பத் தொடங்கினான். இதற்கு எபிரேயர்களைப் பயன்படுத்தி இருக்கலாம். ''யோசேப்பை அறியாத'' (யாத் 1:8) பார்வோன் என்று விவிலியம் கூறுவது இந்த முதலாம் சேத்தியைப் பற்றித்தான் என்று அறிஞர் கூறுவர். இவன் காலத்தில் தான் இஸ்ராயேலர் பார்வோனுக்குக் களஞ்சியங்கள் கட்டினர்; துன்பப்படத் தொடங்கினர்; அவல நிலையில் இருந்தனர்.

இஸ்ராயேலரின் அவலநிலை இரண்டாம் இராமசேசின் காலத்திலும் தொடர்ந்தது. எகிப்தின் வரலாற்றில் முதலாம் சேத்தியைப் பற்றி மிகுதியாக ஒன்றும் கூறப்படவில்லை. அவன் மகன் இராமசேசின் புகழ் சேத்தியின் பெயரை மங்கச் செய்து விட்டது எனலாம். இவன் போர்ச் செயல்களிலும் கட்டடங்கள் கட்டுவதிலும் புகழ் பெற்றான்; நீண்ட காலம் ஆண்டான் (கி.மு. 1290-1224). இவன் தன் ஆட்சியின் தொடக்கத்தில் பல கட்டடங்களை எழுப்பினான். தன் தந்தையைப் பின்பற்றி இவன் எபிரேயர்களைக் கொடுமைப்படுத்தினான் என்று கருத இடமிருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் கருத்துப்படி இஸ்ராயேலர் எகிப்திலிருந்து வெளிப்போந்தது இவன் காலத்தில்தான் நடந்திருக்க வேண்டும்.

இவ்வரலாற்றுச் சூழ்நிலையில், கொடுமைப் படுத்தப்பட்ட இஸ்ராயேலர் சார்பாக இறைவன் குறுக்கிடு செய்யத் தலைப்படுகிறார். தம் தூதுவனாக அவர் மோசேயைத் தேர்ந்தெடுக்கிறார். யாத்திரை நூலின் முதல் பன்னிரண்டு அதிகாரங்கள் யாவேயால் விடுதலை அடைந்தது வரை இஸ்ராயேலர் பட்ட துன்பங்களை எடுத்துக் கூறுகின்றன. மோசே தலைமையில் விடுதலை பெற்ற எபிரேயர் ஏறத்தாழ 40 ஆண்டுகள் (அதாவது ஒரு தலைமுறைக் காலம்) பாலையில் அலைந்து திரிந்த பின் (ஏறத்தாழ கி.மு. 1280-ஐ ஒட்டி), பாலஸ்தீனத்தைக் கைப்பற்றத் தொடங்குகின்றனர். ஆட்சோர், இலாக்கிசு, தேல்பெயித் மிரிசீம், போன்ற பாலஸ்தீன நகரங்கள் கி.மு. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அழிக்கப்பட்டனவாகத் தெரிய வருகிறது. இந்த முடிவை நவீன அறிவியல் தொல்பொருள் ஆராய்ச்சியும் உறுதிப்படுத்துகிறது. இவற்றிலிருந்து இஸ்ராயேலர் எகிப்திலிருந்து வெளிப்போந்தது ஏறத்தாழ கி.மு. 1280-ஐ ஒட்டி நடந்திருக்க வேண்டும் என்று நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

2) மோசேயின் தோற்றம்: யாத்திரை ஆகமம் யாக்கோபின் புதல்வர்களின் பட்டியலோடும், அவர்களது செழிப்பான வளர்ச்சியை விவரிப்பதோடும் தொடங்குகிறது. அவர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக, அவர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பிய பார்வோன் அவர்களைக் கொடுமைப்படுத்தத் தொடங்கினான் (யாத் 1:8-22). இச்சூழ்நிலையில் மோசே பிறக்கிறார்; பார்வோனுடைய மகளால் காப்பாற்றப்படுகிறார். பின் அரச வீட்டில் தத்தெடுக்கப்படுகிறார் (2:1-10). இரண்டாம் இராமசேசுக்கு 79 புதல்வர்களும், 59 புதல்விகளும் இருந்தனர் என்பதை மனத்தில் கொண்டால், அரசவீட்டில், கூட ஒரு பிள்ளை இருப்பது யாருடைய கவனத்தையும் ஈர்த்திருக்காது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். தன் குலப் பின்னிலையை மோசே அறிந்திருந்தார் என்பது ஓர் உடன் எபிரேயனைக் கொடுமைப்படுத்திய எகிப்தியனைக் கொன்றதிலிருந்து அறியப்படுகிறது. இக்கொலையின் விளைவாக

மோசே மிதியான், பாலைவனத்துக்கு ஓடிப் போகிறார். அங்கே இரகுவேல் அல்லது இத்திரோ என்றழைக்கப்படுபவர் வீட்டில் தங்கி அவருடைய புதல்விகளில் ஒருத்தியை மணக்கிறார் (2:11-22).

3) மோசே இறைவனால் அழைக்கப்படுதல்: இவ்வரலாற்றுச் சூழ்நிலையில்தான் விவிலிய ஆசிரியர் இறைவெளிப்பாட்டையும், இறைவன் மோசே அழைத்ததையும் கூறுகிறார் (3:1-22). இறைவன் தோன்றியது புலன்களாலும் அறியப்படக்கூடியது என்று காட்ட, ஆசிரியர் இறைவனின் திருமுன்னைத் தாங்கும் இல்லமாக எரியும் செடியை வரைபடமாகச் சித்திரிக்கின்றார். இந்த இலக்கிய உத்தியால், இறைவன் தாம் தெரிந்து கொண்ட சாதாரணமானவர்களுக்கும் ஏதாவது ஒரு விதத்தில் தம்மையே வெளிப்படுத்துகிறார் என்று படிப்பவர்களுக்கு எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் தமக்குள்ள உறவை இறைவன் மோசேக்கு வெளிப்படுத்துகிறார். அஃதோடு இக்குல முதியவர்களின் மரபினரை, அவர்கள் படும் கொடுமையிலிருந்து விடுவிக்கப்போகும் தம் உறுதியான முடிவையும் எடுத்துக் கூறுகிறார். தன்னை இறைவன் தேர்ந்தெடுத்ததைக் கண்ட மோசே கிலி பிடித்துத் திகைத்து நிற்க, ''நாம் உன்னோடு இருப்போம்'' என்று அவருக்கு இறைவன் உறுதிமொழி அளிக்கிறார். இந்த உறுதிமொழி வாய்பாடு முதலில் யாக்கோபுக்கு அளிக்கப்படுகிறது (ஆதி 28:15); அடுத்து இங்கு வருகிறது. இனி, பழைய ஏற்பாடு முழுவதும் அடிக்கடி இவ்வாய்பாடு காணப்படும். இக்கூற்று அப்போஸ்தலர்களைத் தூது அனுப்பிய போது (மத் 28:20) இயேசு அளிக்கும் உறுதியில் உச்சநிலை அடைகிறது. இக்கூற்று இயற்கை ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தூதுக்குக் கருவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வெற்றி உறுதியாக அளிக்கப்படும் என்பதற்கு உறுதிச்சான்று அளிக்கிறது.

இந்த இறை இடையீட்டில் தம்மையே வெளிப்படுத்தும் இறைவனைக் காண்கிறோம். இவ்விடையீடுகளின் வழியாக, காலமாகிய குறுகிய எல்லைகளைத் தகர்த்து, பழைய ஏற்பாடு முழுவதும் தொடர்ச்சியான, புதிய, சிறப்பான முறைகளில் தம்மையே வெளிப்படுத்துகிறார் இறைவன். இவர் மனிதர்களைத் தம் தூதுவர்களாகவும், தமக்குப் பதிலாகப் பேசுபவர்களாகவும் தேர்ந்தெடுக்கிறார். இறைவன் ஒருவரை அழைக்கும்போது, அவ்வழைப்புக்கு ஏற்றவாறு அவனுக்குத் துணைக்கருவியையும் அளிக்கிறார். இஸ்ராயேலின் இறைவாக்குரைஞரில் எல்லாம் மோசே மிகப்பெரியவராவார். இவர்தான் இஸ்ராயேலை யாவேயின் மக்களாகவும், யாவேயை இஸ்ராயேலின் இறைவனாகவும் செய்த நடுவர். இதற்கு இவ்வுலகியல் சார்ந்த விதத்தில் விளக்கம் அளிக்கவே முடியாது. இதை ஆராய்ந்து கொண்டே போனால், நாம் சந்திப்பது இறைவனின் அளவிட முடியாத மறைபொருளாகும். இவ்விறைவன் தம்மையே வெளிப்படுத்துகிறார்; தக்க நேரத்தில் தாமாகவே குறுக்கிட்டு வழிகாட்டுகிறார்; மனித வரலாற்றுப் போக்கையே நிர்ணயிக்கிறார்.

4) இறைவனின் திருப்பெயர்: ''நீர் யார், உமது பெயர் என்ன?'' என்று கேட்டு நின்ற மோசேக்கு இறைவன் அளிக்கும் பதில் மறைபொருள் பொதிந்ததாகும்; புகழ் பெற்றதாகும். ''இருக்கிறவர் நாமே'' என்று பொருள்படும் ''யாஹ்வே'' என்பது நமது பெயர் என வெளிப்படுத்துகிறார் இறைவன். இப்பெயருக்குப் பொருள் கூறுவதும் விளக்கம் அளிப்பதும் எளிதன்று. விளக்கவுரையாளர் சிலர் இப்பெயருக்கு ''நாம் யாராய் இருந்தால் உனக்கென்ன? சென்று, கூறியதைச் செய்'' என்று கூறி இறைவன் தட்டிக் கழித்துத் தம் பெயரைக் கூற மறுப்பதாக விளக்கம் கூறுவர். மேற்காசியாவைச் சேர்ந்த மக்களிடையே ஒருவருடைய பெயரை அறிதல், அறிந்தவர்க்கு அறியப்பட்டவர்மேல் ஒருவித ஆற்றல் அளித்தது என்று கருதப்பட்டது. ஆகையால், மோசே

கேட்டதுபோல், இறைவனின் பெயரை அறிதல் இறைவன் மேல் மோசே ஒருவித ஆற்றல் கொள்வதற்குச் சமமாகும். மோசேக்குத் தமது பெயரைக் கூற இறைவன் மறுப்பது, தாம் எவருக்கும் கட்டுப்பட்டவர் அல்லர், யாவற்றையும் கடந்தவர் என்று கூறுவதற்குச் சமமாகும் என்பர் சிலர். இதற்குமுன் மோசேயின் இறைவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் இறைவன் என்றழைக்கப்பட்டார். மூதாதையரின் இறைவன் என்றழைக்கப்பட்டார்; யாக்கோபோடு போரார்டிய தூதுவன், பெயர் கேட்கப்பட்டபோது, கூற மறுத்து விட்டார் (ஆதி 32:30). பெயர் கேட்ட சிம்சோனின் தந்தைக்கு இறைவன் ''வியப்புக்குரிய என் பெயரை நீ ஏன் கேட்கிறாய்?'' என்று பதில் கேள்வி எழுப்புகிறார். இவற்றைக் கருத்தில் கொண்டால் இறைவன் மோசேயிடம் தம் பெயரைக் கூற மறுப்பதாகத் தெரிகிறது.

ஆயினும், யாத்திரை நூலின் சூழ்நிலையைக் கவனிக்குங்கால் இறைவன் தமது பெயரை வெளியிட விரும்புவதாகத் தெரிகிறது. ''என்றும் நமது பெயரும் இதுவே! தலைமுறை தலைமுறையாக நமது நினைவுச் சின்னமும் இதுவே!'' (யாத் 3:15). மூல வடிவில், இப்பெயர் மீட்பு இடையீடு செய்வதற்காக எப்போதும் இருக்கும் இறைவன், குலமுதுவர்களோடு நெருங்கிய உறவு கொண்ட வரலாற்று இறைவன்தான் என்று உணர்த்தவல்லது என்று கூறலாம். திருவெளிப்பாட்டு நூலில் வரும் ''இருக்கிறவர், இருந்தவர், இனி வருபவர்'' (திருவெளி 1:4) என்ற வாய்பாடு யாவே என்ற பெயரின் இயற்கையான விளக்கமாகும்.

எபிரேயத்தில் இறைவனின் திருப்பெயர் "YHVH" என்று எழுதப்பட்டது; ''யாவ்வே'' என்று உச்சரிக்கப்பட்டது. இப்பெயருக்குப் பலவாறு விளக்கம் அளிப்பர் விளக்கவுரையாளர்கள். இப்பெயருக்கு உள்ளவற்றையெல்லாம் இருக்கச் செய்பவர் அதாவது, ''படைக்கும் இறைவன்'' எனப்பொருள் அளிப்பர் சிலர்; வேறு சிலர் ''நான் யாராய் இருப்பேனோ அவராய் இருப்பேன்'' (I shall be who I shall be), ''நாம் உன்னோடு இருப்போம்'' என்று மொழி பெயர்ப்பர். இது வருங்கால நிகழ்ச்சியையும் பொருளையும் சுட்டுகிறது. இதன்படி, ''நாம் யார் என்று நீ கண்டு கொள்வாய். நாம் நம்மையே வரலாற்றில் வெளிப்படுத்துவோம்'' என்று பொருள் கொள்ளலாம். இது இறைவனின் ஆற்றல்மிக்க திருமுன்னைக் குறிக்கவல்லது. மூன்றாவது குழுவினர், இப்பெயர் இறைவனின் எல்லாம் கடந்த தன்மையைக் குறிக்கிறது என்பர். ''இருக்கிறவர் நாமே'' (I am who am). இப்பெயர் இறைவனின் மீபௌதீகத் தன்மையை விளக்குகிறது. அவர் யாவற்றிற்கும் மேலானவர், தனித்தன்மையும் முதன்மையும் உடையவர் என்று மெய்யியல் அடிப்படையில் பொருள் அளிப்பர். நான்காவது குழுவினர், இப்பெயர் நம்மையும் நமது அறிவையும் கடந்த ஓர் ஆளைக் குறிக்கிறது; அவரை அறிதல் மனிதனால் கூடிய காரியமன்று; அணுக முடியாதவர் என்று பொருள் கூறுவர்.

மேற்கூறிய நான்கு விளக்கங்களும் ஒன்றை ஒன்று விலக்குவனவல்ல. நான்கையும் மனதில் கொண்டு இறைவன் திருப்பெயருக்கு விளக்கம் அளிக்க வேண்டும். இப்பெயரில், இறைவன் தம் முழுத்தன்மையை வெளியிடுகிறார். அதேபோது இப்பெயர் இறைவனின் யாவும் கடந்த தன்மையையும், மனித அறிவால் அறிய முடியாத மறைபொருளையும், அவர் வரலாற்றில் தம்மையே வெளிப்படுத்துகிறார் என்பதையும் உணர்த்துகிறது. இறைவன் மறைந்து வாழ்பவர்; ஆனால், தம்மையே வெளிப்படுத்துபவர்; தெளிவாக, படிப்படியாக வரலாற்றில் தம்மை வெளிப்படுத்துபவர். வரலாற்றில் அவரது செயல் ஒருபோதும் ஓயாது. இவற்றில் அவர் யாவற்றையும் கடந்தவர்; ஆனால், மனிதரிடையே வாழும் இறைவனாவார். அவரை யாரும் கட்டாயப்படுத்த முடியாது. யாரும் அவரை ஊடுருவி அறியமுடியாது. ஆனால், அவர் ''தாமேயாய் இருப்பவர்'' ஆவார்; எப்போதும் பிரசன்னமாய் இருப்பவர். இப்பிரசன்னம்

வெல்ல முடியாத, விடுதலை அளிக்கும் பிரசன்னமாகும். இப்பிரசன்னம் படைப்பு முழுவதையும் அதன் தொடக்கமுதல் இறுதிவரை தம்முள் கொண்டுள்ளது. முக் காலங்களையும் தம்மில் ஒன்றிக்கிறது.

''தொடக்கத்திலிருந்து தலைமுறைகளை அழைத்தவர் அன்றோ? முதலும் முடிவு மாயிருக்கிற ஆண்டவராகிய நாம்...'' *(எசா 41:4)*. மக்களின் நன்மைக்காக எங் கெல்லாம் இறையிடையீடு தேவையோ அங்கெல்லாம் இருப்பார். எப்போதும் இருப்பவர்; எங்கும் இருப்பவர். அவரது பிரசன்னம் ஆற்றலோடு செயல்படும். அவ ரது செயல்கள் வியப்புக்குரியவை, மறை பொருள் மிக்கவை. அவரது திருப்பெயரின் தோன்றுதலுக்குப் பின்வரும் அருஞ்செயல் கள் அவரது திருப்பெயரின் முத்திரையா கும்.

தமது பெயரை வெளிப்படுத்தி, மோசேக் குத் தம்மையே இறைவன் வெளிப்படுத்துகி றார். அதேபோழ்து, தம்மை முழுவதும் வெளிப்படுத்த மறுத்துவிடுகிறார் எனலாம். யாத்திரை நிகழ்ச்சிகளிலும் பின்வரும் நிகழ்ச்சிகளிலுந்தான் மோசேயும் இஸ்ராயே லரும் யாவேயைச் சிறிது சிறிதாக அறி கின்றனர். இவ்விறை வெளிப்பாடு தொடர்ந்து நடந்தது; கிறிஸ்துவில் நிறைவு பெறுகிறது. நான்காம் நற்செய்தி, இறை மகன் மனிதனான உண்மையை விவரிக்கும் போது இதேசெயல் ஆற்றல்மிக்க பிரசன்னக் கருத்தைப் பயன்படுத்துகிறது. ''(பிரசன்ன மாய்) நானே இருக்கிறேன்'' (யோவா 4:26; 8:24. 28; 13:19) என்று இயேசு கூறும்போது இறைவெளிப்பாட்டின் நிறைவை இயேசு வில் காண்கிறோம். பாடுகளும் மகிமைப் படுதலுமாகிய இறுதி நேரம் வந்த போது, தம்மைக் கைது செய்யத் தேடி வந்தவர்களி டம் ''நான்தான் என்று'' இயேசு பதில் கூறினார். இறைவன் இப்போது ஒரு பெயரால் வெளிப்படுத்துவதில்லை. எல் லாப் பெயர்களுக்கும் மேலான ஒருவரால் தம்மை வெளிப்படுத்துகிறார் (பிலி 2:9).

இயேசுவே ''இருக்கிறவர்''. அவரது பிரசன்னம் மனிதரை மாற்றாது விடாது. அவரை எதிர் கொள்ளுதல் மீட்பையோ, தீர்வையோ அளிக்கும் இறைவனது பிரசன் னம். அவரது இரக்கம், நீதி ஆகியவற்றின் வெளிப்பாடு, எரியும் புதரில் தொடங்கி யது; கிறிஸ்துவில் நிறைவுபெறும். அவரில் புதிய யாத்திரை நிறைவுபெறும்.

இறைவன் தமது பெயராக மோசேக்கு வெளிப்படுத்தியது ''யாவே'' என்ற பெய ராகும். அவருடைய யாவும் கடந்த தன்மை யையும், அவரை அணுக முடியாத தன்மையையும், மறைபொருள் மிக்க தன் மையையும், அழுத்திக் கூற விரும்பிய விவிலிய ஆசிரியர்கள் இறைவனுடைய பெயரை உச்சரிக்க அஞ்சி, அவரைப் ''பெயர்'' என்ற பொதுப் பெயரால் அழைத்தனர். பிற்கால விவிலிய நூல்களில் ''பெயர்'' யாவேயைக் குறிக்கும். பிற்கால யூத ராபிகளின் நூல்களும் இறைவனை இப்படியே குறிக்கின்றன. இறைவன்பால் கொண்ட அச்சமிக்க மரியாதையை முன் னிட்டு யாவே என்ற சொல்லுக்குப் பதி லாக, ''இறைவன்'' என்று பொருள்படும் ''எலோகிம்'' என்ற பொதுப்பெயரும், ''ஆண்டவர்'' என்று பொருள்படும் ''அதோனாயி'' என்ற சொல்லும் பயன் படுத்தப்பட்டன. புதிய ஏற்பாடும் ''ஆண்ட வர்'' என்ற சொல்லையே இறைவனைக் குறிக்கப் பயன்படுத்துகிறது.

யாவே பாரம்பரியப்படி பெருவெள்ளத் திற்கு முன்பே இறைவன் யாவே என்ற பெயரில் வணங்கப்படுகிறார் (ஆதி 4:26). ஆனால் குருக்கள், எலோகிம் பாரம்பரியங் கள்படி குலமுதுவர்களுக்கு இறைவன் ''எல்லாம் வல்ல இறைவன்'' என்ற பொருள்படும் ''ஏல்ஷடாய்'' என்ற பெய ரில் தம்மை வெளிப்படுத்துகிறார். யாத் 3:11-15 என்ற பகுதி எலோகிம் பாரம்பரி யத்தைச் சேர்ந்ததாகும். இதன்படி வாசகத் தில் வரும் சிறப்பான சூழ்நிலையில் யாவே என்னும் தமது சொந்தப் பெயரை மோசேக்கு வெளிப்படுத்துகிறார் இறை வன். இரண்டு பாரம்பரியங்களுக்குமுள்ள

முரண்பாடு கண்டு வாசகர்கள் மலைக்கலாம். எது சரி? இரண்டுமே சரி எனலாம். யாவே என்ற பெயரைத் தொடக்கத்திலிருந்து பயன்படுத்துகிறார்; மீட்பு வரலாற்றுத் தொடர் ஓவியத்தை வரைய முயல்கிறார். இஸ்ராயேலின் இறைவனாகிய யாவே, வரலாற்றின் படைப்பின் உண்மையான ஆண்டவர். ஆகவே, யாவே பாரம்பரிய ஆசிரியர் இறையியல் நோக்கோடு யாவே வழிபாட்டைக் காலத்தொடக்கத்திற்கே பின்னோக்கிக் கொண்டு செல்கிறார். குலமுதுவர்களுக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாடு குறையுள்ளதெனினும் தொடக்கத்திலிருந்து யாவேதான் குலமுதுவர்களை வழிநடத்திச் செல்கிறார். இறைவனைப் பல்வேறு பெயர்களைக் கொண்டு வழிபட்டாலும், யாவேயைத்தான் அவர்கள் உண்மையிலேயே வழிபட்டனர். ஆகவே, யாவே பாரம்பரியப் , யாவே என்ற பெயரைக் காலமயக்கமாக விவிலியத் தொடக்கத்திலிருந்து பயன்படுத்துவதை அதன் இறையியல் நோக்கோடு புரிந்து கொள்ள வேண்டும். மாறாக குருக்கள், எலோகிம் பாரம்பரியங்கள், உண்மை நிகழ்ச்சிகளுக்கேற்ப, யாவே என்ற பெயர் இறைவனைக் குறிக்க மோசே காலத்தில்தான் பயன்படுத்தப்பட்டது என்று கூற விழைகின்றன. குழந்தைகளுக்கு யாவே என்ற பெயரோடு தொடர்புடைய பெயர்கள் கொடுக்கப்படுதல் மோசே காலத்திலிருந்துதான் இஸ்ராயேலில் பழக்கத்தில் காணப்படுகிறது. இது யாத்திரைக் காலத்தில்தான் யாவே என்ற பெயர் இறைவனைக் குறிக்கத் தொடங்கியது என்று காட்டுகிறது. குருக்கள், எலோகிம் பாரம்பரியங்கள் மோசே வழியாக அளிக்கப்பட்ட வெளிப்பாட்டின் சிறப்பை அழுத்திக் கூறுகின்றன.

காயீனின் மரபினரான கினேவரிடமிருந்து, யாவே என்ற பெயரை மோசே அறிந்திருந்தார் என்று சிலர் கூறுவர். இப்போது இக்கருத்துக்கு அவ்வளவு மதிப்பு இல்லை. மேலும், இது தவறானது என்று ப்ராக்ஷ் என்ற அறிஞர் ஆராய்ச்சி மூலம் காட்டியுள்ளார். சீனாய் மலை உடன்படிக்கைச் சூழ்நிலையில் புதிய பொருளோடு யாவே என்ற பெயர் வெளிப்படுத்தப்படுகிறது; மோசேக்குப் புதியதோர் இறைவன் வெளிப்படுத்தப்படவில்லை; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் கடவுளே யாவே என்று தம்மை வெளிப்படுத்துகிறார் என யாத்திரை நூலின் இறுதிப் பதிப்பாசிரியர் காட்ட விழைகிறார் எனலாம்.

தமது சொந்தப் பெயரை வெளிப்படுத்திய பின், யாவே ஆகிய இறைவன் தாம் புதிதாகத் தேர்ந்தெடுத்துள்ள கருவியாகிய மோசேக்குத் தாம் அளிக்கவிருக்கும் தூதுப் பணியை விரிவாக எடுத்துரைக்கிறார். மோசே தன் உடன் எபிரேயரை எகிப்திலிருந்து புறப்படத் தூண்ட வேண்டும். அவர்களும் அவருக்குச் செவிமடுப்பர். ஆனால், பார்வோன் இதை வரவேற்க மாட்டான். தனக்குப் பெரிதும் பயன்படும் இந்த எபிரேய அடிமைகளை இழப்பதை வெறுத்து, அவர்கள் எகிப்திலிருந்து புறப்படுவதை எதிர்த்து எழுவான். ஆனால், வரலாற்றையும் கட்டுப்படுத்தி ஆண்டு நடத்தும் யாவேயின் வல்லமைமிக்க வலக்கரம் இம்மக்களைத் தன்னுரிமையோடு போகவிட அவனைத் தூண்டும்.

5) வாதைகளும் வியத்தகு இயற்கையும்: மோசே தன் உடன் பிறந்தான் ஆரோனைத் தனது பேச்சாளனாகப் பயன்படுத்த அனுமதி பெறுகிறார் *(யாத் 4:17)*. இதற்குப்பின், யாவேக்கும் பார்வோனுக்கும் இடையே நடக்கும் கடும்போட்டியாக நிகழ்ச்சிகளை விவரிக்கிறார் விவிலிய ஆசிரியர் *(5:1-12:51)*. ஒரு புறம் தமது மக்களாகிய இஸ்ராயேலை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க உறுதி பூண்டிருக்கும் யாவே ஆகிய இறைவன் மறுபுறம் அடிமைகளான எபிரேயரைத் தன்னிடமே வைத்துக் கட்டுப்படுத்தப் பிடிவாதம் பிடிக்கும் பார்வோன். இருவருக்குமிடையே ஒரு பா பெரும் போராட்டம். அதில் சிறப்பான பகுதி வாதைகளாகும். இவை இயற்கைப் பேரழிவுகளாகும். இவை போன்றவை எகிப்திய வரலாற்றில் அடிக்கடி நடந்திருக்

கின்றன. இவ்வழிவுகள் இயற்கை நிகழ்ச்சிகளாக இருந்தால், இவற்றின் மேல் வியத்தகு பண்பைச் சாற்றி விவிலிய ஆசிரியர் கூறுவது வினோதமாக இருக்கலாம். நவீன அறிவியல்வாதி இயற்கை அழிவுகளை இறைவனது தீர்ப்பாக விளக்க விரும்பான். ஆனால், பழங்கால மக்கள் அப்படிக் கருதியதாகவும், அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டதாகவும் அறிகிறோம்.

இவ்விடத்தில் இயற்கையைப் பற்றி நாம் ஒரு சிறிது கூற வேண்டும். நவீன மனிதன் இயற்கையின் அறிவியலை நன்கு அறிவான். அவனுக்கு இயற்கை, நிலையான சட்ட ஒழுங்குகளால் ஆட்சி செய்யப்படும் ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் சட்டங்கள் செயற்படுவதில் தலையிட்டு அவை மாறாக அல்லது வேறு விதமாகச் செயல்படச் செய்தால் அஃது அருஞ்செயலாகக் கருதப்படும். இத்தகைய கருத்து பழங்காலச் செமித்தியர்கள் அறியாத ஒன்றாகும். அவர்களுக்கு இயற்கை ஆட்தன்மையுடையது. பல சமயங்களில் இயற்கைக்கு இறை ஆட்தன்மையும் அளிக்கப்படுவதுண்டு. இஸ்ராயேலை அடுத்து இருந்த புறமதத்தினர் இப்படிப்பட்ட பல இயற்கைத் தெய்வங்களைக் கொண்டிருந்தனர். தங்களுக்குப் பயன்பட்டால் இத்தெய்வங்களை நட்புடைத் தெய்வங்களாகவும், தீமை செய்தால் பகைவர்களாகவும் கருதினர். ஆனால், இறைவெளிப்பாட்டின் பயனாக, எல்லாம் வல்ல யாவே இவ்வாற்றல்களைக் கட்டுப் படுத்துகிறார். அவற்றைத் தமது திட்டத்திற்கேற்பப் பயன்படுத்துகிறார் என்று எபிரேயர் தம் பட்டறிவால் உணர்ந்தனர். இயற்கையின் ஆற்றல்களை யாவேயினுடைய ஆற்றலின் தோற்றங்களாகக் கருதினர். ஆகையால், இயற்கை நிகழ்ச்சிகளை யாவேயின் வியத்தகு அடையாளங்களாகக் கண்டனர் எபிரேயர். அப்படிக் கருதுவதற்கு, இறைவன் தலையிட்டு இயற்கைச் சட்டங்களை மாற்றியமைக்கவோ, நிறுத்தி வைக்கவோ தேவையில்லை.

யாத்திரை நூலில் வரும், எகிப்தில் நடந்த வாதைகள் உண்மையிலேயே யாவே இறைவனால் நிகழ்கின்றன என்பதை மோசே தன் இறைவாக்கால் விளக்குகிறார். அவர் பயன்படுத்தும் கோல் மாயவித்தைக்காரரின் கோல் அன்று. அது மோசேயின் இறைவாக்குரைக்கும் செயலின் அடையாளமாகும். மோசே ஒரு மாயவித்தைக்காரரும் அல்லர். மோசே, ஒழுக்க, சமயக் குறிக்கோளுக்காகவும், தன் அடிமைப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும், தன் மூதாதையரின் இறைவன் பெயரால் போராடுகிறார். அதற்கேற்ப, அவர் பயன்படுத்தும் கோலுக்குத் தன்னிலேயே எந்த அருஞ்செயல் ஆற்றலும் இல்லை. இறைவனுடைய அருஞ்செயல் புரியும் ஆற்றலே செயல்படுகின்றது என்பதற்கு அடையாளமாகவே அக்கோல் பயன்படுகிறது.

யாத்திரை நூலில் வரும் இந்த வாதைகளைப் புரிந்து கொள்ள சிறிது விசுவாச அடிப்படை தேவை. இந்த வாதைகளை இவ்வுலகியல் வரலாற்றுக் கண்ணோக்கோடு விவரிக்கலாம். ஆனால், மோசேயினுடைய இறைவாக்கு மட்டுந்தான் இறைவனுடைய தீர்ப்பளிக்கும் கரம் செயல்படுகிறது என்று காட்டுகிறது. கிறிஸ்துவை விசுவாசத்தால்தான் அறிந்து கொள்ளக் கூடும். மீட்பு வரலாற்றின் தொடக்கமும் அப்படியே:

பத்து *வாதைகள்: 1)* நீர் குருதியாக மாறுதல், *2)* தவளைகள், *3)* கொசுக்கள், *4)* ஈக்கள், *5)* விலங்குகளுக்குக் கொள்ளை நோய், *6)* சொப்புளங்கள், *7)* கல் மழை, *8)* வெட்டுக்கிளிகள், *9)* இருள், *10)* தலைப் பேறுகளின் சாவு.

இந்த வாதைகள் எகிப்து முழுவதையும் பாதிக்கவில்லை. யாவே தமது அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆற்றுகிறார். மேற்குக் காற்று வெட்டுக்கிளிகளை அடித்துக் கொண்டு போய்ச் செங்கடலில் சேர்த்தது என்று கூறப்படுகிறது. தென் எகிப்தில் நடந்திருந்தால் வெட்டுக்கிளிகள்

பாலைவனத்தைத்தான் சேர்ந்திருந்திருக்கும். நைல் நதி சிவப்பாதல் அதன் வெள்ளப்பெருக்கோடு சாற்றிக் கூறப்படுகிறது. ஈக்கள் இலையுதிர் காலத்தில் காணப்படுகின்றன. ஈ எகிப்தின் அடையாளமாகும் (எசா 7:18; 18:1). மீன்கள் சாதல், விலங்குகள் கொள்ளை நோயால் துன்புறுதல், கொப்புளங்கள், கல்மழை போன்ற வாதைகள் எகிப்தில் அடிக்கடி நடப்பனவாகும். பெரும் இருளை மணற்புயலைக்கொண்டு விளக்கலாம். இறுதியில், எகிப்து பல கொடிய நோய்களுக்குப் பெயர் போனது. பத்தாவது வாதையில் சிறப்பானது முதல்பேறு இறத்தலாகும். ஒவ்வொரு வாதைக்கும் இயற்கையான விளக்கம் அளிக்கலாம். ஆனால், இவை யாவும் இறைத்தீர்ப்பாக யாவே அனுப்பியவையாகும் என்று விவிலியம் தெளிவாகக் கூறுகிறது. நூலைக் கவனமாய்ப் படித்தால், இந்த முடிவைத் தவிர்க்க முடியாது. எபிரேயர்களை விடுவித்தலில் இவ்வாதைகள் இறைவனின் அருள்பாலிப்பை அழுத்திக் காட்டுகின்றன.

எல்லா வாதைகளும் சேர்ந்து ஒரே பட்டியலில் தரப்படவில்லை. யாவே பாரம்பரியம் எட்டு வாதைகளை மட்டும் தருகிறது (1, 2, 4, 5, 7, 8, 9, 10). எலோகிம் பாரம்பரியம் ஐந்தையும் (1, 7, 8, 9, 10) குருக்களின் பாரம்பரியம் ஐந்தையும் (1, 2, 3, 6, 10) தருகின்றன (எண்ணிக்கை முதலில் தரப்பட்ட வாதைகளின் பட்டியல் எண்ணைக் குறிக்கிறது). எல்லாப் பாரம்பரியங்களிலும் முதலாவதும் கடைசியானதும் ஒத்துப்போகின்றன. ஆனால் வழக்கம்போல், அவற்றை நோக்கும் விதம் பாரம்பரியங்களுக்கேற்ப வேறுபடுகின்றன. யாவே பாரம்பரியப்படி, மோசே சொல்லுக்காக இறைவன் நேரடியாகத் தலையிட்டுச் செயலாற்றுகிறார். எலோகிம் ஆசிரியர், மோசே தடியை நீட்ட, செயலாற்றும் இறைவனைக் காண்கிறார். குருக்கள் பாரம்பரியத்தில் ஆரோன் தடியைக் கையாள இறைவன் செயலாற்றுகிறார். இவ்வாசிரியர் எகிப்தியரின் மாயவித்தைக்காரர்களை உட்புகுத்துகிறார். அவர்களின் தேவர்களுக்கும் யாவேக்கும் இடையே ஒரு போட்டியை ஏற்படுத்துகிறார்.

யாத்திரை நூலைத் தொகுத்த பதிப்பாசிரியர் இம்மூன்று பாரம்பரியங்களையும் சேர்த்துப் பெரும் ஆற்றலுடன் பின்னி நாடகப் பாணியை உயர்த்திக் காட்ட முயல்கிறார். மேலும், யாவேக்கும் புறமதத் தேவர்களுக்கும் நடக்கும் போட்டியாக நிகழ்ச்சிகளை நோக்குகிறார். இந்தப் போட்டி யாவேயின் எல்லாம் வல்ல தன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. முதல் நான்கு வாதைகளிலும் ஓரளவு துன்பந்தான் செய்யப்படுகின்றது. சிலவற்றை எகிப்திய மாயவித்தைக்காரர்களும் செய்கின்றனர். அடுத்த நான்கும் முனைப்பாக உள்ளன. மனிதர்களுக்கும் உடைமைகளுக்கும் இடர்மிக்க அழிவு ஏற்படுகின்றது. ஒன்பதாவது வாதை பெருங்கிலியை எழுப்புகிறது. பத்தாவது வாதை எகிப்தியர்களுக்குத் திகைப்பு மிக்க கிலியையும் அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. அதன் விளைவாக இஸ்ராயேல் மக்களைப் போகவிட, பார்வோன் உறுதியான முடிவு எடுக்கிறான். இவை யாவும் வீரகாவியப் பாணியில் விவரிக்கப்படுகின்றன. இப்பாணியை யாத்திரை நிகழ்ச்சியுரைகளில் மட்டுமன்று, சங்கீத நூலிலும் (சங் 77; 104), ஞானாகம நூல்களிலும் காணலாம் (ஞான 11:14-20; 16:1-18).

6) பாஸ்கா அல்லது கடந்தேகும் விழா: வாதைகளின் விவரிப்பின் முடிவில், விவிலியம் கடந்தேகும் விழாவையும், அதன் ஒழுங்குகளையும், இஸ்ராயேல் மக்கள் கடைப்பிடிக்க வேண்டியவற்றையும் பறைசாற்றுகின்றது (யாத் 12:1-51). இறுதி வாதையான தலைப்பேறுகளின் இறப்பு பார்வோனின் பிடிவாதத்தைத் தகர்த்தெறிகிறது. இஸ்ராயேலின் தலைப்பேறுகள் காக்கப்பெறும் பொருட்டு, மோசே ஒரு கட்டளையிட்டிருந்தார். ஒவ்வொரு குடும்பத்தினரும் ஓர் ஆட்டுக் குட்டியைக் கொன்று, அதன் குருதியை வீட்டு நிலை

களில் தெளித்திட வேண்டும். இப்படிச் சடங்குகள் முறையே நடைபெற்ற வீடுகளைப் பத்தாவது வாதையின்போது இறைவனின் தூதர் கடந்து சென்றார். இப்படிக் கடந்துசென்றதைக் குறிக்கிறது ''பாஸ்கா'' என்ற எபிரேயச் சொல்லாகும். இது விவிலியம் கூறும் பொது விளக்கம். சிலர் இச்சொல்லுக்குச் சமாதானப்படுத்தல், பரிகாரம் செய்தல் என்று பொருள் கொடுப்பர். ஆனால், இஸ்ராயேலின் கடத்தல் விழாவில் பரிகாரப் பொருளே இருந்ததில்லை. ஆதலால், இப்பொருள் ஒவ்வாததாகும். மற்றும் சிலர் எகிப்திய மொழியில் இப்பெயருக்குப் பொருள் காண விழைந்தனர். ஆனால், செமித்திக்குத் தோற்ற வரலாறுடைய ஒரு விழாவுக்கு எகிப்தியப் பெயரை எபிரேயர்கள் கொடுத்தனர் என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாகும். இந்த முயற்சிகள் எல்லாம், இச்சொல்லுக்குப் பத்தாவது வாதையில் பொருள் காண முயல்கின்றன. ஆனால், இந்த வாதையின் நினைவு இவ்விழாவுக்குப் பிந்தியதாகும்.

சொல் விளக்கம் எப்படியிருப்பினும், தோற்றத்தில் இவ்விழா மிகமிகப் பழமையானதாகும் என்பது தெரிய வருகிறது. எகிப்திலிருந்து இஸ்ராயேலர் வெளிப்போந்த நிகழ்ச்சிக்கு மிக முந்தியதாகும். தொடக்க காலத்தில் இது நாடோடி மக்களுடைய இளவேனிற்காலச் சடங்காக இருந்திருக்கலாம். இச்சடங்கில் குருக்களோ, பீடங்களோ சிறப்புப் பெறவில்லை. இதில் குருதி சிறப்பாகப் பயன்பட்டது. ஆடுகள் பெருகுவதற்காக இச்சடங்கு நடைபெற்றிருக்கலாம். மேலும், கூடார நிலைகளில் தெளிக்கப்பட்ட குருதி, பகையான அல்லது தீய சக்திகளிலிருந்து காப்பாற்றுவதாகக் கருதப்பட்டது.

இந்தப் பொதுச்சடங்கை இஸ்ராயேலர் வரலாற்றின் தலையாய கட்டத்தில் மோசே பயன்படுத்துகிறார்; இவ்விழாவுக்குப் புதிய ஆழ்ந்த பொருள் அளிக்கிறார். இதிலிருந்து இச்சடங்கு நாடோடிகளின் விழாவின் தன்மையை இழந்து, இறைவனின் சொந்த மக்களின் விடுதலையையும் மீட்பையும் குறிக்கும் மாபெரும் விழாவாக மாறுகிறது. பாஸ்கா விழாவின் ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தின் வழியாக ஒரு காலத்தில் இஸ்ராயேலர்களுக்கு மீட்பளிக்கும் பொருட்டு யாவே செய்த வரலாற்றுச் செயலால் எல்லாத் தலைமுறைகளும் உயர்வு பெறுகின்றன. அதில் ஒவ்வொரு இஸ்ராயேலனும் பங்கு பெறுகிறான். தனிக் குடும்பங்களில் பாஸ்கா உணவு உண்ணப்பட்டபோது அஃது ஒரு பலியாகவும் நினைவாக்க விருந்தாகவும் நடந்தது. பாஸ்காவுக்கு முந்திய இரவில், கிறிஸ்து தமது சொந்த நினைவாக்க விருந்தை ஏற்படுத்திய போது, அவர் பழைய ஏற்பாட்டின் நினைவாக்கத்தைக் கடந்து செல்கிறார்; அதை நிறைவு செய்கிறார்.

7) புளியாத அப்பவிழா: இதுவும் மிகப் பழைய விழாவாகும். இஃது உழவுத் தொழிலைப் பின்னிலையாகக் கொண்டது; வாற்கோதுமை அறுவடையின் தொடக்கத்தில் கொண்டாடப்பட்டது. இது கானானியர்களிடமிருந்து வந்ததாகத் தெரிகிறது. இவ்விழாவில் ஏழு நாட்களுக்குப் புளியாத அப்பத்தை இஸ்ராயேலர் உண்டனர். ஒப்புக்கொடுக்கப்பட வேண்டிய காணிக்கை அறுவடையின் முதல் பலனாகும்.

பாஸ்கா விழாவும், புளியாத அப்ப விழாவும் மிகப்பழையனவாகும். இவை நாடோடித்தன்மையை எடுத்துக் காட்டுகின்றன; உழவுத்தொழிலைப் பின்னிலையாகக் கொண்டன. இவையிரண்டும் இறைக் கட்டளையால் ஒன்று சேர்க்கப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டு, எகிப்திலிருந்து இறை மக்கள் விடுதலையடைந்த மாபெரும் நிகழ்ச்சியை உணர்த்தப் பயன்படுகின்றன. இவ்விரட்டைவிழாவுக்குப் புதிய மீட்புப் பொருள் அளிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாஸ்கா அல்லது கடத்தல் விழா, கிறிஸ்துவுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் பொருளையும் பெறுகிறது (*1 கொரி 5:7; யோவா 1:29; 19:36; 1 பேதுரு 1:19*).

யாத் 12-ஆம் அதிகாரத்தின் முதல் 14 வசனங்கள் குருக்கள் பாரம்பரியத்தைச் சேர்ந்தனவாகும். பின்வரும் ஆறு வசனங் கள் அதே பாரம்பரியத்தைச் சேர்ந்ததா யினும் பிற்காலச் சேர்க்கையாகக் கருதப்படு கிறது. காரணம், இதில் யாத்திரை ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டதாகக் கருதப் படுகிறது.

8) தலைப்பேறுகளின் இறப்பு: மோசே கட்டளைக்குப் பணிந்து இஸ்ராயேலர் முதல் பாஸ்காச் சடங்கை நிறைவேற்றினர். பின், எகிப்தியரிடையே நிகழ்ந்த அழிவை ஆசிரியர் விவரிக்கிறார். எகிப்தியரின் தலைப்பேறுகள் கொல்லப்படுதல் இறைவ னுடைய நேரடிச் செயலால் நடந்தது என்பர் பலர். வேறு சிலர் எகிப்தியரி டையே அடிக்கடி வரும் கொடிய கொள்ளை நோயின் விளைவு என்பர். இவர்களின் கருத்துப்படி தலைப்பேறுகள் என்று குறிக்கப்படுதல் இந்நூலில் காணப் படும் வீர காவிய அணிக்கு ஒரு சான்றா கும். எஃது எப்படியிருந்தாலும், எகிப்திய ரின் தலைப்பேறுகள் மரித்த அவ்விரவே பார்வோன் மோசேயை அழைத்து, ''நீங்க ளும் இஸ்ராயேல் மக்களும் எழுந்து என் மக்களை விட்டுப் புறப்பட்டுப் போய், நீங்கள் சொன்னபடியே ஆண்டவருக்குப் பலியிடுங்கள்'' (யாத் 12:3) என்று கூறுகி றான். பிடிவாதம் பிடித்த பார்வோன், எபிரேயர்கள் தங்களின் மனைவியர் குழந் தைகளோடு புறப்படுவதற்கு விரைவில் இசைவு அளிக்கிறான். புறப்படும் அடிமை களுக்கு எகிப்தியர் தங்கம், வெள்ளி, உடைகள் முதலியவ்வகளை அளிக்க இணங்கினர் என்பது நமக்கு வியப்பை அளிக்கலாம். ஆனால், இச்செயல் எகிப்திய ரின் சமயப் போக்கிற்கு ஒத்ததே. இஸ்ராயே லின் இறைவனாகிய யாவே தமது வல்ல மையைக் காட்டிவிட்டார். அவருடைய மக்களை வெறுமையாகப் போக விடுவது அவ்விறைவனுக்குச் செய்யும் அவமானமா கும். பழங்கால மேற்காசிய மக்களின் இந்த மனப்போக்கைப் பிற்காலத்தில் பெலிஸ்தி யர்களின் செயலிலும் பார்க்கலாம் (1 சாமு 6:3-5). விவிலியக் கருத்துப்படி இஸ்ரா யேல் எகிப்திலிருந்து வெளிப்போந்தது தற்செயலாக நடந்தது அன்று, சமயப் போக்கும் பொருளும் உடையதாகும்.

9) எகிப்திலிருந்து புறப்படுதல்: எகிப்தில் யாவேக்கும் பார்வோனுக்கும் நடந்த போராட்டம் யாவேக்கு வெற்றியுடன் முடிந்தது. பின், விவிலிய ஆசிரியர் அடி மைத்தன நாட்டிலிருந்து உறுதி அளிக்கப் பட்ட நாட்டிற்குச் செல்ல இஸ்ராயேல் பின்பற்றிய பாதையையும் பயணத்தையும் விவரிக்க முனைகிறார் (12:37).

10) இஸ்ராயேலின் எண்ணிக்கை: எழுது கிற போக்கில், பிள்ளைகளைத் தவிர்த்து, 600,000 பேர் புறப்பட்டதாகக் கூறுகிறார் ஆசிரியர். இதை உண்மையென்று எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 30 லட்சம் பேர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டிருக்க வேண்டும். இவர்களை நடத்திச் செல்வது அவ்வளவு எளிதான செயலும் அன்று. இவ்வெண் ணிக்கை பற்றிப் பலரும் பலவாறு விளக் கம் அளிக்க முயன்றுள்ளனர்.

இதில், செமித்தியர்கள் மிகைப்படுத்திக் கூறுதலுக்கு ஒரு சான்றைக் காண்கின்றனர் சிலர். மற்றவர்கள் இவ்வெண்ணிக்கை தாவீது காலத்தில் எடுக்கப்பட்ட கணக்கெ டுப்பின் விளைவாகும், அது காலமயக்க மாக யாத்திரைக் காலத்தில் புகுத்தப்படு கின்றது என்பர். மூன்றாவது குழுவினர், ஆயிரம் என்ற எண்ணிக்கையைக் குறிப்ப தாகக் கருதப்படும் ''ஏலெபு'' என்ற சொல் லுக்குக் குடும்பம் என்னும் பொருளும் கொடுக்கலாம் என்பர். இதன்படி, மோசே யுடன் எகிப்திலிருந்து 600 இஸ்ராயேலர் குடும்பங்கள் புறப்பட்டன. அப்படியா னால் ஏறத்தாழ 10,000 மக்கள் புறப்பட்டி ருக்க வேண்டும். இந்த விளக்கத்தை இப்போது பலர் ஏற்றுக்கொள்வர். எண் ணிக்கை பற்றிப் பல கருத்துக்கள் இருந்தா லும், பெரும்பான்மையான ஆராய்ச்சியா ளர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட எபிரே யர்களின் எண்ணிக்கை பல ஆயிரம் என்று ஒப்புக்கொள்வர்.

11) எகிப்து நாட்டில் இஸ்ராயேலர் பயணம் சென்ற வழி: எகிப்திலிருந்து கானானுக்குச் செல்ல, பல வழிகள் இருந்தன. அவற்றில் முதலாவது பெலிஸ்தியர் நாட்டின் வழியாகச் செல்லும் பாதையாகும். இப்பாதை மற்றவற்றை விட மிக எளிதானது. இரண்டாவது பாதை, சீர் பாலைவனம் வழியாகச் செல்லுவது. மூன்றாவது, சூயெஸ் வளைகுடா வடமுனையிலிருந்து எட்சியோன்-கெபேருக்கு நேரே கிழக்கு நோக்கிச் செல்லும் எகிப்து-அரேபியா வணிகப் பாதையாகும். இவ்வழிகள் பயணத்துக்குப் பெரிதும் பயன்பட்டன; அரசு வீரர்களால் நன்கு பாதுகாக்கப்பட்டன. ஆகையால் இவற்றை ஒதுக்கிவிட்டு, எகிப்தியர் படைப்பயம் இல்லாத தெற்கு வழியாகச் சென்று, சுற்றான வழியில் இஸ்ராயேல் மக்களைக் கானானுக்கு இட்டுச் செல்கிறார் மோசே. ஆனால், இவ்வழி எது என்பது பற்றி நவீன ஆராய்ச்சியாளர்களிடையே ஒற்றுமையேயில்லை. இஸ்ராயேலர் சென்ற வழியில் குறிப்பிடப்படும் இடங்களில் சுக்கோத்தைத் தவிர மற்ற இடங்களைப் பற்றி ஊகமாகக் கூறலாமே தவிர, உறுதியாக ஒன்றும் கூறமுடியாது. சுக்கோத்து இப்போது தெல்-ஏல் மோசாகுத்தா என்றழைக்கப்படும் இடமாகும். இது நைல்நதிக் கழிமுகத்திலுள்ள (இப்போது சான்-ஏல் ஹாகன் என்றழைக்கப்படும்) இரமசேசுக்குத் தென் கிழக்கில் *32* கல் தொலைவில் உள்ளது. ஒரு காலத்தில் இவ்விடம் பித்தோம் எனத் தவறாகக் கருதப்பட்டது. ஆனால் இப்பித்தோம் சுக்கோத்துக்கு மேற்கே 3 1/2 கல் தொலைவில் உள்ள தெல்-ஏர்ரட்டபா ஆகும்.

எகிப்திய மொழியில் ஏத்தாம் என்றால் அரண், கோட்டை எனப் பொருள்படும். இவ்விடம் பாலைவனத்தின் எல்லையை ஒட்டிய கசப்பு ஏரிகளின் வடமுனையில் இருந்திருக்க வேண்டும். பிககிரோத்து இப்போதைய க்வான் டீர் என்ற இடத்திற்கு அருகில் இருந்திருக்க வேண்டும். இஃது இரமசேசுக்கு நேர் தெற்கில் உள்ளது. ''கோபுரம்'' அல்லது ''அரண்'' எனப் பொருள்படும் ''மக்தலம்'' என்னும் எபிரேயப் பெயர் பல இடங்களுக்குப் பெயராக இருந்திருக்கிறது. அவற்றில் ஒன்று இக்காலத்திய தெல்-ஏல் ஹெயில் என்ற இடமாகும். இவ்விடம்தான் விவிலியத்தில் குறித்தப்படும் மக்தலம் எனப் பெரும்பாலும் கருதப்படுகிறது. இதுதான் எரே *44:1*; எசே *29:10*; *30:6*-இல் குறிக்கப்படும் மிக்தோல் என்று அறிஞர் கருதுவர். மற்றொரு மக்தலம் கசப்பு ஏரிகளின் தென்பகுதியில் உள்ளது. பெல் சாபோன் என்ற இடம் பிற்கால விவிலிய இலக்கியத்தில் தெகபனகேசு என்றழைக்கப்பட்டது (எசே *30:18*). இதைக் கிரேக்கர் தாப்னே என்றழைத்தனர்; இன்று கோட்டாப்பானா என்றழைக்கப்படுகிறது. சூயெஸ் வளைகுடாவையும் மத்திய தரைக்கடலைச் சேர்ந்த மன்சாலா ஏரியையும் இணைக்கும் சூயெஸ் கால்வாய் பல மாற்றங்களைச் செய்துள்ளது. சான்றாக, பாலாக்கு ஏரி மறைந்து விட்டது. விவிலிய காலத்தில் கசப்பு ஏரிகள் சூயெஸ் வளைகுடாவோடு இணைக்கப்பட்டிருந்திருக்கலாம்.

12) நாணல் கடலைக் கடத்தல்: யாத்திரை நூலின் சூழ்நிலையில் செங்கடலைப் பற்றிக் கூறுதல் தவறானதாகும். இஃது எழுபது நூல் ஆசிரியர் செய்த தவறாகும். யாத்திரையின் நிகழ்ச்சியுரைக்கும் செங்கடலுக்கும் பொருத்தமின்மை எந்த நிலப்படத்தையும் பார்த்தால் தெரியும். விவிலியத்தில் வரும் எபிரேயச் சொல் ''நாணல் கடல்'' என்று பொருள்படும். இரமசேசுக்கு அருகே இரு நீர்நிலைகள் இருந்ததாகப் பழங்குறிப்புகளிலிருந்து அறிகிறோம். ஒன்று 'ஹோரஸ்' நீர்நிலை என்றழைக்கப்பட்டது. மற்றது ''நாணல் கடல்'' அல்லது ''நாணல் சதுப்பு நிலம்'' என்றழைக்கப்பட்டது.

இந்த நாணல் கடல் எங்கு இருந்தது என்பது பற்றி அறுதியிட்டுக் கூறவியலாது. இது கசப்பு ஏரிகளுக்கு வடக்கில் இருந்திருக்க வேண்டும். ஆகையால், இந்த ஏரிகளுக்கு வடக்கே கடத்தல் நிகழ்ச்சி நடந்திருக்க வேண்டும் என்பர் சிலர். மற்றும் சிலர் வடக்கு தெற்குக் கசப்பு ஏரிகளுக்குத்

தெற்கில் நாணல் கடலைக் கடத்தல் நடந்திருக்க வேண்டும் என்பர். வேறு சிலர், கசப்பு ஏரிகளுக்குத் தெற்கில் நாணல் கடலைக் கடந்திருக்க வேண்டும் என்பர்.

விவிலிய நிகழ்ச்சியுரையில் இஸ்ராயேவர் கசப்பு ஏரிப்பகுதிகளை அடைந்தபின், தங்களை எகிப்தியர் துரத்தி வருவதைத் திடீரென்று திகிலோடு அறிகின்றனர். அச்சத்தோடு ஆண்டவரை நோக்கி மன்றாடுகின்றனர்; மோசேயிடம் முறையிடுகின்றனர். இப்படி முறையிடுதல் யாத்திரை நூலிலும் எண்ணாகமத்திலும் அடிக்கடி நடைபெறும். நாணல் கடலைக் கடந்த நிகழ்ச்சியுரையில் வீரகாவியப்பாணி தெளிவாகத் தெரிகிறது.

இஸ்ராயேலின் விடுதலை இஸ்ராயேலின் வரலாற்று நிகழ்ச்சியாகும். இஃது அவர்களின் பிற்கால விசுவாசத்திற்கு அடிப்படைக் கொள்கையாக விளங்கியது. இந்த அடிப்படை நிகழ்ச்சி பற்றிய பல மூலங்களும் ஒத்துப் போகின்றன; அதற்கு அணியும் செய்கின்றன. சான்றாக, நாணல் கடலைக் கடந்த நிகழ்ச்சியுரையில் வீரகாவியப்பாணி தெளிவாகத் தெரிகிறது. நாணல் கடலைக்கடந்து, ஓடிப்போகும் இஸ்ராயேலர்களுக்கு இடப்புறமும் வலப்புறமும் தண்ணீர் சுவராக நின்றது என்பது குறிக்கத் தக்கது. யாத்திரை நூலின் பதிப்பாசிரியர் தனது மூலங்களைப் பின்னுகிற முறையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வருஞ் செயலில் எலோகிம் பாரம்பரியம் இறைவனின் தூதரையும் (14:19), குருக்கள் பாரம்பரியம் மோசேயின் தடியையும் (14:16), யாவே பாரம்பரியம் இறைவனின் இடையீட்டையும் பயன்படுத்துகின்றன.

இந்நிகழ்ச்சியில் இயற்கை நிகழ்ச்சிகளை இறைவனது அருள்பாலிப்பு பயன்படுத்தியுள்ளது என்று நவீன ஆசிரியர்கள் பொதுவாக ஏற்றுக் கொள்வர். வரலாற்றில் இஃது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியன்று. பழைய இலத்தீன் இலக்கிய மூலங்களிலிருந்து, காற்று உப்பங்கழி நீரைப் பின்புறம் அடித்துப் போகச் செய்தது என்றும், இது புதிய கார்த்தேசைக் கைப்பற்ற சிப்பியோவுக்கு உதவியது என்றும் அறிகிறோம்.

நாணல் கடலைக் கடந்த நிகழ்ச்சியில் காற்றின் பாகத்தை விவிலிய வாசகமே எடுத்துக்கூறுகிறது (14:21). வாதைகளைப் பற்றி முன்கூறியது போல், இறைவனது மகிமையை எடுத்துக்காட்டவும், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களான இஸ்ராயேலின் தனிச்சிறப்பை எடுத்துக்காட்டவும் இயற்கை நிகழ்ச்சிகளை இவ்வாறு வீர காவியப் பாணியில் விவிலிய ஆசிரியர் விவரிக்கிறார் எனலாம்.

பாஸ்கா விழா, இஸ்ராயேல் அடைந்த வரலாற்று விடுதலையை நினைவு கூர்ந்தது. இவ்விழாவின் வழிபாட்டுச் சடங்கின் போது யாத்திரை விவரிப்பு வாசிக்கப்பட்டது. ஆகவே, பாஸ்கா விழா நிகழ்ச்சியுரை முதலாவது ஒரு வழிபாட்டுச் சடங்கு நிகழ்ச்சியுரையாகும் என்று பலரும் இப்போது ஏற்றுக் கொள்வர். இத்தகைய வழிபாட்டு விழாக்களின் நோக்கம் இறைவனை மகிமைப்படுத்துதலாகும். எனவே, மேற்காசிய மக்களது மனப்போக்குடைய ஆசிரியர் வரலாற்று நிகழ்ச்சிகளை மட்டும் கூறவில்லை, அவற்றை வீரகாவியப் பாணியில் அணிசெய்து கூறுகிறார். இதைக் கண்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை. கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் புனித பவுல் இந்நிகழ்ச்சியைத் திருமுழுக்கின் முன் எடுத்துக் காட்டாகக் காண்கிறார். திருமுழுக்கில் கிறிஸ்தவன் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைகிறான்.

13) எகிப்தியர் இஸ்ராயேலரைத் துரத்துதல்: எபிரேயர் தங்களுடைய இறைவனுக்குப் பலியிடப் பாலைவனம் வரை மட்டும் போகவில்லை; எகிப்தை விட்டு முழுவதும் ஓடி விடப் போகிறார்கள் என்று திடீரென்று உணர்ந்த எகிப்தியர்கள் இஸ்ராயேலரைத் துரத்துகின்றனர். தங்களுக்குப் பெரிதும் பயன்பட்ட அடிமை ஆற்றலை எப்படி இழப்பது? இதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது ஆகையால், இஸ்

ராயேலரைத் துரத்திப் போகும்படி இரண்டாம் இரமசேசு தனது வீரர்களை ஏவுகின்றான். இறைநோக்கோடு பார்க்கும்போது இந்நிகழ்ச்சிக்கு வேறொரு பொருள் அளிக்கலாம். இறைவனின் அருள்பாலிப்பில், இறைவன் தம் மக்கள் மேல் கொண்டுள்ள அக்கறையை அவர்களுக்கு உறுதியாக உணர்த்தவும், அவர்களுடைய எதிரிகளுக்கு இறைவனது ஆற்றலை எண்பிக்கவும் இந்நிகழ்ச்சி பயன்படுகிறது (14:4). இரவின் இருட்டில் எகிப்தியர்கள் நாணல் கடலுக்குள் பாய்ந்து சென்று இஸ்ராயேலரைத் துரத்தினர். இது மூன்றாம் இராக்காவல் நேரத்தில், அதாவது, காலை 2 முதல் 6 மணிவரையுள்ள காலத்தில் நடந்திருக்கலாம். மீளவும் எகிப்தியரை அழிக்க இறை அருள்பாலிப்பு இயற்கை நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துகிறது என்று கூறலாம். தண்ணீரை அடித்துச் சென்ற காற்று அடங்கியவுடன் நாணல் கடலில் நீர் மீண்டும் நிரம்பி எகிப்தியர்களுடைய தேர்களைச் சேற்றில் புதைத்தது எனலாம். ''ஒருவரும் தப்பவில்லை'' (14:28) என்ற சொற்றொடர் எபிரேய வீரகாவிய அணிச்சுவையைக் கொண்டுள்ளது எனலாம். சங் 136:15-இல் இது கட்டிக்காட்டப்பட்டாலும், இதில் பார்வோன் மடிந்தான் என்று எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், விவிலியத்துக்குப் புறம்பான மூலங்களிலிருந்து இரண்டாம் இரமசேசு கி.மு. 1224 வரை ஆட்சி செய்தான் எனத் தெரிகிறது. இக்காலத்திற்குள் உறுதி அளிக்கப்பட்ட நாட்டில் இஸ்ராயேலர் நன்றாக நிலை பெற்றுவிட்டனர் என்று கருத இடம் இருக்கிறது.

இஸ்ராயேலர் சார்பாக தாம் தனிப்பட்ட விதத்தில் இடையீடு செய்து காத்து வருவதை அம்மக்கள் உணரச் செய்ய இறைவன் விரும்பினார் என்பது இந்நிகழ்ச்சியின் சிறப்பாகும். இதற்குப் பல பழைய ஏற்பாட்டு வாசகங்கள் சான்று பகர்கின்றன. அவற்றில் சில: உப 26:5-8; 1 அர 8:16. 21.51.53; எரே 2:6; ஓசே 2:15; 11:1; ஆமோ 2:10; 3:1; மீக் 6:4; சங் 78:11-14; 136:10-15; இப்பெரும் நிகழ்ச்சியைப் பற்றிய பழங்கால இலக்கிய நினைவுச் சின்னம் மோசேயின் பாடலாகும் அல்லது சில சமயம் கூறப்படுவதுபோல் மிரியாமின் பாடலாகும். இந்த வெற்றிப் பாடலில் காணப்படும் கவிநயமும், உற்சாகக் கொந்தளிப்பும், மனவெழுச்சியும், இப்பாடல் நினைவுகூரும் நிகழ்ச்சியின் சிறப்புக்குப் பொருந்தியதே. ''ஆண்டவருக்குப் பாட்டுப் பாடுவோம். ஏனெனில், அவர் பெரும் புகழோடு வெற்றியில் சிறந்தார். குதிரையையும் அதன்மேல் ஏறியிருந்த வீரனையும் கடலிலே வீழ்த்தினார்'' (யாத் 15:1). தாம் அருஞ்செயல் புரிந்து தம் மக்களைக் காப்பாற்றும் இறைவன் என்பதை யாவே மெய்ப்பித்து விட்டார். தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். இம்மக்களை ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக மாற்றியமைக்க இவர்களைச் சீனாய் மலைக்கு இட்டுச் செல்லவிருக்கிறார். இச்சூழ்நிலையில் இஸ்ராயேலர் சீனாய்த் தீபகற்பத்திற்குள் நுழைகின்றனர். இப்பகுதி முக்கோண வடிவமானது. தெற்கு வடக்கில் 420 கி.மீ. நீளமும் வட பகுதியில் 240 கி.மீ. அகலமும் உடையது. துரத்துவார் யாருமின்றி இஸ்ராயேலர் பாலைவனப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

14) சீனாய்மலை நோக்கி: நாணல் கடலை வியத்தகு முறையில் கடந்தபின், எகிப்திலிருந்து விடுதலை அடைந்த இம்மக்களைத் திருவெளிப்பாடுகளின் மலையாகிய இறைவன் மலைக்கு இட்டுச் செல்வது மோசேயின் பெரும் கடமையாக இருந்தது. இப்பயணத்தின் சிறப்புப்பெற்ற இடங்கள் யாத் 15:22-க்குப்பின் தரப்படுகின்றன. ஆனால், இவ்விடங்களைத் தெளிவாக வரையறுத்துச் சுட்டிக் காட்டுவது கடினம். மோசே தன் மக்களைச் செங்கடலை ஒட்டிய வணிக வழியில் தெற்கு நோக்கி நடத்திச் சென்றார். சூர் என்ற ஆள் நடமாட்டமில்லாத பாலைவன வழியாக மூன்று நாள் பயணம் செய்தபின், மாரா என்ற பெயருடைய நீரூற்றுக்கு வந்தடைந்தனர். மாரா என்பது எபிரேயத்தில் கசப்பு என்று பொருள்படும். இந்த இடம் இருந்தி

ருக்கக்கூடியதாக இரு இடங்களை இப்போது சுட்டிக்காட்டுவர். ஓர் இடம் மோசேயின் கிணறு எனப்படும் அயின்மூசாவாகும். இது நாணல் கடலைக் கடந்த இடத்திலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த இடத்தில் இன்றும் நீர் கசப்பாய் உள்ளது. மற்றொரு இடம் அயின் ஹவாரா என்பர். இது நாணல் கடலைக் கடந்த இடத்திலிருந்து 64 கி.மீ. தொலைவில் உள்ளது; வரிசையான கிணறுகளைக் கொண்டது. மாரா என்ற இடத்தில் யாவேயின் கட்டளைப்படி ஒரு மரத்தைக் கிணற்றில் போட்டு கசப்பு நீரைக் குடிநீராக மாற்றினார் மோசே.

மாராவிலிருந்து புறப்பட்டு எலிம் என்ற பாலைவனச்சோலைக்கு வந்தனர் இஸ்ராயேலர். இங்குப் பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது ஈச்சமரங்களும் இருந்ததாகத் தெரிகிறது. இவ்விடம் காரான்டெல் ஓடையோடு ஒத்துப்போகிறது. எலிமிலிருந்து புறப்பட்டு, சின் என்னும் பாலைவனம் வழியாகச் சென்று, எலிமிலிருந்து 75 கல் தொலைவிலுள்ள இரபிதிம் என்ற இடத்தை அடைந்தனர். அங்கே அமலேக்கியர் எபிரேயர்களை எதிர்த்துப் போராடினர். ஆனால், மோசேயின் செப ஆற்றலால் எபிரேயர் பெரிதும் வெற்றி பெற்றனர் (யாத் 17:1தொ). இங்கு மோசே மாமன் இத்திரோவைச் சந்திக்கிறார். இத்திரோவின் அறிவுரைப்படி எபிரேயர்களிடையே நடுவர்கள் நியமிக்கப்படுகின்றனர் (18:1தொ). நாம் இவ்விடங்களைப் பாலைவனம் என்று கூறும்போது அங்கு ஒன்றுமே முளைக்கவில்லை என்று கருதக்கூடாது. இவை பெரும்பாலும் புல் வெளிகளாகும். மழைக் காலத்தில் ஆடுமாடுகளுக்குப் போதிய புல் இங்குக் கிடைத்தது. ஆடு மாடுகளிலிருந்து பாலும், வெண்ணெயும், இறைச்சியும் கிடைத்தாலும் வறட்சியான காலத்தில் இவை போதிய அளவு கிடைக்காது. இவ்விடங்களில் தாகமும் பசியும் இயற்கையான பகைவர்களாகும். இப்படிப்பட்ட நிலையில் எபிரேயர்கள் உணவுப் பொருள்கள் மிகுதியாகக் கிடைத்த அடிமை வாழ்வுக் காலத்தை எண்ணி ஏங்கியதிலும், மோசேக்கும் யாவேக்கும் எதிராக முணுமுணுப்பதிலும் வியப்பில்லை. அருஞ்செயல் புரிந்து இவர்களுக்கு விடுதலை அளித்த யாவே, மீண்டும் அருஞ்செயல் புரிந்து, குடிக்கப் பாறையிலிருந்து நீர் அளிக்கிறார் (யாத் 17:6). காடைக் கூட்டங்களை அனுப்பி ஊன் அளிக்கிறார் (யாத் 16:3). மன்னாவை அன்றாட உணவாக அளிக்கிறார் (16:14). இந்நூலில் முன்வந்த அருஞ்செயல்களுக்கு விளக்கம் அளித்தது போல் இவ்வருஞ்செயல்களுக்கும் விளக்கம் அளிக்கலாம். இயற்கை நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தி யாவே எபிரேயர்களுக்கு உணவு அளிக்கிறார். அவை நிகழும் காலமும் சூழ்நிலையும் இறைவனின் ஆற்றலையும் மகிமையையும் எபிரேயர்களுக்கு எடுத்துக்காட்டுகின்றன.

15) சீனாய் மலை: எகிப்திலிருந்து புறப்பட்ட மூன்றாவது திங்களில், இஸ்ராயேலர்கள் இறைவனின் மலையை அடைந்தனர் (யாத் 19:1-2). இஸ்ராயேல் சமயக் கருத்துப்படி யாவேக்கு உரிய புனிதமலைகள் இரண்டு உண்டு. ஒன்று அவர் தம் பெயரை வெளிப்படுத்திய சீனாய் மலை. மற்றது அவர் குடி கொள்ளும் சீயோன் மலையாகும். இது பழைய ஏற்பாடு முழுவதும் உறுதி கூறும் உண்மையாகும். சீனாய் மலை எங்குள்ளது? இஃது இன்றும் ஒரு பெரும் சிக்கலாகும். ஒரு சிலர், இவ்விடம் சீனாய்த் தீபகற்பத்தின் கிழக்குப் பகுதியில் அக்காபா வளைகுடா அருகில் இருந்திருக்கலாம் என்பர். யாத் 19:16-19-இல் வரும் எரிமலைக் கொதிப்பைச் சுட்டிக்காட்டி, தீபகற்பத்தில் எரிமலைக் கொந்தளிப்பு இருந்ததற்கு அடையாளம் இல்லையாதலால், இவ்விடம் கிழக்குப் பகுதியில் இருந்திருக்க வேண்டும் என்பர். ஆனால், எரிமலைக் கொந்தளிப்புப் பற்றிய குறிப்பு எரிமலையைச் சுட்ட வேண்டியதில்லை. இஃது ஒரு பெரிய மலைப்புயலை விவரிக்கும் செமித்திய மரபு என எடுத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய இலக்கிய மரபுக்குச் சங் 29; 18:8-15-ஐப் பார்க்கலாம்.

வேறு சிலர் காதேசு பாலைவனச் சோலைக்கு அருகிலுள்ளது இந்த இறைவன் மலை என்பர். மேலும் இவர்கள், பாலைவனப் பயணம் ஒரு கவியின் கற்பனை என்றும் கூறுவர். இவர்களின் கூற்றும் காரணங்களும் விவிலியக் கூற்றுக்கு நேர்முரணானதாக இருக்கிறது. இக்கால ஆராய்ச்சிகள், விவிலியக் கூற்றுக்கள் உண்மையானவை, நம்பத்தக்கவை என்று மேலும் மேலும் காட்டுகின்றன.

பெரும்பாலோர் இப்போது மோசேயின் மலை என்ற பொருளோடு அழைக்கப்படும் எபல் மூசா என்பதே இறைவனது மலையாகும் என்பர். இது சீனாய்த் தீபகற்பத்தின் தென் முனையில் உள்ளது. அங்குப் பல சிகரங்கள் உண்டு. விவிலிய வாசகம் *உப 1:2* இவ்விடத்தைச் சுட்டுகிறது. இச்சிகரங்களில் ஒன்று வெளிப்பாடுகளின் மலையாக இருக்க வேண்டும். எபல் மூசாவை அடுத்துள்ள எர்ரஹா என்ற சமவெளி இந்த ஊகத்தை உறுதிப்படுத்துகிறது. இஃது இறைவனது மலையடிவாரத்தில் இஸ்ராயேலர் கூடாரம் அடித்துத் தங்கிய பகுதியோடு (*யாத் 19:2*) ஒத்துப் போகிறது. ஆகவே, சீனாய்த் தீபகற்பத்தின் தென்முனையிலுள்ள மலைதான் சீனாய்மலை என்ற இறைவனது மலையாகும் என்று ஏற்றுக்கொள்ளலாம். சீனாய், ஓரேபு என்ற பெயர்கள் ஒரே மலையைக் குறிக்கின்றன. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றைப் பயன்படுத்தலாம் (*யாத் 3:1; 6:1; 19:11; உப 1:2*). இப்பகுதியில் இஸ்ராயேலர் நெடுநாள் தங்கி ஓய்வெடுத்தனர். இங்கு வேண்டிய நீரூற்றுக்களும் புல்வெளிகளும் இருந்தன. மலையை ஒட்டி அரைவட்ட வடிவமாகச் சமவெளி அமைந்திருந்தது. சமவெளியிலிருந்து திடீரென்று 600 மீட்டர் உயரமுள்ள மலை எழுகிறது. இவ்வியற்கை அமைப்பே நடக்கவிருக்கும் திருவெளிப்பாட்டுக்கு ஆடம்பர மேடை அமைப்பதாய் இருக்கிறது. இங்குதான் இஸ்ராயேலருடன் யாவே உடன்படிக்கை செய்து கொள்கிறார். அதன்படி அவர் அவர்களுடைய இறைவனாகவும், அவர்கள் அவருடைய மக்களாகவும் இருப்பர். இங்குதான் மோசேக்குப் பத்துக் கற்பனைகள் வழங்கப்படுகின்றன.

16) இரத்தத்தில் உடன்படிக்கை: சீனாய் மலையில் நடந்ததாக யாத்திரை நூல் கூறுவனவற்றில் மனிதச் செயல் சிறப்புப் பெறுவதில்லை; இறைவனது செயல் ஒன்றே சிறப்புப் பெறுகிறது. யூத சமயம் எந்த மனித முயற்சியின் விளைவுமன்று; அஃது இறைவனது சொந்த, தன்னுரிமையான, கைம்மாறு கருதாத, இலவசமான செயலின் விளைவாகும்.

இறைவன் செயலே முதன்மை பெறுவதால், மனிதச் செயலர் அகத்தூய்மையால் இறைவனைச் சந்திக்கத் தகுதியுள்ளவராகச் செய்யப்பட வேண்டும். இவ்விதம் மக்களைத் தூய்மைப்படுத்த வேண்டிய சடங்குகளை மோசே அறிக்கையிடுகிறார். மக்கள் தங்களையே புனிதப்படுத்த வேண்டும். தங்களுடைய ஆடைகளைக் கழுவித் தூய்மை செய்ய வேண்டும். மனைவியரோடு கூடாதிருக்க வேண்டும் (*யாத் 19:10-15*). மலையைச் சுற்றி எல்லை குறித்து வைக்கப்பட்டது. அதை மீறிக் கடந்து மலையை அணுகுபவர்கள் சாவுத்தண்டனை பெறுவர். இந்தப் புறத்தூய்மையையும் தயாரிப்பையும் விட, இறைவன் வெளியிட இருக்கும் பெரும் திட்டத்திற்குத் தங்களது உள்ளார்ந்த இசைவைத் தெரிவிக்க வேண்டும்; அறிக்கையிட வேண்டும். ஏனெனில், இறைவன் தமது சித்தப்படி நடக்க வேண்டும் என்று எம்மனிதனையும் கட்டாயப்படுத்துவதில்லை. இறைவன் விடுக்கும் தன்னுரிமையான அழைப்புக்கு இசைந்து பதில் அளிக்க மறுக்கும் மனிதனை, எல்லாம் வல்ல இறைவனே கட்டாயப்படுத்த முடியாது. இறைவனது திட்டம் தெளிவானது; இஸ்ராயேல் மக்களை ''அரச, குருகுலக் கூட்டமாகவும், பரிசுத்த இனமாகவும்'' ஆக்க இறைவன் விரும்புகிறார். ஆனால், மக்களிடமிருந்து முழுமையான இசைவைக் கோருகிறார். மோசே, மக்களின் தலைவர்களையும், மூப்பர்களையும் அழைத்து, அவர்களுக்கு இறைத்திட்டத்தை விளக்குகிறார். இப்புதிய அமைப்பை நிறு

வுவதில், மக்களையும், அரசையும் சார்ந்த யாவும் பரிசுத்த அமைப்பிற்கு உயர்த்தப் படும். சீனாய் மலையில் ஒரு புதிய மக்களினம் மட்டுமன்று, புதியதோர் சமய மக்களினமும் உருவெடுக்கிறது. இந்த இறைத் திட்டத்திற்கு மக்கள் தங்கள் இசைவை விரைந்து தெரிவிக்கின்றனர். ''ஆண்டவர் சொன்னதையெல்லாம் செய்வோம் என்றனர்'' (யாத் 19:8).

இப்படி மக்களது இசைவைப் பெற்ற பின், மூன்றாம் நாள், இறைவன் தமது மகிமை நிறைவோடு மலைமேல் வந்து இறங்கினார் (19:16தொ). புறத்தோற்றத்திற்கு இந்த இறையாற்றல் வெளிப்பாடு, இடி மின்னலுடன் கூடிய மகிமையோடு அச்சமிக்க, ஆற்றல்மிக்க புயலாகத் தோன்றுகிறது. சீனாய்ப் பாலைவனத்தில் வடக்கு நோக்கி அடிக்கும் ஆற்றல்மிக்க புயல் வடிவத்தில் யாவே பல பாடல்களின் தொடக்கத்தில் விவரிக்கப்படுகிறார் (உப 33:2தொ; நீதி 5:4தொ; அப 3:8; சங் 28). இறைவனது தோற்றம் இடியுடன் கூடிய புயல் காற்றுக்குப் பலவிதத்தில் ஒத்திருந்தாலும், இவை யாவும் அவரது திருமுன்னின் புறத்தோற்றங்களேயாகும். இப்புறத் தோற்றங்கள் இறைவனது ஆற்றல்மிக்க மகிமையை மறைத்து நிற்கின்றன. ஆகையால் உலக வரலாற்றில் இறைவனின் மற்ற இடையீடுகளைப் போல, சீனாய் நிகழ்ச்சி முழுவதும் அறிவியல் சார்ந்த விளக்கத்திற்குக் கட்டுப்பட்டதன்று, அதற்கு அப்பாற்பட்டதும் ஆகும். அச்சமூட்டும் புறத்தோற்றங்கள் இறைவெளிப்பாட்டின் அச்சமூட்டும் மறைபொருளை மக்கள் உணர்வதற்கும், இறைவனது திருமுன்னுக்கும் செயலுக்கும் உறுதிப்பாடாகவும் அளிக்கப்பட்டன. மலையில் வெளிப்பட்ட இயற்கை ஆற்றல்கள், இயற்கையின் மேலும் படைப்பின் மேலும் யாவே கொண்டிருந்த எல்லாம் வல்ல ஆற்றலைப் பறைசாற்றுகின்றன. அவரை யாரும், எதுவும் எதிர்க்க முடியாது. யாவும் அவரது பாதுகாப்பில் செயல்படுகின்றன. இத்தகைய வல்லமைமிக்க யாவே இஸ்ராயேலரோடு செய்த உடன்படிக்கையின் பங்காளியாவார். இச்சூழ்நிலையில் தம்முடைய கட்டளைகளுக்கு அவரிடமிருந்து விதி விலக்கற்ற முழுமையான கீழ்ப்படிதலைக் கோருகிறார்.

இவ்வுடன்படிக்கையில் யாவேக்கும் அவருடைய மக்களுக்கும் இடையிலுள்ள நடுவர் மோசே ஆவார். மோசே இறைவனின் தூதுவர். அவரது குரல் வழியாக இறைவனே பேசுகிறார். திடீரென்று இறைவனது குரல் மலையிலிருந்து கேட்டது என்று கற்பனை செய்ய வேண்டியதில்லை. மக்கள் அச்சத்தோடு கேட்ட இறைவனது குரல் இடியும் மின்னலும்தான். மற்றப்படி செய்திகள் யாவும் மோசே வழியாகவே கொடுக்கப்பட்டன. இடி மின்னல் வழியாக இறைவன் தங்களோடு பேச வேண்டாம், மோசே வழியாகப் பேசினால் போதும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றனர் மக்கள்.

இறைவன் அழைப்புக்கு இணங்கி மோசே மேகத்துக்குள் சென்று சட்டத்தைப் பெறுகிறார். கற்பலகையில் எழுதப்பட்டவை மக்களுக்குப் பறைசாற்றப்படுகிறது. மக்கள் அனைவரும் ''ஆண்டவர் திருவுளம் பற்றின எல்லா வாக்கியங்களின்படியும் நடப்போம் என்று ஒரே குரலாய் மறுமொழி சொன்னார்கள்'' (24:3). பின் உடன்படிக்கை நிறைவேறுகிறது. யூதரின் பன்னிரண்டு குலப் பிரிவுகளையும் நினைவுகூரும் விதத்தில் மலையடிவாரத்தில் பன்னிரண்டு நினைவுத் தூண்களை எழுப்பி, அவற்றிடையே பீடத்தைக் கட்டினார் மோசே. அதன் மேல் சமாதானப் பலிகளையும் தகனப் பலிகளையும் செலுத்துகிறார். பலிப்பொருளின் இரத்தத்தில் ஒரு பாதியைப் பலிபீடத்தின் மேல் ஊற்றுகிறார். பின், உடன்படிக்கையின் நூலை எடுத்து மக்கள் கேட்க வாசிக்கிறார். அவர்களும் ஆண்டவர் சொன்னபடியெல்லாம் செய்வோம் என்று தங்களது விருப்பத்தைப் பறை சாற்றுகின்றனர். பின், மோசே மீதி இருந்த பாதி இரத்தத்தை மக்களின் மேல் தெளித்து ''இந்த எல்லா வார்த்தைகளின்

படியும் ஆண்டவர் உங்களுடன் செய்தருளிய உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று கூறினார்'' *(24:8)*. பின் மோசே மூப்பர்களுடன் மலைக்குச் சென்றார். அங்கே யாவேயின் மகிமையை அனைவரும் கண்டனர். பின், யாவேயின் திருமுன் பலியுணவு உண்டனர். இஃதோடு உடன்படிக்கை முடிகிறது. இச்சடங்கில், ஏற்கெனவேயிருந்த வழக்கை மோசே பயன்படுத்துகிறார். இதற்குச் சான்றாக லாபான் யாக்கோபு உடன்படிக்கையை வாசித்தறியலாம் *(ஆதி 31:43 தொ)*. எந்த உடன்படிக்கையின் பிரமாணிக்கத்திற்கும் இறைவனே உத்தரவாதம். ஆகையால், உடன்படிக்கையைப் பலியுணவால் முடிப்பது அக்கால மரபாகும்.

17) மோசே சட்டம்: இச்சட்டத்திற்கும் மோசேக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று சிலர் சாதித்துள்ளனர். இந்நிலை இப்போது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மோசேயே இத்தொகுப்புக்கு மூல காரணம் என்பதை யாரும் இப்போது மறுக்கமாட்டார்கள். அவரது சட்டம் யாவற்றையும் உள்ளடக்கும் தன்மை கொண்டுள்ளது. இறைவனின் நேரடி ஏவுதலின் விளைவாக இச்சட்டத்தின் கீழ்ப் புதியதோர் உலக அமைப்பை நிறுவுகிறார் மோசே. இச்சட்டத்தின் ஊழியத்திற்குத் தமது ஆற்றல் அனைத்தையும் செலவிடுகிறார். அதன் விளைவாக, தம் மக்களின் சமய, சமூக, அரசியல் வாழ்வில் இறைவனது சித்தத்தைப் பறைசாற்றும் தூதுவனாகிறார். எந்த அரசியல் ஆற்றலுமின்றி பெரும் சமய சமூக அமைப்பாளராகிறார். படைபலமின்றி பொதுமக்கள் தலைவராகிறார். குருத்துவப் பட்டமின்றி இறை சேவையை நிறுவுகிறார். இறைவனது பிரசன்னத்தைப் பறைசாற்றுகிறார். அருஞ்செயல்கள் புரிகிறார்; ஆனால், மாயவித்தைக்காரர் அல்லர், அவர்களுக்கு அப்பாற்பட்டவர். இவை யாவும் இஸ்ராயேலின் சமயம், கவனமாய்ப் பாதுகாக்கப்பட்ட எந்தப் பாரம்பரியத்தின் விளைவும் அன்று என்று காட்டுகின்றன; தாம் விரும்பியபடி செயல்படும் இறை ஆவியின் படைப்பாகும். இந்த இறை ஆவி அருஞ்செயல் புரியும் ஆற்றல் பெற்ற பலரைப் பயன்படுத்துகிறது. ஏறுமாறானவற்றை, முரணானவற்றை ஆற்றலுள்ள உயிருள்ள வேலைப்பாடாக இணைக்கிறது. இத்தகைய ஆட்களில் தலைசிறந்தவர் மோசே ஆவார். இவர் இஸ்ராயேலின் சமயத் தொடக்கத்தில் இறைவனது கொடை பெற்றவராகத் திகழ்கிறார். அச்சமயத்தின் அடிப்படை அவரே. அவரின்றி இச்சமயத்தை நினைத்துப் பார்க்க முடியாது.

யூத இனம் இருத்தல் இறைவனது விருப்பத்தை மட்டும் பொருத்ததாகும். ஆகவே, அதன் நாடும் அரசியலும் இறையாட்சித் தன்மையுடையதாகும். இது மோசே சட்டத்தின் தனித்தன்மையை விளக்குகிறது. ஐந்நூலில் வரும் சட்டங்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று தெளிவாக நிறுவப்பட்ட நேரடிச்சட்டம். மற்றது ஐயவாதமுடையது, நிபந்தனையுடையது. பத்துக் கற்பனைகள் முதல் வகையைச் சாந்தனவாகும். இதில் இறைவனது உறுதியான கட்டளைத் தன்மை காணப்படுகிறது. இதில் நிபந்தனைகளுக்கு இடமேயில்லை. பழைய மேற்காசியாவில் இம்மட்டும் தெளிவாக அறுதியிட்டுக் கூறப்படும் சட்டத்தை வேறெங்கும் காணமுடியாது. இறை வெளிப்பாட்டின் பண்புகள் இக்கற்பனைகளில் மிகத் தெளிவாக உள்ளன. இவை மோசே காலத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொண்டால் மட்டும்தான் இவ்வுறுதியையும் இறைத்தன்மையையும் விளக்கமுடியும்.

இதற்கு மாறாக, ஐயவாதமுடைய, நிபந்தனைகளையுடைய சட்டங்களைப் பழைய மேற்காசிய நாடுகளில் காணலாம். சில மாற்றங்களோடு இப்பண்புகளை இஸ்ராயேலின் உடன்படிக்கை நூலில் காணலாம் *(யாத் 20:22-23:23)*. ஏற்கெனவே இருந்த செமித்திக்குச் சட்டங்களை மோசே புதிய முறையில் எடுத்துக்கூறுகிறார் எனலாம். இச்சட்டங்களுக்கு முன்னே இஸ்ராயேலில் ஒரு சட்டமுறை இருந்தது *(யாத் 18:13தொ)*

என்று கூற இடமிருக்கிறது. சீனாய் மலையில் இறைவெளிப்பாட்டின் அடிப்படையில் இச்சட்டங்களைப் புதிய முறையில் மோசே எடுத்துக் கூறுகிறார்.

18) பத்துக் கற்பனைகள்: இவை பற்றி இரு வாசகங்கள் உள்ளன (யாத் 20:1-17; உப 5:6-21). இக்கற்பனைகளை இரு பிரிவாகப் பிரிப்பர். பிலோ ஐந்து கற்பனைகள் அடங்கிய இரு பகுதியாகப் பிரித்தார். சிலர் முதற் கற்பனையை இரு பிரிவாகப் பிரித்து, பெற்றோருக்கு வணக்கம் செய்தலை ஐந்தாம் கற்பனை ஆக்கினர்; பிறர் பொருளைக் கவர்தல் பற்றிய இரு கட்டளைகளையும் ஒன்றாக்கினர். இத்தகைய பிரிவை ஆதித்திருச்சபையும், ஓரிசன் போன்றவர்களும், கிரேக்கத் திருச்சபையும், சில பிரிவினைச் சபைகளும் பின்பற்றின. இலத்தீன் திருச்சபையும், லூத்தரன் சபையும் இறைவனைப் பற்றிய மூன்று கற்பனைகளை ஒரு பிரிவாகவும், அயலாரைப் பற்றிய மற்ற ஏழு கற்பனைகளை ஒரு பிரிவாகவும் பிரித்தனர். இப்பிரிவு புனித அகுஸ்தினார் காலத்திலிருந்து வழக்கிலுள்ளது.

முதல் மூன்று கற்பனைகளும் உடன்படிக்கையின் இறைவனைப் பற்றியதாகும். இதில் சமயத்தின் முதன்மை அழுத்திக் கூறப்படுகிறது. இறைவனை மட்டுமே வழிபட வேண்டும். இஃது எகிப்திலிருந்து விடுதலை அடைந்ததற்கும் உடன்படிக்கையெனும் கொடையைப் பெற்றதற்கும் இஸ்ராயேலர் அளிக்கும் நன்றியறிதலாகும். ஒரே இறைவனை வழிபடும் கட்டளைக்கு, சிலை ஆராதனையைத் தடுக்கும் கட்டளை பாதுகாப்பு அளிக்கிறது. உடன்படிக்கை மக்களின் கதி அவர்களுடைய இறைவழிபாட்டின் தூய்மையைப் பொருத்ததாகும். இறைவன் பெயருக்கு வணக்கம் செலுத்துதல், ஓய்வு நாளைக் கடைப்பிடித்தல் ஆகியன உடன்படிக்கை இறைவனுக்குக் காட்டும் அன்புமிக்க மரியாதையும் ஆராதனையும் ஆகும்; அவருக்குக் காட்டும் பிரமாணிக்கமாகும்.

இரண்டாம் பகுதி பெற்றோருக்கு மரியாதை காட்ட வேண்டும். ஒவ்வொருவருக்கும் குடும்ப உணர்வு இருக்க வேண்டும். கொலை, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி, பிறர்பொருளைக் கவர்தல் போன்றவை தெளிவாகத் தடைசெய்யப்படுகின்றன.

எதிர்மறையான வாக்கிய அமைப்பு நேர்முறையான பொருளை அழுத்திக் கூறவே பயன்படுகிறது. உடன்படிக்கையின் கீழ் நன்றியோடு வாழ்ந்து, அக்கொடைக்கேற்ப வாழ்க்கையை அமைத்தலும் இந்த நேர்முறையான பொருள். இவை வெறுமனே புறச்சட்டங்களை மட்டும் கூறவில்லை. அகத்தூய்மையில் அக்கறை கொள்கிறது. இவை ஒரு மனித ஒழுக்க அமைப்பைத் தருகின்றன. பத்துக் கற்பனைகள் இறைமக்கள் எல்லாருக்கும் எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் உரியதாகும். யாவே, ஓர் இனத்தாருடைய கடவுள் மட்டும் அல்லர். அதுபோல் அவரது சட்டமும் எல்லா இன எல்லைகளையும் கடந்தது. முழு உலக ஒழுக்க அமைப்பிலும் நிறைந்து நிற்கிறது. உலக இலக்கிய முழுவதிலும் இதற்கு ஒத்த ஒழுக்கச் சட்டத்தைப் பார்ப்பது அரிது.

19) உடன்படிக்கை நூல் (யாத் 20:22-23:23): இப்பகுதி, இன்னும் முழுவதும் ஒழுங்கு முறை செய்யப்படாத மக்களிடையே, பெரும்பாலும் ஆயர் வாழ்க்கையும் மனப்போக்குமுடைய மக்களிடையே நிலவ வேண்டிய சமூக உறவைத் திட்டம் செய்கிறது. இத்தகைய சட்டங்கள் மற்ற செமித்திக்கு இனத்தாரிடையேயுமுண்டு. இவை நிபந்தனைகளோடு கூடியவை. இப்படி நடந்தால், இந்தத் தீர்ப்பு வேண்டும் என்ற வாய்பாட்டோடு இச்சட்டங்கள் தொடங்குகின்றன. இச்சட்டங்களில் ஒரு மென்மையான மனிதத்தன்மை உண்டு. ஏழைகளும் துன்பப்படுவோரும், அன்னியரும் சிறப்பான விதத்தில் பாதுகாப்பும் உதவியும் பெறுகின்றனர். அயலாருக்குத் தனிச் சலுகை காட்டப்படுகிறது. அடிமைகள் மீது சிறப்பான அக்கறை காட்டப்படுகிறது.

20) வழிபாட்டுச் சட்டம்: மோசே இஸ்ராயேலின் சமூகத்தை அமைத்தவர் மட்டுமல்லர், அவர்களுடைய யாவே வழிபாட்டையும் ஏற்படுத்தியவர் என்றால் மிகையாகாது. ஏற்கெனவே இருந்திருக்கக்கூடிய வழிபாட்டு மரபுகளைத் தூய்மைப்படுத்தி, சீர்படுத்தி, மாற்றியமைத்து யாவே வழிபாட்டுக்குப் புதியதோர், மேலானதோர் வடிவம் அளிக்கிறார். விலங்குகளைப் பலியிடுவதும், உணவுக்காணிக்கைகளை அளிப்பதும் எல்லாச் செமித்தியர்களுக்கும் பொதுவானதாகும். இவற்றை எடுத்து, யாவேயின் மேல் கொண்டுள்ள விசுவாசம் எனும் உயிர் அளித்து, அவற்றிற்குத் தனிப்பட்ட வடிவமும் பொருளும் அளிக்கிறார் மோசே. இச்செயல் அவரை இறையூக்கம் பெற்ற இறைவாக்குரைஞராக ஆக்குகிறது.

சீனாய் மலையில், மோசே வாக்குறுதிப் பெட்டகமும் ஆசாரக் கூடாரமும் அமைக்கக் கட்டளை பெறுகிறார். இவை பற்றிய நுணுக்கமான கட்டளைகளை யாத்திரைநூல் 25-27-ஆம் அதிகாரங்களில் வாசித்தறியலாம். ஆரோனைத் தலைமையாகக் கொண்ட குருத்துவ அமைப்பு, குருக்களின் திருநிலைப்படுத்தும் சடங்கு, அவர்களுடைய சடங்கு உடைகள் முதலியவை பற்றிய விரிவான கட்டளைகள் யாத் 28-29-ஆம் அதிகாரங்களில் தரப்படுகின்றன. இவை பற்றி லேவியர் ஆகமத்தில் கூறப்படும்.

யாத்திரை நூலில் முதன்மை பெறும் உடன்படிக்கைச் சட்டம் பற்றிய தர்க்கம் இன்றும் உண்டு. பலர் இது சீனாய் மலையில் கொடுக்கப்பட்டது என்பர். வேறு சிலர் கானான் நாட்டுக்குள் நுழையுமுன் அளிக்கப்பட்டது என்பர். பின்னவர்கள் இச்சட்டம் மோசேயின் வேலைப்பாடு அன்று, ஆனால் அவரது மனப்போக்குப்படி அமைக்கப்பட்டது என்பர். ஆனால், பிற்கால இஸ்ராயேலின் விசுவாச வரலாற்றில் சீனாயில் உடன்படிக்கை செய்த இந்தக் காலம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். பிற்காலச் சமயச்சடங்குத் தலைவர்கள், தங்கள் வழிபாட்டின் தொடக்கத்தையும், சட்டத்தொகுப்பையும், விசுவாச அடிப்படையையும், இந்த உடன்படிக்கைக் காலத்திற்கே சுட்டிக் காட்டப் பெரிதும் விரும்பினர்; அப்படியே செய்தனர்.

21) மக்களின் பதிதம்: சீனாய்மலை உடன்படிக்கை ஒரு மாபெரும் திருமறைச் செயலாகும். இத்தகைய திட்டம் மோசே போன்ற ஓர் ஆற்றல் மிக்க தலைவன் இல்லையென்றால் வெற்றியடைந்திருக்க முடியாது. ஆனால், மோசேயின் கருத்துக்களை மக்கள் ஏற்றுத் தங்களுடையதாக்கிக் கொள்ளப் பலகாலம் எடுக்கும். அதற்கிடையே மக்கள் இக்கருத்துக்களை ஏற்க மறுப்பர், எதிர்த்தெழுவர். உடன்படிக்கை நாட்களில் இறைவன் இயற்கையில் காட்டிய வியத்தகு செயல்களால் அச்சம் கொண்ட எதிர்ப்பாளர்கள் மௌனமாய் இருந்திருக்கக்கூடும். அம்மாபெரும் நாட்களுக்குப் பின், மோசே மலைக்குச் சென்று 40 நாட்கள் (அதாவது நீண்ட காலத்திற்கு) தங்கியபோது எதிர்ப்புக்கள் வெளித்தோன்றத் தொடங்கின. ஆரோனைத் தூண்டி, தங்கக்கன்றுக்குட்டி செய்து, அதை வழிபடத் தொடங்கினர் (யாத் 32:1தொ).

இக்கிளர்ச்சியின் பின் நின்ற தீயசக்திகள் யாவை? இச்சடங்கு உண்மையிலேயே யாவேயிடமிருந்து பிரிந்து செல்லும் பதிதமா? வாசகத்திலிருந்து அப்படித் தெரியவில்லை. மாறாக, யாவேயின் பெயரால் விழாக்கொண்டாடுவதாக ஆரோன் அறிக்கையிடுகிறார் (32:5). பின், ஏன் இச்செயல் மோசேயைச் சினம் கொள்ளச் செய்தது? தான் மலையிலிருந்து கொண்டு வந்த சட்டப்பலகையை உடைத்து இந்தப் புதிய வழிபாட்டுச் சடங்கைத் தீயாலும், இரத்தக் களரியாலும் அழிக்க முற்பட்டதே மோசேயின் சினத்தின் உச்சநிலையைக் காட்டுகிறது.

எகிப்திலும் பிற செமித்திக்கு மக்களிடையிலும் எருது அல்லது காளைக்கன்று, தெய்வத்தின் வலிமை, ஆற்றல் மற்றும் பாலினச் செழிப்பையும் குறிக்கும் அடையாளமாகத் தொழப்பட்டது. ஆனால், இஸ்

ராயேவில் இறைவனை அடையாளப் பொருட்களால் தொழுவதில்லை. ஏன், உடன்படிக்கைப் பெட்டக இருக்கை வெறுமையாகவே இருக்கும். வெறுமையான இருக்கையே யாவேயின் திருமுன்னைக் குறித்தது. யாவே அடையாளப் பொருட்களின்றி வழிபடப் பெற்றார்.

அடையாளப் பொருட்கள், தங்களது இயல்பான தன்மைப் பொருளை இறைவனுக்கு அளிக்க வல்லன என்பதால், மோசே அடையாளப் பொருட்களை யாவே வழிபாட்டில் அனுமதிக்கவில்லை, அறவே அகற்றுகிறார். ஆகவே, இவ்வழிபாட்டில் விலங்குகள் சார்ந்த, இயற்கை சார்ந்த எந்த அடையாளப் பொருளையும் நீக்கி, வழிபாட்டைத் தூய்மைப்படுத்துகிறார்; ஓரளவு கொடூரத்துடன் செயல்படவும் செய்கிறார். மக்களிடையே புகுந்து, இறைவனைச் சேர விரும்புகிறவர்கள் தன்னிடம் வருமாறு அழைத்து, தன் இனத்தவராகிய லேவியருடைய துணைகொண்டு, கன்றைத் தொழப் பிடிவாதம் பிடித்த அனைவரையும் கொன்று குவித்தார். இப்படி இரத்தம் சிந்தி மக்களைத் தூய்மைப்படுத்தியதால், அன்றிலிருந்து லேவியர், தலைமுறை தலைமுறையாக வரும் குருத்துவத்தைப் பெறுகின்றனர். இனி, அவர்கள் மோசேயினுடைய மெய்க் காப்பாளர்களாகத் திகழ்வர். யாவேயின் சட்டத்தை மக்களுக்குப் போதிப்பதில் மோசேக்கு ஆற்றல்மிக்க துணையாளர்களாக விளங்குவர்.

கன்றுக்குட்டி வழிபாட்டில் யாவே வழிபாட்டை ஏற்கப் போதிய மனவளர்ச்சியடையாத மக்களையும், அவர்களது எதிர்ப்பையும் காண்கிறோம். மோசே இதைக் கொடூரமான செயல்களால் அடக்குகிறார். யாவே இறைத்தன்மையின் புனிதத்தையும் தூய்மையையும் காக்கின்றார். மோசேயை எரியும் புதரிலிருந்து அழைத்த இறைவன், எந்த உருவத்துள்ளும் அடங்குபவரல்லர்; எந்த உருவமாகவும் ஆக்கப்படக் கூடியவர் அல்லர். அவருக்கு அளிக்கப்பட்ட இந்தக் கன்றுக்குட்டி உருவம் அவரைப் பிற தேவதைகளில் ஒருவராக ஆக்கியிருக்கும். அவரோ தனித்தன்மையானவர், தாமானவர், எந்த உலகப்பொருட்களோடும் ஒப்புமை உடையவர் அல்லர்; அவற்றிலிருந்து முற்றிலும் வேறானவர். அவரது மேன்மையை, மகிமையை எந்த மனித உருவத்தாலும் அறிய முடியாது, புரிய முடியாது, உணரமுடியாது. இப்படிப்பட்ட இறைவனை மோசே மௌனமிக்க வணக்கத்தோடு வழிபடுகிறார்; மக்களையும் வழிபடச் செய்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மோசேக்கும் ஆரோனுக்கும் இடையேயுள்ள எதிர்முரண், உண்மைத் தலைமைக்கும் போலித் தலைமைக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டுகிறது. ஆரோன் தானாக எதுவும் செய்யாமல் மக்களுடைய உணர்ச்சிகளைப் பின்பற்றுகிறார். உருவம் செய்வதில் ஒத்துழைக்கிறார். மோசேயின் செயலோ முற்றிலும் வேறுபட்டது. தன் சக மக்கள்பாலுள்ள அன்பால் உந்தப்பட்டு, சாவை ஏற்கவும் தயாராகி, மேன்மை, நீதி, உண்மை ஆகியவை சிக்கலுக்குரியவையாகும்போது, தம் மக்களையே எதிர்க்கிறார். இறைவன் விருப்பத்திற்கு மட்டுமே பணிகிறார். இவ்விதம் போராடுவதால்தான் தம் மாபெரும் கடவுளாகிய யாவேயின் தகுதிமிக்க கருவியாகிறார். இவ்வழியில்தான் அவர் உண்மையான தலைவர் ஆகிறார். இந்தக் கன்றுக்குட்டி வழிபாட்டால், புதிதாகப் பிறந்து, வளர்ந்து வந்த ஒரே இறைவன் கோட்பாடும் வழிபாடும், பிறக்கும்போதே அழிந்திருக்கும். வெளிப்போதல் என்ற அருஞ்செயல் வழியாக இறைவனே ஏற்படுத்திய புதிய மாபெரும் அடிப்படையும் ஒன்றுமில்லாது போயிருக்கும். ஆனால் ஆபத்துக்கள் யாதாயினும், சீனாயில் தொடங்கிய செயல் எக்காலத்துக்கும் நிலையாக நீடித்திருக்கும் செயலாகவும் மாறியது என்பதும், சீனாயில் தொடங்கிய இந்த ஒரே இறைவன்கோட்பாடு உலகமனைத்தையும் வெல்ல முன்னேறுகிறது என்பதும் முதலில் இறைவனது அருஞ்செயலாகும்; அடுத்து மோசேயின் தலைமை, முன்னோக்கு ஆகியவற்றின் விளைவாகும். இதில் உண்மையி

லேயே மோசே ஒரு சமயத்தைத் தொடங்கும் பெரும் தலைவராகத் திகழ்கிறார்.

22) உடன்படிக்கை செயல்படுதல்: கன்றுக்குட்டி வழிபாடு கடுமையாக அடக்கப்பட்ட பின், மோசே புதிய வழிபாட்டு முறையை அமைக்க முயல்கிறார். பெட்டகம் கட்டப்படுகிறது. அதற்குரிய அணிகள் எல்லாம் செய்யப்படுகின்றன. குருக்களின் சடங்கு ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன (யாக் 35-40). பலிகள், மற்ற வழிபாட்டு முறைகள் பற்றி லேவியர் ஆகமத்தில் தொடர்ந்து காண்க. இஸ்ராயேலர் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகள் எண்ணாகமத்தில் தொடர்ந்து கூறப்படும்.

6. இறையியல்: தேர்ந்தெடுத்தல், விடுதலை, உடன்படிக்கைகள் அடங்கிய ஒரு தொகுப்பாகும் யாத்திரை. இது பழைய ஏற்பாட்டுச் சமயத்தின் சிறப்பான, முதன்மையான சத்தியமாகும். இந்த யாத்திரை நிகழ்ச்சியின்றி, இஸ்ராயேலின் சமயத்தையும்,பிற்காலச் சமய, அரசியல், சமூக அமைப்பையும், புரிந்து கொள்ள முடியாது. புதிய ஏற்பாட்டுக்கு இறைமகன் மனு உருவெடுத்தது எப்படியோ, அப்படிப்பட்டது பழைய ஏற்பாட்டுக்கு இந்த யாத்திரை நிகழ்ச்சி. இஸ்ராயேலர் தனிச் சிறப்புடன் தேர்ந்தெடுக்கப்படுதல், எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைதல், யாவேயுடன் செய்து கொண்ட தனிச்சிறப்பான உடன்படிக்கை ஆகிய அடிப்படை வரலாற்று உண்மைகளுக்கு வலுவான சான்றுகள் கூறப்படுகின்றன. ஏன், உண்மையிலேயே, பழைய இஸ்ராயேலர் ஒரு சமயச் சமூகக் குழுவாயிருப்பதற்கும் இஃது அடிப்படையாகும். இவ்வுண்மைகளை எடுத்துக்கூற விவிலிய ஆசிரியர் பயன்படுத்தும் இலக்கிய வடிவம் வரலாறு பற்றிய பல விளக்கவுரையாகும். அதில் வீர காவியப்பாணி தெளிவாகக் காணப்படுகிறது. ஆகையால், காட்சிகளையும் உருவங்களையும் நேரடிச்சாட்சிகள் எடுத்துக் கூறுவதாகப் பொருள் கொள்ளக்கூடாது. இப்படி வீர காவியப் பாணியில் அழகு செய்து, நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுவதற்கு இரு நோக்கங்கள் உண்டு. ஒன்று இஸ்ராயேலின் இறைவனாகிய யாவேயையும் அவரின் வல்லமையையும் மேன்மையையும் உயர்த்திக் கூறுவது. மற்றது இறைவன் தம் மக்களாகத் தேர்ந்தெடுத்த இஸ்ராயேலின் அழைப்பின் மேன்மையை உயர்த்திக் கூறுவதாகும்.

யாத்திரை நிகழ்ச்சியின் சிறப்பை நாம் மிகைப்படுத்திக் கூறமுடியாது. யாவே இஸ்ராயேலரைத் தேர்ந்தெடுத்தது ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். "உலகிலுள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களைத்தான் நாம் அறிந்து கொண்டோம்" (ஆமோ 3:2). இத்தேர்வின் விளைவாக இஸ்ராயேலர் பல நன்மைகளைப் பெற்றனர். அவற்றில் எகிப்திலிருந்து விடுதலை அடைந்தது முதலாவதாகும். இதை இறைவாக்குரைஞரும், சங்கீத ஆசிரியரும் மீதூர்ந்த பற்றுடன் நினைவு கூர்கின்றனர் (ஆமோ 2:10; சங் 8:10). உடன்படிக்கை மற்ற நன்மைகளைவிடத் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். அதன் விளைவாக யாவேக்கும் இஸ்ராயேலர்களுக்கும் இடையே நெருங்கிய உறவு ஏற்படுகிறது. இஸ்ராயேலர் சிறப்பு வாய்ந்த உரிமை பெறுகின்றனர்; இறைவனின் தனி உடைமையாகின்றனர்; அரசத் திருக்கூட்டமாகின்றனர்; பரிசுத்த குலமாகின்றனர்.

இந்நூலில் காணப்படும் சட்டப் பொருள்கள், சிறப்பாகப் பத்துக்கற்பனைகள், உடன்படிக்கைச் சட்டம் ஆகியவை, பெரிய இறையியல் சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தவை. பத்துக் கற்பனைகளில் நான்கிலிருந்து பத்து வரை உள்ள கற்பனைகள் இயற்கைச் சட்டத்திலிருந்தே எழுகின்றன. இவை முற்காலத்துச் செமித்திக்குச் சட்டங்களில் காணப்படுகின்றன. ஆயினும், யாத்திரை நூல் இவற்றைப் புதிய முறையில் அணுகுகிறது. பழைய சட்டங்களில் இக்கட்டளைகளை மீறுவது அயலானுக்கு மாறாகச் செய்யப்பட்ட குற்றமாகக் கருதப்பட்டது; ஆனால், யாத்திரை நூலில் இறைவனுக்கு மாறாகச் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. மேலும், பத்துக்கற்பனை

ஒரே இறைவன் பற்றிய மறை உண்மையை யும், அவரை மட்டுமே வணங்கும் கடமை யையும் அழுத்திக் கூறுகிறது. இந்நூலில் வரும் வழிபாட்டுச் சடங்குச் சட்டங்கள், இஸ்ராயேலின் பிற்காலத்தில் வழிபாட்டு வளர்ச்சிக்கு அடிகோலுகின்றன.

7. யாத்திரை நூல் புதிய ஏற்பாடு ஒப்பியல்: யாத்திரை நூல் ஒப்பியல் அல்லது எடுத்துக்காட்டியல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு மற்றும் திருச்சபை இலக்கியம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. இதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம். ஒரு சிலவற்றை மட்டுமே இங்குச் சுட்டிக் காட்டுவோம்.

கிறிஸ்து காலத்திய யூத இலக்கியங்கள் இறைவாக்குரைஞர் மரபைப் பின்பற்றி, மீட்பின் காலத்தை யாத்திரை நூலின் மொழியில் விவரிக்கின்றன. மோசே மெசியாவை அடையாளமாகக் குறிக்கிறார். யாத்திரைக் காலத்தில் மன்னாவாலும், உயிரூற்றாலும் மக்கள் உணவளிக்கப்பட்டது போல், மெசியாவின் காலத்திலும் இஸ்ராயேலர் உண்பிக்கப் பெறுவர். பாஸ்காவைப் போல் மீட்பும் இளவேனிற் காலத்தில் நிகழும்.

யாத்திரையில் அடையாளமாகக் குறிக்கப்பட்டவையெல்லாம் கிறிஸ்துவின் வாழ்வில் நிறைவேறுவதாகக் காட்டுகிறது புதிய ஏற்பாடு. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு மத்தேயு எழுதிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியாகும். மத்தேயுவுக்கு இயேசு கிறிஸ்துவே உண்மையான, புதிய இஸ்ராயேல். அவரே புதிய மோசே. ஓசே, முதல் யாத்திரையைச் சுட்டிக்காட்டுவது (ஓசே 11:1) மத்தேயுவில் கிறிஸ்து எகிப்திலிருந்து திரும்பிவந்ததற்குப் பொருந்த எடுத்துக் கூறப்படுகிறது (மத் 2:15). ''எகிப்திலிருந்து என் மகனை அழைத்தேன்''. முதல் இஸ்ராயேல் நாணல் கடலில் திருமுழுக்குப் பெற்றது (யாத் 14); புதிய இஸ்ராயேலாகிய கிறிஸ்து யோர்தான் ஆற்றுநீரில் திருமுழுக்குப் பெறுகிறார் (மத் 3:13-17). யாத்திரைக் காலத்தில் இஸ்ராயேலர் பாலைவனத்தில் 40 ஆண்டுகளுக்குத் தேர்வுக்கு உள்ளாயினர் (யாத்திரை நூல் எண்ணாகமம்). சீனாய் மலையில் 40 நாட்களுக்கு மோசே தங்கினார் (யாத் 24:18). இவற்றை நினைவுகூரும் விதமாகக் கிறிஸ்து 40 நாட்களுக்குப் பாலைவனத்தில் தங்கினார், சோதிக்கப்பட்டார் (மத் 4:1-11). யாத்திரைக் காலத்தில் முதல் மோசே இஸ்ராயேலின் சட்டம் அளிக்கும் பெரும் தலைவராவார். சீனாய் மலையில் பறைசாற்றப்பட்ட சட்டத்தை இஸ்ராயேல் மக்களுக்கு அளித்தார் (யாத் 24:3-8). புதிய மோசேயாகிய கிறிஸ்து மலைப்பொழிவில் தமது சட்டத்தைப் புதிய இஸ்ராயேலுக்கு அளிக்கிறார் (மத் 5-7). நற்செய்தியாளருள் மத்தேயு மட்டும் தான் இந்நிகழ்ச்சியில் மலையின் உருவகத்தை அழுத்திக் கூறுகிறார். பத்துக் கற்பனைகளுக்கும் புதிய சட்டத்திற்குமுள்ள இணைத்தன்மை எடுத்துக் காட்டப்படுகிறது (யாத் 23:13-மத் 5:21; யாத் 20:14-மத் 5:27). மோசே கடலுக்குக் கட்டளையிடுகிறார்; கடலைக் கடந்து செல்கிறார். கிறிஸ்து காற்றுக்கும் அலைகளுக்கும் கட்டளையிட்டு, கடலின்மேல் நடக்கிறார் (மத் 8:23-27). பாலைவனத்தில் மோசே மன்னாவை அளித்ததுபோல், இயேசு மக்களுக்கு அப்பம் அளிக்கிறார் (மத் 14:13-21). அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை பன்னிரண்டு. இஃது இயேசு அமைத்த புதிய குழுவை உண்மையான இஸ்ராயேல் என்று காட்டுகிறது. ஒளியுருவாதல் நிகழ்ச்சியிலும் (மத் 17:1-8) மோசேக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள இணைத்தன்மை காட்டப்படுகிறது. மோசேயே கிறிஸ்துவோடு உரையாடுகிறார். முதல் மோசேயை அக்காலத்தில் சூழ்ந்த ஒளிரும் மேகம் (யாத் 24:15-18) இப்போது புதிய மோசேயான கிறிஸ்துவின் மேல் இறங்குகிறது (மத் 17:5). மத்தேயு கிறிஸ்துவை மோசேயோடு ஒப்பிடும் போது, கிறிஸ்துவின் திருப்பணியைக் கவனத்தில் கொள்கிறார். மோசே மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்துச் சட்டத்தை அளித்த செயல்களோடு கிறிஸ்துவின் பணியை ஒப்பிடுகிறார்.

ஆனால் யோவான் நோக்கும் விதம் வேறு. இவர் அருட்சாதன நோக்கோடு பார்க்கிறார். இவருக்கு யாத்திரை, கிறிஸ்து என்னும் மறை பொருளின் ஓர் எடுத்துக் காட்டாகும்; நற்செய்தி அதன் நிறைவேறுதலாகும்; அருட்சாதனங்கள் அதன் தொடர்ச்சியாகும். கிறிஸ்துவையும் அவரது வாழ்க்கையையும் யாத்திரைப் பின்னணியில் விவரிக்கிறார். அதன் நிறைவேறுதலாகக் காட்டுகிறார். யோவான் நற்செய்தியின் முன்னுரையில் வரும் வார்த்தையானவரே, பாலைவனத்தில் மக்களிடையே வதிந்த யாவேயின் மகிமையின் உறைவிடமாகிய ''ஷெக்கினா''வாவார் (யாத் 40:36). கிறிஸ்துவே, மக்கள் குணமடைவதற்காக பாலைவனத்தில் உயர்த்தப்பட்ட பாம்பாவார் (யோவா 3:14). அவரே இறைமக்களுக்கு உணவாவார்; அவர்களைக் குணமாக்கவும் வந்த மன்னா (6:31. 34). அவரே கூடாரங்களில் வாழ்ந்த மக்களுக்குப் பாறையிலிருந்து வழிந்தோடிய நீரூற்றாவார் (7:37-38). அவரே மக்களைப் பின்பற்றிய தீத்தூண் (8:12). அவரே உலகின் பாவம் போக்க இரத்தம் சிந்திய பாஸ்காச் செம்மறியாவார் (1:29; 19:36).

அப்போஸ்தலர் பணி, புதிய கிறிஸ்தவச் சமூகத்தைப் பாலைவனத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் சமூகத்தின் நிறைவாக விவரிக்கிறது. ஸ்தேவானது பேருரை மோசே வரலாறு பற்றிய விளக்கமாகும். மோசேக்கு எதிராக யூதர்கள் எதிர்த்தெழுந்தது, கிறிஸ்துவுக்கு எதிராக யூதர்கள் எதிர்த்தெழுதலை முன்னறிவிக்கிறது. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதல் திருமுகம், செங்கடலைக் கடந்ததைத் திருமுழுக்குக்கு ஓர் எடுத்துக் காட்டாகக் காட்டுகிறது. பாறையிலிருந்து வடியும் நீர் நற்கருணைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இவை நமக்கு முன் அடையாளமாக நிகழ்ந்தன (1 கொரி 10:11). கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இரண்டாம் திருமுகம் திருச்சபையில் இறைவன் உள்ளுறைதலை, மோசேக்கு உறுதியளிக்கப்பட்ட இறை உள்ளுறைதலின் நிறைவேறுதலாகக் காட்டுகிறது. பேதுருவின் முதல் திருமுகம், திருமுழுக்கை எகிப்திலிருந்து புதிய வெளிப்போதலாக விவரிக்கிறது (1 பேதுரு 1:13-20; 2:1-10). இப்பகுதியில் ஆழ்ந்த பொருளும் கருத்துச் செறிவும் உள்ளன. இதில் யாத்திரை நிகழ்ச்சிக் கருத்துக்கள் யாவும் இடம் பெறுகின்றன. இவற்றில் சில: ''இடுப்பில் கச்சை கட்டி ஆயத்தமாயிருத்தல்'' (யாத் 12:11), ''எகிப்தின் இறைச்சி நிறைந்த பாத்திரங்களை நிராகரித்தல்'' (16:13), பிற மதத்தினரிடையே கூடாரங்களில் தூங்குதல், அடிமைத்தனத்திலிருந்து விடுதலை (15:13), மாசுமறுவற்ற செம்மறியின் இரத்தம் (15:5), உயிர் தரும் நீரைக் கொண்ட பாறை, தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்குச் சொந்தமான இறை மக்கள் (19:5-6) போன்றவையாகும். ''வஞ்சகம் அனைத்தையும் அகற்றுங்கள்'' என்ற கூற்று 1 கொரி 5:7-8-இன்படி புளியாத அப்பத்தைக் குறிக்கலாம்.

திருவெளிப்பாட்டு நூலில், கிறிஸ்தவர்களின் வரலாறு செம்மறியின் பலியைத் தழுவி நிற்கிறது (திருவெளி 5:12). பன்னிரண்டு கோத்திரத்தாரும் திருச்சபையின் முழுமையைக் குறிக்கின்றனர் (7:4-8). விடுதலை, செங்கடலைக் கடத்தலோடு தெளிவாக ஒப்பிடப்படுகிறது (15:3). இறைவனது வெளிப்பாடானது இடிமுழக்கம், பேரிரைச்சல், மின்னல், நில நடுக்கம், எக்காளத் தொனி ஆகிய சீனாய் நிகழ்ச்சிகளால் முன்னறிவிக்கப்படுகிறது (8:5-7). இறைவனுடைய எதிரிகளுக்கு அளிக்கப்படும் தண்டனைகள் எகிப்தில் நிகழ்ந்த வாதைகளே (8:7-8.12; 9:3; 16:2-10). வெளிப்போதல் கிறிஸ்துவில் நிறைவெய்துகிறது என்று அழுத்திக் கூறப்படுகிறது.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில், கிறிஸ்து மோசேயோடு ஒப்பிடப்பட்டு (எபி 3:3-5) அவரைவிட மேலானவராகக் காட்டப்படுகிறார். சீனாயில் தரப்பட்ட இறை வழிபாடு, ''வானக இறைப் பணியின் வெறும் சாயலும் நிழலுமாகக்'' காட்டப்படுகின்றது (8:5). எரேமியாவால்

முன்னறிவிக்கப்பட்ட புதிய உடன்படிக்கை கிறிஸ்துவால் நிறுவப்பட்ட உடன்படிக்கையில் நிறைவேறுகிறது (8:7.13). இளங் காளைகளின் இரத்தம் ஓர் அடையாளமே; கிறிஸ்துவின் இரத்தமே உண்மையான உடன்படிக்கையின் இரத்தமாகும் (9:12-14). இத்திருமுகம், அணுகக்கூடாத சீனாய் மலையையும் எக்காளத் தொனியையும் சீயோன் மலையோடும் உயிருள்ள கடவுளின் நகரோடும், வானக எருசலேமோடும் எண்ணற்ற தூதரோடும் ஒப்பிட்டு வேறுபடுத்துகிறது (12:19-24).

இவ்வாறு யாத்திரை நிகழ்ச்சிக்கும் புதிய ஏற்பாட்டிற்குமுள்ள ஒப்பியலைக் கூறிக் கொண்டே போகலாம். மேல்தரப்பட்ட வாசக ஒப்புமையைக் கவனத்தோடு பார்க்கும்போது நமது உள்ளத்தில் ஒரு கருத்து ஆழமாகப் பதிகிறது. அது, கிறிஸ்து என்னும் மறைபொருள், மோசே காலத்திய இஸ்ராயேலின் வரலாற்றின் தொடர்ச்சியும், மேம்பாட்டில் அதைவிடச் சிறந்ததும், அதைக் கடந்ததுமாகும் என்று காட்டப் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பெரிதும் விரைகின்றனர் என்பதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் மீட்பில் இறைவன் தமது ஆற்றலை வெளிப்படுத்தினார். ஆனால் மனுகுலம், மற்றொரு ஆன்மீகத் தன்மையுடைய அடிமைத்தனத்தில் மூழ்கியிருந்தது. இறைவன் புதிய மீட்பில் தமது ஆற்றலைக் காட்டுவார். இது பெருமளவில் இருக்கும். இது புதியதோர் உடன்படிக்கையைத் தொடங்கிவைக்கும் என்று இறைவாக்குரைஞர்கள் முன்னுரைத்தனர். இவை யாவும் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுகின்றன என்று காட்டுவதே புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களின் பெரும் பணியாகும், அருஞ்சாதனையாகும். இவர்கள் கருத்துப்படி புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் தற்செயலாக நடந்தவையல்ல; காலவரையறைக்கு உட்பட்டவை அல்ல; இறைவனுடைய நித்திய நோக்கோடு முழுவதும் இணைந்தவையாகும். இறைவன் வெறும். முனைப்பற்ற பணிவைச் கோரவில்லை. மாறாக, விரும்பித் தயாராக, தன்னுரிமையாக அளிக்கும் கீழ்ப்படிதலைக் கோருகிறார். இவ்வாறு இறைத்திட்டம் நிறைவேறுதலின் வரலாற்றினுள்ளே இணைத்தன்மையையும் உள்ளார்ந்த இசைவுத் தன்மையையும் காண்கிறோம். இது நம்மை மலைக்கச் செய்யலாம். ஆனால், அசைக்க முடியாத பாறை என இதில்தான் மனித விசுவாசம் தங்கி நிற்கிறது.

8. முடிவுரை: யாத்திரை நிகழ்ச்சிகள் யூத விசுவாசத்தின் அடிப்படையாகும்; கிறிஸ்தவ விசுவாசத்திலும் சிறப்பிடம் பெறுகின்றன. கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் வாழும் நமக்கு யாத்திரை நிகழ்ச்சிகளின் உள்ளார்ந்த பொருளை உணர்வது அவ்வளவு எளிதான செயலன்று. இதற்குக் காலம் முதல் தடையாக அமைகிறது. மிகப் பழைய இஸ்ராயேலின் பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள், சமூக அமைப்புக்கள் முதலியவை பற்றி நமக்கு அவ்வளவாகத் தெரியாது. யாத்திரை நிகழ்ச்சிகள் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் நடந்திருக்க வேண்டும். மனத்தளவாயினும் நாம் பழங்கால இஸ்ராயேலின் உலகத்திற்குள் புக வேண்டும்; அவர்கள் செவிகளோடு இந்நிகழ்ச்சிகள் பற்றிய உரைகளைக் கேட்க வேண்டும்; அவர்களின் வழிபாட்டில் புகுந்து அவர்களுடைய சமய அனுபவத்தில் பங்கெடுக்க வேண்டும். இப்படிச் செய்வது எளிதன்று. ஆனால் அறிஞர்கள், தொல்பொருளாய்வாளர்கள், ஒத்தமை சமய வரலாற்று ஆசிரியர்கள், விளக்கவுரையாளர்கள் ஆகியோரின் அயரா உழைப்பால் ஓரளவு, காலத்தில் பின்னோக்கிச் செல்ல நம்மால் இயலும்.

யாத்திரை நிகழ்ச்சிகளை உள்ளிருந்து புரிந்துகொள்ள மற்றொரு சிக்கலான தடையுள்ளது. இதை ஆராய்ச்சிகள் மட்டும் நீக்க முடியாது. யாத்திரை நிகழ்ச்சிகளைக் கிறிஸ்தவன் தன் வாழ்வில் இக்காலத்தில், இன்று, இப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளாகப் பார்க்க வேண்டும். இஃது ஒரு சிக்கலாகவே இருக்கக்கூடாது. கிறிஸ்தவ வாழ்வு முழுவதுமே ஒரு பாஸ்கா அல்லது கடந்தேகுதல் மறைபொருளாகும். அஃது

இயேசுவில் நிறைவேறும் புதிய பாஸ்கா நிகழ்ச்சியாகும். தந்தையின் மகிமையில் இருக்கும். ஏற்கெனவே உண்மையான, உறுதியளிக்கப்பட்ட நாட்டில் இயேசு நுழைந்து விட்டார். ஆனால், திருப்பயணி கள் அடங்கிய திருச்சபை தனது யாத்தி ரையை இன்றும் தொடர்ந்து செய்கிறது. பழைய இஸ்ராயேலின் வழிபாடானது பாஸ்கா, உடன்படிக்கை முதலிய யாத்திரை நிகழ்ச்சிகளை நினைவாக்கமாகக் கொண் டாடுவதில் அடங்கியிருந்தது. கிறிஸ்தவ வழிபாடு இம் மறைபொருள்களை நினை வாக்கமாகவே கொண்டாடுகிறது. ஏனெ னில் ஒவ்வொரு நற்கருணை வழிபாடும் புதிய பாஸ்கா நினைவாக்கமாகும்; புதிய உடன்படிக்கையின் புதுப்பித்தலாகும். இதில் நாம், கிறிஸ்து தம் தந்தையிடம் கடந்து செல்லும் நிகழ்ச்சியில், கிறிஸ்து வோடு ஒன்றிக்கிறோம். இதில் சிக்கல் இருக்கக்கூடாது; ஆனால், இருக்கிறது. ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்ட நாட்டை வந்தடைந்து விட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக நம்மையே கருதிக் கொள்ளலாம். இந்தத் திருப்தியும், தன்னிறைவுணர்வும், இறுமாப்பும் உடையவர்களுக்கு யாத்திரை நூல் ஒரு மூடிய நூலாகவே இருக்கும். இஸ்ராயேலர் முணு முணுப்பவர்கள், முறையிடுபவர்கள், பிரமாணிக்கம் தவறு பவர்கள், தங்களுடைய மீட்புக்கு மாறா கவே செயல்படுபவர்கள். இவர்களுக்கு மாறாகச் செயல்பட்டு இறைவன் இவர் களை மீட்க வேண்டியிருந்தது. இவர்கள் விடுதலைக்கு அழைக்கப்பட்டனர். ஆனால், அவ்விடுதலை கொண்டு வரும் பொறுப்பை உணர்ந்தாரில்லை. நாமே இம்மக்கள் என்று நாம் பார்க்க வேண்டும். எவ்விதத்தில் இவர்களின் வாழ்விலிருந்து நமது வாழ்வு வேறுபட்டிருக்கிறது? நாமும் முணுமுணுக்கிறோம். பிரமாணிக்கம் தவறு கிறோம். நமக்கு மாறாகவே செயல்பட்டு, இறைவன் நம்மை மீட்க வேண்டியிருக்கி றது. இன்றும் நமது வாழ்வில் யாத்திரை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பழைய இஸ்ராயேலர்களோடு ஒன்றித்து இந்த யாத் திரை மறைபொருளைக் காணவேண்டும், அனுபவிக்க வேண்டும். அப்போது யாத் திரை நூலின் உண்மைப்பொருளை நாம் உணர முடியும். இல்லையெனில், இந்நூல் கடந்த காலம் பற்றி நல்லதோர் கதை போல் இருக்கும். யாத்திரை மறைபொரு ளையும், மீட்பு வரலாற்றின் தொடர்ச்சியை யும் உய்த்துணர நமது வழிபாடு உதவ வல்லது. விவிலிய நிகழ்ச்சியுரைகளுக்கும் நமது இன்றைய வழிபாட்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. அவற் றின் நினைவாக்கமாகும் நமது வழிபாடு.

விண்ணக அரசி (QUEEN OF HEAVEN)

எரேமியாவின் காலத்தில் யூதாவின் பெண்கள் வழிபட்டது இவ்விண்ணக அரசி யைத்தான். அவர்கள் மாவில் தெய்வங் களின் வடிவங்களைச் செய்து விண்ணர சிக்குப் பானப்படையலோடு அளித்தனர் (எரே 7:18; 44:17-19.25). எருசலேமின் வீழ்ச்சிக்குப் பின் எகிப்தில் அகதிகளாய் இருந்த யூதர்கள் விண்ணரசிக்குத் தூபமும், காணிக்கைகளும் செலுத்தியதை எரேமியா கண்டனம் செய்கிறார். இரண்டாவது குறிப் பின்படி, இவ்வழிபாடு பொருட்செல்வம் பெறும் நோக்கோடு செய்யப்பட்டதாகத் தோன்றுகிறது. இந்த விண்ணரசி காதல், பிள்ளைப்பேறு ஆகியவற்றின் தெய்வமான எகிப்திய இஸ்தாரைக் குறிக்கலாம். இஃது அமர்னா ஏடுகளில், வீனஸ் விடிவெள்ளி யாக அடையாளம் காட்டப்படுகிறது: ''விண்ணகத்தலைவி'' என்று குறிக்கப்படு கிறது. ஆனால், பாலஸ்தீனத்தில் வீனஸ் விடிவெள்ளி ஓர் ஆண் தெய்வம் ஆகும். இஃது ஒரு பிரச்சனையை எழுப்பலாம். கானானிய இனப்பெருக்கத் தேவதையான அஸ்தார்தே அல்லது அஸ்தோரேத்து பெண் தெய்வமாக இருக்கலாம்.

இந்த வழிபாடு மனாசேயால் யூதாவில் அறிமுகம் செய்யப்பட்டது (காண்க. 2 அர 21:3.5). இவ்வழிபாட்டில் பெண்களே அதி கம் ஈடுபட்டதாகத் தெரிகிறது. இது வீடு களில் நடந்தது. யோசியாவின் சீர்திருத்தத் தால் விண்ணக அரசி வழிபாடு உட்பட்ட அன்னிய வழிபாடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன (2 அர 22-23). எரேமியா காலத்து யூதாவின் மக்கள்,

யூதாவுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கு இந்த வழிபாடே காரணம் என்று கருதினர் (எரே 44:17-19).

விண்ணேற்றம் (ASCENSION)

I. உயிர்த்த கிறிஸ்து மாட்சிமையுடன் வானுலகில் வீற்றிருக்கிறார் என்பதை விசுவாசத்தின் மூலம் நாம் அறிகிறோம். இங்குப் புலன் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட மறையுண்மை அடங்கியுள்ளது. இதை ஒலிவ மலையில் அப்போஸ்தலர்கள் தங்கள் தலைவர் தங்களை விட்டு இறைவனிடம் திரும்பிச் சென்றதைக் கண்டது போன்ற ஒரு நிகழ்ச்சிக்குள் வரையறை செய்ய முடியாது. உயிர்த்த கிறிஸ்து எதற்காக, எவ்விதமாக, எப்போது விண்ணேற்றம் அடைந்தார் என்பதைப் பற்றி மறைநூலில் பல குறிப்புகள் பரந்து கிடக்கின்றன. இவை போதகச் செறிவுடையவை. இக்குறிப்புகளிலிருந்து இம்மறை உண்மையின் செம்பொருளை ஒருவாறு அறிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

II. **விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையேயுள்ள வழி:** மக்களின் இயல்பான ஒருமுக நம்பிக்கையின்படி விண்ணகம் தெய்வீகத்தின் இருப்பிடம்; கடவுளையே குறிப்பிடும் ஓர் உருவகம். இதை விவிலியமும் ஏற்றுக் கொள்கிறது. இறைவனின் கால்மனையாகிய பூமி (எசா 66:1) மனிதன் வாழும் இடமாகும் (சங் 115:16; திருவுரை 5:1). மனிதனைச் சந்திப்பதற்கு இறைவன் வானின்று இறங்கி (ஆதி 11:5; யாத் 19:11தொ; மீக் 1:3; சங் 144:5), மீண்டும் வானுலகு ஏகுகிறார் (ஆதி 17:22). மேகம் அவரது வாகனம் (எண் 11:25; சங் 18:10; எசா 19:1). அவர் அனுப்பும் ஆவியும் இவ்வுலகை அடைய இறங்கி வரவேண்டும் (எசா 32:15; மத் 3:16; 1 பேதுரு 1:12). அதேபோல் அவரது வார்த்தை இவ்வுலகிற்கு வந்து தன் செயல்களை முடித்தபின் மீண்டும் வானுலகை அடைகிறார் (எசா 55:10தொ; ஞான 18:15). விண்ணுலகில் இறைவனோடு வதியும் வானதூதர்கள் (1 அர 22:19; யோபு 1:6; தோபி 12:15; மத் 18:10) தங்கள் பணிகளை நிறைவேற்றக் கீழிறங்குகின்றனர் (தானி 4:10; மத் 28:2; லூக் 22:43); பின் விண்ணகம் திரும்புகின்றனர் (நீதி 13:20; தோபி 12:20). இவ்வாறு மேலிருந்து இறங்குவதும் மீண்டும் ஏறிச் செல்வதும் விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையேயுள்ள தொடர்பை நிலை நாட்டுகிறது (ஆதி 28:12; யோவா 1:51).

மனிதன் விண்ணுலகிற்குச் செல்வது தன்னிலையில் முடியாத செயல். விண்ணகம் ஏறுவது பற்றிப் பேசுவது அடைய முடியாத பொருளைத் தேடுவதாகும் (உப 30:12; சங் 139:8; பழ 30:4; பாரூ 3:29). அது மனிதனின் வரம்பு மீறிய அகங்காரமாகும் (ஆதி 11:4; எசா 14:14; எரே 51:53; யோபு 20:6; மத் 11:23). நமது மன்றாட்டுகள் இறைவனை அடைவதும் (தோபி 12:12; சீரா 35:16தொ; அ.ப.10:4), சீனாய் மலைமேல் (யாத் 19:20) அல்லது சீயோன் மலைமேல் (எசா 2:3; 4:5) இறங்கிய இறைவனுடன் அதன்மேல் ஏறிய மனிதன் உரையாடுவதும் பெரும் செயல்களாகும். இவ்விதிகளுக்கு மாறாக ஏனோக்கு (ஆதி 5:24; சீரா 44:16; 49:14), எலியா (2 அர 2:11; சீரா 48:9-12; 1 மக் 2:58) போன்ற தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே தெய்வ வல்லமையால் விண்ணுலகிற்கு நேரடியாக எடுத்துச் செல்லப்படும் சலுகை பெறுகிறார்கள். தானியேல் கண்ட காட்சியில் வானத்தின் மேகங்கள் மீது தொன்மை வாய்ந்தவர் அருகில் மனுமகன் வந்தார் என எழுதப்பட்டுள்ளது (தானி 7:13). இது மீண்டும் அவர் விண்ணேற்படைவார் என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறது. எங்கிருந்து வந்தார் என்பது மறைபொருளாக இல்லை; இங்குக் கூறப்பட்ட மேகங்களோ வாகனமல்ல; ஒருவேளை இறைவன் உறைவிடத்தின் அணிகலனாக இருக்கலாம்.

III. **கிறிஸ்துவின் விண்ணேற்றம்:**

1. விவிலிய அண்டவியல்படி, கிறிஸ்து உயிர்ப்பின் வழியாக இறைவனின் வலப் பக்கத்தில் அமர மகிமைப்படுத்தப்பட்டார் (அ.ப.2:34; உரோ 8:34; எபே 1:20தொ;

1 பேதுரு 3:22; காண்க. 12:35தொ. இணை; 14:62 இணை). அரசராக அங்கே அரியணையில் அமர (திருவெளி 1:5; 3:21; 5:6; 7:17), விண்ணகம் ஏற வேண்டியிருந்தது. கிறிஸ்துவின் வானக மாட்சியை (காண்க. அ.ப. 2:34; மாற் 16:19; 1 பேதுரு 3:22) வெளிப்படுத்துவதே விண்ணேற்றத்தை மறை உண்மையாகப் பறைசாற்றுவதின் முதற்காரணமாகும். இறைவெளிப்பாட்டின் முன்னேற்றத்தாலும் விசுவாசத்தின் வளர்ச்சியாலும் விண்ணேற்றம் ஒரு சரித்திர நிகழ்ச்சியாகவும், இறையியல் கொள்கையாகவும் தனித்தன்மையுடையதாக உருவெடுத்தது.

2. வருகையும் ஏற்றமும்: கிறிஸ்து ஆதி முதல் இருக்கின்றார் என்ற உண்மை ஆதிக் கிறிஸ்தவர்களின் விசுவாசத் தொடக்கத்தில் உள்ளடங்கியதாக இருந்தது. ஆனால், விசுவாசம் வளர வளர நாளடைவில் இவ்வுண்மை வெள்ளிடை மலையென வெளிப்படலாயிற்று. மறைநூலில் காணப்படும் இவ்வுண்மை கிறிஸ்துவின் தொடக்கமின்மையை எண்பிக்கிறது. மண்ணுலகிற்கு வருவதற்கு முன்னால் இயேசு கடவுளுடைய மகனாகவும், வார்த்தையாகவும், ஞானமாகவும் இருந்தார். ஆகையால், அவரது வானக மாட்சிமையானது ஒரு மனிதன் தெய்வீகமானான் எனத் தொடக்க காலக் கிறிஸ்து இயல் குறிப்பது போலன்றி (அ.ப. 2:22-36; 10:36-42), விண்ணிலிருந்த வந்த அவர் மீண்டும் தம் இடத்திற்குத் திரும்பிச் செல்வதைச் சுட்டிக்காட்டுவது ஆகும். அவர் வானகத்திலிருந்து வந்தவர் (யோவா 6:33.38.41தொ.50தொ.58) என்பதையும், மீண்டும் வானுலகை அடைந்தவர் (3:13; 6:62) என்பதையும் யோவான் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார். பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தின் பகுதியை (உரோ 10:6தொ) மேற்கூறிய கருத்தை வலியுறுத்த மேற்கோளாகக் காட்ட முடியாது. ஏனெனில், இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்று இப்பகுதி எடுத்துரைக்கிறதேயன்றி விண்ணேற்றத்தைக் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக, எபேசியர் திருமுகம் (4:9) இயேசு மண்ணுலகின் கீழ்ப்பகுதிக்கு (அல்லது மண்ணுலகிற்கு) இறங்கி, மீண்டும் ஏழு உலகங்களுக்கும் மேலாக ஏறிச் சென்றவர் எனக் கூறுகிறது. பிலிப்பியர் திருமுகத்தில் காணப்படும் புகழ்ப்பாடலும் (பிலி 2:6-11) இயேசுவின் விண்ணேற்றத்தைக் குறிக்கிறது.

3. அனைத்து அதிகாரங்களின் மேல் வெற்றி: கிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்துவதற்கு அவரது விண்ணேற்றத்தை உயிர்ப்பினின்றும், விண்ணக அரியணை ஏறுதலினின்றும் தனியாகப் பிரித்துக் காட்டுவதின் மற்றொரு நோக்கம் அவர் அனைத்து அதிகாரங்களின் மேல் கொண்ட வெற்றியை எடுத்துக் காட்டுவதாகும். கிறிஸ்துவை வானதூதர்களைக் காட்டிலும் குறைவாக மதிப்பிட்ட கொலோசியர்களின் தப்பறைக் கொள்கையைக் கண்டித்து, பவுல் தாம் முன்பே அறிவித்திருந்த உண்மையான இயேசு அனைத்து அதிகாரங்களின் மேல் கொண்டுள்ள வெற்றியை (1 கொரி 15:24) மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார் (கொலோ 2:15). மேலும், இவ்வுலகில் மட்டுமன்று, மறுவுலகிலும் வேறு எப்பெயர் கொண்டவர்க்கும் மேலாகவும் ''கிறிஸ்து இப்போது ஆள்கிறார்'' (எபே 1:21தொ) என்கிறார். சங் 68:19-ஐ மேற்கோள் காட்டி அவருடைய விண்ணேற்றம் அகிலமனைத்தையும் சொந்தமாக்கி நிறைவு பெறச் செய்வதற்கும் (எபே 4:10), தலைவர் என்ற பட்டத்தோடு அனைத்தையும் ஒன்று சேர்க்கவும் (எபே 1:10)ஆகும் எனவும் அவர் கூறுகிறார். திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகத்தில் வரும் துதிப்பாடல் (3:16) கிறிஸ்து வானதூதர்க்கும், உலகிற்கும் தம்மை வெளிப்படுத்தியபின் மாட்சிமையில் விண்ணேற்பு அடைந்தார் என இயம்புகிறது. மனிதர்கள் விரும்பும் மீட்பு மறுவுலகில் உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு கிறிஸ்துவின் விண்ணேற்றத்தை எடுத்துரைக்கிறது எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம். திரைச்சீலையைக் கடந்து சென்று (எபி 6:19தொ) நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும்படி கடவுளின் திருமுன் நிற்பதற்கு (9:24), வானங்களையெல்லாம் கடந்து சென்று நமது தலைமைக் குரு (4:14) வானதூதர்

களுக்கும் மேலாக (1:4-13; 2:7தொ) இறைவனின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார் (1:3; 8:1; 10:12தொ; 12:2).

4. விண்ணேற்பு அடைந்த நேரம்: பலரும் காண கிறிஸ்து விண்ணகம் சென்றதால் இந்த விண்ணேற்றம் உயிர்ப்பிலிருந்து வேறாகத் தோன்றுகிறது. மேலும், காலத்திற்கு அப்பாற்பட்ட அந்த நிகழ்ச்சியைக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாக மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியிருப்பதாலும், காட்சிகள் அளிக்க சிறிது காலம் தேவைப்படுவதாலும் இந்த விண்ணேற்றம் உயிர்ப்பிலிருந்து மாறுபட்டதாகக் காட்டப்படுகிறது. இயேசு உயிர்த்ததுமே தம் மகிமையில் நுழைந்து விட்டார்; அங்கிருந்த தம் சீடர்களுக்குத் தம்மையே காண்பிக்க உலகிற்கு வந்தார் என்று கூற எவ்விதத் தடையுமில்லை. அவ்வாறு கூறுவதே முறையுமாகும். இல்லாவிடில் காட்சிகளுக்கிடையே அவர் எங்கிருந்தார் என்ற பிரச்சனை எழும். மேலும், ஏற்கெனவே மாட்சி அடைந்த நிலையில்தான் அவர்களுக்குத் தம்மைக் காட்டுகிறார். இப்படித்தான் மத்தேயு உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அதனால்தான் கிறிஸ்துவின் விண்ணேற்ற நிகழ்ச்சியைப் பற்றி, தாம் எழுதிய நற்செய்தியில் ஒன்றும் குறிப்பிடவில்லை. மாறாக, ''விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'' (மத் 28:18) என்ற இந்த வசனத்தால் அதை மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து கலிலேயாவின் மலையில் காட்சி அளிக்கும் முன்பே அவர் வானுலகின் அரசராக மாட்சி பெற்றுவிட்டார் என்பது தெளிவாகிறது. யோவான் இவ்வுண்மையை வேறுவிதமாக வெளியிடுகிறார். என் தந்தையிடம் நான் ஏறிச் செல்கிறேன் (யோவா 20:17) என்று தம் சீடர்களிடம் தெரிவிக்கும்படி மகதலா மரியாளிடம் கூறுகிறார். இதிலிருந்து மீண்டும் அன்று தம் சீடர்களுக்குக் காட்சி கொடுத்தபோது (20:19) அவர் வானுலகிற்குச் சென்று திரும்பியிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. பழைய தொடர்புகள் (20:7; 11:2; 12:3) ஆன்மீகமாக்கப்பட்ட (6:58. 62) ஒரு புதிய நிலையை இயேசு அடைந்து விட்டார் என்பதை மகதலா மரியா புரிந்து கொள்ளும்படி செய்வதற்காக உயிர்ப்பிற்கும் விண்ணேற்றத்திற்கும் ஒரு சில மணி நேர இடைவேளை கொடுக்கப்பட்டுள்ளது.

மற்ற வாசகங்கள் அவர் விண்ணேற்றமடைந்த நேரம் அவரது உயிர்த்த நேரத்திலிருந்து வேறுபட்டிருப்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. லூக் 24:13.33.36.44 எனும் வசனங்களுக்குப் பின் வரும் 24:50தொ-இலிருந்து இயேசு உயிர்த்த ஞாயிறு அன்று முதலில் தம் சீடர்களுக்குத் தோன்றி, பல உண்மைகளைப் போதித்த பின்பே மாலையில் வானுலகிற்கு எழுந்தருளினார் என்பது தெளிவாகிறது. மாற்கு நற்செய்தியில் 16:19-க்குப் பின் வரும் பகுதி லூக்கா நற்செய்தியை ஒட்டி உள்ளது. இஃது உயிர்த்த இயேசு பலமுறை தம் சீடர்களுக்குக் காட்சி கொடுத்த பின் விண்ணேற்படைந்தார் எனக் கூறுகிறது. இக்காட்சிகள் ஒரு நாளில் நடைபெற்றனவா, பல நாட்களில் நடைபெற்றனவா என்பதை அறுதியிட்டுக் கூறுவது கடினம். கடைசியாக, அப்போஸ்தலர் பணி நூல் (1:3-11) அவர் உயிர்த்த நாற்பதாம் நாள் விண்ணேற்படைந்தார் எனக் கூறுகிறது. இம்மூன்று பகுதிகளும் இயேசு காட்சி கொடுத்த நாட்கள் விண்ணேற்போடு முடிவடைந்தன என்பதை வெளிப்படையாக எடுத்துரைக்கின்றன.

இம்மூன்று பகுதிகளிலும் விவரிக்கப்படும் விண்ணேற்றம், காட்சிகளின் காலம் முடிவுறுவதைத் தெளிவுபடுத்துகின்றன. வெவ்வேறு விதமாக விவரிக்கப்படுகின்ற தாமதத்திற்குப் பிறகு கிறிஸ்து எவ்வாறு தமது மகிமையில் முதல் முறை நுழைந்தார் என்பது பற்றி விவரிப்பது இதன் நோக்கம் அன்று; மாறாக, அவரது காட்சிகளுக்கு முடிவு காட்டும் இறுதிப் பிரிவை விவரிப்பதே இதன் நோக்கமாகும். இதனால்தான் ஐம்பதாம் நாள் வரவிருக்கும் பெந்தக் கோஸ்தேவை முன்னிட்டு இயேசு நாற்ப

தாம் நாள் விண்ணேற்படைந்தார் என அப்போஸ்தலர் பணியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில், இயேசு இவ்வுலகை விட்டு நிரந்தரமாகச் செல்வது தமக்குப் பதிலாக, தூய ஆவியைத் தம் சீடர்களிடம் அனுப்புவதற்கே.

மறைநூல் போதகம் இயேசுவின் விண்ணேற்பை ஒன்றோடொன்று தொடர்புள்ள, எனினும் வேறுபட்ட இரு கோணங்களில் எடுத்துரைக்கின்றது. ஒன்று இயேசு உயிர்த்த வினாடியே மாட்சிமை பெற்றுவிட்டார் என்பது; மற்றொன்று, இவ்வுலகில் இயேசு சில காலம் காட்சியளித்தபின் விண்ணேற்படைந்தார் என்பது. இவ்விதம் இறைவனிடம் திரும்புவதைத்தான் அப்போஸ்தலர்கள் ஒலிவ மலையில் நேரில் கண்டார்கள். இதையே திருவழிபாட்டு ஆண்டில் விண்ணேற்ற விழாவாக நாம் நினைவு கூர்கிறோம்.

5. விண்ணேற்படைந்த முறை: அப்போஸ்தலர் பணி *1:9* மட்டும்தான் இயேசு எம்முறையில் விண்ணேற்படைந்தார் எனச் சிறிதளவு எடுத்துரைக்கின்றது; இயேசு மாட்சிமையுள் முதல்முறை நுழைந்த வரலாற்றை விவரிக்க வேண்டும் என்பதற்கன்று. புறவினத்தார் ரோமுலு, மித்திரா போன்ற வீரர்களைத் தேவர்களாக மாற்றியது போலவோ, விவிலியத்தில் எலியாவைப் பற்றிய வர்ணனையைப் போலவோ அன்றி, கிறிஸ்துவின் விண்ணேற்றம் அடக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது. போலிக் கற்பனைகளோ, மிகைபடு வர்ணனைகளோ இல்லாமல் திருக்காட்சிகளின் வர்ணனைகளில் சாதாரணமாக உபயோகப்படுத்தப்படும் மேகம், வானதூதரின் பேச்சு போன்றவற்றின் வழியாக விண்ணேற்பின் அடிப்படைக் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது. இதனால் ஒலிவ மலையில் நடைபெற்ற விண்ணேற்றம் சரித்திர நிகழ்ச்சியில்லையென்றோ, தாம் கடவுளிடம் திரும்பிச் சென்றதைத் தம் சீடர்கள் ஐம்புலன்களால் அறிந்து கொள்ளும்படி செய்ய இயேசுவால் முடியாது என்றோ பொருள் கொள்வதற்கில்லை. உயிர்ப்பிலேயே அவர் அடைந்த வெற்றியை வர்ணிப்பதன்று, சிறிது காலம் இயேசு தம் சீடர்களுக்குக் காட்சி கொடுத்துத் தோழமை அளித்தபின், மீண்டும் உலக முடிவில் திரும்பி வரும்வரை நம் ஊனக் கண்களால் பார்க்க முடியாதபடி தம்மை மறைத்துக்கொண்டார் என்ற கருத்தை வெளிப்படுத்துவதுதான் இந்நிகழ்ச்சியை எடுத்துரைப்பதின் நோக்கமாகும்.

IV. **விண்ணேற்றம் இரண்டாம் வருகையின் முன்னோடி:** ''உங்கள் நடுவிலிருந்து வானகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற இந்த இயேசு எவ்வாறு வானகம் செல்லக் கண்டீர்களோ அவ்வாறே மீண்டும் வருவார்'' (*அ.ப. 1:11*) என்ற வானதூதர்களின் இச்சொற்கள் இயேசு எதற்காக விண்ணேற்றம் அடைந்தார் என்பதைத் தெளிவுபடுத்துவதோடு மட்டுமன்றி விண்ணேற்றத்திற்கும் அவரது இரண்டாம் வருகைக்குமுள்ள தொடர்பையும் வெளிப்படுத்துகிறது. இறைவனின் மீட்புத்திட்டத்தில் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருக்கும் நேரம்வரை இயேசு விண்ணில் இருக்கிறார். இஃது ஒரு தற்காலிகமான ஏற்பாடு. இயேசுவில் அனைத்தும் புதுப்பிக்கப்படும் நேரத்தில் (*அ.ப. 3:21; 1 தெச 1:10*) அவரது இறுதி வெளிப்பாடு வரை (*கொலோ 3:1-4*) அவர் மனிதர்களின் கண்களுக்கு மறைவா விண்ணுலகில் இருப்பார். பின், எம்முறையில் விண்ணேற்படைந்தாரோ (*அ.ப. 1:11*) அதேபோல், மேகங்களின் வழியாக (*திருவெளி 1:7; காண்க. 14:14தொ*) வானின்று இறங்கி வருவார். அதே நேரத்தில் அவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் மேகங்களின் மீது தூக்கிச் செல்லப்பட்டு, வான் வெளியில் ஆண்டவரைச் சந்திப்பார்கள் (*1 தெச 4:17*). இந்த வர்ணனையும் மனிதனுக்கு இயல்பாக எழக்கூடிய கற்பனையே. ஆயினும், இக்கற்பனை மிகக்குறுகிய அளவிலேயே உள்ளது.

மேற்கூறியவற்றிலிருந்து பின்வரும் ஆழ்ந்த கருத்துகள் வெளிப்படுகின்றன. இயேசு கிறிஸ்து சாவின்மேல் வெற்றி கொண்டார்; இறைவனோடு கொண்ட ஒரு புதிய முறையான வாழ்க்கையைத் தொடங்

கியுள்ளார்; அவர் தாம் தேர்ந்து கொண்ட வர்களுக்கு இடம் ஏற்பாடு செய்ய விண்ண கம் சென்றுள்ளார்; பின், அவர்கள் அவ ரோடு நிரந்தரமாய்த் தங்கும்படி அவர் மீண்டும் வந்து அவர்களை அங்கு அழைத்துச் செல்வார் (யோவா 14:2தொ).

V. **விண்ணேற்றமும் கிறிஸ்தவ ஆன்மீக வியலும்:** இரண்டாம் வருகையான இறுதி வெளிப்பாட்டை எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்தவர்கள் உயிர்த்த நமதாண்டவரோடு விசுவாசத்தினாலும், திருவருட்சாதனங்களி னாலும் ஒன்றித்திருக்க வேண்டும். இவ்வுல கிலேயே கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் அவரோடு உயிர்த்தெழவும், விண்ணுலகில் அவரோடு அமரவும் வேண்டும் (எபே 2:6). நீங்கள் மேலுலகில் உள்ளவற்றின் மீது மனத்தைச் செலுத்துங்கள். ஏனெனில், உங் கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது (கொலோ 3:1தொ), நமக்கோ வானகமே தாய்நாடு (பிலி 3:20). விண்ணிலிருந்து வரும் நம் உறைவிடத்தை மேலணிந்து கொள்ள வேண்டும் என்ற ஏக்கம் (2 கொரி 5:1தொ), விண்ணைச் சார்ந்த (1 கொரி 15:45-49) நம் ஆண்டவரா கிய இயேசு கிறிஸ்துவின் மாட்சிமைக்குரிய உடலின் சாயலாக உருமாறுவதாகும் (பிலி 3:21). இதிலிருந்து புறப்படுவதுதான் நம் பிக்கை என்ற புண்ணியத்தின் அடிப்படை யான விண்ணேற்றத்தைப் பற்றிய முழு ஆன்மீகவியலாகும். ஏனெனில், கிறிஸ்து ஆட்சி செய்யும் இப்புதிய உலகத்தை ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது கிறிஸ் தவ வாழ்க்கை. ஆயினும், இறைவன் அவனை இவ்வுலகிலிருந்து எடுத்துக் கொள்ளவில்லை; மாறாக, ஒரு புதிய முறையில் அவனுக்குப் பணியையும் சக்தி யையும் கொடுத்திருக்கிறார். இச்சக்தியைக் கொண்டு இவ்வையகத்தை இறைவனின் திட்டப்படி ஒரு புதிய வானம் புதிய பூமியாக மாற்ற வேண்டிய கடமை மனித னுடையதே.

விண்ணைச் சார்ந்த உடல்கள் (CELESTIAL BODIES)

பவுல் 1 கொரி 15:40-இல் விண்ணைச் சார்ந்த உடல்களையும் மண்ணைச் சார்ந்த உடல்களையும் ஒப்பிட்டு வேறுபடுத்துகி றார். மண்ணைச் சார்ந்த உடல்கள், இவ்வுல கில் மண்ணில் உள்ளவையாகும். விண் ணைச் சார்ந்த உடல்கள் விண்ணில் உள்ள வையாகும். தன் காலத்துக் கிரேக்கர்களைப் போல், பவுல் இத்தொடரால் சூரியன், சந்திரன், விண் மீன்களைக் குறிப்பிடுகிறார். இவை சுடரால் ஆன உடலைக் கொண் டவை; மண்ணைச் சார்ந்த உடல்களின் பொருள்களிலிருந்து வேறுபட்டவை. பல வகையான உடல்கள் இருக்கின்றன என் றும், உயிர்ப்பிக்கப்பட்ட உடல் தனித் தன்மையுடையது என்றும் கூற பவுல் விழைகிறார்.

விண்மீன்கள் (STARS)

1. புறவினச் சமயங்களில் விண்மீன்கள்: பழங்கால மேற்காசிய மக்கள் நம்மைவிட விண்மீன்கள் பற்றி அதிக அக்கறை காட்டி னர். சூரியன், சந்திரன், விண்மீன்கள், மற்றக் கோள்களில் நமது காலத்து உலகிலிருந்து முழுதும் வேறுபட்ட மறைபொருள் மிக்க உலகைக் கண்டனர் பழங்கால மக்கள். விண்ணக உலகத்தை ஓர் அரைக்கோளமாக வும், விண்மீன்கள் அதில் பதிக்கப்பட்டு அதனதன் வீதிகளில் செல்வதாகவும் கருதி னர். இவற்றின் முறையான சுழற்சிக் காலங்களை அளவிடவும் மனிதன் தனது நாட்காட்டியை அமைத்துக் கொள்ளவும் விண்மீன்களும் கோள்களும் உதவின. அதில் சிறப்பாக விண்மீன்களின் இயக்கம் உலகம் நித்திய சட்டங்களால் ஆளப்படு வதையும், மனித வரலாற்றின் இயல்பான நிலையைக் கடந்த ஒரு சில விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதையும் சுட்டியது. எனவே, இந்த ஒளிமிக்க கோள்கள் மனித வாழ்வைக் கட்டுப்படுத்தி அவற்றின் முடி வுகளை நிர்ணயிக்கிற இயற்கைக்கு அப் பாற்பட்ட சக்திகளின் வெளிப்பாடாகும் என நம்பினர். எனவே, இயல்பாகவே அவற்றை வழிபட ஆரம்பித்தனர். இதன் மூலம் அவற்றின் சலுகைகள் தங்களுக்குக் கிடைக்கும் என எண்ணினர். சூரியன், சந்திரன், விடிவெள்ளி போன்றவை பல தேவதைகளாகவும் கடவுளர்களாகவும் அவ

னுக்குக் காட்சியளித்தன. விண்மீன் குழுக்கள் புதிரான வடிவங்களில் வானத்தில் தோன்றின. அவற்றிற்கு மனிதன் இதிகாசப் பெயர்களைக் கொடுத்தான். இவ்வாறு விண்மீன்கள் பற்றிய அக்கறை முறையான ஆராய்ச்சிக்கு இட்டுச்சென்றது. இது வான இயல் எனும் ஒரு தனி அறிவியலாக, படிப்படியாக வளர்ச்சி பெற்றது. இதில் மெசபொத்தாமியாவைச் சேர்ந்தவர்களும், எகிப்தியர்களும் தலைசிறந்து விளங்கினர். ஆனால், இந்தத் தொடக்ககால வானவியல் குறிசொல்லுதல், சிலை வழிபாடு போன்ற பழக்கங்களோடு தொடர்புடையதாகவே இருந்தது. இவ்வாறு பண்டைய மனிதர்கள் வெல்ல முடியாத சக்திகளுக்கு அடிமையாயினர். இச்சக்திகள் அவர்களுடைய ஊழைக் கட்டுப்படுத்தின; உண்மையான இறைவனை அவர்களிடமிருந்து மறைத்தன.

2. கடவுளின் பணியாளர்களான விண்மீன்கள்: விவிலியத்தைப் புரட்டிப்பார்த்தால் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலை அங்குக் காணக் கிடக்கிறது. விண்மீன்கள் இறைவனின் அவையில் இருப்பதாகக் கூறப்படும் வானதூதர்களிடமிருந்து தெளிவாக வேறுபடுத்தப்படவில்லை (யோபு 38:7; சங் 148:2தொ). இவை உலகில் உள்ள மற்ற எல்லாப் படைப்புகளையும் போலவே ஒரு படைப்பாக இருந்தாலும் (ஆமோ 5:8; ஆதி 1:14தொ; சங் 33:6; 136:7தொ), இவை இறைவனின் விண்ணகச் சேனையெனவும் கருதப்படுகின்றன. யாவேயின் அழைப்பைக் கேட்டு அவை ஒளிர்கின்றன (பாரூ 3:3). இறைவனது கட்டளையைக் கேட்டு அவரது மக்களைப் போரில் உறுதிப்படுத்த உதவியாக இடையீடு செய்கின்றன (யோசு 10:12தொ; நீதி 5:20). அவை படைத்திரளின் ஆண்டவராகிய யாவேயின் பணியாளர்கள் தானே ஒழிய, கடவுள்கள் அல்ல. அவை பருவக்காலங்களை நெறிப்படுத்துகின்றன வென்றால், இரவுக்கும் பகலுக்கும் தலைமை தாங்கி வழி நடத்துகிறதென்றால் அதற்குக் காரணம் அவ்வாறு செய்யுமாறு இறைவன் அவைகளை ஆணையிட்டுள்ளார் (ஆதி 1:15தொ). சூரியனின் பேரொளியைக் கண்டு வியக்கலாம் (சங் 19:5தொ). சந்திரனின் பேரழகைக் கண்டு மகிழலாம் (உ.ச.6:10). அனைத்துக் கோள்களும் மிகச் சரியாக இயங்கும் அற்புதத்தைக் கண்டு வியக்கலாம் (ஞான 7:18தொ). ஆனால், இவை அனைத்தும் ஒரே கடவுளின் மகிமையை (சங் 19:2), விண்ணகக் கோள்களின் இயக்கத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை உருவாக்கியவரின் புகழைப் பாடுகின்றன (யோபு 38:31தொ). இவ்வாறு, விண்மீன்கள் தங்களைப் படைத்தவரை மறைப்பதில்லை; மாறாக, அவரை வெளிப்படுத்துகின்றன (ஞான 13:5). அவை முன்னர் தந்த சிலைவழிபாட்டுப் பொருளை இப்பொழுது தருவதில்லை; மாறாக, தூய்மைப் படுத்தப்பட்டு இறைவனின் பரிபாலிப்பை வெளிப்படுத்துகின்ற உலக உண்மைகளின் அடையாளங்களாகின்றன; ஆபிரகாமின் பிள்ளைகள் அளவற்ற விதத்தில் பெருகுதல் (ஆதி 15:5), தாவீதின் வழியில் வரும் அரசன் (எண் 24:17), எதிர்கால மீட்பின் ஒளி (எசா 60:1தொ; மலா 3:20), அருளின் வழியாக மீண்டும் பிறப்பவர்களின் முடிவில்லா மகிமை (தானி 12:3) ஆகிய உண்மைகளின் அடையாளங்களாகின்றன.

3. புற இன சமயப் பாதிப்பு: விவிலிய வெளிப்பாடு திட்டவட்டமாக விளக்கிய பின்னும் இஸ்ராயேலர் விண்மீன்கள் கொண்ட பிறசமயத்தால் ஈர்க்கப்படாமல் இல்லை. சமய வாழ்வில் பின்னோக்கிச் சென்றபோதெல்லாம் சூரியன், சந்திரன், விண்ணகத்திலுள்ள அமைப்புகள் அனைத்தையும் வழிபடும் பக்தர்கள் இருந்தனர் (2 அர 17:16; 21:3.5; எசே 8:16). இத்தகைய அண்ட சக்திகள் மீது மனிதனுக்கு இயல்பாக உள்ள பயத்தினால் அவற்றைச் சாந்தப் படுத்த விரும்புகிறான். இஸ்தார் அல்லது விடிவெள்ளியாகிய ''விண்ணரசிக்கு''க் காணிக்கைகள் செலுத்தப்பட்டன (எரே 7:18; 44:17தொ). அடையாளங்களை மிகக் கவனமாகப் பார்த்தனர் (எரே 10:2). ஏனெனில், அதன் வழியாக தங்கள் வாழ்வின் முடிவை அறிந்துகொள்ளலாம் என நினைத்தனர் (எசா 47:13). ஆனால், இறைவாக்

கினர்கள் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றனர். உபாகமம் இதனை இழிவு படுத்திப் பேசுகிறது (உப 4:19; 17:3). இத்தகைய பழக்கத்தை முற்றிலும் அழிப்பதற்கு அரசன் யோசியா மிக வன்மையாகத் தலையிடுகிறார் (2 அர 23:4தொ.11). விண்மீன்களை வழிபடுபவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை காத்திருக்கிறது என எரேமியா எச்சரிக்கிறார் (எரே 8:1). ஆனால், இந்தச் சிலைவழிபாட்டுப் பழக்கத்திலிருந்து (காண்க. யோபு 31:26தொ), இஸ்ராயேல் முழுவதுமாக விடுதலைபெற நாடுகடத்தப்படுதலும், சிதறிப்போதலும் மிகவும் அவசியமாகின்றன. இப்பழக்கத்தின் பயனற்ற தன்மையை ஞானநூல் உரக்கப் பறைசாற்றும் (ஞான 13:1-5).

4. விண்மீன்களிலிருந்து தீய வானதூதர்களுக்கு: இத்தகைய விண்மீன் வழிபாடுகள் விசுவாச வாழ்வில் பல பாதிப்புகளை ஏற்படுத்தின. இந்த விண்மீன்கள் ஒருவனைக் கடவுளிடமிருந்து தூரக் கொண்டு போகும் சோதனையாக அமைந்ததென்றால், இஃது இறைவனுக்கு எதிரான தீயசக்திகளோடு இவை தொடர்பு கொண்டுள்ளன என்று சுட்டவில்லையா? விண்ணகத்தில் உள்ள இறைத்தூதுவர்களில் ஒரு சிலர், இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் தவறிய தூதர்கள், தமது கூட்டத்திற்கு மனிதர்களை இழுத்துத் தங்களை வணங்கச் செய்யவில்லையா? கடவுள்களுக்குள்ளேயே போர்கள் பற்றிய பழங்கால இதிகாசக் கருத்துகள், இறைவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த விண்ணகச் சக்திகளின் வீழ்ச்சியைக் காவிய முறையில் எடுத்துக் கூற உதவும் பல பொருள்களைக் கொடுக்கின்றன (எசா 14:12-15). புதிய ஏற்பாட்டில் வரும் சாத்தான் இந்த அடையாளக் கூறுகளால் செறிவு ஊட்டப்பெறும் (திருவெளி 8:10; 9:1; 12:3தொ.7தொ). இதன் விளைவாக, ஆண்டவரின் நாளில விண்ணகப் படைகளும், மண்ணகத்தில் அவற்றை வழிபட்டவர்களும் தீர்ப்பிடப்படுவதைக் கண்டு நாம் வியப்புற வேண்டியதில்லை (எசா 24:21தொ). இங்குத் தீய வானதூதரின் இடத்திலும் நிலையிலும் விண்மீன்கள் தோன்றுகின்றன.

5. கிறிஸ்துவால் மீட்கப்பட்ட உலகில்: விண்மீன்கள், இறைப் பாதுகாப்புப் பணியை மீண்டும் மேற்கொள்கின்றன. கொலோசியர்களை அச்சுறுத்திய அண்ட வேதனையிலிருந்து கிறிஸ்துவின் சிலுவை விடுவித்து விட்டது. ''சிலுவையில் கிடைத்த வெற்றியால், எல்லாரும் அவர்களைக் காண, இழுத்துக்கொண்டு பவனி செல்லும் பொருட்டு'', கிறிஸ்து ''தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர் முதலிய தூதருடைய படைக்கலங்களைப் பறித்துக் கொண்டதால் கிறிஸ்தவர்கள் இனி உலகப் பூதங்களுக்கு அடிமைப் பட்டவர்கள் அல்லர்'' (கொலோ 2:8.15 18; கலா 4:3). இனி விண்மீன்களைக் கொண்டு எதுவும் முன்குறித்து வைக்கப்படுவதில்லை. ஊழ் இனி வானில் எழுதப்படுவதில்லை. இவை போன்ற பிறமத மூட நம்பிக்கைகளுக்குக் கிறிஸ்து முடிவு கட்டி விட்டார். அவரது பிறப்பை ஒரு விண்மீன் வெளிப்படுத்துகிறது (மத் 2:2). இது, நமது இதயங்களில் தோன்ற நாம் காத்திருக்கும் (2 பேதுரு 1:19) ஒப்புமையற்ற விடிவெள்ளியாக (திருவெளி 2:28; 22:16) அவரைக் குறிக்கிறது. அவரே புதுப்பிக்கப்பட்ட உலகை ஒளிர்விக்கும் உண்மையான சூரியன் (லூக் 1:78தொ). சூரியன் இருண்டு பூமியெங்கும் இருள் சூழ்ந்து அவருடைய இறப்பைக் குறித்ததுபோல் (மத் 27:45 இணை), விண்மீன்கள் இருளடைவது அவருடைய மகிமைமிக்க வருகையின் அடையாளமாக அமையும் என்பது உறுதியென்றால் (மத் 24:29 இணை; எசா 13:9தொ; யோவே 4:15), இதற்குக் காரணம் வருங்கால உலகில் இந்தப் படைக்கப்பட்ட ஒளிகள் மறைந்து போய்விடும். இறைவனுடைய மாட்சிமை புதிய எருசலேமுக்கு ஒளிவீசும். செம்மறியே அதன் விளக்காகும் (திருவெளி 21:23).

விதவை, கைம்பெண் (WIDOW)

விதவை தனிமையாய் நிற்கும்போது (பாரூ 4:12-16) அதிர்ஷ்டமற்றவரின் மாதிரியாக நிற்கிறாள் (எசா 47:9). அவளது உடை

துயருற்றுப் புலம்புவோரின் அடையாள மாக இருக்கிறது (ஆதி 38:14; யூதி 10:2). மீண்டும் திருமணம் செய்தாலொழிய பிள்ளைப்பேறு பெறும் வாய்ப்பை இழந்து விட்டவள். அவள் பாதுகாப்பற்றவள்.

1. விதவைகட்கு உதவி: அனாதைகளை யும், அன்னியர்களையும் போல விதவை களும் சட்டத்தின் உதவியால் சிறப்பான பாதுகாப்புப் பெறுபவர்கள் ஆகின்றனர் (யாத் 22:20-23; உப 14:28.29.24: 17-22). கடவுளும் (உப 10:17தொ) விதவைகளின் முறையீடுகளைக் கேட்கிறார் (சீரா 35:14). அவளைப் பாதுகாப்பவராகவும் பழிவாங்கு பவராகவும் இருக்கிறார் (சங் 94:6-10). விதவையின் கையறு நிலையைத் தங்க ளுக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைப்ப வர்களுக்கு ஐயோ, கேடு! (எசா 10:2; மாற் 12:40இணை). எலியாவைப் போலவே இயேசுவும் ஒரு விதவையின் ஒரே மகனை உயிர்ப்பித்துக் கொடுக்கிறார் (லூக் 7:11-15; 1 அர 17:17-24). தன் தாய் மரியாளைத் தனது அன்புக்குரிய சீடராகிய யோவானி டம் ஒப்படைக்கிறார் (யோவா 19:26). தொடக்கத் திருச்சபையில் அன்றாடப் பணி யில் விதவைகளை ஆதரிப்பதும் அவர்க ளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதும் முக்கிய பகுதியாக இருந்தது (அ.ப. 7:1). விதவைகட்கு உறவினர் யாரும் இல்லை யென்றால் (1 திமொ 5:16; காண்க. அ.ப. 9:36-39), அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அந்தச் சமூகத்திற்கு உண்டு (யாக் 1:26; காண்க. உப 26:12தொ; யோபு 31:16). இஃது இறைவன் முன் புனிதமும் மாசற்றதுமான தொண்டுகளில் ஒன்றாகும்.

2. விதவைத் தன்மையின் மதிப்பு: ஏற்கெ னவே பழைய ஏற்பாட்டின் முடிவில் விதவை நிலையின் மதிப்பு உணரப்பட் டது. யூதித்தின் விதவை நிலைக்குத் தனி மதிப்பும், மரியாதையும் கொடுக்கப்பட்டது (யூதி 8:4-8; 16:2). அன்னா என்ற பெண் விதவையாயினும் தன் வாழ்வைச் செபத்தி லும், நோன்பிலும் செலவழித்தாள் (லூக் 2:36). இயற்கையின் பலவீனத்திற்கும் கடவு ளிடமிருந்து பெறும் சக்திக்குமிடையே உள்ள வேறுபாடு யூதித்தின் வாழ்வில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது.

பவுல் விதவை மறுமணத்தைப் பொறுத் துக் கொண்டாலும் (1 கொரி 7:9.39), இளம் விதவைகள் தவறாக நடந்து கொள்வதைத் தடுக்க அவர்கள் மறுமணம் செய்து கொள் வதை உற்சாகப்படுத்தினாலும் (1 திமொ 5:13-15) அவர் விதவையாக இருப்பதையே மேலானதாகக் கருதுகிறார் (1 கொரி 7:8). ஏனெனில், திருமணத்தை விட்டுக்கொடுப் பது இறைவன் தரும் கொடையின் அடை யாளமாகப் பார்ப்பதால் அவ்வாறு கூறுகி றார் (1 கொரி 7:17-24). கன்னிமையைப் போலவே விதவை நிலையும் ஒருவரைக் கடவுளது பணிக்கென விடுவித்து முழுமை யாக அர்ப்பணிக்க உதவும் ஒரு நிலை யாகும் (1 கொரி 7:34).

3. கைம்பெண்கள் நிறுவனம்: திருச்சபை யில் எல்லாக் கைம்பெண்களுமே எவ்விதப் பழிச்சொல்லுக்கும் ஆளாகாமல் இருக்க வேண்டும் (1 திமொ 5:7.14) என்கிறார். எவ்விதக் குடும்பக் கடமையும் இல்லாத கைம்பெண்கள் எல்லா நாட்டங்களையும் விட்டு விட்டு முழுமையாகத் தம்மையே செபத்தில் ஈடுபடுத்திக் கொள்ளலாம் (5:5தொ). மேலும், விதவை நிலையில் நிலையாக இருக்க அதிகாரபூர்வமான பொறுப்பேற்று இருக்கின்றனர் (5:12). ஒரு முறையே திருமணம் செய்த விதவைகளில் 60 வயதை எட்டிய விதவைகளே இந்த விதவைகளின் சபையில் ஏற்றுக் கொள்ளப் பட்டனர் (5:9). இந்தச் சபையில் உள்ள பெண்கள் அன்புப் பணியாற்றுவதற்கெனத் தங்களைக் கையளித்தனர் (5:10). ஏனெ னில், கடந்த காலத்தில் இப்படிப்பட்ட சேவைகளைச் செய்தவர்களாக இருக்க வேண்டும் (5:10).

இவ்வாறு, வாழ்வின் இறுதிக்கட்டத்தில் விதவைகளின் முன் வைக்கப்பட்ட இலட்சி யத்தைச் செபம், கற்பு மற்றும் அன்பு என்று சுருக்கமாகக் கூறலாம்.

விதி (FATE)

இது பொதுவாக ஒருவனின் அதிர்ஷ்டத் தையோ, துரதிர்ஷ்டத்தையோ குறிக்கும்.

விவிலியத்தில் இது தவிர்க்க முடியாத முடிவாகிய சாவையே குறிக்கும். நல்லோருக்கும், தீயோருக்கும், ஞானிக்கும், அறிவிலிக்கும், எல்லாருக்கும் சாவு வருவது உறுதி (சங் 49:13; திருவுரை 2:14; 3:19; 9:2-3). இதை எதிர்நோக்கி மனிதன் வாழ வேண்டும் (திருவுரை 2:24; 3:12-13).

விவிலிய ஆசிரியருக்கு விதி என்பது இறைவனது திருவுளத்தோடு நேரடித் தொடர்புடையது. இறைவன் உலகைத் தாமே நேரடியாக ஆள்கிறார்; எல்லாவற்றின் முடிவையும் நிர்ணயிக்கிறார் (எசா 45:1-8; ஆமோ 3:6; மத் 10:29-30; லூக் 12:24-28). மனிதனின் வாழ்க்கை இறைவனின் கையில் உள்ளது. பிற்கால ராபிகள் கருத்துப்படி ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும், விதியும் விண்ணக அவையில் நிர்ணயிக்கப்படுகின்றன. கடவுள் மனிதனுக்கு என்ன நேரும் என்பதையே நிச்சயிக்கிறார். அவன் நல்லவனாகவோ, கெட்டவனாகவோ வாழ்வது அவனவன் செயல், அவனவன் சுதந்தரம் என்ற கருத்து பரவியது.

இறையாட்சி பற்றிய மறையுண்மை எப்போதுமே யாவருக்கும் இருந்திருக்கிறது. நல்லவர்களுக்கு ஆசீர்வாதமும், தீயவர்களுக்குத் தண்டனையும்தான் கிடைக்கும் எனக் கருதப்பட்டது. ஆனால், இது நடைமுறைக்கு ஒத்ததாய் இருக்கவில்லை. யோபு நூல், திருவுரை நூல் ஆகியவற்றில் இக் கருத்து எதிர்த்துக் கூறப்படுவதாய்த் தோன்றுகிறது. வெளிப்பாட்டு நூல்கள், நல்லவர்கள் இறுதிநாளில் பரிசளிக்கப்படுவர் எனக் கூறின. ஆனால், விவிலிய ஆசிரியர் விசுவாசத்தால் இப்பிரச்சனையைத் தீர்க்கிறார். வாழ்க்கையைத் தண்டனை, ஆசீர்வாதம் எனப் பிரிக்க முடியாது. எல்லாத் தேவைக்கும் இறைவன் ஒருவரே போதுமானவர் (யோபு 19:25-27; சங் 73:23-26; உரோ 8:35-39; 2 கொரி 9:8-10). ஆவியின் சன்மானம் எந்த உலகத் திமையையும் விட அளவிடமுடியாத விதத்தில் மேன்மையானது (2 கொரி 4:7-11). பேரிடர் மனத்துக்கத்திற்கு அழைப்பாகும் (லூக் 13:1-5). சாவு வாழ்வுக்கு வாயிலாகும் (1 கொரி 15:51-57; பிலி 1:21-23).

விதைத்தல் (SOWING)

I. இயற்கையின் வளர்ச்சி, மனித இனப் பெருக்க வரலாறு, படைப்பு மற்றும் மீட்புச்செயல் அனைத்துமே அதே சுழற்சிக்கு ஏற்ப நடைபெறுகின்றன. இவை விதையாக இருக்கும் காலம், வளர்ச்சிப் பருவம், பலன் அளித்தல், இறுதியில் அறுவடை ஆகியவை. விதைத்தல் என்பதன் சாதாரணப் பொருளுக்கும், விதைத்தல் என்பதன் உருவகப் பொருளுக்கும் முழுமையான தொடர்பிருக்கிறது.

II. **மண்ணில் விதைக்கப்படுபவை:**

1. **இறைவனின் செயல்:** இறைவன் உலகைப் படைத்த நாளில் இந்த மண்ணில் வளர்ந்து பலனளித்து மீண்டும் தம்மை உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய விதை தரும் தாவர இனங்களைப் படைத்தார் (ஆதி 1:11.29). தவறாமல் ''விதைப்பவனுக்கு விதையும், உண்பதற்கு உணவும் உதவுகின்றவர் விதைப்பதற்கு வேண்டியதை உங்களுக்கும் கொடுத்து அதைப் பெருகச் செய்வார்'' (2 கொரி 9:10). விதைக்கின்ற, அறுக்கின்ற காலத்தை ஆள்கின்ற இறைவன் (ஆதி 8:22) நீதிமான் விதைத்தது நூறுமடங்கு பலனளிக்கும்படி ஆசீர்வதிக்கிறார் (26:12). ஆனால், தீயவனின் எதிர்பார்ப்பு தோல்வியுறும்படி செய்கிறார் (எசா 5:10; மீக் 6:15). அவர்கள் கோதுமையை விதைத்தாலும் முட்செடியையே அறுப்பார்கள் (எரே 12:13; காண்க. ஆதி 3:18). ஆனால், மனம் மாறி வருபவனுக்கு அவன் ''நிலத்தில் விதைத்துள்ள விதைமீது ஆண்டவர் மழை பொழிவார்'' (எசா 30:23). அவனது நிலமும் விதையைப் பெறும் நிலமாக மாறும் (எசே 36:9). விவிலியத்தில், விதைப்பதின் வெற்றியில் செயல்படும் இறை ஆசீர் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதோடு எப்போதும் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது.

2. மனிதனின் பங்கு: விதைத்தலைக் கடவுள் ஆசீர்வதித்தாலும் அதனை உண்மையிலேயே விதைத்து விளையச் செய்ய வேண்டியது மனிதனுடைய உழைப்புத்தான்.

அ) மனிதனின் பொறுப்பு: ஒவ்வொரு விதையையும் பாதுகாக்கவும், வெள்ளப் பெருக்கின் அழிவிலிருந்து காக்கவும் வேண்டிய பொறுப்பை மனிதனிடம் ஒப்படைத்தார் இறைவன் (ஆதி 7:3). பஞ்சம் வரும்போது அவைகளைத் தேடி (ஆதி 47:19), பிற தூய்மையற்ற தொடர்பிலிருந்து பாதுகாக்க வேண்டும் (லேவி 11:37தொ). ''காலையில் விதையைத் தெளி. மாலையிலும் அப்படியே செய்'' (திருவுரை 11:6). மனிதனுடைய பங்கு கடின உழைப்பாகும்.

பாலஸ்தீனப் பழக்க வழக்கப்படி விதை விதைத்த பின்தான் இந்த உழைப்பு நிகழ்கிறது. ஞானமும் அப்படித்தானே வளர்க்கப்பட வேண்டும்! ''ஞானத்துக்காக உழைப்போர் சிறிதளவே களைப்படைவர். விரைவிலேயே அதன் கனிகளை உண்பர்'' (சீரா 6:19).

உருவகப்பொருளில் மனிதனின் இந்தப் பொறுப்பு விதையைத் தேர்ந்தெடுத்தல், நிலத்தைத் தேர்ந்தெடுத்தலையும் உள்ளடக்குகிறது. ஏனெனில், மனிதன் எதை விதைத்தானோ அதையே அறுப்பான் (கலா 6:7). வித்தியாசமான விதைகளை விதைப்பது (சிலை வழிபாடு) மிகவிரைவாகப் பூத்துக் குலுங்கும். ஆனால், எதையும் அறுவடை செய்யமுடியாது (எசா 17:10தொ). அநீதியை அல்லது கொடுமையை விதைப்பவன் ஏழு மடங்கு துயரங்களை அறுப்பான் (பழ 22:8; யோபு 4:8; சீரா 7:3); காற்றை விதைப்பவன் கடும் புயலை அறுவடை செய்கிறான் (ஒசே 8:7). வாழ்க்கை அனுபவம் நமக்கு ஒன்றைத் தெளிவுபடுத்துகிறது. சிறுக விதைப்பவன் சிறுக அறுப்பான். பெருக விதைப்பவன் பெருக அறுப்பான் (2 கொரி 9:6). ஊனியல்பில் விதைப்பதற்குப் பதிலாக ஆவியானவரைப் பெற்ற இயல்பில் விதைக்க வேண்டும் (கலா 6:8). முள் நடுவில் விதைப்பதற்குப் பதிலாக (எரே 4:3) அமைதியிலும் (யாக் 3:18), நீதியிலும் (ஒசே 10:12; பழ 11:18) விதைக்க வேண்டும்.

ஆ) நம்பிக்கையின் செயல்: வேலையாள் கூலிக்கு உரிமையுடையவன் என்பதும் (1 கொரி 9:10), தான் உழைத்து உற்பத்தியாக்குவதில் அவனுக்கும் பங்கு உண்டு என்பதும், ஒருவன் விதைத்ததை அவனே அறுவடை செய்வது இலட்சியமானது என்பதும் உண்மையென்றாலும், ''உழைப்பவர் ஒருவர்; அறுவடை செய்பவர் வேறு ஒருவர்'' (யோவா 4:37) என்ற பழமொழியும் உண்மையே. ஆகவே, விதைப்பவர் வானம் மழை தரும், பூமி பலன் தரும் என்ற நம்பிக்கையோடு இருக்க வேண்டும். அதில் உலகப் பூதங்களுக்கு அடிமையாகக் கூடாது. விதைக்கும்போதே காற்று என்ன செய்யுமோ (திருவுரை 11:4) என்று கவலைப்பட்டால் அவனால் எதையும் சாதிக்க முடியாது. மிகச் சிறிய விதையும் மிகப் பெரிய மரமாக வளர முடியும் (மாற் 4:31). வளமான நிலத்தில் விதைக்கப்படும் விதை 100 மடங்கு பலன் தருகிறது. விதைப்பதில் மனிதனது பங்கு முக்கியமானாலும் மண்ணில் விழுந்தபின் விதை தானாக முளைத்து வளர்கிறது (மாற் 4:27) என்பதை மனிதன் மறக்கக்கூடாது. ஆண்டவரின் அருள்தரும் ஆண்டான ஏழாவது ஆண்டிலே ஒருவனும் விதைக்கக் கூடாது (லேவி 25:4). அதற்கு முந்திய ஆண்டிலே இரண்டு மடங்கு விளைச்சலை ஆண்டவர் தந்துவிட்டார் என்பதில் உறுதி கொள்ள வேண்டும். விண்ணகத் தந்தை மேல் வைக்க வேண்டிய மாறாத நம்பிக்கையைக் குறிப்பிடுவதற்கு இயேசு கூறுகிறார்: வானத்துப் பறவைகளைப் பாருங்கள்! அவை விதைப்பதும் இல்லை! அறுப்பதும் இல்லை! ஆயினும், உங்கள் வானகத் தந்தை அவற்றிற்கும் உணவளிக்கிறார் (மத் 6:26இணை).

இத்தகைய நம்பிக்கைதான், மனிதன் விதையை மண்ணிலே புதைத்து அது பலன் தரும்படியாகவிட - அழிந்து போகவிட

மனிதனுக்கு உற்சாகம் அளிக்கிறது (யோவா 12:24). கண்ணீரோடு விதை விதைப்பவர்கள் களிப்பாரவாரத்தோடு அறுவடை செய்வார்கள் (சங் 126:5). இந்த உருவகம் புனிதர்களின் நலனுக்காகச் செய்யும் பணியையும் (கலா 6:7-10; 2 கொரி 9::6-13), அப்போஸ்தலிக்க அலுவலையும் (யோவா 4:38; 1 கொரி 3:8; 2 கொரி 9:10 தொ) எடுத்துக்காட்டுகிறது. இறுதியாக, புத்துயிர் பெறும் பொருட்டு விதை மடிய வேண்டும் என்றால் (1 கொரி 15:36), அழிந்துபோகும் மனிதனுக்கும் இது பொருந்தும். அவனும் மீண்டு எழ வேண்டும். ''விதைக்கப்படுவது அழிவுக்குரியது; உயிர்த்தெழுவது அழியாதது;... விதைக்கப்படுவது மனித உயிர் கொண்ட உடல்; உயிர்த்தெழுவது தேவ ஆவிக்குரிய உயிர் கொண்டது'' (15:42.44). மண்ணுக்கு நம் உடலைக் கையளிக்கும்போது நாம் கிறிஸ்துவில் மகிமைக்கு உயிர்த்தெழுவோம்.

III **இறைவன் விதைக்கிறார்:**

1. படைப்பவரையும் விதைப்பவரோடு ஒப்பிடலாம். ஆனால், அஃது ஓர் இறுதிக் காலச் சூழ்நிலையில் சித்திரிக்கப்படுகிறது. கடவுளின் மகனை இறைவார்த்தையாகவும் இறைவிதையாகவும் அறியும் கிறிஸ்தவன், இறைவனை மனிதர் இதயத்தில் தம் வார்த்தையை விதைப்பவராகவும், ஒவ்வொரு மனிதனிலும் தம் உண்மையான வழிமரபான தம் விதையை விதைப்பவராகவும் காணமுடிகிறது.

2. இறைவனின் வித்து: ஆதாமைக் கடவுள் பலன்தரக் கூடியவனாக ஆசீர்வதிக்கிறார். வித்து என்ற வார்த்தை தலைமுறை, வழித்தோன்றல்கள், இனம் என்பதையும் குறிக்கவல்லது. தொடக்கத்திலிருந்தே பாம்பின் மேல் வெற்றிகொள்ளும் வழிமரபோடு, தலைமுறை தலைமுறையாக வரும் மனித வித்து ஒன்றுபடுத்தி வேறுபடுத்தப்படுகிறது. இந்த வெற்றி இறைவனின் மகன், ஆதாம், ஆபிரகாம் மற்றும் தாவீதின் மகன் ஆகிய இரு மரபுகளின் கலவையால் பிறக்கும். இயேசுவில் நிறைவேறும்.

நோவா (ஆதி 9:9), ஆபிரகாம் (12:7), ஈசாக்கு (26:4), யாக்கோபு (32:13) ஆகியோரின் சந்ததிகளுக்கு இறைவனின் ஆசீர் உறுதியளிக்கப்படுகிறது. அவர்கள் பூவுலகின் மண்ணைப் போலவும் (13:15தொ), கடற்கரை மணலைப் போலவும் (22:17), விண்மீன்களைப் போலவும் (15:15; 26:4) பலுகிப் பெருகுவர். அதுமட்டுமன்று, தாவீதின் அரசகுலத்திற்கும் இதே வாக்குறுதி தரப்பட்டது (2 சாமு 7:12; 22:51). ஏனெனில், உடன்படிக்கை குலமுதுவரோடு மட்டுமன்றி, அவரது வித்தோடும் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், அஃது ஆபிரகாமின் வித்தாயினும் சரி, தாவீதின் வித்தாயினும் சரி, மக்களின் பிரமாணிக்கமின்மையும், அரசர்களின் பிரமாணிக்கமின்மையும் கடவுள் தனது ஆசீரைத் திரும்ப எடுத்துவிடுமாறு செய்தன. ஈசாயின் மரம் வெட்டப்பட வேண்டும். ஆனால், அதன் அடிமரத்திலிருந்து தூயவித்து தோன்றும் (எசா 6:13). மீண்டும் கடவுள் விதைப்பவராகிறார் (ஓசே 2:25; எரே 31:27). தீய மக்கள் தண்டனையால் அழிக்கப்படுவர் (எசா 1:4). இறைவன் யூதாவை மக்களால் நிரப்புவார். மிகத் துல்லியமாக, இந்த வித்து ஒரு தளிரில் மையம் கொள்ளும். இந்தத் தளிர் மெசியாவின் பெயர்களில் ஒன்றாக வரும். ''இதோ 'தளிர்' என்னும் பெயர் கொண்ட மனிதர் தம் இடத்திலிருந்து தளிர்ப்பார்; ஆண்டவரின் கோயிலைக் கட்டியெழுப்புவார்'' (செக் 6:12).

3. இறை வார்த்தை: உருவக நடையில் பார்க்கும்போது விதை இறை வார்த்தையாகும். இஸ்ராயேலுக்கு ஆறுதல் தருபவர் இறைவார்த்தையின் ஆற்றல் மிக்க செயலை, விதையைப் பலனளிக்கச் செய்யும் மழைக்கு ஒப்பிடுகிறார் (எசா 55:10). விதைப்பவன் உவமையைக் கூற[illegible] வழியாக, பலனளிக்கும் கடமையை அறுவடையோடு அன்றி, மாறாக, விதைப்பதோடு தொடர்புபடுத்துகிறார் இயேசு. நாம் பேசிக்கொண்டிருக்கும்போதே [illegible]கழ்ந்து கொண்டிருக்கும் இறுதிக்காலத்தின் [illegible]

கத்தை நோக்குகிறார் (காண்க. ஓசே 2:25). இவ்வாறுதான் இறுதிக்காலத்தில் இறை வார்த்தையாக இறைவித்தும் இறைமக்களும் சந்திக்கின்றனர் என்பது வெளிப்படுகிறது. ஏனெனில், விதைத்தது இயேசுவான தால் இந்தச் சந்திப்பு நிகழ்கிறது. இதில் கிடைக்கும் பலன் மகத்தானது. ஆயினும், மனுமகன் நல்ல விதை விதைக்கும்போது சாத்தான் களையை விதைத்து விடுகிறான் (மத் 13:24-30. 36-43).

இந்த வார்த்தை கிறிஸ்துவே. அவரே மண்ணில் மடிவதால் மிகுந்த பலனளிக்க வேண்டும் என்று விரும்பினார் (யோவா 12:24.32). இயேசுவின் உவமைகளில் தனது வரலாறு அடங்கியிருப்பதைத் திருச்சபை உணர்ந்துகொண்டது. அவள் தனது விசுவாசத்தை இறையரசின் எளிய தொடக்கங்களின் வழியாக இறுதி மகிமையின் முன்னுணர்வால், உவமைகளின் அடிப்படையில் உறுதிப்படுத்திக் கொண்டாள். ஏனெனில் இறையரசு கடுகு விதையைப் போல சிறிதாகத் தொடங்கினாலும் மிகப் பெரிய மரமாக வளர்வதைப் போல (மத் 13:31தொ; காண்க. எசே 17:23; தானி 4:7-19), தானும் வளர்ந்து மிகப் பெரிய திருச்சபையாவோம் என்ற விசுவாசம் அதனில் ஆழமாக இருந்தது. இறுதியாக, இயேசுவின் வித்தாகிய திருச்சபை (திருவெளி 12:17)தீயவனாகிய மாபெரும் பறவை நாகத்தோடு போராடி, இயேசு தன்னில் இருப்பதால் (1 யோவா 3:9) அதை வெற்றி கொள்கிறது.

விதைப்பவன் உவமை (SOWER, PARABLE OF)

ஒத்தமை நற்செய்திகளில் காணப்படும் இந்த உவமையின் விளக்கத்தையும் இயேசு தருகிறார் (மத் 13:18-23; மாற் 4:13-20; லூக் 8:11-15). தனது போதனைக் காலத்திலே இயேசு பெருந்திரளான மக்கட் கூட்டத்தைக் கவர்ந்தார். அவர்களில் பெரும்பாலானோர் அவர்தம் புதுமைகளைக் காணவே வருகிறார்கள். உண்மையான இறையன்பினால் அன்று என்பதையும் உணர்ந்தார். மேலும், அதிகாரிகள் இவரைக் கிளர்ச்சியாளர் என எண்ணலாம் என்பதையும் அறிந்திருந்தார். எனவே, அவர் உவமைகளின் மூலம் மக்களுக்குப் போதிக்கிறார். இதனைச் சிலரே புரிந்து கொள்வார்கள். விசுவாசம், அர்ப்பணிப்பு போன்ற பண்புகள் இந்தச் சிலருக்குத் தேவை.

இந்த உவமையின் விளக்கம் அன்றைய ஆதித் திருச்சபையின் நிலையை விளக்குகிறது. விதை, வார்த்தையாகிய இயேசு (யோவா 1:14). பறவைகள், மனித மீட்பைக் கெடுக்கும் சாத்தான். பாறை நிலம், வேதனை, துன்பம் ஆகிய இடறலைக் குறிக்கும். முட்செடிகள் மனிதனின் இறையார்வத்தைக் கெடுக்கும் உலக ஆசைகள். நல்ல நிலம் வார்த்தையைக் கேட்டு உணர்ந்து அதன்படி வாழ்தலைக் குறிக்கும்.

விபசாரம் (ADULTORY)

முன்பு பத்துக் கட்டளைகளும், பின்பு இறைவாக்கினரும் விபசாரத்தை அறவே கண்டனம் செய்த போதிலும், கணவனுக்கும் மனைவிக்குமிடையே இருக்க வேண்டிய பற்றுறுதியைக் கிறிஸ்துதான் முழுமையாக வெளிப்படுத்துபவர் ஆவார். கணவன் மனைவியிடமிருந்து எதிர்பார்க்கும் பிரமாணிக்கம், இறைவன் மக்களிடமிருந்து எதிர்பார்க்கும் பிரமாணிக்கத்திற்கு ஒப்பிடப்படுகிறது. ஆகையால், இறைவனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மக்கள் மீறும்போது ஆன்மீக விபசாரம் நடைபெறுகிறது என இறைவாக்கினர்கள் கண்டிக்கிறார்கள்.

1. திருமணமும் விபசாரமும்: விபசாரம் தடுக்கப்பட்ட போதிலும் (யாத் 20:14; உப 5:18; எரே 7:9; மலா 3:5), அதுபற்றிய சட்டத்தின் விளக்கம் வரைக்குட்பட்டதாகும். விபசாரம் என்பது கணவன் தன் மனைவியின்பால் கொண்டிருக்கும் உடைமை, உரிமையைப் பறிப்பதாகும் (லேவி 20:10; உப 22.22தொ). ஆண், பெண்ணைத் தன் உரிமைப் பொருளாகக் கருதினானே தவிர (யாத் 20:17), அவளைத் தன்னோடு அன்பில் இணைந்து ஒன்றாக

வாழும் ஓர் ஆளாகக் கருதவில்லை (ஆதி 2:23தொ). பெண்ணின் இந்த இழிவிற்குக் காரணம் அன்று வழக்கிலிருந்த பலதார மணமாகும். பொதுவாக, காயினின் மரபிலிருந்து வந்தவர்கள் சிலரிடையே இப்பல தார மண வழக்கம் மிகுதியாகக் காணப்பட்டது (ஆதி 4:19-24). இப்பலதார மணம் வழக்கிலே பல ஆண்டுகள் இருந்தது (உப 21:15; காண்க. 17:17; லேவி 18:18). ஆயினும், ஞானிகள் விபசாரத்தின் கொடுமையைக் கடுமையாக எதிர்த்தனர் (பழ 6:24-29; சீரா 23:22-28); இளம் வயதில் மணந்து கொண்ட மனைவியை நேசிக்கும்படி மக்களை ஊக்குவித்தனர் (பழ 5:15-19; மலா 2:14); மேலும், விலைமாதர்களுடன் கொள்ளும் உறவைக் கண்டனம் செய்கின்றனர். ஆயினும், விலை மாதரின் தொடர்பை விப[illegible]ாகக் கருதவில்லை (பழ 23:27; சீரா 9:3[illegible]).

பு[illegible] ஏ[illegible] இயேசு விபசாரத்தில் பிடிப[illegible] பெண்[illegible]த் தம் கருணையால் காப்பாற்றினாலும், அவள் செய்த பாவத்தைக் கண்டிக்கிறார் (யோவா 8:1-11); அதே சமயத்தில் கணவன் மனைவியருக்கிடையே இருக்க வேண்டிய அன்புப் பிணைப்பின் முழுமையை வெளிப்படுத்துகிறார் (மத் 5:27தொ.31தொ; 19:9இணை). இப்பிணைப்பு கணவன் மனைவி இருவரையும் கட்டுப்படுத்துகிறது (மத் 10:11). இது பிரிக்க முடியாததொன்று (19:6); உள்ளார்ந்தது (5:28). விவாக முறிவிற்குப்பின் ஒருவன் அல்லது ஒருத்தி மீண்டும் மணந்து கொண்டால் அது விபசாரமாகும். ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும், ஏற்கெனவே தன்னுள்ளத்தில் விபசாரம் செய்கிறான் (மத் 5:28). விபசாரம் புரிபவனுக்கு இறைவனின் அரசு உரிமையாகாது (1 கொரி 6:9). எனவே, இப்பாவத்தைச் செய்யாதிருக்க அன்பின் வழியைப் பின்பற்றி (உரோ 13:9தொ), பற்றுறுதி கொண்டு வாழ வேண்டும் என்று பவுல் எச்சரிக்கின்றார். இவ்வழியைப் பின்பற்றினால் திருமணத்தின் புனிதத்துவத்தை நாம் காக்கக் கூடும் (எபி 13:4).

2. உடன்படிக்கையும் விபசாரமும்: இறைவனையும் மனிதனையும் நிரந்தர அன்பினால் பிணைக்கும் உடன்படிக்கையைப் பிரிக்க முடியாத திருமணத்திற்கு இறைவாக்கினர்கள் ஒப்பிடுகின்றனர் (ஒசே 2:21தொ; எசா 54:5தொ). ஆகவே, மக்களின் பிரமாணிக்கமின்மை விபசாரமாகக் கருதப்பட்டது (ஒசே 2:4). ஏனெனில், பணத்திற்காக உடலை விற்கும் விபசாரிகளைப் போல் பிற தெய்வங்களின் வழிபாட்டில் இவர்கள் தங்களை அர்ப்பணிக்கின்றனர் (ஒசே 2:7; 4:10; எரே 5:7; 13:27; எசா 57:3; எசே 23:43தொ).

இயேசு அவிசுவாசத்தைக் கண்டிக்கும் பொருட்டு இவ்வுருவகத்தைப் பயன்படுத்துகிறார். அவரில் விசுவாசங்கொள்ளத் தயங்குபவர்களையும், அருங்குறி கேட்பவர்களையும், அவரைப் பற்றியும் அவரது வார்த்தையைப் பற்றியும் வெட்கப்படுகிறவர்களையும் 'கெட்டுப்போன விபசாரத் தலைமுறை' என அழைக்கிறார் (மத் 12:39; 16:4; மாற் 8:38). இத்தகைய கண்டனங்கள் மனிதன் இறைவனுக்கு முற்றிலும் பிரமாணிக்கமாயிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இப்பிரமாணிக்கம் அன்பின் நிபந்தனையும் விளைவுமாகும். காண்க. வாழ்க்கைத்துணை.

வியர்வை (SWEAT)

இயேசு கெத்சமனித் தோட்டத்தில் செபித்த போது வானதூதர் தோன்றி ஆறுதல் கூறினார் என்றும், ''அவருடைய வியர்வை பெரும் இரத்தத் துளிகளாக நிலத்தில் விழுந்தது'' என்றும் லூக் 22:43-44 கூறுகின்றது. ஆனால், இந்தப் பகுதி மற்ற நற்செய்தியில் காணப்படவில்லை. இன்னும் பல கையெழுத்துப் படிவங்களில் காணப்படாததால் இப்பகுதி ஏற்றுக்கொள்ளப்படாத பகுதியாகக் கருதப்படுகிறது.

''இரத்தத்துளிகளைப் போல'' என்பது தெளிவாக இல்லை. இந்தச் சொற்கள், அவருடைய வியர்வை இரத்தம் உறைவதைப் போல, பெரிய துளிகளாக வெளிவந்தன என்றும், இரத்தமே வியர்வையாகக் கசிந்து வெளிவந்தது என்றும் பொருள்

படும். இரத்தமே வியர்வையாகக் கசிந்து வெளிவரும் நிகழ்ச்சிக்கு ஏட்டுச் சான்றுகள் உள்ளன. இயேசுவின் வேதனையின் கடுமையைக் குறித்துக் காட்ட ஆசிரியர் இந்தச் சொற்களை ஒருவேளை உருவகமாகப் பயன்படுத்தி இருக்கலாம். ஏனெனில், கடும் வேதனையில் வியர்ப்பது என்பது இயல்பாகும்.

விரற்கடை (HAND BREADTH)

இஃது ஒரு நீட்டல் அளவையாகும். கையில் விரல்கள் உள்ள பகுதியின் அகலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. ஏறக்குறை மூன்று அங்குலம் அல்லது 7.5 செ.மீ. அகலமாகும் *(எ.கா. 1 அர 7:26; 2 நாள் 4:5)*. பொதுவாக, ஆறு விரற்கடைகள் அகலம் ஒரு முழமாகும். ஆனால், எசேக்கியேலின் முழம் ஒரு விரற்கடையை அதிகமாகக் கொண்டிருந்தது *(எசே 40:5)*. இவ்வாறு அளப்பது எகிப்தில் நிர்ணயிக்கப்பட்ட பொது அளவையாகும்.

விரியன் பாம்பு (VIPER)

மிகவும் நஞ்சுள்ள ஒரு பாம்புக் குடும்பத்தைச் சேர்ந்தது. விவிலிய நாட்டில், பாலஸ்தீன வகையைச் சார்ந்த விரியன்கள் காணப்படுகின்றன. அ.ப. 28-இல் கூறப்படுவது, மத்திய தரைக்கடல் நாடுகளில் காணப்படும் விரியன் பாம்பு வகையாகும். ''விரியன் பாம்புக்குட்டிகளே'' என்பது (மத் 3:7; 12:34; 23:38; காண்க. லூக் 3:7) ஒரு வசைமொழியாகும். திருமுழுக்கு யோவானும் இயேசுவும் தங்கள் எதிரிகளைச் சரியாக விவரிக்க இச்சொற்றொடரைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது.

விரியன்பாம்பு தீமையையும், தீயவர்களையும் அடையாளமாகக் குறிக்கின்றது (சங் 140:3; எசா 30:6; 59:5). விரியன் பாம்பின் நாக்கு நஞ்சுடையது என்ற பழங்காலத் தவறான கருத்தை யோபு 20:16 எடுத்துக் கூறுகிறது.

விருத்தசேதனம் (CIRCUMCISION)

I. **விருத்தசேதனம்** என்றால் சுன்னத்துச் செய்வது; அதாவது, ஆண் குறியின் நுனித் தோலைச் செதுக்கல். ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களில் வாழும் ஆதிக் குடியினரிடையே இப்பழக்கம் பரவி நிலவியிருந்தது. எகிப்தியர் வழியாக இஸ்ராயேலரிடையே இப்பழக்கம் புகுந்திருக்க வேண்டும். இஃது எவ்வளவு தொன்மை மிக்கது என்றால், இச்சடங்கை நிறைவேற்றக் கத்திக்குப் பதிலாகத் தீக்கல் அல்லது சக்கிமுக்கிக் கல்லைப் பயன்படுத்தினர் *(யாத் 4:25; யோசு 5:2)*. மக்களின் சிலரிடையே ஆண்களுக்கும், பெண்களுக்கும் இச்சடங்கு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. ஒருவேளை இசடங்கு குறிப்பிட்ட ஒரு சமயச் சமூகத்துள் சேர்க்கும் ஒரு சடங்காக இருந்திருக்கலாம். சிலவேளைகளில் கருதப்பட்டது போல், இச்சடங்கு மருத்துவ நோக்கத்தோடோ, உடல்நலத்திற்காகவோ செய்யப்படவில்லை. புற இனத்தவரிடையே இது பருவமடையும் காலத்தில் செய்யும் சடங்காகும். குழந்தைப் பருவத்திலிருந்து இளமைப் பருவத்திற்குப் புகுத்தும் ஒரு சடங்காகும். திருமணத்திற்குத் தயாரிப்பாகவும் இது கருதப்பட்டிருக்கலாம். ஆகையால், இச்சடங்கு இரு பாலருக்கும் பருவமடையும் காலத்தில் செய்யப்பட்டது.

இப்பழக்கம் இஸ்ராயேலரிடையே எப்படிப் புகுந்தது என்று கூற முடியாது. யூதர்களிடையே இச்சடங்கு ஆண்களுக்கு மட்டும் செய்யப்பட்டது. அதுவும் குழந்தை பிறந்த எட்டாம் நாளே செய்யப்பட்டது *(லேவி 12:3; ஆதி 17:12)*. ஆகையால், இஃது ஒரு பருவகாலச் சடங்கன்று. தொடக்கத்திலிருந்தே இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையின் நியமனமாகக் கருதப்பட்டது *(ஆதி 17:6-14; அ.ப. 7:8)*. ஆபிரகாமின் வழியில் வந்த யாவரும், வீட்டுப் பிள்ளைகளோ, அடிமைகளோ யாவரும், இச்சடங்கிற்கு உட்பட வேண்டும்.

II. *பழைய ஏற்பாடு:*

*1. **விருத்தசேதனம் ஒரு சமூகத்தின் உறுப்பினனாவதன் அடையாளம்:*** ஒருவன் வயது வந்தவர்களின் சமூகத்தில் ஒருவனாகிறான்.

திருமணம் செய்யத் தயாராகி விட்டான் என்பதைக் குறிக்கும் ஒரு பழக்கமாகவே விருத்தசேதனம் இருந்து வந்திருக்கிறது. இஸ்ராயேல் இதை ஒரு மிகத் தொன்மை யான பழக்கமாகப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், கல்லால் ஆன கத்தி பற்றிப் பேசப்படுகிறது (யாத் 4:24தொ; யோசு 5:2-9). விருத்தசேதனம் ஓர் ஏற்றுக்கொள் ளப்பட்ட உண்மையாக இருந்தது. எனவே, அதைப் பற்றி விவாதிப்பதோ, நியாயப் படுத்துவதோ இல்லை. ஆனால், பின்னர் விருத்தசேதனம் செய்து கொள்ளாதது அவ மானத்துக்குரியதாகக் கருதப்பட்டது (யோசு 5:9; ஆதி 34:14). இஸ்ராயேலர்கள் விருத்த சேனம் செய்யப்படாதவர்களைப் பார்க் கவே சம்மதிக்கவில்லை, வெறுத்தொதுக்கி னர் (1 சாமு 17:26.36; நீதி 14:3; 1 நாள் 10:4; அ.ப. 2:16; எசே 14:7தொ). ஏனெ னில், விருத்தசேதனம் செய்யப்படாதவன் மனிதனே அல்லன். இவ்வாறு விருத்தசேத னம் என்பது ஒருவன் ஒரு சமூகத்தின் உறுப்பினனாவதைக் குறிக்கும் அடையாள மாக இருந்தது.

2. விருத்தசேதனம் உடன்படிக்கையின் அடையாளம்: இந்தச் சடங்கிற்குச் சமயப் பொருள் கொடுக்க வேண்டியிருந்தது. ஏனெனில், இது கடவுளால் (யோசு 5:2), இதனை நிறைவேற்றாவிடின் கடவுளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்ற எச்சரிக்கையோடு இடப்பட்ட கட்டளை ஆகும் (யாத் 4:24). குருக்களின் பாரம்பரி யத்தில் ஒவ்வொரு இஸ்ராயேலனும் உடன் படிக்கையின் அடையாளமாக தன் உட லில், பிறந்த எட்டாவது நாளில் இருந்து சுமக்க வேண்டிய அடையாளம் என இது வலியுறுத்தப்படுகிறது. விருத்தசேதனத்தில் சிந்தப்படும் இரத்தம் (காண்க. யாத் 4:26) பிந்தைய யூதமதத்தில் உடன்படிக்கையின் இரத்தம் என அழைக்கப்படுகிறது.

விருத்தசேதனம் அனைத்து மக்களின் தந்தையாகிய ஆபிரகாமுடன் தொடர்பு கொண்டது (ஆதி 17:9.14; 21:4). இது சட்டத்தாலும் கட்டளையிடப்பட்டது (லேவி 12:3). ஓர் இஸ்ராயேலன் பாஸ்கா விழாவில் பங்கு பெறும் உரிமையை இதன் மூலம் மட்டுமே பெறமுடியும். ஏனெனில், இதில் இஸ்ராயேல் யாவே கடவுளால் மீட்டு விடுதலை பெற்றது உறுதிப்படுத்தப் படுகிறது (யாத் 12:44.48). இதைத் தடுத்துப் புறவினத்தார் துன்புறுத்தியபோது (1 மக் 1:48), யூதர்கள் தாமே முடிவு செய்து கொள்ளும்படி இது விடப்பட்டது. ஒரு சிலர் விருத்தசேதனத்தை மறைக்க முயன்ற னர் (1:15); வேறு சிலர் தங்கள் உயிரையும் பணயம் வைத்துத் தங்கள் குழந்தைகட்கு விருத்தசேதனம் செய்தனர் (1:60; 2 மக் 6:10); மேலும், தயங்குபவர்களைக் கட்டா யப்படுத்தி விருத்தசேதனம் செய்து வைத்த னர் (1 மக் 2:46).

3. இதயத்தின் விருத்தசேதனம்: உடன் படிக்கையில் வாக்களிக்கப்பட்ட நலன் களைப் பெற்றுக்கொள்ள விருத்தசேதனம் ஒன்றே போதுமென இஸ்ராயேல் நினைக்க லாம். உடலில் நிகழும் விருத்தசேதனம் மக்கள் பலரால் செய்யப்படுகிறது. எனவே, அதற்கு எம்மதிப்பும் இல்லை என்று மிகத் தெளிவாகக் கூறியவர்களில் எரேமியா முத லானவராவார் (எரே 9:24). அதிகம் பயன் படுத்தப்பட்ட உருவகத்தின்படி (எரே 6:10; லேவி 19:23), இதயத்தின் நுனித்தோல் அகற்றப்படுவதே முக்கியம் என்கிறார் (எரே 4:4). உபாகம ஆசிரியரும் இதயத்தின் விருத்தசேதனத்தை வலியுறுத்தி அது யாவே மேல் மட்டுமே கொள்ளும் மாறாத அன்பி லும், சகோதர அன்பிலும் வெளிப்பட வேண்டுமென்கிறார் (உப 10:12-22). இந்த அழைப்பைக் குருக்கள் பாரம்பரியம் குருத் துவ மரபில் பிரதிபலிக்கின்றது (லேவி 26:41; எசே 44:7). இத்தகைய இதயத்தின் விருத்தசேதனத்தை இஸ்ராயேல் தானே விரும்பி அடைய முடியாது. அதனை மீட்பின் நாளில் இறைவனே அவர்களுக்குக் கொடுப்பார். ''ஆண்டவர் உன் உள்ளத்தைப் பண்படுத்துவார். அதனால், உன் கடவுளாகிய ஆண்டவர் மீது நீ... அன்பு கூர்வாய். அப்போது நீயும் வாழ்வு பெறுவாய்'' (உப 30:6). இதே அருளுரை யில் (30:12) பவுலும் அருளாலும் விசுவாசத்

தாலும் வரும் மீட்பைப் பற்றிய அறிவிப்பைச் சரியாகக் கண்டுகொள்கிறார் (உரோ 10:6தொ).

III. புதிய ஏற்பாடு:

1. விருத்தசேதனப் பழக்கம்: திருமுழுக்கு யோவானைப் போல இயேசுவுக்கும் விருத்தசேதனம் செய்யப்பட்டது (லூக் 1:59; 2:21). அவருடைய சீடர்களைப் போலவே விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களின் பணிக்குத் தன்னைத் தந்தவர்களில் அவரே முதல்வர் (உரோ 15:8; மாற் 7:27). ஆனால், அவருடைய நற்செய்தி பல நாடுகளிலும் அறிவிக்கப்பட வேண்டும் (உரோ 15:9-12). அப்படியென்றால் ஆபிரகாமின் வழித் தோன்றல்களுக்கான விருத்தசேதனச் சடங்கை எல்லோரும் செய்து கொள்ள வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. அடிக்கடி நிகழ்வது போன்று கொள்கையளவிலான பதிலுக்குள், செயல் முறையான பதில் கிடைக்கிறது. சில இடங்களில் மனம் மாறிய புறவினத்தார்கள் விருத்தசேதனம் பெற வேண்டிய கட்டாயம் இல்லாமலேயே திருமுழுக்குப் பெற்றனர் (அ.ப. 10-11). யூதக் கிறிஸ்தவர்களின் வற்புறுத்தலையும் கண்டு கொள்ளாமல் எருசலேம் சங்கம் விருத்தசேதனமின்றி திருமுழுக்குப் பெறலாம் என்ற சட்டத்தை உருவாக்கியது. இது பேதுருவின் காட்சியை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது (அ.ப.10:45); ஏற்கெனவே வழக்கில் இருந்திருக்கிறது (அ.ப.15).

இந்த முடிவு ஒரு நடைமுறை சார்ந்த முடிவாக இருந்திருக்கலாம். ஏனெனில், புறவினத்தார் இதனை ஓர் உடல் சிதைவாகக் கருதி அதை வெறுத்திருக்கலாம். ஆனால், இந்த முடிவு ஒரு கோட்பாட்டு முக்கியத்துவம் கொண்டது. இத்தகைய இடுக்கண் நிலையைப் பவுல் கலாத்தியாவில் எதிர்கொண்டார். அவரது விளக்கத்தின்படி, விருத்தசேதனம் செய்யப்படாத புறவினத்தவர் கடவுளை விட்டு வெகு தொலைவில் இருந்தனர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது (காண்க. கொலோ 2:13). ஆனால், அவனுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டால் சட்டத்தின் முழுச்சுமையும் அவன் தாங்கியாக வேண்டும். அது யாருக்குமே சாத்தியப்படாது (கலா 3:2; 5:10; 6:13). எனவே, இரண்டு வகையிலும் அவன் அழிவை நோக்கியே போகிறான். மேலும், மீட்பைப் பெறுவதற்கு விருத்தசேதனம் ஒரு நிபந்தனையென்றால் விருத்தசேதனம் பெறுவதற்கு முன்னரே கடவுள் தாமாக ஆபிரகாமுக்கு அளித்த மீட்பின் வாக்குறுதி பயனற்றதாகிறது. ஏற்கெனவே கடவுளின் வாக்குறுதியும், ஆபிரகாமின் விசுவாசமும் தந்த நீதியின் முத்திரையாக பிற்காலத்தில் விருத்தசேதனம் அமைந்தது; அதன் ஊற்றாக அன்று (கலா 3:6 29; உரோ 4:9-12). விருத்தசேதனம் அவசியமென்றால் கடவுளின் வாக்குறுதியை நிறைவேற்றி மீட்கும் கிறிஸ்துவின் சிலுவையும் மதிப்பற்றதாகிறது (கலா 5:11தொ)

2. ஆன்மீக விருத்தசேதனம்: எனவேதான் இறைவாக்கினர்கள், இனப்பிரிவை உருவாக்கும் விருத்தசேதனத்தை விட்டு விட்டு அனைவரையும் ஒன்றிணைக்கும் இதயத்தின் விருத்தசேதனத்துக்கு, புறச்சடங்கின் உள்ளார்ந்த உறுதிசெய்தலுக்கு அழைப்பு விடுக்கின்றனர். ''விருத்தசேதனமும் பயனற்றது, விருத்தசேதனமின்மையும் பயனற்றது. ஒன்றும் செய்ய இயலாது. தேவைப்படுவது அன்பின் வழியாய்ச் செயலாற்றும் விசுவாசமே'' என்றும் பவுல் கூறுகிறார் (கலா 5:6). ''புதிய படைப்பாவதே'' முக்கியம் (கலா 6:15). இதை ஆண்டவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதால் ஒருவன் அடையலாம் (1 கொரி 7:19). ஒருவன் அழைக்கப்படுவதற்கு முன்னால் உள்ள நிலை எந்த மாற்றத்தையும் விளைவிப்பதில்லை. ஏனெனில், அவன் எத்தகையவனாயினும் விசுவாசம் அவனை ஏற்புடையவனாக்குகிறது. ஏனெனில், கடவுள் அனைவருக்கும் கடவுள் ஆவார் (உரோ 3:29). கிறிஸ்துவே அனைவரிலும் அனைத்துமாவார் (கொலோ 3:11).

விருத்தசேதனச் சடங்கு நீக்கப்பட்டாலும், அந்தச் சொல் பொருள் தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ''நாமே உண்மை

யான விருத்தசேதனம் பெற்றுக் கொண்டவர்கள். நாமே கடவுளின் ஆவிக்கேற்ப உண்மை வழிபாடு செலுத்துகிறோம்'' (பிலி 3:3). இவ்வாறு இறைவாக்குகள் எல்லாம் உண்மையாயின. விருத்தசேதனம் என்பது உள்ளார்ந்ததும், ஆன்மீகம் சார்ந்ததும், மறைவாக உள்ளதுமாய் இருக்க வேண்டுமென்பது நிறைவேறிவிட்டது (உரோ 2:28தொ). இது மனிதக்கரங்களால் செய்யப்படுவதன்று (கொலோ 2:11). விருத்தசேதனம் திருமுழுக்கை ஒத்தது. ஏனெனில், ''பாவத்திற்கான உடலைக் களைந்துவிட்டு'' (கொலோ 2:11), ''கிறிஸ்துவில் உண்டான விருத்தசேதனத்துக்கு'' விசுவாசியைத் திருமுழுக்கு ஒன்றிணைக்கிறது. இது கிறிஸ்துவோடு என்றும் இணைந்து வாழ அழைத்துச் செல்கிறது.

விருந்தாளி (GUEST)

விருந்துக்கு அல்லது அதற்கு நிகரான ஒன்றுக்கு, அழைக்கப்பட்ட ஒருவர் (1 அர 1:41.49; பழ 9:18; செப் 1:7; மத் 22:10-11) அல்லது தங்க இடமளிக்கப்பட்ட ஒருவர் (லூக் 19:7). மாற் 14:14; லூக் 22:11-இல் குறிக்கப்படும் விருந்து உண்பதற்கான அறையையும், லூக் 2:7-இல் குறிக்கப்படும் விடுதியையும் குறிக்க ஒரே கிரேக்கச் சொல் பயன்பட்டுள்ளது.

விருந்து (BANQUET)

விவிலிய வரலாற்றுக் காலத்தில் திராட்சை ரசமும் மற்ற விலையுயர்ந்த வளமான உணவுகளும் உண்பதுதான் விருந்தின் சிறப்பான கூறாகும். ஆமோஸ் நல்ல ஒரு விருந்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார். விருந்தினர்கள் தந்தத்தாலான கட்டிலில் பஞ்சணைமீது சாய்ந்திருப்பர். கிடையிலிருந்து ஆட்டுக்குட்டிகளையும், மந்தையிலிருந்து கொழுத்த கன்றுகளையும் சாப்பிடுவர்; வீணையொலி எழுப்பி அலறித் தீர்க்கிறார்கள்; கோப்பைகளில் திராட்சை ரசம் குடிக்கிறார்கள்; உயர்ந்த நறுமண எண்ணெய் தடவிக் கொள்கிறார்கள் (ஆமோ 6:4-6). விருந்து பல்வேறு சூழ்நிலைகளில் நடைபெற்றது.

1) விருந்தினர் வரும்பொழுது (ஆதி 19:3), 2) பிறந்த நாள் விழாவின்போது (ஆதி 40:20; மத் 14:6), 3) குழந்தை பால்குடி நிறுத்தும் நாள் (ஆதி 21:8), 4) ஆடுகளுக்கு மயிர்க்கத்தரித்த பிறகு (1 சாமு 25:11; 2 சாமு 13:23), 5) திராட்சைப் பழ அறுவடையின்போது (நீதி 9:24), 6) பொதுக் கட்டடத்தின் வேலை முடியும் பொழுது (2 நாள் 7:8), 7) ஓர் ஒப்பந்தம் உறுதி செய்யப்படும்பொழுது (ஆதி 26:30; 31:54), 8) திருமணத்தின்போது (நீதி 14:16) என்றிவ்வாறு பல நிலையில் விருந்து நடைபெற்றது. எஸ்தர் நூலில் ஐந்து தனி விருந்துகள் விவரிக்கப்படுகின்றன.

விருந்து உண்பதற்கான அறை (GUEST ROOM)

இஃது இயேசுவும் அவருடைய சீடர்களும் கடைசி இரவுணவை உண்ட இடத்தைக் குறிக்கும் (மாற் 14:14; லூக் 2:11). இதைக் குறிக்கும் அதே கிரேக்கச் சொல்லைச் சத்திரம் அல்லது விடுதியைக் குறிக்க லூக் 2:7 பயன்படுத்துகிறது.

இது பெரிய அறையாக இருக்கலாம். இங்கே பயணியர் தூங்கலாம். இங்குக் குறிப்பிடப்படுவது போல், இது பாஸ்கா விழாத் திருப்பயணியர், பாஸ்கா உணவை உட்கொள்வதற்காக கடன் வாங்கிய அல்லது வாடகைக்கு எடுத்த இடமாகும். ஆகவே, இது தற்காலிகமாகத் தங்கும் இடமாகும்.

விருந்தோம்பல் (HOSPITALITY)

1. விருந்தோம்பல், ஓர் இரக்கத்தின் பணி: தேவையான உறைவிடத்தைக் கேட்கின்ற கடந்து செல்லும் வழிப்போக்கர் (பழ 27:8; சீரா 29:21-22), அடிமைப்படுத்தப்பட்ட அன்னியராக இருந்த முந்தைய நிலையை இஸ்ராயேலுக்கு நினைவுபடுத்துகிறார் (லேவி 19:33தொ; காண்க. அ.ப. 7:6). உலகப்பயணியைப் போன்ற அதனுடைய நிகழ்கால நிலையினையும் அது நினைவுபடுத்துகிறது (சங் 39:13; காண்க. எபி 11:13; 13:14). அவரை அன்பு செய்கின்ற இறைவனின பெயரால் இந்த விருந்தாளி

வரவேற்கப்பட்டு அன்புடன் நடத்தப்பட வேண்டும் (உப 10:18-19). அவனது பாது காப்புப் பற்றிய சூழலில் எவ்வளவு உயரிய தியாகமும் மறுக்கப்பட மாட்டா (ஆதி 19:8; நீதி 19:23). அல்லது எதிர்பாராத விருந்தாளியின் தேவைகளைத் திருப்திப் படுத்த தனது நண்பர்களுக்கு இடையூறு ஏற்படுத்தவும் ஒருவன் தயங்குவதில்லை (லூக் 11:5-6). ஆபிரகாமை மாதிரியாகக் கொண்டதும் (ஆதி 18:2-8), யோபு பெருமை கொள்வதும் (யோபு 31:31-32), கிறிஸ்துவால் அங்கீகரிக்கப்பட்டதுமான (லூக் 7:44-46) இந்த ஆர்வமிக்க சமய வரவேற்பானது, மற்றவர்களுக்கான தனது கடமையைப் பற்றி கிறிஸ்தவனை அறியச் செய்கிற சகோதர அன்பின் ஒரு கூறாகும் (உரோ 12:13; 13:8).

2. விருந்தோம்பல், விசுவாசத்திற்கான சாட்சியம்: இறுதித் தீர்ப்பின்போது, அன் பின் ஒரு வடிவமாகிய இந்த விருந்தோம் பலின் மறைபொருளை இயேசு ஒவ்வொரு வருக்கும் வெளிப்படுத்துவார். தனக்குரிய வர்களிடம் கிறிஸ்து வந்ததைப் போன்று விருந்தினரிலும் விருந்தினர் மூலமாகவும் கிறிஸ்து வரவேற்கப்படுகிறார் அல்லது விரட்டப்படுகிறார்; அறிந்து கொள்ளப்படு கிறார் அல்லது அறிந்து கொள்ளப்படுவ தில்லை (மத் 25:35.43). அவரது பிறப்பின் போது மட்டும் சத்திரத்தில் அவருக்கு இடம் இருக்கவில்லை (லூக் 2:7). அவரது வாழ்வின் இறுதிவரை உலகம் அவரை அறிந்து கொள்ளவில்லை; அவருக்குரியவர் கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவா 1:9-11). அவரில் விசுவாசங்கொள் வோர் ''அவரது பெயரால்'' அவரது பிரதிநிதிகளையும் (13:20), மிகத்தாழ்மையா னோர் உட்பட அனைத்து மனிதரையும் வரவேற்கின்றனர் (லூக் 9:48). ஒவ்வொரு விருந்தாளியிலும் ஆண்டவரது பிரதிநிதி யையோ, ''வான தூதரையோ'' (ஆதி 19:1-3) மட்டும் பார்க்காமல், ஆண்ட வரையே காண்கின்றனர் (மத் 10:40; மாற் 9:37).

எனவே, விருந்தாளியைக் கடனாளி யாகவோ (சீரா 29:24-28), வரவேற்கப் படக்கூடாதவராகவோ, நம்பக்கூடாதவ ராகவோ (1 பேதுரு 4:9) நடத்தாமல், அளிக்கப்பட்ட உதவிகளுக்குப் பிரதிபலன் அளிக்க இயலாதவர்களைப் பேரின்பத்து டன் வரவேற்க வேண்டும் (லூக் 14:13). ஒவ்வொரு கிறிஸ்தவனும் (1 திமொ 5:10) சிறப்பாக மறை ஆயரும் (1 திமொ 3:2; தீத் 1:8) தனது வாயில் கதவைத் தட்டுபவ ருக்குத் (காண்க. திருவெளி 3:20) தன்னு டைய உறைவிடத்தை அளித்துத் தனது தந்தையுடன் வந்துள்ள இறைமகனைக் காண வேண்டும் (யோவா 14:23). இதற்குப் பிரதிபலனாக இந்த இறைவிருந்தாளிகள் அவனைத் தங்களுடைய இல்லத்திற்குள் விருந்தாளியாக இல்லாமல் வீட்டின் குழந் தையாக அறிமுகப்படுத்துவர் (யோவா 14:2-3; எபே 2:19). தனது மறு வருகையின் போது கதவைத் தட்டுகின்ற தலைவனுக்கு வாயிலைத் திறக்கின்ற விழிப்பான ஊழியர் கள் பேறுபெற்றோர். அவர் நிலைகளை மாற்றி, மேசையில் பரிமாறுவதன் மூலமாக வும் (லூக் 12:37), தனது உணவைப் பங்கிடுவதன் மூலமும் (திருவெளி 3:20) விருந்தோம்பலின் மறைபொருளை வெளிப்படுத்துவார்.

விரைவு அஞ்சலர் (COURIER)

நிலம் வழியாகவும், கடல் வழியாகவும் பயணம் செய்த ஓர் அரச தூதுவன் (2 நாள் 30:6.10; எஸ்த 3:13). பழங்காலப் பாரசீகர்கள், உரோமையர்கள், மற்றும் எல்லா நாகரிகமடைந்த மக்களும் அரசனிட மிருந்து அல்லது பேரரசனிடமிருந்து மற்ற இடங்களுக்குச் செய்திகளை விரைவில் கொண்டு செல்ல நன்றாக அமைக்கப்பட்ட செய்தித்துறையை வைத்திருந்தனர்.

விலக்கி வைத்தல், ஒதுக்கி வைத்தல் (BAN, EXCOMMUNICATION)

1. இது குழு அல்லது சமூகத்தின் தோழ மையிலிருந்து ஒருவரை விலக்கி வைத்தல் அல்லது புறம்பாக்குதல் ஆகும். இது கோட்பாட்டுத் தவறு அல்லது ஒழுக்கத்

தவறுக்காக தற்காலிகமாகவோ, நிலையா கவோ ஒருவருக்குத் திருச்சபை அளிக்கும் தண்டனையாகும். இஃது அருட்சாதனங்களி லிருந்தும் திருச்சபையிலிருந்தும் ஒருவரை விலக்கி வைப்பதாகும். இது புதிய ஏற் பாட்டுத் திருச்சபை நடைமுறையிலிருந்து, பிற்காலத் திருச்சபையில் வளர்ச்சியடைந்த ஒரு மரபு.

II. *பழைய ஏற்பாடு:* வழிபாட்டு விதி களை மீறியதற்காக, தற்காலிகமாக வழி பாட்டுச் சடங்கிலிருந்து நீக்கப்படுவது, இஸ்ராயேலின் வழிபாட்டுச் சட்டத்தில் காணப்படுகிறது. பாஸ்காவின் காலத்தில் புளித்த உணவை உட்கொள்ளுதல் (யாத் 12:15.19), கொல்லப்பட்ட விலங்குகளைச் சந்திப்புக் கூடாரத்தின் வாயிலுக்குக் கொண்டு வரத்தவறுவது (லேவி 17:4.9), சடங்குத் தூய்மையின்மையிலிருந்து தன் னையே தூய்மைப்படுத்தத் தவறுவது (எண் 19:20) போன்ற பெரிய சடங்குக் குற்றங்க ளுக்குத் தண்டனை இஸ்ராயேல் சமூகத்திலி ருந்து முழுவதும் நீக்கப்படுவதாகும்.

விலக்கி வைத்தல் என்ற அச்சுறுத்தல், முதன் முதல் எஸ்ரா காலத்தில் தோன்றுகி றது. எஸ்ரா கலப்பு மணத்திற்கு எதிராகப் போராடினார். கலப்புத் திருமணம் செய்த வர்கள் எருசலேமுக்கு வந்து விளக்கம் தர அழைக்கப்பட்டனர். அதற்கு வர மறுத்தவர் களுடைய உடைமைகள் பறிமுதல் செய்யப் படும்; மக்களிடமிருந்து விலக்கி வைக்கப் படுவர் (எஸ் 10:8). இது முற்றிலும் பிரித்து வைக்கப்படும் முற்கால வழக்கிலிருந்து சிறிது மட்டுப்படுத்தப்பட்டதாகும். முற் கால வழக்கு தவறு செய்தவரின் மரணத்தை யும், அவருடைய உடைமைகள் அழிக்கப் படுதலையும் உள்ளடக்கும் (லேவி 27:28-29).

III. *புதிய ஏற்பாட்டுக்காலம்:*

அ) யூதர்களிடையே: புதிய ஏற்பாட்டுக் காலத்தில், சாதாரணமாகப் பெரிய சமய அல்லது ஒழுக்கக் குற்றங்களுக்காக செபக் கூடத்திலிருந்து விலக்கிவைத்தல் யூதர்களி டையே வழக்கில் இருந்தது. கடுமை குறைந்த அளவில், ஒருவர் தண்டனையாக, முப்பது நாட்களுக்குப் பிறரோடு பேசுவதி லிருந்து தடுக்கப்படலாம். வரையறையற்ற காலத்திற்குச் சமயச் சலுகைகளிலிருந்து விலக்கி வைப்பதற்குப் பத்துப் பேராவது தீர்மானிக்க வேண்டும். இது கடுமையான வடிவமாகும். மூன்றாவது வடிவமான முழுவதும் விலக்கி வைப்பது பற்றி அறி ஞர்களிடையே கருத்தொற்றுமையில்லை.

லூக் 6:22-இல் பயன்படுத்தப்பட்டிருக் கும் மூன்று வேறுபட்ட சொற்கள் யூதரி டையே நிலவிய மூன்று வகையான விலக்கி வைத்தல்களைப் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. கும்ரான் சமூகத்தில், வெவ் வேறு குற்றங்களுக்கு, வேறுபட்ட காலங்க ளுக்கு உறுப்பினர்கள் தண்டிக்கப்படுவார் கள். இந்தத் தண்டனைகள் எப்போதும், குறிப்பிடப்பட்டே இருப்பதில்லை. புனித உணவிலிருந்தும் (தூய்மை), சமூகத்தோ டான முழு ஒன்றிப்பிலிருந்தும் சில காலங் களுக்கு விலக்கப்படுவது ஒரு வகையான தண்டனையாகும். தலைவர்களுக்கு எதி ராகச் சபிப்பது அல்லது அவதூறு பேசுவது போன்ற குற்றத்திற்கு விலக்கப்படுவ துண்டு. அஃதோடு மீண்டும் சேர்த்துக் கொள்வதும் கிடையாது. விலக்கப்பட்ட ஒருவர் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட, இரண்டு வருடங்களாவது வேண்டும். பத்து வருடமாகப் பிரிந்து இருக்கின்றவனோடு, புனித உணவைப் பகிர்ந்து கொண்டவனும், நிரந்தரமாக ஒதுக்கி வைக்கப்படுவான். புதிய ஏற்பாட்டுக் குறிப்புகளின்படி, இயேசு வைக் கிறிஸ்துவாக ஏற்று அறிவிப்பவர் கள், செபக்கூடத்துக்குப் புறம்பாக்கப்பட்ட னர் (யோவா 9:22; 12:42; 16:2). இது யூதர்களிடையே இருந்த பழக்கத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தப் புறம்பாக்குத லால் எல்லாச் சமூக, சமய ஒன்றிப்பிலிருந் தும் வெளியேற்றப்பட்டனர்.

ஆ) கிறிஸ்தவச் சமூகத்தில்: ''பாதிக்கப் பட்ட சகோதரன், முதலில் நேரடியாகச் சென்று, கண்டித்துப் பார்க்க வேண்டும். அவன் செவிசாய்க்காவிடில், இரண்டு அல் லது மூன்று சாட்சிகள் மூலம் போக வேண்டும். அதுவும் முடியவில்லை என்

றால் திருச்சபையாரிடம் சொல்ல வேண்டும்: அப்படியும் இல்லையென்றால் புற இனத்தான் போல ஆகட்டும்'' என்று உள்ளது (மத் 18:15-17). இது யூத நடைமுறைக்கு ஒத்து உள்ளது. மேலும், கும்ரான் பிரிவின் விதிகளுக்கு அப்படியே பொருந்தியிருக்கிறது. இது மத்தேயு நற்செய்தி எழுதும்போது இருந்த யூதக் கிறிஸ்தவப் பழக்கத்தை நன்கு பிரதிபலிக்கிறது.

கிறிஸ்தவ விலக்கி வைத்தலின் தோற்றதனை மத் 16:19; 18:18 (காண்க. யோவா 20:23) போன்ற பகுதிகளிலிருந்து காணலாம். இந்தக் கூற்று திருச்சபை கட்டுவதும், அவிழ்ப்பதும் ஆகிய அதன் ஆன்மீக அதிகாரத்தைக் குறித்துக் காட்டுகிறது.

பவுல், திருச்சபைகளின் ஒழுக்கப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும்போது, திருச்சபையில் அமைதியை நிலைநாட்ட அல்லது மீண்டும் அமைக்க, சில சமயங்களில், விலக்கிவைத்தலைக் கையாள வேண்டியிருந்தது. உழைக்க மறுத்த தெசலோனிக்கேயருக்கு உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது என்று கட்டளை கொடுத்துள்ளார் (2 தெச 3:10). இம்மாதிரி தண்டனைகள் கும்ரான் சமூகத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தது. பவுல், தன் கடிதத்தில் சொல்லியவற்றுக்கு யாராவது கீழ்ப்படியாவிட்டால், ''அவனுக்கு வெட்கமுண்டாகும்படி, சபையில் அவன் பெயரைக் குறிப்பிட்டு அவனோடு உறவு வைத்துக்கொள்ளாதீர்கள்'' என்று தெசலோனிக்கேயருக்கு எழுதியுள்ளார் (2 தெச 3:14-15). ஆனால், முக்கியமான பெரிய குற்றங்களுக்காக, ''தீயவனை உங்களிடையேயிருந்து களைந்தெறியுங்கள்'' (1 கொரி 5:13) என்றும் கூறியுள்ளார். மேலும், ''ஒருவன் தன் தந்தையின் மனைவியை வைத்திருக்கிறானாம். இச்செயல் செய்தவனை உங்களிடையேயிருந்து அகற்றி விட்டிருக்க வேண்டும். அத்தகையவனைச் சாத்தானுக்குக் கையளிக்க வேண்டும்'' என்று எழுதியுள்ளார் (1 கொரி 5:1-5). மேலும், இப்பகுதியில் ''அவனது உடல் அழிவுற்றாலும், அவனது ஆன்மா ஆண்டவரின் நாளில் மீட்படையும்படி இவ்வாறு செய்வோம்'' என்று எழுதப்பட்டிருப்பது, தெளிவற்ற நிலையில் உள்ளது. பிறகு, பவுல் தனது இரண்டாவது கடிதத்தில் ''அவனை மன்னித்து அவனுக்கு ஊக்கம் அளிப்பது நல்லது'' என்று கூறுவது (2 கொரி 2:6-11) மேற்கண்ட குற்றத்தைச் செய்தவனைப் பற்றித்தானா என்பது தெளிவாக இல்லை. பலரால் தண்டனை அளிக்கப்பட்டது. இது பவுலின் கருத்துப்படி மனந்திரும்பவும், சமூகத்தில் சேர்த்துக் கொள்ளப்படவும் கொடுக்கப்படுகிறது. திருச்சபையில் பலர், இன்னும் அவன் புறம்பாக்கப்பட வேண்டும் என்று கருதினர். அதற்குப் பவுல் தண்டனையின் குறிக்கோள் மனமாற்றமே என்று தெளிவுறுத்தினார்.

கொரிந்து, தெசலோனிக்கேய நகர்களுக்கு எழுதிய கடிதங்கள், அவ்வளவு கண்டிப்பான விதிகள் கொண்ட நிறுவன முறையைக் காட்டவில்லை. மேய்ப்புப் பணித் திருமுகங்களும், ஒழுக்க முறையைப் பற்றி, குறிப்பாக கோட்பாடுகளைப் பொருத்தமட்டும், அவ்வளவு நீக்குப்போக்குக் காட்டவில்லை. கோட்பாட்டு அளவில் பிரிவுகளை உண்டாக்கி விலகிச் செல்பவர், ஒழுக்க நெறியில் குற்றம் புரிபவனைத் தண்டிப்பதுபோல, தண்டிக்கப்பட வேண்டும்; அதன்பிறகு விலக்கப்பட வேண்டும் (தீத் 3:10). போலிக் கோட்பாடுகளைக் கூறியவன், சமூக உறவுகளிலிருந்து விலக்கப்படலாம் (1 திமொ 1:20; 6:3; 2 யோவா 10). வெளியேற்றுவது, ஒழுக்க முறையின் ஒரு பகுதியோ, சாத்தானுக்குக் கையளிப்பதோ இல்லை. இதன் முக்கியமான நோக்கம், நோயுற்ற அங்கத்தினரை வெட்டி, திருச்சபையை அழிவிலிருந்து காப்பதுவே ஆகும். ராபிகளின் மரபுப்படி, இயேசு சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவர் ஆவார். அவர் எதையும் செய்யக்கூடாது என்று கட்டளையிடப்பட்டிருந்தார். பவுல் (1 கொரி 12:3) ''கடவுளுடைய ஆவியின் ஏவுதலால் பேசும்போது, 'இயேசுவுக்குச் சாபம்' என்று யாரும் சொல்லுவதில்லை'' என்று கூறும்போது, இயேசு விலக்கப்பட்ட

வர் என்ற குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கிறார். பவுல் ''இரத்த உறவினரான என் சகோதரர்களுக்காக நான் கிறிஸ்துவைப் பிரிந்து சாபத்துக்கு உள்ளாகவும் தயங்கேன்'' என்று கூறியுள்ளார் (உரோ 9:3). பவுல் தனது நற்செய்திக்கு எதிராகப் போதிப்பவர்களையும் (கலா 1:8), ஆண்டவரின்பால் அன்பு இல்லாதவர்களையும் (1 கொரி 16:22) விலக்கி வைக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கிறார். அதிகாரத்தைப் பற்றியும் யார் யாரை விலக்கி வைப்பது என்பது பற்றியும் பதிதம் மற்றும் பிளவுச் சூழ்நிலையில் கேள்வி எழுகிறது. இது தியோத்திரபு காரியத்தில் தெளிவாகிறது. (3 யோவா 9-10).

பிற்காலத்தில் விரிவான முறையாக வளர விருந்ததின் தொடக்கத்தைப் புதிய ஏற்பாடு பிரதிபலிக்கிறது. அது, பரந்த மற்றும் சக்தியுள்ள நிறுவனமாகப் படிப்படியாக உருமாறியது; சிக்கலான சட்டமுறைக்கு இட்டுச்சென்றது.

விலங்குகளும், விலங்கும் (BEASTS & BEAST)

1. அடையாளம் தோன்றிய விதம்:
மத்தியகாலத்தில் மேலைநாடுகளில் எழுதப்பட்ட விலங்கியல் விளக்க ஏடு போல விவிலியம் விலங்குகளைப் பற்றி எந்த அடையாள விளக்கமும் தரவில்லை. அதிகம் போனால், குறைவான அடையாளவியலை ஒருசில விலங்குகளைப் பற்றித் தருகிறது விவிலியம். இந்த விலங்குகள் மனிதனின் எதிரிகளாகச் சித்திரிக்கப்படுகின்றன; சமயச் சிந்தனையில் இடம் பெறுகின்றன. ஆதியாகமத்திலிருந்து திருவெளிப்பாடு வரை பல இடங்களில் விலங்குகளின் ஓவிய விவரிப்புகள் காணப்படுகின்றன. விலங்குகளின் கூட்டத்தைப் பற்றிய மறைபொருள் சிந்தனை எதுவும் இல்லை. ஆனால், மிகுந்த வெறுப்புக்குரிய விலங்கிலிருந்து கற்பனை விலங்குவரை அனைத்தும் உள்ளன. கொடிய விலங்குகள், சிங்கங்கள், ஓநாய்கள், சிறுத்தைகள் (ஓசே 5:14; அப 1:8), கழுதைப்புலி, நரிகள் (எசா 13:22), சிதைவுகளில் உலவும் வேட்டையாடும் விலங்குகளும் பறவைகளும் (எசா 13:21; 34:11தொ; செப் 2:14), பாம்புகளிலிருந்து முதலைவரை (சங் 91:13; எசே 29), வெட்டுக்கிளி, சுவர்க்கோழி போன்ற அழிவைக் கொண்டுவரும் பூச்சிகள் (நாகூ 3:15.தொ) ஆகிய அனைத்தும் விவிலியத்தில் காணப்படுகின்றன. பேய்களோடு தொடர்புடைய முழுவதும் தீய உயிரினங்கள் மனிதனை நேருக்கு நேர் எதிர் கொள்கின்றன. பறவை நாகம், பறக்கும் பாம்பு, ராகபு, லிவியத்தான் போன்ற விலங்குகளின் (எசா 27:1; யோபு 7:12; எசா 51:9) மிகச்சிறந்த முன்மாதிரியாகக் கடலின் பெருநாகம் (ஆதி 1:21) அமைகிறது. லிவியத்தான் மேற்காசிய இதிகாசங்களின் அடையாளவியலில் கடலைக் குறிக்கிறது. இது யாவேயின் மீட்புத்திட்டத்தின் எதிரியாக அவரையே நேருக்கு நேர் எதிர்கொள்கிறது.

2. தொடக்கங்கள்: புராணத்தன்மை நீக்கப்பட்ட ஒரு சில உருவகங்களைக் கையாளும் விவிலியப் பகுதிகள் கடவுளின் படைப்புச் செயலை இவ்வாறு விளக்குகின்றன; லிவியத்தான் அல்லது ராகபு எனும் குழப்பமே உருவானவனாகிய மாபெரும் பூதத்துடன் போராடி அவனை வென்று கடவுள் வெற்றியை நிலைநாட்டினார், அதனால்தான் உலகம் படைக்கப்பட்டது என்கின்றன (சங் 74:13; 89:10தொ; யோபு 9:13. 25:12; எசா 51:9). இந்தப் போர், வரலாற்றில் நடக்கும் எல்லாப் போர்களுக்கும் பொருள் தரக்கூடியதாக வரலாற்றுச் சூழலுக்குப் புறம்பே நடைபெறுகிறது. இன்பவனம் பற்றிய நாடகமும் இது போன்றது தான் (ஆதி 3). ஆதியாகமத்தில் கடவுள் மற்றும் மனிதர்களின் தந்திரமுள்ள எதிரி அவனது உண்மையான பெயரால் அழைக்கப்படவில்லை. மாறாக, மண்ணகப் பாம்பிற்குப்பின், பாம்பின் மூல மாதிரியான பேய் மற்றும் சாத்தானுமான நாகம் செயல்படுகிறது (ஞான 2:24; திருவெளி 12:9; 20:2). இவ்வாறு விலங்குகளில் எல்லாம் சபிக்கப்பட்ட விலங்கு சாபத்தின் பெரிய பிரதிநிதியாகும். இந்த விலங்கு தான்

ஓரளவு ஆதிக்கம் பெற்றுள்ள பெண்ணின் சந்ததிக்கு எதிராகத் தன் சக்தியைச் சோதித்தறியும் (ஆதி 3:14தொ) களங்களின் பட்டியலே வரலாறு ஆகும்.

3. மனிதனுக்கெதிரான விலங்கின் போராட்டம்:

அ. விலங்குகள் மனிதனைத் தண்டிக்க கடவுளின் கருவிகளாதல்: இந்தப் போர் தொடக்கத்தில் இம்மைக்கால மட்டத்தில் நிகழ்கிறது. பாவமுள்ள மனிதகுலத்தின் மீது பழியைப் போடுகிறது தீமையின் வடிவான விலங்குகள். ஆனால், அவை முழுச்சுதந்தரத்துடன் செயல்பட கடவுள் விடுவதில்லை. அவைகளின் செயலின் முடிவைத் தமது விருப்பத்திற்கு ஏற்ப கடவுள் மாற்றி அமைக்கிறார். எகிப்திற்கு எதிரான கடவுளின் தீர்ப்பை நிறைவேற்றும் கைவினைஞர்களாகச் செயல்படுகின்றன இந்த விலங்குகள் (யாத் 7:26-8:28; 10:1-20; ஞான 16:1-12). விசுவாசமற்றவர்களுக்கு எதிரான கடவுளின் சாபத்தை அவை நிறைவேற்றுகின்றன (உப 28:26.42; லேவி 26:22; காண்க. எரே 15:3). விலங்குகளின் கைகளில் விடப்பட்ட நகரங்களின் நிலையைப் பற்றிப் பேசும்பொழுது அது மனித சமூகத்தின்மீது விழும் தண்டனையாகக் கருதப்படுகிறது (எசா 34:11தொ; எரே 9:10; 10:23; 49:33; 50:39; 51:37; செப் 2:14தொ). பாலைவனத்தில் கொள்ளிவாய்ப் பாம்புகள் கடவுளுக்கு எதிராக முணுமுணுத்தவர்களைக் கடிக்கிறது (எண் 21:5-7). பாவமுள்ள மனிதனைக் கருதி இறுதிநாளில் தண்டிக்க வரும் வெட்டுக்கிளிகளாக உருவக முறையில் பேசப்படும் குதிரைவீரர்கள் வருவார்கள் எனத் திருவெளி 9:3-10 கூறுகிறது (காண்க. நாகூ 3:15தொ; எரே 51:27). அவர்களுக்குப் பாதாளத்தின் தூதன் தலைமை தாங்குகிறான் (திருவெளி 9:11). மீட்புக்காகக் குறிக்கப்பட்டவர்களைத் தவிர ஒருவரும் தப்ப முடியாது (9:4; காண்க. 7:3).

ஆ. விலங்கின் வெற்றி: அதே நேரத்தில் சாத்தான் மற்ற வெற்றியையும் அடைகிறது. மனிதர்கள் அது மாறுவேடத்தில் இருக்கும போது அதனை வழிபடுகின்றனர். மனிதர்கள் கண்மூடித்தனமாக எல்லா ஊர்வனவற்றின் சிலைகளையும் வழிபடுகின்றனர் (எசே 8:10). இஃது இஸ்ராயேலில் சட்டத்தால் விலக்கப்பட்ட ஒன்று (உப 4:16 தொ). ஆனால், இத்தகைய சிலைவழிபாடு புறவினத்தாரின் மத்தியில் மிகப் பிரபலமாக இருந்தது (ஞான 11:15; 12:24; 13:10.14; உரோ 1:23). எனவே, அது கடவுளின் கோபத்தை அவர்கள் மேல் கொண்டு வந்தது (ஞான 16:1 9; உரோ 1:24தொ). ஒருசில புறவின அரசுகளில் இத்தகைய விலங்குகள் மனுவுரு எடுத்து உலகில் பல நாடுகளோடு போர் புரிகின்றன; சிறப்பாக, கடவுளின் மக்களுக்கெதிராகப் போரிட்டுத் தெய்வ நிந்தனைக்குரிய மமதையைக் கொண்டிருக்கின்றன (தானி 7:2-8). இவ்வாறு ஆதியிலே தொடங்கிய போராட்டம், உலகில் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது (திருவெளி 13:4). அரசனுக்கு முன்னால் இவன் தன்னையே எதிர்க்கிறிஸ்துவாக அறிவித்துத் தெய்வ நிந்தனை செய்து, புனிதர்களைத் துன்புறுத்தி அவர்கள் அவனை வணங்குமாறு செய்வான் (திருவெளி 13:1-9). அவனது எண்ணைக் கொண்டிராத யாரும் இங்கு வாழ்வதற்குரிய உரிமை பெற்றவர்கள் அல்லர் என்கிறான் (13:16). இவ்வாறு அனைத்தும் தனக்குக் கீழ்ப்பட்டதே என்று உரிமை பாராட்டியது அந்தியோக்கு எப்பிபான் அல்லது உரோமைப் பேரரசு மட்டுமல்ல. வரலாற்றில் இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

இ. விலங்கின் தோல்வி: விலங்கு பெற்ற வெற்றி போலித்தோற்றமும், தற்காலிகமானதுமாகும். ஏனெனில், பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே விசுவாசிகளின் வெற்றிதான் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது. மோசே வெண்கலத்தால் செய்த பாம்பைப் பாலைவனத்தில் உயர்த்தியபோது அதை நோக்கிய இஸ்ராயேலர் இறக்காமல் உயிர் பிழைத்தனர் (ஞான 16:6). புறவினத்தார் விலங்குகளை வழிபட்டபோது; உயிருள்ள கடவுளின் மேல்

தான் கொண்ட விசுவாசத்தை இஸ்ராயேலர் காத்துக் கொள்ள முடிந்தது (தானி 14:23-42). சிங்கங்களால் வந்த ஆபத்தைக் கூட, துணிவோடு சந்திக்க முடிந்தது; கடவுள் அதனை மீட்கிறார் (தானி 6). ஏனெனில், கடவுள்மீது யார்யார் நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்களை ஆண்டவர் தமது தூதர்களைக் கொண்டு காக்கிறார். அவனும் தன் காலால் அந்த விலங்கை நசுக்குவான் (சங் 91:11-13). இந்த முன் நிகழ்ந்த வெற்றிகள் எல்லாம் இயேசு பெறும் வெற்றியின் முன்னடையாளங்களாய் இருக்கின்றன. இயேசு சாத்தானை வென்றபோது (மத் 4:1-11), அவர் காட்டு விலங்குகளோடு பாலைவனத்தில் இருந்தார். வானதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தனர் (மாற் 1:13). அவரது சீடர்களுக்கும் அவர் பாம்பையும் தேளையும் எதிரியின் சக்தி அனைத்தையும் நசுக்க ஆற்றல் அளிக்கிறார். ஏனெனில், சாத்தான் விண்ணிலிருந்து வீழ்ந்து விட்டது. தீய ஆவிகள் எல்லாம் இயேசுவின் பிரதிநிதிகளுக்குக் கீழ்ப்பட்டவையாகின்றன (லூக் 10:17தொ; காண்க. மாற் 16:17தொ). விலங்கின் தோல்வி இன்னும் வெளிப்படுத்தப்படவில்லையெனினும், அது நிகழ்ந்துவிட்டதொன்றாகும்.

4. விலங்கின் சாவு: வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி அளிக்கும் இறுதியான தீர்ப்பு இந்தத் தோல்வியைச் செயல்படுத்தும். இந்த விலங்கு வெட்டிச் சாய்க்கப்பட்டு நெருப்பிலே போடப்படும் (தானி 7:11-27). இவ்வாறு பேயும் சாத்தானுமாகிய ஆதிப் பாம்பின் தோல்வி நிகழும் (திருவெளி 12:9). இதுவே கிறிஸ்து மேற்கொள்ளும் இறுதிப் போராகும் (19:11-16). இதில் தனது புனித நகரத்தைப் பிற தீயநாடுகளிடமிருந்து பாதுகாப்பார் (20:8தொ). அப்பொழுது சாத்தான், சாவு, நரகம், போலி இறைவாக்கினர்கள், விலங்கினை வழிபட்டவர்கள், எதிர்க்கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஆகிய அனைவரும் நெருப்பு ஏரிக்குள் எறியப்பட்டு, கொல்லப்படுவர். இதுவே இரண்டாம் சாவு (19:19தொ; 20:10.14). இறுதியில், ஆதியிலே தொடங்கிய நாடகம் முடிவு பெறும்.

விலங்குகள் (ANIMALS)

I. **விவிலியத்தில் விலங்குகள் பட்டியல்:**

காண்க. விவிலியத்தில் உயிரினங்கள்.

II. மனிதனுக்கு மிக நெருங்கிய கட்புலனாகிற படைப்பின் ஒரு பகுதியாக விலங்கு உலகம் அமைந்துள்ளது. இந்த நெருக்கத்தை நம்மைவிட, எபிரேயர்கள் அதிகம் உணர்ந்திருந்தனர். ஏனெனில், நம்மைவிட அவர்கள் விலங்குகளோடு நிலையான தொடர்பு கொண்டிருந்தனர். அதனால்தான், சில மனித மனநிலைகளை விவரிக்க விவிலியம் விலங்குப் பண்புகளைப் பயன்படுத்துகிறது. இவ்வாறு எதிரி நாய் என்றழைக்கப்படுகிறான் (சங் 22:17); படையெடுத்துவரும் படை வெட்டுக்கிளிகளின் மேகமாகிறது (எசா 33:4). சில சமயம் இறைவனும், சில சமயம் எதிரியும் சிங்கமாக விவரிக்கப்படுகின்றனர். சில அடையாளங்களின் இருமுகப் போக்கில், விலங்குகள் மிகச்சிறப்பானவற்றையும் இழிவானவற்றையும் செய்யக்கூடிய தன்மை பின்னணியாக உள்ளது என்பதைக் காண்பது அவசியமாகும். அடிக்கடி மக்கள் மந்தைக்கு ஒப்பிடப்படுகின்றனர் (2 சாமு 12:1-4; எரே 23:1-8; எசே 34; யோவா 10:1-16). கிறிஸ்துவை எடுத்துக்காட்ட செம்மறியும் (யோவா 1:29; திருவெளி 5:6), தூய ஆவியை எடுத்துக்காட்ட புறாவும் (மத் 3:16 இணை) பயன்பட்டுள்ளன.

இந்தத் தற்செயலான குறிப்புகளோடு, விலங்குச் சக்தியை எதிர்கொண்டு, அதன் மேல் தங்கள் மேலாண்மையைச் செயல்படுத்திய, விவிலிய நிகழ்ச்சிகளில் வரும் ஆட்களின் முயற்சிகளையும் நாம் கவனிக்க வேண்டும்.

இதற்குமேல், விலங்கு உலகில் தாங்கள் பங்குகொண்டு, அதில் தங்களது நிலையை ஓரளவு விரும்பிப் புகுத்தி, விலங்கு உலகைப் பற்றிப் பேசும்போது புனித எழுத்தாளர்கள் மனுகுலம் மற்றும்

படைப்பு ஆகிய எல்லாவற்றின் நாட்டத்தை, மீட்புக்கான ஏக்கத்தை இறுதியில் வெளிப்படுத்துகின்றனர்.

III. படைப்பில் விலங்குகளும் மனிதனும்:

1. விலங்குகள் மனிதனுக்கு மேலானவையா?: விலங்கு வழிபாடு, எகிப்தியருடையதைப் போன்ற முதிராப் பண்புடைய சமயங்கள் இந்த மனிதனல்லாத உயிர்களுக்கு எவ்வளவு புனித மரியாதை செலுத்தின என்பதைச் சுட்டுகின்றது. விலங்குகளை இறைத்தன்மையுடையதாக்குவது அல்லது அவற்றின் உருவங்களை வணங்குதல் ஆகிய சோதனைக்குச் சில சமயங்களில் இஸ்ராயேலர் பணிந்தனர் (யாத் 32:1; அ 12:18-31). ஆயினும், மோசேயின் சட்டமும் இறைவாக்கினர்களின் எச்சரிக்கைகளும் ஞானிகளின் ஆலோசனையும் இந்த இழிவாக்கும் பாதையிலிருந்து எபிரேயர்களைத் திரும்பச் செய்தன (ஞான 15:18தொ; காண்க. உரோ 1:23). சிலை வழிபாட்டைக் கொண்டிருந்த எதிரிகளைப் பொருத்த மட்டும், அவர்கள் வணங்கிய விலங்குகளால் பாதுகாப்புப் பெறுவதற்குப் பதிலாக, அவற்றால் தண்டிக்கப்பட்டனர் (ஞான 15-16; யாத் 39:4.17-30; திருவெளி 19:17தொ.21).

2. விலங்குகளுக்கும் மனிதருக்குமிடையிலான பிணைப்பு: மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையேயுள்ள ஒற்றுமை, குறிப்பாக இருவரும் மண்ணிலிருந்து பொதுவாகத் தோன்றுவதிலும், புதை குழியிலே முடிவதிலும் உள்ள ஒற்றுமை, சில சமயம் கொடுமையாக எடுத்துக் கூறப்படுகிறது (திருவுரை 3:19தொ; சங் 49:13). அடிக்கடி, பெரும்பாலும் முனைப்பற்ற முறையில், இரு படைப்புகளும் ''வாழும் உயிரினங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன. இரண்டிற்குமிடையே ஒரு சகோதரப் பிணைப்பு இருப்பது போல் தோன்றுகிறது. சிலசமயம் மனிதன் விலங்குகளுக்கு உதவுகிறான். நோவா வாழும் உயிரினங்களின் ஓரிணையை நீரிலிருந்து காப்பாற்றுகிறார். மற்றச் சமயங்களில் விலங்குகள் மனிதனுக்கு உதவுகின்றன. புலனாகாதவற்றைக் காணும் திறனுடைய பெண் கழுதை பிலயாமைக் காப்பாற்றுகிறது (எண் 22:22-35). காகங்கள் எலியாவுக்கு உணவளிக்கின்றன (1 அர 17:6). ஒரு பெரிய மீன் பிடிவாதமுடைய யோனாவைக் காப்பாற்றி, சரியான பாதையில் நடக்கச் செய்கிறது (யோனா 2). தங்களது நிறைவுடைமையால் விலங்குகள், யோபுவைப் படைப்பவரின் எல்லாம் வல்ல தன்மையைக் கண்டு ...ரச் செய்கின்றன (யோபு 38:39-39:30; 40:15-41:26); இறுதியாக, வாழும் எல்லா உயிர்களுக்கும் இறைவன் தமது நலன்களை அளிக்கத் தவறுவதில்லை என்று மனிதர்களுக்கு நினைவூட்டுகின்றன (சங் 104:27; 147:9; மத் 6:26).

விலங்குகள் இறைவனுக்கும் நோவாவுக்கும் இடையிலான உடன்படிக்கையில் பங்கெடுக்கும் அளவுக்கு மனிதனோடு நெருக்கமுள்ளவையாய் உள்ளன. அவை மோசே சட்டத்தின் பொருளாகவும் ஆகின்றன. ஓய்வு நாள் சட்டம் விலங்குகளுக்கும் அடிமைகளுக்கும் பொருந்தும் (யாத் 23:12; உப 5:14). அவற்றின் பால் மனித நேயப் பண்பு காட்ட வேண்டும் என்று கட்டளையிடப்படுகிறது (யாத் 23:5; உப 22:6தொ; 25:4; காண்க. 1 கொரி 9:9; 1 திமொ 5:18). பிறரைத் துன்புறுத்தும் விலங்குகள் தண்டிக்கப்படும் (ஆதி 9:5; லேவி 20:15தொ). சில சமயங்களில் அவை கல்லால் எறியப்படும் (யாத் 21:28-32). இறுதியாக, மனிதனது மனத்துக்கத்தோடும் (யோன 3:7), அவனது தண்டனையோடும் (யாத் 11:5) அவை தொடர்புபடுத்தப்படுகின்றன.

3. விலங்குகளின் மேல் மனிதனுக்குள்ள மேம்பாடு: ஆயினும், படைப்பு வரலாறு விலங்குகள் மேல் மனிதன் கொண்டுள்ள உயர்வு பற்றிய கூரிய உணர்வைச் சுட்டிக் காட்டுகிறது. தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் முறையில் ஆதாம் விலங்குகளுக்குப் பெயரிடுகிறார் (ஆதி 2:20). இந்த விலங்குகளில் ''தனக்குத் தகுந்த துணையை மனிதன் காணவில்லை'' (2:18-23). விலங்குடன் புணர்ச்சி கொள்வது கடினமாகத்

தண்டிக்கப்படுகிறது (யாத் 22:19; உப 27:21; லேவி 18:23). மனிதன் விலங்கைக் கொன்று உணவாகக் கொள்ளலாம் (ஆதி 9:2தொ). மனிதனின் உயர்வு வெற்றி வடிவில் எடுத்துக் கூறப்படுகிறது (1:26-30). இதற்கு மாறாக, நேர்மையற்ற நெபுகத்னேசருக்குத் தண்டனையாக, ''விலங்கின் மனம் கொடுக்கப்பட்டது'' (தானி 4:13). ஆவிக்கும், இறுதியில் இறைவனுக்கும் எதிரான கிளர்ச்சியை மனித விலங்கு நடத்தை அடையாளப்படுத்துகிறது.

ஆயினும், விலங்குகளின் மேம்பாடு பற்றிய நம்பிக்கைகளின் சில எஞ்சிய கூறுகள் புனித ஆசிரியர்களின் ஏடுகளில் காணப்படுகின்றன. அவர்கள் நம்பத்தகாத, வியத்தக்க விலங்குகளைப் பற்றிப் பேசத் தயங்கவில்லை. இவற்றின் தோற்றம் எதுவானாலும், இவை இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றைச் சுட்டுகின்றன. இது பேயோடு நெருங்கிய (திருவெளி 12:13; 16:13தொ; 20:1தொ), மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம் (தானி 7; திருவெளி 9:3-11) அல்லது இறையுலகைச் சேர்ந்ததாக இருக்கலாம் (எசே 1:4-24; திருவெளி 4:6தொ).

IV. **மீட்பில் விலங்குகளும் மனிதனும்:**

1.விலங்குகளின் கிளர்ச்சியும் பணிவும்: காட்டு விலங்குகள் இருப்பது, மனிதனுக்கு எதிராக இயற்கை செய்யும் கிளர்ச்சியையும் உலகில் புகுத்தப்பட்ட சீர்குலைவையும் எடுத்துக்காட்டுகின்றது; அவற்றை அடையாளப்படுத்துகின்றது. இந்நிலை மனிதனது பாவத்தின் விளைவாகும். ஆதாமின் கீழ்ப்படியாமைக்குமுன், வீட்டு மற்றும் காட்டு விலங்குகள் அனைத்தும் தங்களுக்குப் பெயரிட்டவனுக்குப் பணிந்திருப்பதாய்த் தோன்றுகின்றன. ஆனால் பாவத்தின் விளைவாக, விலங்கு உலகம் உட்பட்ட படைப்பு அனைத்தும் அழிவிற்கு அடிமையாகிவிட்டது (காண்க. உரோ 7:19-22). ஆனால், முன்னறிவினால் அல்லது மெசியா அருளினால், சில வேளைகளில் வெல்லப்பட்ட விலங்குகள் இன்பவனத்தை நினைவுபடுத்தும் முறையில், பணிவுள்ளவைகளாக மாறுகின்றன (த... 6:17-25; 14:31-42; சங் 91:13; மாற் 1:13 16:18; அ.ப. 28:3-6). உலகம் தன் பாவத்திலிருந்து முழுவதும் தூய்மையாக்கப்படும் இறுதிக் காலத்தில், கொடுமையான விலங்குகள் மறைந்துபோகும் (லேவி 26:6; எசே 34:25) அல்லது நன்கு பழக்கப்பட்டவையாகும் (ஓசே 2:20; எசா 11:5தொ, 65:25). மீண்டும் ஒன்றிணைக்கப்பட்ட உலகில் இயற்கை கிளர்ச்சி செய்ய அறியாது. மனிதரில் காணப்படும் விலங்குத் தன்மையும் (காண்க. யாக் 3:2-8) முழுவதும் வெற்றி கொள்ளப்படும்; மாற்றி அமைக்கப்படும் (1 கொரி 15:44தொ).

2. தூய்மையானவை தூய்மையற்றவை என்ற பிரிவுகளுக்கு அப்பால்: விலங்குகள் தூய்மையானவை, தூய்மையற்றவை என்று பிரிக்கப்படுவது நீண்ட காலம் இருந்திருக்கிறது; மறை பொருள் மிக்கதாகத் தோன்றுகிறது (காண்க. லேவி 11; இச 14). இப்பிரிவு, மனுகுலத்தைத் தூய இஸ்ராயேலர் தூய்மையற்ற புறவினத்தார் என்று பிரித்து, இக்கருத்தை யூதத்துவத்துக்குள் புகுத்தி, பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இஃது இரு பிரிவினருக்கும் இடையில் ஒன்றாக உண்பது, நெருங்கிப் பழகுதல் போன்றவற்றை இயலாததாக்கிற்று. தூய்மையற்ற விலங்குகளை உண்பது பற்றிய ஒழுங்குகள் இதைத் தோற்றுவிக்காவிட்டாலும், இதை வலியுறுத்துகின்றன. இதைக் கருத்தில் கொண்டால், யோப்பாவில் பேதுரு கண்ட காட்சியின் பொருளைப் புரிந்து கொள்ளலாம் (அ.ப. 10). இந்தக் காட்சியில் ''தூய்மையற்ற விலங்குகள்'' என்ற கருத்து நீக்கப்படுவது இத்தகைய பிரிவு மனிதர்களிடம் இனி இல்லையென்று உணர்த்துகிறது. இந்த விலங்கு அடையாளத்தின் பின் மனிதர்களின் ஒன்றிப்பும் திருச்சபையின் பொதுமைப்பண்பும் வலியுறுத்தப்படுகின்றன.

3. விலங்கு வழிபாடும் இறைவழிபாடும்: அகில உலகோடு (சங் 147:7.10) அல்லது இஸ்ராயேலோடு (எசா 43:20) தொடர்புடைய விலங்குகள் அனைத்தும் படைப்ப

வரையும் மீட்பரையும் போற்றிப் புகழ்கின்றன. மோசே சட்டத்தின் பொருளாகவும் மனிதரின் மனத்துக்கத்தில் பங்கெடுப்பவைகளாகவும் மாறுகின்றன. இவை மட்டுமன்று, இவற்றிற்கு மேலாக, பலிப்பொருளாகப் பொதுவாகக் கருதப்பட்டு, புதிய உடன்படிக்கையின் இறைப்பலிப் பொருளை முன்னுணர்த்தும் உருவமாகின்றன (ஆதி 22:13; யாத் 13:12தொ). மேலும், இந்தப் பலிவிலங்குகளான அடையாளம் வழியாக, இஸ்ராயேலர் தங்களை முழு ஆற்றலோடு அர்ப்பணித்து, வரவிருக்கும் உண்மையின் நிறைவுக்கு ஏங்க வேண்டும் (சங் 40:7தொ; 51:18தொ; எபி 10:1-18). அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்படும் செம்மறி போல் (எசா 53:7), ஊழியனாகிய இயேசுவின் பலிமட்டும்தான் முடிவில்லா மீட்பை வெல்ல முடியும் (எபி 9:12).

இவ்வாறு மீட்பின் முழு வரலாறும், சில வேளைகளில் விவிலிய விலங்குகளுக்காகவும் அவற்றின் வழியாகவும் சித்திரிக்கப்படுகிறது. இந்த வரலாற்றில் கிளர்ச்சி, சிலைவழிபாடு, தூய்மையானவை தூய்மையற்றவை என்ற பிரிவு, மோசே சட்டத்திற்குக் கீழ்ப்படிதல், மனத்துக்கம், காணிக்கைகள் மற்றும் பலிகள், நோவா பெட்டகப் பலியில் பங்கெடுத்தல், இறுதிக்காலப் பணிவு ஆகியவை அடங்கும். பேய்த் தன்மையுடைய பாம்பால் உருக்குலைக்கப்பட்டு, சாத்தான் தன்மையுடைய நாகத்தால் அச்சுறுத்தப்பட்டு, படைப்பு மீட்கப்படுகிறது. இறுதியில் இறைவனின் செம்மறியானவரின் பலியால் உருமாற்றியமைக்கப்படும்.

விலங்கோடு புணர்தல் (BESTIALITY)

ஆணோ, பெண்ணோ விலங்குடன் உடலுறவு கொள்வது. இந்தச் சட்ட விரோதமான செய்கைக்குப் பழைய ஏற்பாட்டுச் சட்டங்கள் மரணதண்டனை அளித்தன (யாத் 22:19;லேவி 20:15-16; காண்க.லேவி 18:23; உப 27:21). இந்தப் பழக்கம் புறவினவழிபாட்டுச் சடங்குகளுடன் தொடர்புடையதாக இருந்திருக்கலாம். பாபிலோனிய இதிகாசத்தில், இஸ்தார் தேவதையின் ஏவலாளால் கவர்ச்சிக்கப்படும் வரை எபானி (அல்லது என்கிடு) என்பவர் ஒரு காட்டு விலங்குடன் உறவு கொண்டதாகக் கூறப்படுகிறது.

விலை கூறித் திரிபவர் (PEDDLER)

2 கொரி 2:17-இல் பவுல், தான் கடவுளின் வார்த்தையை விற்பனை செய்யும் வியாபாரி அல்லர் என்கிறார். அவர் திருச்சபைகளிடமிருந்து பணம் எதுவும் பெறவில்லையென இஃது உணர்த்துகிறது. அல்லது, வேறு பொருளையும் இது குறிக்கலாம். ''வேலையாள் தன் உணவிற்கு உரிமையுடையவன்'' எனும் இயேசுவின் வார்த்தையை அவர் அறிந்திருந்தார் (மத் 10:10; லூக் 10:7-5; 1 கொரி 9:14; 1 திமொ 5:18). எதையும் பெற்றுக் கொள்ளாமலே அளியுங்கள் எனும் இயேசுவின் வார்த்தையையும் அவர் அறிந்திருக்கலாம் (மத் 10:8-9). கொரிந்து நகரில், சம்பளத்திற்குத் தனக்கு இருக்கும் உரிமையை அவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை (1 கொரி 9:12.15). எனவே, உரிய சம்பளத்தை வாங்காதிருத்தலையே 2 கொரி 2:17-இல் பவுல் குறிப்பிட்டிருக்கலாம். அவர் தனது போதகப்பணியில் தந்திரங்களைப் புகுத்தி நற்செய்தியைப் பொய்யாக்கவில்லை என்பதே முதன்மையான கருத்து. வியாபாரத்தில் சிறுமையான, நேர்மையற்ற செயல்களோடு கூடிய வியாபாரத்திற்கும், கடவுளால் மன்னிக்கப்பட்டோம் (2 கொரி 4:2) என்ற எண்ணத்துடனும், நேர்மையான குறிக்கோளுடனும் செய்யும் போதகத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு வலியுறுத்தப்படுகிறது.

வில்லாளர், வில்வீரர், அம்பு எய்பவர் (ARCHER)

போரில் பிறரைத் தாக்கிப் போர்புரிய வில் அம்புகளுடன் நிறுத்தப்பட்டிருக்கும் வீரனுக்குப் பெயர் வில்வீரன்.

ஆதி 21:20 குறிப்பிடுவதிலிருந்து இதன் பொருளை முழுமையாகத் தெளிவாகக் கூற முடியவில்லை. ஆனால் யோபு 16:13; எரே 50:29-இல் கலைச்சொல்லாகப் பயன்பட்டுள்ளது.

அசீரியப் படையில் இருந்தது போல எபிரேயப் படையிலும் கைதேர்ந்த வில் வீரர்களடங்கிய ஒரு பிரிவு இருந்ததா என்பது தெரியவில்லை. கில்போவா மலையில் சவுல் பெலிஸ்திய வில்வீரர்களால் காயப்படுத்தப்பட்டார் (1 சாமு 31:3; 1 நாள் 10:3). அம்மோனிய வில்வீரர்கள் இத்தியரான உரியாவைக் கொன்றனர் (2 சாமு 11:24). 2 நாள் 35:23-இன்படி, யோசியா அரசன் எகிப்திய வில்வீரர்களால் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. எரேமியா பாபிலோனிய வில்வீரர்களைப் பற்றியும், அவர்களது பகைவர்களைப் பற்றியும் கூறுகிறார் (எரே 50:29;51:3). ''கேதார் மக்களின் வலிமை வாய்ந்த வில் வீரர்களுள் எஞ்சினோர் மிகச் சிலராகவே இருப்பர்'' என்பது (எசா 21:17) அவர்களின் மகிமைக் குறைவைக் குறிக்கிறது. யோசேப்பின் குலம் வில்வீரர்களால் தாக்கப்பட்டு வெல்ல முடியாத குலமாக விவரிக்கப்படுகிறது (ஆதி 39:23). யோபு தன்னை ஆண்டவர் அவரது வில்வீரர்களைக் கொண்டு தாக்குவதாகக் குறிப்பிடுகிறார் (யோபு 16:13).

வில்லும் அம்பும் (BOW AND ARROW)

குலமுதியவர்கள் காலமுதல் வில்லும் அம்பும் நாடோடிகளின் ஆயுதமாகும் (ஆதி 21:20). இவை வேட்டையாடுவதற்கும் (27:3; எசா 7:24), போரிலும் (யோசு 24:12; 1 அர 22:34; எசே 39:9) பயன்பட்டன. இஸ்ராயேலர்களிடையே பென்யமின் இனத்தவரும், யோர்தானுக்குக் கிழக்கில் குடியேறியவர்களும் அம்பு எய்வதில் வீரர்களாகத் திகழ்ந்தனர் (1 நாள் 5:18; 12:2; 2 நாள் 14:8). அண்டை நாட்டினரான அசீரியர், பாபிலோனியர், எகிப்தியர், பெலிஸ்தியர் ஆகியோர் வில்வீரர் படைப் பகுதிகளைக் கொண்டிருந்தனர்.

வில் கடினமான, வளைந்து விரியும் தன்மையுடைய மரத்தால் செய்யப்பட்டுக் கயிற்றால் சுற்றப்பட்டு வலுப்படுத்தப்பட்டிருக்கும். சிலசமயம், வில் கொம்பால் அல்லது எலும்பால் செய்யப்பட்டு, வெண்கலத்தால் வலுப்படுத்தப்படும் (யோபு 20:24; சங் 18:34). சாதாரணமாய், வில் இருவளைவு கொண்டிருக்கும். சீரியர்கள் பயன்படுத்திய வில் விரிகோணத்தில் அமைந்திருந்தது.

வில்நாண் நூல் சுற்றப்பட்ட கயிற்றாலோ, நூலாலோ, எருது அல்லது ஒட்டகத்தின் குடலாலோ செய்யப்பட்டிருக்கும். சிறிய வில் கையால் வளைக்கப்படும் (காண்க. 2 அர 13:16). போரில் பெரிய வில் ஒரு முனை காலால் மிதிக்கப்பட்டும் மறுமுனை கையால் அம்பு எய்வதற்கு ஏற்றவாறு வளைக்கப்பட்டும் நாணேற்றப்படும் (சங் 7:12: எசா 5:28).

அம்பு நாணலாலோ, மெல்லிய மரத்தாலோ செய்யப்பட்டு, முனையில் உலோகமோ, கல்லோ, எலும்போ பொருத்தப்பட்டிருக்கும் (யோபு 20:24). இந்த முனைகள், சில சமயங்கள் வளைந்து கொக்கி வடிவத்தில் அமைந்திருந்தன. அதனால் அதை எளிதில் உடலிலிருந்து நீக்க முடியாது. ''அனல் பறக்கும் அம்பு'' (சங் 7:13; காண்க. எபே 6:16) என்பது முனையில் சணல்நார் சுற்றப்பட்டு, எண்ணெய் அல்லது நி[illegible] கீலில் அமுக்கப்பட்டு, தீ மூட்டப்பட்டு எய்யப்படும் அம்பாகும். நஞ்சு பூசப்பட்ட அம்புகளும் பயன்படுத்தப்பட்டன (யோபு 6:4). வில்லாளர்கள் சிறிய அம்புகள் அடங்கிய அம்புக்கூட்டை முதுகில் அல்லது வலப் பக்கத்தில் சுமந்து சென்றனர்; பெரிய அம்புகளைத் தோளில் சுமந்தனர்.

மெசபொத்தாமியாவில் - இஸ்ராயேலில் கூட - குறிசொல்லுதலிலும் அம்பு பயன்பட்டது (காண்க. 4:12). இப்பழக்கத்தின் விவரங்கள் தெளிவாக இல்லை. ஒரு வேளை இதில் குறிசொல்பவர் அம்பை ஆட்டியிருக்கலாம் (எசே 21:21) அல்லது வானில் எய்திருக்க வேண்டும் (2 அர 13:14-19).

வன்முறை அல்லது இறைத்தீர்ப்பை உருவகமாகச் சுட்ட அம்பு பயன்பட்டுள்ளது (சங் 38:2; 64:7; அப 3:9). வில் (அல்லது வானவில்) இறை உடன்படிக்கையின் அடையாளமாகப் பயன்படுவது (ஆதி 9:12-13), போரிலிருந்து வெற்றியோடு

திரும்பும் மெசபொத்தாமியாவின் பொது வான உருவகத்திலிருந்து வந்திருக்கலாம். அரசனின் நாணேற்றப்படாத வில், புதிதாகப் பெற்ற அமைதியை நிலைப்படுத்தும் அவனது பற்றுறுதியை அடையாளமாகக் காட்டுகிறது; மனிதனது வன்முறையையும் குழப்பத்தையும் இறைவன் தம் வன்முறையாலும் குழப்பத்தாலும் தண்டிக்க மாட்டார் என்ற இறைவனது உறுதியைச் சுட்டிக் காட்டுகிறது. ஒரு சிலர் இதில் பிலின உருவகத்தைக் காண்கின்றனர். வில்லும் அம்பும் ஆண் அடையாளமாகவும், அம்புக் கூடு பெண் அடையாளமாகவும் காணப்படுகிறது (ஆதி 49:24; சங் 127:4-5; சீரா 26:12).

சவுல் மற்றும் யோனத்தான் மேல் தாவீது பாடிய இரங்கற்பாடல் (2 சாமு 1:17-27) ''வில்லின் பாடல்'' என்று சில மொழிபெயர்ப்புகளில் அழைக்கப்படுகிறது.

விவிலியத் திருமுறைப்பட்டியல் - பழைய ஏற்பாடு (BIBLICAL CANON - O T)

I. விவிலியத்தில் அடங்கியிருக்கும் நூல்களின் அதிகாரபூர்வமான பட்டியலே திருமுறைப்பட்டியலாகும். ஒரு நூல் இறை ஏவுதல் பெற்றிருப்பதால் அது திருமுறையைச் சேர்ந்ததாகும். ஆனால், இறை ஏவுதல் பெற்றிருப்பதும் திருமுறையைச் சேர்ந்திருப்பதும் ஒரே பொருளை உணர்த்துவதில்லை.இறைவன், ஒரு மனித ஆசிரியரைக் கருவியாகப் பயன்படுத்தி, எழுதும் நூல் இறை ஏவுதல் பெற்றதாகும். திருச்சபை ஒரு நூலை இறை ஏவுதல் பெற்றதாக ஏற்று, இறைவனது வார்த்தைகளைக் கொண்டிருப்பதாகவும் வெளிப்பாட்டின் மூலமாய் இருப்பதாகவும் விசுவாசிகளுக்கு அறிவிக்கும்போது அந்நூல் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாகிறது. கத்தோலிக்கத் திருச்சபையின் விசுவாசத்தின்படி, விவிலியத் திருமுறைப்பட்டியல் திருச்சபையின் பாரம்பரியத்தின்படியே முழுவதும் நிர்ணயிக்கப்படுகிறது. இறைவெளிப்பாட்டின் காப்பாளர் என்ற அளவில், புனித நூல்களை நிர்ணயிப்பதில் திருச்சபைக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. கத்தோலிக்க விசுவாசம் பிரிவினைச் சகோதரர்களின் விசுவாசத்திலிருந்து வேறுபடுகிறது. பின்னதின்படி, ஒருநூல், சமய அனுபவத்தைக் கொடுக்கக்கூடிய அதன் ஆற்றலாலோ, யூதப்பாரம்பரியம் மற்றும் அப்போஸ்தலர்களை ஆசிரியராகக் கொண்டிருப்பதாலோ அந்நூலின் திருமுறைத்தன்மை தீர்மானிக்கப்படுகிறது. திருமுறைப்பட்டியல் பற்றிய, கத்தோலிக்கப் பாரம்பரியத்தைத் தடம் காண்பது அவ்வளவு எளிதன்று. பொதுவாக, அஃது அப்போஸ்தலர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழைய ஏற்பாட்டைக் கொண்டுள்ளது என்று கூறலாம்.

II. **தோற்றமும் வளர்ச்சியும்:**

1. கிறிஸ்தவக் காலத்திற்குமுன் யூதத் திருமுறைப்பட்டியல் ஏற்கெனவே இருந்தது என்பது சரியான கருத்தன்று. கிறிஸ்தவர்களோடு கொண்ட போராட்டமே இந்தத் திருமுறைப்பட்டியலை நிர்ணயிக்க வாய்ப்பாயிற்று. ஆனால், யூதர்கள் தங்களுடைய புனித நூல்களைக் கொண்டிருந்தனர் என்பது உண்மை.

இந்தப் புனித நூல்களின் தொகுப்பின் தொடக்கத்தை இஸ்ராயேலுக்குச் சட்டம் அளித்த மோசேக்குச் சாற்றிக் கூறுகிறது பாரம்பரியம் (உப 3:9). இதுவே சட்டத்தின் உட்கருவாகும். இஃதோடு இஸ்ராயேல் இனங்களைப் பற்றி இங்குமங்குமாக எழுதப்பட்ட செய்திகள் மோசேயால் சேர்க்கப்பட்டன. இத்தொகுப்பு பிற்காலத் தலைமுறைகளுக்காகச் சேகரிக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டன. ஆனால், பரந்த அளவில் இலக்கியங்களைத் தொகுத்த முதல் முயற்சி ஒருவேளை சாலமோன் காலத்தில் செய்யப்பட்டிருக்கலாம். அக்காலத்திற்குள், பல வகையான ஏடுகள், தலைமுறைப்பட்டியல்கள், இடப்பட்டியல்கள், குறிப்பிட்ட சட்டத்தொகுப்புகள், தொடக்க காலச் சங்கீதங்கள் முதலியவை வழக்கில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இவை வரலாற்றோடு தொடர்புபடுத்தப்படவில்லை. வரலாற்றோடு தொடர்புபடுத்தும் செயல் ஐந்நூல் தோற்றம் பற்றிய இக்காலக்கருத்துப்படி, சாலமோன் காலத்தில் தொடங்கப்பட்டது; பின்வந்த தலைமுறைகளால் தொடரப்பட்

டது. பின்வந்த காலத்தில், முந்தைய தொகுப்புகளை உள்ளடக்கிய ஒன்றுக்கு மேற்பட்ட தொகுப்புகள் தோன்றின. இஃவாறு யாவே, ஏலோகிம் பாரம்பரியங்கள் இணைக்கப்பட்டன. எசேக்கியா சீர்திருத்த காலத்திற்குள் (2 நாள் 29), 8-ஆம் நூற்றாண்டில், கூடுதலான சங்கீதங்களும், (சாலமோனுக்குப் பெரும்பாலும் சாற்றிக்கூறப்பட்ட, பழ 25:1), ஞான வாக்குகளும், பழமொழிகளும், அரசவை ஏடுகளும் சேர்க்கப்பட்டன. இவற்றோடு இறைவாக்கினர் நூல்கள் அல்லது அக்காலத்தில் பெரும் பணியாற்றிய ஓசேயா,மீக்கா, எசாயா போன்ற இறைவாக்கினர்களைப் பற்றி எழுதப்பட்ட ஏடுகள் சேர்க்கப்பட்டன. எருசலேம் ஆலயம் இந்த ஏடுகள் அல்லது பெரும்பகுதிகளைச் சேர்த்து வைக்கும் இடமாக இருந்திருக்கலாம். 2 நாள் 34:14-இல் யோசியா காலத்தில் ''சட்ட நூல்'' ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டதை நாம் குறிக்கலாம். இந்தச் சட்ட நூல்தான் உபாகம நூல் அல்லது முக்கிய பகுதிகளாக இருக்கலாம். இது முந்தைய நூற்றாண்டில் எசேக்கியா சீர்திருத்த காலத்திலோ, அதற்குச் சிறிது பின்போ எழுதப்பட்டிருக்கலாம். இது முந்தைய பொருட்களையும் உள்ளடக்கியிருந்திருக்க வேண்டும்; தீய அரசன் மனாசேயின் ஆட்சிக்காலத்தில் தொலைந்து போயிருக்க வேண்டும். இச்சட்ட நூல் இஸ்ராயேல் வரலாற்றில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசர்கள் நூல்கள் உபாகமப் போக்கால் ஊடுருவப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும்.

2. சட்டம், இறைவாக்கினர்கள், மற்றும் நூல்கள்:

அ) சட்டம்: நாடு கடத்தப்பட்ட போதிலும், அதற்குப் பின் வந்தகாலத்தில்தான் முழுமூச்சான பதிப்பு வேலை நடந்தது எனலாம். இக்காலத்தில்தான் நமக்கு அறிமுகமான வடிவில் பழைய ஏற்பாடு உருவெடுக்கத் தொடங்கியது எனலாம். சடங்குச் சட்டங்களாயும் அவற்றின் பிற் சேர்க்கைகளாயும் சேர்ந்த தொகுப்புக்குக் ''குருக்கள் பதிப்பாசிரியர்கள்'' என்றழைக்கப்பட்டவர்கள் பொறுப்பானவர்களாவர். மேலும், இவர்கள் ஆலய வழிபாட்டில் மிகவும் அக்கறை செலுத்தினர். இக்கருத்து, ஐந்நூலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இவர்களுடைய நிகழ்ச்சியுரைகளில் பெரிதும் ஆதிக்கம் செலுத்துகிறது. ஏறக்குறைய கி.மு. 450-இல் எஸ்ராவின் காலத்திலேயே ஐந்நூல் முழுமை பெற்றுவிட்டது எனலாம். அதன் இறுதித் தொகுப்பில் அவருடைய ஈடுபாடும் இருந்திருக்கலாம். யோசியா சட்டநூலை அறிவித்தது போன்ற ஒரு சடங்கில் (2 அர 22-23), எஸ்ரா ''காலை முதல் நண்பகல் வரை'' மோசேயின் சட்டநூலை வாசித்தார் (நெகே 8:3). இக்காலத்தில் ஐந்நூல் மட்டும்தான் திருமுறையாக அதிகாரபூர்வமாகக் கருதப்பட்டதாகத் தெரிகிறது. ஏனெனில், இக்காலத்திற்குச் சிறிது பின்பு தனிச்சமய அமைப்பாகத் தோன்றிய சமாரியர்கள் ஐந்நூலை மட்டும்தான் திருமுறையாக ஏற்றுக்கொண்டனர். பிற்காலத்தில் இஸ்ராயேலின் திருமுறைப்பட்டியலில் பிற நூல்கள் சேர்க்கப்பட்டபோது கூட, ஐந்நூல் தனித் தொகுப்பாகவே கருதப்பட்டது. நாடு கடத்தலுக்கு முன் மக்கள் இறைவாக்கினர்கள் வழியாக அளிக்கப்பட்ட இறைவாக்கையே நம்பியிருந்தனர். இதற்கு மாறாக, நாடு கடத்தலுக்குப் பின், மக்களுக்குப் போதகம் அளிக்க செபக்கூடம் என்ற அமைப்பு எங்கும் தோன்றியது. அங்கு ஒவ்வோர் ஓய்வுநாளும் மக்களுக்குச் சட்டம் விளக்கிக் கூறப்பட்டது.

ஆ) இறைவாக்கினர்கள்: அடுத்து இரு நூற்றாண்டுகளில் இரண்டாம் வகையான நூல்கள் படிப்படியாக உருவெடுத்தன. ஐந்நூலில் சட்டமும் வரலாறும் கலந்து காணப்படுகின்றன. இஃது இறைவன் தமது மக்களின் வரலாற்றின் வழியாக எவ்வாறு செயலாற்றுகிறார் என்றும், எவ்வாறு சட்டம் அனுபவத்திலிருந்து தோன்றுகிறது என்றும் காட்டுகிறது. பின்வரும் வரலாற்று நூல்களில் (யோசுவா, நீதிபதி, சாமுவேல், அரசர்கள்) ஆசிரியர் வரலாற்றுக்காக வர

லாற்றில் அக்கறை கொள்வதாகத் தெரிய வில்லை; இதைவிட, வரலாற்று நிகழ்ச்சி களைப் பயன்படுத்தி, சில சமயக்கருத்து களை எடுத்துக் கூறுவதிலும், இறைவனது செயல்களை எடுத்துக் காட்டுவதிலும் அதி கம் அக்கறை செலுத்துகிறார் எனலாம். இதனால்தான் யூதர்கள் இந்த நூல்களை **முந்தைய இறைவாக்கினர்கள்** என்றழைத்த னர். பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல்களும் உள்ளன. இவை நாளாகமம், எஸ்ரா, நெகேமிய ஆகியவையாகும். இவை கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முடிவிற்குள் எழுதப்பட் டவை. இவை இரண்டாம் வகை நூல்க ளோடு சேர்க்கப்படவில்லை. ஏனெனில் இரண்டாம் வகை நூல்கள் ஏற்கெனவே ஒரு தனிச்சிறப்பு நிலையைப் பெற்றுவிட் டன என்பதே காரணமாகும். மேலும், அந்நிலையைப் பின்வந்த நூல்கள் பெற வில்லை என்பதும் காரணமாகலாம். அதன் விளைவாக இவை வெறுமனே ''நூல்கள்'' என்றழைக்கப்பட்டு மூன்றாம் வகை நூல் கள் தோன்றின. ''முந்தைய இறைவாக்கினர் கள்'' என்றழைக்கப்பட்ட வரலாற்று நூல்க ளில் பிற்காலப் பதிப்பு வேலைகள் காணப் படுகின்றன. ஐந்நூல் முழுவதிலும் குருக் கள் பாரம்பரியப் பாதிப்பு காணப்படுவது போல், வரலாற்று நூல்கள் முழுவதிலும் உபாகமப் பாரம்பரியத்தின் முத்திரை காணப்படுகிறது. இந்தப் பதிப்பு வேலை நாடுகடத்தலுக்கு முன் நடந்திருக்கலாம் என்பது ஐயத்திற்கு உரியதாகும். மேலும், அரசர்கள் வரலாறு நாடு கடத்தலுக்குப்பின் னும் செல்கிறது. இந்தப் பதிப்பு வேலை நாடு கடத்தலின்போதுதான் நடந்திருக்க லாம் என்பது உண்மைக்கு நெருங்கியதா கும். ஆயினும், இந்நூல்களில் காணப்படும் வரலாற்றுப் பொருள்கள் பல நூற்றாண்டுக ளுக்கு முன்பே நடந்தவை என்பதும் கூறாமலே விளங்கும்.

முந்தை வரலாற்று நூல்களான ''முந்தைய இறைவாக்கினர்'' நூல்களுடன் **''பிந்தைய இறைவாக்கினர்''** என்ற நூல்கள் சேர்க்கப் பட்டன. இவை 8-ஆம் நூற்றாண்டிலிருந்து எழுதப்பட்ட இறைவாக்குகளின் தொகுப் பாகும். கி.பி. 400-க்குப்பின் இறைவாக்குக் குரலொலி மறைந்து விட்டதாகத் தெரிகி றது. ஆகவே, யூதர்கள் தங்களால் முடிந்த மட்டும் தங்கள் இறைவாக்கினர்களின் எழு தப்பட்ட ஏடுகளை ஒன்றாகத் தொகுத்து, காலப்போக்கில், அவற்றைச் சட்டத்திற்கு அடுத்து வைத்தனர். இறைவாக்கினர் சிலர் எதையும் எழுத்து வடிவில் விட்டுச் செல்ல வில்லை. மேலும், ஏட்டுவடிவில் நாம் கொண்டிருப்பவையெல்லாம் இறைவாக்கி னர்களாலேயே எழுதப்பட்டன என்று கருத வேண்டியதில்லை. சில சமயம் அவர்கள் நேரடியாக எழுதினர் என்பதே உண்மை. இவ்வாறு எரேமியா சில வாக்குகளைப் பாருக்கிடம் சொல்லி எழுத வைத்தார் (எரே 45). இறைவாக்குகளோடு இந்நூல்கள் வாழ்க்கைக் குறிப்புகளையும் கொண்டுள் ளன. இவற்றையெல்லாம் இறைவாக்குக ளோடு ஒன்றிணைத்து இந்நூல்கள் அமைக் கப்பட்டன. பிந்தைய இறைவாக்கினர்கள் என்ற தொகுப்பில் எசாயா, எரேமியா, எசேக்கியேல் மற்றும் 12 சிறிய இறைவாக்கி னர்கள் ஆகியவை அடங்கும். இவை பதிப்பிக்கப் பெற்றது 5-ஆம் நூற்றாண்டின் முடிவில் குறுகிய காலத்தில் நடந்திருக்க லாம். ஆயினும், சட்டத்தொகுப்பின் மேல் தான் அதிக அக்கறை காட்டப்பட்டது. இதிலேதான் எஸ்ரா கவனம் செலுத்தினார். இறைவாக்கு நூல்கள் சட்டத்துக்குச் சம மான நிலைபெற இன்னும் ஒரு நூற்றாண்டு செல்ல வேண்டியிருந்தது. சீராக்கு நூலின் முன்னுரை ஆசிரியரின் பேரனால் கி.மு. 130-ஐ ஒட்டி எழுதப்பட்டது. அதில், சட்டம், இறைவாக்கினர்கள் என்று தெளி வாக வேறுபடுத்தப்பட்ட இரு தொகுப்பு கள் இருந்தன என்று அறிகிறோம். முந்தைய, பிந்தைய இறைவாக்கினர்களை உள்ளடக்கிய இந்தத் தொகுப்பு ஒருவேளை கி.பி. 200-ஐ ஒட்டி முற்றுப்பெற்றிருக்க வேண்டும்.

இ) இதே காலத்தில் மற்றப் புனித நூல்களின் தொகுப்பு பெருகி வளர்ந்தது. இவற்றில் சில வெகுகாலத்திற்கு முன்பே தோன்றி இருக்க வேண்டும். எடுத்துக்காட்

டாக சங்கீதங்கள், பழமொழி, சில பிற்கால வரலாற்று நூல்களைக் கூறலாம். ஐந்நூலின் தனிச்சிறப்பு நிலையைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ''இறைவாக்கினர்கள்'' என்ற தொகுப்பு, எந்த அடிப்படையில் முன்னதிலிருந்து வேறுபட்டதாகக் கருதப் பட்டது என்று அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவேளை, இறைவாக்கினர்கள் தொகுப்பைப் பிற நூல் களிலிருந்து வேறுபடுத்திக் கருதுவது நடை முறைக்கு வசதியானதாக இருக்கலாம். எஞ்சிய நூல்கள் பொதுவாக ''நூல்கள்'' என்று அல்லது வெறுமனே ''மற்ற நூல் கள்'' என்றழைக்கப்பட்டன. இத்தொகுப் பில் பல்வகையான நூல்கள் காணப்படுகின் றன. இதில் பிற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டவையும் சமீபத்தில் எழுதப்பட்டவை யும் சேர்க்கப்பட்டன. இதில் முக்கியமா னது சங்கீதங்களாகும். சங்கீதங்கள் என்ற தலைப்பில் இந்த மூன்றாம் வகைத் தொகுப்பு முழுவதையும் கிறிஸ்து குறிப்ப தாகத் தெரிகிறது. அவர் ''மோசேயின் சட்டம், இறைவாக்கினர், சங்கீதங்களைப்'' பற்றிப் பேசுகிறார் (லூக் 22:44). கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் புனித நூல்களைத் தொகுத்தல் தொடர்ந்து நடந்ததாகத் தெரிகி றது. 2 மக் 2:13-இல் நெகேமியா ஒரு நூல் நிலையம் அமைத்து, அங்கு அரசர்கள், இறைவாக்கினர்கள் பற்றிய நூல்களைச் சேகரித்தார் என்று வாசிக்கிறோம். அவ் விதமே போரினால் தொலைந்து போன நூல்களை யூதா மக்கபேயுவும் சேகரித்தார். இவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்த தொகுப்பு, பிற்காலத்தில் பின்வருமாறு பகுக்கப்பட்டது.

எபிரேய விவிலியம்:

1) சட்டம்: ஆதியாகமம், யாத்திரை, லேவியர், எண், உபஆகமங்கள்.

2) இறை வாக்கினர்கள்:
முந்தைய இறைவாக்கினர்கள்: யோசுவா, நீதிபதி, 1-2 சாமுவேல், 1-2 அரசர்கள். பிந்தைய இறைவாக்கினர்கள்: எசாயா, எரே மியா, எசேக்கியேல், 12 சிறிய இறைவாக்கி னர்கள் (ஒசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, மீக்கா, யோனா, நாகூம், அபக் கூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி).

3) நூல்கள்: 1-2 நாளாகமம், எஸ்ரா -நெகேமியா, எஸ்தர், ரூத்து, சங்கீதங்கள், பழமொழிகள், யோபு, புலம்பல், திரு வுரை, உன்னத சங்கீதம், தானியேல்.

இவ்வாறு எபிரேயத் திருமுறைப்பட்டிய லில் 24 நூல்கள் குறிக்கப்பட்டன. கி.பி. 93-இல் வரலாற்று ஆசிரியர் யோசிப்பசின் கூற்றுப்படி திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த இறை ஏவுதல் பெற்ற நூல்கள் இருபத்து இரண்டு மட்டுமே. இதற்காக, புலம்பலை எரேமியாவுடனும், ரூத்தை நீதிபதிகளுடனும் சேர்த்து எண்ணினர். இதன் விளைவாக, எபிரேய நெடுங்கணக் கில் உள்ள 22 எழுத்துகளுக்கு இணையாக எபிரேய விவிலியத்தில் 22 நூல்கள் இருந் தன என்று கருதப்பட்டது. யோசிப்பசு, திருமுறைப்பட்டியலை நிர்ணயிப்பதை எஸ்ரா முடிவுக்குக் கொண்டு வந்தார் என்ற ஒரு ராபிகளின் பாரம்பரியத்தையும் கூறுகி றார். ஆனால், இதற்கு எந்த ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை.

3. எழுபது நூல்: நாடு கடத்தலின்போது யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு வெளியே சிதறிப்போயினர். இவர்களிடையே எபி ரேய மொழி சிறிது சிறிதாக மறைந்து, கிரேக்க மொழி அன்றாடம் பேசும் மொழி யாகியது. இவர்களுக்குக் கிரேக்க மொழி யில் விவிலியம் அவசியமாயிற்று. இந்தக் கிரேக்க மொழிபெயர்ப்பு அலக்சாந்திரியா வில் செய்யப்பட்டது. இதை எபிரேய விவிலியத்திற்குப் போட்டியாகச் செய்ய வில்லை, எருசலேமிலுள்ள யூதத் தலைவர் களின் அனுமதி பெற்றே செய்தனர் என்று காட்ட அலக்சாந்திரிய யூதர்கள் ஒரு கற்ப னைக் கதையை அமைத்துக் கூறினர் (காண்க. எழுபதுநூல்). இந்தக் கிரேக்க மொழிபெயர்ப்பு எழுபது நூல் தொகுப்பு என்று அழைக்கப்பட்டது. இதில் எபிரேய விவிலியத்தில் உள்ள நூல்களோடு, சில கூடுதலான நூல்களும் காணப்பட்டன. அவை 1-2 மக்கபேயர், தோபி, யூதித்து,

சீராக்கு, சாலமோனின் ஞானம், பாரூக்கு, தானியேல் மற்றும் எஸ்தரைச் சேர்ந்த சில கூடுதல் பகுதிகள் ஆகும். எபிரேய விவிலியத்தில் வரும் நூல்கள் மூலத் திருமுறைப் பட்டியல் என்றும், எழுபது நூலில் வரும் கூடுதல் நூல்கள் துணைத் திருமுறைப்பட்டியல் என்றும் அழைக்கப்பட்டன. இந்தக் கலைச்சொற்களை முதன் முதலில் கி.பி. 1566-இல் சியன்னாவைச் சேர்ந்த சிஸ்து பயன்படுத்தினார். அவ்வளவு பொருத்தமின்மை இல்லை என்றாலும், இச்சொற்கள் இப்போதும் பயன்படுத்தப்படுகின்றன. இவை நூல்களின் தரத்தைச் சுட்டவில்லை, தோன்றிய காலத்தையே சுட்டுகின்றன எனலாம்; மூலத் திருமுறைப்பட்டியல் துணைத் திருமுறைப்பட்டியலை விட, காலத்தால் முந்தியது என்பதையே காட்டுகின்றன.

எபிரேயப் பட்டியலும், அலக்சாந்திரியப் பட்டியலும் யூதர்களிடையேதான் தோன்றின. ஆனால் இவற்றிடையே உள்ள உறவு என்ன என்பது தெளிவாகக் கூற முடியாததாகும். இரண்டும் திட்டமிட்டு வளர்ந்தவையன்று, படிப்படியாக வளர்ந்தவையாகும். சட்டம், இறைவாக்கினர்கள், நூல்கள் என்ற பிரிவு புனிதநூல்கள் தொகுக்கப்பட்ட மூன்று கட்டங்களைச் சுட்டலாம். கி.மு. 180-ஐ ஒட்டிச் சீராக்கு நூல் எழுதப்பட்ட போது நூல்கள் என்ற தொகுப்பு இன்னும் நிறைவு அடையவில்லை என்று கருதுகிறது. இரண்டு பட்டியல்களிலும், நூல்களின் வரிசையும் பொருளடக்கமும் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை எனத்தெரிகிறது. எருசலேமைச் சேர்ந்த பாலஸ்தீன விவிலியப்பட்டியல் இருந்திருந்தால், எருசலேம் ராபிகளின் தலைமையைப் பின்பற்றி அலக்சாந்திரிய யூதர்கள் எவ்வாறு வேறுபட்ட விவிலியப்பட்டியலை அமைத்துக் கொண்டனர் என்று புரிந்து கொள்வது கடினம். கி.மு. 400-ஐ ஒட்டி, யூதர்களிடமிருந்து பிரிந்து சென்ற சமாரியர்கள், சட்ட நூல்களை மட்டுமே புனித நூலாக ஏற்றுக் கொண்டனர்.

4. கி.பி. 70-க்குமுன்: தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் பெரும்பாலோர் யூதர்கள். இவர்கள் எபிரேய அல்லது அரமேயிக்கு மொழி பேசியவர்கள். இவர்கள் யூதர்களுக்கு எதிராக எழுபதுநூல் பட்டியலை ஏற்றுக்கொண்டிருப்பார்கள் என்பது நடக்கக் கூடிய செயல் அன்று. ஆனால், கிரேக்க மொழி பேசிய கிறிஸ்தவர்கள் பெருகினர். எழுபதுநூல் பட்டியல் தொடக்க காலக் கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

புதிய ஏற்பாட்டில், இயேசுவும் அப்போஸ்தலர்களும் புனித நூல்களின் தொகுப்பையும், எபிரேயப் பட்டியலில் காணப்படும் மூன்று பிரிவுகளையும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், புதிய ஏற்பாட்டிலிருந்து இப்பிரிவுகளின் பொருளடக்கத்தை நிர்ணயிக்க முடியாது. எஸ்ரா, நெகேமியா, எஸ்தர், ரூத்து, திருவுரை, உன்னத சங்கீதம், ஒபதியா, நாகூம் ஆகிய நூல்களைத் தவிர, எபிரேயப் பட்டியலைச் சார்ந்த மற்ற நூல்களிலிருந்து நேரடி மேற்கோள்கள் கூறப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் வரும் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்த 350 மேற்கோள்களில் 300 எழுபது நூலிலிருந்து தரப்படுகின்றன. இந்த மேற்கோள்களின் முதன்மையான மூலம் எழுபது நூலாகத் தெரிகிறது. துணைத் திருமுறைப்பட்டியல் நூல்களிலிருந்து நேரடி மேற்கோள்கள் புதிய ஏற்பாட்டில் இல்லை. ஆனால் மக்கபேயர், சீராக்கு, சாலமோனின் ஞானம் ஆகிய நூல்களிலிருந்து எதிரொலிகளும், சுட்டிக்காட்டுதல்களும் காணப்படுகின்றன. பவுலின் காலத்திலிருந்து துணைத் திருமுறை நூல்களைக் கொண்ட எழுபது நூலே திருச்சபையின் பழைய ஏற்பாடாகும் என்பதில் ஐயமில்லை. இதற்குக் காரணம் மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளில் கிரேக்க மொழி பேசப்பட்டதாக இருக்கலாம்.

5. கி.பி. 70-க்குப்பின்: இதுவரை திருமுறைப்பட்டியல் பற்றிய தெளிவான கருத்துகள் இல்லை என்றாலும், இந்தத் தொகுப்பில் ஒரு நூலைச் சேர்ப்பது அல்லது நீக்குவது பற்றிச் சில பொதுவான கருத்துகள் இருந்திருக்க வேண்டும். இவற்றின்

தரம் பற்றிய கருத்துகள் இருந்திருப்பதாகத் தெரிகிறது. தெளிவான சான்றுகள் இல்லையென்றாலும், சில நூல்கள் காலப்போக்கில் பிறவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, திருமுறைப்பட்டியலில் சேர்த்தவையாகக் கருதப்பட்டிருக்கலாம். இக்காரணத்திற்காகத்தான், கிறிஸ்தவத் திருச்சபையால் எழுபது நூலிலிருந்து கையெழுத்துப் பிரதிகள் எடுக்கப்பட்டன. கி.பி. 70-க்குப்பின் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்குமிடையே போராட்டங்களும் தர்க்கங்களும் எழுந்தன. அவற்றில் இரு குழுவினரும் திருநூலைப் பயன்படுத்தினர். அவர்களது எதிரிகளான யூதர்கள், எழுபதுநூலைப் பயன்படுத்தியிருக்கக் கூடுமானாலும், மூல எபிரேய வாசகத்தையே சிறப்பாகப் பயன்படுத்தினர். பல இடங்களில் கிரேக்க வாசகம் எபிரேய வாசகத்திலிருந்து வேறுபட்டது. யூதர்கள், கிரேக்க வாசகம் எபிரேய வாசகத்தை விட மேம்பாடு உடையது என்று ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஆகவே எழுபதுநூல், குறிப்பாக மெசியா அளிக்கும் பகுதிகள், தவறானவை என்று தீர்மானித்தனர். இவர்கள் எபிரேய வாசகத்தையே மேலும் மேலும் விரும்பிப் பயன்படுத்தினர். கி.பி. 90-ஐ ஒட்டி, யாம்னியாவில், 22 (24) எபிரேய நூல்கள் அடங்கிய தொகுப்பே உண்மையான திருநூல் என்று தீர்மானித்தனர். கி.பி. 130-ஐ ஒட்டி, எழுபதுநூல் முழுவதையும் கண்டனம் செய்தனர். அது பாரம்பரிய யூதர்களுக்குச் சபிக்கப்பட்டதாக மாறியது.

எழுபது நூல் நிராகரிக்கப்படுவதற்கு முன்பே, திருமுறைப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய நூல்களைப் பற்றிய கருத்துகள் குறுகிய தன்மையுடையவை ஆயின. வெளிப்பாட்டு இலக்கியங்கள் ஏன் தங்கள் மதிப்பை இழந்தன என்பது புரிந்து கொள்ளக்கூடியதே. ஏனெனில், கி.பி. 70-க்குப்பின் அவை பொருளற்றவை ஆயின. ஏனெனில், இக்காலம்வரை இந்நூல்கள் மெசியா திடீரென்று மகிமையோடு தோன்றி எதிரிகளைக் குழப்பமடையச் செய்து அவர்களைத் தோற்கடிப்பார் என்று அறிவித்தன. இவற்றின் புரட்சி தோன்றச் செய்யும் கருத்துகளால் தூண்டப்பெற்று கி.பி. 66-இல் பெரும் கிளர்ச்சி தொடங்கியது. கி.பி. 70-இல் இது பேரழிவிலும், நம்பிக்கை அழிவிலும் முடிந்தது. ஆகவே, வெளிப்பாட்டு நூல்கள் நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய நூல்களைப் பொருத்தமட்டும் சட்டத்தை வலியுறுத்தலும், இவற்றின் விட்டுக்கொடுக்கும் ஒழுக்கப்போக்கை ஏற்க மறுத்தலும், இவை நீக்கப்படுவதற்குக் காரணங்களாயின. இவற்றில் சில மெசியாவைப் பற்றிய கிறிஸ்தவ விளக்கத்திற்கு ஆதரவாயிருந்தன. ஆகவே, இவற்றை யூதர்கள் விரும்பவில்லை. மேலும் பெருகிக் கொண்டிருக்கும் திருமுகங்கள், நற்செய்திகள், அப்போஸ்தலர் பணிநூல்கள் ஆகிய கிறிஸ்தவ இலக்கியங்களை விலக்குவது அவசியமாயிற்று. ஏனெனில், இவை யூதர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன.

மேலும், யோசிப்பசின் கூற்றுப்படி, இறைவாக்குரைத்தல் மோசேயிலிருந்து அர்த்தக்சஸ்தா என்ற பாரசீக அரசன் (கி.மு. 465-424) ஆட்சிவரைதான் நீடித்தது என்று கருதப்பட்டது. அதற்குப் பின்னும் யூத வரலாறு எழுதப்பட்டாலும், அவை அதே அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில், இக்காலத்திற்குப்பின் இறைவாக்கினர் தலைமுறை இருக்கவில்லை என்று கருதப்பட்டது. அர்த்தசஸ்தா அல்லது எஸ்ராவுக்குப்பின் எழுதப்பட்ட எந்த நூலும் இறை ஏவுதல் பெற்றதும் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததும் அன்று என்ற தேர்வுமுறை, யூதர்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்த வெளிப்பாட்டு இலக்கியப் பெருந்தொகுப்பையும், அவர்களுக்குப் பிரியமில்லாத நூல்களையும் ஒரே அடியில் நீக்குவதற்குப் பயன்பட்டது. தானியேலும், யோபுவும், இறைவாக்குத்தன்மையுடையவை என்று கருதப்பட்டதால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேற்கூறப்பட்ட தேர்வுமுறையால் சீராக்கும் மக்கபேயரும் நீக்கப்பட்டன. சாலமோனின் ஞானமும், சாலமோனின் சங்கீதங்களும் கிரேக்க மொழியில் மட்டும் இருந்ததால் நீக்கப்பட்டன. எபிரேய மொழியில் இருந்த எஸ்தர், அதன் பொருளடக்கத்தைப் பற்றிய

நீண்ட கால ஐயத்திற்குப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இஃது எஸ்ராவின் இறப்புக்கு முன் எழுதப்பட்டது என்ற கருத்தும் இதற்கு ஒரு காரணமாகலாம். புலம்பல் எரேமியாவுடன் சேர்ந்தது என்று கருதப்பட்டதால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாருக்கு எபிரேய மொழியில் எழுதப்படாததால் நீக்கப்பட்டது. திருமுறைப்பட்டியலைத் தேர்வு செய்யும் இந்த முறை, கி.பி. 70 நிகழ்ச்சிக்குப்பின் அமைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. கி.பி. 70-க்கு முன் இந்தத் தேர்வு முறை இருந்திருக்க முடியாது. பாரம்பரியமாகக் கருதப்பட்ட இறைவாக்கினர்கள் இருக்கவில்லை என்பது உண்மையானாலும், வெளிப்பாட்டு இலக்கிய ஆசிரியர்களும், பொதுவாக எஸ்ராவுக்குப்பின் எழுதிய ஆசிரியர்களும், தாங்களே இறைவாக்கினரின் வாரிசுகள் என்று கருதினர். அப்படியே மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. எஸ்ராவிற்குப்பின் எழுதப்பட்டது என்று உறுதியாகக் கருதப்படும் சீராக்குநூல், யூதத்திருமுறையில் ஏற்றுக் கொள்ளப்படும் அளவுக்கு மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. இஃது ''எஸ்ராவிற்கு முன் எழுதப்படுதல்'' என்ற தேர்வு முறை யூதர்களிடையே நீண்ட காலமாய் இருந்திருக்க முடியாது என்று காட்டுகிறது. மேலும், சீராக்கு நூலின் முன்னுரையில் குறிக்கப்படும் ''பிற நூல்கள்'' என்பது திருமுறைப்பட்டியல் தேர்வு செய்வது முடிந்துவிட்டது என்று காட்டவில்லை. மேலும் 2 மக் 15:9-இல் மூன்றாவது பிரிவான நூல்களைக் குறிப்பிடாமல், ''சட்டம் மற்றும் இறைவாக்கினர்களிலிருந்து'' எடுத்துக்கூறி, தன் படையினரை யூதா மக்கபேயு உற்சாகப்படுத்துகிறார்.

கி.பி. 90-இல் யாம்னியாவில் (யாப்னேயில்) யூத ராபிகள் துணைத் திருமுறை நூல்கள் உட்பட்ட இந்த நூல்கள் அனைத்தையும் நிராகரித்தனர். ஆனால், இஃதோடு எல்லாம் முடிந்து விடவில்லை. கும்ரானில் எந்தத் தடயமும் காணப்படாத எஸ்தர் நூலின் திருமுறைத்தன்மை நெடுங்காலமாக யூதர்களாலும் கிறிஸ்தவர்களாலும் ஐயுறப்பட்டது. பழமொழி, உன்னத சங்கீதம், ரூத்து, திருவுரை, எசேக்கியேல் ஆகிய நூல்கள் பற்றியும், இவை எல்லா இடங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படும் வரை, இத்தகைய ஐயப்பாடு இருந்தது. மறுபுறம் நிராகரிக்கப்பட்ட நூல்களும் ஒரு காலத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. சான்றாக, சீராக்கு நூல் செபக்கூட வழிபாட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தாலும், திருநூலைப் போல் எடுத்துக் கூறப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்கு இது வாசிக்கப்பட்டது. யூத ராபிகள் இவற்றை நிராகரித்ததே, இவற்றின் எபிரேய அல்லது அரமேயிக்கு வாசகம் காலப்போக்கில் மறைந்து போனதற்குக் காரணமாக இருக்கலாம்.

கி.பி. 70-இல் நடந்த பேரழிவுக்குப்பின், யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையில் கசப்பான போராட்டங்கள் எழுந்தன. அதன் விளைவு யூதர்கள் எழுபது நூலையும் மற்றும் சில நூல்களையும் நிராகரித்தனர். இக்காலத்திற்குள் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கிரேக்க மொழி பேசுபவர்களாக இருந்தனர். இவர்களின் விவிலியம் எழுபது நூல்தான். யூதர்களால் எடுக்கப்பட்ட எந்தத் தீர்மானமும், குறிப்பாகக் கிறிஸ்தவர்கள் பால் கொண்ட பகையால் எடுக்கப்பட்ட தீர்மானம், கிறிஸ்தவர்களைப் பாதித்தது என்று எதிர்பார்க்க முடியாது. கி.பி. 70-க்கு முன் யூதர்கள் போலவே கிறிஸ்தவர்களும் திருமுறைப்பட்டியலைப் பற்றித் தெளிவில்லாத கருத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தனர். பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய நூல்களில் பெரும்பாலானவற்றைப் பற்றி கருத்தொற்றுமை கொண்டிருந்தனர். ஆனால் அதன் வரையறைபற்றி உறுதியான கருத்துக் கொண்டிருக்கவில்லை. நமக்குக் கிடைத்திருக்கும் எழுபது நூலின் முழுப் பட்டியலும் அடங்கிய பிரதி நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்த பிரதிகளில், துணைத்திருமுறை நூல்கள் ஒரே விதமாகக் காணப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. மேலும், இந்நூல்கள் ஒரே இடத்தில் தொகுக்கப்பட்டுக் காணப்படவில்லை; மாறாக, பழைய ஏற்பாடு முழுவதும் பரவிக்கிடக்கின்றன. இவற்றில் சில நூல்கள் இறை ஏவுதல் பெற்று, திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டு, பின்பு

நிராகரிக்கப்பட்டாலும், இவை யாவும் சமமாகக் கருதப்பட்டன. 4-ஆம் நூற்றாண்டில் இருந்த நிலை இதுதான் என்றால், இவற்றைப் பற்றிய கருத்து, முதல் நூற்றாண்டில் இருந்தது போலவே, 4-ஆம் நூற்றாண்டிலும் தெளிவில்லாமல் இருந்தது. இது பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். முதல் கிறிஸ்தவர்கள்,கி.பி. 90-இல் யாம்னியாவின் யூதத் தலைவர்களிடமிருந்து தங்கள் திருமுறைப்பட்டியலைப் பெறவில்லை. கி.பி. 70-க்கு முன்பே, பிற்காலத்தில் திருமுறைப்பட்டியலில் சேர்க்க வேண்டிய நூல்களைப் பெற்றுவிட்டனர். குறிப்பிட்ட நூல்களிலிருந்து அவர்கள் எடுத்தாளும் மேற்கோள்கள் மற்றும் குறிப்புகளிலிருந்து இந்நூல்களை நாம் யூகிக்கலாம். புதிய ஏற்பாட்டில், துணைத் திருமுறை நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட வெளிப்படையான மேற்கோள்கள் இல்லை; ஆனால், சுவடுகள் உள்ளன. இவற்றில் சில: *மத் 6:14=சீரா 28:2; மத் 27:39-40=ஞானம் 2:12-15; உரோ 1:20*தொ= *ஞானம் 13-14; எபி 11:35-39=2மக் 6:18-7:42; யாக் 1:19=சீரா 5:11-13;* 1 பேதுரு *1:6=ஞானம் 3:3*தொ. **அப்போஸ்தலத் தந்தையர்கள்** மற்றும் தொடக்கத் திருச்சபை ஆசிரியர்கள் காலத்திற்கு வரும்போது, துணைத் திருமுறை நூல்களிலிருந்து மேற்கோள்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவையும் மூலத்திருமுறை நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோளைப் போலவே, பயன்பட்டுள்ளன.

6. திருச்சபைத் தந்தையர்கள்: எழுபது நூலில் அடங்கிய புனித நூல்களை, முதல் மூன்று நூற்றாண்டைச் சேர்ந்த திருச்சபை ஆசிரியர்கள் பயன்படுத்துகின்றனர். இதற்கு விதிவிலக்கு சர்தையைச் சேர்ந்த மெலித்தோ (கி.பி. *193*) ஆவார். இவர் எபிரேய வாசகத்தை எடுத்துக்கூறுகிறார். யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்படா விட்டாலும், துணைத்திருமுறை நூல்களைப் பயன்படுத்தற்குரிய கிறிஸ்தவர்களின் உரிமையை வலியுறுத்துகிறார் ஒரிசன் *(254)*. அதே பட்டியல் செல்தன்காம் பட்டியல் *(350)*, இப்போ சங்கப் பட்டியல் *(393)*, கார்த்தேசு சங்கப் பட்டியல் *(397)*, முதலாம் இன்னோசந்தின் பட்டியல் ஆகியவற்றில் காணப்படுகிறது. இதற்கு விதிவிலக்கு இலவோதிக்கேய சங்கப் பட்டியலாகும் *(360)*.

இவ்வாறு இருக்க அத்தனாசியு *(373)*, எருசலேம் சிரில் *(386)*, பொய்தியரின் கில்லரி *(366)*, எரோனிமு *(420)*, ரூபைனுசு *(410)*, கிரகோரி நாசியான்சன் *(390)* போன்ற நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த திருச்சபைத் தந்தையர்கள், துணைத்திருமுறை நூல்களை நிராகரித்து, எபிரேயத் திருமுறைப் பட்டியலைப் பயன்படுத்தியதை விளக்குவது கடினமாகும். இக்கருத்திற்கு அடிப்படை, எரோனிமு யூதர்களோடு சேர்ந்து செய்த விவிலிய ஆய்வுகளாகும். இந்த யூதப் பாதிப்பு மற்றவர்களுக்கும் பொருந்தும். இக்கருத்து முதலில் கிழக்குத் திருச்சபையிலும், கிழக்கில் நெடுங்காலமாக வாழ்ந்த இலத்தீன் தந்தையர்களின் நூல்களிலும் காணப்படுவது கவனிக்கத்தக்கதாகும். இந்தத் தந்தையர்களின் ஆதிக்கம் எவ்வளவு மிகுந்திருந்ததென்றால், இவர்களின் கருத்து, சில அறிஞர் குழுக்களிடையே 16-ஆம் நூற்றாண்டுவரை நிலவியது. ஆயினும், பிளாரன்ஸ் சங்கம் எழுபது நூல் பட்டியலையே எடுத்துக் கூறியது.

திருமுறைப்பட்டியலைப் பற்றிய, கருத்தொற்றுமை மேற்குத் திருச்சபையில் 5-ஆம் நூற்றாண்டிலேயே பெருமளவிற்கு ஏற்பட்டதென்று கூறலாம். கிழக்குத் திருச்சபையில் இது 7-ஆம் நூற்றாண்டில்தான் எட்டப்பட்டது. இலத்தீன் மொழி விவிலியம் நீண்ட பட்டியலையே கொண்டிருந்தது. சில பதிப்புகள், 3-4 எஸ்திராஸ், மனாசேயின் மன்றாட்டு போன்ற நூல்களைக் கூடுதலாக முடிவில் கொண்டிருந்தன. ஆனால், இங்குமங்குமாகக் கருத்து வேறுபாடுகள் இல்லாமல் இல்லை. இந்நிலை சீர்திருத்தக் காலம் வரை நீடித்தது எனலாம்.

பொதுவாகக் கூறுமிடத்து, கத்தோலிக்கத் திருச்சபையால் இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்கள் திருச்சபைத் தந்தையர்களாலும் ஆசிரியர்களாலும் திருநூல் என்று அடிக்கடி எடுத்துக்கூறப்பட்டவையும், திருநூல் என்ற அளவில் திருச்சபையில் வாசிக்கப்பட்டவையும், கிரேக்க விவிலியப் பிரதி

களிலும் அதன் விளைவாக இலத்தீன் விவிலியத்திலும் தொடர்ச்சியாக இடம் பெற்றவையுமாகும். எழுபதுநூல் பிரதிகளில் சிலசமயம் காணப்பட்ட 3-4 எஸ்திராஸ், மனாசேயின் மன்றாட்டு, 3-4 மக்கபேயர், சங்கீதம் 151, சாலமோனின் சங்கீதங்கள் போன்றவை காலப்போக்கில் நீக்கப்பட்டன. இதற்குரிய புறக்காரணங்கள், இவை திருச்சபைத் தந்தையர்களாலும் ஆசிரியர்களாலும் அரிதாகவே எடுத்துக் கூறப்படுதல்; ஏற்கெனவே இருந்து நூல்களில் இரட்டிப்பு வாசகமாயிருத்தல் (எ.கா. 3 எஸ்திராஸ்); இவற்றின் பொருளடக்கம் தகுதியுடையதாக இல்லாதிருத்தல்; பிற்காலத்தைச் சேர்ந்ததாக இருத்தல் (எ.கா. 4 எஸ்திராஸ்) ஆகியவையாகும். இறுதி முடிவாக, இறைவனது ஆவி தமது திருச்சபையின் வழியாகச் செயலாற்றியதையே கண்டுணரலாம்.

7. சீர்திருத்தகாலம்: சீர்திருத்தவாதிகள் என்று தங்களையே அழைத்துக்கொண்டவர்கள் உரோமைத் திருச்சபையிலிருந்து முறித்துக் கொண்டபோது பழைய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலைப் பற்றிய பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டியிருந்தது. பல செயல்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். சான்றாக, துணைத்திருமுறை நூல்களில் ஒன்றான 2-ஆம் மக்கபேயர் நூல் புனிதர்களின் பரிந்துரைக்கும் மன்றாட்டு (2 மக் 15:14), இறந்தோருக்காக மன்றாடுதலும் அதன் பின் வளர்ச்சியான உத்தரிக்கிற நிலையும் பற்றிக் (12:43-45) கூறுவது குழப்பம் உண்டாக்கக்கூடிய உண்மையாகும். மேலும், இந்த நூல்கள் எபிரேய வாசகங்களில் காணப்படவில்லை. மூலத்திலிருந்து விவிலியத்தைப் பெறுவதை மிகவும் வலியுறுத்திய சீர்திருத்தவாதிகள் இந்நூல்களை நிராகரித்ததையோ இவற்றைத் தாழ்ந்த நிலையில் வைத்ததையோ கண்டு வியப்படைய வேண்டியதில்லை. அவர்களிடையேயும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. லூத்தரும், இங்கிலாந்து திருச்சபையும் இவற்றைத் திருமுறைப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளவில்லை; ஆனால், வளர்ச்சிக்குரியவையாகவும், திருச்சபையில் வாசிக்கக் கூடாதவையாகவும் கருதினர். துணைத் திருமுறை நூல்களை நிராகரித்த இங்கு சீர்திருத்தவாதிகள், இந்நூல்களுக்குப் போலிநூல்கள் (Apocrypha) என்று பெயர் கொடுத்தனர். இந்தப் பெயரின் கீழ் இலத்தீன் விவிலியத்தில் காணப்பட்ட கூடுதலான நூல்களையும் சேர்த்தனர். இங்கிலாந்து திருச்சபை இந்நூல்களைப் பழைய ஏற்பாட்டின் முடிவில் பதிப்பித்தது. இவையில்லாமல் விவிலியத்தைப் பதிப்பிப்பதற்கு ஓராண்டு சிறைத்தண்டனையும், கி.பி. 1615-இல் அளிக்கப்பட்டது. ஆயினும் பிற்காலத்தில் வந்த விவிலியப் பதிப்புகளில் இவை சேர்க்கப்படவில்லை. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எடின்பர்க் விவிலியக் கழகம், இந்நூல்களை மூடப்பக்தியுடையவை என்றும் பொருளற்றவை என்றும் கண்டனம் செய்தது. அதற்குப்பின் இவற்றைப் பதிப்பிக்கப்போவதில்லை என்று எல்லா விவிலியக் கழகங்களும் தீர்மானித்தன. ஆயினும், இப்போது பிரிவினைச் சகோதரர்கள் இந்நூல்களைப் பயன்படுத்துவது பொதுவாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

8. கிழக்கத்திய திருச்சபை: தனது வரலாற்றின் பெரும் பகுதியில் இந்தத் திருச்சபை நீண்ட திருமுறைப்பட்டியலையே கொண்டிருந்தது; ஆனால், உரோமை கொண்டிருந்த வரிசையில் கொண்டிருக்கவில்லை. சீர்திருத்த காலத்தில் கான்ஸ்டான்டிநோப்பிலின் பேராயரான சிரில் லூக்காரியா என்பவர், பாப்புவின் அதிகாரத்திற்கு எதிராகப் போராடினார்; இதில் பிரிவினைச் சகோதரர்களின் போக்கைப் பின்பற்றினார். இவர் கி.பி. 1629-இல் கிரேக்க மொழியில் ஒரு விவிலியத்தைப் பதிப்பித்தார். இதில் மூலத் திருமுறைப் பட்டியலில் உள்ளடங்கிய நூல்களை மட்டும் பதிப்பித்தார். துணைத் திருமுறை நூல்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆனால், இவரது இந்த முயற்சி மக்களின் ஆதரவைப் பெறவில்லை. இவரது எதிரிகளின் தூண்டுதலால், காலப்போக்கில், சுல்தான் இவரைக் கொன்றான். இவரது இறப்புக்குப் பின்வந்த ஆண்டுகளில், கிழக்கத்திய திருச்சபை, பல சங்கங்களைக் கூட்டி, நீண்ட திருமுறைப் பட்டியலை ஆதரிக்கும் தனது விசுவாசத்தை

விட்டுக் கொடாத முறையில் எடுத்துக்கூறியது; சிரில் லூக்காரியாவைக் கண்டனம் செய்தது. இவரது விவிலியத்தை நிராகரித்தது. எனினும், இங்குமங்கும் கருத்து வேறுபாடு இல்லை என்று கூற முடியாது. ஆனால், பெருமளவுக்குக் கிழக்கத்திய திருச்சபை நீண்ட திருமுறைப்பட்டியலையே ஆதரித்து வந்துள்ளது.

9. திரிதெந்தீன் பொதுசசங்கம்: சீர்திருத்தவாதிகளின் போக்கை எதிர்கொண்ட கத்தோலிக்கத் திருச்சபை ஒரு நிலையைத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. திரிதெந்தீன் பொதுச்சங்கத்தில் தந்தையர் சிலர், எரோனிமுவின் பட்டியலை ஏற்று அறிக்கையிட கருத்துத் தெரிவித்தனர். இச்சங்கம், கி.பி. **1546**-இல், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தையும் சம பக்தியோடும் வணக்கத்தோடும் தாம் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது. அதற்குப்பின், ஆப்பிரிக்கச் சங்கங்கள் ஏற்றுக்கொண்ட நீண்ட பட்டியலைக் கொடுக்கிறது. திரிதெந்தீன் சங்கக் காலத்திலிருந்து, கத்தோலிக்கத் திருச்சபை மூலத் திருமுறை நூல்களையும், துணைத் திருமுறை நூல்களையும் சமநிலையிலும் சமஇறை ஏவுதல் பெற்றதாகவும் ஏற்று அறிக்கையிட்டது. இஃதோடு இப்பிரச்சனை முடிவு கட்டப்பட்டது. அதே விசுவாச அறிக்கை முதல் வத்திக்கான் சங்கத்திலும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திலும் வலியுறுத்தப்பட்டது.

சீர்திருத்தவாதிகள் (பிரிவினைச் சகோதரர்கள்) எபிரேயத் திருமுறைப்பட்டியலில் (மூலத் திருமுறைப்பட்டியலில்) காணப்படும் நூல்களை மட்டும் இறைஏவுதல் பெற்றதாகவும், திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாகவும் ஏற்றுக்கொள்வர். கத்தோலிக்கர்கள் மூலத்திருமுறைப்பட்டியலிலும், துணைத்திருமுறைப்பட்டியலிலும் காணப்படும் நூல்கள் அனைத்தையும் இறை ஏவுதல் பெற்றதாகவும் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்ததாகவும் சம பக்தியோடும் வணக்கத்தோடும் ஏற்றுக்கொள்வர்; அவற்றைப் பின்வருமாறு பிரித்துக்காட்டுவர்.

ஐந்நூல் (சட்டம்):-ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்.

வரலாற்று நூல்கள்:-யோசுவா, நீதிபதி, 1-2 சாமுவேல் (1-2 அரசர்கள்), 1-2 அரசர்கள் (3-4-அரசர்கள்), 1-2 நாள், எஸ்ரா, நெகேமியா, தோபி, யூதித்து, (10:4-16:24 உள்ளிட்ட) எஸ்தர்.

ஞானநூல்கள்:-யோபு, சங்கீதங்கள், பழமொழி, திருவுரை, உன்னத சங்கீதம், ஞானம், சீராக்கு.

பெரிய இறைவாக்கினர்கள்:-எசாயா, (புலம்பல், பாரூக்கு சேர்ந்த) எரேமியா, எசேக்கியேல், (3:24-90;13-14 உள்ளிட்ட) தானியேல்.

சிறிய இறைவாக்கினர்கள்:-ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், அபக்கூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி.

வரலாற்றுப் பிற்சேர்க்கை: 1-2 மக்கபேயர்.

விவிலியத் திருமுறைப்பட்டியல் - புதிய ஏற்பாடு (BIBLICAL CANON - NT))

1. **உருவாதல்:** பழைய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலைப்போல் புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலும் படிப்படியாக வளர்ந்ததாகும். தொடக்கத்தில் இத்தொகுப்பின் நூல்கள், தனித்தனியாக, ஒன்றையொன்று சாராது, வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு சூழ்நிலைகளில், வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்பத் தோன்றின. பின்வரும் தலைமுறைகளுக்குச் சொத்தாக விட்டுச்செல்ல ஒரு தொகுப்பைப் படைக்க ஒத்துழைக்க வேண்டும் என்ற கருத்து அப்போஸ்தலர்களிடமோ, அவர்களது சீடர்களிடமோ இருந்ததில்லை. இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் போதகர்களே ஒழிய, எழுத்தாளர்கள் அல்லர். அவர்கள் படிப்பித்தனர், போதித்தனர். ஏனெனில், பவுலின் சொற்களில், ''அறிவிப்பதைக் கேட்பதால்தான் விசுவாசம் உண்டாகிறது'' (உரோ 10:17). வாய்மொழி நற்செய்

தியைப் பலப்படுத்தவே, எழுதப்பட்ட நற்செய்தி பயன்பட்டது (காண்க. லூக் 1:4). புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு நூலும் தனித்தனியாகத் தோன்றியது. அதற்கே உரிய வரலாற்றைக் கொண்டுள்ளது. சான்றாக, பவுல், செயல்முறையான தேவைகளைச் சந்திக்கவும், போதகம் அளிக்கவும், உற்சாகப்படுத்தவும், உடனடியான ஆபத்துகளைப் பற்றி எச்சரிக்கவும் ஒரு விசுவாச சமூகத்திற்குத் தமது மடல்களை எழுதினார். உரோமைப் பேரரசு முழுவதும் அமைந்திருந்த தலத்திருச்சபைகளுக்கு எழுதப்பட்ட இத்தகைய மடல்கள் மற்றத் திருச்சபைகளோடும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இப்படிச் செய்யுமாறு, பவுலே கேட்டுக்கொள்கிறார் (கொலோ 4:16). இத்தகைய மடல்கள் எண்ணிக்கையில் பெருகின. ஒவ்வொரு திருச்சபையும் இம்மடல்களின் தொகுப்பைச் சேர்த்துக்கொள்ள விரும்பியது. எப்படித் திருமுறைப்பட்டியலின் கருமூல வடிவம் தோன்றியது என ஏற்கெனவே இங்குக் காணலாம். இச்சிறுதொகுப்பு அப்போஸ்தலர்களிடமிருந்து தோன்றியதன் தெளிவான முத்திரை அல்லது உத்தரவாதம் கொண்ட நூல்கள் மேலும் மேலும் சேர்க்கப்பட்டபோது பெருகியது. பழைய ஏற்பாட்டுக்கு இணைந்த முறையில், புதிய ஏற்பாட்டிலும் இத்தகைய தொகுப்பு உருவாவதைப் பற்றிய அடையாளங்கள் புதிய ஏற்பாட்டிலேயே உள்ளன. ''நமது அன்புக்குரிய பவுலும், தமக்கு அளிக்கப்பட்ட ஞானத்தின்படி இவ்வாறே உங்களுக்கு எழுதியுள்ளார். தம் கடிதங்களில் இதைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அதையே அவர் சொல்கிறார். புரிந்து கொள்வதற்குக் கடினமானவை சில அவருடைய கடிதங்களில் உள்ளன. அறியாதவர்களுக்கும் உறுதியற்றவர்களுக்கும் மறைநூலின் மற்றப் பகுதிகளுக்குப் பொருள் திரித்துக் கூறுவது போல், இவற்றிற்கும் கூறுகின்றனர்'' (2 பேதுரு 3:15-16).

உயிருள்ள சாட்சிகள் குறைந்து கொண்டே போயின. அதே சமயம், விசுவசிக்கும் சமூகங்களின் எண்ணிக்கை பெருகியது. இச்சூழ்நிலையில், ஆண்டவரது போதகம், வாழ்வு, மரணம் மற்றும் உயிர்ப்புப் பற்றிய எழுதப்பட்ட ஏடுகள் இருந்தால் வருங்காலத் தலைமுறைகளுக்குப் போதகம் அளிக்கப் பயனுள்ளதாக இருக்கும் என்ற உணர்வு மேலும் மேலும் வளர்ந்தது. இந்நிலையில் முதலில் முழுவதும் வாய்மொழிப் பாரம்பரியமும் முதலாவது எழுதப்பட்ட ஏடுகளும் கலந்த நிலையைக் காண்கிறோம். இவற்றைத் திட்டம் செய்ய எடுக்கப்பட்ட பல முயற்சிகளையும் தான் அறிந்திருப்பதாகவும் அவற்றைத் தான் பயன்படுத்தியதாகவும் லூக்கா கூறுகிறார் (லூக் 1:1). திருமுறை நற்செய்திகளில் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நிலைப்படுத்தப்பட்ட இறுதிக் கட்டத்திற்கு முன், இவை பற்றிய முன் வரலாறு இருந்திருக்க வேண்டும். இதில் முழுவதும் வாய்மொழிப் பாரம்பரியம் மட்டும் அடங்கியிருக்கவில்லை எனலாம். நற்செய்தி ஒரு முறை எழுதப்பட்டபின், திருமுகங்களைப்போல், ஒரு திருச்சபையிலிருந்து மற்றத் திருச்சபைகளோடு பரிமாறிக்கொள்ளப்படும். ஒவ்வொரு திருச்சபையும் தன்னிடமுள்ள ஏட்டுத்தொகுப்போடு புதிதாகக் கிடைத்த நூல்களையும் சேர்த்துக் கொள்ளும். யோவான் நூல் இவ்வாறு பரிமாறிக் கொள்ளப்பட்டதற்குச் சான்று 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எகிப்திய புல்தாள் ஏடுகளில் காணப்படுகின்றது. ஆனால், இத்தொகுப்புகள் விரைவாகச் செய்யப்படவில்லை. ஏனெனில், தொலைத்தொடர்புகள் மெதுவாகவும் கடினமாகவும் இருந்ததாலும், நூல்களைப் பிரதி எடுக்க வேண்டிய சாதனங்கள் குறைவாக இருந்ததாலும், நூல்களைத் தொகுப்பது மெதுவாகவே நடந்தது. வேறு தடங்கல்களும் இருந்தன. எடுத்துக்காட்டாக, சிறிய கடிதங்கள் தனிநபர்களுக்கு எழுதப்பட்டவை; கோட்பாட்டளவில் முக்கியமில்லாதவை; இவை அப்போஸ்தலிக்க மூலங்களிலிருந்துதான் தோன்றினவா என்று கூறுவது கடினம். மேலும் போலியான, தனிக்குறிக்கோள் நோக்குடைய நூல்கள் மக்களிடையே உலவின. இவையும் அப்போஸ்தல மூலம்

கொண்டிருந்ததாக உரிமை கொண்டாடின. ஆகவே, அப்போஸ்தல அதிகாரம் பெற்றதாக உறுதி செய்யப்படாத, ஐயமுள்ள எதையும் ஏற்றுக்கொள்ள மக்கள் எச்சரிக்கையாக இருந்தனர். இச்சூழ்நிலையில், உண்மையானதும், இறை ஏவுதல் பெற்றதும் நிறை திருமுறை நிலை பெற்றதுமான சில நூல்கள் நீண்ட காலத்திற்கு எல்லா இடங்களிலும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் வியப்படைய வேண்டியதில்லை. இவை புதிய ஏற்பாட்டுத் துணைத் திருமுறை நூல்கள் என்றழைக்கப்பட்டன. இவை எபிரேயர், யாக்கோபு, 2 பேதுரு, 2-3 யோவான், திருவெளிப்பாடு ஆகிய நூல்களாகும். ஆனால், புதிய ஏற்பாட்டைப் பொருத்தமட்டும் கத்தோலிக்கர்களுக்கும் பிரிவினைச் சகோதரர்களுக்குமிடையில் வேறுபாடு இல்லை. புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலைச் சேர்ந்த நூல்கள் நான்கு நற்செய்திகள், அப்போஸ்தலர் பணி நூல், பவுலின் பதினான்கு திருமுகங்கள், ஏழு பொதுத்திருமுகங்கள் (யாக்கோபு, 1-2பேதுரு, 1-2-3 யோவான், யூதா), திருவெளிப்பாடு ஆகியவையாகும்.

II. **வரலாறு:**

1) தொடக்க காலத்திலேயே: உரோமை, அந்தியோக்கியா, கொரிந்து, அலக்சாந்திரியா போன்ற முக்கிய திருச்சபைகளும் மற்றத் திருச்சபைகளும் தாங்கள் அதிகாரபூர்வமானவை என்று கருதிய அப்போஸ்தல நூல்களைக் கொண்டிருந்திருக்க வேண்டும். ஆனால் அவற்றின் எண்ணிக்கை வேறுபட்டிருக்கலாம். திருநூலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பவுலின் நூல்கள் அடங்கிய தொகுப்பு இருந்ததற்குப் புதிய ஏற்பாட்டிலேயே சான்று இருப்பதை ஏற்கெனவே பார்த்துள்ளோம். மேலும், நற்செய்திகளும் அப்போஸ்தலர்களின் நூல்களும் தனிச்சிறப்பான இடத்தைக் கொண்டிருந்தன என்று அப்போஸ்தலிக்கத் தந்தையர்கள் எடுத்துக் கூறுகின்றனர். இவர்கள் இந்நூல்களைத் தங்கள் நூல்களிலிருந்து கவனமாய்ப் பிரித்துக்காட்டுவது கவனிக்கத்தக்கது. உரோமைக் கிளமந்து (கி.பி. 96), அந்தியோக்கு - இஞ்ஞாசியார் (107-110), சிமிர்னா போலிக்கார்ப்பு (70-156) ஆகியோரின் நூல்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

வெளிப்படையான குறிப்புகளைத் தவிர, தற்செயலான குறிப்புகளும் சிந்தனை மற்றும் மொழி இணைவுத்தன்மையும் பல காணப்படுகின்றன. இவை பவுலின் நூல்களை நன்கு அறிந்திருப்பதாகத் தெரிகிறது. அப்போஸ்தோலிக்கத் தந்தையர்களின் நூல்களில் புதிய ஏற்பாட்டு நூல்கள் பலவற்றின் தெளிவான சுவடுகள் காணப்படுகின்றன. இஃது எவ்வளவு பரந்த அளவில் காணப்படுகின்றன என்றால், இந்நூல்களின் தொகுப்பு பொதுவாக அறியப்பட்டிருந்தது, பரவலாகப் பயன்பட்டது என்பது பற்றி ஐயமேயில்லை எனலாம்.

நமது ஆண்டவரின் வாழ்வும் போதனையும் இன்னும் வாய்மொழியால் அறியப்பட்டு வந்தாலும், எழுதப்பட்ட நற்செய்திகளைச் சுட்டிக்காட்டல்களும் காணப்படுகின்றன. தொடக்க கால ஆசிரியர்களின் தீர்ப்பு தெளிவாக உள்ளது. ஏனெனில், அவர்கள் இந்நூல்களை அதிகாரபூர்வமானவையாகப் பயன்படுத்துகின்றனர்; இவை அப்போஸ்தலர்களிடமிருந்து வருவதாக ஏற்றுக்கொள்கின்றனர்; இறை ஏவுதல் பெற்றவையாக எடுத்துக்கூறுகின்றனர்.

2) காப்புரையாளர்கள்: திருச்சபை வாழ்வில் பின்வந்த காலத்தில், உரோமைப் பேரரசின் கொடுமைகளையும், பதிதப் போலிச் சகோதரர்களின் தாக்குதல்களையும் எதிர்கொண்டபோது, திருச்சபைக்கு உதவ காப்புரையாளர்கள் தோன்றினர். அவர்களின் நூல்களில் திருமுறை நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் மிகுந்து காணப்படுகின்றன. அவை அப்போஸ்தல அதிகாரத்தின் மேல் அமைந்திருப்பதாக விவரிக்கிறார் மறைசாட்சியான யுஸ்தீன். கிறிஸ்தவர்கள் ஞாயிறன்று வழிபாட்டுக்குக் கூடியபோது, இந்நிகழ்ச்சியுரைகள் இறைவாக்கினர்களோடு சேர்த்து வாசிக்கப்பட்டன. இது, பழைய ஏற்பாட்டோடு சேர்ந்து கிறிஸ்தவர்களின் தொகுப்பும் இடம் வகிப்பதைச்

சுட்டுகிறது. இன்று நாம் கொண்டிருக்கும் நான்கு நற்செய்திகளைப் பற்றி யுஸ்தீன் பேசுகிறார். இதை அவருடைய சீடர் தேசியனின் நூலும் உறுதிப்படுத்துகிறது. இந்த நற்செய்திகளிலிருந்துதான் தேசியன் தனது நற்செய்திகளின் ஒருங்கமைவு நூலைத் தயாரித்தார். திருவெளிப்பாட்டு நூலைப் புனித யோவான் எழுதியதாக யுஸ்தீன் கூறுகிறார். கொரிந்தைச் சேர்ந்த தெனிசு என்பவர் (176), ஒரு முக்கிய பகுதியில், பதிதர்கள் தன்நூலைப் பழுது படுத்துவதாக முறையிடுகின்றார். ஆனால், ஆண்டவரது திருநூலுக்குங்கூட இப்படித் தான் நடந்தது என்ற நினைவால் ஆறுதல் அடைகிறார். பதிதரான மார்சியோன் (150) புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியல் இருந்ததற்கு நேரடிச்சான்று கொடுக்கிறது. இவரது கூற்றுகளே திருச்சபை தனது புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலை வரையறை செய்வதற்குத் தூண்டியது எனலாம். மார்சியோன் பழைய ஏற்பாடு முழுவதையும் நிராகரித்தார்; புதிய ஏற்பாட்டில், குறுகிய வடிவத்தில் லூக்கா நற்செய்தி மற்றும்பவுலின் பத்துத் திருமுகங்களைத் தவிர, மற்றவற்றை நிராகரித்தார். இவரது நிலைக்கு எதிர்ப்பாக, இனி வரும் விவிலியங்களோடு ''மார்சியோனுக்கு எதிராக'' என்ற முன்னுரையும் சேர்த்துப் பதிப்பிக்கப் பட்டது.

2-ஆம் நூற்றாண்டு முடிவுகள் புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தாலும் பொதுவாக அறியப்பட்டிருந்தன; . அவற்றில் பெரும்பாலானவற்றின் இறைப்பண்பு எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்குச் சிறிய ஆசியா, பிரான்ஸ், உரோமை போன்ற இடங்களில் நிலவிய பாரம்பரியங்களை நன்கு அறிந்தவரும், தனது ஆசிரியர்கள் வழியாக அப்போஸ்தல முடிவோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவருமான இரனேயு, வட ஆப்பிரிக்காவைச் சேர்ந்த தெர்துல்லியன், அலக்சாந்திரிய இளமந்து போன்ற தந்தையர்களின் நூல்களில் சான்றுகளைக் காணலாம். இவர்கள் அளிக்கும் பட்டியலில் சில நூல்கள் விடப்பட்டிருக்கலாம். ஆனால் திருச்சபைத் தந்தையர் யாவரும், மார்சியோனின் நிலையை நிராகரித்து, இந்நூல்களின் உண்மைத் தன்மையையும் அதிகாரத்தையும் வலியுறுத்துகின்றனர்.

நமக்கு ஏட்டுவடிவில் கிடைத்திருக்கும் காலத்தால் முந்திய பட்டியல் ''மூராத்தோரியின் துணுக்குகளாகும்'' (200). இவற்றை மிலானிலுள்ள அம்ப்ரோசியார் நூல் நிலையத்தில், 1740-இல் மூராத்தோரி என்பவர் கண்டுபிடித்தார். அவரது பெயரால் இத் துணுக்குகள் அழைக்கப்படுகின்றன. இவற்றில் 2-ஆம் நூற்றாண்டின் முடிவில் உரோமையில் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப் பட்ட நூல்களின் பட்டியல் அடங்கியுள்ளது. இந்நூல்கள் நான்கு நற்செய்திகள், அப்போஸ்தலர் பணி, (எபிரேயரைத் தவிர்த்த) பவுலின் திருமுகங்கள், யாக்கோபு, 1-2 பேதுரு, யோவானின் ஒரு திருமுகம் ஆகும். 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த செஸ்டர் பீட்டி ஏடுகள் மூன்று ஏட்டுத் தொகுப்புகளைக் கொண்டுள்ளன. இவற்றை ஒன்று சேர்க்கும் போது, அது மேய்ப்புப்பணித் திருமுகங்கள் மற்றும் பொதுத்திருமுகங்கள் தவிர்த்த, புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தையும் கொண்டுள்ளது.

சான்றுகளிலிருந்து, 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, புதிய ஏற்பாடு, நாம் திருமுறைப்பட்டியலில் கொண்டிருக்கும் நூல்களைப் பெருமளவிற்குக் கொண்டிருந்தது என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படும். இப்படிக் கூறுவதால் சில நூல்களைப் பற்றித் தயக்கமோ, தர்க்கமோ, மறுபரிசோதனையோ இருந்திருக்கவில்லை என்று கூறவில்லை.

III. **துணைத் திருமுறை நூல்கள்:** எபிரேயர், யாக்கோபு, 1-2 பேதுரு, 1-2-3 யோவான், யூதா, திருவெளிப்பாடு ஆகிய நூல்கள் புதிய ஏற்பாட்டுத் துணைத் திருமுறை நூல்கள் என்று சிலரால் அழைக்கப் படும். இவற்றின் உண்மைத்தன்மை பற்றி ஐயப்பாடுகள் எழுந்ததால், 3-ஆம் நூற்

றாண்டு திருச்சபைத் தந்தையர்கள் இவற்றில் சிலவற்றை ஏற்கத் தயங்கியுள்ளனர். சில குறுகியவையாகவும் நன்கு அறியப்படாமலும் இருந்தன. இவை திருமுறைத் தன்மைக்கு உரிமை கோரியபோது, அஃது உடனடியாக அளிக்கப்படவில்லை. இது புரிந்து கொள்ளக்கூடியதே.

திருவெளிப்பாட்டு-நூல் தொடக்கத்திலிருந்தே எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், 3-ஆம் நூற்றாண்டில் இந்நூல் ஆயிரமாண்டு நற்காலப் பதிதக்கொள்கைக்கு ஆதரவு அளிப்பதாகப் பயன்பட்டது. ஆகவே, இந்நூல் அப்போஸ்தலரால் எழுதப்பட்டதுதானா என்று மறு பரிசீலனை செய்ய அலக்சாந்திரியாவைச் சேர்ந்த தெனிசு என்பவரைத் தூண்டியது. இந்நூலின் இறை ஏவுதல் தன்மை மற்றும் திருமுறைத் தன்மை பற்றிய பாரம்பரியம் நெடுங்காலமாக இருந்ததால், இவற்றை அவர் மறுக்கவில்லை. ஆனால் நடை, சிந்தனை மற்றும் மொழியில் உள்ள வேறுபாட்டால், நான்காம் நற்செய்தியை எழுதிய ஆசிரியரே திருவெளிப்பாட்டு நூலை எழுதினார் என்பதைத் தெனிசு மறுத்தார். இந்நூலின் ஆசிரியர் பற்றிய ஐயப்பாடு அதன் திருமுறைத்தன்மையையும் ஐயத்திற்குள்ளாக்கியது. ஆகவே, அதன் அதிகாரத்தன்மையை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் உண்டாகியது. 4-ஆம் நூற்றாண்டில், யூசேபியு இதே தயக்கத்தை எடுத்துக்காட்டுகிறார். ஏனெனில், இந்நூலை ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல் தொகுப்பிலும் போலிநூல் தொகுப்பிலும் சேர்த்துக் கூறுகிறார். கிழக்கத்திய திருச்சபையில் எருசலேம் சிரில், இலவோதிக்கேயா சங்கம், கிரகோரி நாசியான்சன், அம்பிலியோக்கியு மற்றும் பிறரும் இந்நூலைத் திருமுறைப்பட்டியலில் ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்கத்திய திருச்சபையில் எரோனிமு, அகுஸ்தீனார், மற்றப் பெரிய இலத்தீன் தந்தையர்கள் இந்நூலின் அதிகாரத்தை ஏற்று வலியுறுத்தினர். இறுதியில் இரண்டு திருச்சபைகளாலும் இந்நூல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்தனாசியு இதைப் புதிய ஏற்பாட்டு நூல்களில் ஏற்றுக் கொள்கிறார்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தைப் பொருத்தமட்டும், மேற்கத்திய திருச்சபைதான் ஐயப்பாடும் தயக்கமும் காட்டியது. இந்நூலைப் பவுல் எழுதவில்லை என்று கருதியது. ஆகவே நூலின் திருமுறைத்தன்மை கேள்விக்குரியதாயிற்று. கிழக்கத்திய திருச்சபையால், இந்நூல் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பவுலைச் சேர்ந்தது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஓரிசன் போன்றவர்கள், நூலின் சிந்தனை பவுலினுடையது, நடையும் மொழியமைப்பும் அவருடைய சீடரைச் சேர்ந்தவை, இச்சீடர் தனது குருவின் போதகத்தைப் பிரமாணிக்கமாக எடுத்துரைத்தார் என்று கூறினர். இந்நூலின் உடனடியான ஆசிரியர் பற்றி உறுதியாக எதுவும் கூற முடியாவிட்டாலும், இந்நூல், புதிய ஏற்பாட்டு நூல்களில் அதன் பாரம்பரிய இடத்தைப் பெற்றிருந்தது. அத்தனாசியு, இதையும் சேர்த்துப் பவுல் 14 திருமுகங்களை எழுதியதாகக் கூறுகிறார். இந்நூலின் ஆசிரியர் பற்றி ஐயப்பாடு இருந்தாலும் 4-ஆம் நூற்றாண்டிலிருந்து கிழக்கிலும் மேற்கிலும் இந்நூல் அதிகாரமுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இஃது ஆப்பிரிக்கச் சங்கங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

நான்காம் நூற்றாண்டின் முடிவிற்குள், புதிய ஏற்பாட்டு நூல்கள் சிலவற்றைப் பற்றிய ஐயங்கள் மறைந்தன. இவை ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்கள் என்பதற்கு மாறான தடங்கல்கள் எழவில்லை. இந்நிலை 16-ஆவது நூற்றாண்டு வரை நீடித்தது. திரிதெந்தீன் சங்கம் அறிக்கையிட்ட புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியல் இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களின் பட்டியல்தான். இன்று இதுதான் எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமுறைப்பட்டியல். எராஸ்முஸ், கயேத்தான் போன்றவர்கள் போலிப்புலமையால் தவறாக வழிநடத்தப்பட்டு, பழைய ஐயங்களை மீண்டும் எழுப்பினர். லூத்தரும், செர்மென் சீர்திருத்தவாதிகள் சிலரும் யூதா, எபிரேயர், யாக்கோபு, திருவெளிப்பாடு ஆகிய நூல்களை நிராகரித்தனர். ''விசுவாசம் செயலோடு

கூடியதாய் இராவிட்டால், அது தன்னிலே உயிரற்றது'' என்ற யாக்கோபின் போதகத்தை லூத்தர் எதிர்த்துப் போராடியது யாவரும் அறிந்த ஒன்றாகும். மற்றச் சீர் திருத்தசபைகள் புதிய ஏற்பாட்டுத் திருமுறைப் பட்டியலைப் பற்றித் தர்க்கிக்கவில்லை. லூத்தர் சபையினரும் 17-ஆம் நூற்றாண்டில் பாரம்பரியத் திருமுறைப்பட்டியலை ஏற்றுக்கொண்டனர். சில எதிர்ப்புகளின் பின்னணியில்தான் 1546-இல் திரிதெந்தீன் பொதுச்சங்கம் புதிய ஏற்பாட்டுத் திருமுறைப்பட்டியலில் பின்வரும் நூல்கள் அடங்கியுள்ளன என்று அறிக்கையிட்டது. அதையே முதலாம், இரண்டாம் வத்திகான் சங்கங்கள் வலியுறுத்தின.

1. நான்கு நற்செய்திகள்: மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்.
2. லூக்கா எழுதிய அப்போஸ்தலர் பணி நூல்.
3. பவுல் எழுதிய 14 திருமுகங்கள்: உரோமையர், 1-2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசியர், 1-2 தெசலோனிக்கேயர், 1-2 திமொத்தேயு, தீத்து, பிலமோன், எபிரேயர்.
4. பொதுத் திருமுகங்கள்: யாக்கோபு, 1-2 பேதுரு, 1-2-3 யோவான், யூதா.
5. திருவெளிப்பாட்டு நூல்.

IV. **திருமுறையின் ஒப்பளவுகள்:** எந்த ஒரு தனிநூலின் இறை ஏவுதல் அல்லது இறை ஆசிரியத் தன்மையையும் இறை ஆசிரியர் மட்டுமே வெளிப்படுத்தக் கூடுமாகையால், அந்நூலின் இறை ஏவுதல் அல்லது திருமுறைத்தன்மையைப் பற்றி முடிவு செய்யப் பயன்படும் எந்த அளவுகோலும் அல்லது கோட்பாடும் இறைசாட்சியத்தைக் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய இறைசாட்சியத்தைக் கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்களிடமிருந்து ஏதாவது ஒரு வடிவில் வரும் பாரம்பரியத்தில் மட்டுமே காணலாம். இது திருச்சபையில் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும்; அதிகாரபூர்வமான கூற்றுகளால் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்; விசுவாச ஒழுங்கோடு ஒத்துப் போகக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால், ஒரு கேள்வி எழலாம். புதிய ஏற்பாட்டு நூல்களை நிர்ணயிப்பதில், அப்போஸ்தலப் பாரம்பரியம் எந்தப் பொருளில் திருச்சபைக்கு வழிகாட்டியது?

முன்பு கூறியதுபோல், முதல் கிறிஸ்தவர்கள் தங்கள் மறைநூலைப் படிப்படியாகத் தொகுத்தனர். இவை தனிச்சிறப்பான புனிதமும் அதிகாரமும் உடையன என்று கருதினர். ஏனெனில், இவை அப்போஸ்தலர்களிடமிருந்து தோன்றின என்பதற்குத் தவறுக்கு இடமில்லாத முத்திரை அல்லது உத்தரவாதம் கொண்டிருந்தன எனக் கருதினர். அதே சமயம் நிரூபிக்கப்பட்ட, ஐயமற்ற அப்போஸ்தலிக்க அதிகாரம் பெறா எந்த நூலையும் இத்தொகுப்போடு சேர்த்துக் கொள்வதைத் தவிர்க்க மிக எச்சரிக்கையாக இருந்தனர். இதன்படி ஒருநூல் திருமுறைத் தன்மை கொண்டிருப்பதற்கு, அஃது அப்போஸ்தலர்களிடமிருந்து, ஏதாவது ஒரு வழியில் தோன்றியிருக்க வேண்டும் என்பதே தொடக்கத்திலிருந்த அளவுகோலாகும் என்று கருதினர். அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் பெயரால் போதிக்க அவரது தூதுவர்களாக அனுப்பப்பட்டவர்கள் என்பதால், அவர்கள் போதித்தவையெல்லாம் கிறிஸ்துவின் வார்த்தையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் (உரோ 2:16; 16:25; 2 கொரி4:3). ஆனால், அவர்கள் போதனையைப் பேசப்பட்ட வார்த்தைக்கு மட்டும் ஏன் வரையறை செய்ய வேண்டும்? அவர்கள் பேசியபோது இருந்ததுபோல், எழுதிய போதும் கிறிஸ்துவின் தூதுவர்களாக இருக்கவில்லையா? இந்நோக்கில் அப்போஸ்தலர்கள் எழுதியவையும் இறை ஏவுதல் பெற்றவையேயாகும். இப்பொருளில் தான் அவை விசுவாசிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மாற்கு, லூக்காவின் நூல்கள் முறையே பேதுரு, பவுலிடமிருந்து தோன்றியதாகக் கருதப்பட்டதால் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால், ஒரு கேள்வி எழலாம். இறை ஏவுதல் என்ற தற்செயலான அருங்கொடை அல்லது ஆற்றலை அப்போஸ்தலர் என்ற நிலையான பதவியுடன் சமகாலத்திற்கு நீண்டதாக ஆக்குவது

சரிதானா? மாற்கையும் லூக்காவையும் அப்போஸ்தலர் பதவிக்கு உயர்த்துவது சரிதானா? உண்மையில், அப்போஸ்தலரின் போதகத்தைப் பிரமாணிக்கமாய் எழுதிவைத்தாலும், அஃது இறை ஏவுதல் என்ற சொல்லின் உண்மைப்பொருளில், இறை ஏவுதல் பெறாததாக இருக்கக் கூடுமல்லவா? அப்போஸ்தலர்களும் அவர்களுக்குப்பின் வந்தவர்களும் சில நூல்களை ஒதுக்கிவைத்து, அவற்றைப் பழைய ஏற்பாட்டு நூல்களுக்குச் சமமாக அமைத்து, பொது வழிபாட்டில் அவற்றைப் பயன்படுத்தியும், வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ சுட்டிக்காட்டியுமிருக்க வேண்டும். தாங்கள் போதித்து வந்த பல பகுதிகளிலும் அப்போஸ்தலர்கள் தங்கள் விசுவாசிகளுக்கு இப்படித் தேர்வு செய்வதில் வழிகாட்டி, இந்த அப்போஸ்தலிக்க மரபு அல்லது பாரம்பரியத்தைப் பின்வந்த தலைமுறைகளுக்குக் கையளித்திருக்க வேண்டும். இந்தப் பாரம்பரியம் எல்லா இடங்களிலும் ஒரே சீராக இருந்திருக்க வேண்டியதில்லை. சில நூல்கள் திருச்சபையின் சுய எடுத்துக் கூறலாக திருச்சபையில் எழுத்து வடிவில் தோன்றி ஏற்றுக்கொள்ளப் பட்டன என்பதே, அந்நூல்களின் இறை ஏவுதல் தன்மை அல்லது இறை ஆசிரியத் தன்மை அப்போஸ்தலிக்கத் திருச்சபைக்கு வெளிப்படுத்தப்பட்டது என்றும் கட்டவல்லது. தவறுகள் தோன்றியபோது எதிர்ப்புகள் போராட்டங்களுக்கிடையில் திருச்சபை தனது போதிக்கும் அதிகாரத்தை அல்லது ஆசிரியத் தன்மையைப் பயன்படுத்தி, திருமுறைப்பட்டியலை வரையறை செய்தது.

இது பற்றி இரண்டாம் வத்திகான் சங்கம் பின்வருமாறு கூறுகிறது. "திருமரபும் திருமறைநூலும் திருச்சபையிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ள இறைவார்த்தையின் ஒரே திருக்களஞ்சியமாகும்... எழுதப்பட்ட அல்லது மரபு வழிவந்த இறைவார்த்தைக்கு அதிகார பூர்வமான பொருள் விளக்கம் செய்யும் பொறுப்பு இயேசு கிறிஸ்துவின் பெயரால் அதிகாரம் செலுத்தும் திருச்சபையின் உயிருள்ள ஆசிரியத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும், இவ்வாசிரியம் இறைவனின் வார்த்தைக்கு மேற்பட்டதன்று. மாறாக, மரபு வழியில் வழங்கப்பட்டதை மட்டும் போதிக்கும் திருச்சபையின் ஆசிரியம் இறைவனின் கட்டளையாலும், தூய ஆவியின் துணையாலும் அதனைப் பக்தியோடு கேட்டு, தூய்மையாகக் காத்து, பற்றுறுதியுடன் விளக்குவதன் வழியாக இறைவார்த்தைக்குப் பணிபுரிகின்றது; அஃதோடு இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை என விசுவசிக்கும்படி அஃது எடுத்துரைக்கும் எல்லாவற்றையும் விசுவாசத்தின் ஒரே திருக்களஞ்சியத்திலிருந்தே பெறுகிறது. எனவே, திருமரபு, திருமறைநூல், திருச்சபையின் ஆசிரியம் ஆகியவை இறைவனின் ஞானமிகு திட்டத்தின்படி ஒன்றோடொன்று எவ்வளவு ஒன்றுபட்டு இருக்கின்றனவென்றால், ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்க முடியாது என்பது தெளிவு. இவை யாவும் சேர்ந்து, ஒவ்வொன்றும் தத்தம் முறைப்படி, ஒரே தூய ஆவியினால், ஆன்மாக்களின் மீட்பிற்குப் பயனுறு வகையில் உதவுகின்றது என்பதும் தெளிவாகிறது" (2-ஆம் வத்திகான்: இறைவெளிப்பாடு-10).

V. முடிவுரை: 16-ஆம் நூற்றாண்டில் வரையறை செய்யப்பட்ட திருமுறைப்பட்டியலிலிருந்து தொடக்க காலத் தந்தையர்களின் நூல்களுக்கு நம் கண்களைத் திருப்பினால், எடுத்துக்காட்டுகள் மற்றும் மறைமுகமான குறிப்புகளுக்கும் இக்காலத் திருமுறை வரையறைகளுக்கும் இடையில் பரந்த நிகழ்வுப் பொருத்தத்தைக் காண்கிறோம். இதற்குக் காரணம் தேட வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. திருமறையின் திருமுறைப்பட்டியல் ஒரு விசுவாச சத்தியமாகும்; வெளிப்படுத்தப்பட்ட உண்மையாகும். அந்த அளவில் அதற்கு வரலாறும் வளர்ச்சியும் உண்டு; ஆனால் கூடுதல் அல்லது பெருகுதல் என்ற பொருளில் அன்று. ஏனெனில், அப்போஸ்தலர் காலத்துக்குப்பின், இது நிகழக்கூடிய காரியமன்று; ஆனால், மேலும் நிறைவாக, மேலும் வெளிப்படையாகப் புரிந்துகொள்

ருதல் என்ற பொருளில்தான். வெளிப்படுத்தப்பட்ட உண்மை படிப்படியாகத்தான் மலர்கிறது. அஃது அதன் எல்லாக் கோணங்களிலும் உடனடியாகப் புரிந்து கொள்ளப் படுவதோ, அதன் ஆழம் முழுவதும் ஊடுருவப்படுவதோ, அதன் எல்லா நிறைவிலும் அழகிலும் பாராட்டப்படுவதோ, அதன் எல்லா உட்கருத்துகளும் முன்னோக் கப்படுவதோ இல்லை. இவை யாவும் படிப்படியாகக் கண்டுணரப்படுகின்றன. ஆண்டவராலும், அப்போஸ்தலர்களாலும் வெளிப்படுத்தப்பட்ட உண்மை, திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது: 2-ஆம் நூற்றாண்டில் பொதுவாக அறியப்பட்டது; கருத்து வேறுபாடுகளாலும், வாத, எதிர்வாதங்களால் 3-ஆம் 4-ஆம் நூற்றாண்டுகளில் தெளிவாக்கப்பட்டது; சூழ்நிலைகள் கோரிய போது வெளிப்படையாக்கப்பட்டது; இறுதியில் அறிக்கையாக அறிவிக்கப்பட்டது. முற்காலம் உள்ளடக்கமாக, மறைமுகமாக ஏற்றுக்கொண்டதைப் பிற்காலம் வெளிப் படையாகக் கொண்டிருக்கிறது; இப்பொருளில் மேலும் நிறைவாகக் கொண்டிருக் கிறது; ஆனால், வேறான கோட்பாட்டையோ, புதிய வெளிப்பாட்டையோ கொண்டிருக்கவில்லை.

விவிலியத்தில் உயிரினங்கள் (FAUNA IN THE BIBLE)

பாலஸ்தீனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல்வகைப்பட்ட உயிரினங்கள் காணப்பட்டன. புவியியல் வேறுபாடுகளுக்கேற்ப இவை வேறுபடுகின்றன. இவற்றை அடையாளம் காட்டுவதும் விவரிப்பதும் கடினமாகும். மொழிவேறுபாடும் இந்த உயிரினங்களை விவரிப்பதிலும் பாகுபடுத்துவதிலும் பயன்படும் பழங்கால முறைக்கும் இக்கால முறைக்கும் இடையேயுள்ள வேறுபாடும் இதற்குக் காரணங்களாகும். இக்கால முறை உயிரியல் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உயிரினங்களைப் பாகுபடுத்துகிறது. விவிலியம் உயிரினங்களின் நடத்தை, தங்கும் இடங்களை அடிப்படையாகக் கொண்டு இவற்றைப் பாகுபடுத்துகிறது.

இக்கட்டுரையில் இந்த உயிரினங்களின் பெயர்களை மட்டும் தொகுத்துத் தருகிறோம். இந்த உயிரினங்கள் பற்றி அந்தந்தப் பெயருடைய தலைப்புகளின் கீழ்க் காண்க.

1. வீட்டு விலங்குகள்: ஆடு, எருது (காளை), ஒட்டகம், கழுதை, குதிரை, கோவேறு கழுதை, செம்மறி, நாய், பசு, பன்றி, பூனை, வெள்ளாடு முதலிய கால்நடைகள்.

2. காட்டு விலங்குகள்: இளமான், எலி, ஓநாய், கரடி, கலைமான், கழுதைப்புலி, கவரிமான், காட்டாடு, காட்டுக்கழுதை, காட்டுப்பன்றி, காட்டுமான், காட்டு வெள்ளாடு, காட்டெருது, குழிமுயல், சிங்கம், சிறுத்தைப்புலி, சுண்டெலி, நரி (குள்ளநரி) பறவை நாகம், பெகமோத்து, மான், முயல், முள்ளம்பன்றி, லிவியத்தான் வெளவால் முதலியன.

3. பறவைகள்: அடைக்கலான் குருவி, ஆந்தை, கடலூராஞ்சி, கவுதாரி, கழுகு, காக்கை, காடை, காட்டுப்புறா, குருவி, கூழக்கடா, கொக்கு, கோட்டான், கோழி வகைகள், சிட்டுக்குருவி, தீக்கோழி, நாரை, பருந்து, பல்வண்ணப்பறவை, பிணந்தின்னிக்கழுகு, புறா, பெலிக்கான், மீன் கொத்தி, வாத்து முதலியன.

4. ஊர்வன: ஓணான், தவளை, பாம்பு வகைகள், புழுக்கள் முதலியன.

5. மீன்வகைகள்.

6. பூச்சிகள்: அட்டை, அந்துப்பூச்சி, ஈ, எறும்பு, உன்னி, கடலுயிர்கள் கம்பளிப் பூச்சி, குளவிகள், சிலந்தி, தத்துக்கிளி, தெள்ளுப்பூச்சி, தேள், தேனீ, நத்தை, வெட்டுக்கிளி முதலியன.

விவிலியத் திறனாய்வு (BIBLICAL CRITICISM)

1. விவிலியத்தின் மூலச்சொற்களைத் துல்லியமாக நிர்ணயிப்பதில் ஆய்வாளர்கள் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். விவிலிய வாசகத்தை முதலில் கேட்டவர்கள் புரிந்து

கொண்ட பொருளையும், இன்று அதை வாசிப்பவர்களுக்கு அஃது அளிக்கும் செய்தியையும், அதைத்தேடி எடுத்துக் கூறுவதிலும் அவர்கள் கவனம் செலுத்தினர். இவற்றை அடைய அவர்கள் பல உத்திகளையும் ஒழுங்குமுறைகளையும் பயன்படுத்துகின்றனர். இத்தகைய அணுகுமுறையைத் திறனாய்வு முறை என்று அழைக்கிறோம். இத்திறனாய்வுமுறை நூல்களின் தோற்றம், ஆசிரியர், அவை கையளிக்கப்பட்ட முறை, சாற்றிக் கூறப்படும் முறை ஆகியவற்றை ஆய்வு செய்கிறது. அடிப்படைவாதிகள் இந்த அணுகுமுறையை இறைவார்த்தையின் அதிகாரத்திற்கு அளிக்கும் அச்சுறுத்தலாகக் கருதுவர். ஆனால் கிறிஸ்தவச் சபைகளில் பெரும்பாலானவை விவிலிய ஆய்வில் இத்தகைய அணுகுமுறையின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றன.

இத்திறனாய்வு கடந்த இரு நூற்றாண்டுகளாகச் சிறப்பான முறையில் நடைபெற்று வந்துள்ளது. இஃது ஐந்நூல் பற்றிய ஆய்வாகத் தொடங்கி விவிலியத்தின் பிறநூல்களுக்கும் விரிவாக்கப்பட்டது.

2. வாசகத்திறனாய்வு: இதன் நோக்கம், கையெழுத்து நூல்கள் எழுதப்பட்டபோதும் மறுபடி பிரதிகள் எடுக்கப்பட்டபோதும் தற்செயலாகவோ, வேண்டுமென்றோ எங்கெல்லாம் மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறதோ அங்கெல்லாம் விவிலிய நூலின் மூலச் சொல்லமைப்பைக் கண்டுபிடித்து நிறுவுவதாகும். கையெழுத்துப் பிரதிகள், மொழிபெயர்ப்புகள், எடுத்துக் காட்டாகக் கையாளப்பட்ட பகுதிகள் ஆகியவற்றுள் ஒன்றோடொன்றை ஒப்பிட்டு விடை காண்பது இந்த அணுகுமுறையின் முக்கிய பகுதியாகும். வாசக ஆய்வாளர்கள் எழுத்தர்களின் பிழைகளைக் கண்டுபிடித்துத் திருத்தவும், கையெழுத்துப் பிரதிகளிடையே காணப்படும் வேறுபாடுகளைச் சமூக, வரலாறு மற்றும் இறையியல் பின்னணியில் விளக்கிக்காட்டவும் முயல்கின்றனர். நம்பத்தகுந்த வாசகத்தை நிறுவுவது, மேற்கொள்ள வேண்டிய ஆய்வுக்கும் விளக்கங்களுக்கும் மிகவும் முக்கியமானதாகும்.

3. இலக்கிய மற்றும் வரலாற்றுத் திறனாய்வு: நூல்களின் ஆசிரியர், நூலமைப்பு மற்றும் காலம் ஆகியவை பற்றியவைகளில் இந்த ஆய்வு முறை முதன்மையாக அக்கறை செலுத்தியது. வாசகத்தில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள், சிறப்பான வாய்பாடுகள் (எ.கா. ஓசே 1:1; செப் 1:1), காலம் குறிக்கக்கூடியவற்றோடு ஒப்பிடக் கூடிய மொழி அல்லது நடைச்சிறப்புகள் அல்லது மற்ற நூல்களில் காணப்படும் எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றைக் கொண்டு நூலின் காலத்தை ஓரளவு நிர்ணயிக்கலாம். நூலின் ஆசிரியர், அதன் அமைப்பு ஆகியவை பற்றிய பிரச்சனை சிக்கலானதாகும். இவை மூலங்கள், பதிப்பு அல்லது கையளிக்கப்படுதல் ஆகிய பிரச்சனைகளோடு தொடர்புடையன. விவிலிய ஆசிரியர்கள் எடுத்துப்பயன்படுத்தியுள்ள ஏடுகள் அல்லது மூலங்களை விவிலியமே குறிப்பிடுகிறது (எ.கா. எண் 21:14; யோசு 10:13; 1 அர 14:19). அரிதாக, சில எடுத்துக்காட்டுகளில் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய ஏட்டு மூலமும், அதை எடுத்துக் கையாண்டுள்ள பிற்கால நூலும் கிடைத்துள்ளன (எ.கா. 1-2 நாளாகமங்கள், அவற்றின் மூலங்களான 1-2 சாமுவேல் மற்றும் 1-2 அரசர்கள் நூல்கள்).

ஐந்நூல் பற்றிய ஆய்விலிருந்து நவீன இலக்கியத்திறனாய்வு தொடக்கமும் அதிக ஊக்கமும் தூண்டுதலும் பெற்றது எனலாம். கி.பி. 1682-இல் ரிச்சர்டு சீமோன் என்ற கத்தோலிக்கக் குரு பழைய ஏற்பாடு பற்றி ஒரு திறனாய்வு நூலை வெளியிட்டார். கத்தோலிக்கர்களும் பிரிவினைச் சகோதரர்களும் அந்நூலைக் கண்டனம் செய்து வாசிக்கப்படக் கூடாத நூலாக்கினர். ஆயினும், இவர் செய்த தொடக்க முயற்சிக்காக, அவர் விவிலியத் திறனாய்வின் தந்தையென அழைக்கப்படுகிறார். அவர் படைப்பு மற்றும் பெருவெள்ளம் பற்றிய விவரிப்புகளில் இரட்டை நிகழ்ச்சியுரைகள் உள்ளதையும், நடையில் வேறுபாடுகள் இருப்பதையும்

எடுத்துக்காட்டி, ஐந்நூல் தோன்றுவதற்கு ஆசிரியர்கள் பலர் ஈடுபாடு காட்டியிருக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டார். இந்த இரட் டை நிகழ்ச்சியுரைகளில் வேறுபட்ட பெயர்கள் இறைவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதை 'விட்டர்' என்பவர் (1711) எடுத்துக்காட்டினர். இதைப் பயன்படுத்தி, பிரான்சு நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்கரும் மருத்துவருமான ஜான் ஆஸ்ட்ருக்கு என்பவர் ஆதியாகமம் பற்றிய ஓர் இலக்கியப் பகுப்பாராய்ச்சி நூலை 1753-இல் வெளியிட்டார். ஆதியாகமத்திற்கு இருமூலங்கள் இருந்திருக்க வேண்டும் என்று இவர் கருதினார். இறைவனுக்கு யாவே என்ற பெயரைப் பயன்படுத்தும் பகுதிகளைப் பிரித்து யாவே பாரம்பரியம் அல்லது மூலம் என்றார். இறைவனுக்கு ஏலோகிம் என்ற பெயரைச் சாற்றிக் கூறும் பகுதிகளை ஏலோகிம் பாரம்பரியம் அல்லது மூலம் என்றார். இவை மோசேக்கு முந்தி ஏற்கெனவே இருந்தவை; இவற்றை ஒன்று சேர்த்து மோசே ஆதியாகமத்தை எழுதினார் என்றார். இதுவே ஏடுகளை அடிப்படையாகக் கொண்ட கருதுகோளின் தொடக்கமாகும். இந்நூலைக் கத்தோலிக்கர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, ஆதரிக்கவில்லை. இந்தக் கருதுகோளை ஏய்க்கானும் (1780), இல்கென்னும் (1798) மேலும் விரிவாக்கினர். இவர்கள் ஏலோகிம் மூல ஏடுகளில் கவனம் செலுத்தினர். இதில் மூன்று மூலங்கள் இருப்பதாகக் கண்டனர். இதில் ஒன்று பிற்காலத்தில் குருக்கள் பாரம்பரியம் என்றழைக்கப்பட்டது.

விவிலியத் திறனாய்வைத் தொடர்ந்து நடத்திய கெடெஸ் (1792), வாட்டர் (1802) ஆகியோர் நிகழ்ச்சியுரைகளில் காணப்படும் ஏறுமாறான தன்மையால் ஈர்க்கப்பட்டனர். இவர்கள் ஏடுகளை அடிப்படையாகக் கொண்ட கருதுகோளை நிராகரித்துவிட்டு துணுக்கு ஏடு கருதுகோளை மேலானதாகக் கருதினர். இதன்படி ஐந்நூலுக்குப் பெரும் எண்ணிக்கையில் சிறு மூலங்கள் இருந்திருக்க வேண்டும். பல தொடர்பற்ற துணுக்குகள் வெறுமனே ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு நூலாக ஐந்நூல் வெளியிடப்பட்டது என்றனர். டேவெட்டா என்பவர் (1806) இக்கருத்தை மற்றொரு கருதுகோளாக விரிவாக்கினார். இதன்படி, ஐந்நூல் ஏலோகிம் மூலத்தை முதன்மையாகக் கொண்ட நூலாகும். அதை யாவே மூல ஏட்டுத்துணுக்குகள் நிறைவு செய்தன. இக்கருதுகோளோடு இவால்டு (1843), பிலிக்கு மற்றும் துக்கு ஆகியோரும் தொடர்புடையவர்களாவர்.

கெப்பெல் (1857) என்பவர் ஏடுகள் கருதுகோளைப் புதுப்பித்தார். ஆதியாகமத்தில் இரு ஏலோகிம் மூலங்களும், ஒரு யாவே மூலமும் இருப்பதாக அவருக்கு முந்திய ஆய்வாளர்களைவிடத் தெளிவாகக் காட்ட முயன்றார். ஏலோகிம் பாரம்பரியங்களில் ஒன்றான குருக்கள் மூலத்தை மிகப் பழமையானதாகவும் அடிப்படையானதாகவும் கருதினார். அவருக்குப்பின் ரீம் என்பவர் (1854) உபாகமப் பாரம்பரியத்தைப் பிரித்துக் காட்டினார். இந்த முயற்சிகள் ஐந்நூலில் முதலாம் ஏலோகிம் மூலம் (E), இரண்டாம் ஏலோகிம் மூலம் [இது பிற்காலத்தில் குருக்கள் மூலம் (P) என்று விளக்கப்பட்டது] யாவே மூலம் (Y or J), உபாகம மூலம் (D) ஆகிய நான்கு மூலங்கள் இருப்பதாகக் காட்ட முயன்றன; நான்கு பாரம்பரியக் கருதுகோளுக்கு உறுதியாக அடிகோலின. இக்கருதுகோளை உறுதி செய்வதும் விவரங்களைத் திருத்தி அமைப்பதும் ஆகிய வேலைகள் தொடர்ந்து நடைபெற்றன.

ரேயுஸ் (1833), வட்கே (1835), கிராபு (1866), கோஸ்டாஸ் (1868) மற்றும் குயெனென் (1870) ஆகியோர் வரலாற்றுத் திறனாய்வில் ஈடுபட்டிருந்தனர். பரிணாமம் பற்றிய இவர்களின் கருதுகோள் இஸ்ராயேலின் சமயப் பரிணாமத்தின் பல கட்டங்களையும் சட்டம் மற்றும் நிறுவனங்களோடு தொடர்புபடுத்தியது. இந்த வரலாற்றுத் திறனாய்வைப் பயன்படுத்தி வெல்காசன் என்பவர் (1878), நான்கு மூலங்கள் பற்றிய கருதுகோளை இஸ்ராயேலரின் சமயப் பரிணாமத்தோடு தொடர்புபடுத்தினார். இதன்படி ஐந்நூல் நான்கு மூலங்

களின் கலவையாகும். இந்த ஏடுகள் வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு காலங்களிலும் தோன்றியவை. இந்த ஏடுகள் தோன்றிய காலத்தைத் தோராயமாக வரையறுப்பது இக்கருதுகோளுக்கு வேண்டிய பணித்திட்டத்தை அளித்தது. இக்கருதுகோளின்படி முதலில் யாவே மூலம், ஏலோகீம் மூலம் என இரு பாரம்பரியங்கள் இருந்தன. யாவே பாரம்பரியம் கி.மு. 9-ஆம் நூற்றாண்டில் யூதாவில் எழுத்து வடிவம் எடுத்தது எனலாம். சிறிது காலத்திற்குப்பின் வட அரசாகிய இஸ்ராயேலில் ஏலோகீம் பாரம்பரியம் எழுதப்பட்டிருக்கலாம். வட அரசாகிய இஸ்ராயேலின் வீழ்ச்சிக்குப்பின் இந்த இரு பாரம்பரிய ஏடுகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன. அரசன் யோசியா காலத்துக்குப்பின் உபாகமப் பாரம்பரிய ஏடு சேர்க்கப்பட்டது. உபாகம ஏடு, யோசியா காலத்தில் ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நூல்தான் என்று இந்த ஆய்வாளர்களால் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டது. இதனோடு ஒத்துப்பார்த்து மற்ற ஏடுகள் காலவரையறை செய்யப்பட்டன. யாவே, ஏலோகீம் ஏடுகள் பல வழிபாட்டு இடங்களை ஏற்றுக்கொள்கின்றன. இதற்கு எதிராக உபாகமம் போராடுகிறது. ஆகவே யாவே, ஏலோகீம் ஏடுகள் உபாகம ஏட்டிற்கு முந்தியனவாக இருக்க வேண்டும். யூதர்கள் வெல்லப்பட்டு அடிமையாக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட பின், ஏற்கெனவே இருந்த தொகுப்போடு குருக்கள் பாரம்பரிய ஏடு சேர்க்கப்பட்டது. இப்பாரம்பரியம் ஒரே ஒரு புனிதத்தலத்தை ஏற்றுக்கொள்கிறது. ஆகவே, இஃது உபாகம ஏடுகளுக்கு மிகப் பிந்தியதாகும். இதில் நிகழ்ச்சியுரைப் பகுதிகள் சிலவே. பெரும் பகுதி சடங்கு விவரிப்புகளையே கொண்டுள்ளது. இஃது ஏற்கெனவே இருந்த தொகுப்புகளைக் கட்டிப்பிணைக்க உதவுகிறது.

இந்த ஒப்புமை சார்ந்த காலவரையறை மற்ற ஒப்புமைச் சான்றுகளால் உறுதி செய்யப்பட்டது. இவை இப்பாரம்பரியங்கள் எழுத்து வடிவம் எடுத்த காலத்தை ஓர் அளவு உறுதியாக வரையறை செய்ய உதவின. இலக்கியத் திறனாய்வு இயலை பெருமளவிற்குப் பயன்படுத்தி இந்த ஏடுகள் கருதுகோளைப் பரப்ப வெல்காசன் பெரிதும் பாடுபட்டார். ஆனால் வரலாறு, மெய்யியல் பற்றிய அவரது முன்கருத்துக்கள், அவரது கருதுகோளை ஓர் அளவு பழுதாக்கின. இஸ்ராயேலின் அரசர்கள் காலத்திற்கு முன்னிருந்த வரலாற்றைத் திரும்பத் திருத்தி அமைக்க முடியுமா என்பது பற்றி ஐயம் தெரிவித்தார். யாத்திரை, பாலையில் அலைந்து திரிதல், வெற்றி ஆகியவை பற்றிச் சில விவரங்கள் தெரியலாம். இவற்றை வைத்துக்கொண்டு, இஸ்ராயேலின் வரலாற்றை ஒன்றிணைந்த, தொடர்ந்த வரலாறாகத் திருத்தி அமைத்தல் முடியாததாகும் என்றார். யாத்திரைக்கு முந்தியவை யாவும் வெறும் கட்டுக்கதையும் கற்பனையுமாகும் என்றார். ஆகவே, இஸ்ராயேலரின் வரலாற்றைச் சரியான சூழ்நிலையில் அமைக்க இவர்களுக்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லையாதலால், சமய வளர்ச்சிப் பிரிவினைக்கொள்கையைப் பயன்படுத்தி பழைய ஏற்பாட்டு இலக்கியத்தை ஆராயத் தலைப்பட்டனர். இந்த முறையில் இறைவனது இடையீட்டிற்கு இடமேயில்லை. ஆகவே, மற்ற மக்களிடமிருந்து வேறுபட்ட விதத்தில் இஸ்ராயேலரிடையே சமயம் வளர்ந்திருக்கக்கூடும் என்பதற்கே வழியில்லை. வெல்காசனுடைய இந்த ஒருதலைச்சார்பான போக்கால், அவருடைய கொள்கை ஆழ்ந்த உட்கருத்துகளைக் கொண்டிருந்தாலும் பிறர் இக்கருதுகோளை ஐயத்தோடு நோக்க இடமளித்தது. இதைப் பலர் எதிர்க்கவும் செய்தனர். ஆயினும், அவரது நான்கு பாரம்பரியக் கருதுகோளைச் சில மாற்றங்களுடன் அறிஞர்கள் பலர் ஏற்றுக்கொண்டனர். அவரது மற்ற முடிவுகள் அவ்வளவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த ஏடுகள் பற்றிய கருதுகோள் அவரது பெயரால் அழைக்கப்படுவதும் உண்டு. இந்த ஏடுகள் கருதுகோள் ஆய்வில் எயிஸ்பெல்டு (19[illegible]) பெயிபெர் (1930), வோன்ராடு (1931) கென்னத்து (1920), ஒஸ்டெயிக்கன் (192[illegible]).

வெல்ச் *(1924)*, ராபாட்சன் *(1950)* ஆகியோரும் தங்கள் பங்கை விட்டுச் சென்றனர்.

ஐந்நூலுக்கு மோசேயே முதன்மை ஆசிரியர் ஆவார் என்ற நிலையைக் கொண்டவர்கள் வெல்காசனின் கருதுகோளை முழுவதும் நிராகரித்தனர். திறனாய்வு அடிப்படையிலும் வெல்காசனின் நிலை கைவிடப்பட்டது. இஸ்ராயேலின் வரலாற்றை வெல்காசன் திருத்தி அமைத்ததைத் தொல்பொருள் ஆய்வுகள் தவறெனக் காட்டின. மேலும், இவை இலக்கிய ஆய்வை முதன்மையாகக் கொண்ட நிலைக்குச் சவால் விட்டன. இலக்கியப் பிரச்சனை வரலாற்றுப் பிரச்சனையாக மாறிற்று. இந்நூல் எப்போது இறுதி வடிவம் எடுத்தது என்பதைவிட எந்த வாய்மொழிப் பாரம்பரியம் அல்லது எழுத்துமூலம் நூலின் பகுதிக்குப் பின்னணியாக உள்ளது என்பது சிறப்புப் பெற்றது; உடனடிப் பிரச்சனையாக மாறியது. இப்பிரச்சனையை அணுகும் புதுமுறை முழுவதும் இலக்கியம் சார்ந்ததாகவும் இல்லை; செயற்கையானதாகவும் இல்லை; உண்மை நிகழ்ச்சிகளுக்கும் வாழ்க்கைச் சூழ்நிலைக்கும் நெருங்கியதாக மாறியது. ஆய்வாளர்களுக்கு மூலங்கள் மிகப் பழையனவாகத் தோன்றத் தொடங்கியுள்ளன. தொல்பொருள் ஆய்வுகளும் புதைபொருள் ஆய்வுகளும் இந்நூல் தோன்றியதாக இதுவரை கூறப்பட்ட காலத்திற்கு முன்பே இந்நூல் இருந்திருக்க வேண்டும் என்று காட்டின; வெல்காசன் போன்றவர்களின் ஐயப்பாட்டுக்கு இடமே யில்லை என்றும் காட்டின. அவை ஐந்நூலின் பல நிகழ்ச்சியுரைப் பகுதிகள் எழுதப்பட்டது எனக் கூறப்படும் சூழ்நிலைக்கு வேறுபட்டதும் காலத்தால் முந்தியதுமான சூழ்நிலையில் நடந்திருக்கக்கூடும் என்றும் காட்டுகின்றன. இதற்கு ஆதரவாக அகண்ட மேற்காசிய மற்றும் கலாச்சாரச் சூழ்நிலையின் பின்னணியில் விவிலிய நிகழ்ச்சியுரைகளை நோக்குவதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டின. இதில் ஆல்பிரைட்டும் அவரது சீடர்களான பிரைட்டு, ரைட்டு, பிரிடுமன், கிராஸ் ஆகியோரும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தினர். சமீப காலத்தில் மென்கால், கோட்வால்டு *(1979)* ஆகியோர் சமூகப் பகுப்பாய்வை வலியுறுத்தியுள்ளனர். சமூக மற்றும் இலக்கிய அமைப்புகளுக்கிடையிலான தொடர்பை லீக்கு, லாக்கு, போல்சின், ரிக்கூர் போன்றவர்கள் தங்கள் அமைப்புப் பகுப்பாய்வில் எடுத்துக் காட்டினர். வடிவத்திறனாய்வு விவரிப்புகளில் அடிப்படை மாதிரிகளின் சமூக மற்றும் இலக்கியப் பங்கை ஆய்வு செய்கின்றனர். இது குன்கால் என்பவரால் *(1964)* முதலில் சங்கீதங்களையும், பின் "இதிகாச" விவரிப்புகளை ஆய்வு செய்யவும் பயன்பட்டது. இது பிறகு, சட்டத்தொகுப்புகளை ஆய்வு செய்யவும் ஆட்டு என்பவரால் *(1934)* பயன்படுத்தப்பட்டது. ஸ்காண்டிநேவியன் அறிஞர்கள் பாரம்பரியம் - வரலாற்றுத் திறனாய்வு முறையை வளர்த்துள்ளனர். இம்முறை வாய்மொழிப் பாரம்பரியம் தொடர்ந்து பாதிப்பு ஏற்படுத்துகிறது என்று ஏற்றுக்கொள்கிறது. சைல்டு என்பவரின் *(1979)* திருமுறைப்பட்டியல் திறனாய்வு விசுவசிக்கும் சமூகத்தினுள் விவிலிய ஆசிரியர்களின் பங்கையும் முழுப்பட்டியலின் பின்னணியையும் வலியுறுத்துகிறது.

ஐந்நூல் மற்றும் பொதுவாக விவிலியம் பற்றிய திறனாய்வு காலப்போக்கில் மூன்று திசைகளில் வளர்ந்தது. முதலாவது, ஆழ்ந்த இலக்கியப் பகுப்பாராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. ஐந்நூல், வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஓர் ஆசிரியரால் ஒன்றுமின்மையிலிருந்து எழுதப்பட்டது அன்று. ஒவ்வொரு பாரம்பரிய ஏடும் ஒரு கலப்பு இலக்கியமாகும். அவற்றின் அடிப்படையான மூலங்களைப் பிரித்தெடுக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. பிரச்சனைகள் தெளிவாக்கப்படுகின்றன. அதே போழ்து இப்பிரச்சனைகளைப் பற்றி மற்றக் கோணங்களிலிருந்தும் ஆராய வேண்டும் என்பதும் தெளிவாகிறது.

இரண்டாவது திசை வடிவத் திறனாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. இஃது ஐந்நூலை ஒரு முழு நூலாகக் கருத்தில் கொண்டு ஆராயவில்லை; மாறாக, அதில் காணப்படும் கதைகள்,

பாடங்கள் போன்ற தனிப்பட்ட சிறு பகுதிகளை ஆராய்ந்து, இப்பகுதிகள் தோன்றவும், இலக்கிய வடிவம் எடுக்கவும் அடிப்படையான பழங்கால இஸ்ராயேலின் வாழ்க்கை நிலையை வரையறை செய்ய முயல்கிறது. இம்முறை, ஐந்நூலின் பெரும் பகுதிகள் மிகப்பழமையானவை என்று காட்டியது. இஸ்ராயேலின் இறையியல் பற்றிய பல விளக்கங்களை அளித்துள்ளது. ஐந்நூல் பற்றிய எந்தக் கருதுகோளையும் ஏற்றுக்கொள்ளுமுன் இன்னும் ஆழ்ந்த ஆய்வு இன்றியமையாதது என்று காட்டியது. இக்காலத்தில் இந்த வடிவத் திறனாய்வு முறையை ஏறக்குறைய விவிலிய அறிஞர் எல்லாரும் ஓர் அளவு பயன்படுத்துகின்றனர். இவ்விதம் ஐந்நூலை ஆராய்தல், ஏடுகள் கருதுகோளுக்கு மாறானது அன்று என்றாலும் இதன் முடிவுகள் ஏடுகள் கருதுகோளை ஓர் அளவு பாதித்தன எனலாம்.

ஐந்நூல் பற்றிய ஆராய்ச்சியின் மூன்றாவது திசை, ஏடுகள் கருதுகோளை அடியோடு மாற்றியமைத்தது எனலாம். ஏன், நிராகரித்தது என்று கூடச் சொல்லலாம். இம்முறை ஸ்வீடனைச் சேர்ந்த உப்சாலா குழுவினரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்குழுவினரும், சிறப்பாக இவர்களுள் என்னெல் என்பவரும், யூதர்கள் நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வரும்வரை இஸ்ராயேலில் பரந்த அளவில் எழுத்து இலக்கியம் அமைக்கும் தொழில் இருந்தது என்பதை மறுத்தனர். நாடு கடத்தப்படுமுன் இஸ்ராயேலில் ஐந்நூலின் பொருள்கள் வாய்மொழிப் பாரம்பரியமாக வழிவழியாக ஒப்படைக்கப்பட்டன. வாய்மொழிப் பாரம்பரியத்தையும் அதன் உண்மைத்தன்மையையும் இக்குழு வலியுறுத்தியது. ஐந்நூல் எழுத்து வடிவம் எடுத்த பின்னும் வாய்மொழிப் பாரம்பரியம் தொடர்ந்து அதைப் பாதித்தது. இந்நூலில் காணப்படும் பொருள்களில் பெரும்பகுதி பழமை மிக்கதாகும். இப்பழமைக்கு உயர்மதிப்பு கொடுத்தது வரவேற்கப்பட வேண்டிய ஒரு திருப்பமாகும். வெல்காசின் குழு, தனது முதிராத முடிவுகளால், இந்நூலில் பெரும் பகுதிகள் தோன்றிய காலத்தை மிகவும் பின் தள்ளிப்போட்டது. இதற்கு ஒரு திருத்தம் வேண்டியிருந்தது. உப்சாலாக் குழு, வாய்மொழிப் பாரம்பரியத்தையும் அதன் உண்மைத்தன்மையையும் வலியுறுத்தியதோடு, பழமைக்குரிய மரியாதையையும் மதிப்பையும் அளித்தது.

பழைய ஏற்பாடு பற்றிய திறனாய்வில் பயன்பட்டுள்ள உத்திகளே புதிய ஏற்பாடு பற்றிய திறனாய்வுக்கும் பெரும்பாலும் பயன்பட்டுள்ளன. ஒத்தமை நற்செய்திகளைப் புரிந்து கொள்வதில் லக்மன் (1835) என்பவரின் நூல்கள் பெரிதும் உதவியுள்ளன. மாற்கு நற்செய்திதான் காலத்தால் முந்தியது என்றும், மத்தேயு மற்றும் லூக்காவில் வரும் பொருள்களின் மூலம் ஆகும் என்றும் இவர் எடுத்துக் காட்டினார். மத்தேயுவுக்கும் லூக்காவுக்கும் பொதுவானதும், ஆனால் மாற்கில் காணப்படாததுமான பொருள்கள் இயேசுவின் கூற்றுக்கள் என்ற தொகுப்பாகக் கருதப்பட்டன. இதை ராபின்சன் Q-தொகுப்பு என்றழைத்தார். துபின்சன் குழு பவுலின் மடல்களைத் திருச்சபையின் தொடக்க வரலாற்றோடு ஒருமுகப்படுத்த முயன்றுள்ளது.

புதிய ஏற்பாடு பற்றிய ஆய்வில் வடிவத் திறனாய்வு முறை பெரும் பங்கு வகிக்கிறது. இந்த அணுகுமுறையை முதலில் திபேலியுசும் (1919), பின்பு புல்ட்மன்னும் (1921) பயன்படுத்தினர். நிகழ்ச்சியுரைகளுக்கும் கூற்றுகளுக்கும் இடையிலான வேறுபாட்டில் முதன்மைக் கவனம் செலுத்தப்பட்டது. மறுபதிப்பு அல்லது படிதிருத்தத் திறனாய்வு, ஆசிரியர்கள் அல்லது பதிப்பாசிரியர்கள் பல்வகை மூலங்களையும் பாரம்பரியங்களையும் மீண்டும் அமைத்து அல்லது திருத்தி அமைத்து அவற்றை எடுத்துக் கூறிய முறைகளில் இந்த அணுகுமுறை கவனம் செலுத்தியது. அண்மைக் காலத்து ஆய்வுகள் தொடக்கக் கிறிஸ்துவத்தின் சமூக அமைப்பு, புதிய ஏற்பாட்டு விவரிப்புகளை உண்டாக்கிய பல்வேறு முன்னோக்குகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

விவிலியப் பொருள்கோள் (BIBLICAL HERMENEUTICS)

1. விவிலிய வாசகங்களைப் படிக்கும் பலரும் தத்தமக்கே உரிய பாணியில் இவற்றின் பொருளைப் புரிந்து கொண்டு விளக்கம் அளித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். உணர்ச்சிபூர்வமான எழுச்சிக் கூட்டங்களில் பங்கேற்கும் ஒருவரும், அறிவுபூர்வமான கருத்தரங்குகளில் பங்கேற்கும் மற்றொருவரும் ஒரே வாசகத்திற்குக் கூறும் விளக்கங்கள் வேறுபட்டவையாகவும் சில சமயம் மாறுபட்டவையாகவும் தெரிகின்றன. வரலாற்றைத் தொடாத ஆன்மீகமயமான விளக்கங்களுக்கும், உள்ளார்ந்த ஆன்மீகச் செறிவற்ற நடைமுறை விளக்கங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை மறையுரைகளிலும், மறைவிளக்கக் கட்டுரைகளிலும் காண்கிறோம். இவ்வனைத்துக் கூறுகளையும் நுணுகிப் பகுத்து ஆராய்ந்து இறைச்சமுதாயத்திற்குத் தன்னையே விரும்பி வெளிப்படுத்தும் அன்பு நிறை இறைவன் இன்று குறிப்பிட்ட சூழலில் அறிவிக்கும் செய்தி யாது எனத் தெளிவாக அறிவதே நமது ஏக்கமும் நோக்கமுமாகும்.

விவிலியம் உருவான காலந்தொட்டே விவிலியப் பொருள்கோளுக்கான பல்வேறு அணுகுமுறைகள் மாறிமாறிக் கையாளப் பட்டு வந்துள்ளன. கிரேக்க மொழியின் 'ஹர்மேனெயா' (hermeneia) என்னும் சொல் வாய்மொழி விளக்கத்தையும், தெய்வ சித்தத்தை வெளிப்படுத்தும் அருள் வாக்கையும், புரியாததைப் புரியவைக்கும் மொழியாக்கத்தையும் குறித்தது; படிப்படியாக, பண்டைக்கால நூல்களுக்கான தற்கால விளக்கத்தையும், விளக்க நூல்களையும் குறித்தது. இச்சொல்லிலிருந்து உருவான hermeneutic (s) என்கிற சொல் எந்தவொரு (பண்டைய) இலக்கியம், நூல், நிகழ்வு, செயல், அடையாளம் ஆகியவற்றையும் புரிந்து கொண்டு விளக்கிக் கூறுவதில் நாம் சந்திக்கும் எல்லாக் கூறுகளையும், சவால்களையும், அம்சங்களையும் உள்ளடக்குவதாக நாம் இன்று கொள்ளலாம். விவிலியத்தைப் படித்துப் பொருள் கண்டு விளக்கம் கூறுவதற்குப் பின்னணியில் நிகழும் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய நம் சிந்தனைத் தேடலை விவிலியப் பொருள்கோள் (Biblical Hermeneutics) என்கிறோம்.

2. விவிலியப்பொருள்கோளில் நாம் எதிர்கொள்ளும் சில சிக்கல்கள்: விவிலியப் பொருளைத் தீர்மானிக்கும்போது இதன் நூல்களின் பல்வேறு ஆசிரியர்கள் கொண்ட பொருளை நிர்ணயிப்பது எளிதன்று. காலப் போக்கில் ஆசிரியர் நினைத்த பொருளுக்கும் அப்பாற்பட்டுப் புதுப்புது பொருள்களும் ஏற்றிக் கூறப்பட்டதெனினும் ஆசிரியர் கொண்ட முதல் பொருளை நாம் தள்ளி வைத்துவிட இயலாது.

ஆசிரியர்களின் காலம், பண்பாடு, மொழி, இலக்கிய நடை, இவற்றைக் கையாண்டவிதம் ஆகியவற்றிலிருந்து நாம் எவ்வளவோ வேறுபட்டவர்கள். மேலும், பல விவிலிய நூல்கள் கால ஓட்டங்களின் போது பல்வேறு மரபுகளினாலும், மூலங்களினாலும் பின்னப்பட்டு, குறிப்பிட்ட ஆசிரியரின் பெயரைத் தாங்கி வருகிறது. எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாடு கி.மு. 1200-100 வரை தொகுக்கப்பட்டும், புதிய ஏற்பாடு கி.பி. 49-125 வரை தொகுக்கப்பட்டும் அமைந்திருக்கின்றன. எசாயா நூல் சுமார் 200 ஆண்டளவாக எசாயா இறைவாக்கினரின் வாழ்நாட்களுக்கும் பிறகு தொகுக்கப்பட்ட தொகுப்பு. ஆமோஸ் நூலின் கடினமாக இடித்துரைத்து, ஓரளவு நம்பிக்கையற்ற நிலையைச் சுட்டிக்காட்டும் வாசகங்களின் இறுதிப்பகுதியில் இறுதி வசனமாக நம்பிக்கையை ஏற்றும் வாக்கியம் பிற்காலத் தொகுப்பாசிரியர்களால் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிற்காலத் தொகுப்பாளர்களாலும், பிரதி எடுப்போராலும் தேவையை முன்னிட்டும் தெரியாமலும் சேர்க்கப்பட்ட, நீக்கப்பட்ட பகுதிகளைக் கொண்டிருக்கும் நூல்களின் மூலப்பொருளை, அதாவது ஆசிரியர் கற்பித்த பொருளை, அடையாளம் காண்பது மிகமிகக் கடினமாகும், அரிதாகும். ஆசிரியர் எனும் போது தெய்வீக ஆசிரியரின் கரம் எவ்வாறு இயங்கியிருக்கிறது என்னும்

பிரச்சனையையும் விவிலியத்தைப் பொருத்த அளவில் உணர்வுக்குக் கொணர வேண்டும்.

3. நேர்ப்பொருள் - உடனடிப்பொருள் -மூலப்பொருள் (Literal Sense): விவிலியச் சொற்கள் உடனடியாகவும், நேரடியாகவும் குறிக்கின்ற பொருளே நேர்ப்பொருள் எனப் படும். மனித ஆசிரியர் இதனை நினைத்தி ருக்கலாம், நினைக்காமலும் இருந்திருக்க லாம். இயன்றவரை, மானிட ஆசிரியர் அன்றைக்கு யாருக்கு எழுதினாரோ அந்த மக்களுக்கு அவர் கூற விரும்பிய பொருளை முதன்முதல் தெளிதல் வேண் டும். காலப்போக்கில் வளர்ந்து வரும் மொழியின் தன்மைக்கேற்ப சொற்கள் சுட்டிக்காட்டும் பொருளைத் தேட வேண் டும். வெவ்வேறு விவிலிய நிகழ்வுகளின் போது அம்மக்கள் பெற்ற இறைவாக்கு, பிற்கால ஆசிரியர் - தொகுப்பாளர் வழியாக புதிய வடிவம் பெற்று, அடுத்தடுத்து வந்த மக்களின் சூழலுக்கேற்ப வழங்கப்பட்டது. இன்றையச் சூழலில் வாழும் இன்றையத் திருச்சபைக்கும் தூய ஆவியின் ஆற்றலால் விவிலிய நிகழ்வுகள் தொடங்கி, விவிலிய ஆசிரியர் தொகுப்பாளர் வழியாக நமக் கேற்ற பாணியில் இறைவாக்கின் செய்தி அருளப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, இயேசு நிகழ்வினைத் தத்தமக்கேற்ற வகை யிலும் சூழலிலும் புரிந்து பொருள் கொண்டு வழங்கினர் நான்கு வடிவ நற் செய்தியாளர். இந்நற்செய்திகளும் நமக் கேற்ற வகையில் நமது சூழலுக்கேற்ப இயேசு நிகழ்வின் தாக்கத்தை நம்மில் ஏற்படுத்துகிறது.

விவிலியக் கவிதைகளையும், உவமை களையும் கையாளும்போது மிகக்குறிப்பாக அக்கால மொழிப் போக்குகளைக் கவனிக்க வேண்டும். கிறிஸ்துவை, யூதாவின் சிங்கக் குட்டி என்கிறபோது அவர் ஒரு விலங்கு என நேர்ப்பொருள் கொள்ளுதல் தவறு.

4. நேர்ப்பொருளை நிர்ணயிப்பதில் கருத்தில் கொள்ள வேண்டியவை: தன் சமகாலத்த வருக்குரிய மொழி, பண்பாடு, கண்ணோட் டம் ஆகியவற்றுடன் அன்றைய மாந்தருக் கென்று எழுதிய மானிட ஆசிரியரின் சில சொற்களும், சிந்தனைக்கோவைகளும் இன் றையக் காலத்தவருக்குப் புரியாதிருப்பது இயல்பே. எடுத்துக்காட்டாக, வெளிப் பாட்டு இலக்கியத்தில் பயன்படுத்தப்படும் அடையாளங்கள், படைப்பு பற்றிய சிந்த னைகள், நோய்-பேய் பற்றிய எண்ணங்கள், தன் மகனையே பலியிடத் துணியும் பண் பாட்டுப் பின்னணி, உடன்படிக்கை அருங் குறி போன்ற அடிப்படைக் கருத்துக்களின் வேரோட்டமான அம்சங்களை ஆழமாகப் புரிந்து கொள்ள நமக்கு மற்ற மூலங்களும் தரவுகளும் தேவை. விவிலிய மொழிகளின் இலக்கண இலக்கியப் பின்னணிகளும், விவிலிய உலகின் புவியியல் வரலாற்றுச் செய்திகளும் இன்னும் தேவை.

விவிலியத்தின் ஒரு சில பகுதிகளை மட்டுமே கணக்கில் கொண்டு வகுப்பறை விவாதம், செபக்கூட்டம், மறையுரை, பிரச் சனைக்கான தீர்வு, கருத்தரங்கம் ஆகிய தேவைகளுக்கேற்றபடி ஒரு கொள்கையை நியாயப்படுத்தவோ, நிரூபிக்கவோ விவிலி யத்தைப் பயன்படுத்தலாகாது. மாறாக, விவிலிய ஊற்றிலிருந்து இயல்பாகச் சுரக் கும் வாழ்வின் வார்த்தைகளை நாம் பருக வேண்டும். ஒட்டு மொத்தமான விவிலிய விசுவாசத்தைப் பின்புலமாகக் கொண்டு தான் ஒவ்வொரு பகுதியையும் புரிந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, இயேசுவின் மலைப்பொழிவுதான் விவிலி யத்தின் அடித்தளம் என்போர் (காந்தி), விவிலியக்கடவுள் வரலாற்றில் இயங்கிய விதத்தை அடியோடு மறந்து விடுகின்றனர்.

கி.பி. 3-5-ஆம் நூற்றாண்டுகளில் ஓரிசன், அகுஸ்தீனார் ஆகியோரின் ஆன்மீக முறை யில் புரிந்து கொள்ளுதல், எரோனிமுவின் சமய வாசகத்தின் பகுப்பாய்வு, கி.பி. 13-ஆம் நூற்றாண்டு அக்குவின் தோமையா ரின் தத்துவப்பின்னணிப் பகுப்பாய்வு ஆகிய அனைத்துப் பொருள்கோள்களும் விவிலியத்தின் நேர்ப்பொருளின் அடித்தளத் தின் மேல் எழுப்பப்பட்ட "கோபுரங்கள் தாம்." 1943-இல் வெளியான 12-ஆம்

பத்திநாதரின் Divino Afflante Spiritu என்னும் பாப்பரசரின் அறிக்கையில், வரலாற்றுப் பகுப்பாய்வு வழியினைப் பின்பற்றி (historico-critical exegesis) விவிலியத்தின் நேர்ப் பொருளைக் கொள்ளும்படி க்த்தோலிக்கருக்கு ஆர்வமூட்டப்பட்டது.

1994-ஆம் ஆண்டு பாப்பரசரின் விவிலியக்குழு வெளியிட்ட அறிக்கையும் விவிலியப் பொருள்கோள் முயற்சியில் பல்வேறு பகுப்பாய்வுக் கருவிகளை நாம் பயன்படுத்தினாலும் விவிலிய உலகுக்குள் பயன்படுத்தப்படும் பொருள்கோள் முறையின் தொடர்ச்சியாக நமது பொருள்கோள் அமைய வேண்டும் என எடுத்துக் கூறுகிறது.

5. இலக்கிய வடிவங்களை நிர்ணயித்தல்: பண்டைய இஸ்ராயேலரின், ஆதித்திருச்சபையின் வரலாற்று ஓட்டத்தில் முழங்கப்பட்ட விசுவாச அறிக்கைகள் பற்றிய தொகுப்பு நூலகமே பழைய ஏற்பாடு -புதிய ஏற்பாடு அடங்கிய விவிலியம் எனலாம். இதன் வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் பல்வேறு இலக்கிய வடிவங்களான - சட்டம், வரலாற்று ஆவணம், புனைவுக்கதை, வீர வரலாறு, பழமொழி, உவமை, பொன்மொழி, சடங்கு மற்றும் தூய்மைபற்றிய விவரம், விசுவாச அறிக்கை, தனிப்பட்ட மற்றும் கூட்டுச் செபம், மறையுரை, அறவுரை, கடிதம், கனவு, திருவெளிப்பாட்டு அடையாளம், பல்வேறு உணர்வுகள் சிதறும் கவிதை -ஆகியவற்றை இனம் காண வேண்டும். இம்முயற்சியிலேயே அந்தந்த விவிலியப் பகுதி உருவான வாழ்க்கைச்சூழல் (Sitz-im-Leben) நமக்குத் தெரிய வரும். எடுத்துக்காட்டாக யோசுவா நூலின் வீரகாவியக் கவிதைச் சூழலையும், சங்கீதங்களின் வழிபாட்டுச் சூழலையும், உன்னத சங்கீதத்தின் காதல் இரசங்களையும், பழமொழி, யோபு நூல்களின் அறவுரைச் சூழலையும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் நோக்கிப் பொருள் கொண்டால்தான் வாசகச் சூழலுக்கேற்ப விவிலியம் நம்மோடு உரையாடும். இதே போல் யோனா நூலையும் சிம்சோனின் கதையையும் சிறுகதைகளாகச் சரியாகப் புரிந்து கொண்டால் தேவையில்லாமல் வரலாற்று நிகழ்வுகளோடு குழப்பிக் கொள்ள மாட்டோம்.

புதிய ஏற்பாட்டு நற்செய்திகளும் நிரல்பட விவரிக்கப்பட்ட வரலாற்று ஆவணங்கள் அல்ல. அவை இயேசு நிகழ்வினை விசுவாசக் கண்களோடு நோக்கிய இளந் திருச்சபையின் முழக்கமும் போதனைகளுமாகும். இவ்வாறான விவிலியப்பகுதிகளின் இலக்கிய வடிவு ஆய்வின் மூலம் தான் (Form Criticism) விவிலியக் காலமாந்தரின் மற்றும் ஆசிரியர் - தொகுப்பாசிரியர் வாழ்ந்த விசுவாசக் குழுமத்தின் சூழல்களை நாம் புரிந்து கொண்டு குறிப்பிட்ட பகுதியின் அன்றையப் பொருளை அறிந்து கொள்ள இயலும்.

விவிலியத்தின் பல்வேறு பகுதிகளும், மரபுகளும் எவ்வாறு இணைக்கப்பட்டு இறுதியான முழு வடிவம் பெற்றுள்ளன, ஏன் இவ்வாறு தொகுக்கப்பட்டன என ஆராய்ந்து பார்க்கும்போது இறுதித் தொகுப்பாசிரியரின் இறையியல் தேவைகளை அறியலாம். தனிப்பட்ட ஒவ்வொரு பகுதி மட்டுமன்று ஒரு குறிப்பிட்ட நூலின் முழுமை வடிவம் அமைந்துள்ள விதமே இறுதித் தொகுப்பாசிரியரின் இறையியல் சிந்தனை ஓட்டத்தைக் காட்டுகிறது. இதனைப் பகுத்து உணர்வதே தொகுப்பு ஆசிரியரின் இறையியல் சிந்தனைப் பகுப்பாய்வு (Redaction Criticism). எடுத்துக்காட்டாக, ஒத்தமை நற்செய்திகளின் இறுதிப்பகுதியில் காணப்படும் எருசலேம் ஆலயத்தில் இயேசு வியாபாரிகளை விரட்டும் பகுதி யோவான் நற்செய்தியின் தொடக்கத்தில் அமைக்கப்படக் காரணமான இறையியல் சிந்தனை ஓட்டத்தை அறியலாம். காய்க்காத அத்திமரம் பற்றிய பாரம்பரியத்தை லூக்கா மத்தியப்பகுதியிலும் (லூக் 13), மத்தேயு இறுதிப்பகுதியிலும் (மத் 21), மாற்கு இறுதிப்பகுதியில் இரண்டு பாகங்களாகவும் (மாற்கு 11:12-14.20-25) அமைத்திருப்பதன் பின்னணியை ஆராய்ந்தால் நற்செய்தியாளர்களின் சிந்தனைப் போக்கினைத் தெளிவாக உணரலாம்.

6. நேர்ப்பொருளுக்கும் அப்பாற்பட்டு (Beyond Literal Sense): இறையூக்கம் பெற்ற விவிலியத்தின் வழியாக இறைவன் பேசும் மொழியினை ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு மட்டுமே என நினைத்து அதனைக் கட்டுப் படுத்தி விட முடியாது. மேலும், எழுத்து வடிவம் பெற்ற எந்த ஓர் இலக்கியப் பகுதியையும், ஆசிரியரின் சிந்தனையோட் டத்திற்குள் மட்டும் அடக்கி வைத்து விட முடியாது. கால ஓட்டத்தின் ஏற்றத் தாழ்வு களுக்கு ஏற்ப, தொடர்ந்து மானிடரோடு உறவு கொள்ளும் கடவுள் ஆவியின் தூண்டு கோலுக்கேற்ப, வாசகர்களின் உலகநோக்கு மற்றும் முன் அனுமானங்களுக்கு (Pre-understanding) ஏற்ப எழுதப்பட்ட வாசகம் உயிர்த்துடிப்புள்ள புதுப்பொருளை வழங் கிக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக யாத்திரை நூலின் விடுதலைப் பயணத்தைப் பின்னணியாகக் கொண்டு இரண்டாம் எசா யாவும் (எசா 40-55), ஞானநூல் ஆசிரியரும் (ஞான 11-19) தத்தம் சூழலின் விடுதலைத் தாகத்தையும், அனுபவத்தையும் சித்திரிக் கின்றனர். விடுதலை ஏக்கத்துடன் துடிக்கும் இன்றைய ஏழை, ஆதிவாசிகள், தலித்மக் கள், கறுப்பர் இனத்தவர், பெண்கள் ஆகி யோரும் அன்றைய விடுதலைப் பயணத் தின் தொடர்ச்சியாக தமது விடுதலைப் பயணங்களிலும் இறைவன் பேசுவதாகக் காண்கின்றனர். பிரமாணிக்கமுள்ள விவி லிய இறைவன் நேற்றும், இன்றும், நாளை யும் தனது மீட்பின் அருஞ்செயல்களை ஆற்றி வருகின்றார் என்பதே இதன் பின் னணி. கி.மு. 6-ஆம் நூற்றாண்டுத் தானி யேல் நூல் காட்சிகள் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் நடைமுறைக்கு வருவதாகக் காண்கின்றனர். எசா 7:14-இன் இம்மானு வேல் கூற்று கிட்டத்தட்ட 700 ஆண்டுகளுக் குப் பிறகு இயேசுவின் பிறப்பில் (மத் 1:23) புதிய பொருளைப் பெறுகின்றது. இரண்டாம் எசாயா காட்டும் பாடுகளின் ஊழியன் பாத்திரம் (எசா 42:1-9; 49:1-6; 50:4-9; 52:13-12) இயேசுவில் நிறைவேறுவ தாக நோக்கப்படுகின்றது (லூக் 24:26). இவ்வாறு இயேசு நிகழ்வின் கண்ணாடி கொண்டு பழைய ஏற்பாட்டினைப் படிக் கும்போது புதிய பொருள் மலர்வது, இளந்திருச்சபையின் இயல்பான ஒரு கட்ட மாகும்.

7. திருத்தந்தையரின் காலம்: கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் அலக்சாந்திரியா நகரை மையம் கொண்டு, விவிலியத்தைப் படிக் கும் முறையில் வல்லுநர்களாகத் திகழ்ந்த வர்கள் பிலோ, கிளமந்து, ஓரிசன் போன் றோர். பிலோ போன்ற யூத அறிஞரின் வழியைப் பின்பற்றியவர்கள் வாசகத்தில் காணப்படும் ஒவ்வோர் அம்சத்திற்கும் ஓர் உவமையைக் கண்டு ஆன்மீகப் பொருள் காணும் முறை இது (Allegory, typology). பழைய ஏற்பாட்டைக் கிறிஸ்தியல் கண் ணோட்டத்தில் காணும் பாணி இது. அந்தி யோக்கு நகரை மையம் கொண்ட விவிலிய அணுகு முறையை லூசியன், தியோடோ ரஸ், தியோடோர், கிறிசோஸ்தம், ஜூலியன் போன்றோர் கையாண்டனர். இம்முறையி லான விவிலியப் பொருள்கோள் ஆசிரியர் நினைத்த நேர்ப்பொருளை வலியுறுத்திக் கூறியது.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் அகுஸ்தினார் ''புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டில் மறைந்துள்ளது. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டில் விளக்கம் பெறுகிறது'' எனக் கூறி அலக்சாந்திரிய முறையைக் கையாண் டார். எரோனிமு, விவிலிய மூல மொழி களைப் படித்து அந்தியோக்குப் பாணியை மேற்கொண்டார். இதன் பிறகு அலக்சாந்தி ரிய முறையே பரவலாகப் பிரபலமானது.

8. மத்திய காலங்களில் (Middle ages). மத் திய காலங்களில் எழுந்த விவிலியப் பகுப் பாய்வு கீழ்க்கண்ட 4 பொருளை வெளிச்சம் போட்டுக்காட்டியது.

1. வரலாற்றுப் பொருள் அல்லது நேர்ப் பொருள் (Historical or Literal sense).
2. தொடர் உருவகப் பொருள் (அ) கிறிஸ் தியல் பொருள் (Allegorical or Christological).

3. (அ) வாழ்வியல் பொருள் (ஆ) அறநெறிப் பொருள் (இ) மானிட வாழ்வுப்பொருள் (Topological or moral or anthropolorical)

4. வாழ்வைக்கடந்த பொருள் (அ) இறுதிகளைப் பற்றிய பொருள் (anagogical or eschatolosical)

எருசலேம் என்கிற சொல்லை இப் பின்னணியில் புரிந்து கொண்டால்,

1. எருசலேம் — யூதர்களின் சமய அரசியல் தலைநகரம்;
2. எருசலேம் — கிறிஸ்துவின் திருச்சபை / இறைச்சமூகம்;
3. எருசலேம் — மானிட ஆன்மா;
4. எருசலேம் — வானகத்திருநகர் எனப் பொருள்படும்.

ஆக,

1. நேர்ப்பொருள் வரலாற்றுச்சூழல் பற்றிய அறிவையும்,
2. தொடர் உருவகப்பொருள் விசுவாசத்தையும்,
3. வாழ்வியல் பொருள் அன்பையும்,
4. வாழ்வுக்கப்பாற்பட்ட பொருள் நம்பிக்கையையும் வளர்ப்பதாகக் கருதப் பட்டன.

அக்குவின் தோமையாரின் அணுகு முறைப்படி ஆன்மீகப்படுத்தப்பட்ட பொருளின் மேல் விசுவாசக் கொள்கையைக் கட்டி எழுப்பக்கூடாது. அரிஸ்டாடில் தத்துவங்களின் மேல் எழுந்த நுணுகிப்பகுத்தாயும் (Scholarticism) முறையிலே விசுவாசக் கோட்பாடுகள் விளக்கப்பட்டன. இறையியல் சிந்தனைகளில் விவிலியம் முதன்மை பெற வில்லை.

9. சீர்திருத்த, மறுமலர்ச்சிக் காலம்: 16-17-ஆம் நூற்றாண்டுகளில் லூத்தர், கால்வின் போன்றோரின் 'விவிலியம் மட்டுமே' (Sola Scriptura) என்னும் அணுகு முறையில், தான்தோன்றித்தனமான தொடர் உருவகப் பொருள் (Allegory) கொள்ளும் தன்மை ஒதுக்கித் தள்ளப்பட்டது. நேர்ப்பொருளே (literal sense) முக்கியம் எனக் கருதினாலும் கிறிஸ்தியல் நோக்கில்தான் அவர்களும் பழைய ஏற்பாட்டை அணுகினர்.

10. மறுமலர்ச்சிக் காலமும் அதன் பின்னும்: அறிவு மையச் சிந்தனைகள் எழுந்த 18-ஆம் நூற்றாண்டு மறுமலர்ச்சிக் காலம் எனப்படும். வரலாறு, சமயம் போன்ற அனைத்தையும் அறிவியல் கண்கொண்டு ஆய்வு செய்யும் அணுகுமுறை எங்கும் பரவியது. இக்காலத்தில் கருவாகி 19-20 நூற்றாண்டுகளில் உருவானதுதான் விவிலிய வரலாற்றுப் பகுப்பாய்வு (Historical Criticism) ஆதாம், ஆபிரகாம் முதல் இயேசு, பவுல் போன்றோர் வரை அவர்தம் வாழ்க்கைச் சம்பவங்களையும், அவர்தம் வார்த்தைகளின் வரலாற்று உண்மைகளையும் பற்றிய அடிப்படைக் கேள்விகள் எழுப்பப்பட்டன. பல்வேறு மூல ஏடுகள், எழுத்துப் பிரதிகளை ஆய்வு செய்ததன் வழியாக மூல விவிலிய வாசகங்களின் ஆய்வுகள் (Textual Criticism) நடந்தேறின. விவிலியத் திருமுறைத் தொகுப்பு, தவறின்மை, இறையூக்கம், அதிகாரம் போன்ற அடிப்படைக் கருத்துக்கள் அறிவியல் கேள்விகளுக்கு உள்ளாக்கப்பட்டன. பண்டைக் காலக் கலாச்சாரங்களும், மொழிகளும் ஆய்வுக்குள்ளாகி விவிலிய இலக்கிய வடிவ ஆய்வு (Form Criticism) மெருகேற்றம் பெற்றது. வரலாற்றுப் போக்கில் உருவான பல்வேறு விவிலிய மரபுகளைப் பற்றிய வரலாற்று ஆய்வுகளும் (Tradition history) எழுச்சி பெற்றன. விவிலிய நூல்கள் உருவாகி திருமுறைத் தொகுப்பு ஆக்கப்பட்ட சூழலை ஆராயும் தன்மையும் வளர்ந்தது (Canonical Criticism).

11. இருபதாம் நூற்றாண்டின் போக்குகள்: மேற்கண்ட பல்முனை அணுகுமுறை ஒன்றுக்கொன்று உதவி விவிலியம் என்னும் ''இறைக்கொடை''யை அணுகி வந்தாலும் இறைவாக்கின் பொருளைப் புரிந்து கொள்ளுதலில் இன்னும் திருப்தி ஏற்படவில்லை. வரலாறு, அறிவியல் என்று அறிஞர்கள் முழுமூச்சாக இறங்கினாலும் வாழ்வு தரும் வார்த்தைகளின் பொருளை இன்றைய மனித இனம் தேடுவதற்கான ஒரு பொருள் கோள் முறையை வரலாற்றுப் பகுப்பாய்வு (Historical Criticism) திருப்தியாக வழங்க

வில்லை என்றே கூறலாம். அது வெறும் பண்டைக்காலத்தைப் பற்றிய ஓர் அகழ்வாராய்ச்சியாகவும், அறிஞர் சமுதாயம் மட்டுமே தமக்குள் புரிந்து கொள்ளும் ஒரு சங்கேத மொழியாகவும் மட்டும் உள்ளது.

எனவே, விவிலியத்தை ஒரு ஜன்னலாக நோக்கிப் பின்புறம் நிகழ்ந்த நிகழ்வுகளை எட்டி மட்டும் பார்ப்பதே விவிலியப் பொருள்கோள் முறை என்னும் நிலையில் இருந்து மாற்றங்கள் நிகழ்கின்றன.

1970-க்குப்பிறகு, அண்மைக் காலங்களின் சமூகவியல் கொள்கைகளின் பின்னணியில் பண்டைக்கால சமய, விவிலிய இலக்கியங்கள் சித்திரிக்கும் சமூகக் கட்டமைப்புகளை ஆய்வு செய்து (Sociological Reading) பொருள் கொள்ளும் முறையும் பயன்படுகின்றது. இதேபோல் பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropological approach), உளவியல் ((Psychological Approach) கொள்கைகளோடு விவிலிய உலகினை ஆராயும் பாங்கும் வளர்ந்து வருகின்றது. ஆயினும், இன்றைய மானிட சமுதாயத்திற்கு விவிலியம் கூறும் மீட்பின் நற்செய்தியினை விளக்க இவை மட்டும் போதுமானவையாக இல்லை.

மேலும், சமீப காலத்தில் எழுந்துள்ள மொழியியல் (Linguistics), இலக்கிய ஆய்வு (Literary Analysis) போன்ற அறிவியல் பூர்வமான தேடல்களும் விவிலியத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அன்று நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகள் எவ்வாறு நிகழ்ந்திருந்தாலும், சித்திரிக்கப்பட்டிருந்தாலும் நமக்குக் கிடைத்துள்ள ஒரே மூலம் தற்போதைய வடிவில் கிட்டியுள்ள விவிலிய வாசகங்களும் நூலுமேயாகும். எனவே, விவிலிய வாசகங்களுக்குள் அகழ்ந்து ஆராய்ந்து அவற்றின் பொருளைக் கொள்ளுவதே சரி என்பதே இந்தப் பொருள்கோள்முறை. வாசகத்தின் உள்ளடக்கங்கள் எவ்வாறு இசைவாகப் பொருந்தி, சிறு சிறு அம்சங்கள் கூடி வாசிப்போரின் சிந்தனைகளை எப்படி வசப்படுத்தி ஈர்க்கின்றன, அன்றைய வாசகரோடு உறவுத்தொடர்பு கொண்டு செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றன என்னும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன (Rhetorical Analysis, Narrative Analysis). வாழ்வியலின் அடித்தள அமைப்புக்களே, மொழியின் அமைப்புக்களாகப் பரிணமிக்கின்றன. எனவே, வாசகத்தின் அமைப்பை ஆழ்ந்து நோக்கினால் வாழ்வின் அடித்தளத்து அமைப்புக்களையும் நுணுகிப்பகுத்து ஆராயலாம் என அமைப்பியல் ஆய்வு (Structural Analysis) எடுத்துச் சொல்கின்றது.

இவ்வாறு விவிலிய வாசகங்களின் பின்னணியை அகழ்ந்து நோக்குவதும், வாசகக் கட்டமைப்பிற்குள் அகழ்ந்து ஆராய்வதும் இன்றைய வாசகருக்குத் தரும் இறைச் செய்திதான் யாது?

12. இன்றைய வாசகரை மையப்படுத்தும் பொருள்கோள் முறை (Reader-Response Criticism): வாசக ஆசிரியரோ, தொகுப்பாசிரியரோ இன்று வாழவில்லை. ஆயினும் வாசகத்தின் உயிர்த்துடிப்புள்ள போக்குகளுக்கு ஏற்ப ஆசிரியத் தன்மைகளைச் சித்திரிக்கலாம் (Implied Author). இதேபோல் உயிருள்ள இன்றைய வாசகரிடமிருந்து குறிப்பிட்ட வாசகம் எதிர்பார்க்கும் வாசகரின் தன்மையை (Implied Reader) நாம் குறிப்பாக உணரலாம். ஆக, இங்குக் கூறிய ஆசிரியத்தன்மையையும் வாசகத்தன்மையையும், வாசகத்தின்பால் வசப்படுத்துபவர் வாசக ஓட்டத்தின் இயக்கங்களை நெறிப்படுத்தும் இடைநிலை வருணிப்பாளர் ஆவார் (Narrator). இவ்வாறு ஆசிரியத்தன்மையும், வாசகர் தன்மையும் ஒருமுகப்பட்டு வாசக உலகில் சஞ்சரிக்கும்போது ஏற்படும் அதிர்வுகளும், சிந்தனை அலைகளும் வாசகரின் உள்ளாழத்தைப் பாதிக்கின்றன. இந்நிகழ்வினை அன்றைய விவிலிய உலகின் தொடுவானமும், இன்றைய வாசகர் உலகின் தொடுவானமும் ஒரு சேர ஒன்றிப்பது (Fusion of Horizons) என்றும் கூறலாம். ஆகவே வாசகரைப் பாதிக்கும் உள்ளுயிர்ச் சக்தியைச் சரியாக அடையாளம் காணுதல் மூலம் விவிலியப்பொருளை உணரலாம்.

இன்றைய வாசகரைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் அவர்தம் உள்ளக்கிடக்கையில் ஊறிப்போயிருக்கும் வேரோட்டமான கலாச்சார அமைப்பு, உலக நோக்கு, உறவு கொள்ளும் பாங்கு ஆகிய உள்ளடக்கங் களையும் (Pre-Understanding) தீர ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்றால், இறை வாக்கினைத் தான்தோன்றித்தனமாக தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என நினைத்து விவிலி யத்தை அணுகுதல் விவிலிய இறைவனுக்கு எதிரான செயலாகும். சில எழுச்சிக் கூட் டங்களிலும், கருத்தரங்குகளிலும், அறிஞர் களின் ஆலோசனைக் கூட்டங்களிலும், மறையுரைகளிலும் விவிலியத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் பண்பு அவ்வப்போது தலைதூக்குகிறது.

13. சூழமைவுகளுக்கான பொருள் கோள் முறை (Contextual Approaches) ஓரங்கட்டப் பட்ட மாந்தரிடையே இறைவன் செயல்படு வதனால் அவர்தம் விடுதலை ஏக்கத்தை வரலாற்றில் எடுத்துச் சொல்லிப் போராடும் போது சில அடிப்படைக் கேள்விகள் எழுகின்றன. இத்தகைய கேள்விகளை விவி லிய உலகோடு விசுவாசக்கண் கொண்டு உரசிப் பார்க்கும்போது ஏற்படும் ஊக்க மும், ஆக்கமும் அத்தகையோரின் வாழ்வை வளப்படுத்துகின்றன. இதனையே சூழமை வுக்கான பொருள்கோள்முறை (Contextual Approach) எனக் கூறுகிறோம். விசுவாசம் பற்றிய விவாதங்களை ஆகாயக் கோட்டை யில் நடத்துவதல்ல; மாறாக, விசுவாசச் சிந்தனைகளால் வளம் பெற்ற வரலாற்றுச் செயல்பாடுகளின் (Praxis) தாக்கங்களோடு விவிலியத்தில் நுழைவதும், விவிலியத்திலி ருந்து இவ்வாறான அர்ப்பணச் செயல்பாடு களில் ஈடுபடுவதும் இந்த அணுகுமுறை யின் சிறப்பு அம்சமாகும்.

அராஜகத்தினால் ஏழ்மை சுமத்தப்பட்ட வர்கள் விடுதலை அணுகுமுறையினாலும், மானிட மாண்பு மறுக்கப்பட்டவர் கறுப்பர் இறையியல் அணுகுமுறையாலும், தலித் அணுகுமுறையாலும், ஆதிவாசி அணுகு முறையாலும், பெண்மை மிதிக்கப்படுவ தால் பாதிக்கப்படுவோர் பெண்ணியல் அணுகுமுறையாலும் விவிலியத்தை ஆழ மாகப் படித்துச் செபித்து வாழத் துடிப்பது இன்றைய திருச்சபையில் நாம் காணும் பல்வேறு முகங்கள். இவ்வாறு பல்வேறு கோணங்களிலிருந்து நமக்கு அருளப்படும் இறைவாக்கின் செய்திகள் திருச்சபையின் வாழ்வை இன்னும் வளப்படுத்தும்.

14. 21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பொறுப்புள்ள விவிலியப் பொருள்கோள்: விவிலிய உலகோடு உரசிப் பார்த்த அனுப வர்களில் ஒருசில அம்சங்களை மட்டும் வலியுறுத்த மற்ற அடிப்படை அம்சங்களைக் காற்றோடு பறக்கச் செய்வதால் அடிப்படை வாதப்பொருள்கோள் முறைதான் விளை யும். மற்ற விசுவாசிகளுடன் உரையாடல் நடத்த விடாத இத்தகைய போக்குகள் மறைந்தொழிய வேண்டும். படைப்புலகின் வாழ்வினை, நிறைவை நோக்கிப் பயணிக் கச் செய்கின்ற இறைவன் அன்று விவிலிய நிகழ்வுகளின் வழியாகப் பேசினார்; இன் றும் நமது வரலாற்று ஓட்டங்களின் வழி யாகவும் பேசுகிறார் என்பதனை மறந்து விடலாகாது. விவிலிய இறைவனின் வாழ்வு தரும் வார்த்தைகளை ஒரு குறிப் பிட்ட கருத்தியலுக்குள், இறுகிப்போன கொள்கைக்குள் அடக்கிவிட முடியாது. மாந்திரீகத்தனமான எதிர்பார்ப்பையும் விவி லியத்திடமிருந்து நாம் எதிர் பார்க்கக்கூடாது.

21-ஆம் நூற்றாண்டின் வாயிற்படியில் நிற்கின்ற நாம் பொறுப்புள்ள விதத்தில் விவிலியப் பொருள்கோள் முறையை உரு வாக்கிட வேண்டும். இதற்கு உதவியாகக் கீழ்க்கண்ட குறிப்புக்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

விவிலியம் ஒரு வரலாற்றுப் பாட நூலோ, தத்துவச் சிந்தனைத் தொகுப்போ, சடங்கு சம்பிரதாயம் பற்றிய நூலோ அன்று.

ஐம்புலனடக்கிக் குவித்த புண்ணியத்திற் கான ஞான போதனையாகவோ, வெறும் ஆகாயத்தில் உலவும் ஆன்மீகத்தனமான

சிந்தனைக் கோவையாகவோ, தனிப்பட்ட ஆன்ம ஈடேற்றத்திற்கான தரும சாஸ்திர மாகவோ விவிலியத்தைப் புரிந்து கொள்ளக்கூடாது. மாறாக, இது வரலாற்றில் இயங்கிய, இயங்குகின்ற, இயங்கப் போகும் இறைவன் படைப்புலகில் நடமாடும் மானிடரோடு கொள்கின்ற உறவு பற்றிய ஒரு தொடர்கதை; இவ்வனுபவம் பெற்ற இஸ்ராயேலரின், இளந்திருச்சபையின் விசுவாசப் பிரமாணம் (உப 6:20-24; 26:5-9; அ.ப. 2:22-24; 1 கொரி 15:3-11); புழுதியில் தோய்ந்து நம்மோடு குடிவந்த இறைவன் (யோவான் 1:14) தானே விரும்பி வேண்டித் தேடி வந்ததற்கான விசுவாசப் பதிலுரை (மத் 5-7); எவ்விதப் பலனும் கருதாமல் நம்மை ஏற்புடையவராக மாற்றிய இறையருள் (உரோ 1:17); தனிமனித, குழும, அண்ட சராசர அளவில் அன்னியமாக்கப்பட்ட நம்மை ஒப்புரவாக்கும் (எபே 1:20) அன்பின் காவியம்; வானத்தையும் பூமியையும் படைத்த இறைவன் (ஆதி 1:1). புதிய வானகத்தையும் புதிய வையகத்தையும் உருவாக்கத் துடிக்கும் (திருவெளி 21:1) நம் மீட்பின் கதை; நம் மீட்பரின் கதை.

மானிட மைய உறவுச் செறிவும் (ஆதி 1:26; யோவா 1:14; கொலோ 1:15-20), இவ்வுலக வரலாற்றில் தோய்ந்த இயக்கமும் (யாத் 6:6-7; ஆமோ 5:21-24), இறைச்சமுதாயத்தின் கூட்டு நலனும் (உப 15:1-18; லேவி 19:9-18; மத் 22:24-40; 1 கொரி 13;யாக் 2:7) விவிலியத்தில் அழுத்தம் பெறுகின்றன. சமூக பொருளாதார அளவில் வஞ்சிக்கப்பட்டு, சக்தியை இழந்து, திக்கற்று, தெய்வமே கதி எனக் கதறி அலையும் நாதியற்றவர்கள்பால் (Anawim) இறைவனின் தாயுள்ளம் சிறப்பு ஈடுபாடு கொள்கிறது என்பது வலியுறுத்தப்படுகிறது (யாத் 22:21-24; உப 24:17-21; எசா 3:13-15; ஆமோ 8:4-6; மத் 11:5; லூக் 6:20).

மேற்கண்ட பொதுக்குறிப்புக்களோடு பண்டைய விவிலிய உலகின் எதார்த்தங்களைத் திறந்த மனதுடன் வரலாறு, புவியியல், மொழியியல், சமூகவியல், மானிடவியல் தெளிவுகளுடன் அணுகிப் பார்க்க வேண்டும். இன்றைய உலகின் உண்மை நிகழ்வுகளை விசுவாசப் பின்னணியில் கூர்ந்து அலசிப்பார்த்து இறைச்சமூகக் குழுமமாக விவிலிய இறைவன் காட்டிய நெறியில் நடக்க வேண்டும்.

இன்றைய வரலாற்றின் விசுவாசம் தூண்டும் அர்ப்பணச் செயல்களில் ஈடுபட்ட அனுபவத்தோடும், அறிவியல் பார்வையில் வாழ்வின் உண்மை நிகழ்வுகளை நோக்கும் ஆய்வோடும் விவிலியத்தினுள் நுழைய வேண்டும். இந்த உரசலில் இறையூக்கம் பெற்ற விவிலியம் நமக்கு விடுக்கும் சவால்களினால் மனந்திரும்பும் ஆற்றலையும், புதிய உலகு சமைக்கும் சக்தியையும் மீட்பின் சக்தியாக இறைவன் நமக்கு வழங்குவார். முழு உள்ளத்தோடும் முழு வலிமையோடும் இதில் ஈடுபடும்போது விவிலியத்தின் பொருள்கோள் முறை இறைப்பிரசன்னமாய் நம்மோடு வளர்ந்து கொண்டே வரும்.

விவிலியம் (BIBLE, THE)

I. 'பிப்லோஸ்' என்ற கிரேக்கச்சொல் முதலில் எழுதப் பயன்படும் புல்தாளைக் குறிக்கும்; பின், புல்தாள்களில் எழுதப்பட்ட நூலைக் குறிக்கும். பெரும்பாலும் இச்சொல் அதன் பன்மை வடிவில் பிப்லியா என்று பயன்பட்டுள்ளது. பிப்லோஸ் என்ற சொல் எந்தச் சிறப்பு அடைமொழியும் இல்லாமல் பயன்படும்போது, யூத-கிறிஸ்தவ மறைநூலைக் குறிக்கும். பிப்லோசிலிருந்து விவிலியம் என்ற தமிழ்ச் சொல் வருகிறது. அதன் பொருள் 'நூல்' என்பதாகும். நூல்களில் எல்லாம் சிறந்த நூலாகிய விவிலியம் எந்தச் சிறப்பு அடைமொழியுமில்லாது வெறுமனே நூல் அல்லது விவிலியம் என்றழைக்கப்பட்டது. ஆனால், விவிலியம் ஒரே ஒரு நூலை மட்டும் கொண்டிருக்கவில்லை. மாறாக, அது நூல்களின் தொகுப்பாகும்; ஒரு நூல் நிலையம் என்று கூறலாம்.

இந்நூல்கள் இறை ஏவுதல் பெற்றவை என்று கிறிஸ்தவர்கள் கருதுவதால் இவை புனிதமானவை என்றும், விசுவாச

ஒழுங்கை அளிக்கும் அதிகாரபூர்வமான நூல் பட்டியலைக் கொண்டிருப்பதால் திரு முறை என்றும் அழைக்கப்பட்டன. விவிலி யத்திற்கு உடன்படிக்கை, ஏற்பாடு, திரு மறை என்ற பெயர்களும் உண்டு.

II. *பிரிவுகள்:*

1. விவிலியம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு மீட்பின் மைய நிகழ்ச்சிகளான சீனாய் உடன்படிக் கையையும், இயேசுவின் புதிய உடன்படிக் கையையும் கட்டுகிறது. தானி 9:2-இல் ''நூல்கள்'' என்ற சொல் இறைவாக்கு நூல்களைக் குறிக்கிறது. கிறிஸ்தவர்கள் தங்கள் திருமறைநூலை விவிலியம் என்ற ழைக்கும் மரபு முதன்முதல் உரோமைக் கிளமந்தின் இரண்டாம் மடலில் காணப்படு கிறது. அங்கே இச்சொல் பழைய ஏற்பாட் டைக் குறிக்கிறது. 2 கொரி 3:14-இல் பவுல் பழைய உடன்படிக்கையைப் பழைய ஏற் பாடு என்று குறிப்பிடுகிறார். எபிரேயர்க ளின் பழைய ஏற்பாட்டிலிருந்து தன் மறை நூல்களை வேறுபடுத்திக் காட்ட ஆதித்திருச் சபை தன் நூல்களின் தொகுப்பைப் புதிய ஏற்பாடு என்றழைத்தது.

2. பழைய ஏற்பாடு: எபிரேயர் தங்கள் விவிலியத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்த னர்: 1) சட்டம் (தோரா அல்லது ஐந்நூல் அல்லது மோசேயின் நூல்கள்): ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங் கள். 2) இறைவாக்கினர் நூல்கள்: இவை யும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட் டன. 2.அ) முந்தைய இறைவாக்கினர் நூல் கள் (யோசுவா, நீதிபதிகள், 1-2 சாமுவேல், 1-2 அரசராகமங்கள்); 2. ஆ) நூல் பெற்ற இவைாக்கினர்கள் (எசாயா, எரேமியா, எசேக்கியேல், 12 சிறிய இறைவாக்கினர் கள்). 3) நூல்கள்: ரூத்து, சங்கீதங்கள், யோபு, பழமொழி, திருவுரை, உன்னத சங்கீதம், புலம்பல், தானியேல், எஸ்தர், எஸ்ரா, நெகேமியா, 1-2 நாளாகமங்கள். இந்த வரிசை தால்மூதில் காணப்படுகிறது. எபிரேய மோசரேட்டிக் வாசகம் நூல்கள் என்ற தொகுப்பை அ) பாடல் நூல்கள் (சங்கீதங்கள், யோபு, பழமொழி), ஆ) சுருள்கள் (உன்னத சங்கீதம், ரூத்து, புலம்பல், திருவுரை, எஸ்தர்), இ) எஞ்சிய நூல்கள் (தானியேல், எஸ்ரா, நெகேமியா, 1-2 நாளாகமங்கள்) என்று மூன்று பகுதி களாகப் பிரித்தது.

கிரேக்க எழுபதுநூல் தொகுப்பு, பழைய ஏற்பாட்டை அ) வரலாற்று நூல்கள் [ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங் கள், யோசுவா, நீதிபதிகள், 1-4அரசராகமங்கள் (1-2 சாமுவேல், 1-2 அரசர்கள்)] ஆ) பாடல் நூல்கள் (யோபு, சங்கீதங்கள், பழமொழி, திருவுரை, உன்னத சங்கீதம்), இ) இறைவாக்கு நூல்கள் [எசாயா, எரேமியா, எசேக்கியேல், தானி யேல், 12 சிறிய இறைவாக்கினர்கள் (ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், அபக்கூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி)] என்று மூன்று தொகுப்புகளாகப் பிரித்தது. இவற்றோடு எழுபது நூல் தொகுப்பு 1-2 மக்கபேயர், தோபி, யூதித்து, சீராக்கு, சாலமோன் ஞானம், பாரூக்கு மற்றும் பிற நூல்களையும் கொண்டிருந்தது.

கத்தோலிக்கத் திருச்சபை, தனது பழைய ஏற்பாட்டுத் தொகுப்பில், எழுபது நூல் தொகுப்பிலுள்ள 46 நூல்களை ஏற்றுக்கொள் கிறது. இதைத் திருமுறைப்பட்டியல், துணைத் திருமுறைப்பட்டியல் (1-2 மக்கபே யர், தோபி, யூதித்து,சீராக்கு, சாலமோன் ஞானம், பாரூக்கு) என்று வகைப்படுத்துகி றது. பிரிவினைச் சகோதர சபைகள் எபிரேய விவிலியத் தொகுப்பை ஏற்று, பழைய ஏற்பாட்டில் 39 நூல்களை மட்டும் கொண்டி ருக்கின்றனர். இவர்கள் துணைத் திருமுறை நூல்களை ஏற்றுக்கொள்வதில்லை.

பழைய ஏற்பாட்டைப் பற்றிய பொதுப் பாணிப் பிரிவுகளையே கிறிஸ்து பயன் படுத்தினார். முழு பழைய ஏற்பாட்டைத் ''திருச்சட்டம் மற்றும் இறைவாக்குகள்'' என்றும் (மத் 5:17; 7:12; 22:40; லூக் 16:16 இணை; மத் 11:13), ''சட்டம்'' என்றும் (மத் 5:18 இணை; லூக் 16:7, மத் 12:5;

22:36; 23:23; யோவா *7:49; 12:34*), ''சட்டம், இறைவாக்கினர், சங்கீதங்கள்'' என்றும் (லூக் *24:44*) இயேசு குறிப்பிடுகிறார். ஆபேலின் இரத்தத்தையும் (ஆதி *4:8;* மத் *23:35* இணை) செக்கரியாவையும் (2 நாள் *24:20-21;* லூக் *11:511*) பற்றிய இயேசுவின் கூற்றுகள் ஆதியாகமம் முதல் நாளாகமம் வரையுள்ள முழுமையையும் பழைய ஏற்பாட்டு முழுமையையும் உள்ளடக்குகின்றன.

3. **புதிய ஏற்பாடு:** புதிய ஏற்பாட்டைப் பொருத்தமட்டும் கத்தோலிக்கத் திருச்சபையும், பிரிவினைச் சபைகளும் இருபத்து ஏழு நூல்கள் கொண்ட தொகுப்பை ஏற்றுக் கொள்கின்றன. இத்தொகுப்பை மூன்று சிறு தொகுப்புகளாகப் பிரிக்கலாம்: அ) வரலாற்று நூல்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நற்செய்திகள், மற்றும் அப்போஸ்தலர் பணிநூல்), ஆ) இறைவாக்கு நூல்கள் (திருமுகங்கள்), இ) வெளிப்பாட்டு நூல் (திருவெளிப்பாடு). திருமுகங்கள், பெரிய திருமுகங்கள் என்றும் (உரோமையர், 1-2 கொரிந்தியர், கலாத்தியர், 1-2 தெசலோனிக்கேயர்), சிறைக்கூட மடல்கள் என்றும் (எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர், பிலமோன்), மேய்ப்புப்பணி மடல்கள் என்றும் (1-2 திமொத்தேயு, தீத்து), எபிரேயர் மற்றும் பொதுமடல்கள் என்றும் (யாக்கோபு, 1-2 பேதுரு, 1-2-3 யோவான், யூதா) பிரிக்கப் படலாம்.

III. **மொழியும் அமைப்பும்:** புதிய ஏற்பாடு முழுவதும் கோயினே கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருக்கின்றது. பழைய ஏற்பாட்டில் பெரும்பகுதிகள் எபிரேய மொழியில் எழுதப்பட்டவையாகும். இதற்கு விதிவிலக்காக 2 மக்கபேயர், சாலமோன் ஞானம், தானி 13-14 ஆகியவை கிரேக்க மொழியில் எழுதப்பட்டவையாகும். யூதித்து, பாரூக்கு,சீராக்கு, 1 மக்கபேயர் ஆகிய நூல்கள் எபிரேய மொழியில் எழுதப்பட்டவையாயினும் நமக்குக் கிடைத்திருக்கும் பிரதிகள் கிரேக்க மொழியில் உள்ளன. இவற்றில் சிலவற்றின் எபிரேயத் துணுக்குகள் சமீபத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கும்ரான் ஏடுகள் தோபி என்ற நூல் அரமேயிக்கு மொழியில் எழுதப்பட்டிருக்கலாம் என்று சுட்டுகின்றன. பல நூல்களில், இங்கும் அங்கும், அரமேயிக்கு, பாரசீக, கிரேக்க, இலத்தீன் மொழிகளின் பாதிப்பையும் சொற்களையும் காணலாம்.

இஸ்ராயேல் மக்களிடையே வாசிக்கப் படுவதற்கே பழைய ஏற்பாடு எழுத்து வடிவம் எடுத்தது (யாத் *24:7;* யோசு *8:34-35;* நெகே *8:4-5.8*). இதற்கு வசதியாக நூல்கள் பகுதிகளாகவும் வசனங்களாகவும் பிரிக்கப் பட்டிருந்தன. அதிகாரங்களாகப் பிரிக்கப் பட்டு எண்கள் அளிக்கும் நவீனமுறையை ஸ்தேவான் லாக்டன் (கி.பி. 1228) என்பவர் தொடங்கி வைத்ததாகப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். இவர் ஒருவேளை ஏற்கெனவே இருந்த பிரிவு முறைகளைப் பயன் படுத்தியிருக்கலாம். பழைய ஏற்பாட்டின் வசனங்களை எண்ணும் நவீன முறையைச் சாஸ்தே பக்னினி என்பவர் கி.பி. 1528-இல் தாம் பதிப்பித்த இலத்தீன் மொழி விவிலியத்தில் பயன்படுத்துகிறார். பாரீசைச் சேர்ந்த ராபர்ட் எத்தியென் என்ற பதிப்பாளர் பழைய ஏற்பாட்டைப் பொருத்த மட்டும் பக்னினியின் முறையைப் பயன் படுத்துகிறார்; கி.பி. 1555-இல் தாம் பதிப்பித்த புதிய ஏற்பாட்டுப் பகுதிக்கு வசன எண்ணிக்கை முறையைத் தானே அளிக்கிறார். குடென்பர்க்கு என்பவர் (1450) முதல் விவிலியத்தை அச்சடித்தார். 1500-க்குள் 100-க்குமேற்பட்ட பதிப்புகள் தோன்றின.

IV. **விவிலியத்தின் அதிகாரம்:** விவிலியம் இறை ஏவுதலால் எழுதப்பட்டது ஆகவே, இறைவனது வார்த்தையைக் கொண்டுள்ளது என்ற விசுவாசத்திலிருந்துதான் விவிலியம் தன் அதிகாரத்தைப் பெறுகிறது. ஆகவே, அதில் அடங்கியுள்ள போதனை விசுவாசத்திற்கும் செயலுக்கும் அதிகாரபூர்வமானது. கிறிஸ்தவச் சபைகளில் சில இந்த அதிகாரத்தை விவிலியத்துக்கு மட்டும் உரியதென்று வரையறை செய்யும்போது மற்றச் சபைகள் விசுவாசிகளின் குழு அளிக்கும் விளக்கத்திற்கும் (பாரம்பரியம்) சம முக்கி

யத்துவம் அளிக்கின்றன. ஏனெனில், இதிலும் பரிசுத்த ஆவி தொடர்ந்து செயலாற்றுகிறார்.

கத்தோலிக்கத் திருச்சபை விவிலியத்தை இறைவனது வார்த்தையாகக் கொள்கிறது. ஆகவே, விவிலியம் வெளிப்படுத்தப்பட்ட மறையுண்மைகளின் ஊற்றாகவும் விசுவாச ஒழுங்குமுறையாகவும் உள்ளது. திருச்சபை தனது விசுவாசத்தை விவிலியத்திலிருந்தும் உயிருள்ள பாரம்பரியத்திலிருந்தும் பெறுகிறது. இப்பாரம்பரியம் இயேசுவால் திருச்சபை நிறுவப்பட்டதிலிருந்து திருச்சபையில் இருந்து வந்துள்ள அதன் உயிருள்ள போதிக்கும் அதிகாரமாகும். திருச்சபைதான் விவிலியத்தை இறைவார்த்தை என்று ஏற்று விளக்குகிறது. அதனுள் அடங்கியுள்ள நூல்களின் பட்டியலையும் நிர்ணயிக்கிறது. ஆகவே, விவிலியம் விசுவாசத்தின் சேய்மை ஒழுங்கென்றால், பாரம்பரியம் விசுவாசத்தின் அணிமை ஒழுங்காகும் என்று இறையியல் வல்லுநர்கள் கூறுவர்.

விழாக்கள் (FEASTS)

I. எல்லா மதங்களிலும் விழா வழிபாட்டின் ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது. வழிபாட்டுச் சமூகம் மகிழ்ச்சி பொங்க, மனிதவாழ்வின் ஏதாவதொரு அம்சத்திற்காக இறைவனுக்குச் சில சடங்குகள் வழியாக வணக்கத்தைச் செலுத்துகிறது. நன்றி கூறி, இறைனின் துணையை வேண்டுகிறார்கள். விவிலிய விழாக்களின் தனித்தன்மை என்னவென்றால் அவை புனித வரலாற்றுடன் தொடர்புடையதாகவும், தான் தேர்ந்து கொண்ட மக்கள் சார்பாக இடைவிடாது செயல்படும் கடவுளோடு தொடர்பை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றன; அதே நேரத்தில் இந்த விழாக்கள் எல்லாம் பொது மனிதத் தன்மையினை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

II. *பழைய ஏற்பாடு:*

1. யூதத் திருவிழாக்களின் தோற்றம்: இஸ்ராயேலில் மாதத்தை நிர்ணயித்தது சந்திரனின் சுழற்சிதான். அது மீண்டும் மீண்டும் வருவதால், அது பல விழாக்களுக்கு வழி வகுத்தது; சில சமயம் பௌர்ணமியும் (சங் 81:4), பொதுவாக அமாவாசையும் (1 சாமு 20:5; 2 அர 4:28; ஆமோ 8:5) இறுதியாக ஒரு வாரத்தின் இலயத்தை அமைத்த. ஓய்வுநாளும் (யாத் 20:8-11) விழாக்கள் கொண்டாட வாய்ப்பாயின. சூரியனின் சுழற்சி புதுவருட விழாவைக் கொண்டு வந்தது. இஃது எல்லாக் கலாச்சாரத்துக்கும் பொதுவானது. இத்திருவிழா முதலில் இலையுதிர் காலத்தில் வரும் அறுவடைத் திருவிழாவுடனும், பின்னர் வசந்த காலத்தில் வரும் பாஸ்காத் திருவிழாவுடனும் இணைத்துக் கொண்டாடப்பட்டது (யாத் 23:16; 12:2). இந்த வழிபாடுகளிலிருந்து பாவப்பரிகார நாளுக்கான சில சடங்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டன (காண்க. லேவி 16).

விண்மீன்களின் சுழற்சியை மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்ட இவ்விழாக்களோடு, இஸ்ராயேலரின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய மேய்ச்சல், விவசாய வாழ்வுச் சூழல்களும் விழாக்களை நிர்ணயித்தன. ஆனால், இவை மேலே கூறிய விழாக்களோடு குழப்பும் போக்கைக் கொண்டிருந்தன. பாஸ்கா விழாவின்போது, மேய்ச்சலின் விழாவான வசந்தகால விழாவும், ஆடுகளில் முதற்கனியை ஒப்புக்கொடுக்கும் விழாவும் கொண்டாடப்பட்டன. நிலத்தின் செயல்பாட்டையொட்டி மூன்று பெரும் விழாக்கள் தோன்றின. அவை வசந்த காலத்தில் கொண்டாடப்பட்ட புளியாத அப்பத்திருவிழா, சோளை காலத்தில் கொண்டாடப்பட்ட அறுவடையின் விழா, இலையுதிர் காலத்தில் கொண்டாடப்பட்ட முந்திரி அறுவடை விழா (யாத் 23:14-17; 34:18-22). உபாகமம் புளியாத அப்பத்திருவிழாவைப் பாஸ்காவுடன் இணைத்தது; திராட்சை அறுவடைக்குக் கூடாரத் திருவிழா என்ற பெயரைக் கொடுத்தது (உப 16:1-17). இச்காலத் திருவிழாக்களில் உள்ள சடங்குகளின் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவற்றின் விவசாய, மேய்ச்சல் தொடர்புகளைப் பார்க்க வேண்டும். நாடு கடத்துதலுக்குப்

பிறகு 'பூரிம்' (எஸ்த 9:26; காண்க. 2 மக் 15:36தொ), அர்ப்பண விழா, நிக்கானோர் நாள் (1 மக் 4:52-59; 7:49; 2 மக் 10:5தொ; 15:36தொ) போன்ற இரண்டாந்தர விழாக்கள் தோன்றின.

2. யூத விழாக்களின் உண்மைப்பொருள்: பல்வேறுபட்ட திருவிழாக்கள் அவை உணர்த்தும் கடந்தகால நினைவுகளாலும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை அறிக்கையிடுவதாலும், நிகழ்காலத்தின் தேவைகளை வெளிப்படுத்துவதாலும் புதிய பொருளைப் பெறுகின்றன.

அ) யாவேயின் மாபெரும் செயல்களை நினைவூட்டும் விழாக்கள்: இஸ்ராயேல் தனது கடவுளைப் பல்வேறுபட்ட அடைமொழிகளால் புகழ்கிறது. படைத்தவர் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் நினைவு கூரப்படுகிறார் (யாத் 20:11); எகிப்திலிருந்து இஸ்ராயேலர்களை விடுவித்தவர் ஓய்வுநாளில் மட்டுமன்று, பாஸ்காவிழா கொண்டாடப்படும் பொழுதும் பிரசன்னமாய்த் தங்கியிருக்கிறார் (உப 5:12-15; 16:11); கூடாரத் திருவிழா இஸ்ராயேலர்கள் பாலைவனத்தில் யாவே இறைவன் துணையுடன் பயணம் செய்ததையும், அவர்கள் இருவருக்குமிடையே ஏற்பட்ட உறவின் ஒப்பந்தத்தையும் நினைவூட்டியது (லேவி 23:42தொ); இறுதியாக, பிந்தைய யூத சமயம் சீனாய் மலையில் சட்டம் கொடுக்கப்பட்டதை வாரங்களின் விழாவோடு அதாவது பெந்தக்கோஸ்தே விழாவோடு இணைத்துக் கொண்டாடியது. இவ்வாறு விவசாயத் திருவிழாக்கள் நினைவுகூரும் கொண்டாட்டமாக மாறுகின்றன. தங்களது முதற்கனிகளை ஒப்புக்கொடுத்த இஸ்ராயேலர்கள் தங்கள் செபத்தில் மண்ணின் கொடைகளுக்காகவும், கடந்த காலத்தில் இறைவன் செய்த நன்மைகளுக்காகவும் நன்றி செலுத்தினர் (உப 26:5-10).

ஆ) எதிர்காலத்தை முன்னெதிர்பார்ப்புடன் கொண்டாடுதல்: இந்த விழாக்கள் எதிர்காலத்தில் பெறப்போகும் மீட்பின் இறுதிக் குறிக்கோளுக்கு உண்மையான நம்பிக்கையூட்டுவதாக அமைகின்றன; இறைவனின் கடந்த காலச் செயல்கள் மக்களுக்கு எதிர்கால நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக அமைகின்றன. விடுதலைப் பயணத்தைக் கொண்டாடுதல் ஒரு நாள் இஸ்ராயேலர்கள் இறுதியாகவும், முழுமையாகவும் விடுதலை பெறுவர் என்றும் (எசா 43:15-21; 52:1-12; 55:12தொ), எருசலேமை நோக்கி கூடாரத் திருவிழாவுக்காகத் திருயாத்திரை செல்லும் அனைத்து நாடுகளுக்கும் யாவே இறைவனின் அரசாட்சி பரவும் (செக் 14:16-19) என்றும் முன்னுரைக்கிறது; உத்தரவாதம் அளிக்கிறது. அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார்கள் (சங் 118; 122; 126)! ஏனெனில், அவர்கள் இறைப்பிரசன்னத்தில் அல்லவா இருக்கிறார்கள் (உப 16:11-15; லேவி 28:40)?

இ) இன்றைய தேவைகள்: மனம் வருந்தி மனம் மாறிய தூய்மையான உள்ளத்தில்தான் இந்த மகிழ்ச்சி உண்மையான மகிழ்ச்சியாக இருக்கும். மகிழ்ச்சியின் சங்கீதங்கள் கூட இதன் தேவையை வலியுறுத்துகின்றன. ''என்னுடைய மக்களே எனக்குச் செவி கொடுப்பீர்களாக!'' என்ற சங்கீதம் கூடாரத் திருவிழாவின்போது பாடப்பட்டது (சங் 81:8). பாவப்பரிகாரத் திருவிழா கூட்டறிக்கையால் ஆழ்ந்த மனமாற்றத்திற்கான ஆவலை எடுத்துக்கூறுகிறது (சங் 106; நெகே 9:5-37; தானி 9:4-19). விசுவாசமற்ற இதயங்கள் செலுத்தும் பலியினாலும், வழிபாட்டினாலும் கிடைக்கும் பாதுகாப்புணர்வும், மகிழ்ச்சியும் நிலையற்றது எனத் தொடர்ந்து இறைவாக்கினர்கள் எச்சரிக்கின்றனர். இத்தகைய வழிபாட்டை ''நாம் வெறுக்கிறோம்; அருவருக்கிறோம்'' (ஆமோ 5:21; காண்க. ஓசே 2:18; எசா 1:13தொ). இத்தகைய அழிவைக் கூறும் இறைவாக்குகளால் விழாக்களை முழுவதும் நிறுத்திவிடச் சொல்லவில்லை. மாறாக, அதன் முழுப்பொருளையும் உணர்ந்து அவற்றை உயிருள்ள இறைவனைச் சந்திக்கும் வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்றுதான் கூறுகிறார்கள் (யாத் 19:17).

III. **புதிய ஏற்பாடு:**

1. யூதத் திருவிழாக்களிலிருந்து முடிவில்லா விழாவுக்கு: இயேசு தான் வாழ்ந்த காலத்தில் கொண்டாடப்பட்ட யூதத் திருவிழாக்கள் அனைத்திலும் பங்கு பெற்றார். ஆனால், அது கூடாரத் திருவிழாவாக இருந்தாலும் சரி (*யோவா 7:37தொ; 8:12; காண்க. மத் 21:1-10*), ஆலய அர்ப்பண விழாவாக இருந்தாலும் சரி (*யோவா 10:22-38*) அது தன்னிலேதான், அதாவது தனது செயல்பாட்டில்தான் முழுப் பொருளைப் பெற முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். இயேசு தனது புதிய உடன்படிக்கையின் தனது பலி பாஸ்காப் பின்னணியில் நிறைவேறுமாறு பார்த்துக் கொள்கிறார் (*மத் 26:2.17தொ. 28இணை; யோவா 13:1; 19:36; 1 கொரி 5:7தொ*). இந்தப் புதிய இறுதிப் பாஸ்காவினால் இயேசு பாவப்பரிகார விழாவையும் நிறைவேற்றுகிறார். ஏனெனில், அவரது இரத்தம் தூயகத்துக்குள் நுழைவதற்கான உரிமையைப் பெற்றுத் தருகிறது (*எபி 10:19*); மேலும், விண்ணகத்தில் கூடும் எருசலேம் சபையில் நுழையவும் உரிமை பெற்றுத் தருகிறது (*எபி 12:22*). இந்த நாளிலிருந்து உண்மையான திருவிழா விண்ணகத்தில் கொண்டாடப்படுகிறது. கூடார விழாவில் நடப்பதுபோல் (*திருவெளி 7:9*) சங்கீதங்களைப் பயன்படுத்தி, உண்மையான பாஸ்காச் செம்மறியால் மீட்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் கூட்டம் (*5:8-14; 7:10-14*), செம்மறியையும் அவரது தந்தையையும் போற்றி, இடைவிடாமல் புதிய கீதம் பாடுகின்றனர் (*14:3*). எனவே, பாஸ்காவிழா முடிவுறாத விண்ணக விழாவாக மாறுகிறது.

2. கிறிஸ்தவ விழாக்கள்: விண்ணகப் பாஸ்கா விழா, யூத விழாக்கள் அனைத்தையும் ஒன்றாக்கி இறுதிக்கால நிறைவுக்குக் கொண்டு வந்தது போல மண்ணுலகில் திருச்சபையின் பல திருவிழாக்களுக்கும் இது புதுப்பொருள் கொடுக்கிறது. யூத திருவிழாக்களைப்போல் அல்லாது திருச்சபைத் திருவிழாக்கள் ஒரே போது நிறைவேற்றப்பட்டதும் முடிவில்லா மதிப்புடையதுமான ஒரு நிகழ்வை மீண்டும் மீண்டும் நினைவு கூர்கின்றன, கொண்டாடுகின்றன. ஆனால், யூத விழாக்களைப்போல், இந்த விழாக்கள் எல்லாம் பருவகாலங்களை ஒட்டி, இயேசுவின் வாழ்வு நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்டாலும் இவை அனைத்துமே உண்மையான விண்ணக விழாவின் பிரதிபலிப்புகள்தான் (*காண்க. கொலோ 2:16*). எனவே, திருச்சபை இவ்விழாக்களைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை (*காண்க. கலா 4:10*). விழாக்களின் எண்ணிக்கையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

திருச்சபை பாஸ்கா மறைபொருளை மையமாகக் கொண்ட நற்கருணைக் கொண்டாட்டத்தில் முக்கிய கவனம் செலுத்துகிறது. ஏனெனில், இக்கொண்டாட்டம்தான் ஒவ்வொரு ஞாயிறும் இறைமக்கள் சமூகத்தை ஒரே குடும்பமாக இணைக்கிறது. இந்த நாள் ஆண்டவர் உயிர்த்தெழுந்ததால் இன்னும் அதிக சிறப்புப் பெறுகிறது (*அ.ப. 20:7; 1 கொரி 16:2; திருவெளி 1:10*).

இஃது ஓய்வு நாளோடு முடிந்த வாரத்தின் முதல் நாளாகும். இது கிறிஸ்தவ விழாவின் அடிப்படைப் புதுமையைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தத் தனித்தன்மை மிக்க விழாவின் பிரகாசம் ஆண்டு முழுவதையும் ஒளிர்விக்கிறது. இதன் செழுமை, பாஸ்காவை மையமாகக் கொண்ட விழாச் சூழலில் விரிவாக்கப்படுகிறது.

இஃதோடு, யூத வழிமரபுச் செல்வத்தைப் பயன்படுத்தி, திருச்சபை இயற்கைச் சூழலை மீண்டும் காணமுடிகிறது. கிறிஸ்துவின் வாழ்வின் வழியாக அதை மீண்டும் செயலாக்கம் செய்வதாலும், முடிவில்லா விண்ணக விழாக்களை நோக்கித் திசை முகப்படுத்துவதாலும் இதைச் செயல்படுத்துகிறது.

விழிப்பாயிரு (WATCH)

I. விழிப்பாயிருத்தல் என்பது அதன் சரியான பொருளில் ஓர் இரவு தூங்காதிருத்தல் ஆகும். இஃது அதிக வேலை செய்வதற்காக இருக்கலாம் (ஞான 6:15); அல்லது நாம் கவனமாயில்லாதபோது எதிரி நம்மைத் தாக்குவதைத் தடுப்பதற்காக இருக்கலாம் (சங் 127:1தொ). எனவே, விழிப்பாய் இருத்தல் என்பது உருவகமாகக் கூறப்படுகிறது. அதன்படி பார்த்தால் எச்சரிக்கையாயிருத்தல், கவனமின்மையை எதிர்த்துப் போராடுதல் என்பன விழிப்பாய் இருத்தலாகும். இதன் வழியாக எண்ணிய இலட்சியத்தை அடைவது ஒருவரது நோக்கமாகிறது (பழ 8:34). விசுவசிப்பவனின் குறிக்கோள் என்னவென்றால் அந்த நாள் வரும்பொழுது ஆண்டவரை வரவேற்க விழிப்பாய்க் காத்திருக்க வேண்டும் என்பதே (எசா 21:11-12; 52:8). விசுவாசி விழிப்பாயிருப்பதால் அவன் இருளில் இருந்தாலும், இரவில் இருந்தாலும் அவன் இருளாகவோ, இருளின் ஒரு பகுதியாகவோ மாறாமல் இருக்கிறான்.

II. **ஆண்டவரின் வருகைக்காக விழிப்பாயிருத்தல்:**

1. ஒத்தமை நற்செய்திகள்: இறைமகன் மீண்டும் வரும்போது அவர்கள் ஒவ்வொருவரும் விழிப்பாயிருக்க வேண்டும் என்பதுதான் இயேசு தரும் அறவுரையில் முக்கியமானதாக இருக்கிறது (மாற் 13:33-37). ''விழிப்பாயிருங்கள்; ஏனெனில், உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது'' (மத் 24:42). தமது வருகை முன்னறியப்பட முடியாதது என்பதை உணர்த்த இயேசு பல வகையான ஒப்புமைகளையும் உவமைகளையும் பயன்படுத்துகிறார். இவை விழிப்பாய் இருத்தல் தூங்காதிருத்தல் என்ற தற்காலப் பொருளைச் சுட்டுகின்றன. திருடன் இரவில் வருவதுபோல மனுமகன் வருவார் (மத் 24:32 தொ). தனது பணியாளர்களுக்கு முன்னெச்சரிக்கை தராமல் இரவில் திரும்பி வரும் வீட்டுத் தலைவனைப்போல வருவார் (மாற் 13:35தொ). விவேகமுள்ள வீட்டுத் தலைவனைப்போல அல்லது நல்ல ஊழியனைப்போல ஒரு கிறிஸ்தவனும் தூக்கம் தன்னை மேற்கொள்ள விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவன் விழித்திருந்து ஆண்டவரை வரவேற்கக் காத்திருக்க வேண்டும். எனவே, விழித்திருத்தல் என்பது இயேசுவின் வருகையை நம்பிக்கையோடு எதிர்பார்க்கும் அவரது சீடரின் தனித்தன்மையாக இருக்கிறது. இந்த எச்சரிக்கை உணர்வு எப்பொழுதும் கவனமாயிருக்க வேண்டிய ஒரு நிலையாதலால் இது மண்ணக இன்பங்களிலிருந்தும், பொருட்களிலிருந்தும் ஒரு ஈடுபாடற்ற நிலையில் இருக்க வேண்டிய அவசியத்தைக் கோருகிறது (லூக் 21:34தொ). ஏனெனில் இரண்டாம் வருகையின் நேரத்தை யாரும் முன் குறித்துச் சொல்ல முடியாததலால் அஃது எந்த நேரத்தில் வந்தாலும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். இதைத்தான் பத்துக் கன்னியர் உவமை எடுத்துக்கூறுகிறது (மத் 25:1-13).

2. பவுலின் முதல் திருமடல்கள்: பவுலின் முதல் மடல்கள் இரண்டாம் வருகையை அதிகம் வலியுறுத்தி எச்சரிக்கையாயிருங்கள், விழிப்பாயிருங்கள் என அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் பார்க்கிறோம். சிறப்பாக 1 தெச 5:1-7-இல் ''நாம் இரவுக்கோ, இருளுக்கோ உரியவரல்லர். எனவே, மற்றவர்போல் நாமும் தூங்கலாகாது, விழித்திருக்க வேண்டும். மட்டுமிதத்தோடு இருத்தல் வேண்டும்'' (1 தெச 5:5தொ). ஒரு கிறிஸ்தவன் கடவுளை நோக்கித் திரும்பிவிட்டதால் அவன் ஒளியின் மகனாக இருக்கிறான். எனவே, அவன் தீமையின் அடையாளமான இருளைத் தொடர்ந்து ஆற்றலோடு எதிர்க்க வேண்டும். அப்பொழுதுதான் இயேசுவின் வருகை அவனுக்கு எதிர்பாராத வியப்பாக அமையாது. விழிப்பாயிருத்தல் ஓரளவு மட்டுமிதத்தைக் கோருகிறது. அதாவது, இருளோடு தொடர்புடைய மிகைப்பாடுகளைக் கைவிட வேண்டும். ஆண்டவருடைய வருகையிலிருந்து திசை திருப்பும் எதையும் கைவிட வேண்டும். மேலும்,

விழிப்பாயிருக்க விரும்பும் ஒருவன் ஆன்மீகப் படைக்கலங்களாகிய விசுவாசம், அன்பு முதலியவற்றை அணிந்து கொள்ள வேண்டும் (1 தெச 5:8). சற்றுப் பிந்திய மடலில் கிறிஸ்தவர்கள் தங்கள் உற்சாகம் குன்றிப் போகக்கூடாது என்ற எண்ணத்தில் தங்களையே சிறிது தூண்டிவிட்டுத் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து அவர்களை நெருங்கும் மீட்புக்குத் தயாராக இருக்குமாறு பவுல் தூண்டுகிறார் (உரோ 13:11-14).

3. திருவெளிப்பாடு: சர்தைத் திருச்சபைக்கு இறுதிநாளில் நீதிபதி அளிக்கும் செய்தி விழிப்பாயிருப்பது பற்றி அறிவுரை கூறப்படுவதுதான் (திருவெளி 3:1தொ). ஏனெனில், அந்தத் திருச்சபை கிறிஸ்து திரும்பி வருகிறார் என்பதையே மறந்து விட்டது. அது விழித்தெழாவிட்டால் அதனைத் திருடனைப்போல் அவர் திடீரெனச் சந்திப்பார். ஆனால், தனது உடையெல்லாம் உடுத்தி எவன் தயாராக இருக்கிறானோ அவன் பேறுபெற்றவன் (16:15). இவ்வாறு, ஆண்டவரின் வெற்றி ஊர்வலத்தில் அவன் கலந்துகொள்ளக் கூடியவனாவான்.

III **ஒவ்வொரு நாளும் சோதனைக்குட்படாதபடி விழிப்பாயிருத்தல்:** இயேசுவின் வருகைக்காகக் காத்திருக்கும் இந்த விழித்திருத்தலில் கிறிஸ்தவர்கள் தளராது நிலைத்து இருப்பதில் அன்றாடச் சோதனைகளுக்கு எதிராகப் போராட வேண்டியிருக்கிறது. இந்தச் சோதனைகளே பெரிய இறுதிக் காலப் போராட்டத்தின் முன்னனுபவமாக இருக்கிறது.

1. கடவுளின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்றும் இறுதி நேரத்தில் கூட கெத்சமனித் தோட்டத்தில் இயேசு துன்பம் மிக்க விதத்தில் போராட வேண்டியிருந்தது. அது கால இறுதியில் வரும் போராட்டத்தின் முன்னுரை போல் அமைந்தது. சோதனைகட்கு எதிராக விழித்திருக்கும் ஒரு மாதிரியாக இயேசுவை ஒத்தமை நற்செய்திகள் காட்டுகின்றன. இயேசு சிறப்பு மிக்க மாதிரியாவார். ஏனெனில், அவ்வளவு எச்சரிக்கைக்குப் பிறகும் சீடர்கள் தவறிவிட்டனர். ''சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்'' (மத் 26:41). இது கெத்சமனியையும் கடந்து செல்லும் கிறிஸ்தவ அறவுரையாகும். ஆண்டவர்கள் கற்பித்த செபத்தின் இறுதி மன்றாட்டு முன்னதற்கு நெருங்கியதாகும்; ஏனெனில்,, இறுதிக்கால வேளையில் மட்டுமன்று. ஒவ்வொரு நாளும் சோதனையில் விழாமல் இருக்க இறைவனுடைய உதவியைத் தேடுகிறது.

2. விழிப்பாய் இருக்க வேண்டுமென்ற கட்டளை, இன்றைய வாழ்வின் ஆபத்துக்கள் உள்ளார்ந்த விதத்தில் அதிகமாக இருப்பதால் அடிக்கடி பவுலின் திருமடல்களில் வருகிறது (1 கொரி 16:13; கொலோ 4:2; எபே 6:10-20). இந்த அறிவுரை மிகச்சிறப்பாக இரவுச்செபத்தின் ஒரு பகுதியாக உயிரோட்டத்துடன் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ''தெளிந்த மனத்தோடு விழிப்பாயிருங்கள். ஏனெனில், உங்கள் எதிரியான அலகை கர்ச்சிக்கும் சிங்கம் போல யாரை விழுங்கலாம் எனத் தேடித் திரிகிறது'' (1பேதுரு 5:8). இங்கும் எபே 6:10-ஐப் போலவே எதிரி யார் என்பது தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. மாற்றமுடியாத வெறுப்புடன் சாத்தானும் அவனது உதவியாளர்களும் எந்தக் கிறிஸ்தவன் கிறிஸ்துவை மறுப்பான் என ஆவலோடு காத்திருக்கின்றனர். எனவே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது செபத்தாலும், தன் மறுப்பாலும் எதிரியின் வலையில் சிக்காதிருக்க எச்சரிக்கையாக இருப்பானாக! சிறப்பாக, சமூகங்களின் தலைவர்களாயிருப்பவர்கள் இத்தகைய கொடிய ஓநாய்களிடமிருந்து மந்தையைப் பாதுகாக்க இத்தகைய விழிப்புணர்வு கொண்டிருக்க வேண்டும் என அறிவுரை கூறப்படுகிறது (அ.ப. 20:28 31).

IV **விழித்திருத்தல்:** இரவை விழித்திருந்து செபத்தில் கழித்தல். இரவு முழுவதும் விழித்திருந்து செபிக்கும் தொடக்கத் திருச்சபையின் பழக்கத்தை எபே 6:18; கொலோ 4:2-இல் பவுல் சுட்டிக்காட்டுகி

றார் எனலாம். ஏனெனில், விழித்திருந்து செபித்தல் என்பது இயேசுவின் செயலை நாம் பின்பற்றுதலாகும் (லூக் 6:12; மாற் 14:38).

விழிப்பாயிருத்தல், இயேசு ஆண்டவரின் மகிமையான வரவை நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்தவனின் சிறப்புப் பண்புகளில் ஒன்றாகும். இது வரப்போகிறவரை வரவேற்கக் காத்திருப்பதையும் (திருவெளி 22:17.20), இறுதிக்கால விசுவாச மறுதலிப்புகளை எதிர்த்துப் போராடுவதையும் உள்ளடக்கும். இந்த வாழ்வின் சோதனைகள் இறுதிக்காலச் சோதனைகளின் முன்னனுபவமாக அமைவதால், ஒரு கிறிஸ்தவன் விழிப்பாக இருந்து தீயவனுக்கு எதிரான ஒவ்வொரு நாள் போராட்டத்திலும் அவனை வெல்ல வேண்டும். இதற்கு இடைவிடாத செபமும் மட்டுமிதமான நிலையும் ஒரு சீடனுக்கு அவசியமாகும்.

விழிப்பாயிருக்கும் வாயில் காவலர் - உவமை (WATCHING DOORKEEPER OR SERVANT - PARABLE)

(மாற் 13:32-27; லூக் 12:35-40).

இந்த உவமை இறைமகனின் இரண்டாம் வருகைக்காக விழிப்பாயிருந்து காத்திருக்க வேண்டுமெனக் கூறுகிறது. ஏனெனில், இஃது எந்த நேரத்தில் நிகழும் எனத் தெரியாது. வீட்டை விட்டுத் தொலைநாடு செல்லும் தலைவன் இறைமகன் இயேசு. அவர் விட்டுச்செல்லும் வீடு இவ்வுலகம். ஊழியர்கள் அவரது வார்த்தையைப் பின்பற்றி வாழும் சீடர்கள். ஒவ்வொரு ஊழியரும் விழிப்பாயிருக்க வேண்டும். ஏனெனில், இயேசு வரும்போது தயாராயில்லாத ஊழியரை, குறிப்பாக வாயிற்காவலாளியைப் புறக்கணிப்பார். எனவே, எல்லா மனிதர்களும் இறைவனை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்.

விளக்கு (LAMP)

I. பழைய ஏற்பாட்டில் விளக்குகள் பற்றி பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. உடன்படிக்கைப் பேழையிலும், கோவிலிலும், அடையாளப் பொருளிலும் இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. விளக்குகள் ஒவ்வொரு நாளும் பயன்பட்ட ஒன்று என்பதனைத் தெளிவாகக் காண்கிறோம் (பழ 31:18; எரே 25:10).

பழைய ஏற்பாட்டில் விளக்குகள் களிமண்ணால் செய்யப்பட்டவையே. தட்டுப் போல் அமைந்த ஒன்றின் நுனியில் திரியமைத்து அதில் ஒலிவ எண்ணெய் ஊற்றி விளக்குகளாகப் பயன்படுத்தினர் (யாத் 27:20). அந்தத் தட்டின் நான்கு மூலைகளும் இதழ்போலக் குவித்து வைக்கப்பட்டு, திரியை வைப்பதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டிருந்தன. மத்திய வெண்கலக் காலத்தில் ஓர் இதழுள்ள விளக்குகள் இருந்தன. பிறகு ஏழு இதழ்களுள்ள விளக்குகள் தோன்றின (செக் 4:2).

தொடக்கத்தில் மேலே கூறப்பட்டது போல் விளக்குகள் இருந்தாலும் (1 சாமு 3:3) பின்னர் ஒரே தண்டில் பல விளக்குகள் இணைக்கப்பட்டு, ஏழு கிளைகள் உள்ள விளக்குகள் கூடத் தோன்றின. கிரேக்கப் பண்பாட்டின்படி வந்த விளக்குகள் மூடியுடன் வந்தன. இவை கி.மு. 5 மற்றும் 4-ஆம் நூற்றாண்டுகளில் உருண்டை வடிவத்தில் அமைந்த விளக்குகள் தனிமூடியோடும், பின்னர் உரோமையர்கள் கி.மு. 100-இல் அறிமுகப்படுத்திய விளக்குகள் மூடியும் விளக்குகளும் சேர்ந்தும் அமைந்தன. முட்டை வடிவத்திலும், முக்கோண வடிவத்திலும் விளக்குகள் பின்னர் [illegible]. விவிலியக் காலத்திற்குப் பிறகே [illegible] வத்தி விளக்குகள் அறிமுகப்படு[illegible]டன. அதற்குமுன் சாதாரண எண்[illegible] விளக்குகளே பயன்பட்டன.

II. **உருவகப்பொருள்:** விளக்கு[illegible] அதனைக் கொண்டிருக்கும் விளக்[illegible]டும் அடையாளப் பொருட்களைக் கொண்டிருந்தன எனலாம். ஒளியும் [illegible] கொண்டிருந்த விளக்கும் இறை[illegible]தைக் குறிப்பதாயின (திருவெளி 21.23; 22.5; காண்க. யோவா 8:12; யோவா 1:5). இறைவாக்கினரின் வார்த்தையும் ஒளிவிடும் விளக்காக எண்ணப்பட்டது (யோவா 5:35;

பேதுரு 1:19; மாற் 4:21-22; லூக் 8:16-17; இது மத்தேயு 5:15-16-இல் கொடுக்கப்பட்டிருக்கும் ஒழுக்கம் பற்றிய விளக்கத்திலிருந்து மாறுபட்டதாகும்). அது நம்மைக் காத்து, வாழ்வு மற்றும் ஒளியான விளக்குச் சட்டத்தையும் குறித்துக் காட்டுகிறது (சங் 119:105; பழ 6:23); நீதியுடைமையின் செயல்களையும் சுட்டிக்காட்டுகிறது (மத் 5:15). மற்றொரு கோணத்தில், தனது நாணயத்தைத் தொலைத்து விட்ட பெண் விளக்கை ஏற்றி அதனைத் தேடுவது போல (லூக் 15:8), விளக்கு இறைவனுடைய கண்களை அடையாளமாகச் சுட்டலாம் (செக் 4:1-14). ஒருவரின் கண்ணே அவரது உடலுக்கு விளக்கு என்றும் கூறலாம். என்றுமே அழியாத தாவீதின் வம்சத்தின் அடையாளமாக விளக்கைக் கொள்கின்றனர் (1 அர 11:36; 15:4; 2 அர 8:19; 2 நாள் 21:7). கடவுளே இருளை ஒளியாக்கிக் கொண்டிருக்கும் விளக்கு (2 சாமு 22:29). இவ்வாறு விளக்கு அடையாளப் பொருளாகப் பலவற்றைச் சுட்டலாம். இவை ஒளி-உயிர் என்னும் அடிப்படைக் கருத்திலிருந்து உருவாக்கப்பட்டவையாகும்.

III. **இறையியல் சிந்தனை:** விளக்கு, தன்னகத்தே பிரகாசிக்கும் ஒளியைத் தாங்கி நிற்பதால் இறைவனுடையவும் மனிதனுடையவும் உயிருள்ள பிரசன்னத்தை அடையாளமாக உணர்த்துகிறது.

1. விளக்கு இறைப்பிரசன்னத்தின் அடையாளம்: ''ஆண்டவராகிய நீரே என் ஒளி விளக்கு'' (2 சாமு 22:29). இவ்வாறே சங்கீத ஆசிரியரும், இறைவன் ஒருவரே ஒளியும், வாழ்வும் தரவல்லவர் என்று பறைசாற்றுகிறார். ''ஆண்டவர் மனிதனுக்குத் தந்துள்ள ஆவி ஒரு விளக்கு'' (பழ 20:27). இறைவனுடைய கட்டளைகளுக்கும் (பழ 6:23; சங் 105; 119), இறைவாக்கிற்கும் விசுவாசிகள் பணிந்து, இந்த விளக்கின் ஒளியில் நல்வழி நடக்க, இறைவனின் திரு ஆவி அவ்விளக்காக இருந்து பெரிதும் உதவுகிறார். மேலும், இறைவாக்கினர்களின் நூல்கள் ''இறைவாக்கை நீங்கள் இருண்ட இடத்தில் ஒளிரும் விளக்கென மதித்துக் கவனித்தல் நலம். பொழுது புலர்ந்து விடிவெள்ளி உங்கள் இதயங்களில் தோன்றும்வரை அவ்விளக்கு ஒளிர்கிறது'' (2 பேதுரு 1:19) என்று சான்று பகர்கின்றன. ஆண்டவராகிய கடவுளும் செம்மறியுமான இறைமகன் உலகத்தின் முடிவில் மீண்டும் வரும் இறுதி நாளில், ''இரவே இராது. விளக்கின் ஒளியோ, கதிரவனின் ஒளியோ அவர்களுக்குத் (விசுவாசிகளுக்குத்) தேவைப்படாது'' (திருவெளி 22:5). ஏனெனில், 'கடவுளின் மாட்சிமையே' அவர்களுக்கு ஒளியாகவும், 'செம்மறியே' விளக்காகவும் திகழும். அதன் ஒளியில் எல்லா நாட்டு மக்களும் நடந்து செல்வர் (திருவெளி 21:23.24).

2. விளக்கு, மனிதப்பிரசன்னத்தின் அடையாளம்: மனிதப் பிரசன்னத்தை அடையாளப்படுத்தவும் விளக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. தாவீது அரசனிடம் அவரது புதல்வர்கள் மேலும் தொடர்ந்து பெருகிப் பலுகுவார்கள் என்ற பொருள்பட 'ஒரு விளக்கைக் கொடுப்பதாக' இறைவன் வாக்களிக்கிறார் (2 அர 8:19; 1 அர 11:36; 15:4). அம்மக்கள், இறைவனது வாக்கிற்குக் கீழ்ப்படியாமல் மாறாக அவர்கள் மனம் போல் நடக்க நேரும்போழ்து இறைவன் எரிந்துகொண்டிருக்கின்ற 'விளக்குகளின் ஒளியை' அணைத்து விடுவதாக அச்சுறுத்துகிறார் (எரே 25:10). அப்போது தீயவன் மிகவும் விரும்பத்தக்கது தனது விளக்கு விரைவில் அணைக்கப்பட வேண்டும் என்பதே (பழ 13:9; யோபு 18:தொ). இஸ்ராயேல் மக்கள் இறைவன்பால் கொண்டுள்ள பிரமாணிக்கத்திற்கு எடுத்துக்காட்டாகவும், இறைவன் திருமுன் செபத்தில் ஒன்றித்து வாழ்கின்றனர் என்பதற்குச் சான்றாகவும் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும்படி விளக்கைப் பலிபீடத்தில் வைத்துக் காத்தனர் (யாத் 27:20 தொ; 1 சாமு 3:3). விளக்கு அணைந்து போக விட்டால் அஃது அவர்கள் இறைவனைக் கைவிட்டு விட்டனர் என்பதற்கு அடையாளமாகும் (2 நாள் 29:7). ஆனால் விவேகிகளாகிய 5 கன்னியர்களைப் போன்றும் (மத் 25:1-8), உண்மை ஊழியக்காரனைப்போன்றும் (லூக் 12:35)

தங்களிடம் இருக்கும் விளக்குகள் என்றும் அணையாத வண்ணம் எரியும் விளக்குகளோடு ஆண்டவரின் வருகைக்காகக் காத்திருப்போர் பேறு பெற்றோர்.

ஆனால், இறைவன் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறார். அவ்விளக்குகள் என்றும் எரியும்வண்ணம் காத்திருப்பவர்கள் ''விளக்கைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைக்க மாட்டார்கள்; மாறாக, வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும்பொருட்டு, விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள்'' (மத் 5:15தொ. இணை). அப்பொழுது ஆண்டவரின் அன்புக்குரிய உண்மை ஊழியக்காரர்கள், இறைவாக்கினர் எலியா ''பந்தம்போல் அவருடைய வார்த்தை பற்றி'' (சீரா 48:1) எரியச் செய்ததுபோல், தங்கள் ஒளிகளையும் தீய உலகின் நடுவில் ஒளிரச் செய்வார்கள் (பிலி 2:15). திருமுழுக்கு யோவானைப் போன்று அவர்கள் 'எரிந்து சுடர்விடும் விளக்கு'கள் (யோவா 5:35). யோவான் எவ்வாறு ''அனைவரும் தம் வழியாக விசுவசிக்கும்படி ஒளியைக் குறித்துச் சாட்சியம் அளிப்பதற்கு அவர் சாட்சியாக'' வந்தாரோ (1:7தொ), அதே போன்று இவர்களும் அவ்வொளிக்குத் தங்கள் வாழ்விலும், ''நெறிகெட்ட, சீரழிந்த தலை முறையினரிடையே.... வாழ்வைப்பற்றிய வார்த்தைகளை ஏந்தி நின்று, உலகில் சுடர்விடும் விண்மீன்''களாய்த் (பிலி 2:15தொ) திகழ்வார்கள். 'மக்கள் உங்கள் ஒளிகளைக் கண்டு வானகத்தில் உள்ள தந்தையை மகிமைப் படுத்தும்படி உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிரவேண்டும்' (மத் 5:16) என்பதையே இறைவன் மேலும் விரும்புகின்றார். பேதுரு, பவுல் இருவரும் ''மண்ணுலகை ஆளும் ஆண்டவர் முன் நிற்கும் இரண்டு ஒலிவ மரங்களும், இரண்டு விளக்குத் தண்டுகளுமாவர்'' (திருவெளி 11:4). இவ்விருவர் தலைமையில் அமைக்கப்பட்ட திருச்சபையும், உலகம் முடியும் வரை பொன் குத்துவிளக்குகளின் ஒளி நடுவே பிரகாசமாய் மாட்சிமையோடு வீற்றிருக்கும் மனுமகனின் மகிமையை (திருவெளி 1:12 20) உலகிற்கு ஒளியாகத் திகழ்ந்து பறைசாற்றிக் கொண்டு இருக்கும்.

விளக்கு உவமை (LAMP, PARABLE OF)

(மத் 5:14-16; மாற் 4:21-22; லூக் 8:16 17; 11:33-36).

இயேசுவின் சீடர்கள் நற்செயல்களைச் செய்து வாழ வேண்டும். இயேசுவின் போதனைக்கேற்ப நாம் வாழ்க்கை நடத்தினால் நாம் வானகத் தந்தையின் புகழைப் பரப்பலாம். இதைப் பார்ப்பவர்கள் வானகத் தந்தையைப் போற்றுவார்கள். ஆனால், நற்செய்தியின்படி தன்னுடைய வாழ்க்கையை நடத்தாதவன் புறக்கணிக்கப்படுவான். ஏனெனில், மரக்காலின் கீழ் உள்ள விளக்கு ஒளிதர முடியாது. எசாயா இறைவாக்கினர் எருசலேமை ஆண்டவரின் கட்டளைகளைக் கற்க நாடுகள் ஓடிவரும் விளக்காகக் கருதினார் (எசா 60:3-5). ஆனால், தற்பொழுது மற்றவருக்கு நல்வழி காட்டும் பணி இயேசுவின் சீடர்கள் மேல் சுமத்தப்பட்டுள்ளது.

விளக்குத்தண்டு (LAMPSTAND)

விளக்கை ஏற்றி வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தண்டு அல்லது சிறிய கம்பம். இதன் பயனாக விளக்கின் ஒளியானது அதிகப்பரப்பை ஒளியூட்டும். சிறப்பாக, கோவிலிலும், திரு உறைவிடத்திலும் பயன்படுத்தப்படும் ஏழு கிளைகள் கொண்ட விளக்குத் தண்டினையே இச்சொல் குறிப்பிடுகின்றது.

1. புதைபொருள் ஆராய்ச்சிக் குறிப்புகள்: விளக்கின் ஒளியைத் தெளிவாகப் பெறுவதற்காக விளக்கு சுவரின் மீதோ, நிலையடுக்குத் தட்டின் மீதோ, தூணின் மீதோ வைக்கப்படும் அல்லது கூரைப்பகுதியிலிருந்து கயிற்றினால் கட்டித் தொங்கவிடப்படும். தண்டின்மீது விளக்கு வைக்கப்படுவதால் தெளிவான ஒளியை நாம் பெற இயலும் (மத் 5:15). பாலஸ்தீன நகரங்களின் புதைபொருள் ஆராய்ச்சியில் பலதரப்பட்ட விளக்குத் தண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சாதாரணமாக இவை மண்ணால் செய்யப்பட்டு, ஏறக்குறைய உருளை

வடிவமைப்பைக் கொண்டுள்ளன; பக்க வாட்டில் சிறு ஓட்டைகளையும், வெளிப் புறத்தில் வண்ண வடிவமைப்புக்களையும் கொண்டுள்ளன. எளிமையான அமைப்புக்களைக் கொண்ட இந்தத் தண்டுகள் பொதுவாக, தூபப் பாத்திரங்களைத் தாங்கவும் பயன்படுத்தப்பட்டன.

மெகிதோ, பெத்சான் என்ற இரு இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட உலோகத்தாலான பல தண்டுகள், சாலமோன் ஆலய விளக்குத் தண்டுகளை ஒத்ததாக உள்ளன. உயரமான தளம் கொண்ட அமைப்பு இரும்புக்காலப் பாலஸ்தீனத்தில் இருந்தது. தெல்தானாக்கு என்ற இடத்தில் காணப்பட்ட ஏழு கிளை விளக்கு ஒன்று, சுனாமியப் பெண் ஒருத்தி எலியாவிற்கு அளித்த விளக்குத்தண்டிற்கு ஆதாரமாக உள்ளது (2 அர 4:10). செக்கரியாவின் காட்சியில் வரும் விளக்குத் தண்டும் இதற்குச் சிறந்த உதாரணம் (செக் 4:2.11).

2. மெனோரா (Menorah): கோவிலிலும் திரு உறைவிடத்திலும் பயன்படுத்தப்படும் விளக்குத் தண்டுகளையே இது குறிப்பிடுகின்றது. தனி வீடுகளிலும் அரச மாளிகைகளிலும் பயன்படுத்தப்பட்ட விளக்குத் தண்டுகளைப் பற்றிய விவிலியக் குறிப்புகள் மிகக் குறைவு (2 அர 4:10; லூக் 8:16). *'மெனோரா'* என்ற எபிரேயச் சொல் ஏழுகிளை விளக்கைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. இன்றும், யூத செபக் கூடங்களிலும், வீடுகளிலும் சிறந்த அடையாளங்களாக இத்தண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன (யாத் 26:35; 25:31-40; 37:17-24). இத்தண்டுகள் தளப்பகுதி, நிலைக்கோல், கிளைகள் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளன. திறமைமிக்க கலைஞர்களால் இவை செய்யப்பட்டன. பிரசன்ன அப்பமேசை முன் இருந்த மெனோரா யாத் 25:31-40; 37:17-24-இல் விவரிக்கப்படுகிறது.

சாலமோன் ஆலயத்தின் கருவறை முன்னால் வடக்கு, தெற்குப் பக்கங்களில் முறையே ஐந்தும், மேலும் பல அறைகளில் தங்க, வெள்ளித் தண்டுகளும் இருந்தன (1 அர 7:49; 1 நாள் 28:15). இரண்டாவது ஆலயத்தில் ஒரே ஒரு தண்டு பயன்படுத்தப் பட்டது (1 மக் 1:21; 4:49).

3. மெனோராவின் அடையாளப் பொருள்: ஏழு கிளை விளக்கின் அடையாளத் தன்மையின் ஆரம்பம் பற்றிய விளக்கம் தெளிவாக இல்லை. எனினும் இன்றைய அறிவின்படி, விளக்கின் கிளைகள் வாழ்வுதரும் மரக்கிளைகளைக் குறிப்பிடுகின்றன என்றும், வட்டவடிவ அடிப் பகுதியானது உலக மலைகளையும் அவற்றிலிருந்து வளரும் மரங்களையும் வெளிப் படுத்துகின்றன என்றும் விளக்கம் கொடுக்கப்படுகின்றது. ஒளியும், உயிரும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவைகளாகப் பயன்படுத்தப்பட்டன. ஏழு என்ற எண் எங்கும் புனிதமானதாகக் கருதப்படுகின்றது. செக் 4:10-இல் ஏழு விளக்கானது ஆண்டவரின் ஏழு கண்களாக விரித்துரைக்கப்படுகின்றது. எபி 9:2-இல் திரு உறைவிடத்து விளக்கும், மாற் 4:21-இல் வீட்டு விளக்குத்தண்டும் குறிக்கப்படுகின்றன. மற்றப்படி புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலில் (1:12-20; 2:5) மட்டும்தான் விளக்குத்தண்டு குறிக்கப்படுகிறது. ஏழு விளக்குத்தண்டுகள் சிறிய ஆசியாவின் ஏழு திருச்சபைகளுக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எபேசியத் திருச்சபை மனந்திரும்பத் தவறினால் அதன் விளக்குத் தண்டு அகற்றப்படும் என்று அச்சுறுத்தப் படுகிறது.

4. மெனோராவின் வரலாறு: யாத்திரை நூலின் குறிப்புகளிலிருந்து, மெனோராவைப் பற்றிய விளக்கங்கள் ஐந்தாம் நூற்றாண்டு அல்லது அதற்கும் பிற்பட்ட காலத்தைச் சார்ந்தன என்று தெரிகின்றது. எனவே, புதைபொருள் ஆராய்ச்சிக் குறிப்புகளின் உதவி அதிகம் தேவைப்படுகின்றது. இந்த விளக்குத் தண்டுகள் அடிப்பகுதி, நிலைக்கோல், பெரிய பாத்திரம், கிளை விளக்குகள் போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளன (செக் 4:2.11). இரண்டாவது ஆலயத்தில் ஏழுகிளை முறை பயன்படுத்தப்பட்டது. அந்திகோனு மத்தத்தியா

(கி.மு. 40-37) தனது நாணயத்தில் அடையாளமாக இதைப் பயன்படுத்தினார். கோவிலின் அழிவுவரை இஃது ஒரு பொது அடையாளமாக இல்லாவிட்டாலும் அதற்குப் பின்னர் யூதர்களின் மிக முக்கிய அடையாளமாக இது மாறியது; கட்டடங்களிலும், கல்லறைகளிலும், கைக்காப்பு போன்ற சிறிய பொருட்களிலும், விளக்குகளிலும் பொறிக்கப்பட்டது. மெழுகுவத்தி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இந்த விளக்குத்தண்டுகள் மெழுகுவத்தித் தாங்கிகளாக மாறின.

விளாமரம் (MASTIC)

இஃது ஒருவகைப் பிசின் கசிவுள்ள சிறுமரமாகும். இதன் பிசின், மேற்காசிய நாடுகளில் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டது. தானி 13:54-இல் இவ்வகை மரம் குறிப்பிடப்படுகின்றது. இவை மத்திய தரைக் கடல் பகுதிகளில் இருந்தாலும், கீயு தீவில் உயர்ந்த வகையினவாய்க் கிடைக்கின்றன.

விளிம்பு, தொங்கல்கள், குஞ்சங்கள் (FRINGES)

விளிம்பைக் குறிக்கும் மூல எபிரேயச் சொல் பழைய ஏற்பாட்டு வாசகங்களில் குஞ்சம் அல்லது தொங்கல் என்று மொழி பெயர்க்கப்படுகிறது. வெளியில் போர்த்தக் கூடிய போர்வையின் நுனியில் அமைந்துள்ள நூல் வரிசை. உப 22:12- ''நீ உன்னை மூடிக்கொள்ளும் மேற்போர்வையின் நான்கு மூலைகளிலும் தொங்கல்களை அமைத்துக்கொள்'' என்று கூறுகிறது. இந்தப் பகுதிதான் இதைப் பற்றிய காலத்தால் முந்திய குறிப்பாகும். இந்த மேற்போர்வை இரவில் போர்த்திக்கொள்வதற்கும் பயன்படும். எண்ணிக்கை நூல் குறித்தபடி ஆடைகளின் நுனியிலே நீல நாடாவைத் தைத்துக் குஞ்சம் கட்டித் தொங்கவிட்டிருப்பர் (எண் 15:38-39). பின்பு வெள்ளை நிறத்தில் தைக்க ஆரம்பித்தனர். ஏனென்றால், நீலத்தின் விலை மிகவும் அதிகமாக இருந்தது.

எண்ணிக்கை நூலும், உபாகமமும் மேற்போர்வையோடு குஞ்சம் வைத்துத் தைக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றன. அதனால் பகட்டாகத் தெரியும். தனது நோக்கத்தை நிறைவேற்ற நன்கு பயன்பட்டது. ஆனால், யூதர்கள் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டபோது இந்தப் பழக்கத்தை மாற்றிக்கொண்டார்கள். ஏனெனில், இவை அவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களின் கவனத்தை ஈர்த்தன. ஆகவே, குஞ்சங்கள் புற ஆடைக்குள் மறைத்து அணியப்பட்டன. இதிலிருந்து செபம் செய்யும்போது தலையைச் சுற்றிச் செப சால்வை அணியும் வழக்கம் தோன்றிது.

ஒவ்வொரு யூதனுக்கும், தான் யூதன் என்பதைக் காட்ட மூன்று வகையான அடையாளங்கள் கட்டளையிடப்பட்டிருந்தன. அவற்றில் முதலில் வருவது குஞ்சங்களாகும். இரண்டாவது, வாசகச் சுருளைக் கொண்ட உருளை வீட்டின் கதவு நிலைகளிலும் நுழைவாயில்களிலும் வைத்திருக்க வேண்டும் (உப 6:9; 11:20). மூன்றாவது மறைநூல் வாசகம் கொண்ட பட்டைகள் கைகளிலும் கண்களுக்கிடையிலும் அணிய வேண்டும் (யாத் 13:9. 16; உப 11:18). இந்தக் குஞ்சத்தை அல்லது தொங்கல்களைத் தைத்துப் போர்வையைத் தொங்கவிடுவதன் நோக்கம், ''நீங்கள் ஒழுக்கம் கெட்டு நடப்பதற்கு ஏதுவாய் உங்கள் இதயங்களும் கண்களும் விரும்புவதைப் பின்பற்றாமல், நீங்கள் அவற்றைப் (குஞ்சங்கள்) பார்த்து ஆண்டவர் கட்டளைகள் அனைத்தையும் நீங்கள் நினைவு கூர்ந்து அவற்றைச் செய்திடவே'' (எண் 15:34). சந்தேகமில்லாமல் இந்தப் பழக்கம் தோன்றியபோது ஒரு மந்திரக்கருவியாகவோ தடை அடையாளமாகவோ இருந்திருக்கலாம். ஆனால், யூத சமூகத்தில் ஓர் உயர்ந்த நோக்கத்திற்காக மாற்றப்பட்டு விட்டது.

புதிய ஏற்பாட்டில், பெரும்பாடு என்னும் நோயால் வருந்திய பெண் ஒருத்தி இயேசுவின் போர்வை விளிம்பைத் தொட்டுக் குணம் பெறுவதாக மத்தேயுவில் காண்கி

நோய் (மத் 9:20=லூக் 8:44). அஃதோடு கெனசரேத்தில் உள்ள மக்கள் எல்லாரும் வந்து, ''அவரது மேலங்கியின் விளிம்பை யாவது அவர்கள் தொட அனுமதிக்குமாறு அவரை வேண்டினர். தொட்டவர் யாவரும் நலமடைந்தனர்'' (மத் 14:36=மாற்கு 6:56).

பரிசேயர்கள் தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்கி, குஞ்சங்களைப் பெரிதாக்கினார்கள். மக்கள் பார்க்க வேண்டுமென்றே அவர்கள் இப்படி செய்ததால் இயேசு அவர்களைக் கடுமையாகக் கண்டிக்கிறார் (மத் 23:5). ஏனென்றால் மேலே கூறப்பட்டது போல மேற்போர்வையும் குஞ்சமும் அணிவது வேறு நோக்கத்திற்காக.

விளையாட்டுகள் (GAMES)

விவிலியம் பலவகையான விளையாட்டுச் செயல்களைக் குறிப்பிடுகின்றது. ஆனால், அவற்றின் விவரங்களை அதிகம் கொடுப்பதில்லை. அவற்றில் நகைச்சுவையும், பாடல்களும், நடனங்களும், போட்டிகளும் இடம் பெற்றதாகத் தெரிகிறது.

1. **பழைய** *ஏற்பாடு:* குழந்தைகள் குதித்தாடுவதை யோபு 21:11 குறிப்பிடுகிறது. ஆதி 21:9-இல் குறிக்கப்படும் இசுமயேல் யாக்கோபோடு விளையாடுதல் வெறும் கேலியாகவோ, குற்றமற்றதாகவோ இருந்திருக்க முடியாது. விடுகதைப்போட்டி நீதி 14:12-இல் குறிக்கப்படுகிறது. 2 சாமு 2:12-17-இல் மற்போர் போட்டி குறிக்கப்படுகிறது. இது சில சமயம் இரத்தக்களரியாக மாறுவதும் உண்டு. யாபோக்கு ஆற்றங் கரையில் யாக்கோபுடன் ஆண்டவரின் மனிதர் இத்தகைய மற்போரில் ஈடுபட்டிருக்கலாம். அந்த மனிதர் யாக்கோபின் தொடைச் சந்தைத் தொட்டதால், யாக்கோபு போட்டியில் தோல்வியுற்றார் (ஆதி 32:25-26). ஓட்டப்பந்தயம் ஓடுதல் ஒரு விளையாட்டாகும் (சங் 19:5). இத்தகைய விளையாட்டுகளில் எபிரேயர் ஈடுபட்டிருந்ததால், நான்காம் அந்தியோக்கு எப்பிபான் கிரேக்க முறை விளையாட்டுகளைப் புகுத்தியதற்கு வெறுப்புக் காட்டினர் (1 மக் 1:10-14). இந்த முறையைப் பெரிய குரு யாசோன் ஊக்குவித்தார். ஆலயத்துக்கருகில் ஒரு விளையாட்டு அரங்கத்தையும் கட்டுவித்தார். கிரேக்க முறை விளையாட்டுகளில் மற்போர், தட்டு எறிதல், தேர் ஓட்டம், பந்தய ஓட்டம், விலங்குகளோடு போரிடுதல் ஆகியவை இடம் பெற்றிருந்தன. தொல்பொருள் ஆய்வுகள் பல்வகையான விளையாட்டுப் படத்தட்டுகளையும், பொருட்களையும் வெளிக்கொணர்ந்துள்ளன. மெசபொத்தாமியாவிலிருந்தும், எகிப்திலிருந்தும் பலவகை விளையாட்டுகள் பாலஸ்தீனத்தில் புகுத்தப்பட்டிருப்பதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

2. **புதிய** *ஏற்பாடு:* ஓர் அறவுரையில் குழந்தைகள் விளையாடும் திருமணம், சவ அடக்கம் போன்ற விளையாட்டுகளை இயேசு குறிப்பிடுகிறார் (மத் 11:16-17; லூக் 7:32). தமது பாடுகளின்போது, இயேசுவே ஒரு கேலி விளையாட்டின் மையமாகினார். அப்போது சிலர் அவர் முகத்தை மூடி, அவரைக் குத்தி ''இறைவாக்கினனே, யார் என்று சொல்'' என்று கேட்டுக் கேலிசெய்தனர் (மாற் 14:65; லூக் 22:64; காண்க. 26:68). உரோமை வீரர்கள் சீட்டுப்போட்டு இயேசுவின் ஆடைகளைப் பகிர்ந்து கொண்டனர் (மத் 27:35).

யூதர்கள் கிரேக்க, உரோமை விளையாட்டு முறைகளை அறிந்திருந்தனர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில், ஒலிம்பியாவிலும், தெல்பியிலும், இஸ்துமசிலும் நிகழ்ந்த விளையாட்டுகள் புகழ்பெற்றவை. பவுல் ஒருவேளை இஸ்துமியன் விளையாட்டுகளைப் பார்த்திருக்க வேண்டும். அந்தப் போட்டிகளை எடுத்துக்கூறி, விசுவாசிகளுக்கு ஆன்மீகப் பாடம் கற்பிக்கிறார் பவுல் (1 கொரி 9:24-25). கிறிஸ்தவ வாழ்வை அவர் ஓர் ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிடுகிறார். பந்தயத்தில் பலர் ஓடுகின்றனர். ஆனால், பரிசு பெறுபவன் ஒருவன் தான். பந்தயத்தில் போட்டியிடுகிறவர்கள் தங்களை எல்லா வகையிலும் ஒடுக்குகிறார்கள். அப்படியே அழியா வெற்றிவாகை அடைவதற்காகக் கொரிந்தியக் கிறிஸ்தவர்

கள் தங்களையே ஒடுக்க வேண்டும். ஒரு குறிக்கோளோடு ஓட வேண்டும்; மற்போர் புரிய வேண்டும் (9:26-27). மற்றத் திருமுகங்களில் விசுவாச ஓட்டத்தை வீணாகச் செய்யாமலிருக்கும்படி பவுல் எச்சரிக்கிறார் (கலா 2:2; பிலி 2:16). பிலி 3:13-14-இல் கிறிஸ்தவ வாழ்வை ஓர் ஓட்டப்பந்தயத்திற்குப் பவுல் ஒப்பிடுகிறார். ''கடந்ததை மறந்து விட்டு, முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு, பரிசு பெற வேண்டி இலக்கை நோக்கி முனைந்து ஓடுகிறார்'' பவுல். தனது வாழ்வின் முடிவில் 2 திமொ 4:7-8-இல், ஓட்டப்பந்தய ஒழுங்கின்படி பந்தயத்தை முடித்து விட்டதாகவும், சோதனை மற்றும் துன்பகாலத்தில் விசுவாசத்தைப் பாதுகாத்து விட்டதாகவும், நல்வாழ்வின் பரிசான வெற்றி வாகையைப் பெறத் தயாராக இருப்பதாகவும், வெற்றிப் பெருமிதத்தோடு அறிவிக்கிறார் (காண்க. 2:5; எபி 12:1-2).

வீ

வீச்சு வாள் (SEYTHE)

இது தேர்ப்படைப் போருக்கு உதவும் ஒரு வளைந்த கருக்குள்ள வாள். 5-ஆம் அந்தியோக்கு யுப்பாத்தோரும், லீசியாவும் பெத்சூரில் யூதா மக்கபேயுவுக்கு எதிராகப் போரிட்டபோது இவ்வாள்களையுடைய போர்த்தேர்கள் பயன்பட்டன (2 மக் 13:2). ஆனால் 1 மக் 6:30-இல் இப்படைப் பிரிவு குறிக்கப்படவில்லை. இந்த வீச்சு வாள்கள் நிறைந்த தேர்கள் எகிப்தியர்கள், பாரசீகர்கள் மத்தியில் மிகவும் புகழ் வாய்ந்தனவாக இருந்தன. ஆனால், கிரேக்கர்களாலும், உரோமையர்களாலும் பயன்படுத்தப்பட வில்லை. கி.மு. 190-இல் நடந்த மக்னேசியாச் சண்டையில், செலூக்கிய அரசர்கள் இவ்வகை வாளைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. ஆனால் 'பெவான்' என்பவரால், இஃது அதன் பிறகு பயன்படுத்தப்பட்டதா என்பதில் சந்தேகம் எழுப்பப்படுகிறது. யூதேயா போன்ற நாடுகளில் பயன்படுத்தப் பட்டது என்பது பொருத்தமற்றுத் தெரிகிறது.

வீடு (HOUSE)

I. **பொது விவரங்கள்:** இது தங்கியிருக்கும் அல்லது குடியிருக்கும் இடத்தைக் குறிக்கிறது. இது (குகை, கூடாரம் உட்பட்ட) எளிய குடியானவனின் தங்குமிடத்தி லிருந்து மேல்குலத்தோரின் மாளிகை வரை குறிக்கும்.

வெண்கலக் காலத் தொடக்க முதல் (கி.மு. 3200-2100), பாலஸ்தீன வீடுகளில் பெரும்பாலானவை, பாதுகாக்கப்பட்ட நகர்களிலும் அவற்றைச் சார்ந்து இருந்த கிராமங்களிலும் அமைந்திருந்தன. இவ்வாறு அமைந்திருப்பது, பாதுகாப்பையும் நகர வசதிகளையும் அளித்தது. இதுவரை நாட்டுப்புற வீடுகள் பற்றிய விவரங்கள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. இவை விவசாயிகள் உணவு கொள்வதற்கும் இரவைக் கழிப்பதற்கும் பயன்பட்ட குடிசைகளாக இருந்திருக்கலாம். நகரங்களில் வீடுகள் அடுத்தடுத்து அமைந்திருந்திருக்க வேண்டும். இவற்றைச் சுற்றித் தெருக்கள் அமைந்திருந்தன. சில இடங்களில் வீடுகள் நகரப்பாதுகாப்புச் சுவர்க்கருகிலும், சுவரை ஒட்டியும் (யோசு 2:15) அமைந்திருந்தன.

வீடுகள் பாறையால் ஆன அடித்தளத்தைக் கொண்டிருந்தன (காண்க. மத் 7:24-27). கிடைத்தபோது, தோண்டி எடுக்கப்பட்ட கற்களாலும், மண்ணால் செய்யப்பட்ட கற்களாலும் கட்டப்பட்டு, வீடுகள் களி மண் சாந்தால் பூசப்பட்டன. வீட்டுத் தரை, நன்கு மிதிக்கப்பட்ட களிமண்ணால் ஆனது. கூரை, மரவிட்டத்தால் அமைக்கப் பட்டு, அதன்மீது இலைகளை விரித்துக் களிமண்ணால் பூசப்பட்டிருந்தது (உ.ச. 1:17; காண்க. சங் 129:6; எசா 37:27). வாயிலின் நிலைகள் மரத்தால் செய்யப்பட்டிருந்தன. சுவரில் காணப்பட்ட சில சன்னல்கள் சுவரில் அமைந்த சிறிய திறப்புகளாகும் (காண்க. யோசு 2:15).

இஸ்ராயேலரின் வீடுகளின் அடிப்படை வரைபடம் செவ்வக வடிவமுடையது. ஏழைகளின் வீடுகள் ஓர் அறையே கொண்டிருந்திருக்கலாம். ஒரு வளாகத்தைச் சுற்றி அமைந்த பல அறைகள் கொண்ட வீடுகளுக்குப் போதிய சான்றுகள் கிடைத்துள்ளன. குடும்பம் தங்குவதற்குரிய பகுதிகளைத் தவிர, கால்நடைகளுக்கும், சமைப்பதற்கும், சேமித்து வைப்பதற்கும் அறைகள் இருந்தன. தச்சு வேலைக்கும், வண்ணம்பூசுதலுக்கும், நெய்தலுக்கும் பயன் பட்ட அறைகளும் இருந்தன. தட்டையான கூரையைச் சுற்றிக் கைப்பிடிச் சுவர்களும் (உப 22:8), அங்குச் செல்வதற்கு ஏணிகளும் படிக்கட்டுகளும் இருந்தன. இவ்விதம் அமைந்த கூரை, உறங்குவதற்குக் கூடுதல் இடம் அளித்தது (1 சாமு 9:25; 2 சாமு 11:2; 2 அர 4:10). இது விளைபொருள்களைக் காயவைப்பதற்கும் வழிபாடு செய்வதற்கும் பயன்பட்டது (அ.ப. 10:9; காண்க. 2 அர 23:12).

மேல்குலத்தோரின் வீடுகளும் மாளிகைகளும் விரிவாக அமைந்திருந்தன. முளையில் சுழலும் கதவுகளும், பின்னால் சட்டம் பொருத்தப்பட்ட சன்னல்களும் அமைந்திருந்தன. வீடுகள், மரச்சிற்பங்களாலும், ஓவியங்களாலும், பல்வண்ண அமைப்புகளாலும், தந்தம் பதிக்கப்பட்டும் அழகு செய்யப்பட்டிருந்தன (காண்க. ஆமோ *3:15; 6:4*). இத்தகைய அமைப்புகள், வடவரசின் தலைநகரான திர்சாவிலும், இலாக்கீசில் காணப்பட்ட பாரசீகக் காலத்தைச் சேர்ந்த சிதைவுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிரேக்கர், உரோமையரின் பாதிப்பு தெளிவாகக் காணப்படுகிறது. மக்கள் அணுகக்கூடிய வீடுகளில் சுற்றி அமைந்த பெரிய புறமுற்றமும், குடும்பத்திற்குரிய தனி உள் முற்றமும் அமைந்திருந்தன. அரச மாளிகையைச் சேர்ந்த அறைகளும், மன்றங்களும், இணைந்த கட்டடங்களும் கூட வீடு என்று அழைக்கப்பட்டன. ''லெபனோனின் வனம்'' சாலமோனின் அரண்மனையின் ஒரு பகுதியாகும். இது கேதுரு மரங்களாலும் பிற பொருட்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது (1 அர *7:2-5; 10:17.21*; காண்க. *22:8*). அரசனது குளிர்கால வீடு, மூலத்தில் அரச அரண்மனையில் இத்தகைய ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் (காண்க. எரே *36:22*). பிற இடங்களில், ஏரோதின் எரிகோவில் அமைந்த சொகுசுக் கட்டடங்களைப் போன்ற தனி இடமாக இஃது இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது (காண்க. ஆமோ *3:15*).

திரு உறைவிடமும் ஆலயமும் (யாத் *23:19*; 1 அர *8:11*; நெகே *6:10*; தானி *1:2*; எபி *10:21*), பிற மக்களின் கோவில்களும் (1 சாமு *5:2. 5*; காண்க. *3:10*), சிலந்திவலையும் (யோபு *8:14*; காண்க. *27:18*), மனித உடலும் (*4:9*), சேமிப்பு இடங்களும் (உப *6:11*; காண்க. எசா *3:20*) வீடு என்று குறிக்கப்படுகின்றன. செயோலைப் போன்ற இடத்தையும் (யோபு *17:13*; காண்க. *30:23*; திருவுரை *12:5*), அடிமைத்தனத்தைப் போன்ற நிலையையும் (யாத் *13:3*; உப *5:6*) உருவகமாகக் குறிக்க வீடு என்ற சொல் பயன்பட்டுள்ளது.

அரச மரபையும், குடும்பம், இனம் போன்ற சமூக அமைப்புகளையும் வீடு என்ற சொல் குறிக்கவல்லது.

II. இறையியல் கருத்து:

1. மனிதன் வாழ்வதற்குத் தக்கதொரு சூழ்நிலையும் பாதுகாப்பான இடமும் தேவை; ஒரு குடும்பமும் ஓர் இல்லமும் தேவை. இந்த இடத்தையும் இல்லத்தையும் 'பெய்த்' என்னும் ஒரே எபிரேயச் சொல் உணர்த்துகிறது (கூட்டுச் சொற்களில் பெத் எனறு வரும். எ.கா.பெத்-எல்: கடவுளின் வீடு). ஆனால், கடவுள் மனிதனுக்கு இயல்பான ஒரு குடும்பத்தையும் சடப் பொருள் சார்ந்த உறைவிடத்தையும் கொடுத்து மனநிறைவு கொள்ளவில்லை; அவனைத் தம் சொந்த வீட்டுக்குள் அழைத்து வர விரும்புகிறார்; அதுவும், ஊழியனாக மட்டுமன்று, மகனென்ற பட்டப் பெயருடன் அழைத்து வர விரும்புகிறார். எனவே, இஸ்ராயேலர் நடுவில், அவர்கள் ஆலயத்தில் குடி இருந்த கடவுள் தம் ஒரே மகனை அனுப்பி ஓர் ஆன்மீக இல்லத்தை அமைக்கலானார். இஃது உயிருள்ள கற்களால் ஆனதும், மக்கள் அனைவருக்கும் திறந்திருப்பதுமான ஓர் ஆன்மீக வீடாகும்.

2. மனுமக்களின் வீடு:

அ) குடும்பம் வாழும் வீடு: மனிதன் தன் 'சொந்த வீடெனச் சொல்ல ஓரிடம் தேடுகிறான்; பழமொழி நூல் (*27:8*) கூறுவது போல, ஒரு கூடு கட்ட விரும்புகிறான். தன் தனிவாழ்வுக்குப் பாதுகாப்பாக ஒரு குடிசையாவது தேடுகிறான் (சீரா *27:8*). இத்தகைய குடிசையைத் தன் சொந்த நாட்டிலேயே, அதாவது தன் தந்தை வாழ்ந்த இடத்திலேயே அமைக்கத் தேடுகிறான் (ஆதி *30:25*). இக்குடிசைதான் அவனுக்கு மரபுரிமைச் சொத்து. இதை எவரும் பறிக்கலாகாது (மீக் *2:2*). அவ்வாறு செய்ய இச்சிக்கவிடக் கூடாது (யாத் *20:17*). அவன் வீட்டில் அவன் மனைவி தன் நற்குணத்தால்

எழில் பரப்பி அதற்கு அரணாக விளங்குகின்றாள் (சீரா 27:16). ஆனால், அவன் மனைவி கெட்ட குணமுள்ளவளாயின், வீட்டையே குட்டிச்சுவராக்குகிறாள் (25:16). ஒருவன் தன் இல்லத்தில் தன் மக்களோடு வாழ்கிறான். அவர்கள் அவனோடு என்றும் இருப்பார்கள். அவனுடைய ஊழியர்களுக்கோ அங்கு நிலையான இடமில்லை (யோவா 8:35). ஒருவன் தன் இல்லத்தினுள் விருந்தினரை வரவேற்க விரும்புகிறான்; தேவைப்படின் வற்புறுத்தி அவ்வாறு அழைக்கவும் செய்கின்றான் (ஆதி 19:2தொ; அ.ப. 16:15). எனவே இஸ்ராயேலரிடையே மனிதாபிமானமிக்க சட்டம் ஒன்று இருந்தது. அதன்படி, போர் அடுத்திருந்தாலும், அது புனிதப் போராயினும் புதுவீட்டுக்காரன் மகிழ்ந்திருக்க விதிவிலக்கு அளிக்கப்பெற்றான் (உப 20:5; 1 மக் 3:56).

ஆ) கட்டி எழுப்புதலும் இடித்துத் தகர்த்தலும்: ஒரு வீட்டை அமைப்பதென்றால் அதன் சுவர்களைக் கட்டி எழுப்புவது மட்டுமன்று. அதனுள் ஒரு குடும்பத்தை நிறுவி, பிள்ளைகளைப் பெற்றெடுத்து, அவர்களுக்கு மறைபோதனையும், நற்பண்பு நிறை வாழ்வுக்கு மாதிரியும் அளிப்பதாகும். இவை யாவும் ஞானத்தின் வேலைப்பாடும் (பழ 14:1), பெரும் பொறுப்புமாகும். இதிலெல்லாம் நற்பண்புள்ள மனைவிக்கு வேறு யாராலும் ஈடு செய்ய முடியாத பெரும் பங்குண்டு (31:10-31). மேலும் சொல்ல வேண்டுமாயின், இதெல்லாம் ஒரு தெய்வீகப் பணியாகும். எனவே, இப்பணியை மனிதன் தன் ஆற்றலால் மட்டும் நிறைவுறச் செய்ய முடியாது (சங் 127:1). ஆனால், மனிதன் தன் கெடுமதியால் தன் வீட்டின்மீது அழிவையும் கொண்டு வரக்கூடும் (பழ 17:13); மதிகெட்ட மனைவியும் தன் வீட்டையே இடித்துத் தகர்க்கிறாள் (14:1). பாவம், வீட்டை அழிக்கும் முன்னரே, வேறொரு அழிவிற்குக் காரணமாகிறது; அதாவது, மனிதனை அழிவுறச் செய்கிறது. ஏனெனில், , களிமண் குடிசையான மனிதன் (யோபு 4:19) கடவுளின் மூச்சால்தானே உயிர் வாழ்கிறான் (ஆதி 2:7). பாவியான மனிதன் முடிவில்லா வீடான கல்லறையில் தன் முன்னோர்களுடன் சேருமுன் (ஆதி 25:8; சங் 12:20; திருவுரை 12:தொ), இறந்து தன் ஆவியை இறைவனிடம் கையளிக்க வேண்டும். இத்தகைய மனிதனே தன் வழித்தோன்றல்களில் நிலைத்து வாழ்கிறான். இவர்களே இறைவன் தம் அன்பர்களுக்கு அமைத்துத்தரும் வீடாவர் (சங் 127). இதனால்தான் வீட்டைக்கட்டி அதில் குடியிராமல் போவது, இறைவன் தரும் தண்டனைக்கு ஓர் அடையாளம். பிரமாணிக்கமின்மைக்குக் கிடைக்கும் பரிசு இத்தண்டனையே (உப 28:30). ஆனால், தேர்ந்துகொள்ளப்பட்டோர் வருங்கால மகிழ்ச்சியில் தங்கள் வீடுகளில் என்றென்றும் வாழ்ந்திடுவர் (எசா 65:21 தொ).

3. கடவுள் எழுப்பும் அடையாள வீடு:

அ) இஸ்ரயேலரின் வீடும் தாவீதின் வீடும்: பாவம் இறைவனிடமிருந்து மக்களைப் பிரித்தது. இத்தகைய மனிதரிடையே இறைவன் திரும்பவும் வாழ்ந்திட விழைகின்றார்; இதற்கான தமது திட்டத்தை, தமக்கு ஊழியம்புரிய ஆபிரகாமை அழைக்கும்பொழுது, தொடங்குகிறார்; மற்றத் தெய்வங்களை வழிபட்ட மக்கள் நடுவிலிருந்து அவரைத் தம்பால் ஈர்த்துக் கொள்கிறார் (யோசு 24:2). ஆகவேதான், ஆபிரகாம் தம் நாட்டையும் தம் தந்தையின் வீட்டையும் விட்டுப் புறப்பட வேண்டும் (ஆதி 12:1). அவரும் அவருடைய மக்களும் பயணிகள் போல் கூடாரங்களில் வாழ்கிறார்கள் (எபி 11:9.13). இவ்வாறு, யாக்கோபும் அவர் மக்களும் எகிப்தில் குடியேறும்வரை வாழ்வர். ஆனால், விரைவில் இஸ்ரயேலர், எகிப்தில் கிடைத்த 'அடிமை வீட்டிலிருந்து' வெளியேற விழைவர். கடவுளும், அவர்களை விடுவித்து, அவர்களோடு உடன்படிக்கை செய்து அவர்கள் நடுவில், தாமே ஏற்பாடு செய்த கூடாரத்தில் வாழ்ந்திடுவார். அக்கூடாரத்தின் மீது மேகம் தங்கும். அஃது இறைவனின் மாட்சிக்குத் திரையிட்டு, அவர்தம் பிரசன்னத்தை இஸ்ரயேல் வீட்டார் அனைவருக்கும் வெளிப்படுத்தும்

(யாத் 40:34-38). இஸ்ரயேல் வீட்டார் என்னும் இப்பெயர், யாக்கோபின் வழித் தோன்றல்களுக்கும் உரித்தாகும். இவர்கள் விண்மீன்களையும்விட எண்ணிக்கையில் மிகுந்திருப்பார்கள் (உப 10:22).

இம்மக்கள் தம் கடவுளின் கூடாரத்தைச் சுற்றிக் கூடுகிறார்கள். அதனால்தான் அந்த இடம் கடவுளும் மக்களும் சந்திக்கும் கூடாரம் எனப்படுகிறது (யாத் 33:7). இங்குதான் தம்மை அடிக்கடி தேடிவரும் தம் ஊழியர் மோசேயோடு இறைவன் உரையாடுகிறார் (33:9 தொ; எண் 12:7). அதன்படி மோசேயும் மக்களை வாக்களிக் கப்பட்ட நாடுவரை வழிநடத்துகிறார். இவ் வாக்களிக்கப்பட்ட நாடு முழுவதும் 'ஆண் டவரின் வீடாகும்' (ஓசே 8:1; 9:15; எரே 12:7; செக் 9:8). இந்நாட்டில்தான் தம் மக்கள் நிரந்தரமாகக் குடியிருக்க யாவே விரும்புகிறார் (2 சாமு 7:10). தாவீதோ தாம் குடியிருக்கும் அரண்மனையை ஒத்த ஒரு வீட்டைக்(7:2) கடவுளுக்கென்று அமைக்க விரும்புகிறார். ஆனால், கடவுள் இத்திட்டத்தைத் தள்ளிவிட்டு, தமக்குக் கூடாரம் போதுமென்கிறார் (7:5தொ). எனி னும், தம்மால் திருநிலைப்படுத்தப் பெற்ற தாவீதை ஆசீர்வதிக்கிறார். கல்லால் அமைந்த ஒரு வீட்டில் குடியிருக்க விரும் பாத கடவுள், தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டவும், அவர்தம் அரியணைமீது அவர் வழித்தோன்றல்களை என்றும் நிலைநாட்ட வும் விரும்புகிறார் (7:11-16). கடவுளுக் கென்று ஒரு வீடு கட்டும் பெருமை தாவீதின் மகனுக்குரியது. அந்த மகன் கடவுளைத் தந்தையாகக் கொண்டிருப்பார் (7:13தொ).

ஆ) கல்லால் அமைந்த இல்லத்திலிருந்து விண்ணகக் கோயிலுக்கு: கடவுள் வாழ் கின்ற வானாதி வானங்களும் அவரை உள்ளடக்க இயலாது என (1 அர 8:27) அறிக்கையிடும் சாலமோன், யாவேயின் திருப்பெயருக்கென்று ஒரு வீடு கட்டுவார். அங்கு மக்கள் அத்திருப்பெயரைக் கூவி யழைப்பார்கள். இறைவனுடைய பிரசன் னத்தின் அடையாளமான பேழையும் அவ் வீட்டில் இடம் பெறும் (8:19தொ. 29). ஆனால், கடவுள் எந்த ஓர் இடத்திலும் வீட்டிலும் கட்டுண்டு இருப்பவர் அல்லர். இக்கருத்தை இறைவன் தமது திருப் பெயரைத் தாங்கிய வீட்டிலேயே எரேமியா வழியாக அறிவிக்கிறார் (எரே 7:2-14); இன்னும் இரு காட்சிகளில் எசேக்கியே லுக்கு இதை எண்பித்துக் காட்டுகிறார். ஒரு காட்சியில் இறைவனின் மகிமை நீட்டுப் பட்ட வீட்டிலிருந்து வெளியேறுகிறது (எசே 10:18; 11:23); மற்றொரு காட்சியில் இஸ்ரயேலர் வீட்டார் நாடுகடத்தப் பெற்ற வர்களாய்ப் புறவினத்தார் நடுவில் வாழ்ந்த போது ஆண்டவரின் மகிமை இறைவாக்கி னருக்குத் தோன்றுகிறது (எசே 1). ஆனால், இறைவனின் திருப்பெயரைப் பங்கப்படுத் திய இஸ்ரயேலர் வீட்டார்க்கு அவர் கூறுகி றார்: நாம் உங்களைத் தூய்மையாக்கு வோம், ஒன்றுகூட்டுவோம், ஒற்றுமைப் படுத்துவோம், உங்கள் நடுவில் மீண்டும் நம் உறைவிடத்தை நிறுவுவோம் (36:22-28; 37:15தொ. 26தொ). இவையெல்லாம் இஸ்ர யேலர் வீட்டார்மீது இறைவன் தம் ஆவியைப் பொழிவதின் விளைவாகும் (39:29). பொருள் செறிந்த இவ்விறைவாக்கு இறைவனின் உண்மையான வீடு என்றால் என்ன என்பதை ஒருவாறு கண்டுகொள்ளச் செய்கின்றது. அந்த உண்மையான வீடு இறைவாக்கினரால் நுணுக்கமாக வருணிக் கப்பெறும் சடப்பொருள் சார்ந்த, அடை யாளமான கோயிலன்று (40-43); மாறாக, இஸ்ரயேலர் வீட்டாரே தம் இறைவனின் ஆன்மீக உறைவிடமாவர்.

இ) தாழ்நிலையோரின் கடவுள் உறையு மிடம்: தாயகம் திரும்பிவந்த இஸ்ரயேல ருக்கு இறைவன் இரு போதனைகளைப் புகட்டி, அவர்களைத் 'தங்கள் நாடு, தங்கள் இனம்' என்ற குறுகிய மனப்பான்மையி னின்றும், உள்ளன்பற்ற போலிச் சடங்கு முறையினின்றும் விடுவிப்பார். ஒருபுறம் இறைவன் தமதுவீட்டை மக்கள் இனங்க ளுக்கெல்லாம் திறந்து விடுகிறார் (எசா 56:5தொ; காண்க. மாற் 11:17); மறுபுறம் தம் வீடு அனைத்தையும் கடந்ததும் நிலைத்

திருப்பதுமான வீடு என்றும், அவ்வீட்டில் தாழ்மையான மனத்தவரும் நொறுங்கிய உள்ளத்தினருமே நுழைவர் என்றும் அறிவிக்கிறார் (எசா 57:15; 66:1தொ; காண்க. சங் 15). ஆனால், இந்த விண்ணக உறைவிடத்திற்குள் மனிதனை அழைத்துச் செல்ல வல்லவர் யார்? இறைவனின் ஞானமே மனுமக்கள் நடுவில் தோன்றித் தன் வீட்டைக் கட்டி, அதனுள் நுழைய அனைவர்க்கும் அழைப்பு விடுக்கும் (பழ 8:31; 9:1-6).

4. தந்தைக்கும் அவர் மக்களுக்கும் உரிய ஆன்மீக வீடு:

அ) உண்மையில் இயேசு கிறிஸ்துவே கடவுளின் ஞானமாவார் (1 கொரி 1:24). அவரே இறைவனின் வார்த்தை. அவ்வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்டார் (யோவா 1:14). தாவீதின் வீட்டைச் சேர்ந்த அவர், யாக்கோபின் வீட்டின்மீது ஆட்சி செய்ய வருகின்றார் (லூக் 1:27.33). அவர் பிறக்கின்ற தாவீதின் நகராகிய பெத்லகேமில் அவரை வரவேற்க வீடில்லை (2:4.7). நாசரேத்தில் தம் பெற்றோரின் வீட்டில் வாழ்கின்றார். எனினும், பன்னிரண்டு வயதினரான இயேசு தாம் தந்தையின் இல்லத்தில் இருக்க வேண்டுமென்று எடுத்துரைக்கிறார் (2:49). எருசலேமில் உள்ள ஆலயம் தந்தையின் வீடென்கிறார் (யோவா 2:16). இயேசு தமக்குரிய இவ்வீட்டில் மகனுக்குரிய அதிகாரத்தோடு தலையிடுகிறார் (மாற் 11:17இணை). எனினும் இவ்வீடு அழிவுக்குள்ளாகப் போகிறதென்றும் அறிவார் (13:1இணை). இன்னொரு வீட்டை அதாவது, தமது திருச்சபையைக் கட்டி எழுப்ப வந்துள்ளார் (மத் 16:18; காண்க. 1 திமொ 3:15).

ஆ) இந்தப் பணியை ஆற்றுகின்றபோது, இயேசு தமக்கென ஒரு வீடோ (லூக் 9:58) ஒரு குடும்பமோ வைத்திருக்கவில்லை (8:21). பாவிகளும் ஆயக்காரர்களும் தம் வீட்டுக்கு அவரை அழைப்பர். அவரும் தாமாகவே அவர்கள் வீடு தேடிப் போவார் (5:29-32; 19:5-10). தம்மை அழைத்தவர்கள் இல்லங்களில் இயேசு சிலவேளைகளில் முகம் மலர்ந்த வரவேற்பும், சில வேளைகளில் முகம் திரிந்த வரவேற்பும் கண்டார் (7:36-50; 10:38தொ). மனந்திரும்புதலுக்கு அழைப்பு, மன்னிப்புப் பெறுவதற்கு அருள், மீட்படைவதற்கு இன்றியமையாத நற்செய்தி ஆகியவற்றை இவ்வில்லங்களுக்கும் இயேசு எப்பொழுதும் எடுத்துச் செல்கிறார். அவருடைய அழைப்பை ஏற்கும் சீடர்கள் தங்கள் வீட்டை விட்டு மற்ற அனைத்தையும் துறந்து அவரைப் பின்செல்வர் (மாற் 10:29தொ). இயேசு அவர்களைத் தம் அதிகாரத்தோடு மக்களிடம் அனுப்புகிறார். அவர்களும் தம்மை வரவேற்கின்ற வீடுகளுக்குச் சமாதானத்தைக் கொண்டு செல்வர் (லூக் 10:5தொ). அதே பொழுது இயேசுவைப் பின்பற்றும்படி அழைப்பு விடுப்பர். ஏனெனில், கிறிஸ்துவே தந்தையின் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியாவார். அவ்வீட்டிற்குத்தான் நம்மை அழைத்துச் செல்ல உறுதி கூறுகிறார் இயேசு (யோவா 14:2-6).

இறைவனே இவ்வீட்டை அமைப்பவர். மகன் என்ற அளவில் கிறிஸ்துவே இவ்வீட்டிற்குத் தலையாவார் (எபி 3:3-6). நம் தலைமைக் குரு கிறிஸ்து தம் பலியின் பயனாக முன்னோடியாக நமக்கு முன் கடந்து சென்று (6:10தொ; 10:19தொ) இவ்வீட்டை நமக்குத் திறந்து வைத்துள்ளார். தந்தைக்குரிய இவ்வீடு விண்ணகத் தூயகமாகும். இந்த வீடு கற்பனையன்று, ஓர் ஆன்மீக உண்மையாகும். இவ்வீடு நமக்குப் புறம்பானதன்று. ஏனெனில், நம்பிக்கையில் ஊன்றி நிற்கும்வரை "நாம்தாம் அந்த வீடு" (3:6).

இ) உண்மையில், இறைவன் எழுப்பும் இவ்வுறைவிடத்தை நம்மில் ஒவ்வொருவரும் மண்ணக உறைவிடத்தை விடுத்து, விண்ணகத்திலிருந்து வரும் நிலையான உறைவிடத்தை, அதாவது மாட்சிமைக்கும் சாகாமைக்கும் உரிய உடலை அணிந்து கொள்ளுமட்டும், நாம் அடையமாட்டோம் (2 கொரி 5:1தொ; காண்க. 1 கொரி 15:53). ஆனால், இப்பொழுதே இறைவன் இந்த வீட்டைக் கட்டுவதில் தம்மோடு ஒத்து

கூழைக்க நம்மை அழைக்கிறார். இயேசு கிறிஸ்துவே அவ்வீட்டின் அடித்தளம் (1 கொரி 3:9தொ), உயிருள்ள மூலைக்கல். விசுவாசிகளான உயிருள்ள கற்களால் அவ் வீடு அமைக்கப்படுகிறது (1 பேதுரு 2:4). தந்தையை அணுகும் பேற்றினைக் கிறிஸ்து நமக்களிக்கிறார்:- எவ்வாறெனின் வீட்டிற்கு விருந்தினர்களாக மட்டுமல்ல, அவ்வீட் டிற்கு உரியவர்களாகவும் கிறிஸ்து நம்மை ஆக்கி (எபே 2:18தொ), அக்கட்டடத்தின் அமைப்பிலும் வளர்ச்சியிலும் நம்மை ஒன்றுபடுத்துகிறார். ஏனெனில், தேவ ஆவி யால் ஆண்டவருக்குள் தம் சகோதரர்க ளோடு ஒன்றித்திருக்கும் ஒவ்வொருவரும் இறைவனின் உறைவிடமாவார் (2:21தொ). இதனால்தான் திருவெளிப்பாட்டு நூலில் காண்பது போல விண்ணக எருசலேமுள் ஆலயம் இல்லை (திருவெளி 21:22). அது முழுமையும் இறைவனின் உறைவிடமா கும். அவருடைய மக்களாகி (21:3.7), கிறிஸ்துவோடு தந்தையின் அன்பில் நிலைத்திருப்பவரும் (யோவா 15:10) அவ ரோடு இணைந்திருப்பர்.

வீடுபேறு, மீட்பு, உய்வு (SALVATION)

I. வீடுபேறு, முக்தி, உய்வு எனப் பல சொற்களால் குறிப்பிடப்படும் இஃது ஒரு அடிப்படையான அனுபவத்தை மையமா கக் கொண்டது. அதாவது, ஓர் ஆபத்தான சூழ்நிலையில் தன்னையே இழந்து விடு வோமோ என்ற தருணத்திலிருந்து காக்கப் படுதல். ஆபத்தின் தன்மைக்கேற்பக் காத்தல், பாதுகாப்பாக, விடுதலையாக, பிணைய மீட்புத் தருவதாக, குணமாக்குவதாக, வெற்றி தருவதாக, வாழ்வு அமைதி தருவ தாக அமைகிறது. மனித அனுபவங் களையே தொடக்கமாக வைத்து, மனித மொழியையே பயன்படுத்தி, கடவுளது செயல்பாட்டின் மிக முக்கியமான பண்பு களை மிக அழகாக வெளிப்பாடு விளக்கு கிறது. கடவுள் மனிதனை மீட்கிறார். கிறிஸ்துவே நமது மீட்பர் (லூக் 2:11). நற்செய்தி விசுவசிக்கும் ஒவ்வொருவருக் கும் மீட்பைக் கொணர்கிறது (உரோ 1:16). இதில் விவிலிய மொழியில் ஒரு முக்கிய சொல்லைக் கொண்டுள்ளோம். இது மெது வாக வளர்ச்சியடைந்து, அதன் இறுதிப் பொருளைப் பெறுகிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

II. *பழைய ஏற்பாடு:*

1. வரலாற்றிலும் இறுதிக்கால இயலிலும் இறைவனது மீட்பு: தமது பிரமாணிக்க முள்ள மக்களைக் கடவுள் காக்கிறார் என்பது எல்லா மறைகளுக்கும் பொதுவானது தான். ஆனால், பழைய ஏற்பாட்டில் இது மிகச் சிறப்பான, மையமான, மீண்டும் மீண்டும் வரும், வணக்கத்துக்குரிய ஒரு கருத்தாகும். அதனால்தான், பல பெயர்கள் 'காத்தல்' என்ற பொருளுடைய அடிச்சொல் லிலிருந்து வருகின்றன: யோசுவா, எசாயா, எலிசா, ஓசேயா, என்பன. யாசா (Yasa) என்ற அடிச்சொல் இவை அனைத்திலும் வருகின்றது. கடவுளின் மக்கள் வரலாற்றில் பெற்ற அனுபவம் இதற்குச் சிறப்பான வண்ணம் அளிக்கிறது. இஃது இறைவாக்கு இறுதிக்கால இயலில் இச்சொல் பயன் படும் விதத்தை விளக்குகிறது.

அ) வரலாற்று அனுபவம்: இஸ்ராயேல் மிக இக்கட்டான சூழலில் மாட்டிக் கொண்டு தவித்தபோது அதனைக் கடவுள் அந்தச் சூழலிலிருந்து மீட்கிறார். இஃது ஒரு தெய்வீகமயமான பாதுகாப்புச் செயலா னாலும் சூழ்நிலையால் விளைந்த ஒன்றாக இருக்கலாம்; அதே நேரத்தில் ஓர் அற்புதம் என்று கூறக்கூடிய வகையில் மகத்தானதாக வும் இருக்கலாம்; அல்லது மனிதத்தலைவர் ஒருவரை அனுப்பி வெற்றியைக் கொணர்ந் ததாக இருக்கலாம். இவற்றில் எல்லாம் அவர்கள் கடவுளின் பாதுகாப்பை உணர்ந்து அனுபவித்தனர். இத்தகைய வெற்றி அனுப வங்களில் கடவுள் பாதுகாக்கிறார் என்பதை வரலாற்றில் பல இடங்களில் ஆழமாக அனுபவித்துள்ளனர். இத்தகைய நிலைக்குச் சனகெரிபு எருசலேமை முற்றுகையிட்டது மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். யாவே இஸ்ராயேலை மீட்க முடியுமா என்று அசீரிய அரசன் சவால் விடுகிறான் (2 அர 18:30-35). எசாயா மீட்பை உறுதியளிக்கிறார் (19:34; 20:6). இறைவனும் தம் மக்களை

மீட்கிறார். புனித வரலாற்று ஆசிரியர்கள் கடந்தகாலத்திய இத்தகைய பல அனுபவங் களை எடுத்துக்கூறுகின்றனர். கடவுள் தாவீதைப் பாதுகாக்கிறார்; அவர் போகுமிட மெல்லாம் வெற்றி ஈட்டித்தருகிறார் (2 சாமு 8:6.14; 23:10.12). அவரை இடைநிலையாள ராகப் பயன்படுத்தி அவர் தனது மக்களை எதிரிகளிடமிருந்து காக்கிறார் (2 சாமு 3:18). இதே முறையில்தான் இதற்குமுன் சவுல் (1 சாமு 3:18), சாமுவேல் (7:8), சிம்சோன் (நீதி 13:5), அனைத்து நீதிபதிகள் வழியாக வும் (நீதி 2:16; 18) கடவுள் தன் மக்களைக் காத்துள்ளார். முக்கிய விடுதலைப் பயணத் தின்போது மிகச்சிறப்பாக அவர்களைக் காத்துள்ளார் (யாத் 14:13; காண்க. எசா 63:8தொ; சங் 106:8.10.21). மிக முக்கியமான இந்த மைய அனுபவத்திற்கு முன்னமே யாக்கோபின் புதல்வர்களை யோசேப்பின் வழியாகவும் (ஆதி 45:5), லோத்தின் உயிரையும் (ஞான 10:4), நோவாவை வெள்ளத்தினின்றும் (காண்க. ஆதி 7:23) கடவுள் காப்பதைப் பார்க்கிறோம். அத னால்தான் இக்கட்டான சூழல் எழுந்தபோ தெல்லாம் காப்பாற்றப்படுவதற்காக (எரே 4:14) உடனே இஸ்ராயேல் தன் கடவுளை நோக்கித் திரும்புவதையும், எதிர்பார்த்த மீட்பு கிடைக்காதபோது முறையிடுவதை யும் (8:20) காண்கிறோம்; அவரைத் தவிர தங்களைக் காக்க வேறு யாருமில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தது (எசா 43:11; காண்க. 47:15; ஓசே 13:4). கடந்தகால மீட்பு நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து, மீட்பர் என்ற பெயரில் அவரை அழைக்க விரும்புகிறது (காண்க. எசா 63:8; 1 மக் 4:30). இந்த வரலாற்றிலும் இறைபரி பாலிப்புச் சட்டத்தைப் பல தடவை காண லாம். அதன் விளைவுகள் இறுதிக்காட்சி யின் சூழ்நிலையில் தெளிவாகின்றன. மனி தப்பாவத்தால் விளைந்த ஆபத்துக்களிலி ருந்து, பெருவெள்ளக் காலத்தில் நோவா வைப் போன்று ''எஞ்சியோரே'' மீட்கப் பெறுவர். மீட்பு இறைத்தீர்ப்பு இல்லாமல் நிகழ்வதில்லை. அதில் நீதிமான்கள் பாவி களிடமிருந்து பிரிக்கப்படுவர்.

*ஆ. **இறுதிக்கால இயல் வாக்குறுதிகள்:** நாட்டின் மிகப்பெரிய இக்கட்டுகளில்தான் இஸ்ராயேலர் மிகுந்த நம்பிக்கையோடு கடவுளை நோக்குகின்றனர் (மீக் 7:7). இறுதிக்கால இயல் இறைவாக்குகளின் மையக்கருத்தாக மீட்பர் என்ற தலைப்பு வருகிறது (செப் 3:17; எசா 33:32; 43:3; 45:15.21; 60:16; பாரூ 4:22). இறுதி நாட்களைப் பற்றிய இறைவாக்குகளில் இஸ்ராயேலின் இறுதியான மீட்புப் பற்றிய பல கூறுகளும் பேசப்படுகின்றன. யாவே தன் மக்களை அவர்களது நாட்டுக்கு மீண் டும் அழைத்து வருவதாலும் (எரே 31:7), மெசியா அவர்களிடம் அரசரை அனுப்புவ தாலும் (23:6) அவர்களை மீட்பார் என்று எரேமியா கூறுகிறார். எசேக்கியேலின் கூற் றுப்படி யாவே தனது ஆடுகளை மீண்டும் நல்ல புல்வெளிக்குக் கொண்டு வருவதால் அவற்றைக் காப்பார் (எசே 34:22). அவர் தனது மக்களை அனைத்து அசுத்தங்களிலி ருந்தும் தூய்மையாக்கிக் காப்பார். அதற்குத் துணையாக, தனது ஆவியைத் தருவார் (எசே 36:29). ஆறுதல் செய்தியும் வெளிப் பாட்டு இலக்கியமும் தன் மக்களை மட்டு மல்ல (எசா 35:4) இந்த உலகம் முழுவதை யுமே (45:22) காக்க இறைவன் வருவார் என்ற செய்தியை மீண்டும் மீண்டும் கூறு கின்றன. மீட்பு தருவதே அவரது நீதியின் வெற்றியாகும் (காண்க. 63:1). அதற்குத் தனது ஊழியனை அனுப்புவார் (49:6.8). இறைவனது இறுதிக் காலச்செயல் பாட்டைக் குறிப்பதாக **நீதி, மீட்பு** என்ற இரு சொற்களும் இணைந்தே வருகின்றன (46:13; 52:7-10; 56:1; 59:17; 61:10; 62:1). இஸ்ராயேலின் வரலாற்றில் மீட்புப் பெறும் அனுபவம் எஞ்சியோருக்குரியதாகிறது (ஆமோ 3:12; 5:15; 9:8; எசா 10:20தொ; 28:5). அது வருமுன் இறைவனது தீர்ப்பு மண்ணகத்தில் நிகழ வேண்டும்.*

நாடு கடத்தலுக்குப் பிறகு யாவேயின் நாளைப்பற்றி வரும் விளக்கம் மீட்பின் மகிழ்ச்சியைப் பாடுகிறது (எசா 12:2; 25:9). அவரது நூலில் எழுதப்பட்ட அனைவருக் கும் (தானி 12:1), அவரை நம்பிக்கையோடு

அழைப்பவர்கட்கும் (யோவே 3:5) மீட்பு காத்திருக்கிறது. இறுதியாக ஞானநூல் இறுதி நாளில் நீதிமான்களின் மீட்புப்பற்றி விவரிக்கிறது (ஞான 5:2). இறையரசோடு தொடர்புபடுத்தப்பட்டு, மீட்பு, அமைதி மற்றும் மகிழ்ச்சியோடும் (எசா 52:7), தூய்மைப்படுத்தலோடும் (எசே 36:20), விடுதலையோடும் (எரே 31:7) ஒரு பொருள் பல சொல்லாகிறது. அதன் மனிதக் கைவினைஞரான இறுதிக்கால அரசர் மீட்பர் என்றழைக்கப்படுகிறார் (செப் 9:9; சங் 72:4·3). இத்தகைய இறைவாக்குகள் அனைத்தும் புதிய ஏற்பாட்டுக்கு ஒரு சரியான தயாரிப்பாக அமைந்தது.

*2. **இஸ்ராயேலின் செபத்தில் கடவுளின் விடுபேறு:*** இத்தகைய மாபெரும் வரலாற்று அனுபவம் மற்றும் இறைவாக்குப் பின்னணியில் இஸ்ராயேலின் செபம் விடுபேற்றுக்கு மிக முக்கியத்துவம் கொடுப்பதைக் காண்கிறோம்.

அ) விசுவாசத்தின் உறுதிப்பாடுகள்: வீடுபேறு கடவுள் தரும் ஒரு கொடை. இந்த அடிப்படை உறுதிப்பாட்டுக்கு ஆதரவாக நாட்டை வெற்றி கொண்ட அனுபவத்தை நாம் எண்ணிப்பார்க்கலாம் (சங் 44:4.7தொ). மனிதச் சக்தியின் மீது எல்லா நம்பிக்கையும் வைத்துவிட்டு வீடுபேறு கிடைத்துவிடும் என நினைப்பது தவறு (33:16-19). நீதிமான்களுக்கு வீடுபேறு இறைவனிடமிருந்தே வரும் (37:39தொ). யாவேயே அவர்களது வீடுபேறு ஆகிறார் (சங் 27:1; 35:3; 62:7). இந்தக் கோட்பாடு பல அனுபவங்களால் உறுதிப்படுத்தப்படுகிறது. ஆபத்திலிருந்த எத்தனையோ பேர், யாவேயைக் கூவி அழைத்தபோது அவர்கள் காப்பாற்றப்பட்டனர் (சங் 107:13.19.28; காண்க. 22:6). பல நன்றிச் செபக்கீதங்கள் இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன (சங் 118:14): ஆபத்திலிருந்து காக்கப்பட்டவர்கள் செபம் (18:20); சோதனைகளிலிருந்தும் (சீரா 51:11), சாவின் பிடியிலிருந்தும் பாதுகாக்கப் பெற்றவர்கள் செபம் (சங் 116:6). பிற்கால நூல்கள் இத்தகைய கதைகளை எடுத்துக் கூறுகின்றன. நெருப்பிலிருந்து மூன்று இளைஞர்களும் (தானி 3:28-95), சிங்கக் குகையிலிருந்து தானியேலும் (6:28) காப்பாற்றப்படுகின்றனர். இறைவன் தம்மை நம்புபவர்களைக் காப்பாற்றுகிறார் (18:60). தமது மக்களுக்கும் (சங் 69:36), தமது அபிடேகம் பெற்றவர்க்கும் (20:7) வாக்குறுதி அளித்ததுபோல் தமது ஊழியர்களுக்கு இப்பாதுகாப்பை வாக்குறுதி அளிக்கிறார் (91:14தொ). சங்கீதங்கள் பல கடவுளின் பிள்ளைகள் அவரை அழைத்தபோதெல்லாம் உடனே அவர்க்கு அவர் செவிமடுத்து உதவ வருவது யார் யாருக்கு என்று ஓர் அட்டவணை தருகிறது: நீதிமான் (சங் 34:16.19), ஏழைகள் (34:7; 109:31), சாந்தமுள்ளோர் (18:28; 76:10; 149:4), சிறியோர் (116:6), நேர்மையுடையோர் (7:11), நம்பிக்கையிழந்தோர் (34:19), துன்புறுத்தப்படுவோர் (55:17), பொதுவாகக் கூறவேண்டுமென்றால் அவருக்கு அஞ்சி நடப்போர் (சங் 145:9) என்போராவர். இங்கு இவை நம்பிக்கையைத் தூண்டுவதாகவும் ஒருவரைச் செபிக்கத் தூண்டுவதாகவும் அமைவதைப் பார்க்கிறோம்.

ஆ) காக்கும் கடவுளை நோக்கி வேண்டுதல்: அவரை நோக்கி வேண்டுபவர்கள் மேய்ப்பர் (சீரா 51:1) எனவும், நம்பிக்கையிழந்தோரின் கடவுள் (யூதி 9:11) அல்லது வீடுபேற்றின் கடவுள் (சங் 51:16; 79:9) எனவும் அவரை அழைத்துச் செபித்தனர். இச்செபங்களின் சுருக்கம் என்னவென்றால் "எம்மைக் காத்தருளும் யாவே இறைவனே" (118:25), "நீர் என்னைக் காத்தருளும். நான் காக்கப்படுவேன்" (எரே 17:14) என்பதுதான். பொதுவாக, இத்தகைய கூக்குரல்கள் ஒருவன் வாழ்வில் துயரப்படும் சாதாரண சூழ்நிலைகளிலிருந்துதான் எழுகின்றன. எடுத்துக்காட்டாக, சோதனைகள் மற்றும் துன்பங்கள் (சங் 86:2), உடனடியான சரிவுக்குரிய ஆபத்து (69:2.15) போன்றவைகளின் போதும் ஒருவன் எதிரியால் துன்புறுத்தப்படும்போதும் (22:22; 31:12.16; 43:1; 59:2), மிகவும் ஆபத்தான சூழலிலிருக்கும் போதும் வேண்டுகிறான். இத்தகைய வேண்டுதல்களுக்கு யாவே இறைவாக்குகளின்

வாயிலாகப் பதில் கொடுப்பதைப் பார்க்கிறோம் (சங் 12:26). இறைவன் தரும் ஆறுதலின் விளைவு எவ்வளவு தீவிரமாக இருந்ததென்றால், அது வீடுபேறு பாதுகாப்புக் கிடைக்குமுன்னே அது கிடைத்தது போல நம்பிக்கையோடு பாடும் சங்கீதங்களைக் கூடக் காண்கிறோம் (96:2; 98:1தொ). சில சங்கீதங்கள் மீட்பில் கிடைக்கும் மகிழ்ச்சியை முன்னரே பாடுகின்றன (சங் 51:14). மேலே குறிப்பிட்ட விவிலியப்பகுதிகளில் எல்லாம் எவ்வாறு இஸ்ராயேலின் ஆன்மா கிறிஸ்துவின் வழியாகப் பெறப் போகும் வீடுபேற்றுக்குத் தயாராக அதனைப் பெற்றுக்கொள்ளக் காத்திருந்தது என்பது தெரிகிறது.

III **புதிய ஏற்பாடு:**

1. வீடுபேற்றின் வெளிப்பாடு:

அ) இயேசு, மனிதரின் மீட்பர்: 1) இயேசு தன்னை மீட்பர் என மிகவும் பொருள் பொதிந்த செயல்களினால் முதன்மையாக வெளிப்படுத்துகிறார்; நோயாளிகளைக் குணமாக்குவதன் வழியாகக் காக்கிறார் (மத் 8:21 இணை; மாற் 3:4; 5:23; 6:56); நீரில் நடக்கும் பேதுருவையும் புயலில் அகப்பட்ட சீடர்களையும் காக்கிறார் (மத் 8:25; 14:30). ஆனால் அடிப்படையான தேவை என்னவெனில், அவர்மீது அசைக்க முடியா விசுவாசம் கொள்ள வேண்டும். அவர்மீது கொண்ட விசுவாசம்தான் நோயாளிகளைக் குணப்படுத்துகிறது (லூக் 8:48; 17:19; 18:42). அவரது அப்போஸ்தலர்கள் விசுவாசமின்மைக்காகக் கண்டிக்கப்படுகின்றனர் (மத் 8:26; 14:31). இந்த உண்மைகள் மீட்பின் திட்டத்தை ஏற்கெனவே நமக்குப் புரிய வைக்கின்றன. ஆனால் மீட்பு என்பது இது மட்டுமன்று, இதைக் கடந்து செல்கிறது. பாவியான பெண், இயேசு அவளுடைய பாவங்களை மன்னிப்பதால் மீட்புப் பெற்றாள் (லூக் 7:48தொ). மனம் மாறி மன்னிப்புப் பெற்ற சக்கேயுவின் வீட்டில் மீட்பு நுழைந்தது (லூக் 19:9). எனவே, மீட்புப் பெற வேண்டுமென்றால் ஒருவர் [illegible]ின் நற்செய்தியை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் (காண்க. லூக் 8:12). இயேசுவைப் பொருத்தமட்டில் மீட்பே அவரது வாழ்வின் குறிக்கோள். "இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்" (லூக் 19:10). உலகைக் காக்க வேண்டுமென்பதே அவரது நோக்கம் அதைத் தீர்ப்பிட்டு அழிப்பதன்று (யோவா 3:17; 12:47). அவர் பேசுவது மனிதர்களைக் காப்பதற்குத்தான் (5:34). அவரே வழி! அவரே வாயில்! அதன் வழியாக நுழைபவன் எவனும் காக்கப்படுவான் (10:9).

2) மேலே கூறப்பட்டவைகளிலிருந்து நமக்கு ஒன்று தெளிவாகிறது. அதாவது மீட்புதான் அடிப்படைப் பிரச்சனை. பாவம் அவர்களை அழிவின் ஆபத்தில் நிலைக்க வைக்கிறது. சாத்தானோ அவர்கள் மீட்புப் பெறாதபடி முயற்சிக்கிறது (லூக் 8:12). அவர்கள் காணாமற்போன ஆடுகள் (15:4.7). அவர்களுக்காகவே இயேசு அனுப்பப்பட்டார் (மத் 15:24). அவரது மந்தையைச் சேர்ந்தால் அவர்கள் ஒருபோதும் காணாமற் போகமாட்டார்கள் (யோவா 10:28; காண்க. 6:39; 17:12; 18:9). அதே நேரத்தில் ஒருவருக்கு அளிக்கப்படும் வாய்ப்பைத் தவற விடாமல், நேரம் இருக்கும்போதே தபசுகள் செய்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் (லூக் 13:3.5). இல்லையாயின் அழிவு உடனடியானதும் சீர்செய்ய முடியாததுமாக இருக்கும். ஒருவர் மீட்புப்பெற விரும்பினால் குறுகிய வாயில் வழியாக நுழையவேண்டும் (லூக் 13:23தொ). இறுதிவரை மனம் தளராது செல்ல வேண்டும் (மத் 24:13). பொருள்களின் மீது பற்றில்லாமை மிகவும் முக்கியமாகும். இது மிகக்கடினம் என்பதை உணர்ந்த சீடர்கள், "பிறகு யாருக்கு இது சாத்தியம்"? என்று கேட்கின்றனர். கடவுளால்தான் இது முடியும் (மத் 19:25இணை). இறுதியாக இயேசு அளிக்கும் ஒரு முரண்பாடாகத் தோன்றுகிறது. அதாவது, தன்னைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் தன்னை இழந்து விடுவான்; தன்னை இழப்பவன் தன்னையே காத்துக் கொள்வான் (மத் 10:39; லூக் 9:24; யோவா 12:25).

இந்தச் சட்டத்தைத் தனது வாழ்விலேயே இயேசு உண்மையாக்கிக் காட்டுகிறார். அதாவது, பிறரை மீட்கும் அவர் சிலுவையில் தொங்கும்போது காத்துக்கொள்ளவில்லை (மாற் 15:30). தந்தை அவரைச் சாவினின்று காத்திருக்கலாம் (எபி 5:7). ஆனால், அந்த நேரத்திற்காகத்தானே அவர் அனுப்பப்பட்டார் (யோவா 12:27). விசுவாசம் கொண்டு அவர் வழியாக மீட்புத் தேடும் எவரும் அவரையே இந்த நிலை வரை பின்பற்ற வேண்டும்.

ஆ) மீட்பின் நற்செய்தி:

1. உயிர்ப்பு மற்றும் பெந்தக்கோஸ்தேக்குப்பின் அப்போஸ்தல சமூகம் தங்கள் நற்செய்தியின் மையக்கருத்தாக விவிலியத்தில் கூறியபடி மீட்பு இயேசுவில் நிறைவேறிற்று என்பதையே கொண்டிருந்தனர். உயிர்ப்பினால் இயேசு ''தலைவராகவும் மீட்பராகவும்'' உயர்த்தப்பட்டார் (அ.ப. 5:31; காண்க. 13:23). அப்போஸ்தலர்களால் நிகழ்ந்த அருஞ்செயல்கள் இந்தச் செய்தியை உறுதிப்படுத்துகின்றன. இயேசுவின் பெயரால் நோயாளிகள் குணப்படுத்தப்பட்டார்கள் என்றால் வேறு எந்தப் பெயராலும் அவர்கள் காக்கப்பட முடியாது (அ.ப. 4:9.12; காண்க. 14:3). நற்செய்தியே மீட்பின் செய்தி என்றே விளக்கப்படுகிறது (அ.ப. 12:26; காண்க. 11:14). இச்செய்தி முதலில் யூதர்கட்கும் (13:26), பிறகு மற்ற நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டது (13:47; 22:28). மனிதர்கள் நற்செய்தியைக் கேட்டு விசுவசிப்பதின் வழியாக இந்த விபசாரத் தலைமுறையிடமிருந்து தங்களையே காத்துக் கொள்வார்களாக (2:40). மீட்புப் பெறுவதற்குரிய ஒரே நிபந்தனை இயேசுவின் மேல் விசுவாசம் கொள்வதும் (அ.ப. 16:3தொ; காண்க. மாற்கு 16:16), அவரது பெயரைச் சொல்லி மன்றாடுவதும் (அ.ப. 2:21; காண்க. யோவே 3:5) ஆகும். இதைப் பொருத்தமட்டும் யூதர்களும், புறவினத்தாரும் ஒரே நிலையில்தான் இருக்கிறார்கள். இருவருமே தங்களைத் தாங்களே மீட்டுக் கொள்வதில்லை; மாறாக, இயேசு ஆண்டவரின் அருள்தான் அவர்களை மீட்கிறது (அ.ப. 15:11). அப்போஸ்தலர்கள் மக்களுக்கு மீட்பின் ஒரே வழியைக் காட்டுகிறார்கள் (16:17). புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள் தங்களை எஞ்சியவர்களாக, மீட்பைப் பெற வேண்டியவர்களாகக் கருதுகிறார்கள் (2:47).

2. தொடக்க போதகத்தில் மீட்புச் செய்தியின் உயர்ந்த முக்கியத்துவத்தால்தான் நற்செய்தியாளர்கள் மத்தேயுவும், லூக்காவும் இயேசுவைப் பிறப்பிலிருந்தே மீட்பராகக் காட்டுவதில் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இயேசுவின் மீட்புப் பணியை மத்தேயு அவருடைய பெயருடனே இணைத்துக் காட்டுகிறார். இயேசு என்றால் ''யாவே மீட்கிறார்'' என்பது பொருள் (மத் 1:21). லூக்கா அவருக்கு 'மீட்பர்' என்பதைப் பட்டமாகத் தருகிறார் (லூக் 2:11). இறைவாக்கினர் முன்னறிவித்த மீட்பின் விடிவு காலத்தைச் செக்கரியாவும் (லூக் 1:69.71.77), அகிலமே அவரால் மீட்கப்படுவதைக் காட்சியாகக் காண்பதைச் சிமியோனும் கூறுகின்றனர் (லூக் 2:30). இறுதியாக, மறைநூலைப் பின்பற்றி, திருமுழுக்கு யோவான் ''மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக்'' காணும் பொருட்டு ஆண்டவருக்கு வழியை ஆயத்தம் செய்கிறார் (லூக் 3:2-6; காண்க. எசா 40:3தொ; 52:10). நற்செய்தியிலேயே மீட்பு சிலுவையில் உச்சக்கட்டத்தை எட்டிப்பிடிப்பதைப் பேசுகிறது.

3. விடுபேறு பற்றிய கிறிஸ்தவ இறையியல்: இயேசுவின் மீட்புச் செய்தியை அப்போஸ்தலப் போதனை பலவகைகளில் விளக்கினாலும் மீட்புப் பற்றிய கிறிஸ்தவக் கோட்பாட்டை இங்கு 'வீடுபேற்றை' மையமாக வைத்து ஒன்றிணைக்கிறது.

அ) கிறிஸ்துவினுடைய வாழ்வின் பொருள்: கடவுள் அனைவரும் மீட்புப் பெறவேண்டுமென்று விரும்புகிறார் (1 திமொ 2:4; காண்க. 4:10). இதனை நிறைவேற்ற தனது மகனையே உலகின் மீட்பராக அனுப்புகிறார் (1 யோவா 4:14). நமது கடவுளும் மீட்பருமாகியவர் (தீத்

2:13) பாவிகளை மீட்க (1 திமொ 1:15) இம்மண்ணில் வந்தபோது நமது கடவுளின் அருளும், அன்பும் வெளிப்படுத்தப்பட்டன (தீத் 2:11; 3:4). ஏனெனில், கிறிஸ்து தனது இறப்பு உயிர்ப்பினால் முடிவில்லா மீட்பின் காரணரானார் (எபி 5:9); திருச்சபை என்னும் உடலின் மீட்பரும் ஆனார் (எபே 5:23). இவ்வாறு, மீட்பர் என்ற அடைமொழி தந்தை இறைவனுக்கும் (1 திமொ 1:1; 2:3; 4:10; தீத் 1:3; 2:10), இயேசுவுக்கும் (தீத் 1:4; 2:13; 3:6; 2 பேதுரு 1:11; 2:20; 3:2.18) சமமாகப் பொருந்துவதைப் பார்க்கிறோம். எனவேதான் இந்த உண்மைகளை எடுத்துக் கூறும் நற்செய்தி ஒவ்வொரு விசுவாசியும் மீட்புப்பெற கடவுளின் சக்தியாக உள்ளது எனக்குறிப்பிடுகிறது (உரோ 1:16). இதனைப் போதிக்கும் அப்போஸ்தலரும் மனித மீட்பைத் தவிர வேறு எதையும் மனதில் கொண்டிருக்க முடியாது எனத் (1 கொரி 9:22; 10:33; 1 திமொ 1:15) தெளிவாக்கப்படுகிறது. இஸ்ராயேல் அனைவரும் இறுதியாக மீட்கப்படுவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது (உரோ 11:26) எஞ்சியோராவது - அவர்கள் புறமதத்தினரோ (11:11) யூதர்களோ - மீட்கப்பட்டு விட்டனர்.

ஆ) கிறிஸ்தவ வாழ்வின் பொருள்: அப்போஸ்தலர்களால் நற்செய்தி போதிக்கப்பட்ட பின் அதைக் கேட்பவர்கட்கு இரண்டே இரண்டு வாய்ப்புகள்தான் தரப்படுகின்றன. மீட்பு அல்லது அழிவு (2 தெச 2:10; 2 கொரி2:15); வாழ்வு அல்லது இறப்பு. விசுவசித்து அவரில் தங்கள் விசுவாசத்தை அறிவிப்பவர்கள் மீட்புப் பெறுகின்றவர் (உரோ 10:9தொ. 13). கடவுள் அவர்களது செயல்களை முன்னிட்டல்ல, மாறாக அவர்களைத் தனது அருளால் மட்டுமே காக்கிறார் (2 திமொ 1:9; தீத் 3:5). அருளாலும் (எபே 2:5-8), பரிசுத்த ஆவியைக் கொடுப்பதாலும் (2 தெச 2:13; எபே 1:13; தீத்து 3:5தொ) அவர்களை மீட்கிறார். அந்த நேரத்திலிருந்து தன்னிடம் கொடுக்கப்பட்ட இறை வார்த்தையை மிகக் கவனமுடன் ஒருவன் காக்க வேண்டும் (யாக் 1:21). இறை வார்த்தையோடு கொள்ளும் நெருங்கிய உறவால் ஒருவன் தன் விசுவாசத்தை வளப்படுத்துவானாக (2 திமொ 3:15). அதனைத் தனது நற்செயல்களில் பயனளிக்கச் செய்ய வேண்டும் (யாக் 2:14). ஒருவன் அச்ச நடுக்கத்தோடு செயல்பட்டு மீட்பை நிறைவுபெறச் செய்ய வேண்டும் (பிலி 2:12). இதில் கவனமின்மை இருக்கக்கூடாது. ஏனெனில், மீட்பு வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்திலும், நமக்கு அளிக்கப்படுகின்றது (எபி 2:3). இதுவே மீட்பின் நாள் என்ற மனநிலையோடு வாழ வேண்டும் (2 கொரி 6:2).

இ) இறுதி மீட்பின் எதிர்பார்ப்பு: நாம் மீட்பின் வாரிசுகள் என்றால் (எபி 1:14), அதற்கு நிறைவாக ஏற்புடையவர்கள் என்றால் (உரோ 5:1), நாம் மீட்புப்பெறுவோம் என்ற நம்பிக்கைதான் உள்ளதேயொழிய (உரோ 8:24) முற்றிலும் மீட்புப் பெற்றுவிட்டோம் என்றன்று. நம்மை மீட்புக்கென கடவுள் ஒதுக்கி வைத்தாலும் (1 தெச 5:9), அது முழுமையாக வெளிப்படுவது இறுதி நாளில்தான் (1 பேதுரு 1:5). எனவே மீட்பு என்பது ஆண்டவரின் நாளாகிய இறுதி நாளுக்குரியது என்றுதான் கொள்ள வேண்டும் (1 கொரி 3:1தொ; 5:5). நாம் ஏற்கெனவே அவரது மகனின் இறப்பால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தால் ஏற்புடையவர்களும் ஆக்கப்பட்டு அதனால் அவரது கோபத்தினின்று காக்கப்படுவோம் (உரோ 5:9தொ). கிறிஸ்து நமக்கு மீட்பைத் தர வருவார் (எபி 9:28). நாமும் மீட்பரின் முழுமையான வெளிப்பாட்டிற்காகக் காத்திருக்கிறோம். அவர் நமது உடலை உருமாற்றும் கடமையை நிறைவேற்றுவார் (பிலி 3:20). அந்த அடிப்படையில்தான் நமது மீட்பு ஒரு நம்பிக்கையின் பொருளாக இருக்கிறது (உரோ 8:23தொ). அப்போது சங்கீத ஆசிரியர் தன்னை விடுவித்துக் காக்குமாறு மன்றாடும் நோய்கள், துன்பங்கள், சாவு போன்ற தீமைகளிலிருந்தெல்லாம் முற்றிலும் விடுவிக்கப்படுவோம். ஏனெனில், கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில்

தமது அருஞ்செயல்களால் இத்தீமைகளை யெல்லாம் வென்று வெற்றி கொண்டார். அத்தகைய ஒரு செயல்தான் கடவுளுக்கும் கிறிஸ்துவுக்கும் மாபெரும் வெற்றியாகும். இதைத்தான் திருவெளிப்பாட்டு நூலின் வழிபாட்டுப் புகழ்ப்பாடல் ''எங்கள் கடவுளுக்கும் செம்மறிக்குமே மீட்பு உரியது'' என்று பறை சாற்றுகிறது (திருவெளி 7:10; 12:10; 19:1).

விட்டுத்தலைவன் (HOUSE HOLDER)

இதன் கிரேக்கச்சொல் ஒத்தமை நற்செய்திகளில் மட்டும் 13 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் வேறெங்கிலும் இச்சொல் கையாளப்படவில்லை. மத் 20:1-16-இல் உள்ள உவமையில், ஒரு வீட்டின் தலைவன் அவனுடைய பணியாட்களுக்குச் செய்வது போலவே கடவுளும் மனிதருக்குச் செய்வார் என்ற உண்மை விளக்கப்பட்டுள்ளது.

வீண் (VANITY)

விவிலியச் சொல்வழக்கில் இச்சொல் ஒன்றுமின்மை, பயனின்மை, வெறுமை, அல்லது குழப்பம் ஆகியவற்றை உணர்த்தும். சில சமயம் இச்சொல் சிலை வழிபாட்டோடு தொடர்புபடுத்தப்பட்டும் பயன்படுகிறது.

இதைக் குறிக்கும் எபிரேயச்சொல் காற்றையும் (பழ 21:6), மூச்சையும் (எசா 57:13) உணர்த்தும். இச்சொல் வாழ்வின் நிலையற்ற தன்மையையும், தற்காலிகமான தன்மையையும் உணர்த்தவல்லது (திருவெளி 1:14; 2:11.17; 4:16; 6:9: காற்றைப் பிடிக்க முயல்வது போன்றதாகும்; காண்க. சங் 39:5; 144:4); திருப்தியளிக்க முடியாதது (சங் 62:4; காண்க. யோபு 15:31).

வீண் என்பது இறைவனுடைய அல்லது மற்றவர்களுடைய செயல்களை விட, தன்னையும் தன்னுடைய செயல்களையும் மேலானதாகக் கருதுவதாகும். அதன் விளைவு மதிப்பற்ற காற்றைப்போல் மறைந்து போகும். ஏனெனில், ஒருவனுடைய குறிக்கோள் இறைவனுடைய முடிவில்லாக் குறிக்கோளோடு ஒத்துப்போகவில்லையென்றால், அவனுடைய முயற்சிகள் எல்லாம் ஒன்றுமின்மையாகும். இறைச் சட்டத்திற்கு அல்லது இறைவனுடைய வழிகாட்டல் மற்றும் காக்கும் ஆற்றலுக்கு மதிப்பளிக்காது வாழ்பவனது ஏமாற்றத்தை இச்சொல் உணர்த்துகிறது (சங் 2:1; 4:2; காண்க. 94:11; அப 2:13). இப்பொருளில், இச்சொல் புறவினத்தாரைப் பற்றிக் கூறப்படுகிறது (எசா 30:28; காண்க. எபே 4:17). ஏமாற்றுதல் அல்லது வஞ்சகத்தால் ஒருவன் உண்டாக்கும் போலி அமைப்பு இத்தகையதாகும் (யோபு 31:5; சங் 12:2; 24:4; காண்க. பழ 30:3; எசே 13:6.8-9).

இச்சொல் சிலை வழிபாட்டிற்கும் (எரே 16:19), சிலைகளுக்கும், புறவினக் கடவுள்களுக்கும் (உப 32:21; 1 அர 16:13.26; சங் 31:6; எசா 40:17.23; 57:13; எரே 2:5; 8:19; 10:8; 14:22; 1:18; யோனா 2:8) குறிப்பாகப் பொருந்தும். எரே 51:17-18-இல் வரும் சொல்லாடலில், சிலைகள் மூச்சில்லாதவைகள், உயிர் இல்லாதவைகள் என்று விவரிக்கப்படுகின்றன. அ.ப. 14:15-இல் சிலைகள் பயனற்றவை என்று குறிக்க இச்சொல் பயன்பட்டுள்ளது.

வெறுமையையும் அழிவையும் (அ.ப.2:13), பொதுவாக, இறைவனுக்குப் புறம்பான வாழ்வின் பயனின்மையையும் (சங் 2:1; 4:2) குறிக்க இச்சொல் வருகிறது. பாசாங்கு செய்வதால் (சங் 12:2; 41:6), ஏமாற்றுதலால் (யோபு 31:5; சங் 24:4), பொய் சொல்வதால் (சங் 144:4), மனிதன் அமைக்கும் மாயையான, பொய்யைக் (பழ 30:8; எசே 13:6.8-9.23; 21:29; 22:28) குறிக்க இச்சொல் பயன்படுகிறது. இப்படிப் பல பொருளைச் சுட்ட இச்சொல் விவிலியத்தில் பயன்படுகிறது.

வீழ்ச்சி (FALL, THE)

I விவிலியத்தில் மனிதர்கள் பாவத்தில் வீழ்ந்தது பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன (1 கொரி 10:12; 1 திமொ 3:6-7; 6:9; எபி 4:11; யாக் 5:12). அதில் தீய வானதூதர்களின் வீழ்ச்சியைப் பற்றியும் (2 பேதுரு 2:4; யூதா 6), வானதூதர்

மனிதப்புதல்வியரை மணந்த கதையையும் (ஆதி 6:2.4) வாசிக்கிறோம். ஆனால் கிறிஸ்தவ இறையியலில் வீழ்ச்சி, ஆதி 3-இல் விவரிக்கப்படும் ஆதாம் - ஏவாளின் கீழ்படியாமையை, பாவத்தைக் குறிக்கிறது. இன்பவனக் கதை பழைய ஏற்பாட்டுச் சிந்தனையில் அதிக விளைவுகளை உண்டாக்கவில்லை. ஆனால், இக்கருத்து மூலப் பாவம் பற்றிய புதிய ஏற்பாட்டுக் கோட்பாட்டில் ஆதிக்கம் செலுத்துகிறது (காண்க. உரோ 5:12-19). ஆகவே, வீழ்ச்சி பற்றிய எந்த ஆய்வும் இன்பவன விவரிப்பில் கவனம் செலுத்த வேண்டும். அதைப் பல கோணங்களிலிருந்து நோக்க வேண்டும்.

II. **விவிலிய விவரிப்பு:** படைப்புப் பற்றிய இரண்டாம் விலிலிய விவரிப்புக்குள் (ஆதி 2:4-3:24) வீழ்ச்சி பற்றிய நிகழ்ச்சியுரை கொடுக்கப்படுகிறது. மனிதனும் (2:7) பெண்ணும் (2:22) படைக்கப்பட்டதை விவரித்தபின், மேன்மையான மூலநிலை தகர்த்தெறியப்பட்ட சூழ்நிலையை விவரிக்கிறது. பாம்பு ஏவாளை அணுகி, நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தின் பழத்தை விரும்பச் செய்கிறது (3:1-3); அதைத் தடுத்ததில் இறைவனின் நோக்கத்தை ஏவாள் ஐயுறச் செய்கிறது (3:4-5; காண்க. 2:16-17). அப்பழத்தை உண்பதால் இறைவனுடையதுக்கு ஒப்பான அறிவை அடையக் கூடும் என்று நினைத்து, ஏவாள் அதை உண்டாள்; தன் துணைவனுக்கும் உண்ணக் கொடுத்தாள் (3:6). அவர்கள் செயலின் விளைவை இருவரும் உடனடியாக அனுபவிக்கின்றனர். ஆகவே, இறைவனிடமிருந்து தங்களை மறைத்துக்கொள்ள முயல்கின்றனர். இறைவன் அவர்களைத் தேடி வருவது மனிதப்பண்பு முறையில் விவரிக்கப்படுகிறது. இறைவன் அவர்களிடமிருந்து குற்ற அறிவிப்பைப் பெற்று, அதில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கிறார். பாம்புகள் ஏன் ஊர்கின்றன? மனிதனுக்கும் பாம்புகளுக்குமிடையேயுள்ள இயற்கையான பகைமை (3:14-15), பிள்ளைப்பேற்றின் துன்பத்துக்கும் பலின ஆசைக்கும் இடையேயுள்ள முரண்தொடை (3:16), மனுகுலத்திற்கும் இயற்கைக்கும் இடையில் நிலவும் இழுவை நிலையை எடுத்துக்காட்டும் முரண்பாடு, மற்றும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உண்ண வேண்டிய மனிதனின் அவல நிலை (3:17-19) ஆகியவற்றை எடுத்துக்கூறும் காரணகாரிய விளக்கமாக சாபங்கள் அமைந்துள்ளன. இவற்றையெல்லாம் விட முக்கியமாக, ஆதாம்-ஏவாள் உலக இன்பவனத்திலிருந்து வெளியே அனுப்பப்பட்டனர்.

ஆதியாகம விவரிப்புக்குப்பின் அமைந்துள்ள இலக்கிய வளர்ச்சித் தொகுப்பு, அடையாளவியலில் செறிந்த விவரிப்பைக் கொண்டுள்ளது; பல இதிகாசக் கருத்துகளைச் சுட்டிக்காட்டுகிறது. விவிலிய விவரிப்புக்கும் பழங்கால மேற்காசிய இதிகாசங்களுக்கும் இடையிலுள்ள ஒப்புமை பலவற்றை ஆய்வாளர்கள் கண்டு எடுத்துக் கூறியுள்ளனர். எடுத்துக்காட்டாக, பாபிலோனிய அதப்பா இதிகாசமாகும். இதில் அனு என்ற தலைமைக் கடவுள் ஞானியான அதப்பாவுக்கு வாழ்வின் அப்பத்தையும் நீரையும் அளிக்கிறார். பொறாமை கொண்ட ஏயா என்ற கடவுளின் விவேகமற்ற ஆலோசனைக்கு இணங்கி அதப்பா அனுவின் கொடையை ஏற்க மறுக்கிறார். இதன் விளைவாக, தனக்கும் மனுகுலத்திற்கும் அழியாமையை இழந்துவிடுகிறார். சுமேரிய கில்காமிஷ் வீரகாவியத்தில், கதைத்தலைவன் அழியாமையைத் தேடித் திரிகிறான். இந்தப் பயணத்தில் கில்காமிசின் தோழனான என்கிடு என்பவன் ஒரு வேசியால் சோதனைக்குட்படுத்தப்பட்டு, பலின உணர்வு அனுபவத்தையும் ஞானத்தையும் பெறுகிறான். முடிவில் இளமையின் செடியைக் கில்காமிசிடமிருந்து ஒரு பாம்பு திருடிவிடுகிறது. இதனால் அழியாமை தேடும் முயற்சியில் கில்காமிஷ் தோல்வியுறுகிறான். ஆயினும், இந்தக் கதைகளில் காணப்படுவதற்கு மாறாக, விவிலிய விவரிப்பு மனிதத்தோல்விக்கும் துன்பத்துக்கும் காரணம், மனிதன் இறைவனது கட்டளைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த கீழ்ப்படியாமையே ஒழிய, அவனது பலவீனமோ,

விதியோ, பொறாமை மிக்க கடவுள்களின் தந்திரமோ அல்ல என்று தெளிவாக எடுத்துக்கூறுகிறது.

III. **விளக்கம்:** விவிலிய காலந்தொட்டு இந்த வீழ்ச்சி, உலகத்திலும் பாவத்தைப் புகுத்தியது என்றும், அஃதோடு மனிதனைச் சாவுக்கு அடிமைப்படுத்தியது என்றும் விளக்கப்பயன்பட்டுள்ளது (உரோ 5:12; காண்க. ஆதி 3:19). பழங்கால மேற்காசிய இதிகாசங்களில் காணப்படும் இத்தகைய அழியாமையின் இழப்பை உள்ளடக்கிய கதைகளோடு ஒப்பிடும்போது, விவிலியத்தில் ஆணும் பெண்ணும் தங்களுடைய செயல்களுக்குத் தாங்களே பொறுப்பாளிகளாகவும், தீர்மானிக்கும் சுதந்தரத்தைப் பயன்படுத்தக்கூடியவர்களாகவும் காட்சி அளிக்கின்றனர். அவர்கள் முன்குறித்து வைக்கப்பட்ட ஒரு திட்டத்திற்கோ, தீய சக்திகளின் தந்திரங்களுக்கோ கட்டுப்பட்டவர்கள் அல்லர்.

ஆதியாகம விவரிப்பு மூலப்பாவத்தைப் பற்றிய கோட்பாட்டை அறிவிக்காவிடினும், மேற்கத்திய (இலத்தீன்) திருச்சபைத் தந்தையர்களில் பலர், ஆதாம் - ஏவாளை மனுகுலம் முழுவதற்கும் முன்னோராகவும் அவர்களின் பாவம் பின்வரும் எல்லாத் தலைமுறைகளுக்கும் உரிமைச் சொத்தாகக் கையளிக்கப்பட்டது எனவும் காண்கின்றனர், போதிக்கின்றனர். பெலேசியு போன்ற பதிதர்கள் வீழ்ச்சியினால் வந்த எந்தத் தீய விளைவையும் மறுத்தனர். கிழக்கத்திய (கிரேக்கத்) திருச்சபைத் தந்தையர்கள், மனித பாவத்தின் உலகளாவிய தன்மையையும், அதன் விளைவாக வீழ்ச்சியில் ஒவ்வொருவருடைய பங்கையும் வலியுறுத்தினர். வீழ்ச்சியின் விவரிப்பு வரலாறாகவோ, அடையாளவியலாகவோ விளக்கப்பட்டாலும், இந்த நிகழ்ச்சி கிறிஸ்துவினால் உலகம் மீட்கப்படுவது பற்றிய கிறிஸ்தவக் கோட்பாட்டின் அடிப்படையாக அமைந்துள்ளது (காண்க. ஆதி 3:15; உரோ 5:12-19; 1 கொரி 15:22).

வீழ்ச்சி விவரிப்போடு தொடர்புடைய பாரம்பரியங்கள் பாம்பில் சாத்தான் அல்லது பேயை அடையாளம் காண்கின்றன (ஞான 2:24; திருவெளி 12:9; 20:2). மற்றொரு பாரம்பரியம் வீழ்ச்சிக்கும் பாவத்திற்கும் முதன்மையான பொறுப்பாளி ஏவாள் ஆவாள் என்று கூறுகிறது (சீரா 25:24). காண்க. பாவம் - II. மூலப்பாவம்.

வெ

வெகுமானம், கைம்மாறு, பரிசு (REWARD)

ஒவ்வொரு செயலும் அதற்குரிய வெகுமானம் பெறுவதால், மனிதனும் வெகுமானம் பெறுவதை ஒரு நீதிப் பிரச்சனையாகக் கருதுகிறான். இது சமய முறையில் மாறாகக் கொள்வதுபோல் தோன்றுகிறது. பரிசு பற்றியே கருதாத தன்னலமற்ற தன்மை வேண்டியிருக்கிறது. கிறிஸ்து இந்த முறையில் வெற்றுக் கொள்கையை எதிர் பார்க்காமல், தனது சீடர்கள் தூய மனத் தோடு செயலாற்ற வேண்டும் என்றே கேட்டுக்கொண்டார்.

1. வெகுமானமும் ஊதியமும்: சமய வாழ்க்கையில் வெகுமானம் என்பது முன் கருத்தாகக் கொள்ளப்படுகிறது. இதனுடைய சரியான பொருளை உணர மனச் சாட்சியில் அதன் தோற்றத்தை விவரிக்க வேண்டும். ஏனைய கருத்துக்கள்போல் இதுவும் மனித அனுபவத்திலிருந்து எழுகிறது. இது தலைவனுக்கும் ஊழியனுக்கும் உள்ள உறவுமுறையிலிருந்து எழுகிறது என்று சொல்லலாம். இந்த எண்ணமோ எந்த எண்ணத்தையும் கடந்து நிற்கிறது. காரணம் கடவுள், தானே உறவு முறை ஏற்படுத்துவதே. சந்தேகமில்லாத முறையில் ''ஊதியம்'' என்னும் கருத்து இதில் மேலோங்கி நிற்பதையும் காண்கிறோம். ஆனால், உண்மையில் ஒரு வேலைக்குத் தகுந்த ஊதியம் என்று நாம் இன்று கொள்ளும் கருத்தாக மாற்ற முடியாது. எப்படி என்றால் ஒப்பந்த முடிவில் ஊதியம் கிடைக்கிறது; மாறாக, தன் ஊழியனது செயலைத் தம் தீர்ப்பால் சரியென்று ஏற்றுக் கொள்ளும் இறைவனுடைய சந்திப்பால், சமயச் சூழலில் வெகுமானம் அளிக்கப்படுகிறது.

தொடக்கத்திலிருந்தே கடவுளுக்காக வேலை செய்கிறோம் என்றும், இதற்கு ஊதியம் கிடைக்கும் என்றுமே மனிதன் எண்ணி வந்துள்ளான் (ஆதி 2:15; காண்க. 14:6; மத் 20:1-15; யோபு 7:1தொ). கடவுள் நீதியுள்ளவர்; கொடுக்கப்பட்ட வேலையை ஒவ்வொருவரும் செய்யும்போது அவர்க்குச் சேர வேண்டியதைக் கொடுப்பார். மனிதனோ தன்னிலே நிறைவு இல்லாதவன்; எனவே, தானாக வலிந்து கைம்மாறு கருதாது கடவுளுக்குத் தன்னலமற்ற உதவி செய்ய முடியாதவன். மனிதன் யார்? கடவுள் முன் ஓர் ஏழை, பிச்சைக்காரன், ஊழியன், அடிமையுங்கூட. அன்றாடம் தலைவன் கொடுப்பதைவிட அவனிடம் வேறொன்றுமில்லை. ஆகவே, வெகுமானம் என்பது சமயவாழ்வின் எல்லைக் கூறன்று; மாறாக, இறைவனுக்குச் செய்யும் பணியின் சாதாரண நன்மையாகும்.

இதனால்தான், மீட்பு வரலாற்றின் தொடக்கத்தில், கடவுள் ஆபிரகாமுக்குப் பரிசொன்றை உறுதி கூறுகிறார் (ஆதி 15:1). விவிலிய இறுதிச் சொற்களும் ''அவனவன் செயலுக்கேற்ப அவனவனுக்கு அளிக்கும் கைம்மாறு'' (திருவெளி 22:12) என்று வெளிப்படுத்துகின்றன. இவ்விரண்டு மேற்கோளுக்கிடையில் கடவுள் மனிதனின் வேலைக்கேற்றாற்போல் பரிசளிக்கிறார் (பழ 12:14; எரே 31:16; சங் 28:4; 2 நாள் 15:7; யோபு 34:11; எசா 59:18; சீரா 51:30; லூக் 10:7; யோவா 4:36; உரோ 2:6; 2 திமொ 4:14) என்றும், இந்த ஊதியம் கடவுளுக்கு மட்டுமே உரியது என்றும் மறைநூல் சாற்றுகிறது (உப 32:35; பழ 30:22; காண். உரோ 12:17-20). இம்மறையுண்மை மிக முக்கியமானது. கைம்மாறு உண்டு என்பதை மறுப்பது இறைப்பற்றற்றோரின் போக்கு என்று கருதப்படுகிறது (ஞான 2:22). ''தம்மைத் தேடுபவர்களுக்குத் தக்க கைம்மாறு அளிக்கிறார்'' (எபி 11:6) என்பதும் கடவுள்மேல் கொள்ளும் விசுவாசத்தின் முக்கியமான கூறு ஆகும்.

வேலைகளைச் சரிவரச் செய்கின்றவன் வெகுமதி எதிர்பார்க்கலாம் என்றாலும், ஊழியம் புரிய மறுக்கின்றவன் இதே வெகுமதியை இழக்க நேரிடுவதையும், ஏன், கடவுள் முன்னால் வாழவும் இயலா

தென்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும், ஒருவருடைய செயல்களுக்கேற்ப வெகுமானம் பெறுவது, இறைவனது தீர்ப்புக்கு உட்படுவதாகும். அது தான் செய்தவற்றிற்குத் தகுந்தாற்போல் நன்மையோ தண்டனையோ பெறுவதாகும். இவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டி உள்ளது ஒன்று: வாழ்க்கை அல்லது சாவு. கடவுளின் நீதித்தீர்ப்பு மனித இயல்பைக் கடந்து நிற்பது. ஏனென்றால், கடவுள் மட்டுமே மனிதனை அளந்து பார்க்க முடிந்தவர். கடவுளின் பேருண்மையை மனிதன் உய்த்துணர முடியாது. அவரே இரக்கம், சினம், விசுவாசம், நீதி, அன்பு அனைத்துமாவார்.

2. வெகுமதி பற்றி வெளிப்பாட்டுப் படிநிலைகள்: கைம்மாறு பற்றிய உண்மை அடிப்படையான உறுதியானால் அதனுடைய இயல்பு மறைபொருளானது. அதையும் கடவுள் மட்டுமே படிப்படியாக வெளிப்படுத்த வேண்டும்.

அ) கூட்டொருமையும் பொறுப்புணர்வும்: தொடக்க காலத்திலிருந்தே மனிதனின் ஒவ்வொரு செயலும் அவனுடைய பொறுப்புணர்வில் தோன்றுவதாகத் தெரிகிறது; ஆயினும், குழுவிற்கு முக்கியமானதாகவும் உள்ளது. ஒரு குடும்பத்திலிருந்து, இனத்திலிருந்து, நாட்டிலிருந்து ஒருவன் பிரிந்திருக்க இயலாது. கடவுளின் பராமரிப்பும் தீர்ப்பும் முன்காலத்திய ஆவணங்களிலிருந்தே மிகப்பரந்த அளவில் ''மனிதன்'' மேல் விழுகிறது (ஆதி 6:5தொ). யாவேயின் உடன்படிக்கையும் அதிலிருந்து புறப்படும் அவரின் பற்றுறுதியும் முதன் முதலில் ஒரு மக்களினத்தைத் தழுவி நிற்கிறது. குழுப்பண்பு மேலோங்கினாலும், தனிப்பட்டவன் பொறுப்புணர்வு வெளியாவதையும் இது தண்டனைச் சட்டங்களில் மெய்யாவதையும் காண்கிறோம். பழங்காலப் பழக்கத்தில் உள்ள சோதனை முறை ''கடவுளின் தீர்ப்பு'' (காண்க. எண் 5:11-30), கடவுள் இன்பவனத்தில் நடத்திய ''ஆய்வு'' ஆகியவையெல்லாம் உண்மையைக் காணவும் பொறுப்பானவரைத் தண்டிக்கவும் நோக்காகக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஆக்கான் வரலாறு தனிப்பட்டவரின் பொறுப்பையும் குழுக்குற்றத்தையும் ஒதுக்கி விடாமல் இருப்பதில் கருத்தாய் இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. கடவுளின் அறிக்கையால் குற்றமானவன் கண்டுபிடிக்கப்பட்டு, அவனது பிரசன்னம் குழு முழுவதையும் பாதிக்கிறது என்பது காட்டப்படுகிறது (யோசு 7:5-12). தனிப்பட்ட முறையில் அவன் அடையும் தண்டனை அவனுடைய குடும்பத்திற்கும் சொத்துக்கும் பரவுவதை அறிகிறோம் (7:24; காண்க. ஆதி 3:16-19). இதேபோல் நீதிமானுக்குக் கிடைக்கும் வெகுமதி உறவினரையும் தழுவிச் செல்வதை அறிகிறோம். இதேபோல்தான் நோவாவிற்கும் (ஆதி 6:18; 7:1), லோத்திற்கும் (19,12) ஒபேது ஏதோமுக்கும் (2 சாமு 6:12) நிகழ்கிறது.

தண்டனையும் மன்னிப்பும் இடங்கடந்து உலக முழுவதையும் (ஒருவரது செயல் அன்னவரையும் பற்றுகிறது), காலத்தையும் (ஒருவருடைய முன்னோர்களால் தலைமுறைகள் அனைத்தும் பாதிக்கப்படுவது) பாதிக்கின்றது. ஆயினும், இரக்கம் நோக்கியே தராசு சாய்கிறது. இந்த இரக்கம் முடிவில்லாக் காலத்திற்கும் நீடிக்கிறது (யாத் 20:5தொ; 34:7). இவ்வாறு நோக்கினால் சமய நிகழ்ச்சிகளின் விளக்கவுரை எளிதாகிறது. நீதியுள்ள கடவுள் உலகை ஆள்கிறார். ஒருவன் மகிழ்ச்சியற்றும் இன்னல் மிகுந்தும் இருந்தால், காரணம் அவனுடைய குற்றம் அல்லது மற்றவரோடு தொடர்புள்ள குற்ற விளைவு ஆகும் (காண்க. யோவா 9:2). இதற்குத் தலைகீழான முறையில், என்னதான் கொடுங்குற்றங்கள் செய்து அதனால் விளைவுகள் ஏற்பட்ட போதிலும், ஒருவனுடைய ஈடேற்றம் ஒரு நீதிமானுடன் கொண்டுள்ள தொடர்பால் கைகூடும். சோதோமில் பத்து நல்லவர்கள் இருந்திருந்தால் மக்கள் தங்கள் பாவங்களுக்காக அழிந்திருக்க மாட்டார்கள் (ஆதி 18:16-33; காண்க. 19:20தொ). ஒவ்வொரு சூழ்நிலைக்கும் விளக்கமான திட்டம் ஒன்று இவ்வரலாற்றுக் கட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம். அதே

நேரத்தில் முடிவில்லாமல் இது செல்லக் கூடியதன்று.

ஆ) தனது கதிக்கு மனிதனே பொறுப்பு: நாடு கடத்தப்பட்டபொழுது நிகழ்ந்த அவலங்களை அனுபவித்ததிலிருந்து வளையாத மரபு மொழி ஒன்றை மக்கள் உண்டாக்கினார்கள்; ''தந்தையர் புளித்த திராட்சைப் பழங்களைத் தின்ன, பிள்ளைகளுக்குப் பல் கூசிற்றாம்'' (எரே 31:28தொ). கடவுளின் நீதியைப் பற்றிக் கேள்வி எழுப்பும் கேவலமான கூற்று! இந்தப் பழமொழியை மேலும் ஒருபோதும் சொல்லக்கூடாது என்று எரேமியா முழங்கினார்; எசக்கியேலுக்கோ இதில் இன்னும் பொருள் இல்லை (எசே 18:2-3). வெகுமானம் பெறுவதில் கூட்டொருமை மற்றும் பாவங்களுக்குச் சொந்த வினைப்பயன் கோட்பாட்டை வலியுறுத்தும் உப 7:9தொ- மரபின் வழியில், மனமாற்றக் கோட்பாட்டை வலியுறுத்தி, நீதிமான்கள் தங்களை மட்டுமே மீட்க முடியும் என்று எசேக்கியேல் அறிவிக்கிறார். முன்னாளில் நோவா தன் மக்களைக் காப்பாற்றினார் (ஆதி 7:7). ஆனால், இறைவனின் திட்டம் புதிய கட்டத்தை அடைந்து விட்டதால் இப்போது அவ்வாறு செய்ய அவரால் இயலாது (எசே 14:12-20). இதனால்தான் இயன்ற எல்லாச் சூழ்நிலைகளையும் எசேக்கியேல் அலசுகிறார் (18). ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மனிதனும் அவனது கதிக்கு அவனே பொறுப்பாளி. அவன் அதை விட்டுக்கொடுக்கவோ, மீண்டும் அக்கதியைப் பெறவோ எப்போதும் இயலும். எனினும் இதில், கடவுள் எதிரியாகவோ சார்பற்றவராகவோ ஒருபோதும் இல்லை. ''எவனுடைய சாவிலும் எனக்கு விருப்பமே இல்லை... மனம் மாறி வாழ்வு பெறுங்கள்'' (எசே 18:32).

இ) கடவுளின் நீதி பற்றிய மறை பொருள்: மனிதனே தனது கதிக்குப் பொறுப்பாளி என்றால் வாழ்வில் தேற்றம் உண்டாகிறது. ஆனால், மற்றொரு பிரச்சனை எழுகிறது- உயிர்த்த வாழ்வின் வெளிப்பாட்டில்தான் இதற்குரிய நிறைவான விடை கிடைக்கும். இங்கேயே வெகுமதிக்கென ஓரிடம் இருந்தால், ஏன் அது நிலையாக இருப்பதில்லை? வழிவழி வந்துள்ளதுபோல் நீதிமான் எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்கிறான் (சங் 37; 91; 92; 112) என்ற பாரம்பரியக் கருத்து அனுபவ முறையில் முரண்படுகிறது.

இந்த மனச்சாட்சிப் போராட்டத்தை எடுத்துக்காட்டுவதில், உண்மையான விசுவாசத்தையும் சொந்த அனுபவத்தையும் இணைந்து போகச் செய்ய முயன்றவர்களின் இதய எழுச்சிகளையும் விவிலியம் வெளிப்படுத்துகிறது. எரேமியா அலைமோதும் நிலையிலே இருந்தபோது அவருக்குக் கிடைத்த பதில், ''தைரியமாக அதே பாதையில் செல்க'' என்ற உற்சாகமூட்டும் சொற்கள்தாம் (எரே 12:1-5). ஆனால் யோபு, திருவுரையாளர், சங்கீத ஆசிரியர்கள் ஆகியோர் பிரச்சனையை நேரடியாக மோதித் தீர்வுகாண முயன்றனர்.

1) நீண்ட காலமாக பழைய மரபு முறையையே மெய்யியலார் சிலர் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருந்தனர். வினைப்பயன் காலந்தாழ்த்திக் கிடைத்தாலும், சாவு நேரத்தில் மொத்தமாக, இந்த வாழ்விலே கிடைக்கும் என்றனர். அசாதாரண மகிழ்ச்சி அல்லது வேதனையால் சாவு தனிச்சிறப்புப் பெற்றிருக்கும் (சங் 49:17தொ; சீரா 1:13; 7:26; 11:18-28). இந்த அடிப்படையற்ற அமைப்பையே சங்கீத ஆசிரியர் சாடுகிறார்; ''அவர்களுக்குச் சாவின் வேதனை என்பதே இல்லை'' (சங் 73:4தொ).

2) மரபு வழியைப் பாதித்த நிலையில்லாமையைத் (திருவுரை 8:12தொ) தவிர வேறொன்றையும் காணாது ''ஞானத்தையும் காரண காரியத்தையும்'' (7:25) தேடிய திருவுரையாளர் அன்றாட வாழ்வில் மிக மேலானதைக் கொணரத் தேடும் மட்டுடைய செயல்களைப் பரிந்து போதிக்கிறார். அமைதியாக இருந்தும், ஆனால் பிரச்சனைக்குத் தீர்வு காணப் பின்வாங்கும் கடவுள் மேல் உள்ள நம்பிக்கைச் சூழலில் தான் இவை யாவும் நிறைவேறுகின்றன.

3) விசுவாசத்திற்காக இன்னல் அனுபவித்தும் கடவுள்மேல் நிபந்தனையற்ற பற்றுள்ளவர்களுக்கு ஓர் ஒளி கிடைக்கிறது. எல்லாச் சோதனைகளிலும் கடவுள்தான் அவர்களின் ''பங்கு, ஒளி மற்றும் பாறை'' ஆவார் (சங் 16:5தொ; 18:1தொ; 27:1தொ; 73:26; 142:6; புல 3:24). இவர்கள் கடவுளின் திருவுளப்படி செய்வதைவிட வேறு நோக்கம் கொண்டிருக்கவும் இல்லை; வேறு கைம்மாறு விரும்பவும் இல்லை (சங் 119:57; சீரா 2:18; 51: 20தொ). யோபு வாழ்ந்து காட்டிய அதே ஆழமான விசுவாசச் சூழலை இது மனத்திற் கொள்கிறது. அவர் கடவுளைப் ''பார்த்து விட்டார்.'' இறைவனது புனிதத்தோடு கொண்ட இந்த மறைத் தொடர்புதான் யோபுவைத் தாழ்ச்சியுள்ளவராகவும், கடவுளை வணங்குகின்றவராகவும், தன் பாவ நிலையை உணர்ந்தவராகவும், புதிய முறையில் கடவுளைப் புரிந்து வலிமை பெற்றவராகவும் மாற்றியது (யோபு 42:5தொ).

4) நீதிமான்களின் வேதனை பற்றி விளக்க முனையும்போது வெகுமதி என்ற கோணத்தில் பார்க்காமல் மீட்பு என்ற கோணத்தில் காணவேண்டும் என்று மற்றவர்கள் முன்னுணர்வு கொண்டனர். ஊழியர் கவிதைகளின் கடைசிப்பகுதி இத்தகைய பொருள் பொதிந்ததே (எசா 53:10; காண்க. சங் 22). ஆனால், உலர்ந்த எலும்புகள் உயிர்பெற்ற காட்சியில் உள்ளதுபோல் நாடு கடத்தப்பெற்றுத் தூய்மை பெற்ற குழுவை மட்டுமே வெகுமதி ஈடுபடுத்துவதாகத் தோன்றுகிறது.

ஈ) தனிப்பட்டவருக்கு வெகுமதி: முடிவாக, உலக முடிவில் தனி மனிதனின் உயிர்ப்பிலுள்ள விசுவாசமே எழுப்பப்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்க முடியும். நீதிக்காக ஏங்குவோரை நிறைவு செய்வது கடவுளின் தன்மை என்பது சில கடினமான விவிலிய வசனங்களின் பொருளாகும். சிறிது காலத்திற்கு எனக் கீழுலகிலிருந்து நீதிமான் விடுதலை பெற்ற போதிலும் அவனைக் கைம்மாறுக்கெனத் தண்டிப்பது கடவுளுக்கு இயலாத ஒன்றாகும் (யோபு 19:25தொ). எனவே மனிதன் கடவுளோடு ஒன்றிக்க எழுப்பும் குரலை, அவர் புறக்கணிக்க முடியாது (காண்க. சங் 16:9தொ). அவர் எலியாவையோ, ஏனோக்கையோ தன்னிடம் எடுத்துக்கொண்டால், நீதிமானும் ஏன் இறைவனுக்கருகில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை?

அந்தியோக்கு எப்பிபான் காலத்தில் நடந்த துன்புறுத்தலும் உயிரிழப்பும் உயிர்ப்பின்மேல் விசுவாசங்கொள்ளவும், அப்போது கைம்மாறு கிடைக்கும் என்றும் விசுவாசிகளுக்கு நினைவூட்டியது (2 மக் 7; காண்க. தானி 12:1தொ). சாகாமை என்பதின் மூலம் உயிர்ப்பின் மேலுள்ள விசுவாசம் ஞானாகமத்தில் மறைந்திருக்கிறது (ஞான 3:1; 4:1). இறுதி நாளில் கடவுளோடு கொள்ளும் சந்திப்புக்குப்பின் நீதிமான்கள் கடவுளோடு தோழமை கொண்டு வாழ்வார்கள். இதுதான் அவர்களுக்குரிய வெகுமானம் (காண்க. ஞான 2:22; 5:15). இந்த வெகுமதி ஓர் அருட்கொடை (காண்க. 3:9.14; 4:15). மனித முயற்சிகளுக்கு அளவில்லாமல் மேற்பட்டு விளங்கும் ஒன்றாகும்.

3. கிறிஸ்துவும் தகுதியும்: கிறிஸ்துவின் வருகையினால் தகுதியானது முழுமை பெறுகிறது.

1. தனிப்பட்டவரின் தகுதி உறுதிபெறுதல்: நீதிமானின் வெகுமதியாக உயிர்ப்பு, முடிவில்லா வாழ்வு, நீடிக்கும் அரசு ஆகியவை பற்றி இஸ்ராயேல் மக்களில் பலரும் (மத் 22:22; அ.ப. 23:8), ஏன் கிறிஸ்துவின் சீடர்களுள் (1 கொரி 15:12) சிலரும் இன்னும் ஐயம் கொண்டனர். ஆனால் இஸ்ராயேலின் உண்மையான மரபை இயேசுவும் அவரின் அப்போஸ்தலர்களும் விடாமல் காப்பாற்றினர் (மத் 22:31தொ; 25:31-46; 1 கொரி 15:13-19; அ.ப. 24:14 தொ). இயேசுவின் கடவுள் அவரை உயிர்ப்பித்து நீதிமானாகக் காட்டுகிறார் (அ.ப. 3:14 தொ; கொலோ 2:12தொ). இவ்வாறு ஒரு விசுவாசி தன் செயல்களுக்குத் தகுந்தாற்போல் வெகுமதி உண்டு

என்று அறிகிறார் (காண்க. மத் 16:27; மாற் 9:41; 2 திமொ 4:14; 2 யோவா 8; 2 பேதுரு 2:13; திருவெளி 18:6). மேலும் தீர்ப்பின்போது 'அரசர்' மனிதர்களை அவர்களின் செயலுக்கு ஏற்றாற்போல் வாழ்விற்கோ, தண்டனைக்கோ (மத் 25:46), வானகத்திற்கோ, நரகத்திற்கோ அனுப்புவார். இப்போதிருந்தே நற்பரிசு பெற விறுவிறுப்புடன் போரிட வேண்டியதுதான் (1 கொரி 9:24-27;கலா 5:7; 2 திமொ 4:7).

2. உண்மையான வெகுமானம்: தனிப்பட்டவரின் தகுதி உண்மை என்றால், பரிசேயரின் தத்துவம் உயிர்பெறும் ஆபத்து இருக்கிறது; அதாவது, மனிதக் கடைப்பிடிப்பால் விண்ணகப் பரிசு கிடைக்கும். ஆனால் ஒரு விசுவாசி, தகுதி பற்றிய கொள்கையை உருக்கெடுக்கும் இப்போக்கு மட்டில், விழிப்பாய் இருக்க வேண்டியது அவசியம்.

முதன் முதலாக, ஒருவன் உலகியல்பான மகிமை, பெருமை, அறிமுகம், பற்று ஆகியவற்றைத் தேடி அலையக்கூடாது. ஏனெனில், இதற்காக நன்மை செய்கிறவன் ''ஏற்கெனவே கைம்மாறு பெற்று விட்டான்'' (மத் 6:1-16; லூக் 14:12தொ; காண்க. 1 கொரி 9:17தொ). ஆனால் யாவற்றிற்கும் மேலாக ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவையே எல்லாவற்றிற்கும் மையமாகக் கொண்டவன். இதுவே அவனுடைய நோக்கம் கூட. இதில் தனது நலத்தை - உள்ளார்ந்த அல்லது தன் மறுப்பு மூலம் - அவன் நாடுவதில்லை. கிறிஸ்தவனின் முக்கிய குறிக்கோளைக் கிறிஸ்துவே ஆட்கொள்கிறார் (பிலி 1:21-26). அவர் அளிக்கும் கைம்மாறு தெய்வீக உரிமையாகும் (கொலோ 3:24). இதன் மூலம் அவன் கிறிஸ்துவின் உடன் உரிமையாளனாகவும், சகோதரனாகவும் ஆகின்றான் (உரோ 8:17). அன்போடு எதிர்நோக்கும் கிறிஸ்துவின் வருகையினால் அப்போஸ்தலர் நல்வாழ்வின் வெற்றிவாகை பெறுவார் (2 திமொ 4:8). சுருக்கமாகச் சொன்னால், கிறிஸ்துவோடு என்றும் இருக்கவே அவர் விரும்புகிறார் (1 தெச 4:17; காண்க. பிலி 1:23; லூக் 23:43; திருவெளி 21:3தொ). திருமுழுக்கிற்கு விசுவாசமாய் இருப்பது அன்றாட வாழ்வின் முயற்சியாக மாறுகிறது. இவ்வாறு கிறிஸ்துவின் சாவோடு இணைந்தவர் உயிர்ப்பிற்கும் தன்னையே தயார் செய்கிறார் (உரோ 6:5-8; கொலோ 3:1-4). கிறிஸ்துவில் வெளிப்படும் கடவுளின் அன்புதான் (உரோ 8:38தொ) ஏற்புடையோர் காத்திருக்கும் ஈடேற்றமாகும் (5:9தொ). யோவான் இதே கருத்தை வேறு விதத்தில் விவரிக்கிறார். மனிதனின் பசிக்கும் தாகத்திற்கும், சாவை மேற்கொள்ளும் அழியாத விருப்பத்திற்கும் தன்னையே அளித்து இயேசு பதில் தருகிறார். அவர்தான் உயிருள்ள நீரின் ஊற்று, அப்பம், ஒளி மற்றும் வாழ்வு (யோவா 7:37தொ; 6:26-35; 8:12; 11:23தொ). வெகுமதி பற்றி முன்பு எழுந்த முரண்பாடுள்ளவைகள் எல்லாம் கிறிஸ்து இயேசுவில் தீர்ப்புப் பெறுகின்றன. கடவுள் கொடுப்பது அவரே மனம் உவந்து விரும்பிக் கைம்மாறு கருதாது கொடுப்பதாகும். தகுதியையும் மனித ஏக்கத்தையும் கடந்தது அவரது கொடை. மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் எதிர்பார்க்கப்படும். அஃது ஏற்புடைமையால் ஏற்கெனவே உடைமையாகக் கொள்ளப்படுகிறது. இந்தக் கோட்பாடு அமைதியான உறுதி கொண்டதாயினும் விசுவாசத்தின் இருள் நிலையிலும், இக்கட்டான சூழ்நிலையிலும் பெறப்படும் இறைவனது சாட்சியத்தை மட்டுமே அடித்தளமாய்ப் பெற்று விளங்குகிறது. ஒவ்வொரு தனி மனிதனையும் இஃது ஆழமான முறையில் தழுவுகிறது. மேலும், கிறிஸ்துவின் உடலோடு உயிருள்ள இணைப்பொன்றையும் ஏற்படுத்துகிறது. ''வெகுமதி அறநெறிக்கும்'' ''அன்பு அறநெறிக்கும்,'' இடையே எவ்வித எதிர்ப்பும் இல்லை. ஏனென்றால், அன்பும் கைம்மாறு தேடுகிறது.

வெங்காயம் (ONION)

இது காய்கறி இனத்தைச் சார்ந்தது. இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்திலிருந்த போது இதற்காக ஏங்கினர் (எண் 11:5). கி.மு. 3-ஆம் ஆயிரமாண்டிலிருந்து எகிப்து

மக்கள் இதை விரும்பி உண்டனர். பழங் கால ஆசிரியர்கள் எகிப்திய வெங்காய வகைகளைப் போற்றி எழுதியுள்ளனர்.

வெஸ்பாசியன் (VESPASIAN)

பிளாவியன் வம்சத்தைத் தோற்றுவித்த உரோமைப் பேரரசன் (கி.பி. 69-79). இவரது முழுப்பெயர் தீத்து பிளாவியு வெஸ்பாஸியானு. இவர் கி.பி. 9-இல் பணம் வட்டிக்கு விடும் ஒரு பணக்கார இத்தாலியக் குடும்பத்தில் பிறந்தார். இவர் கலிகுலாவின் ஆட்சியில் கிளாதியுதின் தலைமையில் படையில் உயர்ந்த பதவியில் இருந்தார். இவர் 66-இல் நீரோவுடன் சேர்ந்து கிரீசுக்குச் சென்றார்.

யூதாவின் கலகத்தை அடக்குவதற்காக இவர் மூன்று படைப்பிரிவுகளைப் பெற்று, பாலஸ்தீனத்திற்குச் சென்றார். இவர் இந்த வேலையை மெதுவாக, திட்டத்துடன் செய்தார். நீரோ இறந்த பின்பு இவர் பேரரசன் ஆனார். எகிப்தின் ஆளுநனான திபேரியு யூலியு அலக்சாந்தர் 66-இல் தன்னுடைய ஒத்துழைப்பைப் பற்றி வெஸ்பாசியனுக்கு உறுதிமொழி கொடுத்தான். 70-ஆம் ஆண்டு இவர் மக்களின் ஆரவாரத்தோடு உரோமையில் நுழைந்தார். எருசலேமைக் கைப்பற்றிய அவரது மகன் தீத்துவை 71-இல் வெஸ்பாசியன் தன் அரசில் கூட்டாளியாக்கினார். தன்னுடைய இன்னொரு மகனான தொமிசியனுக்கு எந்த வித அதிகாரத்தையும் தரவில்லை.

இவர் ஒரு சிறந்த செயலாட்சியாளர் உரோமையின் பொருளாதாரச் சீர்திருத்தத்தின் தேவையையுணர்ந்த இவர், வரிகளை உயர்த்தினார். இவர் எளிய வாழ்க்கை வாழ்ந்தார்; கடவுளாக்கப்படுவதை எள்ளி நகைத்தார். இவர் 79-இல் இறந்தார். இவரது மகன் தீத்து அரசனானார். முதியோர் மன்றம் வெஸ்பாசியனை ஒரு கடவுளாக அறிவித்தது.

இவருடைய ஆட்சியில், நமக்குத் தெரிந்த அளவிற்கு, இவர் யூதர்களையோ, கிறிஸ்தவர்களையோ துன்புறுத்தியது இல்லை. இவர் தாவீதின் குடும்பத்தினரைக் கொல்லத் தேடினதாக கிறிஸ்தவப் பாரம் பரியத்தில்தான் கேட்கிறோம்.

இவர் பாலஸ்தீனத்தைத் தன் நேரடி ஆட்சிக்குள் வைத்துக்கொண்டார். எருசலேம் கோவிலுக்குச் செலுத்தப்பட்ட தலைவரியை யூப்பித்தர், காப்பித்தோலினு கோவிலுக்கு மாற்றிவிட்டார்.

பேரரசு அழிந்து கொண்டிருந்தபொழுது அதைக் காப்பாற்றியதுதான் இவருடைய முக்கியமான தொண்டு ஆகும்.

வெட்கம் (SHAME)

I. **வெட்கம் அனுபவிக்கப்படும் சூழ்நிலைகள்:** நாம் வெட்கம் என்பது பற்றிப் புரிந்து கொள்ளும் விதம் விவிலியத்தில் காணப்படும் பொருளிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. வெட்கம் என்பது ஏமாற்றம், நிலைகுலைந்து போதல் என்பதற்கு இணையாகப் பொருள் புரிந்து கொள்ளப்படுகிறது. தரையில் விழுதல், நிர்வாணமாக இருத்தல், பின்வாங்குதல், பயனற்றிருத்தல் ஆகிய இவைதான் எல்லாருக்கும் வெட்கத்துக்குரிய செயல்களாகக் கருதப்படும். ஆனால், விவிலியத்தில் இந்த உணர்வு எல்லாவகையான துயரங்களையும் உள்ளடக்குகிறது. பஞ்சத்தினால் வரும் துயரம் கூட (எசே 36:30) இழிவுக்குரியதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், விவிலியத்தைப் பொருத்தவரை எல்லாத் துன்பங்களும் பிறர்முன் அனுபவிக்கப்பட்டு, பிறரால் தீர்ப்பிடப்படுகிறது. அதனால் வெட்கம் ஏற்படுகிறது. அதனால் தான் தீர்ப்பிடுதலும், வெட்கமும் இணைத்துப் பேசப்படுகின்றன. தீர்ப்புதான் வாழ்க்கையிலும் அதன் முடிவிலும் ஒருவனுடைய நம்பிக்கையின் மடமை அல்லது உறுதியை இறையொளியில் எல்லார் முன்னும் வெளிப்படுத்துகிறது.

1. வெட்கமும் தோல்வியும்: நாம் ஒரு செயலைச் செய்து முடிக்க வெளியிலிருந்து வரும் உதவியைச் சார்ந்திருக்கிறோம். நமது திட்டம் தோல்வியடைகிறபோது அல்லது அது பயனற்றதாகும்போது நாம் பிறர் முகத்தில் விழிக்க முடியாமல் போகிறது; அல்லது பிறரின் சிரிப்புக்கு ஆளாகிறோம். எனவே உதவி, நம்பிக்கை, விசுவாசத்தோடு வெட்கம் பொருந்தி வருவதைப் பார்க்கி

றோம் (சங் 22:4). நீதிமான் ஆண்டவரைச் சார்ந்திருக்கிறான். அது பயனற்றதாகும் போது அவனுக்கு அது வெட்கமாகிறது, இழிவாகிறது. எனவேதான் எதிரிகள்முன் என்னை நாணமுறச் செய்ய வேண்டாம் என்பது அடிக்கடி பல சங்கீதங்களில் வருகிறது (சங் 25:2; 22:6; காண்க. எசா 49:23). அதே நேரத்தில் தவறான ஆதரவு களாகிய பார்வோன், சிலைகள் போன் றவை தங்களின் ஒன்றுமில்லாமையை நிரூ பிப்பதுபோல் தோல்வியடையும்போது அறிவற்றவன் அதை நினைத்து ஏமாற்ற மடைகிறான் (எசா 1:29). அவர்கள் நாணத் தால் கூனிக்குறுகிப் போவர் (எசா 42:17; சங் 6:11; 70:4). யாரை இழிவுபடுத்த வேண்டும் என அவர்கள் நினைத்தார்களோ .அவர்களின் வெற்றிதான் இத்தகையோர்கள் இழிவுபடுத்தப்படுவதால் நிகழ்கிறது (ஞான 2:20; 5:1தொ; சங் 35:26).

2. வெட்கமும் நிர்வாணமும்: ஆடை யின்றி நிர்வாணமாக இருப்பதால் ஏற்படும் நாணம் முதல் பாவத்தோடு தொடர்புடைய தாக இருக்கிறது. ஒழுங்கற்ற நிலையில் தனிமையாய் ஏற்பட்ட நிலையை மனச் சான்று சுட்டிக்காட்டுவதால் ஏற்படும் நாணமே இது. இஸ்ராயேலில் பெண்களின் ஆடைகளைக் களைந்தெறிவது அவர்க்குப் பெரும் தண்டனையாகும் (எசே 23:29; எசா 47:1தொ).

3. வெட்கமும் பிள்ளைப் பேறற்ற நிலை யும்: ஒருவன் தன் வாழ்வால் யாருக்காவது எவ்வகையிலேனும் பலன் கொடுக்காமல் இருந்தால் அவன் அழிவுக்குரிய சூழ்நிலை யில் இருக்கிறான் என்றுதான் கூற வேண் டும். இதைவிட மோசமானது பிள்ளைப் பேறற்றிருக்கும் பெண்ணின் நிலையும் (லூக் 1:25; ஆதி 30:23), கணவனின்றி வாழும் பெண்ணின் நிலையும் (எசா 4:1) ஆகும்.

4. வெட்கமும் சிலைவழிபாடும்: சிலைக் குரிய சரியான பெயர் வெட்கம் என்றுதான் சொல்ல வேண்டும் (2 சாமு 2:8). சிலை நிலையற்றதும், மாயையானதும், பொய் யானதும், பலன் தர முடியாததுமாயிருக் கிறது (ஞான 4:11; எசா 41:23தொ; 44:19). அதே நேரத்தில் யாவேயின் முகத்தை நோக்குபவர்களை அவர் வெட்கமுறாமல் காக்கிறார் (சங் 34:6).

II நீதிமான் வெட்கமுறாமல் காக்கப்படு கிறார்:

1. கடவுளாலும், கிறிஸ்துவாலும்: நீதிமான் வெட்கமுறுகிறான். மக்கள் அவனைப் பாராது தங்கள் முகத்தைத் திருப்பிக் கொள் கின்றனர் (எசா 53:3; ஞான 5:4; சங் 69:8). வெட்கமென்றால் அவன்தான் என்கின்றனர் (சங் 22:7; 109:25). ஆனால், நீதிமான் வெட்கமுறத் தேவையில்லை; தன் முகத் தைக் கற்பாறை ஆக்கிக் கொள்கிறார் (எசா 50:7). அதை நினைத்துப் பயந்து செயல் படாமல் இருக்கத் தேவையில்லை. விசு வசிப்பவர் இழிவுபடுத்தப்படுவார் (மத் 5:11). ஆனால் இயேசுவுக்காகவோ, அவரது வார்த்தையின் பொருட்டோ ஒருவர் வெட்க முறத் தேவையில்லை (லூக் 9:26). புனித பவுல் நற்செய்தியின் பொருட்டு நாணமுற வேயில்லை (உரோ 1:16; காண்க. 2 திமொ 1:8). அவர் நீதியின் நாளுக்காக நம்பிக்கை யோடு காத்திருக்கிறார். தான் நிச்சயமாக இறுதியில் வெட்கமுற நேரிடாது என்ற உறுதிப்பாடு கொண்டிருக்கிறார். எனவே, ஒருவர் தன் விசுவாசத்தால் வெட்கத்திலி ருந்து முழுமையாக விடுதலை பெறுகிறார். எனவே, இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தால் வெட்கம் தூர எறியப் பட்டது. ''என்ன நேரிடினும் நான் நிலை குலைய மாட்டேன்; துணிவை இழக்கமாட் டேன்..... என்னால் கிறிஸ்துவின் புகழ் விளங்கும். இதுவே என் பேராவல். இதுவே என் நம்பிக்கை'' (பிலி 1:20). உண்மையில் இயேசுவே முதன்முதலில் வெட்கத்தைப் பொருட்படுத்தவில்லை (எபி 12:2).

2. சகோதர அன்பினால் வெல்லலாம்: பவுல் பல சமூக எதிர்ப்புகளுக்கும், துயரங்க ளுக்கும், இழிவுபடுத்துதல்களுக்கும் ஆளா கியிருந்தாலும் அவர் பலரது சகோதர அன்பின் ஆதரவினால் நாணமுறவில்லை;

எனவே, சிலரால் ஒதுக்கப்பட்டாலும், பல ரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார் (கலா 4:14). திருச்சபை என்னும் உடலில் எந்த ஓர் உறுப்பும் மற்றொரு உறுப்பை நினைத்து வெட்கமுறக்கூடாது (1 கொரி 12:23). கிறிஸ்து நம்மைச் சகோதரர்களாக ஏற்றுக் கொள்வதை வெட்கத்துக்குரியதொன்றாகக் கருதவில்லை (எபி 2:11). இதுதான் அன்பின் உண்மையான அடிப்படைப்பொருள். அன்பினால் அனைவரையும் ஒரே மன நிலையில் ஏற்றுக்கொள்ளும்போது வெட்கத்திற்கு இடமில்லை.

வெட்டுக்கிளி (LOCUST)

இஃது இறக்கையுள்ள பூச்சிவகைகளுள் ஒன்று. இது தத்திச் செல்லும். இதுவும் தத்துக்கிளியும் ஒன்றுக்குப் பதிலாக மற்றது பயன்படும். இறக்கையுள்ள பூச்சிவகைகளில் தத்திச் செல்லும் பூச்சிகள் மட்டுமே சுத்த உணவாக மோசேயின் சட்டம் அனுமதிக்கிறது (லேவி 11:20-23). திருமுழுக்கு யோவான் "வெட்டுக்கிளியையும் காட்டுத் தேனையும்" உண்டு வந்தார் (மத் 3:4; மாற் 1:6). இரண்டும் யூதேயாப் பாலைவனத்தில் எளிதாகக் கிடைத்தன. வெட்டுக்கிளிக் கூட்டத்தின் படையெடுப்பு யோவே 1:2-2:11-இல் விரிவாகச் சித்திரிக்கப்படுகிறது. இப்பூச்சியின் வளரும் பல கட்டங்கள் 1:4-இல் விவரிக்கப்படுகின்றன (2:25). மற்றப் பகுதிகளில் வருவது போல் (உப 28:38.42; 2 நாள் 7:13; ஆமோ 4:9; 7:1), வெட்டுக்கிளிகளால் விவசாயம் அழிக்கப்படுவது இறைவனது தீர்ப்பாகக் கருதப்படுகிறது. எகிப்தில், எட்டாவது வாதையாக, வெட்டுக்கிளிகள் வயல்களையும் திராட்சைத் தோட்டங்களையும் அழித்தன (யாத் 10:1-20; சங் 78:46; 105:34).

உருவகமாக, பெருந் எண்ணிக்கையைக் குறிக்கவும் (நீதி 6:5; 7:12; எரே 46:23; 51:14), பேராவலையும் பாய்ந்து தாக்குவதைக் குறிக்கவும் (எசா 33:4), ஒழுங்கு முறைப்படி செயல்படுவதைக் குறிக்கவும் (பழ 30:27) வெட்டுக்கிளிகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. தாவும் குதிரை வெட்டுக்கிளிக்கு ஒப்பிடப்படுகிறது (யோபு 39:20). நாகூ 3:15-17-இல், அழிவிற்கும் பெருகுதலுக்கும் (3:15), இன்னல் வரும்போது தப்பி மறைந்துபோகும் தலைவர்களுக்கும் (3:16-17) வெட்டுக்கிளி ஒப்புமையாக்கப்படுகிறது. திருவெளி 8:6-9:21-இல் இறுதிக்காலப் பேரழிவுகளில் ஒன்று வெட்டுக்கிளிகளாகும். இவை தாவரங்களைத் தாக்குவதில்லை; மனிதர்களைத் தாக்குகின்றன (9:3-11). இவை மனிதப் படையை உருவகமாக எடுத்துக் காட்டலாம்.

வெண்கலக்கடல் (BRONZE SEA)

காண்க. வார்ப்புக்கடல்.

வெண்கல நீர்த்தொட்டி (BRONZE LAVER)

இது சந்திப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தொட்டியாகும் (யாத் 40:30). பீடத்தில் பலியிடும் முன், குருக்களும் பெரிய குருவும் தங்கள் கைகளையும் கால்களையும் இத்தொட்டியில் கழுவ வேண்டும் (30:17-21). இது சந்திப்புக்கூடார நுழைவாயிலில் பணியாற்றும் பெண்கள் கொண்டு வந்த வெண்கலத்தால் செய்யப்பட்டது (38:8). சாலமோன் ஆலயத்தில், இந்த நீர்த்தொட்டிக்குப் பதிலாக வார்ப்புக் கடல் தகனப்பலி பீடத்துக்கு அருகில் அமைக்கப்பட்டது (1 அர 7:23-26. 39; 2 நாள் 4:2-5.10). செருபாபேல் கட்டிய ஆலயத்தில் இத்தொட்டி அமைக்கப்பட்டது (1 மக் 4:49).

வெண்கலப்பாம்பு (BRONZE SERPENT)

பாலைவனத்தில் தமக்கும் மோசேக்கும் எதிராக முணுமுணுத்த மக்களை இறைவன் பாம்புகளை அனுப்பித் தண்டித்தார். அவர்கள் துயருற்று மனம் மாறி அழுதபோது இறைவன் மோசேயிடம் கூறியவாறு அவரால் செய்யப்பட்டதே இவ்வெண்கலப் பாம்பு.

பாம்பைக் கண்டு ஏற்படும் பயம் பிறரால் அறிவுறுத்தப்பட்ட பிறகுதான் ஏற்பட வேண்டுமென்பதில்லை. அதனை முன்பின் பார்த்திராத அல்லது கேள்விப்பட்டிராதவர்

கள் கூட முதன்முதலில் அதனைப் பார்க்கும் பொழுது பயப்படுவார்கள். இதனால்தான் பழங்கால மக்கள் இதனைத் தெய்வமாக வழிபட்டனர். எபிரேய மக்களும் இதற்கு விதிவிலக்கல்லர். அவ்வாறு பாம்பு வழிபாடு தோன்றியதற்குப் பாலைவன நிகழ்ச்சியில் அவர்கள் பயன்படுத்திய கதையாகவும் இருக்கலாம். பிற்காலத்தில் ஒபயிட்டு என்ற கிறிஸ்தவப் பிரிவினர் பாம்புகளை வழிபட்டனர். இக்கதை மேற்காசியப் புராணங்களிலிருந்து தோன்றியிருக்கலாம். ஏனெனில், அப்பகுதிகளில் மந்திர தந்திரங்களும், அதன் விளைவான திமர்ச் சுகங்களும் பரவியிருந்தன. ஆனால், விவிலியத் தொகுப்பாசிரியர் இதனை இறைவனில் கொண்டுள்ள விசுவாசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவே கூறுகிறார். வல்லமை பாம்பிடமிருந்து அன்று கடவுளிடமிருந்துதான் வந்தது என்பதை வலியுறுத்தவே விரும்புகிறார். இயேசுவும் தனது வரவிருக்கும் அனுபவத்தை இதனோடு இணைத்துக் கூறுகிறார் (யோவா 3:14). எபிரேயர்கள் எசேக்கியாவின் காலம் வரை பாம்பு வழிபாட்டைக் கைக்கொண்டனர் (2 அர 18:4) என்பதன் மூலம் தற்காலிகமாக ஒரு நேரத்தில் மட்டும் ஏற்பட்ட சுகத்திற்காக வழிபட்டதாகக் கூறமுடியாது.

பொதுவாக, தீமைக்கும் அழிவுக்கும் அடையாளமாக பாம்பு கூறப்பட்டாலும் அது சுகத்திற்கும், மறுபிறப்பிற்கும் அடையாளமாகவும் இருக்கிறது. இன்று கூட, பல மருத்துவக் கருவிகளில் பாம்பு அடையாளம் இருப்பதைக் காணலாம். பாம்பு உருவம் மெர்க்குரியின் (கிரேக்கக்கடவுள்) தூதர் கையில் உள்ள கோலைச்சுற்றி அமைந்துள்ளது.

வெண்கலம் (BRONZE)

இது செம்பும் வெள்ளீயமும் (தகரம்) சேர்ந்த உலோகக் கலப்பாகும். இச்சொல் செம்பும் ஈயமும் சேர்ந்த உலோகக் கலவையையும், நீலங்கலந்த வெண்மை நிற உலோகத்தையும், மற்ற உலோகங்களையும் குறிக்கப் பயன்பட்டுள்ளது. இது பித்தளை என்றும் குறிப்பிடப்படுகிறது.

வெண்கலம், மெசபொத்தாமியாவில் கி.மு. 4-ஆம் ஆயிரம் ஆண்டுக் காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டுள்ளது. வெண்கலக்காலம் பாலஸ்தீனத்தில் கி.மு. 3200-ஐ ஒட்டித் தொடங்கியது. இந்தத் தொல்பொருள் காலம், தொடக்க வெண்கலக் காலம் (3200-2100), மத்திய வெண்கலக் காலம் (2100-1550), பிந்தைய வெண்கலக் காலம் (1550-1220) என்று மூன்று அடிப்படைக் காலப்பிரிவாகப் பிரிக்கப்படுகிறது. இக்காலங்களில் கல் அல்லது இரும்பை விட வெண்கலம் அதிகமாகப் பயன்பட்டுள்ளது. ஆபிரகாம் பாலஸ்தீனத்திற்கு வந்ததும் குல மூதாதையர்களின் செயல்கள் மத்திய வெண்கலக் காலத்தைச் சேர்ந்ததாகவும், பாலஸ்தீனத்தைக் கைப்பற்றியது பிந்தைய வெண்கலக்காலத்தைச் சேர்ந்ததாகவும் கருதப்படுகிறது. பாலஸ்தீனத்தில், பிந்தைய வெண்கலக்காலம் வரை வெண்கலம் பொதுவான உலோகமாகப் பயன்படுத்தப்படவில்லை.

சாலமோன் ஆலயத்தில், அலங்காரப் பொருட்கள் செய்ய வெண்கலம் தாராளமாகப் பயன்பட்டுள்ளது (1 அர 7:13-47; 2 நாள் 4:1-18). புதைபொருள் ஆய்வுகள் பல்வகைப்பட்ட கருவிகள், ஆயுதங்கள், விளக்குகள், ஆணிகள், ஆபரணப் பொருள்களைக் கண்டெடுத்துள்ளன. போரில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் வெண்கலமும் செம்பும் பொதுவான பொருட்களாகும் (2 அர 25:13-17; எரே 52:17-23; காண்க. 2 சாமு 8:8).

வெண்ணிலக்கல் (PORPHYRY)

இஃது ஓர் வெண்ணீலப் பாறை வகையைச் சேர்ந்த கல். இது மெருகேற்றப் பெற்று மண்டபங்களிலும் பயன்படுத்தப்பட்டது (எஸ் 1:6). இது பல்வண்ண ஒட்டுத்தளத்தின் அமைப்பின் கூறுகளில் ஒன்றாகும். பாரசீகத் தலைநகரான சூசாவில் அமைந்த அரண்மனையின் முற்றத்தில் இத்தகைய விலையுயர்ந்த அழகிய கற்கள் பதிக்கப்பட்டிருந்தன (எஸ் 1:6).

வெண்மை (WHITE)

1. விவிலிய உலகத்திலே வெள்ளை நிறப். மனிதனின் மகிழ்ச்சியையும், விழாக் களையும் குறிப்பதாக வருகிறது. இது கபடற்ற தன்மை, மகிழ்ச்சி, தூய்மை, போன்ற குணங்களைப் பிரதிபலிப்பதாக வும், வியப்பைத் தூண்டுவதாகவும் அமைகி றது. ஒளியின் நிறமாகவும் வாழ்வின் நிறமாகவும் விளங்கும் வெள்ளை இருள், துயரம் இவற்றின் நிறமான கறுப்பு நிறத் திற்கு எதிரானதாக இருக்கிறது. விவிலியம் இந்தப் பல்வேறு பொருள்களில் வெண்மை யைப் பயன்படுத்துவதோடு (திருவுரை 9:8; சீரா 43:18) ஒரு புதிய பரிணாமத்தையும் வெள்ளை நிறத்திற்குக் கொடுக்கிறது. அஃது இறுதிக்காலத் தன்மையாகும். வெள்ளைநிறம் ஆண்டவரின் மகிமையில் பங்கு பெறுபவர்களோடு தொடர்புடைய தாகக் காட்டுகிறது.

2. விண்ணகத்தைச் சேர்ந்தவர்கள்: *திரு வெளிப்பாட்டு நூல் விண்ணக உலகத்தில் உள்ளவற்றைப் பற்றிப் பேசும்போது அடிக் கடி வெண்மை நிறத்தைப் பற்றிப் பேசி அதன் இறுதிக்காலப் பண்பை வெளிக் கொணர்கிறது. கூழாங்கல் (திருவெளி 2:17), மேகம் (14:14), குதிரை (19:11), அரியணை (20:11) ஆகியவை வெண்மை நிறமுடைய னவாக விவரிக்கப்படுகின்றன. வெண் ணாடை உடுத்திய மனிதனாயினும் சரி (எசே 9:2), கண்ணைப் பறிக்கும் ஒளிவீசும் உடையணிந்த கடவுளின் தூதர்களாகிய வான தூதர்களாயினும் சரி (லூக் 24:4; அ.ப. 10:30), விண்ணக அவையிலுள்ள 24 மூப்பர் கள் ஆயினும் (திருவெளி 4:4) மனுமகனாயி னும் சரி (1:13தொ), ''வெண்பனிபோல ஆடை அணிந்தவரும் தூய பஞ்சுபோல தலைமயிர் உடையவரும்'' (தானி 7:9) தொன்மை வாய்ந்தவருமானவரால் அறிவிக் கப்பட்ட கிறிஸ்துவாயினும் சரி இந்த விண்ணக உயிர்கள் அனைவருடைய வெண்மை விவிலியம் முழுவதிலும் சிறப் பித்துக் கூறப்படுகிறது.*

3. உருமாற்றம் பெற்றவர்கள்: *கிறிஸ்து வின் விண்ணக நிறமான வெண்மைநிறம், அவரது மண்ணக வாழ்வில் அவர் உருமாற் றம் அடைந்த நேரத்தைத்தவிர, மற்றநேரங்க ளில் தோன்றவில்லை. உருமாற்றத்தின் போது, ''அவரது ஆடைகள் இவ்வுலகில் எந்தச் சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெண்மையாயின'' (மாற் 9:3). இதே போல், தங்கள் பாவங்களிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்டு (எசா 1:18; தி.பா 51:9), நங்களுடைய உடையைச் செம்மறி யின் இரத்தத்தில் தோய்த்துத் தூய்மைப் படுத்திக் கொண்டவர்களுடையவும் (திரு வெளி 7:14), இறைவனின் மகிமையில் பங்கு கொள்பவர்களாக (7:9-13) உருமாற் றம் பெற்றவர்களுடையவும் புனிதர்களுடைய நிறமும் வெண்மைதான். இவர்கள் அனைவரும் வெற்றி பெற்றவரைப் புடை சூழ்ந்து, மகிழ்ச்சியோடு வெற்றிக்கீதம் பாடுவர் (3:4தொ). செம்மறியின் மணமகள் ''பகட்டான வெண்மை ஆடை'' உடுத்தி யிருந்தாள் (19:1-14).*

வழிபாட்டில் பொதுவாக வெண்ணிற ஆடையே குருக்கள் அணியும் ஆடையின் நிறமாக இருந்திருக்கிறது (லேவி 6:3). புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவரின் மேல் விண்ணக மகிமையைப் பிரதிபலிக்கும் வெண்ணிற ஆடை போர்த்தப்படுகிறது.

வெப்பக்காற்று (BLIGHT)

அரேபியப் பாலைவனத்தில் இருந்து வீசும் வெப்பக்காற்று, பாலஸ்தீனத்திற்கு அழிவுதரும் இயற்கைச் சக்திகளில் ஒன்றா கும். இக்காற்று ஒரே நாளில் பூக்களையும், பழங்களையும் உதிர்த்துவிடுவதோடு பயிர் களையும் அழித்துவிடும். 1 அர 8:37; 2 நாள் 6:28-இல் கூறப்படும் இயற்கையான சீற்றங்களிலும் இக்காற்று பற்றிக் கூறப்படு கிறது. மேலும் கடவுள் மக்களுக்குக் கொடுத்த தண்டனைகளைப் பற்றிக் கூறும் போதும் (உப 28:22; ஆமோ 4:9; ஆகா 2:17) இது பற்றிச் சொல்லப்படுகிறது.

வெளிப்பாட்டு இலக்கியம் (APOCALYPTIC LITERATURE)

I. முன்னுரை:

பொதுவாக வெளிப்பாட்டு இலக்கியம் உலக வரலாற்றுப்போக்கை உருவகமாக விளக்கும் ஒரு யுக்தியாகும். இந்த உலக

முடிவை வெளிப்படுத்தும். இது குறிப்பாக, வளர்ச்சியடைந்த இறுதிக்கால இயலைக் கொண்டிருக்கும். அதாவது மரணம், தீர்ப்பு, தண்டனை, சன்மானம், மரணத்துக்குப் பின் வாழ்வு ஆகியவை பற்றிய இறையியலைக் கொண்டிருக்கும் சமயங்களில் காணப்படுகிறது. இந்தியச் சமயங்களில் காணப்படும் இத்தகைய யூகங்கள், ஈரானிய சமயச்சிந்தனைகள் வழியாக இஸ்ராயேலைப் பாதித்திருப்பதாகத் தெரிகிறது. அதன் விளைவுகளைப் பழைய ஏற்பாட்டில் காணலாம். எசேக்கியேல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட நிலையில் அவரது நூல் எழுதப்பட்டது. எசாயாவின் சில பகுதிகள் இஸ்ராயேல் நாடு கடத்தப்பட்டபோதும் அதற்குப் பின்னும் தோன்றின என்பதை நினைவில் கொண்டிருப்பது நன்று. இந்தக் கட்டுரையில் விவிலியத்தில் காணப்படும் வெளிப்பாட்டு இலக்கியங்களுக்குப் பொது அறிமுகம் வழங்குகிறோம்.

விவிலிய இலக்கிய வரலாற்றில், இறைவாக்குரைத்தல் காலப்போக்கில் மங்கிப் போய், பல புதிய இலக்கிய வடிவங்களுக்கு இடம் அளித்தது. ஒரு புறம், மக்களுக்கு வழிகாட்டுபவர்கள் என்ற அளவில் ஞான இலக்கிய ஆசிரியர்கள் இறைவாக்கினரது பாகத்தை எடுத்துக்கொண்டனர். மறுபுறம், இறைவாக்குகளால் வரும் இறுதிக்காலம் பற்றிய வாக்குகள் பெயர் தெரியாத ஆசிரியர்களிடையே, மரபு அடிப்படைச் சொற்றொடர்களும் தெளிவில்லாத் தன்மையும் கொண்ட நடையில் தன்னிச்சையாக வளர்ந்தன. இந்த வளர்ச்சியும் இரு வடிவம் எடுக்கிறது. ஒன்று மிட்ராஷ் இலக்கியமாகும். மற்றது, இறுதிக்காலம் பற்றிய முந்தைய இறைவாக்கினர்களின் கூற்றுகளும் இறைவாக்குக் காட்சிகளும் இணைந்து, காலப்போக்கில் புதிய இலக்கிய வடிவாகத் தோன்றுகிறது. இது கனவுகளிலும் அடையாளக் காட்சிகளிலும் இறை இரகசியங்களை எடுத்துக்கூறும் வெளிப்பாட்டு இலக்கியமாகும். ஏமாற்றுத் தன்மையுடைய நிகழ்காலத்தின் பொருளை அறியவும், இறைவனது திட்டம் வருங்காலத்தில் எப்படி நிறைவேறும் என்பது பற்றித் தெளிவடையவும் விரும்பிய பக்தியுள்ள யூதர்களின் கடுந்துயர்கள் இந்த இலக்கிய வடிவம் வழியாக வெளிப்படுகின்றன. இந்த இலக்கியம் பழைய ஏற்பாட்டின் இறுதிக் காலத்திலும், புதிய ஏற்பாட்டின் தொடக்க காலத்திலும் வளர்ச்சியுற்றுச் செழித்தோங்கியது.

இறைவாக்கு இலக்கியத்திலிருந்து தோன்றிய மிட்ராகம் வெளிப்பாட்டு இலக்கியங்களும் பழங்கால இலக்கியச் சொற்களைப் பயன்படுத்துதல், அடையாள மொழியியல், கதைகள், நிறைவேற்றுதல் பற்றிய கருத்துக்கள் ஆகியவற்றில் ஒத்திருந்தாலும், மிட்ராஷ் இலக்கியத்தில் காணப்படாத சில பண்புகள் வெளிப்பாட்டு இலக்கியத்தில் வருகின்றன. அவை உலகம் முழுவதையும் உட்படுத்தும் மிகப்பெரும் இறுதிப் போராட்டம், உலகின் இறுதிக்காலம், இறையரசு, புனைபெயர், புராணக் கூறுகள் ஆகியவையாகும்.

இந்தக் கட்டுரையில் சமய, அரசியல் பின்னணியில் வெளிப்பாட்டு இலக்கிய வளர்ச்சி, அதன் பண்புகள் ஆகியவற்றைப் பார்ப்போம்.

II **பெயர்:** வெளிப்பாட்டு இலக்கியம் என்ற சொல் ''அப்போகலிப்சோஸ் (apocalypsos) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வருகிறது. ''அப்போகலுப்டெயின்'' (apokaluptein) என்ற கிரேக்கச் சொல்லுக்குத் ''திரை விலக்குதல்'' அல்லது ''வெளிப்படுத்துதல்'' என்று பொருள் கூறலாம். பழைய ஏற்பாட்டில் இந்தக் கிரேக்கச்சொல் ''காலா'' (gala) என்ற எபிரேயச் சொல்லை மொழி பெயர்க்கிறது. சாதாரணமாய் இவ்வகை இலக்கியத்தில் ஆசிரியரின் கண்களுக்குக் காட்சிகள் வெளிப்படுத்தப்படுகின்றன என்று கொள்ளப்படுவதால், இக்கருத்தை எடுத்துக்கூறும் பொருத்தமான எபிரேயச்சொல் காட்சி என்று பொருள்படும் ''ஹாசியோன்'' (Hazion) என்பதாகும்.தமிழில் இவ்வகை இலக்கியத்தைக் குறிக்க வெளிப்பாட்டு இலக்கியம் அல்லது

காட்சி இலக்கியம் என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தலாம். இக்கட்டுரையில் வெளிப்பாட்டு இலக்கியம் என்ற சொற்றொடரையே பயன்படுத்துவோம்.

III சமய. அரசியல் பின்னணியில் வெளிப்பாட்டு இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்: எந்த ஓர் இலக்கிய வடிவின் வளர்ச்சியையும் ஆய்வு செய்ய, அது தோன்றி வளர்ச்சியடைந்த காலத்தைச் சேர்ந்த, அக்காலத்தின் தன்மையை எடுத்துக் காட்டும் தகுந்த, போதிய நூல்களையோ, இலக்கியத் துணுக்குகளையோ கொண்டிருப்பது அவசியமாகும். அண்மைக் காலத்து இலக்கிய வடிவங்களுக்கு இவை எளிதில் கிடைக்கும். ஆனால், பழங்கால இலக்கியங்களுக்கு இவை போதிய அளவு கிடைப்பது அரிது. வெளிப்பாட்டு இலக்கிய வடிவத்தைப் பொருத்த மட்டும் போதிய அளவு நூல்களோ இலக்கியத் துணுக்குகளோ அதிகம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இஃது ஒரு குறையே. இந்நிலை, இந்த விவிலிய வடிவின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை பற்றித் தெளிவாகவும் துல்லியமாகவும் எடுத்துரைப்பதைக் கடினமாக்குகிறது. ஆயினும், ஓர் இலக்கிய வடிவின் வளர்ச்சியில் ஏதாவது ஒரு கட்டத்தில் அஃது எப்படியிருந்தது, அதன் பண்புகள் என்ன என்பவை பற்றி ஓரளவு அறியக்கூடுமானால், அது பூவாக வளர்ச்சியுற்றதற்குரிய வித்தை அடையாளம் காட்டலாம். விவிலியத்தின் சில பழங்கால இலக்கிய வடிவங்களைப் பொருத்தமட்டும் அதிகம் போனால் இந்த அளவுதான் செய்ய முடியும். ஆனால் இதுவே போதுமானது.

பின்வரும் பகுதியில், விவிலியத்திலிருந்து வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த வெளிப்பாட்டு இலக்கியப் பகுதிகளையும் சமய, அரசியல் பின்னணிகளையும் எடுத்துக்கூறுகிறோம். இதிலிருந்து வெளிப்பாட்டு இலக்கியத்தின் முக்கிய கருத்துக்களின் தோற்றம், அதன் பண்புகள் ஆகியவை பற்றி ஓரளவு புரிந்து கொள்ளலாம். இவற்றிலிருந்து இவ்வடிவம் முதிர்ச்சியடைந்த வடிவில் வரும் தானியேல், திருவெளிப்பாடு போன்ற நூல்களை நன்கு புரிந்து கொள்ளலாம். இத்தகைய ஆய்வின் தொகுப்பு விரிவான எடுத்துக்காட்டுகள் இன்மையை ஈடுசெய்ய உதவும் என நம்புகிறோம். இந்த ஆய்வு, இறைவாக்கு இலக்கியத்திலிருந்து வெளிப்பாட்டு இலக்கியம் எப்படித் தோன்றி வளர்ச்சியுற்றது என்றும் காட்டும்.

1. தொடக்க காலம்: இக்காலத்திய இலக்கியத்துணுக்குகள் நேரடியாக வெளிப்பாட்டுப் பண்புகளைக் காட்டவில்லை. ஆனால், அவற்றில் காணப்படும் கூறுகள் பிற்காலத்தில் வெளிப்பாட்டு இலக்கியங்களில் எடுத்துக் கையாளப்படும்.

யாத் 7-12: ஒரு பெரும் நெருக்கடியான காலத்தில், புறவின எகிப்தியர்களின் அடக்குமுறை அட்டூழியங்களிலிருந்து இஸ்ராயேலை விடுவிக்க, பெருந்துன்பங்களை எகிப்தியர் மேல் அனுப்பி இறைவன் உறுதியாக இடையிடு செய்தார் என்ற உண்மை, அவரது மக்களின் மீட்புக்குத் தேவையானால் உரிய காலத்தில் அவ்வாறே இறைவன் செய்யக் கூடும் என்ற அனுபவ உணர்வுக்கு இட்டுச் சென்றது. தங்கள் பகைவர்களுக்கு எதிராக இறைவன் தலையிடுவார் என்ற நம்பிக்கை மிக்க எதிர்பார்ப்பை எடுத்துக் கூறமட்டுமன்று, இறைவன் தமக்கு மாறான சக்திகளுக்கு எதிராகச் செய்யும் இடையீட்டை விவரிக்கவும், வெளிப்பாட்டு இலக்கிய ஆசிரியர்கள் இப்பெருந்துன்பங்களை அடிக்கடி பயன்படுத்துகின்றனர் (*உப 28:58-61; எசே 38:21-22; செக் 14:12-15; யோவே 2:2-9; திருவெளி 9:18*).

யாத் 19:16-19: சீனாய் மலையில் நிகழ்ந்த இறையாற்றல் தோற்றத்தோடு நிகழ்ந்த இடி, மின்னல், புயல் மேகங்கள், புகைமண்டலம், எக்காள முழக்கங்கள் போன்றவை, இறைவன் நடுவராக வருவதை விவரிக்க ஒரே தன்மையுடைய ஏதுக்களாகப் பயன்படுகின்றன. இவ்வாறு கவிஞர்களும் (*சங் 18; 50; 76,*) இறைவாக்கி

பங்களும் (எசா 6; எசே 1; மீக் 1:3-4; செப் 1:14-16; அப 3:3-6) மட்டுமல்லர், வெளிப்பாட்டு இலக்கிய ஆசிரியர்களும் (எசே 38:18-23; தானி 7:9-10; திருவெளி 4:4-5) இவற்றைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

உப 28: இங்குக் கூறப்படும் ஆசீர்களும் சாபங்களும் வருங்கால இறைவாக்கினர்களுக்கும், வெளிப்பாட்டு ஆசிரியர்களுக்கும் இலக்கியச் கரங்கங்களாகின்றன. இது போன்ற பகுதிகளிலிருந்து தீயவர்களை, குறிப்பாக இறைவன் தமக்கு எதிரான சக்திகளை, தண்டிப்பார் என்ற உறுதிக்கு வருங்கால ஆசிரியர்கள் வருவதோடல்லாமல், தீயவர்களைத் தண்டிக்க இறைவனது தவிர்க்க முடியாத இடையீட்டின் விளைவுகளை விவரிக்க வேண்டிய மிகவும் உயிர்ச் சித்திரமான மொழியையும் பெறுகின்றனர்.

2. இறைவாக்கினர் காலம்: ஆமோ 5:18 இல் வரும் ''ஆண்டவரின் நாள்'', கி.மு. 712-இல் நடந்த சாமாரியாவின் அழிவை முதன்மையாக உணர்த்தினாலும், யாத்திரைக் காலத்தில் செய்ததுபோல் இக் காலத்திலும் இறைவன் வரலாற்றில் தலையிட்டு அதன் போக்கை மாற்றி அமைப்பார் என்ற உட்பொருளைக் கொண்டுள்ளது. அந்நாளை ''ஒளிமிக்க நாளன்று, இருள் சூழ்ந்த நாளாகத்தான் இருக்கும்'' என்று ஆமோஸ் விவரிக்கிறார். அந்நாளின் பயங்கரத்துக்கு முன் ''கற்குகைகளில் நுழைந்து கொள்ளுங்கள், மண்ணில் பதுங்கி மறைந்து கொள்ளுங்கள்'' என்று எசாயா மக்களை எச்சரிக்கிறார் (எசா 2:10). வரலாற்றில் நடக்கும் எந்த ஒரு மாபெரும் இறைவனது இடையீட்டையும், குறிப்பாக இறைவனுக்கு எதிரான தீய சக்திகளின் அழிவையும் இறையரக நிறுவப்படுதலையும் எடுத்துக் கூற ''ஆண்டவரின் நாள்'' என்ற சொற்றொடர் பிற்காலத்தில் பயன்படுகிறது. அந்நாள் தீயவர்களுக்குப் பெருந்தண்டனையையும் நல்லவர்களுக்கு ஆசீர்களையும் கொண்டு வரும் என்ற பொருளில் பிற்கால வெளிப்பாட்டு ஆசிரியர்கள் இச்சொற்றொடரைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு, இறைவனுக்கு எதிரான சக்திகளின் மிகுந்த ஆற்றலிலிருந்து இறைவன் தமது மக்களை மீட்க அவரது நேரடி இடையீட்டால் மட்டுந்தான் முடியும் என்று தோன்றும் போதெல்லாம் ''ஆண்டவரின் நாளை'' நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதும், அதன் வருகையை உற்சாகத்தோடு விவரிப்பதும் இறைவாக்கினர்களிலும் (எசா 2:12-22; 4:2-6; 11:10-16; எரே 4:9-18; 50:27-29; செப் 1:4-18; எசே 30:1-3), வெளிப்பாட்டு ஆசிரியர்களிலும் (எசே 38:18-23; 39:11-16; எசா 13:6-22; 24:21-23; 25:9-12; செக் 12:3-9; 13:1-4; 14:1-21; யோவே 1:15; 2:1-2; தானி 7-12; திருவெளிப்பாட்டு நூலில் ஆண்டவரின் நாள் என்ற கருத்து உள்ளடங்கியுள்ளது) நிலையான இலக்கிய மரபு ஆகிறது என்பதிலிருந்து அறியலாம்.

எசா 11: இது விவிலியத்தில் புகழ்பெற்ற அதிகாரமாகும். ஒருவேளை 11:1-9 முதல் எசாயாவையும், 11:10-16 இரண்டாம் எசாயாவையும் சேர்ந்ததாக இருக்கலாம். இதில் மெசியாவின் வருகையும் ஆதி 2-3-இல் வரும் இன்பவனக் காலம் மீண்டும் வருதலும் ஆண்டவரின் நாள் என்ற கருத்தோடு இணைக்கப்படுகின்றன. இது வருங்காலத்தில் இறைவாக்கு, வெளிப்பாட்டு இலக்கியங்களில் இக்கருத்துக்கள் அடிக்கடி ஒருங்கு சேர்த்து கூறப்படுதலுக்கு வழிவகுக்கிறது (ஆமோ 9:11-15; எசா 65:17-25; செக் 14:6-11; யோவே 4:17-21; தானி 2:44-45; 7:13-14; 9:24-27; திருவெளி 22).

எசா 13: இது முதலில் அசீரியர்களுக்கு எதிராகக் கூறப்பட்டதாகும். பிற்காலத்தில் பாபிலோனியர்களுக்கு எதிரான கூற்றாக மாற்றம் அடைந்தது. இதன் தற்போதைய வடிவில் இஸ்ராயேலரைக் கொடுமைப் படுத்தியவர்களுக்கு ''ஆண்டவரின் நாள்'' வருவதை விவரிக்கிறது. அந்நாளின் பயங்கரத் துயரையும் இருளையும் மிகைப் படுத்த, தனது கற்பனையை உண்மையான வெளிப்பாட்டுப் பாணியில் செயல்பட ஆசிரியர் விட்டுவிடுகிறார். ''வானத்து மீன்களும் விண்மீன் கூட்டங்களும் தம் ஒளியை வீசமாட்டா; தோன்றும்போதே கதிரவன்

இருண்டு போவான்; வெண்ணிலவும் தண்ணொளியைப் பரப்பிடாது'' (எசா 13:10) என்றும், ''வானத்தை நடுங்கச் செய்வோம், பூமியும் தன்னிலையில் ஆட்டம் கொடுக்கும்'' (எசா 13:13) என்றும் இறைவன் கூறுகிறார். இத்தகைய அண்டக் குமுறல்கள் பற்றிய குறிப்புக்கள், சீனாய் மலையின் இறையாற்றல் தோற்றம் பற்றிய உருவகத்தைப் போல், வெளிப்பாட்டு நூல்களில் ஆண்டவரின் பெருநாள் பற்றிய விவரிப்புக்குக் கூடுதல் மேடை ஏதுக்களாகின்றன (எசா 24:17-23; யோவே 3:3தொ; 4:15; மத் 24:29-31; திருவெளி 6:12-17).

3. நாடு கடத்தப்படுதலுக்கு முந்திய காலம்: இஃது இஸ்ராயேலின் அரசாட்சியின் இறுதிக்காலமாகும். இப்போது தாவீது அரசனின் ஆற்றல் மிக்க தாக்கமும், சாலமோனின் பொற்கால நம்பிக்கையும் அழிந்து போயின. இக்காலம் இரு பொருள் பொதிந்த நிகழ்ச்சிகளுக்கும் முக்கியமானதாகும்.

3. அ) எரேமியாவால் உந்தப்பட்டு இறைவாக்குரைத்தல் மீண்டும் உயிர் பெறுதல்: இதுவரை எசேக்கியாவைத் தவிர மற்ற அரசர்கள் காலத்தில் யாவேக்கு எதிராக யூதாவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த போக்கை யோசியா அரசன் மாற்றி அமைத்தார். இதற்கு வேண்டிய பக்தியும் துணிவும் கொண்டிருந்தார். மேலும், அவரது ஆட்சியின் ஏழாவது ஆண்டில் பலமிக்க அசீரியப் பேரரசு வீழ்ச்சியுற்று அழிந்தது. மற்றொரு பேரரசு பாபிலோனியாவில் தோன்றியது. இதைத் தக்க சமயமாகக் கருதி, யோசியா அசீரியச் சிலைகளை அகற்றி எருசலேமைச் சுத்தி செய்தார். இச்செயல் அசீரியர்களுக்கு எதிரான சுதந்தர அறிக்கைக்குச் சமமாகும். இஃதோடு, இதுவரை அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த சுதந்தரக் குரல் பேரரசின் எப்பக்கத்திலும் எழுந்தது.

இப்பேரரசுகளின் வீழ்ச்சியையும், எழுச்சியையும் எரேமியா, செப்பனியா, நாகூம் போன்ற இறைவாக்கினர்களின் போதனைகள் அழுத்தமாக எதிரொலிக்கின்றன. ஆமோஸ் விவரித்த ''ஆண்டவரின் நாள்'' இறைவனது படைப்பு அனைத்தின்மேலும் வரும் அழிவுமிக்க பயங்கரத் தீர்ப்பாக வெளிப்படுகிறது (செப் 1:2-3). நன்னம்பிக்கையுடைய நாகூம், இந்நாள் யூதாவுக்கு அமைதியை அறிவிக்கும் நற்செய்தியைக் கொண்டு வருவதாகவும், யூதாவின் எதிரிகளுக்கு முழு அழிவைக் கொண்டு வருவதாகவும் காண்கிறார் (நாகூ 1:15; 2). ஆகவே நாடு கடத்தப்படுவதற்கு முன்பே, இறைவன் தமது மக்களிடையிலோ, உலக முழுவதிலுமோ தமது நம்பிக்கைக்கும் வாக்குறுதிகளுக்கும் மாறாக, எழும் எதிர்பார்ப்புகளை முழுவதும் அழிப்பார் என்று இறைவாக்கினர் தெளிவாக அறிவித்தனர். வெளிப்பாட்டு ஆசிரியர்கள் இந்த ''ஆண்டவரின் நாள்'' என்ற கருத்தைப் பயன்படுத்தி அதை இன்னும் கடுமையாகவும் உறுதியோடும் விவரிப்பர்.

இறைவாக்கு இலக்கியத்திலிருந்து வெளிப்பாட்டு இலக்கியத்திற்கு வரும் வரலாற்றில் எரேமியா முக்கியமானவர். அவருடைய போதகம் யூதாவின் பாவங்களின் அண்ட விளைவுகளை அழுத்திக் கூறும் வெளிப்பாட்டு இலக்கியத்திற்குத் தயாரித்தது. ''வானங்களே இதைக் கண்டு வியப்படையுங்கள்; மிகவும் அஞ்சித் திடுக்கிடுங்கள்'' (எரே 2:12). எரேமியாவில் அண்டத்தையும், இஸ்ராயேலையும் நெருக்கமாக இணைக்கும் மற்ற வாசகங்கள்: எரே 4:23-26; 5:2-23; 9:9; 10:10-13; 27:5-6 என்பன. எரேமியாவின் தனிநபர் பொறுப்புடைமைப் போதகத்தில் புற இனத்தவரும் உள்ளடங்குவர். அவர்களும் இறைவனுக்கு ஏற்புடைய விதத்தில் நடக்கக்கூடும், நடக்க வேண்டும். யாவரையும் உள்ளடக்கும் இந்தப் பொதுமைக் கோட்பாட்டை வெளிப்பாட்டு ஆசிரியர்கள் வேறு கோணத்தில் அணுகுவர். உலகம் முழுவதும் புதிய படைப்பாகிய இறையரசில் ஈடுபட்டிருக்கிறது என்று அழுத்திக் கூறுவர். எரேமியா தனிநபர் பற்றிய தமது போதகத்தை அழுத்திக் கூறும் அதே அதிகாரத்தில் (31:29-30) புதிய படைப்பையும் (31:22) புதிய உடன்

படிக்கையையும் அறிவிக்கிறார் (31:32-34). தனிநபர் பொறுப்புடைமை, பொதுமைக் கோட்பாடு ஆகிய இரு கருத்துக்களும் எசேக்கியேலிலும் சேர்ந்து காணப்படுகின்றன (எசே 18:2; 36:26; 37:26). நிறைவு பெறாத வாக்குறுதிகளின் தாக்கமும் வெளிப்பாட்டு இலக்கியங்களைப் பாதித்தன. நிறைவுறும் காலம் தள்ளிப் போடப்பட்டபோது வெளிப்பாட்டு ஆசிரியர்கள் இறை இரகசியங்களை ஆழ்ந்து நோக்கி ஆராய்ந்து எடுத்துரைக்க முனைந்தனர்.

3. ஆ) யோசியாவின் உபாகமச் சீர்திருத்தம்: இந்த இயக்கம் வெளிப்பாட்டு இலக்கியத்தைப் பெரிதும் பாதித்தது. இதன் பண்புகளாகிய வரலாறு பற்றிய இறையியல், கடந்த காலத்தை நிகழ்கால மெய்ம்மையாகத் தோன்றும்படி விவரித்தல், எருசலேமைச் சார்ந்த சாதோக்கின் குருக்களுக்கு எதிர்ப்பு ஆகிய மூன்றும் வெளிப்பாட்டு இலக்கியங்களில் காணப்படுகின்றன. பாவம் - தண்டனை - மனத்துக்கம் -மீட்பு ஆகியவை அடங்கிய உபாகம வரலாற்று இயல் (நீதி 2:6-3:6) வெளிப்பாட்டு நூல்களில் மீண்டும் வருகிறது. பாவமிக்க உலகு அச்சமிக்க இறுதிப் போரில் வெடிக்கிறது. இந்த இறுதிக்காலத் துன்பங்களிலிருந்து திடீரென்று புதிய சகாப்தம் தோன்றுகிறது. ஆசீர்களும் சாபங்களும் அடங்கிய வெளிப்பாட்டு நடை இயேசுவின் இறுதிக்கால உரையிலும் காணப்படுகிறது (மத் 23-25).

கடந்த காலத்தின் மெய்ம்மைத் தோற்றமாக நிகழ்காலத்தை நோக்குவது உபாகமப் பாரம்பரியத்திற்கு விருப்பமானதொன்றாகும். உபாகமம் ஒவ்வொரு தலைமுறையிலும் ஒரேபு மலையின் மோசே உடன்படிக்கையை மீண்டும் நடப்பதாக, மீட்பின் மறைபொருள் மிக்க செயலை விளக்குகிறது (உப 5:1-5). உபாகமம் கடந்த காலத்தை வளைந்து கொடாத சட்டங்களைக் கொண்டதாகவும், ஆனால், பாதுகாப்புக்கும், மகிழ்ச்சிக்கும் நிலையான உதவிகளைக் கொண்டிருப்பதாகவும் நோக்குகிறது (உப 1:21-31; 4:1-8; 8:1-5). இறைவன் அச்சமிக்கவர், அணுக முடியாதவர், அறிய முடியாதவர் (உப 4:32-36; 5:22-24; 10:14-21). ஆனால், அவரது அன்பு, நன்மைத்தன்மை ஆகியவற்றைப் போல் அவரைப் பற்றிய வேறு எதுவும் அவ்வளவு மறைபொருள் மிக்கதன்று (உப 4:31. 37; 6:4-12; 7:6-9; 10:15). வெளிப்பாட்டு நூல்கள் உபாகமத்தில் காணப்படும் மென்மையைக் கொண்டிராமல் இருக்கலாம்; ஆனால், முந்தைய காலத்திய பெரும் மீட்புச் செயல்களைப் புதுப்பிக்கும் இறைவனது வியப்பும் அச்சமும் மிக்க பிரசன்னத்தை அழுத்திக் கூறுகின்றன. அவை தங்கள் விவரிப்பை முழுவதும் பழங்காலப் பெயர்களிலேயே தருகின்றன.

உபாகமச் சீர்திருத்தம் குருக்களின் ஆதிக்கத்திலிருந்து சுதந்தரமானது; அவர்களுக்கு எதிராகவும் உள்ளது. குருக்கள் பழமை விரும்பிகள்; குறுகிய நோக்கமும் உள்ளவர்கள். உபாகமச் சீர்த்திருத்தம் குருத்துவத்தை எல்லா லேவியர்களுக்கும் திறந்துவிட முயன்றது (உப 18:1-8); ஆனால், வெற்றியடையவில்லை (எசே 4:10 தொ). பிற்காலத்தில் வந்த வெளிப்பாட்டு இயக்கம் குருக்களில் தன் தலைமையைக் காணவில்லை. பரிசேயர்கள், கும்ரான் குழுவினர் போன்றவர்கள் சதுசேயக் குருத்துவத்திற்கு எதிராகச் செயல்பட்டனர். இவர்கள் வானதூதர், அண்டம் சார்ந்த போராட்டம், உலகம் மாற்றியமைக்கப்படுதல், உயிர்ப்பு, மரணத்துக்குப் பின் வாழ்வு ஆகியவற்றில் கொண்ட வெளிப்பாட்டு விசுவாசத்தைத் தொடர்ந்தனர்.

நாடு கடத்தப்படுதலுக்கு முந்திய இக்காலம் நெபுகத்னேசரின் படைகள் எருசலேமை அழிப்பதோடு முடிகிறது. இந்தத் துன்பமிக்க நிகழ்ச்சி விவிலியத்தில் வரும் இஸ்ராயேலின் வரலாற்றை இரு பெரும் பிரிவாகப் பிரிப்பனவற்றில் ஒன்றாகும். இதற்கு முன்னும் பின்னும் நடந்தவற்றையெல்லாம் பிரித்து, அவற்றைப் பெரிதும் பாதித்தது.

4. நாடு கடத்தப்பட்ட காலம்: நாடு கடத்தப்பட்ட மக்களுக்குத் தோராவும் இறைவாக்கி

னர்களின் அச்சுறுத்தல்களுமே எஞ்சியிருந்தன. அவற்றை நெடுங்காலமாகத் தியானித்தனர். அஃது இயல்பானதும், உண்மைத் தன்மையுடையதாயும், துணிவுடைய எழுச்சியுடையதாயும் இருந்தது. அதை எசேக்கியேலிலும் உப எசாயாவிலும் காணலாம்.

4. அ) எசேக்கியேல்: இவரது நூலில் வெளிப்பாட்டு இலக்கியத்தின் தொடக்கக் கூறுகள் ஒருங்கிணைந்து காணப்படுகின்றன. இந்நூல் பின்வரும் காலங்களுக்கு ஒரு மாதிரியாக அமைந்துள்ளது. அவருடைய நடையின் பண்புகள் நம்மை மலைக்கச் செய்யக்கூடியன. அவை அவரது அணுகு முறையின் புதிர்மிக்க தெளிவின்மை, ஒன்றன்மேல் ஒன்றாகக் குவிக்கப்படும் விசித்திரமான புதிர்மிக்க அடையாள உருவகங்கள், விசித்திரமான காட்சிகள், அவற்றை விளக்குவதற்கு வானதூதர்கள் இடையீட்டின் தேவை, முழு அழிவிலிருந்து முழுப்புதுப்பித்தலுக்கு மாறும் பெரும் மாற்றம் ஆகியவையாகும். இவற்றில் வெளிப்பாட்டு நடையின் முக்கிய பண்புகளை நாம் அடையாளம் காணலாம். இறைவாக்கு நூல் வெளிப்பாட்டு நூலாக மாறியதற்கு எசேக்கியேல் நூல் மிகச் சிறந்த மாதிரியாகும்.

எசேக்கியேல் இறைவாக்குகளைப் பேச மட்டும் செய்யவில்லை. அவற்றை அடையாளமாகவும் புதிராகவும் செய்து காட்டினார். அவரது செயல்களில் அவர் ''இஸ்ராயேல் மக்களுக்கு ஓர் அடையாளமாவார்'' (எசே 12:6.11; 4:3; 4:24.27). அவர் மௌனமாய்ச் செய்கைகளைச் செய்து ''இதுதான் எருசலேம்'' என்று விளக்குவது பயங்கரமாகத் தோன்றவல்லது (எசே 5:5).

எசேக்கியேலின் வெளிப்பாட்டு நடை அவர் ''அடையாள மனிதன்'' என்பதில் மட்டுமன்று, அவர் ''நூலின் மனிதன்'' என்பதிலும் தெரிகிறது. மிகப் பழங்கால, பரிசுத்தப் பாரம்பரியங்களிலிருந்து எடுக்கப்பட்ட உருவகங்களில் தமது கருத்தை ஒருவிதப் பிடிவாதத்துடன் எடுத்துக் கூறுகிறார். இதற்குச் சான்றுகள்: கெருபீம் (எசே 1:1; ஆதி 3:24; யாத் 37:7), நோவா, தானியேல், யோபு (எசே 14:14; 28:3; ஆதி 6:9தொ; எசே 21:32; ஆதி 49:10-ஐச் சார்ந்திருப்பது), எசே 27:11-19-இல் வரும் படைப்புக் கதை (ஆதி 2:4-3:4), கோகு மாகோகு ஆகியோருக்கு எதிரான இறைவாக்கு (எசே 38-39; ஆதி 10:2; எண் 24:7; ஆமோ 7:1). இவ்வாறு கடந்த காலத்திலிருந்து எடுக்கப்பட்ட மேடை ஏதுக்களால் நிகழ்காலத்தை விளக்குவது பிற்கால வெளிப்பாட்டு நூல்களில் குறிப்பாக, தானியேல் நூலில் தெளிவாகக் காணப்படும்.

குரு என்ற அளவில் எசேக்கியேல் வருங்கால யூதத்துவத்தில் நிலையான ஆதிக்கம் செலுத்துவார். பழங்கால, பிற்கால வழிபாட்டிலும், வெளிப்பாட்டு இலக்கியங்களிலும் பொதுவாகக் காணப்படும் ஒரு பண்பு யாவேக்கும் அவருடைய உலகளாவிய எதிர்ச் சக்திகளுக்கும் நடக்கும் பெரும் போராகும். இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு எசே 38-89 ஆகும். இப்பகுதியில் நாடு கடத்தப்பட்டோரில் அவநம்பிக்கை கொண்டவர்களுக்கு எசேக்கியேல் இறைவனுக்குச் சார்பான சக்திகளுக்கும் எதிரான சக்திகளுக்கும் இடையே நடக்கும் போரை விவரிக்கிறார். இறைவன் தமது மக்களை அவர்களுடைய பாவங்களுக்காகத் தண்டிப்பதில் பிற இனத்தவரைப் பயன்படுத்துவார் என்று இறை வாக்கினர்கள் (எசாயா, எரேமியா, செப்பனியா, அபக்கூக்கு) முன் அறிவித்திருந்தனர். புற இனத்தவர் இறைவனது பழிதீர்க்கும் கருவி என்ற நிலையைக் கடந்து சென்று, அவரது மக்களை முழுக்க அழிக்க முயலும்போது அவர்கள் செயலளவில் இறைவனது எதிரிகளாகின்றனர். அப்படியாகும்போது அவரது சீற்றத்தின் நாளில் அவர்கள் முழுவதும் அழிக்கப்படுவர் என்று எசேக்கியேல் சுட்டிக்காட்டுகிறார். இதைப் பின்பற்றி, பிற்கால வெளிப்பாட்டு ஆசிரியர்கள், இறுதிக்காலத்தில் இறைவன் தமக்கு எதிரான சக்திகளை அழித்து அவரது அரசை இஸ்ராயேலின் மேல் மட்டுமன்று, எல்லா மனிதர்கள் நடுவிலும் நிறுவுவார் என்று இறைமக்களுக்கு உறுதி அளிக்கின்ற

னர் (எசா 13:4-9; செக் 2:1-4; 12-14; யோவே 4:9-21; தானி 7-12; திருவெளி 13-20).

வழிபாட்டுப் பாடல்களிலும் சடங்குகளிலும் குருக்களால் நடத்தப்பட்டு, யாவே மற்ற நாடுகள் மீதும் அவர்கள் கடவுள்கள் மீதும் இறுதியில் வெற்றி கொள்கிறார் (சங் 7:7-9; 9:5-9; 19; 83; 96). வெளிப்பாட்டு இலக்கியம் நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் இறுதிக்காலப் போரை ஒரு வழிபாட்டுச் சடங்கைப்போல் விவரிக்கிறது. இறுதி வெற்றி எருசலேமை மையமாகக் கொண்டுள்ளது (செக் 2:5-27; 4:1-3; 11-14; யோவேல்; யூதித்து). இப்போராட்டத்தில் பிற மக்களின் கடவுள்கள் ஈடுபட்டிருக்கின்றனர். வெளிப்பாட்டு இலக்கியங்கள் இப்போராட்டத்தைப் புராண காவியச் சொற்களில் விவரிக்கின்றன. இந்தப் புராணக் குறிப்புக்களை ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம். கெருபிம்கள் (எசே 1-3); இன்பவனக் கருத்து (எசே 28:11-19); தொடக்ககால அசுரர்கள் (எசே 38-39). இறைவாக்கினரும் குருவுமாகிய எசேக்கியேல் போன்றவர்களின் செல்வாக்கால் தான் நாடுகடத்தலுக்குப்பின் வந்த குறுகிய மனப்பான்மையும் மட்டு மீறிய தன்னாட்டுப் பற்றும் மிகுந்த யூதர்களிடமிருந்து பிறமதக் கதைகளும் குறிப்புகளும் தப்பின (ஆகா 2:10-14; எஸ் 4:1-5; 9-10; யோவே 4).

தோராவில் குருக்கள் பாரம்பரிய வளர்ச்சியில் எசேக்கியேல் முக்கிய இடம் வகிக்கிறார். இவர் பரிசுத்த சட்டத்தின் (லேவி 17-25) போக்கையும் சொற்றொகுதியையும் ஏற்றுப் பயன்படுத்துவதோடு, அதில் தனது முத்திரையையும் விட்டுச் சென்றுள்ளார் (லேவி 26). இது முக்கியமானதொரு கூறாகும். ஏனெனில், வெளிப்பாட்டு ஆசிரியர்கள் தோராவை அதிகம் பயன்படுத்தியுள்ளனர். படைப்பு, பெருவெள்ளம் மற்றும் அதையொட்டிய குலமுதியவர்களின் மறைபொருள் மிக்க பெயர்கள், ஏனோக்கு மறைந்து போதல், நாடுகளின் பட்டியல் ஆகியவை அவர்களுக்குப் பிரியமான கதைகளாகும். குருக்கள் பாரம்பரியத்தில் காணப்படும் மனுகுலம் முழுவதுடன் இறைவன் செய்யும் உடன்படிக்கை (ஆதி 1:26; 9:1-17) வெளிப்பாட்டு ஆசிரியர்களைப் பெரிதும் பாதித்துள்ளது. அவ்வுடன்படிக்கை இஸ்ரா யேல் வழியாகச் செயல்படுத்தப்படும் (ஆதி 12:1-3).

எசே 40:3-4: எசேக்கியேலில் வானதூதர்கள் இறைவனுக்கும் உலகுக்குமிடையில் இடைப்பேச்சாளராகப் பயன்படுகின்றனர். வானதூதுவர்கள் வெளிப்பாட்டு இலக்கியத்தின் மற்றொரு நிலையான மேடை ஏதுவாக ஆகிறார்கள் (செக் 1:8 தொ; 2:2; தானி 8:16; 9:21; 10:5; திருவெளி 21:15 தொ).

எசேக்கியேல், இறைவாக்கினர் என்ற அளவில் வெளிப்பாட்டு இலக்கியத்தில் தலை சிறந்த இடம் வகித்தார். ஆனால், குரு என்ற அளவில் அவர் எபிரேய இலக்கியத்தை வேறொரு திக்கில் திசை திருப்பினார். ஒழுக்க வாழ்வு பற்றிய இறைவாக்கினரின் போதகத்தைக் குறைத்து, வழிபாட்டைப் புதுப்பித்தலை அழுத்திக் கூறினார். இறைவன் மேன்மேலும் மகத்துவம் மிக்கவராகவும், யாவற்றையும், கடந்தவராகவும் தோன்றினார். அடையாள முறை, வானதூதர், முடிவுகாலம் நிறைவேறுதல் ஆகியவற்றால் இறைவனது வழிபாடு சூழப்பட்டிருந்தது. இந்த வழிபாட்டுப் பண்புகள் இறைவாக்கு இலக்கியத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின; அதை வெளிப்பாட்டு இலக்கியமாக மாற்றி அமைக்க உதவின.

4. *ஆ) எசாயா:* இவர் வெளிப்பாட்டு இலக்கிய வளர்ச்சியில் அதிகம் பங்கு கொள்ளவில்லை என்றாலும், சில வெளிப்பாட்டுப் பண்புகள் இவரது நூலில் காணப்படுகின்றன. உப எசாயாவின்படி, முடிவு காலம் பற்றிய இரகசியங்கள், யாவேயும் அவரது தூதர்களும் அடங்கிய இறை அவையில் முதலில் பேசப்படுகின்றன. பின் அதன் எதிரொலியை இறைவாக்கினர் பூமியில் கேட்கிறார். யாவே தமது மகிமையில் உன்னதமானவராகவும் ஞானத்தில்

தேடி அடைய முடியாதவராகவும் தோன்று கிறார் (எசா 40:12-24; 41:13-14. 29; 42:8). அவர் வாழ்வை முழுமையாகக் கொண்டு உலகின் எல்லா நிகழ்ச்சிகளின் இரகசியத் தையும் அறிந்திருப்பது மட்டுமன்று, நாடு கடத்தலின் குழப்பத்திற்கும் புதிய படைப் பின் மகிமைக்கும் அவரே பொறுப்பாவார் (41:4-5.21தொ; 42:9; 43:9-13; 51:9-11). இறைவாக்கினர், யாவேக்கும் தீய கடவுள் களுக்குமிடையே நடக்கும் போராட்ட மாகப் புதுப் படைப்பைப் புராண காவிய மொழியில் விவரிக்கிறார். ஆனால், அவ ருக்கு இந்தப் போராட்டம் முடிந்து விட்ட தொன்றாகும். இக்கடவுள்கள் உதவியற்ற நிலைக்குள்ளாகின்றனர் (44:9-20; 46:1-2). இந்தக் கடவுள்களின் தோல்வியின் விளை வுதான், யாவேயின் படைப்பாற்றலை மீண் டும் மீண்டும் வலியுறுத்த ஆசிரியரைக் கட்டாயப்படுத்துகிறது (40:28; 41:20; 42:5; 45:4-7).

நாடு கடத்தப்பட்ட காலத்திய வெளிப் பாட்டு இலக்கியத்தின் கூறுகளைப் பின் வருமாறு சுருக்கிக் கூறலாம். பயங்கரமும் நம்பிக்கையும் மிக்கது ஆண்டவரின் நாள். அந்நாள் யூதர்களையும் புற இனத்தவரை யும் உள்ளடக்கும். மோசேயின் உடன்படிக் கையை நிறைவு செய்து அதைக் கடந்து செல்லும் புதிய உடன்படிக்கையைப் பற்றிய சாட்சி; உபாகமப் பாரம்பரியத்தில் காணப்படும் வரலாற்றை நிகழ்கால மெய் மையாக்கும் கருத்து; எருசலேம் குருக்கள், அவர்களுடைய தோராவுக்கும் தனியுரி மைக் கோரிக்கைகளுக்கும் எதிரான உபாக மக் கிளர்ச்சி; இரகசிய விண்ணக அவையி லிருந்து பூமிக்கு வந்த எல்லாம் வல்ல வார்த்தையால் செயல்படுத்தப்படும் புதிய படைப்பில் உன்னதராகக்கொண்டு, கடவுள் களுக்கிடையே நடக்கும் போர் பற்றிய காட்சி; இறுதியாக குருவும் இறைவாக்கின ருமான எசேக்கியேலின் பெரும் செல் வாக்கு. அடையாளங்களின் மனிதர் என்ற அளவில், எசேக்கியேல் காட்சிகள், அடை யாளங்கள் வடிவில் தமது சொற்களை மரபு ஒழுங்கு செய்தார். ''நூலின் மனிதர்'' என்ற அளவில் அவர் யூதத்துவத்தில் ஆதிக்கம் செலுத்திய வழிபாட்டுப் போக்குக்கும் குருக்களின் பாரம்பரியத்திற்கும், ஆர்வ மிக்க பிரமாணிக்கத்திற்கும் பொறுப்பா னார். இப்பண்புகள் ஏதாவது ஒரு வடிவில் முந்திய இறைவாக்கினர்களின் நூல்களில் காணப்படுகின்றன. இவை யாவும் சேர்ந்து ஓரளவு வெளிப்பாட்டு ' இலக்கியத்தை விளக்கவல்லன. இவை தனித்தனியாக அன்று, இவையனைத்தின் தனிச்சிறப்பான ஒருங்கிணைப்பு, நாடு கடத்தலால் பாதிக் கப்பட்டுப் புதியதொன்றைப் படைத்தது. விசித்திர அடையாளங்கள், அண்டக் குழப் பங்கள், பழையன புதுப்பிக்கப்படுதல், விரைவில் வரவிருக்கும் இறுதிக்காலம் ஆகியவற்றில் சிறப்பாகக் கவனம் செலுத்தி, நாடு கடத்தலுக்குப்பின் வந்த யூதர் சிந்தனைப்போக்கு இக்கூறுகளின் ஒருங்கிணைப்பை மேலும் வலுப் படுத்தியது.

5. நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்: கி.மு. 539-இல் பாபிலோனியப் பேரரசு வீழ்ந்தது; பெர்சியப் பேரரசு தோன்றியது. அதனோடு இஸ்ராயேல் வரலாற்றில் ஒரு புதிய, ஆனால், தெளிவில்லாத அதிகாரம் தொடங்குகிறது. தன்னையே புரிந்து கொள் ளும் முயற்சியில் தன் கடந்த காலத்தை நோக்கும் புதியதோர் சமுதாயம் உண்டா கிறது. ஆனால், அது வருங்காலத்தையும் முன்னோக்குகிறது. இக்காலத்தைப் பாரசீகர் காலம், கிரேக்கர் காலம் என இரு வகை யாகப் பிரிக்கலாம்.

இக்காலத்தைச் சேர்ந்த வெளிப்பாட்டு இலக்கியங்களின் சான்றுகளாகப் பின்வரும் சில பகுதிகளைத் தருகிறோம். செக் 1-8:-செக்கரியா, வெளிப்பாட்டு இலக்கியத் தின் அடையாள மொழியைத் தொகுத்துக் குவிக்கிறார். அவற்றில் சில: கொம்புகள் (செக் 2:1-4); பழைய ஏற்பாட்டுப் பொது உருவகத்திலிருந்து எடுக்கப்பட்டு (உப 33:17; 1 அர 22:11), ஆற்றல், வலிமை, சக்தி ஆகியவற்றை உணர்த்துகின்றன. இது தானியேலிலும் (7:8; 8:3-8), யோவானது திருவெளிப்பாட்டிலும் (12:3; 13:1) பரவ

லாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏழு கண்கள் (செக் 3:9; 4:10): இது எசேக்கியேலிலிருந்து எடுக்கப்பட்டு (1:18) இறைவனது யாவும் அறியும் பண்பை அடையாளமாக உணர்த்துகிறது; மீளவும் தானியேலிலும் (7:20), திருவெளிப்பாட்டிலும் (5:6) காணப்படுகிறது. குதிரைகளும் வீரர்களும் (எசே 1:8-17; 6:1-8): இது வரலாற்றை வழி நடத்துதலில் இறைவனது பராமரிப்பு அக்கறையை அடையாளமாகக் குறிக்கிறது; மீண்டும் திருவெளிப்பாட்டில் (6:2தொ) வருகிறது. மரக்காலுக்குள் பெண் (எசே 5:5-11): பாபிலோனில் நடப்பட்ட தீமையைக் குறிக்கிறது. அங்குத் தீமைக்கு ஒரு கோவில் கட்டப்பட்டிருந்தது. மீண்டும் திருவெளிப்பாட்டில் பெரிய வேசியாகத் தோன்றுகிறது (17:5-6). இறுதியாக இலக்கியக்காட்சியைச் செக்கரியா பயன்படுத்தும் விதம் கவனிக்கற்பாலது (1:7; 2:1; 2:5). இஃது ஒருவேளை ஆமோ 7-9-ஐ அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம். அவரது செய்திக்கு நாடகப்பாணியை அளிக்கப் பயன்படுகிறது. இம்முறை தானியேலிலும் (2:19; 4:7; 7:1; 9:21; 10:7) திருவெளிப்பாட்டிலும் (9:17) பரவலாகப் பயன் பட்டுள்ளது.

யோபு 1-2: *யோபு நூல் ஒரு வெளிப்பாட்டு நூல் அன்று; ஆனாலும், புனைபெயர் நூலுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். எசேக்கியேலிலிருந்து (14:14) தெளிவாவது போல், யோபு இஸ்ரயேலைச் சேராத, புகழ்பெற்ற பழங்கால அறிவர்களுள் ஒருவராவார். ஆசிரியர் யோபுவின் புகழைப் பயன்படுத்தி அவரைத் தமது பேச்சாளராகப் பயன்படுத்துகிறார். புனைபெயர் ஆசிரியரைப் பயன்படுத்துதல் ஞான நூல்களின் மரபு என்று பார்த்துள்ளோம். இந்தப் பழக்கம் வெளிப்பாட்டு ஆசிரியர்களின் உண்மையான பண்பாகிறது. இதற்கு எஸ்ராவின் வெளிப்பாடு, பாருக்கின் வெளிப்பாடு, மோசே விண்ணேற்பு போன்ற நூல்கள் சான்றாகும். தானியேல் நூலில் வரும் தானியேலும் ஒரு புனைபெயரே என்பது உறுதியாகும்.*

யோவே 3-4: *இந்நூல் தானியேல் நூலுக்கு முன் வாசிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில், இது பழைய நடை இறைவாக்கு இலக்கியத்திற்கும், புதிய நடை இறைவாக்கு - வெளிப்பாட்டு இலக்கியத்திற்கும் இடைப்பட்டதொன்றாகும். யோவேல் என்ற பெயர் உண்மையானதே, புனைபெயரன்று. அதி 3-4-இல் வெளிப்பாட்டு ஆசிரியர்களின் இலக்கிய, வாழ்க்கைச் சூழ்நிலைகளில் யோவே உலவுகிறார். இப்பகுதியில் ஆசிரியர் வருங்காலத்தை மட்டுமே நோக்குகிறார். மெசியாக் காலத்தில் ஆவியானவர் பொழியப்படும் பழங்கால இறைவாக்குப் போதகத்தை (எசா 11:12; எரே 24:7; 31:33; 32:40; எசே 36:25-27; 37:14; 39:29; எசா 43:1; 44:3; 54:13; 59:21) ஆண்டவரின் பெருநாள் சூழ்நிலையில் யோவேல் மீண்டும் எடுத்துக் கூறுகிறார். அண்ட அதிர்வுகளோடு நிகழும் மெசியாத் தன்மையுடைய "ஆண்டவரின் நாளை" விவரிக்கிறார் (யோவே 3:3-4). அது யோசபாத்துப் பள்ளத்தாக்கில் நாடுகள் தீர்ப்பிடப்பட்டு அழிவதில் உச்சநிலையை அடைகிறது (4:1-3. 9-16; எசே 38-39; செக் 9:14தொ; 14:1-5). அதன் விளைவாக இறைமக்கள் உயர்த்தப் பெறுகின்றனர் (4:17). மெசியாக் காலம் வருவது இன்பவனக் கதையின் மொழியில் விவரிக்கப்படுகிறது (1:18-21; ஆமோ 9:11-15; எசா 65:17-25; செக் 14:6-11). யோவே 3-4 முழுவதும் வெளிப்பாட்டு இலக்கியத்திற்குச் சிறந்த சான்றாகும். அதில் ஆண்டவரின் நாளின் வருகை (3:1-5), இறைவனுடையவும் இஸ்ராயேலினுடையவும் எதிரிகள் அழிக்கப்படுதல் (4:1-16), இறையரசின் வருகை (4:17-21) ஆகியவை விவரிக்கப்படுகின்றன.*

தமது காலத்தில் நடந்த ஒரு குறிப்பிட்ட "ஆண்டவரின் நாளிலிருந்து" (வெட்டுக்கிளிக் கொள்ளை நோய்) (அதி. 1-2) வெகு சேய்மையில் வரவிருக்கும் மெசியாத் தன்மையுடைய வருங்கால ஆண்டவரது நாளுக்கு ஆசிரியர் கடந்து செல்லுகிறார். அதி. 3-4-க்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் தொடர்ச்சியாக வந்த துன்பங்கள்

காரணமாய் இருக்கலாம். துன்பமும் அவநம்பிக்கையும் நிறைந்த காலத்தில், மெசியாத்தன்மையுடைய பழங்கால இறைவாக்குகள், குறிப்பாக இறை ஆவி பொழியப்படுவது (எசா 11:1-2; எசே 36:20-29; யோவே 3:1-2), இறைவன் தமது அரசுக்கு எதிரான பகைவர்களை வெல்லுதல் (எசே 38-39; யோவே 4:1 16), ஆலயத்திலிருந்து புறப்படும் ஆசீர்கள், அருவி (எசே 47:1 2; யோவே 4:18) ஆகியவற்றைப் பற்றிய இறைவாக்குகள் நிறைவேறும் காலத்தை எதிர்நோக்க மக்களை உற்சாகப்படுத்துவது ஆசிரியரது நோக்கமாகும். இதில் யோவேல் புதிதாக ஒன்றையும் கூறிவிடவில்லை. ஏற்கெனவே நன்கு நிறுவப்பட்ட இறைவாக்குகளையே மீண்டும் கூறுகிறார். ஆனால், அவற்றைத் துன்பமும் ஐயப்பாடும் மிகுந்த காலத்தில் அவநம்பிக்கைப்பட்டோரை உற்சாகப்படுத்தவும் வலுப்படுத்தவும் மீண்டும் வலியுறுத்துதல் வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்பாகும். அதே செய்தியை மிகவும் இயற்கை கடந்த கற்பனை முறையில் தானியேல் நூல் எடுத்துக் கூறும்.

நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின்வந்த இஸ்ராயேலர் வரலாற்றைப் பாரசீகர் காலம், கிரேக்கர் காலம் எனப்பிரிக்கலாம் என்று கூறினோம்.

5. அ) பாரசீகர் காலம்: இக்காலத்தின் வெளிப்பாட்டு இலக்கியம் மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது.

5. அ.1) புறவின எதிர்ப்பு: நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய யூத சமூகம் பிற இனத்தவரிடமிருந்து பிரிந்து ஒதுங்கி வாழும் போக்கைக் கொண்டிருந்தது (எஸ் 4:10; நெகே 13). இது சிறிது சிறிதாக வளர்ந்து சகிப்புத்தன்மையற்றதாயும் வெறுப்பாகவும் மாறியது. இப்போக்குக்கு மாறாகப் பொதுமைப்பண்பும் பரந்த மனப்பான்மையுமுள்ள யூதர்களும் இருந்தனர். இதற்கு ரூத்து, யோனா போன்ற நூல்கள் சான்றாக உள்ளன. ஆனால், இத்தகையோரை விட, பிற இனத்தவரை வெறுத்த யூதர்களே அதிகமாய் இருந்தனர். இவர்களின் ஒரு குழுவினர் வெளிப்பாட்டு ஆசிரியர்களாவர்.

இந்தப் போக்குக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் சில: யூதாவில் நிலவிய குறுகிய வரைக்குட்பட்ட வாழ்க்கைமுறை; பிற சமய மரபுகள் இஸ்ராயேலில் புகுந்து விடும் என்ற அச்சம்; கடந்தகாலத் தவறுகள் மீண்டும் நிகழ்ந்து விடக்கூடாதே என்ற எச்சரிக்கைப்போக்கு; புறவினத் தீட்டிலிருந்து தங்களைத் தூய்மையாகக் காத்துக் கொள்ளும் விருப்பம் (ஆகா 2:10-14; செக் 5:5-11).

பாரசீகர்கள் பொதுவாக யூதர்களைத் தயவோடு நடத்தினாலும், சில சமயங்களில் அவர்களுடைய அதிகாரிகள் யூதர்களைக் கொடுமைப்படுத்தினர். இந்த ஆட்சிக்கு எதிராக வன்மைமிக்க கிளர்ச்சிகள் பொங்கி எழுந்தன. இவையே எசே 38-39; எசா 24-27; 63:1-6; ஒபதியா; செக் 9-12; யோவேல் ஆகிய பகுதிகளுக்குப் பின்னணியாயின. வெளிப்பாட்டு ஆசிரியர்களில் கிளர்ச்சிகளை ஆதரிக்கும் போக்கு சிறிது சிறிதாக வளர்ச்சியுற்றது. இவர்கள் கிளர்ச்சிகளுக்கு ஆதரவு காட்டியதைவிட, சமயத்திற்காகக் கொடுமைப்படுத்தப்பட்ட காலத்தில் மக்கள் மன உறுதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று போதித்தனர்.

5. அ. 2) இறைவாக்குரைத்தலின் மறைவு: இறைவாக்குரைத்தல் மங்கிப்போய் முழுவதும் மறைந்துபோய் விட்டதாகத் தோன்றியது. இறைவாக்கு இயக்கம் ஞான இலக்கிய இயக்கம், மிட்ராஷ் இலக்கியம் வெளிப்பாட்டு இலக்கியம் என்ற மூன்று வழிகளில் மாற்று உரு எடுத்தது. முன்னைய இரண்டைப் பற்றி அவை பற்றிய தலைப்பின் கீழ்க் காண்க. இப்போது வெளிப்பாட்டு இலக்கிய இயக்கம் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

இறைவாக்கு இயக்கத்திற்கு ஏற்பட்ட மாற்றத்தை யோவேல் நூல் எடுத்துக் காட்டுகிறது. இந்நூலின் ஆசிரியர் அடிக்கடி முந்திய இறைவாக்கு நூல்களிலிருந்து எடுத்

துக் கூறுகிறார். இவர் சமூக நீதி, திருமணப் பற்றுறுதி, எளிய வாழ்க்கை ஆகியவை பற்றி அதிகம் கூறவில்லை. மாறாக நோன்பு, சாக்குடை தரித்தல், பலிசெலுத்து தல், மன்றாட்டுகள் ஆகியவற்றில் அக்கறை காட்டுகிறார். ஆலயச் சூழ்நிலையில் போதிக்கிறார். இறைவாக்கினர்களுக்குப் பதிலாகக் குருக்களும், மூப்பர்களும் மக்க ளின் தலைவர்களாகத் திகழ்கின்றனர் (யோவே 1:2-3). ஆண்டவரின் அச்சம் தரும் பெருநாளைச் சுற்றி தமது போதகத்தை அமைக்கிறார். அப்போது, ''நிலம் நடுங்கு கிறது; வானம் வெடவெடத்துப் போகிறது'' (2:10). ''மக்கள் ஒருபோதும் அவமானத்திற் குள்ளாக்கப்பட மாட்டார்கள்'' (2:27). ''எல் லார் மேலும் நம் ஆவியைப் பொழிந்திடு வோம்'' (3:1). பரந்த வண்ணக் காட்சியாக இறைவெற்றி நாளை யோவேல் விவரிக்கி றார். அப்போது புவியியல், சமூக, நாட்டுத் தடைகள் எல்லாம் அகற்றப்படும். யோவே லின் ஆலய வழிபாடும் அண்ட இறுதிக் கால இயலும் சீர்திருத்தம், மனத்துக்கம் ஆகியவற்றை மேற்கொள்கின்றன எனலாம்.

இறைவாக்கு இயக்கத்திற்கு ஏற்பட்ட மாற்றத்தை எடுத்துக்காட்டும் மற்றொரு சான்று நாளாகமங்களாகும். இத்தொகுப்பு ஆலயத்திலும் தாவீது அரச மரபிலும் அக்கறை காட்டுகிறது. ஆனால், இஃது ஆர்வம் காட்டும் தாவீது, வரலாற்றில் மடிந்துபோன தாவீது அரசர் அல்லர்; மாறாக, ஆண்டவரின் பெருநாளில் தோன்ற விருக்கும் புதிய தாவீது ஆவார் (1 நளா் 17:11). இத்தொகுப்பு மிட்ராஷ் வெளிப் பாட்டுப் போக்கும், இறைவாக்குத் தன்மை யும் கொண்ட வரலாறு ஆகும்.

5. அ. 3) இறுதிக்காலம் பற்றிய சங்கீதங் கள்: *சங் 95-98; 96-98* போன்ற சங்கீதங்கள் யாவேயின் வெற்றியில் வியப்போடும் ஆற்றலோடும் வடிவெடுத்துத் தோன்றும் இறுதிக்காலத்தைப் பாடுகின்றன. தாவீது அரச மரபுக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கவில்லை. வெளிப்பாட்டு இலக்கி யம் குருக்களின் செல்வாக்கில் செயல்படு கிறது.

பாரசீகர் காலத்தில் வெளிப்பாட்டு ஆசிரி யர்கள் எசேக்கியேல் காட்டிய மாதிரியைக் கடந்து செல்லவில்லை. ஆனால், இறை வாக்கு இலக்கியம் வெளிப்பாட்டு இலக்கி யமாக மாறியது நிலையானதாகிறது. இறை வாக்குரைத்தல் மரித்து-விட்டதென்றே கூற லாம். இந்த உண்மையை உள்ளத்தை அறுக்கும் விதத்தில் முதலாம் மக்கபேயர் நூல் ஏற்றுக்கொள்கிறது (1 மக் 4:46; 9:27; 14:41; எசே 7:26; புல2:9). இப்போது விருத்தசேதனம், ஓய்வு நாள் கடைப் பிடிப்பு, உணவு பற்றிய ஒழுங்குகள், நோன்பு ஆகியவற்றால் யூதர்கள் அடையா ளம் கண்டு கொள்ளப்படுகின்றனர் (லேவி 17-26; எசா 56:2; 58:1-7; செக் 7:1-6; 8:18-23; எஸ் 10). நாடு கடத்தலுக்குப்பின் வந்த யூதத்துவத்தின் குறுகிய எல்லைகளை உடைத்து யாவே எருசலேமை உலகத் தலைநகரமாக்குவார் என்றும், தமது ஆவி யைப் பொழிந்து பூமியை ஆட்டம் கொள் ளச்செய்து, கதிரவனை இருளச்செய்து, பழங்கால வாக்குறுதிகளை நிறைவேற்று வார் என்றும் நம்பினர். மிகைப்படுத்தப் பட்ட அடையாளமுறை சாதாரணமாய், குறிப்பாக 1-6-இல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

5. ஆ) கிரேக்கர் காலம்: அலக்சாந்தரின் மாபெரும் வெற்றிகள், மலைப்பகுதியில் அமைந்திருந்த சிறிய நாடாகிய யூதாவின் நம்பிக்கைகளையும் மரபுகளையும் அதிகம் பாதிக்கவில்லை. ஆனால், யூதர்கள் தங்க ளுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் நம்பாத, பொறாமைமிக்க, பகைமை பாராட்டும் சதுசேயர், பரிசேயர் என இரு குழுவாகப் பிரிந்தனர். சதுசேயர் எருசலேமைச் சேர்ந்த குருக்கள் குழுவினர். பரிசேயர்கள் பக்தி யுள்ள பொது நிலையினராவர். செக்கரியா (11:4-17) குருகுலத் தலைமையைக் கண்ட னம் செய்தார். நமக்கு அவரது மொழி அடையாளத் தன்மையுடையதாயும் அத னால் தெளிவில்லாமலும் இருக்கலாம். ஆனால், அது முதலில் கூறப்பட்டபோது கேட்டவர்களுக்கு, மூடி மழுப்பாது தெளி வோடு இருந்திருக்க வேண்டும். குருக்கள்

பழமை விரும்பிகள்; சட்டத்தை அதன் சொற்பொருளில் ஏற்றுக்கொண்டனர். இவர்கள் எந்தப் புதிய பழக்கத்தையோ, மரபுகளையோ ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. பரிசேயர் ''வாய்மொழித் தோராவுக்கும்'' அதைப் புதிய முறையில் விளக்கிக் காட்டுவதற்கும் கவனமும் மரியாதையும் கொடுத்தனர். குருக்களின் எச்சரிக்கையான போக்கைச் சீராக்கு நூலில் காணலாம். இந்நூல், இறந்தபின் வரும் வினைப்பயன் கோட்பாடு பற்றிய கருத்துக்களைத் தவிர்த்தது; குருத்துவத்தையும் சட்டத்தையும் ஒரே சீராகப் போற்றுகிறது (சீரா 7:17).

மரணத்திற்குப்பின் உடல் உயிர்ப்பு, வினைப்பயன் கோட்பாடு போன்ற புதிய கருத்துக்கள் வெளிப்பாட்டு மிட்ராஷ் இலக்கியங்களில் தோன்றத்தொடங்கின (2 மக் 7; தானி 12:1-3). இக்காலத்தில் யூதர்கள் அன்னியர்பால் அமைதியான, தாராளமிக்க மனப்போக்கைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது (செக் 23:38). பெலிஸ்தியரையும் ''இறைவனுக்குரிய எஞ்சியோரில்'' ஏற்றுக் கொண்டனர் (செக் 7). அலக்சாந்தரின் மின்னல் தோற்றத்தன்மையுடைய வெற்றிகள், விரைவில் வரும் யாவேயின் இறுதிக் கால நிறைவேறுதலைப் பற்றிச் சிந்திக்க ஆசிரியரை உற்சாகப்படுத்தின. ஒரு வேளை பிற்காலத்தில்தான் புற இனத்தார் பால் பகைமையும் வெறுப்பும் செக்கரியா நூலில் இடம் பெற்றிருக்க வேண்டும் (செக் 9:3; 11:1-3; 14:12). எசேக்கியேலுக்கு ஒரு நூற்றாண்டுக்குப்பின், அவர் ஏற்படுத்திய மாதிரியின் வரையறைகளை உடைத்து, வெளிப்பாட்டு இலக்கியம் யாவும் கடந்த தன்மையுடைய மிகைப்படுத்தப்பட்ட அடையாளமுறையைத் தனது சிறப்புப் பண்பாக்கிக் கொண்டது. தானி 7-12-இல் காணப்படுவது போன்ற உருவக முறையின் வலுவான தாக்கத்தை வன்மைமிக்க சூழ்நிலையில்தான் விளக்க முடியும்.

வெளிப்பாட்டு இலக்கியத்தின் போக்கையும் பண்புகளையும் தானியேல் நூல் செறிவான முறையில் முனைப்பாக வெளிப்படுத்துகிறது. அவை: உலக வாழ்வின் வரம்புகளை உடைத்தெறியும் உருவகம்; வானதூதர் வழியாக விண்ணக உண்மைகளுக்கு விளக்கம் அளித்தல்; மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளுக்கிடையே நடக்கும் நன்மை தீமைப் போராட்டம்; திடீரென்று வரும் மகிமைமிக்க விடுவிப்பை எதிர்பார்த்தல்; இறையரசின் தோற்றம்; எஸ்ரா காலத்திற்கு முன் வாழ்ந்த ஒருவர் நூலை எழுதியதாகக் கூறும் புனைபெயர் முறை ஆகியவையாகும். இப்புனைபெயர் முறை பற்றி நாம் சிறிது கவனம் செலுத்த வேண்டும். பகைமை பாராட்டும் அதிகாரிகளுக்கு எதிரான எதிர்ப்புப் பிரச்சாரத்தை நூல் கொண்டிருந்தால், ஆசிரியர் புனைபெயரைப் பயன்படுத்துகிறார். இம்முறையைப் பிற்கால ஆசிரியர்களும் பயன்படுத்துவர். இம்முறைக்கு மற்றொரு காரணமும் உண்டு. எஸ்ரா திருத்தி அமைத்த தோராவை மட்டும் எருசலேம் குருக்கள் ஏற்றுக்கொண்டனர். ஆகவே, தோராவில் காணப்படும் பெருந்தலைவர்கள் இந்நூல்களை எழுதியதாகக் காட்டினால், மக்கள் அவற்றை ஏற்றுக்கொள்வர் என்று உண்மையான ஆசிரியர்கள் எண்ணினர்.

மேலும், இறைவாக்குகள் நிறைவேறுவதால் அவை எண்பிக்கப்படும் என்று நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வந்த யூதர்கள் உறுதியாக நம்பினர். இது பிற்கால யூதத்துவத்தைச் சேர்ந்த உப 18:19-22-இல் தெளிவாகிறது. வெளிப்பாட்டு ஆசிரியர்கள் நிகழ்காலத்தைப் பற்றித்தான் எழுதினர்; ஆனால், இறைவாக்குகள் அல்லது காட்சிகள் வடிவில் எழுதினர். நிகழ்காலத்தைப் பரிகத்த வரலாற்றுக் கண்ணாடி வழியாக நோக்கி, நிகழ்கால நிகழ்ச்சிகளின் மீட்புப் பொருளைப் புரிந்து கொள்ள முயன்றனர். இஃது உபாகம அணுகுமுறைக்கு ஒத்ததாகும். இம்முறைக்காகவும் புனைபெயர்களை வெளிப்பாட்டு ஆசிரியர்கள் பயன்படுத்தினர்.

தானியேல் நூலின் ஆசிரியர் வெளிப்பாட்டு இலக்கியத்திற்குக் குருக்கள் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அளித்தார். ஆலயமும் அதன் வழிபாடும் மக்களின் கவனத்

தைத் தொடர்ந்து கவர்ந்தன; அவர்களின் நம்பிக்கையின் மையமாகத் தொடர்ந்து விளங்கின. இக்காலத்திற்குள் எருசலேம் குருக்கள் தீவிரப்பழமை விரும்பிகளாயினர். இக்காலத்தில் தோன்றிய புதிய கருத்துக்களில் பலவற்றை நிராகரித்தனர். தானியேல் காலத்திற்குப்பின் வெளிப்பாட்டு இலக்கியம் குருக்கள் அல்லாதோரிடையே வளர்ந்தோங்கியது. அடையாளமுறை மேன் மேலும் வளமிக்கதாகவும் விசித்திரக் கற்பனை மிக்கதாகவும் மிளிர்ந்தது. பழங் காலத்திலிருந்து எடுக்கப்பட்ட புனைபெயர்கள் பயன்படுத்தப்பட்டன. இம்முறை இறைவாக்குகளுக்கு நிறைவேறுதல் பொருள் அளிக்கவும், அரசியல் அல்லது குருக்களைச் சார்ந்த எதிரிகளிடமிருந்து பதில் தாக்குதலைத் தவிர்க்கவும் பயன் பட்டது.

6. கிறிஸ்தவத் தொடக்கம்: இறுதியாக, கி.பி. முதலாம் நூற்றாண்டில் அப்போது தான் தோன்றியிருந்த கிறிஸ்தவத்திலும் வெளிப்பாட்டு இலக்கியம் இடம் பெற்றது. தீவிர யூதவெளிப்பாட்டு ஆசிரியர்கள் கி.பி. 66-70-இலும், 135-இலும் நடந்த பெருங் கிளர்ச்சிக்கு வழி வகுத்தனர். இவை பயங் கரத் தோல்விகளுக்கும் அவநம்பிக்கையின் எல்லைக்கும் இட்டுச் சென்றன. இவற்றிற்குப் பிறகு யூதர்கள் யாவேயின் உலகளாவிய அரசு உடனடியாகத் தோன்றும் என்ற நம்பிக்கையையே இழந்தனர், கைவிட்டனர்; சட்டத்தை நுணுக்கமாய்க் கடைப்பிடிப்பதை அடிப்படையாகக் கொண்டு தங்கள் சமயத்தை வளர்த்தனர். கிறிஸ்தவம், தன்னையே கிறிஸ்துவின் இறுதிக்கால வெற்றியாகவும், உலகை ஆவியின் புதிய அரசாக மாற்றியமைப்பதாகவும் கருதியது. புதிய ஏற்பாடு, திருவெளிப்பாட்டு நூலோடு முடிகிறது. இறுதிச் சொற்கள் ''மாரனாத்தா ஆண்டவராகிய இயேசுவே வாரும்'' என்ற நித்திய வெற்றியின் அறை கூவலாகும்.

புதிய ஏற்பாட்டில் காணப்படும் மற்ற வெளிப்பாட்டு இலக்கியப் பகுதிகள் மாற் 13;1 தெச 4:13-5:6; 2 தெச 1:4-10; 2:1-12; 2 கொரி 12:1-9;1 பேதுரு 3:19தொ; 2 பேதுரு 3:10-13; அ.ப. 10:9-16 ஆகியவையாகும். விவிலிய வெளிப்பாட்டு நூல்களில் வரும் காட்சிகள் இலக்கியக் கட்டுக்கதைகளாக இருக்கலாம். அதனால் அவற்றின் தவறின்மை பாதிக்கப்படவில்லை. இறைவன் அளித்த வெளிப்பாட்டை அதை எடுத்துக் கூறும் முறையிலிருந்து வேறுபடுத்திப் புரிந்துகொள்ள வேண்டும். வெளிப்பாட்டுச் செய்தியில் அடங்கியுள்ள உண்மை இரண்டாந்தரச் சூழ்நிலைகளைச் சார்ந்ததன்று.

IV இறைவாக்கு, வெளிப்பாட்டு இலக்கியங்களில் வேறுபாடுகள்: இறைவாக்கு இலக்கியத்திலிருந்து வெளிப்பாட்டு இலக்கியம் வளர்ந்தது என்றால், அதைப் புரிந்து கொள்ள, அஃது இறைவாக்குரைத்தலின் எந்தப் பண்புகளை அழுத்திக்கூறியது அல்லது இன்னும் வளர்த்தது என்றும், எதைக் குறைத்துக்கூறியது அல்லது மங்கிப்போக விட்டுவிட்டது என்றும், தனக்கே உரிய அடையாளத்தைப் பெற எத்தகைய கலப்பு அமைப்பு வடிவம் எடுத்தது என்றும் நிர்ணயிப்பது அவசியமாகும். முதலில் இரண்டிற்குமிடையேயுள்ள மாறுபாடுகளைக் காண்போம்.

இறைவாக்கினர்கள் செயல் வீரர்கள் ஆவர்; தங்கள் காலத்தேவைகளுக்கு ஏற்ற சுயேச்சையான ஆற்றல்மிக்க போதகத்தை அறிவித்தனர். இதற்கு மாறாக, வெளிப்பாட்டு ஆசிரியர்கள் எழுதப்பட்ட சொற்களின் மனிதர்கள் ஆவர்; தங்கள் செய்தியை வேண்டுமென்று செயற்கை முறை விளைவுகளோடு எடுத்துக்கூறினர்.

இறைவாக்கு நூல்கள் வாய்மொழிக் கூற்றுக்களை முதன்மையாகவும், அதிகமாகவும் நிகழ்ச்சியுரைப் பகுதிகளைச் சிறிதளவாகவுமே கொண்டிருந்தன. வெளிப்பாட்டு நூல்கள் பொதுவாக முழுவதுமே நிகழ்ச்சியுரை வடிவில் உள்ளன. இறைவாக்கினர் போதித்தனர் என்றால் வெளிப்பாட்டு ஆசிரியர்கள் படிப்பித்தனர் அல்லது கற்பித்தனர் என்று கூறலாம். இப்பண்பு, வெளிப்பாட்டு

ஆசிரியர்கள் இறைவாக்கினர்களின் வாரிசு ஆனாலும், நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் வளர்ச்சியுற்றிருந்த உலகச்செயல்களி லும் சட்டத்திலும் புலமை பெற்றிருந்த ஞானநூல் ஆசிரியர்களோடும், அறிவர்க ளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தனர் என்று காட்டுகிறது.

இறைவாக்கினர்கள் பாலஸ்தீன அரசிய லில் தாமே ஈடுபட்டனர். இதற்கு மாறாக, வெளிப்பாட்டு ஆசிரியர்கள் அண்டத்தை நோக்கினர். இறைவாக்கினர்கள் தனிப்பட்ட நிகழ்ச்சிகள் மீது தீர்ப்பாகத் தங்கள் செய் தியை அறிவித்தனர். வெளிப்பாட்டு ஆசிரி யர்களோ, குறிப்பாக தானியேல், உலக வரலாறு முழுமைக்கும் சமய விளக்கம் அளிக்க முயன்றார். இறைவாக்கினர்கள் பொதுவாக யாவே மக்கள் மேல் கொள் ளும் இறையாட்சிக்காகப் போராடினர். தாவீது அரச குடும்பத்திற்கு ஆதரவு அளித் துச் செயலாற்றினார். வெளிப்பாட்டு ஆசிரி யர்களோ யாவேயின் உலகளாவிய ஆட் சியை எதிர்நோக்கினர். தாவீது, மெசியா ஆகியவர்களைப் பற்றிய கவனத்தைக் குறைத்துக் கொண்டே போய், இறுதியில் முழுவதும் கைவிட்டு விட்டனர். இறைவ னது நேரடிச் செயலால்தான் உலகைப் புதிய படைப்பாக மாற்றி அமைக்க முடியும் என்று உறுதியாக நம்பினர். இது வரலாறு பற்றிய வெளிப்பாட்டு நோக்குக்கு இன்றிய மையாததாகும்.

வருங்காலத்தையும் இறுதிக்காலத்தையும் பற்றிப் பேசுவது இறைவாக்கினர்களின் பல கூறுகளில் ஒன்றாகும். ஆனால், இதுவே வெளிப்பாட்டு இலக்கியத்தின் முதன்மை யான பண்பாகும்.

இறைவாக்கினர் சமய, சமூகத் தவறு களைப் பற்றி மழுப்பல் இல்லாமல் பேசி னர்; அரிதாகத்தான் மக்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டனர். வெளிப்பாட்டு ஆசிரியர்களோ காட்சிகளை அடையாள மொழியில் எழுதினர். அவற்றை அவர்களே முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர்களது வாசகர்களை அவை இன்னும் அதிகமாகப் புதிரால் திணறடித்தன. அடை யாளக் காட்சிகளைச் சாதாரணமாய் வான தூதர்கள் விளக்க வேண்டியிருந்தது.

V **உளவியல் - வரலாற்றுப் பின்னணி:** திருமுறைப் பட்டியலைச் சேர்ந்தவையும் சேராதவையுமான பெரும்பாலான வெளிப் பாட்டு நூல்கள் கி.மு.2 - கி.பி.2-ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் எழுதப்பட்ட வையாகும். இவை தோன்ற உளவியல் உந்துகாரணமாயிருந்தவை சமயத்தின் பொருட்டு யூதர்கள் அனுபவித்த கொடுமை களும், கடந்த காலத்தில் இறைவன் அளித்த வாக்குறுதிகள் நம்பத் தகுந்தவை அவை காலப்போக்கில் நிச்சயமாக நிறைவேறும் என்ற உறுதியுமாகும். இவற்றில் ஒன்று அல்லது இரண்டுமே உந்து காரணமாயின.

ஏறக்குறைய எல்லா வெளிப்பாட்டு நூல் களும், அவற்றின் தொடக்க வடிவத்திலும் கூட, பிற இனத்தவர் சமயத்தின் பொருட்டோ அரசியலுக்காகவோ இழைத்த கொடுமைகள் ஏற்படுத்திய விசு வாச நெருக்கடியின் விளைவாகத் தோன்றி யவையாகும். சான்றாக, ஆமோஸ், எசாயா நூல்களில் காணப்படும் தொடக்ககால வெளிப்பாட்டுப் பகுதிகள் அசிரியர்களால் ஏற்பட்ட நெருக்கடிக் காலத்தைச் சேர்ந்த வையாகும். எசேக்கியேல், உப எசாயா ஆகியவை பாபிலோனியாவுக்கு இஸ்ராயே லர் நாடு கடத்தப்பட்ட இருண்ட காலத் தைச் சேர்ந்தவையாகும். செக்கரியா, யோவேல் ஆகியவை நாடு கடத்தப்பட்டுத் திரும்பிய பின் ஏற்பட்ட மயக்க நீக்க காலத்தில் தோன்றியவையாகும். தானி யேல் நூல் நான்காம் அந்தியோக்கு எப்பி பான் ஆட்சியின் கீழ் பிறமதக் கோட்பாடு கள் யூதாவில் பரவிக்கொண்டிருந்த காலத் தைச் சேர்ந்ததாகும். இக்காலத்தில் வேத நூல்களை வைத்திருப்பதுகூட குற்றமாகக் கருதப்பட்டது. உயிருக்கே போராடிக் கொண்டிருந்த யூதத்துவத்தை உலோகாயுத கிரேக்கப் பண்பாடு முழுவதும் அழித்து விட அச்சுறுத்தியது. புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாட்டு நூலும் கூட நெருக்கடிக் காலத்தில் தோன்றியதே. அப்போது, நீரோ

வால் தொடங்கப்பட்ட சமயத்தின் பொருட்டு அவனுக்குப் பின்வந்த உரோமைப் பேரரசர்கள் காலத்திலும் கொடுமை தொடர்ந்தது.

வெளிப்பாட்டு இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களிடையே நிலவிய அவல, இழிநிலையும் அவை தோன்றக் காரணமாயிற்று. அவர்கள் அன்னிய ஆதிக்கத்தின் கடுமையான கொடுமைமிக்க அடிமைத்தனத்திற்கு உட்பட்டிருந்தனர். அவர்களது நிகழ்கால நிலைக்கும் அவர்களுடையதாக எதிர்பார்க்கப்பட்ட நற்காலத்திற்குமிடையேயுள்ள வேறுபாட்டை மிகக்கடுமையாக உணர்ந்தனர். எரேமியா தனது முன்னறிவிப்பு நிறைவேறாமை தமது செய்தியின் நம்புதல் தகுதியைப் பாதித்தது என்று புலம்பினார் (எரே 20:7தொ). காலப் போக்கில் இந்த அவல நிலை மக்களின் மனத்தைக் கடினப்படுத்தியது; பலருக்கு இடறலாக அமைந்தது. பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டுத் திரும்பியபின் வந்த இருண்ட காலம் கடந்து போயிற்று. நாடு கடத்தப்பட்டுத் திரும்பி வருதலின் உச்ச நம்பிக்கைகள் நிறைவேறாது கடந்து போயின. ஒன்றும் உண்மையில் மாறிவிடவில்லை. உறுதியளிக்கப்பட்ட மீட்பு நிறைவேறவில்லை. இதைவிட மோசமான நிலை, யூதா மீளவும் அடிமைத்தனத்திற்கு உள்ளாகியதாகும் (2 மக் 3-7). இவை யாவும் பலரது விசுவாசத்தைச் சோதித்தன; அதைத் தகர்த்தெறியும் சூழ்நிலையை உண்டாக்கின.

இந்நிலையில் வழிகாட்ட, உற்சாகமூட்ட, ஆறுதல் அளிக்க இறைவாக்குக் குரல் எழவில்லை. இந்நிலையில் புனைபெயர் நூல் ஆசிரியர்கள் மக்களின் கவனத்தை வருங்காலத்திற்கு, அதுவும் தூர வருங்காலத்திற்குத் திசை திருப்ப முயன்றனர். அப்போது இஸ்ராயேல்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்ற கதியை அடையும் என்று நம்பினர், படிப்பித்தனர். ஆகவே, மெசியாவின் வெற்றி மிக்க அரசை உயிர்ச் சித்திரமாக வரைவதில் பெருமை கொண்டனர். அந்த ஆட்சி விரைவில் வரும், திடீரென்று வரும். அதில் இறைவனது வாக்குறுதிகள் யாவும் நிறைவேறும். நீதிமான்களின் வெற்றி எல்லாருக்கும் வெளிப்படும். இவை இந்நூல்களின் முக்கிய உந்து காரணமும் நம்பிக்கையும் ஆயின. இந்நூல்கள், தங்களின் தவிர்க்க முடியாத மகிமை மிக்க கதியில் ஆழ்ந்த விசுவாசம் கொள்ள யூதர்களைப் பல வழிகளிலும் தூண்டி எழுப்பின; அவர்களது துன்பங்களில் ஆறுதல் அளித்தன; இறைவாக்குகளின் கோரிக்கையை நிறைவு செய்தன; நீதிமான்களின் துன்பம் என்ற எக்காலமும் தோன்றும் பிரச்சனை, கடந்தகால இறைவாக்குகள் நிறைவேறுமோ என்ற அவநம்பிக்கைப் பிரச்சனை போன்றவற்றை விடுவித்தன; அதே சமயத்தில் தீயோரின் செழிப்பு, தீர்ப்பு, செயல்வினைப்பயன், இறந்தவரின் உயிர்ப்பு ஆகிய இறையியல் பிரச்சனைகளுக்குத் தெளிவும் அளித்தன.

வெளிப்பாட்டு நூல்களைக் கவனமாய்ப் படித்தால் மேற்கூறப்பட்ட உளவியல் பண்புகளைக் கண்டுணரலாம்.

VI. வெளிப்பாட்டு இலக்கியப் பண்புகள்:

1. அண்டப் போராட்டம், இறுதிக்கால வெற்றி பற்றிய இரகசியம்: வெளிப்பாட்டு நூல்களில் பெரும்பாலானவை "ஆண்டவரின் நாள்" வரும்போது நிகழும் அண்டக் குமுறல்களைக் கற்பனை வளத்துடன் விவரிக்கின்றன. உலக வரலாற்றின் இறுதிக்காலமும், உலகப் பேரழிவுகள் பற்றிய விவரிப்புகளும் இருமைத் தன்மையுடையன. அப்போது நன்மை, தீமை ஆகிய இரு பெரும் ஆட்தன்மைப்படுத்தப்பட்ட சக்திகளுக்குள் பெரும் போராட்டம் நிகழும். தீயசக்திகள் எல்லாம் வல்ல இறைவனுடைய சக்திகளுக்கு எதிராகப் போராடும். இப்போராட்டத்தில் அண்டம் முழுவதும், கீழுலகம், விண்ணுலகம் மற்றும் படைப்புகள் யாவும் பங்கெடுக்கின்றன. ஆகவே, இதை அண்டத்துவைதம் என்று கூறலாம். இந்தப் போராட்டத்தில் இறைவன் முழுக்கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கிறார். இந்தப் பயங்கர இரத்தக்களரிப் போராட்டத்தில் தீய சக்திகள் இறுதியாகத் தோற்கடிக்கப்படு

கின்றன. இரு சக்திகளும் உருவகமாக விவரிக்கப்படுகின்றன. இவை நிகழ்கால வரலாற்றில் உலகச் சக்திகளாகும். ஆனால், வெளிப்பாட்டு இலக்கியத்தில் உலக முடிவுக்கு முந்திய உலக வரலாற்றின் இறுதிச் சக்திகளாகும். இறுதியில் இறைவன் திடீரென்று தலையிட, நல்ல சக்திகள் வெற்றி பெறுகின்றன. இறையரசு நிறுவப்படுகிறது. இப்போராட்டத்தில் யூதா மெசியாத் தலைவரோடு விவரிக்கப்படுகிறது. அவரோடு உலகை வெற்றி கொள்கிறது.

இந்தப் போராட்டத்தில் இறுதிக்காலக் கூறுகள் இடம் பெறுகின்றன. இதில் இவ்வுலக வரலாற்றைச் சேர்ந்த யுகமும், காலம் கடந்த யுகமும் இடம் பெறுகின்றன. இவ்வுலக வரலாறு இறைவனுடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும், இறைவனது திட்டம் உறுதியாக நிறைவேறும் என்றாலும், இவ்வுலகில் தீய சக்திகள் கட்டுக் கடங்காமல் ஆதிக்கம் செலுத்துவதாகத் தோன்றும். ஆகவே, உலகம் தீயதும், சீரழிந்து தூய்மை கெட்டதுமாகும். உலக மக்களில் அனேகர் தீயசக்திகளைப் பின்பற்றுவர்; இறைவனுடைய நீதிமான்களைத் துன்புறுத்துவர், கொடுமைப்படுத்துவர், கொல்லவும் செய்வர். நீதிமான்களுக்கு இந்த யுகத்தில் நம்பிக்கையே இருக்காது. ஏனெனில், இந்த யுகம் தீயதுமட்டுமன்று, திருத்தியமைக்கப்படக் கூடாத அளவு தீயதுமாகும். போகப்போக சூழ்நிலை மேலும் சீரழியும். நீதிமான்களுக்கு உதவியேயில்லை என்று தோன்றும்.

மனித வரலாற்றின் இந்த யுகம் தீமையும் சீரழிவும் மிகுந்ததாயும், முன்னேற்றமடையக் கூடாததாயும் மீட்கப் படக்கூடாததாயும் தோன்றினாலும் நீதிமான்களுக்கு ஒரே ஒரு நம்பிக்கையுண்டு. அஃது, இறைவன் தமது பெருநாளில் வலிமையோடும் ஆற்றலோடும் திடீரென்று தலையிட்டு, உலகம் முழுவதும் ஈடுபடும் அண்டப்போராட்டத்தில் தீய சக்திகளின் தலைவனான சாத்தானோடு பொருது, வென்று புதிய, காலம் கடந்த யுகத்தைத் தொடங்கி வைப்பார் என்பதாகும். அதைத் தமது உடனடிக் கட்டுப்பாட்டில் கொண்டிருப்பார். அவரது மெசியாவின் வருகையோடு இறையரசு உறுதியாக நிறுவப்படும். இறைவன் உலகைச் சாத்தானிடம் ஒப்படைத்து விடவில்லை. மனிதன் இறைவனது திருவுளத்தை அறிந்து நடந்தால் இவ்வுலகை முன்னேற்ற முடியும். முன்னேற்ற வேண்டும். இறைவன் மனித வரலாற்றில் அக்கறையற்றவர் அல்லர். அவரே வரலாற்றின் ஆண்டவர். அதன் பொருளற்றதாகத் தோன்றும் நெளிவு சுழிவுகள் வழியாக ஆற்றலோடு ஆட்சி செய்கிறார். இறைவன் நிறுவும் இறுதி அரசு கடந்து போகாதது; ஆனால், முழுவதும் இயற்கை கடந்தது; இவ்வுலகத்தைச் சேராதது (யோவா 18:36). அது மனிதரால் படைக்கப்பட்டதன்று (தனி 2:45), இவ்வுலகைச் சேராதது என்றாலும் அதில் செயல்படுகிறது. நீதிமான்கள் இறைவனுக்குக் காட்டிய பிரமாணிக்கத்தின் சன்மானமாக இறையரசில் மகிழ்ச்சியோடும் பெரும் பேற்றோடும் வாழ்வர்.

இவ்வாறு வெளிப்பாட்டு நூல்களின் நம்பிக்கை இவ்வுலகைச் சேராததாயும் மறு உலகைச் சேர்ந்ததுமாயும் இருக்கிறது. உலக வரலாற்றைச் சேர்ந்த யுகத்தைப் பொருத்தமட்டும் நன்னம்பிக்கையற்றதாகவும் எதிர்கால யுகத்தைப் பொருத்தமட்டும் நன்னம்பிக்கை மிக்கதாயும் இருக்கிறது. வெளிப்பாட்டு ஆசிரியர்களின் உண்மையான காலவரை அவர்களது காலத்தாலும் சிந்தனைப் போக்காலும் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவர்களுடைய செய்தி இறைவாக்கினர்களுடையதைப் போன்றதே; இயேசுவின் இறையரசு போன்றதே. அதாவது, இவ்வுலகில் ஒளியின் சக்திகளுக்கும் இருளின் சக்திகளுக்கும் போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றது. அதிலிருந்து இறையரசு வெற்றியொளியோடு வெளிவரும்.

இறைவாக்கினர்கள், தீயவர்களை சூழ்கடிக்கும் இருளாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் வெற்றியாகவும் கண்ட ஆண்டவரின் நாளை, வெளிப்பாட்டு ஆசிரியர்கள் இன்னும் அதிக இருள்மிக்கதாகவும், அதன் ஒளி இன்னும் அதிகமாய்க் கண்களைப்

பறித்துக் குருடாக்குவதாகவும் கண்டனர். நன்மைக்கும் தீமைக்கும் இறுதிவரை நடக்கும் போராட்டத்தை இறைவாக்கினர்கள் இஸ்ராயேலர்களுக்குள்ளேயே நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்டமாகக் கண்டனர். இப்போராட்டம் வெளிப்பாட்டு ஆசிரியர்களுக்கு அண்டக் குமுறல்களாக மாறியது. துன்பமிக்க நிகழ்காலம் வெற்றி மிக்க வருங்காலத்திற்கு இட்டுச் செல்வதாக இறைவாக்கினர் விவரித்தனர். வெளிப்பாட்டு ஆசிரியர்கள் வானம் திறக்கக் கண்டனர். அவர்களுக்கு எதிர்காலம் நிகழ்காலத்திற்குள் இடிமுழக்கம் செய்கிறது. இறைவாக்கினர் நிகழ்காலத்தில் கவனம் செலுத்தியபோது வெளிப்பாட்டு ஆசிரியர்கள் வருங்காலத்தில் இறைவனது திருவுளம் நிறைவேறுதலையும் அவரது அரசு நிறுவப்படுதலையும் முன்னோக்கினர். ஆனால், அவர்கள் வருங்காலத்தைப் பற்றி மட்டும் பேசவில்லை; வருங்காலத்தை நிகழ்காலத்துக்குரிய திறவுகோலாகவும் எல்லாவற்றிற்கும் விடையாகவும் விவரித்தனர். ஆகவே, வருங்காலத்தை உலக வரலாற்றுச் சூழ்நிலையில் எடுத்துக் கூறினர். இவ்வாறு வெளிப்பாட்டு நூல்கள் இந்த யுகத்தில் தெளிவாகக் காணப்படும் தீமையை விளக்கின; நீதிமான்களின் துன்பம் என்ற பிரச்சனைக்கு ஒரு விடையையும் அளித்தன. ஏனெனில், தீய சக்திகளின் தலைவனான சாத்தான் எப்படியோ இந்த யுகத்தில் ஆதிக்கம் கொண்டுள்ளான். அவனே இந்த யுகத்தின் தீமைக்கும் சீரழிவுக்கும் நீதிமான்கள் அனுபவிக்கும் கொடுமைகளுக்கும் பொறுப்பாவான். ஆயினும், இறைவன் சாத்தானை வெல்வார்; இந்த யுகம் முடிவுக்கு வரும்; எல்லாத் தீமையும் அழிந்து போகும்; புதிய யுகம் தோன்றும்! அதில் இறைவனே ஆட்சி செய்வார். அதில் நீதியும் நன்மையும் நிறைந்திருக்கும்!

இறைவனுக்கு எதிராகத் தீயசக்திகளின் உச்சநிலைப் போராட்டம், அண்டப் பேரழிவுகள், நிகழ்கால வரலாறு பற்றிய உருவகம் ஆகியவை பற்றிய விவரிப்புகளை எசா 13; 24-27; எசே 38-39; செப் 1:14-18-இல் காணலாம். நன்மை-தீமை சக்திகளுக்கிடையே போராட்டம், இறுதிக்காலம், இறையரசு முதலியவை பற்றிய இரகசியங்களை எடுத்துக்கூற வெளிப்பாட்டு ஆசிரியர்கள் காட்சிகள், அடையாளமொழி, வானதூதர், புனைபெயர் ஆகிய யுக்திகளைப் பயன்படுத்துகின்றனர்.

2. காட்சிகள்: வெளிப்பாட்டு நூல்கள் பொதுவாகக் காட்சிகளைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும். இக்கருத்து எல்லா வெளிப்பாட்டு நூல்களுக்கும் பொருந்தாது. காட்சிகளாய் இல்லாத வெளிப்பாட்டு இலக்கியப் பகுதிகளும் உண்டு (எசா 24-27; 1 கொரி 15:20-29). வெளிப்பாட்டு நூல்களில் வரும் காட்சிகள் சிக்கல் மிக்க அடையாள மொழிவழி வருங்காலத்தை வெளிப்படுத்தின. காட்சிகள் எப்போதும் விளக்கப்படுவதில்லை. ஆனால், நிகழ்கால வரலாறு போதியமட்டும் தெரிந்தால் அக்காட்சிகளை ஓரளவு விளக்கலாம். காட்சி விவரிப்பில் ஒருவிதத் தெளிவின்மை காணப்படும். அவற்றில் ''...போன்ற ஒருவரை...'', ''...போன்ற உருவம் ஒன்று...'' போன்ற, சொற்றொடர்களைக் காணலாம். சிலசமயம் இக்காட்சிகள் மிக விசித்திரமாகவும், அடையாளத் தன்மையுடையனவாகவும், புதிர் மிக்கனவாயும் இருப்பதுண்டு. ஆகவே, இவற்றை விளக்க வானதூதர்களின் இடையீடு தேவைப்படுவதுண்டு.

இக்காட்சிகள் எந்த அளவுக்கு வெறுமனே இலக்கிய யுக்திகள் என்றும், எந்த அளவுக்கு உண்மையான ஆன்மீக அனுபவத்தை எடுத்துக் கூறுகின்றன என்றும் கூறுவது கடினம். ஆனால், இவை அவநம்பிக்கையால் குழம்பிய மனதின் சீர்கெட்ட கற்பனையின் வெறும் மயக்கத்தோற்றங்களே என்று நாம் கருதினால், நிச்சயமாக நாம் தவறு செய்கிறோம்.

3. அடையாள மொழி: வெளிப்பாட்டு இலக்கியத்தின் முக்கிய பண்புகளில் ஒன்று அடையாள உருவக முறையாகும். ஏறக்குறைய இப்பூமியிலுள்ளதெல்லாம் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மனித

உடலின் ஒவ்வொரு பாகத்திற்கும் குறியிட்டுப் பொருள் அளிக்கப்படுகிறது. இவ்வாறு கண்கள் அறிவையும், கைகள் ஆற்றலையும், கால்கள் உறுதியையும், நரைமுடி தொல்பழமையையும் - மகத்துவத்தையும், வாய் இறைவாக்கையும் அடையாளமாய் உணர்த்தின. விலங்குகளும் பறவைகளும் அடையாள உருவகமாகப் பயன்பட்டுள்ளன. சிங்கம் அரசத்தன்மையையும், எருமை பலத்தையும், கழுகு விரைவையும், பறவை நாகம் அல்லது கடல் வேதாளம் தீமையையும், செம்மறி பலியையும், கொம்பு வலிமையையும், பறவைகளின் இறக்கை வேகத்தையும் உணர்த்தின. ஆடைகள் புதிய பொருள் பெற்றன. நீண்ட ஆடை குருத்துவத்தையும், முடியோ, மோதிரமோ அரச நிலையையும் உணர்த்தின. வண்ணங்களுக்குப் புதிய பொருள் அளிக்கப்பட்டது. வெள்ளை மகிழ்ச்சியையும் - வெற்றியையும், இரத்தச் சிவப்பு மறைசாட்சித் தன்மையையும், கருஞ்சிவப்பு சொகுசையும் வளமையையும் உணர்த்தின. எண்கள் அவற்றின் சாதாரண மதிப்பைக் கடந்த பொருளில் பயன்பட்டன. இவ்வாறு எண் நான்கு படைக்கப்பட்ட உலகின் மூலைகளையும், ஏழு அல்லது நாற்பது நிறைவையும், பன்னிரண்டு இறைவனின் மக்களையும் அல்லது புதிய இஸ்ராயேலையும், ஆயிரம் ஒரு கூட்டத்தையும் உணர்த்தப் பயன்பட்டன.

இத்தகைய அடையாளமுறை, சமயத்திற்காகக் கொடுமைப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் பகைமைமிக்க அதிகாரிகளின் கவனத்தைத் தவிர்க்க விவேகமிக்க முறையாகும். இஃதோடு அறியாத வருங்காலத்தைப் பற்றிப் பேசும்போது உருவக அடையாள முறை தவிர்க்க முடியாததாகும். மேலும், மறைபொருள் மிக்க இறை உண்மைகளை வெளிப்படுத்த இம்முறை பொருந்தமுடையதாகும்.

4. வான தூதர்கள்: வெளிப்பாட்டு நூல்களில் வானதூதர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். பாரசீகத்திலிருந்து வானதூதர் இயல் எபிரேய இலக்கியத்தில் இடம் பெறுவதாகத் தெரிகிறது. விவிலிய வெளிப்பாட்டு நூல்களில் வானதூதர்கள் யாவேயின் தூதர்களும் பணியாளர்களும் ஆவர். யாவேயின் இறை அவையில் வானதூதர்கள் இடம் பெறுகின்றனர்; மனிதர்க்கு இறைவனது செய்தியை அறிவிக்கின்றனர்; மனிதரின் மன்றாட்டுக்களை இறைவன்முன் சமர்ப்பிக்கின்றனர்; மனிதர்க்காகப் பரிந்து பேசுகின்றனர்; இயற்கையின் மேல் ஆதிக்கம் கொண்டுள்ளனர்; நாடுகளைப் பாதுகாக்கின்றனர். வெளிப்பாட்டு நூல்களில் வானதூதர்கள் விண்ணக மறைபொருள்களை வெளிப்படுத்தவும், அவற்றையும் அவை பற்றிய காட்சிகளை விளக்கவும் செயல்படுகின்றனர். வானதூதர்கள் இந்நூல்களில் தோன்றும் வெறும் இலக்கிய யுக்தியா அல்லது இயற்கை கடந்த உயிரினங்களா என்று உறுதியாகக் கூற முடியாது.

5. புனைபெயர் ஆசிரியர்கள்: வெளிப்பாட்டு நூல்களில் காணப்படும் மற்றொரு முக்கிய பண்பு நூலில் ஆசிரியருக்குப் புனைபெயர் கொடுப்பதாகும். இந்த மரபு ஞான இலக்கியங்களில் காணப்படுகிறது. இந்த மரபுப்படி, வெளிப்பாட்டு நூல் ஆசிரியர் தன்னை மிகப்பழங்காலத்தைச் சேர்ந்த குலமுதியவராகவோ, இறைவாக்கினராகவோ பாவனை செய்து கொள்வார். ஆசிரியராகக் கருதப்படுபவர் நூலில் இறைவாக்கு உரைக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு முந்திய வராக, குறிப்பாக எஸ்ரா காலத்திற்கு முந்தியவராக, இருக்க வேண்டும். இப்படிப் புனைபெயரால் குறிக்கப்படுபவர் இஸ்ராயேல் வரலாற்றின் தொடக்கத்திலிருந்து எழுதுவார். இவர் தம் வரலாற்று நோக்கில் இறைவாக்குரைத்து, அவரது காலத்து வரலாற்றை முன்னறிவிப்பாக வெளிப்படுத்தி, அதற்கு மறு விளக்கம் அளித்து, உண்மையான ஆசிரியரது காலத்துக்குப் பொருந்தியதாகக் காட்டுவார்; வருங்காலத்தை விவரிக்க முனைவார்; அது கொண்டிருப்பதாகக் கருதப்படும் இரகசியங்களை வெளிப்படுத்துவார். இத்தகைய முறையால் கடந்தகால இறைவாக்கினர்கள் முன்னறிவித்தவையெல்லாம் மெசியாவின் அரசு

நிறுவப்படுதலிலும், தீயசக்திகளின் அழிவிலும் நிறைவேறும் என்று காட்டுவார்.

இந்தப் புனைபெயர் முறை முதலில், மக்களிடையே இந்நூல்கள் மதிப்புடையனவாகவும், அதிகாரமுடையனவாகவும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குப் பயன்பட்டது; இரண்டாவது, மறை உண்மைகளை வெளிப்படுத்தும் கருவியாகவும் பயன்பட்டது; மூன்றாவது, காட்சிகளும், புனைபெயர் முறையும் சமயத்திற்காகக் கொடுமைப்படுத்தியவர்களின் கவனத்திலிருந்து தப்பிக்கப் பெரிதும் உதவின. குறிப்பாக, நான்காம் அந்தியோக்கு எப்பிபான் காலத்தில் வெளிப்பாட்டு இலக்கியம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அப்போது யூத சமயநூல்கள் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன (1மக் 1:56 தொ). அரசனது மேற்பார்வையாளர்கள் யூத சமயத்துக்கு எதிரான சட்டத்தைக் கடுமையாக நிறைவேற்றினர் (1 மக் 1:51). காட்சிகள் வடிவிலும் புனைபெயரோடும் எடுத்துக் கூறப்பட்ட இறைசெய்திகளை அவர்களால் எளிதாய்க் கண்டுபிடிக்க முடியவில்லை. நேரடிப் போதகமாகவோ, வரலாற்று நடையிலோ இச்செய்திகள் கூறப்பட்டிருந்தால் அவை ஆசிரியர்களுக்கு மேலும் பல துன்பங்களைக் கொண்டு வந்திருக்கும்.

VII. **குறிக்கோள்:** வெளிப்பாட்டு இலக்கியங்கள் இஸ்ராயேல் வரலாற்றின் இடுக்கண் மிக்க காலங்களில் தோன்றின. அப்போது இறைவாக்குரைத்தல் மங்கிப்போய் மறைந்து போயிற்று. ஆழ்ந்த சமய உணர்வுடைய யூதர்கள் இறைவனது வாக்குறுதிகள் இன்னும் நிறைவேறவில்லை என்பதை உணர்ந்தனர். இறைவனிடமிருந்து அதிகார பூர்வமான செய்தி எதுவும் கிடைப்பதாகத் தெரியவில்லை (1 மக் 4:46; 9:27; 14:41). தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பல நூற்றாண்டுகளாக பாபிலோனியர், பாரசீகர், கிரேக்கர், எகிப்தியர், சீரியர்கள், உரோமையர் போன்றவர்களின் ஆட்சியில் அவதியுற்றனர். இந்நிலையில் வெளிப்பாட்டு நூல்கள் தோன்றி மக்களின் கவனத்தை மெசியாவின் மகிழ்ச்சி மிக்க வருங்காலத்தின்பால் செலுத்தின. இறைவன் தமது வாக்குறுதிகளுக்குப் பிரமாணிக்கமாயிருக்கிறார், இருக்க வேண்டும் என்ற ஆழ்ந்த விசுவாசத்தை எடுத்துக் கூறின. இறைவனது உலகளாவிய பராமரிப்பில் அசைக்கமுடியாத விசுவாசம், இந்நூல்களுக்கு உந்துதலாயின. வெளிப்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் நூல்கள் வழியாக இந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் எடுத்துக் கூறினர்; தங்கள் காலத்து மக்களின் விசுவாசத்தைத் தூண்டியெழுப்பினர்; அவர்களை எச்சரித்தனர்; உற்சாகப்படுத்தினர்; சமய இடுக்கண் மிக்க காலத்திலும் மக்கள் மன உறுதியோடு யாவேக்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டும் என்று போதித்தனர்.

இந்த அகப் பிரமாணிக்கத்தோடு, வெளிப்பாட்டு நூல்கள் அரசியல் புரட்சிகளையும் கிளர்ச்சிகளையும் தோற்றுவித்தன என்றால் மிகையாகாது. கிரேனியு யூதேயாவில் மக்கட்தொகைக் கணக்கெடுத்த காலத்திலிருந்து யூத மக்களிடையே உரோமை அரசுக்கு எதிரான கிளர்ச்சி தோன்றி வளர்ச்சியடைந்து கி.பி. 66-70-இல் நடந்த போராட்டத்திற்கும் அழிவிற்கும் சில வெளிப்பாட்டு நூல்கள் இட்டுச் சென்றன என்பது உறுதியாகும்.

VIII. **பிற்காலத்தில்:** யூதத்துவத்தின் பிற்காலத்திலும், கிறிஸ்துவத்தின் தொடக்க காலத்திலும், மிகவும் கொடுமைப்படுத்தப்பட்ட திகைப்பு மிக்க கடினமான காலத்திலும் வெளிப்பாட்டு நூல்கள் அதிகம் ஆதிக்கம் செலுத்தின. பொதுவாக ஏழைகளும், வறியவர்களும், கொடுமைப்படுத்தப்பட்டோரும், ஒடுக்கப்பட்டோரும், குறிப்பாகச் சமயத்துக்காகக் கொடுமைப்படுத்தப்பட்டோரும், இந்நூல்களை ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டனர். இந்நூல்கள் இத்தகைய சூழ்நிலையில் தோன்றியவை தானே! காலந்தோறும் இந்நூல்கள் மக்களின் கவனத்தைக் கவர்ந்ததற்குக் காரணம், தீமை என்னும் பிரச்சனைக்கு இவை அளிக்கும் சிக்கலில்லாத விளக்கமும் நாடகப்பாணி விடையும் ஆகும். மேலும் நல்ல - தீய சக்திகளுக்கிடையே நடக்கும்

அண்டப் போராட்டத்தில், வாசகர் வெறும் காட்சி காண்பவராக மட்டுமின்றி தாமே ஈடுபட்டிருக்கிறார் என்ற உணர்வு கொள்ளவும் தீமையின் மேல் நன்மை கொள்ளும் வெற்றியில் தாமே பங்கெடுப்பதாக உணரச் செய்யவும் வல்லன. இந்நூல்கள் சமயத்திற்காகக் கொடுமைப்படுத்தப் படுபவர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தவல்லன. இறுதியில் இறைவன் தலையிட்டு தமது அரசை உறுதியாக நிறுவுவார். அதில் நீதிமான்கள் இறைவனது மகிழ்ச்சியில் நிறைவெய்துவர் என்ற நம்பிக்கையைத் தூண்டவல்லன.

மேலும், இறைவனது உதவியின்றி மனிதன் தன் மீட்பை அமைத்துக் கொள்ளக் கூடும் என்றும், உலகின் தீமைகளைத் திருத்தி விடக்கூடும் என்றும் எண்ணும் மனித அகந்தைக்கு இந்நூல்கள் ஒரு திருத்தமாக அமைந்துள்ளன. மேலும், மரணத்துக்குப்பின் வாழ்வு, உயிர்ப்பு, தீர்ப்பு, தண்டனை, சன்மானம் முதலியவை பற்றிய கிறிஸ்தவக் கருத்துக்களில் வளர்ச்சியுண்டாக்க இந்த நூல்கள் உதவியுள்ளன. நமது காலத்திய இறையியல் கருத்துக்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்நூல்கள் பாதித்துள்ளன. ஆகவே, இந்நூல்களின் அடிப்படைத் தன்மையைப் புரிந்திருப்பது அவசியமாகும்.

வெளிவேடக்காரன் (HYPOCRITE)

உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறும் நெறிகெட்ட மனிதரை வெறுக்கின்றனர் இறைவாக்கினர் (எசா 29, 13). வெளிவேடம் புனைந்து கபட நாடகமாடும் பொல்லாத மனிதரைக் கயவர் எனக் கடிந்துரைக்கின்றனர் ஞானிகள் (சீரா 1:28தொ; 32:15; 36:22). அவர்தம் வழிவந்த கிறிஸ்துவும் தம்முடைய சமுதாயத்திலே புரையோடிக் கிடக்கும் போலி வாழ்வை அம்பலப்படுத்துகிறார்; குறிப்பாக, அறிஞர் என்று பெயர் எடுத்து, சட்டத்தின் காவலர் எனக் கூறிக்கொண்டு, பயிரை மேயும் வேலியாய் அமைந்த பரிசேயர்களின் முகமூடியைக் கிழித்தெறிகின்றார்; ''வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே,'' ''குருட்டுப் பரிசேயரே'' என அவர்களைக் கண்டித்து எழுகின்றார் (மத் 23:25-26). இந்த இரு பட்டங்களும் அவர்களுக்குச் சரியாகப் பொருந்துகின்றன. வெளிவேடக்காரன் மற்றவரை ஏமாற்ற முயற்சி செய்கிறான்; அந்த முயற்சியில் தன்னையே ஏமாற்றிக் கொள்ளுகிறான். தன்னை ஏமாற்றிக் கொள்ளும் போது உண்மையை உணர இயலாத, ஒளியைக் காண இயலாத குருடனாகிறான்.

1. வெளி வேடக்காரரின் ஆசாரங்கள்: சமய வெளிவேடம் புனைகின்றவர் வெறும் பொய்யர் மட்டுமல்லர்; பெரும் ஏமாற்றுப் பேர்வழிகள். இவர்கள் நற்செயல்களை எளிய உள்ளத்துடன் செய்யாமல், மற்றவரின் நன்மதிப்பைப் பெறுவதற்கென்றே செய்கின்றனர். இறைவனுக்குத் திருத்தொண்டு புரிவதாக எடுத்துரைக்கின்றனர்; ஆனால், பிறர் பார்க்க, பிறர் போற்ற தம் பெயர் விளங்கச் செய்கின்றனர். பிச்சை இடுதல், செபம், நோன்பு ஆகிய நற்செயல்கள் பிறர் கவனத்தைக் கவரும் நோக்கில் செய்யப்படும்போது, வெறும் ஏமாற்று வித்தைகளாய் மாறிவிடுகின்றன (மத் 6:2.5.16; 23:5). உள்ளத்திற்கும் உதட்டிற்கும் உள்ள இடைவெளி விரிவடையும்போது, தங்கள் கயமையை மறைக்கத் தந்திரமாகச் செயல்படுகின்றனர். கண்ணி வைத்து இயேசுவைப் பிடிக்க நினைக்கின்றனர்; சட்டம் பற்றிக் கேள்விக்கணை தொடுத்து அவரை வீழ்த்தப் பார்க்கின்றனர் (மத் 22:18; காண்க. எரே 18:18). தங்களுக்கு நேரிடும் அவமானத்திலிருந்து தப்பித்துக்கொள்ள சட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகத் திரித்துக் கூறுகின்றனர். தங்களுக்குப் பெருமையளிக்கும் சட்டத்தையே வலியுறுத்துகின்றனர். குருட்டு வழி காட்டிகள் அவர்கள்; கொசுவை வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகின்றனர் (மத் 23:24). கிண்ணத்தின் வெளிப்புறத்தைத் தூய்மையாக்குகின்றனர்; ஆனால், துர்நாற்றமெடுக்கும் உட்புறத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை (23:25). ''வெளிவேடக்காரரே, உங்களைப் பற்றிப் பொருத்தமாகவே எசாயா இறைவாக்கு உரைத்திருக்கிறார். அவர், இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர்.

இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கின்றது'' *(மத் 15:7)* என்கிறார்.

2. தம்மையே ஏமாற்றும் குருடர்: வெறும் ஆசாரங்களை மட்டும் நாடுகின்றவர்களை மாற்றிவிடலாம்; ஆனால், அந்த ஆசாரங்களுக்கு அடிமையாகி, அவற்றைத் தங்களுடைய குற்றங்களை மூடி மறைக்கும் போர்வைகளாகப் பயன்படுத்தும் வெளிவேடக்காரருடைய இதயம் நாளடைவில் இறுகிக் கல்லாகி விடுகின்றது; அவர்களை மாற்றுவது கடினம். அவர்கள் மற்றவர்களை ஏமாற்றுவதற்காக நடிக்கின்றனர்; நாளடைவில் அந்த நடிப்பே உண்மை என்று நம்புகின்றனர். இவர்கள் வெள்ளையடிக்கப் பட்ட கல்லறைகள்; தாங்கள் நீதி வழுவாதவர் என எண்ணி இறுமாந்திருக்கின்றனர் *(காண்க. லூக் 18:9)*; எனவே, மனந்திரும்புமாறு இறைவன் விடுக்கும் அழைப்பிற்குச் செவிமடுக்க மறுக்கின்றனர். மேடையிலே வேடம் புனைந்து நடிக்கின்றனர் நடிகர்; ஆனால், இந்த வெளிவேடக்காரரோ வாழ்க்கையை மேடையாக்கித் தொடர்ந்து நடிக்கின்றனர். இவர்கள் உயர்ந்த பதவி வகித்து மக்களும் அவர்களுடைய வாக்கிற்குக் கட்டுப்பட்டு நடக்கும் நிலையில், இவர்களின் வெளிவேடம் இன்னும் அதிகமாகிறது *(மத் 23:2தொ)*. குற்றம் கண்டவிடத்து இடித்துரைத்தல் சகோதரனின் கடமைதான்; ஆனால், தன் அயலானின் கண்ணில் காணப்படும் சிறு துரும்பைப் பற்றி எப்பொழுதும் கவலைப்படும் ஒருவன், எவ்வாறு தன் கண்ணின் பார்வையைக் கெடுக்கும் விட்டத்தை அகற்ற முடியும் *(மத் 7:4தொ; 23:3தொ)*? ஆன்மீக வழிகாட்டிகள் நமக்குத் தேவைதான்; ஆனால், அவர்கள் இறைவனின் சட்டங்களுக்குப் பதில் மனிதனின் மரபுகளைப் புகுத்தும்போது அவர்கள் இறைவனின் இடத்தையே பறித்துக்கொள்ளவில்லையா? இவர்கள் மற்றவர்களைத் தாம் வழிநடத்துவதாகக் கற்பனை செய்து கொள்ளும் குருடர்கள் *(மத் 15:3-14)*. இவர்களுடைய கொள்கைகள் கெட்டுப் போன புளிப்பு மாவிற்கு ஒப்பானவை *(லூக் 12:1)*. இந்தக் குருடர்கள் காலத்தின் குறிகளை அறியும் ஆற்றல் அற்றவர்கள்; அதாவது, இயேசு இறைவனின் தூதுவர் என்பதை உணர இயலாதவர்கள். இவர்கள் வானிலிருந்து அருங்குறி ஒன்றைக் காட்டும்படி கேட்கின்றனர் *(லூக் 12:56; மத் 16:1தொ)*. தங்களுடைய கயமைக் கள்களை மறைக்க, இவர்கள் இயேசுவிடம் எந்த நன்மையையும் காண மறுக்கின்றனர். ஓய்வுநாள் சட்டங்களின் துணைகொண்டு, அவர் நல்லவை எதுவும் செய்யாதபடி தடுக்கப் பார்க்கின்றனர் *(லூக் 13:15)*. உண்மை உரைக்க இயலாக் கறைபடிந்த உள்ளமுடைய அவர்கள், பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டு, இயேசு பேய்களை ஓட்டுகிறார் எனப் பிதற்றும் துணிவு பெற்றிருக்கின்றனர் *(மத் 12:24.34)*. இயேசு அவர்களுடைய இதயக் கதவை உடைத்துத் திறக்கிறார்; மற்றவர்கள் முன்னே அவர்கள் வெட்கித் தலைகுனியும் படி செய்கிறார் *(23:1தொ)*. அவர்களுடைய பாவ வாழ்க்கையையும், நாற்றமெடுத்த உள்ளத்தையும் அம்பலப் படுத்துகிறார் *(23:27தொ)*. தீயவர்களின் கதிக்கு அவர்களைவிட்டுவிடக் கூடாது என்னும் நோக்கிலேயே இவ்வாறு அவர்களைச் சாடுகிறார் *(மத் 24:51; லூக் 12:46)*. பழைய ஏற்பாட்டில் காணப்படும் நெறிகெட்டவர், தீயோர் ஆகிய சொற்களையே இங்குக் கிறிஸ்து வெளிவேடக்காரரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்துகின்றார். உண்மைதான், அவர்கள் கயவர்களின் பாதையிலே அடியெடுத்து வைத்திருக்கின்றனர்! அவர்களைத்தான் யோவானுடைய நற்செய்தி குருடர் எனக் குறிப்பிடுகின்றது. குருடராய் இருந்து கொண்டு, எங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற அகங்காரமே யூதர்களின் பெரும் பாவமாகும் *(யோவா 9:40)*.

3. என்றும் எச்சரிக்கை வேண்டும்: வெளிவேடம் என்பது பரிசேயரை மட்டும் பீடித்த நோய் என எண்ணிக் கவனக்குறைவாய் இருந்துவிடக் கூடாது. படித்தவர்களை மட்டுமன்றி, பாமரக் கூட்டத்தையும் அந் நோய் பீடிக்கும் என ஒத்தமை நற்செய்தியா

ளர் காட்டுகின்றனர் (லூக் 12:56; 13:15). அதுபோல எல்லாக் கிறிஸ்தவர்களும், குறிப்பாகத் தலைமைப் பொறுப்பில் உள்ள வர்களும் வெளிவேடக்காரராக மாறும் ஆபத்தில் இருக்கின்றனர். ஏன், பேதுரு கூட இந்த ஆபத்திலிருந்து தப்பவில்லை. அந்தியோக்கியாவில் நடந்த நிகழ்ச்சியில் பேதுருவின் வெளிவேடத்தைச் சுட்டிக் காட்டுகிறார் பவுல் (கலா 2:13). வெளி வேடன் என்னும் வஞ்சக வலையில் வீழ்ந்துவிடாமல், புதிதாய்ப் பிறந்த குழந் தைகளைப் போல் வளரவேண்டும் எனப் பேதுரு அறிவுறுத்துகிறார் (1 பேதுரு 2:1தொ). இந்த வெளிவேடம் இறுதியில் நம்முடைய விசுவாசத்தையே மறுக்கச் செய் யும் (1 திமொ 4:2). எனவே, வெளிவேடம் நம்மை அணுகாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வெள்ளம் (FLOOD)

1. **தொன்மையான வெள்ளம்:** மாபெரும் அழிவைக் கொண்டு வந்த வெள்ளத்தைப் பற்றிப் பாபிலோன், சுமேரியப் புராணங் கள் பேசுகின்றன. விவிலிய மரபு இதனை எடுத்து ஒரே கடவுள் வழிபாட்டுப் பின்ன ணியில் அதற்கு ஓர் ஒழுக்க, சமய முக்கியத் துவம் கொடுத்து இந்த வெள்ளப் பெருக் கைப் புதிய முறையில் விளக்குகிறது. பொறாமை மிக்க கடவுளர்களின் ஏறுமா றான செயல்களாக வருணிக்கப்பட்ட இஃது ஒரே கடவுளின் நேரிய செயலாக மாற்றிக் கூறப்பட்டது. அழிவிற்குப் பதிலாக மீட்பை அடைவதற்கான தூய்மைப்படுத் தும் ஒரு நிகழ்வாக இது மாற்றியமைக்கப் படுகிறது. அதன் அடையாளமாக வெள்ளத் தினின்று பாதுகாக்கும் பெட்டகம் அமைகி றது. பொறுப்பற்ற சக்திகளைக் கடந்து, இறைவனின் தீர்ப்பு வந்து பாவியை அழித்துவிட்டு நீதிமான் ஒருவரைப் புதிய மனித இனத்தின் ஊற்றாக, விதையாக நிலைப்படுத்துவதாக அமைகிறது. இவ் வாறு நோவாவின் வீரச்செயல் ஒரு தற்செய லான நிகழ்ச்சியாக மட்டுமன்று; மாறாக, இஸ்ராயேலின் வரலாற்றின் மற்றும் மனு குல வரலாற்றின் சுருக்கமாகவும், அடை யாளமாகவும் அமைகிறது.

நோவா மட்டுமே நீதிமான் என அழைக் கப்படுகிறார் (ஆதி 7:1). ஆனால் ஆதா மைப் போலவே அவரும் அவர் குடும்பம் முழுவதையும் குறிக்கின்றார். எனவே தன் னையும் தனது குடும்பம் முழுவதையும் காக்கிறார் (ஆதி 7:1.7.13). இந்தச் சுதந்தரத் தேர்வினால் ஒரு புதிய இனம் தோன்றுவ தற்கான எஞ்சியோரை இறைவன் தனக் கென வைத்துக்கொண்டார். இவர்களும் பாவத்தை நோக்கித் திரும்பினால் கடவுள் பொறுமையைக் காப்பார். அப்படியே அவர் தண்டித்தாலும் அது மனமாற்றத்தைக் கொண்டு வரும் தண்டனையாக இருக்குமே யொழிய அழிவின் தண்டனையாக இருக் காது. ஏனெனில், அவரது இரக்கம் இதற்கு மாறானது (ஆதி 9:15-22). எனவே நீரினால் வரும் அழிவு புதிய உடன்படிக்கையினால் இனிமேல் மனித குலத்தின்மீது வரவே வராது என்பதையும் தான் தனது உடன்படிக் கைக்கு என்றும் பிரமாணிக்கமாய் இருப்ப தையும் கடவுள் உறுதியாகத் தெளிவுபடுத்து கிறார் (ஆதி 9:1-17).

2. **எதிர்காலத்தின் மாதிரி:** வெள்ளப் பெருக்கை, இறைவாக்கு இறையியல் செங் கடலைக் கடந்த நிகழ்ச்சியைப்போல் இறை வனின் மீட்புத்தீர்ப்பின் முன் மாதிரியாகப் பார்க்கின்றது. நாடு கடத்தப்பட்டதிலிருந்து திரும்பிய எஞ்சினோர் ஒரு புதிய இனத்தின் வித்தாக, புதிய விடுதலைப் பயணத்தை மட்டுமன்று, நோவா பெட்டகத்தை விட்டு வெளியேறிய பின் செய்த அதே பணியைத் தொடர்கின்றனர். "என்றுமுள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன் எனக்கு இது நோவாவின் நாள்களில் நடந்தது போல் உள்ளது. நோவாவின் காலத்துப் பெரு வெள்ளம் இனிமேல் மண்ணுலகின்மேல் பாய்ந்து வராது என்று நான் ஆணையிட் டேன்" (எசா 54:8-9) என்ற இந்த மீட்புத் தீர்ப்பை ஞானிகள் எடுத்துக்கூறுகிறார்கள்.

"நோவா நிறைவுள்ளவராகவும் நீதிமா னாகவும் காணப்பட்டார் சினத்தின் காலத் தில் பரிகாரம் செய்தார். வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, அவர் பொருட்டுச் சிலர் உலகில் விடப்பட்டார்கள். எவ்வுயிரும்

வெள்ளப்பெருக்கால் இனி அழிக்கப்படக் கூடாது என்பதற்கு என்றுமுள உடன்படிக் கைகள் அவருடன் செய்யப்பட்டன (சீரா 44:17-18; காண்க. ஞான 10:4தொ; 14:6). குணமாக்குபவர் மற்றும் எஞ்சியோரின் மெசியா உருவங்கள் ஏற்கெனவே நோவாவை, ஒரு காலத்தில் புதிய படைப் பின் தொடக்கமான இயேசு கிறிஸ்துவின் மாதிரியாக்குகின்றன.

3. புதிய சகாப்தத்தின் வெள்ளப்பெருக்கு: இறுதிக்காலத் தீர்ப்பைப் பற்றிக் கூற வரும்போது இயேசு வெள்ளப் பெருக்கை நினைவுகூர்கிறார் (மத் 24:37தொ). இயேசு, நோவாவைப்போல், சாவு என்ற வெள்ளப் பெருக்கில் மூழ்கி வெற்றி வீரராய் எழுந்த போது இங்கு அந்த இறுதித் தீர்ப்பு ஏற்கெனவே நிகழ்த்தப்படுகிறது. திரு முழுக்கு நீரில் மூழ்கி எழுவோர் உயிர்த்த கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்றுக் காக் கப்பெறுவர் (1 பேதுரு 3:18-21). இவ்வாறு வெள்ளப்பெருக்கு திருமுழுக்கை முன்னு ணர்த்தினால், வெள்ளப்பெருக்கிலிருந்து காத்த பெட்டகம், இந்தப் பாவ உலக மெனும் வெள்ளத்தின் மேல் மிதக்கும் திருச்சபைக்கு மாதிரியாகவும், திருச்சபை ''நெறிகெட்ட இத்தலைமுறையிலிருந்து நீங்கி மீட்பு அடைய'' விரும்புபவர்களை ஏற்றுக்கொள்கிறது என்றும் (அ.ப. 2:40) திருச்சபைத் தந்தையர் காண்கின்றனர்.

தீயவர்களை அச்சுறுத்தும் இறுதித் தீர்ப்பு இன்னும் வரவில்லை. வெள்ளப்பெருக்கின் நாள்களைப் போலவே இறுதித் தீர்ப்பை யும் ஆண்டவர் தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறார். இஃது அவரது அளவற்ற பொறுமையையும் இரக்கத்தை யும் காட்டுகின்றது. அது மட்டுமன்று, மெசியாவின் சமூகம் நிறைவை அடையும் வரை இறுதித் தீர்ப்பைத் தள்ளிப் போடுகி றார் (காண்க. 2 பேதுரு 2:5.9; 3:6தொ). அவரது கால வெளிப்பாட்டு உருவகங்க ளில் பேதுருவின் இரண்டாம் திருமுகம் ஆசிரியர் மீட்பின் வரலாற்றில் மூன்று நிலைகளைப் பிரித்துக் காட்டுகிறார். அ) வெள்ளப்பெருக்கால் தீர்ப்பிடப்பட்ட பழைய உலகம்; ஆ) நெருப்பினால் அழி யப்போகும் இன்றைய உலகு; இ) எதிர் காலத்தில் தோன்ற இருக்கும் புதிய வானம் (2 பேதுரு 3:5தொ.11தொ). இவ்வாறு நோவாவுடன் மேற்கொள்ளப்பட்ட பழைய உடன்படிக்கை, தூய்மையான மக்கள் தூய் மையான அகிலத்தில் இணைந்து வாழும் நிலையில் நிறைவுக்குக் கொண்டு வரப் படும்.

வெள்ளரிக்காய் (CUCUMBER)

இஸ்ராயேல் மக்கள் வனாந்தரத்திலே சுற்றித் திரிந்தபோது, மன்னாவை உண்டு சலித்த அம்மக்கள், ''நாம் எகிப்திலே செலவில்லாமல் உண்ட மீன்கள், வெள்ள ரிக்காய், கொம்மட்டிக்காய்,கீரை, வெங்கா யம், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றின் நினைவு வருகிறது'' (எண் 11:5) என்று முறையிட்டனர். இஃது எகிப்தில் நிலை யான உணவுப்பொருளாகும். இதற்காக பாலைவனத்தில் இஸ்ராயேலர் ஏங்கினர்.

எசாயா இறைவாக்கினர் எருசலேமின் அழிவுக்காட்சியிலே, அழிவுற்ற எருசலேம் வெள்ளரித் தோட்டத்தின் குடிசை போல் உள்ளது எனக் கூறுகிறார் (எசா 1:8).

மனிதர் வணங்கும் சிலைகள் வெள்ளரித் தோட்டத்துப் பொம்மை போன்றவை என்று அவற்றின் பயனற்ற தன்மையை எரேமியா சித்திரிக்கிறார் (எரே 10:5).

வெள்ளாடு (GOAT)

இது பாலஸ்தீனத்தில் பொதுவாகக் காணப்படும் ஒரு வீட்டு விலங்கு. விவிலி யத்தில் இஃது அடிக்கடி குறிப்பிடப்படு கிறது.

1. பொது உபயோகத்தில்: இஸ்ராயேலில் பால் வழங்கிய விலங்குகளில் வெள்ளாடு முதன்மையானதாகும். அதன் பால் உயர் வாக மதிக்கப்பட்டது (உப 32:14; பழ 27:27). அதன் இறைச்சி உணவாகப் பயன் பட்டது (லேவி 7:23; உப 14:4). அதன் மயிர் துணி நெய்வதற்கு மூலப்பொருளா கும். இத்துணி கூடாரங்கள் அமைப்பதற் கும், வீட்டில் பயன்படுத்துவதற்கும் பயன்

பட்டது (யாத் 25:4; 26:7; 36:14; 1 சாமு 19:13.16). அதன் பதனிட்ட தோல் மூடு திரையாகப் பயன்பட்டது (எண் 4:6). முழுத்தோலும் தண்ணீர் அடைத்து வைக்கும் துருத்தியாகப் பயன்பட்டது (காண்க. ஆதி 21:14; யோசு 9:4; 1 சாமு 1:24; மத் 9:17). பெரிய ஆட்டு மந்தைகளைக் கொண்டிருப்பது ஒருவருடைய செல்வத்தின் மற்றும் சமூக உயர்வின் அடையாளமாகும் (காண்க. ஆதி 30:32.43; 1 சாமு 25:2). மற்ற வீட்டு விலங்குகளைப்போல், வெள்ளாட்டின் முதல் ஈற்று ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் (எண் 18:15-17). ஆண் வெள்ளாடு மந்தைக்குத் தலைமை தாங்கியது (எரே 50:8; பழ 30:31). ஆகவே, அரசியல் தலைவர்களும் வலிமை வாய்ந்த அரசர்களும் வெள்ளாடுகள் என்று உருவகமாக அழைக்கப்படுகின்றனர் (எசே 34:17; 39:18; தானி 8:5; செக் 10:3). தீர் நகரின் வியாபாரப் பொருள்களில் முக்கியமானவை செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளுமாகும் (எசே 27:21).

2. பலிவிலங்கு: யாவேக்குப் பலியிடப்படுவதற்கு, ஒரு வெள்ளாடு எட்டு நாள் வயதுடையதாகவாவது இருக்க வேண்டும் (லேவி 22:7). பாஸ்கா உணவிற்குப் பயன்பட்ட வெள்ளாடு ஒரு வயதுக் கிடாயாக இருக்க வேண்டும் (யாத் 12:5). பலியில் வெள்ளாடுகள் பொதுவாகப் பயன்பட்டாலும் (சங் 50:9.13; 66:15; எசா 1:11), பெரும்பாலான குறிப்புகள் குறிப்பிட்ட வகைப்பலியிலோ, குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலோ பயன்பட்ட வெள்ளாடுகளைக் குறிக்கின்றன. இந்த வெள்ளாடு கிடாயாக இருக்க வேண்டும் (லேவி 1:10; 22:19). சமாதானக் காணிக்கை (லேவி 3:6.12; 17:3; எண் 7:17), குற்றத்திற்கான காணிக்கை (லேவி 5:18), பாவத்திற்கான காணிக்கை (லேவி 4:23; எண் 7:16; 2 நாள் 29:21; எசே 43:22.25; 45:23) ஆகியவற்றில் ஆண் வெள்ளாடு பயன்பட்டது. லேவி 4:28; 5:6-இல் பெண் வெள்ளாடும் குறிக்கப்படுகிறது. பரிகார நாளில் பழி ஆடு பற்றிய விவரிப்பு லேவி 16-இல் காணக்கிடக்கிறது. இந்தச் சடங்கு பற்றிய கிறிஸ்தவ நோக்கு எபி 9:12-13.19; 10:4-இல் கூறப்படுகிறது.

3. உருவகமாக: வெள்ளாட்டு மந்தை ஒரு பெண்ணின் தலைமுடியையும் (உ.ச. 4:1; 6:5), இஸ்ராயேலரின் படைச்சிறுமையையும் (1 அர 20:27) உவமையாகக் குறிக்கிறது. மனிதத் தலைவர்கள், ஆண் வெள்ளாடாக உருவகமாக விவரிக்கப்படுகின்றனர் (எசா 14:9; எசே 34:17; தானி 8:5-8; செக் 10:3). இறுதித் தீர்ப்பு உவமையில் (மத் 25:31-46) இன்றும் பாலஸ்தீனத்தில் காணப்படும் ஒரு காட்சியை இயேசு பயன்படுத்துகிறார். செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் ஒரே மேய்ச்சல் நிலத்தில் மேய்கின்றன. ஆனால், சந்தைக்குக் கொண்டு போகப்படும்போது இரண்டும் பிரிக்கப்பட்டுத் தனித்தனிப் பட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டன. உவமை பிரிவை மட்டுந்தான் சுட்டிக்காட்டுகிறது. வெள்ளாடு தீமையைக் குறிக்கிறது என்ற எந்த அடையாளவியலும் இல்லை.

வெள்ளி (SILVER)

1. பண்டைக் காலத்தில்: கிழக்கத்திய நாடுகளில் தங்கம், செம்பு போன்றே வெள்ளியும் தொடக்க காலத்திலிருந்தே பழக்கத்தில் இருந்தது. பாரசீகர் காலம் வரை (கி.மு. 500) வெள்ளிதான் அதிக விலையுள்ள பொருளாக இருந்து வந்தது. ஆனால், சந்தையில் ஏராளமான வெள்ளி புழக்கத்திற்கு வந்தவுடனே தங்கம் அதனுடைய இடத்தைப் பிடித்துக்கொண்டது. வெள்ளி நகைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது; வியாபார பேரங்களில் பயன்படுத்தப்பட்டது. இப்பொருளில் முதன் முதலாக இந்தச் சொல் ஆதி 23:15-16-இல் காணப்படுகின்றது. எகிப்திற்கு உள்நாட்டிலிருந்து போதுமான வெள்ளிக் கனிமங்கள் கிடைக்கவில்லை. கி.மு. 1580-1350-இல் ஆசியாவின் மீது படையெடுத்தபோது தூய்மை செய்யப்பட்ட வெள்ளி கிடைத்தது (ஆதி 44:2). வெள்ளியால் செய்யப்பட்ட எகிப்திய நகைகள் மிகவும் விலையுயர்ந்தவையாக இருந்தன (ஆதி 11:2; 12:35). ஏறக்குறைய ஆபிரகாமின் காலத்திலிருந்து சிறிய ஆசியா

வில், இத்தியர்களும் அவர்களுக்குப்பின் வந்தவர்களும் உலக வெள்ளிச் சந்தையின் மீது முழு ஆதிக்கம் உடையவர்களாக இருந்தனர். கப்பதோக்கியக் குறிப்பின்படி மெசபொத்தாமியாவைச் சார்ந்த வணிகர்கள் வெள்ளி வியாபாரத்தில் ஈடுபட்டுச் சிறிய ஆசியாவில் முன்னணியில் நின்றனர்.

பாலஸ்தீனத்தில் நடந்த புதைபொருள் ஆய்வில் வெள்ளிப்பொருட்கள் சிலவே கிடைத்துள்ளன. இது கி.மு. 1400-இலிருந்து வெள்ளி அரிதாகவே கிடைத்தது என்று கட்டுகிறது. இதற்கு விதிவிலக்கு சாலமோன் ஆட்சிக்காலமாகும். அப்போது, எருசலேமில் ''வெள்ளி கற்களைப்போல்'' காணப்பட்டது (1 அர 10:27; 2 நாள் 9:27; சிரா 47:18). பழைய ஏற்பாட்டிலே தங்கத்தை விட வெள்ளிக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டது. நாளாகமங்களிலும், தானியேல் நூலிலும் புதிய ஏற்பாட்டில் உள்ளது போல் தங்கத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. பெனிசியாவும் (2 நாள் 9:21; எசே 27:12), அரேபியாவும் (2 சாமு 8:10-12; 2 நாள் 9:14) இஸ்ராயேலுக்கு வெள்ளியை விநியோகிக்கும் மாநிலங்களாக இருந்தன (எரே 10:9; 1 அர 10:22).

*2. **பழைய ஏற்பாடு:** ஏராளமான பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் வெள்ளியின் பயனைப் பற்றி வெளிப்படுத்துகின்றன. பொதுவாக, வெள்ளி ஒருவனுடைய செல்வ நிலையைக் குறிப்பதற்கும் (ஆதி 13:2; 24:35; யாத் 25:3; எண் 22:18; உப 7:25; செப் 1:18; ஆகா 2:9; செக் 6:11), எடுத்துக்கொண்ட கொள்ளைப்பொருளைக் குறிப்பதற்கும் (யோசு 6:19; 7:21), கப்பமாகக் கொடுக்கப்பட்டதைக் குறிக்கவும் (1 அர 15:19; உ.ச. 8:9) பயன்படுத்தப்பட்டது.*

கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய சம்பளத்திற்கு வெள்ளி உலோக அளவாகப் பயன்படுத்தப்பட்டது; பணமாகச் செலுத்தப்பட்டது (ஆதி 20:16; 23:15-16; 37:28; 45:22; யாத் 21:32; லேவி 27:16; யோசு 24:32; நீதி 17:10; 2 சாமு 24:24; நெகே 7:72; யோபு 28:15; எசா 7:23; 46:6; ஆமோ 2:6; 8:6). அரசர்களின் இரசம் பருகும் கோப்பையாகவும் (ஆதி44:2), அரசனுடைய தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட மணிமுடியிலும் (செக் 6:11) வெள்ளி பயன்பட்டது; நகைகளாகவும் (ஆதி 24:53; யாத் 3:22; 11:2; 12:35; உ.ச. 1:11), சிலைகள் செய்வதற்கும் (யாத் 20:23; உப 29:17; நீதி 17:4: சங் 115:4; 135:15; எசா 2:20; 39:22; 31:17; 40:19; எரே 10:4; தானி 2:32-33; 5:2-3; 11:8-9; ஓசே 13:2) பயன்பட்டது. இஃது எக்காளம் செய்வதற்கும் (எண் 10:2), உருவ மேடைகள் அமைப்பதற்கும் (யாத் 26:19), கொக்கிகள், தலைமடிப்பு, தூண் முகடு (ஆதி 27:10.17; 36:24.26) ஆகியவை செய்வதற்கும், சாப்பிடும் தட்டுகளும், கோப்பைகளும் செய்வதற்கும் (எண் 7:13-14) பயன்படுத்தப்பட்டது. இஃது எருசலேம் ஆலயத் தொடர்பிலும் (1 அர 7:51; 1 நாள் 28: 15-16; 2 நாள் 2:7; எஸ் 8:26.28; நெகே 7:71), கச்சாப் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டது (யாத் 31:4; 35:24.32; 1 அர 15:15).

பழைய ஏற்பாடு வெள்ளிக் கனிம உற்பத்தி இடங்களையும் (யோபு 28:1), அதைத் தூய்மைப்படுத்தக்கூடிய முறையையும் (செக் 13:9; மலா 3:3; எசே 22:20-22), பல்வேறு வகையில் புடமிடுவதைப் பற்றியும் (பழ 17:3; 27:21), தூய்மைப்படுத்தப்பட்ட வெள்ளியை எடுக்கும் முறையையும் (பழ 10:20; 1 நாள் 29:4; சங் 12:6) அறிந்திருக்கிறது. உருவகமாக நீதிமானின் இதயம் தூய்மைப்படுத்தப்பட்ட வெள்ளியாகக் காட்டப்பட்டுள்ளது (சங் 66:10; எசா 48:10). எருசலேமின் மோசமான நிலைக்கு வெள்ளியின் களிம்பேறிய நிலை ஒப்பிடப்பட்டுள்ளது (எசா 1:22; எரே 6:30). வெள்ளி பிரகாசமான நிறத்திற்குப் பயன்படுத்தப்பட்டது (சங் 68:13). கடவுளுடைய வார்த்தையின் தூய்மையையும் (சங் 12:6), செல்வ நிறைவையும் (யோபு 3:5; 22:25; 27:16; எசா 60:17; செக் 9:3), ஞானத்தைவிடக் குறைவான மதிப்புடையது என்பதை (யோபு 28:15; பழ 3:14; 8:19; 10:20; 16:16; 22:1; 25:11) குறிக்கவும் உருவகமாக வெள்ளி பயன்பட்டுள்ளது.

3. புதிய ஏற்பாடு: புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் வெள்ளியைப் பற்றி இகழ்ச்சியான குறிப்புகள் உள்ளன (மத் 10:9; யாக் 5:3; 1 பேதுரு 1:18). பொதுவாக வெள்ளி சொத்தாகவும் (அ.ப. 20:33; 1 கொரி 3:12 திருவெளி 18:12), நாணயமாகவும் (மத் 22:19; 26:15; 27:3-9; லூக் 15:8-10), வரி கொடுப்பதற்குத் தேவைப்படுவதாகவும் (மத் 17:24-27), சிலைகள் செய்வதற்கும் (அப் 17:29; 19:24; திருவெளி 9:20) பயன்பட்டதாகத் தெரிகின்றது.

வெள்ளித் தட்டான் (SILVER SMITH)

இவர் வெள்ளிக் குகையிலிருந்து எடுக்கப்பட்ட வெள்ளியைத் தூய்மைப்படுத்துவதிலும், ஆபரணங்களாகச் செய்வதிலும் ஈடுபட்டுள்ள தட்டான் ஆவார். கி.மு. மூன்றாம் ஆயிரம் ஆண்டுக்காலத்திற்கு முன்பே சிறிய ஆசியாவில், இவ்வகைத் தட்டான்கள் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. தட்டான்தான் முதலில் உலோகக் கனிகளை உருக்கி அதை வார்ப்பு அச்சில் ஊற்றிப் பல்வேறு வடிவங்களில் அமைக்கின்றார். ஆகவே அவரை இதனுடைய அமைப்பாளர் என்று சொல்லலாம் (நீதி 17:4). வெள்ளித்தட்டான், வெள்ளித்தகடுகளைச் செய்வான் (எரே 10:9); இசைக்கருவிகளைச் செய்வான் (எண் 10:2); செம்மையான அலங்கரிப்புக்கள் (யாத் 26:19), ஆலயத்திற்கும் ஆண்டவருடைய பேழைக்கும் (எண் 7:13; 2 சாமு 8:11) சிலைகளுக்கும் (யாத் 20:23; அ.ப. 19:24) வேண்டிய பொருள்களையும் செய்வான். புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு பகுதியில், பவுலின் போதனையில் உருவ வழிபாட்டிற்கு எதிரான பயமுறுத்தல் இருந்ததால் வெள்ளித்தட்டான்களின் தலைவனுடன் பவுலுக்குச் சச்சரவு இருந்ததாகத் தெரிகின்றது. தெமேத்திரியு அப்போது தட்டான்களின் சங்கத்தலைவனாக இருந்திருக்கலாம்.

வெள்ளீயம், தகரம் (TIN)

பழைய ஏற்பாட்டின் இறுதிப் பகுதியில் தான் வெள்ளீயம் பற்றிய செய்தி காணப்படுகிறது (எசே 22:18.20; 27:12). பெனிசியர்கள் இதை வெளிநாடுகளிலிருந்து பழங்கால மேற்காசியாவினுள் இறக்குமதி செய்து தங்களது அண்டைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர் (27:12). மிதியான் நாட்டு வியாபாரிகள், இஸ்ராயேலருக்கு வெள்ளீயம் கொணர்ந்ததாகக் கருதப்படுகின்றது (எண் 31:22). இது சில சமயங்களில் ஈயத்தோடு குழப்பப்படுகிறது (காண்க. செக் 4:10). இது செம்போடு சேர்ந்து வெண்கலம் என்ற கலப்பு உலோகம் செய்யப்பயன்பட்டது. இது வெள்ளிக் கனிமத்தோடு சேர்ந்து காணப்பட்டது. வெள்ளிக்கனிமம் உருக்கி, வெள்ளீயம் நீக்கப்பட்டுச் சுத்தி செய்தல் எசா 1:25; எசே 22:18-20-இல் உருவகமாகக் கூறப்படுகிறது.

வெள்ளைப்பூண்டு (GARLIC)

எபிரேயர்கள், பாலைவனத்தில் தபேரா என்ற இடத்துக்கருகில் தாங்கள் எகிப்தில் உண்ட உணவுக்காக ஏங்கினர். இந்த உணவில் ஒன்று வெள்ளைப்பூண்டு ஆகும் (எண் 11:5). இது வெங்காய வகையைச் சேர்ந்த தாவரப் பொருளாகும்; உணவுக்குச் சுவையூட்டப் பயன்பட்டது. எகிப்தில் இஸ்ராயேலர் அடிமை வேலையில் ஈடுபட்டிருந்த போது வெள்ளைப்பூண்டு போன்ற காரமான நறுமணப் பொருள்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கலாம் (11:5).

வெள்ளைப்போளம் (MYRRH)

வெள்ளைப்போளம் என்ற நறுமணப் பொருள் பல மரங்களின் கசிவுச் சாற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

பெரும்பான்மையான ஆராய்ச்சியாளர்கள் ஆதி 37:25; 43:11-இல் குறிக்கப்பட்டுள்ள நறுமணப்பொருளை மஞ்சள் அல்லது இளஞ்சிவப்புநிற மலர்களையுடைய புதர்ச் செடியிலிருந்து தயாரிக்கப்பட்ட பிசின் வகையைச் சேர்ந்தது என்று கணிக்கின்றார்கள். இதுதான் பழங்கால இசுமாயேலர்கள் கிலயாத்திலிருந்து எகிப்துக்கு எடுத்துச் சென்ற முக்கிய வியாபாரப் பொருளாக இருந்தது (ஆதி 37:25). இஸ்ராயேல் (யாக்கோபு) தன் புதல்வர்களை எகிப்தின் அமைச்சன் யோசேப்புக்குத் தன் நாட்டில் கிடைக்கும் விலை உயர்ந்த

பொருளாகிய வெள்ளைப்போளம் கொண்டு போய்க் கொடுக்கும்படி கூறுகின்றார் (ஆதி 43:11).

வெள்ளைப்போளம் பெரும்பாலும் தென் அரேபியாவில் திரவ வடிவிலோ (யாத் 30:23; உ.ச. 5:5.13), எண்ணெய் வடிவிலோ (எஸ்த 2:12), திடப்பொருளாகவோ கிடைக்கின்றது. வெள்ளைப்போளம் புனிதத் தைலமாகவும் (யாத் 30:23), அழகூட்டும் பொருளாகவும் (எஸ்த 2:12; உ.ச. 5:5), துணிகளில் நறுமணம் சேர்க்கும் பொருளாகவும் (சங் 45:8; பழ 7:17; உ.ச. 1:13; 3:6) பயன்பட்டது; கவிதை அடையாளமாகவும் (உ.ச. 4:6.14; 5:1.13; சீரா 24:15) பயன்படுத்தப்பட்டது.

குழந்தை இயேசுவுக்கு மூன்று ஞானிகள் அளித்த காணிக்கைகளில் இதுவும் ஒன்று (மத் 2:11). இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது அவருக்கு வெள்ளைப்போளம் கலந்த இரசத்தைக் கொடுத்தனர் (மாற் 15:23). முன்னொரு நாள் இயேசுவை இரவில் பார்க்க வந்த நிக்கதேமு வெள்ளைப்போளமும், அகில்தூளும் கலந்து இவைகளுடன் இயேசுவின் சடலத்தைக் கட்டி அடக்கம் செய்தார் (யோவா 19:39; காண்க. மாற் 16:1; லூக் 24:1).

வெள்ளைப்போளம், யூதஅத்தர் (STACTE)

இது திருப்பொருளாம் புனித நறுமணக் கட்டி செய்யப் பயன்படுத்தப்படும் நான்கு வகை வாசனைப் பொருட்களுள் ஒன்று (யாத் 30:34); சில செடிகளில் மற்றும் மரங்களிலிருந்து வடியும் பிசினாக இருக்கலாம். ஞானம் பற்றிய ஒரு பாடலில் இது குறிப்பிடப்படுகிறது (சீரா 24:15).

வெறுங்கால் (BAREFOOT)

விவிலிய காலத்தில் பயணம் செய்யும் போது காலில் செருப்பு அணிந்திருத்தல் வழக்கம். சில சமயங்களில் வெறுங்காலாய்ச் சென்றனர். வெறுங்காலாய் இருத்தல் வணக்கத்தையும் (யாத் 3:5; யோசு 5:15), தபசையும் (2 சாமு 15:30), துக்கத்தையும் (2 சாமு 15:30; எசே 24:17.23) எடுத்துக்காட்டியது. மேலும், அடிமைத்தனத்தையும் (எசா 20:2-4), வெட்கத்தையும் (உப. 25:9-10; 2ரூத் 4:7) அடையாளமாக உணர்த்திற்று.

புதிய ஏற்பாட்டில் பன்னிருவரை இயேசு தூது அனுப்பியபோது (மத் 10:5தொ; மாற்கு 6:7தொ; லூக் 9:1தொ) மிதியடி போட்டுக்கொள்ள அனுமதிக்கிறார். ஆனால், எழுபத்திரண்டு பேரைத் தமக்கு முன் அனுப்பும்போது (லூக் 10:1-12) அவர்கள் மிதியடி அணிவதை இயேசு அனுமதிக்கவில்லை. இது முரண்பாடாகத் தோன்றுகிறது. இதைப் பலரும் பலவாறு விளக்க முயன்றுள்ளனர். ஆனால், எதுவும் நிறைவு தரவில்லை.

வெறுத்தல், வெறுப்பு (HATE, HATRED)

I. வெறுப்பு அன்பிற்கு முரணானது. அதே நேரத்தில் அன்போடு நெருங்கிய தொடர்பு கொண்டது. தாமாரின் மீது அம்மோன் கொண்டிருந்த அன்பு திடீரென வெறுப்பாக மாறியதற்குக் காரணம் அம்மோன் அவள்மீது காமவெறி கொண்டவனாக மாறியதுதான் (2 சாமு 13:5). விவிலியத்தின் பல பகுதிகள் 'அன்பு-வெறுப்பு' என்ற இந்த இரட்டை நிகழ்வுகளை எதிர்கொள்ளச் செய்கின்றன (ஆதி 29:18.31; மத் 5:43; 6:24). ஏனெனில், அன்பு எதை மிக மதிப்புள்ளதாக நினைக்கிறதோ அதையே வெறுப்பது இயல்பானது என்று இப்பகுதிகள் கருதுவதாகத் தெரிகிறது. நிராகரிக்கும் கணவனின் உள்ள நிலை எப்படி இருக்கும் என்பதை உபாகமம் இதை வைத்தே விளக்குகிறது (உப 22:13.16). செமித்திய மொழிமரபில் இத்தகைய வன்முறையான எதிர்ச்செயல் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், இடைநிலையான பொருள் எதையும் இது கொடுப்பதில்லை. ஆனால், எதார்த்தத்துக்கும், மொழி கொடுக்கும் ஆழமான பொருளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. பல மனைவிகள் உள்ள ஒரு குடும்பத்தில் ஒரு மனைவி குறைவாக அன்பு செய்யப்பட்டால், அவள் வெறுக்கப்பட்டதாகக் கூறலாம் (உப 21:15; காண்க. ஆதி 29:31தொ). இத்தகைய குறிப்புகள் நற்செய்தியில் உள்ள ஒரு சில சொற்றொடர்களைப்

புரிந்துகொள்ளத் துணை செய்கின்றன (லூக் 14:26; காண். மத் 10:37). வெறுப்பு உருவாக்கும் ஒருசில சமயப்பிரச்சனைகள் இங்குச் சந்திக்கப்படவில்லை. ஏன், எவ்வாறு வெறுப்பு மனிதகுலத்தில் நுழைந்தது? கடவுளைப் பற்றிப் பேசும்போது விவிலியம் எந்த ஒரு கண்ணோட்டத்தோடு வெறுப்பைப் பற்றிப் பேசுகிறது? வெறுப்பை எந்த ஒரு மனநிலைபோடு இயேசு அணுகினார்?

II. **மனிதர்களிடையே வெறுப்பு:**

1. வெறுப்பிலே அமிழ்ந்திருக்கும் உலகம்: மனிதர்களிடையே வெறுப்பு உள்ளது என்பது உண்மை. மனிதனின் முதல் தலைமுறையிலிருந்தே இஃது இருப்பதை ஆதியாகமம் சுட்டிக்காட்டுகிறது (ஆதி 4:2-8). ஞானிகள் இதனை எப்படிப் பார்ப்பதென்று தெளிவாக இருக்கின்றனர் (பழ 10:12; 14:20; 19:7; 26:24தொ; சீரா 20:8). ஆனால், விவிலியம் இதன் மீது மதிப்பீட்டுத் தீர்ப்பை வழங்குகிறது. வெறுப்பு பாவத்தின் விளைவும் தீமையும் ஆகும். ஏனெனில், கடவுள் மனிதர்களைச் சகோதரர்களாக அன்பில் இணைந்து வாழ அழைத்தார். காயினின் கதை வெறுப்பின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. தன் சகோதரனின் மீது கொண்ட பொறாமை வெறுப்பாக மாறி முடிவில் அது கொலையில் முடிந்தது. இஃது ஒன்றே வெறுப்பு சாத்தானிடமிருந்து வருகிறது என்று கண்டனம் செய்யப்படப் போதுமானது. இதை ஞானிகள் தெளிவாகக் கூறுகின்றனர். மனிதன் மகிழ்ச்சியாய் இருப்பதைக் கண்டு பொறாமையுற்ற சாத்தான் வெறுப்பைக் கொண்டு வந்து, அதன் வழியாகச் சாவையும் கொண்டு வந்தது (ஞான 2:24). அன்றிலிருந்து இன்று வரை உலகம் வெறுப்பின் கையில் சிக்கிக்கொண்டது (தீத் 3:3).

2. நீதிமானே வெறுப்பிற்கு உள்ளாகிறார்: தொடக்கத்திலிருந்தே பொறாமை -வெறுப்பு - கொலை மூன்றுமே ஒரே நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கடவுள் பற்றற்ற மனிதனே நீதிமானை வெறுத்து அவரைத் தனது எதிரியாக் நினைக்கிறான். காயீன் ஆபேலிடம் கொண்டிருந்ததும், ஏசா யாக்கோபிடம் கொண்டிருந்ததும், யாக்கோபின் புதல்வர்கள் யோசேப்பிடம் கொண்டிருந்ததும், எகிப்தியர்கள் இஸ்ராயேலரிடம் கொண்டிருந்ததும் (சங் 105:25), கடவுள் பற்றற்ற அரசர்கள் இறைவாக்கினரிடம் கொண்டிருந்ததும் (1 அர 22:8), சங்கீதங்களில் தீயோர் நீதிமான்களிடம் கொண்டிருந்ததும், யாவேயால் அபிடேகம் செய்யப்பட்டவர்கள் மீதும் (1 சங் 129) எருசலேம் மீதும் (எசா 60:15) அன்னியர்கள் கொண்டிருந்ததும் இத்தகைய வெறுப்புதான். எனவே இறைவனை அன்பு செய்பவரும், கடவுளால் அன்பு செய்யப்படுபவரும் எப்பொழுதுமே வெறுப்புக்கு ஆளாவார் என்பது ஒரு மாறாத நிலைத்த நியதியாகிவிட்டது. ஏனெனில், அவர் தனித்திருப்பது பொறாமையை எழுப்புகிறது. அவரது வாழ்வு பாவிகளைக் கண்டனம் செய்கிறது (ஞான 2:10-20). எது எப்படியிருந்தாலும் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களில் கடவுளே காணப்பட்டு வெறுக்கப்படுகிறார் (1 சாமு 8:7; எரே 17:14தொ).

3. நீதிமானால் வெறுக்க முடியுமா?: நீதிமான் தன்னை வெறுப்பவர்களை வெறுக்கலாமா? கடவுளின் மனிதர்கள் தங்கள் அயலாரை அன்பு செய்ய வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது (லேவி 19:17தொ). வெறுப்பால் ஒருவனைக் கொலை செய்தவன் சாக வேண்டுமென்று ஒரு சட்டமும் உள்ளது (உப 19:11தொ). அதே நேரத்தில் இரத்தப்பழி வாங்குதலின் கடுமையைக் குறைப்பதற்கு அடைக்கலம் தரும் நகரங்களாகச் சிலவற்றையும் ஏற்படுத்தியுள்ளது சட்டம் (உப 19:1-10).

நீதிமான்களை வெறுக்கும் தீயவர்கள் மக்களின் எதிரிகளாவது மட்டுமல்லாது கடவுளின் எதிரிகளாகவும் செயல்படுகிறார்கள் (எண் 10:35;சங் 83:3). ஆனால், ஆண்டவரின் அன்பு இடும் கட்டளை மாறுபட்டு நிற்கிறது. அது நமக்கு வியப்பை அளிக்கலாம். இஸ்ராயேல் இறைவனுடைய எதிரிகளை வெறுக்கும். இதன்

நோக்கம் அவர்களுடைய நடத்தையைப் பின்பற்றாமல் இருப்பதுவே. இதுவே அர்ப்பணப்போரின் பொருளாகும் (காண்க. உப 7:1-6). தீயவர்கள்மேல் பொறாமை கொண்டு அவர்களைப் பின்பற்றச் சோதிக்கப்படும் துன்புறும் நீதிமான் (பழ 3:31; சங் 37:73), தன்னைப் பாவத்திலிருந்து காத்துக்கொள்ள, பாவிகளின் குழுவை வெறுப்பார் (சங் 26:4தொ; 101:3தொ).

யாவேயை வெறுப்பவர்களை அன்பு செய்ய வேண்டும் (2 நாள் 19:2) என்று நினைப்பவர்கள் விசுவாசமற்றவர்கள் கூட்டத்தில் சேர்ந்து பிரமாணிக்கமற்றவர்களாவார்கள் (சங் 50:18-21). கடவுளின் ஆர்வ மிகுந்த அன்புக்குப் பதிலிறுப்பது என்பது அதைப் போலவே நாமும் எல்லாவற்றிலும் குறையாத அன்பு கொள்ளுதலேயாகும் (சங் 119:113; 97:10). அவரது விருப்பம் எல்லாவற்றிலும் நிறைவேற்றப்பட வேண்டும். அவர் அன்பு செய்வதை அன்பு செய்ய வேண்டும். அவர் வெறுப்பதை வெறுக்க வேண்டும் (ஆமோ 5:15; பழ 8:13; சங் 45:8). அப்படியென்றால் எப்படிக் கடவுளை வெறுப்பவர்களை ஒருவன் வெறுக்காமல் இருக்க முடியும் (சங் 139:21தொ)?

ஆனால், இந்த மனப்போக்கில் ஐயப்பாடும் ஆபத்தும் இல்லாமல் இல்லை. ஏனெனில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற போர்வையில் எல்லாச் சொந்த எதிரிகளையும், தேசிய எதிரிகளையும் கடவுளின் எதிரிகளாக நினைத்துவிட்டால் என்ன செய்வது? இஃது ஒரு கற்பனையான பிரச்சனை அன்று. ஏனெனில், பேலியாலுக்கு விரோதமாக "முடிவில்லா வெறுப்பை" வாக்குறுதி எடுத்தபோது, கும்ரான் பிரிவினர் செயலளவில் இறைவனுடைய செயல்களையும் தங்கள் குறுகிய குழுவின் செயல்களையும் ஒன்றாக்கினர். "உன்னை அடுத்தவர் மீது அன்புகூர்வாயாக; பகைவர் மீது காழ்ப்புக் கொள்வாயாக" (மத் 5:43). இது பழைய சட்டத்தின்படி உள்ளதன்று. மாறாக, பலர் இதைத் தவறாக விளக்கிப் பொருள் கொண்டு, ஒரு குறுகிய வட்டத்திற்குள் தங்களை வைத்துக் கொண்டனர்.

III. **கடவுளிடம் வெறுப்பு உள்ளதா?:** அன்பே வடிவான கடவுளிடம் வெறுப்பு இருக்க முடியுமா? உண்மையிலே கடவுள் தான் படைத்த யாரையும் வெறுக்கமுடியாது (ஞான 11:24). அப்படி இருப்பார் எனச் சொல்வது அவர் தனது மக்களை வெறுப்பவர் என்று கூறி அவருக்குத் தீங்கு செய்வதும் குற்றம் சாட்டுவதுமாகும் (உப 1:27; 9:28). ஆனால், அன்பே வடிவான அதே கடவுள் தூய்மையும், பொறாமையும் மிக்கவர். அவரது அன்பு பாவத்தைக் கடுமையாக நிராகரிக்கிறது. சிலைவழிபாடு இஸ்ராயேலரிடம் காணப்பட்டாலும் சரி, கானானியர்களிடம் காணப்பட்டாலும் சரி அதை வெறுக்கிறார் (எரே 44:4). வழிபாட்டில் இரட்டை வேடத்தையும் (ஆமோ 5:21), கொள்ளையையும், குற்றத்தையும் (எசா 61:8), பொய்யாணையையும் (செக் 8:17), மணமுறிவையும் (மலா 2:16), பொதுவாக, பழ 6:16-19-இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள எல்லாப் பாவங்களையுமே அவர் வெறுக்கிறார். ஒரு விதத்தில் பாவி பாவத்தோடு ஒன்றித்து விடுவதால் அவன் வேறு, பாவம் வேறு என்ற நிலை மாறி ஒன்றாகி விடுகின்றான்; எனவே, இறைவனின் எதிரியாகிறான் (அதாவது இறைவனை வெறுப்பவனாகிறான். யாத் 20:5; உப 7:10; சங் 139:21; உரோ 1:30). தனது தவறுகளால் ஒரு பாவி எந்த விதத்திலும் கடவுளோடு ஒத்துப்போக முடியாமை விவிலியத்தில் வெறுப்பு என்று விவரிக்கப்படுகிறது. வன்முறை செய்பவர்கள் (சங் 11:5), சிலையை வழிபடுவோர் (31:7), வெளிவேடக்காரர் (சீரா 27:24), பொதுவாகத் தீமை செய்பவர்கள் அனைவரையுமே இறைவன் வெறுக்கிறார் (சங் 5:6தொ). குற்றம் செய்த கானானியர்களைக் கடவுள் வெறுப்பது போல (ஞான 12:3), பிரமாணிக்கமற்ற இஸ்ராயேலர்களையும் கடவுள் வெறுக்கிறார் (ஓசே 9:15; எரே 12:8). கடவுள், "நான் யாக்கோபை அன்பு செய்கிறேன்; ஏசாவை வெறுக்கிறேன்" என்று கூறும்போது சற்றுக் குழப்பம் ஏற்படுகிறது (மலா 1:2; உரோ

9:13). இங்கு யாக்கோபு இஸ்ராயேலரை யும், ஏசா ஏதோமியரையும் குறிக்கின்றனர் (மலா 1:2; காண்க. ஆதி 25:30; 32:28). இவ்வாறு ஏதோமியர் இஸ்ராயேலுக்கு இழைத்த கொடுமைகளை இறைவன் கண் டனம் செய்கிறார் (காண்க. சங் 137:7; எசே 25:12; ஒப 10-14). தேர்ந்தெடுத்தல் என்பது ஒருவனுக்குச் சிறப்பான முன்னுரிமையைத் தருகிறது. அதாவது, ஒருவன் தன் மனைவி களில் ஒருத்தியை அன்பு செய்து மற்ற வளை வெறுப்பது போலத்தான் இதுவும் என்பதை இக்கூற்றால் அவர் சுட்டிக்காட்டு கிறார் (காண்க. ஆதி 29:31தொ; உரோ 9:11தொ).

ஆனால், தீமை நிறைந்த இந்த உலகில் கடவுள் கொண்டிருக்கும் வெறுப்பு என்ற சொல் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். தமது அனைத்து வலிமையுட னும் இறைவன் அறிவிக்கின்ற இந்த முன்னுரிமையும், வெறுத்து ஒதுக்குத லும் நேர்நிலை உண்மைகளாயினும், இவற்றை வெறுப்பு என்று நாம் அழைக்க முடியாது. அப்படி இவற்றை வெறுப்பு என்று குறிக்க வேண்டும் என்றால், பாவம் நிறைந்த நம் உலகில் அது குறிக்கும் கடும்வெறுப்பு, மனக்காழ்ப்பு, துன்புறுதி, அழிக்கவிரும்புதல் போன்ற எல்லாவற்றிலி ருந்தும் அச்சொல் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். பாவி சாக வேண்டுமென்ப தன்று, அவன் மனம் மாறி வாழ வேண்டு மென்பதே நமது விருப்பம் (எசே 18:23) என்று சொல்லும் கடவுள் பாவத்தை வெறுத்தால், பாவியை வெறுக்கிறார் என்று சொல்ல முடியுமா? தாமே தேர்ந்து கொள்வ தினாலும், தண்டிப்பதாலும், கடவுள் எல்லா மனிதர்க்கும் ஒரு தனிப்பட்ட அன்பின் திட்டத்தைச் செயலாற்றுகிறார். அவரது அன்பே இறுதிச் சொல்லைக் கொண்டிருக்கும். இத்திட்டம் இயேசுவில் முழுமையாக வெளிப்படுகிறது. புதிய ஏற் பாடு கடவுளிடம் வெறுப்பு இருப்பதாகப் பேசுவதே இல்லை.

IV. ***இயேசு வெறுப்பை எதிர்கொள்ளல்:***

1. உலகம் இயேசுவை வெறுத்தது: வெறுப்பு எனும் தீமையை நெருப்புப் போல வளர்க்கும் உலகில் தன்னை நோக்கி வரும் பல்வேறு வகையான வெறுப்பு களைப் பார்க்கிறார் இயேசு. கடவுளால் தேர்ந்து கொள்ளப்பெற்றவர் பொறாமைக் குட்பட்டு வெறுக்கப்படுவதை அவர் பார்க் கிறார் (லூக் 19:4; மத் 27:18; யோவா 5:18). அவரது பிரசன்னமே கண்டனமாக இருக்கும்; நீதிமான் வெறுக்கப்படுகிறார் (யோவா 7:7; 15:24); இஸ்ராயேலின் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுதலைத் தங் களுக்கு மட்டுமே உரிமையாக வைத்துக் கொள்ள விரும்பியதால் இயேசுவை வெறுக்கின்றனர் (காண்க. யோவா 11:50). அவர்களுக்குப் பின்னால், தீமை நிறைந்த உலகம் முழுவதும் நிற்கிறது (யோவா 15:18). மேலும், அவரிடம் உள்ள ஒளியை யும் வெறுக்கின்றனர். ஏனெனில், அவர்க ளது செயல்கள் அனைத்தும் தீமையும் இருளைச் சார்ந்ததுமாக இருக்கின்றன (3:20). குருட்டுத்தனமான, காரணமில்லாத வெறுப்புப் பற்றி மறைநூல் அறிவிக்கும் மறைபொருள் இவ்வாறு நிறைவேறுகிறது (15:25). இந்த வெறுப்பு இயேசுவைக் கடந்து தந்தைவரை செல்கிறது (15:23தொ). இயேசு வெறுப்பிற்குப் பலியாகி இறக்கி றார். ஆனால், அவர் தனது இறப்பினால் வெறுப்பைக் கொல்கிறார் (எபே 2:14. 16). ஏனெனில், இந்த இறப்பு அன்புச் செயலா கும். அது மீண்டும் அன்பை உலகினுள் அறிமுகப்படுத்தி, என்றென்றும் மாறாது நிலைத்திருக்கும் வண்ணம் நிலைநாட்டி விட்டது.

2. உலகம் கிறிஸ்தவர்களை வெறுக்கி றது: இயேசுவைப் பின்பற்றும் எவரும் அதே அனுபவத்தைப் பெறுவர். அவரது பெயருக்காக அவரது சீடர்கள் வெறுக்கப் படுவர் (மத் 10:22; 24:9). அதைக் கண்டு அவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை (1 யோவா 3:13). அதற்காக உண்மையிலே அவர்கள் மகிழ வேண்டும் (லூக் 6:22).

ஏனெனில், அவர்களது தலைவருக்குக் கிடைத்த அதே முடிவு அவர்களுக்கும் கிடைக்கும். உலகம் அவர்களை வெறுக்கிற தென்றால் அதற்குக் காரணம் அவர்கள் உலகத்தைச் சார்ந்தவர்களாய் இராததுதான் *(யோவா 15:19; 17:14)*. இவ்வாறு தொடக்க முதல் ஆற்றலுடன் செயல்படும் பகைவன் யார் என்பது வெளிப்படுத்தப்படுகிறது *(8:44)*. ஆனால், இயேசு அவர்கள் அனைவருக்காகவும், அவர்களை உலகிலிருந்து நீக்கி விட வேண்டும் என்றல்லாமல், தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டும் என்று செபித்துள்ளார் *(17:15)*.

3. தீமையை வெறுக்க வேண்டும் மனிதர்களையல்ல: எவ்வாறு இயேசுவின் மேலும் *(யோவா 14:30; 8:16)*, தூய தந்தையாம் கடவுளின் மேலும் *(17:11)* இவ்வுலகின் தலைவனுக்கு எவ்வித அதிகாரமும் இல்லையோ அதுபோல இயேசுவின் சீடர்களும் தீமையை வெறுப்பர். கடவுளுக்கும் உலகிற்கும் *(1 யோவா 2:15; யாக் 4:4)*, கடவுளுக்கும் ஊனுக்கும் *(உரோ 8:7)*, கடவுளுக்கும் பணத்திற்கும் *(மத் 6:24)* இடையில் அடிப்படையிலே பெரும் முரண்பாடு உள்ளது. இவை எதுவும் கடவுளோடு ஒத்துப்போகாது என்பதை அவர்கள் அறிவர். தீமையோடு ஒத்துப் போவதற்குப் பதிலாக அவர்கள் அனைத்தையும் துறந்து, ஏன் தங்களையே வெறுப்பதற்கும் முன் வருவர் *(லூக் 14:26; யோவா 12:25)*. ஆனால், மற்ற மனிதர்களைப் பொருத்தமட்டில் அவர்கள் யார்மீதும் வெறுப்பு வைப்பதில்லை. ஏனெனில், தன் சகோதரனை வெறுக்கும் எவனும் இருளில் இருக்கிறான் *(1 யோவா 2:9.11; 3:15)*. அன்பு ஒன்றே பகைவரிடம் கொண்டுள்ள உறவிலும் கூட நிலவும் சட்டமாகும் *(லூக் 6:27)*.

வெறுப்புப் பற்றிய வரலாற்றின் முடிவில் எல்லாக் கிறிஸ்துவர்கட்கும் ஒன்று தெளிவாகிறது; செயலாற்ற வேண்டிய நேரடியான செயல்முறையும் தெளிவாகிறது. அதாவது, ஒருவன் எல்லோரையும் அன்பு செய்தல் வேண்டும்; தன்னையே வெறுக்க நேர்ந்தாலும் பரவாயில்லை. ஒருவன் தன்னையே நிலைநாட்டிக்கொள்ள வெறுப்பு ஒன்றுதான் வழி எனக் கிறிஸ்து இல்லாத போது நினைக்கலாம் *(எபே 2:11; தீத் 3:3)*. ஆனால், காயீனின் காலம் கடந்து போய் விட்டது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தெளிவாக்கிக் கொள்ள வேண்டியது ஒன்று உள்ளது. அன்பு மட்டுமே வாழ்வு தருவது. அது மட்டுமே ஒருவனைக் கடவுளைப் போல் மாற்றுகிறது *(1 யோவா 3:11-24)*.

வெறுமையாக்குதல் *(EMPTIED, KENOSIS)*

புதிய ஏற்பாட்டில், கிறிஸ்து இயல்பகுதி இச்சொல்லைப் பிலி 2:7-இல் கொண்டிருக்கிறது. ''கடவுள் தன்மையில் விளங்கிய அவர்... தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டார்....'' என்று பவுல் கூறுகிறார். இந்த வெறுமையாக்குதலுக்கு மூன்று வகையான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அ) கிறிஸ்து, கடவுள் தன்மையில் வெளி அடையாளங்களை வெறுமையாக்கி, மனிதத் தன்மையில் வெளியடையாளத்தை எடுத்துக்கொண்டார் என்று பவுல் கூறியதாக ஒரு கருத்து உள்ளது. இதன்படி பார்த்தால் இயேசு முழு மனிதனாக இவ்வுலகில் இல்லை; மாறுவேடம் பூண்டு உலகில் தோன்றினார். இக்கருத்தைத் திருச்சபை நிராகரித்தது.

ஆ) மற்றொரு கருத்து கிறிஸ்து தன் தெய்வீகத் தன்மையிலிருந்து (எல்லாம் அறிதல், எல்லாம் வல்லமை போன்ற) மாட்சிமையின் அடையாளங்களைத் துறந்தார் என்றும், அவரிடமிருந்தது மனிதன் என்ற தன்மை ஒன்றே என்பதும் ஆகும். இதன்படி எல்லாத் தெய்வீக சக்தியும் போய்விட்டதாகக் கூறப்படவில்லை. ஏனெனில் இறைவனின் அன்பு இன்னும் அவரில் காணப்படுகிறது. அவர் கடவுள் தன்மையில் இருக்கும்போது கொண்டிருந்த சில குணங்களை மட்டும் கைவிட்டார்;

எல்லாப் பண்புகளையும் கைவிட்டு விட வில்லை. இதுவும் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதன்று.

இ) மூன்றாவது விளக்கம் ஒன்று உண்டு. அதாவது, 'இயேசு கிறிஸ்து, எதிலிருந்தும் தன்னையே வெறுமையாக்கிக் கொள்ள வில்லை; ஆனால், தன்னையே வெறுமை யாக்கினார்' என்று பவுல் கூறுகிறார். இவ்வாறு இயேசு கடவுளுக்கு இணையாயி ருக்கும் நிலையை விடாமல் பிடித்துக் கொண்டிராமல், தன் வாழ்க்கையையே வெறுமையாக்கினார் என்றும், அதன் சில பண்புகளை மட்டுமோ, புறவடிவை மட்டுமோ அன்றி முழுவதையும் வெறுமை யாக்கினார் என்றும் பவுல் கூறுகிறார். வெறுமையாக்குதல் என்ற சொல்லைக் ''கொட்டுதல், சிந்துதல்'' என்றும் மொழி பெயர்க்கலாம். கிறிஸ்து ''சாவை ஏற்கும் அளவுக்குத்'' தம்மைக் கொட்டினார், சிந்தி னார் (பிலி 2:8). இதற்குப் பின்னால் ''அவர் தன்னையே சாவுக்குக் கையளித்தார்'' (கொட்டினார்) என்று எசா 53:3.8.12-இல் வரும் காட்சி அமைந்திருக்கிறது.

கி.பி. மூன்றாம் அல்லது நான்காம் நூற்றாண்டிலிருந்து இச்சொல் கிறிஸ்தவ இறையியலில் பிலி 2:7-இல் வரும் கருத்தை விவரிக்கப் பயன்பட்டுள்ளது. இதன்படி காலத்துக்கு முன் வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்து, மனிதன் ஆவதற் காகத் தன்னையே வெறுமையாக்கினார் அல்லது கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையைத் துறந்தார். இந்தத் துணிகரமான கூற்றினால் எதை உணர்த்த பவுல் விரும்பி னார் என்று கூறுவது கடினம். மனிதனான தில், கிறிஸ்து தமது தெய்வீகத்தையோ, தந்தையோடு கொண்ட சிறப்பு உறவையோ இழந்து விட்டார் என்று பவுல் பொருள் கொண்டார் என்று கூற முடியாது. அப்படி யிருந்தால் அவரது மனு உருவான வாழ்வு ஓர் இறைவாக்கினருடைய அல்லது போத கருடைய வாழ்வை விட அதிகப் பொரு ளுடையதன்று. கிறிஸ்து விரும்பிச் சுயமாக, இறை அடையாளங்களையும் தனிச் சிறப்பு ரிமைகளையும் துறந்தார் என்பதே இங்குச் சிறப்பாகக் குறிக்கப்பட வேண்டும். பவு லின் சிந்தனையில் இயேசு இறைவன், மனிதன் என்ற பொய்த்தோற்றத்தில் சுற்றித் திரியவில்லை. இஃது, ''அவர் தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அது வும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படியலானார்'' என்ற பிலி 2:8-ஆல் மட்டுமன்றி, 2 கொரி 13:4-இல் ''வலுவின் மையால் அவர் சிலுவையில் அறையுண் டார்'' என்பதாலும், சிலுவை இடறலாக வும் மடமையாகவும் இருப்பது பற்றிய (1 கொரி 1:18-30) வலிமையான மொழியா லும் காட்டப்படுகிறது. பிலி 2:5-11 என்ற பகுதி தொடக்க காலக் கிறிஸ்தவப் பாடலி லிருந்தோ, நற்செய்தி அறிக்கையிலிருந்தோ தோன்றியிருக்க வேண்டும் என்றும், இது பவுலின் திருமுகங்களுக்கு முந்தியது என் றும் கருதக் காரணம் இருக்கிறது.

திருச்சபைத் தந்தையரின் இலக்கியங்க ளில், ''வெறுமையாக்குதல்'' என்ற சொல், இறைமகனுடைய அருள்பாலிப்புத் தாழ்ச் சியை எடுத்துக்கூறும் மனு உருவாவதைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகும் (காண்க. 2 கொரி 8:9). நவீன இறையியலில் பரந்த கோட்பாட்டை விவரிக்க இச்சொல் பயன் படுகிறது. அதாவது, இயேசு இறைப்பண்பு கள் சிலவற்றையோ முழுவதையுமோ துறந்து, வரையுள்ள அறிவுக்குட்பட்ட மனித வாழ்வின் எல்லா நிலைகளுக்கும் சுதந்தரமாகவும் சுயமாகவும் உட்பட்டார். புதிய ஏற்பாட்டின் பல பகுதிகள் இந்தக் கோட்பாட்டை ஆதரிக்கும்போது, யோவா னின் நற்செய்தி வேறுபட்ட நிலையைக் கொண்டிருக்கிறது. அஃது, இயேசு அருஞ் செயல் செய்யும் வல்லமையையும் அறிவை யும் கொண்டிருப்பதாகவும், தந்தையோடு இடைவிடாத உறவையும் நிறை இணைத் தன்மையையும் கொண்டிருப்பதை உறுதிப் படுத்துவதாகவும் சித்திரிக்கிறது (யோவா 1:14.48; 5:19-24; 10:30; 11:41-42; 13:1-3).

வெற்றி, வாகை சூடல் (VICTORY, TRIUMPH)

I வெற்றி என்பது சண்டையிடுதலையும், தோல்வியுறும் வாய்ப்பையும் உள்ளடக்குகிறது. உண்மையிலே மனித சமுதாயத்தின் வரலாற்றுத் தொடக்கத்திலே மனிதன் சாத்தான், பாவம், இறப்பு ஆகியவற்றால் தோற்கடிக்கப்படுவதை விவிலியம் கூறுகிறது. ஆனால், அந்தத் தோல்வியிலே தீமையின்மீது வெற்றிபெறப் போவதற்கான ஒரு வாக்குறுதியும் கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம் (ஆதி 3:15). மீட்பின் வரலாறு என்பது இந்த உறுதியான வெற்றியை நோக்கிய முன்னேற்றம்தான்.

II **பழைய ஏற்பாடு:** கடவுளின் மக்கள் தங்கள் உலகம் சார்ந்த வரலாற்றிலே முதன் முதலில் இவ்வாறு வெற்றியையும், தோல்வியையும் சந்திக்கின்றனர். ஆனால், இந்த அனுபவம் மற்றொரு மட்டத்தில் பெறவிருக்கும் மற்றொரு வெற்றியை எதிர்பார்ப்பதற்கு அதன் விசுவாசத்தை இட்டுச் செல்கிறது.

1. கடவுளின் மக்கள் பெற்ற வெற்றிகள்: தொடக்க கால இஸ்ராயேல் மக்கள் தங்கள் கடவுளின் வலிமையை அவர்கள் தாம் பெற்ற போர் வெற்றிகளின் அடிப்படையில் கணக்கிட்டனர். தங்கள் எதிரிகளைத் தாங்கள் வெற்றி கொள்வதோடு கடவுள் தீமை மேல் கொள்ளும் வெற்றியைக் குழப்புகின்றனர். போரில் அவர்கள் யாவேயின் சேனை யல்லவா? (யாத் 12:41; நீதி 5:13; 1 சாமு 17:26). எனவே, யாவே அவர்கள் சார்பாய்ப் போரிட்டு அவர்களுக்கு வெற்றியை உறுதிப்படுத்துகிறார். இது மோசே (யாத் 14:14; 15:1-21; 17:8-16), யோசுவா (யோசு 6:16; 10:10), நீதிபதிகள் (நீதி 7:15), அரசர்கள் (1 சாமு 14:6; 2 நாள் 14:10தொ; 20:15.29) ஆகியோரின் தலைமையில் நடக்கிறது. போர் அவசியமானதாக இருந்தது. ஆனால், அதே நேரத்தில், வெற்றியைக் கடவுளிடமிருந்து வரும் அருளாகவும், கொடையாகவும் உணர்ந்து கொள்வதும் அவசியமாக இருந்தது (சங் 18:32-49; 20:7-10; 118:10-27). அதனால், மக்கபேயர்கள் தங்கள் வெற்றியைக் கடவுளின் சேனைகளுக்குரியதாகக் கூறத் தயங்கியதில்லை (1 மக் 3:19; 2 மக் 10:38; 13:15; 15:8-24).

இவ்வாறு கடவுள் வெற்றிகொள்ளப்பட முடியாத துணையாளராகத் தோன்றுகிறார் (யூதி 16:3; உப 32:22-43; எசா 30:27-33; நாகூ 1:2-8; அப 3; நாள் 29:11). தொடக்கத்தில் குழப்பத்தின் சக்திகளாம் மாபெரும் விலங்குப் பூதங்களை வெற்றி கொண்டது போல் கடவுள் வரலாற்றில் அவரது மீட்புத் திட்டத்தின் எதிரிகளும், குழப்பத்தின் சக்திகளுமான புறவினத்தாரை வென்று தனது சக்தியையும் திட்டத்தையும் நிலைநாட்டுகிறார். இந்த ஒரு காரணத்திற்காகவே இஸ்ராயேலர் தங்கள் எதிரிகளை வென்று ஆளலாம். இந்த அனுபவம் சமயப்பொருளுடையது என்பதை மறுக்க முடியாது; ஆனால், ஐயப்பாடு உடையதுமாகும். ஆனால், இத்தகைய வெற்றியை அதனால் கிடைத்த உலக அதிகாரத்துடன் சமமாக்கிப் பார்க்கும் சோதனைக்கு உட்படுத்த மாட்டார்களா? சரிசம எதிராற்றல் இந்தத் தவற்றிலிருந்து பாதுகாக்கும்.

2. கடவுளின் மக்கள் பெற்ற தோல்விகள்: அவர்கள் வெற்றி பெற்றபோது கூட இறைவன் அளித்த வெற்றி அவர்களின் நன்னடத்தைக்குரிய வெகுமானமாக இருக்க வேண்டியதில்லை என்று (உப 9:4தொ) இறைவாக்கினர்கள் இஸ்ராயேலருக்கு நினைவுபடுத்துகின்றனர். அவர்கள் ஆன்மீக வாழ்வின் மோசமான நிலையைக் காட்ட தோல்விகளும் அவசியமாக இருந்தன. விடுதலைப் பயணத்தின்போது ஏற்பட்ட சோதனைகள் (எண் 14:42; உப 8:19தொ), கானானை வெற்றி கொள்வதில் ஏற்பட்ட தாமதம் (யோசு 7:1-12; நீதி 2:10-23), அரசாட்சியின் கீழ் ஏற்பட்ட தோல்விகள் (2 நாள் 21:14; 24:20; 25:8-20), சிறப்பாக, பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட பேரழிவு (எரே 15:1-9; 27:6; எஸ் 22) ஆகியவை அனைத்தும் இஸ்ராயேலர்கள் கடவுளை ஏமாற்றும்போது அவரும் அவர்களுக்கு எதிராகப் போராடத் தயங்கவில்லை என்று காட்டுகின்றன. இந்தத் தோல்விகள்

எல்லாம் அவர்களின் பிரமாணிக்கமற்ற தன்மைக்குத் தண்டனைகள் என்றே கூற வேண்டும் (சங் 78; 106). இந்தத் தோல்விகள் எல்லாம் பேரரசுகளின் தலைவரான கடவுளின் தோல்விகளாகக் கருதப்படாமல், கடவுளின் வெற்றி இவ்வுலக வெற்றிகளினின்று, மாறுபட்டதென்பதைக் காட்டுகின்றன. எனவே, அவப்பேறுகளைப் புரிந்து கொள்வதற்கும் ஓர் உண்மையான வெற்றிக்கும் இஸ்ராயேலரை இட்டுச்சென்றன.

3. மற்றொரு வெற்றியை நோக்கி: இறுதி நாட்களில் நிகழும் வெற்றி இதுவரை பெற்ற வெற்றிகள் அனைத்தையும் விட எல்லாவித்திலும் மகத்தானதாக இருக்கும் என இறைவாக்குகள் எல்லாம் கூறுகின்றன. ஆன்மீக வெற்றி ஆயுதங்களின் விளைவு அன்று என்று ஞானிகள் தெளிவாக்கினர்.

அ) இறுதிநாளின் வெற்றி: நாடு கடத்துதலுக்குப்பிறகு எழுந்த இறைவாக்கினர்கள் வரலாற்றின் இறுதிக்கட்டத்தை மாபெரும் போராகவும் அதில் கடவுள் தனது எதிரிகள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக எதிர் கொள்வார் என்று சித்திரிக்கவும் விரும்புகின்றனர். நிச்சயமாக, கடவுள் அவர்களனைவரையும் அழித்தொழிப்பார் (காண்க. எசா 63:1-6). இஃது அவரது முடிவான ஆட்சிக்கு முன்னுரையாக அமையும் (செக் 14; காண்க. எசே 38-39). மற்றப் பகுதிகள் யார் வழியாக இந்த வெற்றி அமையும் என்பதை அறிமுகப்படுத்துகின்றன. சில சமயம் இவர் அரச மெசியாவாகவும் (சங் 2:1-9; 110:5தொ), யாவற்றையும் கடந்த மனுமகனாகவும், அவர்முன் விலங்குகளைக் கடவுள் ஒன்றுமற்றதாக மாற்றுவதாகவும் (தானி 7) தோன்றுகிறார். ஆனால், யாவேயின் ஊழியன் பெறும் வெற்றி முரண்பட்டதாக இருக்கிறது. ஏனெனில், அவர் பெறும் வெற்றி தன்னையே தியாகம் செய்து பெறும் வெற்றியாகும் (எசா 52:13தொ; 53:11தொ). இவ்வாறு அவர் கடவுளின் திட்டத்தை நிறைவுக்குக் கொண்டு வருகிறார். மனுமகனுடைய வெற்றி வரலாற்றைக் கடந்து செல்வதால் அஃது உலகப் பருமன்களுக்கு அதிகமானது; ஊழியனது வெற்றி ஆன்மீகத் தனத்தைக் கொண்டுள்ளது. இஃது ஒன்றே இறுதி முக்கியத்துவம் உடையது.

ஆ) நீதிமான்களின் வெற்றி: எல்லா ஞானபோதனைகளிலும் மேலே கூறப்பட்ட வெற்றி, பாவத்தை வெல்லும் நீதிமான்களால் ஏற்கெனவே பெறப்பட்டுவிட்டது என்று கூறப்படுகிறது. இது புதிய ஏற்பாட்டு இறுதியில் சாலமோனின் ஞான நூலில் மிகத் தெளிவாகிறது. போரில் வெற்றி பெற்று அதில் கறை படாததால் நீதிமான்கள் வெற்றிவாகை சூடிக் காலமெல்லாம் பீடு நடைபோடுவர் (ஞான 4:2). ஆண்டவர் தீமைக்கு எதிராகக் கடைசிப் போராட்டத்தைத் தொடங்கும்போதே நீதிமான்களுக்குரிய வெகுமானத்தை அவர்களுக்கு அளிப்பார் (ஞான 5:15-23). இத்தகைய வெற்றியைத்தான் கிறிஸ்து பெறுவார்; எல்லாக் கிறிஸ்தவர்களும் பெறுவர்.

III புதிய ஏற்பாடு:

1. கிறிஸ்துவின் வெற்றி: கிறிஸ்து இந்த மண்ணகப் போர்களை மட்டும் கொண்ட மனப்போக்கை உறுதியாகக் கடந்து செல்கிறார்; ஏனெனில், மற்றொரு தரமுடைய போராட்டத்தை அறிமுகப்படுத்துகிறார். அவரது பொதுவாழ்வின் தொடக்கத்திலிருந்தே, தான் வலியவனை வெல்லும் அதிக வலிமையுடையவர் என்று உறுதியாகக் கூறுகிறார் (லூக் 11:14-22). இந்த வலியவன் உலகின் அரசனான சாத்தான் ஆவான். அவர் சாவதற்கு முன், சீடர்களை வெறுப்பால் துன்புறுத்தும் தீய உலகைக் கண்டு அஞ்சவேண்டாம் என்று அவர்களை எச்சரிக்கிறார். ஏனெனில், ''நான் உலகின்மீது வெற்றி கொண்டு விட்டேன். துணிவுடன் இருங்கள்'' (யோவா 16:33). இந்த வெற்றி, யாவேயின் ஊழியன் பெறும் வெற்றியில் காணப்படும் முரண்பாட்டுத் தன்மைகளை ஏற்று, அவற்றின் சொற்பொருளில் நிறைவேறுகிறது. ஆனால், உயிர்ப்பில்தான், இந்த வெற்றி செயல்முறையானதும் உறுதியான உண்மையும் ஆகிறது. ஏனெனில், இங்குப் பாவம் மற்றும் சாவின்மேல் கிறிஸ்து வெற்றி கொள்கிறார். வெல்லப்

பட்ட சக்திகளைத் தன் வெற்றித் தேருக்குப் பின் இழுத்துச் செல்கிறார் (கொலோ 2:15). யூதாவின் இந்தச் சிங்கம் (திருவெளி 5:5) பழைய இஸ்ராயேல் அரசர்களின் வெற்றிகளையெல்லாம் விஞ்சுகிறார். ஏனெனில், பலியிடப்பட்ட செம்மறி (5:12) மனித வரலாற்றின் தலைவராக ஆகிவிட்டார். அவரது வெற்றி இறுதியானதும் உறுதியானதுமாக ஒளிரும். அஃது எப்பொழுதென்றால் அவரை எதிர்க்கும் சக்திகளைச் (17:14; 19:11-21) சிறப்பாக, சாவை என்றுமாக வெற்றி கொள்ளும்போது (1 கொரி 15:24தொ) நடைபெறும். தோற்றத்திற்குத் தோல்வியானாலும், சிலுவை தூயவர்கள் பாவத்தை வெற்றி கொள்வதற்கும், வாழ்வோர் இறந்தோரை வெல்வதற்கும் உத்தரவாதம் தருகிறது.

2. புதிய **மக்களின்** *வெற்றி:* இத்தகையதே கிறிஸ்துவின் வெற்றியும் அவரைப் பின்பற்றும் அவரது புதிய மக்களின் வெற்றியுமாகும். இந்த வெற்றி, தோற்றத் தோல்விகள் நிகழும் உலகில் இனி நடப்பதில்லை. இவ்வாறு மறைசாட்சிகள் விலங்கால் நசுக்கப்படுகின்றனர் (திருவெளி 11:7; 13:7; காண்க. 6:2). ஆயினும் செம்மறியின் இரத்தத்தினால் (12:10தொ; 15:2), அவர்கள் ஏற்கெனவே அதை வென்று விட்டனர். இவ்வாறே கிறிஸ்துவின் வெற்றியில் பங்கு பெறும் அப்போஸ்தலர்களும் (2 கொரி 2:14) வெற்றி அடைகின்றனர். ஆயினும், அவர்கள் அப்போஸ்தலப் பணியின் தேவைகளால் நசுக்கப்படலாம் (4:10). இதுவே எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். அவர்களின் தந்தையை ஏற்றுக்கொள்வதாலும், அவரது வார்த்தையால் ஊட்டம் பெறுவதாலும், அவர்கள் தீயவனை வெற்றி கொண்டு விட்டனர் (1 யோவா 2:13தொ). கடவுளிடமிருந்து பிறந்தவர்களாய் அவர்கள் அடைந்த வெற்றி இறைமகனில் அவர்கள் கொண்டிருக்கும் விசுவாசமே (5:5). அவரில், எதிர்க்கிறிஸ்துவால் தூண்டப்படும் மனிதர்களை அவர்கள் வெற்றி கொள்கின்றனர் (4:4). கிறிஸ்தவன், தீமையை வெல்ல போராட்டத்தால் இந்த வெற்றியை வலுப்படுத்த வேண்டும். இனி மேலிருந்து ஆவியால் எல்லா இடர்களையும் வெல்ல முடியும் என்று கிறிஸ்தவனுக்குத் தெரியும். கிறிஸ்துவின் அன்பிலிருந்து எதுவும் ஒருபோதும் அவரைப் பிரிக்காது (8:35தொ).

கிறிஸ்தவன் தன் தலைவரின் வெற்றியில் மட்டுமன்று, அவருடைய மகிமையிலும் பங்கு பெறுவான். வெற்றி பெற்றவர்களின் வெகுமானத்தை விவரிக்கப் புதிய ஏற்பாடு உருவகங்களைப் பயன்படுத்துகிறது. அது மேலிருந்து தயாரிக்கப்பட்ட மணிமுடியாகும்; வாழ்வின் வெற்றிவாகையாகும் (யாக் 1:12; திருவெளி 2:10); மகிமையின் வாடாத வெற்றிவாகையாகும் (1 பேதுரு 5:4); நீதியின் வெற்றிவாகையாகும் (2 திமொ 4:8); உலகவெற்றி வாகையைப்போல் அல்லாமல், அஃது அழியாத வெற்றிவாகையாகும் (1 கொரி 9:25). ஏனெனில், அப்போஸ்தலர்களால் விசுவாசத்திற்குக் கொண்டு வரப்பட்ட மனிதர்களால் ஆன உயிருள்ள வெற்றிவாகையாகும் (பிலி 4:1; 1 தெச 2:19). திருவெளிப்பாட்டு நூல், விலங்குக்கு எதிராகப் போரில் ஈடுபட்டிருக்கும் கிறிஸ்தவர்களை அழுத்திக்கூறி, வெற்றி பெறுபவர்களுக்குக் கிடைக்கும் பரிசைச் சிறப்பாக விவரிக்கிறது. அவர்கள் இறைவனின் புதல்வர்களாய் இருப்பர்; அவரோடு சேர்ந்து புறவினத்தார் மீது அதிகாரம் செலுத்துவர் (2:26); ஒரு புதிய பெயரைப் பெறுவர் (2:17); வாழ்வு தரும் மரத்தின் கனியை உண்பர் (2:7); அவர்களது கடவுளின் ஆலயத்தில் ஒரு தூணாக ஏற்படுத்தப்படுவர் (3:12). முடிவில்லா வாழ்வில் ஒரு முறை நுழைந்தபின் இரண்டாவது சாவைப் பற்றி ஒருபோதும் அச்சப்பட வேண்டியதில்லை (2:11). இந்நிலை, தோற்கடிக்கப்பட்டவர்கள், கோழைகள் மற்றும் நெறிகெட்ட கயவர்களுடைய நிலையிலிருந்து பெரிதும் வேறுபட்டதாகும் (21:8).

புதிய ஏற்பாடு கண்களைக் கூசச் செய்யும் வெற்றி பற்றிய இக்குறிப்போடு முடிகிறது. ஆதியாகமத்தில் வரும் மூல வாக்குறுதி இவ்வாறு எதிர்பார்ப்புகளையெல்லாம்

கடந்த உண்மையாகிறது. ஏனெனில், சாத்தானால், பாவத்தால், சாவால் ஒருமுறை வெல்லப்பட்ட மனிதன், இயேசு கிறிஸ்து வழியாக அவற்றையெல்லாம் வென்று விட்டான்.

வெற்றி நுழைவு (TRIUMPHAL ENTRY)

இஃது இயேசுவின் இறுதிக்காலத்திலே அவர் கழுதைக்குட்டியின் மீது மக்கள் புடைசூழ எருசலேமில் நுழைந்த நிகழ்ச்சியைக் குறிக்கிறது. இது மெசியாவின் பணியில் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டுகிறது (மத் 21:1-11; மாற் 11:1-11; லூக் 19:28-44; யோவா 12:12-19). மாற்கு மெசியாவின் மகிமையைக் குறைவாகவே கூறுகிறார். ஆனால், மத்தேயு தாவீதின் மகன் வருகையைக் கண்டு நகரமே கலங்கியதாகக் கூறுகிறார். லூக்கா நற்செய்தியிலே சீடர்கள் இயேசு அரசர் எனப் பறைசாற்றினர். இதை யோவானும் அழுத்திக் கூறுகிறார். ஆனால் சீடர்கள் இந்த நிகழ்ச்சியை முதலில் புரிந்து கொள்ளவில்லை. மேலும், யோவான் மட்டும் குருத்தோலைகளைப் பற்றிக் கூறுகிறார் (12:13). இதனிலிருந்துதான் 'குருத்து ஞாயிறு' வழிபாடு தொடங்கியது. இந்த நுழைவைப் பற்றிய விளக்கங்கள் பல உள.

அ. மெசியா பற்றிய இறைவாக்குகளை உணர்ந்தவராக, இயேசு தான் எருசலேமில் இவ்வாறு நுழைந்ததன் மூலம் அவற்றை அடையாளச் செயல்களால் நிறைவேற்றினார்.

ஆ. இது மூலத்தில், சீடர்கள் தங்கள் தலைவர் நகருக்கு வருவதைக் குறித்து மகிழ்ந்து உற்சாகமாக வரவேற்றனர். பின்னர், இந்நிகழ்ச்சிக்கு மெசியாப் பொருள் கொடுக்கப்பட்டது.

வே

வேதனை, கடுந்துன்பம் (TRIBULATION)

இஃது இறுதிக்காலத்தில் வரும் பெரும் துன்பங்களைக் குறிக்கும் இவற்றிலிருந்து தானி 12:1-இல் முன்னுரைக்கப்பட்டது போல் தேர்ந்தெடுக்கப்பட்டோர் மீட்கப்படுவர் (காண்க. மாற் 13:19; திருவெளி 7:14). புதிய ஏற்பாட்டில், இது நற்செய்தியை விசுவசித்து, இயேசுவைப் பின்பற்றுவோரின் எதிர்பார்க்கப்பட்ட அனுபவமாகும் (மத் 13:21இணை; 24:9; யோவா 16:20-22.33; அ.ப. 14:22; திருவெளி 1:9; காண்க. 1 தெச 3:3).

இறுதிக்காலம் பற்றிய வாசகங்களில், வேதனை ஒருமுனைப்பான கருத்தாகும். தீமை செய்யும் எவனும் எதிர்பார்க்க வேண்டிய முடிவாகும் (உரோ 2:9; திருவெளி 2:22; காண்க. 2 தெச 1:6-7). பழைய ஏற்பாட்டில் இறைமக்களின் பாவங்களுக்குத் தண்டனையாக எதிர்பார்க்கப்பட்ட துன்பமே (காண்க. உப 4:70) இக்கருத்துக்குப் பின்னணியாக அமைந்துள்ளது. பாவங்களுக்குத் தண்டனையாக நிகழவிருக்கும் உலகின் இறுதிக்கால அழிவிலிருந்து நீதிமான்கள் மீட்கப்படுவர் (திருவெளி 7:14; காண்க. தானி 12:1; 1 பேதுரு 4:7.12-18). இயேசுவும் வேதனையை இறுதிக்கால நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக் அல்லாமல், அவற்றின் முன்னுரையாக இருக்குமென்று கூறுகிறார். கி.பி. 66-79-இல் நடந்த போர், ஆலய அழிவு (மத் 24:15-22 இணை) ஆகியவை இறுதிக்கால நிகழ்வுகளுக்கு முன் வரும் (24:29-31) வேதனைகளாக (24:21 இணை) அடையாளம் காட்டப்படுகின்றன. ''பெரும் வேதனை'' என்பதை இறைவனின் இறுதிக்கால மீட்பிற்கும் கிறிஸ்துவின் இறுதி வருகைக்கும் முன்னால் உடனடியாக நிகழவிருக்கும் இது வரை நிகழ்ந்திராத துன்பங்கள், பேரழிவுகள், துன்புறுத்தப்படுதல் ஆகியவை அடங்கிய தனிப்பட்ட காலமாகக் கருதுகின்றனர் விளக்கவுரையாளர் சிலர்.

இயேசு கெத்சமனித் தோட்டத்தில் அனுபவித்த கடுந்துயரைக் குறிக்கவும் இச்சொல் பயன்பட்டுள்ளது (லூக் 22:44).

வேசிப்பிள்ளை (BASTARD)

விபசாரத்திலோ, தகாத நெருங்கிய உடல் உறவிலோ பிறந்த குழந்தை இவ்வாறு குறிக்கப்படுகிறது (உப 23:2). திருமணத்துக்குப் பிரமாணிக்கமின்மை எவ்வளவு கொடுமையான குற்றமாகக் கருதப்பட்டது என்றால் அத்தகையோரும் அவர்கள் பிள்ளைகளும் பத்துத் தலைமுறை வரையிலும், அதாவது எக்காலத்திற்கும், முதலில் ஆலயத்திலும் பிற்காலத்தில் செபக்கூடங்களிலும் நடக்கும் ஆண்டவர் சபையில் அனுமதி மறுக்கப்பட்டனர் (உப 23:2). செக் 9:6-இல் இவர்கள் கலப்பின மக்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் குடும்பத்தின் கூட்டொருமையிலும் அதன் உரிமைகள் மற்றும் பொறுப்புக்களிலும் பங்கு பெற முடியாததால், எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியர், இறைவனால் கண்டித்துத் திருத்தப்படாதவர்களை வேசிப்பிள்ளைகள் என்றழைக்கிறார் (எபி 12:8).

வேடன் (FOWLER)

கண்ணி, வலை, வலைப்பொறி, பறவை கள்பொறி, வீழ்த்து குழி என்று இன்னும் பலவகையான வழிகளால் பறவைகளை உணவிற்காகவோ வீர விளையாட்டிற்காகவோ வேட்டையாடுபவர்களே வேடர் ஆவர். விவிலியத்தில் இஃது உருவகமாகப் பயன்பட்டுள்ளது. கொடுமையும், தீமையும், சிலைவழிபாடும் பொறி, கண்ணி என்று குறிப்பிடப்படுகின்றன (சங் 91:3; 124: 7; 141:9; எரே 5:26-27).

போலி இறைவாக்கினர்கள் இந்த வேடர்களைப் போன்றவர்கள் (ஓசே 9:8). ஆதலால், கடவுள் தீயவர்களை அவர்களுடைய தீச்செயல்களுக்காக வானத்துப் பறவைகளைப் போலக் கீழே வீழ்த்தித் தண்டிக்கிறார் (யோபு 18:9-10; ஓசே 7:12). இயேசு

வும் இந்தக் கண்ணி உருவகத்தைப் பயன்படுத்துகிறார் (லூக் 21:35). வியாபாரம் ஒரு கண்ணி போன்றதாகும் (பழ 6:5). பல்வேறு வகையான வலைகள்தவிர, வேடர்கள் குச்சிகளையும் (அம்பு), கற்களையும் (கவண்) பயன்படுத்துகிறார்கள் (நீதி 20:16).

வேட்டைப்பொருள் (GAME)

விவிலியகாலத்தில் கலைமான்கள், சிறு மான்கள், வரையாடுகள், கொழுத்த கோழிகள் முதலியவை முக்கியமான வேட்டைப் பொருள்களாகும் (1 அர 5:3). ஏசா வேட்டையாடித் தந்த உணவின் பொருட்டு ஈசாக்கு அவன் மேல் அன்பு கொண்டிருந்தார் (ஆதி 25:28). யாக்கோபு, தன் தமையனான ஏசாவைப்போல் மாறுவேடம் பூண்டு, தன் தந்தை ஈசாக்குக்கு விருப்பமான, சுவையுள்ள வேட்டைப் பொருள்களை உண்ணக்கொடுத்து ஏமாற்றி, தலைமகனுக்குரிய ஆசீரைப் பெற்றுக்கொண்டார் (ஆதி 27).

வேட்டையாடுதல் (HUNTING)

பழங்கால மேற்காசியாவில் வேட்டையாடுதல் மிகவும் வளர்ச்சியடைந்த கலையாகும். விவசாயம் பரவியதும், நகரங்களின் எழுச்சியும் உணவு அளிப்பதில் வேட்டையாடுதலை இரண்டாந்தர முக்கியம் வாய்ந்ததாக மாற்றினாலும், விவிலியமும் மற்ற இலக்கியங்களும் வேட்டையாடுதலில் பயன்பட்ட கருவிகள் மற்றும் உபாயங்கள் பற்றிப் பல கருத்துக்களைக் கொடுக்கின்றன. வேட்டை உருவகம் விவிலியம் முழுவதும் காணப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் நிம்ரோதும் (ஆதி 10:9), ஏசாவும் (25:27) மட்டுமே வேடர்கள் என்று கூறப்படுகின்றனர். வேட்டையாடுதல் அவ்வப்போது பழக்கத்திலிருந்திருக்கிறது; அதுவும் விவசாயத்திலோ, வீட்டு விலங்கு வளர்ப்பதிலோ ஈடுபட்ட பெயர் தெரியாதவர்களிடையே இருந்திருக்கிறது. வேட்டை நாய்கள் மற்றும் வேட்டைப்பருந்துகளைப் பயன்படுத்தி இன்பத்திற்காக வேட்டையாடுதல் எகிப்திய, பெனீசிய, அசீரிய நினைவுச் சின்னங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளன; ஆனால், விவிலியத்தில் காணப்படவில்லை.

வேட்டையாடுதலில் வில், அம்பு (ஆதி 27:3), கவண்கள் (1 சாமு 17:40.49-50), சுருக்குக் கண்ணி, ஈட்டிகள், பொறிகள், வலைகள், முட்டுப்பொறி ஆகிய கருவிகள் பயன்பட்டன. கொடிய விலங்குகளிடமிருந்து மனிதர்களையும் வீட்டு விலங்குகளையும் பாதுகாக்க வாள்கள், ஈட்டிகள், கவண்கள், தடிகள் போன்றவை பயன்பட்டன. விலங்குகளை வேட்டையாடுவதை விட பறவைகளை வேட்டையாடுதல் சாதாரணமானதாகும். பெரும்பாலும் அவற்றைக் களைத்துப்போகும் வரை விரட்டி, கல்லால் அடித்துக் கொல்வர்.

வேட்டைக்காரனுடைய பொறுமையும், கொல்லும் நோக்கமும் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் உருவகமாகப் பயன்படுகின்றன. மனிதன் மனிதனை வேட்டையாடுதல் (மீக் 7:2; காண்க. 1 சாமு 24:11), யாவேயின் கடுமை தணியாத தீர்ப்பு (யோபு 10:16; எரே 16:16; காண்க. எசா 24:17-18; எரே 48:43-44), இயேசுவையோ, விசுவாசிகளையோ அவர்களுடைய பேச்சில் சிக்க வைக்கும் முயற்சி (காண்க. மாற் 12;13; லூக் 11:54; 1 திமொ 3:7; 2 திமொ 2:26) முதலியவை முக்கிய உருவகக் கருத்துகளாகும்.

வேய்தல் (OVERLAY)

யாத்திரையின் திருஉறைவிடம் மற்றும் எருசலேம் ஆலயம் ஆகியவற்றின் சில பகுதிகள் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகியவற்றால் வேயப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன. இதில் பயன்பட்ட உலோகம் இலையை விடத் தடிமனானதாய் இருக்கும். இத்தகடுகள் பொருட்களின் மேல் அடித்துப் பதிக்கப்பட்டது.

தாவீது கோயிற்சுவர்களை வேய்வதற்காக மூவாயிரம் தாலந்து பொன்னும், ஏழாயிரம் தாலந்து வெள்ளியும் அளித்தார் (1 நாள் 29:4). சனகெரிபு முந்நூறு தாலந்து வெள்ளியும், முப்பது தாலந்து பொன்னும் கப்பம் கோரியபோது, எசேக்கியா அரண்மனைக்

கருவூலத்திலிருந்து எல்லா வெள்ளியையும் கொடுத்தார்; ஆண்டவர் இல்லக்கதவுகளிலும், கதவு நிலைகளிலும் பதித்திருந்த பொன் தகடுகளைக் கழற்றி அசீரிய மன்னனுக்குக் கொடுத்தார் *(2 அர 18:15-16).*

திரு உறைவிடத்தில் பேழையையும் அதன் தண்டுகளையும், அப்ப மேசையையும் அதன் தண்டுகளையும் மற்ற மரப் பொருள்களையும் வேய்வதற்குப் பொன் பயன்பட்டது. பீடத்தையும் அதன் தண்டுகளையும் வேய்வதற்கு வெள்ளியும் பயன் பட்டது *(யாத் 25:11-38:28).* ஆலயத்தில் திருத்தூயகத்தையும், அதைச் சார்ந்த பொருள்களையும், தந்த அரியணையையும், முன்முக மண்டபத்தையும் வேய்வதற்குப் பொன்னும் *(1 அர 6:30-32; 10:18; 2 நாள் 3:4.10; 9:17),* குருக்கள் முற்றத்தின் கதவுகளை வேய்வதற்கு வெண்கலமும் *(2 நாள் 4:9)* பயன்பட்டன. சிலைகள் வேயப்படுதல் *எசா 40:9; அப 2:19-இல்* குறிக்கப் பட்டுள்ளது.

வேர் (ROOT)

இச்சொல் பெரும்பாலும் உருவகமாகவே பயன்பட்டுள்ளது எ.கா. ஒரு காரணகாரியம் அல்லது மூலம் *(யோபு 19:28; 28:9; 36:30; 1 திமொ 6:10).*

ஒரு மனிதனின் வேர் மூலவளமும் பாதுகாப்பும் ஆகும் *(எரே 12:2; 17:7-8; கொலோ 2:7).* இதுபோல ஒரு குடும்பத்தின் *(உப 29:18; எபி 12:15),* ஓர் அரச மரபின் *(எசா 14:29)* மற்றும் ஒரு நாட்டின் *(எசே 31:7)* வேர்கள், கடந்த காலத்தில் கொண்டிருக்கும் ஆதாரம், அதன் தற்போதைய பாதுகாப்பு, அதன் செழிப்பின் தன்மையையும் பரப்பையும் விவரிக்கும் கனிகள் ஆகியவற்றைக் குறிக்கும். ''வேரோடு பிடுங்குதல்'' என்பது தீர்ப்பையும் அழிவையும் குறிக்கும் *(1 அர 14:15; சங் 9:6; 52:5; எரே 24:6; மத் 15:13).*

இஸ்ராயேல், யாவேயின் தேர்ந்தெடுத்தல் *(சங் 80:15; உரோ 11:16-18),* தீர்ப்பு *(எசா 5:24; மத் 3:10),* மீண்டும் அமைக்கப்பெறுதல் *(எசா 27:6; ஓசே 14:5-6; ஆமோ 9:15)* ஆகிய கூறுகளின் கீழ் ஒரு செடியென விவரிக்கப்படுகிறது.

தாவீது அரச மரபிலிருந்து ஒரு பெரிய அரசன் வருவார் என்ற எதிர்பார்ப்பால் ''ஈசாயின் வேர்'' *(எசா 11:1-10; உரோ 15:12),* ''தாவீதின் வேர்'' *(திருவெளி 5:5; 22:16)* போன்ற உருவகங்கள் தோன்றின. அதாவது, அரசமரபின் வழித்தோன்றலில் அரச மரபு நிறைவுபெறும் என்று இவை உணர்த்தின.

வேலி (FENCE, HEDGE)

இது முட்புதராலோ, கற்சுவராலோ ஆன பாதுகாப்பாகும் *(சங் 80:12-13; எசா 5:5; மத் 21:33; மாற் 12:1).* உருவகமாக, வேலி இறைவனுடைய பாதுகாப்பையும் *(யோபு 1:10),* அவர் ஒருவனை அடைத்துத் தடை செய்வதையும் *(யோபு 3:23; புல 3:7; ஓசே 2:8)* குறிக்கிறது. பகைவர்களால் சூழப்பட்ட மனிதன் இடிந்த மதிலுக்கும் சிதைந்த வேலிக்கும் ஒப்பாவான் *(சங் 62:3).*

வேலை (WORK)

I. மனிதன் உழைப்பில் ஈடுபட்டுள்ள செய்தி விவிலியம் முழுவதும் காணப்படுகிறது. ஆனால், கலைஞன் அல்லது சிறு விவசாயியின் வேலை நுணுக்கமாக ஒழுங்குபடுத்தப்பட்ட நாம் காணும் இன்றைய வேலையிலிருந்து வேறுபட்டிருப்பதால் வேதநூல் வேலையைப் பற்றி தெளிவுபடுத்தவில்லை அல்லது தவறாக அறிவித்துள்ளது என்று கருத நம்மை இட்டுச் செல்கிறது. இன்னும் வேதநூல் உழைப்பின் பொருளையும், மதிப்பையும் பற்றிய அடிப்படைக் கொள்கைகளை அவ்வளவாக எடுத்துரைக்காததால், பரவலாகக் காணப்படும் ஒருசில கூற்றுக்களை அவைகளுடைய சூழ்நிலையிலிருந்து பிரித்து நம்முடைய முன்கூட்டிய கருத்துக்களைப் புகுத்தக்கூடிய சோதனைக்கு நாம் ஈர்க்கப் படுகிறோம். விவிலியம் நம்முடைய வினாக்கள் அனைத்திற்கும் விடைபகர்வதில்லை. இருந்தபோதிலும் இதை முழுமையாக நோக்கும்போது உழைப்பின் உண்மையும், மதிப்பும், துன்பமும், மீட்பும் நமக்குத் தெளிவாகத் தெரிகின்றன.

II. **உழைப்பின் உயர்வு:**

1. படைப்பவரின் ஆணை: இன்றைய கருத்து உத்தேசமாக இருந்தபோதிலும் வேலை பாவத்தினால் வருவதன்று. வீழ்ச் சிக்கு முன்னே "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவரா கிய கடவுள் மனிதனை அங்குக் கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்" (ஆதி 2:15). பத்துக்கற்பனை ஓய்வைக் கட்டளையிடுகிற தென்றால் அஃது ஆறுநாள் உழைப்பின் இறுதியில்தான் (யாத் 20:8). வாரத்தின் உழைப்பு இறைவன் இவ்வுலகை உரு வாக்க ஆறுநாட்கள் ஆனதை நினைவுக்குக் கொணர்கிறது. இஃது இறைவனுடைய செயலைப் பிரதிபலிக்கிறது. முதலில் இறைவன் மனிதனைத் தம் சாயலில் உருவாக்கி (ஆதி 1:27) அவனைத் தமது திட்டத்தின் பங்காளியாக்க விழைந்தார். பிறகு உலகை அதற்குரிய இடத்தில் அமைத்து, மனிதன் மண்ணுலகை ஆண்டு நிரப்பும் வல்லமையை இறைவன் அவனுக் களித்து, அவன் கையில் இவ்வுலகை ஒப்படைத்தார் (ஆதி 1:28). உழைப்பவர் எல்லாரும் "நற்பயிற்சியையோ, தீர்ப் பையோ விளக்கிக் கூற முடியாது". ஆனால், ஒவ்வொரு தனிமனிதனும் தன் னுடைய செயலுக்கேற்ப "படைப்பின் அமைப்பைப் பேணிக்காப்பாற்றுகிறார்கள்" (சிரா 38:34). ஆதலால் படைத்தவரின் செயல்கள் உழைப்பாளியின் செயல்களால் வர்ணிக்கப்படுவதில் சிறிதும் வியப்பு இல்லை. மனிதனை உருவாக்கி (ஆதி 2:7), விண்ணைப்படைத்து, விண்மீன்களை அவைகளுக்குரிய இடத்தில் அமைத்தார் (சங் 8:3). பதிலாக, காலையில் "மானிடர் வேலைக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர். அவர்கள் மாலைவரை உழைக்கின்றனர்" (சங் 104:23; காண்க. சிரா 7:15) என்னும் படைப்பவராகிய இறைவனின் பெரிய சங்கீதம் மனிதனைச் சித்திரிக்கிறது. மனித னின் இவ்வேலை இறைவன் படைப்பின் மலர்ச்சி; அவருடைய திருவுள்ளத்தின் நிறைவு.

2. உழைப்பின் இயற்கையான மதிப்பு: உடன்படிக்கையின் கட்டளைகளிலோ, பத்துக் கற்பனைகளிலோ, நற்செய்தியிலோ இறைவனின் அதிகாரபூர்வமான திருவுளம் ஓரளவுகூடக் குறிப்பிடப்படவில்லை; இதில் வியப்பு ஒன்றுமில்லை. இது தவிர்க் கப்பட்டது சாதாரணமே; ஏனெனில், இறை வனின் மீட்புக்கு அவன் அழைக்கப்பட்டுள் ளான் என்பதை அவன் அறிவதற்கு முன்பே வேலை ஒவ்வொரு மனிதன் மீதும் சுமத்தப் பட்ட மனிதத்தன்மையின் சட்டமாகும் (காண்க. உப 5:13). விவிலியத்தில் வேலைக்கு மாறான அனேக எதிர்ச்செயல் கள் நன்கு தெளிந்த மனச்சாட்சியின் தீர்ப்பு களே ஆகும். இந்த எதிர்ச்செயல்கள் ஞானி களின் நூல்களில் தோன்றுவது இயல்பு. இவர்கள் சாதாரண ஒழுக்க அனுபவத்திலி ருந்து இஸ்ராயேலின் மறை மிகுந்த பயன் அடையச் செய்ததில், மிகவும் கவனமாய் இருந்தனர்.

இவ்விதமாக உழைக்காதவன் உண்ண ஒன்றுமில்லாது (பழ 13:4) பசியினால் இறப்பிற்குள்ளாகிறான் (21:25) என்னும் தெளிவான காரணத்திற்காக விவிலியம் சோம்பேறித் தனத்தின்மீது மிகக் கடுமை யாகவுள்ளது. பசி சோம்பேறியை உழைக் கத் தூண்டுவதில்லை (16:26). உழைக்க மறுத்து நேர்வழியிலிருந்து ஒதுங்குவோ ருக்கு இவ்வாதத்தை எடுத்துக்காட்ட, பவுல் தயங்குவதில்லை. "உழைக்க உளமில்லாத வன் உண்ணலாகாது" (2 தெச 3:10). மேலும், சோம்பேறித்தனம் அழிவின் ஒரு வகை. எப்பொழுதும் சுறுசுறுப்பாக விழித் திருக்கும் பெண்ணை நாம் போற்றுகி றோம். அவள் "சோம்பலினால் தன் அப்பத் தையும் உண்ணாள்" (பழ 31:27); "கீல் பட்டையில் கதவு ஆடிக்கொண்டிருப்பது போல், சோம்பேறி தன் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பான்" (26:14) என்று நகைச்சுவையோடு சோம்பேறி விவரிக்கப் படுகிறான். அவன் மனிதனல்லன்; "மாசு படிந்த கல்"; "குப்பை மேட்டுக்கு ஒப்பா வான். அதைத் தொடும் அனைவரும் கையை உதறித் தட்டிவிடுவர்" (சிரா 22:1-2).

சிறப்பாகவும் திறமையோடும் ஆற்றும் கலைவேலையையும், முழுமூச்சாக உழைக்கும் உழவனையும், கொல்லனையும், குயவனையும் விவிலியம் அதிகமாகப் போற்றுகிறது (சீரா 38:26.28.30). கலையின் வெற்றிப் படைப்புகளை விவிலியம் முழுமையாகப் போற்றுகிறது; குறிப்பாக எந்த நாட்டிலும் ஒப்புமையில்லாத (1 அர 10:20) சாலமோனின் அரண்மனை (7:1-12) மற்றும் அரியணை இதையெல்லாம் விட யாவேயின் ஆலயமும் சிறந்த அதனுடைய நுட்பமான வேலைப்பாடும் (6:7; 13-50) போற்றப்படுகின்றன. பொய்த் தேவதைகளின் சிலை வடிக்கும் மூடனுக்கு எதிராகக் கண்டனம் செய்தாலும், இவ்வளவு திறமையை ''ஒன்றுமில்லாமைக்குச்'' செலவிடுவதை வெறுத்தாலும் (எசா 40:19தொ; 41:6தொ) விவிலியம் அவனுடைய திறமையை மதிக்கிறது.

3. வேலையின் சமுதாய மதிப்பு: *கலையின் வெற்றியைப் போற்றுவதிலிருந்து மட்டும் வேலையின் மதிப்பு எழுடதில்லை. சமூக வாழ்விலும் பொருளாதாரத் துறையிலும் வேலை பெற்றுள்ள ஊடுருவக் கூடிய தனித்தன்மையிலிருந்து இது தோன்றுகிறது. உழவுத் தொழிலாளரும் கலைஞருமின்றி ஒரு நகரும் கட்டப்பட முடியாது (சீரா 38:32). ''செல்வம் சேர்க்கும் ஆவல் மீது ஆசை, கைவினை ஞானம், இறைப் பராமரிப்பின் உறுதுணை'' ஆகிய மூன்றும் கடற்பயணத்தின் தொடக்கமாக உள்ளன (ஞான 14:2-3). இம்மூன்றின் முக்கியத்துவம் எல்லாத்திட்டத்திலும், வேலையின் வெற்றியைப் போற்றுவதிலும் விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, கடற் பயணம் செய்வோன் எவ்வாறு ''மிகச்சிறிய மரக்கட்டையிடம் தன் உயிரையே ஒப் படைக்கிறான்'', எவ்வாறு ''இறை ஞானத்தின் வேலை பயனின்றியிருத்தலை'' அவன் தடுத்து இறைவனின் படைப்பை நிறைவு பெறச் செய்கிறான் என்பது விளக்கப்படுகிறது (ஞான 14:5).*

III வேலையின் வாதை: *வேலை மனித உயிர்வாழ்வின் ஓர் அடிப்படை உண்மை. ஆதலால், இது பாவத்தால் நேர்முகமாகவும், ஆழமாகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ''நெற்றிவியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய்'' (ஆதி 3:19). இறைச்சாபம் குழந்தைகளைப் பெற்றெடுப்பதை வேதனை மிக்கதாக்குவது போல் வேலையையும் வேதனை மிக்கதாக்குகிறது. எவ்வாறு குழந்தை பெற்றெடுத்தல் உயிர்ச் சாவின்மேல் கொள்ளும் வேதனை மிக்க வெற்றியோ அவ்வாறே வேலையில் ஆழ்ந்து ஈடுபடும் மனிதனின் அன்றாட வேதனை இறைவன் தனக்குப் படைப்பின் மீது அளித்த அதிகாரத்தைச் செயல்படுத்துவதைச் சுட்டிக்காட்டுகிறது. வல்லமை தொடர்ந்து இருக்கிறது; ஆனால், சபிக்கப் பட்ட மண்ணோ எதிர்த்துப் போராடுகிறது; அதை அடக்கி ஆள வேண்டும் (3:17). இந்தப் போராட்டத்தில் ஏற்படும் மிகக்கடினமான துன்பம் அடிக்கடி மிகச் சிறந்த வெற்றியில் முடிகிறது. எடுத்துக்காட்டாக, சாலமோனின் பெரிய சாதனைகள். சாவு இப்போராட்டத்தைப் பயனற்றதாக்குகிறது. ''உழைப்புக்கு மனிதனுக்குக் கிடைக்கும் பயன் என்ன? வாழ்நாளெல்லாம் அவனுக்குத் துன்பம்; வேலையில் தொந்தரவு; இரவிலும் அவன் மனதிற்கு அமைதியில்லை. எல்லாமே வீண்'' (திருவுரை 2:22-23).*

பாவத்தின் பெரிய, வலுவான உட்பாதைகள் மனித முயற்சியை ஊடுருவிச் செல்கின்றன. அடிக்கடியான பயனற்ற துயரமிக்க வேலை இம்மனித முயற்சியின் ஒரு பாகம் ஆகும். அடிக்கடி ஏற்படும் மனமாற்றம், கொடுமை, அநீதி, பேராசை ஆகியவை வேலையைத்தாங்க முடியாச் சுமையாகச் செய்வதோடு மட்டுமின்றி, வெறுப்பு பிளவுகளின் மூலகாரணமாகவும் மாற்றுகின்றன. உழைப்பாளிகள் தங்கள் ஊதியத்தை இழந்தனர் (எரே 22:13; யாக் 5,4); விவசாயிகள் வரிச்சுமையால் அழிகின்றனர் (ஆமோ 5:11); மக்கள் அனைவரும் அன்னிய அரசாலும் (2 சாமு 12:31), அவர்களுடைய சொந்த அரசனாலும் அடிமைவேலைக்கு ஆளாகின்றனர் (1 சாமு 8:10-18; 1 அர

5:27; 12: 1-14); அடிமைகள் உழைப்புக்கும் உதைக்கும் உள்ளாகின்றனர் (சீரா 33:25-29). தீமையைத் தூண்டும் இப்படத்தில் எப்போதுமே சொந்தக் குற்றம் இருப்பதில்லை. ஆதாமின் மக்களாகிய நாம் வழக்கமான உலக உழைப்பையே கொண்டுள்ளோம். இஸ்ராயேலர் இவ்வுலகை அறிந்திருந்தனர்; இதனை எகிப்தில் மிக உணர்ச்சியில்லா உருவில் அறிந்திருந்தனர். தளர்ச்சி தரும் கட்டாய வேலையை இரக்கமற்ற அதிகாரிகளின் அடியிலும் எதிரிகளினடியிலும், எதிரி நாடு நலம் பெற உழைத்தனர்; இந்தத் திட்டமிட்ட வேலை மனிதத்தன்மையை ஒன்றுமில்லாமையாக்கியது; அவர்களை எதிர்த்துநிற்க முடியாதவர்களாக்கியது (யாத் 1:6-14; 2:11-15; 5:6-18). இஃது ஏற்கெனவே அடிமைவேலையின் இருப்பிடமாகவும், கட்டாய உழைப்புக் குடியேற்றமாகவும் திகழ்கிறது.

IV **வேலையின் மீட்பு:** பாவத்தின் விளைவாகிய இந்த மனிதத்தன்மையற்ற வேலையின் உலகிலிருந்து யாவே தம்முடைய மக்களை விடுவித்துள்ளார். வேலையை இன்னல் தரும் ஒவ்வொரு கூறிலிருந்தும் மீட்காவிட்டாலும், மனிதனுடைய கெட்ட எண்ணத்தால் உண்டான பயங்கரமான வடிவங்களிலிருந்தாவது மீட்க மேற்கொண்ட தொடர்ச்சியான விதிக்கூறுகள் அவர் இஸ்ராயேலரோடு செய்துள்ள உடன்படிக்கையில் அடங்கியுள்ளன. தளர்ச்சிப்படுத்தும் தொடர்ச்சியான வேலை நாட்களிலிருந்து சிறிது விடுவிக்கவும் (யாத் 20:9தொ), மனிதனுக்கும் விலங்கிற்கும் உறுதியாக ஓய்வு கொடுக்கவுமே ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டது (யாத் 23:12; உப 5:14). இறைவன் உழைக்கிறார், ஓய்வெடுக்கிறார், அடிமை வேலையிலிருந்து விடுவிக்கிறார் என்பதை அவரே வெளிப்படுத்தியுள்ளார். அவரைப் பின்பற்றியே இவ்வோய்வு அமைந்துள்ளது (உப 5:15). அடிமை அல்லது கூலியாளைக் காப்பதாகச் சட்டத்தின் பல பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. கூலியாளுக்கு அன்றே கூலியை வழங்க வேண்டும். கூலியாளைத் தன் சுயநலத்திற்காகக் கொடுமைப்படுத்தலாகாது (உப 24:14).

இக்கோரிக்கைகளை இறைவாக்கினர் மீண்டும் நினைவுபடுத்துகின்றனர் (எரே 22:13). உடன்படிக்கையின் மீதுள்ள பிரமாணிக்கம் இஸ்ராயேலரை வேலையிலிருந்து நீக்காது; மாறாக, அவ்வேலையைப் பலனுள்ளதாக்கும். ஏனென்றால் ''இறைவன் அவருடைய செயல்களை ஆசீர்வதிப்பார்'' (உப 14:29; 16:15; 28:12; சங் 128:2). முயற்சி அதனுடைய சாதாரணப் பலனை விளைவிக்கும். திராட்சைக் கொடி நடுபவர் அதனுடைய கனியைச் சுவைப்பர். கட்டியவர் தாம் கட்டிய வீட்டில் வாழ்வர் (ஆமோ 9:14; எசா 62:8; காண்க. உப 28:30).

V **கிறிஸ்துவும் வேலையும்:**

1. இயேசு கிறிஸ்துவின் வருகை முரண்பாடுகளைப் போக்குகிறது; நற்செய்தி தெளிவுபடுத்துதலைக் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டின் வேலை சில சந்தர்ப்பங்களில் போற்றப்படுகிறது; சில சமயங்களில் ஒன்றும் கூறாததுபோல் தோன்றுகிறது; அல்லது மிக முக்கியமில்லாததுபோல் தொட்டும் தொடாமல் பேசப்படுகிறது. இயேசுவே ஒரு தொழிலாளி (மாற் 6:3), ஒரு தொழிலாளியின் மகன் (மத் 13:55) என்பதாலும், பவுல் தம் சொந்தக்கரங்களால் உழைத்து (அ.ப. 18:3), அதில் பெருமையும் கொண்டார் (அ.ப. 20:34; 1 கொரி 4:12) என்பதாலும் உழைப்பின் உயர்வு போற்றப்படுகிறது. இருந்தாலும், நற்செய்திகள் வேலையைப் பற்றி வியக்குமளவுக்கு மௌனம் காக்கிறது. இவை இவ்வார்த்தையோடு கொண்டுள்ள தொடர்பு இறைவனுடைய வேலைகளாகிய கட்டாயக் கடமைகளை மட்டும் சார்ந்ததாகக் காணப்படுகின்றன. அல்லது எடுத்துக்காட்டுகளிலும் காணப்படுகின்றன; பறவைகள் ''விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை'' (மத் 6:26); வயல்வெளி லீலி மலர்கள் ''உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை'' (6:28). வேலையைப் பற்றிக் குறைந்த அளவே கூறியிருப்பதும், வேலைக்கு முக்கியத்துவம் அளிப்பதும் முரணானவையல்ல; மாறாக, அடிப்படை

யான கிறிஸ்தவக் கொள்கைகளில் இரு துருவங்கள் இவை.

2. அழியும் வேலை: ''அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம்; நிலை வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள்'' (யோவா 6:27). இறையரசைக் கொணர்வதற்காக இயேசு கிறிஸ்து வருகிறார். வேறெதுவும் அவரது பணியன்று; வேறெதனைப் பற்றியும் அவர் பேசுவதில்லை. ஏனென்றால், இவ்வரசு மற்றெல்லாவற்றையும் கடந்து செல்கிறது (மத் 6:33). உண்பது, குடிப்பது, உடுப்பது போன்ற மற்றெல்லாம் அவ்வளவு முக்கியமானவை அல்ல. ஆனால், இறையரசை இழக்குமளவுக்கு அவைகளைப் பற்றியே அதிகம் கவனம் செலுத்தி உலகையே அடைந்தாலும், இஃதொரு முழுமையான பேரிழப்பாகும் (லூக் 9:25). இறைவனைப் பெற்றிருப்பதாகிய தனிமுதலுக்கு முன்னால் மற்றெல்லாம் மறைந்துபோகின்றன. இவ்வுலகின் ''இன்றைய உலக அமைப்பு கடந்து செல்கிறது'' (1 கொரி 7:31); ''ஆண்டவரிடம் முழுப்பற்றுக் கொண்டிருப்பது'' மட்டுமே மிக முக்கியமானதாகும் (7:35).

3. வேலையின் பயனுள்ள மதிப்பு: வேலையை இறைவனிடமிருந்து வேறுபடுத்தி அதற்குரிய இடத்தில் வைத்துக் காட்டுவதால் அதன் மதிப்பு எவ்விதத்திலும் குறைவதில்லை; மாறாக, படைப்புத் திட்டத்தில் அதனுடைய உண்மையான உயர்ந்த மதிப்பு மீண்டும் நிலை நிறுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் யாவேயைப்போல் இயேசு உழைப்பைக் கொண்டிலங்கும் உலகிடமிருந்து உவமைகளையும், தலைப்புக்களையும் பெறுகிறார்; ஆயன், திராட்சைக்கொடியைப் பயிரிடுவோன், மருத்துவர், விதைப்போர் (யோவா 10:1தொ; 15:1; மாற் 2:17; 4:3). ஆனால் இவற்றில் உடல் உழைப்பிற்கு அறிஞருடைய தயாள நிழல் கூடயில்லாமல் அதனுடையும் தேவையும் அளவும் தெரிகிறது (சீரா 38:32). கிறிஸ்து அப்போஸ்தலத்துவத்தை ஒரு வேலையாகக் காட்டுகிறார்; அறுவடை வேலையாக (மத் 9:27; வா 4:38) அல்லது மீன் பிடிப்பதாகக் காட்டுகிறார் (மத் 4:18). அவர் தேர்ந்தெடுக்கிறவர்களின் பணியை அறிந்திருக்கிறார் (மத் 4:15). ஆனால், இவை எல்லாவற்றையும் விட அவருடைய முழு நடைமுறையும் உலக உழைப்பில் இயங்குவதை முன் கொண்டிருக்கிறது. விவசாயி அவனுடைய வயலிலும் (லூக் 9:62), இல்லாள் இல்லத்தைத் தூய்மைப்படுத்துவதிலும் உழைப்பதைச் சித்திரிக்கிறார் (15:8). திறமை பலனளிக்காது மறைந்திருப்பதை இயற்கைக்கு மாறானதாகக் கருதுகிறார் (மத் 25:14-30). நம்முடைய அடுப்புகளில் சுடப்பட்ட அப்பமாக அப்பத்தைப் பலுகச் செய்யும்போதும் இது வழக்கத்திற்கு ஒரு விதிவிலக்கு என்பதைச் சுட்டிக்காட்டத் துடிக்கிறார். மனிதனே தம்முடைய அப்பத்தைச் செய்யும்படி விட்டுவிடுகிறார். இறுதி வருகை அருகில் உள்ளது என்று ''சோம்பித்திரியும் எந்தச் சகோதரனிடமிருந்தும் விலகி நில்லுங்கள்'' என்று மனித நிலைமைக்கு அடிபணிந்துள்ள உணர்வோடு நமக்குப் பவுல் கூறுவார் (2 தெச 3:6).

4. வேலையில் கிறிஸ்தவ மதிப்பு: மனுகுலம் இவ்வுலகை ஆண்டு, உரிய வேலையைச் செய்ய புது ஆதாமாகிய கிறிஸ்து அனுமதிக்கிறார் (எபி 2:5தொ; எபே 1:9). ஏனெனில், கிறிஸ்து மனிதனை மீட்பதன் மூலமாக வேலைக்கு முழு மதிப்பளிக்கிறார். உழைக்க வேண்டியதன் தேவை மிக இன்றியமையாததாக உள்ளது. ஏனெனில், அஃது இயற்கை கடந்த அன்பின் செயல்முறையான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. மனிதன் இறைமக்களாகத் திகழ்வதற்குப் பெற்றுள்ள அழைப்பை வெளிப்படுத்துவதன் வாயிலாக மனிதனின் உயர்வையும், உழைப்பின் உயர்வையும் தெள்ளத்தெளிவாக்குகிறார். வேலையில் மனிதனுடைய தீர்ப்புக்கும், நடத்தைக்கும் மதிப்பீட்டுப்படி மரபை நிறுவுகிறார். அஃதோடு கிறிஸ்து உழைப்பில் பிறர் நட்பையும் உறுதிப்படுத்துகிறார்; உழைப்பை அதனுடைய எல்லாப் பொரு

ளோடும் கிறிஸ்துவில் சகோதரத்துவம் என்னும் புதிய கொள்கையில் அமைக்கிறார் (பிலமோன்). ஏனென்றால், அவருடைய அன்பின் ஆணைப்படி (யோவா 13:34), சுயநலத்திற்கு எதிராக நாம் செயல்படவும், மனித வேலையின் வாதையைக் குறைக்கவும் கடமைப்பட்டுள்ளோம். மேலும், கிறிஸ்தவனை இயேசுவினுடைய துன்பம் மற்றும் இறப்பின் மறைபொருளுக்கு உட்படுத்தித் தவிர்க்க முடியாத வாதைக்கே ஒரு புதிய மதிப்புக் கொடுக்கிறார்.

5. உழைப்பும் புதிய உலகமும்: முடிவில் ஆண்டவருடைய இறுதி வருகையில், அவர் தேர்ந்தெடுத்தவர்களை அவருடைய உயிர்ப்பின் மகிமை உடுத்தும். அப்பொழுது அவர் வழியாக, அவரில் பாவம், சாவு, துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு மனிதன் உலகம் முழுவதையும் அடக்கி ஆளும் நிலை ஏற்படும். இறுதி நாளுக்கு முன்புகூட கிறிஸ்துவில் எவ்வளவுக்கு வேலை செய்யப்படுகிறதோ, அவ்வளவுக்கு அது படைப்பு இறைவனை நோக்கிச் செல்வதில் பங்கு பெறுகிறது. அடிமை தன் நிலைமையைக் கிறிஸ்துவில் தாங்கிக் கொள்ளும்போது ''ஆண்டவரில் விடுதலை பெற்ற மனிதனாகத்'' திகழ்கிறான் (1 கொரி 7:23); ''படைப்பனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலைமையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைக்குரிய மகிமையும் விடுதலையும் பெற்றுக்கொள்ளும்படி'' அவர் தயார் செய்கிறார் (உரோ 8:21). இதற்குமேல் உழைப்பு நிறைவு பெற்று நிலைத்து நிற்குமா? மறைநூல் இம்மை சார்ந்த மெசியாக் கோட்பாட்டை ஆதரிப்பதில்லை; ஏனெனில், அஃது ''இவ்வுலகத்தின் அமைப்பைக் கடந்து செல்கிறது'' (1 கொரி 7:31). உலகின் இன்றைய மற்றும் வருங்கால நிலைகளுக்குள் உள்ள இடைவெளி, வருங்கால உலகிற்கு எளிய மற்றும் நேரடியான முறையில் கடந்து செல்லுதற்கு இடந்தராது. ஆயினும், தெளிவாகக் குறிப்பிடாவிடினும் மனித வேலைக்கு ஒருவித நிரந்தரமான தன்மை உண்டு. இஃது உலகம் கிறிஸ்துவினால் மேற்கொள்ளப்பட்டு ஒன்று கூட்டப்பட்டுள்ளது என்னும் பவுலின் கூற்றுக்குப் பொருத்தமாக உள்ளது (உரோ 8:19தொ; எபே 1:10; கொலோ 1:16. 20). மீட்புப் பெற்று விடுபட்ட படைப்பு முடிவில்லாக் காலத்திற்கும் கிறிஸ்துவில் கூட்டிச் சேர்க்கப்பட்ட இறைமக்களின் உலகாகத் திகழும் நம்பிக்கையை மறைநூல் முழுவதும் நமக்கு வரவழைக்கிறது.

வேலைக்காரர் (SERVANT)

1. இவர் ஒரு தலைவனுக்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்ட ஆணோ, பெண்ணோ ஆவர். இவர் அடிமையாகவோ, சுதந்தரமுடைய கூலியாளாகவோ (யாத் 12:45; யோபு 7:1; மலா 3:5) இருக்கலாம். இச்சொல்லுக்குப் பதிலாக அடிமை, ஊழியன், கூலியாள், பணியாளன் என்ற சொற்களும் பயன்பட்டுள்ளன. இவற்றின் பொதுப்பொருள் ஒருவருக்குக் கீழ்ப் படிந்து, உடனிருந்து ஊழியம் செய்வது என்பதாகும் (யாத் 24:13; 1 அர 10:5).

2. விவிலிய காலங்களில் வழக்கமாக வேலைக்காரர்கள் அடிமைகளே ஆவர்; அதாவது, மற்றொருவருடைய சொத்தாவார். அவர்கள் அந்த மற்றொருவரால் விருப்பம் போல் நடத்தப்படலாம். பழங்கால இஸ்ராயேலில் அடிமைகளைக் குறிப்பாக, இஸ்ராயேல் அடிமைகளை, மனிதத் தன்மையுடன் நடத்தக் கோரும் சட்டங்கள் இருந்தன. இச்சட்டங்களுக்கு அடித்தளமாக உள்ளது அவர்கள் எகிப்தில் அனுபவித்த அடிமைத்தனமாகும் (உப 15:15). சுதந்தர மானவர்கள்போல் அடிமைக்கு ஓய்வுநாள் உண்டு (யாத் 20:10). ஒருவன் தன் அடிமையை அடித்துத் தீங்கு விளைவித்தால் அந்த அடிமைக்கு விடுதலை அளித்து அனுப்பிவிட வேண்டும் (21:26-27). வறுமையின் பொருட்டு அடிமையான இஸ்ராயேல் (லேவி 25:39) அன்னிய அடிமைகளிலிருந்து வேறுபடுத்தப்பட்டனர். அன்னிய அடிமைகள் விலைக்கு வாங்கப்பட்டவர்களாகவோ (25:44-45), போரில் பிடிபட்டவர்களாகவோ (1 அர 9:20-21) இருக்கலாம். இந்த அடிமை வேலைக்காரர் பற்றி மற்ற செய்திகளை அடிமை என்ற தலைப்பின் கீழ்க்காண்க.

3. சமய மரபு: ஒரு குறிப்பிட்ட கடவுளிடம் பக்தியுள்ளவர்கள் அக்கடவுளின் ஊழியர்கள் என்றும் பணியாளர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். பழைய ஏற்பாட்டில் இறைமக்களின் முதன்மையான தலைவர் அல்லது இறைவனுக்கும், அவரது மக்களுக்கும் இடையில் செயலாற்றிய மோசே, தாவீது போன்ற தலைவர்கள் இறைவனது ''ஊழியன்'' என்றழைக்கப்பட்டனர் (யாத் 14:31; 2 சாமு 3:18; காண்க. சங் 19:11). எசாயா நூலில் வரும் ஊழியனைப் பற்றிய பாடல்களோடு இணைத்துச் சுட்டிக்காட்டப் படும் இடங்களில் இயேசு ''இறைவனது ஊழியர்'' என்றழைக்கப்படுகிறார் (மத் 12:18; அ.ப. 3:13.26; 4:27.30). பிலி 2:7-இல் இயேசு அடிமையின் தன்மை பூண்டார் என்று கூறப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்கள் ''கடவுளின் ஊழியர்கள்'' என்றும், ''கிறிஸ்துவின் ஊழியர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர் (அ.ப. 16:17; தீத் 1:1; யாக் 1:1; 1 பேதுரு 2:16; காண்க. அ.ப. 2:18). பாவத்திற்கு அடிமையான வாழ்விலிருந்து கிறிஸ்துவால் மீட்கப்பட்டு, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உடைமையாகவும் (அடிமை), அவருக்கு ஏற்புடையவர்களாயும் ஆகிவிட்டனர் (உரோ 6:6-7. 17-18; 1 கொரி 6:19-20; 7:22-23; கலா 4:3.8-9). அவர்கள் மகனுரிமையுள்ளவர்கள், அடிமைகள் அல்லர் (யோவா 8:31-36; உரோ 8:15; கலா 4:4). திருச்சபையில் ''தியாக்கோன்'' (பிலி 1:1; 1 திமொ 3:8-13) பதவியிலும் மற்றப் பகுதிகளில் உள்ளோரும் (2 கொரி 6:4; கொலோ 1:7) பணியாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

வேலைவாங்கும் அதிகாரிகள் (TASK MASTER)

வேலை கொடுப்பதும், அதைச் சரிவரச் செய்யக் கட்டாயப்படுத்துவதும் இவருடைய பணியாகும். இவர் மேற்பார்வையாளர் ஆவார் (யாத் 1:11). எகிப்தில் இவர்கள் வேலைவாங்க தடிகளைப் பயன்படுத்தினர். இவர்களது கொடுமைகள் யாவரும் அறிந்த ஒன்றாகும் (யாத் 3:7; 5:6 14; யோபு 3:18). தாவீதும் சாலமோனும் தங்களுக்குக் கட்டாய வேலை செய்த இஸ்ராயேலரை மேற்பார்வையிட இத்தகைய அதிகாரிகளைக் கொண்டிருந்தது (2 சாமு 20:24) அவர்களது அரசாட்சி பிளவுபட ஏதுவாக இருந்தது. சாலமோன் ஆலயத்தைக் கட்ட, இதைப் போன்ற மேற்பார்வையாளர்கள் பலரை ஏற்படுத்தினார் (1 அர 5:16). எந்த வெளிநாட்டு மன்னனும் இறைவாக்கினர்களால் வேலைவாங்குவோனாக அல்லது கொடுமைப்படுத்துபவனாகக் கருதப்பட்டான் (எசா 3:2; செக் 10:4). விலங்குகளை ஓட்டுபவன் அவைகளிடம் வேலை வாங்குவோன் ஆவான் (யோபு 39:7).

வேளாண்மை, விவசாயம் (AGRICULTURE)

1. தொடக்க காலத்திலிருந்தே, பாலஸ்தீனத்தில் வாழ்ந்தவர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். தொல்பொருள் மற்றும் ஒப்புமை ஆய்வுகள், வேளாண்மை பற்றி விவிலியம் தரும் செய்திகளை நிறைவு செய்கின்றன. கர்மேல் மலைத்தொடரின் மேற்கு ஓரத்தில் உள்ள வாடி ஏல்-முகாராவில் நடந்த அகழ்வாய்வுகள் இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இடைக்கற்காலத்திலேயே (கி.மு. 8000-7000) உழவர்களாக இருந்திருந்தனர் என்று காட்டுகின்றன. எரிகோவில் நடந்த அகழ்வாய்வுகள் கி.மு. 7500-ஐஒட்டிய காலத்திலேயே இங்கு வாற்கோதுமை, மற்றொருவகைக் கோதுமை, பயறு வகைகள் ஆகியன நீர் பாய்ச்சிப் பயிர் செய்யப்பட்டன என்று காட்டுகின்றன. எபிரேய குலமூதாதையர்கள் காலத்திலேயே (கி.மு. 3000) தானியங்கள் பயிரிடுவதும், திராட்சை, அத்தி, பேரீச்சை, ஒலிவத் தோட்டங்களும் யோர்தான் பள்ளத்தாக்கிலும், மலையடிவாரங்களிலும் நன்கு நிலைபெற்று விட்டிருந்தன (காண்க. ஆதி 13:10). பாதி வறண்ட சமவெளிகளிலும் பீடபூமிப் பகுதிகளிலும் மேய்ப்புத்தொழில் நிலவியிருந்தது (ஆதி 13:2; 26:14; 37:12; 47:1-12).

2. பாலஸ்தீன உழவர்கள் நல்ல விளைச்சலுக்குப் பெரிதும் மழைநீரை நம்பியிருந்தனர். ஆண்டில் ஐந்து மாதங்கள் வறட்சியான

காலமாகும் (மே மத்தியிலிருந்து அக்டோபர் மத்திவரை). நிலம் காய்ந்து வறண்டிருக்கும். முதல் பருவமழை வரை (அக்டோபர் பின்பகுதி நவம்பர்; சங் 84; எரே 5:4) பயிர் செய்ய முடியாது. இந்த முதல் பருவ மழைக்குப்பின் நிலம் பண்படுத்தப்படும். குளிர்காலத்தின் கனமான மழை பெரும் பகுதியான நீரை அளித்தது. ஆனால் விளைச்சலை அறுவடைக்குக் கொண்டு வருவதற்கு, பின் மாரி (மார்ச்-ஏப்ரல், எரே 5:24) அவசியமாகும். தானியங்கள் பயிர் செய்வதற்கு மிகவும் ஏற்ற பகுதி வெப்ப மிக்க, எளிதில் நீர் பாய்ச்சக்கூடிய யோர்தான் பள்ளத்தாக்காகும். ஆனால் அரசாட்சிக் காலம் வரை இப்பகுதியைக் கானானியர் மற்றும் பெலிஸ்தியர்களிடமிருந்து இஸ்ராயேலரால் கைப்பற்ற முடியவில்லை. ஆகவே, மலைப்பகுதிகளில் படிமேடைகள் அமைத்துத் தானியங்களைப் பயிர் செய்தனர். ஆனால், அதற்காகப் பெரும் காட்டுப் பகுதிகளை அழிக்க வேண்டியிருந்தது (காண்க. யோசு 17:18). இம்முறை மலையில் ஏற்கெனவே சிறிதளவாய் இருந்த மண்ணை அரித்துப்போகச் செய்தது. இரும்புக் காலத்திற்குப் பிறகு, படிமேடைகள் அமைத்தும், பருவகாலத்தில் நீரோடும் சிற்றோடைகளின் படுகையில் அணைகள் அமைத்தும் இஸ்ராயேல் வறண்ட பகுதிகளிலும் விவசாயம் செய்தனர். சில பகுதிகளில் இரண்டாம் முறையும் தானியம் பயிர் செய்தனர் (காண்க. ஆமோ 7:1).

3. கோதுமை, வாற்கோதுமை, மாக்கோதுமை, சாமை, கம்பு போன்ற தானியங்களும், திராட்சை, அத்தி, ஒலிவப்பழ மர வகைகளும், பேரீச்சை, பஞ்சு போன்றவைகளும், மொச்சை போன்ற பயறு வகைகளும், புதினா போன்ற கீரை வகைகளும், வெங்காய வகைகளும் பயிர் செய்யப்பட்டன.

கலப்பை, மண்வெட்டி, கல்லரிவாள், முக்கூர்க்கருவி, விதைக்கும் கருவி, போரடிக்கும் கருவி, தூற்றும் கருவி, சல்லடைகள் முதலியவை வேளாண்மை செய்வதில் பயன்படுத்தப்பட்டன.

4. விவசாயம் செய்ய நிலம் நன்கு பண்படுத்தப்படும். குறிப்பாக, மலைப் பகுதிகளில் பெரும் கற்கள் அகற்றப்படும் (எசா 5:2). எருதுகளால் இழுக்கப்பட்ட கலப்பையை வலக்கையால் பிடித்து (லூக் 9:62), இடக்கையில் தாற்றுக்கோல் பிடித்து (நீதி 3:31; 1 சாமு 13:21; காண்க. அ.ப. 26:14) நிலத்தை உழுதனர். தொடக்கத்தில் கலப்பைக்கொழு செம்புப் பற்களைக் கொண்டிருந்தது. கி.மு. 10-ஆம் நூற்றாண்டளவில் இரும்புப் பல்லுடைய கொழுக்கள் பயன்படுத்தப்பட்டன. விதைகளைப் பையிலோ, சாடியிலோ வைத்துக் கையால் அள்ளி வீசிச் சிதறி, விதைகளை விதைத்தனர்; அல்லது கலப்பையோடு இணைக்கப்பட்ட குழாய் வழியாக விதை விழுமாறு செய்தனர். இது விதை நேர்ப்பாத்திகளில் விழுவதற்கு ஏதுவாக இருந்தது (எசா 28:25; யோவா 12:24). புதிதாக விதைக்கப்பட்ட விதைகளைப் பறவைகளிடமிருந்து பாதுகாக்க, அவற்றைப் பரம்பாலோ, மண்வெட்டியாலோ மண்பரப்பி மூடி விடுவர் (யோபு 39:10; எசா 7:25; 28:24; ஓசே 10:1). களைகள் ஒரு பிரச்சனையாக இருந்தாலும், இவை சில சமயம் அகற்றப்பட்டன; சில சமயம், களையுடன் பயிரும் அகற்றப்படுவதைத் தவிர்ப்பதற்காக பயிரோடு சேர்ந்து களை வளர விடப்பட்டது (காண்க. மத் 13:27-29).

5. ஏப்ரல் - மே மாதங்களில் வாற்கோதுமை அறுவடை செய்யப்பட்டது. ஒரு மாதம் கழித்துக் கோதுமை அறுவடை செய்யப்பட்டது. அறுவடை செய்வதில் குடும்பம் முழுவதும், கூலியாட்களும் ஈடுபட்டனர். கதிர்கள் தாளோடு தரையை ஒட்டி வெட்டப்பட்டன; வளைந்த கருக்குள்ள கற்களாலும், இரும்பு அரிவாளாலும் வெட்டப்பட்டு அரி அரியாகத் தரையில் விடப்பட்டன. இவற்றைக் குழந்தைகள் ஒன்று சேர்ப்பர். பின் இவை போரடிக்கும் களத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன (காண்க. நீதி 15:5). கதிர்களைத் தரையில் பரப்பியபின் தடியால் அடித்தோ, எருதுகளால் மிதிக்கச்செய்தோ (உப 25:4), வண்டியையோ (எசா 28:27) போரடிக்கும்

கருவியையோ (2 சாமு 24:22; எசா 41:15) இழுத்துச் செல்லும் எருதுகளைக் கதிர்கள் மேல் சுற்றிவரச் செய்தோ தானிய மணி களைப் பிரிப்பர். பின், பொலி வீசப்பட்டு, தூற்றப்பட்டு, தானியமணிகள் பதரிலிருந்து பிரிக்கப்படும் (எரே 15:7; எசா 20:24). இச்செயல் வழக்கமாகக் காற்று அதிகம் வீசும் மாலையில் செய்யப்படும் (காண்க. ரூத் 3:2). கழிவுப்பொருட்கள், கற்கள் போன்றவற்றை நீக்குவதற்குத் தானியமணி கள் சல்லடையால் சலிக்கப்படும்; பின், வீட்டு உபயோகத்திற்காகச் சாடிகளிலோ, களஞ்சியங்களிலோ சேர்த்து வைக்கப்படும் (ஆகா 2:19; மத் 3:12; 6:26; லூக் 12:18).

6. பல வகையான திராட்சைகள் பயிர் செய்யப்பட்டன. இவற்றின் பழங்கள் முத லில் இரசம் செய்வதற்காகவும், பின் காயவைத்து அடை செய்வதற்காகவும் பயன்பட்டன. சாதாரணமாக, திராட்சை மலைகளில் பயிர் செய்யப்பட்டது (எசா 5:1; எரே 31:5); ஆனால், இதை வீட்டுக்கரு கிலும் பயிர் செய்யலாம் (காண்க. 1 அர 21:1). திராட்சைத் தோட்டங்கள் மதில் சுவராலோ, வேலியாலோ பாதுகாக்கப்பட் டன. அவற்றில் ஒரு காவல் கோபுரமும் இருக்கும் (எசா 5:2). வரிசையாக மூன்று மீட்டருக்கு ஒன்றாக நடப்பட்டு, திராட்சை வளரும்போது வசந்த காலத்தில் கவாத்து செய்வதைத் தவிர (எசா 18:5) அதை அதிகம் கவனிக்க வேண்டியதில்லை.

இதற்கு மாறாக, ஒலிவமரச்செடி வளரும் போது அதிகக் கவனம் வேண்டும். அது வளர்ந்து முதிர்ச்சியடைந்தபின், நூறாண்டு களுக்குக்கூட அது பழங்களைத் தந்து கொண்டே இருக்கும். பழைய மரத்தின் வேரிலிருந்து புதுக்கன்றுகள் தளிர்க்கும் (காண்க. உரோ 11:17-24). செப்டம்பர் மாதத்தில், பழங்கள் பறிப்பதற்குத் தயாராக இருக்கும். மெதுவாகப் பழுத்தால், சில சமயம் பழம் பறிப்பது திசம்பர் மாதம்வரை கூடச் செல்லலாம். கிளைகளை அசைத்தோ, கம்பால் கிளைகளை அடித்தோ பழங்களைக் கீழே உதிரச்செய்து சேகரித்தனர் (உப 24:20). ஒலிவப்பழம் நேரடியாக உண்ணப்பட்டது. பழங்களை ஆலையில் இயந்திரக்கல்லால் நசுக்கியோ, காலால் மிதித்தோ (உப 33:24; மீக் 6:15) தயாரிக்கப்பட்ட எண்ணெய் சமையலுக்குப் பயன்பட்டது.

7. ஆட்டு மந்தைகள் பாலுக்காகவும், மற்றப் பால் தொடர்பான பொருட்களுக் காகவும், கம்பளத்துக்காகவும் வளர்க்கப்பட் டன. வெகு அரிதாகத்தான் அவற்றின் இறைச்சி உணவாக உண்ணப்பட்டது. உண்ணுவதற்கான இறைச்சி வேட்டைப் பொருள்களிலிருந்து பெறப்பட்டது.

8. **வேலையாட்கள்:** வருடத்தின் 12 மாதங் களிலும் இஸ்ராயேலர்கள் வயலிலே வேலை செய்கிறார்கள். விவசாயியின் குடும்பத்தைச் சார்ந்த எல்லாரும் வேலை செய்தார்கள். உரிமையாளர்களும், அடிமை களும், இளைஞர்களும், இளம் பெண் களும் அவரவர்க்குரிய வேலையைச் செய் தார்கள் (ரூத் 2; 2 அர 4:18; எசா 61:5). தன் நிலத்தை உழுபவன் எவனும் நிறைவு காண்பான் எனப் பழ 12:11 கூறுகிறது. பகல் வேளைகளில் அனைவரும் வேலைக் குச் சென்று விடுவதால் கிராமமே வெறிச் சோடிக் கிடக்கும். இரவிலும் பலர் பயிரைப் பாதுகாப்பதற்காக வயல்வெளி யிலே தங்கி விடுவார்கள். வயலில் விடப் பட்ட அரிக்கட்டையையும், திராட்சைக் குவியல்களையும் பலர் பொறுக்கிக்கொண் டனர். இவ்வாறு பொறுக்குவது விதவை, கைவிடப்பட்டவர்கள் ஆகியவர்கள் பிழைப்பதற்கு உரிய சட்டமாக இருந்தது (உப 24:19-21). ஒரு வேலை நாளின் முடிவிலே மனிதர்கள் மன நிறைவு அடைந் தனர் (ரூத் 3:7). அறுவடைக்காலம் உண் மையிலேயே மகிழ்ச்சி மிக்கதாக இருந்தது (நீதி 9:27; 21:19-23).

9. **விவசாயமும் விவிலிய மதமும்:** விவ சாயம் செய்வது மனிதர்களின் வாழ்வில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருந்ததென் றால், படைப்பின் தொடக்கத்தில் இருந்தே விவசாயம் புரிவது கடவுளால் கொடுக்கப் பட்ட மேன்மைக்குரிய தொழில் என்று

மக்கள் கருதினார்கள் (ஆதி 3-4; குறிப்பாக 3:23). நிலம் என்பது யாவே கொடுத்த கொடையாகும். அஃது அவரின் பாதுகாப்பில்தான் இருந்தது (உப 11:12). கடவுள் தான் சிறப்பான பயிர் சாகுபடி முறையை மனிதனுக்குச் சொல்லிக் கொடுத்ததாகப் பலர் நம்பினார்கள் (எசா 28:26). மனிதனின் உழைப்புக்கு ஏற்ற பலனைத் தர, இயற்கைச் சக்திகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் யாவேயிடம் மட்டுமே உள்ளது என்று நம்பினார்கள். இறைவாக்கினருக்குச் செவி கொடுக்காமல் பாவம் செய்யும் போது, அவர்களின் சாபம் பயிர்கள் மீது விழுந்து மக்களுக்குப் பேரழிவு ஏற்படுத்தியது (எசா 5:8-10; ஆமோ 4:1-8; ஆகா 1:4-11). ஐந்நூலின் பெரும்பகுதிகள், விவசாயிகளின் வாழ்க்கையோடு மிகவும் தொடர்புடையது. உபாகம ஆசிரியரின் கூற்றுப்படி, இஸ்ராயேலர்கள் கொண்டாடிய மிக முக்கியமான திருவிழாக்கள் மூன்றும் விவசாயத்தோடு தொடர்புடையவை. நல்ல விளைச்சலைக் கொடுத்தார் யாவே. எனவே, அவருக்கு நன்றிக்கடன் செலுத்தும் விதத்தில் இந்தத் திருவிழாக்கள் அமைந்தன. பாஸ்கா விழாவும் புளியாத அப்ப விழாவும் வசந்த காலத்தில் தானிய அறுவடையின் தொடக்கத்திலும் (யாத் 12:1-13: 16; 34:18-20; லேவி 23:4-14), ஐம்பதாம் நாள் விழா அல்லது வாரங்களின் விழா தானிய அறுவடையின் முடிவிலும் (யாத் 23:16; லேவி 23:15-21), கூடார விழா பழ அறுவடை முடிவிலும் (யாத் 23:16; உப 16:13-16) கொண்டாடப்பட்டன. ஓய்வுநாள் கூட விவசாயம் சார்ந்த வாழ்வில் இருந்து தான் ஆரம்பித்திருக்கக்கூடும் என்று சடங்குப் பத்துக்கற்பனையால் சுட்டப்படுகிறது (யாத் 22:29-30; 23:12-19); அப்படி இல்லாவிட்டாலும், பிற்காலத்தில் வேளாண்மைத் தொனி பெற்றது.

ஓய்வு ஆண்டு, நிலங்களும் தோட்டங்களும் தங்கள் வளமையைத் திரும்பப் பெறும் பொருட்டுத் தரிசாக விடப்படும் வழக்கிலிருந்து வந்திருக்க வேண்டும் (யாத் 23:10-11; லேவி 25:3-5). ஐந்நூலின் சட்டங்களில் பெரும்பாலானவை நிலத்தையும் அதன் உற்பத்திகளையும் பொறுப்போடு கவனித்துக் கொள்வதில் அக்கறை காட்டுகின்றன (உப 14:22-29; 22:1-3.9-10; 24:25). இச்சட்டங்கள், நற்பேறற்றவர்களுக்கு உதவுவதையும் (24:19-21; 26:12), நன்றியாக ஒரு பகுதியை அளிப்பதையும் (15:19-16:17) உள்ளடக்குகின்றன. உபாகமத்தின் 35 பிரிவுகளில் 8 பிரிவுகள், விவசாய வாழ்க்கையோடு மிகத் தொடர்புடையன (உப 14:22தொ; 15:19-16: 17; 19:14; 22:1-3. 9-10; 23:24-25; 25:4; 26:1-11). விளைச்சலில் பத்தில் ஒரு பங்கும், மந்தையின் தலையீற்றும் கடவுளுக்குக் கொடுக்கப்பட வேண்டும், நில எல்லைக் கற்களை நகர்த்தக் கூடாது என்பன உழவர்களுடைய வாழ்வோடு தொடர்புடையன (உப 27:17). கொடிமுந்திரித் தோட்டத்தில் தானியங்களை விதைக்கக்கூடாது, மாட்டையும் கழுதையையும் இணைத்து உழக்கூடாது போன்ற சட்டங்களும் (உப 22:9-10) காணப்படுகின்றன. பிறருடைய கொடிமுந்திரித் தோட்டத்தில் நுழைந்து தேவைக்கேற்ப உண்ணலாம். ஆனால், எதையும் தன்னோடு எடுத்துச்செல்லலாகாது (உப 23:24-25). இவ்வாறு கூறப்படும் பல மதச்சட்டங்கள், இஸ்ராயேலரின் விவசாயத்தோடு தொடர்புடையதாக இருப்பதால், விவசாயத்திற்கும், மதத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தெளிவாகத் தெரிகிறது.

*10. **விவசாயமும் விவிலிய இலக்கியமும்:*** விவசாயத்தோடு தொடர்புடைய பல உவமைகள், உருவகங்கள் விவிலியத்தில் ஏராளம் காணப்படுகின்றன. இஸ்ராயேலரின் மகிமை மிக்க வருங்கால மறுமலர்ச்சி, உழவுத்தொழிலோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளிலே விளக்கப்படுகிறது. திராட்சைத் தோட்டங்களும், மற்றத் தோட்டங்களும் திரும்பி நடப்படும். அவையும் செழித்து வளரும் (ஆமோ 9:4; செக் 8:12). எந்த ஒரு மகிழ்வான நிகழ்ச்சியும், மிகுந்த அறுவடையோடு ஒப்பிடப்பட்டது. எந்த ஒரு துயர நிகழ்ச்சியும், குறைந்த விளைச்சலோடு ஒப்பிடப்பட்டது (எசா 16:10).

ஞானிகளும், கவிஞர்களும் தங்கள் பொருளை விளக்க விவசாயத்தோடு தொடர்புடைய சொற்களையே பயன்படுத்தினார்கள் (*பழ 10:5; 20.26; 24:30-34; யோபு 5:26; 24:2.6.10-11.18-19. 24; சங் 65:9-13; 80:8-13; 128*).

இயேசு தனது மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறக்கூடிய விவசாய உருவகங்களைப் பயன்படுத்துகிறார். விதை விதைப்பவன் உவமை (*மாற் 4:1-20*); திராட்சைத் தோட்டத்து ஊழியர்கள் உவமை (*மத் 20:1-16*); ''அத்தி மரத்திடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்'' (*மத் 24:32*); நல்ல கனி தரும் கெட்ட மரமும் இல்லை; கெட்ட கனி தரும் நல்ல மரமும் இல்லை (*லூக் 6:43-44*); கடவுளின் உண்மையைப் பற்றியும் மனிதரோடு அவர் கொண்ட உறவைப் பற்றியும் கூறும்போது திராட்சை, மரம், பழம் போன்ற விவசாய வாழ்வோடு தொடர்புடைய சொற்கள் கையாளப் பட்டன.

வை..வெள

வைகறை இமைகள் (EYELIDS OF THE MORNING)

இந்த ஆங்கிலச் சொற்றொடர் வைகறை இமைகள் (யோபு 41:10) என்றும், வைகறையின் கண் விழிப்பு (3:9) என்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உதிக்கும் கதிரவனின் வருகையை அறிவிக்கும் விடிகாலை ஒளிக்கதிர்களை இது குறிக்கும். பழைய ஏற்பாட்டில், கடல் விலங்கான லெவியத்தானைப் பற்றிக்கூறும்போது இச் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. லெவியத்தானை யாராலும் பிடிக்க முடியாதென்றும், அதனுடைய சக்தியும், பற்களும், கண்களும் மனிதர்களைப் பயமுறுத்துகின்றன என்றும் கருதப்பட்டது (யோபு 41:1தொ; சங் 74:14).

லெவியத்தான் என்பது மூலக்குழப்பம் பற்றிய அடையாளங்களில் ஒன்றாகும் (யோபு 26:12; சங் 74:13-14; காண்க. சங் 104: 26). முற்கால மரபுகளின் படி, இந்தப் பெரும் விலங்கு அல்லது பறவைநாகம் சூரியனையும், நிலவையும் விழுங்கிக் கிரகணங்களை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்ததாகும். இது பகலையும் இரவையும் கட்டுப்படுத்தியது. பண்டைய எகிப்தியர்கள் சுக்கோஸ் எனப்படும் முதலை உதிக்கும் சூரியனின் முதுகில் பயணம் செய்வதாகக் கருதினார்கள். அது சூரியனையே வெற்றி கொண்டதாகப் பிற்காலத்தில் நம்பினார்கள். எகிப்திய சித்திர எழுத்து ஏடுகளில் முதலையின் கண் விடியற்காலத்தைக் குறிக்கிறது.

பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள், இத்தகைய விலங்குகள் மேல் நம்பிக்கை கொள்ளாமல் இறைவனின் அளவு கடந்த வல்லமையைக் காட்டுவதற்காக அவற்றை உருவகங்களாகப் பயன்படுத்தினர்.

வைரம், வைரக்கல் (ADAMANT, DIAMOND)

பெரிய குருவின் மார்புப்பட்டையில் இரண்டாவது வரிசையில் மூன்றாவதாகப் பதிக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த கல் (யாத் 28:18; 39:11; எசே 28:13). இஃது ஒருவேளை கடல் வண்ணக்கல் அல்லது மணிக் கல்லைக் குறிக்கலாம்.

இது துளைக்க முடியாத கடினமான கல்லாகக் கருதப்பட்டது; கடினத் தன்மையைக் கூறும் சொல்லாகக் கவிதைகளில் பயன்பட்டுள்ளது. ஆண்டவர் எசேக்கியேலின் நெற்றியைத் தீக்கல்லைவிட உறுதி பெற்ற வைரக்கல்லாய் ஆக்கியுள்ளார் (எசே 3:9). இஸ்ராயேலர் திருச்சட்டத்தையும் வாக்குகளையும் கேட்டுவிடாதபடி பாறையைப்போல் (வைரம்போல்) தங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொண்டார்கள் (சக 7:12). யூதாவின் பாவம் வைரமுனையுடைய இரும்பு எழுத்தாணியால் எழுதப்பட்டுள்ளது (எரே 17:11). யூதாவினுடைய இதயத்தின் கடினத்தைத் துளைக்க வைரம் போன்ற கடினத் தன்மையுடைய எழுத்தாணி வேண்டியிருந்தது.

வைடூரியம், சிவப்புக்கல் (AGATE)

இது நீலச்சாயலுடைய வெண்ணிற மாணிக்கக்கல் வகையைச் சேர்ந்தது; பல நிறங்களில் காணப்படுவது; ஆனால், அதிகமாகப் பழுப்பு வண்ணத்தில் பொது மைய வட்ட வளையங்களோடு காணப்படும். பழங்கால மேற்காசியா மக்களிடையே இது பெரிதும் மதிக்கப்பட்டது.

யாத் 28:19; 39:12-இல், பெரிய குருவின் மார்புப்பட்டையில் மூன்றாவது வரிசையில் இரண்டாவது கல்லாகப் பதிக்கப்பட்டிருந்தது. எசா 54:12-இல் எருசலேமின் காவற் கோபுரங்களைக் கட்டுவதற்குப் பயன்பட்ட பொருளாகும். இப்பகுதி தமிழில் சிவப்புக் கல் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எசே 27:16-இன்படி இஃது ஏதோமுக்கும் தீருக்கும் இடையிலான வர்த்தகப் பொருட்களுள் ஒன்று. திருவெளி 21:19-இல், இது புதிய எருசலேமின் மதில்களின் அடிக்கற்களில் மூன்றாவதாகும். இங்கு மாணிக்கம் என்று தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

வைப்பாட்டி (CONCUBINE)

எபிரேயர் குடும்பத்தைச் சேர்ந்த, குழந்தைகளைப் பெற்ற ஒரு அடிமைப்பெண். இவள் குடும்பத்தில் ஒருத்தியாக ஏற்றுக் கொள்ளப்பட்டாள் (2 சாமு 19:5; 1 அர 11:3; தானி 5:2-3). ஏழை எபிரேயக் குடும்பங்களிலிருந்து விலைக்கு வாங்குவதன் மூலமோ, போரில் பிடிபடுவதின் மூலமோ, கடனுக்குப்பதிலாக எடுத்துக் கொள்வதன் மூலமோ இப்பெண்களை அடையலாம். இவ்வகையைச் சேர்ந்த பெண்கள் ஆண்பிள்ளைகளைப் பெற்றால் ஒரு தனிப்பட்ட அந்தஸ்தை அடைந்தனர் (ஆதி 21:10; 22:24; 30:3; 31:33; யாத் 23:12; 21:7.10). அவள் மகன் உடன் வாரிசாகலாம். அவளுடைய மகனால் அவளுடைய பெயர் நினைவு கூரப்படும். ஒரு மலடி மனைவி இவள் வழியாக பிள்ளைகளைப் பெறலாம். அவள் சொந்தமான வீட்டை எடுத்துக் கொள்ளலாம். ஓய்வுநாளை அனுபவிக்க அவளுக்கு உரிமையுண்டு; உணவுக்கும், உடைக்கும், உடல் உறவிற்கும் அவளுக்கு உரிமையுண்டு. அவளுடைய ''கணவனின்'' அன்பை அனுபவிக்க உரிமையுடையவள் (நீதி 19:1-3). அண்ணகர்கள் இவர்களுக்குப் பொறுப்பாக வைக்கப்பட்டனர் (எஸ்த 2:15). இவர்கள் பாடகர்களோடு, ''மகிழ்வூட்டும் மங்கையர்'' என்று அழைக்கப்பட்டார்கள் (திருவுரை 2:8). ஓர் அரசன் வைப்பாட்டிகள் பலரைக் கொண்டிருக்கலாம் (1 அர 11:3). இவர்களுக்குப் பெருமளவு பொறுப்பு அளிக்கப்பட்டது (2 சாமு 15:6; 20:3). ஒரு வைப்பாட்டியின் மகளின் பிரமாணிக்கத்தால் சவுலுக்கும், யோனத்தானுக்கும் நல்லடக்கம் கொடுக்க தாவீது தூண்டப்பட்டார் (2 சாமு 21:10-14).

வைக்கோல், தாள் (STRAW)

இது சூட்டடிப்பின்போது $1^1/2$-2 அங்குலமாக வெட்டப்பட்ட கோதுமை அல்லது பார்லித் தாளைக் குறிக்கும். வைக்கோல் பல வழிகளில் பயன்பட்டது; வீட்டு விலங்குகளுக்கு உணவாகப் பயன்பட்டது (ஆதி 24:25; நீதி 19:19; 1 அர 5:8). விவிலியத்தின் சில பகுதிகள், வைக்கோல் விலங்குகளுக்குப் படுக்கையாகப் பயன்பட்டதாகக் கூறுகின்றன. ஆனால், வைக்கோல் தனியாகவோ (எசா 11:7), தானியங்களுடன் கலந்தோ உணவாகவும் பயன்படுத்தப்பட்டது. அகழ்வாய்களிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் (யாத் 5:7-12), வைக்கோல் செங்கல் செய்வதில் பிணைப்பாகப் பயன்பட்டது என்று அறிகிறோம்.

வோப்சி, ஒப்சி (VOPSHI - ஆதாயம்)

இவர் நப்தலி கோத்திரத்திலிருந்து கானானை உளவு கண்டு வர அனுப்பப்பட்ட நகுபியின் தந்தை ஆவார் (எண் 13:14).

வௌவால் (BAT)

பழங்களையும், சிறு பூச்சிகளையும் உண்டு வாழும், பறக்கும், பாலூட்டி இனத்தைச் சேர்ந்த, இரவில் உலவும் பறவையாகும். இதில் 400 வகைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் வௌவால் அசுத்தமான பறவைகளைப் பற்றிய பட்டியலில் வருகிறது (லேவி 11:19; உப 14:18). எசா 2:20-இல் இருண்ட குகைகளில் வாழும் உயிரினமாகக் காட்டப்பட்டுள்ளது. எரேமியாவின் கடிதத்தில் சிலைகளின் தலையிலும், உடலிலும் வௌவால் வந்து தங்குவதாகவும், ஆகவே அச்சிலைகள் உயிரற்றவை என்றும் குறிப்பிடப்படுகிறது.

ன, னகரம்

இந்தத் தமிழ் எழுத்து, கிரேக்க நெடுங்கணக்கின் கடைசி எழுத்தான ஒமேகாவுக்கு இணையானது. யூத மரபுப்படி, ஓர் ஆசிரியர் எபிரேய நெடுங்கணக்கிலுள்ள முதல் எழுத்து ஆலேபிலிருந்து கடைசி எழுத்தான ''தௌ''வரை எல்லாவற்றையும் கூறிவிட்டால், ஒரு தலைப்பைப் பற்றிச் சொல்லக் கூடிய எல்லாம் முழுமையாகச் சொல்லி விட்டதாகக் கருதப்படும் *(லேவி 26:3-13)*. **ஆல்பாவும் ஒமேகாவும்** என்ற தலைப்பைக் காண்க. இந்த மரபைப் பின்பற்றி, விவிலியக் களஞ்சியம் என்ற இந்தத் தொகுப்பைத் தமிழ் நெடுங்கணக்கிலுள்ள முதல் எழுத்தான அகரத்தோடு தொடங்கினோம். இப்போது, இத்தொகுப்பின் கடைசித் தலைப்பாக ''னகரம்'' பற்றி எழுதுகிறோம்.

தமிழ் விவிலியத்தில், ''னகரம்'' என்ற சொல் ''அகரமும் னகரமும் நானே -தொடக்கமும் முடிவும் நானே'' என்ற கூற்றில் *(திருவெளி 21:6)* வருகிறது. புதிய ஏற்பாட்டில் இஃது இறைவனை *(1:8)* அல்லது கிறிஸ்துவைக் *(22:13)* குறிக்கப் பயன்பட்டுள்ளது. இதே கருத்து வேறுவடிவில் *திருவெளி 1:8; உரோ 11:36*-இல் காணக்கிடக்கிறது. இக்கருத்தின் அடிப்படை வாய்பாடு *எசா 44:6; 48:12*-இல் வருகிறது. படைப்பவரும் மீட்பவருமான ஒரே இறைவனின் தனித்தன்மையை இது வலியுறுத்துகிறது.

இருப்பவற்றிற்கெல்லாம் இறைவனே தொடக்கமும் முடிவுமாக, அகரமும் னகரமுமாக இருக்கிறார். அவர் அகரமாக (தொடக்கமாக) இருப்பதால் விண்ணின் மேலும் மண்ணின் மேலும் நிறைவான மேலதிகாரத்தைக் கொண்டுள்ளார். அவர் ஒருவரே எல்லாவற்றையும் புதியதாகப் படைக்கவல்லவர். அவர் னகரமாக (முடிவாக) இருப்பதால், அவர் ஒருவரே ''இனி நடக்கவிருப்பன பற்றியும் நிகழப்போவன பற்றியும் முன்னுரைக்க'' வல்லவர் *(எசா 44:7)*. அவரே உயிர்; வாழ்வின் ஊற்று *(திருவெளி 21:6)*. அவர் சாவையும் பாதாளத்தையும் அழிக்கக்கூடும். அவரது வெகுமானமே இறுதியானது. இச்சொற்றொடர்கள் இயேசுவுக்குச் சாற்றிக் கூறப்படுவதால் அவரது தனித்தன்மை வாய்ந்த தலைமை உரிமையை இவை தெளிவாகக் காட்டுகின்றன. இது வெளிப்படையானாலும் முக்கியமானதும் ஆகும் *(21:6)*. ''அரியணையில் வீற்றிருப்பவருக்கும் செம்மறியானவர்க்கும் போற்றியும் மாட்சியும் மகிமையும் வல்லமையும் என்றென்றும் உரியனவாகுக. ஆமென்'' *(5:13-14)*!

வரைபடம் 1



காஸ்பியன் கடல்
இத்தியார்
மத்தியதரைக் கடல்
தோகருமா
கர்க்கமிசு
ஆரான்
நினிவே
அசிரியா
காலாகு
அசூர்
அலெப்போ
உகரித்து
அமாது
பிபுலோசு
சீரியா
ததிமோர்
மாரி
அக்காது
சீதோன்
தமஸ்கு
ஆசோர்
மெகிதோ
செக்கேம்
அம்மோன்
சோவான்
பெத்தேல்
ஆயி
எருசலேம்
கெரார்
எபிரோன்
மம்ரே
பெயேர்-செபா
ஏதோம்
பாபிலோன்
பாபிலோனியா
ஊர்
லிபியா
பிரமிடுகள்
எலியோப்பொலி
சீனாய்
மிதியான்
அரேபியா
பாலைவனம்
செங்கடல்
பாரசீக வளைகுடா
முதுபெரும் தந்தையர் காலத்து
விவிலிய உலகு
ஆபிரகாமின் அழைப்பும் பயணமும்
0 100 200 300 400 500



இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணம்

(அறிஞர்களின் பொதுவான கருத்துப்படி)

வரைபடம் III


கானான் நாடு
(இஸ்ராயேலின் 12 கோத்திரங்கள் வாழ்ந்த நிலப்பகுதிகள்)
0 5 10 20 40
சீரியா
தமஸ்கு
ஏதோன்
சீதோனியர்
லெபனோன் மலை
எர்மோன் மலை
தீர்
தான்
காதேசு
காசோர்
ஆக்கோ
மேரோம் ஏரி
யோர்தான் நதி
6
8
பாசான்
10
கார்மேல் மலை
தாபோர் மலை
கெனெசரேத் ஏரி
அபேக்கு
கோலான்
3
தோர்
9
தாவாத்து
பெத்துசான்
கிலயாது
தோத்தான்
3
பெருங்கடல்
ஏபால் மலை
கெரிசிம் மலை
செக்கேம்
யோர்தான் நதி
இராமோத்து
பெலிசேல்
சுக்கோத்து
எமோரியர்
யோப்பா
11
சீலோ
7
5
12
யாசேர்
இரபா
எக்ரோன்
பெத்தேல்
ஆயி
எரிகோ
கில்கால்
இராமா
எருசலேம்
எசெபோன்
பெலிஸ்தியர்
அசோத்து
அசுக்கலோன்
பெத்லகேம்
நெபோ மலை
1
அமோனியர்
4
எபிரோன்
சிப்பு
உப்புக் கடல்
பெசேர்
காசா
தெபீர்
இத்தியர்
பெயேர் செபா
அரோயர்
மோவாபியர்
இராகொபோத்து
2
தாமார்
ஏதோம்
1. ரூபன்
2. சிமியோன்
3. மனாசே
4. யூதா
5. தான்
6. நப்தலி
7. காது
8. ஆசேர்
9. இசக்கார்
10. செபுலோன்
11. எப்பிராயிம்
12. பென்யமின்


சைப்ரஸ்
தாவீது-சலமோனின் பேரரசு
பெனிசியா
சோபா
இஸ்ராயேல்
பெருங்கடல்
அம்மோன்
மோவாபு
ஏதோம்

வரைபடம் V


பாலஸ்தீன் நாடு
(இயேசுவின் காலத்தில்)
Scale: 1 1.700.000
0 5 10 16 20
சீதோன்
சரெப்தா
தீர்
பெனிக்கியா
இதுரேயா
அபிலேன்
தமஸ்கு
சீரியா
எர்மோன் மலை
பிலிப்புச் செசரியா
தாண்
திரக்கோனித்து
கொராசின்
கப்பர் நகூம்
பெத்து சயிதா
கானாவூர்
மகதலா
கலிலேயா
கலிலேயாக் கடல்
திபேரியா
தொலமாய்
கர்மேல் மலை
நாசரேத்து
தாபோர் மலை
காதாரா
நயீன்
செசரியா
சமாரியா
இனோன்
தெக்காப்பொலி
நதி
யோர்தான்
சமாரியா
ஏபால் மலை
கெரிசிம் மலை
சிக்கார்
செக்கேம்
யாக்கோபின் கிணறு
அப்பொல்லோனியா
கெராசா
அந்திப்பத்திரி
யோப்பா
அரிமத்தியா
பெத்து பாரா
பெத்தேல்
எப்பிராயிம்
இலிதா
பிலதெல்பியா
எரிகோ
எம்மாவு
ஒலிவ மலை
பெரயா
எருசலேம்
கும்ரான்
அயின் கெரேம்
பெத்து பாகே
பெத்தானியா
எசிபோன்
அசோத்து
யூதேயா
பெத்லகேம்
அசுக்கலோன்
மத்தியதரைக்கடல்
யூதேயாவின் பாலைநிலம்
சாக்கடல்
காசா
கெபிரோன்
பெயேர்-செபா
இதுமேயா


எருசலேம் —
பாடுகளின் பாதை
பிலாத்து
அரண்மனை
(அந்தோனியா)
போதித்தல்
ஆலயம்
வியாபாரிகளைத்
துரத்துதல்
அரச முற்றம்
ஏரோது அந்திப்பாவின்
அரண்மனை
தங்க வாயில்
ஒலிவ
மலை
இயேசு
ஆலோசனைக் குழுவின்
முன்னிலையில்
கயபா
(அரண்மனை)
பேதுரு
மறுதலித்தல்
கெதுசமனித்
சிலோவாம்
குளம்
இரத்த நிலம்
(குயவன் நிலம்)
இன்னோம் பள்ளத்தாக்கு
மீட்டர்
0 60 100 150
1
2
3
4
6
8
9



புனித பவுலின் தூதுரைப் பயணங்கள்
கருங்கடல்
மத்தியதரைக் கடல்
அதிரியாக் கடல்
தல்மாத்தியா
தாசியா
மோசியா
திராக்கே
மக்கதோனியா
ஆசியா
பம்பிலியா
கப்பதோக்கியா
கிரேத்து
இத்தாலியா
சிசிலி
மால்த்தா
லிபியா
எகிப்து
0 100 200 300


புனித பவுலின்
தூதுரைப் பயணங்கள்
இரண்டாம் பயணம்
கி.பி. 49—52 (அப். பணி 15:39—18:22)
மூன்றாம் பயணம்
கி.பி. 53—57 (அப். பணி 18:22—21:16)
கருங்கடல்
போந்து
பித்தினியா
மீசியா
ஆசியா
பிரிகியா
கலாத்தியா
பிசிதியா
பம்பிலியா
சிலிசியா
சீரியா
பெனிக்கியா
சைப்பிரஸ்
கிரேத்து
மத்தியதரைக்கடல்
எகிப்து
மக்கதோனியா
அம்பிப்போலிஸ்
பிலிப்பி
நெயாப்பொலி
துரோவா
அக்காயா
கொரிந்து
எபேசு
மிலேத்து
இக்கோனியா
தெர்பை
அந்தியோக்கியா
செலூக்கியா
தீர்
செசரியா
எருசலேம்
0 100 200 300

ஆசிரியரது பிற நூல்கள்

விவிலிய அறிமுக நூல்கள்

1.	"தோரா" அல்லது "ஐந்நூல்"	(ஆதி, யாத்திரை, லேவியர், எண், உப ஆகமங்கள்)
2.	வரலாற்று நாயகன்	(யோசுவா, நீதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2, அரசர்கள், 1,2 நாள், எஸ்ரா, நெகேமியா, 1,2, மக்கபேயர்கள்)
3.	இஸ்ராயேலின் காவலர்கள் – I	(பொது முன்னுரை, ஆமோஸ் ஒசேயா, மீக்கா)
4.	இஸ்ராயேலின் காவலர்கள் – II	(எசாயா, செப்பனியா, நாகூப், அபக்கூக்கு, எரேமியா, எசேக்கியேல், ஆகாய், செக்கரியா, ஒதியா, மாலக்கி, யோவேல்)
5.	ஞான நூல்கள்	(யோபு, பழமொழி, சங்கீதங்கள், திருவுரை, உன்னத சங்கீதம், ஞானநூல், சீராக்கு)
6.	சில கதைகளும் காட்சிகளும்	(யோனா, ரூத்து, தோபியா, எஸ்தர், புலம்பல், பாரூக்கு, தானியேல், யூதித்து)
7.	நான்கு வடிவ நற்செய்திகள்	(மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகள்)
8.	புனித பவுலின் திருமுகங்கள் – I	(பவுலின் வாழ்க்கை வரலாறு, மற்றும் 1 தெசலோனிக்கர், கலாத்தியர், பிலிப்பியர், 1 & 2 கொரிந்தியர், உரோமையர், பிலமோன் ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்கள்)
9.	புனித பவுலின் திருமுகங்கள் – II	(2–ஆம் தெசலோனிக்கர், கொலோசையர், எபேசியர், தீத்து, 1–ஆம், 2–ஆம் திமொத்தேயு ஆகிய திருமுகங்களுக்கு அறிமுகங்களும், பவுலின் இறையியலும்)

விளக்கவுரை நூல்

10.	லூக்காவின் நற்செய்தி	(அருள்வாக்கு மன்றப்பதிப்பு)
11.	விவிலியச் சித்திரக் கதைகள்	**பழைய ஏற்பாடு:** (காயின் ஆபேல், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, சிம்சோன் ரூத்து, சாமுவேல், சவுல், தாவீது, அரசன் தாவீது)
12.	விவிலியக் களஞ்சியம் – I	**புதிய ஏற்பாடு:**
13.	விவிலியக் களஞ்சியம் – II	
14.	விவிலியக் களஞ்சியம் – III	
15.	விவிலியக் களஞ்சியம் – IV	
16.	விவிலியக் களஞ்சியம் – V	

தயாரிப்பில் உள்ளவை :

1. விவிலியச் சித்திரக் கதைகள் (பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு)

கிடைக்குமிடம்

தியான ஆசிரமம்

13, மாதா கோவில் தெரு, சென்னை – 600 028.

மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி நிலையங்கள்.